பரிசுத்த பைபிள்

புதிய உலக

மொழிபெயர்ப்பு

இது என்னுடைய பைபிள்

பெயர் ____

பரிசுத்த பைபிள்

புதிய உலக
மொழிபெயர்ப்பு

2013-ல் திருத்தப்பட்ட
ஆங்கில *புதிய உலக மொழிபெயர்ப்பு* பைபிளிலிருந்து
மொழிபெயர்க்கப்பட்டது

“உன்னதப் பேரரசராகிய யெகோவா [יהוה, *ய்ஹ்வ்ஹ்*]
இப்படிச் சொல்கிறார்: ‘. . . இதோ பாருங்கள், நான் புதிய வானத்தையும்
புதிய பூமியையும் படைக்கிறேன். முன்பு பட்ட கஷ்டங்கள் இனி யாருடைய
மனதுக்கும் வராது. யாருடைய நெஞ்சத்தையும் வாட்டாது.’”

—ஏசாயா 65:13, 17; 2 பேதுரு 3:13-ஐயும் பாருங்கள்.

©2016
WATCH TOWER BIBLE
AND TRACT SOCIETY
OF PENNSYLVANIA

100 Watchtower Drive
Patterson, NY 12563-9204
U.S.A.

பரிசுத்த பைபிள்—புதிய உலக மொழிபெயர்ப்பு

பிரசுரிப்போர்

WATCHTOWER BIBLE AND TRACT SOCIETY OF NEW YORK, INC.

Wallkill, New York, U.S.A.

பகுதியாகவோ முழுமையாகவோ 150 மொழிகளில் கிடைக்கிறது. என்னென்ன மொழிகளில் வெளிவருகிறது என்பதைத் தெரிந்துகொள்ள www.jw.org-ஐப் பாருங்கள்.

தயாரிக்கப்பட்ட மொத்த பிரதிகள்:

22,21,51,997 பிரதிகள்

2018 பதிப்பு

இந்தப் புத்தகம் விற்பனைக்கு அல்ல. இது யெகோவாவின் சாட்சிகளுடைய உலகளாவிய பைபிள் கல்வித் திட்டத்தின் பாகமாக வழங்கப்படுகிறது.

New World Translation of the Holy Scriptures

Tamil (*nwt*-TL)

Made in Japan

4-7-1 Nakashinden,
Ebina City, Kanagawa-Pref,
243-0496
Japan

நன்றி:

பக்கம் 2496:
மேலே: Shrine of the Book, Photo © The Israel Museum, Jerusalem

கீழே: Courtesy of Ben-Zvi Institute; photographer: Ardon Bar-Hama

பக்கம் 2498:
© The Trustees of the Chester Beatty Library, Dublin

பக்கம் 2500:
Shrine of the Book, Photo © The Israel Museum, Jerusalem

பக்கம் 2502:
© The British Library Board (G.12161)

பக்கம் 2506:
இடது: From the book *A Pre-Massoretic Biblical Papyrus,* by Stanley A. Cook, M. A. (1903)

பக்கம் 2507:
From *The Codex Alexandrinus in Reduced Photographic Facsimile,* 1909, by permission of the British Library

nwt-TL
180816

கடவுளுடைய புத்தகத்துக்கு ஓர் அறிமுகம்

கடவுள் நமக்குச் சொல்ல விரும்பும் செய்தி பைபிளில் இருக்கிறது. வாழ்க்கையில் எப்படி வெற்றி பெறலாம், கடவுளுக்குப் பிரியமாக எப்படி வாழலாம் என்று பைபிள் சொல்கிறது. அதோடு, இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கும் பதில் தருகிறது:

1. கடவுள் யார்?
2. கடவுளைப் பற்றி எப்படித் தெரிந்துகொள்ளலாம்?
3. பைபிளை எழுதியது யார்?
4. அறிவியலோடு பைபிள் ஒத்துப்போகிறதா?
5. பைபிள் சொல்லும் முக்கியச் செய்தி என்ன?
6. மேசியாவைப் பற்றி பைபிள் என்ன முன்னறிவித்தது?
7. நம்முடைய காலத்தைப் பற்றி பைபிள் என்ன முன்னறிவித்தது?
8. நம்முடைய கஷ்டங்களுக்குக் கடவுள் காரணமா?
9. மனிதர்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள்?
10. நம் எதிர்காலத்தைப் பற்றி பைபிள் என்ன சொல்கிறது?
11. ஒருவர் இறந்த பின்பு என்ன ஆகிறது?
12. இறந்தவர்கள் மறுபடியும் உயிரோடு வருவார்களா?
13. வேலையைப் பற்றி பைபிள் என்ன சொல்கிறது?
14. பணக்கஷ்டத்தைத் தவிர்ப்பது எப்படி?
15. சந்தோஷமாக வாழ்வது எப்படி?
16. கவலைகளைச் சமாளிப்பது எப்படி?
17. குடும்ப வாழ்க்கைக்கு பைபிள் எப்படி உதவுகிறது?
18. கடவுளுடைய நண்பராவது எப்படி?
19. பைபிள் புத்தகங்களில் என்ன தகவல் இருக்கிறது?
20. பைபிள் படிப்பிலிருந்து எப்படிப் பயனடையலாம்?

பைபிள் வசனங்களை எப்படிக் கண்டுபிடிக்கலாம்?

பைபிளில் 66 சிறு புத்தகங்கள் இருக்கின்றன. எபிரெய-அரமேயிக் வேதாகமம் ("பழைய ஏற்பாடு") என்றும், கிரேக்க வேதாகமம் ("புதிய ஏற்பாடு") என்றும் இரண்டு பகுதிகளாக பைபிள் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பைபிள் புத்தகத்திலுமே அதிகாரங்களும் வசனங்களும் இருக்கின்றன. வசனங்கள் குறிப்பிடப்படும்போது, புத்தகத்தின் பெயருக்கு அடுத்து வருகிற எண் அதிகாரத்தைக் குறிக்கிறது, அதற்கு அடுத்து வருகிற எண் வசனத்தைக் குறிக்கிறது. உதாரணத்துக்கு, ஆதியாகமம் 1:1 என்பது ஆதியாகமம் புத்தகத்தில் அதிகாரம் 1, வசனம் 1-ஐக் குறிக்கிறது.

கேள்வி 1

கடவுள் யார்?

“யெகோவா என்ற பெயருள்ள நீங்கள் ஒருவர்தான், இந்தப் பூமி முழுவதையும் ஆளுகிற உன்னதமான கடவுள் என்று மக்கள் புரிந்துகொள்ளட்டும்.”

சங்கீதம் 83:18 [பக்கம் 1174]

“யெகோவாதான் கடவுள் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். அவர்தான் நம்மைப் படைத்தார், நாம் அவருக்குச் சொந்தமானவர்கள்.”

சங்கீதம் 100:3 [பக்கம் 1193]

“நான் யெகோவா. அதுதான் என்னுடைய பெயர். என்னுடைய மகிமையை யாருக்கும் கொடுக்க மாட்டேன். என்னுடைய புகழை எந்தச் சிலைக்கும் கொடுக்க மாட்டேன்.”

ஏசாயா 42:8 [பக்கம் 1437]

“யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்கிற ஒவ்வொருவரும் மீட்புப் பெறுவார்கள்.”

ரோமர் 10:13 [பக்கம் 2213]

“உண்மைதான், ஒவ்வொரு வீடும் யாரோ ஒருவரால் உண்டாக்கப்படுகிறது, ஆனால் எல்லாவற்றையும் உண்டாக்கியவர் கடவுளே.”

எபிரெயர் 3:4 [பக்கம் 2345]

“வானத்தை அண்ணாந்து பாருங்கள். அங்கே இருக்கும் நட்சத்திரங்களைப் படைத்தது யார்? அவற்றை ஒவ்வொன்றாக எண்ணி ஒரு படைபோல் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிற கடவுள்தான் அவர். அவை ஒவ்வொன்றையும் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறார். அவருடைய அபாரமான ஆற்றலினாலும் பிரமிக்க வைக்கிற பலத்தினாலும், அவற்றில் ஒன்றுகூட குறையாமல் இருக்கிறது.”

ஏசாயா 40:26 [பக்கம் 1432]

கேள்வி 2

கடவுளைப் பற்றி எப்படித் தெரிந்துகொள்ளலாம்?

“இந்தத் திருச்சட்ட புத்தகத்தில் உள்ள விஷயங்களைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டே இரு. அதில் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் கவனமாய்க் கடைப்பிடிப்பதற்காக ராத்திரியும் பகலும் தாழ்ந்த குரலில் அதை வாசி. அப்போதுதான் வாழ்க்கையில் உனக்கு வெற்றி கிடைக்கும், நீ ஞானமாகவும் நடப்பாய்.”

யோசுவா 1:8 [பக்கம் 445]

“எஸ்றாவும் லேவியர்களும் உண்மைக் கடவுளுடைய திருச்சட்ட புத்தகத்திலிருந்து சத்தமாக வாசித்து, அதைத் தெளிவாக விளக்கி, அதன் அர்த்தத்தை ஜனங்களின் மனதில் பதிய வைத்தார்கள். வாசிக்கப்பட்ட விஷயங்களை எல்லாரும் புரிந்துகொள்வதற்கு உதவி செய்தார்கள்.”

நெகேமியா 8:8 [பக்கம் 954]

‘பொல்லாதவர்கள் சொல்கிற அறிவுரையைக் கேட்காமல் இருக்கிறவன் சந்தோஷமானவன். . . . அவன் யெகோவாவின் சட்டத்தை ஆசை ஆசையாகப் படிக்கிறான். அதை ராத்திரியும் பகலும் தாழ்ந்த குரலில் வாசிக்கிறான். . . . அவன் செய்வதெல்லாம் வெற்றி பெறும்.’

சங்கீதம் 1:1-3 [பக்கம் 1067]

“பிலிப்பு அந்த ரதத்தோடு சேர்ந்து ஓடியபோது, ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை அந்த அதிகாரி சத்தமாக வாசித்துக்கொண்டிருப்பதைக் கேட்டார்; அப்போது அவரிடம், ‘நீங்கள் வாசிப்பது உங்களுக்குப் புரிகிறதா?’ என்று கேட்டார். அதற்கு அவர், ‘ஒருவர் கற்றுக்கொடுக்காவிட்டால் எனக்கு எப்படிப் புரியும்?’ என்று சொன்னார்.”

அப்போஸ்தலர் 8:30, 31 [பக்கம் 2145]

“பார்க்க முடியாத அவருடைய குணங்களை, அதாவது நித்திய வல்லமை, கடவுள்தன்மை ஆகியவற்றை, உலகம் படைக்கப்பட்ட சமயத்திலிருந்தே படைப்புகள் மூலம் தெளிவாகப் பார்க்க முடிகிறது. அதனால், அவர்கள் சாக்குப்போக்கு சொல்ல முடியாது.”

ரோமர் 1:20 [பக்கம் 2196]

“இவற்றைப் பற்றியே ஆழமாக யோசித்துக்கொண்டிரு; இவற்றிலேயே மூழ்கியிரு; அப்போதுதான் உன்னுடைய முன்னேற்றம் எல்லாருக்கும் தெளிவாகத் தெரியவரும்.”

1 தீமோத்தேயு 4:15 [பக்கம் 2325]

‘அன்பு காட்டுவதற்கும் நல்ல செயல்கள் செய்வதற்கும் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி, ஒருவர்மீது ஒருவர் ஆழ்ந்த அக்கறை காட்ட வேண்டும்; சபைக் கூட்டங்களுக்கு வராமல் இருந்துவிடக் கூடாது.’

எபிரெயர் 10:24, 25 [பக்கம் 2356]

“உங்களில் ஒருவனுக்கு ஞானம் குறைவாக இருந்தால், கடவுளிடம் அவன் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்; அப்படிக் கேட்கிறவர்களை அவர் திட்ட மாட்டார். எல்லாருக்கும் தாராளமாகக் கொடுக்கிற கடவுள் அவனுக்கும் கொடுப்பார்.”

யாக்கோபு 1:5 [பக்கம் 2365]

கேள்வி 3

பைபிளை எழுதியது யார்?

“யெகோவா சொன்ன எல்லாவற்றையும் மோசே எழுதி வைத்தார்.”

யாத்திராகமம் 24:4 [பக்கம் 189]

“ஒருநாள் ராத்திரி தானியேல் படுத்திருந்தபோது கனவையும் தரிசனங்களையும் பார்த்தார். பார்த்ததையெல்லாம் அவர் விவரமாக எழுதி வைத்தார்.”

தானியேல் 7:1 [பக்கம் 1762]

“நீங்கள் கடவுளுடைய வார்த்தையை எங்கள் மூலம் கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனிதர்களுடைய வார்த்தையாக அல்ல கடவுளுடைய வார்த்தையாக ஏற்றுக்கொண்டீர்கள். இதற்காக நாங்கள் எப்போதும் கடவுளுக்கு நன்றி சொல்கிறோம். அது உண்மையிலேயே கடவுளுடைய வார்த்தைதான்.”

1 தெசலோனிக்கேயர் 2:13 [பக்கம் 2312]

‘வேதவசனங்கள் எல்லாம் கடவுளுடைய சக்தியின் தூண்டுதலால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை கற்றுக்கொடுப்பதற்குப் பிரயோஜனமுள்ளவையாக இருக்கின்றன.’

2 தீமோத்தேயு 3:16 [பக்கம் 2334]

“மனிதர்கள் ஒருகாலத்திலும் தங்களுடைய விருப்பத்தால் தீர்க்கதரிசனம் சொல்லவில்லை. கடவுளுடைய வார்த்தைகளை அவருடைய சக்தியால் தூண்டப்பட்டுதான் சொன்னார்கள்.”

2 பேதுரு 1:21 [பக்கம் 2382]

கேள்வி 4

அறிவியலோடு பைபிள் ஒத்துப்போகிறதா?

“வெறுமையான இடத்தில் அவர் வானத்தை விரித்தார். பூமியை அந்தரத்தில் தொங்கவிட்டார்.”
யோபு 26:7 [பக்கம் 1026]

“எல்லா ஆறுகளும் கடலில் போய்க் கலந்தாலும், கடல் நிரம்பி வழிவதில்லை. உற்பத்தியான இடத்துக்கே ஆறுகள் போகின்றன, அங்கிருந்து மறுபடியும் ஓடிவருகின்றன.”
பிரசங்கி 1:7 [பக்கம் 1323]

“உருண்டையான பூமிக்கு மேலே கடவுள் குடியிருக்கிறார்.”
ஏசாயா 40:22 [பக்கம் 1432]

கேள்வி 5

பைபிள் சொல்லும் முக்கியச் செய்தி என்ன?

“உனக்கும் பெண்ணுக்கும் உன் சந்ததிக்கும் அவள் சந்ததிக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்.”

ஆதியாகமம் 3:15 [பக்கம் 48]

“நீ என் பேச்சைக் கேட்டதால், உன்னுடைய சந்ததியின் மூலம் பூமியிலுள்ள எல்லா தேசத்தாரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.”

ஆதியாகமம் 22:18 [பக்கம் 78]

“உங்களுடைய அரசாங்கம் வர வேண்டும். உங்களுடைய விருப்பம் பரலோகத்தில் நிறைவேறுவதுபோல் பூமியிலும் நிறைவேற வேண்டும்.”

மத்தேயு 6:10 [பக்கம் 1902]

“சமாதானத்தைத் தருகிற கடவுள் சீக்கிரத்தில் சாத்தானை உங்கள் காலடியில் நசுக்கிப்போடுவார்.”

ரோமர் 16:20 [பக்கம் 2224]

“எல்லாமே மகனுக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட பின்பு, எல்லாவற்றையும் அவருக்குக் கீழ்ப்படுத்திய கடவுளுக்கு மகனும் கீழ்ப்பட்டிருப்பார். அப்போது, கடவுள்தான் எல்லாருக்கும் எல்லாமுமாக இருப்பார்.”

1 கொரிந்தியர் 15:28 [பக்கம் 2251]

‘ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. அந்தச் சந்ததி கிறிஸ்துதான். அதோடு, நீங்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்றால், உண்மையிலேயே ஆபிரகாமின் சந்ததியாக இருக்கிறீர்கள்.’
கலாத்தியர் 3:16, 29 [பக்கங்கள் 2279, 2280]

“உலகத்தின் அரசாங்கம் நம் எஜமானுக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் சொந்தமான அரசாங்கமானது. அவர் என்றென்றும் ராஜாவாக ஆட்சி செய்வார்.”
வெளிப்படுத்துதல் 11:15 [பக்கம் 2415]

“உலகம் முழுவதையும் ஏமாற்றுகிற பழைய பாம்பாகிய ராட்சதப் பாம்பு, அதாவது பிசாசு என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்படுகிறவன், கீழே தள்ளப்பட்டான். அவன் பூமிக்குத் தள்ளப்பட்டான்; அவனோடு அவனுடைய தூதர்களும் தள்ளப்பட்டார்கள்.”
வெளிப்படுத்துதல் 12:9 [பக்கம் 2416]

“அவர் பழைய பாம்பாகிய ராட்சதப் பாம்பை, அதாவது பிசாசாகிய சாத்தானை, பிடித்து 1,000 வருஷங்களுக்குக் கட்டிப்போட்டார்.”
வெளிப்படுத்துதல் 20:2 [பக்கம் 2428]

கேள்வி 6

மேசியாவைப் பற்றி பைபிள் என்ன முன்னறிவித்தது?

தீர்க்கதரிசனம்	நிறைவேற்றம்
"எப்பிராத்தா என்று அழைக்கப்படும் பெத்லகேமே, . . . இஸ்ரவேலை ஆளப்போகிற ராஜா உன்னிடமிருந்து வருவார்." மீகா 5:2 [பக்கம் 1835]	'ஏரோது ராஜாவின் காலத்தில், யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார்; அதன் பின்பு, கிழக்கிலிருந்து ஜோதிடர்கள் எருசலேமுக்கு வந்தார்கள்.' மத்தேயு 2:1 [பக்கம் 1894]
"என்னுடைய அங்கிகளைப் பங்கு போட்டுக்கொள்கிறார்கள், என்னுடைய உடைக்காகக் குலுக்கல் போடுகிறார்கள்." சங்கீதம் 22:18 [பக்கம் 1090]	'படைவீரர்கள் இயேசுவை மரக் கம்பத்தில் வைத்து ஆணியடித்த பின்பு, அவருடைய மேலங்கிகளை நான்கு பாகங்களாக்கினார்கள்; உள்ளங்கி தையல் இல்லாமல் மேலிருந்து கீழ்வரை ஒரே துணியாக நெய்யப்பட்டிருந்தது. அதனால், "இதைக் கிழிக்க வேண்டாம்; இது யாருக்கு என்று குலுக்கல் போட்டுப் பார்க்கலாம்" என ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள்.' யோவான் 19:23, 24 [பக்கம் 2119]

தீர்க்கதரிசனம்	நிறைவேற்றம்
“அவருடைய எல்லா எலும்புகளையும் அவர் பாதுகாக்கிறார். அவற்றில் ஒன்றுகூட முறிக்கப்படுவதில்லை.” சங்கீதம் 34:20 [பக்கம் 1106]	“இயேசுவிடம் வந்தபோது, அவர் ஏற்கெனவே இறந்திருந்ததைப் பார்த்து அவருடைய கால்களை உடைக்காமல் விட்டுவிட்டார்கள்.” யோவான் 19:33 [பக்கம் 2120]
“நம்முடைய குற்றத்துக்காகத்தான் அவர் குத்தப்பட்டார்.” ஏசாயா 53:5 [பக்கம் 1464]	“படைவீரர்களில் ஒருவன் அவருடைய விலாவை ஈட்டியால் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் வெளியே வந்தன.” யோவான் 19:34 [பக்கம் 2120]
“அவர்கள் எனக்கு 30 வெள்ளிக் காசுகளைக் கூலியாகக் கொடுத்தார்கள்.” சகரியா 11:12, 13 [பக்கம் 1878]	“பின்பு, பன்னிரண்டு பேரில் ஒருவனான யூதாஸ் இஸ்காரியோத்து முதன்மை குருமார்களிடம் போய், ‘அவரைக் காட்டிக்கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?’ என்று கேட்டான். அவர்கள் 30 வெள்ளிக் காசுகள் கொடுப்பதாக அவனோடு ஒப்பந்தம் செய்தார்கள்.” மத்தேயு 26:14, 15; 27:5 [பக்கங்கள் 1949, 1953]

கேள்வி 7

நம்முடைய காலத்தைப் பற்றி பைபிள் என்ன முன்னறிவித்தது?

“ஜனத்துக்கு எதிராக ஜனமும் நாட்டுக்கு எதிராக நாடும் சண்டை போடும், . . . இவையெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.”

மத்தேயு 24:7, 8 [பக்கம் 1943]

“போலித் தீர்க்கதரிசிகள் பலர் வந்து நிறைய பேரை ஏமாற்றுவார்கள்; அக்கிரமம் அதிகமாவதால் பெரும்பாலானவர்களின் அன்பு குறைந்துவிடும்.”

மத்தேயு 24:11, 12 [பக்கம் 1944]

“போர் முழக்கங்களையும் போர்ச் செய்திகளையும் நீங்கள் கேட்கும்போது, திகிலடையாதீர்கள். இதெல்லாம் நடக்க வேண்டும், ஆனால் முடிவு அப்போதே வராது.”

மாற்கு 13:7 [பக்கம் 1990]

“பெரிய நிலநடுக்கங்கள் ஏற்படும். அடுத்தடுத்து பல இடங்களில் பஞ்சங்களும் கொள்ளைநோய்களும் உண்டாகும். திகிலுண்டாக்கும் காட்சிகள் தெரியும், வானத்திலிருந்து மாபெரும் அடையாளங்கள் தோன்றும்.”

லூக்கா 21:11 [பக்கம் 2061]

“கடைசி நாட்களில், சமாளிக்க முடியாத அளவுக்கு நிலைமை படு மோசமாக இருக்கும் என்பதைத் தெரிந்துகொள். ஏனென்றால், மனிதர்கள் சுயநலக்காரர்களாக, பண ஆசைபிடித்தவர்களாக, ஆணவமுள்ளவர்களாக, கர்வமுள்ளவர்களாக, கடவுளை நிந்திக்கிறவர்களாக, அப்பா அம்மாவுக்குக் கீழ்ப்படியாதவர்களாக, நன்றிகெட்டவர்களாக, உண்மையில்லாதவர்களாக, பந்தபாசம் இல்லாதவர்களாக, எதற்குமே ஒத்துப்போகாதவர்களாக, மற்றவர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவர்களாக, சுயக்கட்டுப்பாடு இல்லாதவர்களாக, கொடூரமானவர்களாக, நல்ல காரியங்களை விரும்பாதவர்களாக, நம்பிக்கைத் துரோகிகளாக, அடங்காதவர்களாக, தலைக்கனம் பிடித்தவர்களாக, கடவுளை நேசிக்காமல் சுகபோக வாழ்க்கையை நேசிக்கிறவர்களாக, பக்திமான்களைப் போல் காட்டிக்கொண்டு அதற்கு நேர்மாறாக வாழ்கிறவர்களாக இருப்பார்கள்.”

2 தீமோத்தேயு 3:1-5

[பக்கம் 2333]

கேள்வி 8

நம்முடைய கஷ்டங்களுக்குக் கடவுள் காரணமா?

“உண்மைக் கடவுள் ஒருபோதும் கெட்டது செய்ய மாட்டார். சர்வவல்லமையுள்ளவர் ஒருபோதும் அநியாயம் செய்ய மாட்டார்.”

யோபு 34:10 [பக்கம் 1041]

“சோதனை வரும்போது, ‘கடவுள் என்னைச் சோதிக்கிறார்’ என்று யாரும் சொல்லக் கூடாது. கெட்ட காரியங்களால் கடவுளைச் சோதிக்க முடியாது, அவரும் யாரையும் சோதிப்பது கிடையாது.”

யாக்கோபு 1:13 [பக்கம் 2365]

“அவர் உங்கள்மேல் அக்கறையாக இருக்கிறார். அதனால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் போட்டுவிடுங்கள்.”

1 பேதுரு 5:7 [பக்கம் 2380]

“யெகோவா தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றத் தாமதிப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். ஆனால், அவர் தாமதிப்பதில்லை. ஒருவரும் அழிந்துபோகாமல் எல்லாரும் மனம் திருந்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அதனால்தான் உங்கள்மேல் பொறுமையாக இருக்கிறார்.”

2 பேதுரு 3:9 [பக்கம் 2385]

கேள்வி 9

மனிதர்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள்?

“வேகமாக ஓடுகிறவர்கள் எல்லா சமயத்திலும் முதலில் வருவதில்லை, பலசாலிகள் எல்லா சமயத்திலும் போரில் ஜெயிப்பதில்லை, ஞானமுள்ளவர்களிடம் எல்லா சமயத்திலும் உணவு இருப்பதில்லை, புத்திசாலிகளிடம் எல்லா சமயத்திலும் சொத்து குவிந்திருப்பதில்லை, அறிவாளிகளுக்கு எல்லா சமயத்திலும் வெற்றி கிடைப்பதில்லை. ஏனென்றால், எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத சம்பவங்கள் எல்லாருக்கும் நடக்கின்றன.”

பிரசங்கி 9:11 [பக்கம் 1334]

“ஒரே மனிதனால் பாவமும் பாவத்தினால் மரணமும் இந்த உலகத்தில் வந்தது. இப்படி, எல்லா மனிதர்களும் பாவம் செய்ததால் மரணம் எல்லா மனிதர்களுக்கும் பரவியது.”

ரோமர் 5:12 [பக்கம் 2203]

“பிசாசின் செயல்களை ஒழிப்பதற்காகத்தான் கடவுளுடைய மகன் வந்தார்.”

1 யோவான் 3:8 [பக்கம் 2390]

“இந்த உலகம் முழுவதும் பொல்லாதவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.”

1 யோவான் 5:19 [பக்கம் 2394]

கேள்வி 10

நம் எதிர்காலத்தைப் பற்றி பைபிள் என்ன சொல்கிறது?

“நீதிமான்கள் இந்தப் பூமியைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள். அவர்கள் என்றென்றும் அதில் வாழ்வார்கள்.”

சங்கீதம் 37:29 [பக்கம் 1112]

“பூமி என்றென்றும் நிலைத்திருக்கிறது.”

பிரசங்கி 1:4 [பக்கம் 1323]

“மரணத்தை அவர் அடியோடு ஒழித்துக்கட்டுவார். உன்னதப் பேரரசராகிய யெகோவா எல்லாருடைய முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்துவிடுவார்.”

ஏசாயா 25:8 [பக்கம் 1401]

“அப்போது, கண் தெரியாதவர்களுக்குக் கண் தெரியும். காது கேட்காதவர்களுக்குக் காது கேட்கும். நடக்க முடியாதவர்கள் மான்போல் துள்ளி ஓடுவார்கள். பேச முடியாதவர்கள் சந்தோஷத்தில் பாடுவார்கள். வனாந்தரத்தில் தண்ணீர் ஊற்றெடுக்கும். பாலைநிலத்தில் ஆறுகள் பாய்ந்தோடும்.”

ஏசாயா 35:5, 6 [பக்கம் 1422]

“அவர்களுடைய கண்ணீரையெல்லாம் கடவுள் துடைத்துவிடுவார். இனிமேல் மரணம் இருக்காது, துக்கம் இருக்காது, அழுகை இருக்காது, வேதனை இருக்காது. முன்பு இருந்தவை ஒழிந்துபோய்விட்டன.”

வெளிப்படுத்துதல் 21:4 [பக்கம் 2430]

“ஜனங்கள் வீடுகளைக் கட்டி அதில் குடியிருப்பார்கள். திராட்சைத் தோட்டங்களை அமைத்து அதன் பழங்களைச் சாப்பிடுவார்கள். ஒருவர் கட்டும் வீட்டில் இன்னொருவர் குடியிருக்க மாட்டார். ஒருவருடைய தோட்டத்தின் விளைச்சலை இன்னொருவர் சாப்பிட மாட்டார். ஏனென்றால், மரத்தின் ஆயுள் காலத்தைப் போல என் ஜனங்களின் ஆயுள் காலமும் இருக்கும். நான் தேர்ந்தெடுத்த ஜனங்கள் தங்கள் உழைப்பின் பலனை முழுமையாக அனுபவிப்பார்கள்.”

ஏசாயா 65:21, 22 [பக்கம் 1488]

கேள்வி 11

ஒருவர் இறந்த பின்பு என்ன ஆகிறது?

“அவர்களுடைய உயிர்சக்தி போய்விடுகிறது, அவர்கள் மண்ணுக்குத் திரும்புகிறார்கள். அதே நாளில் அவர்களுடைய யோசனைகள் அழிந்துபோகின்றன.”

சங்கீதம் 146:4 [பக்கம் 1254]

“உயிரோடு இருக்கிறவர்களுக்குத் தாங்கள் என்றாவது ஒருநாள் சாக வேண்டியிருக்கும் என்பது தெரியும். ஆனால், இறந்தவர்களுக்கு எதுவுமே தெரியாது . . . உன் கைகளால் எதைச் செய்தாலும் அதை முழு பலத்தோடு செய். ஏனென்றால், நீ போய்ச்சேரும் கல்லறையில் வேலை செய்யவோ திட்டம் போடவோ முடியாது; அங்கே அறிவோ ஞானமோ இல்லை.”

பிரசங்கி 9:5, 10 [பக்கம் 1334]

“[இயேசு] இப்படிச் சொல்லிவிட்டு, ‘நம்முடைய நண்பன் லாசரு தூங்குகிறான், அவனை எழுப்புவதற்காக நான் அங்கே போகப்போகிறேன்’ என்று சொன்னார். லாசரு இறந்துவிட்டதைப் பற்றி இயேசு பேசிக்கொண்டிருந்தார். அவர்களோ, தூங்குவதைப் பற்றி அவர் பேசுவதாக நினைத்துக்கொண்டார்கள். அதனால் இயேசு, ‘லாசரு இறந்துவிட்டான்’ என்று அவர்களிடம் வெளிப்படையாகவே சொன்னார்.”

யோவான் 11:11, 13, 14 [பக்கங்கள் 2100, 2101]

கேள்வி 12

இறந்தவர்கள் மறுபடியும் உயிரோடு வருவார்களா?

“இதைப் பற்றி ஆச்சரியப்படாதீர்கள்; ஏனென்றால், நேரம் வருகிறது; அப்போது, நினைவுக் கல்லறைகளில் இருக்கிற எல்லாரும் அவருடைய குரலைக் கேட்டு வெளியே வருவார்கள்.”

யோவான் 5:28, 29 [பக்கம் 2085]

“நீதிமான்களும் அநீதிமான்களும் உயிரோடு எழுப்பப்படுவார்கள்.”

அப்போஸ்தலர் 24:15 [பக்கம் 2183]

“இறந்துபோன பெரியவர்களும் சிறியவர்களும் சிம்மாசனத்துக்கு முன்னால் நிற்பதைப் பார்த்தேன். அப்போது சுருள்கள் திறக்கப்பட்டன. வாழ்வின் சுருள் என்ற வேறொரு சுருளும் திறக்கப்பட்டது. அந்தச் சுருள்களில் எழுதப்பட்டிருக்கிறபடியே, இறந்தவர்கள் தங்களுடைய செயல்களுக்கு ஏற்ப தீர்ப்பு பெற்றார்கள். கடல் தன்னிடம் இருக்கிற இறந்தவர்களை ஒப்படைத்தது; அதேபோல், மரணமும் கல்லறையும் தங்களிடம் இருக்கிற இறந்தவர்களை ஒப்படைத்தன. ஒவ்வொருவரும் தங்களுடைய செயல்களுக்கு ஏற்ப தீர்ப்பு பெற்றார்கள்.”

வெளிப்படுத்துதல் 20:12, 13 [பக்கம் 2429]

கேள்வி 13

வேலையைப் பற்றி பைபிள் என்ன சொல்கிறது?

“திறமையாக வேலை செய்கிறவனைப் பார்த்திருக்கிறாயா? அவன் சாதாரண ஆட்கள் முன்னால் அல்ல, ராஜாக்கள் முன்னால் நிற்பான்.”

நீதிமொழிகள் 22:29 [பக்கம் 1303]

“திருடுகிறவன் இனி திருடாமல் இருக்க வேண்டும்; இல்லாதவர்களுக்குக் கொடுப்பதற்காக, தானே தன் கையால் பாடுபட்டு நேர்மையாக உழைக்க வேண்டும்.”

எபேசியர் 4:28 [பக்கம் 2291]

“சாப்பிட்டு, குடித்து, தங்கள் கடின உழைப்பால் கிடைக்கிற சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும். இதைவிட மேலானது வேறு எதுவுமே இல்லை. . . . இது கடவுள் தரும் பரிசு.”

பிரசங்கி 3:13 [பக்கம் 1326]



கேள்வி 14

பணக்கஷ்டத்தைத் தவிர்ப்பது எப்படி?

“உல்லாசப் பிரியன் ஏழையாவான். திராட்சமதுவையும் எண்ணெயையும் விரும்புகிறவன் பணக்காரனாக மாட்டான்.”
நீதிமொழிகள் 21:17 [பக்கம் 1300]

“கடன் வாங்கியவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை.”
நீதிமொழிகள் 22:7 [பக்கம் 1301]

“உங்களில் யாராவது ஒரு கோபுரம் கட்ட விரும்பினால், அதைக் கட்டி முடிக்க தனக்குப் போதுமான வசதி இருக்கிறதா என்று முதலில் செலவைக் கணக்கு பார்க்காமல் இருப்பானா? அப்படிச் செய்யாவிட்டால், அஸ்திவாரம் போட்ட பிறகு, அவனால் அதைக் கட்டி முடிக்க முடியாமல் போய்விடும். பார்ப்பவர்கள் எல்லாரும், ‘இந்த மனுஷன் கட்ட ஆரம்பித்தான், ஆனால் முடிக்க முடியவில்லை’ என்று சொல்லி அவனைக் கேலி செய்வார்கள்.”
லூக்கா 14:28-30 [பக்கம் 2046]

“எல்லாரும் வயிறார சாப்பிட்டு முடித்த பிறகு அவர் தன்னுடைய சீஷர்களிடம், ‘எதுவும் வீணாகாதபடி, மீதியான ரொட்டித் துண்டுகளைச் சேகரியுங்கள்’ என்று சொன்னார்.”
யோவான் 6:12 [பக்கம் 2086]

கேள்வி 15

சந்தோஷமாக வாழ்வது எப்படி?

“வெறுப்போடு பரிமாறப்படும் அருமையான இறைச்சியைவிட, அன்போடு பரிமாறப்படும் காய்கறியே மேல்.”

நீதிமொழிகள் 15:17 [பக்கம் 1288]

“யெகோவாவாகிய நானே உங்கள் கடவுள். உங்களுக்குப் பிரயோஜனமானதை நான் கற்றுக்கொடுக்கிறேன். நீங்கள் நடக்க வேண்டிய வழியில் உங்களை நடத்துகிறேன்.”

ஏசாயா 48:17 [பக்கம் 1454]

“ஆன்மீக விஷயங்களில் ஆர்வப்பசியோடு இருக்கிறவர்கள் சந்தோஷமானவர்கள், ஏனென்றால் பரலோக அரசாங்கம் அவர்களுடையது.”

மத்தேயு 5:3 [பக்கம் 1899]

“உன்மேல் நீ அன்பு காட்டுவது போல மற்றவர்கள்மேலும் அன்பு காட்ட வேண்டும்.”

மத்தேயு 22:39 [பக்கம் 1940]

“மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.”

லூக்கா 6:31 [பக்கம் 2020]

“கடவுளுடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கிறவர்கள்தான் சந்தோஷமானவர்கள்!”

லூக்கா 11:28 [பக்கம் 2036]

“ஒருவனுக்கு ஏராளமான சொத்து இருந்தாலும் அது அவனுக்கு வாழ்வைத் தராது.”

லூக்கா 12:15 [பக்கம் 2039]

“அதனால், நமக்கு உணவும் உடையும் இருந்தால் அதுவே போதும் என்று திருப்தியோடு வாழ வேண்டும்.”

1 தீமோத்தேயு 6:8 [பக்கம் 2328]



“வாங்குவதைவிட கொடுப்பதில்தான் அதிக சந்தோஷம் இருக்கிறது.”

அப்போஸ்தலர் 20:35 [பக்கம் 2175]

கேள்வி 16

கவலைகளைச் சமாளிப்பது எப்படி?

“யெகோவாமேல் உன் பாரத்தைப் போட்டுவிடு. அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாட விடமாட்டார்.”

சங்கீதம் 55:22 [பக்கம் 1134]

“கடினமாக உழைக்கிறவனுடைய திட்டங்கள் நிச்சயம் வெற்றி பெறும். ஆனால், எதையும் அவசரப்பட்டுச் செய்கிறவர்களுக்கு வறுமைதான் வரும்.”

நீதிமொழிகள் 21:5 [பக்கம் 1299]

“பயப்படாதே, நான் உன்னோடு இருக்கிறேன். கவலைப்படாதே, நான் உன் கடவுள். நான் உன்னைப் பலப்படுத்துவேன், உனக்கு உதவி செய்வேன். என்னுடைய நீதியான வலது கையால் உன்னைத் தாங்குவேன்.”

ஏசாயா 41:10 [பக்கம் 1434]

“கவலைப்படுவதால் உங்களில் யாராவது தன்னுடைய வாழ்நாளில் ஒரு நொடியை கூட்ட முடியுமா?”

மத்தேயு 6:27 [பக்கம் 1904]

“நாளைக்காக ஒருபோதும் கவலைப்படாதீர்கள். நாளைக்கு நாளைய கவலைகள் இருக்கும். அந்தந்த நாளுக்கு அதனதன் பாடுகள் போதும்.”

மத்தேயு 6:34 [பக்கம் 1904]

"மிக முக்கியமான காரியங்கள் எவை என்று நீங்கள் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்."

பிலிப்பியர் 1:10 [பக்கம் 2296]

"நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்; உங்களுடைய எல்லா விண்ணப்பங்களையும் நன்றியோடுகூடிய ஜெபத்தின் மூலமும் மன்றாட்டின் மூலமும் கடவுளிடம் சொல்லுங்கள். அப்போது, எல்லா சிந்தனைக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இதயத்தையும் மனதையும் கிறிஸ்து இயேசுவின் மூலமாகப் பாதுகாக்கும்."

பிலிப்பியர் 4:6, 7 [பக்கம் 2301]

கேள்வி 17

குடும்ப வாழ்க்கைக்கு பைபிள் எப்படி உதவுகிறது?

கணவர்கள்/அப்பாக்கள்

“அதேபோல, கணவர்களும் தங்கள் சொந்த உடல்மீது அன்பு காட்டுவதுபோல் தங்கள் மனைவிமீதும் அன்பு காட்ட வேண்டும். தன் மனைவிமீது அன்பு காட்டுகிறவன் தன்மீதே அன்பு காட்டுகிறான். ஒருவனும் தன் உடலை வெறுக்க மாட்டான், அதைக் கவனித்துக்கொண்டு நெஞ்சார நேசிப்பான். . . . நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள்மீது அன்பு காட்டுவதுபோல், உங்கள் மனைவிமீதும் அன்பு காட்ட வேண்டும்.”

எபேசியர் 5:28, 29, 33 [பக்கம் 2293]

“அப்பாக்களே, உங்களுடைய பிள்ளைகளுக்கு எரிச்சலூட்டாதீர்கள். அதற்குப் பதிலாக, யெகோவா சொல்கிற விதத்தில் அவர்களைக் கண்டித்து, அவர் தருகிற புத்திமதியின்படி வளர்த்து வாருங்கள்.”

எபேசியர் 6:4 [பக்கம் 2294]

மனைவிகள்

“மனைவி தன் கணவனுக்கு ஆழ்ந்த மரியாதை காட்ட வேண்டும்.”

எபேசியர் 5:33 [பக்கம் 2293]

“மனைவிகளே, உங்கள் கணவருக்குக் கட்டுப்பட்டு நடங்கள்; இதுவே நம் எஜமானைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஏற்றது.”

கொலோசெயர் 3:18 [பக்கம் 2308]

பிள்ளைகள்

“பிள்ளைகளே, நம் எஜமான் விரும்புகிறபடி உங்கள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கீழ்ப்படிந்து நடங்கள், இதுதான் சரியானது. ‘உங்கள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மதிப்புக் கொடுங்கள்’ என்பதுதான் வாக்குறுதியோடு கொடுக்கப்பட்ட முதலாம் கட்டளை. ‘நீ சீரும் சிறப்புமாக இருப்பாய், பூமியில் நீண்ட காலம் வாழ்வாய்’ என்பதுதான் அந்த வாக்குறுதி.”

எபேசியர் 6:1-3 [பக்கம் 2294]

“பிள்ளைகளே, உங்கள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எல்லா விஷயத்திலும் கீழ்ப்படிந்து நடங்கள். இதுதான் நம் எஜமானுக்குப் பிரியமானது.”

கொலோசெயர் 3:20 [பக்கம் 2308]

கேள்வி 18

கடவுளுடைய நண்பராவது எப்படி?

“ஜெபத்தைக் கேட்கிறவரே, எல்லா விதமான மக்களும் உங்களைத் தேடி வருவார்கள்.”

சங்கீதம் 65:2 [பக்கம் 1143]

“யெகோவாவை முழு இதயத்தோடு நம்பு. உன்னுடைய சொந்த புத்தியை நம்பாதே. எதைச் செய்தாலும் அவரை மனதில் வைத்துச் செய். அப்போது, உன் வழியில் இருக்கும் தடைகளையெல்லாம் அவர் நீக்கிவிடுவார்.”

நீதிமொழிகள் 3:5, 6 [பக்கம் 1265]

“ஒரே உண்மையான கடவுளாகிய உங்களையும், நீங்கள் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் பற்றி அவர்கள் தெரிந்துகொண்டே இருந்தால் அவர்களுக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்கும்.”

யோவான் 17:3 [பக்கம் 2114]

‘உண்மையில், அவர் [கடவுள்] நம் ஒருவருக்கும் தூரமானவராக இல்லை.’

அப்போஸ்தலர் 17:27 [பக்கம் 2168]

“அன்பிலும் திருத்தமான அறிவிலும் முழுமையான பகுத்தறிவிலும் நீங்கள் அதிகமதிகமாகப் பெருக வேண்டும் என்று . . . தொடர்ந்து ஜெபம் செய்கிறேன்.”

பிலிப்பியர் 1:9, 10 [பக்கம் 2296]

“உங்களில் ஒருவனுக்கு ஞானம் குறைவாக இருந்தால், கடவுளிடம் அவன் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்; அப்படிக் கேட்கிறவர்களை அவர் திட்ட மாட்டார். எல்லாருக்கும் தாராளமாகக் கொடுக்கிற கடவுள் அவனுக்கும் கொடுப்பார்.”

யாக்கோபு 1:5 [பக்கம் 2365]

“கடவுளிடம் நெருங்கி வாருங்கள், அப்போது அவர் உங்களிடம் நெருங்கி வருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்தமாக்குங்கள்; இரண்டு மனதாக இருக்கிறவர்களே, உங்கள் இதயங்களைத் தூய்மையாக்குங்கள்.”

யாக்கோபு 4:8 [பக்கம் 2370]

“நாம் கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதுதான் அவர்மீது அன்பு காட்டுவதாகும். அவருடைய கட்டளைகள் பாரமானவை அல்ல.”

1 யோவான் 5:3 [பக்கம் 2392]

கேள்வி 19

பைபிள் புத்தகங்களில் என்ன தகவல் இருக்கிறது?

எபிரெய வேதாகமம் (“பழைய ஏற்பாடு”)

ஐந்தாகமம் (5 புத்தகங்கள்):

ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம்
படைப்புமுதல் பூர்வ கால இஸ்ரவேல் தேசம் உருவானதுவரை

சரித்திரப் புத்தகங்கள் (12 புத்தகங்கள்):

யோசுவா, நியாயாதிபதிகள், ரூத்
வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்துக்குள் இஸ்ரவேலர்கள் நுழைந்ததைப் பற்றியும், அதற்குப்பின் நடந்த சம்பவங்களைப் பற்றியும்

1, 2 சாமுவேல்; 1, 2 ராஜாக்கள்; 1, 2 நாளாகமம்
எருசலேமின் அழிவுவரை இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரம்

எஸ்றா, நெகேமியா, எஸ்தர்
பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப்போன யூதர்கள் திரும்பி வந்தபின் நடந்த சம்பவங்கள்

கவிதைநடை புத்தகங்கள் (5 புத்தகங்கள்):

யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு
பொன்மொழிகளும் பாடல்களும் அடங்கிய தொகுப்பு

தீர்க்கதரிசனப் புத்தகங்கள் (17 புத்தகங்கள்):

ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல், தானியேல், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா
கடவுளுடைய மக்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

கிறிஸ்தவ கிரேக்க வேதாகமம் ("புதிய ஏற்பாடு")

நான்கு சுவிசேஷங்கள் (4 புத்தகங்கள்):

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்
இயேசுவின் வாழ்க்கையும் ஊழியமும்

அப்போஸ்தலரின் செயல்கள் (1 புத்தகம்):

கிறிஸ்தவ சபையின் ஆரம்பம், மிஷனரி பயணங்கள்

கடிதங்கள் (21 புத்தகங்கள்):

ரோமர், 1, 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1, 2 தெசலோனிக்கேயர்
கிறிஸ்தவ சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்கள்

1, 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன்
கிறிஸ்தவர்கள் சிலருக்குத் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்ட கடிதங்கள்

எபிரெயர், யாக்கோபு, 1, 2 பேதுரு
1, 2, 3 யோவான், யூதா
கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும் எழுதப்பட்ட கடிதங்கள்

வெளிப்படுத்துதல் (1 புத்தகம்):

எதிர்காலத்தில் நடக்கப்போவதைப் பற்றி அப்போஸ்தலன் யோவானுக்குக் காட்டப்பட்ட தரிசனங்கள்

கேள்வி 20

பைபிள் படிப்பிலிருந்து எப்படிப் பயனடையலாம்?

பைபிளை வாசிக்கும்போது இப்படி யோசித்துப் பாருங்கள்:

யெகோவா தேவனைப் பற்றி இதிலிருந்து என்ன தெரிந்துகொண்டேன்?

பைபிளின் முக்கியச் செய்திக்கும் இந்த வசனங்களுக்கும் என்ன சம்பந்தம்?

இதை என் வாழ்க்கையில் எப்படிக் கடைப்பிடிக்கலாம்?

மற்றவர்களுக்கு உதவி செய்ய இந்த வசனங்களை எப்படிப் பயன்படுத்தலாம்?

“உங்களுடைய வார்த்தை என் கால்களுக்கு விளக்காகவும், என் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கிறது.”
சங்கீதம் 119:105
[பக்கம் 1228]



முன்னுரை

கடவுள் நம்மோடு தொடர்புகொள்வதற்காகக் கொடுத்திருக்கிற புத்தகம்தான் பரிசுத்த பைபிள். அவரைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு நாம் பைபிளைப் படிக்க வேண்டும். (யோவான் 17:3; 2 தீமோத்தேயு 3:16) மனிதர்களையும் இந்தப் பூமியையும் படைத்த தற்கான காரணத்தைப் பற்றிக் கடவுளாகிய யெகோவா பைபிளில் சொல்லியிருக்கிறார். —ஆதியாகமம் 3:15; வெளிப்படுத்துதல் 21:3, 4.

பைபிளைப் போல வேறு எந்தப் புத்தகமும் மனிதர்களுடைய வாழ்க்கையில் இந்த ளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. யெகோவாவைப் போலவே நாமும் அன்பு, இரக் கம், கரிசனை போன்ற குணங்களைக் காட்டுவதற்கு பைபிள் நம்மைத் தூண்டுகிறது. நாம் நம்பிக்கையோடு வாழவும் பயங்கரமான கஷ்டத்தைக்கூட சகித்துக்கொள்ளவும் பைபிள் நமக்கு உதவி செய்கிறது. இந்த உலகத்தில் கடவுளுடைய பரிபூரண விருப் பத்துக்கு எதிராக இருக்கும் எல்லாவற்றையும் அது தொடர்ந்து வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.—சங்கீதம் 119:105; எபிரெயர் 4:12; 1 யோவான் 2:15-17.

பைபிள் முதன்முதலில் எபிரெயு, அரமேயிக், மற்றும் கிரேக்கு மொழிகளில் எழுதப் பட்டது. பிறகு அது பகுதிகளாகவோ முழுமையாகவோ சுமார் 3,000 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சரித்திரத்திலேயே மிக அதிகமாக மொழிபெயர்க்கப் பட்டு, விநியோகிக்கப்பட்டுள்ள புத்தகம் பைபிள்தான். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. பைபிள் தீர்க்கதரிசனம் இப்படிச் சொல்கிறது: “கடவுளுடைய அரசாங் கத்தைப் பற்றிய இந்த நல்ல செய்தி உலகம் முழுவதும் இருக்கிற எல்லா தேசத்தாருக் கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்; பின்பு முடிவு வரும்.”—மத்தேயு 24:14.

பைபிளில் இருக்கும் செய்தி மிகவும் முக்கியமானது. அதனால், மூலப் பதிவுகளில் இருப்பதை அர்த்தம் மாறாமல் மொழிபெயர்ப்பதோடு, வாசிப்பதற்குத் தெளிவாகவும் எளிமையாகவும் இருக்கும்படி மொழிபெயர்ப்பதே எங்கள் குறிக்கோளாக இருந்திருக் கிறது. இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற “பைபிள் மொழிபெயர்ப்புக்கு உதவும் நிய மங்கள்,” “இந்த மொழிபெயர்ப்பின் சிறப்பம்சங்கள்,” “பைபிள் நமக்குக் கிடைத்த விதம்” போன்ற கட்டுரைகள், இந்த மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்ட சில நிய மங்களைப் பற்றியும் இதிலுள்ள சில சிறப்பம்சங்களைப் பற்றியும் சொல்கின்றன.

கடவுளாகிய யெகோவாவை நேசிக்கிறவர்களும் அவரை வணங்குகிறவர்களும், அவ ருடைய புத்தகத்தின் திருத்தமான மொழிபெயர்ப்பை, அதுவும் புரிந்துகொள்வதற்கு எளிமையான மொழிபெயர்ப்பை விரும்புகிறார்கள். (1 தீமோத்தேயு 2:4) அதனால், *புதிய உலக மொழிபெயர்ப்பு* பைபிளை முடிந்தளவு நிறைய மொழிகளில் மொழிபெ யர்க்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய குறிக்கோள். இதை மனதில் வைத்தே இந்த மொழிபெயர்ப்பைத் தமிழில் வெளியிட்டிருக்கிறோம். அன்பான வாசகரே, ‘கட வுளைத் தேடவும், . . . அவரைக் கண்டுபிடிக்கவும்’ நீங்கள் எடுக்கிற முயற்சியில், பரி சுத்த பைபிளின் இந்த மொழிபெயர்ப்பு உங்களுக்குக் கைகொடுக்கும் என்று நம்பு கிறோம், அதற்காக ஜெபம் செய்கிறோம்!—அப்போஸ்தலர் 17:27.

புதிய உலக பைபிள் மொழிபெயர்ப்புக் குழு

புத்தகங்களின் பெயர்ப் பட்டியல்

எபிரெய-அரமேயிக் வேதாகமம்

புத்தகம்	பெயர்ச் சுருக்கம்	பக்கம்
ஆதியாகமம்	ஆதி	41
யாத்திராகமம்	யாத்	141
லேவியராகமம்	லேவி	225
எண்ணாகமம்	எண்	285
உபாகமம்	உபா	368
யோசுவா	யோசு	443
நியாயாதிபதிகள்	நியா	491
ரூத்	ரூ	540
1 சாமுவேல்	1சா	547
2 சாமுவேல்	2சா	612
1 ராஜாக்கள்	1ரா	667
2 ராஜாக்கள்	2ரா	732
1 நாளாகமம்	1நா	794
2 நாளாகமம்	2நா	851
எஸ்றா	எஸ்றா	922
நெகேமியா	நெ	940
எஸ்தர்	எஸ்தர்	968
யோபு	யோபு	983
சங்கீதம்	சங்	1057
நீதிமொழிகள்	நீதி	1258
பிரசங்கி	பிர	1321
உன்னதப்பாட்டு	உன்	1338
ஏசாயா	ஏசா	1351
எரேமியா	எரே	1492
புலம்பல்	புல	1625
எசேக்கியேல்	எசே	1641
தானியேல்	தானி	1745
ஓசியா	ஓசி	1776
யோவேல்	யோவே	1797
ஆமோஸ்	ஆமோ	1805
ஒபதியா	ஒப	1821
யோனா	யோனா	1823
மீகா	மீ	1828
நாகூம்	நாகூ	1840
ஆபகூக்	ஆப	1846
செப்பனியா	செப்	1852
ஆகாய்	ஆகா	1859
சகரியா	சக	1863
மல்கியா	மல்	1882

கிறிஸ்தவ கிரேக்க வேதாகமம்

புத்தகம்	பெயர்ச் சுருக்கம்	பக்கம்
மத்தேயு	மத்	1890
மாற்கு	மாற்	1958
லூக்கா	லூ	1999
யோவான்	யோவா	2072
அப்போஸ்தலர்	அப்	2125
ரோமர்	ரோ	2194
1 கொரிந்தியர்	1கொ	2224
2 கொரிந்தியர்	2கொ	2254
கலாத்தியர்	கலா	2274
எபேசியர்	எபே	2285
பிலிப்பியர்	பிலி	2295
கொலோசெயர்	கொலோ	2303
1 தெசலோனிக்கேயர்	1தெ	2310
2 தெசலோனிக்கேயர்	2தெ	2317
1 தீமோத்தேயு	1தீ	2320
2 தீமோத்தேயு	2தீ	2329
தீத்து	தீத்	2336
பிலேமோன்	பிலே	2340
எபிரெயர்	எபி	2341
யாக்கோபு	யாக்	2364
1 பேதுரு	1பே	2372
2 பேதுரு	2பே	2381
1 யோவான்	1யோ	2386
2 யோவான்	2யோ	2394
3 யோவான்	3யோ	2395
யூதா	யூ	2397
வெளிப்படுத்துதல்	வெளி	2399

பைபிள் புத்தகங்களின் பட்டியல்	2434
பைபிள் வார்த்தைகளின் அட்டவணை	2436
பைபிள் வார்த்தைகளின் சொல் பட்டியல்	2464
இணைப்பு A	2487
இணைப்பு B	2533

ஆதியாகமம்

முக்கியக் குறிப்புகள்

ஆதி+ஆகமம்=ஆதியாகமம். அர்த்தம், "ஆரம்பகாலப் பதிவு."

1 வானமும் பூமியும் படைக்கப்படுகின்றன (1, 2)
பூமியிலுள்ள எல்லாமே ஆறு நாட்களில் படைக்கப்படுகின்றன (3-31)
1-ஆம் நாள்: வெளிச்சம்; பகலும் இரவும் (3-5)
2-ஆம் நாள்: ஆகாயவிரிவு (6-8)
3-ஆம் நாள்: காய்ந்த தரையும், செடிகொடிகளும் (9-13)
4-ஆம் நாள்: வானத்தில் ஒளிச்சுடர்கள் (14-19)
5-ஆம் நாள்: மீன்களும், பறவைகளும் (20-23)
6-ஆம் நாள்: நிலத்தில் வாழ்கிற மிருகங்களும், மனிதர்களும் (24-31)

2 ஏழாம் நாளில் கடவுள் ஓய்வெடுக்கிறார் (1-3)
கடவுளாகிய யெகோவா வானத்தையும் பூமியையும் படைத்தவர் (4)
ஏதேன் தோட்டத்தில் மனிதனும் மனுஷியும் (5-25)
மனிதன் மண்ணிலிருந்து உருவாக்கப்படுகிறான் (7)
தடை செய்யப்பட்ட மரம் (15-17)
பெண் உருவாக்கப்படுகிறாள் (18-25)

3 பாவத்தின் ஆரம்பம் (1-13)
முதல் பொய் (4, 5)
யெகோவாவின் பேச்சை மீறியவர்களுக்குத் தண்டனை (14-24)
பெண்ணின் சந்ததி பற்றி முன்னறிவிக்கப்படுகிறது (15)
ஏதேனிலிருந்து துரத்தப்படுகிறார்கள் (23, 24)

4 காயீனும் ஆபேலும் (1-16)
காயீனின் வம்சம் (17-24)
சேத்தும் அவருடைய மகன் ஏனோசும் (25, 26)

5 ஆதாம்முதல் நோவாவரை (1-32)
ஆதாமுக்கு மகன்களும் மகள்களும் பிறக்கிறார்கள் (4)
ஏனோக்கு கடவுளோடு நடந்தார் (21-24)

6 தேவதூதர்கள் பூமியிலுள்ள பெண்களை மனைவிகளாக ஆக்கிக்கொள்கிறார்கள் (1-3)
ராட்சதர்கள் பிறக்கிறார்கள் (4)
மனிதர்களின் மோசமான நடத்தையைப் பார்த்து யெகோவா வேதனைப்படுகிறார் (5-8)
பேழையைக் கட்டும்படி நோவாவிடம் சொல்கிறார் (9-16)
பெரிய வெள்ளம் வரப்போவதைப் பற்றிக் கடவுள் சொல்கிறார் (17-22)

7 பேழைக்குள் போகுதல் (1-10)
பூமியெங்கும் வெள்ளம் (11-24)

8 தண்ணீர் வடிகிறது (1-14)
புறா வெளியே விடப்படுகிறது (8-12)
பேழையிலிருந்து வெளியே வருதல் (15-19)
பூமியைப் பற்றிக் கடவுள் கொடுத்த வாக்குறுதி (20-22)

9 எல்லா மனிதர்களுக்கும் கொடுக்கப்படுகிற அறிவுரைகள் (1-7)
இரத்தத்தைப் பற்றிய சட்டம் (4-6)
வானவில் ஒப்பந்தம் (8-17)
நோவாவின் வம்சத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் (18-29)

10 சந்ததிகளின் பட்டியல் (1-32)
யாப்பேத்தின் வம்சம் (2-5)
காமின் வம்சம் (6-20)
நிம்ரோது யெகோவாவை எதிர்க்கிறான் (8-12)
சேமின் வம்சம் (21-31)

11 பாபேல் கோபுரம் (1-4)
யெகோவா மொழியைக் குழப்புகிறார் (5-9)
சேமிலிருந்து ஆபிராம்வரை (10-32)
தேராகுவின் குடும்பம் (27)
ஊர் நகரத்தைவிட்டு ஆபிராம் புறப்படுகிறார் (31)

12 ஆபிராம் ஆரானிலிருந்து கானானுக்குப் போகிறார் (1-9)
ஆபிராமுக்குக் கடவுள் கொடுக்கிற வாக்குறுதி (7)
எகிப்தில் ஆபிராமும் சாராயும் (10-20)

13 ஆபிராம் கானானுக்குத் திரும்பிப் போகிறார் (1-4)
ஆபிராமும் லோத்துவும் பிரிந்து போகிறார்கள் (5-13)
ஆபிராமுக்கு மறுபடியும் கடவுளுடைய வாக்குறுதி (14-18)

14 ஆபிராம் லோத்துவைக் காப்பாற்றுகிறார் (1-16)
ஆபிராமை மெல்கிசேதேக்கு ஆசீர்வதிக்கிறார் (17-24)

15 ஆபிராமோடு கடவுள் செய்கிற ஒப்பந்தம் (1-21)
400 வருட அடிமைத்தனம் முன்னறிவிக்கப்படுகிறது (13)
ஆபிராமுக்கு மறுபடியும் கடவுளுடைய வாக்குறுதி (18-21)

16 ஆகாரும் இஸ்மவேலும் (1-16)

17 ஆபிரகாம் நிறைய தேசங்களுக்குத் தகப்பனாக ஆவார் (1-8)
ஆபிராமுக்கு ஆபிரகாம் என்று பெயர் வைக்கப்படுகிறது (5)
விருத்தசேதன ஒப்பந்தம் (9-14)
சாராய்க்கு சாராள் என்று பெயர் வைக்கப்படுகிறது (15-17)
ஈசாக்கு பிறப்பான் என்று வாக்குறுதி கொடுக்கப்படுகிறது (18-27)

18 மூன்று தேவதூதர்கள் ஆபிரகாமைச் சந்திக்கிறார்கள் (1-8)
மகன் பிறப்பான் என்று சாராளுக்கு வாக்குறுதி; சாராள் சிரிக்கிறாள் (9-15)
சோதோமுக்காக ஆபிரகாம் கெஞ்சுகிறார் (16-33)

19 தேவதூதர்கள் லோத்துவைச் சந்திக்கிறார்கள் (1-11)
குடும்பத்தோடு ஓடிப்போகும்படி லோத்துவிடம் சொல்லப்படுகிறது (12-22)
சோதோமும் கொமோராவும் அழிக்கப்படுகின்றன (23-29)
லோத்துவின் மனைவி உப்புச் சிலையாகிறாள் (26)
லோத்துவும் அவருடைய மகள்களும் (30-38)
மோவாபியர்கள் மற்றும் அம்மோனியர்களின் ஆரம்பம் (37, 38)

20 அபிமெலேக்கிடமிருந்து சாராள் விடுவிக்கப்படுகிறாள் (1-18)

21 ஈசாக்கு பிறக்கிறார் (1-7)
ஈசாக்கை இஸ்மவேல் கேலி செய்கிறான் (8, 9)
ஆகாரும் இஸ்மவேலும் வெளியே அனுப்பப்படுகிறார்கள் (10-21)
அபிமெலேக்குடன் ஆபிரகாம் செய்கிற ஒப்பந்தம் (22-34)

22 ஈசாக்கைப் பலிகொடுக்கும்படி ஆபிரகாமிடம் சொல்லப்படுகிறது (1-19)
ஆபிரகாமின் சந்ததி மூலம் கிடைக்கும் ஆசீர்வாதம் (15-18)
ரெபெக்காளின் குடும்பம் (20-24)

23 சாராளின் மரணமும் அவள் அடக்கம் செய்யப்படுகிற இடமும் (1-20)

24 ஈசாக்குக்குப் பெண் தேடப்படுகிறது (1-58)
ரெபெக்காள் ஈசாக்கைச் சந்திக்கப் போகிறாள் (59-67)

25 ஆபிரகாம் வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்கிறார் (1-6)
ஆபிரகாமின் மரணம் (7-11)
இஸ்மவேலின் மகன்கள் (12-18)
யாக்கோபும் ஏசாவும் பிறக்கிறார்கள் (19-26)
மூத்த மகனின் உரிமையை ஏசா விற்கிறான் (27-34)

26 கேராரில் ஈசாக்கும் ரெபெக்காளும் (1-11)
கடவுளுடைய வாக்குறுதி ஈசாக்கிடம் உறுதிப்படுத்தப்படுகிறது (3-5)
கிணறுகளுக்காக வாக்குவாதம் (12-25)
அபிமெலேக்குடன் ஈசாக்கு செய்கிற ஒப்பந்தம் (26-33)
ஏசாவின் இரண்டு ஏத்திய மனைவிகள் (34, 35)

27 ஈசாக்கிடமிருந்து யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெறுகிறான் (1-29)
ஏசா ஆசீர்வாதம் கேட்கிறான், ஆனால் மனம் திருந்தவில்லை (30-40)
யாக்கோபின்மேல் ஏசாவுக்குக் கடும் கோபம் (41-46)

28 யாக்கோபை ஈசாக்கு பதான்-அராமுக்கு அனுப்புகிறார் (1-9)
பெத்தேலில் யாக்கோபு கண்ட கனவு (10-22)
கடவுளுடைய வாக்குறுதி யாக்கோபுக்கு உறுதிப்படுத்தப்படுகிறது (13-15)

29 யாக்கோபு ராகேலைச் சந்திக்கிறார் (1-14)
ராகேலை யாக்கோபு காதலிக்கிறார் (15-20)
லேயாளையும் ராகேலையும் யாக்கோபு கல்யாணம் செய்கிறார் (21-29)
லேயாளுக்கும் யாக்கோபுக்கும் பிறந்தவர்கள்: ரூபன், சிமியோன், லேவி, யூதா (30-35)

30 பில்காளுக்கு தாண், நப்தலி பிறக்கிறார்கள் (1-8)
சில்பாளுக்கு காத், ஆசேர் பிறக்கிறார்கள் (9-13)
லேயாளுக்கு இசக்கார், செபுலோன் பிறக்கிறார்கள் (14-21)
ராகேலுக்கு யோசேப்பு பிறக்கிறார் (22-24)

யாக்கோபின் மந்தைகள் பெருகுகின்றன (25-43)

31 யாக்கோபு ரகசியமாக கானானுக்குக் கிளம்புகிறார் (1-18)
லாபான் யாக்கோபைத் துரத்திக்கொண்டு போகிறார் (19-35)
லாபானோடு யாக்கோபு செய்யும் ஒப்பந்தம் (36-55)

32 தேவதூதர்கள் யாக்கோபைச் சந்திக்கிறார்கள் (1, 2)
ஏசாவைச் சந்திக்க யாக்கோபு தயாராகிறார் (3-23)
ஒரு தேவதூதரோடு யாக்கோபு போராடுகிறார் (24-32)
யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்று பெயர் வைக்கப்படுகிறது (28)

33 ஏசாவை யாக்கோபு சந்திக்கிறார் (1-16)
யாக்கோபு சீகேமுக்குப் போகிறார் (17-20)

34 தீனாள் கற்பழிக்கப்படுகிறாள் (1-12)
யாக்கோபின் மகன்கள் தந்திரமாக நடந்துகொள்கிறார்கள் (13-31)

35 யாக்கோபு பொய் தெய்வங்களின் சிலைகளைத் தூக்கிப்போடுகிறார் (1-4)
யாக்கோபு பெத்தேலுக்குத் திரும்பி வருகிறார் (5-15)
பென்யமீன் பிறக்கிறான், ராகேல் இறந்துபோகிறாள் (16-20)
இஸ்ரவேலின் 12 மகன்கள் (21-26)
ஈசாக்கின் மரணம் (27-29)

36 ஏசாவின் வம்சம் (1-30)
ஏதோமின் ராஜாக்களும் குலத்தலைவர்களும் (31-43)

37 யோசேப்பு கண்ட கனவுகள் (1-11)
யோசேப்பும் வயிற்றெரிச்சல்பட்ட அவனுடைய சகோதரர்களும் (12-24)
யோசேப்பு அடிமையாக விற்கப்படுகிறான் (25-36)

38 யூதாவும் தாமாரும் (1-30)

39 போத்திபாரின் வீட்டில் யோசேப்பு (1-6)
யோசேப்பு போத்திபாருடைய மனைவியின் ஆசைக்கு அடிபணிய மறுக்கிறார் (7-20)
சிறையில் யோசேப்பு (21-23)

40 கைதிகள் கண்ட கனவுகளின் அர்த்தத்தை யோசேப்பு சொல்கிறார் (1-19)
'கடவுளால் மட்டும்தான் கனவுகளுக்கு அர்த்தம் சொல்ல முடியும்' (8)
பார்வோனுடைய பிறந்த நாள் விருந்து (20-23)

41 பார்வோன் கண்ட கனவுகளுக்கு யோசேப்பு அர்த்தம் சொல்கிறார் (1-36)
யோசேப்பைப் பார்வோன் உயர்த்துகிறார் (37-46அ)
யோசேப்பு உணவு நிர்வாகி ஆகிறார் (46ஆ-57)

42 யோசேப்பின் அண்ணன்கள் எகிப்துக்குப் போகிறார்கள் (1-4)
யோசேப்பு அவருடைய அண்ணன்களைச் சந்திக்கிறார், அவர்களைச் சோதிக்கிறார் (5-25)
அவருடைய அண்ணன்கள் யாக்கோபிடம் திரும்பிப் போகிறார்கள் (26-38)

43 யோசேப்பின் அண்ணன்கள் பென்யமீனோடு எகிப்துக்கு மறுபடியும் போகிறார்கள் (1-14)
யோசேப்பு தன் சகோதரர்களை மறுபடியும் சந்திக்கிறார் (15-23)
தன் சகோதரர்களோடு யோசேப்பு விருந்து சாப்பிடுகிறார் (24-34)

44 பென்யமீனின் பையில் யோசேப்பின் வெள்ளிக் கோப்பை (1-17)
பென்யமீனுக்காக யூதா கெஞ்சுகிறார் (18-34)

45 தான் யார் என்பதை யோசேப்பு சொல்கிறார் (1-15)
யோசேப்பின் சகோதரர்கள் யாக்கோபிடம் திரும்பிப் போகிறார்கள் (16-28)

46 யாக்கோபு குடும்பத்தோடு எகிப்துக்குக் குடிமாறிப் போகிறார் (1-7)
எகிப்துக்குக் குடிமாறிப் போகிறவர்களின் பெயர்கள் (8-27)
கோசேனில் யோசேப்பு யாக்கோபைச் சந்திக்கிறார் (28-34)

47 யாக்கோபு பார்வோனைச் சந்திக்கிறார் (1-12)
யோசேப்பு உணவு வழங்கும் பொறுப்பை ஞானமாகச் செய்கிறார் (13-26)
கோசேனில் இஸ்ரவேல் குடியேறுகிறார் (27-31)

48 யோசேப்பின் இரண்டு மகன்களையும் யாக்கோபு ஆசீர்வதிக்கிறார் (1-12)
எப்பிராயீமுக்கு அதிக ஆசீர்வாதம் கிடைக்கிறது (13-22)

49 மரணப் படுக்கையில் யாக்கோபு தீர்க்கதரிசனம் சொல்கிறார் (1-28)
யூதாவிலிருந்து ஷைலோ வருவார் (10)

தன்னை எங்கே அடக்கம் செய்ய வேண்டுமென்று யாக்கோபு சொல்கிறார் (29-32)
யாக்கோபின் மரணம் (33)
50 யாக்கோபை யோசேப்பு கானானில் அடக்கம் செய்கிறார் (1-14)
சகோதரர்களை மன்னித்துவிட்டதாக யோசேப்பு உறுதியளிக்கிறார் (15-21)
யோசேப்பின் இறுதி நாட்களும் மரணமும் (22-26)
தன் எலும்புகளை என்ன செய்ய வேண்டுமென்று யோசேப்பு சொல்கிறார் (25)

1 ஆரம்பத்தில் கடவுள் வானத்தையும் பூமியையும் படைத்தார்.[a]
2 பூமி ஒழுங்கில்லாமல் வெறுமையாக* இருந்தது, எங்கு பார்த்தாலும்
ஆழமான தண்ணீரும்[b] இருட்டுமாக இருந்தது. தண்ணீருக்கு மேலே[c] கடவு
ளுடைய சக்தி#[d] செயல்பட்டுக்கொண்டு△ இருந்தது.
3 பின்பு கடவுள், "வெளிச்சம் வரட்டும்" என்று சொன்னார். அப்போது
வெளிச்சம் வந்தது.[e] **4** கடவுள் வெளிச்சத்தைப் பார்த்தபோது அது நன்
றாக இருந்தது. பின்பு, அவர் வெளிச்சத்தையும் இருட்டையும் தனித்தனி
யாகப் பிரித்தார். **5** வெளிச்சத்துக்குப் பகல் என்றும், இருட்டுக்கு இரவு[f]
என்றும் பெயர் வைத்தார். சாயங்காலமும் விடியற்காலையும் வந்தது, முத
லாம் நாள் முடிந்தது.
6 பின்பு கடவுள், "தண்ணீர் இரண்டாகப் பிரியட்டும்,[g] நடுவில் ஆகா
யவிரிவு உண்டாகட்டும்"[h] என்று சொல்லி, **7** ஆகாயவிரிவை உண்டாக்க
ஆரம்பித்தார். தண்ணீரின் ஒரு பகுதி ஆகாயவிரிவுக்குக் கீழேயும் இன்
னொரு பகுதி ஆகாயவிரிவுக்கு மேலேயும் இருக்கும்படி பிரித்தார்.[i] அது
அப்படியே ஆனது. **8** அவர் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பெயர்
வைத்தார். சாயங்காலமும் விடியற்காலையும் வந்தது, இரண்டாம் நாள்
முடிந்தது.
9 பின்பு கடவுள், "வானத்துக்குக் கீழே இருக்கிற தண்ணீரெல்லாம் ஒரு
பக்கமாக ஒதுங்கட்டும், காய்ந்த தரை உண்டாகட்டும்"[j] என்று சொன்
னார். அது அப்படியே ஆனது. **10** காய்ந்த தரைக்கு நிலம் என்று கடவுள்
பெயர் வைத்தார்.[k] ஒருபக்கமாக ஒதுங்கிய தண்ணீருக்குக் கடல்[l] என்று
பெயர் வைத்தார். அவற்றை அவர் பார்த்தபோது அவை நன்றாக இருந்
தன.[m] **11** பின்பு கடவுள், "நிலத்தில் புற்களும் செடிகளும் மரங்களும்
அந்தந்த இனத்தின்படியே* முளைக்கட்டும். செடிகள் விதைகளைத் தரட்
டும், மரங்கள் விதைகளுள்ள பழங்களைக் கொடுக்கட்டும்" என்று சொன்
னார். அது அப்படியே ஆனது. **12** நிலத்தில் புற்களும் செடிகளும்
மரங்களும் அந்தந்த இனத்தின்படியே முளைக்க ஆரம்பித்தன. செடிகள்
விதைகளைத் தந்தன,[n] மரங்கள் விதைகளுள்ள பழங்களைக் கொடுத்தன.
கடவுள் அவற்றைப் பார்த்தபோது அவை நன்றாக இருந்தன. **13** சாயங்
காலமும் விடியற்காலையும் வந்தது, மூன்றாம் நாள் முடிந்தது.
14 பின்பு கடவுள், "பகலையும் இரவையும் தனித்தனியாகப் பிரிப்பதற்கு
வானத்தில் ஒளிச்சுடர்கள்[o] தெரியட்டும்.[p] பருவ காலங்களையும் நாட்களை

1:2 *வே.வா., "காலியாக." #வே.வா., "செயல் நடப்பிக்கும் ஆற்றல்." △நே.மொ., "அசைந்தாடிக்கொண்டு." **1:11** *அதாவது, "வகையின்படியே."

அதி. 1
a சங் 102:25
ஏசா 42:5
ஏசா 45:18
ரோ 1:20
எபி 1:10
வெளி 4:11
வெளி 10:6
b நீதி 8:27, 28
c சங் 104:5, 6
d சங் 33:6
ஏசா 40:26
e ஏசா 45:7
2கொ 4:6
f ஆதி 8:22
g 2பே 3:5
h ஆதி 1:20
i ஆதி 7:11
நீதி 8:27, 28
j யோபு 38: 8, 11
சங் 104:6-9
சங் 136:6
k சங் 95:5
l நீதி 8:29
m உபா 32:4
n சங் 104:14
o உபா 4:19
p சங் 104:19

அதி. 1
a ஆதி 8:22
b சங் 136:7, 8
c சங் 8:3
எரே 31:35
d சங் 74:16
e ஆதி 2:19
f நெ 9:6
சங் 104:25
g ஆதி 2:19
h 1கொ 11:7
i நீதி 8:30
யோவா 1:3
கொலோ 1:16
j ஆதி 5:1
யாக் 3:9
k ஆதி 9:2
l சங் 139:14
மத் 19:4
மாற் 10:6
1கொ 11:7, 9
m ஆதி 9:1
n ஆதி 2:15
o சங் 8:4, 6

யும் வருஷங்களையும் குறித்துக் காட்டுகிற அடையாளங்களாக அவை
இருக்கட்டும்.[a] **15** அந்த ஒளிச்சுடர்கள் வானத்திலிருந்து பூமிக்கு வெளிச்
சம் தரட்டும்" என்று சொன்னார். அது அப்படியே ஆனது. **16** பின்பு,
கடவுள் இரண்டு மிகப் பெரிய ஒளிச்சுடர்களைத் தெரியும்படி செய்தார்.
பகலில் பிரகாசமாய் ஒளிவீச* ஓர் ஒளிச்சுடரையும்[b] இரவில் இதமாய் ஒளி
வீச ஓர் ஒளிச்சுடரையும், அதோடு நட்சத்திரங்களையும் தெரிய வைத்தார்.[c]
17 இப்படி, பூமிக்கு வெளிச்சம் தருவதற்காகக் கடவுள் அவற்றை வானத்
தில் வைத்தார். **18** பகலிலும் இரவிலும் ஒளிவீசுவதற்காகவும், வெளிச்
சத்தையும் இருட்டையும் தனித்தனியாகப் பிரிப்பதற்காகவும் அப்படிச் செய்
தார்.[d] அவற்றை அவர் பார்த்தபோது அவை நன்றாக இருந்தன.
19 சாயங்காலமும் விடியற்காலையும் வந்தது, நான்காம் நாள் முடிந்தது.

20 பின்பு கடவுள், "தண்ணீரில் ஏராளமான உயிரினங்கள்* உண்டாகட்
டும், பூமிக்கு மேலே இருக்கிற வானம் என்ற ஆகாயவிரிவிலே பறவை
கள்# பறக்கட்டும்"[e] என்று சொன்னார். **21** கடலில் வாழும் மிகப் பெரிய
உயிரினங்களையும் கூட்டங்கூட்டமாக நீந்தும் உயிரினங்களையும் அந்
தந்த இனத்தின்படியே கடவுள் படைத்தார். பறக்கும் எல்லா பறவைகளை
யும் அந்தந்த இனத்தின்படியே படைத்தார். அவற்றை அவர் பார்த்தபோது
அவை நன்றாக இருந்தன. **22** கடவுள் அவற்றை ஆசீர்வதித்து, "ஏராள
மாகப் பெருகி கடலை நிரப்புங்கள்"[f] என்று சொன்னார்; "பூமியில் பறவை
கள் பெருகட்டும்" என்றும் சொன்னார். **23** சாயங்காலமும் விடியற்காலை
யும் வந்தது, ஐந்தாம் நாள் முடிந்தது.

24 பின்பு கடவுள், "நிலத்தில் வாழும் உயிரினங்கள் அந்தந்த இனத்தின்
படியே உண்டாகட்டும்; வீட்டு விலங்குகளும் ஊரும் பிராணிகளும் காட்டு
மிருகங்களும் அந்தந்த இனத்தின்படியே உண்டாகட்டும்"[g] என்றார். அது
அப்படியே ஆனது. **25** காட்டு மிருகங்களை அந்தந்த இனத்தின்படியும்
வீட்டு விலங்குகளை அந்தந்த இனத்தின்படியும் ஊரும் பிராணிகளை அந்
தந்த இனத்தின்படியும் கடவுள் உண்டாக்க ஆரம்பித்தார். அவற்றை அவர்
பார்த்தபோது அவை நன்றாக இருந்தன.

26 பின்பு கடவுள், "மனிதனை நம்முடைய சாயலில்[h] நம்மைப்[i]
போலவே உண்டாக்கலாம்.[j] கடலில் வாழும் மீன்களும், வானத்தில் பறக்கும்
பறவைகளும், வீட்டு விலங்குகளும், ஊரும் பிராணிகளும், முழு பூமியும்
அவனுடைய அதிகாரத்தின்கீழ் இருக்கட்டும்"[k] என்று சொன்னார். **27** மனி
தனைக் கடவுள் தன்னுடைய சாயலில் படைத்தார். தன்னுடைய சாயலி
லேயே அவனைப் படைத்தார். ஆணையும் பெண்ணையும் அவர் படைத்
தார்.[l] **28** கடவுள் அவர்களிடம், "நீங்கள் பிள்ளைகளைப் பெற்று,
ஏராளமாகப் பெருகி, பூமியை நிரப்புங்கள்;[m] அதைப் பண்படுத்துங்கள்.*[n]
கடலில் வாழ்கிற மீன்களும், வானத்தில் பறக்கிற பறவைகளும், நிலத்தில்
வாழ்கிற எல்லா உயிரினங்களும் உங்கள் அதிகாரத்தின்கீழ் இருக்கட்டும்"[o]
என்று சொல்லி ஆசீர்வதித்தார்.

29 பின்பு கடவுள், "பூமியிலுள்ள எல்லா செடிகளையும், விதைகளுள்ள
பழங்களைத் தருகிற மரங்களையும் உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.

1:16 * வே.வா., "பகலை ஆள." **1:20** * சொல் பட்டியலில் "நெஃபெஷ், சைக்கீ" என்ற தலைப்பைப் பாருங்கள். # நே.மொ., "பறக்கும் உயிரினங்கள்." இவை சிறகுள்ள பூச்சிகளையும் குறிக்கலாம். **1:28** * நே.மொ., "கீழ்ப்படுத்துங்கள்."

அவை உங்களுக்கு உணவாக இருக்கட்டும்.[a] **30** பூமியிலுள்ள எல்லா
காட்டு மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் நிலத்தில் வாழ்கிற எல்லா உயி
ரினங்களுக்கும் புல்பூண்டுகளை உணவாகத் தந்திருக்கிறேன்"[b] என்றார்.
அது அப்படியே ஆனது.

31 பின்பு, தான் படைத்த எல்லாவற்றையும் கடவுள் பார்த்தார், எல்
லாமே மிகவும் நன்றாக இருந்தன.[c] சாயங்காலமும் விடியற்காலையும் வந்
தது, ஆறாம் நாள் முடிந்தது.

2 இப்படி, வானமும் பூமியும் அவற்றிலுள்ள எல்லாமும் படைத்து முடிக்
கப்பட்டன.[d] **2** ஏழாம் நாள் ஆரம்பிப்பதற்குள், இந்த எல்லா வேலை
களையும் கடவுள் முடித்திருந்தார். இதையெல்லாம் முடித்துவிட்டு ஏழாம்
நாளில் ஓய்வெடுக்கத் தொடங்கினார்.[e] **3** அவர் படைக்க நினைத்த எல்
லாவற்றையும் படைத்து முடித்துவிட்டு அந்த நாளில் ஓய்வெடுக்க ஆரம்
பித்தார். அந்த ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் புனித நாளாக அறி
வித்தார்.*

4 வானமும் பூமியும் படைக்கப்பட்ட காலத்தில், பூமியையும் வானத்
தையும் கடவுளாகிய யெகோவா* படைத்த[f] நாளில் நடந்தவற்றைப் பற்றிய
பதிவு இதுதான்.

5 செடிகொடிகளோ மற்ற தாவரங்களோ அதுவரை பூமியில் முளைக்க
வில்லை. ஏனென்றால், கடவுளாகிய யெகோவா பூமியில் அதுவரை மழை
பெய்யும்படி செய்யவில்லை. அதோடு, நிலத்தைப் பண்படுத்த மனிதனும்
இருக்கவில்லை. **6** ஆனால் பூமியிலிருந்து தண்ணீர் ஆவியாகி மேலே
போய், பின்பு முழு நிலத்தையும் நனைத்தது.

7 அதன்பின், கடவுளாகிய யெகோவா நிலத்திலிருந்து மண்ணை எடுத்து,
மனிதனை உருவாக்கத் தொடங்கினார்;[g] அவனுடைய மூக்கில் உயிர்மூச்சை
ஊதினார்.[h] அப்போது அவன் உயிருள்ளவன்* ஆனான்.[i] **8** கடவுளாகிய
யெகோவா கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம்[j] அமைத்து, தான் உரு
வாக்கிய மனிதனை அங்கே குடிவைத்தார்.[k] **9** கடவுளாகிய யெகோவா
ருசியான பழங்களைத் தரும் அழகான மரங்களை நிலத்தில் வளர வைத்
தார். அதோடு, வாழ்வுக்கான மரத்தையும்[l] நன்மை தீமை அறிவதற்கான
மரத்தையும்[m] தோட்டத்தின் நடுவில் வளர வைத்தார்.

10 ஏதேனிலிருந்து ஓடிய ஓர் ஆற்றின் தண்ணீர் அந்தத் தோட்டத்தில்
பாய்ந்தது, பின்பு அது நான்கு ஆறுகளாகப் பிரிந்தது. **11** முதலாம் ஆற்
றின் பெயர் பைசோன். அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடுகிறது.
அந்தத் தேசத்தில் தங்கம் கிடைக்கிறது. **12** அது சுத்தமான தங்கம். வெள்
ளைப் பிசினும்* கோமேதகமும்கூட அங்கே கிடைக்கின்றன. **13** இரண்
டாம் ஆற்றின் பெயர் கீகோன். அது கூஷ் தேசம் முழுவதையும் சுற்றி ஓடுகி
றது. **14** மூன்றாம் ஆற்றின் பெயர் இதெக்கேல்.*[n] அது அசீரியாவுக்குக்[o]
கிழக்கே ஓடுகிறது. நான்காம் ஆற்றின் பெயர் யூப்ரடிஸ்.#[p]

15 கடவுளாகிய யெகோவா மனிதனை ஏதேன் தோட்டத்தில்

2:3 * அதாவது, "அந்த நாளைத் தனது விசேஷ நோக்கத்திற்காக ஒதுக்கி வைத்தார்." **2:4** * இங்குதான் கடவுளுடைய பெயர் முதன்முதலில் குறிப்பிடப்படுகிறது. இணைப்பு A4-ஐப் பாருங்கள். **2:7** * சொல் பட்டியலில் "நெஃபெஷ், சைக்கீ" என்ற தலைப்பைப் பாருங்கள். **2:12** * சில மரங்களிலிருந்து கிடைக்கும் ஒருவித வாசனைப் பிசின். **2:14** * வே.வா., "டைகிரீஸ்." # அதாவது, "ஐப்பிராத்து."

அதி. 1
a ஆதி 9:3; சங் 104:14; அப் 14:17
b சங் 147:9; மத் 6:26
c உபா 32:4; சங் 104:24; 1தீ 4:4

அதி. 2
d நெ 9:6; சங் 146:6
e யாத் 31:17; எபி 4:4
f ஏசா 45:18
g ஆதி 3:19; சங் 103:14; பிர 3:20
h ஆதி 7:22; ஏசா 42:5; அப் 17:25
i 1கொ 15:45, 47
j ஆதி 2:15; ஆதி 3:23
k ஆதி 1:26
l ஆதி 3:22, 24; வெளி 2:7
m ஆதி 2:17
n தானி 10:4
o ஆதி 10:8, 11
p ஆதி 15:18; உபா 11:24

குடிவைத்து, அதைப் பண்படுத்தவும் பராமரிக்கவும் சொன்னார்.[a]
16 அதோடு, கடவுளாகிய யெகோவா மனிதனுக்கு இந்தக் கட்டளையைக்
கொடுத்தார்: "இந்தத் தோட்டத்தில் இருக்கிற எல்லா மரங்களின் பழங்களை
யும் நீ திருப்தியாகச் சாப்பிடலாம்.[b] **17** ஆனால், நன்மை தீமை அறிவதற்
கான மரத்தின் பழத்தை நீ சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிட்டால், அதே
நாளில் கண்டிப்பாகச் செத்துப்போவாய்."[c]

18 பின்பு கடவுளாகிய யெகோவா, "மனிதன் தனியாக இருப்பது நல்ல
தல்ல, அவனுக்கு உதவியாக இருப்பதற்குப் பொருத்தமான ஒரு துணையை
நான் உண்டாக்குவேன்"[d] என்று சொன்னார். **19** அதன்பின், கடவுளாகிய
யெகோவா மண்ணிலிருந்து தான் உருவாக்கிய எல்லா காட்டு மிருகங்க
ளுக்கும் பறக்கும் உயிரினங்களுக்கும் மனிதன் என்ன பெயர் வைப்பான்
என்று பார்ப்பதற்காக, அவற்றை அவனிடம் கொண்டுவரத் தொடங்கினார்.
ஒவ்வொரு உயிரினத்துக்கும் மனிதன் என்ன பெயர் வைத்தானோ அதுவே
அதன் பெயராக ஆனது.[e] **20** இப்படி வீட்டு விலங்குகள், பறக்கும் உயிரி
னங்கள், காட்டு மிருகங்கள் ஆகிய எல்லாவற்றுக்கும் மனிதன் பெயர் வைத்
தான். ஆனால், மனிதனுக்குப் பொருத்தமான ஒரு துணை இருக்கவில்லை.
21 அதனால், கடவுளாகிய யெகோவா அவனுக்கு ஆழ்ந்த தூக்கத்தை வர
வைத்தார். அவன் தூங்கிக்கொண்டிருந்த சமயத்தில், அவனுடைய விலா
எலும்புகளில் ஒன்றை எடுத்துவிட்டு, அந்த இடத்தை மூடினார். **22** மனி
தனிலிருந்து எடுத்த அந்த விலா எலும்பை வைத்து யெகோவா ஒரு
பெண்ணை உருவாக்கி, அவளை மனிதனிடம் கொண்டுவந்தார்.[f]

23 அப்போது அந்த மனிதன்,

"இதோ! இவள் என்னுடைய எலும்பின் எலும்பு!
என் சதையின் சதை!
இவள் மனுஷி என்று அழைக்கப்படுவாள்.
ஏனென்றால், இவள் மனுஷனிலிருந்து எடுக்கப்பட்டாள்"[g]

என்று சொன்னான். **24** அதனால், மனிதன் தன்னுடைய அப்பாவையும்
அம்மாவையும் விட்டுத் தன் மனைவியோடு சேர்ந்திருப்பான்.* அவர்கள்
ஒரே உடலாக# இருப்பார்கள்.[h] **25** அந்த முதல் மனிதனும் அவன்
மனைவியும் நிர்வாணமாக இருந்தார்கள்,[i] ஆனாலும் அவர்கள் வெட்கப்
படவில்லை.

3 கடவுளாகிய யெகோவா படைத்த காட்டு மிருகங்கள் எல்லாவற்றை
யும்விட பாம்பு[j] மிகவும் ஜாக்கிரதையானதாக* இருந்தது. அது அந்தப்
பெண்ணிடம், "தோட்டத்தில் உள்ள அத்தனை மரங்களின் பழங்களையும்
நீங்கள் சாப்பிடக் கூடாது என்று கடவுள் நிஜமாகவே சொன்னாரா?"[k] என்று
கேட்டது. **2** அதற்கு அந்தப் பெண், "தோட்டத்தில் இருக்கிற மரங்களின்
பழங்களை நாங்கள் சாப்பிடலாம்.[l] **3** ஆனால், தோட்டத்தின் நடுவில்
இருக்கிற மரத்தின் பழத்தை[m] நாங்கள் சாப்பிடக் கூடாது என்றும், தொடக்
கூடாது என்றும் கடவுள் சொல்லியிருக்கிறார். மீறினால் நாங்கள் செத்துப்
போவோம் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்" என்றாள். **4** அப்போது
அந்தப் பாம்பு அவளிடம், "நீங்கள் கண்டிப்பாகச் செத்துப்போக மாட்டீர்
கள்.[n] **5** நீங்கள் அதைச் சாப்பிடும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும்

அதி. 2
a ஆதி 1:28; ஆதி 2:8; சங் 115:16
b ஆதி 2:8, 9; ஆதி 3:2
c ஆதி 3:19; சங் 146:4; பிர 9:5, 10; எசே 18:4; ரோ 5:12; 1கொ 15:22
d 1கொ 11:8, 9; 1தீ 2:13
e ஆதி 1:26
f மாற் 10:9; 1தீ 2:13
g 1கொ 11:8
h மல் 2:16; மத் 19:5; மாற் 10:7, 8; ரோ 7:2; 1கொ 6:16; எபே 5:31; எபி 13:4
i ஆதி 3:7

அதி. 3
j 2கொ 11:3; வெளி 12:9; வெளி 20:2
k ஆதி 2:17
l ஆதி 2:16
m ஆதி 2:8, 9
n யோவா 8:44; 1யோ 3:8

2:24 *இதற்கான எபிரெய வார்த்தை, பசைபோல் இறுக ஒட்டிக்கொண்டிருப்பதை அர்த்தப்படுத்துகிறது. #நே.மொ., "சதையாக." **3:1** *வே.வா., "தந்திரமுள்ளதாக."

என்றும், நீங்கள் நன்மை தீமையைத் தெரிந்துகொண்டு*[a] கடவுளைப் போல
ஆவீர்கள் என்றும் கடவுளுக்குத் தெரியும்” என்று சொன்னது.

6 அதன்பின், அந்த மரத்தின் பழம் அவளுடைய கண்களுக்கு மிக
வும் நல்ல* பழமாகவும், அழகான பழமாகவும் தெரிந்தது. அதைப் பார்க்
கப் பார்க்க அவளுக்கு ஆசையாக இருந்தது. அதனால், அந்தப் பழத்தைப்
பறித்துச் சாப்பிட்டாள்.[b] பிறகு, தன் கணவனோடு இருந்தபோது அவனுக்
கும் கொஞ்சம் கொடுத்தாள், அவனும் சாப்பிட்டான்.[c] **7** உடனே, அவர்
கள் இரண்டு பேருடைய கண்களும் திறந்தன, தாங்கள் நிர்வாணமாக
இருப்பதை உணர்ந்தார்கள். அதனால், அத்தி இலைகளைத் தைத்து இடுப்
பில் கட்டிக்கொண்டார்கள்.[d]

8 பின்பு, தென்றல் காற்று வீசும் சாயங்கால வேளையில் கடவுளாகிய
யெகோவா தோட்டத்தில் நடந்துகொண்டிருந்த சமயத்தில், அந்த மனித
னும் அவன் மனைவியும் அவருடைய குரலைக் கேட்டார்கள். கடவுளாகிய
யெகோவாவின் கண்ணில் படாமல் இருப்பதற்காக அவர்கள் உடனே தோட்
டத்திலுள்ள மரங்களுக்கு நடுவில் ஒளிந்துகொண்டார்கள். **9** அப்போது
கடவுளாகிய யெகோவா அந்த மனிதனிடம், “நீ எங்கே இருக்கிறாய்?”
என்று திரும்பத் திரும்பக் கேட்டார். **10** கடைசியாக அவன், “தோட்டத்
தில் உங்களுடைய குரலைக் கேட்டேன், ஆனால் நான் நிர்வாணமாக
இருப்பதால் பயந்து ஒளிந்துகொண்டேன்” என்று சொன்னான். **11** அதற்கு
அவர், “நீ நிர்வாணமாக இருக்கிறாய் என்று உனக்குச் சொன்னது யார்?[e] சாப்
பிடக் கூடாது என்று நான் சொல்லியிருந்த மரத்தின் பழத்தை[f] நீ சாப்பிட்
டாயா?” என்று கேட்டார். **12** அதற்கு அவன், “என்னோடு இருப்பதற்காக
நீங்கள் எனக்குத் தந்த பெண்தான் அந்த மரத்தின் பழத்தைக் கொடுத்தாள்,
அதனால் சாப்பிட்டேன்” என்று சொன்னான். **13** அப்போது கடவுளாகிய
யெகோவா அந்தப் பெண்ணிடம், “நீ ஏன் இப்படிச் செய்தாய்?” என்று கேட்
டார். அதற்கு அவள், “அந்தப் பாம்புதான் என்னை ஏமாற்றியது, அதனால்
தான் சாப்பிட்டேன்”[g] என்று சொன்னாள்.

14 பின்பு கடவுளாகிய யெகோவா அந்தப் பாம்பிடம்,[h] “நீ இப்படிச்
செய்ததால், வீட்டு விலங்குகள் எல்லாவற்றிலும் காட்டு மிருகங்கள் எல்லா
வற்றிலும் நீ சபிக்கப்பட்டிருப்பாய். உன் வயிற்றில் ஊர்ந்து போவாய்,
உன் வாழ்நாளெல்லாம் மண்ணைத் தின்பாய். **15** உனக்கும்[i] பெண்ணுக்
கும்[j] உன் சந்ததிக்கும்[k] அவள் சந்ததிக்கும்[l] பகை உண்டாக்குவேன்.[m] அவர்
உன் தலையை நசுக்குவார்,*[n] நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்”#[o] என்று
சொன்னார்.

16 கடவுள் அந்தப் பெண்ணிடம், “நீ கர்ப்பமாக இருக்கும்போது உன்
வலியை ரொம்பவே அதிகமாக்குவேன். வலியோடுதான் நீ பிள்ளைகளைப்
பெற்றெடுப்பாய். உன் கணவன்மேல் ஏக்கமாகவே இருப்பாய், அவன்
உன்னை அடக்கி ஆளுவான்” என்றார்.

17 பின்பு அவர் ஆதாமிடம்,* “நீ உன் மனைவியின் பேச்சைக் கேட்டு,
‘சாப்பிடக் கூடாது’ என்று நான் சொல்லியிருந்த மரத்தின் பழத்தைச்[p] சாப்
பிட்டதால் இந்த நிலம் சபிக்கப்பட்டிருக்கும்.[q] வயிற்றுப்பிழைப்புக்காக
உன் வாழ்நாளெல்லாம் நீ சிரமப்பட்டு வேலை செய்ய வேண்டியிருக்கும்.[r]

3:5 * அதாவது, “தீர்மானித்து.” **3:6** * வே.வா., “ருசியான.” **3:15** * வே.வா., “நொறுக்குவார்.” # வே.வா., “காயப்படுத்துவாய்.” **3:17** * ஆதாம் என்ற பெயரின் அர்த்தம், “மனிதன்; மனித இனம்.”

அதி. 3

a ஆதி 3:22
b 2கொ 11:3, 1தீ 2:14, யாக் 1:14, 15
c ரோ 5:12
d ஆதி 3:21
e ஆதி 2:25
f ஆதி 2:17
g 2கொ 11:3, 1தீ 2:14
h ஆதி 3:1
i வெளி 12:9
j வெளி 12:1
k யோவா 8:44, 1யோ 3:10
l ஆதி 22:18, ஆதி 49:10, கலா 3:16, 29
m வெளி 12:7, 17
n வெளி 20:2, 10
o மத் 27:50, அப் 3:15
p ஆதி 2:17
q ஆதி 5:29
r ரோ 8:20

18 நிலத்தில் முட்செடிகளும் முட்புதர்களும் முளைக்கும். அதில் விளைவ
தைத்தான் நீ சாப்பிட வேண்டும். **19** நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட
தால்[a] மண்ணுக்குப் போகும்வரை நெற்றி வியர்வை சிந்திதான் உணவு சாப்
பிடுவாய். நீ மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்"[b] என்றார்.

20 அதன்பின், ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள்* என்று பெயர் வைத்
தான். ஏனென்றால், அவள்தான் உயிருள்ள எல்லாருக்கும் தாய்.[c] **21** கட
வுளாகிய யெகோவா நீளமான தோல் உடைகளைச்[d] செய்து ஆதாமுக்கும்
அவன் மனைவிக்கும் கொடுத்தார். **22** பின்பு, கடவுளாகிய யெகோவா இப்
படிச் சொன்னார்: "இதோ, நன்மை தீமையைத் தெரிந்துகொள்வதில்* மனி
தன் நம்மைப் போல ஆகிவிட்டான்.[e] இப்போது அவன் வாழ்வுக்கான மரத்
தின் பழத்தையும்[f] பறித்துச் சாப்பிட்டு என்றென்றும் வாழாதபடி,—" **23** இப்
படிச் சொல்லிவிட்டு, கடவுளாகிய யெகோவா அவனை ஏதேன் தோட்டத்தி
லிருந்து[g] துரத்திவிட்டார். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட அவனை[h] மண்
ணிலேயே வேலை செய்வதற்காகத் துரத்திவிட்டார். **24** அவனைத் துரத்
திய பின்பு, வாழ்வுக்கான மரத்துக்குப் போகிற வழியைக் காவல் காப்பதற்கு
ஏதேன் தோட்டத்தின் கிழக்கே கேருபீன்களை[i] நிறுத்தினார். சுடர்விட்டபடி
எப்போதும் சுழன்றுகொண்டிருந்த வாளையும் அங்கே வைத்தார்.

4 பின்பு, ஆதாம் தன் மனைவி ஏவாளோடு உறவுகொண்டான். அவள்
கர்ப்பமாகி காயீனைப்[j] பெற்றெடுத்தாள்.[k] அப்போது, "யெகோவாவின்
உதவியால் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தேன்" என்று சொன்னாள்.
2 பிறபாடு, அவள் இன்னொரு மகனைப் பெற்றெடுத்தாள். அவன்தான்
காயீனின் தம்பி ஆபேல்.[l]

ஆபேலும் காயீனும் வளர்ந்து ஆளானார்கள். ஆபேல் ஆடுகளை
மேய்த்துவந்தான், காயீன் விவசாயம் செய்துவந்தான். **3** சில காலம்
கழித்து, நிலத்தில் விளைந்த சில பொருள்களை காயீன் யெகோவாவுக்குக்
காணிக்கையாகக் கொண்டுவந்தான். **4** ஆனால், ஆபேல் தன்னுடைய
ஆடுகளின் முதல் குட்டிகளில் சிலவற்றை,[m] அவற்றின் கொழுப்போடு
சேர்த்துக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும்
யெகோவா ஏற்றுக்கொண்டார்.[n] **5** ஆனால், காயீனையும் அவன் காணிக்
கையையும் அவர் ஏற்றுக்கொள்ளவே இல்லை. அதனால், காயீனுக்குப்
பயங்கர கோபம் வந்தது, அவன் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்
டான். **6** அப்போது யெகோவா காயீனிடம், "நீ ஏன் இவ்வளவு கோப
மாக இருக்கிறாய்? ஏன் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு இருக்கி
றாய்? **7** நீ மனம் மாறி நல்லது செய்தால், உன்னை நான் ஏற்றுக்கொள்ள
மாட்டேனா?* நீ நல்லது செய்யவில்லை என்றால், இதோ, பாவம் உன் கத
வுக்கு வெளியில் பதுங்கியிருக்கிறது. அது உன்மேல் பாய்வதற்குக் காத்தி
ருக்கிறது. ஆனால், நீ அதை அடக்குவாயா?" என்றார்.

8 பின்பு காயீன் தன்னுடைய தம்பி ஆபேலிடம், "வா, காட்டுப் பக்கம்
போய்விட்டு வரலாம்" என்றான். அவர்கள் காட்டுப் பக்கம் போன பிறகு,
காயீன் தன் தம்பி ஆபேலைக் கொலை செய்தான்.[o] **9** பின்பு யெகோவா
காயீனிடம், "உன் தம்பி ஆபேல் எங்கே?" என்று கேட்டார். அதற்கு அவன்,
"எனக்குத் தெரியாது. என் தம்பிக்கு நான் என்ன காவல்காரனா?" என்று கேட்
டான். **10** அப்போது கடவுள், "நீ என்ன காரியம் செய்திருக்கிறாய்? இதோ!

அதி. 3
a ஆதி 2:7
b சங் 104:29, பிர 3:20, பிர 12:7
c அப் 17:26
d ஆதி 3:7
e ஆதி 3:5
f ஆதி 2:9
g ஆதி 2:8
h ஆதி 3:19
i சங் 80:1, ஏசா 37:16, எசே 10:4

அதி. 4
j 1யோ 3:10-12, யூ 11
k ஆதி 1:28
l மத் 23:35
m யாத் 13:12
n எபி 11:4
o மத் 23:35, 1யோ 3:10-12, யூ 11

3:20 *அர்த்தம், "உயிருள்ளவள்." **3:22** *அதாவது, "தீர்மானிப்பதில்." **4:7** *வே.வா., "நீ உயர்வடைய மாட்டாயா?"

உன் தம்பியின் இரத்தம் என்னிடம் நீதி கேட்டு இந்த மண்ணிலிருந்து
கதறுகிறது.[a] **11** நான் உன்னைச் சபிக்கிறேன்; உன் தம்பியின் இரத்
தத்தை உன் கையிலிருந்து வாங்கிக் குடித்த இந்த மண்ணைவிட்டு உன்
னைத் துரத்துகிறேன்.[b] **12** நீ நிலத்தில் பயிர் செய்தாலும் உனக்கு விளைச்
சல் கிடைக்காது. இந்தப் பூமியில் நாடோடியாக அலைந்து திரிவாய்"
என்றார். **13** அதற்கு காயீன் யெகோவாவிடம், "நான் செய்த குற்றத்
துக்கு நீங்கள் தருகிற தண்டனையை என்னால் தாங்கிக்கொள்ளவே முடி
யாது. **14** இன்று நீங்கள் இந்த மண்ணைவிட்டு என்னைத் துரத்துகிறீர்கள்.
இனி நான் உங்கள் முகத்துக்கு முன்னால் நிற்க முடியாது. இந்தப் பூமியில்
நாடோடியாகத்தான் அலைந்து திரிய வேண்டியிருக்கும். என்னை யாரா
வது பார்த்தால் கண்டிப்பாகக் கொன்றுவிடுவார்களே" என்றான்.
15 அதற்கு யெகோவா, "அப்படியென்றால், காயீனைக் கொலை செய்கிற
வன் ஏழு மடங்கு பழிவாங்கப்படுவான்" என்றார்.

காயீனைப் பார்க்கிற எவனும் அவனை அடித்துக் கொல்லாமல் இருப்ப
தற்காக, யெகோவா காயீனுக்காக ஓர் அடையாளத்தைக் கொடுத்தார்.*
16 அப்போது, யெகோவாவின் முன்னிலையிலிருந்து காயீன் புறப்பட்டுப்
போய், ஏதேனுக்குக்[c] கிழக்கே இருந்த நோத்* தேசத்தில் குடியேறினான்.

17 அதன்பின், காயீன் தன் மனைவியோடு[d] உறவுகொண்டான். அவள்
கர்ப்பமாகி ஏனோக்கைப் பெற்றாள். பின்பு, காயீன் ஒரு நகரத்தைக் கட்டத்
தொடங்கி, அதற்குத் தன்னுடைய மகன் ஏனோக்கின் பெயரை வைத்தான்.
18 பிற்பாடு, ஏனோக்குக்கு ஈராத் என்ற மகன் பிறந்தான். ஈராத்துக்கு மெகு
யவேல் பிறந்தான். மெகுயவேலுக்கு மெத்தூசவேல் பிறந்தான். மெத்தூசவே
லுக்கு லாமேக்கு பிறந்தான்.

19 லாமேக்குக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவியின் பெயர்
ஆதாள், இரண்டாம் மனைவியின் பெயர் சில்லாள். **20** ஆதாள் யாபா
லைப் பெற்றெடுத்தாள். கூடாரங்களில் தங்கி கால்நடைகளை வளர்த்த
முதல் மனிதன் யாபால்தான். **21** அவனுடைய சகோதரன் பெயர் யூபால்.
யாழும் குழலும் வாசித்த முதல் மனிதன் யூபால்தான். **22** சில்லாள்,
தூபால்-காயீனைப் பெற்றெடுத்தாள். அவன் எல்லாவித செம்புக் கருவிக
ளையும் இரும்புக் கருவிகளையும் செய்தான். தூபால்-காயீனின் சகோதரி
பெயர் நாமாள். **23** பின்பு, லாமேக்கு தன் மனைவிகளான ஆதாளையும்
சில்லாளையும் பார்த்து,

"லாமேக்கின் மனைவிகளே, கேளுங்கள்.
என் வார்த்தைகளுக்குக் காதுகொடுங்கள்:
ஒரு மனுஷனைக் கொன்றேன், என்னைக் காயப்படுத்தியதற்காக.
ஆம், ஓர் இளைஞனைக் கொன்றேன், என்னை அடித்ததற்காக.
24 காயீனுக்காக 7 தடவை பழிவாங்கப்படும் என்றால்,[e]
லாமேக்குக்காக 77 தடவை பழிவாங்கப்படும்"

என்று சொன்னான்.

25 ஆதாம் தன் மனைவியோடு மறுபடியும் உறவுகொண்டான், அவள்
ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அப்போது அவள், "ஆபேலைக் காயீன்
கொலை செய்ததால்[f] அவனுக்குப் பதிலாகக் கடவுள் எனக்கு இன்னொரு

4:15 * இது மற்றவர்களை எச்சரிப்பதற்காக கொடுக்கப்பட்ட ஒரு கட்டளையாக இருந்திருக்கலாம். **4:16** * வே.வா., "நாடுகடத்தப்படுதல்."

அதி. 4
a எபி 12:24
b ஆதி 9:5
c ஆதி 2:8
d ஆதி 5:4
e ஆதி 4:15
f ஆதி 4:8
மத் 23:35
எபி 11:4

வாரிசைக் கொடுத்திருக்கிறார்” என்று சொல்லி அவனுக்கு சேத்*[a] என்று
பெயர் வைத்தாள். **26** சேத்துக்கும் ஒரு மகன் பிறந்தான். சேத் அவ
னுக்கு ஏனோஸ்[b] என்று பெயர் வைத்தார். அந்தச் சமயத்தில், ஜனங்கள்
யெகோவாவின் பெயரைக் களங்கப்படுத்த* ஆரம்பித்தார்கள்.

5 ஆதாமுடைய வம்சத்தைப் பற்றிய பதிவு இதுதான். ஆதாமைக்
கடவுள் படைத்தபோது* அவனை அவருடைய சாயலில் படைத்தார்.[c]
2 ஆணையும் பெண்ணையும் கடவுள் படைத்தார்.[d] அவர்களைப் படைத்த
போது*[e] அவர்களை ஆசீர்வதித்து, மனித இனம்# என்று அழைத்தார்.

3 ஆதாமுக்கு 130 வயதானபோது அவனைப் போலவே, அவனுடைய
சாயலில் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு சேத்[f] என்று ஆதாம் பெயர்
வைத்தான். **4** சேத் பிறந்த பின்பு, ஆதாம் 800 வருஷங்கள் வாழ்ந்து,
மகன்களையும் மகள்களையும் பெற்றான். **5** ஆதாம் மொத்தம் 930 வரு
ஷங்கள் வாழ்ந்தபின் இறந்துபோனான்.[g]

6 சேத்துக்கு 105 வயதானபோது அவருக்கு ஏனோஸ்[h] பிறந்தார்.
7 ஏனோஸ் பிறந்த பின்பு, சேத் 807 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களையும்
மகள்களையும் பெற்றார். **8** சேத் மொத்தம் 912 வருஷங்கள் வாழ்ந்தபின்
இறந்துபோனார்.

9 ஏனோசுக்கு 90 வயதானபோது அவருக்கு கேனான் பிறந்தார்.
10 கேனான் பிறந்த பின்பு, ஏனோஸ் 815 வருஷங்கள் வாழ்ந்து, மகன்க
ளையும் மகள்களையும் பெற்றார். **11** ஏனோஸ் மொத்தம் 905 வருஷங்
கள் வாழ்ந்தபின் இறந்துபோனார்.

12 கேனானுக்கு 70 வயதானபோது அவருக்கு மகலாலெயேல்[i] பிறந்
தார். **13** மகலாலெயேல் பிறந்த பின்பு, கேனான் 840 வருஷங்கள்
வாழ்ந்து, மகன்களையும் மகள்களையும் பெற்றார். **14** கேனான் மொத்தம்
910 வருஷங்கள் வாழ்ந்தபின் இறந்துபோனார்.

15 மகலாலெயேலுக்கு 65 வயதானபோது அவருக்கு யாரேத்[j] பிறந்தார்.
16 யாரேத் பிறந்த பின்பு, மகலாலெயேல் 830 வருஷங்கள் வாழ்ந்து, மகன்
களையும் மகள்களையும் பெற்றார். **17** மகலாலெயேல் மொத்தம் 895
வருஷங்கள் வாழ்ந்தபின் இறந்துபோனார்.

18 யாரேத்துக்கு 162 வயதானபோது அவருக்கு ஏனோக்கு[k] பிறந்தார்.
19 ஏனோக்கு பிறந்த பின்பு, யாரேத் 800 வருஷங்கள் வாழ்ந்து, மகன்க
ளையும் மகள்களையும் பெற்றார். **20** யாரேத் மொத்தம் 962 வருஷங்கள்
வாழ்ந்தபின் இறந்துபோனார்.

21 ஏனோக்குக்கு 65 வயதானபோது அவருக்கு மெத்தூசலா[l] பிறந்தார்.
22 மெத்தூசலா பிறந்த பின்பு, ஏனோக்கு 300 வருஷங்கள் வாழ்ந்து, மகன்
களையும் மகள்களையும் பெற்றார். அவர் உண்மைக் கடவுளுடைய* வழி
யில் தொடர்ந்து நடந்துவந்தார்.# **23** ஏனோக்கு மொத்தம் 365 வருஷங்
கள் வாழ்ந்தார். **24** அவர் உண்மைக் கடவுளுடைய வழியில் தொடர்ந்து
நடந்துவந்தார்.#[m] அதன்பின் யாரும் அவரைப் பார்க்கவில்லை. ஏனென்
றால், கடவுள் அவரை எடுத்துக்கொண்டார்.[n]

அதி. 4
a ஆதி 5:3; 1நா 1:1
b ஆதி 5:6; லூ 3:23, 38

அதி. 5
c ஆதி 1:26; யாக் 3:9
d ஆதி 1:27; மாற் 10:6
e ஆதி 2:23; ஏசா 45:12; மத் 19:4
f ஆதி 4:25
g ஆதி 2:17; ஆதி 3:19; ரோ 6:23; 1கொ 15:22
h ஆதி 4:26; லூ 3:23, 38
i லூ 3:23, 37
j லூ 3:23, 37
k யூ 14
l லூ 3:23, 37
m ஆதி 6:9; உபா 8:6; உபா 13:4; 3யோ 4; யூ 14, 15
n யோவா 3:13; எபி 11:5

4:25 *அர்த்தம், “நியமிப்பது; கொடுப்பது.” **4:26** *நே.மொ., “யெகோவாவின் பெய
ரில் அழைக்க.” **5:1, 2** *நே.மொ., “படைத்த நாளில்.” **5:2** #வே.வா., “ஆதாம்; மனி
தன்.” **5:22** *சொல் பட்டியலில் “உண்மைக் கடவுள்” என்ற தலைப்பைப் பாருங்கள்.
5:22, 24 #நே.மொ., “அவர் கடவுளோடு நடந்துவந்தார்.”

25 மெத்தூசலாவுக்கு 187 வயதானபோது அவருக்கு லாமேக்கு[a] பிறந்
தார். **26** லாமேக்கு பிறந்த பின்பு, மெத்தூசலா 782 வருஷங்கள் வாழ்ந்து,
மகன்களையும் மகள்களையும் பெற்றார். **27** மெத்தூசலா மொத்தம்
969 வருஷங்கள் வாழ்ந்தபின் இறந்துபோனார்.

28 லாமேக்குக்கு 182 வயதானபோது அவருக்கு ஒரு மகன் பிறந்தான்.
29 அப்போது அவர், “யெகோவா சபித்த இந்த மண்ணில்[b] நாம் படாத
பாடுபடுகிறோம்; ஆனால், இவன் நமக்கு ஆறுதல்* தருவான்” என்று
சொல்லி அவனுக்கு நோவா#[c] என்று பெயர் வைத்தார். **30** நோவா
பிறந்த பின்பு, லாமேக்கு 595 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களையும் மகள்க
ளையும் பெற்றார். **31** லாமேக்கு மொத்தம் 777 வருஷங்கள் வாழ்ந்தபின்
இறந்துபோனார்.

32 நோவாவுக்கு 500 வயதான பின்பு அவருக்கு சேம்,[d] காம்,[e] யாப்
பேத்[f] என்ற மகன்கள் பிறந்தார்கள்.

6 மனிதர்கள் பூமியில் ஏராளமாகப் பெருக ஆரம்பித்தார்கள். அவர்
களுக்குப் பெண் பிள்ளைகள் பிறந்தார்கள். **2** பூமியிலிருந்த பெண்
கள் அழகாக இருப்பதைத் தேவதூதர்கள்*[g] கவனித்தார்கள். அதனால்,
தங்களுக்குப் பிடித்த பெண்களையெல்லாம் தங்களுடைய மனைவிகளாக
ஆக்கிக்கொண்டார்கள். **3** அப்போது யெகோவா, “மனுஷனை நான் கால
மெல்லாம் இப்படியே பொறுத்துக்கொள்ள மாட்டேன்.[h] ஏனென்றால்,
அவன் பாவமுள்ளவன்.* அவன் வாழப்போவது இன்னும் 120 வருஷங்
கள்தான்” என்று சொன்னார்.[i]

4 கடவுள் அதைச் சொன்னபோது, பூமியில் ராட்சதர்கள்* இருந்தார்கள்.
அந்தக் காலத்தில், பூமியிலிருந்த பெண்களோடு தேவதூதர்கள் தொடர்ந்து
உறவுகொண்டார்கள். அவர்களுக்கு மகன்கள் பிறந்தார்கள். இந்த மகன்கள்
தான் பெரிய பலசாலிகளாகவும், பிரபலமானவர்களாகவும் இருந்தார்கள்.

5 பூமியில் வாழ்ந்த மனிதர்கள் மிக மோசமாக நடந்துகொண்டதையும்,
அவர்களுடைய உள்ளத்தின் எண்ணங்களும் ஆசைகளும் எப்போதும்
மோசமாகவே இருந்ததையும்*[j] யெகோவா கவனித்தார். **6** யெகோவா
பூமியில் படைத்த மனிதர்களை நினைத்து வருத்தப்பட்டார், உள்ளத்தில்
மிகவும் வேதனைப்பட்டார்.[k] **7** அதனால் யெகோவா, “நான் படைத்த
மனுஷர்களை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது, அவர்களை இந்தப்
பூமியிலிருந்து அடியோடு அழிக்கப்போகிறேன். வீட்டு விலங்குகள்,
ஊரும் பிராணிகள், பறக்கும் உயிரினங்கள் எல்லாவற்றோடும் சேர்த்து
அவர்களை அழிக்கப்போகிறேன்” என்றார். **8** ஆனால், நோவா யெகோ
வாவுக்குப் பிரியமானவராக இருந்தார்.

9 நோவாவின் வரலாறு இதுதான்.

நோவா நீதிமானாக இருந்தார்.[l] அவருடைய காலத்தில் வாழ்ந்த ஜனங்

5:29 *வே.வா., “நிம்மதி.” #அநேகமாக இதன் அர்த்தம், “ஆறுதல்; இளைப்பா
றுதல்.” **6:2** *நே.மொ., “உண்மைக் கடவுளின் மகன்கள்.” **6:3** *அல்லது, “பாவ
இயல்பின்படி நடந்துகொள்கிறான்.” **6:4** *எபிரெயுவில், “நெபிலிம்கள்.” ஒருவேளை
இந்தப் பெயரின் அர்த்தம், “வீழ்த்துபவர்கள்.” அதாவது, “மற்றவர்களை விழச் செய்கிற
வர்கள்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **6:5** *வே.வா., “உள்ளம் எப்போதும் கெட்ட
எண்ணங்களின் பக்கமாகவே சாய்ந்திருந்ததையும்.”

அதி. 5
a லூ 3:23, 36
b ஆதி 3:17
c ஆதி 7:1
எசே 14:14
மத் 24:37
எபி 11:7
1பே 3:20
2பே 2:5
d ஆதி 10:21
ஆதி 11:10
லூ 3:23, 36
e ஆதி 6:10
ஆதி 10:6
f ஆதி 10:2

அதி. 6
g யோபு 1:6
யோபு 38:7
2பே 2:4
யூ 6
h ஆதி 7:4
1பே 3:20
i 2பே 3:9
j ஆதி 8:21
எரே 17:9
மத் 15:19
k சங் 78:40, 41
l ஆதி 7:1
எசே 14:14
எபி 11:7

களில் அவர் குற்றமற்றவராக இருந்தார். அவர் உண்மைக் கடவுளின் வழி
யில் நடந்தார்.*[a] **10** சேம், காம், யாப்பேத் என்ற மூன்று மகன்கள் அவ
ருக்குப் பிறந்தார்கள்.[b] **11** பூமி சீரழிந்து கிடந்ததை உண்மைக் கடவுள்
பார்த்தார். பூமியெங்கும் வன்முறை நடந்தது. **12** கடவுள் பூமியைப் பார்த்
தபோது, அது சீரழிந்து கிடந்தது.[c] பூமியில் மனிதர்கள் எல்லாருடைய நடத்
தையும் படுமோசமாக இருந்தது.[d]

13 அப்போது நோவாவிடம் கடவுள், “எல்லா உயிர்களையும் அழிக்க
வேண்டுமென்று நான் முடிவுசெய்துவிட்டேன். ஏனென்றால், இந்தப் பூமி
யில் எங்கு பார்த்தாலும் மனுஷர்கள் வன்முறையில் இறங்குகிறார்கள். அத
னால், அவர்களையும் இந்தப் பூமியையும் நான் நாசமாக்கப்போகிறேன்.[e]
14 கொப்பேர்* மரத்தால் நீ ஒரு பேழையை# கட்டு.[f] அதில் அறை
களை அமைத்து, அதன் உள்ளேயும் வெளியேயும் தார் பூசு.[g] **15** பேழை
யின் நீளம் 300 முழமும், அகலம் 50 முழமும், உயரம் 30 முழமுமாக*
இருக்க வேண்டும். **16** வெளிச்சம் வருவதற்காக பேழையின் கூரைக்குக்
கீழே ஒரு முழம் விட்டு ஜன்னல்* வைக்க வேண்டும். பேழையின் பக்க
வாட்டில் ஒரு கதவு வைக்க வேண்டும்.[h] கீழ்த்தளம், நடுத்தளம், மேல்தளம்
என மூன்று தளங்களையும் அமைக்க வேண்டும்.

17 வானத்தின் கீழிருக்கிற எல்லா உயிர்களையும்* அழிப்பதற்கு பூமி
யின் மேல் நான் பெரிய வெள்ளத்தைக்[i] கொண்டுவரப்போகிறேன். அப்
போது, பூமியிலுள்ள எல்லா உயிர்களும் இறந்துபோகும்.[j] **18** ஆனால்,
நான் உன்னோடு ஒரு ஒப்பந்தம் செய்கிறேன். நீயும், உன் மனைவியும், உன்
மகன்களும், உன் மருமகள்களும் பேழைக்குள் போக வேண்டும்.[k]
19 உன்னோடு சேர்த்து மற்ற உயிர்களையும் காப்பாற்றப்போகிறேன்.
அதனால், ஒவ்வொரு உயிரினத்திலும் ஆண், பெண் என ஒரு ஜோடி
யைப் பேழைக்குள் கொண்டுபோ.[l] **20** பறக்கும் உயிரினங்களிலும் வீட்டு
விலங்குகளிலும் ஊரும் பிராணிகளிலும் அந்தந்த இனத்தில்* ஒவ்வொரு
ஜோடியைப் பேழைக்குள் கொண்டுபோ. அவற்றின் உயிரையும் நான் காப்
பாற்றப்போகிறேன்.[m] **21** நீயும் மற்ற உயிரினங்களும் சாப்பிடுவதற்குத்
தேவைப்படும் எல்லா வகையான உணவையும்[n] சேர்த்து வைத்து, அவற்
றைப் பேழைக்குள் கொண்டுபோ” என்று சொன்னார்.

22 கடவுள் சொன்ன எல்லாவற்றையும் நோவா செய்தார். அவர் அப்ப
டியே செய்தார்.[o]

7 அதன்பின் யெகோவா நோவாவிடம், “இந்தத் தலைமுறையிலேயே
நீதான் என் பார்வையில் நீதிமானாக இருக்கிறாய். அதனால், நீ
உன் குடும்பத்தோடு பேழைக்குள் போ.[p] **2** சுத்தமான மிருகங்களில்,*

அதி. 6
a 2பே 2:5
b ஆதி 5:32
c வெளி 11:18
d மத் 24:37-39; 2பே 2:5
e ஆதி 7:4
f எபி 11:7
g ஆதி 14:10; யாத் 2:3
h ஆதி 7:16
i ஆதி 1:7; ஆதி 7:6, 11
j ஆதி 7:21; சங் 104:29; மத் 24:39; 2பே 2:5
k ஆதி 7:13
l ஆதி 7:2; ஆதி 8:17
m ஆதி 7:14, 15
n ஆதி 1:29, 30
o யாத் 40:16; எபி 11:7

அதி. 7
p ஆதி 6:9; எபி 10:38; எபி 11:7; 1பே 3:12; 2பே 2:5, 9

6:9 *நே.மொ., “அவர் கடவுளோடு நடந்தார்.” **6:14** *இது ஒரு பிசின் மரம், ஒருவேளை ஊசியிலை மரம். #இது கப்பலைப் போல் பெரிதாக இருந்தது, ஆனால் நீளமான ஒரு பெட்டிபோல் இருந்தது. **6:15** *அதாவது, “நீளம் சுமார் 438 அடியும், அகலம் சுமார் 73 அடியும், உயரம் சுமார் 44 அடியுமாக.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **6:16** *எபிரெயுவில், “சோஹார்.” இது வெளிச்சத்துக்கான ஜன்னலாகவோ திறப்பாகவோ இல்லாமல், கூரையிலிருந்து ஒரு முழத்துக்கு நீட்டிக் கொண்டிருந்த ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்பது சிலருடைய கருத்து. **6:17** *நே.மொ., “உயிர்சக்தியுள்ள எல்லாவற்றையும்.” **6:20** *அதாவது, “வகையில்.” **7:2** *ஒருவேளை, பலி கொடுப்பதற்கு ஏற்ற மிருகங்களைக் குறிக்கலாம்.

ஒவ்வொரு இனத்திலும்* ஆண், பெண் என ஏழு மிருகங்களை# கொண்
டுபோ. அசுத்தமான[a] மிருகங்களில், ஒவ்வொரு இனத்திலும் ஆண், பெண்
என இரண்டு மிருகங்களை மட்டும் கொண்டுபோ. **3** பறக்கும் உயிரினங்
களில் ஆண், பெண் என ஏழு உயிரினங்களை# கொண்டுபோ. அந்த
எல்லா இனங்களும் பூமியிலிருந்து அடியோடு அழிந்துபோகாதபடி அவற்
றைப் பேழைக்குள் கொண்டுபோ.[b] **4** இன்னும் ஏழே நாட்களில், இந்தப்
பூமியில் நாற்பது நாட்களுக்கு இரவும் பகலும்[c] மழை பெய்ய வைப்பேன்.[d]
நான் படைத்த எல்லா உயிர்களையும் இந்தப் பூமியிலிருந்து அடியோடு
அழிப்பேன்"[e] என்று சொன்னார். **5** யெகோவா சொன்ன எல்லாவற்றை
யும் நோவா செய்தார்.

6 நோவாவுக்கு 600 வயதானபோது பூமியில் பெரிய வெள்ளம் வந்தது.[f]
7 அது வருவதற்கு முன்பு நோவாவும் அவருடைய மனைவியும் மகன்க
ளும் மருமகள்களும் பேழைக்குள் போனார்கள்.[g] **8** நோவாவுக்குக்
கடவுள் கட்டளை கொடுத்தபடியே, சுத்தமான மிருகங்கள், அசுத்தமான
மிருகங்கள், பறக்கும் உயிரினங்கள், ஊரும் பிராணிகள் என எல்லாமே[h]
9 ஆணும் பெண்ணுமாக ஜோடி ஜோடியாய்ப் பேழைக்குள் நோவாவிடம்
போயின. **10** ஏழு நாட்கள் கழித்து பூமியில் பெரிய வெள்ளம் வந்தது.

11 நோவாவுக்கு 600 வயதானபோது, அந்த வருஷத்தின் இரண்டாம்
மாதம், 17-ஆம் நாளில், வானத்திலிருந்த மாபெரும் அணைக்கட்டுகள்
உடைந்து* அதன் மதகுகள் திறந்தன.[i] **12** நாற்பது நாட்கள் இரவும் பகலும்
விடாமல் மழை கொட்டியது. **13** அதே நாளில், நோவாவும் அவருடைய
மனைவியும் அவருடைய மகன்களான சேம், காம், யாப்பேத் ஆகியவர்க
ளும்,[j] அவர்களுடைய மனைவிகள் மூன்று பேரும் பேழைக்குள் போனார்
கள்.[k] **14** எல்லா காட்டு மிருகங்களையும், எல்லா வீட்டு விலங்குகளையும்,
ஊருகிற எல்லா பிராணிகளையும், எல்லா பறவைகளையும், இறக்கை
யுள்ள எல்லா உயிரினங்களையும் அந்தந்த இனத்தின்படியே பேழைக்குள்
அவர்கள் கொண்டுபோனார்கள். **15** எல்லா உயிரினங்களுமே* ஜோடி
ஜோடியாக நோவாவின் பேழைக்குள் போயின. **16** நோவாவுக்குக் கடவுள்
கொடுத்த கட்டளைப்படியே, எல்லா உயிரினங்களும் ஆணும் பெண்ணு
மாகப் பேழைக்குள் போயின. அதன் பின்பு பேழையின் கதவை யெகோவா
மூடினார்.

17 பூமியில் நாற்பது நாட்களுக்கு விடாமல் மழை கொட்டியது, வெள்
ளம் பெருக்கெடுத்து ஓடியது. நீர்மட்டம் உயர்ந்துகொண்டே போனது. அத
னால் பேழை மேலே எழும்பி மிதக்க ஆரம்பித்தது. **18** தண்ணீர் பெருக்
கெடுத்து ஓடியதால் பூமி வெள்ளக்காடானது, ஆனால் பேழை தண்ணீரில்
மிதந்துகொண்டிருந்தது. **19** தண்ணீர் பெருகிக்கொண்டே போனதால்
பூமியில் இருந்த உயரமான மலைகளெல்லாம் மூழ்கிவிட்டன.[l] **20** மலை
களுக்கு மேலே 22 அடி* உயரத்துக்குத் தண்ணீர் பெருகியது.

21 அதனால், பறக்கும் உயிரினங்கள், வீட்டு விலங்குகள், காட்டு மிரு
கங்கள், கூட்டங்கூட்டமாகப் போகும் சிறு பிராணிகள் என பூமியிலிருந்த
எல்லா உயிரினங்களும் அழிந்தன.[m] அதோடு, எல்லா மனிதர்களும் இறந்து

7:2 * அதாவது, "வகையிலும்." **7:2, 3** # அல்லது, "ஜோடிகளை." **7:11** * நே.மொ., "மகா ஆழத்தின் ஊற்றுகளெல்லாம் பிளந்து." **7:15** * நே.மொ., "உயிர்ச்சக்தியுள்ள எல்லாமே." **7:20** * நே.மொ., "15 முழ." இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 7
a ஆதி 8:20
b ஆதி 7:23, ஆதி 8:19
c ஆதி 7:11, 12
d ஆதி 2:5
e ஆதி 6:7, 17
f ஆதி 8:13
g லூ 17:27, எபி 11:7
h ஆதி 6:19, 20
i ஆதி 1:7, ஆதி 8:2
j ஆதி 9:18, 1நா 1:4
k ஆதி 6:18, 1பே 3:20, 2பே 2:5
l 2பே 3:5, 6
m ஆதி 6:7, 17

போனார்கள்.[a] **22** நிலத்தில் வாழ்ந்த சுவாசமுள்ள[b] எல்லாமே அழிந்தன.
23 மனிதர்கள், மிருகங்கள், ஊரும் பிராணிகள், பறக்கும் உயிரினங்கள்
என பூமியிலிருந்த எல்லா உயிர்களையும் கடவுள் அழித்தார். அவற்
றைப் பூமியிலிருந்து அடியோடு அழித்தார்.[c] நோவாவின் குடும்பமும் அவ
ருடன் பேழையிலிருந்த உயிரினங்களும் மட்டும்தான் உயிர்பிழைக்க முடிந்
தது.[d] **24** பூமி 150 நாட்களுக்குத் தண்ணீரில் மூழ்கியிருந்தது.[e]

8 ஆனால், நோவாவுக்கும் அவரோடு பேழையில் இருந்த காட்டு மிரு
கங்கள், வீட்டு விலங்குகள் எல்லாவற்றுக்கும் கடவுள் கருணை காட்டி
னார்.[f] பின்பு, பூமியில் காற்றை வீச வைத்தார், அப்போது தண்ணீர்
குறைய ஆரம்பித்தது. **2** வானத்திலிருந்த அணைக்கட்டுகளும்* மதகுக
ளும் மூடப்பட்டன. அதனால், மழை கொட்டுவது நின்றது.[g] **3** பூமியி
லிருந்த தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக வடியத் தொடங்கியது. 150 நாட்
கள் கழித்து தண்ணீர் மட்டம் குறைந்திருந்தது. **4** ஏழாம் மாதம் 17-ஆம்
நாளில், பேழை அரராத் மலையில் வந்து நின்றது. **5** பத்தாம் மாதம்வரை
தண்ணீர் வடிந்துகொண்டே வந்தது. பத்தாம் மாதம் முதலாம் நாளில், மலை
களின் உச்சிகள் தெரிய ஆரம்பித்தன.[h]

6 நோவா 40 நாட்களுக்குப் பின்பு பேழையின் ஜன்னலைத்[i] திறந்து,
7 ஓர் அண்டங்காக்கையை வெளியே விட்டார். பூமியிலிருந்த தண்ணீர்
வற்றும்வரை அது போவதும் வருவதுமாக இருந்தது.

8 பின்பு, தண்ணீர் வடிந்துவிட்டதா என்று தெரிந்துகொள்ள நோவா
ஒரு புறாவை அனுப்பினார். **9** பூமியெங்கும் இன்னும் தண்ணீர் நிறைந்தி
ருந்ததால் புறாவுக்கு உட்கார இடமே கிடைக்கவில்லை.[j] அதனால், அது
பேழைக்கே திரும்பி வந்தது. நோவா தன் கையை நீட்டி அதைப் பிடித்து
பேழைக்குள் எடுத்துக்கொண்டார். **10** இன்னும் ஏழு நாட்கள் கழித்து,
அந்தப் புறாவைப் பேழையிலிருந்து மறுபடியும் வெளியே விட்டார்.
11 அது பசுமையான ஒலிவ இலையைக் கொத்திக்கொண்டு சாயங்காலத்
தில் அவரிடம் திரும்பி வந்தது. அதைப் பார்த்தபோது, பூமியிலிருந்த தண்
ணீர் வடிந்துவிட்டது என்பதை நோவா தெரிந்துகொண்டார்.[k] **12** ஏழு
நாட்கள் கழித்து, அந்தப் புறாவை மறுபடியும் வெளியே விட்டார். ஆனால்,
அது திரும்பி வரவே இல்லை.

13 நோவாவுக்கு 601 வயதானபோது,[l] அந்த வருஷத்தின் முதலாம்
மாதம், முதலாம் நாளில் பூமியிலிருந்த தண்ணீர் வடிந்திருந்தது. பேழையின்
கூரையை நோவா திறந்து பார்த்தபோது, நிலம் காய்ந்துவருவது தெரிந்தது.
14 இரண்டாம் மாதம் 27-ஆம் நாளில் பூமி நன்றாகக் காய்ந்திருந்தது.

15 அப்போது கடவுள் நோவாவிடம், **16** “நீயும், உன் மனைவியும்,
உன் மகன்களும், உன் மருமகள்களும் பேழையிலிருந்து வெளியே வாருங்
கள்.[m] **17** உன்னோடு இருக்கிற மிருகங்கள், பறக்கும் உயிரினங்கள்,
ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும்[n] நீ வெளியே கொண்டுவா. அவை
யெல்லாம் பூமியில் ஏராளமாகப் பெருகட்டும்”[o] என்று சொன்னார்.

18 அதனால், நோவாவும் அவருடைய மனைவியும் மகன்களும்[p] மரு
மகள்களும் பேழையிலிருந்து வெளியே வந்தார்கள். **19** எல்லா மிருகங்
களும், ஊருகிற எல்லா பிராணிகளும், பறக்கிற எல்லா உயிரினங்க
ளும், நிலத்தில் வாழ்கிற மற்ற எல்லா உயிரினங்களும் அந்தந்த

8:2 * நே.மொ., “மகா ஆழத்தின் ஊற்றுகளும்.”

அதி. 7
a லூ 17:27
b ஆதி 2:7; ஆதி 7:15; பிர 3:19; ஏசா 42:5
c ஆதி 6:7; 2பே 3:5, 6
d மத் 24:37-39; 1பே 3:20; 2பே 2:5, 9
e ஆதி 8:3

அதி. 8
f ஆதி 6:19, 20; எபி 11:7
g ஆதி 7:11, 12
h ஆதி 7:20
i ஆதி 6:16
j ஆதி 7:19
k ஆதி 7:20; ஆதி 8:3
l ஆதி 7:6, 11
m ஆதி 7:7; 1பே 3:20; 2பே 2:5
n ஆதி 6:19, 20; ஆதி 7:14, 15
o ஆதி 1:22
p ஆதி 6:10

இனத்தின்படி பேழையிலிருந்து வெளியே வந்தன.[a] **20** பின்பு, யெகோ
வாவுக்காக நோவா ஒரு பலிபீடத்தைக் கட்டினார்.[b] சுத்தமான மிருகங்கள்
சிலவற்றையும் சுத்தமான பறவைகள்[c] சிலவற்றையும் எடுத்து அதன்மேல்
தகன பலி செலுத்தினார்.[d] **21** அது யெகோவாவுக்குப் பிடித்த வாசனை
யாக இருந்தது. அதனால் யெகோவா தன் உள்ளத்தில், "மனுஷர்கள் செய்
கிற தவறுக்காக இனி ஒருபோதும் இந்தப் பூமியைச் சபிக்க மாட்டேன்.[e] சிறு
வயதிலிருந்தே மனுஷர்களுடைய உள்ளத்தின் ஆசைகள் மோசமாக இருக்
கின்றன.*[f] இப்போது செய்ததுபோல், எல்லா உயிர்களையும் இனி நான்
ஒருபோதும் அழிக்க மாட்டேன்.[g] **22** பூமியில் இனி விதைப்பும் அறுப்பும்,
குளிரும் வெப்பமும், கோடைக் காலமும் குளிர் காலமும், பகலும் இரவும்
எப்போதுமே இருக்கும்"[h] என்று சொல்லிக்கொண்டார்.

9 நோவாவையும் அவருடைய மகன்களையும் கடவுள் ஆசீர்வதித்து,
"நீங்கள் பிள்ளைகளைப் பெற்று, ஏராளமாகப் பெருகி, பூமியை நிரப்
புங்கள்.[i] **2** பூமியிலுள்ள எல்லா மிருகங்களும், பறக்கிற எல்லா உயிரினங்
களும், நிலத்தில் வாழ்கிற மற்ற எல்லா உயிரினங்களும், கடலிலுள்ள
எல்லா மீன்களும் முன்பு போலவே உங்களைப் பார்த்துப் பயப்படும்.
அவற்றை இப்போது உங்கள் கையில்* ஒப்படைக்கிறேன்.[j] **3** பூமியில்
வாழும் எல்லா மிருகங்களையும் நீங்கள் சாப்பிடலாம்.[k] நான் உங்களுக்
குச் செடிகொடிகளைத் தந்தது போல இவை எல்லாவற்றையும் தருகிறேன்.[l]
4 ஆனால், இறைச்சியை நீங்கள் இரத்தத்தோடு சாப்பிடக் கூடாது;[m]
ஏனென்றால், இரத்தம்தான் உயிர்.[n] **5** நீங்கள் கொலை செய்யப்பட்டால்,*
உங்கள் உயிருக்காக நான் பழிவாங்குவேன். மிருகமாக இருந்தாலும் சரி,
மனுஷனாக இருந்தாலும் சரி, நான் பழிவாங்குவேன். தன் சகோதரனை யார்
கொலை செய்தாலும் அந்தச் சகோதரனின் உயிருக்காக நான் அவனைப்
பழிவாங்குவேன்.[o] **6** ஒரு மனுஷனைக் கொலை செய்கிறவன் இன்னொரு
மனுஷனால் கொலை செய்யப்படுவான்.*[p] ஏனென்றால், மனுஷனை என்னு
டைய சாயலில் படைத்திருக்கிறேன்.#[q] **7** நீங்கள் பிள்ளைகளைப் பெற்று,
ஏராளமாகப் பெருகி, இந்தப் பூமியை நிரப்புங்கள்" என்று சொன்னார்.[r]

8 பின்பு, நோவாவிடமும் அவருடன் இருந்த மகன்களிடமும் கடவுள்
இப்படிச் சொன்னார்: **9** "இப்போது உங்களோடும் உங்கள் வம்சத்தோடும்
நான் ஒரு ஒப்பந்தம் செய்கிறேன்.[s] **10** உங்களுடன் இருக்கிற பறவைகள்,
மிருகங்கள் என எல்லா உயிரினங்களோடும், அதாவது பேழையிலிருந்து
வெளியே வந்த எல்லா உயிரினங்களோடும்,[t] பூமியிலுள்ள எல்லா உயிர்க
ளோடும் நான் ஒரு ஒப்பந்தம் செய்கிறேன். **11** இனி ஒருபோதும் எல்லா
உயிர்களையும் வெள்ளத்தால் அழிக்க மாட்டேன், இனி ஒருபோதும் இந்
தப் பூமியை வெள்ளத்தால் நாசமாக்க மாட்டேன் என்று உங்களோடு ஒப்
பந்தம் செய்கிறேன்."[u]

12 அதோடு, கடவுள் இதையும் சொன்னார்: "உங்களோடும், உங்களோடு
இருக்கிற எல்லா உயிரினங்களோடும், தலைமுறை தலைமுறைக்கும் நான்

8:21 *வே.வா., "உள்ளம் கெட்ட காரியங்களின் பக்கமாகச் சாய்கிறது." **9:2** *வே.வா., "பொறுப்பில்." **9:5** *நே.மொ., "உங்கள் உயிராகிய இரத்தம் சிந்தப்பட்டால்." **9:6** *நே.மொ., "ஒரு மனுஷனுடைய இரத்தத்தை எவனாவது சிந்தினால் அவனுடைய இரத்தத்தை இன்னொரு மனுஷன் சிந்துவான்." #நே.மொ., "கடவுள் தன்னுடைய சாயலில் மனுஷனை உண்டாக்கியிருக்கிறார்."

அதி. 8
a ஆதி 7:13, 14
b ஆதி 12:7
c ஆதி 7:2; லேவி 20:25
d உபா 27:6
e ஆதி 3:17; ஆதி 5:29
f ஆதி 6:5; பிர 7:20; மத் 15:19
g ஆதி 6:7, 17; ஆதி 9:11; ஏசா 54:9
h ஆதி 1:14; சங் 74:17; பிர 1:4

அதி. 9
i ஆதி 1:28
j ஆதி 1:26; யாக் 3:7
k 1தீ 4:3
l ஆதி 1:29
m லேவி 3:17; லேவி 7:26; லேவி 17:10, 13; உபா 12:16, 23; அப் 15:20, 29; அப் 21:25
n லேவி 17:11, 14
o ஆதி 4:8, 10; யாத் 21:12
p யாத் 20:13; எண் 35:30; மத் 26:52
q ஆதி 1:27
r ஆதி 1:28; ஆதி 10:32
s ஆதி 9:15; ஏசா 54:9
t ஆதி 8:17
u ஆதி 8:21

செய்யும் ஒப்பந்தத்துக்கு அடையாளம் இதுதான். **13** நான் ஒரு வான
வில்லை மேகத்தில் வர வைக்கிறேன். இந்தப் பூமியில் வாழ்கிற எல்லாரு
டனும் நான் செய்கிற ஒப்பந்தத்துக்கு இதுதான் அடையாளம். **14** வானத்
தில் மேகங்களை நான் வர வைக்கும்போது வானவில்லும் கண்டிப்பாக
வரும். **15** அப்போது, உங்களோடும் எல்லா உயிர்களோடும் நான் செய்த
ஒப்பந்தத்தை நிச்சயம் நினைத்துப் பார்ப்பேன். பூமியிலுள்ள எல்லா உயிர்
களையும் அழிக்க இனி வெள்ளம் வராது.[a] **16** மேகத்தில் வானவில்
தெரியும்போதெல்லாம், நான் அதைப் பார்த்து, இந்தப் பூமியிலுள்ள எல்லா
உயிர்களோடும் நான் செய்த நிரந்தர ஒப்பந்தத்தை நிச்சயம் நினைத்துக்
கொள்வேன்."

17 கடவுள் மறுபடியும் நோவாவிடம், "இந்தப் பூமியிலுள்ள எல்லா
உயிர்களோடும் நான் செய்கிற ஒப்பந்தத்துக்கு இதுதான் அடையாளம்"
என்று சொன்னார்.[b]

18 பேழையிலிருந்து வெளியே வந்த நோவாவின் மகன்களுடைய
பெயர்கள்: சேம், காம், யாப்பேத்.[c] பின்பு, காமுக்கு கானான் பிறந்தான்.[d]
19 இந்த மூன்று பேரும் நோவாவின் மகன்கள். பூமியிலிருக்கிற எல்லா
மனிதர்களும் இவர்களுடைய வம்சத்தில்தான் வந்தார்கள். பின்பு, மனிதர்
கள் பூமி முழுவதும் பரவினார்கள்.[e]

20 நோவா விவசாயம் செய்ய ஆரம்பித்தார். அவர் ஒரு திராட்சைத்
தோட்டம் போட்டார். **21** ஒருநாள், போதை தலைக்கேறும் அளவுக்கு
அவர் திராட்சமதுவைக் குடித்துவிட்டு தன் கூடாரத்தில் உடை இல்லாமல்
கிடந்தார். **22** கானானின் அப்பாவான காம் தன்னுடைய அப்பா நோவா
நிர்வாணமாகக் கிடப்பதைப் பார்த்துவிட்டு, வெளியே போய்த் தன் இரண்டு
சகோதரர்களிடம் சொன்னான். **23** உடனே, சேமும் யாப்பேத்தும் ஓர்
அங்கியை எடுத்துத் தங்கள் தோள்களின் மேல் போட்டுக்கொண்டு, பின்
னோக்கி நடந்துபோய், தங்களுடைய அப்பாவின் மேல் போட்டார்கள்.
அவர்களுடைய முகம் எதிர்ப்பக்கமாக இருந்ததால் தங்கள் அப்பா நிர்வா
ணமாகக் கிடப்பதை அவர்கள் பார்க்கவில்லை.

24 நோவா போதை தெளிந்து எழுந்தபோது தன் இளைய மகன் செய்
ததைப் பற்றித் தெரிந்துகொண்டார். **25** அப்போது அவர்,

"கானான் சபிக்கப்பட்டவன்.[f]
அவனுடைய சகோதரர்களுக்கு அவன் அடிமையாகட்டும்"*[g]

என்று சொன்னார்.

26 அதோடு அவர்,

"சேமின் கடவுளாகிய யெகோவாவைப் போற்றுகிறேன்,
சேமுக்கு கானான் அடிமையாகட்டும்.[h]
27 யாப்பேத்துக்குக் கடவுள் மிகப் பெரிய இடத்தைக் கொடுக்கட்டும்,
அவன் சேமின் கூடாரங்களில் குடியிருக்கட்டும்.
கானான் யாப்பேத்துக்கும் அடிமையாகட்டும்"

என்று சொன்னார்.

28 பெருவெள்ளத்துக்குப் பின்பு, நோவா 350 வருஷங்கள் வாழ்ந்தார்.[i]
29 மொத்தம் 950 வருஷங்கள் வாழ்ந்த பின்பு நோவா இறந்துபோனார்.

9:25 * நே.மொ., "அடிமையிலும் அடிமையாகட்டும்."

அதி. 9
a ஆதி 8:21
b ஆதி 9:12, 13
c ஆதி 5:32
ஆதி 7:7
ஆதி 10:1
d ஆதி 10:6
e ஆதி 10:32
f உபா 7:1
g யோசு 17:13
h நியா 1:28
i ஆதி 7:6

10 நோவாவின் மகன்களான சேம்,[a] காம், யாப்பேத் ஆகியவர்களின்
வரலாறு இதுதான்.
பெருவெள்ளம் வந்த பின்பு அவர்களுக்கு மகன்கள் பிறந்தார்கள்.[b]
2 யாப்பேத்தின் மகன்கள்: கோமர்,[c] மாகோகு,[d] மாதாய், யாவான்,
தூபால்,[e] மேசேக்,[f] தீராஸ்.[g]
3 கோமரின் மகன்கள்: அஸ்கினாஸ்,[h] ரீப்பாத், தொகர்மா.[i]
4 யாவானின் மகன்கள்: எலிஷா,[j] தர்ஷீஸ்,[k] கித்தீம்,[l] தொதானீம்.
5 இவர்களுடைய வம்சத்தார் அவரவர் மொழியின்படியும், குடும்பத்தின்
படியும், தேசத்தின்படியும் தீவுகளில்* பரவியிருந்தார்கள்.
6 காமின் மகன்கள்: கூஷ், மிஸ்ராயீம்,[m] பூத்,[n] கானான்.[o]
7 கூஷின் மகன்கள்: சிபா,[p] ஆவிலா, சப்தா, ராமாகு,[q] சப்திகா.
ராமாகுவின் மகன்கள்: சேபா, தேதான்.
8 கூஷுக்கு நிம்ரோது பிறந்தான். இந்தப் பூமியில் நிம்ரோதுதான்
முதன்முதலில் பலம்படைத்தவனாக ஆனான். **9** இவன் பெரிய* வேட்
டைக்காரனாக இருந்தான், யெகோவாவையே எதிர்த்தான். அதனால்
தான், “யெகோவாவையே எதிர்த்த பெரிய வேட்டைக்காரனான நிம்ரோ
தைப் போல” என்ற வழக்குச்சொல் வந்தது. **10** அவன் முதன்முதலாக
ஆட்சி செய்த நகரங்கள்: சினேயார் தேசத்திலிருந்த[r] பாபேல்,[s] ஏரேக்,[t]
அக்காத், கல்னே. **11** அவன் அந்தத் தேசத்திலிருந்து அசீரியாவுக்குப்[u]
போய் நினிவே,[v] ரெகொபோத்-இர், காலாக் ஆகியவற்றையும் **12** நினி
வேக்கும் காலாக்குக்கும் இடையில் ரெசேனையும் கட்டினான். இதுதான்
மாநகர்.*
13 மிஸ்ராயீமின் மகன்கள்: லூதீம்,[w] அனாமீம், லெகாபீம், நப்தூகீம்,[x]
14 பத்ருசீம்,[y] கஸ்லூகிம் (இவருடைய வம்சத்தார்தான் பெலிஸ்தியர்
கள்),[z] கப்தோரிம்.[a]
15 கானானின் முதல் மகன் சீதோன்.[b] இன்னொரு மகன் ஏத்.[c]
16 அதன்பின் எபூசியர்கள்,[d] எமோரியர்கள்,[e] கிர்காசியர்கள், **17** ஏவி
யர்கள்,[f] அர்கீயர்கள், சீநியர்கள், **18** அர்வாதியர்கள்,[g] செமாரியர்கள்,
காமாத்தியர்கள்[h] ஆகியவர்களுக்கு கானான் மூதாதை ஆனான். பிற்
பாடு, இந்த கானானியர்களின் குடும்பங்கள் சிதறிவிட்டன. **19** கானானி
யர்களுடைய தேசத்தின் எல்லை சீதோனிலிருந்து காசாவுக்குப்[i] பக்கத்தி
லுள்ள கேரார்[j] வரையும், லாசாவுக்குப் பக்கத்திலுள்ள சோதோம்,
கொமோரா,[k] அத்மா, செபோயீம்[l] வரையும் இருந்தது. **20** குடும்பங்க
ளின்படியும், மொழிகளின்படியும், தேசங்களின்படியும், சமுதாயங்களின்ப
டியும் வாழ்ந்துவந்த காமின் சந்ததியார் இவர்கள்தான்.
21 சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள். அவன் மூத்தவனாகிய யாப்
பேத்தின் சகோதரன்,* ஏபேருடைய சந்ததியாருக்கு[m] மூதாதை.
22 சேமின் மகன்கள்: ஏலாம்,[n] அஷூர்,[o] அர்பக்சாத்,[p] லூத், அராம்.[q]
23 அராமின் மகன்கள்: ஊத்ஸ், கூல், கேத்தெர், மாஸ்.

10:5 *வே.வா., “கடலோரப் பகுதிகளில்.” **10:9** *வே.வா., “பலம்படைத்த.” **10:12** *அநேகமாக, நினிவே, ரெகொபோத்-இர், காலாக், ரெசேன் ஆகிய எல்லா நகரங்களும் சேர்ந்து ஒரு மாநகரமாகக் கருதப்பட்டது. **10:21** *அல்லது, “அவன் யாப்பேத்தின் அண்ணன்.”

அதி. 10
a லூ 3:23, 36
b ஆதி 9:18, 19
c எசே 38:6
d எசே 38:2
e ஏசா 66:19
எசே 27:13
f சங் 120:5
எசே 32:26
g 1நா 1:5-7
h எரே 51:27
i எசே 27:14
எசே 38:6
j எசே 27:7
k யோனா 1:3
l ஏசா 23:1
m ஆதி 50:11
n எரே 46:9
நாகூ 3:9
o எண் 34:2
1நா 1:8-10
p சங் 72:10
q எசே 27:22
r தானி 1:2
s ஆதி 11:9
t எஸ்றா 4:9
u மீ 5:6
v யோனா 3:3
மத் 12:41
w எரே 46:9
x 1நா 1:11, 12
y எசே 29:14
z யோசு 13:2, 3
எரே 47:4
a உபா 2:23
b யோசு 13:6
மாற் 7:24
c ஆதி 25:10
ஆதி 27:46
1நா 1:13-16
d நியா 1:21
e ஆதி 15:16
உபா 3:8
f யோசு 11:3
g எசே 27:11
h 1ரா 8:65
i யோசு 15:
20, 47
அப் 8:26
j ஆதி 20:1
k ஆதி 13:10
ஆதி 19:24
யூ 7
l உபா 29:23
m ஆதி 11:17
n எஸ்றா 4:9
அப் 2:8, 9
o எசே 27:23
p ஆதி 11:10
q 1நா 1:17

24 அர்பக்சாத்தின் மகன் சேலா.[a] சேலாவின் மகன் ஏபேர்.

25 ஏபேருக்கு இரண்டு மகன்கள் பிறந்தார்கள். ஒரு மகனின் பெயர் பேலேகு,*[b] ஏனென்றால் அவருடைய வாழ்நாளில்தான் ஜனங்கள் எல்லா இடங்களுக்கும் பிரிந்துபோனார்கள். இன்னொரு மகனின் பெயர் யொக்தான்.[c]

26 யொக்தானின் மகன்கள்: அல்மோதாத், சாலேப், ஆசர்மாவேத், யேராக்,[d] **27** ஹதோராம், ஊசால், திக்லா, **28** ஓபால், அபிமாவேல், சேபா, **29** ஓப்பீர்,[e] ஆவிலா, யோபாப்; இவர்கள் எல்லாரும் யொக்தானுக்குப் பிறந்தவர்கள்.

30 இவர்கள் குடியிருந்த பகுதி, மேசாமுதல் கிழக்கத்திய மலைப்பகுதியான செப்பார்வரை பரவியிருந்தது.

31 குடும்பங்களின்படியும், மொழிகளின்படியும், தேசங்களின்படியும் சமுதாயங்களின்படியும் வாழ்ந்துவந்த சேமின் சந்ததியார் இவர்கள்தான்.[f]

32 வம்சங்களின்படியும் தேசங்களின்படியும் வாழ்ந்துவந்த நோவாவுடைய மகன்களின் குடும்பத்தார் இவர்கள்தான். பெருவெள்ளத்துக்குப் பின்பு இவர்களுடைய சந்ததியார்தான் பூமியெங்கும் பரவினார்கள்.[g]

11 அப்போது, பூமியெங்கும் ஒரே மொழி இருந்தது; ஜனங்கள் ஒரே விதமான வார்த்தைகளைப் பேசினார்கள். **2** அவர்கள் கிழக்குத் திசையில் போனபோது, சினேயார் தேசத்தில்[h] ஒரு சமவெளியைக் கண்டுபிடித்து அங்கே குடியேறினார்கள். **3** அப்போது அவர்கள், “நாம் செங்கல் செய்து அவற்றைச் சூளையில் சுடுவோம், வாருங்கள்” என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். பின்பு செங்கல் செய்து அவற்றைக் கல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தினார்கள், தார் வைத்து அவற்றைப் பூசினார்கள். **4** பின்பு அவர்கள், “வாருங்கள்! நாம் பூமி முழுவதும் சிதறிப்போகாமல் இருப்பதற்காக, நமக்கு ஒரு நகரத்தையும் வானத்தைத் தொடுகிற அளவுக்கு ஒரு கோபுரத்தையும் கட்டி, பேரும் புகழும் சம்பாதிப்போம்” என்று சொல்லிக்கொண்டார்கள்.[i]

5 மனிதர்கள் கட்டிக்கொண்டிருந்த நகரத்தையும் கோபுரத்தையும் பார்ப்பதற்காக யெகோவா கீழே இறங்கி வந்தார்.* **6** அப்போது யெகோவா, “இதோ! அவர்கள் எல்லாரும் ஒரே மொழியைப்[j] பேசிக்கொண்டு ஒன்றாக இருக்கிறார்கள். அதனால்தான், இந்த வேலையைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இனி அவர்கள் திட்டம் போடுகிறபடியெல்லாம் செய்துவிடுவார்கள். **7** அதனால் நாம்[k] இறங்கிப் போய்,* அவர்கள் ஒருவருக்கொருவர் பேசுவது புரியாதபடி அவர்களுடைய மொழியில் குழப்பத்தை ஏற்படுத்தலாம்” என்று சொன்னார். **8** அதன்படியே, யெகோவா அவர்களை அங்கிருந்து பூமி முழுவதும் சிதறிப்போக வைத்தார்.[l] அதனால், அந்த நகரத்தை அவர்கள் கட்டாமல் விட்டுவிட்டார்கள். **9** அந்த இடத்துக்கு பாபேல்*[m] என்ற பெயர் வைக்கப்பட்டது. ஏனென்றால், பூமியெங்கும் பேசப்பட்ட மொழியை யெகோவா குழப்பியது அந்த இடத்தில்தான். அங்கிருந்த ஜனங்களை யெகோவா பூமியெங்கும் சிதறிப்போக வைத்தார்.

10:25 *அர்த்தம், “பிரிவு.” **11:5** *வே.வா., “தன் கவனத்தைத் திருப்பினார்.” **11:7** *வே.வா., “நம்முடைய கவனத்தைத் திருப்பி.” **11:9** *அர்த்தம், “குழப்பம்.” பாபேல் என்பது பாபிலோனைக் குறிக்கிறது.

அதி. 10
a ஆதி 11:12; லூ 3:23, 35
b ஆதி 11:16
c 1நா 1:19
d 1நா 1:20-23
e 1ரா 9:28; 1ரா 10:11
f ஆதி 10:5
g ஆதி 9:7; ஆதி 9:19; அப் 17:26

அதி. 11
h ஆதி 10:9, 10; தானி 1:2
i ஆதி 9:1
j ஆதி 11:1
k ஆதி 1:26
l உபா 32:8
m எரே 50:1

10 சேமின் வரலாறு இதுதான்.[a]
பெருவெள்ளம் வந்து இரண்டு வருஷங்களுக்குப் பின்பு, சேமுக்கு
100 வயதானபோது, அவனுக்கு அர்பக்சாத்[b] பிறந்தான். **11** அர்பக்சாத்
பிறந்த பின்பு சேம் 500 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களையும் மகள்களை
யும் பெற்றான்.[c]
12 அர்பக்சாத்துக்கு 35 வயதானபோது அவனுக்கு சேலா[d] பிறந்தான்.
13 சேலா பிறந்த பின்பு அர்பக்சாத் 403 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களை
யும் மகள்களையும் பெற்றான்.
14 சேலாவுக்கு 30 வயதானபோது அவனுக்கு ஏபேர்[e] பிறந்தான்.
15 ஏபேர் பிறந்த பின்பு சேலா 403 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களையும்
மகள்களையும் பெற்றான்.
16 ஏபேருக்கு 34 வயதானபோது அவனுக்கு பேலேகு[f] பிறந்தான்.
17 பேலேகு பிறந்த பின்பு ஏபேர் 430 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களை
யும் மகள்களையும் பெற்றான்.
18 பேலேகுக்கு 30 வயதானபோது அவனுக்கு ரெகூ[g] பிறந்தான்.
19 ரெகூ பிறந்த பின்பு பேலேகு 209 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களை
யும் மகள்களையும் பெற்றான்.
20 ரெகூவுக்கு 32 வயதானபோது அவனுக்கு சேரூக் பிறந்தான்.
21 சேரூக் பிறந்த பின்பு ரெகூ 207 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களையும்
மகள்களையும் பெற்றான்.
22 சேரூக்குக்கு 30 வயதானபோது அவனுக்கு நாகோர் பிறந்தான்.
23 நாகோர் பிறந்த பின்பு சேரூக் 200 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களை
யும் மகள்களையும் பெற்றான்.
24 நாகோருக்கு 29 வயதானபோது அவனுக்கு தேராகு[h] பிறந்தான்.
25 தேராகு பிறந்த பின்பு நாகோர் 119 வருஷங்கள் வாழ்ந்து, மகன்களை
யும் மகள்களையும் பெற்றான்.
26 தேராகுக்கு 70 வயதான பின்பு, அவனுக்கு ஆபிராம்,[i] நாகோர்,[j]
ஆரான் என்ற மகன்கள் பிறந்தார்கள்.
27 தேராகுடைய வரலாறு இதுதான்.
ஆபிராம், நாகோர், ஆரான் ஆகியவர்கள் தேராகுவின் மகன்கள்;
ஆரான் லோத்துவைப்[k] பெற்றார். **28** ஆரான் தன்னுடைய சொந்த நக
ரமாகிய ஊர்[l] என்ற கல்தேயர்களின் நகரத்தில்[m] தன் அப்பா தேராகுக்கு
முன்பே இறந்துவிட்டார். **29** சாராய்[n] என்ற பெண்ணை ஆபிராம் கல்யா
ணம் செய்துகொண்டார். மில்காள்[o] என்ற பெண்ணை நாகோர் கல்யாணம்
செய்துகொண்டார்; மில்காள் ஆரானின் மகள். ஆரானுக்கு மில்காளைத்
தவிர இஸ்காள் என்ற மகளும் இருந்தாள். **30** சாராய்க்குக் குழந்தை பாக்
கியம் கிடைக்கவில்லை.[p]
31 பின்பு, தேராகு தன்னுடைய மகன் ஆபிராமையும், ஆரானின் மக
னும் தன்னுடைய பேரனுமான லோத்துவையும்,[q] ஆபிராமின் மனைவியும்
தன் மருமகளுமான சாராயையும் கூட்டிக்கொண்டு, ஊர் என்ற கல்தேயர்க
ளின் நகரத்தைவிட்டு கானான் தேசத்துக்குப்[r] புறப்பட்டுப் போனார். பின்பு,
அவர்கள் ஆரான்[s] என்ற நகரத்துக்குப் போய் அங்கே குடியிருந்தார்கள்.
32 தேராகு மொத்தம் 205 வருஷங்கள் உயிரோடு இருந்தார். பின்பு, ஆரா
னில் இறந்துபோனார்.

அதி. 11
a ஆதி 6:10, லூ 3:23, 36
b ஆதி 10:22, 1நா 1:17
c ஆதி 10:21
d ஆதி 10:24, 1நா 1:18, லூ 3:23, 35
e ஆதி 10:21, 1நா 1:18
f ஆதி 10:25, 1நா 1:19
g லூ 3:23, 35
h ஆதி 11:32, லூ 3:23, 34
i ஆதி 12:7, ஆதி 15:1, 6, ஆதி 17:5, யாக் 2:23
j யோசு 24:2
k ஆதி 12:4, ஆதி 19:1, 2பே 2:7
l ஆதி 15:7, நெ 9:7
m அப் 7:4
n ஆதி 12:11, ஆதி 17:15, ஆதி 20: 12, 13, 1பே 3:6
o ஆதி 22:20, ஆதி 24:15
p ஆதி 16:1, 2, ரோ 4:19, எபி 11:11
q ஆதி 11: 27, 28
r ஆதி 10:19
s ஆதி 12:4, ஆதி 27: 42, 43, அப் 7:2, 4

12 அப்போது யெகோவா ஆபிராமிடம், “நீ உன் தேசத்தையும், உன்
சொந்தக்காரர்களையும், உன் அப்பாவின் குடும்பத்தாரையும்* விட்
டுவிட்டு நான் காட்டப்போகிற தேசத்துக்குப் புறப்பட்டுப் போ.[a] **2** நான்
உன்னை மாபெரும் தேசமாக்குவேன், உன்னை ஆசீர்வதித்து உன் பெய
ரைப் பிரபலமாக்குவேன். உன் மூலமாக எல்லாருக்கும் ஆசீர்வாதம்
கிடைக்கும்.[b] **3** உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை நான் ஆசீர்வதிப்பேன்,
உன்னைச் சபிக்கிறவர்களை நான் சபிப்பேன்.[c] பூமியிலுள்ள எல்லா குடும்
பங்களும் உன் மூலமாக நிச்சயம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்”[d]
என்று சொன்னார்.

4 யெகோவா சொன்னபடியே ஆபிராம் அங்கிருந்து புறப்பட்டுப்
போனார், லோத்துவும் அவருடன் போனார். ஆபிராம் ஆரானிலிருந்து
புறப்பட்டபோது[e] அவருக்கு 75 வயது. **5** ஆபிராம் தன் மனைவி சாரா
யோடும்,[f] தன் சகோதரனின் மகன் லோத்துவோடும்,[g] ஆரானிலே அவர்
கள் சேர்த்துவைத்த எல்லா பொருள்களோடும்,[h] சம்பாதித்த வேலைக்காரர்
களோடும் கானான் தேசத்துக்குக் கிளம்பினார்.[i] அவர்கள் கானான்
தேசத்தின் எல்லையை அடைந்தார்கள். **6** அதன்பின் அந்தத் தேசத்துக்
குள் பயணம் செய்து, சீகேம்[j] நகரத்திலே பெரிய மரங்கள் இருந்த மோரே[k]
என்ற இடத்துக்கு வந்துசேர்ந்தார்கள். அந்தச் சமயத்தில் கானானியர்கள்
அங்கு வாழ்ந்துவந்தார்கள். **7** பின்பு யெகோவா ஆபிராமுக்குத் தோன்றி,
“உன்னுடைய சந்ததிக்கு[l] இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்”[m] என்று சொன்
னார். அதனால், ஆபிராம் யெகோவாவுக்காக அங்கே ஒரு பலிபீடம் கட்
டினார். **8** பிற்பாடு, பெத்தேல்[n] நகரத்துக்குக் கிழக்கே இருந்த மலைப்பகு
திக்குப் போய் அங்கே கூடாரம் போட்டார். அதற்கு மேற்கே பெத்தேல்
நகரமும் கிழக்கே ஆயி நகரமும்[o] இருந்தன. அங்கு அவர் யெகோவா
வுக்கு ஒரு பலிபீடம் கட்டி[p] யெகோவாவின் பெயரைப் போற்றிப் புகழ்ந்
தார்.[q] **9** பின்பு ஆபிராம் அங்கிருந்து புறப்பட்டு, நெகேபின்[r] திசை
யில்* பயணம் செய்தார். வழியிலே, பல இடங்களில் கூடாரம் போட்டுத்
தங்கினார்.

10 அப்போது, கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் கடுமை
யாக இருந்ததால்,[s] சில காலம்* எகிப்தில் தங்குவதற்காக ஆபிராம் புறப்
பட்டுப் போனார்.[t] **11** எகிப்தை நெருங்கியபோது அவர் தன் மனைவி
சாராயிடம், “தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்! நீ பார்ப்பதற்கு ரொம்ப
அழகாக இருக்கிறாய்.[u] **12** அதனால் எகிப்தியர்கள் உன்னைப் பார்க்கும்
போது, ‘இவள் இவனுடைய மனைவி’ என்று சொல்லி, உன்னை அடைவ
தற்காக என்னைக் கொன்றுவிடுவார்கள். **13** அவர்களிடம் நீ என் தங்கை
என்று தயவுசெய்து சொல்லிவிடு. அப்போதுதான், அவர்கள் என்னை
ஒன்றும் செய்ய மாட்டார்கள். உன்னால் நான் உயிர் பிழைப்பேன்”[v] என்று
சொன்னார்.

14 ஆபிராம் எகிப்துக்குள் போனவுடன், சாராய் மிக அழகாக இருப்
பதை எகிப்தியர்கள் கவனித்தார்கள். **15** பார்வோனின் அதிகாரிகளும்
அவளைப் பார்த்து, அவளுடைய அழகைப் பற்றி பார்வோனிடம்
புகழ்ந்து பேசினார்கள். அதனால், அவள் பார்வோனின் அரண்மனைக்குக்

அதி. 12
a யோசு 24:3; அப் 7:3, 4
b ஆதி 13:14, 16; ஆதி 15:1, 5; ஆதி 17:5; ஆதி 22:17, 18; உபா 26:5
c ஆதி 27:29, 30
d அப் 3:25; கலா 3:8
e எபி 11:8
f ஆதி 11:29
g ஆதி 11:31
h ஆதி 13:5, 6
i ஆதி 26:3
j அப் 7:15, 16
k ஆதி 35:4; உபா 11:29, 30
l ஆதி 3:15; ஆதி 21:12; ஆதி 28:13, 14; ரோ 9:7; கலா 3:16
m ஆதி 13:14, 15; ஆதி 15:1, 7; ஆதி 17:1, 8; உபா 34:4
n ஆதி 28:16-19; ஆதி 31:13
o ஆதி 13:1, 3; யோசு 7:2
p ஆதி 8:20; ஆதி 35:2, 3
q ஆதி 26:25
r ஆதி 20:1; ஆதி 24:62
s ஆதி 26:1, 2
t சங் 105:13
u ஆதி 26:7
v ஆதி 20:11, 12

12:1 *நே.மொ., “வீட்டையும்.” **12:9** *அதாவது, “தென் திசையில்.” **12:10** *வே.வா., “அன்னியராக.”

கொண்டுபோகப்பட்டாள். **16** அவளுக்காக ஆபிராமை பார்வோன் நன்
றாகக் கவனித்துக்கொண்டான். அவருக்கு ஆடுமாடுகளையும் கழுதைக
ளையும் வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் ஒட்டகங்களையும்
கொடுத்தான்.[a] **17** ஆபிராமின் மனைவி சாராய்[b] பார்வோனின் அரண்ம
னைக்குக் கொண்டுபோகப்பட்டதால், அவனையும் அவன் வீட்டைச் சேர்ந்
தவர்களையும் யெகோவா கொடிய நோய்களால்* வாட்டினார். **18** அத
னால் பார்வோன் ஆபிராமைக் கூப்பிட்டு, “நீ ஏன் இப்படிச் செய்தாய்?
இவள் உன் மனைவி என்று ஏன் என்னிடம் சொல்லவில்லை? **19** ‘இவள்
என் தங்கை’ என்று ஏன் சொன்னாய்?[c] அதனால்தானே இவளை என்
மனைவியாக்க நினைத்தேன். இதோ, உன் மனைவி! இவளைக் கூட்டிக்
கொண்டு போய்விடு!” என்று சொன்னான். **20** பின்பு, ஆபிராமை அனுப்
பிவிடச் சொல்லி பார்வோன் தன்னுடைய ஆட்களுக்கு ஆணையிட்டான்.
அதன்படியே, அவர்கள் ஆபிராமை அவருடைய மனைவியோடும் அவர்
களுக்குச் சொந்தமான எல்லாவற்றோடும் அனுப்பி வைத்தார்கள்.[d]

13 அதன்பின், ஆபிராம் தன் மனைவியோடும் லோத்துவோடும் தன்
னிடம் இருந்த எல்லாவற்றோடும் எகிப்திலிருந்து நெகேபுக்குப்[e]
போனார். **2** ஆபிராமிடம் ஏராளமான கால்நடைகளும் வெள்ளியும் தங்க
மும் இருந்தன.[f] **3** நெகேபிலிருந்து பெத்தேலுக்கு அவர் பயணம் செய்த
போது பல இடங்களில் கூடாரம் போட்டுத் தங்கினார். கடைசியில், பெத்
தேல் நகரத்துக்கும் ஆயி நகரத்துக்கும்[g] இடையில், ஏற்கெனவே கூடாரம்
போட்டிருந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார். **4** முன்பு அவர் பலிபீடம்
கட்டியிருந்த அந்த இடத்தில் யெகோவாவின் பெயரைப் போற்றிப்
புகழ்ந்தார்.

5 ஆபிராமுடன் பயணம் செய்துவந்த லோத்துவுக்கும் ஆடுமாடுகளும்
கூடாரங்களும் இருந்தன. **6** அதனால், அவர்கள் ஒன்றாகக் குடியிருக்க
அந்த இடம் போதவில்லை. அவர்களுக்கு ஏராளமான பொருள்கள் சேர்ந்
துவிட்டதால் அவர்களால் ஒன்றாகக் குடியிருக்க முடியவில்லை. **7** இதன்
காரணமாக, ஆபிராமின் மேய்ப்பர்களுக்கும் லோத்துவின் மேய்ப்பர்களுக்
கும் வாக்குவாதம் ஏற்பட்டது. (அந்தச் சமயத்தில் கானானியர்களும் பெரி
சியர்களும் அந்தத் தேசத்தில் குடியிருந்தார்கள்.)[h] **8** அதனால் ஆபிராம்
லோத்துவிடம்,[i] “உனக்கும் எனக்கும் உன் மேய்ப்பர்களுக்கும் என் மேய்ப்
பர்களுக்கும் தயவுசெய்து எந்த வாக்குவாதமும் வேண்டாம். நீயும் நானும்
சகோதரர்கள்தானே? **9** இந்தத் தேசத்தில் எந்தப் பகுதியை வேண்டுமானா
லும் நீ எடுத்துக்கொள். தயவுசெய்து நாம் பிரிந்துவிடலாம். நீ இடது பக்க
மாகப் போனால், நான் வலது பக்கமாகப் போவேன். நீ வலது பக்கமாகப்
போனால் நான் இடது பக்கமாகப் போவேன்” என்று சொன்னார்.
10 சோவார்[j] வரையுள்ள யோர்தான் பிரதேசம் முழுவதையும் லோத்து
பார்த்தார்.[k] அது நிறைய தண்ணீர் உள்ள இடமாக இருந்தது. (சோதோ
மையும் கொமோராவையும் யெகோவா அழிப்பதற்கு முன்பு அது அப்
படி இருந்தது.) யெகோவாவின் தோட்டத்தைப் போலவும்[l] எகிப்து தேசத்
தைப் போலவும் அது இருந்தது. **11** யோர்தான் பிரதேசம் முழுவதையும்
லோத்து தேர்ந்தெடுத்தார். பின்பு, கிழக்கே போய்க் குடியிருந்தார். இப்
படி, ஆபிராமும் லோத்துவும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோனார்கள்.

12:17 * நே.மொ., “துன்பங்களால்.”

ஆதி. 12
a ஆதி 20:14; ஆதி 24:34, 35
b ஆதி 11:29; ஆதி 17:15; ஆதி 23:2, 19
c ஆதி 20:11, 12
d சங் 105:14

ஆதி. 13
e ஆதி 12:9; ஆதி 20:1
f ஆதி 24:34, 35
g ஆதி 12:8, 9; யோசு 7:2
h ஆதி 10:19
i ஆதி 11:27
j ஆதி 19:20-22
k ஆதி 19:28
l ஆதி 2:8, 9

12 ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருந்தார். ஆனால் லோத்து, யோர்
தான் பிரதேசத்தில் இருந்த நகரங்களில் குடியிருந்தார்.[a] கடைசியாக, அவர்
சோதோமுக்குப் பக்கத்தில் கூடாரம் போட்டார். **13** சோதோமிலிருந்த
ஆட்கள் பொல்லாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் யெகோவாவுக்கு எதி
ராகப் பயங்கரமான பாவங்களைச் செய்துவந்தார்கள்.[b]

14 ஆபிராமிடமிருந்து லோத்து பிரிந்துபோன பின்பு யெகோவா ஆபி
ராமிடம், “நீ இருக்கும் இடத்திலிருந்து தயவுசெய்து வடக்கிலும் தெற்கிலும்
கிழக்கிலும் மேற்கிலும் பார். **15** நீ பார்க்கும் எல்லா இடங்களையும்
உனக்கும் உன் சந்ததிக்கும் நிரந்தர சொத்தாகத் தருவேன்.[c] **16** உன் சந்த
தியைப் பூமியிலுள்ள மணலைப் போலப் பெருக வைப்பேன். பூமியிலுள்ள
மணலை யாராவது எண்ண முடிந்தால்தான் உன் சந்ததியையும் எண்ண
முடியும்.[d] **17** நீ புறப்பட்டுப் போய் அந்தத் தேசம் முழுவதையும் சுற்றிப்
பார். நான் அதை உனக்குத் தருவேன்” என்று சொன்னார். **18** ஆபி
ராம் தொடர்ந்து கூடாரங்களில் வாழ்ந்துவந்தார். பிற்பாடு, எப்ரோனிலே[e]
பெரிய மரங்கள் இருக்கிற மம்ரே[f] என்ற இடத்துக்குப் போய்க் குடியிருந்
தார். அங்கே யெகோவாவுக்கு ஒரு பலிபீடம் கட்டினார்.[g]

14 அம்ராப்பேல் சினேயாரின்[h] ராஜாவாகவும், ஆரியோகு ஏலாசாரின்
ராஜாவாகவும், கெதர்லாகோமேர்[i] ஏலாமின்[j] ராஜாவாகவும், திதி
யால் கோயிமின் ராஜாவாகவும் இருந்தார்கள். **2** இவர்கள் சோதோமின்[k]
ராஜா பேராவுக்கும், கொமோராவின்[l] ராஜா பிர்சாவுக்கும், அத்மாவின் ராஜா
சிநெயாவுக்கும், செபோயீமின்[m] ராஜா செமேபருக்கும், பேலாவின் (அதா
வது, சோவாரின்) ராஜாவுக்கும் எதிராகப் போர் செய்தார்கள். **3** இவர்கள்*
எல்லாரும் தங்கள் படைகளோடு சித்தீம் பள்ளத்தாக்கிலே,[n] அதாவது இப்
போது உப்புக் கடல்#[o] இருக்கிற இடத்திலே, ஒன்றுதிரண்டார்கள்.

4 இவர்கள்* 12 வருஷங்களாக கெதர்லாகோமேர் ராஜாவுக்கு அடிப
ணிந்து நடந்தார்கள்; ஆனால், 13-ஆம் வருஷத்தில் கலகம் செய்தார்கள்.
5 அதனால் 14-ஆம் வருஷத்தில் கெதர்லாகோமேர் ராஜாவும் அவரோடு
இருந்த ராஜாக்களும் படையெடுத்து வந்து, அஸ்தரோத்-கர்னாயீமில்
இருந்த ரெப்பாயீமியர்களையும், காமில் இருந்த சூசிமியர்களையும், சாவே-
கீரியத்தாயீமில் இருந்த ஏமியர்களையும்,[p] **6** சேயீர் மலையில்[q] இருந்த
ஓரியர்களையும்[r] தோற்கடித்தார்கள். இவர்களை வனாந்தரத்தின் எல்லையி
லுள்ள எல்-பாரான்வரை தோற்கடித்தார்கள். **7** பின்பு, அங்கிருந்து
திரும்பி என்-மிஸ்பாத்துக்கு, அதாவது காதேசுக்கு,[s] போய் அமலேக்கியர்
களின்[t] பிரதேசம் முழுவதையும் கைப்பற்றினார்கள். அதோடு, அத்சாத்
சோன்-தாமாரில்[u] குடியிருந்த எமோரியர்களைத்[v] தோற்கடித்தார்கள்.

8 அப்போது சோதோமின் ராஜாவும், கொமோராவின் ராஜாவும், அத்
மாவின் ராஜாவும், செபோயீமின் ராஜாவும், பேலாவின் (அதாவது, சோவா
ரின்) ராஜாவும் சித்தீம் பள்ளத்தாக்கிலே அணிவகுத்து வந்து, **9** ஏலாமின்
ராஜாவாகிய கெதர்லாகோமேருக்கும், கோயிமின் ராஜாவாகிய திதியா
லுக்கும், சினேயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலுக்கும், ஏலாசாரின் ராஜா
வாகிய[w] ஆரியோகுக்கும் எதிராகப் போர் செய்தார்கள். அதாவது,

14:3 *“இவர்கள்” என்பது வசனம் 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள ராஜாக்களாக இருக்க
லாம். #அதாவது, “சவக் கடல்.” **14:4** *“இவர்கள்” என்பது வசனம் 2-ல் குறிப்பிடப்
பட்டுள்ள ராஜாக்களாக இருக்கலாம்.

அதி. 13
a ஆதி 19:28, 29
b ஆதி 18:20; ஆதி 19:5; 2பே 2:6-8; யூ 7
c ஆதி 12:7; ஆதி 15:18; ஆதி 24:7; யாத் 33:1
d ஆதி 12:2; ஆதி 15:1, 5; யாத் 1:7; எபி 11:12
e ஆதி 23:2
f ஆதி 18:1; ஆதி 23:19; ஆதி 25:9, 10; ஆதி 35:27
g ஆதி 12:7

அதி. 14
h ஆதி 10:9, 10
i ஆதி 14:17
j ஆதி 10:22
k ஆதி 10:19; ஆதி 13:12
l ஆதி 13:10, 12
m உபா 29:23
n ஆதி 14:10
o எண் 34:2, 12
p உபா 2:10, 11
q ஆதி 36:8
r உபா 2:12
s எண் 20:1
t ஆதி 36:12; 1சா 15:2
u 2நா 20:2
v ஆதி 10:15, 16
w ஆதி 14:1, 2

நான்கு ராஜாக்கள் சேர்ந்து ஐந்து ராஜாக்களுக்கு எதிராகப் போர் செய்தார்
கள். **10** சித்தீம் பள்ளத்தாக்கில் தார் குழிகள் நிறைய இருந்தன. சோதோ
மின் ராஜாவும் கொமோராவின் ராஜாவும் தப்பித்து ஓடியபோது அந்தக்
குழிகளுக்குள் விழுந்தார்கள். மற்றவர்கள் மலைப்பகுதிக்கு ஓடிப்போனார்
கள். **11** வெற்றி அடைந்த படைவீரர்கள் சோதோம், கொமோரா ஜனங்
கள் வைத்திருந்த உணவுப் பொருள்களையும் மற்ற எல்லா பொருள்களை
யும் எடுத்துக்கொண்டு போனார்கள்.[a] **12** ஆபிராமுடைய சகோதரனின்
மகனாகிய லோத்து சோதோமில் வாழ்ந்துவந்ததால்[b] அவரையும் பிடித்துக்
கொண்டு போனார்கள். அவருக்குச் சொந்தமான எல்லாவற்றையும் எடுத்
துக்கொண்டு போனார்கள்.

13 அவர்களிடமிருந்து தப்பித்து வந்த ஒருவன் அந்த விஷயத்தை எபி
ரெயரான ஆபிராமிடம் சொன்னான். அந்தச் சமயத்தில் ஆபிராம், எமோ
ரியனான மம்ரே என்பவனுக்குச் சொந்தமான பெரிய மரங்களுக்கு நடுவே
குடியிருந்தார்.*[c] இந்த மம்ரே, எஸ்கோலுக்கும் ஆநேருக்கும்[d] சகோதரன்.
இந்த மூன்று பேரும் ஆபிராமோடு ஒப்பந்தம் செய்திருந்தார்கள். **14** எதி
ரிகள் படையெடுத்து வந்து தன்னுடைய சகோதரனின் மகனைப்[e] பிடித்துக்
கொண்டு போனதை ஆபிராம் தெரிந்துகொண்டார். உடனே, தன்னுடைய
வீட்டில் பிறந்து வளர்ந்திருந்த பயிற்சி பெற்ற 318 வீரர்களைக் கூட்டிக்
கொண்டு தாண்வரை[f] எதிரிகளைத் துரத்திச் சென்றார். **15** அன்றைக்கு
ராத்திரி, தன்னோடு இருந்தவர்களை அவர் அணி அணியாகப் பிரித்
தார். பின்பு, அவரும் அவருடைய வீரர்களும் எதிரிகளைத் தாக்கி அவர்
களைத் தோற்கடித்தார்கள். தமஸ்குவுக்கு வடக்கே இருக்கிற ஓபா வரையில்
ஆபிராம் அவர்களைத் துரத்திக்கொண்டு போனார். **16** பின்பு, எதிரிகள்
எடுத்துக்கொண்டு போயிருந்த எல்லாவற்றையும், தன் சகோதரனின் மகன்
லோத்துவையும் அவருக்குச் சொந்தமானவற்றையும், பெண்களையும், மற்ற
ஜனங்களையும் மீட்டுக்கொண்டு வந்தார்.

17 ஆபிராம் கெதர்லாகோமேர் ராஜாவையும் அவனுடன் இருந்த
ராஜாக்களையும் தோற்கடித்துவிட்டுத் திரும்பியபோது, சோதோமின் ராஜா
அவரைச் சந்திப்பதற்காக சாவே பள்ளத்தாக்குக்கு, அதாவது ராஜா-பள்ளத்
தாக்குக்கு,[g] புறப்பட்டு வந்தார். **18** சாலேமின் ராஜாவாகிய[h] மெல்கிசே
தேக்கு[i] ஆபிராமுக்கு ரொட்டியும் திராட்சமதுவும் கொண்டுவந்தார். அவர்
உன்னதமான கடவுளுக்குச் சேவை செய்துவந்த குருவாக இருந்தார்.[j]

19 அப்போது அவர் ஆபிராமை ஆசீர்வதித்து,

“வானத்தையும் பூமியையும் படைத்த உன்னதமான கடவுள்
ஆபிராமை ஆசீர்வதிக்கட்டும்!
20 உன்னதமான கடவுளுக்குப் புகழ் சேரட்டும்!
அவர் உன்னுடைய எதிரிகளை உன் கையில் கொடுத்தாரே!”

என்று சொன்னார். ஆபிராம் தான் மீட்டுவந்த எல்லாவற்றிலும் பத்திலொரு
பாகத்தை அவருக்குக் கொடுத்தார்.[k]

21 அதன்பின் சோதோமின் ராஜா, “என்னுடைய ஜனங்களை மட்டும்
என்னிடம் கொடுத்துவிடுங்கள், பொருள்களை நீங்களே எடுத்துக்கொள்
ளுங்கள்” என்று ஆபிராமிடம் சொன்னார். **22** ஆனால் ஆபிராம், “நான்

14:13 * வே.வா., “நடுவே கூடாரங்களில் தங்கியிருந்தார்.”

அதி. 14
a ஆதி 14:16
b ஆதி 19:1
c ஆதி 13:18
d ஆதி 14:24
e ஆதி 11:27
f நியா 18:29
g 2சா 18:18
h எபி 7:1, 2
i சங் 110:4
எபி 6:20
j சங் 83:18
எபி 5:5, 10
k எபி 7:4

அதி. 14
a ஆதி 14:13

அதி. 15
b சங் 27:1
ஏசா 41:10
ரோ 8:31
எபி 13:6
c உபா 33:29
நீதி 30:5
d ஆதி 17:5, 6
e ஆதி 24:2, 3
f ஆதி 12:7
அப் 7:5
g ஆதி 17: 15, 16
ஆதி 21:12
h ஆதி 22:17
உபா 1:10
ரோ 4:18
எபி 11:12
i எபி 11:8
j ரோ 4:13, 22
கலா 3:6
யாக் 2:23
k ஆதி 11:31
நெ 9:7
l ஆதி 21:9
யாத் 1:13, 14
யாத் 3:7
அப் 7:6, 7

என் கையை உயர்த்தி, வானத்தையும் பூமியையும் படைத்த உன்னதமான
கடவுளாகிய யெகோவாவுக்குமுன் உறுதிமொழி தருகிறேன். **23** உங்களி
டமிருந்து சின்ன துரும்பைக்கூட* நான் எடுத்துக்கொள்ள மாட்டேன்.
ஏனென்றால், ‘ஆபிராமை நான்தான் பணக்காரனாக்கினேன்’ என்று நீங்
கள் சொல்லிவிடக் கூடாது. **24** என்னோடு இருக்கிற வாலிபர்கள் எதை
எடுத்து சாப்பிட்டார்களோ அதை மட்டுமே நான் எடுத்ததாக வைத்துக்
கொள்ளலாம். ஆனால், என்னோடு வந்த ஆநேரும் எஸ்கோலும் மம்ரே
யும்[a] அவர்களுடைய பங்கை எடுத்துக்கொள்ளட்டும்” என்று சோதோமின்
ராஜாவிடம் சொன்னார்.

15 அதன்பின் யெகோவா ஒரு தரிசனத்தில், “ஆபிராமே, பயப்ப
டாதே.[b] நான் உனக்குக் கேடயமாக இருக்கிறேன்.[c] உனக்கு மிகப்
பெரிய ஆசீர்வாதத்தைத் தருவேன்”[d] என்று சொன்னார். **2** அதற்கு ஆபி
ராம், “உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, நீங்கள் என்ன ஆசீர்வா
தத்தைத் தருவீர்கள்? எனக்குத்தான் இன்னும் குழந்தை இல்லையே; என்
னிடம் இருப்பதெல்லாம் தமஸ்கு ஊர்க்காரனாகிய எலியேசருக்குத்தானே[e]
போய்ச் சேரும்” என்று சொன்னார். **3** அதோடு ஆபிராம், “நீங்கள்
எனக்குக் குழந்தை பாக்கியம் தராததால்,[f] என் வீட்டில் வேலை செய்கிற
வன்தான் என் வாரிசு ஆவான்” என்றார். **4** அதற்கு யெகோவா, “அவன்
உன் வாரிசு ஆக மாட்டான்; உனக்குப் பிறக்கும் மகன்தான் உன் வாரிசு
ஆவான்” என்று சொன்னார்.[g]

5 அப்போது ஆபிராமைக் கடவுள் வெளியே கூட்டிக்கொண்டு வந்து,
“தயவுசெய்து வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை உன்னால்
எண்ண முடிந்தால் எண்ணு” என்றார். பின்பு, “இப்படித்தான் உன் சந்ததி
யும் எண்ணற்றதாக ஆகும்”[h] என்றார். **6** யெகோவாமேல் ஆபிராம் விசு
வாசம் வைத்தார்.[i] அதனால், அவர் ஆபிராமை நீதிமானாகக் கருதினார்.[j]
7 அதோடு அவர், “இந்தத் தேசத்தை உனக்குக் கொடுப்பதற்காக கல்தேயர்
களுடைய நகரமான ஊர் நகரத்திலிருந்து உன்னைக் கூட்டிக்கொண்டு வந்த
யெகோவா நான்தான்”[k] என்று சொன்னார். **8** அதற்கு ஆபிராம், “உன்
னதப் பேரரசராகிய யெகோவாவே, இந்தத் தேசம் எனக்குச் சொந்தமாகும்
என்பதை நான் எப்படித் தெரிந்துகொள்வது?” என்று கேட்டார். **9** அதற்
குக் கடவுள், “மூன்று வயதுள்ள இளம் பசுவையும், மூன்று வயதுள்ள
பெண் வெள்ளாட்டையும், மூன்று வயதுள்ள செம்மறியாட்டுக் கடாவையும்,
ஒரு காட்டுப் புறாவையும், ஒரு புறாக் குஞ்சையும் கொண்டுவா” என்றார்.
10 அப்படியே, ஆபிராம் அவற்றைக் கொண்டுவந்து, இரண்டு துண்டுக
ளாக வெட்டி, அந்தத் துண்டுகளை எதிரெதிராக வைத்தார். பறவைகளை
அவர் அப்படி வெட்டவில்லை. **11** அந்த இறைச்சித் துண்டுகளைச் சாப்
பிட வேறு பறவைகள் பறந்து வந்தன, ஆனால் ஆபிராம் அவற்றை விரட்
டிவிட்டார்.

12 சூரியன் மறையும் நேரத்தில், ஆபிராம் நன்றாகத் தூங்கிவிட்டார். அப்
போது, பயங்கரமான இருட்டுக்குள் இருப்பதுபோல் அவருக்கு ஒரு கனவு
வந்தது. **13** அவரிடம் கடவுள், “உன்னுடைய சந்ததியில் வருகிறவர்கள்
வேறொரு தேசத்தில் அன்னியர்களாகக் குடியிருப்பார்கள்; அந்தத் தேசத்து
ஜனங்கள் 400 வருஷங்களுக்கு[l] அவர்களை அடிமைகளாக வைத்துக்

14:23 * நே.மொ., “சிறிய நூலையோ செருப்பு வாரையோகூட.”

கொடுமைப்படுத்துவார்கள். இது நடக்கப்போவது உறுதி. **14** ஆனால்,
அவர்களை அடிமைப்படுத்திய தேசத்தை நான் தண்டிப்பேன்.[a] அதன்பின்,
அவர்கள் அங்கிருந்து நிறைய பொருள்களை எடுத்துக்கொண்டு வரு
வார்கள்.[b] **15** முதிர்வயதில் நீ உன் முன்னோர்களைப் போல நிம்மதியாகக்
கண்மூடுவாய்.[c] **16** உன்னுடைய சந்ததியின் நான்காவது தலைமுறைதான்
இங்கே திரும்பி வரும்.[d] ஏனென்றால், எமோரியர்களை* தண்டிக்க வேண்
டிய நேரம் இன்னும் வரவில்லை”[e] என்று சொன்னார்.

17 சூரியன் மறைந்து, நன்றாக இருட்டிவிட்டது. அப்போது, புகைகிற
சூளை ஒன்று தெரிந்தது. ஒரு தீப்பந்தம் அந்த இறைச்சித் துண்டுகளின்
நடுவே கடந்துபோனது. **18** அன்றைக்கு ஆபிராமுடன் யெகோவா ஓர்
ஒப்பந்தம் செய்து,[f] “எகிப்தில் இருக்கிற ஆற்றிலிருந்து பெரிய ஆறான யூப்
ரடிஸ்வரை*[g] இருக்கிற இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுப்பேன்.[h]
19 கேனியர்களும்,[i] கெனிசியர்களும், கத்மோனியர்களும், **20** ஏத்தியர்க
ளும்,[j] பெரிசியர்களும்,[k] ரெப்பாயீமியர்களும்,[l] **21** எமோரியர்களும்,
கானானியர்களும், கிர்காசியர்களும், எபூசியர்களும்[m] வாழ்கிற அந்தத்
தேசத்தைக் கொடுப்பேன்” என்று சொன்னார்.

16 ஆபிராமின் மனைவி சாராய்க்குக் குழந்தை இல்லை.[n] அவ
ளுக்கு எகிப்தைச் சேர்ந்த ஆகார்[o] என்ற வேலைக்காரி இருந்தாள்.
2 அதனால் சாராய் ஆபிராமிடம், “யெகோவா எனக்குக் குழந்தை பாக்கி
யம் தரவில்லை. அதனால், என் வேலைக்காரியை உங்களுக்குக் கொடுக்
கிறேன். தயவுசெய்து அவள் மூலம் எனக்குக் குழந்தை பாக்கியம் கொடுங்
கள்”[p] என்று சொன்னாள். ஆபிராமும் சாராயின் பேச்சைக் கேட்டார்.
3 ஆபிராம் கானான் தேசத்துக்கு வந்து 10 வருஷங்கள் ஆகியிருந்த
சமயத்தில்தான், சாராய் தன்னுடைய எகிப்திய வேலைக்காரி ஆகாரைத்
தன் கணவன் ஆபிராமுக்கு மனைவியாகக் கொடுத்தாள். **4** ஆபிராமி
னால் ஆகார் கர்ப்பமானாள்; தான் கர்ப்பமாக இருப்பதை அவள் தெரிந்து
கொண்டபோது தன்னுடைய எஜமானியைக் கேவலமாகப் பார்க்க ஆரம்
பித்தாள்.

5 அப்போது சாராய் ஆபிராமிடம், “உங்களால்தான் எனக்கு இந்த
நிலைமை. என் வேலைக்காரியை உங்களுக்குக் கொடுத்ததே நான்தான்.
ஆனால், அவள் எப்போது கர்ப்பமானாளோ அப்போதிலிருந்து என்னைக்
கேவலமாகப் பார்க்கிறாள். தப்பு என்மேல் இருக்கிறதா, உங்கள்மேல் இருக்
கிறதா என்பதை யெகோவாவே முடிவுசெய்யட்டும்” என்று சொன்னாள்.
6 அதற்கு ஆபிராம், “சாராய், உன் வேலைக்காரிக்கு நீதான் எஜமானி.
உனக்கு எது சரி என்று படுகிறதோ அதைச் செய்” என்று சொன்னார். அதன்
பின், ஆகாரை சாராய் நோகடித்தாள்.* அதனால், ஆகார் சாராயிடமிருந்து
ஓடிப்போனாள்.

7 பிற்பாடு, வனாந்தரத்திலுள்ள நீரூற்றுக்குப் பக்கத்தில், அதாவது
ஷூருக்குப்[q] போகும் வழியிலுள்ள நீரூற்றுக்குப் பக்கத்தில், யெகோவா
வின் தூதர் அவளைச் சந்தித்தார். **8** அவர் ஆகாரிடம், “சாராயின்
வேலைக்காரப் பெண்ணாகிய ஆகாரே, நீ எங்கிருந்து வருகிறாய்? எங்கே

15:16 *இந்த வசனத்தில் எமோரியர்கள் என்பது கானானியர்கள் எல்லாரையும் ஒட்டுமொத்தமாகக் குறிக்கிறது. **15:18** *அதாவது, “ஐப்பிராத்துவரை.” **16:6** *வே.வா., “அவமானப்படுத்தினாள்.”

அதி. 15
a யாத் 7:4; எண் 33:4
b யாத் 3:22; சங் 105:37
c ஆதி 25:8
d யோசு 14:1; அப் 7:7
e 1ரா 21:26; 2ரா 21:11
f ஆதி 17:19; ஆதி 22:17
g 1ரா 4:21
h யாத் 3:8
i 1சா 15:6
j யோசு 1:4
k யாத் 3:17
l யோசு 17:15
m உபா 7:1

அதி. 16
n ஆதி 15:2, 3
o கலா 4:25
p ஆதி 30:1, 3
q ஆதி 25:17, 18; யாத் 15:22

போகிறாய்?” என்று கேட்டார். அதற்கு அவள், “என் எஜமானி சாராயிடமிருந்து ஓடிப்போகிறேன்” என்று சொன்னாள். **9** அப்போது யெகோவாவின் தூதர் அவளிடம், “நீ உன் எஜமானியிடம் திரும்பிப் போ; அவளுக்கு அடங்கி நட” என்றார். **10** அதுமட்டுமல்ல, யெகோவாவின் தூதர் அவளிடம், “யாருமே எண்ண முடியாத அளவுக்கு நான் உன் சந்ததியைப் பெருக வைப்பேன்”[a] என்று சொன்னார். **11** பின்பு யெகோவாவின் தூதர் அவளிடம், “இப்போது கர்ப்பமாக இருக்கிற நீ ஒரு மகனைப் பெற்றெடுப்பாய்; அவனுக்கு இஸ்மவேல்* என்று பெயர் வை. ஏனென்றால், உன்னுடைய கதறலை யெகோவா கேட்டிருக்கிறார். **12** உன் மகன் அடங்காதவனாக* இருப்பான். எல்லாரும் அவனை எதிர்ப்பார்கள், எல்லாரையும் அவன் எதிர்ப்பான்; தன்னுடைய சகோதரர்கள் எல்லாருக்கும் எதிராக# வாழ்வான்” என்றார்.

13 யெகோவா இதையெல்லாம் சொன்ன பிறகு ஆகார் அவருடைய பெயரைப் புகழ்ந்து, “நீங்கள் எல்லாவற்றையும் பார்க்கிற கடவுள்.[b] என்னைப் பார்ப்பவரை நானும் பார்த்துவிட்டேனே!” என்று சொன்னாள். **14** அதனால்தான், அந்தக் கிணறு பெயெர்-லகாய்-ரோயீ* என்று அழைக்கப்பட்டது. (அது காதேசுக்கும் பேரேத்துக்கும் இடையில் இருக்கிறது.) **15** ஆபிராமுக்கு ஆகார் ஒரு மகனைப் பெற்றுக் கொடுத்தாள். அவனுக்கு இஸ்மவேல்[c] என்று ஆபிராம் பெயர் வைத்தார். **16** இஸ்மவேல் பிறந்தபோது ஆபிராமுக்கு 86 வயது.

17 ஆபிராமுக்கு 99 வயதானபோது யெகோவா அவர்முன் தோன்றி, “நான் சர்வவல்லமையுள்ள கடவுள். நீ என்னுடைய வழியில் நடந்து, குற்றமற்றவனாக இரு. **2** நான் உன்னோடு செய்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தி,[d] உன்னுடைய சந்ததியை மிக அதிகமாகப் பெருக வைப்பேன்”[e] என்றார்.

3 உடனே, ஆபிராம் சாஷ்டாங்கமாக விழுந்தார். கடவுள் அவரிடம், **4** “நான் உன்னோடு ஒப்பந்தம் செய்திருக்கிறேன்.[f] அதனால் நிறைய தேசங்களுக்கு நீ தகப்பனாவாய், இது உறுதி.[g] **5** இனி நீ ஆபிராம்* என்று அழைக்கப்படாமல், ஆபிரகாம்# என்று அழைக்கப்படுவாய். ஏனென்றால், நான் உன்னை நிறைய தேசங்களுக்குத் தகப்பனாக ஆக்கப்போகிறேன். **6** உன் சந்ததியை மிக அதிகமாகப் பெருக வைப்பேன். உன்னிடமிருந்து ஜனக்கூட்டங்கள் உருவாகும், உன்னிடமிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்.[h]

7 உன்னோடும், உன் சந்ததியோடும், அவர்களுக்குப் பின்வரும் எல்லா தலைமுறைகளோடும் நான் செய்திருக்கிற நிரந்தரமான ஒப்பந்தத்தைக் காப்பேன்.[i] அதன்படியே, உனக்கும் உன்னுடைய வருங்காலச் சந்ததிக்கும் கடவுளாக இருப்பேன். **8** நீ அன்னியனாகத் தங்கியிருக்கிற[j] இந்த கானான் தேசம் முழுவதையும் உனக்கும் உன் வருங்காலச் சந்ததிக்கும் நிரந்தர சொத்தாகத் தருவேன்; நான் அவர்களுடைய கடவுளாக இருப்பேன்”[k] என்று சொன்னார்.

அதி. 16
a ஆதி 17:20, ஆதி 25:13-16, 1நா 1:29-31
b நீதி 15:3
c ஆதி 21:9, கலா 4:22, 24

அதி. 17
d ஆதி 15:18, சங் 105:8-11
e ஆதி 22:17, உபா 1:10, எபி 11:11, 12
f சங் 105:9-11
g ஆதி 13:16, ரோ 4:17
h ஆதி 35:10, 11
i லூ 1:72, 73
j யாத் 6:4, எபி 11:8, 9
k உபா 14:2

16:11 *அர்த்தம், “கடவுள் கேட்கிறார்.” **16:12** *நே.மொ., “காட்டுக் கழுதையைப் போல்.” #அல்லது, “விரோதமாக.” **16:14** *அர்த்தம், “என்னைப் பார்க்கிற உயிருள்ளவரின் கிணறு.” **17:5** *அர்த்தம், “தகப்பன் உயர்ந்தவர்.” #அர்த்தம், “திரளான ஜனங்களுக்குத் தகப்பன்.”

9 அதன்பின் கடவுள் ஆபிரகாமிடம், “நீயும் உன் வருங்காலச் சந்ததி
யும், அவர்களுக்குப் பின்வரும் எல்லா தலைமுறைகளும் என் ஒப்பந்தத்
தைக் கடைப்பிடிக்க வேண்டும். **10** நான் உங்களோடு செய்கிற ஒப்பந்தத்
தின்படி, ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம்* செய்துகொள்ள வேண்டும்.
நீயும் உன் வருங்காலச் சந்ததியும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும்.[a]
11 நீங்கள் கண்டிப்பாக விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டும். நான்
உங்களோடு செய்கிற ஒப்பந்தத்துக்கு இதுதான் அடையாளம்.[b] **12** இனி
வரும் காலமெல்லாம் உன்னுடைய சந்ததியில் பிறக்கிற ஒவ்வொரு ஆண்
குழந்தைக்கும் எட்டாவது நாளில் விருத்தசேதனம் செய்ய வேண்டும்.[c]
உன் வீட்டில் பிறக்கிற எல்லா ஆண் குழந்தைகளும், உன் சந்ததியில் வராத
எல்லா ஆண்களும், மற்ற தேசத்தாரிடமிருந்து விலைக்கு வாங்கப்படு
கிற எல்லா ஆண்களும் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும். **13** உன்
வீட்டில் பிறக்கிற எல்லா ஆண் குழந்தைகளும், நீ விலைக்கு வாங்குகிற
எல்லா ஆண்களும் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும்;[d] இந்த விருத்
தசேதன ஒப்பந்தம் நிரந்தர ஒப்பந்தமாக இருக்க வேண்டும். **14** எந்த
ஆணாவது விருத்தசேதனம் செய்யவில்லை என்றால் அவன் கொல்லப்
பட வேண்டும்; ஏனென்றால், அவன் என் ஒப்பந்தத்தை மீறுகிறான்” என்று
சொன்னார்.

15 பின்பு கடவுள் ஆபிரகாமிடம், “நீ உன் மனைவியை இனி சாராய்*[e]
என்று கூப்பிடக் கூடாது, இனிமேல் அவளுடைய பெயர் சாராள்.#
16 நான் அவளை ஆசீர்வதித்து, அவள் மூலம் உனக்கு ஒரு மகனைக்
கொடுப்பேன்.[f] நான் அவளை ஆசீர்வதிக்கப்போவதால், அவளிடமிருந்து
தேசங்கள் உருவாகும், ராஜாக்கள் தோன்றுவார்கள்” என்று சொன்னார்.
17 அப்போது ஆபிரகாம் சாஷ்டாங்கமாக விழுந்தார். அதன்பின் சிரித்துக்
கொண்டே,[g] “100 வயதில் எனக்குக் குழந்தை பிறக்கப்போகிறதா? 90 வய
தில் சாராள் பிள்ளையைப் பெற்றெடுக்கப்போகிறாளா?”[h] என்று உள்ளத்தில்
சொல்லிக்கொண்டார்.

18 ஆபிரகாம் உண்மைக் கடவுளிடம், “இஸ்மவேலுக்கு உங்களுடைய
ஆசீர்வாதம் கிடைக்கட்டுமே!”[i] என்றார். **19** அதற்குக் கடவுள், “உன்
மனைவி சாராள் கண்டிப்பாக உனக்கு ஒரு மகனைப் பெற்றுக் கொடுப்பாள்.
அவனுக்கு நீ ஈசாக்கு*[j] என்று பெயர் வைக்க வேண்டும். என்னுடைய
ஒப்பந்தத்தை அவனுக்கும் அவனுடைய வருங்காலச் சந்ததிக்கும் நிரந்தர
ஒப்பந்தமாக உறுதிப்படுத்துவேன்.[k] **20** இஸ்மவேலைப் பற்றி நீ சொன்ன
தைக் கேட்டேன்; நான் அவனை ஆசீர்வதித்து, அவன் சந்ததியை மிக அதி
கமாகப் பெருக வைப்பேன். அவனிடமிருந்து 12 தலைவர்கள் தோன்றுவார்
கள். அவனை நான் மாபெரும் தேசமாக்குவேன்.[l] **21** ஆனாலும், அடுத்த
வருஷம் இதே சமயம்[m] சாராளுக்குப் பிறக்கப்போகிற ஈசாக்கோடுதான்
நான் ஒப்பந்தம் செய்வேன்”[n] என்று சொன்னார்.

22 ஆபிரகாமிடம் பேசி முடித்த பின்பு கடவுள் அங்கிருந்து போய்
விட்டார். **23** அதன்பின், கடவுள் சொன்னபடியே[o] ஆபிரகாம் தன் மகன்
இஸ்மவேலுக்கும் தன் வீட்டில் இருந்த எல்லா ஆண்களுக்கும் அதே
நாளில் விருத்தசேதனம் செய்தார். அதாவது, தன் வீட்டில் பிறந்த எல்லா

17:10 * சொல் பட்டியலைப் பாருங்கள். **17:15** * ஒருவேளை இதன் அர்த்தம், “சண்டைக்காரி.” # அர்த்தம், “இளவரசி.” **17:19** * அர்த்தம், “சிரிப்பு.”

அதி. 17
a ஆதி 21:4; ரோ 2:29
b அப் 7:8; ரோ 4:11
c லூ 2:21
d யாத் 12:44
e ஆதி 11:29
f ஆதி 18:10
g ஆதி 18:12
h ரோ 4:19; எபி 11:11
i ஆதி 16:11
j மத் 1:2
k ஆதி 26:24
l ஆதி 16:10; ஆதி 21: 13, 18; ஆதி 25: 13–16; 1நா 1:29–31
m ஆதி 18: 10, 14; ஆதி 21:1
n ஆதி 26:3; எபி 11:8, 9
o ஆதி 17:13

ஆண்களுக்கும், தான் விலைக்கு வாங்கிய எல்லா ஆண்களுக்கும் விருத்தசேதனம் செய்தார். **24** ஆபிரகாமுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டபோது அவருக்கு 99 வயது.[a] **25** அவருடைய மகன் இஸ்மவேலுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டபோது அவனுக்கு 13 வயது.[b] **26** ஆபிரகாமுக்கும் அவர் மகன் இஸ்மவேலுக்கும் ஒரே நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டது. **27** அவருடைய வீட்டில் இருந்த எல்லா ஆண்களுக்கும், அதாவது அவர் வீட்டில் பிறந்த எல்லா ஆண்களுக்கும் மற்ற தேசத்தாரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்ட எல்லா ஆண்களுக்கும், அவரோடு சேர்ந்து விருத்தசேதனம் செய்யப்பட்டது.

18 பிற்பாடு, மம்ரேயில் இருந்த பெரிய மரங்களின் நடுவே[c] யெகோவா[d] ஆபிரகாமுக்குமுன் தோன்றினார். அப்போது, உச்சி வெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. ஆபிரகாம் கூடார வாசலில் உட்கார்ந்துகொண்டிருந்தார். **2** அவர் நிமிர்ந்து பார்த்தபோது, கொஞ்சத் தூரத்தில் மூன்று மனிதர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். உடனே, கூடார வாசலிலிருந்து எழுந்து ஓடி, அவர்களுக்கு முன்னால் மண்டிபோட்டு தரைவரைக்கும் குனிந்து வணங்கினார்.[e] **3** பின்பு, “யெகோவாவே,* இந்த அடியேன்மேல் உங்களுக்குப் பிரியம் இருந்தால், தயவுசெய்து கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போங்கள். **4** நான் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவருகிறேன். தயவுசெய்து உங்கள் பாதங்களைக் கழுவிவிட்டு[f] இந்த மரத்தின் கீழ் ஓய்வெடுங்கள். **5** நீங்கள் இந்த அடியேனிடம் வந்திருப்பதால், கொஞ்சம் ரொட்டி கொண்டுவருகிறேன். அதைச் சாப்பிட்டுவிட்டு, தெம்போடு நீங்கள் கிளம்பலாமே” என்று சொன்னார். அதற்கு அவர்கள், “சரி, நீ சொன்னபடியே செய்” என்றார்கள்.

6 உடனே, ஆபிரகாம் கூடாரத்துக்குள் ஓட்டமாய் ஓடி சாராளிடம், “சீக்கிரம்! மூன்று படி* நைசான மாவை எடுத்துப் பிசைந்து, ரொட்டி சுடு” என்று சொன்னார். **7** பின்பு மாட்டுத் தொழுவத்துக்கு ஓடி, இளம் காளைகளில் நல்லதாக ஒன்றைத் தேடிப் பிடித்து அவருடைய வேலைக்காரனிடம் கொடுத்தார். அவன் அதைச் சமைக்க வேகவேகமாய்ப் போனான். **8** பின்பு அவர் வெண்ணெயையும், பாலையும், சமைத்த இறைச்சியையும் கொண்டுபோய் அவர்கள்முன் வைத்தார். அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது அவர்களுக்குப் பக்கத்திலேயே மரத்தடியில் நின்றார்.[g]

9 அப்போது அவர்கள், “உன் மனைவி சாராள்[h] எங்கே?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், “இங்கேதான் கூடாரத்தில் இருக்கிறாள்” என்றார். **10** அவர்களில் ஒருவர், “அடுத்த வருஷம் இதே சமயம் நான் கண்டிப்பாகத் திரும்பி வருவேன்; அப்போது உன் மனைவி சாராளுக்கு ஒரு மகன் இருப்பான்”[i] என்றார். அவருக்குப் பின்னாலிருந்த கூடார வாசலில் சாராள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். **11** ஆபிரகாமும் சாராளும் வயதானவர்களாக இருந்தார்கள்.[j] சாராள் குழந்தை பெறும் வயதைத் தாண்டியிருந்தாள்.[k] **12** அதனால், “நான் ஒரு கிழவி, என் எஜமானும் கிழவராகிவிட்டார், இந்த வயதில் எனக்குச் சந்தோஷம் கிடைக்குமா?”[l] என்று தனக்குள்

18:3 *யெகோவாவிடம் நேரடியாகப் பேசுவதுபோல் யெகோவாவின் தூதரிடம் ஆபிரகாம் பேசினார். **18:6** *நே.மொ., “மூன்று சியா அளவு.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 17
a அப் 7:8; ரோ 4:11
b ஆதி 16:16

அதி. 18
c ஆதி 13:18; ஆதி 14:13
d ஆதி 16:7; நியா 13:21
e ஆதி 19:1
f ஆதி 19:2; ஆதி 24:32
g எபி 13:2
h ஆதி 17:15
i ஆதி 17:21; ஆதி 21:2; ரோ 9:9
j ஆதி 17:17
k ரோ 4:19
l எபி 11:11; 1பே 3:6

சிரித்துக்கொண்டே சொன்னாள். **13** அப்போது யெகோவா ஆபிரகாமி
டம், "'இந்த வயதான காலத்தில் எனக்குப் பிள்ளை பிறக்குமா' என்று சாராள்
ஏன் சிரித்துக்கொண்டே சொன்னாள்? **14** யெகோவாவினால் செய்ய முடி
யாதது ஏதாவது இருக்கிறதா?[a] அடுத்த வருஷம் இதே சமயம் நான் திரும்பி
வருவேன்; அப்போது சாராளுக்கு ஒரு மகன் இருப்பான்" என்று சொன்னார்.
15 உடனே சாராள் பயந்துபோய், "நான் சிரிக்கவில்லை" என்று சொன்னாள்.
ஆனால் அவர், "இல்லை! நீ சிரித்தாய்!" என்றார்.

16 பின்பு, அந்த மனிதர்கள் எழுந்து சோதோமைப்[b] பார்த்தபடி நடக்க
ஆரம்பித்தார்கள். அவர்களை வழியனுப்ப ஆபிரகாமும் கூடவே போனார்.
17 அப்போது யெகோவா, "நான் செய்யப்போவதை ஆபிரகாமுக்குச்
சொல்லாமல் இருப்பேனா?[c] **18** ஆபிரகாம் பலம்படைத்த தேசமாகவும்
மாபெரும் தேசமாகவும் ஆவான், இது உறுதி. பூமியிலுள்ள எல்லா தேசத்
தாரும் ஆபிரகாம் மூலமாக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.[d]
19 ஆபிரகாமை எனக்கு நன்றாகத் தெரியும். யெகோவாவின் வழியில் நடக்
கும்படி அவன் தன்னுடைய மகன்களுக்கும் வருங்காலச் சந்ததிகளுக்கும்
நிச்சயமாகக் கட்டளை கொடுப்பான். அவர்களை நீதியோடும் நியாயத்தோ
டும் நடக்கச் சொல்வான்.[e] அதனால், ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறு
தியை யெகோவா நிறைவேற்றுவார்" என்று சொன்னார்.

20 அதன்பின் யெகோவா, "சோதோமிலும் கொமோராவிலும் இருக்கிற
ஜனங்கள் படுமோசமான பாவங்களைச் செய்திருக்கிறார்கள்.[f] அவர்
களுக்கு எதிராக மற்றவர்கள் பயங்கரமாகப் புலம்புவதைக் கேட்டேன்.[g]
21 மற்றவர்கள் புலம்புவதுபோல், அந்த ஜனங்கள் உண்மையிலேயே
மோசமாக நடக்கிறார்களா என்று நான் இறங்கிப் போய்ப் பார்க்கப்போகி
றேன்"[h] என்றார்.

22 பின்பு, அந்த மனிதர்கள் அங்கிருந்து சோதோமுக்குப் போனார்
கள். ஆனால், யெகோவா[i] ஆபிரகாமுடனேயே இருந்தார். **23** அப்போது
ஆபிரகாம் அவரிடம், "பொல்லாதவர்களோடு சேர்த்து நீதிமான்களையும்
நீங்கள் அழித்துவிடுவீர்களா?[j] **24** ஒருவேளை அந்த நகரத்தில் 50 பேர்
நீதிமான்களாக இருந்தால்? அப்போதும் அவர்களை அழித்துவிடுவீர்களா?
அந்த 50 பேருக்காக அந்த நகரத்தை மன்னிக்க மாட்டீர்களா? **25** பொல்
லாதவர்களோடு சேர்த்து நீதிமான்களையும் அழிப்பதை உங்களால்
நினைத்துக்கூடப் பார்க்க முடியாதே! அப்படி அழித்தால் நீதிமான்களுக்
கும் பொல்லாதவர்களுக்கும் ஒரே கதி வந்துவிடுமே![k] அப்படிச் செய்வதை
உங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதே![l] இந்த முழு உலகத்
துக்கே நீதிபதியாக இருப்பவர் நியாயமாக நடக்காமல் இருப்பாரா?"[m]
என்றார். **26** அதற்கு யெகோவா, "சோதோமில் 50 பேர் நீதிமான்களாக
இருந்தால் அவர்களுக்காக அந்த முழு நகரத்தையும் மன்னிப்பேன்" என்று
சொன்னார். **27** ஆனால் ஆபிரகாம் மறுபடியும், "நான் வெறும் தூசிதான்,
சாம்பல்தான். இருந்தாலும் யெகோவாவே, உங்களிடம் உரிமையோடு பேசு
கிறேன், தயவுசெய்து கேளுங்கள். **28** ஒருவேளை, அந்த 50 பேரில் ஐந்து
பேர் குறைவாக இருந்தால்? ஐந்து பேர் குறைகிறார்கள் என்பதற்காக அந்த
முழு நகரத்தையும் நீங்கள் அழிப்பீர்களா?" என்று கேட்டார். அதற்குக்
கடவுள், "அங்கே 45 பேர் நீதிமான்களாக இருந்தால்கூட அதை அழிக்க
மாட்டேன்"[n] என்று சொன்னார்.

அதி. 18

a ஏசா 40:29
மத் 19:26
லூ 1:36, 37

b ஆதி 13:12

c சங் 25:14
ஆமோ 3:7

d ஆதி 12:1-3
கலா 3:14

e உபா 4:9

f ஆதி 13:13
யூ 7

g 2பே 2:7, 8

h ஆதி 11:5
யாத் 3:7, 8
சங் 14:2

i ஆதி 31:11
ஆதி 32:30

j எண் 16:22

k சங் 37:10, 11
நீதி 29:16
மல் 3:18
மத் 13:49

l உபா 32:4

m யோபு 34:12
ஏசா 33:22

n எண் 14:18
சங் 86:15

அதி. 18
a யாத் 34:6
b ஆதி 18:2, 22

29 மறுபடியும் ஆபிரகாம் அவரிடம், “ஒருவேளை அங்கே 40 பேர் நீதிமான்களாக இருந்தால்?” என்று கேட்டார். அதற்கு அவர், “40 பேர் நீதிமான்களாக இருந்தால்கூட நான் அதை அழிக்க மாட்டேன்” என்று சொன்னார். **30** ஆனால் ஆபிரகாம், “யெகோவாவே, தயவுசெய்து என் மேல் கோபப்படாதீர்கள்;[a] நான் பேசுவதை இன்னும் கொஞ்சம் கேளுங்கள். அங்கே ஒருவேளை 30 பேர் மட்டுமே நீதிமான்களாக இருந்தால்?” என்று கேட்டார். அதற்கு அவர், “அங்கே 30 பேர் நீதிமான்களாக இருந்தாலும் நான் அதை அழிக்க மாட்டேன்” என்று சொன்னார். **31** ஆனால் ஆபிரகாம் தொடர்ந்து, “யெகோவாவே, உங்களிடம் உரிமையோடு பேசுகிறேன், தயவுசெய்து கேளுங்கள். அங்கே ஒருவேளை 20 பேர் மட்டுமே நீதிமான்களாக இருந்தால்?” என்று கேட்டார். அதற்கு அவர், “20 பேர் நீதிமான்களாக இருந்தால்கூட நான் அதை அழிக்க மாட்டேன்” என்று சொன்னார். **32** கடைசியாக ஆபிரகாம், “யெகோவாவே, தயவுசெய்து என் மேல் கோபப்படாதீர்கள். இன்னும் ஒரு தடவை மட்டும் நான் பேசுவதைக் கேளுங்கள். அங்கே ஒருவேளை 10 பேர் மட்டுமே நீதிமான்களாக இருந்தால்?” என்று கேட்டார். அதற்கு அவர், “10 பேர் நீதிமான்களாக இருந்தால்கூட நான் அதை அழிக்க மாட்டேன்” என்று சொன்னார். **33** ஆபிரகாமிடம் பேசி முடித்த பின்பு யெகோவா அங்கிருந்து போனார்,[b] ஆபிரகாமும் தன் இடத்துக்குத் திரும்பிப் போனார்.

அதி. 19
c ஆதி 18:2, 22
d யூ 7

19 அந்த இரண்டு தேவதூதர்களும் சாயங்காலத்தில் சோதோமுக்கு வந்துசேர்ந்தார்கள். அப்போது, லோத்து நகரவாசலில் உட்கார்ந்திருந்தார். அவர்களைப் பார்த்ததும் அவர் எழுந்துபோய், அவர்கள்முன் மண்டிபோட்டு,[c] **2** “என் எஜமான்களே, இன்றைக்கு ராத்திரி தயவுசெய்து அடியேனுடைய வீட்டில் தங்குங்கள். உங்கள் பாதங்களைக் கழுவ எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள். விடிந்ததுமே நீங்கள் கிளம்பிவிடலாம்” என்றார். அதற்கு அவர்கள், “பரவாயில்லை, இன்றைக்கு ராத்திரி நாங்கள் பொது சதுக்கத்திலேயே தங்கிக்கொள்கிறோம்” என்றார்கள். **3** ஆனால், அவர் மிகவும் வற்புறுத்திக் கூப்பிட்டதால் அவருடைய வீட்டுக்குப் போனார்கள். அவர்களுக்காக லோத்து புளிப்பில்லாத ரொட்டி சுட்டு, விருந்து வைத்தார்; அவர்கள் சாப்பிட்டார்கள்.

4 அவர்கள் படுக்கப் போவதற்கு முன்பு, சோதோம் நகரத்திலிருந்த சிறுவன்முதல் கிழவன்வரை எல்லா ஆண்களும் கும்பலாக வந்து அவருடைய வீட்டைச் சூழ்ந்துகொண்டார்கள். **5** லோத்துவை அவர்கள் சத்தமாகக் கூப்பிட்டுக்கொண்டே இருந்தார்கள். “ராத்திரி உன் வீட்டில் தங்க வந்த ஆண்கள் எங்கே? நாங்கள் அவர்களோடு உறவுகொள்ள வேண்டும்,[d] அவர்களை வெளியே கொண்டுவா” என்று கத்திக்கொண்டே இருந்தார்கள்.

6 அப்போது லோத்து வீட்டுக்கு வெளியே வந்து, கதவைச் சாத்தினார். **7** அவர் அவர்களிடம், “என் சகோதரர்களே, தயவுசெய்து இந்தக் கெட்ட காரியத்தைச் செய்யாதீர்கள். **8** தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். கல்யாணமாகாத இரண்டு பெண்கள் எனக்கு இருக்கிறார்கள். அவர்களை நான் வெளியில் கொண்டுவருகிறேன், அவர்களை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால், இந்த ஆண்களை மட்டும் தயவுசெய்து ஒன்றும் செய்துவிடாதீர்கள். அவர்கள் என் வீட்டில்* தங்க

19:8 * வே.வா., “என் கூரை நிழலில்.”

வந்திருக்கிறார்கள்”[a] என்று சொன்னார். **9** அதற்கு அவர்கள், “தள்ளிப்
போ!” என்று சொல்லிவிட்டு, “நம் ஊரில் பிழைக்க வந்த நாதியில்லாத
இவன் நமக்கே நியாயம் சொல்ல வந்துவிட்டான், என்ன துணிச்சல்! முத
லில் உன்னைத்தான் ஒருவழி பண்ண வேண்டும்” என்றார்கள். பின்பு, லோத்
துவை நெருக்கித் தள்ளி கதவை உடைக்கப் பார்த்தார்கள். **10** உடனே,
வீட்டுக்குள் இருந்த மனிதர்கள்* கையை நீட்டி, லோத்துவை உள்ளே இழுத்
துக்கொண்டு, கதவைச் சாத்தினார்கள். **11** பின்பு, வீட்டு வாசலில் இருந்த
சிறுவன்முதல் கிழவன்வரை எல்லா ஆண்களுடைய கண்களையும் குருடாக்
கினார்கள். அதனால் அவர்கள் வாசல் கதவைத் தேடித்தேடி அலுத்துப்போ
னார்கள்.

12 அப்போது அந்த மனிதர்கள்* லோத்துவிடம், “இந்த நகரத்தில்
உனக்கு வேறு யாராவது இருக்கிறார்களா? மருமகன்கள், மகன்கள், மகள்கள்
என்று யார் இருந்தாலும் எல்லா சொந்தபந்தங்களையும் கூட்டிக்கொண்டு
இங்கிருந்து போய்விடு! **13** நாங்கள் இந்த இடத்தை அழிக்கப்போகி
றோம். இந்த ஜனங்களைப் பற்றிய பயங்கரமான புலம்பலை யெகோவா
கேட்டிருக்கிறார்.[b] அதனால், இந்த நகரத்தை அழிக்க யெகோவா எங்களை
அனுப்பியிருக்கிறார்” என்று சொன்னார்கள். **14** உடனே, லோத்து தன்
மகள்களுக்கு நிச்சயம் செய்திருந்த மருமகன்களைப் போய்ப் பார்த்து, “சீக்கி
ரம்! இங்கிருந்து புறப்படுங்கள்! யெகோவா இந்த நகரத்தை அழிக்கப்போகி
றார்!” என்று திரும்பத் திரும்பச் சொன்னார். ஆனால், அவர் ஏதோ வேடிக்
கையாகச் சொல்கிறார் என்று அவர்கள் நினைத்துக்கொண்டார்கள்.[c]

15 பொழுது விடியும் நேரத்தில் அந்தத் தேவதூதர்கள் லோத்துவிடம்,
“சீக்கிரம்! உன் மனைவியையும் உன் இரண்டு மகள்களையும் கூட்டிக்
கொண்டு போ! இல்லையென்றால், இந்த நகரம் அதன் அக்கிரமத்துக்
காக அழிக்கப்படும்போது நீயும் அழிக்கப்படுவாய்!”[d] என்று சொல்லி அவச
ரப்படுத்தினார்கள். **16** லோத்து தயங்கிக்கொண்டே இருந்தார். ஆனாலும்,
யெகோவா அவர்மேல் கரிசனை காட்டியதால்[e] அந்த மனிதர்கள்* அவரு
டைய கையையும், அவருடைய மனைவியின் கையையும், இரண்டு மகள்
களுடைய கையையும் பிடித்து நகரத்துக்கு வெளியில் கொண்டுவந்து விட்
டார்கள்.[f] **17** நகரத்துக்கு வெளியில் வந்ததும் அந்த மனிதர்களில் ஒருவர்,
“தப்பித்து ஓடு! திரும்பிப் பார்க்காதே,[g] இந்தப் பிரதேசத்தில்[h] எங்கேயும்
நிற்காதே! மலைப்பகுதிக்குத் தப்பித்து ஓடு! இல்லையென்றால் உன் உயிர்
போய்விடும்!” என்றார்.

18 அதற்கு லோத்து அவர்களிடம், “யெகோவாவே,* தயவுசெய்து
அங்கே போகச் சொல்லாதீர்கள்! **19** நீங்கள் அடியேனுக்குக் கருணை
காட்டியிருக்கிறீர்கள். அளவுகடந்த அன்பை* காட்டி, என் உயிரைக் காப்
பாற்றியிருக்கிறீர்கள்.[i] ஆனாலும், என்னால் அந்த மலைப்பகுதிக்கு ஓடிப்
போக முடியாது. அங்கே ஏதாவது ஆபத்தில் சிக்கி செத்துவிடுவேனோ
என்று பயமாக இருக்கிறது.[j] **20** தயவுசெய்து, பக்கத்தில் உள்ள ஊருக்கு
ஓடிப்போகிறேனே; அது சின்ன ஊர்தானே. தயவுசெய்து அங்கே ஓடிப்
போகட்டுமா? அது சின்ன ஊர்தான். அங்கே போனால் நான் பிழைத்துக்

19:10, 12, 16 * அதாவது, “மனித உருவில் வந்த தேவதூதர்கள்.” **19:18** * யெகோவா
விடம் நேரடியாகப் பேசுவதுபோல் யெகோவாவின் தூதர்களிடம் லோத்து பேசினார்.
19:19 * வே.வா., “மாறாத அன்பை.”

அதி. 19
a நியா 19:23, 24
b ஆதி 13:13; ஆதி 18:20
c லூ 17:28
d லூ 17:29-31
e யாத் 33:19
f 2பே 2:7-9
g லூ 9:62
h ஆதி 13:10
i சங் 143:11
j சங் 6:4

கொள்வேன்” என்று சொன்னார். **21** அதற்கு அவர், “சரி, இந்த விஷயத்
திலும் உனக்குக் கருணை காட்டுகிறேன்,[a] நீ சொல்கிற ஊரை அழிக்காமல்
விடுகிறேன்.[b] **22** சீக்கிரம் ஓடிப்போ, நீ அங்கே போய்ச் சேரும்வரை என்
னால் ஒன்றும் செய்ய முடியாது!”[c] என்று சொன்னார். அதனால்தான், அந்த
ஊருக்கு சோவார்*[d] என்ற பெயர் வந்தது.

23 லோத்து சோவாருக்குப் போய்ச் சேர்ந்தபோது சூரியன் உதித்திருந்
தது. **24** அப்போது யெகோவா சோதோம், கொமோராவில் நெருப்பை
யும் கந்தகத்தையும் கொட்டினார். யெகோவா வானத்திலிருந்து அவற்றைக்
கொட்டி,[e] **25** அந்த நகரங்களை அழித்தார். ஜனங்கள், செடிகொடிகள்
என எதையும் விட்டுவைக்காமல் முழு பிரதேசத்தையும் அழித்தார்.[f]
26 லோத்துவுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த அவருடைய மனைவி
திரும்பிப் பார்த்தாள், உடனே உப்புச் சிலையானாள்.[g]

27 ஆபிரகாம் விடியற்காலையில் எழுந்து, தான் ஏற்கெனவே யெகோ
வாவுக்குமுன் நின்றிருந்த இடத்துக்குப் போனார்.[h] **28** அங்கிருந்து அவர்
கீழே பார்த்தபோது, சோதோமும் கொமோராவும் அந்த முழு பிரதேசமும்
கோரமாகக் காட்சியளித்தது. சூளையிலிருந்து போகிற புகையைப் போல
அடர்த்தியான புகை மேலே போய்க்கொண்டிருந்தது![i] **29** கடவுள் அந்
தப் பிரதேசத்திலுள்ள நகரங்களை அழிப்பதற்குமுன், ஆபிரகாமோடு தான்
பேசியதை நினைத்துப் பார்த்தார். அதனால், அங்கு வாழ்ந்துவந்த லோத்
துவை அங்கிருந்து அனுப்பிவிட்டார்.[j]

30 பிற்பாடு, லோத்து சோவாரில்[k] குடியிருக்கப் பயந்து, தன்னுடைய
இரண்டு மகள்களையும் கூட்டிக்கொண்டு மலைப்பகுதிக்குப் போனார்.[l]
அங்கே, தன்னுடைய இரண்டு மகள்களுடன் ஒரு குகையில் குடியிருந்தார்.
31 ஒருநாள் பெரியவள் தன் தங்கையிடம், “அப்பாவுக்கு வயதாகிவிட்டது.
எல்லாரையும் போல நாமும் கல்யாணம் செய்துகொள்ள இந்த இடத்தில்
ஒரு ஆண்கூட இல்லை. **32** வா, அப்பாவுக்குத் திராட்சமதுவைக் குடிக்கக்
கொடுக்கலாம். அப்புறம், அவரோடு படுத்துக்கொள்ளலாம். அப்போதுதான்
அப்பாவுடைய வம்சம் அழியாமல் இருக்கும்” என்று சொன்னாள்.

33 அதனால் அன்றைக்கு ராத்திரி, அவர்கள் தங்களுடைய அப்பா
வுக்குத் திராட்சமதுவை ஊற்றி ஊற்றிக் கொடுத்தார்கள். பின்பு, பெரிய
வள் உள்ளே போய்த் தன் அப்பாவோடு படுத்துக்கொண்டாள். ஆனால்,
அவள் எப்போது படுத்தாள், எப்போது எழுந்தாள் என்று லோத்துவுக்குத்
தெரியவில்லை. **34** அடுத்த நாள் பெரியவள் தன் தங்கையிடம், “நேற்று
ராத்திரி நான் அப்பாவோடு படுத்துக்கொண்டேன். இன்றைக்கு ராத்திரியும்
அவருக்குத் திராட்சமதுவைக் குடிக்கக் கொடுக்கலாம். அப்புறம் நீ உள்ளே
போய் அவரோடு படுத்துக்கொள். அப்போதுதான் அப்பாவின் வம்சம்
அழியாமல் இருக்கும்” என்று சொன்னாள். **35** அதனால், அன்றைக்கு ராத்
திரியும் அவர்கள் தங்களுடைய அப்பாவுக்குத் திராட்சமதுவை ஊற்றி ஊற்
றிக் கொடுத்தார்கள். பின்பு, சின்னவள் போய்த் தன் அப்பாவோடு படுத்துக்
கொண்டாள். ஆனால், அவள் எப்போது படுத்தாள், எப்போது எழுந்தாள்
என்று லோத்துவுக்குத் தெரியவில்லை. **36** இப்படி, லோத்துவின் இரண்டு
மகள்களும் தங்கள் அப்பாவினால் கர்ப்பமானார்கள். **37** பெரியவளுக்கு

19:22 * அர்த்தம், “சிறியது.”

அதி. 19
a சங் 34:15
b ஆதி 19:30; சங் 68:20
c 2பே 3:9
d ஆதி 14:2
e உபா 29:23; லூ 17:29; 2பே 2:6
f ஆதி 13:10
g லூ 17:32; எபி 10:38
h ஆதி 18:2, 22
i யூ 7
j 2பே 2:7, 8
k ஆதி 19:20, 22
l ஆதி 19:17

ஒரு பையன் பிறந்தான். அவனுக்கு மோவாப்[a] என்று அவள் பெயர் வைத்
தாள். அவனுடைய வம்சத்தில் வந்தவர்களைத்தான் இன்று மோவாபியர்
கள்[b] என்று சொல்கிறோம். **38** சின்னவளுக்கும் ஒரு பையன் பிறந்தான்.
அவனுக்கு பென்னம்மி என்று அவள் பெயர் வைத்தாள். அவனுடைய
வம்சத்தில் வந்தவர்களைத்தான் இன்று அம்மோனியர்கள்[c] என்று சொல்
கிறோம்.

20 பிற்பாடு, ஆபிரகாம் புறப்பட்டு[d] நெகேபுக்குப் போய் காதே
சுக்கும்[e] ஷூருக்கும்[f] இடையில் குடியிருந்தார். அவர் கேராரில்[g]
வாழ்ந்துவந்தபோது, **2** மறுபடியும் தன்னுடைய மனைவி சாராளைத் தன்
னுடைய தங்கை என்று சொன்னார்.[h] அவர் அப்படிச் சொன்னதால், கேரா
ரின் ராஜா அபிமெலேக்கு* ஆள் அனுப்பி சாராளைக் கொண்டுபோனார்.[i]
3 ஆனால் ராத்திரியில் அபிமெலேக்கின் கனவில் கடவுள் வந்து, "அந்தப்
பெண்ணைக் கொண்டுவந்திருப்பதால் நீ சாகப்போகிறாய்.[j] அவள் கல்
யாணம் ஆனவள், இன்னொருவனுக்குச் சொந்தமானவள்"[k] என்று சொன்
னார். **4** அபிமெலேக்கு அதுவரை அவளை நெருங்காமல்* இருந்ததால்
கடவுளிடம், "யெகோவாவே, ஒரு பாவமும் செய்யாத ஜனங்களை நீங்கள்
கொன்றுவிடுவீர்களா? **5** 'இவள் என்னுடைய தங்கை' என்று அவன் என்
னிடம் சொன்னானே; அவளும் அவனை அண்ணன் என்று சொன்
னாளே. நான் கெட்ட எண்ணத்துடனோ வேண்டுமென்றோ இதைச் செய்ய
வில்லை"* என்றார். **6** அப்போது கடவுள் அவரிடம், "நீ கெட்ட
எண்ணத்துடன் இதைச் செய்யவில்லை என்று எனக்குத் தெரியும். அதனால்
தான் பாவம் செய்யாதபடி நான் உன்னைத் தடுத்தேன், அவளைத் தொடு
வதற்கு உன்னை விடவில்லை. **7** இப்போது, அவளை அவளுடைய
கணவனிடமே அனுப்பிவிடு, அவன் ஒரு தீர்க்கதரிசி.[l] அவன் உனக்காக
என்னிடம் மன்றாடுவான்,[m] அப்போது நீ சாகாமல் பிழைத்துக்கொள்வாய்.
ஆனால் அவளைத் திருப்பி அனுப்பவில்லை என்றால், நீயும் உன் வீட்டி
லிருக்கிற எல்லாரும் கண்டிப்பாகச் சாவீர்கள்" என்றார்.

8 அபிமெலேக்கு விடியற்காலையில் எழுந்து தன்னுடைய வேலைக்கா
ரர்கள் எல்லாரையும் கூப்பிட்டு, இந்த எல்லா விஷயங்களையும் சொன்
னார். அவர்கள் பயத்தில் வெலவெலத்துப் போனார்கள். **9** பின்பு அபிமெ
லேக்கு ஆபிரகாமை வரவழைத்து, "ஏன் இப்படிச் செய்தாய்? நான்
உனக்கு என்ன பாவம் செய்தேன்? உன்னால் என்மேலும் என் நாட்டின்மே
லும் எவ்வளவு பெரிய பழி விழுந்திருக்கும்! நீ செய்த காரியம் கொஞ்சம்
கூட சரியில்லை" என்று சொன்னார். **10** அதோடு, "என்ன நினைத்து நீ
இப்படிச் செய்தாய்?"[n] என்று அபிமெலேக்கு கேட்டார். **11** அதற்கு ஆபி
ரகாம், "இங்கு இருக்கிறவர்களுக்குக் கடவுள்பயமே இல்லை என்றும்,
என் மனைவியை அடைவதற்காக என்னைக் கொன்றுவிடுவார்கள் என்றும்
நினைத்தேன்.[o] **12** அதோடு, அவள் நிஜமாகவே என் தங்கைதான். அவ
ளும் என் அப்பாவுக்குப் பிறந்தவள்தான். எங்கள் அம்மாதான் வேறு
வேறு. அவளை நான் கல்யாணம் செய்துகொண்டேன்.[p] **13** என்னுடைய
அப்பாவின் வீட்டிலிருந்து கடவுள் என்னைப் புறப்பட்டுப் போகச் சொன்

20:2 * இது பெலிஸ்திய ராஜாக்களின் பட்டப்பெயராக இருக்கலாம். **20:4** * வே.வா., "அவளுடன் உறவுகொள்ளாமல்." **20:5** * வே.வா., "நான் நேர்மையான இதயத்தோடும் சுத்தமான கைகளோடும்தான் இதைச் செய்தேன்."

அதி. 19
a உபா 2:9
b 1நா 18:2
c உபா 2:19, நியா 11:4, நெ 13:1, செப் 2:9

அதி. 20
d ஆதி 13:18
e எண் 13:26
f ஆதி 25:17, 18
g ஆதி 10:19, ஆதி 26:6
h ஆதி 12:11–13, ஆதி 20:11, 12
i ஆதி 12:15
j ஆதி 12:17, சங் 105:14
k உபா 22:22
l சங் 105:14, 15
m யோபு 42:8
n ஆதி 12:18, 19, ஆதி 26:9, 10
o ஆதி 12:11, 12, ஆதி 26:7
p ஆதி 11:29

னபோது[a] நான் அவளிடம், ‘உனக்கு உண்மையிலேயே என்மேல் அன்பு*
இருந்தால், நாம் எங்கு போனாலும் நான் உன் அண்ணன் என்றுதான் நீ
சொல்ல வேண்டும்’[b] என்று சொல்லி வைத்திருந்தேன்” என்றார்.

14 அதன்பின், அபிமெலேக்கு ஆடுமாடுகளையும் வேலைக்காரர்களை
யும் வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுத்தார், அவருடைய
மனைவி சாராளையும் அவரிடமே ஒப்படைத்தார். **15** அப்போது அபி
மெலேக்கு அவரிடம், “என்னுடைய தேசத்தில் எங்கு வேண்டுமானாலும்
நீ குடியிருக்கலாம்” என்றும் சொன்னார். **16** அதோடு சாராளிடம், “உன்
அண்ணனுக்கு நான் 1,000 வெள்ளிக் காசுகள் கொடுக்கிறேன்.[c] என் நிழல்
கூட உன்மேல் படவில்லை என்பதற்கு இது அடையாளமாக இருக்கும்.
உன்னோடு இருப்பவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் இது அடையாளமாக
இருக்கும். நீ களங்கம் இல்லாதவள்” என்று சொன்னார். **17** அப்போது,
ஆபிரகாம் உண்மைக் கடவுளிடம் மன்றாடினார். கடவுள் அபிமெலேக்கை
யும் அவருடைய மனைவியையும் அவருடைய அடிமைப் பெண்களையும்
குணப்படுத்தி, அவர்களுக்குக் குழந்தை பாக்கியம் தந்தார். **18** ஏனென்
றால், ஆபிரகாமின் மனைவி சாராளை அபிமெலேக்கு கொண்டுவந்த
சமயத்திலிருந்து அவருடைய அரண்மனையில் இருந்த எந்தப் பெண்ணும்
கர்ப்பமாகாதபடி யெகோவா செய்திருந்தார்.[d]

21

யெகோவா தான் சொன்னபடியே சாராளுக்குக் கருணை காட்
டினார். அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியை யெகோவா நிறை
வேற்றினார்.[e] **2** அதனால் சாராள் கர்ப்பமாகி,[f] வயதான ஆபிரகாமுக்கு
ஒரு மகனைப் பெற்றுக் கொடுத்தாள். ஆபிரகாமுக்குக் கடவுள் வாக்கு
றுதி கொடுத்தபடியே குறித்த காலத்தில் இது நடந்தது.[g] **3** சாராள் பெற்
றெடுத்த மகனுக்கு ஈசாக்கு[h] என்று ஆபிரகாம் பெயர் வைத்தார். **4** கடவு
ளுடைய கட்டளைப்படியே[i] ஆபிரகாம் தன்னுடைய மகன் ஈசாக்கு பிறந்த
எட்டாம் நாளில் அவனுக்கு விருத்தசேதனம் செய்தார். **5** ஈசாக்கு பிறந்
தபோது ஆபிரகாமுக்கு 100 வயது. **6** அப்போது சாராள், “கடவுள் என்
னைச் சந்தோஷமாகச் சிரிக்க வைத்திருக்கிறார். இதைக் கேள்விப்படுகிற
எல்லாரும் என்னோடு சேர்ந்து* சிரிப்பார்கள்” என்று சொன்னாள்.
7 அதோடு, “நான் என்னுடைய கணவருக்குக் குழந்தை பெற்றுக் கொடுப்
பேன் என்று யாராவது நினைத்திருப்பார்களா? இருந்தாலும், அவருடைய
வயதான காலத்தில் அவருக்கு நான் ஒரு மகனைப் பெற்றுக் கொடுத்திருக்
கிறேன்” என்று சொன்னாள்.

8 ஈசாக்கு வளர்ந்து தாய்ப்பாலை மறந்தான். அன்றைக்கு ஆபிரகாம்
ஒரு பெரிய விருந்தை ஏற்பாடு செய்தார். **9** ஆனால், எகிப்தியப் பெண்
ஆகார் மூலமாக ஆபிரகாமுக்குப் பிறந்த மகன், ஈசாக்கைக் கேலி செய்
வதை[j] சாராள் கவனித்துக்கொண்டே இருந்தாள்.[k] **10** அதனால் சாராள்
ஆபிரகாமிடம், “இந்த அடிமைப் பெண்ணையும் இவளுடைய மகனையும்
துரத்திவிடுங்கள். இவளுடைய மகன் என்னுடைய மகன் ஈசாக்கோடு
வாரிசாக இருக்க முடியாது!”[l] என்றாள். **11** ஆனால் ஆபிரகாமுக்கு, தன்
னுடைய மகனைப் பற்றி அவள் இப்படிச் சொன்னது மிகவும் வேதனையாக
இருந்தது.[m] **12** அப்போது கடவுள் ஆபிரகாமிடம், “உன்னுடைய மக
னையும் உன்னுடைய அடிமைப் பெண்ணையும் பற்றி சாராள் சொன்னதை

20:13 * வே.வா., “மாறாத அன்பு.” **21:6** * அல்லது, “என்னைப் பார்த்து.”

அதி. 20
a ஆதி 12:1
b ஆதி 12:13
c ஆதி 20:2, 12
d ஆதி 12:17

அதி. 21
e ஆதி 18:10
f எபி 11:11
g ஆதி 17:21 ஆதி 18: 10, 14 ரோ 9:9
h ஆதி 17:19 யோசு 24:3 ரோ 9:7
i ஆதி 17:12 லேவி 12:3 அப் 7:8
j ஆதி 15:13 கலா 4:22, 29
k ஆதி 16:4, 15
l ஆதி 15:2, 4 கலா 4:30
m ஆதி 17:18

நினைத்து வேதனைப்படாதே. அவளுடைய பேச்சைக் கேள். ஏனென்
றால், ஈசாக்கின் வழியாக உருவாகும் சந்ததிதான் உன்னுடைய சந்ததி என்று
அழைக்கப்படும்.[a] **13** உன்னுடைய அடிமைப் பெண்ணின் மகனையும்[b]
ஒரு தேசமாக ஆக்குவேன்;[c] ஏனென்றால், அவனும் உன் சந்ததிதான்”
என்று சொன்னார்.

14 அதனால் ஆபிரகாம் விடியற்காலையில் எழுந்து, உணவையும் ஒரு
தோல் பை நிறைய தண்ணீரையும் எடுத்து, ஆகாரின் தோள்மேல்
வைத்து, அவளையும் பையனையும் அனுப்பி வைத்தார்.[d] அவள் அங்கி
ருந்து புறப்பட்டுப் போய், பெயெர்-செபாவின்[e] வனாந்தரத்தில் அலைந்து
திரிந்தாள். **15** கடைசியில், தோல் பையில் இருந்த தண்ணீர் தீர்ந்து
போனபோது அவள் தன்னுடைய பையனை ஒரு புதரின் கீழ் விட்டுவிட்
டாள். **16** பின்பு, அம்பு பாயும் தூரத்துக்குப் போய் உட்கார்ந்துகொண்டு,
“என் பையன் சாவதை என்னால் பார்க்க முடியாது” என்று சொல்லிக் கதறி
அழ ஆரம்பித்தாள்.

17 அப்போது, அந்தப் பையனுடைய குரலைக் கடவுள் கேட்டார்.[f] பர
லோகத்திலிருந்து ஒரு தேவதூதர் ஆகாரைக் கூப்பிட்டு,[g] “ஆகாரே, ஏன்
அழுகிறாய்? பயப்படாதே, அங்கே கிடக்கிற உன் மகனுடைய குரலைக்
கடவுள் கேட்டார். **18** எழுந்திரு, அவனைத் தூக்கிவிடு, உன் கையால்
தாங்கிப் பிடித்துக்கொள். அவனை நான் மாபெரும் தேசமாக்குவேன்”[h]
என்று சொன்னார். **19** அதன்பின் கடவுள் அவளுடைய கண்களைத் திறந்
ததால், தண்ணீருள்ள ஒரு கிணற்றை அவள் பார்த்தாள். உடனே போய்,
தோல் பையில் தண்ணீரை நிரப்பி தன் பையனுக்குக் குடிக்கக் கொடுத்
தாள். **20** கடவுள் அவனோடு[i] இருந்தார். அவன் வனாந்தரத்தில் குடி
யிருந்தான். வளர்ந்து ஆளான பின்பு அம்புவிடுவதில் அவன் திறமைசா
லியாக ஆனான். **21** பாரான் வனாந்தரத்தில்[j] அவன் குடியிருந்தபோது,
அவனுடைய அம்மா எகிப்து தேசத்துப் பெண்ணை அவனுக்குக் கல்யா
ணம் செய்து வைத்தாள்.

22 அந்தச் சமயத்தில், அபிமெலேக்கு தன்னுடைய படைத் தளபதி
பிகோலைக் கூட்டிக்கொண்டு ஆபிரகாமிடம் வந்து, “நீ செய்கிற எல்லா
காரியத்திலும் கடவுள் உன்னோடு இருப்பதை எங்களால் பார்க்க முடிகி
றது.[k] **23** அதனால், எனக்கும் என் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைக
ளுக்கும் நீ நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டாய் என்று கடவுள் பெய
ரில் சத்தியம் செய்து கொடு. நான் உனக்கு விசுவாசமாக இருப்பது போல
நீயும் எனக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். நீ குடியிருக்கிற இந்தத்
தேசத்தின் ஜனங்களுக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும்”[l] என்று சொன்
னார். **24** அதற்கு ஆபிரகாம், “நான் விசுவாசமாக இருப்பேன், இது சத்தி
யம்” என்றார்.

25 ஆனாலும் ஆபிரகாம், அபிமெலேக்கின் ஆட்கள் சண்டைபோட்
டுப் பிடுங்கிக்கொண்ட கிணற்றைப்[m] பற்றி அவரிடம் புகார் செய்தார்.
26 அதற்கு அபிமெலேக்கு, “யார் அப்படிச் செய்தார்கள் என்று எனக்குத்
தெரியாது. இதுவரை இந்த விஷயத்தைப் பற்றி நீ என்னிடம் எதுவும் சொல்
லவில்லை, யாருமே சொல்லவில்லை” என்றார். **27** பின்பு, ஆபிரகாம்
அபிமெலேக்குக்கு ஆடுமாடுகளைக் கொடுத்தார். இரண்டு பேரும் ஒப்பந்
தம் செய்துகொண்டார்கள். **28** அதன்பின், ஏழு பெண் செம்மறியாட்
டுக் குட்டிகளை மட்டும் ஆபிரகாம் தனியாக நிற்க வைத்தார். **29** அதைப்

அதி. 21
a ஆதி 17:19
ரோ 9:7
எபி 11:18
b கலா 4:22
c ஆதி 16:9, 10
ஆதி 17:20
ஆதி 25: 12, 16
d ஆதி 25:5, 6
e ஆதி 22:19
f ஆதி 16:11
g ஆதி 16:7, 8
h 1நா 1:29-31
i ஆதி 16:16
j எண் 10:12
k ஆதி 20: 17, 18
ஆதி 26: 26, 28
l ஆதி 20: 14, 15
m ஆதி 26: 15, 20

பார்த்தபோது அபிமெலேக்கு அவரிடம், “ஏன் இந்த ஏழு ஆட்டுக்குட்டி
களை மட்டும் தனியாக நிற்க வைத்திருக்கிறாய்?” என்று கேட்டார்.
30 அதற்கு ஆபிரகாம், “நான் இந்தக் கிணற்றைத் தோண்டினேன் என்ப
தற்கு அத்தாட்சியாக இந்த ஏழு ஆட்டுக்குட்டிகளை என்னிடமிருந்து
வாங்கிக்கொள்ளுங்கள்” என்றார். **31** பின்பு, அந்த இடத்துக்கு பெயெர்-
செபா*[a] என்று பெயர் வைத்தார். ஏனென்றால், அந்த இடத்தில் இரண்டு
பேரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். **32** அவர்கள் இரண்டு
பேரும் பெயெர்-செபாவில் ஒப்பந்தம் செய்த[b] பின்பு, அபிமெலேக்கும்
அவருடைய படைத் தளபதி பிகோலும் பெலிஸ்தியர்களின் தேசத்துக்குத்
திரும்பிப் போனார்கள்.[c] **33** பின்பு, பெயெர்-செபாவில் ஆபிரகாம் ஒரு
சவுக்கு மரத்தை நட்டு வைத்தார். என்றென்றுமுள்ள கடவுளான[d]
யெகோவாவின் பெயரை அங்கே போற்றிப் புகழ்ந்தார்.[e] **34** பெலிஸ்தி
யர்களின் தேசத்தில் ஆபிரகாம் நிறைய காலம் தங்கியிருந்தார்.[f]

22 பின்பு, ஆபிரகாமின் விசுவாசத்தை உண்மைக் கடவுள் சோதித்
துப் பார்த்தார்.[g] ஒருநாள் அவர், “ஆபிரகாமே!” என்று கூப்பிட்டார்.
அதற்கு ஆபிரகாம், “சொல்லுங்கள் எஜமானே!” என்றார். **2** அப்போது
கடவுள், “நீ உயிருக்கு உயிராய் நேசிக்கிற உன்னுடைய ஒரே மகன்[h] ஈசாக்
கைத்[i] தயவுசெய்து மோரியா தேசத்துக்குக்[j] கூட்டிக்கொண்டு போ. அங்கே
நான் காட்டுகிற ஒரு மலையில் அவனைத் தகன பலியாகக் கொடு” என்று
சொன்னார்.

3 அதனால், ஆபிரகாம் விடியற்காலையில் எழுந்து, தன்னுடைய கழு
தைமேல் சேணம்* வைத்தார். பின்பு, தன்னுடைய மகன் ஈசாக்கையும்
இரண்டு வேலைக்காரர்களையும் கூட்டிக்கொண்டு, தகன பலிக்கு வேண்
டிய விறகுகளையும் வெட்டி எடுத்துக்கொண்டு, உண்மைக் கடவுள் சொல்
லியிருந்த இடத்துக்குப் புறப்பட்டுப் போனார். **4** மூன்றாம் நாள் ஆபிர
காம் அந்த இடத்தைத் தூரத்திலிருந்து பார்த்தார். **5** அவர் தன்
வேலைக்காரர்களிடம், “நீங்கள் இங்கேயே கழுதையுடன் இருங்கள். நானும்
என் மகனும் அங்கே போய் கடவுளை வணங்கிவிட்டு வருகிறோம்” என்று
சொன்னார்.

6 பின்பு, ஆபிரகாம் தகன பலிக்கான விறகுகளை எடுத்து, தன்னு
டைய மகன் ஈசாக்கின் தோள்மேல் வைத்தார். அதன்பின், நெருப்பையும் கத்
தியையும்* எடுத்துக்கொண்டார். இரண்டு பேரும் ஒன்றாக நடந்துபோனார்
கள். **7** அப்போது ஈசாக்கு ஆபிரகாமிடம், “அப்பா!” என்றார். அதற்கு
அவர், “என்ன மகனே?” என்று கேட்டார். அப்போது ஈசாக்கு, “நெருப்பும்
விறகும் இருக்கிறது, ஆனால் தகன பலி கொடுக்க ஆடு எங்கே?” என்று
கேட்டார். **8** அதற்கு ஆபிரகாம், “மகனே, தகன பலிக்கான ஆட்டைக்[k]
கடவுள் கொடுப்பார்” என்று சொன்னார். இரண்டு பேரும் தொடர்ந்து நடந்து
போனார்கள்.

9 கடைசியாக, உண்மைக் கடவுள் சொல்லியிருந்த இடத்துக்கு அவர்
கள் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தைக் கட்டி,
அதன்மேல் விறகுகளை அடுக்கினார். பின்பு, தன்னுடைய மகன்

அதி. 21
a ஆதி 26:32, 33
b ஆதி 26:26, 28
c ஆதி 10:13, 14; ஆதி 26:1
d சங் 90:2; ஏசா 40:28; 1தீ 1:17
e ஆதி 12:8, 9; ஆதி 26:25
f எபி 11:8, 9

அதி. 22
g எபி 11:17
h யோவா 3:16
i ஆதி 17:19; யோசு 24:3; ரோ 9:7
j 2நா 3:1
k யோவா 1:29; 1பே 1:18, 19

21:31 * அர்த்தம், “உறுதிமொழியின் கிணறு; ஏழின் கிணறு.” **22:3** * சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை. **22:6** * வே.வா., “வெட்டுக்கத்தியையும்.”

ஈசாக்கின் கையையும் காலையும் கட்டி, அந்த விறகுகள்மேல் படுக்க வைத்
தார்.[a] **10** அதன்பின், ஆபிரகாம் தன்னுடைய மகனைக் கொல்வதற்காகக்
கத்தியை* எடுத்தார்.[b] **11** உடனே யெகோவாவின் தூதர் பரலோகத்திலி
ருந்து, “ஆபிரகாமே, ஆபிரகாமே!” என்று கூப்பிட்டார். அதற்கு ஆபிரகாம்,
“சொல்லுங்கள், எஜமானே!” என்றார். **12** அப்போது அவர், “உன் மக
னைக் கொன்றுவிடாதே, அவனுக்கு ஒன்றும் செய்துவிடாதே. நீ கட
வுள்பயம் உள்ளவன் என்று இப்போது நான் தெரிந்துகொண்டேன். ஏனென்
றால், எனக்காக உன்னுடைய ஒரே மகனைக் கொடுப்பதற்குக்கூட நீ
தயங்கவில்லை”[c] என்று சொன்னார். **13** அப்போது, கொஞ்சத் தூரத்தில்
ஒரு செம்மறியாட்டுக் கடா இருப்பதை ஆபிரகாம் பார்த்தார். அதனுடைய
கொம்புகள் ஒரு புதரில் சிக்கியிருந்தன. ஆபிரகாம் அங்கே போய் அந்தச்
செம்மறியாட்டுக் கடாவைப் பிடித்துக்கொண்டு வந்து, தன் மகனுக்குப் பதி
லாக அதைத் தகன பலியாகச் செலுத்தினார். **14** ஆபிரகாம் அந்த இடத்
துக்கு யெகோவா-யீரே* என்று பெயர் வைத்தார். அதனால்தான்,
“யெகோவா தன்னுடைய மலையில் கொடுப்பார்”[d] என்று இன்றுவரை
சொல்லப்படுகிறது.

15 யெகோவாவின் தூதர் இரண்டாம் தடவை பரலோகத்திலிருந்து
ஆபிரகாமைக் கூப்பிட்டு, **16** “யெகோவா இப்படிச் சொல்கிறார்: ‘என்
மேல் சத்தியமாகச் சொல்கிறேன்,[e] நீ உன்னுடைய ஒரே மகனை எனக்குக்
கொடுக்கத் தயங்காததால்[f] **17** நான் உன்னை நிச்சயம் ஆசீர்வதிப்பேன்.
உன்னுடைய சந்ததியை வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போலவும் கடற்
கரை மணலைப் போலவும் பெருகப் பண்ணுவேன்.[g] உன்னுடைய சந்ததி
எதிரிகளுடைய நகரங்களை* கைப்பற்றும்.[h] **18** நீ என் பேச்சைக் கேட்ட
தால், உன்னுடைய சந்ததியின்[i] மூலம் பூமியிலுள்ள எல்லா தேசத்தாரும்
ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்’”[j] என்று சொன்னார்.

19 பின்பு, ஆபிரகாம் தன்னுடைய வேலைக்காரர்கள் இருந்த இடத்
துக்கு வந்தார். அங்கிருந்து அவர்கள் எல்லாரும் பெயெர்-செபாவுக்குத்[k]
திரும்பிப் போனார்கள். ஆபிரகாம் தொடர்ந்து பெயெர்-செபாவிலேயே
குடியிருந்தார்.

20 அதன்பின் ஒருவன் ஆபிரகாமிடம் வந்து, “உங்கள் சகோதரன்
நாகோருக்கும்[l] அவருடைய மனைவி மில்காளுக்கும் இப்போது மகன்
கள் இருக்கிறார்கள். **21** முதல் மகனுடைய பெயர் ஊத்ஸ், இரண்டாவது
மகன் பூஸ், மூன்றாவது மகன் அராமின் அப்பாவான கேமுவேல்.
22 இவர்களைத் தவிர கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்து
வேல்[m] என்ற மகன்களும் இருக்கிறார்கள்” என்று சொன்னான். **23** பெத்து
வேலுக்கு ரெபெக்காள்[n] பிறந்தாள். பெத்துவேலோடு சேர்த்து அந்த எட்டு
மகன்களும் ஆபிரகாமின் சகோதரனான நாகோருக்கும் மில்காளுக்கும்
பிறந்தவர்கள். **24** நாகோரின் மறுமனைவி பெயர் ரேயுமாள். அவளுக்கு
தேபா, காகாம், தாகாஸ், மாக்கா என்ற மகன்கள் பிறந்தார்கள்.

23 சாராள் 127 வருஷங்கள் வாழ்ந்தாள்.[o] **2** அவள் கானான் தேசத்
திலுள்ள[p] கீரியாத்-அர்பாவில்,[q] அதாவது எப்ரோனில்,[r] இறந்
தாள். அவளுக்காக ஆபிரகாம் துக்கம் அனுசரிக்கவும் அழுது புலம்பவும்

22:10 *வே.வா., “வெட்டுக்கத்தியை.” **22:14** *அர்த்தம், “யெகோவா கொடுப்பார்; யெகோவா பார்த்துக்கொள்வார்.” **22:17** *நே.மொ., “நகரங்களின் நுழைவாசலை.”

அதி. 22
a யோவா 10:17, 18
b எபி 11:17
c எபி 11:17-19; யாக் 2:21
d ஆதி 22:2; 2நா 3:1
e எபி 6:13, 14
f யோவா 3:16; ரோ 8:32; எபி 11:17
g ஆதி 13:14, 16; ஆதி 15:1, 5; அப் 3:25
h சங் 2:8; தானி 2:44
i ஆதி 3:15; ரோ 9:7; கலா 3:16
j கலா 3:8
k ஆதி 21:31
l ஆதி 11:26, 29
m ஆதி 25:20
n ஆதி 24:15; ரோ 9:10

அதி. 23
o ஆதி 17:17
p ஆதி 12:5
q யோசு 14:15
r ஆதி 35:27; எண் 13:22

ஆரம்பித்தார். **3** பின்பு, அங்கிருந்து எழுந்து போய் ஏத்தின்[a] மகன்களி
டம், **4** “நான் என்னுடைய தேசத்தைவிட்டு இங்கே வந்து அன்னியனாகக்
குடியேறினேன்.[b] என் மனைவியை அடக்கம் செய்வதற்காக எனக்கு ஒரு
இடம் கொடுங்கள்” என்றார். **5** அதற்கு ஏத்தின் மகன்கள் ஆபிரகாமிடம்,
6 “எஜமானே, நீங்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபதி* என்று
எங்களுக்குத் தெரியும்.[c] நாங்கள் அடக்கம் செய்கிற இடங்களில் ஒரு நல்ல
இடமாகப் பார்த்து உங்கள் மனைவியை நீங்கள் அடக்கம் செய்துகொள்ள
லாம். நாங்கள் எல்லாருமே எங்களுடைய இடத்தைத் தருவதற்குத் தயா
ராக இருக்கிறோம்” என்று சொன்னார்கள்.

7 அப்போது ஆபிரகாம் எழுந்து, அந்தத் தேசத்தைச் சேர்ந்த ஏத்
தின்[d] மகன்களைப் பார்த்துத் தலைவணங்கி, **8** “என் மனைவியை இங்கே
அடக்கம் செய்ய நீங்கள் ஒத்துக்கொண்டால், சோகாரின் மகன் எப்பெரோ
னிடம் பேசி, **9** மக்பேலாவில் அவருடைய நிலத்தின் ஓரத்தில் இருக்
கிற குகையை எனக்கு விற்கச் சொல்லுங்கள். உங்களுடைய முன்னிலை
யில் அதை அவர் விற்கட்டும், அதற்கான மொத்த விலையையும்[e] நான்
கொடுத்துவிடுகிறேன். அப்போது, அடக்கம் செய்ய எனக்கென்று சொந்த
மாக ஒரு இடம் இருக்கும்”[f] என்று சொன்னார்.

10 ஏத்தின் மகன்களோடு ஏத்தியனான எப்பெரோன் உட்கார்ந்துகொண்
டிருந்தார். அவர்களுடைய முன்னிலையிலும் அந்த நகரவாசலில்[g] இருந்த
எல்லாருடைய முன்னிலையிலும் எப்பெரோன் ஆபிரகாமைப் பார்த்து,
11 “என் எஜமானே! நான் சொல்வதைக் கேளுங்கள். அந்த நிலத்தோடு
சேர்த்து அதிலுள்ள குகையையும் உங்களுக்குத் தருகிறேன். என்னுடைய
ஜனங்களின் முன்னிலையில் அதை நான் உங்களுக்குத் தருகிறேன். உங்
கள் மனைவியை அங்கே அடக்கம் செய்யுங்கள்” என்று சொன்னார்.
12 அப்போது ஆபிரகாம் அந்தத் தேசத்து ஜனங்கள்முன் தலைவணங்கி,
13 அவர்கள் முன்னிலையில் எப்பெரோனிடம், “தயவுசெய்து நான் சொல்
வதைக் கேளுங்கள். நிலத்துக்கான மொத்த விலையையும் நான் உங்களுக்
குக் கொடுக்கிறேன், வாங்கிக்கொள்ளுங்கள். அப்போது, என் மனைவியை
நான் அங்கே அடக்கம் செய்வேன்” என்று சொன்னார்.

14 அதற்கு எப்பெரோன் ஆபிரகாமிடம், **15** “என் எஜமானே, நான்
சொல்வதைக் கேளுங்கள். அந்த நிலத்தின் விலை 400 வெள்ளி சேக்கல்.*
ஆனால், நமக்குள்ளே பணம் ஒரு பெரிய விஷயமா? உங்கள் மனைவியை
அங்கே அடக்கம் செய்துகொள்ளுங்கள்” என்றார். **16** ஏத்தின் மகன்களு
டைய முன்னிலையில் எப்பெரோன் சொன்னதை ஆபிரகாம் ஒத்துக்
கொண்டு, அன்றைய வியாபாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குப்படி
400 வெள்ளி சேக்கலை* நிறுத்துக் கொடுத்தார்.[h] **17** அப்போது, மம்ரேக்
குப் பக்கத்தில் மக்பேலாவில் இருந்த எப்பெரோனின் நிலத்தையும் அதி
லிருந்த குகையையும் எல்லா மரங்களையும், **18** ஏத்தின் மகன்களுடைய
முன்னிலையிலும் நகரவாசலில் இருந்த எல்லாருடைய முன்னிலையி
லும் ஆபிரகாம் வாங்கியதாக உறுதி செய்யப்பட்டது. **19** அதன்பின், மக்
பேலாவில் இருந்த அந்த நிலத்தின் குகையில் ஆபிரகாம் தன் மனைவி
சாராளை அடக்கம் செய்தார். அது கானான் தேசத்தில் இருந்த மம்ரேக்குப்

23:6 * அல்லது, “நீங்கள் மகா அதிபதி.” **23:15, 16** * ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 23
a ஆதி 10:15
b ஆதி 17:1, 8; எபி 11:9, 13
c ஆதி 21:22
d 1நா 1:13
e ஆதி 23:15
f ஆதி 25:9, 10; ஆதி 49: 29–33; ஆதி 50: 13, 14
g ரூ 4:1
h அப் 7:15, 16

பக்கத்தில், அதாவது எப்ரோனில், இருந்தது. **20** இப்படி, அடக்கம் செய்
வதற்கான இடமாக அந்த நிலத்தையும் அதிலிருந்த குகையையும் ஏத்தின்
மகன்கள் ஆபிரகாமுக்குக் கொடுத்தார்கள்.[a]

24 ஆபிரகாம் மிகவும் வயதானவராக இருந்தார். அவர் செய்த எல்லா
வற்றையும் யெகோவா ஆசீர்வதித்திருந்தார்.[b] **2** ஒருநாள் ஆபிர
காம், தன் வீட்டிலுள்ள எல்லாவற்றையும் கவனித்துவந்த மூத்த ஊழியரி
டம்,[c] “தயவுசெய்து என் தொடையின் கீழ் உன் கையை வைத்து,* **3** நான்
குடியிருக்கிற இந்த கானான் தேசத்திலிருந்து என்னுடைய மகன் ஈசாக்
குக்கு நீ பெண்ணெடுக்க மாட்டாய் என்று பரலோகத்துக்கும் பூமிக்கும் கட
வுளான யெகோவாவின் மேல் சத்தியம் செய்து கொடு.[d] **4** நீ என்னுடைய
தேசத்துக்குப் போய் என்னுடைய சொந்தத்திலிருந்து[e] அவனுக்குப் பெண்
ணெடுக்க வேண்டும்” என்று சொன்னார்.

5 அப்போது அந்த ஊழியர், “என்னோடு இங்கே வர அந்தப் பெண்
ணுக்கு விருப்பம் இல்லையென்றால் என்ன செய்வது? நீங்கள் விட்டுவந்த
தேசத்துக்கே[f] உங்கள் மகனை நான் கூட்டிக்கொண்டு போகட்டுமா?” என்று
கேட்டார். **6** அதற்கு ஆபிரகாம், “வேண்டாம்! என் மகனை நீ அங்கே
கூட்டிக்கொண்டு போகக் கூடாது.[g] **7** என்னுடைய அப்பாவின் வீட்டிலி
ருந்தும் என்னுடைய சொந்தக்காரர்களின் தேசத்திலிருந்தும் என்னைக்
கூட்டிக்கொண்டு வந்த[h] பரலோகத்தின் கடவுளான யெகோவா, என்னு
டைய சந்ததிக்கு[i] இந்தத் தேசத்தைத் தருவதாக[j] வாக்குக் கொடுத்திருக்கி
றார்.[k] அதனால், அவருடைய தூதனை உனக்கு முன்னால் அனுப்புவார்,[l]
நீ கண்டிப்பாக அங்கிருந்து என் மகனுக்குப் பெண்ணெடுப்பாய்.[m] **8** ஒரு
வேளை, உன்னோடு வர அந்தப் பெண்ணுக்கு விருப்பம் இல்லையென்
றால், எனக்குக் கொடுத்த உறுதிமொழியிலிருந்து நீ விடுபடுவாய். ஆனா
லும், என் மகனை நீ அங்கே கூட்டிக்கொண்டு போகக் கூடாது” என்று
சொன்னார். **9** அப்போது, அந்த ஊழியர் தன்னுடைய எஜமான் ஆபிர
காமுடைய தொடையின் கீழ் கை வைத்து, அவர் கேட்டபடியே சத்தியம்
செய்து கொடுத்தார்.[n]

10 பின்பு, அந்த ஊழியர் தன்னுடைய எஜமானிடமிருந்து 10 ஒட்டகங்
களையும் நல்ல நல்ல அன்பளிப்புகளையும் எடுத்துக்கொண்டு மெசொப்
பொத்தாமியாவில் இருந்த நாகோரின் நகரத்துக்குப் புறப்பட்டுப் போனார்.
11 அந்த நகரத்துக்கு வெளியில் ஒரு கிணற்றைப் பார்த்தபோது அங்கே
தன்னுடைய ஒட்டகங்களை ஓய்வெடுக்க விட்டார். அது சாயங்கால
நேரமாக இருந்தது. பொதுவாக, அந்த நேரத்தில் பெண்கள் தண்ணீர்
எடுக்க வருவார்கள். **12** அப்போது அவர், “யெகோவாவே, என் எஜ
மான் ஆபிரகாமின் கடவுளே, தயவுசெய்து நான் வந்த காரியத்தை நல்லப
டியாக முடித்துக் கொடுங்கள். என் எஜமானாகிய ஆபிரகாமின் மேல்
எப்போதும் போல அன்பு* காட்டுங்கள். **13** நான் கிணற்றுக்குப் பக்கத்
தில் நின்றுகொண்டிருக்கிறேன். இந்த நகரத்துப் பெண்கள் தண்ணீர் எடுக்க
வந்துகொண்டிருக்கிறார்கள். **14** ‘உன்னுடைய ஜாடியிலிருந்து எனக்குக்
கொஞ்சம் தண்ணீர் கொடு’ என்று நான் கேட்கும்போது, ‘குடியுங்கள்,
உங்கள் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுக்கிறேன்’ என்று எந்தப் பெண்

24:2 * பழங்காலத்தில் இப்படித்தான் உறுதிமொழி கொடுத்தார்கள். **24:12** * வே.வா., “மாறாத அன்பு.”

அதி. 23
a ஆதி 25:9, 10; ஆதி 49:29–33; ஆதி 50:13, 14

அதி. 24
b ஆதி 13:2
c ஆதி 15:2, 3
d ஆதி 28:1; உபா 7:1, 3; 2கொ 6:14
e ஆதி 22:20–23
f ஆதி 11:27, 28; ஆதி 15:7
g எபி 11:15
h ஆதி 12:1; எபி 11:8
i எபி 11:18
j ஆதி 13:14, 15; ஆதி 26:3, 4; உபா 34:4; அப் 7:4, 5
k மீ 7:20; லூ 1:72, 73; எபி 6:13, 14
l எபி 1:7, 14
m ஆதி 12:5
n ஆதி 24:2, 3

சொல்கிறாளோ, அவள்தான் உங்கள் ஊழியன் ஈசாக்குக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கிற பெண் என்று தெரிந்துகொள்வேன். என் எஜமான்மேல் நீங்கள் வைத்திருக்கிற அன்பை* இதன் மூலம் எனக்குக் காட்டுங்கள்" என்று வேண்டிக்கொண்டார்.

15 அவர் இப்படிச் சொல்லி முடிப்பதற்குள், ரெபெக்காள் தண்ணீர் ஜாடியைத் தோளில் சுமந்துகொண்டு வந்தாள். அவள் ஆபிரகாமுடைய சகோதரன் நாகோருக்கும்[a] அவர் மனைவி மில்காளுக்கும்[b] பிறந்த பெத்துவேலின் மகள்.[c] **16** அவள் கல்யாணமாகாத இளம் பெண். பார்க்க ரொம்ப அழகாக இருந்தாள். அவள் கிணற்றுக்குள் இறங்கி தண்ணீர் ஜாடியை நிரப்பிக்கொண்டு மேலே வந்தாள். **17** உடனே அந்த ஊழியர் அவளிடம் ஓடிப்போய், "தயவுசெய்து உன் ஜாடியிலிருந்து கொஞ்சம் தண்ணீர் கொடு" என்று கேட்டார். **18** அதற்கு அவள், "குடியுங்கள், ஐயா" என்று சொல்லி, உடனே தன்னுடைய ஜாடியைத் தோளிலிருந்து இறக்கி அவருக்குத் தண்ணீர் கொடுத்தாள். **19** அவர் குடித்து முடித்ததும் அவள் அவரிடம், "உங்களுடைய ஒட்டகங்களுக்கும் போதுமான அளவு தண்ணீர் எடுத்துக் கொடுக்கிறேன்" என்று சொன்னாள். **20** பின்பு, ஜாடியில் இருந்த தண்ணீரை அங்கிருந்த தொட்டியில் சீக்கிரமாக ஊற்றிவிட்டு, மறுபடியும் மறுபடியும் ஓடிப் போய் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவந்தாள். அவருடைய எல்லா ஒட்டகங்களும் குடித்து முடிக்கும்வரை ஊற்றிக்கொண்டே இருந்தாள். **21** அந்த ஊழியர் எதுவும் பேசாமல் அவளை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டே, தான் வந்த காரியத்தை யெகோவா கைகூடி வரப் பண்ணிவிட்டாரோ என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

22 எல்லா ஒட்டகங்களும் தண்ணீர் குடித்து முடித்ததும், தங்கத்தில் செய்த அரை சேக்கல்* எடையுள்ள மூக்குவளையத்தையும் 10 சேக்கல்* எடையுள்ள இரண்டு காப்புகளையும் அந்த ஊழியர் அவளுக்கு எடுத்துக் கொடுத்தார். **23** பின்பு அவளிடம், "நீ யாருடைய மகள் என்று தெரிந்துகொள்ளலாமா? இந்த ராத்திரி நாங்கள் தங்குவதற்கு உன் அப்பாவுடைய வீட்டில் இடம் இருக்கிறதா?" என்று கேட்டார். **24** அதற்கு அவள், "நாகோருக்கும் மில்காளுக்கும் பிறந்த பெத்துவேலின் மகள்[d] நான்" என்று சொன்னாள். **25** அதோடு, "ராத்திரி தங்குவதற்கு எங்கள் வீட்டில் இடம் இருக்கிறது. ஒட்டகங்களுக்கு வைக்கோலும் நிறைய தீவனமும்கூட இருக்கிறது" என்றாள். **26** அப்போது, அந்த ஊழியர் மண்டிபோட்டு, தரை வரைக்கும் குனிந்து, யெகோவாவுக்கு நன்றி சொல்லி, **27** "என் எஜமான் ஆபிரகாமின் கடவுளான யெகோவாவுக்குப் புகழ் சேரட்டும்! அவர் என் எஜமானுக்கு எப்போதும் போலவே மாறாத அன்பையும் உண்மைத்தன்மையையும் காட்டியிருக்கிறார். என் எஜமானுடைய சகோதரர்களின் வீட்டுக்கே வந்துசேர யெகோவா எனக்கு உதவியிருக்கிறார்" என்று சொன்னார்.

28 ரெபெக்காள் இந்த விஷயங்களைத் தன்னுடைய அம்மாவிடமும் மற்றவர்களிடமும் சொல்வதற்காக ஓடினாள். **29** ரெபெக்காளுக்கு லாபான் என்ற அண்ணன் இருந்தார்.[e] அவர், நகரத்துக்கு வெளியே கிணற்றுக்குப் பக்கத்தில் இருந்த அந்த ஊழியரைப் பார்க்க ஓடினார். **30** ஏனென்றால்,

---

24:14 *வே.வா., "மாறாத அன்பை." **24:22** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 24
a ஆதி 11:26
b ஆதி 11:29
c ஆதி 22:23
d ஆதி 11:29; ஆதி 22:23
e ஆதி 25:20; ஆதி 29:10

அந்த ஊழியர் பேசியதைப் பற்றி அவருடைய தங்கை சொல்லியிருந்
தாள். அவளுடைய மூக்கிலிருந்த வளையத்தையும் கைகளிலிருந்த
காப்புகளையும்கூட லாபான் பார்த்திருந்தார். அதனால், கிணற்றுக்குப் பக்
கத்தில் ஒட்டகங்களுடன் நின்றுகொண்டிருந்த அந்த ஊழியரிடம் போய்,
31 "யெகோவாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றவரே, ஏன் இங்கேயே நின்று
கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் என்னுடைய வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு
செய்திருக்கிறேன், உங்கள் ஒட்டகங்களுக்கும் ஒரு இடத்தைத் தயார் செய்
திருக்கிறேன், வாருங்கள்" என்றார். **32** அதனால், அந்த ஊழியர் லாபா
னின் வீட்டுக்கு வந்தார். அப்போது, அவர்* ஒட்டகங்களின் சேணத்தை#
அவிழ்த்து அவற்றுக்கு வைக்கோலும் தீவனமும் கொடுத்தார். அதோடு,
அந்த ஊழியரும் அவருடன் வந்தவர்களும் தங்கள் பாதங்களைக் கழுவு
வதற்காகத் தண்ணீர் கொடுத்தார். **33** அந்த ஊழியருக்கு உணவு பரி
மாறப்பட்டபோது, "வந்த விஷயத்தைச் சொல்வதற்கு முன்பு நான் சாப்பிட
மாட்டேன்" என்று சொன்னார். அதற்கு லாபான், "சரி, சொல்லுங்கள்!"
என்றார்.

34 அதற்கு அவர், "நான் ஆபிரகாமின் ஊழியன்.[a] **35** யெகோவா
என் எஜமானை அளவில்லாமல் ஆசீர்வதித்திருக்கிறார். அவருக்கு ஆடு
மாடுகள், ஒட்டகங்கள், கழுதைகள், வெள்ளி, தங்கம், வேலைக்காரர்கள்,
வேலைக்காரிகள் எல்லாவற்றையும் கொடுத்து அவரைப் பெரிய பணக்கார
ராக ஆக்கியிருக்கிறார்.[b] **36** அதோடு, என் எஜமானின் மனைவி சாராள்
வயதான காலத்தில் அவருக்கு ஒரு மகனைப் பெற்றுக் கொடுத்தார்.[c]
அந்த மகனுக்குத்தான் என் எஜமானுடைய எல்லா சொத்தும் வந்து
சேரும்.[d] **37** என் எஜமான் என்னிடம், 'நான் குடியிருக்கிற இந்த
கானான் தேசத்திலிருந்து நீ என்னுடைய மகன் ஈசாக்குக்குப் பெண்ணெடுக்
காமல்,[e] **38** என் அப்பாவின் வீட்டுக்குப் போய் என் குடும்பத்திலிருந்து[f]
அவனுக்குப் பெண்ணெடு'[g] என்று சொல்லி என்னிடம் சத்தியம் வாங்
கிக்கொண்டார். **39** அப்போது நான் என் எஜமானிடம், 'என்னோடு வர
அந்தப் பெண்ணுக்கு விருப்பம் இல்லையென்றால் என்ன செய்வது?'
என்று கேட்டேன்.[h] **40** அதற்கு அவர், 'நான் வணங்குகிற யெகோவா*[i]
தன்னுடைய தூதனை உன்னோடு அனுப்பி,[j] நீ போகிற காரியம் கைகூடும்
படி செய்வார். என் குடும்பத்திலிருந்தும் என் அப்பாவின் வீட்டிலிருந்தும் நீ
என் மகனுக்குப் பெண்ணெடுக்க வேண்டும்.[k] **41** நீ என் சொந்தக்காரர்க
ளிடம் போய்க் கேட்டும் அவர்கள் பெண் தராவிட்டால், எனக்குக் கொடுத்த
உறுதிமொழியிலிருந்து நீ விடுபடுவாய்' என்று சொன்னார்.[l]

42 இன்று நான் கிணற்றுப் பக்கமாக வந்தபோது கடவுளிடம், 'யெகோ
வாவே, என் எஜமான் ஆபிரகாமின் கடவுளே, நான் வந்த காரியத்தை நல்
லபடியாக முடித்துக் கொடுங்கள். **43** நான் கிணற்றுக்குப் பக்கத்தில் நின்
றுகொண்டிருக்கிறேன். தண்ணீர் எடுக்க வருகிற ஒரு பெண்ணிடம்,[m]
"உன்னுடைய ஜாடியிலிருந்து எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடு" என்று
நான் கேட்கும்போது, **44** அவள் என்னிடம், "குடியுங்கள், உங்கள் ஒட்
டகங்களுக்கும் தண்ணீர் கொடுக்கிறேன்" என்று சொன்னால், அவள்தான்

24:32 *அநேகமாக, "லாபான்." #சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை. **24:40** *வே.வா., "நான் யெகோவாவின் வழியில் நடப்பதால் அவர்."

அதி. 24
a ஆதி 15:2, 3
b ஆதி 12:15, 16; ஆதி 13:2; ஆதி 24:1
c ஆதி 21:1, 2; ரோ 4:19; எபி 11:11
d ஆதி 25:5
e ஆதி 24:2, 3; ஆதி 28:1
f ஆதி 22:20-23
g ஆதி 24:4
h ஆதி 24:5
i ஆதி 48:15
j எபி 1:7, 14
k ஆதி 11:25
l ஆதி 24:9
m ஆதி 24:16

என் எஜமானுடைய மகனுக்கு யெகோவா தேர்ந்தெடுத்த பெண் என்று
தெரிந்துகொள்வேன்'[a] என்று வேண்டிக்கொண்டேன்.

45 நான் இப்படி மனதில்* சொல்லி முடிப்பதற்குள், ரெபெக்காள் தண்
ணீர் ஜாடியைத் தோளில் சுமந்துகொண்டு வந்தாள். அவள் கிணற்றுக்குள்
இறங்கி தண்ணீர் எடுத்தாள். அப்போது நான் அவளிடம், 'தயவுசெய்து,
குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடு' என்று கேட்டேன்.[b] **46** அவள்
உடனே தன்னுடைய தோளிலிருந்து ஜாடியை இறக்கி, 'குடியுங்கள்,[c] உங்க
ளுடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுக்கிறேன்' என்று சொன்னாள்.
நான் குடித்தேன், அதன்பின் ஒட்டகங்களுக்கும் அவள் தண்ணீர் கொடுத்
தாள். **47** பின்பு அவளிடம், 'நீ யாருடைய மகள்?' என்று கேட்டேன்.
அதற்கு அவள், 'நாகோருக்கும் மில்காளுக்கும் பிறந்த பெத்துவேலின்
மகள் நான்' என்றாள். அப்போது, நான் அவளுடைய மூக்கில் வளையத்
தையும் கைகளில் காப்புகளையும்[d] போட்டுவிட்டேன். **48** பின்பு மண்டி
போட்டு, தரைவரைக்கும் குனிந்து, என் எஜமானின் கடவுளாகிய யெகோ
வாவுக்கு[e] நன்றி சொன்னேன். என் எஜமானுடைய மகனுக்கு அவருடைய
சகோதரரின் மகளையே பேசி முடிப்பதற்கு உதவி செய்த யெகோவாவைப்
புகழ்ந்தேன். **49** இப்போது, என் எஜமானிடம் மாறாத அன்பு காட்டவும்
அவருக்கு உண்மையாக இருக்கவும் நீங்கள் விரும்புகிறீர்களா என்று தயவு
செய்து என்னிடம் சொல்லுங்கள். உங்களுக்கு விருப்பம் இல்லையென்
றாலும் என்னிடம் சொல்லுங்கள். அப்போதுதான், அடுத்து என்ன செய்ய
வேண்டுமென்று நான் யோசிக்க முடியும்"[f] என்று சொன்னார்.

50 அதற்கு லாபானும் பெத்துவேலும், "இது யெகோவாவின் ஏற்பாடு.
அதனால் நாங்கள் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. **51** இதோ, ரெபெக்
காள் இருக்கிறாள். அவளைக் கூட்டிக்கொண்டு போங்கள். யெகோவா
சொன்னபடியே அவள் உங்கள் எஜமானுடைய மகனுக்கு மனைவியாகட்
டும்" என்று சொன்னார்கள். **52** ஆபிரகாமின் ஊழியர் இதைக் கேட்டவு
டன் மண்டிபோட்டு, தரைவரைக்கும் குனிந்து யெகோவாவை வணங்கினார்.
53 பின்பு, தங்க நகைகளையும் வெள்ளி நகைகளையும் துணிமணிகளையும்
எடுத்து ரெபெக்காளுக்குக் கொடுத்தார். அவளுடைய அண்ணனுக்கும் அம்
மாவுக்கும் விலைமதிப்புள்ள பொருள்களைக் கொடுத்தார். **54** அதன்பின்,
அவரும் அவரோடு இருந்த ஆட்களும் சாப்பிட்டு, குடித்தார்கள். ராத்திரி
அங்கேயே தங்கினார்கள்.

அந்த ஊழியர் காலையில் எழுந்து, "என் எஜமானிடம் போக
வேண்டும், என்னை அனுப்பி வையுங்கள்" என்றார். **55** அதற்கு அந்தப்
பெண்ணின் அண்ணனும் அம்மாவும், "எங்கள் பெண் பத்து நாளாவது
எங்களோடு இருக்கட்டுமே, அப்புறம் போகலாமே' என்று சொன்னார்கள்.
56 ஆனால் அவர், "நான் வந்த காரியத்தை யெகோவா நல்லபடியாக
முடித்துக் கொடுத்திருக்கிறார், அதனால் நேரம் தாழ்த்தாமல் என்னை
அனுப்பி வையுங்கள். நான் என் எஜமானிடம் போக வேண்டும்" என்
றார். **57** அப்போது அவர்கள், "பெண்ணையே கூப்பிட்டு அவளுடைய
விருப்பத்தைக் கேட்கலாமே" என்று சொன்னார்கள். **58** உடனே ரெபெக்
காளைக் கூப்பிட்டு, "இவரோடு போக உனக்குச் சம்மதமா?" என்று கேட்
டார்கள். அதற்கு அவள் "சம்மதம்தான்" என்று சொன்னாள்.

அதி. 24
a ஆதி 24:14
b ஆதி 24: 15, 17
c ஆதி 24:18
d ஆதி 24: 22, 23
e ஆதி 24:27
f ஆதி 24:8

24:45 * நே.மொ., "இதயத்தில்."

59 அதனால், அவர்கள் ரெபெக்காளையும்*[a] அவளுடைய தாதியை
யும்#[b] ஆபிரகாமின் ஊழியரையும் அவருடைய ஆட்களையும் அனுப்பி
வைத்தார்கள். **60** அப்போது அவர்கள் ரெபெக்காளிடம், “எங்கள் சகோ
தரியே, உன்னுடைய வம்சம் லட்சக்கணக்கில் பெருகட்டும்; உன்னுடைய
சந்ததி எதிரிகளின் நகரங்களைக் கைப்பற்றட்டும்” என்று சொல்லி வாழ்த்
தினார்கள்.[c] **61** பின்பு, ரெபெக்காளும் அவளுடைய பணிப்பெண்களும்
ஒட்டகங்களில் ஏறி, அந்த ஊழியரின் பின்னால் போனார்கள். இப்படி,
அந்த ஊழியர் ரெபெக்காளைக் கூட்டிக்கொண்டு போனார்.

62 நெகேபில்[d] குடியிருந்த ஈசாக்கு, பெயெர்-லகாய்-ரோயீ[e] என்ற கிணற்
றின் வழியாக வந்தார். **63** அவர் சாயங்கால நேரத்தில், சில விஷயங்
களைத் தியானிப்பதற்காக[f] காட்டுவெளியில் நடந்துகொண்டிருந்தார். அவர்
நிமிர்ந்து பார்த்தபோது, ஒட்டகங்கள் வருவது தெரிந்தது. **64** ரெபெக்
காளும் ஈசாக்கைப் பார்த்தாள். உடனே, ஒட்டகத்தைவிட்டு இறங்கினாள்.
65 அப்போது அந்த ஊழியரிடம், “நம்மைச் சந்திப்பதற்காக ஒருவர் வருகி
றாரே, அவர் யார்?” என்று கேட்டாள். அதற்கு அந்த ஊழியர், “அவர்தான்
என் எஜமான்” என்று சொன்னார். அப்போது, அவள் முக்காடு போட்டுக்
கொண்டாள். **66** அதன்பின் அந்த ஊழியர், நடந்த எல்லா விஷயங்களை
யும் ஈசாக்கிடம் சொன்னார். **67** பின்பு, ஈசாக்கு தன்னுடைய அம்மா சாரா
ளின் கூடாரத்துக்கு[g] ரெபெக்காளைக் கூட்டிக்கொண்டு போய், தன்னுடைய
மனைவியாக்கிக்கொண்டார். அவர் அவளை நேசித்தார்.[h] இப்படி, அம்மா
வைப் பறிகொடுத்த[i] சோகத்திலிருந்து மீண்டு ஆறுதல் அடைந்தார்.

25 பின்பு ஆபிரகாம், கேத்தூராள் என்ற பெண்ணைக் கல்யாணம்
செய்துகொண்டார். **2** அவர்களுக்கு சிம்ரான், யக்ஷான், மேதான்,
மீதியான்,[j] இஸ்பாக், சுவாகு[k] என்ற மகன்கள் பிறந்தார்கள்.

3 யக்ஷானின் மகன்கள்: சேபா, தேதான்.

தேதானின் மகன்கள்: அசூரீம், லெத்தூசீம், லெயூமீம்.

4 மீதியானின் மகன்கள்: ஏப்பா, ஏப்பேர், ஆனோக்கு, அபிதா,
எல்தாகா.

இவர்கள் எல்லாரும் கேத்தூராளின் பேரன்கள்.

5 ஆபிரகாம் தன்னுடைய எல்லா சொத்துகளையும் ஈசாக்குக்குக்
கொடுத்தார்.[l] **6** ஆனால், தன்னுடைய மறுமனைவிகள் பெற்ற மகன்க
ளுக்கு அன்பளிப்புகளைக் கொடுத்தார். அதுமட்டுமல்ல, தான் உயிரோடு
இருக்கும்போதே தன் மகன் ஈசாக்கைவிட்டுத் தூரமாய்க் கிழக்கத்திய
தேசத்துக்கு அவர்களை அனுப்பி வைத்தார்.[m] **7** ஆபிரகாம் 175 வரு
ஷங்கள் வாழ்ந்தார். **8** அவர் நிறைய காலம் மனநிறைவோடு வாழ்ந்த
பின்பு முதிர்வயதில் இறந்துபோனார்.* **9** அவருடைய மகன்களான ஈசாக்
கும் இஸ்மவேலும் மம்ரேக்குப் பக்கத்தில், ஏத்தியனான சோகாரின் மகன்
எப்பெரோனுடைய நிலத்திலுள்ள மக்பேலா குகையில், அவரை அடக்கம்
செய்தார்கள்.[n] **10** அந்த நிலத்தை ஏத்தின் மகன்களிடமிருந்து ஆபிரகாம்

24:59 *நே.மொ., “தங்கள் சகோதரியான ரெபெக்காளையும்.” #ரெபெக்காள் குழந்
தையாக இருந்தபோது அவளுக்குப் பாலூட்டியவள்; இந்தச் சமயத்தில் அவளுடைய
பணிப்பெண். **25:8** *நே.மொ., “தன் முன்னோர்களுடன் சேர்க்கப்பட்டார்.” எபிரெயு
வில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன.

அதி. 24
a ஆதி 28:5
b ஆதி 35:8
c ஆதி 22:15, 17
d ஆதி 12:9; ஆதி 20:1; எண் 13:22; நியா 1:9
e ஆதி 16:14; ஆதி 25:11
f சங் 77:12; சங் 143:5
g எபி 11:9
h ஆதி 26:8
i ஆதி 23:2, 19

அதி. 25
j ஆதி 37:28; யாத் 2:15; எண் 31:2; நியா 6:2
k 1நா 1:32, 33
l ஆதி 24:36
m ஆதி 21:14
n ஆதி 23:8, 9; ஆதி 49:29, 30

விலைக்கு வாங்கியிருந்தார். அவருடைய மனைவி சாராள் அடக்கம் செய்
யப்பட்ட அதே இடத்தில் அவரும் அடக்கம் செய்யப்பட்டார்.[a] **11** ஆபி
ரகாம் இறந்த பின்பு, அவருடைய மகன் ஈசாக்கைக் கடவுள் தொடர்ந்து
ஆசீர்வதித்தார்.[b] பெயெர்-லகாய்-ரோயீ[c] என்ற கிணற்றுக்குப் பக்கத்தில்
ஈசாக்கு வாழ்ந்துவந்தார்.

12 சாராளின் வேலைக்காரியான எகிப்தியப் பெண் ஆகாருக்கும்[d]
ஆபிரகாமுக்கும் பிறந்த இஸ்மவேலின்[e] வரலாறு இதுதான்.

13 இஸ்மவேலுடைய மகன்களின் பெயர்களும் அவரவர் வம்சங்களின்
பெயர்களும் இவைதான்: இஸ்மவேலுடைய மூத்த மகன் நெபாயோத்.[f]
அவனுக்குப் பிறகு கேதார்,[g] அத்பியேல், மிப்சாம்,[h] **14** மிஷ்மா, தூமா,
மாஸா, **15** ஆதாத், தீமா, யெத்தூர், நாபீஸ், கேத்மா ஆகிய மகன்களும்
இஸ்மவேலுக்குப் பிறந்தார்கள். **16** இஸ்மவேலுடைய மகன்களாகிய இந்த
12 பேரும் அவரவர் குலத்துக்குத் தலைவர்களாக இருந்தார்கள்.[i] அவர்கள்
தங்கியிருந்த கிராமங்களும் முகாம்களும் அவர்களுடைய பெயர்களால்
அழைக்கப்பட்டன. **17** இஸ்மவேல் 137 வருஷங்கள் வாழ்ந்த பின்பு
இறந்துபோனார்.* **18** எகிப்துக்குக் கிழக்கே ஷூருக்குப்[j] பக்கத்திலுள்ள
ஆவிலா[k] பகுதியிலிருந்து அசீரியாவரை இஸ்மவேலர்கள் வாழ்ந்துவந்தார்
கள். அவர்கள் தங்களுடைய எல்லா சகோதரர்களுக்கும் பக்கத்தில் குடியி
ருந்தார்கள்.*[l]

19 ஆபிரகாமின் மகன் ஈசாக்கின் வரலாறு இதுதான்.[m]

ஆபிரகாமுக்கு ஈசாக்கு பிறந்தார். **20** ஈசாக்கு 40 வயதில் ரெபெக்
காளைக் கல்யாணம் செய்துகொண்டார். இவள் பதான்-அராமைச் சேர்ந்த
அரமேயனான பெத்துவேலின் மகள்,[n] அரமேயனான லாபானின் தங்கை.
21 ரெபெக்காளுக்குக் குழந்தை இல்லாததால் ஈசாக்கு யெகோவாவிடம்
வேண்டிக்கொண்டே இருந்தார். யெகோவா அவருடைய வேண்டுத
லைக் கேட்டார், ரெபெக்காள் கர்ப்பமானாள். **22** அவளுடைய வயிற்றி
லிருந்த மகன்கள் ஒருவருக்கொருவர் முட்டிமோதிக்கொண்டிருந்தார்கள்.[o]
அதனால் அவள், "நான் இப்படிக் கஷ்டப்படுவதற்குச் செத்துப்போவதே
மேல்" என்று சொன்னாள். அதன்பின், யெகோவாவிடம் விசாரித்தாள்.
23 யெகோவா அவளிடம், "உன் வயிற்றில் இரண்டு மகன்கள் இருக்கிறார்
கள்.*[p] உன்னிடமிருந்து இரண்டு தேசங்கள் உருவாகும்.[q] ஒரு தேசம் மற்
றொன்றைவிட பலமானதாக இருக்கும்.[r] பெரியவன் சின்னவனுக்குச்
சேவை செய்வான்"[s] என்று சொன்னார்.

24 பிரசவ நேரம் வந்தது. அவளுடைய வயிற்றில் இரட்டைக் குழந்தை
கள் இருந்தன. **25** முதலில் பிறந்த குழந்தை சிவப்பாக இருந்தது. கம்பளி
போர்த்தியது போல அதன் உடம்பு முழுக்க முடி இருந்தது.[t] அதனால், அந்
தக் குழந்தைக்கு ஏசா*[u] என்று அவர்கள் பெயர் வைத்தார்கள். **26** இரண்
டாவதாகப் பிறந்த குழந்தை தன்னுடைய அண்ணன் ஏசாவின் குதிங்கா
லைப் பிடித்தபடி வெளியே வந்தது.[v] அதனால், இந்தக் குழந்தைக்கு

25:17 *நே.மொ., "தன் முன்னோர்களுடன் சேர்க்கப்பட்டார்." எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன. **25:18** *அல்லது, "எல்லா சகோதரர்களையும் பகைத்துக்கொண்டு வாழ்ந்தார்கள்." **25:23** *நே.மொ., "இரண்டு தேசங்கள் இருக்கின்றன." **25:25** *அர்த்தம், "நிறைய முடி உள்ளவன்."

அதி. 25
a ஆதி 23:2, 19
b ஆதி 17:19; ஆதி 26:12-14
c ஆதி 16:14
d கலா 4:24
e ஆதி 16:10, 11
f ஆதி 36:2, 3; ஏசா 60:7
g சங் 120:5; எரே 49:28; எசே 27:21
h 1நா 1:29-31
i ஆதி 17:20
j ஆதி 16:7, 8
k 1சா 15:7
l ஆதி 16:11, 12
m ஆதி 22:2; மத் 1:1, 2
n ஆதி 22:23
o ரோ 9:10
p சங் 139:15
q ஆதி 36:31; எண் 20:14
r ஆதி 27:29, 30; உபா 2:4
s 2சா 8:14; மல் 1:2, 3; ரோ 9:10-13
t ஆதி 27:11
u ஆதி 27:32; ஆதி 36:9; மல் 1:3
v ஓசி 12:3

யாக்கோபு*[a] என்ற பெயர் வைக்கப்பட்டது. ரெபெக்காள் குழந்தைகளைப்
பெற்றபோது ஈசாக்குக்கு 60 வயது.

27 அந்தக் குழந்தைகள் வளர்ந்து ஆளானார்கள். ஏசா வேட்டையாடுவ
தில் கெட்டிக்காரனாக ஆனான்.[b] அவன் காட்டிலேயே சுற்றித் திரிந்து
கொண்டு இருந்தான். ஆனால், யாக்கோபு அமைதியாக* கூடாரத்தில்
தங்கிவந்தான்.[c] **28** ஈசாக்கு ஏசாவை அதிகமாக நேசித்தார். ஏனென்றால்,
அவருடைய வாய்க்கு ருசியானதை அவன் வேட்டையாடிக் கொண்டுவந்
தான். ஆனால், ரெபெக்காள் யாக்கோபை அதிகமாக நேசித்தாள்.[d]
29 ஒருநாள், யாக்கோபு கூழ் காய்ச்சிக்கொண்டிருந்தான். அப்போது, காட்டி
லிருந்து ஏசா களைப்பாகத் திரும்பி வந்தான். **30** அதனால் யாக்கோபிடம்,
“நான் ரொம்பக் களைத்துப்போயிருக்கிறேன்,* தயவுசெய்து அந்தச் சிவப்
பான கூழைக் கொஞ்சம்# தா! சீக்கிரம் கொடு!” என்று கேட்டான். அதனால்
தான் அவனுக்கு ஏதோம்△[e] என்ற பெயர் வந்தது. **31** யாக்கோபு அவனி
டம், “மூத்த மகனின் உரிமையை முதலில் எனக்கு விற்றுவிடு!”[f]
என்றான். **32** அதற்கு ஏசா, “நானே செத்துக்கொண்டிருக்கிறேன்! மூத்த மக
னின் உரிமையை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறேன்?” என்றான்.
33 “அப்படியானால், முதலில் நீ எனக்குச் சத்தியம் செய்து கொடு!” என்று
யாக்கோபு கேட்டான். அதன்படியே, ஏசா சத்தியம் செய்து கொடுத்து, மூத்த
மகனின் உரிமையை யாக்கோபுக்கு விற்றுவிட்டான்.[g] **34** அப்போது, ஏசா
வுக்கு ரொட்டியையும் பயற்றங்கூழையும் யாக்கோபு கொடுத்தான். அவன்
சாப்பிட்டான், குடித்தான். பின்பு எழுந்து போனான். இப்படி, மூத்த மகனின்
உரிமையை ஏசா அலட்சியம் பண்ணினான்.

26
ஆபிரகாமின் காலத்தில் பஞ்சம் உண்டானது போலவே,[h] மறுபடி
யும் ஒரு பஞ்சம் தேசத்தில் உண்டானது. அதனால், கேராரிலிருந்த
பெலிஸ்திய ராஜாவான அபிமெலேக்கிடம் ஈசாக்கு போனார். **2** அப்
போது யெகோவா அவர்முன் தோன்றி, “நீ எகிப்துக்குப் போகாதே. நான்
சொல்கிற இடத்துக்குப் போய்க் குடியிரு. **3** இந்தத் தேசத்தில் அன்னிய
னாகத் தங்கியிரு.[i] நான் எப்போதும் உன்னோடு இருந்து உன்னை ஆசீர்வ
திப்பேன். உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசம் முழுவதையும் கொடுப்
பேன்.[j] உன் அப்பாவான ஆபிரகாமுக்குக் கொடுத்த உறுதிமொழியை
நிறைவேற்றுவேன்.[k] **4** நான் ஆபிரகாமிடம், ‘உன் சந்ததியை வானத்தி
லுள்ள நட்சத்திரங்களைப் போலப் பெருகப் பண்ணுவேன்.[l] உன் சந்ததிக்கு
இந்தத் தேசம் முழுவதையும் கொடுப்பேன்.[m] உன் சந்ததியின் மூலம் பூமி
யிலுள்ள எல்லா தேசத்தாரும் நிச்சயம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்
வார்கள்’[n] என்று சொன்னேன், அதன்படியே செய்வேன். **5** ஏனென்றால்,
ஆபிரகாம் என் பேச்சைக் கேட்டு நடந்தான். எப்போதுமே என்னுடைய
விதிமுறைகளையும் கட்டளைகளையும் சட்டதிட்டங்களையும் கடைப்பி
டித்தான்”[o] என்று சொன்னார். **6** அதனால், ஈசாக்கு கேராரிலேயே[p] குடி
யிருந்தார்.

7 அங்கிருந்த ஆண்கள் அவருடைய மனைவியைப் பற்றிக் கேட்ட
போதெல்லாம், “இவள் என் தங்கை” என்று அவர் சொல்லிவந்தார்.[q]

25:26 *அர்த்தம், “குதிங்காலைப் பிடித்துக்கொண்டவன்; இன்னொருவனின் இடத்தை எடுத்துக்கொண்டவன்.” **25:27** *வே.வா., “குற்றமற்றவனாக.” **25:30** *வே.வா., “என் வயிறு காய்கிறது.” #வே.வா., “ஒரு வாய்.” △அர்த்தம், “சிவப்பு.”

அதி. 25
a ஆதி 27:36
b ஆதி 27:3, 5
c எபி 11:9
d ஆதி 27:6, 7, 46
e ஆதி 36:1
f உபா 21:16, 17
g எபி 12:16

அதி. 26
h ஆதி 12:10
i ஆதி 20:1; எபி 11:8, 9
j ஆதி 12:7; ஆதி 15:18
k ஆதி 22:16–18; சங் 105:9–11; எபி 6:13, 14
l ஆதி 15:1, 5; எபி 11:12
m உபா 34:4
n ஆதி 12:1–3; அப் 3:25; கலா 3:8
o ஆதி 17:10, 23; ஆதி 22:3, 12; எபி 11:8; யாக் 2:21
p ஆதி 26:17
q ஆதி 12:11–13

ரெபெக்காள் அழகாக இருந்ததால்[a] அங்கே இருந்தவர்கள் அவளை
அடைவதற்காகத் தன்னைக் கொன்றுபோடுவார்களோ என்று பயந்து
தான் அவளைத் தன் மனைவி என்று சொல்லாமல் இருந்தார். **8** கொஞ்
சக் காலத்துக்குப் பின்பு, பெலிஸ்திய ராஜாவான அபிமெலேக்கு ஜன்னல்
வழியாகப் பார்த்தபோது, ஈசாக்கு தன் மனைவி ரெபெக்காளைக் கொஞ்
சிக்கொண்டிருந்தார்.*[b] **9** உடனே அபிமெலேக்கு ஈசாக்கைக் கூப்பிட்டு,
“அவள் உண்மையில் உன் மனைவிதானே! அப்புறம் எதற்கு ‘இவள் என்
தங்கை’ என்று சொன்னாய்?” என்று கேட்டார். அதற்கு ஈசாக்கு, “அவளை
அடைவதற்காக என்னை யாராவது கொன்றுபோடுவார்களோ என்று பயந்
துதான் அப்படிச் சொன்னேன்”[c] என்றார். **10** அதற்கு அபிமெலேக்கு,
“ஏன் இப்படிச் செய்தாய்?[d] எங்களில் யாராவது உன் மனைவியோடு
படுத்திருந்தால், எங்கள்மேல் பழி விழுந்திருக்குமே!”[e] என்றார். **11** பின்பு,
“இந்த மனுஷனின் மேலோ இவனுடைய மனைவியின் மேலோ யாராவது
கை வைத்தால் அவன் கண்டிப்பாகக் கொல்லப்படுவான்!” என்று எல்லா
ஜனங்களையும் எச்சரித்தார்.

12 ஈசாக்கு அந்தத் தேசத்தில் பயிர் செய்யத் தொடங்கினார். யெகோவா
அவரை ஆசீர்வதித்ததால்[f] அந்த வருஷத்தில் விதைத்ததைவிட 100
மடங்கு அதிகமாக அறுவடை செய்தார். **13** அவர் பணக்காரராக ஆனார்,
சொத்துகள் குவிந்துகொண்டே இருந்ததால் மிகப் பெரிய பணக்காரராக
ஆனார். **14** அவருக்கு ஏராளமான ஆடுமாடுகளும் நிறைய வேலைக்கா
ரர்களும் இருந்தார்கள்.[g] அதையெல்லாம் பார்த்து பெலிஸ்தியர்கள் வயிற்
றெரிச்சல்பட்டார்கள்.

15 அதனால், அவருடைய அப்பாவான ஆபிரகாமுடைய காலத்தில்
ஆபிரகாமின் வேலைக்காரர்கள் வெட்டியிருந்த எல்லா கிணறுகளையும்[h]
பெலிஸ்தியர்கள் மண்ணினால் மூடினார்கள். **16** அப்போது அபிமெ
லேக்கு ஈசாக்கிடம், “நீ எங்களைவிட ரொம்பப் பெரிய ஆளாகிவிட்
டாய், அதனால் இங்கிருந்து போய்விடு” என்று சொன்னார். **17** உடனே,
ஈசாக்கு அங்கிருந்து புறப்பட்டுப் போய் கேரார்[i] பள்ளத்தாக்கில்* கூடாரம்
போட்டுத் தங்கினார். **18** அவருடைய அப்பா ஆபிரகாம் நிறைய கிண
றுகளை வெட்டியிருந்தார். ஆனால், ஆபிரகாம் இறந்தபின் பெலிஸ்தியர்
கள் அவற்றை மூடிவிட்டார்கள்.[j] அந்தக் கிணறுகளை ஈசாக்கு மறுபடியும்
தோண்டி, தன்னுடைய அப்பா வைத்திருந்த பெயர்களையே அவற்றுக்கு
வைத்தார்.[k]

19 ஈசாக்கின் வேலைக்காரர்கள் அந்தப் பள்ளத்தாக்கில்* தோண்டிய
போது, நல்ல தண்ணீருள்ள கிணற்றைப் பார்த்தார்கள். **20** அப்போது,
கேராரைச் சேர்ந்த மேய்ப்பர்கள் ஈசாக்கின் மேய்ப்பர்களிடம், “இந்தக்
கிணற்றுத் தண்ணீர் எங்களுடையது!” என்று சொல்லி வாக்குவாதம் செய்
தார்கள். அவர்கள் அவருடன் வாக்குவாதம் செய்ததால் அந்தக் கிணற்
றுக்கு ஏசேக்கு* என்று அவர் பெயர் வைத்தார். **21** அவர்கள் இன்னொரு
கிணற்றைத் தோண்ட ஆரம்பித்தபோது, அதற்காகவும் பெலிஸ்தியர்கள்
வாக்குவாதம் செய்தார்கள். அதனால், அந்தக் கிணற்றுக்கு சித்னா* என்று

அதி. 26
a ஆதி 24:16
b ஆதி 24:67
c ஆதி 20:11
d ஆதி 12:18
e ஆதி 20:9
f ஆதி 24:34, 35
g ஆதி 12:16
h ஆதி 21:27, 30
i ஆதி 10:19; ஆதி 20:1
j ஆதி 21:25
k ஆதி 21:31

26:8 * வே.வா., “கட்டிப்பிடித்துக்கொண்டிருந்தார்.” **26:17, 19** * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கில்.” **26:20** * அர்த்தம், “வாக்குவாதம்.” **26:21** * அர்த்தம், “குற்றச்சாட்டு.”

பெயர் வைத்தார். **22** பிற்பாடு, அவர் அங்கிருந்து புறப்பட்டுப் போய்
வேறொரு கிணற்றைத் தோண்டினார். ஆனால், இந்தத் தடவை அவர்கள்
வாக்குவாதம் செய்யவில்லை. அதனால், “நம்முடைய சந்ததி பெருகுவதற்
காக இப்போது யெகோவா இந்தத் தேசத்தில் நமக்கு நிறைய இடம் தந்
திருக்கிறார்”[a] என்று சொல்லி, அந்தக் கிணற்றுக்கு ரெகொபோத்* என்று
பெயர் வைத்தார்.

23 பின்பு, அவர் அங்கிருந்து புறப்பட்டு பெயெர்-செபாவுக்குப்[b]
போனார். **24** அந்த ராத்திரி யெகோவா அவர்முன் தோன்றி, “உன்னு
டைய அப்பாவான ஆபிரகாமின் கடவுள் நான்தான்.[c] பயப்படாதே, நான்
உன்னோடு இருக்கிறேன்.[d] என்னுடைய ஊழியன் ஆபிரகாமுக்காக நான்
உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருக வைப்பேன்”[e] என்று
சொன்னார். **25** அதனால் ஈசாக்கு அங்கே ஒரு பலிபீடம் கட்டி,
யெகோவாவின் பெயரைப் போற்றிப் புகழ்ந்தார்.[f] பின்பு, அங்கே ஒரு
கூடாரம் போட்டுத் தங்கினார்.[g] அவருடைய வேலைக்காரர்கள் அங்கே
ஒரு கிணறு தோண்டினார்கள்.

26 பிற்பாடு, அபிமெலேக்கு கேராரிலிருந்து தன்னுடைய முக்கிய
ஆலோசகரான அகுசாத்தையும், தன்னுடைய படைத் தளபதி பிகோலை
யும்[h] கூட்டிக்கொண்டு ஈசாக்கைப் பார்க்க வந்தார். **27** ஈசாக்கு அவர்களி
டம், “ஏன் என்னைப் பார்க்க வந்தீர்கள்? நீங்கள்தான் என்னை வெறுத்து,
உங்கள் ஊரைவிட்டே அனுப்பிவிட்டீர்களே” என்றார். **28** அதற்கு அவர்
கள், “யெகோவா உங்களோடு இருக்கிறார் என்பதை எங்கள் கண்களா
லேயே பார்த்துவிட்டோம்.[i] அதனால், ‘தயவுசெய்து எங்களோடு ஒரு சமா
தான ஒப்பந்தம் செய்யுங்கள்’[j] என்று கேட்க வந்திருக்கிறோம்.
29 நாங்கள் உங்களுக்குக் கெடுதல் செய்யாமல் நல்லதையே செய்து, உங்
களைச் சமாதானமாக அனுப்பி வைத்தோம் இல்லையா? அதுபோலவே,
நீங்களும் எங்களுக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டீர்கள் என்று எங்
களோடு ஒப்பந்தம் செய்யுங்கள். உங்களை யெகோவா ஆசீர்வதித்திருக்
கிறாரே!’” என்றார்கள். **30** பின்பு, ஈசாக்கு அவர்களுக்கு விருந்து வைத்
தார். அவர்கள் சாப்பிட்டார்கள், குடித்தார்கள். **31** விடிந்ததுமே அவர்கள்
எழுந்து ஒருவருக்கொருவர் உறுதிமொழி தந்தார்கள்.[k] அதன்பின், ஈசாக்கு
அவர்களை அனுப்பி வைத்தார். அவர்களும் சமாதானத்துடன் புறப்பட்டுப்
போனார்கள்.

32 அதே நாளில் ஈசாக்கின் வேலைக்காரர்கள் அவரிடம் வந்து, அவர்
கள் தோண்டிய கிணற்றில்[l] தண்ணீர் வந்துவிட்டதாகச் சொன்னார்கள்.
33 அந்தக் கிணற்றுக்கு செபா* என்று அவர் பெயர் வைத்தார். அத
னால்தான், அந்த நகரம் இன்றுவரை பெயெர்-செபா#[m] என்று அழைக்கப்
படுகிறது.

34 ஏசாவுக்கு 40 வயதானபோது, ஏத்தியனான பெயேரியின் மகள்
யூதீத்தையும் ஏத்தியனான ஏலோனின் மகள் பஸ்மாத்தையும்[n] கல்யாணம்
செய்துகொண்டான். **35** அவர்கள் இரண்டு பேரும் ஈசாக்குக்கும் ரெபெக்
காளுக்கும் தீராத தலைவலியாக இருந்தார்கள்.[o]

26:22 * அர்த்தம், “விசாலமான இடங்கள்.” **26:33** * அர்த்தம், “உறுதிமொழி; ஏழு.”
அர்த்தம், “உறுதிமொழியின் கிணறு; ஏழின் கிணறு.”

அதி. 26
a ஆதி 17:5, 6; ஆதி 28:1, 3
b ஆதி 21:31
c ஆதி 17:1; ஆதி 28:13
d ஆதி 15:1
e ஆதி 17:19; சங் 105:9-11
f ஆதி 12:8, 9
g எபி 11:9
h ஆதி 21:32
i ஆதி 21:22
j ஆதி 21:27
k ஆதி 21: 22-24
l ஆதி 26:18
m நியா 20:1
n ஆதி 36:2, 3
o ஆதி 27:46; ஆதி 28:8

27 வயதான காலத்தில் ஈசாக்கின் கண்பார்வை சுத்தமாக மங்கிவிட்டது.
அவர் தன்னுடைய மூத்த மகன் ஏசாவைக்[a] கூப்பிட்டு, “மகனே!”
என்றார். அதற்கு ஏசா, “சொல்லுங்கள், அப்பா!” என்றான். **2** அப்போது
அவர், “எனக்கு வயதாகிவிட்டது, எவ்வளவு நாள் உயிரோடு இருப்பேன்
என்று தெரியவில்லை. **3** அதனால், இப்போது நீ தயவுசெய்து உன்னு
டைய வில்லையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு காட்டுக்குப் போய்,
ஏதாவது ஒரு மிருகத்தை வேட்டையாடிக் கொண்டுவா.[b] **4** எனக்குப்
பிடித்த மாதிரி அதை ருசியாகச் சமைத்துத் தா. அதை நான் சாப்பிட்டுவிட்டு,
உயிரோடு இருக்கும்போதே உன்னை ஆசீர்வதித்துவிடுகிறேன்” என்று
சொன்னார்.

5 ஈசாக்கு தன்னுடைய மகன் ஏசாவிடம் பேசிக்கொண்டிருந்ததை
ரெபெக்காள் கேட்டாள். ஏசா மிருகத்தை வேட்டையாடிக் கொண்டுவர
காட்டுக்குப் போனான்.[c] **6** அப்போது ரெபெக்காள் தன்னுடைய மகன்
யாக்கோபிடம்,[d] “உன் அண்ணன் ஏசாவோடு உன் அப்பா பேசிக்கொண்டி
ருந்ததை இப்போதுதான் கேட்டேன். **7** அவர் அவனிடம், ‘ஏதாவது ஒரு
மிருகத்தை வேட்டையாடிக் கொண்டுவந்து ருசியாகச் சமைத்துத் தா.
அதை நான் சாப்பிட்டுவிட்டு, உயிரோடு இருக்கும்போதே யெகோவாவின்
முன்னிலையில் உன்னை ஆசீர்வதித்துவிடுகிறேன்’[e] என்று சொன்னார்.
8 மகனே, நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டு அப்படியே செய்.[f]
9 தயவுசெய்து தொழுவத்துக்குப் போய், கொழுகொழுவென்று இருக்கிற
இரண்டு வெள்ளாட்டுக் குட்டிகளைக் கொண்டுவா. உன் அப்பாவுக்குப்
பிடித்த மாதிரியே அதை ருசியாகச் சமைத்துக் கொடுக்கிறேன். **10** அதை
உன் அப்பாவிடம் கொண்டுபோய்க் கொடு. அவர் அதைச் சாப்பிட்டு
விட்டு, உயிரோடு இருக்கும்போதே உன்னை ஆசீர்வதிக்கட்டும்” என்று
சொன்னாள்.

11 அப்போது யாக்கோபு தன்னுடைய அம்மா ரெபெக்காளிடம்,
“என் அண்ணனுக்கு உடம்பு முழுக்க முடி இருக்கிறது,[g] ஆனால் எனக்கு
இல்லையே. **12** ஒருவேளை அப்பா என்னைத் தடவிப் பார்த்தால்?[h]
நான் அவரை ஏமாற்றுவதாக நினைத்து, என்னை ஆசீர்வதிப்பதற்குப்
பதிலாகச் சபித்துவிடுவாரே” என்று சொன்னான். **13** அதற்கு அவனு
டைய அம்மா, “மகனே, அந்தச் சாபம் என்மேல் வரட்டும். இப்போது,
நான் சொல்வதைச் செய், நீ போய் நான் கேட்டதைக் கொண்டுவா”[i]
என்று சொன்னாள். **14** அவன் போய், வெள்ளாட்டுக் குட்டிகளைப் பிடித்
துத் தன்னுடைய அம்மாவிடம் கொண்டுவந்தான். அவள் அவனுடைய அப்
பாவுக்குப் பிடித்த மாதிரியே ருசியாகச் சமைத்தாள். **15** அதன்பின்,
வீட்டிலே தன்னுடைய பெரிய மகன் ஏசா வைத்திருந்த அருமையான அங்
கிகளை எடுத்துத் தன்னுடைய சின்ன மகன் யாக்கோபுக்குப் போட்டுவிட்
டாள்.[j] **16** அதோடு, வெள்ளாட்டுக் குட்டிகளின் தோலை அவன் கைகளி
லும் கழுத்திலும் போட்டுவிட்டாள்.[k] **17** பின்பு, தான் சமைத்த ருசியான
இறைச்சியையும் ரொட்டியையும் எடுத்துத் தன்னுடைய மகன் யாக்கோபிடம்
கொடுத்தாள்.[l]

18 யாக்கோபு தன்னுடைய அப்பாவிடம் போய், “அப்பா!” என்றான்.
அதற்கு ஈசாக்கு, “சொல், மகனே! நீ ஏசாவா யாக்கோபா?” என்று கேட்டார்.
19 அப்போது யாக்கோபு, “நான் உங்களுடைய மூத்த மகன் ஏசா.[m] நீங்கள்
சொன்ன மாதிரியே செய்திருக்கிறேன். தயவுசெய்து எழுந்து உட்காருங்கள்,

அதி. 27
a ஆதி 25:28
b ஆதி 25:27
c ஆதி 27:30
d ஆதி 25:28
e ஆதி 27:30, 31
f ஆதி 27:13, 43
g ஆதி 25:25; ஆதி 27:23
h ஆதி 27:21
i ஆதி 27:8, 43
j ஆதி 25:23, 26
k ஆதி 25:25; ஆதி 27:11
l ஆதி 27:9
m ஆதி 25:31-33; ரோ 9:10-12

நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைக் கொஞ்சம் சாப்பிடுங்கள். பின்பு
என்னை ஆசீர்வதியுங்கள்”[a] என்றான். **20** அதற்கு ஈசாக்கு, “மகனே, எப்
படி இவ்வளவு சீக்கிரம் வேட்டையாடிவிட்டு வந்தாய்?” என்று கேட்டார்.
அப்போது யாக்கோபு, “நம்முடைய கடவுள் யெகோவாதான் எனக்கு உதவி
செய்தார்” என்றான். **21** பின்பு ஈசாக்கு யாக்கோபிடம், “தயவுசெய்து என்
பக்கத்தில் வா மகனே, நிஜமாகவே நீ ஏசாதானா என்று உன்னைத் தட
விப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும்”[b] என்றார். **22** அதனால், யாக்
கோபு தன்னுடைய அப்பா ஈசாக்கின் பக்கத்தில் போனான். அவர் யாக்கோ
பைத் தடவிப் பார்த்து, “குரல் யாக்கோபின் குரலைப் போல இருக்கிறது,
ஆனால் கைகள் ஏசாவின் கைகளைப் போலத்தான் இருக்கிறது”[c] என்றார்.
23 யாக்கோபின் கைகள் அவனுடைய அண்ணன் ஏசாவின் கைகளைப்
போல நிறைய முடியுடன் இருந்ததால், ஈசாக்கினால் அவனைக் கண்டு
பிடிக்க முடியவில்லை. அதனால், அவனை ஆசீர்வதித்தார்.[d]

24 அதன்பின் ஈசாக்கு, “நீ நிஜமாகவே என் மகன் ஏசாதானா?” என்று
கேட்டார். அதற்கு அவன், “நான் ஏசாதான்” என்றான். **25** அப்போது
ஈசாக்கு, “மகனே, நீ வேட்டையாடிக் கொண்டுவந்ததை எனக்குக் கொஞ்சம்
தா, நான் அதைச் சாப்பிட்டுவிட்டு உன்னை ஆசீர்வதிக்கிறேன்” என்றார்.
யாக்கோபு அதைக் கொண்டுவந்து கொடுத்தான். ஈசாக்கு அதைச் சாப்பிட்
டார். பின்பு, அவன் திராட்சமதுவைக் கொண்டுவந்து கொடுத்தான், அவர்
அதைக் குடித்தார். **26** அதன்பின் ஈசாக்கு அவனிடம், “தயவுசெய்து என்
பக்கத்தில் வா மகனே, எனக்கு ஒரு முத்தம் கொடு”[e] என்றார். **27** அதன்
படியே, யாக்கோபு அவர் பக்கத்தில் போய் முத்தம் கொடுத்தான். யாக்
கோபு போட்டிருந்த அங்கிகளிலிருந்து வாசனை வந்தது.[f] அப்போது
அவர் அவனை ஆசீர்வதித்து,

“இதோ, என் மகனுடைய வாசனை யெகோவா ஆசீர்வதித்த காட்டுவெ
ளியின் வாசனையைப் போல இருக்கிறது. **28** உண்மைக் கடவுள் உனக்கு
வானத்தின் பனித்துளிகளையும்[g] செழிப்பான நிலங்களையும்[h] ஏராளமான
தானியங்களையும் புதிய திராட்சமதுவையும்[i] கொடுக்கட்டும். **29** எல்லா
ஜனங்களும் உனக்குச் சேவை செய்யட்டும், எல்லா தேசத்தாரும் உனக்குத்
தலைவணங்கட்டும். உன்னுடைய சகோதரர்களுக்கு நீ எஜமானாக இருப்
பாய், அவர்கள் உனக்குத் தலைவணங்கட்டும்.[j] உன்னைச் சபிக்கிறவர்கள்
சபிக்கப்படட்டும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்படட்டும்”[k]
என்றார்.

30 இப்படி, ஈசாக்கு ஆசீர்வதித்து முடித்த பின்பு யாக்கோபு அங்கி
ருந்து போனான். அவன் போன உடனேயே அவனுடைய அண்ணன்
ஏசா வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்தான்.[l] **31** அவனும் இறைச்சியை
ருசியாகச் சமைத்துத் தன்னுடைய அப்பாவிடம் கொண்டுவந்தான். அவன்
அவரிடம், “அப்பா, எழுந்திருங்கள். உங்களுடைய மகன் வேட்டையாடிக்
கொண்டுவந்ததைச் சாப்பிட்டுவிட்டு ஆசீர்வாதம் பண்ணுங்கள்” என்றான்.
32 அதற்கு அவனுடைய அப்பா ஈசாக்கு, “நீ யார்?” என்று கேட்டார். அப்
போது அவன், “நான்தான் உங்களுடைய மகன், உங்களுடைய மூத்த மகன்
ஏசா”[m] என்றான். **33** உடனே ஈசாக்கு அதிர்ச்சியில் நடுநடுங்கிப்போய்,
“அப்படியானால், இதற்குமுன் வேட்டையாடிக் கொண்டுவந்தது யார்? நீ
வருவதற்கு முன்பே நான் அதைச் சாப்பிட்டுவிட்டு அவனை ஆசீர்வதித்து
விட்டேனே! அவனுக்குத்தான் ஆசீர்வாதம் போய்ச் சேரும்!” என்றார்.

அதி. 27
a ஆதி 27:4
b ஆதி 27: 11, 12
c ஆதி 27:16
d எபி 11:20
e ஆதி 48:10
f ஆதி 25:27; ஆதி 27:15
g உபா 11:11
h எண் 13: 26, 27
i ஆதி 27:37; உபா 7:13
j ஆதி 25:23
k ஆதி 12:1, 3; ஆதி 28:1, 3; ஆதி 31:42; எசே 25: 12, 13
l ஆதி 27:3
m ஆதி 25: 25, 31; எபி 12:16

34 அவர் சொன்னதைக் கேட்டதும் ஏசா, “என்னையும் ஆசீர்வதி
யுங்கள் அப்பா, என்னையும் ஆசீர்வதியுங்கள்!” என்று சொல்லி பயங்கர
மாகக் கதறி அழுதான்.[a] **35** ஆனால் அவனுடைய அப்பா, “உன் தம்பி
என்னை ஏமாற்றி, உனக்குக் கிடைக்க வேண்டிய ஆசீர்வாதத்தை வாங்கிக்
கொண்டான்” என்றார். **36** அதற்கு ஏசா, “யாக்கோபு* என்ற பெயர் அவ
னுக்குப் பொருத்தமாகத்தான் இருக்கிறது. எனக்குச் சொந்தமானதை இரண்டு
தடவை அவன் பிடுங்கிக்கொண்டான்.[b] முன்பு மூத்த மகனின் உரிமை
யைப் பிடுங்கினான்,[c] இப்போது எனக்குக் கிடைக்க வேண்டிய ஆசீர்வாதத்
தையும் பிடுங்கிக்கொண்டான்!”[d] என்றான். அதன்பின், “எனக்கென்று ஒரு
ஆசீர்வாதத்தைக்கூட நீங்கள் விட்டுவைக்கவில்லையா?” என்று கேட்டான்.
37 அதற்கு ஈசாக்கு, “நான் அவனை உனக்கு எஜமானாக நியமித்துவிட்
டேன்.[e] அவனுடைய சகோதரர்கள் எல்லாரையும் அவனுக்கு வேலையாட்
களாகக் கொடுத்துவிட்டேன். தானியங்களையும் புதிய திராட்சமதுவையும்
அவனுக்குத் தந்துவிட்டேன்.[f] அப்படியிருக்கும்போது, என் மகனே, நான்
உனக்கு வேறென்ன கொடுக்க முடியும்?” என்று கேட்டார்.

38 அதற்கு ஏசா, “அப்பா, இனி உங்களிடம் ஒரு ஆசீர்வாதம்கூட இல்
லையா? அப்பா, என்னை ஆசீர்வதியுங்கள், என்னையும் ஆசீர்வதியுங்
கள்!” என்று சொல்லி, கண்ணீர்விட்டுக் கதறி அழுதான்.[g] **39** அப்போது
அவனுடைய அப்பா ஈசாக்கு,

“செழிப்பான நிலத்தில் நீ வாழ மாட்டாய், வானத்தின் பனித்துளியை நீ
அனுபவிக்க மாட்டாய்.[h] **40** உன்னுடைய வாளோடுதான் நீ வாழ்வாய்,[i]
உன்னுடைய சகோதரனுக்குச் சேவை செய்வாய்.[j] உன்னால் பொறுக்க முடி
யாமல் போகும்போதோ, உன்னுடைய கழுத்தில் அவன் சுமத்திய நுகத்த
டியை உடைத்துப்போடுவாய்”*[k] என்றார்.

41 யாக்கோபு தன்னுடைய அப்பாவிடமிருந்து ஆசீர்வாதத்தை
வாங்கிக்கொண்டதால் அவன்மேல் ஏசா வெறுப்பை வளர்த்துக்கொண்
டான்.[l] “இன்னும் கொஞ்சக் காலத்தில் அப்பா செத்துப்போய்விடுவார்.[m]
அதன்பின் என் தம்பி யாக்கோபைத் தீர்த்துக்கட்டிவிடுவேன்” என்று உள்
ளத்தில் சொல்லிக்கொண்டே இருந்தான். **42** பெரிய மகன் ஏசாவின் திட்
டத்தைப் பற்றி ரெபெக்காள் கேள்விப்பட்டபோது, அவள் உடனே தன்னு
டைய சின்ன மகன் யாக்கோபை வரவழைத்து, “உன்னுடைய அண்ணன்
ஏசா உன்னைப் பழிவாங்கப்போகிறான். உன்னைக் கொலை செய்யத் திட்
டம் போட்டிருக்கிறான்.* **43** அதனால் என் மகனே, நான் சொல்கிறபடி
செய். உடனே கிளம்பி ஆரானிலுள்ள என் அண்ணன் லாபானிடம்
ஓடிப்போ.[n] **44** உன்னுடைய அண்ணனின் ஆத்திரம் அடங்கும்வரை
நீ கொஞ்சக் காலம் அங்கேயே தங்கியிரு. **45** நீ அவனுக்குச் செய்ததை
அவன் மறந்து அவனுடைய கோபம் தீர்ந்தவுடன் நான் உனக்குச் சொல்லி
அனுப்புகிறேன், அப்போது நீ வரலாம். ஒரே நாளில் உங்கள் இரண்டு
பேரையும் நான் ஏன் இழக்க வேண்டும்?” என்றாள்.

46 பின்பு ரெபெக்காள் ஈசாக்கிடம், “இந்த ஏத்தியப் பெண்களால்

27:36 *அர்த்தம், “குதிங்காலைப் பிடித்துக்கொண்டவன்; இன்னொருவனின் இடத்தை எடுத்துக்கொண்டவன்.” **27:40** *அதாவது, “உன்னுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவாய்.” **27:42** *வே.வா., “உன்னைக் கொல்லப்போவதை நினைத்து மனதைத் தேற்றிக்கொள்கிறான்.”

ஆதி. 27
a எபி 12:16, 17
b ஆதி 25:26; ஆதி 32:28; ஓசி 12:3
c ஆதி 25:32-34
d ஆதி 27:28
e ஆதி 25:23; ஆதி 27:29; ரோ 9:10, 12
f உபா 33:28
g எபி 12:16, 17
h யோசு 24:4; எபி 11:20
i ஆதி 32:6; எண் 20:18
j ஆதி 25:23; 2சா 8:14; மல் 1:2, 3
k 2ரா 8:20; 2நா 28:17
l ஆமோ 1:11
m ஆதி 35:28, 29
n ஆதி 28:5

எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது.[a] யாக்கோபும் ஒரு ஏத்தியப்
பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டால் நான் செத்துப்போவதே
மேல்”[b] என்று புலம்பிக்கொண்டே இருந்தாள்.

28 அதனால், ஈசாக்கு யாக்கோபைக் கூப்பிட்டு, “நீ கானானியப் பெண்
ணைக் கல்யாணம் செய்யக் கூடாது.[c] **2** பதான்-அராமில் இருக்
கிற உன் தாத்தா* பெத்துவேலின் வீட்டுக்குப் புறப்பட்டுப் போ. அங்கே
உன்னுடைய தாய்மாமன் லாபானின் மகள்களில்[d] ஒருத்தியைக் கல்யா
ணம் செய்துகொள்” என்று சொன்னார். **3** அதோடு, “சர்வவல்லமையுள்ள
கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார். உன்னை ஏராளமாகப் பெருக வைப்பார்.
உன் சந்ததி ஒரு பெரிய ஜனக்கூட்டமாக ஆகும்.[e] **4** ஆபிரகாமுக்குக்
கொடுத்த ஆசீர்வாதத்தை[f] அவர் உனக்கும் உன் சந்ததிக்கும் கொடுப்பார்.
நீ அன்னியனாகக் குடியிருக்கிற இந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்
வாய். ஆபிரகாமுக்கு அவர் கொடுத்த இந்தத் தேசம்[g] உனக்குச் சொந்தமா
கும்” என்று சொல்லி ஆசீர்வதித்தார்.

5 பின்பு ஈசாக்கு யாக்கோபை அனுப்பி வைத்தார். அவர் பதான்-அரா
மில் இருந்த அரமேயனான பெத்துவேலின் மகன் லாபானுடைய வீட்
டுக்குப் புறப்பட்டுப் போனார்.[h] யாக்கோபையும் ஏசாவையும் பெற்றெடுத்த
ரெபெக்காளின் சொந்த அண்ணன்தான் லாபான்.[i]

6 ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்ததையும், கானானியப் பெண்ணைக்
கல்யாணம் செய்யக் கூடாதென்று[j] அவரிடம் சொல்லி பதான்-அராமுக்குப்
போய் பெண் பார்க்கச் சொன்னதையும் ஏசா கேள்விப்பட்டான். **7** யாக்
கோபு தன்னுடைய அம்மா அப்பாவின் பேச்சைக் கேட்டு பதான்-அராமுக்
குப் போனதையும் கேள்விப்பட்டான்.[k] **8** தன்னுடைய அப்பா ஈசாக்குக்கு
கானானியப் பெண்களைப் பிடிக்கவில்லை[l] என்பது அவனுக்குப் புரிந்
தது. **9** அதனால், ஏற்கெனவே மனைவிகள் இருந்தும்[m] அவன் ஆபிரகா
மின் மகன் இஸ்மவேலிடம்* போய், அவருடைய மகளும் நெபாயோத்தின்
சகோதரியுமான மகலாத்தைக் கல்யாணம் செய்துகொண்டான்.

10 யாக்கோபு பெயெர்-செபாவிலிருந்து புறப்பட்டு ஆரானுக்குப்[n]
போய்க்கொண்டிருந்தார். **11** பின்பு, ஒரு இடத்தில் தங்க முடிவுசெய்தார்.
ஏனென்றால், சூரியன் மறைந்து இருட்டாகியிருந்தது. அவர் அங்கிருந்த
ஒரு கல்லை எடுத்துத் தலைக்கு வைத்துக்கொண்டு படுத்துத் தூங்கினார்.[o]
12 அப்போது, அவருக்கு ஒரு கனவு வந்தது. அந்தக் கனவில், பரலோகத்
தைத் தொடும் அளவுக்கு உயரமான ஒரு படிக்கட்டு* பூமியில் இருந்தது.
அதில் தேவதூதர்கள் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருந்தார்கள்.[p]
13 அதன் உச்சியில் யெகோவா இருந்தார். அவர் யாக்கோபிடம்,

“உன்னுடைய தாத்தா ஆபிரகாமின் கடவுளும் உன்னுடைய அப்பா
ஈசாக்கின் கடவுளுமான யெகோவா நான்தான்.[q] நீ படுத்திருக்கிற இந்த
இடத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் கொடுப்பேன்.[r] **14** உன்னுடைய சந்
ததி நிச்சயம் பூமியின் மணலைப் போலப் பெருகும்.[s] உன்னுடைய வம்சம்
மேற்கிலும் கிழக்கிலும் வடக்கிலும் தெற்கிலும் பரவும். உன் மூலமாகவும்
உன் சந்ததி மூலமாகவும் பூமியிலுள்ள எல்லா குடும்பங்களும் நிச்சயமாக

28:2 *நே.மொ., “அம்மாவின் அப்பா.” **28:9** *அதாவது, “இஸ்மவேலர்களிடம்.” இதற்குள் இஸ்மவேல் இறந்துவிட்டார்; ஏசாவுக்கு சுமார் 77 வயது. **28:12** *வே.வா., “ஏணி.”

அதி. 27
a ஆதி 26:34, 35; ஆதி 28:8
b ஆதி 24:2, 3

அதி. 28
c ஆதி 24:34, 37; யாத் 34:15, 16; 1ரா 11:1-3; 2கொ 6:14
d ஆதி 29:16
e ஆதி 17:5; ஆதி 46:15, 19; 1நா 2:1, 2
f ஆதி 12:2, 3
g ஆதி 12:7; ஆதி 15:13; ஆதி 17:1, 8; எபி 11:9
h ஆதி 25:20
i ஆதி 24:29
j ஆதி 28:1; 2கொ 6:14
k ஆதி 27:43
l ஆதி 27:46
m ஆதி 36:2, 3
n ஆதி 11:31; ஆதி 27:43
o ஆதி 28:18, 19
p யோவா 1:51; எபி 1:7, 14
q ஆதி 26:24, 25
r ஆதி 12:7; ஆதி 28:4; சங் 105:9-11
s ஆதி 13:14, 16; 1ரா 4:20

ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்.[a] **15** நான் உன்னோடு இருப்பேன்,
நீ போகும் இடமெல்லாம் உன்னைப் பாதுகாப்பேன். உன்னை இந்தத்
தேசத்துக்குத் திரும்பி வரப் பண்ணுவேன்.[b] நான் உனக்குக் கொடுத்த வாக்
குறுதியை நிறைவேற்றுவேன், உன்னைக் கைவிடவே மாட்டேன்"[c] என்று
சொன்னார்.

16 யாக்கோபு தூக்கத்திலிருந்து எழுந்து, "நிஜமாகவே யெகோவா இந்த
இடத்தில் இருக்கிறார் என்பதை நான் தெரிந்துகொண்டேன்" என்றார்.
17 பின்பு பயபக்தியோடு, "இந்த இடம் எவ்வளவு பரிசுத்தமானது! இது
கடவுளுடைய வீடாகத்தான் இருக்க வேண்டும்,[d] பரலோகத்தின் வாசலா
கத்தான் இருக்க வேண்டும்"[e] என்றார். **18** யாக்கோபு விடியற்காலையில்
எழுந்து, தான் தலைவைத்துப் படுத்திருந்த கல்லை எடுத்து நினைவுக்கல்
லாக நாட்டி அதன்மேல் எண்ணெய் ஊற்றினார்.[f] **19** அந்த இடத்துக்கு
பெத்தேல்* என்று பெயர் வைத்தார். முன்பு அந்த நகரம் லஸ்[g] என்று
அழைக்கப்பட்டது.

20 அங்கே யாக்கோபு, "யெகோவா தொடர்ந்து என்னோடு இருந்து, பய
ணத்தில் என்னைப் பாதுகாத்து, உணவும் உடையும் தந்து, **21** என் அப்பா
வின் வீட்டுக்கு என்னைப் பத்திரமாகத் திரும்பிவர வைத்தால், அவர்
உண்மையிலேயே என்னுடைய கடவுள் என்பதை நிரூபிப்பார். **22** நான்
நாட்டிய இந்த நினைவுக்கல் கடவுளுடைய வீடாக இருக்கும்.[h] என்னிடம்
இருக்கிற எல்லாவற்றிலும் பத்திலொரு பாகத்தை நிச்சயமாகவே கடவுளுக்
குக் கொடுப்பேன்" என்று நேர்ந்துகொண்டார்.

29 அதன்பின், யாக்கோபு அங்கிருந்து புறப்பட்டு, கிழக்கத்திய தேசத்
துக்குப் போனார். **2** அங்கே வயல்வெளியில் ஒரு கிணற்றைப்
பார்த்தார். அதன் பக்கத்தில் மூன்று ஆட்டு மந்தைகள் படுத்துக் கிடந்தன.
வழக்கமாக, அந்தக் கிணற்றிலிருந்துதான் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டு
வார்கள். அந்தக் கிணறு ஒரு பெரிய கல்லால் மூடப்பட்டிருந்தது. **3** மந்
தைகளெல்லாம் அங்கு வந்துசேர்ந்ததும், மேய்ப்பர்கள் அந்தக் கல்லை
உருட்டிவிட்டு, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவார்கள். பின்பு, மறுபடியும்
அந்தக் கல்லால் கிணற்றை மூடிவிடுவார்கள்.

4 யாக்கோபு அந்த மேய்ப்பர்களிடம், "சகோதரர்களே, நீங்கள் எங்கி
ருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "நாங்கள் ஆரானி
லிருந்து[i] வருகிறோம்" என்றார்கள். **5** அவர்களிடம் அவர், "நாகோரின்[j]
பேரன் லாபானை[k] உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். அவர்
கள், "தெரியும்" என்றார்கள். **6** அதற்கு யாக்கோபு, "அவர் எப்படி இருக்
கிறார்?" என்று கேட்டார். "நன்றாக இருக்கிறார். இதோ! அவருடைய மகள்
ராகேல்[l] ஆடுகளை ஓட்டிக்கொண்டு வருகிறாள்" என்றார்கள். **7** பின்பு
அவர், "மத்தியானம்தான் ஆகிறது. ஆடுகளைப் பட்டியில் அடைக்க இன்
னும் நிறைய நேரம் இருக்கிறது. அதனால், இந்த ஆடுகளுக்குத் தண்ணீர்
காட்டிவிட்டு மேயவிடலாம், இல்லையா?" என்றார். **8** அதற்கு அவர்கள்,
"முதலில் எல்லா மந்தைகளும் வந்துசேர வேண்டும். அப்புறம்தான் கிணற்
றின் மேலிருக்கிற கல்லை உருட்டி, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவோம்"
என்று சொன்னார்கள்.

28:19 * அர்த்தம், "கடவுளுடைய வீடு."

ஆதி. 28
a ஆதி 18:18; ஆதி 22:15, 18
b ஆதி 35:6
c ஆதி 31:3; எண் 23:19; யோசு 23:14; எபி 6:18
d சங் 47:2
e ஆதி 35:1
f ஆதி 31:13
g ஆதி 35:6; யோசு 16:1, 2
h ஆதி 35:1

ஆதி. 29
i ஆதி 27:42, 43; அப் 7:2
j ஆதி 24:24; ஆதி 31:53
k ஆதி 24:29
l ஆதி 46:19; ரூ 4:11

9 இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, ஆடு மேய்ப்பவளான
ராகேல் தன் அப்பாவின் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தாள். **10** யாக்
கோபு தன்னுடைய தாய்மாமன் லாபானின் மகளான ராகேல் ஆடுகளு
டன் வருவதை பார்த்ததும், கிணற்றின் மேலிருந்த கல்லை உருட்டி, லாபா
னின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினார். **11** பின்பு, ராகேலுக்கு முத்தம்
கொடுத்துவிட்டு, ஓவென்று அழுதார். **12** அதன்பின், தான் அவளுடைய
அத்தை ரெபெக்காளின் மகன் என்று சொன்னார். உடனே அவள் ஓடிப்
போய்த் தன்னுடைய அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னாள்.

13 லாபான்[a] தன்னுடைய தங்கையின் மகன் யாக்கோபைப் பற்றிக்
கேட்டவுடன், அவரைப் பார்க்க ஓடினார். பின்பு, யாக்கோபைக் கட்டிப்
பிடித்து முத்தம் கொடுத்து வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்தார். நடந்த எல்
லாவற்றையும் லாபானிடம் யாக்கோபு சொன்னார். **14** அப்போது
லாபான், "நீ எனக்கு இரத்த சொந்தம்"* என்றார். யாக்கோபு அவருடன் ஒரு
மாதம் முழுவதும் தங்கியிருந்தார்.

15 பின்பு லாபான் யாக்கோபிடம், "நீ என் சொந்தக்காரன்[b] என்பதற்காக
எனக்குச் சும்மா வேலை செய்ய வேண்டியதில்லை. சொல், உனக்கு என்ன
சம்பளம்[c] வேண்டும்?" என்று கேட்டார். **16** லாபானுக்கு இரண்டு மகள்
கள் இருந்தார்கள். பெரியவள் பெயர் லேயாள், சின்னவள் பெயர் ராகேல்.[d]
17 லேயாளுடைய கண்கள் வசீகரமாக இல்லை. ஆனால், ராகேல் ரொம்ப
அழகாகவும் லட்சணமாகவும் இருந்தாள். **18** யாக்கோபு ராகேலைக் காத
லித்தார். அதனால் அவர் லாபானிடம், "உங்களுடைய இரண்டாவது பெண்
ராகேலுக்காக உங்களிடம் ஏழு வருஷம் வேலை செய்கிறேன்,[e] அவளை
எனக்குக் கொடுப்பீர்களா?" என்று கேட்டார். **19** அதற்கு லாபான்,
"யாரோ ஒருவனுக்கு அவளைக் கொடுப்பதைவிட உனக்குக் கொடுப்பது
நல்லதுதான். சரி, என்னுடனேயே தங்கியிரு" என்று சொன்னார். **20** யாக்
கோபு ராகேலுக்காக ஏழு வருஷங்கள் வேலை செய்தார்.[f] ஆனாலும்,
அவள்மேல் இருந்த காதலால் அந்த ஏழு வருஷங்கள் சில நாட்கள் போல
உருண்டோடிவிட்டன.

21 பின்பு யாக்கோபு லாபானிடம், "ஏழு வருஷங்கள் முடிந்துவிட்
டன, என் மனைவியை எனக்குக் கொடுங்கள். நான் அவளோடு குடும்பம்
நடத்த* வேண்டும்" என்றார். **22** அதனால், லாபான் அந்த ஊர் ஜனங்க
ளைக் கூப்பிட்டு கல்யாண விருந்து வைத்தார். **23** ஆனால், சாயங்காலத்
தில் ராகேலுக்குப் பதிலாக லேயாளைக் கூட்டிக்கொண்டு போய் யாக்கோ
பிடம் விட்டார். யாக்கோபு அவளோடு உறவுகொண்டார். **24** லாபான்
தன்னுடைய வேலைக்காரி சில்பாளைத் தன் மகள் லேயாளுக்கு வேலைக்
காரியாகக் கொடுத்தார்.[g] **25** காலையில் யாக்கோபு எழுந்து பார்த்த
போது அவருடன் லேயாள் படுத்திருந்தாள்! அதனால் அவர் லாபானிடம்
போய், "ஏன் இப்படிச் செய்தீர்கள்? நான் ராகேலுக்காகத்தானே உங்களி
டம் வேலை செய்தேன்? ஏன் என்னை ஏமாற்றினீர்கள்?"[h] என்று கேட்டார்.
26 அதற்கு லாபான், "பெரியவள் இருக்கும்போது சின்னவளைக் கொடுப்
பது எங்கள் ஊர் வழக்கம் இல்லை. **27** இந்த வாரம் முழுக்க இவளோடு
இரு. அதற்கு அப்புறம் அவளையும் உனக்குக் கொடுக்கிறேன். ஆனால்,
இன்னும் ஏழு வருஷங்கள் நீ எனக்கு வேலை செய்ய வேண்டும்"[i] என்றார்.

29:14 *நே.மொ., "எலும்பும் சதையுமானவன்." **29:21** *நே.மொ., "உறவுகொள்ள."

அதி. 29
a ஆதி 24:29
b ஆதி 28:5
c ஆதி 30:27, 28; ஆதி 31:7
d ரூ 4:11
e ஆதி 31:41
f ஆதி 30:26; ஓசி 12:12
g ஆதி 16:1, 2; ஆதி 30:9; ஆதி 46:18
h ஆதி 31:7, 42
i ஆதி 31:41

28 யாக்கோபு அந்த வாரம் அவளோடு இருந்தார். பின்பு லாபான், தன்
னுடைய மகள் ராகேலையும் அவருக்கு மனைவியாகக் கொடுத்தார்.
29 லாபான் தன்னுடைய வேலைக்காரி பில்காளைத்[a] தன் மகள் ராகே
லுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தார்.[b]

30 அதன்பின், யாக்கோபு ராகேலுடனும் உறவுகொண்டார். அவர்
லேயாளைவிட ராகேலை அதிகமாக நேசித்து, லாபானிடம் இன்னும்
ஏழு வருஷங்கள் வேலை செய்தார்.[c] **31** லேயாளுக்கு அன்பு கிடைக்கா
ததை யெகோவா பார்த்தபோது அவளுக்குக் குழந்தை பாக்கியம் தந்
தார்.[d] ஆனால் ராகேலுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை.[e]
32 லேயாள் கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். "யெகோவா என்
னுடைய கஷ்டத்தைப் பார்த்திருக்கிறார்,[f] இப்போது என் கணவர் என்னை
நேசிப்பார்" என்று சொல்லி அவனுக்கு ரூபன்*[g] என்று பெயர் வைத்தாள்.
33 அவள் மறுபடியும் கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். "அன்பு
கிடைக்காத இந்தப் பெண்ணின் புலம்பலைக் கேட்டு யெகோவா இவனை
யும் தந்திருக்கிறார்" என்று சொல்லி அவனுக்கு சிமியோன்*[h] என்று பெயர்
வைத்தாள். **34** அவள் திரும்பவும் கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றெடுத்
தாள். "என் கணவருக்கு நான் மூன்று மகன்களைப் பெற்றுக் கொடுத்திருக்கி
றேன், இனிமேல் அவர் என்னிடம் நெருக்கமாக இருப்பார்" என்று சொல்லி
அவனுக்கு லேவி*[i] என்று பெயர் வைத்தாள். **35** அவள் இன்னொரு தட
வையும் கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். "இந்தத் தடவை நான்
யெகோவாவைப் புகழ்வேன்" என்று சொல்லி அவனுக்கு யூதா*[j] என்று
பெயர் வைத்தாள். அதன்பின், கொஞ்சக் காலம் அவளுக்குக் குழந்தை
பிறக்கவில்லை.

30 ராகேலுக்குக் குழந்தை இல்லாததால் அவள் தன்னுடைய அக்கா
வைப் பார்த்துப் பொறாமைப்பட்டாள். பின்பு யாக்கோபிடம், "எனக்
குக் குழந்தை வேண்டும், இல்லாவிட்டால் நான் செத்துப்போவேன்" என்று
புலம்பினாள். **2** அதனால், யாக்கோபுக்கு ராகேல்மேல் கோபம் பற்றிக்
கொண்டு வந்தது. "நான் என்ன கடவுளா? அவர்தானே உனக்குக் குழந்தை
பாக்கியம் தராமல் இருக்கிறார்" என்று சொன்னார். **3** அதற்கு அவள்,
"என் அடிமைப் பெண் பில்காளை[k] உங்களுக்குக் கொடுக்கிறேன். அவள்
மூலமாக எனக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கட்டும்" என்று சொல்லி,
4 தன் வேலைக்காரி பில்காளை அவருக்கு மனைவியாகக் கொடுத்தாள்.
யாக்கோபு அவளோடு உறவுகொண்டார்.[l] **5** பில்காள் கர்ப்பமாகி யாக்
கோபுக்கு ஒரு மகனைப் பெற்றுக் கொடுத்தாள். **6** அப்போது ராகேல்,
"கடவுள் என்னுடைய நீதிபதியாக இருந்து, என் அழுகையைக் கேட்டு,
ஒரு மகனைத் தந்திருக்கிறார்" என்று சொல்லி அவனுக்கு தாண்*[m] என்று
பெயர் வைத்தாள். **7** ராகேலின் வேலைக்காரி பில்காள் மறுபடியும் கர்ப்
பமாகி யாக்கோபுக்கு இரண்டாவது மகனைப் பெற்றுக் கொடுத்தாள்.
8 அப்போது ராகேல், "என் அக்காவோடு கஷ்டப்பட்டுப் போராடி, வெற்றி
யும் பெற்றிருக்கிறேன்!" என்று சொல்லி அவனுக்கு நப்தலி*[n] என்று பெயர்
வைத்தாள்.

29:32 * அர்த்தம், "இதோ, ஒரு மகன்!" **29:33** * அர்த்தம், "கேட்பது." **29:34** * அர்த்தம், "இணைந்திருப்பது; நெருங்கியிருப்பது." **29:35** * அர்த்தம், "புகழப்படுவது." **30:6** * அர்த்தம், "நீதிபதி." **30:8** * அர்த்தம், "என் போராட்டம்."

அதி. 29
a ஆதி 35:22
b ஆதி 30:1, 3
c ஓசி 12:12
d ஆதி 46:15; ரூ 4:11
e ஆதி 30:22
f ஆதி 30:20; 1சா 1:5, 6; லூ 1:24, 25
g ஆதி 35:22; ஆதி 37:22; ஆதி 49:3, 4; யாத் 6:14; 1நா 5:1
h ஆதி 34:25; ஆதி 49:5; 1நா 4:24
i ஆதி 34:25; ஆதி 49:5; யாத் 6:16; எண் 3:12; 1நா 6:1
j ஆதி 35:23; ஆதி 37:26; ஆதி 44:18; ஆதி 49:8; 1நா 2:3; வெளி 5:5

அதி. 30
k ஆதி 29:29
l ஆதி 35:22
m ஆதி 35:25; ஆதி 46:23; ஆதி 49:16
n ஆதி 35:25; ஆதி 46:24; ஆதி 49:21; உபா 33:23

9 லேயாளுக்குக் கொஞ்சக் காலமாகக் குழந்தை பிறக்காததால் தன்
வேலைக்காரி சில்பாளை யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தாள்.[a]
10 லேயாளின் வேலைக்காரி சில்பாள் யாக்கோபுக்கு ஒரு மகனைப்
பெற்றுக் கொடுத்தாள். **11** அப்போது லேயாள், “எப்பேர்ப்பட்ட பாக்கியம்
கிடைத்திருக்கிறது!” என்று சொல்லி அவனுக்கு காத்*[b] என்று பெயர் வைத்
தாள். **12** பின்பு, லேயாளின் வேலைக்காரி சில்பாள் யாக்கோபுக்கு இரண்
டாவது மகனைப் பெற்றுக் கொடுத்தாள். **13** அப்போது லேயாள்,
“எனக்கு ரொம்பச் சந்தோஷமாக இருக்கிறது! பெண்கள் கண்டிப்பாக என்
னைச் சந்தோஷமானவள் என்று புகழ்வார்கள்”[c] என்று சொல்லி அவனுக்கு
ஆசேர்*[d] என்று பெயர் வைத்தாள்.

14 கோதுமை அறுவடை நடந்த காலத்தில், ரூபன்[e] ஒருநாள் காட்டுவெ
ளியில் நடந்து போய்க்கொண்டிருந்தான். அங்கே சில பழங்களை* பார்த்து,
அதைக் கொண்டுவந்து தன்னுடைய அம்மா லேயாளிடம் கொடுத்தான். அப்
போது ராகேல், “உன் மகன் கொண்டுவந்த பழங்களைத் தயவுசெய்து எனக்
கும் கொஞ்சம் தா” என்று லேயாளிடம் கேட்டாள். **15** அதற்கு லேயாள்,
“நீ என் கணவனை எடுத்துக்கொண்டது போதாதா?[f] இப்போது என் மகன்
கொண்டுவந்த பழங்களையும் கேட்கிறாயா?” என்றாள். அப்போது ராகேல்,
“சரி சரி, உன் மகன் கொண்டுவந்த பழங்களுக்குப் பதிலாக இன்று ராத்திரி
அவர் உன்னோடு படுத்துக்கொள்ளட்டும்” என்று சொன்னாள்.

16 சாயங்காலத்தில் யாக்கோபு வயல்வெளியிலிருந்து திரும்பி வந்
துகொண்டிருந்தபோது லேயாள் அவரிடம் போய், “இன்றைக்கு ராத்திரி
நீங்கள் என்னோடுதான் படுத்துக்கொள்ள வேண்டும். அதற்குக் கூலி
யாக, என் மகன் கொண்டுவந்த பழங்களைக் கொடுத்துவிட்டேன்” என்று
சொன்னாள். அதனால் அவர் அன்றைக்கு ராத்திரி அவளோடு படுத்
தார். **17** லேயாளுடைய ஜெபத்துக்குக் கடவுள் பதில் தந்தார். அவள் கர்ப்
பமாகி யாக்கோபுக்கு ஐந்தாவது மகனைப் பெற்றுக் கொடுத்தாள். **18** அப்
போது லேயாள், “என்னுடைய வேலைக்காரியை என் கணவருக்குக்
கொடுத்ததால் கடவுள் எனக்கு நல்ல கூலியைக் கொடுத்திருக்கிறார்” என்று
சொல்லி அவனுக்கு இசக்கார்*[g] என்று பெயர் வைத்தாள். **19** லேயாள்
மறுபடியும் கர்ப்பமாகி யாக்கோபுக்கு ஆறாவது மகனைப் பெற்றுக் கொடுத்
தாள்.[h] **20** அப்போது லேயாள், “கடவுள் எனக்கு அருமையான பரிசைக்
கொடுத்திருக்கிறார். என் கணவர் இனி என்னை ஏற்றுக்கொள்வார்.[i] அவ
ருக்கு நான் ஆறு மகன்களைப் பெற்றுத் தந்திருக்கிறேன்”[j] என்று சொல்லி
அந்த மகனுக்கு செபுலோன்*[k] என்று பெயர் வைத்தாள். **21** பிற்பாடு ஒரு
மகளைப் பெற்றெடுத்து, அவளுக்கு தீனாள்[l] என்று பெயர் வைத்தாள்.

22 கடைசியில், ராகேலுக்குக் கடவுள் கருணை காட்டினார்.* அவ
ளுடைய ஜெபத்தைக் கேட்டு, அவளுக்குக் குழந்தை பாக்கியம் தந்
தார்.#[m] **23** அவள் ஒரு மகனைப் பெற்றெடுத்தபோது, “கடவுள் என் அவ
மானத்தை நீக்கிவிட்டார்!”[n] என்று சொன்னாள். **24** பின்பு, “யெகோவா

30:11 *அர்த்தம், “பாக்கியம்.” **30:13** *அர்த்தம், “சந்தோஷம்; சந்தோஷமாக.” **30:14** *நே.மொ., “காட்டுச்சூட்டிப் பழங்களை.” இந்தப் பழங்கள் கருத்தரிக்க உதவிய தாக நம்பப்பட்டது. **30:18** *அர்த்தம், “இவன்தான் கூலி.” **30:20** *அர்த்தம், “ஏற்றுக்கொள்வது.” **30:22** *நே.மொ., “ராகேலைக் கடவுள் நினைத்துப் பார்த்தார்.” #நே.மொ., “அவளுடைய கருப்பையைத் திறந்தார்.”

அதி. 30
a ஆதி 35:26
b ஆதி 49:19, எண் 32:33
c லூ 1:46, 48
d ஆதி 35:26, ஆதி 46:17, ஆதி 49:20, உபா 33:24
e ஆதி 29:32
f ஆதி 29:30
g ஆதி 35:23, ஆதி 46:13, ஆதி 49:14, உபா 33:18
h ரூ 4:11
i ஆதி 29:32
j ஆதி 35:23, ஆதி 46:15, சங் 127:3
k ஆதி 46:14, ஆதி 49:13, உபா 33:18
l ஆதி 34:1
m ஆதி 29:31
n லூ 1:24, 25

அதி. 30
a ஆதி 35:24
ஆதி 45:4
உபா 33:13
அப் 7:9
b ஆதி 28:15
ஆதி 31:13
c ஆதி 31:41
ஓசி 12:12
d ஆதி 31:7
e ஆதி 31:38
f ஆதி 32:9, 10
g ஓசி 12:12
h ஆதி 31:7
i ஆதி 31:8

எனக்கு இன்னும் ஒரு மகனைச் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்" என்று
சொல்லி அவனுக்கு யோசேப்பு*[a] என்று பெயர் வைத்தாள்.

25 ராகேல் யோசேப்பைப் பெற்றெடுத்ததும் லாபானிடம் யாக்கோபு,
"நான் என்னுடைய தேசத்துக்கே திரும்பிப் போக வேண்டும்,[b] அனுமதி
கொடுங்கள். **26** என் மனைவிகளையும் பிள்ளைகளையும் என்னோடு
அனுப்பி வையுங்கள். அவர்களுக்காகத்தானே உங்களிடம் வேலை செய்
தேன்.[c] அதுவும் எவ்வளவு நேர்மையாக வேலை செய்தேன் என்று உங்க
ளுக்கே தெரியும்" என்றார். **27** அதற்கு லாபான், "தயவுசெய்து என்னுட
னேயே இரு. உன்னால்தான் யெகோவா என்னை ஆசீர்வதிக்கிறாரென்று
சகுனம்* பார்த்துத் தெரிந்துகொண்டேன்" என்றார். **28** "உனக்கு எவ்வ
ளவு சம்பளம் வேண்டுமோ கேள், தருகிறேன்"[d] என்றும் சொன்னார்.
29 அதற்கு யாக்கோபு, "நான் உங்களுக்கு எப்படியெல்லாம் வேலை
செய்தேன், உங்கள் மந்தைகளை எப்படியெல்லாம் பார்த்துக்கொண்டேன்
என்று உங்களுக்கே தெரியும்.[e] **30** நான் வருவதற்கு முன்பு உங்கள் மந்
தையில் கொஞ்சம் ஆடுகள்தான் இருந்தன. ஆனால், அதற்குப்பின் ஏராள
மாகப் பெருகிவிட்டன. நான் வந்த சமயத்திலிருந்து யெகோவா உங்களை
நிறைய ஆசீர்வதித்திருக்கிறார். இப்போது நான் என்னுடைய குடும்பத்துக்
காக உழைக்க வேண்டாமா?"[f] என்றார்.

31 அதற்கு லாபான், "உனக்கு நான் என்ன தர வேண்டும்?" என்று கேட்
டார். அப்போது யாக்கோபு, "எனக்கு ஒன்றும் தர வேண்டாம்! நான் எப்போ
தும்போல் உங்கள் மந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ள[g] வேண்
டுமென்றால் ஒரேவொரு காரியம் மட்டும் செய்யுங்கள். **32** இன்றைக்கு
உங்களுடைய எல்லா ஆடுகளையும் போய்ப் பார்க்கலாம். புள்ளிகளோ
கலப்புநிறத் திட்டுகளோ இருக்கிற செம்மறியாடுகளையும் பெண் வெள்ளா
டுகளையும், கரும்பழுப்பு நிறத்தில் இருக்கிற செம்மறியாட்டுக் கடாக் குட்
டிகளையும் தனியாகப் பிரித்துவிடுங்கள். இனிமேல் பிறக்கிற இந்த மாதிரி
யான ஆடுகளை என் சம்பளமாகக் கொடுங்கள்.[h] **33** அப்படி எனக்குச்
சம்பளமாகக் கிடைக்கும் ஆடுகளை நீங்கள் பார்க்க வரும்போது என்னு
டைய நேர்மையைத் தெரிந்துகொள்வீர்கள். புள்ளிகளோ கலப்புநிறத்
திட்டுகளோ இல்லாத பெண் வெள்ளாடுகளும், கரும்பழுப்பு நிறத்தில் இல்
லாத செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளும் என்னுடைய மந்தையில்
இருந்தால், அவற்றை நான் திருடியதாக வைத்துக்கொள்ளலாம்" என்று
சொன்னார்.

34 அதற்கு லாபான், "சரி, நீ சொன்னபடியே செய்யலாம்"[i] என்றார்.
35 அன்றைக்கே, வரிகளோ கலப்புநிறத் திட்டுகளோ இருந்த வெள்ளாட்
டுக் கடாக்களையும், புள்ளிகளோ கலப்புநிறத் திட்டுகளோ இருந்த பெண்
வெள்ளாடுகளையும், வெள்ளைத் திட்டுகள் இருந்த எல்லா ஆடுகளையும்,
கரும்பழுப்பு நிறத்தில் இருந்த செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளையும்
பிரித்து தன் மகன்களிடம் ஒப்படைத்தார். **36** அதன்பின், மூன்று நாள்
பயண தூரத்தில் இருக்கும் ஓர் இடத்துக்கு அந்த மந்தையைக் கொண்டு
போனார். மிச்சமிருந்த லாபானின் ஆடுகளை யாக்கோபு மேய்த்துவந்தார்.
37 பின்பு, வாதுமை மரத்திலிருந்தும் அர்மோன் மரத்திலிருந்தும் மற்ற

30:24 * யொசிபியா என்ற பெயரின் சுருக்கம். அர்த்தம், "'யா' சேர்க்கட்டும் (அதிகரிக்கட்டும்)." **30:27** * வே.வா., "அத்தாட்சி."

மரங்களிலிருந்தும்* பச்சைக் கொம்புகளை வெட்டி, இடையிடையே பட்
டைகளை உரித்தார். அதனால் அங்கங்கே வெள்ளையாகத் தெரிந்தன.
38 தண்ணீர் குடிக்க வரும் ஆடுகள் அந்த மரக்கொம்புகளுக்கு முன்னால்
இணைசேர வேண்டும் என்பதற்காக அவற்றைத் தண்ணீர்த் தொட்டிகளில்
போட்டுவைத்தார்.

39 அந்த மரக்கொம்புகளுக்கு முன்னால் ஆடுகள் இணைசேர்ந்து, வரி
களோ புள்ளிகளோ கலப்புநிறத் திட்டுகளோ உள்ள குட்டிகளைப் போட்
டன. **40** பின்பு, செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளை யாக்கோபு பிரித்து
வைத்தார். பிற்பாடு, லாபானின் மந்தைகளில் இருந்த வரிகளுள்ள ஆடுக
ளையும் கரும்பழுப்பு நிற ஆடுகளையும் பார்த்தபடி மற்ற ஆடுகளை
நிற்க வைத்தார். அதன்பின் தன்னுடைய ஆடுகளை லாபானுடைய ஆடு
களோடு சேர்க்காமல் தனியாகப் பிரித்து வைத்தார். **41** கொழுத்த ஆடு
கள் இணைசேர்ந்த சமயங்களில் அவற்றின் கண்களில் படுமாறு அந்த மரக்
கொம்புகளைத் தண்ணீர்த் தொட்டிகளில் போட்டுவைத்தார். **42** ஆனால்,
நோஞ்சான் ஆடுகளுக்கு முன்பாக அவற்றைப் போடவில்லை. அதனால்,
நோஞ்சான் ஆடுகள் எல்லாமே லாபானுக்குப் போய்ச் சேர்ந்தன,
கொழுத்த ஆடுகள் எல்லாமே யாக்கோபுக்கு வந்து சேர்ந்தன.[a]

43 இப்படி, யாக்கோபு பெரிய பணக்காரராக ஆனார். அவருக்கு ஏரா
ளமான ஆடுகளும் ஒட்டகங்களும் கழுதைகளும் இருந்தன, நிறைய
வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் இருந்தார்கள்.[b]

31 பிற்பாடு லாபானின் மகன்கள், "நம்முடைய அப்பாவுக்குச் சொந்த
மான எல்லாவற்றையும் யாக்கோபு எடுத்துக்கொண்டான். அப்பா
வுடைய சொத்துகளை வைத்து அவன் பெரிய பணக்காரனாகிவிட்டான்"[c]
என்று பேசிக்கொண்டதை யாக்கோபு கேட்டார். **2** அதோடு, லாபானின்
முகம் முன்புபோல இல்லாமல்[d] கடுகடுப்பாக இருந்ததை யாக்கோபு கவ
னித்தார். **3** ஒருநாள் யெகோவா யாக்கோபிடம், "உன்னுடைய முன்னோர்
களின் தேசத்துக்குப் போய் உன்னுடைய சொந்தபந்தங்களோடு குடியிரு.[e]
நான் எப்போதும் உன்னோடு இருப்பேன்" என்றார். **4** அதன்பின் யாக்
கோபு ஆள் அனுப்பி, தான் மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்த இடத்
துக்கு ராகேலையும் லேயாளையும் வர வைத்தார். **5** அவர் அவர்களிடம்,

"உங்கள் அப்பா முன்புபோல் இல்லை, என்னிடம் கடுகடுப்பாக
நடந்துகொள்கிறார்.[f] ஆனால், என்னுடைய அப்பாவின் கடவுள் எப்போ
தும் என்னோடு இருக்கிறார்.[g] **6** உங்கள் அப்பாவுக்காக நான் எவ்வளவு
கஷ்டப்பட்டு வேலை செய்தேன் என்று உங்களுக்கே தெரியும்.[h]
7 அவர் என்னை ஏமாற்ற நினைத்தார், என் சம்பளத்தை 10 தடவை மாற்
றினார். ஆனால், எனக்குக் கெடுதல் செய்ய கடவுள் அவரை விட
வில்லை. **8** 'புள்ளியுள்ள ஆடுகள்தான் உன்னுடைய சம்பளம்' என்று
அவர் சொன்னபோது ஆடுகளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்
டன. 'வரியுள்ள ஆடுகள்தான் உன் சம்பளம்' என்று அவர் சொன்னபோது
ஆடுகளெல்லாம் வரியுள்ள குட்டிகளைப் போட்டன.[i] **9** கடவுள்தான் உங்
கள் அப்பாவுடைய ஆடுகள் எல்லாவற்றையும் எடுத்து எனக்குத் தந்
தார். **10** ஆடுகள் இணைசேரும் காலத்தில், நான் ஒரு கனவு கண்டேன்.

30:37 * எபிரெயுவில், "லிவ்னே மரங்களிலிருந்தும்."

அதி. 30
a ஆதி 31:9
b ஆதி 32:5
ஆதி 36:6, 7

அதி. 31
c ஆதி 30:33
d ஆதி 30:27
e ஆதி 28:15
ஆதி 32:9
ஆதி 35:27
f ஆதி 30:27
g ஆதி 48:15
h ஆதி 30:29, 30
i ஆதி 30:32

அதில், வெள்ளாடுகளோடு இணைசேரும் கடாக்கள் வரிகளுடனோ புள்ளி
களுடனோ கலப்பு நிறத்துடனோ இருந்ததைப் பார்த்தேன்.[a] **11** அந்
தக் கனவில் உண்மைக் கடவுளுடைய தூதர், 'யாக்கோபே!' என்று கூப்பிட்
டார். நான் உடனே, 'சொல்லுங்கள், எஜமானே!' என்றேன். **12** அப்போது
அவர், 'கொஞ்சம் நிமிர்ந்து பார். வெள்ளாடுகளோடு இணைசேருகிற
எல்லா கடாக்களும் வரிகளுடனோ புள்ளிகளுடனோ கலப்பு நிறத்துடனோ
இருக்கின்றன. ஏனென்றால், லாபான் உனக்குச் செய்கிற எல்லா கெடுதலை
யும் நான் பார்த்தேன்.[b] **13** நீ பெத்தேலில்[c] நினைவுக்கல்லை அபிஷேகம்
பண்ணி நேர்ந்துகொண்டபோது[d] உன்முன் தோன்றிய உண்மைக் கடவுள்
நான்தான். இப்போது நீ இந்தத் தேசத்திலிருந்து புறப்பட்டு உன்னுடைய
சொந்த தேசத்துக்கே திரும்பிப் போ'[e] என்று சொன்னார்" என்றார்.

14 அதற்கு ராகேலும் லேயாளும், "எங்கள் அப்பாவுடைய சொத்
திலிருந்து இனி எங்களுக்கு என்ன கிடைக்கப்போகிறது? **15** அவர்
எங்களை முன்பின் தெரியாதவர்கள்* போல விற்றுவிட்டார், விற்ற பணத்
தையும் விழுங்கிக்கொண்டாரே.[f] **16** கடவுள்தான் எங்களுடைய அப்
பாவிடம் இருந்த எல்லா சொத்துகளையும் எடுத்து நமக்கும் நம் பிள்
ளைகளுக்கும் கொடுத்திருக்கிறார்.[g] அதனால், கடவுள் உங்களிடம்
சொன்னபடியெல்லாம் செய்யுங்கள்"[h] என்றார்கள்.

17 பின்பு, யாக்கோபு எழுந்து தன்னுடைய பிள்ளைகளையும் மனைவி
களையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றினார்.[i] **18** பதான்-அராமிலே சேர்த்த
எல்லா பொருள்களையும் எடுத்துக்கொண்டு,[j] அங்கே சம்பாதித்த எல்லா
மந்தைகளையும் ஓட்டிக்கொண்டு, கானான் தேசத்திலுள்ள தன்னுடைய
அப்பா ஈசாக்கிடம் போவதற்குப் புறப்பட்டார்.[k]

19 அந்தச் சமயத்தில் லாபான் தன்னுடைய ஆடுகளுக்கு மயிர் கத்த
ரிக்கப் போயிருந்தார். அப்போது, அவருடைய மகள் ராகேல் அவரு
டைய[l] குலதெய்வச் சிலைகளைத்[m] திருடிக்கொண்டாள். **20** யாக்கோபும்
தான் போகிற விஷயத்தைப் பற்றி அரமேயனான லாபானிடம் சொல்
லாமல் சாமர்த்தியமாக நழுவினார். **21** யாக்கோபு தன்னுடன் இருந்த
வர்களோடும் தனக்குச் சொந்தமான எல்லாவற்றோடும் ஆற்றை*[n] கடந்து,
கீலேயாத் மலைப்பகுதிக்குத்[o] தப்பித்துப் போனார். **22** அவர் தப்பித்துப்
போன விஷயம் மூன்றாம் நாளில் லாபானுக்குத் தெரியவந்தது.
23 உடனே, அவர் தன்னுடைய சொந்தக்காரர்களோடு சேர்ந்து யாக்கோ
பைத் துரத்திக்கொண்டு போனார். ஏழு நாட்கள் கழித்து, யாக்கோபு இருந்த
கீலேயாத் மலைப்பகுதிக்குப் போய்ச் சேர்ந்தார். **24** அன்றைக்கு ராத்திரி
அரமேயனான லாபானின்[p] கனவில் கடவுள் வந்து,[q] "நீ யாக்கோபின் விஷ
யத்தில் தலையிடாதே,* ஜாக்கிரதை!" என்று சொன்னார்.[r]

25 யாக்கோபு கூடாரம் போட்டிருந்த கீலேயாத் மலைப்பகுதியில்தான்
லாபான் தன்னுடைய சொந்தக்காரர்களோடு தங்கினார். அவர் யாக்கோபி
டம் போய், **26** "ஏன் இப்படிச் செய்தாய்? ஏன் என்னிடம் சொல்லாமல்
சாமர்த்தியமாகத் தப்பித்து வந்தாய்? என் மகள்களை ஏன் போர்க்கைதிக
ளைப் போலப் பிடித்துக்கொண்டு வந்தாய்? **27** ஏன் என்னை ஏமாற்றி
னாய்? என்னிடம் சொல்லாமல் ஏன் ரகசியமாக ஓடி வந்தாய்?

31:15 *வே.வா., "அன்னியர்கள்." **31:21** *அதாவது, "யூப்ரடிஸ் ஆற்றை." **31:24** *வே.வா., "நல்லதோ கெட்டதோ, நீ யாக்கோபிடம் எதையும் பேசாதே."

அதி. 31
- a ஆதி 30:39
- b ஆதி 29:25; ஆதி 31:39
- c ஆதி 12:8, 9; ஆதி 35:15
- d ஆதி 28:18, 22
- e ஆதி 35:14; ஆதி 37:1
- f ஆதி 31:41; ஓசி 12:12
- g ஆதி 31:1
- h ஆதி 31:3
- i ஆதி 33:13
- j ஆதி 30:42, 43
- k ஆதி 35:27
- l ஆதி 31:14
- m ஆதி 35:2; யோசு 24:2
- n ஆதி 15:18
- o எண் 32:1
- p ஆதி 25:20; ஓசி 12:12
- q ஆதி 20:3
- r சங் 105:15

சொல்லியிருந்தால், நானே மேளதாளத்தோடும்* பாடல்களோடும் உன்
னைச் சந்தோஷமாக அனுப்பி வைத்திருப்பேனே. **28** என் பேரப்பிள்
ளைகளையும் மகள்களையும் முத்தம்கொடுத்து அனுப்பக்கூட நீ எனக்
குச் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. முட்டாள்தனமாக நடந்துகொண்டாய்.
29 நான் நினைத்தால் உங்களையெல்லாம் என்ன வேண்டுமானாலும்
செய்ய முடியும். ஆனால் உங்களுடைய முன்னோர்களின் கடவுள் நேற்று
ராத்திரி என்னிடம், ‘நீ யாக்கோபின் விஷயத்தில் தலையிடாதே, ஜாக்கி
ரதை!’ என்றார்.[a] **30** உன்னுடைய அப்பாவின் வீட்டுக்குத் திரும்பிப்
போக வேண்டுமென்ற ஏக்கத்தில் நீ கிளம்பி வந்திருக்கலாம், ஆனால் என்
சிலைகளை ஏன் திருடிக்கொண்டு வந்தாய்?”[b] என்றார்.

31 அப்போது யாக்கோபு லாபானிடம், “உங்களுடைய மகள்களைப்
பிடித்து வைத்துக்கொள்வீர்களோ என்று பயந்துதான் நான் சொல்லாமல்
வந்தேன். **32** உங்களுடைய சிலைகளை யார் திருடியிருந்தாலும் அவன்
கொல்லப்படுவான். உங்களுடைய பொருள்கள் ஏதாவது என்னிடம் இருக்
கிறதா என்று இங்கு இருக்கிறவர்களுக்கு முன்னால் தேடிப் பாருங்கள்,
இருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள்” என்று சொன்னார். ஆனால், அவற்றை
ராகேல் திருடியிருந்தது யாக்கோபுக்குத் தெரியாது. **33** லாபான் யாக்கோ
புடைய கூடாரத்துக்கும் லேயாளுடைய கூடாரத்துக்கும் இரண்டு அடிமைப்
பெண்களுடைய[c] கூடாரத்துக்கும் போய்த் தேடிப் பார்த்தார். ஆனால் எது
வும் கிடைக்கவில்லை. அதனால், லேயாளின் கூடாரத்தைவிட்டு வெளியே
வந்து ராகேலின் கூடாரத்துக்குள் போனார். **34** ராகேல் அந்தக் குலதெய்
வச் சிலைகளை எடுத்துத் தன்னுடைய ஒட்டகச் சேணத்துக்குள்* வைத்து,
அதன்மேல் உட்கார்ந்திருந்தாள். அதனால், லாபான் அந்தக் கூடாரம்
முழுக்கத் தேடிப் பார்த்தும் அவற்றைக் கண்டுபிடிக்கவில்லை. **35** அப்
போது அவள், “கோபித்துக்கொள்ளாதீர்கள் அப்பா, என்னால் எழுந்து
நிற்க முடியவில்லை, எனக்கு இப்போது மாதவிலக்கு”[d] என்று சொன்னாள்.
அவர் நன்றாகத் தேடிப் பார்த்தும் அந்தச் சிலைகள்[e] கிடைக்கவில்லை.

36 அதனால் யாக்கோபு கோபத்தோடு லாபானிடம் பொரிந்து தள்ளி
னார். “நான் என்ன தப்பு செய்தேன்? ஏன் இப்படி ஆவேசமாக என்னைத்
துரத்திக்கொண்டு வந்தீர்கள்? நான் உங்களுக்கு என்ன பாவம் செய்தேன்?
37 என்னுடைய எல்லா பொருள்களையும் தேடிப் பார்த்தீர்களே, உங்களு
டைய வீட்டிலிருந்து நான் ஏதாவது எடுத்து வந்திருக்கிறேனா? என்னுடைய
சொந்தக்காரர்களுக்கும் உங்களுடைய சொந்தக்காரர்களுக்கும் முன்னால்
காட்டுங்கள், பார்க்கலாம். நம்முடைய பிரச்சினைக்கு அவர்களே ஒரு முடிவு
சொல்லட்டும். **38** உங்களோடு நான் இருந்த இந்த 20 வருஷ காலத்தில்,
உங்களுடைய மந்தையில் ஒரு ஆட்டுக்குட்டிகூட செத்துப் பிறக்கவில்லை.[f]
ஒரு செம்மறியாட்டுக் கடாவைக்கூட நான் அடித்துச் சாப்பிடவில்லை.
39 காட்டு மிருகங்களிடம் சிக்கி செத்துப்போன எந்த ஆட்டையாவது நான்
உங்களிடம் கொண்டுவந்தேனா?[g] அந்த நஷ்டத்தை நான்தானே ஏற்றுக்
கொண்டேன்? உங்களுடைய ஆடுகள் பகலில் திருடுபோயிருந்தாலும் சரி,
ராத்திரியில் திருடுபோயிருந்தாலும் சரி, என்னிடம்தானே நஷ்ட ஈடு கேட்

அதி. 31
a ஆதி 31:24
b ஆதி 31:19; ஆதி 35:2
c ஆதி 46:18, 25
d லேவி 15:19
e ஆதி 31:19
f ஆதி 30:27
g 1சா 17:34

31:27 *நே.மொ., “கஞ்சிராவோடும் யாழோடும்.” **31:34** *சேணம் என்பது மிரு
கங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன
இருக்கை.

டீர்கள்? **40** காலையில் வெயிலில் காய்ந்தேன், ராத்திரியில் குளிரில் நடுங்
கினேன்; எனக்குத் தூக்கமே இல்லாமல் போனது.[a] **41** இப்படி 20 வருஷ
மாக உங்கள் வீட்டில் பாடுபட்டேன். உங்களுடைய இரண்டு மகள்களுக்காக
14 வருஷமும் உங்கள் ஆடுகளுக்காக 6 வருஷமும் வேலை செய்
தேன். 10 தடவை என்னுடைய சம்பளத்தை மாற்றினீர்கள்.[b] **42** என்னு
டைய தாத்தா ஆபிரகாமும் அப்பா ஈசாக்கும் பயபக்தியோடு வணங்கிய
கடவுள்[c] என் பக்கம் இருந்திருக்காவிட்டால், என்னை வெறுங்கையோடு
தான் அனுப்பியிருப்பீர்கள். நான் பட்ட வேதனையையும் சிந்திய வேர்வை
யையும் கடவுள் பார்த்திருக்கிறார். அதனால்தான், நேற்று ராத்திரி உங்களை
எச்சரித்திருக்கிறார்”[d] என்றார்.

43 அப்போது லாபான் யாக்கோபிடம், “இந்தப் பெண்கள் என்னுடைய
பெண்கள், இந்தப் பிள்ளைகள் என்னுடைய பிள்ளைகள், இந்த மந்தைகள்
என்னுடைய மந்தைகள். உன்னுடைய கண் முன்னால் இருக்கிற எல்
லாமே எனக்கும் என் மகள்களுக்கும் சொந்தமானதுதான். இவர்களுக்
கும் இவர்கள் பிள்ளைகளுக்கும் இன்று நான் என்ன கெடுதல் செய்துவி
டப்போகிறேன்? **44** நானும் நீயும் சமாதானமாக இருப்போம் என்பதற்கு
சாட்சியாக இப்போது ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம், வா” என்றார்.
45 அதனால், யாக்கோபு ஒரு கல்லை எடுத்து அதை நினைவுக்கல்லாக
நாட்டினார்.[e] **46** பின்பு தன்னுடைய சொந்தக்காரர்களிடம், “கற்களைக்
கொண்டுவாருங்கள்!” என்றார். அப்படியே அவர்களும் கற்களைக் கொண்
டுவந்து குவித்தார்கள். பின்பு, அதன்மேல் உணவை வைத்து சாப்பிட்டார்
கள். **47** லாபான் அதற்கு ஜெகர்-சகதூதா* என்று பெயர் வைத்தார், யாக்
கோபு அதற்கு கலயெத்# என்று பெயர் வைத்தார்.

48 அதன்பின் லாபான், “இன்று எனக்கும் உனக்கும் இடையில் சாட்சி
யாக இருப்பது இந்தக் கற்குவியல்தான்” என்று சொன்னார். அதனால்
தான், யாக்கோபு அதற்கு கலயெத்[f] என்றும், **49** காவற்கோபுரம்* என்றும்
பெயர் வைத்தார். அப்போது லாபான், “நாம் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்
துபோன பின்பு என்னையும் உன்னையும் யெகோவா கண்காணிக்கட்
டும். **50** நீ என்னுடைய மகள்களைக் கொடுமைப்படுத்தினாலோ இன்னும்
நிறைய மனைவிகளை வைத்துக்கொண்டாலோ, மனுஷர்கள் பார்க்காவிட்
டாலும் கடவுள் பார்ப்பார். உனக்கும் எனக்கும் இடையில் அவர் சாட்சியாக
இருப்பார் என்பதை மறந்துவிடாதே” என்று சொன்னார். **51** அதுமட்டு
மல்ல, “இதோ, உனக்கும் எனக்கும் நடுவில் நான் இந்தக் கற்குவியலை
யும் நினைவுக்கல்லையும் வைத்திருக்கிறேன். **52** நான் இந்தக் கற்குவிய
லைத் தாண்டி வந்து உனக்குக் கெடுதல் செய்ய மாட்டேன், நீயும் இந்தக்
கற்குவியலையும் நினைவுக்கல்லையும் தாண்டி வந்து எனக்குக் கெடுதல்
செய்யக் கூடாது. இதற்கு இந்தக் கற்குவியலும் நினைவுக்கல்லும் சாட்சியாக
இருக்கும்.[g] **53** ஆபிரகாமின் கடவுளும்[h] நாகோரின் கடவுளும் அவர்
களுடைய அப்பாவின் கடவுளும் நமக்குத் தீர்ப்பு கொடுக்கட்டும்” என்று
லாபான் சொன்னார். அப்போது, யாக்கோபு தன்னுடைய அப்பா ஈசாக்கு
பயபக்தியோடு வணங்கிய கடவுள்மேல்[i] சத்தியம் செய்தார்.

அதி. 31
a ஆதி 47:9
b ஆதி 31:7
c ஆதி 28:13; ஆதி 31:29; ஆதி 31:53
d ஆதி 31:24
e ஆதி 28:18
f ஆதி 31: 22, 23
g ஆதி 31: 44, 45
h ஆதி 17:1, 7
i ஆதி 31:42

31:47 *அரமேயிக் மொழியில் இதன் அர்த்தம் “சாட்சிக் குவியல்.” #எபிரெய மொழியில் இதன் அர்த்தம் “சாட்சிக் குவியல்.” **31:49** *வே.வா., “கண்காணிக்கும் கோபுரம்.”

54 பின்பு, அந்த மலையில் யாக்கோபு பலி செலுத்திவிட்டு, சாப்பிடு
வதற்குத் தன்னுடைய சொந்தக்காரர்களைக் கூப்பிட்டார். அவர்கள் எல்லா
ரும் சாப்பிட்டுவிட்டு, ராத்திரி அங்கேயே தங்கினார்கள். **55** லாபான்
விடியற்காலையிலேயே எழுந்து தன்னுடைய பேரப்பிள்ளைகளுக்கும் மகள்
களுக்கும் முத்தம் கொடுத்து[a] அவர்களை ஆசீர்வதித்தார்.[b] அதன்பின்,
லாபான் தன்னுடைய வீட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.[c]

32 பின்பு, யாக்கோபும் அங்கிருந்து புறப்பட்டுப் போனார். வழியில்
தேவதூதர்கள் அவரைச் சந்தித்தார்கள். **2** யாக்கோபு அவர்க
ளைப் பார்த்தவுடன், “இதுதான் கடவுளுடைய முகாம்!” என்று சொல்லி,
அந்த இடத்துக்கு மக்னாயீம்* என்று பெயர் வைத்தார்.

3 அதன்பின் யாக்கோபு, ஏதோமில் உள்ள[d] சேயீர் தேசத்தில்[e] இருந்த
தன்னுடைய அண்ணன் ஏசாவைப் போய்ப் பார்க்கச் சொல்லி ஆட்களை*
அனுப்பினார். **4** அவர்களிடம், “நீங்கள் என்னுடைய எஜமான் ஏசாவிடம்
போய், ‘உங்கள் அடிமை யாக்கோபு இப்படிச் சொல்லி அனுப்பியிருக்கி
றார்: “நான் இத்தனை வருஷமாக[f] லாபானுடன் தங்கியிருந்தேன். **5** காளை
களையும் கழுதைகளையும் செம்மறியாடுகளையும் வேலைக்காரர்களையும்
வேலைக்காரிகளையும் சம்பாதித்திருக்கிறேன்.[g] என் எஜமானே, உங்களு
டைய கருணை கிடைப்பதற்காக இந்தச் செய்தியைச் சொல்லி அனுப்புகி
றேன்” என்று சொல்லுங்கள்’” என்றார்.

6 அந்த ஆட்கள் யாக்கோபிடம் திரும்பி வந்து, “உங்கள் அண்ணன்
ஏசாவை நாங்கள் பார்த்தோம், இப்போது அவர் உங்களைப் பார்ப்பதற்காக
வந்துகொண்டிருக்கிறார், அவரோடு 400 பேர் வருகிறார்கள்”[h] என்று சொன்
னார்கள். **7** அதைக் கேட்டதும் யாக்கோபு பயத்தில் பதறினார்.[i] உடனே,
தன்னுடன் இருந்தவர்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும்
மற்ற கால்நடைகளையும் இரண்டு கூட்டமாகப் பிரித்து, **8** “ஏசா ஒரு கூட்
டத்தைத் தாக்கினாலும், இன்னொரு கூட்டத்தால் தப்பித்து ஓட முடியும்”
என்றார்.

9 அதோடு கடவுளிடம், “யெகோவாவே, என் தாத்தா ஆபிரகாமின் கட
வுளே, என் அப்பா ஈசாக்கின் கடவுளே, ‘உன்னுடைய தேசத்துக்குப் போய்
உன் சொந்தக்காரர்களோடு குடியிரு, நான் உன்னை ஆசீர்வதிப்பேன்’
என்று சொன்னவரே,[j] **10** உங்கள் அடிமையாகிய என்னிடம் நீங்கள் இவ்
வளவு காலமாகக் காட்டிய மாறாத அன்புக்கும் உண்மைத்தன்மைக்கும்[k]
நான் தகுதி இல்லாதவன். இந்த யோர்தானைத் தாண்டிப் போனபோது என்
னிடம் ஒரு தடி மட்டும்தான் இருந்தது, ஆனால் இப்போது இரண்டு பெரிய
கூட்டங்களுக்குச் சொந்தக்காரனாக இருக்கிறேன்.[l] **11** கடவுளே, உங்களி
டம் கெஞ்சிக் கேட்கிறேன்,[m] என் அண்ணன் ஏசாவிடமிருந்து என்
னைக் காப்பாற்றுங்கள். அவன் வந்து என்னையும் என் பிள்ளைகளையும்
மனைவிகளையும் தீர்த்துக்கட்டிவிடுவானோ[n] என்று பயமாக இருக்கிறது.
12 நீங்கள் என்னை ஆசீர்வதிப்பதாகவும், என்னுடைய சந்ததியை கடற்
கரை மணலைப் போல எண்ண முடியாத அளவுக்குப் பெருக வைப்பதாக
வும் சொன்னீர்களே”[o] என்று ஜெபம் செய்தார்.

13 அந்த ராத்திரி அவர் அங்கேயே தங்கினார். பின்பு, தன்னுடைய
அண்ணன் ஏசாவுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு,[p] **14** 200 பெண்

32:2 * அர்த்தம், “இரண்டு முகாம்கள்.” **32:3** * வே.வா., “தூதுவர்களை.”

அதி. 31
a ஆதி 31:28
b ஆதி 24:59, 60
c ஆதி 27:43; ஆதி 28:2

அதி. 32
d ஆதி 25:30
e ஆதி 27:39; ஆதி 36:8; உபா 2:5; யோசு 24:4
f ஆதி 31:41
g ஆதி 30:43; ஆதி 33:11
h ஆதி 33:1, 2
i ஆதி 27:41; ஆதி 32:11
j ஆதி 31:3, 13
k ஆதி 28:15; சங் 100:5
l ஆதி 28:10; ஆதி 30:43; ஆதி 32:7
m சங் 34:4
n ஆதி 27:41
o ஆதி 28:14; ஆதி 46:2, 3; யாத் 1:7; யாத் 32:13; அப் 7:17
p ஆதி 33:10

அதி. 32
a ஆதி 30:43
b ஆதி 33:8
c ஆதி 43:11; 1சா 25:18
d ஆதி 29:30; ரூ 4:11
e ஆதி 30:3, 9
f உபா 3:16; யோசு 12:2; நியா 11:13
g ஓசி 12:3
h ஆதி 32: 31, 32
i ஓசி 12:4
j ஆதி 35:10
k ஓசி 12:3

வெள்ளாடுகளையும், 20 வெள்ளாட்டுக் கடாக்களையும், 200 பெண் செம்
மறியாடுகளையும், 20 செம்மறியாட்டுக் கடாக்களையும், **15** 30 ஒட்டகங்க
ளையும், அவற்றின் குட்டிகளையும், 40 பசுக்களையும், 10 காளைகளையும்,
20 பெட்டைக் கழுதைகளையும், 10 ஆண் கழுதைகளையும் பிரித்தெ
டுத்தார்.[a]

16 ஒவ்வொரு மந்தையையும் தன்னுடைய வேலைக்காரர்களிடம்
தனித்தனியாக ஒப்படைத்து, "எனக்கு முன்னால் போங்கள், ஒவ்வொரு மந்
தைக்கும் நடுவில் இடைவெளி விட்டு அவற்றை ஓட்டிக்கொண்டு போங்
கள்" என்று சொன்னார். **17** அதோடு, முதலாம் வேலைக்காரனிடம்,
"ஒருவேளை என்னுடைய அண்ணன் ஏசா உன்னிடம் வந்து, 'நீ யாரு
டைய வேலைக்காரன், எங்கே போகிறாய், உனக்கு முன்னால் போகிற இந்த
மந்தை யாருடையது?' என்று கேட்டால், **18** 'உங்கள் அடிமை யாக்கோபு
டையது. எஜமானாகிய ஏசாவுக்கு அன்பளிப்பாக அனுப்பினார்.[b] அவரும்
எங்களுக்குப் பின்னால் வருகிறார்' என்று நீ சொல்ல வேண்டும்" என்றார்.
19 அதுபோலவே, இரண்டாம் மூன்றாம் வேலைக்காரர்களிடமும் மந்தைக
ளுக்குப் பின்னால் போன மற்ற எல்லாரிடமும், "ஏசாவைப் பார்க்கும்போது
இதேபோல் நீங்கள் சொல்ல வேண்டும். **20** 'உங்கள் அடிமை யாக்கோபு
எங்களுக்குப் பின்னால் வருகிறார்' என்றும் சொல்ல வேண்டும்" என்
றார். அதன்பின், 'அன்பளிப்புகளை முதலில் அனுப்பி அவரைச் சமாதா
னப்படுத்தினால்,[c] நான் அவரைப் பார்க்கும்போது ஒருவேளை அவர் என்
னிடம் அன்பாக நடந்துகொள்வார்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.
21 இப்படி, அன்பளிப்புகளை முன்னால் அனுப்பிவிட்டு அன்றைக்கு ராத்
திரி அங்கே அவர் தங்கினார்.

22 அந்த ராத்திரியிலேயே அவர் எழுந்து தன்னுடைய இரண்டு மனை
விகளையும்[d] இரண்டு வேலைக்காரிகளையும்[e] 11 மகன்களையும் கூட்டிக்
கொண்டு யாபோக்[f] ஆற்றுத்துறையை* கடந்தார். **23** அவர்களையும்
தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் அவர் கரைசேர்த்தார்.*

24 கடைசியில், யாக்கோபு மட்டும் தனியாக இருந்தார். அப்போது, ஒரு
மனிதர்* வந்து விடியற்காலைவரை அவரோடு போராடினார்.[g] **25** யாக்
கோபை ஜெயிக்க முடியாததால் அந்த மனிதர் அவருடைய இடுப்பு
மூட்டை* தொட்டார். அந்த மனிதரோடு போராடியதில் யாக்கோபின்
இடுப்புமூட்டு பிசகியது.[h] **26** அப்போது அந்த மனிதர் அவரிடம், "என்
னைப் போகவிடு, விடிந்துவிட்டது" என்றார். அதற்கு அவர், "நீங்கள்
என்னை ஆசீர்வதித்தால்தான் உங்களைப் போகவிடுவேன்"[i] என்று சொன்
னார். **27** அதனால் அந்த மனிதர், "உன்னுடைய பெயர் என்ன?" என்று
கேட்டார். அதற்கு அவர், "யாக்கோபு" என்றார். **28** அப்போது அந்த மனி
தர், "இனிமேல் உன் பெயர் யாக்கோபு அல்ல, இஸ்ரவேல்.*[j] ஏனென்றால்,
நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி[k] கடைசியில் ஜெயித்துவிட்டாய்"
என்று சொன்னார். **29** அதற்கு யாக்கோபு, "உங்களுடைய பெயர் என்ன,
தயவுசெய்து சொல்லுங்கள்" என்று கேட்டார். ஆனால் அந்த மனிதர்,

32:22 *ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதி. **32:23** *வே.வா., "காட்டாற்றுப் பள்ளத்தாக்கைக் கடக்கப்பண்ணினார்." **32:24** *அதாவது, "மனித உருவில் ஒரு தேவதூதர்." **32:25** *வே.வா., "தொடைச்சந்தை." **32:28** *அர்த்தம், "கடவுளோடு போராடுபவர்; கடவுள் போராடுகிறார்."

“என்னுடைய பெயரை எதற்காகக் கேட்கிறாய்?”[a] என்றார். பின்பு, அவரை
ஆசீர்வதித்தார். **30** அப்போது யாக்கோபு, “கடவுளுடைய* முகத்தை
நேரில் பார்த்தேன், ஆனாலும் உயிர் பிழைத்தேன்”[b] என்று சொல்லி, அந்த
இடத்துக்கு பெனியேல்#[c] என்று பெயர் வைத்தார்.

31 அவர் பெனூவேலை* கடந்தவுடனே சூரியன் உதித்தது. அவர்
நொண்டி நொண்டி நடந்துபோனார்.[d] **32** ஏனென்றால், அந்த மனிதர்
யாக்கோபுடைய இடுப்புமூட்டின் மேல் இருந்த தசைநாணைத் தொட்டிருந்
தார். அதனால்தான் இடுப்புமூட்டின் மேல் உள்ள தசைநாணை இன்றுவரை
இஸ்ரவேல் ஜனங்கள் சாப்பிடுவதில்லை.

33 யாக்கோபு நிமிர்ந்து பார்த்தபோது, ஏசா 400 ஆட்களுடன் வந்து
கொண்டிருந்தார்.[e] அதனால், லேயாளிடமும் ராகேலிடமும்
இரண்டு வேலைக்காரிகளிடமும் அவரவர் பிள்ளைகளை ஒப்படைத்தார்.[f]
2 பின்பு, வேலைக்காரிகளையும் அவர்களுடைய பிள்ளைகளையும் முத
லில் நிறுத்தினார்.[g] அடுத்து, லேயாளையும் அவளுடைய பிள்ளைகளை
யும் நிறுத்தினார்.[h] அவர்களுக்குப் பின்னால் ராகேலையும் யோசேப்பை
யும் நிறுத்தினார்.[i] **3** அதன்பின், அவர்கள் எல்லாருக்கும் முன்னால்
நடந்து போனார். அவருடைய அண்ணனின் பக்கத்தில் போகப்போக ஏழு
தடவை மண்டிபோட்டு தரைவரைக்கும் குனிந்து வணங்கினார்.

4 அப்போது ஏசா அவரிடம் ஓடிவந்து, அவரைக் கட்டிப்பிடித்து
முத்தம் கொடுத்தார். அவர்கள் கண்ணீர்விட்டு அழுதார்கள். **5** யாக்கோ
புடன் வந்த பெண்களையும் பிள்ளைகளையும் ஏசா பார்த்தபோது, “இவர்
கள் யார்?” என்று கேட்டார். அதற்கு யாக்கோபு, “உங்கள் அடியேனுக்குக்
கடவுள் தந்திருக்கிற பிள்ளைகள்”[j] என்றார். **6** அப்போது, வேலைக்காரி
கள் தங்களுடைய பிள்ளைகளுடன் முன்னால் வந்து தலைவணங்கி
னார்கள். **7** பின்பு, லேயாளும் அவளுடைய பிள்ளைகளும் முன்னால்
வந்து தலைவணங்கினார்கள். அதன்பின், யோசேப்பும் ராகேலும் முன்
னால் வந்து தலைவணங்கினார்கள்.[k]

8 பின்பு ஏசா, “எதற்காக உன்னுடைய ஆட்களிடம் இதையெல்லாம்
கொடுத்து அனுப்பினாய்?”[l] என்று கேட்டார். அதற்கு அவர், “என் எஜமானு
டைய கருணை கிடைப்பதற்காகத்தான்”[m] என்று சொன்னார். **9** அப்போது
ஏசா, “என்னிடமே ஏராளமான சொத்துப்பத்துகள் இருக்கின்றன.[n] அதனால்
உன்னுடையதை நீயே வைத்துக்கொள்” என்றார். **10** ஆனால் யாக்கோபு
அவரிடம், “அப்படிச் சொல்லாதீர்கள். எனக்குக் கருணை காட்ட நினைத்
தால், நான் தரும் அன்பளிப்புகளைத் தயவுசெய்து வாங்கிக்கொள்ளுங்கள்.
உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையில் இதையெல்லாம்
கொண்டுவந்தேன். நீங்கள் என்னைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டதால்,
இப்போது உங்களுடைய முகத்தைப் பார்க்கும்போது கடவுளுடைய முகத்
தைப் பார்ப்பதுபோல் இருக்கிறது.[o] **11** தயவுசெய்து, நான் அன்போடு
தருகிற இந்தப் பரிசுகளை வாங்கிக்கொள்ளுங்கள்.[p] கடவுள் என்னை ஆசீர்
வதித்திருக்கிறார், தேவையான எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்திருக்கி
றார்”[q] என்று சொன்னார். யாக்கோபு அவரை வற்புறுத்திக்கொண்டே இருந்
ததால், அவரும் அவற்றை வாங்கிக்கொண்டார்.

32:30 *அதாவது, “கடவுளின் பிரதிநிதியான தூதருடைய.” #அர்த்தம், “கடவு
ளுடைய முகம்.” **32:31** *அதாவது, “பெனியேலை.”

அதி. 32
a நியா 13:17, 18
b ஆதி 16:7, 13
நியா 6:22
யோவா 1:18
c 1ரா 12:25
d ஆதி 32:25

அதி. 33
e ஆதி 32:6
f ஆதி 32:22
g ஆதி 30:7, 12
h ஆதி 30:19
i ஆதி 30:
22–24
j ஆதி 32:22
சங் 127:3
k ஆதி 33:2
l ஆதி 32:16
m ஆதி 32:4, 5
n ஆதி 36:6, 7
o ஆதி 32:
11, 20
p ஆதி 32:
13–15
q ஆதி 30:43

அதி. 33
a ஆதி 31:17
b ஆதி 32:3
c யோசு 13: 24, 27 1ரா 7:46
d ஆதி 25:20 ஆதி 28:6
e ஆதி 10:19 ஆதி 12:6
f யோசு 24:1
g யோசு 24:32 அப் 7:15, 16
h ஆதி 35:1, 7

அதி. 34
i ஆதி 30: 19, 21 ஆதி 46:15
j ஆதி 26: 34, 35 ஆதி 27:46
k உபா 7:1 1நா 1:13–15
l ஆதி 33: 18, 19

12 பிற்பாடு ஏசா, “நாம் புறப்படலாம், வா; நான் உனக்குத் துணை
யாக வருகிறேன்” என்றார். **13** ஆனால் யாக்கோபு, “எஜமானே, என்னு
டைய பிள்ளைகள் சின்னஞ்சிறுசுகள்[a] என்று உங்களுக்கே தெரியும்.
அதோடு, என்னுடைய மந்தையில் கறவை* ஆடுகளும் மாடுகளும் இருக்
கின்றன. ஒரேவொரு நாள் வேகமாய் ஓட்டிக்கொண்டு போனால்கூட
மந்தையெல்லாம் செத்துப்போகும். **14** அதனால் எஜமானே, தயவுசெய்து
நீங்கள் உங்களுடைய அடியேனுக்கு முன்னால் போங்கள். நான் என்
னுடைய ஆடுமாடுகளோடும் பிள்ளைகளோடும் சேர்ந்து மெதுவாக வரு
கிறேன். சேயீர் தேசத்தில்[b] என் எஜமானாகிய உங்களைச் சந்திக்கிறேன்”
என்றார். **15** அப்போது ஏசா, “அப்படியானால், என்னுடைய ஆட்களில்
சிலரை உனக்காக விட்டுவிட்டுப் போகட்டுமா?” என்று கேட்டார். அதற்கு
யாக்கோபு, “என் எஜமானுடைய கருணை கிடைத்தாலே எனக்குப் போதும்,
இதெல்லாம் எதற்கு?” என்றார். **16** அதனால் ஏசா அன்றைக்கே புறப்
பட்டு, சேயீர் தேசத்துக்குத் திரும்பிப் போனார்.

17 யாக்கோபு சுக்கோத்துக்குப்[c] போய் அங்கே தனக்காக ஒரு வீடு
கட்டினார், மந்தைகளுக்குக் கொட்டகைகளும் போட்டார். அதனால், அந்த
இடத்துக்கு சுக்கோத்* என்று பெயர் வைத்தார்.

18 பதான்-அராமிலிருந்து புறப்பட்டு வந்திருந்த[d] யாக்கோபு, கானான்
தேசத்திலுள்ள[e] சீகேம் நகரத்துக்குப்[f] பத்திரமாகப் போய்ச் சேர்ந்தார். அந்த
நகரத்துக்குப் பக்கத்தில் கூடாரம் போட்டுத் தங்கினார். **19** பின்பு, கூடா
ரம் போட்டுத் தங்கிய நிலத்தை சீகேமின் அப்பாவான ஏமோரின் மகன்
களிடமிருந்து 100 வெள்ளிக் காசுகளுக்கு வாங்கினார்.[g] **20** அங்கு ஒரு
பலிபீடத்தைக் கட்டி, ஏல் எல்லோகே இஸ்ரவேல்* என்று அதற்குப் பெயர்
வைத்தார்.[h]

34 யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த தீனாள்,[i] அந்தத் தேசத்திலி
ருந்த இளம் பெண்களோடு[j] பொழுதைக் கழிப்பதற்காக* அடிக்கடி
போய்வந்தாள். **2** அங்கே ஏவியர்களின்[k] தலைவனான ஏமோரின் மகன்
சீகேம் அவளைக் கவனித்தான். அவன் அவளைக் கொண்டுபோய்ப் பலாத்
காரம் செய்தான். **3** அதன்பின், யாக்கோபின் மகளான தீனாளின் மேல்
பைத்தியமாக இருந்தான். அவளைக் காதலித்ததால் அவளுடைய மனதை
மயக்கும் விதத்தில் பேசினான். **4** கடைசியில், தன்னுடைய அப்பா
ஏமோரிடம்[l] போய், “இந்தப் பெண்ணை எப்படியாவது எனக்குக் கல்யா
ணம் செய்து வையுங்கள்” என்று சொன்னான்.

5 தன்னுடைய மகள் தீனாளை சீகேம் கெடுத்துவிட்டான் என்ற விஷ
யத்தை யாக்கோபு கேள்விப்பட்டார். ஆனால், அவருடைய மகன்கள் மந்
தையை மேய்ப்பதற்காகப் போயிருந்ததால் அவர்கள் வரும்வரை அமைதி
யாக இருந்தார். **6** அதற்குள், நடந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதற்காக
சீகேமின் அப்பா ஏமோர் யாக்கோபிடம் வந்தார். **7** யாக்கோபின் மகன்க
ளும் நடந்ததைக் கேள்விப்பட்டு, பயங்கர கோபத்தோடு உடனே கிளம்பி
வந்தார்கள். சீகேம் யாக்கோபுடைய மகளைப் பலாத்காரம் செய்து

33:13 *அதாவது, “குட்டிகளுக்குப் பாலூட்டுகிற.” **33:17** *அர்த்தம், “பந்தல்கள்; கொட்டகைகள்.” **33:20** *அர்த்தம், “இஸ்ரவேலின் கடவுளே கடவுள்.” **34:1** *வே.வா., “பெண்களைப் பார்ப்பதற்காக.”

இஸ்ரவேலை அவமானப்படுத்தியது[a] பெரிய அட்டூழியம்[b] என்று அவர்கள்
நினைத்தார்கள்.

8 ஏமோர் அவர்களைப் பார்த்து, “என் மகன் சீகேம் உங்கள் மகள்
மேல் உயிரையே வைத்திருக்கிறான். தயவுசெய்து அவளை அவனுக்குக்
கல்யாணம் பண்ணி வையுங்கள். **9** எங்களோடு சம்பந்தம் பண்ணுங்கள்.
நாம் ஒருவருக்கொருவர் பெண் கொடுத்து, பெண் எடுத்துக்கொள்ளலாம்.[c]
10 நீங்கள் எங்களுடைய தேசத்தில் எங்கு வேண்டுமானாலும் தங்க
லாம். இங்கேயே குடியிருந்து, வியாபாரம் செய்து, சொத்துகளைச் சேர்த்
துக்கொள்ளலாம்” என்றார். **11** அப்போது சீகேம் தீனாளுடைய அப்பாவி
டமும் அண்ணன்களிடமும், “கொஞ்சம் பெரியமனதுபண்ணுங்கள். நீங்கள்
என்ன கேட்டாலும் தருகிறேன். **12** பணமும்* பொருளும் எவ்வளவு
வேண்டுமானாலும் கேளுங்கள்.[d] அதைத் தருவதற்கு நான் தயார். உங்கள்
பெண்ணை மட்டும் எனக்கு மனைவியாகத் தந்தால் போதும்” என்று
சொன்னான்.

13 தீனாளை சீகேம் கெடுத்துவிட்டதால் அவளுடைய அண்ணன்கள்
சீகேமிடமும் அவனுடைய அப்பா ஏமோரிடமும் இப்படித் தந்திரமாகப்
பதில் சொன்னார்கள்: **14** “விருத்தசேதனம் செய்யாத ஒருவனுக்கு[e] எங்க
ளுடைய தங்கையைக் கொடுப்பது எங்களுக்குப் பெரிய அவமானம். அத
னால், நீங்கள் கேட்கிறபடி அவளைத் தர முடியாது. **15** நீங்களும் உங்க
ளுடைய ஆண்கள் எல்லாரும் எங்களைப் போலவே விருத்தசேதனம்
செய்தால்தான்[f] இந்தக் கல்யாணத்துக்கு நாங்கள் சம்மதிப்போம். **16** அப்
போதுதான், எங்களுடைய பெண்களை உங்களுக்குக் கொடுத்து உங்களு
டைய பெண்களை எங்களுக்கு எடுத்துக்கொள்வோம். உங்களோடு குடியி
ருந்து, ஒன்றுக்குள் ஒன்றாக இருப்போம். **17** ஆனால், நாங்கள்
சொல்கிறபடி நீங்கள் விருத்தசேதனம் செய்யவில்லை என்றால், எங்களு
டைய தங்கையைக் கூட்டிக்கொண்டு போய்விடுவோம்.”

18 அவர்கள் சொன்ன விஷயம் ஏமோருக்கும்[g] அவருடைய மகன் சீகே
முக்கும்[h] நல்லதாகத் தெரிந்தது. **19** சீகேம் கொஞ்சம்கூட காலம் தாழ்த்த
வில்லை.[i] ஏனென்றால், அவன் யாக்கோபுடைய மகள்மேல் கொள்ளை
ஆசை வைத்திருந்தான். அதோடு, அவனுடைய அப்பாவின் குடும்பத்தி
லேயே அவனுக்குத்தான் அதிக மதிப்பும் மரியாதையும் இருந்தது.

20 அதனால் ஏமோரும் அவருடைய மகன் சீகேமும் நகரவாசலுக்குப்
போய் அங்கிருந்த ஆண்களிடம்,[j] **21** “அந்த மனிதர்கள் நம்மோடு சமா
தானமாக இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் இந்த இடத்தில் குடியி
ருந்து வியாபாரம் செய்துகொள்ளட்டும். இந்தத் தேசத்தில்தான் இடத்துக்குப்
பஞ்சமே இல்லையே! நம்முடைய பெண்களை அவர்களுக்குக் கொடுத்து,
அவர்களுடைய பெண்களை நமக்கு எடுத்துக்கொள்ளலாம்.[k] **22** ஆனால்,
நம்முடைய ஆண்கள் எல்லாரும் அவர்களைப் போலவே விருத்தசேத
னம் செய்துகொள்ள வேண்டும்.[l] இதற்குச் சம்மதித்தால் மட்டும்தான்
அவர்கள் நம்மோடு சேர்ந்து வாழ்வார்கள், ஒன்றுக்குள் ஒன்றாக இருப்பார்
கள். **23** அப்போது, அவர்களுடைய எல்லா ஆடுமாடுகளும் சொத்துப்
பத்துகளும் நமக்குச் சொந்தமாகிவிடும். அதனால், அவர்களுக்குச் சம்ம
தம் சொல்லிவிடலாம். அவர்கள் நம்மோடு சேர்ந்து வாழட்டும்” என்றார்கள்.

34:12 * நே.மொ., “மணமகள் விலையும்.”

அதி. 34
a 2சா 13:22
b எபி 13:4
c ஆதி 24:2, 3
d ஆதி 24:53; ஓசி 3:2
e ஆதி 17:9, 12
f ஆதி 17:10
g ஆதி 33:18, 19
h ஆதி 34:2
i ஆதி 34:15
j சக 8:16
k ஆதி 34:8, 9
l ஆதி 17:11

24 ஏமோரும் அவருடைய மகன் சீகேமும் சொன்ன ஆலோசனையை
நகரவாசலில் இருந்த எல்லாரும் ஏற்றுக்கொண்டார்கள். பின்பு, அந்த நகரத்
திலிருந்த ஆண்கள் எல்லாரும் விருத்தசேதனம் செய்துகொண்டார்கள்.

25 ஆனால், மூன்றாம் நாளில் அவர்கள் இன்னமும் வலியில் இருந்த
போது யாக்கோபின் மகன்களும் தீனாளின் அண்ணன்களுமான சிமியோ
னும் லேவியும்[a] ஆளுக்கொரு வாளை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.
யாருக்கும் சந்தேகம் வராதபடி அந்த நகரத்துக்குள் நுழைந்து, அங்கிருந்த
எல்லா ஆண்களையும் கொன்றுபோட்டார்கள்.[b] **26** ஏமோரையும் அவரு
டைய மகன் சீகேமையும் வாளால் வெட்டிவிட்டு, சீகேமின் வீட்டிலிருந்த
தீனாளைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். **27** யாக்கோபுடைய மற்ற மகன்
கள் அந்த நகரத்துக்குள் புகுந்தபோது எல்லாரும் செத்துக் கிடப்பதைப்
பார்த்தார்கள். அந்த நகரத்தில் தங்களுடைய தங்கை கெடுக்கப்பட்டதால்[c]
அங்கிருந்த எல்லாவற்றையும் சூறையாடினார்கள். **28** ஆடுமாடுகளை
யும், கழுதைகளையும் பிடித்துக்கொண்டு போனார்கள். அந்த நகரத்தி
லும் வயல்வெளியிலும் இருந்த மற்ற எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு
போனார்கள். **29** அவர்களுடைய சொத்துகளையெல்லாம் எடுத்துக்
கொண்டு, அவர்களுடைய மனைவிகளையும் பிள்ளைகளையும் பிடித்
துக்கொண்டு போனார்கள். அவர்களுடைய வீடுகளில் எதையுமே விட்டு
வைக்கவில்லை.

30 அப்போது யாக்கோபு சிமியோனிடமும் லேவியிடமும்,[d] “என்னை
எவ்வளவு பெரிய பிரச்சினையில் சிக்க வைத்துவிட்டீர்கள்! இந்தத் தேசத்
தில் இருக்கிற கானானியர்கள் மத்தியிலும் பெரிசியர்கள் மத்தியிலும் என்
னுடைய பெயரைக் கெடுத்துவிட்டீர்கள்.* என்னோடு கொஞ்சம் பேர்
மட்டுமே இருப்பதால், அவர்கள் கும்பலாக வந்து என்னைத் தீர்த்துக்கட்டி
விடுவார்கள். என்னையும் என் குடும்பத்தையும் நிச்சயம் அழித்துவிடுவார்
கள்” என்று சொன்னார். **31** ஆனால் அந்த இரண்டு பேரும், “அவர்கள்
மட்டும் எங்கள் தங்கையை விபச்சாரிபோல் நடத்தலாமா?” என்றார்கள்.

35 அதன்பின் யாக்கோபிடம் கடவுள், “நீ புறப்பட்டுப் போய் பெத்தே
லில்[e] குடியிரு. உன் அண்ணன் ஏசாவிடமிருந்து நீ தப்பித்து ஓடி
யபோது[f] உன் முன்னால் தோன்றிய உண்மைக் கடவுளுக்கு அங்கே ஒரு
பலிபீடம் கட்டு” என்றார்.

2 அப்போது, யாக்கோபு தன்னுடைய குடும்பத்தாரையும் தன்னோடு
இருந்த எல்லாரையும் பார்த்து, “நீங்கள் வைத்திருக்கிற பொய் தெய்வங்க
ளின் சிலைகளைத் தூக்கிப்போடுங்கள்.[g] உங்களைச் சுத்தமாக்குங்கள்,
உங்களுடைய துணிமணிகளை மாற்றிக்கொள்ளுங்கள். **3** நாம் பெத்தே
லுக்குப் புறப்பட்டுப் போகலாம். அங்கே நான் உண்மைக் கடவுளுக்கு
ஒரு பலிபீடம் கட்டப்போகிறேன். ஏனென்றால், வேதனையில் நான் செய்த
வேண்டுதல்களை அவர் கேட்டார். நான் போன இடமெல்லாம் எனக்குத்
துணையாக இருந்தார்”[h] என்றார். **4** அப்போது, எல்லாரும் தங்களிடம்
இருந்த பொய் தெய்வங்களின் சிலைகளையும் தங்கள் காதுகளில் போட்டி
ருந்த தோடுகளையும் எடுத்து யாக்கோபிடம் கொடுத்தார்கள். அவர்
அவற்றை சீகேமுக்குப் பக்கத்தில் இருந்த பெரிய மரத்தின் கீழ் புதைத்து
வைத்தார்.*

34:30 * வே.வா., “நாறடித்துவிட்டீர்கள்.” **35:4** * வே.வா., “மறைத்துவைத்தார்.”

ஆதி. 34
a ஆதி 46:15
b ஆதி 49:5-7
c ஆதி 34:2
d ஆதி 49:5

ஆதி. 35
e ஆதி 28:19; ஆதி 31:13
f ஆதி 27:42-44
g ஆதி 31:19; உபா 5:7; யோசு 23:7; 1கொ 10:14
h ஆதி 28:13, 15; ஆதி 31:42

5 அவர்கள் அங்கிருந்து கிளம்பியபோது, அவர்களைச் சுற்றியிருந்த
எல்லா ஊர்க்காரர்களின் மனதிலும் கடவுள் திகிலை உண்டாக்கினார்.
அதனால், அவர்கள் யாக்கோபின் மகன்களைத் துரத்திக்கொண்டு போக
வில்லை. **6** கடைசியில், யாக்கோபும் அவருடன் இருந்த எல்லாரும்
கானான் தேசத்திலுள்ள லஸ்[a] என்ற பெத்தேலுக்கு வந்துசேர்ந்தார்கள்.
7 அங்கே அவர் ஒரு பலிபீடத்தைக் கட்டி அந்த இடத்துக்கு எல்-பெத்
தேல்* என்று பெயர் வைத்தார். ஏனென்றால், அவர் தன்னுடைய அண்ண
னிடமிருந்து தப்பித்து ஓடியபோது உண்மைக் கடவுள் அங்கேதான் அவர்
முன் தோன்றினார்.[b] **8** பிற்பாடு, ரெபெக்காளுக்குத் தாதியாக இருந்த
தெபொராள்[c] இறந்துபோனாள். பெத்தேலின் அடிவாரத்திலிருந்த கருவாலி
மரத்தின் கீழ் அவள் அடக்கம் செய்யப்பட்டாள். அதனால், அந்த இடத்
துக்கு அவர் அலோன்-பாகத்* என்று பெயர் வைத்தார்.

9 பதான்-அராமிலிருந்து வந்துகொண்டிருந்த யாக்கோபின் முன்னால்
கடவுள் மறுபடியும் தோன்றி அவரை ஆசீர்வதித்தார். **10** கடவுள் அவரி
டம், “இப்போது உன்னுடைய பெயர் யாக்கோபு.[d] ஆனால், இனிமேல் உன்
பெயர் இஸ்ரவேல்” என்று சொன்னார். பின்பு, அவரை இஸ்ரவேல்
என்று கூப்பிட ஆரம்பித்தார்.[e] **11** அதோடு, “நான் சர்வவல்லமையுள்ள
கடவுள்.[f] நீ பிள்ளைகளைப் பெற்று ஏராளமாகப் பெருகு. உன்னிடமி
ருந்து நிறைய ஜனக்கூட்டங்கள் உருவாகும்,[g] உன்னிடமிருந்து ராஜாக்
கள் தோன்றுவார்கள்.[h] **12** ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் கொடுப்பதாகச்
சொன்ன தேசத்தை நான் உனக்குக் கொடுப்பேன், உன்னுடைய சந்ததிக்கும்
கொடுப்பேன்”[i] என்றார். **13** அதன்பின் கடவுள், அவருடன் பேசிய இடத்
தைவிட்டு மேலே போனார்.

14 கடவுள் தன்னுடன் பேசிய இடத்தில் யாக்கோபு ஒரு நினைவுக்
கல்லை நாட்டி, அதன்மேல் திராட்சமதுவைக் காணிக்கையாக ஊற்றி
னார், எண்ணெயையும் ஊற்றினார்.[j] **15** கடவுள் தன்னோடு பேசிய அந்த
இடத்தை யாக்கோபு மறுபடியும் பெத்தேல்[k] என்று அழைத்தார்.

16 பின்பு, அவர்கள் பெத்தேலிலிருந்து புறப்பட்டார்கள். எப்பிராத்துக்குப்
போய்ச் சேர இன்னும் கொஞ்சத் தூரம் இருந்தபோது, ராகேலுக்குப் பிரசவ
வலி வந்தது. பிரசவம் மிகவும் கஷ்டமாக இருந்தது. **17** வலியில் அவள்
துடித்துக்கொண்டிருந்தபோது மருத்துவச்சி அவளிடம், “பயப்படாதே,
உனக்கு இந்தத் தடவையும் ஒரு மகன் பிறப்பான்”[l] என்று சொன்னாள்.
18 அவளுடைய (உயிர் ஊசலாடிக்கொண்டிருந்ததால்) உயிர் போகும்
நேரத்தில், அவள் தன்னுடைய மகனுக்கு பெனொனி* என்று பெயர் வைத்
தாள். அவனுடைய அப்பாவோ அவனுக்கு பென்யமீன்#[m] என்று பெயர்
வைத்தார். **19** ராகேல் இறந்துபோனாள். எப்பிராத்துக்கு, அதாவது பெத்ல
கேமுக்கு,[n] போகும் வழியில் அவள் அடக்கம் செய்யப்பட்டாள்.
20 அங்கே யாக்கோபு ஒரு பெரிய கல்லை நாட்டினார். இன்றுவரை அது
ராகேலுடைய கல்லறைக்கு நினைவுக்கல்லாக இருக்கிறது.

21 அதன்பின், இஸ்ரவேல் அங்கிருந்து புறப்பட்டு ஏதேர் கோபுரத்துக்கு
அப்பால் கூடாரம் போட்டுத் தங்கினார். **22** இஸ்ரவேல் அந்தத் தேசத்

35:7 * அர்த்தம், “பெத்தேலின் கடவுள்.” **35:8** * அர்த்தம், “அழுகையின் கருவாலி மரம்.” **35:18** * அர்த்தம், “என்னுடைய துக்கத்தின் மகன்.” # அர்த்தம், “வலது கையின் மகன்.”

அதி. 35

a ஆதி 28:19
b ஆதி 28:20-22
c ஆதி 24:59
d ஆதி 25:26; ஆதி 27:36
e ஆதி 32:28
f ஆதி 17:1; யாத் 6:3; வெளி 15:3
g ஆதி 48:3, 4
h ஆதி 17:5, 6; யோவா 12:13
i ஆதி 15:18; உபா 34:4
j ஆதி 28:18
k ஆதி 28:19
l ஆதி 30:22-24
m ஆதி 46:21; ஆதி 49:27; உபா 33:12
n ஆதி 48:7; மீ 5:2; மத் 2:6

தில் குடியிருந்தபோது, அவருடைய மகன் ரூபன் ஒருநாள் அவருடைய
மறுமனைவி பில்காளோடு உறவுகொண்டான். இதை இஸ்ரவேல் கேள்விப்
பட்டார்.[a]

யாக்கோபுக்கு 12 மகன்கள். **23** லேயாள் பெற்ற மகன்கள்: யாக்
கோபின் மூத்த மகன் ரூபன்,[b] அடுத்து சிமியோன், லேவி, யூதா, இசக்
கார், செபுலோன். **24** ராகேல் பெற்ற மகன்கள்: யோசேப்பு, பென்யமீன்.
25 ராகேலின் வேலைக்காரி பில்காள் பெற்ற மகன்கள்: தாண், நப்தலி.
26 லேயாளின் வேலைக்காரி சில்பாள் பெற்ற மகன்கள்: காத், ஆசேர்.
பதான்–அராமில் யாக்கோபுக்குப் பிறந்த மகன்கள் இவர்கள்தான்.

27 கடைசியில், யாக்கோபு தன்னுடைய அப்பா ஈசாக்கு இருந்த மம்ரே
என்ற இடத்துக்கு வந்துசேர்ந்தார்.[c] இது கீரியாத்–அர்பாவில், அதாவது எப்
ரோனில், இருந்தது. முன்பு ஆபிரகாமும் ஈசாக்கும் எப்ரோனில்தான் அன்
னியர்களாகக் குடியிருந்தார்கள்.[d] **28** ஈசாக்கு 180 வருஷங்கள் வாழ்ந்
தார்.[e] **29** அவர் நிறைய காலம் மனநிறைவோடு வாழ்ந்து, கடைசியில்
இறந்துபோனார்.* அவருடைய மகன்களான ஏசாவும் யாக்கோபும் அவரை
அடக்கம் செய்தார்கள்.[f]

36 ஏசாவின், அதாவது ஏதோமின்,[g] வரலாறு இதுதான்.
2 ஏசா கல்யாணம் செய்த கானானியப் பெண்கள்: ஏத்தியனான
ஏலோனின் மகள்[h] ஆதாள்,[i] ஏவியனான சிபியோனின் பேத்தியும் ஆனா
குவின் மகளுமான அகோலிபாமாள்,[j] **3** இஸ்மவேலின் மகளும் நெபா
யோத்தின்[k] சகோதரியுமான பஸ்மாத்.[l]

4 ஏசாவின் மனைவி ஆதாளுக்கு எலிப்பாஸ் பிறந்தான், பஸ்மாத்
துக்கு ரெகுவேல் பிறந்தான்.

5 அகோலிபாமாளுக்கு எயூஷ், யாலாம், கோராகு[m] என்ற மகன்கள்
பிறந்தார்கள்.

இவர்கள்தான் கானான் தேசத்தில் ஏசாவுக்குப் பிறந்த மகன்கள்.
6 பின்பு, ஏசா தன்னுடைய மனைவிகளையும் மகன்களையும் மகள்க
ளையும் தன்னுடைய வீட்டிலிருந்த எல்லாரையும் கூட்டிக்கொண்டு, தன்னு
டைய தம்பி யாக்கோபைவிட்டுத் தூரமாக வேறொரு தேசத்துக்குப்
போனார்.[n] அப்போது, தன்னுடைய ஆடுமாடுகளையும் மற்ற எல்லா கால்
நடைகளையும் ஓட்டிக்கொண்டு, கானான் தேசத்தில் தான் சம்பாதித்திருந்த
சொத்துகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போனார்.[o] **7** ஏனென்
றால், ஏசாவும் யாக்கோபும் ஒன்றாகச் சேர்ந்து வாழ முடியாதளவுக்கு அவர்
களுடைய உடைமைகள் ஏராளமாகப் பெருகியிருந்தன. அதோடு, அவர்கள்
குடியிருந்த தேசத்தில் அவர்களுடைய மந்தைகளுக்குப் போதுமான இடம்
இருக்கவில்லை. **8** அதனால், சேயீர் மலைப்பகுதியில்[p] ஏசா குடியேறி
னார். ஏசாவின் இன்னொரு பெயர் ஏதோம்.[q]

9 சேயீர் மலைப்பகுதியில்[r] வாழ்ந்த ஏதோமியர்களின் தகப்பனான ஏசா
வுடைய வரலாறு இதுதான்.

10 ஏசாவுடைய மகன்கள்: ஏசாவின் மனைவியான ஆதாளுக்குப் பிறந்த
எலிப்பாஸ், ஏசாவின் மனைவியான பஸ்மாத்துக்குப் பிறந்த ரெகுவேல்.[s]

35:29 * நே.மொ., “தன் முன்னோர்களுடன் சேர்க்கப்பட்டார்.” எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன.

அதி. 35
a ஆதி 49:3, 4; 1நா 5:1
b ஆதி 49:3
c ஆதி 31:17, 18
d ஆதி 15:13; எபி 11:9
e ஆதி 25:20, 26
f ஆதி 49:30, 31

அதி. 36
g ஆதி 25:30; எசே 25:12, 13; ரோ 9:13
h ஆதி 26:34
i ஆதி 36:10
j ஆதி 36:18
k ஆதி 25:13; ஆதி 28:9
l ஆதி 36:17
m 1நா 1:35
n ஆதி 27:39; ஆதி 32:3
o ஆதி 33:9
p ஆதி 14:6; உபா 2:5
q ஆதி 25:30
r உபா 2:12
s 1நா 1:35

11 எலிப்பாசின் மகன்கள்: தேமான்,[a] ஓமார், செப்போ, கத்தாம்,
கேனாஸ்.[b] 12 ஏசாவின் மகன் எலிப்பாசுக்கு திம்ணா மறுமனைவியா
னாள். அவள் எலிப்பாசுக்கு அமலேக்கைப்[c] பெற்றுக் கொடுத்தாள். இவர்
கள்தான் ஏசாவின் மனைவியான ஆதாளின் பேரன்கள்.
13 ரெகுவேலின் மகன்கள்: நாகாத், சேராகு, சம்மா, மீசா. இவர்கள்
தான் ஏசாவின் மனைவியான பஸ்மாத்தின்[d] பேரன்கள்.
14 சிபியோனின் பேத்தியும் ஆனாகுவின் மகளும் ஏசாவின் மனைவி
யுமான அகோலிபாமாளுக்குப் பிறந்த மகன்கள்: எயூஷ், யாலாம்,
கோராகு.
15 ஏசாவின் வம்சத்தில் வந்த குலத்தலைவர்கள்[e] இவர்கள்தான்: ஏசா
வின் மூத்த மகன் எலிப்பாசின் மகன்களான தேமான், ஓமார், செப்போ,
கேனாஸ்,[f] 16 கோராகு, கத்தாம், அமலேக். இவர்கள்தான் ஏதோம் தேசத்
தில் எலிப்பாசின் வம்சத்தில் வந்த குலத்தலைவர்கள்.[g] இவர்கள்தான் ஆதா
ளின் பேரன்கள்.
17 ஏசாவின் மகன் ரெகுவேலின் மகன்கள்: நாகாத், சேராகு, சம்மா, மீசா.
இவர்கள்தான் ஏதோம் தேசத்தில்[h] ரெகுவேலின் வம்சத்தில் வந்த குலத்த
லைவர்கள். இவர்கள்தான் ஏசாவின் மனைவியான பஸ்மாத்தின் பேரன்கள்.
18 ஏசாவுடைய மனைவி அகோலிபாமாளின் மகன்கள்: எயூஷ், யாலாம்,
கோராகு. இவர்கள்தான் ஆனாகுவின் மகளும் ஏசாவின் மனைவியுமான
அகோலிபாமாளின் மகன்களில் குலத்தலைவர்களாக இருந்தவர்கள்.
19 ஏசாவின் மகன்களும் அவர் வம்சத்தில் வந்த குலத்தலைவர்களும்
இவர்கள்தான். ஏசாவின் இன்னொரு பெயர் ஏதோம்.[i]
20 அந்தத் தேசத்தில் குடியிருந்த ஓரியனான சேயீரின் மகன்கள்:[j]
லோத்தான், சோபால், சிபியோன், ஆனாகு,[k] 21 திஷோன், ஏத்சேர்,
திஷான்.[l] இவர்கள்தான் ஏதோம் தேசத்திலிருந்த சேயீரின் மகன்களான ஓரி
யர்களின் குலத்தலைவர்கள்.
22 லோத்தானின் மகன்கள்: ஓரி, ஏமாம். லோத்தானின் சகோதரி:
திம்ணா.[m]
23 சோபாலின் மகன்கள்: அல்வான், மானகாத், ஏபால்,
செப்போ, ஓனாம்.
24 சிபியோனின் மகன்கள்:[n] அயா, ஆனாகு. இந்த ஆனாகு தன்னு
டைய அப்பா சிபியோனின் கழுதைகளை மேய்த்துக்கொண்டிருந்த சம
யத்தில் வெந்நீர் ஊற்றுகளை வனாந்தரத்தில் கண்டுபிடித்தான்.
25 ஆனாகுவின் பிள்ளைகள்: மகன் திஷோன், மகள் அகோலி
பாமாள்.
26 திஷோனின் மகன்கள்: எம்தான், எஸ்பான், இத்தரான், கேரான்.[o]
27 ஏத்சேரின் மகன்கள்: பில்கான், சகவான், அக்கான்.
28 திஷானின் மகன்கள்: ஊத்ஸ், அரான்.[p]
29 ஓரியர்களின் குலத்தலைவர்கள்: லோத்தான், சோபால், சிபியோன்,
ஆனாகு, 30 திஷோன், ஏத்சேர், திஷான்.[q] இவர்கள்தான் சேயீர் தேசத்
தில் இருந்த ஓரியர்களின் குலத்தலைவர்கள்.
31 இஸ்ரவேலர்களை ராஜாக்கள் ஆட்சி செய்வதற்குமுன்[r] ஏதோம்
தேசத்தை ஆட்சி செய்த ராஜாக்களின்[s] விவரம் இதுதான்: 32 பெயோ
ரின் மகன் பேலா ஏதோமில் ஆட்சி செய்தான். அவன் ஆட்சி செய்த

அதி. 36
a ஆதி 36:34
b ஆதி 36:40, 42; 1நா 1:36
c யாத் 17:8; எண் 13:29; எண் 24:20; உபா 25:19; 1சா 15:8; 1சா 30:1
d ஆதி 26:34
e யாத் 15:15
f 1நா 1:53, 54
g 1நா 1:36
h எண் 20:23; 1ரா 9:26
i ஆதி 25:30; ஆதி 32:3
j ஆதி 14:6; உபா 2:12, 22
k 1நா 1:40
l 1நா 1:38
m 1நா 1:39
n ஆதி 36:2
o 1நா 1:41
p 1நா 1:42
q 1நா 1:38
r உபா 17:14, 15; 1சா 10:19; 1நா 1:43-50
s எண் 20:14

நகரத்தின் பெயர் தின்காபா. **33** பேலா இறந்தபின், போஸ்றாவைச் சேர்ந்த
சேராகுவின் மகன் யோபாப் ஆட்சிக்கு வந்தான். **34** யோபாப் இறந்த
பின், தேமானியர்களின் தேசத்தைச் சேர்ந்த ஊசாம் ஆட்சிக்கு வந்தான்.
35 ஊசாம் இறந்தபின், பேதாத்தின் மகன் ஆதாத் ஆட்சிக்கு வந்தான்.
அவன் மோவாப் பிரதேசத்தில் மீதியானியர்களைத்[a] தோற்கடித்திருந்தான்.
அவன் ஆட்சி செய்த நகரத்தின் பெயர் ஆவீத். **36** ஆதாத் இறந்தபின்,
மஸ்ரேக்காவைச் சேர்ந்த சம்லா ஆட்சிக்கு வந்தான். **37** சம்லா இறந்த
பின், ஆற்றுக்குப் பக்கத்தில் இருந்த ரெகொபோத்தைச் சேர்ந்த சாவூல்
ஆட்சிக்கு வந்தான். **38** சாவூல் இறந்தபின், அக்போரின் மகன் பாகால்-
கானான் ஆட்சிக்கு வந்தான். **39** அக்போரின் மகன் பாகால்-கானான்
இறந்தபின், ஹாதார் ஆட்சிக்கு வந்தான். அவன் ஆட்சி செய்த நகரத்தின்
பெயர் பாகு. அவனுடைய மனைவியின் பெயர் மெகேதபேல்; இவள் மத்
ரேத்தின் மகள், மேசகாப்பின் பேத்தி.

40 அவரவர் வம்சங்களின்படியும் அவரவர் இடங்களின்படியும், ஏசா
வின் சந்ததியில் வந்த குலத்தலைவர்களின் பெயர்கள்: திம்ணா, ஆல்வா,
ஏதேத்,[b] **41** அகோலிபாமா, ஏலா, பினோன், **42** கேனாஸ், தேமான்,
மிப்சார், **43** மக்தியேல், இராம். ஏதோமியர்கள் உரிமையாக்கிக்கொண்ட
தேசத்தில்[c] அவரவர் குடியேறிய பகுதிகளின்படி குலத்தலைவர்களாக
இருந்தவர்கள் இவர்கள்தான். இந்த ஏதோமியர்களின் மூதாதை ஏசா.[d]

37 யாக்கோபு கானான் தேசத்திலேயே வாழ்ந்துவந்தார். அங்குதான்
அவருடைய அப்பாவும் அன்னியராக வாழ்ந்திருந்தார்.[e]

2 யாக்கோபின் வரலாறு இதுதான்.

அவருடைய மகன் யோசேப்பு,[f] 17 வயதாக இருந்தபோது பில்காளின்
மகன்களோடும் சில்பாளின் மகன்களோடும் சேர்ந்து ஆடுகளை மேய்த்து
வந்தான்.[g] பில்காளும் சில்பாளும் யாக்கோபின் மனைவிகள். அவர்க
ளுடைய மகன்கள்[h] செய்த தவறுகளைப் பற்றி யோசேப்பு ஒருமுறை தன்
னுடைய அப்பாவிடம் சொன்னான். **3** இஸ்ரவேல் வயதானவராக இருந்த
போது யோசேப்பு பிறந்ததால் மற்ற எல்லா மகன்களையும்விட[i] அவனை
அவர் அதிகமாக நேசித்தார். அவனுக்கு அழகான, நீளமான அங்கியையும்
செய்து கொடுத்தார். **4** அவர் யோசேப்புக்கு அதிக பாசம் காட்டியதை
அவனுடைய சகோதரர்கள் பார்த்தபோது அவனை வெறுக்கத் தொடங்கி
னார்கள். அதனால் அவனிடம் முகம்கொடுத்துக்கூட* பேசவில்லை.

5 ஒருநாள் யோசேப்பு ஒரு கனவு கண்டான், அதைத் தன்னுடைய
சகோதரர்களிடம் சொன்னபோது,[j] அவர்கள் அவனை இன்னும் அதிகமாக
வெறுக்க ஆரம்பித்தார்கள். **6** அவன் அவர்களிடம், “நான் பார்த்த கன
வைப் பற்றிச் சொல்கிறேன், தயவுசெய்து கேளுங்கள். **7** வயல் நடுவே
நாம் எல்லாரும் கதிர்களைக் கட்டிக்கொண்டிருந்தோம். அப்போது, என்னு
டைய கதிர்க்கட்டு நிமிர்ந்து நின்றது. உங்களுடைய கதிர்க்கட்டுகள் என்னு
டைய கதிர்க்கட்டைச் சுற்றிநின்று தலைவணங்கின”[k] என்று சொன்னான்.
8 அப்போது அவனுடைய சகோதரர்கள், “அப்படியென்றால் நீ ராஜா
வாகி, எங்களை அடக்கி ஆளப்போகிறாயோ?”[l] என்று கேட்டார்கள்.
அவன் பார்த்த கனவைப் பற்றிக் கேட்ட பின்பு அவர்கள் இன்னும் அதிக
மாக அவனை வெறுத்தார்கள்.

37:4 * நே.மொ., “சமாதானமாக.”

அதி. 36
a ஆதி 25:1, 2; யாத் 2:15; எண் 31:2
b 1நா 1:51-54
c உபா 2:5
d ஆதி 25:30; ஆதி 36:8

அதி. 37
e ஆதி 23:3, 4; ஆதி 28:1, 4; எபி 11:8, 9
f ஆதி 30:25; ஆதி 46:19
g ஆதி 47:3
h ஆதி 35:25; ஆதி 35:26
i 1நா 2:1, 2
j ஆதி 37:19
k ஆதி 42:6, 9
l ஆதி 45:8; ஆதி 49:26

9 அதன்பின், அவன் இன்னொரு கனவு கண்டான். உடனே தன்னுடைய
சகோதரர்களிடம் போய், “நான் இன்னொரு கனவு கண்டேன். இந்தத் தடவை
சூரியனும் சந்திரனும் 11 நட்சத்திரங்களும் எனக்கு முன்னால் தலைவணங்
கின”[a] என்று சொன்னான். **10** பின்பு, அதைத் தன் சகோதரர்களுக்கு முன்
பாகத் தன்னுடைய அப்பாவிடமும் சொன்னான். அப்போது அவர் அவ
னைக் கண்டித்து, “உன் கனவுக்கு என்ன அர்த்தம்? நானும் உன் அம்மாவும்
உன் சகோதரர்களும் உனக்கு முன்னால் தலைவணங்குவோம் என்று சொல்
கிறாயா?” என்றார். **11** அதேசமயத்தில், அவன் சொன்ன விஷயத்தைத்
தன்னுடைய மனதில் வைத்துக்கொண்டார். ஆனால் அவனுடைய சகோதரர்
களுக்கு ஒரே வயிற்றெரிச்சலாக இருந்தது.[b]

12 பின்பு, அவனுடைய சகோதரர்கள் தங்கள் அப்பாவின் ஆடுகளை
மேய்க்க சீகேமுக்குப்[c] பக்கத்தில் போனார்கள். **13** பிறகு இஸ்ரவேல்
யோசேப்பிடம், “சீகேமுக்குப் பக்கத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருக்கிற
உன் சகோதரர்களைப் போய்ப் பார்த்துவிட்டு வருவாயா?” என்று கேட்டார்.
அதற்கு அவன், “சரி அப்பா, பார்த்துவிட்டு வருகிறேன்!” என்று சொன்
னான். **14** அப்போது அவர், “உன் சகோதரர்கள் பத்திரமாக இருக்கி
றார்களா என்று பார்த்துவிட்டு வா. ஆடுகள் எப்படி இருக்கின்றன என்றும்
தயவுசெய்து பார்த்துவிட்டு வந்து சொல்” என்றார். பின்பு, அந்த எப்ரோன்
பள்ளத்தாக்கிலிருந்து[d] அவனை அனுப்பி வைத்தார், அவன் சீகேம் பக்க
மாகப் போனான். **15** அவன் வயல்வெளியில் நடந்து போய்க்கொண்டி
ருந்த சமயத்தில் ஒருவர் அவனைப் பார்த்து, “யாரைத் தேடுகிறாய்?”
என்று கேட்டார். **16** அதற்கு அவன், “என் சகோதரர்களைத் தேடுகிறேன்.
அவர்கள் எங்கே ஆடு மேய்க்கிறார்கள் என்று தெரியுமா? தெரிந்தால்
தயவுசெய்து சொல்லுங்கள்” என்றான். **17** அப்போது அவர், “அவர்கள்
இங்கிருந்து போய்விட்டார்கள். ‘தோத்தானுக்குப் போகலாம்’ என்று அவர்
கள் பேசிக்கொண்டதைக் கேட்டேன்” என்றார். அதனால், யோசேப்பு தன்
னுடைய சகோதரர்களைத் தேடி தோத்தானுக்குப் போனான். அங்கே அவர்
களைக் கண்டுபிடித்தான்.

18 அவன் வருவதை அவனுடைய சகோதரர்கள் தூரத்திலிருந்து பார்த்
தார்கள். அவன் பக்கத்தில் வருவதற்குள், அவனை எப்படிக் கொலை செய்
யலாம் என்று திட்டம் தீட்ட ஆரம்பித்தார்கள். **19** அவர்கள் ஒருவருக்கொ
ருவர், “இதோ, கனவு மன்னன் வருகிறான்![e] **20** வாருங்கள், அவனைத்
தீர்த்துக்கட்டி, இங்கே இருக்கிற ஒரு தண்ணீர்த் தொட்டிக்குள் போட்டுவி
டலாம். ஒரு காட்டு மிருகம் அவனைத் தின்றுவிட்டது என்று சொல்லிவிட
லாம். அவன் கனவெல்லாம் என்ன ஆகிறதென்று அப்புறம் பார்க்கலாம்”
என்று சொல்லிக்கொண்டார்கள். **21** ரூபன்[f] அதைக் கேட்டபோது அவர்
களிடமிருந்து அவனைக் காப்பாற்ற நினைத்தான். அதனால் அவர்களி
டம், “நாம் அவனைச் சாகடிக்க வேண்டாம்”[g] என்றான். **22** எப்படியாவது
அவர்களிடமிருந்து அவனைக் காப்பாற்றித் தன்னுடைய அப்பாவிடம் ஒப்
படைக்க வேண்டும் என்று நினைத்து, “அவனைக் கொன்றுவிடாதீர்கள்.[h]
வனாந்தரத்தில் இருக்கிற இந்தத் தொட்டிக்குள் அவனைத் தள்ளிவிடுங்கள்.
அவனுக்கு வேறு ஒன்றும் செய்துவிடாதீர்கள்”[i] என்றான்.

23 யோசேப்பு பக்கத்தில் வந்தவுடனே அவன் போட்டிருந்த அழகான
அங்கியை[j] அவர்கள் உருவிக்கொண்டார்கள். **24** பின்பு, அவனைப்

ஆதி. 37
a ஆதி 44:14; ஆதி 45:9
b அப் 7:9
c ஆதி 33:18
d ஆதி 23:19; ஆதி 35:27
e ஆதி 37:5
f ஆதி 49:3
g ஆதி 9:5; யாத் 20:13
h ஆதி 4:8, 10; ஆதி 42:22
i ஆதி 42:21
j ஆதி 37:3

அதி. 37
a ஆதி 25:12
b ஆதி 43:11
c ஆதி 4:8, 10
d அப் 7:9
e ஆதி 25:1, 2
f ஆதி 40:15
ஆதி 45:4
சங் 105:17
g ஆதி 37:3
h ஆதி 42:38
ஆதி 44:29
சங் 89:48
பிர 9:10
ஓசி 13:14
அப் 2:27
வெளி 20:13
i ஆதி 40:2, 3
j ஆதி 39:1

பிடித்து அந்தத் தண்ணீர்த் தொட்டிக்குள் தள்ளினார்கள். அந்தச் சமயத்தில்
அந்தத் தொட்டி தண்ணீர் இல்லாமல் வறண்டிருந்தது.

25 பின்பு, அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். அப்போது, கீலே
யாத்திலிருந்து வந்துகொண்டிருந்த இஸ்மவேலர்களின்[a] கூட்டத்தைப்
பார்த்தார்கள். மலைரோஜா பிசினையும் பரிமளத் தைலத்தையும் பிசின்
பட்டையையும்[b] ஒட்டகங்களில் ஏற்றிக்கொண்டு அவர்கள் எகிப்துக்குப்
போய்க்கொண்டிருந்தார்கள். **26** யூதா தன்னுடைய சகோதரர்களிடம்,
“நம்முடைய தம்பியைக் கொலை செய்துவிட்டு அதை மூடி மறைப்ப
தில் நமக்கு என்ன லாபம்?[c] **27** வாருங்கள், அவனை இந்த இஸ்மவேலர்
களிடம் விற்றுவிடுவோம்.[d] நாம் அவனைச் சாகடிக்க வேண்டாம். அவன்
நம்முடைய தம்பிதானே, நம்முடைய சொந்த இரத்தம்தானே”* என்றான்.
அதற்கு அவர்கள் சம்மதித்தார்கள். **28** யோசேப்பைத் தண்ணீர்த் தொட்
டியிலிருந்து வெளியே தூக்கி, அந்தப் பக்கமாக வந்த மீதியானிய[e] வியா
பாரிகளான இஸ்மவேலர்களிடம்* 20 வெள்ளிக் காசுகளுக்கு விற்றார்கள்.[f]
அந்த ஆட்கள் யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோனார்கள்.

29 பிற்பாடு, ரூபன் அந்தத் தண்ணீர்த் தொட்டியின் பக்கமாகத் திரும்பி
வந்தபோது, யோசேப்பு அங்கு இல்லாததைப் பார்த்து துக்கத்தில் தன்னு
டைய உடையைக் கிழித்துக்கொண்டான். **30** பின்பு தன்னுடைய சகோத
ரர்களிடம் போய், “தம்பியைக் காணோமே! ஐயோ! இப்போது நான் என்ன
செய்வேன்?” என்று பதறத்தோடு கேட்டான்.

31 அவர்கள் ஒரு வெள்ளாட்டுக் கடாவை வெட்டி, அதன் இரத்தத்தில்
யோசேப்பின் அங்கியை முக்கியெடுத்தார்கள். **32** பின்பு, அந்த அங்கி
யைத் தங்களுடைய அப்பாவிடம் அனுப்பி, “இதை நாங்கள் எதேச்சையா
கப் பார்த்தோம். இது உங்கள் மகனுடைய அங்கிதானா[g] என்று தயவு
செய்து பாருங்கள்” என்று சொல்லச் சொன்னார்கள். **33** அவர் அதைப்
பார்த்ததும், “இது என் மகனுடைய அங்கிதான்! ஐயோ! ஏதோவொரு
காட்டு மிருகம் அவனை அடித்துப்போட்டிருக்கும்! அவனைக் கடித்துக்
குதறியிருக்கும்!” என்று சொல்லி, **34** துக்கத்தில் தன்னுடைய உடையைக்
கிழித்துக்கொண்டார். பின்பு, இடுப்பில் துக்கத் துணியை* கட்டிக்கொண்டு,
தன்னுடைய மகனுக்காகப் பல நாட்கள் துக்கம் அனுசரித்தார். **35** அவரு
டைய மகன்களும் மகள்களும் அவருக்கு எவ்வளவோ ஆறுதல் சொல்
லிப் பார்த்தார்கள். ஆனால் அவர் ஆறுதலடையாமல், “என் மகனுக்காக
அழுது அழுதே நான் கல்லறைக்குள்* போய்விடுவேன்!”[h] என்று
சொல்லிப் புலம்பினார். அவனையே நினைத்துக் கண்ணீர்விட்டுக்கொண்டி
ருந்தார்.

36 அந்த மீதியானியர்கள் யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோய்,
பார்வோனின் அரண்மனை அதிகாரியாகவும் காவலர்களின் தலைவராக
வும்[i] இருந்த போத்திபாரிடம்[j] விற்றுப்போட்டார்கள்.

38 கிட்டத்தட்ட அந்தச் சமயத்தில்தான், யூதா தன்னுடைய சகோதரர்
களைவிட்டுப் பிரிந்துபோனார். அதுல்லாம் ஊரைச் சேர்ந்த ஹிரா
என்பவர் குடியிருந்த இடத்துக்குப் பக்கத்தில் அவர் கூடாரம் போட்டுத்

37:27 *நே.மொ., “சதைதானே.” **37:28** *வே.வா., “மீதியானிய வியாபாரிகளிடம்.”
37:34 *சொல் பட்டியலைப் பாருங்கள். **37:35** *மூலமொழியில், “ஷியோலுக்குள்.”
சொல் பட்டியலில் “ஷியோல்” என்ற தலைப்பைப் பாருங்கள்.

தங்கினார். **2** அங்கே சூவா என்ற ஒரு கானானியனின் மகளைப்[a] பார்த்
தார். அவளைக் கல்யாணம் செய்துகொண்டார். **3** அவள் கர்ப்பமாகி
ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். யூதா அவனுக்கு ஏர்[b] என்று பெயர்
வைத்தார். **4** அவள் மறுபடியும் கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றெடுத்
தாள். அவனுக்கு ஓனேன் என்று பெயர் வைத்தாள். **5** அதன்பின், அவள்
இன்னொரு மகனையும் பெற்றெடுத்தாள். அவனுக்கு சேலா என்று பெயர்
வைத்தாள். சேலா பிறந்தபோது அவர்* அக்சீப்பில்[c] இருந்தார்.

6 சில காலம் கழித்து, யூதா தன்னுடைய மூத்த மகன் ஏருக்கு தாமார்[d]
என்ற பெண்ணைக் கல்யாணம் செய்துவைத்தார். **7** ஆனால், யூதாவின்
மூத்த மகன் ஏர் யெகோவாவுக்குப் பிடிக்காததைச் செய்துவந்தான். அத
னால் யெகோவா அவனைக் கொன்றுபோட்டார். **8** அவன் இறந்துவிட்ட
தால் யூதா தன்னுடைய மகன் ஓனேனிடம், "கொழுந்தனுடைய* கடமைப்
படி நீ உன் அண்ணன் மனைவியைக் கல்யாணம் செய்துகொண்டு
அவனுக்கு வாரிசு உண்டாக்கு"[e] என்றார். **9** அது தன்னுடைய வாரிசாக
இருக்காது[f] என்று ஓனேனுக்குத் தெரிந்ததால், தன்னுடைய அண்ணனின்
மனைவியோடு உறவுகொண்ட எல்லா சமயத்திலும் தன் விந்துவைத் தரை
யில் விழவைத்தான்.[g] **10** அவன் செய்தது யெகோவாவுக்குப் பிடிக்கவே
இல்லை. அதனால், அவனையும் கொன்றுபோட்டார்.[h] **11** அப்போது
யூதா தன்னுடைய மருமகள் தாமாரிடம், "என் மகன் சேலா பெரியவனாகும்
வரை நீ உன்னுடைய அப்பா வீட்டுக்குப் போய் விதவையாகத் தங்கியிரு"
என்றார். ஏனென்றால், சேலாவும் அவனுடைய சகோதரர்களைப் போலச்
செத்துவிடுவானோ[i] என்று யூதா பயந்தார். அவர் சொன்னபடியே, தாமார்
தன்னுடைய அப்பாவின் வீட்டுக்குப் போய்த் தங்கியிருந்தாள்.

12 கொஞ்சக் காலம் கழித்து, சூவாவின்[j] மகளான யூதாவின் மனைவி
இறந்துபோனாள். யூதா அவளுக்காகத் துக்கம் அனுசரித்தார். பின்பு, தன்
னுடைய ஆடுகளுக்கு மயிர் கத்தரிப்பதற்காக அதுல்லாம் ஊரைச்[k] சேர்ந்த
தன்னுடைய நண்பர் ஹிராவைக் கூட்டிக்கொண்டு திம்னாவுக்குப்[l] புறப்பட்
டுப் போனார். **13** அப்போது ஒருவர் தாமாரிடம், "ஆடுகளுக்கு மயிர் கத்
தரிப்பதற்காக உன்னுடைய மாமனார் திம்னாவுக்குப் போய்க்கொண்டிருக்
கிறார்" என்று சொன்னார். **14** உடனே அவள் விதவையின் உடைகளை
மாற்றிவிட்டு, முக்காடு போட்டுக்கொண்டு, ஒரு சால்வையால் தன்னைப்
போர்த்திக்கொண்டாள். பின்பு, திம்னாவுக்குப் போகும் வழியிலிருந்த ஏனா
யிம் ஊர்வாசலில் உட்கார்ந்துகொண்டாள். சேலா பெரியவனாகியும் யூதா
அவனை அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்காததால்தான்[m] அப்படிச்
செய்தாள்.

15 யூதா அவளைப் பார்த்தவுடனே அவள் ஒரு தாசி என்று நினைத்துக்
கொண்டார். ஏனென்றால், அவள் தன்னுடைய முகத்தை மூடியிருந்தாள்.
16 அவள் தன்னுடைய மருமகள்[n] என்று தெரியாமல் அவள் பக்கமாகப்
போய், "இன்றைக்கு ராத்திரி நாம் சேர்ந்து இருக்கலாமா?" என்று கேட்டார்.
"நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள்?" என்று அவள் கேட்டாள். **17** அதற்கு
அவர், "என்னுடைய மந்தையிலிருந்து ஒரு வெள்ளாட்டுக் குட்டியை
அனுப்பி வைக்கிறேன்" என்றார். ஆனால் அவள், "அதை அனுப்பும்வரை

38:5 * அதாவது, "யூதா." **38:8** * அதாவது, "கணவனுடைய அண்ணன் அல்லது தம்
பியுடைய."

அதி. 38

a ஆதி 24:2, 3; ஆதி 28:1
b எண் 26:19
c யோசு 19:29, 31
d மத் 1:3
e உபா 25:5, 6; மத் 22:24
f ரூ 4:6
g உபா 25:7, 9
h 1நா 2:3
i எண் 26:19
j ஆதி 38:2
k ஆதி 38:1
l யோசு 15:10, 12; நியா 14:1
m உபா 25:5
n ஆதி 38:11

அதி. 38
a ஆதி 41:42
1ரா 21:8

எதையாவது எனக்கு அடமானமாகத் தருவீர்களா?” என்று கேட்டாள்.
18 அதற்கு அவர், “அடமானமாக உனக்கு என்ன வேண்டும்?” என்று கேட்
டார். அப்போது அவள், “உங்கள் முத்திரை மோதிரத்தையும்[a] அதன் கயிற்
றையும் உங்கள் கையிலுள்ள கோலையும் கொடுங்கள்” என்றாள். அவர்
அவற்றைக் கொடுத்து, அன்றைக்கு ராத்திரி அவளோடு சேர்ந்து இருந்தார்.
அதனால் அவள் கர்ப்பமானாள். **19** அதன்பின் அவள் எழுந்துபோய்,
தன்னுடைய சால்வையை எடுத்துவிட்டு விதவையின் உடைகளைப் போட்
டுக்கொண்டாள்.

20 பின்பு யூதா, அதுல்லாம் ஊரைச் சேர்ந்த தன்னுடைய நண்பரின்[b]
கையில் அந்த வெள்ளாட்டுக் குட்டியைக் கொடுத்து, அந்தப் பெண்ணிட
மிருந்த அடமானத்தை வாங்கிவரச் சொன்னார். ஆனால், அவரால் அவ
ளைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. **21** அதனால் அவர் அந்த ஊரி
லிருந்த ஆண்களிடம் போய், “ஏனாயிமில் வழியோரமாக உட்கார்ந்திருந்த
கோயில் தாசி* எங்கே?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “கோயில்
தாசி யாரும் இந்த ஊரில் இருந்ததே கிடையாது” என்றார்கள். **22** கடை
சியில் அவர் யூதாவிடம் திரும்பிப் போய், “அவளைக் கண்டுபிடிக்கவே
முடியவில்லை. அதுமட்டுமல்ல, ‘கோயில் தாசி யாரும் இந்த ஊரில்
இருந்ததே கிடையாது’ என்று அந்த ஊர்க்காரர்கள் சொன்னார்கள்” என்
றார். **23** அதற்கு யூதா, “அவற்றை அவளே வைத்துக்கொள்ளட்டும். இனி
யும் அவளைத் தேடிப்போனால் நமக்குத்தான் அவமானம். சொன்னபடியே
நான் இந்த வெள்ளாட்டுக் குட்டியை அனுப்பி வைத்தேன். என்ன செய்வது,
உன்னால் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை” என்றார்.

b ஆதி 38:1

c லேவி 21:9

24 சுமார் மூன்று மாதம் கழித்து, “உங்கள் மருமகள் தாமார் விபச்சா
ரம் செய்திருக்கிறாள், அதனால் கர்ப்பமாகிவிட்டாள்” என்று யாரோ யூதா
விடம் சொன்னார்கள். யூதா அதைக் கேட்டதும், “அவளை இழுத்து வந்து
சுட்டெரியுங்கள்”[c] என்றார். **25** அவள் இழுத்து வரப்பட்டபோது, அடமா
னப் பொருள்களைத் தன்னுடைய மாமனாரிடம் அனுப்பி, “இந்தப் பொருள்
களுக்கு யார் சொந்தக்காரரோ அவரால்தான் நான் கர்ப்பமானேன். இந்த
முத்திரை மோதிரமும், கயிறும், கோலும்[d] யாருடையது என்று தயவுசெய்து
பாருங்கள்” என்று சொல்லச் சொன்னாள். **26** யூதா அவற்றைப் பார்த்தவு
டன், “அவள் என்னைவிட நீதியுள்ளவள். அவளை என் மகன் சேலா
வுக்குக் கொடுக்காததால்தான்[e] அவள் இப்படி நடந்துகொண்டாள்” என்று
சொன்னார். அதற்குப்பின், அவளை அவர் தொடவே இல்லை.

d ஆதி 38:
16, 18

e ஆதி 38:11
உபா 25:5

27 அவளுக்குப் பிரசவ நேரம் நெருங்கியது. அவள் வயிற்றில் இரட்
டைக் குழந்தைகள் இருந்தன. **28** பிரசவ நேரத்தில், ஒரு குழந்தை
தன் கையை வெளியே நீட்டியது. உடனே மருத்துவச்சி அடையாளத்துக்
காக ஒரு சிவப்பு நூலை அதன் கையில் கட்டி, “இதுதான் முதலில் வந்த
குழந்தை” என்று சொன்னாள். **29** அந்தக் குழந்தை தன் கையை உள்ளே
இழுத்துக்கொண்டது. உடனே, இன்னொரு குழந்தை வெளியே வந்தது.
அப்போது அவள், “நீ கருப்பையைக் கிழித்துக்கொண்டு வந்திருக்கிறாய்!”
என்று சொன்னாள். அதனால், அவனுக்கு பாரேஸ்*[f] என்று பெயர் வைக்
கப்பட்டது. **30** அதன்பின், கையில் சிவப்பு நூல் கட்டப்பட்டிருந்த அவன்

f ஆதி 46:12
ரூ 4:12
1நா 2:4
லூ 3:23, 33

38:21 *அநேகமாக, “கானானிய தெய்வ வழிபாட்டின் பாகமாக விபச்சாரத்தில் ஈடு
பட்ட பெண்.” **38:29** *அர்த்தம், “கிழிதல்.”

சகோதரன் வெளியே வந்தான். அவனுக்கு சேராகு[a] என்று பெயர் வைக்
கப்பட்டது.

39 யோசேப்பை இஸ்மவேலர்கள்[b] எகிப்துக்குக் கொண்டுபோனார்
கள்.[c] எகிப்தியரான போத்திபார்[d] யோசேப்பை அவர்களிடமிருந்து
விலைக்கு வாங்கினார். போத்திபார், பார்வோனுடைய அரண்மனை அதி
காரியாகவும் காவலர்களின் தலைவராகவும் இருந்தார். **2** யெகோவா
யோசேப்போடு இருந்தார்.[e] அதனால், யோசேப்பு செய்த எல்லாவற்றிலும்
அவருக்கு வெற்றி கிடைத்தது. எகிப்தியரான அவருடைய எஜமானின் வீட்
டில் அவருக்குப் பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. **3** யெகோவா யோசேப்
போடு இருந்ததையும், அவர் செய்கிற எல்லாவற்றிலும் யெகோவா அவ
ருக்கு வெற்றி தந்ததையும் அவருடைய எஜமான் பார்த்தார்.

4 போத்திபாருக்கு யோசேப்பை மிகவும் பிடித்திருந்தது. அதனால்,
போத்திபார் அவரைத் தன்னுடைய முக்கிய உதவியாளராக நியமித்து, தன்
னுடைய வீட்டையும் தனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் அவருடைய
பொறுப்பில் ஒப்படைத்தார். **5** அந்தச் சமயத்திலிருந்து, யோசேப்புக்காக
அந்த எகிப்தியரின் வீட்டை யெகோவா ஆசீர்வதித்தார். அவருடைய
வீட்டிலும் வெளியிலும் இருந்த எல்லாவற்றையும் யெகோவா ஆசீர்வதித்
தார்.[f] **6** போத்திபார் தனக்குச் சொந்தமான எல்லாவற்றையுமே யோசேப்
பின் பொறுப்பில் விட்டுவிட்டதால், சாப்பிடுகிற உணவைத் தவிர வேறு
எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. யோசேப்பு அழகான, வாட்டசாட்ட
மான வாலிபராக ஆனார்.

7 அப்போது, அவருடைய எஜமானின் மனைவி அவரைக் காமக் கண்
ணோடு பார்க்க ஆரம்பித்தாள். “என்னோடு படு!” என்றும் கூப்பிட்டாள்.
8 ஆனால் அவர் அதற்கு ஒத்துக்கொள்ளாமல், “என் எஜமான் இந்த வீட்டி
லுள்ள எல்லாவற்றையும் என் கையில் ஒப்படைத்திருக்கிறார். என் பொறுப்
பில் இருக்கிற எதைப் பற்றியும் அவர் கவலைப்படுவதில்லை. **9** இந்த
வீட்டிலேயே எனக்குத்தான் நிறைய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்.
எதையுமே அவர் எனக்குத் தராமல் இருக்கவில்லை, உங்களைத் தவிர!
ஏனென்றால், நீங்கள் அவருடைய மனைவி! அப்படியிருக்கும்போது, நான்
எப்படி இவ்வளவு பெரிய தவறு செய்து, கடவுளுக்கு விரோதமாகப் பாவம்
பண்ணுவேன்?”[g] என்று சொன்னார்.

10 தினமும் அவள் யோசேப்பிடம் குழைந்துகொண்டே இருந்தாள்.
ஆனால், அவளோடு படுக்கவோ பொழுதைக் கழிக்கவோ அவர் சம்மதிக்
கவே இல்லை. **11** ஒருநாள், வேலையைக் கவனிக்க வீட்டுக்குள் அவர்
போனபோது, அங்கு வேலைக்காரர்கள் யாரும் இல்லை. **12** அப்போது
அவள் அவருடைய அங்கியைப் பிடித்திழுத்து, “என்னோடு படு!”
என்று கூப்பிட்டாள். ஆனால், அவர் தன்னுடைய அங்கியை அவளு
டைய கையில் விட்டுவிட்டு வெளியே ஓடிப்போனார். **13** அவர் தன்னு
டைய அங்கியை விட்டுவிட்டு ஓடிப்போனதைப் பார்த்ததும், **14** அவள்
கூச்சல் போட்டு தன்னுடைய வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, “பாருங்
கள்! என் கணவர் கூட்டிக்கொண்டுவந்த இந்த எபிரெயன் நம் மானத்தை
வாங்கப் பார்த்தான். என்னைக் கெடுக்க வந்தான். ஆனால், நான் பயங்கர
மாகக் கத்திக் கூச்சல் போட்டேன். **15** நான் போட்ட கூச்சலில், அவனு
டைய அங்கியை இங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டான்” என்று சொன்

அதி. 38
a மத் 1:3

அதி. 39
b ஆதி 17:20
ஆதி 37:25
c சங் 105:17
அப் 7:9
d ஆதி 37:36
e ரோ 8:31
எபி 13:6
f ஆதி 30:27
g ஆதி 2:24
ஆதி 20:3, 6
சங் 51:மே.கு., 4
மாற் 10:7, 8
எபி 13:4

னாள். **16** அதன்பின், போத்திபார் வரும்வரை அவள் அந்த அங்கியைத் தன்னிடம் வைத்திருந்தாள்.

17 யோசேப்பின் எஜமான் வந்ததும், “நீங்கள் கூட்டிக்கொண்டுவந்த அந்த எபிரெய வேலைக்காரன் என் மானத்தை வாங்கப் பார்த்தான். **18** நான் கத்திக் கூச்சல் போட்டவுடனே, தன்னுடைய அங்கியை இங்கே போட்டுவிட்டு ஓடிவிட்டான்” என்று சொன்னாள். **19** “உங்கள் வேலைக்காரன் எனக்கு இப்படிச் செய்தான்” என்று தன்னுடைய மனைவி சொன்னதைக் கேட்டதும் அவருக்குப் பயங்கர கோபம் வந்தது. **20** அதனால் யோசேப்பைப் பிடித்து, அரசு கைதிகள் வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையில் போடக் கட்டளையிட்டார். யோசேப்பு அந்தச் சிறைச்சாலையிலேயே அடைபட்டுக் கிடந்தார்.[a]

21 ஆனால், யெகோவா யோசேப்புடனேயே இருந்தார். அவரைக் கைவிடாமல் மாறாத அன்பை எப்போதும் காட்டிவந்தார். சிறைச்சாலையின் முக்கிய அதிகாரியுடைய பிரியம் யோசேப்புக்குக் கிடைக்கும்படி செய்தார்.[b] **22** அதனால், அந்த அதிகாரி அங்கிருந்த எல்லா கைதிகளையும் யோசேப்பின் கண்காணிப்பில் விட்டுவிட்டார். கைதிகள் செய்த எல்லா வேலைகளையும் யோசேப்புதான் மேற்பார்வை செய்துவந்தார்.[c] **23** யோசேப்பின் பொறுப்பில் விடப்பட்ட எதைப் பற்றியும் அந்த அதிகாரி கவலைப்படவில்லை. ஏனென்றால், யெகோவா யோசேப்புடனேயே இருந்தார். யோசேப்பு செய்த எல்லாவற்றிலும் யெகோவா அவருக்கு வெற்றி தந்தார்.[d]

40 பிற்பாடு, எகிப்து ராஜாவுக்குப் பானம் பரிமாறுபவர்களின் தலைவனும்[e] ரொட்டி சுடுபவர்களின் தலைவனும் ராஜாவுக்கு எதிராகப் பாவம் செய்தார்கள். **2** அதனால், அந்த இரண்டு அதிகாரிகள்மேலும் பார்வோனுக்குப் பயங்கர கோபம் வந்தது.[f] **3** அவர்களைக் காவலர்களுடைய தலைவரின்[g] பொறுப்பிலிருந்த சிறைச்சாலையில்* தள்ளினார். அங்குதான் யோசேப்பும் கைதியாக இருந்தார்.[h] **4** காவலர்களுடைய தலைவர் அந்த இரண்டு பேரையும் கவனித்துக்கொள்கிற பொறுப்பை யோசேப்புக்குக் கொடுத்தார்.[i] அந்த இரண்டு பேரும் கொஞ்சக் காலம் அந்தச் சிறைச்சாலையில் இருந்தார்கள்.

5 எகிப்து ராஜாவுடைய அந்த இரண்டு அதிகாரிகளும் சிறைச்சாலையில் இருந்தபோது, ஒருநாள் ராத்திரி ஆளுக்கொரு கனவு கண்டார்கள். ஒவ்வொருவருடைய கனவுக்கும் ஒவ்வொரு அர்த்தம் இருந்தது. **6** அடுத்த நாள் காலையில் யோசேப்பு உள்ளே வந்து பார்த்தபோது, அவர்களுடைய முகம் வாடிப்போயிருந்தது. **7** அதனால், சிறைச்சாலையில் தன்னோடு அடைக்கப்பட்டிருந்த அந்த அதிகாரிகளைப் பார்த்து, “இன்றைக்கு ஏன் உங்கள் முகம் வாடியிருக்கிறது?” என்று கேட்டார். **8** அதற்கு அவர்கள், “நாங்கள் இரண்டு பேரும் கனவு கண்டோம். ஆனால், அதற்கு அர்த்தம் சொல்ல யாரும் இல்லை” என்று சொன்னார்கள். அப்போது யோசேப்பு, “கடவுளால் மட்டும்தானே கனவுகளுக்கு அர்த்தம் சொல்ல முடியும்?[j] நீங்கள் என்ன கனவு கண்டீர்கள் என்று தயவுசெய்து சொல்லுங்கள்” என்றார்.

40:3 * வே.வா., “தலைவரின் வீட்டுச் சிறைச்சாலையில்.”

அதி. 39
- *a* சங் 105:17, 18
- *b* ஆதி 40:2, 3; சங் 105:19; அப் 7:9
- *c* ஆதி 39:6
- *d* ஆதி 49:22, 25; அப் 7:9, 10

அதி. 40
- *e* ஆதி 40:11
- *f* ஆதி 40:20–22
- *g* ஆதி 37:36
- *h* ஆதி 39:20; சங் 105:17, 18
- *i* ஆதி 39:22
- *j* ஆதி 41:15, 16; தானி 2:28, 45

9 அப்போது, பானம் பரிமாறுபவர்களின் தலைவன் தன்னுடைய
கனவை யோசேப்பிடம் சொன்னான். அவன், “என் முன்னால் ஒரு திராட்
சைக் கொடி இருப்பதைப் பார்த்தேன். **10** அந்தத் திராட்சைக் கொடியில்
மூன்று கிளைகள் இருந்தன. அவை துளிர்விட்டு, பூ பூத்தன. அவற்றில்
திராட்சைகள் கொத்துக்கொத்தாகப் பழுத்துத் தொங்கின. **11** பார்வோனு
டைய கோப்பை என் கையில் இருந்தது. அப்போது, நான் அந்தத் திராட்
சைப் பழங்களைப் பறித்து பார்வோனின் கோப்பையில் பிழிந்தேன். பின்பு,
அந்தக் கோப்பையை பார்வோனின் கையில் கொடுத்தேன்” என்று சொன்
னான். **12** யோசேப்பு அவனிடம், “இந்தக் கனவின் அர்த்தம் இதுதான்:
மூன்று கிளைகள் என்பது மூன்று நாட்கள். **13** இன்னும் மூன்று நாட்க
ளில் பார்வோன் உங்களை விடுதலை செய்து மறுபடியும் அதே பதவியைக்
கொடுப்பார்.[a] முன்பு போலவே பார்வோனுக்கு நீங்கள் பானம் பரிமாறுவீர்
கள்.[b] **14** அப்படி உங்களுக்கு நல்லது நடக்கும்போது என்னை நினைத்
துக்கொள்ளுங்கள். தயவுசெய்து எனக்கு விசுவாசமாக இருங்கள். என்
னைப் பற்றி பார்வோனிடம் சொல்லி இந்தச் சிறையிலிருந்து வெளியே வர
உதவி செய்யுங்கள். **15** எபிரெயர்களுடைய தேசத்திலிருந்து நான் கடத்தி
வரப்பட்டேன்.[c] சிறைச்சாலையில் போடுமளவுக்கு நான் எந்தத் தவறும்
செய்யவில்லை”[d] என்று சொன்னார்.

16 பானம் பரிமாறுபவர்களின் தலைவனுக்கு நல்லது நடக்குமென்று
யோசேப்பு சொன்னதைக் கேட்டு, ரொட்டி சுடுபவர்களின் தலைவன் அவ
ரிடம், “நானும் ஒரு கனவு கண்டேன். என்னுடைய தலையில் மூன்று ரொட்
டிக் கூடைகள் இருந்தன. **17** பார்வோனுக்காகச் சுட்ட எல்லா வகையான
ரொட்டிகளும் மேல் கூடையில் இருந்தன. ஆனால், பறவைகள் அவற்
றைத் தின்றுவிட்டன” என்றான். **18** அதற்கு யோசேப்பு, “இந்தக் கனவின்
அர்த்தம் இதுதான்: மூன்று கூடைகள் என்பது மூன்று நாட்கள். **19** இன்
னும் மூன்று நாட்களில் பார்வோன் உங்கள் தலையை வெட்டி, உங்கள்
உடலை மரக் கம்பத்தில் தொங்கவிடுவார். உங்கள் சதையைப் பறவைகள்
தின்னும்”[e] என்றார்.

20 மூன்றாம் நாளில் பார்வோனின் பிறந்த நாள் விழா நடந்தது.[f] அவன்
தன்னுடைய ஊழியர்கள் எல்லாருக்கும் விருந்து வைத்தான். அப்போது,
பானம் பரிமாறுபவர்களின் தலைவனையும் ரொட்டி சுடுபவர்களின் தலை
வனையும் தன்னுடைய ஊழியர்களுக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தி
னான். **21** பானம் பரிமாறுபவர்களின் தலைவனுக்கு மறுபடியும் அதே பத
வியைக் கொடுத்தான். அவன் பார்வோனுடைய கையில் முன்பு போலவே
கோப்பையைக் கொடுத்தான். **22** ஆனால், ரொட்டி சுடுபவர்களின் தலை
வனை பார்வோன் மரக் கம்பத்தில் தொங்கவிட்டான். யோசேப்பு அவர்க
ளுக்குச் சொன்னபடியே எல்லாம் நடந்தது.[g] **23** இருந்தாலும், பானம் பரி
மாறுபவர்களின் தலைவனுக்கு யோசேப்பைப் பற்றிய ஞாபகம் வரவில்லை,
அவரை மறந்துவிட்டான்.[h]

41 இரண்டு வருஷங்களுக்குப் பின்பு பார்வோன் ஒரு கனவு கண்
டான்.[i] அதில், அவன் நைல் நதிக்கரையில் நின்றுகொண்டிருந்தான்.
2 அப்போது, புஷ்டியாக இருந்த அழகான ஏழு பசுக்கள் நைல் நதியிலி
ருந்து வெளியே வந்து நதிக்கரையில் இருந்த புல்லை மேய்ந்துகொண்டிருந்
தன.[j] **3** அதற்குப்பின் நைல் நதியிலிருந்து இன்னும் ஏழு பசுக்கள்

அதி. 40
a ஆதி 41: 12, 13
b ஆதி 40: 20, 21
c ஆதி 37:28
d ஆதி 39:7, 8
e ஆதி 40: 20, 22
f மாற் 6:21
g ஆதி 40:8
h ஆதி 40:14

அதி. 41
i தானி 2:1
j ஆதி 41: 18–21

வெளியே வந்தன. அவை பார்ப்பதற்கு அசிங்கமாகவும், எலும்பும் தோலுமாகவும் இருந்தன. அவை நைல் நதிக்கரையில் இருந்த புஷ்டியான பசுக்களின் பக்கத்தில் நின்றன. **4** பின்பு, எலும்பும் தோலுமாக இருந்த அசிங்கமான பசுக்கள், புஷ்டியாக இருந்த அழகான ஏழு பசுக்களை விழுங்க ஆரம்பித்தன. உடனே, பார்வோன் தூக்கத்திலிருந்து எழுந்துகொண்டான்.

5 அவன் மறுபடியும் தூங்கியபோது இன்னொரு கனவைக் கண்டான். அதில், ஒரே தாளில் ஏழு கதிர்கள் செழிப்பாக வளர்ந்திருந்தன.[a] **6** அதற்குப்பின் முளைத்த ஏழு கதிர்கள் கிழக்கிலிருந்து வீசிய வெப்பக்காற்றினால் தீய்ந்துபோய்ப் பதராக இருந்தன. **7** பதராக இருந்த கதிர்கள் செழிப்பாக வளர்ந்திருந்த கதிர்களை விழுங்க ஆரம்பித்தன. உடனே பார்வோன் தூக்கத்திலிருந்து எழுந்துகொண்டான். அது ஒரு கனவு என்று புரிந்துகொண்டான்.

8 காலையில் அவனுக்கு ஒரே பதற்றமாக இருந்தது. அதனால், எகிப்திலிருந்த எல்லா மந்திரவாதிகளையும் ஞானிகளையும் வரச் சொல்லி, தான் கண்ட கனவுகளை அவர்களிடம் சொன்னான். ஆனால், அவற்றின் அர்த்தத்தை யாராலும் பார்வோனுக்குச் சொல்ல முடியவில்லை.

9 அப்போது, பானம் பரிமாறுபவர்களின் தலைவன் பார்வோனிடம், “நான் செய்த பாவங்களை இன்றைக்கு உங்களிடம் சொல்லிவிடுகிறேன். **10** பார்வோன் அவர்களே, நீங்கள் ஒருசமயம் ரொட்டி சுடுபவர்களின் தலைவன்மேலும் என்மேலும் பயங்கரமாகக் கோபப்பட்டு, காவலர்களின் தலைவருடைய கண்காணிப்பில் இருந்த சிறைச்சாலையில் போட்டீர்கள் இல்லையா?[b] **11** அதன் பின்பு, நாங்கள் இரண்டு பேரும் ஒரே ராத்திரியில் கனவு கண்டோம். ஒவ்வொருவருடைய கனவுக்கும் ஒவ்வொரு அர்த்தம் இருந்தது.[c] **12** அங்கே, எபிரெயனான ஒரு வாலிபன் எங்களோடு இருந்தான். அவன் காவலர்களின் தலைவருடைய ஊழியன்.[d] எங்கள் கனவை அவனிடம் சொன்னபோது,[e] ஒவ்வொரு கனவுக்கும் ஒவ்வொரு அர்த்தத்தை அவன் சொன்னான். **13** எல்லாம் அவன் சொன்னபடியே நடந்தது. எனக்கு மறுபடியும் அதே பதவி கிடைத்தது. ஆனால், ரொட்டி சுடுபவர்களின் தலைவன் மரக் கம்பத்தில் தொங்கவிடப்பட்டான்”[f] என்று சொன்னான்.

14 உடனே, யோசேப்பைக் கூட்டிக்கொண்டு வருவதற்கு பார்வோன் தன்னுடைய ஆட்களை அனுப்பினான்.[g] அவர்கள் வேகமாகப் போய் சிறைச்சாலையிலிருந்து[h] யோசேப்பைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். யோசேப்பு சவரம்* செய்து, தன் உடைகளை மாற்றிக்கொண்டு பார்வோனிடம் போனார். **15** பார்வோன் யோசேப்பிடம், “நான் ஒரு கனவு கண்டேன், அதற்கு யாராலும் அர்த்தம் சொல்ல முடியவில்லை. ஆனால், நீ கனவுகளுக்கு அர்த்தம் சொல்வாய் என்று கேள்விப்பட்டேன்”[i] என்றான். **16** அதற்கு யோசேப்பு, “நான் இல்லை, பார்வோனாகிய உங்களுக்குக் கடவுள்தான் நல்ல செய்தி சொல்வார்”[j] என்றார்.

17 அப்போது பார்வோன் யோசேப்பிடம், “என் கனவு இதுதான். நைல் நதிக்கரையில் நான் நின்றுகொண்டிருந்தேன். **18** அப்போது, அந்த நைல் நதியிலிருந்து புஷ்டியாக இருந்த அழகான ஏழு பசுக்கள் வெளியே வந்து

அதி. 41

a ஆதி 41: 22-24

b ஆதி 40:2, 3

c ஆதி 40:5

d ஆதி 39:1

e ஆதி 40:8

f ஆதி 40: 21, 22

g சங் 105:20

h ஆதி 40:15

i தானி 5:12 அப் 7:9, 10

j ஆதி 40:8 தானி 2:23, 28

41:14 *இதற்கான எபிரெய வார்த்தை, முகத்தையும் தலையையும் சவரம் செய்வதைக் குறிக்கலாம்.

நதிக்கரையில் இருந்த புல்லை மேய்ந்துகொண்டிருந்தன.[a] **19** அதற்குப்
பின் இன்னும் ஏழு பசுக்கள் வெளியே வந்தன. அவை பார்ப்பதற்குப் பரி
தாபமாகவும், அசிங்கமாகவும், எலும்பும் தோலுமாகவும் இருந்தன. இந்த
எகிப்து தேசத்தில் எங்கேயும் அப்படிப்பட்ட அசிங்கமான பசுக்களை நான்
பார்த்ததே இல்லை. **20** நோஞ்சானாகவும், அசிங்கமாகவும் இருந்த பசுக்
கள், முதலில் நான் பார்த்த புஷ்டியான ஏழு பசுக்களை விழுங்க ஆரம்பித்
தன. **21** ஆனால் அவற்றை விழுங்கிய பின்பும், விழுங்கிய அறிகுறியே
தெரியவில்லை. அவை முன்பு போலவே எலும்பும் தோலுமாக இருந்தன.
அப்போது, நான் தூக்கத்திலிருந்து எழுந்துகொண்டேன்.

22 அதன்பின், நான் மறுபடியும் ஒரு கனவு கண்டேன். ஒரே தாளில்
ஏழு கதிர்கள் செழிப்பாக வளர்ந்திருந்தன.[b] **23** அதற்குப்பின் முளைத்த
ஏழு கதிர்கள் கிழக்கிலிருந்து வீசிய வெப்பக்காற்றினால் வாடி வதங்கி
தீய்ந்துபோய்ப் பதராக இருந்தன. **24** பதராக இருந்த கதிர்கள் செழிப்
பாக வளர்ந்திருந்த ஏழு கதிர்களை விழுங்கத் தொடங்கின. இந்தக் கனவை
நான் மந்திரவாதிகளிடம் சொன்னேன்,[c] ஆனால் யாராலும் அதற்கு அர்த்
தம் சொல்ல முடியவில்லை"[d] என்று சொன்னான்.

25 அதற்கு யோசேப்பு, "பார்வோன் அவர்களே, உங்களுடைய இரண்டு
கனவுகளுக்கும் அர்த்தம் ஒன்றுதான். உண்மைக் கடவுள், தான் செய்யப்
போவதை பார்வோனாகிய உங்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்.[e]
26 புஷ்டியான ஏழு பசுக்கள் ஏழு வருஷங்களைக் குறிக்கின்றன.
அதேபோல், செழுமையான ஏழு கதிர்களும் ஏழு வருஷங்களைக் குறிக்
கின்றன. இரண்டு கனவுகளுக்கும் ஒரே அர்த்தம்தான். **27** அடுத்து வந்த
அசிங்கமான ஏழு நோஞ்சான் பசுக்களும் ஏழு வருஷங்களைக் குறிக்
கின்றன. கிழக்கிலிருந்து வீசிய வெப்பக்காற்றினால் தீய்ந்து பதராகிப்போன
ஏழு கதிர்கள் ஏழு வருஷங்களுக்கு வரப்போகும் பஞ்சத்தைக் குறிக்கின்
றன. **28** பார்வோனாகிய உங்களுக்கு நான் சொன்னது போலவே உண்
மைக் கடவுள், தான் செய்யப்போவதை உங்களுக்குத் தெரியப்படுத்தியி
ருக்கிறார்.

29 எகிப்து தேசம் முழுக்க ஏழு வருஷங்களுக்கு அமோக விளைச்சல்
இருக்கும். **30** ஆனால், அதற்குப்பின் ஏழு வருஷங்களுக்குப் பஞ்சம்
வரும். அப்போது, எகிப்து தேசத்தில் அமோக விளைச்சல் கிடைத்த காலத்
தையே ஜனங்கள் மறந்துபோவார்கள். அந்தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்
கும்.[f] **31** முன்பிருந்த அமோக விளைச்சல் ஜனங்களுடைய ஞாபகத்
துக்கு வராது. அந்தளவுக்குப் பஞ்சம் மிகக் கடுமையாக இருக்கும்.
32 உண்மைக் கடவுள் இதை உறுதிசெய்திருக்கிறார் என்பதற்கு அறிகுறியா
கவே பார்வோனாகிய உங்களுக்கு இந்தக் கனவு இரண்டு தடவை காட்டப்
பட்டிருக்கிறது. இதை உண்மைக் கடவுள் சீக்கிரம் நிறைவேற்றுவார்.

33 அதனால் பார்வோன் அவர்களே, விவேகமும் ஞானமும் உள்ள
ஒருவரை நீங்கள் தேடிக் கண்டுபிடித்து அவரை எகிப்து தேசத்துக்கு
அதிகாரியாக்குங்கள். **34** பார்வோனாகிய நீங்கள் தேசம் முழுவதும் கண்
காணிகளை ஏற்படுத்துங்கள். எகிப்து தேசத்தில் ஏழு வருஷங்கள் அமோக
விளைச்சல் கிடைக்கும்போது[g] ஐந்திலொரு பாகத்தை அவர்கள் பத்திர
மாக எடுத்து வைக்கட்டும். **35** வளமான அந்த வருஷங்களில் விளையும்
எல்லா உணவுப் பொருள்களையும் நகரங்களில் உள்ள பார்வோனின் கிடங்

அதி. 41
a ஆதி 41:2-4
b ஆதி 41:5-7
c ஆதி 41:8 தானி 2:2
d தானி 2:27 தானி 4:7
e தானி 2:28 ஆமோ 3:7
f அப் 7:11
g ஆதி 41: 26, 47

குகளில் அவர்கள் பாதுகாத்து வைக்கட்டும்.[a] **36** எகிப்தில் ஏழு வருஷங்க
ளுக்குப் பஞ்சம் வரும்போது இந்த உணவுப் பொருள்களைப் பயன்படுத்திக்
கொள்ளலாம். அப்போதுதான், தேசம் பஞ்சத்தால் அழிந்துபோகாது"[b] என்று
சொன்னார்.

37 அவர் சொன்னது பார்வோனுக்கும் அவனுடைய ஊழியர்களுக்கும்
நல்லதாகத் தெரிந்தது. **38** அதனால் பார்வோன் தன்னுடைய ஊழியர்க
ளிடம், "இவனைப் போல தெய்வசக்தி உள்ளவன் யாருமே இல்லை!" என்
றான். **39** பின்பு யோசேப்பிடம், "இதையெல்லாம் கடவுள்தான் உனக்குத்
தெரியப்படுத்தியிருக்கிறார். அதனால், உன்னைப் போல விவேகமும் ஞான
மும் உள்ளவன் யாருமே கிடையாது. **40** நீ என்னுடைய அரண்மனைக்கு
அதிகாரியாக இருப்பாய். என்னுடைய ஜனங்கள் எல்லாரும் மறுபேச்
சில்லாமல் உனக்குக் கீழ்ப்படிவார்கள்.[c] ராஜாவான நான் மட்டும்தான் உன்
னைவிட உயர்ந்தவனாக இருப்பேன்" என்று சொன்னான். **41** அதோடு,
"நான் உன்னை எகிப்து தேசம் முழுவதற்கும் அதிகாரியாக நியமிக்கி
றேன்"[d] என்று சொன்னான். **42** பின்பு, அவனுடைய முத்திரை மோதிரத்
தைக் கழற்றி யோசேப்பின் கையில் போட்டுவிட்டான். அவருக்கு விலை
உயர்ந்த உடைகளை உடுத்தி, கழுத்தில் தங்கச் சங்கிலியைப் போட்டுவிட்
டான். **43** அதுமட்டுமல்ல, அவரைத் தன்னுடைய இரண்டாம் ரதத்தில்
ஊர்வலம் போக வைத்துக் கௌரவித்தான். அவருக்கு முன்னால், *"அவ்
ரேக்!"** என்று கத்திக்கொண்டே ஆட்கள் போனார்கள். இப்படி, பார்வோன்
யோசேப்பை எகிப்து தேசம் முழுவதற்கும் அதிகாரியாக்கினான்.

44 அதுமட்டுமல்ல, அவன் யோசேப்பிடம், "பார்வோனாகிய நான்
சொல்கிறேன், எகிப்து தேசம் முழுவதிலும் உன்னுடைய உத்தரவு இல்லா
மல் யாரும் எதுவும் செய்ய முடியாது"[e] என்றான். **45** அதன்பின்,
யோசேப்புக்கு சாப்நாத்-பன்னேயா என்று பெயர் வைத்தான். ஓன்* நகரத்
துப் பூசாரியான போத்திபிராவின் மகள் ஆஸ்நாத்தை[f] அவருக்குக் கல்
யாணம் செய்து வைத்தான். பின்பு, எகிப்து தேசம் முழுவதையும் சுற்றிப்
பார்க்க# யோசேப்பு புறப்பட்டார்.[g] **46** எகிப்தின் ராஜாவாகிய பார்வோ
னுக்கு வேலை செய்ய ஆரம்பித்தபோது யோசேப்புக்கு 30 வயது.[h]

யோசேப்பு பார்வோனிடமிருந்து புறப்பட்டு எகிப்து தேசம் முழுவதை
யும் சுற்றிப் பார்த்தார். **47** வளமான ஏழு வருஷங்களின்போது அந்தத்
தேசத்தில் அமோக விளைச்சல் கிடைத்தது. **48** அந்த ஏழு வருஷங்கள்
முழுக்க எகிப்து தேசத்தில் விளைந்த உணவுப் பொருள்கள் எல்லாவற்றை
யும் அவர் சேகரித்து, நகரங்களில் இருந்த கிடங்குகளில் சேமித்து வந்தார்.
சுற்றியிருந்த வயல்களில் விளைந்த உணவுப் பொருள்களை எல்லா நகரத்தி
லும் சேமித்து வைத்தார். **49** கடற்கரை மணலைப் போல் தானியங்களை
ஏராளமாகக் குவித்து வைத்துக்கொண்டே இருந்தார். கடைசியில், அளக்க
முடியாத அளவுக்குத் தானியங்கள் குவிந்ததால் அவர்கள் அதை அளப்
பதையே நிறுத்திவிட்டார்கள்.

50 பஞ்ச காலம் ஆரம்பிப்பதற்கு முன்பு யோசேப்புக்கு இரண்டு
மகன்கள் பிறந்தார்கள்.[i] அவர்களை ஓன்* நகரத்துப் பூசாரியான

அதி. 41
a ஆதி 41:48, 49; அப் 7:12
b ஆதி 45:9, 11; ஆதி 47:13, 19
c ஆதி 39:6; சங் 105:21; அப் 7:9, 10
d தானி 5:7
e ஆதி 44:18; ஆதி 45:8; அப் 7:9, 10
f ஆதி 46:20
g சங் 105:21
h எண் 4:3; 2சா 5:4; லூ 3:23
i ஆதி 48:5

41:43 *மரியாதையும் கௌரவமும் கொடுக்க வேண்டும் என்பதை இந்த வார்த்தை அர்த்தப்படுத்தியிருக்கலாம். **41:45, 50** *அதாவது, "ஹெலியோபாலிஸ்." **41:45** #வே.வா., "கண்காணிக்க."

போத்திபிராவின் மகள் ஆஸ்நாத் பெற்றெடுத்தாள். **51** மூத்த மகன்
பிறந்தபோது யோசேப்பு, “என்னுடைய எல்லா பிரச்சினைகளையும் என்
அப்பாவின் குடும்பத்தையும் நான் மறக்கும்படி கடவுள் செய்தார்” என்று
சொல்லி அவனுக்கு மனாசே*[a] என்று பெயர் வைத்தார். **52** இரண்டா
வது மகன் பிறந்தபோது, “நான் கஷ்டங்கள் அனுபவித்த இந்தத் தேசத்தில்
கடவுள் என் வம்சத்தைத் தழைக்க வைத்தார்”[b] என்று சொல்லி அவனுக்கு
எப்பிராயீம்*[c] என்று பெயர் வைத்தார்.

53 பின்பு, எகிப்து தேசத்தில் அமோக விளைச்சல் கிடைத்த ஏழு வரு
ஷங்கள் முடிவுக்கு வந்தன.[d] **54** யோசேப்பு சொன்னபடியே, ஏழு வருஷ
பஞ்ச காலம் தொடங்கியது.[e] எல்லா தேசத்திலும் பஞ்சம் பரவியது.
ஆனால், எகிப்து தேசம் முழுக்க உணவுப் பொருள்கள் இருந்தன.[f]
55 கடைசியில், எகிப்து தேசத்திலும் பஞ்சம் வாட்டியெடுத்தது. அப்போது,
ஜனங்கள் உணவுப் பொருள்களைக் கேட்டு பார்வோனிடம் கெஞ்சிக் கத
றினார்கள்.[g] பார்வோன் அந்த ஜனங்களிடம், “யோசேப்பிடம் போங்
கள், அவர் என்ன சொல்கிறாரோ அதன்படியே செய்யுங்கள்”[h] என்றான்.
56 உலகம் முழுவதும் பஞ்சம் வாட்டியது.[i] எகிப்து தேசத்திலும் பஞ்சம்
ஆட்டிப்படைத்ததால், யோசேப்பு அங்கிருந்த தானியக் கிடங்குகள் எல்
லாவற்றையும் திறந்து எகிப்தியர்களுக்குத் தானியங்களை விற்க ஆரம்பித்
தார்.[j] **57** முழு உலகத்தையும் பஞ்சம் ஆட்டிப்படைத்ததால்[k] யோசேப்
பிடமிருந்து உணவுப் பொருள்களை வாங்க எல்லா தேசத்து ஜனங்களும்
எகிப்துக்கு வந்தார்கள்.

42 எகிப்தில் தானியம் இருக்கிறது என்று யாக்கோபு கேள்விப்பட்டார்.[l]
அதனால் அவர் தன்னுடைய மகன்களிடம், “ஏன் ஒருவர் முகத்தை
ஒருவர் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறீர்கள்? **2** எகிப்தில் தானியம்
கிடைக்கிறது என்று கேள்விப்பட்டேன். அங்கு போய் நமக்காகக் கொஞ்
சம் தானியம் வாங்கி வாருங்கள். அப்போதுதான், நாம் பட்டினியால் சாக
மாட்டோம்”[m] என்று சொன்னார். **3** அவர் சொன்னபடியே, யோசேப்பின்
10 அண்ணன்களும்[n] தானியம் வாங்க எகிப்துக்குப் போனார்கள்.
4 யோசேப்பின் தம்பி பென்யமீனை அவர்களுடன் யாக்கோபு அனுப்பி
வைக்கவில்லை.[o] ஏனென்றால், அவனுக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்து
விடுமோ என்று பயந்தார்.[p]

5 தானியம் வாங்குவதற்காகப் போன ஜனங்களுடன் இஸ்ரவேலின்
மகன்களும் போனார்கள். ஏனென்றால், பஞ்சம் கானான் தேசத்திலும் பர
வியிருந்தது.[q] **6** யோசேப்பு எகிப்து தேசத்துக்கு அதிகாரியாக இருந்தார்.[r]
அவர்தான் உலகத்திலிருந்த எல்லா ஜனங்களுக்கும் தானியம் விற்றுவந்
தார்.[s] அதனால், யோசேப்பின் அண்ணன்கள் அவரிடம் வந்து அவர்முன்
மண்டிபோட்டு தரைவரைக்கும் குனிந்து வணங்கினார்கள்.[t] **7** யோசேப்பு
தன்னுடைய அண்ணன்களைப் பார்த்ததுமே அடையாளம் கண்டுகொண்
டார். ஆனால், தான் யார் என்று காட்டிக்கொள்ளவே இல்லை.[u] அவர்களி
டம், “எங்கிருந்து வருகிறீர்கள்?” என்று கடுகடுப்பாகக் கேட்டார். அதற்கு
அவர்கள், “தானியம் வாங்குவதற்காக கானான் தேசத்திலிருந்து வந்திருக்
கிறோம்”[v] என்று சொன்னார்கள்.

41:51 *அர்த்தம், “மறக்கச் செய்கிறவர்; மறக்கடிக்கிறவர்.” **41:52** *அர்த்தம், “இரண்டு மடங்கு தழைத்தல்.”

அதி. 41
a ஆதி 50:23; எண் 1:34, 35
b சங் 105:17, 18; அப் 7:9, 10
c ஆதி 48:17; எண் 1:32, 33; உபா 33:17; யோசு 14:4
d ஆதி 41:26
e ஆதி 41:30; அப் 7:11
f ஆதி 45:9, 11; ஆதி 47:17
g ஆதி 47:13
h சங் 105:21
i ஆதி 43:1
j ஆதி 41: 48, 49; ஆதி 47:16
k ஆதி 47:4

அதி. 42
l ஆதி 41: 48, 49
m அப் 7:12
n 1நா 2:1, 2
o ஆதி 35: 18, 19; ஆதி 42:38; ஆதி 44:20
p ஆதி 43:14
q ஆதி 41:57; அப் 7:11
r ஆதி 41:44; ஆதி 45:8; சங் 105:21; அப் 7:9, 10
s ஆதி 47:14
t ஆதி 37:7, 9
u ஆதி 42:23
v ஆதி 37:1; அப் 7:11, 12

8 அவர்கள் யாரென்று யோசேப்புக்குத் தெரிந்துவிட்டது, ஆனால்
யோசேப்பு யாரென்று அவர்களுக்குத் தெரியவில்லை. **9** அவர்களைப்
பற்றிக் கனவு கண்டதை உடனே யோசேப்பு நினைத்துப் பார்த்தார்.[a] பின்பு
அவர்களிடம், "நீங்கள் உளவு பார்க்கிறவர்கள்! எந்தெந்த இடங்களைத்
தாக்கினால் நாட்டைப் பிடித்துவிடலாம் என்று பார்க்க வந்திருக்கிறீர்கள்!"
என்றார். **10** அதற்கு அவர்கள், "இல்லை எஜமானே! உங்கள் அடிமைக
ளாகிய நாங்கள் தானியம் வாங்க வந்திருக்கிறோம். **11** நாங்கள் எல்லா
ரும் அண்ணன் தம்பிகள், நேர்மையானவர்கள். உங்கள் அடிமைகளாகிய
நாங்கள் உளவு பார்க்கிறவர்கள் அல்ல" என்றார்கள். **12** ஆனால் அவர்,
"பொய் சொல்கிறீர்கள்! எந்தெந்த இடங்களைத் தாக்கினால் நாட்டைப்
பிடித்துவிடலாம் என்று பார்க்க வந்திருக்கிறீர்கள்!" என்றார். **13** அதற்கு
அவர்கள், "எஜமானே, எங்களுடைய அப்பா கானான் தேசத்தில் வாழ்ந்து
வருகிறார். அவருக்கு மொத்தம் 12 மகன்கள்.[b] எங்களுடைய கடைசித்
தம்பி இப்போது அப்பாவுடன் இருக்கிறான்.[c] இன்னொருவன் உயிரோடு
இல்லை"[d] என்று சொன்னார்கள்.

14 ஆனால் யோசேப்பு, "இல்லை! நான் சொன்னதுபோல் நீங்கள்
உளவு பார்க்கிறவர்கள்தான்! **15** நீங்கள் எந்தளவுக்கு உண்மை பேசுகிறீர்
கள் என்று நான் தெரிந்துகொள்ள வேண்டும். அதனால், பார்வோனு
டைய உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* உங்களுடைய கடைசித்
தம்பி இங்கே வராவிட்டால் உங்களை இங்கிருந்து அனுப்ப மாட்டேன்.[e]
16 நீங்கள் யாராவது போய் உங்களுடைய தம்பியைக் கூட்டிக்கொண்டு
வாருங்கள். அதுவரை மற்ற எல்லாரும் இங்கே கைதிகளாக இருக்க
வேண்டும். நீங்கள் எந்தளவுக்கு உண்மை பேசுகிறீர்கள் என்று அப்போது
தெரிந்துவிடும். நான் சொன்னதை நீங்கள் செய்யவில்லை என்றால், பார்
வோனுடைய உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன், நீங்கள் உளவு பார்க்
கிறவர்கள்தான்" என்று சொன்னார். **17** பின்பு, மூன்று நாட்களுக்கு அவர்
கள் எல்லாரையும் ஒன்றாகக் காவலில் வைத்தார்.

18 மூன்றாம் நாள் யோசேப்பு அவர்களிடம், "நான் தெய்வத்துக்குப்
பயப்படுகிறவன். நான் சொல்கிறபடி செய்தால் உயிர்தப்புவீர்கள். **19** நீங்
கள் நேர்மையானவர்கள் என்றால், உங்களில் ஒருவன் மட்டும் இந்தச் சிறை
யிலே கைதியாய் இருக்கட்டும். பஞ்சத்தில் தவிக்கிற குடும்பத்தாருக்காக
மற்றவர்கள் தானியம் கொண்டுபோகலாம்.[f] **20** அதன்பின் உங்களுடைய
கடைசித் தம்பியை என்னிடம் கூட்டிக்கொண்டு வாருங்கள். அப்போதுதான்,
நீங்கள் சொன்னது உண்மை என்று நம்புவேன், உங்களை உயிரோடு விடு
வேன்" என்று சொன்னார். அவர்களும் அதற்கு ஒத்துக்கொண்டார்கள்.

21 அப்போது அவர்கள் ஒருவருக்கொருவர், "நம் தம்பிக்கு நாம் செய்த
துரோகத்துக்குத்தான் இந்தத் தண்டனையை அனுபவிக்கிறோம்.[g] அவன்
வேதனையில் துடித்ததை நாம் பார்த்தோம். கருணை காட்டச் சொல்லி
அவன் எவ்வளவோ கெஞ்சினான். ஆனால், நாம் அதைக் காதில் போட்
டுக்கொள்ளவே இல்லை. அதனால்தான் இப்போது நமக்கு இந்தக் கஷ்ட
மெல்லாம் வந்திருக்கிறது" என்றார்கள். **22** அதற்கு ரூபன், "தம்பிக்கு
விரோதமாக எந்தப் பாவமும் செய்யாதீர்கள் என்று அன்றைக்கே நான்

அதி. 42
a ஆதி 37:7-9
b யாத் 1:1-4; 1நா 2:1, 2
c ஆதி 35:18, 19; ஆதி 42:38; ஆதி 43:7
d ஆதி 37:27, 35; ஆதி 44:20
e ஆதி 42:34; ஆதி 43:29
f ஆதி 45:21, 23
g ஆதி 37:18, 28; ஆதி 50:17; அப் 7:9

42:15 * வே.வா., "பார்வோன் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

சொன்னேன் இல்லையா? நீங்கள்தான் கேட்கவே இல்லை.[a] இப்போது,
அவனுடைய சாவுக்காக* நாம் பழிவாங்கப்படுகிறோம்"[b] என்று சொன்
னார். **23** அவர்கள் பேசியதை யோசேப்பு புரிந்துகொண்டார் என்பது
அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், ஒரு மொழிபெயர்ப்பாளனை
வைத்துதான் யோசேப்பு அவர்களோடு பேசினார். **24** யோசேப்பு அவர்
களைவிட்டுத் தள்ளிப்போய்க் கண்ணீர்விட்டு அழுதார்.[c] திரும்பி வந்து
அவர்களிடம் மறுபடியும் பேசினார். பின்பு, அவர்களுடைய கண் முன்னா
லேயே சிமியோனைப் பிடித்துக் கட்டிவைத்தார்.[d] **25** அதன் பின்பு,
அவர்களுடைய சாக்குப் பைகளில் தானியங்களை நிரப்பவும், அவரவர்
பணத்தைத் திரும்ப அவரவர் சாக்குப் பையில் போட்டு வைக்கவும், பய
ணத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொடுக்கவும்
யோசேப்பு தன்னுடைய ஊழியர்களுக்குக் கட்டளை கொடுத்தார். அவர்
கள் அப்படியே செய்தார்கள்.

26 யோசேப்பின் அண்ணன்கள் தங்களுடைய தானியப் பைகளைக்
கழுதைகளின் மேல் ஏற்றி அங்கிருந்து புறப்பட்டுப் போனார்கள். **27** சத்
திரத்தில், கழுதைக்குத் தீனிபோட அவர்களில் ஒருவன் தன்னுடைய சாக்
குப் பையை அவிழ்த்தபோது அந்தப் பையில் தன்னுடைய பணம் இருப்
பதைப் பார்த்தான். **28** உடனே தன்னுடைய சகோதரர்களிடம், "இங்கே
பாருங்கள், என்னுடைய பணத்தை என் பையிலேயே திரும்பவும் போட்டி
ருக்கிறார்கள்!" என்று சொன்னான். அவர்களுக்குப் பகீர் என்றது. எல்லாரும்
நடுநடுங்கிப்போய், "கடவுள் ஏன் நம்மை இப்படித் தண்டிக்கிறார்?" என்று
ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டார்கள்.

29 பின்பு, கானான் தேசத்தில் இருந்த தங்களுடைய அப்பா யாக்கோ
பிடம் வந்து, நடந்த எல்லா விஷயங்களையும் சொன்னார்கள். **30** "அந்த
நாட்டின் அதிகாரி எங்களிடம் கடுகடுப்பாகப் பேசினார்,[e] நாங்கள் உளவு
பார்க்க வந்திருப்பதாகக் குற்றம்சாட்டினார். **31** அப்போது நாங்கள் அவ
ரிடம், 'நாங்கள் நேர்மையானவர்கள். உளவு பார்க்கிறவர்கள் அல்ல.[f]
32 எங்கள் அப்பாவுக்கு மொத்தம் 12 மகன்கள்.[g] ஒரு தம்பி உயி
ரோடு இல்லை,[h] கடைசித் தம்பி இப்போது கானான் தேசத்தில் அப்பா
வுடன் இருக்கிறான்'[i] என்று சொன்னோம். **33** ஆனால் அவர் எங்களிடம்,
'நீங்கள் நேர்மையானவர்களா இல்லையா என்று நான் பார்க்க வேண்டும்.
அதனால், உங்களில் ஒருவனை மட்டும் என்னிடம் விட்டுவிட்டு,[j] பஞ்சத்
தில் இருக்கிற உங்கள் குடும்பத்தாருக்காகத் தானியம் கொண்டுபோங்கள்.[k]
34 அதன்பின், உங்களுடைய கடைசித் தம்பியை என்னிடம் கூட்டிக்
கொண்டு வாருங்கள். அப்போதுதான், நீங்கள் உளவு பார்ப்பவர்கள் அல்ல,
நேர்மையானவர்கள் என்று நம்புவேன். உங்கள் சகோதரனையும் உங்களி
டம் ஒப்படைப்பேன். பிறகு இந்தத் தேசத்தில் நீங்கள் வியாபாரம்கூட செய்
யலாம்' என்று சொன்னார்" என்றார்கள்.

35 அவர்கள் தங்களுடைய சாக்குப் பைகளை அவிழ்த்துக் கொட்டிய
போது ஒவ்வொருவருடைய சாக்கிலும் பணப் பை இருந்தது. அவர்களும்
அவர்களுடைய அப்பாவும் அந்தப் பணப் பைகளைப் பார்த்துப் பயந்துபோ
னார்கள். **36** அவர்களுடைய அப்பா யாக்கோபு அவர்களைப் பார்த்து,
"உங்களால் என் பிள்ளைகள் எல்லாரையுமே பறிகொடுத்துவிடுவேன்

42:22 *நே.மொ., "இரத்தத்துக்காக."

அதி. 42
a ஆதி 37:21
b ஆதி 9:5
c ஆதி 43:30
d ஆதி 42:19
ஆதி 43:23
e ஆதி 42:7, 9
f ஆதி 42:11
g ஆதி 42:13
h ஆதி 37: 28, 35
i ஆதி 35: 18, 19
ஆதி 42:4
j ஆதி 42:19
k ஆதி 42:2

போலிருக்கிறது![a] யோசேப்பு செத்துவிட்டான்,[b] சிமியோனும் இல்லை,[c] இப்
போது பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்கள். எல்லா கஷ்டங்க
ளும் எனக்குத்தான் வந்துசேருகிறது!" என்று புலம்பினார். **37** அப்போது
ரூபன், "அப்பா, அவனை என்னுடைய பொறுப்பில் விடுங்கள், நான் உங்க
ளிடம் அவனைப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்க்கிறேன்.[d] அவனை
நான் திரும்பவும் உங்களிடம் கொண்டுவந்து சேர்க்கவில்லை என்றால், என்
னுடைய இரண்டு மகன்களைக் கொன்றுவிடுங்கள்"[e] என்றார். **38** ஆனால்
அவர், "என் மகனை நான் உங்களோடு அனுப்ப மாட்டேன். அவனுடைய
அண்ணன் செத்துப்போய்விட்டான், இப்போது இவன் மட்டும்தான் இருக்
கிறான்.[f] போகும் வழியில் இவனுக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்
டால், அவ்வளவுதான்! இந்த வயதான காலத்தில், உங்களால் நான் துக்கத்
தோடுதான்[g] கல்லறைக்குள் போவேன்"[h] என்றார்.

43 அந்தத் தேசத்தில் பஞ்சம் கடுமையாக இருந்தது.[i] **2** எகிப்திலி
ருந்து வாங்கிவந்த தானியம் தீர்ந்துபோனபோது,[j] அவர்களு
டைய அப்பா அவர்களிடம், "மறுபடியும் போய், நமக்குக் கொஞ்சம் தானி
யம் வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்றார். **3** அப்போது யூதா அவரிடம்,
"'உங்களுடைய தம்பியைக் கூட்டிக்கொண்டு வரவில்லை என்றால் என்
முகத்திலேயே முழிக்க வேண்டாம்' என்று அந்த மனுஷர் எங்களைக் கடு
மையாக எச்சரித்திருக்கிறார்.[k] **4** தம்பியை நீங்கள் எங்களுடன் அனுப்பி
வைத்தால்தான் நாங்கள் போய் தானியம் வாங்கிக்கொண்டு வருவோம்.
5 இல்லையென்றால் நாங்கள் போக மாட்டோம். ஏனென்றால், 'உங்களு
டைய தம்பியைக் கூட்டிக்கொண்டு வராவிட்டால் என் முகத்திலேயே
முழிக்க வேண்டாம்' என்று அந்த மனுஷர் எங்களிடம் சொல்லியிருக்கி
றார்"[l] என்றார். **6** அப்போது இஸ்ரவேல்[m] அவர்களிடம், "உங்களுக்கு
இன்னொரு தம்பி இருக்கிறான் என்று அவரிடம் எதற்காகச் சொன்னீர்கள்?
ஏன் எனக்கு இவ்வளவு பெரிய பிரச்சினையைக் கொண்டுவந்தீர்கள்?" என்று
கோபமாகக் கேட்டார். **7** அதற்கு அவர்கள், "எங்களைப் பற்றி அவர்
நேரடியாகக் கேட்டார். நம் குடும்பத்தில் வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள்
என்று விசாரித்தார். 'உங்களுக்கு அப்பா இருக்கிறாரா? இன்னொரு தம்பி
இருக்கிறானா?' என்றெல்லாம் கேட்டார். அதனால்தான் நாங்கள் இதையெல்
லாம் சொன்னோம்.[n] தம்பியைக் கூட்டிக்கொண்டு வரச் சொல்வாரென்று
எங்களுக்கு எப்படித் தெரியும்?"[o] என்றார்கள்.

8 அப்போது, யூதா தன்னுடைய அப்பா இஸ்ரவேலிடம், "நீங்களும்
நாங்களும் எங்கள் பிள்ளைகுட்டிகளும்[p] சாகாமல் உயிரோடிருக்க வேண்டு
மென்றால்,[q] அவனை என்னோடு அனுப்பி வையுங்கள்.[r] நாங்கள் போகி
றோம். **9** அவனுடைய உயிருக்கு நான் உத்தரவாதம் தருகிறேன்.[s] அவ
னுக்கு ஏதாவது ஆகிவிட்டால் அதற்கு நான் பொறுப்பு. நான் அவனைக்
கூட்டிக்கொண்டு வந்து உங்கள்முன் நிறுத்தாவிட்டால், நான் சாகும்வ
ரைக்கும் அந்தப் பழி என் தலைமேல் இருக்கட்டும். **10** நீங்கள் எங்களை
முன்பே போக விட்டிருந்தால், இந்நேரத்துக்குள் இரண்டு தடவை போய்
விட்டு வந்திருப்போம்" என்று சொன்னார்.

11 அதற்கு அவர்களுடைய அப்பா இஸ்ரவேல், "அப்படியென்றால்
ஒன்று செய்யுங்கள். இந்தத் தேசத்திலுள்ள சிறந்த பொருள்களை உங்களு
டைய பைகளில் எடுத்துக்கொண்டுபோய் அவருக்கு அன்பளிப்பாகக்

அதி. 42
a ஆதி 43:14
b ஆதி 37:28, 35
c ஆதி 42:24
d ஆதி 43:8, 9; ஆதி 44:32
e ஆதி 37:22; ஆதி 46:9
f ஆதி 37:31–34; ஆதி 44:20
g ஆதி 37:34, 35; ஆதி 44:29
h சங் 89:48; பிர 9:10; ஓசி 13:14; அப் 2:27; வெளி 20:13

அதி. 43
i ஆதி 41:30; அப் 7:11
j ஆதி 42:1, 2
k ஆதி 42:15
l ஆதி 42:15
m ஆதி 32:28
n ஆதி 42:13
o ஆதி 42:16
p அப் 7:14
q ஆதி 42:1, 2
r ஆதி 37:26; ஆதி 42:38
s ஆதி 44:32

கொடுங்கள்.[a] கொஞ்சம் பரிமளத் தைலத்தையும்,[b] கொஞ்சம் தேனை
யும், மலைரோஜா பிசினையும், பிசின் பட்டையையும்,[c] பாதாமையும், பிஸ்
தாவையும் கொண்டுபோய்க் கொடுங்கள். **12** இரண்டு மடங்கு பணத்தை
எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் பைகளில் திருப்பி அனுப்பப்பட்ட பணத்
தையும்[d] எடுத்துக்கொள்ளுங்கள். அதை ஒருவேளை அவர்கள் தவறுத
லாக வைத்திருக்கலாம். **13** உங்கள் தம்பியைக் கூட்டிக்கொண்டு அந்த
மனுஷரிடம் போங்கள். **14** சர்வவல்லமையுள்ள கடவுள் உங்களுக்கு
அந்த மனுஷருடைய இரக்கம் கிடைக்கும்படி செய்யட்டும். உங்களுடைய
இன்னொரு சகோதரனை அவர் விடுதலை செய்து, அவனையும் பென்யமீ
னையும் உங்களோடு அனுப்பி வைக்கட்டும். ஒருவேளை நான் என்
பிள்ளைகளைப் பறிகொடுக்க வேண்டுமென்றால் பறிகொடுத்துதான் ஆக
வேண்டும்!"[e] என்றார்.

15 அவர்கள் அந்த அன்பளிப்புகளையும் இரண்டு மடங்கு பணத்தை
யும் எடுத்துக்கொண்டு பென்யமீனோடு எகிப்துக்குப் புறப்பட்டுப் போய்,
மறுபடியும் யோசேப்பின் முன்னால் நின்றார்கள்.[f] **16** யோசேப்பு பென்யமீ
னைப் பார்த்தவுடன், தன்னுடைய வீட்டு நிர்வாகியிடம், "இவர்களை வீட்டுக்
குக் கூட்டிக்கொண்டு போ. மத்தியானம் இவர்கள் என்னோடு சாப்பிடுவார்
கள். அதனால், ஆடுமாடுகளை அடித்து விருந்துக்கு ஏற்பாடு செய்" என்று
சொன்னார். **17** உடனே அந்த நிர்வாகி, யோசேப்பு சொன்னபடி அவர்
களை அவருடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார்.[g] **18** யோசேப்
பின் வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டதால் அவர்கள் பயந்துபோய்,
"போன தடவை நம்முடைய பைகளில் பணம் இருந்ததென்று சொல்லி இப்
போது அவர்கள் நம்மை அடித்து உதைத்து அடிமைகளாக்கிவிடுவார்கள்.
நம்முடைய கழுதைகளையும் பிடுங்கிக்கொள்வார்கள்!"[h] என்று ஒருவருக்
கொருவர் பேசிக்கொண்டார்கள்.

19 அதனால், யோசேப்பின் வீட்டு வாசலில் நின்றபடி அவர்கள் அந்த
நிர்வாகியிடம், **20** "எஜமானே! தானியம் வாங்க முன்பு ஒருமுறை நாங்
கள் இங்கே வந்திருந்தோம்.[i] **21** திரும்பிப்போகும் வழியில் ஒரு சத்திரத்
திலே எங்களுடைய பைகளைத் திறந்து பார்த்தபோது, அவரவர் பையில்
அவரவர் பணம் அப்படியே இருந்தது.[j] அதை எங்கள் கையாலேயே உங்
களிடம் திருப்பிக் கொடுக்க விரும்புகிறோம். **22** தானியம் வாங்க இன்
னும் நிறைய பணம் கொண்டுவந்திருக்கிறோம். யார் எங்களுடைய பையில்
பணத்தைத் திருப்பி வைத்தார்கள் என்று எங்களுக்குத் தெரியாது"[k] என்று
சொன்னார்கள். **23** அதற்கு அவர், "பரவாயில்லை, பயப்படாதீர்கள்! உங்
கள் முன்னோர்களுக்கும் உங்களுக்கும் கடவுளாக இருப்பவர்தான் உங்
களுடைய பைகளில் இந்தப் பணத்தை வைத்திருப்பார். நீங்கள் கொடுத்த
பணம் எனக்கு ஏற்கெனவே கிடைத்துவிட்டது" என்றார். அதன்பின், சிமி
யோனை அவர்களிடம் கூட்டிக்கொண்டு வந்தார்.[l]

24 பிறகு, அந்த நிர்வாகி அவர்களை யோசேப்பின் வீட்டுக்குள் கூட்
டிக்கொண்டுபோய், பாதங்களைக் கழுவ தண்ணீர் தந்தார். அவர்களுடைய
கழுதைகளுக்குத் தீவனமும் தந்தார். **25** அவர்கள் யோசேப்புக்காக
அன்பளிப்புகளை[m] எடுத்துத் தயாராக வைத்தார்கள். ஏனென்றால், அவர்
களோடு சாப்பிடுவதற்கு அவர் மத்தியானம் வரப்போகிறார் என்று
கேள்விப்பட்டார்கள்.[n] **26** யோசேப்பு வீட்டுக்குள் வந்தபோது, அவருக்கு

ஆதி. 43
a ஆதி 32:20
b எரே 8:22 எசே 27:17
c ஆதி 37:25
d ஆதி 42:25, 35
e ஆதி 42:36
f ஆதி 37:7, 9
g ஆதி 41:39, 40
h ஆதி 42:25, 35
i ஆதி 42:3
j ஆதி 42:27
k ஆதி 43:12
l ஆதி 42:23, 24
m ஆதி 43:11
n ஆதி 43:16

அன்பளிப்புகளைக் கொண்டுவந்து கொடுத்து, அவர்முன் சாஷ்டாங்க
மாக விழுந்தார்கள்.[a] **27** அவர் அவர்களிடம் நலம் விசாரித்தார். அதன்
பின், “உங்களுக்கு வயதான அப்பா இருப்பதாகச் சொல்லியிருந்தீர்களே,
அவர் நன்றாக இருக்கிறாரா?”[b] என்று கேட்டார். **28** அதற்கு அவர்கள்,
“உங்கள் அடிமையாகிய எங்கள் அப்பா நன்றாக இருக்கிறார்” என்று சொன்
னார்கள். பின்பு, அவர்முன் சாஷ்டாங்கமாக விழுந்தார்கள்.[c]

29 அவர் தன்னுடைய கூடப்பிறந்த தம்பி பென்யமீனைப்[d] பார்த்த
போது, “நீங்கள் சொன்ன கடைசித் தம்பி இவன்தானா?”[e] என்று கேட்டார்.
பின்பு, “என் மகனே, கடவுள் உன்னை ஆசீர்வதிக்கட்டும்” என்றார்.
30 தம்பியைப் பார்த்த பின்பு யோசேப்பினால் அழுகையை அடக்கவே
முடியவில்லை. அதனால், வேகமாக ஓர் அறைக்குள் போய் அங்கே
கண்ணீர்விட்டு அழுதார்.[f] **31** அதன்பின் தன்னுடைய உணர்ச்சியைக் கட்
டுப்படுத்திக்கொண்டு, தன்னுடைய முகத்தைக் கழுவினார். பிறகு வெளியே
வந்து தன்னுடைய வேலைக்காரர்களிடம், “உணவு பரிமாறுங்கள்” என்று
சொன்னார். **32** அவர்கள் யோசேப்புக்குத் தனியாகவும், அவருடைய
சகோதரர்களுக்குத் தனியாகவும், அங்கிருந்த எகிப்தியர்களுக்குத் தனி
யாகவும் பரிமாறினார்கள். ஏனென்றால், எபிரெயர்களுடன் உணவு சாப்பிடு
வதை எகிப்தியர்கள் அருவருப்பாக நினைத்தார்கள்.[g]

33 யோசேப்பின் சகோதரர்கள் அவர்முன் உட்கார வைக்கப்பட்டார்கள்.
அவர்களில் மூத்தவன் மூத்த மகனின் உரிமைப்படி[h] முதலாவதாகவும், மற்
றவர்கள் அவரவர் வயதின்படி வரிசையாகவும் உட்கார வைக்கப்பட்டார்கள்.
அப்போது, அவர்கள் ஒருவரை ஒருவர் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்
டார்கள். **34** அவர் தன்னுடைய மேஜையிலிருந்து உணவு வகைகளை
அவர்களுக்கு அனுப்பிக்கொண்டே இருந்தார். மற்ற எல்லாரையும்விட
பென்யமீனுக்கு ஐந்து பங்கு அதிகமாக அனுப்பினார்.[i] அவர்கள் திருப்தியா
கச் சாப்பிட்டார்கள், குடித்தார்கள்.

44 பின்பு யோசேப்பு தன்னுடைய வீட்டு நிர்வாகியிடம், “அந்த மனு
ஷர்களால் எவ்வளவு கொண்டுபோக முடியுமோ அவ்வளவு தானி
யத்தை அவரவர் பைகளில் நிரப்பு. அதற்கு மேலாக அவரவர் பணத்தைப்
போட்டுவிடு.[j] **2** ஆனால், சின்னவனுடைய பையில் மட்டும் தானியத்துக்
காக அவன் கொடுத்த பணத்தோடு சேர்த்து என்னுடைய வெள்ளிக் கோப்
பையையும் போட்டுவிடு” என்று சொன்னார். அந்த நிர்வாகியும் அப்படியே
செய்தார்.

3 பொழுது விடிந்தவுடன், அவர்கள் தங்களுடைய கழுதைகளோடு
அனுப்பி வைக்கப்பட்டார்கள். **4** அவர்கள் அந்த நகரத்தைவிட்டுக்
கொஞ்ச தூரம்தான் போயிருப்பார்கள். அப்போது யோசேப்பு அந்த நிர்வா
கியிடம், “சீக்கிரம்! அவர்களைத் துரத்திப் பிடித்து, ‘நாங்கள் நல்லது செய்த
துக்கு இப்படியா எங்களுக்குக் கெடுதல் செய்வது? **5** எங்களுடைய எஜ
மான் குடிப்பதற்கும் குறிபார்ப்பதற்கும் வைத்திருக்கிற கோப்பையை ஏன்
எடுத்துக்கொண்டு வந்தீர்கள்? பெரிய மோசடி செய்திருக்கிறீர்கள்!’ என்று
சொல்” என்றார்.

6 அந்த நிர்வாகி அவர்களைத் துரத்திப் பிடித்து, யோசேப்பு சொன்ன
படியே அவர்களிடம் சொன்னார். **7** அதற்கு அவர்கள், “எங்கள் எஜமான்
இப்படிப் பேசலாமா? உங்கள் அடிமைகளாகிய நாங்கள் இப்படியொரு

அதி. 43
a ஆதி 37:7, 9; ஆதி 42:6
b ஆதி 43:7
c ஆதி 37:7, 9
d ஆதி 35:24
e ஆதி 42:13
f ஆதி 42: 23, 24
g ஆதி 46: 33, 34; யாத் 8:26
h ஆதி 49:3; உபா 21:17
i ஆதி 45:22

அதி. 44
j ஆதி 42:25

காரியத்தைச் செய்வோமா? **8** எங்கள் பைகளில் இருந்த பணத்தைக்
கூட கானான் தேசத்திலிருந்து திரும்பக் கொண்டுவந்து தந்தோமே![a] அப்
படியிருக்கும்போது, உங்கள் எஜமானுடைய வீட்டிலிருந்து வெள்ளி
யையோ தங்கத்தையோ திருடிக்கொண்டு வருவோமா? **9** எங்கள்
யாரிடமாவது அது இருந்தால் அவனைக் கொன்றுவிடுங்கள். மற்றவர்க
ளும் உங்கள் எஜமானுக்கு அடிமைகளாக ஆகிவிடுகிறோம்" என்று சொன்
னார்கள். **10** அதற்கு அவர், "நீங்கள் சொன்னபடியே செய்யலாம். யாரி
டம் அது இருக்கிறதோ அவன் எனக்கு அடிமையாவான். மற்ற எல்லாரும்
நிரபராதிகள்" என்று சொன்னார். **11** உடனே எல்லாரும் அவரவர் பைக
ளைத் தரையில் இறக்கி வைத்து அதை அவிழ்த்தார்கள். **12** மூத்தவன்
தொடங்கி சின்னவன் வரைக்கும், ஒவ்வொருவருடைய பையையும் அவர்
கவனமாகத் தேடினார். கடைசியில், அந்தக் கோப்பை பென்யமீனின்
பையில் கண்டுபிடிக்கப்பட்டது.[b]

13 அப்போது, அவர்கள் தங்களுடைய உடையைக் கிழித்துக்கொண்டு,
தங்கள் பைகளை மறுபடியும் கழுதைகள்மேல் ஏற்றி நகரத்துக்குத்
திரும்பி வந்தார்கள். **14** யூதாவும்[c] அவருடைய சகோதரர்களும் யோசேப்
பின் வீட்டுக்குள் போனார்கள். அதுவரை யோசேப்பு அங்கேதான் இருந்
தார். அவர்கள் அவர்முன் சாஷ்டாங்கமாக விழுந்தார்கள்.[d] **15** யோசேப்பு
அவர்களைப் பார்த்து, "ஏன் இப்படிச் செய்தீர்கள்? நான் எல்லாவற்றையும்
குறிபார்த்துக்[e] கண்டுபிடித்துவிடுவேன் என்று உங்களுக்குத் தெரியாதா?"
என்று கேட்டார். **16** அதற்கு யூதா, "எங்கள் எஜமானே, உங்களிடம்
என்ன சொல்வோம்? என்ன பேசுவோம்? நாங்கள் நிரபராதிகள்* என்று எப்
படி நிரூபிப்போம்? உங்கள் அடிமைகளாகிய நாங்கள் முன்பு தப்பு செய்த
தால் இப்போது உண்மைக் கடவுள் எங்களைத் தண்டிக்கிறார்.[f] இதோ, நாங்
களும் இந்தக் கோப்பையை வைத்திருந்தவனும் உங்களுக்கு அடிமைகள்!"
என்றார். **17** ஆனால் அவர், "உங்கள் எல்லாரையும் நான் அடிமையாக்க
மாட்டேன். யாருடைய பையில் இந்தக் கோப்பை இருந்ததோ அவன் மட்
டும்தான் எனக்கு அடிமையாக இருப்பான்.[g] மற்றவர்கள் உங்களுடைய அப்
பாவிடம் சமாதானத்தோடு திரும்பிப் போகலாம்" என்று சொன்னார்.

18 அப்போது யூதா அவருக்குப் பக்கத்தில் போய், "என் எஜமானே, உங்
களிடம் கெஞ்சிக் கேட்கிறேன், அடியேன் பேசுவதைக் கொஞ்சம் கேளுங்
கள். இந்த அடிமைமேல் கோபப்படாதீர்கள். நீங்கள் பார்வோனுக்குச் சமமா
னவர்.[h] **19** எஜமானாகிய நீங்கள் இந்த அடிமைகளிடம், 'உங்களுக்கு
அப்பா இருக்கிறாரா, இன்னொரு சகோதரன் இருக்கிறானா?' என்று கேட்டீர்
கள். **20** அதற்கு நாங்கள், 'ஆமாம், ரொம்பவே வயதாகிவிட்ட அப்பாவும்,
வயதான காலத்தில் அவருக்குக் கடைசியாகப் பிறந்த ஒரு மகனும் இருக்
கிறார்கள்.[i] அவனுடைய அண்ணன் இறந்துவிட்டான்.[j] அவனுடைய அம்
மாவுக்குப் பிறந்தவர்களில் இப்போது அவன் மட்டும்தான் உயிரோடு
இருக்கிறான்.[k] அதனால், எங்கள் அப்பா அவன்மேல் உயிரையே வைத்தி
ருக்கிறார்' என்று சொன்னோம். **21** அதற்கு நீங்கள் இந்த அடிமைகளிடம்,
'அவனை நான் பார்க்க வேண்டும், என்னிடம் கூட்டிக்கொண்டு வாருங்கள்'
என்று சொன்னீர்கள்.[l] **22** ஆனால் நாங்கள் எஜமானாகிய உங்களிடம்,
'அவன் எங்கள் அப்பாவைவிட்டு வர முடியாது. அப்படி வந்தால், அவர்

44:16 * வே.வா., "நீதிமான்கள்."

அதி. 44
a ஆதி 43:12
b ஆதி 44:2
c ஆதி 43:8; ஆதி 44:32
d ஆதி 37:7, 9
e ஆதி 44:5
f ஆதி 37:18, 28; ஆதி 42:21, 22
g ஆதி 44:9
h ஆதி 41:44; ஆதி 45:8
i ஆதி 42:13; ஆதி 43:7
j ஆதி 37:31–34
k ஆதி 35:18, 19
l ஆதி 42:15; ஆதி 43:29

நிச்சயம் செத்துப்போய்விடுவார்’[a] என்று சொன்னோம். 23 அப்போது நீங்கள் இந்த அடிமைகளிடம், ‘உங்கள் தம்பியைக் கூட்டிக்கொண்டு வராவிட்டால் என் முகத்திலேயே முழிக்க வேண்டாம்’ என்று சொன்னீர்கள்.[b]

24 அதனால், உங்களுடைய அடிமையாகிய எங்கள் அப்பாவிடம் போய், எஜமானாகிய நீங்கள் சொன்னதையெல்லாம் சொன்னோம். 25 பின்பு எங்களுடைய அப்பா எங்களிடம், ‘மறுபடியும் போய், நமக்குக் கொஞ்சம் தானியம் வாங்கிக்கொண்டு வாருங்கள்’ என்றார்.[c] 26 அப்போது நாங்கள், ‘எங்களால் போக முடியாது. கடைசித் தம்பி எங்களுடன் வந்தால்தான் போவோம். அவன் எங்களோடு வராவிட்டால் எங்களால் அவருடைய முகத்தில் முழிக்க முடியாது’ என்று சொன்னோம்.[d] 27 அப்போது உங்களுடைய அடிமையாகிய எங்கள் அப்பா எங்களிடம், ‘உங்களுக்கே தெரியும், என் மனைவி எனக்கு இரண்டு மகன்களைப் பெற்றுக் கொடுத்தாள்.[e] 28 ஆனால், அவர்களில் ஒருவன் என்னைவிட்டுப் போய்விட்டான். அவனை ஏதோவொரு காட்டு மிருகம் கடித்துக் குதறியிருக்கும் என்று நினைத்துக்கொண்டேன்.[f] இதுவரைக்கும் நான் அவனைப் பார்க்கவில்லை. 29 இவனையும் நீங்கள் என்னிடமிருந்து கூட்டிக்கொண்டு போய், வழியில் இவனுக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்டால், அவ்வளவுதான்! இந்த வயதான காலத்தில், உங்களால் நான் மிகுந்த துக்கத்தோடுதான்[g] கல்லறைக்குள்[h] போவேன்’ என்றார்.

30 உங்கள் அடிமையாகிய எங்கள் அப்பா இவனை உயிருக்கு உயிராக நேசிக்கிறார். அதனால், இவன் இல்லாமல் நான் திரும்பிப் போனால், 31 உடனே அவருடைய உயிர் போய்விடும். இந்த வயதான காலத்தில் எங்கள் அப்பா எங்களால் துக்கத்தோடுதான் கல்லறைக்குள் போவார். 32 உங்கள் அடிமையாகிய நான் என்னுடைய அப்பாவிடம் இவனுக்காக உத்தரவாதம் கொடுத்திருக்கிறேன். ‘இவனைத் திரும்பவும் கூட்டிக்கொண்டு வந்து உங்கள்முன் நிறுத்தாவிட்டால், சாகும்வரைக்கும் அந்தப் பழி என் தலைமேல் இருக்கட்டும்’ என்று சொல்லியிருக்கிறேன்.[i] 33 அதனால் என் எஜமானே, தயவுசெய்து இவனுக்குப் பதிலாக என்னை உங்கள் அடிமையாக வைத்துக்கொள்ளுங்கள். இவனை மற்ற சகோதரர்களுடன் அனுப்பிவையுங்கள். 34 இவன் இல்லாமல் நான் எப்படி என் அப்பாவிடம் திரும்பிப் போவேன்? என் அப்பா துக்கத்தோடு செத்துப்போவதை என்னால் பார்க்க முடியாது!” என்று சொன்னார்.

45 யோசேப்பினால் அதற்கு மேலும் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் அங்கிருந்த தன் ஊழியர்களிடம், “எல்லாரும் இங்கிருந்து வெளியே போங்கள்!”[j] என்று சத்தமாகச் சொன்னார். தான் யாரென்று தன் சகோதரர்களுக்கு அவர் வெளிப்படுத்தியபோது யாருமே அவருடன் இல்லை.[k]

2 அவர் சத்தமாக அழுதார். அதை எகிப்தியர்களும் பார்வோனின் அரண்மனையில் இருந்தவர்களும் கேட்டார்கள். 3 கடைசியில் யோசேப்பு தன்னுடைய சகோதரர்களிடம், “நான்தான் யோசேப்பு. அப்பா நன்றாக இருக்கிறாரா?” என்று கேட்டார். அதிர்ச்சியில் அவர்களால் எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை. 4 அதனால் யோசேப்பு அவர்களிடம், “தயவுசெய்து என் பக்கத்தில் வாருங்கள்” என்று கூப்பிட்டார். அவர்கள் அவருக்குப் பக்கத்தில் போனார்கள்.

அதி. 44
a ஆதி 42:38
b ஆதி 42:20
c ஆதி 43:2
d ஆதி 43:5
e ஆதி 29:18; ஆதி 30:22-24; ஆதி 35:18, 19; ஆதி 46:19
f ஆதி 37:33
g ஆதி 37:34, 35; ஆதி 42:38; சங் 88:3
h சங் 16:10; பிர 9:10; ஓசி 13:14; அப் 2:27; வெளி 20:13
i ஆதி 43:9

அதி. 45
j ஆதி 43:30
k அப் 7:13

பின்பு அவர், "நான்தான் உங்கள் சகோதரன் யோசேப்பு, எகிப்தியர்
களிடம் நீங்கள் விற்றுப்போட்ட அதே யோசேப்புதான்.[a] **5** என்னை விற்
றதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டாம், ஒருவர்மேல் ஒருவர் பழிபோட
வேண்டாம். உங்கள் உயிரைக் காப்பாற்றத்தான் கடவுள் என்னை உங்க
ளுக்கு முன்னால் இங்கே அனுப்பியிருக்கிறார்.[b] **6** தேசத்தில் பஞ்சம்
ஆரம்பித்து இப்போதுதான் இரண்டு வருஷம் ஆகியிருக்கிறது.[c] இன்னும்
ஐந்து வருஷத்துக்கு எதையும் விதைக்கவும் முடியாது, அறுக்கவும்
முடியாது. **7** உங்களையும் உங்களுடைய வம்சத்தையும்*[d] அற்புதமாக
விடுவிப்பதற்குத்தான் கடவுள் என்னை உங்களுக்கு முன்னால் அனுப்பியி
ருக்கிறார். **8** அதனால், என்னை இங்கு அனுப்பியது நீங்கள் அல்ல. உண்
மைக் கடவுள்தான் என்னை அனுப்பியிருக்கிறார். பார்வோனுடைய முக்கிய
ஆலோசகராக* இருந்து, அவருடைய வீட்டையும் நாட்டையும் கவனித்துக்
கொள்கிற முழு பொறுப்பைக் கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறார்.[e]

9 நீங்கள் சீக்கிரமாக அப்பாவிடம் போய் இப்படிச் சொல்லுங்கள்:
'உங்கள் மகன் யோசேப்பு உங்களுக்கு இந்தச் செய்தியை அனுப்பியிருக்
கிறான்: "கடவுள் என்னை எகிப்து தேசம் முழுவதற்கும் ஆளுநராக
நியமித்திருக்கிறார்.[f] உடனே புறப்பட்டு வாருங்கள். நேரம் கடத்தாதீர்கள்.[g]
10 நீங்களும் உங்கள் மகன்களும் பேரன்களும், ஆடுமாடுகளோடும் மற்ற
எல்லாவற்றோடும் எனக்குப் பக்கத்திலேயே கோசேன் பிரதேசத்தில் குடி
யிருக்கலாம்.[h] **11** அங்கு நான் உங்களுக்கு உணவு தருவேன். ஏனென்
றால், இன்னும் ஐந்து வருஷத்துக்குப் பஞ்சம் இருக்கும்.[i] நீங்கள் வராவிட்
டால், நீங்களும் உங்களுடைய வீட்டில் இருக்கிற எல்லாரும் வறுமையில்
வாடுவீர்கள், எல்லாவற்றையும் இழந்துவிடுவீர்கள்.' இதை நான் சொன்ன
தாகச் சொல்லுங்கள். **12** உங்களிடம் பேசுவது நான்தான் என்பதை நீங்
களும் என் தம்பி பென்யமீனும் கண்கூடாகப் பார்க்கிறீர்களே.[j] **13** அத
னால், எகிப்தில் எனக்கு இருக்கிற பேரையும் புகழையும், நீங்கள் பார்த்த
எல்லாவற்றையும் அப்பாவிடம் சொல்லுங்கள். சீக்கிரமாகப் போய் அப்பா
வைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்" என்று சொன்னார்.

14 பின்பு, அவர் தன்னுடைய தம்பி பென்யமீனைக் கட்டிப்பிடித்து அழு
தார். பென்யமீனும் அவருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதார்.[k]
15 யோசேப்பு தன்னுடைய அண்ணன்கள் எல்லாருக்கும் முத்தம் கொடுத்
துவிட்டு அழுதார். அதன்பின், அவர்கள் அவரோடு பேசினார்கள்.

16 "யோசேப்பின் சகோதரர்கள் வந்திருக்கிறார்கள்!" என்ற செய்தி பார்
வோனின் அரண்மனையை எட்டியது. பார்வோனும் அவருடைய ஊழியர்
களும் அதைக் கேட்டு சந்தோஷப்பட்டார்கள். **17** பின்பு பார்வோன்
யோசேப்பிடம், "உன்னுடைய சகோதரர்களிடம் இப்படிச் சொல்: 'எல்லா
வற்றையும் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு கானான் தேசத்துக்குப் போங்
கள். **18** அப்பாவையும் வீட்டிலுள்ள எல்லாரையும் கூட்டிக்கொண்டு
வாருங்கள். எகிப்தில் இருக்கிற நல்ல நல்ல பொருள்களை நான் உங்களுக்
குத் தருவேன். இங்கு விளைகிற அருமையான உணவை நீங்கள் சாப்பிட
லாம்.'[l] **19** அதோடு நீ அவர்களிடம்,[m] 'உங்கள் பிள்ளைகளையும் மனை
விகளையும் கூட்டிக்கொண்டு வருவதற்காக எகிப்து தேசத்திலிருந்து மாட்டு

45:7 *வே.வா., "வம்சத்தில் சிலரையும்." **45:8** *நே.மொ., "பார்வோனுக்குத் தகப்பனாக."

அதி. 45
a ஆதி 37:28; அப் 7:9
b ஆதி 47:23, 25; ஆதி 50:20; சங் 105:17
c ஆதி 41:30; ஆதி 47:18
d ஆதி 46:26
e சங் 105:21; அப் 7:9, 10
f ஆதி 45:26
g அப் 7:14
h ஆதி 46:33, 34; ஆதி 47:1; யாத் 8:22; யாத் 9:26
i ஆதி 47:12
j ஆதி 42:23
k ஆதி 46:29
l ஆதி 47:6
m ஆதி 41:39, 40

வண்டிகளைக்[a] கொண்டுபோங்கள். அப்பாவையும் ஒரு வண்டியில் ஏற்றிக்
கொண்டு வாருங்கள்.[b] **20** நீங்கள் சேர்த்து வைத்திருக்கிற பொருள்
களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.[c] எகிப்து தேசத்தில் இருக்கிற சிறந்த
பொருள்களை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல். இது என் கட்டளை"
என்றார்.

21 இஸ்ரவேலின் மகன்கள் அப்படியே செய்தார்கள். பார்வோனுடைய
ஆணைப்படி யோசேப்பு அவர்களுக்கு மாட்டு வண்டிகளையும் பய
ணத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் தந்தார். **22** அவர்
கள் ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய உடையைத் தந்தார். பென்யமீ
னுக்கு மட்டும் 300 வெள்ளிக் காசுகளும் ஐந்து புதிய உடைகளும்
தந்தார்.[d] **23** அதோடு, தன்னுடைய அப்பாவுக்காக எகிப்திலிருந்த மிகச்
சிறந்த பொருள்களை 10 ஆண் கழுதைகள்மேல் அனுப்பி வைத்தார். அவ
ருடைய பயணத்துக்குத் தேவையான தானியங்களையும் ரொட்டிகளையும்
மற்ற உணவுப் பொருள்களையும் 10 பெட்டைக் கழுதைகள்மேல் அனுப்பி
வைத்தார். **24** அதேசமயம், "வழியில் சண்டை போட்டுக்கொள்ளாதீர்கள்"
என்று தன்னுடைய சகோதரர்களிடம் சொல்லி அனுப்பினார்.[e]

25 அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து கிளம்பி கானான் தேசத்திலிருந்த
தங்களுடைய அப்பா யாக்கோபிடம் வந்துசேர்ந்தார்கள். **26** அவர்கள்
அவரிடம், "யோசேப்பு இன்னும் உயிரோடு இருக்கிறான்! எகிப்து தேசம்
முழுவதையும் அவன்தான் ஆளுகிறான்!"[f] என்றார்கள். அவர் அதைக்
கேட்டு அதிர்ச்சியடைந்தார். அவர்கள் சொன்னதை அவரால் நம்பவே
முடியவில்லை.[g] **27** ஆனால், யோசேப்பு சொல்லி அனுப்பியதைக் கேட்ட
போதும், தன்னைக் கூட்டிக்கொண்டுவர யோசேப்பு அனுப்பிய மாட்டு
வண்டிகளைப் பார்த்தபோதும் உற்சாகம் அடைந்தார். **28** பின்பு இஸ்ர
வேல், "இப்போது நான் நம்புகிறேன்! என்னுடைய மகன் யோசேப்பு இன்
னும் உயிரோடுதான் இருக்கிறான்! நான் சாவதற்கு முன்னால் அவனைப்
போய்ப் பார்க்க வேண்டும்!" என்று சொன்னார்.[h]

46 இஸ்ரவேல் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு*
புறப்பட்டார். அவர் பெயெர்-செபாவுக்கு[i] வந்துசேர்ந்தபோது தன்
னுடைய அப்பா ஈசாக்குடைய கடவுளுக்குப்[j] பலிகளைச் செலுத்தினார்.
2 அன்றைக்கு ராத்திரி கடவுள் ஒரு தரிசனத்தில், "யாக்கோபே, யாக்
கோபே!" என்று கூப்பிட்டார். அதற்கு யாக்கோபு, "சொல்லுங்கள், எஜ
மானே!" என்றார். **3** அப்போது அவர், "நான்தான் உண்மைக் கடவுள்,
நான்தான் உன்னுடைய அப்பாவின் கடவுள்.[k] எகிப்துக்குப் போக நீ பயப்
படாதே. ஏனென்றால், அங்கே நான் உன்னை மாபெரும் தேசமாக்கு
வேன்.[l] **4** நான் உன்னோடு எகிப்துக்கு வருவேன். உன்னை மறுபடியும்
அங்கிருந்து கூட்டிக்கொண்டு வருவேன்.[m] நீ சாகும்போது யோசேப்பு உன்
கண்களை மூடுவான்"[n] என்றார்.

5 அதன்பின் யாக்கோபு பெயெர்-செபாவிலிருந்து புறப்பட்டார். அவ
ருடைய மகன்கள் அவரையும் தங்களுடைய பிள்ளைகளையும் மனைவி
களையும் பார்வோன் அனுப்பியிருந்த மாட்டு வண்டிகளில் ஏற்றினார்கள்.
6 கானான் தேசத்தில் தாங்கள் சேர்த்திருந்த பொருள்களையும் மந்தைக
ளையும் கொண்டுபோனார்கள். இப்படி, யாக்கோபு குடும்பமாக எகிப்துக்கு

அதி. 45
a ஆதி 45:27; ஆதி 46:5
b ஆதி 47:9
c ஆதி 46:6
d ஆதி 43:34
e ஆதி 42:21, 22
f சங் 105:21
g ஆதி 42:38; ஆதி 44:27, 28
h ஆதி 46:30

அதி. 46
i ஆதி 21:31
j ஆதி 31:42; யாத் 3:6
k ஆதி 28:13
l ஆதி 12:1, 2; யாத் 1:7; உபா 26:5
m ஆதி 15:16; ஆதி 28:15; ஆதி 47:29, 30; ஆதி 50:13
n ஆதி 50:1

46:1 * வே.வா., "தனக்குச் சொந்தமான எல்லாரையும் கூட்டிக்கொண்டு."

வந்துசேர்ந்தார். **7** அவர் தன்னுடைய மகன்கள், மகள்கள், பேரன்கள்,
பேத்திகள் எல்லாரோடும் எகிப்துக்கு வந்துசேர்ந்தார்.

8 எகிப்துக்கு வந்துசேர்ந்த இஸ்ரவேலின், அதாவது யாக்கோபின், மகன்
கள்[a] இவர்கள்தான்: யாக்கோபின் மூத்த மகன் ரூபன்.[b]

9 ரூபனின் மகன்கள்: ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ.[c]

10 சிமியோனின்[d] மகன்கள்: எமுவேல், யாமின், ஓகாத், யாகீன்,
சோகார், கானானியப் பெண்ணின் மகன் சாவூல்.[e]

11 லேவியின்[f] மகன்கள்: கெர்சோன், கோகாத், மெராரி.[g]

12 யூதாவின்[h] மகன்கள்: ஏர், ஓனேன், சேலா,[i] பாரேஸ்,[j] சேராகு.[k]
ஏரும் ஓனேனும் கானான் தேசத்தில் இறந்துபோனார்கள்.[l]

பாரேசின் மகன்கள்: எஸ்ரோன், ஆமூல்.[m]

13 இசக்காரின் மகன்கள்: தோலா, புவா, யோபு, சிம்ரோன்.[n]

14 செபுலோனின்[o] மகன்கள்: சேரேத், ஏலோன், யாலேயேல்.[p]

15 இவர்கள்தான் பதான்-அராமில் லேயாள் யாக்கோபுக்குப் பெற்றெ
டுத்த மகன்கள். தீனாள்[q] என்ற மகளையும் அங்கே அவள் பெற்றெடுத்தாள்.
யாக்கோபின் மகன்களும் மகள்களும் மொத்தம் 33 பேர்.

16 காத்தின்[r] மகன்கள்: சிப்பியோன், ஹகி, சூனி, இஸ்போன், ஏரி,
ஆரோதி, அரேலி.[s]

17 ஆசேரின்[t] மகன்கள்: இம்னா, இஸ்வா, இஸ்வி, பெரீயா. இவர்களு
டைய சகோதரி சேராள்.

பெரீயாவின் மகன்கள்: ஹேபெர், மல்கியேல்.[u]

18 லாபான் தன் மகள் லேயாளுக்குக் கொடுத்த வேலைக்காரியான சில்
பாள்[v] பெற்ற மகன்கள் இவர்கள்தான். இவள் வழிவந்த யாக்கோபின் வம்
சத்தார் மொத்தம் 16 பேர்.

19 யாக்கோபின் மனைவி ராகேல் பெற்றெடுத்த மகன்கள்: யோசேப்பு,[w]
பென்யமீன்.[x]

20 யோசேப்புக்கு எகிப்து தேசத்தில் பிறந்த மகன்கள்: மனாசே,[y] எப்
பிராயீம்.[z] இவர்களை ஓன்* நகரத்துப் பூசாரியான போத்திபிராவின் மகள்
ஆஸ்நாத்[a] பெற்றெடுத்தாள்.

21 பென்யமீனின் மகன்கள்:[b] பேலா, பெகேர், அஸ்பேல், கேரா,[c] நாக
மான், ஏகி, ரோஷ், முப்பிம், உப்பிம்,[d] ஆரேத்.[e]

22 ராகேல் வழிவந்த யாக்கோபின் வம்சத்தார் மொத்தம் 14 பேர்.

23 தாணின்[f] மகன் ஊசிம்.[g]

24 நப்தலியின்[h] மகன்கள்: யாத்சியேல், கூனி, எத்செர், சில்லேம்.[i]

25 லாபான் தன் மகள் ராகேலுக்குக் கொடுத்த வேலைக்காரியான பில்
காள் பெற்ற மகன்கள் இவர்கள்தான். யாக்கோபுக்கு இவள் பெற்றெடுத்த
வர்கள் மொத்தம் ஏழு பேர்.

26 யாக்கோபின் மருமகள்களைத் தவிர, அவருடன் எகிப்துக்குப்
போன அவருடைய வம்சத்தார் மொத்தம் 66 பேர்.[j] **27** யோசேப்புக்கு
எகிப்தில் பிறந்த மகன்கள் இரண்டு பேர். இப்படி, எகிப்துக்கு வந்துசேர்ந்த
யாக்கோபின் குடும்பத்தார் மொத்தம் 70 பேர்.[k]

46:20 *அதாவது, “ஹெலியோபாலிஸ்.”

அதி. 46
a யாத் 1:1-4
b ஆதி 35:23; 1நா 5:1
c எண் 26:5, 6
d ஆதி 29:33
e எண் 26:12, 13; 1நா 4:24
f ஆதி 29:34
g 1நா 6:16
h ஆதி 29:35; வெளி 5:5
i ஆதி 38:2-5
j லூ 3:23, 33
k ஆதி 38:30
l ஆதி 38:7, 9, 10
m எண் 26:21; 1நா 2:5
n எண் 26:23, 24; 1நா 7:1
o ஆதி 30:20
p எண் 26:26
q ஆதி 30:21
r ஆதி 30:11
s எண் 26:15-17
t ஆதி 30:13
u எண் 26:44, 45
v ஆதி 29:24
w ஆதி 30:24
x ஆதி 35:18
y ஆதி 41:51
z ஆதி 41:52
a ஆதி 41:50
b 1நா 7:6
c 1நா 8:1, 3
d 1நா 7:12
e எண் 26:38-40
f ஆதி 30:6
g எண் 26:42
h ஆதி 30:8
i எண் 26:48, 49
j ஆதி 35:10, 11
k யாத் 1:5; உபா 10:22; அப் 7:14

28 யாக்கோபு யூதாவைத் தனக்கு முன்னால் அனுப்பி,[a] தான் கோசேனுக்கு வந்துகொண்டிருப்பதாக யோசேப்பிடம் சொல்லச் சொன்னார். அவர்கள் கோசேன் பிரதேசத்துக்கு[b] வந்துசேர்ந்தபோது, **29** யோசேப்பு தன்னுடைய ரதத்தைத் தயார்படுத்தி, தன் அப்பா இஸ்ரவேலைப் பார்ப்பதற்காக கோசேனுக்குப் போனார். அவரைப் பார்த்ததும் கட்டிப்பிடித்து வெகு நேரம் அழுதார்.* **30** பின்பு இஸ்ரவேல் யோசேப்பிடம், “இனி எனக்குச் சாவு வந்தாலும் கவலைப்பட மாட்டேன். உன்னுடைய முகத்தைப் பார்த்துவிட்டேன், நீ உயிரோடு இருப்பதைத் தெரிந்துகொண்டேன்” என்றார்.

31 யோசேப்பு தன்னுடைய சகோதரர்களையும் தன்னுடைய அப்பாவின் குடும்பத்தாரையும் பார்த்து, “நான் பார்வோனிடம்[c] போய், ‘என் சகோதரர்களும் என் அப்பாவின் குடும்பத்தாரும் கானான் தேசத்திலிருந்து இங்கே வந்திருக்கிறார்கள்.[d] **32** அவர்கள் மேய்ப்பர்கள்,[e] ஆடுமாடுகளை வளர்ப்பது அவர்களுடைய தொழில்.[f] அவர்கள் தங்களுடைய மந்தைகளையும் தங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றையும் கொண்டுவந்திருக்கிறார்கள்’[g] என்று சொல்லப்போகிறேன். **33** பார்வோன் உங்களைக் கூப்பிட்டு, ‘என்ன தொழில் செய்கிறீர்கள்?’ என்று கேட்டால், **34** ‘உங்கள் அடிமைகளாகிய நாங்கள் சிறு வயதிலிருந்தே எங்கள் முன்னோர்களைப் போல ஆடுமாடுகளை வளர்த்துவருகிறோம்’[h] என்று சொல்லுங்கள். அப்போதுதான், நீங்கள் கோசேன் பிரதேசத்தில் குடியிருக்க முடியும்.[i] ஏனென்றால், ஆடு மேய்க்கிறவர்களைக் கண்டாலே எகிப்தியர்களுக்குப் பிடிக்காது”[j] என்று சொன்னார்.

47 பின்பு யோசேப்பு பார்வோனிடம் வந்து,[k] “என் அப்பாவும் சகோதரர்களும் தங்களுடைய மந்தைகளோடும் மற்ற எல்லாவற்றோடும் கானான் தேசத்திலிருந்து வந்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் கோசேனில்[l] இருக்கிறார்கள்” என்று சொன்னார். **2** அதன்பின், தன்னுடைய சகோதரர்களில் ஐந்து பேரைக் கூட்டிக்கொண்டு போய் பார்வோனின் முன்னால் நிறுத்தினார்.[m]

3 அப்போது பார்வோன் யோசேப்பின் சகோதரர்களிடம், “நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?” என்று கேட்டான். அதற்கு அவர்கள், “உங்கள் அடிமைகளாகிய நாங்கள் எங்களுடைய முன்னோர்களைப் போல ஆடு மேய்த்துவருகிறோம்”[n] என்றார்கள். **4** அதோடு, “கானான் தேசத்தில் பஞ்சம் கடுமையாக இருக்கிறது.[o] எங்கள் மந்தைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லை. அதனால், இந்தத் தேசத்தில் அன்னியர்களாய்க் குடியிருப்பதற்காக வந்திருக்கிறோம்.[p] உங்கள் அடிமைகளாகிய நாங்கள் கோசேனில் குடியிருப்பதற்குத் தயவுசெய்து அனுமதி கொடுங்கள்”[q] என்றார்கள். **5** அப்போது பார்வோன் யோசேப்பைப் பார்த்து, “உன்னுடைய அப்பாவும் சகோதரர்களும் உன்னைத் தேடி வந்திருக்கிறார்கள். **6** எகிப்து தேசமே உன் கையில் இருக்கிறது. இங்கு இருக்கிற இடங்களிலேயே நல்ல இடமான கோசேனில்[r] அவர்களைக் குடி வை. அவர்களில் திறமைசாலிகள் யாராவது இருந்தால், என்னுடைய மந்தைகளைக் கவனிக்கும் அதிகாரிகளாக நியமனம் செய்” என்றான்.

7 பின்பு, யோசேப்பு தன்னுடைய அப்பா யாக்கோபை பார்வோனிடம் கூட்டிக்கொண்டு வந்து அறிமுகப்படுத்தினார். யாக்கோபு பார்வோனை

46:29 * வே.வா., “திரும்பத் திரும்பக் கட்டிப்பிடித்து அழுதார்.”

அதி. 46
- a ஆதி 43:8; ஆதி 44:18
- b ஆதி 45:10; ஆதி 47:1
- c ஆதி 41: 39, 40
- d ஆதி 45:19; அப் 7:13
- e ஆதி 31: 17, 18; ஆதி 47:3
- f ஆதி 31:38
- g ஆதி 46:6
- h ஆதி 30: 35, 36
- i ஆதி 45: 17, 18; ஆதி 47:27
- j ஆதி 43:32

அதி. 47
- k ஆதி 46:31
- l ஆதி 45:10; யாத் 8:22
- m அப் 7:13
- n ஆதி 12:16; ஆதி 26: 12, 14; ஆதி 31: 17, 18; ஆதி 46: 33, 34
- o அப் 7:11
- p ஆதி 15:13; உபா 26:5; சங் 105:23; அப் 7:6
- q ஆதி 45:10
- r ஆதி 45: 17, 18

வாழ்த்தினார். **8** அப்போது பார்வோன் யாக்கோபைப் பார்த்து, “உங்க
ளுக்கு என்ன வயதாகிறது?” என்று கேட்டான். **9** அதற்கு யாக்கோபு,
“எனக்கு 130 வயதாகிறது. இத்தனை வருஷங்களாக என் முன்னோர்களைப்
போலவே நாடோடியாக* வாழ்ந்துவருகிறேன்.[a] அவர்களைப் போல நான்
நிறைய காலம் வாழாவிட்டாலும், வாழ்ந்த இந்தக் கொஞ்சக் காலத்திலேயே
நிறைய கஷ்டங்களை அனுபவித்துவிட்டேன்”[b] என்றார். **10** அதன்பின்,
யாக்கோபு பார்வோனை வாழ்த்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டுப் போனார்.

11 பார்வோன் கட்டளை கொடுத்தபடியே, யோசேப்பு தன்னுடைய
அப்பாவையும் சகோதரர்களையும் எகிப்து தேசத்தில் குடிவைத்தார். தேசத்
திலேயே மிகச் சிறந்த இடமாகிய ராமசேஸ் பகுதியில்[c] ஓர் இடத்தை
அவர்களுக்குக் கொடுத்தார். **12** யோசேப்பு தன்னுடைய அப்பாவுக்கும்
சகோதரர்களுக்கும் அப்பாவின் குடும்பத்தாருக்கும், அவரவருடைய பிள்
ளைகளின் எண்ணிக்கைப்படி தொடர்ந்து உணவு தந்தார்.

13 எகிப்து தேசத்திலும் கானான் தேசத்திலும் பஞ்சம் கடுமையாக இருந்
ததால் உணவு இல்லாமல்போனது. அங்கிருந்த ஜனங்கள் பஞ்சத்தால் வாடி
னார்கள்.[d] **14** எகிப்திலும் கானானிலும் இருந்த ஜனங்களுக்குத் தானியம்
விற்றதன் மூலம் கிடைத்த பணத்தையெல்லாம்[e] யோசேப்பு பார்வோனு
டைய அரண்மனை கஜானாவில் சேர்த்துவைத்தார். **15** எகிப்திலும் கானா
னிலும் இருந்த ஜனங்களிடம் பணம் தீர்ந்துபோனபோது, எகிப்தியர்கள்
எல்லாரும் யோசேப்பிடம் வந்து, “எங்கள் பணமெல்லாம் தீர்ந்துவிட்டது!
எங்களுக்கு உணவு கொடுங்கள். உங்கள் கண் முன்னால் நாங்கள் ஏன் சாக
வேண்டும்?” என்றார்கள். **16** அதற்கு யோசேப்பு, “பணம் தீர்ந்துபோயி
ருந்தால், உங்கள் கால்நடைகளைக் கொண்டுவந்து கொடுங்கள். அவற்றை
வாங்கிக்கொண்டு உணவைக் கொடுக்கிறேன்” என்றார். **17** அதனால்,
அவர்கள் தங்களுடைய கால்நடைகளை யோசேப்பிடம் கொண்டுவரத்
தொடங்கினார்கள். யோசேப்பு அவர்களுடைய குதிரைகளையும் ஆடுமாடு
களையும் கழுதைகளையும் வாங்கிக்கொண்டு உணவுப் பொருள்களைத் தந்
தார். இப்படி, அந்த வருஷம் முழுவதும் அவர்களுடைய கால்நடைகளை
வாங்கிக்கொண்டு உணவு தந்துகொண்டே இருந்தார்.

18 அடுத்த வருஷம் அவர்கள் அவரிடம் வந்து, “எஜமானே, எங்
கள் பணத்தையும் மந்தைகளையும் எஜமானாகிய உங்களிடம் ஏற்கெ
னவே கொடுத்துவிட்டோம் என்று உங்களுக்குத் தெரியும். இப்போது உங்
களிடம் கொடுப்பதற்கு எங்களையும் எங்களுடைய நிலங்களையும் தவிர
வேறு ஒன்றும் இல்லை. **19** உங்கள் கண் முன்னால் நாங்களும் எங்கள்
நிலங்களும் ஏன் அழிய வேண்டும்? எங்களையும் எங்கள் நிலங்களையும்
வாங்கிக்கொண்டு உணவு கொடுங்கள். நாங்கள் பார்வோனுக்கு அடிமைக
ளாவோம், எங்கள் நிலங்களும் அவருக்குச் சொந்தமாகும். விதைப்பதற்கு
விதைகளை எங்களுக்குக் கொடுங்கள். அப்போதுதான் நாங்கள் சாகா
மல் இருப்போம், எங்கள் நிலங்களும் அழியாமல் இருக்கும்” என்றார்கள்.
20 அதனால், யோசேப்பு எகிப்தியர்களுடைய எல்லா நிலங்களையும் பார்
வோனுக்காக வாங்கினார். பஞ்சம் மிகவும் கடுமையாக இருந்ததால் எகிப்
தியர்கள் எல்லாரும் தங்களுடைய வயல்களை விற்றார்கள். அவை பார்
வோனுக்குச் சொந்தமாயின.

47:9 * வே.வா., “அன்னியனாக.”

ஆதி. 47

a ஆதி 25:7
ஆதி 35:28

b யோபு 14:1, 2

c ஆதி 45:10
யாத் 1:8, 11
யாத் 12:37
எண் 33:3

d ஆதி 41:
30, 31

e ஆதி 41:56
ஆதி 44:25

21 பின்பு யோசேப்பு, எகிப்தின் ஓர் எல்லையிலிருந்து இன்னொரு எல்
லைவரை இருந்த ஜனங்களைப் பக்கத்து நகரங்களுக்குக் குடிமாற்றினார்.[a]
22 பூசாரிகளுடைய நிலங்களை மட்டும் அவர் வாங்கவில்லை.[b] அவர்க
ளுக்குத் தேவையான உணவுப் பொருள்களை பார்வோன் கொடுத்துவந்த
தால், அவர்கள் தங்களுடைய நிலங்களை விற்கவில்லை. **23** அப்போது
யோசேப்பு ஜனங்களிடம், “உங்களையும் உங்கள் நிலங்களையும் பார்வோ
னுக்காக இன்று வாங்கியிருக்கிறேன். இப்போது உங்களுக்கு விதைகளைத்
தருகிறேன், கொண்டுபோய் நிலத்தில் விதையுங்கள். **24** விளைச்சலில்
ஐந்திலொரு பாகத்தை நீங்கள் பார்வோனுக்குக் கொடுக்க வேண்டும்.[c] மீதி
நான்கு பாகத்தை வயலில் விதைப்பதற்காகவும், நீங்களும் உங்கள் பிள்
ளைகளும் வீட்டில் இருப்பவர்களும் சாப்பிடுவதற்காகவும் வைத்துக்கொள்
ளுங்கள்” என்றார். **25** அதற்கு அவர்கள், “நீங்கள் எங்களுடைய உயிரைக்
காப்பாற்றியிருக்கிறீர்கள்.[d] எங்கள் எஜமானே, நீங்கள் கருணை காட்டி
னால், நாங்கள் பார்வோனுக்கு அடிமைகளாக இருக்கிறோம்”[e] என்றார்கள்.
26 ஐந்திலொரு பாகம் பார்வோனுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்
பதை யோசேப்பு சட்டமாக்கினார். இன்றுவரை அந்தச் சட்டம் எகிப்து
தேசத்தில் இருந்துவருகிறது. பூசாரிகளின் நிலங்கள் மட்டும்தான் பார்வோ
னுக்குச் சொந்தமாகவில்லை.[f]

27 இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்திலுள்ள கோசேனில் தொடர்ந்து குடி
யிருந்தார்கள்.[g] அவர்கள் அங்கேயே வாழ்ந்து, பிள்ளைகளைப் பெற்று, ஏரா
ளமாகப் பெருகினார்கள்.[h] **28** யாக்கோபு எகிப்து தேசத்தில் 17 வருஷங்
கள் வாழ்ந்தார். அவர் மொத்தம் 147 வருஷங்கள் உயிர்வாழ்ந்தார்.[i]

29 சாவு நெருங்கிவிட்டதை இஸ்ரவேல் உணர்ந்ததால்[j] தன்னுடைய
மகன் யோசேப்பைக் கூப்பிட்டு, “நீ எனக்கு ஏதாவது நல்லது செய்ய நினைத்
தால், என்மேல் இருக்கிற அன்பை விட்டுவிடாமல் எப்போதும் எனக்கு விசு
வாசத்தோடு இருப்பாய் என்று தயவுசெய்து என்னுடைய தொடையின் கீழ்
கையை வைத்து சத்தியம் செய்து கொடு.* நீ என்னை எகிப்தில் அடக்கம்
செய்யக் கூடாது.[k] **30** நான் இறந்த பின்பு தயவுசெய்து என்னை எகிப்தி
லிருந்து கொண்டுபோய் என்னுடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்
பட்ட இடத்திலேயே* அடக்கம் செய்”[l] என்றார். அதற்கு யோசேப்பு, “நீங்
கள் சொல்கிறபடியே செய்கிறேன்” என்றார். **31** அப்போது இஸ்ரவேல்,
“எனக்குச் சத்தியம் செய்து கொடு” என்றார். யோசேப்பும் சத்தியம் செய்து
கொடுத்தார்.[m] பின்பு, இஸ்ரவேல் தன்னுடைய கட்டிலின் தலைமாட்டிலே
சாய்ந்து ஜெபம் செய்தார்.[n]

48 பிற்பாடு, “உங்களுடைய அப்பாவின் உடல்நிலை மோசமா
கிக்கொண்டே வருகிறது” என்று யோசேப்பிடம் சொல்லப்பட்டது.
உடனே, அவர் தன்னுடைய இரண்டு மகன்களான மனாசேயையும் எப்பிரா
யீமையும் கூட்டிக்கொண்டு தன்னுடைய அப்பாவைப் பார்க்கப் போனார்.[o]
2 “உங்கள் மகன் யோசேப்பு வந்திருக்கிறார்” என்று யாக்கோபிடம்
சொல்லப்பட்டது. அவர் தன்னுடைய பலத்தையெல்லாம் திரட்டி படுக்கை
யிலிருந்து எழுந்து உட்கார்ந்தார். **3** பின்பு யோசேப்பிடம்,

“சர்வவல்லமையுள்ள கடவுள் கானான் தேசத்திலுள்ள லஸ் நகரத்தில்

அதி. 47
a ஆதி 41: 48, 49
b ஆதி 41:45
c ஆதி 41:34
d ஆதி 45:5; அப் 7:11
e ஆதி 47:19
f ஆதி 47:22
g ஆதி 47:4
h யாத் 1:7; உபா 10:22; சங் 105:24; அப் 7:17
i ஆதி 47:9
j ஆதி 49:33
k ஆதி 46:4; ஆதி 50:13; அப் 7:15, 16
l ஆதி 25:9, 10; ஆதி 49: 29, 30
m ஆதி 50:5
n எபி 11:21

அதி. 48
o ஆதி 41:50; யோசு 14:4

47:29 *பழங்காலத்தில் இப்படித்தான் உறுதிமொழி கொடுத்தார்கள். **47:30** *வே.வா., “கல்லறையிலேயே.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

எனக்குத் தோன்றி என்னை ஆசீர்வதித்தார்.[a] **4** அப்போது அவர் என்
னிடம், 'நான் உன்னை ஏராளமாகப் பெருக வைப்பேன். உன்னுடைய சந்
ததியை ஒரு பெரிய ஜனக்கூட்டமாக ஆக்குவேன்.[b] உனக்குப்பின்
வரும் உன் வம்சத்துக்கு இந்தத் தேசத்தை நிரந்தர சொத்தாகத் தரு
வேன்'[c] என்றார். **5** எகிப்து தேசத்துக்கு நான் வருவதற்குமுன் உனக்குப்
பிறந்த இரண்டு மகன்களும் என்னுடைய மகன்கள்.[d] ரூபனையும் சிமியோ
னையும்[e] போலவே எப்பிராயீமும் மனாசேயும் என்னுடைய மகன்களாக
இருப்பார்கள். **6** ஆனால், இவர்களுக்குப்பின் உனக்குப் பிறக்கும் பிள்
ளைகள் உன் பிள்ளைகளாக இருப்பார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு அவர்
களுடைய சகோதரர்களின் நிலத்தில் ஒரு பங்கு கிடைக்கும்.[f] **7** பதானை
விட்டு நான் வரும்போது, கானான் தேசத்தில் உன் அம்மா ராகேல்
இறந்துபோனாள்.[g] அப்போது, நான் அவள் பக்கத்தில்தான் இருந்தேன். எப்
பிராத்து[h] என்ற பெத்லகேம்[i] ரொம்பத் தூரத்தில் இருந்ததால் எப்பிராத்துக்
குப் போகும் வழியிலேயே அவளை அடக்கம் செய்தேன்" என்றார்.

8 பின்பு, இஸ்ரவேல் யோசேப்பின் மகன்களைப் பார்த்து, "இவர்கள்
யார்?" என்று கேட்டார். **9** அப்போது யோசேப்பு தன் அப்பாவிடம், "இந்
தத் தேசத்தில் கடவுள் எனக்குத் தந்த மகன்கள்"[j] என்றார். அதற்கு அவர்,
"தயவுசெய்து அவர்களை என் பக்கத்தில் கொண்டுவா, நான் அவர்களை
ஆசீர்வதிக்க வேண்டும்"[k] என்றார். **10** இஸ்ரவேல் வயதானவராக இருந்
ததால் அவருடைய பார்வை மங்கியிருந்தது, அவரால் சரியாகப் பார்க்க
முடியவில்லை. அதனால், யோசேப்பு அவர்களை அவர் பக்கத்தில் கொண்
டுபோய் நிற்க வைத்தார். அவர் அவர்களைக் கட்டிப்பிடித்து முத்தம்
கொடுத்தார். **11** இஸ்ரவேல் யோசேப்பிடம், "உன்னுடைய முகத்தைப்
பார்ப்பேன் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை.[l] ஆனால், இப்போது
கடவுள் உன்னுடைய வாரிசுகளைப் பார்க்கும் பாக்கியத்தைக்கூட தந்திருக்
கிறார்" என்றார். **12** அதன்பின், யோசேப்பு இஸ்ரவேலின் முழங்கால்
பக்கத்திலிருந்த தன்னுடைய மகன்களைப் பின்னால் தள்ளி நிற்க வைத்து
விட்டு, மண்டிபோட்டு தரைவரைக்கும் குனிந்து வணங்கினார்.

13 பின்பு, யோசேப்பு அவர்கள் இரண்டு பேரையும் இஸ்ரவேலுக்குப்
பக்கத்தில் நிற்க வைத்தார். எப்பிராயீமைத்[m] தன்னுடைய வலது கையால்
பிடித்து இஸ்ரவேலின் இடது பக்கத்திலும், மனாசேயைத்[n] தன்னுடைய
இடது கையால் பிடித்து இஸ்ரவேலின் வலது பக்கத்திலும் நிற்க வைத்தார்.
14 ஆனால், இஸ்ரவேல் தன்னுடைய வலது கையை எப்பிராயீமின் தலை
யிலும் இடது கையை மனாசேயின் தலையிலும் வைத்தார். மனாசேதான்
மூத்தவன்[o] என்று தெரிந்திருந்தும் அப்படிச் செய்தார். **15** பின்பு அவர்
யோசேப்பை ஆசீர்வதித்து,[p]

"என் தாத்தா ஆபிரகாமும் என் அப்பா ஈசாக்கும் வணங்கிய[q]
உண்மைக் கடவுள்
என் வாழ்நாள் முழுவதும் என்னை வழிநடத்தி* வந்திருக்கிறார்.[r]
16 எல்லா துன்பத்திலும் தேவதூதர் மூலம் என்னைக்
காப்பாற்றியிருக்கிறார்.[s] அந்த உண்மைக் கடவுள் இந்தப்
பிள்ளைகளை ஆசீர்வதிக்கட்டும்.[t]

48:15 * நே.மொ., "மேய்த்து."

அதி. 48
a ஆதி 28:13, 19; ஓசி 12:4
b ஆதி 35:10, 11
c ஆதி 28:13, 14
d யோசு 14:4; 1நா 5:1
e ஆதி 35:23
f யோசு 13:29; யோசு 16:5
g ஆதி 35:19
h மீ 5:2
i 1சா 17:12; மத் 2:6
j ஆதி 41:50
k எபி 11:21
l ஆதி 37:34, 35; ஆதி 42:36; ஆதி 46:30
m ஆதி 41:52
n ஆதி 41:51
o ஆதி 41:51; ஆதி 46:20
p 1நா 5:2
q ஆதி 17:1; ஆதி 24:40
r ஆதி 28:13; சங் 23:1
s ஆதி 28:15; ஆதி 31:11; சங் 34:7
t ஆதி 32:26

அதி. 48
a யாத் 1:7
எண் 26:
34, 37
b ஆதி 41:51
c எண் 2:18–21
d எண் 1:32, 33
e எபி 11:21
f ஆதி 50:24
g ஆதி 15:14
ஆதி 26:3
உபா 31:8

அதி. 49
h உபா 33:6
i ஆதி 29:32
யாத் 6:14
1நா 5:1
j ஆதி 35:22
k ஆதி 29:
33, 34
ஆதி 35:23
l ஆதி 34:25

என் பெயரும் என் தாத்தா ஆபிரகாமின் பெயரும் என் அப்பா
ஈசாக்கின் பெயரும் இவர்கள் மூலமாக நிலைத்திருக்கட்டும்.
இந்தப் பூமியில் இவர்கள் ஏராளமாகப் பெருகட்டும்”[a]

என்றார்.

17 எப்பிராயீமின் தலையில் தன்னுடைய அப்பா வலது கையை வைத்தது யோசேப்புக்குப் பிடிக்கவில்லை. அதனால், அவருடைய கையை எப்பிராயீமின் தலையிலிருந்து எடுத்து மனாசேயின் தலையில் வைக்கப் போனார். **18** அப்போது தன் அப்பாவிடம், “அப்பா, நீங்கள் கையை மாற்றி வைத்திருக்கிறீர்கள். இவன்தான் மூத்த மகன்.[b] உங்களுடைய வலது கையை இவனுடைய தலையில் வையுங்கள்” என்றார். **19** ஆனால் அவருடைய அப்பா கொஞ்சமும் சம்மதிக்காமல், “தெரியும் மகனே, எனக்குத் தெரியும். இவனும் ஒரு பெரிய ஜனக்கூட்டமாக ஆவான், இவனும் பலம்படைத்தவனாக ஆவான். ஆனால், இவனுடைய தம்பி இவனைவிட அதிக பலம்படைத்தவனாக ஆவான்.[c] இவனுடைய தம்பியின் சந்ததி மாபெரும் தேசங்களைப் போலப் பெருகும்”[d] என்றார். **20** பின்பு அவர்களைத் தொடர்ந்து ஆசீர்வதித்து,[e]

“இஸ்ரவேலர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்தும்போது,
‘கடவுள் உன்னை எப்பிராயீமைப் போலவும் மனாசேயைப் போலவும்
ஆசீர்வதிக்க வேண்டும்’ என்று சொல்லட்டும்”

என்றார். இப்படி, அவர் மனாசேயைவிட எப்பிராயீமை உயர்த்தினார்.

21 அதன்பின் இஸ்ரவேல் யோசேப்பிடம், “சீக்கிரத்தில் நான் சாகப்போகிறேன்.[f] ஆனால், கடவுள் எப்போதும் உங்கள் எல்லாரோடும் இருப்பார். உங்களுடைய முன்னோர்களின் தேசத்துக்கே உங்களைத் திரும்பவும் கூட்டிக்கொண்டு போவார்.[g] **22** நான் உன் சகோதரர்களுக்குக் கொடுப்பதைவிட ஒரு பங்கு அதிகமான நிலத்தை உனக்குத் தருகிறேன். வாளோடும் வில்லோடும் எமோரியர்களுடன் போராடி நான் பெற்ற நிலம் அது” என்றார்.

49 பின்பு, யாக்கோபு தன்னுடைய மகன்களைக் கூப்பிட்டு, “எல்லாரும் கூடிவந்து நில்லுங்கள். கடைசி நாட்களில் உங்களுக்கு நடக்கப்போவதை நான் சொல்கிறேன். **2** யாக்கோபின் மகன்களே, எல்லாரும் கூடிவந்து கேளுங்கள். உங்களுடைய அப்பா இஸ்ரவேல் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்.

3 ரூபன்![h] நீ என்னுடைய மூத்த மகன்,[i] நீ என்னுடைய வலிமை, நீ என்னுடைய முதல் வாரிசு.* நீ மகா கண்ணியமும் மகா பலமும் பெற்றிருந்தாய். **4** ஆனால், நீ உயர்வடைய மாட்டாய். ஏனென்றால், கொந்தளிக்கும் தண்ணீரைப் போல அடங்காமல் போய்விட்டாய். உன் அப்பாவின் படுக்கைக்கே போய் அதைக் களங்கப்படுத்தினாய்.[j] இவன் என்னுடைய படுக்கைக்கே போய்விட்டானே!

5 சிமியோனும் லேவியும் சகோதரர்கள்.[k] அவர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்துக்கொண்டு வன்முறையில் இறங்குகிறார்கள்.[l] **6** என் உயிரே, அவர்களுடைய கூட்டத்தில் சேராதே. என் மேன்மையே,* அவர்களுடைய நட்பைத் தேடாதே. அவர்கள் கோபத்தில் ஆட்களை வெட்டிக்

49:3 *வே.வா., “என்னுடைய ஆண்மையின் முதல் பலன்.” **49:6** *அல்லது, “மனமே.”

கொன்றார்கள்.[a] வீம்புக்காக எருதுகளை நொண்டியாக்கினார்கள்.*
7 அவர்களுடைய கோபம் வெறித்தனமானது, அது சபிக்கப்படட்டும். அவர்
களுடைய ஆத்திரம் கண்மூடித்தனமானது, அது சபிக்கப்படட்டும்.[b] யாக்
கோபின் தேசத்திலும் இஸ்ரவேலின் தேசத்திலும் அவர்களைச் சிதறிப்
போகப் பண்ணுவேன்.[c]

8 யூதா![d] உன் சகோதரர்கள் உன்னைப் புகழ்வார்கள்.[e] உன்னுடைய
கை எதிரிகளின் கழுத்தைப் பிடிக்கும்.[f] உன்னுடைய அப்பாவின் மகன்கள்
உனக்கு முன்னால் தலைவணங்குவார்கள்.[g] 9 யூதா ஒரு சிங்கக்குட்டி![h]
என் மகனே, நீ இரையைத் தின்றுவிட்டு எழுந்துபோவாய். சிங்கத்தைப்
போலக் கால்நீட்டிப் படுத்திருப்பாய். அவன் ஒரு சிங்கம், அவனை எழுப்ப
யாருக்குத் துணிச்சல் இருக்கிறது? 10 ஷைலோ* வரும்வரை[i] யூதாவை
விட்டு செங்கோல் விலகாது,[j] அவன் பாதங்களுக்கு இடையிலிருந்து அதி
காரக்கோலும் விலகாது. ஜனங்கள் எல்லாரும் ஷைலோவுக்குக் கீழ்ப்படி
வார்கள்.[k] 11 யூதா தன்னுடைய கழுதையைத் திராட்சைக் கொடியிலும்
கழுதைக்குட்டியைச் செழிப்பான திராட்சைக் கொடியிலும் கட்டிவைப்பான்.
தன்னுடைய உடையைத் திராட்சமதுவிலும், தன்னுடைய அங்கியைத்
திராட்சரசத்திலும் துவைப்பான். 12 அவனுடைய கண்கள் திராட்சமதுவி
னால் சிவந்திருக்கின்றன. அவனுடைய பற்கள் பாலினால் வெண்மையாக
இருக்கின்றன.

13 செபுலோன்,[l] கப்பல்கள் நிறுத்தப்பட்டிருக்கிற கடற்கரைக்குப் பக்கத்
தில் குடியிருப்பான்.[m] அவனுடைய எல்லை சீதோனின் திசையில்
இருக்கும்.[n]

14 இசக்கார்,[o] இரண்டு மூட்டைகளைச் சுமந்துகொண்டே படுத்திருக்
கிற வலிமையான கழுதை. 15 அவன் குடியிருக்கிற தேசம் அருமையாக
வும் அழகாகவும் இருப்பதைப் பார்ப்பான். சுமை சுமப்பதற்காகத் தோளைச்
சாய்ப்பான், கொத்தடிமைபோல் வேலை செய்வான்.

16 தாண்,[p] இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரமாக இருந்து,
தன்னுடைய ஜனங்களுக்கு நீதி வழங்குவான்.[q] 17 கொம்பு விரியன்
பாம்பு எப்படி வழியோரத்தில் படுத்துக்கொண்டு, குதிரையின் குதிங்கா
லைக் கடித்து, அதன்மேல் சவாரி செய்பவனைப் பின்பக்கமாக விழ வைக்
குமோ அப்படித்தான் அவனும் செய்வான்.[r] 18 யெகோவாவே, உங்கள்
மீட்புக்காக நான் காத்திருப்பேன்.

19 காத்தை[s] ஒரு கொள்ளைக்கூட்டம் தாக்க வரும், ஆனால் அவன்
அந்தக் கூட்டத்தைத் துரத்திக்கொண்டு போய்த் தாக்குவான்.[t]

20 ஆசேரிடம்[u] உணவு ஏராளமாக இருக்கும், ராஜாக்கள் சாப்பிடும்
உணவைத் தருவான்.[v]

21 நப்தலி,[w] பாய்ந்தோடும் மான். இனிமையான வார்த்தைகளைப்
பேசுவான்.[x]

22 யோசேப்பு,[y] நீரூற்றுக்குப் பக்கத்திலுள்ள பழ மரத்தின் அடிக்கன்று;
அதன் கிளைகள் மதில்மேல் படர்ந்திருக்கும். 23 வில்வீரர்கள் அவனுக்கு
எப்போதும் தொல்லை கொடுத்தார்கள். அவன்மேல் அம்புகளை எறிந்தார்
கள். அவனைப் பகைத்துக்கொண்டே இருந்தார்கள்.[z] 24 ஆனால், அவ

49:6 * அதாவது, “எருதுகளின் பின்தொடை தசைநார்களை வெட்டினார்கள்.” 49:10 * அர்த்தம், “உரிமைக்காரர்.”

அதி. 49
a ஆதி 34:7
b ஆதி 34:25
c யோசு 19:1; யோசு 21:41
d ஆதி 29:35; உபா 33:7
e ஆதி 43:8, 9; ஆதி 46:28; 1நா 5:2
f நியா 1:2
g எண் 10:14; 2சா 5:3
h வெளி 5:5
i ஏசா 9:6; எசே 21:27; லூ 1:32; எபி 7:14
j எண் 24:17; 2சா 2:4; 2சா 7:16, 17
k சங் 2:8; ஏசா 11:10; மத் 2:6
l உபா 33: 18, 19
m மத் 4:13
n யோசு 19:10
o உபா 33:18; 1நா 7:5
p உபா 33:22
q நியா 13:2, 24; நியா 15:20
r நியா 14:19; நியா 15:15
s உபா 33:20
t யோசு 13:8
u உபா 33:24
v 1ரா 4:7, 16
w உபா 33:23
x மத் 4:13, 15
y உபா 33: 13-17
z ஆதி 37:5, 8; ஆதி 40:15

னும் வில்லைக் கையில் தயாராக வைத்திருந்தான்.[a] அவனுடைய கைகள்
வலிமையுடனும் துடிப்புடனும் இருந்தன.[b] இஸ்ரவேலின் மூலைக்கல்
லாகவும் மேய்ப்பராகவும் யாக்கோபுக்கு வலிமைமிக்கவராகவும் இருந்தவர்
தான்* அதற்குக் காரணம். **25** அவனை* அவனுடைய அப்பாவின்
கடவுள் அன்பளிப்பாகக் கொடுத்தார். கடவுள் அவனுக்குக் கைகொடுப்
பார். சர்வவல்லமையுள்ளவரோடு அவன் இருக்கிறான். வானத்திலிருந்தும்
பூமியின் ஆழத்திலிருந்தும் கடவுள் அவனுக்கு ஆசீர்வாதங்களைத் தரு
வார்.[c] ஏராளமான பிள்ளைகளையும் ஆடுமாடுகளையும் தந்து ஆசீர்வ
திப்பார். **26** உன் அப்பா தந்திருக்கிற ஆசீர்வாதங்கள், நிலையான மலை
களுக்கும் குன்றுகளுக்கும் இருக்கிற சிறப்புகளைவிட சிறந்ததாக இருக்கும்.[d]
அந்த ஆசீர்வாதங்கள் எப்போதும் யோசேப்பின் மேல் தங்கும். அவன் தன்
னுடைய சகோதரர்களிலிருந்து விசேஷமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவன்.[e]

27 பென்யமீன்,[f] ஓநாயைப் போல் எப்போதும் கடித்துக் குதறுவான்.[g]
காலையில் தன்னுடைய இரையைத் தின்பான்; சாயங்காலத்தில், தான் கைப்
பற்றியதைப் பங்குபோடுவான்"[h] என்றார்.

28 அந்த 12 பேரிலிருந்துதான் இஸ்ரவேலின் 12 கோத்திரங்கள் வந்
தன. அவர்களுடைய அப்பா அவர்களை ஆசீர்வதித்தபோது இதைத்தான்
சொன்னார். அவரவருக்குத் தகுந்த ஆசீர்வாதத்தைத் தந்தார்.[i]

29 அதன்பின் அவர்களிடம், "நான் சீக்கிரத்தில் சாகப்போகிறேன்.*[j]
ஏத்தியனான எப்பெரோனின் நிலத்திலுள்ள குகையில் என்னை அடக்
கம் செய்யுங்கள். அங்குதான் என் முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்
டார்கள்.[k] **30** கானான் தேசத்தில் மம்ரேக்குப் பக்கத்திலே மக்பேலாவில்
உள்ள நிலத்தில் அந்தக் குகை இருக்கிறது. ஏத்தியனான எப்பெரோனிடமி
ருந்து ஆபிரகாம் அந்த நிலத்தைக் கல்லறை நிலமாக விலைக்கு வாங்கி
னார். **31** அங்கேதான் ஆபிரகாமும் அவர் மனைவி சாராளும் அடக்கம்
செய்யப்பட்டார்கள். அங்கேதான் ஈசாக்கும்[l] அவர் மனைவி ரெபெக்கா
ளும் அடக்கம் செய்யப்பட்டார்கள். அங்கேதான் லேயாளை நான் அடக்
கம் செய்தேன்.[m] **32** அந்த நிலமும் அதில் இருக்கிற குகையும் ஏத்தின்
மகன்களிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டன"[n] என்று சொன்னார்.

33 யாக்கோபு தன்னுடைய மகன்களுக்கு இந்த எல்லா அறிவுரைகளை
யும் கொடுத்துவிட்டு, தன்னுடைய கால்களைத் தூக்கிக் கட்டில்மேல் வைத்
துப் படுத்தார். அதன்பின் இறந்துபோனார்.*[o]

50 யோசேப்பு தன்னுடைய அப்பாவின் உடல்மேல் விழுந்து கதறி
அழுதார்,[p] அவருக்கு முத்தம் கொடுத்தார். **2** அதன்பின், தன்
அப்பாவின் உடலைப் பாடம் செய்யும்படி*[q] தன் ஊழியர்களான வைத்தி
யர்களுக்குக் கட்டளை கொடுத்தார். அவர்களும் இஸ்ரவேலின் உடலைப்
பாடம் செய்தார்கள். **3** அதற்கு 40 நாட்கள் பிடித்தன. ஏனென்றால், ஓர்

49:24 *யெகோவாவையும் குறிக்கலாம் யோசேப்பையும் குறிக்கலாம். **49:25** *அதாவது, "யோசேப்பை." **49:29** *நே.மொ., "என் முன்னோர்களுடன் சேர்க்கப்படப்போகிறேன்." எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன. **49:33** *நே.மொ., "தன் முன்னோர்களுடன் சேர்க்கப்பட்டார்." எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன. **50:2** *பாடம் செய்வது என்பது, உடல் அழுகிப்போகாதபடி அதைப் பாதுகாக்கும் முறையைக் குறிக்கிறது.

அதி. 49
a ஆதி 50:20
b யோசு 1:1, 6; நியா 11:32
c உபா 33:13
d யோசு 17:14
e உபா 33:16
f உபா 33:12
g நியா 20:15, 16; 1சா 9:16
h எஸ்தர் 2:5; எஸ்தர் 8:7
i எபி 11:21
j ஆதி 35:29; ஆதி 49:33
k ஆதி 23:17, 18
l ஆதி 35:29
m ஆதி 23:2, 19; ஆதி 25:9, 10
n ஆதி 23:17, 18
o அப் 7:15

அதி. 50
p ஆதி 46:4
q ஆதி 50:26

உடலை முறையாகப் பாடம் செய்ய 40 நாட்கள் ஆகும். அவருக்காக எகிப்
தியர்கள் 70 நாட்கள் துக்கம் அனுசரித்தார்கள்.

4 துக்கம் அனுசரிக்கும் நாட்கள் முடிந்த பிறகு யோசேப்பு பார்வோ
னின் அதிகாரிகளிடம்,* “எனக்கு ஒரு உதவி செய்ய நினைத்தால் பார்வோ
னிடம் நான் இப்படிச் சொன்னதாகத் தயவுசெய்து சொல்லுங்கள்: **5** ‘என்
அப்பா என்னிடம், “நான் சீக்கிரத்தில் இறந்துவிடுவேன்.[a] கானான் தேசத்
தில்[b] எனக்காக நான் வெட்டியிருக்கும் கல்லறையில் நீ என்னை அடக்
கம் செய்ய வேண்டும்”[c] என்று என்னிடம் சத்தியம் வாங்கியிருந்தார்.[d]
அதனால், தயவுசெய்து எனக்கு அனுமதி கொடுங்கள், நான் போய் என்
அப்பாவை அடக்கம் செய்துவிட்டு வருகிறேன்’” என்றார். **6** அதற்கு பார்
வோன், “உன் அப்பாவுக்குச் சத்தியம் செய்து கொடுத்தபடியே நீ போய்
அவரை அடக்கம் செய்துவிட்டு வா”[e] என்றார்.

7 அதனால், யோசேப்பு தன்னுடைய அப்பாவை அடக்கம் செய்யப்
புறப்பட்டார். அவருடன் பார்வோனுடைய ஊழியர்களாகிய அரசவைப் பெரி
யோர்கள்[f] எல்லாரும், எகிப்து தேசத்திலிருந்த பெரியோர்கள் எல்லாரும்,
8 யோசேப்பின் வீட்டிலிருந்த எல்லாரும், அவருடைய சகோதரர்களும்,
அவருடைய அப்பாவின் குடும்பத்தாரும்[g] போனார்கள். பிள்ளைகளை
யும் ஆடுமாடுகளையும் மட்டுமே கோசேனில் விட்டுவிட்டுப் போனார்
கள். **9** யோசேப்போடு ரதவீரர்களும்[h] குதிரைவீரர்களும்கூட போனார்கள்.
இப்படி, அவர்கள் பெரிய கூட்டமாகப் போனார்கள். **10** யோர்தான் பிரதே
சத்திலிருந்த ஆத்தாத்தின் களத்துமேட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும், அவர்
கள் ஒப்பாரி வைத்துக் கதறி அழுதார்கள். யோசேப்பு தன் அப்பாவுக்காக
ஏழு நாட்கள் துக்கம் அனுசரித்தார். **11** அவர்கள் ஆத்தாத்தின் களத்து
மேட்டில் துக்கம் அனுசரிப்பதை அங்கு குடியிருந்த கானானியர்கள் பார்த்
தபோது, “எகிப்தியர்கள் பெரியளவில் துக்கம் அனுசரிக்கிறார்களே!” என்
றார்கள். அதனால்தான், யோர்தான் பிரதேசத்தில் இருந்த அந்த இடத்துக்கு
ஆபேல்-மிஸ்ராயீம்* என்று பெயர் வைக்கப்பட்டது.

12 யாக்கோபு கட்டளை கொடுத்தது போலவே அவருடைய மகன்கள்
செய்தார்கள்.[i] **13** அவரை கானான் தேசத்துக்குக் கொண்டுபோய், மம்ரேக்
குப் பக்கத்தில் மக்பேலா நிலத்திலிருந்த குகையில் அடக்கம் செய்தார்கள்.
அந்த நிலத்தை, அடக்கம் செய்வதற்கான நிலமாக ஏத்தியனான எப்பெரோ
னிடமிருந்து ஆபிரகாம் விலைக்கு வாங்கியிருந்தார்.[j] **14** யோசேப்பு தன்
னுடைய அப்பாவை அடக்கம் செய்துவிட்டு, தன்னுடைய சகோதரர்களோ
டும் மற்ற எல்லாரோடும் எகிப்துக்குத் திரும்பினார்.

15 யோசேப்பின் சகோதரர்கள் தங்களுடைய அப்பா இறந்த பின்பு,
“யோசேப்புக்கு நம்மேல் முன்விரோதம் இருந்தாலும் இருக்கும். நாம்
அவனுக்குச் செய்த எல்லா துரோகத்துக்கும் அவன் ஒருவேளை நம்
மைப் பழிவாங்கலாம்”[k] என்று பேசிக்கொண்டார்கள். **16** பின்பு யோசேப்
புக்குச் செய்தி அனுப்பி, “உன்னுடைய அப்பா சாவதற்குமுன் எங்களைக்
கூப்பிட்டு, **17** ‘நீங்கள் யோசேப்பிடம் போய், அவனுக்குச் செய்த கெடு
தலையும் பாவத்தையும் துரோகத்தையும் மன்னிக்கச் சொல்லிக் கெஞ்சிக்
கேளுங்கள்’ என்றார். அதனால், உன் அப்பாவுடைய கடவுளின் ஊழியர்

50:4 *வே.வா., “வீட்டில் உள்ளவர்களிடம்.” **50:11** *அர்த்தம், “எகிப்தியர்களின்
துக்க அனுசரிப்பு.”

அதி. 50

a ஆதி 48:21

b ஆதி 23:17, 18; ஆதி 49:29, 30

c ஆதி 46:4; ஆதி 47:29

d ஆதி 47:29–31

e ஆதி 47:31

f சங் 105:21, 22

g ஆதி 46:27

h ஆதி 41:43; ஆதி 46:29

i ஆதி 47:29

j ஆதி 23:17, 18; ஆதி 25:9, 10; ஆதி 35:27; ஆதி 49:29, 30

k ஆதி 37:18, 28; ஆதி 42:21; சங் 105:17

களான நாங்கள் செய்த துரோகத்தைத் தயவுசெய்து மன்னித்துவிடு" என்
றார்கள். இதைக் கேட்டதும் யோசேப்பு கண்ணீர்விட்டு அழுதார்.
18 பின்பு, அவருடைய சகோதரர்கள் அவர்முன் வந்து விழுந்து, "நாங்கள்
உன் அடிமைகள்!"[a] என்றார்கள். **19** அப்போது யோசேப்பு, "பயப்படாதீர்
கள். உங்களைத் தண்டிக்க நான் என்ன கடவுளா? **20** நீங்கள் எனக்குக்
கெட்டது செய்ய நினைத்தும்,[b] அதை நல்லதாக மாற்றி பலருடைய உயி
ரைக் காப்பாற்ற கடவுள் நினைத்தார்.[c] அதைத்தான் இன்று செய்துவரு
கிறார். **21** அதனால் பயப்படாதீர்கள். உங்களுக்கும் உங்களுடைய பிள்
ளைகளுக்கும் நான் தொடர்ந்து உணவுப் பொருள்களைக் கொடுப்பேன்"[d]
என்றார். இப்படி, அவர்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் தந்தார்.

22 யோசேப்பும் அவருடைய அப்பாவின் குடும்பத்தாரும் எகிப்திலேயே
வாழ்ந்தார்கள். யோசேப்பு 110 வருஷங்கள் உயிர்வாழ்ந்தார். **23** எப்பி
ராயீமின் பேரன்களையும்[e] மனாசேயின் மகனான மாகீரின் மகன்களை
யும்[f] பார்க்கும்வரை யோசேப்பு உயிர்வாழ்ந்தார். அவர்களைத் தன்னுடைய
சொந்த மகன்களாகவே நினைத்தார்.* **24** கடைசியில் யோசேப்பு தன்
னுடைய சகோதரர்களிடம், "நான் சீக்கிரத்தில் இறந்துவிடுவேன். ஆனால்,
கடவுள் கண்டிப்பாக உங்களுக்குக் கருணை காட்டுவார்,[g] ஆபிரகாமுக்
கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் வாக்குறுதி தந்த தேசத்துக்கு உங்களை
இங்கிருந்து கூட்டிக்கொண்டு போவார்"[h] என்றார். **25** பின்பு யோசேப்பு,
"கடவுள் கண்டிப்பாக உங்களுக்குக் கருணை காட்டுவார். நீங்கள் இங்கி
ருந்து போகும்போது என்னுடைய எலும்புகளைக் கொண்டுபோக வேண்
டும்" என்று சொல்லி, இஸ்ரவேலின் மகன்களிடம் சத்தியம் வாங்கிக்கொண்
டார்.[i] **26** யோசேப்பு 110 வயதில் இறந்தார். அவருடைய உடல் எகிப்து
தேசத்தில் பாடம் செய்யப்பட்டு,[j] ஒரு சவப்பெட்டியில் வைக்கப்பட்டது.

50:23 * நே.மொ., "அவர்கள் யோசேப்பின் முழங்கால்களில் பிறந்தார்கள்."

ஆதி. 50
- *a* ஆதி 37:7, 9
- *b* ஆதி 37:18
- *c* ஆதி 45:5; சங் 105:17
- *d* ஆதி 47:12
- *e* 1நா 7:20
- *f* யோசு 17:1; 1நா 7:14
- *g* யாத் 4:31
- *h* ஆதி 12:7; ஆதி 17:8; ஆதி 26:3; ஆதி 28:13
- *i* யாத் 13:19; யோசு 24:32; எபி 11:22
- *j* ஆதி 50:2

யாத்திராகமம்

முக்கியக் குறிப்புகள்

யாத்திரை+ஆகமம்=யாத்திராகமம். அர்த்தம், "பயணத்தைப் பற்றிய பதிவு."

1 எகிப்தில் இஸ்ரவேலர்கள் பெருகுகிறார்கள் (1-7)
இஸ்ரவேலர்களை பார்வோன் ஒடுக்குகிறான் (8-14)
கடவுள்பயமுள்ள மருத்துவச்சிகள் உயிர்களைக் காப்பாற்றுகிறார்கள் (15-22)

2 மோசே பிறக்கிறார் (1-4)
பார்வோனின் மகள் மோசேயைத் தத்தெடுக்கிறாள் (5-10)
மோசே மீதியானுக்கு ஓடிப்போகிறார்; சிப்போராளைக் கல்யாணம் செய்கிறார் (11-22)
கடவுள் இஸ்ரவேலர்களின் குமுறலைக் கேட்கிறார் (23-25)

3 மோசேயும் எரிகிற முட்புதரும் (1-12)
யெகோவா தன் பெயரின் அர்த்தத்தை விளக்குகிறார் (13-15)
மோசேக்கு யெகோவா அறிவுரைகள் தருகிறார் (16-22)

4 மோசே செய்ய வேண்டிய மூன்று அற்புதங்கள் (1-9)
மோசே தனக்குத் தகுதியில்லை என்று நினைக்கிறார் (10-17)
மோசே எகிப்துக்குத் திரும்புகிறார் (18-26)
மோசேயும் ஆரோனும் மறுபடியும் சந்திக்கிறார்கள் (27-31)

5 மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் போகிறார்கள் (1-5)
ஜனங்கள் ரொம்பவே ஒடுக்கப்படுகிறார்கள் (6-18)
மோசேமீதும் ஆரோன்மீதும் இஸ்ரவேலர்கள் பழிபோடுகிறார்கள் (19-23)

6 விடுதலை பற்றித் திரும்பவும் வாக்குறுதி கொடுக்கப்படுகிறது (1-13)
யெகோவா தன் பெயரைப் பற்றி முழுமையாக வெளிப்படுத்தவில்லை (2, 3)
மோசே மற்றும் ஆரோனின் வம்சாவளி (14-27)
மோசே மறுபடியும் பார்வோனிடம் போக வேண்டியிருக்கிறது (28-30)

7 மோசேயை யெகோவா பலப்படுத்துகிறார் (1-7)
ஆரோனின் கோல் ஒரு பெரிய பாம்பாக மாறுகிறது (8-13)
1-ஆம் தண்டனை: தண்ணீர் இரத்தமாக மாறுகிறது (14-25)

8 2-ஆம் தண்டனை: தவளைகள் (1-15)
3-ஆம் தண்டனை: கொசுக்கள் (16-19)
4-ஆம் தண்டனை: கொடிய ஈக்கள் (20-32)
கோசேன் பிரதேசம் பாதிக்கப்படுவதில்லை (22, 23)

9 5-ஆம் தண்டனை: கால்நடைகளின் சாவு (1-7)
6-ஆம் தண்டனை: மனிதர்கள்மேலும் மிருகங்கள்மேலும் கொப்புளங்கள் (8-12)
7-ஆம் தண்டனை: ஆலங்கட்டி மழை (13-35)
கடவுளுடைய வல்லமையை பார்வோன் பார்ப்பான் (16)
யெகோவாவின் பெயர் பூமியெங்கும் அறிவிக்கப்படும் (16)

10 8-ஆம் தண்டனை: வெட்டுக்கிளிகள் (1-20)
9-ஆம் தண்டனை: இருட்டு (21-29)

11 10-ஆம் தண்டனை அறிவிக்கப்படுகிறது (1-10)
இஸ்ரவேலர்கள் பொருள்களைக் கேட்டு வாங்க வேண்டும் (2)

12 பஸ்காவின் ஆரம்பம் (1-28)
வாசலின் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்பட வேண்டும் (7)
10-ஆம் தண்டனை: முதல் பிறப்புகளின் சாவு (29-32)
எகிப்தைவிட்டு இஸ்ரவேலர்கள் புறப்படுகிறார்கள் (33-42)
430 வருஷங்கள் முடிவடைகின்றன (40, 41)
பஸ்கா பண்டிகை சம்பந்தமான அறிவுரைகள் (43-51)

13 முதல் ஆண் பிறப்புகள் யெகோவாவுக்குச் சொந்தம் (1, 2)
புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகை (3-10)
முதல் ஆண் பிறப்புகளைக் கடவுளுக்கு அர்ப்பணிக்க வேண்டும் (11-16)
இஸ்ரவேலர்கள் செங்கடல் பக்கமாக அழைத்துச் செல்லப்படுகிறார்கள் (17-20)
மேகத் தூணும் நெருப்புத் தூணும் (21, 22)

14 இஸ்ரவேலர்கள் கடல் பக்கம் வந்துசேர்கிறார்கள் (1-4)
பார்வோன் இஸ்ரவேலர்களைத் துரத்திக்கொண்டு வருகிறான் (5-14)
இஸ்ரவேலர்கள் செங்கடலைக் கடக்கிறார்கள் (15-25)
எகிப்தியர்கள் கடலுக்குள் மூழ்கிவிடுகிறார்கள் (26-28)
இஸ்ரவேலர்கள் யெகோவாமேல் விசுவாசம் வைக்கிறார்கள் (29-31)

15 மோசேயும் இஸ்ரவேலர்களும் பாடுகிற வெற்றிப் பாடல் (1-19)
மிரியாம் பதில்பாட்டு பாடுகிறாள் (20, 21)
கசப்பான தண்ணீர் தித்திப்பாக மாறுகிறது (22-27)

16 ஜனங்கள் சாப்பாட்டுக்காக முணுமுணுக்கிறார்கள் (1-3)
அவர்கள் முணுமுணுப்பதை யெகோவா கேட்கிறார் (4-12)
காடையும் மன்னாவும் கொடுக்கப்படுகின்றன (13-21)
ஓய்வுநாளில் மன்னா கொடுக்கப்படுவதில்லை (22-30)
மன்னா ஒரு நினைப்பூட்டுதலாக வைக்கப்படுகிறது (31-36)

17 தண்ணீர் இல்லாததால் ஜனங்கள் ஓரேபிலே தகராறு செய்கிறார்கள் (1-4)
கற்பாறையிலிருந்து தண்ணீர் (5-7)
அமலேக்கியர்கள் போர் செய்து தோற்றுப்போகிறார்கள் (8-16)

18 எத்திரோவும் சிப்போராளும் வருகிறார்கள் (1-12)
வழக்குகளை விசாரிக்க ஆட்களை நியமிக்கும்படி எத்திரோ ஆலோசனை (13-27)

19 சீனாய் மலையில் (1-25)
இஸ்ரவேலர்கள் ராஜாக்களாகவும் குருமார்களாகவும் ஆவார்கள் (5, 6)
கடவுள் முன்னிலையில் நிற்பதற்காக ஜனங்கள் புனிதப்படுத்தப்படுகிறார்கள் (14, 15)

20 பத்துக் கட்டளைகள் (1-17)
இஸ்ரவேலர்களை நடுநடுங்க வைக்கும் காட்சிகள் (18-21)
வணக்கம் சம்பந்தமான அறிவுரைகள் (22-26)

21 இஸ்ரவேலர்களுக்கான நீதித்தீர்ப்புகள் (1-36)
எபிரெய அடிமைகள் பற்றி (2-11)
வன்முறையில் இறங்குகிறவர்கள் பற்றி (12-27)
மிருகங்கள் பற்றி (28-36)

22 இஸ்ரவேலர்களுக்கான நீதித்தீர்ப்புகள் (1-31)
திருடுவது பற்றி (1-4)
பயிர்களை நாசமாக்குவது பற்றி (5, 6)
நஷ்ட ஈடு மற்றும் உரிமையாளர் பற்றி (7-15)
ஒரு பெண்ணை ஏமாற்றி உறவுகொள்வது பற்றி (16, 17)
கடவுளை வணங்குவது மற்றும் நியாயமாக நடந்துகொள்வது பற்றி (18-31)

23 இஸ்ரவேலர்களுக்கான நீதித்தீர்ப்புகள் (1-19)
நீதியாகவும் நேர்மையாகவும் நடந்துகொள்வது பற்றி (1-9)
ஓய்வு நாட்கள் மற்றும் பண்டிகை நாட்கள் பற்றி (10-19)
இஸ்ரவேலர்களை ஒரு தூதர் வழிநடத்துகிறார் (20-26)
தேசத்தைக் கைப்பற்றுவதும் அதன் எல்லைகளும் (27-33)

24 ஒப்பந்தத்தின்படி நடக்க ஜனங்கள் ஒத்துக்கொள்கிறார்கள் (1-11)
சீனாய் மலையில் மோசே (12-18)

25 வழிபாட்டுக் கூடாரத்தை அமைக்க காணிக்கைகள் (1-9)
பெட்டி (10-22)
மேஜை (23-30)
குத்துவிளக்கு (31-40)

26 வழிபாட்டுக் கூடாரம் (1-37)
கூடாரத்தின் விரிப்புகள் (1-14)
மரச் சட்டங்களும் அவற்றை நிறுத்துவதற்கான பாதங்களும் (15-30)
திரைச்சீலையும் திரையும் (31-37)

27 தகன பலிக்கான பலிபீடம் (1-8)
பிரகாரம் (9-19)
குத்துவிளக்கிற்கான எண்ணெய் (20, 21)

28 குருமார்களுக்கான உடைகள் (1-5)
ஏபோத் (6-14)
மார்ப்பதக்கம் (15-30)
ஊரீம், தும்மீம் (30)
கையில்லாத அங்கி (31-35)
தங்கத் தகட்டுடன் தலைப்பாகை (36-39)
குருமார்களுக்கான மற்ற உடைகள் (40-43)

29 குருமார்கள் நியமிக்கப்படுகிறார்கள் (1-37)
தினமும் செலுத்தப்படுகிற பலிகள் (38-46)

30 தூபப்பொருள் எரிப்பதற்கான பீடம் (1-10)
கணக்கெடுப்பும் பாவப் பரிகாரத்துக்கான பணமும் (11-16)
கைகால்களைக் கழுவுவதற்கான செம்புத் தொட்டி (17-21)
அபிஷேகத் தைலம் தயாரிப்பதற்கான விசேஷக் கலவை (22-33)
பரிசுத்தமான தூபப்பொருளைத் தயாரிக்கும் விதம் (34-38)

31 கைவேலைகளைச் செய்பவர்கள் கடவுளுடைய சக்தியால் நிரப்பப்படுகிறார்கள் (1-11)
ஓய்வுநாள், கடவுளுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையே ஓர் அடையாளம் (12-17)
இரண்டு கற்பலகைகள் (18)

32 கன்றுக்குட்டிச் சிலையை வணங்குகிறார்கள் (1-35)
ஒரு வினோதமான பாடல் சத்தம் மோசேயின் காதில் விழுகிறது (17, 18)
திருச்சட்டம் எழுதப்பட்ட கற்பலகைகளை மோசே வீசியெறிகிறார் (19)
லேவியர்கள் யெகோவாவுக்கு உண்மையாக இருக்கிறார்கள் (26-29)

33 கடவுள் கண்டித்துப் பேசுகிற வார்த்தைகள் (1-6)
முகாமுக்கு வெளியே இருக்கும் சந்திப்புக் கூடாரம் (7-11)
யெகோவாவின் மகிமையைப் பார்க்க வேண்டுமென்று மோசே கேட்கிறார் (12-23)

34 புதிய கற்பலகைகளை மோசே தயார் செய்கிறார் (1-4)
யெகோவாவின் மகிமையை மோசே பார்க்கிறார் (5-9)
ஒப்பந்தத்தின் விவரங்கள் மறுபடியும் சொல்லப்படுகின்றன (10-28)
மோசேயின் முகம் ஒளிவீசுகிறது (29-35)

35 ஓய்வுநாள் பற்றிய அறிவுரைகள் (1-3)
வழிபாட்டுக் கூடாரத்திற்காகக் காணிக்கைகள் (4-29)
பெசலெயேலும் அகோலியாபும் கடவுளுடைய சக்தியால் நிரப்பப்படுகிறார்கள் (30-35)

36 தேவைக்கும் அதிகமான காணிக்கைகள் கொடுக்கப்படுகின்றன (1-7)
வழிபாட்டுக் கூடார வேலைகள் (8-38)

37 பெட்டி செய்யப்படுகிறது (1-9)
மேஜை (10-16)
குத்துவிளக்கு (17-24)
தூபபீடம் (25-29)

38 தகன பலிக்கான பலிபீடம் (1-7)
செம்புத் தொட்டி (8)
பிரகாரம் (9-20)
வழிபாட்டுக் கூடாரத்துக்கான சாமான்களின் பட்டியல் (21-31)

39 குருமார்களுக்கான அங்கிகள் தயாரிக்கப்படுகின்றன (1)
ஏபோத் (2-7)
மார்ப்பதக்கம் (8-21)
கையில்லாத அங்கி (22-26)
குருமார்களுக்கான மற்ற உடைகள் (27-29)
தங்கத் தகடு (30, 31)
வழிபாட்டுக் கூடாரத்தை மோசே பார்வையிடுகிறார் (32-43)

40 வழிபாட்டுக் கூடாரம் அமைக்கப்படுகிறது (1-33)
வழிபாட்டுக் கூடாரம் யெகோவாவின் மகிமையால் நிரப்பப்படுகிறது (34-38)

---

1 யாக்கோபு என்ற இஸ்ரவேல் எகிப்துக்குப் போனபோது, அவருடைய
மகன்களும் அவரவர் குடும்பத்தோடு போனார்கள். அவருடைய மகன்
களுடைய பெயர்கள் இவைதான்:[a] **2** ரூபன், சிமியோன், லேவி, யூதா,[b]
3 இசக்கார், செபுலோன், பென்யமீன், **4** தாண், நப்தலி, காத், ஆசேர்.[c]
5 யோசேப்பு ஏற்கெனவே எகிப்து தேசத்தில் இருந்தார். யாக்கோபுடைய
வம்சத்தார் மொத்தம் 70 பேர்.[d] **6** பிற்பாடு, யோசேப்பும் அவருடைய
சகோதரர்கள் எல்லாரும், அந்தத் தலைமுறையைச் சேர்ந்த எல்லாரும்
இறந்துபோனார்கள்.[e] **7** இஸ்ரவேலர்கள் பிள்ளைகளைப் பெற்று ஏராளமா
கப் பெருகினார்கள். அவர்களுடைய எண்ணிக்கை பல மடங்கு அதிகமாகிக்
கொண்டே போனது. அதனால், அவர்களுடைய பலமும் கூடிக்கொண்டே
போனது. எகிப்து தேசமெங்கும் அவர்கள் நிறைந்திருந்தார்கள்.[f]

8 பிற்பாடு, யோசேப்பைப் பற்றித் தெரியாத ஒரு புதிய ராஜா எகிப்தை
ஆட்சி செய்ய ஆரம்பித்தான். **9** அவன் தன்னுடைய ஜனங்களிடம்,
“பாருங்கள்! இஸ்ரவேலர்கள் நம்மைவிட ஏராளமாகப் பெருகிவிட்டார்கள்,
பலத்திலும் நம்மை மிஞ்சிவிட்டார்கள்.[g] **10** நாம் சாமர்த்தியமாக ஏதாவது
செய்து அவர்கள் பெருகாதபடி தடுக்க வேண்டும். இல்லையென்றால், எதி
ரிகள் போர் செய்ய வரும்போது இவர்கள் அவர்களோடு சேர்ந்துகொண்டு
நம்மைத் தோற்கடித்துவிட்டு இந்தத் தேசத்திலிருந்து தப்பித்துவிடுவார்கள்”
என்றான்.

11 அதனால், இஸ்ரவேலர்களைக் கொத்தடிமைகள் போல வேலை
வாங்கி அடக்கி ஒடுக்குவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள்.[h] பார்
வோனுக்காகப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்கு பித்தோம் நகரத்

அதி. 1
a ஆதி 46:8
b 1நா 2:3, 4
c ஆதி 46:17
d ஆதி 46:26 உபா 10:22 அப் 7:14
e ஆதி 50:26
f ஆதி 46:3 உபா 26:5 அப் 7:17-19
g சங் 105:24, 25
h ஆதி 15:13 யாத் 3:7 எண் 20:15 உபா 26:6

தையும் ராமசேஸ் நகரத்தையும்[a] கட்டும்படி இஸ்ரவேலர்கள் வற்புறுத்தப்பட்
டார்கள். **12** ஆனால், எகிப்தியர்கள் எந்தளவுக்கு அவர்களை அடக்கி
ஒடுக்கினார்களோ அந்தளவுக்கு அவர்கள் பெருகினார்கள், எல்லா இடங்
களிலும் பரவினார்கள். அதனால், இஸ்ரவேலர்களை நினைத்து எகிப்தியர்
கள் பீதியடைந்தார்கள்.[b] **13** அவர்களைக் கொத்தடிமைகள் போல நடத்
தினார்கள்.[c] **14** வாழ்க்கையே வெறுத்துப்போகும் அளவுக்கு அவர்களை
வேலை வாங்கினார்கள். களிமண் சாந்தும் செங்கலும் தயாரிக்கிற வேலைக
ளையும், எல்லாவித வயல் வேலைகளையும் செய்யும்படி கட்டாயப்படுத்தி
னார்கள். இப்படி, அவர்களைப் படாத பாடுபடுத்தி, சக்கையாகப் பிழிந்தெ
டுத்தார்கள்.[d]

15 பிற்பாடு, எகிப்தின் ராஜா எபிரெய மருத்துவச்சிகளான சிப்பிராளை
யும் பூவாளையும் கூப்பிட்டு, **16** “எபிரெயப் பெண்களுக்கு நீங்கள் பிரச
வம் பார்க்கும்போது[e] ஆண் குழந்தை பிறந்தால் அதைக் கொன்றுவிடுங்
கள், பெண் குழந்தை பிறந்தால் உயிரோடு விட்டுவிடுங்கள்” என்று
சொன்னான். **17** ஆனால், அந்த மருத்துவச்சிகள் உண்மைக் கடவுளுக்
குப் பயந்து நடந்ததால் எகிப்தின் ராஜா சொன்னபடி செய்யவில்லை.
ஆண் குழந்தைகளை உயிரோடு விட்டுவிட்டார்கள்.[f] **18** பிற்பாடு, எகிப்
தின் ராஜா அந்த மருத்துவச்சிகளைக் கூப்பிட்டு, “ஆண் குழந்தைகளை
ஏன் உயிரோடு விட்டுவைத்தீர்கள்?” என்று கேட்டான். **19** அதற்கு அந்த
மருத்துவச்சிகள், “எபிரெயப் பெண்கள் எகிப்தியப் பெண்களைப் போலக்
கிடையாது. அவர்கள் துடிப்பானவர்கள், மருத்துவச்சி வருவதற்கு முன்பே
குழந்தை பெற்றுவிடுகிறார்கள்” என்று சொன்னார்கள்.

20 அதனால், கடவுள் அந்த மருத்துவச்சிகளுக்கு ஆதரவாக இருந்தார்.
இஸ்ரவேல் ஜனங்கள் பெருகிக்கொண்டே போனார்கள், அவர்களுடைய
பலமும் கூடிக்கொண்டே போனது. **21** அந்த மருத்துவச்சிகள் உண்மைக்
கடவுளுக்குப் பயந்து நடந்ததால் அவர் பிற்பாடு அவர்களுக்குப் பிள்ளை
களைக் கொடுத்து ஆசீர்வதித்தார். **22** கடைசியில், பார்வோன் தன்னு
டைய ஜனங்களிடம், “எபிரெயர்களுக்குப் பிறக்கிற எல்லா ஆண் குழந்தை
களையும் நைல் நதியில் வீசிவிடுங்கள், பெண் குழந்தைகளை மட்டும் உயி
ரோடு விட்டுவிடுங்கள்”[g] என்று கட்டளை போட்டான்.

2

அந்தச் சமயத்தில், லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் அதே கோத்
திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்தார்.[h] **2** அந்தப்
பெண் கர்ப்பமாகி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். குழந்தை மிகவும்
அழகாக இருப்பதைப் பார்த்து, அவனை மூன்று மாதங்கள் ஒளித்துவைத்
தாள்.[i] **3** அதற்குமேல் அவனை ஒளித்துவைக்க முடியாததால்,[j] ஒரு
நாணல்* கூடையை எடுத்து, அதற்குத் தார் பூசி, அவனை அதில் படுக்க
வைத்தாள். பின்பு, நைல் நதியோரம் இருந்த நாணற்புற்களுக்கு இடை
யில் கூடையை வைத்தாள். **4** அவனுக்கு என்ன நடக்கிறதென்று பார்ப்ப
தற்காக அவனுடைய அக்கா[k] கொஞ்சத் தூரத்தில் நின்றுகொண்டாள்.

5 பார்வோனின் மகள் குளிப்பதற்காக நைல் நதிக்கு வந்தாள். அவ
ளுடைய பணிப்பெண்கள் நைல் நதிக்கரையில் நடந்துகொண்டிருந்தார்
கள். அப்போது, நாணற்புற்களுக்கு இடையில் இருந்த அந்தக் கூடையை
அவள் பார்த்தாள். உடனே தன்னுடைய அடிமைப் பெண்ணை அனுப்பி

அதி. 1
a ஆதி 47:11
b யாத் 1:7; சங் 105:24, 25
c யாத் 2:23; அப் 7:6
d லேவி 26:13
e எசே 16:4
f ஆதி 9:5, 6
g அப் 7:18, 19

அதி. 2
h யாத் 6:20; எண் 26:59
i அப் 7:20; எபி 11:23
j அப் 7:18, 19
k யாத் 15:20; 1நா 6:3; மீ 6:4

2:3 * அதாவது, “பாப்பிரஸ் புல்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதை எடுத்துவரச் சொன்னாள்.[a] **6** பார்வோனின் மகள் அதைத் திறந்த
போது, அதற்குள் குழந்தை இருந்தது. அது அழுதுகொண்டிருப்பதைப்
பார்த்தபோது அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. “இது எபிரெயர்களு
டைய குழந்தை” என்று சொன்னாள். **7** அப்போது, அந்தக் குழந்தையின்
அக்கா பார்வோனுடைய மகளிடம், “குழந்தைக்குப் பால் கொடுக்க ஒரு
எபிரெயப் பெண்ணை நான் போய்க் கூட்டிக்கொண்டு வரட்டுமா?” என்று
கேட்டாள். **8** அதற்கு பார்வோனின் மகள், “சரி, போ!” என்றாள். அந்தக்
குட்டிப் பெண் உடனடியாகப் போய், குழந்தையின் அம்மாவைக்[b] கூட்டிக்
கொண்டு வந்தாள். **9** அப்போது பார்வோனின் மகள் அந்தப் பெண்ணி
டம், “இந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு போய், பால் கொடுத்து, நன்றா
கக் கவனித்துக்கொள். நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன்” என்றாள்.
அந்தப் பெண்ணும் குழந்தையை எடுத்துக்கொண்டு போய் பால் கொடுத்து
வளர்த்தாள். **10** குழந்தை வளர்ந்த பின்பு, அவனை பார்வோனின் மக
ளிடம் கொண்டுவந்து விட்டாள். அவள் அவனைத் தன்னுடைய மகனாக
ஏற்றுக்கொண்டாள்.[c] “இவனை நான் தண்ணீரிலிருந்து எடுத்தேன்” என்று
சொல்லி அவனுக்கு மோசே* என்று பெயர் வைத்தாள்.[d]

11 மோசே வளர்ந்து ஆளான பின்பு, தன்னுடைய சகோதரர்களாகிய
எபிரெயர்கள் படுகிற கஷ்டங்களைப் பார்க்கப் போனார்.[e] அப்போது, ஓர்
எபிரெயனை ஓர் எகிப்தியன் அடித்துக்கொண்டிருந்தான். **12** அவர் சுற்று
முற்றும் பார்த்துவிட்டு, யாரும் இல்லையென்று தெரிந்தவுடன், அந்த எகிப்
தியனைக் கொன்று மணலுக்குள் புதைத்தார்.[f]

13 அடுத்த நாள் அவர் வெளியே போனபோது, இரண்டு எபிரெ
யர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது தப்பு செய்தவ
னிடம், “நீ ஏன் உன்னுடைய சகோதரனை அடிக்கிறாய்?” என்று கேட்டார்.[g]
14 அதற்கு அவன், “உன்னை எங்களுடைய தலைவனாகவும் நீதிபதியாக
வும் யாராவது நியமித்தார்களா? நீ அந்த எகிப்தியனைக் கொன்றுபோட்டது
போல என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயா?” என்று கேட்டான்.[h]
அதைக் கேட்டதும் மோசே பயந்துபோய், “நான் செய்தது எல்லாருக்கும்
தெரிந்துவிட்டது!” என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

15 நடந்ததை பார்வோன் கேள்விப்பட்டவுடன், மோசேயைக் கொலை
செய்ய நினைத்தான். அதனால் மோசே பார்வோனிடமிருந்து தப்பியோடி,
மீதியான் தேசத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.[i] அங்கே ஒரு கிணற்றுக்குப் பக்கத்
தில் உட்கார்ந்தார். **16** அந்தத் தேசத்தைச் சேர்ந்த குருவுக்கு[j] ஏழு மகள்கள்
இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய அப்பாவின் ஆடுகளுக்காகக் கிணற்
றிலிருந்து தண்ணீரை மொண்டு தொட்டிகளை நிரப்புவதற்கு அங்கே வந்தார்
கள். **17** ஆனால், வழக்கம்போல் மேய்ப்பர்கள் வந்து அவர்களை விரட்டி
னார்கள். உடனே, மோசே எழுந்துபோய் அந்தப் பெண்களுக்கு உதவி செய்
தார்.* அதுமட்டுமல்ல, அவர்களுடைய ஆடுகளுக்குத் தண்ணீரும் காட்டி
னார். **18** அவர்கள் வீட்டுக்குப் போனதும் அவர்களுடைய அப்பா ரெகு
வேல்,*[k] “இன்றைக்கு இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டீர்களே, எப்படி?”
என்று ஆச்சரியத்தோடு கேட்டார். **19** அதற்கு அவர்கள், “ஒரு எகிப்தி

2:10 * அர்த்தம், “எடுக்கப்பட்டவன்,” அதாவது, “தண்ணீரிலிருந்து காப்பாற்றப்பட்ட வன்.” **2:17** * வே.வா., “அந்தப் பெண்களுக்காகப் பரிந்து பேசினார்.” **2:18** * அதாவது, “எத்திரோ.”

அதி. 2
a அப் 7:21
b யாத் 6:20
c எபி 11:24, 25
d அப் 7:21
e யாத் 1:11, யாத் 3:7, அப் 7:23
f அப் 7:24
g அப் 7:26
h அப் 7:27, 28
i ஆதி 25:1, 2, யாத் 3:1, யாத் 4:19
j யாத் 18:12
k யாத் 4:18, யாத் 18:1, எண் 10:29

யர்[a] எங்களை மேய்ப்பர்களிடமிருந்து காப்பாற்றினார், அதுமட்டுமல்ல ஆடு
களுக்குத் தண்ணீரையும் மொண்டு ஊற்றினார்” என்றார்கள். **20** அப்போது
அவர் தன்னுடைய மகள்களிடம், “அவர் எங்கே? ஏன் அவரை விட்டு
விட்டு வந்தீர்கள்? உடனே போய் அவரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்,
அவர் நம்மோடு சேர்ந்து சாப்பிடட்டும்” என்றார். **21** அதன் பின்பு, மோசே
யும் அங்கு வந்து அவரோடு தங்கியிருக்க ஒத்துக்கொண்டார். ரெகுவேல்
தன்னுடைய மகள் சிப்போராளை[b] மோசேக்குக் கல்யாணம் செய்து வைத்
தார். **22** அவள் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அப்போது மோசே, “நான்
வேறு தேசத்தில் அன்னியனாகக் குடியிருக்கிறேன்”[c] என்று சொல்லி அவ
னுக்கு கெர்சோம்*[d] என்று பெயர் வைத்தார்.

23 பல வருஷங்களுக்குப் பின்பு எகிப்தின் ராஜா இறந்துபோனான்.[e]
ஆனால், இஸ்ரவேலர்கள் அடிமைகளாகவே இருந்ததால் வேதனையில்
குமுறினார்கள், அழுது புலம்பினார்கள். அடிமைத்தனத்திலிருந்து விடு
தலை கேட்டு உண்மைக் கடவுளிடம் தொடர்ந்து கெஞ்சிக் கதறினார்கள்.[f]
24 கடவுள் அவர்களுடைய குமுறலைக் கேட்டார்.[g] ஆபிரகாமுடனும்
ஈசாக்குடனும் யாக்கோபுடனும் செய்த ஒப்பந்தத்தை நினைத்துப் பார்த்தார்.[h]
25 கடவுள் இஸ்ரவேலர்கள்மேல் தன் கவனத்தைத் திருப்பினார்; அவர்களு
டைய கஷ்டத்தைக் கவனித்தார்.

3 மோசே, மீதியான் தேசத்து குருவான தன்னுடைய மாமனார் எத்திரோ
வின்[i] ஆடுகளை மேய்த்துவந்தார். அந்த ஆடுகளை வனாந்தரத்தின்
மேற்குப் பக்கம் ஓட்டிக்கொண்டு போனபோது, உண்மைக் கடவுளின் மலை
யாகிய ஓரேபுக்கு[j] வந்துசேர்ந்தார். **2** அப்போது, கொழுந்துவிட்டு எரிந்து
கொண்டிருந்த ஒரு முட்புதரின் நடுவில் யெகோவாவின் தூதர் அவருக்
குத் தோன்றினார்.[k] மோசே அந்த முட்புதரையே பார்த்தார். அது எரிந்து
கொண்டிருந்தபோதிலும் கருகவே இல்லை. **3** அதனால் மோசே, “இந்த
முட்புதர் கருகாமல் இருக்கிறதே! இந்த அற்புதக் காட்சியைப் பக்கத்தில்
போய்ப் பார்க்க வேண்டும்” என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.
4 அவர் அதன் பக்கத்தில் வருவதை யெகோவா பார்த்தபோது அந்த முட்
புதரிலிருந்து, “மோசே, மோசே” என்று கூப்பிட்டார். அதற்கு மோசே, “சொல்
லுங்கள், எஜமானே!” என்றார். **5** அப்போது கடவுள் அவரிடம், “பக்கத்தில்
வராதே. உன் செருப்பைக் கழற்று. ஏனென்றால், நீ நிற்கிற இடம் பரிசுத்தமா
னது” என்றார்.

6 அதோடு, “நான் உன் முன்னோர்களான* ஆபிரகாமின் கடவுளாக
வும்,[l] ஈசாக்கின் கடவுளாகவும்,[m] யாக்கோபின் கடவுளாகவும்[n] இருக்கிறேன்”
என்றார். உண்மைக் கடவுளைப் பார்க்க மோசே பயந்ததால் முகத்தை மூடிக்
கொண்டார். **7** அதன் பின்பு யெகோவா, “எகிப்தில் என்னுடைய ஜனங்
கள் படுகிற கஷ்டத்தை நான் பார்த்தேன். வேலை வாங்குகிறவர்களுடைய
கொடுமை தாங்காமல் அவர்கள் கதறுவதைக் கேட்டேன். அவர்களுடைய
வலியும் வேதனையும் எனக்கு நன்றாகவே தெரியும்.[o] **8** நான் கீழே இறங்
கிப் போய்* எகிப்தியர்களுடைய கையிலிருந்து அவர்களைக் காப்பாற்றி,[p]
பாலும் தேனும் ஓடுகிற நல்ல தேசத்துக்குக்[q] கொண்டுபோவேன். கானானி
யர்களும் ஏத்தியர்களும் எமோரியர்களும் பெரிசியர்களும் ஏவியர்களும்

அதி. 2
a அப் 7:22
b யாத் 18:2-4; எண் 12:1
c அப் 7:29
d 1நா 23:15
e யாத் 7:7; அப் 7:30
f யாத் 3:7; 1ரா 8:51
g அப் 7:34
h ஆதி 15:13, 14; யாத் 6:5; எண் 20:15, 16

அதி. 3
i யாத் 2:16; யாத் 18:1
j யாத் 24:12, 13; 1ரா 19:8, 9
k அப் 7:30-34
l ஆதி 17:1, 7
m ஆதி 26:24
n ஆதி 28:13; ஆதி 32:9; மத் 22:32; அப் 7:32
o யாத் 1:11; ஏசா 63:9; அப் 7:34
p யாத் 12:51
q எண் 13:26, 27; உபா 27:3

2:22 *அர்த்தம், “அங்கே ஓர் அன்னியன்.” **3:6** *நே.மொ., “தகப்பனாகிய.” **3:8** *வே.வா., “நான் என் கவனத்தைத் திருப்பி.”

எபூசியர்களும்[a] வாழ்கிற மாபெரும் தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு
போவேன். **9** இஸ்ரவேல் ஜனங்கள் கதறுவதை நான் கேட்டேன். எகிப்தி
யர்கள் அவர்களை எந்தளவுக்கு அடக்கி ஒடுக்குகிறார்கள் என்பதையும்
பார்த்தேன்.[b] **10** அதனால், இப்போது உன்னை பார்வோனிடம் அனுப்
பப்போகிறேன். என் ஜனங்களாகிய இஸ்ரவேலர்களை நீ எகிப்திலிருந்து
கூட்டிக்கொண்டு வருவாய்"[c] என்றார்.

11 ஆனால் மோசே உண்மைக் கடவுளிடம், "பார்வோனிடம் போவதற்
கும் எகிப்திலிருந்து இஸ்ரவேலர்களைக் கூட்டிக்கொண்டு வருவதற்கும்
எனக்கு என்ன தகுதி இருக்கிறது?" என்று கேட்டார். **12** அதற்கு அவர்,
"நான் உன்னோடு இருப்பேன்.[d] என்னுடைய ஜனங்களை எகிப்திலிருந்து
நீ கூட்டிக்கொண்டு வந்த பின்பு, உண்மைக் கடவுளாகிய என்னை நீங்கள்
எல்லாரும் இந்த மலையில் வணங்குவீர்கள்.[e] நான்தான் உன்னை அனுப்
பினேன் என்பதற்கு இதுவே அடையாளம்" என்றார்.

13 ஆனால் மோசே உண்மைக் கடவுளிடம், "நான் இஸ்ரவேலர்களிடம்
போய், 'உங்கள் முன்னோர்களின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பி
னார்' என்று சொல்லும்போது, 'அவருடைய பெயர் என்ன?'[f] என்று
அவர்கள் கேட்டால் என்ன சொல்வது?" என்று கேட்டார். **14** அதற்
குக் கடவுள், "நான் எப்படியெல்லாம் ஆக நினைக்கிறேனோ* அப்படி
யெல்லாம் ஆவேன்"#[g] என்று சொன்னார். அதோடு, "நீ இஸ்ரவேலர்களி
டம், 'ஆவேன்' என்பவர் உங்களிடம் என்னை அனுப்பியிருக்கிறார் என்று
சொல்"[h] என்றார். **15** கடவுள் மறுபடியும் மோசேயிடம்,

"'உங்கள் முன்னோர்களான ஆபிரகாமின் கடவுளாகவும், ஈசாக்கின் கட
வுளாகவும், யாக்கோபின் கடவுளாகவும் இருக்கிற யெகோவா[i] உங்களிடம்
என்னை அனுப்பியிருக்கிறார்' என்று நீ இஸ்ரவேலர்களிடம் சொல்ல வேண்
டும். என்றென்றும் இதுதான் என்னுடைய பெயர்.[j] தலைமுறை தலைமுறை
யாக இந்தப் பெயரால்தான் ஜனங்கள் என்னை நினைத்துப் பார்ப்பார்
கள். **16** இப்போது நீ போய் இஸ்ரவேலின் பெரியோர்களை* ஒன்று
கூட்டி, அவர்களிடம், 'உங்கள் முன்னோர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்
கோபு ஆகியவர்களின் கடவுளாகிய யெகோவா எனக்குத் தோன்றி இப்ப
டிச் சொன்னார்: "எகிப்தில் உங்களுக்குச் செய்யப்படுகிற கொடுமைகளையும்
நீங்கள் அனுபவிக்கிற கஷ்டங்களையும் நான் பார்த்தேன்.[k] **17** அதனால்,
எகிப்தியர்களுடைய பிடியிலிருந்து உங்களை விடுதலை செய்து,[l] கானானி
யர்களும் ஏத்தியர்களும் எமோரியர்களும்[m] பெரிசியர்களும் ஏவியர்களும்
எபூசியர்களும்[n] வாழ்கிற தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு போவேன். அது
பாலும் தேனும் ஓடுகிற தேசம்"'[o] என்று சொல்.

18 அவர்கள் நீ சொல்வதை நிச்சயம் கேட்பார்கள்.[p] நீயும் இஸ்ர
வேலின் பெரியோர்களும் எகிப்தின் ராஜாவிடம் போய், 'எபிரெயர்களின்
கடவுளாகிய யெகோவா[q] எங்களிடம் பேசினார். நாங்கள் மூன்று நாட்கள்
பயணம் செய்து, வனாந்தரத்தில் எங்களுடைய கடவுளாகிய யெகோவாவுக்
குப் பலி கொடுக்க வேண்டும்.[r] அதனால் தயவுசெய்து எங்களைப் போக
விடுங்கள்' என்று கேட்க வேண்டும். **19** ஆனால், என்னுடைய கைபலத்
தைக் காட்டினால்தான் எகிப்தின் ராஜா உங்களைப் போக விடுவான்

3:14 *வே.வா., "விரும்புகிறேனோ." #இணைப்பு A4-ஐப் பாருங்கள். **3:16** *வே.வா., "மூப்பர்களை."

அதி. 3
a ஆதி 10:15-17; யாத் 33:1, 2; உபா 7:1; யோசு 3:10; நெ 9:7, 8
b யாத் 1:11
c சங் 105:26, 38; அப் 7:34
d உபா 31:23; யோசு 1:5; ஏசா 41:10; ரோ 8:31; பிலி 4:13
e யாத் 19:2; உபா 4:11, 12
f யாத் 15:3; சங் 96:8; சங் 135:13; ஓசி 12:5; யோவா 17:26; ரோ 10:13
g யோபு 23:13; ஏசா 14:27; யோவா 12:28
h யாத் 6:3, 7; ரோ 9:17
i ஆதி 17:1, 7; ஆதி 26:24; ஆதி 28:13; மத் 22:32
j சங் 135:13
k ஆதி 50:24; யாத் 13:19
l ஆதி 15:13, 14; லேவி 26:13
m ஆதி 15:16
n யாத் 23:23
o எண் 13:27; உபா 8:7-9
p யாத் 4:31
q ஆதி 14:13
r யாத் 5:3; யாத் 10:25, 26

என்று எனக்கு நன்றாகத் தெரியும்.[a] **20** அதனால், அதிர வைக்கும் அற்பு
தங்களைச் செய்து எகிப்தைத் தாக்குவேன். அதன் பின்பு, அவன் உங்களை
அனுப்பிவிடுவான்.[b] **21** நீங்கள் அங்கிருந்து வெறுங்கையோடு வர மாட்
டீர்கள். உங்களுக்கு வேண்டியதையெல்லாம் எகிப்தியர்கள் கொடுக்கும்படி
செய்வேன்.[c] **22** இஸ்ரவேல் பெண்கள் தங்களுடைய வீட்டிலும் அக்கம்
பக்கத்திலும் இருக்கிற எகிப்தியப் பெண்களிடம், தங்கத்திலும் வெள்ளியி
லும் செய்யப்பட்ட பொருள்களையும் துணிமணிகளையும் கேட்டு வாங்க
வேண்டும். அவற்றைத் தங்களுடைய மகன்களுக்கும் மகள்களுக்கும்
போட்டுவிட வேண்டும். இப்படி, நீங்கள் எகிப்தியர்களின் சொத்துகளை
எடுத்துக்கொண்டு வர* வேண்டும்”[d] என்று சொன்னார்.

4 அப்போது மோசே, “அவர்கள் நான் சொல்வதைக் கேட்காமலும்
என்னை நம்பாமலும் போனால், என்ன செய்வது?[e] ‘யெகோவா உன்
முன்னால் தோன்றியிருக்க மாட்டார்’ என்று அவர்கள் சொல்வார்களே” என்
றார். **2** அப்போது யெகோவா, “கையில் என்ன வைத்திருக்கிறாய்?” என்று
கேட்டார். அதற்கு அவர், “ஒரு கோலை வைத்திருக்கிறேன்” என்றார்.
3 கடவுள் அவரிடம், “அதைத் தரையில் போடு” என்றார். மோசே அதைத்
தரையில் போட்டதும் அது ஒரு பாம்பாக மாறியது.[f] உடனே அவர் அங்கி
ருந்து பயந்து ஓடினார். **4** யெகோவா மோசேயிடம், “உன் கையை நீட்டி,
அதன் வாலைப் பிடி” என்றார். அவரும் கையை நீட்டி அதைப் பிடித்தார்,
அந்தப் பாம்பு கோலாக மாறியது. **5** அப்போது கடவுள் அவரிடம், “அவர்
களுடைய முன்னோர்களான ஆபிரகாமின் கடவுளும் ஈசாக்கின் கடவுளும்
யாக்கோபின் கடவுளுமான யெகோவா[g] உன் முன்னால் தோன்றினார் என்
பதை அவர்கள் நம்புவதற்கு இது ஒரு அடையாளம்”[h] என்றார்.

6 யெகோவா மறுபடியும் அவரிடம், “தயவுசெய்து உன் கையை உன்னு
டைய அங்கியின் மேல்மடிப்புக்குள் வை” என்றார். அவரும் அங்கியின்
மடிப்புக்குள் கையை வைத்தார். அவர் கையை வெளியே எடுத்தபோது,
அது தொழுநோய் பிடித்து, பனி போல வெள்ளையாக மாறியிருந்தது![i]
7 அதன் பின்பு கடவுள் அவரிடம், “உன் கையை மறுபடியும் அங்கியின்
மேல்மடிப்புக்குள் வை” என்றார். அவரும் அங்கிக்குள் கையை வைத்தார்.
பின்பு கையை வெளியே எடுத்தபோது, அது பழையபடி மாறியிருந்தது!
8 அப்போது கடவுள் அவரிடம், “நீ செய்த முதல் அற்புதத்தைப் பார்த்தும்
அவர்கள் உன்னை நம்பாமல் போனால், அடுத்த அற்புதத்தைப் பார்த்து
நிச்சயம் நம்புவார்கள்.[j] **9** ஒருவேளை, இந்த இரண்டு அற்புதங்களைப்
பார்த்த பின்பும் அவர்கள் உன் பேச்சைக் கேட்காமல் போனால், நீ நைல்
நதியிலிருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்து காய்ந்த தரையில் ஊற்று. அது
இரத்தமாக மாறும்”[k] என்றார்.

10 அப்போது மோசே யெகோவாவிடம், “என்னை மன்னித்துவிடுங்
கள் யெகோவாவே, எனக்குச் சரளமாகப் பேச வராது. எனக்கு வாய் திக்
கும், நாக்கு குழறும். நீங்கள் என்னிடம் பேச ஆரம்பித்த பிறகுகூட எனக்
குச் சரியாகப் பேச்சு வரவில்லை”[l] என்றார். **11** அதற்கு யெகோவா, “மனு
ஷர்களுக்கு வாயைக் கொடுத்தது யார்? அவனை ஊமையனாக, செவிட
னாக, குருடனாக, அல்லது நல்ல கண்பார்வை உள்ளவனாக ஆக்க யாரால்
முடியும்? யெகோவாவாகிய என்னால்தானே முடியும்? **12** அதனால்

3:22 * வே.வா., “சொத்துகளைச் சூறையாட.”

அதி. 3
a யாத் 5:2; யாத் 14:8; ரோ 9:17
b யாத் 7:3; யாத் 12:33; உபா 6:22
c யாத் 11:2; யாத் 12:35, 36
d ஆதி 15:13, 14; யாத் 12:36

அதி. 4
e யாத் 2:13, 14
f யாத் 7:9
g லூ 20:37
h யாத் 3:16; யாத் 4:31
i எண் 12:10
j அப் 7:36
k யாத் 4:30
l யாத் 6:12; எண் 12:3; எரே 1:6; அப் 7:22

நீ புறப்பட்டுப் போ. நீ பேசும்போது நான் உன்னோடு இருப்பேன், நீ
என்ன பேச வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொடுப்பேன்”[a] என்
றார். **13** ஆனால் மோசே, “என்னை மன்னித்துவிடுங்கள் யெகோவாவே,
தயவுசெய்து வேறு யாரையாவது அனுப்புங்கள்” என்றார். **14** அதனால்,
யெகோவாவுக்குப் பயங்கர கோபம் வந்தது. அவர் மோசேயிடம், “உனக்
குத்தான் லேவியனாகிய உன் அண்ணன் ஆரோன்[b] இருக்கிறானே. அவன்
நன்றாகப் பேசுவான் என்று எனக்குத் தெரியும். உன்னைப் பார்க்க அவன்
வந்துகொண்டிருக்கிறான். உன்னைப் பார்க்கும்போது அவன் சந்தோஷப்
படுவான்.[c] **15** நான் உனக்குச் சொன்ன எல்லாவற்றையும் நீ அவனிடம்
சொல்ல வேண்டும்.[d] நீ பேசும்போது நான் உன்னோடு இருப்பேன், அவ
னோடும் இருப்பேன்.[e] நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நான் சொல்
லிக்கொடுப்பேன். **16** அவன் உன்னுடைய சார்பில் ஜனங்களிடம் பேசு
வான், நீ கடவுளுடைய சார்பில் அவனிடம் பேசுவாய்.*[f] **17** நீ இந்தக்
கோலை எடுத்துக்கொண்டு போய், இதை வைத்து அற்புதங்களைச் செய்
வாய்”[g] என்று சொன்னார்.

18 பின்பு, மோசே தன் மாமனார் எத்திரோவிடம்[h] போய், “நான் போய்
எகிப்திலுள்ள என் சகோதரர்கள் நன்றாக இருக்கிறார்களா என்று பார்க்க
வேண்டும், தயவுசெய்து என்னை அனுப்பி வையுங்கள்” என்றார். அப்
போது எத்திரோ, “சரி, நல்லபடியாகப் போய்விட்டு வா” என்றார்.
19 அதன் பின்பு யெகோவா மீதியானில் இருந்த மோசேயிடம், “நீ எகிப்
துக்குப் போ. உன்னைக் கொலை செய்ய நினைத்த எல்லாரும் செத்துவிட்
டார்கள்”[i] என்றார்.

20 அதனால், மோசே தன் மனைவியையும் மகன்களையும் கழுதை
யின் மேல் உட்கார வைத்து, எகிப்துக்குப் புறப்பட்டார். உண்மைக் கடவுள்
கொண்டுபோகச் சொன்ன கோலையும் எடுத்துக்கொண்டார். **21** அப்
போது யெகோவா மோசேயிடம், “நீ எகிப்துக்குப் போனதும், நான் உனக்
குத் தந்திருக்கிற சக்தியால் பார்வோனுக்குமுன் எல்லா அற்புதங்களையும்
செய்.[j] ஆனாலும், அவனுடைய இதயம் இறுகிப்போகும்படி நான் விட்டுவி
டுவேன்,[k] அவன் என்னுடைய ஜனங்களை அனுப்ப மாட்டான்.[l] **22** அப்
போது நீ பார்வோனிடம், ‘யெகோவா சொல்வது இதுதான்: “இஸ்ரவேல்
என்னுடைய மூத்த மகன்.[m] **23** என்னை வணங்குவதற்காக அவனை நீ
அனுப்பிவிடு, இது என் கட்டளை. என்னுடைய மூத்த மகனை நீ அனுப்
பாவிட்டால், உன்னுடைய மூத்த மகனை நான் கொன்றுவிடுவேன்”’[n] என்று
சொல்” என்றார்.

24 பின்பு, வழியிலிருந்த ஒரு சத்திரத்தில் யெகோவா[o] அவர்முன்
தோன்றி, அவனை* கொலை செய்யப் பார்த்தார்.[p] **25** அப்போது, சிப்
போராள்[q] ஒரு கூர்மையான கல்லை* எடுத்து தன்னுடைய மகனுக்கு
விருத்தசேதனம் செய்து, அந்த நுனித்தோலை அவர் பாதங்களில் வைத்து,
“எனக்கு நீங்கள் இரத்தத்தின் மணமகன்” என்றாள். **26** அதனால், கடவுள்
அவனை விட்டுவிட்டார். அப்போது அவள், விருத்தசேதனத்தின் காரண
மாக, “இரத்தத்தின் மணமகன்” என்றாள்.

27 பின்பு யெகோவா ஆரோனிடம், “மோசேயைச் சந்திப்பதற்காக

4:16 * வே.வா., “நீ அவனுக்குக் கடவுளாக இருப்பாய்.” **4:24** * ஒருவேளை, “மோசே
யின் மகனை.” **4:25** * நே.மொ., “சிக்கிமுக்கிக் கல்லை.”

அதி. 4
a ஏசா 50:4
மாற் 13:11
b எண் 26:59
c யாத் 4:27
d யாத் 4:28
e எரே 1:9
f யாத் 7:1, 2
g யாத் 8:5
யாத் 17:5, 6
எண் 20:11
h யாத் 2:18, 21
யாத் 18:1
எண் 10:29
i யாத் 2:15
j யாத் 7:9
k யாத் 7:3
யாத் 8:15
யாத் 9:12
யாத் 11:10
ரோ 9:17, 18
l யாத் 7:22
m உபா 7:6
உபா 14:2
ஓசி 11:1
ரோ 9:4
n யாத் 12:29
o எண் 22:22
1நா 21:16
p ஆதி 17:14
q யாத் 2:16, 21

வனாந்தரத்துக்குப் போ”[a] என்றார். அதனால் அவர் புறப்பட்டுப் போய்,
உண்மைக் கடவுளுடைய மலையில்[b] மோசேயைச் சந்தித்து, அவருக்கு
முத்தம் கொடுத்து வாழ்த்தினார். **28** அப்போது மோசே, யெகோவா
சொன்ன எல்லா விஷயங்களைப் பற்றியும், தன்னைச் செய்யச் சொன்ன
எல்லா அற்புதங்களைப் பற்றியும் ஆரோனிடம் சொன்னார்.[c] **29** அதன்
பின்பு மோசேயும் ஆரோனும் போய், இஸ்ரவேலின் பெரியோர்கள்* எல்
லாரையும் ஒன்றுகூட்டினார்கள்.[d] **30** யெகோவா மோசேயிடம் பேசிய
எல்லாவற்றையும் ஆரோன் அவர்களிடம் சொன்னார். ஜனங்களுடைய
கண் முன்னால் அவர் அற்புதங்களைச் செய்தார்.[e] **31** அப்போது, ஜனங்
கள் மோசேயை நம்பினார்கள்.[f] இஸ்ரவேலர்களுக்கு யெகோவா கருணை
காட்டியிருக்கிறார்[g] என்பதையும், அவர்கள் அனுபவிக்கிற துன்பத்தைப்
பார்த்திருக்கிறார்[h] என்பதையும் கேட்டபோது அவர்கள் சாஷ்டாங்கமாக
விழுந்தார்கள்.

5 பின்பு மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் போய், “‘வனாந்
தரத்தில் எனக்குப் பண்டிகை கொண்டாட என் ஜனங்களை அனுப்பி
வை’ என்று இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்கிறார்” என்றார்
கள். **2** ஆனால் பார்வோன், “யார் அந்த யெகோவா?[i] நான் எதற்காக அவ
ருடைய பேச்சைக் கேட்டு இஸ்ரவேலர்களை அனுப்ப வேண்டும்?[j]
யெகோவா யாரென்றே எனக்குத் தெரியாது. நான் இஸ்ரவேலர்களைக்
கண்டிப்பாக அனுப்ப மாட்டேன்”[k] என்றான். **3** ஆனால் அவர்கள், “எபி
ரெயர்களின் கடவுள் எங்களிடம் பேசினார். நாங்கள் மூன்று நாட்கள் பய
ணம் செய்து, வனாந்தரத்தில் எங்களுடைய கடவுள் யெகோவாவுக்குப் பலி
செலுத்த வேண்டும், தயவுசெய்து அனுமதி கொடுங்கள்.[l] இல்லையென்
றால், அவர் எங்களை நோயினாலோ வாளினாலோ கொன்றுவிடுவார்”
என்றார்கள். **4** அதற்கு எகிப்தின் ராஜா, “மோசே! ஆரோன்! இந்த ஜனங்
களுடைய வேலையை ஏன் கெடுக்கிறீர்கள்? போய் அவரவர் வேலை
யைப் பாருங்கள்!”[m] என்றான். **5** அதோடு, “இந்தத் தேசத்தில் உங்களு
டைய ஜனங்கள் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்று பாருங்கள்.
அத்தனை பேருடைய வேலையையும் ஏன் கெடுக்கிறீர்கள்?” என்றான்.

6 ஜனங்களிடம் வேலை வாங்கிய அதிகாரிகளுக்கும் உதவியாளர்
களுக்கும்* பார்வோன் அதே நாளில் இப்படிக் கட்டளை கொடுத்தான்:
7 “செங்கல் செய்ய நீங்கள் இனிமேல் ஜனங்களுக்கு வைக்கோல் கொடுக்
கக் கூடாது.[n] அவர்களே போய் வைக்கோலைக் கொண்டுவரட்டும்.
8 ஆனால், முன்பு எத்தனை செங்கல் செய்தார்களோ அதே அளவுக்கு
இப்போதும் செய்ய வேண்டும். அதில் ஒரு செங்கல்கூட குறையக் கூடாது.
அவர்கள் சோம்பேறிகளாகிவிட்டார்கள்.* அதனால்தான், ‘நாங்கள் போக
வேண்டும், எங்களுடைய கடவுளுக்குப் பலி செலுத்த வேண்டும்’ என்று
சொல்கிறார்கள். **9** அவர்களுக்கு இன்னும் நிறைய வேலை கொடுங்கள்,
அவர்களை ஓய்வெடுக்க விடாதீர்கள். அப்போதுதான், வெட்டிப் பேச்சுக
ளைக் கேட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள்” என்று சொன்னான்.

10 அதனால், அந்த அதிகாரிகளும்[o] உதவியாளர்களும் ஜனங்களிடம்

4:29 *வே.வா., “மூப்பர்கள்.” **5:6** *இந்த உதவியாளர்கள் இஸ்ரவேலர்களின் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். **5:8** *வே.வா., “வெட்டியாகப் பொழுதைக் கழிக்கிறார்கள்.”

அதி. 4
a யாத் 4:14
b யாத் 3:1; யாத் 20:18; யாத் 24:16
c யாத் 4:8; யாத் 4:15
d யாத் 3:16; யாத் 24:1
e யாத் 4:3, 6, 9
f யாத் 3:18
g ஆதி 50:25
h யாத் 1:14; யாத் 3:7; உபா 26:6

அதி. 5
i யாத் 7:5; யாத் 9:15, 16
j 2ரா 18:28, 35
k யாத் 3:19
l யாத் 3:18
m யாத் 1:11
n யாத் 1:14
o யாத் 1:11

போய், "இனிமேல் உங்களுக்கு வைக்கோல் தரப்போவதில்லை என்று
பார்வோன் சொல்லிவிட்டார். **11** நீங்களே போய் வைக்கோலைத்
தேடி எடுத்துக்கொண்டு வர வேண்டும். ஆனால், உங்கள் வேலை
கொஞ்சம்கூட குறைக்கப்படாது" என்றார்கள். **12** அதனால், வைக்கோ
லுக்காக வயல்களில் இருக்கும் தாள்களைத் தேடி ஜனங்கள் எகிப்து
தேசமெங்கும் அலைந்தார்கள். **13** அவர்களுடைய அதிகாரிகள், "வைக்
கோல் இருந்தபோது எந்தளவுக்கு வேலை செய்தீர்களோ அதே அளவுக்
குத் தினமும் வேலை செய்தாக வேண்டும்" என்று வற்புறுத்திக்கொண்டே
இருந்தார்கள். **14** அதோடு, உதவியாளர்களாகத் தாங்கள் நியமித்த இஸ்ர
வேலர்களை அடித்தார்கள்.[a] அவர்களிடம், "முன்பு செய்துவந்த அளவுக்கு
ஏன் நேற்றைக்கும் இன்றைக்கும் செங்கல் செய்யவில்லை?" என்று அதட்
டினார்கள்.

15 அதனால், அவர்களுடைய உதவியாளர்களாக இருந்த இஸ்ரவேலர்
கள் பார்வோனிடம் போய், "உங்கள் வேலையாட்களாகிய எங்களை ஏன்
இப்படி நடத்துகிறீர்கள்? **16** வைக்கோலே தராமல், 'செங்கல் செய்யுங்
கள்!' என்று உங்கள் ஆட்கள் சொல்கிறார்கள். உங்கள் வேலையாட்களா
கிய எங்களை அடிக்கிறார்கள். ஆனால், தப்பு உங்களுடைய ஆட்கள்மேல்
தான் இருக்கிறது" என்று முறையிட்டார்கள். **17** அதற்கு அவன், "நீங்கள்
சோம்பேறிகளாகிவிட்டீர்கள்,* சோம்பேறிகளாகிவிட்டீர்கள்![b] அதனால்
தான், 'நாங்கள் போக வேண்டும், யெகோவாவுக்குப் பலி செலுத்த வேண்
டும்' என்று சொல்கிறீர்கள்.[c] **18** போங்கள், போய் வேலையைப் பாருங்
கள்! உங்களுக்கு வைக்கோல் தரவே மாட்டோம், ஆனால், நீங்கள் முன்பு
செய்துவந்த அதே அளவுக்குச் செங்கல் செய்ய வேண்டும்" என்றான்.

19 வழக்கமாகச் செய்துவந்த செங்கலில் ஒன்றுகூட குறையக் கூடாது
என்று ராஜா கட்டளை கொடுத்ததால், தாங்கள் பெரிய சிக்கலில் மாட்டிக்
கொண்டதாக அந்த உதவியாளர்கள் நினைத்தார்கள். **20** அவர்கள் பார்
வோனைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது அவர்களைச் சந்திக்க
மோசேயும் ஆரோனும் அங்கே நின்றுகொண்டிருந்தார்கள். **21** உடனே
அவர்களிடம், "பார்வோனும் அவருடைய ஆட்களும் எங்களை வெறுக்
கும்படி செய்துவிட்டீர்கள். எங்களைக் கொலை செய்வதற்காக நீங்களே
அவர்கள் கையில் வாளைக் கொடுத்துவிட்டீர்கள்.[d] யெகோவா உங்களைப்
பார்த்துக்கொள்ளட்டும், அவர் உங்களை நியாயந்தீர்க்கட்டும்" என்று சொன்
னார்கள். **22** அப்போது மோசே யெகோவாவிடம், "யெகோவாவே, ஏன்
இந்த ஜனங்களுக்குக் கஷ்டம் கொடுத்தீர்கள்? ஏன் என்னை இங்கு அனுப்
பினீர்கள்? **23** உங்கள் பெயரில் பேசுவதற்காக நான் பார்வோனிடம்
போன[e] சமயத்திலிருந்து அவன் இவர்களை இன்னும் அதிகமாகக் கொடு
மைப்படுத்தி வருகிறானே.[f] உங்கள் ஜனங்களை நீங்கள் ஏன் காப்பாற்றா
மல் இருக்கிறீர்கள்?"[g] என்றார்.

6 அதற்கு யெகோவா மோசேயிடம், "பார்வோனை நான் என்ன செய்
யப்போகிறேன் என்று நீ இப்போது பார்ப்பாய்.[h] என்னுடைய
கைபலத்தை நான் அவனுக்குக் காட்டுவேன், அப்போது இஸ்ரவேலர்
களை அவன் அனுப்பிவிடுவான். என்னுடைய கைபலத்தைப் பார்த்து, இந்
தத் தேசத்திலிருந்தே அவர்களைத் துரத்திவிடுவான்"[i] என்றார்.

5:17 * வே.வா., "வெட்டியாகப் பொழுதைக் கழிக்கிறீர்கள்."

அதி. 5
a யாத் 2:11
b யாத் 5:7, 8
c யாத் 5:3
d யாத் 6:9
e யாத் 5:1
f யாத் 5:6, 9
g யாத் 3:8

அதி. 6
h யாத் 14:13
i யாத் 9:3
யாத் 11:1
யாத் 12:29, 31

2 பின்பு மோசேயிடம், “நான் யெகோவா. **3** நான் சர்வவல்லமையுள்ள
கடவுள் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தெரியப்
படுத்தினேன்.[a] ஆனால் யெகோவா என்ற என்னுடைய பெயரைப்[b] பற்றி
அவர்களுக்கு முழுமையாக வெளிப்படுத்தவில்லை.[c] **4** அவர்கள் அன்
னியர்களாகக் குடியிருந்த கானான் தேசத்தை அவர்களுக்கே தருவதாக
நான் ஒப்பந்தம் செய்தேன்.[d] **5** இப்போது, எகிப்தியர்களிடம் அடிமைப்
பட்டுக் கிடக்கிற இஸ்ரவேலர்களின் குமுறல்களைக் கேட்டு, என்னுடைய
ஒப்பந்தத்தை நினைத்துப் பார்க்கிறேன்.[e]

6 அதனால் நீ இஸ்ரவேலர்களிடம் இப்படிச் சொல்: ‘நான் யெகோவா.
எகிப்தியர்கள் உங்கள்மேல் சுமத்திய சுமைகளை நான் நீக்குவேன்.
அடிமைத்தனத்திலிருந்து உங்களை விடுவிப்பேன்.[f] எகிப்தியர்களைக் கடு
மையாகத் தண்டித்து, என்னுடைய மகா வல்லமையால் உங்களைக் காப்
பாற்றுவேன்.[g] **7** நீங்கள் என்னுடைய ஜனங்களாக இருப்பீர்கள், நான் உங்
களுடைய கடவுளாக இருப்பேன்.[h] எகிப்தியர்கள் சுமத்திய சுமைகளிலிருந்து
உங்களை விடுவிக்கும் உங்கள் கடவுளாகிய யெகோவா நானே என்று நீங்
கள் நிச்சயம் தெரிந்துகொள்வீர்கள். **8** ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்
கோபுக்கும் எந்தத் தேசத்தைக் கொடுப்பதாக நான் உறுதிமொழி தந்தேனோ
அந்தத் தேசத்துக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போவேன். அதை உங்க
ளுக்குச் சொந்தமாகக் கொடுப்பேன்.[i] நான் யெகோவா’”[j] என்றார்.

9 மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேலர்களிடம் சொன்னார்.
ஆனால், அவர்கள் நொந்துபோயிருந்ததாலும் அடிமைத்தனத்தில் சிக்கித்
தவித்ததாலும் மோசே சொன்னதைக் காதில் வாங்கவே இல்லை.[k]

10 பின்பு யெகோவா மோசேயிடம், **11** “இஸ்ரவேலர்களை இந்தத்
தேசத்திலிருந்து அனுப்பும்படி எகிப்தின் ராஜாவான பார்வோனிடம்
போய்ச் சொல்” என்றார். **12** ஆனால் மோசே யெகோவாவிடம், “நான்
சொன்னதை இஸ்ரவேலர்களே கேட்கவில்லை,[l] பார்வோன் எப்படிக் கேட்
பான்? அதுவும் நான் திக்கித்திணறிப் பேசுகிறேனே”[m] என்றார்.
13 யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும் மறுபடியும் பேசி, இஸ்ர
வேலர்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வருவது சம்பந்தமாக இஸ்ர
வேலர்களுக்கும் பார்வோனுக்கும் என்னென்ன கட்டளைகள் கொடுக்க
வேண்டுமென்று சொன்னார்.

14 இஸ்ரவேல் குடும்பங்களின் தலைவர்கள் இவர்கள்தான்: இஸ்ர
வேலின் மூத்த மகனான ரூபனுடைய[n] மகன்கள்: ஆனோக்கு, பல்லூ, எஸ்
ரோன், கர்மீ.[o] இவர்கள்தான் ரூபனின் வம்சத்தார்.

15 சிமியோனின் மகன்கள்: எமுவேல், யாமின், ஓகாத், யாகீன், சோகார்,
கானானியப் பெண்ணுக்குப் பிறந்த சாவூல்.[p] இவர்கள்தான் சிமியோனின்
வம்சத்தார்.

16 அவரவர் குடும்பங்களுக்குத் தலைவர்களாய் இருந்த லேவியின்[q]
மகன்கள்: கெர்சோன், கோகாத், மெராரி.[r] இந்த லேவி 137 வருஷங்கள்
வாழ்ந்தார்.

17 அவரவர் குடும்பங்களுக்குத் தலைவர்களாய் இருந்த கெர்சோ
னின் மகன்கள்: லிப்னி, சீமேயி.[s]

18 கோகாத்தின் மகன்கள்: அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசி
யேல்.[t] இந்த கோகாத் 133 வருஷங்கள் வாழ்ந்தார்.

அதி. 6

a ஆதி 17:1; ஆதி 35:10, 11
b சங் 83:18; லூ 11:2; யோவா 12:28; அப் 15:14; வெளி 15:3
c ஆதி 12:8; ஆதி 28:16; எரே 32:20
d ஆதி 15:18; ஆதி 28:4
e ஆதி 17:1, 7; யாத் 2:24
f உபா 4:20
g உபா 26:8; 1நா 17:21; அப் 13:17
h யாத் 29:45; உபா 7:6; 2சா 7:24; சங் 33:12
i ஆதி 15:18; ஆதி 26:3; ஆதி 35:12; யாத் 32:13
j யாத் 20:2; ஏசா 42:8
k யாத் 5:21
l யாத் 5:21; யாத் 6:9
m யாத் 4:10; அப் 7:22
n ஆதி 49:3
o ஆதி 46:9
p 1நா 4:24
q ஆதி 29:34
r ஆதி 46:11; எண் 26:57
s எண் 3:18
t எண் 3:19

19 மெராரியின் மகன்கள்: மகேலி, மூசி.
இவர்கள் எல்லாரும் லேவியின் மகன்களுடைய வழிவந்த வம்சத்தார்.[a]
20 அம்ராம் தன்னுடைய அப்பாவின் சகோதரி யோகெபேத்தைக் கல்
யாணம் செய்தார்.[b] அவள் ஆரோனையும் மோசேயையும் அவருக்குப்
பெற்றுக் கொடுத்தாள்.[c] அம்ராம் 137 வருஷங்கள் வாழ்ந்தார்.
21 இத்சேயாரின் மகன்கள்: கோராகு,[d] நெப்பேக், சிக்ரி.
22 ஊசியேலின் மகன்கள்: மீஷாவேல், எல்சாப்பான்,[e] சித்ரி.
23 அம்மினதாபின் மகளும் நகசோனின்[f] சகோதரியுமான எலிசபாளை
ஆரோன் கல்யாணம் செய்தார். நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார்[g]
என்ற மகன்களை அவள் அவருக்குப் பெற்றுக் கொடுத்தாள்.
24 கோராகுவின் மகன்கள்: ஆசீர், எல்க்கானா, அபியாசாப்.[h] இவர்
கள்தான் கோராகியர்களின் வம்சத்தார்.[i]
25 ஆரோனின் மகன் எலெயாசார்[j] பூத்தியேலின் மகள்களில் ஒருத்தி
யைக் கல்யாணம் செய்தார். அவள் பினெகாஸ்[k] என்ற மகனை அவருக்
குப் பெற்றுக் கொடுத்தாள்.
இவர்கள்தான் அவரவர் வம்சங்களின்படி, லேவியர்களுடைய தந்தைவ
ழிக் குடும்பத் தலைவர்கள்.[l]
26 இந்த ஆரோனிடமும் மோசேயிடமும்தான், "எகிப்து தேசத்திலி
ருந்து இஸ்ரவேல் ஜனங்களை அணி அணியாகக் கூட்டிக்கொண்டு வாருங்
கள்" என்று யெகோவா சொன்னார்.[m] **27** எகிப்து தேசத்திலிருந்து இஸ்ர
வேல் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு வருவதற்காக எகிப்தின் ராஜாவான
பார்வோனிடம் பேசியது இந்த மோசேயும் ஆரோனும்தான்.[n]
28 எகிப்து தேசத்திலிருந்த மோசேயிடம் யெகோவா பேசிய அந்த
நாளில், **29** யெகோவா அவரிடம், "நான் யெகோவா. நான் உன்னிடம்
சொல்கிற எல்லாவற்றையும் எகிப்தின் ராஜாவான பார்வோனிடம் சொல்"
என்றார். **30** அப்போது மோசே யெகோவாவிடம், "நானே திக்கித்திண
றிப் பேசுகிறேன், அப்படியிருக்கும்போது நான் சொல்வதை பார்வோன்
கேட்பானா?" என்றார்.[o]

7 அதனால் யெகோவா மோசேயிடம், "நான் உன்னை பார்வோ
னுக்குக் கடவுளாக்கினேன்.* உன்னுடைய அண்ணன் ஆரோன் உன்
னுடைய சார்பில் தீர்க்கதரிசனம் சொல்வான்.[p] **2** நான் உனக்குக் கொடுக்
கிற எல்லா கட்டளைகளையும் உன் அண்ணன் ஆரோனிடம் நீ சொல்ல
வேண்டும். அவன் பார்வோனிடம் பேசுவான். அப்போது, பார்வோன் இஸ்
ரவேலர்களை அனுப்பிவிடுவான். **3** பார்வோனின் இதயம் இறுகிப்போ
கும்படி நான் விட்டுவிடுவேன்.[q] எகிப்து தேசத்தில் ஏராளமான அதிசயங்
களையும் அற்புதங்களையும் செய்வேன்.[r] **4** ஆனால், பார்வோன் உங்க
ளுடைய பேச்சைக் கேட்க மாட்டான். அதனால் எகிப்துக்கு எதிராக
என்னுடைய பலத்தைக் காட்டுவேன். எகிப்தைப் பயங்கரமாகத் தண்டித்து,
பெரிய படைபோல் இருக்கிற என் ஜனங்களாகிய இஸ்ரவேலர்களை அங்கி
ருந்து கூட்டிக்கொண்டு வருவேன்.[s] **5** எகிப்துக்கு எதிராக என் பலத்தைக்
காட்டி இஸ்ரவேலர்களை அங்கிருந்து கூட்டிக்கொண்டு வரும்போது, நான்
யெகோவா என்று எகிப்தியர்கள் தெரிந்துகொள்வார்கள்"[t] என்று சொன்

7:1 * அதாவது, "பார்வோன்மேல் அதிகாரம் உள்ளவனாக்கினேன்."

அதி. 6
a எண் 3:20
b யாத் 2:1; எண் 26:59
c 1நா 23:13
d எண் 16:1, 32; எண் 26:10
e லேவி 10:4; எண் 3:30
f ரூ 4:19-21; மத் 1:4
g எண் 3:2
h எண் 26:10, 11
i எண் 26:58; 1நா 9:19
j எண் 3:32
k எண் 25:7; எண் 31:6; யோசு 22:31; நியா 20:28
l யாத் 6:19
m யாத் 7:2, 4; யாத் 12:41; அப் 7:35
n சங் 77:20
o யாத் 4:10; யாத் 6:12

அதி. 7
p யாத் 4:14-16; யாத் 4:30
q யாத் 4:21; யாத் 7:13, 22; யாத் 8:15, 19; யாத் 9:12, 35; யாத் 10:20, 27; யாத் 11:10; யாத் 14:8; ரோ 9:17, 18
r யாத் 3:19, 20; சங் 105:26, 27; அப் 7:36
s யாத் 12:12, 51
t யாத் 7:17; யாத் 8:9, 10; யாத் 8:22; யாத் 9:29; யாத் 14:4

னார். **6** மோசேயும் ஆரோனும் யெகோவாவின் பேச்சைத் தட்டாமல்
அப்படியே செய்தார்கள். **7** பார்வோனிடம் பேசிய சமயத்தில் மோசேக்கு
80 வயது, ஆரோனுக்கு 83 வயது.[a]

8 யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **9** “ஒரு அற்புதம்
செய்து காட்டும்படி பார்வோன் உங்களிடம் கேட்டால், நீ ஆரோனைப்
பார்த்து, ‘உன் கோலை எடுத்து பார்வோனின் முன்னால் போடு’ என்று
சொல்ல வேண்டும். அப்போது அது ஒரு பெரிய பாம்பாக மாறும்”[b]
என்றார். **10** உடனே மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் போய்,
யெகோவா சொன்னபடியே செய்தார்கள். ஆரோன் தன்னுடைய கோலை
பார்வோன் முன்னாலும் அவனுடைய ஊழியர்கள் முன்னாலும் போட்டார்.
அது ஒரு பெரிய பாம்பாக மாறியது. **11** அப்போது, பார்வோன் எகிப்தி
லிருந்த ஞானிகளையும் சூனியக்காரர்களையும் மந்திரவாதிகளையும் வரவ
ழைத்தான்.[c] அந்த மந்திரவாதிகளும் தங்களுடைய மந்திர சக்தியால்
அதேபோல் செய்தார்கள்.[d] **12** அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கோல்
களைக் கீழே போட்டபோது அவை பெரிய பாம்புகளாக மாறின. ஆனால்,
ஆரோனின் கோல் அவர்களுடைய கோல்களை விழுங்கியது. **13** இருந்
தாலும், யெகோவா சொல்லியிருந்தபடியே பார்வோனின் இதயம் இறுகிப்
போனது.[e] அவர்கள் பேச்சை அவன் கேட்கவே இல்லை.

14 பின்பு யெகோவா மோசேயிடம், “பார்வோன் பிடிவாதமாக இருக்கி
றான்.[f] என் ஜனங்களை அனுப்பாமல் வைத்திருக்கிறான். **15** காலையில்
நீ அவனிடம் போ. அவன் நைல் நதிக்கு வருவான். அவனைப் பார்த்துப்
பேசுவதற்காக நீ நதியோரத்தில் நின்றுகொள். முன்பு பாம்பாக மாறிய அந்
தக் கோலையும் உன் கையில் எடுத்துக்கொள்.[g] **16** நீ அவனிடம், ‘எபிரெ
யர்களின் கடவுளாகிய யெகோவா என்னை உங்களிடம் அனுப்பியிருக்கி
றார்.[h] வனாந்தரத்தில் அவரை வணங்குவதற்காக அவருடைய ஜனங்களை
அனுப்பி வைக்கச் சொல்லியிருக்கிறார். ஆனாலும், நீங்கள் இதுவரை அவ
ருடைய பேச்சுக்குக் கீழ்ப்படியவில்லை. **17** அதனால் யெகோவா இப்
படிச் சொல்கிறார்: “நான் யெகோவா என்று உனக்குக் காட்டுவேன்.[i] என்
கையிலுள்ள இந்தக் கோலினால் நைல் நதியின் தண்ணீரை அடிப்பேன்,
அது இரத்தமாக மாறும். **18** நதியிலுள்ள மீன்கள் எல்லாம் செத்துவிடும்,
அதில் துர்நாற்றம் வீசும். எகிப்தியர்களால் அந்தத் தண்ணீரைக் குடிக்கவே
முடியாது”’ என்று சொல்” என்றார்.

19 பின்பு யெகோவா மோசேயிடம், “எகிப்தின் நீர்நிலைகளாகிய ஆறு
கள், கால்வாய்கள்,* குளங்கள், நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றின் மேல்
கோலை நீட்டும்படி நீ ஆரோனிடம் சொல்.[j] அப்போது எகிப்து தேசமெங்
கும் உள்ள தண்ணீர் இரத்தமாக மாறும். மரப் பாத்திரங்களிலும் கல் தொட்டி
களிலும் உள்ள தண்ணீர்கூட இரத்தமாக மாறும்” என்றார். **20** யெகோவா
சொன்னபடியே மோசேயும் ஆரோனும் உடனடியாகச் செய்தார்கள். பார்
வோனின் முன்னாலும் அவனுடைய ஊழியர்களின் முன்னாலும் ஆரோன்
தன்னுடைய கோலை நீட்டி நைல் நதியின் தண்ணீரை அடித்தார்.
அந்த நதியிலிருந்த தண்ணீரெல்லாம் இரத்தமாக மாறியது.[k] **21** நதியிலி
ருந்த மீன்கள் செத்துப்போயின.[l] அதிலிருந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்தது.

7:19 * அதாவது, “நைல் நதியின் கால்வாய்கள்.”

அதி. 7
a உபா 34:7; அப் 7:22, 23
b யாத் 4:2, 3
c ஆதி 41:8; 2தீ 3:8
d யாத் 7:20, 22; யாத் 8:7, 18; யாத் 9:11
e யாத் 7:3
f யாத் 10:1
g யாத் 4:2, 3
h யாத் 3:18
i யாத் 7:5; யாத் 8:9, 10; யாத் 8:22; யாத் 9:29; யாத் 14:4
j யாத் 8:5; யாத் 9:22; யாத் 10:12; யாத் 14:21
k சங் 78:44
l சங் 105:29

எகிப்தியர்களால் அந்தத் தண்ணீரைக் குடிக்க முடியவில்லை.[a] எகிப்து
தேசத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே இரத்தமாக இருந்தது.

22 ஆனால், எகிப்தின் மந்திரவாதிகளும் தங்களுடைய மாயமந்திரத்
தால் அதேபோல் செய்தார்கள்.[b] அதனால் யெகோவா சொல்லியிருந்தபடி,
பார்வோனின் இதயம் இறுகியே இருந்தது. மோசேயும் ஆரோனும் சொன்
னதை அவன் கேட்கவே இல்லை.[c] **23** பின்பு, பார்வோன் தன்னுடைய
அரண்மனைக்குத் திரும்பிப் போனான். இந்தத் தடவை நடந்த அற்புதத்தை
யும் அவன் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. **24** எகிப்தியர்கள் எல்லா
ரும் நைல் நதியைச் சுற்றியிருந்த பகுதிகளில் மண்ணைத் தோண்டி, குடிப்
பதற்குத் தண்ணீர் கிடைக்குமா என்று பார்த்தார்கள். ஏனென்றால், நைல்
நதியின் தண்ணீரை அவர்களால் குடிக்க முடியவில்லை. **25** யெகோவா
நைல் நதியை இரத்தமாக மாற்றி ஏழு நாட்கள் ஆகியிருந்தன.

8 பின்பு யெகோவா மோசேயிடம், "நீ பார்வோனிடம் போய் இப்படிச்
சொல்: 'யெகோவா சொல்வது இதுதான்: "என்னை வணங்குவதற்காக
என் ஜனங்களை அனுப்பிவிடு.[d] **2** அவர்களை அனுப்பாமல் பிடிவாதம்
பிடித்தால், நான் உன் தேசம் முழுக்க தவளைகளை வர வைத்துத் தண்
டிப்பேன்.[e] **3** நைல் நதி முழுக்க தவளைகளாக இருக்கும். அவை அங்
கிருந்து வந்து உன் அரண்மனையிலும் உன் படுக்கை அறையிலும் உன்
படுக்கையிலும் உன்னுடைய ஊழியர்களின் வீடுகளிலும் உன் ஜனங்கள்மே
லும் அடுப்புகளிலும் மாவு பிசைகிற பாத்திரங்களிலும் ஏறிக்கொள்ளும்.[f]
4 உன்மேலும் உன் ஜனங்கள்மேலும் உன் ஊழியர்கள் எல்லார்மேலும்
அந்தத் தவளைகள் ஏறிக்கொள்ளும்"'" என்றார்.

5 பின்பு யெகோவா மோசேயிடம், "ஆறுகள்மேலும் கால்வாய்கள்மே
லும் குளங்கள்மேலும் கோலை நீட்டி, எகிப்து தேசமெங்கும் தவளைகளை
வர வைக்கும்படி நீ ஆரோனிடம் சொல்" என்றார். **6** உடனே, எகிப்தின்
நீர்நிலைகள்மேல் ஆரோன் தன்னுடைய கோலை நீட்டினார். அப்போது,
தவளைகள் நதியிலிருந்து வந்து எகிப்து தேசமெங்கும் நிறைந்தன.
7 ஆனால், மந்திரவாதிகளும் தங்களுடைய மந்திர சக்தியால் அதேபோல்
செய்தார்கள். அவர்களும் எகிப்து தேசத்தில் தவளைகளை வர வைத்
தார்கள்.[g] **8** அதன்பின், மோசேயையும் ஆரோனையும் பார்வோன் வரவ
ழைத்து, "நான் உங்களுடைய ஜனங்களை அனுப்பத் தயார். போய் யெகோ
வாவுக்குப் பலி செலுத்துங்கள். ஆனால், இந்தத் தவளைகள் என்னை
விட்டும் என் ஜனங்களைவிட்டும் போய்விட வேண்டுமென்று யெகோவா
விடம் கெஞ்சிக் கேளுங்கள்"[h] என்றான். **9** அப்போது மோசே பார்வோ
னிடம், "நான் எப்போது கடவுளிடம் வேண்டிக்கொள்ள வேண்டுமென்று
நீங்களே சொல்லுங்கள். அதன்பின், உங்களையும் உங்களுடைய ஊழியர்
களையும் ஜனங்களையும் வீடுகளையும்விட்டுத் தவளைகள் போய்விடும்,
அவை நைல் நதியில் மட்டும்தான் இருக்கும்" என்றார். **10** அதற்கு
அவன், "நாளைக்கு வேண்டிக்கொள்" என்றான். உடனே மோசே, "நீங்
கள் சொல்கிறபடியே செய்கிறேன். எங்கள் கடவுளாகிய யெகோவாவைப்
போல் வேறு யாரும் இல்லை என்பதை அப்போது நீங்கள் தெரிந்துகொள்
வீர்கள்.[i] **11** உங்களையும் உங்களுடைய வீடுகளையும் ஊழியர்களை
யும் ஜனங்களையும்விட்டுத் தவளைகள் போய்விடும். அவை நைல் நதி
யில் மட்டும்தான் இருக்கும்"[j] என்றார்.

அதி. 7
a யாத் 7:18, 24
b யாத் 7:11, 12; யாத் 8:7, 18; யாத் 9:11; 2தீ 3:8
c யாத் 3:19

அதி. 8
d யாத் 3:12
e சங் 78:45
f சங் 105:30
g யாத் 7:11, 12; யாத் 7:20, 22; யாத் 8:17, 18; யாத் 9:11; 2தீ 3:8
h யாத் 10:16–19
i யாத் 9:14; யாத் 15:11; சங் 83:18; சங் 86:8; ஏசா 46:9; எரே 10:6, 7; ரோ 9:17
j யாத் 8:3

12 பின்பு, மோசேயும் ஆரோனும் பார்வோனிடமிருந்து புறப்பட்டுப்
போனார்கள். தவளைகளை பார்வோனைவிட்டுப் போக வைக்கும்படி
மோசே யெகோவாவிடம் கெஞ்சிக் கேட்டார்.[a] **13** மோசே கேட்டபடியே
யெகோவா செய்தார். வீடுகளிலும் முற்றங்களிலும் வயல்களிலும் இருந்த
தவளைகள் செத்துப்போயின. **14** ஜனங்கள் அவற்றைக் குவியல் குவி
யல்களாகக் குவித்தார்கள், தேசமெங்கும் நாற்றம் அடித்தது. **15** தவளை
கள் எல்லாம் ஒழிந்துவிட்டதை பார்வோன் பார்த்தபோது, யெகோவா
சொல்லியிருந்தபடியே, அவன் இதயம் இன்னும் இறுகிப்போனது.[b] அவர்
கள் பேச்சை அவன் கேட்கவே இல்லை.

16 அப்போது யெகோவா மோசேயிடம், “கோலை நீட்டி நிலத்திலுள்ள
புழுதியை அடிக்கும்படி ஆரோனிடம் சொல். அப்போது, எகிப்து தேசமெங்
கும் இருக்கிற புழுதியெல்லாம் கொசுக்களாக* மாறும்” என்றார். **17** அப்ப
டியே அவர்கள் செய்தார்கள். ஆரோன் தன் கையிலுள்ள கோலை நீட்டி
நிலத்திலுள்ள புழுதியை அடித்தார். அப்போது, கொசுக்கள் வந்து மனிதர்க
ளையும் மிருகங்களையும் சூழ்ந்துகொண்டன. எகிப்து தேசமெங்கும் இருந்த
புழுதியெல்லாம் கொசுக்களாக மாறின.[c] **18** அந்தக் கொசுக்கள் மனிதர்
களையும் மிருகங்களையும் சூழ்ந்துகொண்டன. மந்திரவாதிகளும் தங்களு
டைய மந்திர சக்தியால் அதேபோல் கொசுக்களை வர வைக்கப் பார்த்தார்
கள்,[d] ஆனால் முடியவில்லை. **19** அப்போது அவர்கள் பார்வோனிடம்,
“கடவுளுடைய சக்தியால்* மட்டும்தான் இதைச் செய்ய முடியும்!”[e] என்றார்
கள். ஆனால், யெகோவா சொல்லியிருந்தபடி பார்வோனின் இதயம் இறு
கியே இருந்தது. அவர்கள் பேச்சை அவன் கேட்கவே இல்லை.

20 பின்பு யெகோவா மோசேயிடம், “நீ விடியற்காலையில் எழுந்து, பார்
வோனைப் போய்ப் பார். அவன் நைல் நதிக்கு வருவான். நீ அவனிடம்,
‘யெகோவா சொல்வது இதுதான்: “என்னை வணங்குவதற்காக என் ஜனங்
களை அனுப்பிவிடு. **21** நீ என்னுடைய ஜனங்களை அனுப்பாவிட்டால்,
உன்மேலும் உன் ஊழியர்கள்மேலும் ஜனங்கள்மேலும் வீடுகள்மேலும்
கொடிய ஈக்களை* வர வைப்பேன். எகிப்தியர்களுடைய வீடுகளில் அந்த
ஈக்கள் மொய்க்கும். அவர்கள் நிற்கிற தரைகளையும்கூட அவை மூடிவி
டும். **22** ஆனால் அந்த நாளில், என் ஜனங்கள் வாழ்கிற கோசேன் பிரதே
சத்தை மட்டும் நான் ஒன்றும் செய்ய மாட்டேன். அங்கு ஈக்களே வராது.[f]
அப்போது, யெகோவாவாகிய நான் இந்தத் தேசத்தில் இருக்கிறேன் என்று
நீ தெரிந்துகொள்வாய்.[g] **23** என்னுடைய ஜனங்களுக்கும் உன்னுடைய
ஜனங்களுக்கும் இடையில் வித்தியாசத்தைக் காட்டுவேன். நாளைக்கு இந்த
அதிசயம் நடக்கும்”’ என்று சொல்” என்றார்.

24 யெகோவா அப்படியே செய்தார். பார்வோனுடைய அரண்மனையி
லும் அவனுடைய ஊழியர்களின் வீடுகளிலும் எகிப்து தேசம் முழுவதிலும்
கொடிய ஈக்கள் படையெடுத்து வந்தன.[h] தேசமே அந்த ஈக்களால் பாழா
னது.[i] **25** கடைசியில், மோசேயையும் ஆரோனையும் பார்வோன் வரவ
ழைத்து, “இந்தத் தேசத்திலேயே உங்கள் கடவுளுக்குப் பலி செலுத்துங்கள்”
என்றான். **26** ஆனால் மோசே, “நாங்கள் அப்படிச் செய்வது சரியல்ல.

8:16 * இதற்கான எபிரெய வார்த்தை, எகிப்தில் பொதுவாகக் காணப்பட்ட கொசுவைப் போன்ற ஒருவித பூச்சியைக் குறிக்கிறது. **8:19** * நே.மொ., “விரலால்.” **8:21** * இவை ஒருவகையான கடிக்கும் ஈக்கள்.

அதி. 8
a யாத் 8:30, 31; யாத் 9:33
b யாத் 4:21; யாத் 7:3
c சங் 105:31
d யாத் 7:11, 12; யாத் 7:20, 22; யாத் 8:7; யாத் 9:11
e யாத் 31:18; லூ 11:20
f யாத் 9:4, 26; யாத் 10:23; யாத் 12:13
g 1சா 17:46; 1ரா 20:28; 2ரா 19:17, 19
h யாத் 8:3
i சங் 78:45; சங் 105:31

ஏனென்றால், எங்களுடைய கடவுளான யெகோவாவுக்கு நாங்கள் செலுத்
தும் பலி எகிப்தியர்களுக்கு அருவருப்பாக இருக்கும்.[a] அவர்கள் அருவருப்
பாக நினைக்கிற பலியை அவர்களுடைய கண் முன்னால் நாங்கள் செலுத்
தினால், எங்கள்மேல் கல்லெறிய மாட்டார்களா? **27** எங்கள் கடவுளான
யெகோவா சொன்னது போலவே, நாங்கள் மூன்று நாள் பயணம் செய்து
வனாந்தரத்தில் அவருக்குப் பலி செலுத்துவோம்”[b] என்றார்.

28 அப்போது பார்வோன், “சரி, உங்கள் கடவுளான யெகோவாவுக்கு
வனாந்தரத்தில் பலி செலுத்த உங்களை அனுப்புகிறேன். ஆனால், ரொம்
பத் தூரம் போய்விடாதீர்கள். எனக்காக உங்கள் கடவுளிடம் வேண்டிக்
கொள்ளுங்கள்”[c] என்றான். **29** அதற்கு மோசே, “நான் இப்போதே போய்,
யெகோவாவிடம் வேண்டிக்கொள்கிறேன். நாளைக்கு இந்தக் கொடிய ஈக்
கள் பார்வோனாகிய உங்களையும் உங்களுடைய ஊழியர்களையும் விட்
டுப் போய்விடும். ஆனால், நீங்கள் மறுபடியும் எங்களை ஏமாற்றக் கூடாது.*
யெகோவாவுக்குப் பலி கொடுப்பதற்காக ஜனங்களை அனுப்பாமல்
இருக்கக் கூடாது”[d] என்றார். **30** அதன்பின் மோசே பார்வோனிடமிருந்து
புறப்பட்டுப் போய், அந்தக் கொடிய ஈக்களைப் போக வைக்கும்படி
யெகோவாவிடம் கெஞ்சிக் கேட்டார்.[e] **31** மோசே கேட்டுக்கொண்டப
டியே யெகோவா செய்தார். பார்வோனையும் அவனுடைய ஊழியர்களை
யும் ஜனங்களையும்விட்டு அந்தக் கொடிய ஈக்கள் போய்விட்டன. ஒன்று
விடாமல் எல்லாமே போய்விட்டன. **32** ஆனாலும், பார்வோனுடைய இத
யம் மறுபடியும் இறுகிப்போனது, இஸ்ரவேல் ஜனங்களை அவன் அனுப்
பவில்லை.

9 அதனால் யெகோவா மோசேயிடம், “நீ பார்வோனிடம் போய் இப்ப
டிச் சொல்: ‘எபிரெயர்களின் கடவுளாகிய யெகோவா சொல்வது இது
தான்: “என்னை வணங்குவதற்காக என் ஜனங்களை அனுப்பிவிடு.[f]
2 நீ அவர்களை அனுப்பாமல் பிடிவாதம் பிடித்துக்கொண்டே இருந்
தால், **3** யெகோவாவாகிய நான் உன் கால்நடைகளைத் தாக்குவேன்.[g]
குதிரைகள், கழுதைகள், ஒட்டகங்கள், ஆடுமாடுகள் எல்லாவற்றையும்
கொடிய கொள்ளைநோயால் தண்டிப்பேன்.[h] **4** ஆனால், யெகோவாவா
கிய நான் எகிப்தியர்களின் கால்நடைகளுக்குச் செய்வது போல இஸ்ரவே
லர்களின் கால்நடைகளுக்குச் செய்ய மாட்டேன். இஸ்ரவேலர்களின் கால்
நடைகள் எதுவுமே செத்துப்போகாது”’”[i] என்றார். **5** யெகோவா அதற்கு
ஒரு நாளையும் குறித்து, “யெகோவாவாகிய நான் இந்தத் தேசத்தில்
நாளைக்கு இதைச் செய்வேன்” என்றார்.

6 யெகோவா அடுத்த நாளே அதைச் செய்தார். எகிப்திலிருந்த எல்லா
கால்நடைகளும் செத்துப்போயின.[j] ஆனால், இஸ்ரவேலர்களுடைய கால்
நடைகளில் ஒன்றுகூட சாகவில்லை. **7** பார்வோன் தன்னுடைய ஆட்களை
அனுப்பி விசாரித்தான். இஸ்ரவேலர்களின் கால்நடைகளில் எதுவுமே சாக
வில்லை என்று தெரிந்த பின்பும், பிடிவாதமாகவே இருந்தான். ஜனங்களை
அவன் அனுப்பவில்லை.[k]

8 பின்பு யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், “சூளையிலுள்ள
சாம்பலை இரண்டு கைகளிலும் அள்ளிக்கொண்டு போங்கள். பார்வோனு
டைய கண் முன்னால் மோசே அதைக் காற்றில் வீச வேண்டும். **9** எகிப்து

8:29 * வே.வா., “எங்களோடு விளையாடக் கூடாது.”

அதி. 8
a ஆதி 46:33, 34; யாத் 10:25, 26
b யாத் 3:18
c யாத் 8:8; யாத் 9:28
d யாத் 8:15
e யாத் 9:33

அதி. 9
f யாத் 5:1; யாத் 8:1
g யாத் 7:4
h யாத் 9:15
i யாத் 8:22; யாத் 10:23; யாத் 11:7; யாத் 12:13
j சங் 78:48
k யாத் 4:21

தேசமெங்கும் அது தூசியாகப் பரவி, மனுஷர்கள்மேலும் மிருகங்கள்
மேலும் பயங்கரமான கொப்புளங்களாக ஆகும்” என்றார்.

10 அதனால், சூளையிலிருந்த சாம்பலை அவர்கள் எடுத்துக்கொண்டு
போய் பார்வோனின் முன்னால் நின்றார்கள். மோசே அதைக் காற்றில் வீசி
யபோது, அது மனிதர்கள்மேலும் மிருகங்கள்மேலும் பயங்கரமான கொப்பு
ளங்களாக ஆனது. **11** மந்திரவாதிகள்மேலும் கொப்புளங்கள் வந்துவிட்ட
தால் மோசேக்குமுன் வந்து நிற்க அவர்களால் முடியவில்லை. எகிப்தியர்கள்
எல்லார்மேலும் கொப்புளங்கள் வந்தன.[a] **12** ஆனால், பார்வோனின் இத
யம் இறுகிப்போகும்படி யெகோவா விட்டுவிட்டார். யெகோவா சொல்லியி
ருந்தபடியே அவர்கள் பேச்சை அவன் கேட்கவில்லை.[b]

13 பின்பு யெகோவா மோசேயிடம், “நீ விடியற்காலையில் எழுந்து, பார்
வோனின் முன்னால் போய் நில். அவனிடம் இப்படிச் சொல்: ‘எபிரெயர்
களின் கடவுளான யெகோவா சொல்வது இதுதான்: “என்னை வணங்குவ
தற்காக என் ஜனங்களை அனுப்பிவிடு. **14** இல்லாவிட்டால், உனக்கும்*
உன் ஊழியர்களுக்கும் உன் ஜனங்களுக்கும் எல்லா தண்டனைகளையும்
கொடுப்பேன். அப்போது, இந்த முழு பூமியிலும் என்னைப் போல் யாரு
மில்லை என்பதை நீ தெரிந்துகொள்வாய்.[c] **15** நான் உன்னையும் உன்
ஜனங்களையும் கொடிய கொள்ளைநோயால் எப்போதோ தாக்கியிருப்
பேன். நீயும் இந்தப் பூமியிலிருந்தே ஒழிந்துபோயிருப்பாய். **16** ஆனால்,
என் வல்லமையைக் காட்டுவதற்கும் பூமியெங்கும் என் பெயர் அறிவிக்
கப்படுவதற்குமே நான் உன்னை விட்டுவைத்திருக்கிறேன்.[d] **17** இன்னும்
உன் அகம்பாவம் அடங்கவில்லை, என் ஜனங்களை அனுப்பாமல் வைத்
திருக்கிறாய். **18** அதனால் நாளைக்கு இந்நேரத்தில், எகிப்தின் சரித்திரத்தி
லேயே இல்லாத அளவுக்கு மாபெரும் ஆலங்கட்டி* மழையைப் பெய்ய
வைப்பேன். **19** நீ ஆள் அனுப்பி, வெளியில் இருக்கிற கால்நடைகளை
யும் ஆட்களையும் மற்ற எல்லாவற்றையும் கூரைக்குள் கூட்டிக்கொண்டு
வரச் சொல். கூரைக்குள் இல்லாமல் வெளியில் இருக்கும் எல்லா மனுஷர்
களும் மிருகங்களும் ஆலங்கட்டி மழைக்குப் பலியாகப்போவது உறுதி”’”
என்றார்.

20 அப்போது, பார்வோனின் ஊழியர்களில் யாரெல்லாம் யெகோ
வாவுக்குப் பயந்தார்களோ அவர்கள் எல்லாரும் தங்களுடைய ஆட்களை
யும் கால்நடைகளையும் வேகவேகமாகக் கூரைக்குள் கூட்டிக்கொண்டு வந்
தார்கள். **21** ஆனால், யெகோவாவின் வார்த்தையைக் காதில் போட்டுக்
கொள்ளாத எல்லாரும் தங்களுடைய ஆட்களையும் கால்நடைகளையும்
வெளியிலேயே விட்டுவிட்டார்கள்.

22 பின்பு யெகோவா மோசேயிடம், “வானத்துக்கு நேராக உன் கையை
நீட்டு. அப்போது, எகிப்து தேசமெங்கும் ஆலங்கட்டி மழை பெய்யும்.[e]
எகிப்து தேசத்திலுள்ள மனுஷர்கள்மேலும் மிருகங்கள்மேலும் பயிர்பச்சை
கள்மேலும் ஆலங்கட்டிகள் விழும்”[f] என்றார். **23** அப்படியே, மோசே
வானத்துக்கு நேராகத் தன்னுடைய கோலை நீட்டினார். உடனே
யெகோவா இடி இடிக்கும்படியும், ஆலங்கட்டிகள் விழும்படியும், தீப்பிழம்
புகள்* தாக்கும்படியும் செய்தார். எகிப்து தேசத்தின் மேல் ஆலங்கட்டிகள்

அதி. 9
a யாத் 7:11, 12; யாத் 7:20, 22; யாத் 8:7, 18; 2தீ 3:8
b யாத் 4:21; யாத் 8:31, 32; யாத் 14:17
c யாத் 8:9, 10; 2சா 7:22; சங் 83:18
d யாத் 14:17; யோசு 2:9, 10; 1நா 16:24; நீதி 16:4; ஏசா 63:12; ரோ 9:17
e சங் 78:47; சங் 105:32
f யாத் 10:4, 5

9:14 *நே.மொ., “உன் இதயத்துக்கும்.” **9:18** *அதாவது, “பனிக்கட்டி.” **9:23** *இவை ஒருவேளை பயங்கர மின்னல்களாக இருந்திருக்கலாம்.

விழுந்துகொண்டே இருக்கும்படி யெகோவா செய்தார். **24** ஆலங்கட்டி
மழை பெய்தபோது இடையிடையே தீப்பிழம்புகள் பளிச்சிட்டன. அந்த
மழை மிகவும் பலமாகக் கொட்டியது. எகிப்தின் சரித்திரத்தில் அப்படிப்
பட்ட மழை பெய்ததே இல்லை.[a] **25** எகிப்து தேசத்தில், மனிதர்கள்முதல்
மிருகங்கள்வரை வெளியில் இருந்த அத்தனை உயிர்களுமே ஆலங்கட்டி
மழைக்குப் பலியாகிவிட்டன. பயிர்பச்சைகள் நாசமாயின, எல்லா மரங்க
ளும் முறிந்து விழுந்தன.[b] **26** இஸ்ரவேலர்கள் வாழ்ந்த கோசேன் பிரதே
சத்தில் மட்டும் ஆலங்கட்டி மழை பெய்யவே இல்லை.[c]

27 அதனால், பார்வோன் மோசேயையும் ஆரோனையும் வரவழைத்து,
"இந்தத் தடவை நான் பாவம் செய்துவிட்டேன். யெகோவா நீதியுள்ளவர்,
நானும் என்னுடைய ஜனங்களும்தான் தப்பு செய்துவிட்டோம். **28** இடிமு
ழக்கத்தையும் ஆலங்கட்டி மழையையும் நிறுத்தச் சொல்லி யெகோவா
விடம் கெஞ்சிக் கேளுங்கள். அதன்பின் நான் உங்களை அனுப்பிவிடு
வேன், நீங்கள் இங்கே இருக்க வேண்டியதில்லை" என்றான். **29** அதற்கு
மோசே, "நான் இந்த நகரத்தைவிட்டு வெளியே போனவுடன் என் கைகளை
உயர்த்தி யெகோவாவிடம் ஜெபம் செய்வேன். அதன்பின் இடிமுழக்கமும்
ஆலங்கட்டி மழையும் நின்றுவிடும். அப்போது, இந்தப் பூமி யெகோவாவுக்
குச் சொந்தம் என்பதை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.[d] **30** ஆனால், நீங்க
ளும் உங்களுடைய ஊழியர்களும் அப்போதுகூட யெகோவாவுக்குப் பயப்
பட மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்" என்றார்.

31 அறுவடைக்குத் தயாராக இருந்த பார்லி பயிரும் அரும்புவிட்டிருந்த
ஆளிவிதைச் செடியும்* ஆலங்கட்டி மழையில் நாசமாயின. **32** கோது
மையும் மாக்கோதுமையும்* கொஞ்சக் காலம் கழித்துதான் கதிர்விடும்
என்பதால், அவை இரண்டும் சேதமாகவில்லை. **33** மோசே பார்வோனி
டமிருந்து புறப்பட்டு நகரத்துக்கு வெளியே போய்த் தன்னுடைய கைகளை
உயர்த்தி யெகோவாவிடம் ஜெபம் செய்தார். அப்போது, இடிமுழக்கமும்
ஆலங்கட்டி மழையும் நின்றுவிட்டன. அதன்பின் மழை பெய்யவில்லை.[e]
34 மழையும் ஆலங்கட்டியும் இடிமுழக்கமும் நின்றுபோனதை பார்வோன்
பார்த்தபோது, அவனும் அவனுடைய ஊழியர்களும் மறுபடியும் பாவம்
செய்தார்கள். அவர்களுடைய இதயம் இறுகிப்போனது.[f] **35** யெகோவா
மோசேயிடம் சொல்லியிருந்தபடி, பார்வோனின் இதயம் இறுகியே இருந்
தது. இஸ்ரவேலர்களை அவன் அனுப்பவில்லை.[g]

10 பின்பு யெகோவா மோசேயிடம், "நீ பார்வோனிடம் போ. அவனும்
அவனுடைய ஊழியர்களும் பிடிவாதமாக இருக்கும்படி நான் விட்டு
விட்டேன்.[h] என்னுடைய அற்புதங்களை அவன் கண் முன்னால் செய்து
காட்டுவதற்காகவும்,[i] **2** எகிப்தை நான் எந்தளவுக்குக் கடுமையாகத் தண்
டித்தேன் என்பதையும், அங்கே என்னென்ன அற்புதங்கள் செய்தேன் என்
பதையும் உங்கள் மகன்களுக்கும் பேரன்களுக்கும் நீங்கள் சொல்வதற்காக
வும் அப்படிச் செய்தேன்.[j] நான் யெகோவா என்று நீங்கள் நிச்சயம் தெரிந்
துகொள்வீர்கள்" என்றார்.

3 அதனால் மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் போய், "எபிரெ

9:31 *இந்தச் செடியின் நாரிலிருந்துதான் லினன் என்ற நாரிழைத் துணி தயாரிக்கப்பட்டது. **9:32** *பூர்வ எகிப்தில் பயிரிடப்பட்ட ஒருவகையான தரம்குறைந்த கோதுமை.

அதி. 9
a யாத் 9:18
b சங் 105:33
c யாத் 8:22; யாத் 9:3, 4; யாத் 10:23; யாத் 11:7; யாத் 12:13
d யாத் 7:5, 17; யாத் 8:9, 10; யாத் 8:22; யாத் 14:4; உபா 10:14; சங் 24:1
e யாத் 10:17-19
f யாத் 4:21; யாத் 8:13, 15
g யாத் 7:4

அதி. 10
h யாத் 4:21; யாத் 9:34
i யாத் 9:15, 16; சங் 78:12; ரோ 9:17
j யாத் 13:3, 8; உபா 4:9; உபா 6:20-22; சங் 44:1

யர்களின் கடவுளான யெகோவா சொல்வது இதுதான்: ‘இன்னும் எவ்வளவு
நாளைக்குத்தான் நீ எனக்கு அடங்காமல் இருப்பாய்?[a] என்னை வணங்கு
வதற்காக என் ஜனங்களை அனுப்பிவிடு. **4** அவர்களை அனுப்பாமல் நீ
பிடிவாதம் பிடித்துக்கொண்டே இருந்தால், நாளைக்கு உன்னுடைய தேசத்
துக்குள் வெட்டுக்கிளிகளை அனுப்புவேன். **5** தரையே தெரியாத அள
வுக்கு அவை நிலத்தை மூடிவிடும். ஆலங்கட்டி* மழைக்குத் தப்பிய எல்லா
வற்றையும் அவை தின்றுவிடும். காட்டுவெளியில் உள்ள எல்லா மரங்களின்
இலைகளையும்கூட தின்றுவிடும்.[b] **6** உன் வீடுகளும் உன் ஊழியர்கள் எல்
லாருடைய வீடுகளும் எகிப்திலுள்ள எல்லாருடைய வீடுகளும் அவற்றால்
நிரம்பும். உங்களுடைய அப்பாக்களும் தாத்தாக்களும் இன்றுவரை அப்ப
டிப்பட்ட ஒன்றை இந்தத் தேசத்தில் பார்த்திருக்கவே மாட்டார்கள்’”[c] என்றார்
கள். பின்பு, மோசே பார்வோனைவிட்டுப் புறப்பட்டுப் போனார்.

7 அதன்பின் பார்வோனிடம் அவனுடைய ஊழியர்கள், “இன்னும் எத்
தனை நாளைக்குத்தான் இந்த மனுஷன் நம்மை மிரட்டிக்கொண்டே இருப்
பான்? அவர்களுடைய கடவுளான யெகோவாவை வணங்குவதற்காக
அவர்களை அனுப்பிவிடுங்கள். ஏற்கெனவே எகிப்து தேசம் நாசமாகிவிட்
டது. இது இன்னும் உங்களுக்குப் புரியவில்லையா?” என்றார்கள்.
8 அதனால், பார்வோன் மோசேயையும் ஆரோனையும் மறுபடியும் கூப்
பிட்டு, “போய் உங்களுடைய கடவுளான யெகோவாவை வணங்குங்கள்.
ஆனால், யாரெல்லாம் போகப்போகிறீர்கள் என்று முதலில் சொல்லுங்கள்”
என்றான். **9** அதற்கு மோசே, “எங்களுடைய கடவுளான யெகோவாவுக்
குப் பண்டிகை கொண்டாட[d] நாங்கள் சிறியவர்களையும் பெரியவர்க
ளையும் மகன்களையும் மகள்களையும் ஆடுகளையும் மாடுகளையும் கூட்
டிக்கொண்டு போவோம்”[e] என்றார்கள். **10** அப்போது அவன், “நான் மட்
டும் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் அனுப்பிவிட்டேன் என்றால்,
யெகோவா உங்களோடு இருக்கிறார் என்று அர்த்தம்![f] நீங்கள் கண்டிப்பாக
ஏதோ சூழ்ச்சி செய்கிறீர்கள். **11** எல்லாரையும் நான் அனுப்ப மாட்டேன்!
யெகோவாவை வணங்குவதற்கு ஆண்களை மட்டும்தான் அனுப்புவேன்.
நீங்களும் அப்படித்தான் என்னிடம் கேட்டீர்கள்” என்று சொன்னான்.
உடனே அவர்கள் பார்வோன் முன்னாலிருந்து துரத்தப்பட்டார்கள்.

12 அப்போது யெகோவா மோசேயிடம், “எகிப்து தேசத்தின் மேல் உன்
கையை நீட்டு. தேசமெங்கும் வெட்டுக்கிளிகள் படையெடுத்து வரட்டும்.
ஆலங்கட்டி மழைக்குத் தப்பிய பயிர்பச்சைகள் எல்லாவற்றையும் அவை
தின்றுதீர்க்கட்டும்” என்றார். **13** உடனே மோசே எகிப்து தேசத்தின் மேல்
தன்னுடைய கோலை நீட்டினார். அப்போது யெகோவா, கிழக்குக் காற்று
வீசும்படி செய்தார். அன்று பகலிலும் ராத்திரியிலும் காற்று வீசிக்கொண்டே
இருந்தது. விடியற்காலையில், அது வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டு
வந்தது. **14** அந்த வெட்டுக்கிளிகள் எகிப்து தேசத்தையே மூடின. அவை
பயங்கரமாகப் படையெடுத்து வந்து[g] மூலைமுடுக்கெல்லாம் பரவின.[h] அவ்
வளவு ஏராளமான வெட்டுக்கிளிகள் அதற்குமுன் வந்ததே இல்லை, இனிமே
லும் வரப்போவதில்லை. **15** அவை அந்தத் தேசத்தின் நிலப்பரப்பையே
மூடிவிட்டன. அவற்றால் தேசமே இருண்டுபோனது. ஆலங்கட்டி மழைக்
குத் தப்பிய பயிர்பச்சைகள் எல்லாவற்றையும், மரங்களிலிருந்த பழங்கள்

அதி. 10
a யாத் 9:17
b யாத் 9:31, 32
c யாத் 9:24
d யாத் 3:18; யாத் 5:1
e யாத் 10:25, 26
f யாத் 12:31, 32
g யாத் 10:5; சங் 105:34, 35
h சங் 78:46

10:5 * அதாவது, “பனிக்கட்டி.”

எல்லாவற்றையும் அவை தின்றுதீர்த்தன. எகிப்து தேசமெங்கும் இருந்த மரங்
களையும் செடிகொடிகளையும் அவை மொட்டையாக்கிவிட்டன.

16 அதனால், பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அவசரமாக
வரவழைத்து, “உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கும் உங்களுக்கும் எதி
ராக நான் பாவம் செய்துவிட்டேன். **17** அதனால், இந்த ஒரு தடவை மட்
டும் என் பாவத்தை மன்னித்துவிட்டு, உங்கள் கடவுளாகிய யெகோவாவிடம்
தயவுசெய்து வேண்டிக்கொள்ளுங்கள். இந்தப் பயங்கரமான தண்டனையை
எப்படியாவது நீக்கிவிடச் சொல்லுங்கள்” என்றான். **18** அதனால், அவர்*
பார்வோனிடமிருந்து புறப்பட்டுப் போய், யெகோவாவிடம் ஜெபம் செய்
தார்.[a] **19** உடனே யெகோவா, கிழக்குக் காற்றை மிகவும் பலமான மேற்
குக் காற்றாக மாற்றினார். அது வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டு போய்
செங்கடலில் தள்ளியது. எகிப்து தேசத்தில் ஒரு வெட்டுக்கிளிகூட மிஞ்ச
வில்லை. **20** ஆனாலும், பார்வோனின் இதயம் இறுகிப்போகும்படி
யெகோவா விட்டுவிட்டார்,[b] இஸ்ரவேலர்களை அவன் அனுப்பவில்லை.

21 பின்பு யெகோவா மோசேயிடம், “வானத்துக்கு நேராக உன்
கையை நீட்டு. அப்போது, எகிப்து தேசம் இருட்டாகிவிடும். அந்த இருட்டு
படுபயங்கரமாக இருக்கும்” என்றார். **22** உடனடியாக மோசே வானத்துக்கு
நேராகத் தன்னுடைய கையை நீட்டினார். அப்போது, எகிப்து தேசம் முழுவ
தும் மூன்று நாட்களுக்குக் கும்மிருட்டாக ஆனது.[c] **23** மூன்று நாட்களுக்கு
யாராலும் ஒருவரை ஒருவர் பார்க்கவும் முடியவில்லை, இருந்த இடத்தை
விட்டு நகரவும் முடியவில்லை. ஆனால், இஸ்ரவேலர்கள் குடியிருந்த பகுதி
களில் வெளிச்சம் இருந்தது.[d] **24** அதன்பின் பார்வோன் மோசேயை வர
வழைத்து, “போய் யெகோவாவை வணங்குங்கள்.[e] உங்கள் ஆடுமாடு
களை மட்டும் இங்கேயே விட்டுவிடுங்கள். உங்கள் பிள்ளைகளையும் கூட்
டிக்கொண்டு போங்கள்” என்றான். **25** ஆனால் மோசே, “எங்கள் மிருகங்
களையும் கொண்டுபோக நீங்கள் அனுமதிக்க வேண்டும். அவற்றை எங்கள்
கடவுளாகிய யெகோவாவுக்குப் பலி கொடுக்க வேண்டும்.[f] **26** அதனால்
எங்கள் கால்நடைகளையும் நாங்கள் கொண்டுபோவோம். ஒரு மிருகத்தைக்
கூட விட்டுவிட்டுப் போக மாட்டோம். ஏனென்றால், எங்கள் கடவுளாகிய
யெகோவாவை வணங்கும்போது சில மிருகங்களைப் பலி கொடுப்போம்.
யெகோவாவுக்கு எதைப் பலி கொடுப்போம், எதைப் பலி கொடுக்க மாட்
டோம் என்று அங்கு போகும்வரை எங்களுக்கே தெரியாது” என்றார்.
27 அப்போது, பார்வோனின் இதயம் இறுகிப்போகும்படி யெகோவா விட்
டுவிட்டார். அவர்களை அனுப்ப அவன் ஒத்துக்கொள்ளவில்லை.[g]
28 பார்வோன் மோசேயிடம், “என்னுடைய கண் முன்னால் நிற்காதே! இனி
என் முகத்திலேயே முழிக்காதே, மீறினால் நீ உயிரோடு இருக்க மாட்டாய்”
என்றான். **29** அதற்கு மோசே, “சரி, நீங்கள் சொன்னபடி இனி நான் உங்க
ளுடைய முகத்தில் முழிக்கப்போவதில்லை” என்றார்.

11 பின்பு யெகோவா மோசேயிடம், “பார்வோனுக்கும் எகிப்துக்கும்
இன்னுமொரு தண்டனை கொடுப்பேன். அதன்பின் அவன் உங்
களை இங்கிருந்து அனுப்பிவிடுவான்.[h] சொல்லப்போனால், உங்களை இங்
கிருந்து துரத்தியே விடுவான்.[i] **2** அதனால், எல்லா ஆண்களும் பெண்க
ளும் மற்றவர்களிடம், தங்கத்திலும் வெள்ளியிலும் செய்யப்பட்ட பொருள்

10:18 * அநேகமாக, “மோசே.”

அதி. 10
a யாத் 8:30, 31
b யாத் 7:3; யாத் 11:10; ரோ 9:17, 18
c சங் 105:28
d யாத் 8:21, 22; யாத் 9:3, 6; யாத் 9:26; யாத் 11:7; யாத் 12:13
e யாத் 8:28; யாத் 9:28
f யாத் 3:18; யாத் 5:3
g யாத் 4:21; யாத் 14:4

அதி. 11
h உபா 4:34
i யாத் 12:31, 32

களைக் கேட்டு வாங்க வேண்டும் என்று என்னுடைய ஜனங்களிடம்
போய்ச் சொல்"[a] என்றார். **3** எகிப்தியர்கள் இஸ்ரவேலர்களுக்கு வேண்
டிய எல்லாவற்றையும் கொடுக்கும்படி யெகோவா செய்தார். அதுமட்டு
மல்ல, எகிப்தில் மோசேயின் மதிப்புக் கூடியிருந்தது. பார்வோனின் ஊழி
யர்களும் ஜனங்களும் அவரை மிக உயர்வாக நினைத்தார்கள்.

4 மோசே பார்வோனிடம், "யெகோவா சொல்வது இதுதான்: 'இன்று நடு
ராத்திரியில் நான் எகிப்து தேசத்துக்கு வருவேன்.[b] **5** அப்போது, எகிப்து
தேசத்திலுள்ள மூத்த மகன்கள் எல்லாரும் செத்துப்போவார்கள்.[c] சிம்மாச
னத்தில் உட்கார்ந்திருக்கிற பார்வோனின் மூத்த மகன்முதல் மாவு அரைக்
கிற* அடிமைப் பெண்ணின் மூத்த மகன்வரை எல்லாரும் செத்துப்போவார்
கள். மிருகங்களுடைய முதல் குட்டிகளும் செத்துப்போகும்.[d] **6** எகிப்து
தேசமெங்கும் பயங்கரமான ஒப்பாரிச் சத்தம் கேட்கும். அப்படிப்பட்ட
சத்தம் அதற்கு முன்பும் கேட்டிருக்காது, இனிமேலும் கேட்காது.[e] **7** இஸ்
ரவேல் ஜனங்களையோ அவர்களுடைய மிருகங்களையோ பார்த்து ஒரு
நாய்கூட குரைக்காது. அப்போது, யெகோவா எகிப்தியர்களை எப்படி நடத்
துகிறார், இஸ்ரவேலர்களை எப்படி நடத்துகிறார் என்று நீ தெரிந்துகொள்
வாய்'"[f] என்றார். **8** அதோடு மோசே அவரிடம், "உங்களுடைய ஊழியர்
கள் எல்லாரும் கண்டிப்பாக என் முன்னால் வந்து சாஷ்டாங்கமாக
விழுந்து, 'நீங்களும் உங்களுடைய ஜனங்கள் எல்லாரும் தயவுசெய்து
போய்விடுங்கள்' என்று சொல்வார்கள்,[g] அப்போது நான் போவேன்" என்று
சொன்னார். பிறகு, கடும் கோபத்தோடு பார்வோனைவிட்டுப் புறப்பட்டுப்
போனார்.

9 யெகோவா மோசேயிடம், "நீங்கள் இரண்டு பேரும் சொல்வதை பார்
வோன் கேட்க மாட்டான்.[h] அதனால், எகிப்து தேசத்தில் நான் இன்னும்
பல அற்புதங்களைச் செய்ய வேண்டியிருக்கும்"[i] என்றார். **10** மோசேயும்
ஆரோனும் பார்வோனின் முன்னால் எல்லா அற்புதங்களையும் செய்தார்
கள்.[j] ஆனால், பார்வோனின் இதயம் இறுகிப்போகும்படி யெகோவா விட்டு
விட்டார். அவன் இஸ்ரவேலர்களைத் தன்னுடைய தேசத்திலிருந்து அனுப்
பவில்லை.[k]

12 பின்பு யெகோவா எகிப்து தேசத்திலிருந்த மோசேயிடமும் ஆரோ
னிடமும், **2** "இந்த மாதம் உங்களுக்கு வருஷத்தின் முதல் மாத
மாக இருக்கும்.[l] **3** இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரிடமும் இதைச் சொல்
லுங்கள்: 'இந்த மாதம் 10-ஆம் நாளில் ஒவ்வொருவரும் அவரவர் குடும்
பத்துக்காகவும் அவரவர் வீட்டுக்காகவும் ஒரு ஆட்டைத்[m] தேர்ந்தெ
டுக்க வேண்டும். **4** முழு ஆட்டையும் சாப்பிட முடியாதளவுக்கு அந்
தக் குடும்பம் சின்னதாக இருந்தால், பக்கத்து வீட்டில் இருப்பவர்களோடு
சேர்ந்து அதைச் சாப்பிட வேண்டும். ஒவ்வொருவரும் எவ்வளவு சாப்பிடு
வார்கள் என்பதைக் கணக்குப் போட்டுப் பார்த்து அதைப் பகிர்ந்துகொள்ள
வேண்டும். **5** அந்த ஆடு எந்தக் குறையும் இல்லாத[n] ஒருவயது கடாக்
குட்டியாக இருக்க வேண்டும். அது செம்மறியாட்டுக் கடாக் குட்டியா
கவோ வெள்ளாட்டுக் கடாக் குட்டியாகவோ இருக்கலாம். **6** இந்த மாதம்
14-ஆம் நாள்வரை அதை நீங்கள் வைத்திருக்க வேண்டும்.[o] அன்றைக்குச்
சாயங்காலம், இஸ்ரவேல் சபையார் எல்லாரும் தங்கள் ஆட்டை வெட்ட

11:5 * வே.வா., "திரிகைக் கல்லில் அரைக்கிற."

அதி. 11
a யாத் 3:21, 22; யாத் 12:35, 36; சங் 105:37
b யாத் 12:29
c யாத் 4:22, 23; சங் 78:51; சங் 105:36; சங் 136:10; எபி 11:28
d யாத் 12:12
e யாத் 12:30
f யாத் 8:22; யாத் 9:3, 4; யாத் 10:23; யாத் 12:13
g யாத் 12:33
h யாத் 3:19; யாத் 7:4; ரோ 9:17, 18
i யாத் 7:3
j சங் 135:9
k யாத் 4:21; யாத் 9:15, 16; யாத் 10:20

அதி. 12
l யாத் 13:4; யாத் 23:15; எண் 28:16; உபா 16:1
m யோவா 1:29; 1கொ 5:7; வெளி 5:6
n லேவி 22:18-20; உபா 17:1; 1பே 1:19
o எண் 28:16

வேண்டும்.[a] **7** அதன் இரத்தத்தைக் கொஞ்சம் எடுத்து, எந்த வீட்டில் சாப்
பிடுகிறார்களோ அந்த வீட்டு வாசலின் இரண்டு நிலைக்கால்களிலும் அவற்
றின் மேற்சட்டத்திலும் தெளிக்க வேண்டும்.[b]

8 அதன் இறைச்சியை அன்றைக்கு ராத்திரி சாப்பிட வேண்டும்.[c]
அதை நெருப்பில் வாட்டி, புளிப்பில்லாத ரொட்டியோடும்[d] கசப்பான கீரை
யோடும் சாப்பிட வேண்டும்.[e] **9** இறைச்சியைப் பச்சையாகவோ தண்
ணீரில் வேக வைத்தோ சாப்பிடக் கூடாது. அதன் தலை, கால்கள், உள்ளு
றுப்புகள் எல்லாவற்றையும் நெருப்பில் வாட்டித்தான் சாப்பிட வேண்டும்.
10 இறைச்சி முழுவதையும் அந்த ராத்திரிக்குள் சாப்பிட்டு முடிக்க வேண்
டும். அதில் ஏதாவது காலைவரை மீதியாக இருந்தால், தீயில் சுட்டெரிக்க
வேண்டும்.[f] **11** இடுப்பில் வார் கட்டிக்கொண்டும், கால்களில் செருப்பு
போட்டுக்கொண்டும், கையில் தடியைப் பிடித்துக்கொண்டும் அதை அவ
சர அவசரமாகச் சாப்பிட வேண்டும். அது யெகோவாவின் பஸ்கா.*
12 ஏனென்றால், அந்த ராத்திரி நான் எகிப்தைக் கடந்துபோவேன். அப்
போது, இந்தத் தேசத்தில் இருக்கிற மூத்த மகன்கள் எல்லாரையும் மிருகங்க
ளுடைய முதல் குட்டிகள் எல்லாவற்றையும் சாகடிப்பேன்.[g] எகிப்தின் தெய்
வங்கள் எல்லாவற்றையும் தண்டிப்பேன்.[h] நான் யெகோவா. **13** நிலைக்
கால்களில் தெளிக்கப்பட்ட இரத்தம் நீங்கள் இருக்கிற வீடுகளுக்கு அடை
யாளமாக இருக்கும். நான் எகிப்து தேசத்தைத் தாக்கும்போது அந்த
இரத்தத்தைப் பார்த்து உங்களைக் கடந்துபோய்விடுவேன்; நான் கொடுக்
கும் தண்டனையால் நீங்கள் அழிந்துபோக மாட்டீர்கள்.[i]

14 அந்த நாளை நீங்கள் நினைவில் வைக்க வேண்டும். அதைத் தலை
முறை தலைமுறையாய் யெகோவாவுக்கு ஒரு பண்டிகையாகக் கொண்டாட
வேண்டும். என்றென்றும் இந்தச் சட்டதிட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்
டும். **15** ஏழு நாட்களுக்கு நீங்கள் புளிப்பில்லாத ரொட்டியைச் சாப்பிட
வேண்டும்.[j] முதல் நாளிலிருந்து ஏழாவது நாள்வரை, புளிப்பு சேர்க்கப்பட்
டதை யாராவது சாப்பிட்டால் அவன் கொல்லப்படுவான். அதனால் முதல்
நாளில், உங்கள் வீடுகளில் இருக்கிற புளித்த மாவைத் தூக்கியெறிந்து
விட வேண்டும். **16** முதல் நாளிலும் ஏழாவது நாளிலும் பரிசுத்த மாநாட்
டுக்காக நீங்கள் ஒன்றுகூடி வர வேண்டும். அந்த நாட்களில் எந்த வேலை
யும் செய்யக் கூடாது.[k] அவரவர் சாப்பிடுவதற்குத் தேவையானதை மட்டும்
நீங்கள் செய்துகொள்ளலாம்.

17 புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையை நீங்கள் கொண்டாட வேண்
டும்.[l] ஏனென்றால், பெரிய படைபோல் இருக்கிற உங்களை அந்த
நாளில்தான் எகிப்து தேசத்திலிருந்து நான் கூட்டிக்கொண்டு வருவேன்.
தலைமுறை தலைமுறையாக நீங்கள் அந்த நாளைக் கொண்டாட
வேண்டும். என்றென்றுமே இந்தச் சட்டதிட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்
டும். **18** முதலாம் மாதத்தின் 14-ஆம் நாள் சாயங்காலத்திலிருந்து
21-ஆம் நாள் சாயங்காலம்வரை நீங்கள் புளிப்பில்லாத ரொட்டியைச் சாப்
பிட வேண்டும்.[m] **19** ஏழு நாட்களுக்கு உங்கள் வீடுகளில் புளித்த மாவு
இருக்கக் கூடாது. யாராவது புளிப்பு சேர்க்கப்பட்டதைச் சாப்பிட்டால்,
அவன் வேறு தேசத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, உள்ளூர்க்கார
னாக இருந்தாலும் சரி,[n] கொல்லப்பட வேண்டும்.[o] **20** புளிப்பு சேர்க்கப்

12:11 * அர்த்தம், “கடந்துபோகுதல்.”

அதி. 12
a யாத் 12:18, லேவி 23:5, உபா 16:6
b 1கொ 5:7, எபி 11:28
c உபா 16:6, 7
d யாத் 13:3, யாத் 34:25, உபா 16:3, 1கொ 5:8
e எண் 9:11
f லேவி 7:15, லேவி 22:29, 30, உபா 16:4
g யாத் 11:4, 5, யாத் 12:29
h எண் 33:4
i யாத் 8:22, யாத் 9:4, 26, யாத் 10:23, யாத் 11:7
j யாத் 23:15, லேவி 23:6
k லேவி 23:8
l லேவி 23:6, லூ 22:1, 1கொ 5:8
m லேவி 23:5, 6
n எண் 9:14
o உபா 16:3, 1கொ 5:7

பட்ட எதையும் நீங்கள் சாப்பிடக் கூடாது. உங்களுடைய வீடுகளில் புளிப்
பில்லாத ரொட்டிகளைத்தான் சாப்பிட வேண்டும்'" என்றார்.

21 உடனடியாக, மோசே இஸ்ரவேலின் பெரியோர்கள்*[a] எல்லா
ரையும் கூப்பிட்டு, "உங்கள் குடும்பத்துக்காக நீங்கள் ஒரு ஆட்டுக்குட்
டியை# தேர்ந்தெடுத்து, அதை வெட்டி, பஸ்கா பலி செலுத்துங்கள்.
22 பின்பு, பாத்திரத்திலுள்ள இரத்தத்தில் ஒரு மருவுக்கொத்தை முக்கி
யெடுத்து, வீட்டு வாசலின் இரண்டு நிலைக்கால்களின் மேலும் அவற்றின்
மேற்சட்டத்தின் மேலும் அதைத் தெளியுங்கள். காலைவரை யாருமே வீட்
டைவிட்டு வெளியே போகக் கூடாது. **23** எகிப்தியர்களைத் தண்டிப்பதற்
காக யெகோவா வரும்போது, வீட்டு வாசலின் இரண்டு நிலைக்கால்களின்
மேலும் அவற்றின் மேற்சட்டத்தின் மேலும் இரத்தத்தைப் பார்த்தால், அந்த
வீட்டைவிட்டுக் கடந்துபோய்விடுவார். உங்களுடைய வீடுகளில் சாவு
விழுவதற்கு யெகோவா விடமாட்டார்.[b]

24 நீங்களும் உங்களுடைய மகன்களும் இந்த நிரந்தரக் கட்டளைக்குக்
கீழ்ப்படிய வேண்டும்.[c] **25** யெகோவா சொன்னபடியே, அவர் உங்களுக்
குக் கொடுக்கும் தேசத்துக்கு நீங்கள் போய்ச் சேரும்போது இந்தப் பண்டி
கையைக் கொண்டாட வேண்டும்.[d] **26** 'இந்தப் பண்டிகையை ஏன் கொண்
டாடுகிறோம்?' என்று உங்கள் மகன்கள் கேட்டால்,[e] **27** 'யெகோவாவுக்கு
பஸ்கா பலி செலுத்துவதற்காகக் கொண்டாடுகிறோம். ஏனென்றால், அவர்
எகிப்தியர்களைத் தண்டித்தபோது எங்களை மட்டும் ஒன்றும் செய்யாமல்
எங்கள் வீடுகளைக் கடந்துபோய்விட்டார்' என்று சொல்ல வேண்டும்"
என்றார்.

அப்போது, ஜனங்கள்* சாஷ்டாங்கமாக விழுந்தார்கள். **28** மோசேயி
டமும் ஆரோனிடமும் யெகோவா சொன்னபடியே இஸ்ரவேலர்கள் செய்
தார்கள்.[f] அவர்கள் அப்படியே செய்தார்கள்.

29 நடுராத்திரியில், எகிப்து தேசத்திலிருந்த மூத்த மகன்கள் எல்லாரையும்
யெகோவா கொன்றுபோட்டார்.[g] சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்த பார்வோ
னுடைய மூத்த மகன்முதல் சிறைச்சாலையில் இருந்த கைதியின் மூத்த மகன்
வரை எல்லாரையும் கொன்றுபோட்டார். மிருகங்களுடைய முதல் குட்டிக
ளையும் கொன்றுபோட்டார்.[h] **30** அன்றைக்கு ராத்திரி பார்வோனும் அவ
னுடைய ஊழியர்களும் எகிப்தியர்கள் எல்லாரும் தூக்கத்திலிருந்து எழுந்து
கொண்டார்கள். எகிப்தில் பயங்கரமான ஒப்பாரிச் சத்தம் கேட்டது. ஏனென்
றால், சாவு விழாத வீடு ஒன்றுகூட இருக்கவில்லை.[i] **31** அந்த ராத்திரியே
பார்வோன் மோசேயையும் ஆரோனையும் கூப்பிட்டு,[j] "புறப்பட்டுப் போங்
கள். நீங்களும் மற்ற இஸ்ரவேலர்களும் என்னுடைய ஜனங்களின் நடுவிலி
ருந்து போய்விடுங்கள். நீங்கள் கேட்டுக்கொண்டபடியே, போய் யெகோ
வாவை வணங்குங்கள்.[k] **32** நீங்கள் சொன்னபடியே, உங்கள் ஆடுமாடு
களையும் ஓட்டிக்கொண்டு போங்கள்.[l] ஆனால், என்னை ஆசீர்வதிக்கும்
படி உங்கள் கடவுளிடம் கேளுங்கள்" என்றான்.

33 தேசத்தைவிட்டு உடனடியாகப் போகும்படி இஸ்ரவேலர்களை
எகிப்தியர்கள் அவசரப்படுத்தினார்கள்.[m] "நீங்கள் இங்கேயே இருந்தால்
நாங்கள் எல்லாரும் செத்துவிடுவோம்!" என்று சொன்னார்கள்.[n]

12:21 *வே.வா., "மூப்பர்கள்." #அதாவது, "செம்மறியாட்டுக் குட்டியையோ வெள்ளாட்டுக் குட்டியையோ." **12:27** *ஒருவேளை, "பெரியோர்கள்."

அதி. 12
a யாத் 3:16; எண் 11:16
b எபி 11:28
c உபா 16:3
d யோசு 5:10
e யாத் 13:3, 8; உபா 6:6, 7
f எபி 11:28
g எண் 33:4; சங் 78:51; சங் 105:36
h ஆதி 15:14; யாத் 11:4, 5; எண் 3:13; சங் 135:8
i யாத் 11:6
j யாத் 10:28, 29
k யாத் 3:19, 20; யாத் 6:1; யாத் 10:8-11; சங் 105:38
l யாத் 10:26
m யாத் 12:11
n யாத் 10:7

34 அதனால் இஸ்ரவேல் ஜனங்கள், பிசைந்த மாவைப் புளிக்க வைப்ப
தற்கு முன்பே அதைப் பாத்திரத்தோடு எடுத்து, தங்களுடைய சால்வையில்
கட்டி, தோள்மேல் வைத்துக்கொண்டு போனார்கள். **35** மோசே சொன்ன
படியே, எகிப்தியர்களிடமிருந்து தங்கத்திலும் வெள்ளியிலும் செய்யப்
பட்ட பொருள்களையும் துணிமணிகளையும் கேட்டு வாங்கிக்கொண்டார்
கள்.[a] **36** அவர்கள் கேட்டதையெல்லாம் எகிப்தியர்கள் கொடுக்கும்படி
யெகோவா செய்தார். இப்படி அவர்கள் எகிப்தியர்களின் சொத்துகளை
எடுத்துக்கொண்டார்கள்.*[b]

37 பின்பு, இஸ்ரவேலர்கள் ராமசேசிலிருந்து[c] சுக்கோத்துக்குப்[d] புறப்பட்
டுப் போனார்கள். அவர்களில், பிள்ளைகள் தவிர ஆண்கள்* சுமார்
ஆறு லட்சம் பேர் இருந்தார்கள்.[e] **38** பலதரப்பட்ட ஜனங்களில்*[f] ஏராள
மானோரும் அவர்களோடு போனார்கள். எல்லாரும் ஏகப்பட்ட ஆடுமாடு
களையும் மற்ற கால்நடைகளையும் கொண்டுபோனார்கள். **39** அவர்கள்
எகிப்திலிருந்து கொண்டுவந்திருந்த மாவை எடுத்து புளிப்பில்லாத வட்ட
ரொட்டிகளைச் சுட்டார்கள். அவர்கள் அங்கிருந்து திடீரென்று துரத்தப்பட்
டதால், மாவைப் புளிக்க வைக்கவோ மற்ற உணவுகளை எடுத்து வரவோ
அவர்களால் முடியவில்லை.[g]

40 எகிப்திலிருந்து[h] வந்த இஸ்ரவேலர்கள் மொத்தம் 430 வருஷங்கள்
அன்னியர்களாக வாழ்ந்திருந்தார்கள்.[i] **41** அந்த 430 வருஷங்கள்
முடிந்த நாளில்தான், யெகோவாவின் ஜனங்கள் எல்லாரும் எகிப்து தேசத்
தைவிட்டுப் படைபோல் திரண்டு போனார்கள். **42** யெகோவா அவர்
களை எகிப்திலிருந்து கொண்டுவந்ததற்காக அவர்கள் அந்த ராத்திரியைக்
கொண்டாட வேண்டியிருந்தது. யெகோவாவுக்காக இஸ்ரவேல் ஜனங்கள்
எல்லாரும் தலைமுறை தலைமுறையாய் அதைக் கொண்டாட வேண்டியி
ருந்தது.[j]

43 பின்பு யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், "பஸ்கா பண்டி
கைக்கான சட்டதிட்டம் இதுதான்: வேறு தேசத்து ஜனங்கள் யாரும்
பஸ்கா உணவைச் சாப்பிடக் கூடாது.[k] **44** விலைகொடுத்து வாங்கப்பட்ட
ஒரு அடிமை உங்களோடு இருந்தால், நீங்கள் அவனுக்கு விருத்தசேத
னம் செய்ய வேண்டும்.[l] பின்புதான், அவன் அதைச் சாப்பிட வேண்டும்.
45 உங்களோடு குடியேறியிருக்கிற வேறு தேசத்து ஜனங்களும் உங்களி
டம் கூலிக்கு வேலை செய்கிறவர்களும் அதைச் சாப்பிடக் கூடாது.
46 பஸ்கா உணவை ஒரே வீட்டில் சாப்பிட வேண்டும். இறைச்சியில்
எதையும் வீட்டுக்கு வெளியே கொண்டுபோகக் கூடாது. அதன் ஒரு எலும்
பைக்கூட முறிக்கக் கூடாது.[m] **47** இஸ்ரவேலர்கள் எல்லாரும் இந்தப்
பண்டிகையைக் கொண்டாட வேண்டும். **48** உங்களோடு தங்கியிருக்கிற
வேறு தேசத்துக்காரன் யெகோவாவின் பஸ்காவைக் கொண்டாட விரும்பி
னால், அவனுடைய வீட்டு ஆண்கள் எல்லாரும் விருத்தசேதனம் செய்யப்
பட வேண்டும். பின்பு, அவன் உங்களோடு சேர்ந்து அதைக் கொண்டாட
லாம். அப்போது, அவன் இஸ்ரவேல் குடிமகனைப் போலவே ஆகிவிடு
வான். ஆனால், விருத்தசேதனம் செய்யப்படாத யாரும் அதைச் சாப்பிடக்

12:36 *வே.வா., "சூறையாடினார்கள்." **12:37** *நே.மொ., "கால்நடையாகப் போன ஆண்கள்." அநேகமாக, படை சேவைக்குத் தகுதி பெற்ற ஆண்கள். **12:38** *அதாவது, "எகிப்தியர்கள் உட்பட மற்ற தேசத்தாரில்."

அதி. 12
a ஆதி 15:14, யாத் 3:21, யாத் 11:2, சங் 105:37
b யாத் 3:22
c ஆதி 47:11, யாத் 1:11
d எண் 33:5
e ஆதி 12:1, 2, ஆதி 15:1, 5, ஆதி 46:2, 3, யாத் 1:7, எண் 2:32
f எண் 11:4
g யாத் 12:31
h ஆதி 46:2, 3, ஆதி 47:27, அப் 13:17
i கலா 3:17
j உபா 16:1
k லேவி 22:10
l ஆதி 17:12, 23
m எண் 9:12, சங் 34:19, 20, யோவா 19:33, 36

கூடாது.[a] **49** இஸ்ரவேல் ஜனங்களுக்கும் அவர்களோடு தங்கியிருக்கிற
வேறு தேசத்து ஜனங்களுக்கும் ஒரே சட்டம்தான்” என்றார்.[b]

50 அதனால், மோசேயிடமும் ஆரோனிடமும் யெகோவா சொன்னப
டியே இஸ்ரவேலர்கள் எல்லாரும் செய்தார்கள். அவர்கள் அப்படியே செய்
தார்கள். **51** அந்த நாளில், இஸ்ரவேலர்கள் எல்லாரையும்* எகிப்து தேசத்
திலிருந்து யெகோவா வெளியே கொண்டுவந்தார்.

13 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “இஸ்ரவேலர்களுக்குப் பிறக்
கிற முதல் ஆண் குழந்தைகளும் சரி, அவர்களுடைய மிருகங்க
ளுக்குப் பிறக்கிற முதல் ஆண்குட்டிகளும் சரி, எனக்குத்தான் சொந்தம்.[c]
அதனால் அந்த எல்லா ஆண் குழந்தைகளையும் ஆண்குட்டிகளையும்
எனக்கு அர்ப்பணிக்க வேண்டும்” என்றார்.

3 அதன்பின் மோசே ஜனங்களிடம், “எகிப்தின் அடிமைத்தனத்
திலிருந்து* விடுதலையான இந்த நாளை நீங்கள் நினைவில் வையுங்
கள்.[d] யெகோவா தன்னுடைய கைபலத்தால் உங்களை அங்கிருந்து கூட்
டிக்கொண்டு வந்திருக்கிறார்.[e] அதனால், புளிப்பு சேர்க்கப்பட்ட எதை
யுமே நீங்கள் சாப்பிடக் கூடாது. **4** ஆபிப்* மாதத்தின் இந்த நாளில் நீங்
கள் வெளியேறினீர்கள்.[f] **5** யெகோவா உங்களுடைய முன்னோர்களுக்கு
வாக்குறுதி கொடுத்தபடியே[g] பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்கு[h] நான்
உங்களைக் கொண்டுபோன பின்பு, இதே மாதத்தில் நீங்கள் இந்தப் பண்டி
கையைக் கொண்டாட வேண்டும். கானானியர்களும் ஏத்தியர்களும் எமோ
ரியர்களும் ஏவியர்களும் எபூசியர்களும்[i] வாழ்கிற அந்தத் தேசத்துக்குப்
போனதும் நீங்கள் தவறாமல் இந்தப் பண்டிகையைக் கொண்டாட வேண்
டும். **6** ஏழு நாட்களுக்கு நீங்கள் புளிப்பில்லாத ரொட்டிகளைச் சாப்பிட
வேண்டும்.[j] ஏழாம் நாளில் யெகோவாவுக்கு ஒரு பண்டிகையைக்
கொண்டாட வேண்டும். **7** ஏழு நாட்களும் புளிப்பில்லாத ரொட்டிகளைச்
சாப்பிட வேண்டும்.[k] புளிப்பு சேர்க்கப்பட்ட எதையுமே நீங்கள் வைத்தி
ருக்கக் கூடாது.[l] புளித்த மாவு எதுவுமே உங்கள் எல்லைகளுக்குள் இருக்
கக் கூடாது. **8** அந்த நாளில் உங்கள் மகன்களிடம், ‘யெகோவா எங்களை
எகிப்திலிருந்து எப்படி விடுதலை செய்தார் என்பதை நினைத்துப் பார்க்கத்
தான் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்’ என்று சொல்லுங்கள்.[m]
9 யெகோவா தன்னுடைய கைபலத்தால் உங்களை எகிப்திலிருந்து விடு
தலை செய்ததை இந்தப் பண்டிகை உங்களுக்கு ஞாபகப்படுத்தும். இது
உங்கள் கையில் ஒரு அடையாளம் போலவும் நெற்றியில் ஒரு நினைப்பூட்
டுதல் போலவும் இருக்கும்.[n] அதனால் யெகோவாவின் சட்டத்தைப் பற்றி
எப்போதும் பேசுவீர்கள். **10** ஒவ்வொரு வருஷமும் குறித்த காலத்தில்
நீங்கள் இந்தச் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.[o]

11 கானானியர்களின் தேசத்தை உங்களுக்குக் கொடுப்பதாக உங்களுக்
கும் உங்கள் முன்னோர்களுக்கும் யெகோவா வாக்குறுதி தந்திருக்கிறார்.[p]
அங்கே அவர் உங்களைக் கூட்டிக்கொண்டு போகும்போது, **12** எல்லா
ரும் தங்களுக்குப் பிறக்கிற முதல் ஆண் குழந்தையை யெகோவாவுக்கு
அர்ப்பணிக்க வேண்டும். அதேபோல், உங்களுடைய மிருகங்களுக்குப்

12:51 *நே.மொ., “இஸ்ரவேலர்களையும் அவர்களுடைய எல்லா படைகளையும்.” **13:3** *நே.மொ., “அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து.” **13:4** *இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

அதி. 12
a எண் 9:14
b லேவி 24:22; எண் 15:16

அதி. 13
c எண் 3:13; எண் 18:15; உபா 15:19; லூ 2:22, 23
d யாத் 12:42; உபா 16:3
e உபா 4:34; நெ 9:10
f உபா 16:1
g ஆதி 15:18; யாத் 6:5, 8
h யாத் 3:17; உபா 8:7-9
i யாத் 3:8; யாத் 34:11
j யாத் 12:15; யாத் 34:18
k யாத் 23:15
l உபா 16:3
m யாத் 12:26, 27
n யாத் 12:14; உபா 11:18
o யாத் 12:24, 25
p ஆதி 15:18

பிறக்கிற முதல் ஆண்குட்டியையும் அர்ப்பணிக்க வேண்டும். எல்லா
ஆண் குழந்தைகளும் ஆண்குட்டிகளும் யெகோவாவுக்குத்தான் சொந்
தம்.[a] **13** கழுதையின் முதல் குட்டியை, ஒரு ஆட்டைக் கொடுத்து நீங்கள்
மீட்க வேண்டும். அப்படி அதை மீட்காவிட்டால், அதன் கழுத்தை முறிக்க
வேண்டும். உங்களுக்குப் பிறக்கிற முதல் ஆண் குழந்தைகளையும் நீங்கள்
மீட்டுக்கொள்ள வேண்டும்.[b]

14 ‘எதற்காக இப்படிச் செய்கிறோம்?’ என்று உங்கள் மகன்கள் கேட்
டால், ‘நாங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தபோது யெகோவா தன்னு
டைய கைபலத்தால் எங்களை விடுதலை செய்தார்.[c] **15** பார்வோன் எங்
களை அனுப்பாமல் பிடிவாதம் பிடித்தபோது,[d] எகிப்திலிருந்த மூத்த மகன்
கள் எல்லாரையும் மிருகங்களுடைய முதல் குட்டிகள் எல்லாவற்றையும்
யெகோவா கொன்றுபோட்டார்;[e] அதனால்தான், மிருகங்களுக்குப் பிறந்த
முதல் ஆண்குட்டிகள் எல்லாவற்றையும் யெகோவாவுக்குப் பலி கொடுத்து,
என்னுடைய மூத்த மகனை மீட்கிறேன்’ என்று சொல்லுங்கள். **16** இது
உங்கள் கையிலும் நெற்றியிலும் ஒரு அடையாளம்போல் இருக்க வேண்
டும்.[f] ஏனென்றால், யெகோவா தன்னுடைய கைபலத்தால் எகிப்திலிருந்து
நம்மை விடுதலை செய்தார்” என்றார்.

17 இஸ்ரவேலர்களை பார்வோன் அனுப்பிய பின்பு, கடவுள் அவர்
களை பெலிஸ்தியர்களுடைய தேசத்தின் வழியாகக் கூட்டிக்கொண்டு
போகவில்லை. “அந்த வழியாகப் போனால் அங்கே இருக்கிறவர்கள்
இவர்களோடு போர் செய்யலாம். உடனே இவர்கள் மனம் மாறி எகிப்துக்கே
திரும்பிப் போய்விடலாம்” என்று கடவுள் சொன்னார். அதனால்தான், அது
குறுக்கு வழியாக இருந்தாலும் அதன் வழியாகக் கூட்டிக்கொண்டு போகா
மல், **18** செங்கடலுக்குப் பக்கத்தில் இருக்கிற வனாந்தரத்தின் வழியா
கச் சுற்றிப் போக வைத்தார்.[g] எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் ஒரு
படையைப் போல அணிவகுத்துப் போனார்கள். **19** யோசேப்பின் எலும்
புகளையும் மோசே எடுத்துக்கொண்டு போனார். ஏனென்றால் யோசேப்பு
இஸ்ரவேல் வம்சத்தாரிடம், “கடவுள் கண்டிப்பாக உங்களுக்குக் கருணை
காட்டுவார். அதனால், நீங்கள் இங்கிருந்து போகும்போது என் எலும்புக
ளைக் கொண்டுபோக வேண்டும்” என்று சொல்லி உறுதிமொழி வாங்கியி
ருந்தார்.[h] **20** அவர்கள் சுக்கோத்திலிருந்து புறப்பட்டு வனாந்தரத்தின் எல்
லையில் இருந்த ஈத்தாமில் கூடாரம் போட்டுத் தங்கினார்கள்.

21 யெகோவா அவர்களுக்கு முன்னால் போய் வழிகாட்டினார். பகலில்
மேகத் தூணின் மூலம் வழிகாட்டினார்,[i] ராத்திரியில் நெருப்புத் தூணின்
மூலம் வெளிச்சம் காட்டினார். அதனால், பகலிலும் ராத்திரியிலும் அவர்க
ளால் பயணம் செய்ய முடிந்தது.[j] **22** பகலில் மேகத் தூணும் ராத்திரியில்
நெருப்புத் தூணும் ஜனங்களைவிட்டு விலகவே இல்லை.[k]

14 அப்போது யெகோவா மோசேயிடம், **2** “இஸ்ரவேலர்கள் திரும்
பிப் போய், மிக்தோலுக்கும் கடலுக்கும்* இடையில், பாகால்–
செபோனைப் பார்த்தபடி இருக்கிற பிககிரோத் என்ற இடத்துக்கு முன்னால்
முகாம்போட வேண்டுமென்று சொல்.[l] அதற்கு எதிரில் இருக்கிற கடற்கரை
யிலே நீங்கள் முகாம்போட வேண்டும். **3** அப்போது பார்வோன், ‘இஸ்ர
வேலர்கள் வழி தெரியாமல் அலைந்து திரிகிறார்கள். அவர்கள் வனாந்

14:2 * அநேகமாக, “செங்கடலுக்கும்.”

அதி. 13
a யாத் 22:29; யாத் 34:19, 20; லேவி 27:26; எண் 3:13; லூ 2:22, 23
b எண் 18:15
c உபா 7:7, 8
d யாத் 5:2
e யாத் 12:29; சங் 78:51
f உபா 11:18
g யாத் 14:2, 3; எண் 33:5
h ஆதி 50:24, 25; யோசு 24:32; எபி 11:22
i யாத் 14:19
j எண் 9:15; சங் 78:14
k சங் 105:39; 1கொ 10:1

அதி. 14
l யாத் 13:17, 18

தரத்தில் மாட்டிக்கொண்டார்கள்' என்று சொல்வான். **4** பார்வோனின் இத
யம் இறுகிப்போகும்படி நான் விட்டுவிடுவேன்.[a] அவன் அவர்களைத் துரத்
திக்கொண்டு வருவான். பார்வோனையும் அவனுடைய எல்லா படைகளை
யும் தோற்கடிப்பதன் மூலம் எனக்குப் புகழ் சேர்ப்பேன்.[b] அப்போது, நான்
யெகோவா என்று எகிப்தியர்கள் தெரிந்துகொள்வார்கள்"[c] என்றார். அவர்
சொன்னபடியே இஸ்ரவேலர்கள் செய்தார்கள்.

5 இஸ்ரவேலர்கள் ஓடிப்போய்விட்டார்கள் என்ற செய்தி எகிப்தின்
ராஜாவான பார்வோனுக்குச் சொல்லப்பட்டபோது, "ஏன்தான் இப்படிச் செய்
தோமோ![d] நமக்கு அடிமைகளாக இருந்த இஸ்ரவேலர்களை ஏன்தான் விடு
தலை செய்தோமோ!" என்று அவனும் அவனுடைய ஊழியர்களும்
நொந்துகொண்டார்கள். **6** அதனால் பார்வோன் தன்னுடைய போர் ரதங்
களைத் தயார்படுத்தி, தன்னுடைய வீரர்களோடு புறப்பட்டான்.[e] **7** விசே
ஷமான 600 ரதங்களோடும், எகிப்திலிருந்த மற்ற எல்லா ரதங்களோ
டும் புறப்பட்டுப் போனான். அவை ஒவ்வொன்றிலும் வீரர்கள் இருந்தார்
கள். **8** இப்படி, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய இதயம் இறுகிப்
போகும்படி யெகோவா விட்டுவிட்டார். அவன் இஸ்ரவேலர்களைத் துரத்
திக்கொண்டு போனான். ஆனால், இஸ்ரவேலர்கள் வெற்றி நடைபோட்டுப்
போய்க்கொண்டிருந்தார்கள்.[f] **9** எகிப்தியர்கள் பார்வோனுடைய எல்லா
ரதங்களோடும், குதிரை வீரர்களோடும், மற்ற எல்லா படைகளோடும் அவர்
களைத் துரத்திக்கொண்டு வந்தார்கள்.[g] பிககிரோத் என்ற இடத்துக்கு முன்
னால், பாகால்-செபோனுக்கு எதிரில் இருந்த கடற்கரையில் முகாம்போட்டி
ருந்த இஸ்ரவேலர்களை அவர்கள் நெருங்கினார்கள்.

10 பார்வோனும் எகிப்தியர்களும் நெருங்கி வருவதை இஸ்ரவேலர்
கள் பார்த்தபோது, கதிகலங்கிப்போய் யெகோவாவிடம் கதறினார்கள்.[h]
11 பின்பு அவர்கள் மோசேயிடம், "எகிப்தில் கல்லறை இல்லையென்றா
இந்த வனாந்தரத்தில் சாவதற்கு எங்களை இழுத்துக்கொண்டு வந்தீர்கள்?[i]
எதற்காக எங்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தீர்கள்? **12** எகிப்
தில் இருக்கும்போதே நாங்கள் உங்களிடம், 'எங்களை விட்டுவிடுங்கள்,
நாங்கள் எகிப்தியர்களுக்கே வேலை செய்கிறோம்' என்று சொல்லவில்
லையா? இந்த வனாந்தரத்தில் சாவதைவிட எகிப்தியர்களுக்கு வேலை
செய்வதே மேல்" என்றார்கள்.[j] **13** அதற்கு மோசே, "பயப்படாதீர்கள்![k]
தைரியமாக நின்று, இன்று யெகோவா உங்களுக்குத் தரும் மீட்பைப் பாருங்
கள்.[l] இன்று நீங்கள் பார்க்கிற இந்த எகிப்தியர்களை இனி என்றுமே பார்க்க
மாட்டீர்கள்.[m] **14** உங்களுக்காக யெகோவாவே போர் செய்வார்.[n] நீங்கள்
சும்மாயிருப்பீர்கள்" என்றார்.

15 அப்போது யெகோவா மோசேயிடம், "ஏன் என்னிடம் கெஞ்சு
கிறாய்? இஸ்ரவேலர்களை இங்கிருந்து புறப்படச் சொல். **16** நீ உன்னு
டைய கோலை எடுத்து கடலுக்கு நேராக நீட்டு. அப்போது கடல் இரண்டா
கப் பிளக்கும், இஸ்ரவேலர்கள் கடலின் நடுவில் காய்ந்த தரையிலே
நடந்து போவார்கள். **17** எகிப்தியர்களுடைய இதயம் இறுகிப்போகும்படி
நான் விட்டுவிடுவேன். அதனால், அவர்கள் இஸ்ரவேலர்களைத் துரத்திக்
கொண்டு வருவார்கள். அப்போது, பார்வோனையும் அவனுடைய போர்
ரதங்களையும் குதிரைப்படைகளையும் மற்ற எல்லா படைகளையும்
அழித்து எனக்குப் புகழ் சேர்ப்பேன்.[o] **18** பார்வோனையும் அவனுடைய

அதி. 14

a யாத் 7:13, ரோ 9:17, 18
b யாத் 9:15, 16; யாத் 15:11; யாத் 18:10, 11; யோசு 2:9, 10
c யாத் 7:5; யாத் 8:22
d யாத் 12:33
e யாத் 14:23
f எண் 33:3
g யாத் 15:9
h யோசு 24:6, 7; நெ 9:9
i யாத் 16:3; யாத் 17:3; எண் 14:2-4; சங் 106:7
j யாத் 5:21; யாத் 6:6, 9
k எண் 14:9; உபா 20:3; 2நா 20:15, 17; சங் 27:1; சங் 46:1; ஏசா 41:10
l 2நா 20:17
m யாத் 14:30; யாத் 15:5; சங் 136:15
n உபா 1:30; உபா 20:4; 2நா 20:29
o யாத் 9:15, 16

போர் ரதங்களையும் குதிரைப்படைகளையும் அழித்து எனக்குப் புகழ்
சேர்க்கும்போது, நான் யெகோவா என்று எகிப்தியர்கள் தெரிந்துகொள்வார்
கள்”[a] என்றார்.

19 பின்பு, இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்னால் போய்க்கொண்
டிருந்த உண்மைக் கடவுளின் தூதர்[b] அங்கிருந்து விலகி அவர்களுக்குப்
பின்னால் வந்தார். அவர்களுக்கு முன்னால் இருந்த மேகத் தூணும்
அவர்களுக்குப் பின்னால் வந்தது.[c] **20** அது எகிப்தியர்களின் படைக்கும்
இஸ்ரவேலர்களுக்கும் இடையில் நின்றது.[d] அது எகிப்தியர்களுக்கு இருளா
கவும், இஸ்ரவேலர்களுக்கு ராத்திரியில் வெளிச்சமாகவும் இருந்தது.[e] அத
னால், ராத்திரி முழுவதும் எகிப்தியர்களால் இஸ்ரவேலர்களை நெருங்க
முடியவில்லை.

21 பின்பு, மோசே தன்னுடைய கையைக் கடலுக்கு நேராக நீட்டி
னார்.[f] யெகோவா ராத்திரி முழுவதும் கிழக்கிலிருந்து பலத்த காற்றை
வீச வைத்து, கடலை இரண்டாகப் பிளந்தார்.[g] தண்ணீர் இரண்டு பக்கங்க
ளிலும் பிரிந்து நின்றது. நடுவிலே காய்ந்த தரை தெரிந்தது.[h] **22** அந்தக்
காய்ந்த தரை வழியாகக் கடலின் நடுவிலே இஸ்ரவேலர்கள் நடந்து
போனார்கள்.[i] தண்ணீர் அவர்களுடைய வலது பக்கத்திலும் இடது பக்கத்
திலும் மதில் போலத் திரண்டு நின்றது.[j] **23** எகிப்தியர்கள் அவர்களைத்
துரத்திக்கொண்டு வந்தார்கள். பார்வோனுடைய எல்லா குதிரைகளும்
போர் ரதங்களும் குதிரைப்படைகளும் அவர்களுக்குப் பின்னாலேயே கட
லுக்குள் வர ஆரம்பித்தன.[k] **24** மூன்றாம் ஜாமத்தில்* மேகமும் நெருப்
புமான தூணிலிருந்து[l] யெகோவா எகிப்தியர்களைப் பார்த்து, அவர்களுக்
குள் குழப்பத்தை உண்டாக்கினார். **25** அவர்களுடைய ரதங்களின் சக்
கரங்களை அவர் கழன்றுபோக வைத்ததால், ரதங்களை ஓட்ட அவர்கள்
படாத பாடுபட்டார்கள். அதனால், “இஸ்ரவேலர்களோடு நமக்கு எந்தச் சம்
பந்தமும் வேண்டாம், அவர்களைவிட்டு ஓடிப்போய்விடலாம். அவர்களுக்
காக யெகோவா நம்மை எதிர்த்துப் போர் செய்கிறார்”[m] என்று சொல்லிக்
கொண்டார்கள்.

26 பின்பு யெகோவா மோசேயிடம், “கடலுக்கு நேராக உன் கையை
நீட்டு. தண்ணீர் பாய்ந்து வந்து எகிப்தியர்களையும் அவர்களுடைய போர்
ரதங்களையும் குதிரைப்படைகளையும் மூழ்கடிக்கட்டும்” என்றார்.
27 உடனே மோசே கடலுக்கு நேராகத் தன் கையை நீட்டினார். பொழுது
விடிய ஆரம்பித்தபோது, கடல்நீர் பழைய நிலைக்குத் திரும்பியது. எகிப்தி
யர்கள் அங்கிருந்து தப்பித்துப்போக முயற்சி செய்தார்கள். ஆனால்,
யெகோவா அவர்களைக் கடலுக்குள் மூழ்கடித்தார்.[n] **28** இஸ்ரவேலர்க
ளைக் கடலுக்குள் துரத்திச்சென்ற பார்வோனின் போர் ரதங்களும் குதிரைப்
படைகளும் மற்ற எல்லா படைகளும் புரண்டுவந்த தண்ணீரில் மூழ்கிப்போ
யின.[o] ஒருவர்கூட தப்பிப்பதற்குக் கடவுள் விடவில்லை.[p]

29 ஆனால், இஸ்ரவேலர்கள் கடலின் நடுவில் காய்ந்த தரையில் நடந்து
போனார்கள்.[q] தண்ணீர் அவர்களுடைய வலது பக்கத்திலும் இடது பக்
கத்திலும் மதில் போலத் திரண்டு நின்றது.[r] **30** இப்படி, யெகோவா அந்த
நாளில் இஸ்ரவேலர்களை எகிப்தியர்களின் கையிலிருந்து காப்பாற்றினார்.[s]
எகிப்தியர்களின் பிணங்கள் கரையில் ஒதுங்கியதை இஸ்ரவேலர்கள் பார்த்

14:24 * அதாவது, “அதிகாலை சுமார் 2 மணிமுதல் 6 மணிவரை.”

அதி. 14

a யாத் 14:4; ரோ 9:17, 18
b ஆதி 48:16; யாத் 32:34; எண் 20:16; யூ 9
c யாத் 13:21
d யோசு 24:6, 7
e சங் 105:39
f யாத் 14:16; அப் 7:36
g நெ 9:10, 11; சங் 78:13; சங் 136:13; ஏசா 63:12
h யோசு 2:9, 10; சங் 66:6; சங் 106:9; சங் 114:3
i 1கொ 10:1; எபி 11:29
j யாத் 15:8
k யாத் 14:17
l யாத் 13:21
m யாத் 14:4
n யாத் 15:1, 4
o யாத் 15:5, 10; உபா 11:3, 4; யோசு 24:6, 7; நெ 9:10, 11; சங் 78:53; எபி 11:29
p யாத் 14:13; சங் 106:11; சங் 136:15
q சங் 77:19
r யாத் 15:8
s உபா 4:20; சங் 106:8-11

தார்கள். **31** எகிப்தியர்களுக்கு எதிராக யெகோவா காட்டிய மகா வல்ல
மையையும் பார்த்தார்கள். அவர்கள் யெகோவாவுக்குப் பயந்து, யெகோவா
மேலும் அவருடைய ஊழியரான மோசேமேலும் விசுவாசம் வைத்தார்கள்.[a]

15 அப்போது, மோசேயும் இஸ்ரவேலர்களும் யெகோவாவைப்
புகழ்ந்து இப்படிப் பாடினார்கள்:[b]

“நான் யெகோவாவைப் புகழ்ந்து பாடுவேன்,
அவருக்கு மாபெரும் வெற்றி கிடைத்தது.[c]
குதிரைகளையும் குதிரை வீரர்களையும் கடலில் சமாதியாக்கினார்.[d]
2 அவர் என் மீட்பரானார்;[e] ‘யா’வே* என் பலம், என் கோட்டை.
அவர்தான் என்னுடைய கடவுள், நான் அவரைப் புகழ்வேன்.[f]
அவர் என்னுடைய தகப்பனின் கடவுள்,[g] நான் அவரைப்
போற்றுவேன்.[h]
3 யெகோவா ஒரு மாவீரர்![i]
யெகோவா என்பதுதான் அவருடைய பெயர்![j]
4 பார்வோனின் படைகளையும் ரதங்களையும் அவர் கடலில்
தள்ளினார்.[k]
அவனுடைய வீராதிவீரர்கள் செங்கடலில் மூழ்கினார்கள்.[l]
5 சீறிவந்த தண்ணீர் அவர்களைச் சுருட்டிக்கொண்டு போனது.
அவர்கள் கல்லைப் போல அமிழ்ந்துபோனார்கள்.[m]
6 யெகோவாவே, உங்களுடைய வலது கை மகா பலம் கொண்டது.[n]
யெகோவாவே, உங்களுடைய வலது கை எதிரியை நொறுக்கிவிடும்.
7 உங்களை எதிர்க்கிறவர்களை மகா கம்பீரத்தோடு வீழ்த்துவீர்கள்.[o]
உங்களுடைய கோபத் தீயினால் அவர்களை வைக்கோல் போலப்
பொசுக்குவீர்கள்.
8 உங்களுடைய மூச்சுக்காற்றினால் தண்ணீர் குவிந்து நின்றது.
மாபெரும் கடல் மதில்போல் உயர்ந்து நின்றது.
புரண்டு ஓடிய தண்ணீர் கடலில் உறைந்துபோனது.
9 ‘அவர்களைத் துரத்திக்கொண்டு போய்ப்பிடிப்பேன்!
கைப்பற்றிய பொருள்களை ஆசைதீர பங்குபோடுவேன்!
வாளை எடுத்து, அவர்களை வெட்டிச் சாய்ப்பேன்!’[p] என்றெல்லாம்
எதிரி சொன்னான்.
10 நீங்கள் உங்களுடைய மூச்சுக்காற்றை ஊதினீர்கள்.
கடல் அவர்களை மூழ்கடித்தது.[q]
அவர்கள் ஆழ்கடலில் ஈயம்போல் மூழ்கிப்போனார்கள்.
11 யெகோவாவே, உங்களைப் போல ஒரு கடவுள் உண்டா?[r]
பரிசுத்தத்தின் சிகரமே,[s] யார் உங்களுக்கு ஈடாக முடியும்?
நீங்கள் அற்புதங்களைச் செய்கிறவர்.[t]
பயபக்தியோடு போற்றிப் புகழப்பட வேண்டியவர்.
12 நீங்கள் வலது கையை நீட்டினீர்கள், அவர்கள் பூமிக்குள்
புதைந்துபோனார்கள்.[u]

15:2 * “யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 14
a யாத் 4:31, யாத் 19:9, சங் 106:12

அதி. 15
b நியா 5:1, 2சா 22:1, வெளி 15:3
c யாத் 9:16, யாத் 18:10, 11, சங் 106:11, 12
d யாத் 15:21, சங் 136:15
e ஏசா 12:2
f 2சா 22:47, ஏசா 25:1
g யாத் 3:15
h சங் 83:18, சங் 148:13
i சங் 24:8
j யாத் 6:3, ஏசா 42:8
k யாத் 14:27
l யாத் 14:6, 7
m நெ 9:10, 11
n சங் 60:5, சங் 89:13
o ஏசா 37:23
p யாத் 14:5, 9
q யாத் 14:21, 28
r உபா 3:24, 2சா 7:22
s ஏசா 6:3
t யாத் 11:9
u சங் 78:53, எபி 11:29

13 உங்களுடைய ஜனங்களை விடுவித்தீர்கள்.[a]
மாறாத அன்பினால் அவர்களை வழிநடத்தினீர்கள்.
உங்கள் பலத்தால் உங்களுடைய பரிசுத்தமான இடத்துக்கு
அவர்களைக் கூட்டிக்கொண்டு போவீர்கள்.
14 ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு[b] நடுங்குவார்கள்.
பெலிஸ்திய ஜனங்கள் பீதியடைவார்கள்.
15 ஏதோமின் குலத்தலைவர்கள் கதிகலங்குவார்கள்.
மோவாபின் கொடுங்கோலர்கள் குலைநடுங்குவார்கள்.[c]
கானானில் வாழ்கிறவர்கள் கலக்கமடைவார்கள்.[d]
16 பயமும் திகிலும் அவர்களைக் கவ்வும்.[e]
உங்களுடைய கைபலம் அவர்களைக் குத்துக்கல் போல ஆக்கிவிடும்.
யெகோவாவே, நீங்கள் உருவாக்கிய உங்கள் ஜனம்[f] கடந்துபோகிற
வரைக்கும்,[g]
அவர்கள் எல்லாருடைய நிலைமையும் அப்படித்தான் இருக்கும்.
17 யெகோவாவே, உங்களுடைய ஜனத்தைக் கூட்டிக்கொண்டு வருவீர்கள்.
யெகோவாவே, உங்களுக்குச் சொந்தமான மலையிலே,
நீங்கள் தங்குவதற்குத் தயார் செய்த இடத்திலே,
உங்கள் கைகளால் உண்டாக்கிய புனித இடத்திலே,
அவர்களை நிலைநாட்டுவீர்கள்.*[h]
18 யெகோவா என்றென்றும் ராஜாவாக இருப்பார்.[i]
19 பார்வோனின் குதிரைகள் அவனுடைய ரதங்களோடும் வீரர்களோடும்
கடலின் நடுவில் பாய்ந்தன.[j]
திரண்டுநின்ற தண்ணீரை யெகோவா அவர்கள்மேல் புரண்டுவர
வைத்தார்.[k]
ஆனால், இஸ்ரவேலர்களைக் கடலின் நடுவில் காய்ந்த தரையில்
நடக்க வைத்தார்."[l]

20 ஆரோனின் சகோதரியும் தீர்க்கதரிசனம் சொல்கிறவளுமான மிரி
யாம் கஞ்சிராவைக் கையில் எடுத்துக்கொண்டாள். மற்ற எல்லா பெண்
களும்கூட கஞ்சிராவை எடுத்துக்கொண்டு அவளுக்குப் பின்னால் போய்
நடனம் ஆடினார்கள். 21 ஆண்கள் பாடப் பாட மிரியாமும்,

"யெகோவாவைப் புகழ்ந்து பாடுங்கள், அவருக்கு மாபெரும் வெற்றி
கிடைத்தது.[m]
குதிரைகளையும் வீரர்களையும் கடலில் சமாதியாக்கினார்"[n]

என்று பதில்பாட்டுப் பாடினாள்.

22 பிற்பாடு, மோசே இஸ்ரவேலர்களை செங்கடலிலிருந்து ஷூர்
வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போனார். அவர்கள் மூன்று நாட்கள்
அந்த வனாந்தரத்தில் நடந்துபோனார்கள். ஆனால், அவர்களுக்குத் தண்
ணீர் கிடைக்கவில்லை. 23 பின்பு, மாரா* என்ற இடத்துக்கு வந்துசேர்ந்
தார்கள்.[o] அங்கிருந்த தண்ணீர் கசப்பாக இருந்ததால், அவர்களால்
அதைக் குடிக்க முடியவில்லை. அதனால்தான், அவர் அந்த இடத்துக்கு

15:17 * நே.மொ., "நட்டு வைப்பீர்கள்." 15:23 * அர்த்தம், "கசப்பு."

அதி. 15
a சங் 106:10
b எண் 14:13, 14
c எண் 22:1, 3
d யோசு 2:9-11, யோசு 5:1
e உபா 11:25
f 2சா 7:23, ஏசா 43:1
g எண் 20:14, 17, எண் 21:21, 22
h சங் 80:8
i சங் 10:16
j யாத் 14:23
k யாத் 14:28
l யாத் 14:22
m யாத் 9:16, யாத் 18:11
n யாத் 14:27, 28, சங் 106:11, 12
o எண் 33:8

மாரா என்று பெயர் வைத்தார். **24** இஸ்ரவேல் ஜனங்கள் மோசேக்கு
விரோதமாக முணுமுணுத்து,[a] "நாங்கள் எதைத்தான் குடிப்பது?" என்றார்
கள். **25** மோசே யெகோவாவிடம் கெஞ்சினார்.[b] யெகோவா அவருக்கு
ஒரு சின்ன மரத்தைக் காட்டினார். மோசே அதைத் தூக்கித் தண்ணீருக்குள்
போட்டவுடன், அந்தத் தண்ணீர் தித்திப்பானது.

அங்குதான் கடவுள் ஜனங்களைச் சோதித்துப் பார்த்தார்.[c] அங்கு நடந்த
சம்பவங்கள் அவர்களுக்கு ஒரு பாடமாக இருந்தன, அவர்களுடைய
வாழ்க்கைக்கு ஒரு சட்டம் போலவும் இருந்தன.* **26** கடவுள் அவர்களி
டம், "யெகோவாவாகிய நான் சொல்லும் வார்த்தையை நீங்கள் கவனமா
கக் கேட்டு, எனக்குப் பிரியமானதைச் செய்து, என் கட்டளைகளுக்குக் கீழ்ப்
படிந்து, என் விதிமுறைகள் எல்லாவற்றையும் பின்பற்றினால்,[d] எகிப்தியர்
கள்மேல் கொண்டுவந்த எந்தக் கொள்ளைநோயையும் நான் உங்கள்மேல்
கொண்டுவர மாட்டேன்.[e] யெகோவாவாகிய நான் உங்களைக் குணப்படுத்
துகிறேன்"[f] என்று சொன்னார்.

27 அதன்பின், அவர்கள் ஏலிமுக்கு வந்துசேர்ந்தார்கள். அங்கே 12 நீரூற்
றுகளும் 70 பேரீச்ச மரங்களும் இருந்தன. அந்த நீரூற்றுகளுக்குப் பக்கத்தில்
அவர்கள் முகாம்போட்டார்கள்.

16 இஸ்ரவேல் ஜனங்கள் ஏலிமிலிருந்து புறப்பட்டார்கள். கடைசியில்,
அவர்கள் எல்லாரும் ஏலிமுக்கும் சீனாய்க்கும் இடையில் இருக்கிற
சின் வனாந்தரத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.[g] எகிப்து தேசத்திலிருந்து புறப்
பட்ட பின்பு, இரண்டாம் மாதம் 15-ஆம் நாளில் அங்கு வந்துசேர்ந்தார்கள்.

2 பின்பு, அந்த வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருமே
மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முணுமுணுத்தார்கள்.[h] **3** இஸ்ர
வேலர்கள் அவர்களிடம் போய், "எகிப்து தேசத்தில் நாங்கள் இறைச்சி
யையும் ரொட்டியையும் திருப்தியாகச் சாப்பிட்டோமே, அப்போதே
யெகோவாவின் கையால் செத்துப்போயிருந்தால் நன்றாக இருந்திருக்
கும்![i] எங்கள் எல்லாரையும் பட்டினிபோட்டு சாகடிப்பதற்காகத்தான் இந்த
வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்று சொல்லிக்
கொண்டே இருந்தார்கள்.[j]

4 அதனால் யெகோவா மோசேயிடம், "இப்போது நான் வானத்திலி
ருந்து உணவைப் பொழியப்போகிறேன்.[k] ஒவ்வொருவரும் போய் அந்தந்த
நாளுக்குத் தேவையானதை எடுத்துக்கொள்ள வேண்டும்.[l] அவர்கள் என்னு
டைய கட்டளையின்படி நடக்கிறார்களா இல்லையா என்று நான் சோதித்துப்
பார்ப்பேன்.[m] **5** ஆனால் ஆறாம் நாளில்,[n] மற்ற நாட்களைவிட இரண்டு
மடங்கு அதிகமாக எடுத்து சமைத்துக்கொள்ளலாம்"[o] என்றார்.

6 அதனால் மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலர்களிடம், "யெகோ
வாதான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார் என்ப
தைச் சாயங்காலத்தில் நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.[p] **7** யெகோவாவுக்கு
எதிராக நீங்கள் முணுமுணுத்ததை அவர் கேட்டார். அதனால், காலை
யில் யெகோவாவின் மகிமையைப் பார்ப்பீர்கள். ஏன் எங்களுக்கு எதிராக
முணுமுணுக்கிறீர்கள்? நாங்களா முக்கியம்?" என்றார்கள். **8** பின்பு மோசே,

15:25 *நே.மொ., "அங்குதான் கடவுள் அவர்களுக்கு ஒரு விதிமுறையையும் சட்டப்
பூர்வ முன்னோடியையும் வகுத்துக் கொடுத்தார்."

அதி. 15
a யாத் 16:2, 3; யாத் 17:3; 1கொ 10:6, 10
b யாத் 17:4
c யாத் 16:4; உபா 8:2
d உபா 28:1
e உபா 7:12, 15
f யாத் 23:25; சங் 103:3

அதி. 16
g எண் 33:10, 11
h யாத் 15:24; 1கொ 10:6, 10
i எண் 11:4; எண் 14:2, 3
j யாத் 17:3; எண் 16:13
k சங் 78:24, 25; சங் 105:40; யோவா 6:31, 32; யோவா 6:58; 1கொ 10:1, 3
l மத் 6:11
m உபா 8:2
n யாத் 35:2
o யாத் 16:22
p யாத் 6:7; எண் 16:28, 29

“நீங்கள் திருப்தியாய்ச் சாப்பிடுவதற்காகச் சாயங்காலத்தில் இறைச்சியை
யும் காலையில் உணவையும் யெகோவா உங்களுக்குத் தருவார். யெகோவா
வுக்கு விரோதமாக நீங்கள் முணுமுணுத்தது அவர் காதுக்கு எட்டியது என்
பதை அப்போது புரிந்துகொள்வீர்கள். நாங்களெல்லாம் ஒன்றுமே இல்லை.
உண்மையில் நீங்கள் எங்களுக்கு எதிராக முணுமுணுக்கவில்லை, யெகோ
வாவுக்கு எதிராகத்தான் முணுமுணுக்கிறீர்கள்”[a] என்றார்.

9 பின்பு மோசே ஆரோனிடம், “நீங்கள் இஸ்ரவேலர்கள் எல்லாரையும்
பார்த்து, ‘யெகோவாவுக்கு முன்னால் வாருங்கள், நீங்கள் முணுமுணுத்ததை
அவர் கேட்டார்’[b] என்று சொல்ல வேண்டும்” என்றார். **10** ஆரோன்
இதை இஸ்ரவேலர்கள் எல்லாரிடமும் சொன்னவுடன், அவர்கள் வனாந்த
ரம் இருந்த திசையில் திரும்பிப் பார்த்தார்கள். அப்போது, யெகோவாவின்
மகிமை மேகத்தில் தோன்றியது.[c]

11 யெகோவா மோசேயிடம், **12** “இஸ்ரவேலர்கள் முணுமுணுத்ததை
நான் கேட்டேன்.[d] நீ அவர்களிடம், ‘சாயங்காலத்தில் நீங்கள் இறைச்சியைச்
சாப்பிடுவீர்கள், காலையில் உணவைத் திருப்தியாகச் சாப்பிடுவீர்கள்.[e] அப்
போது, உங்கள் கடவுளாகிய யெகோவா நானே என்று தெரிந்துகொள்வீர்
கள்’[f] என்று சொல்” என்றார்.

13 அன்றைக்குச் சாயங்காலம், காடைகள் பறந்து வந்து முகாமை மூடிக்
கொண்டன.[g] காலையில் முகாமைச் சுற்றிலும் பனி பெய்திருந்தது.
14 பனி மறைந்த பின்பு, சிறுசிறு மணிகள் போன்ற ஏதோவொன்று வனாந்
தரமெங்கும் கிடந்தது.[h] அது மென்மையான உறைபனி போலத் தரையெங்
கும் கிடந்தது. **15** இஸ்ரவேலர்கள் அதைப் பார்த்தபோது, “இது என்ன?”
என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள். அது என்னவென்று
அவர்களுக்குத் தெரியவில்லை. மோசே அவர்களிடம், “நீங்கள் சாப்பிடு
வதற்காக யெகோவா தந்திருக்கிற உணவு இது.[i] **16** யெகோவாவின் கட்
டளை இதுதான்: ‘ஒவ்வொருவரும் தாங்கள் சாப்பிடும் அளவுக்கு அதை
எடுத்துக்கொள்ள வேண்டும். தலைக்கு ஒரு ஓமர் அளவு*[j] என்ற கணக்
குப்படி, உங்கள் கூடாரத்தில் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை
பேருக்காக அதை எடுத்துக்கொள்ளலாம்’” என்றார். **17** இஸ்ரவேலர்கள்
அப்படியே செய்தார்கள். சிலர் அதிகமாகவும் சிலர் குறைவாகவும் எடுத்
தார்கள். **18** அதை அவர்கள் ஓமரால் அளந்து பார்த்தபோது, அதிகமாக
எடுத்தவரிடம் அதிகமாகவும் இல்லை, குறைவாக எடுத்தவரிடம் குறைவா
கவும் இல்லை.[k] ஒவ்வொருவரும் தாங்கள் சாப்பிடும் அளவுக்கு அதை
எடுத்திருந்தார்கள்.

19 பின்பு மோசே அவர்களிடம், “அடுத்த நாள் காலையில் சாப்பிடுவ
தற்காக யாரும் அதை மிச்சம் வைக்கக் கூடாது”[l] என்றார். **20** ஆனால்
சிலர் மோசேயின் பேச்சைக் கேட்காமல், காலையில் சாப்பிடுவதற்காக
அதை மிச்சம் வைத்தார்கள். அப்போது அது புழுபுழுத்து, துர்நாற்றம் வீசி
யது. அதனால் மோசேக்கு அவர்கள்மேல் கடும் கோபம் வந்தது. **21** தின
மும் காலையில், ஒவ்வொருவரும் அவரவர் சாப்பிடும் அளவுக்கு அதை
எடுத்தார்கள். வெயில் ஏற ஏற அது உருகிப்போனது.

22 ஆறாம் நாளில் அதை இரண்டு மடங்கு எடுத்தார்கள்,[m] அதாவது

16:16 * அதாவது, “சுமார் இரண்டு லிட்டர்.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 16
a எண் 21:7; 1சா 8:7
b யாத் 16:2; எண் 11:1
c யாத் 13:21; எண் 16:19; மத் 17:5
d எண் 14:27
e சங் 105:40
f யாத் 4:5; யாத் 6:7
g எண் 11:31, 34; சங் 78:27-29
h எண் 11:7; உபா 8:3; நெ 9:15
i எண் 21:5; உபா 8:14, 16; யோசு 5:11, 12; யோவா 6:31, 32; யோவா 6:58; 1கொ 10:1, 3
j யாத் 16:36
k 2கொ 8:15
l மத் 6:11, 34
m யாத் 16:5

தலைக்கு இரண்டு ஓமர் அளவு எடுத்தார்கள். ஜனங்களின் தலைவர்கள்
எல்லாரும் வந்து அதை மோசேயிடம் சொன்னார்கள். **23** அதற்கு அவர்,
“யெகோவா சொல்லியிருப்பது இதுதான். நாளைக்கு முழு ஓய்வுநாள், அது
யெகோவாவுக்கான பரிசுத்த ஓய்வுநாள்.[a] அதனால், நீங்கள் சுட்டு
வைக்க வேண்டியதைச் சுட்டு வைத்துக்கொள்ளுங்கள், வேக வைக்க
வேண்டியதை வேக வைத்துக்கொள்ளுங்கள்.[b] மீதியை அடுத்த நாள்
காலைக்காக எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்” என்றார். **24** மோசே கட்
டளை கொடுத்தபடியே, அடுத்த நாள் காலையில் சாப்பிடுவதற்காக ஜனங்
கள் அதை எடுத்து வைத்தார்கள். அது புழுபுழுக்கவும் இல்லை, துர்நாற்றம்
வீசவும் இல்லை. **25** பின்பு மோசே அவர்களிடம், “நீங்கள் எடுத்து வைத்
ததை இன்றைக்குச் சாப்பிடுங்கள். இன்று அதை வெளியில் எங்கும் பார்க்க
முடியாது. ஏனென்றால், இன்று யெகோவாவுக்கான ஓய்வுநாள். **26** ஆறு
நாளும் அதை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், ஏழாம் நாள்
ஓய்வுநாளாக[c] இருப்பதால் அன்றைக்கு ஒன்றுமே கிடைக்காது” என்றார்.
27 இருந்தாலும், சிலர் ஏழாம் நாளிலும் அதை எடுப்பதற்காக வெளியே
போனார்கள். ஆனால், ஒன்றுமே கிடைக்கவில்லை.

28 அதனால் யெகோவா மோசேயிடம், “இன்னும் எவ்வளவு காலத்துக்
குத்தான் என்னுடைய கட்டளைகளுக்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்படியா
மல் இருப்பீர்கள்?[d] **29** யெகோவாவாகிய நான்தான் உங்களுக்கு ஓய்
வுநாளைத் தந்திருக்கிறேன் என்பதை மறந்துவிடாதீர்கள்.[e] அதனால்தான்,
ஆறாம் நாளில் இரண்டு நாளைக்குத் தேவையான உணவைத் தருகி
றேன். ஏழாம் நாளில், எல்லாரும் அவரவர் இடத்திலேயே இருக்க வேண்
டும். யாரும் வெளியே போகக் கூடாது” என்றார். **30** அதனால், ஜனங்கள்
ஏழாம் நாளில் ஓய்வுநாளை அனுசரித்தார்கள்.[f]

31 இஸ்ரவேல் ஜனங்கள் அந்த உணவுக்கு “மன்னா”* என்று பெயர்
வைத்தார்கள். அது வெள்ளையாகவும் கொத்துமல்லி விதையைப் போல
வும் இருந்தது. அதன் ருசி தேன் கலந்த அப்பத்தைப் போல இருந்தது.[g]
32 பின்பு மோசே, “யெகோவா கட்டளையிடுவது இதுதான்: ‘இதில் ஒரு
ஓமர் அளவு எடுத்து, தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து வையுங்
கள்.[h] ஏனென்றால், உங்களை எகிப்து தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டு
வந்தபோது வனாந்தரத்தில் நான் தந்த உணவை வருங்காலத் தலைமுறை
கள் பார்க்க வேண்டும்’” என்றார். **33** அப்போது மோசே ஆரோனி
டம், “நீங்கள் ஒரு ஜாடியை எடுத்து, அதில் ஒரு ஓமர் அளவு மன்னாவைப்
போட்டு, தலைமுறை தலைமுறையாகப் பாதுகாப்பதற்காக யெகோவாவின்
முன்னிலையில் வைக்க வேண்டும்” என்றார்.[i] **34** மோசேக்கு யெகோவா
கட்டளை கொடுத்தபடியே, அதைப் பாதுகாப்பதற்காக ஒரு விசேஷப்
பெட்டிக்கு*[j] முன்னால் ஆரோன் அதை வைத்தார். **35** 40 வருஷங்க
ளாக இஸ்ரவேலர்கள் மன்னாவைச் சாப்பிட்டார்கள்.[k] கானான் தேசத்தின்[l]
எல்லைக்கு வந்து சேரும்வரை[m] அவர்கள் மன்னாவைச் சாப்பிட்டார்கள்.
36 ஒரு ஓமர் என்பது ஒரு எப்பா* அளவில் பத்திலொரு பாகம்.

16:31 *“இது என்ன?” என்பதற்கான எபிரெய வார்த்தைகளிலிருந்து இந்தப் பெயர் அநேகமாக வந்திருக்கலாம். **16:34** *நே.மொ., “ஒரு சாட்சிக்கு.” இது ஒருவேளை முக்கிய ஆவணங்களைப் பாதுகாப்பதற்கான பெட்டியாக இருந்திருக்கலாம். **16:36** *ஒரு எப்பா என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 16
a யாத் 20:8; யாத் 31:15; யாத் 35:2; லேவி 23:3
b எண் 11:7, 8
c யாத் 20:9, 10; யாத் 31:13; உபா 5:15
d எண் 14:11; சங் 78:10; சங் 106:13
e யாத் 31:13
f லேவி 23:3; உபா 5:13, 14
g யாத் 16:15; எண் 11:7
h சங் 105:5, 40
i எபி 9:4
j யாத் 27:21
k உபா 8:2; நெ 9:21; சங் 78:24
l எண் 33:48; உபா 34:1
m யோசு 5:11, 12

17 இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் சின் வனாந்தரத்திலிருந்து புறப்
பட்டுப் போனார்கள்.[a] யெகோவா கட்டளை கொடுத்தபடியே, ஒவ்
வொரு இடமாகப் பயணம் செய்தார்கள்.[b] பின்பு, அவர்கள் ரெவிதீமுக்கு
வந்து முகாம்போட்டார்கள்.[c] ஆனால், அங்கே அவர்களுக்குக் குடிக்கத்
தண்ணீர் கிடைக்கவில்லை.

2 அதனால் ஜனங்கள், “எங்களுக்குத் தண்ணீர் வேண்டும்” என்று
சொல்லி மோசேயோடு தகராறு செய்தார்கள்.[d] அப்போது மோசே, “நீங்கள்
ஏன் என்னோடு தகராறு செய்கிறீர்கள்? ஏன் மறுபடியும் மறுபடியும் யெகோ
வாவைச் சோதித்துப் பார்க்கிறீர்கள்?”[e] என்று கேட்டார். **3** ஆனால், அந்த
ஜனங்கள் தண்ணீருக்காக ரொம்பவும் தவித்தார்கள். அதனால், அவர்கள்
மோசேக்கு எதிராக முணுமுணுத்துக்கொண்டே இருந்தார்கள்.[f] “எங்களை
எதற்காக எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தீர்கள்? நாங்களும் எங்கள்
பிள்ளைகுட்டிகளும் ஆடுமாடுகளும் தாகத்தால் செத்துப்போவதற்கா?”
என்று கேட்டார்கள். **4** கடைசியில் மோசே யெகோவாவிடம், “இந்த
ஜனங்களை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன்? கொஞ்ச நேரத்
தில் என்னைக் கல்லெறிந்து கொன்றுவிடுவார்கள் போலிருக்கிறதே!” என்று
அலறினார்.

5 அப்போது யெகோவா மோசேயிடம், “இஸ்ரவேலின் பெரியோர்கள்*
சிலரைக் கூட்டிக்கொண்டு ஜனங்களுக்கு முன்னால் நடந்து போ. நீ நைல்
நதியை அடிக்கப் பயன்படுத்திய கோலையும்[g] எடுத்துக்கொண்டு போ.
6 இதோ! நான் ஓரேபிலுள்ள கற்பாறையின் மேல் உன் முன்னால் நிற்பேன்.
நீ அந்தக் கற்பாறையை அடிக்க வேண்டும். அதிலிருந்து தண்ணீர் பாய்ந்து
வரும், ஜனங்கள் அதைக் குடிப்பார்கள்”[h] என்றார். இஸ்ரவேலின் பெரி
யோர்களுக்கு முன்பாக மோசே அப்படியே செய்தார். **7** அங்கே இஸ்ர
வேலர்கள் அவரோடு தகராறு செய்ததாலும், “யெகோவா நம்மோடு இருக்
கிறாரா இல்லையா?” என்று சொல்லி யெகோவாவைச் சோதித்துப் பார்த்
ததாலும்,[i] அவர் அந்த இடத்துக்கு மாசா*[j] என்றும், மேரிபா#[k] என்றும்
பெயர் வைத்தார்.

8 பின்பு, அமலேக்கியர்கள்[l] ரெவிதீமிலிருந்த[m] இஸ்ரவேலர்களுடன்
போர் செய்ய வந்தார்கள். **9** அப்போது மோசே யோசுவாவிடம்,[n] “நம்
முடைய ஆட்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களோடு போய்
அமலேக்கியர்களுடன் போர் செய். நாளைக்கு நான் உண்மைக் கடவு
ளின் கோலைக் கையில் பிடித்துக்கொண்டு குன்றின் உச்சியில் நிற்பேன்”
என்றார். **10** மோசே சொன்னபடியே[o] அமலேக்கியர்களுக்கு எதிராக
யோசுவா போர் செய்தார். மோசேயும் ஆரோனும் ஹூரும்[p] குன்றின் உச்
சிக்குப் போனார்கள்.

11 மோசே தன்னுடைய கைகளை உயர்த்தி வைத்திருந்த வரைக்கும்
போரில் இஸ்ரவேலர்கள் ஜெயித்துக்கொண்டே இருந்தார்கள். ஆனால்,
அவர் தன்னுடைய கைகளைக் கீழே தொங்கவிட்டவுடன் அமலேக்கியர்
கள் ஜெயிக்க ஆரம்பித்தார்கள். **12** மோசேக்குக் கைகள் வலித்தபோது
அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து வைத்தார்கள், அவர் அதன்
மேல் உட்கார்ந்தார். பின்பு, ஆரோனும் ஹூரும் மோசேயின் கைகளை

17:5 *வே.வா., “மூப்பர்கள்.” **17:7** *அர்த்தம், “சோதித்துப் பார்த்தல்.” #அர்த்தம், “தகராறு செய்தல்.”

அதி. 17
a எண் 33:12
b எண் 33:2
c எண் 33:14
d யாத் 5:19, 21; எண் 14:2, 3; எண் 20:3
e எண் 14:22; சங் 78:18, 22; சங் 106:14
f யாத் 16:2, 3
g யாத் 7:20
h எண் 20:8; உபா 8:14, 15; நெ 9:15; சங் 78:15; சங் 105:41; 1கொ 10:1, 4
i உபா 6:16; சங் 95:8, 9; எபி 3:8, 9
j உபா 9:22
k சங் 81:7
l ஆதி 36:12
m உபா 25:17; 1சா 15:2
n எண் 11:28
o யோசு 11:15
p யாத் 24:13, 14

ஆளுக்கு ஒரு பக்கமாகத் தாங்கிப் பிடித்துக்கொண்டார்கள். அதனால், சூரியன் மறையும்வரை அவருடைய கைகள் அதே நிலையில் இருந்தன. **13** இப்படி, அமலேக்கியர்களையும் அவர்களோடு சேர்ந்தவர்களையும் யோசுவா வாளால் வீழ்த்தினார்.[a]

14 அப்போது யெகோவா மோசேயிடம், “நான் சொல்லும் இந்த வார்த்தைகளை யாரும் மறக்காமல் இருப்பதற்காக* ஒரு புத்தகத்தில் எழுதி வைத்து, யோசுவாவுக்கு வாசித்துக் காட்டு: ‘அமலேக்கியர்கள் பற்றிய நினைவையே இந்த உலகத்திலிருந்து நான் அடியோடு அழித்துவிடுவேன்’”[b] என்றார். **15** பின்பு மோசே ஒரு பலிபீடம் கட்டினார். அதற்கு யெகோவா-நிசி* என்று பெயர் வைத்து, **16** “அமலேக்கியர்கள் ‘யா’வின்*[c] சிம்மாசனத்தை எதிர்ப்பதால், யெகோவா அவர்களோடு தலைமுறை தலைமுறையாகப் போர் செய்வார்”[d] என்று சொன்னார்.

18 யெகோவா மோசேக்கும் தன்னுடைய ஜனங்களான இஸ்ரவேலர்களுக்கும் எப்படியெல்லாம் உதவினார் என்றும், அவர்களை எகிப்திலிருந்து எப்படிக் கூட்டிக்கொண்டு வந்தார் என்றும் எத்திரோ கேள்விப்பட்டார்.[e] இவர் மீதியான் தேசத்தைச் சேர்ந்த குரு, மோசேயின் மாமனார்.[f] **2** இவரிடம்தான் மோசே முன்பு தன்னுடைய மனைவி சிப்போராளையும் இரண்டு மகன்களையும்[g] அனுப்பி வைத்திருந்தார். எத்திரோ அவர்களைக் கவனித்துக்கொண்டார். **3** மோசேயின் ஒரு மகனுடைய பெயர் கெர்சோம்.*[h] “நான் வேறு தேசத்தில் அன்னியனாகக் குடியிருக்கிறேன்” என்று சொல்லி மோசே அவனுக்கு அந்தப் பெயரை வைத்திருந்தார். **4** அவருடைய இன்னொரு மகனின் பெயர் எலியேசர்.* “பார்வோனின் வாளிலிருந்து[i] என்னைக் காப்பாற்றிய என்னுடைய முன்னோர்களின் கடவுள்தான் எனக்குத் துணை” என்று சொல்லி மோசே அவனுக்கு அந்தப் பெயரை வைத்திருந்தார்.

5 வனாந்தரத்தில் உண்மைக் கடவுளின் மலைக்குப் பக்கத்தில்[j] மோசே முகாம்போட்டிருந்தபோது, அவருடைய மனைவியையும் மகன்களையும் மோசேயின் மாமனார் எத்திரோ கூட்டிக்கொண்டு வந்தார். **6** அவர் மோசேயிடம் ஆள் அனுப்பி, “உன் மாமனார் எத்திரோ[k] வந்துகொண்டிருக்கிறேன், உன் மனைவியையும் இரண்டு மகன்களையும் கூட்டிக்கொண்டு வருகிறேன்” என்று சொல்லச் சொன்னார். **7** உடனே மோசே தன்னுடைய மாமனாரைப் பார்க்கப் போனார். அவருக்கு முன்னால் தலைவணங்கி, அவருக்கு முத்தம் கொடுத்தார். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துவிட்டு, கூடாரத்துக்குள் போனார்கள்.

8 யெகோவா இஸ்ரவேல் ஜனங்களுக்காக பார்வோனையும் எகிப்தையும் எப்படியெல்லாம் தண்டித்தார்[l] என்றும், வழியில் இஸ்ரவேலர்கள் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டார்கள்[m] என்றும், யெகோவா அவர்களை எப்படியெல்லாம் காப்பாற்றினார் என்றும் மோசே தன்னுடைய மாமனாருக்கு விவரமாகச் சொன்னார். **9** யெகோவா இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுதலை செய்து பல விதங்களில் ஆசீர்வதித்ததைப் பற்றி எத்திரோ

17:14 *வே.வா., “எல்லாரும் நினைவில் வைப்பதற்காக.” **17:15** *அர்த்தம், “யெகோவா என் கொடிக் கம்பம்.” **17:16** *“யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **18:3** *அர்த்தம், “அங்கே ஓர் அன்னியன்.” **18:4** *அர்த்தம், “என் கடவுள்தான் எனக்குத் துணை.”

அதி. 17
a யோசு 11:12
b எண் 24:20; உபா 25:19; 1நா 4:42, 43
c வெளி 19:1
d 1சா 15:20; எஸ்தர் 9:24

அதி. 18
e யோசு 2:9, 10; யோசு 9:3, 9
f யாத் 2:16, 21; யாத் 3:1
g அப் 7:29
h யாத் 2:22
i யாத் 2:15
j யாத் 19:2; 1ரா 19:8, 9
k யாத் 4:18; எண் 10:29
l யாத் 7:3; யாத் 14:27, 28; உபா 4:34
m யாத் 15:22; யாத் 16:3

கேட்டபோது மிகவும் சந்தோஷப்பட்டார். **10** பின்பு எத்திரோ, “உங்
களை எகிப்தின் பிடியிலிருந்தும் பார்வோனின் பிடியிலிருந்தும் விடுதலை
செய்த யெகோவா புகழப்படட்டும்! **11** அவருடைய ஜனங்களை ஆண
வத்தோடு அடக்கி ஒடுக்கியவர்களை அவர் அழித்துவிட்டார்! யெகோவா
தான் மற்ற எல்லா தெய்வங்களையும்விட உயர்ந்தவர்[a] என்பதை இப்போது
தெரிந்துகொண்டேன்” என்றார். **12** மோசேயின் மாமனார் எத்திரோ, கடவு
ளுக்குத் தகன பலியையும் மற்ற பலிகளையும் கொண்டுவந்தார். ஆரோனும்
இஸ்ரவேலின் பெரியோர்கள்* எல்லாரும் உண்மைக் கடவுளின் முன்னிலை
யில் எத்திரோவுடன் சேர்ந்து சாப்பிட அங்கே வந்தார்கள்.

13 அடுத்த நாள், மோசே வழக்கம்போல் ஜனங்களுக்குத் தீர்ப்பு சொல்
வதற்காக உட்கார்ந்தார். காலையிலிருந்து சாயங்காலம்வரை ஜனங்கள்
அவர் முன்னால் வந்து நின்றார்கள். **14** ஜனங்களுக்காக மோசே செய்த
எல்லாவற்றையும் அவருடைய மாமனார் பார்த்தார். அதனால் அவர்
மோசேயிடம், “ஜனங்கள் காலையிலிருந்து சாயங்காலம்வரை உன் முன்
னால் வந்து நிற்கிறார்களே. அவர்களுக்காக நீ ஏன் தனியாளாய் எல்லாவற்
றையும் செய்கிறாய்?” என்றார். **15** அதற்கு மோசே, “கடவுளிடம் விசா
ரிக்கச் சொல்லித்தான் ஜனங்கள் என்னிடம் வந்துகொண்டே இருக்கிறார்
கள். **16** ஏதாவது வழக்கு இருந்தால், அதை என்னிடம் கொண்டுவருவார்
கள். நான் விசாரணை செய்து, உண்மைக் கடவுளுடைய தீர்மானங்களையும்
சட்டங்களையும் அவர்களுக்குச் சொல்வேன்”[b] என்றார்.

17 அப்போது அவருடைய மாமனார், “நீ இப்படிச் செய்வது சரியல்ல.
18 இது ரொம்பவும் பெரிய பொறுப்பு. நீ ஒருவனே இதைச் செய்ய முடி
யாது. அப்படிச் செய்தால் நீயும் களைத்துப்போவாய், இந்த ஜனங்க
ளும் களைத்துப்போவார்கள். **19** அதனால், உனக்கு ஒரு ஆலோசனை
சொல்கிறேன். தயவுசெய்து அதைக் கேள். கடவுள் உன்னோடு இருப்
பார்.[c] நீ ஜனங்களுடைய சார்பாக உண்மைக் கடவுளிடம் பேசு,[d] அவர்க
ளுடைய வழக்குகளை அவரிடம் சொல்.[e] **20** கடவுளுடைய விதிமுறைக
ளையும் சட்டங்களையும் அவர்களுக்குப் புரியவை.[f] அவர்கள் எப்படி
நடக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்லிக்
கொடு. **21** அதேசமயத்தில், திறமையான ஆண்களை ஜனங்களிலிருந்து
தேர்ந்தெடு.[g] அவர்கள் கடவுளுக்குப் பயந்து நடக்கிறவர்களாகவும், ஆதா
யத்துக்கு ஆசைப்படாத நம்பகமான ஆட்களாகவும் இருக்க வேண்டும்.[h]
அவர்களை 1,000 பேருக்குத் தலைவர்களாகவும், 100 பேருக்குத் தலை
வர்களாகவும், 50 பேருக்குத் தலைவர்களாகவும், 10 பேருக்குத் தலைவர்
களாகவும் நியமனம் செய்.[i] **22** அவர்கள் ஜனங்களுடைய வழக்குகளை
விசாரித்து அவர்களுக்குத் தீர்ப்பு சொல்ல வேண்டும். சிக்கலான வழக்குக
ளுக்கு மட்டும் நீயே தீர்ப்பு சொல்.[j] சின்னச் சின்ன வழக்குகளுக்கு
அவர்கள் தீர்ப்பு சொல்லட்டும். இப்படி, உன்னுடைய சுமையை அவர்களு
டன் பகிர்ந்துகொள், உன்னுடைய பாரம் குறையும்.[k] **23** நீ இப்படிச் செய்
தால், அதோடு கடவுளும் இப்படிச் செய்யச் சொல்லி உனக்குக் கட்
டளை கொடுத்தால், இந்தச் சுமையை உன்னால் சுமக்க முடியும். ஜனங்க
ளும் திருப்தியோடு திரும்பிப் போவார்கள்” என்றார்.

24 மோசே தன்னுடைய மாமனார் சொன்ன எல்லாவற்றையும் உடனடி

18:12 * வே.வா., “மூப்பர்கள்.”

அதி. 18

a யாத் 15:11; சங் 95:3; சங் 97:9

b உபா 4:5; உபா 5:1

c யோசு 1:5, 17

d யாத் 20:19

e எண் 27:1-5

f உபா 7:11

g எண் 11:16, 17; உபா 1:13; அப் 6:3

h யாத் 23:8; 1தீ 3:2, 3; தீத் 1:7; 1பே 5:2

i உபா 1:15; அப் 14:23

j லேவி 24:10, 11; எண் 15:32, 33; உபா 1:17

k எண் 11:17

யாகச் செய்தார். **25** இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து திறமையான ஆண்க
ளைத் தேர்ந்தெடுத்து 1,000 பேருக்குத் தலைவர்களாகவும், 100 பேருக்குத்
தலைவர்களாகவும், 50 பேருக்குத் தலைவர்களாகவும், 10 பேருக்குத் தலை
வர்களாகவும் நியமித்தார். **26** அவர்கள் ஜனங்களுடைய வழக்குகளை
விசாரித்து அவர்களுக்குத் தீர்ப்பு சொன்னார்கள். சிக்கலான வழக்குகளை
மோசேயிடம் கொண்டுவந்தார்கள்,[a] சின்னச் சின்ன வழக்குகளுக்கு அவர்
களே தீர்ப்பு சொன்னார்கள். **27** அதன்பின், மோசே தன்னுடைய மாம
னாரை வழியனுப்பி வைத்தார்,[b] அவரும் தன்னுடைய தேசத்துக்குத் திரும்
பிப் போனார்.

19 இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட பின்பு மூன்றாம் மாதத்
தில் சீனாய் வனாந்தரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். **2** அவர்கள்
ரெவிதீமிலிருந்து புறப்பட்ட[c] அதே நாளில் சீனாய் வனாந்தரத்துக்கு வந்து,
அங்கிருந்த மலையின்[d] எதிரில் முகாம்போட்டார்கள்.

3 பின்பு, உண்மைக் கடவுள்முன் நிற்பதற்காக மோசே அந்த மலை
மேல்[e] ஏறிப்போனார். மலையிலிருந்து யெகோவா அவரைக் கூப்பிட்டு,
“நீ யாக்கோபின் வம்சத்தாராகிய இஸ்ரவேலர்களிடம் போய் என் செய்தி
யைச் சொல். அவர்களிடம், **4** ‘கழுகு தன்னுடைய குஞ்சுகளைச் சிறகுக
ளில் சுமந்துகொண்டு வருவது போல நான் உங்களை என்னிடம் சுமந்து
கொண்டு வருவதற்காக[f] எகிப்தியர்களைத் தண்டித்தேன்; அதை உங்
கள் கண்ணாலேயே பார்த்தீர்கள்.[g] **5** நீங்கள் என் சொல்லுக்கு அப்படியே
கீழ்ப்படிந்து என் ஒப்பந்தத்தை மீறாமல் இருந்தால், மற்ற எல்லா ஜனங்களி
லும் நீங்கள் எனக்கு விசேஷ சொத்தாக[h] இருப்பீர்கள். ஏனென்றால், இந்த
முழு பூமியும் எனக்குத்தான் சொந்தம்.[i] **6** நீங்கள் ராஜாக்களாக ஆட்சி
செய்கிற குருமார்களாகவும் என்னுடைய பரிசுத்த ஜனமாகவும் இருப்பீர்
கள்’[j] என்று சொல். இந்த எல்லா வார்த்தைகளையும் இஸ்ரவேலர்களிடம்
சொல்” என்றார்.

7 அதனால், மோசே போய் இஸ்ரவேலின் பெரியோர்களை* கூப்பிட்டு,
யெகோவா கட்டளை கொடுத்த எல்லாவற்றையும் அவர்களிடம் சொன்
னார்.[k] **8** அப்போது ஜனங்கள் எல்லாரும், “யெகோவா சொன்ன எல்லா
வற்றையும் நாங்கள் செய்வோம்”[l] என்று ஒருமனதாகச் சொன்னார்கள்.
உடனடியாக மோசே அதை யெகோவாவிடம் சொன்னார். **9** அப்போது
யெகோவா மோசேயிடம், “நான் உன்னிடம் பேசுவதை ஜனங்கள் கேட்டு,
உன்மேல் எப்போதும் நம்பிக்கை வைப்பதற்காக நான் உன்னிடம் கார்
மேகத்தில் வருவேன்” என்றார். ஜனங்கள் சொன்னதை மோசே யெகோவா
விடம் சொன்னார்.

10 பின்பு யெகோவா மோசேயிடம், “நீ ஜனங்களிடம் போய் இன்
றைக்கும் நாளைக்கும் அவர்களைப் புனிதப்படுத்து. அவர்கள் தங்களு
டைய துணிமணிகளைத் துவைக்க வேண்டும். **11** மூன்றாம் நாளுக்காக
அவர்கள் தயாராக வேண்டும். ஏனென்றால், மூன்றாம் நாளில் யெகோவா
வாகிய நான் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக சீனாய் மலைமேல் இறங்
குவேன். **12** ஜனங்கள் தாண்டி வராதபடி மலையைச் சுற்றிலும் எல்லை
யைக் குறித்துவை. அதன்பின் நீ அவர்களிடம், ‘யாரும் இந்த மலைமேல்
ஏறாதபடி ஜாக்கிரதையாக இருங்கள். நீங்கள் அதன்மேல் கால் வைக்கவும்

19:7 * வே.வா., “மூப்பர்களை.”

அதி. 18
a அப் 15:2
b எண் 10:29

அதி. 19
c யாத் 17:1
d யாத் 3:1, 12
e அப் 7:38
f உபா 32:11, 12; ஏசா 63:9
g உபா 4:34
h 1ரா 8:53; சங் 135:4
i உபா 10:14
j லேவி 11:44; உபா 7:6; 1பே 2:9; வெளி 5:9, 10
k யாத் 24:3
l யாத் 24:7; யோசு 24:24

கூடாது. அப்படி யாராவது கால் வைத்தால் அவன் கண்டிப்பாகக் கொல்
லப்படுவான். **13** அவனை யாரும் தொடக் கூடாது, கல்லையோ ஆயுதத்
தையோ* எறிந்துதான் கொல்ல வேண்டும். மலையைத் தொடுவது மனித
னாக இருந்தாலும் சரி, மிருகமாக இருந்தாலும் சரி, கொல்லப்பட வேண்
டும்'[a] என்று சொல். ஆனால், ஊதுகொம்பின்# சத்தம் கேட்கும்போது[b] எல்
லாரும் மலைக்குப் பக்கத்தில் வரலாம்" என்றார்.

14 பின்பு, மோசே மலையிலிருந்து இறங்கி ஜனங்களிடம் போய் அவர்
களைப் புனிதப்படுத்தினார். அவர்கள் தங்களுடைய துணிமணிகளைத்
துவைத்தார்கள்.[c] **15** அவர் அவர்களிடம், "மூன்றாம் நாளுக்காகத் தயாரா
குங்கள். உங்கள் மனைவியோடு உடலுறவு கொள்ளாதீர்கள்" என்றார்.

16 மூன்றாம் நாள் காலையில் இடி இடித்தது, மின்னல் வெட்டியது.
மலைமேல் கார்மேகம் சூழ்ந்தது,[d] ஊதுகொம்பின் சத்தம் பலமாக முழங்
கியது. முகாமில் இருந்த எல்லாரும் நடுநடுங்கினார்கள்.[e] **17** அப்போது,
உண்மைக் கடவுளைச் சந்திப்பதற்காக முகாமிலிருந்த ஜனங்களை மோசே
கூட்டிக்கொண்டு வந்தார். அவர்கள் மலை அடிவாரத்தில் நின்றார்கள்.
18 அப்போது, யெகோவா சீனாய் மலைமேல் தீ ஜுவாலையுடன் இறங்கி
னார்.[f] அதனால் அது புகைமண்டலமாக ஆனது. சூளையிலிருந்து புகை
எழும்புவது போல மலையிலிருந்து புகை எழும்பியது. அந்த மலையே
பயங்கரமாக அதிர்ந்தது.[g] **19** ஊதுகொம்பின் சத்தம் பலமாகிக்கொண்டே
போனது. அப்போது மோசே பேசினார், உண்மைக் கடவுள் அவருக்குப்
பதில் சொன்னார்.*

20 யெகோவா சீனாய் மலையின் உச்சியில் இறங்கினார். பின்பு,
யெகோவா மோசேயை மலை உச்சிக்குக் கூப்பிட்டார், அதனால் மோசே
அங்கே போனார்.[h] **21** அப்போது யெகோவா மோசேயிடம், "ஜனங்கள்
யெகோவாவாகிய என்னைப் பார்ப்பதற்காக எல்லையைக் கடந்து வரக்
கூடாதென்று நீ கீழே போய் அவர்களுக்கு எச்சரிக்கை கொடு. இல்லா
விட்டால், அவர்களில் நிறைய பேர் அழிந்துபோவார்கள். **22** யெகோவா
வாகிய என் பக்கத்தில் வழக்கமாக வருகிற குருமார்கள் தங்களைப்
புனிதப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான், யெகோவாவாகிய
நான் அவர்களைத் தண்டிக்க மாட்டேன்"[i] என்றார். **23** அதற்கு மோசே
யெகோவாவிடம், "சீனாய் மலையைச் சுற்றிலும் எல்லையைக் குறித்து
அதைப் புனிதமாக்கும்படி[j] நீங்கள் ஏற்கெனவே எங்களை எச்சரித்ததால்
ஜனங்கள் யாரும் அதன் பக்கத்தில் வர மாட்டார்கள்" என்றார்.
24 இருந்தாலும் யெகோவா அவரிடம், "நீ கீழே போய் ஆரோனைக்
கூட்டிக்கொண்டு வா. ஆனால், குருமார்களையும் ஜனங்களையும் என்னி
டம் வர விடாதே. மீறி வந்தால் யெகோவாவாகிய நான் அவர்களைத் தண்
டிப்பேன்"[k] என்றார். **25** அதனால், மோசே இறங்கிப்போய் ஜனங்களிடம்
இதைச் சொன்னார்.

20
பின்பு கடவுள்,[l]
2 "எகிப்து தேசத்தில் அடிமைகளாக அடைபட்டிருந்த உங்களை
விடுதலை செய்து கூட்டிக்கொண்டு வந்த உங்கள் கடவுளாகிய யெகோவா

19:13 * ஒருவேளை, "அம்பையோ." # அதாவது, "செம்மறியாட்டுக் கடாவின் கொம்பினால் செய்யப்பட்ட ஊதுகொம்பின்." **19:19** * நே.மொ., "உண்மைக் கடவுளின் குரல் அவருக்குப் பதில் தந்தது."

அதி. 19
a எபி 12:20
b யாத் 20:18
c யாத் 19:10
d உபா 4:11; 1ரா 8:12; சங் 97:2
e எபி 12:18–21
f யாத் 24:17; உபா 4:11, 12; 2நா 7:1–3
g சங் 68:8
h யாத் 24:12
i லேவி 10:1, 2; 1நா 13:10
j யாத் 19:12
k எண் 16:19, 35

அதி. 20
l உபா 5:22; அப் 7:38

நான்தான்.[a] **3** என்னைத் தவிர வேறு தெய்வங்களை நீங்கள் வணங்கக்
கூடாது.[b]

4 மேலே வானத்திலோ கீழே பூமியிலோ பூமியின் கீழ் தண்ணீரிலோ
இருக்கிற எதனுடைய வடிவத்திலும் நீங்கள் உருவங்களையும் சிலைகளை
யும் உங்களுக்காக உண்டாக்கக் கூடாது.[c] **5** அவற்றுக்கு முன்னால் தலை
வணங்கவோ அவற்றைக் கும்பிடவோ கூடாது.[d] நான் உங்கள் கடவுளா
கிய யெகோவா. நீங்கள் என்னை மட்டும்தான் வணங்க வேண்டும் என்று
எதிர்பார்க்கிறேன்.[e] தகப்பன்கள் என்னை வெறுத்து எனக்கு எதிராகப்
பாவம் செய்தால் அவர்களுடைய பிள்ளைகளை மூன்றாம் நான்காம் தலை
முறைவரை தண்டிப்பேன். **6** ஆனால், என்னை நேசித்து என் கட்டளை
களைக் கடைப்பிடிப்பவர்களுக்கு[f] ஆயிரம் தலைமுறைவரை மாறாத அன்
பைக் காட்டுவேன்.

7 உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பெயரை வீணாகப் பயன்படுத்
தாதீர்கள்.[g] யெகோவாவின் பெயரை வீணாகப் பயன்படுத்துகிறவர்களை
அவர் தண்டிக்காமல் விட மாட்டார்.[h]

8 ஓய்வுநாளைப் புனித நாளாக[i] அனுசரிக்க மறந்துவிடாதீர்கள். **9** உங்
களுடைய எல்லா வேலைகளையும் ஆறு நாட்களுக்குச் செய்யுங்கள்.[j]
10 ஆனால், ஏழாம் நாள் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கான ஓய்வு
நாள். அன்றைக்கு நீங்களோ, உங்கள் மகனோ மகளோ, உங்களிடம்
அடிமையாக இருக்கிற ஆணோ பெண்ணோ, உங்கள் ஊர்களில் குடியிருக்
கிற வேறு தேசத்துக்காரனோ, உங்கள் மிருகமோ எந்த வேலையும் செய்யக்
கூடாது.[k] **11** ஏனென்றால், யெகோவா வானத்தையும் பூமியையும் கடலை
யும் அவற்றிலுள்ள எல்லாவற்றையும் ஆறு நாட்களில் உண்டாக்கி, ஏழாம்
நாளில் ஓய்வெடுக்கத் தொடங்கினார்.[l] அதனால்தான், யெகோவா ஓய்வு
நாளை ஆசீர்வதித்து அதைப் புனிதமாக்கினார்.

12 உங்கள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மதிப்புக் கொடுங்கள்.[m] அப்
போதுதான், உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்தில் நீங்கள்
நீண்ட காலம் வாழ்வீர்கள்.[n]

13 நீங்கள் கொலை செய்யக் கூடாது.[o]

14 உங்களுடைய மணத்துணைக்குத் துரோகம் செய்யக் கூடாது.[p]

15 நீங்கள் திருடக் கூடாது.[q]

16 நீங்கள் அடுத்தவனுக்கு விரோதமாகப் பொய் சாட்சி சொல்லக்
கூடாது.[r]

17 நீங்கள் அடுத்தவனுடைய வீட்டின் மேல் ஆசைப்படக் கூடாது.
அவனுடைய மனைவியையும், அடிமையையும்,* காளையையும், கழுதை
யையும், அவனுக்குச் சொந்தமான வேறு எதையும் அடையத் துடிக்கக்
கூடாது"[s] என்றார்.

18 அப்போது, ஜனங்கள் எல்லாரும் இடிமுழக்கத்தைக் கேட்டார்கள்,
மின்னல் வெட்டுவதைப் பார்த்தார்கள், ஊதுகொம்பின் சத்தத்தைக் கேட்
டார்கள், மலையிலிருந்து புகை எழும்புவதைப் பார்த்தார்கள். அதனால்
நடுநடுங்கிப் போய், தூரத்தில் நின்றுகொண்டார்கள்.[t] **19** பின்பு மோசேயி
டம், "நீங்கள் எங்களிடம் பேசுங்கள், நாங்கள் கேட்கிறோம். ஆனால்

20:17 * அதாவது, "ஆண் அடிமையையும், பெண் அடிமையையும்."

அதி. 20
a உபா 5:6; ஓசி 13:4
b உபா 5:7-10
c லேவி 26:1; உபா 4:15, 16; ஏசா 40:25; அப் 17:29
d யாத் 23:24; 1கொ 10:20; 1யோ 5:21
e யாத் 34:14; மத் 4:10; லூ 10:27
f பிர 12:13
g லேவி 19:12
h லேவி 24:15, 16; உபா 5:11
i யாத் 16:23; யாத் 31:13, 14; உபா 5:12-14
j யாத் 23:12
k யாத் 16:29; யாத் 34:21
l ஆதி 2:2
m யாத் 21:15; லேவி 19:3; நீதி 1:8
n உபா 5:16; மத் 15:4; எபே 6:2, 3
o ஆதி 9:6; உபா 5:17; யாக் 2:11; 1யோ 3:15; வெளி 21:8
p ஆதி 39:7-9; உபா 5:18; நீதி 6:32; மத் 5:27, 28; ரோ 13:9; 1கொ 6:18; எபி 13:4
q லேவி 19:11; உபா 5:19; மாற் 10:19; 1கொ 6:9, 10; எபே 4:28
r லேவி 19:16; உபா 5:20; உபா 19:16-19
s உபா 5:21; மத் 5:28; ரோ 7:7
t யாத் 19:16; எபி 12:18, 19

கடவுள் எங்களிடம் பேச வேண்டாம், அவர் பேசினால் செத்துவிடு
வோமோ என்று பயமாக இருக்கிறது"[a] என்றார்கள். **20** அதனால் மோசே
ஜனங்களிடம், "பயப்படாதீர்கள், உங்களைச் சோதித்துப் பார்க்கத்தான் உண்
மைக் கடவுள் வந்திருக்கிறார்.[b] நீங்கள் எப்போதும் அவருக்குப் பயந்து
நடந்து, பாவம் செய்யாமல் இருக்க வேண்டும் என்றுதான் அவர் விரும்பு
கிறார்"[c] என்றார். **21** அப்போது, ஜனங்கள் தூரத்திலேயே நின்றுகொண்டி
ருந்தார்கள். ஆனால் மோசே, உண்மைக் கடவுள் இருந்த கார்மேகத்துக்குப்
பக்கத்தில் போனார்.[d]

22 அப்போது யெகோவா மோசேயிடம், "நீ இஸ்ரவேலர்களிடம் இப்ப
டிச் சொல்: 'நான் பரலோகத்திலிருந்து உங்களிடம் பேசியதை உங்கள் கண்
களாலேயே பார்த்தீர்கள்.[e] **23** என்னைத் தவிர உங்களுக்கு வேறே தெய்
வம் இருக்கக் கூடாது. அதனால், வெள்ளியிலோ தங்கத்திலோ உங்களுக்
காகத் தெய்வங்களை உண்டாக்காதீர்கள்.[f] **24** எனக்காக மண்ணினால்
ஒரு பலிபீடத்தைச் செய்யுங்கள். அதன்மேல் உங்கள் ஆடுமாடுகளைத்
தகன பலிகளாகவும் சமாதான* பலிகளாகவும் செலுத்துங்கள். நான் தேர்ந்
தெடுக்கிற எல்லா இடங்களிலும் இப்படிச் செய்யுங்கள். அப்போது, என்
னுடைய பெயரை எல்லாரும் அங்கே நினைத்துப் பார்ப்பார்கள்.[g] நானும்
அங்கே வந்து உங்களை ஆசீர்வதிப்பேன். **25** நீங்கள் கற்களால் எனக்
குப் பலிபீடம் கட்டும்போது, உளிகளால் செதுக்கிய கற்களை வைத்துக்
கட்டக் கூடாது.[h] கற்களின் மேல் உளி பட்டால் அவை தீட்டுப்பட்டுவிடும்.
26 என்னுடைய பலிபீடத்தின் மேல் நீங்கள் ஏறிப்போகும்போது உங்கள்
அந்தரங்க உறுப்புகள் தெரியக் கூடாது; அதனால், அதற்குப் படிக்கட்டுகள்
வைக்காதீர்கள்'" என்று சொன்னார்.

21
பின்பு அவர், "நீ இஸ்ரவேலர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய நீதித்
தீர்ப்புகள் இவைதான்:[i]

2 ஒரு எபிரெயனை நீங்கள் அடிமையாக வாங்கினால்,[j] அவன் உங்களி
டம் ஆறு வருஷங்கள் வேலை செய்யலாம். ஆனால், ஏழாம் வருஷம் அவ
னிடமிருந்து எதையும் வாங்காமல் அவனை விடுதலை செய்துவிட
வேண்டும்.[k] **3** அவன் தனியாளாக வந்திருந்தால், தனியாளாகப் போக
வேண்டும். மனைவியோடு வந்திருந்தால், அவளும் அவனுடன் போக
வேண்டும். **4** அவனுடைய எஜமான் அவனுக்கு ஒரு பெண்ணை மனை
வியாகத் தந்திருந்தால், அவள் அவனுக்கு மகன்களையோ மகள்களையோ
பெற்றுக் கொடுத்திருந்தால், அந்த மனைவியும் பிள்ளைகளும் எஜமானுக்
குச் சொந்தமாவார்கள். அந்த அடிமை மட்டும் விடுதலையாகிப் போகலாம்.[l]
5 ஆனால் அந்த அடிமை, 'நான் என் எஜமானையும் மனைவிமக்களையும்
நேசிக்கிறேன், விடுதலை பெற எனக்கு இஷ்டமில்லை' என்று உறுதியாகச்
சொன்னால்,[m] **6** அவனுடைய எஜமான் அவனைக் கதவுக்குப் பக்கத்தில்
அல்லது நிலைக்காலுக்குப் பக்கத்தில் கொண்டுவந்து, உண்மைக் கடவுளைச்
சாட்சியாக வைத்து,* ஒரு ஊசியால் அவன் காதைக் குத்த வேண்டும். வாழ்
நாள் முழுக்க அவன் அவருக்கு அடிமையாக இருப்பான்.

7 ஒருவன் தன் மகளை அடிமையாக விற்றால், ஒரு ஆண் அடிமை
விடுதலையாகிப் போவதுபோல் அவளால் போக முடியாது. **8** அவளு

20:24 * வே.வா., "நல்லுறவு." **21:6** * அதாவது, "உண்மைக் கடவுளுக்கு முன்பாக."

அதி. 20
a அப் 7:38; கலா 3:19
b உபா 8:2
c யோசு 24:14; யோபு 28:28; நீதி 1:7
d உபா 5:5; சங் 97:2
e உபா 4:36; நெ 9:13
f அப் 17:29
g உபா 12:5, 6; 2நா 6:6
h உபா 27:5; யோசு 8:30, 31

அதி. 21
i யாத் 24:3; உபா 4:14
j லேவி 25:39, 40
k உபா 15:12
l உபா 15:12
m உபா 15:16, 17

டைய எஜமானுக்கு அவளைப் பிடிக்கவில்லை என்பதற்காக அவர் அவ
ளைத் தன்னுடைய மறுமனைவியாக ஆக்கிக்கொள்ளாமல் வேறொருவ
னுக்கு விற்றுப்போடப் பார்த்தால், அவர் அவளுக்குத் துரோகம் செய்ததாக
அர்த்தம். வேறு தேசத்தைச் சேர்ந்தவனிடம் அவளை விற்க அவருக்கு
உரிமை இல்லை. **9** அவளை அவர் தன்னுடைய மகனுக்கு மனைவியா
கக் கொடுத்தால், மகளின் உரிமைகளை அவர் தர வேண்டும். **10** அவரு
டைய மகன்* இன்னொரு பெண்ணையும் கல்யாணம் செய்துகொண்டால்,
உணவு, உடை, தாம்பத்தியக் கடன்[a] என எதிலுமே முதல் மனைவிக்
குக் குறை வைக்கக் கூடாது. **11** இந்த மூன்று பொறுப்புகளையும் அவன்
செய்யாமல்போனால், பணம் எதுவும் கொடுக்காமல் அவள் விடுதலையா
கிப் போகலாம்.

12 ஒருவன் யாரையாவது அடித்து அவன் செத்துப்போனால்
அடித்தவன் கொல்லப்பட வேண்டும்.[b] **13** ஆனால், அவன் தெரியாத்த
னமாக அதைச் செய்திருந்தால், அப்படி நடக்கும்படி உண்மைக் கடவு
ளாகிய நான் விட்டிருந்தால், அவன் ஓடிப்போவதற்கு ஒரு இடத்தை ஏற்
பாடு செய்வேன்.[c] **14** ஒருவன் இன்னொருவன்மேல் கடும் கோபம்
கொண்டு அவனை வேண்டுமென்றே கொலை செய்தால்,[d] கொலைகார
னைச் சாகடிக்க வேண்டும். தப்பிப்பதற்காக அவன் என்னுடைய பலி
பீடத்துக்கு வந்தாலும்கூட அவனை அங்கிருந்து பிடித்துக்கொண்டுபோய்ச்
சாகடிக்க வேண்டும்.[e] **15** அப்பாவையோ அம்மாவையோ அடிக்கிறவன்
கொல்லப்பட வேண்டும்.[f]

16 ஒருவன் யாரையாவது கடத்திக்கொண்டு[g] போய் விற்றுவிட்டால்
அல்லது அப்படிக் கடத்தும்போது கையும் களவுமாகப் பிடிபட்டால்,[h]
அவன் கொல்லப்பட வேண்டும்.[i]

17 அப்பாவையோ அம்மாவையோ சபிக்கிற எவனும் கொல்லப்பட
வேண்டும்.[j]

18 சண்டை போடும்போது ஒருவன் இன்னொருவனைக் கல்லாலோ
கைமுஷ்டியாலோ* அடித்ததால், அவன் படுத்த படுக்கையாகக் கிடந்து,
19 பின்பு மறுபடியும் எழுந்து ஊன்றுகோலைப் பிடித்துக்கொண்டு வெளியே
நடமாட ஆரம்பித்தால், அடித்தவனுக்கு எந்தத் தண்டனையும் கிடைக்காது.
ஆனால், அடிவாங்கியவன் முழுவதுமாகக் குணமாகி வேலைக்குப் போகும்
வரை அவனுக்குத் தேவையானதைக் கொடுத்து உதவ வேண்டும்.

20 ஒருவன் தனக்கு அடிமையாக இருக்கிற ஆணையோ பெண்
ணையோ தடியால் அடிக்கும்போது அந்த அடிமை இறந்துபோனால்,
அடித்தவன் தண்டிக்கப்பட வேண்டும்.[k] **21** ஆனால், அந்த அடிமை
ஒரு நாளோ இரண்டு நாளோ உயிரோடு இருந்தால், அடித்தவன் தண்டிக்
கப்படக் கூடாது. ஏனென்றால், அந்த அடிமையை அவன் விலைகொடுத்து
வாங்கியிருக்கிறான்.

22 ஆண்கள் ஒருவருக்கொருவர் சண்டை போடும்போது ஒரு கர்ப்
பிணிக்கு அடிபட்டு குறைப்பிரசவம்[l] ஆகிவிட்டால், அதேசமயத்தில் அவ
ளுடைய உயிருக்கோ குழந்தையின் உயிருக்கோ ஒன்றும் ஆகாவிட்டால்,
அடித்தவன் அந்தப் பெண்ணின் கணவர் கேட்கிற அபராதத்தை

21:10 * அல்லது, “அவர்.” **21:18** * அல்லது, “கருவியாலோ.”

அதி. 21
a 1கொ 7:3
b ஆதி 9:6; எண் 35:30; மத் 5:21
c எண் 35:11; எண் 35: 22-25; உபா 4:42; உபா 19:3-5; யோசு 20:7-9
d எண் 15:30
e உபா 19:11, 12; 1ரா 1:50; 1ரா 2:29; 1யோ 3:15
f யாத் 20:12
g ஆதி 40:15
h ஆதி 37:28
i உபா 24:7
j லேவி 20:9; நீதி 20:20; நீதி 30:11, 17; மத் 15:4
k ஆதி 9:5, 6; லேவி 24:17
l சங் 139:16; எரே 1:5

நியாயாதிபதிகளின் மூலம் கொடுக்க வேண்டும்.[a] **23** ஆனால் தாயோ
குழந்தையோ இறந்துவிட்டால், உயிருக்கு உயிர் கொடுக்க வேண்டும்.[b]
24 கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்,[c]
25 சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், அடிக்கு அடி கொடுக்க
வேண்டும்.

26 ஒருவன் தனக்கு அடிமையாக இருக்கிற ஆணையோ பெண்
ணையோ அடிக்கும்போது அந்த அடிமையின் கண் போய்விட்டால், கண்
ணுக்கு நஷ்ட ஈடாக அந்த அடிமையை அவன் விடுதலை செய்ய வேண்
டும்.[d] **27** அவன் தன்னுடைய அடிமையின் பல்லை உடைத்தால், பல்லுக்கு
நஷ்ட ஈடாக அந்த அடிமையை அவன் விடுதலை செய்ய வேண்டும்.

28 மாடு முட்டியதால் ஒரு ஆணோ பெண்ணோ செத்துப்போனால்,
அந்த மாடு கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்.[e] அதன் இறைச்சியை
யாரும் சாப்பிடக் கூடாது. மாட்டின் சொந்தக்காரனுக்குத் தண்டனை கொடுக்
கக் கூடாது. **29** ஆனால், ஒரு மாடு வழக்கமாக முட்டுகிற மாடாய் இருந்
தால், அதன் சொந்தக்காரன் எச்சரிக்கப்பட்டும் அவன் அதைக் கட்டி வைக்
காமல்போய் அது ஒருவனைக் கொன்றுபோட்டால், அந்த மாடும் கல்லெ
றிந்து கொல்லப்பட வேண்டும், அதன் சொந்தக்காரனும் கொல்லப்பட
வேண்டும். **30** ஒருவேளை உயிருக்குப் பதிலாக ஒரு மீட்புவிலையைக்
கொடுக்கும்படி அவனிடம் சொல்லப்பட்டால் அந்த மொத்த விலையையும்
அவன் கொடுக்க வேண்டும். **31** ஒரு மாடு ஒருவருடைய மகனை முட்டி
னாலும் சரி, மகளை முட்டினாலும் சரி, மாட்டின் சொந்தக்காரனுக்கு இந்த
நீதித்தீர்ப்பின்படியே செய்ய வேண்டும். **32** ஒரு மாடு அடிமையாக இருக்
கும் ஒரு ஆணையோ பெண்ணையோ முட்டினால், அதன் சொந்தக்காரன்
அந்த அடிமையின் எஜமானுக்கு 30 சேக்கல்* கொடுக்க வேண்டும். அந்த
மாடு கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்.

33 ஏற்கெனவே உள்ள குழியை அல்லது புதிதாகத் தோண்டிய குழியை
ஒருவன் மூடாமல் இருந்து, அதில் ஒரு மாடோ கழுதையோ விழுந்து செத்
துவிட்டால், **34** குழிக்குச் சொந்தக்காரன் மிருகத்தின் சொந்தக்காரனுக்கு
நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்.[f] செத்த மிருகம் அவனுக்குச் சேர
வேண்டும். **35** ஒருவனுடைய மாடு இன்னொருவனுடைய மாட்டை முட்
டிக் கொன்றுபோட்டால், உயிருள்ள மாட்டை விற்று, அந்தத் தொகையை
அவர்கள் இரண்டு பேரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். செத்துப்போன
மாட்டையும் அவர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும். **36** அந்த மாடு வழக்
கமாக முட்டுகிற மாடாய் இருந்தும் அதன் சொந்தக்காரன் அதைக் கட்டி
வைக்காமல் இருந்தால், அவன் நஷ்ட ஈடாக மாட்டுக்கு மாடு கொடுக்க
வேண்டும். செத்த மாடு அவனுக்குச் சேர வேண்டும்" என்றார்.

22 பின்பு அவர், "ஒருவன் ஒரு மாட்டையோ ஆட்டையோ திருடி
அதை வெட்டினால் அல்லது விற்றால், அந்த மாட்டுக்குப் பதிலாக
5 மாடுகளையும் அந்த ஆட்டுக்குப் பதிலாக 4 ஆடுகளையும்[g] நஷ்ட ஈடா
கக் கொடுக்க வேண்டும்.

2 (ராத்திரியில் ஒரு வீட்டுக்குள் புகுந்து திருடுகிறவனை[h] ஒருவன்
பிடித்து அடிக்கும்போது அவன் செத்துவிட்டால், அடித்தவன்மேல் எந்தக்

21:32 * ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 21
a யாத் 18:25, 26
உபா 16:18
உபா 17:8

b ஆதி 9:6
லேவி 24:17
எண் 35:31
வெளி 21:8

c லேவி 24:20
மத் 5:38

d எபே 6:9
கொலோ 4:1

e ஆதி 9:5
எண் 35:33

f யாத் 22:6
யாத் 22:14
உபா 22:8

அதி. 22
g 2சா 12:6
லூ 19:8

h யாத் 20:15

அதி. 22
a யாத் 22:4
b உபா 16:18
உபா 19:17
c உபா 16:18
உபா 25:1
d யாத் 22:4
e லேவி 6:2-5

கொலைப்பழியும்* இருக்காது. **3** ஆனால் சூரியன் உதித்த பின்பு அது நடந்தால், அடித்தவன்மேல் கொலைப்பழி வரும்.)

திருடுகிறவன் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். நஷ்ட ஈடு கொடுக்க அவன் கையில் ஒன்றும் இல்லையென்றால், திருட்டுப் பொருளுக்கு ஈடு கட்ட அவன் அடிமையாக விற்கப்பட வேண்டும். **4** அவன் திருடிய ஆடோ மாடோ கழுதையோ அவனிடம் உயிரோடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அவன் இரண்டு மடங்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5 ஒருவன் தன் மிருகங்களை அடுத்தவருடைய வயலிலோ திராட்சைத் தோட்டத்திலோ மேய விட்டுவிட்டால், தன்னுடைய வயலிலோ திராட்சைத் தோட்டத்திலோ விளைந்த சிறந்த விளைச்சலைக் கொடுத்து அதற்கு ஈடு கட்ட வேண்டும்.

6 ஒருவன் தீ மூட்டும்போது அது முட்புதர்களில் பரவி, கதிர்க்கட்டுகளையோ விளைந்த பயிர்களையோ எரித்து நாசமாக்கிவிட்டால், தீ மூட்டியவன் அதற்கு ஈடுகட்ட வேண்டும்.

7 ஒருவன் மற்றொருவனிடம் பணத்தையோ பொருளையோ கொடுத்து வைத்திருக்கும்போது அது அவன் வீட்டிலிருந்து திருடுபோனால், அதைத் திருடியவன் ஒருவேளை கண்டுபிடிக்கப்பட்டால், அவன் இரண்டு மடங்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்.[a] **8** அந்தத் திருடன் கண்டுபிடிக்கப்படவில்லை என்றால், அந்தப் பொருளை வீட்டில் வைத்திருந்தவனே அதை எடுத்துக்கொண்டானா என்பதைத் தெரிந்துகொள்ள அவனை உண்மைக் கடவுள்முன் கொண்டுவர வேண்டும்.[b] **9** காணாமல்போன ஒரு ஆட்டையோ மாட்டையோ கழுதையையோ துணிமணியையோ வேறெதாவது பொருளையோ இரண்டு பேர் சொந்தம்கொண்டாடி, 'இது எனக்குத்தான் சொந்தம்!' என்று சண்டைபோட்டால், அந்த இரண்டு பேருமே தங்கள் வழக்கை உண்மைக் கடவுள்முன் கொண்டுவர வேண்டும்.[c] எவனைக் குற்றவாளி என்று கடவுள் சொல்கிறாரோ அவன் மற்றவனுக்கு இரண்டு மடங்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்.[d]

10 ஒருவன் தன்னுடைய ஆட்டையோ மாட்டையோ கழுதையையோ வேறெதாவது மிருகத்தையோ மற்றொரு ஆளிடம் கொடுத்து வைத்திருக்கும்போது அது செத்துப்போனால், அல்லது ஊனமானால், அல்லது யாரும் பார்க்காத நேரத்தில் ஓட்டிக்கொண்டு போகப்பட்டால், **11** அதை வைத்திருந்த ஆள் தான் நிரபராதி என்று யெகோவாவுக்கு முன்னால் சத்தியம் செய்ய வேண்டும். மிருகத்தின் சொந்தக்காரன் அதை நம்ப வேண்டும். அதை வைத்திருந்த ஆள் அதற்காக ஈடுகட்ட வேண்டியதில்லை.[e] **12** ஆனால் அதை வைத்திருந்த அந்த ஆளிடமிருந்து அது திருடப்பட்டிருந்தால், அதன் சொந்தக்காரனுக்கு அவன் ஈடுகட்ட வேண்டும். **13** அதை ஒரு காட்டு மிருகம் கடித்துக் குதறியிருந்தால், அத்தாட்சிக்காக அதை அவன் கொண்டுவர வேண்டும். காட்டு மிருகத்தால் கடித்துக் குதறப்பட்ட மிருகத்துக்காக அவன் ஈடுகட்ட வேண்டியதில்லை.

14 ஆனால், ஒருவன் ஒரு மிருகத்தை இரவலாக வாங்கியிருக்கும்போது, அதன் சொந்தக்காரன் அதன் பக்கத்தில் இல்லாத சமயத்தில் அது ஊனமானாலோ செத்துப்போனாலோ, இரவல் வாங்கியவன் அதற்காக

22:2 * வே.வா., "இரத்தப்பழியும்."

ஈடுகட்ட வேண்டும். **15** அதன் சொந்தக்காரன் அதன் பக்கத்தில் இருந்திருந்தால், அதற்கு அவன் ஈடுகட்ட வேண்டியதில்லை. அது வாடகைக்கு வாங்கப்பட்டிருந்தால் வாடகைத் தொகையே நஷ்ட ஈடாக இருக்கும்.

16 நிச்சயிக்கப்படாத ஒரு கன்னிப்பெண்ணை ஒருவன் ஏமாற்றி அவளோடு உறவுகொண்டால், மணமகள் விலையை* கொடுத்து அவளைத் தன் மனைவியாக்கிக்கொள்ள வேண்டும்.[a] **17** ஆனால், அவளுடைய அப்பா அவளைத் தர பிடிவாதமாக மறுத்துவிட்டால், மணமகள் விலைக்குச் சமமான தொகையை அவன் கொடுக்க வேண்டும்.

18 சூனியக்காரியை நீங்கள் உயிரோடு விட்டுவைக்கக் கூடாது.[b]

19 மிருகத்தோடு உறவுகொள்கிற எவனும் நிச்சயம் கொல்லப்பட வேண்டும்.[c]

20 யெகோவாவைத் தவிர வேறு தெய்வங்களுக்குப் பலி செலுத்துகிற எவனும் கொல்லப்பட வேண்டும்.[d]

21 உங்களோடு தங்கியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களை நீங்கள் மோசமாக நடத்தவோ கொடுமைப்படுத்தவோ கூடாது.[e] நீங்களும் மற்ற தேசத்தில், அதாவது எகிப்தில், தங்கியிருந்தீர்களே.[f]

22 விதவையையோ அப்பா இல்லாத பிள்ளையையோ* நீங்கள் கொடுமைப்படுத்தக் கூடாது.[g] **23** அப்படிக் கொடுமைப்படுத்தும்போது அவன் என்னிடம் முறையிட்டால், அதை நான் நிச்சயம் கேட்பேன்.[h] **24** என் கோபம் பற்றியெரியும், நான் உங்களை வாளால் கொன்றுபோடுவேன். அப்போது, உங்கள் மனைவிகள் விதவைகளாவார்கள். உங்கள் பிள்ளைகள் அப்பா இல்லாமல் தவிப்பார்கள்.

25 என் ஜனங்களில் ஏழைகளாக இருக்கிறவர்களுக்கு நீங்கள் கடன் கொடுத்தால், வட்டிக்காரனைப் போல நடந்துகொள்ளக் கூடாது. அவர்களிடம் வட்டி வாங்கக் கூடாது.[i]

26 நீங்கள் கொடுக்கும் கடனுக்காக ஒருவனுடைய சால்வையை அடமானமாக வாங்கினால்,[j] சூரியன் மறைவதற்குள் அதை அவனிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். **27** ஏனென்றால், அதைத்தான் அவன் போர்த்திக்கொள்ள வேண்டும். அது இல்லாவிட்டால் வேறு எதைப் போர்த்திக்கொண்டு தூங்குவான்?[k] அவன் என்னிடம் முறையிட்டால் நான் நிச்சயமாகக் கேட்பேன். ஏனென்றால், நான் கரிசனை* காட்டுகிறவர்.[l]

28 கடவுளையோ மக்களின் தலைவரையோ நீங்கள் சபித்து* பேசக் கூடாது.[m]

29 உங்களுடைய நிலங்களில் அமோகமாக விளைகிறவற்றையும் உங்களுடைய ஆலைகளில்* பெருக்கெடுத்து ஓடுகிறவற்றையும் எனக்குக் காணிக்கையாகக் கொடுக்கத் தயங்கக் கூடாது.[n] உங்களுடைய மூத்த மகனை எனக்கு அர்ப்பணிக்க வேண்டும்.[o] **30** உங்கள் ஆடுமாடுகளுடைய குட்டிகளும் கன்றுகளும்[p] ஏழு நாட்கள் அவற்றின் தாயுடன் இருக்க வேண்டும். எட்டாம் நாளில் அவற்றை நீங்கள் எனக்குக் கொடுக்க வேண்டும்.[q]

22:16 *கல்யாணம் செய்துகொள்ளப்போகிற பெண்ணுக்காக மாப்பிள்ளை வீட்டார் கொடுக்கும் பணம் இது. **22:22** *வே.வா., "அநாதையையோ." **22:27** *வே.வா., "கனிவு." **22:28** *வே.வா., "கேவலமாக." **22:29** *அதாவது, "எண்ணெய் மற்றும் திராட்சரச ஆலைகளில்."

அதி. 22
a உபா 22: 28, 29
b லேவி 19:26 லேவி 20:6 உபா 18:10-12 1சா 28:3 கலா 5:20 வெளி 22:15
c லேவி 18:23 லேவி 20:15 உபா 27:21
d எண் 25:3 1ரா 18:40 1கொ 10:20
e லேவி 25:35
f லேவி 19: 33, 34 உபா 10:19
g உபா 27:19 யாக் 1:27
h சங் 10:18 யாக் 5:4
i லேவி 25: 35, 36 உபா 23:19 லூ 6:34, 35
j உபா 24:6
k உபா 24:13
l உபா 10:18 சங் 34:6
m லேவி 24: 11, 14 பிர 10:20 அப் 23:5 யூ 8
n நீதி 3:9 2கொ 9:7
o யாத் 13:2
p உபா 15:19
q லேவி 22:27

31 நீங்கள் எனக்குப் பரிசுத்தமான ஜனங்களாக இருக்க வேண்டும்.[a]
வெளியிலே காட்டு மிருகத்தால் கடித்துக் குதறிப்போடப்பட்ட மிருகத்தை
நீங்கள் சாப்பிடக் கூடாது.[b] அதை நாய்களுக்குப் போட்டுவிட வேண்டும்”
என்றார்.

23 பின்பு அவர், “நீங்கள் வதந்திகளைப் பரப்பக் கூடாது.[c] பொல்லா
தவனோடு கூட்டுச் சேர்ந்துகொண்டு கெட்ட எண்ணத்துடன் இன்
னொருவனுக்கு எதிராகச் சாட்சி சொல்லக் கூடாது.[d] **2** நிறைய பேர் தப்பு
செய்கிறார்கள் என்பதற்காக நீங்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு
தப்பு செய்யக் கூடாது. ஊர் உலகத்தோடு ஒத்துப்போவதற்காகப் பொய்
சாட்சி சொல்லி நியாயத்தைப் புரட்டக் கூடாது. **3** ஏழைகளின் வழக்கில்
பாரபட்சம் காட்டக் கூடாது.[e]

4 உங்கள் எதிரியின் மாடோ கழுதையோ வழிதவறித் திரிவதைப் பார்த்
தால், அதை அவனிடம் கொண்டுபோய் விட வேண்டும்.[f] **5** உங்களு
டைய விரோதியின் கழுதை சுமையோடு கீழே விழுந்து கிடப்பதைப் பார்த்
தால், கண்டும்காணாமல் அங்கிருந்து போய்விடக் கூடாது. அந்தக் கழுதை
யின் சுமையை இறக்குவதற்கு நீங்கள் அவனுக்கு உதவ வேண்டும்.[g]

6 ஏழைகளின் வழக்கில் நியாயத்தைப் புரட்டி அவர்களுக்கு எதிராகத்
தீர்ப்பு சொல்லக் கூடாது.[h]

7 மற்றவர்கள்மேல் பொய்க் குற்றம்சாட்டாதீர்கள். நிரபராதியும் நீதிமா
னும் சாவதற்குக் காரணமாகிவிடாதீர்கள். இப்படிப்பட்ட அக்கிரமம் செய்கி
றவனை நான் குற்றத்திலிருந்து விடுவிக்கவே மாட்டேன்.[i]

8 நீங்கள் லஞ்சம் வாங்கக் கூடாது. ஏனென்றால், லஞ்சம் ஞானமுள்ள
வர்களின் கண்களை மறைத்துவிடும், நீதிமான்களைக்கூட உண்மைக்கு முர
ணாகப் பேச வைத்துவிடும்.[j]

9 உங்களுடன் குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களை நீங்கள் கொடு
மைப்படுத்தக் கூடாது. இன்னொரு தேசத்தில் குடியிருப்பது எவ்வளவு கஷ்
டம் என்று உங்களுக்கே தெரியும். ஏனென்றால், நீங்களும் எகிப்தில் அப்
படிக் குடியிருந்தீர்களே.[k]

10 ஆறு வருஷங்களுக்கு உங்கள் நிலத்தில் பயிர் செய்து, விளைச்
சலை அறுவடை செய்ய வேண்டும்.[l] **11** ஆனால், ஏழாம் வருஷம்
எதையும் பயிர் செய்யாமல் நிலத்தைத் தரிசாக விட்டுவிட வேண்டும்.
அதில் தானாக முளைப்பதை உங்களுடன் இருக்கும் ஏழைகள் சாப்பிடு
வார்கள். அவர்கள் விட்டுவைப்பதை காட்டு மிருகங்கள் தின்னும். உங்க
ளுடைய திராட்சைத் தோட்டத்துக்கும் ஒலிவத் தோப்புக்கும் இதேபோல்
செய்ய வேண்டும்.

12 ஆறு நாட்கள் நீங்கள் வேலை செய்ய வேண்டும். ஆனால், ஏழாம்
நாளில் எந்த வேலையும் செய்யக் கூடாது. அப்போதுதான், உங்கள் மாட்
டுக்கும் கழுதைக்கும் ஓய்வு கிடைக்கும்; உங்களுடைய அடிமைப் பெண்
ணின் மகனுக்கும் உங்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்துக்காரனுக்கும்
புத்துணர்ச்சி கிடைக்கும்.[m]

13 நான் உங்களிடம் சொன்ன எல்லாவற்றையும் நீங்கள் அப்படியே
செய்ய வேண்டும்.[n] மற்ற தெய்வங்களின் பெயர்களைச் சொல்லிக் கூப்பி
டாதீர்கள். அந்தப் பெயர்கள் உங்கள் வாயில்கூட வரக் கூடாது.[o]

அதி. 22
a லேவி 19:2; எண் 15:40; 1பே 1:15
b லேவி 22:3, 8

அதி. 23
c லேவி 19:16; நீதி 6:16, 19
d உபா 19:18, 19; நீதி 19:5
e லேவி 19:15
f நீதி 25:21; 1தெ 5:15
g உபா 22:4; லூ 6:27; ரோ 12:21
h உபா 16:19; 2நா 19:7
i நீதி 17:15; ரோ 1:18; ரோ 2:6
j பிர 7:7
k லேவி 19:34
l லேவி 25:3, 4
m யாத் 20:9, 10; உபா 5:14
n உபா 4:9
o உபா 12:3; யோசு 23:6, 7

14 வருஷத்தில் மூன்று தடவை எனக்காக நீங்கள் பண்டிகை
கொண்டாட வேண்டும்.[a] **15** முதலாவதாக, புளிப்பில்லாத ரொட்டிப் பண்
டிகையை நீங்கள் கொண்டாட வேண்டும்.[b] நான் உங்களுக்குக் கட்டளை
கொடுத்தபடியே, ஆபிப்* மாதத்தின் குறிக்கப்பட்ட தேதிகளில் புளிப்பில்
லாத ரொட்டிகளை ஏழு நாட்களுக்குச் சாப்பிட வேண்டும்.[c] அந்தச் சம
யத்தில்தான் நீங்கள் எகிப்திலிருந்து வந்தீர்கள். இந்தப் பண்டிகையின்போது
யாருமே என் முன்னால் வெறுங்கையோடு வரக் கூடாது.[d] **16** இரண்டா
வதாக, உங்களுடைய உழைப்பினால் விளைந்த முதல் விளைச்சலை
அறுத்து, அறுவடைப் பண்டிகையை* கொண்டாட வேண்டும்.[e] மூன்றாவ
தாக, உங்களுடைய உழைப்பினால் விளைந்ததை வருஷக் கடைசியில்
சேகரிக்கும்போது சேகரிப்புப் பண்டிகையை# கொண்டாட வேண்டும்.[f]
17 உண்மை எஜமானாகிய யெகோவாவின் முன்னிலையில் ஆண்கள் எல்
லாரும் வருஷத்துக்கு மூன்று தடவை வர வேண்டும்.[g]

18 எனக்காகச் செலுத்தும் பலியின் இரத்தத்தை, புளிப்பு சேர்க்கப்பட்ட
எதனுடனும் சேர்த்து செலுத்தக் கூடாது. எனக்காகக் கொண்டாடும் பண்டி
கைகளின்போது நீங்கள் செலுத்தும் கொழுப்பைக் காலைவரை அப்படியே
விடக் கூடாது.

19 உங்கள் நிலத்தில் விளைகிற முதல் விளைச்சலில் மிகச் சிறந்ததை
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் வீட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.[h]

ஆட்டுக்குட்டியை அதன் தாயின் பாலிலே சமைக்கக் கூடாது.[i]

20 வழியில் உங்களைக் காப்பதற்கும், நான் ஏற்பாடு செய்திருக்கிற இடத்
துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கும் உங்களுக்கு முன்னால் என் தூதரை
அனுப்புகிறேன்.[j] **21** அவர் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள், அவ
ருக்குக் கீழ்ப்படியுங்கள். அவருடைய பேச்சை மீறாதீர்கள், இல்லாவிட்டால்
அவர் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.[k] ஏனென்றால், அவர் என்
னுடைய பெயரில் வருகிறார். **22** அவர் பேச்சை அப்படியே கேட்டு, நான்
சொல்கிற எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிந்தால் உங்களை எதிர்க்கிறவர்களை
எதிர்ப்பேன், உங்களைப் பகைக்கிறவர்களைப் பகைப்பேன். **23** எமோரி
யர்களும், ஏத்தியர்களும், பெரிசியர்களும், கானானியர்களும், ஏவியர்க
ளும், எபூசியர்களும் இருக்கிற இடத்துக்கு என் தூதர் உங்களை நடத்
திக்கொண்டு போவார், நான் அவர்களை அழிப்பேன்.[l] **24** நீங்கள் அவர்
களுடைய தெய்வங்களை வணங்கவோ அவற்றுக்குப் பூஜை செய்யவோ
கூடாது. அவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பின்பற்றக் கூடாது.[m] அவர்
களுடைய சிலைகளையும் பூஜைத் தூண்களையும் உடைத்துப்போட வேண்
டும்.[n] **25** உங்கள் கடவுளான என்னை மட்டும்தான் வணங்க வேண்
டும்.[o] யெகோவாவாகிய நான் உணவும் தண்ணீரும் தந்து உங்களை ஆசீர்
வதிப்பேன்.[p] உங்களுடைய நோய்களை நீக்குவேன்.[q] **26** உங்கள் தேசத்
துப் பெண்களுக்குக் கருச்சிதைவு ஏற்படாது, குழந்தை பாக்கியமும் இல்லா
மல் போகாது.[r] நான் உங்களை நீடூழி வாழ வைப்பேன்.

27 நீங்கள் தாக்கப் போவதற்கு முன்பே உங்கள் எதிரிகள் என்னைப் பற்
றிக் கேள்விப்பட்டு நடுநடுங்கும்படி செய்வேன்.[s] உங்களோடு மோதுகிற

23:15 *இணைப்பு B15-ஐப் பாருங்கள். **23:16** *வாரங்களின் பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே பண்டிகை என்றும் இது அழைக்கப்பட்டது. #கூடாரப் பண்டிகை என்றும் இது அழைக்கப்பட்டது.

அதி. 23
- *a* உபா 16:16
- *b* லேவி 23:6, லூ 22:7
- *c* யாத் 12:18
- *d* உபா 16:17
- *e* எண் 28:26, உபா 16:9, 10, அப் 2:1
- *f* உபா 16:13, நெ 8:14, யோவா 7:2
- *g* உபா 12:5, 6
- *h* எண் 18:8, 12, 1கொ 15:20
- *i* உபா 14:21, நீதி 12:10
- *j* யாத் 14:19, எண் 20:16
- *k* எண் 14:35, யோசு 24:19
- *l* யாத் 34:11, யோசு 5:13, 14, யோசு 24:8
- *m* யாத் 20:5, லேவி 18:3, உபா 12:30, 2நா 33:2
- *n* யாத் 20:3, எண் 33:52
- *o* உபா 6:13, உபா 10:12, யோசு 22:5, மத் 4:10
- *p* உபா 7:13
- *q* உபா 7:15
- *r* உபா 7:14, உபா 28:4
- *s* உபா 2:25, யோசு 2:9

எல்லாரையும் நான் குழப்புவேன். உங்கள் எதிரிகள் எல்லாரும் உங்களிடம்
தோற்றுப்போய் ஓடும்படி செய்வேன்.[a] **28** நீங்கள் தாக்கப் போவதற்கு
முன்பே அவர்கள் விரக்தி* அடையும்படி செய்வேன்.[b] அதனால், ஏவியர்
களும் கானானியர்களும் ஏத்தியர்களும் உங்களைவிட்டு ஓடிப் போவார்
கள்.[c] **29** நான் அவர்களை ஒரே வருஷத்தில் உங்களைவிட்டு ஒட்டு
மொத்தமாகத் துரத்த மாட்டேன். அப்படிச் செய்தால், ஜனங்கள் யாரும்
இல்லாமல் நிலம் பாழாகிவிடும், காட்டு மிருகங்களும் பெருகி பெரிய அச்சு
றுத்தலாக ஆகிவிடும்.[d] **30** அதனால் நீங்கள் ஏராளமாகப் பெருகி தேசத்
தைச் சொந்தமாக்கும்வரை, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அவர்களைத்
துரத்தியடிப்பேன்.[e]

31 உங்கள் எல்லை செங்கடலிலிருந்து பெலிஸ்தியர்களின் கடல்*
வரைக்கும், வனாந்தரத்திலிருந்து ஆறு# வரைக்கும் இருக்கும்.[f] அங்கிருக்
கிற ஜனங்களை உங்கள் கையில் கொடுப்பேன், அவர்களை நீங்கள்
துரத்தியடிப்பீர்கள்.[g] **32** அவர்களுடனோ அவர்கள் தெய்வங்களுடனோ
நீங்கள் ஒப்பந்தம் செய்யக் கூடாது.[h] **33** அவர்கள் உங்களுடைய தேசத்
தில் குடியிருக்கக் கூடாது. அப்படிக் குடியிருந்தால், எனக்கு எதிராக உங்க
ளைப் பாவம் செய்ய வைப்பார்கள். நீங்கள் அவர்களுடைய தெய்வங்
களை வணங்கினால், அது கண்டிப்பாக உங்களுக்கு ஒரு கண்ணியாக ஆகி
விடும்”[i] என்றார்.

24 பின்பு அவர் மோசேயிடம், “நீயும் ஆரோனும் நாதாபும் அபியூ
வும்[j] இஸ்ரவேலின் பெரியோர்கள்* 70 பேரும் மலைமேல் ஏறிப்
போங்கள். தூரத்தில் நின்று யெகோவாவை வணங்குங்கள். **2** அதன்பின்,
நீ மட்டும் யெகோவாவின் பக்கத்தில் போக வேண்டும், மற்றவர்கள் போகக்
கூடாது. ஜனங்களும் உன்னோடு வரக் கூடாது”[k] என்றார்.

3 அதன்பின் மோசே ஜனங்களிடம் போய், யெகோவா சொன்ன எல்லா
விஷயங்களையும் அவர் கொடுத்த எல்லா நீதித்தீர்ப்புகளையும் சொன்
னார்.[l] அப்போது ஜனங்கள் எல்லாரும் ஒரே குரலில், “யெகோவா சொன்ன
எல்லாவற்றையும் நாங்கள் செய்வோம்”[m] என்றார்கள். **4** யெகோவா
சொன்ன எல்லாவற்றையும் மோசே எழுதி வைத்தார்.[n] பின்பு அவர் விடி
யற்காலையில் எழுந்து, அந்த மலையின் அடிவாரத்தில் ஒரு பலிபீடத்தைக்
கட்டினார். இஸ்ரவேலின் 12 கோத்திரங்களைக் குறிப்பதற்காக 12 கல்தூண்
களையும் நாட்டினார். **5** அதன்பின், அவர் இஸ்ரவேலின் வாலிபர்களை
அனுப்பினார். அவர்கள் போய் யெகோவாவுக்குத் தகன பலிகளையும், சமா
தான பலிகளாகக் காளைகளையும்[o] செலுத்தினார்கள். **6** பின்பு, மோசே
அந்த மிருகங்களின் இரத்தத்தில் பாதியைக் கிண்ணங்களில் எடுத்து வைத்
தார். இன்னொரு பாதியைப் பலிபீடத்தில் தெளித்தார். **7** அதன்பின், ஒப்
பந்தப் புத்தகத்தை* எடுத்து அதை ஜனங்களுக்கு முன்னால் சத்தமாகப்
படித்தார்.[p] அப்போது அவர்கள், “யெகோவா சொன்ன எல்லாவற்றையும்
நாங்கள் செய்வோம், அவருடைய பேச்சைக் கேட்டு நடப்போம்”[q] என்றார்
கள். **8** அதனால் மோசே இரத்தத்தை எடுத்து ஜனங்கள்மேல் தெளித்து,[r]
“யெகோவா உங்களோடு செய்திருக்கிற ஒப்பந்தத்தின் வார்த்தைகளைக்

23:28 *அல்லது, “பீதி.” **23:31** *வே.வா., “மத்தியதரைக் கடல்.” #அதாவது, “யூப்ரடிஸ் ஆறு.” **24:1** *வே.வா., “மூப்பர்கள்.” **24:7** *அநேகமாக, யாத்திராகமம் 20:22–23:33-ல் உள்ள சட்டதிட்டங்கள் அடங்கிய புத்தகமாக இருக்கலாம்.

அதி. 23
a உபா 7:23, 24
b உபா 7:20; யோசு 2:11
c யோசு 24:11
d உபா 7:22
e உபா 9:4
f ஆதி 15:18; உபா 1:7; யோசு 1:4; 1ரா 4:21
g நியா 1:4; நியா 11:21
h யாத் 34:12; எண் 25:1, 2; உபா 7:2; 2கொ 6:14
i யோசு 23:12, 13; நியா 1:28; சங் 106:36

அதி. 24
j லேவி 10:1
k யாத் 20:21; எண் 12:8
l யாத் 21:1; உபா 4:1
m உபா 5:27; யோசு 24:22
n யாத் 34:27; உபா 31:9
o லேவி 3:1; லேவி 7:11
p உபா 31:11; அப் 13:15
q யாத் 19:8
r எபி 12:24

கேட்டீர்களே, அந்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் இரத்தம் இதுதான்”[a]
என்றார்.

9 மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும் இஸ்ரவேலின் பெரியோர்
கள் 70 பேரும் மலைமேல் ஏறிப்போய், **10** இஸ்ரவேலின் கடவுளைப்
பார்த்தார்கள்.*[b] அவருடைய பாதத்தின் கீழே நீலமணிக் கல் பதிக்கப்பட்ட
தரையைப் போல ஒன்று தெரிந்தது. அது தெள்ளத்தெளிவான வானத்தைப்
போல இருந்தது.[c] **11** இஸ்ரவேலின் முக்கியத் தலைவர்களான[d] அவர்
களை உண்மைக் கடவுள் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் அவருடைய
தரிசனத்தைப் பார்த்தார்கள், சாப்பிட்டார்கள், குடித்தார்கள்.

12 யெகோவா மோசேயிடம், “நீ மலைமேல் ஏறி என்னிடம் வந்து இங்
கேயே தங்கியிரு. ஜனங்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய சட்டங்க
ளையும் கட்டளைகளையும் நான் கற்பலகைகளில் எழுதி உன்னிடம் தரு
வேன்” என்றார்.[e] **13** அதனால், மோசேயும் அவருடைய உதவியாளரான
யோசுவாவும் புறப்பட்டார்கள்.[f] மோசே உண்மைக் கடவுளின் மலைமேல்
ஏறிப் போவதற்கு[g] முன்பு, **14** அங்கிருந்த பெரியோர்களிடம், “நாங்கள்
திரும்பி வரும்வரை இங்கேயே காத்திருங்கள்.[h] ஆரோனும் ஹூரும்[i]
உங்களுடன் இருக்கிறார்கள். யாருக்காவது வழக்கு இருந்தால் அவர்களி
டம் போகலாம்”[j] என்று சொன்னார். **15** மலையை மேகம் மூடியிருந்த சம
யத்தில், மோசே அதன்மேல் ஏறிப் போனார்.[k]

16 யெகோவாவின் மகிமை[l] சீனாய் மலையில் தங்கியிருந்தது.[m] ஆறு
நாட்களாக அந்த மலையை மேகம் மூடியிருந்தது. ஏழாம் நாளில் கடவுள்
மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார். **17** யெகோவாவின்
மகிமை மலை உச்சியில் பற்றியெரியும் நெருப்பைப் போல இஸ்ரவேலர்க
ளின் கண்களுக்குத் தெரிந்தது. **18** மோசே அந்த மேகத்துக்குள்
நுழைந்து, மலைமேல் ஏறினார்.[n] 40 நாட்களுக்கு ராத்திரி பகலாக அந்த
மலையிலேயே தங்கியிருந்தார்.[o]

25 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “எனக்குக் காணிக்கை
கொண்டுவரும்படி நீ இஸ்ரவேல் ஜனங்களிடம் சொல். உள்ளப்பூர்
வமாகக் கொடுக்கிற ஆட்களிடமிருந்து நீங்கள் எனக்குக் காணிக்கை
வாங்க வேண்டும்.[p] **3** அவர்களிடமிருந்து நீங்கள் வாங்க வேண்டிய
காணிக்கைகள் இவைதான்: தங்கம்,[q] வெள்ளி,[r] செம்பு,[s] **4** நீல நிற நூல்,
ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தர நாரிழை,* வெள்ளாட்டு
மயிர், **5** சிவப்புச் சாயம் போட்ட செம்மறியாட்டுக் கடாத் தோல், கடல்
நாய்த் தோல், வேல மரம்;[t] **6** விளக்குகளுக்கான எண்ணெய்,[u] அபிஷே
கத் தைலத்துக்கும்[v] தூபப்பொருளுக்கும் தேவையான பரிமளத் தைலம்,[w]
7 ஏபோத்திலும்*[x] மார்ப்பதக்கத்திலும்[y] பதிக்க வேண்டிய கோமேதகக்
கற்கள் மற்றும் பல ரத்தினக் கற்கள். **8** நான் உங்கள் நடுவில் தங்குவதற்
காக நீங்கள் எனக்கு ஒரு வழிபாட்டுக் கூடாரத்தை அமைக்க வேண்டும்.[z]
9 வழிபாட்டுக் கூடாரத்தையும் அதன் எல்லா பொருள்களையும் நான்
உனக்குக் காட்டுகிற மாதிரியின்படியே* நீங்கள் செய்ய வேண்டும்.[a]

10 வேல மரத்தில் நீங்கள் ஒரு பெட்டியைச் செய்ய வேண்டும். அதன்

24:10 *அதாவது, “கடவுளின் மகிமையைப் பார்த்தார்கள்.” **25:4** *அதாவது, “லினன்.” **25:7** *சொல் பட்டியலைப் பாருங்கள். **25:9** *வே.வா., “வடிவத்திலேயே.”

அதி. 24
a எபி 9:18-20
b யோவா 1:18
c எசே 1:26; வெளி 4:3
d யாத் 24:1
e உபா 5:22
f எண் 11:28
g யாத் 24:2
h யாத் 32:1
i யாத் 17:10
j யாத் 18:25, 26
k யாத் 19:9
l யாத் 16:10; லேவி 9:23; எண் 16:42
m யாத் 19:11
n யாத் 19:20
o யாத் 34:28; உபா 9:9

அதி. 25
p யாத் 35:4-9; 1நா 29:9; 2கொ 9:7
q யாத் 38:24
r யாத் 38:25
s யாத் 38:3; யாத் 38:29
t யாத் 36:20
u யாத் 27:20
v யாத் 30:23-25
w யாத் 30:34, 35
x யாத் 28:6
y யாத் 28:15
z யாத் 29:45; 1ரா 6:13; எபி 9:11
a 1நா 28:12; அப் 7:44; எபி 8:5; எபி 9:9

நீளம் இரண்டரை முழமும்,* அகலம் ஒன்றரை முழமும், உயரம் ஒன்
றரை முழமுமாக இருக்க வேண்டும்.[a] **11** பெட்டியின் உள்ளேயும் வெளி
யேயும் சுத்தமான தங்கத்தால் தகடு அடிக்க வேண்டும்.[b] அதன் விளிம்
பைச் சுற்றிலும் தங்கத்தால் அலங்கார வேலைப்பாடு செய்ய வேண்டும்.[c]
12 தங்கத்தால் நான்கு வளையங்களை வார்த்து, பெட்டியின் நான்கு கால்
களுக்கு மேலேயும் பொருத்த வேண்டும். இரண்டு வளையங்களை ஒரு
பக்கத்திலும், மற்ற இரண்டு வளையங்களை இன்னொரு பக்கத்திலும்
பொருத்த வேண்டும். **13** வேல மரத்தில் கம்புகள் செய்து, அவற்றுக்
குத் தங்கத் தகடு அடிக்க வேண்டும்.[d] **14** பெட்டியைத் தூக்கிக்கொண்டு
போவதற்கு வசதியாக, அதன் இரண்டு பக்கங்களிலும் உள்ள வளையங்
களில் அந்தக் கம்புகளைச் செருகி வைக்க வேண்டும். **15** அந்தக் கம்பு
களைப் பெட்டியின் வளையங்களிலிருந்து கழற்றவே கூடாது.[e] **16** நான்
உனக்குக் கொடுக்கப்போகும் சாட்சிப் பலகைகளை அந்தப் பெட்டியில்
வைக்க வேண்டும்.[f]

17 இரண்டரை முழ நீளத்திலும் ஒன்றரை முழ அகலத்திலும் சுத்த
மான தங்கத்தால் ஒரு மூடி செய்ய வேண்டும்.[g] **18** தங்கத்தைச் சுத்தி
யால் அடித்து இரண்டு கேருபீன்களைச் செய்ய வேண்டும். அவை மூடியின்
இரண்டு முனைகளிலும் இருக்க வேண்டும்.[h] **19** மூடியின் ஒரு முனையில்
ஒரு கேருபீனும் இன்னொரு முனையில் இன்னொரு கேருபீனும் இருக்க
வேண்டும். **20** அந்தக் கேருபீன்களின் இரண்டு சிறகுகளும் பெட்டியின்
மூடிக்கு மேலாக விரிந்திருக்க வேண்டும்.[i] அந்தக் கேருபீன்கள் எதிரெ
திரே இருக்க வேண்டும். அவற்றின் முகங்கள் மூடியைப் பார்த்தபடி இருக்க
வேண்டும். **21** நான் உனக்குக் கொடுக்கப்போகும் சாட்சிப் பலகைகளைப்
பெட்டிக்குள் வைத்துவிட்டு, மூடியால் அதை மூட வேண்டும்.[j] **22** அந்த
இடத்தில் நான் உன் முன்னால் தோன்றுவேன், பெட்டியின் மூடிக்கு மேலி
ருந்து உன்னிடம் பேசுவேன்.[k] இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்க வேண்
டிய எல்லா கட்டளைகளையும் சாட்சிப் பெட்டியின் மேல் இருக்கிற இரண்டு
கேருபீன்களின் நடுவிலிருந்து நான் உனக்குக் கொடுப்பேன்.

23 அதோடு, இரண்டு முழ நீளத்திலும் ஒரு முழ அகலத்திலும் ஒன்
றரை முழ உயரத்திலும் வேல மரத்தால் ஒரு மேஜை[l] செய்ய வேண்டும்.[m]
24 அதற்கு சுத்தமான தங்கத்தால் தகடு அடித்து, சுற்றிலும் தங்கத்தால்
அலங்கார வேலைப்பாடு செய்ய வேண்டும். **25** அதாவது, நான்கு விரல
ளவு அகலத்துக்கு* சுற்றிலும் சட்டம் அடித்து, அந்தச் சட்டத்தின் ஓரங்க
ளில் தங்கத்தால் அலங்கார வேலைப்பாடு செய்ய வேண்டும். **26** தங்கத்
தில் நான்கு வளையங்களைச் செய்து, மேஜையின் நான்கு கால்கள் இருக்
கிற நான்கு மூலைகளிலும் பொருத்த வேண்டும். **27** இந்த வளையங்க
ளைச் சட்டத்துக்குப் பக்கத்தில் பொருத்த வேண்டும். மேஜையைத் தூக்கிக்
கொண்டு போவதற்கான கம்புகளை அவற்றில் செருகி வைக்க வேண்டும்.
28 அந்தக் கம்புகளை வேல மரத்தால் செய்து, அவற்றுக்குத் தங்கத் தகடு
அடிக்க வேண்டும். அந்தக் கம்புகளால் மேஜையைத் தூக்கிக்கொண்டு
போக வேண்டும்.

29 மேஜையில் வைக்க வேண்டிய தட்டுகளையும் கோப்பைகளை
யும் திராட்சமதுவைக் காணிக்கையாக ஊற்றுவதற்கான கூஜாக்களையும்

25:10, 25 * இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 25
a யாத் 37:1-5
b எபி 9:4
c யாத் 30:1, 3
d யாத் 30:1, 5; 1நா 15:15
e 1ரா 8:8
f யாத் 31:18; யாத் 40:20; 1ரா 8:9; எபி 9:4
g யாத் 37:6-9
h 1சா 4:4; எபி 9:5
i 1ரா 8:7; 1நா 28:18
j யாத் 40:20; எபி 9:4, 5
k யாத் 30:6; லேவி 16:2; எண் 7:89; நியா 20:27; சங் 80:1
l யாத் 40:22; லேவி 24:6; எண் 3:30, 31; எபி 9:2
m யாத் 37:10-15

கிண்ணங்களையும்கூட செய்ய வேண்டும். இவற்றைச் சுத்தமான தங்கத்
தால் செய்ய வேண்டும்.[a] **30** மேஜையின் மேல் படையல் ரொட்டிகளை
எனக்கு முன்னால் எப்போதும் வைக்க வேண்டும்.[b]

31 சுத்தமான தங்கத்தால் ஒரு குத்துவிளக்கு[c] செய்ய வேண்டும்.
அதன் அடிப்பகுதி, தண்டு, கிளைகள், புல்லி இதழ்கள்,* மொட்டுகள், மலர்
கள் எல்லாவற்றையும் ஒரே வேலைப்பாடாக சுத்தியால் அடித்துச்
செய்ய வேண்டும்.[d] **32** விளக்குத்தண்டின் ஒரு பக்கத்தில் மூன்று கிளை
கள், இன்னொரு பக்கத்தில் மூன்று கிளைகள் என மொத்தம் ஆறு கிளை
கள் இருக்க வேண்டும். **33** ஒவ்வொரு கிளையிலும் வாதுமைப் பூ வடி
வத்தில் மூன்று புல்லி இதழ்களும், இடையிடையே மொட்டுகளும் மலர்க
ளும் இருக்க வேண்டும். விளக்குத்தண்டிலிருந்து பிரியும் ஆறு கிளைகளி
லும் அதேபோல் இருக்க வேண்டும். **34** விளக்குத்தண்டிலும் வாதுமைப்
பூ வடிவத்தில் நான்கு புல்லி இதழ்களும், இடையிடையே மொட்டுக
ளும் மலர்களும் இருக்க வேண்டும். **35** முதல் இரண்டு கிளைகளுக்
குக் கீழே ஒரு மொட்டு, அடுத்த இரண்டு கிளைகளுக்குக் கீழே ஒரு
மொட்டு, அதற்கடுத்த இரண்டு கிளைகளுக்குக் கீழே ஒரு மொட்டு என்று
விளக்குத்தண்டிலிருந்து பிரியும் ஆறு கிளைகளுக்கும் இருக்க வேண்
டும். **36** குத்துவிளக்கின் மொட்டுகளையும் கிளைகளையும் தண்டு முழு
வதையும் சுத்தமான தங்கத்தில் ஒரே வேலைப்பாடாகச் சுத்தியால் அடித்
துச் செய்ய வேண்டும்.[e] **37** அதற்கு ஏழு அகல் விளக்குகளைச் செய்ய
வேண்டும். முன்பக்கமாக ஒளிவீசும் விதத்தில் அந்த விளக்குகளை ஏற்றி
வைக்க வேண்டும்.[f] **38** அதற்கான இடுக்கிகளும், தீய்ந்துபோன திரிகளை
எடுத்து வைப்பதற்கான கரண்டிகளும் சுத்தமான தங்கத்தால் செய்யப்பட
வேண்டும்.[g] **39** குத்துவிளக்கையும் இந்த எல்லா சாமான்களையும் ஒரு
தாலந்து* சுத்தமான தங்கத்தில் செய்ய வேண்டும். **40** மலையில் நான்
உனக்குக் காட்டிய மாதிரியின்படியே* ஒவ்வொன்றையும் செய்ய நீ கவன
மாக இருக்க வேண்டும்”[h] என்றார்.

26 பின்பு அவர், “வழிபாட்டுக் கூடாரத்தை[i] 10 விரிப்புகளால்
அமைக்க வேண்டும். உயர்தரமான திரித்த நாரிழை,* நீல நிற நூல்,
ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல் ஆகியவற்றால் இந்த விரிப்புக
ளைச் செய்ய வேண்டும். இந்த விரிப்புகள்மேல் கேருபீன்களின்[j] வடி
வத்தில் தையல்# வேலைப்பாடு செய்ய வேண்டும்.[k] **2** ஒவ்வொரு விரிப்
பும் 28 முழ* நீளத்திலும், 4 முழ அகலத்திலும் இருக்க வேண்டும்.
எல்லா விரிப்புகளும் ஒரே அளவில் இருக்க வேண்டும்.[l] **3** ஐந்து விரிப்பு
களை ஒன்றாகவும் மற்ற ஐந்து விரிப்புகளை ஒன்றாகவும் இணைக்க வேண்
டும். **4** இணைக்கப்பட்ட ஒரு விரிப்பின் ஓரத்தில் நீல நிற நூலால் காது
களை* தைக்க வேண்டும்; இணைக்கப்பட்ட மற்றொரு விரிப்பின் ஓரத்தி
லும் அதேபோல் காதுகளைத் தைக்க வேண்டும். இந்த இரண்டு விரிப்புக
ளையும் சேர்ப்பதற்காக இப்படிச் செய்ய வேண்டும். **5** ஒவ்வொரு விரிப்

25:31 *பூ இதழ்களின் அடியில் உள்ளதும் அவற்றைத் தாங்குவதுமான இலை போன்ற பகுதிகள். **25:39** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **25:40** *வே.வா., “வடிவத்திலேயே.” **26:1** *அதாவது, “லினன்.” #வே.வா., “எம்பிராய்டரி.” **26:2** *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **26:4** *அதாவது, “நூல் வளையங்களை.”

அதி. 25
a யாத் 37:16; எண் 4:7; 1ரா 7:48, 50
b லேவி 24:5, 6; 1சா 21:6; 1நா 9:32; 2நா 13:11; மத் 12:4
c யாத் 40:24; 1ரா 7:48, 49; எபி 9:2
d யாத் 37:17-24
e எண் 8:4
f யாத் 30:8; லேவி 24:2, 3; எண் 8:2; 2நா 13:11
g எண் 4:9
h யாத் 39:42; எண் 8:4; அப் 7:44; எபி 8:5

அதி. 26
i எபி 8:5; எபி 9:9, 11
j ஆதி 3:24; சங் 99:1
k யாத் 36:8-13
l எண் 4:25

அதி. 26
a யாத் 39: 33, 34

பிலும் 50 காதுகளைத் தைக்க வேண்டும். ஒரு விரிப்பிலுள்ள காதுகள்
மற்ற விரிப்பின் ஓரத்திலுள்ள காதுகளோடு இணையும்படி நேருக்கு நேர்
இருக்க வேண்டும். **6** தங்கத்தில் 50 கொக்கிகள் செய்து, அவற்றால் அந்த
இரண்டு விரிப்புகளையும் ஒன்றாக இணைக்க வேண்டும். அப்போது, முழு
கூடாரமும் ஒரே விரிப்பால் அமைக்கப்பட்டதாக இருக்கும்.[a]

7 வழிபாட்டுக் கூடாரத்தின் மேல் விரிப்பதற்கு வெள்ளாட்டு மயிரால்[b]
11 கம்பளிகளைச் செய்ய வேண்டும்.[c] **8** ஒவ்வொரு கம்பளியும் 30 முழ
நீளத்திலும், 4 முழ அகலத்திலும் இருக்க வேண்டும். 11 கம்பளிகளும் ஒரே
b யாத் 35:26
அளவில் இருக்க வேண்டும். **9** ஐந்து கம்பளிகளை ஒன்றாக இணைக்க
வேண்டும். மற்ற ஆறு கம்பளிகளை ஒன்றாக இணைக்க வேண்டும்.
ஆறாம் கம்பளியைக் கூடாரத்தின் முன்புறத்தில் பாதியாக மடித்துப் போட
வேண்டும். **10** இணைக்கப்பட்ட ஒரு கம்பளியின் ஓரத்தில் 50 காதுக
ளைத் தைக்க வேண்டும். இணைக்கப்பட்ட மற்றொரு கம்பளியின் ஓரத்தி
லும் 50 காதுகளைத் தைக்க வேண்டும். ஒரு கம்பளியின் காதுகள் மற்ற கம்
பளியின் காதுகளோடு இணையும்படி இருக்க வேண்டும். **11** செம்பினால்
c யாத் 36:14-18
50 கொக்கிகளைச் செய்து, அந்தக் கொக்கிகளால் காதுகளை இணைக்க
வேண்டும். அப்போது, முழு கூடாரத்துக்கும் ஒரே கம்பளி இருக்கும்.
12 நாரிழை விரிப்பைவிட நீளமாக இருக்கும் கம்பளியின் பகுதி தொங்க
விடப்பட வேண்டும். அதாவது, வழிபாட்டுக் கூடாரத்தின் பின்பக்கத்தில்
அது இரண்டு முழத்துக்கு தொங்கவிடப்பட வேண்டும். **13** வழிபாட்டுக்
கூடாரத்தின் இரண்டு பக்கங்களிலும் நீண்டிருக்கும் ஒரு முழப் பகுதியும்
d யாத் 36:19
அப்படியே தொங்கவிடப்பட வேண்டும். அவை கூடாரத்தின் இரண்டு பக்
கங்களையும் மூட வேண்டும்.

14 அதோடு, கம்பளிமேல் போடுவதற்கு சிவப்புச் சாயம் போட்ட செம்
மறியாட்டுக் கடாத் தோலினால் ஒரு விரிப்பைச் செய்ய வேண்டும். அதன்
மேல் போடுவதற்கு கடல்நாய்த் தோலினால் ஒரு விரிப்பைச் செய்ய
வேண்டும்.[d]

e யாத் 36: 20-23; எண் 4:29, 31
15 வழிபாட்டுக் கூடாரத்துக்காக வேல மரத்தால் செங்குத்தான சட்டங்
களை* செய்ய வேண்டும்.[e] **16** ஒவ்வொரு சட்டமும் 10 முழ உயர
மும், ஒன்றரை முழ அகலமுமாக இருக்க வேண்டும். **17** ஒவ்வொரு
சட்டத்தின் அடிபாகத்திலும் இரண்டு புடைப்புகள்* அடுத்தடுத்து இருக்க
வேண்டும். வழிபாட்டுக் கூடாரத்துக்கான எல்லா சட்டங்களையும் இப்படித்
தான் செய்ய வேண்டும். **18** வழிபாட்டுக் கூடாரத்தின் தெற்குப் பக்கத்தில்
நிறுத்துவதற்காக 20 சட்டங்கள் செய்ய வேண்டும்.

19 அந்த 20 சட்டங்களின் கீழே வைப்பதற்காக 40 வெள்ளிப் பாதங்
களை*[f] செய்ய வேண்டும்; ஒரு சட்டத்திலுள்ள இரண்டு புடைப்புக
f எண் 3:36
ளுக்காக இரண்டு பாதங்கள் என ஒவ்வொரு சட்டத்துக்குக் கீழேயும்
பாதங்களை வைக்க வேண்டும்.[g] **20** வழிபாட்டுக் கூடாரத்தின் இன்
னொரு பக்கத்துக்காக, அதாவது வடக்குப் பக்கத்துக்காக, 20 சட்டங்களை
யும், **21** அவற்றுக்காக 40 வெள்ளிப் பாதங்களையும் செய்ய வேண்டும்.
ஒரு சட்டத்துக்குக் கீழே இரண்டு பாதங்கள் என ஒவ்வொரு சட்டத்துக்குக்

26:15 *இவை செங்கோண வடிவ சட்டங்கள். **26:17** *வே.வா., "கால்கள்." **26:19** *அதாவது, "சட்டங்களின் புடைப்பான பகுதிகளைப் பொருத்துவதற்கு ஏற்ற குழிகள் கொண்ட அடிபீடங்கள்."

g யாத் 36: 24-26

கீழேயும் இரண்டு பாதங்களை வைக்க வேண்டும். **22** வழிபாட்டுக் கூடா
ரத்தின் பின்பக்கத்துக்காக, அதாவது மேற்குப் பக்கத்துக்காக, ஆறு சட்
டங்களைச் செய்ய வேண்டும்.[a] **23** வழிபாட்டுக் கூடாரத்தின் பின்பக்கத்
திலுள்ள இரண்டு மூலைகளுக்கும் இரண்டு மூலைச்சட்டங்களைச் செய்ய
வேண்டும். **24** ஒவ்வொரு மூலைச்சட்டத்துக்கும் இரண்டு கட்டைகளைக்
கூம்பு வடிவத்தில் வைத்து, முதல் வளையம் இருக்கிற இடத்தில்
இணைக்க வேண்டும். கூடாரத்தின் இரண்டு பக்கத்திலுள்ள மூலைச்சட்டங்
களையும் இப்படித்தான் செய்ய வேண்டும். **25** ஒரு சட்டத்துக்குக் கீழே
இரண்டு பாதங்கள் என ஒவ்வொரு சட்டத்துக்குக் கீழேயும் இரண்டிரண்டு
பாதங்கள் இருக்க வேண்டும். அதாவது, 8 சட்டங்களுக்கு 16 வெள்ளிப்
பாதங்கள் இருக்க வேண்டும்.

26 வேல மரத்தால் கம்புகளைச் செய்ய வேண்டும். வழிபாட்டுக் கூடாரத்
தின் ஒரு பக்கத்திலுள்ள சட்டங்களை இணைப்பதற்காக ஐந்து கம்புகளைச்
செய்ய வேண்டும்.[b] **27** வழிபாட்டுக் கூடாரத்தின் மற்ற பக்கத்திலுள்ள சட்
டங்களை இணைப்பதற்காக ஐந்து கம்புகளைச் செய்ய வேண்டும். வழிபாட்
டுக் கூடாரத்தின் பின்பக்கத்துக்காக, அதாவது மேற்குப் பக்கத்துக்காக, ஐந்து
கம்புகளைச் செய்ய வேண்டும். **28** சட்டங்களை இணைப்பதற்காக அவற்
றின் நடுப்பகுதியில் செருகப்படும் கம்பு, ஒரு முனையிலிருந்து இன்னொரு
முனைவரை ஒரே கம்பாக இருக்க வேண்டும்.

29 சட்டங்களுக்குத் தங்கத்தால் தகடு அடிக்க வேண்டும்.[c] கம்புகளைச்
செருகுவதற்கான வளையங்களைத் தங்கத்தில் செய்ய வேண்டும். கம்புக
ளுக்கும் தங்கத் தகடு அடிக்க வேண்டும். **30** மலையில் உனக்குக் காட்டப்
பட்ட மாதிரியின்படியே* வழிபாட்டுக் கூடாரத்தைச் செய்ய வேண்டும்.[d]

31 நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தரமான
திரித்த நாரிழை ஆகியவற்றால் ஒரு திரைச்சீலையைச்[e] செய்ய வேண்டும்.
அதன்மேல் கேருபீன்களின் வடிவத்தில் தையல்* வேலைப்பாடு செய்ய
வேண்டும். **32** வேல மரத்தால் செய்யப்பட்டு, தங்கத்தால் தகடு அடிக்கப்
பட்ட நான்கு தூண்களில் இந்தத் திரைச்சீலையைத் தொங்கவிட வேண்டும்.
அவற்றின் கொக்கிகளைத் தங்கத்தில் செய்ய வேண்டும். வெள்ளியில் செய்
யப்பட்ட நான்கு பாதங்களின் மேல் இந்தத் தூண்களை நிறுத்த வேண்டும்.
33 இந்தத் திரைச்சீலையைக் கூடார விரிப்புகள் இணைக்கப்பட்ட கொக்கி
களுக்குக் கீழே மாட்ட வேண்டும். திரைச்சீலைக்கு உள்பக்கம் சாட்சிப் பெட்
டியை[f] வைக்க வேண்டும். இந்தத் திரைச்சீலை பரிசுத்த அறையையும்[g] மகா
பரிசுத்த அறையையும்[h] பிரிக்கும். **34** சாட்சிப் பெட்டிக்கு மூடி போட்டு,
அதை மகா பரிசுத்த அறையில் வைக்க வேண்டும்.

35 திரைச்சீலைக்கு வெளிப்பக்கம் மேஜையை வைக்க வேண்டும். வழி
பாட்டுக் கூடாரத்தின் தெற்குப் பக்கத்தில், மேஜைக்கு எதிரில் குத்துவி
ளக்கை வைக்க வேண்டும்.[i] மேஜையை வடக்குப் பக்கத்தில் வைக்க
வேண்டும். **36** வழிபாட்டுக் கூடாரத்தின் நுழைவாசலுக்காக நீல நிற நூல்,
ஊதா நிற கம்பளி, கருஞ்சிவப்பு நூல், உயர்தரமான திரித்த நாரிழை ஆகிய
வற்றால் ஒரு திரையை நெய்ய வேண்டும்.[j] **37** திரையைத் தொங்கவிடுவ
தற்காக வேல மரத்தில் ஐந்து தூண்களைச் செய்து அவற்றுக்குத் தங்கத் தகடு

26:30 * வே.வா., "வடிவத்திலேயே." **26:31** * வே.வா., "எம்பிராய்டரி."

அதி. 26
a யாத் 36:27-30
b யாத் 36:31-33
c யாத் 12:35, 36; யாத் 36:34
d யாத் 19:3; யாத் 25:9; அப் 7:44; எபி 8:5
e யாத் 36:35, 36; லூ 23:45; எபி 6:19; எபி 9:3; எபி 10:19, 20
f 1ரா 8:6
g யாத் 40:22, 26
h யாத் 40:21; லேவி 16:2; 1ரா 8:6; எபி 9:2-4; எபி 9:12, 24
i லேவி 24:2, 3; 1ரா 7:48, 49
j யாத் 36:37, 38

அடிக்க வேண்டும். அவற்றின் கொக்கிகளைத் தங்கத்தில் செய்ய வேண்டும்.
அவற்றுக்காக, செம்பில் ஐந்து பாதங்களை வார்க்க வேண்டும்” என்றார்.

27 பின்பு அவர், “வேல மரத்தால் ஒரு பலிபீடத்தை நீ செய்ய வேண்
டும்.[a] அதன் நீளம் ஐந்து முழமும்,* அகலம் ஐந்து முழமும், உய
ரம் மூன்று முழமுமாக இருக்க வேண்டும். அது சதுரமாக இருக்க வேண்
டும்.[b] **2** அதன் நான்கு மூலைகளிலும் கொம்புகள்[c] வைக்க வேண்டும்.
அந்தக் கொம்புகள் பலிபீடத்துடன் இணைந்தபடி இருக்க வேண்டும். பலி
பீடத்துக்கு செம்பினால் தகடு அடிக்க வேண்டும்.[d] **3** பலிபீடத்துக்கான
கிண்ணங்களையும், முள்கரண்டிகளையும், சாம்பல் அள்ளும் வாளிகளை
யும் கரண்டிகளையும், தணல் அள்ளும் கரண்டிகளையும் செய்ய வேண்
டும். அதன் பாத்திரங்கள் எல்லாவற்றையும் செம்பினால் செய்ய வேண்
டும்.[e] **4** பலிபீடத்துக்காக செம்பினால் ஒரு கம்பிவலையைச் செய்ய
வேண்டும். அந்தக் கம்பிவலைக்கு மேலாக நான்கு மூலைகளிலும் நான்கு
செம்பு வளையங்களைப் பொருத்த வேண்டும். **5** அந்தக் கம்பிவலை
யைப் பலிபீடத்தின் விளிம்புக்குக் கீழே பாதி உயரத்தில் செருகி வைக்க
வேண்டும். **6** பலிபீடத்துக்காக வேல மரத்தால் கம்புகள் செய்து, அவற்
றுக்குச் செம்பினால் தகடு அடிக்க வேண்டும். **7** பலிபீடத்தைத் தூக்கிக்
கொண்டு போவதற்காக அதன் இரண்டு பக்கங்களிலும் இருக்கிற வளை
யங்களில் இந்தக் கம்புகளைச் செருகி வைக்க வேண்டும்.[f] **8** நான்கு பக்
கங்களிலும் பலகைகள் அடித்து, கீழேயும் மேலேயும் திறந்திருக்கிறபடி இந்
தப் பலிபீடத்தைச் செய்ய வேண்டும். மலையில் நான் உனக்குக் காட்டிய
மாதிரியின்படியே* அதைச் செய்ய வேண்டும்.[g]

9 வழிபாட்டுக் கூடாரத்துக்குப் பிரகாரத்தையும்[h] அமைக்க வேண்
டும். பிரகாரத்தின் தெற்குப் பக்கத்துக்காக, உயர்தரமான திரித்த நாரிழை
யில்* மறைப்புகளைச் செய்ய வேண்டும். இவற்றின் நீளம் 100 முழ
மாக இருக்க வேண்டும்.[i] **10** பின்பு, 20 செம்புப் பாதங்களின் மேல் 20 கம்
பங்களை நிறுத்த வேண்டும். கம்பங்களுக்காக வெள்ளியால் கொக்கிகளை
யும் இணைப்புகளையும்* செய்ய வேண்டும். **11** வடக்குப் பக்கத்துக்கான
மறைப்புகளையும் 100 முழத்தில் செய்ய வேண்டும். அதோடு, 20 செம்புப்
பாதங்களின் மேல் 20 கம்பங்களை நிறுத்த வேண்டும். கம்பங்களுக்காக
வெள்ளியால் கொக்கிகளையும் இணைப்புகளையும் செய்ய வேண்டும்.
12 பிரகாரத்தின் மேற்குப் பக்கத்துக்காக, 50 முழ அகலத்துக்கு மறைப்புக
ளைச் செய்ய வேண்டும். அவற்றுக்கு 10 கம்பங்களையும் 10 பாதங்களை
யும் செய்ய வேண்டும். **13** சூரியன் உதிக்கிற கிழக்குப் பக்கத்தில் பிர
காரத்தின் அகலம் 50 முழமாக இருக்க வேண்டும். **14** அதன் ஒரு பக்
கத்தில் 15 முழத்துக்கு மறைப்புகள் இருக்க வேண்டும். அவற்றுக்கு மூன்று
கம்பங்களும் மூன்று பாதங்களும் இருக்க வேண்டும்.[j] **15** அதன் இன்
னொரு பக்கத்தில் 15 முழத்துக்கு மறைப்புகள் இருக்க வேண்டும். அவற்
றுக்கு மூன்று கம்பங்களும் மூன்று பாதங்களும் இருக்க வேண்டும்.

16 பிரகார நுழைவாசலில் ஒரு திரையைத் தொங்கவிட வேண்டும். நீல
நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தரமான திரித்த

அதி. 27
a யாத் 40:29, 2நா 4:1, எபி 13:10
b யாத் 38:1-7
c லேவி 4:25
d 1ரா 8:64
e 1ரா 7:45
f எண் 4:14, 15
g யாத் 25:40, 1நா 28:12, அப் 7:44, எபி 8:5
h யாத் 40:8, 1ரா 6:36
i யாத் 38:9-15
j யாத் 39:33, 40

27:1 *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **27:8** *வே.வா., “வடிவத்திலேயே.” **27:9** *அதாவது, “லினனில்.” **27:10** *வே.வா., “வளையங்களையும்.”

நாரிழை[a] ஆகியவற்றால் 20 முழ நீளத்துக்கு அதைச் செய்ய வேண்
டும். அதற்கு நான்கு கம்பங்களையும் நான்கு பாதங்களையும் செய்ய
வேண்டும்.[b] **17** பிரகாரத்தைச் சுற்றியுள்ள எல்லா கம்பங்களுக்கும்
வெள்ளி இணைப்புகளையும் வெள்ளிக் கொக்கிகளையும் செய்ய வேண்
டும். ஆனால், அவற்றின் பாதங்களைச் செம்பினால் செய்ய வேண்டும்.[c]
18 உயர்தரமான திரித்த நாரிழையில் 100 முழ நீளத்திலும்,[d] 50 முழ அக
லத்திலும், 5 முழ உயரத்திலும் பிரகாரத்துக்குத் தடுப்பு அமைக்க வேண்
டும். அதன் பாதங்களைச் செம்பினால் செய்ய வேண்டும். **19** வழிபாட்
டுக் கூடாரத்தில் பயன்படுத்தப்படும் எல்லா பாத்திரங்களையும், பொருள்க
ளையும், கூடார ஆணிகளையும், பிரகாரத்துக்கான மற்ற எல்லா ஆணிக
ளையும் செம்பினால் செய்ய வேண்டும்.[e]

20 விளக்குகள் தொடர்ந்து எரிவதற்காக, இடித்துப் பிழிந்த சுத்தமான
ஒலிவ எண்ணெயைக் கொண்டுவரும்படி நீ இஸ்ரவேலர்களுக்குக் கட்
டளை கொடுக்க வேண்டும்.[f] **21** சந்திப்புக் கூடாரத்தில், சாட்சிப் பெட்டிக்
குப் பக்கத்தில் உள்ள திரைச்சீலைக்கு[g] வெளியே அந்த விளக்குகள் எரிந்து
கொண்டிருக்க வேண்டும். அவை சாயங்காலத்திலிருந்து காலைவரை
யெகோவாவின் முன்னிலையில் எரியும்படி ஆரோனும் அவருடைய மகன்
களும் பார்த்துக்கொள்ள வேண்டும்.[h] இஸ்ரவேலர்கள் தலைமுறை தலைமு
றையாகக் கடைப்பிடிக்க வேண்டிய சட்டம் இது"[i] என்றார்.

28 பின்பு அவர், "இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து உன் அண்ணன்
ஆரோனையும்[j] அவனுடைய மகன்களான[k] நாதாப், அபியூ,[l]
எலெயாசார், இத்தாமார்[m] ஆகியவர்களையும் கூப்பிட்டுக்கொண்டு வா.
அவர்கள் எனக்குக் குருமார்களாகச் சேவை செய்வார்கள்.[n] **2** உன் சகோ
தரன் ஆரோனுக்கு மதிப்பும் அழகும்[o] சேர்க்கிற பரிசுத்த உடைகளை நீ
செய்ய வேண்டும். **3** நான் யாருக்கெல்லாம் ஞானமும் திறமையும் தந்தி
ருக்கிறேனோ அவர்கள் எல்லாரிடமும் பேசி ஆரோனுக்காக உடைகளைச்
செய்யச் சொல்.[p] குருத்துவச் சேவை செய்வதற்காக ஆரோன் புனிதமாக்
கப்பட்டிருப்பதை அந்த உடைகள் காட்டும்.

4 அவர்கள் செய்ய வேண்டிய உடைகள் இவைதான்: மார்ப்பதக்கம்,[q]
ஏபோத்,[r] கையில்லாத அங்கி,[s] கட்டம்போட்ட அங்கி, தலைப்பாகை,[t]
இடுப்புக்கச்சை.[u] உன் அண்ணன் ஆரோனும் அவனுடைய மகன்களும்
எனக்குக் குருத்துவச் சேவை செய்வதற்காக இந்தப் பரிசுத்த உடை
களை அவர்கள் செய்ய வேண்டும். **5** தங்கம், நீல நிற நூல், ஊதா நிற
கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தர நாரிழை* ஆகியவற்றால் செய்ய
வேண்டும்.

6 தங்கம், நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல்,
உயர்தரமான திரித்த நாரிழை ஆகியவற்றால் அவர்கள் ஏபோத்தைச்
செய்து, அதில் தையல்* வேலைப்பாடு செய்ய வேண்டும்.[v] **7** ஏபோத்
துக்கு இரண்டு தோள்பட்டைகள் செய்து, அவற்றை இரண்டு பக்கங்களிலும்
இணைக்க வேண்டும். **8** ஏபோத்தை இழுத்துக் கட்டுவதற்காக அதனு
டன் இடுப்புப்பட்டையை[w] இணைக்க வேண்டும். ஏபோத்தைப் போலவே
இந்த இடுப்புப்பட்டையையும் தங்கம், நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல்,

28:5 * அதாவது, "லினன்." **28:6** * வே.வா., "எம்பிராய்டரி."

அதி. 27
a யாத் 35:25
b யாத் 38:18, 19
c யாத் 38:17
d யாத் 27:9
e யாத் 38:20
எண் 3:36, 37
f யாத் 39:33, 37
லேவி 24:1-3
g யாத் 26:33
யாத் 40:3
எபி 9:2, 3
h யாத் 30:8
i எண் 18:23

அதி. 28
j எபி 5:4
k யாத் 6:23
1நா 6:3
l லேவி 10:1
எண் 26:61
m யாத் 38:21
லேவி 10:16
1நா 24:2
n லேவி 8:2
எபி 5:1
o யாத் 29:5
லேவி 8:7
p யாத் 31:6
யாத் 36:1
q யாத் 39:8, 15
லேவி 8:8
r யாத் 39:2
s யாத் 39:22
t யாத் 39:27, 28
யாத் 39:30, 31
லேவி 8:9
u யாத் 39:27, 29
லேவி 8:7
v யாத் 39:2-5
w யாத் 29:5

அதி. 28
a யாத் 35:5, 9
யாத் 35:27
b யாத் 1:1-4
c யாத் 39:6, 14
d யாத் 39:7
e யாத் 39:15
f யாத் 39:18
g யாத் 28:30
லேவி 8:8
எண் 27:21
h யாத் 39:8-14
i யாத் 39:15-18

கருஞ்சிவப்பு நூல், உயர்தரமான திரித்த நாரிழை ஆகியவற்றால் செய்ய வேண்டும்.

9 இரண்டு கோமேதகக் கற்களை எடுத்து,[a] அவற்றில் இஸ்ரவேலின் மகன்களுடைய பெயர்களைப் பொறிக்க வேண்டும்.[b] **10** ஒரு கல்லில் ஆறு பெயர்களையும் இன்னொரு கல்லில் ஆறு பெயர்களையும் பொறிக்க வேண்டும். அவர்கள் பிறந்த வரிசையின்படியே அந்தப் பெயர்களைப் பொறிக்க வேண்டும். **11** செதுக்கு வேலை செய்கிற ஒருவர் இஸ்ரவேலின் மகன்களுடைய பெயர்களை அந்த இரண்டு கற்களிலும் முத்திரையைப் போலப் பொறிக்க வேண்டும்.[c] பின்பு, அந்தக் கற்களைத் தங்க வில்லைகளில் பதிக்க வேண்டும். **12** இஸ்ரவேலின் மகன்களுடைய நினைவுக் கற்களாக இருக்கும்படி, அந்த இரண்டு கற்களை ஏபோத்தின் தோள்பட்டைகளில் பொருத்த வேண்டும்.[d] அவர்களுடைய பெயர்களை ஆரோன் தன்னுடைய இரண்டு தோள்பட்டைகளிலும் நினைவுச் சின்னமாக யெகோவாவின் முன்னிலையில் சுமக்க வேண்டும். **13** தங்கத்தில் வில்லைகளையும், **14** சுத்தமான தங்கத்தில் இரண்டு முறுக்குச் சங்கிலிகளையும் செய்ய வேண்டும்.[e] அந்த முறுக்குச் சங்கிலிகளை வில்லைகளுடன் இணைக்க வேண்டும்.[f]

15 தையல் வேலைப்பாடு செய்கிறவரை வைத்து நியாயத்தீர்ப்பு மார்ப்பதக்கத்தைச் செய்ய வேண்டும்.[g] ஏபோத்தைப் போலவே இதையும் தங்கம், நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தரமான திரித்த நாரிழை ஆகியவற்றால் செய்ய வேண்டும்.[h] **16** இரண்டாக மடிக்கும்போது அது சதுரமாக, ஒரு சாண்* நீளத்திலும் ஒரு சாண் அகலத்திலும் இருக்க வேண்டும். **17** அதில் நான்கு வரிசையாகக் கற்களைப் பதிக்க வேண்டும். முதலாம் வரிசையில் மாணிக்கம், புஷ்பராகம், மரகதம் ஆகியவற்றைப் பதிக்க வேண்டும். **18** இரண்டாம் வரிசையில் நீலபச்சைக் கல், நீலமணிக் கல், சூரியகாந்தக் கல் ஆகியவற்றைப் பதிக்க வேண்டும். **19** மூன்றாம் வரிசையில் கெம்புக் கல்,* வைடூரியம், செவ்வந்திக் கல் ஆகியவற்றைப் பதிக்க வேண்டும். **20** நான்காம் வரிசையில் படிகப்பச்சை, கோமேதகம், பச்சைக் கல் ஆகியவற்றைப் பதிக்க வேண்டும். இவற்றைத் தங்க வில்லைகளில் பதிக்க வேண்டும். **21** இந்த 12 கற்களும் இஸ்ரவேலின் மகன்களுடைய 12 பெயர்களின்படி இருக்க வேண்டும். ஒவ்வொரு கல்லிலும் ஒவ்வொரு பெயர் என 12 கோத்திரங்களின் பெயர்களும் முத்திரையாகப் பொறிக்கப்பட வேண்டும்.

22 மார்ப்பதக்கத்துக்காகச் சுத்தமான தங்கத்தில் முறுக்குச் சங்கிலிகள் செய்ய வேண்டும்.[i] **23** அதோடு, இரண்டு தங்க வளையங்களைச் செய்து, அவற்றை மார்ப்பதக்கத்தின் இரண்டு மேல்முனைகளிலும் பொருத்த வேண்டும். **24** இரண்டு தங்க முறுக்குச் சங்கிலிகளையும் மார்ப்பதக்கத்தின் மேல்முனைகளில் இருக்கிற இரண்டு வளையங்களில் மாட்ட வேண்டும். **25** அந்த இரண்டு முறுக்குச் சங்கிலிகளின் மற்ற இரண்டு முனைகளையும், ஏபோத்தின் முன்பக்கத் தோள்பட்டைகளில் இருக்கிற இரண்டு வில்லைகளில் பொருத்த வேண்டும். **26** தங்கத்தில் இன்னும் இரண்டு வளையங்கள் செய்து, அவற்றை மார்ப்பதக்கத்தின் உள்பக்கத்திலுள்ள

28:16 * இணைப்பு B14-ஐப் பாருங்கள். **28:19** * எபிரெயுவில், "லேசேம்." இது உண்மையில் எந்தக் கல் என்பது தெரியவில்லை.

இரண்டு கீழ் முனைகளில் பொருத்த வேண்டும். இவை ஏபோத்தைத் தொட்
டபடி இருக்கும்.[a] **27** தங்கத்தில் இன்னும் இரண்டு வளையங்கள்
செய்து அவற்றை ஏபோத்தின் முன்பக்கத் தோள்பட்டைகளின் கீழே,
அது இணைக்கப்பட்டுள்ள இடத்துக்குப் பக்கத்தில், ஏபோத்தின் இடுப்புப்
பட்டைக்குக் கொஞ்சம் மேலே பொருத்த வேண்டும்.[b] **28** மார்ப்பதக்கத்
தின் வளையங்களை ஏபோத்தின் வளையங்களோடு நீல நிற நாடாவால்
இணைக்க வேண்டும். அப்போதுதான், மார்ப்பதக்கம் இடுப்புப்பட்டைக்கு
மேலேயே, ஏபோத்தின் மேல் அசையாமல் நிற்கும்.

29 ஆரோன் பரிசுத்த அறைக்குள் போகும்போது நியாயத்தீர்ப்பு மார்ப்
பதக்கத்தைப் போட்டுக்கொள்ள வேண்டும். இஸ்ரவேலின் மகன்களு
டைய பெயர்களை யெகோவாவின் முன்னிலையில் நினைவுச் சின்ன
மாக எப்போதும் நெஞ்சில் சுமந்துகொண்டு போக வேண்டும். **30** நியா
யத்தீர்ப்பு மார்ப்பதக்கத்தில் ஊரீமையும் தும்மீமையும்*[c] நீ வைக்க வேண்
டும். யெகோவாவின் முன்னிலையில் ஆரோன் வரும்போது அவை அவர்
நெஞ்சுக்கு மேலே இருக்க வேண்டும். இஸ்ரவேலர்களுக்குத் தீர்ப்பு சொல்
வதற்காக ஆரோன் அவற்றை யெகோவாவின் முன்னால் எப்போதும் தன்
நெஞ்சுக்கு மேலே சுமக்க வேண்டும்.

31 ஏபோத்துக்கு உள்ளே போடுவதற்காகக் கையில்லாத ஒரு அங்
கியை முழுக்க முழுக்க நீல நிற நூலால் செய்ய வேண்டும்.[d] **32** அதன்
நடுவில் கழுத்துப் பகுதியை அமைக்க வேண்டும். அந்தக் கழுத்துப்
பகுதியைச் சுற்றிலும் ஒரு பட்டிபோல் நெசவாளர் நெய்ய வேண்டும்.
அது உடல்கவசத்தின் கழுத்துப் பகுதியைப் போல் இருக்க வேண்டும்;
அப்போதுதான், அது கிழியாமல் இருக்கும். **33** நீல நிற நூல், ஊதா நிற
கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல் ஆகியவற்றால் மாதுளம்பழங்கள்
போல செய்து, அவற்றை அந்த அங்கியின் கீழ்மடிப்பைச் சுற்றிலும் வைத்
துத் தைக்க வேண்டும். தங்கத்தில் மணிகள்போல் செய்து இடையிடையே
வைத்துத் தைக்க வேண்டும். **34** ஒரு தங்க மணி, ஒரு மாதுளம்பழம், ஒரு
தங்க மணி, ஒரு மாதுளம்பழம் என அந்த அங்கியின் கீழ்மடிப்பைச் சுற்றி
லும் வைத்துத் தைக்க வேண்டும். **35** குருத்துவச் சேவை செய்யும்போது
ஆரோன் இந்த அங்கியைப் போட்டிருக்க வேண்டும். அவன் வழிபாட்டுக்
கூடாரத்துக்குள்ளே யெகோவாவின் முன்னிலையில் போகும்போதும் சரி,
வரும்போதும் சரி, அந்த மணிகளின் ஓசை கேட்க வேண்டும். இல்லாவிட்
டால், அவன் கொல்லப்படுவான்.[e]

36 சுத்தமான தங்கத்தில் பளபளப்பான ஒரு தகடு செய்து, ஒரு முத்
திரை பொறிப்பது போல அதில், 'யெகோவா பரிசுத்தமே உருவானவர்'*[f]
என்று பொறிக்க வேண்டும். **37** அந்தத் தகட்டை நீல நிற நாடாவினால்
தலைப்பாகையில் கட்ட வேண்டும்.[g] அது எப்போதும் தலைப்பாகையின்
முன்பக்கம் இருக்க வேண்டும். **38** அது ஆரோனின் நெற்றிமேல்
இருக்க வேண்டும். இஸ்ரவேலர்கள் கடவுளுக்கு அர்ப்பணிக்கிற பரிசுத்த
மான காணிக்கைகளின் விஷயத்தில் யாராவது பாவம் செய்தால், அதற்கு
ஆரோன் பொறுப்பேற்க வேண்டும்.[h] ஜனங்களை யெகோவா ஏற்றுக்

28:30 * சொல் பட்டியலைப் பாருங்கள். **28:36** * நே.மொ., "பரிசுத்தம் யெகோவாவு
டையது."

அதி. 28
a யாத் 39:19-21
b யாத் 28:8
லேவி 8:7
c லேவி 8:8
எண் 27:21
உபா 33:8
1சா 28:6
எஸ்றா 2:
62, 63
d யாத் 39:
22-26
லேவி 8:7
e லேவி 16:2
எண் 18:7
f யாத் 39:30, 31
லேவி 8:9
1நா 16:29
சங் 93:5
1பே 1:16
g யாத் 29:6
h லேவி 22:9
எண் 18:1

கொள்ள வேண்டும் என்றால், ஆரோன் எப்போதும் தன் நெற்றியில்
அந்தத் தகட்டைக் கட்டியிருக்க வேண்டும்.

39 கட்டம்போட்ட அங்கியையும் தலைப்பாகையையும் உயர்தர நாரி
ழையால் நெய்ய வேண்டும். அதோடு, இடுப்புக்கச்சையையும் நெய்ய
வேண்டும்.[a]

40 ஆரோனின் மகன்களுக்கு மதிப்பும் அழகும் சேர்க்கிற அங்கிகளை
யும், இடுப்புக்கச்சைகளையும், முண்டாசுகளையும்கூட நீ செய்ய வேண்டும்.[b]
41 உன் அண்ணன் ஆரோனுக்கும் அவனுடைய மகன்களுக்கும் அவற்றை
நீ போட்டுவிட வேண்டும். அவர்களை அபிஷேகம் செய்து,[c] புனிதப்ப
டுத்தி, குருமார்களாக நியமிக்க[d] வேண்டும். **42** அவர்களுடைய அந்த
ரங்க உறுப்புகளை மறைப்பதற்காக நாரிழையில் கால்சட்டைகளைச் செய்ய
வேண்டும்.[e] அவை இடுப்பிலிருந்து தொடைவரை நீண்டதாக இருக்க
வேண்டும். **43** ஆரோனும் அவனுடைய மகன்களும் சந்திப்புக் கூடாரத்
துக்கு வரும்போதும், பரிசுத்த இடத்திலுள்ள பலிபீடத்தில் சேவை செய்ய
வரும்போதும் அந்தக் கால்சட்டையைப் போட்டிருக்க வேண்டும். இல்லா
விட்டால், அந்தக் குற்றத்துக்காக அவர்கள் சாவார்கள். அவருக்கும் அவரு
டைய வருங்காலச் சந்ததிக்கும் இது நிரந்தரச் சட்டமாக இருக்கும்” என்றார்.

29 பின்பு அவர், “எனக்குக் குருத்துவச் சேவை செய்வதற்காக நீ அவர்
களைப் புனிதப்படுத்த வேண்டும். அதற்காக நீ செய்ய வேண்டி
யது இதுதான்: ஒரு இளம் காளையையும் எந்தக் குறையும் இல்லாத இரண்டு
செம்மறியாட்டுக் கடாக்களையும் தேர்ந்தெடு.[f] **2** நைசான கோதுமை
மாவில் புளிப்பில்லாத ரொட்டிகளையும், எண்ணெயில் பிசைந்து சுடப்பட்ட
புளிப்பில்லாத வட்ட ரொட்டிகளையும், எண்ணெய் தடவிய மெல்லிய ரொட்
டிகளையும்[g] செய்து, **3** ஒரு கூடையில் எடுத்துக்கொண்டு வா.[h] அதோடு,
நீ தேர்ந்தெடுத்த காளையையும் இரண்டு செம்மறியாட்டுக் கடாக்களையும்
கொண்டுவா.

4 ஆரோனையும் அவனுடைய மகன்களையும் சந்திப்புக் கூடாரத்
தின்[i] வாசலுக்குக் கூட்டிக்கொண்டு வந்து, குளிக்க வை.*[j] **5** பின்பு கட்
டம்போட்ட அங்கியையும், கையில்லாத உள்ளங்கியையும், ஏபோத்தையும்,
மார்ப்பதக்கத்தையும் எடுத்து வந்து ஆரோனுக்குப் போட்டுவிடு. ஏபோத்
தின் இடுப்புப்பட்டையைக் கட்டிவிடு.[k] **6** தலைப்பாகையை அவன் தலை
யில் வை. அதன்மேல் அர்ப்பணிப்பின் பரிசுத்த அடையாளத்தைக் கட்டி
விடு.*[l] **7** அபிஷேகத் தைலத்தை[m] அவன் தலையில் ஊற்றி அபிஷே
கம் செய்.[n]

8 பின்பு, அவனுடைய மகன்களைக் கூட்டிக்கொண்டு வந்து அவர்
களுக்கும் அங்கிகளைப் போட்டுவிடு.[o] **9** ஆரோனுக்கும் அவனுடைய
மகன்களுக்கும் இடுப்பில் கச்சையைக் கட்டிவிடு. அவர்களுடைய தலை
யில் முண்டாசையும் கட்டிவிடு. அவர்கள்தான் குருமார்களாக இருப்பார்
கள், என்றென்றும் இதுதான் என் சட்டம்.[p] எனக்குக் குருத்துவச் சேவை
செய்வதற்காக ஆரோனையும் அவனுடைய மகன்களையும் இப்படித்தான்
நீ நியமிக்க வேண்டும்.[q]

29:4 * ஒருவேளை, “குளிக்கச் சொல்.” **29:6** * அதாவது, “அதன்மேல் பரிசுத்த மகு
டத்தை வை.”

அதி. 28
a யாத் 28:4, யாத் 39:27-29
b யாத் 28:2, லேவி 8:13
c யாத் 29:4, 7, யாத் 30:30, அப் 10:38, 2கொ 1:21
d யாத் 29:8, 9, லேவி 8:33, எண் 3:2, 3
e லேவி 6:10

அதி. 29
f லேவி 8:2, உபா 17:1
g லேவி 6:20
h லேவி 8:26
i யாத் 26:36, யாத் 40:28, லேவி 8:2, 3
j லேவி 8:6, எபி 10:22
k யாத் 28:4, யாத் 28:8, லேவி 8:7, லேவி 16:4
l யாத் 28:36, யாத் 39:30, லேவி 8:9
m யாத் 30:23-25
n லேவி 8:12, சங் 133:2, ஏசா 61:1, அப் 10:38
o யாத் 28:40, லேவி 8:13
p யாத் 28:1-3, யாத் 28:40, 43, யாத் 40:15
q யாத் 28:41

10 பின்பு, சந்திப்புக் கூடாரத்துக்கு முன்பு காளையைக் கொண்டுவா.
ஆரோனும் அவனுடைய மகன்களும் அந்தக் காளையின் தலைமேல்
தங்கள் கைகளை வைக்க வேண்டும்.[a] **11** சந்திப்புக் கூடாரத்தின் வாசலில்,
யெகோவாவின் முன்னிலையில் அந்தக் காளையை வெட்டு.[b] **12** காளை
யின் இரத்தத்தை உன் விரல்களில் தொட்டு பலிபீடத்தின் கொம்புகள்மேல்
பூசு.[c] மீதமுள்ள இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிடு.[d]
13 அதன் குடல்களைச் சுற்றியுள்ள எல்லா கொழுப்பையும்[e] கல்லீரலின்
மேலுள்ள சவ்வையும் இரண்டு சிறுநீரகங்களையும் அவற்றின் மேலுள்ள
கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின் மேல் எரித்துவிடு.[f] **14** ஆனால்,
காளையின் சதையையும் தோலையும் சாணத்தையும் முகாமுக்கு
வெளியே கொண்டுபோய்ச் சுட்டெரித்துவிடு. இந்தக் காளைதான் பாவப் பரி
கார பலி.

15 பின்பு, அந்தச் செம்மறியாட்டுக் கடாக்களில் ஒன்றைக் கொண்டுவா.
அதன் தலைமேல் ஆரோனும் அவனுடைய மகன்களும் கைகளை வைக்க
வேண்டும்.[g] **16** நீ அந்தச் செம்மறியாட்டுக் கடாவை வெட்டி, அதன்
இரத்தத்தைப் பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளி.[h] **17** செம்மறி
யாட்டுக் கடாவைத் துண்டு துண்டாக வெட்டி, அதன் குடல்களையும் கால்
களையும் கழுவு.[i] அதன் தலையையும் மற்ற எல்லா துண்டுகளையும் அத
னதன் இடத்தில் வை. **18** முழு செம்மறியாட்டுக் கடாவையும் பலிபீடத்
தின் மேல் வைத்து எரித்துவிடு. அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த
வாசனையாக இருக்கும்.[j] அதுதான் யெகோவாவுக்குச் செலுத்தப்படும்
தகன பலி.

19 பின்பு, இன்னொரு செம்மறியாட்டுக் கடாவையும் நீ கொண்டுவா.
ஆரோனும் அவனுடைய மகன்களும் அதன் தலைமேல் கைகளை வைக்க
வேண்டும்.[k] **20** நீ அந்தச் செம்மறியாட்டுக் கடாவை வெட்டி, அதன்
இரத்தத்தைக் கொஞ்சம் எடுத்து, ஆரோனின் வலது காது மடலிலும்
அவனுடைய மகன்களின் வலது காது மடலிலும் பூசு. அதோடு, அவர்க
ளுடைய வலது கையின் கட்டைவிரலிலும் வலது காலின் பெருவிரலிலும்
பூசு. மீதமுள்ள இரத்தத்தைப் பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளி.
21 பின்பு, பலிபீடத்தின் மேலுள்ள அந்த இரத்தத்தில் கொஞ்சத்தையும்
அபிஷேகத் தைலத்தில்[l] கொஞ்சத்தையும் எடுத்து, அவற்றை ஆரோன்மே
லும் அவனுடைய உடைகள்மேலும், அவனுடைய மகன்கள்மேலும் அவர்
களுடைய உடைகள்மேலும் தெளி. அப்போது, ஆரோனும் அவனுடைய
மகன்களும் பரிசுத்தமாவார்கள், அவர்களுடைய உடைகளும் பரிசுத்த
மாகும்.[m]

22 அது குருமார்கள் நியமிக்கப்படும்போது செலுத்தப்படுகிற செம்மறி
யாட்டுக் கடா என்பதால் அதன் கொழுப்பையும், கொழுப்பு நிறைந்த அதன்
வாலையும், குடல்களைச் சுற்றியுள்ள கொழுப்பையும், கல்லீரலின் மேலுள்ள
சவ்வையும், இரண்டு சிறுநீரகங்களையும், அவற்றின் மேலுள்ள கொழுப்
பையும்,[n] அதன் வலது காலையும் எடுத்துக்கொள்.[o] **23** அதோடு,
யெகோவாவின் முன்னிலையில் புளிப்பில்லாத ரொட்டிகள் வைக்கப்பட்
டுள்ள கூடையிலிருந்து ஒரு வட்ட ரொட்டியையும், எண்ணெயில்
பிசைந்து சுடப்பட்ட ஒரு வட்ட ரொட்டியையும், ஒரு மெல்லிய ரொட்டியை
யும் எடுத்துக்கொள். **24** அவை எல்லாவற்றையும் ஆரோனின் கையிலும்

அதி. 29
a லேவி 8: 14-17
b லேவி 4:3
c யாத் 27:2
d லேவி 4:7
e லேவி 3:17
f லேவி 4:8-10
g லேவி 1:4 லேவி 8: 18-21
h எபி 9:22
i லேவி 1:13
j ஆதி 8:21
k லேவி 8: 22-24
l யாத் 30: 23-25
m லேவி 8:30
n லேவி 3:9, 10
o லேவி 8:22 லேவி 8: 25-28

அவருடைய மகன்களின் கையிலும் வைத்து, அசைவாட்டும் காணிக்கை
யாக யெகோவாவின் முன்னிலையில் அசைவாட்டு. **25** பின்பு, அவற்றை
அவர்களுடைய கையிலிருந்து எடுத்து, பலிபீடத்திலுள்ள தகன பலியின்
மேல் வைத்து எரித்துவிடு. அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த
வாசனையாக இருக்கும். அதுதான் யெகோவாவுக்குச் செலுத்தப்படும்
தகன பலி.

26 பின்பு, ஆரோனைக் குருவாக நியமிக்கும்போது செலுத்தப்படுகிற
செம்மறியாட்டுக் கடாவின் மார்க்கண்டத்தை* எடுத்து,[a] அசைவாட்டும்
காணிக்கையாக யெகோவாவின் முன்னிலையில் அசைவாட்டு. அது
உனக்குச் சேர வேண்டிய பங்கு. **27** நீ அசைவாட்டுகிற அந்த மார்க்கண்
டத்தையும் பரிசுத்த பங்காகிய கால் பகுதியையும் புனிதப்படுத்து.
அவை ஆரோனையும் அவனுடைய மகன்களையும் குருமார்களாக நிய
மிக்கும்போது செலுத்தப்படுகிற செம்மறியாட்டுக் கடாவிலிருந்து[b] எடுக்கப்
பட்டவை. **28** இஸ்ரவேலர்கள் அவற்றை ஆரோனுக்கும் அவனுடைய
மகன்களுக்கும் கொடுக்க வேண்டும். இதை ஒரு நிரந்தரக் கட்டளையாகப்
பின்பற்ற வேண்டும்.[c] ஏனென்றால், அவை ஆரோனுக்கும் அவனுடைய
மகன்களுக்கும் சேர வேண்டிய பரிசுத்தமான பங்கு. இஸ்ரவேலர்கள்
யெகோவாவுக்குச் சமாதான பலிகளைச் செலுத்தும்போதெல்லாம் அவை
ஆரோனுக்கும் அவனுடைய மகன்களுக்கும் பரிசுத்த பங்காகக் கொடுக்
கப்பட வேண்டும்.[d]

29 ஆரோனுக்குப்பின் அவனுடைய மகன்கள்* அபிஷேகம் செய்யப்
பட்டு குருமார்களாக நியமிக்கப்படும்போது, அவனுடைய பரிசுத்த உடை
களை[e] அவர்கள் போட்டுக்கொள்வார்கள்.[f] **30** இப்படி, ஆரோனுக்குப்
பின் குருவாக நியமிக்கப்பட்டு சந்திப்புக் கூடாரத்தின் பரிசுத்த இடத்தில்
சேவை செய்ய வருகிறவர், இந்த உடைகளை ஏழு நாட்களுக்குப் போட்
டுக்கொள்ள வேண்டும்.[g]

31 குருமார்கள் நியமிக்கப்படும்போது செலுத்தப்படுகிற செம்மறியாட்
டுக் கடாவின் இறைச்சியை நீ பரிசுத்தமான இடத்தில் வேக வைக்க வேண்
டும்.[h] **32** ஆரோனும் அவனுடைய மகன்களும், அந்த இறைச்சியையும்
கூடையிலுள்ள ரொட்டிகளையும் சந்திப்புக் கூடாரத்தின் வாசலில் சாப்பிட
வேண்டும்.[i] **33** அவர்களை குருமார்களாக நியமிப்பதற்காகவும் புனிதப்
படுத்துவதற்காகவும் செலுத்தப்பட்ட பாவப் பரிகாரப் பலிகளை அவர்கள்
சாப்பிட வேண்டும். தகுதி இல்லாதவர்கள்* அவற்றைச் சாப்பிடக் கூடாது.
ஏனென்றால், அவை பரிசுத்தமானவை.[j] **34** குருமார்கள் நியமிக்கப்படும்
போது செலுத்தப்படுகிற பலியிலும் ரொட்டியிலும் காலைவரை ஏதாவது
மீதியாக இருந்தால் அவற்றை நீ சுட்டெரிக்க வேண்டும்.[k] அவை பரிசுத்த
மானவை என்பதால் அவற்றைச் சாப்பிடக் கூடாது.

35 நான் உனக்குச் சொன்னபடியெல்லாம் நீ ஆரோனுக்கும் அவனு
டைய மகன்களுக்கும் செய்ய வேண்டும். அவர்களைக் குருமார்களாய் நிய
மிப்பதற்காக ஏழு நாட்கள் எடுத்துக்கொள்.[l] **36** பாவப் பரிகார பலியாகிய
காளையைத் தினமும் பலி கொடுத்து பாவப் பரிகாரம் செய். பலிபீடத்தின்

அதி. 29
a லேவி 8:29; சங் 99:6
b யாத் 29:22
c லேவி 7:34; லேவி 10:14
d லேவி 7:11, 14
e யாத் 28:4
f எண் 20:26
g லேவி 8:35
h லேவி 8:31
i 1கொ 9:13
j லேவி 22:10; எண் 3:10
k லேவி 8:32
l லேவி 8:4, 33

29:26 *அதாவது, “நெஞ்சுப் பகுதியை.” **29:29** *அதாவது, “அவனுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.” **29:33** *அதாவது, “ஆரோனின் வம்சத்தைச் சேராதவர்கள்.”

மேல் பலிகள் செலுத்தி அதைச் சுத்திகரி. அதைப் புனிதப்படுத்துவதற்காக
அபிஷேகம் செய்.[a] **37** பலிபீடத்தைச் சுத்திகரிப்பதற்காக நீ ஏழு நாட்கள்
எடுத்துக்கொள். அது மகா பரிசுத்த பலிபீடமாய் ஆவதற்காக நீ அதைப்
புனிதப்படுத்த வேண்டும்.[b] பரிசுத்தமாக இருக்கிறவர்கள் மட்டும்தான் அந்
தப் பலிபீடத்தைத் தொட வேண்டும்.

38 ஒரு வயதுடைய இரண்டு செம்மறியாட்டுக் கடாக்களைப் பலிபீடத்
தின் மேல் தினமும் நீ பலி கொடு.[c] **39** செம்மறியாட்டுக் கடாக் குட்டிக
ளில் ஒன்றைக் காலையிலும் மற்றொன்றைச் சாயங்காலத்திலும் பலி கொடு.[d]
40 ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு* நைசான மாவையும் இடித்
துப் பிழிந்த ஒரு லிட்டர்# சுத்தமான ஒலிவ எண்ணெயையும் கலந்து எடுத்
துக்கொள். அதோடு, ஒரு லிட்டர் திராட்சமதுவைக் காணிக்கையாக எடுத்
துக்கொள். இவற்றை முதலாம் செம்மறியாட்டுக் கடாக் குட்டியுடன் செலுத்து.
41 காலையில் செய்தது போலவே சாயங்காலத்திலும் இரண்டாம் செம்மறி
யாட்டுக் கடாக் குட்டியை உணவுக் காணிக்கையோடும் திராட்சமது காணிக்
கையோடும் பலி கொடுக்க வேண்டும். யெகோவாவுக்குப் பிடித்த வாசனை
யான தகன பலியாக அதைச் செலுத்த வேண்டும். **42** சந்திப்புக் கூடாரத்
தின் வாசலில் தலைமுறை தலைமுறையாக அதைத் தினமும் யெகோவா
வின் முன்னிலையில் எரிக்க வேண்டும். உன்னிடம் பேசுவதற்காக ஜனங்
கள் முன்னால் நான் அங்கே தோன்றுவேன்.[e]

43 நான் அங்கே இஸ்ரவேலர்கள் முன்னால் தோன்றும்போது, அந்த
இடம் என் மகிமையால் புனிதமாகும்.[f] **44** சந்திப்புக் கூடாரத்தையும்
பலிபீடத்தையும் நான் புனிதமாக்குவேன். எனக்குக் குருமார்களாகச் சேவை
செய்வதற்காக ஆரோனையும் அவனுடைய மகன்களையும் புனிதமாக்கு
வேன்.[g] **45** நான் இஸ்ரவேல் ஜனங்களின் நடுவில் தங்கியிருந்து, அவர்
கள் கடவுளாக இருப்பேன்.[h] **46** அவர்கள் நடுவில் தங்குவதற்காக அவர்
களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்த கடவுளாகிய யெகோவா
நானே என்பதை அப்போது நிச்சயம் தெரிந்துகொள்வார்கள்.[i] நானே அவர்
கள் கடவுளாகிய யெகோவா" என்றார்.

30 பின்பு அவர், "தூபப்பொருளை எரிப்பதற்காக[j] நீ வேல மரத்
தால் ஒரு பீடம் செய்.[k] **2** அது சதுரமாக இருக்க வேண்டும்.
அதன் நீளம் ஒரு முழமாகவும்,* அகலம் ஒரு முழமாகவும், உயரம்
இரண்டு முழமாகவும் இருக்க வேண்டும். அதன் கொம்புகள் அதனோடு
இணைந்திருக்க வேண்டும்.[l] **3** அதன் மேல்பகுதிக்கும் சுற்றுப்பகுதிக்கும்
கொம்புகளுக்கும் சுத்தமான தங்கத்தால் தகடு அடி. அதன் விளிம்பைச்
சுற்றிலும் தங்கத்தால் அலங்கார வேலைப்பாடு செய். **4** பீடத்தைத் தூக்
கிக்கொண்டு போவதற்கான கம்புகளைச் செருகுவதற்காக, அந்த வேலைப்
பாட்டுக்குக் கீழே இரண்டு எதிரெதிர் பக்கங்களில் இரண்டிரண்டு தங்க
வளையங்களைப் பொருத்து. **5** வேல மரத்தால் கம்புகள் செய்து அவற்
றுக்குத் தங்கத் தகடு அடிக்க வேண்டும். **6** நான் உன் முன்னால் தோன்
றும் இடத்துக்கு[m] எதிரே, அதாவது சாட்சிப் பெட்டிக்கும் அதன் மூடிக்
கும் பக்கத்திலுள்ள திரைச்சீலைக்கு எதிரே, அந்தப் பீடத்தை வைக்க
வேண்டும்.[n]

29:40 *அதாவது, "சுமார் ஒரு கிலோ." #நே.மொ., "ஒரு ஹின் அளவில் நான்கில் ஒரு பங்கு." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **30:2** *இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 29
a யாத் 30:26, 28; லேவி 8:11; எண் 7:1
b யாத் 40:10
c 2நா 2:4; எபி 7:27; எபி 10:11
d எண் 28:4-6
e யாத் 25:22; லேவி 1:1; எண் 17:4
f யாத் 40:34; எண் 12:5; 1ரா 8:11
g லேவி 22:9
h யாத் 25:8; லேவி 26:12; சக 2:11; 2கொ 6:16
i யாத் 20:2

அதி. 30
j யாத் 40:5
k யாத் 37:25-28
l யாத் 27:1, 2; லேவி 4:7
m யாத் 25:22
n யாத் 26:33; எபி 9:3

அதி. 30

7 ஆரோன்[a] தினமும் காலையில் விளக்குகளைத் தயார்படுத்த[b] வரும்
போது அந்தப் பீடத்தில் தூபப்பொருளை[c] எரிக்க வேண்டும்.[d] **8** சாயங்
காலத்தில் ஆரோன் விளக்கேற்றி வைக்கும்போதும் தூபப்பொருளை
எரிக்க வேண்டும். இப்படி, தலைமுறை தலைமுறையாக யெகோவாவின்
முன்னிலையில் தவறாமல் தூபப்பொருளை எரிக்க வேண்டும். **9** அந்தப்
பீடத்தின் மேல் தூபப்பொருளை அத்துமீறி* எரிக்கக் கூடாது.[e] அதன்மேல்
தகன பலியையோ உணவுக் காணிக்கையையோ திராட்சமது காணிக்கை
யையோ செலுத்தக் கூடாது. **10** வருஷத்துக்கு ஒருமுறை ஆரோன் அந்
தப் பீடத்தைச் சுத்திகரிக்க வேண்டும்.[f] அதாவது, பாவப் பரிகார பலியா
கச் செலுத்தப்பட்ட மிருகத்தின் இரத்தத்தை அந்தப் பீடத்தின் கொம்புகள்
மேல் பூசி அதைச் சுத்திகரிக்க வேண்டும்.[g] இது தலைமுறை தலைமுறை
யாகச் செய்யப்பட வேண்டும். இது யெகோவாவுக்கு மகா பரிசுத்தமானது"
என்றார்.

11 பின்பு யெகோவா மோசேயிடம், **12** "இஸ்ரவேல் ஆண்கள் கணக்
கெடுக்கப்படும்[h] சமயங்களில், ஒவ்வொருவரும் தங்கள் உயிருக்காக
யெகோவாவுக்கு மீட்புவிலையைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான்,
பெயர்ப்பதிவு செய்யப்படும்போது எந்தத் தண்டனையும் வராது.
13 பெயர்ப்பதிவு செய்யப்படுகிற எல்லாரும் அரை சேக்கல்* கொடுக்க
வேண்டும். பரிசுத்த# சேக்கலின் கணக்குப்படி அதைக் கொடுக்க வேண்
டும்.[i] ஒரு சேக்கல் என்பது இருபது கேரா.Δ யெகோவாவுக்காகக் கொடுக்
கப்படும் காணிக்கை அரை சேக்கல்.[j] **14** பெயர்ப்பதிவு செய்யப்படுகிற
எல்லாரும், அதாவது 20 வயதும் அதற்கு அதிகமான வயதும் உள்ள எல்
லாரும், யெகோவாவுக்குக் காணிக்கை கொடுக்க வேண்டும்.[k] **15** உங்க
ளுடைய உயிரை மீட்பதற்காக# யெகோவாவுக்குக் காணிக்கை செலுத்தும்
போது, பணக்காரன் அரை சேக்கலுக்கு* அதிகமாகவும் கொடுக்கக்
கூடாது, ஏழை அதற்குக் குறைவாகவும் கொடுக்கக் கூடாது. **16** பாவப்
பரிகாரத்துக்காக இஸ்ரவேலர்கள் கொடுக்கிற வெள்ளிக் காசை நீ வசூலித்து
சந்திப்புக் கூடாரத்தின் சேவைக்குக் கொடுத்துவிடு. அப்போது யெகோவா
அவர்களை நினைத்துப் பார்ப்பார், அவர்களுடைய உயிரும் மீட்கப்படும்"
என்றார்.

17 பின்பு யெகோவா மோசேயிடம், **18** "ஒரு செம்புத் தொட்டியை
யும் அதை வைப்பதற்கு ஒரு தாங்கியையும் செய்.[l] சந்திப்புக் கூடாரத்துக்
கும் பலிபீடத்துக்கும் நடுவில் அந்தத் தொட்டியை வைத்து அதில் தண்
ணீர் ஊற்று.[m] **19** ஆரோனும் அவனுடைய மகன்களும் அங்கே தங்
கள் கைகால்களைக் கழுவ வேண்டும்.[n] **20** அவர்கள் சந்திப்புக் கூடாரத்
துக்குள் நுழையும்போதோ, யெகோவாவுக்குத் தகன பலிகள் செலுத்தவும்*
சேவை செய்யவும் பலிபீடத்துக்குப் போகும்போதோ தண்ணீரால் கைகால்
களைக் கழுவ வேண்டும். அப்போதுதான், அவர்கள் சாக மாட்டார்கள்.
21 அவர்கள் சாகாமல் இருப்பதற்காகத் தங்களுடைய கைகால்களைக்
கழுவ வேண்டும். இது அவனுக்கும் அவனுடைய மகன்களுக்கும் நிரந்தரக்

a 1நா 23:13
b யாத் 27:20
c யாத் 30: 34, 35
d எண் 16: 39, 40; 1சா 2:27, 28; லூ 1:9
e லேவி 10:1; 2நா 26:18; எசே 8:11, 12
f லேவி 23:27; எபி 9:7
g லேவி 16:5, 6; லேவி 16: 18, 19
h யாத் 38:25; எண் 1:2; 2சா 24:10, 15
i லேவி 27:25
j 2நா 24:9; மத் 17:24
k யாத் 38:26; எண் 1:3; எண் 26:1, 2
l யாத் 38:8; லேவி 8:11; 1ரா 7:38
m யாத் 40:7
n யாத் 40:30, 31; எபி 10:22

30:9 *வே.வா., "தகாத விதத்தில்." **30:13, 15** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **30:13** #வே.வா., "பரிசுத்த இடத்து." Δஒரு கேரா என்பது 0.57 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **30:15** #நே.மொ., "உயிருக்குப் பாவப் பரிகாரம் செய்வதற்காக." **30:20** *வே.வா., "தூபம் காட்டவும்."

கட்டளையாக இருக்க வேண்டும். தலைமுறை தலைமுறையாக அவர்கள்
இதைப் பின்பற்ற வேண்டும்" என்றார்.[a]

22 பின்பு யெகோவா மோசேயிடம், **23** "தரமான வாசனைப் பொருள்
களை எடுத்துக்கொள். கெட்டியான வெள்ளைப்போளம்* 500 சேக்கல், வாச
னையான லவங்கப்பட்டை 250 சேக்கல், வாசனையான வசம்பு 250 சேக்
கல், **24** கருவாய்ப்பட்டை 500 சேக்கல் ஆகியவற்றைப் பரிசுத்த* சேக்
கலின் கணக்குப்படி[b] எடுத்துக்கொள். அதோடு மூன்றரை லிட்டர்#
ஒலிவ எண்ணெயையும் எடுத்துக்கொள். **25** இதையெல்லாம் பக்குவ
மாக* கலக்கி, அபிஷேகத் தைலத்தைத் தயாரி.[c] அதுதான் பரிசுத்த அபி
ஷேகத் தைலம்.

26 சந்திப்புக் கூடாரத்தையும் சாட்சிப் பெட்டியையும் அந்தத் தைலத்
தால் அபிஷேகம் செய்.[d] **27** அதோடு, மேஜையையும் அதனுடன்
சேர்ந்த பாத்திரங்களையும், குத்துவிளக்கையும் அதனுடன் சேர்ந்த
பொருள்களையும், தூபபீடத்தையும், **28** தகன பலிக்கான பலிபீடத்தை
யும் அதனுடன் சேர்ந்த பாத்திரங்களையும், தொட்டியையும் அதன்
தாங்கியையும் அபிஷேகம் செய். **29** அவை மகா பரிசுத்தமாக ஆகும்
படி நீ அவற்றைப் புனிதப்படுத்து.[e] பரிசுத்தமாக இருக்கிறவர்கள் மட்
டும்தான் அவற்றைத் தொட வேண்டும்.[f] **30** ஆரோனும்[g] அவனுடைய
மகன்களும்[h] குருமார்களாக எனக்குச் சேவை செய்வதற்காக அவர்களை
அபிஷேகம் செய்து, புனிதப்படுத்து.[i]

31 நீ இஸ்ரவேலர்களிடம், 'இது தலைமுறை தலைமுறைக்கும் எனக்கு
ரிய பரிசுத்த அபிஷேகத் தைலமாக இருக்க வேண்டும்.[j] **32** யாரும்
இதை உடலில் பூசிக்கொள்ளக் கூடாது. இந்தத் தைலத்தின் கலவையைப்
போல நீங்கள் வேறு எதையும் தயாரிக்கக் கூடாது, இது பரிசுத்தமானது.
இது எப்போதும் உங்களுக்குப் பரிசுத்தமாக இருக்க வேண்டும். **33** இதே
போன்ற தைலத்தைத் தயாரிக்கிறவனும், தகுதி இல்லாதவன்மேல்* இதை
ஊற்றுகிறவனும் கொல்லப்பட வேண்டும்' என்று சொல்" என்றார்.[k]

34 அதன்பின் யெகோவா மோசேயிடம், "நறுமணப் பிசின், ஓனிக்கா,
கல்பான், சுத்தமான சாம்பிராணி ஆகிய வாசனைப் பொருள்களைச்[l] சரிச
மமாக எடுத்துக்கொள். **35** அதையெல்லாம் பக்குவமாகக் கலக்கி, உப்பு
சேர்த்து[m] தூபப்பொருளாகத்[n] தயாரி. அது தூய்மையாகவும் பரிசுத்தமாக
வும் இருக்க வேண்டும். **36** நீ அதிலிருந்து கொஞ்சம் எடுத்து நன்றா
கப் பொடியாக்கி, நான் உனக்குமுன் தோன்றும் சந்திப்புக் கூடாரத்திலுள்ள
சாட்சிப் பெட்டியின் எதிரே வை. அது உங்களுக்கு மகா பரிசுத்தமான
தாக இருக்க வேண்டும். **37** அதே போன்ற தூபப்பொருள் கலவையைச்
சொந்த உபயோகத்துக்காக யாரும் தயாரிக்கக் கூடாது.[o] யெகோவாவுக்
குப் பரிசுத்தமானதாக அதைக் கருத வேண்டும். **38** அதன் வாசனையை
அனுபவித்து மகிழ்வதற்காக அதே போன்ற தூபப்பொருள் கலவையைத்
தயாரிக்கிற எவனும் கொல்லப்பட வேண்டும்" என்றார்.

30:23 *சொல் பட்டியலைப் பாருங்கள். **30:24** *வே.வா., "பரிசுத்த இடத்து." #நே.மொ., "ஒரு ஹின்." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **30:25** *வே.வா., "தைலம் தயாரிப்பவர் செய்வதைப் போல." **30:33** *அதாவது, "ஆரோனின் வம்சத்தைச் சேராதவன்மேல்."

அதி. 30
a 2நா 4:6
b எண் 3:47
c யாத் 37:29
d யாத் 40:9; எண் 7:1
e லேவி 8:10
f யாத் 29:37
g லேவி 8:12
h எண் 3:2, 3
i யாத் 40:15
j யாத் 37:29; 1ரா 1:39; சங் 89:20
k யாத் 30:37, 38
l யாத் 25:3, 6
m லேவி 2:13
n யாத் 37:29; சங் 141:2; வெளி 5:8
o யாத் 30:31, 32

31 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “இதோ, யூதா கோத்தி
ரத்தைச் சேர்ந்த ஹூரின் பேரனும் ஊரியின் மகனுமான பெசலெ
யேலை[a] நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.[b] **3** நான் அவனை என்னுடைய
சக்தியால் நிரப்பி, எல்லா விதமான கைவேலைகள் செய்யவும், **4** கலை
வேலைப்பாடுகள் செய்யவும், தங்கம், வெள்ளி, செம்பு வேலைகள் செய்ய
வும், **5** கற்களைப் பட்டைதீட்டி அவற்றைப் பதிக்கவும்,[c] எல்லா வித
மான மர வேலைகள் செய்யவும்[d] அவனுக்கு ஞானத்தையும் புரிந்து
கொள்ளுதலையும் அறிவையும் தருவேன். **6** அதோடு, தாண் கோத்திரத்
தைச் சேர்ந்த அகிசாமாக்கின் மகன் அகோலியாபையும் அவனுக்கு உத
வியாக நியமித்திருக்கிறேன்.[e] திறமைசாலிகள் எல்லாருக்கும் நான் ஞானத்
தைக் கொடுப்பேன். அதனால், நான் உனக்குச் சொன்னபடியே அவர்கள்
எல்லாவற்றையும் செய்வார்கள்.[f] **7** சந்திப்புக் கூடாரம்,[g] சாட்சிப் பெட்டி,[h]
அதன் மூடி,[i] கூடாரத்துக்கான பாத்திரங்கள், **8** மேஜை,[j] அதற்கான பாத்
திரங்கள், சுத்தமான தங்கத்தில் செய்யப்பட்ட குத்துவிளக்கு, அதற்கான
பாத்திரங்கள்,[k] தூபபீடம்,[l] **9** தகன பலிக்கான பலிபீடம்,[m] அதற்கான பாத்
திரங்கள், தொட்டி, அதை வைப்பதற்கான தாங்கி,[n] **10** நன்றாக நெய்யப்
பட்ட உடைகள், குருவாகிய ஆரோனுக்குப் பரிசுத்த அங்கிகள், குருமார்க
ளாகச் சேவை செய்ய அவனுடைய மகன்களுக்கு அங்கிகள்,[o] **11** அபி
ஷேகத் தைலம், வழிபாட்டுக் கூடாரத்துக்கான தூபப்பொருள் ஆகியவற்
றைச் செய்வார்கள்.[p] நான் உனக்குக் கட்டளை கொடுத்த எல்லாவற்றையும்
அவர்கள் செய்வார்கள்” என்றார்.

12 பின்பு யெகோவா மோசேயிடம், **13** “இஸ்ரவேலர்களிடம் நீ
சொல்ல வேண்டியது என்னவென்றால், ‘நீங்கள் என் ஓய்வுநாளைக் கண்
டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.[q] அது எனக்கும் உங்களுக்கும் இடை
யில் தலைமுறை தலைமுறையாய் ஒரு அடையாளமாக இருக்கும். யெகோ
வாவாகிய நான் உங்களைப் புனிதப்படுத்துகிறேன் என்பதை இதன் மூலம்
தெரிந்துகொள்வீர்கள். **14** நீங்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்
டும்.[r] ஏனென்றால் அது உங்களுக்குப் பரிசுத்தமானது. ஓய்வுநாளின் பரிசுத்
தத்தைக் கெடுக்கிற எவனும் கொல்லப்பட வேண்டும். அந்த நாளில் ஒரு
வன் எந்த வேலையாவது செய்தால், அவன் கொல்லப்பட வேண்டும்.[s]
15 ஆறு நாட்கள் நீங்கள் வேலை செய்யலாம். ஆனால், ஏழாம் நாள் நீங்
கள் முழுமையாய் ஓய்ந்திருக்க வேண்டிய ஓய்வுநாள்.[t] அது யெகோவாவுக்
குப் பரிசுத்தமான நாள். ஓய்வுநாளில் வேலை செய்கிற எவனும் கொல்லப்
பட வேண்டும். **16** இஸ்ரவேலர்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்
டும். அதைத் தலைமுறை தலைமுறையாகக் கடைப்பிடிக்க வேண்டும், இது
ஒரு நிரந்தர ஒப்பந்தம். **17** எனக்கும் இஸ்ரவேலர்களுக்கும் இடையில்
இது ஒரு நிரந்தர அடையாளமாக இருக்கும்.[u] ஏனென்றால், யெகோவாவா
கிய நான் ஆறு நாட்களில் வானத்தையும் பூமியையும் படைத்தேன். ஏழாம்
நாளில் வேலையை முடித்துவிட்டு ஓய்வெடுத்தேன்’”[v] என்றார்.

18 சீனாய் மலையில் அவர் மோசேயிடம் பேசி முடித்தவுடன், தன்னு
டைய சக்தியால்*[w] எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளைத் தந்தார்.[x]
அவைதான் சாட்சிப் பலகைகள்.

31:18 * நே.மொ., “விரலால்.”

அதி. 31
a யாத் 35:30-34; 1நா 2:20
b யாத் 37:1
c யாத் 28:9-11
d 2நா 2:13, 14
e யாத் 38:23
f யாத் 36:1
g யாத் 36:8
h யாத் 37:1
i யாத் 37:6
j யாத் 37:10
k யாத் 37:17, 24
l யாத் 37:25
m யாத் 38:1; யாத் 40:6
n யாத் 30:18; யாத் 38:8
o யாத் 28:2, 15; யாத் 39:1, 27; லேவி 8:7
p யாத் 30:25, 35; யாத் 37:29
q யாத் 20:8; லேவி 19:30; கொலோ 2:16, 17
r உபா 5:12
s யாத் 35:2; எண் 15:32, 35
t யாத் 16:23; யாத் 20:10
u யாத் 31:13
v ஆதி 2:2
w மத் 12:28; லூ 11:20; 2கொ 3:3
x யாத் 24:12; யாத் 32:15; உபா 4:13; உபா 9:15

32 பல நாட்களாகியும் மோசே மலையிலிருந்து இறங்கி வராததால்[a]
ஜனங்கள் ஆரோனைச் சூழ்ந்துகொண்டு, “எகிப்திலிருந்து எங்க
ளைக் கூட்டிக்கொண்டு வந்த மோசேக்கு என்ன ஆனதோ தெரியவில்லை.
எங்களை வழிநடத்துவதற்கு ஒரு தெய்வத்தைச் செய்துகொடுங்கள்”[b] என்
றார்கள். **2** அதற்கு ஆரோன், “உங்களுடைய மனைவிமக்களின் காதுக
ளில் இருக்கிற தங்கத் தோடுகளைக்[c] கழற்றி என்னிடம் கொண்டுவாருங்
கள்” என்றார். **3** அதனால், ஜனங்கள் எல்லாரும் தாங்கள் போட்டிருந்த
தங்கத் தோடுகளைக் கழற்றி ஆரோனிடம் கொடுத்தார்கள். **4** ஆரோன்
அந்தத் தங்கத்தை வாங்கி, செதுக்கும் கருவியால் செதுக்கி, ஒரு கன்
றுக்குட்டி சிலையைச் செய்தார்.[d] அப்போது ஜனங்களில் சிலர், “இஸ்ரவே
லர்களே, உங்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்த தெய்வம் இது
தான்!” என்று சொன்னார்கள்.[e]

5 ஆரோன் அதைப் பார்த்தபோது, அந்தச் சிலைக்கு முன்னால் ஒரு
பலிபீடத்தைக் கட்டினார். பின்பு, “நாளைக்கு யெகோவாவுக்குப் பண்டிகை
கொண்டாடுவோம்” என்று அறிவித்தார். **6** அதனால், ஜனங்கள் விடியற்
காலையிலேயே எழுந்து தகன பலிகளையும் சமாதான பலிகளையும்
செலுத்தினார்கள். அதன்பின் சாப்பிட்டார்கள், குடித்தார்கள், சந்தோஷமாக
இருந்தார்கள்.[f]

7 அப்போது யெகோவா மோசேயிடம், “நீ கீழே இறங்கிப் போ. எகிப்
திலிருந்து நீ கூட்டிக்கொண்டு வந்த ஜனங்கள் தறிகெட்டுப் போய்விட்டார்
கள்.[g] **8** இவ்வளவு சீக்கிரத்தில் என் வழியைவிட்டு விலகிவிட்டார்கள்![h]
கன்றுக்குட்டி சிலையைச் செய்து அதை வணங்குகிறார்கள். அதற்குப்
பலி செலுத்தி, ‘இஸ்ரவேலர்களே, உங்களை எகிப்திலிருந்து கூட்டிக்
கொண்டு வந்த தெய்வம் இதுதான்!’ என்று சொல்லிக்கொள்கிறார்கள்” என்
றார். **9** அதோடு யெகோவா மோசேயிடம், “இந்த ஜனங்கள் பிடிவாதக்
காரர்கள்*[i] என்று எனக்குத் தெரியும். **10** இவர்கள்மேல் என் கோபம் பற்
றியெரிகிறது, இவர்களை அடியோடு அழிக்கலாம் என்றிருக்கிறேன். அதே
சமயத்தில், உன் மூலமாக ஒரு மாபெரும் தேசத்தை உருவாக்கப்போகி
றேன்”[j] என்றார்.

11 அப்போது, மோசே தன் கடவுளாகிய யெகோவாவிடம் இப்படிக்
கெஞ்சினார்:[k] “யெகோவாவே, இந்த ஜனங்களை மகா வல்லமையோடும்
கைபலத்தோடும் எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தவர் நீங்கள்தானே?
அப்படியிருக்கும்போது, இவர்கள்மேல் நீங்கள் இந்தளவுக்குக் கோபப்பட
லாமா?[l] **12** எகிப்தியர்கள் உங்களைப் பற்றித் தப்பாகப் பேசுவதற்கு
ஏன் இடம் தர வேண்டும்? அவர்கள், ‘இஸ்ரவேலர்களை மலையில்
கொன்றுபோட்டு இந்தப் பூமியிலிருந்தே ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற
கெட்ட எண்ணத்தோடுதான் அவர்களுடைய கடவுள் அவர்களைக் கூட்
டிக்கொண்டு போனார்’ என்று சொல்வார்களே.[m] அதனால் உங்களுடைய
கடும் கோபத்தை விட்டுவிடுங்கள். தயவுசெய்து, இந்த ஜனங்களை அழிக்க
வேண்டுமென்ற உங்கள் முடிவை மாற்றிக்கொள்ளுங்கள். **13** உங்கள்
ஊழியர்களான ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்
துப் பாருங்கள். அவர்களிடம், ‘உங்கள் சந்ததியை வானத்திலுள்ள நட்சத்தி
ரங்களைப் போலப் பெருகப் பண்ணுவேன்,[n] நான் தேர்ந்தெடுத்த இந்தத்

அதி. 32
a யாத் 24:18; உபா 9:9
b அப் 7:40
c யாத் 12:35, 36
d உபா 9:16; ஏசா 46:6; அப் 7:41
e யாத் 20:4; நெ 9:18; சங் 106:19, 20
f 1கொ 10:7
g உபா 4:15-18
h யாத் 18:20; யாத் 20:3
i யாத் 34:9; உபா 9:6; அப் 7:51
j எண் 14:12; உபா 9:14
k சங் 106:23
l உபா 9:18, 19
m உபா 9:28
n ஆதி 22:15-17; ஆதி 35:10, 11; எபி 6:13, 14

32:9 * நே.மொ., “வளையாத கழுத்து உள்ளவர்கள்.”

தேசம் முழுவதையும் உங்கள் சந்ததிக்கு நிரந்தர சொத்தாகத் தருவேன்'[a] என்று உங்கள்மேல் சத்தியம் செய்து கொடுத்தீர்களே" என்றார்.

14 அதனால், யெகோவா தன்னுடைய முடிவை மாற்றிக்கொண்டு தன் ஜனங்களை அழிக்காமல் விட்டுவிட்டார்.[b]

15 அதன்பின், மோசே இரண்டு சாட்சிப் பலகைகளையும்[c] கையில் பிடித்துக்கொண்டு மலையிலிருந்து கீழே இறங்கினார்.[d] அந்தக் கற்பலகைகளின் இரண்டு பக்கங்களிலும், அதாவது முன்புறத்திலும் பின்புறத்திலும், எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. **16** அந்தக் கற்பலகைகள் கடவுளால் செய்யப்பட்டவை. அதன்மேல் இருந்த எழுத்துக்கள் அவரால் பொறிக்கப்பட்டவை.[e] **17** ஜனங்கள் போடுகிற சத்தத்தை யோசுவா கேட்டபோது அவர் மோசேயிடம், "முகாமில் போர் சத்தம் கேட்கிறதே" என்றார். **18** அதற்கு மோசே,

"அது வெற்றிப் பாடலின் சத்தம் போலவும் தெரியவில்லை,
தோல்விப் பாடலின்* சத்தம் போலவும் தெரியவில்லை.
வேறு விதமான பாடல் சத்தம்தான் கேட்கிறது"

என்றார்.

19 முகாமை நெருங்கியவுடன் கன்றுக்குட்டி சிலையையும்[f] ஜனங்களின் ஆட்டம்பாட்டத்தையும் அவர் பார்த்தார். அப்போது, அவருக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. உடனே, தன் கையிலிருந்த கற்பலகைகளை மலை அடிவாரத்தில் வீசியெறிந்தார். அவை துண்டு துண்டாக உடைந்து சிதறின.[g] **20** பின்பு, அவர்கள் செய்த கன்றுக்குட்டி சிலையை நெருப்பில் சுட்டெரித்து, பொடிப் பொடியாக நொறுக்கி,[h] தண்ணீர்மேல் தூவி, இஸ்ரவேலர்களைக் குடிக்கச் சொன்னார்.[i] **21** அதன்பின் அவர் ஆரோனிடம், "இந்த ஜனங்கள் உங்களுக்கு என்ன செய்தார்கள்? இவர்கள்மேல் இவ்வளவு பெரிய பாவத்தைச் சுமத்திவிட்டீர்களே" என்றார். **22** அதற்கு ஆரோன், "எஜமானே, கோபப்படாதீர்கள். இந்த ஜனங்களுடைய கெட்ட புத்தி உங்களுக்கே தெரியும்.[j] **23** அவர்கள் என்னிடம், 'எகிப்திலிருந்து எங்களைக் கூட்டிக்கொண்டு வந்த மோசேக்கு என்ன ஆனதோ தெரியவில்லை. எங்களை வழிநடத்துவதற்கு ஒரு தெய்வத்தைச் செய்துகொடுங்கள்'[k] என்று கேட்டார்கள். **24** அதனால் நான் அவர்களிடம், 'நீங்கள் போட்டிருக்கிற தங்க நகைகளைக் கழற்றிக் கொடுங்கள்' என்றேன். அவர்கள் கொடுத்த தங்கத்தை நெருப்பில் போட்டேன், இந்தக் கன்றுக்குட்டி வந்தது" என்று சொன்னார்.

25 ஆரோன் கண்டிக்காமல் விட்டுவிட்டதால் அந்த ஜனங்கள் தறிகெட்டுப்போய், எதிரிகள்முன் அவமானத்தைத் தேடிக்கொண்டதை மோசே பார்த்தார். **26** பின்பு முகாமின் வாசலில் நின்றுகொண்டு, "யார் யெகோவாவின் பக்கம் இருக்கிறீர்கள்? என்னிடம் வாருங்கள்!"[l] என்றார். உடனே, லேவியர்கள் எல்லாரும் அவரிடம் கூடிவந்தார்கள். **27** அப்போது அவர், "இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது இதுதான்: 'எல்லாரும் வாளை எடுத்துக்கொள்ளுங்கள், முகாமின் ஒவ்வொரு வாசலுக்கும் போய் உங்கள் சகோதரனையும் அக்கம்பக்கத்தில் இருப்பவனையும் நெருங்கிய நண்பனையும் வெட்டிப்போடுங்கள்'"[m] என்றார். **28** மோசே

32:18 * வே.வா., "தோல்வியினால் பாடும் ஒப்பாரிப் பாடலின்."

அதி. 32
a ஆதி 13:14, 15; ஆதி 26:3, 4
b சங் 106:45
c யாத் 40:20; உபா 5:22
d உபா 9:15
e யாத் 31:18; உபா 9:10
f நெ 9:18; சங் 106:19, 20; அப் 7:41
g உபா 9:16, 17
h உபா 7:25
i உபா 9:21
j யாத் 15:24; யாத் 16:2; யாத் 17:2; உபா 9:7; உபா 31:27
k யாத் 32:1; அப் 7:40
l யோசு 24:15; 2ரா 10:15
m எண் 25:5

சொன்னபடியே லேவியர்கள் செய்தார்கள். அதனால், அந்த நாளில் சுமார்
3,000 ஆண்கள் கொல்லப்பட்டார்கள். **29** அப்போது மோசே, "இன்று உங்
களை யெகோவாவின் சேவைக்கு அர்ப்பணியுங்கள். சொந்த மகன்
என்றோ சகோதரன் என்றோ பார்க்காமல் எல்லாரையும் கொன்றுபோட்டீர்
களே.[a] இன்று அவர் உங்களை ஆசீர்வதிப்பார்"[b] என்றார்.

30 அடுத்த நாள் மோசே இஸ்ரவேலர்களிடம், "நீங்கள் மகா பெரிய
பாவம் செய்துவிட்டீர்கள். உங்கள் பாவத்துக்கு நான் ஏதாவது பரிகாரம்
செய்ய முடியுமா என்பதை யெகோவாவிடம் போய்க் கேட்டுக்கொண்டு
வருகிறேன்"[c] என்றார். **31** பின்பு மோசே யெகோவாவிடம் திரும்பிப்
போய், "இந்த ஜனங்கள் மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள்! தங்கத்தில்
சிலை செய்து வணங்கியிருக்கிறார்கள்![d] **32** உங்களுக்கு இஷ்டம் இருந்
தால், இவர்களுடைய பாவத்தை மன்னியுங்கள்.[e] இல்லையென்றால், தயவு
செய்து உங்களுடைய புத்தகத்திலிருந்து என் பெயரை அழித்துவிடுங்கள்"[f]
என்றார். **33** அதற்கு யெகோவா மோசேயிடம், "யாரெல்லாம் எனக்கு எதி
ராகப் பாவம் செய்தார்களோ, அவர்களுடைய பெயரைத்தான் என் புத்தகத்
திலிருந்து துடைத்தழிப்பேன். **34** நீ இப்போது கீழே போ. நான் உனக்குச்
சொன்ன இடத்துக்கு இந்த ஜனங்களைக் கூட்டிக்கொண்டு போ. இதோ!
என் தூதர் உங்கள் முன்னால் போய் வழிகாட்டுவார்.[g] என்னுடைய தீர்ப்பு
நாளில், அந்த ஜனங்களுடைய பாவத்துக்குத் தண்டனை கொடுப்பேன்"
என்றார். **35** அந்த ஜனங்கள் ஆரோன் மூலம் கன்றுக்குட்டி செய்ததற்காக
யெகோவா அவர்களுக்குக் கொடிய தண்டனை கொடுக்க ஆரம்பித்தார்.

33 பின்பு யெகோவா மோசேயிடம், "எகிப்திலிருந்து நீ கூட்டிக்
கொண்டு வந்த ஜனங்களோடு இங்கிருந்து கிளம்பிப் போ. 'உன் சந்
ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்' என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்
கும் யாக்கோபுக்கும் நான் வாக்குக் கொடுத்த இடத்துக்குப் போ.[h] **2** நான்
என் தூதரை உங்களுக்கு முன்னால் அனுப்பி[i] கானானியர்கள், எமோரியர்
கள், ஏத்தியர்கள், பெரிசியர்கள், ஏவியர்கள், எபூசியர்கள் எல்லாரையும்
துரத்திவிடுவேன்.[j] **3** பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்கு நீங்கள் போங்
கள்.[k] ஆனால், நான் உங்களோடு வர மாட்டேன். ஏனென்றால், நீங்கள் பிடி
வாதமான ஜனங்கள்;[l] உங்கள் பிடிவாதத்தைப் பார்த்து வழியில் நான் உங்
களை அழித்தாலும் அழித்துவிடலாம்"[m] என்றார்.

4 இந்தக் கடுமையான வார்த்தைகளைக் கேட்டபோது ஜனங்கள்
அழுது புலம்ப ஆரம்பித்தார்கள். யாருமே நகைகளைப் போட்டுக்கொள்
ளவில்லை. **5** யெகோவா மோசேயிடம், "நீ இஸ்ரவேலர்களிடம் இப்படிச்
சொல்: 'நீங்கள் பிடிவாதமான ஜனங்கள்.[n] நான் நினைத்தால் உங்கள் நடு
வில் வந்து ஒரே நொடியில் உங்களை அழிக்க முடியும்.[o] அதனால்,
உங்களை என்ன செய்யலாம் என்று நான் முடிவுசெய்யும் வரையில், நகை
களைப் போட்டுக்கொள்ளாமல் இருங்கள்'" என்றார். **6** அதனால், ஓரேப்
மலையில் கூடியிருந்த சமயத்திலிருந்து இஸ்ரவேலர்கள் நகைகளைப்
போட்டுக்கொள்ளவில்லை.

7 அப்போது, மோசே தன் கூடாரத்தைப் பிரித்து முகாமுக்கு வெளியே
கொஞ்சத் தூரத்தில் அமைத்தார். அதை அவர் சந்திப்புக் கூடாரம் என்று
அழைத்தார். யெகோவாவிடம் விசாரிப்பதற்காக[p] ஜனங்கள் முகாமுக்கு
வெளியிலிருந்த அந்தச் சந்திப்புக் கூடாரத்துக்குப் போய் வந்தார்கள்.

அதி. 32
a எண் 25:11; உபா 13:6-9
b உபா 33:8, 9
c எண் 16:47; எண் 21:7; உபா 9:18
d யாத் 20:23
e எண் 14:19
f பிலி 4:3; வெளி 3:5
g யாத் 23:20; யாத் 33:2

அதி. 33
h ஆதி 12:7; ஆதி 26:3
i யாத் 23:20; யாத் 32:34
j உபா 7:1, 22; யோசு 24:11
k யாத் 3:8; உபா 8:7-9
l யாத் 32:9; உபா 9:6; அப் 7:51
m யாத் 32:10; எண் 16:21
n யாத் 34:9; உபா 9:6; அப் 7:51
o எண் 16:45
p யாத் 18:25, 26; எண் 27:1-5

8 மோசே அந்தக் கூடாரத்துக்குப் போகும்போதெல்லாம் ஜனங்கள் அவ
ரவர் கூடார வாசலில் எழுந்து நிற்பார்கள். அவர் அந்தக் கூடாரத்துக்குள்
நுழையும்வரை அவரையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். **9** மோசே அந்
தக் கூடாரத்துக்குள் நுழைந்தவுடன், மேகத் தூண்[a] இறங்கி வந்து கூடார
வாசலில் நிற்கும். கடவுள் மோசேயுடன் பேசுவார்.[b] **10** கூடார வாசலில்
மேகத் தூண் நிற்பதை ஜனங்கள் பார்க்கும்போது, ஒவ்வொருவரும் அவர
வர் கூடார வாசலில் எழுந்து நின்று தலைவணங்குவார்கள். **11** ஒரு மனி
தன் இன்னொரு மனிதனோடு பேசுவதுபோல் யெகோவா மோசேயிடம்
நேருக்கு நேராகப் பேசுவார்.[c] மோசே முகாமுக்குத் திரும்பிப்போன பிறகு,
அவருடைய உதவியாளரும் ஊழியரும் நூனின் மகனுமாகிய யோசுவா,[d]
சந்திப்புக் கூடாரத்திலேயே இருப்பார்.

12 மோசே யெகோவாவிடம், "'இந்த ஜனங்களைக் கூட்டிக்கொண்டு
போ' என்று சொல்கிறீர்கள். ஆனால், என்னோடு யாரை அனுப்புவீர்கள்
என்று இன்னும் சொல்லவில்லையே. அதோடு, 'உன்னை* எனக்கு நன்றா
கத் தெரியும்,# நீ எனக்குப் பிரியமானவன்' என்று சொன்னீர்கள்.
13 நான் உங்களுக்குப் பிரியமானவனாக இருந்தால், தயவுசெய்து உங்கள்
வழிகளை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.[e] அப்போதுதான் நான் உங்களை
நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும், எப்போதும் உங்களுக்குப் பிரியமான
வனாக இருக்க முடியும். இந்தத் தேசத்தார் உங்களுடைய சொந்த ஜனங்
கள் என்பதையும் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்"[f] என்றார். **14** அதற்கு
அவர், "நான் உன்னோடு வருவேன்,[g] உனக்கு ஓய்வு தருவேன்"[h] என்றார்.
15 அப்போது மோசே, "நீங்கள் எங்களோடு வரவில்லையென்றால், இங்கி
ருந்து எங்களைப் போகச் சொல்லாதீர்கள். **16** நீங்கள் என்மேலும் உங்க
ளுடைய ஜனங்கள்மேலும் பிரியமாக இருக்கிறீர்கள் என்று எப்படித் தெரி
யும்? நீங்கள் எங்களோடு வந்தால்தானே தெரியும்?[i] அப்போதுதானே
நானும் உங்கள் ஜனங்களும் இந்தப் பூமியிலுள்ள மற்ற எல்லாரையும்விட
விசேஷமானவர்களாக இருப்போம்?"[j] என்று கேட்டார்.

17 அப்போது யெகோவா மோசேயிடம், "இந்தத் தடவையும் நீ கேட்
கிறபடி செய்கிறேன். ஏனென்றால், நீ எனக்குப் பிரியமானவன். உன்னை*
எனக்கு நன்றாகத் தெரியும்" என்றார். **18** அதற்கு மோசே, "தயவுசெய்து
உங்கள் மகிமையை எனக்குக் காட்டுங்கள்" என்றார். **19** ஆனால் அவர்,
"நான் உன் முன்னால் கடந்துபோவேன். அப்போது, நான் எவ்வளவு நல்
லவர் என்று நீ பார்ப்பாய். யெகோவா என்ற என் பெயரைப் பற்றி உன்
முன்னால் அறிவிப்பேன்.*[k] யாருக்குக் கருணை காட்ட நினைக்கிறேனோ
அவர்களுக்குக் கருணை காட்டுவேன். யாருக்கு இரக்கம் காட்ட நினைக்கி
றேனோ அவர்களுக்கு இரக்கம் காட்டுவேன்"[l] என்றார். **20** அதோடு, "நீ
என் முகத்தைப் பார்க்க முடியாது. ஏனென்றால், என்னைப் பார்க்கிற எந்த
மனுஷனும் உயிரோடு இருக்க முடியாது" என்றார்.

21 பின்பு யெகோவா, "இதோ, என் பக்கத்தில் ஒரு இடம் இருக்
கிறது. இந்தப் பாறையின் மேல் நின்றுகொள். **22** என் மகிமை கடந்துபோ
கும்போது, உன்னை இந்தப் பாறையின் குகையில் வைப்பேன். நான்
கடந்துபோகிற வரைக்கும் என் கையால் உன்னை மறைத்துப் பாதுகாப்பேன்.

அதி. 33
a யாத் 13:21; சங் 99:7
b எண் 11:16, 17; எண் 12:5
c யாத் 33:22, 23; எண் 12:8; உபா 34:10; யோவா 1:18; யோவா 6:46; அப் 7:38
d யாத் 17:9; யாத் 24:13; எண் 11:28; உபா 1:38; யோசு 1:1
e சங் 25:4; சங் 27:11; சங் 86:11; சங் 119:33; ஏசா 30:21
f உபா 9:26
g யாத் 13:21; யாத் 40:34; யோசு 1:5, 17; ஏசா 63:9
h யோசு 21:44; யோசு 23:1
i எண் 14:13, 14
j உபா 4:34; 2சா 7:23; சங் 147:20
k யாத் 3:13; யாத் 6:3; யாத் 34:6
l ரோ 9:15

33:12, 17 * வே.வா., "உன் பெயரை." **33:12** # வே.வா., "நான் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்." **33:19** * வே.வா., "நான் எப்படிப்பட்டவர் என்று சொல்வேன்."

23 அதன்பின் என் கையை எடுத்துவிடுவேன், நீ என் பின்பக்கத்தைப்
பார்ப்பாய். ஆனால், என் முகத்தைப் பார்க்க மாட்டாய்"[a] என்றார்.

34 பின்பு யெகோவா மோசேயிடம், "நீ உடைத்துப்போட்ட[b]
முதல் இரண்டு கற்பலகைகளைப் போலவே வேறு இரண்டு கற்ப
லகைகளை வெட்டி எடுத்துக்கொள்.[c] முதல் கற்பலகைகளில் இருந்த வார்த்
தைகளை இந்தக் கற்பலகைகளில் நான் எழுதுவேன்.[d] **2** நீ நாளை காலை
யிலேயே சீனாய் மலை உச்சிக்கு ஏறிவந்து அங்கே என் முன்னிலையில்
நிற்க வேண்டும். அதற்காகத் தயாராகிக்கொள்.[e] **3** ஆனால், யாரும் உன்
னோடு வரக் கூடாது. மலைமேல் வேறு யாரையுமே நான் பார்க்கக் கூடாது.
அந்த மலைக்கு முன்னால் ஆடுமாடுகள்கூட மேயக் கூடாது"[f] என்றார்.

4 அதனால், முதல் கற்பலகைகளைப் போன்ற இரண்டு கற்பலகை
களை மோசே வெட்டி எடுத்துக்கொண்டார். பின்பு விடியற்காலையி
லேயே எழுந்து, யெகோவா சொன்னபடி அந்த இரண்டு கற்பலகைக
ளையும் கையில் எடுத்துக்கொண்டு சீனாய் மலைமேல் ஏறிப்போனார்.
5 யெகோவா மேகத்தில் இறங்கி வந்து[g] மோசேக்குப் பக்கத்தில் நின்றார்.
பின்பு, யெகோவா என்ற தன்னுடைய பெயரைப் பற்றி அறிவித்தார்.*[h]
6 யெகோவா மோசேயின் முன்னால் கடந்துபோகும்போது, "யெகோவா,
யெகோவா, இரக்கமும்[i] கரிசனையும்*[j] உள்ள கடவுள், சீக்கிரத்தில் கோபப்
படாதவர்,[k] மாறாத அன்பை அளவில்லாமல் காட்டுபவர்,[l] உண்மையுள்ள
வர்,#[m] **7** ஆயிரமாயிரம் தலைமுறைகளுக்கு மாறாத அன்பைக் காட்டுப
வர்,[n] குற்றத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிப்பவர்.[o] ஆனால்,
குற்றவாளியை அவர் ஒருபோதும் தண்டிக்காமல் விடமாட்டார்.[p] தகப்பன்
கள் செய்த குற்றத்துக்காக அவர்களுடைய மகன்களையும் பேரன்களையும்
மூன்றாம் நான்காம் தலைமுறைகளைச் சேர்ந்தவர்களையும் தண்டிப்பார்"[q]
என்று சொன்னார்.

8 உடனே மோசே சாஷ்டாங்கமாக விழுந்தார். **9** பின்பு, "யெகோ
வாவே, என்மேல் உங்களுக்குப் பிரியம் இருந்தால், தயவுசெய்து எங்க
ளோடு வாருங்கள், எங்கள் நடுவில் இருங்கள்.[r] யெகோவாவே, நாங்கள்
பிடிவாதக்காரர்களாக இருந்தாலும்,[s] எங்கள் குற்றத்தையும் பாவத்தையும்
மன்னியுங்கள்.[t] எங்களை உங்களுடைய ஜனங்களாக ஏற்றுக்கொள்ளுங்
கள்" என்றார். **10** அதற்கு அவர், "இதோ, நான் ஒரு ஒப்பந்தம் செய்கி
றேன். இதுவரை இந்த உலகத்தில் நடக்காத அற்புதங்களை உங்கள் எல்லா
ருக்கும் முன்னால் நடத்திக் காட்டுவேன்.[u] வேறு எந்தத் தேசத்தார் முன்பா
கவும் செய்யாத அதிசயங்களைச் செய்வேன். யெகோவாவாகிய நான் உங்
களுக்காகச் செய்யும் பிரமிப்பூட்டுகிற செயல்களை உங்களைச் சுற்றியுள்ள
ஜனங்கள் பார்ப்பார்கள்.[v]

11 இன்று நான் உங்களுக்குச் சொல்லும் கட்டளைகளைக் கடைப்பிடி
யுங்கள்.[w] எமோரியர்கள், கானானியர்கள், ஏத்தியர்கள், பெரிசியர்கள், ஏவி
யர்கள், எபூசியர்கள் எல்லாரையும் உங்களைவிட்டுத் துரத்துவேன்.[x]
12 நீங்கள் போய்ச் சேருகிற தேசத்தின் குடிமக்களோடு ஒப்பந்தம் செய்யா
தபடி ஜாக்கிரதையாக இருங்கள்.[y] இல்லாவிட்டால், நீங்கள் ஆபத்தில் சிக்
கிக்கொள்வீர்கள்.[z] **13** அவர்களுடைய பலிபீடங்களை இடித்துப்போடுங்

34:5 *வே.வா., "தான் எப்படிப்பட்டவர் என்று சொன்னார்." **34:6** *வே.வா., "கனி
வும்." #வே.வா., "நம்பிக்கையானவர்."

அதி. 33
a யோவா 1:18

அதி. 34
b யாத் 32:19
உபா 9:17
c உபா 10:1
d உபா 9:10
e யாத் 19:20
யாத் 24:12
f யாத் 19:12, 13
g அப் 7:38
h யாத் 6:3
யாத் 33:19
i லூ 6:36
j யாத் 22:27
2நா 30:9
நெ 9:17
சங் 86:15
யோவே 2:13
k எண் 14:18
2பே 3:9
l எரே 31:3
புல 3:22
மீ 7:18
m சங் 31:5
ரோ 2:2
n தானி 9:4
o சங் 103:12
ஏசா 55:7
எபே 4:32
1யோ 1:9
p உபா 32:35
யோசு 24:19
ரோ 2:5
2பே 2:4
யூ 14, 15
q யாத் 20:5
உபா 30:19
1சா 15:2
r யாத் 33:14
s யாத் 32:9
யாத் 33:3
t எண் 14:19
u 2சா 7:23
சங் 147:19, 20
v யாத் 33:16
உபா 10:21
w யாத் 19:5, 6
உபா 12:28
x யாத் 3:8
யாத் 33:2
உபா 7:1
y உபா 7:2
z யாத் 23:
32, 33

கள், பூஜைத் தூண்களை* தகர்த்துப்போடுங்கள், பூஜைக் கம்பங்களை*
உடைத்துப்போடுங்கள்.[a] **14** வேறொரு தெய்வத்தை நீங்கள் வணங்கக்
கூடாது.[b] யெகோவா தன்னை மட்டுமே வணங்க வேண்டுமென்று எதிர்
பார்க்கிற கடவுள் என்பது எல்லாருக்கும் தெரியும். உண்மையில், அவர்
முழு பக்தியை எதிர்பார்க்கும் கடவுள்.[c] **15** மற்ற தேசத்து ஜனங்களோடு
ஒப்பந்தம் செய்யாதபடி ஜாக்கிரதையாக இருங்கள். ஏனென்றால், அவர்கள்
என்னை வணங்காமல் தங்களுடைய தெய்வங்களைக் கும்பிட்டு, அவற்றுக்
குப் பலி செலுத்தும்போது,[d] உங்களையும் கூப்பிடுவார்கள். அவர்கள்
பலி செலுத்துவதை நீங்களும் சாப்பிடுவீர்கள்.[e] **16** அதன்பின், அவர்களு
டைய மகள்களை உங்களுடைய மகன்களுக்குக் கல்யாணம் செய்து வைப்
பீர்கள்.[f] அவர்களுடைய மகள்கள் தங்களுடைய தெய்வங்களைக் கும்பிடு
வது போதாதென்று, உங்கள் மகன்களும் அவற்றைக் கும்பிடும்படி செய்து
விடுவார்கள்.*[g]

17 நீங்கள் சிலைகளைச் செய்து வணங்கக் கூடாது.[h]

18 புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையை நீங்கள் கொண்டாட வேண்
டும்.[i] நான் உங்களுக்குக் கட்டளை கொடுத்தபடியே, ஆபிப்* மாதத்தின்
குறிக்கப்பட்ட தேதிகளில், புளிப்பில்லாத ரொட்டிகளை ஏழு நாட்களுக்குச்
சாப்பிட வேண்டும்.[j] ஏனென்றால், ஆபிப் மாதத்தில்தான் நீங்கள் எகிப்திலி
ருந்து வெளியே வந்தீர்கள்.

19 உங்களுக்குப் பிறக்கிற முதல் ஆண் பிள்ளைகளும் சரி, உங்கள்
ஆடுமாடுகள் போடுகிற முதல் ஆண்குட்டிகளும் கன்றுகளும் சரி, எனக்
குத்தான் சொந்தம்.[k] **20** கழுதையின் முதல் குட்டியை, ஒரு ஆட்டைக்
கொடுத்து நீங்கள் மீட்க வேண்டும். அப்படி அதை மீட்காவிட்டால், அதன்
கழுத்தை முறிக்க வேண்டும். உங்களுக்குப் பிறக்கிற முதல் ஆண் குழந்
தைகளையும் நீங்கள் மீட்டுக்கொள்ள வேண்டும்.[l] யாருமே என் முன்னால்
வெறுங்கையோடு வரக் கூடாது.

21 ஆறு நாட்கள் நீங்கள் வேலை செய்ய வேண்டும், ஏழாம் நாள் உங்க
ளுக்கு ஓய்வுநாள்.[m] உழுகிற காலத்திலும் சரி, அறுக்கிற காலத்திலும் சரி,
ஏழாம் நாளில் நீங்கள் ஓய்ந்திருக்க வேண்டும்.

22 உங்களுடைய கோதுமையின் முதல் விளைச்சலைச் செலுத்தி,
வாரங்களின் பண்டிகையைக் கொண்டாட வேண்டும். வருஷத்தின் முடி
வில், சேகரிப்புப் பண்டிகையை* கொண்டாட வேண்டும்.[n]

23 உண்மை எஜமானும் இஸ்ரவேலின் கடவுளுமான யெகோவாவின்
முன்னிலையில் ஆண்கள் எல்லாரும் வருஷத்துக்கு மூன்று தடவை வர
வேண்டும்.[o] **24** மற்ற தேசத்தாரை உங்கள் முன்பிருந்து நான் துரத்திவிடு
வேன்.[p] உங்கள் எல்லையை விரிவாக்குவேன். வருஷத்துக்கு மூன்று
தடவை உங்கள் கடவுளாகிய யெகோவாவின் சன்னிதிக்கு நீங்கள் போகும்
போது, யாரும் வந்து உங்கள் தேசத்தைப் பிடிக்க மாட்டார்கள்.

25 எனக்காகச் செலுத்தும் பலியின் இரத்தத்தைப் புளிப்பு சேர்க்கப்பட்ட
எதனுடனும் சேர்த்து செலுத்தக் கூடாது.[q] பஸ்கா பண்டிகையின்போது
நீங்கள் செலுத்தும் பலியைக் காலைவரை வைத்திருக்கக் கூடாது.[r]

அதி. 34
a யாத் 23:24; உபா 12:3
b யாத் 20:3; 1கொ 10:14; 1யோ 5:21
c யோசு 24:19
d 1கொ 10:20
e எண் 25:2; 2கொ 6:14
f எஸ்றா 9:2
g உபா 7:4; உபா 31:16; நியா 2:17; நியா 8:33; 1ரா 11:2; நெ 13:26; சங் 106:28
h யாத் 32:8; லேவி 19:4
i லேவி 23:6
j யாத் 23:15
k யாத் 13:2; யாத் 22:30; லூ 2:23
l யாத் 13:15; எண் 18:15, 16
m உபா 5:12
n யாத் 23:16; லேவி 23:34
o உபா 16:16
p யாத் 34:11
q யாத் 23:18
r யாத் 12:10; எண் 9:12

34:13 *சொல் பட்டியலைப் பாருங்கள். **34:16** *வே.வா., “அவற்றைக் கும்பிட்டு எனக்குத் துரோகம் பண்ணும்படி செய்துவிடுவார்கள்.” **34:18** *இணைப்பு B15-ஐப் பாருங்கள். **34:22** *கூடாரப் பண்டிகை என்றும் இது அழைக்கப்பட்டது.

26 உங்கள் நிலத்தில் விளைகிற முதல் விளைச்சலில் மிகச் சிறந்ததை
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் வீட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.[a]
ஆட்டுக்குட்டியை அதன் தாயின் பாலிலே சமைக்கக் கூடாது"[b] என்றார்.
27 அதோடு யெகோவா மோசேயிடம், "இந்த வார்த்தைகளை நீ எழுதி
வைத்துக்கொள்.[c] ஏனென்றால், இந்த வார்த்தைகளின்படியே நான் உன்னோ
டும் இஸ்ரவேலர்களோடும் ஒப்பந்தம் செய்கிறேன்"[d] என்றார். **28** அங்கு
மோசே 40 நாட்கள் இரவும் பகலும் யெகோவாவுடன் இருந்தார். அவர்
உணவு சாப்பிடவும் இல்லை, தண்ணீர் குடிக்கவும் இல்லை.[e] கடவுள்
அந்தக் கற்பலகைகளில் ஒப்பந்தத்தின் வார்த்தைகளாகிய பத்துக் கட்டளை
களை எழுதினார்.[f]

29 பின்பு, மோசே சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வந்தார்.
அந்தச் சாட்சிப் பலகைகள் இரண்டையும் கையில் வைத்திருந்தார்.[g] அவர்
அதுவரை கடவுளோடு பேசிக்கொண்டிருந்ததால், மலையிலிருந்து இறங்கி
வந்தபோது அவருடைய முகம் ஒளிவீசியது. ஆனால், அது அவருக்குத்
தெரியவில்லை. **30** அவர் முகம் ஒளிவீசியதை ஆரோனும் இஸ்ரவேல்
ஜனங்கள் எல்லாரும் பார்த்தார்கள். அதனால், அவருக்குப் பக்கத்தில்
போகவே பயந்தார்கள்.[h]

31 ஆனால், மோசே அவர்களைக் கூப்பிட்டார். அப்போது, ஆரோ
னும் ஜனங்களின் தலைவர்கள் எல்லாரும் அவரிடம் வந்தார்கள். மோசே
அவர்களுடன் பேசினார். **32** அதன்பின், இஸ்ரவேலர்கள் எல்லாரும்
அவருக்குப் பக்கத்தில் வந்தார்கள். சீனாய் மலையில் யெகோவா கொடுத்த
கட்டளைகள் எல்லாவற்றையும் அவர் அவர்களுக்குச் சொன்னார்.[i]
33 மோசே அவர்களோடு பேசி முடிக்கும்போது முகத்திரையைப் போட்
டுக்கொள்வார்.[j] **34** ஆனால், யெகோவாவிடம் பேசுவதற்காகப் போகும்
போது அதை எடுத்துவிடுவார்.[k] அதன்பின், அவர் வெளியே வந்து
கடவுள் தந்த கட்டளைகளை இஸ்ரவேலர்களுக்குச் சொல்வார்.[l] **35** இஸ்ர
வேலர்கள் பார்க்கும்போது மோசேயின் முகம் ஒளிவீசும். மோசே முகத்தி
ரையைப் போட்டுக்கொள்வார், கடவுளிடம் பேசுவதற்குப் போகும்போது
மட்டும் அதை எடுத்துவிடுவார்.[m]

35 பிற்பாடு, மோசே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் கூடிவரச்
செய்து இப்படிச் சொன்னார்: "யெகோவா உங்களுக்கு இந்தக்
கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார்:[n] **2** ஆறு நாட்கள் நீங்கள் வேலை
செய்யலாம். ஆனால், ஏழாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான நாள். அது
யெகோவாவுக்காக முழுமையாய் ஓய்ந்திருக்க வேண்டிய ஓய்வுநாள்.[o]
அந்த நாளில் வேலை செய்கிற எவனும் கொல்லப்படுவான்.[p] **3** ஓய்வுநா
ளிலே, நீங்கள் குடியிருக்கிற எந்த இடத்திலும் நெருப்பு மூட்டக் கூடாது."
4 பின்பு, மோசே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரிடமும், "யெகோவா
வின் கட்டளை என்னவென்றால், **5** 'நீங்கள் யெகோவாவுக்குக் காணிக்கை
கொண்டுவர வேண்டும்.[q] யெகோவாவுக்கு உள்ளப்பூர்வமாகக் காணிக்கை
கொடுக்க விரும்புகிறவர்கள்[r] இதையெல்லாம் கொண்டுவரலாம்: தங்கம்,
வெள்ளி, செம்பு, **6** நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு
நூல், உயர்தர நாரிழை,* வெள்ளாட்டு மயிர்,[s] **7** சிவப்புச் சாயம் போட்ட
செம்மறியாட்டுக் கடாத் தோல், கடல்நாய்த் தோல், வேல மரம், **8** விளக்

35:6 * அதாவது, "லினன்."

அதி. 34
a எண் 18:8, 12; உபா 26:2; நீதி 3:9
b யாத் 23:19; உபா 14:21
c யாத் 24:4; உபா 31:9, 11
d யாத் 24:8; உபா 4:13
e உபா 9:18
f யாத் 31:18; உபா 10:2
g யாத் 32:15
h 2கொ 3:7
i யாத் 24:3; உபா 1:3
j 2கொ 3:13
k 2கொ 3:16
l உபா 27:10
m 2கொ 3:7, 13

அதி. 35
n யாத் 34:32
o யாத் 20:9, 10; லேவி 23:3
p யாத் 31:14, 15; எண் 15:32, 35
q யாத் 25:2-7; யாத் 35:29
r 2கொ 8:12; 2கொ 9:7
s யாத் 26:7; யாத் 36:8

குகளுக்கான எண்ணெய், அபிஷேகத் தைலத்துக்கும் தூபப்பொருளுக்
கும் தேவையான பரிமளத் தைலம்,[a] 9 ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும்[b]
பதிக்க வேண்டிய கோமேதகக் கற்கள்[c] மற்றும் பல ரத்தினக் கற்கள்.

10 உங்களில் திறமைசாலிகளாக இருக்கிற[d] எல்லாரும் வந்து,
யெகோவா சொல்லியிருக்கிற எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.
11 அதாவது, வழிபாட்டுக் கூடாரம், அதற்கான மேல்விரிப்புகள், கொக்
கிகள், சட்டங்கள், கம்புகள், தூண்கள், பாதங்கள், 12 பெட்டி,[e] அதன் கம்
புகள்,[f] அதன் மூடி,[g] திரைச்சீலை,[h] 13 மேஜை,[i] அதன் கம்புகள், அதற்
கான பாத்திரங்கள், படையல் ரொட்டிகள்,[j] 14 குத்துவிளக்கு,[k] அதற்கான
பாத்திரங்கள், அகல் விளக்குகள், விளக்குகளுக்கான எண்ணெய்,[l] 15 தூப
பீடம்,[m] அதன் கம்புகள், அபிஷேகத் தைலம், தூபப்பொருள்,[n] வழிபாட்டுக்
கூடார வாசலின் திரை, 16 தகன பலிக்கான பலிபீடம்,[o] அதற்கான செம்
புக் கம்பிவலை, கம்புகள், பாத்திரங்கள், தொட்டி, அதை வைப்பதற்கான
தாங்கி,[p] 17 பிரகாரத்துக்கான மறைப்புகள்,[q] கம்பங்கள், பாதங்கள், பிரகார
நுழைவாசலுக்கான திரை, 18 கூடார ஆணிகள், பிரகாரத்துக்கான ஆணி
கள், கயிறுகள்,[r] 19 வழிபாட்டுக் கூடாரத்தில் பணிவிடை செய்வதற்காக
நன்றாய் நெய்யப்பட்ட உடைகள்,[s] குருவாகிய ஆரோனுக்குப் பரிசுத்த அங்
கிகள்,[t] குருமார்களாகச் சேவை செய்ய அவனுடைய மகன்களுக்கு அங்கி
கள் ஆகியவற்றைச் செய்ய வேண்டும்'" என்றார்.

20 மோசே சொன்னதைக் கேட்ட பின்பு இஸ்ரவேலர்கள் எல்லாரும்
அங்கிருந்து போனார்கள். 21 பின்பு, யாருடைய உள்ளம் தூண்டியதோ,
யாருடைய மனம் உந்துவித்ததோ,[u] அவர்கள் எல்லாரும் சந்திப்புக் கூடா
ரத்துக்காகவும் அங்கு நடக்கிற வேலைகளுக்காகவும் பரிசுத்த அங்கிகள்
செய்வதற்காகவும் யெகோவாவுக்குக் காணிக்கை கொண்டுவந்து கொடுத்
தார்கள். 22 தங்க ஊசிகளையும்,* தோடுகளையும், மோதிரங்களையும்,
மற்ற நகைகளையும், எல்லா விதமான தங்கச் சாமான்களையும் ஆண்கள்,
பெண்கள் எல்லாரும் உள்ளப்பூர்வமாகக் கொடுத்துக்கொண்டே இருந்தார்
கள். அவர்கள் எல்லாரும் தங்கத்தை யெகோவாவுக்குக் காணிக்கையாக#
கொடுத்தார்கள்.[v] 23 நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு
நூல், உயர்தர நாரிழை, வெள்ளாட்டு மயிர், சிவப்புச் சாயம் போட்ட செம்
மறியாட்டுக் கடாத் தோல், கடல்நாய்த் தோல் ஆகியவற்றை வைத்திருந்த
வர்கள் அவற்றைக் கொண்டுவந்தார்கள். 24 வெள்ளியும் செம்பும் வைத்
திருந்த எல்லாரும் அவற்றை யெகோவாவுக்குக் காணிக்கையாகக் கொடுத்
தார்கள். வேல மரத்துண்டுகள் வைத்திருந்த எல்லாரும் அவற்றைக் கூடார
வேலைகளுக்காகக் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

25 திறமையான பெண்கள்[w] எல்லாரும் தங்கள் கைகளால் நூல் நூற்று,
நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தர நாரிழை
ஆகியவற்றைக் கொண்டுவந்தார்கள். 26 திறமையான பெண்களில் யாருக்
கெல்லாம் உள்ளத்தில் ஆர்வம் இருந்ததோ அவர்கள் எல்லாரும் வெள்
ளாட்டு மயிரை நூலாகத் திரித்துக் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

27 ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்க வேண்டிய கோமேதகக் கற்
கள் மற்றும் பல ரத்தினக் கற்கள்,[x] 28 பரிமளத் தைலம், விளக்குகளுக்கும்

அதி. 35
a யாத் 25:3, 6
b யாத் 28:15
c யாத் 28:9; யாத் 39:14
d யாத் 31:6; யாத் 36:1
e யாத் 25:10
f யாத் 25:13
g யாத் 25:17
h யாத் 26:31
i யாத் 25:23
j யாத் 25:30; லேவி 24:5, 6
k யாத் 25:31
l யாத் 27:20
m யாத் 30:1; யாத் 37:25; யாத் 40:5
n யாத் 30: 34, 35
o யாத் 27:1
p யாத் 30:18; யாத் 38:8
q யாத் 27:9
r யாத் 27:19
s யாத் 31:6, 10; யாத் 39: 33, 41
t யாத் 39:1
u யாத் 25:2; யாத் 36:2; 2கொ 8:12; 2கொ 9:7
v யாத் 38:24
w யாத் 28:3; யாத் 31:6; யாத் 36:8
x யாத் 28:15, 28; யாத் 39:15, 21

35:22 *இவை அநேகமாக உடைகளில் குத்திக்கொள்ளும் அலங்காரப் பின்களாக இருந்திருக்கலாம். #வே.வா., "அசைவாட்டும் காணிக்கையாக."

அபிஷேகத் தைலத்துக்கும்[a] தூபப்பொருளுக்கும் தேவையான எண்
ணெய்[b] ஆகியவற்றைத் தலைவர்கள் கொண்டுவந்தார்கள். **29** ஆண்களி
லும் பெண்களிலும் யாருக்கெல்லாம் உள்ளத்தில் ஆர்வம் இருந்ததோ
அவர்கள் எல்லாரும், மோசே மூலம் யெகோவா செய்யச் சொல்லியி
ருந்த வேலைக்காக ஏதாவது ஒரு காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.
இஸ்ரவேலர்கள் அவர்களாகவே விருப்பப்பட்டு அவற்றை யெகோவாவுக்
குக் கொடுத்தார்கள்.[c]

30 பின்பு மோசே இஸ்ரவேலர்களிடம், “யூதா கோத்திரத்தைச் சேர்ந்த
ஹூரின் பேரனும் ஊரியின் மகனுமான பெசலெயேலை யெகோவா தேர்ந்
தெடுத்திருக்கிறார்.[d] **31** அவரைத் தன்னுடைய சக்தியால் நிரப்பி, எல்லா
விதமான கைவேலைகள் செய்யவும், **32** கலை வேலைப்பாடுகள் செய்ய
வும், தங்கம், வெள்ளி, செம்பு வேலைகள் செய்யவும், **33** கற்களைப் பட்
டைதீட்டி அவற்றைப் பதிக்கவும், எல்லாவித மர வேலைப்பாடுகள் செய்ய
வும் அவருக்கு ஞானத்தையும் புரிந்துகொள்ளுதலையும் அறிவையும் தந்
திருக்கிறார். **34** கற்பிக்கும் திறமையை பெசலெயேலுக்கும் தாண் கோத்
திரத்தைச் சேர்ந்த அகிசாமாக்கின் மகன் அகோலியாபுக்கும்[e] கடவுள் தந்தி
ருக்கிறார். **35** எல்லா விதமான கைவேலைகள் செய்யவும், நீல நிற நூல்,
ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தர நாரிழை ஆகியவற்
றால் தையல்* வேலைப்பாடு செய்யவும், உடைகளை நெசவு செய்து வடி
வமைக்கவும் அவர்களுக்குக் கடவுள் திறமை தந்திருக்கிறார்.[f] அவர்கள்
எல்லா விதமான வேலைகளையும் கலை வேலைப்பாடுகளையும் செய்வார்
கள்” என்றார்.

36 அதோடு, “பெசலெயேலுடன் அகோலியாபும் மற்ற திறமைசா
லிகளும் சேர்ந்து வழிபாட்டுக் கூடாரத்தின் பரிசுத்த வேலைகளைச்
செய்வார்கள். யெகோவா சொன்னபடியே அந்த வேலைகளைச் சரியாகச்
செய்ய யெகோவா அவர்களுக்கு ஞானத்தையும் புரிந்துகொள்ளுதலையும்
தந்திருக்கிறார்”[g] என்று மோசே சொன்னார்.

2 பின்பு பெசலெயேலையும், அகோலியாபையும், யெகோவாவிடமி
ருந்து ஞானத்தைப் பெற்ற திறமைசாலிகள் எல்லாரையும்,[h] அந்த வேலை
களை விருப்பப்பட்டு செய்ய யாருடைய உள்ளம் தூண்டியதோ[i] அவர்கள்
எல்லாரையும் மோசே கூப்பிட்டார். **3** அந்தப் பரிசுத்த வேலைகளுக்காக
இஸ்ரவேலர்கள் கொடுத்த காணிக்கைகள்[j] எல்லாவற்றையும் அவர்கள்
மோசேயிடமிருந்து வாங்கிக்கொண்டார்கள். அதன் பின்பும், ஒவ்வொரு
நாள் காலையிலும் ஜனங்கள் விருப்பத்தோடு காணிக்கைகளைக் கொண்டு
வந்தார்கள்.

4 அவர்கள் அந்தப் பரிசுத்த வேலைகளை ஆரம்பித்த பின்பு,
அந்தத் திறமைசாலிகள் எல்லாரும் ஒவ்வொருவராக வந்து, **5** மோசே
யிடம், “யெகோவா செய்யச் சொன்ன வேலைக்காக, ஜனங்கள் தேவைக்
கும் அதிகமான பொருள்களைக் கொண்டுவந்து குவிக்கிறார்கள்” என்
றார்கள். **6** அதனால் மோசே, “ஆண்கள், பெண்கள் யாருமே இனி எந்தப்
பொருளையும் காணிக்கையாகக் கொண்டுவர வேண்டாம்” என்று முகாம்
முழுக்க அறிவிப்பு செய்யச் சொன்னார். அதனால், ஜனங்கள் காணிக்கை
கொண்டுவருவதை நிறுத்தினார்கள். **7** எல்லா வேலைகளுக்கும் தேவை

35:35 * வே.வா., “எம்பிராய்டரி.”

அதி. 35
a யாத் 30:23-25
b யாத் 30:34, 35
c யாத் 36:5; 2கொ 9:7
d யாத் 31:2-6
e யாத் 36:1
f யாத் 31:3

அதி. 36
g யாத் 25:9; யாத் 31:6
h யாத் 28:3; யாத் 35:10
i யாத் 35:21, 26
j யாத் 35:5-9; நீதி 3:9; 2கொ 9:7

அதி. 36
a யாத் 31:6
b யாத் 25:9; யாத் 39:32; எபி 9:9
c யாத் 26:1-6
d யாத் 26:7-11
e யாத் 26:14
f யாத் 25:10, 23; யாத் 27:1; யாத் 30:5; யாத் 36:36
g யாத் 26:15-18

யான பொருள்கள் ஏற்கெனவே வந்து குவிந்திருந்தன. அவை தேவைக்கும் அதிகமாகவே இருந்தன.

8 அந்தத் திறமைசாலிகள் எல்லாரும்[a] வழிபாட்டுக் கூடாரத்தை[b] 10 விரிப்புகளால் அமைத்தார்கள். உயர்தரமான திரித்த நாரிழை,* நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல் ஆகியவற்றால் இந்த விரிப்புகளைத் தயாரித்தார்கள். இந்த விரிப்புகள்மேல் அவர்# கேருபீன்களின் வடிவத்தில் தையல்^ வேலைப்பாடு செய்தார்.[c] **9** ஒவ்வொரு விரிப்பும் 28 முழ* நீளத்திலும் 4 முழ அகலத்திலும் இருந்தது. எல்லா விரிப்புகளும் ஒரே அளவில் இருந்தன. **10** பின்பு, ஐந்து விரிப்புகளை ஒன்றாகவும் மற்ற ஐந்து விரிப்புகளை ஒன்றாகவும் அவர் இணைத்தார். **11** இணைக்கப்பட்ட ஒரு விரிப்பின் ஓரத்தில் நீல நிற நூலால் காதுகளை* தைத்தார். இணைக்கப்பட்ட மற்றொரு விரிப்பின் ஓரத்திலும் அதேபோல் காதுகளைத் தைத்தார். இந்த இரண்டு விரிப்புகளையும் சேர்ப்பதற்காக இப்படிச் செய்தார். **12** அந்த ஒவ்வொரு விரிப்பிலும் 50 காதுகளைத் தைத்தார். ஒரு விரிப்பிலுள்ள காதுகள் மற்ற விரிப்பின் ஓரத்திலுள்ள காதுகளோடு இணையும்படி நேருக்கு நேராக வைத்துத் தைத்தார். **13** தங்கத்தில் 50 கொக்கிகள் செய்து, அவற்றால் அந்த இரண்டு விரிப்புகளையும் ஒன்றாக இணைத்தார். இப்படி, முழு கூடாரமும் ஒரே விரிப்பால் அமைக்கப்பட்டதாக இருந்தது.

14 பின்பு, வழிபாட்டுக் கூடாரத்தின் மேல் விரிப்பதற்கு வெள்ளாட்டு மயிரால் 11 கம்பளிகளைச் செய்தார்.[d] **15** ஒவ்வொரு கம்பளியும் 30 முழ நீளத்திலும் 4 முழ அகலத்திலும் இருந்தது. 11 கம்பளிகளும் ஒரே அளவில் இருந்தன. **16** ஐந்து கம்பளிகளை அவர் ஒன்றாக இணைத்தார். மற்ற ஆறு கம்பளிகளை ஒன்றாக இணைத்தார். **17** இணைக்கப்பட்ட ஒரு கம்பளியின் ஓரத்தில் 50 காதுகளைத் தைத்தார். இணைக்கப்பட்ட மற்றொரு கம்பளியின் ஓரத்திலும் 50 காதுகளைத் தைத்தார். ஒரு கம்பளியின் காதுகள் மற்ற கம்பளியின் காதுகளோடு இணையும்படி அமைத்தார். **18** செம்பினால் 50 கொக்கிகளைச் செய்து, அந்தக் கொக்கிகளால் காதுகளை இணைத்தார். அப்போது, முழு கூடாரத்துக்கும் ஒரே கம்பளி இருந்தது.

19 அதோடு, கம்பளிமேல் போடுவதற்கு சிவப்புச் சாயம் போட்ட செம்மறியாட்டுக் கடாத் தோலினால் ஒரு விரிப்பைச் செய்தார். அதன்மேல் போடுவதற்கு கடல்நாய்த் தோலினால் ஒரு விரிப்பைச் செய்தார்.[e]

20 பின்பு, வழிபாட்டுக் கூடாரத்துக்காக வேல மரத்தால்[f] செங்குத்தான சட்டங்களை* செய்தார்.[g] **21** ஒவ்வொரு சட்டமும் 10 முழ உயரமும் ஒன்றரை முழ அகலமுமாக இருந்தது. **22** ஒவ்வொரு சட்டத்தின் அடிபாகத்திலும் இரண்டு புடைப்புகள்* அடுத்தடுத்து இருந்தன. வழிபாட்டுக் கூடாரத்துக்கான எல்லா சட்டங்களையும் இப்படித்தான் செய்தார். **23** வழிபாட்டுக் கூடாரத்தின் தெற்குப் பக்கத்தில் நிறுத்துவதற்காக 20 சட்டங்கள் செய்தார். **24** அந்த 20 சட்டங்களுக்கும் கீழே வைப்பதற்காக 40 வெள்ளிப் பாதங்களை* செய்தார். ஒரு சட்டத்திலுள்ள இரண்டு புடைப்புகளுக்காக

36:8 * அதாவது, "லினன்." # அநேகமாக, "பெசலெயேல்." ^ வே.வா., "எம்பிராய்டரி." **36:9** * இணைப்பு B14-ஐப் பாருங்கள். **36:11** * அதாவது, "நூல் வளையங்களை." **36:20** * இவை செங்கோண வடிவ சட்டங்கள். **36:22** * வே.வா., "கால்கள்." **36:24** * அதாவது, "சட்டங்களின் புடைப்பான பகுதிகளைப் பொருத்துவதற்கு ஏற்ற குழிகள்கொண்ட அடிபீடங்களை."

இரண்டு பாதங்கள் என ஒவ்வொரு சட்டத்துக்குக் கீழேயும் பாதங்களை
வைத்தார்.[a] **25** வழிபாட்டுக் கூடாரத்தின் இன்னொரு பக்கத்துக்காக,
அதாவது வடக்குப் பக்கத்துக்காக, 20 சட்டங்களைச் செய்தார். **26** அவற்
றுக்காக 40 வெள்ளிப் பாதங்களையும் செய்தார். ஒரு சட்டத்துக்குக் கீழே
இரண்டு பாதங்கள் என ஒவ்வொரு சட்டத்துக்குக் கீழேயும் இரண்டு பாதங்
களை வைத்தார்.

27 வழிபாட்டுக் கூடாரத்தின் பின்பக்கத்துக்காக, அதாவது மேற்குப்
பக்கத்துக்காக, ஆறு சட்டங்களைச் செய்தார்.[b] **28** வழிபாட்டுக் கூடாரத்
தின் பின்பக்கத்திலுள்ள இரண்டு மூலைகளுக்கும் இரண்டு மூலைச்சட்டங்
களைச் செய்தார். **29** ஒவ்வொரு மூலைச்சட்டத்துக்கும் இரண்டு கட்டை
களைக் கூம்பு வடிவத்தில் வைத்து, முதல் வளையம் இருக்கிற இடத்தில்
இணைத்தார். கூடாரத்தின் இரண்டு பக்கத்திலுள்ள மூலைச்சட்டங்களையும்
இப்படித்தான் செய்தார். **30** ஒவ்வொரு சட்டத்துக்குக் கீழேயும் இரண்டி
ரண்டு பாதங்கள் இருந்தன. அதாவது, 8 சட்டங்களுக்கு 16 வெள்ளிப்
பாதங்கள் இருந்தன.

31 பின்பு, அவர் வேல மரத்தால் கம்புகளைச் செய்தார். வழிபாட்டுக்
கூடாரத்தின் ஒரு பக்கத்திலுள்ள சட்டங்களை இணைப்பதற்காக ஐந்து
கம்புகளைச் செய்தார்.[c] **32** வழிபாட்டுக் கூடாரத்தின் மற்ற பக்கத்தி
லுள்ள சட்டங்களை இணைப்பதற்காக ஐந்து கம்புகளைச் செய்தார். வழி
பாட்டுக் கூடாரத்தின் பின்பக்கத்துக்காக, அதாவது மேற்குப் பக்கத்துக்காக,
ஐந்து கம்புகளைச் செய்தார். **33** சட்டங்களை இணைப்பதற்காக அவற்
றின் நடுப்பகுதியில் செருகப்படும் கம்பு ஒரு முனைமுதல் மறு முனை
வரை ஒரே கம்பாக இருக்கும்படி செய்தார். **34** சட்டங்களுக்குத் தங்கத்
தால் தகடு அடித்தார். கம்புகளைச் செருகுவதற்கான வளையங்களைத் தங்
கத்தில் செய்தார். கம்புகளுக்கும் தங்கத்தால் தகடு அடித்தார்.[d]

35 நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்
தரமான திரித்த நாரிழை ஆகியவற்றால் ஒரு திரைச்சீலையைச்[e] செய்தார்.
அதன்மேல் கேருபீன்களின்[f] வடிவத்தில் தையல் வேலைப்பாடு செய்தார்.[g]
36 திரைச்சீலையைத் தொங்கவிடுவதற்காக வேல மரத்தால் நான்கு தூண்
கள் செய்து, அவற்றுக்குத் தங்கத்தால் தகடு அடித்தார். அவற்றின் கொக்
கிகளைத் தங்கத்தில் செய்தார். வெள்ளியில் செய்யப்பட்ட நான்கு பாதங்க
ளின் மேல் அந்தத் தூண்களை நிறுத்தினார். **37** வழிபாட்டுக் கூடாரத்தின்
நுழைவாசலுக்காக நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல்,
உயர்தரமான திரித்த நாரிழை ஆகியவற்றால் ஒரு திரையை நெய்தார்.[h]
38 அந்தத் திரையைத் தொங்கவிடுவதற்காக ஐந்து தூண்களையும் ஐந்து
கொக்கிகளையும் செய்தார். தூண்களின் மேல்பகுதிகளுக்கும் இணைப்புக
ளுக்கும்* தங்கத்தால் தகடு அடித்தார். அவற்றின் ஐந்து பாதங்களைச் செம்
பினால் செய்தார்.

37 பெசலெயேல்[i] வேல மரத்தால் ஒரு பெட்டியைச்[j] செய்தார்.
அதன் நீளம் இரண்டரை முழமும்* அதன் அகலம் ஒன்றரை முழ
மும் அதன் உயரம் ஒன்றரை முழமுமாக இருந்தது.[k] **2** அதன் உள்ளே
யும் வெளியேயும் சுத்தமான தங்கத்தால் அவர் தகடு அடித்தார். அதன்
விளிம்பைச் சுற்றிலும் தங்கத்தால் அலங்கார வேலைப்பாடு செய்தார்.[l]

36:38 * அதாவது, “வளையங்களுக்கும்.” **37:1** * இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 36
a யாத் 26:19-21
b யாத் 26: 22-25
c யாத் 26:26-28
d யாத் 26:29
e யாத் 40:21 எபி 10:19, 20
f ஆதி 3:24
g யாத் 26:31, 32
h யாத் 26: 36, 37

அதி. 37
i யாத் 31:2-5 யாத் 38:22
j யாத் 40:3 எண் 10:33
k யாத் 25:10-15
l எபி 9:4

3 பின்பு, தங்கத்தால் நான்கு வளையங்களை வார்த்து, பெட்டியின் நான்கு
கால்களுக்கு மேலேயும் பொருத்தினார். இரண்டு வளையங்களை ஒரு பக்
கத்திலும், மற்ற இரண்டு வளையங்களை இன்னொரு பக்கத்திலும் பொருத்
தினார். **4** அடுத்ததாக, வேல மரத்தில் கம்புகள் செய்து, அவற்றுக்குத் தங்
கத்தால் தகடு அடித்தார்.[a] **5** பெட்டியைத் தூக்கிக்கொண்டு போவதற்கு
வசதியாக, அதன் இரண்டு பக்கங்களிலும் இருந்த வளையங்களில் அந்தக்
கம்புகளைச் செருகி வைத்தார்.[b]

6 இரண்டரை முழ நீளத்திலும் ஒன்றரை முழ அகலத்திலும்[c] சுத்
தமான தங்கத்தால் ஒரு மூடியைச்[d] செய்தார். **7** தங்கத்தைச் சுத்தியால்
அடித்து இரண்டு கேருபீன்களைச் செய்தார்.[e] அவை மூடியின்[f] இரண்டு
முனைகளிலும் இருந்தன. **8** ஒரு முனையில் ஒரு கேருபீனும் இன்னொரு
முனையில் ஒரு கேருபீனும் இருந்தன. இப்படி, மூடியின் இரண்டு முனை
களிலும் கேருபீன்களைச் செய்து வைத்தார். **9** அந்த இரண்டு கேருபீன்
களின் சிறகுகளும் பெட்டியின் மூடிக்கு மேலாக விரிந்திருந்தன.[g] அந்தக்
கேருபீன்கள் ஒன்றுக்கொன்று எதிராக இருந்தன. அவற்றின் முகங்கள் மூடி
யைப் பார்த்தபடி இருந்தன.[h]

10 பின்பு, அவர் இரண்டு முழ நீளத்திலும் ஒரு முழ அகலத்திலும் ஒன்
றரை முழ உயரத்திலும்[i] வேல மரத்தால் ஒரு மேஜை[j] செய்தார். **11** அதற்
குச் சுத்தமான தங்கத்தால் தகடு அடித்தார், விளிம்பைச் சுற்றிலும் தங்
கத்தால் அலங்கார வேலைப்பாடு செய்தார். **12** நான்கு விரலளவு அகலத்
துக்கு* சுற்றிலும் சட்டம் அடித்து, அந்தச் சட்டத்தின் ஓரங்களில் தங்கத்தால்
அலங்கார வேலைப்பாடு செய்தார். **13** பின்பு, தங்கத்தால் நான்கு வளை
யங்களை வார்த்து, மேஜையின் நான்கு கால்கள் இணைக்கப்பட்டுள்ள
நான்கு மூலைகளிலும் பொருத்தினார். **14** இந்த வளையங்களைச் சட்டத்
துக்குப் பக்கத்தில் பொருத்தினார். மேஜையைத் தூக்கிக்கொண்டு போவதற்
கான கம்புகளைச் செருகுவதற்காக இந்த வளையங்களைச் செய்தார்.
15 பின்பு, மேஜையைத் தூக்கிக்கொண்டு போவதற்கான கம்புகளை வேல
மரத்தால் செய்து, தங்கத்தால் தகடு அடித்தார். **16** அதன்பின், மேஜை
யில் வைக்க வேண்டிய தட்டுகளையும் கோப்பைகளையும் திராட்சமதுவைக்
காணிக்கையாக ஊற்றுவதற்கான கூஜாக்களையும் கிண்ணங்களையும் செய்
தார். இவற்றைச் சுத்தமான தங்கத்தால் செய்தார்.[k]

17 பின்பு, சுத்தமான தங்கத்தால் குத்துவிளக்கு[l] செய்தார். அதன் அடிப்
பகுதி, தண்டு, புல்லி இதழ்கள்,* மொட்டுகள், மலர்கள் எல்லாவற்றையும்
ஒரே வேலைப்பாடாகச் சுத்தியால் அடித்துச் செய்தார்.[m] **18** விளக்குத்
தண்டின் ஒரு பக்கத்தில் மூன்று கிளைகள், இன்னொரு பக்கத்தில் மூன்று
கிளைகள் என்று மொத்தம் ஆறு கிளைகள் இருந்தன. **19** ஒவ்வொரு
கிளையிலும் வாதுமைப் பூ வடிவத்தில் மூன்று புல்லி இதழ்களும், இடையி
டையே மொட்டுகளும் மலர்களும் இருந்தன. விளக்குத்தண்டிலிருந்து பிரி
யும் ஆறு கிளைகளிலும் அதேபோல் இருந்தன. **20** விளக்குத்தண்டி
லும் வாதுமைப் பூ வடிவத்தில் நான்கு புல்லி இதழ்களும், இடையிடையே
மொட்டுகளும் மலர்களும் இருந்தன. **21** முதல் இரண்டு கிளைகளுக்குக்
கீழே ஒரு மொட்டு, அடுத்த இரண்டு கிளைகளுக்குக் கீழே ஒரு மொட்டு,

---

37:12 * இணைப்பு B14-ஐப் பாருங்கள். **37:17** * பூ இதழ்களின் அடியில் உள்ளதும் அவற்றைத் தாங்குவதுமான இலை போன்ற பகுதிகள்.

அதி. 37
a 2நா 5:9
b யோசு 3:8
c யாத் 25:17-20
d லேவி 16:2, 14; 1நா 28:11
e ஆதி 3:24
f யாத் 40:20
g எபி 9:5
h 1சா 4:4; சங் 80:1
i யாத் 25:23-28
j யாத் 40:4
k யாத் 25:29
l யாத் 40:24; லேவி 24:4; 2நா 13:11
m யாத் 25:31-39

அதற்கடுத்த இரண்டு கிளைகளுக்குக் கீழே ஒரு மொட்டு என்று
விளக்குத்தண்டிலிருந்து பிரியும் ஆறு கிளைகளுக்கும் இருந்தன. **22** குத்
துவிளக்கின் மொட்டுகளையும் கிளைகளையும் தண்டு முழுவதையும் சுத்
தமான தங்கத்தில் ஒரே வேலைப்பாடாகச் சுத்தியால் அடித்துச் செய்தார்.
23 பின்பு, அதன் ஏழு அகல் விளக்குகளையும்,[a] இடுக்கிகளையும், தீய்ந்து
போன திரிகளை எடுத்து வைப்பதற்கான கரண்டிகளையும் சுத்தமான
தங்கத்தால் செய்தார். **24** குத்துவிளக்கையும் அதற்கான எல்லா சாமான்
களையும் ஒரு தாலந்து* சுத்தமான தங்கத்தில் செய்தார்.

25 தூபம் போடுவதற்காக வேல மரத்தால் ஒரு பீடம் செய்தார்.[b]
அது சதுரமாக இருந்தது. அதன் நீளம் ஒரு முழமாகவும் அகலம் ஒரு
முழமாகவும் உயரம் இரண்டு முழமாகவும் இருந்தது. அதனுடன் இணைந்த
படி கொம்புகள் இருந்தன.[c] **26** அதன் மேல்பகுதிக்கும் சுற்றுப்பகுதிக்கும்
கொம்புகளுக்கும் சுத்தமான தங்கத்தால் தகடு அடித்தார். அதன் விளிம்
பைச் சுற்றிலும் தங்கத்தால் அலங்கார வேலைப்பாடு செய்தார்.
27 அதைத் தூக்கிக்கொண்டு போவதற்கான கம்புகளைச் செருகுவதற்காக,
அந்த வேலைப்பாட்டுக்குக் கீழே இரண்டு எதிரெதிர் பக்கங்களில் இரண்டி
ரண்டு தங்க வளையங்களைப் பொருத்தினார். **28** வேல மரத்தால் கம்பு
கள் செய்து அவற்றுக்குத் தங்கத்தால் தகடு அடித்தார். **29** பரிசுத்த அபி
ஷேகத் தைலத்தையும்,[d] சுத்தமான தூபப்பொருளையும்[e] அவர் பக்குவ
மாக* தயாரித்தார்.

38 தகன பலிக்கான பலிபீடத்தை அவர் வேல மரத்தால் செய்தார். அது
சதுரமாக இருந்தது. அதன் நீளம் ஐந்து முழமும்,* அகலம் ஐந்து
முழமும், உயரம் மூன்று முழமுமாக இருந்தது.[f] **2** அதன் நான்கு
மூலைகளிலும் கொம்புகள் வைத்தார். அந்தக் கொம்புகள் அதனுடன்
இணைந்தபடி இருந்தன. பின்பு, அவர் அதற்குச் செம்பினால் தகடு அடித்
தார்.[g] **3** அதோடு, பலிபீடத்துக்கான எல்லா சாமான்களையும் அவர் செய்
தார். வாளிகளையும், சாம்பல் அள்ளும் கரண்டிகளையும், கிண்ணங்களை
யும், முள்கரண்டிகளையும், தணல் அள்ளும் கரண்டிகளையும் செய்தார்.
இவை எல்லாவற்றையும் செம்பினால் செய்தார். **4** பலிபீடத்துக்காகச் செம்
பினால் ஒரு கம்பிவலையைச் செய்தார். அந்தக் கம்பிவலையைப் பலிபீடத்
தின் விளிம்புக்குக் கீழே பாதி உயரத்தில் செருகி வைத்தார். **5** கம்புகளைச்
செருகுவதற்காக நான்கு வளையங்களை வார்த்து, செம்புக் கம்பிவலைக்குப்
பக்கத்தில் நான்கு மூலைகளிலும் பொருத்தினார். **6** பின்பு, வேல மரத்தால்
கம்புகள் செய்து, அவற்றுக்குச் செம்பினால் தகடு அடித்தார். **7** பலிபீடத்
தைத் தூக்கிக்கொண்டு போவதற்காக அதன் இரண்டு பக்கங்களிலும் இந்தக்
கம்புகளை வளையங்களில் செருகி வைத்தார். கீழேயும் மேலேயும் திறந்தி
ருக்கிற ஒரு பெட்டியைப் போல் அந்தப் பலிபீடத்தைச் செய்தார்.

8 பின்பு, ஒரு தொட்டியையும்[h] அதை வைப்பதற்கு ஒரு தாங்கியையும்
செம்பினால் செய்தார். சந்திப்புக் கூடார வாசலில் முறைப்படி சேவை செய்
துவந்த பெண்கள் பயன்படுத்திய கண்ணாடிகளால்* அவற்றைச் செய்தார்.

37:24 *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோ. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **37:29** *வே.வா., "தைலம் தயாரிப்பவர் செய்வது போல." **38:1** *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **38:8** *அதாவது, "நன்கு பளபளப்பாக்கப்பட்ட உலோகக் கண்ணாடிகளால்." அவை முகம் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன.

அதி. 37
a எண் 8:2
b யாத் 30:7, யாத் 40:5, சங் 141:2, வெளி 8:3
c யாத் 30:1-5
d யாத் 30:25, 33, யாத் 40:9
e யாத் 30:34, 35, சங் 141:2

அதி. 38
f யாத் 27:1-8, யாத் 40:10
g 2நா 1:5
h யாத் 30:18, லேவி 8:11, 1ரா 7:23

அதி. 38
a யாத் 40:8
b யாத் 27:9-15
c யாத் 27:17
d யாத் 27:16
e யாத் 27:19
f யாத் 25:16, யாத் 31:18, எண் 17:7
g யாத் 6:23, எண் 4:28, 1நா 6:3
h எண் 3:6, எண் 4:46, 47
i யாத் 31:2-5, யாத் 35:30, யாத் 36:1, யாத் 37:1, 2நா 1:5
j யாத் 31:6, யாத் 35:34, யாத் 36:2
k யாத் 35:22

9 அதன்பின், பிரகாரத்தை அமைத்தார்.[a] பிரகாரத்தின் தெற்குப் பக்
கத்துக்காக, உயர்தரமான திரித்த நாரிழையில்* 100 முழத்துக்கு மறைப்பு
களைச் செய்தார்.[b] **10** செம்பினால் செய்யப்பட்ட 20 பாதங்களின்
மேல் 20 கம்பங்களை நிறுத்தினார். கம்பங்களுக்காக வெள்ளியால் கொக்
கிகளையும் இணைப்புகளையும்* செய்தார். **11** வடக்குப் பக்கத்துக்கான
மறைப்புகளையும் 100 முழத்தில் செய்தார். அவற்றுக்கான 20 கம்பங்களை
யும் 20 பாதங்களையும் செம்பினால் செய்தார். கம்பங்களுக்கான கொக்கி
களையும் இணைப்புகளையும் வெள்ளியால் செய்தார். **12** பிரகாரத்தின்
மேற்குப் பக்கத்துக்காக, 50 முழத்துக்கு மறைப்புகள் செய்தார். அவற்றுக்கு
10 கம்பங்களையும் 10 பாதங்களையும் செய்தார். கம்பங்களுக்கான கொக்
கிகளையும் இணைப்புகளையும் வெள்ளியால் செய்தார். **13** பிரகாரத்தினு
டைய கிழக்குப் பக்கத்தின் அகலம் 50 முழமாக இருந்தது. **14** அதன் ஒரு
பக்கத்துக்காக 15 முழத்துக்கு மறைப்புகள் செய்யப்பட்டன. அவற்றுக்கு
மூன்று கம்பங்களும் மூன்று பாதங்களும் செய்யப்பட்டன. **15** அதன்
இன்னொரு பக்கத்துக்காக 15 முழத்துக்கு மறைப்புகள் செய்யப்பட்டன.
அவற்றுக்கு மூன்று கம்பங்களும் மூன்று பாதங்களும் செய்யப்பட்டன.
16 பிரகாரத்தைச் சுற்றிலும் வைக்கப்பட்ட மறைப்புகள் எல்லாமே உயர்த
ரமான திரித்த நாரிழையால் செய்யப்பட்டன. **17** கம்பங்களுக்கான பாதங்
கள் செம்பினால் செய்யப்பட்டன. கம்பங்களின் கொக்கிகளும் இணைப்
புகளும் வெள்ளியால் செய்யப்பட்டன. அவற்றின் மேலே உள்ள குமிழ்க
ளுக்கு வெள்ளித் தகடு அடிக்கப்பட்டது. பிரகாரத்தைச் சுற்றியுள்ள எல்லா
கம்பங்களுக்கும் வெள்ளி இணைப்புகள் செய்யப்பட்டன.[c]

18 நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தர
மான திரித்த நாரிழை ஆகியவற்றால் பிரகார நுழைவாசலின் திரை நெய்யப்
பட்டது. அது 20 முழ நீளத்திலும், பிரகாரத்தின் மறைப்புகளைப் போலவே
5 முழ உயரத்திலும் இருந்தது.[d] **19** அவற்றின் நான்கு கம்பங்களும் நான்கு
பாதங்களும் செம்பினால் செய்யப்பட்டன. அவற்றின் கொக்கிகள் வெள்ளி
யால் செய்யப்பட்டன. மேலே உள்ள குமிழ்களுக்கும் இணைப்புகளுக்
கும் வெள்ளித் தகடு அடிக்கப்பட்டது. **20** கூடார ஆணிகளும் பிரகாரத்
துக்கான மற்ற எல்லா ஆணிகளும் செம்பினால் செய்யப்பட்டன.[e]

21 சாட்சிப் பெட்டி[f] வைக்கப்பட்டிருக்கிற வழிபாட்டுக் கூடாரத்துக்கான
சாமான்களைப் பட்டியல் எடுக்கும்படி மோசே கட்டளை கொடுத்தார். குரு
வாகிய ஆரோனின் மகன் இத்தாமாரின்[g] தலைமையில் லேவியர்கள் இந்
தப் பொறுப்பை[h] நிறைவேற்றினார்கள். **22** மோசேக்கு யெகோவா கட்
டளை கொடுத்த எல்லாவற்றையும் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஹூரின்
பேரனும் ஊரியின் மகனுமான பெசலெயேல்[i] செய்தார். **23** தாண் கோத்தி
ரத்தைச் சேர்ந்த அகிசாமாக்கின் மகன் அகோலியாப்[j] அவருக்கு உதவியாக
இருந்தார். கைவேலை செய்வதிலும், தையல்* வேலைப்பாடு செய்வதிலும்,
நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தர நாரிழை
ஆகியவற்றை நெய்வதிலும் இவர் திறமைசாலியாக இருந்தார்.

24 பரிசுத்த இடத்தின் வேலைக்காகப் பயன்படுத்தப்பட்ட தங்கம் முழு
வதும், அசைவாட்டும் காணிக்கையாகக் கிடைத்த தங்கமாகும்.[k] அதன்

38:9 *அதாவது, "லினனில்." **38:10** *வே.வா., "வளையங்களையும்." **38:23** *வே.வா., "எம்பிராய்டரி."

எடை 29 தாலந்தும்,* 730 சேக்கலுமாக# இருந்தது. அது பரிசுத்த△
சேக்கலின் கணக்குப்படி இருந்தது. **25** பெயர்ப்பதிவு செய்யப்பட்ட ஜனங்
கள் காணிக்கையாகக் கொடுத்த வெள்ளி 100 தாலந்தும், 1,775 சேக்கலுமாக
இருந்தது. அது பரிசுத்த△ சேக்கலின் கணக்குப்படி இருந்தது. **26** பெயர்ப்
பதிவு செய்யப்பட்ட ஆண்களில் 20 வயதிலும் அதற்கு அதிகமான வயதி
லும் இருந்தவர்களும், பரிசுத்த△ சேக்கலின் கணக்குப்படி தலைக்கு அரை
சேக்கல் கொண்டுவந்தார்கள்.[a] அவர்கள் மொத்தம் 6,03,550 பேர்.[b]

27 பரிசுத்த இடத்தின் பாதங்களையும் திரைச்சீலை தொங்கவிடப்பட்ட
தூண்களின் பாதங்களையும் வார்க்க 100 தாலந்து ஆனது. ஒவ்வொரு
பாதத்துக்கும்[c] ஒரு தாலந்து என 100 பாதங்களுக்கு 100 தாலந்து ஆனது.
28 தூண்களுக்கான கொக்கிகள் 1,775 சேக்கலில் செய்யப்பட்டன. அவற்
றின் மேல்பகுதிகள் தகடு அடிக்கப்பட்டு இணைக்கப்பட்டன.

29 காணிக்கையாக* கிடைத்த செம்பு 70 தாலந்தும் 2,400 சேக்கலுமாக
இருந்தது. **30** அதை வைத்து சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்கான பாதங்
களையும், செம்புப் பலிபீடத்தையும், அதற்கான செம்புக் கம்பிவலையை
யும், அதற்கான எல்லா பாத்திரங்களையும், **31** பிரகாரத்தைச் சுற்றி
யுள்ள பாதங்களையும், பிரகாரத்தின் நுழைவாசலுக்கான பாதங்களையும்,
வழிபாட்டுக் கூடாரத்துக்கான எல்லா ஆணிகளையும், பிரகாரத்தைச் சுற்றி
யுள்ள எல்லா ஆணிகளையும்[d] செய்தார்கள்.

39 பரிசுத்த இடத்தின் வேலைக்காக நீல நிற நூல், ஊதா நிற கம்பளி
நூல், கருஞ்சிவப்பு நூல்[e] ஆகியவற்றால் அவர்கள் உடைகளை
நன்றாக நெய்தார்கள். மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே,
ஆரோனுக்காகப் பரிசுத்த அங்கிகளைத் தயாரித்தார்கள்.[f]

2 அவர்* தங்கம், நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்
சிவப்பு நூல், உயர்தரமான திரித்த நாரிழை# ஆகியவற்றால் ஏபோத்தைத்[g]
தயாரித்தார். **3** அவர்கள் தங்கத்தைச் சன்னமான தகடுகளாக அடித்தார்
கள். பின்பு அவர் அந்த நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு
நூல், உயர்தர நாரிழை ஆகியவற்றோடு சேர்த்து தையல்* வேலைப்பாடு
செய்வதற்காக அந்தத் தங்கத் தகடுகளைச் சரிகைகளாகப் பண்ணினார்.
4 அதன்பின், அவர்கள் ஏபோத்துக்கு இரண்டு தோள்பட்டைகள் செய்து,
அவற்றை இரண்டு பக்கங்களிலும் இணைத்தார்கள். **5** ஏபோத்தை இழுத்
துக் கட்டுவதற்காக அதனுடன் இடுப்புப்பட்டையை இணைத்துத் தைத்தார்
கள்.[h] ஏபோத்தைப் போலவே இந்த இடுப்புப்பட்டையையும் தங்கம், நீல
நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல், உயர்தரமான திரித்த
நாரிழை ஆகியவற்றால் செய்தார்கள். மோசேக்கு யெகோவா கட்டளை
கொடுத்தபடியே செய்தார்கள்.

6 தங்க வில்லைகளில் கோமேதகக் கற்களைப் பதித்தார்கள். முத்திரை
பொறிப்பதுபோல் இஸ்ரவேலின் மகன்களுடைய பெயர்களை அந்தக் கற்
களில் பொறித்தார்கள்.[i] **7** பின்பு அவர், இஸ்ரவேலின் மகன்களுடைய

38:24 * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோ. இணைப்பு B14-ஐப் பாருங்கள். # ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **38:24-26** △ வே.வா., "பரிசுத்த இடத்து." **38:29** * வே.வா., "அசைவாட்டும் காணிக்கையாக." **39:2** * இந்த வசனத்திலும் 3, 7, 8, 22 ஆகிய வசனங்களிலும் "அவர்" என்பது அநேகமாக பெசலெயேலைக் குறிக்கலாம். # அதாவது, "லினன்." **39:3** * வே.வா., "எம்பிராய்டரி."

அதி. 38
a யாத் 30:15
b யாத் 12:37
எண் 1:45, 46
c யாத் 26:19-21
யாத் 26:25, 32
d யாத் 27:19

அதி. 39
e யாத் 35:23
f யாத் 28:4, 5
யாத் 29:5
யாத் 35:10, 19
g யாத் 28:6-8
லேவி 8:7
h யாத் 29:5
i யாத் 28:9, 10

அதி. 39

நினைவுக் கற்களாக இருக்கும்படி அவற்றை ஏபோத்தின் தோள்பட்டைக
ளில் பொருத்தினார்.[a] மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே
செய்தார். **8** அதன்பின், ஏபோத்துக்குச் செய்தது போலவே மார்ப்பதக்கத்
துக்கும்[b] தங்கம், நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல்,
உயர்தரமான திரித்த நாரிழை ஆகியவற்றால் அவர் தையல் வேலைப்பாடு
செய்தார்.[c] **9** இரண்டாக மடிக்கும்போது அது சதுரமாக, ஒரு சாண்* நீள
மும் ஒரு சாண் அகலமுமாக இருந்தது. **10** அவர்கள் அதில் நான்கு வரி
சையாகக் கற்களைப் பதித்தார்கள். முதலாம் வரிசையில் மாணிக்கம், புஷ்
பராகம், மரகதம் ஆகியவற்றைப் பதித்தார்கள். **11** இரண்டாம் வரிசை
யில் நீலபச்சைக் கல், நீலமணிக் கல், சூரியகாந்தக் கல் ஆகியவற்றைப் பதித்
தார்கள். **12** மூன்றாம் வரிசையில் கெம்புக் கல்,* வைடூரியம், செவ்வந்திக்
கல் ஆகியவற்றைப் பதித்தார்கள். **13** நான்காம் வரிசையில் படிகப்பச்சை,
கோமேதகம், பச்சைக் கல் ஆகியவற்றைப் பதித்தார்கள். இவற்றைத் தங்க
வில்லைகளில் பதித்தார்கள். **14** இந்த 12 கற்களும் இஸ்ரவேலின் மகன்க
ளுடைய 12 பெயர்களின்படி இருந்தன. ஒவ்வொரு கல்லிலும் ஒவ்வொரு
பெயர் என 12 கோத்திரங்களின் பெயர்களும் முத்திரையாகப் பொறிக்
கப்பட்டன.

15 மார்ப்பதக்கத்துக்காகச் சுத்தமான தங்கத்தில் முறுக்குச் சங்கிலிகள்
செய்தார்கள்.[d] **16** இரண்டு தங்க வில்லைகளையும் இரண்டு தங்க வளை
யங்களையும் செய்தார்கள். அந்த இரண்டு வளையங்களை மார்ப்பதக்கத்
தின் இரண்டு மேல்முனைகளிலும் பொருத்தினார்கள். **17** பின்பு, இரண்டு
தங்க முறுக்குச் சங்கிலிகளையும் மார்ப்பதக்கத்தின் மேல்முனைகளில்
இருக்கிற இரண்டு வளையங்களில் மாட்டினார்கள். **18** அதன்பின், அந்த
இரண்டு முறுக்குச் சங்கிலிகளின் மற்ற இரண்டு முனைகளையும், ஏபோத்
தின் முன்பக்கத் தோள்பட்டைகளில் இருக்கிற இரண்டு வில்லைகளில்
பொருத்தினார்கள். **19** பிறகு, தங்கத்தில் இன்னும் இரண்டு வளையங்கள்
செய்து, அவற்றை மார்ப்பதக்கத்தின் உள்பக்கத்திலுள்ள இரண்டு கீழ் முனை
களில் பொருத்தினார்கள். இவை ஏபோத்தைத் தொட்டபடி இருந்தன.[e]
20 தங்கத்தில் இன்னும் இரண்டு வளையங்கள் செய்து அவற்றை ஏபோத்
தின் முன்பக்கத் தோள்பட்டைகளின் கீழே, அது இணைக்கப்பட்டுள்ள இடத்
துக்குப் பக்கத்தில், ஏபோத்தின் இடுப்புப்பட்டைக்குக் கொஞ்சம் மேலே
பொருத்தினார்கள். **21** மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே,
மார்ப்பதக்கத்தின் வளையங்களை ஏபோத்தின் வளையங்களோடு நீல நிற
நாடாவால் இணைத்தார்கள். இதனால், மார்ப்பதக்கம் இடுப்புப்பட்டைக்கு
மேலேயே, ஏபோத்தின் மேல் அசையாமல் நின்றது.

22 பின்பு அவர், ஏபோத்துக்கு உள்ளே போடுவதற்காகக் கையில்லாத
ஒரு அங்கியை முழுக்க முழுக்க நீல நிற நூலால் நெய்தார்.[f] **23** அதன்
நடுவில் கழுத்துப் பகுதி இருந்தது. அது உடல்கவசத்தின் கழுத்துப் பகுதி
போல இருந்தது. கிழியாமல் இருப்பதற்காகச் சுற்றிலும் ஒரு பட்டிபோல்
வைக்கப்பட்டிருந்தது. **24** அதன்பின் அவர்கள் நீல நிற நூல், ஊதா நிற
கம்பளி நூல், கருஞ்சிவப்பு நூல் ஆகியவற்றைத் திரித்து மாதுளம்பழங்க
ளைப் போல செய்தார்கள். அவற்றை அந்த அங்கியின் கீழ்மடிப்பைச்

39:9 *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **39:12** *எபிரெயுவில், “லேசேம்.” இது உண்
மையில் எந்தக் கல் என்பது தெரியவில்லை.

a யாத் 28:12
b லேவி 8:8
c யாத் 28:15-21
d யாத் 28:22-25
e யாத் 28:26-28
f யாத் 28:31-35

சுற்றிலும் வைத்துத் தைத்தார்கள். **25** அதோடு, சுத்தமான தங்கத்தில் மணி
கள்போல் செய்து, அந்த அங்கியின் கீழ் மடிப்பைச் சுற்றிலும் மாதுளம்ப
ழங்களுக்கு இடையிடையே வைத்துத் தைத்தார்கள். **26** ஒரு மணி, ஒரு
மாதுளம்பழம், ஒரு மணி, ஒரு மாதுளம்பழம் என்று குருத்துவச் சேவைக்
கான அந்த அங்கியின் கீழ்மடிப்பைச் சுற்றிலும் வைத்துத் தைத்தார்கள்.
மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே செய்தார்கள்.

27 ஆரோனுக்காகவும் அவருடைய மகன்களுக்காகவும் உயர்தர நாரி
ழையால் நெய்யப்பட்ட அங்கிகளையும்,[a] **28** தலைப்பாகையையும்,[b]
அலங்கரிக்கப்பட்ட முண்டாசையும்[c] செய்தார்கள். உயர்தரமான திரித்த
நாரிழையால் அரைக் கால்சட்டைகளையும்[d] செய்தார்கள். **29** அதோடு,
உயர்தரமான திரித்த நாரிழை, நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்
சிவப்பு நூல் ஆகியவற்றால் இடுப்புக்கச்சையை நெய்தார்கள். மோசேக்கு
யெகோவா கட்டளை கொடுத்தபடியே செய்தார்கள்.

30 கடைசியாக, சுத்தமான தங்கத்தில் பளபளப்பான ஒரு தகடு
செய்து, முத்திரை பொறிப்பது போல, "யெகோவா பரிசுத்தமே உருவான
வர்"* என்று அதில் பொறித்தார்கள்.[e] அதுதான் அர்ப்பணிப்பின் பரிசுத்த
அடையாளம்.# **31** அந்தத் தகட்டை நீல நிற நாடாவினால் தலைப்பாகை
யில் கட்டினார்கள். மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே செய்
தார்கள்.

32 இப்படி, வழிபாட்டுக் கூடாரத்துக்கான எல்லா வேலைகளும், அதா
வது சந்திப்புக் கூடாரத்துக்கான எல்லா வேலைகளும், செய்து முடிக்கப்பட்
டன. மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்த எல்லாவற்றையும் இஸ்ர
வேலர்கள் செய்தார்கள்.[f] அவர் சொன்னபடியே செய்தார்கள்.

33 பின்பு, வழிபாட்டுக் கூடாரத்தை[g] மோசேயிடம் அவர்கள் கொண்டு
வந்தார்கள். அதாவது கூடாரம்,[h] அதற்கான பாத்திரங்கள், கொக்கிகள்,[i] சட்
டங்கள்,[j] கம்புகள்,[k] தூண்கள், பாதங்கள்,[l] **34** சிவப்புச் சாயம் போட்ட
செம்மறியாட்டுக் கடாத் தோலினால்[m] செய்த மேல்விரிப்பு, கடல்நாய்த்
தோலினால் செய்த மேல்விரிப்பு, திரைச்சீலை,[n] **35** சாட்சிப் பெட்டி,
அதன் கம்புகள்,[o] மூடி,[p] **36** மேஜை, அதன் பாத்திரங்கள்,[q] படையல்
ரொட்டிகள், **37** சுத்தமான தங்கத்தில் குத்துவிளக்கு, அதன் அகல் விளக்
குகள்,[r] அதற்கான பாத்திரங்கள்,[s] விளக்குகளுக்கான எண்ணெய்,[t]
38 தங்கப் பீடம்,[u] அபிஷேகத் தைலம்,[v] தூபப்பொருள்,[w] கூடார வாசலுக்
கான திரை,[x] **39** செம்புப் பலிபீடம்,[y] அதற்கான செம்புக் கம்பிவலை, கம்
புகள்,[z] பாத்திரங்கள்,[a] தொட்டி, அதை வைப்பதற்கான தாங்கி,[b] **40** பிரகா
ரத்துக்கான மறைப்புகள், அவற்றின் கம்பங்கள், பாதங்கள்,[c] பிரகார நுழை
வாசலுக்கான திரை,[d] கூடாரக் கயிறுகள், கூடார ஆணிகள்,[e] வழிபாட்டுக்
கூடாரமாகிய சந்திப்புக் கூடாரத்தில் பயன்படுத்துவதற்கான பாத்திரங்கள்,
41 வழிபாட்டுக் கூடாரத்தில் பணிவிடை செய்வதற்காக நன்றாய் நெய்யப்
பட்ட உடைகள், குருவாகிய ஆரோனுக்குப் பரிசுத்த அங்கிகள்,[f] குருமார்
களாகச் சேவை செய்ய அவருடைய மகன்களுக்கு அங்கிகள் ஆகியவற்
றைக் கொண்டுவந்தார்கள்.

42 மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே இஸ்ரவேலர்கள்

39:30 *நே.மொ., "பரிசுத்தம் யெகோவாவுடையது." #வே.வா., "அதுதான் பரிசுத்த மகுடம்."

அதி. 39
- a யாத் 28:39, 40
- b யாத் 28:4
- c யாத் 29:8, 9
- d யாத் 28:42
- e யாத் 28:36, 37 லேவி 8:9
- f யாத் 25:40 எபி 8:5
- g யாத் 36:8
- h யாத் 36:14
- i யாத் 36:18
- j யாத் 36:20
- k யாத் 36:31
- l யாத் 36:24
- m யாத் 36:19
- n யாத் 36:35
- o யாத் 37:1, 4
- p யாத் 37:6
- q யாத் 37:10, 16
- r யாத் 37:17, 23
- s யாத் 25:38
- t யாத் 35:27, 28
- u யாத் 37:25
- v யாத் 37:29
- w யாத் 30:34, 35
- x யாத் 36:37
- y யாத் 38:1, 4
- z யாத் 38:6
- a யாத் 38:30
- b யாத் 30:18 யாத் 38:8
- c யாத் 38:9-11
- d யாத் 38:18
- e யாத் 38:20
- f யாத் 28:3

எல்லா வேலைகளையும் செய்தார்கள்.[a] **43** அவர்களுடைய வேலைகள்
எல்லாவற்றையும் மோசே பார்வையிட்டார். யெகோவா கட்டளை கொடுத்
தபடியே அவர்கள் செய்திருந்ததைப் பார்த்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

40 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “முதலாம் மாதம் முதலாம்
நாளில் வழிபாட்டுக் கூடாரத்தை, அதாவது சந்திப்புக் கூடாரத்தை,
நீ அமைக்க வேண்டும்.[b] **3** அதற்கு உள்ளே சாட்சிப் பெட்டியை வைத்து,[c]
திரைச்சீலை போட்டு அதை மறைத்துவிடு.[d] **4** மேஜையை[e] உள்ளே
கொண்டுவந்து அதன்மேல் வைக்க வேண்டிய பொருள்களை வை. குத்து
விளக்கை[f] உள்ளே கொண்டுவந்து வைத்து, அதன் அகல் விளக்குகளை[g]
ஏற்று. **5** சாட்சிப் பெட்டிக்கு முன்பக்கம் தங்கத்தாலான தூபபீடத்தை[h]
வைத்து, வழிபாட்டுக் கூடாரத்தின் வாசலில் திரையைத் தொங்கவிடு.[i]

6 தகன பலிக்கான பலிபீடத்தை[j] வழிபாட்டுக் கூடாரத்தின், அதா
வது சந்திப்புக் கூடாரத்தின், வாசலுக்கு முன்பக்கம் வை. **7** சந்திப்புக்
கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவில் தொட்டியை வைத்து, அதில் தண்
ணீர் ஊற்று.[k] **8** பின்பு, சுற்றிலும் பிரகாரம் அமைத்து,[l] அதன் நுழைவாச
லில் திரையைத் தொங்கவிடு.[m] **9** அதன்பின், அபிஷேகத் தைலத்தை[n]
எடுத்து வழிபாட்டுக் கூடாரத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் அபி
ஷேகம் செய்து,[o] அதையும் அதிலுள்ள பாத்திரங்கள் எல்லாவற்றையும்
புனிதப்படுத்து. அப்போது, அது பரிசுத்தமாகும். **10** தகன பலிக்கான
பலிபீடத்தையும் அதற்கான பாத்திரங்களையும் அபிஷேகம் செய்து அந்
தப் பலிபீடத்தைப் புனிதப்படுத்து. அப்போது, அது மகா பரிசுத்த பலிபீ
டமாகும்.[p] **11** பின்பு, தொட்டியையும் அதை வைப்பதற்கான தாங்கியை
யும் அபிஷேகம் செய்து புனிதப்படுத்து.

12 பிற்பாடு, ஆரோனையும் அவனுடைய மகன்களையும் சந்திப்புக்
கூடாரத்தின் வாசலுக்குப் பக்கத்தில் கூட்டிக்கொண்டு வந்து குளிக்க
வை.*[q] **13** பரிசுத்த உடைகளை ஆரோனுக்குப் போட்டுவிட்டு,[r] அவனை
அபிஷேகம் செய்து,[s] அவனைப் புனிதப்படுத்து. அவன் எனக்குக் குருத்து
வச் சேவை செய்வான். **14** அதன்பின், அவனுடைய மகன்களைக் கூட்டிக்
கொண்டு வந்து அவர்களுக்கும் அங்கிகளைப் போட்டுவிடு.[t] **15** அவர்க
ளுடைய அப்பாவை அபிஷேகம் செய்ததுபோல் அவர்களையும் அபிஷே
கம் செய்.[u] அப்போது, அவர்கள் எனக்குக் குருத்துவச் சேவை செய்வார்கள்.
அவர்கள் அபிஷேகம் செய்யப்படுவதால், தலைமுறை தலைமுறையாக
அவர்களே நிரந்தரமாகக் குருத்துவச் சேவை செய்வார்கள்”[v] என்றார்.

16 யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே எல்லாவற்றையும்
செய்தார்.[w] அவர் அப்படியே செய்தார்.

17 இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதலாம் நாளில் வழிபாட்டுக்
கூடாரம் அமைக்கப்பட்டது.[x] **18** மோசே அதை அமைத்தபோது, அதன்
பாதங்களைக் கீழே வைத்து[y] அந்தப் பாதங்கள்மேல் சட்டங்களை[z] நிறுத்
தினார். அவற்றில் கம்புகளைச்[a] செருகினார். தூண்களையும் நிறுத்தினார்.
19 பின்பு, வழிபாட்டுக் கூடாரத்தின் சட்டங்கள்மேல் விரிப்புகளை[b] ஒன்
றின்மேல் ஒன்றாகப் போட்டார். யெகோவா கட்டளை கொடுத்தபடியே
மோசே செய்தார்.

20 அதன்பின், சாட்சிப் பலகைகளை[c] எடுத்து பெட்டிக்குள்[d] வைத்து,

40:12 * ஒருவேளை, “குளிக்கச் சொல்.”

அதி. 39
a யாத் 35:10
யாத் 36:1

அதி. 40
b எண் 7:1
c யாத் 25:21
d எண் 4:5
எபி 9:3
e யாத் 26:35
f யாத் 25:31
எபி 9:2
g யாத் 25:37
h யாத் 30:1
i யாத் 26:36
j யாத் 38:1
k யாத் 30:18
l யாத் 27:9
m யாத் 27:16
யாத் 38:18
n யாத் 30: 23-25
o லேவி 8:10
எண் 7:1
p யாத் 29: 36, 37
லேவி 8:11
q லேவி 8:6
r யாத் 29:5
லேவி 8:7
s லேவி 8:12
சங் 133:2
t லேவி 8:13
u லேவி 8:30
v எபி 7:11
w யாத் 39:43
உபா 4:2
x எண் 7:1
எண் 9:15
y யாத் 36:24
z யாத் 26:15
a யாத் 36:31
b யாத் 26:7
யாத் 26:14
c யாத் 31:18
d யாத் 25:22
யாத் 37:1

அதில் கம்புகளைச்[a] செருகி, மூடியால் மூடினார்.[b] **21** பின்பு, சாட்சிப்
பெட்டியை வழிபாட்டுக் கூடாரத்துக்குள் கொண்டுவந்து, திரைச்சீலை[c]
போட்டு அதை மறைத்தார்.[d] யெகோவா கட்டளை கொடுத்தபடியே
மோசே செய்தார்.

22 அடுத்ததாக, வழிபாட்டுக் கூடாரத்தின், அதாவது சந்திப்புக் கூடாரத்
தின், வடக்குப் பக்கத்தில் திரைச்சீலைக்கு வெளியே மேஜையை[e] வைத்
தார். **23** பின்பு, ரொட்டிகளை[f] மேஜைமேல் அடுக்கி யெகோவாவின்
முன்னிலையில் வைத்தார். யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே
செய்தார்.

24 பின்பு வழிபாட்டுக் கூடாரத்தின், அதாவது சந்திப்புக் கூடாரத்தின்,
தெற்குப் பக்கத்தில் மேஜைக்கு முன்னால் குத்துவிளக்கை[g] வைத்தார்.
25 யெகோவாவின் முன்னிலையில் விளக்குகளை[h] ஏற்றினார். யெகோவா
கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார்.

26 அடுத்ததாக, தங்கத்தாலான தூபபீடத்தை[i] சந்திப்புக் கூடாரத்தில்
திரைச்சீலைக்கு முன்னால் வைத்தார். **27** தூபப்பொருளை[j] எரிப்பதற்காக[k]
அதை வைத்தார். யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார்.

28 அதன்பின், வழிபாட்டுக் கூடாரத்தின் வாசலில் திரையைத்[l] தொங்க
விட்டார்.

29 பின்பு, தகன பலிக்கான பலிபீடத்தை[m] வழிபாட்டுக் கூடாரத்தின்
வாசலாகிய சந்திப்புக் கூடாரத்தின் வாசலில் வைத்தார். தகன பலிகளை
யும்[n] உணவுக் காணிக்கைகளையும் செலுத்துவதற்காக அதை வைத்தார்.
யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார்.

30 அதன்பின், சந்திப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவில்
தொட்டியை வைத்து, கைகால் கழுவுவதற்காக அதில் தண்ணீர் ஊற்றி
வைத்தார்.[o] **31** மோசேயும் ஆரோனும் அவருடைய மகன்களும் அந்தத்
தண்ணீரை எடுத்துத் தங்கள் கைகால்களைக் கழுவினார்கள். **32** சந்திப்புக்
கூடாரத்துக்கோ பலிபீடத்துக்கோ போகும்போதெல்லாம் அவர்கள் கைகால்
கழுவினார்கள்.[p] மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே செய்து
வந்தார்கள்.

33 கடைசியாக, வழிபாட்டுக் கூடாரத்தையும் பலிபீடத்தையும் சுற்றி பிர
காரம்[q] அமைத்து அதன் நுழைவாசலில் திரை[r] போட்டார்.

இப்படி, எல்லா வேலைகளையும் மோசே செய்து முடித்தார். **34** அப்
போது, சந்திப்புக் கூடாரத்தை மேகம் மூடியது. வழிபாட்டுக் கூடாரம்
யெகோவாவின் மகிமையால் நிறைந்தது.[s] **35** சந்திப்புக் கூடாரத்தை
மேகம் மூடியிருந்ததாலும், வழிபாட்டுக் கூடாரத்தில் யெகோவாவின் மகிமை
நிறைந்திருந்ததாலும் மோசேயால் அதற்குள் நுழைய முடியவில்லை.[t]

36 இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் பயணம் செய்த காலமெல்லாம், வழி
பாட்டுக் கூடாரத்தைவிட்டு மேகம் எழும்பிய சமயங்களில் மட்டுமே தங்
கள் இடத்தைவிட்டுப் புறப்பட்டார்கள்.[u] **37** ஆனால், மேகம் கூடாரத்தின்
மேல் தங்கியிருந்த சமயங்களில், அது மேலே எழும்பும் நாள்வரை புறப்
படாமல் காத்திருந்தார்கள்.[v] **38** பகலில் யெகோவாவின் மேகமும் ராத்தி
ரியில் நெருப்பும் வழிபாட்டுக் கூடாரத்தின் மேல் இருப்பதை இஸ்ரவேல்
ஜனங்கள் எல்லாரும் வனாந்தரத்தில் பயணம் செய்த காலமெல்லாம் பார்த்
தார்கள்.[w]

அதி. 40

a யாத் 37:4, 1ரா 8:8
b யாத் 37:6, லேவி 16:2, 1நா 28:11
c யாத் 36:35, எபி 10:19, 20
d எபி 9:3
e யாத் 37:10, எபி 9:2
f யாத் 25:30, மத் 12:4
g யாத் 37:17
h யாத் 25:37, யாத் 37:23
i யாத் 30:1, யாத் 37:25
j யாத் 30: 34, 35
k யாத் 30:7
l யாத் 26:36, யாத் 36:37
m யாத் 38:1
n யாத் 29:38
o யாத் 30:18
p யாத் 30:18, 19
q யாத் 27:9, யாத் 38:9
r யாத் 38:18
s எண் 9:15, வெளி 15:8
t 2நா 5:14
u எண் 10:11, நெ 9:19
v எண் 9:17, 22
w யாத் 13:21, எண் 9:16, சங் 78:14

லேவியராகமம்

முக்கியக் குறிப்புகள்

லேவியர்+ஆகமம்=லேவியராகமம். அர்த்தம், "லேவியர்களைப் பற்றிய பதிவு." அதாவது, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சட்டங்கள்.

1 தகன பலி (1-17)

2 உணவுக் காணிக்கை (1-16)

3 சமாதான பலி (1-17)
- கொழுப்பையும் இரத்தத்தையும் சாப்பிடக் கூடாது (17)

4 பாவப் பரிகார பலி (1-35)

5 சில பாவங்களும் அவற்றுக்கான பலிகளும் (1-6)
- மற்றவர்கள் செய்த பாவங்களைத் தெரிவித்தல் (1)

ஏழைகள் செலுத்த வேண்டிய பலியும் காணிக்கையும் (7-13)

தெரியாத்தனமாகப் பாவம் செய்தவர்கள் செலுத்த வேண்டிய குற்ற நிவாரண பலி (14-19)

6 குற்ற நிவாரண பலி பற்றிய கூடுதல் அறிவுரைகள் (1-7)

பலி சம்பந்தமான அறிவுரைகள் (8-30)
- தகன பலி (8-13)
- உணவுக் காணிக்கை (14-23)
- பாவப் பரிகார பலி (24-30)

7 பலி சம்பந்தமான அறிவுரைகள் (1-21)
- குற்ற நிவாரண பலி (1-10)
- சமாதான பலி (11-21)

கொழுப்பையும் இரத்தத்தையும் சாப்பிடக் கூடாது (22-27)

குருமார்களுக்கான பங்கு (28-36)

பலி பற்றிய அறிவுரைகளின் முடிவுரை (37, 38)

8 ஆரோனும் அவருடைய மகன்களும் குருமார்களாக நியமிக்கப்படுகிறார்கள் (1-36)

9 ஆரோன் குருத்துவ நியமிப்புக்கான பலிகளைச் செலுத்துகிறார் (1-24)

10 யெகோவாவின் நெருப்பு நாதாபையும் அபியூவையும் கொன்றுபோடுகிறது (1-7)

குடிப்பது, சாப்பிடுவது சம்பந்தமாக குருமார்களுக்குக் கொடுக்கப்பட்ட சட்டங்கள் (8-20)

11 சுத்தமான, அசுத்தமான மிருகங்கள் (1-47)

12 குழந்தை பிறந்த பிறகு சுத்திகரிப்புக்காகச் செய்ய வேண்டியவை (1-8)

13 தொழுநோயாளிகளுக்கான சட்டங்கள் (1-46)

உடையில் வரும் தொழுநோய் (47-59)

14 தொழுநோயிலிருந்து சுத்திகரிப்பது (1-32)

தொழுநோய் பிடித்த வீட்டைச் சுத்திகரிப்பது (33-57)

15 பிறப்புறுப்பில் ஒழுக்கு நோயுள்ளவர்கள் தீட்டுள்ளவர்கள் (1-33)

16 பாவப் பரிகார நாள் (1-34)

17 பலிகளைச் செலுத்துவதற்கான வழிபாட்டுக் கூடாரம் (1-9)

இரத்தத்தைச் சாப்பிட தடை (10-14)

தானாகச் செத்த மிருகத்தைச் சாப்பிட்டால் செய்ய வேண்டியவை (15, 16)

18 முறைகேடான உடலுறவுகொள்வது (1-30)
- கானானியர்களைப் பின்பற்றக் கூடாது (3)
- இரத்த சொந்தங்களோடு உடலுறவுகொள்வது (6-18)
- மாதவிலக்கின்போது உடலுறவுகொள்வது (19)
- ஆணுடன் ஆண் உறவுகொள்வது (22)
- மிருகத்தோடு உறவுகொள்வது (23)
- 'சுத்தமாக இருங்கள், இல்லாவிட்டால் தேசத்திலிருந்து துரத்தப்படுவீர்கள்' (24-30)

19 பரிசுத்தமாக இருப்பது சம்பந்தமான சட்டங்கள் (1-37)
- அறுவடையின்போது செய்ய வேண்டியவை (9, 10)
- காது கேட்காதவனுக்கும் கண் தெரியாதவனுக்கும் கரிசனை காட்ட வேண்டும் (14)
- இல்லாததையும் பொல்லாததையும் பேசக் கூடாது (16)
- யார்மேலும் பகை வைத்திருக்கக் கூடாது (18)
- மாயமந்திரமும் ஆவியுலகத் தொடர்பும் தடை செய்யப்படுகின்றன (26, 31)
- பச்சை குத்துவதற்குத் தடை (28)
- மூத்தவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் (32)

மற்ற தேசத்து ஜனங்களை நேசிக்க வேண்டும் (33, 34)

20 மோளேகை வணங்குவது; ஆவியுலகத் தொடர்பு (1-6)

பரிசுத்தமாக இருப்பதும், பெற்றோருக்கு மதிப்புக் கொடுப்பதும் (7-9)

முறைகேடாக உடலுறவுகொள்கிறவர்கள் கொல்லப்படுவார்கள் (10-21)

தேசத்திலிருந்து துரத்தப்படாமல் இருக்க பரிசுத்தமாக இருக்க வேண்டும் (22-26)

ஆவிகளோடு பேசுகிறவர்கள் கொல்லப்பட வேண்டும் (27)

21 குருமார்கள் தீட்டுப்படாமல் பரிசுத்தமாக இருக்க வேண்டும் (1-9)

தலைமைக் குருவானவர் தன்னைத் தீட்டுப்படுத்திக்கொள்ளக் கூடாது (10-15)

குருமார்களுக்கு உடலில் குறைபாடு இருக்கக் கூடாது (16-24)

22 குருமார்கள் தீட்டுப்படாமல் இருப்பதும், பரிசுத்தமான பொருள்களைச் சாப்பிடுவதும் (1-16)

குறையில்லாத மிருகங்களின் பலிகளையே கடவுள் ஏற்றுக்கொள்வார் (17-33)

23 பரிசுத்தமான நாட்களும் பண்டிகைகளும் (1-44)

ஓய்வுநாள் (3)

பஸ்கா (4, 5)

புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகை (6-8)

முதல் விளைச்சலைக் காணிக்கையாகக் கொடுப்பது (9-14)

வாரங்களின் பண்டிகை (15-21)

அறுவடையின்போது கடைப்பிடிக்க வேண்டிய அறிவுரைகள் (22)

எக்காளம் ஊதி அறிவிப்பு செய்யப்படுகிற பண்டிகை (23-25)

பாவப் பரிகார நாள் (26-32)

கூடாரப் பண்டிகை (33-43)

24 வழிபாட்டுக் கூடாரத்தின் விளக்குகளுக்கான எண்ணெய் (1-4)

படையல் ரொட்டிகள் (5-9)

கடவுளுடைய பெயரைப் பழித்துப் பேசுபவன் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் (10-23)

25 ஓய்வு வருஷம் (1-7)

விடுதலை வருஷம் (8-22)

நிலத்தை மீட்டுக்கொள்ளும் விதம் (23-34)

ஏழைகளிடம் நடந்துகொள்ள வேண்டிய விதம் (35-38)

அடிமைகள் சம்பந்தமான சட்டங்கள் (39-55)

26 சிலைகளை வணங்கக் கூடாது (1, 2)

கீழ்ப்படிவதால் வரும் ஆசீர்வாதங்கள் (3-13)

கீழ்ப்படியாவிட்டால் வரும் தண்டனைகள் (14-46)

27 நேர்ந்துகொண்டவற்றை மீட்டுக்கொள்ளும் விதம் (1-27)

ஆட்கள் (1-8)

மிருகங்கள் (9-13)

வீடுகள் (14, 15)

வயல்கள் (16-25)

முதல் பிறப்புகள் (26, 27)

எந்த நிபந்தனையும் இல்லாமல் யெகோவாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவை (28, 29)

பத்திலொரு பாகத்தை மீட்டுக்கொள்ளும் விதம் (30-34)

---

1 சந்திப்புக் கூடாரத்தில்[a] யெகோவா மோசேயைக் கூப்பிட்டு, **2** “நீ
இஸ்ரவேலர்களிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால், ‘உங்க
ளில் ஒருவன் வீட்டு விலங்கு ஒன்றை யெகோவாவுக்குக் காணிக்கையா
கச் செலுத்த விரும்பினால், மாடுகளிலோ ஆடுகளிலோ ஒன்றைச் செலுத்த
வேண்டும்.[b]

3 மாடுகளில் ஒன்றைத் தகன பலியாகச் செலுத்த அவன் விரும்
பினால், எந்தக் குறையும் இல்லாத காளை மாட்டைச் செலுத்த வேண்டும்.[c]
அதைச் சந்திப்புக் கூடாரத்தின் வாசலில் யெகோவாவின் முன்னிலையில்
கொண்டுவந்து மனப்பூர்வமாகச்[d] செலுத்த வேண்டும். **4** தகன பலியாகச்
செலுத்தப்படும் காளையின் தலையில் அவன் தன்னுடைய கையை வைக்க

அதி. 1

a யாத் 40:34

b லேவி 22:18-20

c உபா 15:19, 21 மல் 1:14

d 2கொ 9:7

வேண்டும். அது அவனுடைய பாவத்துக்குப் பரிகாரமாக ஏற்றுக்கொள்
ளப்படும்.
5 பின்பு, அந்த இளம் காளையை யெகோவாவின் முன்னிலையில்
வெட்ட வேண்டும். குருமார்களாகிய[a] ஆரோனின் மகன்கள் அதன் இரத்
தத்தை எடுத்து, சந்திப்புக் கூடாரத்தின் வாசலருகே உள்ள பலிபீடத்தின்
எல்லா பக்கங்களிலும் தெளிக்க வேண்டும்.[b] **6** தகன பலியாகச் செலுத்
தப்படும் காளையைத் தோலுரித்து, துண்டு துண்டாக வெட்ட வேண்டும்.[c]
7 குருமார்களாகிய ஆரோனின் மகன்கள் பலிபீடத்தின் மேல் தணல்
போட்டு[d] அதன்மேல் விறகுக் கட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும்.
8 பின்பு, அவற்றின் மேல் அந்தக் காளையின் தலையையும் கொழுப்பை
யும் மற்ற துண்டுகளையும் அடுக்கிவைக்க வேண்டும்.[e] **9** அதன் குடல்க
ளையும் கால்களையும் தண்ணீரில் கழுவ வேண்டும். குருவானவர் பலிபீ
டத்தின் மேல் எல்லாவற்றையும் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த
வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.[f]
10 ஒருவன் ஆடுகளில் ஒன்றைத் தகன பலியாகச் செலுத்த விரும்பி
னால்,[g] எந்தக் குறையும் இல்லாத செம்மறியாட்டுக் கடாக் குட்டியையோ
வெள்ளாட்டுக் கடாவையோ செலுத்த வேண்டும்.[h] **11** அதைப் பலிபீடத்
தின் வடக்குப் பக்கம் யெகோவாவின் முன்னிலையில் வெட்ட வேண்டும்.
குருமார்களாகிய ஆரோனின் மகன்கள் அதன் இரத்தத்தை எடுத்து, பலிபீ
டத்தின் எல்லா பக்கங்களிலும் தெளிக்க வேண்டும்.[i] **12** அந்த ஆட்டைத்
துண்டு துண்டாக்க வேண்டும். பின்பு, பலிபீடத்தின் தணல்மீது வைக்கப்
பட்டுள்ள விறகுகள்மேல் அவற்றையும் ஆட்டின் தலையையும் கொழுப்
பையும் குருவானவர் அடுக்கிவைக்க வேண்டும். **13** அதன் குடல்களை
யும் கால்களையும் தண்ணீரில் கழுவ வேண்டும். பின்பு, எல்லாவற்றையும்
பலிபீடத்தின் மேல் அந்தக் குருவானவர் எரிக்க வேண்டும். இதுதான் தகன
பலி. அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.
14 ஒருவன் பறவைகளில் ஒன்றை யெகோவாவுக்குத் தகன பலியாகச்
செலுத்த விரும்பினால், எந்தக் குறையும் இல்லாத காட்டுப் புறாவையோ,
புறாக் குஞ்சையோ செலுத்த வேண்டும்.[j] **15** குருவானவர் அதைப் பலிபீ
டத்தில் கொண்டுவந்து அதன் கழுத்தைக் கிள்ளி, பலிபீடத்தின் மேல்
எரிக்க வேண்டும். ஆனால், அதன் இரத்தத்தைப் பலிபீடத்தின் பக்கவாட்
டில் ஊற்ற வேண்டும். **16** அதன் தொண்டைப்பையையும் இறகுகளையும்
நீக்கி, பலிபீடத்துக்குப் பக்கத்தில், கிழக்கே, சாம்பல் கொட்டும் இடத்தில்
எறிந்துவிட வேண்டும்.[k] **17** அதை இரண்டு துண்டாக்காமல் சிறகுகளுக்
குப் பக்கத்தில் கிழித்துவிட வேண்டும். பின்பு, குருவானவர் பலிபீடத்
தின் தணல்மீது வைக்கப்பட்டுள்ள விறகுகள்மேல் அதை எரிக்க வேண்டும்.
அதுதான் தகன பலி. அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனை
யாக இருக்கும்'" என்றார்.

2 பின்பு அவர், "'ஒருவன் யெகோவாவுக்கு உணவுக் காணிக்கையை[l]
கொண்டுவர விரும்பினால், நைசான மாவில் எண்ணெய் ஊற்றி, அதன்
மேல் சாம்பிராணி வைத்துக் கொண்டுவர வேண்டும்.[m] **2** பின்பு, குருமார்
களாகிய ஆரோனின் மகன்களிடம் அதைக் கொடுக்க வேண்டும். குருவான
வர் அந்த நைசான மாவையும் எண்ணெயையும் மொத்த சாம்பிராணியோடு

அதி. 1
a எபி 10:11
b எபி 9:13, 14
c லேவி 7:8
d லேவி 6:12
e 1ரா 18:23
f ஆதி 8:20, 21; எண் 15:2, 3
g ஆதி 4:4
h லேவி 12:6; லேவி 22:18-20
i யாத் 29:16-18; லேவி 8:18-21; லேவி 9:12-14
j லேவி 5:7; லேவி 12:8; லூ 2:24
k யாத் 27:3; லேவி 4:11, 12; லேவி 6:10

அதி. 2
l லேவி 9:17; எண் 15:2-4
m யாத் 29:1-3; லேவி 6:14, 15; எண் 7:13

சேர்த்து ஒரு கைப்பிடி எடுத்து, மொத்த காணிக்கைக்கும் அடையாளமாக[a]
அதைப் பலிபீடத்தில் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை
யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும். **3** மீதியிருக்கும் உண
வுக் காணிக்கை ஆரோனுக்கும் அவன் மகன்களுக்கும் சேர வேண்
டும்.[b] யெகோவாவுக்குச் செலுத்தப்படும் தகன பலியில் இது மகா பரிசுத்த
மானது.[c]

4 அடுப்பில் சுட்ட ரொட்டியை உணவுக் காணிக்கையாகச் செலுத்த
விரும்பினால், அதை நைசான மாவில் செய்ய வேண்டும். அது எண்ணெ
யில் பிசைந்து சுடப்பட்ட புளிப்பில்லாத வட்ட ரொட்டியாகவோ எண்ணெய்
தடவிய புளிப்பில்லாத மெல்லிய ரொட்டியாகவோ இருக்க வேண்டும்.[d]

5 வட்டக் கல்லில் சுட்ட ரொட்டியை உணவுக் காணிக்கையாகச் செலுத்த
விரும்பினால்,[e] புளிப்பில்லாத நைசான மாவில் எண்ணெய் கலந்து அதைச்
செய்ய வேண்டும். **6** பின்பு அதைத் துண்டு துண்டாகப் பிட்டு, அதன்மேல்
எண்ணெய் ஊற்ற வேண்டும்.[f] இது உணவுக் காணிக்கை.

7 வாணலியில் செய்த ரொட்டியை உணவுக் காணிக்கையாகச் செலுத்த
விரும்பினால், அதை நைசான மாவிலும் எண்ணெயிலும் செய்ய வேண்
டும். **8** இப்படிப்பட்ட உணவுக் காணிக்கையை நீங்கள் யெகோவாவுக்
குச் செலுத்துவதற்காக குருவானவரிடம் கொடுக்க வேண்டும். அதை அவர்
பலிபீடத்துக்குக் கொண்டுபோக வேண்டும். **9** அந்த உணவுக் காணிக்கை
யில் கொஞ்சத்தை குருவானவர் எடுத்து, மொத்த காணிக்கைக்கும்
அடையாளமாக[g] அதைப் பலிபீடத்தில் தகன பலியாகச் செலுத்த வேண்
டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.[h]
10 மீதியிருக்கும் உணவுக் காணிக்கை ஆரோனுக்கும் அவன் மகன்களுக்
கும் சேர வேண்டும். யெகோவாவுக்குச் செலுத்தப்படும் தகன பலியில் இது
மகா பரிசுத்தமானது.[i]

11 நீங்கள் யெகோவாவுக்குச் செலுத்தும் எந்த உணவுக் காணிக்கையி
லும் புளிப்பு சேர்க்கக் கூடாது.[j] புளித்த மாவையோ தேனையோ* யெகோ
வாவுக்குத் தகன பலியாகச் செலுத்தக் கூடாது.

12 அவற்றை முதல் விளைச்சலிலிருந்து எடுத்து யெகோவாவுக்குப்
படைக்கலாம்.[k] ஆனால், வாசனையான காணிக்கையாகப் பலிபீடத்தில்
எரிக்கக் கூடாது.

13 நீங்கள் செலுத்தும் உணவுக் காணிக்கைகள் எல்லாவற்றிலும் உப்பு
சேர்க்க வேண்டும். அது கடவுள் செய்த ஒப்பந்தத்தை ஞாபகப்படுத்துவ
தால் உணவுக் காணிக்கையில் அதைச் சேர்க்காமல் இருக்கக் கூடாது.
நீங்கள் செலுத்துகிற எல்லாவற்றோடும் சேர்த்து உப்பையும் செலுத்த
வேண்டும்.[l]

14 முதல் விளைச்சலிலிருந்து உணவுக் காணிக்கை செலுத்தும்போது,
பச்சையான கதிர்களைத் தீயில் வாட்டி, குறுணையாக்கி செலுத்த வேண்டும்.
முதல் விளைச்சலிலிருந்து யெகோவாவுக்குச் செலுத்தும் காணிக்கை அது.[m]
15 அதன்மேல் எண்ணெய் ஊற்றி சாம்பிராணியை வைக்க வேண்டும். அது
உணவுக் காணிக்கை. **16** குருவானவர் அந்தக் குறுணையையும் எண்ணெ
யையும் மொத்த சாம்பிராணியோடு சேர்த்து ஒரு கைப்பிடி எடுத்து மொத்த

2:11 * அநேகமாக, தேன்கூட்டிலிருந்து எடுக்கப்படும் தேனை அல்ல, ஆனால் பழச்
சாற்றைக் குறிக்கலாம்.

அதி. 2
a எண் 5:25, 26
b லேவி 7:9, 10
c லேவி 10:12
எண் 18:9
d லேவி 8:
26, 28
எண் 6:13, 19
e லேவி 6:
20, 21
f எண் 28:9
g லேவி 2:2
லேவி 5:
11, 12
h யாத் 29:
38-41
எண் 28:4-6
i எண் 18:9
j லேவி 6:
14, 17
k யாத் 23:19
எண் 15:20
2நா 31:5
நீதி 3:9
l எசே 43:
23, 24
m யாத் 23:16
யாத் 34:22
எண் 28:26

காணிக்கைக்கும் அடையாளமாக அதைப் பலிபீடத்தில் எரிக்க வேண்டும்.[a]
அது யெகோவாவுக்குச் செலுத்தும் தகன பலி'" என்றார்.

3 பின்பு அவர், "'ஒருவன் சமாதான* பலியைச்[b] செலுத்த விரும்பினால்,
எந்தக் குறையும் இல்லாத காளையையோ பசுவையோ யெகோவா
வின் முன்னிலையில் செலுத்த வேண்டும். 2 பலியாகச் செலுத்தப்படும்
மாட்டின் தலையில் அவன் கை வைக்க வேண்டும். அது சந்திப்புக்
கூடாரத்தின் வாசலில் வெட்டப்பட வேண்டும். குருமார்களாகிய ஆரோ
னின் மகன்கள் அதன் இரத்தத்தைப் பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும்
தெளிக்க வேண்டும். 3 அந்தச் சமாதான பலியிலிருந்து யெகோவாவுக்
குத் தகன பலியாக,[c] குடல்களின் மேலும் அதைச் சுற்றிலும் உள்ள கொழுப்
பையும்,[d] 4 இரண்டு சிறுநீரகங்களையும், அவற்றின் மேலுள்ள கொழுப்
பையும், அதாவது இடுப்புப் பகுதியிலுள்ள கொழுப்பையும், செலுத்த
வேண்டும். சிறுநீரகங்களை எடுக்கும்போது கல்லீரலின் மேலுள்ள சவ்வை
யும் எடுத்து தகன பலியாகச் செலுத்த வேண்டும்.[e] 5 ஆரோனின் மகன்
கள் அதைத் தகன பலிமேல் வைத்து எரிக்க வேண்டும், அதாவது பலி
பீடத்தின் தணலில் அடுக்கப்பட்ட விறகுகள்மேல் எரிகிற தகன பலிமேல்
வைத்து எரிக்க வேண்டும்.[f] அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த
வாசனையாக இருக்கும்.[g]

6 ஒருவன் ஆடுகளில் ஒன்றை யெகோவாவுக்குச் சமாதான பலியாகச்
செலுத்த விரும்பினால், அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்
தாலும் சரி, எந்தக் குறையும் இல்லாததைச் செலுத்த வேண்டும்.[h] 7 செம்
மறியாட்டுக் கடாக் குட்டியை அவன் செலுத்த விரும்பினால், அதை
யெகோவாவின் முன்னிலையில் செலுத்த வேண்டும். 8 பலியாகச் செலுத்
தப்படும் ஆட்டின் தலையில் அவன் கை வைக்க வேண்டும். அது சந்திப்
புக் கூடாரத்தின் முன்னால் வெட்டப்பட வேண்டும். ஆரோனின் மகன்கள்
அதன் இரத்தத்தைப் பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளிக்க வேண்
டும். 9 சமாதான பலியிலிருந்து எடுக்கப்படும் கொழுப்பை யெகோவா
வுக்குத் தகன பலியாகச் செலுத்த வேண்டும்.[i] முதுகெலும்பின் பக்கத்தி
லுள்ள கொழுப்பு நிறைந்த வால் முழுவதையும், குடல்களின் மேலும்
அதைச் சுற்றிலும் உள்ள எல்லா கொழுப்பையும், 10 இரண்டு சிறுநீரகங்
களையும், அவற்றின் மேலுள்ள கொழுப்பையும், அதாவது இடுப்புப் பகு
தியிலுள்ள கொழுப்பையும், செலுத்த வேண்டும். சிறுநீரகங்களை எடுக்கும்
போது கல்லீரலின் மேலுள்ள சவ்வையும் எடுத்து தகன பலியாகச் செலுத்த
வேண்டும்.[j] 11 குருவானவர் பலிபீடத்தின் மேல் அதை உணவாக*
எரிக்க வேண்டும். இது யெகோவாவுக்குச் செலுத்தப்படும் தகன பலி.[k]

12 ஒருவன் வெள்ளாட்டைப் பலியாகச் செலுத்த விரும்பினால்,
அதை யெகோவாவின் முன்னிலையில் செலுத்த வேண்டும். 13 அதன்
தலையில் அவன் கை வைக்க வேண்டும். அது சந்திப்புக் கூடாரத்தின் முன்
னால் வெட்டப்பட வேண்டும். ஆரோனின் மகன்கள் அதன் இரத்தத்தைப்
பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளிக்க வேண்டும். 14 யெகோவா
வுக்குத் தகன பலியாக, குடல்களின் மேலும் அவற்றைச் சுற்றிலும் உள்ள
கொழுப்பையும்,[l] 15 இரண்டு சிறுநீரகங்களையும், அவற்றின் மேலுள்ள

3:1 *வே.வா., "நல்லுறவு." **3:11** *அதாவது, "சமாதான பலியில் கடவுளுடைய பங்காக."

அதி. 2
a லேவி 5:11, 12; லேவி 6:14, 15

அதி. 3
b லேவி 22:21; எண் 6:13, 14
c லேவி 7:29-31
d யாத் 29:13; லேவி 7:23-25; 1ரா 8:64
e லேவி 7:1-4
f லேவி 6:12
g லேவி 4:29, 31
h எண் 6:13, 14
i யாத் 29:22; லேவி 9:18-20; 2நா 7:7
j லேவி 4:8, 9; லேவி 9:10
k லேவி 4:31
l லேவி 4:24, 26

கொழுப்பையும், அதாவது இடுப்புப் பகுதியிலுள்ள கொழுப்பையும்,
செலுத்த வேண்டும். சிறுநீரகங்களை எடுக்கும்போது கல்லீரலின் மேலுள்ள
சவ்வையும் எடுத்து தகன பலியாகச் செலுத்த வேண்டும். **16** குருவானவர்
பலிபீடத்தின் மேல் அதை உணவாக* எரிக்க வேண்டும். அது வாசனை
யான தகன பலி. கொழுப்பு முழுவதும் யெகோவாவுக்கே சொந்தம்.[a]

17 கொழுப்பையோ இரத்தத்தையோ நீங்கள் சாப்பிடவே கூடாது.[b] நீங்
கள் எங்கே குடியிருந்தாலும் சரி, தலைமுறை தலைமுறைக்கும் இந்தச் சட்ட
திட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்'" என்றார்.

4 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "இஸ்ரவேலர்களைப் பார்த்து
நீ சொல்ல வேண்டியது என்னவென்றால், 'செய்யக் கூடாதென்று
யெகோவா சொன்ன ஒன்றை யாராவது தெரியாத்தனமாகச் செய்யும்
போது,[c] பின்பற்ற வேண்டிய சட்டங்கள் இவைதான்:

3 அபிஷேகம் செய்யப்பட்ட குருவானவர்*[d] பாவம் செய்து[e] ஜனங்க
ளைக் குற்றத்துக்கு ஆளாக்கினால், எந்தக் குறையுமில்லாத இளம் காளை
யைப் பாவப் பரிகார பலியாக யெகோவாவுக்குச் செலுத்த வேண்டும்.[f]
4 சந்திப்புக் கூடாரத்தின் வாசலில் யெகோவாவின் முன்னிலையில் அந்
தக் காளையைக் கொண்டுவந்து[g] அதன் தலையில் தன் கையை வைக்க
வேண்டும். யெகோவாவின் முன்னிலையில் அதை வெட்ட வேண்டும்.[h]
5 அபிஷேகம் செய்யப்பட்ட குருவானவர்[i] அந்தக் காளையின் இரத்தத்
தில் கொஞ்சத்தை எடுத்து சந்திப்புக் கூடாரத்துக்குள் கொண்டுவர வேண்
டும். **6** அந்த இரத்தத்தை அவர் தன் விரலில் தொட்டு[j] பரிசுத்த இடத்
தின் திரைச்சீலைக்கு எதிரில், யெகோவாவின் முன்னிலையில் ஏழு தடவை
தெளிக்க வேண்டும்.[k] **7** அதோடு, இன்னும் கொஞ்சம் இரத்தத்தை
எடுத்து சந்திப்புக் கூடாரத்தில் யெகோவாவின் முன்னிலையில் உள்ள தூப
பீடத்தின் கொம்புகளில் பூச வேண்டும்.[l] மீதமுள்ள இரத்தம் முழுவதையும்
சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்குப் பக்கத்திலுள்ள தகன பலிக்கான பலிபீ
டத்தின் அடியில் ஊற்றிவிட வேண்டும்.[m]

8 பின்பு, பாவப் பரிகார பலியாகச் செலுத்தப்படுகிற காளையின்
கொழுப்பு முழுவதையும் அவர் எடுக்க வேண்டும். குடல்களின் மேலும்
அவற்றைச் சுற்றிலும் உள்ள கொழுப்பையும், **9** இரண்டு சிறுநீரகங்களை
யும், அவற்றின் மேலுள்ள கொழுப்பையும், அதாவது இடுப்புப் பகுதியி
லுள்ள கொழுப்பையும், எடுக்க வேண்டும். சிறுநீரகங்களை எடுக்கும்போது
கல்லீரலின் மேலுள்ள சவ்வையும் எடுக்க வேண்டும்.[n] **10** சமாதான பலிக்
காகச் செலுத்தப்படுகிற காளையிலிருந்து அவற்றை எடுப்பது போலவே
இந்தக் காளையிலிருந்தும் எடுக்க வேண்டும்.[o] பின்பு, குருவானவர் தகன
பலிக்கான பலிபீடத்தில் அவற்றை எரிக்க வேண்டும்.

11 ஆனால், அந்தக் காளையின் தோல், சதை, தலை, கால்கள், குடல்
கள், சாணம் ஆகியவற்றையும்[p] **12** மீதமுள்ள எல்லாவற்றையும் முகா
முக்கு வெளியே சாம்பல் கொட்டப்படுகிற சுத்தமான இடத்துக்கு அவர்
கொண்டுபோக வேண்டும். அந்த இடத்தில் விறகுகளை வைத்து அவற்றை
எரிக்க வேண்டும்.[q] அதாவது, சாம்பல் கொட்டப்படுகிற இடத்தில்
அவற்றை எரிக்க வேண்டும்.

3:16 *அதாவது, "சமாதான பலியில் கடவுளுடைய பங்காக." **4:3** *அதாவது,
"தலைமைக் குரு."

அதி. 3
a லேவி 7:23; 1சா 2:15-17
b ஆதி 9:4; லேவி 17:10, 13; உபா 12:23; அப் 15:20, 29

அதி. 4
c லேவி 5:17; எண் 15:27, 28
d லேவி 8:12; லேவி 21:10
e எண் 12:1, 11
f எபி 5:1-3; எபி 7:27
g லேவி 6:25
h யாத் 29:10, 11
i யாத் 30:30
j லேவி 8:15, 16
k லேவி 16:14, 19
l யாத் 30:10
m லேவி 5:9
n லேவி 9:8, 10
o லேவி 3:3, 4
p யாத் 29:14
q லேவி 8:14, 17; எபி 13:11

13 இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் தெரியாத்தனமாகப் பாவம்
செய்து,[a] அதாவது செய்யக் கூடாதென்று யெகோவா சொன்ன ஏதோ
வொன்றைத் தெரியாமல் செய்து குற்றத்துக்கு ஆளானால்,[b] **14** அந்தப்
பாவம் பிற்பாடு தெரியவரும்போது சபையார் தங்களுடைய பாவப் பரி
கார பலியாக ஒரு இளம் காளையைச் சந்திப்புக் கூடாரத்துக்கு முன்னால்
கொண்டுவர வேண்டும். **15** இஸ்ரவேலின் பெரியோர்கள்* யெகோவா
வின் முன்னிலையில் அந்தக் காளையின் தலையில் தங்களுடைய
கைகளை வைக்க வேண்டும். அதன்பின், அந்தக் காளை யெகோவாவின்
முன்னிலையில் வெட்டப்பட வேண்டும்.

16 பின்பு, அபிஷேகம் செய்யப்பட்ட குருவானவர் அந்தக் காளையின்
இரத்தத்தில் கொஞ்சத்தை எடுத்து சந்திப்புக் கூடாரத்துக்குள் கொண்டு
வர வேண்டும். **17** அந்த இரத்தத்தை அவர் தன் விரலில் தொட்டு திரைச்
சீலைக்கு[c] எதிரில் யெகோவாவின் முன்னிலையில் ஏழு தடவை தெளிக்க
வேண்டும். **18** அதோடு, இன்னும் கொஞ்சம் இரத்தத்தை எடுத்து, சந்
திப்புக் கூடாரத்தில் யெகோவாவின் முன்னிலையில் உள்ள தூபபீடத்தின்
கொம்புகளில்[d] பூச வேண்டும். மீதமுள்ள இரத்தம் முழுவதையும் சந்திப்புக்
கூடார வாசலுக்குப் பக்கத்திலுள்ள தகன பலிக்கான பலிபீடத்தின்[e] அடி
யில் ஊற்றிவிட வேண்டும். **19** அதன் கொழுப்பு முழுவதையும் எடுத்து
பலிபீடத்தின் மேல் எரிக்க வேண்டும்.[f] **20** பாவப் பரிகார பலியாகச்
செலுத்தப்படுகிற காளைக்குச் செய்வது போலவே இந்தக் காளைக்கும்
செய்ய வேண்டும். குருவானவர் அப்படியே செய்து, ஜனங்களுடைய
பாவத்துக்காகப் பரிகாரம் செய்ய வேண்டும்.[g] அப்போது, அவர்கள் மன்
னிக்கப்படுவார்கள். **21** பின்பு, அவர் அந்தக் காளையை முகாமுக்கு
வெளியே கொண்டுபோய், முந்தின காளையை எரித்தது போலவே இதை
யும் எரிக்க வேண்டும்.[h] இது இஸ்ரவேல் சபையாருக்காகக் கொடுக்கப்
படும் பாவப் பரிகார பலி.[i]

22 செய்யக் கூடாதென்று யெகோவா சொன்ன ஏதோவொன்றைக் கோத்
திரத் தலைவர்[j] ஒருவர் தெரியாத்தனமாகச் செய்து குற்றத்துக்கு ஆளானால்,
23 அல்லது தான் செய்த ஒரு பாவத்தைப் பற்றிப் பிற்பாடு உணர்ந்தால்,
எந்தக் குறையுமில்லாத ஒரு வெள்ளாட்டுக் கடாக் குட்டியைப் பலியாகக்
கொண்டுவர வேண்டும். **24** அதன் தலையில் அவர் தன் கையை வைக்க
வேண்டும். பின்பு, தகன பலிக்கான மிருகங்கள் வெட்டப்படும் இடத்தில்
அதை யெகோவாவின் முன்னிலையில் வெட்ட வேண்டும்.[k] அது பாவப்
பரிகார பலி. **25** பாவத்துக்காகச் செலுத்தப்படும் பலியின் இரத்தத்தில்
கொஞ்சத்தைக் குருவானவர் தன்னுடைய விரலில் தொட்டு, தகன பலிக்
கான பலிபீடத்தின் கொம்புகளில் பூச வேண்டும்.[l] மீதமுள்ள இரத்தத்தை
அந்தப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட வேண்டும்.[m] **26** சமாதான பலி
யின் கொழுப்பை எரிப்பது போலவே இதன் கொழுப்பு முழுவதையும் பலி
பீடத்தில் எரிக்க வேண்டும்.[n] இப்படி, கோத்திரத் தலைவர் செய்த பாவத்
துக்காகக் குருவானவர் பரிகாரம் செய்ய வேண்டும். அப்போது, அந்தக்
கோத்திரத் தலைவருடைய பாவம் மன்னிக்கப்படும்.

27 செய்யக் கூடாதென்று யெகோவா சொன்ன ஏதோவொன்றை ஜனங்
களில் ஒருவன் தெரியாத்தனமாகச் செய்து குற்றத்துக்கு ஆளானால்,[o]

4:15 * வே.வா., "மூப்பர்கள்."

அதி. 4
a யோசு 7:11
b எண் 15:22-24
c யாத் 26:31; யாத் 40:21; எபி 10:19, 20
d யாத் 30:1, 6
e யாத் 27:1; யாத் 40:6
f லேவி 3:16
g யாத் 32:30; லேவி 16:17; எண் 15:25; எபே 1:7; எபி 2:17
h லேவி 4:11, 12
i லேவி 16:15; 1யோ 2:1, 2
j யாத் 18:21
k லேவி 1:10, 11; லேவி 6:25; லேவி 7:2
l லேவி 9:8, 9; லேவி 16:18; எபி 9:22
m லேவி 8:15
n லேவி 3:3-5
o எண் 15:27-29

28 அல்லது தான் செய்த ஒரு பாவத்தைப் பற்றிப் பிற்பாடு உணர்ந்தால்,
அந்தப் பாவத்துக்காக எந்தக் குறையுமில்லாத ஒரு பெண் வெள்ளாட்டுக்
குட்டியைப் பலியாகக் கொண்டுவர வேண்டும். **29** பாவப் பரிகார பலி
யாகச் செலுத்தப்படுகிற அந்த வெள்ளாட்டுக் குட்டியின் தலையில் அவன்
தன் கையை வைக்க வேண்டும். பின்பு, தகன பலிக்கான மிருகங்கள் வெட்
டப்படுகிற இடத்தில் அதை வெட்ட வேண்டும்.[a] **30** அதன் இரத்தத்தில்
கொஞ்சத்தைக் குருவானவர் தன்னுடைய விரலில் தொட்டு, தகன பலிக்
கான பலிபீடத்தின் கொம்புகளில் பூச வேண்டும். மீதமுள்ள இரத்தம் முழு
வதையும் அந்தப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட வேண்டும்.[b] **31** சமா
தான பலியின்[c] கொழுப்பை எடுப்பது போலவே அதன் கொழுப்பு
முழுவதையும் குருவானவர் எடுத்து பலிபீடத்தில் எரிக்க வேண்டும்.[d]
அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும். இப்படி,
அவன் செய்த பாவத்துக்காகக் குருவானவர் பரிகாரம் செய்ய வேண்டும்.
அப்போது அவனுடைய பாவம் மன்னிக்கப்படும்.

32 பாவப் பரிகார பலியாக அவன் ஒரு செம்மறியாட்டுக் குட்டி
யைக் கொண்டுவந்தால், அது எந்தக் குறையுமில்லாத பெண் ஆட்டுக்குட்
டியாக இருக்க வேண்டும். **33** பாவப் பரிகார பலியாகச் செலுத்தப்படும்
அந்த ஆட்டுக்குட்டியின் தலையில் அவன் தன் கையை வைக்க வேண்
டும். பின்பு, தகன பலிக்காக மிருகங்கள் வெட்டப்படும் இடத்தில் பாவப் பரி
கார பலியாக அதை வெட்ட வேண்டும்.[e] **34** அதன் இரத்தத்தில் கொஞ்
சத்தைக் குருவானவர் தன்னுடைய விரலில் தொட்டு, தகன பலிக்கான
பலிபீடத்தின் கொம்புகளில் பூச வேண்டும்.[f] மீதமுள்ள இரத்தம் முழுவதை
யும் அந்தப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட வேண்டும். **35** சமாதான
பலியாகச் செலுத்தப்படும் செம்மறியாட்டுக் கடாக் குட்டியின் கொழுப்பை
எடுப்பது போலவே இந்தப் பெண் செம்மறியாட்டுக் குட்டியின் கொழுப்
பையும் எடுக்க வேண்டும். பலிபீடத்தில் யெகோவாவுக்குச் செலுத்தப்பட்ட
தகன பலிமேல் அதை வைத்து குருவானவர் எரிக்க வேண்டும்.[g] இப்படி,
அவன் செய்த பாவத்துக்காகக் குருவானவர் பரிகாரம் செய்ய வேண்டும்.
அப்போது, அவனுடைய பாவம் மன்னிக்கப்படும்'"[h] என்றார்.

5 பின்பு அவர், "'ஒருவன் பாவம் செய்வதைப் பார்க்கிறவனோ அதைப்
பற்றித் தெரிந்தவனோ, அதற்குச் சாட்சியாக[i] இருக்கிறான். அதனால்,
அதைத் தெரிவிக்க வேண்டுமென்ற அறிவிப்பை* கேட்டும் அவன் தெரி
விக்காமல் இருந்துவிட்டால் அவன் குற்றவாளி. அந்தக் குற்றத்துக்காக
அவன் தண்டிக்கப்படுவான்.

2 ஒருவன் அசுத்தமான காட்டு மிருகங்களின் பிணத்தையோ அசுத்
தமான வீட்டு விலங்குகளின் பிணத்தையோ கூட்டங்கூட்டமாகப் போகிற
அசுத்தமான சிறு பிராணிகளின் பிணத்தையோ தொட்டால்,[j] அதைத்
தெரியாத்தனமாகத் தொட்டிருந்தாலும்கூட தீட்டுப்பட்டவனாகவும், குற்ற
முள்ளவனாகவும் இருப்பான். **3** மனுஷனைத் தீட்டுப்படுத்துகிற எதையா
வது[k] அல்லது தீட்டான எந்த மனுஷனையாவது ஒருவன் தெரியாத்தனமா
கத் தொட்டுவிட்டால், அது தெரியவரும்போது அவன் குற்றமுள்ளவனாக
இருப்பான்.

5:1 *பாவம் செய்தவருக்கோ அதைப் பற்றிச் சாட்சி சொல்லாதவருக்கோ சாபம்
வரும் என்பது இந்த அறிவிப்பில் அநேகமாக உட்பட்டிருக்கலாம்.

அதி. 4
- a லேவி 1:10, 11; லேவி 6:25
- b லேவி 4:25; லேவி 8:15; லேவி 9:8, 9; எபி 9:22
- c லேவி 3:3, 4
- d லேவி 3:16
- e லேவி 1:10, 11
- f லேவி 4:25; லேவி 16:18
- g யாத் 29:13, 14; லேவி 3:3, 4; லேவி 6:12; லேவி 9:8, 10
- h எண் 15:28; 1யோ 1:7; 1யோ 2:1, 2

அதி. 5
- i நீதி 29:24
- j லேவி 11:21–24; லேவி 17:15; உபா 14:8
- k லேவி 12:2; லேவி 13:3; லேவி 15:3; எண் 19:11

4 ஒருவன் ஏதோவொன்றைச் செய்வதாக அவசரப்பட்டு வாக்குக்
கொடுத்துவிட்டால், அது நல்ல காரியமோ கெட்ட காரியமோ, அப்படி
அவசரப்பட்டு வாக்குக் கொடுத்துவிட்டதை உணரும்போது குற்றமுள்ளவ
னாக இருப்பான்.*[a]

5 இப்படி ஏதோவொரு விஷயத்தில் ஒருவன் குற்றவாளியானால்,
தான் செய்த பாவத்தை ஒத்துக்கொள்ள வேண்டும்.[b] **6** அதோடு, குற்ற
நிவாரண பலியை யெகோவாவின் முன்னிலையில் கொண்டுவர வேண்
டும்.[c] அதாவது, பெண் செம்மறியாட்டுக் குட்டியையோ பெண் வெள்ளாட்
டுக் குட்டியையோ பாவப் பரிகார பலியாகக் கொண்டுவர வேண்டும். அப்
போது, குருவானவர் அவனுக்குப் பாவப் பரிகாரம் செய்வார்.

7 ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவனுக்கு வசதியில்லை என்றால்,
இரண்டு காட்டுப் புறாக்களையோ இரண்டு புறாக் குஞ்சுகளையோ[d] குற்ற
நிவாரண பலியாக யெகோவாவுக்குக் கொண்டுவர வேண்டும். ஒன்றைப்
பாவப் பரிகார பலியாகவும் மற்றொன்றைத் தகன பலியாகவும் கொண்டு
வர வேண்டும்.[e] **8** அவன் அவற்றைக் குருவானவரிடம் கொடுக்க வேண்
டும். குருவானவர் ஒரு பறவையை முதலில் எடுத்து, கழுத்தைத் துண்டாக்
காமல் அதைக் கிள்ளி, பாவப் பரிகார பலியாகச் செலுத்த வேண்டும்.
9 பாவத்துக்காகச் செலுத்தப்பட்ட அந்தப் பலியிலிருந்து கொஞ்சம் இரத்
தத்தை எடுத்து, பலிபீடத்தின் பக்கவாட்டில் தெளிக்க வேண்டும். மீதமுள்ள
இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட வேண்டும்.[f] அது பாவப்
பரிகார பலி. **10** குருவானவர் மற்றொரு பறவையை எடுத்து வழக்கமான
முறைப்படி[g] தகன பலியாகச் செலுத்த வேண்டும். அவன் செய்த பாவத்துக்
காகக் குருவானவர் பாவப் பரிகாரம் செய்ய வேண்டும். அப்போது, அவ
னுடைய பாவம் மன்னிக்கப்படும்.[h]

11 இரண்டு காட்டுப் புறாக்களையோ இரண்டு புறாக் குஞ்சுகளையோ
கொண்டுவர அவனுக்கு வசதியில்லை என்றால், ஒரு எப்பா அளவிலே பத்
தில் ஒரு பங்கு*[i] நைசான மாவைப் பாவப் பரிகாரத்துக்கான காணிக்கை
யாகக் கொண்டுவர வேண்டும். அதன்மேல் எண்ணெய் ஊற்றவோ சாம்பி
ராணியை வைக்கவோ கூடாது. அது பாவப் பரிகாரத்துக்கான காணிக்கை.
12 அதை அவன் குருவானவரிடம் கொண்டுவர வேண்டும். குருவானவர்
அதிலிருந்து ஒரு கைப்பிடி மாவை எடுத்து, மொத்த காணிக்கைக்கும்
அடையாளமாகப் பலிபீடத்தில் எரிக்க வேண்டும். அதாவது, யெகோவா
வுக்குச் செலுத்தப்படும் தகன பலிகள்மேல் எரிக்க வேண்டும். அது பாவப்
பரிகார பலி. **13** இப்படிப்பட்ட பாவங்களில் எதை அவன் செய்திருந்தா
லும், அதற்காகக் குருவானவர் பாவப் பரிகாரம் செய்வார். அப்போது,
அவனுடைய பாவம் மன்னிக்கப்படும்.[j] மீதமுள்ள மாவு, உணவுக் காணிக்
கையைப்[k] போலவே குருவானவருக்குச் சொந்தமாகும்'"[l] என்றார்.

14 பின்பு யெகோவா மோசேயிடம் இப்படிச் சொன்னார்: **15** "யெகோ
வாவின் பரிசுத்த காரியங்களுக்கு* விரோதமாக ஒருவன் தெரியாத்தனமா
கப் பாவம் செய்தால்,[m] எந்தக் குறையுமில்லாத செம்மறியாட்டுக் கடாவைக்

அதி. 5
a மத் 5:33
b எண் 5:7; சங் 32:5; நீதி 28:13; 1யோ 1:9
c லேவி 7:1; லேவி 14:2, 12; லேவி 19:20, 21; எண் 6:12
d லூ 2:24
e லேவி 12:7, 8; லேவி 14:21, 22; லேவி 15:13-15
f லேவி 1:4, 5; லேவி 7:2; எபி 9:22
g லேவி 1:15-17
h லேவி 6:7
i யாத் 16:36
j லேவி 4:26
k லேவி 6:14-16; 1கொ 9:13
l லேவி 2:10; லேவி 7:1, 6
m லேவி 10:17, 18

5:4 * அவன் தன்னுடைய வாக்கை நிறைவேற்றாததைப் பற்றி இங்கே சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. **5:11** * அதாவது, "சுமார் ஒரு கிலோ." **5:15** * யெகோவாவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது அர்ப்பணிக்கப்பட்ட எல்லாவற்றையும் இவை குறிக்கின்றன.

குற்ற நிவாரண பலியாக யெகோவாவுக்குக் கொண்டுவர வேண்டும்.[a]
அந்தச் செம்மறியாட்டுக் கடாவின் மதிப்பு எவ்வளவு என்பதைப் பரி
சுத்த* வெள்ளி சேக்கலின்# கணக்குப்படி குருவானவர் தீர்மானிக்க வேண்
டும்.[b] **16** பரிசுத்த இடத்துக்கு விரோதமாகத் தான் செய்த பாவத்துக்கு
அவன் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். அதன் மதிப்பில் ஐந்திலொரு
பாகத்தைச் சேர்த்து குருவானவரிடம் கொடுக்க வேண்டும்.[c] குருவானவர்
குற்ற நிவாரண பலியாகிய செம்மறியாட்டுக் கடாவைச் செலுத்தி அவனுக்
குப் பாவப் பரிகாரம் செய்வார்.[d] அப்போது, அவனுடைய பாவம் மன்னிக்
கப்படும்.[e]

17 செய்யக் கூடாதென்று யெகோவா சொன்ன ஏதோவொன்றை ஒரு
வன் தெரியாத்தனமாகச் செய்தாலும்கூட, குற்றமுள்ளவனாக இருப்பான்.
அந்தக் குற்றத்துக்காக அவன் தண்டிக்கப்படுவான்.[f] **18** நிர்ணயிக்கப்
பட்ட மதிப்பின்படி, எந்தக் குறையும் இல்லாத ஒரு செம்மறியாட்டுக்
கடாவை அவன் கொண்டுவர வேண்டும். குற்ற நிவாரண பலியாக அதை
குருவானவரிடம் கொடுக்க வேண்டும்.[g] அவன் தெரியாத்தனமாகச் செய்த
பாவத்துக்காகக் குருவானவர் பாவப் பரிகாரம் செய்வார். அப்போது, அவ
னுடைய பாவம் மன்னிக்கப்படும். **19** அது குற்ற நிவாரண பலி. அவன்
யெகோவாவுக்கு விரோதமாகக் குற்றம் செய்திருக்கிறான்."

6 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "ஒருவன் தன்னிடம் ஒப்படைக்
கப்பட்டிருந்த பொருளோ, கொடுத்து வைக்கப்பட்டிருந்த பொருளோ
தன்னிடம் இல்லையென்று மறுத்திருக்கலாம்,[h] அல்லது அதைத் திருப்பித்
தராமல் ஏமாற்றியிருக்கலாம், அல்லது மற்றவனுக்குச் சொந்தமானதைத்
திருடியிருக்கலாம், அல்லது மோசடி செய்திருக்கலாம், **3** அல்லது யாரோ
தொலைத்த பொருளைத் திருட்டுத்தனமாக எடுத்து வைத்திருக்கலாம்.
அவன் இதுபோன்ற ஒரு பாவத்தை மறைத்து பொய் சத்தியம் செய்து,[i]
யெகோவாவுக்கு உண்மையில்லாமல் நடந்துகொண்டால்,[j] இந்தச் சட்டங்க
ளைப் பின்பற்ற வேண்டும்: **4** திருடியதை, அபகரித்ததை, மோசடி செய்
ததை, தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதை, அல்லது தான் கண்டெடுத்ததை
அவன் திருப்பித் தர வேண்டும். **5** அல்லது, எதைக் குறித்துப் பொய் சத்
தியம் செய்தானோ அதைத் திருப்பித் தர வேண்டும் அல்லது அதற்கு முழு
நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்.[k] அதுமட்டுமல்ல, அதன் மதிப்பில் ஐந்தி
லொரு பாகத்தைச் சேர்த்துத் தர வேண்டும். தன்னுடைய குற்றம் நிரூபிக்
கப்படும் நாளில் அதன் சொந்தக்காரருக்கு அதைக் கொடுக்க வேண்டும்.
6 எந்தக் குறையுமில்லாத ஒரு செம்மறியாட்டுக் கடாவை மந்தையிலி
ருந்து கொண்டுவந்து தன்னுடைய குற்ற நிவாரண பலியாகக் குருவானவரி
டம் கொடுக்க வேண்டும். தன் குற்றத்துக்காக யெகோவாவுக்கு அவன்
செலுத்தும் இந்தப் பலி, நிர்ணயிக்கப்பட்ட மதிப்பின்படி இருக்க வேண்டும்.[l]
7 குருவானவர் யெகோவாவின் முன்னிலையில் அவனுக்காகப் பாவப் பரி
காரம் செய்வார். இப்படிப்பட்ட எந்தக் குற்றத்தை அவன் செய்திருந்தாலும்
அது மன்னிக்கப்படும்"[m] என்றார்.

8 அதன்பின் யெகோவா மோசேயிடம், **9** "இந்த எல்லா கட்டளைக
ளையும் ஆரோனிடமும் அவனுடைய மகன்களிடமும் நீ சொல்ல வேண்

5:15 * வே.வா., "பரிசுத்த இடத்து." # ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 5
a லேவி 6:6
b யாத் 30:13; லேவி 27:25
c லேவி 6:4, 5; லேவி 22:14; எண் 5:6, 7
d யாத் 32:30
e லேவி 6:7; லேவி 19:22
f லேவி 5:2
g லேவி 6:6

அதி. 6
h யாத் 22:7; லேவி 19:11
i யாத் 22:10, 11; லேவி 19:12; எபே 4:25; கொலோ 3:9
j எண் 5:6
k லேவி 5:15, 16; எண் 5:6, 7
l லேவி 5:15; லேவி 7:1; ஏசா 53:10
m லேவி 5:18

டும்: ‘தகன பலிக்கான[a] சட்டம் என்னவென்றால், ராத்திரி முழுவதும் அது
பலிபீடத்தின் மேல் இருக்க வேண்டும். காலை வரைக்கும் அது அங்
கேயே இருக்க வேண்டும். பலிபீடத்தில் நெருப்பு எரிந்துகொண்டே இருக்க
வேண்டும். **10** குருவானவர் தன்னுடைய நாரிழை* அங்கியைப் போட்
டுக்கொள்ள வேண்டும்.[b] நாரிழை அரைக் கால்சட்டையை[c] உள்ளாடை
யாகப் போட்டுக்கொள்ள வேண்டும். பலிபீடத்தில் எரிக்கப்பட்ட தகன பலி
யின் சாம்பலை[d] எடுத்து பலிபீடத்துக்குப் பக்கத்தில் கொட்ட வேண்டும்.
11 பின்பு, அவர் தன்னுடைய உடைகளைக் கழற்றிவிட்டு[e] வேறு உடை
களைப் போட்டுக்கொண்டு, அந்தச் சாம்பலை முகாமுக்கு வெளியிலுள்ள
சுத்தமான இடத்துக்குக் கொண்டுபோய்க் கொட்ட வேண்டும்.[f] **12** பலிபீ
டத்தின் நெருப்பு எரிந்துகொண்டே இருக்க வேண்டும், அது அணைந்து
விடக் கூடாது. குருவானவர் தினமும் காலையில் அதன்மேல் விறகு
களை வைத்து,[g] தகன பலியை அடுக்கிவைக்க வேண்டும். சமாதான
பலியின் கொழுப்பை அதன்மேல் எரிக்க வேண்டும்.[h] **13** பலிபீடத்தி
லுள்ள நெருப்பு எரிந்துகொண்டே இருக்க வேண்டும், அது அணைந்துவி
டக் கூடாது.

14 உணவுக் காணிக்கைக்கான சட்டம் இதுதான்:[i] உணவுக் காணிக்கை
யைப் பலிபீடத்தின் முன்பு யெகோவாவின் முன்னிலையில் ஆரோனின்
மகன்கள் படைக்க வேண்டும். **15** அவர்களில் ஒருவன் அதிலிருந்து ஒரு
கைப்பிடி நைசான மாவையும், கொஞ்சம் எண்ணெயையும், சாம்பிராணி
முழுவதையும் எடுத்து, மொத்த காணிக்கைக்கும் அடையாளமாக அதைப்
பலிபீடத்தில் எரிக்க வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த
வாசனையாக இருக்கும்.[j] **16** மீதியிருக்கும் மாவில் புளிப்பில்லாத ரொட்
டிகளைச் சுட்டு ஆரோனும் அவனுடைய மகன்களும் பரிசுத்த இடத்
தில் சாப்பிட வேண்டும்.[k] அதாவது, சந்திப்புக் கூடாரத்தின் பிரகாரத்தில்
சாப்பிட வேண்டும்.[l] **17** புளித்த எதையும் அந்த மாவுடன் கலந்து சுடக்
கூடாது.[m] எனக்குச் செலுத்தப்படும் தகன பலிகளிலிருந்து நான் அவர்க
ளுக்குக் கொடுக்கும் பங்கு அது.[n] பாவப் பரிகார பலியையும் குற்ற
நிவாரண பலியையும் போல அது மிகவும் பரிசுத்தமானது.[o] **18** ஆரோ
னின் வம்சத்தில் வரும் ஆண்கள் எல்லாரும் அதைச் சாப்பிட வேண்டும்.[p]
யெகோவாவுக்குச் செலுத்தப்படும் தகன பலிகளில் தலைமுறை தலைமு
றைக்கும் அது அவர்களுடைய பங்காக இருக்கும்.[q] பலிகள்மேல் படுகிற
எல்லாமே பரிசுத்தமாகும்’” என்றார்.

19 அதோடு யெகோவா மோசேயிடம், **20** “ஆரோனும் அவனுக்குப்
பின் அவனுடைய மகன்களும் அபிஷேகம்[r] செய்யப்படும் நாளில், தவ
றாமல் யெகோவாவுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கைகள் இவைதான்:
ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு*[s] நைசான மாவை எடுத்து
பாதியைக் காலையிலும் மீதியைச் சாயங்காலத்திலும் உணவுக் காணிக்கை
யாகப்[t] படைக்க வேண்டும். **21** அதில் எண்ணெய் கலந்து வட்டக் கல்
லில் ரொட்டியாகச் சுட வேண்டும்.[u] பின்பு அதைத் துண்டுகளாக்கி, அவற்
றின் மேல் நிறைய எண்ணெய் ஊற்றி உணவுக் காணிக்கையாகச் செலுத்த
வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்
கும். **22** ஆரோனுக்குப் பின்பு குருவாக அபிஷேகம் செய்யப்படுகிற

அதி. 6
a யாத் 29:38-42, எண் 28:3, எபி 10:11
b யாத் 28:39, லேவி 16:32, எசே 44:17
c யாத் 28:42, யாத் 39:27, 28
d யாத் 27:3, லேவி 1:16
e லேவி 16:23, எசே 44:19
f லேவி 4:3, 12
g லேவி 1:7, நெ 13:30, 31
h லேவி 3:5, 16
i லேவி 2:1, எண் 15:3, 4
j லேவி 2:2, 9, லேவி 5:11, 12
k லேவி 2:3, லேவி 5:13, எசே 44:29, 1கொ 9:13
l லேவி 10:12
m லேவி 2:11
n எண் 18:9
o லேவி 2:3, 10
p எண் 18:10
q லேவி 24:8, 9
r யாத் 30:30, எபி 5:1
s யாத் 16:36
t யாத் 29:1, 2, யாத் 29:40, 41, லேவி 2:1, லேவி 9:17, எண் 28:4, 5
u லேவி 2:5, லேவி 7:9, 1நா 23:29

6:10 * அதாவது, “லினன்.” **6:20** * அதாவது, “சுமார் ஒரு கிலோ.”

அவனுடைய மகன்[a] அதைச் செய்ய வேண்டும். அதை யெகோவாவுக்
கென்று முழுவதுமாக எரிக்க வேண்டும். இது நிரந்தரக் கட்டளை. **23** குரு
வானவருக்காகச் செலுத்தப்படும் உணவுக் காணிக்கையை முழுவதுமாக
எரித்துவிட வேண்டும், அதைச் சாப்பிடக் கூடாது” என்றார்.

24 பின்பு யெகோவா மோசேயிடம் இப்படிச் சொன்னார்: **25** “ஆரோ
னிடமும் அவனுடைய மகன்களிடமும் நீ சொல்ல வேண்டியது என்ன
வென்றால், ‘பாவப் பரிகார பலியின் சட்டம் இதுதான்:[b] வழக்கமாகத் தகன
பலி வெட்டப்படுகிற இடத்தில்[c] பாவப் பரிகார பலியையும் யெகோவாவின்
முன்னிலையில் வெட்ட வேண்டும். அது மிகவும் பரிசுத்தமானது.
26 பாவப் பரிகார பலியைச் செலுத்துகிற குருவானவர் அதைச் சாப்பிட
வேண்டும்.[d] பரிசுத்த இடத்தில், அதாவது சந்திப்புக் கூடாரத்தின் பிரகாரத்
தில், அதைச் சாப்பிட வேண்டும்.[e]

27 அதன் இறைச்சிமேல் படுகிற எல்லாமே பரிசுத்தமாகும். அதன்
இரத்தம் ஒருவனுடைய அங்கியில் தெறித்தால், அதைப் பரிசுத்த இடத்
தில் துவைக்க வேண்டும். **28** அந்த இறைச்சியை மண்பாத்திரத்தில் வேக
வைத்திருந்தால், அந்தப் பாத்திரத்தை உடைத்துவிட வேண்டும். செம்புப்
பாத்திரத்தில் வேக வைத்திருந்தால், அதை நன்றாகத் தேய்த்துத் தண்ணீரில்
கழுவ வேண்டும்.

29 குருமார்களாகச் சேவை செய்யும் ஆண்கள் அந்த இறைச்சியைச்
சாப்பிட வேண்டும்.[f] அது மிகவும் பரிசுத்தமானது.[g] **30** ஆனால், பாவப்
பரிகார பலியின் இரத்தத்தில் கொஞ்சத்தைப் பாவப் பரிகாரத்துக்காகப் பரி
சுத்த இடமாகிய சந்திப்புக் கூடாரத்துக்கு உள்ளே கொண்டுவந்திருந்தால்,
அதன் இறைச்சியைச் சாப்பிடக் கூடாது.[h] அதை நெருப்பில் சுட்டெரிக்க
வேண்டும்.’”

7 பின்பு அவர், “‘குற்ற நிவாரண பலிகளுக்கான சட்டம் இதுதான்:[i] இந்தப்
பலி மிகவும் பரிசுத்தமானது. **2** தகன பலிக்குரியதை வெட்டும் இடத்
தில் குற்ற நிவாரண பலிக்குரியதையும் வெட்ட வேண்டும். அதன் இரத்தத்
தைப்[j] பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளிக்க வேண்டும்.[k] **3** அதன்
கொழுப்பு முழுவதையும் குருவானவர் கடவுளுக்குச் செலுத்த வேண்
டும்.[l] கொழுப்பு நிறைந்த வாலையும், குடல்களின் மேலுள்ள கொழுப்பை
யும், **4** இரண்டு சிறுநீரகங்களையும், அவற்றின் மேலுள்ள கொழுப்பையும்,
அதாவது இடுப்புப் பகுதியிலுள்ள கொழுப்பையும், செலுத்த வேண்டும். சிறு
நீரகங்களை எடுக்கும்போது கல்லீரலின் மேலுள்ள சவ்வையும் அவர்
எடுக்க வேண்டும்.[m] **5** யெகோவாவுக்குத் தகன பலியாக அதைப் பலிபீ
டத்தின் மேல் குருவானவர் எரிக்க வேண்டும்.[n] அது குற்ற நிவாரண பலி.
6 குருமார்களாகச் சேவை செய்யும் ஆண்கள் எல்லாரும் அதன் இறைச்சி
யைப் பரிசுத்த இடத்தில் சாப்பிட வேண்டும்.[o] அது மிகவும் பரிசுத்தமானது.[p]
7 பாவப் பரிகார பலிகளுக்கான சட்டம் குற்ற நிவாரண பலிகளுக்கும்
பொருந்தும். குற்ற நிவாரண பலியைச் செலுத்தி பாவப் பரிகாரம் செய்கிற
குருவுக்குத்தான் அந்த இறைச்சி சொந்தமாகும்.[q]

8 ஒருவன் கொண்டுவருகிற தகன பலியின் தோல்[r] அந்தப் பலியைச்
செலுத்துகிற குருவுக்குத்தான் சொந்தமாகும்.

9 அடுப்பிலோ வாணலியிலோ வட்டக் கல்லிலோ செய்து கொண்டுவ
ரப்படும் எல்லா உணவுக் காணிக்கையும்[s] அதைச் செலுத்துகிற குருவுக்

அதி. 6
a உபா 10:6
b லேவி 4:3
c லேவி 1:3, 11
d லேவி 10:17
எண் 18:9
எசே 44:29
e யாத் 27:9
லேவி 6:14, 16
எசே 42:13
f லேவி 6:14, 18
லேவி 21:21, 22
எண் 18:10
g லேவி 6:25
h லேவி 4:5
லேவி 10:18
லேவி 16:27
எபி 13:11

அதி. 7
i லேவி 5:6
லேவி 6:6
லேவி 14:2, 12
லேவி 19:20, 21
எண் 6:12
j எபி 9:22
k லேவி 3:1, 2
லேவி 5:9
l யாத் 29:13, 14
லேவி 3:9, 17
லேவி 4:8, 9
லேவி 8:18, 20
m லேவி 3:3, 4
n லேவி 3:14-16
o லேவி 5:13
லேவி 6:14, 16
எண் 18:9
p லேவி 2:3
q லேவி 6:25, 26
லேவி 14:13
r யாத் 29:14
லேவி 1:6
s லேவி 6:20, 21
1நா 23:29

குத்தான் சொந்தமாகும்.[a] **10** ஆனால், எண்ணெய் கலந்தோ[b] எண்ணெய்
கலக்காமலோ[c] செய்து கொண்டுவரப்படும் உணவுக் காணிக்கை எல்லாவற்
றையும் ஆரோனின் மகன்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் எல்
லாரும் அதைச் சமமாகப் பங்குபோட்டுக்கொள்ள வேண்டும்.

11 யெகோவாவுக்குச் செலுத்தப்படும் சமாதான பலிகளுக்கான[d] சட்டம்
இதுதான்: **12** அதை நன்றி தெரிவிக்கும் பலியாகச்[e] செலுத்தினால், எண்
ணெய் கலந்து சுடப்பட்ட புளிப்பில்லாத வட்ட ரொட்டிகள், எண்ணெய் தட
விய புளிப்பில்லாத மெல்லிய ரொட்டிகள், வறுத்த நைசான மாவில்
எண்ணெய் ஊற்றி பிசைந்து சுடப்பட்ட வட்ட ரொட்டிகள் ஆகியவற்
றையும் அதனோடு சேர்த்து செலுத்த வேண்டும். **13** நன்றி தெரிவிக்கச்
செலுத்தப்படும் சமாதான பலிகளுடன் சேர்த்து, புளித்த மாவினால் செய்
யப்பட்ட வட்ட ரொட்டிகளையும் செலுத்த வேண்டும். **14** ஒவ்வொரு
விதமான ரொட்டியிலிருந்தும் ஒன்றை எடுத்து யெகோவாவுக்குப் பரிசுத்த
பங்காகப் படைக்க வேண்டும். இவையெல்லாம் சமாதான பலிகளின்
இரத்தத்தைத் தெளிக்கிற குருவுக்குச் சொந்தமாகும்.[f] **15** நன்றி தெரிவிக்
கச் செலுத்தப்படும் சமாதான பலியின் இறைச்சியை அதே நாளில் சாப்
பிட வேண்டும். அடுத்த நாள் காலைவரை அதில் எதையும் மீதி வைக்கக்
கூடாது.[g]

16 ஒருவன் கொண்டுவரும் பலி, நேர்ந்துகொண்டதை நிறைவேற்றும்
பலியாகவோ[h] அவனாகவே விருப்பப்பட்டு செலுத்தும் பலியாகவோ[i]
இருந்தால் அதே நாளில் சாப்பிட வேண்டும். மீதியிருந்தால் அடுத்த நாளி
லும் சாப்பிடலாம். **17** ஆனால், மூன்றாம் நாள்வரை மீந்திருக்கும் இறைச்
சியை எரித்துவிட வேண்டும்.[j] **18** சமாதான பலியைக் கொண்டுவந்தவன்
அதன் இறைச்சியை மூன்றாம் நாளில் சாப்பிட்டால், அவனைக் கடவுள் ஏற்
றுக்கொள்ள மாட்டார். அந்தப் பலியால் அவனுக்கு எந்தப் பிரயோஜனமும்
கிடைக்காது. அது கடவுளுக்கு அருவருப்பாக இருக்கும். அதில் கொஞ்
சம் சாப்பிட்டால்கூட அந்தக் குற்றத்துக்காக அவன் தண்டிக்கப்படுவான்.[k]
19 தீட்டான எதன் மீதாவது அந்த இறைச்சி பட்டால் அதைச் சாப்பிடக்
கூடாது. அதை நெருப்பில் சுட்டெரித்துவிட வேண்டும். தீட்டுப்படாத எல்
லாரும் சுத்தமான இறைச்சியைச் சாப்பிடலாம்.

20 யெகோவாவுக்குச் செலுத்தப்படும் சமாதான பலியின் இறைச்சி
யைத் தீட்டான ஒருவன் சாப்பிட்டால், அவன் கொல்லப்பட வேண்டும்.[l]
21 ஒருவன் தீட்டான மனிதனையோ[m] அசுத்தமான மிருகத்தையோ[n] தீட்
டாகவும் அருவருப்பாகவும் இருக்கிற ஒன்றையோ[o] தொட்டுவிட்டு,
யெகோவாவுக்குச் செலுத்தப்பட்ட சமாதான பலியின் இறைச்சியைச் சாப்
பிட்டால், அவன் கொல்லப்பட வேண்டும்'" என்றார்.

22 பின்பு யெகோவா மோசேயிடம், **23** "நீ இஸ்ரவேல் ஜனங்களிடம்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'காளை, செம்மறியாட்டுக் கடாக்
குட்டி, வெள்ளாடு ஆகியவற்றின் கொழுப்பை நீங்கள் சாப்பிடக் கூடாது.[p]
24 தானாகச் செத்துப்போன மிருகத்தின் கொழுப்பையும் வேறொரு மிரு
கத்தினால் கொல்லப்பட்ட மிருகத்தின் கொழுப்பையும் மற்ற காரியங்களுக்
காகப் பயன்படுத்தலாம். ஆனால், அதை ஒருபோதும் சாப்பிடக் கூடாது.[q]
25 யெகோவாவுக்குத் தகன பலியாகச் செலுத்தும் மிருகத்தின் கொழுப்பை
ஒருவன் சாப்பிட்டால் அவன் கொல்லப்பட வேண்டும்.

அதி. 7
a லேவி 2:3-7, எண் 18:9, 1கொ 9:13
b லேவி 14:21
c லேவி 5:11, எண் 5:15
d லேவி 3:1, லேவி 7:20, லேவி 22:21, 1கொ 10:16
e லேவி 22:29, 2நா 29:31
f லேவி 6:25, 26, லேவி 10:14, எண் 18:8
g லேவி 22:29, 30
h லேவி 22:21
i லேவி 22:23, உபா 12:5, 6
j லேவி 19:5, 6
k லேவி 19:7, 8
l எண் 19:20
m லேவி 12:2, 4
n லேவி 11:21-24, உபா 14:7
o லேவி 11:10, உபா 14:10
p லேவி 3:16, 17, லேவி 4:8-10, 1சா 2:16, 17
q யாத் 22:31, லேவி 17:15

26 நீங்கள் குடியிருக்கும் எந்த இடத்திலும் பறவைகளின் இரத்தத்
தையோ மிருகங்களின் இரத்தத்தையோ சாப்பிடக் கூடாது.[a] **27** இரத்தத்
தைச் சாப்பிடுகிறவன் கொல்லப்பட வேண்டும்’”[b] என்றார்.

28 அதன்பின் யெகோவா மோசேயிடம், **29** “நீ இஸ்ரவேல் ஜனங்களி
டம் சொல்ல வேண்டியது என்னவென்றால், ‘யெகோவாவுக்குச் சமாதான
பலி செலுத்துகிறவன் அதில் ஒரு பங்கை யெகோவாவுக்கென்று கொண்டு
வர வேண்டும்.[c] **30** யெகோவாவுக்குச் செலுத்தும் தகன பலியாக மார்க்
கண்டத்தையும்* கொழுப்பையும்[d] தன் கையிலேயே கொண்டுவர
வேண்டும். அதை அசைவாட்டும் காணிக்கையாக யெகோவாவின் முன்
னிலையில் அசைவாட்ட வேண்டும்.[e] **31** குருவானவர் அதன் கொழுப்
பைப் பலிபீடத்தின் மேல் எரிக்க வேண்டும்.[f] ஆனால், மார்க்கண்டம்
ஆரோனுக்கும் அவனுடைய மகன்களுக்கும் சொந்தமாகும்.[g]

32 நீங்கள் சமாதான பலியாகச் செலுத்துகிற மிருகங்களின் வலது
காலை எடுத்து குருவானவருக்குப் பரிசுத்த பங்காகக் கொடுக்க வேண்
டும்.[h] **33** சமாதான பலிகளின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்து
கிற ஆரோனின் மகனுக்கு அந்த வலது காலைப் பங்காகக் கொடுக்க
வேண்டும்.[i] **34** இஸ்ரவேல் ஜனங்கள் செலுத்துகிற சமாதான பலிகளிலி
ருந்து, அசைவாட்டும் காணிக்கையாகிய மார்க்கண்டத்தையும் பரிசுத்த
பங்காகிய காலையும் குருமார்களாகிய ஆரோனுக்கும் அவனுடைய மகன்
களுக்கும் கொடுத்திருக்கிறேன். இஸ்ரவேல் ஜனங்களுக்கு இதை ஒரு நிரந்
தரக் கட்டளையாகத் தந்திருக்கிறேன்.[j]

35 யெகோவாவுக்குச் செலுத்தப்பட்ட தகன பலிகளிலிருந்து எடுக்கப்ப
டும் இந்தப் பங்கை குருமார்களாகிய ஆரோனுக்காகவும் அவனுடைய
மகன்களுக்காகவும் ஒதுக்கி வைக்க வேண்டுமென்று கட்டளை கொடுக்கப்
பட்டது. அவர்கள் யெகோவாவுக்குக் குருத்துவச் சேவை செய்ய நியமிக்
கப்பட்ட நாளில் அந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது.[k] **36** இந்தப் பங்கை
அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்களை அபிஷேகம்
செய்த[l] நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு யெகோவா கட்டளை கொடுத்
தார். இது தலைமுறை தலைமுறைக்கும் அவர்களுக்குச் சட்டமாக இருக்
கும்’” என்றார்.

37 தகன பலி,[m] உணவுக் காணிக்கை,[n] பாவப் பரிகார பலி,[o] குற்ற நிவா
ரண பலி,[p] குருமார்கள் நியமிக்கப்படும்போது செலுத்தப்படும் பலி,[q] சமா
தான பலி[r] ஆகியவற்றுக்கான சட்டங்கள் இவைதான். **38** சீனாய் மலை
யில் யெகோவா கொடுத்த இந்தச் சட்டங்களின்படியே,[s] யெகோவாவுக்குப்
பலிகள் செலுத்த வேண்டுமென்று இஸ்ரவேல் ஜனங்களுக்கு சீனாய் வனாந்
தரத்தில் மோசே கட்டளை கொடுத்தார்.[t]

8 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “ஆரோனையும் அவனுடைய
மகன்களையும்[u] வரச் சொல். உடைகள்,[v] அபிஷேகத் தைலம்,[w] பாவப்
பரிகார பலிக்கான காளை, இரண்டு செம்மறியாட்டுக் கடாக்கள், புளிப்பில்
லாத ரொட்டிகள்[x] உள்ள கூடை ஆகியவற்றை எடுத்துக்கொள். **3** ஜனங்
கள் எல்லாரும் சந்திப்புக் கூடாரத்தின் பிரகார நுழைவாசலுக்கு முன்னால்
கூடிவரும்படி செய்” என்றார்.

7:30 * அதாவது, “நெஞ்சுப் பகுதியையும்.”

அதி. 7
a ஆதி 9:4; லேவி 3:17; லேவி 17:10; உபா 12:16; 1சா 14:33; அப் 15:20, 29
b லேவி 17:14
c லேவி 3:1
d லேவி 3:3
e யாத் 29:24; லேவி 8:25-27; லேவி 9:21
f லேவி 3:3-5
g லேவி 8:29
h யாத் 29:27, 28; லேவி 10:14; எண் 6:20
i உபா 18:3
j லேவி 10:14
k யாத் 28:1; யாத் 29:4, 7; யாத் 40:13
l யாத் 40:15; லேவி 8:12
m லேவி 6:9
n லேவி 2:1; லேவி 6:14
o லேவி 6:25
p லேவி 5:6; லேவி 7:1
q யாத் 29:1; லேவி 6:20
r லேவி 3:1
s யாத் 34:27
t லேவி 1:2

அதி. 8
u யாத் 28:1
v யாத் 28:4; யாத் 39:33, 41
w யாத் 30:23-25; யாத் 40:15
x யாத் 29:1, 2

4 யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார். சந்திப்புக் கூடாரத்தின் பிரகார நுழைவாசலில் ஜனங்கள் ஒன்றுகூடினார்கள். 5 அப்போது மோசே ஜனங்களிடம், “இப்படிச் செய்யச் சொல்லி யெகோவா நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்” என்றார். 6 அதனால், ஆரோனையும் அவருடைய மகன்களையும் கூப்பிட்டு, அவர்களைக் குளிக்க வைத்தார்.*[a] 7 அதன்பின் ஆரோனுக்கு உள்ளங்கியைப்[b] போட்டு, இடுப்புக்கச்சையைக்[c] கட்டினார். அதன்மேல் கையில்லாத அங்கியையும்,[d] ஏபோத்தையும்[e] போட்டுவிட்டார். ஏபோத்தின் இடுப்புப்பட்டையை[f] இறுக்கமாகக் கட்டிவிட்டார். 8 அடுத்து, அவருக்கு மார்ப்பதக்கத்தைப்[g] போட்டுவிட்டு, அதற்குள் ஊரீமையும் தும்மீமையும்[h] வைத்தார். 9 பின்பு, அவருக்குத் தலைப்பாகையை[i] வைத்து, அதன் முன்பக்கத்தில் பளபளப்பான தங்கத் தகட்டை, அதாவது அர்ப்பணிப்பின் பரிசுத்த அடையாளத்தை,*[j] கட்டினார். யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார்.

10 பின்பு, மோசே அபிஷேகத் தைலத்தை எடுத்து, வழிபாட்டுக் கூடாரத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும்[k] அபிஷேகம் செய்து புனிதப்படுத்தினார். 11 அதன்பின், அந்தத் தைலத்தில் கொஞ்சத்தைப் பலிபீடத்தின் மேல் ஏழு தடவை தெளித்து, பலிபீடத்தையும் அதற்கான பாத்திரங்களையும் செம்புத் தொட்டியையும் அதன் தாங்கியையும் அபிஷேகம் செய்து புனிதப்படுத்தினார். 12 கடைசியாக, ஆரோனின் தலையில் கொஞ்சம் அபிஷேகத் தைலத்தை ஊற்றி அபிஷேகம் செய்து அவரைப் புனிதப்படுத்தினார்.[l]

13 பின்பு, ஆரோனின் மகன்களைப் பக்கத்தில் கூப்பிட்டு, அவர்களுக்கு அங்கியைப் போட்டுவிட்டு, இடுப்புக்கச்சையையும் முண்டாசையும் கட்டிவிட்டார்.[m] யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார்.

14 அடுத்ததாக, பாவப் பரிகார பலியைச் செலுத்த மோசே காளையைக் கொண்டுவந்தார். அந்தக் காளையின் தலையில் ஆரோனும் அவர் மகன்களும் கை வைத்தார்கள்.[n] 15 மோசே அந்தக் காளையை வெட்டி, அதன் இரத்தத்தைத்[o] தன் விரலில் தொட்டு, பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் உள்ள கொம்புகளில் பூசி, அந்தப் பலிபீடத்தைச் சுத்திகரித்தார். மீதமுள்ள இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றினார். இப்படி, பலிகள் செலுத்துவதற்காகப் பலிபீடத்தைப் புனிதப்படுத்தினார். 16 பின்பு, குடல்கள் மேலுள்ள எல்லா கொழுப்பையும், கல்லீரல் மேலுள்ள சவ்வையும், இரண்டு சிறுநீரகங்களையும் அவற்றின் கொழுப்பையும் எடுத்து பலிபீடத்தின் மேல் எரித்தார்.[p] 17 பிற்பாடு, அந்தக் காளையின் தோல், சதை, சாணம் ஆகியவற்றையும் மற்ற பாகங்களையும் முகாமுக்கு வெளியில் எரிக்கச் சொன்னார்.[q] யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார்.

18 பின்பு, தகன பலி செலுத்த செம்மறியாட்டுக் கடாவை மோசே கொண்டுவந்தார். ஆரோனும் அவர் மகன்களும் அதன் தலையில் கை வைத்தார்கள்.[r] 19 மோசே அதை வெட்டி, அதன் இரத்தத்தைப் பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளித்தார். 20 அந்தச் செம்மறியாட்டுக் கடாவைத் துண்டு துண்டாக வெட்டி, அதன் தலையையும் துண்டுகளையும்

8:6 * ஒருவேளை, “குளிக்கச் சொன்னார்.” **8:9** * வே.வா., “அதாவது பரிசுத்த மகுடத்தை.”

அதி. 8
a யாத் 29:4; யாத் 40:12
b யாத் 28:39
c யாத் 39:27, 29
d யாத் 39:22
e யாத் 28:6; யாத் 39:2
f யாத் 28:8; யாத் 29:5; யாத் 39:20
g யாத் 28:15; யாத் 39:9
h யாத் 28:30
i யாத் 29:6; யாத் 39:27, 28
j யாத் 28:36; யாத் 39:30
k யாத் 30:26-28
l யாத் 29:4, 7; யாத் 30:30; யாத் 40:13; லேவி 21:10; சங் 133:2
m யாத் 28:40; யாத் 29:8, 9
n யாத் 29:10-14; லேவி 4:3, 4; லேவி 16:6
o எபி 9:21, 22
p லேவி 4:8, 9
q லேவி 4:11, 12; லேவி 16:27
r யாத் 29:15-18; லேவி 1:4

கொழுப்பையும் எரித்தார். **21** அதன் குடல்களையும் கால்களையும் தண்
ணீரில் கழுவிய பின்பு, அந்தச் செம்மறியாட்டுக் கடா முழுவதையும்
பலிபீடத்தில் தகன பலியாகச் செலுத்தினார். அந்த வாசனை யெகோவாவுக்
குப் பிடித்த வாசனையாக இருந்தது. யெகோவா கட்டளை கொடுத்தபடியே
மோசே செய்தார்.

22 பின்பு, இரண்டாவது செம்மறியாட்டுக் கடாவை, அதாவது குருமார்
களை நியமிக்கும்போது[a] செலுத்தப்படும் செம்மறியாட்டுக் கடாவை,
மோசே கொண்டுவந்தார். ஆரோனும் அவர் மகன்களும் அதன் தலை
யில் கை வைத்தார்கள்.[b] **23** மோசே அந்தச் செம்மறியாட்டுக் கடாவை
வெட்டி, அதன் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலது காது
மடலிலும் வலது கை கட்டைவிரலிலும் வலது கால் பெருவிரலிலும் பூசி
னார். **24** அதன்பின், ஆரோனின் மகன்களைக் கூப்பிட்டு, அந்த இரத்தத்
தில் கொஞ்சம் எடுத்து அவர்களுடைய வலது காது மடலிலும் வலது கை
கட்டைவிரலிலும் வலது கால் பெருவிரலிலும் பூசினார். மீதமுள்ள இரத்தத்
தைப் பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளித்தார்.[c]

25 பின்பு அதன் கொழுப்பையும், அதன் கொழுப்பு நிறைந்த வாலை
யும், குடல்களைச் சுற்றியுள்ள கொழுப்பையும், கல்லீரலின் மேலுள்ள சவ்
வையும், இரண்டு சிறுநீரகங்களையும், அவற்றின் மேலுள்ள கொழுப்பை
யும், அதன் வலது காலையும் எடுத்தார்.[d] **26** அதோடு, யெகோவாவின்
முன்னிலையில் புளிப்பில்லாத ரொட்டிகள் வைக்கப்பட்டிருந்த கூடையிலி
ருந்து ஒரு வட்ட ரொட்டியையும்,[e] எண்ணெயில் பிசைந்து சுடப்பட்ட ஒரு
வட்ட ரொட்டியையும்,[f] ஒரு மெல்லிய ரொட்டியையும் எடுத்தார்.
இவற்றை, வெட்டி எடுக்கப்பட்ட அந்தக் கொழுப்புத் துண்டுகளின் மேலும்
வலது காலின் மேலும் வைத்தார். **27** அவை எல்லாவற்றையும் ஆரோ
னின் கையிலும் அவருடைய மகன்களின் கையிலும் வைத்து, அசைவாட்
டும் காணிக்கையாக யெகோவாவின் முன்னிலையில் அசைவாட்டினார்.
28 பின்பு, அவற்றை அவர்களுடைய கையிலிருந்து எடுத்து, பலிபீடத்தி
லுள்ள தகன பலியின் மேல் வைத்து எரித்தார். அது குருமார்களை நியமிக்
கும்போது செலுத்தப்படும் தகன பலி, அந்த வாசனை யெகோவாவுக்குப்
பிடித்த வாசனையாக இருந்தது.

29 குருமார்களை நியமிக்கும்போது செலுத்தப்படும் அந்தச் செம்மறி
யாட்டுக் கடாவின் மார்க்கண்டத்தை* மோசே எடுத்து அசைவாட்டும்
காணிக்கையாக யெகோவாவின் முன்னிலையில் அசைவாட்டினார்.[g]
யெகோவா கட்டளை கொடுத்தபடியே அதை மோசே தன் பங்காக எடுத்
துக்கொண்டார்.[h]

30 அபிஷேகத் தைலத்திலும்[i] பலிபீடத்தின் மேலுள்ள இரத்தத்திலும்
கொஞ்சம் எடுத்து, அவற்றை ஆரோன்மேலும் அவருடைய உடைகள்
மேலும் அவருடைய மகன்கள்மேலும் அவர்களுடைய உடைகள்மேலும்
மோசே தெளித்தார். இப்படி, ஆரோனையும் அவருடைய உடைகளையும்,
அவருடைய மகன்களையும்[j] அவர்களுடைய உடைகளையும்[k] புனிதப்
படுத்தினார்.

31 மோசே ஆரோனையும் அவருடைய மகன்களையும் பார்த்து, “சந்
திப்புக் கூடாரத்தின் வாசலுக்கு முன்னால் செம்மறியாட்டுக் கடாவின்

8:29 * அதாவது, “நெஞ்சுப் பகுதியை.”

அதி. 8
a லேவி 8:33
b யாத் 29: 19, 20
c யாத் 24:6
d யாத் 29: 22–25
e லேவி 2:4
f யாத் 29:1, 2
g லேவி 7: 29, 30
h யாத் 29: 26, 27 லேவி 7: 34, 35
i யாத் 30:30
j எண் 3:2, 3
k யாத் 29:21

இறைச்சியை நீங்கள் வேக வைக்க[a] வேண்டும். பின்பு, அதையும்
கூடையிலுள்ள* ரொட்டியையும் அங்கே சாப்பிட வேண்டும். ஏனென்
றால், ‘ஆரோனும் அவனுடைய மகன்களும் அதைச் சாப்பிட வேண்
டும்’[b] என்று கடவுள் எனக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். **32** மீதியி
ருக்கும் இறைச்சியையும் ரொட்டியையும் நீங்கள் சுட்டெரிக்க வேண்டும்.[c]
33 ஏழு நாட்கள் முடியும்வரை, அதாவது நீங்கள் குருமார்களாக நிய
மிக்கப்படும் நாட்கள் முடியும்வரை, சந்திப்புக் கூடாரத்தின் வாசலைவிட்டு
நீங்கள் வெளியே போகக் கூடாது. ஏனென்றால், குருத்துவச் சேவைக்
காக உங்களை நியமிப்பதற்கு ஏழு நாட்கள் எடுக்கும்.[d] **34** உங்களுக்குப்
பாவப் பரிகாரம் செய்வதற்காக,[e] இன்று போலவே மீதமுள்ள ஆறு நாட்க
ளுக்கும் செய்ய வேண்டுமென்று யெகோவா கட்டளை கொடுத்திருக்கிறார்.
35 நீங்கள் சாகாதபடிக்கு ஏழு நாட்கள் ராத்திரியும் பகலும் சந்திப்புக் கூடா
ரத்தின் வாசலில் தங்கியிருந்து,[f] யெகோவா கொடுத்த பொறுப்பை நிறை
வேற்றுங்கள்.[g] நீங்கள் இப்படிச் செய்ய வேண்டுமென்று கடவுள் எனக்குக்
கட்டளை கொடுத்திருக்கிறார்” என்றார்.

36 மோசேயின் மூலம் யெகோவா கட்டளையிட்ட எல்லாவற்றையும்
ஆரோனும் அவர் மகன்களும் செய்தார்கள்.

9 எட்டாம் நாளில்,[h] ஆரோனையும் அவருடைய மகன்களையும் இஸ்ர
வேலின் பெரியோர்களையும்* மோசே கூப்பிட்டார். **2** அவர்
ஆரோனிடம், “குறையில்லாத ஒரு கன்றுக்குட்டியைப் பாவப் பரிகார
பலியாகவும்,[i] குறையில்லாத ஒரு செம்மறியாட்டுக் கடாவைத் தகன
பலியாகவும் கொண்டுவந்து உங்களுக்காக யெகோவாவின் முன்னிலை
யில் செலுத்துங்கள். **3** அதேசமயத்தில், இஸ்ரவேல் ஜனங்களிடம் இப்ப
டிச் சொல்லுங்கள்: ‘ஒரு வெள்ளாட்டுக் கடாவைப் பாவப் பரிகார பலியாக
வும், குறையில்லாத ஒருவயது கன்றுக்குட்டியையும் செம்மறியாட்டுக் கடாக்
குட்டியையும் தகன பலியாகவும் கொண்டுவாருங்கள். **4** யெகோவாவின்
முன்னிலையில் செலுத்துவதற்கு, ஒரு காளையையும் செம்மறியாட்டுக்
கடாவையும் சமாதான பலியாகக்[j] கொண்டுவாருங்கள். எண்ணெய் கலந்த
உணவுக் காணிக்கையையும்[k] கொண்டுவாருங்கள். ஏனென்றால், இன்று
யெகோவா உங்கள்முன் தோன்றுவார்’”[l] என்றார்.

5 அதனால், மோசே கட்டளை கொடுத்த எல்லாவற்றையும் சந்திப்புக்
கூடாரத்துக்கு முன்னால் அவர்கள் கொண்டுவந்தார்கள். பின்பு, ஜனங்கள்
எல்லாரும் வந்து யெகோவாவின் முன்னிலையில் நின்றார்கள். **6** அப்
போது மோசே, “இப்படிச் செய்யச் சொல்லி யெகோவா உங்களுக்குக்
கட்டளை கொடுத்திருக்கிறார். இப்படிச் செய்தால்தான் யெகோவா தன்னு
டைய மகிமையை உங்களுக்குக் காட்டுவார்”[m] என்றார். **7** பின்பு மோசே
ஆரோனிடம், “நீங்கள் பலிபீடத்துக்குப் போய், பாவப் பரிகாரப் பலி
யையும்[n] தகன பலியையும் செலுத்தி, உங்களுக்காகவும்[o] உங்களுடைய
குடும்பத்துக்காகவும் பாவப் பரிகாரம் செய்யுங்கள். யெகோவா கட்டளை
கொடுத்தபடி, ஜனங்கள் கொண்டுவருகிற பலியைச் செலுத்தி அவர்களுக்
காகவும் பாவப் பரிகாரம் செய்யுங்கள்”[p] என்றார்.

8 உடனே, ஆரோன் பலிபீடத்துக்குப் போய்த் தன்னுடைய

அதி. 8
a லேவி 6:28
b யாத் 29:31, 32; 1கொ 9:13
c யாத் 29:34
d யாத் 29:30, 35; எண் 3:2, 3
e யாத் 29:36; லேவி 17:11
f யாத் 29:37
g எண் 1:53

அதி. 9
h லேவி 8:35
i லேவி 4:3
j லேவி 3:1
k லேவி 2:4; லேவி 6:14
l யாத் 29:43
m யாத் 16:10; யாத் 24:16; யாத் 40:34
n லேவி 4:3
o எபி 7:27
p லேவி 16:33; எபி 5:1-3

8:31 * நே.மொ., “குருத்துவ நியமிப்புக்குரிய கூடையிலுள்ள.” **9:1** * வே.வா., “மூப்பர்களையும்.”

பாவத்துக்குப் பலியாகக் கன்றுக்குட்டியை வெட்டினார்.[a] **9** அதன் இரத்
தத்தை[b] அவருடைய மகன்கள் அவரிடம் கொடுத்தார்கள். அதை அவர்
விரலில் தொட்டு பலிபீடத்தின் கொம்புகள்மேல் பூசினார். மீதியிருந்த இரத்
தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றினார்.[c] **10** அதோடு, மோசேக்கு
யெகோவா கொடுத்த கட்டளைப்படியே, ஆரோன் பாவப் பரிகார பலி
யின் கொழுப்பையும் சிறுநீரகங்களையும் கல்லீரலின் மேலுள்ள சவ்வையும்
எடுத்து பலிபீடத்தின் மேல் எரித்தார்.[d] **11** அதன் சதையையும் தோலை
யும் முகாமுக்கு வெளியே எரித்தார்.[e]

12 பின்பு, தகன பலிக்கான கடாவை ஆரோன் வெட்டினார். அவரு
டைய மகன்கள் அதன் இரத்தத்தை அவரிடம் கொடுத்தார்கள். அதை அவர்
பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளித்தார்.[f] **13** அவர்கள் தகன
பலிக்கான அந்தக் கடாவின் துண்டுகளை அதன் தலையோடு சேர்த்து அவ
ரிடம் கொடுத்தார்கள். அவர் அதைப் பலிபீடத்தின் மேல் எரித்தார்.
14 அதோடு, அதன் குடல்களையும் கால்களையும் கழுவி, அவற்றைத்
தகன பலியின் மேல் வைத்து எரித்தார்.

15 பின்பு, பாவப் பரிகார பலியாக ஜனங்கள் கொண்டுவந்த வெள்
ளாட்டை அவர் வெட்டினார். முந்தின பலியைப் போலவே இதையும் பாவப்
பரிகார பலியாகச் செலுத்தினார். **16** அதன்பின், வழக்கமான முறைப்படி
தகன பலியைச் செலுத்தினார்.[g]

17 அடுத்ததாக, உணவுக் காணிக்கையை[h] ஒரு கைப்பிடி எடுத்து,
காலையில்[i] பலிபீடத்தில் செலுத்தப்பட்ட தகன பலியின் மேல் எரித்தார்.

18 பின்பு, ஜனங்கள் தங்களுக்காகக் கொண்டுவந்த சமாதான பலியா
கிய காளையையும் செம்மறியாட்டுக் கடாவையும் வெட்டினார். அவற்
றின் இரத்தத்தை அவருடைய மகன்கள் அவரிடம் கொடுத்தார்கள். அதை
அவர் பலிபீடத்தின் எல்லா பக்கங்களிலும் தெளித்தார்.[j] **19** ஆரோனின்
மகன்கள் காளையின் கொழுப்புத் துண்டுகளையும்,[k] செம்மறியாட்டுக் கடா
வின் கொழுப்பு நிறைந்த வாலையும், உள்ளுறுப்புகளின் மேலுள்ள கொழுப்
பையும், சிறுநீரகங்களையும், கல்லீரலின் மேலுள்ள சவ்வையும் எடுத்து,[l]
20 அந்த எல்லா கொழுப்பையும் மார்க்கண்டங்களின்* மேல் வைத்தார்கள்.
அதன்பின், அந்தக் கொழுப்புத் துண்டுகளைப் பலிபீடத்தின் மேல்
அவர் எரித்தார்.[m] **21** மோசே கட்டளை கொடுத்தபடியே, ஆரோன் அவற்
றின் மார்க்கண்டங்களையும் வலது காலையும் அசைவாட்டும் காணிக்கை
யாக யெகோவாவின் முன்னிலையில் அசைவாட்டினார்.[n]

22 பின்பு, ஆரோன் ஜனங்களைப் பார்த்தபடி தன் கைகளை உயர்த்தி
அவர்களை ஆசீர்வதித்தார்.[o] அதன்பின், பாவப் பரிகார பலியையும் தகன
பலியையும் சமாதான பலிகளையும் செலுத்திய இடத்தைவிட்டு இறங்கி வந்
தார். **23** கடைசியாக, மோசேயும் ஆரோனும் சந்திப்புக் கூடாரத்துக்குள்
போனார்கள். பின்பு, வெளியே வந்து ஜனங்களை ஆசீர்வதித்தார்கள்.[p]

யெகோவா தன்னுடைய மகிமையை எல்லா ஜனங்களுக்கும் காட்
டினார்.[q] **24** யெகோவாவிடமிருந்து நெருப்பு வந்து,[r] பலிபீடத்தின் மேலி
ருந்த தகன பலியையும் கொழுப்புத் துண்டுகளையும் விழுங்கியது.
ஜனங்கள் எல்லாரும் அதைப் பார்த்தபோது, சந்தோஷமாகக் கோஷம்
போட்டார்கள். பின்பு, சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்கள்.[s]

9:20 * அதாவது, “நெஞ்சுப் பகுதிகளின்.”

அதி. 9
a லேவி 4:3, 4
b எபி 9:22
c லேவி 4:7 லேவி 8: 14, 15
d லேவி 4:8-10
e லேவி 4: 11, 12 எபி 13:11
f லேவி 1:5
g லேவி 1:3 லேவி 6:9
h லேவி 2:1, 11, 13
i யாத் 29:39
j லேவி 3:1, 2
k லேவி 3:3, 4
l லேவி 3:9, 10
m லேவி 7: 29-31
n யாத் 29: 27, 28
o எண் 6:23-27 உபா 10:8 உபா 21:5 1நா 23:13
p 2சா 6:18 2நா 6:3
q லேவி 9:6
r நியா 6:21 1நா 21:26
s 1ரா 18:38, 39 2நா 7:1, 3

10 பிறகு, ஆரோனின் மகன்களான நாதாபும் அபியூவும்[a] அவரவர்
தூபக்கரண்டியில் தணலையும் தூபப்பொருளையும்[b] எடுத்துக்
கொண்டு, யெகோவா ஏற்றுக்கொள்ளாத விதத்தில், அத்துமீறி* அவருடைய
சன்னிதியில் தூபம் காட்டினார்கள்.[c] **2** அப்போது, யெகோவாவின் சன்னி
தியிலிருந்து நெருப்பு வந்து அவர்களைச் சுட்டுப் பொசுக்கியது.[d] அவர்
கள் யெகோவாவின் சன்னிதியில் செத்துப்போனார்கள்.[e] **3** பின்பு மோசே
ஆரோனிடம், “யெகோவா சொல்வது என்னவென்றால், ‘என் சன்னிதி
யில் இருப்பவர்கள் என்னைப் பரிசுத்தப்படுத்த வேண்டும்.[f] அப்போது
தான், எல்லா ஜனங்களுக்கு முன்பாகவும் நான் மகிமைப்படுவேன்’” என்றார்.
அதைக் கேட்டபோது, ஆரோன் அமைதியாக இருந்தார்.

4 பின்பு மோசே, ஆரோனின் சித்தப்பாவாகிய ஊசியேலின்[g] மகன்க
ளான மீஷாவேலையும் எல்சாப்பானையும் கூப்பிட்டு, “உங்கள் சகோதரர்
களின் உடல்களைப் பரிசுத்த இடத்தின் பிரகாரத்திலிருந்து எடுத்து முகா
முக்கு வெளியே கொண்டுபோங்கள்” என்றார். **5** மோசே சொன்னபடியே
அவர்கள் போய், குருமார்களின் அங்கிகளோடு கிடந்த அந்த உடல்களை
முகாமுக்கு வெளியே கொண்டுபோனார்கள்.

6 மோசே ஆரோனையும் அவருடைய மற்ற மகன்களான எலெயா
சாரையும் இத்தாமாரையும் பார்த்து, “நீங்கள் உங்களுடைய தலைமுடியை
அலங்கோலமாக விடக்கூடாது, அங்கிகளைக் கிழித்துக்கொள்ளவும்
கூடாது.[h] அப்படிச் செய்தால், நீங்கள் சாக வேண்டியிருக்கும். அதுமட்டு
மல்ல, எல்லா ஜனங்களும் கடவுளுடைய கோபத்துக்கு ஆளாக வேண்டியி
ருக்கும். நெருப்பினால் யெகோவா கொன்றுபோட்ட ஆட்களுக்காக உங்கள்
சகோதரர்களான இஸ்ரவேலர்கள் எல்லாரும் அழுவார்கள். **7** யெகோவா
உங்களை அபிஷேகத் தைலத்தால் அபிஷேகம் செய்திருக்கிறார்.[i] அத
னால், சந்திப்புக் கூடாரத்தின் வாசலைவிட்டு நீங்கள் வெளியே போகக்
கூடாது. அப்படிப் போனால் நீங்கள் செத்துப்போவீர்கள்” என்றார். மோசே
சொன்னபடியே அவர்கள் செய்தார்கள்.

8 பின்பு யெகோவா ஆரோனிடம், **9** “நீயும் உன்னோடு இருக்கிற உன்
மகன்களும் திராட்சமதுவோ வேறெந்த மதுவோ குடித்துவிட்டு சந்திப்புக்
கூடாரத்துக்குள் வரக் கூடாது.[j] அப்படி வந்தால் செத்துப்போவீர்கள். தலை
முறை தலைமுறைக்கும் இதை உங்களுக்கு நிரந்தரச் சட்டமாகத் தருகி
றேன். **10** ஏனென்றால், பரிசுத்தமான காரியங்களுக்கும் பரிசுத்தமில்லாத
காரியங்களுக்கும், சுத்தமான காரியங்களுக்கும் அசுத்தமான காரியங்க
ளுக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் காட்ட வேண்டும்.[k] **11** அதோடு,
யெகோவாவாகிய நான் மோசே மூலம் கொடுத்த எல்லா விதிமுறைகளை
யும் நீங்கள் இஸ்ரவேலர்களுக்குக் கற்றுத்தர வேண்டும்”[l] என்றார்.

12 பின்பு, மோசே ஆரோனையும் அவருடைய மகன்களான எலெயா
சாரையும் இத்தாமாரையும் பார்த்து, “யெகோவாவுக்குத் தகன பலியாகச்
செலுத்திய உணவுக் காணிக்கையில் மீதியிருப்பதை எடுத்து, புளிப்பில்லாத
ரொட்டி செய்து, பலிபீடத்துக்குப் பக்கத்தில் சாப்பிடுங்கள்.[m] ஏனென்றால்,
அது மிகவும் பரிசுத்தமானது.[n] **13** அதைப் பரிசுத்த இடத்தில் சாப்பிட
வேண்டும்.[o] அதுதான் யெகோவாவுக்குச் செலுத்தப்படுகிற தகன பலிகளில்

10:1 *வே.வா., “தகாத விதத்தில்.”

அதி. 10
a யாத் 6:23; 1நா 24:2
b யாத் 30:34, 35; லேவி 16:12
c யாத் 30:9; லேவி 10:9; லேவி 16:1, 2
d எண் 16:35
e எண் 26:61
f யாத் 19:22
g யாத் 6:18
h லேவி 21:10
i யாத் 28:41; லேவி 8:12; லேவி 21:11, 12
j எசே 44:21
k எசே 44:23
l உபா 33:10; 2நா 17:8, 9; நெ 8:7, 8; மல் 2:7
m லேவி 6:14, 16
n லேவி 21:22
o லேவி 6:26; எண் 18:10

உனக்கும் உன் மகன்களுக்கும் கொடுக்கப்படும் பங்கு. அதைக் கொடுக்கும்
படி கடவுள் எனக்குக் கட்டளை தந்திருக்கிறார். **14** நீயும் உன் மகன்களும்
உன்னோடு இருக்கிற உன் மகள்களும்,[a] அசைவாட்டும் காணிக்கையாகிய
மார்க்கண்டத்தையும்* பரிசுத்த பங்காகிய காலையும் சுத்தமான இடத்தில்
சாப்பிட வேண்டும்.[b] இஸ்ரவேல் ஜனங்கள் செலுத்தும் சமாதான பலிகளி
லிருந்து இவை உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் பங்காகக் கொடுக்கப்பட்
டிருக்கின்றன. **15** தகன பலியாகச் செலுத்தப்படும் கொழுப்புத் துண்டு
களோடு, பரிசுத்த பங்காகிய காலையும் அசைவாட்டும் காணிக்கையாகிய
மார்க்கண்டத்தையும் அவர்கள் கொண்டுவர வேண்டும். அசைவாட்டும்
காணிக்கையாக யெகோவாவின் முன்னிலையில் அவற்றை அசைவாட்ட
வேண்டும். யெகோவா கட்டளை கொடுத்தபடியே, அந்தக் காலும் மார்க்
கண்டமும் உனக்கும் உன் மகன்களுக்கும் எப்போதுமே பங்காகக் கிடைக்
கும்"[c] என்றார்.

16 பாவப் பரிகார பலியாகிய வெள்ளாட்டை[d] மோசே தேடியபோது,
அது எரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார். அதனால், ஆரோனின் மகன்க
ளான எலெயாசார்மேலும் இத்தாமார்மேலும் அவருக்குப் பயங்கர கோபம்
வந்தது. **17** அவர்களிடம், "பரிசுத்த இடத்தில் நீங்கள் ஏன் பாவப் பரிகார
பலியைச் சாப்பிடவில்லை?[e] அது மிகவும் பரிசுத்தமானதுதானே? ஜனங்க
ளின் குற்றத்துக்கு நீங்கள் பொறுப்பேற்று, யெகோவாவின் முன்னிலை
யில் அவர்களுக்குப் பாவப் பரிகாரம் செய்யத்தானே அவர் அதை உங்
களுக்குக் கொடுத்திருக்கிறார்? **18** அதன் இரத்தம் பரிசுத்த இடத்துக்குள்
கொண்டுவரப்படவில்லையே![f] அதனால், கடவுள் எனக்குக் கட்டளை
கொடுத்தபடி அதன் இறைச்சியைப் பரிசுத்த இடத்தில் நீங்கள் கண்டிப்
பாகச் சாப்பிட்டிருக்க வேண்டும்" என்றார். **19** அதற்கு ஆரோன் மோசே
யிடம், "இன்று அவர்கள் தங்களுடைய பாவப் பரிகார பலியையும் தகன
பலியையும் யெகோவாவின் சன்னிதியில் செலுத்தினார்கள்.[g] இருந்தாலும்,
எனக்கு இப்படி நடந்துவிட்டது. இன்று நான் பாவப் பரிகார பலியைச் சாப்
பிட்டிருந்தால் யெகோவாவுக்குச் சந்தோஷமாக இருந்திருக்குமா?" என்று
கேட்டார். **20** மோசேக்கு அந்தப் பதில் திருப்தியாக இருந்தது.

11 பின்பு யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **2** "நீங்கள்
இஸ்ரவேல் ஜனங்களிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால்,
'பூமியிலுள்ள உயிரினங்கள்* சம்பந்தமான சட்டங்கள் இவைதான்:[h]
3 குளம்புகள் முழுமையாகப் பிளவுபட்டிருக்கிறதும், அசைபோடுகிறது
மான எந்த மிருகத்தையும் நீங்கள் சாப்பிடலாம்.

4 ஆனால், அசைபோடுகிற மிருகங்களில் அல்லது பிளவுபட்ட குளம்
புடைய மிருகங்களில் நீங்கள் சாப்பிடக் கூடாதவை இவைதான்: அசை
போடுகிற, ஆனால் குளம்புகள் பிளவுபடாத ஒட்டகம். அது உங்களுக்கு
அசுத்தமானது.[i] **5** அசைபோடுகிற, ஆனால் குளம்புகள் பிளவுபடாத கற்
பாறை முயல்.*[j] அது உங்களுக்கு அசுத்தமானது. **6** அசைபோடுகிற,
ஆனால் குளம்புகள் பிளவுபடாத காட்டு முயல். அது உங்களுக்கு அசுத்த
மானது. **7** குளம்புகள் முழுமையாகப் பிளவுபட்டிருக்கிற, ஆனால் அசை

10:14 *அதாவது, "நெஞ்சுப் பகுதியையும்." **11:2** *வே.வா., "நிலத்தில் வாழும் மிருகங்கள்." **11:5** *இது கற்பாறைகளுக்கு நடுவே வாழ்கிற ஒருவகையான பெரிய முயல்.

அதி. 10
a லேவி 22:13, எண் 18:11
b யாத் 29:26-28, லேவி 7:31, 34, லேவி 9:21
c 1கொ 9:13
d லேவி 9:3, 15
e லேவி 6:25, 26, எசே 44:29
f லேவி 6:29, 30
g லேவி 9:8, 12

அதி. 11
h உபா 14:4-6, எசே 4:14
i உபா 14:7, 8
j நீதி 30:26

போடாத பன்றி.[a] அது உங்களுக்கு அசுத்தமானது. **8** நீங்கள் அவற்றின்
இறைச்சியைச் சாப்பிடவோ அவற்றின் பிணத்தைத் தொடவோ கூடாது.
அவை உங்களுக்கு அசுத்தமானது.[b]

9 தண்ணீரில் வாழும் உயிரினங்கள் சம்பந்தமான சட்டங்கள்
இவைதான்: கடல்களிலோ ஆறுகளிலோ வாழ்கிற உயிரினங்களில் துடுப்
புகளும் செதில்களும் உள்ள எல்லாவற்றையும் நீங்கள் சாப்பிடலாம்.[c]
10 ஆனால், கடல்களிலும் ஆறுகளிலும் கூட்டங்கூட்டமாக நீந்துகிற சிறு
பிராணிகளானாலும் சரி, மற்ற உயிரினங்களானாலும் சரி, துடுப்புகளோ
செதில்களோ இல்லாத எல்லாவற்றையும் நீங்கள் அருவருக்க வேண்டும்.
11 அவை உங்களுக்கு அருவருப்பாக இருக்க வேண்டும். அவற்றை நீங்
கள் சாப்பிடக் கூடாது.[d] செத்துப்போன அவற்றின் உடலை நீங்கள் அரு
வருக்க வேண்டும். **12** தண்ணீரில் வாழும் உயிரினங்களில் துடுப்புகளும்
செதில்களும் இல்லாதவற்றை நீங்கள் அருவருக்க வேண்டும்.

13 சில பறவைகள் அருவருப்பானவை என்பதால் அவற்றை நீங்கள்
சாப்பிடக் கூடாது. நீங்கள் அருவருக்க வேண்டிய பறவைகள் இவைதான்:
கழுகு,[e] கடல் பருந்து, கறுப்பு ராஜாளி,[f] **14** சிவப்புப் பருந்து, எல்லா வகை
யான கறுப்புப் பருந்து, **15** எல்லா வகையான அண்டங்காக்கை,
16 நெருப்புக்கோழி, ஆந்தை, கடல் புறா, எல்லா வகையான வல்லூறு,
17 சிறு ஆந்தை, நீர்க்காகம், நெட்டைக்காது ஆந்தை, **18** அன்னம்,
கூழைக்கடா, ராஜாளி, **19** நாரை, எல்லா வகையான கொக்கு, கொண்ட
லாத்தி, வவ்வால். **20** கூட்டங்கூட்டமாகப் பறந்து போகவும் ஊர்ந்து போக
வும் முடிந்த பூச்சிகள் எல்லாவற்றையும் நீங்கள் அருவருக்க வேண்டும்.

21 கூட்டங்கூட்டமாகப் பறந்து போகவும் ஊர்ந்து போகவும் முடிந்த
பூச்சிகளில், தாவிப்போவதற்கு நீளமான கால்கள் உள்ளவற்றை மட்
டுமே நீங்கள் சாப்பிடலாம். **22** அவற்றில் நீங்கள் இதையெல்லாம் சாப்பி
டலாம்: பல வகையான வெட்டுக்கிளிகள்,[g] சிள்வண்டுகள், தத்துக்கிளிகள்.
23 கூட்டங்கூட்டமாகப் பறந்து போகவும் ஊர்ந்து போகவும் முடிந்த மற்ற
எல்லாவற்றையும் நீங்கள் அருவருக்க வேண்டும். **24** அவற்றால் நீங்கள்
தீட்டுப்படுவீர்கள். அவை செத்த பின்பு அவற்றைத் தொடுகிற எவனும்
சாயங்காலம்வரை தீட்டுப்பட்டிருப்பான்.[h] **25** செத்துக் கிடக்கிற அவற்றை
எடுத்துக்கொண்டு போகிற எவனும் தன் உடைகளைத் துவைக்க வேண்
டும்.[i] அவன் சாயங்காலம்வரை தீட்டுப்பட்டிருப்பான்.

26 குளம்புகள் முழுமையாகப் பிளவுபடாமலும், அசைபோடாமலும்
இருக்கிற எல்லா மிருகங்களும் உங்களுக்கு அசுத்தமானவை. அவற்றைத்
தொடுகிற எவனும் தீட்டுப்பட்டிருப்பான்.[j] **27** நான்கு கால்களால் நடக்கிற
மிருகங்களில் குளம்புகள் இல்லாதவை எல்லாமே உங்களுக்கு அசுத்தமா
னவை. அவற்றின் பிணத்தைத் தொடுகிற எவனும் சாயங்காலம்வரை தீட்
டுப்பட்டிருப்பான். **28** அவற்றின் பிணத்தை எடுத்துக்கொண்டு போகிற
எவனும் தன் உடைகளைத் துவைக்க வேண்டும்.[k] அவன் சாயங்காலம்
வரை தீட்டுப்பட்டிருப்பான்.[l] அவை உங்களுக்கு அசுத்தமானவை.

29 ஊரும் பிராணிகளில் உங்களுக்கு அசுத்தமானவை இவைதான்:
பெருச்சாளி, சுண்டெலி,[m] எல்லா வகையான பல்லி, **30** வீட்டுப் பல்லி,
உடும்பு, நிலத்திலும் நீரிலும் வாழும் பல்லி, அரணை, பச்சோந்தி. **31** இந்த
ஊரும் பிராணிகள் எல்லாமே உங்களுக்கு அசுத்தமானவை.[n] அவை

அதி. 11
a ஏசா 65:4; ஏசா 66:3, 17
b அப் 10:14
c உபா 14:9, 10
d உபா 14:3
e யோபு 39:27, 30
f உபா 14:12-19
g மத் 3:4; மாற் 1:6
h லேவி 14:46, 47; லேவி 15:8; லேவி 17:15; லேவி 22:4-6
i லேவி 14:2, 8; லேவி 15:2, 5; எண் 19:10
j உபா 14:7, 8
k லேவி 17:15, 16
l லேவி 5:2
m ஏசா 66:17
n உபா 14:19

செத்த பின்பு அவற்றைத் தொடுகிற எவனும் சாயங்காலம்வரை தீட்டுப்பட்
டிருப்பான்.[a]

32 எதன் மேலாவது அந்தப் பிராணிகள் செத்து விழுந்தால் அது தீட்
டாகிவிடும். மரப் பாத்திரமானாலும், உடையானாலும், தோலினால் அல்லது
மிருக ரோமத்தால் செய்யப்பட்ட துணியானாலும், அது தீட்டாகிவிடும். நீங்
கள் பயன்படுத்துகிற எந்தப் பொருளின் மேல் அவை விழுந்தாலும் அந்தப்
பொருளைத் தண்ணீருக்குள் போட்டுவைக்க வேண்டும். சாயங்காலம்வரை
அது தீட்டாக இருக்கும். அதன்பின் சுத்தமாகும். **33** அவை மண்பாத்தி
ரத்தில் விழுந்தால், அதற்குள் என்ன இருந்தாலும் அது தீட்டுதான்.
அந்தப் பாத்திரத்தை நீங்கள் உடைத்துவிட வேண்டும்.[b] **34** அந்தப் பாத்
திரத்தில் இருக்கும் தண்ணீர் எந்த உணவிலாவது பட்டால் அது தீட்டா
கிவிடும். அந்தப் பாத்திரத்தில் எந்தப் பானம் இருந்தாலும் அது தீட்டாகி
விடும். **35** அந்தப் பிராணிகள் எதன் மீதாவது செத்து விழுந்தால் அது
தீட்டாகிவிடும். பெரிய அடுப்பானாலும் சரி, சின்ன அடுப்பானாலும் சரி,
அதைச் சுக்குநூறாக உடைத்துப்போட வேண்டும்; அது தீட்டு. அது
எப்போதுமே உங்களுக்குத் தீட்டுதான். **36** நீர் ஊற்றுகளும் நிலத்தடி தண்
ணீர்த் தொட்டிகளும் மட்டுமே தீட்டுப்படாது. அந்தப் பிராணிகள் செத்த
பின்பு அவற்றைத் தொடுகிற எவனும் தீட்டுப்பட்டிருப்பான். **37** விதைப்
பதற்காக வைக்கப்பட்டிருக்கும் எந்தத் தானியத்தில் அவை செத்து விழுந்
தாலும் அந்தத் தானியம் தீட்டாகாது. **38** ஆனால், அந்தத் தானியத்
தைத் தண்ணீரில் ஊற வைத்திருந்தால், அந்தப் பிராணிகளின் எந்தப் பாகம்
அதன்மேல் விழுந்தாலும், அந்தத் தானியம் உங்களுக்குத் தீட்டு.

39 இறைச்சிக்காகப் பயன்படும் ஒரு மிருகம் செத்துப்போனால்,
அதைத் தொடுகிறவன் சாயங்காலம்வரை தீட்டுப்பட்டிருப்பான்.[c]
40 செத்த மிருகத்தைச் சாப்பிடுகிறவன் தன் உடைகளைத் துவைக்க
வேண்டும். சாயங்காலம்வரை அவன் தீட்டுப்பட்டிருப்பான்.[d] அந்த மிருகம்
செத்த பின்பு அதை எடுத்துக்கொண்டு போகிறவனும் தன் உடைக
ளைத் துவைக்க வேண்டும். சாயங்காலம்வரை அவன் தீட்டுப்பட்டிருப்
பான். **41** பூமியிலுள்ள ஊரும் பிராணிகள் எல்லாமே அருவருப்பானது.[e]
அவற்றை நீங்கள் சாப்பிடக் கூடாது. **42** வயிற்றில் ஊர்ந்து போகும் எந்
தப் பிராணியையும், நான்கு கால்களில் ஊர்ந்து போகும் எந்தப் பிராணி
யையும், பல கால்களால் ஊர்ந்து போகும் எந்தப் பிராணியையும் நீங்கள்
சாப்பிடக் கூடாது. ஏனென்றால், அவை அருவருப்பானவை.[f] **43** ஊர்ந்து
போகும் எந்தப் பிராணியாலும் உங்களை அருவருப்பாக ஆக்கிக்கொள்
ளாதீர்கள். அவற்றால் நீங்கள் கறைபடவோ தீட்டுப்படவோ வேண்டாம்.[g]
44 நான் உங்கள் கடவுளாகிய யெகோவா.[h] நான் பரிசுத்தமானவர்.[i] அத
னால் நீங்களும் உங்களைத் தூய்மைப்படுத்திக்கொண்டு, பரிசுத்தமாக
இருக்க வேண்டும்.[j] எந்த ஊரும் பிராணியாலும் உங்களைத் தீட்டுப்படுத்
திக்கொள்ளக் கூடாது. **45** நான் யெகோவா. நானே உங்களுடைய
கடவுள் என்று நிரூபிப்பதற்காக உங்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு
வந்தேன்.[k] நான் பரிசுத்தமானவர்,[l] அதனால் நீங்களும் பரிசுத்தமாக
இருக்க வேண்டும்.[m]

46 மிருகங்கள், பறக்கும் உயிரினங்கள், தண்ணீரில் வாழும் உயிரி
னங்கள், பூமியில் ஊர்ந்து போகும் உயிரினங்கள் ஆகியவற்றைக் குறித்த

அதி. 11
a லேவி 11:24
லேவி 22:4, 5
b லேவி 15:12
c லேவி 11: 23, 24
எண் 19:11, 16
d லேவி 17:15
லேவி 22:3, 8
உபா 14:21
எசே 4:14
எசே 44:31
e லேவி 11:21
f உபா 14:3
g லேவி 20:25
h யாத் 20:2
i 1பே 1:15, 16
வெளி 4:8
j யாத் 19:6
லேவி 19:2
உபா 14:2
1தெ 4:7
k யாத் 6:7
யாத் 29:46
ஓசி 11:1
l லேவி 20: 7, 26
யோசு 24:19
1சா 2:2
m யாத் 22:31
எண் 15:40
உபா 7:6

சட்டங்கள் இவைதான். **47** சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும், நீங்கள் சாப்பிடக்கூடிய உயிரினங்களுக்கும் சாப்பிடக்கூடாத உயிரினங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுவதற்காகவே இந்தச் சட்டங்களைக் கொடுத்திருக்கிறேன்’”[a] என்றார்.

12 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “இஸ்ரவேல் ஜனங்களிடம் நீ சொல்ல வேண்டியது என்னவென்றால், ‘ஒரு பெண் கர்ப்பமாகி ஆண் குழந்தையைப் பெற்றால், ஏழு நாட்களுக்குத் தீட்டுப்பட்டவளாக இருப்பாள். மாதவிலக்கு[b] நாட்களைப் போலவே இந்த நாட்களிலும் தீட்டுப்பட்டிருப்பாள். **3** எட்டாம் நாளில் அந்த ஆண் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டும்.[c] **4** இரத்தப்போக்கினால் ஏற்பட்ட தீட்டு நீங்குவதற்கு, அடுத்த 33 நாட்களுக்கு அவள் வீட்டிலேயே இருக்க வேண்டும். அந்தச் சுத்திகரிப்பு நாட்கள் முடியும்வரை பரிசுத்தமான எதையும் அவள் தொடக் கூடாது, பரிசுத்த இடத்துக்குள் வரவும் கூடாது.

5 அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றால், 14 நாட்களுக்குத் தீட்டுப்பட்டவளாக இருப்பாள். மாதவிலக்கு நாட்களைப் போலவே இந்த நாட்களிலும் தீட்டுப்பட்டிருப்பாள். இரத்தப்போக்கினால் ஏற்பட்ட தீட்டு நீங்குவதற்கு, அடுத்த 66 நாட்களுக்கு அவள் வீட்டிலேயே இருக்க வேண்டும். **6** ஆண் குழந்தையையோ பெண் குழந்தையையோ பெற்றவள் தன்னுடைய சுத்திகரிப்பு நாட்கள் முடிந்ததும், ஒருவயது செம்மறியாட்டுக் கடாக் குட்டியைத் தகன பலியாகவும்,[d] ஒரு புறாக் குஞ்சை அல்லது காட்டுப் புறாவைப் பாவப் பரிகார பலியாகவும் கொண்டுவர வேண்டும். அவற்றைச் சந்திப்புக் கூடாரத்தின் வாசலில் குருவானவரிடம் கொடுக்க வேண்டும். **7** அவர் அவற்றை யெகோவாவின் முன்னிலையில் செலுத்தி, அவளுக்காகப் பாவப் பரிகாரம் செய்வார். அப்போது, இரத்தப்போக்கினால் ஏற்பட்ட தீட்டு நீங்கி அவள் சுத்தமாவாள். ஆண் குழந்தையையோ பெண் குழந்தையையோ பெற்றவளுக்காகக் கொடுக்கப்படும் சட்டம் இதுதான். **8** ஆனால், ஆட்டுக்குட்டியைக் கொடுக்க வசதி இல்லாவிட்டால், இரண்டு காட்டுப் புறாக்களையோ இரண்டு புறாக் குஞ்சுகளையோ[e] அவள் கொண்டுவர வேண்டும். ஒன்றைத் தகன பலியாகவும் மற்றொன்றைப் பாவப் பரிகார பலியாகவும் கொடுக்க வேண்டும். அவளுக்காக குருவானவர் பாவப் பரிகாரம் செய்வார். அப்போது, அவள் சுத்தமாவாள்’” என்றார்.

13 பின்பு யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **2** “ஒருவனுடைய தோலில் தடிப்பு, புண்,* அல்லது திட்டு ஏற்பட்டு, அதில் தொழுநோயின்[f] அறிகுறி தெரிந்தால், குருவாகச் சேவை செய்யும் ஆரோனிடமோ அவனுடைய மகன்களில் ஒருவனிடமோ அவனைக் கொண்டுவர வேண்டும்.[g] **3** அவனுடைய தோலில் வந்துள்ள தொற்றை குருவானவர் பரிசோதிக்க வேண்டும். அந்த இடத்திலுள்ள முடி வெள்ளையாய் மாறி, அந்த இடம் பள்ளமாகத் தெரிந்தால், அது தொழுநோய். குருவானவர் அதைப் பரிசோதித்து, அவன் தீட்டுள்ளவன் என்று அறிவிக்க வேண்டும். **4** ஆனால் அவனுடைய தோலில் வந்துள்ள திட்டு வெள்ளையாக இருந்தும், அந்த இடம் பள்ளமாக இல்லாமலும் அங்குள்ள முடி வெள்ளையாக

13:2 *வே.வா., “பொருக்கு.” இது, இரத்தமும் நீரும் கசிந்து, காய்ந்துபோகும்போது உண்டாகும் கெட்டியான தோல்.

அதி. 11
a லேவி 20:25
எசே 44:23

அதி. 12
b லேவி 15:19
c ஆதி 17:12
ஆதி 21:4
லூ 1:59
லூ 2:21, 22
யோவா 7:22
d லேவி 1:10
e லேவி 1:14
லேவி 5:7
லேவி 14:21, 22
லூ 2:24

அதி. 13
f எண் 12:10, 12
2நா 26:19
மத் 8:3
g உபா 24:8
எசே 44:23
மல் 2:7
லூ 17:14

மாறாமலும் இருந்தால், அவனை குருவானவர் ஏழு நாட்களுக்குத் தனியாக வைக்க வேண்டும்.[a] **5** பின்பு, ஏழாம் நாளில் அவனைப் பரிசோதிக்க வேண்டும். அந்தத் தொற்று பரவாமல் அப்படியே இருந்தால், குருவானவர் இன்னும் ஏழு நாட்களுக்கு அவனைத் தனியாக வைக்க வேண்டும்.

6 குருவானவர் மறுபடியும் அவனை ஏழாம் நாளில் பரிசோதிக்க வேண்டும். அந்தத் தொற்று பரவாமல் வெளிறிப்போய் இருந்தால், அவன் தீட்டில்லாதவன் என்று குருவானவர் அறிவிக்க வேண்டும்.[b] அது சாதாரண புண். அவன் தன்னுடைய உடைகளைத் துவைக்க வேண்டும், அப்போது அவன் சுத்தமாவான். **7** ஆனால், தீட்டு இருக்கிறதா இல்லையா என்பதை உறுதிப்படுத்த குருவானவரிடம் போய் வந்த பிறகு அந்தப் புண் தோலில் அதிகமாகப் பரவினால், அவன் மறுபடியும் அவரிடம் போக வேண்டும். **8** குருவானவர் அதைப் பரிசோதிக்க வேண்டும். அந்தப் புண் தோலில் பரவியிருந்தால், அவன் தீட்டுள்ளவன் என்று அறிவிக்க வேண்டும். அது தொழுநோய்.[c]

9 ஒருவனுக்குத் தொழுநோய் இருப்பதற்கான அறிகுறி தெரிந்தால், அவனை குருவானவரிடம் கூட்டிக்கொண்டு வர வேண்டும். **10** அவனை குருவானவர் பரிசோதிக்க வேண்டும்.[d] அவனுடைய தோலில் வெள்ளை நிறத்தில் தடிப்பு வந்து அங்குள்ள முடி வெள்ளையாக மாறியிருந்தால், அதோடு அந்தத் தடிப்பில் இரத்தக் கசிவுள்ள[e] புண் வந்திருந்தால், **11** அது அவனுடைய தோலில் வந்துள்ள தீராத தொழுநோய். அவனைத் தீட்டுள்ளவன் என்று குருவானவர் அறிவிக்க வேண்டும். பரிசோதிப்பதற்காக அவனைத் தனிமையாக வைக்கத் தேவையில்லை,[f] ஏனென்றால் அவன் தீட்டுள்ளவன். **12** ஆனால், அந்தத் தொழுநோய் அவனுடைய தலையிலிருந்து கால்வரை உடம்பு முழுக்க பரவியிருப்பதை குருவானவர் பார்த்தால், **13** அவனைப் பரிசோதித்துப் பார்த்து, தீட்டில்லாதவன் என்று அவர் அறிவிக்க வேண்டும். அவன் உடல் முழுவதும் வெண்மையாக மாறிவிட்டதால் அவன் தீட்டில்லாதவன். **14** ஆனால், எப்போது அவனுடைய உடலில் இரத்தக் கசிவுள்ள புண் வருகிறதோ அப்போது அவன் தீட்டுள்ளவனாக ஆகிவிடுவான். **15** அந்தப் புண்ணைக் குருவானவர் பார்த்த பின்பு அவன் தீட்டுள்ளவன் என்று அறிவிக்க வேண்டும்.[g] அந்தப் புண் தீட்டானது, அது தொழுநோய்.[h] **16** ஆனால், இரத்தக் கசிவுள்ள அந்தப் புண் இருந்த இடம் மறுபடியும் வெண்மையாக மாறிவிட்டால், குருவானவரிடம் அவன் வர வேண்டும். **17** குருவானவர் அவனைப் பரிசோதித்து,[i] அந்த இடம் வெண்மையாக மாறிவிட்டதைப் பார்த்தால், அவன் தீட்டில்லாதவன் என்று அறிவிக்க வேண்டும். அவன் தீட்டில்லாதவன்.

18 ஆனால், ஒருவனுடைய உடலில் கொப்புளம் வந்து குணமான பின்பு, **19** அந்த இடத்தில் வெள்ளை நிறத்தில் தடிப்போ சிவப்பும் வெள்ளையும் கலந்த நிறத்தில் திட்டோ ஏற்பட்டால் அவன் அதை குருவானவரிடம் காட்ட வேண்டும். **20** குருவானவர் அதைப் பரிசோதிக்க வேண்டும்.[j] அந்த இடம் பள்ளமாகி, அங்குள்ள முடி வெள்ளையாக மாறியிருந்தால் அவன் தீட்டுள்ளவன் என்று அவர் அறிவிக்க வேண்டும். அது கொப்புளம் இருக்கும் இடத்தில் வந்துள்ள தொழுநோய். **21** ஆனால், குருவானவர் அதைப் பரிசோதிக்கும்போது அங்குள்ள முடி வெள்ளையாக மாறாமலும் அந்த இடம் பள்ளமாகாமலும் இருந்தால், அதோடு அது வெளிறிப்போய்

அதி. 13

a லேவி 13:50 லேவி 14:38 எண் 12:15

b மத் 8:4 மாற் 1:44 லூ 5:14 லூ 17:14

c லேவி 13:15, 25, 30, 42 எண் 12: 10, 12

d லேவி 13:3

e லேவி 13: 24, 25

f லேவி 13:4

g உபா 24:8

h லேவி 13:8

i லூ 5:14 லூ 17:14

j எசே 44:23

இருந்தால், அவர் அவனை ஏழு நாட்களுக்குத் தனியாக வைக்க வேண்
டும்.[a] **22** அது தோலில் பரவியிருப்பது தெளிவாகத் தெரிந்தால், அவன்
தீட்டுள்ளவன் என்று குருவானவர் அறிவிக்க வேண்டும். அது ஒரு நோய்.
23 ஆனால், அந்தத் திட்டு வேறெங்கும் பரவாமல் அப்படியே இருந்தால்,
அது கொப்புளத்தினால் வந்த சாதாரண வீக்கம். அவன் தீட்டில்லாதவன்
என்று குருவானவர் அறிவிக்க வேண்டும்.[b]

24 ஒருவனுடைய உடலில் தீக்காயம் ஏற்பட்டு அந்த இடத்தில்
வெள்ளை நிறத்திலோ சிவப்பும் வெள்ளையும் கலந்த நிறத்திலோ திட்டு ஏற்
பட்டால், **25** குருவானவர் அதைப் பரிசோதிக்க வேண்டும். அந்த இடத்
தில் உள்ள முடி வெள்ளையாக மாறி அந்த இடம் பள்ளமாகத் தெரிந்தால்,
அது தீக்காயத்தில் வந்துள்ள தொழுநோய். அவன் தீட்டுள்ளவன் என்று
குருவானவர் அறிவிக்க வேண்டும். அது தொழுநோய். **26** ஆனால், குரு
வானவர் அதைப் பரிசோதித்து, அங்குள்ள முடி வெள்ளையாக மாறாம
லும் அந்த இடம் பள்ளமாகாமலும் வெளிறிப்போயும் இருப்பதைப் பார்த்
தால், அவனை ஏழு நாட்களுக்குத் தனியாக வைக்க வேண்டும்.[c]
27 அவனை குருவானவர் ஏழாம் நாளில் பரிசோதிக்க வேண்டும். அந்தத்
திட்டு தோலில் பரவியிருப்பது தெளிவாகத் தெரிந்தால், அவன் தீட்டுள்ள
வன் என்று அறிவிக்க வேண்டும். அது தொழுநோய். **28** அந்தத் திட்டு
வேறெங்கும் பரவாமல் அந்த இடத்திலேயே வெளிறிப்போய் இருந்தால்,
அது தீக்காயத்தில் வந்த சாதாரண வீக்கம். அவன் தீட்டில்லாதவன் என்று
குருவானவர் அறிவிக்க வேண்டும். ஏனென்றால், அது தீக்காயமுள்ள
இடத்தில் வந்த வீக்கம்.

29 ஒரு ஆணின் அல்லது பெண்ணின் தலையிலோ முகவாய்க்கட்
டையிலோ தொற்று ஏற்பட்டால், **30** குருவானவர் அதைப் பரிசோதிக்க
வேண்டும்.[d] அந்த இடம் பள்ளமாகத் தெரிந்தாலும், அங்குள்ள முடி தங்க
நிறத்தில் சன்னமாக இருந்தாலும், அந்த நபர் தீட்டுள்ளவர் என்று குருவா
னவர் அறிவிக்க வேண்டும். அது உச்சந்தலையிலோ தாடியிலோ வந்துள்ள
தொற்று. அது தலையில் அல்லது முகவாய்க்கட்டையில் வந்துள்ள தொழு
நோய். **31** ஆனால், அந்த இடம் பள்ளமாக இல்லாததையும் அங்கே
கறுப்பு முடி இல்லாததையும் குருவானவர் பார்த்தால், அந்த நபரை ஏழு
நாட்களுக்குத் தனியாக வைக்க வேண்டும்.[e] **32** ஏழாம் நாளில் அந்தத்
தொற்றைக் குருவானவர் பரிசோதிக்க வேண்டும். அது வேறெங்கும் பரவா
மல் இருந்தாலோ, அங்கே உள்ள முடி தங்க நிறத்துக்கு மாறாமல்
இருந்தாலோ, அந்த இடம் பள்ளமாகாமல் இருந்தாலோ, **33** தொற்று
ஏற்பட்டுள்ள அந்த இடத்தைத் தவிர மற்ற பகுதிகள் சவரம் செய்யப்பட
வேண்டும். பின்பு, அந்த நபரைக் குருவானவர் ஏழு நாட்களுக்குத் தனி
யாக வைக்க வேண்டும்.

34 தொற்று ஏற்பட்டுள்ள அந்த இடத்தைக் குருவானவர் ஏழாம்
நாளில் மறுபடியும் பரிசோதிக்க வேண்டும். உச்சந்தலையிலும் தாடியிலும்
வந்துள்ள அந்தத் தொற்று வேறெங்கும் பரவாமலும் அந்த இடம் பள்ள
மாகாமலும் இருந்தால், அவன் தீட்டில்லாதவன் என்று குருவானவர் அறி
விக்க வேண்டும். அவன் தன்னுடைய உடைகளைத் துவைக்க வேண்
டும், அப்போது அவன் சுத்தமாவான். **35** ஆனால், குருவானவரிடம்
காட்டிய பின்பு அந்தத் தொற்று பரவியிருப்பது தெளிவாகத் தெரிந்தால்,

அதி. 13

a லேவி 13:4, 50 லேவி 14:38 எண் 12:15

b மத் 8:4 மாற் 1:44 லூ 5:14 லூ 17:14

c லேவி 13:4, 50 லேவி 14:38 எண் 12:15

d உபா 24:8 மல் 2:7

e லேவி 13:4, 50 லேவி 14:38 எண் 12:15

36 அவனைக் குருவானவர் பரிசோதிக்க வேண்டும். அந்தத் தொற்று பரவி
யிருந்தால், தங்க நிற முடி இருக்கிறதா என்று குருவானவர் பார்க்க வேண்
டிய அவசியமில்லை. அவன் தீட்டுள்ளவன்தான். 37 ஆனால், குருவான
வர் அந்தத் தொற்றைப் பரிசோதிக்கும்போது அது பரவாமல் இருப்பதையும்,
அந்த இடத்தில் கறுப்பு முடி வளர்ந்திருப்பதையும் பார்த்தால், அது குணமா
கிவிட்டது என்று அர்த்தம். அவன் தீட்டில்லாதவன். குருவானவர் அவனைத்
தீட்டில்லாதவன் என்று அறிவிக்க வேண்டும்.[a]

38 ஒரு ஆணின் அல்லது பெண்ணின் தோலில் திட்டுகள் ஏற்பட்டு
அவை வெண்மையாக இருந்தால், 39 குருவானவர் அந்த நபரைப் பரி
சோதிக்க வேண்டும்.[b] அந்தத் திட்டுகள் வெளிறிப்போய் இருந்தால், அது
தோலில் வந்துள்ள தீங்கில்லாத தேமல். அந்த நபர் தீட்டில்லாதவர்.

40 ஒருவனுடைய தலையில் வழுக்கை விழுந்தால் அவன் தீட்டில்லாத
வன். 41 அவனுடைய முன்னந்தலையில் வழுக்கை விழுந்தால் அவன்
தீட்டில்லாதவன். 42 ஆனால், உச்சந்தலையிலோ முன்னந்தலையிலோ
வழுக்கை விழுந்த இடத்தில் சிவப்பும் வெள்ளையும் கலந்த புண் வந்தால்,
அது உச்சந்தலையில் அல்லது முன்னந்தலையில் வந்துள்ள தொழுநோய்.
43 குருவானவர் அவனைப் பரிசோதிக்க வேண்டும். தோலில் தோன்றும்
தொழுநோயைப் போல, வழுக்கை விழுந்த உச்சந்தலையிலோ முன்னந்த
லையிலோ சிவப்பும் வெள்ளையும் கலந்த தடிப்புகள் இருந்தால்,
44 அவன் தொழுநோயாளி. அவன் தீட்டுள்ளவன். அவனுடைய தலை
யில் தொழுநோய் வந்திருப்பதால், அவன் தீட்டுள்ளவன் என்று குருவான
வர் அறிவிக்க வேண்டும். 45 தொழுநோயாளி தன்னுடைய உடைக
ளைக் கிழித்துக்கொண்டு தன் தலையை அலங்கோலமாக விட்டுவிட
வேண்டும். துணியால் வாயை* மறைத்துக்கொண்டு, 'தீட்டு, தீட்டு!' என்று
கத்த வேண்டும். 46 அந்த நோய் இருக்கும் காலமெல்லாம் அவன் தீட்
டுள்ளவனாக இருப்பான். அதனால், அவன் ஒதுக்குப்புறத்தில் வாழ வேண்
டும். முகாமுக்கு வெளியே குடியிருக்க வேண்டும்.[c]

47 கம்பளி உடை, நாரிழை* உடை, 48 நாரிழை பாவு நூல்* அல்லது
ஊடை நூல்,# கம்பளி பாவு நூல் அல்லது ஊடை நூல், தோல் அல்லது
ஏதாவது தோல் பொருள் ஆகியவற்றில் தொழுநோய்△ பிடிக்கலாம்.
49 தொழுநோய் பிடித்த அந்த உடையிலோ தோலிலோ பாவு நூலிலோ
ஊடை நூலிலோ ஏதாவது தோல் பொருளிலோ மஞ்சள் கலந்த பச்சை
நிறத்தில் அல்லது சிவப்பு நிறத்தில் கறை ஏற்பட்டால், அது அந்தத் தொழு
நோயின் கறை. அதை குருவானவரிடம் காட்ட வேண்டும். 50 தொழு
நோய் பிடித்த அந்தப் பொருளைக் குருவானவர் பரிசோதித்து, ஏழு நாட்க
ளுக்குத் தனியாக வைக்க வேண்டும்.[d] 51 ஏழாம் நாளில் அதை அவர்
பரிசோதிக்கும்போது, அந்தத் தொழுநோய் உடையிலோ பாவு நூலிலோ
ஊடை நூலிலோ தோலிலோ (அந்தத் தோலை எதற்குப் பயன்படுத்தினா
லும் சரி) பரவியிருப்பதைப் பார்த்தால், அது ஒரு கொடிய தொழுநோய்;

13:45 * நே.மொ., "மீசையை." 13:47 * அதாவது, "லினன்." 13:48 * பாவு நூல் என்பது தறியில் நீளவாட்டில் செல்லும் இழை. # ஊடை நூல் என்பது தறியில் குறுக்குவாட்டில் செல்லும் இழை. △ இந்தத் தொழுநோய் ஒருவகை பூஞ்சணமாகவோ பூஞ்சக்காளானாகவோ இருந்திருக்கலாம், உறுதியாகத் தெரியாது. சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 13
a மத் 8:4; மாற் 1:44; லூ 5:14; லூ 17:14
b லேவி 13:2
c எண் 5:2; எண் 12:14; 2ரா 7:3; 2நா 26:20, 21
d லேவி 13:4; லேவி 14:38; எண் 12:15

அது தீட்டு.[a] **52** அந்த உடையையோ நாரிழை பாவு நூலையோ ஊடை
நூலையோ அல்லது கம்பளி பாவு நூலையோ ஊடை நூலையோ தோல்
பொருளையோ எரித்துவிட வேண்டும். அது கொடிய தொழுநோயாக
இருப்பதால் அதை எரித்துவிட வேண்டும்.

53 ஆனால், அந்த உடையையோ பாவு நூலையோ ஊடை
நூலையோ ஏதாவது தோல் பொருளையோ குருவானவர் பரிசோதிக்கும்
போது அதில் தொழுநோய் பரவாமல் இருப்பதைப் பார்த்தால், **54** அந்
தப் பொருளைத் தண்ணீரில் கழுவும்படி சொல்ல வேண்டும். பின்பு, அடுத்த
ஏழு நாட்களுக்கு அதைத் தனியாக வைக்க வேண்டும். **55** தொழுநோய்
பிடித்த அந்தப் பொருள் நன்றாகக் கழுவப்பட்ட பின்பு, குருவானவர்
அதை மறுபடியும் பரிசோதிக்க வேண்டும். தொழுநோய் பரவவில்லை என்
றாலும் அந்தக் கறை அப்படியே இருந்தால், அது தீட்டு. அது உள்பக்கத்
திலோ வெளிப்பக்கத்திலோ அரிக்கப்பட்டு இருப்பதால் அதை எரித்துவிட
வேண்டும்.

56 தொழுநோய் பிடித்த அந்தப் பகுதி நன்றாகக் கழுவப்பட்ட பின்பு
குருவானவர் அதைப் பரிசோதித்து அது வெளிறியிருப்பதைப் பார்த்தால்,
உடையிலிருந்தோ, தோல் பொருளிலிருந்தோ, பாவு நூலிலிருந்தோ, ஊடை
நூலிலிருந்தோ அதை அவர் அறுத்துவிட வேண்டும். **57** ஆனால்,
அது உடையிலோ பாவு நூலிலோ ஊடை நூலிலோ தோல் பொரு
ளிலோ வேறொரு இடத்தில் மறுபடியும் வந்திருக்கிறது என்றால் அது பரவு
கிறது என்று அர்த்தம். கறைபட்ட அந்தப் பொருளை எரித்துவிட வேண்
டும்.[b] **58** உடையையோ பாவு நூலையோ ஊடை நூலையோ தோல்
பொருளையோ கழுவிய பின்பு அந்தக் கறை மறைந்துவிட்டால், அதை
இன்னொரு தடவை கழுவ வேண்டும். அப்போது அதன் தீட்டு நீங்கிவிடும்.

59 கம்பளி உடையிலோ, நாரிழை உடையிலோ, பாவு நூலிலோ, ஊடை
நூலிலோ, ஏதாவது தோல் பொருளிலோ தொழுநோய் பிடித்தால், அது
தீட்டுள்ளதா இல்லையா என்று அறிவிப்பதற்கான சட்டங்கள் இவைதான்"
என்றார்.

14 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "தொழுநோயாளி சுத்திகரிக்
கப்படும் நாளில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்டங்கள் இவை
தான்: அவனைக் குருவானவரிடம் கொண்டுவர வேண்டும்.[c] **3** குருவான
வர் முகாமுக்கு வெளியே போய் அவனைப் பரிசோதிக்க வேண்டும்.
அவன் குணமாகியிருந்தால், **4** அவனைச் சுத்திகரிப்பதற்காகச் சுத்தமான
இரண்டு பறவைகளையும் தேவதாரு மரக்கட்டையையும் கருஞ்சிவப்பு
துணியையும் மருவுக்கொத்தையும் கொண்டுவரும்படி குருவானவர் அவ
னிடம் சொல்ல வேண்டும்.[d] **5** பின்பு, அந்தப் பறவைகளில் ஒன்றை ஊற்
றுநீருள்ள ஒரு மண்பாத்திரத்தில் வைத்துக் கொல்லும்படி அவர் கட்டளை
கொடுக்க வேண்டும். **6** ஆனால், உயிரோடிருக்கிற பறவையையும் தேவ
தாரு மரக்கட்டையையும் கருஞ்சிவப்பு துணியையும் மருவுக்கொத்தையும்
ஒன்றாக எடுத்து ஊற்றுநீரில் கொல்லப்பட்ட அந்தப் பறவையின் இரத்தத்
தில் அவர் முக்கியெடுக்க வேண்டும். **7** பின்பு, தொழுநோயிலிருந்து சுத்
திகரிக்கப்படுகிற ஆளின் மேல் அதை ஏழு தடவை அவர் தெளிக்க வேண்
டும். அவன் தீட்டில்லாதவன் என்று அறிவிக்க வேண்டும். உயிரோடிருக்கிற
பறவையை வெட்டவெளியில் விட்டுவிட வேண்டும்.[e]

அதி. 13
a லேவி 14: 44, 45
b லேவி 13:52

அதி. 14
c லேவி 13:2; மத் 8:4; மாற் 1:44; லூ 5:14; லூ 17:14
d லேவி 14: 49-53; எண் 19:6, 9; சங் 51:7
e லேவி 16:22

8 சுத்திகரிக்கப்படுபவன் தன் உடைகளைத் துவைத்து, தன்னுடைய
எல்லா முடியையும் சவரம் செய்துகொண்டு, குளிக்க வேண்டும். அப்போது,
அவன் தீட்டில்லாதவனாக இருப்பான். அதன்பின், அவன் முகாமுக்குள்
வரலாம். ஆனால், தன் கூடாரத்துக்கு வெளியே ஏழு நாட்கள் தங்கியிருக்க
வேண்டும். **9** ஏழாம் நாளில் அவன் தன்னுடைய தலைமுடியையும் தாடி
யையும் புருவங்களையும் சவரம் செய்துகொள்ள வேண்டும். எல்லா முடி
யையும் சவரம் செய்த பின்பு, தன்னுடைய உடையைத் துவைத்து, குளிக்க
வேண்டும். அப்போது அவன் தீட்டில்லாதவனாக இருப்பான்.

10 எட்டாம் நாளில், குறையில்லாத இரண்டு செம்மறியாட்டுக் கடாக்
குட்டிகளையும் குறையில்லாத ஒருவயது பெண் செம்மறியாட்டுக் குட்டி
யையும்[a] அவன் எடுத்துவர வேண்டும். அதோடு, உணவுக் காணிக்கை
யாக, எண்ணெய் கலந்த நைசான மாவை[b] ஒரு எப்பா அளவிலே பத்தில்
மூன்று பங்கும்,* எண்ணெயைச் சுமார் 300 மில்லியும்# எடுத்துவர வேண்
டும்.[c] **11** சுத்திகரிக்கப்போகிற குருவானவர் அந்த மனுஷனை சந்திப்
புக் கூடாரத்தின் பிரகார நுழைவாசலில் நிறுத்தி, யெகோவாவின் முன்னி
லையில் அவனுடைய காணிக்கைகளைச் செலுத்த வேண்டும். **12** சுமார்
300 மில்லி எண்ணெயோடு, ஒரு செம்மறியாட்டுக் கடாக் குட்டியைக் குற்ற
நிவாரண பலியாகக்[d] குருவானவர் செலுத்த வேண்டும். அவற்றை அசை
வாட்டும் காணிக்கையாக யெகோவாவின் முன்னிலையில் அசைவாட்ட
வேண்டும்.[e] **13** பின்பு, பாவப் பரிகார பலியும் தகன பலியும் வழக்கமாக
வெட்டப்படுகிற இடத்தில், அதாவது பரிசுத்த இடத்தில், செம்மறியாட்
டுக் கடாக் குட்டியை வெட்ட வேண்டும்.[f] ஏனென்றால், பாவப் பரிகார பலி
யைப் போலக் குற்ற நிவாரண பலியும் குருவானவருக்குச் சொந்தமானது.[g]
அது மிகவும் பரிசுத்தமானது.[h]

14 குற்ற நிவாரண பலியின் இரத்தத்தில் கொஞ்சத்தைக் குருவானவர்
எடுத்து, சுத்திகரிக்கப்படுகிற நபரின் வலது காது மடலிலும் வலது கை கட்
டைவிரலிலும் வலது கால் பெருவிரலிலும் பூச வேண்டும். **15** அதோடு,
குருவானவர் சுமார் 300 மில்லி எண்ணெயில்[i] கொஞ்சத்தைத் தன்னு
டைய இடது உள்ளங்கையில் ஊற்ற வேண்டும். **16** பின்பு, தன்னுடைய
இடது உள்ளங்கையில் உள்ள எண்ணெயை வலது கைவிரலில் தொட்டு,
யெகோவாவின் முன்னிலையில் ஏழு தடவை தெளிக்க வேண்டும்.
17 குருவானவர் தன்னுடைய உள்ளங்கையில் மீதியிருக்கும் எண்ணெயில்
கொஞ்சத்தை எடுத்து, சுத்திகரிக்கப்படுபவரின் வலது காது மடலிலும் வலது
கை கட்டைவிரலிலும் வலது கால் பெருவிரலிலும் பூச வேண்டும். அதா
வது, ஏற்கெனவே பூசப்பட்ட குற்ற நிவாரண பலியின் இரத்தத்தின் மேல்
பூச வேண்டும். **18** குருவானவர் தன்னுடைய உள்ளங்கையில் இன்னும்
மீதியிருக்கும் எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுபவரின் தலையில் தடவி,
யெகோவாவின் முன்னிலையில் அவனுக்காகப் பாவப் பரிகாரம் செய்ய
வேண்டும்.[j]

19 தீட்டிலிருந்து சுத்திகரிக்கப்படுகிற நபருக்காக, குருவானவர் பாவப்
பரிகார பலியைச்[k] செலுத்தி பாவப் பரிகாரம் செய்ய வேண்டும். அதன்
பின்பு, தகன பலிக்குரியதை வெட்ட வேண்டும். **20** பின்பு, தகன பலியை

14:10 * அதாவது, “சுமார் 3 கிலோவும்.” # நே.மொ., “ஒரு லாகு அளவும்.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 14
a லேவி 4:32
b லேவி 2:1
c மாற் 1:44
d லேவி 6:6
e லேவி 14: 21, 24
f லேவி 1: 10, 11
லேவி 4:3, 4
g லேவி 2:3
லேவி 7:7
1கொ 9:13
1கொ 10:18
h லேவி 6:25
i லேவி 14:10
j லேவி 6:7
1யோ 1:7
1யோ 2:1, 2
k லேவி 5:6

யும் உணவுக் காணிக்கையையும்[a] பலிபீடத்தில் செலுத்தி, அவனுக்காகப்
பாவப் பரிகாரம் செய்ய வேண்டும்.[b] அப்போது, அவன் தீட்டில்லாதவனாக
இருப்பான்.[c]

21 இவற்றைச் செலுத்த வசதியில்லாத ஒரு ஏழையாக அவன் இருந்தால்,
பாவப் பரிகாரம் செய்வதற்காக ஒரு செம்மறியாட்டுக் கடாக் குட்டியைக்
குற்ற நிவாரண பலியாகவும் அசைவாட்டும் காணிக்கையாகவும் அவன்
கொண்டுவர வேண்டும். உணவுக் காணிக்கையாக, எண்ணெய் கலந்த
நைசான மாவை ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கும்,* எண்ணெ
யைச் சுமார் 300 மில்லியும் கொண்டுவர வேண்டும். **22** அதோடு, இரண்டு
காட்டுப் புறாக்களையோ இரண்டு புறாக் குஞ்சுகளையோ கொண்டுவர
வேண்டும். ஒன்றைப் பாவப் பரிகார பலியாகவும் மற்றொன்றைத் தகன பலி
யாகவும்[d] கொடுக்க வேண்டும். **23** எட்டாம் நாளில்[e] தன்னுடைய சுத்திக
ரிப்புக்காக இவற்றைக் கொண்டுவந்து சந்திப்புக் கூடாரத்தின் பிரகார
நுழைவாசலில் யெகோவாவின் முன்னிலையில் குருவானவரிடம் கொடுக்க
வேண்டும்.[f]

24 குற்ற நிவாரண பலிக்கான செம்மறியாட்டுக் கடாக் குட்டியையும்[g]
சுமார் 300 மில்லி எண்ணெயையும் குருவானவர் எடுத்து, அசைவாட்
டும் காணிக்கையாக யெகோவாவின் முன்னிலையில் அசைவாட்ட வேண்
டும்.[h] **25** குற்ற நிவாரண பலிக்கான செம்மறியாட்டுக் கடாக் குட்டியை
குருவானவர் வெட்ட வேண்டும். பின்பு, குற்ற நிவாரண பலியின் இரத்தத்
தில் கொஞ்சத்தை எடுத்து, சுத்திகரிக்கப்படுகிற நபரின் வலது காது மடலி
லும் வலது கை கட்டைவிரலிலும் வலது கால் பெருவிரலிலும் பூச
வேண்டும்.[i] **26** அதோடு, தன்னுடைய இடது உள்ளங்கையில் கொஞ்சம்
எண்ணெயை ஊற்றி,[j] **27** தன்னுடைய வலது கைவிரலில் தொட்டு
யெகோவாவின் முன்னிலையில் ஏழு தடவை தெளிக்க வேண்டும்.
28 பின்பு, குருவானவர் தன்னுடைய உள்ளங்கையில் மீதியிருக்கும் எண்
ணெயில் கொஞ்சத்தை எடுத்து, சுத்திகரிக்கப்படுபவரின் வலது காது மடலி
லும் வலது கை கட்டைவிரலிலும் வலது கால் பெருவிரலிலும் பூச வேண்
டும். அதாவது, ஏற்கெனவே பூசப்பட்ட குற்ற நிவாரண பலியின்
இரத்தத்தின் மேல் பூச வேண்டும். **29** குருவானவர் தன்னுடைய உள்ளங்
கையில் இன்னும் மீதியிருக்கும் எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுபவரின்
தலையில் தடவி, யெகோவாவின் முன்னிலையில் அவனுக்காகப் பாவப்
பரிகாரம் செய்ய வேண்டும்.

30 அவன் தன்னுடைய வசதியைப் பொறுத்து காட்டுப் புறாக்களையோ,
புறாக் குஞ்சுகளையோ கொடுக்க வேண்டும்.[k] **31** அவற்றில் ஒன்றைப்
பாவப் பரிகார பலியாகவும் மற்றொன்றைத் தகன பலியாகவும் கொடுக்க
வேண்டும்.[l] அவற்றை உணவுக் காணிக்கையோடு சேர்த்துக் கொடுக்க
வேண்டும். பின்பு, சுத்திகரிக்கப்படும் நபருக்காக யெகோவாவின் முன்னி
லையில் குருவானவர் பாவப் பரிகாரம் செய்ய வேண்டும்.[m]

32 வசதியில்லாத ஒருவனுக்குத் தொழுநோய் பிடித்திருந்தால் அவன்
தன்னைச் சுத்திகரிப்பதற்காகக் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்கள் இவை
தான்" என்றார்.

33 பின்பு யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **34** "நான்

அதி. 14
a லேவி 2:1, லேவி 14:10, எண் 15:4
b மத் 8:4
c லேவி 14:9, மாற் 1:44, லூ 5:14, லூ 17:14
d லேவி 1:14, லேவி 5:7, லேவி 12:8
e லேவி 15:13, 14
f லேவி 14:10, 11
g லேவி 6:6
h லேவி 14:12
i லேவி 14:14
j லேவி 14:15–18
k லேவி 12:8, லேவி 14:22
l லேவி 5:7
m லேவி 14:20

14:21 * அதாவது, "சுமார் ஒரு கிலோவும்."

அதி. 14

உங்களுக்குச் சொத்தாகத் தருகிற கானான் தேசத்துக்கு[a] நீங்கள் போய்ச்
சேர்ந்த பின்பு, நான் அங்குள்ள ஒரு வீட்டைத் தொழுநோய்* பிடிக்க விட்டு
விட்டால்,[b] **35** அந்த வீட்டின் சொந்தக்காரன் குருவானவரிடம் வந்து,
‘என் வீட்டில் ஏதோவொரு தொற்று வந்திருக்கிறது’ என்று சொல்ல வேண்
டும். **36** குருவானவர் அந்தத் தொற்றைப் பரிசோதிக்கப் போவதற்கு
முன்பே, அந்த வீட்டிலுள்ள எல்லா பொருள்களையும் வெளியே எடுத்துவி
டும்படி கட்டளை கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அங்குள்ள எல்லா
பொருள்களையும் தீட்டானதாக அறிவிக்க வேண்டியிருக்கும். அவை
வெளியே எடுக்கப்பட்ட பின்பு அவர் போய் அந்த வீட்டைப் பரிசோதிக்க
வேண்டும். **37** அந்த வீட்டின் சுவர்களை அவர் பார்வையிடும்போது
தொற்று வந்திருக்கிற இடத்தில் மஞ்சள் கலந்த பச்சை நிறத்திலோ சிவப்பு
நிறத்திலோ குழிகள் விழுந்திருந்தாலும், அது மற்ற பகுதிகளைவிட பள்
ளமாகத் தெரிந்தாலும், **38** குருவானவர் அந்த வீட்டைவிட்டு வெளியே
போய் அதை ஏழு நாட்களுக்கு அடைத்து வைக்க வேண்டும்.[c]

39 பின்பு, குருவானவர் ஏழாம் நாளில் மறுபடியும் வந்து அந்த
வீட்டைப் பரிசோதிக்க வேண்டும். வீட்டின் சுவர்களில் அந்தத் தொற்று பர
வியிருப்பதை அவர் பார்த்தால், **40** தொற்று பரவிய இடத்திலுள்ள கற்க
ளைப் பெயர்த்து, அவற்றை நகரத்துக்கு வெளியே அசுத்தமான பொருள்க
ளைக் கொட்டும் இடத்தில் எறிந்துவிடும்படி கட்டளை கொடுக்க
வேண்டும். **41** பின்பு, அந்த வீட்டுக்குள் இருக்கிற சுவர்களின் காரையை
முழுவதுமாகக் கொத்தியெடுக்கச் சொல்ல வேண்டும். கொத்தியெடுக்கப்
பட்ட காரையை நகரத்துக்கு வெளியே அசுத்தமான பொருள்கள் கொட்
டும் இடத்தில் எறிந்துவிடும்படி கட்டளை கொடுக்க வேண்டும். **42** பின்பு,
பெயர்த்தெடுக்கப்பட்ட கற்களுக்குப் பதிலாக வேறு கற்களை வைத்துக்
கட்டி, காரை பூசும்படி சொல்ல வேண்டும்.

43 அந்தக் கற்களைப் பெயர்த்துவிட்டு சுவரைக் கொத்திப் பூசிய பின்
பும் தொற்று வந்திருந்தால், **44** குருவானவர் அந்த வீட்டுக்குள்ளே போய்
அதைப் பரிசோதிக்க வேண்டும். அந்தத் தொற்று வீட்டில் பரவியிருந்தால்,
அது பயங்கரமான தொற்று.[d] அந்த வீடு தீட்டானது. **45** அந்த வீட்டை
முழுவதுமாக இடித்துப் போட்டு அதன் கற்களையும் பலகைகளையும்
காரையையும் நகரத்துக்கு வெளியே அசுத்தமான பொருள்கள் கொட்டும்
இடத்தில் எறியச் சொல்ல வேண்டும்.[e] **46** அந்த வீடு அடைத்து வைக்
கப்பட்டுள்ள நாட்களில்[f] அதற்குள்ளே போகிறவன் சாயங்காலம்வரை தீட்
டுப்பட்டிருப்பான்.[g] **47** அந்த வீட்டில் படுத்திருந்தவனும் சாப்பிட்டவனும்
தன் உடைகளைத் துவைக்க வேண்டும்.

48 ஆனால், அந்த வீட்டைக் கொத்திப் பூசிய பிறகு குருவானவர் வந்து
பார்க்கும்போது தொற்று பரவியிருக்கவில்லை என்றால், அந்த வீடு தீட்டில்
லாதது என்று அறிவிக்க வேண்டும். ஏனென்றால், அந்தத் தொற்று மறைந்து
விட்டது. **49** அந்த வீட்டைத் தீட்டிலிருந்து சுத்திகரிப்பதற்காக, இரண்டு
பறவைகளையும் தேவதாரு மரக்கட்டையையும் கருஞ்சிவப்பு துணியையும்
மருவுக்கொத்தையும் அவர் கொண்டுபோக வேண்டும்.[h] **50** பின்பு, அந்

14:34 *இந்தத் தொழுநோய் ஒருவகை பூஞ்சணமாகவோ பூஞ்சக்காளானாகவோ இருந்திருக்கலாம், உறுதியாகத் தெரியாது. சொல் பட்டியலைப் பாருங்கள்.

a ஆதி 17:8 எண் 35:10
b உபா 7:12, 15
c லேவி 13: 4, 50 எண் 12:15
d லேவி 13:51
e லேவி 14:41
f லேவி 14:38
g லேவி 11: 23-25 லேவி 15:8 லேவி 17:15 லேவி 22:4-6
h லேவி 14:3, 4 எண் 19:6, 7

தப் பறவைகளில் ஒன்றை ஊற்றுநீருள்ள ஒரு மண்பாத்திரத்தில் வைத்துக் கொல்ல வேண்டும். **51** தேவதாரு மரக்கட்டையையும் மருவுக்கொத்தையும் கருஞ்சிவப்பு துணியையும் உயிரோடிருக்கிற பறவையையும் எடுத்து, ஊற்றுநீரில் கொல்லப்பட்ட அந்தப் பறவையின் இரத்தத்தில் முக்கியெடுக்க வேண்டும். பின்பு, அந்த இரத்தத்தை அந்த வீட்டின் முன்னால் ஏழு தடவை அவர் தெளிக்க வேண்டும்.[a] **52** கொல்லப்பட்ட பறவையின் இரத்தம், ஊற்றுநீர், உயிரோடிருக்கிற பறவை, தேவதாரு மரக்கட்டை, மருவுக்கொத்து, கருஞ்சிவப்பு துணி ஆகியவற்றால் அந்த வீட்டைத் தீட்டிலிருந்து அவர் தூய்மைப்படுத்த வேண்டும். **53** பின்பு, உயிரோடிருக்கிற பறவையை நகரத்துக்கு வெளியே வெட்டவெளியில் விட்டுவிட்டு அந்த வீட்டைச் சுத்திகரிக்க வேண்டும். அப்போது, அது தீட்டில்லாததாக இருக்கும்.

54 எல்லா விதமான தொழுநோயும், தலையிலோ தாடியிலோ வருகிற தொற்றும்,[b] **55** உடை அல்லது வீட்டில் பிடிக்கிற தொழுநோயும்,[c] **56** தோலில் வருகிற தடிப்புகளும், புண்களும்,* திட்டுகளும்[d] **57** எப்போது தீட்டுள்ளவை, எப்போது தீட்டில்லாதவை என்பதைத் தீர்மானிப்பதற்கான[e] சட்டங்கள் இவைதான். தொழுநோயைப் பற்றிய சட்டங்கள் இவைதான்”[f] என்றார்.

15 பின்பு யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **2** “நீங்கள் இஸ்ரவேலர்களிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால், ‘ஒருவனுக்குப் பிறப்புறுப்பில் ஒழுக்கு நோய் வந்தால் அவன் தீட்டுள்ளவன்.[g] **3** அந்த ஒழுக்கு பிறப்புறுப்பிலிருந்து விடாமல் வந்துகொண்டிருந்தாலும் அங்கே அடைபட்டிருந்தாலும் அவன் தீட்டுள்ளவன்.

4 ஒழுக்கு நோயுள்ளவன் எதன்மேல் படுத்தாலும் உட்கார்ந்தாலும் அது தீட்டாகிவிடும். **5** அவனுடைய படுக்கையைத் தொடுகிறவன் தன் உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அவன் சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக இருப்பான்.[h] **6** ஒழுக்கு நோயுள்ளவன் உட்கார்ந்திருந்த பொருளின் மேல் உட்காருகிறவன் தன்னுடைய உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அவன் சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக இருப்பான். **7** ஒழுக்கு நோயுள்ளவனைத் தொடுகிறவன் தன் உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அவன் சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக இருப்பான். **8** ஒழுக்கு நோயுள்ளவனின் எச்சில், தீட்டில்லாத ஒருவன்மேல் தெறித்தால் அவன் தன் உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அவன் சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக இருப்பான். **9** ஒழுக்கு நோயுள்ளவன் எந்தச் சேணத்தின்* மேல் உட்கார்ந்து சவாரி செய்தாலும் அது தீட்டாகிவிடும். **10** அவன் உட்கார்ந்திருந்த எந்தவொரு பொருளையும் தொடுகிறவன் சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக இருப்பான். அதைத் தூக்கிக்கொண்டு போகிறவன் தன் உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அவன் சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக இருப்பான். **11** ஒழுக்கு நோயுள்ளவன்[i] தன்னுடைய கைகளைக் கழுவாமல் ஒருவனைத் தொட்டுவிட்டால்,

14:56 *வே.வா., “பொருக்குகளும்.” இவை, இரத்தமும் நீரும் கசிந்து காய்ந்துபோகும்போது உண்டாகும் கெட்டியான தோல்கள். **15:9** *சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை.

அதி. 14
a லேவி 14:6, 7
b லேவி 13:30
c லேவி 13:47; லேவி 14:34
d லேவி 13:2
e லேவி 10:10; எசே 44:23
f உபா 24:8

அதி. 15
g லேவி 22:4; எண் 5:2
h லேவி 11:24, 25; லேவி 14:46, 47; லேவி 17:15; லேவி 22:6
i லேவி 15:2

அவன் தன்னுடைய உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அவன்
சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக இருப்பான். **12** ஒழுக்கு நோயுள்ள
வன் ஒரு மண்பாத்திரத்தைத் தொட்டுவிட்டால் அதை உடைத்துப்போட
வேண்டும். அவன் ஒரு மரப் பாத்திரத்தைத் தொட்டுவிட்டால் அதைக்
கழுவ வேண்டும்.[a]

13 ஒழுக்கு நின்றுவிட்டால், அது நின்று ஏழு நாட்களுக்குப் பிறகு
அவன் தன் உடைகளைத் துவைத்து, ஊற்றுநீரில் குளிக்க வேண்டும்.
அப்போது, அவன் தீட்டில்லாதவனாக இருப்பான்.[b] **14** எட்டாம் நாளில்
இரண்டு காட்டுப் புறாக்களையோ இரண்டு புறாக் குஞ்சுகளையோ அவன்
கொண்டுவர வேண்டும்.[c] அவற்றை யெகோவாவின் முன்னிலையில் சந்
திப்புக் கூடாரத்தின் பிரகார நுழைவாசலில் குருவானவரிடம் கொடுக்க
வேண்டும். **15** குருவானவர் அவற்றில் ஒன்றைப் பாவப் பரிகார பலி
யாகவும் மற்றொன்றைத் தகன பலியாகவும் செலுத்த வேண்டும். இப்
படி, யெகோவாவின் முன்னிலையில் அவனுக்குப் பாவப் பரிகாரம் செய்து
அவனைத் தீட்டிலிருந்து சுத்திகரிக்க வேண்டும்.

16 ஒருவனுக்கு விந்து வெளியேறினால் அவன் குளிக்க வேண்டும்.
அவன் சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக இருப்பான்.[d] **17** உடையிலோ
தோல் பொருளிலோ விந்து பட்டால் அதை அவன் கழுவ வேண்டும். அது
சாயங்காலம்வரை தீட்டுள்ளதாக இருக்கும்.

18 ஒருவன் ஒரு பெண்ணுடன் உடலுறவுகொள்ளும்போது அவனுக்கு
விந்து வெளியேறினால், அவர்கள் இரண்டு பேரும் குளிக்க வேண்டும்.
அவர்கள் சாயங்காலம்வரை தீட்டுள்ளவர்களாக இருப்பார்கள்.[e]

19 ஒரு பெண்ணுக்கு மாதவிலக்கு ஏற்பட்டால், அவள் ஏழு நாட்கள்
தீட்டுள்ளவளாக இருப்பாள்.[f] அவளைத் தொடுகிற எல்லாரும் சாயங்காலம்
வரை தீட்டுள்ளவர்களாக இருப்பார்கள்.[g] **20** மாதவிலக்கின்போது அவள்
எதன்மேல் படுத்தாலும் உட்கார்ந்தாலும் அது தீட்டுள்ளதாக இருக்கும்.[h]
21 அவளுடைய படுக்கையைத் தொடுகிற எல்லாரும் தங்கள் உடைக
ளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அவர்கள் சாயங்காலம்வரை தீட்டுள்
ளவர்களாக இருப்பார்கள். **22** அவள் உட்கார்ந்திருந்த எந்தவொரு
பொருளையும் தொடுகிறவர்கள் தங்கள் உடைகளைத் துவைத்து, குளிக்க
வேண்டும். அவர்கள் சாயங்காலம்வரை தீட்டுள்ளவர்களாக இருப்பார்கள்.
23 படுக்கையின் மேலோ வேறு ஏதாவது பொருளின் மேலோ அவள்
உட்கார்ந்தால் அதைத் தொடுகிற எல்லாரும் சாயங்காலம்வரை தீட்டுள்ள
வர்களாக இருப்பார்கள்.[i] **24** ஒருவன் அவளோடு உறவுகொள்ளும்போது
அவளுக்கு மாதவிலக்கு ஏற்பட்டு அந்த இரத்தம் அவன்மேல் பட்டால்,[j]
அவன் ஏழு நாட்களுக்குத் தீட்டுள்ளவனாக இருப்பான். அவன் படுக்கிற
படுக்கை தீட்டுள்ளதாக இருக்கும்.

25 மாதவிலக்கு[k] இல்லாத சமயத்தில் ஒரு பெண்ணுக்குப் பல
நாட்கள் இரத்தப்போக்கு ஏற்பட்டால்,[l] அல்லது மாதவிலக்கு நாட்கள் முடிந்
தும் இரத்தப்போக்கு நீடித்தால், மாதவிலக்கு நாட்களைப் போலவே அந்த
எல்லா நாட்களும் அவள் தீட்டுள்ளவளாக இருப்பாள். **26** அந்த நாட்க
ளில் அவள் எதன்மேல் படுத்தாலும் உட்கார்ந்தாலும் மாதவிலக்கு நாட்க
ளில் இருப்பதைப் போலவே அது தீட்டுள்ளதாக இருக்கும்.[m] **27** அதைத்
தொடுகிறவர்கள் தீட்டுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் தங்களுடைய

அதி. 15
a லேவி 11:32, 33
b லேவி 14:8
c லேவி 1:14
d லேவி 22:4; உபா 23:10, 11
e யாத் 19:15; 1சா 21:5
f லேவி 12:2, 5
g லேவி 20:18
h லேவி 15:4-6
i லேவி 15:10
j லேவி 18:19; லேவி 20:18
k லேவி 15:19
l மத் 9:20; லூ 8:43
m லேவி 15:21

உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அவர்கள் சாயங்காலம்வரை
தீட்டுள்ளவர்களாக இருப்பார்கள்.[a]

28 அவளுடைய இரத்தப்போக்கு நின்றுவிட்டால், அது நின்று ஏழு
நாட்களுக்குப் பின்பு அவளுடைய தீட்டு நீங்கும்.[b] **29** எட்டாம் நாளில்
இரண்டு காட்டுப் புறாக்களையோ இரண்டு புறாக் குஞ்சுகளையோ அவள்
கொண்டுவர வேண்டும்.[c] அவற்றைச் சந்திப்புக் கூடாரத்தின் பிரகார நுழை
வாசலில் குருவானவரிடம் கொடுக்க வேண்டும்.[d] **30** குருவானவர் அவற்
றில் ஒன்றைப் பாவப் பரிகார பலியாகவும் மற்றொன்றைத் தகன பலியாக
வும் செலுத்தி, யெகோவாவின் முன்னிலையில் அவளுக்குப் பாவப்
பரிகாரம் செய்து அவளைத் தீட்டிலிருந்து சுத்திகரிக்க வேண்டும்.[e]

31 இப்படி, தீட்டிலிருந்து விலகியிருக்க இஸ்ரவேலர்களுக்கு நீங்கள்
உதவ வேண்டும். இல்லாவிட்டால், அவர்களுக்கு நடுவிலுள்ள என்
கூடாரத்தை அவர்கள் தீட்டுப்படுத்திவிடுவார்கள், அதனால் செத்துப்
போவார்கள்.[f]

32 ஒரு ஆணுக்குப் பிறப்புறுப்பில் ஒழுக்கு ஏற்பட்டாலோ, விந்து
வெளியேறியதால் தீட்டு ஏற்பட்டாலோ,[g] **33** ஒரு பெண்ணுக்கு மாத
விலக்கினால்[h] தீட்டு ஏற்பட்டாலோ, ஒரு ஆணுக்கோ பெண்ணுக்கோ
பிறப்புறுப்பில் ஒழுக்கு ஏற்பட்டாலோ,[i] தீட்டுள்ள ஒரு பெண்ணோடு ஒரு
ஆண் உறவுகொண்டாலோ கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்கள் இவை
தான்'" என்றார்.

16 யெகோவாவின் சன்னிதியில் அத்துமீறி வந்ததற்காக ஆரோனின்
இரண்டு மகன்கள் கொல்லப்பட்ட[j] பின்பு யெகோவா மோசேயி
டம் பேசினார். **2** யெகோவா மோசேயிடம், "திரைச்சீலைக்கு உள்பக்கத்
திலுள்ள[k] மகா பரிசுத்த அறைக்குள் நினைத்த நேரமெல்லாம் வரக்
கூடாதென்று உன் அண்ணன் ஆரோனிடம் சொல்.[l] இல்லாவிட்டால் அவ
னுடைய உயிர் போய்விடும்.[m] அந்த அறையில் சாட்சிப் பெட்டியும் அதன்
மேல் ஒரு மூடியும் இருக்கிறது, அந்த மூடிக்கு மேலாக ஒரு மேகத்தில்[n]
நான் தோன்றுவேன்.[o]

3 ஆரோன் மகா பரிசுத்த அறைக்குள் வருவதற்கு முன்பு, பாவப் பரி
கார பலியாக ஒரு இளம் காளையையும்[p] தகன பலியாக ஒரு செம்மறியாட்
டுக் கடாவையும்[q] செலுத்த வேண்டும். **4** புனித நாரிழை* அங்கியை[r]
அவன் போட்டுக்கொள்ள வேண்டும். நாரிழையால் செய்த அரைக் கால்சட்
டையை[s] உள்ளாடையாக உடுத்திக்கொள்ள வேண்டும். நாரிழையாலான
இடுப்புக்கச்சையையும்[t] தலைப்பாகையையும்[u] போட்டுக்கொள்ள வேண்
டும், அவை பரிசுத்த உடைகள்.[v] அவன் குளித்துவிட்டு[w] அவற்றைப்
போட்டுக்கொள்ள வேண்டும்.

5 பாவப் பரிகார பலிக்காக இரண்டு வெள்ளாட்டுக் கடாக் குட்டிகளை
யும் தகன பலிக்காக ஒரு செம்மறியாட்டுக் கடாவையும் அவன் இஸ்ரவேல்
ஜனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.[x]

6 பின்பு, ஆரோன் தன்னுடைய பாவப் பரிகார பலியாகிய காளையைக்
கொண்டுவந்து, தனக்காகவும்[y] தன்னுடைய குடும்பத்துக்காகவும் பாவப்
பரிகாரம் செய்ய வேண்டும்.

16:4 * அதாவது, "லினன்."

அதி. 15
a லேவி 15:22
b லேவி 15:13
c லேவி 1:14
d லேவி 15: 14, 15
e லேவி 12:7
f லேவி 19:30 எண் 5:3 எண் 19:20
g லேவி 15:16
h லேவி 15:19
i லேவி 15: 2, 25

அதி. 16
j லேவி 10:1, 2
k யாத் 40:21 எபி 6:19 எபி 9:3, 7
l லேவி 23:27
m எண் 4:19, 20
n யாத் 40:34
o யாத் 25:22
p லேவி 4:3
q லேவி 1:3
r யாத் 28:39
s யாத் 28:42
t யாத் 39: 27, 29
u யாத் 28:4
v யாத் 28:2
w யாத் 30:20 எபி 10:22
x எபி 7:27
y எபி 5:1-3

7 அடுத்ததாக, அந்த இரண்டு வெள்ளாடுகளையும் சந்திப்புக் கூடாரத்
தின் வாசலில் யெகோவாவின் முன்னிலையில் நிறுத்த வேண்டும். **8** அந்த
இரண்டு வெள்ளாடுகளுக்காக ஆரோன் குலுக்கல் போட வேண்டும். ஒரு
வெள்ளாட்டை யெகோவாவுக்குப் பலி செலுத்தவும் இன்னொன்றை
போக்கு ஆடாக விடவும் குலுக்கல் போட வேண்டும். **9** யெகோவாவுக்
கென்று குலுக்கல்[a] விழுந்த வெள்ளாட்டைப் பாவப் பரிகார பலியாக
ஆரோன் செலுத்த வேண்டும். **10** போக்கு ஆடாக விடுவதற்கென்று
குலுக்கல் விழுந்த வெள்ளாட்டை யெகோவாவின் முன்னிலையில் உயி
ரோடு நிறுத்த வேண்டும். அதன்மேல் பாவப் பரிகார சடங்கைச் செய்து
போக்கு ஆடாக அதை வனாந்தரத்துக்குள் அனுப்பிவிட வேண்டும்.[b]

11 ஆரோன் தன்னுடைய பாவப் பரிகார பலியாகிய காளையைக்
கொண்டுவந்து, தனக்காகவும் தன்னுடைய குடும்பத்துக்காகவும் பாவப் பரி
காரம் செய்ய வேண்டும். பிறகு, தன்னுடைய பாவப் பரிகார பலியாகிய அந்
தக் காளையை வெட்ட வேண்டும்.[c]

12 பின்பு, ஆரோன் யெகோவாவின் சன்னிதியில் இருக்கிற பலிபீ
டத்தின் தணல்களை[d] ஒரு தூபக்கரண்டியில்[e] நிரப்பிக்கொண்டு, தூபப்பொ
ருளை[f] இரண்டு கைப்பிடி அளவு எடுத்துக்கொண்டு, திரைச்சீலைக்கு உள்
பக்கம் வர வேண்டும்.[g] **13** அவன் சாகாதபடிக்கு, யெகோவாவின்
சன்னிதியில்[h] அந்தத் தூபப்பொருளைத் தணல்மேல் போட வேண்டும்.
அப்போது, சாட்சிப் பெட்டியின்[i] மேலிருக்கிற மூடியைத்[j] தூபப் புகை
சூழ்ந்துகொள்ளும்.

14 காளையின் இரத்தத்தில்[k] கொஞ்சத்தை அவர் தன்னுடைய விரலில்
தொட்டு, மூடிக்கு முன்னால் கிழக்குப் பக்கத்தில் தெளிக்க வேண்டும். இப்
படி, அந்த மூடிக்கு முன்னால் ஏழு தடவை தெளிக்க வேண்டும்.[l]

15 பின்பு, ஜனங்களுடைய பாவப் பரிகார பலியாகிய வெள்ளாட்டை
அவர் வெட்ட வேண்டும்.[m] அதன் இரத்தத்தைத் திரைச்சீலைக்கு உள்
பக்கம் கொண்டுவந்து,[n] காளையின் இரத்தத்தைத்[o] தெளித்தது போலவே
இதையும் அந்த மூடிக்கு முன்னால் தெளிக்க வேண்டும்.

16 இஸ்ரவேல் ஜனங்கள் செய்கிற அசுத்தமான செயல்களாலும் குற்
றங்களாலும் பாவங்களாலும்[p] மகா பரிசுத்த அறை தீட்டுப்படாமல் இருப்
பதற்கு ஆரோன் அதைச் சுத்திகரிக்க வேண்டும். அசுத்தமான செயல்கள்
செய்கிற இஸ்ரவேல் ஜனங்களின் நடுவிலுள்ள சந்திப்புக் கூடாரத்தையும்
அவன் சுத்திகரிக்க வேண்டும்.

17 பாவப் பரிகாரம் செய்ய மகா பரிசுத்த அறைக்குள் அவன் போய்
வரும்வரை வேறு யாரும் சந்திப்புக் கூடாரத்துக்குள் போகக் கூடாது.
ஆரோன் தனக்காகவும் தன்னுடைய குடும்பத்துக்காகவும் இஸ்ரவேல் சபை
யார் எல்லாருக்காகவும்[q] பாவப் பரிகாரம் செய்ய வேண்டும்.[r]

18 பின்பு, யெகோவாவின் சன்னிதியில் இருக்கிற பலிபீடத்துக்கு[s] வந்து
அதைச் சுத்திகரிக்க வேண்டும். காளையின் இரத்தத்தில் கொஞ்சத்தையும்
வெள்ளாட்டின் இரத்தத்தில் கொஞ்சத்தையும் எடுத்து, பலிபீடத்தின் எல்லா
பக்கங்களிலும் இருக்கிற கொம்புகள்மேல் பூச வேண்டும். **19** அந்த இரத்
தத்தில் கொஞ்சத்தைத் தன்னுடைய விரலில் தொட்டு பலிபீடத்தின் மேல்
ஏழு தடவை தெளித்து, இஸ்ரவேலர்கள் செய்கிற அசுத்தமான செயல்களி
லிருந்து அதைச் சுத்திகரித்து புனிதப்படுத்த வேண்டும்.

அதி. 16
a நீதி 16:33
b லேவி 14:7, 53; லேவி 16:21, 22; ஏசா 53:4; ரோ 15:3
c லேவி 16:6
d யாத் 40:29; லேவி 6:13; எண் 16:46
e எபி 9:4
f யாத் 30:34-36; வெளி 5:8; வெளி 8:3-5
g லேவி 16:2; எபி 6:19; எபி 10:19, 20
h யாத் 25:22; 2ரா 19:15
i யாத் 34:29
j யாத் 25:18, 21; 1நா 28:11
k எபி 9:22
l ரோ 3:25; எபி 9:12; எபி 9:24, 25; எபி 10:4, 12
m லேவி 16:5; எபி 2:17; எபி 5:1-3; எபி 9:26; 1யோ 2:1, 2
n எபி 6:19; எபி 9:3, 7; எபி 10:19, 20
o லேவி 17:11
p பிர 7:20
q மாற் 10:45; எபி 2:9; எபி 7:27; எபி 9:7, 12; வெளி 1:5
r லேவி 16:6
s யாத் 38:1

20 மகா பரிசுத்த அறையையும் சந்திப்புக் கூடாரத்தையும் பலிபீடத்தை
யும்[a] சுத்திகரித்த[b] பின்பு, உயிருள்ள வெள்ளாட்டை ஆரோன் தனக்
குப் பக்கத்தில் கொண்டுவர வேண்டும்.[c] **21** அந்த வெள்ளாட்டின் மேல்
தன் இரண்டு கைகளையும் வைத்து இஸ்ரவேலர்கள் செய்த எல்லா குற்
றங்களையும் தவறுகளையும் பாவங்களையும் ஒத்துக்கொள்ள வேண்டும்.
அதையெல்லாம் அந்த வெள்ளாட்டின் தலையில் சுமத்த வேண்டும்.[d]
பின்பு, அதை வனாந்தரத்தில் விடுவதற்கு நியமிக்கப்பட்டவரிடம் அதைக்
கொடுத்து அனுப்பிவிட வேண்டும். **22** அந்த வெள்ளாடு அவர்களு
டைய எல்லா குற்றங்களையும் சுமந்துகொண்டு[e] வனாந்தரத்துக்குள்
போகும்.[f] நியமிக்கப்பட்டவர் அந்த வெள்ளாட்டை வனாந்தரத்துக்குள்
போக விட்டுவிட வேண்டும்.[g]

23 பின்பு, ஆரோன் சந்திப்புக் கூடாரத்துக்குள் போக வேண்டும். பரி
சுத்த இடத்துக்குள் போனபோது உடுத்தியிருந்த நாரிழை உடைகளைக்
கழற்றி அங்கே வைத்துவிட வேண்டும். **24** அதன்பின், பரிசுத்தமான
இடத்தில் குளித்து[h] தன்னுடைய உடைகளைப்[i] போட்டுக்கொள்ள வேண்
டும். பின்பு, தனக்காகவும் ஜனங்களுக்காகவும் தகன பலிகளைச்[j] செலுத்தி
பாவப் பரிகாரம் செய்ய வேண்டும்.[k] **25** பாவப் பரிகார பலியின் கொழுப்
பைப் பலிபீடத்தில் எரிக்க வேண்டும்.

26 வெள்ளாட்டை போக்கு ஆடாகக் கொண்டுபோய் விட்டவர்[l] தன்
னுடைய உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும். அதன் பின்புதான்
அவர் முகாமுக்குள் வர வேண்டும்.

27 பாவப் பரிகார பலியாக வெட்டப்பட்ட காளையையும் வெள்ளாட்
டுக் கடாவையும் முகாமுக்கு வெளியே கொண்டுபோக வேண்டும். அவற்
றின் இரத்தம்தான் பாவப் பரிகாரம் செய்வதற்காக மகா பரிசுத்த
அறைக்குள் கொண்டுவரப்பட்ட இரத்தம். அவற்றின் தோலையும் சதையை
யும் சாணத்தையும் நெருப்பில் சுட்டெரிக்க வேண்டும்.[m] **28** அவற்றைச்
சுட்டெரிக்கிறவன் தன்னுடைய உடைகளைத் துவைத்து, குளிக்க வேண்டும்.
அதன்பின் அவன் முகாமுக்குள் வரலாம்.

29 நான் உங்களுக்குக் கொடுக்கும் நிரந்தரச் சட்டம் இதுதான்: ஏழாம்
மாதம் பத்தாம் நாளில், உங்கள் பாவங்களுக்காக உங்களையே வருத்
திக்கொள்ள வேண்டும்.* நீங்களும் உங்கள் மத்தியில் குடியிருக்கிற
வேறு தேசத்து ஜனங்களும் அன்றைக்கு எந்த வேலையும் செய்யக்
கூடாது.[n] **30** அந்த நாளில் உங்களைச் சுத்திகரிப்பதற்காக[o] உங்களுக்குப்
பாவப் பரிகாரம் செய்யப்படும். அப்போது, உங்களுடைய எல்லா பாவங்
களிலிருந்தும் யெகோவாவின் முன்னிலையில் சுத்தமாவீர்கள்.[p] **31** அது
உங்களுக்கு முழு ஓய்வுநாள். உங்கள் பாவங்களுக்காக அன்றைக்கு உங்
களையே வருத்திக்கொள்ள வேண்டும்.*[q] இது ஒரு நிரந்தரச் சட்டம்.

32 தன்னுடைய அப்பாவுக்குப் பின்பு[r] குருவாகச் சேவை செய்ய நிய
மிக்கப்படுகிறவன்[s] பாவப் பரிகாரம் செய்துவிட்டு பரிசுத்த உடைகளா
கிய[t] நாரிழை உடைகளைப்[u] போட்டுக்கொள்ள வேண்டும். **33** மகா பரி
சுத்த அறையையும்[v] சந்திப்புக் கூடாரத்தையும்[w] பலிபீடத்தையும்[x] அவன்

16:29, 31 *விரதம் இருப்பதன் மூலமோ வேறு விதத்தின் மூலமோ தங்களைத் தாங்களே கஷ்டப்படுத்திக்கொள்வதைக் குறிக்கலாம்.

அதி. 16
a லேவி 16:16
b எபி 9:23
c லேவி 16: 8, 10
d ஏசா 53:5, 6; 2கொ 5:21
e ஏசா 53:12; எபே 1:7; எபி 9:28; 1பே 2:24; 1யோ 3:5
f சங் 103:12; எபி 13:12
g லேவி 16:10
h யாத் 30:20
i யாத் 28:4; லேவி 8:7
j லேவி 16:3; லேவி 16:5
k எபே 1:7
l லேவி 16: 8, 21
m லேவி 4: 11, 12; எபி 13:11, 12
n லேவி 23: 27, 28; எண் 29:7
o யோவா 3:16; ரோ 8:32; தீத் 2:13, 14; 1யோ 1:7; 1யோ 3:16
p எரே 33:8; எபி 9:13, 14; எபி 10:2
q லேவி 23:32
r எண் 20:26
s யாத் 29:4, 7; லேவி 8:12; லேவி 8:33
t யாத் 28:2; யாத் 29:29; லேவி 16:4
u யாத் 28:39; யாத் 39: 27, 28
v லேவி 16:16
w லேவி 16:20
x லேவி 16:18

சுத்திகரிக்க வேண்டும். குருமார்களுக்காகவும் சபையார் எல்லாருக்காகவும் அவன் பாவப் பரிகாரம் செய்ய வேண்டும்.[a] **34** இஸ்ரவேலர்கள் செய்கிற எல்லா பாவங்களுக்காகவும் வருஷத்துக்கு ஒருமுறை[b] பாவப் பரிகாரம் செய்வதற்கான நிரந்தரச் சட்டம்[c] இது” என்றார்.

யெகோவா மோசேக்குக் கட்டளை கொடுத்தபடியே ஆரோன் செய்தார்.

17 பின்பு யெகோவா மோசேயைப் பார்த்து, **2** “நீ ஆரோனிடமும் அவனுடைய மகன்களிடமும் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரிடமும் சொல்ல வேண்டியது என்னவென்றால், ‘யெகோவாவின் கட்டளை இதுதான்:

3 “இஸ்ரவேல் ஜனங்களில் ஒருவன் காளையையோ செம்மறியாட்டுக்கடாக் குட்டியையோ வெள்ளாட்டையோ சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கொண்டுவராமல், **4** அதாவது யெகோவாவின் வழிபாட்டுக் கூடாரத்துக்கு யெகோவாவுக்காகக் கொண்டுவராமல், முகாமுக்கு உள்ளே அல்லது வெளியே வெட்டினால் அவன்மேல் கொலைப்பழி* விழும். இரத்தம் சிந்திய அவன் கொல்லப்பட வேண்டும். **5** அதனால், இஸ்ரவேலர்கள் இனிமேலும் மிருகங்களை வெட்டவெளியில் பலி கொடுக்கக் கூடாது. அவற்றை யெகோவாவுக்காகச் சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கொண்டுவந்து குருவானவரிடம் கொடுக்க வேண்டும். அவற்றைச் சமாதான பலிகளாக யெகோவாவுக்குச் செலுத்த வேண்டும்.[d] **6** அந்தப் பலிகளின் இரத்தத்தைச் சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்குப் பக்கத்திலுள்ள யெகோவாவின் பலிபீடத்தின்மேல் குருவானவர் தெளிக்க வேண்டும். அவற்றின் கொழுப்பைத் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.[e] **7** இஸ்ரவேலர்கள் இனியும் ஆட்டு உருவப் பேய்களுக்கு* பலிகள் செலுத்தி[f] எனக்குத் துரோகம் செய்யக் கூடாது.[g] இது தலைமுறை தலைமுறைக்கும் ஒரு நிரந்தரச் சட்டம்.”’

8 நீ இஸ்ரவேலர்களிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால், ‘உங்களில் யாராவது அல்லது உங்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களில் யாராவது தான் செலுத்துகிற தகன பலியையோ வேறொரு பலியையோ **9** யெகோவாவுக்காகச் சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கொண்டுவராவிட்டால், அவன் கொல்லப்பட வேண்டும்.[h]

10 உங்களில் யாராவது அல்லது உங்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களில் யாராவது இரத்தத்தைச் சாப்பிட்டால்[i] நான் அவனை ஒதுக்கித்தள்ளி, அவனை அழித்துவிடுவேன். **11** ஏனென்றால், உயிரினங்களின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது.[j] பாவப் பரிகாரம் செய்வதற்காக மட்டும் நீங்கள் பலிபீடத்தில் இரத்தத்தைச் செலுத்தலாம் என்ற கட்டளையை நான் கொடுத்திருக்கிறேன்.[k] ஏனென்றால், இரத்தம்தான் பாவப் பரிகாரம் செய்கிறது,[l] அதில்தான் உயிர் இருக்கிறது. **12** அதனால்தான், “நீங்கள் யாரும் இரத்தத்தைச் சாப்பிடக் கூடாது, உங்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களும்[m] இரத்தத்தைச் சாப்பிடக் கூடாது”[n] என்று இஸ்ரவேலர்களுக்குக் கட்டளை கொடுத்திருக்கிறேன்.

13 உங்களில் ஒருவனோ உங்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களில் ஒருவனோ சாப்பிடுவதற்கு நான் அனுமதித்திருக்கும் ஒரு

17:4 * வே.வா., “இரத்தப்பழி.” 17:7 * நே.மொ., “இனியும் வெள்ளாடுகளுக்கு.”

அதி. 16
a லேவி 16:24; 1யோ 2:1, 2
b யாத் 30:10; எபி 9:7
c லேவி 23:31; எண் 29:7

அதி. 17
d லேவி 3:1, 2; லேவி 7:11
e லேவி 3:3-5; லேவி 7:29-31
f உபா 32:17; யோசு 24:14
g யாத் 34:15; உபா 31:16
h லேவி 1:3; உபா 12:5, 6; உபா 12:13, 14
i ஆதி 9:4; லேவி 3:17; லேவி 7:26; லேவி 19:26; 1சா 14:33; அப் 15:20, 29
j லேவி 17:14; உபா 12:23
k லேவி 8:15; லேவி 16:18
l மத் 26:28; ரோ 3:25; ரோ 5:9; எபே 1:7; எபி 9:22; எபி 13:12; 1பே 1:2; 1யோ 1:7; வெளி 1:5
m யாத் 12:49
n உபா 12:23

காட்டு மிருகத்தை அல்லது பறவையை வேட்டையாடிப் பிடித்தால்,
அதன் இரத்தத்தைக் கீழே ஊற்றி[a] மண்ணைப் போட்டு மூடிவிட வேண்
டும். **14** எல்லா உயிரினத்துக்கும் இரத்தம்தான் உயிராக இருக்கிறது.
ஏனென்றால், இரத்தத்தில்தான் அதன் உயிர் இருக்கிறது. அதனால், "எந்த
உயிரினத்தின் இரத்தத்தையும் நீங்கள் சாப்பிடக் கூடாது, ஏனென்றால்
எல்லா உயிரினத்துக்கும் இரத்தம்தான் உயிராக இருக்கிறது. அதைச் சாப்
பிடுகிற எவனும் கொல்லப்பட வேண்டும்"[b] என்று இஸ்ரவேலர்களிடம்
சொன்னேன். **15** இஸ்ரவேலர்களில் ஒருவனாக இருந்தாலும் சரி, அவர்
களோடு குடியிருக்கிற மற்ற தேசத்தைச் சேர்ந்த ஒருவனாக இருந்தாலும்
சரி, தானாகச் செத்துப்போன மிருகத்தையோ காட்டு மிருகத்தால் கொல்
லப்பட்ட மிருகத்தையோ சாப்பிட்டால்[c] அவன் தன்னுடைய உடைகளைத்
துவைத்து, குளிக்க வேண்டும். அவன் சாயங்காலம்வரை தீட்டுள்ளவனாக
இருப்பான்,[d] அதன்பின் சுத்தமாவான். **16** ஆனால், அவன் தன்னுடைய
உடைகளைத் துவைக்காமலோ குளிக்காமலோ இருந்தால், அந்தக் குற்றத்
துக்காகத் தண்டிக்கப்படுவான்'"[e] என்றார்.

18 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "நீ இஸ்ரவேலர்களிடம்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'உங்கள் கடவுளாகிய
யெகோவா நானே.[f] **3** நீங்கள் குடியிருந்த எகிப்து தேசத்தின் ஜனங்க
ளைப் போல நீங்கள் நடந்துகொள்ளக் கூடாது. நான் உங்களைக் கூட்டிக்
கொண்டு போகிற கானான் தேசத்தில் இருக்கிறவர்களைப் போலவும்
நடந்துகொள்ளக் கூடாது.[g] அவர்களுடைய சட்டதிட்டங்களை* பின்பற்றக்
கூடாது. **4** நீங்கள் என் நீதித்தீர்ப்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும். என்
னுடைய சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.[h] நான் உங்
கள் கடவுளாகிய யெகோவா. **5** என்னுடைய சட்டதிட்டங்களுக்கும் நீதித்
தீர்ப்புகளுக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். அவற்றின்படி நடப்பவர்கள்
அவற்றால் வாழ்வு பெறுவார்கள்.[i] நான் யெகோவா.

6 உங்களில் யாரும் இரத்த சொந்தங்களோடு உடலுறவுகொள்ளக்
கூடாது.[j] நான் யெகோவா. **7** உங்கள் அப்பாவோடு உடலுறவுகொள்ளக்
கூடாது. உங்கள் அம்மாவோடும் உடலுறவுகொள்ளக் கூடாது. அவள் உங்
களைப் பெற்ற அம்மாவாக இருப்பதால் அவளோடு உடலுறவுகொள்
ளக் கூடாது.

8 உங்கள் அப்பாவின் மனைவியோடு உடலுறவுகொள்ளக் கூடாது.[k]
அது உங்கள் அப்பாவை அவமானப்படுத்துவதாக இருக்கும்.

9 உங்கள் சகோதரியோடு உடலுறவுகொள்ளக் கூடாது, அவள் உங்களு
டைய அப்பாவுக்குப் பிறந்தவளாக இருந்தாலும் சரி, அம்மாவுக்குப் பிறந்
தவளாக இருந்தாலும் சரி, அதே குடும்பத்தில் பிறந்திருந்தாலும் சரி, வேறு
குடும்பத்தில் பிறந்திருந்தாலும் சரி.[l]

10 உங்கள் மகனின் மகளுடனோ உங்கள் மகளின் மகளுடனோ உட
லுறவுகொள்ளக் கூடாது. அவர்கள் உங்களுக்கு இரத்த சொந்தமாக இருப்
பதால் அது உங்களுக்கு அவமானமாய் இருக்கும்.

11 உங்கள் அப்பாவுக்கும் அவருடைய மனைவிக்கும் பிறந்த மக
ளோடு நீங்கள் உடலுறவுகொள்ளக் கூடாது. அவள் உங்கள் சகோதரி.

18:3 * வே.வா., "பழக்கவழக்கங்களை."

அதி. 17
a உபா 12:16; உபா 15:23
b லேவி 17:10, 11
c யாத் 22:31; உபா 14:21
d லேவி 11:40
e எண் 19:20

அதி. 18
f ஆதி 17:7; யாத் 6:7
g யாத் 23:24; லேவி 20:23
h லேவி 20:22; உபா 4:1
i லூ 10:27, 28; ரோ 10:5; கலா 3:12
j லேவி 20:17
k ஆதி 35:22; ஆதி 49:4; லேவி 20:11; உபா 27:20; 2சா 16:21; 1கொ 5:1
l லேவி 20:17; உபா 27:22; 2சா 13:10-12

12 உங்கள் அப்பாவின் சகோதரியோடு உடலுறவுகொள்ளக் கூடாது. அவள் உங்களுடைய அப்பாவுக்கு இரத்த சொந்தம்.[a]

13 உங்களுடைய அம்மாவின் சகோதரியோடு உடலுறவுகொள்ளக் கூடாது. அவள் உங்கள் அம்மாவுக்கு இரத்த சொந்தம்.

14 உங்கள் அப்பாவுடைய சகோதரனின் மனைவியோடு உடலுறவு கொள்ளக் கூடாது. அது உங்கள் அப்பாவுடைய சகோதரனை அவமானப் படுத்துவதாக இருக்கும். அவள் உங்கள் பெரியம்மா.*[b]

15 உங்கள் மருமகளுடன் உடலுறவுகொள்ளக் கூடாது.[c] அவள் உங்க ளுடைய மகனின் மனைவியாக இருப்பதால் அவளுடன் உடலுறவுகொள் ளக் கூடாது.

16 உங்கள் சகோதரனுடைய மனைவியுடன் உடலுறவுகொள்ளக் கூடாது.[d] அது உங்கள் சகோதரனை அவமானப்படுத்துவதாக இருக்கும்.

17 உங்கள் மனைவியின் மகளுடன் உடலுறவுகொள்ளக் கூடாது.[e] அவ ளுடைய மகனின் மகளுடனோ அவளுடைய மகளின் மகளுடனோ உட லுறவுகொள்ளக் கூடாது. இவர்கள் அவளுக்கு இரத்த சொந்தமாக இருப்ப தால் அது வெட்கங்கெட்ட செயலாக இருக்கும்.

18 உங்கள் மனைவி உயிரோடு இருக்கும்போதே, அவளுடைய சகோ தரியை இரண்டாம் தாரமாக ஆக்கிக்கொள்ளக் கூடாது.[f] அவளுடன் உட லுறவுகொள்ளக் கூடாது.

19 மாதவிலக்கு நாட்களில் உங்கள் மனைவியுடன் உடலுறவுகொள்ளக் கூடாது.[g]

20 அடுத்தவன் மனைவியோடு உடலுறவுகொண்டு, உங்களை அசுத் தப்படுத்தக் கூடாது.[h]

21 உங்களுடைய பிள்ளைகளில் யாரையும் மோளேகு தெய்வத்துக்கு அர்ப்பணித்து,*[i] உங்கள் கடவுளாகிய என் பெயரைக் களங்கப்படுத்தக் கூடாது.[j] நான் யெகோவா.

22 ஒருவன் பெண்ணோடு உடலுறவுகொள்வது போல ஆணோடு உட லுறவுகொள்ளக் கூடாது.[k] அது அருவருப்பானது.

23 ஒரு ஆண் எந்தவொரு மிருகத்துடனும் உறவுகொண்டு தன்னை அசுத்தப்படுத்தக் கூடாது. அதேபோல் ஒரு பெண் எந்த மிருகத்தோடும் உறவுகொள்ளக் கூடாது.[l] அது இயற்கைக்கு முரணானது.

24 இவற்றில் எதையாவது செய்து உங்களை அசுத்தப்படுத்தாதீர்கள்.
ஏனென்றால், உங்களிடமிருந்து நான் துரத்திவிடுகிற ஜனங்கள் இப்படி
யெல்லாம் செய்து தங்களை அசுத்தமாக்கிக்கொண்டார்கள்.[m] **25** அத
னால், அவர்களுடைய தேசம் அசுத்தமாக இருக்கிறது. அந்தத் தேசத்தின்
குற்றத்துக்காக நான் அதைத் தண்டிப்பேன், அந்தத் தேசத்தின் ஜனங்கள்
துரத்தியடிக்கப்படுவார்கள்.[n] **26** நீங்கள் என் சட்டதிட்டங்களுக்கும் நீதித்
தீர்ப்புகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்.[o] நீங்களும் சரி, உங்கள் மத்தியில்
குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களும் சரி, இப்படிப்பட்ட எந்த அருவ
ருப்பான செயலையும் செய்யக் கூடாது.[p] **27** அந்தத் தேசத்தில் வாழ்ந்து
வருகிற ஜனங்கள் இந்த அருவருப்பான செயல்கள் எல்லாவற்றையும்

18:14 * அல்லது, “சித்தி.” **18:21** * பிள்ளையை நரபலி கொடுப்பதையும் இது அர்த் தப்படுத்தலாம்.

அதி. 18
a லேவி 20:19
b லேவி 20:20
c லேவி 20:12
d லேவி 20:21, உபா 25:5, மாற் 6:17, 18
e லேவி 20:14, உபா 27:23
f ஆதி 30:15
g லேவி 15:19, 24, லேவி 20:18
h யாத் 20:14, லேவி 20:10, உபா 22:22, நீதி 6:29, மத் 5:27, 28, 1கொ 6:9, 10, எபி 13:4
i லேவி 20:2, உபா 18:10, 1ரா 11:7, 2ரா 23:10
j லேவி 20:3
k ஆதி 19:5, லேவி 20:13, நியா 19:22, ரோ 1:26, 27, 1கொ 6:9, 10, யூ 7
l யாத் 22:19, லேவி 20:15, 16
m லேவி 20:23, உபா 18:12
n ஆதி 15:16
o லேவி 20:22, உபா 4:1, 40
p யாத் 12:49

செய்துவந்தார்கள்.[a] அதனால், இப்போது அந்தத் தேசம் அசுத்தமாக இருக்
கிறது. **28** நீங்களும் அதை அசுத்தமாக்காமல் இருங்கள். இல்லாவிட்
டால், அந்தத் தேசத்தில் வாழ்ந்துவருகிற ஜனங்கள் எப்படி அங்கிருந்து
துரத்தப்படுவார்களோ அப்படியே நீங்களும் துரத்தப்படுவீர்கள். **29** உங்
களில் யாராவது இப்படிப்பட்ட அருவருப்பான செயல்களைச் செய்தால்,
அவன் கொல்லப்பட வேண்டும். **30** அந்தத் தேசத்தில் வாழ்ந்துவரு
கிற ஜனங்களுடைய அருவருப்பான பழக்கவழக்கங்கள் எதையும் பின்பற்
றாமல் என் கட்டளைகளைக் கடைப்பிடியுங்கள்.[b] அப்போதுதான், அவற்
றால் உங்களை அசுத்தப்படுத்த மாட்டீர்கள். நான் உங்கள் கடவுளாகிய
யெகோவா'" என்றார்.

19 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "இஸ்ரவேல் ஜனங்கள் எல்லா
ரிடமும் நீ சொல்ல வேண்டியது என்னவென்றால், 'நான் உங்கள்
கடவுளாகிய யெகோவா. நான் பரிசுத்தமானவர், அதனால் நீங்களும் பரி
சுத்தமாக இருக்க வேண்டும்.[c]

3 நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய அம்மா அப்பாவுக்கு மதிப்
புக் கொடுக்க வேண்டும்.[d] ஓய்வுநாட்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.[e]
நான் உங்கள் கடவுளாகிய யெகோவா. **4** ஒன்றுக்கும் உதவாத தெய்வங்
களை நீங்கள் வணங்கக் கூடாது,[f] சிலைகளை வார்த்து அவற்றைக் கும்பி
டக் கூடாது.[g] நான் உங்கள் கடவுளாகிய யெகோவா.

5 நீங்கள் யெகோவாவுக்குச் சமாதான பலி செலுத்தினால்,[h] அவர் ஏற்
றுக்கொள்ளும் விதத்தில் அதைச் செலுத்த வேண்டும்.[i] **6** பலி செலுத்
தும் நாளில் அதைச் சாப்பிட வேண்டும், அடுத்த நாளிலும் அதைச் சாப்
பிடலாம். ஆனால், மூன்றாம் நாள்வரை மீதியாக இருப்பதை எரித்துவிட
வேண்டும்.[j] **7** மூன்றாம் நாளிலும் சாப்பிட்டால், அது அருவருப்பானது.
நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். **8** அதைச் சாப்பிடுகிறவன் அந்
தக் குற்றத்துக்காகத் தண்டிக்கப்படுவான். ஏனென்றால், யெகோவா பரிசுத்
தமாக நினைப்பதை அவன் அவமதிக்கிறான். அதனால் அவன் கொல்லப்
பட வேண்டும்.

9 உங்கள் வயலில் அறுவடை செய்யும்போது வரப்பு ஓரத்தில் உள்ள
கதிர்களை முழுமையாக அறுவடை செய்யக் கூடாது, சிந்திய கதிர்
களை எடுக்கவும் கூடாது.[k] **10** அதோடு, உங்கள் திராட்சைத் தோட்டத்
தில் பறிக்காமல் விடப்பட்ட பழங்களையோ கீழே விழுந்து கிடக்கிற பழங்
களையோ எடுக்கக் கூடாது. அவற்றை ஏழைகளுக்காகவும் உங்களோடு
வாழ்கிற மற்ற தேசத்து ஜனங்களுக்காகவும் விட்டுவிட வேண்டும்.[l] நான்
உங்கள் கடவுளாகிய யெகோவா.

11 நீங்கள் திருடக் கூடாது,[m] ஏமாற்றக் கூடாது,[n] யாருக்கும் அநி
யாயம் செய்யக் கூடாது. **12** நீங்கள் என்னுடைய பெயரில் பொய் சத்தியம்
செய்து என் பெயரைக் களங்கப்படுத்தக் கூடாது.[o] நான் உங்கள் கடவுளா
கிய யெகோவா. **13** நீங்கள் மோசடி செய்யக் கூடாது,[p] கொள்ளையடிக்க*
கூடாது.[q] கூலியாளுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தை அடுத்த நாள்
காலைவரை நீங்களே வைத்திருக்கக் கூடாது.[r]

19:13 *இந்த வார்த்தை, ஒருவருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருப்பதையும் குறிக்கலாம்.

அதி. 18
a உபா 20:17, 18; 2ரா 16:2, 3; 2ரா 21:1, 2
b லேவி 18:3; லேவி 20:23; உபா 18:9

அதி. 19
c லேவி 11:44; ஏசா 6:3; 1பே 1:15, 16; வெளி 4:8
d யாத் 20:12; எபே 6:2; எபி 12:9
e யாத் 20:8, 11; யாத் 31:13; லூ 6:5
f லேவி 26:1; சங் 96:5; ஆப 2:18; 1கொ 10:14
g யாத் 20:4, 23; உபா 27:15
h லேவி 3:1
i லேவி 7:11, 12
j லேவி 7:17, 18
k லேவி 23:22; உபா 24:19
l உபா 15:7
m யாத் 20:15; எபே 4:28
n லேவி 6:2; நீதி 12:22; எபே 4:25
o யாத் 20:7; மத் 5:33, 37; யாக் 5:12
p நீதி 22:16; மாற் 10:19
q நீதி 22:22
r உபா 24:15; எரே 22:13; யாக் 5:4

14 காது கேட்காதவனைச் சபித்துப் பேசக் கூடாது. கண் தெரியாத
வனுக்கு முன்னால் எதையாவது போட்டு அவனைத் தடுக்கி விழ வைக்
கக் கூடாது.[a] உங்கள் கடவுளுக்கு நீங்கள் பயந்து நடக்க வேண்டும்.[b] நான்
யெகோவா.

15 நீங்கள் அநியாயமாகத் தீர்ப்பு சொல்லக் கூடாது. ஏழைக்குப் பாரபட்
சம் காட்டவோ பணக்காரனுக்குச் சலுகை காட்டவோ கூடாது.[c] எல்லாருக்
கும் நியாயமாகத் தீர்ப்பு சொல்ல வேண்டும்.

16 அடுத்தவர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் பேசிக்
கொண்டு திரியக் கூடாது.[d] அவர்களுடைய உயிருக்கு உலை வைக்கக்
கூடாது.*[e] நான் யெகோவா.

17 உள்ளத்தில்கூட உங்கள் சகோதரனை வெறுக்காதீர்கள்.[f] ஒருவன்
பாவம் செய்தால் அவனைக் கண்டியுங்கள்.[g] இல்லாவிட்டால், நீங்களும்
அவனுடைய பாவத்துக்கு உடந்தையாகிவிடுவீர்கள்.

18 உங்கள் ஜனங்களை நீங்கள் பழிவாங்கக் கூடாது.[h] அவர்கள்மேல்
பகை* வைத்திருக்கக் கூடாது. உங்கள்மேல் நீங்கள் அன்பு காட்டுவது
போல மற்றவர்கள்மேலும்# அன்பு காட்ட வேண்டும்.[i] நான் யெகோவா.

19 நான் கொடுக்கும் இந்தச் சட்டதிட்டங்களை நீங்கள் கடைப்பிடிக்க
வேண்டும்: இரண்டு விதமான வீட்டு விலங்குகளை இனக்கலப்பு செய்யக்
கூடாது. இரண்டு வகையான தானியங்களைக் கலந்து உங்கள் வயலில்
விதைக்கக் கூடாது.[j] இரண்டு விதமான நூல்களைக் கலந்து நெய்யப்பட்ட
உடையை உடுத்தக் கூடாது.[k]

20 ஒரு அடிமைப் பெண் இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்டு இருக்
கலாம். ஆனால், அவள் மீட்கப்படாமலோ விடுதலை செய்யப்படாமலோ
இருக்கலாம். அவளோடு ஒருவன் உடலுறவுகொண்டால் அவர்களுக்குத்
தண்டனை கொடுக்க வேண்டும். ஆனால், அவர்களைக் கொல்லக் கூடாது.
ஏனென்றால், அவள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. **21** அவன்
யெகோவாவுக்குக் குற்ற நிவாரண பலி செலுத்த ஒரு செம்மறியாட்டுக் கடா
வைச்[l] சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கொண்டுவர வேண்டும்.
22 அவன் செய்த பாவத்துக்காகக் குருவானவர் அந்தச் செம்மறியாட்டுக்
கடாவை யெகோவாவின் சன்னிதியில் கொண்டுவந்து அவனுக்குப் பாவப்
பரிகாரம் செய்வார். அப்போது, அவனுடைய பாவம் மன்னிக்கப்படும்.

23 நான் கொடுக்கிற தேசத்துக்கு வந்தபின் அங்கே ஏதாவது பழ
மரத்தை நீங்கள் நட்டால், அதன் பழங்களை மூன்று வருஷங்களுக்குச்
சாப்பிடக் கூடாது. தடை செய்யப்பட்ட அசுத்தமான பழங்களாக அவற்
றைக் கருத வேண்டும். **24** ஆனால், நான்காம் வருஷத்தில் அதன் பழங்
கள் பரிசுத்தமாக இருக்கும், நீங்கள் அவற்றை யெகோவாவுக்குச் சந்தோஷ
மாகப் படைக்க வேண்டும்.[m] **25** ஐந்தாம் வருஷத்தில் அதன் பழங்களை
நீங்கள் சாப்பிடலாம். அந்த மரம் உங்களுக்கு ஏராளமான பழங்களைக்
கொடுக்கும். நான் உங்கள் கடவுளாகிய யெகோவா.

26 இரத்தம் கலந்த எதையும் நீங்கள் சாப்பிடக் கூடாது.[n]

நீங்கள் சகுனம் பார்க்கவோ மாயமந்திரம் செய்யவோ கூடாது.[o]

19:16 * அல்லது, “அடுத்தவர்களுடைய உயிர் ஆபத்தில் இருக்கும்போது நீங்கள் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்க்கக் கூடாது.” **19:18** * வே.வா., “வன்மம்.” # வே.வா., “சக மனிதர்மேலும்.”

அதி. 19
a உபா 27:18
b லேவி 25:17, நெ 5:15, நீதி 1:7, நீதி 8:13, 1பே 2:17
c யாத் 23:3, உபா 1:16, 17, உபா 16:19, 2நா 19:6, ரோ 2:11, யாக் 2:9
d சங் 15:1, 3
e யாத் 20:16, 1ரா 21:13
f நீதி 10:18, 1யோ 2:9, 1யோ 3:15
g சங் 141:5, நீதி 9:8, மத் 18:15
h நீதி 20:22, ரோ 12:19
i மத் 5:43, 44, மத் 22:39, ரோ 13:9, கலா 5:14, யாக் 2:8
j உபா 22:9
k உபா 22:11
l லேவி 6:6, 7
m உபா 26:1, 2, நீதி 3:9
n லேவி 3:17, லேவி 17:13, உபா 12:23, அப் 15:20, 29
o யாத் 8:7, உபா 18:10-12, கலா 5:19, 20, வெளி 21:8

27 உங்களுடைய கிருதாவைச் சிரைத்துக்கொள்ள* கூடாது. உங்கள்
தாடியை வெட்டி அலங்கோலமாக்கக் கூடாது.#[a]

28 இறந்தவர்களுக்காக உங்கள் உடலைக் கீறிக் கிழித்துக்கொள்ளக்
கூடாது,[b] உங்கள் உடலில் பச்சை குத்திக்கொள்ளக் கூடாது. நான்
யெகோவா.

29 உங்களுடைய மகளை விபச்சாரியாக்கி அவளை அவமானப்படுத்
தக் கூடாது.[c] அப்படிச் செய்தால், உங்கள் தேசம் விபச்சாரிகளால் சீரழிந்து
விடும். அங்கே ஒழுக்கக்கேடு பெருகிவிடும்.[d]

30 நான் கட்டளை கொடுத்த ஓய்வுநாட்களை நீங்கள் கடைப்பிடிக்க
வேண்டும்,[e] என் வழிபாட்டுக் கூடாரத்துக்கு நீங்கள் பயபக்தி காட்ட வேண்
டும். நான் யெகோவா.

31 ஆவிகளோடு பேசுகிறவர்களிடம் நீங்கள் போகக் கூடாது.[f] குறி
சொல்கிறவர்களிடம் குறி கேட்டு, உங்களை அசுத்தமாக்கிவிடக் கூடாது.[g]
நான் உங்கள் கடவுளாகிய யெகோவா.

32 நரைமுடி உள்ளவருக்கு முன்னால் நீங்கள் எழுந்து நிற்க வேண்
டும்,[h] வயதில் மூத்தவருக்கு நீங்கள் மரியாதை கொடுக்க வேண்டும்.[i] உங்
கள் கடவுளுக்கு நீங்கள் பயந்து நடக்க வேண்டும்.[j] நான் யெகோவா.

33 உங்கள் தேசத்தில் குடியிருக்கிற வேறு தேசத்து ஜனங்களை
நீங்கள் மோசமாக நடத்தக் கூடாது.[k] **34** உங்களோடு குடியிருக்கிற வேறு
தேசத்து ஜனங்களை உங்கள் தேசத்து ஜனங்களைப் போலவே நடத்த
வேண்டும்.[l] உங்களை நேசிப்பது போல அவர்களையும் நேசிக்க வேண்
டும். நீங்களும் வேறு தேசத்தில், அதாவது எகிப்தில், குடியிருந்தீர்களே.[m]
நான் உங்கள் கடவுளாகிய யெகோவா.

35 எதையாவது அளக்கும்போதோ எடை போடும்போதோ நீங்கள்
ஏமாற்றக் கூடாது.[n] **36** சரியான தராசையும் சரியான எடைக்கல்லையும்
சரியான படியையும்* சரியான ஆழாக்கையும்# நீங்கள் பயன்படுத்த
வேண்டும்.[o] எகிப்து தேசத்திலிருந்து உங்களைக் கூட்டிக்கொண்டு வந்த
உங்கள் கடவுளாகிய யெகோவா நானே. **37** என்னுடைய எல்லா சட்ட
திட்டங்களையும் நீதித்தீர்ப்புகளையும் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும்,
அவற்றைப் பின்பற்ற வேண்டும்.[p] நான் யெகோவா'" என்றார்.

20 பின்பு யெகோவா மோசேயைப் பார்த்து, **2** "நீ இஸ்ரவேலர்களி
டம் சொல்ல வேண்டியது என்னவென்றால், 'இஸ்ரவேலைச்
சேர்ந்த ஒருவனோ இஸ்ரவேலில் குடியிருக்கிற மற்ற தேசத்தைச் சேர்ந்த
ஒருவனோ மோளேகு தெய்வத்துக்குத் தன் பிள்ளையை அர்ப்பணித்
தால்,* அவன் கண்டிப்பாகக் கொல்லப்பட வேண்டும்.[q] அவனை நீங்கள்
கல்லெறிந்து கொல்ல வேண்டும். **3** தன்னுடைய பிள்ளையை மோளேகுக்
குக் கொடுக்கிறவன் என் பரிசுத்த இடத்தின் புனிதத்தைக் கெடுக்கிறான், என்
பரிசுத்த பெயரைக் களங்கப்படுத்துகிறான். அதனால் நான் அவனை ஒதுக்
கித்தள்ளி, அவனை அழித்துவிடுவேன்.[r] **4** அந்த மனுஷன் தன்னுடைய

19:27 *வே.வா., "வெட்டிக்கொள்ள." #இது புறமத பழக்கங்களைக் குறிக்கலாம். **19:36** *நே.மொ., "எப்பாவையும்." இணைப்பு B14-ஐப் பாருங்கள். #நே.மொ., "ஹின் அளவையும்." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **20:2** *பிள்ளையை நரபலி கொடுப்பதையும் இது அர்த்தப்படுத்தலாம்.

அதி. 19
a லேவி 21:1, 5
b உபா 14:1
c உபா 23:17
d எபி 13:4; 1பே 4:3
e யாத் 20:10; யாத் 31:13
f லேவி 20:6; உபா 18:10–12; 1நா 10:13; ஏசா 8:19
g லேவி 20:27; அப் 16:16
h நீதி 16:31; நீதி 20:29
i யோபு 32:6; நீதி 23:22; 1தீ 5:1
j யோபு 28:28; நீதி 1:7; நீதி 8:13; 1பே 2:17
k யாத் 23:9
l யாத் 12:49
m யாத் 22:21
n உபா 25:13, 15; நீதி 20:10
o நீதி 11:1
p லேவி 18:5; உபா 4:6

அதி. 20
q லேவி 18:21; உபா 18:10
r எசே 5:11

பிள்ளையை மோளேகுக்குக் கொடுப்பதைப் பார்த்தும் நீங்கள் அதைக் கண்
டுகொள்ளாமலும், அவனைக் கொல்லாமலும் விட்டுவிட்டால்,[a] 5 நான்
நிச்சயம் அவனையும் அவனுடைய குடும்பத்தையும் ஒதுக்கித்தள்ளுவேன்.[b]
அவனை மட்டுமல்லாமல், அவனோடு சேர்ந்து மோளேகை வணங்கி எனக்
குத் துரோகம் செய்த எல்லாரையும் அழித்துவிடுவேன்.

6 ஆவிகளோடு பேசுகிறவர்களிடமும்[c] குறிசொல்கிறவர்களிடமும்[d]
போவதன் மூலம் எனக்குத் துரோகம் செய்கிறவனை நான் ஒதுக்கித்தள்ளி,
அவனை அழித்துவிடுவேன்.[e]

7 நீங்கள் உங்களைப் புனிதப்படுத்திக்கொண்டு, பரிசுத்தமாக இருக்க
வேண்டும்.[f] ஏனென்றால், நான் உங்களுடைய கடவுளாகிய யெகோவா.
8 நீங்கள் என் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.[g] உங்
களைப் புனிதப்படுத்துகிற யெகோவா நானே.[h]

9 அப்பாவையோ அம்மாவையோ ஒருவன் சபித்தால் அவன் கண்டிப்
பாகக் கொல்லப்பட வேண்டும்.[i] அப்பாவையோ அம்மாவையோ சபித்த
தால், அவனுடைய சாவுக்கு அவன்தான் பொறுப்பு.

10 ஒருவன் இன்னொருவனுடைய மனைவியோடு உறவுகொண்டு தன்
மனைவிக்குத் துரோகம் செய்தால், தவறு செய்த இரண்டு பேரும் கண்டிப்
பாகக் கொல்லப்பட வேண்டும்.[j] 11 தன்னுடைய அப்பாவின் மனைவி
யோடு உடலுறவுகொள்கிறவன் தன் அப்பாவை அவமானப்படுத்துகிறான்.[k]
அவனும் அவளும் கண்டிப்பாகக் கொல்லப்பட வேண்டும். அவர்களு
டைய சாவுக்கு அவர்கள்தான் பொறுப்பு. 12 ஒருவன் தன்னுடைய மரும
களோடு உடலுறவுகொண்டால், அவர்கள் இரண்டு பேரும் கண்டிப்பா
கக் கொல்லப்பட வேண்டும். அவர்கள் செய்தது இயற்கைக்கு முரணானது.
அவர்களுடைய சாவுக்கு அவர்கள்தான் பொறுப்பு.[l]

13 ஒருவன் பெண்ணோடு உடலுறவுகொள்வதுபோல் ஆணோடு உட
லுறவுகொண்டால், அது அருவருப்பானது.[m] அவர்கள் இரண்டு பேரும்
கண்டிப்பாகக் கொல்லப்பட வேண்டும். அவர்களுடைய சாவுக்கு அவர்கள்
தான் பொறுப்பு.

14 ஒருவன் ஒருத்தியைக் கல்யாணம் செய்துகொண்டு அவளுடைய
தாயோடும் உடலுறவுகொண்டால், அது வெட்கங்கெட்ட செயல்.[n] அவனும்
அவர்களும் கொல்லப்பட்டு, எரிக்கப்பட வேண்டும்.[o] அப்போதுதான், இப்
படிப்பட்ட வெட்கங்கெட்ட செயல் உங்கள் மத்தியில் நடக்காது.

15 ஒருவன் ஒரு மிருகத்தோடு உறவுகொண்டால் அவன் கண்டிப்
பாகக் கொல்லப்பட வேண்டும், அந்த மிருகமும் கொல்லப்பட வேண்டும்.[p]
16 ஒரு பெண் ஒரு மிருகத்தோடு உறவுகொண்டால்,[q] அவளையும் அந்த
மிருகத்தையும் நீங்கள் கொல்ல வேண்டும். மிருகத்தோடு உறவுகொள்கிற
வர்கள் கண்டிப்பாகக் கொல்லப்பட வேண்டும். அவர்கள் சாவுக்கு அவர்
கள்தான் பொறுப்பு.

17 ஒருவன் தன்னுடைய சகோதரியோடு, அதாவது தன்னுடைய அப்
பாவுக்கோ அம்மாவுக்கோ பிறந்தவளோடு, உடலுறவுகொண்டால் அது
வெட்கக்கேடு.[r] அவர்கள் இரண்டு பேரும் ஜனங்களின் கண் முன்னால்
கொல்லப்பட வேண்டும். அவன் தன்னுடைய சகோதரியை அவமானப்
படுத்திய குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட வேண்டும்.

அதி. 20
a உபா 13:6-9
b யாத் 20:5
c லேவி 19:31 உபா 18:10-12 கலா 5:19, 20 வெளி 21:8
d லேவி 20:27 அப் 16:16
e 1நா 10:13
f லேவி 11:44 1பே 1:15, 16
g லேவி 18:4 பிர 12:13
h யாத் 31:13 லேவி 21:8 1தெ 5:23 2தெ 2:13
i யாத் 21:17 உபா 27:16 நீதி 20:20 மத் 15:4
j உபா 5:18 உபா 22:22 ரோ 7:3 1கொ 6:9, 10
k லேவி 18:8 உபா 27:20
l லேவி 18:15, 29
m ஆதி 19:5 லேவி 18:22 நியா 19:22 ரோ 1:26, 27 1கொ 6:9, 10 யூ 7
n லேவி 18:17 உபா 27:23
o லேவி 21:9
p யாத் 22:19 உபா 27:21
q லேவி 18:23
r லேவி 18:9 உபா 27:22

18 மாதவிலக்கு ஏற்பட்ட ஒரு பெண்ணோடு ஒருவன் உடலுறவுகொண்
டால், அவர்கள் இரண்டு பேரும் இரத்தத்தின் புனிதத்தை அவமதிக்கிறார்
கள் என்று அர்த்தம்.[a] அவர்கள் இரண்டு பேரும் கொல்லப்பட வேண்டும்.

19 உங்களுடைய அம்மாவின் சகோதரியோடு அல்லது அப்பாவின்
சகோதரியோடு உடலுறவுகொள்ளக் கூடாது. ஏனென்றால், அது இரத்த
சொந்தத்தை அவமானப்படுத்துவதாக இருக்கும்.[b] அந்தக் குற்றத்துக்காக
அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். **20** தன் அப்பாவுடைய சகோதர
னின் மனைவியோடு உடலுறவுகொள்கிறவன் தன் அப்பாவுடைய சகோத
ரனை அவமானப்படுத்துகிறான்.[c] அவனும் அவளும் அந்தப் பாவத்துக்கா
கத் தண்டிக்கப்பட வேண்டும். அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கக் கூடாது,
அவர்கள் கொல்லப்பட வேண்டும். **21** ஒருவன் தன்னுடைய சகோதரனின்
மனைவியோடு உடலுறவுகொண்டால், அது கேவலமான செயல்.[d] அவன்
தன்னுடைய சகோதரனை அவமானப்படுத்துகிறான். அவர்களுக்குப் பிள்
ளைகள் பிறக்கக் கூடாது, அவர்கள் கொல்லப்பட வேண்டும்.

22 என்னுடைய எல்லா சட்டதிட்டங்களுக்கும் நீதித்தீர்ப்புகளுக்கும் நீங்
கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.[e] அப்போதுதான், நீங்கள் குடியிருப்
பதற்காக நான் கூட்டிக்கொண்டு போகும் தேசத்திலிருந்து துரத்தப்பட மாட்
டீர்கள்.[f] **23** நான் உங்களைவிட்டு விரட்டியடிக்கிற ஜனங்களின் சட்ட
திட்டங்களை* நீங்கள் பின்பற்றக் கூடாது.[g] இப்படிப்பட்ட எல்லா செயல்க
ளையும் அவர்கள் செய்திருக்கிறார்கள், அவர்களை நான் அருவருக்கி
றேன்.[h] **24** அதனால்தான் நான் உங்களிடம், “அவர்களுடைய தேசத்தை
நீங்கள் சொந்தமாக்கிக்கொள்வீர்கள். பாலும் தேனும் ஓடுகிற அந்தத்
தேசத்தை நான் உங்களுக்குக் கொடுப்பேன்.[i] மற்ற எல்லா ஜனங்களிலிருந்
தும் உங்களைப் பிரித்து வைத்திருக்கிற உங்கள் கடவுளாகிய யெகோவா
நானே”[j] என்று சொன்னேன். **25** சுத்தமான மிருகத்துக்கும் அசுத்தமான
மிருகத்துக்கும், சுத்தமான பறவைக்கும் அசுத்தமான பறவைக்கும்
உள்ள வித்தியாசத்தை நீங்கள் தெரிந்திருக்க வேண்டும்.[k] அசுத்தமென்று
நான் விலக்கிய மிருகத்தாலோ பறவையாலோ ஊரும் பிராணியாலோ
நீங்கள் உங்களை அருவருப்பானவர்களாக ஆக்கிக்கொள்ளக் கூடாது.[l]
26 யெகோவாவாகிய நான் பரிசுத்தமாக இருப்பதால், நீங்களும் என்முன்
பரிசுத்தமாக இருக்க வேண்டும்.[m] நீங்கள் என் சொந்த ஜனங்களாய் இருப்
பதற்காக மற்ற எல்லா ஜனங்களிலிருந்தும் உங்களைப் பிரித்து வைத்திருக்
கிறேன்.[n]

27 ஆவிகளோடு பேசுகிற அல்லது குறிசொல்கிற ஒருவனோ ஒருத்
தியோ நிச்சயம் கொல்லப்பட வேண்டும்.[o] ஜனங்கள் அவர்களைக் கல்லெ
றிந்து கொல்ல வேண்டும். அவர்களுடைய சாவுக்கு அவர்கள்தான்
பொறுப்பு’” என்றார்.

21 பின்பு யெகோவா மோசேயிடம், “குருமார்களாகச் சேவை செய்கிற
ஆரோனின் மகன்களிடம் நீ சொல்ல வேண்டியது என்னவென்
றால், ‘தங்களுடைய ஜனத்தில் இறந்துபோன ஒருவனுக்காக யாருமே தங்
களைத் தீட்டுப்படுத்தக் கூடாது.[p] **2** ஆனால் இரத்த சொந்தங்கள் இறந்து
போனால், அதாவது அம்மா, அப்பா, மகன், மகள், சகோதரன், **3** அல்லது

20:23 * வே.வா., “பழக்கவழக்கங்களை.”

அதி. 20
a லேவி 18:19
b லேவி 18:12, 13
c லேவி 18:14
d லேவி 18:16; உபா 25:5
e யாத் 21:1; உபா 5:1; பிர 12:13
f லேவி 18:26, 28
g லேவி 18:3, 24; உபா 12:30
h லேவி 18:27; உபா 9:5
i யாத் 3:17; யாத் 6:8; உபா 8:7-9; எசே 20:6
j யாத் 19:5; யாத் 33:16; 1ரா 8:53; 1பே 2:9
k லேவி 11:46, 47; உபா 14:4-20
l லேவி 11:43
m லேவி 19:2; சங் 99:5; 1பே 1:15, 16; வெளி 4:8
n உபா 7:6
o யாத் 22:18; லேவி 19:31; லேவி 20:6; உபா 18:10-12; வெளி 21:8

அதி. 21
p எண் 19:14

கல்யாணமாகிப் போகாத* சகோதரி இறந்துபோனால் தங்களைத் தீட்டுப்
படுத்திக்கொள்ளலாம். **4** தங்களுடைய ஜனத்தில் ஒருவனைக் கல்யாணம்
செய்த பெண்ணுக்காக யாரும் துக்கம் அனுசரித்து தங்களையே களங்கப்
படுத்தக் கூடாது. **5** குருமார்கள் மொட்டை போட்டுக்கொள்ளவோ,[a]
குறுந்தாடி வைத்துக்கொள்ளவோ, உடலைக் கீறிக் கிழித்துக்கொள்ளவோ
கூடாது.[b] **6** அவர்கள் கடவுளுடைய பெயரைக் களங்கப்படுத்தாமல்[c]
அவருக்கு முன்னால் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.[d] அவர்கள் யெகோ
வாவுக்கு உணவைப் படைப்பதால், அதாவது அவருக்குத் தகன பலிக
ளைச் செலுத்துவதால், பரிசுத்தமாக இருக்க வேண்டும்.[e] **7** குருமார்கள்
கடவுளுடைய பார்வையில் பரிசுத்தமானவர்களாக இருப்பதால் அவர்கள்
ஒரு விபச்சாரியையோ[f] கற்பைப் பறிகொடுத்த பெண்ணையோ விவாகரத்
தான பெண்ணையோ[g] கல்யாணம் செய்யக் கூடாது. **8** அவர்கள் உங்க
ளுடைய கடவுளுக்கு உணவைப் படைப்பதால் நீங்கள் அவர்களைப்
புனிதமானவர்களாக நினைக்க வேண்டும்.[h] உங்களைப் புனிதப்படுத்துகிற
யெகோவாவாகிய நான் பரிசுத்தமானவர்.[i] அதனால், நீங்கள் அவர்களைப்
பரிசுத்தமானவர்களாக நினைக்க வேண்டும்.

9 குருவானவரின் மகள் விபச்சாரம் செய்தால், தனக்கு மட்டுமல்ல தன்
அப்பாவுக்கும் அவமானத்தைக் கொண்டுவருகிறாள். அவள் கொல்லப்
பட்டு, எரிக்கப்பட வேண்டும்.[j]

10 குருமார்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைக் குருவான
வர் அபிஷேகம் செய்யப்பட்டிருப்பதாலும்,[k] பரிசுத்த உடைகளைப்[l] போட்
டிருப்பதாலும், இறந்தவருக்காகத் துக்கப்பட்டு தன்னுடைய தலைமுடியை
அலங்கோலமாக விடவோ உடைகளைக் கிழித்துக்கொள்ளவோ கூடாது.[m]
11 இறந்தவரின் உடலுக்குப் பக்கத்தில் அவர் போகக் கூடாது.[n] தன்னு
டைய அப்பாவோ அம்மாவோ இறந்திருந்தாலும் தன்னைத் தீட்டுப்படுத்
தக் கூடாது. **12** வழிபாட்டுக் கூடாரத்தைவிட்டு அவர் வெளியே போய்,
தன் கடவுளுடைய கூடாரத்தைக் களங்கப்படுத்தக் கூடாது.[o] ஏனென்றால்,
அர்ப்பணிப்பின் அடையாளமாகிய கடவுளுடைய அபிஷேகத் தைலம்[p]
அவர் தலையில் ஊற்றப்பட்டிருக்கிறது. நான் யெகோவா.

13 அவர் ஒரு கன்னிப்பெண்ணைத்தான் கல்யாணம் செய்ய வேண்டும்.[q]
14 அவருடைய ஜனத்திலிருந்துதான் அவர் பெண்ணெடுக்க வேண்டும்.
விதவையையோ விவாகரத்தான பெண்ணையோ கற்பைப் பறிகொடுத்த
பெண்ணையோ விபச்சாரியையோ கல்யாணம் செய்யக் கூடாது. **15** அப்
படிக் கல்யாணம் செய்து தன்னுடைய ஜனத்தின் மத்தியில் தன் சந்ததியைக்
களங்கப்படுத்தக் கூடாது.[r] ஏனென்றால், நான் அவரைப் புனிதப்படுத்துகி
றேன். நான் யெகோவா'" என்றார்.

16 பின்பு யெகோவா மோசேயைப் பார்த்து, **17** "நீ ஆரோனிடம்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'உன் சந்ததியில் யாருக்காவது
உடல் குறைபாடு இருந்தால், அவன் கடவுளுக்கு உணவைப் படைக்கக்
கூடாது. **18** பார்வை இல்லாதவன், கால் ஊனமானவன், விகாரமான
முகம் உள்ளவன், ஒரு கையோ காலோ நீளமாக உள்ளவன், **19** கால்
எலும்போ கை எலும்போ முறிந்தவன், **20** கூன் விழுந்தவன், படு குள்ள

21:3 * நே.மொ., "தன்னோடு இருக்கிற கன்னிப் பெண்ணாகிய."

அதி. 21
- *a* உபா 14:1
- *b* லேவி 19: 27, 28
- *c* லேவி 18:21, லேவி 19:12, லேவி 22:32
- *d* யாத் 29:44
- *e* ஏசா 52:11, 1பே 1:15, 16
- *f* லேவி 19:29
- *g* உபா 24:1, எசே 44:22
- *h* யாத் 28:41
- *i* யாத் 28:36, லேவி 11:45, லேவி 20:7, 8
- *j* லேவி 20:14
- *k* லேவி 8:12
- *l* யாத் 28:2, யாத் 29:29, லேவி 16:32
- *m* ஆதி 37:34, லேவி 10:6
- *n* எண் 6:7, எண் 19: 11, 14
- *o* லேவி 10:7
- *p* லேவி 8:12
- *q* எசே 44:22
- *r* எஸ்றா 9:2

மானவன்,* கண் கோளாறு உள்ளவன், படைநோய் உள்ளவன், படர்
தாமரை நோய் உள்ளவன், அல்லது விரை சேதமடைந்தவன் கடவுளுக்கு
உணவைப் படைக்கக் கூடாது.[a] **21** குருவாகிய ஆரோனின் சந்ததியில்
யாருக்காவது குறைபாடு இருந்தால், அவன் யெகோவாவுக்குத் தகன பலிக
ளைச் செலுத்தக் கூடாது. அவனுக்குக் குறைபாடு இருப்பதால், கடவுளுக்கு
உணவைப் படைக்கக் கூடாது. **22** கடவுளுக்குப் படைக்கப்பட்ட உண
வில் பரிசுத்தமானதையும் மகா பரிசுத்தமானதையும் அவன் சாப்பிடலாம்.[b]
23 ஆனாலும், அவனுக்குக் குறைபாடு இருப்பதால் அவன் திரைச்சீ
லைக்குப்[c] பக்கத்தில் போகக் கூடாது, பலிபீடத்துக்கும்[d] போகக் கூடாது.
அவன் என்னுடைய வழிபாட்டுக் கூடாரத்தைக்[e] களங்கப்படுத்தக் கூடாது.
ஏனென்றால், நான் அவர்களைப் புனிதப்படுத்துகிறேன். நான் யெகோவா'"[f]
என்றார்.

24 ஆரோனுக்கும் அவருடைய மகன்களுக்கும் இஸ்ரவேலர்களுக்கும்
மோசே இதையெல்லாம் தெரிவித்தார்.

22 பின்பு யெகோவா மோசேயிடம் இப்படிச் சொன்னார்: **2** "இஸ்ர
வேலர்கள் செலுத்துகிற பரிசுத்த பொருள்களை ஆரோனும் அவ
னுடைய மகன்களும் கவனமாகக் கையாள வேண்டுமென்று நீ அவர்களி
டம் சொல்.[g] எனக்கு அர்ப்பணிக்கப்படுகிற பொருள்களைத் தீட்டுப்படுத்தி
என் பரிசுத்த பெயரை அவர்கள் களங்கப்படுத்தக் கூடாது.[h] நான்
யெகோவா. **3** நீ அவர்களிடம், 'உங்களுடைய வம்சத்தைச் சேர்ந்த யாரா
வது தீட்டுப்பட்டிருந்தால், யெகோவாவுக்காக இஸ்ரவேலர்கள் அர்ப்பணிக்
கிற பரிசுத்த பொருள்களுக்குப் பக்கத்தில் போகக் கூடாது. அப்படிப்
போனால் அவன் கொல்லப்படுவான். தலைமுறை தலைமுறைக்கும் நீங்
கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளை இது.[i] நான் யெகோவா. **4** ஆரோ
னின் வம்சத்தைச் சேர்ந்த ஒருவனுக்குத் தொழுநோய்[j] இருந்தால் அல்லது
பிறப்புறுப்பில் ஒழுக்கு நோய்[k] இருந்தால் அந்தத் தீட்டு நீங்கும்வரை[l] பரி
சுத்த பொருள்களைச் சாப்பிடக் கூடாது. அதேபோல், பிணத்தைத்
தொட்ட ஒருவனைத் தொட்டுத் தீட்டுப்பட்டவனும்,[m] விந்து வெளிப்பட்ட
ஒருவனும்,[n] **5** அசுத்தமான சிறு பிராணியைத் தொட்டவனும்,[o] ஏதோ
வொரு காரணத்தால் தீட்டாகிவிட்ட ஒருவனைத் தொட்டவனும்[p] பரி
சுத்த பொருள்களைச் சாப்பிடக் கூடாது. **6** இப்படிப்பட்ட ஒருவனையோ
ஒன்றையோ தொட்டவன் சாயங்காலம்வரை தீட்டுப்பட்டிருப்பான். பரிசுத்த
பொருள்களில் எதையும் அவன் சாப்பிடக் கூடாது. அவன் குளிக்க வேண்
டும்.[q] **7** சூரியன் மறைந்த பின்பு அவனுடைய தீட்டு நீங்கிவிடும். அதன்
பின், அவன் பரிசுத்த பொருள்களைச் சாப்பிடலாம். ஏனென்றால், அது
அவனுக்குச் சேர வேண்டிய உணவு.[r] **8** தானாகச் செத்துப்போன மிருகத்
தையோ காட்டு மிருகங்களால் கொல்லப்பட்ட மிருகத்தையோ சாப்பிட்டு
அவன் தீட்டுப்படக் கூடாது.[s] நான் யெகோவா.

9 அவர்கள் பரிசுத்த பொருள்களைக் களங்கப்படுத்தி பாவம் செய்தால்
செத்துப்போவார்கள். அப்படி நடக்காதபடி அவர்கள் என் கட்டளைகளைக்
கடைப்பிடிக்க வேண்டும். நான் அவர்களைப் புனிதப்படுத்துகிறேன். நான்
யெகோவா.

21:20 * அல்லது, "நோஞ்சானாக இருப்பவன்."

அதி. 21
a உபா 23:1
b லேவி 2:10, லேவி 6:14, 16, லேவி 22:10, லேவி 24:8, 9, எண் 18:9, எண் 18:19
c யாத் 30:6
d யாத் 38:1
e யாத் 25:8
f யாத் 28:41

அதி. 22
g யாத் 28:38, எண் 18:32
h லேவி 21:6
i லேவி 7:20
j லேவி 13:2
k லேவி 15:2
l லேவி 14:2, லேவி 15:13
m லேவி 21:1, எண் 19:11, 22
n லேவி 15:16
o லேவி 11:24, 43
p லேவி 15:7, 19
q எண் 19:6, 7
r எண் 18:11
s யாத் 22:31, லேவி 17:15, உபா 14:21

10 தகுதி இல்லாத ஒருவன்* பரிசுத்தமான எதையும் சாப்பிடக் கூடாது.[a] குருவானவரின் வேறு தேசத்து விருந்தாளியோ கூலியாளோ பரிசுத்த பொருள்களில் எதையும் சாப்பிடக் கூடாது. **11** ஆனால், குருவானவர் ஒருவனை விலைகொடுத்து வாங்கியிருந்தால், அவன் அவற்றைச் சாப்பிடலாம். அதேபோல், அவருடைய வீட்டில் பிறந்த அடிமைகளும் அவருடைய உணவைச் சாப்பிடலாம்.[b] **12** குருவானவரின் மகள் குருவாக இல்லாத ஒருவனைக் கல்யாணம் செய்தால், காணிக்கையாக வந்த பரிசுத்த பொருள்களைச் சாப்பிடக் கூடாது. **13** ஆனால், குருவானவரின் மகள் குழந்தையில்லாமல் விதவையாகவோ விவாகரத்து செய்யப்பட்டவளாகவோ தன்னுடைய பிறந்த வீட்டுக்குத் திரும்பி வந்திருந்தால், தன் அப்பாவுக்குக் கிடைக்கும் உணவை அவளும் சாப்பிடலாம்.[c] தகுதி இல்லாதவர்கள்* அதைச் சாப்பிடக் கூடாது.

14 பரிசுத்த பொருளை ஒருவன் தெரியாத்தனமாகச் சாப்பிட்டுவிட்டால், அதன் மதிப்பில் ஐந்திலொரு பாகத்தைச் சேர்த்து அதைக் குருவானவருக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.[d] **15** இஸ்ரவேலர்கள் யெகோவாவுக்குக் காணிக்கையாகக் கொடுக்கிற பரிசுத்த பொருள்களை யாரும் களங்கப்படுத்தக் கூடாது.[e] **16** அந்தப் பரிசுத்த பொருள்களைச் சாப்பிடும் குற்றத்துக்காகத் தண்டனையைத் தேடிக்கொள்ளக் கூடாது. ஏனென்றால், நான் அவர்களைப் புனிதப்படுத்துகிறேன். நான் யெகோவா' என்றார்."

17 பின்பு யெகோவா மோசேயைப் பார்த்து, **18** "ஆரோனிடமும் அவனுடைய மகன்களிடமும் எல்லா இஸ்ரவேலர்களிடமும் நீ சொல்ல வேண்டியது என்னவென்றால், 'இஸ்ரவேலைச் சேர்ந்த ஒருவனோ இஸ்ரவேலில் குடியிருக்கிற வேறு தேசத்தைச் சேர்ந்த ஒருவனோ தான் நேர்ந்துகொண்டதை நிறைவேற்ற அல்லது தானாகவே விருப்பப்பட்டு காணிக்கை செலுத்த[f] யெகோவாவுக்குத் தகன பலியைக்[g] கொண்டுவந்தால், **19** குறையில்லாத காளையையோ[h] செம்மறியாட்டுக் கடாக் குட்டியையோ வெள்ளாட்டுக் கடாவையோ கொண்டுவர வேண்டும். அப்போதுதான், கடவுள் அதை ஏற்றுக்கொள்வார். **20** குறையுள்ள எதையும் நீங்கள் செலுத்தக் கூடாது.[i] ஏனென்றால், கடவுள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்.

21 யெகோவாவுக்கு நேர்ந்துகொண்டதை நிறைவேற்றவோ தானாகவே விருப்பப்பட்டு காணிக்கை செலுத்தவோ ஒருவன் சமாதான பலியைக்[j] கொண்டுவந்தால், அது குறையில்லாத மாடாக அல்லது ஆடாக இருக்க வேண்டும். அப்போதுதான், கடவுள் அதை ஏற்றுக்கொள்வார். அதில் எந்தக் குறையும் இருக்கக் கூடாது. **22** அவன் கொண்டுவரும் ஆடு அல்லது மாடு, குருடாகவோ எலும்பு முறிந்ததாகவோ வெட்டுக்காயம் உள்ளதாகவோ பாலுண்ணி வந்ததாகவோ சொறிசிரங்கு உள்ளதாகவோ படர்தாமரை நோய் பிடித்ததாகவோ இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட எதையும் யெகோவாவுக்குக் கொண்டுவரக் கூடாது, அவற்றை யெகோவாவின் பலிபீடத்தில் செலுத்தவும் கூடாது. **23** ஒரு காளை மாட்டுக்கு அல்லது செம்மறியாட்டுக்கு ஒரு கால் நெட்டையாகவோ குட்டையாகவோ இருந்தால், நேர்ந்துகொண்டதை நிறைவேற்றும் பலியாக அதை யாரும் கொண்டு

22:10 *அதாவது, "ஆரோனின் வம்சத்தைச் சேராதவன்." **22:13** *அதாவது, "ஆரோனின் வம்சத்தைச் சேராதவர்கள்."

அதி. 22
a யாத் 29:33
b எண் 18:11
c லேவி 10:14; எண் 18:19
d லேவி 5:15, 16
e எண் 18:32
f லேவி 7:16; எண் 15:3; உபா 12:5, 6
g எண் 15:14, 16
h லேவி 1:3; லேவி 22:22
i உபா 15:19, 21; உபா 17:1; மல் 1:8; எபி 9:14; 1பே 1:19
j லேவி 3:1

வரக் கூடாது, கடவுள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார். ஆனால், அவர்
களாகவே விருப்பப்பட்டு செலுத்தும் பலியாக அதைக் கொண்டுவர
லாம். **24** விரை சேதமடைந்த, விரை நசுக்கப்பட்ட, அல்லது காயடிக்கப்
பட்ட மிருகத்தை யெகோவாவுக்குக் கொண்டுவரக் கூடாது. அப்படிப்பட்ட
மிருகங்களை உங்களுடைய தேசத்தில் பலி செலுத்தக் கூடாது. **25** வேறு
தேசத்து ஜனங்கள் அவற்றைக் கடவுளுக்கு உணவாகப் படைக்கக் கூடாது.
ஏனென்றால், அவையெல்லாம் ஊனமும் குறையும் உள்ளவை. அவற்றைக்
கடவுள் ஏற்றுக்கொள்ள மாட்டார்'” என்றார்.

26 பின்பு யெகோவா மோசேயிடம், **27** “ஒரு மாடு கன்று போட்டால்
அல்லது ஒரு ஆடு குட்டி போட்டால், அந்தக் கன்றும் குட்டியும் ஏழு நாட்
கள் தாயோடு இருக்க வேண்டும்.[a] எட்டாம் நாளிலிருந்து அதை யெகோ
வாவுக்குத் தகன பலியாகச் செலுத்தலாம், அவர் அதை ஏற்றுக்கொள்வார்.
28 ஒரு மாட்டையும் அதன் கன்றையும் ஒரே நாளில் வெட்டக் கூடாது, ஒரு
ஆட்டையும் அதன் குட்டியையும் ஒரே நாளில் வெட்டக் கூடாது.[b]

29 நீங்கள் யெகோவாவுக்கு நன்றிப் பலி செலுத்தினால்,[c] அதை
அவர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் செலுத்த வேண்டும். **30** அதே நாளில்
அதைச் சாப்பிட வேண்டும். காலைவரை எதையும் மீதி வைக்கக் கூடாது.[d]
நான் யெகோவா.

31 நீங்கள் என்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்
டும்.[e] நான் யெகோவா. **32** நீங்கள் என் பரிசுத்த பெயரைக் களங்கப்ப
டுத்தக் கூடாது.[f] இஸ்ரவேலர்கள் மத்தியில் நான் பரிசுத்தப்பட வேண்டும்.[g]
நான் அவர்களைப் புனிதப்படுத்துகிறேன். நான் யெகோவா.[h] **33** நான்
தான் உங்களுடைய கடவுள் என்று நிரூபிப்பதற்காக உங்களை எகிப்திலி
ருந்து கூட்டிக்கொண்டு வந்தேன்.[i] நான் யெகோவா” என்றார்.

23 பின்பு யெகோவா மோசேயைப் பார்த்து, **2** “நீ இஸ்ரவேலர்களி
டம் இப்படிச் சொல்: ‘யெகோவாவின் பண்டிகை நாட்கள்,[j] பரிசுத்த
மாநாடுகளுக்காக எல்லாரும் ஒன்றுகூடி வர வேண்டிய நாட்கள். நீங்கள்
அறிவிப்பு[k] செய்ய வேண்டிய அந்தப் பண்டிகை நாட்கள் இவைதான்:

3 ஆறு நாட்கள் நீங்கள் வேலை செய்யலாம். ஆனால், ஏழாம்
நாள் உங்களுக்கு முழு ஓய்வுநாள்.[l] பரிசுத்த மாநாட்டுக்காக அன்றைக்கு
நீங்கள் ஒன்றுகூடி வர வேண்டும். எந்த வேலையும் செய்யக் கூடாது. நீங்
கள் எங்கே குடியிருந்தாலும் யெகோவாவுக்காக ஓய்வுநாளை அனுசரிக்க
வேண்டும்.[m]

4 யெகோவாவின் பண்டிகைகளை எந்தெந்த நாட்களில் கொண்டாட
வேண்டுமென்று நீங்கள் அறிவிப்பு செய்ய வேண்டும். பரிசுத்த மாநாடு
களுக்காக நீங்கள் ஒன்றுகூடி வர வேண்டிய அந்த நாட்கள் இவை
தான்: **5** முதலாம் மாதம் 14-ஆம் நாள்[n] சாயங்காலத்தில் யெகோவாவுக்
காக பஸ்கா பண்டிகை[o] கொண்டாட வேண்டும்.

6 அந்த மாதம் 15-ஆம் நாளில், புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையை
யெகோவாவுக்காகக் கொண்டாட வேண்டும்.[p] ஏழு நாட்களுக்குப் புளிப்பில்
லாத ரொட்டி சாப்பிட வேண்டும்.[q] **7** முதலாம் நாளில் பரிசுத்த மாநாட்டுக்
காக ஒன்றுகூடி வர வேண்டும்.[r] அன்றைக்குக் கடினமான வேலை எதுவும்
செய்யக் கூடாது. **8** ஏழு நாட்கள் யெகோவாவுக்குத் தகன பலி செலுத்த
வேண்டும். ஏழாம் நாளில் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்டும்.

அதி. 22
a யாத் 22:30
b யாத் 23:19; உபா 22:6
c லேவி 7:12
d லேவி 7:15
e லேவி 19:37; எண் 15:40; உபா 4:40
f லேவி 18:21; லேவி 19:12
g லேவி 10:3
h யாத் 19:5; லேவி 20:8; லேவி 21:8
i யாத் 6:7; லேவி 11:45

அதி. 23
j யாத் 23:14; லேவி 23:37
k எண் 10:10
l யாத் 16:30; யாத் 20:10; அப் 15:21
m நெ 13:22
n எண் 9:2, 3; எண் 28:16
o யாத் 12:3, 6; உபா 16:1; 1கொ 5:7
p எண் 28:17; 1கொ 5:8
q யாத் 12:15; யாத் 13:6; யாத் 34:18
r யாத் 12:16

அன்றைக்குக் கடினமான வேலை எதுவும் நீங்கள் செய்யக் கூடாது’”
என்றார்.

9 பின்பு யெகோவா மோசேயைப் பார்த்து, **10** “நீ இஸ்ரவேலர்களிடம்
இப்படிச் சொல்: ‘நான் கொடுக்கும் தேசத்துக்குப் போய் நீங்கள் அறுவடை
செய்யும்போது, முதல் விளைச்சலில் கிடைக்கும் ஒரு கதிர்க்கட்டை[a] குரு
வானவரிடம் கொண்டுவர வேண்டும்.[b] **11** யெகோவா உங்களை ஏற்றுக்
கொள்வதற்காக அவருடைய முன்னிலையில் அந்தக் கதிர்க்கட்டை
குருவானவர் அசைவாட்ட வேண்டும். **12** அந்தக் கதிர்க்கட்டு அசை
வாட்டப்படும் நாளில், குறையில்லாத ஒருவயது செம்மறியாட்டுக் கடாக்
குட்டியை யெகோவாவுக்குத் தகன பலியாக நீங்கள் கொண்டுவர வேண்
டும். **13** அதோடு, உணவுக் காணிக்கையாக ஒரு எப்பா அளவிலே
பத்தில் இரண்டு பங்கு* நைசான மாவில் எண்ணெய் கலந்து கொண்டுவர
வேண்டும். அதைத் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை
யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும். தகன பலியோடு
சேர்த்து ஒரு லிட்டர்# திராட்சமதுவைக் காணிக்கையாகக் கொண்டுவர
வேண்டும். **14** புது தானியத்தை நீங்கள் கடவுளுக்குக் காணிக்கையாகக்
கொண்டுவரும் நாள்வரை, அதை ரொட்டி செய்தோ வறுத்தோ பச்சையா
கவோ சாப்பிடக் கூடாது. நீங்கள் எங்கு குடியிருந்தாலும் இதுவே தலை
முறை தலைமுறைக்கும் உங்களுக்குக் கொடுக்கப்படும் சட்டம்.

15 அசைவாட்டும் காணிக்கையாகக் கதிர்க்கட்டை நீங்கள் கொண்டு
வரும் ஓய்வுநாளிலிருந்து ஏழு வாரங்களை* கணக்கிட வேண்டும்.[c]
16 அதாவது, ஏழாம் ஓய்வுநாளுக்கு அடுத்த நாளாகிய 50-ஆம் நாள்
வரை[d] கணக்கிட வேண்டும். அந்த நாளில் புது தானியத்தில் செய்யப்
பட்ட உணவுக் காணிக்கையை யெகோவாவுக்குக் கொண்டுவர வேண்
டும்.[e] **17** அசைவாட்டும் காணிக்கையாக உங்கள் வீடுகளிலிருந்து
இரண்டு ரொட்டிகளைக் கொண்டுவர வேண்டும். ஒரு எப்பா அள
விலே பத்தில் இரண்டு பங்கு* நைசான மாவைப் புளிக்க வைத்து,
அந்த ரொட்டிகளைச் சுட வேண்டும்.[f] முதல் விளைச்சலின் காணிக்கையாக
அவற்றை யெகோவாவுக்குக் கொண்டுவர வேண்டும்.[g] **18** அந்த ரொட்
டிகளோடு, எந்தக் குறையும் இல்லாத ஒருவயதுள்ள ஏழு செம்மறியாட்டுக்
கடாக் குட்டிகளையும், ஒரு இளம் காளையையும், இரண்டு செம்மறி
யாட்டுக் கடாக்களையும் கொண்டுவந்து யெகோவாவுக்குத் தகன பலியா
கச் செலுத்த வேண்டும்.[h] அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த
வாசனையாக இருக்கும். அவற்றோடு கொடுக்கும் உணவுக் காணிக்கையை
யும் திராட்சமது காணிக்கையையும் கொண்டுவர வேண்டும். **19** பாவப்
பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும்[i] சமாதான பலியாக
ஒருவயதுள்ள இரண்டு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளையும் கொண்டு
வர வேண்டும்.[j] **20** முதல் விளைச்சலில் செய்யப்பட்ட ரொட்டிகளோடு,
இரண்டு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளையும் யெகோவாவுக்கு அசை
வாட்டும் காணிக்கையாகக் குருவானவர் அசைவாட்ட வேண்டும். அவை
யெகோவாவுக்குப் பரிசுத்தமானவையாக இருக்கும், அவை குருவானவரு

23:13, 17 *அதாவது, “சுமார் 2 கிலோ.” **23:13** #நே.மொ., “ஒரு ஹின் அளவில் நான்கில் ஒரு பங்கு.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **23:15** *நே.மொ., “ஓய்வுநாட்களை.”

அதி. 23
a 1கொ 15:20, 23
b எண் 18:8, 12; நீதி 3:9; எசே 44:30
c யாத் 34:22; உபா 16:9, 10
d அப் 2:1
e எண் 28:26-31; உபா 16:16
f லேவி 7:11, 13
g யாத் 23:16; யாத் 34:22
h எண் 28:26, 27
i லேவி 4:23
j லேவி 3:1

டைய பங்காக இருக்கும்.[a] **21** பரிசுத்த மாநாட்டுக்காக அந்த நாளில்
ஒன்றுகூடி வர வேண்டுமென்று அறிவிப்பு செய்யுங்கள்.[b] அன்றைக்குக்
கடினமான வேலை எதுவும் நீங்கள் செய்யக் கூடாது. நீங்கள் எங்கு குடி
யிருந்தாலும் இதுவே தலைமுறை தலைமுறைக்கும் உங்களுக்குக் கொடுக்
கப்படும் சட்டம்.

22 உங்கள் வயலில் அறுவடை செய்யும்போது வரப்பு ஓரத்தில் உள்ள
கதிர்களை முழுமையாக அறுவடை செய்யக் கூடாது, சிந்திய கதிர்களை
எடுக்கவும் கூடாது.[c] அவற்றை ஏழைகளுக்காகவும் உங்களோடு வாழ்கிற
மற்ற தேசத்து ஜனங்களுக்காகவும் விட்டுவிட வேண்டும்.[d] நான் உங்கள்
கடவுளாகிய யெகோவா'" என்றார்.

23 பின்பு யெகோவா மோசேயைப் பார்த்து, **24** "இஸ்ரவேலர்களிடம்
நீ இப்படிச் சொல்: 'ஏழாம் மாதம் முதலாம் நாளில் நீங்கள் முழுமையாக
ஓய்ந்திருக்க வேண்டும். எக்காளம் ஊதி அந்த நாளை அறிவிப்பு செய்ய
வேண்டும்.[e] அந்த நாளில் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்
டும். **25** அன்றைக்கு நீங்கள் கடினமான வேலை எதுவும் செய்யக்
கூடாது. யெகோவாவுக்குத் தகன பலி செலுத்த வேண்டும்'" என்றார்.

26 பின்பு யெகோவா மோசேயிடம், **27** "இந்த ஏழாம் மாதம் பத்தாம்
நாள் உங்களுக்குப் பாவப் பரிகார நாள்.[f] அன்று பரிசுத்த மாநாட்டுக்காக
ஒன்றுகூடி வர வேண்டும். உங்களையே வருத்திக்கொண்டு,*[g] யெகோவா
வுக்குத் தகன பலி செலுத்த வேண்டும். **28** அன்று நீங்கள் எந்த வேலை
யும் செய்யக் கூடாது. ஏனென்றால், அது பாவப் பரிகார நாள். அன்று,
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் முன்னிலையில் உங்களுக்குப்
பாவப் பரிகாரம் செய்யப்படும்.[h] **29** அன்று தன்னையே வருத்திக்கொள்
ளாத* எவனும் கொல்லப்பட வேண்டும்.[i] **30** அந்த நாளில் ஒருவன்
எந்த வேலை செய்தாலும் அவனை நான் அழித்துவிடுவேன். **31** அன்று
நீங்கள் எந்த வேலையும் செய்யக் கூடாது. நீங்கள் எங்கு குடியிருந்தாலும்
இதுவே தலைமுறை தலைமுறைக்கும் உங்களுக்குக் கொடுக்கப்படும் சட்
டம். **32** அந்த நாள் நீங்கள் முழுமையாக ஓய்ந்திருக்க வேண்டிய ஓய்வு
நாள். அந்த மாதம் ஒன்பதாம் நாள் சாயங்காலத்தில் உங்களையே வருத்
திக்கொள்ள வேண்டும்.[j] அந்த நாள் சாயங்காலத்திலிருந்து அடுத்த நாள்
சாயங்காலம்வரை உங்களுக்கு ஓய்வுநாள்" என்றார்.

33 பின்பு யெகோவா மோசேயைப் பார்த்து, **34** "நீ இஸ்ரவேலர்களி
டம் இப்படிச் சொல்: 'இந்த ஏழாம் மாதம் 15-ஆம் நாளிலிருந்து நீங்கள்
யெகோவாவுக்காக ஏழு நாட்கள் கூடாரப் பண்டிகை கொண்டாட வேண்
டும்.[k] **35** அந்த முதலாம் நாளில் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர
வேண்டும். அன்று கடினமான வேலை எதுவும் நீங்கள் செய்யக் கூடாது.
36 ஏழு நாட்களும் யெகோவாவுக்குத் தகன பலி செலுத்த வேண்டும். எட்
டாம் நாளில் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்டும்.[l] அது ஒரு
விசேஷ மாநாடு. அன்று நீங்கள் யெகோவாவுக்குத் தகன பலி செலுத்த
வேண்டும். கடினமான வேலை எதுவும் செய்யக் கூடாது.

23:27 *விரதம் இருப்பதன் மூலமோ வேறு விதத்தின் மூலமோ தங்களைத் தாங்களே கஷ்டப்படுத்திக்கொள்வதைக் குறிக்கலாம். **23:29** *அல்லது, "அன்று விரதமிருக்காத."

அதி. 23
a லேவி 7:34, லேவி 10:14, எண் 18:9, உபா 18:4, 1கொ 9:13
b எண் 10:10
c லேவி 19:9, உபா 24:19, ரூ 2:2, 3
d லேவி 19:33, ஏசா 58:7
e எண் 10:10, எண் 29:1
f யாத் 30:10, லேவி 25:9
g லேவி 16:29, 30, எண் 29:7
h லேவி 16:34, எபி 9:12, 24-26, எபி 10:10, 1யோ 2:1, 2
i எண் 9:13, எண் 15:30
j லேவி 16:29-31, லேவி 23:27, எண் 29:7
k யாத் 23:16, எண் 29:12, உபா 16:13, எஸ்றா 3:4, நெ 8:14-18, யோவா 7:2
l நெ 8:18

37 நீங்கள் யெகோவாவுக்காக இந்தப் பண்டிகைகளைக் கொண்டாடும்
போது,[a] பரிசுத்த மாநாடுகளுக்காக ஒன்றுகூடி வர வேண்டுமென்று அறி
விப்பு செய்ய வேண்டும்.[b] அந்தப் பண்டிகைகளின்போது யெகோவா
வுக்கு அந்தந்த நாளில் செலுத்த வேண்டிய தகன பலியையும்,[c] உணவுக்
காணிக்கையையும்,[d] திராட்சமது காணிக்கையையும்[e] கொண்டுவர வேண்
டும். **38** யெகோவாவுக்கான ஓய்வுநாட்களில்[f] நீங்கள் கொண்டுவரும்
காணிக்கைகள்,[g] நன்கொடைகள், நேர்ந்துகொண்ட பலிகள்,[h] நீங்களா
கவே விருப்பப்பட்டு செலுத்தும் காணிக்கைகள்[i] ஆகியவை தவிர அவற்
றையும் அந்தப் பண்டிகைகளின்போது யெகோவாவுக்காகக் கொண்டுவர
வேண்டும். **39** ஏழாம் மாதம் 15-ஆம் நாளிலிருந்து, அதாவது உங்க
ளுடைய நிலத்தில் விளைந்ததைச் சேகரிக்கும் நாளிலிருந்து, ஏழு நாட்க
ளுக்கு யெகோவாவுக்காகப் பண்டிகை கொண்டாட வேண்டும்.[j] முதலாம்
நாளிலும் எட்டாம் நாளிலும் நீங்கள் முழுமையாக ஓய்ந்திருக்க வேண்டும்.[k]
40 முதல் நாளில், பெரிய மரங்களின் பழங்களையும், பேரீச்ச மரங்களின்
ஓலைகளையும்,[l] அடர்த்தியான மரங்களின் கிளைகளையும், பள்ளத்தாக்கி
லுள்ள* காட்டரசு மரக் கிளைகளையும் கொண்டுவந்து, உங்கள் கடவு
ளாகிய யெகோவாவின் முன்னிலையில் ஏழு நாட்களுக்குச் சந்தோஷமாக
இருக்க வேண்டும்.[m] **41** யெகோவாவுக்காக இந்தப் பண்டிகையை வரு
ஷத்தில் ஏழு நாட்கள் கொண்டாட வேண்டும்.[n] ஏழாம் மாதம் இந்தப் பண்
டிகையைக் கொண்டாட வேண்டும். இதுதான் தலைமுறை தலைமுறைக்
கும் உங்களுக்குக் கொடுக்கப்படும் சட்டம். **42** ஏழு நாட்களுக்கு நீங்கள்
கூடாரங்களில் தங்க வேண்டும்.[o] இஸ்ரவேல் குடிமக்கள் எல்லாரும் கூடா
ரங்களில் தங்க வேண்டும். **43** அப்போதுதான், இஸ்ரவேலர்களை எகிப்
திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தபோது நான் அவர்களைக் கூடாரங்களில்
தங்க வைத்தேன்[p] என்பதை வருங்காலச் சந்ததிகள் தெரிந்துகொள்வார்
கள்.[q] நான் உங்கள் கடவுளாகிய யெகோவா'" என்றார்.

44 யெகோவா சொன்ன இந்தப் பண்டிகைகளைப் பற்றி மோசே இஸ்ர
வேலர்களுக்குச் சொன்னார்.

24 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "விளக்குகள் தொடர்ந்து எரி
வதற்காக, இடித்துப் பிழிந்த சுத்தமான ஒலிவ எண்ணெயை
உன்னிடம் கொண்டுவரும்படி இஸ்ரவேலர்களுக்கு நீ கட்டளை கொடு.[r]
3 சந்திப்புக் கூடாரத்தில் சாட்சிப் பெட்டிக்குப் பக்கத்திலுள்ள திரைச்சீ
லைக்கு வெளியே இருக்கிற விளக்குகளை ஆரோன் ஏற்றிவைக்க வேண்
டும். அவை எப்போதும் சாயங்காலத்திலிருந்து காலைவரை யெகோவா
வின் முன்னிலையில் எரிந்துகொண்டிருக்க வேண்டும். தலைமுறை
தலைமுறைக்கும் இது உங்களுக்குக் கொடுக்கப்படும் சட்டம். **4** சுத்த
மான தங்கத்தால் செய்யப்பட்ட விளக்குத்தண்டின்[s] மேலுள்ள அகல்
விளக்குகளை யெகோவாவின் முன்னிலையில் ஆரோன் எப்போதும் வரி
சைப்படி ஏற்றி வைக்க வேண்டும்.

5 நீ நைசான மாவை எடுத்து அதில் 12 வட்ட ரொட்டிகள் சுட வேண்
டும். ஒவ்வொரு ரொட்டியையும், ஒரு எப்பா அளவிலே பத்தில் இரண்டு
பங்கு* மாவில் செய்ய வேண்டும். **6** சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்டு

23:40 *அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள." **24:5** *அதாவது, "சுமார் 2 கிலோ."

அதி. 23
a யாத் 23:14; உபா 16:16
b எண் 28:26; எண் 29:7
c லேவி 1:3
d லேவி 2:1, 11
e எண் 15:5; எண் 28:6, 7
f யாத் 16:23; யாத் 20:8; யாத் 31:13
g யாத் 28:38; எண் 18:29
h உபா 12:11
i எண் 29:39; உபா 12:6; 1நா 29:9; 2நா 35:8; எஸ்றா 2:68
j உபா 16:13
k எண் 29:12
l நெ 8:15; வெளி 7:9
m உபா 16:15; நெ 8:10
n எண் 29:12
o உபா 31:10, 11
p யாத் 12:37, 38; எண் 24:5
q உபா 31:13; சங் 78:6

அதி. 24
r யாத் 27:20, 21; எண் 8:2
s யாத் 25:31; யாத் 39:33, 37; எபி 9:2

யெகோவாவின் முன்னிலையில் வைக்கப்பட்டிருக்கிற மேஜையின்[a] மேல்
அவற்றை இரண்டு அடுக்காக அடுக்கிவைக்க வேண்டும். ஒவ்வொரு அடுக்
கிலும் ஆறு ரொட்டிகளை வைக்க வேண்டும்.[b] **7** ஒவ்வொரு அடுக்கின்
மேலும் சுத்தமான சாம்பிராணியை வைக்க வேண்டும். ரொட்டிகளை
யெகோவாவுக்குத் தகன பலியாகச் செலுத்துவதற்கு அடையாளமாக[c] அது
இருக்கும். **8** ஒவ்வொரு ஓய்வுநாளிலும் யெகோவாவின் முன்னிலையில்
அவை அடுக்கி வைக்கப்பட வேண்டும்.[d] இது இஸ்ரவேலர்களோடு நான்
செய்திருக்கிற நிரந்தர ஒப்பந்தம். **9** அந்த ரொட்டிகள் ஆரோனுக்கும்
அவனுடைய மகன்களுக்கும் சேர வேண்டிய பங்கு.[e] யெகோவாவுக்குச்
செலுத்தப்படும் தகன பலிகளில் அவை மகா பரிசுத்தமானவையாக இருப்
பதால் அவற்றைப் பரிசுத்த இடத்தில் அவர்கள் சாப்பிட வேண்டும்.[f] இது
நிரந்தரக் கட்டளை” என்றார்.

10 இஸ்ரவேலைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் ஒரு எகிப்தியனுக்கும்
பிறந்த ஒருவன் இஸ்ரவேலர்களோடு வாழ்ந்துவந்தான்.[g] ஒருநாள் அவ
னும் இன்னொரு இஸ்ரவேலனும் முகாமில் சண்டை போட்டார்கள்.
11 அப்போது அவன், கடவுளுடைய பெயரைப் பழித்தும் சபித்தும் பேசி
னான்.[h] உடனே அவனை மோசேயிடம் கொண்டுவந்தார்கள்.[i] அவனு
டைய அம்மாவின் பெயர் செலோமித். அவள் தாண் கோத்திரத்தைச்
சேர்ந்த திப்ரியின் மகள். **12** அவனை என்ன செய்ய வேண்டுமென்று
யெகோவா சொல்லும்வரை அவனைக் காவலில் வைத்தார்கள்.[j]

13 யெகோவா மோசேயிடம், **14** “சபித்துப் பேசியவனை முகாமுக்கு
வெளியில் கொண்டுபோ. அவன் சபித்துப் பேசியதைக் கேட்டவர்கள் எல்
லாரும் அவன் தலையில் கை வைக்க வேண்டும். பின்பு, ஜனங்கள் எல்லா
ரும் அவன்மேல் கல்லெறிய வேண்டும்.[k] **15** அதன்பின், நீ இஸ்ரவேலர்
களிடம் இப்படிச் சொல்: ‘யாராவது கடவுளைச் சபித்துப் பேசினால், அந்தப்
பாவத்துக்கு அவன் தண்டிக்கப்பட வேண்டும். **16** யெகோவாவின் பெய
ரைப் பழித்துப் பேசுகிறவன் கண்டிப்பாகக் கொல்லப்பட வேண்டும்.[l] ஜனங்
கள் எல்லாரும் அவன்மேல் கண்டிப்பாகக் கல்லெறிய வேண்டும். கடவு
ளுடைய பெயரைப் பழிப்பவன் இஸ்ரவேலனாக இருந்தாலும் சரி,
இஸ்ரவேலர்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்தைச் சேர்ந்தவனாக இருந்
தாலும் சரி, அவன் கொல்லப்பட வேண்டும்.

17 ஒருவன் யாரையாவது கொலை செய்தால், அவன் கண்டிப்பாகக்
கொல்லப்பட வேண்டும்.[m] **18** ஒருவருடைய வீட்டு விலங்கை ஒருவன்
கொன்றால், அதேபோன்ற இன்னொரு விலங்கை ஈடாகக் கொடுக்க வேண்
டும். **19** ஒருவன் யாரையாவது காயப்படுத்தினால், அவனுக்கும் அது
போலவே செய்யப்பட வேண்டும்.[n] **20** எலும்புக்கு எலும்பு, கண்ணுக்குக்
கண், பல்லுக்குப் பல் கொடுக்கப்பட வேண்டும். அவன் காயப்படுத்தி
யது போலவே அவனும் காயப்படுத்தப்பட வேண்டும்.[o] **21** மிருகத்தைக்
கொன்றவன் அதற்கு ஈடு கொடுக்க வேண்டும்.[p] ஆனால் மனுஷனைக்
கொன்றவன் கொல்லப்பட வேண்டும்.[q]

22 உங்களுக்கும் சரி, உங்களோடு வாழ்கிற மற்ற தேசத்து ஆட்களுக்
கும் சரி, ஒரே நியாயம்தான்* இருக்க வேண்டும்.[r] ஏனென்றால், நான் உங்
கள் கடவுளாகிய யெகோவா’” என்றார்.

24:22 * வே.வா., “நீதித்தீர்ப்புதான்.”

அதி. 24
a யாத் 25:23, 24; 1ரா 7:48
b யாத் 40:22, 23; 1சா 21:4; மாற் 2:25, 26
c லேவி 2:2; லேவி 6:15
d எண் 4:7; 1நா 9:32; 2நா 2:4
e லேவி 21:22; லேவி 22:10; 1சா 21:4, 6; மத் 12:3, 4; லூ 6:3, 4
f லேவி 6:14, 16
g யாத் 12:38; எண் 11:4
h யாத் 20:7; யாத் 22:28; லேவி 19:12
i யாத் 18:22
j யாத் 18:15, 16; எண் 15:32, 34
k எண் 15:32, 35; உபா 17:7
l உபா 5:11
m ஆதி 9:6; யாத் 21:12; எண் 35:31; உபா 19:11-13
n யாத் 21:23, 24
o உபா 19:21; மத் 5:38
p யாத் 22:1
q ஆதி 9:6; யாத் 21:12
r யாத் 12:49; லேவி 17:10; லேவி 19:34; எண் 9:14; எண் 15:16

23 மோசே இவற்றை இஸ்ரவேலர்களுக்குச் சொன்னார். சபித்துப் பேசி
யவனை முகாமுக்கு வெளியில் கொண்டுபோய் அவர்கள் கல்லெறிந்தார்
கள்.[a] யெகோவா மோசேக்குக் கட்டளை கொடுத்தபடியே இஸ்ரவேலர்கள்
செய்தார்கள்.

25 சீனாய் மலையில் யெகோவா தொடர்ந்து மோசேயிடம், **2** “நீ
இஸ்ரவேல் ஜனங்களிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால்,
‘நான் கொடுக்கும் தேசத்துக்கு நீங்கள் போன பின்பு,[b] யெகோவாவின் கட்
டளைப்படி ஓய்வு வருஷத்தில் உங்கள் நிலத்துக்கு ஓய்வு தர வேண்டும்.[c]
3 ஆறு வருஷங்களுக்கு நிலத்தில் விதை விதைக்க வேண்டும், திராட்
சைக் கொடிகளின் கிளைகளை வெட்ட வேண்டும், விளைச்சலைச் சேக
ரிக்க வேண்டும்.[d] **4** ஆனால், ஏழாம் வருஷத்தில் யெகோவாவின் கட்ட
ளைப்படி நிலத்துக்கு முழு ஓய்வு தர வேண்டும். அப்போது, உங்கள்
வயலில் விதை விதைக்கவோ திராட்சைக் கொடிகளின் கிளைகளை
வெட்டவோ கூடாது. **5** அறுவடையின்போது சிந்திய தானியத்திலிருந்து
தானாக விளைவதை நீங்கள் அறுவடை செய்யக் கூடாது. கிளை வெட்டப்
படாத திராட்சைக் கொடிகளிலுள்ள பழங்களைச் சேகரிக்கக் கூடாது. அந்த
வருஷத்தில் நிலத்துக்கு முழு ஓய்வு தர வேண்டும். **6** ஆனால், ஓய்வு
வருஷத்தில் தானாக விளைவதை நீங்களும் உங்களுடைய ஆண் அடி
மைகளும் பெண் அடிமைகளும் கூலியாட்களும் உங்கள் தேசத்தில் குடி
யேறியிருக்கிற வேறு தேசத்து ஜனங்களும் **7** உங்கள் தேசத்திலுள்ள
வீட்டு விலங்குகளும் காட்டு மிருகங்களும் சாப்பிடலாம். நிலத்தில் விளை
கிற எல்லாவற்றையும் சாப்பிடலாம்.

8 அடுத்தடுத்த ஏழு ஓய்வு வருஷங்களை நீங்கள் கணக்குப் போட
வேண்டும். அதாவது, ஏழு வருஷங்களை ஏழு தடவை பெருக்க வேண்
டும். அப்போது, 49 வருஷங்கள் வரும். **9** அந்த ஏழாம் மாதம் பத்தாம்
நாளில், ஊதுகொம்பைச் சத்தமாக ஊத வேண்டும். பாவப் பரிகார நாளா
கிய அந்த நாளில்,[e] ஊதுகொம்பின் சத்தம் தேசமெங்கும் கேட்க வேண்டும்.
10 50-ஆம் வருஷத்தை நீங்கள் புனிதமாக்கி, தேசத்திலுள்ள எல்லாருக்
கும் விடுதலையை* அறிவிக்க வேண்டும்.[f] அந்த வருஷம் உங்களுக்கு
விடுதலை# வருஷமாக இருக்கும். அவரவர் தங்களுடைய பரம்பரை நிலத்
துக்கும் தங்களுடைய குடும்பத்துக்கும் திரும்பிப்போக வேண்டும்.[g]
11 50-ஆம் வருஷம் உங்களுக்கு விடுதலை வருஷமாக இருக்கும்.
அப்போது உங்கள் வயலில் விதைக்கவோ, அறுவடையின்போது சிந்
திய தானியத்திலிருந்து தானாக விளைவதை அறுக்கவோ, கிளை வெட்டப்
படாத திராட்சைக் கொடிகளிலுள்ள பழங்களைச் சேகரிக்கவோ கூடாது.[h]
12 ஏனென்றால் அது விடுதலை வருஷம். அது உங்களுக்குப் பரிசுத்த
மான வருஷம். அப்போது, நிலத்தில் தானாக விளைவதை நீங்கள் சாப்பி
டலாம்.[i]

13 அந்த விடுதலை வருஷத்தில் எல்லாரும் தங்களுடைய பரம்பரை
நிலத்துக்குத் திரும்பிப்போக வேண்டும்.[j] **14** நீங்கள் ஒருவருக்கு எதை
யாவது விற்றாலோ ஒருவரிடமிருந்து எதையாவது வாங்கினாலோ, அநி
யாயம் செய்யக் கூடாது.[k] **15** ஒருவரிடமிருந்து நிலத்தை வாங்கும்போது,

---

25:10 * அதாவது, “அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை.” # வே.வா., “யூபிலி.”

அதி. 24
a எண் 15:33, 36; உபா 17:7

அதி. 25
b ஆதி 15:16
c லேவி 26:34; 2நா 36:20, 21
d யாத் 23:10, 11
e லேவி 16:30; லேவி 23:27, 28
f ஏசா 61:1, 2; லூ 4:18, 19; ரோ 8:20, 21
g லேவி 27:24; எண் 36:4; உபா 15:1
h லேவி 25:5
i யாத் 23:11; லேவி 25:6
j லேவி 25:29, 30; லேவி 27:24
k 1சா 12:3; நீதி 14:31

விடுதலை வருஷத்துக்கு அடுத்துவரும் வருஷங்களைக் கணக்குப் போட்டு,
அவற்றின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி விலைகொடுத்து வாங்க வேண்டும்.
விற்பவன், அந்த வருஷங்களில் தன்னுடைய நிலம் எவ்வளவு விளைச்சல்
தரும் என்பதைக் கணக்குப் போட்டு, அதற்குத் தகுந்தபடி விற்க வேண்டும்.[a]
16 அடுத்த விடுதலை வருஷம் வருவதற்கு இன்னும் நிறைய வருஷங்
கள் இருந்தால், அதன் விலையை அதற்குத் தகுந்தபடி அவன் உயர்த்த
லாம். கொஞ்ச வருஷங்களே இருந்தால், விலையை அதற்குத் தகுந்தபடி
குறைக்கலாம். ஏனென்றால், அந்த நிலத்தில் எவ்வளவு விளையும் என்ப
தைக் கணக்கு போட்டுத்தான் அவன் அதை விற்கிறான். **17** நீங்கள்
யாருமே மற்றவர்களுக்கு அநியாயம் செய்யக் கூடாது.[b] உங்கள் கடவுளுக்
குப் பயந்து நடக்க வேண்டும்.[c] ஏனென்றால், நான் உங்கள் கடவுளாகிய
யெகோவா.[d] **18** நீங்கள் என் சட்டதிட்டங்களுக்கும் நீதித்தீர்ப்புகளுக்
கும் கீழ்ப்படிந்தால், தேசத்தில் பாதுகாப்பாகக் குடியிருப்பீர்கள்.[e] **19** நிலம்
நல்ல விளைச்சல் தரும்.[f] நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டுப் பாதுகாப்பாகக்
குடியிருப்பீர்கள்.[g]

20 ஆனால், “ஏழாம் வருஷத்தில் விதைக்காமலும் அறுவடை செய்யா
மலும் இருந்தால் நாங்கள் எதைச் சாப்பிடுவோம்?” என்று நீங்கள் கேட்க
லாம்.[h] **21** ஆறாம் வருஷத்தில் நான் உங்களை ஆசீர்வதிப்பேன். அப்
போது, மூன்று வருஷங்களுக்குத் தேவையான விளைச்சல் உங்களுக்குக்
கிடைக்கும்.[i] **22** பின்பு, எட்டாம் வருஷத்தில் விதை விதைப்பீர்கள். ஏற்
கெனவே கிடைத்த விளைச்சலை ஒன்பதாம் வருஷம்வரை சாப்பிடுவீர்கள்,
அதாவது அந்த வருஷத்தில் விளைச்சல் கிடைக்கும்வரை அதைச் சாப்பி
டுவீர்கள்.

23 நிலத்தை யாருக்கும் நிரந்தரமாக விற்கக் கூடாது,[j] ஏனென்றால்
தேசம் என்னுடையது.[k] என்னைப் பொறுத்தவரை, நீங்கள் என் தேசத்தில்
குடியேறிய வேறு தேசத்து ஜனங்கள்.[l] **24** நீங்கள் குடியிருக்கும் தேச
மெங்கும், நிலத்தை மீட்டுக்கொள்ளும் உரிமையை அதன் சொந்தக்காரருக்
குக் கொடுக்க வேண்டும்.

25 உங்களுடைய சகோதரன் ஏழையாகி தன்னுடைய நிலத்தில் கொஞ்
சத்தை விற்றுவிட்டால், அவனுடைய நெருங்கிய சொந்தக்காரன் வந்து
அதை மீட்க வேண்டும்.[m] **26** அப்படி மீட்க யாரும் இல்லாவிட்டால்,
அதை மீட்கும் அளவுக்கு அவனுக்கே வசதி வந்துவிட்டால், **27** நிலத்தை
விற்ற வருஷத்திலிருந்து அதில் விளைந்ததன் மதிப்பை அவன் கணக்
குப் பார்த்து, அந்தத் தொகையைக் கழித்துவிட்டு மீதி தொகையை மட்டும்
விலையாகக் கொடுக்க வேண்டும். பின்பு, அவன் தன்னுடைய நிலத்துக்குத்
திரும்பிப்போகலாம்.[n]

28 வாங்கியவனிடமிருந்து அதை மீட்க ஒருவேளை அவனுக்கு வசதி
இல்லையென்றால், விடுதலை வருஷம்வரை அந்த நிலம் அதை வாங்கிய
வனின் கையில் இருக்கும்.[o] விடுதலை வருஷத்தில் அது விற்றவனுக்குக்
கைமாறிவிடும். அவன் தன்னுடைய நிலத்துக்குத் திரும்பிப்போவான்.[p]

29 மதில் சூழ்ந்த நகரத்திலுள்ள வீட்டை ஒருவன் விற்றால், அதை ஒரு
வருஷத்துக்குள் மீட்டுக்கொள்ள வேண்டும். அதை மீட்டுக்கொள்ளும்
உரிமை[q] ஒரு வருஷத்துக்கு மட்டும்தான் இருக்கும். **30** மதில் சூழ்ந்த

அதி. 25
a லேவி 27:18
b லேவி 19:13, நீதி 22:22
c லேவி 25:43, நீதி 1:7, நீதி 8:13
d ஏசா 33:22
e உபா 12:10, சங் 4:8, நீதி 1:33
f சங் 67:6
g லேவி 26:3-5
h லேவி 25:4, 5, மத் 6:25
i ஆதி 26:12, உபா 28:8, மல் 3:10
j 1ரா 21:3
k சங் 24:1
l 1நா 29:15
m ரூ 2:20, ரூ 4:4-6
n லேவி 25:50
o லேவி 27:24
p லேவி 25: 10, 13
q லேவி 25: 25-27

நகரத்திலுள்ள அந்த வீட்டை ஒரு வருஷத்துக்குள் மீட்டுக்கொள்ளாவிட்
டால், தலைமுறை தலைமுறைக்கும் அது வாங்கியவனுடைய நிரந்தர சொத்
தாக ஆகிவிடும். விடுதலை வருஷத்திலும்கூட அவன் அதைத் திருப்பித்
தரக் கூடாது. **31** ஆனால், மதில் இல்லாத பகுதிகளிலுள்ள வீடுகளைக்
கிராமப்புற வயல்நிலத்தைப் போலக் கருத வேண்டும். அவற்றை எப்போது
வேண்டுமானாலும் மீட்டுக்கொள்கிற உரிமை அவனுக்கு இருக்கிறது. வாங்
கியவன் விடுதலை வருஷத்தில் அவற்றைத் திருப்பித் தர வேண்டும்.

32 லேவியர்களின் நகரங்களிலுள்ள வீடுகளைப் பொறுத்தவரை,[a]
அவற்றை எப்போது வேண்டுமானாலும் மீட்டுக்கொள்கிற உரிமை லேவி
யர்களுக்கு இருக்கிறது. **33** ஒரு லேவியன் தன்னுடைய நகரத்திலுள்ள
ஒரு வீட்டை விற்றபின் அதை மீட்டுக்கொள்ளாவிட்டால், அந்த வீடு விடு
தலை வருஷத்தில் அவனுக்குத் திருப்பித் தரப்படும்.[b] ஏனென்றால், இஸ்
ரவேலர்களின் தேசத்தில் லேவியர்களின் நகரங்களிலுள்ள வீடுகள்
அவர்களுடைய சொத்து.[c] **34** அவர்களுடைய நகரங்களைச் சுற்றியுள்ள
மேய்ச்சல் நிலங்களை[d] விற்கக் கூடாது. ஏனென்றால், அவை அவர்களு
டைய நிரந்தர சொத்து.

35 உங்களுக்குப் பக்கத்தில் குடியிருக்கிற உங்கள் சகோதரன் ஏழை
யாகி வயிற்றுப்பிழைப்புக்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டால், உங்கள்
தேசத்தில் குடியேறியிருக்கிற வேறு தேசத்து ஜனங்களைக் கவனித்துக்
கொள்வது போல[e] நீங்கள் அவனைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.[f]
அப்போது, உங்களோடு அவனும் பிழைப்பான். **36** அவனிடமிருந்து
வட்டி வாங்கக் கூடாது, அவனை வைத்து லாபம் சம்பாதிக்கக் கூடாது.[g]
உங்கள் கடவுளுக்குப் பயந்து நடக்க வேண்டும்.[h] அப்போது, உங்களோடு
உங்கள் சகோதரனும் பிழைப்பான். **37** அவனுக்கு உங்கள் பணத்தை வட்
டிக்குக் கொடுக்கக் கூடாது,[i] உங்கள் உணவுப் பொருளை லாபத்துக்கு விற்
கக் கூடாது. **38** உங்கள் கடவுளாகிய யெகோவா நான்தான். உங்களுக்கு
கானான் தேசத்தைத் தருவதற்கும், நானே உங்கள் கடவுள்[j] என்று நிரூபிப்
பதற்கும் உங்களை எகிப்து தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தவர்
நான்தான்.[k]

39 உங்கள் பக்கத்தில் குடியிருக்கிற சகோதரன் ஏழையாகி உங்க
ளிடம் தன்னை விற்றுவிட்டால்,[l] அடிமைபோல் அவனிடம் வேலை வாங்
கக் கூடாது.[m] **40** கூலியாட்களையும் உங்கள் தேசத்தில் குடியேறியிருக்
கிற ஆட்களையும் நடத்துவதுபோல் நீங்கள் அவனை நடத்த வேண்டும்.[n]
விடுதலை வருஷம்வரை அவன் உங்களுக்கு வேலை செய்ய வேண்டும்.
41 அதன்பின், பிள்ளைகளோடு அவன் தன் குடும்பத்தாரிடம் திரும்பிப்
போக வேண்டும். அவன் தன்னுடைய முன்னோர்களின் நிலத்துக்கே திரும்
பிப்போக வேண்டும்.[o] **42** ஏனென்றால், எகிப்து தேசத்திலிருந்து நான்
கூட்டிக்கொண்டு வந்த இஸ்ரவேலர்கள் என்னுடைய அடிமைகள்.[p] அவர்
கள் மற்றவர்களுக்குத் தங்களை அடிமையாக விற்கக் கூடாது.* **43** நீங்
கள் உங்களுடைய சகோதரனைக் கொடூரமாக நடத்தக் கூடாது,[q] உங்கள்
கடவுளுக்குப் பயந்து நடக்க வேண்டும்.[r] **44** ஒரு ஆணையோ பெண்
ணையோ அடிமையாக வாங்க வேண்டுமென்றால் சுற்றியுள்ள தேசங்களி

25:42 *நே.மொ., “ஒரு அடிமையை விற்பதுபோல் அவர்கள் தங்களை விற்கக் கூடாது.”

அதி. 25
a எண் 35:2, 8
b லேவி 25:28
c எண் 18:20; எண் 35:2, 4; உபா 18:1
d எண் 35:7; யோசு 14:4
e யாத் 22:21; யாத் 23:9; லேவி 19:34; உபா 10:18
f உபா 15:7; சங் 41:1; சங் 112:5; நீதி 3:27; நீதி 19:17; மாற் 14:7; அப் 11:29; 1தீ 6:18; 1யோ 3:17
g யாத் 22:25; உபா 23:19; சங் 15:5; நீதி 28:8
h நீதி 8:13
i உபா 23:20; லூ 6:34, 35
j யாத் 6:7
k யாத் 20:2; 1ரா 8:51
l யாத் 21:2; உபா 15:12
m 1ரா 9:22
n லேவி 25:53
o யாத் 21:3; லேவி 25:10
p யாத் 1:13, 14; யாத் 19:5; லேவி 25:55
q யாத் 3:7; எபே 6:9; கொலோ 4:1
r லேவி 25:17; பிர 12:13

லிருந்து வாங்கலாம். **45** அதோடு, உங்கள் தேசத்தில் குடியேறியிருக்கிற
மற்ற தேசத்து ஜனங்களையும்[a] உங்கள் தேசத்தில் அவர்களுக்குப் பிறந்த
வர்களையும் அடிமைகளாக வாங்கலாம். அவர்கள் உங்களுடைய சொத்து.
46 உங்களுக்குப்பின் உங்களுடைய பிள்ளைகளுக்கு அவர்களை நிரந்
தர சொத்தாகக் கொடுக்கலாம். அவர்களை வேலையாட்களாக வைத்
துக்கொள்ளலாம். ஆனால், உங்கள் சகோதரர்களாகிய இஸ்ரவேலர்களைக்
கொடூரமாக நடத்தக் கூடாது.[b]

47 உங்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களில் ஒருவன்
பணக்காரனாக இருக்கும்போது, அவனுக்குப் பக்கத்தில் குடியிருக்கிற
உங்கள் சகோதரன் ஏழையாகி அவனிடமோ அவன் குடும்பத்தாரில்
ஒருவனிடமோ தன்னை விற்றுவிட்டால், **48** தன்னை எப்போது வேண்டு
மானாலும் மீட்டுக்கொள்ள அவனுக்கு உரிமை இருக்கிறது. அவனுடைய
அண்ணனோ, தம்பியோ, **49** அவனுடைய அப்பாவின் சகோதரனோ,
அந்தச் சகோதரனின் மகனோ, அவனுடைய நெருங்கிய சொந்தக்காரர்க
ளில்* வேறொருவனோ அவனை மீட்கலாம்.[c]

ஒருவேளை அவன் பணக்காரனாக ஆகிவிட்டால், அவனே தன்னை
மீட்டுக்கொள்ள வேண்டும்.[d] **50** அவன் தன்னை விற்றதுமுதல் விடு
தலை வருஷம்வரை உள்ள வருஷங்களைக் கணக்குப் போட வேண்டும்.[e]
தன்னை விற்ற தொகையைக் கணக்குப் போட்டு, மீதமுள்ள வருஷங்களுக்
கான விலையைக் கொடுத்து தன்னை மீட்டுக்கொள்ள வேண்டும்.[f] அவன்
வேலை செய்த நாட்களுக்கான கூலியை, ஒரு கூலியாளுக்குக் கொடுக்கப்
படும் கூலியைப் போலக் கணக்கிட வேண்டும்.[g] **51** விடுதலை வருஷத்
துக்கு இன்னும் நிறைய வருஷங்கள் இருந்தால், மீதமுள்ள வருஷங்களுக்
குத் தகுந்த விலையைக் கொடுத்து தன்னை மீட்டுக்கொள்ள வேண்டும்.
52 ஆனால், விடுதலை வருஷத்துக்கு இன்னும் சில வருஷங்களே இருந்
தால், மீதமுள்ள வருஷங்களுக்குத் தகுந்த விலையைக் கணக்குப் போட்
டுக் கொடுத்து தன்னை மீட்டுக்கொள்ள வேண்டும். **53** அடிமையாக
இருக்கும் வருஷங்களில் அவனுடைய எஜமானுக்கு அவன் ஒரு கூலி
யாள் போல இருக்க வேண்டும். அவனுடைய எஜமான் அவனைக் கொடூ
ரமாக நடத்தாதபடி நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.[h] **54** இப்படி
அவனால் தன்னை மீட்டுக்கொள்ள முடியாவிட்டால், விடுதலை வருஷத்
தில் அவனும் அவன் பிள்ளைகளும் விடுதலையாவார்கள்.[i]

55 ஏனென்றால், இஸ்ரவேலர்கள் எனக்குச் சொந்தமான அடிமைகள்,
எகிப்து தேசத்திலிருந்து நான் கூட்டிக்கொண்டுவந்த என் அடிமைகள்.[j]
நான் உங்கள் கடவுளாகிய யெகோவா'" என்றார்.

26 பின்பு அவர், "'ஒன்றுக்கும் உதவாத தெய்வங்களை நீங்கள் உண்
டாக்கக் கூடாது.[k] செதுக்கப்பட்ட சிலைகளையோ[l] பூஜைத் தூண்க
ளையோ வைத்து வணங்கக் கூடாது. உங்கள் தேசத்தில் கற்சிலைகளை[m]
வைத்து அவற்றின் முன்னால் தலைவணங்கக் கூடாது.[n] நான் உங்கள் கட
வுளாகிய யெகோவா. **2** நான் சொன்ன ஓய்வுநாட்களை நீங்கள் கடைப்
பிடிக்க வேண்டும், என் வழிபாட்டுக் கூடாரத்துக்கு நீங்கள் பயபக்தி காட்ட
வேண்டும். நான் யெகோவா.

25:49 * வே.வா., "இரத்த சொந்தத்தில்."

அதி. 25
a யாத் 12:38 யோசு 9:21
b லேவி 25: 39, 43
c லேவி 25:25
d லேவி 25: 26, 27
e லேவி 25:10
f லேவி 25: 15, 16
g உபா 15:18
h லேவி 25: 40, 43 கொலோ 4:1
i யாத் 21:3
j யாத் 20:2 லேவி 25:42

அதி. 26
k யாத் 20:4 லேவி 19:4 அப் 17:29 1கொ 8:4
l உபா 5:8
m எண் 33:52
n தானி 3:18 1கொ 10:14

3 நீங்கள் என்னுடைய சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து என்னுடைய கட்டளைகளின்படி நடந்துவந்தால்,[a] **4** அந்தந்த பருவங்களில் மழை பெய்யும்படி செய்வேன்.[b] நிலம் விளைச்சல் தரும்,[c] மரம் கனி கொடுக்கும். **5** திராட்சையின் அறுவடைக் காலம்வரை போரடிப்புக் காலம் நீடிக்கும். விதைப்புக் காலம்வரை திராட்சையின் அறுவடைக் காலம் நீடிக்கும். நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு உங்களுடைய தேசத்தில் பாதுகாப்பாகக் குடியிருப்பீர்கள்.[d] **6** தேசத்தில் நான் சமாதானத்தைத் தருவேன்.[e] நீங்கள் யாரைக் கண்டும் பயப்படாமல் நிம்மதியாகப் படுத்துத் தூங்குவீர்கள்.[f] தேசத்திலிருந்து கொடிய மிருகங்களைத் துரத்தியடிப்பேன். யாரும் வாளை எடுத்துக்கொண்டு உங்களோடு போர் செய்ய வர மாட்டார்கள். **7** எதிரிகளை நீங்கள் துரத்திக்கொண்டு போவீர்கள், அவர்கள் உங்களுடைய வாளுக்குப் பலியாவார்கள். **8** உங்களில் 5 பேர் 100 பேரைத் துரத்திக்கொண்டு போவீர்கள், 100 பேர் 10,000 பேரைத் துரத்திக்கொண்டு போவீர்கள். எதிரிகள் உங்களுடைய வாளுக்குப் பலியாவார்கள்.[g]

9 நான் உங்கள்மேல் கருணை காட்டுவேன். உங்களுடைய வம்சத்தைத் தழைக்கச் செய்வேன்.[h] உங்களுடன் செய்த ஒப்பந்தத்தைக் காப்பேன்.[i] **10** உங்களுக்கு அமோக விளைச்சல் கிடைக்கும். அடுத்த வருஷம்வரை சாப்பிட்டாலும் அது தீராது. புதிய தானியத்தை வைப்பதற்காகப் பழையதைத் தூக்கிப்போடும் அளவுக்கு ஏராளமான விளைச்சல் கிடைக்கும். **11** உங்கள் நடுவில் என் வழிபாட்டுக் கூடாரத்தை அமைப்பேன்.[j] உங்களை நான் ஒதுக்கித்தள்ள மாட்டேன். **12** நான் உங்கள் நடுவே நடந்து, உங்கள் கடவுளாக இருப்பேன்.[k] நீங்கள் என் ஜனங்களாக இருப்பீர்கள்.[l] **13** நான் உங்கள் கடவுளாகிய யெகோவா. எகிப்தில் அடிமைகளாக இருந்த உங்களை நான் விடுதலை செய்து கூட்டிக்கொண்டு வந்தேன். உங்கள் நுகத்தடியை உடைத்துப்போட்டு உங்களைத் தலைநிமிர்ந்து நடக்க வைத்தேன்.

14 நீங்கள் என் பேச்சைக் கேட்காமலும், இந்த எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாமலும்,[m] **15** என் சட்டதிட்டங்களை ஒதுக்கி,[n] என் நீதித்தீர்ப்புகளை வெறுத்து, என் ஒப்பந்தத்தை மீறி,[o] என் கட்டளைகளைக் கடைப்பிடிக்காமல் போனால், **16** நானும் என் பங்குக்கு இப்படியெல்லாம் உங்களைத் தண்டிப்பேன்: உங்களுக்குப் பீதி உண்டாக்குவேன். காசநோயாலும் கடும் காய்ச்சலாலும் உங்களை அவதிப்பட வைப்பேன். அவை உங்கள் பார்வையை மங்க வைக்கும், உங்கள் சக்தியை உறிஞ்சிவிடும். நீங்கள் விதை விதைத்தாலும் பிரயோஜனம் இல்லாமல் போகும், எதிரிகள் அவற்றைத் தின்றுவிடுவார்கள்.[p] **17** நான் உங்களை ஒதுக்கித்தள்ளுவேன். எதிரிகள் உங்களை வீழ்த்துவார்கள்.[q] உங்களை வெறுப்பவர்கள் உங்கள்மேல் ஏறி மிதிப்பார்கள்.[r] யாரும் விரட்டாமலேயே நீங்கள் தலைதெறிக்க ஓடுவீர்கள்.[s]

18 அதன் பின்பும் நீங்கள் என் பேச்சைக் கேட்காவிட்டால், உங்கள் பாவங்களுக்காக ஏழு மடங்கு உங்களைத் தண்டிப்பேன். **19** உங்கள் அகங்காரத்தையும் ஆணவத்தையும் அடக்குவேன். உங்கள் வானத்தை இரும்பைப் போல மாற்றுவேன்,*[t] உங்கள் பூமியைச் செம்பைப் போல

26:19 * அதாவது, “வானம் மழை பொழியாதபடி செய்வேன்.”

அதி. 26
- a உபா 11:13-15; பிர 12:13
- b உபா 28:12; ஏசா 30:23; எசே 34:26; யோவே 2:23
- c சங் 67:6; சங் 85:12
- d லேவி 25:18
- e 1நா 22:9; சங் 29:11; ஆகா 2:9
- f மீ 4:4
- g உபா 28:7; யோசு 23:10; நியா 7:15, 16; நியா 15:15, 16; 1நா 11:20
- h உபா 28:4
- i யாத் 6:4
- j யாத் 25:8; எசே 37:26; வெளி 21:3
- k உபா 23:14
- l யாத் 6:7; 2கொ 6:16
- m உபா 28:15
- n 2ரா 17:15
- o யாத் 24:7; உபா 31:16; எபி 8:9
- p உபா 28:22, 33; நியா 6:3
- q உபா 28:15, 25; நியா 2:14; 1சா 4:10
- r சங் 106:41; புல 1:5
- s லேவி 26:36
- t உபா 11:17; 1ரா 17:1

ஆக்குவேன்.* **20** உங்கள் நிலத்தில் விளைச்சல் இருக்காது, மரங்களில்
பழம் காய்க்காது. நீங்கள் எவ்வளவுதான் பாடுபட்டாலும் உங்கள் சக்தி
யெல்லாம் வீணாய்ப்போகும்.[a]

21 நீங்கள் என் பேச்சைக் கேட்காமல் எனக்கு விரோதமாக நடந்
துகொண்டே இருந்தால், உங்கள் பாவங்களுக்கு ஏற்றபடி இன்னும் ஏழு
மடங்கு உங்களைத் தண்டிப்பேன். **22** கொடிய மிருகங்களை உங்கள் நடு
வில் அனுப்புவேன்.[b] அவை உங்கள் பிள்ளைகளைக் கொன்றுபோடும்,[c]
ஆடுமாடுகளைக் கடித்துக் குதறிவிடும். கொஞ்சம் பேர்தான் மிஞ்சுவீர்கள்,
உங்கள் சாலைகள் வெறிச்சோடிக் கிடக்கும்.[d]

23 இத்தனை நடந்தும் நீங்கள் திருந்தாமல்[e] பிடிவாதத்தோடு எனக்கு
விரோதமாக நடந்தால், **24** நானும் உங்களுக்கு விரோதமாக நடவடிக்கை
எடுப்பேன். உங்கள் பாவங்களுக்காக ஏழு மடங்கு உங்களைத் தண்டிப்
பேன். **25** என் ஒப்பந்தத்தை மீறியதற்காக உங்களை வாளால் பழிதீர்ப்
பேன்.[f] நீங்கள் நகரங்களுக்குள் ஓடி ஒளிந்தாலும் உங்கள் நடுவில்
நோயைப் பரப்புவேன்.[g] எதிரியின் கையில் உங்களைச் சிக்க வைப்பேன்.[h]
26 உங்கள் உணவுப் பொருள்களை அழித்துப்போடுவேன்.*[i] அப்போது,
10 பெண்கள் ஒரே அடுப்பில் ரொட்டி சுடுவார்கள். அதையும் அளந்து
அளந்துதான் கொடுப்பார்கள்.[j] நீங்கள் சாப்பிட்டாலும் உங்கள் பசி தீராது.[k]

27 அதன் பின்பும் நீங்கள் என் பேச்சைக் கேட்காமல் பிடிவாதத்தோடு
எனக்கு விரோதமாக நடந்தால், **28** நானும் உங்களுக்கு விரோதமாக இன்
னும் கடுமையான நடவடிக்கை எடுப்பேன்.[l] உங்கள் பாவங்களுக்காக ஏழு
மடங்கு உங்களைத் தண்டிப்பேன். **29** அதனால், உங்களுடைய மகன்க
ளின் சதையையும் மகள்களின் சதையையும் நீங்கள் தின்பீர்கள்.[m]
30 நான் உங்களுடைய ஆராதனை மேடுகளை அழிப்பேன்,[n] தூபபீடங்
களை உடைப்பேன். வெறும் ஜடமாயிருக்கிற அருவருப்பான* சிலைகள்
மேல் உங்கள் பிணங்களைக் குவிப்பேன்.[o] அருவருப்புடன் உங்களைவிட்
டுத் திரும்பிக்கொள்வேன்.[p] **31** உங்கள் நகரங்களை நாசம் செய்வேன்,[q]
உங்கள் புனித ஸ்தலங்களைப் பாழாக்குவேன். உங்களுடைய பலிகளை
ஏற்றுக்கொள்ள* மாட்டேன். **32** தேசத்தைப் பாழாக்குவேன்,[r] அதில் குடி
யிருக்கப்போகிற எதிரிகள் அதிர்ச்சியுடன் அதைப் பார்ப்பார்கள்.[s] **33** பல
தேசங்களுக்கு உங்களைச் சிதறிப்போகப் பண்ணுவேன்.[t] நான் உருவி
வீசும் வாள் உங்களைத் துரத்தும்.[u] உங்கள் தேசம் பாழாக்கப்படும்,[v] உங்
கள் நகரங்கள் சின்னாபின்னமாகும்.

34 நீங்கள் எதிரிகளின் தேசத்தில் இருக்கும்போது உங்கள் நிலம்
பாழாய்க் கிடக்கும். அது அனுபவிக்காமல்போன ஓய்வு வருஷங்களை
அப்போது அனுபவிக்கும். அந்தக் காலமெல்லாம் நிலம் ஓய்ந்திருக்கும்.
அதற்குக் கிடைத்திருக்க வேண்டிய ஓய்வு வருஷங்கள் கிடைக்க வேண்
டும்.[w] **35** அந்த நிலம் பாழாய்க் கிடக்கும் காலமெல்லாம் ஓய்ந்திருக்கும்.

அதி. 26
a எரே 12:13; ஆகா 1:6, 10
b உபா 32:24; எரே 15:3
c எசே 5:17
d நியா 5:6; ஏசா 33:8; சக 7:14
e ஏசா 1:16; எரே 2:30; எரே 5:3
f யாத் 24:7
g உபா 28:21; எரே 24:10; ஆமோ 4:10
h நியா 2:14; 1சா 4:10
i எசே 5:16
j எசே 4:16
k ஏசா 9:20; மீ 6:14; ஆகா 1:6
l எரே 21:5
m உபா 28:53; 2ரா 6:29; எரே 19:9; புல 4:10; எசே 5:10
n 2நா 34:3; ஏசா 27:9
o 1ரா 13:2; 2ரா 23:8, 20; எசே 6:5
p சங் 78:58, 59
q 2ரா 25:9, 10; 2நா 36:17; நெ 2:3; ஏசா 1:7; எரே 4:7
r எரே 9:11
s உபா 28:37; உபா 29:22-24; எரே 18:16; புல 2:15; எசே 5:15
t சங் 44:11
u எரே 9:16; எசே 12:14
v சக 7:14
w 2நா 36:20, 21

26:19 *அதாவது, “பூமி வறண்டுபோகும்படி செய்வேன்.” **26:26** *நே.மொ., “ரொட்டிக் கோல்களை முறித்துப்போடுவேன்.” இவை ஒருவேளை ரொட்டிகளை மாட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்ட கோல்களாக இருந்திருக்கலாம். **26:30** *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **26:31** *வே.வா., “பலிகளின் இனிய வாசனையை முகர.”

ஏனென்றால், அந்தத் தேசத்தில் நீங்கள் குடியிருந்தபோது ஓய்வுநாள் சட்
டத்தின்படி நீங்கள் நிலத்துக்கு ஓய்வு தரவில்லை.

36 எதிரிகளின் தேசத்தில் மீதியாக இருப்பவர்களின்[a] இதயத்தை நான்
பதற வைப்பேன். காற்றில் பறக்கும் இலையின் சத்தம் கேட்டால்கூட
அவர்கள் தலைதெறிக்க ஓடுவார்கள். யாரும் துரத்தாமலேயே வாளுக்குத்
தப்பியோடுவது போல ஓடி விழுவார்கள்.[b] **37** யாரும் துரத்தாவிட்டால்
கூட வாளுக்குத் தப்பியோடுவதுபோல் ஓடி, ஒருவர்மேல் ஒருவர் மோதி
விழுவார்கள். உங்களால் எதிரிகளை எதிர்த்து நிற்க முடியாது.[c] **38** மற்ற
தேசத்தார் மத்தியில் நீங்கள் அழிந்துபோவீர்கள்,[d] எதிரிகளின் தேசம்
உங்களை விழுங்கிவிடும். **39** உங்களில் மீதியாக இருப்பவர்கள் தாங்கள்
செய்த குற்றத்தையும் தங்களுடைய முன்னோர்கள் செய்த குற்றத்தையும்[e]
நினைத்து எதிரிகளின் தேசத்தில் வாடி வதங்குவார்கள்.[f] **40** அப்போது,
அவர்கள் செய்த குற்றத்தையும் அவர்களுடைய முன்னோர்கள் செய்த குற்
றத்தையும் துரோகத்தையும் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். எனக்கு
விரோதமாக நடந்து எனக்குத் துரோகம் செய்ததை ஒத்துக்கொள்வார்கள்.[g]
41 அவர்கள் எனக்குத் துரோகம் செய்ததால் நானும் அவர்களுக்கு விரோ
தமாக நடவடிக்கை எடுத்தேன்.[h] எதிரிகளின் தேசத்துக்கு அவர்களைக்
கொண்டுபோனேன்.[i]

அவர்கள் ஒருவேளை தங்களுடைய இதயத்திலுள்ள பிடிவாத
குணத்தை விட்டுவிட்டுத்[j] தங்களுடைய குற்றத்துக்குத் தகுந்த தண்ட
னையை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைத்துதான் அப்படிக் கொண்டு
போனேன். **42** யாக்கோபோடு நான் செய்த ஒப்பந்தத்தையும்[k] ஈசாக்
கோடு நான் செய்த ஒப்பந்தத்தையும்[l] ஆபிரகாமோடு நான் செய்த
ஒப்பந்தத்தையும்[m] நினைத்துப் பார்ப்பேன். தேசத்தையும் நான் நினைத்
துப் பார்ப்பேன். **43** அவர்களால் தேசம் வெறுமையாக விடப்படும்போது,
அது அனுபவிக்க வேண்டிய ஓய்வு வருஷங்களை அனுபவிக்கும்,[n]
அவர்கள் இல்லாமல் பாழாய்க் கிடக்கும்; அவர்கள் என்னுடைய நீதித்
தீர்ப்புகளை ஒதுக்கித்தள்ளியதாலும் என் சட்டதிட்டங்களை வெறுத்ததா
லும் தங்களுடைய குற்றத்துக்குத் தகுந்த தண்டனையைப் பெறுவார்கள்.[o]
44 அதன் பின்பும், எதிரிகளின் தேசத்தில் நான் அவர்களை ஒரேயடியாக
ஒதுக்கித்தள்ளவோ, அடியோடு அழிக்கவோ மாட்டேன்.[p] அப்படிச் செய்
தால் அவர்களோடு செய்த ஒப்பந்தத்தை நான் மீறுவதாக இருக்கும்.[q]
நான் அவர்களுடைய கடவுளாகிய யெகோவா. **45** அவர்களுடைய முன்
னோர்களோடு செய்த ஒப்பந்தத்தை[r] அவர்களுக்காக நான் நினைத்துப்
பார்ப்பேன். நான் அவர்களுடைய கடவுள் என்பதை நிரூபிப்பதற்காக, மற்ற
தேசத்தாரின் கண் முன்னாலேயே எகிப்து தேசத்திலிருந்து அவர்களுடைய
முன்னோர்களைக் கூட்டிக்கொண்டு வந்தேன்.[s] நான் யெகோவா'" என்றார்.

46 சீனாய் மலையில் மோசேயின் மூலம் இஸ்ரவேலர்களுக்கு
யெகோவா தந்த விதிமுறைகளும் நீதித்தீர்ப்புகளும் சட்டங்களும்
இவைதான்.[t]

27 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "நீ இஸ்ரவேலர்களிடம்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'ஒரு நபருக்கென்று நிர்ண
யிக்கப்படும் தொகையை யெகோவாவுக்குச் செலுத்துவதாக யாராவது
விசேஷமாய் நேர்ந்துகொண்டால்,[u] அவரவருக்கு நிர்ணயிக்கப்படும்

அதி. 26
a ஏசா 24:6
b லேவி 26:17; ஏசா 30:17
c யோசு 7:12; நியா 2:14; எரே 37:10
d உபா 4:27; உபா 28:48; எரே 42:17
e யாத் 20:5; எண் 14:18
f உபா 28:65
g 1ரா 8:33; நெ 9:2; எசே 6:9; எசே 36:31; தானி 9:5
h லேவி 26:24
i 1ரா 8:47; 2நா 36:20
j உபா 30:6; எரே 4:4; அப் 7:51
k ஆதி 28:13
l ஆதி 26:3
m ஆதி 12:7; உபா 4:31; சங் 106:45
n லேவி 26:34; 2நா 36:20, 21
o 2ரா 17:15
p உபா 4:31; 2ரா 13:23; நெ 9:31
q உபா 4:13; எரே 14:21
r யாத் 24:3, 8; உபா 9:9
s எசே 20:9
t லேவி 27:34; உபா 6:1

அதி. 27
u உபா 23:21; நியா 11:30, 31; 1சா 1:11

அதி. 27
a லேவி 5:7, 11
லேவி 12:8
லேவி 14:21
b லூ 21:2-4
2கொ 8:12
c லேவி 20:25
உபா 14:7, 8
d லேவி 27:19
e லேவி 27:
11, 12
f லேவி 25:10

தொகை இதுதான்: **3** பரிசுத்த* சேக்கலின்# கணக்குப்படி, 20 வயது
முதல் 60 வயதுவரையுள்ள ஒரு ஆணுக்கு 50 வெள்ளி சேக்கல். **4** பெண்
ணுக்கு 30 சேக்கல். **5** ஐந்து வயதுமுதல் 20 வயதுவரையுள்ள ஆணுக்கு
20 சேக்கல், பெண்ணுக்கு 10 சேக்கல். **6** ஒரு மாதம்முதல் ஐந்து வயது
வரையுள்ள ஆண்பிள்ளைக்கு ஐந்து வெள்ளி சேக்கல், பெண்பிள்ளைக்கு
மூன்று வெள்ளி சேக்கல்.

7 60 அல்லது அதற்கு அதிகமான வயதுடைய ஒரு ஆணுக்கு
15 சேக்கல், பெண்ணுக்கு 10 சேக்கல். **8** ஆனால், நிர்ணயிக்கப்பட்ட இந்
தத் தொகையைச் செலுத்த முடியாதளவுக்கு அவன் பரம ஏழையாக இருந்
தால்,[a] குருவானவரின் முன்னால் வந்து நிற்க வேண்டும். நேர்ந்துகொண்
டவனின் பண வசதிக்குத் தகுந்தபடி[b] குருவானவர் அந்தத் தொகையை
நிர்ணயிக்க வேண்டும்.

9 ஆனால், பலி செலுத்துவதற்கு ஏற்ற ஒரு மிருகத்தை யெகோ
வாவுக்குக் கொடுப்பதாக நேர்ந்துகொண்டால், அவன் யெகோவாவுக்கு
எதைக் கொடுத்தாலும் அது பரிசுத்தமாக இருக்கும். **10** அதற்குப் பதிலாக
வேறொன்றை அவன் செலுத்தக் கூடாது. குறை உள்ளதற்குப் பதிலாக குறை
இல்லாததையும், குறை இல்லாததற்குப் பதிலாக குறை உள்ளதையும் செலுத்
தக் கூடாது. அப்படி ஒரு மிருகத்துக்குப் பதிலாக வேறொரு மிருகத்தை மாற்
றிக் கொடுத்தால், இரண்டுமே கடவுளுக்குச் சொந்தமாகிவிடும். **11** அது
யெகோவாவுக்குக் காணிக்கையாகக் கொடுப்பதற்குத் தகுதியில்லாத அசுத்
தமான மிருகமாக[c] இருந்தால், அந்த மிருகத்தை குருவானவருக்கு முன்
னால் நிறுத்த வேண்டும். **12** அந்த மிருகத்துக்கு எந்தளவு குறை இருக்கி
றதென்று குருவானவர் பார்த்து, அதற்கு ஏற்றபடி அதன் மதிப்பை
நிர்ணயிப்பார். அவர் நிர்ணயிப்பதே அதன் மதிப்பாகும். **13** ஒருவேளை
அவன் அதை மீட்டுக்கொள்ள விரும்பினால், நிர்ணயிக்கப்பட்ட மதிப்
போடு ஐந்திலொரு பங்கைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.[d]

14 ஒருவன் தன் வீட்டை யெகோவாவுக்குப் பரிசுத்தமானதாக அர்ப்ப
ணிக்க நேர்ந்துகொண்டால், அது தரமானதா இல்லையா என்பதைக் குரு
வானவர் பார்த்து அதன் மதிப்பை நிர்ணயிப்பார். அவர் அதற்கு நிர்ணயிக்
கும் மதிப்புதான் அதன் விலையாக இருக்கும்.[e] **15** ஒருவேளை, அந்த
வீட்டை அர்ப்பணிப்பதாக நேர்ந்துகொண்டவன் அதை மீட்டுக்கொள்ள
விரும்பினால், நிர்ணயிக்கப்பட்ட மதிப்போடு ஐந்திலொரு பங்கைச் சேர்த்
துக் கொடுக்க வேண்டும். அப்போது, அது அவனுக்குச் சொந்தமாகும்.

16 ஒருவன் தன்னுடைய வயலில் ஒரு பகுதியை யெகோவாவுக்கு
அர்ப்பணிப்பதாக நேர்ந்துகொண்டால், அதில் எவ்வளவு விதை விதைக்க
லாம் என்பதைப் பொறுத்து அதன் மதிப்பு நிர்ணயிக்கப்படும். அதா
வது, ஒரு ஹோமர் அளவு* பார்லி விதைக்கப்படுகிற வயலின் மதிப்பு 50
வெள்ளி சேக்கல். **17** அவன் தன்னுடைய வயலை அர்ப்பணிப்பதாக
விடுதலை* வருஷத்தில்[f] நேர்ந்துகொண்டால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு
மாறாது. **18** தன்னுடைய வயலை அர்ப்பணிப்பதாக விடுதலை வருஷத்
துக்குப் பிறகு நேர்ந்துகொண்டால், அடுத்த விடுதலை வருஷம்வரை

27:3 *வே.வா., "பரிசுத்த இடத்து." #ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **27:16** *ஒரு ஹோமர் என்பது 220 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **27:17** *வே.வா., "யூபிலி."

உள்ள வருஷங்களைக் குருவானவர் கணக்குப் போட்டு, அதற்கு ஏற்றபடி
அதன் விலையைக் குறைக்க வேண்டும்.[a] **19** ஒருவேளை, அந்த வயலை
நேர்ந்துகொண்டவன் அதை மீட்டுக்கொள்ள விரும்பினால், நிர்ணயிக்
கப்பட்ட மதிப்போடு ஐந்திலொரு பங்கைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.
அப்போது, அது அவனுக்குச் சொந்தமாகும். **20** அந்த வயலை அர்ப்ப
ணிப்பதாக நேர்ந்துகொண்டவன் அதை மீட்காமல் வேறொருவனுக்கு விற்
றால், அதன் பிறகு அதை மீட்கவே முடியாது. **21** விடுதலை வருஷத்தில்
அது யெகோவாவுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும். அது பரிசுத்தமானதா
கவும் குருமார்களின் சொத்தாகவும் இருக்கும்.[b]

22 ஒருவன் யெகோவாவுக்கு அர்ப்பணிப்பதாக நேர்ந்துகொண்ட வயல்
பரம்பரை வயலாக இல்லாமல் விலைக்கு வாங்கப்பட்டதாக இருந்தால்,[c]
23 விடுதலை வருஷம்வரை உள்ள வருஷங்களுக்கான தொகையை குரு
வானவர் கணக்குப் போட வேண்டும். அதே நாளில், அந்தத் தொகையை
அவன் குருவானவருக்குக் கொடுக்க வேண்டும்.[d] அது யெகோவாவுக்குப்
பரிசுத்தமானது. **24** அந்த வயலை அவன் யாரிடமிருந்து வாங்கினானோ
அவனுக்கே விடுதலை வருஷத்தில் அது சொந்தமாகும்.[e]

25 ஒவ்வொன்றின் மதிப்பும் பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி மதிப்
பிடப்பட வேண்டும். ஒரு சேக்கலின் மதிப்பு 20 கேரா.#

26 மிருகங்களின் முதல் குட்டிகளை அர்ப்பணிப்பதாக யாரும் நேர்ந்து
கொள்ளக் கூடாது. ஏனென்றால், முதலில் பிறக்கிற எல்லாமே யெகோவா
வுக்குத்தான் சொந்தம்.[f] அது மாடாக இருந்தாலும் சரி, ஆடாக இருந்தாலும்
சரி, அது ஏற்கெனவே யெகோவாவுக்குச் சொந்தமானது.[g] **27** ஒருவேளை,
அது அசுத்தமான மிருகங்களில் ஒன்றாக இருந்தால், அது மீட்கப்படலாம்.
நிர்ணயிக்கப்பட்ட மதிப்போடு ஐந்திலொரு பங்கைச் சேர்த்துக் கொடுத்து
அதை அவன் மீட்க வேண்டும்.[h] அப்படி மீட்காவிட்டால், நிர்ணயிக்கப்
பட்ட மதிப்பின்படி குருவானவர் அதை விற்க வேண்டும்.

28 ஒருவன் தனக்குச் சொந்தமானதை எந்தவொரு நிபந்தனையும் இல்
லாமல் யெகோவாவுக்கு அர்ப்பணம் செய்துவிட்டால் அதை விற்கவோ
மீட்கவோ கூடாது, அது மனுஷனோ மிருகமோ வயலோ எதுவாக இருந்
தாலும் சரி. அர்ப்பணிக்கப்பட்ட எல்லாமே யெகோவாவுக்கு மிகவும் பரி
சுத்தமானது.[i] **29** அழிவுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட எவனும் மீட்கப்
படக் கூடாது.[j] அவன் கண்டிப்பாகக் கொல்லப்பட வேண்டும்.[k]

30 விளைச்சலில் பத்திலொரு பாகம்* யெகோவாவுக்குத்தான் சொந்
தம்,[l] அது வயலில் விளைகிற பயிர்களாக இருந்தாலும் சரி, மரங்களில்
காய்க்கிற பழங்களாக இருந்தாலும் சரி. அது யெகோவாவுக்குப் பரிசுத்தமா
னது. **31** அவற்றில் எதையாவது மீட்டுக்கொள்ள ஒருவன் விரும்பினால்
அதன் மதிப்போடு ஐந்திலொரு பங்கைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.
32 மாடுகளிலும் ஆடுகளிலும் பத்தில் ஒன்றை யெகோவாவுக்குக்
கொடுக்க வேண்டும். மேய்ப்பன் தன்னுடைய மந்தையை எண்ணும்போது*

27:25 * வே.வா., "பரிசுத்த இடத்து." # ஒரு கேராவின் எடை அரை கிராமுக்கும் சற்று அதிகமாகும். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **27:30** * வே.வா., "தசமபாகம்." **27:32** * மேய்ப்பர்கள் தொழுவத்துக்கு உள்ளே அல்லது வெளியே விலங்குகளை அனுப்பும்போது தங்கள் கோலுக்குக் கீழாக ஒவ்வொன்றாய் அனுப்பி அவற்றை எண்ணினார்கள்.

அதி. 27

a லேவி 25:15, 16

b எண் 18:8, 14

c லேவி 25:25

d லேவி 27:11, 12; லேவி 27:18

e லேவி 25:10, 28

f யாத் 13:2; எண் 18:17

g யாத் 22:30; உபா 15:19

h லேவி 27:11-13

i எண் 18:8, 14

j எண் 21:2

k யோசு 6:17; 1சா 15:3, 18

l ஆதி 14:20; ஆதி 28:22; எண் 18:21, 26; உபா 14:22; 2நா 31:5; நெ 13:12; மல் 3:10; லூ 11:42; எபி 7:5

அதி. 27

a லேவி 27: 9, 10

b யாத் 3:1 எண் 1:1

ஒவ்வொரு பத்தாவது மிருகத்தையும் கடவுளுக்காக ஒதுக்கிவைக்க வேண்
டும். பத்தாவது மிருகம் ஒவ்வொன்றும் பரிசுத்தமானது. **33** அது குறை
உள்ளதா குறை இல்லாததா என்று அவன் பார்க்கக் கூடாது, அதை மாற்ற
வும் கூடாது. அப்படி மாற்றினால் இரண்டுமே கடவுளுக்குச் சொந்தமாகி
விடும்.[a] அவற்றை மீட்க முடியாது’” என்றார்.

34 இஸ்ரவேலர்களுக்கு மோசே மூலம் சீனாய் மலையில் யெகோவா
கொடுத்த கட்டளைகள் இவைதான்.[b]

எண்ணாகமம்

முக்கியக் குறிப்புகள்

எண்+ஆகமம்=எண்ணாகமம். இந்தப் பெயர், கணக்கெடுப்பின் பதிவைக் குறிக்கிறது.

1 படையில் சேவை செய்ய ஆண்கள் கணக்கெடுக்கப்படுகிறார்கள் (1-46)

லேவியர்கள் படையில் சேர்க்கப்படுவதில்லை (47-51)

அணி அணியாகக் கூடாரம் போடுகிறார்கள் (52-54)

2 மூன்று மூன்று கோத்திரங்களாக முகாம்போடுகிறார்கள் (1-34)

யூதா கோத்திரத்தின் பிரிவு கிழக்கே முகாம்போடுகிறது (3-9)

ரூபன் கோத்திரத்தின் பிரிவு தெற்கே முகாம்போடுகிறது (10-16)

லேவி கோத்திரம் நடுவில் முகாம்போடுகிறது (17)

எப்பிராயீம் கோத்திரத்தின் பிரிவு மேற்கே முகாம்போடுகிறது (18-24)

தாண் கோத்திரத்தின் பிரிவு வடக்கே முகாம்போடுகிறது (25-31)

பெயர்ப்பதிவு செய்யப்பட்ட ஆண்களின் மொத்த எண்ணிக்கை (32-34)

3 ஆரோனின் மகன்கள் (1-4)

வழிபாட்டுக் கூடார சேவைக்கு லேவியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் (5-39)

முதல் பிறப்புகள் மீட்கப்பட வேண்டும் (40-51)

4 கோகாத்தியர்களின் வேலைகள் (1-20)

கெர்சோனியர்களின் வேலைகள் (21-28)

மெராரியர்களின் வேலைகள் (29-33)

பெயர்ப்பதிவு பட்டியலின் சுருக்கம் (34-49)

5 தீட்டுப்பட்டவர்கள் தனியாக வைக்கப்படுகிறார்கள் (1-4)

பாவத்தை ஒத்துக்கொள்வதும் நஷ்ட ஈடு கொடுப்பதும் (5-10)

மனைவியின் நடத்தையைச் சந்தேகிக்கும்போது செய்யும் தண்ணீர் சோதனை (11-31)

6 நசரேயராக இருக்க நேர்ந்துகொள்ளுதல் (1-21)

குருமார்களின் வாழ்த்து (22-27)

7 வழிபாட்டுக் கூடார அர்ப்பணத்துக்குக் கொடுக்கப்படும் காணிக்கைகள் (1-89)

8 ஆரோன் ஏழு அகல் விளக்குகளை ஏற்றிவைக்கிறார் (1-4)

லேவியர்கள் தூய்மைப்படுத்தப்பட்டு, வேலையை ஆரம்பிக்கிறார்கள் (5-22)

சந்திப்புக் கூடார வேலைகளைச் செய்கிற லேவியர்களின் வயது வரம்பு (23-26)

9 பஸ்காவை அதற்கான நாளில் கொண்டாட முடியாதவர்களுக்கான ஏற்பாடு (1-14)

வழிபாட்டுக் கூடாரத்தின் மேல் தங்கிய மேகமும் நெருப்பும் (15-23)

10 வெள்ளியால் செய்யப்பட்ட எக்காளங்கள் (1-10)

சீனாயிலிருந்து புறப்படுகிறார்கள் (11-13)

ஜனங்கள் அணி அணியாகப் போகிறார்கள் (14-28)

இஸ்ரவேலர்களுக்கு வழிகாட்டும்படி ஒபாப் கேட்டுக்கொள்ளப்படுகிறார் (29-34)

ஜனங்கள் புறப்படும்போது மோசே செய்யும் ஜெபம் (35, 36)

11 ஜனங்கள் முணுமுணுத்ததால் கடவுள் நெருப்பை அனுப்புகிறார் (1-3)
இறைச்சிக்காக ஜனங்கள் அழுது புலம்புகிறார்கள் (4-9)
தலைமைதாங்க தன்னால் முடியாதென்று மோசே நினைக்கிறார் (10-15)
பெரியோர்களான 70 பேருக்கு யெகோவா தன் சக்தியைக் கொடுக்கிறார் (16-25)
எல்தாதும் மேதாதும்; மோசேயிடம் யோசுவாவுக்கு இருக்கும் மதிப்பு (26-30)
காடைகள் அனுப்பப்படுகின்றன; ஜனங்களுடைய பேராசைக்குத் தண்டனை (31-35)

12 மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாக முணுமுணுக்கிறார்கள் (1-3)
மிகவும் தாழ்மையானவரான மோசே (3)
மோசேயின் சார்பாக யெகோவா பேசுகிறார் (4-8)
மிரியாமைத் தொழுநோய் தாக்குகிறது (9-16)

13 கானான் தேசத்தை உளவு பார்க்க 12 பேர் அனுப்பப்படுகிறார்கள் (1-24)
10 பேர் கானான் தேசத்தைப் பற்றி மோசமாகப் பேசுகிறார்கள் (25-33)

14 ஜனங்கள் எகிப்துக்கே திரும்பிப்போக நினைக்கிறார்கள் (1-10)
யோசுவாவும் காலேபும் கொடுக்கிற நல்ல அறிக்கை (6-9)
யெகோவாவின் கோபம்; ஜனங்கள் சார்பாக மோசே பேசுகிறார் (11-19)
தண்டனை: வனாந்தரத்தில் 40 வருஷங்கள் (20-38)
இஸ்ரவேலர்களை அமலேக்கியர்கள் தாக்குகிறார்கள் (39-45)

15 பலிகளைப் பற்றிய சட்டங்கள் (1-21)
இஸ்ரவேலர்களுக்கும் அவர்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்தாருக்கும் ஒரே சட்டம் (15, 16)
தெரியாத்தனமாகச் செய்த பாவத்திற்காகச் செலுத்தும் பலிகள் (22-29)
வேண்டுமென்றே செய்த பாவத்திற்குக் கிடைக்கும் தண்டனை (30, 31)
ஓய்வுநாள் சட்டத்தை மீறியவன் கொல்லப்படுகிறான் (32-36)
அங்கிகளின் ஓரங்களில் தொங்கல்கள் இருக்க வேண்டும் (37-41)

16 கோராகு, தாத்தான், அபிராம் ஆகியவர்கள் எதிர்க்கிறார்கள் (1-19)
எதிர்த்தவர்களுக்குக் கிடைத்த தண்டனை (20-50)

17 துளிர் விட்டிருந்த ஆரோனின் கோல் ஓர் அடையாளமாக இருந்தது (1-13)

18 குருமார்கள் மற்றும் லேவியர்களின் வேலைகள் (1-7)
குருமார்களின் பங்கு (8-19)
நிரந்தர ஒப்பந்தம் (19)
லேவியர்கள் பத்திலொரு பங்கைப் பெறுவார்கள், கொடுப்பார்கள் (20-32)

19 சிவப்பான இளம் பசுவும் சுத்திகரிப்பு நீரும் (1-22)

20 காதேசில் மிரியாம் இறந்துபோகிறாள் (1)
பாறையை அடித்ததால் மோசே பாவம் செய்துவிடுகிறார் (2-13)
இஸ்ரவேலர்களுக்கு வழிவிட ஏதோம் ராஜா மறுக்கிறான் (14-21)
ஆரோன் இறந்துபோகிறார் (22-29)

21 ஆராத்தின் ராஜா தோற்கடிக்கப்படுகிறான் (1-3)
செம்பினால் செய்யப்பட்ட பாம்பு (4-9)
மோவாபைச் சுற்றி இஸ்ரவேலர்கள் முகாம்போடுகிறார்கள் (10-20)
எமோரியர்களின் ராஜா சீகோன் தோற்கடிக்கப்படுகிறான் (21-30)
எமோரியர்களின் ராஜா ஓக் தோற்கடிக்கப்படுகிறான் (31-35)

22 பிலேயாமுக்கு பாலாக் கூலி கொடுக்கிறான் (1-21)
பிலேயாமின் கழுதை பேசுகிறது (22-41)

23 பிலேயாமின் முதலாம் செய்தி (1-12)
பிலேயாமின் இரண்டாம் செய்தி (13-30)

24 பிலேயாமின் மூன்றாம் செய்தி (1-11)
பிலேயாமின் நான்காம் செய்தி (12-25)

25 மீதியானியப் பெண்களுடன் இஸ்ரவேலர்கள் செய்யும் பாவம் (1-5)
பினெகாசின் நடவடிக்கை (6-18)

26 இஸ்ரவேல் கோத்திரங்களின் இரண்டாவது பெயர்ப்பதிவு (1-65)

27 செலோப்பியாத்தின் மகள்கள் (1-11)
மோசேக்கு அடுத்ததாக யோசுவா நியமிக்கப்படுகிறார் (12-23)

28 பலிகளைச் செலுத்த வேண்டிய முறைகள் (1-31)

தினமும் செலுத்தப்படுகிற பலிகள் (1-8)
ஓய்வுநாளில் செலுத்தப்படுகிற பலிகள் (9, 10)
ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படுகிற பலிகள் (11–15)
பஸ்காவின்போது செலுத்தப்படுகிற பலிகள் (16–25)
அறுவடைப் பண்டிகை நாளில் செலுத்த வேண்டிய பலிகள் (26–31)

29 பலிகளைச் செலுத்த வேண்டிய முறைகள் (1–40)
எக்காளம் ஊதும் நாளில் (1–6)
பாவப் பரிகார நாளில் (7–11)
கூடாரப் பண்டிகை நாளில் (12–38)

30 ஆண்கள் நேர்ந்துகொள்ளும்போது (1, 2)
மனைவியோ மகளோ நேர்ந்துகொள்ளும்போது (3–16)

31 மீதியானியர்களைப் பழிவாங்குகிறார்கள் (1–12)
பிலேயாம் கொல்லப்படுகிறான் (8)
கைப்பற்றப்பட்ட பொருள்கள் சம்பந்தமான அறிவுரைகள் (13–54)

32 யோர்தானுக்குக் கிழக்கே குடியிருக்கும் இடங்கள் (1–42)

33 வனாந்தரத்தில் இஸ்ரவேலர்கள் பயணம் செய்த இடங்கள் (1–49)
கானானைக் கைப்பற்றுவதற்கான அறிவுரைகள் (50–56)

34 கானான் தேசத்தின் எல்லைகள் (1–15)
நிலத்தைப் பங்கிட ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் (16–29)

35 லேவியர்களின் நகரங்கள் (1–8)
அடைக்கல நகரங்கள் (9–34)

36 பெண் வாரிசுகளின் கல்யாணம் பற்றிய சட்டங்கள் (1–13)

1 இஸ்ரவேலர்கள் எகிப்தைவிட்டு வந்த இரண்டாம் வருஷம் இரண்டாம்
மாதம் முதலாம் நாளில்,[a] சீனாய் வனாந்தரத்தில்[b] சந்திப்புக் கூடாரத்
திலே[c] மோசேயிடம் யெகோவா பேசினார். அவர் சொன்னது இதுதான்:
2 “இஸ்ரவேல் ஜனங்களைக் கணக்கெடுங்கள்.[d] அவர்கள் ஒவ்வொருவ
ரையும் வம்சம் வம்சமாக, தந்தைவழிக் குடும்பம் குடும்பமாக, பெயர் பெய
ராக எண்ணுங்கள். **3** இஸ்ரவேல் படையில் சேவை செய்யத் தகுதியுள்ள
20 வயதும் அதற்கு அதிகமான வயதும் உள்ளவர்களை[e] நீயும் ஆரோனும்
அணி அணியாக* பெயர்ப்பதிவு செய்ய வேண்டும்.

4 உங்களுக்கு உதவியாக ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவரைத்
தேர்ந்தெடுங்கள். அவருடைய தந்தைவழிக் குடும்பத்துக்கு அவர் தலைவ
ராக இருப்பார்.[f] **5** இப்படி உங்களுக்கு உதவியாக இருக்க வேண்டியவர்
களின் பெயர்கள்: ரூபன் கோத்திரத்தில், சேதேயூரின் மகன் எலிசூர்.[g]
6 சிமியோன் கோத்திரத்தில், சூரிஷதாயின் மகன் செலூமியேல்.[h] **7** யூதா
கோத்திரத்தில், அம்மினதாபின் மகன் நகசோன்.[i] **8** இசக்கார் கோத்திரத்
தில், சூவாரின் மகன் நெதனெயேல்.[j] **9** செபுலோன் கோத்திரத்தில்,
ஹேலோனின் மகன் எலியாப்.[k] **10** யோசேப்பின் மகன்களில்: எப்பிரா
யீம்[l] கோத்திரத்தில், அம்மியூத்தின் மகன் எலிஷாமா. மனாசே கோத்திரத்
தில், பெதாசூரின் மகன் கமாலியேல். **11** பென்யமீன் கோத்திரத்தில், கீதெ
யோனியின் மகன் அபிதான்.[m] **12** தாண் கோத்திரத்தில், அம்மிஷதாயின்
மகன் அகியேசேர்.[n] **13** ஆசேர் கோத்திரத்தில், ஓகிரானின் மகன் பாகி
யேல்.[o] **14** காத் கோத்திரத்தில், தேகுவேலின் மகன் எலியாசாப்.[p]
15 நப்தலி கோத்திரத்தில், ஏனானின் மகன் அகீரா.[q] **16** இவர்கள்தான்

1:3 * நே.மொ., “அவர்களுடைய படைகளின்படி.”

அதி. 1
a யாத் 40:17
b யாத் 19:1; அப் 7:38
c யாத் 25:22
d யாத் 30:12
e யாத் 30:14
f யாத் 18:25; எண் 1:16; யோசு 22:13, 14; யோசு 23:2; 1நா 27:1
g எண் 2:10
h எண் 7:11, 36
i ரூ 4:20; லூ 3:23, 32
j எண் 10:15
k எண் 7:11, 24
l ஆதி 48:20
m எண் 2:22
n எண் 7:11, 66
o எண் 7:11, 72
p எண் 2:14; எண் 7:11, 42; எண் 10:20
q எண் 2:29; எண் 10:27

இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்கள்தான்
தங்களுடைய தகப்பன் கோத்திரத்தின் தலைவர்கள்,[a] ஆயிரக்கணக்கா
னோரின் தலைவர்கள்"[b] என்றார்.

17 கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆண்களை மோசேயும்
ஆரோனும் தங்களோடு சேர்த்துக்கொண்டார்கள். **18** இரண்டாம் மாதம்
முதலாம் நாளில், இஸ்ரவேல் ஜனங்களை அவர்கள் ஒன்றுகூட்டினார்கள்.
அப்போது, 20 வயதும் அதற்கு அதிகமான வயதும் உள்ளவர்கள்[c] பெயர்
பெயராக, வம்சம் வம்சமாக, தந்தைவழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு
செய்யப்பட்டார்கள். **19** யெகோவா கொடுத்த கட்டளைப்படியே, அவர்க
ளுடைய பெயர்களை சீனாய் வனாந்தரத்தில் மோசே பதிவு செய்தார்.[d]

20 இஸ்ரவேலின் மூத்த மகனாகிய ரூபனின் மகன்கள்[e] பெயர் பெயராக,
வம்சம் வம்சமாக, தந்தைவழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்
டார்கள். படையில் சேவை செய்யத் தகுதியுள்ள 20 வயதும் அதற்கு
அதிகமான வயதுமுள்ள ஆண்கள் ஒவ்வொருவராக எண்ணப்பட்டார்கள்.
21 ரூபன் கோத்திரத்தில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 46,500 பேர்.

22 சிமியோனின் மகன்கள்[f] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக,
தந்தைவழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில்
சேவை செய்யத் தகுதியுள்ள 20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள
ஆண்கள் ஒவ்வொருவராக எண்ணப்பட்டார்கள். **23** சிமியோன் கோத்தி
ரத்தில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 59,300 பேர்.

24 காத்தின் மகன்கள்[g] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தைவழிக்
குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில் சேவை செய்
யத் தகுதியுள்ள 20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள ஆண்கள்
எல்லாரும் எண்ணப்பட்டார்கள். **25** காத் கோத்திரத்தில் பெயர்ப்பதிவு
செய்யப்பட்டவர்கள் 45,650 பேர்.

26 யூதாவின் மகன்கள்[h] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தைவ
ழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில் சேவை
செய்யத் தகுதியுள்ள 20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள ஆண்
கள் எல்லாரும் எண்ணப்பட்டார்கள். **27** யூதா கோத்திரத்தில் பெயர்ப்ப
திவு செய்யப்பட்டவர்கள் 74,600 பேர்.

28 இசக்காரின் மகன்கள்[i] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தைவ
ழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில் சேவை
செய்யத் தகுதியுள்ள 20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள ஆண்
கள் எல்லாரும் எண்ணப்பட்டார்கள். **29** இசக்கார் கோத்திரத்தில் பெயர்ப்
பதிவு செய்யப்பட்டவர்கள் 54,400 பேர்.

30 செபுலோனின் மகன்கள்[j] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தை
வழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில் சேவை
செய்யத் தகுதியுள்ள ஆண்களில் 20 வயதும் அதற்கு அதிகமான வய
துமுள்ள எல்லாரும் எண்ணப்பட்டார்கள். **31** செபுலோன் கோத்திரத்தில்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 57,400 பேர்.

32 யோசேப்பின் மகனான எப்பிராயீமின் மகன்கள்[k] பெயர் பெய
ராக, வம்சம் வம்சமாக, தந்தைவழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு
செய்யப்பட்டார்கள். படையில் சேவை செய்யத் தகுதியுள்ள ஆண்களில்
20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள எல்லாரும் எண்ணப்பட்

அதி. 1

a யாத் 18:21; எண் 7:2
b உபா 1:15
c யாத் 30:14
d எண் 26:1, 2
e ஆதி 29:32; எண் 2:10, 11
f ஆதி 29:33; ஆதி 46:10; எண் 2:12, 13
g ஆதி 30:10, 11; ஆதி 46:16; எண் 2:14, 15
h ஆதி 29:35; ஆதி 46:12; எண் 2:3, 4; 1நா 5:2; மத் 1:2; எபி 7:14
i ஆதி 30:17, 18; ஆதி 46:13; எண் 2:5, 6
j ஆதி 30:20; எண் 2:7, 8
k ஆதி 41:51, 52; ஆதி 46:20; ஆதி 48:17–19; எண் 2:18, 19

டார்கள். **33** எப்பிராயீம் கோத்திரத்தில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்
கள் 40,500 பேர்.

34 மனாசேயின் மகன்கள்[a] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தை
வழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில்
சேவை செய்யத் தகுதியுள்ள ஆண்களில் 20 வயதும் அதற்கு அதிகமான
வயதுமுள்ள எல்லாரும் எண்ணப்பட்டார்கள். **35** மனாசே கோத்திரத்தில்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 32,200 பேர்.

36 பென்யமீனின் மகன்கள்[b] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தை
வழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில் சேவை
செய்யத் தகுதியுள்ள ஆண்களில் 20 வயதும் அதற்கு அதிகமான வய
துமுள்ள எல்லாரும் எண்ணப்பட்டார்கள். **37** பென்யமீன் கோத்திரத்தில்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 35,400 பேர்.

38 தாணின் மகன்கள்[c] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தை
வழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில் சேவை
செய்யத் தகுதியுள்ள ஆண்களில் 20 வயதும் அதற்கு அதிகமான வயது
முள்ள எல்லாரும் எண்ணப்பட்டார்கள். **39** தாண் கோத்திரத்தில் பெயர்ப்
பதிவு செய்யப்பட்டவர்கள் 62,700 பேர்.

40 ஆசேரின் மகன்கள்[d] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தைவ
ழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில் சேவை
செய்யத் தகுதியுள்ள 20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள எல்லா
ரும் எண்ணப்பட்டார்கள். **41** ஆசேர் கோத்திரத்தில் பெயர்ப்பதிவு செய்
யப்பட்டவர்கள் 41,500 பேர்.

42 நப்தலியின் மகன்கள்[e] பெயர் பெயராக, வம்சம் வம்சமாக, தந்தைவ
ழிக் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். படையில் சேவை
செய்யத் தகுதியுள்ள 20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள எல்லா
ரும் எண்ணப்பட்டார்கள். **43** நப்தலி கோத்திரத்தில் பெயர்ப்பதிவு செய்
யப்பட்டவர்கள் 53,400 பேர்.

44 இஸ்ரவேலின் தந்தைவழிக் குடும்பங்களுக்குத் தலைவர்களான
12 பேரின் உதவியோடு மோசேயும் ஆரோனும் அவர்கள் எல்லாரையும்
பெயர்ப்பதிவு செய்தார்கள். **45** படையில் சேவை செய்யத் தகுதியுள்ள
20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள இஸ்ரவேலர்கள் எல்லாரும்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள். **46** பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்
தம் 6,03,550 பேர்.[f]

47 ஆனால், லேவியர்கள்[g] தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்தின்
படி, மற்றவர்களுடன் பெயர்ப்பதிவு செய்யப்படவில்லை.[h] **48** யெகோவா
மோசேயிடம், **49** “லேவி கோத்திரத்தாரை மட்டும் நீ பெயர்ப்பதிவு
செய்யக் கூடாது. மற்ற இஸ்ரவேலர்களுடன் சேர்த்து அவர்களை எண்
ணக் கூடாது.[i] **50** சாட்சிப் பெட்டி[j] வைக்கப்பட்டிருக்கிற கூடாரத்தையும்
அதன் எல்லா பாத்திரங்களையும் பொருள்களையும் கவனித்துக்கொள்கிற
பொறுப்பை லேவியர்களுக்குக் கொடுக்க வேண்டும்.[k] வழிபாட்டுக் கூடா
ரத்தில் அவர்கள் சேவை செய்வார்கள்,[l] அதையும் அதிலுள்ள எல்லா
பாத்திரங்களையும் அவர்கள் சுமந்துகொண்டு போவார்கள்.[m] அவர்கள்
வழிபாட்டுக் கூடாரத்தைச் சுற்றியே முகாம்போட வேண்டும்.[n] **51** நீங்கள்
ஒரு இடத்திலிருந்து புறப்படும்போது, லேவியர்கள்தான் வழிபாட்டுக்

அதி. 1

a எண் 2:20, 21
b ஆதி 43:29; ஆதி 46:21; எண் 2:22, 23
c ஆதி 30:4-6; ஆதி 46:23; எண் 2:25, 26; எண் 10:25
d ஆதி 35:26; எண் 2:27, 28
e ஆதி 30:7, 8; ஆதி 46:24; எண் 2:29, 30; எண் 26:48
f ஆதி 13:16; ஆதி 22:17; ஆதி 46:3; யாத் 38:26; எண் 2:32
g ஆதி 29:34; ஆதி 46:11; எண் 3:12
h எண் 2:33; எண் 26: 63, 64
i எண் 26: 62, 63
j யாத் 31:18
k யாத் 38:21; எண் 3:6, 8
l எண் 3:30, 31; எண் 4:12
m எண் 4:15; எண் 4:24-26; எண் 4:31-33
n எண் 2:17; எண் 3:23, 29; எண் 3:35, 38

கூடாரத்தைப் பிரிக்க வேண்டும்.[a] இன்னொரு இடத்துக்குப் போய்ச் சேரும்
போது அவர்கள்தான் அதை மறுபடியும் அமைக்க வேண்டும். தகுதி இல்
லாத* யாராவது அதன் பக்கத்தில் போனால் அவன் கொல்லப்பட
வேண்டும்.[b]

52 இஸ்ரவேலர்கள் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மூன்று மூன்று
கோத்திரங்களாகவும் அணி அணியாகவும்* கூடாரம் போட வேண்டும்.[c]
53 இஸ்ரவேலர்கள்மேல் என்னுடைய கோபம் பற்றியெரியாமல் இருப்பதற்
காக, லேவியர்கள் சாட்சிப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிற கூடாரத்தைச்
சுற்றி முகாம்போட வேண்டும்.[d] சாட்சிப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிற கூடா
ரத்தைக் கவனித்துக்கொள்வது* லேவியர்களின் பொறுப்பு”[e] என்றார்.

54 மோசேக்கு யெகோவா கொடுத்த கட்டளைப்படி இஸ்ரவேல் ஜனங்
கள் செய்தார்கள். எல்லாவற்றையும் அவர்கள் அப்படியே செய்தார்கள்.

2 யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **2** “மூன்று மூன்று
கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் தங்களுக்கு ஒதுக்
கப்பட்ட இடத்தில் முகாம்போட வேண்டும்.[f] ஒவ்வொருவரும் தங்களு
டைய தந்தைவழிக் குடும்பத்தின் அடையாளச் சின்னத்துக்குப் பக்கத்தில்
முகாம்போட வேண்டும். சந்திப்புக் கூடாரத்தைப் பார்த்தபடி, அதைச் சுற்
றிலும் அவர்கள் முகாம்போட வேண்டும்.

3 சூரியன் உதிக்கும் கிழக்குத் திசையில் மூன்று கோத்திரங்கள் அணி
அணியாக* முகாம்போட வேண்டும். யூதா கோத்திரம் அவற்றின் நடுவில்
முகாம்போட வேண்டும். யூதா கோத்திரத்தின் தலைவர், அம்மினதாபின்
மகனாகிய நகசோன்.[g] **4** அவருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்
பட்டவர்கள் 74,600 பேர்.[h] **5** யூதா கோத்திரத்தின் ஒருபக்கத்தில் இசக்
கார் கோத்திரம் முகாம்போட வேண்டும். இசக்கார் கோத்திரத்தின் தலைவர்,
சூவாரின் மகனாகிய நெதனெயேல்.[i] **6** அவருடைய படையில் பெயர்ப்
பதிவு செய்யப்பட்டவர்கள் 54,400 பேர்.[j] **7** யூதா கோத்திரத்தின் மறுபக்
கத்தில், செபுலோன் கோத்திரம் முகாம்போட வேண்டும். செபுலோன் கோத்
திரத்தின் தலைவர், ஹேலோனின் மகனாகிய எலியாப்.[k] **8** அவருடைய
படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 57,400 பேர்.[l]

9 யூதா கோத்திரத்தின் முகாமில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள்
மொத்தம் 1,86,400 பேர். அவர்கள்தான் முதலாவதாகப் புறப்பட வேண்டும்.[m]

10 தெற்கே மூன்று கோத்திரங்கள் அணி அணியாக* முகாம்போட
வேண்டும். ரூபன் கோத்திரம்[n] அவற்றின் நடுவில் முகாம்போட வேண்டும்.
ரூபன் கோத்திரத்தின் தலைவர், சேதேயூரின் மகனாகிய எலிசூர்.[o] **11** அவ
ருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 46,500 பேர்.[p]
12 ரூபன் கோத்திரத்தின் ஒருபக்கத்தில் சிமியோன் கோத்திரம் முகாம்
போட வேண்டும். சிமியோன் கோத்திரத்தின் தலைவர், சூரிஷதாயின்
மகனாகிய செலூமியேல்.[q] **13** அவருடைய படையில் பெயர்ப்பதிவு
செய்யப்பட்டவர்கள் 59,300 பேர்.[r] **14** ரூபன் கோத்திரத்தின் மறுபக்கத்
தில், காத் கோத்திரம் முகாம்போட வேண்டும். காத் கோத்திரத்தின்

1:51 * அதாவது, “லேவியனாக இல்லாத.” **1:52** * நே.மொ., “அவர்களுடைய படை
களின்படியும்.” **1:53** * வே.வா., “கூடாரத்தைக் காவல்காப்பது; கூடாரச் சேவை செய்
வது.” **2:3, 10** * நே.மொ., “அவர்களுடைய படைகளின்படி.”

அதி. 1
a எண் 10:17, 21
b எண் 3:10
எண் 18:22
c எண் 2:2, 34
d எண் 8:19
எண் 18:5
e எண் 8:24
எண் 18:2, 3
1நா 23:32

அதி. 2
f எண் 1:52
g எண் 7:12
எண் 10:14
ரூ 4:20
மத் 1:4
h எண் 1:27
i எண் 7:11, 18
எண் 10:15
j எண் 1:29
k எண் 7:11, 24
எண் 10:16
l எண் 1:31
m எண் 10:14
n எண் 1:20
o எண் 7:11, 30
எண் 10:18
p எண் 1:21
q எண் 7:11, 36
எண் 10:19
r எண் 1:23

தலைவர், ரெகுவேலின் மகனாகிய எலியாசாப்.[a] **15** அவருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 45,650 பேர்.[b]

16 ரூபன் கோத்திரத்தின் முகாமில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 1,51,450 பேர். அவர்கள்தான் இரண்டாவதாகப் புறப்பட வேண்டும்.[c]

17 சந்திப்புக் கூடாரத்தை எடுத்துக்கொண்டு போகும்போது,[d] லேவியர்களின் கோத்திரம் மற்ற கோத்திரங்களுக்கு நடுவே போக வேண்டும்.

ஒவ்வொரு கோத்திரமும் எந்த வரிசையில் முகாம்போடுகிறதோ அந்த வரிசைப்படி பயணம் செய்ய வேண்டும்.[e] மூன்று மூன்று கோத்திரங்களாகப் பயணம் செய்ய வேண்டும்.

18 மேற்கே மூன்று கோத்திரங்கள் அணி அணியாக* முகாம்போட வேண்டும். எப்பிராயீம் கோத்திரம் அவற்றின் நடுவில் முகாம்போட வேண்டும். எப்பிராயீம் கோத்திரத்தின் தலைவர், அம்மியூத்தின் மகனாகிய எலிஷாமா.[f] **19** அவருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 40,500 பேர்.[g] **20** எப்பிராயீம் கோத்திரத்தின் ஒருபக்கத்தில் மனாசே கோத்திரம்[h] முகாம்போட வேண்டும். மனாசே கோத்திரத்தின் தலைவர், பெதாசூரின் மகனாகிய கமாலியேல்.[i] **21** அவருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 32,200 பேர்.[j] **22** எப்பிராயீம் கோத்திரத்தின் மறுபக்கத்தில், பென்யமீன் கோத்திரம் முகாம்போட வேண்டும். பென்யமீன் கோத்திரத்தின் தலைவர், கீதெயோனியின் மகனாகிய அபிதான்.[k] **23** அவருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 35,400 பேர்.[l]

24 எப்பிராயீம் கோத்திரத்தின் முகாமில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 1,08,100 பேர். அவர்கள்தான் மூன்றாவதாகப் புறப்பட வேண்டும்.[m]

25 வடக்கே மூன்று கோத்திரங்கள் அணி அணியாக* முகாம்போட வேண்டும். தாண் கோத்திரம் அவற்றின் நடுவில் முகாம்போட வேண்டும். தாண் கோத்திரத்தின் தலைவர், அம்மிஷதாயின் மகனாகிய அகியேசேர்.[n] **26** அவருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 62,700 பேர்.[o] **27** தாண் கோத்திரத்தின் ஒருபக்கத்தில் ஆசேர் கோத்திரம் முகாம்போட வேண்டும். ஆசேர் கோத்திரத்தின் தலைவர், ஓகிரானின் மகனாகிய பாகியேல்.[p] **28** அவருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 41,500 பேர்.[q] **29** தாண் கோத்திரத்தின் மறுபக்கத்தில், நப்தலி கோத்திரம் முகாம்போட வேண்டும். நப்தலி கோத்திரத்தின் தலைவர், ஏனானின் மகனாகிய அகீரா.[r] **30** அவருடைய படையில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் 53,400 பேர்.[s]

31 தாண் கோத்திரத்தின் முகாமில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 1,57,600 பேர். மூன்று கோத்திர வரிசைப்படி, அவர்கள்தான் கடைசியாகப் புறப்பட வேண்டும்"[t] என்றார்.

32 அவரவருடைய தந்தைவழிக் குடும்பத்தின்படி பெயர்ப்பதிவு செய்யப்பட்ட இஸ்ரவேலர்கள் இவர்கள்தான். படையில் சேவை செய்வதற்காகப் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 6,03,550 பேர்.[u] **33** ஆனால், மோசேக்கு யெகோவா கொடுத்த கட்டளைப்படி, மற்ற இஸ்ரவேலர்களோடு லேவியர்கள் பெயர்ப்பதிவு செய்யப்படவில்லை.[v] **34** மோசேக்கு

அதி. 2
a எண் 7:11, 42 எண் 10:20
b எண் 1:25
c எண் 10:18
d எண் 1:51
e 1கொ 14: 33, 40
f எண் 7:11, 48 எண் 10:22
g எண் 1:33
h ஆதி 48:20
i எண் 7:11, 54 எண் 10:23
j எண் 1:35
k எண் 7:11, 60 எண் 10:24
l எண் 1:37
m எண் 10:22
n எண் 7:11, 66 எண் 10:25
o எண் 1:39
p எண் 7:11, 72 எண் 10:26
q எண் 1:41
r எண் 7:11, 78 எண் 10:27
s எண் 1:43
t எண் 10:25
u ஆதி 15:5 யாத் 38:26 எண் 1:46 எண் 14:29 எண் 26: 51, 64
v எண் 1:47 எண் 3:15 எண் 26: 62, 63

2:18, 25 *நே.மொ., "அவர்களுடைய படைகளின்படி."

யெகோவா கொடுத்த கட்டளைப்படியே இஸ்ரவேலர்கள் எல்லாவற்றை
யும் செய்தார்கள். இப்படித்தான், அவரவர் வம்சத்தின்படியும் தந்தைவழிக்
குடும்பத்தின்படியும் மூன்று மூன்று கோத்திரங்களாக முகாம்போட்டார்
கள்,[a] அந்த வரிசைப்படியே புறப்பட்டும் போனார்கள்.[b]

3 சீனாய் மலையில்[c] மோசேயுடன் யெகோவா பேசிய காலத்தில்,
ஆரோன் மற்றும் மோசேயின் வம்சத்தாராக இருந்தவர்கள் இவர்கள்
தான். **2** ஆரோனுடைய மகன்கள்: மூத்த மகன் நாதாப், பின்பு அபியூ,[d]
எலெயாசார்,[e] இத்தாமார்.[f] **3** இவர்கள்தான் குருமார்களாகச் சேவை
செய்ய அபிஷேகம் செய்யப்பட்ட ஆரோனின் மகன்கள்.[g] **4** ஆனால்,
நாதாபும் அபியூவும் அத்துமீறி* யெகோவாவுக்குத் தூபம் காட்டியதால்
சீனாய் வனாந்தரத்தில் யெகோவாவின் சன்னிதியில் செத்துப்போனார்கள்.[h]
அவர்களுக்கு மகன்கள் இல்லை. எலெயாசாரும்[i] இத்தாமாரும்[j] தங்கள்
அப்பா ஆரோனோடு சேர்ந்து தொடர்ந்து குருமார்களாகச் சேவை செய்து
வந்தார்கள்.

5 பின்பு யெகோவா மோசேயிடம், **6** “குருவாகிய ஆரோனின் முன்
பாக லேவி கோத்திரத்தாரை[k] நிறுத்து. அவர்கள் அவருக்குப் பணிவிடை
செய்ய வேண்டும்.[l] **7** வழிபாட்டுக் கூடாரம்* சம்பந்தமாகக் கொடுக்கப்படு
கிற எல்லா வேலைகளையும் அவர்கள் செய்ய வேண்டும். ஆரோனுக்கும்
எல்லா ஜனங்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் சந்திப்புக் கூடா
ரத்துக்கு* முன்னால் செய்து முடிக்க வேண்டும். **8** சந்திப்புக் கூடாரத்தின்
பாத்திரங்கள்[m] அவர்களுடைய பொறுப்பில் இருக்க வேண்டும். வழிபாட்
டுக் கூடாரம் சம்பந்தமான வேலைகளைச் செய்து,[n] இஸ்ரவேலர்களுக்
குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும். **9** நீ ஆரோனிட
மும் அவனுடைய மகன்களிடமும் லேவியர்களை ஒப்படைக்க வேண்டும்.
இவர்களைத்தான் இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து பிரித்தெடுத்து ஆரோ
னுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறேன்.[o] **10** குருமார்களாகச் சேவை
செய்ய ஆரோனையும் அவனுடைய மகன்களையும் நீ நியமிக்க வேண்
டும்.[p] ஆனால், தகுதி இல்லாத* யாராவது வழிபாட்டுக் கூடாரத்தின் பக்கத்
தில் வந்தால் அவன் கொல்லப்பட வேண்டும்”[q] என்றார்.

11 பின்பு யெகோவா மோசேயிடம், **12** “நான் இஸ்ரவேலர்களிலி
ருந்து லேவியர்களைப் பிரித்தெடுத்திருக்கிறேன். இஸ்ரவேலர்களின் மூத்த
மகன்கள் எல்லாருக்கும் பதிலாக லேவியர்களை ஏற்றுக்கொள்கிறேன்.[r]
லேவியர்கள் எனக்குச் சொந்தமாவார்கள். **13** ஏனென்றால், முதலில்
பிறக்கிற எல்லாமே எனக்குத்தான் சொந்தம்.[s] எகிப்தியர்களின் முதல் பிறப்
புகளை நான் கொன்றுபோட்ட நாளில்,[t] இஸ்ரவேலர்களின் மூத்த மகன்க
ளையும் மிருகங்களின் முதல் குட்டிகளையும் எனக்கென்று பிரித்து வைத்
தேன்.*[u] முதல் பிறப்புகள் எல்லாமே எனக்குச் சொந்தமாக வேண்டும்.
நான் யெகோவா” என்றார்.

14 பின்பு யெகோவா சீனாய் வனாந்தரத்தில்[v] மோசேயிடம், **15** “லேவி
யின் மகன்களை அவரவர் வம்சத்தின்படியும் தந்தைவழிக் குடும்பத்தின்
படியும் பெயர்ப்பதிவு செய். ஒருமாத ஆண் குழந்தைமுதல் எல்லா ஆண்க

3:4 *வே.வா., “தகாத விதத்தில்.” **3:7** *சொல் பட்டியலைப் பாருங்கள்.
3:10 *அதாவது, “ஆரோனின் வம்சத்தைச் சேராத.” **3:13** *வே.வா., “புனிதப்படுத்
தினேன்.”

அதி. 2
a எண் 2:2
b எண் 10:28

அதி. 3
c யாத் 19:2
d லேவி 10:1
1நா 24:2
e யாத் 6:25
உபா 10:6
f யாத் 6:23
யாத் 38:21
1நா 6:3
g யாத் 28:1
லேவி 8:2, 3
h லேவி 10:1, 2
i எண் 3:32
எண் 20:26
j எண் 4:28
எண் 7:8
k எண் 8:6
எண் 18:2
l எண் 1:50
எண் 8:11
m எண் 4:12
n எண் 1:51
o எண் 8:15, 16
எண் 18:6
p யாத் 40:15
எண் 18:7
q எண் 16:
39, 40
1சா 6:19
2நா 26:16, 18
r எண் 3:41, 45
s யாத் 13:2
யாத் 34:19
எண் 18:15
லூ 2:23
t யாத் 13:15
u லேவி 27:26
v யாத் 19:1

ளையும் பெயர்ப்பதிவு செய்”[a] என்றார். **16** அதனால், யெகோவாவின்
உத்தரவுப்படி அவர்களை மோசே பெயர்ப்பதிவு செய்தார். கடவுள் கட்
டளை கொடுத்தபடியே செய்தார். **17** லேவியின் மகன்களுடைய பெயர்
கள்: கெர்சோன், கோகாத், மெராரி.[b]

18 கெர்சோனின் மகன்களுடைய பெயர்கள்: லிப்னி, சீமேயி.[c] இவர்க
ளுடைய பெயர்களிலிருந்துதான் இவர்களுடைய வம்சங்களின் பெயர்
கள் வந்தன.

19 கோகாத்தின் மகன்களுடைய பெயர்கள்: அம்ராம், இத்சேயார், எப்
ரோன், ஊசியேல்.[d] இவர்களுடைய பெயர்களிலிருந்துதான் இவர்களுடைய
வம்சங்களின் பெயர்கள் வந்தன.

20 மெராரியின் மகன்களுடைய பெயர்கள்: மகேலி,[e] மூசி.[f] இவர்க
ளுடைய பெயர்களிலிருந்துதான் இவர்களுடைய வம்சங்களின் பெயர்
கள் வந்தன.

இவைதான் அந்தந்த தந்தைவழிக் குடும்பங்களில் வந்த வம்சங்கள்.

21 கெர்சோனின் வழியில் லிப்னியர்களின் வம்சமும்[g] சீமேயியர்
களின் வம்சமும் வந்தன. இவர்கள்தான் கெர்சோனியர்களின் வம்சத்
தார். **22** இவர்களில், ஒருமாத ஆண் குழந்தைமுதல் எல்லா ஆண்க
ளும் பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள். இவர்கள் மொத்தம் 7,500 பேர்.[h]
23 கெர்சோனியர்களின் வம்சத்தார் வழிபாட்டுக் கூடாரத்துக்குப் பின்
னால்,[i] மேற்கே முகாம்போட்டார்கள். **24** கெர்சோனியர்களின் தந்தை
வழிக் குடும்பத்துக்குத் தலைவர், லாயேலின் மகன் எலியாசாப். **25** சந்
திப்புக் கூடாரத்தில் கெர்சோனின் மகன்களுடைய பொறுப்பில் உள்ளவை
இவைதான்:[j] வழிபாட்டுக் கூடாரம்,[k] அதன் மேல்விரிப்புகள்,[l] சந்திப்புக்
கூடார வாசலின் திரை,[m] **26** வழிபாட்டுக் கூடாரத்தையும் பலிபீடத்தை
யும் சுற்றியுள்ள பிரகாரத்தின் மறைப்புகள்,[n] பிரகாரத்தின் நுழைவாசலுக்
கான திரை,[o] கூடாரக் கயிறுகள், மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட
வேலைகள்.

27 கோகாத்தின் வழியில் அம்ராமியர்களின் வம்சமும் இத்சேயார்க
ளின் வம்சமும் எப்ரோனியர்களின் வம்சமும் ஊசியேலர்களின் வம்சமும்
வந்தன. இவர்கள்தான் கோகாத்தியர்களின் வம்சத்தார்.[p] **28** இவர்களில்,
ஒருமாத ஆண் குழந்தைமுதல் எல்லா ஆண்களும் பெயர்ப்பதிவு செய்யப்
பட்டார்கள். இவர்கள் மொத்தம் 8,600 பேர். பரிசுத்த இடத்தைக் கவனித்
துக்கொள்ளும் பொறுப்பு இவர்களுடையது.[q] **29** கோகாத்தின் மகன்களு
டைய வம்சத்தார் வழிபாட்டுக் கூடாரத்துக்குத் தெற்கே முகாம்போட்
டார்கள்.[r] **30** கோகாத்தியர்களின் தந்தைவழிக் குடும்பத்துக்குத் தலைவர்,
ஊசியேலின்[s] மகன் எலிசாப்பான். **31** கோகாத்தியர்களின் பொறுப்பில்
உள்ளவை: பெட்டி,[t] மேஜை,[u] குத்துவிளக்கு,[v] பீடங்கள்,[w] பரிசுத்த இடத்
தின் சேவைக்கான பாத்திரங்கள்,[x] திரைச்சீலை,[y] மற்றும் அவற்றுடன் சம்
பந்தப்பட்ட வேலைகள்.[z]

32 குருவாகிய ஆரோனின் மகன் எலெயாசார், லேவியர்களின் தலை
வர்களுக்கெல்லாம் தலைவராக இருந்தார்.[a] பரிசுத்த இடத்தின் வேலைக
ளைக் கவனித்துவந்தவர்களை அவர் கண்காணித்துவந்தார்.

33 மெராரியின் வழியில் மகேலியர்களின் வம்சமும் மூசியர்களின் வம்
சமும் வந்தன. இவர்கள்தான் மெராரியின் வம்சத்தார்.[b] **34** இவர்களில்,

அதி. 3
a எண் 3:39
b யாத் 6:16; எண் 26:57; 1நா 23:6
c யாத் 6:17
d யாத் 6:18
e 1நா 6:29
f யாத் 6:19
g 1நா 6:20
h எண் 4:38-40
i எண் 1:53
j எண் 4:24-26
k யாத் 26:7
l யாத் 26:14
m யாத் 26:36
n யாத் 27:9
o யாத் 27:16
p எண் 3:19
q எண் 4:34-36
r எண் 1:53
s யாத் 6:22; 1நா 6:18
t யாத் 25:10
u யாத் 25:23
v யாத் 25:31
w யாத் 27:1, 2; யாத் 30:1-3
x யாத் 38:3
y யாத் 26:31
z எண் 4:15
a எண் 4:16; எண் 20:28
b எண் 3:20; எண் 26:58

ஒருமாத ஆண் குழந்தைமுதல் எல்லா ஆண்களும் பெயர்ப்பதிவு செய்யப்
பட்டார்கள். இவர்கள் மொத்தம் 6,200 பேர்.[a] **35** அபியாயேலின் மகன்
சூரியேல், மெராரியின் தந்தைவழிக் குடும்பத்துக்குத் தலைவராக இருந்
தார். மெராரியின் வம்சத்தார் வழிபாட்டுக் கூடாரத்துக்கு வடக்கே முகாம்
போட்டார்கள்.[b] **36** மெராரியின் மகன்களுடைய பொறுப்பில் உள்ளவை:
வழிபாட்டுக் கூடாரத்தின் சட்டங்கள்,[c] அதன் கம்புகள்,[d] அதன் தூண்
கள்,[e] அதன் பாதங்கள், அதன் பாத்திரங்கள்,[f] அவற்றுடன் சம்பந்தப்பட்ட
வேலைகள்,[g] **37** பிரகாரத்தைச் சுற்றியுள்ள கம்பங்கள், அவற்றின் பாதங்
கள்,[h] கூடார ஆணிகள், மற்றும் கூடாரக் கயிறுகள்.

38 சூரியன் உதிக்கும் கிழக்குத் திசையில், அதாவது வழிபாட்டுக் கூடார
மாகிய சந்திப்புக் கூடாரத்துக்கு முன்னால், மோசேயும் ஆரோனும் அவர்
களுடைய மகன்களும் கூடாரம் போட்டார்கள். வழிபாட்டுக் கூடாரத்தைக்
கவனித்துக்கொள்ளும் பொறுப்பு அவர்களுடையது. இதுதான், இஸ்ரவேலர்
களின் சார்பாக அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமை. தகுதி இல்லாத*
யாராவது அதன் பக்கத்தில் வந்தால் அவன் கொல்லப்பட வேண்டும்.[i]

39 யெகோவாவின் கட்டளைப்படி, லேவியர்களில் ஒருமாத ஆண்
குழந்தைமுதல் எல்லா ஆண்களையும் மோசேயும் ஆரோனும் பெயர்ப்
பதிவு செய்தார்கள். அவரவர் வம்சத்தின்படி பெயர்ப்பதிவு செய்யப்பட்ட
வர்கள் மொத்தம் 22,000 பேர்.

40 யெகோவா மோசேயிடம், “இஸ்ரவேலர்களுடைய மூத்த மகன்க
ளில், ஒருமாத ஆண் குழந்தைமுதல் எல்லா ஆண்களையும் பெயர்ப்
பதிவு செய்.[j] அவர்களைக் கணக்குப் போட்டு, அவர்களுடைய பெயர்க
ளைப் பட்டியலிடு. **41** இஸ்ரவேலர்களுடைய மூத்த மகன்களுக்குப் பதி
லாக லேவியர்களை எனக்காகப் பிரித்தெடு.[k] இஸ்ரவேலர்களுடைய
மிருகங்களின் முதல் குட்டிகளுக்குப் பதிலாக லேவியர்களுடைய மிருகங்க
ளின் முதல் குட்டிகளைப் பிரித்தெடு.[l] நான் யெகோவா” என்றார். **42** அத
னால் யெகோவா கட்டளை கொடுத்தபடி, இஸ்ரவேலர்களின் மூத்த மகன்
கள் எல்லாரையும் மோசே பெயர்ப்பதிவு செய்தார். **43** மூத்த மகன்களில்,
ஒருமாத ஆண் குழந்தைமுதல் எல்லா ஆண்களும் பெயர்ப்பதிவு செய்யப்
பட்டார்கள். இவர்கள் மொத்தம் 22,273 பேர்.

44 பின்பு யெகோவா மோசேயிடம், **45** “இஸ்ரவேலர்களுடைய மூத்த
மகன்களுக்குப் பதிலாக லேவியர்களைப் பிரித்தெடு. இஸ்ரவேலர்களு
டைய மிருகங்களுக்குப் பதிலாக லேவியர்களுடைய மிருகங்களைப் பிரித்
தெடு. லேவியர்கள் எனக்குச் சொந்தமாவார்கள். நான் யெகோவா.
46 லேவியர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்த இஸ்ரவேலர்
களின் மூத்த மகன்கள் 273 பேருக்காக[m] மீட்புவிலை[n] வாங்க வேண்டும்.
47 ஒவ்வொருவருக்காகவும் நீ ஐந்து சேக்கல்* வாங்க வேண்டும்.[o] அது
பரிசுத்த# சேக்கலின் கணக்குப்படி இருக்க வேண்டும். ஒரு சேக்கல் என்பது
20 கேரா.△[p] **48** லேவியர்களைவிட அதிகமாக இருந்தவர்களிடமிருந்து
வாங்கிய மீட்புவிலையை ஆரோனிடமும் அவனுடைய மகன்களிடமும் நீ
கொடுக்க வேண்டும்” என்றார். **49** அதனால், லேவியர்களைவிட அதிக

3:38 * அதாவது, “லேவியனாக இல்லாத.” **3:47** * ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். # வே.வா., “பரிசுத்த இடத்து.” △ ஒரு கேரா என்பது 0.57 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 3
a எண் 4:42-44
b எண் 1:53
c யாத் 36:20
d யாத் 36:31
e யாத் 26:32, 37; யாத் 36:37, 38
f யாத் 27:19
g எண் 4:31, 32
h யாத் 27:10, 11
i எண் 3:10
j எண் 3:15
k எண் 3:12
l யாத் 13:2; எண் 18:15
m எண் 3:39, 43
n எண் 18:15
o எண் 18:15, 16
p லேவி 27:25

அதி. 4
a எண் 3:19, 27
b 1நா 23:3
லூ 3:23
c எண் 8:25, 26
d எண் 4:30
1நா 6:48
e எண் 3:30, 31
எண் 4:15
f யாத் 26:31
யாத் 40:3
லேவி 16:2
g யாத் 25:10
h யாத் 25:13
i யாத் 25:
23, 24
j யாத் 25:29
k லேவி 24:5, 6
l யாத் 25:28
m யாத் 25:31
n யாத் 25:37
o யாத் 25:38
p யாத் 30:1
யாத் 37:
25, 26
q யாத் 30:5
r எண் 3:30, 31
s லேவி 6:12
t யாத் 27:3

மாக இருந்தவர்களை மீட்பதற்காக அவர்களிடமிருந்து மீட்புவிலையை
மோசே வாங்கிக்கொண்டார். **50** பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி, இஸ்
ரவேலர்களின் மூத்த மகன்களிடமிருந்து 1,365 சேக்கல் வாங்கிக்கொண்
டார். **51** பின்பு யெகோவா சொன்னபடி, அந்த மீட்புவிலையை ஆரோ
னிடமும் அவருடைய மகன்களிடமும் கொடுத்தார். யெகோவா கட்டளை
கொடுத்தபடியே மோசே செய்தார்.

4 யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **2** “லேவியின் வழிவந்த
கோகாத்தியர்களை[a] அவரவர் வம்சத்தின்படியும், தந்தைவழிக் குடும்
பத்தின்படியும் கணக்கெடுக்க வேண்டும். **3** சந்திப்புக் கூடார வேலைக
ளுக்கு நியமிக்கப்பட்ட எல்லாரையும், அதாவது 30[b] வயதுமுதல் 50 வயது
வரை[c] உள்ள எல்லாரையும், கணக்கெடுக்க வேண்டும்.[d]

4 சந்திப்புக் கூடாரம் சம்பந்தமாக கோகாத்தியர்களுக்கு நியமிக்கப்
பட்ட மிகப் பரிசுத்தமான வேலை[e] இதுதான்: **5** இஸ்ரவேலர்கள் புறப்
படும்போது, ஆரோனும் அவனுடைய மகன்களும் வந்து திரைச்சீலை
யைக்[f] கீழே இறக்கி, அதை வைத்து சாட்சிப் பெட்டியை[g] மூட வேண்டும்.
6 பின்பு, அதன்மேல் கடல்நாய்த் தோல் விரிப்பைப் போட்டு, அதை நீல
நிறத் துணியால் மூட வேண்டும். அதைச் சுமப்பதற்குப் பயன்படுத்தப்படும்
கம்புகள்[h] அதனதன் இடத்தில் இருக்க வேண்டும்.

7 படையல் ரொட்டிகளுக்கான மேஜைமேல்[i] நீல நிறத் துணியை விரிக்க
வேண்டும். அதன்மேல் தட்டுகள், கோப்பைகள், கிண்ணங்கள், திராட்சமது
காணிக்கைக்கான கூஜாக்கள்[j] ஆகியவற்றை வைக்க வேண்டும். தவறாமல்
செலுத்தப்படுகிற ரொட்டிகளும்[k] அதன்மேல் இருக்க வேண்டும். **8** அவற்
றைக் கருஞ்சிவப்புத் துணியால் போர்த்தி, பின்பு கடல்நாய்த் தோல் விரிப்
பால் மூட வேண்டும். அதைச் சுமப்பதற்குப் பயன்படுத்தப்படும் கம்பு
கள்[l] அதனதன் இடத்தில் இருக்க வேண்டும். **9** பின்பு நீல நிறத் துணியை
எடுத்து, விளக்குத்தண்டையும்,[m] அதன் அகல் விளக்குகளையும்,[n] இடுக்
கிகளையும், தீய்ந்துபோன திரிகளை எடுத்து வைப்பதற்கான கரண்டிகளை
யும்,[o] குத்துவிளக்குக்கான எண்ணெய்ப் பாத்திரங்களையும் மூட வேண்
டும். **10** குத்துவிளக்கையும் அதற்கான எல்லா சாமான்களையும்
கடல்நாய்த் தோல் விரிப்பில் சுற்றி, சுமப்பதற்கான ஒரு கோலில் இணைத்
துக்கட்ட வேண்டும். **11** தங்கப் பீடத்தை[p] நீல நிறத் துணியால் போர்த்தி,
கடல்நாய்த் தோல் விரிப்பால் அதை மூட வேண்டும். அதைச் சுமப்பதற்
குப் பயன்படுத்தப்படும் கம்புகள்[q] அதனதன் இடத்தில் இருக்க வேண்டும்.
12 பரிசுத்த இடத்தில் தவறாமல் சேவை செய்யப் பயன்படுத்தப்படும் பாத்
திரங்கள்[r] எல்லாவற்றையும் எடுத்து நீல நிறத் துணியில் வைக்க வேண்டும்.
அதைக் கடல்நாய்த் தோல் விரிப்பால் மூடி, சுமப்பதற்கான ஒரு கோலில்
இணைத்துக்கட்ட வேண்டும்.

13 பலிபீடத்திலிருந்து[s] சாம்பலை எடுத்துவிட்டு, அதை ஊதா நிற
கம்பளியால் போர்த்த வேண்டும். **14** பலிபீடத்தில் சேவை செய்யப் பயன்
படுத்தும் பாத்திரங்கள் எல்லாவற்றையும், அதாவது தணல் அள்ளும்
கரண்டிகள், முள்கரண்டிகள், சாம்பல் அள்ளும் கரண்டிகள், கிண்ணங்
கள் போன்ற எல்லாவற்றையும்[t] அதன்மேல் வைத்து கடல்நாய்த் தோல்

3:50 * வே.வா., “பரிசுத்த இடத்து.”

விரிப்பால் மூட வேண்டும். பலிபீடத்தைச் சுமப்பதற்குப் பயன்படுத்தப்படும்
கம்புகள்[a] அதனதன் இடத்தில் இருக்க வேண்டும்.
15 இஸ்ரவேலர்கள் புறப்படும்போது, பரிசுத்த இடத்துக்கான எல்லா
பொருள்களையும் பாத்திரங்களையும் ஆரோனும் அவனுடைய மகன்க
ளும் போர்த்திவைக்க வேண்டும்.[b] அதன்பின், கோகாத்தியர்கள் வந்து
அவற்றை எடுத்துக்கொண்டு போக வேண்டும்.[c] ஆனால், பரிசுத்த இடத்
துக்கான பொருள்களை அவர்கள் தொடக் கூடாது. அப்படித் தொட்
டால் அவர்கள் செத்துப்போவார்கள்.[d] இவைதான் சந்திப்புக் கூடாரம் சம்
பந்தமாக கோகாத்தியர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களாகும்.
16 விளக்குகளுக்கான எண்ணெய்,[e] தூபப்பொருள்,[f] தவறாமல் செலுத்
தப்படும் உணவுக் காணிக்கை, அபிஷேகத் தைலம்[g] ஆகியவற்றுக்கு குரு
வாகிய ஆரோனின் மகன் எலெயாசார்தான்[h] பொறுப்பு. வழிபாட்டுக்
கூடாரத்துக்கும் அதிலுள்ள எல்லா பொருள்களுக்கும், பரிசுத்த இடத்
துக்கும் அதிலுள்ள எல்லா சாமான்களுக்கும் அவர்தான் பொறுப்பு" என்று
சொன்னார்.
17 பின்பு யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **18** "லேவியர்
களில் கோகாத் வம்சத்தார்[i] அழிந்துபோகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
19 அவர்கள் மகா பரிசுத்தமான பொருள்களின் பக்கத்தில் வந்து சாகா
தபடி இப்படிச் செய்யுங்கள்.[j] ஆரோனும் அவனுடைய மகன்களும் வழி
பாட்டுக் கூடாரத்துக்குள்ளே போக வேண்டும். பின்பு, கோகாத்தியர்கள்
ஒவ்வொருவரும் என்னென்ன வேலைகளைச் செய்ய வேண்டும் என்றும்,
என்னென்ன பொருள்களைச் சுமக்க வேண்டும் என்றும் சொல்ல வேண்
டும். **20** கோகாத்தியர்கள் கூடாரத்துக்குள் போய் பரிசுத்த பொருள்களை
ஒரு நொடிகூட பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால், அவர்கள் செத்துப்
போவார்கள்"[k] என்றார்.
21 பின்பு யெகோவா மோசேயிடம், **22** "கெர்சோனியர்களை[l] அவர
வர் வம்சத்தின்படியும், தந்தைவழிக் குடும்பத்தின்படியும் கணக்கெடுக்க
வேண்டும். **23** சந்திப்புக் கூடாரம் சம்பந்தமான வேலைகளுக்கு நியமிக்
கப்பட்ட எல்லாரையும், அதாவது 30 வயதுமுதல் 50 வயதுவரை
உள்ள எல்லாரையும், கணக்கெடுக்க வேண்டும். **24** கெர்சோன் வம்சத்தா
ரின் பொறுப்பிலுள்ள பொருள்களும் அவர்கள் சுமக்க வேண்டிய பொருள்
களும் இவைதான்:[m] **25** சட்டங்களின் மேலுள்ள நாரிழை விரிப்பு,*[n]
அதற்கு மேலுள்ள கம்பளி,# அதற்கும் மேலுள்ள விரிப்பு, அதற்கும்
மேலுள்ள கடல்நாய்த் தோல் விரிப்பு,[o] சந்திப்புக் கூடார வாசலின் திரை,[p]
26 வழிபாட்டுக் கூடாரத்தையும் பலிபீடத்தையும் சுற்றியுள்ள பிரகாரத்தின்
மறைப்புகள்,[q] பிரகார நுழைவாசலின் திரை,[r] கூடாரக் கயிறுகள், வழிபாட்
டுக் கூடாரச் சேவைக்குப் பயன்படுத்தப்படுகிற பாத்திரங்கள் மற்றும் வேறு
சில பொருள்கள். இவைதான் அவர்களுடைய பொறுப்பில் இருக்கின்றன.
27 ஆரோனும் அவனுடைய மகன்களும் கெர்சோனியர்கள்[s] செய்கிற
எல்லா வேலைகளையும் அவர்கள் சுமக்கிற சுமைகளையும் மேற்பார்வை
செய்ய வேண்டும். இந்த எல்லா சுமைகளையும் சுமக்கும் பொறுப்பை
நீங்கள் அவர்களுக்குத் தர வேண்டும். **28** இதுதான் சந்திப்புக் கூடாரம்

4:25 *நே.மொ., "வழிபாட்டுக் கூடார விரிப்பு." #நே.மொ., "சந்திப்புக் கூடார விரிப்பு."

அதி. 4
a யாத் 27:6
b எண் 4:5
c எண் 7:6-9; 1நா 15:2
d 2சா 6:6, 7
e யாத் 27:20
f யாத் 30:34, 35
g யாத் 30:23-25
h எண் 3:32
i எண் 3:27
j எண் 4:4
k யாத் 19:21; 1சா 6:19
l எண் 3:21
m எண் 3:25, 26
n யாத் 26:1
o யாத் 26:7, 14
p யாத் 26:36
q யாத் 27:9
r யாத் 27:16
s எண் 3:21, 23

சம்பந்தமாக கெர்சோனியர்கள் செய்ய வேண்டிய சேவை.[a] குருவாகிய
ஆரோனின் மகன் இத்தாமாரின் தலைமையில் அவர்கள் தங்களுடைய
பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும்.[b]

29 மெராரியர்களை[c] அவரவர் வம்சத்தின்படியும், தந்தைவழிக் குடும்
பத்தின்படியும் நீ பெயர்ப்பதிவு செய்ய வேண்டும். **30** சந்திப்புக் கூடார
வேலைகளுக்கு நியமிக்கப்பட்ட எல்லாரையும், அதாவது 30 வயதுமுதல்
50 வயதுவரை உள்ள எல்லாரையும், பெயர்ப்பதிவு செய்ய வேண்டும்.
31 மெராரியர்கள் சுமக்க வேண்டிய சந்திப்புக் கூடாரப் பொருள்கள் இவை
தான்:[d] வழிபாட்டுக் கூடாரத்தின் சட்டங்கள்,[e] கம்புகள்,[f] தூண்கள்,[g] பாதங்
கள்,[h] **32** பிரகாரத்தைச் சுற்றியுள்ள கம்பங்கள்,[i] அவற்றின் பாதங்கள்,[j]
கூடார ஆணிகள்,[k] கூடாரக் கயிறுகள், மற்றும் வேறு சில கருவிகள். அதனு
டன் சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் அவர்கள் செய்ய வேண்டும்.
யார் யார் எதை எதைச் சுமந்துகொண்டு போக வேண்டுமென்று நீங்கள்
சொல்ல வேண்டும். **33** இதுதான் சந்திப்புக் கூடாரம் சம்பந்தமாக மெரா
ரியர்கள்[l] செய்ய வேண்டிய வேலை. குருவாகிய ஆரோனின் மகன் இத்தா
மாரின் தலைமையில் அவர்கள் தங்களுடைய பொறுப்புகளை நிறைவேற்ற
வேண்டும்"[m] என்றார்.

34 பின்பு, கோகாத்தியர்களை[n] அவரவர் வம்சத்தின்படியும் தந்தைவ
ழிக் குடும்பத்தின்படியும் மோசேயும் ஆரோனும் ஜனங்களின் தலைவர்க
ளும்[o] பெயர்ப்பதிவு செய்தார்கள். **35** சந்திப்புக் கூடார வேலைகளுக்கு
நியமிக்கப்பட்ட எல்லாரையும், அதாவது 30 வயதுமுதல் 50 வயது
வரை உள்ள எல்லாரையும்,[p] அப்படிப் பெயர்ப்பதிவு செய்தார்கள்.
36 அவரவர் வம்சங்களின்படி பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்
தம் 2,750 பேர்.[q] **37** இவர்கள்தான் கோகாத் வம்சத்தில் சந்திப்புக் கூடார
வேலைக்காகப் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள். மோசேக்கு யெகோவா
கொடுத்த கட்டளைப்படியே, மோசேயும் ஆரோனும் இவர்களைப் பெயர்ப்
பதிவு செய்தார்கள்.[r]

38 பின்பு, கெர்சோனியர்கள்[s] அவரவர் வம்சத்தின்படியும் தந்தை
வழிக் குடும்பத்தின்படியும் பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள். **39** சந்திப்
புக் கூடார வேலைகளுக்கு நியமிக்கப்பட்ட எல்லாரும், அதாவது 30 வயது
முதல் 50 வயதுவரை உள்ள எல்லாரும், பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள்.
40 வம்சத்தின்படியும் தந்தைவழிக் குடும்பத்தின்படியும் பெயர்ப்பதிவு
செய்யப்பட்டவர்கள் மொத்தம் 2,630 பேர்.[t] **41** இவர்கள்தான் கெர்சோன்
வம்சத்தில் சந்திப்புக் கூடார வேலைகளுக்காகப் பெயர்ப்பதிவு செய்யப்பட்
டவர்கள். யெகோவாவின் கட்டளைப்படியே, மோசேயும் ஆரோனும் இவர்
களைப் பெயர்ப்பதிவு செய்தார்கள்.[u]

42 மெராரியர்கள் அவரவர் வம்சத்தின்படியும் தந்தைவழிக் குடும்
பத்தின்படியும் பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள். **43** சந்திப்புக் கூடார
வேலைகளுக்கு நியமிக்கப்பட்ட எல்லாரும், அதாவது 30 வயதுமுதல்
50 வயதுவரை உள்ள எல்லாரும்,[v] பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள்.
44 அவரவர் வம்சங்களின்படி பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்
தம் 3,200 பேர்.[w] **45** இவர்கள்தான் மெராரி வம்சத்தில் பெயர்ப்பதிவு
செய்யப்பட்டவர்கள். மோசேக்கு யெகோவா கொடுத்த கட்டளைப்படியே,
மோசேயும் ஆரோனும் இவர்களைப் பெயர்ப்பதிவு செய்தார்கள்.[x]

அதி. 4
a எண் 3:25, 26
b யாத் 6:23; எண் 4:33; எண் 7:8
c யாத் 6:19; எண் 3:33
d எண் 3:36, 37
e யாத் 26:15
f யாத் 26:26
g யாத் 26:37; யாத் 36:38
h யாத் 26:19; யாத் 38:27
i யாத் 27:10
j யாத் 27:11
k யாத் 27:19
l எண் 3:33
m எண் 4:28
n எண் 3:19, 27
o எண் 1:16
p எண் 4:47; எண் 8:25, 26
q எண் 3:27, 28
r எண் 3:15
s எண் 3:21
t எண் 3:21, 22
u எண் 4:22, 23
v எண் 8:25, 26
w எண் 3:33, 34
x எண் 4:29

46 இந்த எல்லா லேவியர்களையும் அவரவர் வம்சத்தின்படியும் தந்
தைவழிக் குடும்பத்தின்படியும் மோசேயும் ஆரோனும் ஜனங்களின் தலை
வர்களும் பெயர்ப்பதிவு செய்தார்கள். **47** 30 வயதுமுதல் 50 வயது
வரை உள்ள அந்த ஆட்கள் எல்லாரும் சந்திப்புக் கூடார வேலைக
ளுக்கும் அதன் பொருள்களைச் சுமக்கிற வேலைகளுக்கும் நியமிக்கப்பட்
டார்கள்.[a] **48** பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 8,580 பேர்.[b]
49 மோசேக்கு யெகோவா கொடுத்த உத்தரவுப்படி, அவர்கள் ஒவ்வொரு
வரும் தங்களுடைய வேலையைச் செய்யவும் சுமையைச் சுமக்கவும் நியமிக்
கப்பட்டு, பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள். யெகோவா மோசேக்குக் கட்
டளை கொடுத்தபடியே அவர்கள் பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள்.

5 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “தொழுநோயாளிகளையும்[c] பிறப்
புறுப்பில் ஒழுக்கு நோய் உள்ளவர்களையும்[d] பிணத்தால் தீட்டுப்பட்ட
வர்களையும்[e] முகாமிலிருந்து அனுப்பிவிடும்படி இஸ்ரவேலர்களுக்கு நீ கட்
டளை கொடு. **3** ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி,
அவர்களை நீ அனுப்பிவிட வேண்டும். முகாம் முழுவதும் தீட்டுப்படாதபடி
அவர்களை அங்கிருந்து வெளியே அனுப்ப வேண்டும்.[f] ஏனென்றால், நான்
உங்கள் மத்தியில் இருக்கிறேன்”[g] என்றார். **4** அதன்படி, இஸ்ரவேலர்கள்
அவர்களை முகாமுக்கு வெளியே அனுப்பிவிட்டார்கள். யெகோவா
மோசேக்குச் சொன்னபடியே இஸ்ரவேலர்கள் செய்தார்கள்.

5 பின்பு யெகோவா மோசேயிடம், **6** “நீ இஸ்ரவேலர்களிடம் சொல்ல
வேண்டியது என்னவென்றால், ‘ஒரு ஆணோ பெண்ணோ ஏதோவொரு
பாவத்தைச் செய்து யெகோவாவுக்குத் துரோகம் பண்ணினால் அவர் குற்ற
வாளியாக இருப்பார்.[h] **7** அந்தப் பாவத்தை அவர் ஒத்துக்கொள்ள வேண்
டும்.[i] குற்றத்துக்கு அபராதமாக முழு நஷ்ட ஈட்டையும், அதன் மதிப்பில்
ஐந்திலொரு பாகத்தையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.[j] யாருக்கு எதிரா
கக் குற்றம் செய்தாரோ அந்த நபருக்கு அதைத் தர வேண்டும். **8** ஆனால்
அந்த நபர் இறந்துவிட்டால், அந்த நஷ்ட ஈட்டை வாங்கிக்கொள்ள அவ
ருக்கு நெருங்கிய சொந்தக்காரரும் இல்லாவிட்டால், அதை யெகோவாவுக்
குக் கொடுக்க வேண்டும். அது குருவானவருக்குச் சொந்தமாகும். அதோடு,
குற்றம் செய்தவருடைய பாவத்துக்குப் பரிகாரமாகக் குருவானவர் செலுத்
தும் செம்மறியாட்டுக் கடாவும் அவருக்கே சொந்தமாகும்.[k]

9 இஸ்ரவேலர்கள் குருவானவருக்குக் கொடுக்கிற எல்லா பரிசுத்த
காணிக்கைகளும்[l] அவருக்கே சொந்தமாகும்.[m] **10** ஒவ்வொருவரும்
கொடுக்கிற பரிசுத்த பொருள்கள் குருவானவருக்குப் போய்ச் சேரும். ஒரு
வர் குருவானவருக்கு எதைக் கொடுத்தாலும் அது குருவானவருக்கே
சொந்தமாகும்’” என்றார்.

11 பின்பு யெகோவா மோசேயிடம், **12** “நீ இஸ்ரவேலர்களிடம் இப்ப
டிச் சொல்: ‘ஒருவனுடைய மனைவி நடத்தைகெட்டுப்போய் அவனுக்குத்
துரோகம் செய்திருக்கலாம். **13** அவள் வேறொருவனோடு உறவுகொண்
டது[n] அவளுடைய கணவனுக்குத் தெரியாமல் இருக்கலாம், மற்றவர்களுக்
கும் தெரியாமல் இருக்கலாம். அவள் களங்கப்பட்டிருந்தும் அவளுக்கு எதி
ராகச் சாட்சிகள் இல்லாமலோ அவள் கையும் களவுமாகப் பிடிபடாமலோ
இருக்கலாம். **14** அவள் அப்படிக் களங்கப்பட்டிருந்தாலும் சரி, இல்லா
விட்டாலும் சரி, அவளுடைய நடத்தையைக் கணவன் சந்தேகப்பட்டால்,

அதி. 4
a எண் 4:15, எண் 4:24-26, எண் 4:31-33
b எண் 3:39

அதி. 5
c லேவி 13:45, 46
d லேவி 15:2
e லேவி 22:4, எண் 19:11
f எண் 19:22
g யாத் 25:8, லேவி 26:11
h லேவி 5:1, 17
i லேவி 5:5, யோசு 7:19, யாக் 5:16
j லேவி 6:4, 5
k லேவி 5:16, லேவி 6:6, 7, லேவி 7:7
l லேவி 6:14, 17, லேவி 7:1, 6, லேவி 10:12, 13
m யாத் 29:27, 28, எண் 18:8, உபா 18:3, எசே 44:29, 1கொ 9:13
n லேவி 18:20, உபா 5:18

அதி. 5
a எரே 17:10
எபி 13:4
b எண் 5:15, 25
c எண் 5:22, 24
d ரோ 7:2
e லேவி 18:20
1கொ 6:9, 10
f எண் 5:15
g லேவி 2:9

15 குருவானவரிடம் அவளைக் கூட்டிக்கொண்டு வர வேண்டும். அதோடு,
அவளுக்காக ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு* பார்லி மாவைக்
காணிக்கையாய்க் கொண்டுவர வேண்டும். அவன் அந்த மாவில் எண்
ணெய் ஊற்றவோ சாம்பிராணியை வைக்கவோ கூடாது. ஏனென்றால், அது
சந்தேகத்தின் காரணமாகச் செலுத்தப்படுகிற உணவுக் காணிக்கை, குற்றத்
தைக் கவனத்துக்குக் கொண்டுவரும் உணவுக் காணிக்கை.

16 குருவானவர் அவளைக் கூப்பிட்டு யெகோவாவின் முன்னிலையில்
நிறுத்துவார்.[a] **17** பின்பு ஒரு மண்பாத்திரத்தில் சுத்தமான* தண்ணீரை
எடுத்து, வழிபாட்டுக் கூடாரத்தின் தரையிலுள்ள மண்ணில் கொஞ்சத்தை
அதில் போடுவார். **18** அதன்பின் அவளை யெகோவாவின் முன்னிலை
யில் நிறுத்தி, அவளுடைய தலைமுடியை அவிழ்ப்பார். அதோடு, சந்தேகத்
தின் காரணமாகச் செலுத்தப்படும் உணவுக் காணிக்கையை[b] ஒரு நினைப்
பூட்டுதலாக அவள் கையில் வைப்பார். சாபத்தைக் கொண்டுவரும் அந்தக்
கசப்பான தண்ணீரைக்[c] குருவானவர் தன் கையில் வைத்திருப்பார்.

19 பின்பு, குருவானவர் அவளைச் சத்தியம் செய்ய வைத்து, இப்படிச்
சொல்ல வேண்டும்: "உன் கணவனுக்குச் சொந்தமாக இருக்கும் நீ[d] வேறு
எந்த ஆணோடும் உறவுகொள்ளாமல் கற்புள்ளவளாக இருந்தால், இந்தக்
கசப்பான தண்ணீர் உனக்கு எந்தச் சாபத்தையும் கொண்டுவராது.
20 நீ உன் கணவனுக்குச் சொந்தமானவளாக இருந்தும் நடத்தைகெட்
டுப்போய் வேறொருவனோடு உறவுகொண்டிருந்தால்[e]—" **21** 'தப்பு செய்
திருந்தால் சாபம் வரட்டும்' என்று உறுதிமொழி எடுக்கும்படி அவளிடம்
குருவானவர் சொல்வார். பின்பு குருவானவர் அவளிடம், "ஜனங்கள் உன்
னுடைய கெட்ட உதாரணத்தைச் சொல்லி சபிக்கும்படியும் ஆணையிடும்
படியும் யெகோவா செய்யட்டும். யெகோவா உன் தொடையை* அழுகச்
செய்து,# உன் வயிற்றை வீங்கச் செய்யட்டும். **22** சாபத்தைக் கொண்டு
வரும் தண்ணீர் உன் குடலுக்குள் போய் உன் வயிற்றை வீங்க வைத்து,
உன் தொடையை அழுகச் செய்யட்டும்" என்று சொல்வார். அதற்கு அந்
தப் பெண், "ஆமென்! ஆமென்!"* என்று சொல்ல வேண்டும்.

23 பின்பு, குருவானவர் இந்தச் சாபங்களை ஒரு புத்தகத்தில் எழுதி அந்
தக் கசப்பான தண்ணீரில் அவற்றைக் கழுவ வேண்டும். **24** அதன்பின்,
சாபத்தைக் கொண்டுவரும் கசப்பான தண்ணீரை அவளுக்குக் குடிக்கக்
கொடுக்க வேண்டும். அந்தத் தண்ணீர் அவளுடைய உடலுக்குள் போய்க்
கசப்பான விளைவை உண்டாக்கும். **25** சந்தேகத்தின் காரணமாகச் செலுத்
தப்படுகிற உணவுக் காணிக்கையை[f] அவளுடைய கையிலிருந்து குரு
வானவர் வாங்கி யெகோவாவின் முன்னிலையில் அசைவாட்ட வேண்டும்.
பின்பு, பலிபீடத்தின் பக்கத்தில் கொண்டுவர வேண்டும். **26** குருவான
வர் அந்த உணவுக் காணிக்கையிலிருந்து ஒரு கைப்பிடி எடுத்து, மொத்த
காணிக்கைக்கும் அடையாளமாக அதைப் பலிபீடத்தில் எரிப்பார்.[g] பின்பு,
அந்தத் தண்ணீரைக் குடிக்கும்படி அவளிடம் சொல்வார். **27** அவள் தன்
னைக் களங்கப்படுத்தி தன் கணவனுக்குத் துரோகம் செய்திருந்தால்,

5:15 *அதாவது, "சுமார் ஒரு கிலோ." **5:17** *நே.மொ., "பரிசுத்தமான." **5:21** *அநேகமாக, பிறப்பு உறுப்பை இது குறிக்கலாம். #இது ஒருவேளை மலடியாக்கு வதைக் குறிக்கலாம். **5:22** *அதாவது, "அப்படியே ஆகட்டும்! அப்படியே ஆகட்டும்!"

சாபத்தைக் கொண்டுவரும் அந்தத் தண்ணீரை அவள் குடித்தவுடன் அது
அவளுக்குள் போய்க் கசப்பான விளைவை உண்டாக்கும். அவள் வயிறு
வீங்கும், தொடை அழுகும், ஜனங்கள் மத்தியில் அவள் சாபக்கேடாக
இருப்பாள். **28** ஆனால், அவள் தன்னைக் களங்கப்படுத்தாமல் தூய்மை
யாக இருந்தால், அப்படிப்பட்ட எந்தக் கேடும் அவளுக்கு வராது. அவள்
கர்ப்பமாகி குழந்தை பெறுவாள்.

29 ஒரு பெண் தன் கணவனுக்குச் சொந்தமானவளாக இருக்கும்
போது வழிதவறிப் போய்த் தன்னைக் களங்கப்படுத்தினால், **30** அல்லது
ஒருவன் தன்னுடைய மனைவியின் நடத்தையைச் சந்தேகப்பட்டால் பின்
பற்ற வேண்டிய சட்டங்கள் இவைதான்.[a] அவன் தன்னுடைய மனைவியை
யெகோவாவின் முன்னிலையில் நிறுத்த வேண்டும், குருவானவர் இந்தச்
சட்டங்களின்படி அவளுக்குச் செய்ய வேண்டும். **31** அப்போது, அந்த
மனிதன் குற்றமில்லாதவனாக இருப்பான், ஆனால் அவனுடைய மனைவி
அந்தக் குற்றத்துக்காகத் தண்டிக்கப்படுவாள்'" என்றார்.

6 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "நீ இஸ்ரவேலர்களிடம் இப்படிச்
சொல்: 'யெகோவாவுக்கு நசரேயராய்*[b] இருப்பதாக ஒரு ஆணோ
பெண்ணோ விசேஷமாக நேர்ந்துகொண்டால், **3** திராட்சமதுவையும்
வேறெந்த மதுவையும் அவர் குடிக்கக் கூடாது. திராட்சமதுவிலோ
வேறெந்த மதுவிலோ செய்யப்படும் காடியைக் குடிக்கக் கூடாது.[c] திராட்
சையில் தயாரிக்கப்படும் எந்தப் பானத்தையும் குடிக்கக் கூடாது.
பழுத்த திராட்சையையோ உலர்ந்த திராட்சையையோ சாப்பிடக் கூடாது.
4 அவர் நசரேயராக இருக்கும் நாளெல்லாம் திராட்சைக் கொடிகளிலிருந்து
கிடைக்கும் எதையுமே சாப்பிடக் கூடாது. திராட்சைக் காய்களையும் தோல்
களையும்கூட சாப்பிடக் கூடாது.

5 நசரேயராய் இருப்பதாக அவர் நேர்ந்துகொண்ட நாளெல்லாம் தன்னு
டைய தலைமுடியை வெட்டக் கூடாது.[d] யெகோவாவுக்குத் தன்னை அர்ப்
பணித்த காலம் முழுவதும் தன் தலைமுடியை நீளமாக வளர்த்து, பரிசுத்த
மாக இருக்க வேண்டும். **6** யெகோவாவுக்குத் தன்னை அர்ப்பணித்த
அந்தக் காலம் முழுவதும் எந்தப் பிணத்தின்* பக்கத்திலும் அவர் போகக்
கூடாது. **7** அப்பாவோ அம்மாவோ சகோதரனோ சகோதரியோ இறந்
தால்கூட பக்கத்தில் போய்த் தன்னைத் தீட்டுப்படுத்தக் கூடாது.[e] ஏனென்
றால், அவர் கடவுளுக்கு நசரேயராக இருக்கிறார். அவருடைய தலைமுடி
அதற்கு அடையாளமாக இருக்கிறது.

8 அவர் நசரேயராக இருக்கும் நாளெல்லாம் யெகோவாவுக்குப் பரிசுத்த
மாக இருக்கிறார். **9** ஆனால், தனக்குப் பக்கத்தில் இருக்கிற யாராவது திடீ
ரென்று இறந்துவிட்டால் அந்த நசரேயர் தீட்டுப்பட்டுவிடுவார்.[f] அப்போது,
கடவுளுக்குத் தன்னை அர்ப்பணித்ததற்கு அடையாளமாக இருக்கிற தலை
முடியை அவர் சிரைத்துவிட வேண்டும்.[g] தன்னைத் தூய்மைப்படுத்தும்
நாளில், அதாவது ஏழாம் நாளில், தன் தலைமுடியைச் சிரைத்துக்
கொள்ள வேண்டும். **10** எட்டாம் நாளில், இரண்டு காட்டுப் புறாக்க
ளையோ இரண்டு புறாக் குஞ்சுகளையோ கொண்டுவந்து சந்திப்புக் கூடா
ரத்தின் வாசலில் குருவானவரிடம் கொடுக்க வேண்டும். **11** குருவானவர்

6:2 *அதாவது, "அர்ப்பணிக்கப்பட்டவராய், பிரித்துவைக்கப்பட்டவராய்." **6:6** *சொல் பட்டியலில் "நெஃபெஷ், சைக்கீ" என்ற தலைப்பைப் பாருங்கள்.

அதி. 5
a எண் 5:14, 15

அதி. 6
b நியா 13:5
c லேவி 10:9; ஆமோ 2:11, 12; லூ 1:15
d நியா 13:5; நியா 16:17; 1சா 1:11
e லேவி 21:1, 11
f எண் 19:14
g எண் 6:13, 18

அவற்றில் ஒன்றைப் பாவப் பரிகார பலியாகவும் மற்றொன்றைத் தகன பலி
யாகவும் செலுத்துவார். இப்படி, இறந்தவரால் தீட்டுப்பட்ட அந்த நசரேய
ருக்காகப் பாவப் பரிகாரம் செய்வார்.[a] அந்த நாள்முதல் நசரேயர் தன்னைப்
புனிதப்படுத்திக்கொள்ள* வேண்டும். **12** அப்போது, அவர் யெகோவா
வுக்கு நசரேயராக இருக்கும் நாட்கள் மறுபடியும் ஆரம்பிக்கும். அதற்
காக, ஒருவயது செம்மறியாட்டுக் கடாக் குட்டியைக் குற்ற நிவாரண பலியா
கக் கொண்டுவர வேண்டும். அவர் தன்னைத் தீட்டுப்படுத்திக்கொண்டதால்,
ஏற்கெனவே நசரேயராக இருந்த நாட்கள் கணக்கில் சேராது.

13 நசரேயருக்கான சட்டம் இதுதான்: ஒருவர் நசரேயராக இருக்கும்
காலம் முடியும்போது[b] அவரைச் சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கூட்
டிக்கொண்டு வர வேண்டும். **14** அங்கே அவர் யெகோவாவுக்குக்
காணிக்கைகள் கொடுக்க வேண்டும். அதாவது, குறையற்ற ஒருவயது
செம்மறியாட்டுக் கடாக் குட்டியைத் தகன பலியாகவும்,[c] குறையற்ற ஒரு
வயது பெண் செம்மறியாட்டுக் குட்டியைப் பாவப் பரிகார பலியாகவும்,[d]
குறையற்ற செம்மறியாட்டுக் கடாவைச் சமாதான பலியாகவும்[e] கொடுக்க
வேண்டும். **15** அதோடு ஒரு கூடையில், நைசான மாவிலே எண்ணெய்
கலந்து சுடப்பட்ட புளிப்பில்லாத வட்ட ரொட்டிகளையும், எண்ணெய் தட
விய மெல்லிய ரொட்டிகளையும், அவற்றுக்கான உணவுக் காணிக்கை
யையும்,[f] திராட்சமது காணிக்கையையும்[g] கொடுக்க வேண்டும். **16** குரு
வானவர் அவற்றை யெகோவாவின் முன்னிலையில் கொண்டுவந்து,
அந்த நசரேயருடைய பாவப் பரிகார பலியையும் தகன பலியையும் செலுத்
துவார். **17** கூடையிலுள்ள புளிப்பில்லாத ரொட்டிகளோடு, ஒரு செம்
மறியாட்டுக் கடாவை யெகோவாவுக்குச் சமாதான பலியாகச் செலுத்துவார்.
அவற்றோடு, உணவுக் காணிக்கையையும்[h] திராட்சமது காணிக்கையையும்
செலுத்துவார்.

18 பின்பு, சந்திப்புக் கூடாரத்தின் வாசலில் அந்த நசரேயர் தன் தலை
முடியைச் சிரைத்துக்கொள்ள வேண்டும்.[i] நசரேயராக இருக்கும்போது
வளர்த்த அந்தத் தலைமுடியைச் சமாதான பலியின் கீழே எரிகிற நெருப்
பில் போட வேண்டும். **19** நசரேயருக்கு அடையாளமாக இருக்கும் தலை
முடியை அவர் சிரைத்துக்கொண்ட பின்பு, வேக வைத்த[j] செம்மறியாட்டுக்
கடாவின் முன்னங்காலையும், கூடையிலுள்ள புளிப்பில்லாத வட்ட
ரொட்டிகளில் ஒன்றையும், மெல்லிய ரொட்டிகளில் ஒன்றையும் குருவான
வர் எடுத்து அந்த நசரேயரின் கைகளில் வைக்க வேண்டும். **20** பின்பு,
அவற்றை அசைவாட்டும் காணிக்கையாக யெகோவாவின் முன்னிலையில்
குருவானவர் அசைவாட்ட வேண்டும்.[k] அந்தக் காணிக்கை பரிசுத்தமா
னது, குருவானவருக்குச் சொந்தமானது. அசைவாட்டும் காணிக்கையாகிய
மார்க்கண்டத்தோடும்* பரிசுத்த பங்காகிய காலோடும் அவை குருவானவ
ருக்குக் கொடுக்கப்படும்.[l] அதன்பின், அந்த நசரேயர் திராட்சமதுவைக்
குடிக்கலாம்.

21 நசரேயராய்[m] இருப்பதாக நேர்ந்துகொள்ளும் ஒருவருக்கான சட்டம்
இதுதான்: நசரேயர்கள் செலுத்த வேண்டிய காணிக்கைகள் தவிர வேறு

அதி. 6
a லேவி 5:8, 10
b எண் 30:2; பிர 5:4
c லேவி 1:10
d லேவி 4:32
e லேவி 3:1
f லேவி 2:1; லேவி 6:14
g எண் 15:8, 10
h லேவி 2:9
i எண் 6:5
j லேவி 8:31
k யாத் 29:23, 24
l லேவி 7:34
m நியா 13:5

6:11 *நே.மொ., “தன் தலையைப் புனிதப்படுத்திக்கொள்ள.” அநேகமாக, தலைமுடியை மறுபடியும் வளர்ப்பதைக் குறிக்கலாம். **6:20** *அதாவது, “நெஞ்சுப் பகுதியோடும்.”

காணிக்கைகளையும் செலுத்துவதாக அவர் யெகோவாவிடம் நேர்ந்து
கொண்டால், அதையும் நிறைவேற்ற வேண்டும்'" என்றார்.

22 பின்பு யெகோவா மோசேயிடம், **23** "நீ ஆரோனிடமும் அவனு
டைய மகன்களிடமும் சொல்ல வேண்டியது என்னவென்றால், 'நீங்கள் இஸ்
ரவேலர்களை வாழ்த்தும்போது,[a]

24 "யெகோவா உங்களை ஆசீர்வதிக்கட்டும்,[b] அவர் உங்களைப்
பாதுகாக்கட்டும்.
25 யெகோவா தன்னுடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கச் செய்து,[c]
உங்களுக்குக் கருணை காட்டட்டும்.
26 யெகோவா உங்களைக் கரிசனையோடு பார்த்து,* உங்களுக்குச்
சமாதானம் தரட்டும்"[d] என்று சொல்லி வாழ்த்த வேண்டும்'"

என்றார். **27** "அவர்கள் என் பெயரைச் சொல்லி இஸ்ரவேலர்களை
வாழ்த்த வேண்டும்,[e] நான் அவர்களுக்கு ஆசீர்வாதம் தருவேன்"[f] என்றும்
சொன்னார்.

7 வழிபாட்டுக் கூடாரத்தை மோசே அமைத்து முடித்ததும்,[g] அதே
நாளில் அந்தக் கூடாரத்தையும் அதன் சாமான்களையும் பலிபீடத்தை
யும் எல்லா பாத்திரங்களையும் அபிஷேகம் செய்து[h] புனிதப்படுத்தினார்.[i]
அப்படி அபிஷேகம் செய்து புனிதப்படுத்திய பின்பு,[j] **2** இஸ்ரவேலின்
கோத்திரத் தலைவர்கள்,[k] அதாவது தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள், தங்
களுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். இவர்கள்தான் பெயர்ப்ப
திவு வேலையைக் கண்காணித்த கோத்திரத் தலைவர்கள். **3** இரண்டிரண்டு
கோத்திரத் தலைவர்களுக்கு ஒரு கூண்டுவண்டி* என ஆறு கூண்டுவண்டி
களையும், ஒவ்வொரு கோத்திரத் தலைவருக்கு ஒரு காளை என 12 காளை
களையும் இவர்கள் கொண்டுவந்து வழிபாட்டுக் கூடாரத்தின் முன்னால்,
யெகோவாவின் முன்னிலையில் கொடுத்தார்கள். **4** அப்போது யெகோவா
மோசேயிடம், **5** "இவற்றை அவர்களிடமிருந்து வாங்கி, சந்திப்புக் கூடார
வேலைகளுக்காக லேவியர்களிடம் கொடு. அவரவர் செய்யும் வேலைக
ளுக்கு ஏற்றபடி அவரவருக்குக் கொடு" என்றார்.

6 அதனால், மோசே அந்த வண்டிகளையும் காளைகளையும் அவர்களி
டமிருந்து வாங்கி லேவியர்களிடம் கொடுத்தார். **7** கெர்சோனியர்களின்
வேலைகளுக்கு ஏற்றபடி,[l] அவர்களுக்கு இரண்டு வண்டிகளையும் நான்கு
காளைகளையும் கொடுத்தார். **8** மெராரியர்களின் வேலைகளுக்கு ஏற்ற
படி, அவர்களுக்கு நான்கு வண்டிகளையும் எட்டுக் காளைகளையும்
கொடுத்தார். அவர்கள் எல்லாருடைய வேலைகளையும் குருவாகிய ஆரோ
னின் மகன் இத்தாமார் மேற்பார்வை செய்தார்.[m] **9** ஆனால், கோகாத்தியர்
களுக்கு மோசே ஒன்றும் கொடுக்கவில்லை. ஏனென்றால், பரிசுத்த இடத்தின்
பொருள்களை[n] அவர்கள் தங்களுடைய தோள்களில் சுமந்தார்கள்.[o]

10 பலிபீடம் அபிஷேகம் செய்யப்பட்ட நாளில், அதாவது அது அர்ப்
பணிக்கப்பட்ட நாளில்,[p] கோத்திரத் தலைவர்கள் தங்களுடைய காணிக்கை
களைக் கொண்டுவந்தார்கள். அவற்றைப் பலிபீடத்துக்கு முன்னால் கொண்
டுவந்து கொடுத்தபோது, **11** யெகோவா மோசேயிடம், "ஒரு நாளுக்கு

6:26 * நே.மொ., "யெகோவா தன் முகத்தை நிமிர்த்தி." 7:3 * அதாவது, "வளைவான கூரை போடப்பட்ட மாட்டு வண்டி."

அதி. 6
a லேவி 9:22; உபா 10:8
b ரூ 2:4; சங் 134:3
c சங் 31:16; சங் 67:1
d சங் 29:11; லூ 2:14
e உபா 28:10; ஏசா 43:7, 10
f சங் 5:12; சங் 67:7

அதி. 7
g யாத் 40:17
h யாத் 30:26
i லேவி 8:10
j யாத் 40:10
k யாத் 18:21; எண் 1:4, 16
l எண் 3:25, 26; எண் 4:24-26
m எண் 3:36, 37; எண் 4:31-33
n எண் 3:30, 31; எண் 4:15
o 2சா 6:13; 1நா 15:15
p 1ரா 8:63; 2நா 7:5

ஒருவர் என கோத்திரத் தலைவர்கள் தங்களுடைய காணிக்கைகளைப் பலி பீடத்தின் அர்ப்பணத்துக்காகக் கொண்டுவர வேண்டும்” என்றார்.

12 முதலாம் நாளில், யூதா கோத்திரத்தைச் சேர்ந்த அம்மினதாபின் மகன் நகசோன்[a] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்தார். **13** அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின்# கணக்குப்படி,[b] 130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்ணெய் கலந்த நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[c] **14** 10 சேக்கல் எடையுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்பட்டிருந்தது; **15** தகன பலியாக[d] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா, ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; **16** பாவப் பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[e] **17** சமாதான பலியாக[f] 2 மாடுகள், 5 செம்மறியாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 5 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் அம்மினதாபின் மகன் நகசோன்[g] கொண்டுவந்த காணிக்கைகள்.

18 இரண்டாம் நாளில், இசக்கார் கோத்திரத்தின் தலைவரும் சூவாரின் மகனுமாகிய நெதனெயேல்[h] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்தார். **19** அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி,[i] 130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்ணெய் கலந்த நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[j] **20** 10 சேக்கல் எடையுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்பட்டிருந்தது; **21** தகன பலியாக[k] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா, ஒரு வயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; **22** பாவப் பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[l] **23** சமாதான பலியாக[m] 2 மாடுகள், 5 செம்மறியாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 5 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் சூவாரின் மகன் நெதனெயேல் கொண்டுவந்த காணிக்கைகள்.

24 மூன்றாம் நாளில், செபுலோன் கோத்திரத்தின் தலைவரும் ஹேலோனின் மகனுமாகிய எலியாப்[n] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்தார். **25** அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி,[o] 130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்ணெய் கலந்த நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[p] **26** 10 சேக்கல் எடையுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்பட்டிருந்தது; **27** தகன பலியாக[q] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா, ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; **28** பாவப் பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[r] **29** சமாதான பலியாக[s] 2 மாடுகள், 5 செம்மறியாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 5 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் ஹேலோனின் மகன் எலியாப்[t] கொண்டுவந்த காணிக்கைகள்.

30 நான்காம் நாளில், ரூபன் கோத்திரத்தின் தலைவரும் சேதேயூரின்

7:13, 19, 25 *வே.வா., “பரிசுத்த இடத்து.” **7:13** #ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 7
- a எண் 1:4, 7; எண் 2:3; ரூ 4:20; மத் 1:4
- b லேவி 27:25
- c லேவி 2:1
- d லேவி 1:3
- e லேவி 4:22, 23
- f லேவி 3:1
- g யாத் 6:23; லூ 3:23, 33
- h எண் 1:4, 8; எண் 2:5; எண் 10:15
- i லேவி 27:25
- j லேவி 2:1
- k லேவி 1:3
- l லேவி 4:22, 23
- m லேவி 3:1
- n எண் 2:7; எண் 10:16
- o லேவி 27:25
- p லேவி 2:1
- q லேவி 1:3
- r லேவி 4:22, 23
- s லேவி 3:1
- t எண் 1:4, 9

மகனுமாகிய எலிசூர்[a] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்தார்.
31 அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி,[b]
130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல் எடையுள்ள
ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்ணெய் கலந்த
நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[c] **32** 10 சேக்கல் எடை
யுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்பட்டிருந்தது;
33 தகன பலியாக[d] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா, ஒருவ
யதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; **34** பாவப் பரிகார பலியாக ஒரு
வெள்ளாட்டுக் குட்டி;[e] **35** சமாதான பலியாக[f] 2 மாடுகள், 5 செம்மறியாட்
டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 5 செம்மறியாட்
டுக் கடாக் குட்டிகள். இவைதான் சேதேயூரின் மகன் எலிசூர்[g] கொண்டு
வந்த காணிக்கைகள்.

36 ஐந்தாம் நாளில், சிமியோன் கோத்திரத்தின் தலைவரும் சூரிஷதா
யின் மகனுமாகிய செலூமியேல்[h] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டு
வந்தார். **37** அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்
படி,[i] 130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல்
எடையுள்ள ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்
ணெய் கலந்த நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[j] **38** 10 சேக்
கல் எடையுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்
பட்டிருந்தது; **39** தகன பலியாக[k] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக்
கடா, ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; **40** பாவப் பரிகார
பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[l] **41** சமாதான பலியாக[m] 2 மாடுகள்,
5 செம்மறியாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள
5 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் சூரிஷதாயின் மகன் செலூ
மியேல்[n] கொண்டுவந்த காணிக்கைகள்.

42 ஆறாம் நாளில், காத் கோத்திரத்தின் தலைவரும் தேகுவேலின்
மகனுமாகிய எலியாசாப்[o] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்
தார். **43** அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி,[p]
130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல் எடையுள்ள
ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்ணெய் கலந்த
நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[q] **44** 10 சேக்கல் எடை
யுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்பட்டிருந்
தது; **45** தகன பலியாக[r] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா,
ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; **46** பாவப் பரிகார பலியாக
ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[s] **47** சமாதான பலியாக[t] 2 மாடுகள், 5 செம்மறி
யாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 5 செம்மறி
யாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் தேகுவேலின் மகன் எலியாசாப்[u]
கொண்டுவந்த காணிக்கைகள்.

48 ஏழாம் நாளில், எப்பிராயீம் கோத்திரத்தின் தலைவரும் அம்மியூத்
தின் மகனுமாகிய எலிஷாமா[v] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டு
வந்தார். **49** அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்
படி,[w] 130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல்
எடையுள்ள ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்

7:31, 37, 43, 49 *வே.வா., “பரிசுத்த இடத்து.”

அதி. 7
a எண் 2:10 எண் 10:18
b லேவி 27:25
c லேவி 2:1
d லேவி 1:3
e லேவி 4: 22, 23
f லேவி 3:1
g எண் 1:4, 5
h எண் 2:12
i லேவி 27:25
j லேவி 2:1
k லேவி 1:3
l லேவி 4: 22, 23
m லேவி 3:1
n எண் 1:4, 6
o எண் 2:14 எண் 10:20
p லேவி 27:25
q லேவி 2:1
r லேவி 1:3
s லேவி 4: 22, 23
t லேவி 3:1
u எண் 1:4, 14
v எண் 2:18 எண் 10:22
w லேவி 27:25

ணெய் கலந்த நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[a] 50 10 சேக்
கல் எடையுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்
பட்டிருந்தது; 51 தகன பலியாக[b] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக்
கடா, ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; 52 பாவப் பரிகார
பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[c] 53 சமாதான பலியாக[d] 2 மாடுகள்,
5 செம்மறியாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள
5 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் அம்மியூத்தின் மகன் எலி
ஷாமா[e] கொண்டுவந்த காணிக்கைகள்.

54 எட்டாம் நாளில், மனாசே கோத்திரத்தின் தலைவரும் பெதாசூரின்
மகனுமாகிய கமாலியேல்[f] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்
தார். 55 அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி[g]
130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல் எடையுள்ள
ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்ணெய் கலந்த
நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[h] 56 10 சேக்கல் எடை
யுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்பட்டிருந்
தது; 57 தகன பலியாக[i] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா,
ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; 58 பாவப் பரிகார பலியாக
ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[j] 59 சமாதான பலியாக[k] 2 மாடுகள், 5 செம்மறி
யாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 5 செம்மறி
யாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் பெதாசூரின் மகன் கமாலியேல்[l]
கொண்டுவந்த காணிக்கைகள்.

60 ஒன்பதாம் நாளில், பென்யமீன் கோத்திரத்தின் தலைவரும்[m]
கீதெயோனியின் மகனுமாகிய அபிதான்[n] தன்னுடைய காணிக்கைகளைக்
கொண்டுவந்தார். 61 அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின்
கணக்குப்படி,[o] 130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல்
எடையுள்ள ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்
ணெய் கலந்த நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[p] 62 10 சேக்
கல் எடையுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்
பட்டிருந்தது; 63 தகன பலியாக[q] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக்
கடா, ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; 64 பாவப் பரிகார
பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[r] 65 சமாதான பலியாக[s] 2 மாடுகள்,
5 செம்மறியாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள
5 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் கீதெயோனியின் மகன்
அபிதான்[t] கொண்டுவந்த காணிக்கைகள்.

66 பத்தாம் நாளில், தாண் கோத்திரத்தின் தலைவரும் அம்மிஷதா
யின் மகனுமாகிய அகியேசேர்[u] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டு
வந்தார். 67 அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்
படி,[v] 130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல்
எடையுள்ள ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்
ணெய் கலந்த நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[w]
68 10 சேக்கல் எடையுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொரு
ளால் நிரப்பப்பட்டிருந்தது; 69 தகன பலியாக[x] ஓர் இளம் காளை, ஒரு
செம்மறியாட்டுக் கடா, ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி;

7:55, 61, 67 * வே.வா., "பரிசுத்த இடத்து."

அதி. 7
a லேவி 2:1
b லேவி 1:3
c லேவி 4: 22, 23
d லேவி 3:1
e எண் 1:4, 10
f எண் 2:20 எண் 10:23
g லேவி 27:25
h லேவி 2:1
i லேவி 1:3
j லேவி 4: 22, 23
k லேவி 3:1
l எண் 1:4, 10
m எண் 1:16
n எண் 2:22 எண் 10:24
o லேவி 27:25
p லேவி 2:1
q லேவி 1:3
r லேவி 4: 22, 23
s லேவி 3:1
t எண் 1:4, 11
u எண் 2:25 எண் 10:25
v லேவி 27:25
w லேவி 2:1
x லேவி 1:3

70 பாவப் பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[a] 71 சமாதான பலி
யாக[b] 2 மாடுகள், 5 செம்மறியாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்
கள், ஒருவயதுள்ள 5 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் அம்
மிஷதாயின் மகன் அகியேசேர்[c] கொண்டுவந்த காணிக்கைகள்.

72 பதினோராம் நாளில், ஆசேர் கோத்திரத்தின் தலைவரும் ஓகிரானின்
மகனுமாகிய பாகியேல்[d] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்தார்.
73 அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி,[e]
130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல் எடையுள்ள
ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்ணெய் கலந்த
நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[f] 74 10 சேக்கல் எடை
யுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்பட்டிருந்தது;
75 தகன பலியாக[g] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா, ஒருவ
யதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; 76 பாவப் பரிகார பலியாக ஒரு
வெள்ளாட்டுக் குட்டி;[h] 77 சமாதான பலியாக[i] 2 மாடுகள், 5 செம்மறியாட்
டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 5 செம்மறியாட்
டுக் கடாக் குட்டிகள். இவைதான் ஓகிரானின் மகன் பாகியேல்[j] கொண்டு
வந்த காணிக்கைகள்.

78 பன்னிரண்டாம் நாளில், நப்தலி கோத்திரத்தின் தலைவரும் ஏனா
னின் மகனுமாகிய அகீரா[k] தன்னுடைய காணிக்கைகளைக் கொண்டுவந்
தார். 79 அவருடைய காணிக்கைகள்: பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி,[l]
130 சேக்கல் எடையுள்ள ஒரு வெள்ளித் தட்டு, 70 சேக்கல் எடையுள்ள
ஒரு வெள்ளிக் கிண்ணம்—உணவுக் காணிக்கையாகிய எண்ணெய் கலந்த
நைசான மாவு அவற்றில் நிரப்பப்பட்டிருந்தது;[m] 80 10 சேக்கல் எடை
யுள்ள ஒரு தங்கக் கோப்பை—அது தூபப்பொருளால் நிரப்பப்பட்டிருந்
தது; 81 தகன பலியாக[n] ஓர் இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா,
ஒருவயதுள்ள செம்மறியாட்டுக் கடாக் குட்டி; 82 பாவப் பரிகார பலியாக
ஒரு வெள்ளாட்டுக் குட்டி;[o] 83 சமாதான பலியாக[p] 2 மாடுகள், 5 செம்மறி
யாட்டுக் கடாக்கள், 5 வெள்ளாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 5 செம்மறி
யாட்டுக் கடாக் குட்டிகள். இவைதான் ஏனானின் மகன் அகீரா[q] கொண்டு
வந்த காணிக்கைகள்.

84 பலிபீடம் அபிஷேகம் செய்யப்பட்ட நாளில், அதன் அர்ப்பணத்துக்
காக இஸ்ரவேலின் கோத்திரத் தலைவர்கள் கொண்டுவந்த காணிக்கைகள்[r]
இவைதான்: 12 வெள்ளித் தட்டுகள், 12 வெள்ளிக் கிண்ணங்கள், 12 தங்கக்
கோப்பைகள்.[s] 85 பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி,[t] ஒவ்வொரு வெள்
ளித் தட்டின் எடை 130 சேக்கல், ஒவ்வொரு வெள்ளிக் கிண்ணத்தின்
எடை 70 சேக்கல். வெள்ளிப் பாத்திரங்களின் மொத்த எடை 2,400 சேக்கல்.
86 பரிசுத்த* சேக்கலின் கணக்குப்படி, தூபப்பொருளால் நிரப்பப்பட்ட
12 தங்கக் கோப்பைகள் ஒவ்வொன்றின் எடை 10 சேக்கல். தங்கக் கோப்
பைகளின் மொத்த எடை 120 சேக்கல். 87 தகன பலியாக 12 காளைகள்,
12 செம்மறியாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 12 செம்மறியாட்டுக் கடாக்
குட்டிகள் ஆகியவற்றையும், அவற்றுக்கான உணவுக் காணிக்கைகளை
யும், பாவப் பரிகார பலியாக 12 வெள்ளாட்டுக் குட்டிகளையும் அவர்கள்
கொண்டுவந்தார்கள். 88 சமாதான பலியாக அவர்கள் கொண்டுவந்தவை:

7:73, 79, 85, 86 *வே.வா., "பரிசுத்த இடத்து."

அதி. 7
a லேவி 4:22, 23
b லேவி 3:1
c எண் 1:4, 12
d எண் 2:27; எண் 10:26
e லேவி 27:25
f லேவி 2:1
g லேவி 1:3
h லேவி 4:22, 23
i லேவி 3:1
j எண் 1:4, 13
k எண் 2:29; எண் 10:27
l லேவி 27:25
m லேவி 2:1
n லேவி 1:3
o லேவி 4:22, 23
p லேவி 3:1
q எண் 1:4, 15
r எண் 7:10; எஸ்றா 2:68
s எண் 7:13-17
t லேவி 27:25

24 காளைகள், 60 செம்மறியாட்டுக் கடாக்கள், 60 வெள்ளாட்டுக் கடாக்
கள், ஒருவயதுள்ள 60 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள். பலிபீடம் அபி
ஷேகம் செய்யப்பட்ட பின்பு,[a] அதன் அர்ப்பணத்துக்காகக் கொண்டுவரப்
பட்ட காணிக்கைகள்[b] இவைதான்.

89 கடவுளோடு பேசுவதற்காக மோசே சந்திப்புக் கூடாரத்துக்குள்
போகும்போதெல்லாம்,[c] சாட்சிப் பெட்டியின் மூடிக்கு மேலிருந்து கடவுள்
பேசுவதைக் கேட்பார்.[d] இரண்டு கேருபீன்களுக்கு[e] நடுவிலிருந்து கடவுள்
அவரிடம் பேசுவார்.

8 யெகோவா மோசேயிடம், **2** “நீ ஆரோனிடம் சொல்ல வேண்டியது
என்னவென்றால், ‘நீ விளக்கேற்றும்போது, ஏழு அகல் விளக்குகளும்
குத்துவிளக்கின் முன்பக்கம் ஒளிவீசும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்’”[f]
என்றார். **3** யெகோவா மோசேக்குக் கட்டளை கொடுத்தபடியே, குத்து
விளக்கின் முன்பக்கம் ஒளிவீசும்படி அகல் விளக்குகளை ஆரோன் ஏற்
றினார்.[g] **4** இந்தக் குத்துவிளக்கு, அதன் தண்டுமுதல் மலர்கள்வரை தங்
கத்தால் தகடு அடிக்கப்பட்டிருந்தது.[h] தரிசனத்தில் மோசேக்கு யெகோவா
காட்டியபடியே குத்துவிளக்கு செய்யப்பட்டிருந்தது.[i]

5 மறுபடியும் யெகோவா மோசேயிடம், **6** “இஸ்ரவேல் ஜனங்களிலி
ருந்து லேவியர்களைப் பிரித்தெடுத்து அவர்களைத் தூய்மைப்படுத்து.[j]
7 நீ அவர்களைத் தூய்மைப்படுத்த வேண்டிய விதம்: பாவச் சுத்திக
ரிப்பு நீரை அவர்கள்மேல் தெளிக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய
உடலிலுள்ள எல்லா முடியையும் சவரக்கத்தியால் சிரைத்து, உடைகளைத்
துவைத்து, தங்களைத் தூய்மைப்படுத்த வேண்டும்.[k] **8** பின்பு ஒரு இளம்
காளையையும்,[l] அதற்கான உணவுக் காணிக்கையாக[m] எண்ணெய் கலந்த
நைசான மாவையும் அவர்கள் கொண்டுவர வேண்டும். அதன்பின், பாவப்
பரிகார பலியாக மற்றொரு இளம் காளையை நீ கொண்டுவர வேண்டும்.[n]
9 சந்திப்புக் கூடாரத்தின் முன்னால் லேவியர்களை நீ நிறுத்த வேண்டும்.
இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் ஒன்றுகூடிவரச் செய்ய வேண்டும்.[o]
10 லேவியர்களை யெகோவாவின் முன்னிலையில் நீ நிறுத்தும்போது,
இஸ்ரவேலர்கள் தங்களுடைய கைகளை அவர்கள்மேல் வைக்க வேண்
டும்.[p] **11** அப்போது, ஆரோன் லேவியர்களை இஸ்ரவேலர்களுடைய
அசைவாட்டும் காணிக்கையாக யெகோவாவுக்கு முன்னால் அசைவாட்ட
வேண்டும்.[q] லேவியர்கள் யெகோவாவுக்குச் சேவை செய்வார்கள்.[r]

12 லேவியர்கள் தங்களுடைய கைகளை அந்தக் காளைகளின் தலை
யில் வைக்க வேண்டும்.[s] அதன் பிறகு, லேவியர்களுக்குப் பாவப் பரிகா
ரம் செய்வதற்காக அதில் ஒன்றைப் பாவத்துக்கான பலியாகவும் மற்றொன்
றைத் தகன பலியாகவும் யெகோவாவுக்குக் கொடுக்க வேண்டும்.[t]
13 பின்பு, நீ ஆரோனுக்கும் அவனுடைய மகன்களுக்கும் முன்பாக லேவி
யர்களை நிறுத்தி, அசைவாட்டும் காணிக்கையாக யெகோவாவுக்கு முன்
னால் அவர்களை அசைவாட்ட வேண்டும். **14** லேவியர்களை இஸ்ர
வேல் ஜனங்களிலிருந்து நீ பிரித்தெடுக்க வேண்டும், லேவியர்கள் எனக்குச்
சொந்தமாவார்கள்.[u] **15** அதன்பின், அவர்கள் வந்து சந்திப்புக் கூடாரத்
தின் வேலைகளைச் செய்வார்கள். இப்படி நீ அவர்களைத் தூய்மைப்படுத்தி,
அசைவாட்டும் காணிக்கையாக அசைவாட்ட வேண்டும். **16** ஏனென்றால்,
அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, எனக்கு

அதி. 7
a எண் 7:1
b எண் 7:10
c யாத் 33:9; எண் 11:17; எண் 12:8
d யாத் 25:22; யாத் 37:6
e யாத் 25:18; 1சா 4:4; சங் 80:1

அதி. 8
f யாத் 25:37; யாத் 40:24, 25; லேவி 24:2
g எபி 9:2
h யாத் 37:17
i யாத் 25:9, 40; 1நா 28:12, 19
j யாத் 29:4; ஏசா 52:11
k யாத் 30:18, 19; லேவி 16:28; எண் 19:7
l லேவி 1:3
m லேவி 2:1
n லேவி 4:3
o லேவி 8:2, 3
p எண் 3:9, 41
q லேவி 7:30; எண் 8:21
r எண் 1:50; எண் 3:6; 2நா 31:2
s யாத் 29:10
t லேவி 1:4
u எண் 3:45; எண் 16:9

அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலர்களின் மூத்த
மகன்கள் எல்லாருக்கும் பதிலாக லேவியர்களை[a] எனக்காக ஏற்றுக்கொள்
கிறேன். **17** ஏனென்றால், இஸ்ரவேலர்களுக்கும் அவர்களுடைய மிருகங்
களுக்கும் முதலில் பிறக்கிற எல்லாமே எனக்குத்தான் சொந்தம்.[b] எகிப்தியர்
களின் முதல் பிறப்புகளை நான் கொன்றுபோட்ட நாளில், இஸ்ரவேலர்களின்
முதல் பிறப்புகளை எனக்கென்று பிரித்து வைத்தேன்.*[c] **18** இஸ்ரவேலர்க
ளின் மூத்த மகன்கள் எல்லாருக்கும் பதிலாக லேவியர்களை நான் ஏற்றுக்
கொள்வேன். **19** லேவியர்களை இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து பிரித்தெ
டுத்து, ஆரோனுக்கும் அவனுடைய மகன்களுக்கும் அன்பளிப்பாகக்
கொடுப்பேன். லேவியர்கள் இஸ்ரவேலர்களின் சார்பாகச் சந்திப்புக் கூடாரத்
தின் வேலைகளைச் செய்து,[d] அவர்களுக்காகப் பாவப் பரிகாரம் செய்வார்
கள். இஸ்ரவேலர்கள் பரிசுத்த இடத்துக்குப் பக்கத்தில் வந்து தண்டிக்கப்படா
மல் இருப்பதற்காகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்கிறேன்"[e] என்றார்.

20 மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் லேவியர்
களுக்கு அப்படியே செய்தார்கள். லேவியர்கள் சம்பந்தமாக மோசேக்கு
யெகோவா கட்டளை கொடுத்தபடியெல்லாம் இஸ்ரவேலர்கள் செய்தார்
கள். **21** லேவியர்கள் தங்களைத் தூய்மைப்படுத்திக்கொண்டு, தங்களு
டைய உடைகளைத் துவைத்தார்கள்.[f] பின்பு, ஆரோன் அவர்களை
யெகோவாவுக்கு முன்னால் அசைவாட்டும் காணிக்கையாக அசைவாட்
டினார்.[g] அதன்பின், அவர்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காகப் பாவப் பரி
காரம் செய்தார்.[h] **22** பிற்பாடு, லேவியர்கள் வந்து சந்திப்புக் கூடாரத்
தின் வேலைகளை ஆரோனுக்கும் அவருடைய மகன்களுக்கும் முன்னால்
செய்தார்கள். லேவியர்கள் சம்பந்தமாக மோசேக்கு யெகோவா கட்டளை
கொடுத்தபடியே ஜனங்கள் செய்தார்கள்.

23 பின்பு யெகோவா மோசேயிடம், **24** "லேவியர்களுக்கான சட்டம்
இதுதான்: 25 வயதும் அதற்கு அதிகமான வயதும் உள்ளவர்கள் சந்திப்புக்
கூடாரத்தின் வேலைகளைச் செய்கிறவர்களோடு சேர்ந்துகொள்ள வேண்
டும். **25** ஆனால், 50 வயதைத் தாண்டியவர்கள் வேலையிலிருந்து ஓய்வு
பெற வேண்டும். **26** சந்திப்புக் கூடார வேலைகளைச் செய்கிற தங்கள்
சகோதரர்களுக்கு அவர்கள் உதவி செய்யலாம். ஆனால், வேறு எந்தச்
சேவையும் அங்கே செய்யக் கூடாது. லேவியர்கள் சம்பந்தமாகவும் அவர்
களுடைய பொறுப்புகள் சம்பந்தமாகவும் நீ பின்பற்ற வேண்டிய சட்டங்கள்
இவைதான்"[i] என்றார்.

9 இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வந்த இரண்டாம் வருஷம் முதலாம்
மாதம்,[j] சீனாய் வனாந்தரத்தில் யெகோவா மோசேயிடம், **2** "இஸ்ர
வேலர்கள் நான் சொன்ன சமயத்தில்[k] பஸ்கா பண்டிகையைக்[l] கொண்
டாட வேண்டும். **3** அதாவது, இந்த மாதம் 14-ஆம் நாள் சாயங்காலத்தில்
அதைக் கொண்டாட வேண்டும். அது சம்பந்தமாக நான் கொடுத்த
எல்லா சட்டதிட்டங்களையும் முறைமைகளையும் பின்பற்ற வேண்டும்"[m]
என்றார்.

4 அவர் சொன்னது போலவே, பஸ்கா பண்டிகையைக் கொண்டாடும்
படி மோசே இஸ்ரவேலர்களிடம் சொன்னார். **5** முதலாம் மாதம் 14-ஆம்
நாள் சாயங்காலத்தில் சீனாய் வனாந்தரத்தில் அவர்கள் பஸ்கா பண்டிகை

8:17 * வே.வா., "புனிதப்படுத்தினேன்."

அதி. 8
a எண் 3:12
b யாத் 13:2, 12; லேவி 27:26
c யாத் 12:29; யாத் 13:15
d எண் 3:9; எண் 18:6; 1நா 23:32; எசே 44:11
e எண் 1:53; எண் 18:5; 1சா 6:19
f எண் 8:7
g எண் 8:11
h எண் 8:12
i எண் 1:53; எண் 3:32; எண் 18:4

அதி. 9
j யாத் 40:2; எண் 1:1
k யாத் 12:3, 6; லேவி 23:5; உபா 16:1; 1கொ 5:7
l யாத் 12:27
m யாத் 12:8

யைக் கொண்டாடினார்கள். மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடி
யெல்லாம் இஸ்ரவேலர்கள் செய்தார்கள்.

6 அந்த நாளில் சிலர் ஒரு பிணத்தைத் தொட்டதால் தீட்டுப்பட்டிருந்
தார்கள்.[a] அதனால், பஸ்கா பண்டிகையைக் கொண்டாட முடியாத நிலை
யில் இருந்தார்கள். அவர்கள் அன்றைக்கு மோசேயிடமும் ஆரோனிடமும்
வந்து,[b] **7** "பிணத்தைத் தொட்டதால் நாங்கள் தீட்டுப்பட்டிருக்கிறோம்.
யெகோவா சொன்ன இந்த நாளில், எல்லாரோடும் சேர்ந்து நாங்கள் பண்
டிகையைக் கொண்டாடவே முடியாதா?"[c] என்று கேட்டார்கள். **8** அதற்கு
மோசே, "கொஞ்சம் பொறுங்கள், யெகோவா என்ன சொல்கிறார் என்று
கேட்டுச் சொல்கிறேன்"[d] என்றார்.

9 யெகோவா மோசேயிடம், **10** "நீ இஸ்ரவேலர்களிடம் சொல்ல
வேண்டியது என்னவென்றால், 'உங்களிலோ உங்களுக்குப் பின்வரும் தலை
முறைகளிலோ யாராவது ஒரு பிணத்தைத் தொட்டுத் தீட்டுப்பட்டிருந்தால்[e]
அல்லது நீண்டதூரப் பயணம் போயிருந்தால், அவரும் யெகோவாவுக்குப்
பஸ்கா பண்டிகையைக் கொண்டாட வேண்டும். **11** ஆனால், இரண்டாம்
மாதம்[f] 14-ஆம் நாள் சாயங்காலத்தில் அதைக் கொண்டாட வேண்டும். பலி
கொடுக்கும் ஆட்டைப் புளிப்பில்லாத ரொட்டியோடும் கசப்பான கீரையோ
டும் சாப்பிட வேண்டும்.[g] **12** எதையும் காலைவரை மீதி வைக்கக்
கூடாது.[h] ஆட்டின் எந்த எலும்பையும் முறிக்கக் கூடாது.[i] பஸ்கா பண்டிகை
சம்பந்தப்பட்ட எல்லா சட்டதிட்டங்களையும் அவர்கள் பின்பற்ற வேண்
டும். **13** ஆனால் ஒருவன் பிணத்தினால் தீட்டுப்படாமலோ, நீண்டதூரப்
பயணம் போகாமலோ இருந்தும் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடாமல்
அதை அலட்சியப்படுத்தினால், அவன் கொல்லப்பட வேண்டும்.[j] ஏனென்
றால், யெகோவாவின் பண்டிகையை அதற்கான நாளில் அவன் கொண்டா
டவில்லை. அந்தப் பாவத்துக்காக அவன் தண்டிக்கப்படுவான்.

14 வேறு தேசத்தைச் சேர்ந்த ஒருவன் உங்களோடு வாழ்ந்துவந்தால்
அவனும் யெகோவாவுக்கு பஸ்கா பண்டிகையைக் கொண்டாட வேண்டும்.[k]
அதற்கான எல்லா சட்டதிட்டங்களையும் பின்பற்ற வேண்டும்.[l] இஸ்ரவேல்
குடிமக்களாகிய உங்களுக்கும் சரி, உங்களோடு வாழ்கிற வேறு தேசத்து
ஜனங்களுக்கும் சரி, ஒரே சட்டம்தான் இருக்க வேண்டும்'"[m] என்றார்.

15 வழிபாட்டுக் கூடாரம், அதாவது சாட்சிப் பெட்டியின் கூடாரம்,
அமைக்கப்பட்ட நாளில்[n] அதன்மேல் மேகம் தங்கியது. ஆனால், சாயங்
காலத்திலிருந்து காலைவரை அது நெருப்புபோல் தெரிந்தது.[o] **16** இதே
போல் தினமும் நடந்துவந்தது. பகலில் வழிபாட்டுக் கூடாரத்தின் மேல்
மேகம் தங்கியிருக்கும், ராத்திரியில் அது நெருப்புபோல் தெரியும்.[p]
17 கூடாரத்தைவிட்டு மேகம் மேலே எழும்பும்போதெல்லாம் இஸ்ரவேலர்
கள் உடனடியாக அங்கிருந்து புறப்படுவார்கள்.[q] எந்த இடத்தில் மேகம் தங்
குகிறதோ, அங்கே அவர்கள் முகாம்போடுவார்கள்.[r] **18** யெகோவாவின்
கட்டளைப்படியே அவர்கள் புறப்படுவார்கள், யெகோவாவின் கட்டளைப்
படியே முகாம்போடுவார்கள்.[s] வழிபாட்டுக் கூடாரத்தின் மேல் மேகம் தங்
கியிருக்கும்வரை அவர்கள் அந்த இடத்திலேயே தங்கியிருப்பார்கள்.
19 வழிபாட்டுக் கூடாரத்தின் மேல் மேகம் பல நாட்கள் தங்கியிருந்தாலும்
இஸ்ரவேலர்கள் யெகோவாவுக்குக் கீழ்ப்படிந்து அங்கேயே இருப்பார்கள்.[t]
20 சிலசமயம், அந்த மேகம் வழிபாட்டுக் கூடாரத்தின் மேல் சில நாட்கள்

அதி. 9
a எண் 5:2; எண் 19:14, 16
b யாத் 18:15; எண் 15:33; எண் 27:1, 2
c லேவி 7:21; உபா 16:2
d யாத் 25:22; லேவி 16:2; சங் 99:6
e எண் 5:2
f 2நா 30:2, 15
g யாத் 12:8
h யாத் 12:10
i யாத் 12:46; சங் 34:20; யோவா 19:36
j யாத் 12:15
k யாத் 12:19, 48
l யாத் 12:8
m லேவி 24:22; உபா 31:12
n யாத் 40:2, 17
o யாத் 40: 34, 38
p யாத் 13:22; நெ 9:19
q எண் 10:11, 34
r யாத் 40: 36, 37
s யாத் 17:1; எண் 10:11-13
t யாத் 40:37

மட்டும்தான் தங்கியிருக்கும். யெகோவாவின் கட்டளைப்படியே அவர்கள்
முகாம்போடுவார்கள், யெகோவாவின் கட்டளைப்படியே புறப்படுவார்கள்.
21 சிலசமயம் சாயங்காலத்திலிருந்து காலை வரைக்கும்தான் அந்த மேகம்
தங்கியிருக்கும். காலையில் மேகம் மேலே எழும்பும்போது, அவர்கள் அங்
கிருந்து புறப்படுவார்கள். பகலோ ராத்திரியோ, மேகம் மேலே எழும்பும்
போது அவர்கள் புறப்படுவார்கள்.[a] **22** இரண்டு நாட்களோ, ஒரு
மாதமோ, அதற்கும் அதிகமான காலமோ, வழிபாட்டுக் கூடாரத்தின் மேல்
மேகம் தங்கியிருக்கும்போது அவர்களும் அங்கேயே தங்கியிருப்பார்கள்.
ஆனால், மேகம் மேலே எழும்பும்போது அங்கிருந்து புறப்படுவார்கள்.
23 இப்படி, யெகோவாவின் கட்டளைப்படியே அவர்கள் முகாம்போடுவார்
கள், யெகோவாவின் கட்டளைப்படியே புறப்படுவார்கள். மோசே மூலம்
யெகோவா கொடுத்த கட்டளையின்படி அவர்கள் செய்தார்கள், யெகோவா
வின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

10 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “நீ வெள்ளியைத் தகடாக
அடித்து, உனக்காக இரண்டு எக்காளங்களைச் செய்துகொள்.[b]
ஜனங்களை ஒன்றுகூடி வரச் சொல்வதற்கும், வேறொரு இடத்துக்குப் புறப்
படச் சொல்வதற்கும் அவற்றை ஊத வேண்டும். **3** இரண்டு எக்காளங்க
ளையும் சேர்த்து ஊதும்போது, சந்திப்புக் கூடாரத்தின் பிரகார நுழைவாச
லில் ஜனங்கள் எல்லாரும் உன் முன்னால் ஒன்றுகூடி வர வேண்டும்.[c]
4 ஒன்றை மட்டும் ஊதும்போது, ஆயிரக்கணக்கானோரின் தலைவர்க
ளான கோத்திரத் தலைவர்கள் மட்டும் உன்னைச் சந்திக்க வர வேண்டும்.[d]

5 எக்காளத்தை ஏற்ற இறக்கத்துடன் ஊதும்போது கிழக்கே முகாம்போட்
டிருப்பவர்கள்[e] புறப்பட வேண்டும். **6** இரண்டாவது தடவை ஏற்ற இறக்கத்
துடன் ஊதும்போது தெற்கே முகாம்போட்டிருப்பவர்கள்[f] புறப்பட வேண்
டும். இப்படி, ஒவ்வொரு பிரிவையும் புறப்படச் சொல்வதற்கு எக்காளம் ஊத
வேண்டும்.

7 ஜனங்களைச் சபையாக ஒன்றுகூட்டும்போது எக்காளங்கள் ஊத
வேண்டும்,[g] ஆனால் ஏற்ற இறக்கத்துடன் ஊதக் கூடாது. **8** குருமார்களா
கச் சேவை செய்யும் ஆரோனின் மகன்கள் எக்காளங்களை ஊத
வேண்டும்.[h] இது தலைமுறை தலைமுறைக்கும் உங்களுக்குக் கொடுக்கப்
படும் சட்டம்.

9 உங்கள் தேசத்தில் உங்களை அடக்கி ஒடுக்குபவனோடு போர் செய்
யக் கிளம்பும்போது, எக்காளங்கள் ஊதி போர் முழக்கம் செய்ய வேண்டும்.[i]
அப்போது, உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை நினைத்துப் பார்த்து,
எதிரியிடமிருந்து உங்களைக் காப்பாற்றுவார்.

10 அதோடு சந்தோஷமான காலங்களில்,[j] அதாவது பண்டிகை சம
யங்களிலும்[k] மாதப்பிறப்புகளிலும், எக்காளங்கள் ஊத வேண்டும். நீங்கள்
தகன பலிகளையும்[l] சமாதான பலிகளையும்[m] செலுத்தும்போது எக்காளங்
கள் ஊத வேண்டும். அதைக் கேட்டு உங்கள் கடவுள் உங்கள்மேல் கவ
னத்தைத் திருப்புவார். நான் உங்கள் கடவுளாகிய யெகோவா”[n] என்றார்.

11 இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் 20-ஆம் நாளில்,[o] சாட்
சிப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிற கூடாரத்தின் மேலிருந்து மேகம் எழும்பி
யது.[p] **12** உடனே, இஸ்ரவேலர்கள் சீனாய் வனாந்தரத்திலிருந்து அவரவர்
வரிசைப்படியே புறப்பட்டுப் போனார்கள்.[q] பின்பு, பாரான் வனாந்தரத்தில்

அதி. 9
a யாத் 40:36
சங் 78:14

அதி. 10
b லேவி 23:24
c எண் 1:18
உபா 29:10, 11
d யாத் 18:21
எண் 1:16
எண் 7:2
உபா 1:15
உபா 5:23
e எண் 2:3
f எண் 2:10
g எண் 10:3
h எண் 31:6
1நா 15:24
1நா 16:6
2நா 29:26
நெ 12:35, 41
i 2நா 13:12
j 1நா 15:28
2நா 5:12
2நா 7:6
எஸ்றா 3:10
k லேவி 23:24
எண் 29:1
l எண் 28:11
m லேவி 3:1
n யாத் 6:7
லேவி 11:45
o எண் 1:1
p எண் 9:17
சங் 78:14
q யாத் 40:36
எண் 2:9, 16,
17, 24, 31

அந்த மேகம் தங்கியது.[a] **13** மோசேக்கு யெகோவா கொடுத்த கட்ட
ளைப்படி[b] அவர்கள் செய்த முதல் பயணம் இதுதான்.

14 முதலாவதாக, யூதாவின் முகாமைச் சேர்ந்த மூன்று கோத்திரங்
கள் அணி அணியாக* புறப்பட்டன. யூதா கோத்திரத்தின் அணிக்கு அம்
மினதாபின் மகன் நகசோன் தலைவராக இருந்தார்.[c] **15** இசக்கார் கோத்
திரத்தின் அணிக்கு சூவாரின் மகன் நெதனெயேல் தலைவராக இருந்தார்.[d]
16 செபுலோன் கோத்திரத்தின் அணிக்கு ஹேலோனின் மகன் எலியாப்
தலைவராக இருந்தார்.[e]

17 வழிபாட்டுக் கூடாரம் பிரிக்கப்பட்ட பின்பு[f] கெர்சோனியர்களும்[g]
மெராரியர்களும்[h] அதை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

18 அடுத்ததாக, ரூபனின் முகாமைச் சேர்ந்த மூன்று கோத்திரங்கள்
அணி அணியாக* புறப்பட்டன. ரூபன் கோத்திரத்தின் அணிக்கு சேதேயூ
ரின் மகன் எலிசூர் தலைவராக இருந்தார்.[i] **19** சிமியோன் கோத்திரத்
தின் அணிக்கு சூரிஷதாயின் மகன் செலூமியேல் தலைவராக இருந்தார்.[j]
20 காத் கோத்திரத்தின் அணிக்கு தேகுவேலின் மகன் எலியாசாப் தலை
வராக இருந்தார்.[k]

21 பின்பு, புனிதப் பொருள்களை கோகாத்தியர்கள் சுமந்துகொண்டு
புறப்பட்டார்கள்.[l] அவர்கள் போய்ச் சேருவதற்கு முன்பு வழிபாட்டுக் கூடா
ரம் அமைக்கப்பட வேண்டியிருந்தது.

22 பின்பு, எப்பிராயீமின் முகாமைச் சேர்ந்த மூன்று கோத்திரங்கள்
அணி அணியாக* புறப்பட்டன. எப்பிராயீம் கோத்திரத்தின் அணிக்கு அம்
மியூத்தின் மகன் எலிஷாமா தலைவராக இருந்தார்.[m] **23** மனாசே கோத்
திரத்தின் அணிக்கு பெதாசூரின் மகன் கமாலியேல் தலைவராக இருந்தார்.[n]
24 பென்யமீன் கோத்திரத்தின் அணிக்கு கீதெயோனியின் மகன் அபிதான்
தலைவராக இருந்தார்.[o]

25 பின்பு, தாணின் முகாமைச் சேர்ந்த மூன்று கோத்திரங்கள் அணி
அணியாக* புறப்பட்டன. அவை மற்ற எல்லா கோத்திரங்களுக்கும் பின்
னால் காவலாகப் போயின. தாண் கோத்திரத்தின் அணிக்கு அம்மிஷதா
யின் மகன் அகியேசேர் தலைவராக இருந்தார்.[p] **26** ஆசேர் கோத்திரத்
தின் அணிக்கு ஓகிரானின் மகன் பாகியேல் தலைவராக இருந்தார்.[q]
27 நப்தலி கோத்திரத்தின் அணிக்கு ஏனானின் மகன் அகீரா தலைவ
ராக இருந்தார்.[r] **28** இஸ்ரவேலர்கள் புறப்பட்டபோதெல்லாம், இந்த வரி
சையில்தான் அணி அணியாக* போனார்கள்.[s]

29 அப்போது மோசே, தன்னுடைய மாமனாரும் மீதியானியருமான
ரெகுவேலின்*[t] மகன் ஓபாபிடம், “யெகோவா எங்களுக்குக் கொடுப்
பதாகச் சொன்ன[u] இடத்துக்கு நாங்கள் போய்க்கொண்டிருக்கிறோம். நீங்
களும் எங்களோடு வாருங்கள்.[v] நாங்கள் உங்களை நன்றாகக் கவனித்
துக்கொள்வோம். இஸ்ரவேலர்களுக்கு நிறைய ஆசீர்வாதங்கள் தரப்போ
வதாக யெகோவா வாக்குறுதி கொடுத்திருக்கிறார்”[w] என்றார். **30** அதற்கு
அவர், “என்னால் உங்களோடு வர முடியாது. நான் என்னுடைய தேசத்துக்
குத் திரும்பிப் போய் என்னுடைய சொந்த ஜனங்களோடு வாழ வேண்டும்”

அதி. 10
a எண் 12:16; எண் 13:26; உபா 1:1, 2
b எண் 2:34; எண் 9:23
c எண் 1:4, 7; எண் 2:3
d எண் 1:4, 8; எண் 2:5
e எண் 2:7
f எண் 1:51
g எண் 3:25, 26
h எண் 3:36, 37
i எண் 1:4, 5; எண் 2:10
j எண் 1:5, 6; எண் 2:12
k எண் 1:4, 14; எண் 2:14
l எண் 3:30, 31; எண் 4:15; எண் 7:9
m எண் 1:4, 10; எண் 2:18, 24
n எண் 1:4, 10; எண் 2:20
o எண் 1:4, 11; எண் 2:22
p எண் 1:4, 12; எண் 2:25, 31
q எண் 1:4, 13; எண் 2:27
r எண் 1:4, 15; எண் 2:29
s எண் 2:34
t யாத் 2:16, 18; யாத் 3:1; யாத் 18:1, 5
u ஆதி 12:7; ஆதி 13:14, 15; ஆதி 15:18
v நியா 1:16; நியா 4:11; 1சா 15:6
w யாத் 3:8; யாத் 6:7

10:14, 18, 22, 25, 28 *நே.மொ., “அவர்களுடைய படைகளின்படி.” **10:29** *அதாவது, “எத்திரோவின்.”

என்றார். **31** அப்போது மோசே, “தயவுசெய்து எங்களைவிட்டுப் போகா
தீர்கள். இந்த வனாந்தரத்தில் நாங்கள் எங்கெங்கே முகாம்போட வேண்டு
மென்று உங்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். அதனால் நீங்கள் எங்க
ளுக்கு வழிகாட்டியாக இருங்கள். **32** எங்களோடு வந்தால்,[a] யெகோவா
எங்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்கிறாரோ அதையெல்லாம் நாங்
களும் உங்களுக்குச் செய்வோம்” என்றார்.

33 அவர்கள் யெகோவாவின் மலையிலிருந்து[b] புறப்பட்டு மூன்று நாட்
களாகப் பயணம் செய்தார்கள். அடுத்ததாக, அவர்கள் தங்க வேண்டிய
இடத்தைக் காட்டுவதற்கு யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டி[c] அந்த மூன்று
நாட்களும் அவர்களுக்கு முன்னால் போனது.[d] **34** அவர்கள் முகாமிலி
ருந்து புறப்பட்டுப் போனபோது, பகலில் யெகோவாவின் மேகம்[e] அவர்
களுக்கு முன்னால் போனது.

35 ஒப்பந்தப் பெட்டியை இன்னொரு இடத்துக்கு எடுத்துக்கொண்டு
போகும்போது, “யெகோவாவே, எழுந்து வந்து[f] உங்கள் எதிரிகளைச் சித
றியோட வையுங்கள், உங்களை வெறுப்பவர்களைப் பயந்தோட வையுங்
கள்!” என்று மோசே சொல்வார். **36** அந்தப் பெட்டி இறக்கி வைக்கப்ப
டும்போது, “யெகோவாவே, லட்சக்கணக்கில் பெருகியிருக்கிற இஸ்ரவேல்[g]
ஜனங்களிடம் தங்குங்கள்” என்று சொல்வார்.

11 பின்பு, ஜனங்கள் யெகோவாவின் முன்னால் பயங்கரமாக
முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். அதை யெகோவா கேட்ட
போது, அவருக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. உடனே, யெகோவா
விடமிருந்து நெருப்பு வந்து முகாமின் எல்லையிலிருந்த சிலர்மேல் பற்
றியெரிந்தது. **2** அதனால், ஜனங்கள் மோசேயிடம் கதறினார்கள். உடனே
அவர் யெகோவாவிடம் மன்றாடினார்,[h] அப்போது நெருப்பு அணைந்தது.
3 யெகோவாவிடமிருந்து வந்த நெருப்பு அவர்கள்மேல் பற்றியெரிந்ததால்
அந்த இடத்துக்கு தபேரா* என்று பெயர் வைக்கப்பட்டது.[i]

4 அவர்களோடு இருந்த பலதரப்பட்ட ஜனங்கள்*[j] உணவுக்காக
ஆலாய்ப் பறந்தார்கள்.#[k] இஸ்ரவேலர்கள்கூட மறுபடியும் அழுது புலம்பி,
“யார் நமக்கு இறைச்சி தருவார்கள்?[l] **5** எகிப்தில் காசே கொடுக்காமல்
மீன், வெள்ளரிக்காய், தர்ப்பூசணி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு எல்லாம்
சாப்பிட்டோமே! அதை நினைத்தாலே வாய் ஊறுகிறது.[m] **6** ஆனால், இப்
போது ஒன்றுமே கிடைக்காமல் காய்ந்து கிடக்கிறோம். இந்த மன்னாவைத்
தவிர வேறொன்றுமே நம் கண்ணில் படுவதில்லை”[n] என்றார்கள்.

7 அந்த மன்னா,[o] பார்ப்பதற்குக் கொத்துமல்லி விதை போலவும்,[p]
வெள்ளைப் பிசின்* போலவும் இருந்தது. **8** ஜனங்கள் போய் அதை
எடுத்துக்கொண்டு வந்து, திரிகைக் கல்லில் அரைத்தார்கள் அல்லது உரலில்
இடித்தார்கள். பின்பு, பானைகளில் வேக வைத்தார்கள் அல்லது வட்ட ரொட்
டிகளாகச் சுட்டார்கள்.[q] அதன் ருசி, எண்ணெய் கலந்து சுடப்பட்ட இனிப்
பான அப்பத்தின் ருசி போல இருந்தது. **9** ராத்திரி நேரம் முகாமில் பனி
விழுந்தபோது அதன்மேல் மன்னாவும் விழுந்தது.[r]

11:3 *அர்த்தம், “பற்றியெரிதல்.” **11:4** *அநேகமாக, “இஸ்ரவேலர்கள் அல்லாத ஜனங்கள்.” #வே.வா., “பேராசைப்பட்டார்கள்.” **11:7** *சில மரங்களிலிருந்து கிடைக்கும் ஒருவித வாசனைப் பிசின். பார்ப்பதற்கு முத்துபோல் இருந்தது; ஒளி ஊடுருவக்கூடியதாக இருந்தது.

அதி. 10
a நியா 1:16, நியா 4:11
b யாத் 3:1, யாத் 19:3, யாத் 24:16, உபா 5:2
c யாத் 25:10, 17
d உபா 1:32, 33, யோசு 3:3, 4
e யாத் 13:21, நெ 9:12, சங் 78:14
f சங் 132:8
g உபா 1:10

அதி. 11
h யாத் 32:11, உபா 9:19, சங் 106:23, யாக் 5:16
i உபா 9:22
j யாத் 12:37, 38, லேவி 24:10
k 1கொ 10:6, 10
l சங் 78:18, 22, சங் 106:14
m யாத் 16:3
n யாத் 16:35, எண் 21:5
o யாத் 16:14, நெ 9:20, யோவா 6:31
p யாத் 16:31
q யாத் 16:16, 23
r சங் 78:24

10 ஜனங்கள் ஒவ்வொருவரும், குடும்பம் குடும்பமாக, அவரவருடைய
கூடாரத்தின் வாசலில் அழுது புலம்புவதை மோசே கேட்டார். அதனால்,
அவர்கள்மேல் யெகோவா மிகவும் கோபப்பட்டார்,[a] மோசேயும் எரிச்சல்
அடைந்தார். **11** பின்பு மோசே யெகோவாவிடம், “உங்கள் ஊழியனாகிய
என்னை ஏன் கஷ்டப்படுத்துகிறீர்கள்? உங்களுக்கு என்மேல் கரு
ணையே இல்லையா? இந்த எல்லா ஜனங்களையும் கவனித்துக்கொள்
ளும் பொறுப்பை என்மேல் சுமத்திவிட்டீர்களே.[b] **12** இவர்களுடைய
முன்னோர்களுக்கு நீங்கள் கொடுப்பதாகச் சொன்ன தேசத்துக்கு[c] இவர்
களைக் கூட்டிக்கொண்டு போகச் சொன்னீர்களே. இந்த ஜனங்களையெல்
லாம் நானா வயிற்றில் சுமந்தேன்? நானா இவர்களைப் பெற்றெடுத்தேன்?
பின்பு ஏன் என்னிடம், ‘பால்குடிக்கும் குழந்தையைப் பணியாளன் சுமப்ப
துபோல் நீ இவர்களை நெஞ்சில் சுமந்துகொண்டு போ’ என்று சொன்னீர்
கள்? **13** இவர்கள் எல்லாருக்கும் நான் எங்கிருந்து இறைச்சியைக் கொண்
டுவந்து கொடுப்பேன்? ‘எங்களுக்கு இறைச்சி வேண்டும்!’ என்று என்னிடம்
புலம்பிக்கொண்டே இருக்கிறார்களே! **14** இந்த எல்லா ஜனங்களையும்
என்னால் தனியாகச் சமாளிக்க முடியவில்லை. எனக்குப் போதும் போது
மென்று ஆகிவிட்டது![d] **15** இப்படியே என்னைக் கஷ்டப்படுத்துவதாக
இருந்தால், தயவுசெய்து இப்போதே என்னைக் கொன்றுவிடுங்கள்.[e] என்
மேல் உங்களுக்குப் பிரியம் இருந்தால், இனியும் என்னை வேதனைப்படுத்
தாதீர்கள்” என்றார்.

16 அதற்கு யெகோவா மோசேயிடம், “இஸ்ரவேலில் உனக்குத் தெரிந்த
பெரியோர்களிலும்* அதிகாரிகளிலும்[f] 70 பேரை சந்திப்புக் கூடாரத்துக்குக்
கூட்டிக்கொண்டு வா. அங்கே அவர்களை உன்னோடு நிறுத்து. **17** அப்
போது, நான் இறங்கி வந்து[g] உன்னோடு பேசுவேன்.[h] நான் உனக்குக்
கொடுத்திருக்கிற சக்தியில்[i] கொஞ்சத்தை எடுத்து அவர்கள்மேல் வைப்
பேன். ஜனங்களைக் கவனித்துக்கொள்ள அவர்கள் உனக்கு உதவியாக
இருப்பார்கள். ஜனங்கள் எல்லாரையும் இனி நீ தனியாகச் சமாளிக்க வேண்
டியதில்லை.[j] **18** நீ அவர்களிடம், ‘நாளைக்காக உங்களைப் புனிதப்படுத்
துங்கள்.[k] நாளைக்கு நீங்கள் நிச்சயம் இறைச்சி சாப்பிடுவீர்கள். “யார் எங்க
ளுக்கு இறைச்சி தருவார்கள்? எகிப்திலே நாங்கள் நன்றாக இருந்தோமே”[l]
என்றெல்லாம் நீங்கள் அழுது புலம்பியதை யெகோவா கேட்டார்.[m]
யெகோவா உங்களுக்குக் கண்டிப்பாக இறைச்சி தருவார், அதை நீங்கள்
சாப்பிடுவீர்கள்.[n] **19** ஒரு நாளோ, இரண்டு நாளோ, ஐந்து நாளோ, பத்து
நாளோ, இருபது நாளோ அல்ல, **20** ஒரு மாதம் முழுவதும் சாப்பிடுவீர்
கள். அது உங்கள் மூக்கு வழியாகப் பிதுங்கிக்கொண்டு வந்து, உங்களுக்கே
அருவருப்பாக ஆகும்வரை அதைச் சாப்பிடுவீர்கள்.[o] உங்கள் நடுவிலி
ருக்கும் யெகோவாவை நீங்கள் ஒதுக்கித்தள்ளிவிட்டு, “ஏன்தான் எகிப்திலி
ருந்து வந்தோமோ?” என்று சொல்லி அவர் முன்னால் புலம்பினீர்களே’”[p]
என்றார்.

21 பின்பு மோசே கடவுளிடம், “என்னோடு இருக்கிற வீரர்கள் மட்
டுமே 6,00,000 பேர்.[q] அப்படியிருக்கும்போது, ‘ஒரு மாதம் முழுவதும் சாப்
பிடுவதற்குத் தேவையான இறைச்சியை நான் அவர்களுக்குத் தருவேன்’
என்று சொல்கிறீர்களே. **22** மந்தைகளிலுள்ள எல்லா ஆடுமாடுகளையும்

11:16 * வே.வா., “மூப்பர்களிலும்.”

அதி. 11
a எண் 11:1
b யாத் 17:4; உபா 1:12
c ஆதி 13:14, 15; ஆதி 26:3
d யாத் 18:17, 18; உபா 1:9
e 1ரா 19:2, 4; யோபு 6:8, 9
f உபா 16:18
g யாத் 19:11; யாத் 25:22; யாத் 34:5; எண் 12:5
h எண் 11:25; எண் 12:8
i 1சா 10:6; 2ரா 2:15; நெ 9:20; அப் 2:17
j யாத் 18:21, 22
k யாத் 19:10
l எண் 11:4, 5
m யாத் 16:7
n யாத் 16:8
o சங் 78:29
p எண் 21:5
q யாத் 12:37; யாத் 38:26; எண் 1:45, 46

வெட்டினால்கூட அவர்களுக்குப் போதாதே! கடலிலுள்ள எல்லா மீன்க
ளையும் பிடித்து வந்தால்கூட போதாதே!” என்றார்.

23 அதற்கு யெகோவா மோசேயிடம், “யெகோவாவினால் இதைச்
செய்ய முடியாது* என்றா நினைக்கிறாய்?[a] நான் சொன்னது நடக்குமா இல்
லையா என்பதை நீயே இப்போது பார்ப்பாய்” என்றார்.

24 அதன்பின் மோசே அங்கிருந்து போய் யெகோவா சொன்னதை
ஜனங்களிடம் சொன்னார். பெரியோர்களில் 70 பேரைக் கூப்பிட்டு, வழி
பாட்டுக் கூடாரத்தைச் சுற்றிலும் நிறுத்தினார்.[b] **25** பின்பு, யெகோவா
மேகத்தில் இறங்கிவந்து[c] அவரிடம் பேசினார்.[d] அவருக்குக் கொடுத்தி
ருந்த சக்தியில் கொஞ்சத்தை எடுத்து[e] அந்தப் பெரியோர்கள் 70 பேர்
மேலும் வைத்தார். அந்தச் சக்தி கிடைத்ததும் அவர்கள் தீர்க்கதரிசிகளைப்
போல நடந்துகொள்ள* ஆரம்பித்தார்கள்.[f] ஆனால், அதன்பின் அவர்கள்
அப்படிச் செய்யவில்லை.

26 பெரியோர்களில் இரண்டு பேர் முகாமிலேயே இருந்துவிட்டார்கள்.
அவர்களில் ஒருவர் பெயர் எல்தாத், மற்றொருவர் பெயர் மேதாத். அவர்
களுடைய பெயர்கள் பட்டியலில் எழுதப்பட்டிருந்தும் அவர்கள் வழிபாட்
டுக் கூடாரத்துக்குப் போகவில்லை. அவர்கள்மேலும் கடவுளுடைய சக்தி
இறங்கியதால் முகாமிலேயே தீர்க்கதரிசிகளைப் போல நடந்துகொள்ள
ஆரம்பித்தார்கள். **27** பின்பு, ஓர் இளைஞன் மோசேயிடம் ஓடிவந்து,
“முகாமில் எல்தாதும் மேதாதும் தீர்க்கதரிசிகளைப் போல நடந்துகொள்கி
றார்கள்” என்று சொன்னான். **28** இளவயதிலிருந்தே மோசேயின் உதவி
யாளராக இருந்த நூனின் மகனாகிய யோசுவா[g] அவரிடம், “மோசே அவர்
களே, என் எஜமானே! அவர்களைத் தடுத்து நிறுத்துங்கள்!”[h] என்
றார். **29** ஆனால் மோசே, “இப்போது என்னுடைய மதிப்புக் குறைந்து
விடும் என்று பயப்படுகிறாயா? யெகோவாவின் ஜனங்கள் எல்லாருமே
யெகோவாவின் சக்தியைப் பெற்று தீர்க்கதரிசிகளாய் ஆக வேண்டும்
என்றுதான் நான் ஆசைப்படுகிறேன்” என்றார். **30** பிற்பாடு, மோசே இஸ்ர
வேலின் பெரியோர்களோடு முகாமுக்குத் திரும்பி வந்தார்.

31 பின்பு, யெகோவா பெருங்காற்றை வீச வைத்தார். அந்தக் காற்று
கடலிலிருந்து காடைகளை அடித்துக்கொண்டு வந்தது.[i] அவை ஒரு
நாள் பயணத் தூரத்தின் அளவுக்கு முகாமின் எல்லா பக்கங்களிலும் வந்து,
தரைக்கு மேலே சுமார் இரண்டு முழ* உயரத்துக்குக் குவிந்தன. **32** அத
னால், ஜனங்கள் அன்று ராத்திரி பகலாகவும், அடுத்த நாள் முழுவதும்
காடைகளைச் சேகரித்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் சேகரித்த காடை
கள் 10 ஹோமர் அளவுக்கும்* அதிகமாக இருந்தது. பின்பு, முகாம் முழுக்க
அவற்றைப் பரப்பி வைத்தார்கள். **33** ஆனால், அவர்கள் அந்த இறைச்
சியைத் தின்றுதீர்ப்பதற்கு முன்பே, அதை மென்றுகொண்டிருக்கும்போதே,
யெகோவாவின் கோபம் அவர்கள்மேல் பற்றியெரிந்தது. அவர்களில் ஏரா
ளமானவர்களை யெகோவா கொன்று குவித்தார்.[j]

34 உணவுக்காக ஆலாய்ப் பறந்தவர்கள் அங்கே அடக்கம் செய்யப்பட்
டார்கள்.[k] அதனால், அந்த இடத்துக்கு கிப்ரோத்-அத்தாவா*[l] என்று பெயர்

அதி. 11

a ஆதி 18:14
ஏசா 59:1
மாற் 10:27
லூ 1:37

b எண் 11:16

c யாத் 33:9
எண் 12:5
உபா 31:15

d சங் 99:7

e எண் 11:17
2ரா 2:9, 15

f 1சா 10:6
1சா 19:20

g யாத் 17:9
யாத் 24:13
யாத் 33:11
எண் 27:18-20
உபா 31:3

h மாற் 9:38

i யாத் 16:13
சங் 78:26, 27

j சங் 78:30, 31
1கொ 10:10

k 1கொ 10:6

l எண் 33:16
உபா 9:22

11:23 *வே.வா., “யெகோவாவின் கை ரொம்பச் சிறியது.” **11:25** *வே.வா., “தீர்க்க
தரிசனம் சொல்ல.” **11:31, 32** *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **11:34** *அர்த்தம்,
“ஆலாய்ப் பறந்தவர்களின் கல்லறைகள்.”

வைக்கப்பட்டது. **35** பின்பு, ஜனங்கள் அங்கிருந்து புறப்பட்டு ஆஸ்ரோத்
துக்குப் போய் அங்கே தங்கினார்கள்.[a]

12 கூஷ் தேசத்துப் பெண்ணை மோசே கல்யாணம் செய்திருந்ததால்[b]
மிரியாமும் ஆரோனும் அவருக்கு விரோதமாக முணுமுணுத்தார்
கள். **2** “மோசே மூலம்தான் யெகோவா பேசினாரா? ஏன், எங்கள் மூலம்
பேசவில்லையா?”[c] என்றும் முணுமுணுத்தார்கள். இதையெல்லாம்
யெகோவா கேட்டுக்கொண்டிருந்தார்.[d] **3** பூமியிலுள்ள எல்லா மனிதர்க
ளையும்விட மோசே மிகவும் தாழ்மையானவராக* இருந்தார்.[e]

4 உடனே யெகோவா மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும்
பார்த்து, “மூன்று பேரும் சந்திப்புக் கூடாரத்துக்கு வாருங்கள்” என்றார்.
மூன்று பேரும் புறப்பட்டுப் போனார்கள். **5** பின்பு, யெகோவா மேகத்
தூணில் இறங்கி வந்து[f] கூடார வாசலில் நின்று, ஆரோனையும் மிரியா
மையும் கூப்பிட்டார். அவர்கள் இரண்டு பேரும் முன்னால் போனார்
கள். **6** அப்போது யெகோவா, “தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்
கள். உங்கள் நடுவில் என் தீர்க்கதரிசி இருந்தால், தரிசனத்தில் என்னைப்
பற்றி அவருக்கு வெளிப்படுத்துவேன்,[g] கனவில் அவனோடு பேசு
வேன்.[h] **7** ஆனால், என் ஊழியனாகிய மோசேயின் விஷயத்தில் அப்
படி இல்லை! என் ஜனங்கள் எல்லாரையும் அவனிடம் ஒப்படைத்திருக்கி
றேன்.*[i] **8** அவனிடம் நான் நேருக்கு நேராகப் பேசுகிறேன்.[j] மர்மமாகப்
பேசாமல் தெளிவாகப் பேசுகிறேன். யெகோவாவாகிய நான் அவன் முன்
னால் தோன்றுகிறேன். அப்படியிருக்கும்போது, என்னுடைய ஊழியனாகிய
மோசேக்கு விரோதமாகப் பேச உங்களுக்கு எப்படித் துணிச்சல் வந்தது?”
என்றார்.

9 அப்போது, அவர்கள்மேல் யெகோவாவின் கோபம் பற்றியெரிந்தது.
அவர் அவர்களைவிட்டுப் போய்விட்டார். **10** கூடாரத்தைவிட்டு மேகம்
விலகிப்போனது. உடனே மிரியாமைத் தொழுநோய் தாக்கியது, அவளு
டைய உடல் வெண்மையான பனி போல மாறியது.[k] அவளுக்குத் தொழு
நோய் பிடித்திருந்ததை[l] ஆரோன் பார்த்தார். **11** உடனே அவர் மோசே
யிடம், “என் எஜமானே, கெஞ்சிக் கேட்கிறேன்! எங்களுடைய பாவத்துக்
காகத் தயவுசெய்து எங்களைத் தண்டிக்க வேண்டாம்! நாங்கள் முட்டாள்தன
மாக நடந்துகொண்டோம்! **12** தாயின் வயிற்றிலேயே செத்து, பாதி அழு
கிப்போய்ப் பிறக்கிற குழந்தையைப் போல இவள் ஆகிவிட்டாளே! தயவு
செய்து இவளை இப்படியே விட்டுவிட வேண்டாம்!” என்றார். **13** அப்
போது யெகோவாவிடம் மோசே கெஞ்சிக் கதறி, “கடவுளே, தயவுசெய்து
என் அக்காவைக் குணப்படுத்துங்கள்! தயவுசெய்து குணப்படுத்துங்கள்!”
என்றார்.[m]

14 அப்போது யெகோவா மோசேயிடம், “இவளுடைய அப்பா இவள்
முகத்தில் காறித் துப்பினால், இவள் ஏழு நாட்கள் வெட்கப்பட வேண்
டாமா? அதுபோலவே, ஏழு நாட்கள் இவள் முகாமுக்கு வெளியே ஒதுக்கி
வைக்கப்பட வேண்டும்,[n] அதன்பின் இவளை உள்ளே கூட்டிக்கொண்டு
வரலாம்” என்றார். **15** அதனால், மிரியாம் முகாமுக்கு வெளியே ஏழு
நாட்கள் ஒதுக்கி வைக்கப்பட்டாள்.[o] மிரியாமைத் திரும்பவும் முகாமுக்குள்

12:3 * வே.வா., “சாந்தமானவராக.” **12:7** * நே.மொ., “என் வீடு முழுவதிலும் அவன் உண்மையுள்ளவனாக இருக்கிறான்.”

அதி. 11
a எண் 33:17

அதி. 12
b யாத் 2:16, 21
c யாத் 4:14-16; யாத் 4:30; யாத் 15:20; யாத் 28:30; மீ 6:4
d எண் 11:1
e மத் 11:29
f யாத் 34:5; எண் 11:25
g ஆதி 15:1; ஆதி 46:2; யாத் 24:9-11
h ஆதி 31:10, 11
i எபி 3:2, 5
j யாத் 33:11; உபா 34:10
k உபா 24:9
l 2நா 26:19
m யாத் 32:11; யாக் 5:16
n லேவி 13:45, 46; எண் 5:2
o உபா 24:9

கூட்டிக்கொண்டு வரும்வரை ஜனங்கள் புறப்படவில்லை. **16** அதன்பின்,
ஜனங்கள் எல்லாரும் ஆஸ்ரோத்திலிருந்து[a] புறப்பட்டு பாரான் வனாந்தரத்
துக்குப் போய் முகாம்போட்டார்கள்.[b]

13 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “இஸ்ரவேலர்களுக்கு நான்
தரப்போகிற கானான் தேசத்தை உளவு பார்க்க சில ஆட்களை
அனுப்பு. ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒரு தலைவரை[c] அனுப்பு”[d]
என்றார்.

3 யெகோவாவின் கட்டளைப்படியே, மோசே அவர்களை பாரான்
வனாந்தரத்திலிருந்து அனுப்பினார்.[e] அந்த ஆட்கள் எல்லாரும் இஸ்ர
வேலர்களின் தலைவர்களாக இருந்தார்கள். **4** அவர்களுடைய பெயர்கள்
இவைதான்: ரூபன் கோத்திரத்திலிருந்து சக்கூரின் மகன் சம்முவா. **5** சிமி
யோன் கோத்திரத்திலிருந்து ஓரியின் மகன் சாப்பாத். **6** யூதா கோத்திரத்தி
லிருந்து எப்புன்னேயின் மகன் காலேப்.[f] **7** இசக்கார் கோத்திரத்திலிருந்து
யோசேப்பின் மகன் ஈகால். **8** எப்பிராயீம் கோத்திரத்திலிருந்து நூனின்
மகன் ஓசெயா.[g] **9** பென்யமீன் கோத்திரத்திலிருந்து ரப்பூவின் மகன்
பல்த்தி. **10** செபுலோன் கோத்திரத்திலிருந்து சோதியின் மகன் காதியேல்.
11 யோசேப்பு கோத்திரத்தைச்[h] சேர்ந்த மனாசே கோத்திரத்திலிருந்து[i] சூசி
யின் மகன் கேதி. **12** தாண் கோத்திரத்திலிருந்து கெமல்லியின் மகன்
அம்மியேல். **13** ஆசேர் கோத்திரத்திலிருந்து மிகாவேலின் மகன் சேத்
தூர். **14** நப்தலி கோத்திரத்திலிருந்து ஒப்பேசியின் மகன் நாகபி. **15** காத்
கோத்திரத்திலிருந்து மாகியின் மகன் கூவேல். **16** இவர்கள்தான் கானான்
தேசத்தை உளவு பார்ப்பதற்காக மோசே அனுப்பி வைத்த ஆட்கள். நூனின்
மகனாகிய ஓசெயாவின் பெயரை யோசுவா*[j] என்று மோசே மாற்றினார்.

17 கானான் தேசத்தை உளவு பார்ப்பதற்காக மோசே அவர்களை
அனுப்பியபோது அவர்களிடம், “நீங்கள் நெகேபுக்குப் போங்கள். அதன்
பின்பு மலைப்பகுதிக்குப் போங்கள்.[k] **18** அந்தத் தேசம் எப்படிப்பட்ட
தேசம்,[l] அங்குள்ள ஜனங்கள் பலசாலிகளா பலம் இல்லாதவர்களா, கொஞ்
சம் பேரா நிறைய பேரா என்று பாருங்கள். **19** அது நல்ல தேசமா
மோசமான தேசமா, அவர்கள் குடியிருக்கும் நகரங்கள் மதில் உள்ள
வையா, மதில் இல்லாதவையா என்றும் பாருங்கள். **20** அது செழிப்பான
நிலமா, தரிசு நிலமா,[m] அங்கே மரங்கள் இருக்கிறதா இல்லையா என்றெல்
லாம் பாருங்கள். நீங்கள் பயப்படாமல்,[n] அங்கு விளைகிறவற்றில் கொஞ்
சத்தை எடுத்துக்கொண்டு வாருங்கள்” என்று சொன்னார். முதல் திராட்சை
கள் பழுக்கும் காலமாக அது இருந்தது.[o]

21 மோசே சொன்னபடி, அவர்கள் போய் சீன் வனாந்தரத்திலிருந்து[p]
ரேகோப்[q] வரையிலும் லெபோ-காமாத்*[r] வரையிலும் அந்தத் தேசத்தை
உளவு பார்த்தார்கள். **22** அவர்கள் நெகேபுக்குப் போய் எப்ரோன் நகரத்
துக்கு[s] வந்துசேர்ந்தார்கள். அங்கே ஏனாக்கியர்களான[t] அகீமானும் சேசா
யும் தல்மாயும்[u] வாழ்ந்துவந்தார்கள். அந்த எப்ரோன் நகரம், எகிப்திலுள்ள
சோவான் நகரம் கட்டப்படுவதற்கு ஏழு வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்
டது. **23** அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்கை*[v] அடைந்து, அங்கே ஒரு

13:16 *வே.வா., “யெஹோஷுவா”; அர்த்தம், “யெகோவாவே மீட்பு.” **13:21** *வே.வா., “காமாத்தின் நுழைவாசல்.” **13:23** *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கை.”

அதி. 12
a எண் 11:35, எண் 33:18
b எண் 10:12

அதி. 13
c யாத் 18:25, உபா 1:15
d உபா 1:22, 23
e எண் 12:16, உபா 1:19
f எண் 13:30, எண் 14:30, 38, எண் 34:18, 19, 1நா 4:15
g எண் 11:28, எண் 13:16, எண் 14:30, எண் 34:17
h ஆதி 48:5
i ஆதி 48:17, 19
j யாத் 17:9
k உபா 1:7
l யாத் 3:8, உபா 8:7
m நெ 9:25, எசே 20:6
n உபா 31:6, யோசு 1:6, 9
o எண் 13:23
p எண் 34:2, 3, யோசு 15:1
q 2சா 10:6, 8
r எண் 34:8
s ஆதி 13:18, யோசு 15:13, யோசு 21:11, 12
t உபா 9:1, 2, யோசு 11:21
u நியா 1:10
v எண் 32:9

திராட்சைக் கொடியிலிருந்த ஒரு குலையை அறுத்தார்கள். அதை
இரண்டு பேர் ஒரு கம்பத்தில் கட்டித் தூக்கிக்கொண்டு வர வேண்டியி
ருந்தது. சில மாதுளம்பழங்களையும் அத்திப்பழங்களையும்கூட அவர்கள்
எடுத்துக்கொண்டார்கள்.[a] **24** அந்த இஸ்ரவேலர்கள் அங்கே திராட்சைக்
குலையை அறுத்ததால் அந்த இடத்துக்கு எஸ்கோல்* பள்ளத்தாக்கு[b]
என்று பெயர் வைக்கப்பட்டது.

25 இப்படி, அவர்கள் அந்தத் தேசத்தை 40 நாட்கள்[c] உளவு பார்த்
துவிட்டு, **26** மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் இருந்த
இடத்துக்கு, அதாவது பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு,[d]
திரும்பி வந்தார்கள். அந்தத் தேசத்தில் பார்த்ததையெல்லாம் ஜனங்க
ளுக்குச் சொன்னார்கள். அங்கு விளைந்த பழங்களையும் காட்டினார்கள்.
27 அவர்கள் மோசேயிடம், “நீங்கள் அனுப்பிய தேசத்துக்கு நாங்கள்
போனோம். அது நிஜமாகவே பாலும் தேனும் ஓடுகிற தேசம்தான்.[e] இதெல்
லாம் அங்கு விளைந்ததுதான்.[f] **28** ஆனால், அங்கே வாழ்கிற ஜனங்
கள் பலசாலிகள். அவர்களுடைய நகரங்கள் மதில் சூழ்ந்த மிகப்
பெரிய நகரங்கள். அங்கே ஏனாக்கியர்களையும் பார்த்தோம்.[g] **29** நெகே
பில்[h] அமலேக்கியர்கள்[i] குடியிருக்கிறார்கள். மலைப்பகுதியில் ஏத்தியர்க
ளும் எபூசியர்களும்[j] எமோரியர்களும்[k] வாழ்கிறார்கள். கடல் பக்கத்திலும்[l]
யோர்தானை ஒட்டியும் கானானியர்கள்[m] வாழ்கிறார்கள்” என்றார்கள்.

30 அப்போது, காலேப் மோசேக்கு முன்னால் நின்ற ஜனங்களிடம்,
“நாம் உடனே அங்கு போகலாம். அதை நிச்சயம் கைப்பற்றிவிடுவோம்,
சுலபமாக ஜெயித்துவிடுவோம்”[n] என்று சொல்லி அவர்களை அமைதிப்
படுத்த முயற்சி செய்தார். **31** ஆனால் அவருடன் போயிருந்த ஆட்கள்,
“அங்கே போக வேண்டாம், அவர்கள் நம்மைவிட பலசாலிகள், நம்மால்
அவர்களை எதிர்க்க முடியாது” என்றார்கள்.[o] **32** அதுமட்டுமல்ல, அந்தத்
தேசத்தைப் பற்றி இப்படி மோசமாகப் பேசிக்கொண்டே இருந்தார்கள்:[p]
“நாங்கள் உளவு பார்த்த தேசம் அதன் குடிமக்களையே கொன்றுவிடு
கிற தேசம். அங்குள்ள ஜனங்களுடைய உருவத்தைப் பார்த்தாலே பயங்க
ரமாக இருக்கிறது.[q] **33** ராட்சதர்களின் வம்சத்தில் வந்த ஏனாக்கியர்களை
அங்கே பார்த்தோம்.[r] அந்த ராட்சதர்களுக்குப் பக்கத்தில் நாங்கள் வெறும்
வெட்டுக்கிளிகளைப் போலத் தெரிந்தோம். அவர்களும் எங்களை அப்ப
டித்தான் பார்த்தார்கள்.”

14 அதைக் கேட்ட ஜனங்கள் எல்லாரும் அந்த ராத்திரி முழுவதும்
சத்தமாக அழுது புலம்பிக்கொண்டே இருந்தார்கள்.[s] **2** அவர்
கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முணுமுணுத்தார்கள்.[t]
“நாம் எகிப்திலேயே செத்துப்போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும்! இந்த
வனாந்தரத்திலேயே செத்துப்போனால்கூட பரவாயில்லை! **3** யெகோவா
எதற்காக நம்மை அந்தத் தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு போய் எதிரிகளின்
வாளுக்குப் பலியாக்கப் பார்க்கிறார்?[u] நம் மனைவிமக்களை அந்த ஜனங்
கள் பிடித்து வைத்துக்கொள்வார்களே.[v] எகிப்துக்குத் திரும்பிப் போவது
தான் நல்லது” என்றெல்லாம் முணுமுணுத்தார்கள்.[w] **4** “நமக்கு ஒரு தலை
வரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு எகிப்துக்கே திரும்பிப் போய்விடுவோம்”
என்றுகூட பேசிக்கொண்டார்கள்.[x]

13:24 * அர்த்தம், “திராட்சைக் குலை.”

அதி. 13
a உபா 1:25 உபா 8:7-9
b உபா 1:24
c எண் 14:33, 34
d உபா 1:19
e யாத் 3:8 லேவி 20:24
f உபா 1:25
g எண் 13:22, 33 உபா 1:27, 28
h எண் 13:17
i ஆதி 36:12 யாத் 17:8 1சா 15:3
j நியா 1:21 2சா 5:6, 7
k ஆதி 10:15, 16
l ஆதி 10:19
m யாத் 23:23 உபா 7:1 உபா 20:17
n யோசு 14:7, 8
o எண் 32:9
p எண் 14:36
q ஆமோ 2:9
r உபா 1:28 உபா 9:1, 2

அதி. 14
s உபா 1:32, 33
t உபா 1:27 சங் 106:25
u சங் 78:40
v எண் 14:31 உபா 1:39
w எண் 11:5
x நெ 9:17

5 இதைக் கேட்டபோது மோசேயும் ஆரோனும் சாஷ்டாங்கமாக விழுந்
தார்கள். இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அதைப் பார்த்துக்கொண்டிருந்
தார்கள். **6** அந்தத் தேசத்தை உளவு பார்த்துவிட்டு வந்த நூனின் மகனா
கிய யோசுவாவும்[a] எப்புன்னேயின் மகனாகிய காலேபும்[b] தங்களுடைய
உடையைக் கிழித்துக்கொண்டு, **7** இஸ்ரவேலர்கள் எல்லாரிடமும், “நாங்
கள் உளவு பார்த்த தேசம் ரொம்ப ரொம்ப நல்ல தேசம்.[c] **8** யெகோவா
வுக்கு நம்மேல் பிரியம் இருந்தால், அந்தத் தேசத்துக்கு நிச்சயம் நம்
மைக் கூட்டிக்கொண்டு போவார், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை
நமக்குத் தருவார்.[d] **9** யெகோவாவின் பேச்சை மாத்திரம் மீறிவிடாதீர்கள்.
அங்குள்ள ஜனங்களை நினைத்துப் பயப்படாதீர்கள்,[e] அவர்களை நாம்
ஒழித்துக்கட்டுவோம். அவர்களைப் பாதுகாக்க யாரும் இல்லை, ஆனால்
நம்மோடு யெகோவா இருக்கிறார்.[f] அவர்களை நினைத்துப் பயப்படாதீர்
கள்” என்று சொன்னார்கள்.

10 அதைக் கேட்ட இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும், அந்த இரண்டு
பேர்மேலும் கல்லெறிய வேண்டுமென்று பேசிக்கொண்டார்கள்.[g] அப்
போது, சந்திப்புக் கூடாரத்தின் மேல் யெகோவாவின் மகிமை தோன்றி
யதை அந்த ஜனங்கள் பார்த்தார்கள்.[h]

11 பின்பு யெகோவா மோசேயிடம், “இன்னும் எத்தனை நாளைக்குத்
தான் இந்த ஜனங்கள் எனக்கு மரியாதை காட்டாமல் இருப்பார்கள்?[i] இவர்
கள் நடுவில் நான் பல அற்புதங்களைச் செய்திருந்தும் எத்தனை நாளைக்
குத்தான் என்மேல் விசுவாசம் வைக்காமல் இருப்பார்கள்?[j] **12** நான்
இவர்களைக் கொள்ளைநோயால் தாக்கி, அழிக்கப்போகிறேன். ஆனால்
உன்னை, இவர்களைவிட பெரிய தேசமாகவும் பலமான தேசமாகவும் ஆக்
கப்போகிறேன்”[k] என்றார்.

13 ஆனால் மோசே யெகோவாவிடம், “இவர்களை உங்களுடைய வல்
லமையால் எகிப்தியர்களிடமிருந்து விடுவித்துக்கொண்டு வந்தீர்களே. இப்
போது இவர்களை நீங்கள் அழித்துவிட்டால் அந்த எகிப்தியர்கள் அதைக்
கேள்விப்பட மாட்டார்களா?[l] **14** அதைப் பற்றி கானான் தேசத்து ஜனங்
களுக்குச் சொல்ல மாட்டார்களா? யெகோவாவாகிய நீங்கள் இஸ்ரவே
லர்களோடு இருக்கிறீர்கள், இவர்கள் முன்னால் நேருக்கு நேராகத் தோன்
றியிருக்கிறீர்கள்[m] என்பதையெல்லாம் அந்தத் தேசத்து ஜனங்களும்
கேள்விப்பட்டிருக்கிறார்களே.[n] அதுமட்டுமல்ல, நீங்கள் யெகோவா, உங்க
ளுடைய மேகம் இவர்களுக்கு மேலே இருக்கிறது, பகலில் மேகத்
தூணிலும் ராத்திரியில் நெருப்புத் தூணிலும் இவர்களுக்கு முன்னால்
போகிறீர்கள்[o] என்பதையெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறார்களே. **15** அப்
படியிருக்கும்போது, இஸ்ரவேல் ஜனங்களை நீங்கள் ஒட்டுமொத்தமாக
அழித்துவிட்டால், உங்களுடைய பெயரையும் புகழையும் பற்றிக் கேள்விப்
பட்டிருக்கிற தேசத்தாரெல்லாம் என்ன சொல்வார்கள்? **16** ‘இந்த ஜனங்க
ளுக்குக் கொடுப்பதாகச் சொன்ன தேசத்துக்கு யெகோவாவினால் இவர்க
ளைக் கூட்டிக்கொண்டு போக முடியவில்லை, அதனால்தான் இவர்களை
வனாந்தரத்தில் அழித்துவிட்டார்’ என்று சொல்ல மாட்டார்களா?[p]
17 யெகோவாவே, நீங்கள் எவ்வளவு மகத்தானவர் என்று தயவுசெய்து
காட்டுங்கள். ஏனென்றால், **18** ‘யெகோவா சீக்கிரத்தில் கோபப்படாதவர்,
மாறாத அன்பை அளவில்லாமல் காட்டுபவர்,[q] குற்றத்தையும் மீறுதலையும்

அதி. 14
a எண் 13:8, 16
b எண் 13:6, 16; எண் 14:30
c எண் 13: 26, 27; உபா 1:25; உபா 8:7, 8
d யாத் 3:8
e உபா 7:17, 18; உபா 20:3
f யாத் 33:16; உபா 20:1
g யாத் 17:4
h யாத் 16:10
i யாத் 16:28; எண் 14: 22, 23
j உபா 9:23; எபி 3:19
k யாத் 32:10
l யாத் 32:12; எசே 20:9
m உபா 4:12; உபா 5:4
n யாத் 15:13, 14; யோசு 2:10; யோசு 5:1
o யாத் 13:21; சங் 78:14
p உபா 9:28
q சங் 103:8; மீ 7:18

மன்னிப்பவர். ஆனால், குற்றவாளியை அவர் ஒருபோதும் தண்டிக்காமல்
விட மாட்டார். தகப்பன்கள் செய்யும் குற்றத்துக்காக மகன்களையும் மூன்
றாம் நான்காம் தலைமுறைகளைச் சேர்ந்தவர்களையும் தண்டிப்பார்' என்று
நீங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள்.[a] **19** தயவுசெய்து உங்களு
டைய அளவுகடந்த அன்பை* காட்டி இந்த ஜனங்களுடைய பாவத்தை
மன்னியுங்கள். எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்ததிலிருந்து மன்னித்
தது போலவே இப்போதும் மன்னியுங்கள்" என்றார்.[b]

20 அதற்கு யெகோவா, "நீ கேட்டுக்கொண்டபடியே நான் இவர்களை
மன்னிக்கிறேன்.[c] **21** ஆனால், என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கி
றேன்,* இந்தப் பூமியெல்லாம் யெகோவாவின் மகிமையால் நிறைந்திருக்
கும்.[d] **22** இவர்கள் என் மகிமையைப் பார்த்திருந்தும், எகிப்திலும் வனாந்
தரத்திலும் நான் செய்த அற்புதங்களைப் பார்த்திருந்தும்,[e] பத்துத் தடவை
என்னைச் சோதித்துப் பார்த்தார்கள்,[f] என் பேச்சைக் காதில் வாங்கவே
இல்லை.[g] **23** அதனால், இவர்களுடைய முன்னோர்களுக்கு நான் வாக்
குக் கொடுத்த தேசத்தை இவர்களில் யாருமே பார்க்க மாட்டார்கள். எனக்கு
மரியாதை காட்டாத யாரும் அதைப் பார்க்க மாட்டார்கள்.[h] **24** ஆனால்,
என் ஊழியனாகிய காலேப்[i] இவர்களைப் போல் நடந்துகொள்ளாமல், முழு
இதயத்தோடு எனக்குக் கீழ்ப்படிந்துவருகிறான். அதனால், அவன் உளவு
பார்த்த தேசத்துக்கு அவனை நான் நிச்சயம் கூட்டிக்கொண்டு போவேன்,
அவனுடைய வம்சத்தார் அதைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.[j]
25 அமலேக்கியர்களும் கானானியர்களும் பள்ளத்தாக்கிலே குடியிருப்ப
தால்,[k] நாளைக்கு நீங்கள் இங்கிருந்து திரும்பி, செங்கடலுக்குப் போகும்
வழியாக வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப் போக வேண்டும்"[l] என்றார்.

26 யெகோவா மோசேயையும் ஆரோனையும் பார்த்து, **27** "இன்னும்
எத்தனை நாளைக்குத்தான் இந்தப் பொல்லாத ஜனங்கள் எனக்கு விரோத
மாக முணுமுணுத்துக்கொண்டே இருப்பார்கள்?[m] இவர்கள் என்ன சொல்லி
முணுமுணுக்கிறார்கள் என்பதை நான் கேட்டேன்.[n] **28** நீ இவர்களிடம்,
'யெகோவா சொல்வது என்னவென்றால், "என் உயிர்மேல் ஆணையா
கச் சொல்கிறேன்,* என் காதுபட நீங்கள் பேசியபடியே உங்களுக்குச் செய்
வேன்.[o] **29** எனக்கு விரோதமாக முணுமுணுத்த நீங்கள் எல்லாரும் இந்த
வனாந்தரத்திலேயே செத்துப்போவீர்கள்.[p] பெயர்ப்பதிவு செய்யப்பட்ட
20 வயதும் அதற்கு அதிகமான வயதும் உள்ள நீங்கள் எல்லாரும் கண்டிப்
பாகச் சாவீர்கள்.[q] **30** நான் உங்களுக்குத் தருவதாக வாக்குக் கொடுத்த
தேசத்துக்கு[r] எப்புன்னேயின் மகனாகிய காலேபையும் நூனின் மகனாகிய
யோசுவாவையும் தவிர வேறு யாரும் போக மாட்டீர்கள்.[s]

31 உங்கள் பிள்ளைகளை எதிரிகள் பிடித்து வைத்துக்கொள்வார்கள்
என்று சொன்னீர்களே, அதே பிள்ளைகளை நான் அந்தத் தேசத்துக்குக்
கூட்டிக்கொண்டு போவேன்.[t] நீங்கள் ஒதுக்கித்தள்ளிய தேசத்தை[u] அவர்
கள் அனுபவிப்பார்கள். **32** ஆனால், நீங்கள் இந்த வனாந்தரத்தில்
சாவீர்கள். **33** உங்கள் மகன்கள் தங்களுடைய மந்தைகளை 40 வருஷங்
களுக்கு[v] இந்த வனாந்தரத்தில் மேய்க்க வேண்டியிருக்கும். நீங்கள்

14:19 * வே.வா., "மாறாத அன்பை." **14:21, 28** * வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 14
a யாத் 34:6, 7
b யாத் 34:9; சங் 78:38
c யாக் 5:16
d சங் 72:19; ஆப 2:14
e நெ 9:17
f யாத் 17:2; சங் 95:9; சங் 106:14; எபி 3:16
g சங் 81:11
h எண் 26:63, 64; எண் 32:11; உபா 1:35; சங் 95:11; சங் 106:26; எபி 3:18; எபி 4:3
i எண் 13:30; எண் 26:65
j யோசு 14:9, 14
k எண் 13:29
l உபா 1:40
m யாத் 16:28; எண் 14:11
n 1கொ 10:6, 10
o எண் 14:2; எண் 26:64; எண் 32:11; உபா 1:35
p சங் 106:26; 1கொ 10:5; எபி 3:17
q எண் 1:45, 46; யூ 5
r யாத் 6:8
s எண் 26:65; எண் 32:11, 12; உபா 1:34-38
t எண் 14:3; உபா 1:39
u சங் 106:24
v எண் 32:13; யோசு 14:10

செய்த துரோகங்களுக்காக அவர்கள் தண்டனையை அனுபவிப்பார்கள். நீங்கள் எல்லாருமே இந்த வனாந்தரத்தில் சாகும்வரை அவர்கள் தண்டனையை அனுபவிப்பார்கள்.[a]
34 நீங்கள் அந்தத் தேசத்தை உளவு பார்த்த 40 நாட்களின்படியே,[b] ஒரு நாளுக்கு ஒரு வருஷம் என்ற கணக்கில் 40 வருஷங்கள்[c] உங்கள் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படுவீர்கள். என்னை எதிர்த்தால் உங்களுடைய கதி என்னவாகும் என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

35 யெகோவாவாகிய நான் இதைச் சொல்லியிருக்கிறேன். எனக்கு எதிராக ஒன்றுகூடிய இந்தப் பொல்லாத ஜனங்களை நான் தண்டிப்பேன். இந்த வனாந்தரத்தில் அவர்களுக்கு முடிவு வரும், இங்கேயே அவர்கள் செத்துப்போவார்கள்.[d]
36 உளவு பார்ப்பதற்காக மோசே அனுப்பிய ஆட்கள், திரும்பி வந்து அந்தத் தேசத்தைப் பற்றி மோசமாகப் பேசியதாலும், அவருக்கு எதிராக முணுமுணுக்க ஜனங்களைத் தூண்டியதாலும்[e] தண்டிக்கப்படுவார்கள்.
37 அந்தத் தேசத்தைப் பற்றி மோசமாகப் பேசிய ஆட்கள் தண்டிக்கப்பட்டு, யெகோவாவின் முன்னால் செத்துப்போவார்கள்.[f]
38 ஆனால், அந்தத் தேசத்தை உளவு பார்க்கப் போனவர்களில் நூனின் மகனாகிய யோசுவாவும் எப்புன்னேயின் மகனாகிய காலேபும் நிச்சயம் உயிர்பிழைப்பார்கள்"'"[g] என்றார்.

39 மோசே இவற்றை இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருக்கும் சொன்னபோது, அவர்கள் மிகவும் அழுது புலம்ப ஆரம்பித்தார்கள்.
40 பின்பு விடியற்காலையில் எழுந்து, "நாங்கள் பாவம் செய்துவிட்டோம், யெகோவா சொல்லியிருந்த இடத்துக்குப் போக இப்போது தயாராக இருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டு உயரமான மலைப்பகுதிக்குப் போகப் பார்த்தார்கள்.[h]
41 ஆனால் மோசே அவர்களிடம், "நீங்கள் ஏன் யெகோவாவின் கட்டளையை மீறி நடக்கிறீர்கள்? நீங்கள் நினைப்பது நிச்சயம் நடக்காது.
42 அதனால் போகாதீர்கள், யெகோவா உங்களோடு இல்லை, மீறிப் போனால் எதிரிகள் உங்களை வீழ்த்திவிடுவார்கள்.[i]
43 அங்கே அமலேக்கியர்களும் கானானியர்களும் இருக்கிறார்கள்.[j] நீங்கள் வாளால் கொல்லப்படுவீர்கள். நீங்கள் யெகோவாவிடமிருந்து விலகிவிட்டதால் யெகோவா உங்களோடு இருக்க மாட்டார்"[k] என்றார்.

44 அவர்கள் மோசேயின் பேச்சைக் கேட்காமல் அகங்காரத்தோடு* அந்த மலைப்பகுதிக்குப் போனார்கள்.[l] ஆனால், யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியும் மோசேயும் முகாமிலிருந்து போகவில்லை.[m]
45 அப்போது அந்த மலைப்பகுதியில் குடியிருந்த அமலேக்கியர்களும் கானானியர்களும் இறங்கிவந்து அவர்களைத் தாக்கி, ஓர்மாவரை துரத்திக்கொண்டு போனார்கள்.[n]

15 பின்பு யெகோவா மோசேயிடம்,
2 "நீ இஸ்ரவேலர்களிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால், 'நான் கொடுக்கப்போகிற தேசத்துக்கு[o] நீங்கள் போய்ச் சேர்ந்த பின்பு,
3 ஒரு மாட்டையோ ஆட்டையோ யெகோவாவுக்குப் பிடித்த வாசனை பலியாக[p] அவருடைய பலிபீடத்தில் செலுத்த நீங்கள் விரும்பலாம். அதைத் தகன பலியாகவோ,[q] விசேஷமாக நேர்ந்துகொண்டதை நிறைவேற்றும் பலியாகவோ, நீங்களாகவே

14:44 *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது.

அதி. 14
a உபா 1:3; உபா 2:14
b எண் 13:25
c சங் 95:10; அப் 7:36; அப் 13:18
d எண் 14:29; எபி 3:17
e எண் 13:32
f 1கொ 10:6, 10; யூ 5
g எண் 14:30; எண் 26:65; எண் 32:11, 12; உபா 1:35, 36; யோசு 14:6
h உபா 1:41
i லேவி 26:14, 17; உபா 1:42
j எண் 13:29
k 2நா 15:2
l உபா 1:43
m எண் 10:33
n எண் 21:1, 3; உபா 1:44

அதி. 15
o ஆதி 15:18
p லேவி 1:9
q லேவி 1:2, 3

விருப்பப்பட்டு செலுத்தும் பலியாகவோ,[a] பண்டிகைகளுக்கான பலியா
கவோ[b] யெகோவாவுக்குச் செலுத்தினால், **4** அதற்கான உணவுக் காணிக்
கையாக, ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு* நைசான மாவில்[c] ஒரு
லிட்டர்# எண்ணெய் கலந்து யெகோவாவுக்குக் கொண்டுவர வேண்டும்.
5 அந்தத் தகன பலியுடன் அல்லது ஒவ்வொரு செம்மறியாட்டுக் கடாக்
குட்டியுடன் ஒரு லிட்டர் திராட்சமதுவைக் காணிக்கையாகக் கொண்டுவர
வேண்டும்.[d] **6** அல்லது ஒரு செம்மறியாட்டுக் கடாவைச் செலுத்தினால்,
அதற்கான உணவுக் காணிக்கையாக, ஒரு எப்பா அளவிலே பத்தில்
இரண்டு பங்கு* நைசான மாவில் ஒன்றேகால் லிட்டர்# எண்ணெய் கலந்து
கொண்டுவர வேண்டும். **7** அதோடு, ஒன்றேகால் லிட்டர் திராட்சமது
வைக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவா
வுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.

8 ஆனால், ஒரு காளையைத் தகன பலியாகவோ[e] விசேஷமாக
நேர்ந்துகொண்டதை நிறைவேற்றும் பலியாகவோ[f] சமாதான பலியா
கவோ யெகோவாவுக்குச் செலுத்தினால்,[g] **9** அதற்கான உணவுக் காணிக்
கையாக,[h] ஒரு எப்பா அளவிலே பத்தில் மூன்று பங்கு* நைசான மாவில்
ஒன்றே முக்கால் லிட்டர் எண்ணெயைக் கலந்து கொண்டுவர வேண்டும்.
10 அதோடு, ஒன்றே முக்கால் லிட்டர் திராட்சமதுவைக் காணிக்கையாகக்[i]
கொண்டுவந்து பலிபீடத்தின் நெருப்பில் ஊற்ற வேண்டும். அந்த வாசனை
யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும். **11** ஒவ்வொரு
காளையுடனும் செம்மறியாட்டுக் கடாவுடனும் செம்மறியாட்டுக் கடாக் குட்
டியுடனும் வெள்ளாட்டுடனும் இவற்றைச் செலுத்த வேண்டும். **12** நீங்கள்
எத்தனை மிருகங்களைச் செலுத்தினாலும் சரி, ஒவ்வொன்றோடும் இவற்
றைக் கொண்டுவர வேண்டும். **13** இஸ்ரவேல் குடிமக்கள் ஒவ்வொருவ
ரும் இப்படித்தான் தகன பலி செலுத்த வேண்டும். அதன் வாசனை யெகோ
வாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.

14 உங்களோடு தங்கியிருக்கிற வேறு தேசத்தைச் சேர்ந்தவனோ தலை
முறை தலைமுறையாக உங்களோடு குடியிருக்கிற வேறு தேசத்தைச்
சேர்ந்தவனோ தகன பலியைச் செலுத்த விரும்பினால், நீங்கள் செலுத்
துவது போலவே அவனும் செலுத்த வேண்டும்.[j] அந்த வாசனை யெகோ
வாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும். **15** இஸ்ரவேல் சபையாராகிய
உங்களுக்கும் சரி, உங்களோடு குடியிருக்கும் வேறு தேசத்து ஜனங்களுக்
கும் சரி, ஒரே சட்டம் இருக்க வேண்டும். அந்தச் சட்டத்தைத் தலை
முறை தலைமுறைக்கும் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். நீங்களும் சரி,
வேறு தேசத்து ஜனங்களும் சரி, யெகோவாவின் சட்டத்தை ஒரே விதமா
கக் கடைப்பிடிக்க வேண்டும்.[k] **16** உங்களுக்கும் சரி, உங்களோடு குடியி
ருக்கும் வேறு தேசத்து ஜனங்களுக்கும் சரி, ஒரே சட்டமும் ஒரே நியாய
மும்* இருக்க வேண்டும்'" என்றார்.

17 பின்பு யெகோவா மோசேயிடம், **18** "நீ இஸ்ரவேலர்களிடம்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'நான் கூட்டிக்கொண்டு போகிற

15:4 *அதாவது, "சுமார் ஒரு கிலோ." #நே.மொ., "ஒரு ஹின் அளவில் நான்கில் ஒரு பங்கு." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **15:6** *அதாவது, "சுமார் 2 கிலோ." #நே.மொ., "ஒரு ஹின் அளவில் மூன்றிலொரு பங்கு." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **15:9** *அதாவது, "சுமார் 3 கிலோ." **15:16** *வே.வா., "நீதித்தீர்ப்பும்."

அதி. 15
a லேவி 7:16; லேவி 22:18, 19; லேவி 22:21
b லேவி 23:4; எண் 28:16; எண் 29:1; உபா 16:13, 16
c யாத் 29:40; லேவி 2:1, 11
d எண் 28:6, 7; எண் 28:11, 14
e லேவி 1:3
f லேவி 7:16
g லேவி 3:1, 3; லேவி 7:11
h லேவி 6:14; எண் 28:11, 12; எண் 29:6
i எண் 28:11, 14
j யாத் 12:49; லேவி 24:22; எண் 9:14
k லேவி 19:34

தேசத்துக்கு நீங்கள் வந்தபின், **19** அந்தத் தேசத்தில் விளைவதை நீங்
கள் சாப்பிடும்போது,[a] யெகோவாவுக்குக் காணிக்கை செலுத்த வேண்டும்.
20 முதல் விளைச்சலின்[b] முதல் மாவில்* வட்ட ரொட்டிகள் சுட்டு காணிக்
கையாகச் செலுத்த வேண்டும். களத்துமேட்டிலிருந்து கொண்டுவந்து
செலுத்தும் காணிக்கையைப் போலவே இதையும் செலுத்த வேண்டும்.
21 முதல் விளைச்சலின் முதல் மாவில்* ரொட்டிகள் சுட்டு யெகோவாவுக்
குக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். தலைமுறை தலைமுறைக்கும்
இதை நீங்கள் செலுத்த வேண்டும்.

22 நீங்கள் ஒரு தவறு செய்து, மோசே மூலம் யெகோவா கொடுத்த இந்
தக் கட்டளைகளைத் தெரியாத்தனமாக மீறிவிட்டால், **23** அதாவது தலை
முறை தலைமுறையாக நீங்கள் கடைப்பிடிப்பதற்காக மோசே மூலம்
யெகோவா கொடுத்த கட்டளைகளைத் தெரியாத்தனமாக மீறிவிட்டால்,
ஜனங்கள் யாருக்கும் தெரியாமல் அதைச் செய்துவிட்டால், யெகோவாவுக்
காக **24** ஜனங்கள் எல்லாரும் ஒரு இளம் காளையைத் தகன பலியாகச்
செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனை
யாக இருக்கும். அதற்கான உணவுக் காணிக்கையையும் திராட்சமது
காணிக்கையையும் வழக்கமான முறைப்படி செலுத்த வேண்டும்.[c] பாவப்
பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும் செலுத்த வேண்டும்.[d]
25 இஸ்ரவேலர்கள் எல்லாருக்காகவும் குருவானவர் பாவப் பரிகாரம் செய்
வார், அப்போது அவர்களுடைய பாவம் மன்னிக்கப்படும்.[e] ஏனென்றால்,
அவர்கள் தெரியாத்தனமாகத் தவறு செய்துவிட்டார்கள். அதற்காக யெகோ
வாவுக்குத் தகன பலியையும் பாவப் பரிகார பலியையும் யெகோவாவின்
முன்னிலையில் கொண்டுவந்தார்கள். **26** இஸ்ரவேல் ஜனங்களும் அவர்
களோடு குடியிருக்கிற வேறு தேசத்து ஜனங்களும் தெரியாத்தனமாகத்
தவறு செய்ததால் மன்னிப்பு பெறுவார்கள்.

27 உங்களில் ஒருவன் தெரியாத்தனமாகத் தவறு செய்தால், பாவப் பரி
கார பலியாக ஒருவயது பெண் வெள்ளாட்டுக் குட்டியை அவன் கொண்டு
வர வேண்டும்.[f] **28** அவனுக்காகக் குருவானவர் யெகோவாவுக்கு முன்
னால் பாவப் பரிகாரம் செய்வார். அப்போது, அவனுடைய பாவம்
மன்னிக்கப்படும்.[g] **29** தெரியாத்தனமாகத் தவறு செய்யும் இந்த விஷயத்
தில், இஸ்ரவேல் குடிமக்களாகிய உங்களுக்கும் சரி, உங்களோடு குடியிருக்
கிற வேறு தேசத்து ஜனங்களுக்கும் சரி, ஒரே சட்டம் இருக்க வேண்டும்.[h]

30 ஒருவன் வேண்டுமென்றே பாவம் செய்தால்,[i] அவன் இஸ்ரவேல்
குடிமக்களில் ஒருவனாக இருந்தாலும் சரி, வேறு தேசத்தைச் சேர்ந்தவனாக
இருந்தாலும் சரி, அது யெகோவாவைப் பழிப்பதற்குச் சமம். அவன் கொல்
லப்பட வேண்டும். **31** அவன் யெகோவாவின் வார்த்தையை அலட்சியம்
செய்து அவருடைய கட்டளையை மீறியதால், கண்டிப்பாகக் கொல்லப்பட
வேண்டும்.[j] அவனுடைய குற்றத்துக்காக அவன் தண்டனையை அனுப
வித்தே தீர வேண்டும்'"[k] என்றார்.

32 இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் இருந்தபோது, ஒருவன் ஓய்வுநா
ளில்[l] விறகு பொறுக்குவதைச் சிலர் பார்த்தார்கள். **33** அவர்கள்
அவனை மோசேக்கும் ஆரோனுக்கும் ஜனங்களுக்கும் முன்னால் கொண்டு
வந்து நிறுத்தினார்கள். **34** அவன் செய்த குற்றத்துக்கு என்ன தண்டனை

15:20, 21 * நே.மொ., "கொரகொரப்பான மாவில்."

அதி. 15
a யோசு 5:11, 12
b யாத் 23:19; லேவி 2:14; எண் 18:8, 12; உபா 26:1, 2; நீதி 3:9
c எண் 15:8-10
d எண் 28:15
e லேவி 4:20; எபி 2:17; 1யோ 2:1, 2
f லேவி 4:27, 28
g லேவி 4:32, 35
h யாத் 12:49; லேவி 24:22; எண் 9:14; எண் 15:15
i யாத் 21:14; உபா 17:12; எபி 10:26, 27
j எபி 10:28
k எசே 18:20
l யாத் 20:9, 10; யாத் 35:2; உபா 5:13, 14

கொடுக்க வேண்டுமென்று கடவுளுடைய சட்டத்தில் கொடுக்கப்படாததால்
அவன் காவலில் வைக்கப்பட்டான்.[a]
35 அப்போது யெகோவா மோசேயிடம், “அவன் கண்டிப்பாகக் கொல்
லப்பட வேண்டும்,[b] ஜனங்கள் எல்லாரும் அவனை முகாமுக்கு வெளியே
கொண்டுபோய்க் கல்லெறிந்து கொல்ல வேண்டும்”[c] என்றார். **36** மோசே
மூலம் யெகோவா கொடுத்த கட்டளைப்படியே ஜனங்கள் எல்லாரும்
அவனை முகாமுக்கு வெளியே கொண்டுபோய்க் கல்லெறிந்து கொன்
றார்கள்.
37 பின்பு யெகோவா மோசேயிடம், **38** “இஸ்ரவேலர்கள் தங்களு
டைய அங்கிகளின் ஓரங்களில் தொங்கல்கள் வைத்து, அந்தத் தொங்கல்
களுக்கு மேலே நீல நிற நாடாவைத் தைக்க வேண்டுமென்று அவர்களி
டம் சொல். தலைமுறை தலைமுறைக்கும் அவர்கள் இப்படிச் செய்ய
வேண்டும்.[d] **39** ‘ஏனென்றால், நீங்கள் அந்தத் தொங்கல்களைப் பார்க்கும்
போது, யெகோவாவின் கட்டளைகள் எல்லாவற்றையும் நினைத்துப்
பார்த்து அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.[e] உங்களுடைய மனதும்*
கண்ணும் போகிற போக்கில் போய் நீங்கள் எனக்குத் துரோகம் செய்யக்
கூடாது.[f] **40** நீங்கள் என்னுடைய எல்லா கட்டளைகளையும் ஞாபகத்தில்
வைத்துக் கடைப்பிடிப்பதற்கும், உங்கள் கடவுளாகிய என் முன்னால் பரி
சுத்தமாக இருப்பதற்கும்[g] இந்தச் சட்டம் உதவும். **41** நானே உங்கள் கட
வுளாகிய யெகோவா. நான்தான் உங்கள் கடவுள் என்பதை நிரூபிப்பதற்காக
உங்களை எகிப்து தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தேன்.[h] நானே உங்
கள் கடவுளாகிய யெகோவா’”[i] என்றார்.

16 பின்பு, லேவியின்[j] கொள்ளுப்பேரனும் கோகாத்தின்[k] பேரனும்
இத்சேயாரின் மகனுமாகிய[l] கோராகு,[m] தாத்தானோடும் அபிரா
மோடும் ஓனோடும் கிளம்பினார். தாத்தானும் அபிராமும் ரூபனின்[n] மக
னாகிய எலியாபுக்குப்[o] பிறந்தவர்கள். ஓன் என்பவன் ரூபனின் மகனாகிய
பேலேத்துக்குப் பிறந்தவன். **2** கோராகு, தாத்தான், அபிராம், ஓன் ஆகிய
நான்கு பேரும், இஸ்ரவேலர்களில் இன்னும் 250 பேரும் மோசேக்கு
எதிராகத் திரண்டார்கள். இந்த 250 பேரும் ஜனங்களின் தலைவர்கள், சபை
யின் பிரதிநிதிகள், பிரபலமானவர்கள். **3** அவர்கள் எல்லாரும் மோசேக்
கும் ஆரோனுக்கும் எதிராகத் திரண்டு வந்து,[p] “உங்களால் நாங்கள் பட்டது
போதும்! ஜனங்கள் எல்லாருமே பரிசுத்தமானவர்கள்.[q] யெகோவா அவர்க
ளோடு இருக்கிறார்.[r] அப்படியிருக்கும்போது, நீங்கள் ஏன் யெகோவாவின்
சபையாரைவிட பெரிய ஆளாகக் காட்டிக்கொள்கிறீர்கள்?” என்று கேட்
டார்கள்.
4 மோசே அதைக் கேட்டவுடன் சாஷ்டாங்கமாக விழுந்தார். **5** பின்பு,
அவர் கோராகுவையும் அவருடைய கூட்டாளிகளையும் பார்த்து, “யெகோ
வாவுக்குச் சொந்தமானவரும்,[s] பரிசுத்தமானவரும், அவருடைய முன்னி
லையில் போவதற்குத் தகுதியானவரும்[t] யார் என்று அவர் காலையில்
சொல்வார். அவர் யாரைத் தேர்ந்தெடுக்கிறாரோ[u] அவர்தான் அவருடைய
முன்னிலையில் போவார். **6** கோராகுவே! கோராகுவின் கூட்டாளிகளே![v]
தூபக்கரண்டிகளை எடுத்துக்கொள்ளுங்கள்.[w] **7** அதில் தணல் போட்டு,

15:39 * நே.மொ., “இதயமும்.”

அதி. 15
a லேவி 24:11, 12
b யாத் 31:14
c லேவி 24:14
d உபா 22:12; மத் 23:5
e உபா 11:18
f யாத் 34:15
g லேவி 11:44; ரோ 12:1; 1பே 1:15
h ஆதி 17:8; யாத் 29:45; லேவி 25:38
i யாத் 3:15; யாத் 6:2, 3

அதி. 16
j யாத் 6:16
k யாத் 6:18
l யாத் 6:21
m யூ 11
n எண் 26:7-9
o ஆதி 46:8
p எண் 12:1, 2; எண் 14:2; சங் 106:16
q யாத் 19:6
r யாத் 29:45
s 2தீ 2:19
t யாத் 28:43; லேவி 21:6
u யாத் 28:1; எண் 17:5; சங் 105:26
v எண் 16:2
w லேவி 10:1

நாளைக்கு யெகோவாவின் முன்னால் தூபம் காட்டுங்கள். யெகோவா
யாரைத் தேர்ந்தெடுக்கிறாரோ[a] அவர்தான் பரிசுத்தமானவர். லேவியின்
வம்சத்தாரே,[b] நீங்கள் அத்துமீறிப் போய்விட்டீர்கள்!" என்றார்.

8 பின்பு மோசே கோராகுவிடம், "லேவியின் வம்சத்தாரே, தயவுசெய்து
நான் சொல்வதைக் கேளுங்கள். **9** இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
உங்களைப் பிரித்தெடுத்து,[c] வழிபாட்டுக் கூடாரத்தில் அவருக்கு முன்பாக
வும், ஜனங்களுக்கு முன்பாகவும் சேவை செய்ய வாய்ப்புத்
தந்திருப்பது[d] சாதாரண விஷயமா? **10** உன்னையும் லேவியின் வம்சத்தா
ராகிய உன் சகோதரர்கள் எல்லாரையும் அவர் தன் பக்கத்தில் வர விட்டி
ருப்பது சின்ன விஷயமா? இதெல்லாம் போதாதென்று, குருமார்களாகவும்
சேவை செய்ய நினைக்கிறீர்களா?[e] **11** நீயும் உன்னோடு திரண்டு வந்தி
ருக்கிற உன் கூட்டாளிகளும் யெகோவாவுக்கு விரோதமாக நடந்துகொள்
கிறீர்கள். ஆரோன் என்ன செய்தாரென்று அவருக்கு எதிராக முணுமுணுக்
கிறீர்கள்?"[f] என்றார்.

12 பின்பு மோசே, எலியாபின் மகன்களாகிய தாத்தானையும்
அபிராமையும்[g] கூட்டிக்கொண்டு வரச் சொல்லி ஆட்களை அனுப்பினார்.
ஆனால் அவர்கள், "நாங்கள் வர மாட்டோம்! **13** பாலும் தேனும் ஓடு
கிற தேசத்திலிருந்து நீங்கள் எங்களைக் கொண்டுவந்து இந்த வனாந்தரத்
தில் சாகடிக்கப் பார்ப்பது என்ன சாதாரண விஷயமா?[h] இப்போது, கொடுங்
கோலன் போல எங்களை அடக்கி ஆளவும் நினைக்கிறீர்களா?
14 பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்கு[i] நீங்கள் எங்களைக் கொண்டுபோக
வும் இல்லை, வயலையும் திராட்சைத் தோட்டத்தையும் எங்களுக்குச் சொத்
தாகக் கொடுக்கவும் இல்லை. இந்த ஆட்களுடைய* கண்ணைப் பிடுங்கப்
பார்க்கிறீர்களா?# நாங்கள் வர மாட்டோம்!" என்றார்கள்.

15 அப்போது, மோசேக்குப் பயங்கரமாகக் கோபம் வந்தது. உடனே
அவர் யெகோவாவிடம், "இவர்களுடைய உணவுக் காணிக்கையை ஏற்றுக்
கொள்ளாதீர்கள். இவர்களிடமிருந்து நான் ஒரு கழுதையைக்கூட எடுத்துக்
கொள்ளவில்லை, யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யவில்லை"[j] என்றார்.

16 பின்பு மோசே கோராகுவிடம், "நாளைக்கு நீயும் உன் கூட்டாளிகளும்
யெகோவாவின் முன்னிலையில் நிற்க வேண்டும், நீயும் அவர்களும் ஆரோ
னும் நிற்க வேண்டும். **17** நீங்கள் ஒவ்வொருவரும் தூபக்கரண்டியை
எடுத்து அதில் தூபம்போட்டு யெகோவாவின் முன்னிலையில் கொண்டுவர
வேண்டும். ஆளுக்கு ஒன்றாக மொத்தம் 250 தூபக்கரண்டிகளைக் கொண்டு
வர வேண்டும். நீயும் ஆரோனும்கூட தூபக்கரண்டியைக் கொண்டுவர
வேண்டும்" என்றார். **18** அதனால், ஒவ்வொருவரும் தங்கள் தூபக்கரண்
டியை எடுத்துக்கொண்டார்கள். அதில் தணலும் தூபப்பொருளும் போட்டு,
மோசேயோடும் ஆரோனோடும் சேர்ந்து சந்திப்புக் கூடாரத்தின் வாச
லில் நின்றார்கள். **19** மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக கோராகு தன்
னுடைய கூட்டாளிகளை[k] சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்கு முன்னால் ஒன்
றுகூடி வரும்படி செய்தார். அப்போது, அங்கிருந்த எல்லா ஜனங்களுக்கும்
முன்னால் யெகோவாவின் மகிமை தோன்றியது.[l]

16:14 *ஒருவேளை, "மோசேயை எதிர்த்தவர்களோடு சேர்ந்துகொண்ட ஆட்க
ளுடைய." #ஒருவேளை அந்த ஆட்கள் தன்னைக் குருட்டுத்தனமாகப் பின்பற்ற
வேண்டுமென்று மோசே எதிர்பார்ப்பதாக அவர்கள் அர்த்தப்படுத்தியிருக்கலாம்.

அதி. 16

a எண் 3:10
b எண் 16:1
c எண் 3:9, 41
d எண் 1:53, எண் 3:6, எண் 4:4, உபா 10:8
e பிலி 2:3
f யாத் 16:8, சங் 106:16
g எண் 16:1
h யாத் 16:3, எண் 14:28, 29
i யாத் 3:8, லேவி 20:24
j 1சா 12:1, 3, அப் 20:33, 2கொ 7:2
k எண் 16:2
l எண் 12:5, எண் 14:10

20 அப்போது யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், **21** “இந்தக் கூட்டத்தைவிட்டு விலகி நில்லுங்கள், இவர்களை நான் ஒரே நிமிஷத்தில் அழிக்கப்போகிறேன்”[a] என்றார். **22** உடனே அவர்கள் சாஷ்டாங்கமாக விழுந்து, “கடவுளே, உயிருள்ள எல்லாருக்கும் சுவாசத்தைத் தருகிறவரே,[b] ஒரேவொரு மனுஷன் செய்த தப்புக்காக எல்லா ஜனங்கள் மேலும் நீங்கள் கோபப்படுவீர்களா?”[c] என்று கேட்டார்கள்.

23 அதற்கு யெகோவா மோசேயிடம், **24** “கோராகு, தாத்தான், அபிராமின்[d] கூடாரங்களைவிட்டுத் தள்ளி நிற்கும்படி ஜனங்களிடம் சொல்” என்றார்.

25 பின்பு, மோசே எழுந்து தாத்தானிடமும் அபிராமிடமும் போனார். இஸ்ரவேலின் பெரியோர்களும்*[e] அவருடன் போனார்கள். **26** அவர் அங்கிருந்த ஜனங்களிடம், “தயவுசெய்து இந்த அக்கிரமக்காரர்களின் கூடாரங்களைவிட்டு விலகி நில்லுங்கள், அவர்களுடைய பொருள்கள் எதையும் தொடாதீர்கள். தொட்டால், அவர்களுடைய பாவங்களுக்காக நீங்களும் அழிந்துபோவீர்கள்” என்றார். **27** உடனே கோராகு, தாத்தான், அபிராம் ஆகியவர்களுடைய கூடாரங்களைச் சுற்றிலும் இருந்தவர்கள் விலகிப்போனார்கள். தாத்தானும் அபிராமும் தங்கள் கூடாரங்களைவிட்டு வெளியே வந்து, தங்களுடைய மனைவிகளோடும் மகன்களோடும் சிறுபிள்ளைகளோடும் வாசலில் நின்றார்கள்.

28 அப்போது மோசே, “என் இஷ்டப்படி நான் எதையும் செய்யவில்லை, யெகோவா சொன்னதைத்தான் செய்தேன். இனி நடக்கப்போவதை வைத்து அதை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். **29** எல்லாரும் இயற்கையாகச் சாவதுபோல் இந்த ஆட்கள் செத்தால், எல்லாருக்கும் கிடைக்கிற தண்டனையே இந்த ஆட்களுக்கும் கிடைத்தால், யெகோவா என்னை அனுப்பவில்லை என்று அர்த்தம்.[f] **30** ஆனால், இதுவரை யாரும் கேள்விப்படாத விதத்தில் யெகோவா இவர்களைத் தண்டித்தால், அதாவது பூமி பிளந்து இவர்களையும் இவர்களுக்குச் சொந்தமான எல்லாவற்றையும் அப்படியே விழுங்கினால், இவர்கள் உயிரோடு கல்லறைக்குள் புதைந்துபோனால், இவர்கள் யெகோவாவை மதிக்கவில்லை என்று நிச்சயம் தெரிந்துகொள்வீர்கள்” என்றார்.

31 அவர் இதையெல்லாம் பேசி முடித்தவுடனே, அவர்கள் நின்றுகொண்டிருந்த நிலம் இரண்டாகப் பிளந்தது.[g] **32** பூமி பிளந்து அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும் கோராகுவுக்குச் சொந்தமான எல்லாரையும்[h] அவர்களுடைய எல்லா பொருள்களையும் விழுங்கியது. **33** அவர்களும் அவர்களுக்குச் சொந்தமான எல்லாரும் உயிரோடு கல்லறைக்குள் புதைந்துபோனார்கள். பூமி அவர்களை மூடிக்கொண்டது. அவர்கள் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோனார்கள்.[i] **34** அவர்களைச் சுற்றியிருந்த இஸ்ரவேலர்கள் எல்லாரும் அவர்கள் போட்ட கூச்சலைக் கேட்டு, “ஐயோ! நாமும் மண்ணுக்குள் புதைந்துவிடுவோம்!” என்று அலறியடித்துக்கொண்டு ஓடினார்கள். **35** அப்போது, யெகோவாவின் முன்னிலையிலிருந்து நெருப்பு வந்து,[j] தூபம்காட்டிய 250 பேரையும் பொசுக்கியது.[k]

36 பின்பு யெகோவா மோசேயிடம், **37** “தூபக்கரண்டிகள்[l] பரிசுத்தமானவையாக இருப்பதால் அவற்றை நெருப்பிலிருந்து எடுக்கும்படி

16:25 * வே.வா., “மூப்பர்களும்.”

அதி. 16
a எண் 3:10, 38; எண் 16:45
b யோபு 12:10; பிர 3:19; பிர 12:7
c ஆதி 18:23
d எண் 16:1, 2
e எண் 11:16
f உபா 18:21, 22
g எண் 26:10; உபா 11:6; சங் 106:17
h யாத் 6:24; எண் 26:11; 1நா 6:31, 37
i யூ 11
j லேவி 10:1, 2; எண் 11:1
k எண் 16:17; எண் 26:10; சங் 106:18
l எண் 16:6, 7

குருவாகிய ஆரோனின் மகன் எலெயாசாரிடம் சொல். அதோடு, தணலை
யும் தூரமாக எடுத்துக் கொண்டுபோய்க் கொட்டச் சொல். **38** பாவம்
செய்து செத்துப்போன அந்த ஆட்களின் தூபக்கரண்டிகள் சன்னமான
தகடுகளாக அடிக்கப்பட்டு, பலிபீடத்தைச்[a] சுற்றிலும் பொருத்தப்பட
வேண்டும். அந்தத் தூபக்கரண்டிகளை அவர்கள் யெகோவாவின் முன்னி
லையில் கொண்டுவந்ததால் அவை பரிசுத்தமாகிவிட்டன. இஸ்ரவேலர்
களை எச்சரிக்கும் அடையாளமாக அவை இருக்க வேண்டும்"[b] என்றார்.
39 அதனால் குருவாகிய எலெயாசார், நெருப்பில் பொசுங்கிய ஆட்க
ளின் செம்புத் தூபக்கரண்டிகளைப் பலிபீடத்தைச் சுற்றிலும் பொருத்துவதற்
காகத் தகடுகளாக அடித்தார். **40** யெகோவா மோசேயின் மூலம் சொன்
னபடியே அவர் செய்தார். தகுதி இல்லாத யாரும், அதாவது ஆரோனின்
வம்சத்தைச் சேராத யாரும், யெகோவாவின் முன்னிலையில் தூபம்காட்டக்
கூடாது[c] என்பதையும், கோராகுவையும் அவருடைய கூட்டாளிகளையும்
போல யாரும் ஆகிவிடக் கூடாது[d] என்பதையும் அந்தத் தகடுகள் இஸ்ர
வேலர்களுக்கு ஞாபகப்படுத்தின.

41 அடுத்த நாளே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் மோசேக்கும்
ஆரோனுக்கும் எதிராக முணுமுணுக்க ஆரம்பித்தார்கள்.[e] "நீங்கள் இரண்டு
பேரும் யெகோவாவின் ஜனங்களைக் கொன்றுவிட்டீர்கள்!" என்று குற்றம்
சாட்டினார்கள். **42** மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக ஒன்றுகூ
டிய ஜனங்கள் எல்லாரும் சந்திப்புக் கூடாரத்தின் பக்கம் திரும்பியபோது,
அதன்மேல் மேகம் தங்கியிருந்தது, யெகோவாவின் மகிமை தெரிய ஆரம்
பித்தது.[f]

43 உடனே, மோசேயும் ஆரோனும் சந்திப்புக் கூடாரத்துக்கு முன்னால்
போய் நின்றார்கள்.[g] **44** யெகோவா மோசேயிடம், **45** "நீங்கள் இந்தக்
கூட்டத்தைவிட்டு விலகி நில்லுங்கள். இவர்களை நான் ஒரே நிமிஷத்
தில் அழிக்கப்போகிறேன்"[h] என்றார். அப்போது, அவர்கள் சாஷ்டாங்கமாக
விழுந்து வணங்கினார்கள்.[i] **46** அதன்பின் மோசே ஆரோனைப் பார்த்து,
"பலிபீடத்தின் தணலைத்[j] தூபக்கரண்டியில் எடுத்து, அதன்மேல் தூபப்பொ
ருளைப் போட்டு, சீக்கிரமாக ஜனங்களிடம் போய் அவர்களுக்காகப் பாவப்
பரிகாரம் செய்.[k] யெகோவாவின் கோபம் பற்றியெரிகிறது. கொள்ளை
நோய் தாக்க ஆரம்பித்துவிட்டது!" என்றார். **47** மோசே சொன்னபடியே,
ஆரோன் உடனடியாக அதை எடுத்துக்கொண்டு சபையாரின் நடுவில் ஓடி
னார். கொள்ளைநோய் ஜனங்களைத் தாக்க ஆரம்பித்திருந்ததைப் பார்த்
தார். அதனால், அவர் தூபக்கரண்டியில் தூபம்போட்டு ஜனங்களுக்காகப்
பாவப் பரிகாரம் செய்தார். **48** செத்தவர்களுக்கும் உயிருள்ளவர்களுக்
கும் நடுவில் அவர் நின்றுகொண்டே இருந்தார். கடைசியில் கொள்ளை
நோயின் தாக்குதல் ஓய்ந்தது. **49** கோராகுவினால் இறந்தவர்கள் போக,
இந்தக் கொள்ளைநோயினால் இறந்தவர்கள் 14,700 பேர். **50** கொள்ளை
நோயின் தாக்குதல் ஓய்ந்த பிறகு, சந்திப்புக் கூடாரத்தின் வாசலில் இருந்த
மோசேயிடம் ஆரோன் திரும்பி வந்தார்.

17 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "நீ இஸ்ரவேலர்களிடம் பேசி,
ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒரு கோல் என மொத்தம் 12 கோல்
களை அந்தந்த கோத்திரத் தலைவரிடமிருந்து[l] வாங்கிக்கொள். அவரவர்
பெயரை அவரவர் கோலில் எழுது. **3** ஆரோனின் பெயரை லேவியின்

அதி. 16
a யாத் 38:1
b எண் 16:5; எண் 17:10
c எண் 3:10; எண் 18:7; 2நா 26:16-18
d சங் 106:17; யூ 11
e எண் 14:2
f யாத் 16:7; எண் 14:10; எண் 16:19
g எண் 20:2, 6
h யாத் 23:20, 21; 1கொ 10:6, 10
i எண் 16:21, 22
j லேவி 6:12
k யாத் 34:9; எண் 8:19

அதி. 17
l எண் 1:4, 16

கோலில் எழுது. ஒவ்வொரு கோத்திரத் தலைவருக்கும் இருக்கிற கோலை
4 சந்திப்புக் கூடாரத்திலே, நான் உங்களைத் தவறாமல் சந்திக்கிற[a] சாட்சிப்
பெட்டிக்கு[b] முன்னால் வை. **5** நான் தேர்ந்தெடுக்கிறவரின்[c] கோல் மட்
டும் துளிர்த்து மொட்டுவிடும்படி செய்வேன். இப்படி, எனக்கு எதிராகவும்
உங்களுக்கு எதிராகவும்[d] இனி இஸ்ரவேலர்கள் முணுமுணுக்காதபடி[e] செய்
வேன்" என்றார்.

6 இவற்றை மோசே இஸ்ரவேலர்களிடம் சொன்னார். அவர்களுடைய
கோத்திரத் தலைவர்கள் எல்லாரும் ஆளுக்கு ஒரு கோல் என 12 கோல்க
ளைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவர்களுடைய கோல்களுடன்
ஆரோனின் கோலும் இருந்தது. **7** பின்பு, மோசே அந்தக் கோல்களைச்
சாட்சிப் பெட்டி வைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் யெகோவாவின் முன்னி
லையில் வைத்தார்.

8 அடுத்த நாள், சாட்சிப் பெட்டி வைக்கப்பட்டிருந்த கூடாரத்துக்குள்
மோசே போனார். அப்போது, லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஆரோ
னின் கோல் மட்டும் துளிர்த்து, மொட்டுவிட்டு, பூப்பூத்திருந்தது. அதில்
வாதுமைப் பழங்களும் இருந்தன. **9** பின்பு, மோசே அந்தக் கோல்களை
யெகோவாவின் முன்னிலையிலிருந்து எடுத்து இஸ்ரவேல் ஜனங்களிடம்
கொண்டுவந்தார். அவர்கள் அதைப் பார்த்தார்கள். பின்பு, எல்லாரும் அவ
ரவர் கோலை எடுத்துக்கொண்டார்கள்.

10 அப்போது யெகோவா மோசேயிடம், "ஆரோனின் கோலைத்[f]
திரும்பவும் சாட்சிப் பெட்டிக்கு முன்னால் வை. எனக்கு அடங்கி நடக்காத
வர்களை[g] எச்சரிக்கும் அடையாளமாக அது இருக்கும்.[h] அப்போதுதான்
அவர்கள் எனக்கு எதிராக முணுமுணுக்கவோ, அதனால் அழிந்துபோ
கவோ மாட்டார்கள்" என்றார். **11** யெகோவா கட்டளை கொடுத்தபடியே
மோசே உடனடியாகச் செய்தார். அவர் அப்படியே செய்தார்.

12 பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயிடம், "ஐயோ! நாங்கள் செத்து
விடுவோம், நாங்கள் அழிந்துவிடுவோம், நாங்கள் எல்லாருமே அழிந்துவிடு
வோம்! **13** யெகோவாவின் கூடாரத்துக்குப் பக்கத்தில் வந்தால்கூட
செத்துவிடுவோம்![i] எங்களுக்கு இப்படித்தான் சாவு வர வேண்டுமா?"[j] என்
றார்கள்.

18 பின்பு யெகோவா ஆரோனிடம், "வழிபாட்டுக் கூடாரம்[k] சம்பந்தப்
பட்ட சட்டங்களை யாராவது மீறினால், நீயும் உன் மகன்களும் உன்
தந்தைவழிக் குடும்பத்தாரும் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். குருமார்
களுக்கான சட்டங்களை யாராவது மீறினால், நீயும் உன் மகன்களும் அதற்
குப் பதில் சொல்ல வேண்டும்.[l] **2** உன் தகப்பனின் கோத்திரமான லேவி
கோத்திரத்தைச் சேர்ந்த உன் சகோதரர்களை உனக்கும் உன் மகன்களுக்
கும் ஒத்தாசையாக வைத்துக்கொள்.[m] சாட்சிப் பெட்டி வைக்கப்பட்
டுள்ள கூடாரத்தின் முன்னால் சேவை செய்வதில் அவர்கள் உங்களுக்கு
உதவியாக இருப்பார்கள்.[n] **3** நீ கொடுக்கும் பொறுப்புகளையும் வழி
பாட்டுக் கூடாரத்தின் மற்ற பொறுப்புகளையும் அவர்கள் கவனித்துக்
கொள்வார்கள்.[o] ஆனால், பரிசுத்த இடத்தின் பாத்திரங்களுக்கும் பலிபீடத்
துக்கும் பக்கத்தில் அவர்கள் வரக் கூடாது. அப்படி வந்தால் அவர்களும்
செத்துவிடுவார்கள், நீங்களும் செத்துவிடுவீர்கள்.[p] **4** அவர்கள் உன்
னோடு சேர்ந்து, சந்திப்புக் கூடாரம் சம்பந்தப்பட்ட பொறுப்புகளையும்

அதி. 17
a யாத் 25:22; யாத் 30:36; லேவி 16:2
b யாத் 34:29
c எண் 16:5
d எண் 14:2; எண் 16:13, 41
e எண் 11:1; எண் 14:27; எண் 16:11; 1கொ 10:6, 10
f எபி 9:4
g உபா 9:7; உபா 31:27
h எண் 16:38
i எண் 1:51; எண் 18:4, 7
j எண் 16:49

அதி. 18
k யாத் 25:8; லேவி 21:10–12
l யாத் 28:38; லேவி 22:9; எண் 18:23
m எண் 3:6; எண் 8:22; எண் 16:9
n எண் 1:53
o எண் 3:25, 26; எண் 3:30, 31; எண் 3:36, 37
p எண் 4:15, 20; எண் 16:39, 40

மற்ற எல்லா வேலைகளையும் செய்வார்கள். தகுதி இல்லாத* யாரும்
உங்களுக்குப் பக்கத்தில் வரக் கூடாது.[a] **5** இஸ்ரவேல் ஜனங்களை இனி
மேலும் கடவுள் தண்டிக்காமல் இருப்பதற்காக,[b] பரிசுத்த இடத்திலும் பலி
பீடத்திலும் செய்ய வேண்டிய கடமைகளை[c] நீங்கள் செய்ய வேண்டும்.
6 இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து உங்கள் சகோதரர்களாகிய லேவியர்களை
நான் பிரித்தெடுத்து உங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறேன்.[d]
சந்திப்புக் கூடாரச் சேவையைச் செய்ய அவர்கள் யெகோவாவுக்கு அர்ப்
பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.[e] **7** பலிபீடத்திலும் திரைச்சீலையின் உள்ளே
யும் குருமார்கள் செய்ய வேண்டிய வேலைகளை நீயும் உன் மகன்க
ளும் கவனித்துக்கொள்ள வேண்டும்.[f] குருத்துவச் சேவைக்கு நீங்கள்தான்
பொறுப்பு.[g] அதை நான் உங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருக்கி
றேன். தகுதி இல்லாத* யாராவது வழிபாட்டுக் கூடாரத்தின் பக்கத்தில் வந்
தால் அவன் கொல்லப்பட வேண்டும்"[h] என்றார்.

8 பின்பு யெகோவா ஆரோனிடம், "எனக்கு வருகிற காணிக்கைகளை
உன் பொறுப்பில் விடுகிறேன்.[i] இஸ்ரவேலர்கள் எனக்குக் காணிக்கையாகக்
கொடுக்கிற பரிசுத்த பொருள்கள் எல்லாவற்றிலும் ஒரு பங்கை உனக்கும்
உன் மகன்களுக்கும் தந்திருக்கிறேன். அது உங்களுடைய நிரந்தரப் பங்காக
இருக்கும்.[j] **9** தகன பலியாகச் செலுத்தப்படுகிற மிகவும் பரிசுத்தமான பலி
களில் உங்களுக்கு ஒரு பங்கு கிடைக்கும். உணவுக் காணிக்கை,[k] பாவப்
பரிகார பலி,[l] குற்ற நிவாரண பலி[m] என ஜனங்கள் எனக்குக் கொண்டுவரு
கிற எல்லா பலிகளிலும் உங்களுக்கு ஒரு பங்கு கிடைக்கும். அது உனக்
கும் உன் மகன்களுக்கும் மிகப் பரிசுத்தமானது. **10** மிகவும் பரிசுத்தமான
இடத்தில் நீ அதைச் சாப்பிட வேண்டும்.[n] எல்லா ஆண்களும் அதைச் சாப்
பிடலாம், அது பரிசுத்தமானது.[o] **11** இஸ்ரவேலர்கள் செலுத்துகிற அசை
வாட்டும் காணிக்கைகளும்,[p] அவற்றோடு கொடுக்கிற மற்ற எல்லா காணிக்
கைகளும்[q] உன்னுடையது. அவற்றை உனக்கும் உன் மகன்களுக்கும்
மகள்களுக்கும் நிரந்தரப் பங்காகத் தந்திருக்கிறேன்.[r] உன் வீட்டில் தீட்டில்
லாமல் இருக்கிற எல்லாரும் அதைச் சாப்பிடலாம்.[s]

12 யெகோவாவாகிய எனக்கு முதல் விளைச்சலிலிருந்து[t] அவர்கள்
கொடுக்கிற உயர்தரமான எண்ணெய், உயர்தரமான புதிய திராட்சமது, உயர்
தரமான தானியம் ஆகியவற்றை நான் உனக்குத் தருகிறேன்.[u] **13** அவர்க
ளுடைய நிலத்தின் முதல் விளைச்சலிலிருந்து யெகோவாவுக்குக் கொண்டு
வருகிற எல்லாமே உன்னுடையது.[v] உன் வீட்டில் தீட்டில்லாமல் இருக்கிற
எல்லாரும் அதைச் சாப்பிடலாம்.

14 இஸ்ரவேலில் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்படுகிற எல்லாமே உனக்
குத்தான் சொந்தமாக வேண்டும்.[w]

15 யெகோவாவுக்காக ஜனங்கள் அர்ப்பணிக்கிற முதல் ஆண்குழந்தை
களும் அவர்களுடைய மிருகங்களின் முதல் குட்டிகளும்[x] உனக்குத்தான்
சொந்தமாக வேண்டும். ஆனாலும், முதல் ஆண்குழந்தைகள் கண்டிப்பாக
மீட்கப்பட வேண்டும்.[y] தீட்டான மிருகங்களின் முதல் குட்டிகளும் மீட்
கப்பட வேண்டும்.[z] **16** அவை பிறந்து ஒரு மாதமோ அதற்கும் அதிகமா
கவோ ஆகியிருந்தால், பரிசுத்த* சேக்கலின்# கணக்குப்படி ஐந்து வெள்ளி

18:4, 7 *அதாவது, "லேவியனாக இல்லாத." **18:16** *வே.வா., "பரிசுத்த இடத்து."
#ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 18
a எண் 1:51
எண் 3:10
b எண் 16:46
c யாத் 30:7
லேவி 24:2, 3
எண் 3:32
d எண் 3:9, 12
எண் 8:15, 16
e எண் 8:19
f லேவி 16:
2, 12
எபி 9:3, 7
g 1சா 2:28
எபி 5:4
h எண் 3:10
எண் 16:
39, 40
i யாத் 23:19
லேவி 27:
28, 30
எண் 18:11, 26
j லேவி 7:34
எண் 5:9
k லேவி 2:3
l லேவி 5:11, 12
லேவி 6:
25, 26
m லேவி 7:1, 7
n யாத் 29:32
லேவி 6:
14, 16
லேவி 10:
12, 13
o லேவி 6:18
லேவி 7:1, 6
லேவி 14:13
லேவி 21:22
p யாத் 29:27
லேவி 7:34
q எண் 15:20
எசே 44:30
r லேவி 10:14
உபா 18:3
s லேவி 22:4-6
t நீதி 3:9
u லேவி 2:14
உபா 18:4
v யாத் 23:19
w லேவி 27:
21, 28
x யாத் 13:2
லேவி 27:26
எண் 3:13
y யாத் 13:13
z யாத் 34:20
லேவி 27:27

சேக்கல்[a] கொடுத்து அவற்றை மீட்க வேண்டும். ஒரு சேக்கல் என்பது
20 கேரா.* **17** முதலில் பிறக்கிற காளைக் கன்றையோ செம்மறியாட்டுக்
கடாக் குட்டியையோ வெள்ளாட்டுக் கடாக் குட்டியையோ மட்டும் மீட்கக்
கூடாது.[b] அவை பரிசுத்தமானவை. அவற்றின் இரத்தத்தைப் பலிபீடத்தின்
மேல் நீ தெளிக்க வேண்டும்.[c] அவற்றின் கொழுப்பைத் தகன பலியாகச்
செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனை
யாக இருக்கும்.[d] **18** அவற்றின் சதைப்பகுதி உன்னுடையது. அசைவாட்
டும் காணிக்கையாகிய மார்க்கண்டத்தையும்* வலது காலையும் போல அது
உன்னுடையது.[e] **19** இஸ்ரவேலர்கள் யெகோவாவுக்குச் செலுத்துகிற பரி
சுத்த காணிக்கைகள் எல்லாவற்றையும்[f] நான் உனக்கும் உன் மகன்களுக்கும்
மகள்களுக்கும் நிரந்தரப் பங்காகக் கொடுத்திருக்கிறேன்.[g] இது உன்னோடும்
உன் வம்சத்தாரோடும் யெகோவா செய்கிற நிரந்தர ஒப்பந்தம்"* என்றார்.

20 பின்பு யெகோவா ஆரோனிடம், "இஸ்ரவேல் தேசத்தில் உனக்கு
எந்தச் சொத்தும் இருக்காது, அவர்களுடைய நிலத்தில் எதுவும் உனக்குச்
சொந்தமாகாது.[h] இஸ்ரவேலர்களின் நடுவில் நானே உன் சொத்து.[i]

21 சந்திப்புக் கூடாரத்தில் லேவியின் வம்சத்தார் செய்கிற சேவைக்
காக, இஸ்ரவேலர்களுக்கு இருக்கிற எல்லாவற்றிலும் பத்திலொரு
பாகத்தை அவர்களுக்குச் சொத்தாகக் கொடுத்திருக்கிறேன்.[j] **22** இனி
மேல் இஸ்ரவேல் ஜனங்களில் யாரும் சந்திப்புக் கூடாரத்துக்குப் பக்கத்தில்
வரக் கூடாது. அப்படி வந்தால், அவர்கள் குற்றத்துக்கு ஆளாகி செத்துப்
போவார்கள். **23** சந்திப்புக் கூடாரச் சேவையை லேவியர்கள் மட்டும்தான்
செய்ய வேண்டும். பரிசுத்த இடத்துக்கு விரோதமாக ஜனங்கள் செய்கிற குற்
றத்துக்கு அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.[k] இஸ்ரவேலர்களின் நடு
வில் அவர்களுக்கு எந்தச் சொத்தும் இருக்கக் கூடாது. இது தலைமுறை
தலைமுறைக்கும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சட்டம்.[l] **24** யெகோ
வாவாகிய எனக்கு பத்திலொரு பாகமாக இஸ்ரவேலர்கள் கொடுக்கிற
காணிக்கைகள் எல்லாவற்றையுமே நான் லேவியர்களுக்குச் சொத்தாகக்
கொடுத்திருக்கிறேன். அதனால்தான், 'இஸ்ரவேலர்களின் நடுவில் அவர்
களுக்கு எந்தச் சொத்தும் இருக்கக் கூடாது' என்று அவர்களிடம் சொன்
னேன்"[m] என்றார்.

25 பின்பு யெகோவா மோசேயிடம், **26** "நீ லேவியர்களிடம்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'இஸ்ரவேலர்கள் கொடுக்கும் பத்தி
லொரு பாகம் உங்களுக்குக் கிடைக்கும். அதை நான் அவர்களிடமிருந்து
வாங்கி உங்களுக்குச் சொத்தாகக் கொடுத்திருக்கிறேன்.[n] நீங்கள் அந்தப் பத்
திலொரு பாகத்திலிருந்து பத்திலொரு பாகத்தை எடுத்து யெகோவாவுக்குக்
காணிக்கையாகக் கொடுக்க வேண்டும்.[o] **27** அதை உங்களுடைய காணிக்
கையாக ஏற்றுக்கொள்வேன். அதை உங்களுடைய களத்துமேட்டின் தானி
யத்தைப் போலவும்,[p] உங்களுடைய ஆலையின் திராட்சரசத்தை
அல்லது எண்ணெயைப் போலவும் ஏற்றுக்கொள்வேன். **28** இப்படி, இஸ்ர
வேலர்கள் உங்களுக்குத் தருகிற பத்திலொரு பாகத்தில் நீங்களும் யெகோ
வாவுக்குக் காணிக்கை கொடுக்க வேண்டும். அவற்றை யெகோவாவுக்
குக் காணிக்கையாக ஆரோனிடம் கொடுக்க வேண்டும். **29** உங்களுக்குக்

18:16 *ஒரு கேரா என்பது 0.57 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **18:18** *அதாவது, "நெஞ்சுப் பகுதியையும்." **18:19** *நே.மொ., "உப்பு ஒப்பந்தம்."

அதி. 18
a லேவி 27:6
b யாத் 22:30; உபா 15:19
c லேவி 17:11
d லேவி 3:16
e யாத் 29:26; லேவி 7:31, 34
f யாத் 23:19; எண் 15:18, 19; எண் 18:11, 26; எண் 31:28, 29
g 2நா 31:4
h எண் 26:62, 63; உபா 10:9; உபா 14:27; யோசு 14:3
i உபா 18:1, 2; யோசு 18:7; எசே 44:28
j லேவி 27:30; நெ 10:37; நெ 12:44; எபி 7:5
k எண் 3:6, 7; எண் 18:1
l யோசு 13:33
m உபா 10:9
n எண் 18:21; உபா 12:19
o நெ 10:38
p எண் 15:20

கொடுக்கப்படுகிற பரிசுத்த காணிக்கைகளில் மிகச் சிறந்ததை நீங்கள்
யெகோவாவுக்குக் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும்.'[a]

30 நீ அவர்களிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால், 'லேவி
யர்களாகிய உங்களுக்குக் கிடைக்கிற பொருள்களில் மிகச் சிறந்ததை
நீங்கள் காணிக்கையாகக் கொடுக்கும்போது, அவை உங்களுடைய களத்து
மேட்டிலிருந்து கிடைத்த தானியத்தைப் போலவும், உங்களுடைய ஆலை
யிலிருந்து கிடைத்த திராட்சரசத்தை அல்லது எண்ணெயைப் போலவும்
ஏற்றுக்கொள்ளப்படும். **31** நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் எந்த இடத்
தில் வேண்டுமானாலும் அதைச் சாப்பிடலாம். ஏனென்றால், அது சந்திப்புக்
கூடாரத்தில் செய்த சேவைக்காக உங்களுக்குக் கொடுக்கப்படுகிற கூலி.[b]
32 அவற்றில் மிகச் சிறந்ததைக் காணிக்கையாகக் கொடுக்கும்வரை, நீங்
கள் குற்றத்துக்கு ஆளாக மாட்டீர்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தரும் பரிசுத்த
பொருள்களை நீங்கள் அவமதிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் நிச்சயம்
சாவீர்கள்'"[c] என்றார்.

19 யெகோவா மறுபடியும் மோசேயிடமும் ஆரோனிடமும்,
2 "யெகோவாவின் சட்டம் இதுதான்: 'குறையோ ஊனமோ இல்
லாத[d] சிவப்பான இளம் பசு ஒன்றை உங்களுக்காகக் கொண்டுவரும்படி
இஸ்ரவேலர்களிடம் சொல்லுங்கள். அது இதுவரை நுகத்தடியில் பூட்டப்ப
டாததாக இருக்க வேண்டும். **3** அதை நீங்கள் வாங்கி குருவாகிய எலெ
யாசாரிடம் கொடுக்க வேண்டும். அவர் அதை முகாமுக்கு வெளியே
ஓட்டிக்கொண்டு போவார். அங்கே அவர் முன்னால் அது கொல்லப்பட
வேண்டும். **4** பின்பு, குருவாகிய எலெயாசார் அதன் இரத்தத்தில் கொஞ்
சத்தைத் தன் விரலில் தொட்டு, சந்திப்புக் கூடாரத்தின் வாசலுக்கு முன்னால்
ஏழு தடவை தெளிக்க வேண்டும்.[e] **5** பின்பு, அந்தப் பசு அவர் கண்
ணுக்கு முன்னால் சுட்டெரிக்கப்பட வேண்டும். அதன் தோல், சதை, இரத்
தம், சாணம் ஆகிய எல்லாமே சுட்டெரிக்கப்பட வேண்டும்.[f] **6** அதன்
பின், தேவதாரு மரக்கட்டையையும் மருவுக்கொத்தையும்[g] கருஞ்சிவப்பு
துணியையும் குருவானவர் எடுத்து, அந்தப் பசு எரிக்கப்படுகிற நெருப்பில்
போட வேண்டும். **7** பின்பு, அவர் தன் உடைகளைத் துவைத்து, குளிக்க
வேண்டும். அதற்குப்பின் அவர் முகாமுக்குள் வரலாம். ஆனால், அவர்
சாயங்காலம்வரை தீட்டுள்ளவராக இருப்பார்.

8 அந்தப் பசுவைச் சுட்டெரித்தவர் தன் உடைகளைத் துவைத்து,
குளிக்க வேண்டும். அவர் சாயங்காலம்வரை தீட்டுள்ளவராக இருப்பார்.

9 தீட்டில்லாத ஒருவர் அந்தப் பசுவின் சாம்பலை[h] எடுத்து, முகாமுக்கு
வெளியே சுத்தமான ஒரு இடத்தில் கொட்ட வேண்டும். சுத்திகரிப்பு நீரைத்[i]
தயாரிப்பதற்காக ஜனங்கள் அந்தச் சாம்பலை அங்கே வைத்திருக்க வேண்
டும். அந்தப் பசுதான் பாவப் பரிகார பலி. **10** அதன் சாம்பலை அள்ளு
கிறவர் தன் உடைகளைத் துவைக்க வேண்டும். அவர் சாயங்காலம்வரை
தீட்டுள்ளவராக இருப்பார்.

இதுதான் இஸ்ரவேலர்களுக்கும் அவர்களோடு வாழ்கிற மற்ற தேசத்து
ஜனங்களுக்கும் கொடுக்கப்படுகிற நிரந்தரச் சட்டம்.[j] **11** பிணத்தைத்
தொடுகிற எவனும் ஏழு நாட்கள் தீட்டுள்ளவனாக இருப்பான்.[k] **12** மூன்
றாம் நாளில் அவன் தன்னைச் சுத்திகரிப்பு நீரினால் தூய்மைப்படுத்த
வேண்டும், அப்போது ஏழாம் நாளில் அவன் சுத்தமாவான். மூன்றாம்

அதி. 18
a எண் 18:8, 12
b 1கொ 9:13
c லேவி 22:2, 15

அதி. 19
d லேவி 22:20; மல் 1:14
e எபி 9:13, 14
f லேவி 4:11, 12
g சங் 51:7
h எபி 9:13, 14
i எண் 19:13, 21
j யாத் 12:49; லேவி 24:22; எண் 15:15
k லேவி 21:1, 11; எண் 5:2; எண் 6:9; எண் 9:6; எண் 31:19

நாளில் அவன் தன்னைத் தூய்மைப்படுத்தாவிட்டால், ஏழாம் நாளில் சுத்த
மாக மாட்டான். **13** பிணத்தைத் தொடுகிறவன் தன்னைத் தூய்மைப்படுத்
தாவிட்டால், யெகோவாவின் கூடாரத்தைத் தீட்டுப்படுத்துகிறான் என்று
அர்த்தம்.[a] அதனால் அவன் கொல்லப்பட வேண்டும்.[b] சுத்திகரிப்பு நீர்[c]
அவன்மேல் தெளிக்கப்படாததால் அந்தத் தீட்டு அவன் மேலேயே இருக்
கும், அது அவனைவிட்டுப் போகாது.

14 யாராவது கூடாரத்தில் இறந்துவிட்டால் பின்பற்ற வேண்டிய சட்டம்
இதுதான்: அந்தக் கூடாரத்துக்குள் போகிறவர்களும், அதற்குள் இருந்தவர்
களும் ஏழு நாட்களுக்குத் தீட்டுள்ளவர்களாக இருப்பார்கள். **15** நன்றாக
மூடி வைக்கப்படாத எந்தப் பாத்திரமும் தீட்டுள்ளதாக இருக்கும்.[d]
16 வெளியில் இருக்கிற ஒருவன், வாளால் கொல்லப்பட்டவனையோ
வேறு விதத்தில் செத்தவனையோ ஒரு மனுஷனின் எலும்பையோ கல்ல
றையையோ தொட்டால், ஏழு நாட்களுக்குத் தீட்டுள்ளவனாக இருப்பான்.[e]
17 அவனைச் சுத்திகரிப்பதற்காக இப்படிச் செய்ய வேண்டும்: பாவப் பரி
கார பலியாகச் சுட்டெரிக்கப்பட்ட பசுவின் சாம்பலைக் கொஞ்சம் எடுத்து
ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் ஊற்றுநீரைக் கலக்க வேண்டும்.
18 அதன்பின், தீட்டில்லாத ஒருவர்[f] மருவுக்கொத்தை[g] எடுத்து, அந்தத்
தண்ணீரில் முக்கி, கூடாரத்தின்மேலும் எல்லா பாத்திரங்களின்மேலும்
அங்கு இருந்தவர்களின்மேலும் தெளிக்க வேண்டும். அதேபோல், கொல்
லப்பட்டவனையோ வேறு விதத்தில் செத்தவனையோ எலும்பையோ கல்
லறையையோ தொட்டவன்மேலும் தெளிக்க வேண்டும். **19** தீட்டில்லா
தவர் தீட்டுப்பட்டவன்மேல் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் அதைத்
தெளிக்க வேண்டும். ஏழாம் நாளில் அவனைப் பாவத்திலிருந்து சுத்திக
ரிக்க வேண்டும்.[h] அதன்பின், சுத்திகரிக்கப்படுகிறவன் தன் உடைகளைத்
துவைத்து, குளிக்க வேண்டும். சாயங்காலத்தில் அவன் சுத்தமாவான்.

20 ஆனால், தீட்டுப்பட்ட ஒருவன் தன்னைத் தூய்மைப்படுத்தாவிட்
டால் அவன் சபையில் இல்லாதபடி கொல்லப்பட வேண்டும்.[i] ஏனென்றால்,
அவன் யெகோவாவின் கூடாரத்தைத் தீட்டுப்படுத்திவிட்டான். சுத்திகரிப்பு
நீர் அவன்மேல் தெளிக்கப்படாததால் அவன் தீட்டுள்ளவன்.

21 சுத்திகரிப்பு நீரைத் தெளிப்பவரும்[j] தன் உடைகளைத் துவைக்க
வேண்டும். சுத்திகரிப்பு நீரைத் தொடுகிறவர் சாயங்காலம்வரை தீட்டுள்ள
வராக இருப்பார். இது நிரந்தரச் சட்டம். **22** தீட்டுள்ளவன் எதைத் தொட்
டாலும் அது தீட்டுப்பட்டுவிடும். அதைத் தொடுகிற எவனும் சாயங்காலம்
வரை தீட்டுள்ளவனாக இருப்பான்'"[k] என்றார்.

20 முதலாம் மாதத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் சீன் வனாந்
தரத்துக்கு வந்துசேர்ந்து, காதேசில் தங்கினார்கள்.[l] அங்குதான் மிரி
யாம்[m] இறந்துபோனாள், அங்குதான் அவள் அடக்கம் செய்யப்பட்டாள்.

2 அங்கே ஜனங்களுக்குத் தண்ணீர் கிடைக்காததால்,[n] அவர்கள்
மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடிவந்தார்கள். **3** அவர்கள்
மோசேயோடு வாக்குவாதம் செய்து,[o] "யெகோவாவின் முன்னால் எங்
கள் சகோதரர்கள் செத்தபோதே நாங்களும் செத்திருந்தால் நன்றாக
இருந்திருக்கும்! **4** யெகோவாவின் சபையாரை எதற்காக இந்த வனாந்
தரத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்தீர்கள்? நாங்களும் எங்கள் ஆடுமாடுக
ளும் இங்கே சாவதற்காகவா?[p] **5** எதற்காக எங்களை எகிப்திலிருந்து

அதி. 19
a லேவி 15:31
b லேவி 22:3; எபி 10:28
c எண் 19:9
d லேவி 11:31, 32
e எண் 19:11; எண் 31:19
f எண் 19:9
g சங் 51:7
h லேவி 14:9; எண் 19:12; எண் 31:19
i எண் 19:13
j எண் 19:18; எபி 9:9, 10; எபி 9:13, 14
k லேவி 15:4, 5

அதி. 20
l எண் 13:26; எண் 20:22; எண் 33:36; உபா 2:14
m யாத் 15:20; எண் 26:59; மீ 6:4
n யாத் 17:1
o யாத் 17:2
p யாத் 14:11; யாத் 17:3; எண் 16:13, 14; எண் 21:5

இந்தப் பயங்கரமான இடத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்தீர்கள்?[a] இங்கே
பயிர்கள், அத்தி மரங்கள், திராட்சைக் கொடிகள், மாதுளைச் செடிகள் எது
வுமே இல்லை, குடிக்கத் தண்ணீர்கூட இல்லை"[b] என்றார்கள். **6** உடனே,
மோசேயும் ஆரோனும் சபையாரைவிட்டு சந்திப்புக் கூடாரத்தின் வாச
லுக்கு வந்து, சாஷ்டாங்கமாக விழுந்தார்கள். அப்போது, யெகோவாவின்
மகிமை அவர்களுக்குத் தெரிய ஆரம்பித்தது.[c]

7 யெகோவா மோசேயிடம், **8** "உன் கையில் கோலை எடுத்துக்கொள்.
நீயும் உன் அண்ணன் ஆரோனும் ஜனங்கள் எல்லாரையும் ஒன்றுகூட்டுங்
கள். அந்தக் கற்பாறை தண்ணீரைத் தரும்படி அவர்களுடைய கண்
முன்னால் அதனிடம் பேசுங்கள். இப்படி, அந்தக் கற்பாறையிலிருந்து தண்
ணீரை வரவைத்து, அதை ஜனங்களுக்கும் ஆடுமாடுகளுக்கும் குடிக்கக்
கொடுங்கள்"[d] என்றார்.

9 யெகோவா கட்டளை கொடுத்தபடி அவர் சன்னிதியில் இருந்த
கோலை மோசே எடுத்துக்கொண்டார்.[e] **10** பின்பு, மோசேயும் ஆரோ
னும் அந்தக் கற்பாறையின் முன்னால் சபையாரை ஒன்றுகூட்டினார்கள்.
மோசே அவர்களிடம், "அடங்காதவர்களே! இந்தக் கற்பாறையிலிருந்து
நாங்கள் உங்களுக்குத் தண்ணீர் தர வேண்டுமா?" என்று சொல்லி,[f]
11 கையை ஓங்கி, அந்தக் கோலால் கற்பாறையை இரண்டு தடவை அடித்
தார். உடனே, அதிலிருந்து தண்ணீர் பாய்ந்து வந்தது. ஜனங்கள் குடித்தார்
கள், அவர்களுடைய ஆடுமாடுகளும் குடித்தன.[g]

12 பிற்பாடு யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும், "இஸ்ரவேல்
ஜனங்கள் முன்னால் நீங்கள் என்மேல் விசுவாசம் காட்டவில்லை, என்
னைப் பரிசுத்தப்படுத்தவில்லை. அதனால், நான் கொடுக்கப்போகும் தேசத்
துக்கு இந்தச் சபையாரை நீங்கள் கூட்டிக்கொண்டு போக மாட்டீர்கள்"[h]
என்றார். **13** அது மேரிபாவின்* தண்ணீர்[i] என்று அழைக்கப்பட்டது.
ஏனென்றால், அங்குதான் இஸ்ரவேலர்கள் யெகோவாவுடன் வாக்குவாதம்
செய்தார்கள். அங்குதான் அவர்களுக்கு முன்னால் கடவுள் தன்னைப் பரி
சுத்தப்படுத்தினார்.

14 மோசே காதேசிலிருந்து ஏதோம் ராஜாவிடம் ஆட்களை அனுப்பி,[j]
"உங்கள் சகோதரன் இஸ்ரவேல்[k] சொல்லி அனுப்பும் செய்தி இதுதான்:
'நாங்கள் இதுவரை பட்ட கஷ்டமெல்லாம் உங்களுக்கே நன்றாகத் தெரியும்.
15 எங்கள் முன்னோர்கள் எகிப்துக்குப் போனார்கள்.[l] அங்குதான் நாங்கள்
பல வருஷங்கள் குடியிருந்தோம்.[m] ஆனால், எங்களையும் எங்கள்
முன்னோர்களையும் எகிப்தியர்கள் கொடுமைப்படுத்தினார்கள்.[n] **16** நாங்
கள் யெகோவாவிடம் கதறினோம்.[o] அவர் அதைக் கேட்டு, ஒரு தூதரை
அனுப்பி[p] எங்களை எகிப்திலிருந்து கொண்டுவந்திருக்கிறார். இப்போது
நாங்கள் உங்களுடைய தேசத்தின் எல்லையிலுள்ள காதேஸ் நகரத்தில்
இருக்கிறோம். **17** உங்கள் தேசத்தின் வழியாகப் போக தயவுசெய்து எங்
களுக்கு அனுமதி கொடுங்கள். உங்கள் வயல்கள் வழியாகவோ திராட்சைத்
தோட்டங்கள் வழியாகவோ நாங்கள் போக மாட்டோம். எந்தக் கிணற்றி
லிருந்தும் தண்ணீர் குடிக்க மாட்டோம். வலது பக்கமோ இடது பக்கமோ
திரும்பாமல் நேராக ராஜ பாதையிலேயே நடந்து, உங்கள் தேசத்தைக்
கடந்துபோவோம்'"[q] என்று சொன்னார்.

20:13 * மேரிபா என்பதன் அர்த்தம், "வாக்குவாதம்."

அதி. 20
a உபா 8:14, 15
b உபா 8:7, 8
c யாத் 16:10, எண் 14:10
d யாத் 17:5, 6; சங் 78:15; சங் 105:41; சங் 114:8; ஏசா 48:21
e யாத் 7:12, 19; எண் 17:10
f சங் 106:32, 33
g 1கொ 10:1, 4
h எண் 27:12-14; உபா 1:37; உபா 3:26; உபா 32:51, 52; உபா 34:4; யோசு 1:2
i சங் 106:32, 33
j நியா 11:17
k ஆதி 36:8; உபா 2:4; உபா 23:7
l ஆதி 46:6
m ஆதி 15:13; யாத் 12:40
n யாத் 1:11, 14
o யாத் 2:23; யாத் 3:7
p யாத் 14:19; யாத் 23:20; யாத் 33:2
q எண் 21:21, 22; உபா 2:26, 27

18 அதற்கு ஏதோம் ராஜா, “எங்களுடைய தேசத்தின் வழியாக நீங்கள்
போகக் கூடாது, மீறினால் வாளுடன் உங்களைச் சந்திப்பேன்” என்றான்.
19 அதற்கு இஸ்ரவேலர்கள், “நாங்கள் நெடுஞ்சாலை வழியாகப் போய்க்
கொள்கிறோம். நாங்களும் எங்கள் ஆடுமாடுகளும் உங்கள் தண்ணீ
ரைக் குடித்தால், அதற்கான விலையைக் கொடுத்துவிடுகிறோம்.[a] உங்கள்
தேசத்தின் வழியாக நடந்து போவதற்கு மட்டும் அனுமதியுங்கள்,
வேறொன்றும் வேண்டாம்”[b] என்றார்கள். **20** ஆனாலும் அவன், “நீங்கள்
இந்த வழியாகப் போகக் கூடாது” என்றான்.[c] அதுமட்டுமல்ல, அவர்
களுக்கு எதிராக ஒரு பெரிய கூட்டத்தோடும் பலம்படைத்த படையோடும்
வந்தான். **21** தன் தேசத்தின் வழியாகப் போக இஸ்ரவேலர்களை ஏதோம்
ராஜா அனுமதிக்காததால் இஸ்ரவேலர்கள் அவனைவிட்டு விலகிப்
போனார்கள்.[d]

22 இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் காதேசைவிட்டுப் புறப்பட்டு ஓர்
என்ற மலைக்கு வந்துசேர்ந்தார்கள்.[e] **23** ஏதோம் தேசத்தின் எல்லையிலி
ருந்த அந்த மலையில் யெகோவா மோசேயிடமும் ஆரோனிடமும்,
24 “ஆரோன் இறந்துபோவான்.*[f] இஸ்ரவேலர்களுக்கு நான் கொடுக்
கப்போகிற தேசத்துக்குள் அவன் போக மாட்டான். மேரிபாவின் தண்ணீர்
விஷயத்தில் நீங்கள் இரண்டு பேரும் என் கட்டளையை மீறிவிட்டீர்கள்.[g]
25 ஆரோனையும் அவனுடைய மகன் எலெயாசாரையும் நீ கூட்டிக்
கொண்டு இந்த ஓர் மலைமேல் ஏறி வா. **26** ஆரோனுடைய குருத்
துவ அங்கிகளைக் கழற்றி[h] அவனுடைய மகன் எலெயாசாருக்குப்[i] போட்
டுவிடு. அங்கே ஆரோன் இறந்துபோவான்” என்றார்.

27 யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார். ஜனங்
களுடைய கண் முன்னால் ஓர் என்ற மலைமேல் அவர்கள் ஏறினார்
கள். **28** அங்கு ஆரோனுடைய குருத்துவ அங்கிகளைக் கழற்றி அவரு
டைய மகன் எலெயாசாருக்கு மோசே போட்டுவிட்டார். அதன்பின், அந்த
மலை உச்சியில் ஆரோன் இறந்துபோனார்.[j] பின்பு, மோசேயும் எலெயாசா
ரும் மலையிலிருந்து இறங்கி வந்தார்கள். **29** ஆரோன் இறந்துபோனதை
இஸ்ரவேல் ஜனங்கள் தெரிந்துகொண்டபோது, அவர்கள் எல்லாரும் அவ
ருக்காக 30 நாட்கள் துக்கம் அனுசரித்தார்கள்.[k]

21 கானானைச் சேர்ந்த ஆராத் நகரத்தின் ராஜா,[l] நெகேபில் வாழ்ந்து
வந்தான். அத்தாரிம் வழியாக இஸ்ரவேலர்கள் வருவதை அவன்
கேள்விப்பட்டபோது, உடனே போய் அவர்களைத் தாக்கினான். அவர்க
ளில் சிலரைப் பிடித்துக்கொண்டு போனான். **2** அதனால் இஸ்ரவேலர்கள்
யெகோவாவிடம், “இந்த எதிரிகளை நீங்கள் எங்கள் கையில் கொடுத்
தால், அவர்களுடைய நகரங்களை நாங்கள் நிச்சயம் அழிப்போம்” என்று
சொல்லி நேர்ந்துகொண்டார்கள். **3** இஸ்ரவேலர்கள் நேர்ந்துகொண்டதை
யெகோவா கேட்டு, கானானியர்களை அவர்கள் கையில் கொடுத்தார்.
அவர்கள் அந்த கானானியர்களையும் அவர்களுடைய நகரங்களையும்
அடியோடு அழித்தார்கள். அதனால் அந்த இடத்துக்கு ஓர்மா*[m] என்று
பெயர் வைத்தார்கள்.

20:24 * நே.மொ., “தன் முன்னோர்களுடன் சேர்க்கப்படுவான்.” எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன. **21:3** * அர்த்தம், “அடியோடு அழித்தல்.”

அதி. 20
a உபா 2:5, 6
b உபா 2:26, 28
c நியா 11:17
d உபா 2:8; நியா 11:18
e எண் 21:4; எண் 33:37
f எண் 33:38; உபா 32:50
g எண் 20:12; உபா 32: 51, 52
h யாத் 28:2; யாத் 29:29
i யாத் 6:23; எண் 4:16
j எண் 33:39; உபா 10:6; உபா 32:50
k உபா 34:8

அதி. 21
l எண் 33:40; யோசு 12: 7, 14
m எண் 14:45

4 பின்பு, அவர்கள் ஓர் என்ற மலையிலிருந்து[a] செங்கடலுக்குப் போகும்
வழியாகத் தொடர்ந்து பயணம் செய்தார்கள். இப்படி, ஏதோம் தேசத்தைச்
சுற்றிப் பயணம் செய்ததால்[b] சோர்ந்துபோனார்கள். **5** அதனால், கடவு
ளுக்கும் மோசேக்கும் எதிராக அவர்கள் முணுமுணுத்துக்கொண்டே இருந்
தார்கள்.[c] "எங்களைச் சாகடிக்கவா எகிப்திலிருந்து இந்த வனாந்தரத்துக்குக்
கொண்டுவந்தீர்கள்? இங்கே உணவும் இல்லை, தண்ணீரும் இல்லை.[d]
இந்தப் பாழாய்ப்போன மன்னாவைப் பார்த்தாலே வெறுப்பாக இருக்
கிறது"[e] என்றார்கள். **6** அதனால், அவர்களுக்கு நடுவே விஷப்பாம்பு
களை யெகோவா அனுப்பினார். அந்தப் பாம்புகள் கடித்ததால் இஸ்ரவேலர்
களில் ஏராளமானவர்கள் செத்துப்போனார்கள்.[f]

7 அதனால் ஜனங்கள் மோசேயிடம் வந்து, "நாங்கள் பாவம் செய்துவிட்
டோம், யெகோவாவுக்கும் உங்களுக்கும் விரோதமாகப் பேசிவிட்டோம்.[g]
இந்தப் பாம்புகளை விரட்டச் சொல்லி எங்களுக்காக யெகோவாவிடம்
கெஞ்சுங்கள்" என்று சொன்னார்கள். மோசே ஜனங்களுக்காகக் கடவுளி
டம் கெஞ்சினார்.[h] **8** அப்போது யெகோவா மோசேயிடம், "விஷப்பாம்
பின் உருவத்தைச் செய்து ஒரு கம்பத்தில் மாட்டி வை. பாம்பு கடித்த
வர்கள் அதைப் பார்த்தால் உயிர்பிழைப்பார்கள்" என்றார். **9** உடனடியாக
மோசே செம்பினால் ஒரு பாம்பைச் செய்து[i] அதைக் கம்பத்தில் மாட்டி
வைத்தார்.[j] பாம்பு கடித்தவர்கள் அந்தச் செம்புப் பாம்பைப் பார்த்தபோது
உயிர்பிழைத்தார்கள்.[k]

10 அதன்பின் இஸ்ரவேலர்கள் புறப்பட்டுப் போய் ஓபோத்தில் முகாம்
போட்டார்கள்.[l] **11** பின்பு ஓபோத்திலிருந்து புறப்பட்டுப் போய், மோவா
புக்கு எதிரில் கிழக்குப் பக்கமாக இருக்கிற வனாந்தரத்திலே, இய்யா-அபாரீ
மில் முகாம்போட்டார்கள்.[m] **12** அடுத்ததாக, அங்கிருந்து போய் சேரெத்
பள்ளத்தாக்கின்*[n] பக்கத்தில் முகாம்போட்டார்கள். **13** பின்பு அங்கிருந்து
போய், எமோரியர்களின் எல்லையிலிருந்து தொடங்கும் வனாந்தரத்தி
லுள்ள அர்னோன் பிரதேசத்தில்[o] முகாம்போட்டார்கள். அந்த அர்னோன்
மோவாபுக்கும் எமோரியர்களின் தேசத்துக்கும் இடையில் இருக்கிற மோவா
பின் எல்லை. **14** அதனால்தான், யெகோவாவின் போர்கள் என்ற புத்தகம்
இவ்வாறு சொல்கிறது: "சூப்பாவிலுள்ள வாகேப், அர்னோனின் பள்ளத்தாக்
குகள்,* **15** அவற்றில் ஓடுகிற கிளை ஆறுகள். இவை ஆர் நகரம்வரை
போய் மோவாபின் எல்லையைத் தொடுகின்றன."

16 அடுத்ததாக, அவர்கள் பேயேர் என்ற இடத்துக்கு வந்துசேர்ந்தார்
கள். அங்கிருந்த கிணற்றைப் பற்றித்தான் யெகோவா மோசேயிடம், "ஜனங்
களை ஒன்றுகூடிவரச் சொல், நான் அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன்"
என்று சொன்னார்.

17 அந்தச் சமயத்தில் இஸ்ரவேலர்கள்,

"கிணறே, நீ ஊற்றெடு! ஜனங்களே, பாடுங்கள்!
18 அதிகாரக்கோலைப் பிடித்துக்கொண்டு அதிபதிகள் தோண்டிய கிணறு
நீதானே!
கோலை எடுத்துக்கொண்டு தலைவர்கள் வெட்டிய கிணறு நீதானே!"
என்று பாடினார்கள்.

21:12 * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்." **21:14** * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்குகள்."

அதி. 21
a எண் 33:41
b எண் 20:21; உபா 2:8; நியா 11:18
c யாத் 14:11; யாத் 15:24; எண் 16:13
d எண் 20:5
e யாத் 16:15; எண் 11:6; சங் 78:24, 25
f 1கொ 10:6, 9
g சங் 78:34
h யாத் 32:11
i 2ரா 18:1, 4
j யோவா 3:14, 15
k யோவா 6:40
l எண் 33:43
m எண் 33:44
n உபா 2:13
o எண் 22:36; நியா 11:18

பின்பு, வனாந்தரத்தைவிட்டு மாத்தனா என்ற இடத்துக்குப் போனார்கள்.
19 அதன்பின், மாத்தனாவிலிருந்து நகாலியேலுக்கும் நகாலியேலிலிருந்து
பாமோத்துக்கும்[a] போனார்கள். **20** பாமோத்திலிருந்து மோவாப் தேசத்தி
லுள்ள[b] பள்ளத்தாக்குக்குப் போனார்கள். அது எஷிமோனை* பார்த்தபடி[c]
பிஸ்காவின் உச்சியில்[d] இருக்கிறது.

21 இஸ்ரவேலர்கள் எமோரியர்களின் ராஜாவான சீகோனிடம் ஆட்
களை அனுப்பி,[e] **22** "உங்கள் தேசத்தின் வழியாகப் போக எங்களுக்கு
அனுமதி கொடுங்கள். அங்குள்ள எந்த வயலிலும் திராட்சைத் தோட்டத்தி
லும் நாங்கள் கால்வைக்க மாட்டோம். எந்தக் கிணற்றிலிருந்தும் தண்ணீர்
குடிக்க மாட்டோம். நேராக ராஜ பாதையில் நடந்து உங்கள் தேசத்தைக்
கடந்துபோவோம்"[f] என்று சொன்னார்கள். **23** ஆனால், சீகோன் தன்னு
டைய தேசத்தின் வழியாகப் போக இஸ்ரவேலர்களை அனுமதிக்கவில்லை.
அவன் தன்னுடைய ஆட்கள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவே
லர்களுக்கு எதிராக வனாந்தரத்திலே போர் செய்யக் கிளம்பினான். அவன்
யாகாசுக்குப் போய், அங்கே இஸ்ரவேலர்களோடு போர் செய்தான்.[g]
24 ஆனால், இஸ்ரவேலர்கள் அவனை வாளால் வீழ்த்தி,[h] அர்னோனிலி
ருந்து[i] யாபோக் வரையுள்ள[j] அவன் தேசத்தைக் கைப்பற்றினார்கள்.[k]
யாபோக் அம்மோனியர்களின் தேசத்துக்குப் பக்கத்தில் இருந்தது. ஆனால்,
யாசேர்[l] அம்மோனியர்களின் எல்லையாக இருந்ததால்[m] அதைத் தாண்டி
அவர்கள் போகவில்லை.

25 எமோரியர்களின் இந்த எல்லா நகரங்களையும் இஸ்ரவேலர்கள்
கைப்பற்றி அவற்றில் குடியிருக்க ஆரம்பித்தார்கள்.[n] அவர்கள் எஸ்போ
னிலும் அதன் சிற்றூர்களிலும்* வாழத் தொடங்கினார்கள். **26** இந்த எஸ்
போன், எமோரியர்களின் ராஜாவான சீகோனின் நகரம். சீகோன், மோவா
பின் ராஜாவுடன் போர் செய்து, அர்னோன்வரை அவனுடைய தேசத்தைக்
கைப்பற்றியிருந்தான். **27** இதனால்தான் இப்படிக் கேலியாகச் சொல்வது
ஜனங்களிடையே வழக்கமானது:

"எஸ்போனுக்கு வாருங்கள்.
சீகோனின் நகரத்தைக் கட்டுங்கள், அதை எடுத்து நிறுத்துங்கள்.
28 எஸ்போனிலிருந்து நெருப்பு வந்தது, சீகோனின் நகரிலிருந்து தீப்பொறி
பறந்தது.
அது மோவாபின் ஆர் நகரைச் சுட்டெரித்தது, அர்னோன் மேடுகளின்
அதிபதிகளைப் பொசுக்கியது.
29 மோவாபே, உனக்குக் கேடுதான் வரும்! கேமோஷ் பக்தர்களே,[o]
உங்களுக்கு அழிவுதான் வரும்!
கேமோஷ் தன் பக்தர்களை அகதிகளாக்கிவிட்டான்!
பக்தைகளை எமோரிய ராஜா சீகோனிடம் பிடித்துக் கொடுத்துவிட்டான்!
30 அவர்கள்மேல் அம்பு எறிவோம்.
எஸ்போன் நகரம் தீபோன்வரை[p] தரைமட்டமாகும்.
அதை நோப்பாவரை நாம் பாழாக்குவோம்.
மேதேபா[q] வரையில் தீ பரவும்."

21:20 *அல்லது, "வனாந்தரத்தை." **21:25** *வே.வா, "அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும்."

அதி. 21
a யோசு 13:15, 17
b எண் 33:49
c எண் 23:28
d உபா 3:27; உபா 34:1
e உபா 2:26-28
f எண் 20:14, 17
g உபா 2:30-35; உபா 29:7; நியா 11:19, 20
h சங் 135:10, 11
i எண் 21:13; உபா 3:16
j நியா 11:21, 22
k எண் 32:33; நெ 9:22
l எண் 32:1; 1நா 6:77, 81
m யோசு 12:1, 2
n ஆதி 10:15, 16; ஆதி 15:16; யாத் 3:8; உபா 7:1
o நியா 11:23, 24; 1ரா 11:7; 2ரா 23:13
p யோசு 13:15, 17
q யோசு 13:8, 9

31 இப்படி, இஸ்ரவேலர்கள் எமோரியர்களின் தேசத்தில் குடியிருக்க
ஆரம்பித்தார்கள். **32** பின்பு, யாசேர் நகரத்தை[a] உளவு பார்க்க சில
ஆட்களை மோசே அனுப்பினார். இஸ்ரவேலர்கள் அதன் சிற்றூர்களைக்
கைப்பற்றி, அங்கிருந்த எமோரியர்களைத் துரத்தியடித்தார்கள். **33** அதன்
பின் அவர்கள் அங்கிருந்து திரும்பி, பாசானுக்குப் போகும் சாலை வழி
யாகப் போனார்கள். அப்போது, அவர்களோடு போர் செய்வதற்காக
பாசானின் ராஜாவாகிய ஓக்[b] தன்னுடைய ஆட்கள் எல்லாரையும் கூட்
டிக்கொண்டு எத்ரேய்க்கு வந்தான்.[c] **34** அப்போது யெகோவா மோசேயி
டம், "அவனைப் பார்த்துப் பயப்படாதே.[d] அவனையும் அவனுடைய ஆட்
கள் எல்லாரையும் அவனுடைய தேசத்தையும் நான் உன்னுடைய கையில்
கொடுப்பேன்.[e] எஸ்போனில் வாழ்ந்துவந்த எமோரியர்களின் ராஜாவாகிய
சீகோனுக்குச் செய்தது போலவே அவனுக்கும் நீ செய்வாய்"[f] என்று சொன்
னார். **35** அவர் சொன்னபடியே, இஸ்ரவேலர்கள் அவனையும் அவனு
டைய மகன்களையும் அவனுடைய ஆட்கள் எல்லாரையும் ஒருவர்விடா
மல் வெட்டி வீழ்த்தினார்கள்.[g] அதன்பின், அவர்கள் அந்தத் தேசத்தைச்
சொந்தமாக்கிக்கொண்டார்கள்.[h]

22 பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் புறப்பட்டுப் போய் மோவாப் பாலை
நிலத்தில் முகாம்போட்டார்கள். அது யோர்தானுக்கு இக்கரையில்,
எரிகோவுக்கு எதிரில் இருந்தது.[i] **2** எமோரியர்கள்மேல் இஸ்ரவேலர்கள்
நடத்திய தாக்குதல்கள் எல்லாவற்றையும் சிப்போரின் மகன் பாலாக்[j] கேள்
விப்பட்டிருந்தான். **3** அதோடு, இஸ்ரவேலர்கள் ஏராளமாக இருந்ததால்,
அவர்களை நினைத்து அவனுடைய ஜனங்களான மோவாபியர்கள் மிகவும்
பயந்தார்கள், சொல்லப்போனால் கதிகலங்கினார்கள்.[k] **4** அதனால், அவர்
கள் மீதியான் தேசத்துப் பெரியோர்களிடம்,*[l] "காட்டிலுள்ள புல்லை மாடு
கள் மேய்ந்துவிடுவதுபோல், இந்த ஜனங்கள் நம்மைச் சுற்றியிருக்கிற எல்
லாவற்றையும் மேய்ந்துவிடுவார்கள் போலிருக்கிறதே" என்றார்கள்.

சிப்போரின் மகன் பாலாக் அந்தச் சமயத்தில் மோவாப் தேசத்தின் ராஜா
வாக இருந்தான். **5** பெயோரின் மகன் பிலேயாமைக்[m] கூட்டிக்கொண்டு
வருவதற்காக பாலாக் தன்னுடைய தூதுவர்களை அனுப்பினான். பிலேயாமு
டைய தேசத்தின் ஆற்றுக்கு* பக்கத்தில் இருக்கிற பெத்தூருக்கு அவர்களை
அனுப்பி, "எகிப்திலிருந்து ஒரு பெரிய கூட்டமே வந்திருக்கிறது. தேசமெங்
கும் அவர்கள் பரவியிருக்கிறார்கள்,[n] என் எதிரிலேயே குடியிருக்கிறார்கள்.
6 அவர்கள் என்னைவிட பலசாலிகள். அதனால், தயவுசெய்து நீங்கள்
வந்து எனக்காக அவர்களைச் சபியுங்கள்.[o] அப்போது ஒருவேளை நான்
அவர்களைத் தோற்கடித்து, இந்தத் தேசத்தைவிட்டுத் துரத்தியடிக்க முடியும்.
ஏனென்றால், நீங்கள் யாரை ஆசீர்வதிக்கிறீர்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்
படுவார்கள், யாரைச் சபிக்கிறீர்களோ அவர்கள் சபிக்கப்படுவார்கள் என்பது
எனக்கு நன்றாகத் தெரியும்" என்று சொல்லச் சொன்னான்.

7 அதனால், மோவாப் தேசத்துப் பெரியோர்களும் மீதியான் தேசத்
துப் பெரியோர்களும், சபிப்பதற்கான* கூலியை எடுத்துக்கொண்டு பிலே
யாமிடம்[p] போனார்கள். பாலாக் சொல்லி அனுப்பிய செய்தியை அவனி
டம் சொன்னார்கள். **8** அதற்கு அவன், "இன்றைக்கு ராத்திரி இங்கேயே

22:4 * வே.வா., "மூப்பர்களிடம்." **22:5** * அநேகமாக, "யூப்ரடிஸ் ஆற்றுக்கு." **22:7** * வே.வா., "குறிசொல்வதற்கான."

அதி. 21
a எண் 32:1
b உபா 3:11; உபா 4:47; யோசு 13:8, 12
c உபா 3:1; உபா 3:8, 10
d உபா 20:3
e யாத் 23:27; உபா 7:24
f உபா 3:2; சங் 135:10, 11
g உபா 3:3
h யோசு 12:4-6

அதி. 22
i எண் 33:48
j யோசு 24:9; நியா 11:25
k யாத் 15:15; உபா 2:25
l எண் 31:7, 8; யோசு 13:15, 21
m உபா 23:3, 4; யோசு 13:22; 2பே 2:15
n ஆதி 13:14, 16
o எண் 23:7; யோசு 24:9; நெ 13:1, 2
p 2பே 2:15; யூ 11

தங்கியிருங்கள். யெகோவா எனக்கு என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டு
விட்டு உங்களுக்குச் சொல்கிறேன்” என்றான். அதனால், மோவாபின் அதி
காரிகள் பிலேயாமுடன் தங்கினார்கள்.

9 கடவுள் பிலேயாமுக்குத் தோன்றி,[a] “உன்னோடு இருக்கிற இந்த ஆட்
கள் யார்?” என்று கேட்டார். **10** அதற்கு பிலேயாம் உண்மைக் கடவுளி
டம், “மோவாபின் ராஜாவும் சிப்போரின் மகனுமாகிய பாலாக் இவர்களை
என்னிடம் அனுப்பி, **11** ‘எகிப்திலிருந்து ஒரு பெரிய கூட்டமே வந்தி
ருக்கிறது. தேசமெங்கும் அவர்கள் பரவியிருக்கிறார்கள். எனக்காக நீங்கள்
வந்து அவர்களைச் சபியுங்கள்.[b] அப்போது ஒருவேளை நான் அவர்க
ளோடு போர் செய்து அவர்களைத் துரத்தியடிக்க முடியும்’ என்று சொல்
லியிருக்கிறான்” என்றான். **12** அதற்குக் கடவுள் பிலேயாமிடம், “நீ இந்த
ஆட்களுடன் போகக் கூடாது. அந்த ஜனங்களைச் சபிக்கவும் கூடாது,
அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்”[c] என்றார்.

13 பிலேயாம் காலையில் எழுந்து பாலாக்கின் அதிகாரிகளிடம்,
“நீங்கள் உங்களுடைய தேசத்துக்குப் போங்கள், உங்களுடன் வருவ
தற்கு யெகோவா எனக்கு அனுமதி தரவில்லை” என்றான். **14** அதனால்,
மோவாபின் அதிகாரிகள் கிளம்பி பாலாக்கிடம் வந்து, “பிலேயாம் எங்க
ளோடு வர முடியாதென்று சொல்லிவிட்டார்” என்றார்கள்.

15 உடனே பாலாக் இன்னும் நிறைய அதிகாரிகளை, அதுவும் பெரிய
பெரிய அதிகாரிகளை அனுப்பினான். **16** அவர்கள் பிலேயாமிடம்
போய், “சிப்போரின் மகன் பாலாக் உங்களிடம் இப்படிச் சொல்லச் சொன்
னார்: ‘தயவுசெய்து வாருங்கள், வராமல் மட்டும் இருந்துவிடாதீர்கள்.
17 நான் உங்களை ரொம்பவே கௌரவப்படுத்துவேன், நீங்கள் எதைச்
செய்யச் சொன்னாலும் செய்வேன். தயவுசெய்து வந்து எனக்காக இந்த
ஜனங்களைச் சபியுங்கள்’” என்றார்கள். **18** ஆனால் பிலேயாம் பாலாக்
கின் ஊழியர்களிடம், “எனக்காக பாலாக் தன்னுடைய மாளிகையையே
கொடுத்தாலும், அதில் வெள்ளியையும் தங்கத்தையும் கொட்டிக் கொடுத்
தாலும், என் கடவுளாகிய யெகோவாவின் கட்டளைக்கு விரோதமாக என்
னால் ஒன்றும் செய்ய முடியாது. சின்ன விஷயமோ பெரிய விஷயமோ
எதையும் செய்ய முடியாது.[d] **19** ஆனால், இன்றைக்கு ராத்திரியும் தயவு
செய்து இங்கே தங்கியிருங்கள், யெகோவா என்னிடம் வேறெதாவது
சொல்கிறாரா என்று பார்க்கலாம்” என்றான்.[e]

20 அன்றைக்கு ராத்திரி கடவுள் பிலேயாமிடம் தோன்றி, “இந்த ஆட்
கள் உன்னைக் கூட்டிக்கொண்டு போக வந்திருந்தால், அவர்களுடன் போ.
ஆனால், நான் சொல்லச் சொல்வதை மட்டும்தான் நீ சொல்ல வேண்டும்”[f]
என்றார். **21** பிலேயாம் காலையில் எழுந்து, தன்னுடைய கழுதைமேல்
சேணம்* வைத்து, மோவாபின் அதிகாரிகளோடு புறப்பட்டான்.[g]

22 ஆனாலும், அவன் போனதால் கடவுள் அவன்மேல் மிகவும்
கோபப்பட்டார். பிலேயாம் தன்னுடைய வேலைக்காரர்கள் இரண்டு
பேரைக் கூட்டிக்கொண்டு, கழுதையின் மேல் ஏறிப்போனான். அப்போது,
யெகோவாவின் தூதர் அவனுக்கு எதிராக வந்து வழியில் நின்றார்.
23 உருவிய வாளுடன் யெகோவாவின் தூதர் வழியில் நிற்பதை அந்தக்

22:21 *சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப்
போடப்படும் தோலினால் ஆன இருக்கை.

அதி. 22
a எண் 22:20
b எண் 22:5, 6; எண் 23:7, 11; எண் 24:10
c ஆதி 12:1-3; ஆதி 22:15, 17; உபா 33:29
d எண் 24:13
e எண் 22:8
f எண் 22:35; எண் 23:11, 12
g 2பே 2:15; யூ 11

கழுதை பார்த்தபோது, வழியைவிட்டு விலகி வயலுக்குள் போக முயற்சி
செய்தது. கழுதையை மறுபடியும் வழிக்குக் கொண்டுவருவதற்காக பிலே
யாம் அதை அடித்தான். **24** அப்போது, இரண்டு திராட்சைத் தோட்
டங்களுக்கு நடுவிலிருந்த குறுகிய பாதையில் யெகோவாவின் தூதர் நின்று
கொண்டார். அதன் இரண்டு பக்கங்களிலும் கற்சுவர்கள் இருந்தன.
25 அந்தக் கழுதை யெகோவாவின் தூதரைப் பார்த்தபோது, மதிலோடு
மதிலாக நெருக்கிக்கொண்டு போனது. அதனால், பிலேயாமின் கால் அந்
தச் சுவரில் நசுங்கியது. அவன் மறுபடியும் அதை அடித்தான்.

26 யெகோவாவின் தூதர் மீண்டும் அங்கிருந்து போய், அந்தக்
கழுதை வலது பக்கமோ இடது பக்கமோ திரும்ப முடியாதபடி ஒரு குறுக
லான இடத்தில் நின்றுகொண்டார். **27** யெகோவாவின் தூதரைப் பார்த்த
போது அந்தக் கழுதை அப்படியே உட்கார்ந்துகொண்டது. அதனால்
பிலேயாம் ஆத்திரமடைந்து, தன்னுடைய தடியால் கழுதையைப் போட்டு
அடித்தான். **28** கடைசியில், யெகோவா அந்தக் கழுதையைப் பேச வைத்
தார்.[a] அது பிலேயாமிடம், "இப்படி என்னை மூன்று தடவை அடிப்பதற்கு[b]
நான் உங்களுக்கு என்ன செய்தேன்?" என்று கேட்டது. **29** அதற்கு பிலே
யாம் அந்தக் கழுதையைப் பார்த்து, "நீ என்னை முட்டாளாக்குகிறாய். என்
கையில் ஒரு வாள் மட்டும் இருந்திருந்தால், உன்னைக் கொன்றே போட்டி
ருப்பேன்!" என்றான். **30** அதற்கு அந்தக் கழுதை, "உங்கள் வாழ்நாளெல்
லாம் நான்தானே உங்களைச் சுமந்து வந்திருக்கிறேன்? இதற்கு முன்பு எப்
போதாவது இப்படிச் செய்திருக்கிறேனா?" என்று கேட்டது. அதற்கு அவன்,
"இல்லை!" என்றான். **31** அப்போது யெகோவா பிலேயாமின் கண்களைத்
திறந்தார்.[c] உருவிய வாளுடன் யெகோவாவின் தூதர் நிற்பதை அவன்
பார்த்தான். உடனே, சாஷ்டாங்கமாக விழுந்தான்.

32 அப்போது யெகோவாவின் தூதர் அவனிடம், "ஏன் உன்னுடைய
கழுதையை மூன்று தடவை அடித்தாய்? இதோ! உனக்கு எதிராக நான் வந்
திருக்கிறேன். நீ என் விருப்பத்துக்கு நேர்மாறாகப் போய்க்கொண்டிருக்கி
றாய்.[d] **33** உன் கழுதை என்னைப் பார்த்து மூன்று தடவை விலகிப் போக
முயற்சி செய்தது.[e] அது மட்டும் விலகிப் போகாமல் இருந்திருந்தால், நான்
உன்னைக் கொன்றிருப்பேன். அதை உயிரோடு விட்டிருப்பேன்" என்றார்.
34 அதற்கு பிலேயாம் யெகோவாவின் தூதரிடம், "நான் பாவம் செய்துவிட்
டேன். என்னைச் சந்திப்பதற்காக நீங்கள்தான் வழியில் நின்றுகொண்டிருந்
தீர்கள் என்று எனக்குத் தெரியாது. உங்களுக்குப் பிடிக்காவிட்டால், நான்
திரும்பிப் போய்விடுகிறேன்" என்றான். **35** அதற்கு யெகோவாவின் தூதர்
பிலேயாமிடம், "நீ அந்த ஆட்களுடன் போ. ஆனால், நான் சொல்லச்
சொல்வதை மட்டும்தான் நீ சொல்ல வேண்டும்" என்றார். அதனால், பாலாக்
கின் அதிகாரிகளுடன் பிலேயாம் போனான்.

36 பிலேயாம் வருவதை பாலாக் கேள்விப்பட்டதுமே, அவனைச் சந்
திக்க தன்னுடைய தேசத்தின் எல்லையில் இருந்த மோவாபின் நகரத்துக்
குப் போனான். அது அர்னோன் கரையோரத்தில் இருந்தது. **37** அங்கே
பாலாக் பிலேயாமிடம், "நான் உங்களைக் கூட்டிக்கொண்டு வருவதற்கு
ஆட்களை அனுப்பினேனே, நீங்கள் ஏன் வரவில்லை? உங்களை என்
னால் பெரிதாகக் கௌரவப்படுத்த முடியாதென்று நினைத்தீர்களா?"[f] என்

அதி. 22
a 2பே 2:15, 16
b எண் 22:32
c 2ரா 6:17
d எண் 22:12
2பே 2:15, 16
e எண் 22:23
எண் 22:25
எண் 22:27
f எண் 22:16, 17
எண் 24:10, 11

றான். **38** அதற்கு பிலேயாம் பாலாக்கிடம், “நான்தான் இப்போது வந்து
விட்டேனே. இருந்தாலும், என் இஷ்டப்படி என்னால் எப்படிப் பேச
முடியும்? கடவுள் என் வாயில் அருளுகிற வார்த்தைகளைத்தான் என்னால்
பேச முடியும்”[a] என்றான்.

39 பிலேயாம் பாலாக்குடன் போனான். அவர்கள் கீரியாத்-ஊசோத்
துக்கு வந்துசேர்ந்தார்கள். **40** பாலாக் ஆடுமாடுகளைப் பலி செலுத்தி,
அவற்றில் கொஞ்சத்தை பிலேயாமுக்கும் அவனுடன் இருந்த அதிகாரி
களுக்கும் அனுப்பி வைத்தான். **41** பாமோத்-பாகால் என்ற இடம் வசதி
யாக இருக்கும் என்பதால் காலையில் பிலேயாமை பாலாக் அங்கு கூட்டிக்
கொண்டு வந்தான். அங்கிருந்து அவனால் எல்லா இஸ்ரவேலர்களையும்
பார்க்க முடிந்தது.[b]

23 பின்பு பிலேயாம் பாலாக்கிடம், “இந்த இடத்தில் ஏழு பலிபீடங்க
ளைக் கட்டி,[c] ஏழு காளைகளையும் ஏழு செம்மறியாட்டுக் கடாக்க
ளையும் எனக்காகக் கொண்டுவாருங்கள்” என்றான். **2** பிலேயாம் சொன்
னபடி பாலாக் உடனே செய்தான். அவர்கள் இரண்டு பேரும் ஒவ்வொரு
பலிபீடத்திலும் ஒரு காளையையும் ஒரு செம்மறியாட்டுக் கடாவையும்
பலி செலுத்தினார்கள்.[d] **3** பின்பு பிலேயாம் பாலாக்கிடம், “உங்களுடைய
தகன பலியின் பக்கத்திலேயே நில்லுங்கள், நான் போகிறேன். ஒருவேளை
யெகோவா என்னைச் சந்திக்கலாம். அவர் எனக்குச் சொல்வதை நான் உங்
களுக்குச் சொல்கிறேன்” என்றான். அதன்பின், அவன் ஒரு குன்றின் மேல்
ஏறிப்போனான்.

4 பிலேயாமைக் கடவுள் சந்தித்தார்.[e] அப்போது அவன் அவரிடம்,
“நான் ஏழு பலிபீடங்களை வரிசையாக வைத்து, ஒவ்வொரு பலிபீடத்தி
லும் ஒரு காளையையும் ஒரு செம்மறியாட்டுக் கடாவையும் பலி செலுத்தி
னேன்” என்றான். **5** யெகோவா பிலேயாமின் வாயில் தன்னுடைய வார்த்
தைகளை அருளி,[f] “நீ பாலாக்கிடம் போய் இதைப் பேசு” என்றார்.
6 அதன்படியே அவன் போனபோது, பாலாக்கும் மோவாபின் அதிகாரி
கள் எல்லாரும் அவனுடைய தகன பலியின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்
தார்கள். **7** அப்போது அவன்,

“மோவாப் ராஜா என்னை அராமிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார்.[g]
பாலாக் ராஜா என்னைக் கிழக்கு மலைகளிலிருந்து அழைத்து வந்தார்.
அவருக்காக யாக்கோபைச் சபிக்கச் சொன்னார்.
இஸ்ரவேலைக் கண்டனம் செய்யச் சொன்னார்.[h]

8 கடவுள் சபிக்காத ஜனங்களை நான் சபிக்க முடியுமா?
யெகோவா கண்டனம் செய்யாத மக்களை நான் கண்டனம் செய்ய
முடியுமா?[i]

9 குன்றின் உச்சியிலிருந்து அவர்களைப் பார்க்கிறேன்.
கற்பாறையின் மேலிருந்து அவர்களைக் காண்கிறேன்.
அவர்கள் அங்கே தனியாக வாழ்கிறார்கள்.[j]
மற்ற ஜனங்களிலிருந்து தாங்கள் வித்தியாசப்பட்டவர்கள் என்று
நினைக்கிறார்கள்.[k]

10 மணல்போல் பரந்துகிடக்கும் யாக்கோபின் வம்சத்தை யாரால் எண்ண
முடியும்?[l]

அதி. 22
a எண் 23:26; எண் 24:13
b எண் 23:13, 14

அதி. 23
c எண் 22:41
d எண் 23:13, 14; எண் 23:28-30
e எண் 22:20
f எண் 22:35
g ஆதி 10:22; எண் 22:5; உபா 23:3, 4
h எண் 22:6
i எண் 22:12
j 1ரா 8:53
k யாத் 33:16
l ஆதி 13:14, 16; ஆதி 22:17; யாத் 1:7

இஸ்ரவேலில் கால்வாசியைக்கூட ஒருவராலும் எண்ண முடியாது.
நேர்மையான ஜனங்களைப் போல நான் சாக வேண்டும்.
அவர்களுக்கு வரும் முடிவைப் போல என் முடிவு இருக்க வேண்டும்"
என்று பாடினான்.[a]

11 பாலாக் இதைக் கேட்டதும் பிலேயாமிடம், "என்ன காரியம் செய்தி
ருக்கிறாய்! என்னுடைய எதிரிகளைச் சபிக்கச் சொல்லித்தானே உன்னைக்
கூட்டிக்கொண்டு வந்தேன். ஆனால் நீ அவர்களை ஆசீர்வதித்துவிட்
டாயே"[b] என்றான். **12** அதற்கு அவன், "யெகோவா என் வாயில் அருளு
வதைத்தானே நான் பேச வேண்டும்?"[c] என்றான்.

13 அப்போது பாலாக், "தயவுசெய்து இன்னொரு இடத்துக்கு என்னோடு
வா. அங்கே அவர்கள் எல்லாரையும் உன்னால் பார்க்க முடியாது, சிலரை
மட்டும்தான் பார்க்க முடியும். எனக்காக அவர்களை அங்கிருந்து சபி"[d] என்
றான். **14** அதன்படியே, பிலேயாமை பிஸ்காவின் உச்சியிலுள்ள[e] சோப்பீ
மின் வெட்டவெளிக்குக் கூட்டிக்கொண்டு போனான். அங்கே ஏழு பலிபீடங்
களைக் கட்டி, ஒவ்வொரு பலிபீடத்திலும் ஒரு காளையையும் ஒரு
செம்மறியாட்டுக் கடாவையும் பலி செலுத்தினான்.[f] **15** அதன்பின் பிலே
யாம் பாலாக்கிடம், "உங்களுடைய தகன பலிக்குப் பக்கத்திலேயே நில்லுங்
கள். நான் போய் கடவுளிடம் பேசிவிட்டு வருகிறேன்" என்றான். **16** பின்பு,
பிலேயாமை யெகோவா சந்தித்தார். அவனுடைய வாயில் வார்த்தைகளை
அருளி,[g] "நீ பாலாக்கிடம் போய் இதைப் பேசு" என்றார். **17** அதன்படியே,
அவன் பாலாக்கிடம் வந்தான். அப்போது, பாலாக் தன்னுடைய தகன பலி
யின் பக்கத்தில் காத்துக்கொண்டிருந்தான். மோவாபின் அதிகாரிகள் அவ
னுடன் இருந்தார்கள். பாலாக் அவனிடம், "யெகோவா என்ன சொன்னார்?"
என்று கேட்டான். **18** அதற்கு அவன்,

"பாலாக்கே, எழுந்து என் வார்த்தையைக் கேள்.
சிப்போரின் மகனே, நான் சொல்வதைக் கேள்.
19 பொய் சொல்ல கடவுள் என்ன சாதாரண மனுஷனா?[h]
மனம் மாறுவதற்கு அவர் என்ன மனுஷனா?[i]
அவர் சொல்வதைச் செய்யாமல் இருப்பாரா?
அவர் சொன்னதை நிறைவேற்றாமல் இருப்பாரா?[j]
20 இதோ! ஆசீர்வதிக்கும்படி எனக்குக் கட்டளை கிடைத்தது.
கடவுள் ஆசீர்வதித்துவிட்டார்,[k] என்னால் அதை மாற்ற முடியாது.[l]
21 எந்த மந்திர சக்தியும் யாக்கோபிடம் பலிக்க அவர் விட மாட்டார்.
எந்தக் கெடுதலும் இஸ்ரவேலுக்கு வர அவர் அனுமதிக்க மாட்டார்.
அவர்களுடைய கடவுளான யெகோவா அவர்களுக்குத் துணையாக
இருக்கிறார்.[m]
அவர்களுடைய ராஜாவாக அவர் போற்றிப் புகழப்படுகிறார்.
22 அவர்களை எகிப்திலிருந்து அவர் கூட்டிக்கொண்டு வருகிறார்.[n]
அவர்களுக்குக் காட்டு எருதின் கொம்புகள் போல அவர் இருக்கிறார்.[o]
23 யாக்கோபுக்கு எதிராக யாரும் மாயமந்திரம் செய்ய முடியாது.[p]
இஸ்ரவேலுக்கு எதிராக யாரும் குறிசொல்ல முடியாது.[q]
இப்போது யாக்கோபையும் இஸ்ரவேலையும் பார்த்து,

அதி. 23
a எண் 23:24 எண் 24:9
b எண் 24:10 யோசு 24:10 நெ 13:1, 2
c எண் 22:38 எண் 24:13
d எண் 22:11
e உபா 34:1
f எண் 22:41 எண் 23:1 எண் 23: 28, 29
g எண் 22:35 எண் 23:5
h சங் 89:35 தீத் 1:2
i 1சா 15:29
j ஏசா 14:24 ஏசா 46:10 மீ 7:20
k ஆதி 12:1, 2 ஆதி 22: 15, 17 எண் 22:12
l எண் 22:18
m யாத் 13:21 யாத் 23:20 யாத் 29:45 ஏசா 8:10
n யாத் 20:2
o எண் 24:8
p ஆதி 12:1, 3
q எண் 22:7

‘இதோ! கடவுள் செய்த அற்புதத்தைப் பாருங்கள்!’ என்று எல்லாரும்
சொல்வார்கள்.

24 இதோ! இந்த ஜனக்கூட்டம் சிங்கத்தைப் போல எழும்பும்.
சிங்கத்தைப் போல நிமிர்ந்து நிற்கும்.[a]
இரையைத் தின்றுதீர்க்கும்வரை ஓயாது.
இரத்தத்தைக் குடித்து முடிக்கும்வரை தூங்காது” என்று பாடினான்.[b]

25 அதற்கு பாலாக் பிலேயாமிடம், “அவர்களை உன்னால் சபிக்க
முடியாதென்றால் அவர்களை ஆசீர்வதிக்கவும் கூடாது” என்றான்.
26 அதற்கு பிலேயாம், “‘யெகோவா சொல்கிறபடியெல்லாம் செய்வேன்’
என்று நான் உங்களிடம் சொல்லவில்லையா?”[c] என்றான்.

27 அப்போது பாலாக், “தயவுசெய்து என்னோடு வா, நான் உன்னை
இன்னொரு இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன். எனக்காக நீ அங்கி
ருந்து அவர்களைச் சபிப்பது உண்மைக் கடவுளுடைய விருப்பமாக இருக்
கலாம்”[d] என்றான். **28** அப்படிச் சொல்லி, பேயோரின் உச்சிக்கு பிலேயா
மைக் கூட்டிக்கொண்டு போனான். அது எஷிமோனை* பார்த்தபடி
இருந்தது.[e] **29** அப்போது பிலேயாம் பாலாக்கிடம், “இந்த இடத்தில் ஏழு
பலிபீடங்களைக் கட்டி, ஏழு காளைகளையும் ஏழு செம்மறியாட்டுக் கடாக்
களையும் எனக்காகக் கொண்டுவாருங்கள்”[f] என்றான். **30** பிலேயாம்
சொன்னபடியே பாலாக் செய்தான். ஒவ்வொரு பலிபீடத்திலும் ஒரு காளை
யையும் ஒரு செம்மறியாட்டுக் கடாவையும் பலி செலுத்தினான்.

24 இஸ்ரவேலர்களை ஆசீர்வதிக்கத்தான் யெகோவா விரும்புகிறார்
என்பதை பிலேயாம் புரிந்துகொண்டபோது, மறுபடியும் மாயமந்தி
ரத்தைத் தேடிப்போகாமல்[g] வனாந்தரத்தின் பக்கமாகத் திரும்பினான்.
2 இஸ்ரவேலர்கள் கோத்திரம் கோத்திரமாக முகாம்போட்டிருப்பதை[h]
பிலேயாம் பார்த்தபோது, கடவுளுடைய சக்தி அவனுக்குக் கிடைத்தது.[i]
3 அப்போது அவன்,

“பெயோரின் மகன் பிலேயாம் பேசுகிறேன்,
கண்கள் திறக்கப்பட்டவன் சொல்கிறேன்.
4 தேவ வார்த்தையைக் காதில் கேட்டவன்,
சர்வவல்லமையுள்ளவரின் தரிசனத்தைப் பார்த்தவன்,
கண் மூடாமல் கீழே விழுந்தவன், பேசுகிறேன்.[j]
5 யாக்கோபே, உன் கூடாரம் எவ்வளவு அழகாக இருக்கிறது!
இஸ்ரவேலே, நீ குடியிருக்கும் இடங்களைப் பார்த்தால் எவ்வளவு
பிரமிப்பாக இருக்கிறது![k]
6 நீளமாக நெளிந்து போகும் பள்ளத்தாக்குகள்* போலவும்,[l]
ஆற்றின் கரையில் இருக்கும் தோட்டங்கள் போலவும்,
யெகோவா நட்டு வைத்த அகில் மரக்கன்றுகள் போலவும்,
நீரோடைக்குப் பக்கத்தில் ஓங்கி நிற்கும் தேவதாரு மரங்கள் போலவும்
அவை இருக்கின்றன.
7 அவருடைய வாளிகளில் தண்ணீர் வழிந்தோடுகிறது.

23:28 *அல்லது, “வனாந்தரத்தை.” **24:6** *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குகள்.”

அதி. 23
a எண் 24:9
b எண் 23:10; எண் 24:9
c எண் 22:38; எண் 23:12
d எண் 23:13
e எண் 21:20
f எண் 22:41; எண் 23:1, 14

அதி. 24
g எண் 23:3, 15; எண் 23:23
h எண் 2:2; எண் 23:9
i 1சா 19:20
j எண் 24:16
k எண் 1:52; எண் 2:2
l எண் 22:11

தண்ணீருக்குப்[a] பக்கத்தில் அவருடைய விதை* விதைக்கப்படுகிறது.
அவருடைய ராஜா[b] ஆகாகைவிட[c] பலம்படைத்தவர்.
அவருடைய ராஜ்யம் மேன்மை அடையும்.[d]
8 அவர்களை எகிப்திலிருந்து அவர் கூட்டிக்கொண்டு வருகிறார்.
அவர்களுக்குக் காட்டு எருதின் கொம்புகள் போல அவர் இருக்கிறார்.
தன்னை ஒடுக்கும் தேசங்களை அவன் ஒழித்துக்கட்டுவான்.[e]
அவர்களுடைய எலும்புகளைக் கடித்து நொறுக்குவான்.
அம்புகளால் அவர்களைத் துளைப்பான்.
9 சிங்கம் போல அவன் உட்கார்ந்திருக்கிறான், சிங்கம் போலப் படுத்திருக்கிறான்.
அவனை எழுப்ப யாருக்குத் துணிச்சல் இருக்கிறது?
அவனை ஆசீர்வதிப்பவன் ஆசீர்வதிக்கப்படுவான்.
அவனைச் சபிப்பவன் சபிக்கப்படுவான்”[f] என்று பாடினான்.[g]

10 அப்போது பிலேயாமின் மேல் பாலாக் பயங்கரமாகக் கோபப்பட்டான். பின்பு, ஏளனமாகத் தன் கைகளைத் தட்டி, “என்னுடைய எதிரிகளைச் சபிக்கச் சொல்லி உன்னைக் கூட்டிக்கொண்டு வந்தேன்.[h] ஆனால் இந்த மூன்று தடவையும் நீ அவர்களை ஆசீர்வதித்துவிட்டாய்.
11 இப்போதே உன் வீட்டுக்குப் போய்விடு. நான் உன்னை ரொம்பவே கௌரவிக்க நினைத்தேன்,[i] ஆனால் யெகோவா அதைத் தடுத்துவிட்டார்” என்றான்.
12 அதற்கு பிலேயாம் பாலாக்கிடம், “நான் உங்கள் ஆட்களிடம்,
13 ‘எனக்காக பாலாக் தன்னுடைய மாளிகையையே கொடுத்தாலும், அதில் வெள்ளியையும் தங்கத்தையும் கொட்டிக் கொடுத்தாலும், என் கடவுளாகிய யெகோவாவின் கட்டளைக்கு விரோதமாக என்னால் ஒன்றும் செய்ய முடியாது. சின்ன விஷயமோ பெரிய விஷயமோ எதையும் செய்ய முடியாது. யெகோவா சொல்வதைத்தான் நான் சொல்வேன்’ என்று சொல்லவில்லையா?[j]
14 இப்போது நான் என் ஜனங்களிடம் போகிறேன். வாருங்கள், எதிர்காலத்தில் இந்த ஜனங்கள் உங்களுடைய ஜனங்களுக்கு என்ன செய்வார்கள் என்பதைச் சொல்கிறேன்” என்றான்.
15 பின்பு அவன்,

“பெயோரின் மகன் பிலேயாம் பேசுகிறேன்,
கண்கள் திறக்கப்பட்டவன் சொல்கிறேன்.[k]
16 தேவ வார்த்தையைக் காதில் கேட்டவன்,
உன்னதமான கடவுளின் அறிவைப் பெற்றவன்,
சர்வவல்லமையுள்ளவரின் தரிசனத்தைப் பார்த்தவன்,
கண் மூடாமல் கீழே விழுந்தவன், பேசுகிறேன்:
17 நான் அவரைப் பார்ப்பேன், ஆனால் இப்போது அல்ல.
நான் அவரைப் பார்ப்பேன், ஆனால் சீக்கிரத்தில் அல்ல.
யாக்கோபிடமிருந்து ஒரு நட்சத்திரம்[l] உதிக்கும்.
இஸ்ரவேலிடமிருந்து[m] ஒரு செங்கோல்[n] எழும்பும்.
மோவாபின் நெற்றிப்பொட்டில் அவர் கண்டிப்பாகத் தாக்குவார்.[o]
வெறிபிடித்த ஜனங்களின் மண்டையோட்டை நிச்சயமாக உடைப்பார்.

24:7 * வே.வா., “சந்ததி.”

அதி. 24
a உபா 8:7
b ஆதி 49:10, சங் 2:6, யோவா 1:49
c எண் 24:20
d 1நா 14:2, தானி 2:44, வெளி 11:15
e யாத் 23:27, உபா 9:5
f ஆதி 12:1-3, ஆதி 27:29
g எண் 23:10, 24
h எண் 22:10, 11, எண் 23:11, நெ 13:1, 2
i எண் 22:16, 17
j எண் 22:18, 38
k எண் 24:3, 4
l வெளி 22:16
m 2சா 7:16, 17, ஏசா 9:7
n சங் 110:2, எபி 1:8
o 2சா 8:2, 1நா 18:2, சங் 108:9

18 இஸ்ரவேல் வீரத்தைக் காட்டுவான்.
அப்போது ஏதோம் அவனுக்குச் சொந்தமாகும்.[a]
சேயீர்[b] தன் எதிரிகளுக்குச் சொந்தமாகும்.[c]
19 யாக்கோபிலிருந்து உதிப்பவர் ஜெயிப்பார்.[d]
நகரத்தில் மீதி இருப்பவர்களை நசுக்குவார்" என்று பாடினான்.[e]
20 அமலேக்கியர்களைப் பார்த்தபோது அவன்,
"அமலேக்குதான் முதல் தேசம்.[f]
ஆனால் முடிவில் அது அழிந்துபோகும்"[g] என்று பாடினான்.
21 கேனியர்களைப்[h] பார்த்தபோது,
"நீ கோட்டையிலே குடியிருக்கிறாய், கற்பாறையில் கூடு
கட்டியிருக்கிறாய்.
22 ஆனால் கேயினைச் சுட்டெரிக்க ஒருவன் வருவான்.
அசீரியா உன்னைப் பிடித்துக்கொண்டு போவதற்கு எவ்வளவு
காலமாகும்?" என்று பாடினான்.
23 அதன்பின் அவன்,
"ஐயோ! கடவுள் இதைச் செய்யும்போது யாரால் உயிர்தப்ப முடியும்?
24 கித்தீம்[i] கரையோரத்திலிருந்து கப்பல்கள் மிதந்து வரும்.
அவை அசீரியாவை அலைக்கழிக்கும்.[j]
ஏபேரைப் பாடாய்ப் படுத்தும்.
ஆனால், அவனும் அடியோடு அழிந்துபோவான்" என்று பாடினான்.
25 அதன்பின் பிலேயாம்[k] எழுந்து, தான் தங்கியிருந்த இடத்துக்குப்
போனான். பாலாக்கும் தன்னுடைய இடத்துக்குப் போனான்.

25 இஸ்ரவேலர்கள் சித்தீமில்[l] குடியிருந்த சமயத்தில், மோவாபியப்
பெண்களுடன் பாலியல் முறைகேட்டில் ஈடுபட ஆரம்பித்தார்
கள்.[m] 2 அந்தப் பெண்கள் அவர்களிடம், 'எங்களுடைய தெய்வங்க
ளுக்குப் பலி செலுத்துகிறோம், நீங்களும் வாருங்கள்' என்று சொல்லிக்
கூப்பிட்டார்கள்.[n] அவர்களும் போய் அந்தத் தெய்வங்களுக்குப் படைக்
கப்பட்டதைச் சாப்பிட்டு, அவற்றைக் கும்பிட்டார்கள்.[o] 3 இப்படி, பாகால்
பேயோரின் வணக்கத்தில் இஸ்ரவேலர்கள் கலந்துகொண்டார்கள்.[p] அத
னால், அவர்கள்மேல் யெகோவாவுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது.
4 யெகோவா மோசேயிடம், "இவர்களுடைய தலைவர்கள் எல்லாரையும்
பிடித்துக் கொன்று பட்டப்பகலில் யெகோவாவுக்கு முன்னால் தூக்கும
ரத்தில் தொங்கவிடு. அப்போதுதான், இஸ்ரவேலர்கள்மேல் பற்றியெரிகிற
யெகோவாவின் கோபம் தணியும்" என்றார். 5 மோசே இஸ்ரவேலர்களின்
நியாயாதிபதிகளிடம்,[q] "நீங்கள் ஒவ்வொருவரும் போய், பாகால் பேயோ
ரைக் கும்பிட்ட உங்கள் ஆட்களைக் கொலை செய்யுங்கள்"[r] என்றார்.
6 சந்திப்புக் கூடார நுழைவாசலில் இஸ்ரவேலர்கள் அழுது புலம்
பிக்கொண்டிருந்தபோது, இஸ்ரவேலன் ஒருவன் மீதியானியப் பெண் ஒருத்
தியை[s] மோசேக்கும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக முகாமுக்குள்
கூட்டிக்கொண்டு போனான். 7 குருவாகிய ஆரோனின் பேரனும் எலெ
யாசாரின் மகனுமாகிய பினெகாஸ்[t] அதைப் பார்த்ததும், ஜனங்களின்
நடுவிலிருந்து உடனடியாக எழுந்துபோய் ஓர் ஈட்டியைக் கையில்

அதி. 24
a ஆதி 27:37, 2சா 8:14, ஆமோ 9:11, 12
b ஆதி 36:8, யோசு 24:4
c 1நா 4:42, 43, எசே 25:14
d ஆதி 49:10, சங் 2:9, சங் 72:11, வெளி 6:2, வெளி 19:15
e எண் 23:10
f யாத் 17:8, 14
g உபா 25:19, 1சா 15:3, 1நா 4:43
h ஆதி 15:18, 19, நியா 1:16
i ஆதி 10:2, 4, எசே 27:6
j நாகூ 3:18
k எண் 31:7, 8

அதி. 25
l யோசு 2:1, மீ 6:5
m எண் 31:16, 1கொ 10:8, வெளி 2:14
n யாத் 34:15, 1கொ 10:20
o யாத் 20:5
p உபா 4:3, யோசு 22:17, சங் 106:28, 29, ஓசி 9:10
q யாத் 18:21
r யாத் 22:20, யாத் 32:25, 27, உபா 13:6-9
s எண் 25:14, 15
t யாத் 6:25, யோசு 22:30

எடுத்துக்கொண்டார். **8** பின்பு, அந்த இஸ்ரவேலனுக்குப் பின்னால் அவ
னுடைய கூடாரத்துக்குள் போய் அவனையும் அந்தப் பெண்ணையும் ஒரே
குத்தாகக் குத்தினார்; ஈட்டி அந்தப் பெண்ணின் அடிவயிற்றை* துளைத்
தது. உடனே, இஸ்ரவேலர்களைத் தாக்கிய கொள்ளைநோய் ஓய்ந்தது.[a]
9 அந்தக் கொள்ளைநோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 24,000.[b]

10 பின்பு யெகோவா மோசேயிடம், **11** "இஸ்ரவேலர்கள் மத்தியில்
குருவாகிய ஆரோனின் பேரனும் எலெயாசாரின் மகனுமாகிய பினெகாஸ்[c]
எனக்காகப் பக்திவைராக்கியம் காட்டி, அவர்கள்மேல் எனக்கிருந்த கோபத்
தைத் தணித்துவிட்டான்.[d] அதனால்தான், நான் முழு பக்தியை* எதிர்பார்க்
கிற கடவுளாக[e] இருந்தாலும் இஸ்ரவேலர்களை அடியோடு அழிக்காமல்
விட்டுவிட்டேன். **12** நீ அவனிடம் போய், அவனோடு நான் சமாதான
ஒப்பந்தம் செய்யப்போகிறேன் என்று சொல். **13** குருத்துவச் சேவை அவ
னுக்கும் அவனுடைய சந்ததிக்கும் நிரந்தரமானது என்பதற்கு இந்த ஒப்பந்
தம் அடையாளமாக இருக்கும்.[f] ஏனென்றால், தன்னுடைய கடவுளுக்காகப்
பக்திவைராக்கியம் காட்டி,[g] இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பாவப் பரிகாரம்
செய்தான்" என்றார்.

14 மீதியானியப் பெண்ணுடன் கொலை செய்யப்பட்ட இஸ்ரவேலனின்
பெயர் சிம்ரி. அவன் சல்லூவின் மகன், சிமியோனியர்களின் தந்தைவ
ழிக் குடும்பத்துக்குத் தலைவன். **15** கொலை செய்யப்பட்ட அந்த மீதியா
னியப்[h] பெண்ணின் பெயர் கஸ்பி. அவள் மீதியானியனான சூரின்[i] மகள்.
அவன் தன்னுடைய தந்தைவழிக் குடும்பத்துக்குத் தலைவன்.

16 பிற்பாடு யெகோவா மோசேயிடம், **17** "மீதியானியர்களுக்கு
விரோதமாகப் போய், அவர்களைக் கொன்றுபோடுங்கள்.[j] **18** ஏனென்
றால் பேயோரின் விஷயத்திலும்,[k] பேயோரில் கொள்ளைநோய் பரவிய
நாளில் கொலை செய்யப்பட்ட[l] அவர்களுடைய சகோதரியான மீதியானி
யத் தலைவனின் மகள் கஸ்பியின்[m] விஷயத்திலும் அவர்கள் உங்களுக்கு
விரோதமாகத் தந்திரமாக நடந்துகொண்டார்கள்" என்றார்.

26 அந்தக் கொள்ளைநோய்[n] ஓய்ந்த பின்பு, யெகோவா மோசேயிட
மும் குருவாகிய ஆரோனின் மகன் எலெயாசாரிடமும், **2** "படை
யில் சேவை செய்யத் தகுதியான ஆண்களில் 20 வயதும் அதற்கு
அதிகமான வயதும் உள்ளவர்களை இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து தேர்ந்
தெடுங்கள். அவர்களுடைய தந்தைவழிக் குடும்பங்களின்படி அவர்களைக்
கணக்கெடுங்கள்"[o] என்றார். **3** அதனால், எரிகோவுக்குப்[p] பக்கத்திலே
யோர்தானை ஒட்டியுள்ள மோவாப் பாலைநிலத்தில்[q] இருந்த ஜனங்களி
டம் மோசேயும் குருவாகிய எலெயாசாரும்,[r] **4** "மோசேக்கு யெகோவா
கட்டளை கொடுத்தபடியே, 20 வயதும் அதற்கு அதிகமான வயதும் உள்ள
எல்லாரையும் கணக்கெடுங்கள்"[s] என்றார்கள்.

எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த இஸ்ரவேல் வம்சத்தார் இவர்கள்
தான்: **5** இஸ்ரவேலின் மூத்த மகன் ரூபன்.[t] ரூபனின் மகன்களும்[u]
அவர்களுடைய வம்சத்தாரும் இவர்கள்தான்: ஆனோக், இவருடைய வம்
சத்தார் ஆனோக்கியர்கள்; பல்லூ, இவருடைய வம்சத்தார் பல்லூவியர்கள்;

25:8 *நே.மொ., "பிறப்புறுப்பை." **25:11** *வே.வா., "என்னை மட்டுமே வணங்க
வேண்டுமென்று."

அதி. 25
a சங் 106:30
b எண் 25:4
உபா 4:3
1கொ 10:8
c எண் 25:7
d சங் 106:30, 31
e யாத் 20:5
யாத் 34:14
உபா 4:24
f 1நா 6:4
எஸ்றா 7:1, 5
எஸ்றா 8:1, 2
g 1ரா 19:10
h 1நா 1:32, 33
i எண் 31:7, 8
யோசு 13:21
j எண் 31:1, 2
k எண் 25:3
எண் 31:16
l எண் 25:9
m எண் 25:8, 15

அதி. 26
n எண் 25:7, 8
o யாத் 30:12
யாத் 38:26
எண் 1:2
p யோசு 6:1
q எண் 22:1
எண் 33:48
r எண் 20:26
s எண் 1:3
t ஆதி 29:32
u ஆதி 46:8, 9
யாத் 6:14

6 எஸ்ரோன், இவருடைய வம்சத்தார் எஸ்ரோனியர்கள்; கர்மீ, இவருடைய
வம்சத்தார் கர்மீயர்கள். **7** இவர்கள்தான் ரூபன் வம்சத்தார். இவர்களில்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 43,730 பேர்.[a]

8 பல்லூவின் மகன் எலியாப். **9** எலியாபின் மகன்கள்: நேமுவேல்,
தாத்தான், அபிராம். இந்த தாத்தானும் அபிராமும் ஜனங்களின் பிரதிநிதி
கள். அவர்கள் கோராகுவின் கூட்டாளிகளோடு[b] சேர்ந்துகொண்டு மோசே
யையும் ஆரோனையும் எதிர்த்தார்கள்.[c] இப்படி, யெகோவாவையே எதிர்த்
தார்கள்.[d]

10 அப்போது, பூமி பிளந்து அவர்களை விழுங்கியது. கோராகுவும்
அவருடைய கூட்டாளிகள் 250 பேரும் நெருப்புக்குப் பலியானார்கள்.[e]
அவர்களுடைய கெட்ட உதாரணம் எல்லாருக்கும் ஓர் எச்சரிக்கையாக
ஆனது.[f] **11** ஆனால், கோராகுவின் மகன்கள் சாகவில்லை.[g]

12 சிமியோனின் மகன்களும்[h] அவர்களுடைய வம்சத்தாரும் இவர்கள்
தான்: நேமுவேல், இவருடைய வம்சத்தார் நேமுவேலர்கள்; யாமின், இவ
ருடைய வம்சத்தார் யாமினியர்கள்; யாகீன், இவருடைய வம்சத்தார்
யாகீனியர்கள்; **13** சேராகு, இவருடைய வம்சத்தார் சேராகியர்கள்; சாவூல்,
இவருடைய வம்சத்தார் சாவூலியர்கள். **14** சிமியோன் வம்சத்தாராகிய
இவர்கள் மொத்தம் 22,200 பேர்.[i]

15 காத்தின் மகன்களும்[j] அவர்களுடைய வம்சத்தாரும் இவர்கள்
தான்: சிப்போன், இவருடைய வம்சத்தார் சிப்போனியர்கள்; ஹகி, இவரு
டைய வம்சத்தார் ஹகியர்கள்; சூனி, இவருடைய வம்சத்தார் சூனியர்கள்;
16 ஒஸ்னி, இவருடைய வம்சத்தார் ஒஸ்னியர்கள்; ஏரி, இவருடைய வம்
சத்தார் ஏரியர்கள்; **17** ஆரோத், இவருடைய வம்சத்தார் ஆரோதியர்கள்;
அரேலி, இவருடைய வம்சத்தார் அரேலியர்கள். **18** இவர்கள்தான் காத்
வம்சத்தார். இவர்களில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம்
40,500 பேர்.[k]

19 யூதாவின் மகன்கள்[l] ஏர், ஓனேன்.[m] ஆனால், இவர்கள் இரண்டு
பேரும் கானான் தேசத்தில் இறந்துபோனார்கள்.[n] **20** யூதாவின் மகன்க
ளும் அவர்களுடைய வம்சத்தாரும் இவர்கள்தான்: சேலா,[o] இவருடைய
வம்சத்தார் சேலாவியர்கள்; பாரேஸ்,[p] இவருடைய வம்சத்தார் பாரேசியர்
கள்; சேராகு,[q] இவருடைய வம்சத்தார் சேராகியர்கள். **21** பாரேசின் மகன்
களும் அவர்களுடைய வம்சத்தாரும் இவர்கள்தான்: எஸ்ரோன்,[r] இவரு
டைய வம்சத்தார் எஸ்ரோனியர்கள்; ஆமூல்,[s] இவருடைய வம்சத்தார்
ஆமூலியர்கள். **22** இவர்கள்தான் யூதா வம்சத்தார். இவர்களில் பெயர்ப்
பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 76,500 பேர்.[t]

23 இசக்காரின் மகன்களும்[u] அவர்களுடைய வம்சத்தாரும் இவர்
கள்தான்: தோலா,[v] இவருடைய வம்சத்தார் தோலாவியர்கள்; புவா, இவரு
டைய வம்சத்தார் புவாவியர்கள்; **24** யாசூப், இவருடைய வம்சத்தார்
யாசூபியர்கள்; சிம்ரோன், இவருடைய வம்சத்தார் சிம்ரோனியர்கள்.
25 இவர்கள்தான் இசக்கார் வம்சத்தார். இவர்களில் பெயர்ப்பதிவு செய்யப்
பட்டவர்கள் மொத்தம் 64,300 பேர்.[w]

26 செபுலோனின் மகன்களும்[x] அவர்களுடைய வம்சத்தாரும் இவர்
கள்தான்: சேரேத், இவருடைய வம்சத்தார் சேரேத்தியர்கள்; ஏலோன், இவ
ருடைய வம்சத்தார் ஏலோனியர்கள்; யாலேயேல், இவருடைய வம்சத்தார்

அதி. 26

a எண் 1:21
b எண் 16:1
c எண் 16:12
d எண் 16:5, 19; உபா 11:6; சங் 106:17
e எண் 16:32, 35; சங் 106:18
f எண் 16:38; 1கொ 10:10, 11
g யாத் 6:24; எண் 26:58; சங் 42:மே.கு.
h ஆதி 35:23; ஆதி 46:10; யாத் 6:15; 1நா 4:24
i எண் 1:23
j ஆதி 35:26; ஆதி 46:16
k எண் 1:25
l ஆதி 29:35; ஆதி 46:12
m ஆதி 38:2-4
n ஆதி 38:7-10
o ஆதி 38:2, 5; ஆதி 38:26; 1நா 4:21
p ஆதி 38:29; ரூ 4:18; மத் 1:3
q ஆதி 38:30; 1நா 2:4
r ரூ 4:19
s 1நா 2:5
t எண் 1:27
u ஆதி 30:18; ஆதி 35:23; ஆதி 46:13; 1நா 7:1
v 1நா 7:2
w எண் 1:29
x ஆதி 30:20; ஆதி 46:14

யாலேயேலியர்கள். **27** இவர்கள்தான் செபுலோன் வம்சத்தார். இவர்களில்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 60,500 பேர்.[a]

28 யோசேப்பின் மகன்களான[b] மனாசே, எப்பிராயீம்[c] ஆகியவர்களின்
வம்சத்தார் இவர்கள்தான். **29** மனாசேயின்[d] மகன்கள்: மாகீர்,[e] இவரு
டைய வம்சத்தார் மாகீரியர்கள். மாகீரின் மகன் கீலேயாத்.[f] கீலேயாத்தின்
வம்சத்தார் கீலேயாத்தியர்கள். **30** கீலேயாத்தின் மகன்களும் அவர்களு
டைய வம்சத்தாரும் இவர்கள்தான்: ஈயேசேர், இவருடைய வம்சத்தார் ஈயே
சேரியர்கள்; ஏலேக், இவருடைய வம்சத்தார் ஏலேக்கியர்கள்; **31** அஸ்ரி
யேல், இவருடைய வம்சத்தார் அஸ்ரியேலர்கள்; சீகேம், இவருடைய
வம்சத்தார் சீகேமியர்கள்; **32** செமீதா, இவருடைய வம்சத்தார் செமீதாவி
யர்கள்; ஹேப்பேர், இவருடைய வம்சத்தார் ஹேப்பேரியர்கள். **33** ஹேப்
பேரின் மகனாகிய செலோப்பியாத்துக்கு மகன்கள் இல்லை, மகள்கள் மட்
டும்தான் இருந்தார்கள்.[g] செலோப்பியாத்தின் மகள்களுடைய பெயர்கள்:[h]
மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள். **34** இவர்கள்தான்
மனாசே வம்சத்தார். இவர்களில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்
தம் 52,700 பேர்.[i]

35 எப்பிராயீமின்[j] மகன்களும் அவர்களுடைய வம்சத்தாரும் இவர்கள்
தான்: சுத்தெலாக்,[k] இவருடைய வம்சத்தார் சுத்தெலாக்கியர்கள்; பெகேர்,
இவருடைய வம்சத்தார் பெகேரியர்கள்; தாகான், இவருடைய வம்சத்
தார் தாகானியர்கள்; **36** சுத்தெலாக்கின் மகன், ஏரான். இவருடைய வம்சத்
தார் ஏரானியர்கள். **37** இவர்கள்தான் எப்பிராயீம் வம்சத்தார். இவர்களில்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 32,500 பேர்.[l] இவர்கள்தான்
யோசேப்பின் வம்சத்தார்.

38 பென்யமீனின் மகன்களும்[m] அவர்களுடைய வம்சத்தாரும் இவர்
கள்தான்: பேலா,[n] இவருடைய வம்சத்தார் பேலாயர்கள்; அஸ்பேல், இவரு
டைய வம்சத்தார் அஸ்பேலர்கள்; அகிராம், இவருடைய வம்சத்தார் அகிரா
மியர்கள்; **39** செப்புப்பாம், இவருடைய வம்சத்தார் சுப்பீமியர்கள்; உப்பாம்,
இவருடைய வம்சத்தார் உப்பாமியர்கள். **40** பேலாவின் மகன்கள் ஆரேத்,
நாகமான்.[o] ஆரேத்தின் வம்சத்தார் ஆரேத்தியர்கள்; நாகமானின் வம்சத்தார்
நாகமானியர்கள். **41** இவர்கள்தான் பென்யமீன் வம்சத்தார். இவர்களில்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 45,600 பேர்.[p]

42 தாணின்[q] மகன் சூகாம், இவருடைய வம்சத்தார் சூகாமியர்கள்.
தாண் வம்சத்தார் இவர்கள்தான். **43** சூகாமியர்களின் வம்சத்தாரில்
பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம் 64,400 பேர்.[r]

44 ஆசேரின் மகன்களும்[s] அவர்களுடைய வம்சத்தாரும் இவர்
கள்தான்: இம்னா, இவருடைய வம்சத்தார் இம்னாவியர்கள்; இஸ்வி, இவ
ருடைய வம்சத்தார் இஸ்வியர்கள்; பெரீயா, இவருடைய வம்சத்தார்
பெரீயாவியர்கள்; **45** பெரீயாவின் மகன்கள்: ஹேபெர், இவருடைய வம்
சத்தார் ஹேபெரியர்கள்; மல்கியேல், இவருடைய வம்சத்தார் மல்கியே
லியர்கள். **46** ஆசேருடைய மகளின் பெயர் சேராள். **47** இவர்கள்தான்
ஆசேர் வம்சத்தார். இவர்களில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்
தம் 53,400 பேர்.[t]

48 நப்தலியின் மகன்களும்[u] அவர்களுடைய வம்சத்தாரும் இவர்கள்
தான்: யாத்சியேல், இவருடைய வம்சத்தார் யாத்சியேலியர்கள்; கூனி,

அதி. 26
a எண் 1:31
b ஆதி 30:24
ஆதி 35:24
ஆதி 46:20
c ஆதி 41:52
d ஆதி 41:51
e ஆதி 50:23
உபா 3:15
1நா 7:14
f யோசு 17:1
g எண் 27:7
1நா 7:15
h எண் 36:11
i எண் 1:35
j ஆதி 41:52
k 1நா 7:20
l எண் 1:33
யோசு 17:17
m ஆதி 35:24
ஆதி 46:21
1நா 8:1
n 1நா 7:6
o 1நா 8:3, 4
p எண் 1:37
q ஆதி 30:6
r எண் 1:39
s ஆதி 30:13
ஆதி 35:26
ஆதி 46:17
1நா 7:30
t எண் 1:41
u ஆதி 30:8
ஆதி 35:25
ஆதி 46:24
1நா 7:13

இவருடைய வம்சத்தார் கூனியர்கள்; **49** எத்செர், இவருடைய வம்சத்
தார் எத்செரியர்கள்; சில்லேம், இவருடைய வம்சத்தார் சில்லேமியர்கள்.
50 இவர்கள்தான் நப்தலி வம்சத்தார். இவர்களில் பெயர்ப்பதிவு செய்யப்
பட்டவர்கள் மொத்தம் 45,400 பேர்.[a]

51 இப்படி, இஸ்ரவேலில் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்கள் மொத்தம்
6,01,730 பேர்.[b]

52 பின்பு யெகோவா மோசேயிடம், **53** "ஒவ்வொரு கோத்திரத்திலும்
உள்ள ஆட்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி நிலத்தைப் பங்குபோட்டுக்
கொடுக்க வேண்டும்.[c] **54** ஒரு தொகுதியில் நிறைய பேர் இருந்தால் அதிக
நிலத்தைப் பங்குபோட்டுக் கொடுக்க வேண்டும், கொஞ்சம் பேர் மட்டும்
இருந்தால் கொஞ்சம் நிலத்தை மட்டும் பங்குபோட்டுக் கொடுக்க வேண்
டும்.[d] பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி
ஒவ்வொரு தொகுதிக்கும் நிலத்தைக் கொடுக்க வேண்டும். **55** ஆனாலும்,
குலுக்கல் முறையில்தான் தேசத்தைப் பங்குபோட்டுக் கொடுக்க வேண்டும்.[e]
ஒவ்வொரு தொகுதிக்கும் அந்தந்த கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலத்
தைப் பங்குபோட்டுக் கொடுக்க வேண்டும். **56** பெரிய தொகுதிக்கும் சரி,
சிறிய தொகுதிக்கும் சரி, யாருக்கு எந்தப் பகுதி என்பதைக் குலுக்கல் போட்
டுத் தீர்மானிக்க வேண்டும்" என்றார்.

57 பெயர்ப்பதிவு செய்யப்பட்ட லேவியர்களும்[f] அவர்களுடைய வம்
சத்தாரும் இவர்கள்தான்: கெர்சோன், இவருடைய வம்சத்தார் கெர்சோனி
யர்கள்; கோகாத்,[g] இவருடைய வம்சத்தார் கோகாத்தியர்கள்; மெராரி,
இவருடைய வம்சத்தார் மெராரியர்கள். **58** லேவியர்களின் வம்சத்தார்
இவர்கள்தான்: லிப்னியர்கள்,[h] எப்ரோனியர்கள்,[i] மகேலியர்கள்,[j] மூசியர்
கள்,[k] கோராகியர்கள்.[l]

கோகாத்தின் மகன் அம்ராம்.[m] **59** அம்ராமின் மனைவி பெயர்
யோகெபேத்.[n] இவள் எகிப்திலே லேவிக்குப் பிறந்தவள். இவள் ஆரோ
னையும் மோசேயையும் இவர்களுடைய சகோதரி மிரியாமையும்[o] அம்ரா
முக்குப் பெற்றெடுத்தாள். **60** ஆரோனுக்கு நாதாப், அபியூ, எலெயாசார்,
இத்தாமார் என்ற மகன்கள் பிறந்தார்கள்.[p] **61** நாதாபும் அபியூவும் அத்து
மீறி* தூபம் காட்டியதால் யெகோவாவின் சன்னிதியில் செத்துப்
போனார்கள்.[q]

62 லேவியர்களில் ஒரு மாதமும் அதற்கு அதிகமான வயதும் உள்ள
எல்லா ஆண்களும் பெயர்ப்பதிவு செய்யப்பட்டார்கள். அவர்கள் மொத்
தம் 23,000 பேர்.[r] ஆனால், அவர்கள் மற்ற இஸ்ரவேலர்களோடு சேர்த்து
பெயர்ப்பதிவு செய்யப்படவில்லை.[s] ஏனென்றால் இஸ்ரவேலர்களின் நடு
வில் அவர்களுக்கு எந்தச் சொத்தும் கொடுக்கப்படவில்லை.[t]

63 எரிகோவுக்குப் பக்கத்தில் யோர்தானை ஒட்டியுள்ள மோவாப்
பாலைநிலத்தில் மோசேயும் குருவாகிய எலெயாசாரும் பெயர்ப்பதிவு
செய்த இஸ்ரவேலர்கள் இவர்கள்தான். **64** ஆனால், மோசேயும் குருவா
கிய ஆரோனும் சீனாய் வனாந்தரத்தில் பெயர்ப்பதிவு செய்த யாருமே
இவர்களோடு இல்லை.[u] **65** ஏனென்றால், "வனாந்தரத்தில் அவர்கள்
நிச்சயம் சாவார்கள்" என்று யெகோவா சொல்லியிருந்தார்.[v] அதனால்,

---

26:61 *வே.வா., "தகாத விதத்தில்."

அதி. 26
a எண் 1:43
b யாத் 38:26; எண் 1:46, 49; எண் 14:29
c யோசு 11:23; யோசு 14:1
d எண் 33:54
e எண் 34:13; யோசு 14:2; யோசு 17:4; யோசு 18:6; நீதி 16:33
f ஆதி 46:11; யாத் 6:16
g எண் 3:19
h யாத் 6:17; எண் 3:18
i எண் 3:27
j யாத் 6:19; எண் 3:33
k எண் 3:20; 1நா 23:23
l யாத் 6:24
m யாத் 6:18; எண் 3:19
n யாத் 2:1; யாத் 6:20
o யாத் 15:20; மீ 6:4
p யாத் 6:23; யாத் 24:9
q லேவி 10:1, 2; எண் 3:2, 4; 1நா 24:2
r எண் 3:39
s எண் 1:49
t எண் 18:24; உபா 10:9; உபா 14:27; யோசு 14:3
u எண் 1:2; உபா 2:14; 1கொ 10:5
v எபி 3:17

எப்புன்னேயின் மகனாகிய காலேபையும் நூனின் மகனாகிய யோசுவாவை
யும் தவிர அவர்களில் ஒருவர்கூட இவர்களோடு இல்லை.[a]

27 யோசேப்பின் மகன் மனாசே, மனாசேயின் மகன் மாகீர்,
மாகீரின் மகன் கீலேயாத், கீலேயாத்தின் மகன் ஹேப்பேர், ஹேப்
பேரின் மகன் செலோப்பியாத்.[b] செலோப்பியாத்தின் மகள்களுடைய
பெயர்கள் மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள். **2** இந்தப்
பெண்கள் சந்திப்புக் கூடாரத்தின் நுழைவாசலுக்கு வந்து, மோசேக்கும் குரு
வாகிய எலெயாசாருக்கும் தலைவர்களுக்கும்[c] ஜனங்களுக்கும் முன்
னால் நின்று, **3** "எங்களுடைய அப்பா வனாந்தரத்தில் செத்துப்போனார்,
ஆனால் யெகோவாவுக்கு அடங்கி நடக்காத கோராகுவின் கும்பலோடு[d]
சேர்ந்ததால் அவர் சாகவில்லை, தன்னுடைய பாவத்தினால்தான் செத்துப்
போனார். அவருக்கு மகன்கள் யாரும் இல்லை. **4** எங்களுடைய அப்பா
வுக்கு ஆண் வாரிசு இல்லை என்பதற்காக அவருடைய பெயர் ஏன் அவ
ருடைய வம்சத்திலிருந்து மறைந்துபோக வேண்டும்? எங்கள் அப்பாவின்
அண்ணன் தம்பிகளோடு எங்களுக்கும் சொத்தில் பங்கு கொடுங்கள்" என்
றார்கள். **5** உடனே மோசே அவர்களுடைய வழக்கை யெகோவாவிடம்
சொன்னார்.[e]

6 அப்போது யெகோவா மோசேயிடம், **7** "செலோப்பியாத்தின் மகள்
கள் கேட்பது சரிதான். நீ அவர்களுடைய அப்பாவின் அண்ணன் தம்பி
களோடு அவர்களுக்கும் கண்டிப்பாகச் சொத்தில் பங்கு கொடுக்க வேண்
டும். அவர்களுடைய அப்பாவின் சொத்தை அவர்களுடைய பெயருக்கு
மாற்றிக் கொடுக்க வேண்டும்.[f] **8** இஸ்ரவேலர்களிடம் நீ சொல்ல வேண்டி
யது என்னவென்றால், 'ஒருவன் ஆண் வாரிசு இல்லாமல் இறந்துபோனால்,
அவனுடைய பரம்பரைச் சொத்து அவனுடைய மகளுக்குப் போய்ச் சேர
வேண்டும். **9** அவனுக்கு மகளும் இல்லாவிட்டால், அவனுடைய பரம்
பரைச் சொத்தை அவனுடைய சகோதரர்களுக்குக் கொடுத்துவிட வேண்
டும். **10** அவனுக்குச் சகோதரர்களும் இல்லாவிட்டால், அவனுடைய அப்
பாவின் சகோதரர்களுக்கு அந்தச் சொத்தைக் கொடுக்க வேண்டும்.
11 அவன் அப்பாவுக்கும் சகோதரர்கள் இல்லாவிட்டால், அவனுடைய
மிக நெருங்கிய இரத்த சொந்தத்துக்கு அந்தச் சொத்தைக் கொடுக்க வேண்
டும். அது அவருக்குச் சொந்தமாகிவிடும். மோசேக்கு யெகோவா கட்டளை
கொடுத்தபடி, இந்தத் தீர்மானம்* இஸ்ரவேலர்களுக்கு ஒரு சட்டமாக இருக்
கும்'" என்றார்.

12 பின்பு யெகோவா மோசேயிடம், "அபாரீம் மலைக்கு[g] ஏறிப்
போய், இஸ்ரவேலர்களுக்கு நான் கொடுக்கப்போகும் தேசத்தை அங்கி
ருந்து பார்.[h] **13** அதை நீ பார்த்த பிறகு, உன் அண்ணன் ஆரோன் இறந்
ததுபோல்[i] நீயும் இறந்துபோவாய்.*[j] **14** ஏனென்றால், சீன் வனாந்தரத்தில்
ஜனங்கள் என்னிடம் வாக்குவாதம் செய்தபோது, அவர்களுக்குத் தண்ணீர்
கொடுத்த விஷயத்தில் நீங்கள் இரண்டு பேரும் என்னை மகிமைப்படுத்தா
மல், என் கட்டளையை மீறி நடந்தீர்கள்.[k] அந்தத் தண்ணீர்தான் சீன் வனாந்
தரத்தில்[l] காதேசுக்குப்[m] பக்கத்திலுள்ள மேரிபாவின் தண்ணீர்"[n] என்றார்.

27:11 * வே.வா., "நீதித்தீர்ப்பு." **27:13** * நே.மொ., "உன் முன்னோர்களுடன் சேர்க்கப்படுவாய்." எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன.

அதி. 26
a எண் 14:29, 30; யோசு 14:14; யோசு 19:49

அதி. 27
b எண் 26:33
c யாத் 18:25, 26
d எண் 14:35; எண் 16:1, 2; எண் 16:19, 35
e யாத் 18:15, 16; யாத் 33:11; லேவி 24:11, 12
f எண் 36:2; யோசு 17:3, 4
g எண் 33:47; உபா 32:48, 49
h ஆதி 13:14, 15; உபா 3:27; உபா 32:52; உபா 34:1
i எண் 31:2; உபா 34:7
j எண் 20:24, 28; எண் 33:38; உபா 10:6; உபா 32:50
k எண் 20:10, 12; உபா 1:37
l யோசு 15:1
m உபா 1:2
n சங் 106:32, 33

15 அப்போது மோசே யெகோவாவிடம், **16** “யெகோவாவே, எல்லா
ஜனங்களுக்கும் உயிர் கொடுக்கிற கடவுளே, இந்த ஜனங்களுக்காக ஒரு
தலைவனை நியமியுங்கள். **17** அவன் எல்லா விஷயங்களிலும் இவர்க
ளுக்குத் தலைமை தாங்கி, இவர்களை வழிநடத்தட்டும். அப்போதுதான்,
யெகோவாவின் ஜனங்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல இருக்க
மாட்டார்கள்” என்றார். **18** அதனால் யெகோவா மோசேயிடம், “அதற்குத்
தகுந்த குணமுள்ளவன் நூனின் மகனாகிய யோசுவாதான். அவனைக் கூப்
பிட்டு, அவன்மேல் உன் கையை வை.[a] **19** பின்பு, குருவாகிய எலெயாசா
ருக்கும் ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாக அவனை நிற்க வைத்து, அவர்க
ளுடைய கண் முன்னால் அவனைத் தலைவனாக நியமி.[b] **20** உனக்கு
இருக்கிற அதிகாரத்தில் கொஞ்சத்தை அவனுக்குக் கொடு.[c] அப்போதுதான்,
இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் அவன் பேச்சைக் கேட்பார்கள்.[d]
21 யோசுவா குருவாகிய எலெயாசாருக்கு முன்னால் நிற்க வேண்டும்.
எலெயாசார் அவனுக்காக ஊரீம்[e] மூலம் யெகோவாவிடம் விசாரித்துச்
சொல்வான். பின்பு, தங்களுக்குக் கொடுக்கப்படும் கட்டளையை யோசுவா
வும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் பின்பற்றுவார்கள்” என்றார்.

22 யெகோவா கட்டளை கொடுத்தபடியே மோசே செய்தார். அவர்
யோசுவாவைக் கூப்பிட்டு, குருவாகிய எலெயாசாருக்கு முன்னாலும்
எல்லா ஜனங்களுக்கு முன்னாலும் நிற்க வைத்தார். **23** பின்பு, அவர்மேல்
கை வைத்து அவரை நியமித்தார்.[f] யெகோவா சொன்னபடியே மோசே
செய்தார்.[g]

28 பின்பு யெகோவா மோசேயிடம், **2** “நீ இஸ்ரவேலர்களுக்குச்
சொல்ல வேண்டியது என்னவென்றால், ‘எனக்கு உணவு படைக்க,
அதாவது பலி செலுத்த, நீங்கள் மறக்கக் கூடாது. நான் சொல்லியிருக்கும்
நேரங்களில், அதைத் தகன பலியாக எனக்குச் செலுத்த வேண்டும்.[h] அந்த
வாசனை எனக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.’

3 அதோடு நீ அவர்களிடம், ‘குறையில்லாத ஒருவயது செம்மறியாட்டுக்
கடாக் குட்டிகள் இரண்டை ஒவ்வொரு நாளும் யெகோவாவுக்குத் தகன
பலியாக நீங்கள் செலுத்த வேண்டும். அதுதான் தினமும் செலுத்தப்படு
கிற* தகன பலி.[i] **4** ஒரு செம்மறியாட்டுக் கடாக் குட்டியைக் காலையிலும்
இன்னொரு செம்மறியாட்டுக் கடாக் குட்டியைச் சாயங்காலத்திலும் செலுத்த
வேண்டும்.[j] **5** அவற்றோடு, இடித்துப் பிழிந்த ஒரு லிட்டர்* எண்ணெயை,
ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு# நைசான மாவில் கலந்து உண
வுக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும்.[k] **6** அதுதான், சீனாய் மலையில்
யெகோவா கட்டளை கொடுத்தபடியே அவருக்குத் தினமும் செலுத்தப்படு
கிற* தகன பலி.[l] அந்த வாசனை அவருக்குப் பிடித்த வாசனையாக இருக்
கும். **7** அதனோடு சேர்த்து திராட்சமதுவைக் காணிக்கையாகக் கொடுக்க
வேண்டும். ஒவ்வொரு செம்மறியாட்டுக் கடாக் குட்டிக்காகவும் ஒரு லிட்டர்
திராட்சமதுவைச் செலுத்த வேண்டும்.[m] யெகோவாவுக்குக் காணிக்கையாக
அதைப் பலிபீடத்தில்* ஊற்ற வேண்டும். **8** இன்னொரு செம்மறியாட்
டுக் கடாக் குட்டியைச் சாயங்கால நேரத்தில் செலுத்த வேண்டும். காலையில்

28:3, 6 *வே.வா., “வழக்கமான.” **28:5** *நே.மொ., “ஒரு ஹின் அளவில் நான்கில் ஒரு பங்கு.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். #அதாவது, “சுமார் ஒரு கிலோ.” **28:7** *நே.மொ., “பரிசுத்த இடத்தில்.”

அதி. 27
a உபா 34:9; அப் 6:5, 6
b உபா 31:7
c உபா 1:38; உபா 31:3; உபா 34:10
d யோசு 1:17
e யாத் 28:30; 1சா 23:9; 1சா 28:6; நெ 7:65
f எண் 27:18
g உபா 3:28; உபா 31: 14, 23

அதி. 28
h 2நா 8:13; நெ 10:32, 33
i யாத் 29:38; லேவி 6:9; எசே 46:15
j யாத் 29:39
k யாத் 29:40; எண் 15:4
l யாத் 29: 38, 42; 2நா 2:4; எஸ்றா 3:3
m யாத் 29: 39, 40

செலுத்தியதைப் போலவே, இந்தப் பலியோடு சேர்த்து உணவுக் காணிக்கை
யையும் திராட்சமது காணிக்கையையும் தகன பலியாகச் செலுத்த வேண்டும்.
அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.[a]

9 ஓய்வுநாளில்,[b] குறையில்லாத ஒருவயது செம்மறியாட்டுக் கடாக்
குட்டிகள் இரண்டைச் செலுத்த வேண்டும். அதனோடு சேர்த்து, உண
வுக் காணிக்கையாக, எண்ணெய் கலந்த நைசான மாவை ஒரு எப்பா
அளவிலே பத்தில் இரண்டு பங்கு* கொண்டுவர வேண்டும். அதனோடு
கொடுக்க வேண்டிய திராட்சமது காணிக்கையையும் கொண்டுவர வேண்
டும். 10 ஓய்வுநாளில் செலுத்த வேண்டிய தகன பலி இதுதான். தினமும்
செலுத்தப்படுகிற* தகன பலியோடும் அதனோடு கொடுக்க வேண்டிய
திராட்சமது காணிக்கையோடும் இதைச் செலுத்த வேண்டும்.[c]

11 ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும், யெகோவாவுக்குத் தகன
பலியாக இரண்டு இளம் காளைகளையும், ஒரு செம்மறியாட்டுக் கடா
வையும், குறையில்லாத ஒருவயதுள்ள ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டி
களையும் செலுத்த வேண்டும்.[d] 12 ஒவ்வொரு காளையுடனும், உண
வுக் காணிக்கையாக, எண்ணெய் கலந்த நைசான மாவை ஒரு எப்பா
அளவிலே பத்தில் மூன்று பங்கு# கொண்டுவர வேண்டும்.[e] செம்மறியாட்
டுக் கடாவுடன், உணவுக் காணிக்கையாக, எண்ணெய் கலந்த நைசான
மாவை ஒரு எப்பா அளவிலே பத்தில் இரண்டு பங்கு* கொண்டுவர
வேண்டும்.[f] 13 ஒவ்வொரு செம்மறியாட்டுக் கடாக் குட்டியுடனும், உண
வுக் காணிக்கையாக, எண்ணெய் கலந்த நைசான மாவை ஒரு எப்பா
அளவிலே பத்தில் ஒரு பங்கு* கொண்டுவர வேண்டும். இவற்றைத்
தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப்
பிடித்த வாசனையாக இருக்கும்.[g] 14 ஒவ்வொரு காளையுடனும் ஒன்றே
முக்கால் லிட்டர்* திராட்சமதுவையும்,[h] செம்மறியாட்டுக் கடாவுடன் ஒன்
றேகால் லிட்டர்# திராட்சமதுவையும்,[i] ஒவ்வொரு செம்மறியாட்டுக் கடாக்
குட்டியுடனும் ஒரு லிட்டர்△[j] திராட்சமதுவையும் காணிக்கையாகச் செலுத்த
வேண்டும். வருஷத்தின் எல்லா மாதங்களிலும் செலுத்த வேண்டிய தகன
பலி இதுதான். 15 தினமும் செலுத்தப்படுகிற* தகன பலியோடும் அத
னோடு கொடுக்க வேண்டிய திராட்சமது காணிக்கையோடும், பாவப் பரி
கார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும் யெகோவாவுக்குச் செலுத்த
வேண்டும்.

16 முதல் மாதம், 14-ஆம் நாளில் யெகோவாவுக்குப் பஸ்காவை அனு
சரிக்க வேண்டும்.[k] 17 அந்த மாதத்தின் 15-ஆம் நாளில் ஒரு பண்டிகை
கொண்டாட வேண்டும். ஏழு நாட்களுக்குப் புளிப்பில்லாத ரொட்டியைச்
சாப்பிட வேண்டும்.[l] 18 முதலாம் நாளில் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்று
கூடி வர வேண்டும். அன்றைக்கு நீங்கள் கடினமான வேலை எதுவும் செய்
யக் கூடாது. 19 இரண்டு இளம் காளைகள், ஒரு செம்மறியாட்டுக் கடா,
ஒருவயதுள்ள ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றை நீங்

28:9, 12 *அதாவது, “சுமார் 2 கிலோ.” 28:10, 15 *வே.வா., “வழக்கமான.” 28:12 #அதாவது, “சுமார் 3 கிலோ.” 28:13 *அதாவது, “சுமார் ஒரு கிலோ.” 28:14 *நே.மொ., “ஒரு ஹின் அளவில் பாதி.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். #நே.மொ., “ஒரு ஹின் அளவில் மூன்றிலொரு பங்கு.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். △நே.மொ., “ஒரு ஹின் அளவில் நான்கில் ஒரு பங்கு.”

அதி. 28
a யாத் 29:41
b யாத் 16:29; யாத் 20:10; எசே 20:12
c எண் 28:3, 7
d எண் 10:10; 1நா 23:31; 2நா 2:4; நெ 10:32, 33
e லேவி 2:11
f லேவி 1:10
g லேவி 1:10, 13
h எண் 15:8, 10
i எண் 15:6, 7
j எண் 15:5
k யாத் 12:14; லேவி 23:5; உபா 16:1; எசே 45:21; 1கொ 5:7
l யாத் 12:15; லேவி 23:6; 1கொ 5:8

கள் யெகோவாவுக்குத் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அவை குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்டும்.[a] **20** அவற்றோடு சேர்த்து, எண்ணெய் கலந்த நைசான மாவை உணவுக் காணிக்கையாகக் கொண்டுவர வேண்டும்;[b] ஒவ்வொரு காளைக்கும் ஒரு எப்பா அளவிலே பத்தில் மூன்று பங்கு* மாவும், செம்மறியாட்டுக் கடாவுக்கு ஒரு எப்பா அளவிலே பத்தில் இரண்டு பங்கு# மாவும் கொண்டுவர வேண்டும். **21** அந்த ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு* மாவைக் கொண்டுவர வேண்டும். **22** அவற்றுடன், உங்களுக்குப் பாவப் பரிகாரம் செய்வதற்காக ஒரு வெள்ளாட்டைக் கொண்டுவர வேண்டும். **23** தினமும் காலையில் செலுத்தும் தகன பலி தவிர, இவற்றையும் நீங்கள் செலுத்த வேண்டும். **24** இவற்றை ஏழு நாட்களும் இதே போல் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும். தினமும் செலுத்துகிற* தகன பலியோடும் அதனோடு கொடுக்க வேண்டிய திராட்சமது காணிக்கையோடும் அதைச் செலுத்த வேண்டும். **25** ஏழாம் நாளில் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்டும்.[c] அன்றைக்கு நீங்கள் கடினமான வேலை எதுவும் செய்யக் கூடாது.[d]

26 புது தானியத்தில் செய்யப்பட்ட உணவுக் காணிக்கையை நீங்கள் யெகோவாவுக்குச் செலுத்துகிற நாளில்,[e] அதாவது முதல் விளைச்சலைச் செலுத்துகிற அறுவடைப் பண்டிகை*[f] நாளில்,[g] பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்டும். அன்றைக்கு நீங்கள் கடினமான வேலை எதுவும் செய்யக் கூடாது.[h] **27** இரண்டு இளம் காளைகள், ஒரு செம்மறியாட்டுக் கடா, ஒருவயதுள்ள ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைத் தகன பலியாக நீங்கள் செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.[i] **28** அதோடு, உணவுக் காணிக்கையாக எண்ணெய் கலந்த நைசான மாவைக் கொண்டுவர வேண்டும். ஒவ்வொரு காளைக்கும் ஒரு எப்பா அளவிலே பத்தில் மூன்று பங்கு* மாவும், செம்மறியாட்டுக் கடாவுக்கு ஒரு எப்பா அளவிலே பத்தில் இரண்டு பங்கு# மாவும் கொண்டுவர வேண்டும். **29** அந்த ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு* மாவைக் கொண்டுவர வேண்டும். **30** அவற்றுடன், உங்களுக்குப் பாவப் பரிகாரம் செய்வதற்காக ஒரு வெள்ளாட்டைக் கொண்டுவர வேண்டும்.[j] **31** தினமும் செலுத்துகிற* தகன பலியையும் அதனோடு சேர்த்துக் கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் தவிர, அவற்றையும் நீங்கள் செலுத்த வேண்டும். அவை குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்டும்.[k] அவற்றோடு சேர்த்துத் திராட்சமது காணிக்கையையும் செலுத்த வேண்டும்' என்று சொல்" என்றார்.

29 பின்பு அவர், "'ஏழாம் மாதம் முதலாம் நாளில், நீங்கள் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்டும். அன்றைக்குக் கடினமான வேலை எதுவும் செய்யக் கூடாது.[l] அந்த நாளில் எக்காளம் ஊத வேண்டும்.[m] **2** ஒரு இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக்

அதி. 28
a லேவி 22:20, 22; உபா 15:21
b லேவி 2:1
c யாத் 13:6
d யாத் 12:16; லேவி 23:8; உபா 16:8
e லேவி 23:15, 16
f யாத் 34:22; உபா 16:10; அப் 2:1
g யாத் 23:16
h லேவி 23:16, 21
i லேவி 23:16, 18
j லேவி 23:16, 19
k லேவி 1:3

அதி. 29
l லேவி 23:24, 25
m எண் 10:2; சங் 81:3

28:20, 28 *அதாவது, "சுமார் 3 கிலோ." **28:20, 28** #அதாவது, "சுமார் 2 கிலோ." **28:21, 29** *அதாவது, "சுமார் ஒரு கிலோ." **28:24, 31** *வே.வா., "வழக்கமான." **28:26** *வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது.

கடா, ஒருவயதுள்ள ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைத் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்டும். **3** அவற்றோடு சேர்த்து, எண்ணெய் கலந்த நைசான மாவை உணவுக் காணிக்கையாகக் கொண்டுவர வேண்டும். இளம் காளையுடன் ஒரு எப்பா அளவிலே பத்தில் மூன்று பங்கு* மாவையும், செம்மறியாட்டுக் கடாவுடன் ஒரு எப்பா அளவிலே பத்தில் இரண்டு பங்கு# மாவையும் கொண்டுவர வேண்டும். **4** ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஒவ்வொன்றுடனும் ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு* மாவைக் கொண்டுவர வேண்டும். **5** அவற்றோடு, ஒரு வெள்ளாட்டுக் கடாக் குட்டியை உங்களுடைய பாவப் பரிகாரத்துக்காகக் கொண்டுவர வேண்டும். **6** ஒவ்வொரு மாதமும் செலுத்துகிற தகன பலி, அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கை[a] மற்றும் திராட்சமது காணிக்கை, தினமும் செலுத்துகிற* தகன பலி, அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கை[b] மற்றும் திராட்சமது காணிக்கை[c] ஆகியவற்றோடு, இவற்றையும் நீங்கள் செலுத்த வேண்டும். வழக்கமான முறைப்படியே இவற்றைத் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும்.

7 ஏழாம் மாதம் 10-ஆம் நாளில், நீங்கள் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்டும்.[d] அன்றைக்கு உங்களையே வருத்திக்கொள்ள வேண்டும்.* எந்த வேலையும் செய்யக் கூடாது.[e] **8** ஒரு இளம் காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா, ஒருவயதுள்ள ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைத் தகன பலியாகச் செலுத்த வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்கும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்டும்.[f] **9** அவற்றோடு சேர்த்து, எண்ணெய் கலந்த நைசான மாவை உணவுக் காணிக்கையாகக் கொண்டுவர வேண்டும். இளம் காளையோடு ஒரு எப்பா அளவிலே பத்தில் மூன்று பங்கு* மாவையும், செம்மறியாட்டுக் கடாவோடு ஒரு எப்பா அளவிலே பத்தில் இரண்டு பங்கு# மாவையும் கொண்டுவர வேண்டும். **10** ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஒவ்வொன்றுடனும் ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு* மாவைக் கொண்டுவர வேண்டும். **11** பாவப் பரிகாரம் செய்வதற்கான பலியையும்[g] அதனோடு கொடுக்க வேண்டிய திராட்சமது காணிக்கையையும், தினமும் செலுத்துகிற* தகன பலியையும் அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்சமது காணிக்கையையும் தவிர, பாவப் பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும் கொண்டுவர வேண்டும்.

12 ஏழாம் மாதம் 15-ஆம் நாளில், நீங்கள் பரிசுத்த மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்டும். அன்றைக்குக் கடினமான வேலை எதுவும் செய்யக் கூடாது. ஏழு நாட்கள் யெகோவாவுக்குப் பண்டிகை கொண்டாட வேண்டும்.[h] **13** அப்போது 13 இளம் காளைகள், 2 செம்மறியாட்டுக் கடாக்

29:3, 9 *அதாவது, “சுமார் 3 கிலோ.” **29:3, 9** #அதாவது, “சுமார் 2 கிலோ.” **29:4, 10** *அதாவது, “சுமார் ஒரு கிலோ.” **29:6, 11** *வே.வா., “வழக்கமான.” **29:7** *விரதம் இருப்பதன் மூலமோ வேறு விதத்தின் மூலமோ தங்களைத்தாங்களே கஷ்டப்படுத்திக்கொள்வதைக் குறிக்கலாம்.

அதி. 29
- a எண் 28:11-13
- b எண் 28:3, 5
- c எண் 28:6, 7
- d லேவி 16:29
- e லேவி 23:27-31
- f லேவி 1:3; லேவி 22:22; உபா 15:21; உபா 17:1
- g லேவி 16:3
- h யாத் 23:16; லேவி 23:34-36; உபா 16:13-15; நெ 8:14-18

அதி. 29
a எஸ்றா 3:4
b லேவி 22:22 உபா 17:1
c எண் 28:3-8
d லேவி 22:22 உபா 17:1
e எண் 28:3-8
f லேவி 22:22 உபா 17:1
g எண் 28:3-8
h லேவி 22:22 உபா 17:1

கள், ஒருவயதுள்ள 14 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைத்
தகன பலியாகச் செலுத்த வேண்டும்.[a] அந்த வாசனை யெகோவாவுக்குப்
பிடித்த வாசனையாக இருக்கும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்
களாக இருக்க வேண்டும்.[b] **14** அவற்றோடு சேர்த்து, எண்ணெய் கலந்த
நைசான மாவை உணவுக் காணிக்கையாகக் கொண்டுவர வேண்டும்.
13 காளைகள் ஒவ்வொன்றுடனும் ஒரு எப்பா அளவிலே பத்தில் மூன்று
பங்கு* மாவையும், இரண்டு செம்மறியாட்டுக் கடாக்கள் ஒவ்வொன்றுட
னும் ஒரு எப்பா அளவிலே பத்தில் இரண்டு பங்கு# மாவையும் கொண்டு
வர வேண்டும். **15** 14 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஒவ்வொன்றுட
னும் ஒரு எப்பா அளவிலே பத்தில் ஒரு பங்கு* மாவைக் கொண்டுவர
வேண்டும். **16** பாவப் பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும்
கொண்டுவர வேண்டும். அதோடு, தினமும் செலுத்துகிற* தகன பலியை
யும் அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்ச
மது காணிக்கையையும் கொண்டுவர வேண்டும்.[c]

17 பண்டிகையின் இரண்டாம் நாளில் 12 இளம் காளைகள், 2 செம்மறி
யாட்டுக் கடாக்கள், ஒருவயதுள்ள 14 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள்
ஆகியவற்றைச் செலுத்த வேண்டும். அவை எல்லாமே குறையில்லாத மிரு
கங்களாக இருக்க வேண்டும்.[d] **18** அந்தக் காளைகள், செம்மறியாட்டுக்
கடாக்கள், செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்
குத் தகுந்தபடி உணவுக் காணிக்கையையும் திராட்சமது காணிக்கையையும்
வழக்கமான முறைப்படி செலுத்த வேண்டும். **19** அதோடு, பாவப் பரிகார
பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும், அதனோடு கொடுக்க வேண்
டிய திராட்சமது காணிக்கையையும், தினமும் செலுத்துகிற* தகன பலியை
யும், அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்
சமது காணிக்கையையும் செலுத்த வேண்டும்.[e]

20 மூன்றாம் நாளில் 11 காளைகள், 2 செம்மறியாட்டுக் கடாக்கள், ஒரு
வயதுள்ள 14 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைச் செலுத்த
வேண்டும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்
டும்.[f] **21** அந்தக் காளைகள், செம்மறியாட்டுக் கடாக்கள், செம்மறியாட்
டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி உணவுக்
காணிக்கையையும் திராட்சமது காணிக்கையையும் வழக்கமான முறைப்
படி செலுத்த வேண்டும். **22** அதோடு, பாவப் பரிகார பலியாக ஒரு
வெள்ளாட்டுக் குட்டியையும், தினமும் செலுத்துகிற* தகன பலியையும்,
அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்சமது
காணிக்கையையும் செலுத்த வேண்டும்.[g]

23 நான்காம் நாளில் 10 காளைகள், 2 செம்மறியாட்டுக் கடாக்கள், ஒரு
வயதுள்ள 14 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைச் செலுத்த
வேண்டும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்
டும்.[h] **24** அந்தக் காளைகள், செம்மறியாட்டுக் கடாக்கள், செம்மறியாட்
டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி உணவுக்
காணிக்கையையும் திராட்சமது காணிக்கையையும் வழக்கமான முறைப்
படி செலுத்த வேண்டும். **25** அதோடு, பாவப் பரிகார பலியாக ஒரு

29:14 * அதாவது, "சுமார் 3 கிலோ." # அதாவது, "சுமார் 2 கிலோ." **29:15** * அதாவது, "சுமார் ஒரு கிலோ." **29:16, 19, 22** * வே.வா., "வழக்கமான."

வெள்ளாட்டுக் குட்டியையும், தினமும் செலுத்துகிற* தகன பலியையும்,
அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்சமது
காணிக்கையையும் செலுத்த வேண்டும்.[a]

26 ஐந்தாம் நாளில் 9 காளைகள், 2 செம்மறியாட்டுக் கடாக்கள், ஒருவ
யதுள்ள 14 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைச் செலுத்த
வேண்டும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்
டும்.[b] **27** அந்தக் காளைகள், செம்மறியாட்டுக் கடாக்கள், செம்மறியாட்
டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி உணவுக்
காணிக்கையையும் திராட்சமது காணிக்கையையும் வழக்கமான முறைப்
படி செலுத்த வேண்டும். **28** அதோடு, பாவப் பரிகார பலியாக ஒரு
வெள்ளாட்டுக் குட்டியையும், தினமும் செலுத்துகிற* தகன பலியையும்,
அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்சமது
காணிக்கையையும் செலுத்த வேண்டும்.[c]

29 ஆறாம் நாளில் 8 காளைகள், 2 செம்மறியாட்டுக் கடாக்கள், ஒருவ
யதுள்ள 14 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைச் செலுத்த
வேண்டும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்
டும்.[d] **30** அந்தக் காளைகள், செம்மறியாட்டுக் கடாக்கள், செம்மறியாட்
டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி உணவுக்
காணிக்கையையும் திராட்சமது காணிக்கையையும் வழக்கமான முறைப்
படி செலுத்த வேண்டும். **31** அதோடு, பாவப் பரிகார பலியாக ஒரு
வெள்ளாட்டுக் குட்டியையும், தினமும் செலுத்துகிற* தகன பலியையும்,
அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்சமது
காணிக்கையையும் செலுத்த வேண்டும்.[e]

32 ஏழாம் நாளில் 7 காளைகள், 2 செம்மறியாட்டுக் கடாக்கள், ஒருவய
துள்ள 14 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைச் செலுத்த
வேண்டும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்
டும்.[f] **33** அந்தக் காளைகள், செம்மறியாட்டுக் கடாக்கள், செம்மறியாட்
டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி உணவுக்
காணிக்கையையும் திராட்சமது காணிக்கையையும் வழக்கமான முறைப்
படி செலுத்த வேண்டும். **34** அதோடு, பாவப் பரிகார பலியாக ஒரு
வெள்ளாட்டுக் குட்டியையும், தினமும் செலுத்துகிற* தகன பலியையும்,
அதனோடு கொடுக்க வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்சமது
காணிக்கையையும் செலுத்த வேண்டும்.[g]

35 எட்டாம் நாளில், விசேஷ மாநாட்டுக்காக ஒன்றுகூடி வர வேண்
டும். அன்றைக்குக் கடினமான வேலை எதுவும் செய்யக் கூடாது.[h]
36 ஒரு காளை, ஒரு செம்மறியாட்டுக் கடா, ஒருவயதுள்ள ஏழு செம்மறி
யாட்டுக் கடாக் குட்டிகள் ஆகியவற்றைத் தகன பலியாகச் செலுத்த
வேண்டும். அந்த வாசனை யெகோவாவுக்குப் பிடித்த வாசனையாக இருக்
கும். அவை எல்லாமே குறையில்லாத மிருகங்களாக இருக்க வேண்டும்.[i]
37 அந்தக் காளைகள், செம்மறியாட்டுக் கடாக்கள், செம்மறியாட்டுக் கடாக்
குட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி உணவுக் காணிக்கை
யையும் திராட்சமது காணிக்கையையும் வழக்கமான முறைப்படி செலுத்த
வேண்டும். **38** அதோடு, பாவப் பரிகார பலியாக ஒரு வெள்ளாட்டுக் குட்

அதி. 29
a எண் 28:3-8
b உபா 15:21
உபா 17:1
c எண் 28:3-8
d லேவி 22:22
உபா 17:1
e எண் 28:3-8
f லேவி 22:22
உபா 17:1
g எண் 28:3-8
h லேவி 23:
36, 39
i லேவி 22:22
உபா 17:1

29:25, 28, 31, 34 * வே.வா., “வழக்கமான.”

டியையும், தினமும் செலுத்துகிற* தகன பலியையும், அதனோடு கொடுக்க
வேண்டிய உணவுக் காணிக்கையையும் திராட்சமது காணிக்கையையும்
செலுத்த வேண்டும்.[a]

39 இவற்றையெல்லாம் பண்டிகை நாட்களில்[b] யெகோவாவுக்குச்
செலுத்த வேண்டும். நேர்ந்துகொண்டதை நிறைவேற்றவோ[c] நீங்களாகவே
விருப்பப்பட்டோ செலுத்தும்[d] தகன பலி,[e] உணவுக் காணிக்கை,[f] திராட்ச
மது காணிக்கை,[g] சமாதான பலி[h] ஆகியவற்றோடு இவற்றையெல்லாம்
செலுத்த வேண்டும்' என்று ஜனங்களிடம் சொல்" என்றார். **40** யெகோவா
கொடுத்த எல்லா கட்டளைகளையும் மோசே இஸ்ரவேலர்களுக்குச்
சொன்னார்.

30 மோசே இஸ்ரவேலின் கோத்திரத் தலைவர்களிடம்,[i] "யெகோவா
உங்களுக்குக் கொடுக்கும் கட்டளை இதுதான்: **2** ஒருவன் எதை
யாவது செய்யப்போவதாக அல்லது தவிர்க்கப்போவதாக யெகோவாவிடம்
நேர்ந்துகொண்டாலோ[j] உறுதிமொழி எடுத்தாலோ[k] அதை மீறக் கூடாது.[l]
தான் நேர்ந்துகொண்ட எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டும்.[m]

3 ஒரு இளம் பெண் தன்னுடைய அப்பாவின் வீட்டில் வாழும்போது
எதையாவது செய்யப்போவதாக அல்லது தவிர்க்கப்போவதாக யெகோவா
விடம் நேர்ந்துகொண்டால், **4** அவள் நேர்ந்துகொண்ட எல்லாவற்றையும்
அவளுடைய அப்பா கேள்விப்பட்டும் அவளைத் தடுக்காவிட்டால், நேர்ந்து
கொண்ட எல்லாவற்றையும் அவள் நிறைவேற்ற வேண்டும். **5** ஆனால்,
அவளுடைய அப்பா அதைக் கேள்விப்பட்டு அவளைத் தடுத்தால், நேர்ந்து
கொண்டதை அவள் நிறைவேற்ற வேண்டியதில்லை. அவளுடைய அப்பா
அவளைத் தடுத்துவிட்டதால் அவளை யெகோவா மன்னிப்பார்.[n]

6 அவள் எதையாவது நேர்ந்திருக்கும் சமயத்தில் அல்லது அவசரப்
பட்டு சத்தியம் செய்திருக்கும் சமயத்தில் அவளுக்குக் கல்யாணமானால்,
7 அவளுடைய கணவன் அதைக் கேள்விப்படும் நாளில் அவளைத்
தடுக்காவிட்டால், நேர்ந்துகொண்ட எல்லாவற்றையும் அவள் நிறைவேற்ற
வேண்டும். **8** ஆனால், அவளுடைய கணவன் அதைக் கேள்விப்படும்
நாளில் அதற்கு அனுமதி தர விரும்பாவிட்டால், அவள் நேர்ந்துகொண்
டதை அல்லது அவசரப்பட்டு சத்தியம் செய்ததை அவர் ரத்து செய்ய
லாம்.[o] யெகோவா அவளை மன்னிப்பார்.

9 விதவைப் பெண்ணோ விவாகரத்தான பெண்ணோ எதையாவது
நேர்ந்துகொண்டால் அதைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும்.

10 ஆனாலும், ஒரு பெண் தன்னுடைய கணவனின் வீட்டில்
வாழும்போது எதையாவது செய்யப்போவதாக அல்லது தவிர்க்கப்போவ
தாக கடவுளிடம் நேர்ந்துகொண்டால், **11** அவளுடைய கணவன்
அதைக் கேள்விப்படும்போது அதற்கு ஆட்சேபணையோ மறுப்போ
தெரிவிக்காவிட்டால், தான் நேர்ந்துகொண்ட எல்லாவற்றையும் அவள்
நிறைவேற்ற வேண்டும். **12** ஆனால் அவளுடைய கணவன் அதைக்
கேள்விப்படும் நாளில், அவள் நேர்ந்துகொண்ட எல்லாவற்றையும் முழுவ
துமாக ரத்து செய்தால் அவள் அவற்றை நிறைவேற்ற வேண்டிய
தில்லை.[p] அவளுடைய கணவன் அவற்றை ரத்து செய்ததால் யெகோவா

29:38 * வே.வா., "வழக்கமான."

அதி. 29
a எண் 28:3-8
b லேவி 23:2; உபா 16:16
c உபா 12:5, 6
d லேவி 7:16; லேவி 22:21
e லேவி 1:3
f லேவி 2:1
g எண் 15:5
h லேவி 3:1

அதி. 30
i யாத் 18:25
j ஆதி 28:20-22; நியா 11:30, 31
k சங் 132:1-5
l உபா 23:21; சங் 116:14; சங் 119:106; பிர 5:4; மத் 5:33
m சங் 50:14; சங் 66:13
n யாத் 20:12
o ரோ 7:2; 1கொ 11:3; எபே 5:22
p 1கொ 11:3; 1பே 3:1

அவளை மன்னிப்பார். **13** எதையாவது செய்யப்போவதாக அல்லது தன்
னையே வருத்திக்கொள்ளப்போவதாக* அவள் நேர்ந்துகொண்டாலோ
உறுதிமொழி எடுத்தாலோ, அதை அவள் நிறைவேற்ற வேண்டுமா வேண்
டாமா என்பதைக் கணவன் தீர்மானிக்கலாம். **14** ஆனால், பல நாட்களாகி
யும் அவளுடைய கணவன் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்காவிட்டால்,
அவள் நேர்ந்துகொண்ட எல்லாவற்றுக்கும் சம்மதம் தெரிவித்துவிட்டார்
என்று அர்த்தம். ஏனென்றால், அதைக் கேள்விப்பட்ட நாளில் அவர் ஆட்
சேபணை தெரிவிக்கவில்லை. **15** ஆனால், அதைக் கேள்விப்பட்ட சில
நாட்களுக்குப் பிறகு ரத்து செய்தால், அவளுடைய குற்றத்துக்கு அவர்தான்
பொறுப்பு.[a]

16 ஏதோவொன்றை நேர்ந்துகொள்ளும் விஷயத்தில் கணவனுக்கும்
மனைவிக்கும், அப்பாவுக்கும் அவர் வீட்டில் வாழ்கிற மகளுக்கும் மோசே
மூலமாக யெகோவா கொடுத்த விதிமுறைகள் இவைதான்" என்றார்.

31 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "இஸ்ரவேலர்களுக்காக மீதி
யானியர்களை[b] நீ பழிவாங்கு.[c] அதன்பின், நீ இறந்துபோவாய்"*[d]
என்றார்.

3 அதனால் மோசே ஜனங்களிடம், "யெகோவாவின் சார்பாக மீதியா
னியர்களை நீங்கள் பழிவாங்க வேண்டும். அவர்களோடு போர் செய்வதற்
காக ஆட்களைத் தயார்படுத்துங்கள். **4** ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும்
1,000 பேரை நீங்கள் போருக்கு அனுப்ப வேண்டும்" என்றார். **5** அதன்ப
டியே, லட்சக்கணக்கில் இருந்த இஸ்ரவேலர்களின்[e] ஒவ்வொரு கோத்திரத்
திலிருந்தும் 1,000 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மொத்தம் 12,000 பேர்
போருக்காகத் தயார்படுத்தப்பட்டார்கள்.

6 ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் 1,000 பேரை மோசே போருக்கு
அனுப்பினார். அவர்களுடன் குருவாகிய எலெயாசாரின் மகன் பினெ
காசை[f] அனுப்பினார். இவர் பரிசுத்த பாத்திரங்களையும் போர் எக்காளங்க
ளையும்[g] கையில் எடுத்துக்கொண்டு போனார். **7** மோசேக்கு யெகோவா
கட்டளை கொடுத்தபடியே மீதியான் தேசத்துக்கு எதிராக இஸ்ரவேலர்கள்
போர் செய்து, எல்லா ஆண்களையும் கொன்றுபோட்டார்கள். **8** மீதியான்
தேசத்தின் ஐந்து ராஜாக்களான ஏவி, ரெக்கேம், சூர், ஹூர், ரேபா ஆகிய
வர்களையும் வெட்டி வீழ்த்தினார்கள். பெயோரின் மகன் பிலேயாமையும்[h]
வாளால் வெட்டிப்போட்டார்கள். **9** ஆனால், மீதியானியப் பெண்களை
யும் பிள்ளைகளையும் பிடித்துக்கொண்டு போனார்கள். மீதியானியர்களின்
எல்லா மந்தைகளையும் எல்லா பொருள்களையும் சூறையாடினார்கள்.
10 அவர்கள் குடியிருந்த எல்லா நகரங்களையும் முகாம்களையும் தீ வைத்
துக் கொளுத்தினார்கள். **11** பின்பு, தாங்கள் பிடித்துவந்த ஆட்களையும்
மிருகங்களையும் கூட்டிக்கொண்டு, **12** சூறையாடிய பொருள்களை எடுத்
துக்கொண்டு மோசேயிடமும் எலெயாசாரிடமும் ஜனங்களிடமும் வந்தார்
கள். அதாவது, எரிகோவுக்குப் பக்கத்தில் யோர்தானை ஒட்டியுள்ள
மோவாப் பாலைநிலத்தில் இருந்த முகாமுக்கு[i] வந்தார்கள்.

30:13 *விரதம் இருப்பதன் மூலமோ வேறு விதத்தின் மூலமோ தங்களைத்தாங்களே கஷ்டப்படுத்திக்கொள்வதைக் குறிக்கலாம். **31:2** *நே.மொ., "உன் முன்னோர்களுடன் சேர்க்கப்படுவாய்." எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன.

அதி. 30
a உபா 23:21

அதி. 31
b எண் 22:7; எண் 25:1-3; எண் 25:17, 18; 1கொ 10:8; வெளி 2:14
c சங் 94:1; ஏசா 1:24; நாகூ 1:2
d எண் 27:12, 13; உபா 32:48-50
e எண் 26:51
f எண் 25:7, 8
g எண் 10:2, 9
h எண் 22:12; 2பே 2:15; வெளி 2:14
i எண் 22:1

13 அப்போது, மோசேயும் குருவாகிய எலெயாசாரும் ஜனங்களின்
தலைவர்கள் எல்லாரும் அவர்களைச் சந்திக்க முகாமுக்கு வெளியே
போனார்கள். **14** போரிலிருந்து திரும்பி வந்த படைத் தலைவர்களைப்
பார்த்து, அதாவது 1,000 வீரர்களுக்குத் தலைவர்களையும் 100 வீரர்க
ளுக்குத் தலைவர்களையும் பார்த்து, மோசே கோபப்பட்டார். **15** மோசே
அவர்களிடம், “பெண்கள் எல்லாரையும் உயிரோடு விட்டுவிட்டீர்களா?
16 பேயோரின் விஷயத்தில்,[a] இவர்கள்தானே பிலேயாமின் பேச்சைக்
கேட்டு இஸ்ரவேலர்களை யெகோவாவுக்கு விரோதமாகத் துரோகம்
செய்ய வைத்தார்கள்![b] இவர்கள்தானே யெகோவாவின் ஜனங்கள்மேல்
கொள்ளைநோயை வர வைத்தார்கள்![c] **17** அதனால் ஆண் பிள்ளைகள்
எல்லாரையும், ஆணோடு உறவுகொண்ட பெண்கள் எல்லாரையும் கொன்
றுபோட வேண்டும். **18** ஆனால், எந்த ஆணோடும் உறவுகொள்ளாத
பெண்கள் எல்லாரையும் உயிரோடு விட்டுவிடலாம்.[d] **19** நீங்கள் ஏழு
நாட்கள் முகாமுக்கு வெளியே தங்க வேண்டும். போரில் கொலை செய்
தவர்களும் கொலை செய்யப்பட்டவர்களின் உடலைத் தொட்டவர்களும்[e]
தங்களை மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தூய்மைப்படுத்த வேண்
டும்.[f] நீங்கள் பிடித்துக்கொண்டு வந்தவர்களும் நீங்களும் இப்படிச் செய்ய
வேண்டும். **20** எல்லா உடைகளையும், தோல் பொருள்களையும், வெள்
ளாட்டு மயிரில் செய்யப்பட்ட பொருள்களையும், மரச் சாமான்களையும்
தூய்மைப்படுத்த வேண்டும்” என்றார்.

21 பின்பு, குருவாகிய எலெயாசார் போரிலிருந்து திரும்பி வந்த ஆட்
களைப் பார்த்து, “யெகோவா மோசேக்குக் கொடுத்த சட்டம் என்னவென்
றால், **22** ‘நெருப்பைத் தாக்குப்பிடிக்கிற எல்லாவற்றையும், அதாவது தங்
கம், வெள்ளி, செம்பு, இரும்பு, தகரம், ஈயம் போன்ற எல்லாவற்றையும்,
23 நீங்கள் நெருப்பில் போட வேண்டும். அப்போது அவை சுத்தமா
கும். அதேசமயத்தில், அவற்றைச் சுத்திகரிப்பு நீராலும்[g] தூய்மைப்படுத்த
வேண்டும். ஆனால், நெருப்பைத் தாக்குப்பிடிக்காத எல்லாவற்றையும் தண்
ணீரில் கழுவ வேண்டும். **24** ஏழாம் நாளில் உங்களுடைய உடைகளைத்
துவைக்க வேண்டும், அப்போது நீங்கள் சுத்தமாவீர்கள். அதன்பின் முகா
முக்குள் வரலாம்’”[h] என்றார்.

25 பின்பு யெகோவா மோசேயிடம், **26** “பிடித்துக்கொண்டு வந்த
மனுஷர்களையும், மிருகங்களையும் நீ கணக்கெடுக்க வேண்டும். குருவா
கிய எலெயாசாருடனும் தந்தைவழிக் குடும்பத் தலைவர்களுடனும் சேர்ந்து
இதைச் செய்ய வேண்டும். **27** பின்பு, அந்த மனுஷர்களையும் மிருகங்க
ளையும் இரண்டு பங்காகப் பிரித்து, போருக்குப் போனவர்களுக்கு ஒரு
பங்கும் ஜனங்களுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.[i] **28** போருக்குப்
போன வீரர்களுக்குக் கொடுக்கிற மனுஷர்களிலும், மாடுகளிலும், கழுதை
களிலும், ஆடுகளிலும் 500-க்கு ஒன்றைப் பிரித்தெடுத்து யெகோவாவுக்கா
கக் கொடுக்க வேண்டும். **29** அவர்களுக்குக் கிடைத்த பாதிப் பங்கிலி
ருந்து இந்த மனுஷர்களையும் மிருகங்களையும் பிரித்தெடுத்து
யெகோவாவுக்குக் காணிக்கையாகக் குருவாகிய எலெயாசாரிடம் கொடுக்க
வேண்டும்.[j] **30** இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கிடைத்த பாதிப் பங்கில்,
அதாவது மனுஷர்களிலும் மாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலும்
வீட்டு விலங்குகளிலும், 50-க்கு ஒன்றைப் பிரித்தெடுத்து லேவியர்களுக்குக்

அதி. 31

a எண் 25:17, 18; உபா 4:3; யோசு 22:17

b எண் 25:1, 2; வெளி 2:14

c எண் 25:9; 1கொ 10:8

d எண் 31:35

e எண் 5:2; எண் 19:11, 16

f எண் 19:20

g எண் 19:9

h எண் 19:19, 20

i யோசு 22:7, 8; 1சா 30:24

j எண் 18:20, 29

கொடுக்க வேண்டும்.[a] ஏனென்றால், யெகோவாவின் கூடாரத்தில் செய்ய
வேண்டிய வேலைகளை அவர்கள் செய்கிறார்கள்"[b] என்றார்.

31 யெகோவா கட்டளை கொடுத்தபடியே, மோசேயும் குருவாகிய எலெ
யாசாரும் செய்தார்கள். **32** போரிலிருந்து திரும்பியவர்கள் பயன்படுத்தி
யது தவிர மீதியிருந்தவை இவைதான்: 6,75,000 ஆடுகள், **33** 72,000
மாடுகள், **34** 61,000 கழுதைகள். **35** எந்த ஆணுடனும் உறவுகொள்
ளாத பெண்கள்[c] மொத்தம் 32,000 பேர். **36** போருக்குப் போனவர்களுக்
குக் கிடைத்த பாதிப் பங்கில் 3,37,500 ஆடுகள் இருந்தன. **37** அவற்றில்
யெகோவாவுக்கான பங்கு 675. **38** அவர்களுடைய பங்கில் 36,000 மாடு
கள் இருந்தன. அவற்றில் யெகோவாவுக்கான பங்கு 72. **39** அவர்களு
டைய பங்கில் 30,500 கழுதைகள் இருந்தன. அவற்றில் யெகோவாவுக்கான
பங்கு 61. **40** அவர்களுடைய பங்கில் 16,000 மனிதர்கள் இருந்தார்கள்.
அவர்களில் யெகோவாவுக்கான பங்கு 32 பேர். **41** யெகோவாவுக்கான
பங்கை குருவாகிய எலெயாசாரிடம் மோசே கொடுத்தார்.[d] இப்படி,
யெகோவா கட்டளை கொடுத்தபடியே செய்தார்.

42 போர் செய்யப் போனவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தது தவிர, இஸ்
ரவேல் ஜனங்களுக்கு மோசே, **43** 3,37,500 ஆடுகளையும், **44** 36,000
மாடுகளையும், **45** 30,500 கழுதைகளையும், **46** 16,000 மனிதர்களையும்
பிரித்துக் கொடுத்தார். **47** பின்பு, இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த பாதிப்
பங்கில், அதாவது மனிதர்களிலும் மிருகங்களிலும், 50-க்கு ஒன்றைப்
பிரித்தெடுத்து, யெகோவாவின் கூடாரத்தில் வேலை செய்த[e] லேவியர்க
ளுக்கு மோசே கொடுத்தார்.[f] யெகோவா கட்டளை கொடுத்தபடியே அவர்
செய்தார்.

48 அதன்பின் படைப்பிரிவுகளின்* தலைவர்களான 1,000 வீரர்க
ளுக்குத்[g] தலைவர்களும் 100 வீரர்களுக்குத் தலைவர்களும் மோசேயிடம்
வந்து, **49** "எங்களுக்குக் கீழுள்ள வீரர்களை உங்கள் ஊழியர்களாகிய
நாங்கள் கணக்கெடுத்தோம், அவர்களில் ஒருவர்கூட குறையவில்லை.[h]
50 அதனால், நாங்கள் ஒவ்வொருவரும் கைப்பற்றிய தங்கச் சாமான்
கள், கொலுசுகள், காப்புகள், முத்திரை மோதிரங்கள், தோடுகள், மற்ற
நகைகள் எல்லாவற்றையும் யெகோவாவுக்குக் காணிக்கையாகத் தருகி
றோம். யெகோவாவின் முன்னிலையில் எங்களுக்குப் பாவப் பரிகாரமாக
இவற்றைத் தருகிறோம்" என்றார்கள்.

51 அவர்கள் கொடுத்த தங்க நகைகளை மோசேயும் குருவாகிய எலெ
யாசாரும் வாங்கிக்கொண்டார்கள். **52** 1,000 வீரர்களுக்குத் தலைவர்க
ளும் 100 வீரர்களுக்குத் தலைவர்களும் யெகோவாவுக்குக் காணிக்கையா
கக் கொடுத்த தங்கத்தின் எடை மொத்தம் 16,750 சேக்கல்.*
53 போருக்குப் போன வீரர்கள் ஒவ்வொருவருக்கும் கைப்பற்றப்பட்ட
பொருள்களிலிருந்து ஒரு பங்கு கிடைத்தது. **54** 1,000 வீரர்களுக்குத்
தலைவர்களும் 100 வீரர்களுக்குத் தலைவர்களும் கொடுத்த தங்கத்தை
மோசேயும் குருவாகிய எலெயாசாரும் சந்திப்புக் கூடாரத்துக்குள் கொண்
டுவந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு நினைப்பூட்டுதலாக இருக்கும்
படி அந்தத் தங்கத்தை யெகோவாவுக்கு முன்னால் வைத்தார்கள்.

31:48 *நே.மொ., "ஆயிரம் வீரர்கள் கொண்ட பிரிவுகளின்." **31:52** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 31
a உபா 12:19
b எண் 3:6, 7; எண் 18:2, 3; 1நா 23:32
c எண் 31:18
d எண் 18:8, 19
e எண் 3:6, 7; எண் 18:2, 3; 1நா 23:32
f உபா 12:19
g எண் 31:4
h யாத் 23:27; லேவி 26:7, 8

அதி. 32
a எண் 26:7
b எண் 26:18
c எண் 21:32
d எண் 21:26
e எண் 33:47
f எண் 32: 37, 38
g எண் 21: 23, 24 உபா 2:24
h உபா 2:35
i எண் 13:31 யோசு 14:7, 8
j எண் 13:23 உபா 1:24
k எண் 13:32 உபா 1:26-28
l ஆதி 13: 14, 15 ஆதி 26:3 ஆதி 28:13
m எண் 14: 29, 30 உபா 2:14
n எண் 14:24 உபா 1:34-38 யோசு 14:8
o எண் 13:30
p யோசு 19:49
q சங் 95:11 எசே 20:15 எபி 3:18
r எண் 14:33 உபா 29:5 யோசு 5:6 சங் 95:10 அப் 13:18
s எண் 26: 63, 64 உபா 2:14 1கொ 10:5 எபி 3:17

32 ரூபன் வம்சத்தாருக்கும்[a] காத் வம்சத்தாருக்கும்[b] ஆடுமாடுகள்
ஏராளமாக இருந்தன. யாசேர் பிரதேசமும்[c] கீலேயாத் பிரதேச
மும் ஆடுமாடுகள் மேய்வதற்கு நல்ல இடமாக இருப்பதை அவர்கள் பார்த்
தார்கள். **2** அதனால், காத் வம்சத்தாரும் ரூபன் வம்சத்தாரும் மோசேயி
டமும் குருவாகிய எலெயாசாரிடமும் ஜனங்களின் தலைவர்களிடமும்
வந்து, **3** “அதரோத், தீபோன், யாசேர், நிம்ரா, எஸ்போன்,[d] எலெயாலே,
சேபாம், நேபோ,[e] பெயோன்[f] ஆகிய இடங்களை **4** இஸ்ரவேலர்களின்
கண் முன்னால் யெகோவா வீழ்த்தினார்.[g] இவை ஆடுமாடுகள் மேய்வ
தற்கு நல்ல இடங்கள். உங்கள் ஊழியர்களாகிய எங்களுக்கு ஏராள
மான ஆடுமாடுகள் இருக்கின்றன.[h] **5** அதனால் நீங்கள் பெரியமனது
பண்ணி, உங்கள் ஊழியர்களாகிய எங்களுக்கு இந்த இடங்களைச் சொத்
தாகக் கொடுங்கள். ஆனால், யோர்தானை மட்டும் கடந்துபோகச் சொல்லா
தீர்கள்” என்றார்கள்.

6 அப்போது மோசே, காத் வம்சத்தாரிடமும் ரூபன் வம்சத்தாரிடமும்,
“உங்களுடைய சகோதரர்கள் போருக்குப் போகும்போது நீங்கள் மட்டும்
இங்கே இருக்க வேண்டுமோ? **7** யெகோவா அந்தத் தேசத்தைக் கண்டிப்
பாகத் தரப்போவதாய்ச் சொல்லியிருக்கும்போது, அங்கு போக நினைக்கிற
வர்களின் ஆர்வத்தை நீங்கள் ஏன் கெடுக்கிறீர்கள்? **8** அந்தத் தேசத்தைப்
பார்ப்பதற்கு உங்களுடைய தகப்பன்களை காதேஸ்-பர்னேயாவிலிருந்து
நான் அனுப்பியபோது அவர்களும் இப்படித்தான் செய்தார்கள்.[i] **9** அவர்
கள் எஸ்கோல் பள்ளத்தாக்குவரை போய்[j] அந்தத் தேசத்தைப் பார்த்து
விட்டு வந்த பிறகு, யெகோவா தரப்போவதாய்ச் சொல்லியிருந்த தேசத்துக்
குப் போக நினைத்தவர்களின் ஆர்வத்தைக் கெடுத்தார்கள்.[k] **10** அதனால்,
அந்த நாளில் யெகோவாவின் கோபம் பற்றியெரிந்தது. அப்போது
அவர், **11** ‘எகிப்திலிருந்து வந்தவர்களில் 20 வயதும் அதற்கு அதிக
மான வயதும் உள்ளவர்கள், ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும்
நான் வாக்குக் கொடுத்த தேசத்தைப்[l] பார்க்கப்போவதில்லை.[m] ஏனென்றால்,
அவர்கள் முழு இதயத்தோடு எனக்குக் கீழ்ப்படியவில்லை. **12** யெகோவா
வாகிய எனக்கு முழு இதயத்தோடு கீழ்ப்படிந்த[n] கெனிசியனான எப்புன்னே
யின் மகன் காலேபையும்[o] நூனின் மகன் யோசுவாவையும்[p] தவிர வேறு
யாரும் அதைப் பார்க்கப்போவதில்லை’ என்று ஆணையிட்டுச் சொன்னார்.[q]
13 இஸ்ரவேலர்கள்மேல் யெகோவாவின் கோபம் பற்றியெரிந்ததால், அவர்
களை 40 வருஷங்கள் வனாந்தரத்திலேயே அலைந்து திரிய வைத்தார்.[r]
பாவம் செய்த அந்தத் தலைமுறையில் எல்லாரும் சாகும்வரை யெகோவா
அவர்களை அப்படி அலைந்து திரிய வைத்தார்.[s] **14** உங்களுடைய தகப்
பன்களைப் போலவே நீங்களும் இப்போது பாவம் செய்கிறீர்கள். இஸ்ர
வேலின் மேல் யெகோவாவின் கோபம் இன்னும் அதிகமாகப் பற்றியெரி
யும்படி செய்கிறீர்கள். **15** நீங்கள் அவரைவிட்டு விலகிப்போனால், எல்லா
ஜனங்களும் மறுபடியும் இந்த வனாந்தரத்திலேயே கிடக்கும்படி அவர் கண்
டிப்பாக விட்டுவிடுவார். உங்களால் இவர்கள் எல்லாரும் அழிந்துபோவார்
கள்” என்றார்.

16 அதன்பின் அவர்கள் அவரிடம் வந்து, “நாங்கள் இங்கேயே
எங்களுடைய ஆடுமாடுகளுக்குத் தொழுவங்களையும்* பிள்ளைகளுக்கு

32:16 * இவை கற்சுவர்களால் கட்டப்பட்ட நிரந்தரத் தொழுவங்களைக் குறிக்கின்றன.

நகரங்களையும் கட்டிக்கொள்கிறோம். **17** இங்குள்ள ஜனங்களால் எந்த
ஆபத்தும் வராதபடி எங்களுடைய பிள்ளைகள் மதில் சூழ்ந்த நகரங்க
ளில் குடியிருக்கட்டும். ஆனால், நாங்கள் இஸ்ரவேலர்களை அவர்களு
டைய இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும்வரை அவர்களுக்கு முன்
னாலேயே போவோம். எப்போதும் போருக்குத் தயாராக இருப்போம்.[a]
18 இஸ்ரவேலர்கள் எல்லாருக்கும் அவரவர் சொத்து கிடைக்கும்வரை
நாங்கள் எங்களுடைய வீடுகளுக்குத் திரும்ப மாட்டோம்.[b] **19** யோர்தா
னுக்குக் கிழக்கே எங்களுடைய பங்கை நாங்கள் வாங்கிக்கொண்டதால்,[c]
யோர்தானுக்கு மேற்கிலும் அதைத் தாண்டியும் அவர்களோடு பங்கு கேட்க
மாட்டோம்" என்றார்கள்.

20 அதற்கு மோசே அவர்களிடம், "போர் செய்வதற்காக நீங்கள் ஒவ்
வொருவரும் யெகோவாவின் முன்னிலையில் ஆயுதங்களை எடுத்துக்
கொண்டு,[d] **21** யோர்தானைக் கடந்து போனால், யெகோவா தன்னுடைய
எதிரிகளை விரட்டியடித்த பின்பு,[e] **22** அதாவது யெகோவா அந்தத்
தேசத்தை வீழ்த்திய பிறகு,[f] நீங்கள் திரும்பி வரலாம்.[g] அப்போது யெகோ
வாவுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் முன்னால் குற்றமற்றவர்களாக இருப்பீர்
கள். யெகோவாவின் முன்னிலையில் இந்தத் தேசம் உங்களுக்குச்
சொந்தமாகும்.[h] **23** நீங்கள் இப்படிச் செய்யாவிட்டால், யெகோவாவுக்கு
விரோதமாகப் பாவம் செய்துவிடுவீர்கள். அந்தப் பாவத்துக்காக நீங்கள்
தண்டிக்கப்படுவீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். **24** இப்போது, உங்
கள் பிள்ளைகளுக்காக நகரங்களையும் உங்கள் மந்தைகளுக்காகத் தொழு
வங்களையும் நீங்கள் கட்டிக்கொள்ளலாம்.[i] ஆனால், நீங்கள் கொடுத்த
வாக்கைக் காப்பாற்ற வேண்டும்" என்றார்.

25 அப்போது, காத் வம்சத்தாரும் ரூபன் வம்சத்தாரும் மோசேயிடம்,
"எஜமானே, உங்கள் கட்டளைப்படியே உங்கள் ஊழியர்களாகிய நாங்கள்
செய்வோம். **26** எங்கள் மனைவிமக்கள் எல்லாரும் எங்கள் வீட்டு விலங்
குகளோடு கீலேயாத்தின் நகரங்களில் குடியிருப்பார்கள்.[j] **27** ஆனால்
எஜமானே, உங்கள் ஊழியர்களாகிய நாங்கள், நீங்கள் சொல்கிறபடியே,
யெகோவாவின் முன்னிலையில் போர் செய்வதற்கு ஆயுதங்களை எடுத்
துக்கொண்டு யோர்தானைக் கடந்துபோவோம்"[k] என்றார்கள்.

28 அதனால், இவர்களைப் பற்றி குருவாகிய எலெயாசாருக்கும்
நூனின் மகன் யோசுவாவுக்கும் இஸ்ரவேலின் தந்தைவழிக் குடும்பத் தலை
வர்களுக்கும் மோசே இப்படிக் கட்டளை கொடுத்தார்: **29** "காத் வம்சத்தா
ரும் ரூபன் வம்சத்தாரும் யெகோவாவின் முன்னிலையில் போர் செய்வ
தற்கு ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு உங்களோடு யோர்தானைக் கடந்து
வந்தால், அந்தத் தேசமும் உங்கள்முன் வீழ்ச்சி அடைந்தால், கீலேயாத் பிர
தேசத்தை இவர்களுடைய பங்காகக் கொடுத்துவிடுங்கள்.[l] **30** ஆனால்,
இவர்கள் ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு உங்களோடு யோர்தானைக்
கடந்து வராமல் இருந்தால், கானான் தேசத்தில் உங்களோடு குடியேற
வேண்டும்."

31 அதற்கு காத் வம்சத்தாரும் ரூபன் வம்சத்தாரும், "உங்கள் ஊழியர்க
ளாகிய நாங்கள் யெகோவா சொன்னபடியே செய்வோம். **32** நாங்கள்
ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு யெகோவாவின் முன்னிலையில் யோர்தா
னைக் கடந்து கானான் தேசத்துக்குப் போவோம்,[m] ஆனால் எங்களுடைய

அதி. 32
a உபா 3:18; யோசு 4:12
b யோசு 22:1, 4
c எண் 32:33; யோசு 12:1; யோசு 13:8
d யோசு 4:13
e சங் 78:55
f யோசு 11:23; யோசு 18:1; சங் 44:2
g யோசு 22:4, 9
h உபா 3:19, 20; யோசு 1:14, 15; யோசு 13:8
i எண் 32:16; எண் 32:34-38
j யோசு 1:12-14
k யோசு 4:12
l யோசு 13:15, 24
m யோசு 4:13

அதி. 32
a உபா 3:12
b யோசு 22:7
c எண் 21: 23, 24 உபா 2:31
d உபா 3:4
e எண் 33:45 யோசு 13: 15, 17
f எண் 32:3, 4
g உபா 2:36 யோசு 12:1, 2
h எண் 21:32
i நியா 8:11
j எண் 32:3, 4
k யோசு 13: 27, 28
l எண் 21:26
m எண் 32:3, 4
n யோசு 13: 15, 19
o எண் 32:3, 4
p யோசு 13: 15, 17
q எண் 26:29
r உபா 3:13 யோசு 13:31 யோசு 17:1
s உபா 3:14 யோசு 13: 29, 30

அதி. 33
t யோசு 24:5 1சா 12:8
u யாத் 13:18
v யாத் 12:51
w எண் 9:17
x யாத் 12:2 யாத் 13:4
y ஆதி 47:11 யாத் 12:37
z யாத் 12:3, 6 உபா 16:1
a யாத் 12:29 சங் 78:51
b யாத் 12:12 யாத் 18:11
c யாத் 12:37
d யாத் 13:20
e யாத் 14:9
f யாத் 14:2
g யாத் 14:22
h யாத் 15:22
i யாத் 13:20
j யாத் 15:23

பங்கு யோர்தானுக்குக் கிழக்கிலேயே இருக்கும்" என்றார்கள். **33** அப்
போது காத் வம்சத்தாரிடமும் ரூபன் வம்சத்தாரிடமும்[a] யோசேப்பின் மகனா
கிய மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரிடமும்,[b] எமோரியர்களின் ராஜாவான
சீகோனின் ராஜ்யத்தையும்[c] பாசானின் ராஜாவான ஓகின் ராஜ்யத்தையும்[d]
மோசே கொடுத்தார். அதாவது, அவர்களுடைய நகரங்களையும் அங்
கிருந்த ஊர்களையும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் கொடுத்தார்.

34 காத் வம்சத்தார் மதில் சூழ்ந்த நகரங்களாகிய தீபோன்,[e] அத
ரோத்,[f] ஆரோவேர்,[g] **35** ஆத்ரோத்-சோபான், யாசேர்,[h] யொகிபேயா,[i]
36 பெத்-நிம்ரா,[j] பெத்தாரன்[k] ஆகியவற்றையும் மந்தைகளுக்குத் தொழு
வங்களையும் கட்டிக்கொண்டார்கள். **37** ரூபன் வம்சத்தார் எஸ்போன்,[l]
எலெயாலே,[m] கீரியாத்தாயீம்,[n] **38** பெயர் மாற்றப்பட்ட நகரங்களான
நேபோ,[o] பாகால்-மெயோன்[p] ஆகியவற்றையும் சிப்மாவையும் கட்டினார்
கள். திரும்பக் கட்டிய நகரங்களுக்கு அவர்கள் புதிய பெயர்களை வைத்
தார்கள்.

39 மனாசேயின் மகனாகிய மாகீரின் மகன்கள்[q] கீலேயாத்துக்கு எதிராகப்
படையெடுத்துப் போய் அதைக் கைப்பற்றி அங்கிருந்த எமோரியர்களை
விரட்டியடித்தார்கள். **40** அதனால், மனாசேயின் மகன் மாகீருக்கு மோசே
கீலேயாத்தைக் கொடுத்தார், அவன் அதில் குடியிருந்தான்.[r] **41** மனாசே
யின் மகனாகிய யாவீர் கீலேயாத்தின் சிற்றூர்களுக்கு எதிராகப் படையெடுத்
துப் போய் அவற்றைக் கைப்பற்றினான். அவற்றுக்கு அவோத்-யாவீர் என்று
பெயர் வைத்தான்.[s] **42** நோபாக் என்பவன் கேனாத்துக்கு எதிராகப் படை
யெடுத்துப் போய், அதையும் அதன் சிற்றூர்களையும்* கைப்பற்றினான்.
நோபாக் என்ற தன்னுடைய பெயரை அதற்கு வைத்தான்.

33 மோசே மற்றும் ஆரோனின் தலைமையில்,[t] இஸ்ரவேலர்கள்
எகிப்திலிருந்து அணி அணியாகப்[u] புறப்பட்டு,[v] பல இடங்களில்
பயணம் செய்தார்கள். **2** யெகோவாவின் கட்டளைப்படி, அவர்கள் பய
ணம் செய்த ஒவ்வொரு இடத்தையும் பற்றி மோசே பதிவு செய்தார்.
அவர்கள் பயணம் செய்த இடங்கள் இவைதான்:[w] **3** முதல் மாதம்
15-ஆம் நாளில்,[x] ராமசேசிலிருந்து அவர்கள் புறப்பட்டார்கள்.[y] பஸ்காவுக்கு
அடுத்த நாளே,[z] எகிப்தியர்களின் கண் முன்னால் இஸ்ரவேலர்கள் வீரநடை
போட்டுக்கொண்டு போனார்கள். **4** அப்போது எகிப்தியர்கள், யெகோவா
கொன்றுபோட்ட தங்களுடைய மூத்த மகன்களை அடக்கம் செய்துகொண்
டிருந்தார்கள்.[a] அவர்களுடைய தெய்வங்களுக்கு யெகோவா தண்டனை
கொடுத்திருந்தார்.[b]

5 இஸ்ரவேலர்கள் ராமசேசைவிட்டுப் புறப்பட்டு சுக்கோத்தில் முகாம்
போட்டார்கள்.[c] **6** பின்பு, சுக்கோத்திலிருந்து புறப்பட்டு வனாந்தரத்தின்
எல்லையில் இருந்த ஏத்தாமில் முகாம்போட்டார்கள்.[d] **7** அதன்பின், ஏத்
தாமிலிருந்து புறப்பட்டு பாகால்-செபோனுக்கு எதிரில் உள்ள பிககிரோத்
துக்குத்[e] திரும்பி, மிக்தோலுக்கு முன்னால் முகாம்போட்டார்கள்.[f]
8 பின்பு, பிககிரோத்திலிருந்து புறப்பட்டு கடலின் நடுவே நடந்து[g] வனாந்
தரத்துக்குப் போனார்கள்.[h] ஏத்தாம் வனாந்தரத்தில்[i] மூன்று நாள் பயணம்
செய்து, மாராவில் முகாம்போட்டார்கள்.[j]

32:42 * வே.வா, "அதைச் சுற்றியுள்ள ஊர்களையும்."

9 அதன்பின், மாராவிலிருந்து புறப்பட்டு ஏலிமுக்கு வந்தார்கள். ஏலி
மில் 12 நீரூற்றுகளும் 70 பேரீச்ச மரங்களும் இருந்ததால் அங்கே
முகாம்போட்டார்கள்.[a] **10** அடுத்ததாக, ஏலிமிலிருந்து புறப்பட்டு செங்
கடலுக்குப் பக்கத்தில் முகாம்போட்டார்கள். **11** அதன்பின், செங்கடலுக்
குப் பக்கத்திலிருந்து புறப்பட்டு சின் வனாந்தரத்தில் முகாம்போட்டார்கள்.[b]
12 பின்பு, சின் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு தொப்காவில் முகாம்போட்
டார்கள். **13** அடுத்ததாக, தொப்காவிலிருந்து புறப்பட்டு ஆலூசில் முகாம்
போட்டார்கள். **14** அதன்பின், ஆலூசிலிருந்து புறப்பட்டு ரெவிதீமில்
முகாம்போட்டார்கள்.[c] அங்கு அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்
கவில்லை. **15** பின்பு, ரெவிதீமிலிருந்து புறப்பட்டு சீனாய் வனாந்தரத்தில்
முகாம்போட்டார்கள்.[d]

16 அடுத்ததாக, சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு கிப்ரோத்-
அத்தாவாவில் முகாம்போட்டார்கள்.[e] **17** பின்பு, கிப்ரோத்-அத்தாவாவி
லிருந்து புறப்பட்டு ஆஸ்ரோத்தில் முகாம்போட்டார்கள்.[f] **18** அதன்பின்,
ஆஸ்ரோத்திலிருந்து புறப்பட்டு ரித்மாவில் முகாம்போட்டார்கள்.
19 அடுத்ததாக, ரித்மாவிலிருந்து புறப்பட்டு ரிம்மோன்-பேரேசில் முகாம்
போட்டார்கள். **20** பின்பு, ரிம்மோன்-பேரேசிலிருந்து புறப்பட்டு லிப்னா
வில் முகாம்போட்டார்கள். **21** அதன்பின், லிப்னாவிலிருந்து புறப்பட்டு
ரீசாவில் முகாம்போட்டார்கள். **22** பிறகு, ரீசாவிலிருந்து புறப்பட்டு கேலத்
தாவில் முகாம்போட்டார்கள். **23** பின்பு, கேலத்தாவிலிருந்து புறப்பட்டு
சாப்பேர் மலையில் முகாம்போட்டார்கள்.

24 அதன்பின், சாப்பேர் மலையிலிருந்து புறப்பட்டு ஆரதாவில் முகாம்
போட்டார்கள். **25** அடுத்ததாக, ஆரதாவிலிருந்து புறப்பட்டு மக்கெலோத்
தில் முகாம்போட்டார்கள். **26** பின்பு, மக்கெலோத்திலிருந்து புறப்பட்டு[g]
தாகாத்தில் முகாம்போட்டார்கள். **27** அதன்பின், தாகாத்திலிருந்து புறப்
பட்டு தேராகுவில் முகாம்போட்டார்கள். **28** பிறகு, தேராகுவிலிருந்து
புறப்பட்டு மித்காவில் முகாம்போட்டார்கள். **29** பின்பு, மித்காவிலிருந்து
புறப்பட்டு அஸ்மோனாவில் முகாம்போட்டார்கள். **30** அதன்பின், அஸ்
மோனாவிலிருந்து புறப்பட்டு மோசெரோத்தில் முகாம்போட்டார்கள்.
31 அடுத்ததாக, மோசெரோத்திலிருந்து புறப்பட்டு பெனே-யாக்கானில்
முகாம்போட்டார்கள்.[h] **32** பின்பு, பெனே-யாக்கானிலிருந்து புறப்பட்டு
ஓர்-அகித்துகாத்தில் முகாம்போட்டார்கள். **33** அதன்பின், ஓர்-அகித்துகாத்
திலிருந்து புறப்பட்டு யோத்பாத்தாவில் முகாம்போட்டார்கள்.[i] **34** பிறகு,
யோத்பாத்தாவிலிருந்து புறப்பட்டு எப்ரோனாவில் முகாம்போட்டார்கள்.
35 அதன்பின், எப்ரோனாவிலிருந்து புறப்பட்டு எசியோன்-கேபேரில்
முகாம்போட்டார்கள்.[j] **36** பிற்பாடு, எசியோன்-கேபேரிலிருந்து புறப்பட்டு
சீன் வனாந்தரத்திலே[k] காதேசில் முகாம்போட்டார்கள்.

37 அடுத்ததாக, காதேசிலிருந்து புறப்பட்டு ஏதோம் தேசத்தின் எல்
லையிலுள்ள ஓர் என்ற மலைக்குப் பக்கத்தில் முகாம்போட்டார்கள்.[l]
38 யெகோவாவின் கட்டளைப்படி, குருவாகிய ஆரோன் ஓர் என்ற அந்த
மலைமேல் ஏறிப் போனார். இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட
40-ஆம் வருஷம், ஐந்தாம் மாதம், முதல் நாளில் அவர் அங்கே இறந்தார்.[m]
39 ஓர் என்ற மலையில் ஆரோன் இறந்தபோது அவருக்கு 123 வயது.

40 கானான் தேசத்திலே நெகேபில் வாழ்ந்துவந்த கானானியனாகிய
ஆராத் ராஜா,[n] இஸ்ரவேலர்கள் வருவதைக் கேள்விப்பட்டான்.

அதி. 33
a யாத் 15:27
b யாத் 16:1
c யாத் 17:1, 8
d யாத் 18:5; யாத் 19:1, 2; எண் 1:1; எண் 3:4; எண் 9:1
e எண் 11:34; உபா 9:22
f எண் 11:35; எண் 12:16
g எண் 9:17
h உபா 10:6
i உபா 10:7
j உபா 2:8; 1ரா 9:26
k எண் 20:1; எண் 27:14; உபா 32:51; யோசு 15:1
l எண் 20:22
m உபா 10:6
n எண் 21:1

41 பிற்பாடு, அவர்கள் ஓர் என்ற மலைக்குப்[a] பக்கத்திலிருந்து புறப்
பட்டு சல்மோனாவில் முகாம்போட்டார்கள். **42** பின்பு, சல்மோனாவிலி
ருந்து புறப்பட்டு பூனோனில் முகாம்போட்டார்கள். **43** அதன்பின், பூனோ
னிலிருந்து புறப்பட்டு ஓபோத்தில் முகாம்போட்டார்கள்.[b] **44** அடுத்ததாக,
ஓபோத்திலிருந்து புறப்பட்டு மோவாபின் எல்லையிலுள்ள இய்யா-அபாரீ
மில்* முகாம்போட்டார்கள்.[c] **45** பிற்பாடு, இய்யமிலிருந்து புறப்பட்டு
தீபோன்-காத்தில்[d] முகாம்போட்டார்கள். **46** பிறகு, தீபோன்-காத்திலிருந்து
புறப்பட்டு அல்மோன்-திப்லத்தாயிமில் முகாம்போட்டார்கள். **47** அதன்
பின், அல்மோன்-திப்லத்தாயிமிலிருந்து புறப்பட்டு நேபோவுக்கு[e] முன்னால்
உள்ள அபாரீம் மலைத்தொடர்களில்[f] முகாம்போட்டார்கள். **48** கடைசி
யாக, அபாரீம் மலைத்தொடர்களிலிருந்து புறப்பட்டு எரிகோவுக்குப் பக்கத்
தில் யோர்தானை ஒட்டியுள்ள மோவாப் பாலைநிலத்தில் முகாம்போட்
டார்கள்.[g] **49** யோர்தானை ஒட்டியுள்ள அந்த மோவாப் பாலைநிலத்தில்,
பெத்-யெசிமோத் பகுதியிலிருந்து ஆபேல்-சித்தீம்வரை[h] அவர்கள் தங்கியி
ருந்தார்கள்.

50 எரிகோவுக்குப் பக்கத்தில் யோர்தானை ஒட்டியுள்ள மோவாப்
பாலைநிலத்தில் யெகோவா மோசேயிடம், **51** "நீ இஸ்ரவேலர்களிடம்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'நீங்கள் யோர்தானைக் கடந்து
கானான் தேசத்துக்குள் போகப் போகிறீர்கள்.[i] **52** அந்தத் தேசத்து ஜனங்
கள் எல்லாரையும் நீங்கள் துரத்தியடிக்க வேண்டும். அவர்கள் வைத்திருக்
கும் எல்லா கற்சிலைகளையும்[j] உலோகச் சிலைகளையும்[k] உடைத்துப்
போட வேண்டும். அவர்களுடைய ஆராதனை மேடுகள் எல்லாவற்றையும்
இடித்துப்போட வேண்டும்.[l] **53** அவர்களுடைய தேசத்தைச் சொந்தமாக்
கிக்கொண்டு அங்கே குடியிருக்க வேண்டும். அந்தத் தேசத்தை நான் நிச்
சயம் உங்கள் கையில் கொடுப்பேன்.[m] **54** நீங்கள் அந்தத் தேசத்தை அந்
தந்த கோத்திரங்களுக்கும் குடும்பங்களுக்கும் குலுக்கல் முறையில் பங்கு
போட்டுக் கொடுக்க வேண்டும்.[n] ஒரு தொகுதியில் நிறைய பேர் இருந்தால்
அதிக நிலத்தைக் கொடுக்க வேண்டும், கொஞ்சம் பேர் மட்டும் இருந்தால்
கொஞ்சம் நிலத்தை மட்டும் கொடுக்க வேண்டும்.[o] குலுக்கல் முறையில்
ஒரு கோத்திரத்துக்கு எந்த இடம் விழுகிறதோ அந்த இடத்தைக் கொடுக்க
வேண்டும். உங்கள் தகப்பன்களுடைய கோத்திரங்களின்படி உங்களுக்குச்
சொத்து கிடைக்கும்.[p]

55 ஆனால், அந்தத் தேசத்திலுள்ள ஜனங்களை நீங்கள் துரத்தியடிக்
காவிட்டால்,[q] அவர்கள் உங்களுடைய கண்களை உறுத்துகிற துரும்பைப்
போலவும் உங்களுடைய விலாவில் குத்துகிற முள்ளைப் போலவும் இருப்
பார்கள். நீங்கள் குடியிருக்கும் தேசத்தில் அவர்கள் உங்களைப் பாடாய்ப்
படுத்துவார்கள்.[r] **56** நான் அவர்களுக்குச் செய்ய நினைத்ததை உங்களுக்
குச் செய்வேன்'"[s] என்றார்.

34 பின்பு யெகோவா மோசேயிடம், **2** "நீ இஸ்ரவேலர்களுக்குச்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'கானான் தேசத்தில்[t] உங்
களுக்குச் சொத்தாகக் கிடைக்கப்போகிற இடங்களின் எல்லைகள்
இவைதான்:[u]

அதி. 33
a எண் 21:4
b எண் 21:10
c ஆதி 19: 36, 37
எண் 21:11, 13
d எண் 32:34
e உபா 34:1
f எண் 27:12
உபா 32: 48, 49
g எண் 22:1
h எண் 25:1
யோசு 2:1
i யோசு 3:17
j லேவி 26:1
k லேவி 19:4
உபா 27:15
l யாத் 23:24
யாத் 34:13, 17
உபா 7:5
உபா 12:3
m உபா 32:8
n நீதி 16:33
o எண் 26: 53, 54
p யோசு 15:1
யோசு 16:1
யோசு 18:11
q நியா 1:21
சங் 106:34
r யாத் 23: 31-33
உபா 7:3, 4
யோசு 23: 12, 13
நியா 2:2, 3
s லேவி 18:28
யோசு 23:15

அதி. 34
t ஆதி 15:18
ஆதி 17:8
u ஆதி 10:19
உபா 4:38
யோசு 1:4
யோசு 14:1
எரே 3:19
அப் 17:26

33:44 * நே.மொ., "அபாரீமின் இய்யம் (இடிபாடுகள்)." இதுதான் அடுத்த வசனத்தில் இய்யம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3 உங்களுடைய தெற்கு எல்லை, ஏதோம் தேசத்தை ஒட்டியுள்ள சீன்
வனாந்தரம் தொடங்கி கிழக்கே உப்புக் கடலின்* கடைசி வரைக்கும்
போகும்.[a] 4 அங்கிருந்து அது திசைதிரும்பி, அக்கராபீம் மேட்டுக்குத்[b]
தெற்குப் பக்கமாகச் சுற்றி, சீன் பகுதியைத் தாண்டி, காதேஸ்-பர்னேயா
வின்[c] தெற்குப் பக்கத்தை அடையும். அங்கிருந்து ஆத்சார்-ஆதார்[d] பகு
திக்குப் போய் அஸ்மோன் பகுதியை அடையும். 5 பின்பு, அஸ்மோனில்
திசைதிரும்பி எகிப்தின் பள்ளத்தாக்குக்கு* போய், கடைசியாக கடலில்#
முடிவடையும்.[e]

6 உங்களுடைய மேற்கு எல்லை, பெருங்கடலும்* அதன் கரையோரப்
பகுதியும்தான். இதுதான் உங்களுடைய மேற்கு எல்லை.[f]

7 உங்களுடைய வடக்கு எல்லை, பெருங்கடல் தொடங்கி ஓர் என்ற
மலைவரை போகும். 8 பின்பு, அது அந்த ஓர் மலையிலிருந்து லெபோ-
காமாத்*[g] வரையிலும் சேதாத் வரையிலும் போகும்.[h] 9 அதன்பின், சிப்
ரோன் வரையில் போய், கடைசியாக ஆத்சார்-ஏனானில்[i] முடிவடையும்.
இதுதான் உங்களுடைய வடக்கு எல்லை.

10 உங்களுடைய கிழக்கு எல்லை, ஆத்சார்-ஏனான் தொடங்கி சேப்
பாம் வரையில் போகும். 11 அதன்பின், சேப்பாமிலிருந்து ஆயினுக்குக்
கிழக்கே உள்ள ரிப்லா வரையில் போகும். பின்பு, கீழே போய் கின்னரேத்
கடலின்*[j] கிழக்குப் பக்கத்தைத் தாண்டிப் போகும். 12 அதன்பின், யோர்
தானுக்குப் போய், கடைசியில் உப்புக் கடலில் முடிவடையும்.[k] இதுதான்
உங்கள் தேசமும்[l] அதன் எல்லைகளும்'" என்றார்.

13 பின்பு மோசே இஸ்ரவேலர்களிடம், "நீங்கள் குலுக்கல் முறையில்
பங்குபோட்டுக்கொள்ள வேண்டிய[m] தேசம் இதுதான். ஒன்பதரை கோத்தி
ரங்களுக்கு இதைப் பிரித்துக் கொடுக்கும்படி யெகோவா கட்டளை தந்திருக்
கிறார். 14 ரூபன் கோத்திரத்தார் தங்கள் தந்தைவழிக் குடும்பத்தின்படியும்,
காத் கோத்திரத்தார் தங்கள் தந்தைவழிக் குடும்பத்தின்படியும் ஏற்கெனவே
பங்கை வாங்கிக்கொண்டார்கள். அவர்களோடு மனாசேயின் பாதிக் கோத்தி
ரத்தாரும் தங்கள் பங்கை வாங்கிக்கொண்டார்கள்.[n] 15 யோர்தானுக்கு இந்
தப் பக்கத்திலே எரிகோவின் கிழக்கில், இந்த இரண்டரை கோத்திரத்தார் ஏற்
கெனவே தங்கள் பங்கை வாங்கிக்கொண்டார்கள்"[o] என்றார்.

16 பின்பு யெகோவா மோசேயிடம், 17 "குருவாகிய எலெயாசாரும்,[p]
நூனின் மகனாகிய யோசுவாவும்[q] அந்தத் தேசத்தை உங்களுக்குப் பங்கு
போட்டுக் கொடுப்பார்கள். 18 நிலத்தைப் பங்குபோடுவதற்காக ஒவ்
வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவரை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.[r]
19 நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டியவர்கள் இவர்கள்தான்: யூதா கோத்திரத்
திலிருந்து,[s] எப்புன்னேயின் மகன் காலேப்.[t] 20 சிமியோன் கோத்திரத்தி
லிருந்து,[u] அம்மியூத்தின் மகன் ஷெமுவேல். 21 பென்யமீன் கோத்திரத்தி
லிருந்து,[v] கிஸ்லோனின் மகன் எலிதாத். 22 தாண் கோத்திரத்திலிருந்து,[w]
யொக்லியின் மகனும் தலைவருமான புக்கி. 23 யோசேப்பின் மகனாகிய[x]
மனாசேயின் கோத்திரத்திலிருந்து,[y] எபோத்தின் மகனும் தலைவருமான

34:3 *அதாவது, "சவக் கடலின்." **34:5** *அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்குக்கு." சொல் பட்டியலைப் பாருங்கள். #அதாவது, "பெருங்கடலில்; மத்தியதரைக் கடலில்." **34:6** *அதாவது, "மத்தியதரைக் கடலும்." **34:8** *வே.வா., "காமாத்தின் நுழைவாசல்." **34:11** *அதாவது, "கெனேசரேத்து ஏரியின்; கலிலேயா கடலின்."

அதி. 34
a யோசு 15:1, 2
b நியா 1:36
c எண் 13:26; எண் 32:8
d யோசு 15:1, 3
e யாத் 23:31; யோசு 15:1, 4
f யோசு 1:4; யோசு 15:12
g எண் 13:21; 2ரா 14:25
h எசே 47:15
i எசே 47:17
j உபா 3:16, 17; யோசு 11:1, 2; லூ 5:1; யோவா 6:1
k யோசு 15:1, 2
l உபா 8:7-9
m எண் 26:55; எண் 33:54; யோசு 14:2; யோசு 18:6; நீதி 16:33
n எண் 32:33; உபா 3:12, 13; யோசு 13:8
o எண் 32:5, 32
p எண் 3:32; எண் 20:26; யோசு 14:1
q எண் 14:38; எண் 27:18; யோசு 19:51
r எண் 1:4, 16
s யோசு 15:1
t எண் 14:30; எண் 26:65
u யோசு 19:1
v யோசு 18:11
w யோசு 19:40
x ஆதி 46:20; ஆதி 48:5; யோசு 16:1
y யோசு 17:1

அன்னியேல். **24** யோசேப்பின் மகனாகிய எப்பிராயீமின் கோத்திரத்திலிருந்து,[a] சிப்தானின் மகனும் தலைவருமான கேமுவேல். **25** செபுலோன் கோத்திரத்திலிருந்து,[b] பர்னாக்கின் மகனும் தலைவருமான எலிசாப்பான். **26** இசக்கார் கோத்திரத்திலிருந்து,[c] ஆஸானின் மகனும் தலைவருமான பல்த்தியேல். **27** ஆசேர் கோத்திரத்திலிருந்து,[d] செலோமியின் மகனும் தலைவருமான அகியூத். **28** நப்தலி கோத்திரத்திலிருந்து,[e] அம்மியூத்தின் மகனும் தலைவருமான பெதாக்கேல்" என்றார். **29** இவர்கள்தான் கானான் தேசத்தை இஸ்ரவேலர்களுக்குப் பங்குபோட்டுக் கொடுக்க வேண்டும் என்று யெகோவா கட்டளை கொடுத்தார்.[f]

35 எரிகோவுக்குப் பக்கத்தில் யோர்தானை ஒட்டியுள்ள மோவாப் பாலைநிலத்தில்[g] யெகோவா மோசேயிடம், **2** "இஸ்ரவேலர்கள் தங்களுக்குக் கிடைக்கிற தேசத்தில் லேவியர்களுக்காகச் சில நகரங்களையும் அவற்றைச் சுற்றியுள்ள மேய்ச்சல் நிலங்களையும் கொடுக்க வேண்டும்.[h] **3** அந்த நகரங்களில் அவர்கள் குடியிருப்பார்கள். அந்த மேய்ச்சல் நிலங்களில் ஆடுமாடுகளையும் அவர்களுக்குச் சொந்தமானவற்றையும் மற்ற மிருகங்களையும் வைத்துக்கொள்வார்கள். **4** லேவியர்களுக்கு நீங்கள் கொடுக்கிற மேய்ச்சல் நிலங்கள், நகரத்தின் மதிலைச் சுற்றிலும் 1,000 முழ* தூரத்துக்கு இருக்க வேண்டும். **5** ஒவ்வொரு நகரத்தின் வெளிப்பக்கத்திலும் அதன் மேய்ச்சல் நிலத்துக்காக கிழக்கே 2,000 முழமும், தெற்கே 2,000 முழமும், மேற்கே 2,000 முழமும், வடக்கே 2,000 முழமும் ஒதுக்க வேண்டும்.

6 லேவியர்களுக்கு நீங்கள் கொடுக்கிற நகரங்களில் ஆறு நகரங்கள் அடைக்கல நகரங்களாக இருக்கும்.[i] யாரையாவது கொலை செய்தவன் அங்கே தப்பியோடலாம்.[j] அவற்றைத் தவிர, 42 நகரங்களையும் லேவியர்களுக்குக் கொடுக்க வேண்டும். **7** மேய்ச்சல் நிலங்களோடு, மொத்தம் 48 நகரங்களைக் கொடுக்க வேண்டும்.[k] **8** இஸ்ரவேலர்களாகிய உங்களுக்குக் கிடைக்கிற தேசத்திலிருந்து இந்த நகரங்களைக் கொடுக்க வேண்டும்.[l] ஒவ்வொரு கோத்திரத்திலும், நிறைய பேருள்ள தொகுதிகள் நிறைய நகரங்களைக் கொடுக்க வேண்டும், கொஞ்சம் பேருள்ள தொகுதிகள் கொஞ்சம் நகரங்களைக் கொடுக்க வேண்டும்.[m] ஒவ்வொரு தொகுதியும் அதற்குக் கிடைக்கும் நகரங்களுக்குத் தகுந்தபடி லேவியர்களுக்குச் சில நகரங்களைக் கொடுக்க வேண்டும்" என்றார்.

9 பின்பு யெகோவா மோசேயிடம், **10** "இஸ்ரவேலர்களிடம் நீ சொல்ல வேண்டியது என்னவென்றால், 'நீங்கள் யோர்தானைக் கடந்து கானான் தேசத்துக்குப் போகப்போகிறீர்கள்.[n] **11** உங்களுக்கு வசதியாக இருக்கும் இடங்களில் அடைக்கல நகரங்களை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான், உங்களில் யாராவது தெரியாத்தனமாகக் கொலை செய்துவிட்டால் அங்கே தப்பியோட முடியும்.[o] **12** ஜனங்களின் பிரதிநிதிகளால் அந்தக் கொலையாளி விசாரிக்கப்படுவதற்கு முன்பு, பழிவாங்குபவனால்*[p] கொல்லப்படாமல் இருப்பதற்காக அந்த நகரங்களில் அவன் அடைக்கலம் பெறலாம்.[q] **13** நீங்கள் கொடுக்கிற ஆறு அடைக்கல நகரங்களும் இதுபோல் பாதுகாப்பு தரும். **14** யோர்தானுக்கு இந்தப் பக்கத்தில் மூன்று

35:4 * இணைப்பு B14-ஐப் பாருங்கள். **35:12** * அதாவது, "கொலை செய்யப்பட்டவனின் நெருங்கிய உறவினரால்."

அதி. 34
a யோசு 16:5
b யோசு 19:10
c யோசு 19:17
d யோசு 19:24
e யோசு 19:32
f எண் 34:18, உபா 32:8, யோசு 19:51, அப் 17:26

அதி. 35
g எண் 22:1, எண் 36:13
h ஆதி 49:7, லேவி 25:32-34, உபா 18:1, யோசு 14:4, யோசு 21:3, 2நா 11:14
i யோசு 20:2, 3, 7, 8, யோசு 21:13, 21, 27, 32, 36, 38
j உபா 4:42
k யோசு 21:3
l ஆதி 49:7
m எண் 26:54, எண் 33:54
n யாத் 3:8, யாத் 23:23, எண் 34:2
o யாத் 21:12, 13, உபா 4:42, உபா 19:4, 5
p எண் 35:19, உபா 19:6
q உபா 19:11, 12, யோசு 20:5, 9

நகரங்களையும்[a] கானான் தேசத்தில் மூன்று நகரங்களையும்[b] அடைக்கல
நகரங்களாக நீங்கள் கொடுக்க வேண்டும். **15** உங்களுக்கும், உங்களோடு
குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களுக்கும் இந்த ஆறு நகரங்கள் அடைக்
கல நகரங்களாக இருக்கும்.[c] யாரையாவது தெரியாத்தனமாகக் கொலை
செய்பவன் இந்த நகரங்களுக்குத் தப்பியோடி அடைக்கலம் பெறலாம்.[d]

16 ஆனால், யாராவது ஒரு இரும்புக் கருவியை வைத்து ஒருவனைத்
தாக்கியதால் அவன் இறந்துபோனால், தாக்கியவன் கொலைகாரன். அந்தக்
கொலைகாரனுக்குக் கண்டிப்பாக மரண தண்டனை கொடுக்க வேண்டும்.[e]
17 யாராவது ஒரு கல்லால்* ஒருவனைத் தாக்கியதால் அவன் இறந்து
போனால், தாக்கியவன் கொலைகாரன். அந்தக் கொலைகாரனுக்குக் கண்
டிப்பாக மரண தண்டனை கொடுக்க வேண்டும். **18** யாராவது ஒரு மரக்
கருவியை* வைத்து ஒருவனைத் தாக்கியதால் அவன் இறந்துபோனால்,
தாக்கியவன் கொலைகாரன். அந்தக் கொலைகாரனுக்குக் கண்டிப்பாக
மரண தண்டனை கொடுக்க வேண்டும்.

19 பழிவாங்க* வேண்டியவன்தான் அந்தக் கொலைகாரனைக் கொல்ல
வேண்டும். அவனைப் பார்த்தவுடனே கொன்றுபோடலாம். **20** யாராவது
முன்விரோதத்தின் காரணமாக ஒருவனைக் கீழே தள்ளியதால் அவன்
இறந்துபோனால், அல்லது கெட்ட எண்ணத்தோடு ஒருவன்மேல் எதையா
வது வீசியதால் அவன் இறந்துபோனால்,[f] **21** அல்லது முன்விரோதத்தின்
காரணமாக ஒருவனைக் கையால் அடித்ததால் அவன் இறந்துபோனால்,
கொலை செய்தவனுக்கு நிச்சயம் மரண தண்டனை கொடுக்க வேண்டும்.
அவன் கொலைகாரன். பழிவாங்குபவன் அவனைப் பார்த்தவுடனே கொன்
றுபோடலாம்.

22 ஆனால், முன்விரோதம் இல்லாமல் எதேச்சையாக ஒருவனைக் கீழே
தள்ளியதால் அல்லது எந்தக் கெட்ட எண்ணமும் இல்லாமல் ஒருவன்
மேல் எதையாவது வீசியதால்[g] **23** அல்லது ஒருவன் இருப்பது தெரியா
மல் அவன்மேல் ஒரு கல்லைப் போட்டதால் அல்லது அவனை எதிரியாகப்
பார்க்காமலும் அவனுக்குக் கெடுதல் நினைக்காமலும் தெரியாத்தனமாகக்
கல்லைப் போட்டதால் அவன் இறந்துபோனால், **24** அவனைக் கொலை
செய்தவனுக்கும் பழிவாங்குபவனுக்கும் ஜனங்களின் பிரதிநிதிகள் இந்த
நீதித்தீர்ப்புகளின்படி தீர்ப்பு வழங்க வேண்டும்.[h] **25** இப்படி, பழிவாங்குப
வனின் கையிலிருந்து கொலைகாரனை ஜனங்களின் பிரதிநிதிகள் காப்
பாற்ற வேண்டும். அவன் தப்பியோடிய அடைக்கல நகரத்துக்கே அவனைத்
திருப்பி அனுப்ப வேண்டும். பரிசுத்த தைலத்தால் அபிஷேகம் செய்யப்
பட்ட தலைமைக் குரு[i] சாகும்வரை அவன் அங்கேயே இருக்க வேண்டும்.

26 ஆனால், அடைக்கல நகரத்தின் எல்லையைத் தாண்டி அவன்
வெளியே வந்தால், **27** பழிவாங்குபவன் அந்த அடைக்கல நகரத்தின்
எல்லைக்கு வெளியே அவனைப் பார்த்துக் கொன்றுபோட்டால், பழிவாங்கு
பவன்மேல் கொலைப்பழி* வராது. **28** ஏனென்றால், கொலைகாரன் தலை
மைக் குரு சாகும்வரை அடைக்கல நகரத்தில்தான் இருக்க வேண்டும்.
தலைமைக் குரு இறந்த பிறகு, அவன் தன்னுடைய சொந்த ஊருக்குத் திரும்

35:17 *நே.மொ., “உயிரையே பறித்துவிடுகிற கல்லால்.” **35:18** *நே.மொ., “உயி
ரையே பறித்துவிடுகிற மரக் கருவியை.” **35:19** *நே.மொ., “சிந்தப்பட்ட இரத்தத்துக்
காகப் பழிவாங்க.” **35:27** *வே.வா., “இரத்தப்பழி.”

அதி. 35
a உபா 4:41-43
b உபா 19:8, 9
யோசு 20:7
c யாத் 12:49
லேவி 19:34
எண் 15:16
d யோசு 20:2, 3
e ஆதி 9:5
யாத் 21:12
லேவி 24:17
உபா 19:11, 12
f யாத் 21:14
உபா 19:11, 12
g யாத் 21:12, 13
உபா 19:4, 5
யோசு 20:2, 3
h எண் 35:12
யோசு 20:4, 5
i யாத் 29:4, 7

பிப் போகலாம்.[a] **29** நீங்கள் எங்கே குடியிருந்தாலும் சரி, இதுதான் தலை
முறை தலைமுறைக்கும் உங்களுக்குச் சட்டமாக இருக்க வேண்டும்.

30 ஒருவன் இன்னொருவனைக் கொலை செய்தால், சாட்சிகளின் வாக்கு
மூலத்தை[b] வைத்து அந்தக் கொலைகாரனுக்கு மரண தண்டனை கொடுக்க
வேண்டும்.[c] ஒரேவொரு சாட்சியின் வாக்குமூலத்தை வைத்து யாருக்கும்
மரண தண்டனை கொடுக்கக் கூடாது. **31** மரண தண்டனை கொடுக்கப்
பட்ட ஒரு கொலைகாரனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் மீட்பு
விலை வாங்கக் கூடாது. அவனைக் கண்டிப்பாகக் கொன்றுபோட வேண்
டும்.[d] **32** அடைக்கல நகரத்துக்குத் தப்பியோடிய ஒருவன் தலைமைக்
குரு இறப்பதற்கு முன்பே சொந்த ஊருக்குத் திரும்பிப்போக விரும்பினால்,
அவனுக்காக மீட்புவிலை வாங்கிக்கொண்டு அவனை அனுப்பி வைக்
கக் கூடாது.

33 நீங்கள் குடியிருக்கிற தேசத்தைத் தீட்டுப்படுத்தக் கூடாது. இரத்தம்
சிந்தினால் தேசம் தீட்டுப்படும்.[e] இரத்தம் சிந்தியவனுடைய இரத்தத்தைச்
சிந்துவதைத் தவிர, சிந்தப்பட்ட இரத்தத்துக்கு வேறெந்தப் பாவப் பரிகார
மும் இல்லை.[f] **34** நீங்கள் வாழ்கிற தேசத்தைத் தீட்டுப்படுத்தக் கூடாது.
ஏனென்றால், நான் அங்கே இருக்கிறேன். யெகோவாவாகிய நான் இஸ்ர
வேலர்களின் நடுவில் இருக்கிறேன்'"[g] என்றார்.

36 யோசேப்பின் கொள்ளுப்பேரனும் மனாசேயின் பேரனும் மாகீ
ரின்[h] மகனுமான கீலேயாத்தின் வம்சத்தைச் சேர்ந்த குடும்பத் தலை
வர்கள், மோசேயிடமும் இஸ்ரவேலின் கோத்திரத் தலைவர்களிடமும் வந்து,
2 "எஜமானே, இஸ்ரவேலர்களுக்குத் தேசத்தைக் குலுக்கல் முறையில் பங்கு
போட்டுக் கொடுக்க வேண்டுமென்று யெகோவா உங்களிடம் சொன்னார்.[i]
எங்கள் சகோதரன் செலோப்பியாத்தின் சொத்தை அவருடைய மகள்க
ளுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் யெகோவா உங்களிடம் சொன்னார்.[j]
3 ஆனால், அந்தப் பெண்கள் இஸ்ரவேலிலுள்ள வேறொரு கோத்திரத்தைச்
சேர்ந்தவர்களைக் கல்யாணம் செய்துகொண்டால், அவர்களுடைய சொத்து
எங்களுடைய பரம்பரையைவிட்டுப் போய்விடும். குலுக்கல் முறையில்
எங்கள் கோத்திரத்துக்குக் கிடைத்த சொத்து, அவர்களுடைய கணவர்களின்
கோத்திரத்துக்குப் போய்விடும். **4** அதுமட்டுமல்ல, இஸ்ரவேலர்களின்
விடுதலை* வருஷம்[k] வரும்போது, அந்தப் பெண்களின் சொத்து எங்களு
டைய கோத்திரத்தைவிட்டுக் கைமாறி அவர்களுடைய கணவர்களின் கோத்
திரத்துக்கு நிரந்தரமாகப் போய்விடுமே" என்றார்கள்.

5 அப்போது, யெகோவாவின் உத்தரவுப்படி மோசே இஸ்ரவேலர்க
ளிடம், "யோசேப்பு கோத்திரத்தார் சொல்வது சரிதான். **6** செலோப்பியாத்
தின் மகள்களைப் பற்றி யெகோவா கொடுக்கும் கட்டளை என்னவென்றால்,
'அவர்கள் தங்களுக்குப் பிடித்தவரைக் கல்யாணம் செய்யலாம். ஆனால்,
அவர்களுடைய அப்பாவின் கோத்திரத்தைச் சேர்ந்தவரை மட்டும்தான் கல்
யாணம் செய்ய வேண்டும். **7** இஸ்ரவேலர்களின் சொத்து ஒரு கோத்திரத்தி
லிருந்து இன்னொரு கோத்திரத்துக்குப் போகக் கூடாது. ஏனென்றால், இஸ்ர
வேலர்கள் அவரவர் கோத்திரத்தின் சொத்தை அவரவரே வைத்துக்கொள்ள
வேண்டும். **8** இஸ்ரவேலில் ஒரு பெண்ணுக்குப் பரம்பரைச் சொத்து

36:4 * வே.வா., "யூபிலி."

அதி. 35
a யோசு 20:6
b உபா 17:6
உபா 19:15
எபி 10:28
c ஆதி 9:6
யாத் 20:13
d ஆதி 9:5
யாத் 21:14
உபா 19:13
e ஆதி 4:8, 10
சங் 106:38
லூ 11:50
f ஆதி 9:6
g யாத் 25:8
லேவி 26:12

அதி. 36
h எண் 26:29
i எண் 26:55
எண் 33:54
j எண் 27:1-7
k லேவி 25:10

கிடைத்தால், அவள் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும், தன்
னுடைய அப்பாவின் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவருக்கே மனைவியாக
வேண்டும்.[a] அப்போதுதான், இஸ்ரவேலர்கள் தங்களுடைய கோத்திரத்தின்
சொத்தை தங்களிடமே வைத்துக்கொள்ள முடியும். **9** இஸ்ரவேலர்களின்
சொத்து ஒரு கோத்திரத்திலிருந்து இன்னொரு கோத்திரத்துக்குப் போகக்
கூடாது. ஏனென்றால், இஸ்ரவேலர்கள் அவரவர் கோத்திரத்தின் சொத்தை
அவரவரே வைத்துக்கொள்ள வேண்டும்'" என்றார்.

10 மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே செலோப்
பியாத்தின் மகள்கள் செய்தார்கள்.[b] **11** செலோப்பியாத்தின்[c] மகள்களான
மக்லாளும், திர்சாளும், ஒக்லாளும், மில்காளும், நோவாளும் தங்களுடைய
அப்பாவின் சகோதரர்களுடைய மகன்களைக் கல்யாணம் செய்துகொண்
டார்கள். **12** யோசேப்பின் மகனாகிய மனாசேயின் வம்சத்தைச் சேர்ந்த
ஆண்களுக்கு அவர்கள் மனைவிகளானார்கள். இதனால், அவர்களுடைய
சொத்து அவர்களுடைய அப்பாவின் கோத்திரத்திலேயே இருந்தது.

13 எரிகோவுக்குப் பக்கத்தில் யோர்தானை ஒட்டியுள்ள மோவாப் பாலை
நிலத்தில், மோசே மூலம் யெகோவா இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த கட்ட
ளைகளும் நீதித்தீர்ப்புகளும் இவைதான்.[d]

அதி. 36
a 1நா 23:22
b எண் 36:6
c எண் 27:1
d எண் 26:3
எண் 33:50
எண் 35:1

உபாகமம்

முக்கியக் குறிப்புகள்

உப+ஆகமம்=உபாகமம். அர்த்தம், "இரண்டாவது சட்டப் பதிவு."

1 இஸ்ரவேலர்கள் ஓரேப் மலையிலிருந்து புறப்படுகிறார்கள் (1-8)
- கோத்திரத் தலைவர்களும் நியாயாதிபதிகளும் நியமிக்கப்படுகிறார்கள் (9-18)
- காதேஸ்-பர்னேயாவில் ஜனங்கள் கீழ்ப்படியாமல் போகிறார்கள் (19-46)
  - கானான் தேசத்துக்குப் போக அவர்கள் மறுக்கிறார்கள் (26-33)
  - கானானியர்களிடம் தோற்றுப்போகிறார்கள் (41-46)

2 வனாந்தரத்தில் 38 வருடங்கள் அலைந்துதிரிகிறார்கள் (1-23)
- எஸ்போனின் ராஜாவான சீகோனைத் தோற்கடித்தல் (24-37)

3 பாசானின் ராஜாவான ஓகைத் தோற்கடித்தல் (1-7)
- யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள தேசம் பிரிக்கப்படுதல் (8-20)
- பயப்படாமல் இருக்கும்படி யோசுவாவிடம் சொல்லப்படுகிறது (21, 22)
- மோசே கானான் தேசத்துக்குப் போகப் போவதில்லை (23-29)

4 கீழ்ப்படிந்து நடக்கும்படி ஜனங்களிடம் சொல்லப்படுகிறது (1-14)
  - கடவுள் செய்தவற்றை அவர்கள் மறக்கக் கூடாது (9)
- யெகோவா தன்னை மட்டுமே வணங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறவர் (15-31)
- யெகோவாவைத் தவிர வேறு கடவுள் இல்லை (32-40)
- யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள அடைக்கல நகரங்கள் (41-43)
- திருச்சட்டம் கொடுக்கப்படுகிறது (44-49)

5 ஓரேப் மலையில் யெகோவா செய்யும் ஒப்பந்தம் (1-5)
- பத்துக் கட்டளைகள் திரும்பவும் சொல்லப்படுகிறது (6-22)
- சீனாய் மலை அடிவாரத்தில் ஜனங்கள் பயப்படுகிறார்கள் (23-33)

6 முழு இதயத்தோடு யெகோவாமேல் அன்பு காட்ட வேண்டும் (1-9)
“இஸ்ரவேலர்களே, இதைக் கேளுங்கள்” (4)
கடவுளைப் பற்றிப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் சொல்லித் தர வேண்டும் (6, 7)
யெகோவாவை மறந்துவிடக் கூடாது (10-15)
யெகோவாவைச் சோதித்துப் பார்க்கக் கூடாது (16-19)
பின்வரும் சந்ததிக்குச் சொல்லித் தர வேண்டும் (20-25)

7 ஏழு தேசங்கள் அழிக்கப்பட வேண்டும் (1-6)
இஸ்ரவேலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணம் (7-11)
கீழ்ப்படிந்தால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் (12-26)

8 யெகோவா தரும் ஆசீர்வாதங்கள் பற்றிய நினைப்பூட்டுதல் (1-9)
‘மனிதன் உணவால் மட்டும் உயிர்வாழ்வதில்லை’ (3)
யெகோவாவை மறந்துவிடக் கூடாது (10-20)

9 இஸ்ரவேலர்களுக்கு கானான் தேசம் கொடுக்கப்பட்டதற்கான காரணம் (1-6)
இஸ்ரவேலர்கள் நான்கு தடவை யெகோவாவின் கோபத்தைக் கிளறுகிறார்கள் (7-29)
தங்கத்தால் செய்யப்பட்ட கன்றுக்குட்டி (7-14)
ஜனங்கள் சார்பாக மோசே மன்றாடுகிறார் (15-21, 25-29)
ஜனங்கள் இன்னும் மூன்று தடவை யெகோவாவின் கோபத்தைக் கிளறுகிறார்கள் (22)

10 மறுபடியும் இரண்டு கற்பலகைகள் செய்யப்படுகின்றன (1-11)
ஜனங்களிடம் யெகோவா கேட்கும் காரியங்கள் (12-22)
யெகோவாவுக்குப் பயந்து, அவர்மேல் அன்பு காட்ட வேண்டும் (12)

11 நீங்கள் யெகோவாவின் மகத்துவத்தைப் பார்த்தீர்கள் (1-7)
வாக்குக் கொடுக்கப்பட்ட தேசம் (8-12)
கீழ்ப்படிவதால் கிடைக்கும் பலன்கள் (13-17)
கடவுளுடைய வார்த்தைகளை இதயத்தில் பதிய வைக்க வேண்டும் (18-25)
‘ஆசீர்வாதமும் சாபமும்’ (26-32)

12 கடவுள் தேர்ந்தெடுக்கிற இடத்தில் அவரை வணங்க வேண்டும் (1-14)
இறைச்சியைச் சாப்பிடலாம், ஆனால் இரத்தத்தைச் சாப்பிடக் கூடாது (15-28)
மற்ற தெய்வங்களை வணங்கி பாவக்குழியில் விழுந்துவிடக் கூடாது (29-32)

13 கடவுளுக்கு எதிராக நடக்கிறவர்களுக்குச் செய்ய வேண்டியவை (1-18)

14 முறையற்ற விதத்தில் துக்கம் அனுசரிப்பது (1, 2)
சுத்தமான உணவுகளும் அசுத்தமான உணவுகளும் (3-21)
யெகோவாவுக்குப் பத்திலொரு பாகம் கொடுக்கப்பட வேண்டும் (22-29)

15 ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலும் கடன்கள் ரத்து (1-6)
ஏழைகளுக்கு உதவ வேண்டும் (7-11)
ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலும் அடிமைகள் விடுதலை (12-18)
ஊசியால் ஓர் அடிமையின் காதைக் குத்துதல் (16, 17)
ஆடுமாடுகளின் முதல் குட்டிகள் அர்ப்பணிக்கப்படுகின்றன (19-23)

16 பஸ்கா பண்டிகை; புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகை (1-8)
வாரங்களின் பண்டிகை (9-12)
கூடாரப் பண்டிகை (13-17)
நியாயாதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள் (18-20)
வணக்கத்திற்காக எந்தப் பொருள்களையும் பயன்படுத்தக் கூடாது (21, 22)

17 பலி செலுத்தப்படுகிற மிருகங்களுக்கு எந்தக் குறையும் இருக்கக் கூடாது (1)
மற்ற தெய்வங்களைக் கும்பிடுகிறவர்களுக்கு எதிரான நடவடிக்கை (2-7)
சிக்கலான வழக்குகள் சம்பந்தமாகச் செய்ய வேண்டியவை (8-13)
ஒரு ராஜாவை ஏற்படுத்தும்போது செய்ய வேண்டியவை (14-20)
திருச்சட்டத்தின் நகலை ராஜா எழுதி வைத்துக்கொள்ள வேண்டும் (18)

18 குருமார்களுக்கும் லேவியர்களுக்கும் கொடுக்க வேண்டிய பங்கு (1-8)
மாயமந்திர பழக்கவழக்கங்களுக்குத் தடை (9-14)
மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கதரிசி (15-19)

பொய்த் தீர்க்கதரிசிகளை அடையாளம் கண்டுகொள்ளும் விதம் (20-22)

19 கொலைக் குற்றமும் அடைக்கல நகரங்களும் (1-13)

எல்லைக் குறியைத் தள்ளிவைக்கக் கூடாது (14)

வழக்கு விசாரணையில் சாட்சிகள் (15-21)

இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் தேவை (15)

20 போருக்குப் புறப்படும்போது செய்ய வேண்டியவை (1-20)

படையிலிருந்து விலக்களிக்கப்படும் வீரர்கள் (5-9)

21 கொலையாளி யாரென்று தெரியாவிட்டால் செய்ய வேண்டியவை (1-9)

போரில் பிடித்துவரப்பட்ட பெண்களைக் கல்யாணம் செய்வது (10-14)

மூத்த மகனின் உரிமை (15-17)

அடங்காத மகன் (18-21)

மரக் கம்பத்தில் தொங்கவிடப்படுகிறவன் சபிக்கப்பட்டவன் (22, 23)

22 மற்றவர்களுடைய மிருகங்களை அலட்சியப்படுத்தக் கூடாது (1-4)

ஆண்களின் உடையை பெண்களும் பெண்களின் உடையை ஆண்களும் போடக் கூடாது (5)

உயிரினங்களிடம் ஈவிரக்கம் இல்லாமல் நடந்துகொள்ளக் கூடாது (6, 7)

மொட்டைமாடிக்குக் கைப்பிடிச்சுவர் வைக்க வேண்டும் (8)

பொருத்தமில்லாத இரண்டைச் சேர்க்கக் கூடாது (9-11)

உடையின் ஓரங்களில் குஞ்சங்கள் வைக்க வேண்டும் (12)

ஒழுக்கக்கேடு சம்பந்தமான சட்டங்கள் (13-30)

23 கடவுளுடைய சபையில் இருக்கத் தகுதியில்லாதவர்கள் (1-8)

முகாம் தீட்டுப்படாதபடி பார்த்துக்கொள்வது (9-14)

எஜமானிடமிருந்து தப்பித்து வந்த அடிமைகள் (15, 16)

விபச்சாரத்திற்குத் தடை (17, 18)

வட்டி வாங்குவதும் நேர்ந்துகொள்வதும் (19-23)

மற்றவர்களின் தோட்டத்திலோ வயலிலோ சாப்பிட அனுமதிக்கப்பட்டவை (24, 25)

24 கல்யாணமும் விவாகரத்தும் (1-5)

உயிருக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் (6-9)

ஏழைக்கு இரக்கம் காட்ட வேண்டும் (10-18)

வயலிலோ மரத்திலோ மீதியாக விடப்பட்டதை எடுப்பது சம்பந்தமான சட்டங்கள் (19-22)

25 குற்றவாளியை அடிப்பது சம்பந்தமான சட்டங்கள் (1-3)

போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டக் கூடாது (4)

கொழுந்தனைக் கல்யாணம் செய்வது (5-10)

அடிதடியின்போது அடிப்பவனின் பிறப்புறுப்பைப் பிடிக்கக் கூடாது (11, 12)

சரியான எடைக்கற்களும் படிகளும் (13-16)

அமலேக்கியர்கள் அழிக்கப்பட வேண்டும் (17-19)

26 முதல் விளைச்சலைக் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும் (1-11)

இரண்டாவது தடவை கொடுக்கப்படும் பத்திலொரு பாகம் (12-15)

இஸ்ரவேலர்கள் யெகோவாவின் விசேஷ சொத்து (16-19)

27 கற்களின் மேல் திருச்சட்டம் எழுதப்பட வேண்டும் (1-10)

ஏபால் மலையிலும் கெரிசீம் மலையிலும் (11-14)

சாபங்கள் பற்றிச் சொல்லப்படுகின்றன (15-26)

28 கீழ்ப்படிகிறவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் (1-14)

கீழ்ப்படியாதவர்களுக்கு வரும் சாபங்கள் (15-68)

29 மோவாப் தேசத்தில் இஸ்ரவேலர்களுடன் செய்யப்படும் ஒப்பந்தம் (1-13)

கீழ்ப்படியாதவர்களுக்குக் கொடுக்கப்படும் எச்சரிப்புகள் (14-29)

ரகசியமான விஷயங்களும், வெளிப்படுத்தப்பட்ட விஷயங்களும் (29)

30 யெகோவாவிடம் திரும்பி வருதல் (1-10)

யெகோவாவின் கட்டளைகள் கஷ்டமானவை அல்ல (11-14)

வாழ்வையோ சாவையோ தேர்ந்தெடுத்தல் (15-20)

31 மோசே சாகப்போகும் நேரம் நெருங்கிவிடுகிறது (1-8)

திருச்சட்டம் எல்லாரும் கேட்கும்படி வாசிக்கப்படுகிறது (9-13)

யோசுவா தலைவராக நியமிக்கப்படுகிறார் (14, 15)
இஸ்ரவேலர்கள் அடங்காமல் போவார்கள் என்று முன்னறிவிக்கப்படுகிறது (16–30)
இஸ்ரவேலர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய பாடல் (19, 22, 30)

32 மோசேயின் பாட்டு (1–47)
யெகோவா கற்பாறை போன்றவர் (4)
கற்பாறைபோல் பாதுகாப்பவரை இஸ்ரவேலர்கள் மறந்துவிடுகிறார்கள் (18)
‘பழிவாங்குவது என் பொறுப்பு’ (35)
“தேசங்களே, அவருடைய ஜனங்களோடு சேர்ந்து சந்தோஷப்படுங்கள்” (43)
நேபோ மலையில் மோசே இறந்துபோவார் (48–52)

33 எல்லா கோத்திரங்களையும் மோசே ஆசீர்வதிக்கிறார் (1–29)
யெகோவாவின் ‘கைகள் என்றென்றும் உன்னைத் தாங்கும்’ (27)

34 கானான் தேசத்தை யெகோவா மோசேக்குக் காட்டுகிறார் (1–4)
மோசே இறந்துபோகிறார் (5–12)

---

1 யோர்தான் பகுதிக்குப் பக்கத்திலுள்ள வனாந்தரத்தில், சூபுக்கு எதிரி
லும் பாரான், தோப்பேல், லாபான், ஆஸ்ரோத், திசாகாப் ஆகியவற்
றுக்கு இடையிலும் உள்ள பாலைநிலத்தில் இஸ்ரவேலர்கள் இருந்தபோது,
மோசே அவர்கள் எல்லாரிடமும் சொன்ன விஷயங்கள்தான் இவை.
2 ஓரேபிலிருந்து சேயீர் மலைப்பகுதியின் வழியாக காதேஸ்-பர்னேயாவுக்
குப்[a] போக 11 நாட்கள் ஆகும். **3** 40-ஆம் வருஷம்,[b] 11-ஆம்
மாதம், முதலாம் நாளில், இஸ்ரவேலர்களுக்காக யெகோவா கொடுத்த
எல்லா கட்டளைகளையும் மோசே அவர்களுக்குச் சொன்னார். **4** அதா
வது, எஸ்போனில் வாழ்ந்துவந்த எமோரியர்களின் ராஜாவான சீகோனைத்
தோற்கடித்த பின்பும்,[c] அஸ்தரோத்தில் வாழ்ந்துவந்த பாசானின் ராஜா
வான ஓகை[d] எத்ரேயில்[e] தோற்கடித்த பின்பும்* அவற்றைச் சொன்
னார். **5** மோவாப் தேசத்திலுள்ள யோர்தான் பிரதேசத்தில் இந்தத் திருச்
சட்டத்தை மோசே விளக்கிச் சொன்னார்.[f] அப்போது அவர்,

6 “ஓரேபில் நம் கடவுளாகிய யெகோவா நம்மிடம், ‘இந்த மலைப்ப
குதியில் நீங்கள் ரொம்பக் காலம் தங்கிவிட்டீர்கள்.[g] **7** இப்போது நீங்
கள் திரும்பி, எமோரியர்களின்[h] மலைப்பகுதிக்கும் அதன் சுற்றுவட்டாரத்தி
லுள்ள அரபாவுக்கும்[i] மத்திய மலைப்பகுதிக்கும் சேப்பெல்லாவுக்கும்
நெகேபுக்கும் கடலோரப் பகுதிக்கும்[j] போங்கள். கானானியர்களின் தேசத்
துக்கும் போங்கள். லீபனோன்*[k] வரைக்கும், பெரிய ஆறாகிய யூப்ரடிஸ்#[l]
வரைக்கும் போங்கள். **8** இதோ, அந்தத் தேசத்தை நான் உங்களுக்குக்
கொடுக்கிறேன். உங்களுடைய முன்னோர்களான ஆபிரகாமுக்கும் ஈசாக்
குக்கும்[m] யாக்கோபுக்கும்[n] அவர்களுடைய சந்ததிக்கும்[o] தருவதாக
யெகோவா வாக்குக் கொடுத்த அந்தத் தேசத்துக்குப் போய் அதைச் சொந்
தமாக்கிக்கொள்ளுங்கள்’ என்றார்.

9 அந்தச் சமயத்தில் நான் உங்களிடம், ‘இனி என்னால் தனியாளாக உங்
களைக் கவனித்துக்கொள்ள முடியாது.[p] **10** ஏனென்றால், உங்கள் கடவுளா
கிய யெகோவா உங்களை ஏராளமாகப் பெருக வைத்திருக்கிறார். நீங்கள்

1:4 * அல்லது, “அஸ்தரோத்திலும் எத்ரேயிலும் வாழ்ந்துவந்த பாசானின் ராஜாவான ஓகை வீழ்த்திய பின்பும்.” **1:7** * அநேகமாக, “லீபனோன் மலைத்தொடர்.” # அதாவது, “ஐப்பிராத்து.”

அதி. 1
a உபா 9:23
b எண் 32:13; எண் 33:38
c எண் 21:23, 24; யோசு 12:1, 2
d எண் 21:33-35
e யோசு 13:8, 12
f உபா 4:8; உபா 17:18; நெ 8:7
g யாத் 19:1; எண் 10:11, 12
h ஆதி 15:16
i யோசு 12:2, 3
j யோசு 9:1, 2
k யோசு 13:1, 5; 1ரா 9:19
l ஆதி 15:18
m ஆதி 26:3
n ஆதி 28:13
o ஆதி 12:7; ஆதி 13:14, 15; ஆதி 17:1, 7
p யாத் 18:17, 18

இப்போது வானத்து நட்சத்திரங்களைப் போல எண்ண முடியாதளவுக்கு
இருக்கிறீர்கள்.[a] **11** உங்கள் முன்னோர்களின் கடவுளான யெகோவா உங்
களை இதைவிட 1,000 மடங்கு பெருக வைக்கட்டும்,[b] அவர் கொடுத்த வாக்
கின்படியே உங்களை ஆசீர்வதிக்கட்டும்.[c] **12** ஆனால், நான் ஒரு
வனே எப்படி உங்கள் எல்லாரையும் கவனித்துக்கொள்ள முடியும்? நான்
ஒருவனே எப்படி உங்களுடைய பிரச்சினைகளையும் வாக்குவாதங்களை
யும் தீர்த்துவைக்க முடியும்?[d] **13** அதனால், ஞானமும் விவேகமும் அனு
பவமும் உள்ள ஆண்களை உங்களுடைய கோத்திரங்களிலிருந்து தேர்ந்
தெடுங்கள். நான் அவர்களை உங்களுக்குத் தலைவர்களாக நியமிப்பேன்'[e]
என்று சொன்னேன். **14** அதற்கு நீங்கள் என்னிடம், 'உங்களுடைய
ஆலோசனை நல்ல ஆலோசனை' என்று சொன்னீர்கள். **15** அதனால்,
ஞானமும் அனுபவமும் உள்ள உங்களுடைய கோத்திரத் தலைவர்களை
1,000 பேருக்குத் தலைவர்களாகவும், 100 பேருக்குத் தலைவர்களாகவும்,
50 பேருக்குத் தலைவர்களாகவும், 10 பேருக்குத் தலைவர்களாகவும், அதி
காரிகளாகவும் நியமித்தேன்.[f]

16 அந்தச் சமயத்தில் நான் உங்களுடைய நியாயாதிபதிகளிடம், 'நீங்
கள் வழக்கு விசாரிக்கும்போது, அது இஸ்ரவேலனுக்கும் இஸ்ரவேலனுக்
கும் இடையே இருந்தாலும் சரி, இஸ்ரவேலனுக்கும் மற்ற தேசத்தைச் சேர்ந்
தவனுக்கும் இடையே இருந்தாலும் சரி,[g] நீதியின்படி தீர்ப்பு கொடுங்கள்.[h]
17 நீங்கள் தீர்ப்பு சொல்லும்போது பாரபட்சம் காட்டக் கூடாது.[i] செல்
வாக்குள்ள மனுஷனின் நியாயத்தைக் கேட்பது போலவே சாதாரண மனு
ஷனின் நியாயத்தையும் கேட்க வேண்டும்.[j] மனுஷர்களுக்குப் பயப்படாதீர்
கள்,[k] ஏனென்றால் நீங்கள் கடவுளின் சார்பாகத் தீர்ப்பு சொல்கிறீர்கள்.[l] ஒரு
வழக்கைத் தீர்ப்பது உங்களுக்கு ரொம்பவே கஷ்டமாக இருந்தால், அதை
என்னிடம் கொண்டுவாருங்கள். நான் அதை விசாரிப்பேன்'[m] என்று சொன்
னேன். **18** நீங்கள் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் அப்போது நான்
உங்களுக்குச் சொன்னேன்.

19 பின்பு, நம் கடவுளாகிய யெகோவாவின் கட்டளைப்படி, ஓரேபிலி
ருந்து புறப்பட்டு பயங்கரமான பெரிய வனாந்தரம் வழியாகப் போனோம்.[n]
எமோரியர்களின் மலைப்பகுதிக்குப் போகும் வழியில் அந்த வனாந்த
ரத்தை நீங்கள் பார்த்தீர்களே.[o] கடைசியில் காதேஸ்-பர்னேயாவுக்கு வந்து
சேர்ந்தோம்.[p] **20** அப்போது நான் உங்களிடம், 'நம் கடவுளாகிய
யெகோவா கொடுக்கப்போகிற எமோரியர்களின் மலைப்பகுதிக்கு நீங்கள்
வந்துசேர்ந்திருக்கிறீர்கள். **21** இதோ, உங்கள் கடவுளாகிய யெகோவா
இந்தத் தேசத்தை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார். உங்கள் முன்னோர்க
ளின் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொன்னபடி, நீங்கள் போய்
அதைச் சொந்தமாக்கிக்கொள்ளுங்கள்.[q] பயப்படாதீர்கள், திகிலடையாதீர்
கள்' என்று சொன்னேன்.

22 ஆனால், நீங்கள் எல்லாரும் என்னிடம் வந்து, 'அந்தத் தேசத்தைப்
பார்த்துவிட்டு வருவதற்கு நாம் ஆட்களை அனுப்பலாம். நாம் எந்த வழியா
கப் போக வேண்டும், எப்படிப்பட்ட நகரங்களைத் தாண்டிப் போக வேண்
டும் என்பதையெல்லாம் அவர்கள் பார்த்துவிட்டு வந்து நமக்குச் சொல்லட்
டும்'[r] என்று சொன்னீர்கள். **23** அந்த ஆலோசனை எனக்கு நல்லதாகப்
பட்டது. அதனால், ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவர் என்று

அதி. 1

a ஆதி 15:1, 5; யாத் 32:13; எண் 26:51; உபா 10:22
b 1ரா 3:8
c ஆதி 12:1-3; ஆதி 22:15, 17; ஆதி 26:3, 4; யாத் 23:25
d யாத் 18:17, 18; எண் 11:11; எண் 20:3
e யாத் 18:21
f யாத் 18:25
g யாத் 22:21; லேவி 19:34; லேவி 24:22
h யாத் 23:8; உபா 16:18; யோவா 7:24
i லேவி 19:15; ரோ 2:11
j யாத் 23:3
k நீதி 29:25
l 2நா 19:6
m யாத் 18:25, 26
n எண் 10:12; உபா 8:14, 15; எரே 2:6
o எண் 13:29
p எண் 13:26
q யாத் 23:27; உபா 1:8
r எண் 13:1, 2

12 ஆண்களைத் தேர்ந்தெடுத்தேன்.[a] **24** அவர்கள் புறப்பட்டு மலைப்பகு
திக்குப் போய்,[b] எஸ்கோல் பள்ளத்தாக்கை* அடைந்து, அந்தத் தேசத்தை
உளவு பார்த்தார்கள். **25** அங்கு விளைந்த பழங்களில் சிலவற்றைச் சுமந்
துகொண்டு வந்தார்கள். அதோடு, 'நம் கடவுளாகிய யெகோவா நமக்
குக் கொடுக்கப்போகிற தேசம் நல்ல தேசம்'[c] என்று சொன்னார்கள்.
26 ஆனால், நீங்கள் அங்கு போக விரும்பவில்லை, உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் கட்டளையை மீறி நடந்தீர்கள்.[d] **27** உங்களுடைய கூடா
ரங்களில் முணுமுணுத்துக்கொண்டே இருந்தீர்கள். 'யெகோவா நம்மை
வெறுக்கிறார், நம்மை எமோரியர்களின் கையில் சிக்க வைத்து அழிப்பதற்
காகத்தான் எகிப்திலிருந்து கொண்டுவந்திருக்கிறார். **28** நாம் போகப்
போகிற இடம் எப்படி இருக்குமோ? அதைப் பார்த்துவிட்டு வந்த நம்
சகோதரர்கள், "அங்கிருக்கிற ஆட்கள் நம்மைவிட பலசாலிகள், உயரமான
வர்கள். அவர்களுடைய நகரங்கள் ரொம்பவே பெரியதாக இருக்கின்
றன. அவற்றின் மதில்கள் வானத்தைத் தொடுமளவுக்கு உயரமாக இருக்
கின்றன.[e] அங்கே நாங்கள் ஏனாக்கியர்களைப்[f] பார்த்தோம்" என்றெல்லாம்
சொல்லி பீதியைக் கிளப்புகிறார்களே'[g] என்று புலம்பினீர்கள்.

29 அப்போது நான் உங்களிடம், 'அவர்களை நினைத்துத் திகிலடையா
தீர்கள், பயப்படாதீர்கள்.[h] **30** உங்கள் கடவுளாகிய யெகோவா உங்கள்
முன்னால் போய், உங்கள் கண்ணெதிரே[i] எகிப்தியர்களோடு போர் செய்
தது போல இப்போதும் உங்களுக்காகப் போர் செய்வார்.[j] **31** வனாந்
தரத்தில் நீங்கள் நடந்துவந்தபோது, ஒரு அப்பா தன் பிள்ளையைத் தூக்கிச்
சுமப்பது போல உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை வழியெல்லாம்
தூக்கிச் சுமந்து இந்த இடத்துக்குக் கொண்டுவந்ததை நீங்கள் பார்த்தீர்களே'
என்று சொன்னேன். **32** இப்படியெல்லாம் நடந்தும், உங்கள் கடவுளாகிய
யெகோவாமேல் நீங்கள் விசுவாசம் வைக்கவில்லை.[k] **33** நீங்கள் முகாம்
போட வேண்டிய இடத்தைப் பார்த்துச் சொல்வதற்காக* அவர் உங்களுக்கு
முன்னால் போனாரே. ராத்திரியில் நெருப்பின் மூலமாகவும் பகலில் மேகத்
தின் மூலமாகவும் உங்களுக்கு வழிகாட்டினாரே.[l]

34 இப்படி நீங்கள் முணுமுணுத்துக்கொண்டே இருந்ததை யெகோவா
கேட்டார். அதனால், அவர் பயங்கர கோபத்தோடு, **35** 'உங்கள் முன்
னோர்களுக்குத் தருவதாக நான் வாக்குக் கொடுத்த நல்ல தேசத்தை இந்
தக் கெட்ட தலைமுறையைச் சேர்ந்த ஒருவர்கூட பார்க்கப் போவ
தில்லை.[m] **36** எப்புன்னேயின் மகன் காலேப் மட்டும்தான் அதைப்
பார்ப்பான். யெகோவாவாகிய எனக்கு அவன் முழு இதயத்தோடு கீழ்ப்ப
டிந்ததால் அவனுடைய காலடி பட்ட இடத்தை அவனுக்கும் அவன் வம்சத்
தாருக்கும் கொடுப்பேன்.[n] **37** (உங்களால் யெகோவா என்மேலும் கோபப்
பட்டு, "நீயும்கூட அங்கே போக மாட்டாய்.[o] **38** உன் ஊழியனும் நூனின்
மகனுமாகிய யோசுவாதான்[p] அந்தத் தேசத்துக்குப் போவான்.[q] அவனுக்குத்
தைரியம் கொடு,*[r] ஏனென்றால் இஸ்ரவேலர்கள் அந்தத் தேசத்தைச் சொந்
தமாக்கிக்கொள்ள அவன்தான் உதவுவான்" என்றார்.) **39** உங்கள் பிள்ளை
களை அந்தத் தேசத்தார் பிடித்து வைத்துக்கொள்வார்கள் என்று சொன்னீர்
களே,[s] இன்றைக்கு நல்லது கெட்டது தெரியாமல் இருக்கிற அந்தப்

அதி. 1
a எண் 13:3
b எண் 13:17
c எண் 13:23-27
d எண் 14:1-4
e எண் 13:28, 33
f எண் 13:22; யோசு 11:21
g எண் 32:9; யோசு 14:7, 8
h எண் 14:9
i எண் 14:22
j யாத் 14:14; யோசு 10:42
k சங் 78:22; சங் 106:24; எபி 3:16, 19; யூ 5
l யாத் 13:21; யாத் 40:36; எண் 10:33, 34; சங் 78:14
m எண் 14:29, 35; 1கொ 10:1, 5; எபி 3:17
n எண் 14:24; யோசு 14:9
o எண் 20:12; எண் 27:13, 14; உபா 3:26; சங் 106:32
p யாத் 33:11; எண் 11:28
q எண் 14:38
r எண் 27:18; உபா 31:7; யோசு 1:6, 9
s எண் 14:3

1:24 * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கை." **1:33** * வே.வா., "உளவு பார்ப்பதற்காக." **1:38** * அல்லது, "கடவுள் அவனைப் பலப்படுத்தியிருக்கிறார்."

பிள்ளைகள்தான் அங்கே போவார்கள். அவர்களுக்கு நான் அந்தத் தேசத்
தைத் தருவேன், அவர்கள் அதைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.[a]
40 ஆனால், நீங்கள் இங்கிருந்து திரும்பி, செங்கடலுக்குப் போகும் வழி
யாக வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப் போக வேண்டும்'[b] என்று ஆணை
யிட்டுச் சொல்லிவிட்டார்.[c]

41 அதற்கு நீங்கள் என்னிடம், 'நாங்கள் யெகோவாவுக்கு விரோத
மாகப் பாவம் செய்துவிட்டோம். எங்கள் கடவுளாகிய யெகோவா கட்டளை
கொடுத்தபடியே இப்போது போய்ப் போர் செய்கிறோம்' என்று சொன்னீர்
கள். பின்பு, நீங்கள் ஒவ்வொருவரும் போர் ஆயுதங்களை எடுத்துக்கொண்
டீர்கள். மலைமேல் ஏறிப்போய் அவர்களைச் சுலபமாக வீழ்த்திவிடலாம்
என்று நினைத்தீர்கள்.[d] **42** ஆனால் யெகோவா என்னிடம், 'நீ இஸ்ரவேலர்
களைப் பார்த்து, "நீங்கள் போய்ப் போர் செய்யக் கூடாது. நான் உங்களோடு
இருக்க மாட்டேன்.[e] என் பேச்சை மீறி நீங்கள் போனால், எதிரிகள் உங்
களை வீழ்த்திவிடுவார்கள்" என்று சொல்' என்றார். **43** அதை நான் உங்
களிடம் சொன்னேன், ஆனால் நீங்கள் அதைக் காதில் போட்டுக்கொள்ள
வில்லை. யெகோவாவின் கட்டளையை மீறி நடந்தீர்கள். அகங்காரத்தோடு*
மலைமேல் ஏறிப் போனீர்கள். **44** அப்போது, அந்த மலையில் வாழ்ந்து
வந்த எமோரியர்கள் உங்களுக்கு எதிராக வந்து, தேனீக்கள் துரத்துவதைப்
போல உங்களை சேயீருக்குத் துரத்தியடித்தார்கள். ஓர்மா வரைக்கும் உங்
களைச் சிதறிப்போக வைத்தார்கள். **45** அதனால், நீங்கள் திரும்பி வந்து
யெகோவாவின் முன்னால் புலம்பி அழுதீர்கள். அதை யெகோவா கேட்க
வும் இல்லை, கண்டுகொள்ளவும் இல்லை. **46** அதனால்தான், காதேசில்
நீங்கள் பல நாட்கள் தங்கியிருக்க வேண்டியிருந்தது" என்றார்.

2 பிறகு மோசே, "அதன்பின் யெகோவா என்னிடம் சொன்னபடியே
நாம் அங்கிருந்து திரும்பி, செங்கடலுக்குப் போகும் வழியாக வனாந்
தரத்துக்குப் புறப்பட்டோம்.[f] சேயீர் மலைப்பகுதியைச் சுற்றிப் பல நாட்
கள் பயணம் செய்தோம். **2** கடைசியில் யெகோவா என்னிடம், **3** 'இந்த
மலைப்பகுதியைச் சுற்றிப் பயணம் செய்தது போதும். இப்போது வடதி
சைக்குப் போங்கள். **4** ஜனங்களுக்கு நீ இந்தக் கட்டளைகளைக் கொடு:
"சேயீரில் வாழ்கிற[g] உங்கள் சகோதரர்களாகிய ஏசாவின் வம்சத்தாரு
டைய[h] எல்லையைக் கடக்கப்போகிறீர்கள். அவர்கள் உங்களைப் பார்த்
துப் பயப்படுவார்கள்.[i] நீங்கள் மிகவும் கவனமாக நடந்துகொள்ள வேண்
டும். **5** அவர்களோடு எந்த வம்புக்கும் போகக் கூடாது.* அவர்களுடைய
தேசத்தில் ஒரு அடி நிலத்தைக்கூட நான் உங்களுக்குக் கொடுக்க மாட்
டேன். ஏனென்றால், சேயீர் மலைப்பகுதியை ஏசாவுக்குக் கொடுத்திருக்கி
றேன்.[j] **6** அவர்களிடமிருந்து உணவையும் தண்ணீரையும் நீங்கள் பணம்
கொடுத்து வாங்க வேண்டும்.[k] **7** உங்கள் கடவுளாகிய யெகோவா நீங்கள்
செய்த எல்லாவற்றையும் ஆசீர்வதித்திருக்கிறார். இவ்வளவு பெரிய வனாந்
தரத்தில் நீங்கள் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியையும் அவர் பார்த்தி
ருக்கிறார். இந்த 40 வருஷங்களாக உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களோடு இருந்திருக்கிறார், உங்களுக்கு ஒரு குறையும் இருந்ததில்லை"'[l]

1:43 * இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. **2:5** * வே.வா., "அவர்களுடைய கோபத்தைத் தூண்டக் கூடாது."

அதி. 1
a எண் 14:30, 31
b எண் 14:25
c எண் 14:28, 35; எண் 32:10-12; உபா 2:14; சங் 95:11; எபி 3:11
d எண் 14:39-45
e லேவி 26:14, 17

அதி. 2
f எண் 14:25
g ஆதி 27:39, 40; ஆதி 36:8, 9
h எண் 20:14; உபா 23:7
i யாத் 15:15; யாத் 23:27
j உபா 32:8; யோசு 24:4; அப் 17:26
k எண் 20:18, 19
l உபா 29:5; நெ 9:21; சங் 23:1; சங் 34:9, 10

என்று சொன்னார். **8** அதனால் அரபா, ஏலாத், எசியோன்-கேபேர்[a] வழி
யாகப் போகாமல், சேயீரில் வாழ்கிற நம் சகோதரர்களாகிய ஏசாவின் வம்
சத்தாருடைய[b] எல்லையைக் கடந்துபோனோம்.
பின்பு அங்கிருந்து திரும்பி, மோவாப் வனாந்தரத்துக்குப்[c] போகும்
வழியாகப் பயணம் செய்தோம். **9** அப்போது யெகோவா என்னிடம்,
'மோவாப் தேசத்தாரோடு எந்த வம்புக்கும் போகாதீர்கள், அவர்களோடு
போர் செய்யாதீர்கள். அவர்களுடைய தேசத்தில் எந்த இடத்தையும் நான்
உங்களுக்குக் கொடுக்க மாட்டேன். ஏனென்றால், லோத்து வம்சத்தா
ருக்கு[d] ஆர் நகரத்தைக் கொடுத்திருக்கிறேன். **10** (முன்பு அங்கு ஏமியர்
கள்[e] வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் ஏனாக்கியர்களைப் போல ஏராளமாக
இருந்தார்கள். அவர்களைப் போலவே பலசாலிகளாகவும், உயரமானவர்
களாகவும் இருந்தார்கள். **11** ரெப்பாயீமியர்களும்[f] பார்ப்பதற்கு ஏனாக்கி
யர்களைப்[g] போல் இருந்தார்கள். மோவாபியர்கள் அவர்களை ஏமியர்கள்
என்று அழைத்தார்கள். **12** சேயீரில் முன்பு ஓரியர்கள்[h] வாழ்ந்தார்கள்.
ஆனால், ஏசாவின் வம்சத்தார் அவர்களை ஒழித்துக்கட்டிவிட்டு அங்கே
குடியேறினார்கள்.[i] இஸ்ரவேலர்களும் அவர்களுக்குக் கிடைக்கப்போகும்
தேசத்தில் அப்படித்தான் செய்வார்கள். அந்தத் தேசத்தை யெகோவா நிச்
சயம் அவர்களுக்குக் கொடுப்பார்.) **13** அதனால், நீங்கள் சேரெத் பள்ளத்
தாக்கை* கடந்து போங்கள்' என்றார். அதன்படியே, நாம் சேரெத் பள்ளத்
தாக்கைக்[j] கடந்து போனோம். **14** காதேஸ்-பர்னேயாவிலிருந்து நடக்கத்
தொடங்கி, சேரெத் பள்ளத்தாக்கைக் கடப்பதற்குள் 38 வருஷங்கள் ஓடி
விட்டன. அதற்குள், போர்வீரர்களாகிய அந்தத் தலைமுறையைச் சேர்ந்த
எல்லாரும் யெகோவா ஆணையிட்டுச் சொன்னபடியே இறந்துபோனார்
கள்.[k] **15** அவர்கள் நம் நடுவிலிருந்து அடியோடு ஒழிந்துபோகும்வரை
யெகோவா அவர்களுக்கு விரோதமாக இருந்தார்.[l]
16 அந்தப் போர்வீரர்கள் எல்லாரும் இறந்தவுடன்,[m] **17** யெகோவா
மறுபடியும் என்னிடம், **18** 'இன்றைக்கு நீங்கள் மோவாப் பிரதேசத்தை,
அதாவது ஆர் நகரத்தை, கடந்துபோக வேண்டும். **19** அம்மோனியர்க
ளின் எல்லையை நெருங்கும்போது, அவர்களுக்குத் தொல்லை கொடுக்கா
மலும் அவர்களைச் சண்டைக்கு இழுக்காமலும் இருங்கள். அவர்களு
டைய தேசத்தில் எந்த இடத்தையும் நான் உங்களுக்குக் கொடுக்க
மாட்டேன். ஏனென்றால், அதை லோத்து வம்சத்தாருக்குக் கொடுத்திருக்
கிறேன்.[n] **20** அந்தத் தேசமும் ரெப்பாயீமியர்களின் தேசமாகக் கருதப்பட்
டது.[o] (முன்பு ரெப்பாயீமியர்கள் அங்கு வாழ்ந்தார்கள். அப்போது அம்மோ
னியர்கள் அவர்களை சம்சூமியர்கள் என்று அழைத்தார்கள். **21** அவர்கள்
ஏனாக்கியர்களைப் போல் ஏராளமாக இருந்தார்கள். அவர்களைப் போலவே
பலசாலிகளாகவும், உயரமானவர்களாகவும் இருந்தார்கள்.[p] ஆனால், அம்
மோனியர்களைப் பயன்படுத்தி யெகோவா அவர்களை அழித்தார். அம்
மோனியர்கள் அவர்களை ஒழித்துக்கட்டிவிட்டு அவர்களுடைய தேசத்தில்
குடியேறினார்கள். **22** இப்படித்தான் ஓரியர்களை அழிப்பதற்காக, இன்று
சேயீரில் வாழும் ஏசாவின் வம்சத்தாருக்குக்[q] கடவுள் உதவினார். அவர்
கள் ஓரியர்களை ஒழித்துக்கட்டிவிட்டு,[r] இன்றுவரை அவர்களுடைய தேசத்
தில் வாழ்ந்துவருகிறார்கள். **23** காசாவரை[s] கிராமங்களில் வாழ்ந்துவந்த

2:13 * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கை."

அதி. 2
a 2நா 8:17
b எண் 20:20, 21
c எண் 21:13; நியா 11:17, 18; 2நா 20:10
d ஆதி 19:36, 37
e ஆதி 14:5
f உபா 3:11; 1நா 20:6
g எண் 13:22, 33
h ஆதி 14:6; ஆதி 36:20
i ஆதி 27:39, 40
j எண் 21:12
k எண் 14:33; எண் 32:11; உபா 1:35; சங் 95:11; எபி 3:18; யூ 5
l 1கொ 10:1, 5
m எண் 26:63, 64
n ஆதி 19:36, 38; உபா 2:9; நியா 11:15; 2நா 20:10; அப் 17:26
o ஆதி 15:18-20; உபா 3:11
p எண் 13:33; உபா 9:1, 2
q ஆதி 36:8
r ஆதி 14:6; உபா 2:12
s ஆதி 10:19

ஆவீமியர்களை கப்தோரிலிருந்து*[a] வந்த கப்தோரியர்கள் ஒழித்துக்கட்டி
விட்டு அங்கே குடியேறினார்கள்.)
24 நீங்கள் புறப்பட்டு அர்னோன் பள்ளத்தாக்கை*[b] கடந்து போங்கள்.
இதோ, எஸ்போனின் ராஜாவும் எமோரியனுமான சீகோனை உங்கள்
கையில் கொடுத்திருக்கிறேன்.[c] அவனோடு போர் செய்து அவனுடைய
தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளுங்கள். **25** இன்றுமுதல், பூமியிலுள்ள
எல்லா ஜனங்களும் உங்களை நினைத்துப் பயப்படும்படி செய்வேன்.
அவர்கள் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டுக் கதிகலங்குவார்கள், நடுநடுங்
குவார்கள்'*[d] என்று சொன்னார்.
26 பின்பு, சமாதான செய்தியைச்[e] சொல்வதற்காக நான் கெதெமோத்
வனாந்தரத்திலிருந்து[f] எஸ்போனின் ராஜாவான சீகோனிடம் தூதுவர்களை
அனுப்பி, **27** 'உங்கள் தேசத்தின் வழியாகப் போக எங்களுக்கு அனுமதி
கொடுங்கள். நாங்கள் வலது பக்கமோ இடது பக்கமோ திரும்பாமல்
நெடுஞ்சாலையில் மட்டும் நடந்துபோவோம்.[g] **28** அப்படி நடந்துபோவ
தற்கு அனுமதி கொடுங்கள். எங்களுக்குத் தேவையான உணவையும் தண்
ணீரையும் நீங்கள் விலைக்குக் கொடுத்தால் போதும். **29** அப்போது, நாங்
கள் யோர்தானைக் கடந்து எங்கள் கடவுளாகிய யெகோவா தரும்
தேசத்துக்குப் போவோம். சேயீரில் வாழ்கிற ஏசாவின் வம்சத்தாரும்
ஆரில் வாழ்கிற மோவாபியர்களும் எங்களுக்கு அப்படித்தான் செய்தார்
கள்' என்று சொன்னேன். **30** ஆனால், எஸ்போனின் ராஜாவான சீகோன்
தன்னுடைய தேசத்தின் வழியாகப் போக நமக்கு அனுமதி கொடுக்க
வில்லை. ஏனென்றால், அவனுடைய இதயம் இறுகிப்போகும்படி நம் கடவு
ளாகிய யெகோவா விட்டுவிட்டார்.[h] அவனை நம் கையில் கொடுப்பதற்
காகத்தான் அப்படிப் பிடிவாதமாக இருக்கும்படி அவனை விட்டுவிட்டார்.
அதன்படியே, அவன் நம் கையில் கொடுக்கப்பட்டான்.[i]
31 அப்போது யெகோவா என்னிடம், 'இதோ, சீகோனையும்
அவன் தேசத்தையும் உங்கள் கையில் தந்திருக்கிறேன். நீங்கள் போய்
அவனுடைய தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளுங்கள்'[j] என்று சொன்
னார். **32** நம்மோடு போர் செய்வதற்காக சீகோன் தன் ஆட்கள் எல்லா
ரையும் கூட்டிக்கொண்டு யாகாசுக்கு வந்தபோது,[k] **33** நம் கடவுளாகிய
யெகோவா அவனை நம் கையில் கொடுத்தார். அவனையும் அவன்
மகன்களையும் அவனுடைய எல்லா ஆட்களையும் நாம் தோற்கடித்தோம்.
34 அவனுடைய எல்லா நகரங்களையும் கைப்பற்றி அழித்தோம். அங்
கிருந்த ஆண்களையும் பெண்களையும் பிள்ளைகளையும் ஒருவர்விடாமல்
கொன்றுபோட்டோம்.[l] **35** அந்த நகரங்களில் கைப்பற்றிய பொருள்களை
யும் ஆடுமாடுகளையும் மட்டும் நமக்காக வைத்துக்கொண்டோம். **36** அர்
னோன் பள்ளத்தாக்கின்* ஓரத்தில் உள்ள ஆரோவேரிலிருந்து[m] (அந்தப்
பள்ளத்தாக்கில் உள்ள நகரத்திலிருந்து) கீலேயாத்வரை எந்த ஊரையும் நாம்
விட்டுவைக்கவில்லை. நம்முடைய கடவுளான யெகோவா அவை எல்லா
வற்றையும் நம் கையில் கொடுத்தார்.[n] **37** ஆனாலும் அம்மோனியர்களின்
தேசத்தை நாம் நெருங்கவில்லை.[o] அதாவது யாபோக் பள்ளத்தாக்கின்[p] எந்

2:23 *அதாவது, "கிரேத்தாவிலிருந்து." **2:24** *அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கை." **2:25** *வே.வா., "பிரசவ வேதனைப்படுவதுபோல் வேதனைப்படுவார்கள்." **2:36** *அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்."

அதி. 2
a ஆதி 10:13, 14
b எண் 21:13
c எண் 21:23
d யாத் 15:14; யாத் 23:27; உபா 11:25; யோசு 2:9, 10
e உபா 20:10
f யோசு 13:15, 18; யோசு 21:8, 37
g எண் 21:21, 22
h ரோ 9:18
i எண் 21:25
j எண் 32:33; சங் 135:10-12
k எண் 21:23, 24; நியா 11:20
l உபா 20:16, 17
m உபா 3:12; உபா 4:47, 48; யோசு 13:8, 9
n சங் 44:3
o உபா 3:16; நியா 11:15
p எண் 21:23, 24

தப் பகுதியையும், மலைப்பகுதியிலுள்ள எந்த நகரத்தையும், நம் கடவுளாகிய
யெகோவா நமக்குத் தடைசெய்த மற்ற எந்த இடத்தையும் நாம் நெருங்க
வில்லை” என்று சொன்னார்.

3 அதன்பின், “நாம் அங்கிருந்து திரும்பி, பாசானுக்குப் போகும்
சாலை வழியாகப் போனோம். அப்போது, நம்மோடு போர் செய்வதற்
காக பாசானின் ராஜாவாகிய ஓக் தன்னுடைய ஆட்கள் எல்லாரையும்
கூட்டிக்கொண்டு எத்ரேய்க்கு வந்தான்.[a] **2** அதனால் யெகோவா என்னி
டம், ‘அவனைப் பார்த்துப் பயப்படாதே. அவனையும் அவனுடைய ஆட்
கள் எல்லாரையும் அவனுடைய தேசத்தையும் நான் உன்னுடைய கையில்
கொடுப்பேன். எஸ்போனில் வாழ்ந்துவந்த எமோரியர்களின் ராஜாவாகிய
சீகோனுக்குச் செய்தது போலவே அவனுக்கும் நீ செய்வாய்’ என்று சொன்
னார். **3** அதன்படியே, பாசானின் ராஜாவாகிய ஓகையும் அவனுடைய
ஆட்கள் எல்லாரையும் நம்முடைய கடவுளாகிய யெகோவா நம் கையில்
கொடுத்தார். ஒருவர்விடாமல் எல்லாரையும் நாம் வெட்டி வீழ்த்தினோம்.
4 பின்பு, அவனுடைய எல்லா நகரங்களையும் கைப்பற்றினோம். அவர்க
ளிடமிருந்து நாம் கைப்பற்றாத இடங்களே கிடையாது. பாசானிலுள்ள
ஓகின் ராஜ்யத்தில், அதாவது அர்கோப் பிரதேசத்தில், மொத்தம் 60 நகரங்
களைக் கைப்பற்றினோம்.[b] **5** இந்த நகரங்கள் உயரமான மதில்களோ
டும் கதவுகளோடும் தாழ்ப்பாள்களோடும் பாதுகாப்பாக இருந்தன. அந்தப்
பிரதேசத்தில் மதில்கள் இல்லாத ஊர்களும் நிறைய இருந்தன. **6** எஸ்
போனின் ராஜாவான சீகோனின் நகரங்களை அழித்தது போலவே அவற்
றையும் நாம் அழித்தோம்.[c] எல்லா நகரங்களையும், அங்கிருந்த ஆண்
களையும், பெண்களையும், பிள்ளைகளையும் அழித்தோம்.[d] **7** ஆனால்,
அங்கிருந்த எல்லா ஆடுமாடுகளையும் பொருள்களையும் எடுத்துக்
கொண்டோம்.

8 அப்போது, யோர்தான் பிரதேசத்திலிருந்த இரண்டு எமோரிய ராஜாக்க
ளின் தேசங்களைக் கைப்பற்றினோம்.[e] அதாவது, அர்னோன் பள்ளத்
தாக்கிலிருந்து* எர்மோன் மலைவரை கைப்பற்றினோம்.[f] **9** (எர்மோன்
மலையை சீரியோன் என்று சீதோனியர்கள் அழைத்தார்கள், ஆனால்
எமோரியர்கள் அதை செனீர் என்று அழைத்தார்கள்.) **10** அதோடு, பீடபூ
மியிலுள்ள* எல்லா நகரங்களையும், கீலேயாத் முழுவதையும், ஓகின்
ராஜ்யத்தைச் சேர்ந்த சல்கா, எத்ரேய்[g] என்ற நகரங்கள் வரையுள்ள
பாசான் பகுதி முழுவதையும் கைப்பற்றினோம். **11** ரெப்பாயீமியர்களில்
கடைசியாக இருந்தது பாசானின் ராஜாவாகிய ஓக் மட்டும்தான். அவனுக்
காக இரும்பினால்* செய்யப்பட்ட சவப்பெட்டி அம்மோனியர்களின் நகர
மாகிய ரப்பாவில் இன்னும் இருக்கிறது. அதன் நீளம் ஒன்பது முழம்,# அக
லம் நான்கு முழம். **12** அந்தச் சமயத்தில், அர்னோன் பள்ளத்தாக்கின்*
பக்கத்தில் உள்ள ஆரோவேர்[h] தொடங்கி கீலேயாத் மலைப்பகுதியின்
பாதி வரையுள்ள தேசத்தை நாம் சொந்தமாக்கிக்கொண்டோம். அங்கிருந்த
நகரங்களை ரூபன் கோத்திரத்தாருக்கும் காத் கோத்திரத்தாருக்கும் நான்

அதி. 3
a எண் 21:33-35
b எண் 32:33; உபா 29:7, 8; யோசு 13:29, 30
c லேவி 27:29
d லேவி 18:25
e எண் 32:33
f யோசு 12:1, 2
g எண் 21:33
h எண் 32:34

3:8 *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து.” **3:10** *பீடபூமி என்பது மேடாக இருக்கிற பரந்த நிலப்பகுதி. **3:11** *அல்லது, “கருங்கல்லினால்.” #ஒரு முழம் என்பது 44.5 செ.மீ. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **3:12** *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்.”

கொடுத்தேன்.[a] **13** கீலேயாத்தின் இன்னொரு பாதியையும் ஓகின் ராஜ்யத்
தைச் சேர்ந்த பாசான் பகுதி முழுவதையும் மனாசேயின் பாதிக் கோத்திரத்
தாருக்குக் கொடுத்தேன்.[b] பாசானைச் சேர்ந்த அர்கோப் பிரதேசம் முழுவ
தும் ரெப்பாயீமியர்களின் தேசம் என்று அழைக்கப்பட்டது.

14 கேசூரியர்கள் மற்றும் மாகாத்தியர்களின்[c] எல்லைவரை இருந்த அர்
கோப் பிரதேசம்[d] முழுவதையும் மனாசேயின் மகனாகிய யாவீர்[e] கைப்பற்
றினார். பாசானிலிருந்த அந்தக் கிராமங்களுக்குத் தன்னுடைய பெயரையே
வைத்து, அவோத்-யாவீர்*[f] என்று அழைத்தார். இந்தப் பெயரில்தான்
இன்றுவரை அவை அழைக்கப்படுகின்றன. **15** கீலேயாத்தை நான் மாகீ
ருக்குக் கொடுத்தேன்.[g] **16** கீலேயாத்முதல் அர்னோன் பள்ளத்தாக்கு
வரை நான் ரூபன் கோத்திரத்தாருக்கும் காத் கோத்திரத்தாருக்கும் கொடுத்
தேன்.[h] அந்தப் பள்ளத்தாக்கின் நடுப்பகுதிதான் அதன் எல்லை. அதோடு,
அம்மோனியர்களின் எல்லையாகிய யாபோக் பள்ளத்தாக்கு வரையும்,
17 அரபா வரையும், குறிப்பாக யோர்தான் ஆற்றின் கரையோரம் வரை
யும், கின்னரேத் தொடங்கி உப்புக் கடலாகிய* அரபா கடல் வரையும்
கொடுத்தேன். இந்தக் கடல், கிழக்கே பிஸ்கா மலைச் சரிவுகளுக்குக் கீழே
இருக்கிறது.[i]

18 பின்பு நான் உங்களிடம், 'நீங்கள் சொந்தமாக்கிக்கொள்வதற்காக
இந்தத் தேசத்தை உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக்
கொடுத்திருக்கிறார். வீரமுள்ள ஆண்கள் எல்லாரும் ஆயுதங்களை எடுத்
துக்கொண்டு உங்கள் சகோதரர்களுக்கு முன்னால் யோர்தானைக்
கடந்து போங்கள்.[j] **19** நான் உங்களுக்குக் கொடுத்திருக்கிற இந்த நகரங்
களில், உங்களுடைய மனைவிமக்களும் கால்நடைகளும் மட்டுமே தங்கட்
டும். உங்களுக்கு ஏராளமான கால்நடைகள் இருப்பது எனக்கு நன்றாகத்
தெரியும். **20** யெகோவா உங்களுக்கு ஓய்வு தந்தது போல உங்கள் சகோ
தரர்களுக்கும் ஓய்வு தருகிற வரையிலும், உங்கள் கடவுளாகிய யெகோவா
யோர்தானுக்கு அந்தப் பக்கத்தில் கொடுக்கப்போகும் தேசத்தை அவர்கள்
சொந்தமாக்கிக்கொள்கிற வரையிலும் நீங்கள் அவர்கள் முன்னால் போக
வேண்டும். அதன்பின், உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் கொடுத்திருக்கிற
இடத்துக்கு நீங்கள் திரும்பி வரலாம்'[k] என்று சொன்னேன்.

21 பின்பு நான் யோசுவாவிடம்,[l] 'இந்த இரண்டு ராஜாக்களுக்கும் உன்
கடவுளாகிய யெகோவா என்ன செய்தார் என்பதை நீயே உன் கண்களால்
பார்த்தாய். யோர்தானுக்கு அந்தப் பக்கத்தில் நீ போகிற எல்லா ராஜ்யங்
களுக்கும் யெகோவா இப்படித்தான் செய்வார்.[m] **22** உங்கள் கடவுளாகிய
யெகோவாவே உங்களுக்காகப் போர் செய்வார்.[n] அதனால், அங்கு இருக்
கிறவர்களைப் பார்த்து நீங்கள் பயப்படக் கூடாது' என்று கட்டளை
கொடுத்தேன்.

23 அந்தச் சமயத்தில் நான் யெகோவாவிடம், **24** 'உன்னதப் பேரரசரா
கிய யெகோவாவே, உங்களுடைய மகத்துவத்தையும் மகா வல்லமையை
யும்[o] உங்கள் அடியேனுக்குக் காட்ட ஆரம்பித்திருக்கிறீர்கள். உங்க
ளைப் போல் அற்புதங்களைச் செய்கிற கடவுள் வானத்திலோ பூமியிலோ
உண்டா?[p] **25** யோர்தானுக்கு அந்தப் பக்கத்திலுள்ள நல்ல தேசத்தை
நான் போய்ப் பார்ப்பதற்குத் தயவுசெய்து அனுமதி கொடுங்கள். அந்த

3:14 * அர்த்தம், "யாவீரின் கிராமங்கள்." **3:17** * அதாவது, "சவக் கடலாகிய."

அதி. 3
a எண் 32:33
b எண் 32:39 யோசு 13: 29-31 1நா 5:23
c யோசு 13:13
d உபா 3:4
e 1நா 2:22
f எண் 32: 40, 41
g எண் 32:39 யோசு 17:1
h எண் 32:33 யோசு 22:9
i எண் 34:11, 12
j எண் 32: 20-22
k யோசு 1: 14, 15 யோசு 22:4, 8
l எண் 11:28 எண் 14:30 எண் 27:18
m யோசு 10:25
n யாத் 14:14 யாத் 15:3 உபா 1:30 உபா 20:4 யோசு 10:42
o யாத் 15:16 உபா 11:2
p யாத் 15:11 2சா 7:22 1ரா 8:23 சங் 86:8 எரே 10:6, 7

அழகான மலைப்பகுதியையும் லீபனோனையும்[a] பார்க்க எனக்கு வாய்ப்
புக் கொடுங்கள்' என்று கெஞ்சினேன். **26** ஆனாலும், உங்களால்
யெகோவா என்மேல் பயங்கர கோபமாகவே இருந்தார்.[b] யெகோவா என்
ஜெபத்தைக் கேட்காமல், 'போதும்! இனிமேல் இந்த விஷயத்தைப் பற்றி
என்னிடம் பேசாதே. **27** நீ யோர்தானைக் கடந்துபோக மாட்டாய்.[c] அத
னால், இப்போதே பிஸ்காவின் உச்சிக்குப்[d] போய் அந்தத் தேசத்தை
மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் பார்த்துக்கொள். **28** பின்பு,
நீ யோசுவாவைத் தலைவனாக நியமித்து,[e] அவனுக்கு ஊக்கமும் தைரி
யமும் கொடு. இந்த ஜனங்களுக்கு முன்னால் அவன்தான் யோர்தானைக்
கடந்து போவான்.[f] நீ பார்க்கப்போகிற அந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்
கொள்ள அவன்தான் இந்த ஜனங்களுக்கு உதவி செய்வான்' என்று சொல்
லிவிட்டார். **29** பெத்-பேயோருக்கு முன்னால் உள்ள பள்ளத்தாக்கில் நாம்
தங்கியிருந்தபோது இதெல்லாம் நடந்தது"[g] என்று சொன்னார்.

4 பின்பு, "இஸ்ரவேலர்களே, நீங்கள் கடைப்பிடிப்பதற்காக இப்போது
நான் உங்களுக்குக் கற்றுக்கொடுக்கிற விதிமுறைகளையும் நீதித்தீர்ப்பு
களையும் கேட்டு நடங்கள். அப்போது வாழ்வு பெறுவீர்கள்,[h] உங்கள்
முன்னோர்களின் கடவுளாகிய யெகோவா கொடுக்கப்போகிற தேசத்துக்குப்
போய் அதைச் சொந்தமாக்கிக்கொள்வீர்கள். **2** என் கட்டளைகளோடு
நீங்கள் எதையும் கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது.[i] உங்கள் கடவு
ளாகிய யெகோவா தந்திருக்கிற அந்தக் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்
படிய வேண்டும்.

3 பாகால் பேயோரின் விஷயத்தில் யெகோவா என்ன செய்தார் என்
பதை உங்கள் கண்களாலேயே பார்த்திருக்கிறீர்கள். உங்கள் ஜனங்களில்
பாகால் பேயோரைக் கும்பிட்ட ஒவ்வொருவனையும் உங்கள் கடவுளா
கிய யெகோவா அழித்துப்போட்டார்.[j] **4** ஆனால், உங்கள் கடவுளாகிய
யெகோவாவை உறுதியாய்ப் பிடித்துக்கொண்ட நீங்கள் எல்லாரும் இன்று
உயிரோடு இருக்கிறீர்கள். **5** இதோ, என் கடவுளாகிய யெகோவா கட்
டளை கொடுத்தபடியே, அவருடைய விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளை
யும் உங்களுக்கு விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.[k] உங்களுக்குச் சொந்
தமாகப்போகும் தேசத்தில் நீங்கள் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.
6 நீங்கள் அவற்றைக் கவனமாகப் பின்பற்ற வேண்டும்.[l] அப்போது,
இந்த விதிமுறைகளைப் பற்றிக் கேள்விப்படுகிற ஜனங்களுக்கு முன்
னால் ஞானமும்[m] புத்தியும்*[n] உள்ளவர்களாக இருப்பீர்கள். அவர்கள்
உங்களைப் பார்த்து, 'இந்த மாபெரும் தேசத்தைச் சேர்ந்த ஜனங்கள்
உண்மையிலேயே ஞானமும் புத்தியுமுள்ள ஜனங்கள்' என்று சொல்வார்
கள்.[o] **7** நாம் கூப்பிடுகிறபோதெல்லாம் நமக்குப் பக்கத்தில் வருகிற நம்
கடவுளாகிய யெகோவாவைப் போல ஒரு கடவுள் வேறெந்தத் தேசத்துக்
காவது உண்டா?[p] **8** இன்று நான் உங்களுக்குக் கொடுப்பதைப் போன்ற*
நீதியான விதிமுறைகளும் நீதித்தீர்ப்புகளும் வேறெந்தத் தேசத்துக்காவது
இருக்கிறதா?[q]

9 உங்கள் கண்களால் பார்த்தவற்றை மறந்துவிடாதபடி மிகக் கவன
மாகவும் ஜாக்கிரதையாகவும் இருங்கள். இவை உங்கள் வாழ்நாளெல்லாம்

4:6 * வே.வா., "புரிந்துகொள்ளுதலும்." **4:8** * வே.வா., "கொடுக்கிற முழு திருச்சட்டத்திலும் உள்ளதைப் போன்ற."

அதி. 3

a யாத் 3:8; உபா 1:7; உபா 11:11, 12
b எண் 20:12; எண் 27:13, 14; உபா 4:21; சங் 106:32
c உபா 34:1, 4
d எண் 27:12
e எண் 27:18-20; உபா 1:38; உபா 31:7
f யோசு 1:1, 2
g உபா 4:45, 46; உபா 34:5, 6

அதி. 4

h லேவி 18:5
i உபா 12:32; நீதி 30:5, 6; வெளி 22:18, 19
j எண் 25:5, 9; சங் 106:28; ஓசி 9:10; 1கொ 10:7, 8
k லேவி 26:46; எண் 30:16; எண் 36:13; உபா 6:1
l 1ரா 2:3
m சங் 111:10
n சங் 119:98, 100
o 1ரா 4:34; 1ரா 10:4-7; தானி 1:19, 20
p யாத் 25:8; லேவி 26:12; உபா 5:26; 2சா 7:23
q சங் 147:19, 20

உங்களுடைய நெஞ்சைவிட்டு நீங்கக் கூடாது. இவற்றை உங்களுடைய
பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் நீங்கள் எடுத்துச் சொல்ல
வேண்டும்.[a] **10** ஓரேபில் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு முன்
னால் நீங்கள் நின்ற நாளில் யெகோவா என்னிடம், ‘என் வார்த்தைகளைக்
கேட்பதற்காக[b] இந்த ஜனங்களை என்னிடம் ஒன்றுகூடிவரச் செய். அப்
போது, இந்தப் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவர்கள் எனக்
குப் பயந்து நடக்கக் கற்றுக்கொள்வார்கள்,[c] தங்களுடைய பிள்ளைகளுக்
கும் அவற்றைச் சொல்லிக்கொடுப்பார்கள்’[d] என்றார்.

11 அதனால், நீங்கள் அந்த மலையின் அடிவாரத்தில் வந்து நின்றீர்கள்.
அந்த மலையில் வானத்தைத் தொடுமளவுக்கு நெருப்பு எரிந்தது. இருண்ட
மேகங்களும் பயங்கரமான இருட்டும் சூழ்ந்துகொண்டன.[e] **12** அந்த
நெருப்பிலிருந்து யெகோவா பேசினார்.[f] அவர் பேசிய வார்த்தைகளைக்
கேட்டீர்கள், ஆனால் நீங்கள் எந்த உருவத்தையும் பார்க்கவில்லை.[g] அவ
ருடைய குரலை மட்டும்தான் கேட்டீர்கள்.[h] **13** நீங்கள் கடைப்பிடிப்பதற்
காக பத்துக் கட்டளைகளைக்[i] கொடுத்து, உங்களோடு ஒரு ஒப்பந்தத்தை
அவர் செய்தார்.[j] பின்பு, அந்தக் கட்டளைகளை இரண்டு கற்பலகைகளில்
எழுதினார்.[k] **14** நீங்கள் கைப்பற்றப்போகிற தேசத்தில் கடைப்பிடிக்க
வேண்டிய விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும் உங்களுக்குக் கற்றுக்
கொடுக்க வேண்டுமென்று யெகோவா என்னிடம் சொன்னார்.

15 அதனால் நீங்கள் மிகவும் கவனமாக இருங்கள், ஓரேபிலே நெருப்
பின் நடுவிலிருந்து யெகோவா உங்களோடு பேசிய நாளில் நீங்கள்
எந்த உருவத்தையும் பார்க்கவில்லை. **16** ஆகவே, எந்தவொரு வடி
வத்திலும் சின்னங்களையோ சிலைகளையோ உண்டாக்காதீர்கள்.[l] ஆண்
உருவம், பெண் உருவம், **17** பூமியிலுள்ள மிருகத்தின் உருவம், வானத்
தில் பறக்கிற பறவையின் உருவம்,[m] **18** தரையில் ஊருகிற பிராணியின்
உருவம், தண்ணீரில் நீந்துகிற மீனின் உருவம் என எந்த உருவத்தையா
வது உண்டாக்கி[n] அக்கிரமம் செய்துவிடாதீர்கள். **19** வானத்துப் படைக
ளான சூரிய, சந்திர, நட்சத்திரங்களைப் பார்க்கும்போது, அவற்றுக்குமுன்
மண்டிபோட்டு வணங்க வேண்டுமென்ற ஆசை உங்களுக்கு வந்துவிடாத
படி எச்சரிக்கையாக இருங்கள்.[o] பூமியிலுள்ள எல்லா ஜனங்களுக்காகவும்
அவற்றை உங்கள் கடவுளாகிய யெகோவா படைத்திருக்கிறார். **20** இருந்
தாலும், யெகோவா உங்களைத்தான் அவருடைய சொந்த ஜனமாகத் தேர்ந்
தெடுத்து, இரும்பு உலை போன்ற எகிப்திலிருந்து வெளியே கொண்டுவந்
தார். இன்றுவரை நீங்கள்தான் அவருடைய சொத்தாக இருக்கிறீர்கள்.[p]

21 நீங்கள் செய்த தவறால் யெகோவா என்மேல் கோபப்பட்டார்.[q] உங்
களுடைய கடவுளாகிய யெகோவா, நான் இந்த யோர்தானைக் கடக்க மாட்
டேன் என்றும், அவர் சொத்தாகக் கொடுக்கப்போகிற நல்ல தேசத்துக்குள்
போக மாட்டேன் என்றும் உறுதியாகச் சொல்லிவிட்டார்.[r] **22** அதனால்
நான் இந்தத் தேசத்திலேயே செத்துவிடுவேன், யோர்தானைக் கடந்துபோக
மாட்டேன்.[s] ஆனால், நீங்கள் அதைக் கடந்துபோய் அந்த நல்ல தேசத்
தைச் சொந்தமாக்கிக்கொள்வீர்கள். **23** உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களோடு செய்த ஒப்பந்தத்தை மறக்காதபடி கவனமாக இருங்கள்.[t] உங்
கள் கடவுளாகிய யெகோவா தடை செய்திருக்கிற எந்தவொரு உருவத்தை
யும் உண்டாக்காதீர்கள்.[u] **24** உங்கள் கடவுளாகிய யெகோவா, சுட்டெரிக்

அதி. 4
a ஆதி 18:19; உபா 6:6, 7
b யாத் 19:9
c யாத் 20:20; உபா 5:29
d நீதி 22:6; எபே 6:4
e யாத் 19:18; எபி 12:18, 19
f உபா 9:10
g ஏசா 40:18; யோவா 1:18; யோவா 4:24
h யாத் 20:22
i யாத் 20:1; யாத் 34:28; உபா 10:4
j யாத் 19:5; உபா 5:2; உபா 9:9; எபி 9:19, 20
k யாத் 24:12; யாத் 31:18; யாத் 32:19; யாத் 34:1
l யாத் 20:4; உபா 27:15; ஏசா 40:18; அப் 17:29; 1கொ 10:14
m உபா 5:8; ரோ 1:22, 23
n 1சா 5:4
o உபா 17:2, 3; 2ரா 17:16; எசே 8:16
p யாத் 19:5
q சங் 106:32
r எண் 20:12; உபா 31:1, 2
s உபா 3:27
t யாத் 24:3
u யாத் 20:4

கிற நெருப்பாக இருக்கிறார்.[a] தன்னை மட்டுமே வணங்க வேண்டுமென்று
எதிர்பார்க்கிற கடவுளாக இருக்கிறார்.[b]

25 அந்தத் தேசத்தில் நீங்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும்
பெற்று நீண்ட காலம் வாழ்ந்தபின், நீங்கள் தறிகெட்டுப்போய் ஏதாவது ஒரு
உருவத்தை உண்டாக்கினாலோ,[c] உங்கள் கடவுளாகிய யெகோவா வெறுக்
கிற காரியங்களைச் செய்து அவரைக் கோபப்படுத்தினாலோ,[d] **26** யோர்
தானைக் கடந்துபோய் நீங்கள் சொந்தமாக்கப்போகிற அந்தத் தேசத்தி
லிருந்து சீக்கிரமாக அழிந்துபோவீர்கள், இது நிச்சயம். இன்று பரலோகத்
தையும் பூமியையும் சாட்சியாக வைத்து இதைச் சொல்கிறேன். அந்தத்
தேசத்தில் நீங்கள் ரொம்பக் காலம் வாழ மாட்டீர்கள், அடியோடு அழிந்
துபோவீர்கள்.[e] **27** யெகோவா உங்களை மற்ற தேசத்தாரின் நடுவில் சித
றிப்போக வைப்பார்.[f] யெகோவா உங்களைத் துரத்தியடிக்கிற தேசங்களில்,
கொஞ்சம் பேர்தான் தப்பிப்பீர்கள்.[g] **28** மரத்தாலும் கல்லாலும் மனுஷர்
கள் செய்த தெய்வங்களுக்கு, அதாவது பார்க்கவோ கேட்கவோ ருசிக்
கவோ முகரவோ முடியாத தெய்வங்களுக்கு, அங்கே நீங்கள் சேவை
செய்ய வேண்டியிருக்கும்.[h]

29 அங்கே நீங்கள் முழு இதயத்தோடும் முழு மூச்சோடும்[i]
உங்கள் கடவுளாகிய யெகோவாவை நாடித் தேடினால், நிச்சயம் அவ
ரைக் கண்டடைவீர்கள்.[j] **30** பிற்காலத்தில் நீங்கள் இந்தக் கஷ்டங்களை
யெல்லாம் அனுபவித்து மனவேதனையில் துடிக்கும்போது உங்கள் கடவு
ளாகிய யெகோவாவிடம் திரும்புவீர்கள், அவர் சொல்வதைக் கேட்பீர்கள்.[k]
31 உங்கள் கடவுளாகிய யெகோவா இரக்கமுள்ள கடவுள்.[l] அவர் உங்
களைக் கைவிடவும் மாட்டார், அழிக்கவும் மாட்டார். உங்களுடைய முன்
னோர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த ஒப்பந்தத்தை அவர் மறக்கவும்
மாட்டார்.[m]

32 கடவுள் மனுஷனைப் படைத்த நாளிலிருந்து இத்தனை காலமாக
இப்படிப்பட்ட அற்புதமான செயல்கள் பூமியில் எங்காவது நடந்திருக்கி
றதா என்று கேட்டுப் பாருங்கள். வானத்தின் ஒரு முனையிலிருந்து இன்
னொரு முனைவரை விசாரித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட செயல்களைப்
பற்றி யாராவது கேள்விப்பட்டிருப்பார்களா?[n] **33** நெருப்பின் நடுவிலி
ருந்து கடவுள் பேசியதை உங்களைப் போல வேறு யாராவது கேட்டிருக்
கிறார்களா, கேட்டு உயிரோடு இருந்திருக்கிறார்களா?[o] **34** உங்கள் கட
வுளாகிய யெகோவா எகிப்தில் உங்கள் கண் முன்னாலேயே தண்டனைத்
தீர்ப்புகள் கொடுத்து, அதிசயங்களையும் அற்புதங்களையும்[p] செய்து,
போராலும்[q] கைபலத்தாலும்[r] மகா வல்லமையாலும் பயங்கரமான செயல்
களாலும்[s] உங்களை விடுதலை செய்தாரே. இதுபோல் வேறெந்தக் கட
வுளாவது ஒரு ஜனத்தை இன்னொரு ஜனத்தின் நடுவிலிருந்து தனக்காகப்
பிரித்தெடுத்தது உண்டா? **35** யெகோவாதான் உண்மைக் கடவுள், அவ
ரைத் தவிர வேறு கடவுள் இல்லை[t] என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளத்
தான் இதையெல்லாம் அவர் செய்தார்.[u] **36** பரலோகத்திலிருந்து அவர்
பேசுவதை நீங்கள் கேட்டீர்கள், பூமியில் அவருடைய நெருப்பு பற்றியெரி
வதைப் பார்த்தீர்கள், அந்த நெருப்பிலிருந்து வந்த அவருடைய குரலைக்
கேட்டீர்கள்.[v] உங்களைத் திருத்துவதற்குத்தான் இப்படியெல்லாம் நடக்கும்
படி அவர் செய்தார்.

அதி. 4

a யாத் 24:17, உபா 9:3, எபி 12:29
b யாத் 20:5, யாத் 34:14, எண் 25:11, லூ 10:27
c நியா 18:30, 2ரா 21:1, 7
d 2ரா 17:16, 17
e லேவி 18:24, 28, லேவி 26:27, 32
f உபா 28:64, நெ 1:8
g உபா 28:62
h உபா 28:15, 36, எரே 16:13, எசே 20:39
i உபா 30:1-3, உபா 30:8-10, 1ரா 8:48, 49, எரே 29:13, யோவே 2:12
j 2நா 15:4, 15
k 2நா 33:13, நெ 1:9
l யாத் 34:6, உபா 30:3, 2நா 30:9, நெ 9:31, ஏசா 54:7, ஏசா 55:7
m லேவி 26:42
n சங் 44:1
o உபா 5:26
p யாத் 7:3
q யாத் 15:3
r யாத் 13:3
s உபா 26:8, சங் 78:43-51
t யாத் 15:11, உபா 32:39, 1சா 2:2, ஏசா 45:18, மாற் 12:32
u யாத் 6:7
v யாத் 19:18, யாத் 20:22

37 கடவுள் உங்களுடைய முன்னோர்களை நேசித்ததாலும் அவர்களு
டைய வம்சத்தாரைத் தேர்ந்தெடுத்ததாலும்,[a] அவர் உங்களோடு இருந்து,
தன்னுடைய மகா வல்லமையால் எகிப்திலிருந்து உங்களைக் கூட்டிக்
கொண்டு வந்தார். **38** உங்களைவிட பலம்படைத்த மாபெரும் தேசங்
களை உங்கள் முன்னால் துரத்தியடித்தார். அவர்களுடைய தேசங்களை
உங்களுக்குச் சொத்தாகக் கொடுப்பதற்கு அப்படிச் செய்தார். அவர்
நினைத்தபடியே இன்று நடந்துவருகிறது.[b] **39** அதனால், மேலே வானத்தி
லும் கீழே பூமியிலும் யெகோவாதான் உண்மைக் கடவுள் என்பதை இந்த
நாளில் தெரிந்துகொள்ளுங்கள்.[c] அதை இதயத்தில் பதிய வைத்துக்கொள்
ளுங்கள். அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை.[d] **40** நான் இன்று
உங்களுக்குச் சொல்கிற அவருடைய விதிமுறைகளையும் கட்டளைகளை
யும் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிச் செய்தால், நீங்களும் உங்
களுடைய சந்ததியாரும் சந்தோஷமாக இருப்பீர்கள், உங்கள் கடவுளாகிய
யெகோவா தருகிற தேசத்தில் நீடூழி வாழ்வீர்கள்”[e] என்று சொன்னார்.

41 அந்தச் சமயத்தில், யோர்தானின் கிழக்கே மூன்று நகரங்களை[f]
மோசே தேர்ந்தெடுத்தார். **42** ஒருவன் எந்த முன்விரோதமும் இல்லா
மல் இன்னொருவனைத் தெரியாத்தனமாகக் கொலை செய்திருந்தால்,[g]
இவற்றில் ஏதாவது ஒரு நகரத்துக்கு ஓடிப்போய் உயிர் பிழைத்துக்கொள்ள
வேண்டியிருந்தது.[h] **43** பீடபூமியாகிய* வனாந்தரத்திலுள்ள பேசேர் நக
ரத்தை[i] ரூபன் கோத்திரத்தாருக்கு அவர் கொடுத்தார், கீலேயாத்திலுள்ள
ராமோத் நகரத்தை[j] காத் கோத்திரத்தாருக்குக் கொடுத்தார், பாசானிலுள்ள
கோலான் நகரத்தை[k] மனாசே கோத்திரத்தாருக்குக் கொடுத்தார்.[l]

44 இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே கொடுத்த திருச்சட்டம்[m] இது
தான். **45** இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வந்தபின், மோசே அவர்களுக்
குக் கொடுத்த எச்சரிப்புகளும்* விதிமுறைகளும் நீதித்தீர்ப்புகளும் இவை
தான்.[n] **46** யோர்தான் பிரதேசத்தில் பெத்-பேயோருக்கு[o] எதிரில் உள்ள
பள்ளத்தாக்கில், எஸ்போனில்[p] வாழ்ந்துவந்த எமோரியர்களின் ராஜாவா
கிய சீகோனின் தேசத்தில், இவற்றைக் கொடுத்தார். எகிப்திலிருந்து வந்த
பின், மோசேயும் இஸ்ரவேலர்களும் அந்த ராஜாவை வீழ்த்தியிருந்தார்
கள்.[q] **47** அவனுடைய தேசத்தையும் பாசானின் ராஜாவாகிய ஓகின்[r]
தேசத்தையும் இஸ்ரவேலர்கள் கைப்பற்றியிருந்தார்கள். எமோரியர்களு
டைய இந்த இரண்டு ராஜாக்களின் தேசங்களும் யோர்தான் பிரதேசத்
துக்குக் கிழக்கே, **48** அர்னோன் பள்ளத்தாக்கின்* ஓரத்திலிருந்த ஆரோ
வேர்[s] தொடங்கி சியோன் மலை வரையிலும், அதாவது எர்மோன் மலை
வரையிலும்,[t] **49** யோர்தான் பிரதேசத்துக்குக் கிழக்கே உள்ள அரபா
முழுவதிலும், பிஸ்கா[u] மலைச் சரிவுகளின் கீழே உள்ள அரபா கடல்* வரை
யிலும் பரந்திருந்தன.

5 பின்பு மோசே, இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் கூப்பிட்டு, “இஸ்
ரவேலர்களே, இன்றைக்கு நான் சொல்கிற விதிமுறைகளையும் நீதித்
தீர்ப்புகளையும் கேளுங்கள். அவற்றைக் கற்றுக்கொண்டு கவனமாகப் பின்
பற்றுங்கள். **2** நம் கடவுளாகிய யெகோவா ஓரேபில் நம்மோடு ஒரு

4:43 *பீடபூமி என்பது மேடாக இருக்கிற பரந்த நிலப்பகுதி. **4:45** *வே.வா., “நினைப்பூட்டுதல்களும்.” **4:48** *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்.” **4:49** *அதாவது, “உப்புக் கடல்; சவக் கடல்.”

அதி. 4
a உபா 10:15, சங் 105:6
b யாத் 23:28, உபா 7:1, உபா 9:1, யோசு 3:10
c 2நா 20:6
d ஏசா 44:6
e ஆதி 48:3, 4
f எண் 35:14
g எண் 35:22–24
h எண் 35:11, 25, உபா 19:4, 5
i யோசு 21:8, 36
j யோசு 21:8, 38
k யோசு 21:27
l யோசு 20:8, 9
m உபா 17:18, உபா 27:2, 3, கலா 3:24
n லேவி 26:46, உபா 4:1
o உபா 1:5, உபா 3:29
p எண் 21:26
q எண் 21:23, 24
r எண் 21:33, உபா 3:4
s உபா 2:36, உபா 3:12
t உபா 3:8, 9
u உபா 3:16, 17, உபா 34:1

ஒப்பந்தம் செய்தார்.[a] **3** அந்த ஒப்பந்தத்தை யெகோவா நம் முன்னோர்
களோடு செய்யாமல், இன்று உயிரோடிருக்கிற நம்மோடுதான் செய்தார்.
4 அந்த மலையில் நெருப்பின் நடுவிலிருந்து யெகோவா உங்களோடு
நேருக்கு நேராகப் பேசினார்.[b] **5** நீங்கள் நெருப்பைப் பார்த்துப் பயந்து
அந்த மலைமேல் ஏறி வராமல் இருந்தீர்கள்.[c] அதனால் யெகோவாவின்
வார்த்தைகளை உங்களுக்குச் சொல்வதற்காக, நான் யெகோவாவுக்கும்
உங்களுக்கும் நடுவில் நின்றேன்.[d] அப்போது அவர் இப்படிச் சொன்னார்:

6 ‘எகிப்து தேசத்தில் அடிமைகளாக அடைபட்டிருந்த உங்களை விடு
தலை செய்து கூட்டிக்கொண்டு வந்த உங்கள் கடவுளாகிய யெகோவா நான்
தான்.[e] **7** என்னைத் தவிர* வேறு தெய்வங்களை நீங்கள் வணங்கவே
கூடாது.[f]

8 மேலே வானத்திலோ கீழே பூமியிலோ பூமியின் கீழ் தண்ணீரிலோ
இருக்கிற எதனுடைய வடிவத்திலும் நீங்கள் உருவங்களையும் சிலைகளை
யும் உங்களுக்காக உண்டாக்கக் கூடாது.[g] **9** அவற்றுக்கு முன்னால் தலை
வணங்கவோ அவற்றைக் கும்பிடவோ கூடாது.[h] நான் உங்கள் கடவுளா
கிய யெகோவா. நீங்கள் என்னை மட்டும்தான் வணங்க வேண்டுமென்று
எதிர்பார்க்கிறேன்.[i] தகப்பன்கள் என்னை வெறுத்து எனக்கு எதிராகப்
பாவம் செய்தால் அவர்களுடைய பிள்ளைகளை மூன்றாம் நான்காம் தலை
முறைவரை தண்டிப்பேன்.[j] **10** ஆனால், என்னை நேசித்து என் கட்டளை
களைக் கடைப்பிடிப்பவர்களுக்கு ஆயிரம் தலைமுறைவரை மாறாத அன்
பைக் காட்டுவேன்.

11 உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பெயரை வீணாகப் பயன்படுத்
தக் கூடாது.[k] யெகோவாவின் பெயரை வீணாகப் பயன்படுத்துகிறவர்களை
அவர் தண்டிக்காமல் விட மாட்டார்.[l]

12 உங்கள் கடவுளாகிய யெகோவா கட்டளை கொடுத்தபடியே, ஓய்வு
நாளைப் புனித நாளாக அனுசரியுங்கள்.[m] **13** ஆறு நாட்களுக்கு உங்
களுடைய எல்லா வேலைகளையும் செய்யுங்கள்.[n] **14** ஆனால், ஏழாம்
நாள் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கான ஓய்வுநாள்.[o] அன்
றைக்கு நீங்களோ, உங்களுடைய மகனோ மகளோ, உங்களிடம் அடிமை
யாக இருக்கிற ஆணோ பெண்ணோ, உங்களுடைய மாடோ கழுதையோ,
வேறெதாவது வீட்டு விலங்கோ, உங்கள் நகரங்களில் குடியிருக்கிற வேறு
தேசத்துக்காரனோ[p] எந்த வேலையும் செய்யக் கூடாது.[q] நீங்கள் ஓய்வெ
டுப்பதுபோல் உங்கள் அடிமையும் ஓய்வெடுக்க வேண்டும்.[r] **15** எகிப்தில்
நீங்கள் அடிமைகளாக இருந்ததை ஞாபகத்தில் வையுங்கள். உங்கள் கடவு
ளாகிய யெகோவா தன் கைபலத்தாலும் மகா வல்லமையாலும் உங்களை
அங்கிருந்து கூட்டிக்கொண்டு வந்தார்.[s] அதனால்தான், ஓய்வுநாளை அனு
சரிக்க வேண்டுமென்று உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கட்
டளை கொடுத்தார்.

16 உங்கள் கடவுளாகிய யெகோவா கட்டளை கொடுத்தபடியே, உங்கள்
அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மதிப்புக் கொடுங்கள்.[t] அப்போதுதான், உங்
கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்தில் நீங்கள் சீரும் சிறப்பு
மாக நீண்ட காலம் வாழ்வீர்கள்.[u]

5:7 * வே.வா., “என்னை மீறி.”

அதி. 5
a யாத் 19:5; எபி 9:19, 20
b யாத் 19:9, 18; அப் 7:38
c யாத் 19:16
d யாத் 20:19; கலா 3:19
e யாத் 13:3; யாத் 20:2
f யாத் 20:3-6; 2ரா 17:35
g லேவி 26:1; உபா 4:15, 16; உபா 4:23; உபா 27:15; அப் 17:29
h யாத் 23:24; 1கொ 10:14
i யாத் 34:14; உபா 4:24; ஏசா 42:8; மத் 4:10
j யாத் 34:6, 7
k யாத் 22:28; லேவி 19:12
l யாத் 20:7; லேவி 24:16
m யாத் 16:23; யாத் 20:8-10; யாத் 31:13
n யாத் 34:21
o யாத் 16:29
p யாத் 23:12
q நெ 13:15
r உபா 10:17; எபே 6:9
s யாத் 6:6; உபா 4:34
t யாத் 21:15; லேவி 19:3; உபா 27:16; நீதி 1:8; மாற் 7:10
u யாத் 20:12; எபே 6:2, 3

17 நீங்கள் கொலை செய்யக் கூடாது.[a]

18 உங்களுடைய மணத்துணைக்குத் துரோகம் செய்யக் கூடாது.[b]

19 நீங்கள் திருடக் கூடாது.[c]

20 அடுத்தவனுக்கு விரோதமாகப் பொய் சாட்சி சொல்லக் கூடாது.[d]

21 அடுத்தவனுடைய மனைவியை அடைய ஆசைப்படக் கூடாது.[e]
அவனுடைய அடிமையையும்,* வீட்டையும், வயலையும், காளையையும்,
கழுதையையும், அவனுக்குச் சொந்தமான வேறு எதையும் அடையத் துடிக்
கக் கூடாது.'[f]

22 சபையாராகிய உங்கள் எல்லாருக்கும் யெகோவா இந்தக் கட்டளை
களை மலையிலே கொடுத்தார். அப்போது, நெருப்பிலிருந்தும் மேகத்திலி
ருந்தும் இருட்டிலிருந்தும்[g] சத்தமான குரலில் அவர் பேசினார். அவற்றைத்
தவிர வேறு கட்டளைகளை அவர் கொடுக்கவில்லை. அவற்றை இரண்டு
கற்பலகைகளில் எழுதி என்னிடம் தந்தார்.[h]

23 ஆனால் மலையில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தபோது, இருண்ட
மேகத்திலிருந்து வந்த அவருடைய குரலைக் கேட்டவுடன்,[i] நீங்கள் உங்
களுடைய கோத்திரத் தலைவர்களையும் பெரியோர்களையும்* என்னிடம்
அனுப்பி, **24** 'நம் கடவுளாகிய யெகோவா தன் மகிமையையும் மகத்து
வத்தையும் எங்களுக்குக் காட்டியிருக்கிறார், நெருப்பிலிருந்து வந்த அவரு
டைய குரலைக் கேட்டோம்.[j] கடவுள் மனுஷனோடு பேசியும் அந்த மனு
ஷன் உயிரோடு இருப்பதை இன்று எங்கள் கண்களாலேயே பார்த்தோம்.[k]
25 இப்போது நாங்கள் ஏன் சாக வேண்டும்? பற்றியெரிகிற அவருடைய
நெருப்பு எங்களைச் சுட்டெரித்துவிடுமே. நம் கடவுளாகிய யெகோவா
வின் குரலை இனியும் கேட்டுக்கொண்டிருந்தால் நாங்கள் நிச்சயம் செத்துப்
போய்விடுவோம். **26** நெருப்பின் நடுவிலிருந்து பேசிய உயிருள்ள கடவு
ளின் குரலை நாங்கள் கேட்டது போல வேறு யாராவது கேட்டு உயிரோடு
இருந்திருக்கிறார்களா? **27** அதனால், நம் கடவுளாகிய யெகோவா சொல்
கிற எல்லாவற்றையும் நீங்களே போய்க் கேட்டு எங்களுக்குச் சொல்
லுங்கள். நம் கடவுளாகிய யெகோவா சொல்வதையெல்லாம் நீங்களே எங்
களுக்குச் சொல்லுங்கள். அதன்படி நாங்கள் நடக்கிறோம்'[l] என்று
சொன்னீர்கள்.

28 நீங்கள் என்னிடம் சொன்னதையெல்லாம் யெகோவா கேட்டார்.
அதனால் யெகோவா என்னிடம், 'இந்த ஜனங்கள் உன்னிடம் சொன்னதை
யெல்லாம் நான் கேட்டேன். அவர்கள் சொல்வது சரிதான்.[m] **29** எனக்குப்
பயந்து, என்னுடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடக்கிற[n] இத
யம் அவர்களுக்கு எப்போதுமே இருந்தால்[o] எவ்வளவு நன்றாக இருக்கும்!
அப்போது அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் என்றென்றும் சந்
தோஷமாக வாழ்வார்கள்.[p] **30** இப்போது நீ அவர்களை அவர்களுடைய
கூடாரங்களுக்குப் போகச் சொல். **31** ஆனால், நீ என்னோடு இங்கேயே
இரு. நீ அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய எல்லா கட்டளைகளை
யும் விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும் நான் உனக்குச் சொல்கிறேன்.
நான் அவர்களுக்குக் கொடுக்கப்போகும் தேசத்தில் அவற்றையெல்லாம்

5:21 * அதாவது, "ஆண் அடிமையையும், பெண் அடிமையையும்." **5:23** * வே.வா., "மூப்பர்களையும்."

அதி. 5

a ஆதி 9:6; யாத் 20:13; எண் 35:20, 21; மத் 5:21; ரோ 13:9
b யாத் 20:14; 1கொ 6:18; எபி 13:4
c யாத் 20:15; லேவி 19:11; நீதி 30:8, 9; 1கொ 6:10; எபே 4:28
d யாத் 20:16; யாத் 23:1; லேவி 19:16; உபா 19:16-19; நீதி 6:16, 19; நீதி 19:5
e மத் 5:28
f யாத் 20:17; லூ 12:15; ரோ 7:7
g யாத் 19:9, 18
h யாத் 24:12; யாத் 31:18; உபா 4:12, 13
i யாத் 20:18; எபி 12:18, 19
j யாத் 24:17
k உபா 4:33, 36
l யாத் 20:19; எபி 12:18, 19
m உபா 18:16, 17
n நீதி 4:4; நீதி 7:2; பிர 12:13; ஏசா 48:18; 1யோ 5:3
o உபா 10:12; யோபு 28:28; நீதி 1:7; மத் 10:28; 1பே 2:17
p சங் 19:8, 11; யாக் 1:25

அதி. 5
a உபா 6:3, 25
உபா 8:1
b உபா 12:32
யோசு 1:7, 8
c உபா 10:12
d உபா 4:40
உபா 12:28
ரோ 10:5

அதி. 6
e ஆதி 18:19
உபா 4:9
f நீதி 3:1, 2
g உபா 5:7
ஏசா 42:8
சக 14:9
மாற் 12:29, 32
1கொ 8:6
h உபா 10:12
உபா 11:13
உபா 30:6
மத் 22:37
மாற் 12:30, 33
லூ 10:27
i ஆதி 18:19
உபா 4:9
நீதி 22:6
எபே 6:4
j உபா 11:19
k உபா 11:18
l ஆதி 15:18
m யோசு 24:13
சங் 105:44
n உபா 8:10
o நியா 3:7
p உபா 10:12
உபா 13:4
q லூ 4:8
r எரே 12:16

அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும்' என்று சொன்னார். **32** அதனால்,
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் கட்டளைப்படி நடப்பதற்கு நீங்கள்
கவனமாக இருக்க வேண்டும்.[a] அவருடைய வழியைவிட்டு வலது பக்
கமோ இடது பக்கமோ திரும்பக் கூடாது.[b] **33** உங்கள் கடவுளாகிய
யெகோவா காட்டிய வழியில் நீங்கள் நடக்க வேண்டும்.[c] அப்போதுதான்,
நீங்கள் சொந்தமாக்கப்போகிற தேசத்தில் சீரும் சிறப்புமாக நீடூழி வாழ்வீர்
கள்"[d] என்றார்.

6 பின்பு அவர், "உங்களுக்குக் கற்றுத்தரச் சொல்லி உங்கள் கடவுளா
கிய யெகோவா கொடுத்த கட்டளைகளும் விதிமுறைகளும் நீதித்தீர்ப்
புகளும் இவைதான். நீங்கள் சொந்தமாக்கப்போகிற தேசத்தில் இவற்றைக்
கடைப்பிடிக்க வேண்டும். **2** நீங்களும் உங்கள் பிள்ளைகளும் பேரப்பிள்
ளைகளும் வாழ்நாளெல்லாம் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப்
பயந்து நடக்க வேண்டும்.[e] நான் உங்களுக்குக் கொடுக்கிற அவருடைய
எல்லா சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்,
அப்போது நீண்ட காலம் வாழ்வீர்கள்.[f] **3** இஸ்ரவேலர்களே, நீங்கள் இவற்
றைக் கேட்டுக் கவனமாகப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் உங்கள்
முன்னோர்களின் கடவுளாகிய யெகோவா உங்களுக்கு வாக்குறுதி தந்தப
டியே, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து, ஏரா
ளமாகப் பெருகுவீர்கள்.

4 இஸ்ரவேலர்களே, இதைக் கேளுங்கள்: நம் கடவுளாகிய யெகோவா
ஒருவரே யெகோவா.[g] **5** உங்கள் கடவுளாகிய யெகோவாமேல் நீங்கள்
முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் முழு பலத்தோடும் அன்பு
காட்ட வேண்டும்.[h] **6** இன்று நான் சொல்கிற இந்த வார்த்தைகளை உங்
கள் இதயத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். **7** அவற்றை உங்களுடைய
பிள்ளைகளின் மனதில் பதிய வைக்கவும் வேண்டும்.*[i] வீட்டில் உட்கார்ந்
திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்திருக்கிறபோதும், எழுந்தி
ருக்கிறபோதும் அவற்றைப் பற்றிப் பேச வேண்டும்.[j] **8** அவற்றை உங்கள்
கையில் ஒரு நினைப்பூட்டுதல் போலவும் நெற்றியில் ஒரு அடையாளம்
போலவும் கட்டிக்கொள்ள வேண்டும்.[k] **9** அவற்றை உங்கள் வீட்டு வாச
லின் நிலைக்கால்களிலும் நகரவாசல்களிலும் எழுதிவைக்க வேண்டும்.

10 உங்கள் முன்னோர்களான ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோ
புக்கும் வாக்குக் கொடுத்த தேசத்துக்கு உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களைக் கூட்டிக்கொண்டு வந்து,[l] நீங்கள் கட்டாத பிரமாண்டமான நக
ரங்களையும்,[m] **11** நீங்கள் உழைத்துச் சம்பாதிக்காத நல்ல நல்ல பொருள்
கள் நிறைந்த வீடுகளையும், நீங்கள் வெட்டாத கிணறுகளையும்,* நீங்கள்
நடாத திராட்சைத் தோட்டங்களையும் ஒலிவ மரங்களையும் உங்களுக்
குக் கொடுப்பார். நீங்கள் நன்றாகச் சாப்பிட்டுத் திருப்தியாக இருப்பீர்
கள்.[n] **12** இதெல்லாம் நடக்கும்போது, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து
உங்களை விடுதலை செய்த யெகோவாவை மறந்துவிடாதபடி கவனமாக
இருங்கள்.[o] **13** உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நீங்கள் பயந்து
நடக்க வேண்டும்,[p] அவருக்கு மட்டும்தான் சேவை செய்ய வேண்டும்.[q]
அவருடைய பெயரில்தான் சத்தியம் செய்ய வேண்டும்.[r] **14** உங்களைச்

6:7 *வே.வா., "பிள்ளைகளிடம் திரும்பத் திரும்பச் சொல்லவும் வேண்டும்." **6:11** *வே.வா., "நிலத்தடி தண்ணீர்த் தொட்டிகளையும்."

சுற்றியுள்ள ஜனங்கள் வணங்குகிற வேறெந்த தெய்வங்களையும் நீங்கள்
தேடிப்போய் வணங்கக் கூடாது.[a] **15** ஏனென்றால், உங்கள் நடுவில்
இருக்கிற உங்கள் கடவுளாகிய யெகோவா தன்னை மட்டும்தான் வணங்க
வேண்டுமென்று எதிர்பார்க்கிற கடவுளாக இருக்கிறார்.[b] மீறினால், உங்கள்
கடவுளாகிய யெகோவாவின் கோபம் உங்கள்மேல் பற்றியெரியும்.[c] இந்தப்
பூமியிலிருந்து அவர் உங்களை அடியோடு அழித்துவிடுவார்.[d]

16 நீங்கள் மாசாவில் செய்தது போல,[e] உங்கள் கடவுளாகிய யெகோவா
வைச் சோதித்துப் பார்க்கக் கூடாது.[f] **17** உங்கள் கடவுளாகிய யெகோவா
தந்த கட்டளைகளையும் எச்சரிப்புகளையும்* விதிமுறைகளையும் கண்ணும்
கருத்துமாகக் கடைப்பிடிக்க வேண்டும். **18** யெகோவாவின் பார்வையில்
எது சரியானதோ, எது நல்லதோ அதையே செய்ய வேண்டும். அப்போது
தான், யெகோவா வாக்குறுதி தந்தபடியே, உங்கள் எதிரிகள் எல்லாரையும்
துரத்தியடிப்பீர்கள்.[g] **19** உங்கள் முன்னோர்களின் கடவுளாகிய யெகோவா
வாக்குக் கொடுத்த நல்ல தேசத்துக்குப் போய் அதைச் சொந்தமாக்கிக்கொள்
வீர்கள்,[h] அங்கே சீரும் சிறப்புமாக வாழ்வீர்கள்.

20 பிற்காலத்தில் உங்களுடைய பிள்ளைகள் உங்களிடம் வந்து, 'நம்
கடவுளாகிய யெகோவா ஏன் இந்த எச்சரிப்புகளையும்* விதிமுறைகளை
யும் நீதித்தீர்ப்புகளையும் கொடுத்திருக்கிறார்?' என்று கேட்டால், **21** நீங்
கள் அவர்களிடம், 'எகிப்தில் நாங்கள் பார்வோனுக்கு அடிமைகளாக
இருந்தோம், ஆனால் யெகோவா தன்னுடைய கைபலத்தால் அங்கிருந்து
எங்களைக் கூட்டிக்கொண்டு வந்தார். **22** எகிப்துக்கும் பார்வோனுக்கும்
அவனுடைய வீட்டாருக்கும் கொடிய தண்டனைகளைக் கொடுத்தார்.
யெகோவா எங்கள் கண் முன்னால் பெரிய அதிசயங்களையும் அற்புதங்
களையும் செய்தார்.[i] **23** நம் முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்த[j] இந்
தத் தேசத்தைத் தருவதற்காக அங்கிருந்து எங்களைக் கூட்டிக்கொண்டு
வந்தார். **24** இந்த எல்லா விதிமுறைகளையும் கடைப்பிடித்து, நம் கடவு
ளாகிய யெகோவாவுக்குப் பயந்து நடக்கும்படி யெகோவா கட்டளை
கொடுத்தார். நாம் என்றென்றைக்கும் நன்றாக வாழ வேண்டும் என்பதற்கா
கத்தான் அவர் அப்படிக் கட்டளை கொடுத்தார்.[k] அதன்படியே, நாம் இன்
றைக்கு நன்றாக வாழ்ந்து வருகிறோம்.[l] **25** நம் கடவுளாகிய யெகோவா
கொடுத்த கட்டளைகளையெல்லாம் கவனமாகப் பின்பற்றி வந்தால், நாம்
அவருடைய நீதியான வழியில் நடக்கிறவர்களாக இருப்போம்'[m] என்று
சொல்லுங்கள்" என்றார்.

7 பின்பு அவர், "நீங்கள் சொந்தமாக்கப்போகும் தேசத்துக்கு உங்கள் கட
வுளாகிய யெகோவா உங்களை இப்போது கூட்டிக்கொண்டு போகும்
போது,[n] உங்களைவிட பெரியதாகவும் பலம்படைத்ததாகவும்[o] இருக்கிற
ஏழு தேசங்களை உங்கள் கண் முன்னால் துரத்தியடிப்பார்.[p] அதாவது ஏத்
தியர்கள், கிர்காசியர்கள், எமோரியர்கள்,[q] கானானியர்கள், பெரிசியர்கள்,
ஏவியர்கள், எபூசியர்கள்[r] ஆகியவர்களைத் துரத்தியடிப்பார். **2** உங்கள்
கடவுளாகிய யெகோவா அவர்களை உங்கள் கையில் கொடுப்பார். அவர்
களை நீங்கள் தோற்கடித்து,[s] கண்டிப்பாக அழித்துவிட வேண்டும்.[t] அவர்
களோடு எந்த ஒப்பந்தமும் செய்யக் கூடாது, அவர்களுக்குக் கருணையே

6:17, 20 * வே.வா., "நினைப்பூட்டுதல்களையும்."

அதி. 6
a யாத் 34:14
b யாத் 20:5
உபா 4:24
c யாத் 32:9, 10
எண் 25:3
உபா 11:16, 17
நியா 2:14
d 2ரா 17:18
e யாத் 17:2, 7
சங் 95:8, 9
எபி 3:8, 9
f மத் 4:7
லூ 4:12
1கொ 10:9
g யாத் 23:30
h ஆதி 15:18
i யாத் 7:3
உபா 4:34
j யாத் 13:5
உபா 1:8
k சங் 111:10
நீதி 14:27
l லேவி 18:5
உபா 4:1
கலா 3:12
m பிர 12:13
ரோ 10:5

அதி. 7
n உபா 31:3
o உபா 20:1
p யாத் 33:2
யோசு 3:10
q ஆதி 15:16
r ஆதி 10:15–17
s எண் 33:52
t லேவி 27:29
யோசு 6:17
யோசு 10:28

காட்டக் கூடாது.[a] **3** அவர்களோடு சம்பந்தம் பண்ணக் கூடாது. அவர்களு
டைய மகன்களுக்கு உங்கள் மகள்களைக் கல்யாணம் செய்துவைக்கக்
கூடாது. உங்களுடைய மகன்களுக்கு அவர்களுடைய மகள்களைக் கல்யா
ணம் செய்துவைக்கக் கூடாது.[b] **4** ஏனென்றால், உங்கள் மகன்கள் என்னை
விட்டுவிட்டு மற்ற தெய்வங்களை வணங்கும்படி அவர்கள் செய்துவிடு
வார்கள்.[c] அப்போது யெகோவாவின் கோபம் உங்கள்மேல் பற்றியெரியும்.
அவர் உங்களை ஒரு நொடியில் அழித்துவிடுவார்.[d]

5 அதனால், நீங்கள் அவர்களுடைய பலிபீடங்களை இடித்துப்போட
வேண்டும், பூஜைத் தூண்களை உடைத்துப்போட வேண்டும்,[e] பூஜைக்
கம்பங்களை* வெட்டிச் சாய்க்க வேண்டும்,[f] உருவச் சிலைகளை எரித்துப்
போட வேண்டும்.[g] **6** உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நீங்கள் பரி
சுத்தமான ஜனங்கள். உங்கள் கடவுளாகிய யெகோவா இந்தப் பூமியிலுள்ள
எல்லா ஜனங்களிலும் உங்களைத்தான் தன்னுடைய ஜனமாகவும் விசேஷ
சொத்தாகவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்.[h]

7 மற்ற எல்லா ஜனங்களையும்விட நீங்கள் ஏராளமாக இருந்தீர்கள் என்
பதற்காக யெகோவா உங்கள்மேல் பாசம் காட்டவோ உங்களைத் தேர்ந்தெ
டுக்கவோ இல்லை.[i] சொல்லப்போனால், மற்ற எல்லா ஜனங்களையும்விட
நீங்கள் கொஞ்சம் பேராகத்தான் இருந்தீர்கள்.[j] **8** யெகோவா உங்களை
நேசித்ததாலும் உங்கள் முன்னோர்களுக்குக் கொடுத்த உறுதிமொழியைக்
காப்பாற்ற நினைத்ததாலும்,[k] எகிப்தில் அடிமைகளாக இருந்த உங்களை
விடுவித்தார்.[l] யெகோவா தன்னுடைய கைபலத்தால் உங்களை எகிப்தின்
ராஜாவாகிய பார்வோனின் பிடியிலிருந்து காப்பாற்றினார். **9** உங்கள் கட
வுளாகிய யெகோவாதான் உண்மைக் கடவுள். அவர் நம்பகமானவர்.
தன்னை நேசித்து தன்னுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்களிடம்
ஆயிரம் தலைமுறை வரைக்கும் மாறாத அன்பைக் காட்டி, ஒப்பந்தத்தைக்
காப்பவர்.[m] இதெல்லாம் உங்களுக்கே நன்றாகத் தெரியும். **10** ஆனால்,
அவரைப் பகைக்கிறவர்களுக்கு அவர் நேருக்கு நேர் பதிலடி கொடுத்து,
அவர்களை ஒழித்துக்கட்டுவார்.[n] தாமதிக்காமல் அவர்களைத் தண்டிப்பார்.
அவர்களை நேரடியாகப் பழிவாங்குவார். **11** அதனால், நான் இன்று உங்
களுக்குக் கொடுக்கிற கட்டளைகளையும் விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புக
ளையும் கண்ணும் கருத்துமாகக் கடைப்பிடியுங்கள்.

12 நீங்கள் இந்த நீதித்தீர்ப்புகளைக் காதுகொடுத்துக் கேட்டு அவற்றைக்
கடைப்பிடித்து வந்தால், உங்கள் கடவுளாகிய யெகோவா நம் முன்னோர்
களுக்கு வாக்குக் கொடுத்தபடியே, தன்னுடைய ஒப்பந்தத்தைக் காப்பார்,
மாறாத அன்பைக் காட்டுவார். **13** அவர் உங்களை நேசிப்பார், ஆசீர்வ
திப்பார், பெருக வைப்பார். உங்கள் முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்த
தேசத்தில்[o] உங்களுக்குப் பிள்ளைகளையும், கன்றுக்குட்டிகளையும், ஆட்
டுக்குட்டிகளையும், தானியங்களையும், புதிய திராட்சமதுவையும், எண்ணெ
யையும் ஏராளமாகக் கொடுத்து ஆசீர்வதிப்பார்.[p] **14** எல்லா ஜனங்களை
யும்விட நீங்கள்தான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனமாக இருப்பீர்கள்.[q]
உங்களில் எந்தவொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தை பாக்கியம்
இல்லாமல் போகாது, உங்கள் கால்நடைகள் குட்டி போடாமல் இருக்காது.[r]

7:5 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 7

a யாத் 23:32; யாத் 34:15; உபா 20:16, 17
b யோசு 23:12, 13; 1ரா 11:1, 2; எஸ்றா 9:2
c யாத் 34:16; 1ரா 11:4
d உபா 6:14, 15
e யாத் 23:24; யாத் 34:13
f உபா 16:21, 22
g உபா 7:25; உபா 12:2, 3
h யாத் 19:5, 6; உபா 14:2; ஆமோ 3:2
i உபா 10:15
j உபா 10:22
k ஆதி 22:16, 17
l யாத் 6:6; யாத் 13:3, 14
m யாத் 34:6, 7
n நீதி 2:22; 2பே 3:7
o ஆதி 13:14, 15
p லேவி 26:4; லேவி 26:9
q உபா 33:29; சங் 147:20
r யாத் 23:26; உபா 28:11; சங் 127:3

15 யெகோவா உங்களுடைய எல்லா நோய்களையும் தீர்ப்பார், எகிப்தியர்களுக்கு வந்த கொடிய நோய்கள் எதுவும் உங்களுக்கு வராமல் பார்த்துக்கொள்வார்.[a] ஆனால், உங்களை வெறுக்கிறவர்களுக்கு அதையெல்லாம் வரச் செய்வார். **16** உங்கள் கடவுளாகிய யெகோவா உங்கள் கையில் கொடுக்கிற எல்லா ஜனங்களையும் நீங்கள் அழித்துவிட வேண்டும்.[b] அவர்களுக்காகப் பரிதாபப்படக் கூடாது.[c] அவர்களுடைய தெய்வங்களை வணங்கக் கூடாது,[d] அப்படி வணங்கினால் ஆபத்தில் சிக்கிக்கொள்வீர்கள்.[e]

17 நீங்கள் உங்களுடைய உள்ளத்தில், ‘இந்த ஜனங்கள் எல்லாரும் நம்மைவிட ஏராளமாக இருக்கிறார்களே. அவர்களை நாம் எப்படித் துரத்துவோம்?’ என்று நினைக்காதீர்கள்.[f] **18** அவர்களைப் பார்த்து நீங்கள் பயப்படக் கூடாது.[g] பார்வோனுக்கும் எகிப்திலுள்ள எல்லாருக்கும் உங்கள் கடவுளாகிய யெகோவா செய்த எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.[h] **19** அங்கே உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுடைய கண் முன்னால் கொடிய தண்டனைகளைக் கொடுத்து, அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்து,[i] தன்னுடைய கைபலத்தாலும் மகா வல்லமையாலும் உங்களைக் கூட்டிக்கொண்டு வந்ததை நினைத்துப் பார்க்க வேண்டும்.[j] நீங்கள் பார்த்துப் பயப்படுகிற ஜனங்களுக்கெல்லாம் உங்கள் கடவுளாகிய யெகோவா அப்படித்தான் செய்வார்.[k] **20** உங்கள் கடவுளாகிய யெகோவா அவர்களை விரக்தியடைய* செய்வார். அவர்களில் மீதி இருக்கிறவர்களும்[l] உங்களிடமிருந்து ஒளிந்துகொள்கிறவர்களும் அழிந்து போகும்வரை அப்படிச் செய்வார். **21** அவர்களைப் பார்த்து நடுநடுங்காதீர்கள். உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களோடு இருக்கிறார்,[m] அவர் அதிசயமும் அற்புதமுமானவர்.[n]

22 உங்கள் கடவுளாகிய யெகோவா அந்தத் தேசத்தாரைக் கொஞ்சம் கொஞ்சமாக உங்களைவிட்டுத் துரத்துவார்.[o] ஆனால், அவர்களை ஒரேயடியாக அழித்துப்போட உங்களை விட மாட்டார். அப்படி விட்டுவிட்டால், அங்கே காட்டு மிருகங்கள் பெருகி பெரிய அச்சுறுத்தலாக ஆகிவிடும். **23** உங்கள் கடவுளாகிய யெகோவா அவர்களை உங்கள் கையில் கொடுப்பார். அவர்கள் அடியோடு அழிந்துபோகும்வரை அவர்களுக்குத் தோல்விமேல் தோல்வியைக் கொடுப்பார்.[p] **24** அவர்களுடைய ராஜாக்களை உங்கள் கையில் கொடுப்பார்,[q] நீங்கள் அவர்களுடைய பெயர்களை இந்த மண்ணிலிருந்தே மறைந்துபோகச் செய்வீர்கள்.[r] நீங்கள் அவர்களை அடியோடு அழிக்கும்வரை[s] யாருமே உங்களை எதிர்த்து நிற்க முடியாது.[t] **25** அவர்களுடைய தெய்வச் சிலைகளை நீங்கள் நெருப்பில் சுட்டெரிக்க வேண்டும்.[u] அவற்றிலுள்ள வெள்ளிக்கும் தங்கத்துக்கும் ஆசைப்பட்டு அவற்றை எடுத்துக்கொள்ளாதீர்கள்.[v] அப்படிச் செய்தால் ஆபத்தில்* சிக்கிக்கொள்வீர்கள். ஏனென்றால், அவை உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு அருவருப்பானவை.[w] **26** அருவருப்பான சிலைகளை உங்கள் வீட்டுக்குள் கொண்டுவராதீர்கள். அப்படிக் கொண்டுவந்தால், அவற்றைப் போலவே நீங்களும் அழிக்கப்படுவீர்கள். நீங்கள் அவற்றை ‘சீ’ என்று வெறுத்து, அருவருக்க வேண்டும். ஏனென்றால், அவை அழியப்போவது உறுதி” என்றார்.

7:20 * அல்லது, “பீதியடைய.” **7:25** * வே.வா., “கண்ணியில்.”

அதி. 7
- a உபா 28:15, 27
- b உபா 7:1, 2; உபா 20:16; யோசு 10:28
- c ஆதி 15:16; லேவி 18:25; உபா 9:5
- d யாத் 20:3
- e யாத் 23:33; உபா 12:30; நியா 2:2, 3; சங் 106:36
- f எண் 13:31
- g உபா 1:29; உபா 31:6; சங் 27:1; ஏசா 41:10
- h யாத் 14:13
- i நெ 9:10, 11; எரே 32:20
- j உபா 4:34
- k யாத் 23:28; யோசு 3:10
- l யாத் 23:29; உபா 2:25; யோசு 2:9; யோசு 24:12
- m எண் 14:9
- n உபா 10:17; 1சா 4:7, 8
- o யாத் 23:30
- p உபா 9:3
- q யோசு 10:24; யோசு 12:1
- r யாத் 17:14; சங் 9:5
- s யோசு 11:14
- t உபா 11:25; யோசு 1:5; ரோ 8:31
- u உபா 12:3; 1நா 14:12
- v ஏசா 30:22
- w உபா 27:15

அதி. 8
a நீதி 3:1, 2
b ஆதி 15:18
c உபா 2:7
d உபா 13:3; நீதி 17:3
e யாத் 16:4; யாத் 20:20
f மத் 4:4
g யாத் 16:3
h யாத் 16:31; சங் 78:24
i உபா 29:5; நெ 9:21
j நீதி 3:12; 1கொ 11:32; எபி 12:5-7; வெளி 3:19
k யாத் 3:8; லேவி 26:4; உபா 11:11, 12
l எண் 13:23
m எசே 20:6
n உபா 6:10-12
o ஓசி 13:6
p உபா 9:4; உபா 32:15
q சங் 106:21

8 பின்பு அவர், “இன்று நான் உங்களுக்குக் கொடுக்கிற ஒவ்வொரு கட்ட
ளையையும் நீங்கள் கண்ணும் கருத்துமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.
அப்போதுதான் தொடர்ந்து உயிர்வாழ்வீர்கள்,[a] ஏராளமாகப் பெருகுவீர்
கள். உங்கள் முன்னோர்களுக்கு யெகோவா வாக்குக் கொடுத்த தேசத்துக்
குப்[b] போய் அதைச் சொந்தமாக்கிக்கொள்வீர்கள். **2** இந்த 40 வருஷங்க
ளும் உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை வனாந்தரத்தில் எவ்வளவு
தூரம் நடக்க வைத்திருக்கிறார் என்பதை நினைத்துப் பாருங்கள்.[c] உங்க
ளுக்குத் தாழ்மையைக் கற்றுக்கொடுப்பதற்கும், அவருடைய கட்டளை
களைக் கடைப்பிடிக்கிற இதயம்[d] உங்களுக்கு இருக்கிறதா இல்லையா
என்று சோதித்துப் பார்ப்பதற்கும்[e] அப்படிச் செய்தார். **3** அவர் உங்களுக்
குத் தாழ்மையைக் கற்றுக்கொடுத்தார். மனுஷன் உணவால்* மட்டுமல்ல,
யெகோவாவின் வாயிலிருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையாலும் உயிர்
வாழ்வான்[f] என்பதை உங்களுக்குப் புரிய வைப்பதற்காக உங்களைப் பசி
யில் வாடவிட்டார்.[g] நீங்களோ உங்கள் முன்னோர்களோ அதுவரை பார்க்
காத மன்னாவை[h] உணவாகத் தந்தார். **4** இந்த 40 வருஷங்களில்
உங்களுடைய துணிமணிகள் பழையதாகவும் இல்லை, உங்கள் பாதங்கள்
வீங்கவும் இல்லை.[i] **5** ஒரு அப்பா தன் மகனைக் கண்டித்துத் திருத்துவது
போல உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களைக் கண்டித்துத் திருத்தி
னார்[j] என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும்.

6 உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்து அவருடைய வழிக
ளில் நடப்பதன் மூலம் அவருடைய கட்டளைகளை நீங்கள் பின்பற்ற
வேண்டும். **7** ஏனென்றால், உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை
நல்ல தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிறார்.[k] அங்கே சமவெளிகளி
லும் மலைப்பகுதிகளிலும் நீரோடைகள் பாய்ந்தோடுகின்றன, நீரூற்றுகள்
பொங்கியெழுகின்றன. **8** அங்கே கோதுமையும், பார்லியும், திராட்சைக்
கொடிகளும், அத்தி மரங்களும், மாதுளைச் செடிகளும்,[l] ஒலிவ எண்ணெ
யும், தேனும்[m] ஏராளமாக இருக்கின்றன. **9** உணவுப் பொருள்களுக்குப்
பஞ்சமே இல்லாத தேசம் அது. அங்கே உங்களுக்கு எதற்குமே குறைவு
இருக்காது. அங்கே உள்ள பாறைகளிலிருந்து இரும்பும் மலைகளிலிருந்து
செம்பும் கிடைக்கும்.

10 நீங்கள் நன்றாகச் சாப்பிட்டுத் திருப்தியாக இருக்கும்போது, அந்த
நல்ல தேசத்தைத் தந்த உங்கள் கடவுளாகிய யெகோவாவைப் போற்றிப் புக
ழுங்கள்.[n] **11** உங்கள் கடவுளாகிய யெகோவாவை மறக்காமலும், இன்று
நான் கொடுக்கிற அவருடைய கட்டளைகளையும் நீதித்தீர்ப்புகளையும்
சட்டதிட்டங்களையும் அலட்சியப்படுத்தாமலும் இருங்கள். **12** நீங்கள் நன்
றாகச் சாப்பிட்டுத் திருப்தியாக இருக்கும்போதும், அழகிய வீடுகளைக்
கட்டி அவற்றில் குடியிருக்கும்போதும்,[o] **13** உங்கள் ஆடுமாடுகள் ஏராள
மாகப் பெருகும்போதும், வெள்ளியும் தங்கமும் உங்களிடம் குவியும்போ
தும், எல்லாமே உங்களுக்குத் தாராளமாகக் கிடைக்கும்போதும், **14** உங்
கள் உள்ளத்தில் பெருமை வந்துவிடக் கூடாது.[p] எகிப்தில் அடிமைகளாக
இருந்த உங்களை விடுதலை செய்து கூட்டிக்கொண்டு வந்த உங்கள் கட
வுளாகிய யெகோவாவை மறந்துவிடக் கூடாது.[q] **15** விஷப் பாம்புகளும்

8:3 * நே.மொ., “ரொட்டியால்.”

தேள்களும் நிறைந்த, தண்ணீரில்லாத பயங்கரமான பெரிய வனாந்தரத்தின்
வழியாக உங்களைக் கூட்டிக்கொண்டு வந்த கடவுளை மறந்துவிடக்
கூடாது.[a] அவர் உங்களுக்காகக் கற்பாறையிலிருந்து தண்ணீரைப் பாய்ந்து
வரச் செய்தார்.[b] **16** உங்கள் முன்னோர்கள் யாரும் அதுவரை பார்க்காத
மன்னாவை வனாந்தரத்தில் உங்களுக்குச் சாப்பிடக் கொடுத்தார்.[c] உங்க
ளுடைய எதிர்கால நன்மையை மனதில் வைத்து,[d] உங்களுக்குத் தாழ்மை
யைக் கற்றுக்கொடுப்பதற்கும்,[e] உங்களைச் சோதித்துப் பார்ப்பதற்கும் அப்ப
டிச் செய்தார். **17** ஒருவேளை நீங்கள், 'என் சொத்துகளையெல்லாம் நானே
என் கைகளால் சம்பாதித்திருக்கிறேன், என் சக்தியாலும் பலத்தாலும் சம்பா
தித்திருக்கிறேன்' என்று உள்ளத்தில் சொல்லிக்கொண்டால்,[f] **18** உங்கள்
கடவுளாகிய யெகோவாதான் சொத்துகளைச் சம்பாதிக்க உங்களுக்குச்
சக்தி தருகிறார் என்பதை மறந்துவிடாதீர்கள்.[g] உங்கள் முன்னோர்களுக்கு
ஆணையிட்டுக் கொடுத்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவே அவர் அப்படிச்
செய்கிறார். இன்றுவரை அதை நிறைவேற்றியும் வந்திருக்கிறார்.[h]

19 உங்கள் கடவுளாகிய யெகோவாவை நீங்கள் என்றைக்காவது மறந்து
வேறு தெய்வங்களைக் கும்பிட்டால் நிச்சயம் அழிந்துபோவீர்கள் என்று
இப்போது எச்சரிக்கிறேன்.[i] **20** உங்கள் கடவுளாகிய யெகோவாவின்
பேச்சை நீங்கள் கேட்காமல்போனால், யெகோவா இன்று உங்கள் கண்ணெ
திரே மற்ற தேசத்தாரை அழிப்பது போல உங்களையும் அழித்துவிடுவார்"[j]
என்றார்.

9 பின்பு அவர், "இஸ்ரவேலர்களே, கேளுங்கள். இன்றைக்கு நீங்கள்
யோர்தானைக் கடந்துபோய்,[k] உங்களைவிட பெரியதாகவும் பலம்ப
டைத்ததாகவும் இருக்கிற தேசங்களைக் கைப்பற்றப்போகிறீர்கள்.[l] அங்கி
ருக்கிற நகரங்கள் மாபெரும் நகரங்கள், வானத்தைத் தொடுமளவுக்கு உய
ரமான மதில்கள் உள்ள நகரங்கள்.[m] **2** அங்கு ஏராளமான ஏனாக்கியர்கள்
இருக்கிறார்கள்.[n] அவர்கள் மிகவும் உயரமானவர்கள். அவர்களைப் பற்றி
உங்களுக்கே தெரியும். அவர்களோடு மோத யாராலும் முடியாது என்று
ஜனங்கள் பேசிக்கொள்வதைக் கேட்டிருக்கிறீர்கள். **3** அதனால், உங்கள்
கடவுளாகிய யெகோவா உங்களுக்கு முன்னால் போவார் என்பதை இப்
போது தெரிந்துகொள்ளுங்கள்.[o] அவர் சுட்டெரிக்கிற நெருப்பாக இருக்கி
றார்.[p] அவர் உங்கள் கண் முன்னால் அவர்களைத் தோற்கடித்து,
அழித்துவிடுவார். யெகோவா உங்களுக்கு வாக்குறுதி தந்தபடியே, நீங்கள்
அவர்களைச் சீக்கிரமாகத் துரத்தியடிப்பீர்கள், ஒரேயடியாக ஒழித்துக்கட்டு
வீர்கள்.[q]

4 உங்கள் கடவுளாகிய யெகோவா உங்கள் முன்னாலிருந்து அவர்
களைத் துரத்தியடிக்கும்போது, 'நாங்கள் நீதிமான்களாக இருப்பதால்தான்
இந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள யெகோவா எங்களைக் கூட்டிக்
கொண்டுவந்தார்' என்று நினைத்துக்கொள்ளாதீர்கள்.[r] அந்த ஜனங்கள்
பொல்லாதவர்களாக இருப்பதால்தான்[s] யெகோவா அவர்களைத் துரத்தி
யடிக்கிறார். **5** நீங்கள் ஏதோ நீதிமான்களாகவும் உள்ளத்தில் நேர்மையான
வர்களாகவும் இருப்பதால் அவர்களுடைய தேசத்தைச் சொந்தமாக்கப்போ
வதாக நினைத்துக்கொள்ளாதீர்கள். அவர்கள் பொல்லாதவர்களாக இருப்
பதால்தான் உங்கள் கடவுளாகிய யெகோவா உங்கள் முன்னாலிருந்து அவர்
களைத் துரத்தியடிக்கிறார்.[t] அதோடு, உங்கள் முன்னோர்களாகிய ஆபிரகா

அதி. 8
a உபா 1:19; எரே 2:6
b எண் 20:11
c யாத் 16:35
d எபி 12:11
e உபா 8:2
f ஓசி 12:8
g சங் 127:1; ஓசி 2:8
h உபா 7:12
i உபா 4:25, 26; உபா 30:17, 18; யோசு 23:12, 13
j தானி 9:11, 12

அதி. 9
k யோசு 4:19
l உபா 7:1
m எண் 13:28
n எண் 13:33
o உபா 1:30; உபா 20:4; உபா 31:3
p உபா 4:24; எபி 12:29
q யாத் 23:31; உபா 7:23, 24
r உபா 7:7, 8; எசே 36:22
s ஆதி 15:16; உபா 12:31; உபா 18:9, 12
t லேவி 18:25

முக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதற்
காகவும்[a] யெகோவா அவர்களைத் துரத்தியடிக்கிறார். **6** அதனால், நீங்கள்
ஏதோ நீதிமான்களாக இருப்பதால் உங்கள் கடவுளாகிய யெகோவா இந்த
நல்ல தேசத்தை உங்களுக்குத் தருகிறார் என்று நினைத்துக்கொள்ளாதீர்கள்.
நீங்கள் எல்லாரும் முரண்டுபிடிக்கிற ஜனங்கள்.[b]

7 வனாந்தரத்தில் நீங்கள் எப்படியெல்லாம் உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் கோபத்தைக் கிளறினீர்கள் என்பதை ஒருபோதும் மறந்து
விடாதீர்கள்.[c] நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து இந்த இடத்
துக்கு வந்து சேரும்வரை, யெகோவாவின் பேச்சை மீறி நடந்திருக்கிறீர்
கள்.[d] **8** ஓரேபிலும் யெகோவாவின் கோபத்தைக் கிளறினீர்கள். யெகோ
வாவுக்கு உங்கள்மேல் பயங்கர கோபம் வந்ததால், உங்களை
ஒழித்துக்கட்ட நினைத்தார்.[e] **9** யெகோவா உங்களோடு செய்த ஒப்பந்
தத்தின் கற்பலகைகளைப்[f] பெற்றுக்கொள்வதற்காக நான் மலையில் ஏறிப்
போனேன். ராத்திரி பகலாக 40 நாட்கள்[g] எதையும் சாப்பிடாமலும் குடிக்
காமலும் அங்கேயே இருந்தேன். **10** அப்போது, யெகோவா தன்னுடைய
சக்தியால்* எழுதிய அந்த இரண்டு கற்பலகைகளை என்னிடம் தந்தார். நீங்
கள் எல்லாரும் ஒன்றுகூடிவந்த நாளில், மலைமேல் எரிந்துகொண்டிருந்த
நெருப்பின் நடுவிலிருந்து யெகோவா சொன்ன எல்லா வார்த்தைகளும்
அவற்றில் எழுதப்பட்டிருந்தன.[h] **11** 40 நாட்களுக்குப் பின்பு, ஒப்பந்
தம் எழுதப்பட்ட அந்த இரண்டு கற்பலகைகளை யெகோவா என்னி
டம் கொடுத்தார். **12** பின்பு யெகோவா என்னிடம், 'உடனே கீழே இறங்
கிப் போ! நீ எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்த ஜனங்கள் தறிகெட்டு
நடக்கிறார்கள்.[i] எவ்வளவு சீக்கிரமாக என் வழியைவிட்டு விலகிவிட்டார்
கள்! ஒரு உலோகச் சிலையை உண்டாக்கி அதை வணங்குகிறார்கள்'[j] என்
றார். **13** பின்பு யெகோவா என்னிடம், 'இந்த ஜனங்களைப் பற்றி எனக்
குத் தெரியும், இவர்கள் முரண்டுபிடிப்பவர்கள்.[k] **14** இந்த உலகத்தில்
இவர்களுடைய பெயரே இல்லாதபடி இவர்களை ஒழித்துக்கட்டலாம்
என்று நினைத்திருக்கிறேன். இவர்களைவிட பெரிய தேசமாகவும் பலம்
படைத்த தேசமாகவும் உன்னை உருவாக்கலாம் என்று நினைத்திருக்கி
றேன்'[l] என்றார்.

15 அதற்குப் பின்பு, மலையிலிருந்து கீழே இறங்கி வந்தேன். அப்போது
அந்த மலையில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது.[m] ஒப்பந்தம் எழுதப்
பட்ட இரண்டு கற்பலகைகளை என்னுடைய கைகளில் வைத்திருந்தேன்.[n]
16 நான் உங்களைப் பார்த்தபோது, உங்கள் கடவுளாகிய யெகோவா
வுக்கு விரோதமாகப் பாவம் செய்துகொண்டிருந்தீர்கள்! ஒரு கன்றுக்குட்டி
சிலையைச் செய்து வணங்கிக்கொண்டிருந்தீர்கள். அவ்வளவு சீக்கிரத்தில்
யெகோவாவின் வழியைவிட்டு விலகிப்போயிருந்தீர்கள்![o] **17** அதனால்,
என் கைகளிலிருந்த இரண்டு கற்பலகைகளையும் வீசியெறிந்தேன். அவை
உங்கள் கண் முன்னால் சுக்குநூறாக உடைந்தன.[p] **18** பிறகு, நான் முன்பு
போலவே ராத்திரி பகலாக 40 நாட்கள் எதையும் சாப்பிடாமலும் குடிக்
காமலும் யெகோவாவுக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்
தேன்.[q] ஏனென்றால், நீங்கள் யெகோவாவுக்குப் பிடிக்காத எத்தனையோ
பாவங்களைச் செய்து அவருடைய கோபத்தைக் கிளறியிருந்தீர்கள்.

9:10 * நே.மொ., "விரலால்."

அதி. 9
a ஆதி 13:14, 15; ஆதி 17:1, 8; ஆதி 26:3; ஆதி 28:13
b யாத் 34:9; சங் 78:8
c உபா 9:22; சங் 78:40; எபி 3:16
d யாத் 17:2; எண் 11:4; எண் 16:1, 2; எண் 25:2, 3; உபா 31:27
e யாத் 32:4, 10
f யாத் 24:7; யாத் 24:12; யாத் 31:18; யாத் 32:16
g யாத் 24:18
h யாத் 19:19; உபா 4:10-13
i யாத் 32:7
j யாத் 32:4
k யாத் 32:9
l யாத் 32:10
m யாத் 19:18
n யாத் 32:15
o யாத் 20:3, 4
p யாத் 32:19
q யாத் 34:28

19 யெகோவா பயங்கர கோபத்தோடு உங்களை ஒழித்துக்கட்ட நினைத்த
தால்[a] நான் நடுநடுங்கிப்போய் யெகோவாவிடம் கெஞ்சினேன். அந்தத் தட
வையும் அவர் என் வேண்டுதலைக் கேட்டார்.[b]

20 ஆரோன்மேலும் யெகோவாவுக்குப் பயங்கர கோபம் வந்ததால்
அவரை அழிக்க நினைத்தார்.[c] அந்தச் சமயத்திலும் நான் ஆரோனுக்காக
அவரிடம் மன்றாடினேன். **21** பின்பு, அந்தப் பாழாய்ப்போன கன்றுக்
குட்டி சிலையைத்[d] தீயில் சுட்டெரித்தேன். அதை நன்றாக இடித்துத் தூள்
தூளாக்கி, மலையிலிருந்து பாய்ந்துவந்த தண்ணீரில் கொட்டிவிட்டேன்.[e]

22 அதோடு, தபேராவிலும்[f] மாசாவிலும்[g] கிப்ரோத்-அத்தாவாவிலும்[h]
நீங்கள் யெகோவாவின் கோபத்தைக் கிளறினீர்கள். **23** யெகோவா உங்
களை காதேஸ்-பர்னேயாவிலிருந்து அனுப்பியபோது,[i] 'நீங்கள் போய்
அந்தத் தேசத்தைக் கைப்பற்றுங்கள், நான் கண்டிப்பாக அதை உங்களுக்
குக் கொடுப்பேன்' என்று சொன்னார். ஆனால், நீங்கள் மறுபடியும் உங்கள்
கடவுளாகிய யெகோவாவின் கட்டளையை மீறி நடந்தீர்கள்.[j] அவர்மேல்
விசுவாசம் வைக்கவில்லை,[k] அவருக்குக் கீழ்ப்படியவில்லை. **24** எனக்
குத் தெரிந்த நாளிலிருந்தே நீங்கள் யெகோவாவின் பேச்சை மீறிவந்திருக்
கிறீர்கள்.

25 உங்களை அழித்துவிடுவதாக யெகோவா சொல்லியிருந்ததால் ராத்
திரி பகலாக 40 நாட்கள் யெகோவாவின் முன்னால் சாஷ்டாங்கமாக
விழுந்து கிடந்தேன்.[l] **26** நான் யெகோவாவிடம் மன்றாடி, 'உன்னதப் பேர
ரசராகிய யெகோவாவே, தயவுசெய்து உங்களுடைய ஜனங்களை
அழித்துவிடாதீர்கள். இவர்கள் உங்களுடைய சொத்து.[m] நீங்கள் உங்களு
டைய மகத்துவத்தால் இவர்களை விடுவித்து, உங்களுடைய கைபலத்தால்
எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தீர்கள்.[n] **27** உங்கள் ஊழியர்களாகிய
ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் நினைத்துப் பாருங்கள்.[o]
இந்த ஜனங்களுடைய பிடிவாதத்தையும் அக்கிரமத்தையும் பாவத்தையும்
பெரிதாக எடுத்துக்கொள்ளாதீர்கள்.[p] **28** இல்லாவிட்டால், "வாக்குக்
கொடுத்த தேசத்துக்கு இஸ்ரவேலர்களைக் கூட்டிக்கொண்டு போக யெகோ
வாவுக்குச் சக்தியில்லை. அவர்களை அவர் வெறுத்துவிட்டார். அதனால்
தான் அவர்களை வனாந்தரத்துக்குக் கொண்டுவந்து கொன்றுபோட்டார்"
என்று எகிப்தியர்கள் சொல்வார்களே.[q] **29** இவர்கள் உங்களுடைய ஜனங்
கள்தானே? உங்களுடைய சொத்துதானே?[r] நீங்கள் உங்களுடைய மகா
வல்லமையாலும் பலத்தாலும் இவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தீர்களே!'[s]
என்று சொன்னேன்" என்றார்.

10 பின்பு, "யெகோவா என்னிடம், 'முன்பு இருந்ததைப் போலவே
வேறு இரண்டு கற்பலகைகளை வெட்டி எடுத்துக்கொண்டு[t] மலை
மேல் ஏறி வா. நீ ஒரு மரப்பெட்டியையும் செய்துகொள். **2** நீ உடைத்துப்
போட்ட முதல் கற்பலகைகளில் இருந்த வார்த்தைகளை இந்தக் கற்பலகைக
ளில் நான் எழுதுவேன். இவற்றை நீ அந்தப் பெட்டியில் வைக்க வேண்டும்'
என்று சொன்னார். **3** அதனால், நான் வேல மரத்தால் ஒரு பெட்டியைச்
செய்தேன். முன்பு இருந்ததைப் போலவே வேறு இரண்டு கற்பலகைகளை
வெட்டி எடுத்துக்கொண்டு, மலைமேல் ஏறிப் போனேன்.[u] **4** முன்பு நீங்கள்
ஒன்றுகூடி வந்த நாளிலே,[v] மலையில் எரிந்துகொண்டிருந்த நெருப்பின் நடு
விலிருந்து யெகோவா சொன்ன அதே வார்த்தைகளை,[w] அதாவது முன்பு

அதி. 9
a யாத் 32:10
b யாத் 32:11, 14; சங் 106:23
c யாத் 32:2, 21
d யாத் 32:4
e யாத் 32:20
f எண் 11:3
g யாத் 17:7
h எண் 11:4, 34
i எண் 13:26
j எண் 14:3, 4
k உபா 1:32; சங் 106:24, 25; எபி 3:19
l யாத் 34:28
m யாத் 19:5; சங் 135:4
n யாத் 32:11
o யாத் 3:6; யாத் 6:8; உபா 9:5
p யாத் 32: 31, 32
q யாத் 32:12; எண் 14:15, 16
r 1ரா 8:51; நெ 1:10
s யாத் 6:6; உபா 4:20, 34

அதி. 10
t யாத் 34:1
u யாத் 34:4
v யாத் 19:17; உபா 5:22
w உபா 4:36; உபா 5:4

எழுதிய அதே பத்துக் கட்டளைகளை,[a] அந்தக் கற்பலகைகளில் யெகோவா
எழுதினார்.[b] அதன்பின், அவற்றை என்னிடம் தந்தார். **5** பின்பு நான்
மலையிலிருந்து கீழே இறங்கி வந்து,[c] நான் செய்து வைத்திருந்த பெட்டி
யில் அந்தக் கற்பலகைகளை வைத்தேன். யெகோவா எனக்குக் கட்டளை
கொடுத்தபடியே அவை இன்றுவரை அதில் இருக்கின்றன.

6 பிற்பாடு, இஸ்ரவேலர்கள் பேரோத் பெனெ-யாக்கானிலிருந்து புறப்
பட்டு மோசெராவுக்குப் போனார்கள். அங்கே ஆரோன் இறந்துபோனார்,
அங்குதான் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.[d] அவருடைய மகன் எலெ
யாசார் அவருக்குப் பதிலாகக் குருத்துவச் சேவை செய்யத் தொடங்கி
னான்.[e] **7** அங்கிருந்து அவர்கள் புறப்பட்டு குத்கோதாவுக்குப் போனார்
கள். பின்பு, குத்கோதாவிலிருந்து யோத்பாத்தாவுக்குப்[f] போனார்கள். அது
ஆறுகள் பாய்ந்தோடுகிற தேசம்.

8 அப்போது, யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியைச் சுமக்கவும்,[g]
யெகோவாவின் சன்னிதியில் அவருக்குச் சேவை செய்யவும், அவரு
டைய பெயரில் ஆசீர்வாதம் வழங்கவும்[h] லேவி கோத்திரத்தாரை
யெகோவா தேர்ந்தெடுத்தார்.[i] இன்றுவரை அவர்கள் இதையெல்லாம்
செய்துவருகிறார்கள். **9** அதனால்தான், லேவியர்களுக்கு அவர்களுடைய
சகோதரர்களோடு எந்தப் பங்கும் சொத்தும் இல்லை. உங்கள் கடவுளா
கிய யெகோவா சொன்னபடி, யெகோவாதான் அவர்களுடைய சொத்து.[j]
10 முன்பு போலவே ராத்திரி பகலாக 40 நாட்கள் நான் மலையில் இருந்
தேன்.[k] அந்தச் சமயத்திலும் யெகோவா என் மன்றாட்டைக் கேட்டார்.[l]
யெகோவா உங்களை அழிக்காமல் விட்டுவிட்டார். **11** பின்பு யெகோவா
என்னிடம், 'நான் உங்களுடைய முன்னோர்களுக்குத் தருவதாக வாக்குக்
கொடுத்த தேசத்தை[m] நீங்கள் கைப்பற்றுவதற்காக, இப்போது ஜனங்களைக்
கூட்டிக்கொண்டு புறப்பட்டுப் போ' என்றார்.

12 இஸ்ரவேலர்களே, உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களிடம்
என்ன கேட்கிறார்?[n] உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்து[o] அவ
ருடைய வழிகளில் நடக்கவும்,[p] அவர்மேல் அன்பு காட்டவும், உங்கள் கட
வுளாகிய யெகோவாவுக்கு முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் சேவை
செய்யவும் வேண்டும் என்றுதானே கேட்கிறார்?[q] **13** உங்களுடைய நன்
மைக்காக இன்று நான் உங்களுக்குக் கொடுக்கிற யெகோவாவின் கட்ட
ளைகளையும் சட்டதிட்டங்களையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று
தானே கேட்கிறார்?[r] **14** இதோ! வானமும், ஏன் வானாதி வானமும்,
பூமியும் அதில் உள்ளவையும் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குத்தான்
சொந்தம்.[s] **15** ஆனாலும், உங்களுடைய முன்னோர்களிடம் மட்டும்தான்
யெகோவா நெருக்கமாக இருந்து, அன்பு காட்டினார். அவர்களுடைய சந்
ததியான உங்களைத்தான் தனக்காகத் தேர்ந்தெடுத்தார்.[t] இன்று எத்
தனையோ ஜனங்கள் இருந்தாலும் நீங்கள்தான் அவருடைய ஜனம்.
16 அதனால், இப்போது உங்களுடைய இதயத்தைச் சுத்தமாக்குங்கள்,[u]
முரண்டுபிடிப்பதை விட்டுவிடுங்கள்.[v] **17** உங்கள் கடவுளாகிய யெகோ
வாதான் தேவாதி தேவன்,[w] எஜமான்களுக்கெல்லாம் எஜமான், வல்
லமை படைத்தவர், அதிசயமும் அற்புதமுமானவர், யாருக்கும் பாரபட்சம்
காட்டாதவர்,[x] லஞ்சம் வாங்காதவர், **18** அப்பா இல்லாத பிள்ளைக்கும்*

10:18 *வே.வா., "அநாதைக்கும்."

அதி. 10
a யாத் 20:1 யாத் 34:28 உபா 4:13
b யாத் 32:15
c யாத் 34:29
d எண் 20:23, 24 எண் 33:31, 38
e எண் 20:28
f எண் 33:33
g எண் 3:30, 31
h எண் 6:23-27 உபா 21:5 2நா 30:27
i எண் 1:50 எண் 3:6 எண் 8:14
j எண் 18:20, 24 உபா 18:1
k யாத் 24:18 யாத் 34:28
l யாத் 32:14
m ஆதி 15:18
n மீ 6:8
o உபா 5:29
p உபா 5:33 யோசு 22:5
q உபா 6:5 லூ 10:27
r உபா 6:24
s 1நா 29:11 சங் 24:1 சங் 115:16
t உபா 4:37
u உபா 30:6
v யாத் 34:9 உபா 9:6 உபா 31:27
w யாத் 18:11 2நா 2:5 சங் 97:9
x அப் 10:34 ரோ 2:11

விதவைக்கும் நியாயம் செய்கிறவர்,[a] உங்களோடு வாழ்கிற வேறு தேசத்து
ஜனங்களை நேசிக்கிறவர்,[b] அவர்களுக்கு உணவும் உடையும் தருகிறவர்.
19 நீங்களும் அவர்களை நேசிக்க வேண்டும். ஏனென்றால், நீங்களும்கூட
வேறு தேசத்தில், அதாவது எகிப்து தேசத்தில், குடியிருந்தீர்களே.[c]

20 உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நீங்கள் பயந்து நடக்க வேண்
டும், அவருக்கு மட்டும்தான் சேவை செய்ய வேண்டும்,[d] அவரையே உறு
தியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும், அவருடைய பெயரில்தான் சத்தி
யம் செய்ய வேண்டும். **21** அவரைத்தான் நீங்கள் புகழ வேண்டும்.[e]
அவர்தான் உங்கள் கடவுள், அவர்தான் உங்கள் கண் முன்னால் உங்களுக்
காக அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்தவர்.[f] **22** எகிப்துக்குப்
போன உங்கள் முன்னோர்கள் வெறும் 70 பேர்தான்.[g] ஆனால், இன்றைக்கு
உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை வானத்து நட்சத்திரங்கள் போல
ஏராளமாகப் பெருக வைத்திருக்கிறார்”[h] என்றார்.

11 பின்பு அவர், “அதனால், உங்கள் கடவுளாகிய யெகோவாமேல்
நீங்கள் அன்பு காட்ட வேண்டும்.[i] எப்போதும் அவருடைய பேச்
சைக் கேட்டு நடக்க வேண்டும். அவருடைய சட்டதிட்டங்களையும் நீதித்
தீர்ப்புகளையும் கட்டளைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். **2** இன்று
நான் உங்கள் பிள்ளைகளிடம் பேசவில்லை, உங்களிடம்தான் பேசுகி
றேன். ஏனென்றால், உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களைத்தான்
கண்டித்துத் திருத்தினார்.[j] அவருடைய மகத்துவத்தையும்[k] கைபலத்தை
யும்[l] மகா வல்லமையையும் உங்கள் பிள்ளைகள் பார்க்கவில்லை,
அதைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. **3** எகிப்தின் ராஜாவாகிய பார்
வோனுக்கும் அவனுடைய தேசத்துக்கும் எதிராக அவர் செய்த அதிசயங்
களையும் அற்புதங்களையும்[m] அவர்கள் பார்க்கவில்லை. **4** உங்களைத்
துரத்திக்கொண்டு வந்த எகிப்தின் படைகளையும் பார்வோனின் குதிரைக
ளையும் போர் ரதங்களையும் யெகோவா செங்கடலில் மூழ்கடித்து, ஒரேய
டியாக அழித்துப்போட்டதை[n] அவர்கள் பார்க்கவில்லை. **5** நீங்கள் இந்த
இடத்துக்கு வந்து சேரும்வரை அவர் உங்களை எப்படியெல்லாம் வனாந்
தரத்தில் வழிநடத்தினார் என்பதையும் அவர்கள் பார்க்கவில்லை. **6** ரூப
னின் பேரன்களும் எலியாபின் மகன்களுமாகிய தாத்தானுக்கும் அபிராமுக்
கும் அவர் செய்ததையும் அவர்கள் பார்க்கவில்லை. இஸ்ரவேலர்களுடைய
கண் முன்னால் பூமி பிளந்து அவர்களும் அவர்களுடைய குடும்பத்தா
ரும் கூடாரங்களும் அவர்களோடு இருந்த எல்லா உயிர்களும் புதைந்து
போனதை[o] அவர்கள் பார்க்கவில்லை. **7** யெகோவா செய்த எல்லா அற்
புதங்களையும் கண்ணால் பார்த்தவர்கள் நீங்கள்தானே!

8 நான் இன்று உங்களுக்குக் கொடுக்கிற கட்டளைகள் எல்லாவற்றையும்
நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் பலம் அடைந்து,
யோர்தானைக் கடந்துபோய், அந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்வீர்
கள். **9** அதோடு, உங்கள் முன்னோர்களுக்கும் அவர்களுடைய சந்ததிக்
கும் தருவதாக யெகோவா வாக்குக் கொடுத்த அந்தத் தேசத்தில்,[p] அதா
வது பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில்,[q] நீடூழி வாழ்வீர்கள்.[r]

10 நீங்கள் சொந்தமாக்கப்போகிற அந்தத் தேசம், நீங்கள் விட்டுவந்த
எகிப்து தேசத்தைப் போல இருக்காது. எகிப்தில் நீங்கள் விதை விதைத்து,
காய்கறித் தோட்டங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவது போல உங்கள் வயல்க

அதி. 10
a சங் 68:5
யாக் 1:27
b லேவி 19:10
உபா 24:14
சங் 146:9
c யாத் 22:21
லேவி 19:34
d லூ 4:8
e யாத் 15:2
வெளி 19:6
f 2சா 7:23
g ஆதி 46:27
யாத் 1:5
அப் 7:14
h ஆதி 15:1, 5

அதி. 11
i உபா 6:5
உபா 10:12
மாற் 12:30
j உபா 8:5
எபி 12:6
k உபா 5:24
உபா 9:26
l யாத் 13:3
m உபா 4:34
n யாத் 14:
23, 28
எபி 11:29
o எண் 16:1, 32
p ஆதி 13:
14, 15
ஆதி 26:3
ஆதி 28:13
q யாத் 3:8
எசே 20:6
r உபா 4:40
நீதி 3:1, 2

ளுக்குக் கஷ்டப்பட்டு* தண்ணீர் பாய்ச்சி வந்தீர்கள். **11** ஆனால், நீங்கள்
இப்போது சொந்தமாக்கப்போகிற தேசம் வானத்தின் மழைத் தண்ணீரைக்
குடிக்கும் தேசம்.[a] அது மலைகளும் சமவெளிகளும் நிறைந்த தேசம்.[b]
12 உங்கள் கடவுளாகிய யெகோவா எப்போதும் கவனித்துக்கொள்கிற
தேசம். அதை உங்கள் கடவுளாகிய யெகோவா வருஷம் முழுக்க கண்ணுக்
குக் கண்ணாகக் காத்துவருகிறார்.

13 இன்று நான் உங்களுக்குக் கொடுக்கிற கட்டளைகளுக்கு நீங்கள்
அப்படியே கீழ்ப்படிந்து நடந்தால், உங்கள் கடவுளாகிய யெகோவாமேல்
அன்பு காட்டி முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் அவருக்குச் சேவை
செய்துவந்தால்,[c] **14** உங்கள் தேசத்தில் வசந்த காலத்திலும் சரி, இலையு
திர் காலத்திலும் சரி, தவறாமல் பருவ மழை பெய்யும்படி அவர் செய்வார்.*
அதனால், உங்களுக்குத் தானியமும் புதிய திராட்சமதுவும் எண்ணெயும்
ஏராளமாகக் கிடைக்கும்.[d] **15** உங்கள் கால்நடைகள் மேய்வதற்கு அவர்
புல்வெளிகளைத் தருவார். நீங்களும் நன்றாகச் சாப்பிட்டுத் திருப்தியாக
இருப்பீர்கள்.[e] **16** மற்ற தெய்வங்களை வணங்க வேண்டுமென்ற தவறான
ஆசை உங்கள் இதயத்தில் வந்துவிடாதபடி எச்சரிக்கையாக இருங்கள்;
அந்தத் தவறான வழியில் போகாதபடி கவனமாக இருங்கள்.[f] **17** அப்ப
டிப் போனால், யெகோவாவின் கோபம் உங்கள்மேல் பற்றியெரியும். மழை
பெய்யாதபடி அவர் வானத்தை அடைத்துவிடுவார்,[g] நிலமும் விளைச்சல்
தராது. யெகோவா கொடுக்கிற நல்ல தேசத்திலிருந்து நீங்கள் சீக்கிரத்தில்
அழிந்துபோவீர்கள்.[h]

18 இந்த வார்த்தைகளை உங்களுடைய இதயத்திலும் மனதிலும் நீங்
கள் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். அவற்றை உங்கள் கையில் ஒரு
நினைப்பூட்டுதல் போலவும் நெற்றியில் ஒரு அடையாளம் போலவும் கட்
டிக்கொள்ள வேண்டும்.[i] **19** அவற்றை உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்
கொடுக்க வேண்டும். வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிற
போதும், படுத்திருக்கிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவற்றைப் பற்றிப்
பேச வேண்டும்.[j] **20** நீங்கள் அவற்றை உங்கள் வீட்டு வாசலின் நிலைக்
கால்களிலும் நகரவாசல்களிலும் எழுதிவைக்க வேண்டும். **21** அப்போது,
யெகோவா உங்கள் முன்னோர்களுக்குத் தருவதாக வாக்குக் கொடுத்த
தேசத்தில்[k] நீங்களும் உங்கள் பிள்ளைகளும் நீடூழி வாழ்வீர்கள்.[l] இந்தப்
பூமிக்கு மேலே வானம் இருக்கும்வரை உங்கள் வாழ்க்கையும் இருக்கும்.

22 நான் கொடுக்கிற இந்தக் கட்டளைகளை நீங்கள் அப்படியே
கடைப்பிடித்தால், அதாவது உங்கள் கடவுளாகிய யெகோவாமேல் அன்பு
காட்டி[m] அவருடைய வழிகளில் நடந்து அவரை உறுதியாகப் பிடித்துக்
கொண்டால்,[n] **23** இந்த ஜனங்களையெல்லாம் யெகோவா உங்கள் முன்
னாலிருந்து துரத்தியடிப்பார்.[o] உங்களைவிட பெரியதாகவும் பலம்படைத்
ததாகவும் இருக்கிற தேசங்களை நீங்கள் கைப்பற்றுவீர்கள்.[p] **24** உங்கள்
காலடி படுகிற இடமெல்லாம் உங்களுக்குச் சொந்தமாகும்.[q] வனாந்தரத்தி
லிருந்து லீபனோன் வரையிலும், யூப்ரடிஸ்* ஆறு வரையிலும், மேற்குக்

அதி. 11
a உபா 8:7
b உபா 1:7
c உபா 4:29; உபா 6:5; உபா 10:12; மத் 22:37
d லேவி 26:4; உபா 8:7-9; உபா 28:12; எரே 14:22
e உபா 8:10
f உபா 8:19; உபா 29:18; எபி 3:12
g உபா 28:15, 23; 1ரா 8:35, 36; 2நா 7:13, 14
h உபா 8:19
i நீதி 7:1-3
j உபா 6:6-9; நீதி 22:6; எபே 6:4
k ஆதி 13:14, 15
l உபா 4:40; நீதி 4:10
m உபா 6:5; லூ 10:27
n உபா 10:20; உபா 13:4; யோசு 22:5
o யாத் 23:28; யோசு 3:10
p உபா 7:1; உபா 9:1, 5
q யோசு 14:9

11:10 *வே.வா., “கால்களால்.” இங்கே, கால்களால் நீர்விசைச் சக்கரத்தை இயக்குவதையோ வாய்க்கால்களை அமைப்பதையோ குறிக்கிறது. **11:14** *நே.மொ., “நான் செய்வேன்.” இந்த வசனத்திலும் அடுத்த வசனத்திலும் “அவர்” என்பது கடவுளைக் குறிக்கிறது. **11:24** *அதாவது, “ஐப்பிராத்து.”

கடல்* வரையிலும் உங்கள் தேசத்தின் எல்லை இருக்கும்.[a] **25** யாருமே
உங்களை எதிர்த்து நிற்க மாட்டார்கள்.[b] உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களுக்கு வாக்குறுதி தந்தபடியே, நீங்கள் கடந்துபோகிற தேசங்களி
லுள்ள ஜனங்கள் எல்லாரும் உங்களை நினைத்துப் பயமும் பீதியும் அடை
யும்படி செய்வார்.[c]

26 இன்று நான் உங்கள் முன்னால் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும்
வைக்கிறேன்.[d] **27** இன்று நான் சொல்கிறபடி உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிந்தால் உங்களுக்கு
ஆசீர்வாதம் கிடைக்கும்.[e] **28** ஆனால் உங்கள் கடவுளாகிய யெகோவா
வின் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியாமல், நான் இன்று சொல்கிற வழி
யைவிட்டு விலகி முன்பின் தெரியாத தெய்வங்களைக் கும்பிட்டால், உங்க
ளுக்குச் சாபம் வரும்.[f]

29 நீங்கள் சொந்தமாக்கப்போகிற தேசத்துக்கு உங்கள் கடவுளாகிய
யெகோவா உங்களைக் கூட்டிக்கொண்டு போகும்போது, கெரிசீம் மலை
அடிவாரத்தில் நிற்கிறவர்களைப் பார்த்து ஆசீர்வாதத்தையும் ஏபால் மலை
அடிவாரத்தில் நிற்கிறவர்களைப் பார்த்து சாபத்தையும் நீ அறிவிக்க*
வேண்டும்.[g] **30** அந்த மலைகள் யோர்தானுக்கு மேற்கே, அரபாவில்
வாழும் கானானியர்களின் தேசத்தில், கில்காலுக்கு எதிரிலுள்ள மோரே
யின் பெரிய மரங்களுக்குப் பக்கத்தில் இருக்கின்றன.[h] **31** நீங்கள் யோர்
தானைக் கடந்து உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்தைச்
சொந்தமாக்கப்போகிறீர்கள்.[i] அப்படி அதைச் சொந்தமாக்கிக்கொண்டு
அங்கே குடியிருக்கும்போது, **32** இன்று நான் உங்களுக்குக் கொடுக்
கிற எல்லா விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும் கவனமாகக் கடைப்
பிடிக்க வேண்டும்”[j] என்றார்.

12 பின்பு அவர், “உங்கள் முன்னோர்களின் கடவுளாகிய யெகோவா
தருகிற தேசத்தில் நீங்கள் வாழும் காலமெல்லாம் கவனமாகக்
கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளும் நீதித்தீர்ப்புகளும் இவைதான்.
2 நீங்கள் கைப்பற்றுகிற தேசத்தார் அவர்களுடைய தெய்வங்களை எங்கே
வணங்கியிருந்தாலும் சரி, அந்த இடங்களை நீங்கள் அழித்துவிட
வேண்டும்.[k] உயர்ந்த மலைகளிலோ குன்றுகளிலோ அடர்த்தியான மரங்க
ளின் கீழோ இருக்கிற அந்த இடங்களில் எதையுமே நீங்கள் விட்டுவைக்கக்
கூடாது. **3** அவர்களுடைய பலிபீடங்களை இடித்துப்போட வேண்டும்,
பூஜைத் தூண்களைத் தகர்த்துப்போட வேண்டும்,[l] பூஜைக் கம்பங்களை*
எரித்துப்போட வேண்டும், தெய்வச் சிலைகளை உடைத்துப்போட வேண்
டும்.[m] அந்தத் தெய்வங்களின் பெயர்களைக்கூட அங்கிருந்து அழித்துவிட
வேண்டும்.[n]

4 அவர்கள் தங்களுடைய தெய்வங்களை வணங்கும் விதத்தில் நீங்கள்
உங்கள் கடவுளாகிய யெகோவாவை வணங்கக் கூடாது.[o] **5** உங்கள் கட
வுளாகிய யெகோவா தன் பெயரின் மகிமைக்காகவும் தான் குடிகொள்வ
தற்காகவும் உங்கள் கோத்திரங்களின் நடுவில் எந்த இடத்தைத் தேர்ந்
தெடுக்கிறாரோ அந்த இடத்துக்குப் போய் அவரை வணங்க வேண்டும்.[p]
6 உங்களுடைய தகன பலிகளையும்,[q] மற்ற பலிகளையும், பத்திலொரு

11:24 * அதாவது, “பெருங்கடல்; மத்தியதரைக் கடல்.” **11:29** * வே.வா., “கொடுக்க.”
12:3 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 11
a ஆதி 15:18; யாத் 23:31
b உபா 7:24; யோசு 1:5
c யாத் 23:27; யோசு 2:9, 10; யோசு 5:1
d உபா 30:15
e உபா 28:1, 2; சங் 19:8, 11
f லேவி 26:15, 16; ஏசா 1:20
g உபா 27:12, 13; யோசு 8:33, 34
h ஆதி 12:6
i யோசு 1:11
j உபா 5:32; உபா 12:32

அதி. 12
k யாத் 34:13
l யாத் 23:24
m உபா 7:25
n யாத் 23:13; யோசு 23:7
o லேவி 18:3; உபா 12:31
p 2நா 7:12
q லேவி 1:3

பாகங்களையும்,[a] காணிக்கைகளையும்,[b] நீங்கள் நேர்ந்துகொண்ட பலிக
ளையும், நீங்களாகவே விருப்பப்பட்டு செலுத்தும் பலிகளையும்,[c] ஆடுமா
டுகளின் முதல் குட்டிகளையும் அங்கேதான் கொண்டுவர வேண்டும்.[d]
7 அங்கே நீங்களும் உங்களுடைய குடும்பத்தாரும் உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் முன்னிலையில் சாப்பிட வேண்டும்.[e] உங்கள் கடவுளாகிய
யெகோவா உங்களை ஆசீர்வதித்திருப்பதால் எல்லா வேலைகளையும் சந்
தோஷமாகச் செய்ய வேண்டும்.[f]

8 இங்கே நாம் செய்துவருவது போல அங்கே செய்யக் கூடாது. இங்கே
அவரவர் இஷ்டப்படி செய்துவருகிறீர்கள். **9** ஏனென்றால், உங்களுடைய
கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொத்தாகக் கொடுக்கப்போகிற
தேசத்தில்[g] நீங்கள் இன்னும் குடியேறவில்லை. **10** நீங்கள் யோர்தானைக்
கடந்துபோய்[h] உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கொடுக்
கப்போகிற தேசத்தில் குடியேறும்போது, சுற்றியுள்ள எதிரிகளின் தொல்லை
கள் எதுவும் இல்லாமல் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் அவர் உங்களை
வாழ வைப்பார்.[i] **11** உங்கள் கடவுளாகிய யெகோவா தன் பெயரின் மகி
மைக்காகத் தேர்ந்தெடுக்கிற இடத்துக்கு[j] நான் சொல்கிற எல்லாவற்றையும்
நீங்கள் கொண்டுவர வேண்டும். அதாவது உங்களுடைய தகன பலிகளை
யும், மற்ற பலிகளையும், பத்திலொரு பாகங்களையும்,[k] காணிக்கைகளையும்,
நீங்கள் நேர்ந்துகொண்ட எல்லா பலிகளையும் யெகோவாவுக்குக் கொண்டு
வர வேண்டும். **12** நீங்களும் உங்களுடைய மகன்களும் மகள்களும், உங்
களிடம் அடிமைகளாக இருக்கிற ஆண்களும் பெண்களும் உங்கள் கடவு
ளாகிய யெகோவாவுக்கு முன்னால் சந்தோஷமாக இருக்க வேண்டும்.[l]
தங்களுக்கென்று எந்தப் பங்கும் சொத்தும் இல்லாமல் உங்கள் நகரங்களில்
வாழ்கிற லேவியர்களும்[m] அதேபோல் சந்தோஷமாக இருக்க வேண்டும்.
13 உங்களுக்கு இஷ்டமான இடங்களிலெல்லாம் தகன பலிகளைச் செலுத்
தாதபடி எச்சரிக்கையாக இருங்கள்.[n] **14** உங்களுடைய கோத்திரங்களின்
நடுவில் யெகோவா எந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கிறாரோ அங்குதான் நீங்
கள் தகன பலிகளைச் செலுத்த வேண்டும். நான் சொல்கிற எல்லாவற்றை
யும் அங்குதான் செய்ய வேண்டும்.[o]

15 இறைச்சி சாப்பிட வேண்டுமென்று எப்போது ஆசைப்பட்டாலும்
அதைச் சாப்பிடலாம்.[p] உங்கள் கடவுளாகிய யெகோவா உங்கள் நகரங்க
ளில் உங்களுக்கு எந்தளவு இறைச்சியைத் தந்து ஆசீர்வதித்திருக்கி
றாரோ அந்தளவு அதைச் சாப்பிடலாம். தீட்டுள்ளவரும் சரி, தீட்டில்லாதவ
ரும் சரி, மான் இறைச்சியை* சாப்பிடுவதுபோல் அதையும் சாப்பிடலாம்.
16 ஆனால் நீங்கள் அதன் இரத்தத்தைச் சாப்பிடக் கூடாது,[q] தண்ணீ
ரைப் போல அதைத் தரையில் ஊற்றிவிட வேண்டும்.[r] **17** தானியம்,
புதிய திராட்சமது, எண்ணெய், ஆடுமாடுகளின் முதல் குட்டிகள், நீங்
கள் நேர்ந்துகொண்ட பலிகள், நீங்களாகவே விருப்பப்பட்டு செலுத்தும் பலி
கள், காணிக்கைகள் ஆகியவற்றில் பத்திலொரு பாகத்தை உங்கள் நகரங்
களுக்கு உள்ளே சாப்பிடக் கூடாது.[s] **18** அவற்றை உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் முன்னிலையில், உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்
தெடுக்கிற இடத்தில்தான் சாப்பிட வேண்டும்.[t] நீங்களும், உங்கள் மகனும்,

12:15 *அதாவது, “வேட்டையாடப்பட்டு வீட்டில் சாப்பிடப்படும் மான் போன்ற விலங்குகளின் இறைச்சியை.”

அதி. 12
a உபா 14:22
b எண் 18:19 உபா 12:11
c 1நா 29:9 எஸ்றா 2:68
d உபா 12:17 உபா 15:19
e உபா 15:19, 20
f லேவி 23:40 உபா 12:12, 18 உபா 14:23, 26 சங் 32:11 சங் 100:2 பிலி 4:4
g 1ரா 8:56 1நா 23:25
h யோசு 3:17
i உபா 33:28 1ரா 4:25
j உபா 16:2 உபா 26:2
k உபா 14:22, 23
l உபா 14:26 1ரா 8:66 நெ 8:10
m எண் 18:20, 24 உபா 10:9 உபா 14:28, 29 யோசு 13:14
n லேவி 17:3, 4 1ரா 12:28
o 2நா 7:12
p உபா 12:21
q ஆதி 9:4 லேவி 7:26 லேவி 17:10 அப் 15:20, 29
r லேவி 17:13 உபா 15:23
s உபா 14:22, 23
t உபா 12:11 உபா 14:26

மகளும், வேலைக்காரனும், வேலைக்காரியும், உங்கள் நகரங்களில் வாழ்
கிற லேவியர்களும் அவற்றைச் சாப்பிட வேண்டும். உங்கள் கடவுளா
கிய யெகோவாவின் முன்னிலையில் நீங்கள் என்ன வேலை செய்தாலும்
அதைச் சந்தோஷமாகச் செய்ய வேண்டும். **19** நீங்கள் அந்தத் தேசத்தில்
வாழும் காலமெல்லாம் லேவியர்களை அசட்டை செய்யாதபடி கவனமாக
இருக்க வேண்டும்.[a]

20 உங்கள் கடவுளாகிய யெகோவா வாக்குறுதி தந்தபடி உங்கள் எல்
லையை[b] விரிவுபடுத்தும் சமயத்தில்,[c] நீங்கள் இறைச்சி சாப்பிட ஆசைப்
பட்டால் அதைச் சாப்பிடலாம்; ஆசைப்படும்போதெல்லாம் அதைச்
சாப்பிடலாம்.[d] **21** உங்கள் கடவுளாகிய யெகோவா தன் பெயரின் மகி
மைக்காகத் தேர்ந்தெடுக்கிற இடம்[e] ரொம்பத் தூரத்தில் இருந்தால்,
யெகோவா கொடுத்திருக்கிற ஆடுமாடுகள் சிலவற்றை வெட்டி நீங்கள்
சாப்பிடலாம். நான் உங்களுக்குக் கட்டளை கொடுத்தபடியே, ஆசைப்ப
டும்போதெல்லாம் உங்கள் நகரங்களுக்கு உள்ளே அதைச் சாப்பிட
லாம். **22** தீட்டுள்ளவரும் சரி, தீட்டில்லாதவரும் சரி, மான் இறைச்சியை*
சாப்பிடுவதுபோல்[f] அதையும் சாப்பிடலாம். **23** ஆனால், அதன் இரத்
தத்தைச் சாப்பிடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருங்கள்.[g] இரத்
தத்தில் உயிர் இருப்பதால்[h] இறைச்சியை இரத்தத்தோடு சாப்பிடக் கூடாது.
24 இரத்தத்தை நீங்கள் கண்டிப்பாகச் சாப்பிடக் கூடாது. தண்ணீரைப்
போல அதைத் தரையில் ஊற்றிவிட வேண்டும்.[i] **25** நீங்கள் அதைச் சாப்
பிடவே கூடாது. அப்போதுதான், நீங்களும் உங்களுடைய வம்சத்தாரும் சந்
தோஷமாக வாழ்வீர்கள், யெகோவாவுக்குப் பிரியமானதைச் செய்கிறவர்க
ளாகவும் இருப்பீர்கள். **26** யெகோவா தேர்ந்தெடுக்கிற இடத்துக்கு நீங்கள்
வரும்போது, உங்களுடைய பரிசுத்த பொருள்களையும் நீங்கள் நேர்ந்து
கொண்ட பலிகளையும் மட்டுமே கொண்டுவர வேண்டும். **27** அங்கே
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்தில் இறைச்சியையும் இரத்
தத்தையும்[j] தகன பலியாகச் செலுத்த வேண்டும். நீங்கள் செலுத்துகிற
பலிகளின் இரத்தத்தை உங்கள் கடவுளாகிய யெகோவாவுடைய பலிபீடத்
தின் அடியில் ஊற்றிவிட வேண்டும்.[k] ஆனால், இறைச்சியை நீங்கள் சாப்
பிடலாம்.

28 நான் உங்களுக்குக் கொடுக்கிற இந்தக் கட்டளைகள் எல்லாவற்றை
யும் கவனமாகக் கடைப்பிடியுங்கள். அப்போதுதான், நீங்களும் உங்களு
டைய வம்சத்தாரும் எப்போதும் சந்தோஷமாக வாழ்வீர்கள். உங்கள் கட
வுளாகிய யெகோவாவின் பார்வையில் எது நல்லதோ, எது சரியானதோ
அதையே செய்கிறவர்களாக இருப்பீர்கள்.

29 உங்கள் கடவுளாகிய யெகோவா, நீங்கள் கைப்பற்றப்போகிற தேசத்
திலுள்ள ஜனங்களை அழித்துவிட்டு[l] உங்களை அங்கே குடியேற்றும்
போது, **30** நீங்கள் படுகுழியில் விழாதபடி எச்சரிக்கையாக இருங்கள்.
அந்த ஜனங்கள் அவர்களுடைய தெய்வங்களை எப்படியெல்லாம் வணங்
கினார்கள் என்று விசாரிக்காதீர்கள். 'நானும் அப்படியே செய்வேன்'[m] என்று
சொல்லாதீர்கள். **31** உங்கள் கடவுளாகிய யெகோவாவை நீங்கள் அப்படி
வணங்கக் கூடாது. ஏனென்றால், அந்த ஜனங்கள் தங்களுடைய தெய்வங்
களை வணங்கும்போது யெகோவா அருவருக்கிற எல்லாவற்றையும் செய்

12:22 * 12:15-ன் அடிக்குறிப்பைப் பாருங்கள்.

அதி. 12

a எண் 18:21 உபா 14:27 2நா 31:4 நெ 10:38, 39 மல் 3:8

b 1ரா 4:21

c ஆதி 15:18 யாத் 34:24 உபா 11:24

d லேவி 11:2-4

e உபா 14:23 2நா 7:12

f உபா 14:4, 5

g லேவி 3:17 உபா 12:16

h ஆதி 9:4 லேவி 17: 11, 14

i லேவி 17:13 உபா 15:23

j லேவி 17:11

k லேவி 4: 29, 30

l யாத் 23:23 சங் 44:2 சங் 78:55

m உபா 7:16 சங் 106:36 எசே 20:28

கிறார்கள், தங்கள் மகன்களையும் மகள்களையும்கூட அந்தத் தெய்வங்க
ளுக்காக நெருப்பில் பலி கொடுக்கிறார்கள்.[a] **32** நான் கொடுக்கிற எல்லா
கட்டளைகளையும் நீங்கள் கவனமாகப் பின்பற்ற வேண்டும்.[b] அதில் ஒன்
றையும் கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது"[c] என்றார்.

13 பின்பு அவர், "உங்கள் நடுவிலிருக்கும் ஒரு தீர்க்கதரிசியோ,
கனவுகளைப் பார்த்து எதிர்காலத்தைச் சொல்கிறவனோ உங்க
ளுக்கு ஒரு அடையாளத்தை அல்லது அற்புதத்தைக் காட்டுவதாகச் சொல்
லலாம். **2** அந்த அடையாளமோ அற்புதமோ நடக்கலாம். அவன் உங்க
ளிடம், 'வாருங்கள், நாம் வேறு தெய்வங்களைத் தேடிப்போய் அவற்றை
வணங்குவோம்' என்று சொல்லலாம். **3** ஆனால், அந்தத் தீர்க்கதரிசியோ
கனவு காண்கிறவனோ சொல்வதை நீங்கள் கேட்கக் கூடாது.[d] ஏனென்றால்,
உங்கள் கடவுளாகிய யெகோவாமேல் முழு இதயத்தோடும் முழு மூச்சோ
டும் அன்பு காட்டுகிறீர்களா[e] என்று உங்கள் கடவுளாகிய யெகோவா உங்
களைச் சோதித்துப் பார்க்கிறார்.[f] **4** உங்கள் கடவுளாகிய யெகோவாவின்
வழியில் நீங்கள் நடக்க வேண்டும், அவருக்குப் பயப்பட வேண்டும், அவ
ருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும், அவருடைய பேச்சைக்
கேட்க வேண்டும், அவரையே வணங்க வேண்டும், அவரையே உறுதியா
கப் பிடித்துக்கொள்ள வேண்டும்.[g] **5** அந்தத் தீர்க்கதரிசியை அல்லது
கனவு காண்கிறவனைக் கொன்றுபோட வேண்டும்.[h] ஏனென்றால், எகிப்தில்
அடிமைகளாக இருந்த உங்களை விடுதலை செய்து கூட்டிக்கொண்டு வந்த
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பேச்சை மீறி நடப்பதற்கு அவன் உங்
களைத் தூண்டினான். உங்கள் கடவுளாகிய யெகோவா சொன்ன வழியை
விட்டு விலகும்படி உங்களைத் தூண்டினான். அதனால், தீமையை உங்கள்
நடுவிலிருந்து ஒழித்துக்கட்ட வேண்டும்.[i]

6 உங்கள் மகனோ, மகளோ, கூடப் பிறந்த சகோதரனோ, ஆசை மனை
வியோ, ஆருயிர் நண்பனோ ரகசியமாக உங்களிடம் வந்து, வேறு தெய்
வங்களை வணங்கலாம் என்று சொல்லி ஆசைகாட்டலாம்.[j] அந்தத்
தெய்வங்கள் உங்களுக்கோ உங்களுடைய முன்னோர்களுக்கோ தெரியாத
தெய்வங்களாக இருக்கலாம். **7** தேசத்தின் ஒரு முனையிலிருந்து இன்
னொரு முனைவரை இருக்கிற ஜனங்களுடைய, அதாவது உங்களுக்குப் பக்
கத்திலோ தூரத்திலோ இருக்கிற ஜனங்களுடைய, தெய்வங்களாக அவை
இருக்கலாம். **8** அந்த நபர் சொல்வதை நீங்கள் கேட்கவும் கூடாது,
அதன்படி செய்யவும் கூடாது.[k] அவர்மேல் இரக்கமோ கரிசனையோ காட்
டக் கூடாது. அவரை ஒளித்துவைக்கவும் கூடாது. **9** கண்டிப்பாக அவ
ரைக் கொன்றுபோட வேண்டும்.[l] முதலில் நீங்கள்தான் அவர்மேல் கல்லெ
றிய வேண்டும், பின்பு மற்ற எல்லா ஜனங்களும் கல்லெறிய வேண்டும்.[m]
10 எகிப்தில் அடிமைகளாக இருந்த உங்களை விடுதலை செய்து கூட்டிக்
கொண்டு வந்த உங்கள் கடவுளாகிய யெகோவாவின் வழியைவிட்டு
விலகும்படி அந்த நபர் உங்களைத் தூண்டியதால், அவரைக் கல்லெ
றிந்து கொல்ல வேண்டும்.[n] **11** அப்போதுதான், இஸ்ரவேலர்கள் எல்லா
ரும் இதைக் கேள்விப்பட்டு பயப்படுவார்கள், இதுபோன்ற மோசமான காரி
யத்தை உங்கள் நடுவே இனி ஒருபோதும் செய்ய மாட்டார்கள்.[o]

12 குடியிருப்பதற்காக உங்கள் கடவுளாகிய யெகோவா தருகிற நகரங்
கள் ஒன்றில் நீங்கள் ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டால், **13** அதாவது,

அதி. 12
a லேவி 18:3, 21; லேவி 20:2; உபா 18:10-12; எரே 32:35
b யோசு 22:5
c உபா 4:2; யோசு 1:7

அதி. 13
d ஏசா 8:19; எரே 27:9
e உபா 6:5; உபா 10:12; மத் 22:37
f உபா 8:2
g உபா 10:20
h உபா 18:20
i உபா 17:2, 3, 7; 1கொ 5:13
j 1ரா 11:4; 2பே 2:1
k கலா 1:8
l யாத் 22:20; யாத் 32:27; எண் 25:5
m உபா 17:2, 3, 7
n லேவி 20:2, 27
o உபா 17:13; 1தீ 5:20

‘உதவாக்கரை மனுஷர்கள் சிலர் தங்கள் நகரத்து ஜனங்களிடம், “நாம்
போய் வேறு தெய்வங்களை வணங்கலாம்” என்று சொல்லி அவர்க
ளைக் கெட்ட வழிக்கு இழுக்கப் பார்க்கிறார்கள்’ என்ற விஷயத்தைக்
கேள்விப்பட்டால், **14** அது உண்மையா இல்லையா என்று நன்றாக விசா
ரிக்க வேண்டும், அலசி ஆராய வேண்டும்.[a] அருவருப்பான இந்தக் காரி
யத்தை உங்கள் நடுவே யாராவது செய்திருப்பது உண்மை என்பது தெரிய
வந்தால், **15** அந்த நகரத்து ஜனங்களைக் கண்டிப்பாக வாளால் வெட்டிக்
கொல்ல வேண்டும்.[b] அந்த நகரத்தையும் அதிலுள்ள எல்லாரையும் அழித்
துப்போட வேண்டும். ஆடுமாடுகளைக்கூட உயிரோடு விட்டுவைக்கக்
கூடாது.[c] **16** நீங்கள் கைப்பற்றிய பொருள்கள் எல்லாவற்றையும் அந்த நக
ரத்தின் பொது சதுக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும். பின்பு அந்த நகரத்
தைச் சுட்டெரித்துவிட வேண்டும். அங்கு கைப்பற்றிய பொருள்களெல்லாம்
உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குத் தகன பலிபோல் இருக்கும். அந்த
நகரம் என்றென்றும் மண்மேடாகக் கிடக்கும். அதை ஒருபோதும் திரும்பக்
கட்டக் கூடாது. **17** அழிப்பதற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட எதையும் நீங்கள்
எடுத்துக்கொள்ளக் கூடாது.[d] அப்போதுதான், யெகோவா அவருடைய
கடும் கோபத்தை விட்டுவிட்டு உங்களுக்கு இரக்கமும் கரிசனையும் காட்டு
வார். உங்களுடைய முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்தபடியே உங்களை
ஏராளமாகப் பெருக வைப்பார்.[e] **18** நான் இன்று உங்களுக்குக் கொடுக்கிற
எல்லா கட்டளைகளையும் கடைப்பிடித்து, உங்கள் கடவுளாகிய யெகோவா
வுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்போது, உங்கள் கடவுளாகிய யெகோவா
வுக்குப் பிரியமானதைச் செய்கிறவர்களாக இருப்பீர்கள்”[f] என்றார்.

14 பின்பு அவர், “நீங்கள் உங்களுடைய கடவுளாகிய யெகோவா
வின் பிள்ளைகள். இறந்தவருக்காக உங்கள் உடலைக் கீறிக்கொள்
ளவோ முன்னந்தலையை* சிரைத்துக்கொள்ளவோ கூடாது.[g] **2** ஏனென்
றால், உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நீங்கள் பரிசுத்தமான
ஜனங்கள்.[h] இந்தப் பூமியிலுள்ள எல்லா ஜனங்களிலும் யெகோவா உங்க
ளைத்தான் தன்னுடைய ஜனமாகவும் விசேஷ சொத்தாகவும் தேர்ந்தெடுத்
திருக்கிறார்.[i]

3 அருவருப்பான எதையும் நீங்கள் சாப்பிடக் கூடாது.[j] **4** ஆனால்
காளை, செம்மறியாடு, வெள்ளாடு, **5** சிவப்பு மான், நவ்வி மான், ரோ
மான், காட்டு வெள்ளாடு, கலைமான், காட்டுச் செம்மறியாடு, வரையாடு
ஆகியவற்றை நீங்கள் சாப்பிடலாம்.[k] **6** குளம்புகள் முழுமையாகப் பிள
வுபட்டிருக்கிற, அசைபோடுகிற எந்த மிருகத்தையும் நீங்கள் சாப்பிட
லாம். **7** இருந்தாலும், அசைபோடுகிற மிருகங்களில் அல்லது குளம்புகள்
பிளவுபட்டிருக்கிற மிருகங்களில் ஒட்டகம், காட்டு முயல், கற்பாறை முயல்*
ஆகியவற்றை நீங்கள் சாப்பிடக் கூடாது. ஏனென்றால் இவை அசைபோடும்,
ஆனால் இவற்றின் குளம்புகள் பிளவுபட்டிருக்காது. இவை உங்களுக்கு
அசுத்தமானவை.[l] **8** பன்றியையும் நீங்கள் சாப்பிடக் கூடாது, ஏனென்றால்
அதற்குக் குளம்புகள் பிளவுபட்டிருக்கும், ஆனால் அது அசைபோடாது.
அது உங்களுக்கு அசுத்தமானது. நீங்கள் அவற்றின் இறைச்சியைச் சாப்
பிடவோ அவற்றின் பிணத்தைத் தொடவோ கூடாது.

14:1 *இது புருவத்தையும் உட்படுத்தலாம். **14:7** *இது கற்பாறைகளுக்கு நடுவே
வாழ்கிற ஒருவகையான பெரிய முயல்.

அதி. 13
a உபா 19:15, 1தீ 5:19
b உபா 17:4, 5, 2நா 28:6
c யாத் 22:20
d யோசு 6:18
e ஆதி 22:15, 17, ஆதி 26:3, 4
f உபா 6:18

அதி. 14
g லேவி 19:28, லேவி 21:1, 5
h லேவி 19:2, லேவி 20:26, உபா 28:9, 1பே 1:15
i யாத் 19:5, 6, உபா 7:6
j லேவி 11:43, லேவி 20:25, அப் 10:14
k லேவி 11:2, 3
l லேவி 11:4-8

அதி. 14
a லேவி 11:9, 10
b லேவி 11: 13–20
c யாத் 22:31 லேவி 17:15
d யாத் 23:19 யாத் 34:26
e உபா 12:11 உபா 26:12
f உபா 12:5, 17 உபா 15:19, 20
g சங் 111:10
h உபா 12:5, 6
i உபா 12:7 உபா 26:11 சங் 100:2
j எண் 18:20 உபா 10:9
k எண் 18:21 2நா 31:4 1கொ 9:13
l உபா 26:12

9 தண்ணீரில் வாழும் உயிரினங்களில், துடுப்புகளும் செதில்களும்
உள்ள எதையும் நீங்கள் சாப்பிடலாம்.[a] **10** ஆனால், துடுப்புகளும்
செதில்களும் இல்லாத எதையும் நீங்கள் சாப்பிடக் கூடாது. அது உங்க
ளுக்கு அசுத்தமானது.

11 பறவைகளில் சுத்தமான எல்லாவற்றையும் நீங்கள் சாப்பிடலாம்.
12 ஆனால் கழுகு, கடல் பருந்து, கறுப்பு ராஜாளி,[b] **13** சிவப்புப் பருந்து,
கறுப்புப் பருந்து, எல்லா வகையான கூளிப் பருந்து, **14** எல்லா வகை
யான அண்டங்காக்கை, **15** நெருப்புக்கோழி, ஆந்தை, கடல் புறா, எல்லா
வகையான வல்லூறு, **16** சிறு ஆந்தை, நெட்டைக்காது ஆந்தை, அன்
னம், **17** கூழைக்கடா, ராஜாளி, நீர்க்காகம், **18** நாரை, எல்லா வகையான
கொக்கு, கொண்டலாத்தி, வவ்வால் ஆகியவற்றை நீங்கள் சாப்பிடக் கூடாது.
19 ஊர்ந்து போகிற, சிறகுள்ள பூச்சிகள் எல்லாமே உங்களுக்கு அசுத்த
மானது. அவற்றைச் சாப்பிடக் கூடாது. **20** பறக்கும் உயிரினங்களில் சுத்த
மான எல்லாவற்றையும் நீங்கள் சாப்பிடலாம்.

21 தானாகச் செத்துப்போன எந்த மிருகத்தையும் நீங்கள் சாப்பிடக்
கூடாது.[c] உங்கள் நகரங்களில் வாழ்கிற வேறு தேசத்துக்காரர்கள் சாப்பிடு
வதற்காக அதைக் கொடுத்துவிடலாம் அல்லது அவர்களுக்கு விற்றுவிட
லாம். ஏனென்றால், உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நீங்கள் பரிசுத்த
மான ஜனங்கள்.

ஆட்டுக்குட்டியை அதன் தாயின் பாலிலே சமைக்கக் கூடாது.[d]

22 வருஷா வருஷம் உங்களுடைய நிலத்தில் விளைகிற எல்லாவற்றி
லும் பத்திலொரு பாகத்தை* நீங்கள் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும்.[e]
23 உங்கள் கடவுளாகிய யெகோவா தன் பெயரின் மகிமைக்காகத் தேர்ந்
தெடுக்கிற இடத்தில் தானியம், புதிய திராட்சமது, எண்ணெய் ஆகியவற்றில்
பத்திலொரு பாகத்தையும், ஆடுமாடுகளின் முதல் குட்டிகளையும் நீங்கள்
சாப்பிட வேண்டும்.[f] அப்படிச் செய்தால், உங்கள் கடவுளாகிய யெகோவா
வுக்கு எப்போதும் பயந்து நடக்கக் கற்றுக்கொள்வீர்கள்.[g]

24 உங்கள் கடவுளாகிய யெகோவா தன் பெயரின் மகிமைக்காகத்
தேர்ந்தெடுக்கிற இடம்[h] ஒருவேளை தூரத்தில் இருந்தால், உங்கள் கடவுளா
கிய யெகோவா உங்களுக்கு ஆசீர்வாதமாகக் கொடுத்த எல்லாவற்றையும்
தூக்கிக்கொண்டு போக உங்களால் முடியாமல் இருந்தால், **25** அவற்றை
விற்றுப் பணமாக்கி, உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்தெடுக்கிற இடத்
துக்குக் கொண்டுபோகலாம். **26** அந்தப் பணத்தில் மாடுகளையும், செம்ம
றியாடுகளையும், வெள்ளாடுகளையும், திராட்சமதுவையும், மற்ற மதுபானங்
களையும், நீங்கள் ஆசைப்படுகிற எல்லா பொருள்களையும் வாங்கலாம்.
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் முன்னிலையில் நீங்களும் உங்களு
டைய குடும்பத்தாரும் சாப்பிட்டு, சந்தோஷமாக இருக்கலாம்.[i] **27** உங்கள்
நகரங்களில் வாழ்கிற லேவியர்களுக்கு உங்களோடு எந்தப் பங்கும் சொத்
தும் இல்லாததால்[j] அவர்களை அசட்டை செய்யாதீர்கள்.[k]

28 ஒவ்வொரு மூன்றாம் வருஷத்தின் முடிவிலும், அந்த வருஷத்
தில் விளைந்தவற்றில் பத்திலொரு பாகத்தைக் கொண்டுவந்து, உங்கள் நக
ரங்களில் வைக்க வேண்டும்.[l] **29** அப்போது, உங்களோடு எந்தப் பங்கும்

14:22 * வே.வா., “தசமபாகத்தை.”

சொத்தும் இல்லாத லேவியனும், உங்கள் நகரங்களில் வாழ்கிற மற்ற தேசத்
துக்காரனும், அப்பா இல்லாத பிள்ளையும்,* விதவையும் வந்து அவற்றை
எடுத்து, திருப்தியாகச் சாப்பிடுவார்கள்.[a] உங்கள் கடவுளாகிய யெகோவா
வும் நீங்கள் செய்கிற எல்லாவற்றையும் ஆசீர்வதிப்பார்”[b] என்றார்.

15 பின்பு அவர், “ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலும் நீங்கள்
கடன்களை ரத்து செய்ய வேண்டும்.[c] **2** அதைச் செய்ய வேண்
டிய முறை இதுதான்: நீங்கள் இன்னொரு இஸ்ரவேலனுக்குக் கடன் கொடுத்
திருந்தால் அந்தக் கடனை ரத்து செய்துவிட வேண்டும். அதைத் திருப்
பிக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்தக் கூடாது. ஏனென்றால், யெகோவாவின்
முன்னிலையில் கடனை ரத்து செய்ய வேண்டிய வருஷம் அது.[d] **3** உங்
கள் சகோதரன் உங்களிடம் என்ன கடன்பட்டிருந்தாலும் சரி, அந்தக்
கடனை ரத்து செய்துவிட வேண்டும். ஆனால், வேறு தேசத்தைச் சேர்ந்த
வனுக்கு நீங்கள் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கலாம்.[e] **4** உங்களுக்
குள் யாரும் ஏழையாக இருக்கக் கூடாது. ஏனென்றால், உங்கள் கடவுளா
கிய யெகோவா சொத்தாகக் கொடுக்கிற தேசத்தில் யெகோவா உங்களை
நிச்சயம் ஆசீர்வதிப்பார்.[f] **5** ஆனால், நான் இன்று உங்களுக்குக் கொடுக்
கிற கட்டளைகளைக் கவனமாகக் கடைப்பிடித்து,[g] உங்கள் கடவுளாகிய
யெகோவாவுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தால் மட்டும்தான், அவர் உங்
களை ஆசீர்வதிப்பார். **6** உங்கள் கடவுளாகிய யெகோவா வாக்குறுதி
தந்தபடியே, உங்களை ஆசீர்வதிப்பார். நீங்கள் எத்தனையோ தேசத்தாருக்
குக் கடன் கொடுப்பீர்கள், ஆனால் நீங்கள் யாரிடமிருந்தும் கடன் வாங்க
மாட்டீர்கள்.[h] நீங்கள் எத்தனையோ தேசங்களை அடக்கி ஆளுவீர்கள்,
ஆனால் எந்தத் தேசமும் உங்களை அடக்கி ஆளாது.[i]

7 உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்தில், உங்கள்
சகோதரன் ஒருவன் ஏழையாகிவிட்டால் அவனிடம் கல்நெஞ்சத்தோடு
நடந்துகொள்ளாதீர்கள். அந்த ஏழை சகோதரனிடம் கஞ்சத்தனம் காட்டா
தீர்கள்.[j] **8** அவனுக்குத் தாராளமாக அள்ளிக் கொடுங்கள்.[k] கடனாக அவ
னுக்கு என்ன தேவைப்பட்டாலும் சரி, அதையெல்லாம் தயங்காமல்
கொடுங்கள். **9** ‘ஏழாம் வருஷம் நெருங்கிவிட்டதே, கடனெல்லாம் ரத்தா
கிவிடுமே!’[l] என்ற கெட்ட எண்ணத்தோடு, உங்கள் ஏழை சகோதரனுக்கு
ஒன்றும் கொடுக்காமல் இருந்துவிடாதீர்கள். அவன் உங்களைப் பற்றி
யெகோவாவிடம் முறையிடுவான், அப்போது நீங்கள் குற்றமுள்ளவர்க
ளாக இருப்பீர்கள்.[m] **10** நீங்கள் அவனுக்குத் தாராளமாகக் கொடுக்க
வேண்டும்,[n] வேண்டாவெறுப்போடு கொடுக்கக் கூடாது. அப்போதுதான்,
உங்கள் கடவுளாகிய யெகோவா நீங்கள் செய்கிற எல்லாவற்றையும் ஆசீர்
வதிப்பார்.[o] **11** தேசத்தில் எப்போதும் ஏழைகள் இருக்கத்தான் செய்வார்
கள்.[p] அதனால்தான், ‘உங்கள் தேசத்திலுள்ள பாவப்பட்ட ஏழை சகோதர
னுக்குத் தாராளமாக அள்ளிக் கொடுக்க வேண்டும்’[q] என்று நான் கட்டளை
கொடுக்கிறேன்.

12 ஒரு எபிரெய ஆணோ பெண்ணோ உங்களிடம் அடிமையாக
விற்கப்பட்டு ஆறு வருஷங்கள் வேலை செய்திருந்தால், ஏழாம் வரு
ஷத்தில் அவரை நீங்கள் விடுதலை செய்து அனுப்பிவிட வேண்டும்.[r]
13 ஆனால், அப்படி அவரை அனுப்பும்போது, வெறுங்கையோடு அனுப்

14:29 * வே.வா., “அநாதையும்.”

அதி. 14
a யாத் 22:21, உபா 10:18, யாக் 1:27
b உபா 15:10, சங் 41:1, நீதி 11:24, நீதி 19:17, மல் 3:10, லூ 6:35

அதி. 15
c லேவி 25:2
d உபா 31:10
e யாத் 12:43, உபா 14:21, உபா 23:20
f உபா 28:8
g யோசு 1:7, 8, ஏசா 1:19
h உபா 28:12
i உபா 28:13, 1ரா 4:24, 25
j நீதி 21:13, யாக் 2:15, 16, 1யோ 3:17
k லேவி 25:35, நீதி 19:17, மத் 5:42, லூ 6:34, 35, கலா 2:10
l உபா 15:1
m யாத் 22:22, 23, உபா 24:14, 15, நீதி 21:13
n அப் 20:35, 2கொ 9:7, 1தீ 6:18, எபி 13:16
o உபா 24:19, சங் 41:1
p மத் 26:11
q நீதி 3:27, மத் 5:42, லூ 12:33
r யாத் 21:2, லேவி 25:39

பக் கூடாது. **14** உங்கள் மந்தையிலிருந்தும் களத்துமேட்டிலிருந்தும் எண்
ணெய்ச் செக்கிலிருந்தும் திராட்சரச ஆலையிலிருந்தும் அவருக்குத் தாரா
ளமாகக் கொடுக்க வேண்டும். உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை
எந்தளவு ஆசீர்வதித்திருக்கிறாரோ அந்தளவு நீங்கள் அவருக்குக் கொடுக்க
வேண்டும். **15** நீங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்ததை ஞாபகத்தில்
வையுங்கள். உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை அங்கிருந்து விடு
வித்தார். அதனால்தான், இதைச் செய்யும்படி நான் இன்று உங்களுக்குக்
கட்டளை கொடுக்கிறேன்.

16 ஆனால், உங்களிடம் வேலை செய்தபோது அந்த அடிமை சந்தோ
ஷமாக இருந்ததால், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் அவன்
நேசிக்கலாம். அதனால், 'நான் உங்களைவிட்டுப் போக மாட்டேன்!'[a] என்று
சொல்லலாம். **17** அப்படி அவன் சொன்னால், நீங்கள் அவனை ஒரு கத
வின் பக்கத்தில் நிறுத்தி ஊசியால் அவன் காதைக் குத்த வேண்டும். அப்
போது, வாழ்நாளெல்லாம் அவன் உங்களுக்கு அடிமையாக இருப்பான்.
உங்கள் அடிமைப் பெண்ணுக்கும் நீங்கள் அப்படியே செய்ய வேண்டும்.
18 உங்கள் அடிமையை விடுதலை செய்து அனுப்புவதை நீங்கள் பெரிய
நஷ்டமாக நினைக்கக் கூடாது. ஏனென்றால் ஆறு வருஷங்களாக, ஒரு
கூலியாள் செய்யும் வேலையைவிட இரண்டு மடங்கு அதிகமாக அவன்
உங்களுக்கு வேலை செய்திருக்கிறான். அதோடு, எல்லா வேலைகளிலும்
உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை ஆசீர்வதித்திருக்கிறார்.

19 ஆடுமாடுகளின் முதல் ஆண் குட்டிகளை உங்கள் கடவுளாகிய
யெகோவாவுக்கு அர்ப்பணித்துவிட வேண்டும்.[b] முதலில் பிறந்த
காளையை வைத்து வேலை வாங்கக் கூடாது, ஆடுகளின் முதல் குட்
டிக்கு மயிர் கத்தரிக்கக் கூடாது. **20** உங்கள் கடவுளாகிய யெகோவா
தேர்ந்தெடுக்கிற இடத்தில் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் யெகோவா
வின் முன்னிலையில் வருஷா வருஷம் அவற்றின் இறைச்சியைச் சாப்பிட
வேண்டும்.[c] **21** ஆனால் அவை முடமாகவோ, குருடாகவோ, அல்லது
வேறெதாவது பெரிய குறை உள்ளதாகவோ இருந்தால், உங்கள் கடவுளா
கிய யெகோவாவுக்கு அவற்றைப் பலி கொடுக்கக் கூடாது.[d] **22** உங்கள்
நகரங்களுக்கு உள்ளே அவற்றை வெட்டிச் சாப்பிடலாம். தீட்டுள்ளவரும்
சரி, தீட்டில்லாதவரும் சரி, மான் இறைச்சியைச் சாப்பிடுவதுபோல்* அவற்
றையும் சாப்பிடலாம்.[e] **23** ஆனால், அவற்றின் இரத்தத்தை மட்டும் சாப்
பிடக் கூடாது.[f] தண்ணீரைப் போல அதைத் தரையில் ஊற்றிவிட வேண்
டும்"[g] என்றார்.

16 பின்பு அவர், "ஆபிப்* மாதத்தை நீங்கள் நினைத்துப் பார்க்க
வேண்டும். அந்த மாதத்தில் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு
பஸ்கா பண்டிகையைக் கொண்டாட வேண்டும்.[h] ஏனென்றால், ஆபிப்
மாதத்தில்தான் ராத்திரியோடு ராத்திரியாக யெகோவா உங்களை எகிப்திலி
ருந்து விடுதலை செய்து கூட்டிக்கொண்டு வந்தார்.[i] **2** உங்கள் கடவுளா
கிய யெகோவா தன் பெயரின் மகிமைக்காகத் தேர்ந்தெடுக்கிற இடத்தில்,[j]
உங்கள் ஆட்டையோ மாட்டையோ[k] யெகோவாவுக்கு பஸ்கா பலியாகச்

15:22 *12:15-ன் அடிக்குறிப்பைப் பாருங்கள். **16:1** *இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

அதி. 15
a யாத் 21:5, 6
b யாத் 13:2; யாத் 22:30; எண் 3:13; எண் 18:15, 17
c உபா 12:5, 6; உபா 14:23; உபா 16:11
d லேவி 22:20; உபா 17:1; மல் 1:8; எபி 9:14
e உபா 12:15; உபா 14:4, 5
f ஆதி 9:4; லேவி 7:26; அப் 15:20, 29
g லேவி 17:10, 13; உபா 12:16

அதி. 16
h யாத் 12:14; லேவி 23:5; எண் 9:2; எண் 28:16; 1கொ 5:7
i யாத் 34:18
j 1ரா 8:29
k யாத் 12:5, 6; 2நா 35:7

செலுத்த வேண்டும்.[a] **3** புளிப்பு சேர்க்கப்பட்ட எதையும் அதனுடன் சாப்
பிடக் கூடாது.[b] எகிப்திலிருந்து அவசர அவசரமாகப் புறப்பட்டு வந்த
போது[c] சாப்பிட்டது போலவே, ஏழு நாட்களுக்குப் புளிப்பில்லாத ரொட்டி
களை நீங்கள் சாப்பிட வேண்டும். எகிப்தில் நீங்கள் பட்ட பாடுகளை அந்த
ரொட்டிகள் ஞாபகப்படுத்தும். எகிப்திலிருந்து புறப்பட்ட நாளைக் கால
மெல்லாம் நினைத்துப் பார்ப்பதற்காக நீங்கள் அவற்றைச் சாப்பிட வேண்
டும்.[d] **4** புளித்த மாவு எதுவுமே ஏழு நாட்களுக்கு உங்கள் எல்லைக்குள்
இருக்கக் கூடாது.[e] முதல்நாள் சாயங்காலத்தில் பலியாகச் செலுத்திய
இறைச்சியை அடுத்த நாள் காலைவரை மீதி வைக்கக் கூடாது.[f] **5** உங்கள்
கடவுளாகிய யெகோவா கொடுக்கிற ஏதோவொரு நகரத்தில் பஸ்கா பலி
யைச் செலுத்தக் கூடாது. **6** உங்கள் கடவுளாகிய யெகோவா தன் பெய
ரின் மகிமைக்காகத் தேர்ந்தெடுக்கிற இடத்தில்தான் பலி செலுத்த வேண்
டும். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட அதே நேரத்தில், அதாவது
சாயங்காலத்தில் சூரியன் மறைந்தவுடன், பஸ்கா பலியை வெட்ட வேண்
டும்.[g] **7** உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்தெடுக்கிற இடத்தில்,[h]
அதை நெருப்பில் வாட்டி சாப்பிட வேண்டும்.[i] காலையில் உங்களுடைய
கூடாரத்துக்குத் திரும்பலாம். **8** ஆறு நாட்களுக்குப் புளிப்பில்லாத ரொட்
டிகளைச் சாப்பிட வேண்டும். ஏழாம் நாளில் உங்கள் கடவுளாகிய யெகோ
வாவுக்காக விசேஷ மாநாடு நடக்கும். அன்றைக்கு நீங்கள் எந்த வேலை
யும் செய்யக் கூடாது.[j]

9 விளைந்த கதிர்களை அறுவடை செய்ய ஆரம்பிக்கும் முதல் நாளிலி
ருந்து ஏழு வாரங்களை நீங்கள் கணக்கிட வேண்டும்.[k] **10** அவற்றின் முடி
வில், உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு வாரங்களின் பண்டிகையைக்
கொண்டாட வேண்டும்.[l] அப்போது, உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களை எந்தளவு ஆசீர்வதித்திருக்கிறாரோ அந்தளவு பலிகளை நீங்க
ளாகவே விருப்பப்பட்டுக் கொண்டுவர வேண்டும்.[m] **11** உங்கள் கடவுளா
கிய யெகோவா தன் பெயரின் மகிமைக்காகத் தேர்ந்தெடுக்கிற இடத்தில்
நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும். நீங்களும், உங்கள் மகன்களும்,
மகள்களும், உங்களிடம் அடிமையாக இருக்கிற ஆண்களும், பெண்க
ளும், உங்கள் நகரங்களில் வாழ்கிற லேவியர்களும், மற்ற தேசத்து ஜனங்
களும், அப்பா இல்லாத பிள்ளைகளும்,* விதவைகளும் உங்கள் கடவுளா
கிய யெகோவாவின் முன்னிலையில் சந்தோஷமாக இருக்க வேண்டும்.[n]
12 நீங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்ததை ஞாபகத்தில் வைத்து,[o]
இந்த எல்லா விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

13 உங்கள் களத்துமேட்டிலிருந்து தானியங்களையும் செக்கிலிருந்து
எண்ணெயையும் ஆலையிலிருந்து திராட்சமதுவையும் சேகரிக்கும்போது
ஏழு நாட்களுக்கு நீங்கள் கூடாரப் பண்டிகையைக் கொண்டாட வேண்
டும்.[p] **14** அந்தப் பண்டிகையின்போது நீங்களும், உங்கள் மகன்களும்,
மகள்களும், உங்களிடம் அடிமையாக இருக்கிற ஆண்களும், பெண்களும்,
உங்கள் நகரங்களில் வாழ்கிற லேவியர்களும், மற்ற தேசத்து ஜனங்களும்,
அப்பா இல்லாத பிள்ளைகளும், விதவைகளும் சந்தோஷமாக இருக்க
வேண்டும்.[q] **15** உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்தெடுக்கிற இடத்
தில், ஏழு நாட்கள் யெகோவாவுக்குப் பண்டிகை கொண்டாட வேண்டும்.[r]

16:11 * வே.வா., "அநாதைகளும்."

அதி. 16
a மத் 26:17
b யாத் 13:3; லேவி 23:6; எண் 28:17; 1கொ 5:8
c யாத் 12:33
d யாத் 12:14; யாத் 13:8, 9
e யாத் 12:15; யாத் 13:7
f யாத் 12:10; யாத் 34:25
g யாத் 12:3, 6; எண் 9:2, 3; மத் 26:19, 20
h யோவா 2:13; யோவா 11:55
i யாத் 12:8; 2நா 35:13
j யாத் 12:16; லேவி 23:8
k யாத் 23:16; யாத் 34:22; லேவி 23:15
l எண் 28:26
m உபா 16:17; 1கொ 16:2; 2கொ 8:12
n உபா 12:5-7
o யாத் 3:7; உபா 5:15
p யாத் 23:16; லேவி 23:34; எண் 29:12; உபா 31:10, 11; யோவா 7:2
q உபா 12:12; நெ 8:10, 17; பிர 5:18
r லேவி 23: 36, 40; நெ 8:18

ஏனென்றால், உங்கள் நிலத்தில் விளைகிற எல்லாவற்றையும் நீங்கள் செய்
கிற எல்லாவற்றையும் உங்கள் கடவுளாகிய யெகோவா ஆசீர்வதிப்பார்.[a]
நீங்கள் மிகவும் சந்தோஷமாக இருப்பீர்கள்.[b]

16 வருஷத்தில் மூன்று தடவை, அதாவது புளிப்பில்லாத ரொட்டிப்
பண்டிகை,[c] வாரங்களின் பண்டிகை,[d] கூடாரப் பண்டிகை[e] ஆகிய பண்டி
கைகளின்போது, உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்தெடுக்கிற இடத்
துக்கு ஆண்கள் எல்லாரும் அவர் முன்னால் வர வேண்டும். யாருமே
யெகோவாவுக்கு முன்னால் வெறுங்கையோடு வரக் கூடாது. **17** உங்கள்
கடவுளாகிய யெகோவா உங்களை எந்தளவு ஆசீர்வதித்திருக்கிறாரோ
அந்தளவு காணிக்கையை ஒவ்வொருவரும் கொண்டுவர வேண்டும்.[f]

18 ஒவ்வொரு கோத்திரத்துக்கும் உங்கள் கடவுளாகிய யெகோவா
கொடுக்கிற நகரங்களில் நியாயாதிபதிகளையும்[g] அதிகாரிகளையும் நீங்கள்
நியமிக்க வேண்டும். ஜனங்களுக்கு அவர்கள் நீதியோடு தீர்ப்பு சொல்ல
வேண்டும். **19** நியாயத்தைப் புரட்டவோ[h] பாரபட்சம் காட்டவோ[i] லஞ்
சம் வாங்கவோ கூடாது. ஏனென்றால், லஞ்சம் ஞானமுள்ளவர்களின் கண்
களை மறைத்துவிடும்,[j] நீதிமான்களைக்கூட உண்மைக்கு மாறாகப் பேச
வைத்துவிடும். **20** நீங்கள் நியாயத்தைச் செய்ய வேண்டும், நியாயத்தைச்
செய்யவே பாடுபட வேண்டும்.[k] அப்போதுதான், உங்கள் கடவுளாகிய
யெகோவா கொடுக்கிற தேசத்தைச் சொந்தமாக்கிக்கொண்டு அதில் நீடூழி
வாழ்வீர்கள்.

21 உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்துக்குப் பக்கத்தில்
எந்த மரத்தையும் பூஜைக் கம்பமாக* நாட்டக் கூடாது.[l]

22 உங்களுக்காகப் பூஜைத் தூணையும் நிறுத்தக் கூடாது,[m] அதை உங்
கள் கடவுளாகிய யெகோவா வெறுக்கிறார்" என்றார்.

17 பின்பு அவர், "ஊனமோ வேறெந்தக் குறையோ உள்ள ஒரு
மாட்டை அல்லது ஆட்டை உங்கள் கடவுளாகிய யெகோவா
வுக்குப் பலி செலுத்தக் கூடாது. ஏனென்றால், அது உங்கள் கடவுளாகிய
யெகோவாவுக்கு அருவருப்பானது.[n]

2 உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற நகரங்களில், ஒரு
ஆணோ பெண்ணோ உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பிடிக்காத
தைச் செய்து, அவருடைய ஒப்பந்தத்தை மீறி,[o] **3** என் கட்டளைக்கு[p]
எதிராக மற்ற தெய்வங்களையோ சூரியனையோ சந்திரனையோ வானத்
துப் படைகளையோ ஒருவேளை கும்பிடலாம்.[q] **4** அதைப் பற்றி உங்க
ளிடம் யாராவது சொன்னால் அல்லது உங்களுக்கே தெரியவந்தால், அதை
நன்றாக விசாரிக்க வேண்டும். இந்த அருவருப்பான காரியம் இஸ்ரவேலில்
நடந்தது உண்மை என்பது தெரியவந்தால்,[r] **5** இந்தக் குற்றத்தைச் செய்த
ஆணை அல்லது பெண்ணை நகரவாசலுக்குக் கொண்டுவர வேண்டும்,
பின்பு கல்லெறிந்து கொல்ல வேண்டும்.[s] **6** இரண்டு அல்லது மூன்று சாட்
சிகளின் வாக்குமூலத்தை வைத்துதான்[t] மரண தண்டனை கொடுக்க வேண்
டும். ஒரேவொரு சாட்சியின் வாக்குமூலத்தை வைத்து மரண தண்டனை
கொடுக்கக் கூடாது.[u] **7** அவனை அல்லது அவளைக் கொன்றுபோட
அந்தச் சாட்சிகள்தான் முதலில் கல்லெறிய வேண்டும். அதற்குப் பின்பு

16:21 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 16
a உபா 7:13, உபா 28:8, உபா 30:16
b பிலி 4:4, 1தெ 5:16
c யாத் 23:14, 15
d உபா 16:10
e உபா 16:13
f 2கொ 8:12
g யாத் 18:25, 26, உபா 1:16, 2நா 19:4, 5
h யாத் 23:2, லேவி 19:15
i உபா 1:17
j யாத் 23:8, 1சா 12:3, பிர 7:7
k மீ 6:8
l யாத் 34:13
m யாத் 23:24, லேவி 26:1, உபா 12:3

அதி. 17
n லேவி 22:20, உபா 15:21, மல் 1:8
o உபா 4:23, உபா 13:6-9
p உபா 13:12-15
q உபா 4:19
r யோவா 7:51
s உபா 13:6, 10
t மத் 18:16, யோவா 8:17, 1தீ 5:19, எபி 10:28
u எண் 35:30, உபா 19:15

மற்றவர்கள் கல்லெறிய வேண்டும். இப்படி, தீமையை உங்களிடமிருந்து
ஒழித்துக்கட்ட வேண்டும்.[a]

8 உங்கள் நகரங்கள் ஒன்றில் உங்களால் தீர்க்க முடியாத சிக்கலான
வழக்குகள் இருந்தால், அதாவது கொலைக்குற்றம்,[b] உரிமைப் பிரச்சினை,
வன்முறை, அல்லது வேறெதாவது சண்டை சச்சரவு சம்பந்தமான வழக்கு
கள் இருந்தால், உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்தெடுக்கிற இடத்துக்
குப் போக வேண்டும்.[c] **9** அந்தச் சமயத்தில் பொறுப்பில் இருக்கிற லேவி
யர்களான குருமார்களிடமும் நியாயாதிபதிகளிடமும்[d] போய் வழக்கைச்
சொல்ல வேண்டும். அவர்கள் தீர்ப்பு கொடுப்பார்கள்.[e] **10** யெகோவா
தேர்ந்தெடுக்கிற இடத்திலிருந்து அவர்கள் கொடுக்கிற தீர்ப்பின்படி நீங்கள்
செய்ய வேண்டும். அவர்கள் கொடுக்கிற எல்லா கட்டளைகளையும் செய்
யக் கவனமாக இருக்க வேண்டும். **11** அவர்கள் காட்டுகிற சட்டத்தின்
படியும் கொடுக்கிற தீர்ப்பின்படியும் நீங்கள் செய்ய வேண்டும்.[f] அவர்கள்
சொல்கிற தீர்ப்புக்கு அப்படியே கீழ்ப்படிய வேண்டும்.[g] **12** உங்களு
டைய நியாயாதிபதி சொல்வதையோ உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்
குச் சேவை செய்கிற குருவானவர் சொல்வதையோ கேட்காமல் அகங்
காரமாக* நடக்கிறவன் கொல்லப்பட வேண்டும்.[h] இப்படி, நீங்கள்
இஸ்ரவேலிலிருந்து தீமையை ஒழித்துக்கட்ட வேண்டும்.[i] **13** அப்போது
தான் எல்லா ஜனங்களும் அதைக் கேள்விப்பட்டு பயப்படுவார்கள், அதன்
பின் யாரும் அகங்காரமாக நடந்துகொள்ள மாட்டார்கள்.[j]

14 உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்துக்கு நீங்கள்
போய் அதில் குடியிருக்கும்போது, ‘சுற்றியுள்ள தேசத்தாரைப் போல
நாமும் ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொள்வோம்’ என்று நீங்கள் சொன்
னால்,[k] **15** உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்தெடுக்கிற ராஜாவை
மட்டும்தான் நீங்கள் நியமிக்க வேண்டும்.[l] உங்கள் சகோதரர்களில் ஒருவ
ரைத்தான் ராஜாவாக்க வேண்டும். வேறு தேசத்தைச் சேர்ந்தவனை
ராஜாவாக்கக் கூடாது. **16** ராஜா தனக்காக ஏராளமான குதிரைகளை
வைத்துக்கொள்ளக் கூடாது,[m] அல்லது இன்னும் அதிக குதிரைகளை வாங்
குவதற்காக ஜனங்களை எகிப்துக்கு அனுப்பக் கூடாது.[n] ஏனென்றால், ‘இனி
ஒருபோதும் நீங்கள் அந்தப் பக்கம் போகக் கூடாது’ என்று யெகோவா
சொல்லியிருக்கிறார். **17** ராஜாவின் இதயம் கடவுளைவிட்டு விலகாமல்
இருக்க வேண்டுமானால் அவர் நிறைய மனைவிகளை வைத்துக்கொள்ளக்
கூடாது.[o] வெள்ளியையும் தங்கத்தையும் ஏராளமாகக் குவித்து வைத்துக்
கொள்ளக் கூடாது.[p] **18** அவர் ராஜாவாக ஆட்சி செய்ய ஆரம்பிக்கும்
போது, லேவியர்களான குருமார்களிடம் உள்ள திருச்சட்ட புத்தகத்தை*[q]
பார்த்து தனக்காக ஒரு நகலை எழுதி வைத்துக்கொள்ள வேண்டும்.

19 அதை அவர் எப்போதும் வைத்திருக்க வேண்டும். தன்னுடைய
வாழ்நாளெல்லாம் அதை வாசிக்க வேண்டும்.[r] அப்போதுதான், தன் கடவு
ளாகிய யெகோவாவுக்குப் பயந்து நடக்கக் கற்றுக்கொள்வார், திருச்சட்
டத்திலுள்ள எல்லா வார்த்தைகளையும் விதிமுறைகளையும் கடைப்பிடிப்
பார்.[s] **20** அதோடு, தன் சகோதரர்களைவிட தன்னைப் பெரியவனாகக்

17:12 * இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. **17:18** * வே.வா., “சுருளை.”

அதி. 17
a உபா 13:5; 1கொ 5:13
b எண் 35:11
c உபா 12:5; 1ரா 3:16, 28; சங் 122:2, 5
d 1சா 7:15, 16
e உபா 19:17; உபா 21:5
f மல் 2:7
g உபா 5:32; உபா 12:32
h நீதி 11:2; எபி 10:28
i உபா 13:5; 1கொ 5:13
j உபா 13:11; உபா 19:20
k 1சா 8:5, 20; 1சா 10:19
l 1சா 9:17; 1சா 10:24; 1சா 16:12, 13
m உபா 20:1; 2சா 8:4; சங் 20:7; நீதி 21:31
n ஏசா 31:1
o 1ரா 11:1-3; நெ 13:26
p யோபு 31:24, 28; 1தீ 6:9
q உபா 31:9, 26; 2ரா 22:8
r 2நா 34:18
s சங் 1:2; சங் 119:97

காட்டிக்கொண்டு தலைக்கனத்தோடு* நடக்க மாட்டார். கடவுளுடைய கட்டளைகளை அச்சுப்பிசகாமல் கடைப்பிடிப்பார். அப்போது, அவரும் அவருடைய மகன்களும் இஸ்ரவேலில் ரொம்பக் காலத்துக்கு ஆட்சி செய்வார்கள்” என்றார்.

18 பின்பு அவர், “லேவியர்களாகிய குருமார்களுக்கும் சரி, லேவி கோத்திரத்தைச் சேர்ந்த மற்ற எல்லாருக்கும் சரி, இஸ்ரவேலில் பங்கோ சொத்தோ கிடையாது. யெகோவாவுக்குச் செலுத்தப்படுகிற தகன பலிகளிலிருந்து, அதாவது அவருடைய பங்கிலிருந்து, அவர்கள் சாப்பிடுவார்கள்.[a] **2** அதனால், அவர்களுடைய சகோதரர்களோடு அவர்களுக்கு எந்தச் சொத்தும் கிடையாது. யெகோவா அவர்களுக்குச் சொன்னபடி, அவர்தான் அவர்களுடைய சொத்து.

3 ஜனங்களிடமிருந்து குருமார்கள் உரிமையுடன் பெற்றுக்கொள்ள வேண்டியவை இவைதான்: ஒரு மாட்டையோ ஆட்டையோ பலி செலுத்துபவர், அதன் முன்னந்தொடையையும் தாடைகளையும் இரைப்பையையும் குருவானவருக்குக் கொடுக்க வேண்டும். **4** முதலில் விளைந்த தானியங்களையும் புதிய திராட்சமதுவையும் எண்ணெயையும் முதலில் கத்தரித்த ஆட்டு மயிரையும் குருவானவருக்குக் கொடுக்க வேண்டும்.[b] **5** யெகோவாவின் பெயரில் என்றென்றும் சேவை செய்ய அவரையும் அவருடைய மகன்களையும்தான் உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்தெடுத்திருக்கிறார்;[c] மற்ற கோத்திரங்களில் இருக்கிறவர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை.

6 ஆனால், இஸ்ரவேல் நகரம் ஒன்றில் வாழ்கிற ஒரு லேவியன்[d] அந்த நகரத்தைவிட்டு யெகோவா தேர்ந்தெடுக்கிற இடத்துக்கு*[e] போக ஆசைப்பட்டால், **7** அங்கே யெகோவாவின் முன்னிலையில் சேவை செய்கிற தன்னுடைய சகோதரர்களான லேவியர்களைப்[f] போலவே அவனும் தன் கடவுளாகிய யெகோவாவின் பெயரில் சேவை செய்யலாம். **8** மற்ற லேவியர்களுக்குக் கிடைக்கிற அதே அளவு உணவை அவனும் பெற்றுக்கொள்வான்.[g] அதோடு, பரம்பரைச் சொத்துகளை விற்பதன் மூலம் கிடைப்பதையும் அவன் அனுபவிப்பான்.

9 உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்துக்குப் போன பின்பு, மற்ற தேசத்தாரின் அருவருப்பான பழக்கவழக்கங்களை நீங்கள் கற்றுக்கொள்ளக் கூடாது.[h] **10** உங்களில் யாருமே தன் மகனை அல்லது மகளை நெருப்பில் பலி கொடுக்க* கூடாது.[i] குறிசொல்லவோ,[j] மாயமந்திரம் செய்யவோ,[k] சகுனம் பார்க்கவோ,[l] சூனியம் வைக்கவோ,[m] **11** வசியம் செய்யவோ, ஆவிகளோடு பேசுகிறவரிடம்[n] அல்லது குறிசொல்கிறவரிடம் போகவோ,[o] இறந்தவர்களைத் தொடர்புகொள்ளவோ கூடாது.[p] **12** ஏனென்றால், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறவர்கள் யெகோவாவுக்கு அருவருப்பானவர்கள். இந்த அருவருப்பான காரியங்களைச் செய்வதால்தான் உங்கள் கடவுளாகிய யெகோவா அந்தத் தேசத்தாரை உங்களிடமிருந்து துரத்திவிடுகிறார். **13** உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு முன்னால் நீங்கள் குற்றமற்றவர்களாக இருக்க வேண்டும்.[q]

17:20 *வே.வா., “உள்ளத்தில் பெருமையோடு.” **18:6** *அதாவது, “அவருடைய வணக்கத்தின் மையமாக அவர் தேர்ந்தெடுக்கிற இடத்துக்கு.” **18:10** *நே.மொ., “நெருப்பைக் கடக்க வைக்க.”

அதி. 18

a எண் 18:20, 24; உபா 10:9; யோசு 13:14, 33; 1கொ 9:13
b யாத் 23:19; எண் 18:8, 12; 2நா 31:4; நெ 12:44
c யாத் 28:1; எண் 3:10; உபா 10:8
d எண் 35:2
e உபா 12:5, 6; உபா 16:2; சங் 26:8
f 2நா 31:2
g லேவி 7:10
h லேவி 18:26; உபா 12:30
i உபா 12:31; 2ரா 16:1, 3; 2நா 28:1, 3; சங் 106:35-37; எரே 32:35
j 2ரா 17:17; அப் 16:16
k லேவி 19:26; அப் 19:19
l எசே 21:21
m யாத் 22:18
n லேவி 20:27; 1நா 10:13
o லேவி 19:31
p 1சா 28:7-11; ஏசா 8:19; கலா 5:19, 20
q மத் 5:48; 2பே 3:14

14 உங்கள் முன்னாலிருந்து துரத்தியடிக்கப்படுகிற அந்தத் தேசத்தார்,
மாயமந்திரம் செய்கிறவர்களின் பேச்சையும் குறிசொல்கிறவர்களின் பேச்
சையும் கேட்டு வந்தார்கள்.[a] ஆனால், உங்கள் கடவுளாகிய யெகோவா
இப்படிப்பட்ட எதையும் செய்ய உங்களை அனுமதிக்கவில்லை. **15** உங்
கள் கடவுளாகிய யெகோவா உங்கள் சகோதரர்களுக்குள் என்னைப்
போன்ற ஒரு தீர்க்கதரிசியைத் தேர்ந்தெடுத்து உங்களுக்காக நியமிப்பார்.
அவர் சொல்வதை நீங்கள் கேட்டு நடக்க வேண்டும்.[b] **16** ஓரேபில்
கூடிவந்த நாளில்[c] நீங்கள் கேட்டுக்கொண்டபடிதான், உங்கள் கடவுளாகிய
யெகோவா அவரை நியமிக்கப்போகிறார். அந்த நாளில் நீங்கள், 'இனி
நாங்கள் எங்களுடைய கடவுளாகிய யெகோவாவின் குரலைக் கேட்காம
லும், பற்றியெரிகிற அவருடைய நெருப்பைப் பார்க்காமலும் இருக்க
வேண்டும், இல்லாவிட்டால் நாங்கள் செத்தே விடுவோம்'[d] என்று சொன்
னீர்கள். **17** அதற்கு யெகோவா என்னிடம், 'அவர்கள் சொல்வது சரி
தான். **18** நான் அவர்கள் நடுவிலிருந்து உன்னைப் போன்ற ஒரு தீர்க்கத
ரிசியை நியமிப்பேன்.[e] என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்.[f]
என்னுடைய எல்லா கட்டளைகளையும் அவர்களுக்கு அவர் சொல்வார்.[g]
19 அவர் என் பெயரில் சொல்கிற வார்த்தைகளைக் கேட்டு நடக்காத
வனை நான் தண்டிப்பேன்.[h]

20 நான் சொல்லாத விஷயத்தை அகங்காரத்தோடு* என் பெயரில்
சொல்லும் தீர்க்கதரிசியும், மற்ற தெய்வங்களின் பெயரில் பேசும் தீர்க்கதரி
சியும் கொல்லப்பட வேண்டும்.[i] **21** ஆனாலும், "இதை யெகோவா
சொல்லவில்லை என்பது எனக்கு எப்படித் தெரியும்?" என்று ஒருவேளை
நீங்கள் நினைக்கலாம். **22** அந்தத் தீர்க்கதரிசி யெகோவாவின் பெயரில்
பேசியது நிறைவேறாமல் போனால் அல்லது பொய்த்துப் போனால், அதை
யெகோவா சொல்லவில்லை என்று நீங்கள் புரிந்துகொள்ளலாம். அந்தத்
தீர்க்கதரிசிதான் அதை அகங்காரத்தோடு சொல்லியிருக்கிறான். அவனுக்கு
நீங்கள் பயப்படக் கூடாது' என்று சொன்னார்" என்றார்.

19 பின்பு அவர், "உங்கள் கடவுளாகிய யெகோவா தருகிற தேசத்
திலுள்ள ஜனங்களை உங்கள் கடவுளாகிய யெகோவா அழிக்
கும்போது, அவர்களுடைய நகரங்களிலும் வீடுகளிலும் நீங்கள் குடியேறுவீர்
கள்.[j] **2** அப்போது, உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கும்
தேசத்தில் மூன்று நகரங்களை நீங்கள் பிரித்து வைக்க வேண்டும்.[k] **3** உங்
கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தை மூன்று
பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலும் ஒரு நகரத்தைத் தேர்ந்தெடுக்க
வேண்டும். தெரியாத்தனமாகக் கொலை செய்த ஒருவன் அந்த நகரங்களில்
ஒன்றுக்கு ஓடிப்போவதற்காகச் சாலைகளை அமைக்க வேண்டும்.

4 அங்கே ஓடிப்போகிறவனின் விஷயத்தில் பின்பற்ற வேண்டிய சட்டம்
இதுதான்: முன்விரோதம் இல்லாமல் அவன் இன்னொருவனை எதேச்சை
யாகத் தாக்கிக் கொன்றுவிட்டால்,[l] **5** இந்த நகரங்களில் ஒன்றுக்கு ஓடிப்
போய் உயிர் பிழைத்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை, விறகு
பொறுக்குவதற்காக அவன் இன்னொருவனோடு காட்டுக்குப் போயிருக்க

18:20 * இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது.

அதி. 18
a லேவி 19:26; யோசு 13:22; 2ரா 21:1, 2, 6
b ஆதி 49:10; எண் 24:17; லூ 7:16; யோவா 1:45; யோவா 6:14; அப் 3:22; அப் 7:37
c யாத் 19:17
d யாத் 20:19
e யாத் 34:28; எண் 12:3; மத் 4:1, 2; மத் 11:29; யோவா 5:46
f யோவா 17:8
g யோவா 12:49; எபி 1:2
h அப் 3:23
i உபா 13:1-5; எரே 28:11-17

அதி. 19
j உபா 7:1; உபா 9:1
k எண் 35:14; யோசு 20:7, 9
l எண் 35:15; உபா 4:42

லாம். அங்கே மரத்தை வெட்டுவதற்குத் தன்னுடைய கோடாலியை ஓங்
கும்போது, அதன் கைப்பிடியிலிருந்து அது கழன்று, அவனோடு வந்தவன்
மேல் விழுந்திருக்கலாம். அதனால், அவன் இறந்திருக்கலாம். அப்போது,
தெரியாத்தனமாகக் கொலை செய்தவன் இந்த நகரங்களில் ஒன்றுக்கு ஓடிப்
போய் உயிர் பிழைத்துக்கொள்ள வேண்டும்.[a] **6** ஒருவேளை அந்த நக
ரம் ரொம்பத் தூரத்தில் இருந்தால், பழிவாங்குபவன்*[b] அந்தக் கொலையா
ளியை விரட்டிப்பிடித்து ஆவேசத்தில் கொன்றுவிடலாம். ஆனால், அவன்
எந்தவித முன்விரோதமும் இல்லாமல் தெரியாத்தனமாகக் கொலை செய்தி
ருந்ததால், நியாயப்படி அவன் சாக வேண்டியதில்லை.[c] **7** அதனால்தான்,
'மூன்று நகரங்களைப் பிரித்து வையுங்கள்' என்று உங்களுக்குக் கட்டளை
கொடுக்கிறேன்.

8 நான் இன்று கொடுக்கிற எல்லா கட்டளைகளையும் நீங்கள் உண்மை
யுடன் கடைப்பிடித்து, உங்கள் கடவுளாகிய யெகோவாவை நேசித்து, என்
றைக்கும் அவருடைய வழிகளில் நடந்தால்,[d] உங்கள் முன்னோர்களுக்கு
வாக்குக் கொடுத்தபடியே உங்கள் எல்லையை உங்கள் கடவுளாகிய
யெகோவா விரிவுபடுத்தி,[e] அவர்களுக்குக் கொடுப்பதாகச் சொன்ன தேசம்
முழுவதையும் கொடுப்பார்.[f] **9** அப்போது, இந்த மூன்று நகரங்களோடு
வேறு மூன்று நகரங்களையும் நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும்.[g]
10 அப்படிச் செய்தால்தான், உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்
குச் சொத்தாகக் கொடுக்கிற தேசத்தில் எந்த அப்பாவியின் இரத்தமும் சிந்
தப்படாது,[h] எந்தக் கொலைப்பழியும்* உங்கள்மேல் வராது.[i]

11 ஆனால், ஒருவன் இன்னொருவன்மேல் இருக்கிற பகையினால்,[j]
பதுங்கியிருந்து அவனைத் தாக்கிக் கொன்றுவிட்டு, இந்த நகரங்களில்
ஒன்றுக்கு ஓடிப்போனால், **12** அவனுடைய நகரத்துப் பெரியோர்கள்*
அவனை அங்கிருந்து வரவழைத்து, பழிவாங்குபவனின் கையில் ஒப்ப
டைக்க வேண்டும், அவன் கொல்லப்பட வேண்டும்.[k] **13** அவனுக்காக
நீங்கள் பரிதாபப்படக் கூடாது. அப்பாவி மனுஷனைக் கொன்ற பழியை*
இஸ்ரவேலிலிருந்து நீக்க வேண்டும்.[l] அப்போதுதான் நீங்கள் சந்தோஷ
மாக வாழ்வீர்கள்.

14 உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்தில் உங்களுக்
குச் சேர வேண்டிய நிலத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளும்போது, மற்றவனு
டைய எல்லைக் குறியை நீங்கள் தள்ளிவைக்கக் கூடாது.[m] உங்கள் முன்
னோர்கள் குறித்து வைத்த எல்லை அது.

15 ஒருவன் செய்த தப்பை அல்லது பாவத்தை உறுதிசெய்ய ஒரேவொரு
சாட்சி போதாது.[n] இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாக்குமூலத்தை
வைத்துதான் அதை உறுதிசெய்ய வேண்டும்.[o] **16** ஒருவன் கெட்ட எண்
ணத்தோடு இன்னொருவனுக்கு எதிராகப் பொய் சாட்சி சொல்லி
அவன்மேல் குற்றம்சாட்டினால்,[p] **17** அந்த இரண்டு பேரும் யெகோவா
வுக்கு முன்னால், அதாவது அந்தச் சமயத்தில் குருமார்களாகவும் நியாயா
திபதிகளாகவும் இருப்பவர்களுக்கு முன்னால், வர வேண்டும்.[q] **18** அவர்
களை நியாயாதிபதிகள் நன்றாக விசாரிக்க வேண்டும்.[r] குற்றம்சாட்டியவன்

19:6 * அதாவது, "கொலை செய்யப்பட்டவனின் நெருங்கிய சொந்தக்காரன்." **19:10** * வே.வா., "இரத்தப்பழியும்." **19:12** * வே.வா., "மூப்பர்கள்." **19:13** * வே.வா., "அப்பாவியின் இரத்தப்பழியை."

அதி. 19
a எண் 35:25
b எண் 35:12, 19
c யோசு 20:4, 5
d உபா 11:22, 23
e ஆதி 15:18; யாத் 23:31; உபா 11:24
f ஆதி 28:14
g யோசு 20:7, 8
h நீதி 6:16, 17
i உபா 21:6-9
j 1யோ 3:15
k ஆதி 9:6; யாத் 21:12; எண் 35:16; உபா 27:24
l லேவி 24:17, 21; எண் 35:33; 2சா 21:1
m உபா 27:17
n எண் 35:30; உபா 17:6
o மத் 18:16; யோவா 8:17; 2கொ 13:1; 1தீ 5:19
p யாத் 23:1; 1ரா 21:13; மாற் 14:56
q உபா 17:8, 9
r உபா 13:14; உபா 17:4; 2நா 19:6

தன்னுடைய சகோதரனுக்கு எதிராகப் பொய் சாட்சி சொல்லியிருக்கிறான்
என்றும், அவன்மேல் பொய்க் குற்றம் சாட்டியிருக்கிறான் என்றும் தெரிய
வந்தால், **19** அவன் தன்னுடைய சகோதரனுக்குச் செய்ய நினைத்த கெடு
தலையே நீங்கள் அவனுக்குச் செய்ய வேண்டும்.[a] இப்படி, உங்கள் நடுவி
லிருந்து தீமையை ஒழித்துக்கட்ட வேண்டும்.[b] **20** அப்போதுதான், இதைக்
கேட்டு மற்றவர்கள் பயப்படுவார்கள், உங்கள் நடுவில் இனி ஒருபோதும்
அதுபோன்ற கெட்ட காரியத்தைச் செய்ய மாட்டார்கள்.[c] **21** அவன்மேல்
நீங்கள் பரிதாபப்படக் கூடாது.[d] உயிருக்கு உயிர், கண்ணுக்குக் கண், பல்லுக்
குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் எடுக்க வேண்டும்"[e] என்றார்.

20 பின்பு அவர், "நீங்கள் போருக்குப் போகும்போது, உங்களைவிட
உங்கள் எதிரிகளிடம் ஏராளமான குதிரைகளும் ரதங்களும் வீரர்க
ளும் இருப்பதைப் பார்த்தால் பயப்பட வேண்டாம். ஏனென்றால், எகிப்திலி
ருந்து உங்களைக் கூட்டிக்கொண்டு வந்த உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களோடு இருக்கிறார்.[f] **2** நீங்கள் போருக்குப் புறப்படும்போது, குரு
வானவர் வீரர்களின் முன்னால் வந்து,[g] **3** 'இஸ்ரவேலர்களே, கேளுங்கள்.
இன்று உங்களுடைய எதிரிகளோடு போர் செய்யப் போகிறீர்கள். தைரிய
மாக இருங்கள். அவர்களைப் பார்த்துப் பயப்படாதீர்கள், திகிலடையாதீர்
கள், நடுங்காதீர்கள். **4** ஏனென்றால், உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களோடு வருகிறார். அவர் எதிரிகளோடு போர் செய்து உங்களைக் காப்
பாற்றுவார்'[h] என்று சொல்ல வேண்டும்.

5 அதிகாரிகளும் அந்த வீரர்களிடம், 'உங்களில் யாராவது புது வீடு
கட்டி இன்னும் குடிபோகாமல்* இருந்தால், அவன் தன்னுடைய வீட்டுக்குத்
திரும்பிப் போகட்டும். அவன் ஒருவேளை போரில் இறந்துபோனால் இன்
னொருவன் அங்கு குடிபோக வேண்டியிருக்குமே. **6** யாராவது திராட்
சைத் தோட்டத்தை நாட்டி இன்னும் அதை அனுபவிக்காமல் இருந்தால்,
வீட்டுக்குத் திரும்பிப் போகட்டும். அவன் ஒருவேளை போரில் இறந்துபோ
னால் இன்னொருவன் அதை அனுபவிக்க வேண்டியிருக்குமே. **7** யாரா
வது ஒரு பெண்ணை நிச்சயம் செய்துவிட்டு இன்னும் கல்யாணம் செய்
யாமல் இருந்தால், வீட்டுக்குத் திரும்பிப் போகட்டும்.[i] அவன் ஒருவேளை
போரில் இறந்துபோனால் இன்னொருவன் அவளைக் கல்யாணம் செய்ய
வேண்டியிருக்குமே' என்று சொல்ல வேண்டும். **8** அதோடு, 'யாராவது
பயந்து நடுங்கிக்கொண்டு இருந்தால்,[j] வீட்டுக்குத் திரும்பிப் போகட்டும்.
இல்லாவிட்டால், மற்ற வீரர்களுடைய தைரியத்தையும் அவன் கெடுத்துவி
டுவான்'[k] என்று சொல்ல வேண்டும். **9** அதிகாரிகள் இப்படி வீரர்களிடம்
பேசி முடித்த பின்பு, அவர்களை நடத்திக்கொண்டு போவதற்குப் படைத்
தலைவர்களை நியமிக்க வேண்டும்.

10 நீங்கள் ஒரு நகரத்தைத் தாக்குவதற்காக அதை நெருங்கும்போது,
முதலில் உங்களோடு சமாதானம் செய்யச் சொல்லி அங்குள்ள ஜனங்க
ளுக்கு அறிவிப்பு செய்ய வேண்டும்.[l] **11** அவர்கள் தங்களுடைய நகர
வாசலைத் திறந்து உங்களோடு சமாதானத்துக்கு வந்தால், அவர்கள் எல்லா
ரும் உங்களுக்கு அடிமைகளாகி, உங்களுக்குப் பணிவிடை செய்வார்கள்.[m]
12 ஆனால், அவர்கள் உங்களோடு சமாதானத்துக்கு வராமல் சண்டை
போடுவதற்கு வந்தால், நீங்கள் அந்த நகரத்தைச் சுற்றிவளைக்க வேண்

20:5 * வே.வா., "திறப்பு விழா நடத்தாமல்."

அதி. 19
a நீதி 19:5
b உபா 21:20, 21; உபா 24:7; 1கொ 5:13
c உபா 13:11; உபா 17:13; 1தீ 5:20
d உபா 19:13
e யாத் 21:23-25; லேவி 24:20; மத் 5:38

அதி. 20
f உபா 3:22; உபா 31:6; சங் 20:7; நீதி 21:31
g எண் 31:6
h யாத் 14:14; யோசு 23:10
i உபா 24:5
j நியா 7:3
k எண் 13:33; எண் 14:1-3; எண் 32:9; உபா 1:28
l யோசு 11:19
m லேவி 25:44, 46; யோசு 9:22, 27

டும். **13** உங்கள் கடவுளாகிய யெகோவா அதை நிச்சயம் உங்கள்
கையில் கொடுப்பார். நீங்கள் அங்குள்ள ஆண்கள் எல்லாரையும் வெட்டி
வீழ்த்த வேண்டும். **14** ஆனால் அங்குள்ள பெண்களையும், பிள்ளைக
ளையும், மிருகங்களையும், கைப்பற்றிய மற்ற எல்லா பொருள்களையும்
நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.[a] உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களி
டம் ஒப்படைத்த எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய எல்லாவற்றையும் சாப்பி
டலாம்.[b]

15 தூரத்தில் இருக்கிற எல்லா நகரங்களுக்கும் இப்படித்தான் நீங்கள்
செய்ய வேண்டும். **16** ஆனால் பக்கத்தில் இருக்கிற நகரங்களையெல்லாம்
உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொத்தாகக் கொடுத்திருப்
பதால் அங்குள்ள எல்லாரையும்* ஒழித்துக்கட்ட வேண்டும்.[c] **17** உங்கள்
கடவுளாகிய யெகோவா கட்டளை கொடுத்தபடியே ஏத்தியர்கள், எமோரியர்
கள், கானானியர்கள், பெரிசியர்கள், ஏவியர்கள், எபூசியர்கள் ஆகிய எல்லா
ரையும் அடியோடு அழித்துவிட வேண்டும்.[d] **18** இல்லாவிட்டால், அவர்
களுடைய தெய்வங்களுக்குச் செய்கிற அருவருப்பான காரியங்களை
அவர்கள் உங்களுக்குக் கற்றுக்கொடுத்து, உங்கள் கடவுளாகிய யெகோவா
வுக்கு விரோதமாகப் பாவம் செய்ய வைத்துவிடுவார்கள்.[e]

19 நீங்கள் ஒரு நகரத்தைச் சுற்றிவளைத்து, பல நாட்களாகப்
போர் செய்து அதைக் கைப்பற்றினால், அங்குள்ள மரங்களைக் கோடாலி
யால் வெட்டிச் சாய்க்கக் கூடாது. அவற்றின் பழங்களை நீங்கள் சாப்பிட
லாம், ஆனால் அந்த மரங்களை வெட்டிச் சாய்க்கக் கூடாது.[f] மனுஷனை
அழிப்பது போல மரத்தை அழிப்பது சரியா? **20** ஒரு மரத்திலுள்ள
பழங்கள் சாப்பிட முடியாததாக இருந்தால் மட்டுமே அதை வெட்டிப்போ
டலாம். உங்களோடு போர் செய்யும் நகரத்தை வீழ்த்தும்வரை, அதைச் சுற்
றிவளைப்பதற்காக அப்படிப்பட்ட மரங்களை வெட்டி அவற்றைக் கம்பங்
களாக நாட்டலாம்” என்றார்.

21 பின்பு அவர், “உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கும் தேசத்
திலே ஒருவன் திறந்தவெளியில் கொலை செய்யப்பட்டுக் கிடந்
தால், கொலையாளி யாரென்று தெரியாமலும் இருந்தால், **2** உங்களு
டைய பெரியோர்களும்* நியாயாதிபதிகளும்[g] அந்த இடத்துக்குப் போக
வேண்டும். உடல் கிடக்கிற இடத்துக்கும் சுற்றியுள்ள நகரங்களுக்கும் உள்ள
தூரத்தை அவர்கள் அளக்க வேண்டும். **3** பின்பு, அந்த உடல் கிடக்
கிற இடத்துக்கு மிகவும் பக்கத்திலுள்ள நகரத்தின் பெரியோர்கள் மந்தையி
லிருந்து ஒரு இளம் பசுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தப் பசு
அதுவரை வேலையில் பழக்கப்படாததாகவும், நுகத்தடியில் பூட்டப்படாத
தாகவும் இருக்க வேண்டும். **4** அதன்பின், தண்ணீர் ஓடுகிற ஒரு பள்ளத்
தாக்குக்கு அந்த இளம் பசுவை அவர்கள் கொண்டுவந்து அதன் கழுத்தை
வெட்ட வேண்டும். அந்தப் பள்ளத்தாக்கு உழவு செய்யப்படாததாகவும்
விதை விதைக்கப்படாததாகவும் இருக்க வேண்டும்.[h]

5 யெகோவாவுக்குச் சேவை செய்வதற்கும் அவர் பெயரில் ஆசீர்வா
தம் செய்வதற்கும்[i] லேவியர்களான குருமார்களை யெகோவா தேர்ந்தெடுத்
திருப்பதால் அவர்களும் அங்கு வர வேண்டும்.[j] வன்முறை சம்பந்தப்பட்ட
வழக்குகளை எப்படித் தீர்க்க வேண்டுமென்று அவர்கள் சொல்வார்கள்.[k]

20:16 *வே.வா., “எல்லா உயிர்களையும்.” **21:2** *வே.வா., “மூப்பர்களும்.”

அதி. 20
a 2நா 14:13
b யோசு 22:8
c யோசு 6:17
யோசு 10:28
யோசு 11:11
d உபா 7:1
e யாத் 34:15
உபா 7:4
யோசு 23:12, 13
ஏசா 2:6
1கொ 5:6
1கொ 15:33
f நெ 9:25

அதி. 21
g உபா 16:18
h எண் 35:33
i எண் 6:23-27
1நா 23:13
j யாத் 28:1
k உபா 17:8, 9

6 அந்த உடல் கிடக்கிற இடத்துக்கு மிகவும் பக்கத்திலுள்ள நகரத்தின் பெரி
யோர்கள் எல்லாரும், பள்ளத்தாக்கில் வெட்டப்பட்ட அந்த இளம் பசுவின்
மேல் தங்கள் கைகளைக் கழுவ வேண்டும்.[a] **7** பின்பு அவர்கள், 'நாங்கள்
இவனைக் கொலை செய்யவில்லை, இவன் கொலை செய்யப்பட்டதை
நாங்கள் பார்க்கவும் இல்லை. **8** யெகோவாவே, நீங்கள் விடுவித்த[b] உங்
களுடைய இஸ்ரவேல் ஜனங்களைக் குற்றப்படுத்தாதீர்கள். இந்த அப்
பாவி மனுஷனைக் கொன்ற பழியை உங்களுடைய ஜனங்கள்மேல் சுமத்
தாதீர்கள்'[c] என்று சொல்ல வேண்டும். அப்போது, அந்தக் கொலைப்பழி*
அவர்கள்மேல் வராது. **9** இப்படி, நீங்கள் யெகோவாவுக்குப் பிரியமான
தைச் செய்தால் அந்த அப்பாவி மனுஷனின் கொலைப்பழியைச் சுமக்கா
மல் இருப்பீர்கள்.

10 உங்கள் கடவுளாகிய யெகோவா போரில் தோற்கடித்த எதிரிகளை
நீங்கள் ஒருவேளை பிடித்துக்கொண்டு வந்திருக்கலாம்.[d] **11** அவர்களில்
ஒரு அழகான பெண்ணை உங்களில் ஒருவன் பார்த்து, அவளிடம்
மயங்கி, அவளை மனைவியாக்கிக்கொள்ள விரும்பினால், **12** அவ
ளைத் தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வரலாம். அப்போது,
அவள் தன் தலையை மொட்டையடித்துக்கொண்டு, நகங்களை வெட்டிக்
கொள்ள வேண்டும். **13** பிடித்துவரப்பட்டபோது போட்டிருந்த உடையை
மாற்றிக்கொண்டு அவனுடைய வீட்டில் இருக்க வேண்டும். அவள் தன்னு
டைய அப்பா அம்மாவுக்காக ஒரு மாதம் முழுவதும் துக்கம் அனுச
ரிக்க வேண்டும்.[e] பின்பு, அவன் அந்தப் பெண்ணோடு உறவுகொள்ளலாம்.
அவர்கள் இரண்டு பேரும் கணவன் மனைவியாக வாழ்வார்கள். **14** அந்
தப் பெண்ணை அவனுக்குப் பிடிக்காமல்போனால், அவள் இஷ்டப்படுகிற
இடத்துக்குப் போக அவளை விட்டுவிட வேண்டும்.[f] அவளை விற்கவோ
கொடுமைப்படுத்தவோ கூடாது; ஏனென்றால், அவளைக் கட்டாயப்படுத்தி
மனைவியாக்கிக்கொண்டான்.*

15 ஒருவேளை ஒருவனுக்கு இரண்டு மனைவிகள் இருக்கலாம். அவர்க
ளில் ஒருத்தியை அவன் அதிகமாக நேசிக்கலாம். அந்த இரண்டு மனைவி
களுக்கும் மகன்கள் பிறக்கலாம். அவனுக்குப் பிடிக்காதவள் பெற்றெடுத்த
மகன் மூத்த மகனாக இருந்தால்,[g] **16** தன்னுடைய மகன்களுக்குச் சொத்
தைப் பிரித்துக் கொடுக்கும் நாளில், பிடிக்காதவளுக்குப் பிறந்த மகனுக்குப்
பதிலாகப் பிடித்தவளுக்குப் பிறந்த மகனை மூத்த மகனாக நடத்தக் கூடாது.
17 பிடிக்காதவளுக்குப் பிறந்த மகனுக்கு எல்லாவற்றிலும் இரண்டு பங்
கைக் கொடுத்து மூத்த மகனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்
றால், அவன்தான் முதல் வாரிசு.* மூத்த மகனின் உரிமை அவனுக்குத்தான்
கிடைக்க வேண்டும்.[h]

18 ஒருவேளை ஒரு மகன் பிடிவாதக்காரனாகவும், அடங்காதவனாக
வும், அம்மா அப்பாவின் பேச்சைக் கேட்காதவனாகவும் இருக்கலாம்.[i]
அவனைத் திருத்துவதற்கு அவர்கள் எவ்வளவோ பாடுபட்டும் அவன்
திருந்தாமல் இருந்தால்,[j] **19** அவர்கள் அவனைப் பிடித்து நகரவாசலில்
இருக்கிற பெரியோர்களிடம் கொண்டுபோக வேண்டும். **20** அங்கே
அவர்களிடம், 'இந்தப் பையன் ரொம்பப் பிடிவாதக்காரனாக இருக்கிறான்,

---

21:8 *வே.வா., "இரத்தப்பழி." **21:14** *வே.வா., "அவளை அவமானப்படுத்திவிட்
டான்." **21:17** *வே.வா., "அவனுடைய ஆண்மையின் முதல் பலன்."

அதி. 21
a சங் 26:6
மத் 27:24
b 2சா 7:23
c ஏசா 26:21
எரே 26:15
d எண் 31:9
உபா 20:
13, 14
e எண் 20:29
உபா 34:8
f உபா 24:1
g ஆதி 29:
30, 33
h ஆதி 25:31
2நா 21:3
i யாத் 20:12
உபா 27:16
நீதி 1:8
எபே 6:1
j உபா 8:5
நீதி 13:24
நீதி 19:18
நீதி 23:13
எபி 12:9

அடங்குவதே கிடையாது. எங்கள் பேச்சைக் கேட்பதே இல்லை. எப்போது பார்த்தாலும் குடித்துக்கொண்டும்[a] தின்றுகொண்டும்[b] இருக்கிறான்' என்று சொல்ல வேண்டும். **21** அப்போது, அந்த நகரத்தின் ஆண்கள் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும். இப்படி, உங்கள் நடுவிலிருந்து தீமையை ஒழித்துக்கட்ட வேண்டும். இஸ்ரவேலர்கள் எல்லாரும் அதைக் கேட்டு பயப்படுவார்கள்.[c]

22 ஒருவன் ஒரு பெரிய பாவத்தைச் செய்திருந்தால் அதற்காக அவனுக்கு மரண தண்டனை கொடுக்கப்படலாம்.[d] அவனுடைய உடலை மரக் கம்பத்தில் தொங்கவிடுவதாக இருந்தால்,[e] **23** ராத்திரி முழுவதும் அதை மரக் கம்பத்திலேயே விட்டுவிடக் கூடாது.[f] அந்த நாளிலேயே அவனைக் கண்டிப்பாக அடக்கம் செய்துவிட வேண்டும். ஏனென்றால், மரக் கம்பத்தில் தொங்கவிடப்பட்டவன் கடவுளால் சபிக்கப்பட்டவன்.[g] உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொத்தாகக் கொடுக்கிற தேசத்தை நீங்கள் தீட்டுப்படுத்தக் கூடாது"[h] என்றார்.

22 பின்பு அவர், "ஒரு இஸ்ரவேலனுடைய ஆடோ மாடோ வழிதவறித் திரிவதை நீங்கள் பார்த்தால், கண்டும்காணாமல் போய்விடக் கூடாது.[i] அதை அவனிடம் கண்டிப்பாகக் கொண்டுபோய் விடவேண்டும். **2** அவனுடைய வீடு அக்கம்பக்கத்தில் இல்லாவிட்டால் அல்லது அவன் யாரென்று தெரியாவிட்டால், அந்த மிருகத்தை உங்கள் வீட்டுக்குக் கொண்டுவர வேண்டும். அவன் தேடி வரும்வரை அதை உங்களிடம் வைத்திருக்க வேண்டும். பின்பு, அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.[j] **3** அவனிடமிருந்து காணாமல் போனது கழுதையாக இருந்தாலும் துணிமணியாக இருந்தாலும் வேறெதுவாக இருந்தாலும், அதை நீங்கள் கண்டுபிடித்திருந்தால் இப்படித்தான் செய்ய வேண்டும். அதைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருந்துவிடக் கூடாது.

4 ஒரு இஸ்ரவேலனுடைய கழுதையோ காளையோ வழியில் விழுந்து கிடப்பதை நீங்கள் பார்த்தால், கண்டும்காணாமல் போய்விடக் கூடாது. அதைத் தூக்கிவிட கண்டிப்பாக அவனுக்கு உதவி செய்ய வேண்டும்.[k]

5 ஆண்களின் உடையைப் பெண்கள் போட்டுக்கொள்ளவோ பெண்களின் உடையை ஆண்கள் போட்டுக்கொள்ளவோ கூடாது. அப்படிச் செய்கிறவர்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு அருவருப்பானவர்கள்.

6 போகும் வழியில், நீங்கள் ஒரு பறவையின் கூட்டை மரத்திலோ தரையிலோ ஒருவேளை பார்க்கலாம். அதில் குஞ்சுகளோ முட்டைகளோ இருக்கலாம். அவற்றின் மேல் தாய்ப் பறவை உட்கார்ந்திருந்தால், தாயையும் குஞ்சுகளையும் சேர்த்து எடுத்துக்கொள்ளக் கூடாது.[l] **7** தாய்ப் பறவையைப் போகவிட்ட பின்பு குஞ்சுகளை எடுத்துக்கொள்ளலாம். அப்படிச் செய்தால்தான், நீங்கள் ரொம்பக் காலம் சந்தோஷமாக வாழ்வீர்கள்.

8 நீங்கள் புது வீடு கட்டினால், மொட்டைமாடிக்குக்[m] கைப்பிடிச்சுவர் வைக்க வேண்டும். ஏனென்றால், மாடியிலிருந்து யாராவது கீழே விழுந்தால் உங்கள் வீட்டில் இருக்கிறவர்கள்மேல் கொலைப்பழி* வரும்.

9 உங்கள் திராட்சைத் தோட்டத்தில் வேறெந்த விதையையும் விதைக்கக் கூடாது.[n] அப்படி விதைத்தால், விளைந்த பயிர்களையும் திராட்சைத்

22:8 * வே.வா., "இரத்தப்பழி."

அதி. 21
a ரோ 13:13, 1கொ 6:10, எபே 5:18
b நீதி 28:7
c உபா 13:10, 11
d எண் 25:5
e யோசு 10:26, அப் 10:39
f யோசு 8:29, யோவா 19:31
g கலா 3:13
h எண் 35:34

அதி. 22
i யாத் 23:4
j மத் 7:12
k யாத் 23:5, லேவி 19:18, லூ 10:27, கலா 6:10
l லேவி 22:28, சங் 145:9, நீதி 12:10, மத் 10:29
m 2சா 11:2, அப் 10:9
n லேவி 19:19

தோட்டத்தின் விளைச்சலையும் சேர்த்து வழிபாட்டுக் கூடாரத்துக்குக்
கொடுத்துவிட வேண்டும்.

10 காளையையும் கழுதையையும் இணைத்து நிலத்தை உழக் கூடாது.[a]

11 கம்பளியையும் நாரிழையையும்* சேர்த்து நெய்த உடையை நீங்கள்
போட்டுக்கொள்ளக் கூடாது.[b]

12 உங்கள் உடையின் நான்கு ஓரங்களிலும் குஞ்சங்கள்* வைக்க
வேண்டும்.[c]

13 ஒருவன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு அவளுடன்
உறவுகொண்ட பின்பு அவளை வெறுத்து, **14** நடத்தை கெட்டவள் என்று
குற்றம்சாட்டி, 'இந்தப் பெண்ணை நான் கல்யாணம் செய்தேன், ஆனால் இவ
ளோடு உறவுகொண்டபோது இவள் கற்பில்லாதவள் என்று தெரிந்து
கொண்டேன்' என்று சொல்லி அவளுடைய பெயரைக் கெடுத்தால்,
15 அவள் கற்புள்ளவள் என்பதற்கான ஆதாரத்தை அவளுடைய அம்மா
வும் அப்பாவும் நகரவாசலில் இருக்கிற பெரியோர்களிடம்* கொண்டு
போய்க் காட்ட வேண்டும். **16** அந்தப் பெண்ணின் அப்பா அந்தப் பெரி
யோர்களிடம், 'இவனுக்கு நான் என் பெண்ணைக் கொடுத்தேன். ஆனால்,
இவன் அவளை வெறுக்கிறான். **17** "உங்கள் மகள் கற்பில்லாதவள் என்ப
தைத் தெரிந்துகொண்டேன்" என்று சொல்லி அவள்மேல் அபாண்டமாகப்
பழி போடுகிறான். ஆனால், அவள் கற்புள்ளவள் என்பதற்கு இதோ ஆதா
ரம்' என்று சொல்ல வேண்டும். பின்பு, நகரத்துப் பெரியோர்கள் முன்
னால் அவர்கள் அந்தத் துணியை விரிக்க வேண்டும். **18** அப்போது, நக
ரத்துப் பெரியோர்கள்[d] அவனைப் பிடித்து தண்டனை விதிக்க வேண்டும்.[e]
19 அவனுக்கு 100 வெள்ளி சேக்கல்* அபராதம் விதிக்க வேண்டும். அதை
வாங்கி அந்தப் பெண்ணின் அப்பாவிடம் கொடுக்க வேண்டும். ஏனென்
றால், இஸ்ரவேலிலுள்ள ஒரு கன்னிப்பெண்ணின் பெயரை அவன் கெடுத்தி
ருக்கிறான்.[f] அவள் தொடர்ந்து அவனுடைய மனைவியாக இருப்பாள். வாழ்
நாள் முழுக்க அவளை அவன் விவாகரத்து செய்யக் கூடாது.

20 ஆனால், அவனுடைய குற்றச்சாட்டு உண்மையாக இருந்து,
அவள் கற்புள்ளவள் என்பதற்கு ஆதாரம் இல்லாவிட்டால், **21** அந்தப்
பெண்ணை அவளுடைய அப்பாவின் வீட்டு வாசலுக்குக் கொண்டுவர
வேண்டும். அந்த நகரத்து ஆண்கள் அவளைக் கல்லெறிந்து கொல்ல
வேண்டும். ஏனென்றால், அவள் தன்னுடைய அப்பாவின்[g] வீட்டில் இருந்த
போது ஒழுக்கக்கேடாக நடந்திருக்கிறாள்.* இஸ்ரவேலில் கேவலமான காரி
யத்தைச் செய்திருக்கிறாள்.[h] அதனால், தீமையை உங்கள் நடுவிலிருந்து
ஒழித்துக்கட்ட வேண்டும்.[i]

22 ஒருவன் இன்னொருவனுடைய மனைவியோடு உறவுகொள்ளும்
போது கையும் களவுமாகப் பிடிபட்டால், அவனும் அவளும் கொல்லப்பட
வேண்டும்.[j] இப்படி, தீமையை இஸ்ரவேலின் நடுவிலிருந்து ஒழித்துக்கட்ட
வேண்டும்.

23 ஒருவனுக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னிப்பெண் ஊருக்குள் இருக்கும்
போது இன்னொருவன் அவளைப் பார்த்து அவளுடன் உறவுகொண்டால்,

22:11 *அதாவது, "லினனையும்." **22:12** *வே.வா., "தொங்கல்கள்." **22:15** *வே.வா., "மூப்பர்களிடம்." **22:19** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **22:21** *வே.வா., "விபச்சாரம் செய்திருக்கிறாள்."

அதி. 22
a நீதி 12:10
b லேவி 19:19
c எண் 15:38; மத் 23:2, 5
d யாத் 18:21; உபா 1:13; உபா 16:18
e உபா 25:2; நீதி 10:13; நீதி 19:29
f மல் 2:16
g லேவி 21:9
h எபி 13:4
i லேவி 11:45; 1கொ 5:13
j ஆதி 20:3; யாத் 20:14; லேவி 20:10; 1கொ 6:9, 10; 1கொ 6:18

24 அந்த இரண்டு பேரையும் நகரவாசலுக்குக் கொண்டுவந்து கல்லெறிந்து
கொல்ல வேண்டும். ஏனென்றால், அந்தப் பெண் ஊருக்குள் இருந்தும்
உதவிக்காகக் கூச்சல் போடவில்லை. அந்த மனுஷனும் இன்னொருவனு
டைய மனைவியாகிய அவளை மானபங்கம் செய்துவிட்டான்.[a] அதனால்,
தீமையை உங்கள் நடுவிலிருந்து ஒழித்துக்கட்ட வேண்டும்.

25 ஆனால், நிச்சயிக்கப்பட்ட அந்தப் பெண்ணை வயல்வெளியில்
அவன் பார்த்து அவளைப் பலாத்காரம் செய்தால், அவன் மட்டும்தான்
கொல்லப்பட வேண்டும். **26** அந்தப் பெண்ணை நீங்கள் ஒன்றும் செய்
யக் கூடாது. மரண தண்டனை பெற வேண்டிய அளவுக்கு எந்தக் குற்றமும்
அவள் செய்யவில்லை. ஒருவன் இன்னொருவனைத் தாக்கி படுகொலை
செய்வதைப் போலத்தான் இதையும் கருத வேண்டும்.[b] **27** ஏனென்றால்,
அந்தப் பெண்ணை வயல்வெளியில் அவன் கெடுத்தபோது அவள் கூச்சல்
போட்டும், காப்பாற்ற யாரும் வராமல் போய்விட்டார்கள்.

28 ஆனால், நிச்சயிக்கப்படாத கன்னிப்பெண்ணை ஒருவன் பார்த்து
அவளைப் பலவந்தமாய்ப் பிடித்திழுத்து அவளுடன் உறவுகொண்டால்,
அவர்கள் பிடிபடும்போது,[c] **29** அவளுடன் உறவுகொண்டவன் அவளு
டைய அப்பாவுக்கு 50 வெள்ளி சேக்கல் கொடுக்க வேண்டும். அவள் அவ
னுடைய மனைவியாவாள்.[d] ஏனென்றால், அவன் அவளை மானபங்கம்
செய்துவிட்டான். வாழ்நாள் முழுக்க அவளை அவன் விவாகரத்து செய்
யக் கூடாது.

30 ஒருவனும் தன் அப்பாவின் மனைவியைத் தன்னுடைய மனைவி
யாக்கிக்கொள்ளக் கூடாது. அது அவனுடைய அப்பாவை அவமானப்படுத்
துவதாக இருக்கும்”[e] என்றார்.

23 பின்பு அவர், “விரை நசுக்கப்பட்ட அல்லது ஆணுறுப்பு அறுக்கப்
பட்ட எவனும் யெகோவாவின் சபையில் ஒருவனாக இருக்க
முடியாது.[f]

2 முறைகேடாகப் பிறந்த எவனும் யெகோவாவின் சபையில் ஒரு
வனாக இருக்க முடியாது.[g] அவனுடைய வம்சத்தார் யாருமே, அவன் பத்
தாம் தலைமுறையைச் சேர்ந்தவனாக இருந்தாலும், யெகோவாவின் சபை
யில் ஒருவனாக இருக்க முடியாது.

3 அம்மோனியனும் மோவாபியனும் யெகோவாவின் சபையில் ஒருவ
னாக இருக்க முடியாது.[h] அவர்களுடைய வம்சத்தார் யாருமே, அவன் பத்
தாம் தலைமுறையைச் சேர்ந்தவனாக இருந்தாலும், யெகோவாவின்
சபையில் ஒருவனாக இருக்கவே முடியாது. **4** ஏனென்றால், நீங்கள் எகிப்
திலிருந்து வரும் வழியில் அவர்கள் உங்களுக்கு உணவும் தண்ணீரும்
கொடுத்து உதவி செய்யவில்லை.[i] அதுமட்டுமல்ல, உங்களைச் சபிக்கச்
சொல்லி, மெசொப்பொத்தாமியா பகுதியிலுள்ள பெத்தூரைச் சேர்ந்த
பெயோரின் மகனாகிய பிலேயாமுக்குக் கூலி கொடுத்தார்கள்.[j]
5 ஆனால், உங்கள் கடவுளாகிய யெகோவா பிலேயாமின் வேண்டுத
லைக் கேட்கவில்லை.[k] அதற்குப் பதிலாக, உங்கள் கடவுளாகிய யெகோவா
அந்தச் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றினார்.[l] ஏனென்றால், உங்கள் கடவு
ளாகிய யெகோவா உங்களை நேசித்தார்.[m] **6** அவர்களுடைய நிம்மதிக்
காகவோ சந்தோஷத்துக்காகவோ நீங்கள் எதையும் எப்போதும் செய்யக்
கூடாது.[n]

அதி. 22
a லேவி 20:10
உபா 5:18
1தெ 4:3, 6
எபி 13:4
b ஆதி 4:8
எண் 35:
20, 21
யாக் 2:11
c ஆதி 34:2, 5
d ஆதி 34:
11, 12
யாத் 22:16
e லேவி 18:8
லேவி 20:11
உபா 27:20
1கொ 5:1

அதி. 23
f லேவி 21:
18, 20
ஏசா 56:4, 5
g யாத் 20:14
லேவி 20:10
h நெ 13:1, 2
i நியா 11:18
j எண் 22:6
யோசு 24:9
k எண் 22:35
l எண் 23:11, 25
எண் 24:10
m உபா 7:7, 8
n 2சா 8:2
2சா 12:31

7 ஏதோமியனை நீங்கள் வெறுக்கக் கூடாது, ஏனென்றால் அவன் உங்
களுடைய சகோதரன்.[a]

எகிப்தியனை நீங்கள் வெறுக்கக் கூடாது, ஏனென்றால் நீங்கள் அவ
னுடைய தேசத்தில் குடியிருந்தீர்கள்.[b] **8** அவர்களுடைய மூன்றாம் தலை
முறையைச் சேர்ந்த எவனும் யெகோவாவின் சபையில் ஒருவனாக
இருக்கலாம்.

9 விரோதிகளுக்கு எதிராகப் போர் செய்ய நீங்கள் முகாம்போட்டிருக்கும்
சமயத்தில், எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.[c]
10 ராத்திரியில் விந்து வெளியேறியதால் உங்களில் ஒருவன் தீட்டுப்பட்
டிருந்தால்,[d] முகாமுக்கு வெளியே அவன் போக வேண்டும், முகாமுக்
குள் திரும்பி வரக் கூடாது. **11** ஆனால், அவன் சாயங்காலத்தில் குளித்து
விட்டு, சூரியன் மறைந்தவுடன் முகாமுக்குள் வரலாம்.[e] **12** மலஜலம்
கழிப்பதற்காக முகாமுக்கு வெளியே ஒரு இடத்தை ஒதுக்கி வைத்துக்
கொண்டு, அங்குதான் நீங்கள் போக வேண்டும். **13** ஆயுதங்களோடு ஒரு
சிறிய தடியையும் நீங்கள் எடுத்துக்கொண்டு போக வேண்டும். அந்தத் தடி
யால் குழிதோண்டி மலஜலம் கழித்துவிட்டு மண்ணைப் போட்டு மூடிவிட
வேண்டும். **14** உங்களைக் காப்பாற்றுவதற்காகவும் எதிரிகளை உங்கள்
கையில் கொடுப்பதற்காகவும் உங்கள் கடவுளாகிய யெகோவா உங்கள்
முகாமுக்குள் நடந்துகொண்டிருக்கிறார்.[f] அதனால், உங்கள் முகாம் பரிசுத்த
மாக இருக்க வேண்டும்.[g] இல்லாவிட்டால், உங்கள் நடுவில் அருவருப்பான
எதையாவது பார்த்து அவர் உங்களைவிட்டு விலகிப் போய்விடுவார்.

15 ஒரு அடிமை தன் எஜமானிடமிருந்து தப்பித்து உங்களிடம் வந்
தால், அவனை அந்த எஜமானிடம் ஒப்படைக்கக் கூடாது. **16** உங்களு
டைய நகரம் ஒன்றில் அவனுக்குப் பிடித்த இடத்தில் அவன் உங்களுடன்
வாழலாம். நீங்கள் அவனைக் கொடுமைப்படுத்தக் கூடாது.[h]

17 இஸ்ரவேலைச் சேர்ந்த எந்த ஆணும் பெண்ணும் கோயிலில் விபச்
சாரம் செய்கிறவர்களாக இருக்கக் கூடாது.[i] **18** விபச்சாரம் செய்கிற ஒரு
ஆணோ பெண்ணோ தனக்குக் கிடைத்த கூலியை உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் வீட்டுக்குக் கொண்டுவரக் கூடாது. தான் நேர்ந்துகொண்
டதை நிறைவேற்ற அந்தக் கூலியைப் பயன்படுத்தக் கூடாது. ஏனென்
றால், அவர்களையும் அவர்களுக்குக் கிடைத்த கூலியையும் உங்கள் கடவு
ளாகிய யெகோவா அருவருக்கிறார்.

19 உங்கள் சகோதரனிடம் நீங்கள் வட்டி வாங்கக் கூடாது.[j] கடனா
கக் கொடுத்த பணத்துக்காகவும் உணவுக்காகவும் வேறெந்தப் பொருளுக்கா
கவும் வட்டி வாங்கக் கூடாது. **20** மற்ற தேசத்தைச் சேர்ந்தவனிடம் நீங்
கள் வட்டி வாங்கலாம்,[k] ஆனால் உங்கள் சகோதரனிடம் வட்டி
வாங்கக் கூடாது.[l] அப்போதுதான், நீங்கள் சொந்தமாக்கிக்கொள்கிற தேசத்
தில் நீங்கள் செய்வதையெல்லாம் உங்கள் கடவுளாகிய யெகோவா ஆசீர்
வதிப்பார்.[m]

21 உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு எதையாவது கொடுப்பதாக
நேர்ந்துகொண்டால்,[n] அதைக் கொடுக்கத் தாமதிக்காதீர்கள்.[o] ஏனென்றால்,
உங்கள் கடவுளாகிய யெகோவா அதை நிச்சயம் உங்களிடம் கேட்பார். நீங்
கள் அதை நிறைவேற்றாவிட்டால் பாவம் செய்தவர்களாக இருப்பீர்கள்.[p]
22 நீங்கள் எதையும் நேர்ந்துகொள்ளாமல் இருந்தால், உங்களுக்குப்

அதி. 23

a ஆதி 25:25, 26; ஆதி 36:1; எண் 20:14

b ஆதி 46:6; லேவி 19:34; சங் 105:23

c 1சா 21:5; 2சா 11:11

d லேவி 15:16

e லேவி 15:31

f லேவி 26:12

g 1பே 1:16

h யாத் 22:21

i லேவி 19:29; லேவி 21:9; 1ரா 14:24; 2ரா 23:7

j யாத் 22:25; லேவி 25:36, 37; நெ 5:10; சங் 15:5

k உபா 15:6

l நீதி 28:8

m உபா 15:4; உபா 15:7, 10; நீதி 19:17; லூ 6:34, 35

n நியா 11:30, 31; 1சா 1:11

o யோனா 2:9

p பிர 5:4, 6

பாவம் இல்லை.[a] **23** சொன்ன சொல்லை நீங்கள் காப்பாற்ற வேண்
டும்.[b] உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நீங்களாகவே விருப்பப்பட்டு
எதையாவது பலி செலுத்துவதாக நேர்ந்துகொண்டால், அதை நீங்கள் நிறை
வேற்ற வேண்டும்.[c]

24 நீங்கள் மற்றவனின் திராட்சைத் தோட்டத்துக்குள் போனால், ஆசை
தீர திராட்சைப் பழங்களைச் சாப்பிடலாம். ஆனால், அதில் ஒன்றைக்கூட
உங்கள் கூடையில் எடுத்துக்கொள்ளக் கூடாது.[d]

25 நீங்கள் இன்னொருவரின் வயலுக்குப் போனால், அங்குள்ள கதிர்க
ளைக் கைகளால் பிடுங்கிச் சாப்பிடலாம். ஆனால், அரிவாளால் வெட்டி
எடுத்துக்கொள்ளக் கூடாது"[e] என்றார்.

24 பின்பு அவர், "ஒருவன் ஒருத்தியைக் கல்யாணம் செய்தபின் அவள்
செய்கிற ஏதோவொரு கேவலமான காரியத்தைப் பார்த்து அவளை
வெறுத்தால், விவாகரத்துப் பத்திரத்தை[f] அவளிடம் எழுதிக்கொடுத்து வீட்
டைவிட்டு அனுப்பிவிட வேண்டும்.[g] **2** அவனுடைய வீட்டைவிட்டு
போன பின்பு அவள் இன்னொருவனுக்கு மனைவியாகலாம்.[h] **3** இரண்டா
வது கணவனும் அவளை வெறுத்து* விவாகரத்துப் பத்திரத்தை அவளிடம்
எழுதிக்கொடுத்து வீட்டைவிட்டு அனுப்பிவிட்டால், அல்லது அந்த இரண்
டாவது கணவன் இறந்துவிட்டால், **4** அவளை விவாகரத்து செய்த முத
லாவது கணவன் மறுபடியும் அவளைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது.
அது யெகோவாவுக்கு அருவருப்பானது. ஏனென்றால், முதல் கணவனுக்கு
அவள் அசுத்தமானவள். உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச்
சொத்தாகக் கொடுக்கிற தேசத்தை நீங்கள் பாவத்தால் நிரப்பக் கூடாது.

5 ஒருவன் புதிதாகக் கல்யாணம் செய்திருந்தால் படையில் சேவை செய்
யக் கூடாது. அவனுக்கு வேறெந்த வேலையும் கொடுக்கக் கூடாது. அவன்
ஒரு வருஷ காலத்துக்குத் தன்னுடைய வீட்டில் தங்கி, தன் மனைவியைச்
சந்தோஷப்படுத்த வேண்டும்.[i]

6 மாவு அரைக்கிற கல்லின்* அடிக்கல்லையோ மேல்கல்லையோ
யாரும் அடமானமாக வாங்கக் கூடாது.[j] அது ஒருவருடைய பிழைப்
பையே# அடமானம் வாங்குவதாக இருக்கும்.

7 ஒருவன் இன்னொரு இஸ்ரவேலனைக் கடத்திக்கொண்டு போய்,
கொடுமைப்படுத்தி, விற்றுவிட்டால்,[k] கடத்தியவன் கொல்லப்பட வேண்
டும்.[l] உங்கள் நடுவிலிருந்து தீமையை ஒழித்துக்கட்ட வேண்டும்.[m]

8 உங்களைத் தொழுநோய்* தாக்கினால், லேவி கோத்திரத்தின் குரு
மார்கள் சொல்கிற எல்லாவற்றையும் மிகக் கவனமாகச் செய்யுங்கள்.[n] நான்
அவர்களுக்குக் கட்டளை கொடுத்ததை அச்சுப்பிசகாமல் செய்யுங்கள்.
9 நீங்கள் எகிப்திலிருந்து வரும் வழியில் உங்கள் கடவுளாகிய யெகோவா
மிரியாமுக்குச் செய்ததை நினைத்துப் பாருங்கள்.[o]

10 ஒருவனுக்கு நீங்கள் ஏதாவது கடன் கொடுத்திருந்தால்,[p] அவன் தரு
வதாகச் சொன்ன அடமானப் பொருளை எடுத்துக்கொள்வதற்காக அவனு
டைய வீட்டுக்குள்ளே போகக் கூடாது. **11** அவனுடைய வீட்டுக்கு

24:3 *வே.வா., "நிராகரித்து." **24:6** *வே.வா., "திரிகைக் கல்லின்." #வே.வா., "உயிரையே." **24:8** *இதற்கான எபிரெய வார்த்தை, பலவிதமான தோல் நோய்களைக் குறிக்கலாம். துணிமணிகளிலும் வீடுகளிலும் பரவுகிற பூஞ்சணத்தைக்கூட குறிக்கலாம்.

அதி. 23
a பிர 5:5
b எண் 30:2; சங் 15:4; நீதி 20:25
c நியா 11:35; 1சா 14:24; மத் 5:33
d மத் 6:11; ரோ 13:10
e மத் 12:1; லூ 6:1

அதி. 24
f மத் 5:31, 32; மாற் 10:4, 11
g மல் 2:16; மத் 1:19; மத் 19:3-8
h லேவி 21:7
i உபா 20:7; நீதி 5:18; பிர 9:9
j யாத் 22:26, 27
k ஆதி 37:28; ஆதி 40:15
l யாத் 21:16
m உபா 19:18, 19; உபா 21:20, 21
n லேவி 13:2, 15; மாற் 1:44; லூ 17:14
o எண் 12:10, 15
p உபா 15:7, 8; நீதி 3:27

வெளியே நிற்க வேண்டும், கடன் வாங்கியவன்தான் அந்த அடமானப்
பொருளை வெளியே எடுத்து வந்து உங்களிடம் தர வேண்டும். **12** அவன்
வறுமையில் வாடினால், அந்த அடமானப் பொருளைத் திருப்பிக் கொடுக்
காமல் நீங்கள் படுக்கப் போகக் கூடாது.[a] **13** சூரியன் மறைந்தவுடனேயே
அதைக் கண்டிப்பாக அவனிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அப்
போது, அவன் தன்னுடைய உடையுடன் படுக்கப் போவான்,[b] உங்களை
ஆசீர்வதிக்கச் சொல்லி கடவுளிடம் கேட்பான். நீங்களும் உங்கள் கடவுளா
கிய யெகோவாவின் பார்வையில் நீதிமான்களாக இருப்பீர்கள்.

14 கஷ்டத்திலும் வறுமையிலும் வாடுகிற கூலியாளுக்குக் கூலி தராமல்
ஏமாற்றக் கூடாது, அவன் உங்கள் சகோதரனாக இருந்தாலும் சரி, உங்க
ளோடு வாழ்கிற மற்ற தேசத்துக்காரனாக இருந்தாலும் சரி.[c] **15** அந்தந்த
நாளின் கூலியை அந்தந்த நாளே கொடுத்துவிட வேண்டும்,[d] அதுவும் சூரி
யன் மறைவதற்குள் கொடுத்துவிட வேண்டும். அவன் வறுமையில் வாடுவ
தால், வயிற்றுப்பாட்டுக்கு அந்தக் கூலியைத்தான் நம்பியிருக்கிறான். நீங்கள்
அப்படிக் கொடுக்காவிட்டால் உங்களைப் பற்றி யெகோவாவிடம் முறையி
டுவான், அப்போது நீங்கள் பாவம் செய்தவர்களாக இருப்பீர்கள்.[e]

16 பிள்ளைகள் செய்த பாவத்துக்காக அப்பாவுக்கோ, அப்பா செய்த
பாவத்துக்காகப் பிள்ளைகளுக்கோ மரண தண்டனை கொடுக்கக் கூடாது.[f]
ஒருவன் செய்த பாவத்துக்காக அவனுக்கு மட்டும்தான் மரண தண்டனை
கொடுக்க வேண்டும்.[g]

17 உங்களோடு வாழ்கிற மற்ற தேசத்துக்காரனின் வழக்கிலோ அப்பா
இல்லாத பிள்ளையின்* வழக்கிலோ நீங்கள் நீதியைப் புரட்டக் கூடாது.[h]
ஒரு விதவையின் சால்வையை அடமானமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.[i]
18 நீங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்ததை ஞாபகத்தில் வையுங்கள்.
உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை அங்கிருந்து விடுவித்தார்.[j] அத
னால்தான், நான் உங்களுக்கு இந்தக் கட்டளையைக் கொடுக்கிறேன்.

19 உங்கள் வயலில் அறுவடை செய்யும்போது ஒரு கதிர்க்கட்டை
அங்கேயே மறந்துவிட்டு வந்திருந்தால், அதை எடுக்க மறுபடியும் போகா
தீர்கள். உங்களோடு வாழ்கிற மற்ற தேசத்துக்காரனுக்கும் அப்பா இல்லாத
பிள்ளைக்கும் விதவைக்கும் அதை விட்டுவிடுங்கள்.[k] அப்போதுதான், நீங்
கள் செய்கிற எல்லாவற்றையும் உங்கள் கடவுளாகிய யெகோவா ஆசீர்வ
திப்பார்.[l]

20 நீங்கள் ஒலிவ மரத்தைத் தடியால் அடித்து பழங்களை உதிர்த்தபின்,
உதிராததை உதிர்ப்பதற்காக மறுபடியும் போகக் கூடாது. உங்களோடு வாழ்
கிற மற்ற தேசத்துக்காரனுக்கும் அப்பா இல்லாத பிள்ளைக்கும் விதவைக்
கும் அவற்றை விட்டுவிட வேண்டும்.[m]

21 உங்கள் திராட்சைத் தோட்டத்தில் பழங்களைச் சேகரித்தபின், மீதி
யானதைப் பறிக்க மறுபடியும் போகக் கூடாது. உங்களோடு வாழ்கிற
மற்ற தேசத்துக்காரனுக்கும் அப்பா இல்லாத பிள்ளைக்கும் விதவைக்கும்
அவற்றை விட்டுவிட வேண்டும். **22** நீங்கள் எகிப்தில் அடிமைகளாக
இருந்ததை ஞாபகத்தில் வையுங்கள். அதனால்தான், நான் உங்களுக்கு இந்
தக் கட்டளையைக் கொடுக்கிறேன்" என்றார்.

24:17 * வே.வா., "அநாதையின்."

அதி. 24
a யோபு 24:9, 10
b யாத் 22:26, 27
c லேவி 25:39, 43; நீதி 14:31
d லேவி 19:13; எரே 22:13; மத் 20:8
e நீதி 22:22, 23; யாக் 5:4
f 2நா 25:3, 4
g எசே 18:20
h யாத் 22:21, 22
i யாத் 22:26, 27
j உபா 5:15
k லேவி 19:9; லேவி 23:22;ரூ 2:16; சங் 41:1
l உபா 15:7, 10; நீதி 11:24; நீதி 19:17; லூ 6:38; 2கொ 9:6; 1யோ 3:17
m லேவி 19:10; உபா 26:13

25 பின்பு அவர், “இரண்டு பேருக்கு இடையில் ஏதாவது வழக்கு இருந்
தால், அவர்கள் நியாயாதிபதிகளிடம் வந்து முறையிடலாம்.[a] அந்த
நியாயாதிபதிகள் குற்றம் செய்யாதவனை* நிரபராதி என்றும், குற்றம் செய்
தவனைக் குற்றவாளி என்றும் தீர்ப்பு கொடுப்பார்கள்.[b] **2** குற்றவாளியை
அடிக்க வேண்டுமென்று[c] நியாயாதிபதி தீர்ப்பு கொடுத்தால், அவருக்கு
முன்னால் அவன் படுக்க வைக்கப்பட்டு அடிக்கப்படுவான். எத்தனை அடி
கொடுக்கப்பட வேண்டும் என்பது அவன் செய்த குற்றத்தைப் பொறுத்து
தீர்மானிக்கப்படும். **3** அவனுக்கு 40 அடிவரை கொடுக்கலாம்,[d] அதற்கு
மேல் அடிக்கக் கூடாது. அப்படி அடித்தால் உங்கள் சகோதரனை உங்கள்
கண் முன்னால் கேவலப்படுத்துவதாக இருக்கும்.

4 போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டக் கூடாது.[e]

5 கூடப்பிறந்த சகோதரர்கள் ஒரே இடத்தில் வாழும்போது அவர்
களில் ஒருவன் ஆண் வாரிசு இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய
மனைவி அந்தக் குடும்பத்துக்கு வெளியே கல்யாணம் செய்யக் கூடாது.
அவளுடைய கணவனின் சகோதரன் அவளை மனைவியாக ஏற்றுக்
கொண்டு, கொழுந்தனுடைய* கடமையைச் செய்ய வேண்டும்.[f] **6** அவ
ளுக்குப் பிறக்கிற மூத்த மகன், இறந்துபோன அவளுடைய கணவனின்
மகனைப் போலக் கருதப்படுவான்.*[g] அதனால், அவளுடைய கணவனின்
பெயர் இஸ்ரவேலிலிருந்து மறைந்துபோகாது.[h]

7 ஆனால், விதவையாகிவிட்ட தன் சகோதரனுடைய மனைவியைக்
கல்யாணம் செய்ய அவனுக்கு இஷ்டம் இல்லையென்றால், நகரவாசலில்
இருக்கிற பெரியோர்களிடம்# அவள் போய், ‘என் கொழுந்தனார் என் கண
வனுடைய பெயரை இஸ்ரவேலில் கட்டிக்காக்க முடியாது என்றும், கொழுந்
தனுடைய* கடமையைச் செய்ய முடியாது என்றும் சொல்கிறார்’ என்று
முறையிட வேண்டும். **8** அப்போது, நகரத்துப் பெரியோர்கள் அவனைக்
கூப்பிட்டுப் பேச வேண்டும். ‘அவளைக் கல்யாணம் செய்ய எனக்கு இஷ்
டமில்லை’ என்று அவன் பிடிவாதமாகச் சொல்லிவிட்டால், **9** அவள் அந்
தப் பெரியோர்களின் முன்னிலையில் அவனுடைய செருப்பைக் கழற்றிப்
போட்டு,[i] அவனுடைய முகத்தில் துப்ப வேண்டும். ‘தன் சகோதரனுடைய
வம்சத்தைக் கட்டிக்காக்க முடியாது என்று சொல்கிறவனுக்கு இப்படித்தான்
செய்ய வேண்டும்’ என்று சொல்ல வேண்டும். **10** அதன்பின், இஸ்ர
வேலில் அவனுடைய குடும்பம், ‘செருப்பு கழற்றப்பட்டவன் குடும்பம்’ என
அழைக்கப்படும்.

11 இரண்டு ஆண்கள் சண்டை போடும்போது, அவர்களில் ஒருவனு
டைய மனைவி தன் கணவனைக் காப்பாற்றுவதற்காக, அவனை அடிக்கிற
வனின் பிறப்புறுப்பைக் கை நீட்டிப் பிடித்தால், **12** அவளுடைய கையை
வெட்ட வேண்டும். அவள்மேல் பரிதாபப்படக் கூடாது.

13 உங்களுடைய பையில், சிறியதும் பெரியதுமான* இரண்டு வித
எடைக்கற்களை வைத்துக்கொள்ளக் கூடாது.[j] **14** உங்களுடைய வீட்டில்,
சிறியதும் பெரியதுமான இரண்டு வித படிகளை வைத்துக்கொள்ளக்

அதி. 25
a உபா 16:18; உபா 17:8, 9; உபா 19:16, 17
b யாத் 23:6; 2நா 19:6; நீதி 17:15; நீதி 31:9
c நீதி 10:13; நீதி 20:30; நீதி 26:3; லூ 12:48; எபி 2:2
d 2கொ 11:24
e நீதி 12:10; 1கொ 9:9; 1தீ 5:18
f ஆதி 38:7, 8; ரூ 4:5; மாற் 12:19
g ஆதி 38:9; ரூ 4:10, 17
h எண் 27:1, 4
i ரூ 4:7
j நீதி 11:1; நீதி 20:10; மீ 6:11

25:1 *வே.வா., “நீதிமானை.” **25:5, 7** *அதாவது, “கணவனின் அண்ணனுடைய அல்லது தம்பியுடைய.” **25:6** *வே.வா., “இறந்தவனின் பெயர் நிலைத்திருக்கும்படி செய்வான்.” **25:7** #வே.வா., “மூப்பர்களிடம்.” **25:13** *வே.வா., “சரியானதும் போலியானதுமான.”

கூடாது.[a] **15** சரியான எடைக்கற்களையும் படிகளையும் நீங்கள் வைத்
திருக்க வேண்டும். போலியானவற்றை வைத்திருக்கக் கூடாது. அப்போ
துதான், உங்கள் கடவுளாகிய யெகோவா தருகிற தேசத்தில் நீடூழி வாழ்வீர்
கள்.[b] **16** வியாபாரத்தில் அநியாயம் செய்கிற எவனும் உங்கள்
கடவுளாகிய யெகோவாவுக்கு அருவருப்பானவன்.[c]

17 எகிப்திலிருந்து வரும் வழியில் அமலேக்கியர்கள் உங்களுக்குச்
செய்ததை நினைத்துப் பாருங்கள்.[d] **18** நீங்கள் அலுத்துக் களைத்துப்
போயிருந்தபோது வழியிலே அவர்கள் உங்களை எதிர்த்து, உங்கள் பின்
னால் வந்துகொண்டிருந்த எல்லாரையும் தாக்கினார்கள். கடவுளுக்கு
அவர்கள் பயப்படவில்லை. **19** உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்
கிற தேசத்துக்கு நீங்கள் போன பின்பு, சுற்றியுள்ள எல்லா எதிரிகளையும்
உங்கள் கடவுளாகிய யெகோவா வீழ்த்தி உங்களுக்கு நிம்மதி தரும்போது,[e]
அமலேக்கியர்களை இந்தப் பூமியிலிருந்து அடியோடு அழித்துவிட வேண்
டும்.[f] இதை மறந்துவிடாதீர்கள்” என்றார்.

26 பின்பு அவர், “உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக்
கொடுக்கிற தேசத்தைச் சொந்தமாக்கிக்கொண்டு அங்கே குடியி
ருக்கும்போது, **2** உங்கள் கடவுளாகிய யெகோவா தரும் தேசத்தின் முதல்
விளைச்சல் எல்லாவற்றிலிருந்தும் கொஞ்சத்தை ஒரு கூடையில் எடுத்துக்
கொள்ள வேண்டும். பின்பு, உங்கள் கடவுளாகிய யெகோவா தன் பெயரின்
மகிமைக்காகத் தேர்ந்தெடுக்கிற இடத்துக்கு அதைக் கொண்டுபோக வேண்
டும்.[g] **3** அந்தச் சமயத்தில் பொறுப்பில் இருக்கிற குருவானவரிடம் போய்,
‘யெகோவா நமக்குத் தருவதாக நம் முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்த
தேசத்துக்கு[h] நான் வந்துவிட்டேன் என்பதை யெகோவாவின் முன்னிலை
யில் இன்று அறிக்கையிடுகிறேன்’ என்று சொல்ல வேண்டும்.

4 அந்தக் கூடையை உங்கள் கையிலிருந்து குருவானவர் வாங்கி,
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்துக்கு முன்னால் வைப்
பார். **5** அப்போது, உங்கள் கடவுளாகிய யெகோவாவின் முன்னிலை
யில் நீங்கள், ‘அரமேயராக[i] இருந்த என் மூதாதை நாடோடியாக*
வாழ்ந்துவந்தார். பின்பு, கொஞ்சம் பேராக இருந்த அவருடைய குடும்
பத்தாருடன்[j] எகிப்துக்குப் போய்[k] அன்னியனாகக் குடியிருந்தார். அதன்
பின், அங்கே பலம்படைத்த மிகப் பெரிய தேசமாக ஆனார்.[l] **6** எகிப்தி
யர்கள் எங்களை மோசமாக நடத்தினார்கள், அடக்கி ஒடுக்கினார்கள்,
கொத்தடிமைபோல் வேலை வாங்கினார்கள்.[m] **7** அதனால், எங்கள் முன்
னோர்களின் கடவுளாகிய யெகோவாவிடம் முறையிட்டோம். யெகோவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டார். எங்களுடைய வேதனையையும் துன்பத்
தையும் கொடுமையையும் பார்த்தார்.[n] **8** கடைசியில், யெகோவா பயங்க
ரமான செயல்களையும் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்து,[o]
தன்னுடைய கைபலத்தாலும் மகா வல்லமையாலும் எங்களை எகிப்தை
விட்டு வெளியே கொண்டுவந்தார்.[p] **9** அவர் எங்களை இங்கே கொண்டு
வந்து, பாலும் தேனும் ஓடுகிற இந்தத் தேசத்தைக் கொடுத்தார்.[q]
10 யெகோவா எனக்குத் தந்த நிலத்தின் முதல் விளைச்சலை இப்போது
கொண்டுவந்திருக்கிறேன்’[r] என்று சொல்ல வேண்டும்.

26:5 * அல்லது, “ஆபத்தான சூழ்நிலைகளில்.”

அதி. 25
a லேவி 19:36
b உபா 4:40
c லேவி 19:35
d யாத் 17:8; எண் 24:20
e யோசு 22:4
f யாத் 17:14; 1சா 14:47, 48; 1சா 15:1-3; 1நா 4:42, 43

அதி. 26
g யாத் 23:19; லேவி 23:10; எண் 18:8, 12; 2நா 6:6; 2நா 31:5; நீதி 3:9
h ஆதி 17:1, 8; ஆதி 26:3
i ஆதி 28:5; ஓசி 12:12
j ஆதி 46:27
k ஆதி 46:3; அப் 7:15
l யாத் 1:7; உபா 10:22; சங் 105:24
m யாத் 1:11
n யாத் 3:9; யாத் 4:31; அப் 7:34
o யாத் 7:3; உபா 4:33, 34
p யாத் 6:6
q யாத் 3:8; உபா 8:7, 8; எசே 20:6
r உபா 26:2

பின்பு, அதை உங்கள் கடவுளாகிய யெகோவாவின் முன்னிலையில்
வைத்து, உங்கள் கடவுளாகிய யெகோவாவை வணங்க வேண்டும்.
11 உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்தாருக்கும் உங்கள் கடவுளாகிய
யெகோவா செய்த நன்மைகளுக்காக நீங்களும் லேவியர்களும் உங்க
ளோடு வாழ்கிற வேறு தேசத்து ஜனங்களும் சந்தோஷப்பட வேண்டும்.[a]

12 மூன்றாம் வருஷத்தில், அதாவது பத்திலொரு பாகத்தைச் செலுத்து
கிற வருஷத்தில்,[b] உங்கள் விளைச்சல் எல்லாவற்றிலும் பத்திலொரு
பாகத்தை எடுத்துவைக்க வேண்டும். லேவியர்களுக்கும், உங்களோடு வாழ்
கிற வேறு தேசத்து ஜனங்களுக்கும், அப்பா இல்லாத பிள்ளைகளுக்
கும்,* விதவைகளுக்கும் அவற்றைக் கொடுக்க வேண்டும். அவர்கள் உங்
களுடைய நகரங்களில் திருப்தியாகச் சாப்பிடுவார்கள்.[c] **13** பின்பு நீங்கள்
உங்கள் கடவுளாகிய யெகோவாவிடம், 'நீங்கள் கட்டளை கொடுத்தபடியே,
இந்தப் பரிசுத்த பங்கு முழுவதையும் என் வீட்டிலிருந்து எடுத்து லேவியர்
களுக்கும், வேறு தேசத்து ஜனங்களுக்கும், அப்பா இல்லாத பிள்ளைக
ளுக்கும் விதவைகளுக்கும் கொடுத்துவிட்டேன்.[d] உங்கள் கட்டளைகளை
நான் மீறவோ அசட்டை செய்யவோ இல்லை. **14** துக்கம் அனுசரிக்கும்
போது அவற்றைச் சாப்பிடவில்லை, தீட்டாக இருக்கும்போது அவற்
றைத் தொடவில்லை, இறந்தவர்களுக்காக அவற்றில் எதையும் கொடுக்க
வில்லை. என் கடவுளாகிய யெகோவா சொன்னபடியே நடந்திருக்கிறேன்,
நீங்கள் கட்டளை கொடுத்த எல்லாவற்றையும் செய்திருக்கிறேன். **15** அத
னால், உங்கள் பரிசுத்த வீடாகிய பரலோகத்திலிருந்து உங்கள் ஜனங்க
ளாகிய இஸ்ரவேலர்களைப் பார்த்து அவர்களை ஆசீர்வதியுங்கள். எங்கள்
முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்தபடியே[e] நீங்கள் எங்களுக்குத் தந்த
தேசமாகிய பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை[f] ஆசீர்வதியுங்கள்'[g] என்று
சொல்ல வேண்டும்.

16 இந்த விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும் கடைப்பிடிக்க வேண்
டுமென்று உங்கள் கடவுளாகிய யெகோவா இன்று கட்டளை கொடுக்கிறார்.
நீங்கள் அவற்றை முழு இதயத்தோடும்[h] முழு மூச்சோடும் பின்பற்ற வேண்
டும். **17** நீங்கள் யெகோவாவின் வழியில் நடந்து, அவருடைய விதிமுறை
களையும்[i] கட்டளைகளையும்[j] நீதித்தீர்ப்புகளையும்[k] கடைப்பிடித்து, அவரு
டைய பேச்சைக் கேட்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதனால்,
அவர் உங்கள் கடவுளாக இருப்பாரென்று இன்றைக்கு உங்களுக்கு வாக்
குக் கொடுத்திருக்கிறார். **18** நீங்களும், யெகோவா வாக்குறுதி தந்தபடியே
அவருடைய ஜனங்களாகவும் விசேஷ சொத்தாகவும் இருப்பீர்கள்[l] என்றும்,
அவருடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவீர்கள் என்றும் இன்று
வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள். **19** நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோ
வாவுக்குப் பரிசுத்தமான ஜனங்களாக இருந்தால்,[m] அவர் சொன்னபடியே,
அவர் உருவாக்கிய மற்ற எல்லா தேசத்தாருக்கும் மேலாக உங்களை
உயர்த்தி[n] பேர்புகழும் மகிமையும் தருவார்" என்றார்.

27 பின்பு, இஸ்ரவேலின் பெரியோர்களுடன்* சேர்ந்து மோசே ஜனங்
களிடம், "இன்று நான் உங்களுக்குக் கொடுக்கிற எல்லா கட்டளைக
ளையும் கடைப்பிடியுங்கள். **2** நீங்கள் யோர்தானைக் கடந்து உங்கள் கட
வுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்துக்குப் போனவுடன், பெரிய

26:12 * வே.வா., "அநாதைகளுக்கும்." **27:1** * வே.வா., "மூப்பர்களுடன்."

அதி. 26
a உபா 12:7; உபா 16:14
b உபா 12:5, 6; உபா 14:22
c உபா 14:28, 29; நீதி 14:21; 1யோ 3:17
d யாக் 1:27
e ஆதி 15:18; ஆதி 26:3
f உபா 8:7, 8
g யாத் 23:25
h உபா 6:6; உபா 11:1; சங் 119:34; 1யோ 5:3
i லேவி 19:37
j பிர 12:13
k லேவி 26:46
l உபா 14:2; உபா 29:10–13
m உபா 7:6; உபா 28:1, 9
n உபா 4:8

கற்களை நாட்டி அவற்றுக்குச் சாந்து பூசுங்கள்.*[a] **3** அந்தக் கற்கள்
மேல் இந்தத் திருச்சட்ட வார்த்தைகள் எல்லாவற்றையும் எழுதுங்கள். உங்
கள் முன்னோர்களின் கடவுளாகிய யெகோவா உங்களுக்கு வாக்குறுதி தந்
தபடியே, உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசமாகிய பாலும்
தேனும் ஓடுகிற தேசத்துக்குப் போக நீங்கள் யோர்தானைக் கடந்தவுடன்
இப்படிச் செய்யுங்கள்.[b] **4** இன்று நான் உங்களுக்குக் கட்டளை கொடுக்கி
றபடியே, நீங்கள் யோர்தானைக் கடந்தவுடன், அந்தக் கற்களை ஏபால்
மலையில்[c] நாட்டி அவற்றுக்குச் சாந்து பூச* வேண்டும். **5** அங்கே உங்
கள் கடவுளாகிய யெகோவாவுக்குக் கற்களால் ஒரு பலிபீடம் கட்ட வேண்
டும். இரும்புக் கருவிகளால் அந்தக் கற்களை வெட்டக் கூடாது.[d] **6** வெட்
டப்படாத முழு கற்களால் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பலிபீடம்
கட்டி, அதன்மேல் யெகோவாவுக்குத் தகன பலிகள் செலுத்த வேண்டும்.
7 அங்கே சமாதான பலிகளைச்[e] செலுத்தி, அவற்றைச் சாப்பிட்டு,[f] உங்கள்
கடவுளாகிய யெகோவாவின் முன்னால் சந்தோஷமாக இருக்க வேண்டும்.[g]
8 நீங்கள் நாட்டிய கற்கள்மேல் இந்தத் திருச்சட்ட வார்த்தைகள் எல்லாவற்
றையும் தெளிவாக எழுத வேண்டும்"[h] என்று சொன்னார்.

9 பின்பு, மோசே லேவியர்களான குருமார்களுடன் சேர்ந்து இஸ்ர
வேலர்கள் எல்லாரிடமும், "இஸ்ரவேலர்களே, அமைதியாகக் கேளுங்கள்.
நீங்கள் இன்று உங்கள் கடவுளாகிய யெகோவாவின் ஜனங்களாக ஆகியி
ருக்கிறீர்கள்.[i] **10** அதனால் உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பேச்சை
நீங்கள் கேட்க வேண்டும், நான் இன்று உங்களுக்குச் சொல்கிற அவரு
டைய கட்டளைகளையும் விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்"[j]
என்று சொன்னார்.

11 அன்றைக்கு மோசே எல்லாரிடமும், **12** "யோர்தானைக் கடந்த
பின்பு, ஜனங்களுக்கு ஆசீர்வாதத்தை அறிவிப்பதற்காக சிமியோன், லேவி,
யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் ஆகிய கோத்திரங்களைச் சேர்ந்தவர்
கள் கெரிசீம் மலையில் நிற்க வேண்டும்.[k] **13** சாபத்தை அறிவிப்பதற்காக
ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி ஆகிய கோத்திரங்களைச்
சேர்ந்தவர்கள் ஏபால் மலையில் நிற்க வேண்டும்.[l] **14** எல்லா இஸ்ரவேலர்
களிடமும் லேவியர்கள் இப்படிச் சத்தமாகச் சொல்ல வேண்டும்:[m]

15 'யெகோவாவுக்கு அருவருப்பானதும்[n] மனுஷனின்* கைவேலையு
மான செதுக்கப்பட்ட சிலையையோ உலோகச் சிலையையோ செய்து
அதை மறைத்துவைப்பவன் சபிக்கப்பட்டவன்.'[o] (ஜனங்கள் எல்லாரும்,
'ஆமென்!'# என்று சொல்ல வேண்டும்.)

16 'அப்பா அம்மாவை மதிக்காதவன் சபிக்கப்பட்டவன்.'[p] (ஜனங்கள்
எல்லாரும், 'ஆமென்!' என்று சொல்ல வேண்டும்.)

17 'ஒருவனுடைய நிலத்தின் எல்லைக் குறியைத் தள்ளி வைப்பவன்
சபிக்கப்பட்டவன்.'[q] (ஜனங்கள் எல்லாரும், 'ஆமென்!' என்று சொல்ல
வேண்டும்.)

18 'கண் தெரியாதவனைத் தவறான வழியில் போக வைப்பவன் சபிக்
கப்பட்டவன்.'[r] (ஜனங்கள் எல்லாரும், 'ஆமென்!' என்று சொல்ல வேண்டும்.)

27:2 *வே.வா., "சுண்ணாம்பினால் வெள்ளையடியுங்கள்." **27:4** *வே.வா., "சுண்ணாம்பினால் வெள்ளையடிக்க." **27:15** *வே.வா., "ஆசாரியின்." #அதாவது, "அப்படியே ஆகட்டும்!"

அதி. 27
a யோசு 8:30-32
b எண் 13:26, 27
c உபா 11:29
d யாத் 20:25
e லேவி 3:1
f லேவி 7:15
g உபா 12:7
h யாத் 24:12
i யாத் 19:5; உபா 26:18
j 1ரா 2:3; மத் 19:17; 1யோ 5:3
k உபா 11:29
l யோசு 8:33
m உபா 33:10
n உபா 7:25; உபா 29:17
o யாத் 20:4; யாத் 34:17; லேவி 19:4; உபா 4:15, 16; ஏசா 44:9
p யாத் 20:12; உபா 21:18-21; நீதி 20:20; நீதி 30:17; மத் 15:4
q உபா 19:14; நீதி 23:10
r லேவி 19:14

19 ‘உங்களோடு வாழ்கிற மற்ற தேசத்துக்காரனுக்கோ, அப்பா இல்லாத
பிள்ளைக்கோ,* விதவைக்கோ[a] இருக்கிற வழக்கில் நீதியைப் புரட்டுப
வன் சபிக்கப்பட்டவன்.’[b] (ஜனங்கள் எல்லாரும், ‘ஆமென்!’ என்று சொல்ல
வேண்டும்.)

20 ‘தன் அப்பாவுடைய மனைவியுடன் உடலுறவுகொள்வதன் மூலம்
தன் அப்பாவைக் கேவலப்படுத்துகிறவன் சபிக்கப்பட்டவன்.’[c] (ஜனங்கள்
எல்லாரும், ‘ஆமென்!’ என்று சொல்ல வேண்டும்.)

21 ‘ஏதாவது ஒரு மிருகத்தோடு புணர்ச்சி செய்கிறவன் சபிக்கப்பட்ட
வன்.’[d] (ஜனங்கள் எல்லாரும், ‘ஆமென்!’ என்று சொல்ல வேண்டும்.)

22 ‘அப்பாவுக்கோ அம்மாவுக்கோ பிறந்த மகளாகிய தன் சகோத
ரியோடு உடலுறவுகொள்பவன் சபிக்கப்பட்டவன்.’[e] (ஜனங்கள் எல்லாரும்,
‘ஆமென்!’ என்று சொல்ல வேண்டும்.)

23 ‘மாமியாருடன் உடலுறவுகொள்பவன் சபிக்கப்பட்டவன்.’[f] (ஜனங்கள்
எல்லாரும், ‘ஆமென்!’ என்று சொல்ல வேண்டும்.)

24 ‘பதுங்கியிருந்து கொலை செய்பவன் சபிக்கப்பட்டவன்.’[g] (ஜனங்கள்
எல்லாரும், ‘ஆமென்!’ என்று சொல்ல வேண்டும்.)

25 ‘ஒரு அப்பாவியைக் கொலை செய்வதற்கு லஞ்சம் வாங்குபவன்
சபிக்கப்பட்டவன்.’[h] (ஜனங்கள் எல்லாரும், ‘ஆமென்!’ என்று சொல்ல
வேண்டும்.)

26 ‘இந்தத் திருச்சட்ட வார்த்தைகளைக் கடைப்பிடிக்காதவன் சபிக்கப்
பட்டவன்’[i] (ஜனங்கள் எல்லாரும், ‘ஆமென்!’ என்று சொல்ல வேண்டும்)”
என்று சொன்னார்.

28 பின்பு அவர், “இன்று நான் கொடுக்கிற கட்டளைகள் எல்லாவற்றை
யும் கவனமாகக் கடைப்பிடித்து, உங்கள் கடவுளாகிய யெகோவா
வின் பேச்சைக் கேட்டு நடந்தால், பூமியிலுள்ள எல்லா தேசத்தாருக்கும்
மேலாக யெகோவா உங்களை உயர்த்துவார்.[j] **2** எப்போதும் உங்கள் கட
வுளாகிய யெகோவாவின் பேச்சைக் கேட்டு நடந்தால், இந்த எல்லா ஆசீர்
வாதங்களும் உங்கள்மேல் வந்து குவியும்:[k]

3 நீங்கள் நகர்ப்புறத்திலும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள், கிராமப்புறத்திலும்
ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.[l]

4 உங்களுடைய குழந்தைகுட்டிகளும் வயல்களின் விளைச்சலும் ஆடு
மாடுகளின் குட்டிகளும் கன்றுகளும் ஆசீர்வதிக்கப்படும்.[m]

5 உங்களுடைய கூடையும் பாத்திரமும் ஆசீர்வதிக்கப்படும்.*[n]

6 நீங்கள் செய்கிற எல்லா காரியங்களும் ஆசீர்வதிக்கப்படும்.

7 உங்களைத் தாக்க வருகிற எதிரிகளை யெகோவா தோற்கடிப்பார்.[o]
ஒரு திசையில் அவர்கள் உங்களைத் தாக்க வருவார்கள், ஆனால் ஏழு
திசைகளில் உங்களைவிட்டு ஓடிப்போவார்கள்.[p] **8** உங்களுடைய களஞ்
சியங்களை யெகோவா ஆசீர்வதிப்பார்.[q] நீங்கள் செய்கிற எல்லாவற்
றையும் உங்கள் கடவுளாகிய யெகோவா ஆசீர்வதிப்பார். அவர் கொடுக்
கிற தேசத்தில் நீங்கள் நிச்சயம் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். **9** உங்கள்
கடவுளாகிய யெகோவாவின் கட்டளைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து

27:19 * வே.வா., “அநாதைக்கோ.” **28:5** * அதாவது, “கூடையில் தானியமும் பாத்தி
ரத்தில் மாவும் எப்போதுமே நிரம்பி வழியும்.”

அதி. 27
a யாத் 22:21, 22; உபா 10:17, 18; மல் 3:5; யாக் 1:27
b உபா 16:20; நீதி 17:23; மீ 3:11
c லேவி 18:8; 1கொ 5:1
d யாத் 22:19; லேவி 18:23; லேவி 20:15
e லேவி 18:9; லேவி 20:17
f லேவி 18:17; லேவி 20:14
g யாத் 20:13; யாத் 21:12; எண் 35:31
h மத் 27:3, 4
i உபா 28:15; கலா 3:10

அதி. 28
j உபா 26:18, 19
k லேவி 26:3, 4; நீதி 10:22; ஏசா 1:19
l உபா 11:14
m லேவி 26:9; உபா 7:13; சங் 127:3; சங் 128:3
n யாத் 23:25; உபா 26:2
o உபா 32:30; யோசு 10:11
p உபா 7:23; 2நா 14:13
q லேவி 26:10; நீதி 3:9, 10; மல் 3:10

அவருடைய வழிகளில் நடந்தால், யெகோவா உங்களுக்கு வாக்குக்
கொடுத்தபடியே,[a] உங்களைத் தன்னுடைய பரிசுத்தமான ஜனமாக ஆக்கு
வார்.[b] **10** நீங்கள் யெகோவாவின் பெயரைத் தாங்கியிருப்பதைப் பூமியி
லுள்ள எல்லா ஜனங்களும் பார்த்து,[c] உங்களுக்குப் பயப்படுவார்கள்.[d]

11 உங்களுக்குத் தருவதாக உங்கள் முன்னோர்களுக்கு யெகோவா
வாக்குக் கொடுத்த தேசத்தில்,[e] ஏராளமான பிள்ளைகளையும் ஆடுமாடுக
ளையும் விளைச்சலையும் யெகோவா தருவார்.[f] **12** நிரம்பி வழியும்
களஞ்சியமாகிய வானத்தை யெகோவா திறந்து, உங்கள் தேசத்தில் பருவ
மழையைப் பொழிய வைப்பார்,[g] நீங்கள் செய்கிற எல்லாவற்றையும் ஆசீர்
வதிப்பார். நீங்கள் எத்தனையோ தேசத்தாருக்குக் கடன் கொடுப்பீர்கள்,
ஆனால் நீங்கள் யாரிடமிருந்தும் கடன் வாங்க மாட்டீர்கள்.[h] **13** இன்று
நான் கொடுக்கிற கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் பேச்சைக் கேட்டு நடந்தால், யெகோவா உங்களை மிகவும்
உயர்ந்த நிலையில் வைப்பார், நீங்கள் தாழ்ந்துபோவதற்கு விட மாட்டார்.[i]
எல்லா ஜனங்களையும் நீங்கள் அடக்கி ஆளுவீர்கள், யாரும் உங்களை
அடக்கி ஆள மாட்டார்கள். **14** இன்று நான் உங்களுக்குக் கொடுக்கிற
கட்டளைகளை நீங்கள் அச்சுப்பிசகாமல் கடைப்பிடிக்க வேண்டும்.[j] வேறு
தெய்வங்களைத் தேடிப்போய் வணங்கக் கூடாது.[k]

15 ஆனால், இன்று நான் கொடுக்கிற கட்டளைகளையும் சட்டதிட்டங்
களையும் கவனமாகக் கடைப்பிடிக்காமலும், உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் பேச்சைக் கேட்டு நடக்காமலும் இருந்தால் இந்த எல்லா
சாபங்களும் உங்கள்மேல் வந்து குவியும்:[l]

16 நீங்கள் நகர்ப்புறத்திலும் சபிக்கப்படுவீர்கள், கிராமப்புறத்திலும் சபிக்
கப்படுவீர்கள்.[m]

17 உங்களுடைய கூடையும் பாத்திரமும் சபிக்கப்படும்.[n]

18 உங்களுடைய குழந்தைகுட்டிகளும் வயல்களின் விளைச்சலும்
ஆடுமாடுகளின் குட்டிகளும் கன்றுகளும் சபிக்கப்படும்.[o]

19 நீங்கள் செய்கிற எல்லா காரியங்களும் சபிக்கப்படும்.

20 நீங்கள் யெகோவாவைவிட்டு விலகி கெட்ட வழியில் போனால், நீங்
கள் செய்கிற எல்லாவற்றிலும் அவர் சாபத்தையும் குழப்பத்தையும்
தண்டனையையும் வரவைப்பார். நீங்கள் அடியோடு அழிந்துபோகும்
வரை இதையெல்லாம் வரவைப்பார்.[p] **21** நீங்கள் சொந்தமாக்கிக்கொள்
ளும் தேசத்திலிருந்து யெகோவா உங்களை அடியோடு அழிக்கும்வரை
நோயால் உங்களைத் தாக்குவார்.[q] **22** காசநோய், கடுமையான காய்ச்
சல்,[r] வீக்கம், கடுமையான சூடு, போர்,[s] வெப்பக்காற்று, தாவர நோய்[t]
ஆகியவற்றால் யெகோவா தாக்குவார். நீங்கள் அழியும்வரை அவை உங்
களைவிட்டுப் போகாது. **23** உங்கள் வானம் செம்பைப் போலவும் பூமி
இரும்பைப் போலவும் ஆகும்.*[u] **24** யெகோவா வானத்திலிருந்து மழை
யைக் கொடுப்பதற்குப் பதிலாக, புழுதியையும் மண்ணையும்தான் கொட்டு
வார். நீங்கள் அடியோடு அழிந்துபோகும்வரை இதைத்தான் செய்வார்.
25 விரோதிகளுக்கு முன்னால் யெகோவா உங்களைத் தோற்கடிப்பார்.[v]
நீங்கள் அவர்களை ஒரு திசையில் தாக்குவீர்கள், ஆனால் அவர்களை

28:23 * அதாவது, “வானம் மழை பொழியாது, பூமி வறண்டுபோகும்.”

அதி. 28
a யாத் 19:6
b உபா 7:6
c ஏசா 43:10 தானி 9:19 அப் 15:17
d எண் 22:3 உபா 11:25 யோசு 5:1
e ஆதி 15:18
f உபா 30:9 சங் 65:9
g லேவி 26:4 உபா 11:14
h உபா 15:6
i 1ரா 4:21
j உபா 5:32 யோசு 1:7 ஏசா 30:21
k லேவி 19:4
l லேவி 26:16, 17 தானி 9:11
m 1ரா 17:1
n லேவி 26:26 உபா 26:2
o லேவி 26:20, 22 புல 2:11, 19 புல 4:10
p யோசு 23:16
q லேவி 26:25 எரே 24:10
r லேவி 26:16
s லேவி 26:33
t ஆமோ 4:9
u லேவி 26:19 உபா 11:17 1ரா 17:1
v லேவி 26:14, 17 1சா 4:10

விட்டு ஏழு திசைகளில் ஓடிப்போவீர்கள். உங்களுடைய கோரமான நிலை
மையைப் பார்த்து உலகமே கதிகலங்கும்.[a] **26** வானத்துப் பறவைகளும்
பூமியின் மிருகங்களும் உங்களுடைய பிணங்களைத் தின்னும். அவற்றை
விரட்டிவிட யாரும் இருக்க மாட்டார்கள்.[b]

27 எகிப்தியர்களை வாட்டிய கொப்புளங்கள், மூலநோய், படை, தோல்
தடிப்புகள் ஆகியவற்றால் யெகோவா உங்களைத் தாக்குவார். அவற்றிலி
ருந்து நீங்கள் குணமடைய முடியாது. **28** யெகோவா உங்களைப் பைத்தி
யமாக்குவார், குருடாக்குவார்,[c] குழப்புவார். **29** நீங்கள் பட்டப்பகலில் குரு
டனைப் போல் தட்டுத்தடுமாறுவீர்கள்.[d] எந்தக் காரியத்திலும் உங்களுக்கு
வெற்றி கிடைக்காது. நீங்கள் எப்போதும் மோசடி செய்யப்படுவீர்கள், கொள்
ளையடிக்கப்படுவீர்கள். உங்களைக் காப்பாற்ற யாரும் இருக்க மாட்டார்கள்.[e]
30 நீங்கள் ஒரு பெண்ணுடன் நிச்சயிக்கப்படுவீர்கள், ஆனால் வேறொரு
வன் அவளைப் பலாத்காரம் செய்வான். நீங்கள் வீடு கட்டுவீர்கள்,
ஆனால் அதில் குடியிருக்க மாட்டீர்கள்.[f] திராட்சைத் தோட்டம் அமைப்பீர்
கள், ஆனால் அதன் பழங்களைச் சாப்பிட மாட்டீர்கள்.[g] **31** உங்கள்
காளைமாடு உங்களுடைய கண் முன்னால் வெட்டப்படும், ஆனால் அதன்
இறைச்சி உங்களுக்குக் கொஞ்சம்கூட கிடைக்காது. உங்கள் கழுதை உங்க
ளுடைய கண் முன்னால் திருடப்படும், ஆனால் அது உங்களுக்குத்
திரும்பக் கிடைக்காது. உங்கள் ஆடுகள் எதிரிகளின் கையில் கொடுக்கப்ப
டும், ஆனால் யாரும் உங்களுடைய உதவிக்கு வர மாட்டார்கள். **32** உங்
கள் கண் முன்னால் உங்கள் மகன்களையும் மகள்களையும் வேறு ஆட்கள்
பிடித்துக்கொண்டு போவார்கள்.[h] அந்தப் பிள்ளைகளுக்காக எப்போதும்
ஏங்கிக்கொண்டே இருப்பீர்கள், ஆனால் ஒன்றுமே செய்ய முடியாமல்
தவிப்பீர்கள். **33** உங்கள் நிலத்தின் விளைச்சலையும் உழைப்பின் பலனை
யும் யார் யாரோ அனுபவிப்பார்கள்.[i] நீங்கள் எப்போதும் மோசடி செய்யப்
படுவீர்கள், அடக்கி ஒடுக்கப்படுவீர்கள். **34** உங்கள் கண் முன்னால் நடப்
பதையெல்லாம் பார்த்து பைத்தியம் பிடித்ததுபோல் அலைவீர்கள்.

35 குணப்படுத்த முடியாத கொப்புளங்களை உங்களுடைய தொடைக
ளிலும் கால்களிலும் யெகோவா வரவைப்பார். அவை உங்களுடைய
உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை பரவி, வலி உண்டாக்கும். **36** உங்க
ளுக்கோ உங்கள் முன்னோர்களுக்கோ தெரியாத தேசத்துக்கு உங்களை
யும் உங்கள் ராஜாவையும் யெகோவா துரத்தியடிப்பார்.[j] அங்கே மரத்தா
லும் கல்லாலும் உருவாக்கப்பட்ட பொய் தெய்வங்களை வணங்குவீர்கள்.[k]
37 யெகோவா உங்களைத் துரத்தியடிக்கிற தேசங்களில் இருக்கிற ஜனங்
கள் உங்களுக்கு வந்த கோரமான முடிவைப் பார்த்து ஏளனமாகப் பேசுவார்
கள். உங்களைக் கேலியும் கிண்டலும் செய்வார்கள்.[l]

38 வயலில் ஏராளமாக விதைப்பீர்கள், ஆனால் கொஞ்சம்தான் அறுப்
பீர்கள்.[m] ஏனென்றால், வெட்டுக்கிளிகள் அவற்றைத் தின்றுதீர்த்துவிடும்.
39 திராட்சைத் தோட்டத்தை அமைத்து அதைப் பராமரிப்பீர்கள், ஆனால்
உங்களுக்குத் திராட்சமதுவோ திராட்சைப் பழங்களோ கிடைக்காது.[n]
ஏனென்றால், புழுக்கள் அவற்றைத் தின்றுதீர்த்துவிடும். **40** எல்லா இடங்க
ளிலும் ஒலிவ மரங்கள் வளர்ந்து நிற்கும், ஆனால் உங்கள் உடலில் தேய்க்க
ஒலிவ எண்ணெய் இருக்காது. ஏனென்றால், ஒலிவ மரத்தின் பிஞ்சுகள்
உதிர்ந்துவிடும். **41** மகன்களையும் மகள்களையும் பெற்றெடுப்பீர்கள்,

அதி. 28
a எரே 29:18, லூ 21:24
b எரே 7:33
c யாத் 4:11
d ஏசா 59:10
e நியா 3:14, நியா 6:1-5, நெ 9:27
f ஏசா 5:9, புல 5:2
g ஆமோ 5:11, மீ 6:15
h 2நா 29:9
i நெ 9:37, ஏசா 1:7
j 2ரா 17:6, 2ரா 25:7, 2நா 33:11, 2நா 36:5, 6
k எரே 16:13
l 1ரா 9:8, 2நா 7:20, எரே 24:9, எரே 25:9
m ஏசா 5:10, ஆகா 1:6
n செப் 1:13

ஆனால் அவர்கள் உங்களோடு இருக்க மாட்டார்கள். ஏனென்றால், எதிரி
கள் அவர்களைப் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள்.[a] **42** பூச்சிகள்
படையெடுத்து வந்து உங்களுடைய எல்லா மரங்களையும் செடிகொடிக
ளையும் மொட்டையாக்கிவிடும். **43** உங்கள் நடுவில் வாழ்கிற மற்ற
தேசத்து ஜனங்கள் உயர்ந்துகொண்டே போவார்கள், ஆனால் நீங்கள்
தாழ்ந்துகொண்டே போவீர்கள். **44** அவர்களால் உங்களுக்குக் கடன்
கொடுக்க முடியும், ஆனால் உங்களால் அவர்களுக்குக் கடன் கொடுக்க
முடியாது.[b] அவர்கள் உயர்ந்த நிலையில் இருப்பார்கள், ஆனால் நீங்கள்
அடிமட்டத்துக்குப் போய்விடுவீர்கள்.[c]

45 உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பேச்சைக் கேட்காமலும் அவ
ருடைய கட்டளைகளையும் சட்டதிட்டங்களையும் கடைப்பிடிக்காமலும்
போனால்,[d] இந்த எல்லா சாபங்களும்[e] கண்டிப்பாக உங்கள்மேல் வந்து
குவியும். நீங்கள் அழியும்வரை[f] அவை உங்களைப் பின்தொடரும், உங்க
ளைவிட்டுப் போகவே போகாது. **46** அவை உங்கள்மேலும் உங்கள்
வம்சத்தின் மேலும் நிரந்தர அடையாளமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்
கும்.[g] **47** ஏனென்றால், எல்லாமே உங்களுக்கு ஏராளமாகக் கிடைத்த
போது உங்கள் கடவுளாகிய யெகோவாவை மகிழ்ச்சியோடும் சந்தோஷம்
பொங்கும் இதயத்தோடும் நீங்கள் வணங்கவில்லை.[h] **48** யெகோவா
உங்களுக்கு எதிராக விரோதிகளை அனுப்புவார். உங்களிடம் ஒன்றுமே
இல்லாமல், பசியோடும்[i] தாகத்தோடும் கிழிந்த துணிமணிகளோடும் அவர்
களுக்கு வேலை செய்வீர்கள்.[j] அவர் உங்களை அழிக்கும்வரை உங்கள்
கழுத்தில் இரும்பு நுகத்தடியை* சுமத்துவார்.

49 பூமியின் ஒரு எல்லையில் இருக்கிற தொலைதூர தேசத்தாரை
உங்களுக்கு எதிராக யெகோவா அனுப்புவார்.[k] அவர்கள் கழுகைப்
போல் வேகமாகப் பாய்ந்து வருவார்கள்.[l] அவர்களுடைய மொழி உங்க
ளுக்குப் புரியாது.[m] **50** பார்க்கவே அவர்கள் பயங்கரமாக இருப்பார்
கள். வயதில் பெரியவர்களுக்கு மதிப்புக் காட்டவோ, வயதில் சிறியவர்
களுக்குக் கரிசனை காட்டவோ மாட்டார்கள்.[n] **51** நீங்கள் அழியும்வரை
உங்களுடைய ஆடுமாடுகளின் குட்டிகளையும் உங்கள் நிலத்தில் விளை
கிறவற்றையும் அவர்கள் சாப்பிடுவார்கள். உங்களை ஒழித்துக்கட்டும்வரை
தானியத்தையோ புதிய திராட்சமதுவையோ எண்ணெயையோ கன்றுக
ளையோ ஆட்டுக்குட்டிகளையோ உங்களுக்காக விட்டுவைக்க மாட்டார்
கள்.[o] **52** உங்கள் தேசத்திலுள்ள எல்லா நகரங்களையும் சுற்றிவளைத்து,
வெளியேற வழியில்லாமல் உங்களை அடைத்து வைப்பார்கள். நீங்கள் நம்
பியிருக்கிற உயரமான, பலமான மதில்களைத் தரைமட்டமாக்கும்வரை உங்
களை வளைத்துக்கொள்வார்கள். உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுத்
திருக்கிற தேசத்திலுள்ள நகரங்களைவிட்டு வெளியேற முடியாதபடி
உங்களைச் சூழ்ந்துகொள்வார்கள்.[p] **53** அப்போது நிலைமை படுமோச
மாக இருக்கும். எதிரிகள் உங்களை வாட்டி வதைப்பார்கள். பெற்றெடுத்த
பிள்ளைகளையே நீங்கள் சாப்பிடுவீர்கள். உங்கள் கடவுளாகிய யெகோவா
தந்த மகன்களின் சதையையும் மகள்களின் சதையையும் தின்பீர்கள்.[q]

54 இளகிய மனதுள்ளவனும் சொகுசாக வாழ்ந்தவனும்கூட தன் மகன்க
ளுடைய சதையைத் தின்னும்போது, அண்ணன் தம்பிக்கோ ஆசை மனை

28:48 *இரும்பு நுகத்தடி என்பது கடுமையான அடிமைத்தனத்தைக் குறிக்கிறது.

அதி. 28
a 2ரா 24:14; எரே 52:15, 30
b நீதி 22:7
c எஸ்றா 9:7
d உபா 11:26-28
e உபா 28:15; உபா 29:27
f 2ரா 17:20; எரே 24:10
g 1கொ 10:11
h உபா 12:7; நெ 9:35
i எரே 44:27
j 2நா 12:8, 9; எரே 5:19
k எரே 6:22; ஆப 1:6
l எரே 4:13; ஓசி 8:1
m எரே 5:15
n 2நா 36:17; ஏசா 47:6; லூ 19:44
o லேவி 26:26; எரே 15:13
p 2ரா 17:5; 2ரா 25:1; லூ 19:43
q 2ரா 6:28; புல 4:10; எசே 5:10

விக்கோ உயிரோடு இருக்கிற மகன்களுக்கோ அதைக் கொடுக்க மாட்
டான். அவர்களுக்கு இரக்கம் காட்ட மாட்டான். **55** ஏனென்றால், சாப்பிட
அவனிடம் வேறு எதுவும் இருக்காது. எதிரிகள் உங்கள் நகரங்களைச் சுற்றி
வளைத்து, உங்களை அந்தளவுக்கு வாட்டி வதைப்பார்கள்.[a] **56** இளகிய
மனதுள்ளவளும் கால் தரையில் படாத அளவுக்கு சொகுசாக வாழ்ந்தவ
ளும்கூட,[b] ஆசை கணவனுக்கோ மகனுக்கோ மகளுக்கோ இரக்கம் காட்ட
மாட்டாள். **57** தான் பெற்றெடுக்கிற பிள்ளையையும் பிரசவத்தின்போது
வெளியேறுகிற எதையும் அவர்களுக்குக் கொடுக்க மாட்டாள். அவள்
மட்டும் ரகசியமாகத் தின்றுதீர்ப்பாள். ஏனென்றால், எதிரிகள் உங்கள் நகரங்
களைச் சுற்றிவளைத்து, உங்களை அந்தளவுக்கு வாட்டி வதைப்பார்கள்.

58 இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள திருச்சட்ட வார்த்தைகளை நீங்
கள் கவனமாகப் பின்பற்றாமலும்,[c] உங்கள் கடவுளாகிய யெகோவாவின்[d]
மகா அற்புதமான* பெயருக்குப்[e] பயப்படாமலும் இருந்தால், **59** உங்க
ளுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பயங்கரமான வேதனைகளையும் தீராத
வேதனைகளையும் யெகோவா கொண்டுவருவார்.[f] தீராத கொடிய நோய்
களை அவர் வர வைப்பார். **60** நீங்கள் எகிப்தில் பார்த்த நோய்கள் எல்
லாவற்றையும் உங்கள்மேல் வரவைப்பார். நீங்கள் எந்த நோய்களை
நினைத்துப் பயந்து நடுங்கினீர்களோ அதே நோய்கள் நிச்சயமாக உங்க
ளைத் தாக்கும். **61** இந்தத் திருச்சட்ட புத்தகத்தில் எழுதப்படாத எல்லா
நோய்களையும் வேதனைகளையும்கூட நீங்கள் அழிந்துபோகும்வரை
யெகோவா உங்கள்மேல் கொண்டுவருவார். **62** நீங்கள் வானத்து நட்சத்
திரங்களைப் போல் ஏராளமாக இருந்தாலும்,[g] உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் பேச்சைக் கேட்காவிட்டால் கொஞ்சநஞ்ச பேர்தான் மிஞ்
சுவீர்கள்.[h]

63 உங்களை ஏராளமாகப் பெருக வைப்பதிலும் சீரும் சிறப்புமாக
வாழ வைப்பதிலும் ஒருசமயம் சந்தோஷப்பட்ட யெகோவா, இப்போது
உங்களை அழிப்பதிலும் ஒழிப்பதிலும் சந்தோஷப்படுவார். நீங்கள் சொந்
தமாக்கப்போகும் தேசத்திலிருந்து யெகோவா உங்களை வேரோடு பிடுங்கி
எறிவார்.

64 பூமியின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைவரை
இருக்கிற எல்லா தேசங்களிலும் யெகோவா உங்களைச் சிதறிப்போக
வைப்பார்.[i] அங்கே மரத்தாலும் கல்லாலும் செய்யப்பட்ட பொய் தெய்வங்
களைக் கும்பிடுவீர்கள்; உங்களுக்கோ உங்கள் முன்னோர்களுக்கோ தெரி
யாத தெய்வங்கள் அவை.[j] **65** அந்தத் தேசங்களில் உங்களுக்குச் சமா
தானம் இருக்காது,[k] நீங்கள் குடியிருப்பதற்கு இடம் இருக்காது. யெகோவா
உங்கள் இதயத்தைக் கவலையில் கரைய வைப்பார்,[l] கண்களைப் பூத்துப்
போகச் செய்வார், மனதைப் பதற வைப்பார்.[m] **66** உங்களுடைய உயிர்
பயங்கர ஆபத்தில் இருக்கும். ராத்திரி பகலாகப் பயத்தில் நடுங்குவீர்கள்.
தப்பிப்பிழைப்பதே உங்களுக்குக் கேள்விக்குறியாக இருக்கும். **67** காலை
நேரத்தில், ‘எப்போது சாயங்காலம் வருமோ!’ என்றும், சாயங்காலத்தில்,
‘எப்போது காலைநேரம் வருமோ!’ என்றும் சொல்வீர்கள். உங்கள் இத
யத்திலுள்ள திகிலினாலும், கண் முன்னால் நடக்கிற காட்சிகளாலும் அப்ப
டிச் சொல்வீர்கள். **68** ‘நீங்கள் இனி ஒருநாளும் பார்க்க மாட்டீர்கள்’ என்று

28:58 * வே.வா., “யெகோவாவின் மகிமையான, பயபக்தியூட்டுகிற.”

அதி. 28
a எரே 52:6
b புல 4:5
c யாத் 24:7, உபா 31:26
d யாத் 3:15, யாத் 6:3, யாத் 20:2, சங் 83:18, சங் 113:3, ஏசா 42:8
e உபா 10:17, சங் 99:3
f லேவி 26:21, தானி 9:12
g உபா 10:22
h உபா 4:27
i லேவி 26:33, நெ 1:8, லூ 21:24
j உபா 4:27, 28
k ஆமோ 9:4
l எசே 12:19
m லேவி 26: 16, 36

நான் சொன்ன இடத்துக்கு யெகோவா உங்களைத் திரும்பிப் போகும்
படி செய்வார். நீங்கள் கப்பல்களில் எகிப்துக்கே திரும்பிப் போகும்படி செய்
வார். அங்கு எதிரிகளிடம் நீங்களே உங்களை அடிமைகளாக விற்க வேண்
டிய நிலை வரும், ஆனால் உங்களை விலைக்கு வாங்க யாருமே முன்வர
மாட்டார்கள்" என்று சொன்னார்.

29 யெகோவா இஸ்ரவேலர்களுடன் ஓரேபில் செய்த ஒப்பந்தத்தைத்[a]
தவிர, மோவாப் தேசத்தில் இன்னொரு ஒப்பந்தத்தையும் செய்யும்
படி மோசேயிடம் கட்டளை கொடுத்தார். அந்த ஒப்பந்தத்தின் வார்த்தை
கள் இவைதான்.

2 மோசே எல்லா இஸ்ரவேலர்களையும் கூப்பிட்டு அவர்களிடம், "பார்
வோனுக்கும் அவனுடைய ஊழியர்களுக்கும் எகிப்து தேசத்துக்கும் உங்
கள் கண் முன்னால் யெகோவா செய்ததையெல்லாம் நீங்கள் பார்த்தீர்கள்.[b]
3 அவர் கொடுத்த கடுமையான தண்டனைகளையும் அவர் செய்த மாபெ
ரும் அதிசயங்களையும் அற்புதங்களையும் உங்கள் கண்களாலேயே பார்த்
தீர்கள்.[c] **4** ஆனால், நீங்கள் கண்களால் பார்த்தவற்றையும் காதுகளால்
கேட்டவற்றையும் புரிந்துகொள்ளும் சக்தியை* இன்றுவரை யெகோவா
உங்களுக்குக் கொடுக்கவில்லை.[d] **5** அவர் உங்களிடம், 'வனாந்தரத்தில்
40 வருஷங்களாக நான் உங்களை வழிநடத்தி வந்தபோது[e] உங்கள் உடை
கள் பழையதாகவும் இல்லை, உங்கள் செருப்புகள் தேயவும் இல்லை.[f]
6 நீங்கள் ரொட்டி சாப்பிடவில்லை, திராட்சமதுவோ வேறெந்த மதுவோ
குடிக்கவில்லை. நானே உங்கள் கடவுளாகிய யெகோவா என்பதை உங்க
ளுக்குக் காட்டினேன்' என்று சொன்னார். **7** கடைசியாக, நீங்கள் இங்கே
வந்துசேர்ந்தீர்கள். எஸ்போனின் ராஜா சீகோனும்[g] பாசானின் ராஜா ஓகும்[h]
நம்மோடு போர் செய்ய வந்தார்கள், ஆனால் நாம் அவர்களைத் தோற்க
டித்தோம்.[i] **8** அதன்பின், அவர்களுடைய தேசத்தைக் கைப்பற்றி ரூபன்
கோத்திரத்துக்கும், காத் கோத்திரத்துக்கும், மனாசேயின் பாதிக் கோத்தி
ரத்துக்கும் சொத்தாகக் கொடுத்தோம்.[j] **9** அதனால், இந்த ஒப்பந்தத்
தைக் கவனமாகக் கடைப்பிடியுங்கள். அப்போது, நீங்கள் செய்வதெல்லாம்
வெற்றி பெறும்.[k]

10 இன்று உங்கள் கடவுளாகிய யெகோவாவின் முன்னிலையில் உங்
களுடைய கோத்திரத் தலைவர்கள், பெரியோர்கள்,* அதிகாரிகள், ஆண்
கள், **11** உங்களுடைய பிள்ளைகள், மனைவிகள்[l] ஆகிய எல்லாரும் நிற்
கிறீர்கள். உங்கள் முகாமில் இருக்கிற மற்ற ஜனங்களும்,[m] அதாவது
உங்களுக்காக விறகு வெட்டுகிறவர்கள்முதல் தண்ணீர் சுமக்கிறவர்கள்
வரை அத்தனை பேரும், உங்களோடு நிற்கிறார்கள். **12** உங்கள் கடவுளா
கிய யெகோவா இன்று இந்த ஒப்பந்தத்தை உங்களோடு செய்யப்போகிறார்,
உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்கு உறுதிமொழி கொடுக்கப்
போகிறார்.[n] **13** கடவுள் உங்களுக்கும் உங்கள் முன்னோர்களான ஆபிர
காம்,[o] ஈசாக்கு,[p] யாக்கோபு[q] ஆகியவர்களுக்கும் வாக்குக் கொடுத்தபடியே
இன்று உங்களைத் தன்னுடைய ஜனமாக ஏற்றுக்கொண்டு,[r] உங்களுடைய
கடவுளாக இருக்கப்போகிறார்.[s]

14 இந்த ஒப்பந்தத்தையும் உறுதிமொழியையும் அவர் உங்களுடன் மட்

29:4 *வே.வா., "ஆனால், புரிந்துகொள்கிற இதயத்தையும், பார்க்கிற கண்களையும், கேட்கிற காதுகளையும்." **29:10** *வே.வா., "மூப்பர்கள்."

அதி. 29
a யாத் 24:8
b யாத் 19:4; யோசு 24:5
c உபா 4:34; நெ 9:10
d ரோ 11:8
e உபா 1:3; உபா 8:2
f உபா 8:4; நெ 9:21; மத் 6:31
g எண் 21:26
h எண் 21:33
i சங் 135:10, 11
j எண் 32:33; உபா 3:12, 13
k உபா 4:6; உபா 8:18; யோசு 1:7, 8; 1ரா 2:3; சங் 103:17, 18; லூ 11:28
l நெ 8:2
m யாத் 12:38
n உபா 1:3; உபா 29:1
o ஆதி 17:1, 7; ஆதி 22:16, 17
p ஆதி 26:3
q ஆதி 28:13
r யாத் 19:5; உபா 7:6; உபா 28:9
s யாத் 6:7; யாத் 29:45

அதி. 29
a உபா 2:4
b எண் 25:1, 2
c உபா 11:16; எபி 3:12
d எபி 12:15
e யோசு 24:19
f உபா 27:26; உபா 28:15
g ஆதி 19:24; யூ 7
h ஆதி 10:19; ஆதி 14:2
i 1ரா 9:8, 9; 2நா 7:21, 22; எரே 22:8, 9
j எரே 31:32
k 1ரா 19:10
l நியா 2:12
m லேவி 26:16; உபா 27:26

டும் செய்வதில்லை. **15** நம் கடவுளாகிய யெகோவாவின் முன்னிலையில் இன்று நம்மோடு நிற்கிறவர்களோடும் வருங்காலச் சந்ததிகளோடும்* செய்கிறார். **16** (எகிப்து தேசத்தில் நாம் எப்படி இருந்தோம், மற்ற தேசங்கள் வழியாக எப்படிப் பயணம் செய்தோம்[a] என்பதெல்லாம் உங்களுக்கே நன்றாகத் தெரியும். **17** அங்கிருந்த ஜனங்கள் செய்த அருவருப்பான உருவங்களை, அதாவது மரம், கல், வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் செய்த அருவருப்பான* சிலைகளை,[b] நீங்களே பார்த்தீர்கள்.) **18** ஜாக்கிரதை! நம் கடவுளாகிய யெகோவாவை விட்டுவிட்டு அந்த ஜனங்களுடைய தெய்வங்களைத் தேடிப்போய் வணங்கும் அளவுக்கு மோசமான இதயமுள்ள ஆணோ பெண்ணோ குடும்பமோ கோத்திரமோ இன்று உங்கள் நடுவில் இருக்கக் கூடாது.[c] விஷப் பழத்தையும் எட்டியையும் முளைப்பிக்கிற வேரைப் போன்றவர்கள் உங்கள் நடுவில் இருக்கக் கூடாது.[d]

19 ஆனால், இந்த உறுதிமொழியின் வார்த்தைகளைக் கேட்ட பின்பும் ஒருவன் பெருமையோடு, “நான் என் இஷ்டப்படிதான்* நடப்பேன், எனக்கு ஒன்றும் ஆகாது’ என்று உள்ளத்தில் சொல்லிக்கொண்டு, தன் வழியிலுள்ள எல்லாவற்றையும் சீரழித்தால், **20** யெகோவா அவனை மன்னிக்க மாட்டார்.[e] யெகோவாவின் கோபம் அவன்மேல் பற்றியெரியும். இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள சாபங்கள் எல்லாமே நிச்சயம் அவன்மேல் வரும்.[f] அவனுடைய பெயர் இந்த உலகத்திலேயே இல்லாதபடி யெகோவா செய்துவிடுவார். **21** இந்தத் திருச்சட்ட புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் எல்லா சாபங்களையும் இஸ்ரவேல் கோத்திரங்களின் நடுவிலுள்ள அவன்மேல் யெகோவா கொண்டுவருவார்.

22 இந்தத் தேசத்து நிலங்களை யெகோவா அழித்திருப்பதை உங்களுடைய வருங்காலத் தலைமுறையினரும் தொலைதூர தேசத்திலிருந்து வரும் மற்ற தேசத்தாரும் பார்ப்பார்கள். **23** யெகோவா தன்னுடைய கோபத்தாலும் ஆக்ரோஷத்தாலும் சோதோம், கொமோரா,[g] அத்மா, செபோயீம்[h] ஆகிய இடங்களை அழித்ததுபோல், இந்தத் தேசத்து நிலங்களையெல்லாம் கந்தகத்தாலும் உப்பாலும் நெருப்பாலும் அழித்திருப்பதைப் பார்ப்பார்கள். அவை விதை விதைக்கப்படாமலும், பயிர்கள் முளைக்காமலும், எதுவுமே வளராமலும் கிடப்பதைப் பார்க்கும்போது **24** அவர்களும் எல்லா தேசத்தாரும், ‘இந்தத் தேசத்தை யெகோவா ஏன் அழித்துப்போட்டார்?[i] அவருடைய கோபம் இந்தளவு பற்றியெரிந்ததற்குக் காரணம் என்ன?’ என்று கேட்பார்கள். **25** அதற்கு ஜனங்கள், ‘அவர்களுடைய முன்னோர்களின் கடவுளாகிய யெகோவா அவர்களை எகிப்து தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தபோது செய்த ஒப்பந்தத்தை[j] அவர்கள் மீறிவிட்டார்கள்.[k] **26** முன்பின் தெரியாத தெய்வங்களை வணங்கக் கூடாது என்று அவர் சொல்லியிருந்தும் அவர்கள் அவற்றை வணங்கினார்கள்.[l]
27 அவர்கள்மேல் யெகோவாவுக்குப் பயங்கர கோபம் வந்ததால், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள எல்லா சாபங்களையும் கொண்டுவந்தார்.[m]
28 யெகோவா பயங்கரமான கோபத்தாலும் ஆக்ரோஷத்தாலும்

29:15 *நே.மொ., “நம்மோடு இல்லாதவர்களோடும்.” **29:17** *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **29:19** *வே.வா., “என் இதயம் போகிற போக்கில்தான்.”

அவர்களுடைய தேசத்திலிருந்து அவர்களை வேரோடு பிடுங்கி[a]
வேறொரு தேசத்தில் எறிந்துவிட்டார். அங்குதான் அவர்கள் இப்போது
இருக்கிறார்கள்'[b] என்று சொல்வார்கள்.

29 ரகசியமாக வைக்கப்படுகிற எல்லா விஷயங்களும் நம் கடவுளாகிய
யெகோவாவுக்குத் தெரியும்.[c] ஆனால், இந்தத் திருச்சட்டத்திலுள்ள எல்லா
வார்த்தைகளின்படியும் நாம் நடக்க வேண்டும் என்பதற்காக, நமக்கும்
நம்முடைய சந்ததிகளுக்கும் இந்த விஷயங்களை வெளிப்படுத்தியிருக்கி
றார்"[d] என்று சொன்னார்.

30 பின்பு அவர், "நான் உங்கள் முன்னால் வைத்த ஆசீர்வாதங்களும்
சாபங்களும் நிறைவேறும்போது,[e] உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களைச் சிதறிப்போக வைக்கும் தேசங்களில்[f] அவற்றை நினைத்துப்
பார்த்து,[g] **2** உங்கள் கடவுளாகிய யெகோவாவிடம் ஒருவேளை நீங்கள்
திரும்பி வரலாம்.[h] ஒருவேளை நீங்களும் உங்கள் மகன்களும் இன்று
நான் கொடுக்கிற எல்லா கட்டளைகளையும் கேட்டு, முழு இதயத்தோ
டும் முழு மூச்சோடும் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தால்,[i] **3** சிறைபிடிக்கப்பட்
டிருந்த உங்களை உங்கள் கடவுளாகிய யெகோவா விடுதலை செய்வார்.[j]
உங்கள் கடவுளாகிய யெகோவா உங்கள்மேல் இரக்கம் காட்டுவார்.[k] உங்க
ளைச் சிதறிப்போக வைத்த தேசங்களிலிருந்து மறுபடியும் உங்களைக் கூட்
டிச்சேர்ப்பார்.[l] **4** நீங்கள் பூமியின் எல்லைக்கே துரத்தப்பட்டிருந்தாலும்,
உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை அங்கிருந்து கூட்டிக்கொண்டு
வருவார்.[m] **5** உங்களுடைய முன்னோர்கள் சொந்தமாக்கிக்கொண்ட
தேசத்துக்கு உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களைக் கொண்டுவந்து
சேர்ப்பார். நீங்களும் அதைச் சொந்தமாக்கிக்கொள்வீர்கள். அப்போது
அவர் உங்களைச் சீரும் சிறப்புமாக வாழ வைப்பார். நீங்கள் உங்களு
டைய முன்னோர்களைவிட ஏராளமாகப் பெருகுவீர்கள்.[n] **6** நீங்கள் உங்
கள் கடவுளாகிய யெகோவாமேல் முழு இதயத்தோடும் முழு மூச்சோடும்
அன்பு காட்டி, வாழ்வு பெறும்படி,[o] உங்கள் கடவுளாகிய யெகோவா உங்
களுடைய இதயத்தையும் உங்கள் பிள்ளைகளின் இதயத்தையும் சுத்தமாக்
குவார்.[p] **7** உங்களை வெறுத்து உங்களைப் பாடாய்ப் படுத்திய எதிரிகள்
மேல் உங்கள் கடவுளாகிய யெகோவா இந்தச் சாபங்கள் எல்லாவற்றையும்
கொண்டுவருவார்.[q]

8 அப்போது, நீங்கள் யெகோவாவிடம் திரும்பி வந்து அவருடைய
பேச்சைக் கேட்பீர்கள். இன்று நான் கொடுக்கிற அவருடைய கட்டளை
கள் எல்லாவற்றையும் கடைப்பிடிப்பீர்கள். **9** நீங்கள் செய்கிற எல்லாவற்
றையும் உங்கள் கடவுளாகிய யெகோவா அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.[r]
உங்களுக்கு ஏராளமான பிள்ளைகளையும் மந்தைகளையும் விளைச்சலை
யும் தருவார். யெகோவா உங்கள் முன்னோர்களை ஆசீர்வதிப்பதில் சந்தோ
ஷப்பட்டது போலவே உங்களை ஆசீர்வதிப்பதிலும் சந்தோஷப்படுவார்.[s]
10 அப்போது, உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பேச்சைக் கேட்டு, இந்
தத் திருச்சட்ட புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள எல்லா கட்டளைகளையும் சட்
டதிட்டங்களையும் கடைப்பிடிப்பீர்கள். முழு இதயத்தோடும் முழு மூச்சோ
டும் உங்கள் கடவுளாகிய யெகோவாவிடம் திரும்பி வருவீர்கள்.[t]

11 நான் இன்று உங்களுக்குக் கொடுக்கிற இந்தக் கட்டளை நீங்கள்
கடைப்பிடிக்க முடியாத அளவுக்குக் கஷ்டமானது இல்லை, கண்டு

அதி. 29
a உபா 28: 45, 63; 1ரா 14:15; 2ரா 17:18; லூ 21:24
b எஸ்றா 9:7; தானி 9:7
c ரோ 11:33
d சங் 78:5; பிர 12:13

அதி. 30
e உபா 11: 26-28; உபா 28:2, 15
f 2ரா 17:6; 2நா 36:20
g 1ரா 8:47; நெ 1:9; எசே 18:28; யோவே 2:13
h ஏசா 55:7; 1யோ 1:9
i உபா 4:29
j எரே 29:14
k புல 3:22
l எஸ்றா 1:2, 3; சங் 147:2; எரே 32:37; எசே 34:13
m உபா 28:64; செப் 3:20
n நெ 1:9
o உபா 6:5
p எரே 32: 37, 39
q ஆதி 12:2, 3; எரே 25:12; புல 3:64; ரோ 12:19
r ஏசா 65:21, 22; மல் 3:10
s எரே 32: 37, 41
t நெ 1:9; அப் 3:19

பிடிக்க முடியாத அளவுக்குத் தூரத்திலும் இல்லை.[a] **12** ‘பரலோகத்துக்கு
ஏறிப்போய் நமக்காக யார் அதைக் கொண்டுவருவார்? அப்போதுதானே
அதைக் கேட்டு நடக்க முடியும்’ என்று நீங்கள் சொல்லும் அளவுக்கு
அது பரலோகத்திலும் இல்லை,[b] **13** ‘கடல் தாண்டிப்போய் நமக்காக
யார் அதைக் கொண்டுவருவார்? அப்போதுதானே அதைக் கேட்டு நடக்க
முடியும்’ என்று நீங்கள் சொல்லும் அளவுக்கு அது கடலைத் தாண்டி
யும் இல்லை. **14** அந்த வார்த்தை உங்களுக்கு ரொம்பப் பக்கத்திலேயே
இருக்கிறது. உங்கள் வாயிலும் இதயத்திலும் இருக்கிறது.[c] அதனால் அதை
உங்களால் கடைப்பிடிக்க முடியும்.[d]

15 இன்று நான் உங்கள் முன்னால் வாழ்வையும் சாவையும், ஆசீர்வா
தத்தையும் சாபத்தையும் வைக்கிறேன்.[e] **16** உங்கள் கடவுளாகிய யெகோ
வாமேல் அன்பு காட்டி,[f] அவருடைய வழிகளில் நடந்து, அவருடைய
கட்டளைகளையும் சட்டதிட்டங்களையும் நீதித்தீர்ப்புகளையும் கடைப்பி
டித்தால், அதாவது உங்கள் கடவுளாகிய யெகோவா இன்று என் மூலம்
கொடுக்கிற கட்டளைகளைக் கேட்டு நடந்தால், வாழ்வு பெறுவீர்கள்.[g] ஏரா
ளமாகப் பெருகுவீர்கள். நீங்கள் சொந்தமாக்கிக்கொள்ளும் தேசத்தில் உங்
கள் கடவுளாகிய யெகோவா உங்களை ஆசீர்வதிப்பார்.[h]

17 ஆனால் உங்கள் இதயம் அவரைவிட்டு விலகிவிட்டால்,[i] அதா
வது நீங்கள் அவருடைய பேச்சைக் கேட்காமல் வேறு தெய்வங்கள்மேல்
ஆசைப்பட்டு அவற்றை வணங்கினால்,[j] **18** நிச்சயம் அழிந்துபோவீர்கள்
என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்.[k] நீங்கள் யோர்தானைக் கடந்து
போய் சொந்தமாக்கிக்கொள்ளும் தேசத்தில் ரொம்பக் காலம் வாழ மாட்டீர்
கள். **19** இன்று பரலோகத்தையும் பூமியையும் சாட்சியாக வைத்துச்
சொல்கிறேன், உங்கள் முன்னால் நான் வாழ்வையும் சாவையும், ஆசீர்வா
தத்தையும் சாபத்தையும் வைக்கிறேன்.[l] நீங்களும் உங்கள் சந்ததிகளும்[m]
பிழைப்பதற்காக, **20** நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாமேல்
அன்பு காட்டி,[n] அவருடைய பேச்சைக் கேட்டு நடந்து, அவருக்கு உண்மை
யாக* இருப்பதன் மூலம்[o] வாழ்வைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.[p] ஏனென்
றால், யெகோவாதான் உங்களுக்கு வாழ்வு தருவார். உங்கள் முன்னோர்க
ளான ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தருவதாக வாக்குக்
கொடுத்த தேசத்தில்[q] அவர்தான் உங்களை நீண்ட காலம் வாழ வைப்பார்”
என்று சொன்னார்.

31 பின்பு மோசே இஸ்ரவேலர்கள் எல்லாரிடமும், **2** “எனக்கு இப்
போது 120 வயது.[r] இனிமேல் நான் உங்களை வழிநடத்திக்கொண்டு
போக முடியாது. ஏனென்றால் நான் யோர்தானைக் கடந்துபோக மாட்
டேன் என்று யெகோவா என்னிடம் சொல்லிவிட்டார்.[s] **3** உங்கள் கடவு
ளாகிய யெகோவாதான் உங்கள்முன் யோர்தானைக் கடந்துபோவார். அவர்
தான் மற்ற தேசத்து ஜனங்களை உங்கள் கண் முன்னால் அழிப்பார், நீங்கள்
அவர்களை விரட்டியடிப்பீர்கள்.[t] யெகோவா சொன்னபடியே, யோசுவாவின்
தலைமையில் நீங்கள் யோர்தானைக் கடந்துபோவீர்கள்.[u] **4** எமோரியர்க
ளின் ராஜாக்களான சீகோனையும்[v] ஓகையும்[w] அவர்களுடைய தேசத்தை
யும் யெகோவா எப்படி அழித்தாரோ அதேபோல் இந்தத் தேசத்தாரையெல்
லாம் அழிப்பார்.[x] **5** உங்களுக்காக யெகோவா அவர்களை வீழ்த்துவார்.

30:20 *நே.மொ., “அவரைப் பற்றிக்கொண்டு.”

அதி. 30

a ஏசா 45:19
b ரோ 10:6
c ரோ 10:8
d மத் 7:21; யாக் 1:25
e உபா 11:26
f உபா 6:5
g லேவி 18:5
h லேவி 25:18; உபா 30:5
i உபா 29:18; எபி 3:12
j உபா 4:19
k உபா 8:19; யோசு 23:15; 1சா 12:25
l உபா 11:26; உபா 27:26; உபா 28:2, 15
m யோசு 24:15
n உபா 10:12
o உபா 4:4
p உபா 32:47
q ஆதி 12:7; ஆதி 15:18

அதி. 31

r யாத் 7:7; உபா 34:7; அப் 7:23
s எண் 20:12; உபா 3:27
t உபா 9:3
u எண் 27:18; உபா 3:28; யோசு 1:2
v எண் 21:23, 24
w எண் 21:33, 35
x யாத் 23:23

நான் சொன்னபடியே நீங்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டும்.[a] **6** தைரி
யமாகவும் உறுதியாகவும் இருங்கள்.[b] அவர்களைப் பார்த்துப் பயந்து நடுங்
காதீர்கள்.[c] ஏனென்றால், உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களோடு
வருகிறார். அவர் உங்களைவிட்டு விலக மாட்டார், உங்களைக் கைவிடவும்
மாட்டார்"[d] என்று சொன்னார்.

7 பின்பு மோசே யோசுவாவைக் கூப்பிட்டு, எல்லா இஸ்ரவேலர்களுக்
கும் முன்னால் அவரிடம், "நீ தைரியமாகவும் உறுதியாகவும் இரு.[e] நம் முன்
னோர்களுக்குத் தருவதாக யெகோவா வாக்குக் கொடுத்த தேசத்துக்கு இந்த
ஜனங்களை நீதான் கூட்டிக்கொண்டு போக வேண்டும். அந்தத் தேசத்தைச்
சொந்தமாக்கிக்கொள்ள அவர்களுக்கு நீதான் உதவி செய்ய வேண்டும்.[f]
8 யெகோவா உனக்கு முன்னால் போகிறார், அவர் உன்னோடு இருப்
பார்.[g] அவர் உன்னைவிட்டு விலக மாட்டார், உன்னைக் கைவிடவும் மாட்
டார். அதனால் பயப்படாதே, திகிலடையாதே"[h] என்று சொன்னார்.

9 பின்பு, மோசே இந்தத் திருச்சட்டத்தை எழுதி[i] யெகோவாவின் ஒப்பந்
தப் பெட்டியைச் சுமக்கிற லேவியர்களான குருமார்களிடமும் இஸ்ரவேலின்
பெரியோர்கள்* எல்லாரிடமும் கொடுத்தார். **10** மோசே அவர்களிடம்,
"விடுதலை வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலும்,[j] கூடா
ரப் பண்டிகை[k] சமயத்தில், **11** உங்கள் கடவுளாகிய யெகோவா தேர்ந்தெ
டுத்திருக்கிற இடத்திலே அவர் முன்னிலையில் இஸ்ரவேலர்கள் எல்லாரும்
வர வேண்டும்.[l] அவர் குறித்திருக்கிற அந்தச் சமயத்தில், அவர்களுடைய
காதில் விழும்படி இந்தத் திருச்சட்டத்தை நீங்கள் வாசிக்க வேண்டும்.[m]
12 ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், உங்கள் நகரங்களில் வாழ்கிற மற்ற
தேசத்து ஜனங்கள் எல்லாரையும் நீங்கள் ஒன்றுகூட்ட வேண்டும்.[n] அப்
போதுதான், அவர்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாவைப் பற்றிக்
கேட்டு, கற்றுக்கொண்டு, அவருக்குப் பயந்து நடப்பார்கள். இந்தத் திருச்சட்
டத்தில் உள்ள எல்லா வார்த்தைகளையும் கவனமாகக் கடைப்பிடிப்பார்கள்.
13 இந்தத் திருச்சட்டத்தைப் பற்றித் தெரியாத அவர்களுடைய மகன்களும்
கேட்டுக் கற்றுக்கொள்வார்கள்.[o] நீங்கள் யோர்தானைக் கடந்து சொந்தமாக்
கிக்கொள்ளும் தேசத்தில் வாழ்நாளெல்லாம் உங்கள் கடவுளாகிய யெகோ
வாவுக்குப் பயந்து நடப்பார்கள்"[p] என்று சொன்னார்.

14 அதன்பின் யெகோவா மோசேயிடம், "நீ இறக்கப்போகும் நேரம் வந்
துவிட்டது.[q] இப்போது பொறுப்பை நான் யோசுவாவுக்குக் கொடுக்க வேண்
டும்.[r] அவனைச் சந்திப்புக் கூடாரத்துக்குக் கூட்டிக்கொண்டு வா" என்று
சொன்னார். அதனால், மோசேயும் யோசுவாவும் சந்திப்புக் கூடாரத்தில்
போய் நின்றார்கள். **15** அப்போது, யெகோவா அந்தக் கூடாரத்தின் மேல்
மேகத் தூணில் தோன்றினார். அந்த மேகத் தூண் கூடார வாசலில் நின்றது.[s]

16 யெகோவா மோசேயிடம், "நீ இறக்கப்போகிறாய். இந்த ஜனங்கள்,
நான் கொடுக்கப்போகிற தேசத்திலுள்ள தெய்வங்களை வணங்கி எனக்
குத் துரோகம் செய்வார்கள்.[t] என்னைவிட்டு விலகி,[u] நான் அவர்களோடு
செய்த ஒப்பந்தத்தை மீறுவார்கள்.[v] **17** அப்போது, அவர்கள்மேல் என்
கோபம் பற்றியெரியும்.[w] நான் அவர்களைக் கைவிட்டுவிடுவேன்.[x] அவர்
கள் அழிந்துபோகும்வரை என் முகத்தை அவர்களிடமிருந்து மறைத்துக்

31:9 * வே.வா., "மூப்பர்கள்."

அதி. 31
a எண் 33:52; உபா 7:2, 24; உபா 20:16
b யோசு 1:6; சங் 27:14; சங் 118:6
c எண் 14:9; உபா 7:18
d உபா 4:31; யோசு 1:5; எபி 13:5
e யோசு 10:25
f உபா 1:38
g யாத் 33:14
h யோசு 1:9
i யாத் 34:27
j உபா 15:1
k லேவி 23:34
l உபா 16:16
m நெ 8:7
n உபா 4:10; எபி 10:25
o உபா 6:6, 7; எபே 6:4
p உபா 30:16
q எண் 27:13
r உபா 3:28
s யாத் 33:9; யாத் 40:38
t நியா 2:17; சங் 106:37-39
u 1ரா 11:33
v நியா 2:12, 20
w உபா 29:20
x 1நா 28:9; 2நா 15:2; 2நா 24:20

கொள்வேன்.[a] அவர்கள் பிரச்சினைகளிலும் கஷ்டங்களிலும் சிக்கித் தவிக்
கும்போது,[b] ‘நம் கடவுள் நம்மோடு இல்லாததால்தானே இப்படியெல்லாம்
கஷ்டப்படுகிறோம்?’ என்று சொல்வார்கள்.[c] **18** அவர்கள் பொய் தெய்
வங்களை வணங்கி அக்கிரமம் செய்ததால், அந்த நாளில் நான் என்
முகத்தை மறைத்துக்கொள்வேன்.[d]

19 இப்போது நீங்கள் இந்தப் பாடலை எழுதி[e] இஸ்ரவேலர்களுக்குக் கற்
றுக்கொடுக்க வேண்டும்.[f] அவர்களை மனப்பாடம் செய்ய வைக்க வேண்
டும். இந்தப் பாடல், நான் கொடுத்த எச்சரிக்கைகளை அவர்களுக்கு ஞாபகப்
படுத்தும்.[g] **20** அவர்களுடைய முன்னோர்களுக்குத் தருவதாக வாக்குக்
கொடுத்த தேசமாகிய[h] பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்கு[i] அவர்களை
நான் கூட்டிக்கொண்டு வந்த பின்பு, அவர்கள் நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்
துப்போய் இருக்கும்போது,[j] பொய் தெய்வங்களை வணங்கி, என்னை அவ
மதிப்பார்கள். என் ஒப்பந்தத்தை மீறுவார்கள்.[k] **21** அவர்களுக்குப் பிரச்சி
னைகளும் கஷ்டங்களும் வரும்போது,[l] நான் கொடுத்த எச்சரிக்கைகளை
இந்தப் பாடல் அவர்களுக்கு ஞாபகப்படுத்தும். (அவர்களுடைய சந்ததி
கள் இந்தப் பாடலை மறக்கக் கூடாது.) நான் வாக்குக் கொடுத்த தேசத்துக்கு
அவர்களைக் கூட்டிக்கொண்டு போவதற்கு முன்னாலேயே அவர்களுடைய
மனம் எப்படி மாறியிருக்கிறது என்று எனக்குத் தெரியும்”[m] என்றார்.

22 அதனால், அன்றைக்கு மோசே இந்தப் பாடலை எழுதி இஸ்ரவேலர்
களுக்குக் கற்றுக்கொடுத்தார்.

23 நூனின் மகனாகிய யோசுவாவுக்கு அவர்* பொறுப்பு கொடுத்து,[n]
“தைரியமாகவும் உறுதியாகவும் இரு.[o] இஸ்ரவேலர்களிடம் நான் வாக்குக்
கொடுத்த தேசத்துக்கு நீதான் அவர்களைக் கூட்டிக்கொண்டு போக வேண்
டும்.[p] நான் எப்போதும் உன்னோடு இருப்பேன்” என்று சொன்னார்.

24 இந்தத் திருச்சட்டம் முழுவதையும் மோசே ஒரு புத்தகத்தில் எழுதி
முடித்தவுடன்,[q] **25** யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியைச் சுமக்கிற
லேவியர்களிடம், **26** “இந்தத் திருச்சட்ட புத்தகத்தை[r] எடுத்து, உங்கள் கட
வுளாகிய யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டிக்குப் பக்கத்தில் வையுங்கள்.[s]
கீழ்ப்படியாதவர்களுக்கு எதிராக இது ஒரு சாட்சியாய் இருக்கும். **27** உங்
களுடைய கீழ்ப்படியாத போக்கும்[t] பிடிவாத குணமும்[u] எனக்கு நன்றா
கத் தெரியும். நான் உயிரோடு இருக்கும்போதே நீங்கள் யெகோவாவின்
பேச்சை இந்தளவுக்கு மீறுகிறீர்கள் என்றால், நான் இறந்த பின்பு இன்னும்
எந்தளவுக்கு மீறுவீர்கள்! **28** உங்கள் கோத்திரத்தைச் சேர்ந்த பெரியோர்
களையும் அதிகாரிகளையும் என் முன்னால் கூடிவரச் சொல்லுங்கள். அவர்
களுக்கு எதிராகப் பரலோகத்தையும் பூமியையும் சாட்சியாக வைத்து,[v]
அவர்களுடைய காதில் விழும்படி நான் இந்த வார்த்தைகளைச் சொல்
வேன். **29** ஏனென்றால், நான் இறந்த பின்பு நீங்கள் அக்கிரமம் செய்
வீர்கள் என்றும் நான் காட்டிய வழியைவிட்டு விலகிப்போவீர்கள்[w] என்றும்
எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் யெகோவாவுக்குப் பிடிக்காததைச் செய்
வீர்கள். உங்களுடைய கைகளின் செயல்களால் அவரைக் கோபப்படுத்து
வீர்கள். அதனால், கடைசி காலத்தில் நிச்சயம் உங்களுக்கு அழிவு வரும்”[x]
என்று சொன்னார்.

31:23 * அநேகமாக, “கடவுள்.”

அதி. 31
a உபா 32:20, சங் 104:29, எசே 39:23
b நெ 9:27
c நியா 6:13
d ஏசா 59:2
e உபா 31:30, உபா 32:44
f உபா 4:9, உபா 11:19
g உபா 31:21
h ஆதி 15:18
i யாத் 3:8, எண் 13:26, 27
j நெ 9:25
k யாத் 24:7, உபா 8:12-14, உபா 29:1, நெ 9:26
l உபா 28:59
m யாத் 16:4
n எண் 27:18, உபா 31:14
o யோசு 1:6, 9
p உபா 1:38, உபா 3:28
q யாத் 34:27
r உபா 17:18, 2நா 34:14
s 1ரா 8:9
t உபா 9:24, நெ 9:26
u யாத் 32:9, சங் 78:8
v உபா 30:19
w நியா 2:19
x உபா 28:15

30 பின்பு இஸ்ரவேல் சபையாரின் காதில் விழும்படி, மோசே இந்தப் பாடலின் வார்த்தைகளை ஆரம்பத்திலிருந்து கடைசிவரை சொன்னார்:[a]

32 “வானமே,* நான் பேசுவதைக் கேள்.
பூமியே, என் வார்த்தைகளைக் கவனி.
2 என் அறிவுரைகள் மழைபோல் பொழியும்.
என் வார்த்தைகள் பனிபோல் இறங்கும்.
அவை புல்மேல் விழும் தூறல்போல் இருக்கும்.
பயிர்மேல் கொட்டும் மழைபோல் இருக்கும்.
3 யெகோவாவின் பெயரை நான் புகழ்வேன்.[b]
நம் கடவுளுடைய மகத்துவத்தை[c] எல்லாருக்கும் சொல்லுங்கள்!
4 அவர் கற்பாறை போன்றவர், அவருடைய செயல்கள் குறை இல்லாதவை.[d]
அவருடைய வழிகளெல்லாம் நியாயமானவை.[e]
அவர் நம்பகமான கடவுள்,[f] அநியாயமே செய்யாதவர்.[g]
அவர் நீதியும் நேர்மையும் உள்ளவர்.[h]
5 அவர்கள்தான் தறிகெட்டு நடந்தார்கள்.[i]
அவர்கள் அவருடைய பிள்ளைகள் அல்ல.
குறையெல்லாம் அவர்கள்மேல்தான் இருக்கிறது.[j]
அவர்கள் சீர்கெட்டும் நெறிகெட்டும் நடக்கிற தலைமுறை![k]
6 அறிவில்லாதவர்களே! முட்டாள்களே![l]
யெகோவாவுக்கு இப்படித்தான் நன்றி காட்டுவீர்களோ?[m]
உங்களுக்கு உயிர் கொடுத்த தகப்பன் அவர்தானே?[n]
உங்களை உருவாக்கி, உங்களை நிலைநாட்டியவர் அவர்தானே?
7 பழங்காலத்தை நினைத்துப் பாருங்கள்.
கடந்த தலைமுறைகளைப் பற்றி யோசித்துப் பாருங்கள்.
உங்கள் அப்பாவைக் கேளுங்கள், அவர் சொல்வார்.[o]
உங்கள் பெரியோர்களை* கேளுங்கள், அவர்கள் விளக்குவார்கள்.
8 உன்னதமான கடவுள், ஆதாமின் பிள்ளைகளை* தனித்தனியாகப் பிரித்து,[p]
எல்லாருக்கும் சொத்தைப் பங்குபோட்டபோது,[q]
இஸ்ரவேலர்களின்[r] எண்ணிக்கையை மனதில் வைத்து,
அந்தந்த தேசத்தின் எல்லையைத் தீர்மானித்தாரே.[s]
9 யெகோவாவின் ஜனங்கள்தான் அவருடைய செல்வம்.[t]
யாக்கோபுதான் அவருடைய சொத்து.[u]
10 அவனை வனாந்தரத்தில்[v] அவர் கண்டுபிடித்தார்.
மிருகங்கள் ஓலமிடும் வெறுமையான பாலைவனத்தில்[w] அவனைப் பார்த்தார்.
வேலிபோல் அவனைச் சூழ்ந்து நின்று பாதுகாத்தார்,[x]

32:1 *வே.வா., “பரலோகமே.” **32:7** *வே.வா., “மூப்பர்களை.” **32:8** *அல்லது, “மனித இனத்தை.”

அதி. 31
a உபா 32:44

அதி. 32
b யோவா 17:26
c 1நா 29:11; சங் 145:3
d 2சா 22:31; சங் 18:2; சங் 19:7; யாக் 1:17
e சங் 33:5
f உபா 7:9; 1பே 4:19
g உபா 25:16
h ஆதி 18:25
i உபா 31:27; நியா 2:19; சங் 14:1
j ஏசா 1:4
k சங் 78:8; லூ 9:41
l எரே 4:22
m ஏசா 1:2
n யாத் 4:22; உபா 32:18; ஏசா 63:16
o யாத் 13:14; சங் 44:1
p ஆதி 11:9
q ஆதி 10:5; சங் 115:16
r ஆதி 15:18; யாத் 23:31
s உபா 2:5, 19; அப் 17:26
t யாத் 19:5; உபா 7:6
u சங் 78:71
v உபா 8:14, 15
w எரே 2:6
x நெ 9:19, 20

அதி. 32
a சக 2:8
b யாத் 19:4
c உபா 1:31
d ஏசா 43:12
e உபா 33:29
f உபா 8:7, 8
g சங் 147:14
h உபா 31:20 நெ 9:25
i ஏசா 1:4 ஓசி 13:6
j நியா 2:12 1ரா 14:22 1கொ 10: 21, 22
k 2ரா 23:13 எசே 8:17
l லேவி 17:7 சங் 106:37 1கொ 10:20
m சங் 106:21 ஏசா 17:10 எரே 2:32
n உபா 4:34
o நியா 2:14 சங் 78:59
p உபா 31:17

கண்ணும் கருத்துமாகக் கவனித்துக்கொண்டார்.
கண்மணிபோல் காத்தார்.[a]
11 கழுகு தன் குஞ்சுகளைக் கூட்டிலிருந்து கலைத்து,*
அவற்றின் மேல் வட்டமிட்டுப் பறந்து,
பின்பு கீழாக வந்து தன் இறக்கைகளை விரித்து,
சிறகுகளில் அவற்றைச் சுமந்துகொண்டு போவது போல,[b]
12 யெகோவா ஒருவரே அவனை* சுமந்து வந்தார்.[c]
வேறு எந்தத் தெய்வமும் அவரோடு இல்லை.[d]
13 பூமியின் உயர்ந்த இடங்களை அவன் கைப்பற்றும்படி செய்தார்.[e]
வயலின் விளைச்சலைச் சாப்பிடக் கொடுத்தார்.[f]
மலையிலிருந்து தேனையும் கற்பாறையிலிருந்து எண்ணெயையும் தந்து போஷித்தார்.
14 பசுமாட்டு வெண்ணெயும் ஆட்டுப் பாலும் ஊட்டினார்.
கொழுத்த செம்மறியாடுகளையும், பாசானின் செம்மறியாட்டுக் கடாக்களையும்,
வெள்ளாட்டுக் கடாக்களையும் தந்தார்.
தரமான கோதுமையைக் கொடுத்தார்.[g]
திராட்சைப் பழங்களின் ரசத்தை* நீ குடித்தாய்.
15 ஆனால் யெஷுரனே,* நீ கொழுத்தபோது அவரையே எட்டி உதைத்தாய்.
நீ பெருத்துப்போனாய், தடித்துப்போனாய், ஊதிப்போனாய்.[h]
அதனால் உன்னைப் படைத்த கடவுளைவிட்டே விலகினாய்.[i]
உன்னுடைய மீட்பின் கற்பாறையை அவமதித்தாய்.
16 பொய் தெய்வங்களை வணங்கி அவருடைய எரிச்சலைக் கிளப்பினாய்.[j]
அருவருப்பான காரியங்களைச் செய்து அவரைக் கோபப்படுத்தினாய்.[k]
17 கடவுளுக்குப் பலி செலுத்தாமல், பேய்களுக்குப் பலி செலுத்தினாய்.[l]
முன்பின் தெரியாத தெய்வங்களுக்கு,
நேற்று முளைத்த தெய்வங்களுக்கு,
உன் முன்னோர்களுக்குத் தெரியாத தெய்வங்களுக்குப் பலி செலுத்தினாய்.
18 கற்பாறைபோல் இருக்கும் உன் கடவுளை மறந்துவிட்டாய்.[m]
உனக்கு உயிர் கொடுத்தவரை நினைக்கத் தவறிவிட்டாய்.[n]
19 யெகோவா அதைப் பார்த்தார்.
தன்னுடைய மகன்களும் மகள்களும் தன்னைக் கோபப்படுத்தியதால் அவர்களை உதறித்தள்ளினார்.[o]
20 பின்பு அவர், ‘என் முகத்தை அவர்களிடமிருந்து மறைத்துக்கொள்வேன்.[p]

32:11 *வே.வா., “கழுகு தன் குஞ்சுகளுக்குப் பறக்கக் கற்றுக்கொடுக்கும்போது.” **32:12** *அதாவது, “யாக்கோபை.” **32:14** *நே.மொ., “இரத்தத்தை.” **32:15** *இந்தப் பெயரின் அர்த்தம், “நேர்மையானவன்”; இது இஸ்ரவேலின் கௌரவப் பட்டம்.

அவர்களுக்கு நடக்கப்போவதைப் பார்ப்பேன்.
அவர்கள் நெறிகெட்ட தலைமுறை.[a]
உண்மை இல்லாத வம்சம்.[b]
21 ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை* கும்பிட்டு என் கோபத்தைக் கிளறினார்கள்.[c]
வீணான சிலைகளை வணங்கி என்னை நோகடித்தார்கள்.[d]
அதனால், ஒன்றுக்கும் உதவாத ஜனத்தைக்கொண்டு நானும் அவர்களுடைய கோபத்தைக் கிளறுவேன்.[e]
முட்டாள்தனமான தேசத்தைக்கொண்டு நானும் அவர்களை நோகடிப்பேன்.[f]
22 என் கோபத் தீ பற்றியெரிகிறது.[g]
அது கல்லறையின் அடிமட்டத்தையும் சுட்டெரிக்கும்.[h]
பூமியையும் அதன் விளைச்சலையும் பொசுக்கும்.
மலைகளின் அஸ்திவாரங்களையே கொழுந்துவிட்டு எரிய வைக்கும்.
23 நான் வேதனைக்குமேல் வேதனையைக் கொண்டுவருவேன்.
அவர்கள்மேல் என் அம்புகளை எறிவேன்.
24 பசி அவர்களை வாட்டியெடுக்கும்.[i]
கடுமையான காய்ச்சலும் பயங்கரமான அழிவும் அவர்களைத் தாக்கும்.[j]
கொடிய மிருகங்கள் அவர்களைப் பீறிப்போடும்.[k]
நிலத்தில் ஊரும் விஷப் பிராணிகள் அவர்களைக் கடிக்கும்.
25 வாலிபர்களோ கன்னிப்பெண்களோ,
குழந்தைகளோ கிழவர்களோ,[l]
வெளியே இருக்கிற எல்லாரையும் வாள் வெட்டித்தள்ளும்![m]
உள்ளே இருக்கிற எல்லாரையும் திகில் கவ்விக்கொள்ளும்![n]
26 நான் உங்களிடம், “உங்களைச் சிதறிப்போக வைத்துவிடுவேன்,
உங்களைப் பற்றிய நினைவே உலகத்தில் இல்லாதபடி செய்துவிடுவேன்” என்று சொல்ல நினைத்தேன்.
27 ஆனால் எதிரிகள் உண்மையைப் புரட்டி,[o] “எங்கள் வீரத்தால்தான் ஜெயித்தோம்,[p]
யெகோவா எதுவும் செய்யவில்லை” என்று பெருமையடிப்பார்களோ என்று நினைத்தேன்.[q]
அதனால் அப்படிச் சொல்லாமல் விட்டுவிட்டேன்.
28 இஸ்ரவேலர்கள் அறிவில்லாத* ஜனங்கள்,
அவர்களுக்குப் புத்தியே# இல்லை.[r]
29 அப்படிப் புத்தி இருந்தால்[s] இதை யோசித்துப் பார்ப்பார்களே.[t]
வரப்போகும் கதியை நினைத்துப் பார்ப்பார்களே.[u]
30 அவர்களுக்குக் கற்பாறைபோல் இருந்தவர் அவர்களைக் கைவிட்டுவிட்டார்.[v]

32:21 *வே.வா., “தெய்வமே இல்லாத ஒன்றை.” **32:28** *அல்லது, “புத்திமதியைக் கேட்காத.” #வே.வா., “புரிந்துகொள்ளுதலே.”

அதி. 32
a உபா 32:5, ஏசா 65:2, மத் 17:17
b ஏசா 1:2
c சங் 96:5, 1கொ 10:21, 22
d 1சா 12:10, 21
e ஓசி 2:23, ரோ 9:25, ரோ 11:11, 1பே 2:10
f ரோ 10:19
g புல 4:11
h ஆமோ 9:2
i உபா 28:53
j உபா 28:21, 22
k லேவி 26:22
l 2நா 36:17, புல 2:21
m புல 1:20
n எசே 7:15
o யாத் 32:12, எண் 14:15, 16
p சங் 115:2
q 1சா 12:22, எசே 20:14
r மத் 13:15
s சங் 81:13
t ஓசி 14:9
u எரே 2:19
v நியா 2:14, 1சா 12:9

யெகோவா அவர்களை எதிரிகளின் கையில் கொடுத்துவிட்டார்.
அதனால்தான் அவர்களில் ஆயிரம் பேரை ஒருவனால் விரட்ட முடிந்தது.
அவர்களில் பத்தாயிரம் பேரை வெறும் இரண்டு பேரால் துரத்த முடிந்தது.[a]
31 (அவர்களுடைய கடவுள்* நம்முடைய கடவுளுக்கு# ஈடாக முடியாது.[b]
நம்முடைய எதிரிகளுக்கும் இது தெரியும்.[c])
32 அவர்களுடைய திராட்சைக் கொடி சோதோமின் திராட்சைக் கொடி,
கொமோராவின் தோட்டங்களில் விளைந்த திராட்சைக் கொடி.[d]
அவர்களுடைய திராட்சைப் பழங்கள் விஷம் நிறைந்தவை.
அவர்களுடைய திராட்சைக் குலைகள் கசப்பானவை.[e]
33 அவர்களுடைய திராட்சமது பாம்புகளின் விஷம்,
அது நாகப்பாம்புகளின் கொடிய நஞ்சு.
34 இதையெல்லாம் நான் முத்திரைபோட்டு மூடியிருக்கிறேன்.
என் களஞ்சியத்தில் அடைத்து வைத்திருக்கிறேன்.[f]
35 பழிவாங்குவதும் பழிதீர்ப்பதும் என் பொறுப்பு.[g]
குறித்த நேரத்தில் அவர்கள் தடுக்கி விழுவார்கள்.[h]
அவர்களுடைய அழிவு நாள் நெருங்கிவிட்டது.
அவர்களுக்கு நடக்க வேண்டியதெல்லாம் சீக்கிரத்தில் நடக்கும்' என்று சொன்னார்.
36 யெகோவா தன்னுடைய ஜனங்களுக்குத் தீர்ப்பு கொடுப்பார்.[i]
தன்னுடைய ஊழியர்களின் பலம் குறைந்துவிட்டதைப் பார்க்கும்போதும்,
ஆதரவற்றவர்களும் அற்பமானவர்களும் மட்டுமே மீந்திருப்பதைப் பார்க்கும்போதும்,
அவர் பரிதாபப்படுவார்.[j]
37 அப்போது அவர், 'அவர்களுடைய தெய்வங்கள் எங்கே?[k]
அவர்கள் அடைக்கலம் தேடிய கற்பாறை எங்கே?
38 அவர்களுடைய பலிகளின் கொழுப்பைத் தின்ற தெய்வங்கள் எங்கே?
அவர்கள் செலுத்திய திராட்சமதுவைக் குடித்த தெய்வங்கள் எங்கே?[l]
அவை வந்து அவர்களுக்கு* உதவி செய்யட்டும்.
அவை அவர்களுக்குப் பாதுகாப்பு தரட்டும்.
39 நான் மட்டும்தான் கடவுள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.[m]
என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை.[n]
உயிர் கொடுக்கிறவரும் உயிர் எடுக்கிறவரும் நானே.[o]
காயப்படுத்துகிறவரும்[p] குணப்படுத்துகிறவரும் நானே.[q]
என் கையிலிருந்து யாரையும் யாராலும் காப்பாற்ற முடியாது.[r]

32:31 *நே.மொ., "கற்பாறை." #நே.மொ., "கற்பாறைக்கு." **32:38** *நே.மொ., "உங்களுக்கு."

அதி. 32
a 2நா 24:24
b 1சா 2:2
c யாத் 14:25; 1சா 4:8; எஸ்றா 1:2, 3
d யூ 7
e ஏசா 5:4; எரே 2:21
f ரோ 2:5
g நாகூ 1:2; ரோ 12:19; எபி 10:30
h சங் 73:12, 18
i எபி 10:30
j நியா 2:18; சங் 90:13; சங் 106:45; சங் 135:14
k நியா 10:14
l ஓசி 2:8; 1கொ 10:20, 21
m ஏசா 41:4; ஏசா 48:12
n உபா 4:35
o 1சா 2:6; சங் 68:20
p 2நா 21:16, 18
q எண் 12:13; எரே 17:14
r ஏசா 43:13

40 என் கையை உயர்த்தி,*
“என்றென்றும் வாழ்கிற என்மேல்” ஆணையாகச் சொல்கிறேன்,#[a]
41 என்னுடைய பளபளப்பான வாளைத் தீட்டுவேன்.
தீர்ப்பு கொடுப்பதற்குத் தயாராவேன்.[b]
என் எதிரிகளைப் பழிவாங்குவேன்.[c]
என்னை வெறுக்கிறவர்களைப் பழிதீர்ப்பேன்.
42 எதிரிகளுடைய தலைவர்களின் தலைகளை
என் வாள் விழுங்கும்.
வெட்டப்பட்டவர்களின் இரத்தத்தையும், சிறைபிடிக்கப்பட்டவர்களின் இரத்தத்தையும்
என் அம்புகள் குடிக்கும்’ என்று சொல்வார்.
43 தேசங்களே, அவருடைய ஜனங்களோடு சேர்ந்து சந்தோஷப்படுங்கள்.[d]
ஏனென்றால், அவருடைய ஊழியர்களின் இரத்தத்துக்காக அவர் பழிவாங்குவார்.[e]
எதிரிகளுக்குப் பதிலடி தருவார்.[f]
தன்னுடைய ஜனங்களின் தேசத்தைச் சுத்திகரிப்பார்.”

44 மோசே இந்தப் பாடல் வரிகளை ஜனங்களுடைய காதில் விழும்படி
சொன்னார்.[g] நூனின் மகன் ஓசெயாவும்*[h] அவரோடு இருந்தார். 45 இஸ்ர
வேலர்கள் எல்லாரிடமும் இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபின்,
46 மோசே அவர்களிடம், “இன்று நான் கொடுக்கும் எச்சரிக்கையை இத
யத்தில் பதிய வைத்துக்கொள்ளுங்கள்.[i] இந்தத் திருச்சட்டத்தின்படி நடக்க
வேண்டுமென்று உங்களுடைய மகன்களுக்குக் கட்டளை கொடுங்கள்.[j]
47 இவையெல்லாம் வெற்று வார்த்தைகள் அல்ல, வாழ்வு தரும் வார்த்தை
கள்.[k] இவற்றின்படி நடந்தால், நீங்கள் யோர்தானைக் கடந்துபோய் சொந்த
மாக்கப்போகிற தேசத்தில் நீடூழி வாழ்வீர்கள்” என்று சொன்னார்.

48 அதே நாளில் யெகோவா மோசேயிடம், 49 “மோவாப் தேசத்தில்,
எரிகோவைப் பார்த்தபடி இருக்கிற இந்த அபாரீம் மலைத்தொடரிலுள்ள[l]
நேபோ மலைக்கு[m] நீ ஏறிப்போ. நான் இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்
போகிற கானான் தேசத்தை[n] அங்கிருந்து பார். 50 ஓர் என்ற மலையில்
உன் அண்ணன் ஆரோன் இறந்தது போல,[o] நேபோ மலையில் நீயும் இறந்து
போவாய்.* 51 ஏனென்றால், சீன் வனாந்தரத்திலுள்ள காதேசில் இருக்கிற
மேரிபாவின் தண்ணீர் விஷயத்தில், நீங்கள் இரண்டு பேரும் இஸ்ரவேலர்க
ளின் முன்னால் எனக்கு உண்மையாக நடக்கவில்லை,[p] என்னை மகிமைப்
படுத்தவில்லை.[q] 52 இஸ்ரவேல் ஜனங்களுக்கு நான் தருகிற தேசத்தை
நீ தூரத்திலிருந்துதான் பார்ப்பாய், அதற்குள் நீ போக மாட்டாய்”[r] என்று
சொன்னார்.

32:40 *நே.மொ., “பரலோகத்துக்கு நேராக உயர்த்தி.” #அதாவது, “நான் என்றென்றும் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” 32:44 *இதுதான் முதலில் யோசுவாவின் பெயர். ஓசி 1:1-ன் அடிக்குறிப்பைப் பாருங்கள். 32:50 *நே.மொ., “உன் முன்னோர்களுடன் சேர்க்கப்படுவாய்.” எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன.

அதி. 32
a 1தீ 1:17, வெளி 10:5, 6
b நாகூ 1:3
c ஏசா 1:24, ஏசா 59:18
d ஆதி 12:2, 3, 1ரா 8:43, ரோ 3:29, ரோ 15:10
e 2ரா 9:7, வெளி 6:10
f மீ 5:15
g வெளி 15:3
h எண் 11:28, உபா 31: 22, 23
i உபா 11:18
j உபா 6:6, 7
k லேவி 18:5, உபா 30:19, ரோ 10:5
l எண் 27:12
m உபா 34:1
n ஆதி 10:19, ஆதி 15:18, யோசு 1:3
o எண் 20:28, எண் 33:38
p எண் 20:12, 13
q லேவி 22:32, ஏசா 8:13
r எண் 27:13, 14, உபா 3:27, உபா 34:4, 5

அதி. 33
a ஆதி 49:28
b யாத் 19:18
c சங் 68:17
d தானி 7:10
யூ 14
e ஆப 3:3
f உபா 7:8
ஓசி 11:1
g யாத் 19:6
h யாத் 19:23
i யாத் 20:19
j யாத் 24:8
k உபா 4:8
அப் 7:53
l எண் 1:44, 46
m யாத் 18:25
யாத் 19:7
n ஏசா 44:2
o ஆதி 49:3
p எண் 26:7
யோசு 13:15
q ஆதி 49:8
1நா 5:2
r சங் 78:68
s நியா 1:2
2சா 7:8, 9
t ஆதி 49:5
எண் 3:12
u யாத் 32:26
v யாத் 28:30
லேவி 8:6, 8
w யாத் 17:7
x எண் 20:13
y யாத் 32:27
லேவி 10:6, 7
z மல் 2:4, 5
a உபா 17:9
b 2நா 17:8, 9
மல் 2:7

33 உண்மைக் கடவுளின் ஊழியராகிய மோசே தான் இறப்பதற்கு
முன்பு இஸ்ரவேலர்களை ஆசீர்வதித்தார்.[a] **2** அப்போது அவர்,
"சீனாயிலிருந்து யெகோவா வந்தார்.[b]
சேயீரிலிருந்து அவர்கள்மேல் ஒளிவீசினார்.
லட்சக்கணக்கான பரிசுத்த தூதர்கள் அவரோடு இருந்தார்கள்.[c]
அவருடைய வலது பக்கத்தில் அவருடைய போர்வீரர்கள்
இருந்தார்கள்.[d]
பாரான் மலைப்பகுதியிலிருந்து அவர் மகிமையில் பிரகாசித்தார்.[e]
3 அவருடைய ஜனங்கள்மேல் பாசம் காட்டினார்.[f]
பரிசுத்தமான அந்த ஜனங்கள் எல்லாரும் அவருடைய கையில்
இருக்கிறார்கள்.[g]
அவருடைய காலடியில் அவர்கள் உட்கார்ந்தார்கள்.[h]
அவருடைய வார்த்தைகளைக் கேட்க ஆரம்பித்தார்கள்.[i]
4 (மோசே நமக்குக் கட்டளையையும் சட்டத்தையும் கொடுத்தார்.[j]
அது யாக்கோபின் சபையாருடைய சொத்து.)[k]
5 ஜனங்களின் தலைவர்களும் இஸ்ரவேல் கோத்திரத்தார்[l] எல்லாரும்
ஒன்றுகூடி வந்தபோது,[m]
கடவுள் யெஷூரனில்*[n] ராஜாவானார்.
6 ரூபன் சாகாமல் என்றும் வாழட்டும்.[o]
அவனுடைய வம்சம் குறையாமல் பெருகட்டும்"[p] என்று சொன்னார்.
7 பின்பு மோசே யூதாவை ஆசீர்வதித்து,[q]
"யெகோவாவே, யூதாவின் குரலைக் கேளுங்கள்.[r]
அவனுடைய ஜனங்களிடமே அவனைத் திரும்பி வரச் செய்யுங்கள்.
அவன் தனக்குச் சொந்தமானதைக் காப்பாற்ற தன் கைகளால்
போராடினான்.
எதிரிகளைத் தோற்கடிக்க அவனுக்கு உதவி செய்யுங்கள்"[s] என்று
சொன்னார்.
8 பின்பு லேவியைப் பற்றி,[t]
"கடவுளே, உங்களுக்கு உண்மையாக* இருக்கிறவனிடம்[u]
உங்களுடைய தும்மீமையும், ஊரீமையும் கொடுத்தீர்கள்.[v]
அவனை மாசாவில் சோதித்துப் பார்த்தீர்கள்.[w]
மேரிபாவின் தண்ணீருக்குப் பக்கத்தில் அவனோடு வழக்காடினீர்கள்.[x]
9 அவன் தன்னுடைய அப்பா அம்மாவை மதிக்கவில்லை.
தன்னுடைய சகோதரர்களின் பக்கம் சாயவில்லை.[y]
சொந்த பிள்ளைகளையும் சட்டை பண்ணவில்லை.
அவர்கள் உங்களுடைய வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள்.
உங்களுடைய ஒப்பந்தத்தை மதித்தார்கள்.[z]
10 உங்கள் நீதித்தீர்ப்புகளை[a] அவர்கள் யாக்கோபுக்குச் சொல்லித்தரட்டும்.
உங்களுடைய திருச்சட்டத்தை இஸ்ரவேலுக்குக் கற்றுக்கொடுக்கட்டும்.[b]

33:5 *இந்தப் பெயரின் அர்த்தம், "நேர்மையானவன்"; இது இஸ்ரவேலின் கௌரவப் பட்டம். **33:8** *வே.வா., "பற்றுமாறாமல்."

உங்களுக்கு வாசனையான தூபத்தைக் காட்டட்டும்.[a]
உங்களுடைய பலிபீடத்தில் தகன பலி செலுத்தட்டும்.[b]
11 யெகோவாவே, அவனுக்கு நிறைய பலம் கொடுங்கள்.
அவன் செய்வதையெல்லாம் பார்த்து சந்தோஷப்படுங்கள்.
அவனுக்கு எதிராகக் கிளம்புகிறவர்களுடைய கால்களை ஒடித்துப்போடுங்கள்.
அவர்கள் மறுபடியும் எழுந்திருக்க முடியாதபடி செய்துவிடுங்கள்" என்று சொன்னார்.

12 பின்பு பென்யமீனைப் பற்றி,[c]
"யெகோவாவுக்குப் பிரியமானவன், அவனுடைய* பாதுகாப்பு நிழலில் தங்கியிருக்கட்டும்.
நாள் முழுக்க அவன்# அவனுக்குத் தஞ்சம் தரட்டும்.
அவனைத் தன் தோள்களில் சுமக்கட்டும்" என்று சொன்னார்.

13 பின்பு யோசேப்பைப் பற்றி,[d]
"அவனுடைய தேசம் யெகோவாவினால் ஆசீர்வதிக்கப்படட்டும்.[e]
வானத்திலிருந்து பனித்துளியும் ஆசீர்வாதங்களும் அங்கே பொழியட்டும்.
ஆழத்திலிருந்து ஊற்றுகள் பொங்கி எழட்டும்.[f]
14 சூரிய வெளிச்சத்தில் அழகான செடிகொடிகள் முளைக்கட்டும்.
ஒவ்வொரு மாதமும் நல்ல விளைச்சல் கிடைக்கட்டும்.[g]
15 என்றென்றுமுள்ள* மலைகள் வளங்களை வாரி இறைக்கட்டும்.[h]
அழியாத குன்றுகள் பொக்கிஷங்களைக் கொடுக்கட்டும்.
16 பூமி எல்லா செல்வங்களையும் தரட்டும்.[i]
முட்புதரில் தோன்றிய கடவுள்[j] ஆசீர்வாதம் பொழியட்டும்.
எல்லாமே யோசேப்பின் தலைமேல் இறங்கட்டும்.
சகோதரர்களில் விசேஷமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவனின் உச்சந்தலைமேல் வரட்டும்.[k]
17 அவனுடைய கம்பீரம் காளையின் முதல் கன்றைப் போன்றது.
அவனுடைய கொம்புகள் காட்டு எருதின் கொம்புகள் போன்றவை.
அவற்றால் ஜனங்களை அவன் முட்டி மோதுவான்,
அவர்கள் எல்லாரையும் பூமியெங்கும் விரட்டியடிப்பான்.
அந்தக் கொம்புகள்தான் எப்பிராயீமின் பத்தாயிரக்கணக்கான வீரர்கள்.[l]
அந்தக் கொம்புகள்தான் மனாசேயின் ஆயிரக்கணக்கான வீரர்கள்" என்று சொன்னார்.

18 பின்பு செபுலோனைப் பற்றி,[m]
"செபுலோனே, நீ வெளியே போகும்போது* சந்தோஷப்படு.
இசக்காரே, நீ கூடாரங்களில் தங்கியிருக்கும்போது சந்தோஷப்படு.[n]
19 அவர்கள் ஜனங்களை மலைக்கு அழைப்பார்கள்.

33:12 *அல்லது, "அவருடைய." #அல்லது, "அவர்." **33:15** *அல்லது, "கிழக்கிலுள்ள." **33:18** *வே.வா., "நீ வியாபாரம் செய்யும்போது."

அதி. 33
a யாத் 30:7; எண் 16:40
b லேவி 1:9
c ஆதி 49:27
d ஆதி 49:22
e யோசு 16:1
f ஆதி 49:25
g லேவி 26:5; சங் 65:9
h யோசு 17:17, 18
i உபா 8:7, 8
j யாத் 3:4; அப் 7:30
k ஆதி 37:7; ஆதி 49:26; 1நா 5:1, 2
l ஆதி 48:19, 20
m ஆதி 49:13
n ஆதி 49:14

நீதியின் பலிகளைச் செலுத்துவார்கள்.
ஏனென்றால், ஆழ்கடலின் செல்வங்களையும்
மண்ணுக்குள் மறைந்திருக்கும் புதையல்களையும்
அவர்கள் அனுபவிப்பார்கள்" என்று சொன்னார்.
20 பின்பு காத்தைப் பற்றி,[a]
"காத்தின் எல்லைகளை[b] விரிவாக்குகிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்.
அவன் சிங்கத்தைப் போலப் பதுங்கியிருப்பான்.
கையையும் உச்சந்தலையையும் கடித்துக் குதறிப்போடக் காத்திருப்பான்.
21 முதல் பங்கை அவனே எடுத்துக்கொள்வான்.[c]
சட்டம் கொடுப்பவர் அதைத்தான் அவனுக்காக ஒதுக்கியிருந்தார்.[d]
அவனுடைய ஜனங்களின் தலைவர்கள் ஒன்றுகூடுவார்கள்.
யெகோவாவின் சார்பாக அவன் நீதி செய்வான்.
இஸ்ரவேலில் அவருடைய நீதித்தீர்ப்புகளை நிறைவேற்றுவான்" என்று சொன்னார்.
22 பின்பு தாணைப் பற்றி,[e]
"தாண் ஒரு சிங்கக்குட்டி,[f]
பாசானிலிருந்து பாய்ந்து வரும் சிங்கக்குட்டி"[g] என்று சொன்னார்.
23 பின்பு நப்தலியைப் பற்றி,[h]
"நப்தலி யெகோவாவின் பிரியத்தைப் பெற்று, திருப்தியாக இருக்கிறான்.
அவருடைய ஆசீர்வாதத்தை நிறைவாகப் பெற்றிருக்கிறான்.
மேற்கையும் தெற்கையும் நீ சொந்தமாக்கிக்கொள்" என்று சொன்னார்.
24 பின்பு ஆசேரைப் பற்றி,[i]
"ஆசேருக்குக் கடவுள் நிறைய மகன்களைத் தந்து ஆசீர்வதிக்கட்டும்.
அவனுடைய சகோதரர்கள் அவனிடம் பிரியமாக இருக்கட்டும்.
அவன் தன்னுடைய பாதங்களை எண்ணெயில் கழுவட்டும்."*
25 இரும்பும் செம்பும் உன் கதவின் தாழ்ப்பாள்கள்.[j]
காலமெல்லாம் நீ பாதுகாப்போடு இருப்பாய்.
26 யெஷுரனின்[k] உண்மைக் கடவுளைப் போல யாரும் இல்லை.[l]
உனக்கு உதவி செய்ய அவர் வானத்தில் பவனி வருகிறார்.
மகிமையோடு மேகத்தில் உலா வருகிறார்.[m]
27 பழங்காலத்திலிருந்தே கடவுள் உன் கோட்டை.[n]
அவருடைய கைகள் என்றென்றும் உன்னைத் தாங்குகின்றன.[o]
உன் எதிரியை உன் கண் முன்னால் அவர் துரத்திவிடுவார்.[p]
'அவர்களை ஒழித்துக்கட்டு!' என்று சொல்வார்.[q]
28 இஸ்ரவேல் பாதுகாப்பாகத் தங்குவான்.
தானியமும் புதிய திராட்சமதுவும் நிறைந்த தேசத்திலே,[r]
பனி பொழியும் தேசத்திலே,[s]
யாக்கோபின் வம்சம்* மட்டும் இருக்கும்.

33:24 * வே.வா., "நனைக்கட்டும்." **33:28** * நே.மொ., "ஊற்று."

அதி. 33
a ஆதி 49:19
b யோசு 13:24-28
c எண் 32:1-5
d யோசு 22:1, 4
e ஆதி 49:16
f நியா 13:2, 24; நியா 15:8, 20; நியா 16:30
g யோசு 19:47
h ஆதி 49:21
i ஆதி 49:20
j உபா 8:7, 9
k ஏசா 44:2
l யாத் 15:11
m சங் 68:32-34
n சங் 46:11; சங் 91:2
o ஏசா 40:11
p உபா 9:3
q உபா 31:3, 4
r உபா 8:7, 8
s உபா 11:11

29 இஸ்ரவேலே, நீ சந்தோஷமானவன்.[a]
உன்னைப் போல் யாரும் இல்லை.[b]
யெகோவாவினால் மீட்கப்படுகிற ஜனம் நீ.[c]
உன்னைக் காக்கும் கேடயம் அவர்தான்.[d]
உன்னுடைய வீர வாளும் அவர்தான்.
உன் எதிரிகள் உன் முன்னால் அடங்கி ஒடுங்கி நிற்பார்கள்.[e]
நீ அவர்களுடைய முதுகில்* ஏறி மிதிப்பாய்” என்று சொன்னார்.

34 பின்பு, மோசே மோவாபின் பாலைநிலத்திலிருந்து, எரிகோவைப்
பார்த்தபடி[f] இருக்கிற நேபோ மலைக்கு,[g] அதாவது பிஸ்காவின்
உச்சிக்கு,[h] ஏறிப்போனார். அப்போது, யெகோவா அவருக்கு முழு தேசத்
தையும் காட்டினார். கீலேயாத்திலிருந்து தாண்[i] வரையும், **2** நப்தலி முழு
வதையும், எப்பிராயீம் மற்றும் மனாசே என்பவர்களுடைய தேசத்தையும்,
மேற்குக் கடல்* வரையில் இருக்கிற யூதா தேசம் முழுவதையும்,[j]
3 நெகேபையும்,[k] யோர்தான் பிரதேசத்தையும்,[l] அதாவது பேரீச்ச மரங்கள்
நிறைந்த எரிகோ நகரத்தின் சமவெளியிலிருந்து சோவார் வரையில்[m] இருக்
கிற முழு பகுதியையும், காட்டினார்.

4 யெகோவா அவரிடம், “‘உன் சந்ததிக்குக் கொடுப்பேன்’[n] என்று
சொல்லி, ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் நான் வாக்குக்
கொடுத்த தேசம் இதுதான். இதை உன் கண்களாலேயே பார்க்கும் பாக்
கியத்தை உனக்குக் கொடுத்திருக்கிறேன், ஆனால் நீ அங்கு போக மாட்
டாய்”[o] என்று சொன்னார்.

5 அதன்பின் யெகோவாவின் ஊழியராகிய மோசே, மோவாப் தேசத்தி
லுள்ள அந்த இடத்தில் யெகோவா சொன்னது போலவே இறந்துபோனார்.[p]
6 மோவாப் தேசத்தில் பெத்-பேயோருக்கு எதிரில் இருக்கிற பள்ளத்தாக்
கில் கடவுள் அவரை அடக்கம் செய்தார். அவருடைய பிரேதக்குழி இன்று
வரை யாருக்கும் தெரியாது.[q] **7** சாகும்போது மோசேக்கு 120 வயது.[r]
அந்த வயதிலும் அவருடைய பார்வை மங்கவோ அவருடைய பலம்
குறையவோ இல்லை. **8** இஸ்ரவேலர்கள் மோசேக்காக மோவாப் பாலை
நிலத்தில் 30 நாட்கள் அழுதார்கள்.[s] அதன்பின், அவர்கள் மோசேக்காகத்
துக்கம் அனுசரித்த நாட்கள் முடிவுக்கு வந்தன.

9 மோசே தன் கைகளை நூனின் மகனாகிய யோசுவாவின் மேல்
வைத்து அவரை நியமித்திருந்ததால், யோசுவா கடவுளுடைய சக்தியாலும்
ஞானத்தாலும் நிறைந்திருந்தார்.[t] இஸ்ரவேலர்கள் அவருடைய பேச்சைக்
கேட்டு நடந்தார்கள். மோசே மூலம் யெகோவா கொடுத்திருந்த கட்டளை
களின்படியே செய்தார்கள்.[u] **10** யெகோவா மிக நன்றாக* தெரிந்து வைத்
திருந்த[v] மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலில் இருந்ததே
இல்லை.[w] **11** எகிப்துக்குப் போய், பார்வோனுக்கும் அவனுடைய எல்லா
ஊழியர்களுக்கும் அவனுடைய முழு தேசத்துக்கும் எதிராக யெகோவா
செய்யச் சொன்ன எல்லா அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்து,[x]
12 இஸ்ரவேலர்களின் கண்களுக்கு முன்பாக கைபலத்தையும் பிரமிக்க
வைக்கிற வல்லமையையும் காட்டியவர் அவர்தான்.[y]

33:29 *அல்லது, “மலைகளை.” **34:2** *அதாவது, “பெருங்கடல்; மத்தியதரைக் கடல்.” **34:10** *வே.வா., “நேருக்கு நேர்.”

அதி. 33
a சங் 33:12, சங் 144:15, சங் 146:5
b உபா 4:7, 2சா 7:23, சங் 147:20
c சங் 27:1, ஏசா 12:2
d சங் 115:9
e சங் 66:3

அதி. 34
f எண் 36:13
g உபா 32:49
h உபா 3:27
i நியா 18:29
j யாத் 23:31, எண் 34:2, 6, உபா 11:24
k யோசு 15:1
l ஆதி 13:10
m ஆதி 19:22, 23
n ஆதி 12:7, ஆதி 26:3, ஆதி 28:13
o எண் 20:12
p உபா 32:50, யோசு 1:2
q யூ 9
r உபா 31:1, 2, அப் 7:23, அப் 7:30, 36
s எண் 20:29
t உபா 31:14, 1தீ 4:14
u எண் 27:18, 21, யோசு 1:16
v யாத் 33:11, எண் 12:8
w உபா 18:15, அப் 3:22, அப் 7:37
x உபா 4:34
y உபா 26:8, லூ 24:19

யோசுவா

முக்கியக் குறிப்புகள்

1 யோசுவாவுக்கு யெகோவா தைரியம் கொடுக்கிறார் (1-9)
- திருச்சட்டத்தைத் தாழ்ந்த குரலில் வாசிக்க வேண்டும் (8)

யோர்தானைக் கடக்க ஜனங்கள் தயாராகிறார்கள் (10-18)

2 யோசுவா இரண்டு உளவாளிகளை எரிகோவுக்கு அனுப்புகிறார் (1-3)

உளவாளிகளை ராகாப் ஒளித்து வைக்கிறாள் (4-7)

ராகாபிடம் செய்த சத்தியம் (8-21அ)
- அடையாளத்திற்காகத் தொங்கவிடப்பட்ட சிவப்புநூல் கயிறு (17)

உளவாளிகள் யோசுவாவிடம் திரும்பிவருகிறார்கள் (21ஆ-24)

3 இஸ்ரவேலர்கள் யோர்தானைக் கடக்கிறார்கள் (1-17)

4 அடையாளச் சின்னங்களாக இருக்கும் கற்கள் (1-24)

5 கில்காலில் விருத்தசேதனம் செய்யப்படுகிறது (1-9)

பஸ்கா கொண்டாடப்படுகிறது; மன்னா பொழிவது நின்றுபோகிறது (10-12)

யெகோவாவின் படைத் தளபதி (13-15)

6 எரிகோவின் மதில்கள் இடிந்து விழுகின்றன (1-21)

ராகாபும் அவளுடைய குடும்பத்தாரும் காப்பாற்றப்படுகிறார்கள் (22-27)

7 ஆயி நகரத்துக்கு எதிரான போரில் இஸ்ரவேலர்கள் தோற்றுப்போகிறார்கள் (1-5)

யோசுவாவின் ஜெபம் (6-9)

இஸ்ரவேலர்களின் தோல்விக்குக் காரணமான பாவச் செயல் (10-15)

ஆகானின் பாவம் வெளிப்படுகிறது, அவன் கல்லெறிந்து கொல்லப்படுகிறான் (16-26)

8 பதுங்கியிருந்து ஆயியைக் கைப்பற்ற யோசுவா வீரர்களை ஏற்பாடு செய்கிறார் (1-13)

ஆயி கைப்பற்றப்படுகிறது (14-29)

ஏபால் மலையில் திருச்சட்டம் வாசிக்கப்படுகிறது (30-35)

9 புத்திசாலிகளான கிபியோனியர்கள் சமாதான ஒப்பந்தம் செய்ய விரும்புகிறார்கள் (1-15)

கிபியோனியர்கள் பொய் சொன்னது தெரியவருகிறது (16-21)

விறகும் தண்ணீரும் எடுத்துவர கிபியோனியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் (22-27)

10 கிபியோனியர்களின் சார்பாக இஸ்ரவேலர்கள் போர் செய்கிறார்கள் (1-7)

இஸ்ரவேலர்களுக்காக யெகோவா போர் செய்கிறார் (8-15)
- தப்பித்து ஓடுகிற எதிரிகளின் மேல் ஆலங்கட்டிகள் விழுகின்றன (11)
- சூரியன் அசையாமல் நிற்கிறது (12-14)

படைதிரண்டு வந்த ஐந்து ராஜாக்கள் கொல்லப்படுகிறார்கள் (16-28)

தெற்கில் உள்ள நகரங்கள் கைப்பற்றப்படுகின்றன (29-43)

11 வடக்கில் உள்ள நகரங்கள் கைப்பற்றப்படுகின்றன (1-15)

யோசுவா அடைந்த வெற்றிகளின் விவரம் (16-23)

12 யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள ராஜாக்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள் (1-6)

யோர்தானுக்கு மேற்கிலுள்ள ராஜாக்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள் (7-24)

13 தேசத்தில் இன்னும் கைப்பற்றப்பட வேண்டிய பகுதிகள் (1-7)

யோர்தானுக்குக் கிழக்கே பிரித்துக்கொடுக்கப்பட்ட பகுதிகள் (8-14)

ரூபன் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (15-23)

காத் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (24-28)

கிழக்கில் மனாசே கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (29-32)

யெகோவாவே லேவியர்களுடைய சொத்து (33)

14 யோர்தானுக்கு மேற்கில் பிரித்துக்கொடுக்கப்பட்ட பகுதிகள் (1-5)

காலேபுக்கு எப்ரோன் சொத்தாகக் கிடைக்கிறது (6-15)

15 யூதா கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (1-12)
காலேபின் மகளுக்கு நிலம் கிடைக்கிறது (13-19)
யூதாவின் நகரங்கள் (20-63)

16 யோசேப்பின் வம்சத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (1-4)
எப்பிராயீம் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (5-10)

17 மேற்கில் மனாசே கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (1-13)
யோசேப்பின் வம்சத்தாருக்குக் கூடுதலாகக் கொடுக்கப்பட்ட பகுதிகள் (14-18)

18 சீலோவிலே தேசத்தின் மற்ற இடங்கள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன (1-10)
பென்யமீன் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (11-28)

19 சிமியோன் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (1-9)
செபுலோன் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (10-16)
இசக்கார் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (17-23)
ஆசேர் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (24-31)
நப்தலி கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (32-39)
தாண் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (40-48)
யோசுவாவுக்குச் சொந்தமாகக் கிடைத்த பகுதி (49-51)

20 அடைக்கல நகரங்கள் (1-9)

21 லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட நகரங்கள் (1-42)
ஆரோனின் மகன்களுக்குக் கொடுக்கப்பட்ட நகரங்கள் (9-19)
கோகாத்தியர்களுக்குக் கொடுக்கப்பட்ட நகரங்கள் (20-26)
கெர்சோனியர்களுக்குக் கொடுக்கப்பட்ட நகரங்கள் (27-33)
மெராரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட நகரங்கள் (34-40)
யெகோவாவின் வாக்குறுதிகள் நிறைவேறுகின்றன (43-45)

22 கிழக்கிலுள்ள கோத்திரத்தார் தங்கள் இடத்துக்குத் திரும்புகிறார்கள் (1-8)
யோர்தானுக்குப் பக்கத்தில் பலிபீடம் கட்டப்படுகிறது (9-12)
பலிபீடம் கட்டப்பட்டதற்கான காரணம் விளக்கப்படுகிறது (13-29)
விவாதம் முடிவுக்கு வருகிறது (30-34)

23 இஸ்ரவேல் தலைவர்களிடம் யோசுவா சொல்லும் கடைசி வார்த்தைகள் (1-16)
யெகோவாவின் வாக்குறுதிகளில் ஒன்றுகூட நிறைவேறாமல் போகவில்லை (14)

24 யோசுவா இஸ்ரவேலர்களின் சரித்திரத்தைச் சொல்கிறார் (1-13)
யெகோவாவுக்குச் சேவை செய்யும்படி அறிவுரை கொடுக்கிறார் (14-24)
“நானும் என் குடும்பத்தாரும் யெகோவாவை மட்டும்தான் வணங்குவோம்” (15)
இஸ்ரவேலர்களோடு யோசுவா செய்கிற ஒப்பந்தம் (25-28)
யோசுவா இறந்துபோய் அடக்கம் செய்யப்படுகிறார் (29-31)
யோசேப்பின் எலும்புகள் சீகேமில் அடக்கம் செய்யப்படுகின்றன (32)
எலெயாசார் இறந்துபோய் அடக்கம் செய்யப்படுகிறார் (33)

1 யெகோவாவின் ஊழியரான மோசே இறந்த பின்பு, மோசேயின் உத
வியாளரும்[a] நூனின் மகனுமாகிய யோசுவாவிடம்*[b] யெகோவா,
2 “என் ஊழியன் மோசே இறந்துவிட்டான்.[c] இப்போது நீயும் இஸ்ரவேலர்
கள் எல்லாரும் புறப்பட்டு யோர்தான் ஆற்றைக் கடந்து, நான் கொடுக்கப்
போகிற தேசத்துக்குப் போங்கள்.[d]
3 மோசேக்கு நான் வாக்குறுதி கொடுத்

1:1 *வே.வா., “யெஹோஷுவாவிடம்”; இந்தப் பெயரின் அர்த்தம், “யெகோவாவே மீட்பு.”

அதி. 1
a யாத் 24:13; எண் 11:28
b உபா 31:14
c உபா 34:5
d உபா 3:28

தடபடியே, உங்கள் காலடி படுகிற இடத்தையெல்லாம் உங்களுக்குத் தரு
வேன்.[a] 4 வனாந்தரம்முதல் லீபனோன் வரைக்கும், பெரிய ஆறான யூப்
ரடிஸ்* வரைக்கும், அதாவது ஏத்தியர்களின் தேசம் முழுவதும்,[b] மேற்கே
பெருங்கடல்# வரைக்கும் உங்களுடைய எல்லை இருக்கும்.[c] 5 நீ உயி
ரோடிருக்கும் நாள்வரை யாரும் உன்னை எதிர்த்துநிற்க முடியாது.[d]
நான் மோசேயுடன் இருந்தது போலவே உன்னோடும் இருப்பேன்.[e] உன்
னைவிட்டு விலகவும் மாட்டேன், உன்னைக் கைவிடவும் மாட்டேன்.[f]
6 நீ தைரியமாகவும் உறுதியாகவும் இரு.[g] உங்கள் முன்னோர்களுக்கு நான்
வாக்குக் கொடுத்த தேசத்தைச்[h] சொந்தமாக்கிக்கொள்ள இவர்களை நீதான்
வழிநடத்திக்கொண்டு போவாய்.

7 தைரியமாகவும் ரொம்பவே உறுதியாகவும் இரு. என் ஊழியன்
மோசே உனக்குக் கொடுத்த திருச்சட்டம் முழுவதையும் கவனமாகக்
கடைப்பிடி. அதைவிட்டு வலது பக்கமோ இடது பக்கமோ விலகிப்
போகாதே,[i] அப்போதுதான் நீ எல்லாவற்றையும் ஞானமாகச் செய்வாய்.[j]
8 இந்தத் திருச்சட்ட புத்தகத்தில் உள்ள விஷயங்களைப் பற்றி மற்றவர்
களிடம் சொல்லிக்கொண்டே இரு.[k] அதில் எழுதியிருக்கிற எல்லாவற்றை
யும் கவனமாய்க் கடைப்பிடிப்பதற்காக ராத்திரியும் பகலும் தாழ்ந்த குரலில்
அதை வாசி.*[l] அப்போதுதான் வாழ்க்கையில் உனக்கு வெற்றி கிடைக்கும்,
நீ ஞானமாகவும் நடப்பாய்.[m] 9 நான் ஏற்கெனவே சொன்னபடி, தைரி
யமாகவும் உறுதியாகவும் இரு. பயப்படாதே, திகிலடையாதே. நீ போகும்
இடமெல்லாம் உன் கடவுளாகிய யெகோவா உன்னோடு இருப்பார்"[n] என்று
சொன்னார்.

10 பின்பு ஜனங்களுடைய அதிகாரிகளிடம் யோசுவா, 11 "நீங்கள்
முகாம் முழுவதும் இருக்கிற ஜனங்களிடம் போய், 'இன்னும் மூன்று நாட்க
ளில் யோர்தானைக் கடந்து, உங்கள் கடவுளாகிய யெகோவா தருகிற தேசத்
தைச் சொந்தமாக்கப்போகிறீர்கள்.[o] அதனால், உணவுப் பொருள்களைத்
தயாராக எடுத்து வையுங்கள்' என்று சொல்லுங்கள்" என்றார்.

12 பின்பு யோசுவா, ரூபன் கோத்திரத்தாரிடமும் காத் கோத்திரத்தாரிட
மும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரிடமும், 13 "யெகோவாவின் ஊழி
யரான மோசே உங்களிடம்,[p] 'உங்கள் கடவுளாகிய யெகோவா உங்க
ளுக்கு நிம்மதியை* தந்திருக்கிறார். அவர் இந்தத் தேசத்தை உங்களுக்குக்
கொடுத்திருக்கிறார். 14 யோர்தானுக்குக் கிழக்கே மோசே உங்களுக்குக்
கொடுத்த இடத்திலேயே உங்கள் மனைவிகளும் பிள்ளைகளும் கால்நடை
களும் தங்கியிருக்கட்டும்.[q] ஆனால், உங்களில் பலம்படைத்த வீரர்கள் எல்
லாரும்[r] உங்கள் சகோதரர்களுக்கு முன்னால் படைபோல் அணிவகுத்துப்
போய் யோர்தானைக் கடக்க வேண்டும்.[s] 15 யெகோவா உங்களுக்கு
நிம்மதி தந்தது போல உங்கள் சகோதரர்களுக்கும் நிம்மதி தரும்வரை,
அதாவது உங்கள் கடவுளாகிய யெகோவா தருகிற தேசத்தை அவர்க
ளும் சொந்தமாக்கும்வரை, நீங்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
பின்பு, யெகோவாவின் ஊழியரான மோசே யோர்தானுக்குக் கிழக்கே உங்
களுக்குக் கொடுத்த தேசத்துக்குத் திரும்பி வந்து அங்கே குடியிருக்கலாம்'
என்று சொன்னதை நினைத்துப் பாருங்கள்"[t] என்றார்.[u]

1:4 *அதாவது, "ஐப்பிராத்து." #அதாவது, "மத்தியதரைக் கடல்." **1:8** *வே.வா., "ராத்திரியும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிரு." **1:13** *வே.வா., "ஓய்வை."

அதி. 1
- a உபா 11:24
- b எண் 13:29
- c ஆதி 15:18, யாத் 23:31, எண் 34:2, 3, உபா 1:7, யோசு 15:1, 4
- d உபா 7:24, உபா 11:25
- e யாத் 3:12, யோசு 3:7
- f உபா 31:6
- g உபா 31:23
- h ஆதி 12:7, ஆதி 15:18, ஆதி 26:3
- i உபா 5:32
- j உபா 29:9, 1ரா 2:3
- k உபா 6:6, உபா 30:14
- l உபா 17:18, 19, சங் 1:1, 2, 1தீ 4:15, யாக் 1:25
- m 1நா 22:13
- n யாத் 23:27, உபா 31:7, 8
- o உபா 9:1, யோசு 3:2, 3
- p எண் 32:20-22, யோசு 22:1-4
- q உபா 3:19, 20, உபா 29:8, யோசு 13:8
- r எண் 1:3, எண் 26:2
- s உபா 3:18
- t எண் 32:33, யோசு 22:4, 9
- u எண் 32:20-22, யோசு 22:1-4

16 அப்போது அவர்கள் யோசுவாவிடம், “நீங்கள் கொடுத்த எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவோம், நீங்கள் எங்கே அனுப்பினாலும் போவோம்.[a]
17 மோசே சொன்னதையெல்லாம் கேட்டு நடந்ததுபோல் நீங்கள் சொல்வதையும் கேட்டு நடப்போம். உங்கள் கடவுளாகிய யெகோவா மோசேயுடன் இருந்தது போல உங்களுடனும் இருப்பார்.[b]
18 யார் உங்களுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனாலும் சரி, யார் உங்களுடைய உத்தரவை மீறினாலும் சரி, அவன் கொல்லப்படுவான்.[c] யோசுவாவே, நீங்கள் தைரியமாகவும் உறுதியாகவும் இருங்கள்”[d] என்று சொன்னார்கள்.

2 பின்பு, நூனின் மகன் யோசுவா இரண்டு உளவாளிகளை சித்தீமிலிருந்து[e] ரகசியமாக அனுப்பி, “நீங்கள் போய் கானான் தேசத்தை உளவு பாருங்கள், முக்கியமாக எரிகோ நகரத்தை உளவு பாருங்கள்” என்று சொன்னார். அதனால், அவர்கள் எரிகோவுக்குப் போய் ராகாப்[f] என்ற விலைமகளின் வீட்டில் தங்கினார்கள்.
2 அப்போது, “தேசத்தை உளவு பார்க்க இந்த ராத்திரியில் இஸ்ரவேல் ஆண்கள் வந்திருக்கிறார்கள்” என்ற செய்தி எரிகோவின் ராஜாவுடைய காதுக்கு எட்டியது.
3 உடனே அவன் ராகாபிடம் ஆட்களை அனுப்பி, “உன் வீட்டுக்கு வந்திருக்கிற ஆட்களை வெளியே கொண்டுவா, அவர்கள் நம்முடைய தேசத்தை உளவு பார்க்க வந்திருக்கிறார்கள்” என்று சொன்னான்.

4 ஆனால், அவள் அந்த இரண்டு பேரையும் ஒளித்துவைத்திருந்தாள். அதனால் ராஜாவின் ஆட்களிடம், “அந்த ஆட்கள் என் வீட்டுக்கு வந்தது உண்மைதான். ஆனால், அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது.
5 இருட்டிய பிறகு, நகரவாசல் அடைக்கப்படும் நேரத்தில் அவர்கள் போய்விட்டார்கள். எங்கே போனார்கள் என்று எனக்குத் தெரியாது. நீங்கள் உடனடியாகத் துரத்திக்கொண்டு போனால், அவர்களைப் பிடித்துவிடலாம்” என்று சொன்னாள்.
6 (ஆனால், அவர்களை வீட்டின் மொட்டைமாடிக்குக் கொண்டுபோய், அங்கே பரப்பி வைக்கப்பட்டிருந்த ஆளிவிதைச் செடியின்* தட்டைகளுக்குள்ளே ஒளித்துவைத்திருந்தாள்.)
7 அதனால், அந்த ஆட்கள் அவர்களைத் தேடிக்கொண்டு யோர்தான் ஆற்றுத்துறைகளுக்கு* போனார்கள்.[g] அவர்கள் நகரத்துக்கு வெளியே போனவுடன் நகரவாசல் அடைக்கப்பட்டது.

8 அந்த உளவாளிகள் தூங்கிவிடுவதற்கு முன்பு, அவள் அந்த மொட்டைமாடிக்கு வந்தாள்.
9 அவள் அவர்களிடம், “இந்தத் தேசத்தை யெகோவா உங்களுக்குக் கண்டிப்பாகக் கொடுப்பார்[h] என்று எனக்குத் தெரியும். உங்களை நினைத்து நாங்கள் பயந்து நடுங்கிக்கொண்டிருக்கிறோம்.[i] இந்தத் தேசத்து ஜனங்கள் எல்லாரும் கதிகலங்கிப்போயிருக்கிறார்கள்.[j]
10 ஏனென்றால், நீங்கள் எகிப்திலிருந்து வந்தபோது உங்கள் முன்னால் செங்கடலை யெகோவா வற்றிப்போகச் செய்ததையும்,[k] எமோரியர்களின் இரண்டு ராஜாக்களான சீகோனையும்[l] ஓகையும்[m] யோர்தானின் கிழக்கே நீங்கள் அழித்துப்போட்டதையும் கேள்விப்பட்டோம்.
11 அதைக் கேள்விப்பட்டபோது வெலவெலத்துப்போனோம். இப்போது

2:6 * இந்தச் செடியின் நாரிலிருந்துதான் விலை உயர்ந்த நாரிழைத் துணி தயாரிக்கப்பட்டது. 2:7 * ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதிகள்.

அதி. 1
a எண் 32:17, 25
b எண் 27:18, 20; உபா 34:9
c உபா 17:12
d உபா 31:7; யோசு 1:6, 9

அதி. 2
e எண் 25:1; எண் 33:49
f யோசு 6:17; மத் 1:5; எபி 11:31; யாக் 2:25
g நியா 3:28; நியா 12:5
h யாத் 3:8
i யாத் 23:27; உபா 2:25; உபா 11:25
j யாத் 15:15; யோசு 5:1
k யாத் 14:21; யாத் 15:13, 14
l எண் 21:21-24
m எண் 21:33, 34; உபா 3:3; யோசு 9:9, 10

அதி. 2

உங்களை எதிர்க்க யாருக்குமே தைரியம் இல்லை. மேலே வானத்திலும்
சரி, கீழே பூமியிலும் சரி, உங்கள் கடவுளாகிய யெகோவாதான் கடவுள்.[a]
12 நான் உங்களுக்கு விசுவாசமாக இருந்தது போல எனக்கும் என் குடும்
பத்துக்கும் நீங்கள் விசுவாசமாக இருப்பீர்கள் என்று யெகோவாவின் பெய
ரில் தயவுசெய்து சத்தியம் செய்து கொடுங்கள். உங்கள் வாக்கைக் காப்பாற்
றுவீர்கள் என்பதற்கு நம்பகமான ஒரு அடையாளம் கொடுங்கள். **13** என்
அப்பா அம்மாவையும் சகோதர சகோதரிகளையும் அவர்களுக்குச் சொந்
தமானவர்களையும் நீங்கள் கொல்லக் கூடாது. எங்கள் எல்லாரையும் காப்
பாற்ற வேண்டும்"[b] என்று சொன்னாள்.

14 அதற்கு அந்த உளவாளிகள், "எங்கள் உயிரையே கொடுத்து உங்
களைக் காப்பாற்றுவோம்! ஆனால், நாங்கள் வந்துபோனதைப் பற்றி நீங்
கள் யாரிடமும் வாய் திறக்கக் கூடாது. அப்போதுதான், இந்தத் தேசத்தை
யெகோவா எங்களுக்குக் கொடுக்கும்போது நாங்களும் உங்களுக்கு விசு
வாசமாகவும் உண்மையாகவும் இருப்போம்"* என்று சொன்னார்கள்.
15 ராகாபின் வீடு நகரத்தின் மதிலோடு இணைந்தபடி இருந்தது. சொல்லப்
போனால், அவள் அந்த மதில்மேல்தான் குடியிருந்தாள். அதனால் அவள்,
ஜன்னலில் ஒரு கயிறு கட்டி அவர்களை இறக்கிவிட்டாள்.[c] **16** அப்போது
அவர்களிடம், "நீங்கள் மலைப்பகுதிக்குப் போய் அங்கே மூன்று நாட்க
ளுக்கு ஒளிந்துகொள்ளுங்கள். அப்போதுதான் உங்களைத் தேடுகிறவர்க
ளால் உங்களைக் கண்டுபிடிக்க முடியாது. அவர்கள் திரும்பி வந்த பின்பு,
நீங்கள் உங்களுடைய இடத்துக்குப் போகலாம்" என்று சொன்னாள்.

17 அதற்கு அவர்கள், "நாங்கள் இந்தத் தேசத்துக்கு வரும்போது, நீங்
கள் எங்களை இறக்கிவிட்ட ஜன்னலில் இந்தச் சிவப்புநூல் கயிற்றைக் கட்
டித் தொங்கவிடுங்கள். உங்கள் அப்பா அம்மாவையும் சகோதரர்களையும்
உங்கள் அப்பாவின் குடும்பத்தார் எல்லாரையும் இந்த வீட்டுக்குள் கூட்டிக்
கொண்டு வந்துவிடுங்கள்.[d] **18** அப்படிச் செய்யாவிட்டால், நீங்கள் எங்க
ளிடம் வாங்கிக்கொண்ட சத்தியம்[e] செல்லாது. **19** யாராவது உங்கள் வீட்
டைவிட்டு வெளியே போனால், அவருடைய சாவுக்கு* அவர்தான்
பொறுப்பு, நாங்கள் பொறுப்பு அல்ல. ஆனால், இந்த வீட்டுக்குள்ளே
இருக்கிற யாருடைய உயிருக்காவது ஆபத்து வந்தால், அதற்கு நாங்
கள்தான் பொறுப்பு. **20** நாங்கள் வந்துபோனதைப் பற்றி நீங்கள் யாரிட
மாவது சொன்னால்,[f] நீங்கள் எங்களிடம் வாங்கிக்கொண்ட சத்தியம் செல்
லாது" என்று சொன்னார்கள். **21** அதற்கு அவள், "நீங்கள் சொன்னபடியே
செய்கிறேன்" என்றாள்.

பின்பு அவர்களை அனுப்பி வைத்தாள், அவர்களும் அங்கிருந்து
போனார்கள். பிற்பாடு, அவள் அந்தச் சிவப்புக் கயிற்றை ஜன்னலில் கட்
டித் தொங்கவிட்டாள். **22** அந்த உளவாளிகள் மலைப்பகுதிக்குப் போய்
மூன்று நாட்கள் தங்கினார்கள். தேடுகிறவர்கள் திரும்பிப் போகும்வரை
அங்கேயே தங்கினார்கள். அந்த ஆட்கள் வழியெல்லாம் தேடியும் இவர்க
ளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. **23** பின்பு, அந்த இரண்டு உளவாளி
களும் மலைப்பகுதியிலிருந்து இறங்கி, ஆற்றைக் கடந்து, நூனின்

2:14 * வே.வா., "மாறாத அன்பையும் உண்மைத்தன்மையையும் காட்டுவோம்." **2:19** * வே.வா., "இரத்தப்பழிக்கு."

a உபா 4:39; 2நா 20:6; தானி 4:35
b யோசு 6:23
c எபி 11:31
d யோசு 6:23
e எண் 30:2
f யோசு 2:14

மகனாகிய யோசுவாவிடம் வந்தார்கள். நடந்த எல்லாவற்றையும் அவரிடம்
சொன்னார்கள். **24** அதோடு, “இந்த முழு தேசத்தையும் யெகோவா நம்
கையில் கொடுத்துவிட்டார்.[a] இந்தத் தேசத்து ஜனங்கள் எல்லாரும்
நம்மை நினைத்து கதிகலங்கிப்போயிருக்கிறார்கள்”[b] என்றும் யோசுவாவி
டம் சொன்னார்கள்.

3 பின்பு யோசுவாவும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் விடியற்காலையில்
எழுந்து, சித்தீமிலிருந்து[c] புறப்பட்டு யோர்தான் ஆற்றங்கரைக்கு வந்
தார்கள். அதைக் கடப்பதற்குமுன் ராத்திரி அங்கே தங்கினார்கள்.

2 மூன்று நாட்களுக்குப்பின் ஜனங்களின் அதிகாரிகள்[d] முகாம் முழுவ
தும் போய், **3** எல்லா ஜனங்களிடமும், “உங்கள் கடவுளாகிய யெகோவா
வின் ஒப்பந்தப் பெட்டியை லேவியர்களாகிய குருமார்கள் சுமந்துகொண்டு
போவதை[e] நீங்கள் பார்க்கும்போது, உடனே உங்களுடைய இடத்தைவிட்
டுப் புறப்பட்டு அதன் பின்னால் போக வேண்டும். **4** அப்போதுதான்
நீங்கள் போக வேண்டிய வழி உங்களுக்குத் தெரியும். ஏனென்றால், அந்த
வழியில் இதற்கு முன்னால் நீங்கள் போனதில்லை. உங்களுக்கும் அந்
தப் பெட்டிக்கும் இடையே சுமார் 2,920 அடி* தூரம் இருக்க வேண்டும்.
அதைத் தாண்டி நீங்கள் போகக் கூடாது” என்று சொன்னார்கள்.

5 அப்போது யோசுவா ஜனங்களிடம், “நாளைக்கு யெகோவா உங்கள்
நடுவே அற்புதங்கள் செய்யப்போகிறார்.[f] அதனால் உங்களைப் புனிதப்ப
டுத்திக்கொள்ளுங்கள்”[g] என்று சொன்னார்.

6 பின்பு யோசுவா குருமார்களிடம், “நீங்கள் ஒப்பந்தப் பெட்டியை[h]
எடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு முன்னால் போங்கள்” என்று சொன்னார்.
அதனால், அவர்கள் ஒப்பந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு ஜனங்க
ளுக்கு முன்னால் போனார்கள்.

7 பின்பு யெகோவா யோசுவாவிடம், “இந்த நாளிலிருந்து இஸ்ரவேலர்
கள் எல்லாருடைய கண் முன்னாலும் நான் உன்னைக் கௌரவப்படுத்து
வேன்.[i] நான் மோசேயுடன் இருந்ததுபோல்[j] உன்னோடும் இருப்பேன்[k] என்
பதை அவர்கள் தெரிந்துகொள்வார்கள். **8** ஒப்பந்தப் பெட்டியைச்
சுமக்கிற குருமார்கள் யோர்தான் ஆற்றில் கால்வைத்தவுடன், அங்கேயே
அசையாமல் நிற்க வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளை கொடு”[l]
என்றார்.

9 பின்பு யோசுவா இஸ்ரவேலர்களிடம், “இங்கே வந்து உங்கள் கடவு
ளாகிய யெகோவாவின் வார்த்தைகளைக் கேளுங்கள்” என்று சொன்
னார். **10** அதன்பின், “உயிருள்ள கடவுள் உங்கள் நடுவில் இருக்கிறார்[m]
என்பதையும், கானானியர்கள், ஏத்தியர்கள், ஏவியர்கள், பெரிசியர்கள், கிர்
காசியர்கள், எமோரியர்கள், எபூசியர்கள் ஆகியவர்களை உங்கள் முன்னா
லிருந்து நிச்சயம் துரத்திவிடுவார்[n] என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்வ
தற்கு அடையாளமாக, **11** முழு பூமிக்கும் எஜமானாகிய கடவுளின்
ஒப்பந்தப் பெட்டி உங்களுக்கு முன்னால் யோர்தானுக்குள் கொண்டுபோ
கப்படும். **12** இப்போது இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒரு
வர் என்று 12 ஆண்களைத் தேர்ந்தெடுங்கள்.[o] **13** முழு பூமிக்கும் எஜ
மானாகிய யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியைச் சுமக்கிற குருமார்களின்

3:4 * நே.மொ., “2,000 முழ.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 2
a யாத் 23:31; யோசு 6:2; யோசு 21:44
b யாத் 15:14-16; யோசு 2:9-11; யோசு 5:1

அதி. 3
c எண் 25:1; யோசு 2:1
d உபா 1:15; யோசு 1:10, 11
e எண் 4:15; 1நா 15:2
f யாத் 34:10
g யாத் 19:10; லேவி 20:7
h யாத் 25:10; எண் 4:15
i யோசு 4:14
j யாத் 3:12; யாத் 14:31
k யோசு 1:5, 17
l யோசு 3:17
m உபா 7:21
n யாத் 3:8; உபா 7:1; சங் 44:2
o யோசு 4:2, 3

பாதங்கள் யோர்தான் ஆற்றில் பட்டவுடன், மேலிருந்து ஓடிவரும் தண்ணீர் அப்படியே அணைபோல்* நிற்கும்”[a] என்று சொன்னார்.

14 யோர்தானைக் கடப்பதற்காக ஜனங்கள் தங்களுடைய கூடாரங்களிலிருந்து புறப்பட்டபோது, ஒப்பந்தப் பெட்டியைச்[b] சுமக்கிற குருமார்கள் அவர்களுக்கு முன்னால் போனார்கள். **15** அறுவடைக் காலம் முழுவதும் யோர்தானில் தண்ணீர் கரைபுரண்டு ஓடும்.[c] பெட்டியைச் சுமக்கிற குருமார்கள் யோர்தானுக்குப் போய்ச் சேர்ந்து, ஆற்றில் கால்வைத்த உடனேயே, **16** மேலிருந்து ஓடிவந்த தண்ணீர் அப்படியே நின்றது. ரொம்பத் தூரத்தில், அதாவது சார்தானின் பக்கத்தில் உள்ள ஆதாம் நகரத்தில், அணைபோல்* நின்றது. கீழே ஓடிய தண்ணீர் வடிந்துகொண்டே போய் உப்புக் கடல்# என்ற அரபா கடலில் கலந்தது. அதனால், ஜனங்கள் எல்லாரும் எரிகோவுக்கு நேரெதிராகக் கடந்துபோனார்கள். **17** இஸ்ரவேல் தேசத்தார் எல்லாருமே கடந்துபோகும்வரை,[d] யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியைச் சுமந்த குருமார்கள் யோர்தானின் நடுவே உலர்ந்த தரையில் நின்றுகொண்டிருந்தார்கள்.[e]

4

இஸ்ரவேல் தேசத்தார் எல்லாரும் யோர்தானைக் கடந்தவுடன் யெகோவா யோசுவாவிடம், **2** “கோத்திரத்துக்கு ஒருவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ஆண்களைக்[f] கூப்பிட்டு, **3** அவர்களிடம், ‘யோர்தான் நடுவிலிருந்து, அதாவது குருமார்கள் அசையாமல் நின்ற இடத்திலிருந்து,[g] 12 கற்களை எடுத்துவந்து இன்று ராத்திரி நீங்கள் தங்கும் இடத்தில் வையுங்கள்’[h] என்று சொல்” என்றார்.

4 அதனால், கோத்திரத்துக்கு ஒருவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ஆண்களை யோசுவா கூப்பிட்டு, **5** அவர்களிடம், “நீங்கள் யோர்தானுக்கு நடுவே உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பெட்டிக்கு முன்பாகப் போங்கள். இஸ்ரவேல் கோத்திரங்களின் எண்ணிக்கைப்படி, ஆளுக்கு ஒரு கல்லை எடுத்து தோள்களில் சுமந்துகொண்டு வாருங்கள். **6** இந்தக் கற்கள் உங்களுக்கு அடையாளச் சின்னங்களாக இருக்கும். எதிர்காலத்தில் உங்களுடைய பிள்ளைகள் உங்களிடம், ‘இந்தக் கற்கள் ஏன் இங்கே இருக்கின்றன?’ என்று கேட்டால்,[i] **7** நீங்கள் அவர்களிடம், ‘ஒப்பந்தப் பெட்டிக்கு முன்னால் யோர்தான் ஆற்றை யெகோவா பிரிந்துபோக வைத்தார்.[j] அதனால், அந்தப் பெட்டி யோர்தானைக் கடந்துபோனபோது தண்ணீர் பிரிந்து நின்றது. இந்தக் கற்கள் இந்தச் சம்பவத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு என்றென்றும் ஞாபகப்படுத்தும்’[k] என்று சொல்ல வேண்டும்” என்றார்.

8 யோசுவா கட்டளை கொடுத்தபடியே அவர்கள் செய்தார்கள். யோசுவாவுக்கு யெகோவா சொல்லியிருந்தபடியே, இஸ்ரவேல் கோத்திரங்களின் எண்ணிக்கைப்படி யோர்தானின் நடுவிலிருந்து 12 கற்களை எடுத்துக்கொண்டு வந்து, ராத்திரி தாங்கள் தங்கிய இடத்தில் வைத்தார்கள்.

9 அதோடு யோர்தானின் நடுவிலும், அதாவது ஒப்பந்தப் பெட்டியைச் சுமந்த குருமார்கள் நின்ற இடத்திலும்,[l] யோசுவா 12 கற்களை நாட்டினார். அந்தக் கற்கள் இன்றுவரை அங்கே இருக்கின்றன.

10 யெகோவா சொல்லச் சொன்ன எல்லா கட்டளைகளையும், அதாவது

3:13, 16 * வே.வா., “சுவர்போல்.” **3:16** # அதாவது, “சவக் கடல்.”

அதி. 3

a சங் 114:1, 3

b யாத் 25:10; யோசு 3:6; அப் 7:44, 45

c யோசு 4:18; 1நா 12:15

d சங் 66:6

e யோசு 4:3

அதி. 4

f யோசு 3:12, 13

g யோசு 3:17

h யோசு 4:19, 20

i யாத் 13:14; உபா 6:20, 21; சங் 78:3, 4

j யோசு 3:13, 16

k உபா 4:9

l யோசு 3:17

மோசே மூலம் கொடுத்திருந்த எல்லா கட்டளைகளையும், யோசுவா ஜனங்களிடம் சொல்லி முடிக்கும்வரை, பெட்டியைச் சுமந்த குருமார்கள் யோர்தானின் நடுவில் நின்றுகொண்டிருந்தார்கள். குருமார்கள் அங்கே நின்றுகொண்டிருந்த சமயத்தில் ஜனங்கள் எல்லாரும் வேகவேகமாக ஆற்றைக் கடந்தார்கள். **11** ஜனங்கள் எல்லாருமே ஆற்றைக் கடந்தவுடன், குருமார்கள் யெகோவாவின் பெட்டியைச் சுமந்துகொண்டு அவர்களுடைய கண் முன்னால் ஆற்றைக் கடந்தார்கள்.[a] **12** மோசே கட்டளை கொடுத்திருந்தபடியே,[b] ரூபன் கோத்திரத்தாரும் காத் கோத்திரத்தாரும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரும் மற்ற இஸ்ரவேலர்களுக்கு முன்னால் அணிவகுத்துப் போனார்கள்.[c] **13** சுமார் 40,000 படைவீரர்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு யெகோவாவின் முன்னிலையில் யோர்தானைக் கடந்து எரிகோ பாலைநிலத்துக்குப் போனார்கள்.

14 அன்று இஸ்ரவேலர்களுடைய கண் முன்னால் யோசுவாவை யெகோவா கௌரவப்படுத்தினார்.[d] ஜனங்கள் மோசேக்கு மதிப்பு மரியாதை காட்டியது[e] போலவே யோசுவாவுக்கும் அவருடைய வாழ்நாள் காலமெல்லாம் மதிப்பு மரியாதை காட்டினார்கள்.

15 யெகோவா யோசுவாவிடம், **16** “சாட்சிப் பெட்டியைச்[f] சுமக்கிற குருமார்களை யோர்தானைவிட்டுக் கரையேறி வரச் சொல்” என்றார். **17** அதனால் யோசுவா குருமார்களிடம், “யோர்தானைவிட்டுக் கரையேறுங்கள்” என்று சொன்னார். **18** யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியைச் சுமக்கிற குருமார்கள்[g] யோர்தானின் நடுவிலிருந்து வந்து கரையில் கால் வைத்த உடனே யோர்தான் ஆறு முன்புபோல் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது.[h]

19 ஜனங்கள் எல்லாரும் முதலாம் மாதம் பத்தாம் நாளில் யோர்தானிலிருந்து கரையேறி, எரிகோவின் கிழக்கு எல்லையிலுள்ள கில்காலில்[i] முகாம் போட்டார்கள்.

20 யோர்தானிலிருந்து எடுத்துவந்த 12 கற்களை கில்காலில் யோசுவா நாட்டினார்.[j] **21** பின்பு அவர் இஸ்ரவேலர்களிடம், “‘இந்தக் கற்கள் ஏன் இங்கே இருக்கின்றன?’ என்று எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகள் கேட்டால்,[k] **22** நீங்கள் அவர்களிடம், ‘இஸ்ரவேலர்கள் உலர்ந்த தரையில் யோர்தானைக் கடந்தார்கள்.[l] **23** அவர்கள் செங்கடலைக் கடந்தபோது நம் கடவுளாகிய யெகோவா அதை வற்றிப்போக வைத்தது போலவே, யோர்தானைக் கடந்தபோதும் நம் கடவுளாகிய யெகோவா அதை வற்றிப்போக வைத்தார்.[m] **24** யெகோவா எவ்வளவு பலம்படைத்தவர் என்பதைப் பூமியிலுள்ள எல்லாரும் தெரிந்துகொள்வதற்காகவும்,[n] நீங்கள் என்றென்றும் நம் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்து நடப்பதற்காகவும் அப்படிச் செய்தார்’ என்று சொல்ல வேண்டும்” என்றார்.

5 இஸ்ரவேலர்கள் யோர்தானைக் கடப்பதற்காக யெகோவா அதன் தண்ணீரை வற்றிப்போக வைத்ததைப் பற்றி யோர்தானின் மேற்குப் பகுதியிலிருந்த எமோரிய[o] ராஜாக்களும் கடலுக்குப் பக்கத்திலிருந்த கானானிய ராஜாக்களும்[p] கேள்விப்பட்டார்கள். அதைக் கேள்விப்பட்டவுடன் வெலவெலத்துப்போனார்கள்.[q] இஸ்ரவேலர்களை எதிர்க்க அவர்கள் யாருக்குமே தைரியம் இல்லாமல் போய்விட்டது.[r]

அதி. 4
a யோசு 3:8, 17
b எண் 32:20-22
எண் 32:25-29
c யோசு 1:12, 14
d யோசு 3:7
e யாத் 14:31
f யாத் 25:22
g எண் 4:15
h யோசு 3:13, 15
i யோசு 4:3
யோசு 5:8, 9
யோசு 10:6
j யோசு 4:8
k சங் 44:1
l யோசு 3:17
சங் 66:6
m யாத் 14:21
ஏசா 63:12
எபி 11:29
n யாத் 9:16
யாத் 15:6
உபா 28:10
1சா 17:46
2ரா 19:19
சங் 106:8

அதி. 5
o ஆதி 10:15, 16
p எண் 13:29
q யாத் 15:15
யோசு 2:24
r யோசு 2:9-11

2 அப்போது யெகோவா யோசுவாவிடம், “நீ கருங்கல்லால்* கத்தி
கள் செய்து, இரண்டாவது தடவை இஸ்ரவேல் ஆண்களுக்கு விருத்தசேத
னம் செய்”[a] என்று சொன்னார். **3** அதனால், யோசுவா கருங்கல்லால்
கத்திகள் செய்து கிபியாத்-ஆர்லோத்* என்ற இடத்தில் இஸ்ரவேல் ஆண்
களுக்கு விருத்தசேதனம் செய்தார்.[b] **4** அந்த ஆண்கள் விருத்தசேத
னம் செய்யப்பட்டதற்கு ஒரு காரணம் இருந்தது. எகிப்திலிருந்து வந்த
ஆண்கள் எல்லாரும், அதாவது போர்வீரர்கள்* எல்லாரும், வழியில்
வனாந்தரத்திலேயே இறந்துபோனார்கள்.[c] **5** எகிப்திலிருந்து வந்த ஆண்
கள் எல்லாருக்கும் ஏற்கெனவே விருத்தசேதனம் செய்யப்பட்டிருந்தது.
ஆனால், எகிப்திலிருந்து வந்தபின் வனாந்தரத்தில் பிறந்த ஆண்கள் யாருக்
குமே விருத்தசேதனம் செய்யப்படவில்லை. **6** எகிப்திலிருந்து வந்த அந்
தப் போர்வீரர்கள் எல்லாரும், அதாவது யெகோவாவின் பேச்சைக் கேட்
காத எல்லாரும், 40 வருஷங்களாக[d] வனாந்தரத்தில் அலைந்து திரிந்து
கடைசியில் இறந்துபோனார்கள்.[e] முன்னோர்களுக்கு யெகோவா வாக்குக்
கொடுத்த தேசமாகிய[f] பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை[g] அந்த ஆட்கள்
பார்க்கவே மாட்டார்கள் என்று யெகோவா உறுதியாகச் சொல்லியிருந்தார்.[h]
7 அவர்களுக்குப் பதிலாக அவர்களுடைய பிள்ளைகளைக் கடவுள் இந்
தத் தேசத்துக்குக் கொண்டுவந்தார்.[i] இவர்களுக்கு யோசுவா விருத்தசேத
னம் செய்தார். ஏனென்றால், வழியில் இவர்களுக்கு விருத்தசேதனம் செய்
யப்படவில்லை.

8 இஸ்ரவேல் ஆண்கள் எல்லாருக்கும் விருத்தசேதனம் செய்து முடிக்
கப்பட்டது. அவர்கள் குணமாகும்வரை, முகாம்போட்டிருந்த இடத்திலேயே
தங்கியிருந்தார்கள்.

9 பின்பு யெகோவா யோசுவாவிடம், “எகிப்தியர்கள் உங்களுக்கு எதி
ராகப் பேசிய பழிப்பேச்சுக்கு இன்று நான் முடிவுகட்டிவிட்டேன்”* என்று
சொன்னார். அதனால், அந்த இடம் கில்கால்#[j] என்று இந்த நாள்வரை
அழைக்கப்படுகிறது.

10 இஸ்ரவேலர்கள் தொடர்ந்து கில்காலிலேயே முகாம்போட்டிருந்தார்
கள். அந்த மாதம் 14-ஆம் நாள்[k] சாயங்காலத்தில், எரிகோ பாலைநிலத்தில்
பஸ்காவைக் கொண்டாடினார்கள். **11** கானான் தேசத்தின் விளைச்சலை,
அதாவது புளிப்பில்லாத ரொட்டிகளையும்[l] வறுத்த தானியங்களையும்,
பஸ்காவுக்கு அடுத்த நாளே சாப்பிட ஆரம்பித்தார்கள். **12** அவர்கள்
அவற்றைச் சாப்பிட்ட அதே நாளில் மன்னா கிடைப்பது நின்றுபோனது.
அதன்பின், இஸ்ரவேலர்களுக்கு மன்னா கிடைக்கவில்லை,[m] அந்த வரு
ஷத்திலிருந்து கானான் தேசத்தின் விளைச்சலைச் சாப்பிட ஆரம்பித்
தார்கள்.[n]

13 யோசுவா எரிகோவுக்குப் பக்கத்தில் இருந்தபோது, உருவிய வாளு
டன் ஒரு மனிதர்[o] தனக்கு முன்னால் நிற்பதைப் பார்த்தார்.[p] யோசுவா அவ
ரிடம் நடந்துபோய், “நீங்கள் எங்கள் பக்கமா, எதிரிகள் பக்கமா?” என்று

அதி. 5
a ஆதி 17:9-11
b யோசு 5:8, 9
c எண் 14:29; எண் 26:65; உபா 2:14
d எண் 14:33; உபா 1:3
e எண் 14:22, 23
f ஆதி 13:14, 15; யாத் 33:1
g யாத் 3:8; எண் 13:26, 27; எசே 20:6
h உபா 1:35
i எண் 14:31
j யோசு 4:19; யோசு 5:3
k யாத் 12:24, 25; எண் 9:5
l யாத் 12:18
m யாத் 16:35
n உபா 6:10-12; உபா 8:10
o ஆதி 18:2; நியா 13:6; அப் 1:10
p யாத் 23:23; எண் 22:23; 1நா 21:16

5:2 *நே.மொ., “சிக்கிமுக்கிக் கல்லால்.” **5:3** *அர்த்தம், “நுனித்தோல்களின் குன்று.” **5:4** *வே.வா., “படையில் சேரும் வயதிலிருந்த ஆண்கள்.” **5:9** *நே.மொ., “எகிப்தின் பழிப்பேச்சை உன்னிடமிருந்து புரட்டிப்போட்டுவிட்டேன்.” #அர்த்தம், “புரட்டிப்போடுதல்.”

கேட்டார். **14** அதற்கு அவர், “அப்படியில்லை, நான் யெகோவாவுடைய
படையின் அதிபதியாக[a] வந்திருக்கிறேன்” என்றார். அதைக் கேட்டவு
டன் யோசுவா சாஷ்டாங்கமாக விழுந்து, “எஜமானே, அடியேனிடம் என்ன
சொல்ல வந்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார். **15** அதற்கு யெகோவா
வுடைய படையின் அதிபதி, “உன் செருப்பைக் கழற்று. ஏனென்றால், நீ நிற்
கிற இடம் பரிசுத்தமான இடம்” என்றார். அவர் சொன்னபடியே யோசுவா
உடனடியாகச் செய்தார்.[b]

6 இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பயந்து, எரிகோ நகரத்தின் வாசல்கள்
அடைத்து வைக்கப்பட்டிருந்தன. யாரும் வெளியே போகவும் இல்லை,
உள்ளே வரவும் இல்லை.[c]

2 பின்பு யெகோவா யோசுவாவிடம், “இதோ, நான் எரிகோவையும்
அதன் ராஜாவையும் பலம்படைத்த வீரர்களையும் உன் கையில் கொடுத்து
விட்டேன்.[d] **3** போர்வீரர்களாகிய நீங்கள் எல்லாரும் அணிவகுத்துப்
போய் இந்த நகரத்தை ஒரு தடவை சுற்றிவர வேண்டும். இப்படி ஆறு நாட்
கள் சுற்றிவர வேண்டும். **4** ஏழு குருமார்கள் ஆளுக்கொரு ஊது
கொம்பை* எடுத்துக்கொண்டு ஒப்பந்தப் பெட்டிக்கு முன்னால் போக
வேண்டும். ஆனால் ஏழாம் நாளில் ஏழு தடவை நகரத்தைச் சுற்றிவர வேண்
டும். குருமார்கள் ஊதுகொம்புகளை ஊத வேண்டும்.[e] **5** ஊதுகொம்பின்
சத்தம்* கேட்டவுடன் எல்லாரும் போர் முழக்கம் செய்ய வேண்டும். அப்
போது நகரத்தின் மதில் இடிந்து விழுந்து தரைமட்டமாகும்,[f] ஒவ்வொருவ
ரும் நேராக உள்ளே போய்த் தாக்குதல் நடத்த வேண்டும்” என்று
சொன்னார்.

6 அதனால், நூனின் மகன் யோசுவா குருமார்களைக் கூப்பிட்டு, “ஒப்
பந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு போங்கள். ஏழு குருமார்கள் ஆளுக்
கொரு ஊதுகொம்பை எடுத்துக்கொண்டு யெகோவாவின் ஒப்பந்தப் பெட்
டிக்கு முன்னால் போக வேண்டும்”[g] என்று சொன்னார். **7** பின்பு அந்த
ஜனங்களிடம், “அணிவகுத்துப் போய் நகரத்தைச் சுற்றி வாருங்கள். வீரர்
கள் ஆயுதங்களோடு[h] யெகோவாவின் பெட்டிக்கு முன்னால் போக வேண்
டும்” என்று சொன்னார். **8** யோசுவா அந்த ஜனங்களிடம் சொன்னப
டியே, ஏழு குருமார்கள் தங்களுடைய ஊதுகொம்புகளை ஊதிக்கொண்டே
யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டிக்கு முன்னால் நடந்துபோனார்கள்.
யெகோவாவின் பெட்டி அவர்களுக்குப் பின்னால் போனது. **9** ஊது
கொம்புகளை ஊதிக்கொண்டு போன குருமார்களுக்கு முன்னால் முன்
னணி வீரர்கள் போனார்கள். பெட்டிக்குப் பின்னால் பின்னணி வீரர்கள்
போனார்கள். ஊதுகொம்புகள் முழங்கிக்கொண்டே இருந்தன.

10 யோசுவா அந்த ஜனங்களிடம், “குரல் எழுப்ப வேண்டுமென்று நான்
சொல்லும் நாள்வரை குரல் எழுப்பாதீர்கள், சத்தம் போடாதீர்கள். உங்கள்
வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வரக் கூடாது. நான் சொல்லும்போது
மட்டும் நீங்கள் குரல் எழுப்ப வேண்டும்” என்று கட்டளை கொடுத்திருந்தார்.
11 யெகோவாவின் பெட்டி ஒரு தடவை நகரத்தைச் சுற்றி வந்தது.
அதன்பின் அவர்கள் முகாமுக்குத் திரும்பி வந்து ராத்திரி அங்கே தங்கி
னார்கள்.

6:4 *அதாவது, “செம்மறியாட்டுக் கடாவின் கொம்பினால் செய்யப்பட்ட ஊது கொம்பை.” **6:5** *வே.வா., “நீண்ட முழக்கம்.”

அதி. 5
a யாத் 23:20
1ரா 22:19
தானி 10:13
b யாத் 3:4, 5

அதி. 6
c யோசு 2:9
d எண் 14:9
உபா 7:24
நெ 9:24
e நியா 7:22
f எபி 11:30
g எண் 4:15
h எண் 10:14, 18, 22
யோசு 1: 12, 14

12 அடுத்த நாள் விடியற்காலையிலேயே யோசுவா எழுந்தார். குருமார்
கள் யெகோவாவின் பெட்டியைச் சுமந்துகொண்டு போனார்கள்.[a] **13** ஏழு
குருமார்கள் தங்களுடைய ஊதுகொம்புகளை ஊதிக்கொண்டே யெகோவா
வின் பெட்டிக்கு முன்னால் நடந்து போனார்கள். முன்னணி வீரர்கள்
அவர்களுக்கு முன்னால் நடந்து போனார்கள். பின்னணி வீரர்கள்
யெகோவாவின் பெட்டிக்குப் பின்னால் போனார்கள். ஊதுகொம்புகள்
முழங்கிக்கொண்டே இருந்தன. **14** அந்த நாளில் அவர்கள் அணிவகுத்
துப் போய் நகரத்தை ஒரு தடவை சுற்றிவந்தார்கள், பின்பு முகாமுக்குத்
திரும்பினார்கள். இப்படியே ஆறு நாட்களும் செய்தார்கள்.[b]

15 ஏழாம் நாளில், பொழுது விடிந்தவுடனேயே அவர்கள் எழுந்து
அதே போல நகரத்தை ஏழு தடவை சுற்றிவந்தார்கள். அந்த நாளில் மட்
டும்தான் நகரத்தை ஏழு தடவை சுற்றிவந்தார்கள்.[c] **16** ஏழாவது தடவை
சுற்றி வந்தபோது, குருமார்கள் ஊதுகொம்புகளை ஊதினார்கள். அப்போது
யோசுவா அந்த ஜனங்களிடம், "இந்த நகரத்தை யெகோவா உங்களுக்குக்
கொடுத்துவிட்டார், குரல் எழுப்புங்கள்![d] **17** நகரத்தையும் அதில் இருக்
கிற எல்லாவற்றையும் அழிக்க வேண்டும்.[e] அவை எல்லாமே யெகோவா
வுக்குச் சொந்தம். நாம் அனுப்பிய உளவாளிகளை ராகாப்[f] என்ற விலைம
கள் ஒளித்துவைத்துக் காப்பாற்றியதால்,[g] அவளையும் அவள் வீட்டில்
இருக்கிறவர்களையும் மட்டும் உயிரோடு விட்டுவிடுங்கள். **18** ஆனால்,
அழிக்க வேண்டிய எந்தப் பொருளின் பக்கத்திலும் போகாதீர்கள்.[h] அப்ப
டிப் போனால், அழிக்க வேண்டிய பொருள்கள் எதையாவது ஆசைப்பட்டு
எடுத்துக்கொள்வீர்கள்.[i] இதனால், இஸ்ரவேலர்களின் முகாமுக்கே அழி
வைக் கொண்டுவந்துவிடுவீர்கள். அது அடியோடு அழிந்துபோகும்படி
செய்துவிடுவீர்கள்.[j] **19** எல்லா வெள்ளியும் தங்கமும் செம்புப் பொருள்க
ளும் இரும்புச் சாமான்களும் யெகோவாவுக்குச் சொந்தமானவை, பரி
சுத்தமானவை.[k] அவை யெகோவாவின் பொக்கிஷத்தில் சேர வேண்டும்"[l]
என்று சொன்னார்.

20 ஊதுகொம்புகள் ஊதப்பட்டபோது அந்த ஜனங்கள் குரல் எழுப்பி
போர் முழக்கம் செய்தார்கள்.[m] உடனே, நகரத்தின் மதில் பொலபொல
வென இடிந்து விழுந்தது.[n] அதன்பின் அவர்கள் ஒவ்வொருவரும்
நேராக உள்ளே போய்த் தாக்குதல் நடத்தி, நகரத்தைக் கைப்பற்றினார்கள்.
21 அந்த நகரத்திலிருந்த எல்லா ஆண்களையும் பெண்களையும், வாலிபர்
களையும் வயதானவர்களையும், ஆடுமாடுகளையும் கழுதைகளையும்
வாளால் கொன்றுபோட்டார்கள்.[o]

22 தேசத்தை உளவு பார்த்த இரண்டு பேரையும் யோசுவா கூப்பிட்டு,
"அந்த விலைமகளின் வீட்டுக்குப் போங்கள். நீங்கள் அந்தப் பெண்
ணுக்கு வாக்குக் கொடுத்தபடியே, அவளையும் அவளுக்குச் சொந்தமான
எல்லாரையும் வெளியே கூட்டிக்கொண்டு வாருங்கள்"[p] என்று சொன்னார்.
23 அதனால், உளவாளிகளாகிய அந்த வாலிபர்கள் போய் ராகாபையும்
அவளுடைய அப்பாவையும் அம்மாவையும் சகோதரர்களையும் அவளுக்
குச் சொந்தமான எல்லாரையும் வெளியே கூட்டிக்கொண்டு வந்தார்கள்.[q]
அவளுடைய முழு குடும்பத்தையும் இஸ்ரவேலின் முகாமுக்கு வெளியே
கூட்டிக்கொண்டு வந்து பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்தார்கள்.

அதி. 6

a 1நா 15:2
b யோசு 6:3
c யோசு 6:4
d யோசு 6:5, 10
e லேவி 27:29; உபா 7:2; உபா 20:16
f யோசு 2:1; மத் 1:5; எபி 11:31
g ஆதி 12:3; யோசு 2:4, 6; யாக் 2:25
h உபா 7:26
i உபா 13:17; யோசு 7: 11, 21
j யோசு 7:25
k எண் 31: 22, 23
l யோசு 6:24; 1ரா 7:51; 1நா 18:11
m யோசு 6:4, 16
n யோசு 6:5; எபி 11:30
o உபா 7:2; உபா 20:16
p யோசு 2:14; எபி 11:31
q யோசு 2: 12, 13; யோசு 2: 17–19

24 பின்பு அந்த நகரத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் நெருப்பி
னால் சுட்டெரித்தார்கள். ஆனால், வெள்ளியையும் தங்கத்தையும் செம்புப்
பொருள்களையும் இரும்புச் சாமான்களையும் யெகோவாவுடைய வீட்டின்
பொக்கிஷத்தில் சேர்த்தார்கள்.[a] **25** விலைமகள் ராகாபையும் அவளு
டைய அப்பாவின் குடும்பத்தாரையும் அவளுக்குச் சொந்தமானவர்களை
யும் மட்டுமே யோசுவா உயிரோடு விட்டுவைத்தார்.[b] அவள் இன்று
வரை இஸ்ரவேலில் வாழ்கிறாள்.[c] ஏனென்றால், எரிகோவை உளவு பார்க்க
யோசுவா அனுப்பிய வாலிபர்களை அவள் ஒளித்துவைத்துக் காப்பாற்
றினாள்.[d]

26 எரிகோ அழிக்கப்பட்டபோது யோசுவா, "எரிகோ நகரத்தைத் திரும்
பக் கட்ட முயற்சி செய்கிறவன் யெகோவாவின் முன்னால் சபிக்கப்பட்ட
வன். அதற்கு அஸ்திவாரம் போடும்போது அவனுடைய முதல் மகன்
இறந்துபோவான், அதற்குக் கதவுகள் வைக்கும்போது அவனுடைய கடைசி
மகன் இறந்துபோவான்" என்று ஆணையிட்டுச் சொன்னார்.*[e]

27 யெகோவா எப்போதுமே யோசுவாவுடன் இருந்தார்.[f] யோசுவாவின்
புகழ் பூமியெங்கும் பரவியது.[g]

7 ஆனால் இஸ்ரவேலர்கள் கடவுளுடைய கட்டளையை மீறி, அழிக்க
வேண்டிய பொருள்களை அழிக்காமல் விட்டுவிட்டார்கள். யூதா கோத்
திரத்தில் சேராகின் வம்சத்தில் வந்த சப்தியின் பேரனும் கர்மீயின் மகனு
மாகிய ஆகான்,[h] அழிக்க வேண்டிய பொருள்களில் சிலவற்றை எடுத்து
வைத்துக்கொண்டான்.[i] அதனால், இஸ்ரவேலர்கள்மேல் யெகோவாவுக்குப்
பயங்கர கோபம் வந்தது.[j]

2 யோசுவா எரிகோவிலிருந்து ஆட்களை அனுப்பி, பெத்தேலுக்குக்[k]
கிழக்கே பெத்-ஆவேனுக்குப் பக்கத்தில் இருந்த ஆயி நகரத்தை[l] உளவு
பார்த்துவிட்டு வரச் சொன்னார். அவர்கள் போய் அந்த நகரத்தை உளவு
பார்த்தார்கள். **3** பின்பு யோசுவாவிடம் திரும்பி வந்து, "ஆயி நகரத்தைத்
தோற்கடிக்க 2,000 அல்லது 3,000 பேர் இருந்தாலே போதும். அதனால் எல்
லாரும் அங்கே போக வேண்டிய அவசியமில்லை. அங்கு கொஞ்சம் பேர்
தான் இருக்கிறார்கள். தேவையில்லாமல் எல்லாரும் போய் நம் சக்தியை
வீணடிக்க வேண்டாம்" என்று சொன்னார்கள்.

4 அதனால், கிட்டத்தட்ட 3,000 வீரர்கள் அங்கே போனார்கள். ஆனால்
ஆயி நகரத்தின் வீரர்களுக்கு முன்னால் அவர்கள் தோற்றுப்போய் ஓடி
னார்கள்.[m] **5** இஸ்ரவேல் வீரர்களில் 36 பேரை ஆயி நகரத்தின் வீரர்கள்
வெட்டி வீழ்த்தினார்கள். நகரவாசலிலிருந்து செபாரீம்* வரைக்கும் துரத்திக்
கொண்டு போய், மலைச் சரிவில் அவர்களை வெட்டினார்கள். அதனால்
இஸ்ரவேலர்கள் எல்லாருடைய தைரியமும் கரைந்துபோனது.#

6 யோசுவா தன்னுடைய உடையைக் கிழித்துக்கொண்டு, சாயங்காலம்
வரை யெகோவாவின் பெட்டிக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்
தார். அவர் தன்னுடைய தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்டே
இருந்தார். இஸ்ரவேலின் பெரியோர்களும்* அப்படியே செய்தார்கள்.
7 பின்பு யோசுவா, "ஐயோ, உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, எமோ

6:26 * அல்லது, "ஜனங்களை ஆணையிட்டுச் சொல்ல வைத்தார்." **7:5** * அர்த்தம், "கற்சுரங்கங்கள்." # நே.மொ., "எல்லாருடைய இதயமும் உருகி, தண்ணீர்போல் ஓடியது." **7:6** * வே.வா., "மூப்பர்களும்."

அதி. 6
a யோசு 6:19
b யோசு 2:14; யோசு 6:17, 22
c மத் 1:5
d எபி 6:10; யாக் 2:25
e 1ரா 16:34
f உபா 31:6; யோசு 1:5
g யோசு 9:1, 2; யோசு 9:9, 10

அதி. 7
h யோசு 22:20; 1நா 2:7
i உபா 7:26
j யோசு 6:17, 18
k ஆதி 28:19
l ஆதி 12:8
m லேவி 26:14, 17; உபா 28:15, 25; உபா 32:30

ரியர்களின் கையால் எங்களை அழித்துப்போடவா யோர்தானைக் கடக்கச்
செய்தீர்கள்? நாங்கள் யோர்தானுக்குக் கிழக்கிலேயே இருந்திருந்தால் நன்
றாக இருந்திருக்குமே! **8** யெகோவாவே, என்னை மன்னித்துவிடுங்கள்,
இப்போது நான் வேறென்ன சொல்ல முடியும்? எதிரிகளுக்கு முன்னால்
இஸ்ரவேலர்கள் பயந்து ஓடுகிற அளவுக்கு ஆகிவிட்டதே! **9** கானானி
யர்களும் இந்தத் தேசத்திலுள்ள மற்ற ஜனங்களும் இதைக் கேள்விப்ப
டும்போது, எங்களைச் சுற்றிவளைப்பார்களே, எங்கள் பெயர் இந்த உலகத்
திலேயே இல்லாதபடி செய்துவிடுவார்களே. அப்போது, உங்களுடைய
மகத்தான பெயரைக் காப்பாற்ற என்ன செய்வீர்கள்?”[a] என்று கதறினார்.

10 அப்போது யெகோவா யோசுவாவிடம், “நீ ஏன் இப்படி
விழுந்து கிடக்கிறாய்? எழுந்திரு! **11** இஸ்ரவேலர்கள் பாவம் செய்துவிட்
டார்கள். மீறக் கூடாதென்று நான் சொன்ன என் ஒப்பந்தத்தை[b] மீறிவிட்
டார்கள். அழிக்க வேண்டிய பொருள்கள்[c] சிலவற்றைத் திருட்டுத்தனமாக
எடுத்து,[d] தங்களுடைய பொருள்களோடு ஒளித்து வைத்துக்கொண்டார்
கள்.[e] **12** அதனால், இஸ்ரவேலர்களால் இனி எதிரிகளைத் தோற்கடிக்க
முடியாது. அவர்கள் அழிக்கப்பட வேண்டிய ஜனங்களாகிவிட்டார்கள்.
அதனால் எதிரிகளைப் பார்த்துப் பயந்து ஓடுவார்கள். அழிக்க வேண்டி
யதை[f] உங்கள் நடுவிலிருந்து ஒழித்துக்கட்டாவிட்டால் நான் இனி உங்க
ளோடு இருக்க மாட்டேன். **13** நீ எழுந்து ஜனங்களைப் புனிதப்படுத்து![g]
நீ அவர்களிடம், ‘நாளைக்கு உங்களைப் புனிதப்படுத்திக்கொள்ளுங்கள்.
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது என்னவென்றால், “இஸ்
ரவேலர்களே, அழிக்க வேண்டிய பொருள்கள் உங்களிடம் இருக்கின்றன.
அவற்றை நீங்கள் ஒழித்துக்கட்டும்வரை எதிரிகளை உங்களால் ஜெயிக்க
முடியாது. **14** நாளைக்குக் காலையில் நீங்கள் கோத்திரம் கோத்திரமாக
ஒன்றுகூடி வர வேண்டும். எந்தக் கோத்திரத்தை யெகோவா தேர்ந்தெ
டுக்கிறாரோ[h] அந்தக் கோத்திரம் வம்சம் வம்சமாக முன்னால் வர வேண்
டும். எந்த வம்சத்தை யெகோவா தேர்ந்தெடுக்கிறாரோ அந்த வம்சம் குடும்
பம் குடும்பமாக முன்னால் வர வேண்டும். எந்தக் குடும்பத்தை யெகோவா
தேர்ந்தெடுக்கிறாரோ அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவராக
முன்னால் வர வேண்டும். **15** அழிக்க வேண்டிய பொருள்களை எவன்
வைத்திருக்கிறானோ அவன் கொல்லப்பட்டு நெருப்பில் சுட்டெரிக்கப்பட
வேண்டும்.[i] யெகோவாவின் ஒப்பந்தத்தை மீறி,[j] இஸ்ரவேலில் கேவலமான
காரியத்தைச் செய்ததால் அவனும் அவனுக்குச் சொந்தமானவையும் சுட்
டெரிக்கப்பட வேண்டும்” என்று சொல்’” என்றார்.

16 அதனால் யோசுவா விடியற்காலையில் எழுந்து இஸ்ரவேலர்களைக்
கோத்திரம் கோத்திரமாக ஒன்றுகூடி வர வைத்தார். அப்போது யூதாவின்
கோத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டது. **17** யூதா கோத்திரத்தை முன்னால் வர
வைத்தபோது, சேராகியர்களின் வம்சம்[k] தேர்ந்தெடுக்கப்பட்டது. சேராகியர்
களின் வம்சத்தாரை ஒவ்வொருவராக முன்னால் வர வைத்தபோது, சப்தி
யின் குடும்பம் தேர்ந்தெடுக்கப்பட்டது. **18** கடைசியில், சப்தியின் குடும்
பத்தில் உள்ளவர்களை ஒவ்வொருவராக வர வைத்தபோது, ஆகான்
தேர்ந்தெடுக்கப்பட்டான்.[l] இவன் யூதா கோத்திரத்தில் சேராகின் வம்சத்
தில் வந்த சப்தியின் பேரனாகிய கர்மீயின் மகன். **19** அப்போது யோசுவா
ஆகானிடம், “என் மகனே, தயவுசெய்து இஸ்ரவேலின் கடவுளாகிய

அதி. 7
a உபா 32:26, 27; சங் 106:8; சங் 143:11; எசே 20:9
b யாத் 24:7
c யோசு 6:17
d யாத் 20:15
e யோசு 7:21
f உபா 7:26; யோசு 6:18; ஏசா 59:2
g யாத் 19:10
h நீதி 16:33
i யோசு 1:18; யோசு 7:25
j யாத் 24:7
k ஆதி 38:30; எண் 26:20; 1நா 2:4, 6
l நீதி 16:33; அப் 5:3

யெகோவாவை மகிமைப்படுத்து. அவரிடம் உன் தப்பை ஒத்துக்கொள். நீ என்ன செய்தாய் என்பதைத் தயவுசெய்து என்னிடம் சொல். எதையும் என்னிடம் மறைக்காதே" என்று சொன்னார்.

20 அதற்கு ஆகான், "இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு விரோதமாகப் பாவம் செய்தது நான்தான். என்ன செய்தேன் என்று சொல்லி
விடுகிறேன். **21** கைப்பற்றப்பட்ட பொருள்களில், சினேயாரில்[a] செய்யப்பட்ட அழகான, விலை உயர்ந்த அங்கியையும், 200 சேக்கல்* வெள்ளியையும், 50 சேக்கல் எடையுள்ள தங்கக் கட்டியையும் பார்த்தபோது, ஆசைப்பட்டு எடுத்துக்கொண்டேன். அவற்றை என் கூடாரத்துக்குள் புதைத்து வைத்திருக்கிறேன். தங்கத்தையும் வெள்ளியையும் அங்கியின் அடியில் வைத்திருக்கிறேன்" என்று சொன்னான்.

22 உடனே யோசுவா ஆட்களை அனுப்பினார். அவர்கள் ஆகானின் கூடாரத்துக்கு ஓடினார்கள். அங்கே, அந்த அங்கியும் அதற்கு அடியில் தங்கமும் வெள்ளியும் புதைத்து வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார்கள்.
23 அவற்றை அந்தக் கூடாரத்திலிருந்து எடுத்து யோசுவாவிடமும் இஸ்ரவேலர்களிடமும் கொண்டுவந்து, யெகோவாவின் முன்னால் வைத்தார்கள்.
24 யோசுவாவும் இஸ்ரவேலர்களும் சேர்ந்து, சேராகின் வம்சத்தைச் சேர்ந்த ஆகானையும்[b] அவனுடைய மகன்களையும் மகள்களையும் கூட்டிக்கொண்டு ஆகோரின் பள்ளத்தாக்குக்குப்[c] போனார்கள். விலை உயர்ந்த அந்த அங்கியையும் வெள்ளியையும் தங்கக் கட்டியையும்[d] ஆடுமாடுகளையும் கழுதைகளையும் கூடாரத்தையும் அவனுக்குச் சொந்தமான எல்லாவற்றையும் கொண்டுபோனார்கள்.
25 அப்போது யோசுவா ஆகானிடம், "நீ ஏன் எங்களுக்கு அழிவைக் கொண்டுவந்தாய்?[e] இன்றைக்கு யெகோவா உனக்கு அழிவைக் கொண்டுவருவார்" என்று சொன்னார். அப்போது இஸ்ரவேலர்கள் எல்லாரும் அவனையும் அவனுடைய குடும்பத்தையும் மிருகங்களையும் கல்லெறிந்து கொன்றார்கள்.[f] அதன்பின் அந்த உடல்களை நெருப்பில் சுட்டெரித்தார்கள்.[g]
26 பின்பு, அவனுடைய உடல்மேல் கற்களைப் பெரிய குவியலாகக் குவித்து வைத்தார்கள். இன்றுவரை அது இருக்கிறது. அவர்கள் அப்படிச் செய்த பின்பு யெகோவாவின் கடும் கோபம் தணிந்தது.[h] அதனால்தான், அந்த இடம் இன்றுவரை ஆகோர் பள்ளத்தாக்கு* என்று அழைக்கப்படுகிறது.

8 பின்பு யெகோவா யோசுவாவிடம், "பயப்படாதே, திகிலடையாதே.[i] போர்வீரர்கள் எல்லாரையும் உன்னோடு கூட்டிக்கொண்டு ஆயி நகரத்துக்கு எதிராகப் போ. இதோ, அந்த நகரத்தையும், தேசத்தையும், அதன் ராஜாவையும், ஜனங்களையும் உன் கையில் கொடுத்துவிட்டேன்.[j]
2 எரிகோ நகரத்துக்கும் அதன் ராஜாவுக்கும் செய்தது போலவே[k] ஆயி நகரத்துக்கும் அதன் ராஜாவுக்கும் செய். ஆனால், அங்கே கைப்பற்றுகிற பொருள்களையும் மிருகங்களையும் நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். அந்த நகரத்தின் பின்னால் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்த வீரர்களை ஏற்பாடு செய்" என்று சொன்னார்.

3 அதனால், யோசுவாவும் போர்வீரர்கள் எல்லாரும் ஆயி நகரத்தோடு போர் செய்யப் போனார்கள். பலம்படைத்த வீரர்களில் 30,000 பேரை

7:21 * ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **7:26** * அர்த்தம், "அழிவின் பள்ளத்தாக்கு."

அதி. 7
a ஆதி 10:10
b யோசு 22:20
c யோசு 15:7, 12; ஏசா 65:10; ஓசி 2:15
d யோசு 6:19
e யோசு 6:18; 1நா 2:7
f லேவி 24:14; யோசு 1:18
g யோசு 7:15
h உபா 13:17

அதி. 8
i உபா 7:18; உபா 31:8; யோசு 1:9; ஏசா 12:2; ரோ 8:31
j சங் 44:3
k யோசு 6:2, 21

அதி. 8

யோசுவா தேர்ந்தெடுத்து, அவர்களை ராத்திரி நேரத்தில் அனுப்பினார்.
4 அப்படி அனுப்பும்போது, “இந்த நகரத்துக்குப் பின்னால் போய்ப் பதுங்
கியிருங்கள். நகரத்தைவிட்டு ரொம்பத் தூரம் போய்விடாதீர்கள். எல்லாரும்
தயாராயிருங்கள். **5** நானும் என்னோடு இருக்கிற வீரர்களும் நகரத்துக்
குப் போவோம். முன்பு போல அவர்கள் எங்களை எதிர்த்து வரும்போது,[a]
நாங்கள் திரும்பி ஓடுவோம். **6** அப்போது அவர்கள், ‘முன்பு போலவே
திரும்பி ஓடுகிறார்கள்’[b] என்று சொல்லி எங்களைத் துரத்திக்கொண்டு வரு
வார்கள். ஆனால், நாங்கள் நகரத்தைவிட்டு அவர்களை ரொம்பத்
தூரம் வர வைத்துவிடுவோம். **7** அப்போது, பதுங்கியிருக்கும் இடத்திலி
ருந்து நீங்கள் எழுந்துவந்து நகரத்தைக் கைப்பற்ற வேண்டும். உங்கள் கட
வுளாகிய யெகோவா அதை உங்கள் கையில் கொடுப்பார். **8** நீங்கள் நக
ரத்தைப் பிடித்தவுடன், அதைத் தீ வைத்துக் கொளுத்த வேண்டும்.[c]
யெகோவா சொன்னபடியே செய்ய வேண்டும். உங்களுக்குக் கொடுக்க
வேண்டிய கட்டளைகளைக் கொடுத்துவிட்டேன்” என்று சொன்னார்.

9 பின்பு யோசுவா அவர்களில் சிலரை அனுப்பினார். அவர்கள் போய்,
ஆயி நகரத்துக்கு மேற்கே, பெத்தேலுக்கும் ஆயிக்கும் இடையே, ஓர்
இடத்தில் பதுங்கிக்கொண்டார்கள். ஆனால், யோசுவா அன்றைக்கு ராத்திரி
மற்ற வீரர்களோடு தங்கினார்.

10 விடியற்காலையில், யோசுவா எழுந்து வீரர்களை ஒன்றுகூட்டினார்.
பின்பு அவரும் இஸ்ரவேல் பெரியோர்களும்* ஆயி நகரத்துக்கு அவர்
களை நடத்திக்கொண்டு போனார்கள். **11** அந்த வீரர்கள் எல்லாரும்[d]
ஆயி நகரத்துக்கு முன்னால் அணிவகுத்துப் போய், அதன் வடக்கே
முகாம்போட்டார்கள். அந்த நகரத்துக்கும் அவர்களுக்கும் இடையே ஒரு
பள்ளத்தாக்கு இருந்தது. **12** அவர் ஏற்கெனவே சுமார் 5,000 வீரர்களைப்
பிரித்தெடுத்து ஆயி நகரத்துக்கு மேற்கே, பெத்தேலுக்கும்[e] ஆயிக்கும்
இடையில், பதுங்கியிருக்க வைத்திருந்தார்.[f] **13** அப்படிப் பதுங்கியிருந்த
படை அந்த நகரத்துக்கு மேற்கே இருந்தது.[g] மற்ற படை அந்த நகரத்
துக்கு வடக்கே முகாம்போட்டிருந்தது.[h] யோசுவா அன்றைக்கு ராத்திரி பள்
ளத்தாக்கின் நடுவே போனார்.

14 ஆயி நகரத்தின் ராஜா இதைப் பார்த்தபோது, இஸ்ரவேலர்களோடு
போர் செய்ய விடியற்காலையிலேயே தன்னுடைய வீரர்களைக் கூட்டிக்
கொண்டு, பாலைநிலத்தைப் பார்த்தபடி இருக்கிற ஓர் இடத்துக்கு வேகமாக
வந்தான். ஆனால், அவனைத் தாக்குவதற்காக நகரத்துக்குப் பின்னால் வீரர்
கள் பதுங்கியிருந்த விஷயம் அவனுக்குத் தெரியவில்லை. **15** ஆயி நக
ரத்து வீரர்கள் தாக்கியபோது, யோசுவாவும் அவரோடு இருந்த இஸ்ரவேல்
வீரர்களும் வனாந்தரத்துக்குப் போகும் பாதையில் ஓடினார்கள்.[i] **16** அப்
போது, அவர்களைத் துரத்திக்கொண்டு போகும்படி ஆயி நகரத்திலிருந்த
ஆண்கள் எல்லாருக்கும் சொல்லப்பட்டது. அவர்கள் யோசுவாவைத் துரத்
திக்கொண்டே தங்கள் நகரத்தைவிட்டுத் தூரமாகப் போக வேண்டியதாகி
விட்டது. **17** ஆயி நகரத்திலும் பெத்தேல் நகரத்திலும் இருந்த அத்தனை
ஆண்களும் நகரவாசலை அப்படியே திறந்துபோட்டுவிட்டு, இஸ்ரவேலர்க
ளைத் துரத்திக்கொண்டு போனார்கள்.

8:10 * வே.வா., “மூப்பர்களும்.”

a யோசு 7:5
b யோசு 8:16
c யோசு 8:19, 28
d யோசு 8:1, 3
e ஆதி 28:19
f யோசு 8:2
g யோசு 8:4
h யோசு 8:5
i யோசு 8:6

18 அப்போது யெகோவா யோசுவாவிடம், “உன் கையில் இருக்கிற
ஈட்டியை ஆயி நகரத்துக்கு நேராக நீட்டு,[a] அந்த நகரத்தை உன் கையில்
கொடுப்பேன்”[b] என்று சொன்னார். அதன்படியே, யோசுவா தன் கையி
லிருந்த ஈட்டியை நகரத்துக்கு நேராக நீட்டினார். **19** உடனே, பதுங்கியி
ருந்த வீரர்கள் சட்டென்று எழுந்து நகரத்துக்குள்ளே ஓடிப்போய் அதைக்
கைப்பற்றினார்கள். கைப்பற்றியதுமே அதைத் தீ வைத்துக் கொளுத்தி
னார்கள்.[c]

20 ஆயி நகரத்தின் ஆண்கள் திரும்பிப் பார்த்தபோது, நகரத்திலிருந்து
புகை மேலே எழும்பிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்த பிறகு, எந்தப்
பக்கத்திலும் தப்பியோட அவர்களுக்குத் தைரியம் வரவில்லை. வனாந்த
ரத்தின் திசையில் ஓடிக்கொண்டிருந்த இஸ்ரவேலர்கள் திரும்பி, தங்களைத்
துரத்திக்கொண்டு வந்தவர்கள்மேல் பாய்ந்தார்கள். **21** பதுங்கியிருந்தவர்
கள் நகரத்தைக் கைப்பற்றியதையும் நகரத்திலிருந்து புகை மேலே எழும்பு
வதையும் யோசுவாவும் இஸ்ரவேலர்களும் பார்த்தபோது, திரும்பி, ஆயி
நகரத்தின் ஆண்களைத் தாக்கினார்கள். **22** நகரத்துக்குத் தீ வைத்தவர்க
ளும் அந்த ஆண்களைத் தாக்க வந்தார்கள். இதனால், இரண்டு பக்கங்களி
லிருந்தும் வந்த இஸ்ரவேலர்களுக்கு நடுவில் ஆயி நகரத்தின் ஆண்கள்
மாட்டிக்கொண்டார்கள். அவர்களில் ஒருவரைக்கூட தப்பவிடாமல் எல்லா
ரையும் இஸ்ரவேலர்கள் வெட்டி வீழ்த்தினார்கள்.[d] **23** ஆனால், ஆயி நக
ரத்தின் ராஜாவை[e] உயிரோடு பிடித்து யோசுவாவிடம் கொண்டுவந்தார்கள்.

24 இஸ்ரவேல் வீரர்கள் தங்களைத் துரத்திக்கொண்டு வந்த ஆயி நக
ரத்தின் ஆண்கள் எல்லாரையும் அந்த வனாந்தரத்திலேயே கொன்றுபோட்
டார்கள். ஒருவர் விடாமல் அத்தனை பேரையும் வெட்டிப்போட்ட பிறகு
ஆயி நகரத்துக்குத் திரும்பிப்போய் அங்கே இருந்தவர்களையும் வெட்டிப்
போட்டார்கள். **25** அன்றைக்குக் கொல்லப்பட்ட ஆண்களும் பெண்க
ளும் மொத்தம் 12,000 பேர். **26** ஆயி நகரத்து ஜனங்கள் எல்லாரும்
அழிக்கப்படும்வரை[f] யோசுவா ஈட்டியை நீட்டிக்கொண்டே இருந்தார்,[g]
தன் கையை மடக்கவே இல்லை. **27** யோசுவாவுக்கு யெகோவா
கொடுத்த கட்டளைகளின்படியே,[h] அந்த நகரத்தில் கைப்பற்றிய மிருகங்க
ளையும் பொருள்களையும் இஸ்ரவேலர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

28 பின்பு யோசுவா ஆயி நகரத்தைச் சுட்டெரித்து அதை வெறும் மண்
மேடாக்கினார்.[i] அது இன்றுவரை அப்படித்தான் இருக்கிறது. **29** ஆயி
நகரத்தின் ராஜாவைக் கொன்று, அவனுடைய உடலை அன்று சாயங்காலம்
வரை மரக் கம்பத்தில்* தொங்கவிட்டார். சூரியன் மறையப்போகும்
வேளையில், சடலத்தை மரக் கம்பத்திலிருந்து கீழே இறக்கச் சொல்லி
யோசுவா கட்டளை கொடுத்தார்.[j] இஸ்ரவேலர்கள் அந்த நகரத்தின் வாச
லில் உடலை வீசியெறிந்து, கற்களை அதன்மேல் பெரிய குவியலாகக்
குவித்துவைத்தார்கள். இன்றுவரை அது இருக்கிறது.

30 இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு ஏபால் மலையில்[k]
யோசுவா பலிபீடம் கட்டினார். **31** “இரும்புக் கருவிகளால் வெட்டப்படாத
கற்களைக்கொண்டு பலிபீடம் கட்ட வேண்டும்”[l] என்று மோசேயின் திருச்
சட்ட புத்தகத்தில்[m] எழுதப்பட்டபடியே யோசுவா செய்தார். யெகோவா

8:29 * வே.வா., “மரத்தில்.”

அதி. 8
a யாத் 17:11
யோசு 8:26
b உபா 7:24
c யோசு 8:8, 28
d லேவி 27:29
உபா 7:2
e யோசு 8:29
யோசு 12:7, 9
f லேவி 27:29
g யாத் 17:11
யோசு 8:18
h யோசு 8:2
i யோசு 8:8
j உபா 21:
22, 23
k உபா 11:29
உபா 27:4, 5
l யாத் 20:25
m உபா 31:9
யோசு 1:8

வின் ஊழியராகிய மோசே இஸ்ரவேலர்களுக்குக் கட்டளை கொடுத்த
படியே அவர் செய்தார். அந்தப் பலிபீடத்தின் மேல் யெகோவாவுக்குத்
தகன பலிகளையும் சமாதான பலிகளையும் ஜனங்கள் செலுத்தினார்கள்.[a]
32 இஸ்ரவேலர்களின் முன்னால் மோசே எழுதியிருந்த திருச்சட்
டத்தை[b] யோசுவா அந்தக் கற்கள்மேல் எழுதினார்.[c] **33** அப்போது,
எல்லா இஸ்ரவேலர்களும் அவர்களுடைய பெரியோர்களும் அதிகாரிக
ளும் நியாயாதிபதிகளும் இஸ்ரவேலர்களோடு வாழ்ந்த மற்ற தேசத்து
ஜனங்களும்[d] யெகோவாவுடைய ஒப்பந்தப் பெட்டியின் இரண்டு பக்கங்க
ளிலும் நின்றுகொண்டிருந்தார்கள். ஒப்பந்தப் பெட்டியைச் சுமக்கிற
லேவியர்களாகிய குருமார்களைப் பார்த்தபடி அவர்கள் நின்றுகொண்டி
ருந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசீர்வாதம் கிடைப்பதற்காக
யெகோவாவின் ஊழியராகிய மோசே கட்டளை கொடுத்திருந்தபடியே,[e]
அவர்களில் பாதிப் பேர் கெரிசீம் மலைக்கு முன்பாகவும் பாதிப் பேர் ஏபால்
மலைக்கு முன்பாகவும் நின்றார்கள்.[f] **34** அதன்பின், திருச்சட்ட புத்தகத்
தில் எழுதப்பட்டிருந்த எல்லாவற்றையும் யோசுவா சத்தமாக வாசித்தார்.[g]
திருச்சட்டத்தில் கொடுக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங்களையும்[h] சாபங்களை
யும்[i] மற்ற எல்லா வார்த்தைகளையும் வாசித்தார். **35** மோசே கொடுத்த
கட்டளைகளை இஸ்ரவேல் சபையாராகிய ஆண்கள், பெண்கள், பிள்ளை
கள், அவர்களோடு வாழ்ந்த மற்ற தேசத்து ஜனங்கள்[j] என எல்லாருக்கும்[k]
முன்னால் ஒரு வார்த்தைகூட விடாமல் வாசித்தார்.[l]

9 யோர்தானின் மேற்குப் பக்கத்திலுள்ள மலைப்பகுதியிலும்[m] சேப்பெல்
லாவிலும் பெருங்கடலின்* கரையோரம் முழுவதிலும்[n] லீபனோனுக்கு
முன்னாலும் இருந்த ராஜாக்கள், அதாவது ஏத்தியர்கள், எமோரியர்கள்,
கானானியர்கள், பெரிசியர்கள், ஏவியர்கள், எபூசியர்கள்[o] ஆகியவர்களின்
ராஜாக்கள், நடந்த சம்பவங்களையெல்லாம் கேள்விப்பட்டார்கள். **2** அத
னால், யோசுவாவையும் இஸ்ரவேலர்களையும் எதிர்த்துப் போர் செய்வதற்
காக அவர்கள் கூட்டுச் சேர்ந்தார்கள்.[p]
3 எரிகோ நகரத்துக்கும்[q] ஆயி நகரத்துக்கும்[r] யோசுவா செய்தவற்றை
கிபியோனின் ஜனங்களும்[s] கேள்விப்பட்டார்கள். **4** அதனால், அவர்கள்
சாமர்த்தியமாக நடந்துகொண்டார்கள். உணவுப் பொருள்களைப் பழைய
பைகளில் வைத்து கழுதைகளின் மேல் ஏற்றிக்கொண்டார்கள். கிழிந்து
போய்த் தைக்கப்பட்ட திராட்சமது தோல் பைகளையும் ஏற்றிக்கொண்டார்
கள். **5** பிய்ந்துபோய்த் தைக்கப்பட்ட செருப்புகளையும், நைந்துபோன
உடைகளையும் போட்டுக்கொண்டார்கள். காய்ந்துபோய் உதிரும் நிலை
யில் இருந்த ரொட்டிகளை எடுத்து வைத்துக்கொண்டார்கள். **6** கில்காலில்
முகாம்போட்டிருந்த[t] யோசுவாவிடம் அவர்கள் போனார்கள். அவரையும்
மற்ற இஸ்ரவேல் ஆண்களையும் பார்த்து, "ரொம்பத் தூரத்தில் இருக்கிற
ஒரு தேசத்திலிருந்து நாங்கள் வந்திருக்கிறோம். தயவுசெய்து எங்களோடு
சமாதான ஒப்பந்தம் பண்ணுங்கள்" என்று சொன்னார்கள். **7** ஆனால்,
இஸ்ரவேல் ஆண்கள் அந்த ஏவியர்களிடம்,[u] "நாங்கள் எப்படி உங்க
ளோடு ஒப்பந்தம் செய்ய முடியும்?[v] ஒருவேளை நீங்கள் பக்கத்து ஊர்க்கா
ரர்களாக இருக்கலாமே" என்று சொன்னார்கள். **8** அதற்கு அவர்கள்,

9:1 * அதாவது, "மத்தியதரைக் கடலின்."

அதி. 8
a உபா 27:6, 7
b யாத் 24:4; யாத் 34:27
c உபா 27:2, 3
d லேவி 24:22; எண் 15:16
e உபா 11:29
f உபா 27:12, 13
g உபா 31:9; நெ 8:3
h உபா 28:2
i உபா 27:15; உபா 28:15
j லேவி 24:22; எண் 15:16
k உபா 29:10, 11; உபா 31:12; நெ 8:2
l உபா 4:2; உபா 12:32

அதி. 9
m யோசு 12:7, 8
n எண் 34:2, 6
o ஆதி 15:18–21; யாத் 3:17; யாத் 23:23; உபா 7:1
p யோசு 24:11
q யோசு 6:20
r யோசு 8:24
s யோசு 10:2; யோசு 11:19
t யோசு 5:10; யோசு 10:43
u ஆதி 10:15, 17; ஆதி 34:2; யாத் 3:8
v யாத் 34:12; உபா 7:2; உபா 20:16-18

“நாங்கள் உங்களுக்கு வேலைக்காரர்களாக இருப்போம்” என்று யோசுவா
விடம் சொன்னார்கள்.

அப்போது யோசுவா, “நீங்கள் யார், எங்கிருந்து வருகிறீர்கள்?”
என்று கேட்டார். **9** அதற்கு அவர்கள், “உங்கள் கடவுளாகிய யெகோவா
வின் பெயர்மேல் வைத்திருக்கிற மரியாதையால் ரொம்பத் தூரத்திலுள்ள
ஒரு தேசத்திலிருந்து[a] நாங்கள் வந்திருக்கிறோம். அவருடைய புகழையும்
எகிப்தில் அவர் செய்த எல்லாவற்றையும் நாங்கள் கேள்விப்பட்டோம்.[b]
10 யோர்தானுக்குக் கிழக்கிலிருந்த எமோரியர்களின் ராஜாக்களான எஸ்
போனின் ராஜா சீகோனையும்[c] அஸ்தரோத்தைச் சேர்ந்த பாசானின்
ராஜா ஓகையும்[d] நீங்கள் எப்படி வீழ்த்தினீர்கள் என்றுகூட கேள்விப்பட்
டோம். **11** அதனால், எங்கள் தேசத்திலுள்ள பெரியோர்களும்* ஜனங்க
ளும் எங்களிடம், ‘வழிப் பயணத்துக்குத் தேவையான உணவுப் பொருள்
களை எடுத்துக்கொண்டு அவர்களைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்.
“நாங்கள் உங்களுக்கு வேலைக்காரர்களாக இருப்போம்,[e] எங்களோடு சமா
தான ஒப்பந்தம் பண்ணுங்கள்”[f] என்று அவர்களிடம் சொல்லுங்கள்’ என்
றார்கள். **12** எங்கள் வீடுகளிலிருந்து கிளம்பியபோது, இந்த ரொட்டியெல்
லாம் சுடச்சுட இருந்தன. ஆனால் இப்போது நீங்களே பாருங்கள், எல்லாம்
காய்ந்துபோய் உதிரும் நிலையில் இருக்கின்றன.[g] **13** இந்தத் தோல் பைக
ளில் திராட்சமதுவை நிரப்பியபோது அவை புதிதாக இருந்தன, ஆனால்
இப்போது கிழிந்துவிட்டன.[h] ரொம்பத் தூரத்திலிருந்து பயணம் செய்துவந்
ததால், நாங்கள் போட்டிருக்கிற உடையும் செருப்பும்கூட பழையதாகிவிட்
டன” என்று சொன்னார்கள்.

14 அப்போது இஸ்ரவேல் ஆண்கள் அவர்களுடைய உணவுப்
பொருள்களில் கொஞ்சத்தை வாங்கிப் பார்த்தார்கள். ஆனால், யெகோவா
விடம் எதுவும் விசாரிக்கவில்லை.[i] **15** யோசுவா அவர்களோடு சமா
தான ஒப்பந்தம் செய்து,[j] அவர்களை உயிரோடு விட்டுவிடுவதாக உறுதி
மொழி கொடுத்தார். ஜனங்களின் தலைவர்களும் அதேபோல் உறுதிமொழி
கொடுத்தார்கள்.[k]

16 அவர்களுடன் ஒப்பந்தம் செய்து மூன்று நாட்கள் கழித்து, அவர்கள்
பக்கத்து ஊர்க்காரர்கள்தான் என்பதை இஸ்ரவேலர்கள் கேள்விப்பட்டார்
கள். **17** அதனால் அவர்கள் புறப்பட்டு, மூன்றாம் நாளில் அந்த கிபியோ
னியர்களின் நகரங்களான கிபியோன்,[l] கெப்பிரா, பேரோத், கீரியாத்-யெயா
ரீம்[m] ஆகிய நகரங்களுக்கு வந்துசேர்ந்தார்கள். **18** இஸ்ரவேலர்கள்
அவர்களைத் தாக்கவில்லை. ஏனென்றால், இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவாவின் பெயரில் ஜனங்களின் தலைவர்கள் அவர்களுக்கு உறுதி
மொழி கொடுத்திருந்தார்கள்.[n] அதனால், அந்தத் தலைவர்களுக்கு விரோ
தமாக இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் முணுமுணுத்தார்கள். **19** அப்
போது அந்தத் தலைவர்கள் எல்லாரும் ஜனங்களிடம், “இஸ்ரவேலின்
கடவுளாகிய யெகோவாவின் பெயரில் நாங்கள் அவர்களுக்கு ஏற்கெ
னவே உறுதிமொழி கொடுத்துவிட்டோம். அதனால் அவர்களைத் தாக்குவ
தற்கு நமக்கு அதிகாரம் இல்லை. **20** அவர்களுக்கு உறுதிமொழி கொடுத்
திருப்பதால், அவர்களை உயிரோடு விட்டுவிடலாம். இல்லையென்றால்
கடவுளுடைய கோபத்துக்கு ஆளாகிவிடுவோம்”[o] என்று சொன்னார்கள்.

9:11 * வே.வா., “மூப்பர்களும்.”

அதி. 9
- *a* உபா 20:10, 15
- *b* யாத் 9:16; யாத் 15:13, 14; யோசு 2:9, 10
- *c* எண் 21:21-24; உபா 2:32-34
- *d* எண் 21:33-35; உபா 3:3
- *e* உபா 20:10, 11
- *f* யோசு 9:6
- *g* யோசு 9:5
- *h* யோசு 9:4
- *i* எண் 27:18, 21; 1சா 30:7, 8
- *j* யோசு 11:19
- *k* 2சா 21:2
- *l* யோசு 10:2
- *m* யோசு 18:11, 14; 1சா 7:1; 1நா 13:5
- *n* எண் 30:2; உபா 6:13
- *o* 2சா 21:1; சங் 15:4; பிர 5:4, 6

21 அதுமட்டுமல்ல, "அவர்கள் உயிரோடு இருந்து, ஜனங்களுக்காக விறகு
வெட்டும் வேலையையும் தண்ணீர் சுமக்கிற வேலையையும் செய்யட்டும்"
என்று சொன்னார்கள். ஏனென்றால், அவர்கள் அந்த கிபியோனியர்களுக்கு
வாக்குக் கொடுத்திருந்தார்கள்.

22 யோசுவா அவர்களைக் கூப்பிட்டு, "எதற்காக எங்களை ஏமாற்றினீர்
கள்? எங்களுக்குப் பக்கத்திலேயே குடியிருந்துகொண்டு, ரொம்பத்
தூரத்திலிருந்து வந்திருப்பதாக ஏன் சொன்னீர்கள்?[a] **23** இனி நீங்கள்
சபிக்கப்பட்டவர்கள்.[b] எப்போதும் அடிமைகளாகத்தான் இருப்பீர்கள். என்
னுடைய கடவுளின் வீட்டுக்கு விறகு வெட்டுகிறவர்களாகவும் தண்ணீர்
சுமக்கிறவர்களாகவும் இருப்பீர்கள்" என்று சொன்னார். **24** அதற்கு அவர்
கள், "இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் கையில் கொடுக்கவும் இங்
குள்ள ஜனங்களை அழிக்கவும் உங்கள் கடவுளாகிய யெகோவா தன்
னுடைய ஊழியரான மோசேயிடம் கட்டளை கொடுத்திருந்தார்
என்பதை நாங்கள் கேள்விப்பட்டோம்.[c] அதனால், எங்கள் உயிருக்குப்
பயந்து[d] இப்படிச் செய்தோம்.[e] **25** இப்போது நாங்கள் உங்கள் கையில்
இருக்கிறோம்! உங்களுக்கு எது சரியென்று படுகிறதோ, எது நல்ல
தென்று படுகிறதோ அதையே எங்களுக்குச் செய்யுங்கள்" என்று சொன்
னார்கள். **26** அப்படியே, யோசுவா அவர்களை இஸ்ரவேலர்களின் கையி
லிருந்து காப்பாற்றினார். இஸ்ரவேலர்கள் அவர்களைக் கொல்லவில்லை.
27 ஆனால், அந்த ஜனங்களுக்கும் யெகோவா தேர்ந்தெடுக்கிற இடத்தில்[f]
அவருக்கு அமைக்கப்படுகிற பலிபீடத்துக்கும் தேவைப்படுகிற விறகுகளை
வெட்டவும் தண்ணீரைச் சுமக்கவும் யோசுவா அவர்களை அன்றைக்கு நிய
மித்தார்.[g] இன்றுவரை அவர்கள் அந்த வேலைகளைத்தான் செய்துவருகி
றார்கள்.[h]

10 ஆயி நகரத்தை யோசுவா கைப்பற்றி அழித்ததைப் பற்றியும், எரி
கோவுக்கும் அதன் ராஜாவுக்கும்[i] செய்ததைப் போலவே ஆயி நக
ரத்துக்கும் அதன் ராஜாவுக்கும் செய்ததைப்[j] பற்றியும் எருசலேமின் ராஜா
அதோனிசேதேக் கேள்விப்பட்டான். அதோடு, கிபியோனின் ஜனங்கள்
இஸ்ரவேலர்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்து[k] அவர்களோடு சேர்ந்து
கொண்டதையும் கேள்விப்பட்டான். **2** அவனுக்குக் குலைநடுங்கியது.[l]
ஏனென்றால், ஓர் அரச நகரத்தைப் போல கிபியோன் மாபெரும் நகரமாக
இருந்தது. அது ஆயி நகரத்தைவிட[m] பெரியதாக இருந்தது, அங்கிருந்த
ஆண்கள் எல்லாரும் போர்வீரர்களாக இருந்தார்கள். **3** அதனால் எருச
லேமின் ராஜாவாகிய அதோனிசேதேக், எப்ரோனின்[n] ராஜா ஓகாமுக்கும்
யர்மூத்தின் ராஜா பீராமுக்கும் லாகீசின் ராஜா யப்பியாவுக்கும் எக்லோனின்
ராஜா தெபீருக்கும்[o] செய்தி அனுப்பி, **4** "எனக்கு உதவி செய்யுங்கள்,
நாம் ஒன்றுசேர்ந்து கிபியோனியர்களைத் தாக்கலாம். அவர்கள் யோசுவா
வோடும் இஸ்ரவேலர்களோடும் சமாதான ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்"[p]
என்று சொன்னான். **5** அப்போது எமோரியர்களின்[q] ஐந்து ராஜாக்களும்,
அதாவது எருசலேமின் ராஜாவும் எப்ரோனின் ராஜாவும் யர்மூத்தின் ராஜா
வும் லாகீசின் ராஜாவும் எக்லோனின் ராஜாவும் படைதிரண்டுபோய், முகாம்
போட்டு, கிபியோனுக்கு எதிராகப் போர் செய்தார்கள்.

6 அப்போது, கில்காலில் முகாம்போட்டிருந்த[r] யோசுவாவுக்கு கிபியோ
னியர்கள் செய்தி அனுப்பி, "உங்கள் அடிமைகளாகிய எங்களைக்

அதி. 9
a யோசு 9:6, 16
b ஆதி 9:25, 26
c உபா 7:1; உபா 20:16
d உபா 2:25; உபா 11:25; யோசு 5:1
e எபி 11:31
f 1ரா 8:29; 2நா 6:6
g யோசு 9:21
h 1நா 9:2; எஸ்றா 7:24; எஸ்றா 8:17; நெ 3:26; நெ 7:60

அதி. 10
i யோசு 6:2, 21
j யோசு 8: 24, 29
k யோசு 9:9, 15; யோசு 11:19
l உபா 2:25; உபா 11:25; யோசு 2: 10, 11; யோசு 5:1
m யோசு 8:25
n ஆதி 23:2; எண் 13:22
o யோசு 12:7, 10–12
p யோசு 9:9, 15; யோசு 11:19
q ஆதி 15:16
r யோசு 5:10

கைவிட்டுவிடாதீர்கள்,[a] உடனே வந்து எங்களைக் காப்பாற்றுங்கள்! எங்க
ளுக்கு உதவுங்கள்! மலைப்பகுதியிலுள்ள எமோரிய ராஜாக்கள் எல்லாரும்
எங்களுக்கு எதிராகப் படைதிரண்டு வந்திருக்கிறார்கள்” என்று சொன்னார்
கள். **7** அதனால் யோசுவா பலம்படைத்த எல்லா போர்வீரர்களையும்
கூட்டிக்கொண்டு கில்காலிலிருந்து புறப்பட்டுப் போனார்.[b]

8 அப்போது யெகோவா யோசுவாவிடம், “நான் அவர்களை உன்
கையில் கொடுத்துவிட்டேன்,[c] அவர்களுக்குப் பயப்படாதே.[d] அவர்களில்
ஒருவன்கூட உன்னை எதிர்த்து நிற்க முடியாது”[e] என்று சொன்னார்.
9 யோசுவா ராத்திரி முழுக்க கில்காலிலிருந்து அணிவகுத்து வந்து, அவர்
களைத் திடீரென்று தாக்கினார். **10** இஸ்ரவேலர்களுக்கு முன்னால் எதிரி
கள் குழம்பிப்போகும்படி யெகோவா செய்தார்.[f] அதனால், இஸ்ரவேலர்கள்
அவர்களை கிபியோனில் கணக்குவழக்கில்லாமல் கொன்று குவித்தார்கள்.
பெத்-ஓரோனுக்கு ஏறிப்போகும் பாதையில் அவர்களை விரட்டிக்கொண்டு
போனார்கள். அசெக்கா வரையும் மக்கெதா வரையும் போய் அவர்களை
வெட்டிப்போட்டார்கள். **11** இஸ்ரவேலர்களின் கையிலிருந்து தப்பித்து,
பெத்-ஓரோனிலிருந்து இறங்குகிற பாதையில் ஓடிக்கொண்டிருந்த எதிரிகள்
மேல் வானத்திலிருந்து பெரிய ஆலங்கட்டிகளை* யெகோவா விழ வைத்
தார். அசெக்காவரை அந்த ஆலங்கட்டிகள் அவர்கள்மேல் விழுந்து அவர்
களைக் கொன்றுபோட்டன. சொல்லப்போனால், இஸ்ரவேலர்களின்
வாளுக்குப் பலியானவர்களைவிட ஆலங்கட்டி மழைக்குப் பலியானவர்
கள்தான் அதிகம்.

12 இஸ்ரவேலர்களுடைய கண் முன்னால் எமோரியர்களை யெகோவா
அடியோடு வீழ்த்திய நாளில், யோசுவா இஸ்ரவேலர்களுக்கு முன்பாக
யெகோவாவிடம் ஜெபம் செய்து,

“சூரியனே, கிபியோன்மேல்[g] அசையாமல் நில்.[h]
சந்திரனே, ஆயலோன் பள்ளத்தாக்கின் மேல் அப்படியே நில்!”

என்று சொன்னார்.

13 அதனால், இஸ்ரவேல் தேசத்தார் எதிரிகளைப் பழிவாங்கித் தீர்க்கும்
வரை சூரியன் அசையாமல் நின்றது, சந்திரனும் நகரவில்லை. இது யாசே
ரின் புத்தகத்தில்[i] எழுதப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஒருநாள் முழுக்க சூரி
யன் நடுவானத்தில் அசையாமல் நின்றது, அது மறையவே இல்லை.
14 யெகோவா ஒரு மனிதனுடைய வேண்டுதலைக் கேட்டு[j] இப்பேர்ப்
பட்ட அற்புதத்தைச் செய்த அந்த நாளைப் போல ஒரு நாள் அதற்கு முன்
பும் இருந்ததில்லை, அதற்குப் பின்பும் இருந்ததில்லை. யெகோவா இஸ்ர
வேலர்களுக்காகப் போர் செய்தார்.[k]

15 அதன்பின், யோசுவா இஸ்ரவேல் வீரர்கள் எல்லாருடனும் சேர்ந்து
கில்காலிலிருந்த முகாமுக்குத்[l] திரும்பினார்.

16 அதற்குள், அந்த ஐந்து ராஜாக்களும் தப்பித்து ஓடி மக்கெ
தாவில்[m] இருந்த குகையில் ஒளிந்துகொண்டார்கள். **17** அப்போது, அந்த
ஐந்து ராஜாக்களும் மக்கெதாவில்[n] உள்ள குகையில் ஒளிந்துகொண்டிருந்த
செய்தி யோசுவாவுக்குச் சொல்லப்பட்டது. **18** அப்போது யோசுவா, “அந்
தக் குகை வாசலில் பெரிய கற்களை உருட்டி வையுங்கள். காவலுக்கு ஆட்

10:11 * அதாவது, “பனிக்கட்டிகளை.”

அதி. 10
a யோசு 9:25, 27
b யோசு 8:3
c உபா 7:24; யோசு 11:6
d உபா 3:2; உபா 20:1
e யோசு 1:3-5
f சங் 44:3
g ஏசா 28:21
h 2ரா 20:10; சங் 135:6; ஏசா 38:8
i 2சா 1:17, 18
j உபா 9:18, 19; 1ரா 17:22; யாக் 5:16
k உபா 1:30; யோசு 23:3
l யோசு 5:10; யோசு 9:6
m யோசு 10:10
n யோசு 10:28

களை நிறுத்துங்கள். **19** மற்றவர்கள் அங்கே நிற்காமல் எதிரிகளைத் துரத்
திக்கொண்டு போய், பின்பக்கத்திலிருந்து தாக்குங்கள்.[a] அவர்களை
அவர்களுடைய நகரங்களுக்குள்ளே நுழைய விடாதீர்கள். ஏனென்றால்,
உங்கள் கடவுளாகிய யெகோவா அவர்களை உங்கள் கையில் கொடுத்தி
ருக்கிறார்” என்று சொன்னார்.

20 எதிரிகளை அடியோடு ஒழித்துக்கட்டும்வரை, யோசுவாவும் இஸ்ர
வேலர்களும் அவர்களைக் கணக்குவழக்கில்லாமல் கொன்று குவித்துக்
கொண்டே இருந்தார்கள். ஆனால், சிலர் மட்டும் தப்பித்து மதில் சூழ்ந்த
நகரங்களுக்குள் புகுந்துவிட்டார்கள். **21** பின்பு, இஸ்ரவேல் வீரர்கள் எல்
லாரும் மக்கெதாவில் முகாம்போட்டிருந்த யோசுவாவிடம் பத்திரமாகத்
திரும்பி வந்தார்கள். இஸ்ரவேலர்களுக்கு எதிராக ஒருவனும் ஒரு வார்த்தை
கூட பேசத் துணியவில்லை. **22** அதன்பின் யோசுவா, “குகை வாசலைத்
திறந்து அந்த ஐந்து ராஜாக்களையும் என்னிடம் கொண்டுவாருங்கள்”
என்று சொன்னார். **23** அதனால் அந்த ஐந்து ராஜாக்களையும், அதாவது
எருசலேமின் ராஜாவையும் எப்ரோனின் ராஜாவையும் யர்மூத்தின் ராஜா
வையும் லாகீசின் ராஜாவையும் எக்லோனின் ராஜாவையும்,[b] அவரிடம்
கொண்டுவந்தார்கள். **24** அப்போது யோசுவா, இஸ்ரவேல் வீரர்கள் எல்
லாரையும் கூப்பிட்டார். பின்பு, அவரோடு போன படைத் தளபதிகளிடம்,
“முன்னால் வந்து, இந்த ராஜாக்களின் கழுத்தில்* கால்வையுங்கள்”
என்று சொன்னார். அப்படியே அவர்கள் முன்னால் வந்து அந்த ராஜாக்
களின் கழுத்தில் கால்வைத்தார்கள்.[c] **25** அப்போது யோசுவா அவர்களி
டம், “பயப்படாதீர்கள், திகிலடையாதீர்கள்.[d] தைரியமாகவும் உறுதியாகவும்
இருங்கள். உங்களுடைய எதிரிகள் எல்லாருக்கும் யெகோவா இப்படித்
தான் செய்வார்”[e] என்று சொன்னார்.

26 பின்பு யோசுவா அவர்களை வெட்டிக் கொன்று, அவர்களுடைய
உடல்களை ஐந்து மரக் கம்பங்களில்* தொங்கவிட்டார். அவை சாயங்கா
லம்வரை மரக் கம்பங்களில் தொங்கிக்கொண்டிருந்தன. **27** சூரியன் மறை
யும் நேரத்தில், அந்த ராஜாக்களின் உடல்களைக் கீழே இறக்கி,[f] அவர்
கள் ஒளிந்துகொண்டிருந்த குகையில் எறிந்துவிடும்படி யோசுவா கட்டளை
கொடுத்தார். அந்தக் குகையின் வாசல் பெரிய கற்களால் அடைத்து வைக்
கப்பட்டது, இன்றுவரை அந்தக் கற்கள் அப்படியே இருக்கின்றன.

28 அன்று யோசுவா மக்கெதாவைக்[g] கைப்பற்றி, அதன் ராஜாவையும்
அங்கிருந்த எல்லாரையும் ஒருவர் விடாமல் வெட்டிக் கொன்றார்.[h] எரி
கோவின் ராஜாவுக்குச் செய்ததைப் போலவே மக்கெதாவின் ராஜாவுக்கும்[i]
செய்தார்.

29 பின்பு யோசுவாவும் இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும் மக்கெதாவிலி
ருந்து லிப்னாவுக்குப்[j] போய் அதை எதிர்த்துப் போர் செய்தார்கள்.
30 அந்த நகரத்தையும் அதன் ராஜாவையும் இஸ்ரவேலர்களின் கையில்
யெகோவா கொடுத்தார்.[k] அவர்கள் அதைத் தாக்கி, அங்கிருந்த எல்லாரை
யும் ஒருவர் விடாமல் வாளால் கொன்றுபோட்டார்கள். எரிகோவின் ராஜா
வுக்குச் செய்ததைப் போலவே[l] லிப்னாவின் ராஜாவுக்கும் செய்தார்கள்.

31 அடுத்ததாக யோசுவாவும் இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும்

அதி. 10
a உபா 28:7
b யோசு 10:3-5; யோசு 12:7, 10-12
c யாத் 23:27
d உபா 31:6; யோசு 1:9
e உபா 3:21; உபா 7:18, 19
f உபா 21:22, 23; யோசு 8:29
g யோசு 10:10; யோசு 15:20, 41
h உபா 20:16
i யோசு 12:7, 16
j யோசு 15:20, 42; யோசு 21:13
k யோசு 12:7, 15
l யோசு 6:2, 21

10:24 * அதாவது, “பின்னங்கழுத்தில்.” **10:26** * வே.வா., “மரங்களில்.”

லிப்னாவிலிருந்து லாகீசுக்குப்[a] போய், முகாம்போட்டு, அதை எதிர்த்துப்
போர் செய்தார்கள். **32** லாகீசை இஸ்ரவேலர்களின் கையில் யெகோவா
கொடுத்தார். இரண்டாம் நாளில் அவர்கள் அதைக் கைப்பற்றினார்கள். லிப்
னாவைத் தாக்கியது போலவே அவர்கள் அதைத் தாக்கி, அங்கிருந்த எல்
லாரையும் வாளால் கொன்றுபோட்டார்கள்.[b]

33 அப்போது கேசேரின்[c] ராஜா ஓராம், லாகீஸ் நகரத்துக்கு உதவி
செய்ய வந்தான். ஆனால், யோசுவா அவனையும் அவனுடைய ஜனங்க
ளையும் ஒருவர் விடாமல் கொன்றுபோட்டார்.

34 பின்பு யோசுவாவும் இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும் லாகீசிலிருந்து
எக்லோனுக்குப்[d] போய் முகாம்போட்டு அதை எதிர்த்துப் போர் செய்தார்
கள். **35** அன்று அதைக் கைப்பற்றி, அங்கிருந்தவர்களை வாளால் தாக்கி
னார்கள். லாகீசில் செய்ததைப் போலவே,[e] அங்கிருந்த எல்லாரையும்
கொன்றுபோட்டார்கள்.

36 யோசுவாவும் இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும் எக்லோனிலிருந்து எப்
ரோனுக்குப்[f] போய் அதை எதிர்த்துப் போர் செய்தார்கள். **37** அவர்கள்
அந்த நகரத்தையும் அதன் ராஜாவையும் அதன் சிற்றூர்களையும் பிடித்து,
அங்கிருந்த எல்லாரையும் ஒருவர் விடாமல் வாளால் கொன்றுபோட்டார்
கள். அவர் எக்லோனுக்குச் செய்ததைப் போலவே எப்ரோனுக்கும் செய்
தார், அந்த நகரத்தையும் அங்கிருந்த எல்லாரையும் அழித்தார்.

38 கடைசியில் யோசுவாவும் இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும் தெபீருக்
குத்[g] திரும்பிப்போய் அதை எதிர்த்துப் போர் செய்தார்கள். **39** அவர்
கள் அந்த நகரத்தையும், அதன் ராஜாவையும், சுற்றியிருந்த எல்லா ஊர்க
ளையும் பிடித்தார்கள். பின்பு, அங்கிருந்த எல்லாரையும் ஒருவர் விடாமல்[h]
வாளால் கொன்றுபோட்டார்கள்.[i] யோசுவா எப்ரோனுக்கும் லிப்னாவுக்கும்
அவற்றின் ராஜாக்களுக்கும் செய்ததைப் போலவே தெபீருக்கும் அதன்
ராஜாவுக்கும் செய்தார்.

40 மலைப்பகுதி முழுவதையும் நெகேபையும் சேப்பெல்லாவையும்[j]
மலைச் சரிவுகளையும் அவற்றின் ராஜாக்களையும் யோசுவா கைப்பற்றி
னார். இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா கட்டளை கொடுத்தபடியே,[k]
அங்கிருந்த எல்லாரையும் ஒருவர் விடாமல்* கொன்றுபோட்டார்.[l]
41 காதேஸ்-பர்னேயாமுதல்[m] காசாவரை[n] இருக்கிற பிரதேசத்தையும்,
கோசேன் பிரதேசம்[o] முழுவதையும், கிபியோன்[p] வரையுள்ள பகுதியையும்
யோசுவா ஜெயித்தார். **42** அந்தத் தேசங்களையும் அவற்றின் ராஜாக்க
ளையும் யோசுவா ஒரே படையெடுப்பில் கைப்பற்றினார். ஏனென்றால்,
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவே அவர்களுக்காகப் போர் செய்
தார்.[q] **43** அதன்பின், யோசுவாவும் இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும் கில்
காலிலிருந்த முகாமுக்குத்[r] திரும்பினார்கள்.

11 ஆத்சோரின் ராஜா யாபீன் இவற்றைக் கேள்விப்பட்டான். உடனே,
மாதோனின் ராஜா[s] யோபாபுக்கும், சிம்ரோனின் ராஜாவுக்கும்,
அக்சாபின் ராஜாவுக்கும்,[t] **2** வடக்கு மலைப்பகுதியில் இருந்த ராஜாக்க
ளுக்கும், கின்னரேத்தின் தெற்கு சமவெளிகளில்* இருந்த ராஜாக்களுக்

10:40 *நே.மொ., "சுவாசிக்கிற எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல்." **11:2** *வே.வா., "அரபாவில்."

அதி. 10
a யோசு 10:3, 4
யோசு 12:7, 11
யோசு 15:20, 39
b உபா 20:16
c யோசு 12:7, 12
யோசு 16:10
யோசு 21:20, 21
1ரா 9:16
d யோசு 10:3, 4
யோசு 12:7, 12
யோசு 15:20, 39
e உபா 20:16
யோசு 10:32
f ஆதி 13:18
ஆதி 23:19
எண் 13:22
யோசு 10:3, 4
யோசு 15:13
யோசு 21:13
g யோசு 12:7, 13
யோசு 15:15
h யோசு 11:14
i உபா 7:2
j யோசு 9:1, 2
நியா 1:9
k உபா 7:2
உபா 9:5
l லேவி 27:29
உபா 20:16
யோசு 11:14
m எண் 34:2, 4
உபா 9:23
n உபா 2:23
o யோசு 15:20, 51
p யோசு 11:16, 19
q யாத் 14:14
உபா 1:30
r யோசு 4:19

அதி. 11
s யோசு 12:7, 19
t யோசு 12:7, 20

கும், சேப்பெல்லாவில் இருந்த ராஜாக்களுக்கும், மேற்கே தோரின் மலைச்
சரிவுகளில்[a] இருந்த ராஜாக்களுக்கும் செய்தி அனுப்பினான். **3** அதோடு,
கிழக்கிலும் மேற்கிலும் இருந்த கானானியர்களுக்கும்,[b] மலைப்பகுதியில்
இருந்த எமோரியர்களுக்கும்,[c] ஏத்தியர்களுக்கும், பெரிசியர்களுக்கும், எபூ
சியர்களுக்கும், மிஸ்பா தேசத்தில் எர்மோன் மலையடிவாரத்தில்[d] இருந்த
ஏவியர்களுக்கும்கூட[e] செய்தி அனுப்பினான். **4** அதனால், அவர்கள் எல்
லாரும் படைகளைத் திரட்டிக்கொண்டு வந்தார்கள். கடற்கரை மணலைப்
போல ஏராளமானவர்கள் கணக்குவழக்கில்லாத குதிரைகளோடும் போர்
ரதங்களோடும் திரண்டு வந்தார்கள். **5** அந்த ராஜாக்கள் எல்லாரும் ஓர்
இடத்தில் சந்திப்பதற்கு முடிவுசெய்தார்கள். அதன்படியே, இஸ்ரவேலர்
களை எதிர்த்துப் போர் செய்ய மேரோமின் நீரோடைக்குப் பக்கத்தில் ஒன்
றாக வந்து முகாம்போட்டார்கள்.

6 அப்போது யெகோவா யோசுவாவிடம், “அவர்களுக்குப் பயப்பட
வேண்டாம்,[f] நாளைக்கு இந்த நேரத்தில் அவர்கள் எல்லாரையும் உன்
கையில் கொடுப்பேன். அவர்களை உன்னுடைய வாளுக்குப் பலியாக்கு
வேன். நீ அவர்களுடைய குதிரைகளை நொண்டியாக்கி*[g] ரதங்களை
நெருப்பில் சுட்டெரிக்க வேண்டும்” என்று சொன்னார். **7** யோசுவாவும்
அவரோடு இருந்த படைவீரர்கள் எல்லாரும் மேரோமின் நீரோடைக்குப்
பக்கத்தில் அவர்கள்மேல் திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள். **8** யெகோவா
அவர்களை இஸ்ரவேலர்களின் கையில் கொடுத்தார்.[h] எதிரிகளை அவர்
கள் தோற்கடித்து, பெரிய சீதோன்[i] மற்றும் மிஸ்ரபோத்-மாயீம்[j] வரைக்கும்,
கிழக்கே மிஸ்பே பள்ளத்தாக்கு வரைக்கும் விரட்டிக்கொண்டு போனார்
கள். ஒருவர் விடாமல் எல்லாரையும் வெட்டி வீழ்த்தினார்கள்.[k] **9** அதன்
பின், யோசுவாவிடம் யெகோவா சொல்லியிருந்தபடியே, அவர்களுடைய
குதிரைகளை அவர் நொண்டியாக்கினார்,* ரதங்களை நெருப்பில் சுட்டெ
ரித்தார்.[l]

10 பின்பு யோசுவா ஆத்சோர் பக்கம் திரும்பி, அதைக் கைப்பற்றி,
அதன் ராஜாவை வாளால் வெட்டிக் கொன்றார்.[m] ஏனென்றால், ஆத்சோர்
தான் முன்பு இந்த எல்லா ராஜ்யங்களுக்கும் தலைநகரமாக இருந்தது.
11 வீரர்கள் அங்கிருந்த எல்லாரையும் ஒருவர் விடாமல் வாளால் கொன்
றார்கள்.[n] பின்பு யோசுவா ஆத்சோரைத் தீ வைத்துக் கொளுத்தினார்.
12 அந்த ராஜாக்களுடைய நகரங்களையெல்லாம் கைப்பற்றி, அவர்
களை வாளால் வீழ்த்தினார்.[o] யெகோவாவின் ஊழியராகிய மோசே
கட்டளை கொடுத்திருந்தபடியே அவர்களைக் கொன்றார்.[p] **13** ஆனா
லும் ஆத்சோரைத் தவிர, குன்றின் மேல் அமைந்திருந்த எந்த நகரத்தை
யும் இஸ்ரவேலர்கள் சுட்டெரிக்கவில்லை. இந்த ஒரு நகரத்தை மட்டும்தான்
யோசுவா சுட்டெரித்தார். **14** மற்ற நகரங்களில் இருந்த எல்லா பொருள்
களையும் மிருகங்களையும் இஸ்ரவேலர்கள் சூறையாடினார்கள்.[q] அங்
கிருந்த மனிதர்கள் ஒவ்வொருவரையும் வாளால் வெட்டிப்போட்டார்கள்.[r]
யாரையுமே உயிரோடு விட்டுவைக்கவில்லை.[s] **15** தன்னுடைய ஊழியரா
கிய மோசேக்கு யெகோவா கொடுத்திருந்த கட்டளைகளை மோசே

அதி. 11
a யோசு 17:11; நியா 1:27
b எண் 13:29
c ஆதி 15:16
d உபா 4:48
e உபா 7:1; உபா 20:17
f யோசு 10:8
g உபா 17:16; நீதி 21:31
h யோசு 21:44
i ஆதி 10:19; யோசு 19:28, 31
j யோசு 13:1, 6
k உபா 20:16
l யோசு 11:6
m யோசு 12:7, 19
n லேவி 27:29; உபா 20:16; யோசு 11:14
o உபா 9:5
p உபா 7:2, 16
q யோசு 8:2, 27
r உபா 7:2
s உபா 20:16

11:6 * அதாவது, “குதிரைகளின் பின்தொடை தசைநார்களை வெட்டி.” **11:9** * அதாவது, “குதிரைகளின் பின்தொடை தசைநார்களை வெட்டினார்.”

அப்படியே யோசுவாவுக்குக் கொடுத்திருந்தார்.[a] யோசுவா அந்தக் கட்ட
ளைகளுக்கு அப்படியே கீழ்ப்படிந்தார். மோசேக்கு யெகோவா கொடுத்தி
ருந்த கட்டளைகளில் ஒன்றையும் யோசுவா செய்யாமல் விடவில்லை.[b]

16 யூதாவின் மலைப்பகுதியையும் நெகேபு[c] முழுவதையும் கோசேன்
பகுதி முழுவதையும் சேப்பெல்லாவையும்[d] அரபாவையும்[e] இஸ்ரவேலின்
மலைப்பகுதியையும் அதன் தாழ்வான பிரதேசத்தையும் யோசுவா கைப்பற்
றினார். **17** அதாவது, சேயீருக்கு ஏறிப்போகும் ஆலாக் மலைமுதல் எர்
மோன்[f] மலையடிவாரத்தில் அமைந்துள்ள லீபனோன் பள்ளத்தாக்கிலுள்ள
பாகால்-காத்வரை[g] எல்லா தேசங்களையும் கைப்பற்றினார். அங்குள்ள
ராஜாக்கள் எல்லாரையும் பிடித்து வெட்டிப்போட்டார். **18** அந்த எல்லா
ராஜாக்களோடும் யோசுவா ரொம்பக் காலம் போர் செய்தார். **19** கிபி
யோன் நகரத்தில் வாழ்ந்த ஏவியர்களைத் தவிர, வேறெந்த நகரத்தாரும்
இஸ்ரவேலர்களோடு சமாதான ஒப்பந்தம் பண்ணவில்லை.[h] அதனால்,
மற்ற எல்லா நகரங்களையும் அவர்கள் போர் செய்து பிடித்தார்கள்.[i]
20 அங்கிருந்த ஜனங்கள் இரக்கம் பெறுவதற்கோ உயிர்வாழ்வதற்கோ தகு
தியில்லாதவர்கள் என்று யெகோவா நினைத்ததால், அவர்களுடைய இத
யம் இறுகிப்போவதற்கும் அவர்கள் இஸ்ரவேலர்களை எதிர்த்துப் போர்
செய்வதற்கும் அவர் விட்டுவிட்டார்.[j] மோசேக்கு யெகோவா கட்டளை
கொடுத்திருந்தபடியே, அவர்கள் எல்லாரையும் இஸ்ரவேலர்கள் அழிக்க
வேண்டியிருந்தது.[k]

21 அப்போது எப்ரோன், தெபீர், ஆனாப் ஆகிய மலைப்பகுதிகளி
லும் யூதாவின் மலைப்பகுதியிலும் இஸ்ரவேலின் மலைப்பகுதியிலும்
வாழ்ந்த ஏனாக்கியர்களை[l] யோசுவா அடியோடு அழித்தார். அவர்களை
யும் அவர்கள் நகரங்களையும் ஒழித்துக்கட்டினார்.[m] **22** இஸ்ரவேலர்க
ளின் தேசத்தில் ஏனாக்கியர்கள் ஒருவர்கூட மிஞ்சவில்லை. காசா,[n]
காத்,[o] அஸ்தோத்[p] ஆகிய நகரங்களில் மட்டும்தான் அவர்கள் இருந்தார்
கள்.[q] **23** மோசேக்கு யெகோவா கொடுத்த வாக்குறுதியின்படியே,[r]
எல்லா தேசத்தையும் யோசுவா தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு
வந்தார். பின்பு, அதை இஸ்ரவேலர்களுக்குச் சொத்தாகப் பிரித்துக் கொடுத்
தார். அவரவர் கோத்திரத்துக்குச் சேர வேண்டிய பங்கின்படியே பிரித்துக்
கொடுத்தார்.[s] தேசத்தில் போர் ஓய்ந்து, அமைதி திரும்பியது.[t]

12 யோர்தானின் கிழக்குப் பகுதியில் இருந்த தேசத்தை, அதாவது
அர்னோன் பள்ளத்தாக்கிலிருந்து*[u] எர்மோன் மலை[v] வரையிலும்
கிழக்கே அரபா முழுவதிலும்[w] இருந்த தேசத்தை, இஸ்ரவேலர்கள்
கைப்பற்றி, அங்கிருந்த ராஜாக்களைத் தோற்கடித்திருந்தார்கள். **2** அவர்க
ளில் ஒருவன்தான், எஸ்போனில் வாழ்ந்த எமோரியர்களின் ராஜாவாகிய
சீகோன்.[x] அவன் அர்னோன் பள்ளத்தாக்கின்[y] ஓரத்தில் இருக்கிற ஆரோ
வேர் நகரத்தையும்[z] கீலேயாத்தின் பாதிப் பிரதேசத்தையும் ஆட்சி செய்
தான். அர்னோன் பள்ளத்தாக்கின் மத்தியப் பகுதியிலிருந்து யாபோக் பள்
ளத்தாக்கு வரையுள்ள முழு பகுதியையும் ஆட்சி செய்தான். இந்த
யாபோக் பள்ளத்தாக்கு அம்மோனியர்களின் எல்லையாகவும் இருந்தது.
3 அரபா பகுதியையும் சீகோன் ஆட்சி செய்தான். அதாவது, கிழக்கே

12:1 * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து.”

அதி. 11
a உபா 3:28; உபா 7:1; உபா 31:7
b உபா 4:2, 5
c எண் 13:17; உபா 1:7
d யோசு 10:40, 41
e யோசு 12:7, 8
f உபா 4:48; யோசு 13:8, 11
g யோசு 13:1, 5
h யோசு 9:7, 15
i உபா 20:17
j யாத் 34:12; உபா 2:30; உபா 7:2
k உபா 20:16
l எண் 13:22; உபா 1:28; யோசு 15:13, 14
m லேவி 27:29; யோசு 11:12; யோசு 24:11
n நியா 1:18
o 1சா 17:4
p 2நா 26:1, 6
q யாத் 23:28-30
r யாத் 23:27; உபா 11:23
s எண் 26:53, 54; யோசு 14:1
t யோசு 14:15; யோசு 21:44; யோசு 23:1

அதி. 12
u உபா 2:24
v உபா 3:8
w உபா 4:47-49
x எண் 21:23, 24
y எண் 21:13
z உபா 3:12

கின்னரேத் கடல்*[a] வரைக்கும் அரபா கடலாகிய உப்புக் கடல்# வரைக்
கும் உள்ள பகுதியையும் ஆட்சி செய்தான். உப்புக் கடலுக்குப் பக்கத்தில்
பெத்-யெசிமோத்தின் திசையில் இருக்கிற அரபா வரைக்கும் தெற்கே
பிஸ்கா[b] மலைச் சரிவுகளின் அடிவாரம் வரைக்கும் அவனுடைய எல்லை
விரிந்திருந்தது.

4 பாசானின் ராஜாவாகிய ஓகின்[c] பகுதியையும் இஸ்ரவேலர்கள் கைப்
பற்றினார்கள். ரெப்பாயீமியர்களில் கடைசியாக இருந்தது அவன் மட்
டும்தான்.[d] அவன் அஸ்தரோத்திலும் எத்ரேயிலும் வாழ்ந்துவந்தான்.
5 எர்மோன் மலையையும், சல்காவையும், கேசூரியர்கள் மற்றும் மாகாத்தி
யர்களின்[e] எல்லை வரையுள்ள பாசான்[f] முழுவதையும், எஸ்போனின்
ராஜாவாகிய சீகோனின் எல்லை[g] வரையுள்ள கீலேயாத்தின் பாதிப் பகுதி
யையும் ஆட்சி செய்தான்.

6 யெகோவாவின் ஊழியராகிய மோசேயும் இஸ்ரவேலர்களும் அவர்
களைத் தோற்கடித்திருந்தார்கள்.[h] அதன்பின் யெகோவாவின் ஊழியராகிய
மோசே, அவர்களுடைய தேசத்தை ரூபன் கோத்திரத்துக்கும் காத் கோத்
திரத்துக்கும் மனாசேயின் பாதிக் கோத்திரத்துக்கும் சொத்தாகக் கொடுத்தி
ருந்தார்.[i]

7 யோர்தானின் மேற்கே, லீபனோன் பள்ளத்தாக்கிலுள்ள[j] பாகால்-காத்[k]
தொடங்கி சேயீருக்கு[l] ஏறிப்போகும் ஆலாக் மலை[m] வரையுள்ள
தேசத்தை யோசுவாவும் இஸ்ரவேலர்களும் கைப்பற்றினார்கள். **8** அதா
வது ஏத்தியர்கள், எமோரியர்கள்,[n] கானானியர்கள், பெரிசியர்கள், ஏவியர்
கள், எபூசியர்கள்[o] ஆகியவர்களின் மலைப்பகுதியையும் சேப்பெல்லாவை
யும் அரபாவையும் மலைச் சரிவுகளையும் வனாந்தரத்தையும்
நெகேபையும்[p] கைப்பற்றினார்கள். பின்பு, இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத்
தேசத்தை யோசுவா பிரித்துக் கொடுத்தார்.[q] அவர்கள் கைப்பற்றிய தேசங்
களின் ராஜாக்கள் இவர்கள்தான்:

9 எரிகோவின் ராஜா;[r] பெத்தேலுக்குப் பக்கத்திலுள்ள ஆயி நகரத்
தின் ராஜா;[s]
10 எருசலேமின் ராஜா; எப்ரோனின் ராஜா;[t]
11 யர்மூத்தின் ராஜா; லாகீசின் ராஜா;
12 எக்லோனின் ராஜா; கேசேரின் ராஜா;[u]
13 தெபீரின் ராஜா;[v] கெதேரின் ராஜா;
14 ஓர்மாவின் ராஜா; ஆராத்தின் ராஜா;
15 லிப்னாவின் ராஜா;[w] அதுல்லாமின் ராஜா;
16 மக்கெதாவின் ராஜா;[x] பெத்தேலின்[y] ராஜா;
17 தப்புவாவின் ராஜா; ஹேப்பேரின் ராஜா;
18 ஆப்பெக்கின் ராஜா; லசரோனின் ராஜா;
19 மாதோனின் ராஜா; ஆத்சோரின் ராஜா;[z]
20 சிம்ரோன்-மேரோனின் ராஜா; அக்சாப்பின் ராஜா;
21 தானாக்கின் ராஜா; மெகிதோவின் ராஜா;
22 கேதேசின் ராஜா; கர்மேலிலுள்ள யொக்னியாமின்[a] ராஜா;

12:3 *அதாவது, “கெனேசரேத்து ஏரி; கலிலேயா கடல்.” #அதாவது, “சவக் கடல்.”

அதி. 12
a யோவா 6:1
b உபா 3:27
c எண் 21:33-35
d உபா 3:11
e யோசு 13:13
f உபா 29:7
g எண் 21:26
h எண் 21:23, 24; எண் 21:33-35
i எண் 32:33; உபா 3:12, 13
j யோசு 1:4
k யோசு 13:1, 5
l உபா 2:12
m யோசு 11:16, 17
n ஆதி 15:16
o யாத் 3:8; யாத் 23:23; உபா 7:1
p யோசு 10:40; யோசு 11:16
q யோசு 12:7
r யோசு 6:2
s யோசு 8:29
t யோசு 10:23, 26
u யோசு 10:33
v யோசு 10:38
w யோசு 10:29
x யோசு 10:28
y நியா 1:22
z யோசு 11:1, 10
a யோசு 21:34

23 தோர் மலைச் சரிவுகளில் இருந்த தோரின் ராஜா;[a] கில்காலில்
இருந்த கோயிமின் ராஜா;

24 திர்சாவின் ராஜா; ஆக மொத்தம், 31 ராஜாக்கள்.

13 யோசுவாவுக்கு ரொம்ப வயதாகிவிட்டது.[b] அதனால் யெகோவா
அவரிடம், “உனக்கு ரொம்ப வயதாகிவிட்டது. ஆனால், தேசத்தில்
இன்னும் ஏராளமான பகுதிகளை இஸ்ரவேலர்கள் கைப்பற்ற வேண்டியி
ருக்கிறது. 2 மீதி இருக்கும் அந்தப் பகுதிகள்[c] இவைதான்: பெலிஸ்தியர்
களுக்கும் கேசூரியர்களுக்கும் சொந்தமான பிரதேசங்கள்[d] 3 (அதாவது,
எகிப்துக்குக் கிழக்கே உள்ள நைல் நதியின் கிளை நதியிலிருந்து* வடக்கே
எக்ரோனியர்களின் எல்லை வரையுள்ள பிரதேசங்கள்; இது முன்பு கானா
னியர்களின் பகுதியாகக்[e] கருதப்பட்டது); பெலிஸ்தியர்களின்[f] ஐந்து தலை
வர்கள் ஆட்சி செய்த காசா, அஸ்தோத்,[g] அஸ்கலோன்,[h] காத்,[i] எக்ரோன்[j]
ஆகிய ஊர்கள்; தெற்கே உள்ள ஆவீமியர்களின்[k] பிரதேசம்; 4 கானா
னியர்களின் முழு தேசம்; ஆப்பெக் வரைக்கும் எமோரியர்களின் எல்லை
வரைக்கும் உள்ள சீதோனியர்களுக்குச்[l] சொந்தமான மெயாரா; 5 கேபா
லியர்களின் தேசம்[m] மற்றும் கிழக்கே எர்மோன் மலையின் அடிவாரத்
திலுள்ள பாகால்-காத்திலிருந்து லெபோ-காமாத்[n] வரையுள்ள* லீபனோன்
முழுவதும்; 6 லீபனோன்[o] தொடங்கி மிஸ்ரபோத்-மாயீம்[p] வரையுள்ள
மலைப்பகுதியில் குடியிருக்கிறவர்களின் பகுதிகள் மற்றும் சீதோனியர்க
ளின்[q] பகுதிகள். இங்கே வாழ்பவர்களை இஸ்ரவேலர்களின் கண் முன்
னால் நான் துரத்திவிடுவேன்.[r] நான் உனக்குக் கட்டளை கொடுத்தபடியே,
அதை நீ இஸ்ரவேலர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.[s] 7 இந்தத்
தேசத்தை ஒன்பது கோத்திரங்களுக்கும் மனாசேயின் பாதிக் கோத்திரத்துக்
கும் பிரித்துக் கொடுக்க வேண்டும்”[t] என்று சொன்னார்.

8 மனாசேயின் மற்றொரு பாதிக் கோத்திரத்தாரும் ரூபன் கோத்திரத்தா
ரும் காத் கோத்திரத்தாரும் யோர்தானுக்குக் கிழக்கில், யெகோவாவின்
ஊழியராகிய மோசே கொடுத்த பகுதிகளைச் சொத்தாகப் பெற்றுக்கொண்
டார்கள்.[u] 9 அர்னோன் பள்ளத்தாக்கின்*[v] ஓரத்திலுள்ள ஆரோவேரை
யும்,[w] அந்தப் பள்ளத்தாக்கின் நடுவிலுள்ள நகரத்தையும், தீபோன்
வரையுள்ள மேதேபா பீடபூமி முழுவதையும், 10 எஸ்போனிலிருந்து
ஆட்சி செய்த எமோரியர்களின் ராஜாவாகிய சீகோனின் நகரங்களையும்,
அதாவது அம்மோனியர்களின் எல்லை வரையுள்ள நகரங்களையும், பெற்
றுக்கொண்டார்கள்.[x] 11 அதோடு கீலேயாத்தையும், கேசூரியர்கள் மற்
றும் மாகாத்தியர்களின் பகுதிகளையும்,[y] எர்மோன் மலை முழுவதையும்,
சல்கா[z] வரையுள்ள பாசான் முழுவதையும்,[a] 12 அஸ்தரோத்திலிருந்தும்
எத்ரேயிலிருந்தும் ஆட்சி செய்த பாசானின் ராஜாவாகிய ஓகின் ராஜ்
யம் முழுவதையும் பெற்றுக்கொண்டார்கள். (ரெப்பாயீமியர்களில் கடைசி
யாக இருந்தது அவன் மட்டும்தான்.)[b] மோசே அவர்களைத் தோற்கடித்து
அங்கிருந்து துரத்தியிருந்தார்.[c] 13 ஆனால், கேசூரியர்களையும் மாகாத்
தியர்களையும் இஸ்ரவேலர்கள் துரத்தவில்லை.[d] அதனால் கேசூரியர்க
ளும் மாகாத்தியர்களும் இன்றுவரை இஸ்ரவேலர்களின் நடுவே குடியிருக்
கிறார்கள்.

13:3 * அதாவது, “சீகோரிலிருந்து.” **13:5** * வே.வா., “காமாத்தின் நுழைவாசல் வரை
யுள்ள.” **13:9** * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்.”

அதி. 12
a யோசு 11:1, 2

அதி. 13
b யோசு 23:1, யோசு 24:29
c யாத் 23:29, 30
d 1சா 27:8
e ஆதி 10:19
f நியா 3:1, 3; 1சா 6:4
g யோசு 15:20, 46
h நியா 14:19
i 2சா 21:19
j 1சா 5:10
k உபா 2:23
l நியா 1:31
m 1ரா 5:18
n எண் 34:2, 8
o உபா 3:25
p யோசு 11:8
q நியா 3:1-3
r யாத் 23:30
s எண் 34:17, யோசு 14:1
t எண் 33:54
u எண் 32:33, யோசு 22:4
v எண் 21:13
w உபா 3:12
x எண் 21:23, 24
y உபா 3:14
z 1நா 5:11
a யோசு 17:1
b உபா 3:11
c எண் 21:23, 24; எண் 21:33-35
d எண் 33:55; யோசு 23:12, 13

14 லேவி கோத்திரத்தாருக்கு மட்டும் தேசம் சொத்தாகப் பங்குபோட்
டுக் கொடுக்கப்படவில்லை.[a] இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா வாக்
குறுதி தந்தபடியே,[b] அவருக்குச் செலுத்தப்பட்ட தகன பலிகள்தான் லேவி
யர்களுக்குக் கிடைத்த சொத்தாக இருந்தன.[c]

15 பின்பு, ரூபன் கோத்திரத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி மோசே
தேசத்தைப் பங்குபோட்டுக் கொடுத்தார். **16** அவர்களுக்குக் கொடுக்கப்
பட்ட பகுதி இதுதான்: அர்னோன் பள்ளத்தாக்கின் ஓரத்திலுள்ள ஆரோ
வேர், அந்தப் பள்ளத்தாக்கின் நடுவிலுள்ள நகரம், மேதேபாவின் பக்கத்தி
லுள்ள முழு பீடபூமி; **17** எஸ்போன் மற்றும் பீடபூமியிலுள்ள அதன்
ஊர்கள்,[d] தீபோன், பாமோத்-பாகால், பெத்-பாகால்-மெயோன்,[e]
18 யாகாஸ்,[f] கெதெமோத்,[g] மேபாகாத்,[h] **19** கீரியாத்தாயீம், சிப்மா,[i]
பள்ளத்தாக்கின் பக்கத்திலே மலைமேல் இருக்கிற செரேத்-சகார்,
20 பெத்-பேயோர், பிஸ்கா மலைச் சரிவுகள்,[j] பெத்-யெசிமோத்,[k] **21** பீட
பூமியிலுள்ள நகரங்கள் மற்றும் எஸ்போனிலிருந்து[l] ஆட்சி செய்த எமோ
ரியர்களின் ராஜாவாகிய சீகோனின் நகரங்கள். சீகோனையும் அந்தத் தேசத்
தில் வாழ்ந்த மீதியானியத் தலைவர்களான ஏவி, ரெக்கேம், சூர், ஹூர்,
ரேபா[m] ஆகியவர்களையும் சீகோனின் சிற்றரசர்களையும் மோசே தோற்
கடித்தார்.[n] **22** மற்றவர்களோடு சேர்த்து, குறிசொல்கிறவனாகிய[o] பெயோ
ரின் மகன் பிலேயாமையும்[p] இஸ்ரவேலர்கள் வாளால் வெட்டிக் கொன்றார்
கள். **23** யோர்தான் ஆறு, ரூபன் கோத்திரத்தாரின் எல்லையாக இருந்தது.
இந்த நகரங்களையும் அவற்றின் கிராமங்களையும்தான் ரூபன் கோத்திரத்
தார் அவரவர் குடும்பத்தின்படி பெற்றுக்கொண்டார்கள்.

24 அடுத்ததாக, காத் கோத்திரத்தாருக்கும் அவரவர் குடும்பத்தின்படி
மோசே தேசத்தைப் பங்குபோட்டுக் கொடுத்தார். **25** யாசேரும்,[q] கீலே
யாத்தின் நகரங்களும், ரப்பாவைப்[r] பார்த்தபடி இருக்கிற ஆரோவேர்
வரையுள்ள அம்மோனியர்களின்[s] பாதித் தேசமும், **26** எஸ்போன்[t]முதல்
ராமாத்-மிஸ்பே மற்றும் பெத்தொனீம் வரைக்கும், மக்னாயீம்முதல்[u] தெபீ
ரின் எல்லை வரைக்கும், **27** பள்ளத்தாக்கிலுள்ள பெத்-ஆராம், பெத்-
நிம்ரா,[v] சுக்கோத்[w] மற்றும் சாப்போனும், எஸ்போனின் ராஜாவாகிய சீகோ
னின்[x] மற்ற பகுதிகளும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. கின்னரேத்
கடல்*[y] வரைக்கும் உள்ள யோர்தானின் கிழக்குப் பகுதி முழுவதும் அவர்
களுக்குக் கொடுக்கப்பட்டது. **28** இந்த நகரங்களையும் அவற்றின் கிரா
மங்களையும்தான் காத் கோத்திரத்தார் அவரவர் குடும்பத்தின்படி பெற்றுக்
கொண்டார்கள்.

29 மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கும் அவரவர் குடும்பத்தின்படி
மோசே தேசத்தைப் பங்குபோட்டுக் கொடுத்தார்.[z] **30** மக்னாயீம்[a]
தொடங்கி பாசான் முழுவதும், பாசானின் ராஜாவாகிய ஓகின் ராஜ்யம் முழு
வதும், பாசானிலுள்ள யாவீரின்[b] சிற்றூர்களாகிய 60 ஊர்கள் முழுவதும்
அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. **31** கீலேயாத்தின் பாதிப் பிரதேசமும்,
பாசானை ஆட்சி செய்த ஓகின் அரச நகரங்களான அஸ்தரோத்தும் எத்
ரேயியும்,[c] மனாசேயின் மகனாகிய மாகீரின்[d] மகன்களில் பாதிப் பேருக்கு
அவரவர் குடும்பத்தின்படி கொடுக்கப்பட்டன.

13:27 * அதாவது, “கெனேசரேத்து ஏரி; கலிலேயா கடல்.”

அதி. 13

a எண் 18:20; உபா 10:9; உபா 12:12
b எண் 18:24
c லேவி 7:33-35; உபா 18:1
d எண் 21:25, 26
e எண் 32:37, 38
f எண் 21:23
g உபா 2:26
h யோசு 21:8, 37
i எண் 32:37, 38
j உபா 3:16, 17
k எண் 33:48, 49
l எண் 21:25
m எண் 31:7, 8
n உபா 2:30
o எண் 22:7
p எண் 22:5; 2பே 2:15
q எண் 32:34, 35
r 2சா 11:1
s யோசு 12:2; நியா 11:13
t எண் 21:26
u ஆதி 32:2; யோசு 21:8, 38
v எண் 32:34, 36
w ஆதி 33:17
x எண் 21:26
y எண் 34:2, 11; உபா 3:16, 17; யோவா 6:1
z உபா 3:13
a 1நா 6:77, 80
b எண் 32:40, 41; உபா 3:14
c எண் 21:33
d எண் 32:39

32 எரிகோவுக்குக் கிழக்கே, யோர்தானுக்கு அப்பால் உள்ள மோவாப்
பாலைநிலத்தில் மோசே இந்தப் பகுதிகளை அவர்களுக்குச் சொத்தாகப்
பிரித்துக் கொடுத்தார்.[a]

33 ஆனால், லேவி கோத்திரத்துக்கு மோசே தேசத்தைச் சொத்தாகப்
பங்குபோட்டுக் கொடுக்கவில்லை.[b] இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
வாக்குறுதி தந்தபடி, அவரே அவர்களுடைய சொத்து.[c]

14 குருவாகிய எலெயாசாரும், நூனின் மகனாகிய யோசுவாவும்,
இஸ்ரவேல் கோத்திரங்களின் தந்தைவழிக் குடும்பத் தலைவர்க
ளும் கானான் தேசத்தை ஜனங்களுக்குப் பங்குபோட்டுக் கொடுத்தார்
கள்.[d] **2** மோசே மூலம் யெகோவா கட்டளை கொடுத்திருந்தபடியே,
ஒன்பதரைக் கோத்திரங்களுக்கும்[e] குலுக்கல் முறையில் தேசம் பங்குபோட்
டுக் கொடுக்கப்பட்டது.[f] **3** மற்ற இரண்டரைக் கோத்திரங்களுக்கு யோர்
தானின் கிழக்கே உள்ள தேசத்தை மோசே பங்குபோட்டுக் கொடுத்தி
ருந்தார்.[g] ஆனால், லேவியர்களுக்கு தேசத்தில் எந்தப் பங்கையும் அவர்
கொடுக்கவில்லை.[h] **4** யோசேப்பின் மகன்களாகிய மனாசேயும் எப்பிரா
யீமும்[i] இரண்டு கோத்திரங்களாக ஆனார்கள்.[j] லேவியர்களுக்குத் தேசத்
தில் பங்கு கொடுக்கப்படாவிட்டாலும், அவர்கள் குடியிருப்பதற்கு நகரங்க
ளும்,[k] அவர்களுடைய மிருகங்களுக்கு மேய்ச்சல் நிலங்களும்
கொடுக்கப்பட்டன.[l] **5** மோசேக்கு யெகோவா கட்டளை கொடுத்தபடியே,
தேசத்தை இஸ்ரவேலர்கள் பங்குபோட்டார்கள்.

6 பின்பு, யூதா கோத்திரத்து ஆண்கள் கில்காலிலிருந்த யோசுவாவிடம்
வந்தார்கள்.[m] கெனிசியனாகிய எப்புன்னேயின் மகன் காலேப்[n] அவரி
டம், “உண்மைக் கடவுளாகிய யெகோவா காதேஸ்-பர்னேயாவில்[o] உங்க
ளைப் பற்றியும் என்னைப் பற்றியும் தன்னுடைய ஊழியராகிய மோசேயி
டம்[p] என்ன சொன்னார்[q] என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும்.
7 தேசத்தை உளவு பார்த்துவிட்டு[r] வரச் சொல்லி யெகோவாவின் ஊழி
யராகிய மோசே என்னை காதேஸ்-பர்னேயாவிலிருந்து அனுப்பிய
போது எனக்கு 40 வயது. நான் திரும்பி வந்து, அங்கு பார்த்ததை அப்ப
டியே சொன்னேன்.[s] **8** என்னோடு வந்த என் சகோதரர்கள் ஜனங்களின்
தைரியத்தைக் கெடுத்தார்கள். ஆனாலும், நான் என் கடவுளாகிய யெகோ
வாவுக்கு முழு இதயத்தோடு கீழ்ப்படிந்தேன்.[t] **9** அன்றைக்கு மோசே
என்னிடம், ‘நீ என் கடவுளாகிய யெகோவாவுக்கு முழு இதயத்தோடு கீழ்ப்ப
டிந்ததால் உன் காலடி பட்ட நிலம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் நிரந்தர
சொத்தாகக் கொடுக்கப்படும்’[u] என்று சத்தியம் செய்தார். **10** இஸ்ரவேலர்
கள் வனாந்தரத்தில் அலைந்தபோது யெகோவா மோசேக்கு வாக்குறுதி[v]
தந்தபடியே,[w] இந்த 45 வருஷங்களாக யெகோவா என்னைக் காப்பாற்றி
வந்திருக்கிறார்.[x] இந்த 85 வயதிலும் நான் உயிரோடு இருக்கிறேன்.
11 உளவு பார்ப்பதற்கு மோசே என்னை அனுப்பிய நாளில் எனக்கு எந்த
ளவு பலம் இருந்ததோ அந்தளவு பலம் இன்றும் இருக்கிறது. போர் செய்
யவும் மற்ற வேலைகள் செய்யவும் அன்று போலவே இன்றும் எனக்குச்
சக்தி இருக்கிறது. **12** அதனால், அன்றைக்கு யெகோவா வாக்குறுதி தந்த
படியே இந்த மலைப்பகுதியை எனக்குக் கொடுங்கள். இங்கே மதில் சூழ்ந்த
பெரிய நகரங்களில் ஏனாக்கியர்கள்[y] வாழ்கிறார்கள் என்று நீங்கள் அன்
றைக்குக் கேள்விப்பட்டது உண்மைதான்.[z] ஆனாலும் யெகோவா வாக்கு

அதி. 13
a எண் 32:33
b உபா 10:9 யோசு 18:7
c எண் 18:24 எண் 26: 62, 63 உபா 18:1

அதி. 14
d எண் 34:17 யோசு 19:51
e எண் 34:13
f எண் 26:55 எண் 33:54 நீதி 16:33 அப் 13:19
g எண் 32:29
h உபா 10:9 யோசு 13:14
i ஆதி 48: 19, 20
j ஆதி 48:5 1நா 5:2
k எண் 35:7 யோசு 21:1, 2
l எண் 35:2, 5
m யோசு 4:19 யோசு 10:43
n எண் 32:11, 12
o எண் 13:26
p எண் 12:7, 8
q உபா 1:35, 36
r எண் 13:2, 6
s எண் 13:30 எண் 14:6, 7
t எண் 14:24 எண் 32:11, 12
u உபா 1:36
v யோசு 21:45
w எண் 14:33
x எண் 14: 29, 30
y எண் 13:33
z எண் 13: 22, 28

றுதி தந்தபடியே,[a] நான் அவர்களைத் துரத்திவிடுவேன். யெகோவா நிச்ச
யம் என்னோடு இருப்பார்”[b] என்று சொன்னார்.

13 எப்புன்னேயின் மகன் காலேபை யோசுவா ஆசீர்வதித்து அவருக்கு
எப்ரோனைச் சொத்தாகக் கொடுத்தார்.[c] **14** அதனால்தான், கெனிசியனா
கிய எப்புன்னேயின் மகன் காலேபுக்கு எப்ரோன் சொந்தமானது. இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு அவர் முழு இதயத்தோடு கீழ்ப்ப
டிந்ததால்,[d] அதுவே இன்றுவரை அவருடைய சொத்தாக இருக்கிறது.
15 எப்ரோன் முற்காலத்தில் கீரியாத்-அர்பா என்று அழைக்கப்பட்டது.[e]
(அர்பா என்பவன் ஏனாக்கியர்களில் மிகவும் செல்வாக்குள்ள மனிதனாக
இருந்தான்.) தேசத்தில் போர் ஓய்ந்து, அமைதி திரும்பியது.[f]

15 யூதா கோத்திரத்துக்கு அவரவர் குடும்பத்தின்படி ஒதுக்கப்பட்ட*
பகுதி[g] ஏதோமின்[h] எல்லை வரைக்கும், அதாவது சீன் வனாந்தரம்
வரைக்கும் நெகேபின் தென்முனை வரைக்கும், விரிந்திருந்தது. **2** அவர்
களுடைய தெற்கு எல்லை உப்புக் கடலின்*[i] முனையில், அதாவது
தெற்கே பார்த்தபடி இருக்கிற விரிகுடாவில், ஆரம்பித்து **3** தெற்கே அக்
கராபீம்[j] மேட்டைக் கடந்து, சீனுக்குப் போனது. பின்பு, காதேஸ்-பர்னேயா
வின்[k] தெற்கிலிருந்து மேலே ஏறி, எஸ்ரோனைக் கடந்து, ஆதார்வரை
போய், கர்க்கா பக்கமாகத் திரும்பியது. **4** அங்கிருந்து அஸ்மோனுக்குப்[l]
போய், எகிப்தின் பள்ளத்தாக்குவரை*[m] விரிந்திருந்தது. அந்த எல்லை கட
லில்# முடிவடைந்தது. இதுதான் அவர்களுடைய தெற்கு எல்லை.

5 உப்புக் கடல்தான், அதாவது யோர்தானின் முகத்துவாரம்* வரையில்
இருக்கிற பகுதிதான், அவர்களுடைய கிழக்கு எல்லை. உப்புக் கடலின் விரி
குடாவில், யோர்தானின் முகத்துவாரத்தில், வடக்கு எல்லை ஆரம்பித்தது.[n]
6 அந்த எல்லை பெத்-ஓக்லாவரை[o] போய், பெத்-அரபாவுக்கு[p] வடக்கு
வரையில் போனது. அங்கிருந்து ரூபனின் மகனாகிய போகனுடைய[q] கல்
வரையில் போனது. **7** பின்பு, அது ஆகோர் பள்ளத்தாக்கிலுள்ள[r] தெபீர்
வரை போய் வடக்கே கில்காலுக்குத்[s] திரும்பியது. பள்ளத்தாக்கின்*
தெற்கிலுள்ள அதும்மீம் மேட்டுக்கு முன்பாகத்தான் கில்கால் இருக்
கிறது. பின்பு, அந்த எல்லை என்-சேமேஸ்[t] நீரூற்றுகளைக் கடந்து
என்-ரொகேலில்[u] முடிவடைந்தது. **8** அங்கிருந்து பென்-இன்னோம்* பள்
ளத்தாக்குவரை,[v] தெற்கே உள்ள எபூசியர்களின்[w] மலைச் சரிவுவரை, அதா
வது எருசலேம்வரை,[x] அந்த எல்லை போனது. பின்பு, அது இன்
னோம் பள்ளத்தாக்கின் மேற்கே இருக்கிற மலையின் உச்சிவரை
போனது. அந்த மலை, ரெப்பாயீம் பள்ளத்தாக்கின் வடமுனையில் இருக்
கிறது. **9** அந்த எல்லை, மலை உச்சியிலிருந்து நெப்தோவா நீரூற்றுவரை[y]
போய், எப்பெரோன் மலையில் இருக்கிற நகரங்கள்வரை விரிந்திருந்தது.
பின்பு பாலா வரையில், அதாவது கீரியாத்-யெயாரீம்[z] வரையில், போனது.
10 அது பாலாவிலிருந்து மேற்கே திரும்பி சேயீர் மலைவரை போய்,
வடக்கே உள்ள யெயாரீம் மலைச் சரிவுவரை, அதாவது கெசலோன்வரை,

15:1 * வே.வா., “குலுக்கல் முறையில் கொடுக்கப்பட்ட.” **15:2** * அதாவது, “சவக் கடலின்.” **15:4** * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குவரை.” சொல் பட்டியலைப் பாருங்கள். # அதாவது, “பெருங்கடலில்; மத்தியதரைக் கடலில்.” **15:5** * அதாவது, “கடலோடு ஆறு கலக்கும் இடம்.” **15:7** * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்.” **15:8** * அர்த்தம், “இன்னோம் மகனின்.”

அதி. 14
a யோசு 15:14; நியா 1:20
b எண் 14:8; ரோ 8:31
c யோசு 10:36, 37; யோசு 15:13; யோசு 21:11, 12; 1நா 6:55, 56
d எண் 14:24; உபா 1:35, 36; யோசு 14:8
e ஆதி 23:2
f லேவி 26:6; யோசு 11:23

அதி. 15
g எண் 26:55
h ஆதி 36:19
i எண் 34:2, 3
j நியா 1:36
k எண் 34:4
l எண் 34:2, 5
m 1ரா 8:65
n எண் 34:12
o யோசு 18:19, 20
p யோசு 18:21, 22
q யோசு 18:17, 20
r யோசு 7:26
s யோசு 5:8, 9
t யோசு 18:17, 20
u 1ரா 1:9
v யோசு 18:16, 20; 2ரா 23:10; எரே 7:31
w நியா 1:21
x யோசு 18:28; நியா 19:10
y யோசு 18:15, 20
z யோசு 9:16, 17; 2சா 6:2; 1நா 13:6

போனது. பின்பு பெத்-ஷிமேசுக்கு[a] இறங்கி திம்னாவுக்குப்[b] போனது.
11 அங்கிருந்து அது வடக்கே இருக்கிற எக்ரோனின் சரிவுவரை போய்,[c]
சிக்ரோனிலிருந்து பாலா மலையைக் கடந்து, யாப்னியேலுக்குப் போய், கட
லில் முடிவடைந்தது.

12 பெருங்கடலும்* அதன் கரையோரப் பகுதிகளும் மேற்கு எல்லை
யாக இருந்தன.[d] யூதா கோத்திரத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி நாலா
பக்கமும் கிடைத்த எல்லை இதுதான்.

13 யெகோவா கட்டளை கொடுத்தபடியே, யூதா வம்சத்தார் மத்தியில்
எப்புன்னேயின் மகன் காலேபுக்கு[e] யோசுவா ஒரு பங்கு கொடுத்தார். அவ
ருக்கு கீரியாத்-அர்பாவை (அர்பா என்பவன் ஏனாக்கின் தகப்பன்), அதா
வது எப்ரோனை, கொடுத்தார்.[f] **14** அதனால் ஏனாக்கின்[g] மூன்று மகன்
களான சேசாய், அகீமான், தல்மாய்[h] ஆகியவர்களை அங்கிருந்து காலேப்
துரத்தியடித்தார். **15** பின்பு, அவர் தெபீருக்குப் போய் அங்கிருந்த ஜனங்
களைத் தாக்கினார்.[i] (தெபீர் முற்காலத்தில் கீரியாத்-செப்பேர் என்று
அழைக்கப்பட்டது.) **16** அதன்பின் காலேப், "கீரியாத்-செப்பேரைக் கைப்
பற்றுகிறவனுக்கு என் மகள் அக்சாளைக் கல்யாணம் செய்து கொடுப்பேன்"
என்று சொன்னார். **17** காலேபின் சகோதரனாகிய கேனாசின்[j] மகன் ஒத்
னியேல்[k] அதைக் கைப்பற்றினார். அதனால், அவருக்குத் தன் மகள்
அக்சாளை[l] காலேப் கல்யாணம் செய்து கொடுத்தார். **18** அவள் தன் கண
வனுடைய வீட்டுக்குப் போகும்போது, தன் அப்பாவிடம் ஒரு நிலத்
தைக் கேட்டு வாங்கச் சொல்லி தன் கணவனைத் தூண்டினாள். கழுதையி
லிருந்து அவள் கீழே இறங்கியபோது* காலேப் அவளிடம், "உனக்கு என்ன
வேண்டும்?" என்று கேட்டார்.[m] **19** அதற்கு அவள், "தயவுசெய்து எனக்கு
ஒரு அன்பளிப்பு கொடுங்கள். தெற்கில்* நீங்கள் எனக்குக் கொடுத்த நிலம்
வறண்ட நிலமாக இருக்கிறது. அதனால் நிறைய தண்ணீர் இருக்கிற நிலத்
தையும்# கொடுங்கள்" என்று கேட்டாள். அவள் கேட்டபடியே மேற்புறத்
திலும் கீழ்ப்புறத்திலும் இருக்கிற நீர்வளமுள்ள நிலத்தை அவர் கொடுத்தார்.

20 இதுதான் யூதா கோத்திரத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி
கொடுக்கப்பட்ட நிலங்களின் விவரம்.

21 யூதா கோத்திரத்தின் தென்முனையில், ஏதோமின் எல்லையைப்[n]
பார்த்தபடி இருக்கிற நகரங்கள் இவைதான்: கப்செயேல், ஏதேர், யாகூர்,
22 கீனா, திமோனா, அதாதா, **23** கேதேஸ், ஆத்சோர், இத்னான்,
24 சீப், தேலெம், பெயாலோத், **25** ஆத்சோர்-அதாத்தா, கீரியோத்-எஸ்
ரோன், அதாவது ஆத்சோர், **26** ஆமம், சேமா, மொலாதா,[o] **27** ஆத்
சார்-காதா, எஸ்மோன், பெத்-பாலேத்,[p] **28** ஆத்சார்-சுவால், பெயெர்-
செபா,[q] பிஸ்யோத்யா, **29** பாலா, ஈயிம், ஆத்சேம், **30** எல்தோலாத்,
கெசீல், ஓர்மா,[r] **31** சிக்லாகு,[s] மத்மன்னா, சன்சன்னா, **32** லெபாவோத்,
சில்லீம், ஆயின் மற்றும் ரிம்மோன்.[t] கிராமங்களோடு சேர்ந்த இந்த நகரங்
கள் மொத்தம் 29.

33 சேப்பெல்லாவிலுள்ள[u] நகரங்கள் இவைதான்: எஸ்தாவோல்,

15:12 *அதாவது, "மத்தியதரைக் கடலும்." **15:18** *அல்லது, "கழுதையின் மேல் இருந்தபடி தன் கைகளைத் தட்டியபோது." **15:19** *வே.வா., "நெகேபில்." #நே.மொ., "குல்லோத்-மாயிமையும்." இந்தப் பெயரின் அர்த்தம், "தண்ணீர்க் குளங்கள்."

அதி. 15
a யோசு 21:8, 16
b யோசு 19:43, 48; நியா 14:1, 2; 2நா 28:18
c 1சா 5:10; 1சா 7:14; 2ரா 1:2
d எண் 34:2, 6; உபா 11:24
e எண் 13:30; உபா 1:36
f ஆதி 23:2; ஆதி 35:27; யோசு 20:7; யோசு 21:11, 12
g எண் 13:33; யோசு 11:21
h எண் 13:22; நியா 1:10, 20
i யோசு 10:38, 39
j 1நா 4:13
k நியா 3:9-11
l 1நா 2:49
m நியா 1:14, 15
n எண் 34:2, 3; உபா 2:5
o யோசு 19:1, 2
p நெ 11:25, 26
q ஆதி 21:31; யோசு 19:1-3
r எண் 14:44, 45; யோசு 19:1, 4; நியா 1:17
s யோசு 19:1, 5; 1சா 27:5, 6; 1நா 12:1
t யோசு 19:1, 7; நெ 11:25, 29
u நியா 1:9

சோரா,[a] அஷ்னா, **34** சனோவா, என்-கன்னீம், தப்புவா, ஏனாம், **35** யர்
மூத், அதுல்லாம்,[b] சோக்கோ, அசெக்கா,[c] **36** சாராயிம்,[d] அதித்தாயீம்,
கெதேரா மற்றும் கேதெரொத்தாயீம்.* கிராமங்களோடு சேர்ந்த இந்த நக
ரங்கள் மொத்தம் 14.

37 சேனான், அதாஷா, மிக்தால்-காத், **38** திலியான், மிஸ்பே, யோக்
தெயேல், **39** லாகீஸ்,[e] போஸ்காத், எக்லோன், **40** காபோன், லகமாம்,
கித்லீஷ், **41** கெதெரோத், பெத்-டாகோன், நாமா மற்றும் மக்கெதா.[f] கிரா
மங்களோடு சேர்ந்த இந்த நகரங்கள் மொத்தம் 16.

42 லிப்னா,[g] ஏத்தேர், ஆசான்,[h] **43** இப்தா, அஷ்னா, நெத்சீப்,
44 கேகிலா, அக்சீப் மற்றும் மரேஷா. கிராமங்களோடு சேர்ந்த இந்த நக
ரங்கள் மொத்தம் 9.

45 எக்ரோன், அதன் சிற்றூர்கள்* மற்றும் கிராமங்கள். **46** எக்ரோ
னுக்கு மேற்கே அஸ்தோத்தின் பக்கத்தில் இருக்கிற நகரங்கள் மற்றும்
கிராமங்கள்.

47 அஸ்தோத்,[i] அதன் சிற்றூர்கள் மற்றும் கிராமங்கள்; காசா,[j] அதன்
சிற்றூர்கள் மற்றும் கிராமங்கள்; எகிப்தின் பள்ளத்தாக்கு, பெருங்கடல் மற்
றும் கரையோரப் பகுதி.[k]

48 மலைப்பகுதியிலுள்ள நகரங்கள்: சாமீர், யாத்தீர்,[l] சோக்கோ,
49 தன்னா, கீரியாத்-சன்னா, அதாவது தெபீர், **50** ஆனாப், எஸ்தெமொ,[m]
ஆனீம், **51** கோசேன்,[n] ஒலோன் மற்றும் கீலோ.[o] கிராமங்களோடு
சேர்ந்த இந்த நகரங்கள் மொத்தம் 11.

52 அராப், தூமா, எஷியான், **53** யானூம், பெத்-தப்புவா, ஆப்பெக்கா,
54 உம்தா, கீரியாத்-அர்பா, அதாவது எப்ரோன்,[p] மற்றும் சீயோர். கிராமங்
களோடு சேர்ந்த இந்த நகரங்கள் மொத்தம் 9.

55 மாகோன்,[q] கர்மேல், சீப்,[r] யுத்தா, **56** யெஸ்ரயேல், யொக்தெயாம்,
சனோவா, **57** கேயின், கிபியா மற்றும் திம்னா.[s] கிராமங்களோடு சேர்ந்த
இந்த நகரங்கள் மொத்தம் 10.

58 அல்கூல், பெத்-சூர், கேதோர், **59** மகாராத், பெத்-ஆனோத் மற்
றும் எல்தெகோன். கிராமங்களோடு சேர்ந்த இந்த நகரங்கள் மொத்தம் 6.

60 கீரியாத்-பாகால், அதாவது கீரியாத்-யெயாரீம்,[t] மற்றும் ரப்பா. கிரா
மங்களோடு சேர்ந்த இந்த நகரங்கள் மொத்தம் 2.

61 வனாந்தரத்திலுள்ள நகரங்கள்: பெத்-அரபா,[u] மித்தீன், செக்காக்கா,
62 உப்பு நகரமாகிய நிப்சான் மற்றும் என்-கேதி.[v] கிராமங்களோடு சேர்ந்த
இந்த நகரங்கள் மொத்தம் 6.

63 எருசலேமில்[w] குடியிருந்த எபூசியர்களை[x] யூதா வம்சத்தாரால்
விரட்டியடிக்க முடியவில்லை.[y] அதனால், எபூசியர்கள் இன்றுவரை யூதா
வம்சத்தாரோடு சேர்ந்து எருசலேமில் குடியிருக்கிறார்கள்.

16 யோசேப்பின்[z] வம்சத்தாருக்குக் குலுக்கல்[a] முறையில் கிடைத்த
தேசத்தின் எல்லை, எரிகோவுக்குப் பக்கத்திலுள்ள யோர்தானிலி
ருந்து ஆரம்பித்து, எரிகோவின் கிழக்கிலுள்ள நீரோடைவரை போனது.
பின்பு, எரிகோவிலிருந்து மேலே ஏறி வனாந்தரத்தின் வழியாகப் போய்

அதி. 15
a யோசு 19:40, 41; நியா 16:31
b 1சா 22:1
c 1சா 17:1
d 1சா 17:52
e 2ரா 18:14
f யோசு 10:28
g யோசு 10:29; 2ரா 8:22
h யோசு 19:1, 7
i 1சா 5:1
j ஆதி 10:19
k எண் 34:2, 5
l யோசு 21:8, 14
m 1நா 6:57
n யோசு 11:16
o 2சா 15:12
p யோசு 14:15
q 1சா 23:25; 1சா 25:2, 3
r 1சா 23:14
s ஆதி 38:12
t யோசு 9:16, 17; யோசு 18:11, 14; 1சா 7:1
u யோசு 18:21, 22
v 1சா 23:29
w 1நா 11:4
x ஆதி 10:15, 16
y எண் 33:55; நியா 1:8, 21; நியா 19:11; 2சா 5:6

அதி. 16
z ஆதி 49:22; உபா 33:13
a எண் 26:55; எண் 33:54; நீதி 16:33

15:36 *அல்லது, “கெதேரா மற்றும் அதன் ஆட்டுத் தொழுவங்கள்.” **15:45** *வே.வா, “அதைச் சுற்றியுள்ள ஊர்கள்.”

பெத்தேலின் மலைப்பகுதிவரை போனது.[a] **2** பிறகு லஸ்ஸுக்குப் பக்கத்தி
லுள்ள பெத்தேலிலிருந்து அற்கியரின் எல்லையாகிய அதரோத்வரை போய்,
3 கீழ் பெத்-ஓரோன்[b] எல்லை வரையுள்ள யப்லெத்தியரின் எல்லைவரை
மேற்காக இறங்கி, கேசேர்வரை[c] போய், கடலில் முடிவடைந்தது.

4 யோசேப்பின் வம்சத்தார்,[d] அதாவது மனாசே மற்றும் எப்பிராயீம்
கோத்திரத்தார், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளைச் சொந்தமாக்கிக்
கொண்டார்கள்.[e] **5** எப்பிராயீம் கோத்திரத்தாருக்கு அவரவர் குடும்பத்
தின்படி கிடைத்த எல்லை இதுதான்: கிழக்கே அவர்களுடைய எல்லை அத
ரோத்-அதார்[f] தொடங்கி மேல் பெத்-ஓரோன்வரை[g] நீண்டு, **6** கடலுக்குப்
போனது. அந்த எல்லை வடக்கே மிக்மேத்தாத்தில்[h] ஆரம்பித்து, அங்கி
ருந்து கிழக்கே தானாத்-சீலோவுக்குப் போய், மறுபடியும் கிழக்கே யநோகா
வுக்குப் போனது. **7** பின்பு யநோகாவிலிருந்து இறங்கி, அதரோத்துக்கும்
நாராவுக்கும் போய், எரிகோவை[i] அடைந்து, யோர்தான்வரை போனது.
8 மேற்கே அந்த எல்லை தப்புவாவிலிருந்து[j] காணா பள்ளத்தாக்குவரை*
போய் கடலில் முடிவடைந்தது.[k] எப்பிராயீம் கோத்திரத்தாருக்கு அவரவர்
குடும்பத்தின்படி கொடுக்கப்பட்ட பகுதிகள் இவைதான். **9** மனாசே கோத்
திரத்தாருடைய பகுதிகளிலும் எப்பிராயீம் வம்சத்தாருக்கு[l] நகரங்களும்
கிராமங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன.

10 ஆனால், கேசேரில் வாழ்ந்துவந்த கானானியர்களை எப்பிராயீமியர்
கள் துரத்தியடிக்கவில்லை.[m] அதனால், கானானியர்கள் இன்றுவரை அவர்
களோடு குடியிருந்து,[n] அவர்களுக்குக் கொத்தடிமைபோல் வேலை செய்
துவருகிறார்கள்.[o]

17 பின்பு, யோசேப்பின் மூத்த மகனாகிய[p] மனாசேயின்[q] கோத்
திரத்தாருக்குக் குலுக்கல்[r] முறையில் தேசம் பிரித்துக் கொடுக்கப்
பட்டது. மனாசேயின் மகனும் கீலேயாத்தின் அப்பாவுமான மாகீர்[s]
பெரிய வீரராக இருந்ததால், அவருக்கு கீலேயாத்தும் பாசானும்[t] கிடைத்
தன. **2** மனாசேயின் மற்ற மகன்களுடைய வம்சத்தாருக்கு அவரவர்
குடும்பத்தின்படி குலுக்கல் முறையில் தேசம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.
அபியேசர்,[u] ஏலேக், அஸ்ரியேல், சீகேம், ஹேப்பேர், செமீதா ஆகியவர்
கள் யோசேப்பின் மகனாகிய மனாசேக்குப் பிறந்த மகன்கள்.[v] **3** ஆனால்,
மனாசேயின் கொள்ளுப்பேரனும் மாகீரின் பேரனும் கீலேயாத்தின் மகனு
மாகிய ஹேப்பேருக்குப் பிறந்த செலோப்பியாத்துக்கு[w] மகன்கள் இல்லை,
மகள்கள் மட்டும்தான் இருந்தார்கள். அவர்களுடைய பெயர்கள்: மக்லாள்,
நோவாள், ஒக்லாள், மில்காள், மற்றும் திர்சாள். **4** அந்தப் பெண்கள்
குருவாகிய எலெயாசாரிடமும்[x] நூனின் மகனாகிய யோசுவாவிடமும் மற்ற
தலைவர்களிடமும் வந்து, "எங்கள் அப்பாவின் அண்ணன் தம்பிகளோடு
எங்களுக்கும் சொத்தில் பங்கு கொடுக்க வேண்டுமென்று மோசேக்கு
யெகோவா கட்டளை கொடுத்தாரே"[y] என்றார்கள். அதனால் யெகோவா
வின் கட்டளைப்படி, அவர்களுடைய அப்பாவின் சகோதரர்களோடு அவர்
களுக்கும் சொத்தில் பங்கு கொடுக்கப்பட்டது.[z]

5 யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள கீலேயாத்தையும் பாசானையும்
தவிர, இன்னும் 10 இடங்கள் மனாசே கோத்திரத்தாருக்குக் கிடைத்தன.[a]

16:8 * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்குவரை."

அதி. 16
a யோசு 18:11, 13
b யோசு 18:11, 13; 1நா 7:24
c 1நா 7:20, 28
d ஆதி 48:5
e உபா 33:13-15; யோசு 17:17, 18
f யோசு 18:11, 13
g 2நா 8:1, 5
h யோசு 17:7
i யோசு 6:20, 26
j யோசு 17:8
k எண் 34:2, 6
l யோசு 17:9
m நியா 1:29
n எண் 33:52, 55
o யோசு 17:13

அதி. 17
p உபா 21:17
q ஆதி 41:51; ஆதி 46:20; ஆதி 48:17, 18
r எண் 26:55; எண் 33:54; நீதி 16:33
s ஆதி 50:23; எண் 26:29; 1நா 7:14
t உபா 3:13; யோசு 13:31
u நியா 6:11
v எண் 26:29-32
w எண் 26:33
x எண் 27:1, 2; எண் 34:17; யோசு 14:1
y எண் 27:7, 11
z எண் 36:6, 12
a யோசு 13:29

6 ஏனென்றால், மனாசேயின் மகன்களோடு அவருடைய மகள்களுக்கும்
சொத்தில் பங்கு கிடைத்தது. மனாசேயின் மற்ற வம்சத்தாருக்கு கீலேயாத்
பிரதேசம் சொத்தாகக் கிடைத்தது.

7 மனாசேயின் எல்லை ஆசேரில் தொடங்கி, சீகேமைப்[a] பார்த்தபடி
இருக்கிற மிக்மேத்தாத்[b] வரையில் போனது. தெற்கில் என்-தப்புவா ஜனங்
களின் தேசம் வரைக்கும் அது போனது. 8 தப்புவா தேசம்[c] மனாசேக்குச்
சொந்தமாக ஆனது. ஆனால், மனாசேயின் எல்லையிலுள்ள தப்புவா நக
ரம் எப்பிராயீம் வம்சத்தாருக்குச் சொந்தமாக ஆனது. 9 அந்த எல்லை
காணா பள்ளத்தாக்கு* பக்கமாகத் தெற்கே போனது. மனாசே கோத்திரத்
தாருடைய நகரங்களுக்கு நடுவே எப்பிராயீம் கோத்திரத்தாரின் நகரங்கள்
இருந்தன.[d] மனாசேயின் எல்லை அந்தப் பள்ளத்தாக்கின் வடக்கே இருந்
தது, அது கடல்வரை போனது.[e] 10 தெற்குப் பகுதி எப்பிராயீம் வம்
சத்தாருக்குச் சொந்தமாக ஆனது, வடக்குப் பகுதி மனாசே வம்சத்தாருக்
குச் சொந்தமாக ஆனது. மனாசே வம்சத்தாருக்கு கடல்தான் எல்லையாக
இருந்தது.[f] அவர்களுடைய எல்லை வடக்கே ஆசேரின் பகுதி வரைக்கும்
கிழக்கே இசக்காரின் பகுதி வரைக்கும் போனது.

11 இசக்காருக்கும் ஆசேருக்கும் சொந்தமான பகுதிகளில், பெத்-செயா
னும் அதன் சிற்றூர்களும்,* இப்லெயாமும்[g] அதன் சிற்றூர்களும், தோரின்[h]
குடிமக்களும் அதன் சிற்றூர்களும், மலைப்பகுதிகளாகிய எந்தோர்,[i]
தானாக்,[j] மெகிதோ ஆகியவற்றின் குடிமக்களும் அவற்றின் சிற்றூர்களும்
மனாசே வம்சத்தாருக்குக் கிடைத்தன.

12 இந்த நகரங்களை மனாசே வம்சத்தாரால் சொந்தமாக்கிக்கொள்ள
முடியவில்லை. ஏனென்றால், கானானியர்கள் அந்தத் தேசத்தைவிட்டுப்
போகாமல் அங்கேயே பிடிவாதமாகக் குடியிருந்தார்கள்.[k] 13 இஸ்ரவேல்
தேசம் பலம்படைத்த தேசமாக ஆனபோது, கானானியர்களை அடிமைப்
படுத்தி வேலை வாங்கியது.[l] ஆனாலும், அவர்களை முழுமையாகத் துரத்
திவிடவில்லை.[m]

14 யோசேப்பின் வம்சத்தார் யோசுவாவிடம், “யெகோவா இன்று
வரை எங்களை ஆசீர்வதித்திருக்கிறார். நாங்கள் நிறைய பேர் இருக்கி
றோம்.[n] அப்படியிருக்கும்போது, எங்களுக்கு ஏன் ஒரேவொரு பங்கை
மட்டும் குலுக்கல் போட்டுக்[o] கொடுத்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள்.
15 அதற்கு யோசுவா அவர்களிடம், “நீங்கள் நிறைய பேர் இருப்பதா
லும், எப்பிராயீம் மலைப்பகுதி[p] இட நெருக்கடியாக இருப்பதாலும், பெரி
சியர்களும்[q] ரெப்பாயீமியர்களும்[r] வாழ்கிற தேசங்களுக்குப் போய் அங்
குள்ள காடுகளை வெட்டி அங்கே குடியேறுங்கள்” என்றார். 16 அதற்கு
யோசேப்பின் வம்சத்தார், “மலைப்பகுதி எங்களுக்குப் போதுமானதாக
இல்லைதான். ஆனால், பெத்-செயானிலும்[s] அதன் சிற்றூர்களிலும் யெஸ்ர
யேல்[t] பள்ளத்தாக்கிலும் குடியிருக்கிற கானானியர்கள் எல்லாரும்
இரும்பு அரிவாள்கள் பொருத்தப்பட்ட போர் ரதங்களை[u] வைத்திருக்கி
றார்களே” என்று சொன்னார்கள். 17 அப்போது யோசேப்பின் வம்சத்தா
ராகிய எப்பிராயீம் மற்றும் மனாசே கோத்திரத்தாரிடம் யோசுவா, “நீங்கள்

அதி. 17
a யோசு 20:7; யோசு 24:1; 1நா 6:66, 67
b யோசு 16:5, 6
c யோசு 16:8
d யோசு 16:9
e யோசு 16:8
f எண் 34:2, 6
g 2ரா 9:27
h யோசு 12:7, 23
i 1சா 28:7
j யோசு 12:7, 21
k நியா 1:27
l யோசு 16:10; நியா 1:30; 2நா 8:8
m யாத் 23:33; எண் 33:55; உபா 20:16, 17; யோசு 23:12, 13; நியா 1:28
n ஆதி 48:19; எண் 26:34, 37
o எண் 33:54
p யாத் 33:2
q ஆதி 15:18-20
r யோசு 24:33
s யோசு 17:11
t யோசு 19:17, 18; நியா 6:33
u உபா 20:1; நியா 1:19

17:9 * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கு.” 17:11 * வே.வா, “அதைச் சுற்றியுள்ள ஊர்களும்.”

நிறைய பேர் இருக்கிறீர்கள், உங்களுக்கு நிறைய பலம் இருக்கிறது. அத
னால், உங்களுக்கு ஒரு பங்கு மட்டுமல்ல,[a]
18 மலைப்பகுதி முழுவதும்
கொடுக்கப்படும்.[b] அது காடாக இருந்தாலும் அங்குள்ள மரங்களை வெட்டி
விடுங்கள். அதுதான் உங்களுடைய பகுதியின் எல்லை. கானானியர்கள்
பலசாலிகளாக இருந்தாலும், இரும்பு அரிவாள்கள் பொருத்தப்பட்ட போர்
ரதங்களை வைத்திருந்தாலும், அவர்களைத் துரத்தியடியுங்கள்"[c] என்று
சொன்னார்.

18 பின்பு இஸ்ரவேலர்கள் எல்லாரும் சீலோவில்[d] ஒன்றுகூடி,
அங்கே சந்திப்புக் கூடாரத்தை அமைத்தார்கள்.[e] ஏனென்றால்,
அப்போது தேசம் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தது.[f]
2 இஸ்ரவேலர்களில் ஏழு கோத்திரத்தாருக்கு அதுவரை எந்த இடமும்
ஒதுக்கப்படவில்லை.
3 அதனால் யோசுவா இஸ்ரவேலர்களிடம், "உங்க
ளுடைய முன்னோர்களின் கடவுளாகிய யெகோவா தந்த தேசத்தைச்
சொந்தமாக்கிக்கொள்ளாமல் இன்னும் எவ்வளவு காலம்தான் தள்ளிப்
போட்டுக்கொண்டே இருப்பீர்கள்?[g]
4 ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும்
மூன்று ஆண்களைத் தேர்ந்தெடுத்து என்னிடம் கூட்டிக்கொண்டு வாருங்
கள். இந்தத் தேசம் முழுவதும் நடந்துபோய், ஒவ்வொரு கோத்திரத்துக்கும்
சேர வேண்டிய இடங்களின் வரைபடத்தை வரைந்துகொண்டு வருவதற்
காக நான் அவர்களை அனுப்புவேன்.
5 தேசத்தை ஏழு பங்காக அவர்க
ளுக்குள் பிரித்துக்கொள்ள வேண்டும்.[h] யூதா கோத்திரத்தார் தெற்கிலுள்ள
தங்கள் பகுதியிலும்,[i] யோசேப்பின் வம்சத்தார் வடக்கிலுள்ள தங்கள் பகு
தியிலும் இருக்க வேண்டும்.[j]
6 நீங்கள் தேசத்தை ஏழு பங்காக வரைந்து
என்னிடம் கொண்டுவர வேண்டும். உங்களுக்குச் சேர வேண்டிய பங்கை
நம் கடவுளாகிய யெகோவாவின் முன்னால் குலுக்கல்[k] முறையில் தேர்ந்
தெடுப்பேன்.
7 ஆனால், லேவியர்களுக்கு உங்களோடு எந்தப் பங்கும்
கிடைக்காது.[l] யெகோவாவுக்குச் செய்யும் குருத்துவச் சேவைதான் அவர்க
ளுக்குக் கொடுக்கப்படும் சொத்து.[m] யெகோவாவின் ஊழியராகிய மோசே
கொடுத்த பங்கை காத், ரூபன், மற்றும் மனாசேயின் பாதிக் கோத்திரத்
தார்[n] யோர்தானின் கிழக்குப் பக்கத்தில் ஏற்கெனவே பெற்றுக்கொண்டார்
கள்" என்று சொன்னார்.

8 யோசுவா அந்த மூன்று ஆண்களிடமும், "நீங்கள் தேசம் முழுவதும்
நடந்துபோய், வரைபடம் வரைந்துகொண்டு என்னிடம் வாருங்கள். உங்
களுக்குச் சேர வேண்டிய பங்கை சீலோவில் யெகோவாவுக்கு முன்னால்
குலுக்கல் போட்டுத் தேர்ந்தெடுப்பேன்"[o] என்று சொன்னார்.
9 உடனே
அவர்கள் புறப்பட்டுப் போய், தேசம் முழுவதும் பயணம் செய்து, அதை
ஏழு பங்காகப் பிரித்து, ஒரு புத்தகத்தில் வரைந்துகொண்டார்கள். அங்
கிருந்த நகரங்களையும் அதில் குறித்துக்கொண்டு, சீலோவில் முகாம்போட்
டிருந்த யோசுவாவிடம் வந்தார்கள்.
10 சீலோவில் யெகோவாவின் முன்
னால் இஸ்ரவேலர்களுக்காக யோசுவா குலுக்கல் போட்டார்.[p] அதன்பின்
தேசத்தைப் பிரித்து, அவரவர் பங்கைக் கொடுத்தார்.[q]

11 பென்யமீன் கோத்திரத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி குலுக்கல்
முறையில் பங்கு கிடைத்தது. யூதா வம்சத்தாருக்கும்[r] யோசேப்பின்
வம்சத்தாருக்கும்[s] இடையே அவர்களுக்குப் பங்கு கிடைத்தது.
12 அவர்

அதி. 17
a யோசு 17:14
b எண் 33:53
யோசு 20:7
நியா 4:5
c உபா 20:1
உபா 31:6
யோசு 13:6
நீதி 21:31

அதி. 18
d யோசு 19:51
யோசு 22:9
நியா 21:19
e 1சா 1:3
1சா 4:3
சங் 78:60
எரே 7:12
அப் 7:44, 45
f எண் 14:8
உபா 7:22
உபா 33:29
g எண் 33:53, 55
h எண் 34:13
யோசு 19:51
i யோசு 15:1
j யோசு 16:1, 4
k எண் 26:55
எண் 33:54
யோசு 14:2
நீதி 16:33
அப் 13:19
l எண் 18:20
யோசு 13:33
m உபா 10:9
உபா 18:1
n உபா 3:12, 13
o யோசு 19:51
நியா 21:19
p நீதி 16:33
q எண் 33:54
அப் 13:19
r யோசு 15:1
s யோசு 16:1

களுடைய வடக்கு எல்லை யோர்தானில் தொடங்கி, எரிகோவின்[a] வடக்
குச் சரிவில் ஏறி, மேற்கே உள்ள மலைவரை போய், பின்பு பெத்-
ஆவேன்[b] வனாந்தரம்வரை போனது. **13** அங்கிருந்து லஸ்ஸின் தென்
சரிவுவரை, அதாவது பெத்தேல்வரை,[c] போனது. பின்பு அது இறங்கி,
கீழ் பெத்-ஓரோனுக்குத்[d] தெற்கே, மலைமேல் உள்ள அதரோத்-அதா
ருக்குப்[e] போனது. **14** மேற்கு எல்லை, தெற்கே பெத்-ஓரோனைப் பார்த்
தபடி இருக்கிற மலையிலிருந்து தெற்குப் பக்கமாகத் திரும்பியது. பின்பு
யூதாவின் நகரமாகிய கீரியாத்-பாகாலில், அதாவது கீரியாத்-யெயாரீமில்,[f]
முடிவடைந்தது.

15 தெற்கு எல்லை கீரியாத்-யெயாரீமின் முனையில் தொடங்கி மேற்
குப் பக்கமாகப் போனது. அது நெப்தோவா நீரூற்றுவரை போனது.[g]
16 அந்த எல்லை பென்-இன்னோம்* பள்ளத்தாக்கைப்[h] பார்த்தபடி இருக்
கிற மலையின் அடிவாரத்துக்குப் போனது. அதாவது, ரெப்பாயீம்[i] பள்ளத்
தாக்கின் வடக்கில் இருக்கிற மலையின் அடிவாரம்வரை போனது. அங்கி
ருந்து இன்னோம் பள்ளத்தாக்குவரை, தெற்கே எபூசியர்களின்[j] மலைச்
சரிவுவரை, அந்த எல்லை போய் என்-ரொகேலுக்கு[k] இறங்கியது.
17 அதன்பின் வடக்கே என்-சேமேசுக்குப் போய், அதும்மீம் மேட்டுக்கு[l]
முன்னால் உள்ள கெலிலோத்துக்குப் போனது. பின்பு, ரூபனுடைய மகனா
கிய போகனின்[m] கல்[n] வரையில் இறங்கிப் போனது. **18** அதன்பின் அர
பாவுக்கு முன்னால் உள்ள வடக்கு மலைச் சரிவுவரை போய், அங்கிருந்து
அரபாவுக்கு இறங்கியது. **19** அந்த எல்லை பெத்-ஒக்லாவின்[o] வடக்கு
மலைச் சரிவுவரை போய், யோர்தானின் தென்முனையில் உள்ள உப்புக்
கடலின்*[p] வடக்கு விரிகுடாவில் முடிவடைந்தது. இதுதான் தெற்கு எல்லை.
20 யோர்தான் அதன் கிழக்கு எல்லையாக இருந்தது. பென்யமீன் வம்சத்
தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி நாலாபக்கமும் கிடைத்த எல்லை
இதுதான்.

21 பென்யமீன் கோத்திரத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி கிடைத்த
நகரங்கள் இவைதான்: எரிகோ, பெத்-ஒக்லா, ஏமக்-கேசீஸ், **22** பெத்-
அரபா,[q] செமராயிம், பெத்தேல்,[r] **23** ஆவீம், பாரா, ஒப்ரா, **24** கேப்
பார்-அமோனாய், ஒப்னி, மற்றும் கெபா.[s] கிராமங்களோடு சேர்ந்த இந்த
நகரங்கள் மொத்தம் 12.

25 கிபியோன்,[t] ராமா, பேரோத், **26** மிஸ்பே, கெப்பிரா, மோத்சா,
27 ரெக்கேம், இர்பெயேல், தாராலா, **28** ஸேலா,[u] ஹா-ஏலேப், எபூசி,
அதாவது எருசலேம்,[v] கிபியா,[w] மற்றும் கீரியாத். கிராமங்களோடு சேர்ந்த
இந்த நகரங்கள் மொத்தம் 14.

பென்யமீன் வம்சத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி கிடைத்த சொத்து
இதுதான்.

19 இரண்டாவது குலுக்கல்[x] சிமியோன் கோத்திரத்தாருக்கு[y] விழுந்
தது. அவரவர் குடும்பத்தின்படி அவர்களுக்குப் பங்கு கிடைத்தது.
அவர்களுடைய பங்கு யூதா கோத்திரத்தாருடைய பகுதியில் இருந்தது.[z]
2 அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடங்கள் இவைதான்: சேபாவுடன்
பெயெர்-செபா,[a] மொலாதா,[b] **3** ஆத்சார்-சுவால்,[c] பாளா, ஆத்சேம்,[d]

18:16 * அர்த்தம், “இன்னோம் மகனின்.” 18:19 * அதாவது, “சவக் கடலின்.”

அதி. 18
a யோசு 2:1 யோசு 16:1
b யோசு 7:2
c ஆதி 28: 18, 19
d யோசு 10:11 யோசு 21: 20, 22
e யோசு 16:5
f யோசு 15:9
g யோசு 15: 9, 12
h யோசு 15: 8, 12 எரே 7:31 எரே 19:2 மத் 5:22
i உபா 2:11
j யோசு 15:63
k யோசு 15: 7, 12 1ரா 1:9
l யோசு 15: 7, 12
m யோசு 15: 6, 12
n உபா 19:14
o யோசு 15: 6, 12
p எண் 34:12
q யோசு 15: 6, 12
r ஆதி 12:8 1ரா 12:28, 29
s யோசு 21: 8, 17
t யோசு 9: 16, 17 1ரா 3:4
u 2சா 21:14
v யோசு 15: 8, 12 1நா 11:4 2நா 3:1
w 1சா 10:26

அதி. 19
x யோசு 18:6
y ஆதி 46:10
z ஆதி 49:5, 7
a ஆதி 21:31 ஆதி 26: 32, 33 யோசு 15: 21, 28
b யோசு 15: 21, 26 1நா 4:28-31
c யோசு 15: 21, 28
d யோசு 15: 20, 29

4 எல்தோலாத்,[a] பெத்தூல், ஓர்மா, **5** சிக்லாகு,[b] பெத்-மார்காபோத்,
ஆத்சார்-சூசா, **6** பெத்-லெபாவோத்[c] மற்றும் சருகேன். கிராமங்களோடு
சேர்ந்த இந்த நகரங்கள் மொத்தம் 13; **7** ஆயின், ரிம்மோன், ஏத்தேர் மற்
றும் ஆசான்.[d] கிராமங்களோடு சேர்ந்த இந்த நகரங்கள் மொத்தம் 4;
8 பாலாத்-பெயெர் வரையில், அதாவது தெற்கிலுள்ள ராமா வரையில்,
உள்ள இந்த நகரங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்கள். இவை
தான் சிமியோன் கோத்திரத்துக்கு அவரவர் குடும்பத்தின்படி கிடைத்த
சொத்து. **9** சிமியோன் வம்சத்தாருக்கு யூதா வம்சத்தாருடைய பங்கிலி
ருந்து ஒரு பாகம் கொடுக்கப்பட்டது. ஏனென்றால், யூதாவுக்குக் கிடைத்த
பங்கு மிகப் பெரியதாக இருந்தது. அதனால், சிமியோன் வம்சத்தாருக்கு
அவர்கள் நடுவிலேயே பங்கு கிடைத்தது.[e]

10 மூன்றாவது குலுக்கல்[f] செபுலோன் கோத்திரத்தாருக்கு[g] விழுந்
தது. அவரவர் குடும்பத்தின்படி அவர்களுக்குப் பங்கு கிடைத்தது. அவர்க
ளுடைய எல்லை சாரீத்வரை போய், **11** மேற்கே மாராலாவுக்கு ஏறி,
தாபசேத்தை எட்டி, யொக்னியாமுக்கு முன்னால் உள்ள பள்ளத்தாக்கு
வரை* போனது. **12** பின்பு, சாரீத்திலிருந்து கிழக்குப் பக்கமாகப் போய்,
கிஸ்லோத்-தாபோரின் எல்லைவரை போனது. அங்கிருந்து தாபராத்துக்
குப்[h] போய், யப்பியாவுக்கு ஏறி, **13** கிழக்குப் பக்கமாக காத்-தேப்பேருக்
குப்[i] போய், இத்-காத்சீனை அடைந்து, ரிம்மோனுக்குச் சென்று நேயா
வரையில் போனது. **14** பின்பு அந்த எல்லை வடக்கே அன்னத்தோனுக்
குத் திரும்பி, இப்தா-ஏலின் பள்ளத்தாக்கில் முடிவடைந்தது. **15** காத்தாத்,
நகலால், சிம்ரோன்,[j] இதாலா, பெத்லகேம்[k] என்ற 12 நகரங்களும் அவற்
றின் கிராமங்களும் அவர்களுக்குக் கிடைத்தன. **16** இந்த நகரங்களும்
அவற்றின் கிராமங்களும்தான் செபுலோன் வம்சத்தாருக்கு அவரவர் குடும்
பத்தின்படி[l] கிடைத்த சொத்து.

17 நான்காவது குலுக்கல்[m] இசக்காருக்கு[n] விழுந்தது. இசக்கார் வம்
சத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி பங்கு கிடைத்தது. **18** அவர்களு
டைய எல்லை இதுதான்: யெஸ்ரயேல்,[o] கெசுல்லோத், சூனேம்,[p] **19** அப்
பிராயீம், ஸீகோன், அனாகராத், **20** ராப்பித், கிஷியோன், அபெத்ஸ்,
21 ரெமேத், என்-கன்னீம்,[q] என்-காதா மற்றும் பெத்-பாத்செஸ். **22** அந்த
எல்லை தாபோரையும்[r] சகசீமாவையும் பெத்-ஷிமேசையும் அடைந்து,
யோர்தானில் முடிவடைந்தது. அதில், கிராமங்களோடு சேர்ந்து மொத்
தம் 16 நகரங்கள் இருந்தன. **23** இந்த நகரங்களும் அவற்றின் கிராமங்க
ளும்தான் இசக்கார் வம்சத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி[s] கிடைத்த
சொத்து.

24 ஐந்தாவது குலுக்கல்[t] ஆசேர்[u] கோத்திரத்துக்கு விழுந்தது. அவரவர்
குடும்பத்தின்படி அவர்களுக்குப் பங்கு கிடைத்தது. **25** அவர்களுடைய
எல்லை இதுதான்: எல்காத்,[v] ஆலி, பேதேன், அக்சாப், **26** அலம்மே
லெக், ஆமாத் மற்றும் மிஷயால். அது மேற்கே கர்மேலுக்கும்[w] சீகோர்-
லிப்னாத்துக்கும் போய், **27** கிழக்கே பெத்-டாகோனுக்குத் திரும்பி, செபு
லோனை அடைந்து, வடக்கே இப்தா-ஏல் பள்ளத்தாக்குவரை போனது.
அங்கிருந்து அது பெத்-ஏமேக்குக்கும் நேகியெலுக்கும் போய், இடது
பக்கமாக காபூலுக்குப் போனது. **28** பின்பு, எபிரோனுக்கும் ரேகோபுக்கும்

19:11 * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குவரை.”

அதி. 19
- a யோசு 15:21, 30
- b யோசு 15:21, 31; 1சா 27:6
- c யோசு 15:21, 32
- d யோசு 15:20, 42; 1நா 4:24, 32; 1நா 6:59, 64
- e நியா 1:3
- f யோசு 18:6
- g ஆதி 49:13
- h யோசு 21:27, 28
- i 2ரா 14:25
- j யோசு 12:7, 20
- k நியா 12:8
- l எண் 26:27
- m எண் 33:54
- n ஆதி 49:14
- o யோசு 17:16; நியா 6:33; 1ரா 21:1
- p 1சா 28:4; 1ரா 1:3; 2ரா 4:8
- q யோசு 21:8, 29
- r நியா 4:6
- s எண் 26:25
- t எண் 26:55; யோசு 18:6
- u ஆதி 49:20
- v யோசு 21:8, 31
- w 1ரா 18:19

ஹம்மோனுக்கும் பெரிய சீதோன்[a] வரையுள்ள காணாவுக்கும் போனது.
29 அந்த எல்லை ராமாவுக்குத் திரும்பி, மதில் சூழ்ந்த தீரு நகரம்[b]
வரைக்கும் போனது. பின்பு அது ஓசாவுக்குத் திரும்பி, **30** அக்சீப்,
உம்மா, ஆப்பெக்[c] மற்றும் ரேகோப்[d] பிரதேசத்திலுள்ள கடலில் முடிவ
டைந்தது. அதில், கிராமங்களோடு சேர்ந்து மொத்தம் 22 நகரங்கள் இருந்
தன. **31** இந்த நகரங்களும் அவற்றின் கிராமங்களும்தான் ஆசேர் வம்சத்
தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி[e] கிடைத்த சொத்து.

32 ஆறாவது குலுக்கல்[f] நப்தலிக்கு விழுந்தது. நப்தலி வம்சத்தா
ருக்கு அவரவர் குடும்பத்தின்படி பங்கு கிடைத்தது. **33** அவர்களுடைய
எல்லை எலேப்பிலிருந்து சானானிமில் உள்ள பெரிய மரத்துக்கும்,[g] அங்கி
ருந்து ஆதமி-நெக்கேப்புக்கும் யாப்னியேலுக்கும் போனது. பின்பு லக்கூம்
வரையில் போய், யோர்தானில் முடிவடைந்தது. **34** அந்த எல்லை
மேற்கே அஸ்னோத்-தாபோருக்குத் திரும்பி உக்கோகுக்குப் போனது.
அவர்களுடைய தெற்கு எல்லை செபுலோனையும், மேற்கு எல்லை
ஆசேரையும், கிழக்கு எல்லை யோர்தானுக்குப் பக்கத்திலுள்ள யூதாவை
யும் எட்டியது. **35** மதில் சூழ்ந்த நகரங்கள் இவைதான்: சீத்திம், சேர், அம்
மாத்,[h] ரக்காத், கின்னரேத், **36** ஆதமா, ராமா, ஆத்சோர்,[i] **37** கேதேஸ்,[j]
எத்ரேய், என்-ஆத்சோர், **38** ஈரோன், மிக்தால்-ஏல், ஓரேம், பெத்-
ஆனாத் மற்றும் பெத்-ஷிமேஸ்.[k] கிராமங்களோடு சேர்ந்த இந்த நகரங்
கள் மொத்தம் 19. **39** இந்த நகரங்களும் அவற்றின் கிராமங்களும்தான்
நப்தலி வம்சத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி[l] கிடைத்த சொத்து.

40 ஏழாவது குலுக்கல்[m] தாண்[n] கோத்திரத்துக்கு விழுந்தது.
அவரவர் குடும்பத்தின்படி அவர்களுக்குப் பங்கு கிடைத்தது. **41** அவர்க
ளுடைய எல்லை இதுதான்: சோரா,[o] எஸ்தாவோல், இர்-சேமேஸ்,
42 சாலாபீன்,[p] ஆயலோன்,[q] யெத்லா, **43** ஏலோன், திம்னா,[r]
எக்ரோன்,[s] **44** எல்தெக்கே, கிபெத்தோன்,[t] பாலாத், **45** யேகூத், பெனெ-
பெராக், காத்-ரிம்மோன்,[u] **46** மே-யார்கோன், ராக்கோன் மற்றும் யோப்
பாவுக்கு[v] எதிரில் உள்ள எல்லைப்பகுதி. **47** தாணின் பகுதி அவர்களுக்கு
ரொம்பவே சின்னதாக இருந்தது.[w] அதனால் அவர்கள் போய் லேசே
மைத்[x] தாக்கி, அதைக் கைப்பற்றி, அங்கிருந்தவர்களை வாளால் கொன்
றார்கள். அந்த நகரத்தைச் சொந்தமாக்கிக்கொண்டு, அங்கே குடியேறினார்
கள். அதோடு, தங்களுடைய மூதாதை தாணின் ஞாபகமாக அதன் பெயரை
தாண் என்று மாற்றினார்கள்.[y] **48** இந்த நகரங்களும் அவற்றின் கிராமங்க
ளுமே தாண் வம்சத்தாருக்கு அவரவர் குடும்பத்தின்படி கிடைத்த சொத்து.

49 இப்படி, அவரவர் பங்கைப் பிரித்துக் கொடுக்கும் வேலை முடி
வடைந்தது. பின்பு, நூனின் மகனாகிய யோசுவாவுக்கு இஸ்ரவேலர்கள்
தங்கள் நடுவில் ஒரு பங்கைக் கொடுத்தார்கள். **50** யோசுவா கேட்ட நக
ரத்தை, அதாவது எப்பிராயீம் மலைப்பகுதியிலுள்ள திம்னாத்-சேராவை,[z]
யெகோவாவின் கட்டளைப்படி அவருக்குக் கொடுத்தார்கள். அவர் அந்த
நகரத்தைக் கட்டி அங்கே குடியிருந்தார்.

51 சீலோவில்[a] யெகோவாவுக்கு முன்னால், அதாவது சந்திப்புக் கூடா
ரத்தின்[b] வாசலுக்கு முன்னால், குருவாகிய எலெயாசாரும் நூனின்
மகனாகிய யோசுவாவும் இஸ்ரவேல் கோத்திரங்களின் தந்தைவழிக் குடும்
பத் தலைவர்களும் குலுக்கல் முறையில் எல்லாருக்கும் பிரித்துக்

அதி. 19
a ஆதி 10:15; நியா 1:31
b 2சா 5:11; 1ரா 5:1
c நியா 1:31
d யோசு 21:8, 31
e எண் 26:47
f எண் 26:55; யோசு 18:6
g நியா 4:11
h யோசு 21:32
i யோசு 11:10; நியா 4:2; 1சா 12:9
j யோசு 20:7
k நியா 1:33
l எண் 26:50
m யோசு 18:6
n ஆதி 49:17
o யோசு 15:20, 33; நியா 13:2
p நியா 1:35
q யோசு 10:12; யோசு 21:8, 24
r நியா 14:1
s யோசு 15:20, 45
t யோசு 21:8, 23
u யோசு 21:8, 24
v யோனா 1:3; அப் 9:36
w எண் 26:54; எண் 33:54
x நியா 18:7
y நியா 18:29
z யோசு 24:29, 30
a நியா 21:19; எரே 7:13
b யோசு 18:1, 8

கொடுத்த[a] சொத்துகள் இவைதான். இப்படி, தேசத்தைப் பங்குபோட்டு
முடித்தார்கள்.

20 பின்பு யெகோவா யோசுவாவிடம், **2** "நீ இஸ்ரவேலர்களிடம்
சொல்ல வேண்டியது என்னவென்றால், 'மோசே மூலம் நான்
உங்களுக்குச் சொன்னபடி, அடைக்கல நகரங்களைத்[b] தேர்ந்தெடுங்கள்.
3 அப்போதுதான், யாரையாவது தெரியாத்தனமாகவோ எதேச்சையாகவோ
கொலை செய்தவன் இந்த நகரங்களுக்கு ஓடிப்போக முடியும். பழிவாங்கு
பவனால்[c] கொல்லப்படாதபடி அங்கே போய் அவன் அடைக்கலம் பெற
முடியும். **4** இந்த நகரங்களில் ஒன்றுக்கு அவன் ஓடிப்போய்[d] அதன் வாச
லில்[e] நிற்க வேண்டும். பின்பு, அந்த நகரத்தின் பெரியோர்களிடம்* தன்
னுடைய வழக்கைச் சொல்ல வேண்டும். அவர்கள் அவனை நகரத்துக்குள்
கூட்டிக்கொண்டுபோய், தங்களோடு குடியிருப்பதற்கு இடம் தர வேண்டும்.
5 பழிவாங்குபவன் துரத்திக்கொண்டு வந்தால், கொலையாளியை அவன்
கையில் அவர்கள் ஒப்படைக்கக் கூடாது. ஏனென்றால், அவன் முன்வி
ரோதம் எதுவும் இல்லாமல் தெரியாத்தனமாகக் கொலை செய்துவிட்டான்.[f]
6 ஜனங்களின் பிரதிநிதிகளால் விசாரிக்கப்படும்வரை அவன் அந்த நகரத்
திலேயே தங்கியிருக்க வேண்டும்.[g] அவன் குற்றவாளி இல்லை என்று நிரூ
பிக்கப்பட்டால், தலைமைக் குரு சாகும்வரை அவன் அங்கேயே குடியி
ருக்க வேண்டும்.[h] அதன்பின், எந்த நகரத்திலிருந்து ஓடி வந்தானோ
அந்த நகரத்திலுள்ள தன் வீட்டுக்கே அவன் திரும்பிப் போகலாம்'"[i] என்று
சொன்னார்.

7 அவர் சொன்னபடியே அவர்கள் செய்தார்கள். நப்தலி மலைப்பகுதி
யில் உள்ள கலிலேயாவைச் சேர்ந்த கேதேஸ்,[j] எப்பிராயீம் மலைப்பகுதி
யில் உள்ள சீகேம்,[k] யூதா மலைப்பகுதியில் உள்ள கீரியாத்-அர்பா,[l]
அதாவது எப்ரோன், ஆகிய நகரங்களைத் தனியாக* பிரித்து வைத்தார்
கள். **8** எரிகோவுக்குக் கிழக்கிலே, ரூபன் கோத்திரத்துக்குச் சொந்தமான
பீடபூமியின் வனாந்தரத்திலுள்ள பேசர்,[m] காத் கோத்திரத்துக்குச் சொந்த
மான கீலேயாத்திலுள்ள ராமோத்,[n] மனாசே கோத்திரத்துக்குச் சொந்த
மான பாசானிலுள்ள கோலான்[o] ஆகிய நகரங்களை அவர்கள் தேர்ந்தெ
டுத்தார்கள்.[p]

9 அந்த நகரங்கள் அடைக்கல நகரங்களாகப் பிரித்து வைக்கப்பட்டன.
தெரியாத்தனமாகக் கொலை செய்துவிடுகிற இஸ்ரவேலனோ இஸ்ரவேலில்
குடியிருக்கிற வேறு தேசத்துக்காரனோ தப்பியோடுவதற்காகவும்,[q] ஜனங்
களின் பிரதிநிதிகளால் விசாரிக்கப்படுவதற்கு முன்பே பழிவாங்குபவனால்
கொல்லப்படாமல் இருப்பதற்காகவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.[r]

21 லேவியர்களின் தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள் கானான் தேசத்
திலுள்ள சீலோவில்,[s] குருவாகிய எலெயாசாரிடமும்[t] நூனின் மக
னாகிய யோசுவாவிடமும் இஸ்ரவேல் கோத்திரங்களின் தந்தைவழிக் குடும்
பத் தலைவர்களிடமும் வந்து, **2** "நாங்கள் குடியிருப்பதற்கு நகரங்களும்,
எங்கள் மிருகங்களுக்கு மேய்ச்சல் நிலங்களும் கொடுக்கச் சொல்லி
மோசே மூலம் யெகோவா கட்டளை கொடுத்திருந்தாரே"[u] என்று
சொன்னார்கள். **3** அதனால் யெகோவாவின் கட்டளைப்படி, இஸ்ரவேலர்

20:4 * வே.வா., "மூப்பர்களிடம்." **20:7** * வே.வா., "புனித நகரங்களாக."

அதி. 19
a எண் 34:17
யோசு 14:1

அதி. 20
b யாத் 21:12, 13
எண் 35:14, 15
உபா 4:41
c ஆதி 9:6
யாத் 21:23
எண் 35:26, 27
d உபா 19:3
e நீதி 31:23
f எண் 35:22-24
உபா 19:4-6
g எண் 35:12, 24
h எண் 35:25
i எண் 35:28
j யோசு 21:32
k ஆதி 33:18
யோசு 21:20, 21
l யோசு 14:15
யோசு 21:13
m யோசு 21:8, 36
1நா 6:77, 78
n யோசு 21:8, 38
1நா 6:77, 80
o யோசு 21:27
1நா 6:71
p உபா 4:41-43
q எண் 35:11, 15
r எண் 35:12, 24
உபா 21:5

அதி. 21
s யோசு 18:1
t எண் 34:17
u லேவி 25:33, 34
எண் 35:2-4
யோசு 14:4

கள் தங்களுக்குக் கிடைத்த பங்கிலிருந்து லேவியர்களுக்கு நகரங்களையும்
மேய்ச்சல் நிலங்களையும் கொடுத்தார்கள்.[a]

4 கோகாத்தியர்களின் வம்சத்தாருக்கு[b] முதல் குலுக்கல் விழுந்தது. குரு
வாகிய ஆரோனின் வம்சத்தாராகிய லேவியர்களுக்கு 13 நகரங்கள்
கொடுக்கப்பட்டன. யூதா கோத்திரத்தார், சிமியோன் கோத்திரத்தார், பென்
யமீன் கோத்திரத்தார் ஆகியவர்களுடைய பங்கிலிருந்து இவை கொடுக்கப்
பட்டன.[c]

5 கோகாத்தியர்களின் வம்சத்தாராகிய மற்றவர்களுக்கு 10 நகரங்கள்
கொடுக்கப்பட்டன.* எப்பிராயீம் கோத்திரத்தார், தாண் கோத்திரத்தார்,
மனாசேயின் பாதிக் கோத்திரத்தார் ஆகியவர்களுடைய குடும்பங்களின்
பங்கிலிருந்து இவை கொடுக்கப்பட்டன.[d]

6 கெர்சோனியர்களுக்கு[e] 13 நகரங்கள் கொடுக்கப்பட்டன. இசக்கார்
கோத்திரத்தார், ஆசேர் கோத்திரத்தார், நப்தலி கோத்திரத்தார், பாசானி
லுள்ள மனாசேயின் பாதிக் கோத்திரத்தார் ஆகியவர்களுடைய குடும்பங்
களின் பங்கிலிருந்து இவை கொடுக்கப்பட்டன.[f]

7 மெராரியர்களின்[g] குடும்பங்களுக்கு 12 நகரங்கள் கொடுக்கப்பட்டன.
ரூபன் கோத்திரத்தார், காத் கோத்திரத்தார், செபுலோன் கோத்திரத்தார் ஆகி
யவர்களுடைய பங்கிலிருந்து இவை கொடுக்கப்பட்டன.[h]

8 மோசே மூலம் யெகோவா சொன்னபடியே, இந்த நகரங்களையும்
மேய்ச்சல் நிலங்களையும் குலுக்கல் போட்டு லேவியர்களுக்கு இஸ்ரவேலர்
கள் கொடுத்தார்கள்.[i]

9 லேவியர்களான கோகாத்தியர்களின் வம்சத்தில் வந்த ஆரோனின்
மகன்களுக்கு முதல் குலுக்கல் விழுந்ததால், **10** யூதா கோத்திரத்தாரின்
பங்கிலிருந்தும் சிமியோன் கோத்திரத்தாரின் பங்கிலிருந்தும் அவர்
களுக்கு நகரங்கள் கொடுக்கப்பட்டன. அந்த நகரங்களுடைய பெயர்க
ளின் பட்டியல் இதுதான்.[j] **11** யூதா மலைப்பகுதியிலுள்ள கீரியாத்-அர்
பாவும்[k] (அர்பா என்பவன் ஏனாக்கின் தகப்பன்), அதாவது எப்ரோனும்,[l]
அதைச் சுற்றியுள்ள மேய்ச்சல் நிலங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்
டன. **12** ஆனால், அந்த நகரத்தைச் சேர்ந்த காட்டுவெளிகளும் அதன்
கிராமங்களும் எப்புன்னேயின் மகன் காலேபுக்குச் சொத்தாகக் கொடுக்கப்
பட்டன.[m]

13 குருவாகிய ஆரோனின் மகன்களுக்குக் கொடுக்கப்பட்ட நகரங்கள்
இவைதான்: கொலையாளிக்கு அடைக்கலம் தரும் நகரமாகிய[n] எப்ரோ
னும்[o] அதன் மேய்ச்சல் நிலங்களும், லிப்னாவும்[p] அதன் மேய்ச்சல் நிலங்க
ளும், **14** யாத்தீரும்[q] அதன் மேய்ச்சல் நிலங்களும், எஸ்தெமொவாவும்[r]
அதன் மேய்ச்சல் நிலங்களும், **15** ஓலோனும்[s] அதன் மேய்ச்சல் நிலங்
களும், தெபீரும்[t] அதன் மேய்ச்சல் நிலங்களும், **16** ஆயினும்[u] அதன்
மேய்ச்சல் நிலங்களும், யுத்தாவும்[v] அதன் மேய்ச்சல் நிலங்களும், பெத்-
ஷிமேசும் அதன் மேய்ச்சல் நிலங்களும். இந்த இரண்டு கோத்திரத்தாரின்
பங்கிலிருந்து மொத்தம் ஒன்பது நகரங்கள் கொடுக்கப்பட்டன.

17 பென்யமீன் கோத்திரத்தாரின் பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட நகரங்
கள் இவைதான்: கிபியோனும்[w] அதன் மேய்ச்சல் நிலங்களும், கெபாவும்

21:5 * அதாவது, “குலுக்கல் முறையில் கொடுக்கப்பட்டன.”

அதி. 21
a ஆதி 49:5, 7; எண் 35:8
b ஆதி 46:11; எண் 3:27-31
c யோசு 19:1; 1நா 6:54, 55; 1நா 6:60, 64
d 1நா 6:61, 70; 1நா 6:66
e யாத் 6:17; எண் 3:21, 22
f எண் 32:33; 1நா 6:62
g யாத் 6:19
h 1நா 6:63
i எண் 35:2, 5
j 1நா 6:64, 65
k ஆதி 23:2; ஆதி 35:27; யோசு 15: 13, 14; யோசு 20:7; நியா 1:10
l 2சா 2:1; 2சா 15:10; 1நா 6:54-56
m நியா 1:20
n எண் 35:6, 15
o யோசு 15: 20, 54
p யோசு 15: 20, 42
q யோசு 15: 20, 48
r யோசு 15: 20, 50
s யோசு 15: 20, 51
t யோசு 15: 20, 49; 1நா 6:57, 58
u யோசு 19:1, 7
v யோசு 15: 20, 55
w யோசு 9:3; யோசு 18: 21, 25

அதன் மேய்ச்சல் நிலங்களும்,[a] **18** ஆனதோத்தும்[b] அதன் மேய்ச்சல்
நிலங்களும், அல்மோனும் அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்தம்,
நான்கு நகரங்கள் கொடுக்கப்பட்டன.

19 ஆரோனின் வழிவந்த குருமார்களுக்கு 13 நகரங்களும் அவற்றின்
மேய்ச்சல் நிலங்களும் கொடுக்கப்பட்டன.[c]

20 லேவியர்களான மற்ற கோகாத்தியர்களுக்கு எப்பிராயீம் கோத்தி
ரத்தாரின் பங்கிலிருந்து குலுக்கல் முறையில் நகரங்கள் கொடுக்கப்பட்டன.
21 கொலையாளிக்கு அடைக்கல நகரமாக[d] இருந்த சீகேமும்[e] எப்பிராயீம்
மலைப்பகுதியிலுள்ள அதன் மேய்ச்சல் நிலங்களும், கேசேரும்[f] அதன்
மேய்ச்சல் நிலங்களும், **22** கிப்சாயீமும் அதன் மேய்ச்சல் நிலங்களும்,
பெத்-ஓரோனும்[g] அதன் மேய்ச்சல் நிலங்களும் அவர்களுக்குக் கொடுக்
கப்பட்டன. ஆக மொத்தம், நான்கு நகரங்கள் கொடுக்கப்பட்டன.

23 தாண் கோத்திரத்தாரின் பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட நகரங்கள்
இவைதான்: எல்தேக்கேயும் அதன் மேய்ச்சல் நிலங்களும், கிபெத்தோ
னும் அதன் மேய்ச்சல் நிலங்களும், **24** ஆயலோனும்[h] அதன் மேய்ச்சல்
நிலங்களும், காத்-ரிம்மோனும் அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்
தம், நான்கு நகரங்கள் கொடுக்கப்பட்டன.

25 மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருடைய பங்கிலிருந்து கொடுக்கப்
பட்ட நகரங்கள் இவைதான்: தானாக்கும்[i] அதன் மேய்ச்சல் நிலங்களும்,
காத்-ரிம்மோனும் அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்தம், இரண்டு
நகரங்கள் கொடுக்கப்பட்டன.

26 கோகாத்தியர்களில் மற்ற குடும்பங்களுக்கு 10 நகரங்களும் அவற்
றின் மேய்ச்சல் நிலங்களும் கொடுக்கப்பட்டன.

27 லேவியின் வம்சத்தில் வந்த கெர்சோனியர்களுக்கு[j] மனாசேயின்
பாதிக் கோத்திரத்தாருடைய பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட நகரங்கள்
இவைதான்: கொலையாளிக்கு அடைக்கலம் தரும் நகரமாகிய பாசானி
லுள்ள கோலானும்[k] அதன் மேய்ச்சல் நிலங்களும், பெயேஸ்திராவும்
அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்தம், இரண்டு நகரங்கள் கொடுக்
கப்பட்டன.

28 இசக்கார் கோத்திரத்தாரின் பங்கிலிருந்து[l] கொடுக்கப்பட்ட நகரங்கள்
இவைதான்: கிஷியோனும் அதன் மேய்ச்சல் நிலங்களும், தாபராத்தும்[m]
அதன் மேய்ச்சல் நிலங்களும், **29** யர்மூத்தும் அதன் மேய்ச்சல் நிலங்க
ளும், என்-கன்னீமும் அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்தம்,
நான்கு நகரங்கள் கொடுக்கப்பட்டன.

30 ஆசேர் கோத்திரத்தாரின் பங்கிலிருந்து[n] கொடுக்கப்பட்ட நகரங்
கள் இவைதான்: மிஷயாலும் அதன் மேய்ச்சல் நிலங்களும், அப்தோனும்
அதன் மேய்ச்சல் நிலங்களும், **31** எல்காத்தும்[o] அதன் மேய்ச்சல் நிலங்
களும், ரேகோபும்[p] அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்தம், நான்கு
நகரங்கள் கொடுக்கப்பட்டன.

32 நப்தலி கோத்திரத்தாரின் பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட நகரங்கள்
இவைதான்: கொலையாளிக்கு அடைக்கலம் தரும் நகரமாகிய[q] கலிலேயா
விலுள்ள கேதேசும்[r] அதன் மேய்ச்சல் நிலங்களும், அம்மோத்-தோரும்
அதன் மேய்ச்சல் நிலங்களும், கர்தானும் அதன் மேய்ச்சல் நிலங்களும்.
ஆக மொத்தம், மூன்று நகரங்கள் கொடுக்கப்பட்டன.

அதி. 21
a 1நா 6:57, 60
b எரே 1:1
c லேவி 25: 33, 34; எண் 35:4
d எண் 35:11, 15
e யோசு 20:7; 1ரா 12:1
f யோசு 16:10
g யோசு 16:1, 3; யோசு 18: 11, 13
h யோசு 10:12; நியா 1:35; 2நா 28:18
i யோசு 17:11
j யோசு 21:6
k 1நா 6:71
l 1நா 6:72, 73
m யோசு 19: 12, 16
n 1நா 6:74, 75
o யோசு 19: 25, 31
p யோசு 19: 28, 31; நியா 1:31
q எண் 35: 14, 15
r யோசு 20:7

33 கெர்சோனியர்களின் குடும்பங்களுக்கு 13 நகரங்களும் அவற்றின்
மேய்ச்சல் நிலங்களும் கொடுக்கப்பட்டன.

34 மற்ற லேவியர்களான மெராரியர்களுக்கு[a] செபுலோன் கோத்தி
ரத்தாரின் பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட நகரங்கள்[b] இவைதான்: யொக்னி
யாமும்[c] அதன் மேய்ச்சல் நிலங்களும், கர்தாவும் அதன் மேய்ச்சல்
நிலங்களும், **35** திம்னாகுவும் அதன் மேய்ச்சல் நிலங்களும், நகலாலும்[d]
அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்தம், நான்கு நகரங்கள் கொடுக்
கப்பட்டன.

36 ரூபன் கோத்திரத்தாரின் பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட நகரங்கள்
இவைதான்: பேசேரும்[e] அதன் மேய்ச்சல் நிலங்களும், யாகாசும் அதன்
மேய்ச்சல் நிலங்களும்,[f] **37** கெதெமோத்தும் அதன் மேய்ச்சல் நிலங்க
ளும், மேபாகாத்தும் அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்தம், நான்கு
நகரங்கள் கொடுக்கப்பட்டன.

38 காத் கோத்திரத்தாரின் பங்கிலிருந்து[g] கொடுக்கப்பட்ட நகரங்கள்
இவைதான்: கொலையாளிக்கு அடைக்கலம் தரும் நகரமாகிய கீலேயாத்தி
லுள்ள ராமோத்தும்[h] அதன் மேய்ச்சல் நிலங்களும், மக்னாயீமும்[i] அதன்
மேய்ச்சல் நிலங்களும், **39** எஸ்போனும்[j] அதன் மேய்ச்சல் நிலங்களும்,
யாசேரும்[k] அதன் மேய்ச்சல் நிலங்களும். ஆக மொத்தம், நான்கு நகரங்
கள் கொடுக்கப்பட்டன.

40 மற்ற லேவியர்களான மெராரியர்களுக்கு மொத்தம் 12 நகரங்கள்
கொடுக்கப்பட்டன.

41 இஸ்ரவேலர்களின் பகுதியில் லேவியர்களுக்கு மொத்தம் 48 நகரங்க
ளும் அவற்றின் மேய்ச்சல் நிலங்களும் கொடுக்கப்பட்டன.[l] **42** அந்த நக
ரங்கள் ஒவ்வொன்றைச் சுற்றிலும் மேய்ச்சல் நிலங்கள் இருந்தன. எல்லா
நகரங்களுக்குமே அப்படி மேய்ச்சல் நிலங்கள் இருந்தன.

43 இஸ்ரவேலர்களின் முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்த[m] எல்லா
தேசத்தையும் யெகோவா அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் அதைச்
சொந்தமாக்கிக்கொண்டு, அங்கே குடியிருந்தார்கள்.[n] **44** அதோடு, அவர்
களுடைய முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்தபடியே, தேசமெங்கும்
அவர்களுக்கு யெகோவா அமைதி தந்தார்.[o] எந்த எதிரியினாலும்
அவர்களை எதிர்க்க முடியவில்லை.[p] எல்லா எதிரிகளையும் அவர்களு
டைய கையில் யெகோவா கொடுத்தார்.[q] **45** இஸ்ரவேல் ஜனங்களுக்கு
யெகோவா கொடுத்த நல்ல வாக்குறுதிகளில் ஒரு வாக்குறுதிகூட* நிறை
வேறாமல் போகவில்லை. அவை எல்லாமே நிறைவேறின.[r]

22 ரூபன் கோத்திரத்தாரையும் காத் கோத்திரத்தாரையும் மனாசேயின்
பாதிக் கோத்திரத்தாரையும் யோசுவா கூப்பிட்டு, **2** “யெகோவா
வின் ஊழியராகிய மோசே சொன்ன எல்லாவற்றையும்[s] நீங்கள் செய்தி
ருக்கிறீர்கள். நான் கொடுத்த எல்லா கட்டளைகளையும் கேட்டு நடந்திருக்
கிறீர்கள்.[t] **3** இவ்வளவு காலமாக, உங்கள் சகோதரர்களை நீங்கள்
கைவிடவில்லை.[u] உங்கள் கடவுளாகிய யெகோவாவின் கட்டளைகளைக்
கடைப்பிடித்து வந்திருக்கிறீர்கள்.[v] **4** உங்கள் சகோதரர்களுக்கு வாக்கு
றுதி கொடுத்தபடியே, உங்கள் கடவுளாகிய யெகோவா இப்போது அமைதி

அதி. 21
a யோசு 21:7
b 1நா 6:77
c யோசு 19:10, 11
d நியா 1:30
e உபா 4:41-43; யோசு 20:8
f 1நா 6:78, 79
g 1நா 6:80, 81
h யோசு 20:8, 9; 1ரா 22:3
i ஆதி 32:2; 2சா 2:8
j எண் 21:26; எண் 32:37
k எண் 32:1
l எண் 35:5, 7
m ஆதி 13:14, 15; ஆதி 15:18; ஆதி 26:3; ஆதி 28:4
n யாத் 23:30
o யாத் 33:14; உபா 12:10; யோசு 1:13; யோசு 11:23; யோசு 22:4
p உபா 28:7
q உபா 7:24; உபா 31:3
r யோசு 23:14; 1ரா 8:56; எபி 6:18

அதி. 22
s எண் 32:20-22; உபா 3:18
t யோசு 1:16
u யோசு 11:18
v எண் 32:25-27

21:45 * வே.வா., “வார்த்தைகூட.”

தந்திருக்கிறார்.[a] அதனால், யோர்தானின் கிழக்கே யெகோவாவின் ஊழிய
ராகிய மோசே தந்த தேசத்தில்[b] இருக்கிற உங்கள் கூடாரங்களுக்கு இப்
போது திரும்பிப் போங்கள். **5** ஆனால், யெகோவாவின் ஊழியராகிய
மோசே கொடுத்த கட்டளைக்கும் திருச்சட்டத்துக்கும் கீழ்ப்படிந்து நடக்க
மிகவும் கவனமாக இருங்கள்.[c] உங்கள் கடவுளாகிய யெகோவாவை
நேசித்து,[d] அவருடைய வழிகளில் நடந்து,[e] அவருடைய கட்டளைகளைக்
கடைப்பிடித்து,[f] அவருக்கு உண்மையாக* இருந்து,[g] உங்கள் முழு இதயத்
தோடும் முழு மூச்சோடும்[h] அவருக்குச் சேவை செய்ய[i] கவனமாக இருங்
கள்" என்று சொன்னார்.

6 பின்பு யோசுவா அவர்களை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார். அவர்
கள் தங்களுடைய கூடாரங்களுக்குப் போனார்கள். **7** மனாசேயின் பாதிக்
கோத்திரத்துக்கு பாசானில் மோசே பங்கு கொடுத்திருந்தார்.[j] இன்னொரு
பாதிக் கோத்திரத்துக்கு யோர்தானின் மேற்குப் பக்கத்தில் அவர்களுடைய
சகோதரர்களோடு யோசுவா ஒரு பங்கு கொடுத்திருந்தார்.[k] அவர்களைக்
கூடாரங்களுக்கு அனுப்பியபோது யோசுவா அவர்களை ஆசீர்வதித்து,
8 "எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய செல்வங்களையும் தங்கத்தையும் வெள்
ளியையும் செம்பையும் இரும்பையும் ஏராளமாக எடுத்துக்கொண்டு போங்
கள். துணிமணிகளை அள்ளிக்கொண்டு போங்கள். ஏராளமான கால்ந
டைகளை ஓட்டிக்கொண்டு போங்கள்.[l] அவற்றையெல்லாம் கொண்டுபோய்
உங்கள் சகோதரர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்"[m] என்று சொன்னார்.

9 அப்போது, ரூபன் கோத்திரத்தாரும் காத் கோத்திரத்தாரும் மனாசே
யின் பாதிக் கோத்திரத்தாரும் கானான் தேசத்திலுள்ள சீலோவிலிருந்த மற்ற
இஸ்ரவேலர்களைவிட்டுப் புறப்பட்டார்கள். மோசே மூலம்[n] யெகோவா
கட்டளை கொடுத்தபடி தாங்கள் முன்பு குடியேறியிருந்த கீலேயாத் பிர
தேசத்துக்கே[o] அவர்கள் திரும்பிப் போனார்கள். **10** ரூபன் கோத்திரத்தா
ரும் காத் கோத்திரத்தாரும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரும் கானான்
தேசத்திலுள்ள யோர்தான் பிரதேசத்துக்கு வந்துசேர்ந்தபோது, யோர்தா
னுக்குப் பக்கத்தில் பிரமாண்டமான பலிபீடத்தைக் கட்டினார்கள். **11** மற்ற
இஸ்ரவேலர்கள் இதைக் கேள்விப்பட்டபோது,[p] "பாருங்கள், கானான்
தேசத்தின் எல்லையில், இஸ்ரவேலர்களுக்குச் சொந்தமான யோர்தான் பிர
தேசத்தில், ரூபன் கோத்திரத்தாரும் காத் கோத்திரத்தாரும் மனாசேயின்
பாதிக் கோத்திரத்தாரும் ஒரு பலிபீடத்தைக் கட்டியிருக்கிறார்கள்" என்றார்
கள். **12** அதனால், அவர்களை எதிர்த்துப் போர் செய்ய இஸ்ரவேலர்கள்
எல்லாரும் சீலோவில் ஒன்றுகூடினார்கள்.[q]

13 அப்போது, குருவாகிய எலெயாசாரின் மகன் பினெகாசை[r] கீலேயாத்
பிரதேசத்திலுள்ள ரூபன் கோத்திரத்தாரிடமும் காத் கோத்திரத்தாரிடமும்
மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரிடமும் இஸ்ரவேலர்கள் அனுப்பினார்
கள். **14** இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒரு தந்தைவ
ழிக் குடும்பத் தலைவர் என 10 தலைவர்களை அவரோடு அனுப்பினார்
கள். அதாவது, இஸ்ரவேலில் ஆயிரக்கணக்கானோருக்கு* தலைவர்களாக[s]
இருந்தவர்களை அனுப்பினார்கள். **15** இவர்கள் கீலேயாத் பிரதேசத்தி

22:5 * நே.மொ., "அவரைப் பற்றிக்கொண்டு." **22:14** * வே.வா., "ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு."

அதி. 22
a யோசு 21:44
b எண் 32:33
c உபா 6:6; உபா 12:32; 2ரா 21:8
d உபா 6:5; உபா 11:1; மத் 22:37
e உபா 10:12
f உபா 13:4; 1யோ 5:3
g உபா 4:4; உபா 10:20; யோசு 23:8
h உபா 4:29; உபா 11:13; மாற் 12:30, 33
i உபா 6:13; யோசு 24:15; லூ 4:8
j யோசு 13:29, 30
k யோசு 17:5
l உபா 28:8
m எண் 31:27
n எண் 32:33
o எண் 32:1
p உபா 13:12-15
q யோசு 18:1; யோசு 19:51
r யாத் 6:25; எண் 25:11; நியா 20:28
s எண் 1:16; உபா 1:13

லுள்ள ரூபன் கோத்திரத்தாரிடமும் காத் கோத்திரத்தாரிடமும் மனாசேயின்
பாதிக் கோத்திரத்தாரிடமும் வந்து,
16 “யெகோவாவின் ஜனங்களுடைய சார்பாக நாங்கள் கேட்கிறோம்,
‘இஸ்ரவேலின் கடவுளுக்கு எதிராக ஏன் இப்படிப்பட்ட துரோகத்தைச் செய்
தீர்கள்?[a] நீங்கள் யெகோவாவின் வழியைவிட்டு விலகிப் போய்விட்டீர்கள்.
யெகோவாவின் கட்டளையை மீறி உங்களுக்காக ஒரு பலிபீடத்தைக் கட்
டியிருக்கிறீர்கள்.[b] **17** பேயோரில் நாம் செய்த பாவம் போதாதா? அன்
றைக்கு யெகோவாவின் ஜனங்களை கொள்ளைநோய் தாக்கியதை[c] மறந்
துவிட்டீர்களா? அந்தப் பாவத்தின் விளைவுகள் இன்னும் நம்மை விட்ட
பாடில்லை. **18** அதற்குள் யெகோவாவின் வழியைவிட்டே நீங்கள் வில
கிப் போக வேண்டுமா? இன்றைக்கு நீங்கள் யெகோவாவின் பேச்சை மீறி
னால் நாளைக்கு எல்லா இஸ்ரவேலர்கள்மேலும் அவருடைய கோபம் பற்
றியெரியுமே.[d] **19** உங்களுடைய பாவத்தைப் போக்க ஒரு பலிபீடம்
வேண்டுமென்று நீங்கள் நினைத்தால், யெகோவாவின் கூடாரம்[e] இருக்கிற
தேசத்துக்கு வாருங்கள். யெகோவாவின் தேசத்துக்கு[f] வந்து எங்க
ளோடு குடியிருங்கள். யெகோவாவின் பேச்சுக்கு அடங்கி நடங்கள். நம்
கடவுளாகிய யெகோவாவுக்கு ஏற்கெனவே ஒரு பலிபீடம் இருக்கும்போது
இன்னொரு பலிபீடத்தைக் கட்டி எங்கள்மேலும் பாவத்தைச் சுமத்திவிடா
தீர்கள்.[g] **20** சேராகுவின் மகனாகிய ஆகான்,[h] அழிக்க வேண்டிய பொரு
ளைத் திருடி துரோகம் செய்தபோது என்ன நடந்தது என்று உங்களுக்குத்
தெரியாதா? எல்லா இஸ்ரவேலர்கள்மேலும் கடவுளுக்குப் பயங்கர கோபம்
வந்தது,[i] இல்லையா? அவன் செய்த பாவத்துக்காக மற்றவர்களும் செத்துப்
போகவில்லையா?’”[j] என்றார்கள்.

21 அதற்கு ரூபன் கோத்திரத்தாரும் காத் கோத்திரத்தாரும் மனாசே
யின் பாதிக் கோத்திரத்தாரும், இஸ்ரவேலிலுள்ள ஆயிரக்கணக்கானோரின்
தலைவர்களிடம்,[k] **22** “யெகோவாதான் தேவாதி தேவன்! யெகோவாதான்
தேவாதி தேவன்![l] அவருக்கு உண்மை தெரியும், இஸ்ரவேலர்களும் தெரிந்
துகொள்வார்கள். நாங்கள் யெகோவாவின் பேச்சை மீறி அவருக்குத் துரோ
கம் பண்ணியிருந்தால், எங்களை இன்றைக்கே ஒழித்துக்கட்டுங்கள்.
23 யெகோவாவைவிட்டு விலகுவதற்காக நாங்கள் பலிபீடம் கட்டியிருந்
தால், தகன பலிகளையும் உணவுக் காணிக்கைகளையும் சமாதான பலிகளை
யும் செலுத்துவதற்காக அதைக் கட்டியிருந்தால், யெகோவா எங்களுக்குத்
தண்டனை கொடுக்கட்டும்.[m] **24** உண்மையில், வேறொரு காரணத்துக்கா
கத்தான் நாங்கள் அதைக் கட்டினோம். எதிர்காலத்தில் உங்களுடைய பிள்
ளைகள் எங்களுடைய பிள்ளைகளிடம், “எங்கள் இடத்துக்கு வந்து இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவாவை வணங்க உங்களுக்கு உரிமை
இல்லை.* **25** ரூபன் கோத்திரத்தையும் காத் கோத்திரத்தையும் சேர்ந்த
உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் இந்த யோர்தானை யெகோவா
எல்லையாக வைத்திருக்கிறார், யெகோவாவுடன் உங்களுக்கு எந்தப் பங்
கும் இல்லை” என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று கவலைப்பட்
டோம். யெகோவாவை வணங்கவிடாமல் உங்களுடைய பிள்ளைகள் எங்க
ளுடைய பிள்ளைகளைத் தடுத்துவிடுவார்களோ என்று பயந்தோம்.

22:24 *நே.மொ., “இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?”

அதி. 22
a யோசு 22: 11, 12
b உபா 12: 13, 14
c எண் 25:3, 9 உபா 4:3
d யோசு 7:1 1நா 21:14
e யோசு 18:1
f எண் 34:2 யோசு 1:11
g உபா 12: 13, 14
h யோசு 7:1
i யோசு 7: 11, 15
j யோசு 7:5 யோசு 7: 24, 25
k யோசு 22: 13, 14
l உபா 10:17
m உபா 12:11, 13

26 அதனால்தான், இந்தப் பலிபீடத்தைக் கட்ட நாங்கள் முடிவு
எடுத்தோம். ஆனால், தகன பலிகளையோ மற்ற பலிகளையோ செலுத்துவ
தற்காக இதைக் கட்டவில்லை. **27** நாங்கள் யெகோவாவின் சன்னிதியில்
தகன பலிகளையும் சமாதான பலிகளையும் மற்ற பலிகளையும் செலுத்தி
அவரை வணங்குவோம்[a] என்பதற்கு சாட்சியாகத்தான் இதைக் கட்டி
னோம்.[b] உங்களுக்கும் எங்களுக்கும் எங்களுடைய வருங்காலச் சந்ததிக
ளுக்கும் நடுவே இது ஒரு சாட்சியாக இருக்கும். எதிர்காலத்தில் உங்களு
டைய பிள்ளைகள் எங்களுடைய பிள்ளைகளிடம், ‘யெகோவாவுடன்
உங்களுக்கு எந்தப் பங்கும் இல்லை’ என்று சொல்லிவிடக் கூடாதே.
28 எங்களிடமும் எங்கள் வருங்காலச் சந்ததிகளிடமும் ஒருவேளை உங்
களுடைய பிள்ளைகள் அப்படிச் சொன்னால், ‘யெகோவாவின் பலிபீ
டத்தைப் போலவே எங்கள் முன்னோர்கள் கட்டியிருக்கிற இந்தப் பலிபீடத்
தைப் பாருங்கள். தகன பலிகளையோ மற்ற பலிகளையோ
செலுத்துவதற்காக இது கட்டப்படவில்லை. நாங்களும் உங்களைப்
போலவே இஸ்ரவேலின் கடவுளை வணங்குகிறோம் என்பதற்குச் சாட்சியா
கத்தான் கட்டப்பட்டிருக்கிறது’ என்று சொல்வோம். **29** நம் கடவுளாகிய
யெகோவாவின் கூடாரத்துக்கு முன்னால் இருக்கிற பலிபீடத்தைத் தவிர
வேறொரு பலிபீடத்தைக் கட்டி அதன்மேல் தகன பலிகளையும் உணவுக்
காணிக்கைகளையும் மற்ற பலிகளையும் செலுத்துவதை எங்களால் நினைத்
துக்கூடப் பார்க்க முடியாது![c] யெகோவாவின் பேச்சை மீறுவதையோ
யெகோவாவைவிட்டு விலகுவதையோ[d] எங்களால் யோசித்துக்கூடப்
பார்க்க முடியாது!” என்று சொன்னார்கள்.

30 ரூபன், காத், மனாசே வம்சத்தார் சொன்னதை குருவாகிய பினெகா
சும் இஸ்ரவேல் ஜனங்களின் தலைவர்களும் ஆயிரக்கணக்கானோரின்
தலைவர்களும் கேட்டு சமாதானம் அடைந்தார்கள்.[e] **31** அதனால் குரு
வாகிய எலெயாசாரின் மகன் பினெகாஸ், ரூபன் வம்சத்தாரையும் காத்
வம்சத்தாரையும் மனாசே வம்சத்தாரையும் பார்த்து, “யெகோவா நம் நடு
வில் இருக்கிறார் என்பதை இன்று நாங்கள் தெரிந்துகொண்டோம். ஏனென்
றால், யெகோவாவுக்கு விரோதமாக நீங்கள் இந்தத் துரோகத்தைச் செய்ய
வில்லை. இஸ்ரவேலர்களை இப்போது யெகோவாவின் கையிலிருந்து
காப்பாற்றியிருக்கிறீர்கள்” என்று சொன்னார்கள்.

32 அப்போது, கீலேயாத் பிரதேசத்திலுள்ள ரூபன் கோத்திரத்தார் மற்
றும் காத் கோத்திரத்தாரிடமிருந்து குருவாகிய எலெயாசாரின் மகன் பினெ
காசும் கோத்திரத் தலைவர்களும் புறப்பட்டு, கானான் தேசத்திலுள்ள மற்ற
இஸ்ரவேலர்களிடம் வந்து விஷயத்தைச் சொன்னார்கள். **33** அதைக்
கேட்டபோது இஸ்ரவேலர்கள் சமாதானம் அடைந்து, கடவுளைப் போற்றிப்
புகழ்ந்தார்கள். ரூபன் கோத்திரத்தாருக்கும் காத் கோத்திரத்தாருக்கும் எதி
ராகப் போர் செய்வதைப் பற்றியோ, அவர்களுடைய தேசத்தை அழிப்ப
தைப் பற்றியோ அதற்குப் பிறகு அவர்கள் எதுவும் பேசவில்லை.

34 “யெகோவாதான் உண்மைக் கடவுள் என்பதற்கு அந்தப் பலிபீடம்
எங்களுக்கும் உங்களுக்கும் சாட்சி” என்று சொல்லி ரூபன் கோத்திரத்தா
ரும் காத் கோத்திரத்தாரும் அதற்குப் பெயர் வைத்தார்கள்.*

22:34 * அவர்கள் சொன்ன வார்த்தைகளை வைத்துப் பார்க்கும்போது, அந்தப் பலிபீடத்துக்கு “சாட்சி” என்று பெயர் வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அதி. 22

a உபா 12:5, 6

b ஆதி 31:48; யோசு 24:27

c உபா 12:14

d உபா 6:14

e யோசு 22:13, 14

அதி. 23
a யாத் 33:14
லேவி 26:6
யோசு 21:44
b யோசு 13:1
c உபா 16:18
d உபா 31:28
e உபா 20:4
யோசு 10:11-14
யோசு 10:40, 42
f உபா 7:1
g யோசு 18:10
h யோசு 13:2-6
i யாத் 23:30
யாத் 33:2
உபா 11:23
j எண் 33:53
k யாத் 24:7
உபா 17:18
உபா 31:26
l உபா 5:32
உபா 12:32
யோசு 1:7, 8
m யாத் 23:33
உபா 7:2
n யாத் 23:13
o யாத் 20:5
p உபா 10:20
யோசு 22:5
q உபா 11:23
r யோசு 1:3-5
s உபா 28:7
t யாத் 23:27
உபா 3:22
u லேவி 26:8
நியா 3:31
2சா 23:8
v உபா 6:5
w உபா 4:9
யோசு 22:5
x யாத் 23:29
யோசு 13:2-6
y யாத் 34:16
உபா 7:3
நியா 3:6
1ரா 11:4
எஸ்றா 9:2
z நியா 2:3, 21

23 சுற்றியிருந்த எல்லா எதிரிகளிடமிருந்தும் இஸ்ரவேலர்களுக்கு
யெகோவா அமைதி தந்து[a] ரொம்பக் காலம் ஆகியிருந்தது. யோசு
வாவுக்கும் ரொம்பவே வயதாகிவிட்டது.[b] **2** அப்போது, எல்லா இஸ்ர
வேலர்களையும் அவர்களுடைய பெரியோர்களையும்* தலைவர்களையும்
நியாயாதிபதிகளையும் அதிகாரிகளையும்[c] அவர் கூப்பிட்டு,[d] "எனக்கு
ரொம்ப வயதாகிவிட்டது. **3** உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்
காக இந்தத் தேசங்கள் எல்லாவற்றையும் தோற்கடித்ததை உங்கள் கண்க
ளாலேயே பார்த்திருக்கிறீர்கள். உங்கள் கடவுளாகிய யெகோவாதான் உங்
களுக்காகப் போர் செய்தார்.[e] **4** இதோ, நான் யோர்தானிலிருந்து மேற்கே
பெருங்கடல்வரை* இருக்கிற எல்லா தேசத்தாரையும் உங்கள் முன்னா
லிருந்து துரத்தியடித்தேன்.[f] அவர்களுடைய தேசத்தைக் குலுக்கல் முறை
யில் உங்களுக்குப் பங்குபோட்டுக் கொடுத்திருக்கிறேன்.[g] அவர்களில்
கொஞ்சம் பேர் இன்னும் இருந்தாலும் இந்தத் தேசம் உங்களுக்குச் சொந்த
மானதுதான்.[h] **5** உங்கள் கடவுளாகிய யெகோவாதான் அவர்களை உங்
கள் முன்னாலிருந்து துரத்தியடித்தார்,[i] உங்களுக்காகத்தான் அவர்களைத்
துரத்தியடித்தார். உங்கள் கடவுளாகிய யெகோவா வாக்குறுதி தந்தபடியே[j]
அவர்களுடைய தேசத்தைச் சொந்தமாக்கிக்கொண்டீர்கள்.

6 மோசேயின் திருச்சட்ட புத்தகத்தில்[k] எழுதப்பட்டிருக்கிற எல்லாவற்
றையும் நீங்கள் ரொம்பத் தைரியத்தோடு கடைப்பிடிக்க வேண்டும். அதை
விட்டு வலது பக்கமோ இடது பக்கமோ விலகிப்போகக் கூடாது.[l] **7** உங்
கள் நடுவில் எஞ்சியிருக்கிற இந்தத் தேசத்தாரோடு சேரவே கூடாது.[m]
அவர்களுடைய தெய்வங்களின் பெயர்களை உங்கள் வாயால்கூட உச்சரிக்
கக் கூடாது,[n] அந்தப் பெயர்களில் சத்தியம் பண்ணவும் கூடாது. அந்தத்
தெய்வங்களை நீங்கள் கும்பிடவோ அவற்றுக்கு முன்னால் தலைவணங்
கவோ கூடாது.[o] **8** இன்றுவரை நீங்கள் செய்ததுபோல் இனிமேலும் உங்
கள் கடவுளாகிய யெகோவாவுக்கு உண்மையாக* இருக்க வேண்டும்.[p]
9 பெரியதாகவும் பலம்படைத்ததாகவும் இருக்கிற தேசங்களை உங்கள்
முன்னாலிருந்து யெகோவா துரத்திவிடுவார்.[q] இன்றுவரை எந்த மனுஷ
னால் உங்களை எதிர்த்து நிற்க முடிந்திருக்கிறது?[r] **10** உங்களுக்கு வாக்கு
றுதி தந்தபடியே,[s] உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்காகப் போர்
செய்வார்.[t] அப்போது, உங்களில் ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்தியடிப்
பான்.[u] **11** அதனால், உங்கள் கடவுளாகிய யெகோவாமேல் வைத்திருக்
கிற அன்பை[v] ஒருநாளும் விட்டுவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.[w]

12 நீங்கள் அவரைவிட்டு விலகி, உங்கள் நடுவில் எஞ்சியிருக்கிற
தேசத்தாருடன்[x] சேர்ந்துகொண்டு, அவர்களோடு சம்பந்தம் பண்ணி
னால்,*[y] நீங்களும் அவர்களும் ஒன்றுக்குள் ஒன்றாய்ப் பழகினால்,
13 உங்கள் கடவுளாகிய யெகோவா இனி அவர்களை உங்கள் முன்னாலி
ருந்து துரத்திவிட மாட்டார்[z] என்பதை நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள்.
உங்கள் கடவுளாகிய யெகோவா தந்திருக்கிற இந்த நல்ல தேசத்திலிருந்து
நீங்கள் அழிந்துபோகும்வரை அவர்கள் உங்களுக்குக் கண்ணியாகவும்,

23:2 *வே.வா., "மூப்பர்களையும்." **23:4** *அதாவது, "மத்தியதரைக் கடல்வரை." **23:8** *நே.மொ., "யெகோவாவைப் பற்றிக்கொண்டு." **23:12** *அதாவது, "அவர்களுக்குப் பெண் கொடுத்து, அவர்களிடமிருந்து பெண் எடுத்தால்."

உங்கள் முதுகுக்குச் சாட்டையாகவும்,[a] உங்கள் கண்களுக்கு முட்களாகவும்
இருப்பார்கள் என்பதை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள்.

14 எனக்குச் சாவு நெருங்கிவிட்டது. உங்கள் கடவுளாகிய யெகோவா
கொடுத்த நல்ல வாக்குறுதிகளில் ஒன்றுகூட நிறைவேறாமல் போக
வில்லை என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும்.* அவை எல்லாமே
நிறைவேறியிருக்கின்றன, அவற்றில் ஒரு வார்த்தைகூட பொய்த்துப்போக
வில்லை.[b] **15** ஆனால், உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுத்த நல்ல
வாக்குறுதிகள் எல்லாவற்றையும் யெகோவா நிறைவேற்றியது போலவே[c]
சாபங்கள் எல்லாவற்றையும் நிச்சயம் நிறைவேற்றுவார். உங்கள் கடவுளா
கிய யெகோவா தந்த இந்த நல்ல தேசத்திலிருந்து உங்களை அழித்துவிடு
வார்.[d] **16** உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுத்த ஒப்பந்தத்தை மீறி
மற்ற தெய்வங்களைக் கும்பிட்டால், யெகோவாவுக்கு உங்கள்மேல் பயங்
கர கோபம் வரும்.[e] அவர் தந்திருக்கிற இந்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள்
சீக்கிரமாக அழிந்துபோவீர்கள்”[f] என்று சொன்னார்.

24 பின்பு யோசுவா, இஸ்ரவேல் கோத்திரத்தாரையும் பெரியோர்க
ளையும்* தலைவர்களையும் நியாயாதிபதிகளையும் அதிகாரிகளை
யும்[g] சீகேமில் ஒன்றுகூட்டினார். அவர்கள் உண்மைக் கடவுளின் முன்னி
லையில் வந்து நின்றார்கள். **2** அப்போது யோசுவா அவர்களைப் பார்த்து,
“இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா உங்களிடம், ‘ரொம்பக் காலத்
துக்கு முன்பு,[h] ஆற்றுக்கு* அந்தப் பக்கத்தில் குடியிருந்த உங்களுடைய
முன்னோர்கள்[i] மற்ற தெய்வங்களைக் கும்பிட்டு வந்தார்கள்.[j] ஆபிரகாமுக்
கும் நாகோருக்கும் அப்பாவான தேராகு அவர்களில் ஒருவன்.

3 உங்களுடைய மூதாதையான ஆபிரகாமை[k] நான் ஆற்றுக்கு அந்தப்
பக்கத்திலிருந்து வரவைத்து, கானான் தேசம் முழுவதும் அவனை
நடக்க வைத்தேன். அவனுடைய சந்ததியைப் பெருக வைத்தேன்.[l] அவ
னுக்கு ஈசாக்கைத் தந்தேன்,[m] **4** ஈசாக்குக்கு யாக்கோபையும் ஏசாவையும்
தந்தேன்.[n] பின்பு, ஏசாவுக்கு சேயீர் மலைப்பகுதியைச் சொத்தாகக் கொடுத்
தேன்.[o] யாக்கோபும் அவனுடைய மகன்களும் எகிப்துக்குப் போனார்
கள்.[p] **5** பிற்பாடு மோசேயையும் ஆரோனையும் அனுப்பி,[q] எகிப்தியர்க
ளுக்குக் கொடிய தண்டனைகளைக் கொடுத்தேன்.[r] அதன்பின் உங்களை
அங்கிருந்து விடுதலை செய்துகொண்டு வந்தேன். **6** உங்களுடைய முன்
னோர்களை எகிப்திலிருந்து நான் கூட்டிக்கொண்டு வந்தபோது,[s] எகிப்தியர்
கள் போர் ரதங்களோடும் குதிரைப்படைகளோடும் செங்கடல்வரை அவர்
களைத் துரத்திக்கொண்டு வந்தார்கள்.[t] **7** அப்போது அவர்கள் யெகோவா
வாகிய என்னிடம் கதறினார்கள்.[u] அதனால், நான் எகிப்தியர்களுக்கும்
அவர்களுக்கும் இடையில் இருட்டை உண்டாக்கினேன். கடல்நீர் எகிப்தியர்
கள்மேல் பாய்ந்து வந்து அவர்களை மூடியது.[v] எகிப்தில் நான் செய்ததை
உங்கள் கண்களாலேயே பார்த்தீர்கள்.[w] பின்பு, வனாந்தரத்தில் பல வருஷம்
தங்கியிருந்தீர்கள்.[x]

8 அதன்பின், யோர்தானுக்குக் கிழக்கில் வாழ்ந்த எமோரியர்களின்
தேசத்துக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு வந்தேன். அவர்கள் உங்களோடு
போர் செய்தார்கள்.[y] ஆனால் நான் அவர்களை உங்கள் கையில் கொடுத்

23:14 *வே.வா., “உங்கள் முழு இதயத்துக்கும் ஜீவனுக்கும் தெரியும்.” **24:1** *வே.வா., “மூப்பர்களையும்.” **24:2** *அதாவது, “யூப்ரடிஸ் ஆற்றுக்கு.”

அதி. 23
a எண் 33:55
b யோசு 21:45; 1ரா 8:56
c லேவி 26:3-12; உபா 28:1
d லேவி 26:14-17; உபா 28:15, 63
e 2ரா 24:20
f யோசு 23:12, 13

அதி. 24
g யாத் 18:25; யோசு 23:2
h ஆதி 11:28, 31
i ஆதி 11:26, 27
j யோசு 24:15
k ஆதி 12:1; நெ 9:7; அப் 7:2
l ஆதி 15:1, 5
m ஆதி 21:3
n ஆதி 25:26
o ஆதி 36:8; உபா 2:5
p ஆதி 46:2, 3
q யாத் 3:10
r யாத் 11:1
s யாத் 12:37
t யாத் 14:9
u யாத் 14:10
v யாத் 14:20, 27; சங் 106:11
w யாத் 3:20; உபா 4:34
x எண் 14:34
y எண் 21:23

தேன், நீங்கள் அவர்களுடைய தேசத்தைச் சொந்தமாக்கிக்கொண்டீர்கள்.
நான் அவர்களை உங்கள் முன்னால் அழித்தேன்.[a] **9** பின்பு, சிப்போ
ரின் மகனும் மோவாபின் ராஜாவுமாகிய பாலாக் இஸ்ரவேலோடு மோதி
னான். உங்களைச் சபிப்பதற்காக பெயோரின் மகன் பிலேயாமை வர வைத்
தான்.[b] **10** ஆனால், நான் பிலேயாமின் வேண்டுதலைக் கேட்கவில்லை.[c]
அதனால், அவன் மறுபடியும் மறுபடியும் உங்களை ஆசீர்வதித்தான்.[d] இப்
படி, அவனுடைய கையிலிருந்து உங்களைக் காப்பாற்றினேன்.[e]

11 பிறகு நீங்கள் யோர்தானைக் கடந்து[f] எரிகோவுக்கு வந்தீர்கள்.[g] எரி
கோவின் தலைவர்களும்* எமோரியர்களும் பெரிசியர்களும் கானானியர்க
ளும் ஏத்தியர்களும் கிர்காசியர்களும் ஏவியர்களும் எபூசியர்களும் உங்க
ளோடு போர் செய்தார்கள். ஆனால், நான் அவர்களை உங்கள் கையில்
கொடுத்தேன்.[h] **12** நீங்கள் அங்கு போவதற்கு முன்பே அவர்களை விரக்
தியடைய* வைத்தேன். எமோரியர்களுடைய இரண்டு ராஜாக்களைப்
போலவே இவர்களும் விரக்தியடைந்து, உங்கள் முன்னாலிருந்து ஓடிப்
போனார்கள்.[i] வாளாலோ வில்லாலோ நீங்கள் இவர்களைத் தோற்கடிக்க
வில்லை.[j] **13** நீங்கள் கஷ்டப்பட்டுக் கைப்பற்றாத* தேசத்தையும் நீங்கள்
கட்டாத நகரங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன்,[k] அவற்றில் குடியேறி
னீர்கள். நீங்கள் பயிர் செய்யாத திராட்சைத் தோட்டங்களிலிருந்தும் ஒலிவ
மரத் தோப்புகளிலிருந்தும் கிடைத்த விளைச்சலைச் சாப்பிட்டீர்கள்'[l] என்று
சொல்கிறார்.

14 அதனால் யெகோவாவுக்குப் பயந்து நடங்கள், உத்தமத்தோடும்
உண்மையோடும் அவருக்குச் சேவை செய்யுங்கள்.[m] ஆற்றுக்கு அந்தப்
பக்கத்திலும் எகிப்திலும் உங்கள் முன்னோர்கள் கும்பிட்டுவந்த தெய்வங்க
ளைத் தூக்கியெறிந்துவிட்டு,[n] யெகோவாவை வணங்குங்கள். **15** யெகோ
வாவை வணங்க உங்களுக்கு இஷ்டமில்லை என்றால், யாரை வணங்கு
வதென்று இன்றைக்கு நீங்களே முடிவு செய்யுங்கள்.[o] ஆற்றுக்கு அந்தப்
பக்கத்தில் உங்களுடைய முன்னோர்கள் வணங்கிய தெய்வங்களைக்
கும்பிடுவீர்களோ,[p] இப்போது நீங்கள் வாழ்கிற எமோரிய தேசத்தின் தெய்
வங்களைக் கும்பிடுவீர்களோ,[q] அது உங்கள் முடிவு. ஆனால், நானும்
என் குடும்பத்தாரும் யெகோவாவை மட்டும்தான் வணங்குவோம்” என்று
சொன்னார்.

16 அதற்கு ஜனங்கள், “யெகோவாவை விட்டுவிட்டு மற்ற தெய்
வங்களை வணங்குவதை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.
17 எங்கள் கடவுளாகிய யெகோவாதான் எங்களையும் எங்கள் முன்னோர்
களையும் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தார்,[r] எங்கள்
கண் முன்னால் மாபெரும் அற்புதங்களைச் செய்தார்,[s] நடந்துவந்த வழி
முழுவதும் எங்களைப் பாதுகாத்தார், கடந்துவந்த எல்லா தேசத்து ஜனங்க
ளின் கையிலிருந்தும் காப்பாற்றினார்.[t] **18** இந்தத் தேசத்தில் எங்க
ளுக்கு முன்னால் வாழ்ந்த எமோரியர்களையும் மற்ற எல்லா ஜனங்களை
யும் யெகோவாதான் துரத்தியடித்தார். அதனால் நாங்களும் யெகோவாவை
மட்டும்தான் வணங்குவோம், அவர்தான் எங்கள் கடவுள்” என்று சொன்
னார்கள்.

அதி. 24
- a நெ 9:22
- b எண் 22:2, 5; உபா 23:3, 4
- c எண் 22:12
- d எண் 23:11, 25; எண் 24:10
- e எண் 31:7, 49
- f யோசு 3:17
- g யோசு 5:10
- h யோசு 11:16; யோசு 21:44; எபி 11:30
- i யாத் 23:28; யோசு 2:9, 10
- j சங் 44:3
- k யோசு 11:14
- l உபா 6:10, 11; உபா 8:7, 8
- m ஆதி 17:1; உபா 10:12; உபா 18:13; 1சா 12:24
- n லேவி 17:7; எசே 23:8
- o உபா 30: 19, 20; 1ரா 18:21
- p யோசு 24:2
- q யாத் 23:32; உபா 7:25; நியா 6:10; நியா 10:6
- r யாத் 19:4; உபா 6:12; உபா 32:12
- s யாத் 14:31; உபா 4:34; உபா 29:2
- t யாத் 23:23

24:11 *அல்லது, “நிலச் சொந்தக்காரர்களும்.” **24:12** *அல்லது, “பீதியடைய.”
24:13 *வே.வா., “பெற்றுக்கொள்ளாத.”

19 அதற்கு யோசுவா ஜனங்களிடம், “உங்களால் யெகோவாவை
வணங்க முடியவில்லை. ஏனென்றால், அவர் பரிசுத்தமுள்ள கடவுள்,[a] எல்
லாரும் தன்னை மட்டுமே வணங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிற
கடவுள்.[b] அவர் உங்களுடைய குற்றங்களையும் பாவங்களையும் மன்
னிக்க மாட்டார்.[c] **20** நீங்கள் யெகோவாவை விட்டுவிட்டு மற்ற தெய்வங்
களைக் கும்பிட்டால், உங்களுக்கு நல்லது செய்த அவரே உங்களுக்கு எதி
ராகத் திரும்பி, உங்களை அழித்துப்போடுவார்”[d] என்று சொன்னார்.

21 ஆனால் ஜனங்கள் யோசுவாவிடம், “நாங்கள் கண்டிப்பாக யெகோ
வாவைத்தான் வணங்குவோம்!”[e] என்று சொன்னார்கள். **22** அதற்கு
யோசுவா, “யெகோவாவை வணங்குவதாக நீங்களே முடிவு எடுத்திருக்கி
றீர்கள், அதற்கு நீங்களே சாட்சிகள்”[f] என்று சொன்னார். அப்போது அவர்
கள், “ஆமாம், நாங்களே சாட்சிகள்” என்று சொன்னார்கள்.

23 அப்போது அவர், “அப்படியானால், உங்கள் நடுவில் இருக்கிற
பொய் தெய்வங்களைத் தூக்கிப்போடுங்கள். இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவாவிடம் முழு இதயத்தோடு திரும்புங்கள்” என்று சொன்னார்.
24 அதற்கு அந்த ஜனங்கள், “எங்கள் கடவுளாகிய யெகோவாவை மட்டும்
தான் வணங்குவோம், அவர் சொல்வதை நிச்சயம் கேட்போம்!” என்றார்கள்.

25 அதனால், யோசுவா அன்றைக்கு ஜனங்களோடு ஒப்பந்தம் செய்து,
சீகேமில் ஒரு விதிமுறையையும் சட்டத்தையும் கொடுத்தார். **26** பின்பு,
கடவுளுடைய திருச்சட்ட புத்தகத்தில்[g] யோசுவா இந்த வார்த்தைகளை
எழுதினார். ஒரு பெரிய கல்லை[h] எடுத்து அதை யெகோவாவின் கூடாரத்
துக்குப் பக்கத்தில் இருக்கிற பெரிய மரத்தின் கீழே நாட்டினார்.

27 அதன்பின் அவர் எல்லா ஜனங்களிடமும், “இதோ, இந்தக்
கல் நமக்கு ஒரு சாட்சியாக இருக்கும்,[i] ஏனென்றால் யெகோவா நம்மிடம்
பேசிய எல்லாவற்றையும் இந்தக் கல் கேட்டிருக்கிறது. உங்களுடைய கட
வுளுக்கு நீங்கள் உண்மையாக இல்லாவிட்டால், அது உங்களுக்கு எதிரா
கச் சாட்சி சொல்லும்” என்றார். **28** அதன்பின் அந்த ஜனங்களை அவர
வர் இடத்துக்கு அனுப்பிவிட்டார்.[j]

29 நூனின் மகனும் யெகோவாவின் ஊழியருமாகிய யோசுவா 110-வது
வயதில் இறந்தார்.[k] **30** அவருக்குச் சொத்தாகக் கிடைத்த இடத்தில், அதா
வது காயாஸ் மலைக்கு வடக்கே எப்பிராயீம் மலைப்பகுதியிலுள்ள திம்
னாத்-சேராவில்,[l] அவர் அடக்கம் செய்யப்பட்டார். **31** யோசுவா வாழ்ந்த
காலத்திலும், யோசுவாவுக்குப்பின் உயிரோடிருந்த பெரியோர்களின் காலத்
திலும், அதாவது இஸ்ரவேலுக்காக யெகோவா செய்த எல்லாவற்றையும்
தெரிந்துவைத்திருந்த பெரியோர்களின் காலத்திலும், இஸ்ரவேலர்கள்
யெகோவாவை வணங்கிவந்தார்கள்.[m]

32 எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் கொண்டுவந்த யோசேப்பின் எலும்
புகள்[n] சீகேமில் அடக்கம் செய்யப்பட்டன. அந்த நிலத்தை சீகேமின் அப்
பாவான ஏமோரின் மகன்களிடமிருந்து 100 வெள்ளிக் காசுகளுக்கு[o] யாக்
கோபு வாங்கியிருந்தார்.[p] அந்த நிலம் யோசேப்பின் வம்சத்தாருடைய
சொத்தாக ஆனது.[q]

33 ஆரோனின் மகன் எலெயாசாரும் இறந்துபோனார்.[r] அவருடைய
மகன் பினெகாசுக்கு[s] எப்பிராயீம் மலைப்பகுதியில் கொடுக்கப்பட்ட குன்
றில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

அதி. 24

a லேவி 19:2, சங் 99:5, ஏசா 6:3, 1பே 1:15

b யாத் 20:5, யாத் 34:14, எண் 25:11, மத் 4:10

c யாத் 23:20, 21, எண் 14:35

d உபா 28:15, 20, யோசு 23:16, 2நா 15:2, ஏசா 63:10, எரே 17:13

e யாத் 19:8

f உபா 26:17, யோசு 24:15

g உபா 31:26

h ஆதி 31:45

i ஆதி 31:48

j நியா 2:6

k நியா 2:8, 9

l யோசு 19:49, 50

m உபா 31:12, 13, நியா 2:7

n ஆதி 50:25, யாத் 13:19, எபி 11:22

o ஆதி 33:18, 19

p அப் 7:15, 16

q யோசு 20:7

r எண் 3:4, எண் 20:26

s யாத் 6:25, நியா 20:28

நியாயாதிபதிகள்

முக்கியக் குறிப்புகள்

1 யூதா மற்றும் சிமியோன் கோத்திரத்தார் கைப்பற்றிய இடங்கள் (1-20)
எபூசியர்கள் தொடர்ந்து எருசலேமிலேயே குடியிருக்கிறார்கள் (21)
யோசேப்பின் வம்சத்தார் பெத்தேலைக் கைப்பற்றுகிறார்கள் (22-26)
கானானியர்கள் முழுவதுமாகத் துரத்தியடிக்கப்படுவதில்லை (27-36)

2 யெகோவாவின் தூதரிடமிருந்து ஓர் எச்சரிக்கை (1-5)
யோசுவா இறந்துபோகிறார் (6-10)
இஸ்ரவேலர்களைக் காப்பதற்காக நியாயாதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள் (11-23)

3 இஸ்ரவேலர்களை யெகோவா பரீட்சை பார்க்கிறார் (1-6)
ஒத்னியேல், முதல் நியாயாதிபதி (7-11)
நியாயாதிபதியான ஏகூத் குண்டாக இருந்த எக்லோன் ராஜாவைக் கொன்றுபோடுகிறார் (12-30)
நியாயாதிபதியான சம்கார் (31)

4 கானானிய ராஜாவான யாபீன் இஸ்ரவேலர்களை அடக்கி ஒடுக்குகிறான் (1-3)
தீர்க்கதரிசனம் சொல்கிறவளான தெபொராளும் நியாயாதிபதியான பாராக்கும் (4-16)
படைத் தளபதியான சிசெராவை யாகேல் கொன்றுபோடுகிறாள் (17-24)

5 தெபொராள் மற்றும் பாராக்கின் வெற்றிப் பாடல் (1-31)
சிசெராவுக்கு எதிராக நட்சத்திரங்கள் போர் செய்கின்றன (20)
கீசோன் நீரோடை பெருக்கெடுக்கிறது (21)
யெகோவாவை நேசிக்கிறவர்கள் சூரியனைப் போல் பிரகாசிக்கிறார்கள் (31)

6 மீதியானியர்கள் இஸ்ரவேலர்களை அடக்கி ஒடுக்குகிறார்கள் (1-10)
நியாயாதிபதியான கிதியோனுக்குக் கடவுளின் ஆதரவு இருப்பதாகத் தேவதூதர் உறுதியளிக்கிறார் (11-24)
பாகாலின் பலிபீடத்தை கிதியோன் இடித்துப்போடுகிறார் (25-32)
கிதியோனுக்குக் கடவுளுடைய சக்தி கிடைக்கிறது (33-35)
கம்பளித் தோலை வைத்து சோதனை (36-40)

7 கிதியோனும் அவருடைய 300 ஆட்களும் (1-8)
கிதியோனின் படை மீதியானியர்களைத் தோற்கடிக்கிறது (9-25)
“இது யெகோவாவின் போர்! கிதியோனின் போர்!” (20)
மீதியானியர்களின் முகாமில் ஏற்பட்ட குழப்பம் (21, 22)

8 எப்பிராயீமியர்கள் கிதியோனிடம் வாக்குவாதம் செய்கிறார்கள் (1-3)
மீதியானிய ராஜாக்கள் துரத்தப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள் (4-21)
ராஜாவாக இருக்க கிதியோன் மறுத்துவிடுகிறார் (22-27)
கிதியோனுடைய வாழ்க்கை விவரம் (28-35)

9 அபிமெலேக்கு சீகேமில் ராஜாவாகிறான் (1-6)
யோதாம் சொல்லும் கதை (7-21)
அபிமெலேக்கின் கொடுங்கோல் ஆட்சி (22-33)
அபிமெலேக்கு சீகேமைத் தாக்குகிறான் (34-49)
ஒரு பெண்ணால் அபிமெலேக்கு படுகாயமடைந்து செத்துப்போகிறான் (50-57)

10 நியாயாதிபதிகளான தோலாவும் யாவீரும் (1-5)
இஸ்ரவேலர்கள் அடங்காமல் போவதும் மனம் திரும்புவதும் (6-16)
அம்மோனியர்கள் இஸ்ரவேலர்களோடு போர் செய்ய வருகிறார்கள் (17, 18)

11 யெப்தா முதலில் துரத்திவிடப்படுகிறார், பின்பு நியாயாதிபதியாக நியமிக்கப்படுகிறார் (1-11)
அம்மோனியர்களிடம் யெப்தா காரணங்களை எடுத்துச்சொல்கிறார் (12-28)
யெப்தாவின் நேர்த்திக்கடனும் அவருடைய மகளும் (29-40)
யெப்தாவின் மகள் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே இருக்கிறாள் (38-40)

12 எப்பிராயீமியர்கள் யெப்தாவோடு சண்டை போடுகிறார்கள் (1-7)
ஷிபோலேத் என்று சொல்லும்படி கேட்கப்படுகிறார்கள் (6)

நியாயாதிபதிகளான இப்சான், ஏலோன், அப்தோன் (8-15)
13 மனோவாவையும் அவருடைய மனைவியையும் ஒரு தேவதூதர் சந்திக்கிறார் (1-23)
சிம்சோன் பிறக்கிறார் (24, 25)
14 ஒரு பெலிஸ்தியப் பெண்ணைக் கல்யாணம் செய்ய சிம்சோன் ஆசைப்படுகிறார் (1-4)
யெகோவாவின் சக்தியால் சிம்சோன் ஒரு சிங்கத்தைக் கொன்றுபோடுகிறார் (5-9)
கல்யாணத்தின்போது சிம்சோன் சொல்லும் விடுகதை (10-19)
சிம்சோனின் மனைவி வேறொருவனுக்குக் கல்யாணம் செய்துவைக்கப்படுகிறாள் (20)
15 பெலிஸ்தியர்களை சிம்சோன் பழிவாங்குகிறார் (1-20)
16 காசாவில் சிம்சோன் (1-3)
சிம்சோனும் தெலீலாளும் (4-22)
சிம்சோன் பழிவாங்கிவிட்டுச் செத்துப்போகிறார் (23-31)
17 மீகாவின் சிலைகளும் அவனுடைய பூசாரியும் (1-13)
18 தாண் கோத்திரத்தார் இடம் தேடுகிறார்கள் (1-31)
மீகாவின் சிலைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன, பூசாரியும் கொண்டுபோகப்படுகிறான் (14-20)
லாயீஸ் கைப்பற்றப்பட்டு அதற்கு தாண் என்று பெயர் வைக்கப்படுகிறது (27-29)
தாணில் சிலை வணக்கம் (30, 31)
19 கிபியாவில் பென்யமீனியர்கள் பாலியல் குற்றம் செய்கிறார்கள் (1-30)
20 பென்யமீனியர்களுக்கு எதிரான போர் (1-48)
21 பென்யமீன் கோத்திரம் அழியாதபடி பாதுகாக்கப்படுகிறது (1-25)

1 யோசுவா இறந்த பின்பு[a] இஸ்ரவேலர்கள் யெகோவாவிடம், “எங்களில்
யார் கானானியர்களோடு முதலில் போர் செய்ய வேண்டும்?” என்று
விசாரித்தார்கள்.[b] **2** அதற்கு யெகோவா, “யூதா கோத்திரத்தார் போர்
செய்ய வேண்டும்.[c] இதோ! அந்தத் தேசத்தை நான் அவர்கள் கையில்
கொடுக்கிறேன்”* என்று சொன்னார். **3** அப்போது யூதா கோத்திரத்தார்
தங்கள் சகோதரர்களான சிமியோன் கோத்திரத்தாரிடம், “எங்களுக்குக்
கொடுக்கப்பட்ட பகுதிக்குப்[d] போய் கானானியர்களைத் துரத்தியடிக்கலாம்,
வாருங்கள். பின்பு நாங்களும் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதிக்கு
வருவோம்” என்று சொன்னார்கள். அதன்படியே, சிமியோன் கோத்திரத்தார்
அவர்களோடு போனார்கள்.

4 யூதா கோத்திரத்தார் போர் செய்தபோது, யெகோவா கானானியர்க
ளையும் பெரிசியர்களையும் அவர்கள் கையில் கொடுத்தார்.[e] பேசேக் என்ற
இடத்தில் அவர்கள் 10,000 வீரர்களைத் தோற்கடித்தார்கள். **5** கானானியர்
களையும்[f] பெரிசியர்களையும்[g] தோற்கடித்தபோது, பேசேக்கில் அதோனி
பேசேக்கைக் கண்டு அவனோடு போர் செய்தார்கள். **6** அதோனிபேசேக்
தப்பித்து ஓடியபோது, அவனைத் துரத்திப் பிடித்து, அவனுடைய கைகால்
பெருவிரல்களைத் துண்டித்தார்கள். **7** அப்போது அதோனிபேசேக், “70
ராஜாக்களுடைய கைகால் பெருவிரல்களை நான் துண்டித்தேன், அவர்கள்
என் மேஜையிலிருந்து கீழே சிந்துவதைப் பொறுக்கித் தின்றார்கள். நான்
செய்த பாவத்துக்குக் கடவுள் எனக்குச் சரியான கூலி கொடுத்துவிட்டார்”
என்று சொன்னான். அதன்பின் அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்தார்
கள்,[h] அங்கே அவன் செத்துப்போனான்.

1:2 * வே.வா., “கொடுத்திருக்கிறேன்.”

அதி. 1
a யோசு 24:29
b எண் 27:18, 21; நியா 20:18
c ஆதி 49:8; உபா 33:7; 1நா 5:2
d யோசு 15:1; யோசு 19:1, 9
e உபா 9:3
f ஆதி 10:6; உபா 20:17
g ஆதி 15:18-21; யாத் 3:8; நியா 3:5; 1ரா 9:20, 21
h யோசு 15:8, 12

8 யூதா கோத்திரத்தார் எருசலேமுக்கு எதிராகப் போர் செய்து[a] அதை
யும் கைப்பற்றினார்கள். அங்கிருந்த ஜனங்களை வாளால் வெட்டி, அந்த
நகரத்தைச் சுட்டெரித்தார்கள். **9** அதன்பின், மலைப்பகுதியிலும் நெகேபி
லும் சேப்பெல்லாவிலும் வாழ்ந்த கானானியர்களோடு போர் செய்தார்கள்.[b]
10 யூதா கோத்திரத்தார் எப்ரோனுக்குப் போய் (எப்ரோன் முற்காலத்தில்
கீரியாத்-அர்பா என்று அழைக்கப்பட்டது) அங்கே குடியிருந்த கானானியர்
களோடு போர் செய்தார்கள். சேசாய், அகீமான், தல்மாய் ஆகியவர்களை
வெட்டிக் கொன்றார்கள்.[c]

11 பின்பு, அவர்கள் தெபீருக்குப் போய் அங்கிருந்த ஜனங்களைத்
தாக்கினார்கள்.[d] (தெபீர் முற்காலத்தில் கீரியாத்-செப்பேர் என்று அழைக்கப்
பட்டது.)[e] **12** அதன்பின் காலேப்,[f] "கீரியாத்-செப்பேரைக் கைப்பற்றுகிறவ
னுக்கு என் மகள் அக்சாளைக் கல்யாணம் செய்து கொடுப்பேன்"[g]
என்று சொன்னார். **13** காலேபின் தம்பியாகிய கேனாசின் மகன்[h] ஒத்
னியேல்[i] அதைக் கைப்பற்றினார். அதனால், அவருக்குத் தன் மகள் அக்
சாளை காலேப் கல்யாணம் செய்து கொடுத்தார். **14** அவள் தன் கணவனு
டைய வீட்டுக்குப் போகும்போது, தன் அப்பாவிடம் ஒரு நிலத்தைக் கேட்டு
வாங்கச் சொல்லி தன் கணவனைத் தூண்டினாள். கழுதையிலிருந்து அவள்
கீழே இறங்கியபோது* காலேப் அவளிடம், "உனக்கு என்ன வேண்டும்?"
என்று கேட்டார். **15** அதற்கு அவள், "தயவுசெய்து எனக்கு ஒரு அன்ப
ளிப்பு கொடுங்கள். தெற்கில்* நீங்கள் எனக்குக் கொடுத்த நிலம் வறண்ட
நிலமாக இருக்கிறது. அதனால் நிறைய தண்ணீர் இருக்கிற நிலத்தையும்#
கொடுங்கள்" என்று கேட்டாள். அவள் கேட்டபடியே, மேற்புறத்திலும் கீழ்ப்
புறத்திலும் இருந்த நீர்வளமுள்ள நிலத்தை அவர் கொடுத்தார்.

16 மோசேயின் மாமனாராகிய[j] கேனியனின் வம்சத்தார்,[k] பேரீச்ச மரங்
கள் நிறைந்த நகரத்திலிருந்து[l] ஆராத்துக்கு[m] தெற்கே இருக்கிற யூதா
வனாந்தரத்துக்கு யூதா கோத்திரத்தாருடன் வந்து, அங்கே அவர்களோடு
தங்கினார்கள்.[n] **17** ஆனால், யூதா கோத்திரத்தார் தங்கள் சகோதரர்களான
சிமியோன் கோத்திரத்தாருடன் போய், சேப்பாத்தில் வாழ்ந்த கானானியர்க
ளைத் தாக்கி அந்த நகரத்தை அழித்தார்கள்.[o] அதனால், ஓர்மா*[p]
என்று அதற்குப் பெயர் வைத்தார்கள். **18** அதன்பின், யூதா கோத்திரத்
தார் காசாவையும்[q] அதன் பிரதேசத்தையும் அஸ்கலோனையும்[r] அதன்
பிரதேசத்தையும் எக்ரோனையும்[s] அதன் பிரதேசத்தையும் கைப்பற்றினார்
கள். **19** யெகோவா யூதா கோத்திரத்தாரோடு இருந்தார். அவர்கள் மலைப்
பகுதிகளைச் சொந்தமாக்கினார்கள். ஆனால், சமவெளியில் வாழ்ந்த ஜனங்
களிடம் இரும்பு அரிவாள்கள் பொருத்தப்பட்ட போர் ரதங்கள்[t] இருந்ததால்
அவர்களைத் துரத்தியடிக்க முடியவில்லை. **20** மோசே வாக்குறுதி தந்த
படியே,[u] காலேபுக்கு எப்ரோன் நகரம் கொடுக்கப்பட்டது. ஏனாக்கின் மூன்று
மகன்களை[v] காலேப் அங்கிருந்து துரத்தியடித்தார்.

21 ஆனால், பென்யமீன் கோத்திரத்தார் எருசலேமில் குடியிருந்த எபூசி
யர்களைத் துரத்தியடிக்கவில்லை. அதனால், எபூசியர்கள் இன்றுவரை பென்
யமீன் கோத்திரத்தாருடன் எருசலேமில் வாழ்ந்துவருகிறார்கள்.[w]

1:14 *அல்லது, "கழுதையின் மேல் இருந்தபடி தன் கைகளைத் தட்டியபோது."
1:15 *வே.வா., "நெகேபில்." #நே.மொ., "குல்லோத்-மாயிமையும்." இந்தப் பெயரின்
அர்த்தம், "தண்ணீர்க் குளங்கள்." **1:17** *அர்த்தம், "அழித்தல்."

அதி. 1
a யோசு 15:63 நியா 1:21
b யோசு 11:16 யோசு 15: 20, 33
c யோசு 11:21 யோசு 15: 13, 14
d யோசு 10:38
e யோசு 15:15
f எண் 13:3, 6 எண் 14:24 உபா 1:35, 36 யோசு 14:13
g யோசு 15: 16-19
h 1நா 4:13
i நியா 3:9
j யாத் 3:1 யாத் 4:18 யாத் 18:1 எண் 10:29
k எண் 24:21 நியா 4:11
l உபா 34:3 நியா 3:13
m எண் 21:1
n எண் 10: 29-32
o லேவி 27:29 உபா 20:16
p யோசு 19:1, 4
q ஆதி 10:19 யோசு 11:22
r நியா 14:19
s யோசு 13:1-3 யோசு 15: 20, 45
t உபா 20:1 யோசு 17:16
u எண் 14:24 யோசு 14:9
v எண் 13:22
w யோசு 15:63 2சா 5:6

22 இதற்கிடையில், யோசேப்பின் வம்சத்தார்[a] பெத்தேலோடு போர்
செய்யப் போனார்கள். யெகோவா அவர்களோடு இருந்தார்.[b]
23 யோசேப்பின் வம்சத்தார் பெத்தேலை (அந்த நகரம் முற்காலத்தில்
லஸ் என்று அழைக்கப்பட்டது)[c] உளவு பார்க்கப் போனபோது, **24** அந்த
நகரத்தைவிட்டு வெளியே போய்க்கொண்டிருந்த ஓர் ஆளைப் பார்த்தார்
கள். அவனிடம், “தயவுசெய்து நகரத்துக்குள் போகிற வழியைக் காட்டு,
நாங்கள் உனக்குக் கைமாறு செய்வோம்” என்று சொன்னார்கள். **25** அவ
னும் நகரத்துக்குள் போகிற வழியைக் காட்டினான். அந்த நகரத்தில் இருந்
தவர்களை அவர்கள் வெட்டிக் கொன்றார்கள். ஆனால், அந்த ஆளை
யும் அவன் குடும்பத்தாரையும் ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்கள்.[d]
26 அவன் ஏத்தியர்களின் தேசத்துக்குப் போய், அங்கே ஒரு நகரத்தைக்
கட்டி, அதற்கு லஸ் என்று பெயர் வைத்தான். இதுதான் இன்றுவரை அந்த
நகரத்தின் பெயர்.

27 பெத்-செயானையும் அதன் சிற்றூர்களையும்,* தானாக்கையும்[e]
அதன் சிற்றூர்களையும், தோரையும் அதன் சிற்றூர்களையும், இப்லெயா
மையும் அதன் சிற்றூர்களையும், மெகிதோவையும் அதன் சிற்றூர்களை
யும் மனாசே கோத்திரத்தார் சொந்தமாக்கவில்லை.[f] கானானியர்கள் அந்தத்
தேசத்தைவிட்டுப் போகாமல் அங்கேயே பிடிவாதமாகக் குடியிருந்தார்கள்.
28 இஸ்ரவேல் தேசம் பலம்படைத்த தேசமாக ஆனபோது, இஸ்ரவேலர்
கள் கானானியர்களை அடிமைப்படுத்தி வேலை வாங்கினார்கள்.[g] ஆனா
லும், அவர்களை முழுமையாகத் துரத்தியடிக்கவில்லை.[h]

29 கேசேரில் குடியிருந்த கானானியர்களை எப்பிராயீமியர்கள் துரத்திய
டிக்கவில்லை. கானானியர்கள் கேசேரில் அவர்களோடு தொடர்ந்து வாழ்ந்து
வந்தார்கள்.[i]

30 கித்ரோன் ஜனங்களையும் நாகலோல்[j] ஜனங்களையும் செபுலோன்
கோத்திரத்தார் துரத்தியடிக்கவில்லை. கானானியர்கள் அவர்களோடு
தொடர்ந்து வாழ்ந்துவந்தார்கள், ஆனால் கானானியர்களை அவர்கள் அடி
மைப்படுத்தி வேலை வாங்கினார்கள்.[k]

31 அக்கோவின் ஜனங்களையும், சீதோன்,[l] அக்லாப், அக்சீப்,[m] எல்பா,
ஆப்பீக்[n] மற்றும் ரேகோபின்[o] ஜனங்களையும் ஆசேர் கோத்திரத்தார் துரத்
தியடிக்கவில்லை. **32** அதனால், கானானியர்களோடு ஆசேர் கோத்திரத்
தார் தொடர்ந்து வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் கானானியர்களைத் துரத்தி
யடிக்கவில்லை.

33 பெத்-ஷிமேஸ் ஜனங்களையும் பெத்-ஆனாத்[p] ஜனங்களையும் நப்
தலி கோத்திரத்தார் துரத்தியடிக்கவில்லை. அந்தத் தேசத்தில் குடியிருந்த
கானானியர்களோடு அவர்கள் தொடர்ந்து வாழ்ந்துவந்தார்கள்.[q] பெத்-
ஷிமேஸ் ஜனங்களையும் பெத்-ஆனாத் ஜனங்களையும் அவர்கள் அடி
மைப்படுத்தி வேலை வாங்கினார்கள்.

34 எமோரியர்கள் தாண் கோத்திரத்தாரை சமவெளிக்கு வரவிடாமல்
தடுத்ததால், அவர்கள் மலைப்பகுதியிலேயே வாழ வேண்டியதாகிவிட்டது.[r]
35 அதனால் ஏரேஸ் மலையிலும், ஆயலோனிலும்[s] சால்பீமிலும்[t] எமோ
ரியர்கள் தொடர்ந்து குடியிருந்தார்கள். ஆனால், யோசேப்பின் வம்சத்தார்
பலம் அடைந்தபோது, எமோரியர்களை அடிமைப்படுத்தி வேலை வாங்கி

1:27 * வே.வா, “அதைச் சுற்றியுள்ள ஊர்களையும்.”

அதி. 1
a யோசு 14:4
b ஆதி 49:22, 24; யோசு 16:1; சங் 44:3
c ஆதி 35:6
d யோசு 6:25; 1சா 15:6
e யோசு 21:8, 25; நியா 5:19
f யோசு 17:11, 12
g ஆதி 9:25; 1ரா 9:20, 21
h எண் 33:55; உபா 7:2; உபா 20:16; யோசு 17:13
i யோசு 16:10; 1ரா 9:16
j யோசு 19:15, 16
k உபா 20:17; நியா 2:2
l யோசு 11:8; யோசு 19:28, 31
m யோசு 19:29, 31
n யோசு 19:30, 31
o யோசு 21:8, 31
p யோசு 19:38, 39
q உபா 7:2
r யோசு 19:47; நியா 18:1
s யோசு 10:12
t யோசு 19:42, 48

னார்கள். **36** எமோரியர்களின் எல்லை அக்கராபீம் மேட்டிலிருந்தும்[a]
சாலாவிலிருந்தும் தொடங்கி, மேலே மலைப்பகுதிக்குப் போனது.

2 பின்பு, யெகோவாவின் தூதர்[b] கில்காலிலிருந்து[c] போகீமுக்கு வந்து,
“நான் உங்கள் முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்த தேசத்துக்கு[d]
எகிப்திலிருந்து உங்களைக் கூட்டிக்கொண்டு வந்தேன். உங்களோடு செய்த
ஒப்பந்தத்தை ஒருபோதும் முறிக்க மாட்டேன்[e] என்று உங்களிடம்
சொன்னேன். **2** அதோடு, ‘நீங்கள் இந்தத் தேசத்தின் ஜனங்களோடு எந்த
ஒப்பந்தமும் செய்யக் கூடாது,[f] அவர்களுடைய பலிபீடங்களை இடித்துப்
போட வேண்டும்’[g] என்று சொன்னேன். ஆனால், நீங்கள் எனக்குக் கீழ்ப்ப
டியவில்லை.[h] ஏன் இப்படிச் செய்தீர்கள்? **3** அதனால்தான் நான் உங்களி
டம், ‘மற்ற தேசத்தாரை உங்களிடமிருந்து நான் துரத்தியடிக்க மாட்டேன்.[i]
அவர்கள் உங்களை ஆபத்தில் சிக்க வைப்பார்கள்.[j] அவர்களுடைய
தெய்வங்கள் உங்களுக்குக் கண்ணியாக இருக்கும்’[k] என்று சொன்னேன்”
என்றார்.

4 இஸ்ரவேலர்கள் எல்லாரிடமும் யெகோவாவின் தூதர் இதைச் சொன்
னபோது, அவர்கள் சத்தமாக அழ ஆரம்பித்தார்கள். **5** அதனால் அந்த
இடத்துக்கு போகீம்* என்று பெயர் வைத்து, அங்கே யெகோவாவுக்குப்
பலி செலுத்தினார்கள்.

6 பின்பு யோசுவா இஸ்ரவேலர்களை அனுப்பி வைத்தார். அவரவர்
இடத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள எல்லாரும் புறப்பட்டுப் போனார்கள்.[l]
7 யோசுவாவின் காலத்திலும் அவருக்குப்பின் உயிரோடிருந்த பெரியோர்
களின்* காலத்திலும், அதாவது இஸ்ரவேலுக்காக யெகோவா செய்த
எல்லா அற்புதங்களையும் கண்களால் பார்த்த பெரியோர்களின் காலத்தி
லும், இஸ்ரவேலர்கள் யெகோவாவை வணங்கிவந்தார்கள்.[m] **8** பின்பு,
நூனின் மகனும் யெகோவாவின் ஊழியருமாகிய யோசுவா 110-வது வய
தில் இறந்தார்.[n] **9** அவருக்குச் சொத்தாகக் கிடைத்த இடத்தில், அதாவது
காயாஸ் மலைக்கு வடக்கே எப்பிராயீம் மலைப்பகுதியிலுள்ள திம்னாத்-
ஏரேசில்,[o] அவர் அடக்கம் செய்யப்பட்டார்.[p] **10** அந்தத் தலைமுறை
யைச் சேர்ந்த எல்லாரும் இறந்துபோனார்கள்.* அவர்களுக்குப்பின் வந்த
தலைமுறைக்கு யெகோவாவைப் பற்றியும், இஸ்ரவேலர்களுக்கு அவர்
செய்தவற்றைப் பற்றியும் தெரியவில்லை.

11 அதனால், அவர்கள் யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்து,
பாகால்களைக் கும்பிட்டார்கள்.[q] **12** எகிப்திலிருந்து தங்களைக் கூட்டிக்
கொண்டு வந்த தங்களுடைய முன்னோர்களின் கடவுளாகிய யெகோ
வாவை விட்டுவிட்டு,[r] தங்களைச் சுற்றியிருந்த ஜனங்களின் தெய்வங்க
ளைத் தேடிப்போனார்கள்.[s] அவற்றை வணங்கி, யெகோவாவைக்
கோபப்படுத்தினார்கள்.[t] **13** யெகோவாவை விட்டுவிட்டு பாகால் சிலைக
ளையும் அஸ்தரோத் சிலைகளையும் கும்பிட்டார்கள்.[u] **14** அதனால், இஸ்
ரவேலர்கள்மேல் யெகோவாவின் கோபம் பற்றியெரிந்தது. சுற்றியிருந்த
எதிரிகள் வந்து, இஸ்ரவேலர்களுக்குச் சொந்தமானதையெல்லாம் சுருட்டிக்
கொண்டு போகும்படி செய்தார்.[v] அந்த எதிரிகளின் கையில் அவர்களைக்

2:5 * அர்த்தம், “அழுகிறவர்கள்.” **2:7** * வே.வா., “மூப்பர்களின்.” **2:10** * நே.மொ., “தங்கள் முன்னோர்களுடன் சேர்க்கப்பட்டார்கள்.” எபிரெயுவில் கவிதை நடையில் உள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன.

அதி. 1
a எண் 34:2, 4; யோசு 15:3, 12

அதி. 2
b யாத் 23:20, 23; யோசு 5:13, 14
c யோசு 5:8, 9
d ஆதி 12:7; ஆதி 26:3
e ஆதி 17:1, 7; லேவி 26:42
f யாத் 23:32; உபா 7:2; 2கொ 6:14
g யாத் 34:13; எண் 33:52
h நியா 1:28
i நியா 2:20-23
j எண் 33:55; யோசு 23:12, 13
k யாத் 23:33; உபா 7:16; 1ரா 11:2
l யோசு 24:28
m யோசு 23:3; யோசு 24:31
n யோசு 24:29
o யோசு 19:49, 50
p யோசு 24:30
q நியா 3:7; நியா 10:6; 1ரா 18:17, 18
r உபா 31:16
s உபா 6:14
t யாத் 20:5
u நியா 3:7; நியா 10:6; 1ரா 11:5
v நியா 3:8; 2ரா 17:20; சங் 106:40, 41

கொடுத்துவிட்டார்,*[a] அவர்களால் அந்த எதிரிகளை எதிர்த்து நிற்க முடிய
வில்லை.[b] **15** யெகோவா அவர்களுக்குச் சொன்னபடியே, யெகோவா
அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னபடியே,[c] அவர்கள் போன இடமெல்
லாம் யெகோவா அவர்களுக்கு விரோதமாக இருந்தார். அவர்களுக்குக்
கேடுதான் வந்தது.[d] அவர்கள் மன வேதனையில் துடித்தார்கள்.[e] **16** அத
னால், எதிரிகளின் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற யெகோவா நியா
யாதிபதிகளை நியமித்தார்.[f]

17 ஆனால், அந்த நியாயாதிபதிகளின் பேச்சையும் அவர்கள் கேட்க
வில்லை. மற்ற தெய்வங்களை வணங்கி யெகோவாவுக்குத் துரோகம்
செய்தார்கள். அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த முன்
னோர்களின் வழியைவிட்டு சீக்கிரமாக விலகிப்போனார்கள்.[g] அந்த
முன்னோர்களைப் போல அவர்கள் நடக்கவில்லை. **18** அவர்களுக்காக
யெகோவா ஒரு நியாயாதிபதியை நியமித்தபோதெல்லாம்,[h] யெகோவா
அந்த நியாயாதிபதியோடு இருந்து, அவருடைய காலம் முழுவதும் எதி
ரிகளின் கையிலிருந்து அவர்களைக் காப்பாற்றினார். ஏனென்றால், கொடு
மைக்காரர்களின் கொடுமை[i] தாங்காமல் அவர்கள் குமுறியதைக் கேட்டு
யெகோவா மனம் உருகினார்.*[j]

19 ஆனால், ஒவ்வொரு நியாயாதிபதி இறந்த பிறகும் அவர்கள் பழைய
படி மற்ற தெய்வங்களைத் தேடிப்போய் வணங்கி, தங்களுடைய முன்னோர்
களைவிட படுமோசமாக நடக்க ஆரம்பித்தார்கள்.[k] கெட்ட பழக்கங்களை
யும் பிடிவாத குணத்தையும் அவர்கள் விடவே இல்லை. **20** கடைசியில்,
இஸ்ரவேலர்கள்மேல் யெகோவாவின் கோபம் பற்றியெரிந்தது.[l] அதனால்
அவர், "இந்த ஜனங்கள் அவர்களுடைய முன்னோர்களுடன் நான் செய்த
ஒப்பந்தத்தை[m] மீறி, எனக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள்.[n] **21** அதனால்,
யோசுவா சாகும்போது விட்டுவைத்திருந்த ஒரு தேசத்தாரைக்கூட[o] அவர்
கள் முன்னாலிருந்து நான் துரத்த மாட்டேன். **22** இஸ்ரவேலர்கள் அவர்
களுடைய முன்னோர்களைப் போல யெகோவாவின் வழியில் நடக்கிறார்
களா இல்லையா என்று பார்ப்பதற்காக[p] அப்படிச் செய்வேன்" என்று
சொன்னார். **23** அதன்படியே, யெகோவா மற்ற தேசத்து ஜனங்களை அங்
கேயே இருக்கும்படி விட்டுவிட்டார். அவர்களை உடனடியாகத் துரத்தியடிக்
கவும் இல்லை, யோசுவாவின் கையில் கொடுக்கவும் இல்லை.

3 கானானியர்களோடு போர் செய்யாத இஸ்ரவேலர்களின் தலைமுறை
களைச் சோதித்துப் பார்ப்பதற்காக,[q] **2** (அதாவது, போர் அனுபவம்
இல்லாத இஸ்ரவேலர்களின் தலைமுறைகள் போர் செய்யக் கற்றுக்கொள்
வதற்காக) யெகோவா விட்டுவைத்த தேசத்தார் இவர்கள்தான்: **3** பெலிஸ்
தியர்களின்[r] ஐந்து தலைவர்கள், கானானியர்கள், சீதோனியர்கள்,[s] மற்றும்
பாகால்-எர்மோன் மலையிலிருந்து லெபோ-காமாத்*[t] வரைக்கும் உள்ள
லீபனோன் மலைத்தொடர்களில்[u] இருக்கிற ஏவியர்கள்.[v] **4** முன்னோர்
களின் காலத்தில் மோசே மூலம் யெகோவா கொடுத்த கட்டளைகளுக்கு
இஸ்ரவேலர்கள் கீழ்ப்படிவார்களா மாட்டார்களா என்பதைச் சோதித்துப்
பார்ப்பதற்காகத்தான் அந்தத் தேசத்தாரையெல்லாம் அவர் விட்டுவைத்

2:14 * நே.மொ., "விற்றுப்போட்டார்." **2:18** * வே.வா., "வருந்தினார்." **3:3** * வே.வா., "காமாத்தின் நுழைவாசல்."

அதி. 2
a நியா 4:2
b லேவி 26:17, 37; உபா 28:15, 25
c உபா 4:25, 26
d உபா 28:15
e நியா 10:9
f நியா 3:9; 1சா 12:11; நெ 9:27; சங் 106:43
g நியா 2:7
h நியா 3:9
i நியா 4:3
j உபா 32:36; சங் 106:45
k நியா 4:1; நியா 8:33
l உபா 7:4; நியா 10:7; சங் 106:40
m யாத் 24:3, 8; யாத் 34:27; உபா 29:1; யோசு 23:16
n லேவி 26:14, 17
o யோசு 13:1, 2
p எண் 33:55; உபா 8:2; யோசு 23:12, 13; நியா 3:4

அதி. 3
q உபா 8:2; நியா 2:10
r நியா 1:18, 19
s யோசு 13:1, 4; நியா 1:31
t எண் 34:2, 8; யோசு 13:1, 5
u யோசு 13:1, 6
v யோசு 9:1, 2

தார்.[a] **5** அதனால் கானானியர்கள், ஏத்தியர்கள், எமோரியர்கள், பெரிசியர்
கள், ஏவியர்கள், எபூசியர்கள் ஆகியவர்களோடு இஸ்ரவேலர்கள் வாழ்ந்து
வந்தார்கள்.[b] **6** இஸ்ரவேலர்கள் அவர்களிடமிருந்து பெண் எடுத்தார்கள்,
அவர்களுக்குத் தங்களுடைய பெண்களைக் கொடுத்தார்கள். அவர்களு
டைய தெய்வங்களைக் கும்பிடவும் ஆரம்பித்தார்கள்.[c]

7 இஸ்ரவேலர்கள் யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்தார்
கள். தங்கள் கடவுளாகிய யெகோவாவை மறந்து, பாகால்களையும்
பூஜைக் கம்பங்களையும்* கும்பிட்டார்கள்.[d] **8** அதனால், இஸ்ரவேலர்கள்
மேல் யெகோவாவின் கோபம் பற்றியெரிந்தது. அவர் அவர்களை
மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்-ரிஷதாயீமின் கையில்
கொடுத்தார்.* இஸ்ரவேலர்கள் எட்டு வருஷங்கள் அந்த ராஜாவுக்குச்
சேவை செய்தார்கள். **9** அவர்கள் யெகோவாவிடம் உதவிக்காகக் கத
றியபோது,[e] அவர்களைக் காப்பாற்ற[f] காலேபின் தம்பியாகிய கேனாசின்
மகன் ஒத்னியேலை[g] யெகோவா அனுப்பினார். **10** யெகோவாவின் சக்தி
அவருக்குக் கிடைத்தது,[h] அவர் இஸ்ரவேலின் நியாயாதிபதியாக ஆனார்.
அவர் போருக்குப் போனபோது, மெசொப்பொத்தாமியாவின் ராஜாவா
கிய கூசான்-ரிஷதாயீமைத் தோற்கடிக்க யெகோவா அவருக்கு உதவினார்.
11 அதன்பின், 40 வருஷங்களுக்குத் தேசத்தில் அமைதி இருந்தது. பின்பு,
கேனாசின் மகன் ஒத்னியேல் இறந்துபோனார்.

12 மறுபடியும் இஸ்ரவேலர்கள் யெகோவா வெறுக்கிற காரியங்களைச்
செய்தார்கள்.[i] அதனால், இஸ்ரவேலர்களை அடக்கி ஒடுக்கும்படி மோவா
பின்[j] ராஜாவாகிய எக்லோனை யெகோவா விட்டுவிட்டார். இஸ்ரவேலர்கள்
யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்துகொண்டிருந்ததால், **13** அம்
மோனியர்களையும்[k] அமலேக்கியர்களையும்கூட[l] அவர்களுக்கு விரோத
மாக வர வைத்தார். அவர்கள் இஸ்ரவேலர்களைத் தாக்கி, பேரீச்ச மரங்கள்
நிறைந்த நகரத்தைக்[m] கைப்பற்றினார்கள். **14** மோவாபின் ராஜாவாகிய
எக்லோனுக்கு இஸ்ரவேலர்கள் 18 வருஷங்கள் சேவை செய்தார்கள்.[n]
15 பின்பு, யெகோவாவிடம் உதவிக்காகக் கதறினார்கள்.[o] அப்போது,
அவர்களைக் காப்பாற்ற[p] பென்யமீன் கோத்திரத்தைச்[q] சேர்ந்த கேராவின்
மகன் ஏகூத்தை[r] யெகோவா அனுப்பினார். இவர் இடது கை பழக்கமுள்
ளவர்.[s] மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குக் கப்பம் கட்டிவிட்டு வரச்
சொல்லி இஸ்ரவேலர்கள் இவரை அனுப்பி வைத்தார்கள். **16** இதற்கிடை
யில், ஏகூத் தனக்காக ஒரு வாளைச் செய்துகொண்டார். அதன் நீளம் ஒரு
முழமாக* இருந்தது, இரண்டு பக்கமும் கூர்மையாக இருந்தது. அதைத் தன்
னுடைய அங்கிக்கு அடியில் வலது தொடையில் கட்டிவைத்துக்கொண்டார்.
17 பின்பு, மோவாபின் ராஜாவாகிய எக்லோனிடம் போய் கப்பம் கட்டினார்.
எக்லோன் மிகவும் குண்டாக இருந்தான்.

18 ஏகூத் கப்பம் கட்டி முடித்தவுடன், அதைச் சுமந்து வந்த ஆட்களை
அனுப்பிவிட்டார். **19** பின்பு, தான் மட்டும் கில்காலில்[t] இருந்த சிலைகள்
வரை* போய்விட்டு, ராஜாவிடம் திரும்பி வந்தார். அவனிடம், "ராஜாவே,

---

3:7 *சொல் பட்டியலைப் பாருங்கள். **3:8** *நே.மொ., "விற்றுப்போட்டார்." **3:16** *ஒருவேளை, "சின்ன முழமாக." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **3:19** *அல்லது, "கற்சுரங்கங்கள்வரை."

அதி. 3
a யாத் 23:33, நியா 2:21, 22
b நியா 1:29, சங் 106:34
c யாத் 34:15, 16, எண் 25:1, 2, உபா 7:3, 4, 1ரா 11:1, 4
d யாத் 34:13, உபா 12:3, உபா 16:21, உபா 31:16, நியா 2:11, நியா 10:6
e உபா 4:30, நியா 10:10, 15
f நியா 2:16, 18, நியா 3:15
g 1நா 4:13
h எண் 11:16, 17, நியா 6:34, நியா 11:29, நியா 14:5, 6, நியா 15:14, 1சா 11:6, 1சா 16:13, 2நா 15:1
i நியா 2:19
j ஆதி 19:36, 37
k ஆதி 19:36, 38, நியா 11:4, 5
l யாத் 17:8, நியா 6:3
m உபா 34:3
n உபா 28:48
o சங் 78:34
p நியா 3:9
q ஆதி 49:27
r நியா 4:1
s நியா 20:15, 16
t யோசு 4:19, யோசு 5:8, 9

நான் உங்களிடம் ஒரு ரகசியம் சொல்ல வேண்டும்” என்றார். அப்போது
ராஜா, “எல்லாரும் போங்கள்!”* என்று சொன்னான், உடனே அங்கிருந்த
சேவகர்கள் எல்லாரும் வெளியே போனார்கள். **20** மொட்டைமாடியில்
இருந்த குளிர்ச்சியான அறையில் தனியாக உட்கார்ந்திருந்த ராஜாவிடம்
ஏகூத், “கடவுள் உங்களுக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்” என்று
சொன்னார். அப்போது, ராஜா இருக்கையிலிருந்து எழுந்தான். **21** உடனே,
ஏகூத் தன்னுடைய வலது தொடையில் கட்டியிருந்த வாளை இடது கையால்
உருவி, அவனுடைய வயிற்றில் ஒரே குத்தாகக் குத்தினார். **22** கத்தியோடு
கைப்பிடியும் சேர்ந்து வயிற்றுக்குள் பாய்ந்தது. அந்தக் கத்தி வயிற்றிலுள்ள
கொழுப்புக்குள் சிக்கிக்கொண்டதால், அவர் அதை உருவி எடுக்கவில்லை.
ராஜாவின் உடலிலிருந்து மலம் வெளியே வந்தது. **23** பின்பு ஏகூத்,
அந்த மொட்டைமாடி அறையின் கதவுகளைப் பூட்டிவிட்டு, வராந்தா*
வழியாக வெளியே வந்தார். **24** அவர் போன பின்பு, சேவகர்கள் வந்து
பார்த்தார்கள். அப்போது, மொட்டைமாடி அறையின் கதவுகள் பூட்டப்பட்டி
ருந்தன. அதனால், “ராஜா ஒருவேளை மலஜலம் கழித்துக்கொண்டிருப்பார்”
என்று சொல்லிக்கொண்டு வெளியே காத்திருந்தார்கள். **25** ஆனால், காத்
துக் காத்து சலித்துப்போனார்கள். ராஜா கதவுகளை திறக்காமலேயே இருந்
ததால், கடைசியில் அவர்களே சாவியை எடுத்துவந்து திறந்தார்கள். உள்ளே
பார்த்தபோது, ராஜா தரையில் பிணமாகக் கிடந்தான்!

26 இதெல்லாம் நடப்பதற்குள் ஏகூத் தப்பித்து ஓடிவிட்டார். சிலைகளை*
கடந்து[a] சேயிரா என்ற இடத்துக்குப் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தார்.
27 அங்கு போய்ச் சேர்ந்ததும், அந்த எப்பிராயீம் மலைப்பகுதியில்[b] ஊது
கொம்பை ஊதினார்.[c] இஸ்ரவேலர்கள் அவருடைய தலைமையில் அந்த
மலைப்பகுதியிலிருந்து இறங்கிவந்தார்கள். **28** அவர் அவர்களிடம், “என்
பின்னால் வாருங்கள், உங்கள் எதிரிகளான மோவாபியர்களை யெகோவா
உங்களுடைய கையில் கொடுத்திருக்கிறார்” என்று சொன்னார். அதனால்,
அவர்கள் அவர் பின்னால் போய், மோவாபியர்கள் தப்பித்துப் போகாதபடி
யோர்தானின் ஆற்றுத்துறைகளை* கைப்பற்றினார்கள். யாருமே ஆற்றைக்
கடப்பதற்கு அவர்கள் விடவில்லை. **29** பலம்படைத்த மாவீரர்களான
சுமார் 10,000 மோவாபியர்களை அவர்கள் வெட்டிச் சாய்த்தார்கள்.[d] அவர்
களில் ஒருவன்கூட தப்பிக்கவில்லை.[e] **30** இப்படி, இஸ்ரவேலர்கள் அன்று
மோவாபியர்களை அடக்கிவிட்டார்கள். அதன்பின், 80 வருஷங்களுக்குத்
தேசத்தில் அமைதி இருந்தது.[f]

31 ஏகூத்துக்குப் பின்பு ஆனாத்தின் மகன் சம்கார்,[g] 600 பெலிஸ்திய
வீரர்களைத்[h] தார்க்கோலால்*[i] கொன்று, இஸ்ரவேலர்களைக் காப்பாற்றினார்.

4 ஆனால் ஏகூத் இறந்த பின்பு, மறுபடியும் இஸ்ரவேலர்கள் யெகோவா
வெறுக்கிற காரியங்களைச் செய்தார்கள்.[j] **2** அதனால் யெகோவா,
கானானின் ராஜாவாகிய யாபீனின் கையில் இஸ்ரவேலர்களைக் கொடுத்து
விட்டார்.*[k] அவன் ஆத்சோரில் ஆட்சி செய்துவந்தான். அவனுடைய
படைத் தளபதியின் பெயர் சிசெரா, இவன் அரோசேத்-கோயிமில்[l] வாழ்ந்து
வந்தான். **3** இரும்பு அரிவாள்கள் பொருத்தப்பட்ட 900 போர் ரதங்களை[m]

3:19 *நே.மொ., “அமைதி!” **3:23** *அல்லது, “காற்றுப்போக்கி.” **3:26** *அல்லது, “கற்சுரங்கங்களை.” **3:28** *ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதிகள். **3:31** *சொல் பட்டியலைப் பாருங்கள். **4:2** *நே.மொ., “விற்றுப்போட்டார்.”

அதி. 3
a நியா 3:19
b நியா 7:24
c நியா 6:34, 1சா 13:3
d உபா 28:7
e லேவி 26:7, 8
f நியா 3:11
g நியா 5:6
h யோசு 13:1, 2
i நியா 15:3, 15, 1சா 17:47, 50

அதி. 4
j நியா 2:19
k நியா 2:14, நியா 3:8, நியா 10:7
l நியா 4:16
m யோசு 17:16, நியா 1:19

யாபீன் வைத்திருந்தான். அவன் 20 வருஷங்களாக இஸ்ரவேலர்களை ரொம்பவே அடக்கி ஒடுக்கினான்.[a] அதனால், அவர்கள் யெகோவாவிடம் கதறி அழுதார்கள்.[b]

4 அந்தக் காலகட்டத்தில், லபிதோத்தின் மனைவியும் தீர்க்கதரிசனம் சொல்கிறவளுமான[c] தெபொராள் இஸ்ரவேலர்களுக்குக் கடவுளுடைய தீர்ப்புகளைச் சொல்லி வந்தாள். 5 தெபொராளுடைய பேரீச்ச மரத்தின் கீழே அவள் உட்கார்ந்திருந்தாள். அந்த மரம் எப்பிராயீம் மலைப்பகுதியில் ராமாவுக்கும்[d] பெத்தேலுக்கும்[e] இடையில் இருந்தது. கடவுளுடைய தீர்ப்பு களைக் கேட்பதற்காக இஸ்ரவேலர்கள் அவளிடம் வந்தார்கள். 6 அவள் கேதேஸ்-நப்தலியில்[f] வாழும் அபினோகாமின் மகன் பாராக்கை[g] வரச் சொல்லி, "இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா உங்களிடம், 'நப்தலி, செபுலோன் கோத்திரங்களைச் சேர்ந்த 10,000 வீரர்களைக் கூட்டிக்கொண்டு தாபோர் மலைக்கு அணிவகுத்துக்கொண்டு போ' என்றும், 7 யாபீனின் படைத் தளபதியாகிய சிசெராவை அவனுடைய போர் ரதங்களோடும் படைவீரர்களோடும் கீசோன் நீரோடைக்கு*[h] வரவைத்து அவனை உன் கையில் கொடுப்பேன்'[i] என்றும் சொல்லவில்லையா?" என்றாள்.

8 அதற்கு பாராக், "நீங்கள் என்னோடு வந்தால்தான் நான் போவேன், இல்லாவிட்டால் போக மாட்டேன்" என்று சொன்னார். 9 அப்போது அவள், "நான் கண்டிப்பாக உங்களோடு வருவேன். ஆனால், இந்தப் போரில் உங்களுக்குப் புகழ் கிடைக்காது, ஒரு பெண்ணின் கையால்தான் சிசெராவை யெகோவா சாகடிப்பார்"[j] என்று சொன்னாள். பின்பு, தெபொ ராள் எழுந்து பாராக்குடன் கேதேசுக்குப்[k] போனாள். 10 செபுலோன், நப் தலி கோத்திரங்களைச்[l] சேர்ந்த வீரர்களை கேதேசுக்கு பாராக் வர வைத் தார். 10,000 வீரர்கள் அவருக்குப் பின்னால் போனார்கள். தெபொராளும் அவரோடு போனாள்.

11 கேனியரான ஹேபெர் என்பவர் மற்ற கேனியர்களிடமிருந்து[m] பிரிந்து, கேதேசில் சானானிமில் உள்ள பெரிய மரத்தின் பக்கத்தில் கூடாரம் போட்டிருந்தார். கேனியர்கள், மோசேயின் மாமனாராகிய ஒபாபின்[n] வம் சத்தார்.

12 தாபோர் மலைக்கு அபினோகாமின் மகனாகிய பாராக் அணி வகுத்து வந்திருக்கிறார் என்ற செய்தி சிசெராவுக்குக் கிடைத்தது.[o] 13 உடனே சிசெரா, இரும்பு அரிவாள்கள் பொருத்தப்பட்ட 900 போர் ரதங் களோடும், அரோசேத்-கோயிமில் தன்னுடன் இருந்த எல்லா படைவீரர் களோடும் கீசோன் நீரோடைக்கு[p] வந்தான். 14 அப்போது தெபொராள் பாராக்கிடம், "புறப்பட்டுப் போங்கள். இன்றைக்கு சிசெராவை யெகோவா உங்கள் கையில் கொடுப்பார். யெகோவா உங்கள் முன்னால் போகிறார் இல்லையா?" என்றாள். உடனே, பாராக்கும் அவருக்குப் பின்னால் 10,000 வீரர்களும் தாபோர் மலையிலிருந்து இறங்கினார்கள். 15 அப் போது, சிசெராவையும் அவனுடைய போர் ரதங்களையும் படைவீரர்க ளையும் பாராக்கின் வாளுக்கு முன்னால் யெகோவா குழம்பிப்போக வைத்தார்.[q] கடைசியில், சிசெரா தன்னுடைய ரதத்தைவிட்டு இறங்கி தப் பியோடினான். 16 அவனுடைய போர் ரதங்களையும் படைவீரர்களை யும் பாராக் துரத்திக்கொண்டு அரோசேத்-கோயிம்வரை போனார். இப்படி,

4:7 * வே.வா., "காட்டாற்றுப் பள்ளத்தாக்குக்கு."

அதி. 4
a உபா 28:48
b நியா 2:18; நியா 3:9; சங் 107:19
c யாத் 15:20; 2ரா 22:14; லூ 2:36; அப் 21:8, 9
d யோசு 18:21, 25
e ஆதி 28:17, 19
f யோசு 21:32
g எபி 11:32
h 1ரா 18:40; சங் 83:9
i உபா 20:1
j நியா 4:21, 22; நியா 5:24, 26
k யோசு 20:7, 9; யோசு 21:32
l நியா 5:18
m எண் 24:21; நியா 1:16; 1சா 15:6
n எண் 10:29
o நியா 4:6
p நியா 5:20, 21
q யாத் 14:24; யோசு 10:10

சிசெராவின் படைவீரர்கள் எல்லாரும் வாளுக்குப் பலியானார்கள். அவர்க
ளில் ஒருவன்கூட தப்பிக்கவில்லை.[a]

17 சிசெரா மட்டும் தப்பியோடி, கேனியரான ஹேபெரின்[b] மனைவி
யாகேலின்[c] கூடாரத்துக்கு வந்தான். ஏனென்றால், ஆத்சோரின் ராஜா
வாகிய யாபீனுக்கும்[d] கேனியரான ஹேபெரின் குடும்பத்தாருக்கும் சுமுக
மான உறவு இருந்தது. **18** யாகேல் தன்னுடைய கூடாரத்துக்கு வெளியே
வந்து சிசெராவைப் பார்த்து, "உள்ளே வாருங்கள், என் எஜமானே, உள்ளே
வாருங்கள். பயப்படாதீர்கள்" என்று சொன்னாள். அதனால், அவன் அவ
ளுடைய கூடாரத்துக்குள் போனான். அப்போது அவள் ஒரு போர்வையை
அவனுக்குப் போர்த்திவிட்டாள். **19** அவன் அவளிடம், "தாகமாக இருக்
கிறது, தயவுசெய்து குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தா" என்று கேட்டான்.
உடனே, அவள் தோல் பையைத் திறந்து பாலை ஊற்றிக் கொடுத்தாள்.[e]
பின்பு, மறுபடியும் அவனுக்குப் போர்வையைப் போர்த்திவிட்டாள்.
20 அவன் அவளிடம், "நீ கூடார வாசலிலேயே நின்றுகொள். யாராவது
உன்னிடம் வந்து, 'இங்கே ஒரு ஆள் வந்தானா?' என்று கேட்டால்,
'இல்லை!' என்று சொல்" என்றான்.

21 பின்பு, சிசெரா களைப்பில் நன்றாகத் தூங்கிவிட்டான். அப்போது,
ஹேபெரின் மனைவியாகிய யாகேல் கூடார ஆணியையும் சுத்தியலையும்
எடுத்துக்கொண்டு சத்தமில்லாமல் அவன் பக்கத்தில் வந்து, அந்த
ஆணியை அவனுடைய நெற்றிப்பொட்டில் ஓங்கி அடித்தாள். அது தரை
வரை இறங்கியது, அவன் அந்த இடத்திலேயே செத்துப்போனான்.[f]

22 அவனைத் துரத்திக்கொண்டு வந்த பாராக் அங்கு வந்துசேர்ந்தார்.
அப்போது யாகேல் வெளியே வந்து அவரைப் பார்த்து, "வாருங்கள், நீங்
கள் தேடுகிற ஆளைக் காட்டுகிறேன்" என்று சொன்னாள். அவர் அவளு
டன் கூடாரத்துக்குள் போய்ப் பார்த்தபோது, கூடார ஆணி நெற்றிப்பொட்
டில் அடிக்கப்பட்ட நிலையில் சிசெரா செத்துக் கிடந்தான்.

23 இப்படி, இஸ்ரவேலர்கள் கானானின் ராஜாவாகிய யாபீனை அடி
யோடு அடக்குவதற்கு அன்று கடவுள் உதவினார்.[g] **24** கானானின் ராஜா
வாகிய யாபீனுக்கு விரோதமாக இஸ்ரவேலர்களின் கை நாளுக்கு நாள்
ஓங்கிக்கொண்டே வந்தது.[h] கடைசியில், அவர்கள் அவனை அழித்துப்
போட்டார்கள்.[i]

5 அன்றைக்கு தெபொராள்[j] பாட்டுப் பாடினாள். அவள் அபினோகா
மின் மகன் பாராக்குடன்[k] சேர்ந்து,

2 "இஸ்ரவேலர்கள் நேர்த்திக்கடன் செலுத்த* போனார்கள்.
போர் செய்ய மனப்பூர்வமாகப் போனார்கள்.[l]
அதனால், யெகோவாவைப் புகழுங்கள்!
3 ராஜாக்களே, கேளுங்கள்! அதிபதிகளே, கவனியுங்கள்!
நான் யெகோவாவைப் புகழ்ந்து பாடுவேன்.
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்குத்[m] துதி பாடுவேன்.*[n]
4 யெகோவாவே, நீங்கள் சேயீர் மலையிலிருந்து[o] புறப்பட்டீர்கள்.
ஏதோம் பிரதேசத்திலிருந்து அணிவகுத்து வந்தீர்கள்.

5:2 * நே.மொ., "தலைமுடியை விரித்தபடி." இது அவர்களுடைய நேர்த்திக்கடனுக்கு அடையாளமாக இருந்தது. **5:3** * வே.வா., "இசை இசைப்பேன்."

அதி. 4
a லேவி 26:7
b நியா 4:11
c நியா 5:24
d நியா 4:1, 2
e நியா 5:25
f நியா 4:9
நியா 5:26, 27
g எபி 11:32, 33
h ஆதி 9:25
i உபா 7:24

அதி. 5
j நியா 4:4
k நியா 4:6
எபி 11:32
l நியா 4:10
m யாத் 20:2
n 2சா 22:50
சங் 7:17
o உபா 33:2

அதி. 5

அப்போது பூமி குலுங்கியது, வானத்திலிருந்து மழை பொழிந்தது.
மேகத்திலிருந்து தண்ணீர் கொட்டியது.
5 யெகோவாவுக்கு முன்னால் மலைகள் உருகின.*[a]
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு[b] முன்னால் சீனாய் கரைந்தது.[c]
6 ஆனாத் மகன் சம்காரின்[d] நாளிலே,
யாகேல்[e] வாழ்ந்த காலத்திலே,
சாலைகள் வெறிச்சோடிக் கிடந்த சமயத்திலே,
பயணிகள் சுற்றுப் பாதையில் பயணம் செய்தார்கள்.
7 இஸ்ரவேல் கிராமவாசிகள் இல்லாமல் போனார்கள்.
கடைசியில் தெபொராளாகிய[f] நான் வந்தேன்.
இஸ்ரவேலின் தாயாக[g] நான் வந்தேன்.
8 அவர்கள் புதிய தெய்வங்களைக் கும்பிட்டார்கள்.[h]
அப்போது நகரவாசலில் போர் சத்தம் கேட்டது.[i]
இஸ்ரவேல் வீரர்கள் நாற்பதாயிரம் பேரின் கைகளில்,
கேடயமும் இல்லை, ஈட்டியும் இல்லை.
9 அந்த வீரர்களோடு மனப்பூர்வமாகப் போன[j] படைத் தளபதிகளுக்கு[k]
நான் இதயப்பூர்வமான ஆதரவு கொடுக்கிறேன்.
யெகோவாவுக்குப் புகழ் சேரட்டும்!
10 பழுப்பு நிற கழுதைகளில் சவாரி செய்பவர்களே,
உயர்தரமான கம்பளங்களில் உட்கார்ந்திருப்பவர்களே,
வழியில் நடந்துபோகிறவர்களே,
கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!
11 மந்தைக்குத் தண்ணீர் காட்டுகிறவர்களின் சத்தம்
தண்ணீர்த் தொட்டிகளின் பக்கத்தில் கேட்டது.
யெகோவாவின் நீதியான செயல்களைப் பற்றியும்,
இஸ்ரவேல் கிராமத்து ஜனங்கள் செய்த நல்ல காரியங்களைப் பற்றியும்
அவர்கள் பேசிக்கொண்டார்கள்.
பின்பு, யெகோவாவின் ஜனங்கள் நகரவாசலுக்குப் போனார்கள்.
12 விழித்தெழு! தெபொராளே,[l] விழித்தெழு!
விழித்தெழு! ஒரு பாடல் பாட[m] விழித்தெழு!
பாராக்கே, எழுந்திடு![n]
அபினோகாமின் மகனே, உன் எதிரிகளைப் பிடித்துக்கொண்டு போ!
13 மீதியாக இருந்தவர்கள் முக்கியப் பிரமுகர்களிடம் வந்தார்கள்.
பலசாலிகளை எதிர்க்க யெகோவாவின் ஜனங்கள் என்னைத் தேடி வந்தார்கள்.
14 பள்ளத்தாக்கில் இருந்தவர்கள் எப்பிராயீமிலிருந்து வந்தார்கள்.
பென்யமீனியர்களே, உங்களோடு அவர்களும் வந்தார்கள்.
மாகீரிலிருந்து[o] படைத் தளபதிகள் வந்தார்கள்.

5:5 * அல்லது, “அதிர்ந்தன.”

a உபா 4:11
b யாத் 20:2
c யாத் 19:18; நெ 9:13
d நியா 3:31
e நியா 4:17
f நியா 4:4
g நியா 4:5
h உபா 32:16, 17; நியா 2:12
i நியா 4:1-3
j நியா 4:10
k நியா 4:6
l நியா 4:4
m நியா 5:1
n நியா 4:6
o எண் 32:39

போருக்கு ஆள் எடுக்கிறவர்கள்* செபுலோனிலிருந்து வந்தார்கள்.
15 இசக்காரின் அதிகாரிகள் தெபொராளுடன் இருந்தார்கள்.
இசக்காரைப் போலவே பாராக்கும்[a] அவளுடன் போனார்.
அவர் சமவெளிக்கு நடந்தே போனார்.[b]
ரூபன் பிரிவினரின் இதயம் இரண்டுபட்டிருந்தது.
16 ஏன் இரண்டு மூட்டைகளைச் சுமந்துகொண்டு உட்கார்ந்தீர்கள்?
மந்தைகளுக்காகக் குழல் ஊதுபவர்களின் இசையை ஏன்
ரசித்துக்கொண்டு இருந்தீர்கள்?[c]
ரூபன் பிரிவினரின் இதயம் இரண்டுபட்டிருந்ததே.
17 யோர்தானுக்கு அந்தப் பக்கமே கீலேயாத் இருந்துவிட்டான்.[d]
கப்பல்களின் நடுவிலேயே தாண் இருந்துவிட்டான்.[e]
கடற்கரையிலேயே ஆசேர் சோம்பலோடு உட்கார்ந்துவிட்டான்.
துறைமுகங்களிலேயே அவன் தங்கிவிட்டான்.[f]
18 செபுலோன் ஜனங்கள் உயிரைப் பணயம் வைத்தார்கள்.
நப்தலி ஜனங்களும்[g] குன்றுகள்மேல்[h] அதேபோல் செய்தார்கள்.
19 ராஜாக்கள் வந்து போர் செய்தார்கள்.
தானாக்கிலே, மெகிதோவின் தண்ணீருக்குப் பக்கத்திலே,[i]
கானானின் ராஜாக்கள் சண்டை போட்டார்கள்.[j]
வெள்ளி எதையும் அவர்கள் சூறையாடவில்லை.[k]
20 வானத்திலிருந்து நட்சத்திரங்கள் போர் செய்தன.
அவற்றின் சுற்றுப் பாதைகளிலிருந்து சிசெராவுடன் சண்டை போட்டன.
21 கீசோன் நீரோடை எதிரிகளை அடித்துக்கொண்டு போனது.[l]
அது பழங்காலத்து நீரோடை.
பலம்படைத்தவர்களை நான் மிதித்துப் போட்டேன்.
22 வீரியமுள்ள குதிரைகள்* மூர்க்கமாகப் பாய்ந்தோடின.
அவற்றின் குளம்புகள் நிலத்தை அதிர வைத்தன.[m]
23 யெகோவாவின் தூதர் சொன்னார்:
'மேரோசைச் சபியுங்கள், அதன் ஜனங்களைச் சபியுங்கள்.
அவர்கள் யெகோவாவின் உதவிக்கு வரவில்லை.
பலசாலிகளுடன் வந்து யெகோவாவுக்கு உதவி செய்யவில்லை.'
24 யாகேல்,[n] பெண்களில் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவள்.
அவள் கேனியரான ஹேபெரின்[o] மனைவி.
கூடாரங்களில் வாழ்கிற பெண்களில் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவள்.
25 அவன் தண்ணீரைக் கேட்டான், அவள் பாலைக் கொடுத்தாள்.
கடைந்த பாலை* பெரிய கிண்ணத்தில் கொடுத்தாள்.[p]
26 கூடார ஆணியைக் கையில் எடுத்தாள்.
வலது கையால் சுத்தியலை ஓங்கினாள்.
சிசெராவின் நெற்றிப்பொட்டைத் துளைத்தாள்.[q]
அவன் தலையை அடித்து நொறுக்கினாள்.

5:14 *அல்லது, "எழுத்தர்களின் எழுதுகோலைப் பிடிக்கிறவர்கள்." **5:22** *வே.வா., "பொலிகுதிரைகள்." **5:25** *வே.வா., "பாலேடு நிறைந்த கெட்டிப் பாலை."

அதி. 5
a நியா 4:6; எபி 11:32
b நியா 4:14
c எண் 32:1
d யோசு 22:9
e யோசு 19:46, 48
f யோசு 19:24, 29
g நியா 4:6, 10
h நியா 4:14
i நியா 1:27
j நியா 4:13
k நியா 4:16
l நியா 4:7, 13; சங் 83:9
m சங் 20:7; நீதி 21:31
n நியா 4:17
o நியா 4:11
p நியா 4:19
q நியா 4:21, 22

27 அவன் அவளுடைய காலடியில் விழுந்தான்,
அப்படியே அசையாமல் கிடந்தான்.
அங்கேயே விழுந்து கிடந்தான்.
விழுந்த இடத்திலேயே பிணமானான்.
28 சிசெராவின் தாய் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக்கொண்டே,
‘அவனுடைய போர் ரதம் ஏன் இன்னும் வரவில்லை?
குதிரைகள் ஓடிவரும் சத்தம் ஏன் இன்னும் கேட்கவில்லை?’[a] என்று புலம்பினாள்.
29 புத்திசாலியான பணிப்பெண்கள் அவளுக்குப் பதில் சொன்னார்கள்.
அவளும் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே,
30 ‘கைப்பற்றிய பொருள்களை அவர்கள் பங்குபோட்டுக்கொண்டு இருப்பார்கள்.
ஒரு வீரனுக்கு ஒன்று அல்லது இரண்டு பெண்களையும்,
சிசெராவுக்கு வண்ண வண்ணத் துணிகளையும்,
கைப்பற்றியவர்களுடைய கழுத்தை அலங்கரிப்பதற்கு
தையல்* வேலைப்பாடு செய்த ஒரு உடையையும், வண்ணத் துணியையும்,
தையல் வேலைப்பாடு செய்த இரண்டு உடைகளையும்
கொடுத்துக்கொண்டு இருப்பார்கள்’ என்றாள்.
31 யெகோவாவே, உங்கள் எதிரிகள் அழிந்துபோகட்டும்.[b]
உங்களை நேசிக்கிறவர்கள் சூரியன்போல் பிரகாசமாக உதிக்கட்டும்” என்று பாடினாள்.[c]

அதன்பின், 40 வருஷங்களுக்குத் தேசத்தில் அமைதி இருந்தது.[d]

6 ஆனால், இஸ்ரவேலர்கள் மறுபடியும் யெகோவாவுக்குப் பிடிக்காத காரி
யங்களைச் செய்தார்கள்.[e] அதனால், யெகோவா அவர்களை ஏழு வரு
ஷங்களுக்கு மீதியானியர்களின் கையில் கொடுத்துவிட்டார்.[f] **2** மீதியானி
யர்கள் இஸ்ரவேலர்களை அடக்கி ஒடுக்கினார்கள்.[g] இஸ்ரவேலர்கள்
மீதியானியர்களுக்குப் பயந்து மலைகளிலும், குகைகளிலும், யாரும்
நெருங்க முடியாத பகுதிகளிலும் பதுங்குவதற்கான இடங்களை* அமைத்
தார்கள்.[h] **3** இஸ்ரவேலர்கள் விதை விதைத்தபோதெல்லாம், மீதியானியர்
களும் அமலேக்கியர்களும்[i] கிழக்கத்தியர்களும்[j] அவர்களைத் தாக்கினார்
கள். **4** அவர்கள் இஸ்ரவேலர்களுக்கு விரோதமாக முகாம்போட்டு, காசா
வரைக்கும் அவர்களுடைய விளைச்சலை நாசமாக்கினார்கள். இஸ்ரவேலர்
கள் சாப்பிடுவதற்கு அவர்கள் எதையுமே விட்டுவைக்கவில்லை. ஆடு,
மாடு, கழுதை என எல்லாவற்றையும் அழித்தார்கள்.[k] **5** ஏராளமான ஆட்
கள் தங்களுடைய கால்நடைகளோடும் கூடாரங்களோடும் கணக்குவழக்கில்
லாத ஒட்டகங்களோடும்[l] வெட்டுக்கிளிகள்போல் திரண்டு வந்து[m] எல்லா
வற்றையும் அழித்தார்கள். **6** இப்படி, மீதியானியர்களால் இஸ்ரவேலர்கள்
வறுமையில் பயங்கரமாகக் கஷ்டப்பட்டார்கள். அதனால், யெகோவாவிடம்
உதவிக்காகக் கெஞ்சினார்கள்.[n]
7 மீதியானியர்களின் கொடுமை தாங்காமல் இஸ்ரவேலர்கள்

அதி. 5
a நியா 4:15, 16
b சங் 83:9
c யாத் 15:1; சங் 18:மே.கு.
d நியா 3:10, 11; நியா 3:30

அதி. 6
e நியா 2:19
f உபா 28:15, 48; நியா 2:14; நெ 9:28
g எண் 33:55
h 1சா 13:5, 6
i நியா 3:13
j நியா 8:10
k உபா 28:15, 33; உபா 28:31, 48
l நியா 7:12
m நியா 8:10
n உபா 4:30

5:30 *வே.வா., “எம்பிராய்டரி.” **6:2** *அல்லது, “நிலத்தடி சேமிப்புக் கிடங்குகளை.”

யெகோவாவிடம் உதவிக்காகக் கெஞ்சியபோது,[a] **8** யெகோவா ஒரு தீர்க்
கதரிசியை அனுப்பினார். அவர்களிடம் அந்தத் தீர்க்கதரிசி, “இஸ்ரவேலின்
கடவுளாகிய யெகோவா சொல்வது என்னவென்றால், ‘எகிப்து தேசத்
தின் அடிமைத்தனத்திலிருந்து நான் உங்களைக் கூட்டிக்கொண்டு வந்
தேன்.[b] **9** எகிப்தியர்களிடமிருந்தும், உங்களை அடக்கி ஒடுக்கிய மற்ற
எல்லா ஜனங்களிடமிருந்தும் நான் உங்களைக் காப்பாற்றினேன். உங்க
ளுடைய எதிரிகளைத் துரத்திவிட்டு, அவர்களுடைய தேசத்தை உங்களுக்
குக் கொடுத்தேன்.[c] **10** அதோடு உங்களிடம், “நான் உங்கள் கடவுளாகிய
யெகோவா.[d] நீங்கள் குடியிருக்கிற தேசத்திலுள்ள எமோரியர்களின் தெய்
வங்களை நீங்கள் கும்பிடக் கூடாது”[e] என்று சொன்னேன். ஆனால், நீங்
கள் எனக்குக் கீழ்ப்படியவில்லை’”[f] என்றார்.

11 பிற்பாடு ஒப்ராவில், அபியேசரின் வம்சத்தைச்[g] சேர்ந்த யோவாசுக்
குச் சொந்தமான பெரிய மரத்தின் அடியில் யெகோவாவின் தூதர்
வந்து[h] உட்கார்ந்திருந்தார். யோவாசின் மகன் கிதியோன்[i] திராட்சரச
ஆலையில் கோதுமையைக் கதிரடித்துக்கொண்டிருந்தார். மீதியானியர்கள்
கோதுமையைப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக அங்கே கதிரடித்துக்
கொண்டிருந்தார். **12** அப்போது யெகோவாவின் தூதர் அவருக்கு முன்
னால் வந்து, “மாவீரனே, யெகோவா உன்னோடு இருக்கிறார்”[j] என்று
சொன்னார். **13** அதற்கு கிதியோன், “என் எஜமானே, என்னை மன்னித்து
விடுங்கள். யெகோவா எங்களோடு இருந்தால், எங்களுக்கு ஏன் இவ்வ
ளவு கஷ்டம்?[k] யெகோவா அற்புதங்கள் செய்து எகிப்திலிருந்து கூட்டிக்
கொண்டு வந்ததாக[l] எங்களுடைய முன்னோர்கள் சொன்னார்களே,[m]
அந்த அற்புதங்களெல்லாம் எங்கே? இப்போது யெகோவா எங்களைக்
கைவிட்டுவிட்டாரே,[n] மீதியானியர்களின் கையில் கொடுத்துவிட்டாரே”
என்று சொன்னார். **14** அப்போது யெகோவா அவரைப் பார்த்து, “உனக்கு
இருக்கிற பலத்தோடு நீ புறப்பட்டுப் போ. மீதியானியர்களின் கையிலிருந்து
நீ இஸ்ரவேலர்களைக் காப்பாற்றுவாய்.[o] ஏனென்றால், நான்தான் உன்னை
அனுப்புகிறேன்” என்று சொன்னார். **15** ஆனால் கிதியோன், “மன்னியுங்
கள், யெகோவாவே. நான் எப்படி இஸ்ரவேலர்களைக் காப்பாற்ற முடியும்?
மனாசே கோத்திரத்திலேயே என்னுடைய குடும்பம்தான் ரொம்பச் சாதா
ரண குடும்பம். என்னுடைய அப்பாவின் குடும்பத்திலேயே நான்தான்
ரொம்ப அற்பமானவன்” என்று சொன்னார். **16** ஆனால் யெகோவா அவ
ரிடம், “நான் உன்னோடு இருக்கிறேன்.[p] ஒரே ஒரு ஆளை வெட்டிச் சாய்ப்
பது போல மீதியானியர்களை ஒட்டுமொத்தமாக நீ வெட்டிச் சாய்ப்பாய்”
என்று சொன்னார்.

17 அப்போது கிதியோன் அவரிடம், “நான் உங்களுக்குப் பிரியமானவ
னாக இருந்தால், என்னிடம் பேசுவது நீங்கள்தான் என்பதற்கு ஒரு
அடையாளம் காட்டுங்கள். **18** நான் உங்கள் முன்னால் காணிக்கையைக்
கொண்டுவந்து வைக்கும்வரை தயவுசெய்து இங்கிருந்து போகாதீர்கள்”[q]
என்று சொன்னார். அதற்கு அவர், “நீ வரும்வரை நான் இங்கேயே இருப்
பேன்” என்று சொன்னார். **19** கிதியோன் உள்ளே போய் ஓர் ஆட்டுக்
குட்டியை வெட்டி அதைச் சமைத்தார். பின்பு, ஒரு எப்பா அளவு* மாவை
எடுத்து புளிப்பில்லாத ரொட்டிகள் சுட்டார்.[r] அதன்பின், இறைச்சியை ஒரு

6:19 * அதாவது, “சுமார் 10 கிலோ.”

அதி. 6
a நியா 2:18; சங் 107:19
b யாத் 20:2; லேவி 26:13; நியா 2:1
c யோசு 10:42; நெ 9:24
d உபா 6:4
e யோசு 24:15
f உபா 28:15; நியா 2:2; எரே 3:13
g யோசு 17:2; நியா 6:24; நியா 8:32
h நியா 2:1
i ஆதி 49: 22, 24; எபி 11:32
j நியா 2:18
k நியா 6:2
l யாத் 13:14
m உபா 4:9; சங் 44:1
n உபா 31:17; 2நா 15:2
o நியா 8:22; எபி 11:32
p உபா 20:3, 4; நியா 2:18
q ஆதி 18:3, 5; நியா 13:15
r ஆதி 18:6, 7; ஆதி 19:1, 3

அதி. 6
a லேவி 9:24 நியா 13:19, 20 1ரா 18:38 1நா 21:26 2நா 7:1
b நியா 13:8, 9 எபி 13:2
c ஆதி 16:7, 13 ஆதி 32:24, 30 நியா 13:21, 22 லூ 1:11, 12
d தானி 10:19
e ஆதி 22:14 யாத் 17:15
f யாத் 23:24 உபா 12:3

கூடையிலும், அதன் சாறை ஒரு சட்டியிலும் எடுத்துக்கொண்டு வந்து அந்
தப் பெரிய மரத்தின் அடியில் அவருக்கு முன்னால் வைத்தார்.

20 அப்போது உண்மைக் கடவுளின் தூதர் அவரிடம், "இறைச்சியையும்
புளிப்பில்லாத ரொட்டிகளையும் எடுத்து அங்கே இருக்கிற பெரிய பாறை
யில் வைத்து, அவற்றின் மேல் அந்தச் சாறை ஊற்று" என்று சொன்
னார். கிதியோன் அப்படியே செய்தார். **21** பின்பு யெகோவாவின் தூதர்
தன்னுடைய கையிலிருந்த தடியை நீட்டி, அதன் நுனியால் இறைச்சியையும்
புளிப்பில்லாத ரொட்டிகளையும் தொட்டார். உடனே, அந்தப் பாறையிலி
ருந்து நெருப்பு வந்து இறைச்சியையும் புளிப்பில்லாத ரொட்டிகளையும் சுட்
டெரித்தது.[a] அப்போது, யெகோவாவின் தூதர் அவருடைய கண் முன்னா
லிருந்து மறைந்தார். **22** அதனால், அவர் யெகோவாவின் தூதர் என்பதை
கிதியோன் புரிந்துகொண்டார்.[b]

உடனே கிதியோன், "ஐயோ, யெகோவாவே! உன்னதப் பேரரசராகிய
யெகோவாவே, நான் உங்களுடைய தூதரை நேருக்கு நேராகப் பார்த்து
விட்டேனே"[c] என்று சொன்னார். **23** ஆனால் யெகோவா அவரிடம்,
"பயப்படாதே,[d] நிம்மதியாக* இரு. நீ சாக மாட்டாய்" என்று சொன்னார்.
24 அதனால், கிதியோன் அங்கே யெகோவாவுக்கு ஒரு பலிபீடம் கட்டி,
அதற்கு யெகோவா-ஷாலோம்*[e] என்று பெயர் வைத்தார். அபியேசரின்
வம்சத்தார் வாழ்கிற ஒப்ராவில் அது இன்றுவரை இருக்கிறது.

25 அன்றைக்கு ராத்திரி யெகோவா அவரிடம், "உன் அப்பா வைத்தி
ருக்கிற காளைகளில், ஏழு வயது இளம் காளையை* எடுத்துக்கொள்.
உன் அப்பாவுக்குச் சொந்தமான பாகாலின் பலிபீடத்தை இடித்துப்போடு.
அதற்குப் பக்கத்திலுள்ள பூஜைக் கம்பத்தை# வெட்டிப்போடு.[f] **26** பின்பு,
இந்தப் பாறையின் உச்சியில் கற்களை அடுக்கி வைத்து உன் கடவுளா
கிய யெகோவாவுக்குப் பலிபீடம் கட்டு. நீ வெட்டிப்போட்ட பூஜைக்
கம்பத்தை# விறகுகளாக உடைத்து, அந்த இளம் காளையை* அவற்றின்
மேல் தகன பலியாகச் செலுத்து" என்று சொன்னார். **27** கிதியோன் தன்னு
டைய வேலைக்காரர்களில் 10 பேரைக் கூட்டிக்கொண்டு போய் யெகோவா
சொன்னபடியே செய்தார். ஆனால், தன்னுடைய அப்பாவின் குடும்பத்தா
ருக்கும் நகரத்திலிருந்த ஆண்களுக்கும் மிகவும் பயந்ததால், அதைப் பக
லில் செய்யாமல் ராத்திரியில் செய்தார்.

28 அந்த நகரத்திலிருந்த ஆண்கள் அடுத்த நாள் விடியற்காலையில்
எழுந்து பார்த்தபோது, பாகாலின் பலிபீடம் இடிக்கப்பட்டிருந்தது. அதற்குப்
பக்கத்திலிருந்த பூஜைக் கம்பம்# வெட்டப்பட்டிருந்தது. புதிதாகக் கட்டப்
பட்டிருந்த பலிபீடத்தின் மேல் இளம் காளை* பலி செலுத்தப்பட்டிருந்தது.
29 "யார் இப்படிச் செய்தது?" என்று அவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக்
கொண்டார்கள். பிறகு விசாரித்துவிட்டு, "யோவாசின் மகன் கிதியோன்தான்
இப்படிச் செய்திருக்கிறான்" என்று சொல்லிக்கொண்டார்கள். **30** அப்
போது, நகரத்திலிருந்த ஆண்கள் யோவாசிடம், "உன்னுடைய மகன் பாகா
லின் பலிபீடத்தை இடித்துவிட்டு, பக்கத்திலிருந்த பூஜைக் கம்பத்தையும்#
வெட்டியிருக்கிறான். அவனை வெளியே இழுத்துக் கொண்டுவா, அவனை

6:23 *வே.வா., "சமாதானமாக." **6:24** *அர்த்தம், "யெகோவா சமாதானமானவர்." **6:25, 26** *நே.மொ., "இரண்டாவது இளம் காளையை." **6:25, 26, 28, 30** #சொல் பட்டியலைப் பாருங்கள். **6:28** *நே.மொ., "இரண்டாவது இளம் காளை."

நாங்கள் கொல்ல வேண்டும்” என்று சொன்னார்கள். **31** உடனே,
யோவாஸ்[a] அவர்கள் எல்லாரிடமும், “பாகாலுக்காக நீங்கள்தான் வாதாட
வேண்டுமோ? பாகாலை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டுமோ? பாகா
லுக்காக வாதாடுகிறவன் இன்று காலையிலேயே கொல்லப்பட வேண்டும்.[b]
பாகால் தெய்வமாக இருந்தால், அவனுடைய பலிபீடம் இடித்துப் போடப்
பட்டதற்காக அவனே வாதாடட்டும்”[c] என்று சொன்னார். **32** “பாகாலின்
பலிபீடம் இடித்துப் போடப்பட்டதற்காக பாகாலே வாதாடட்டும்” என்று
சொல்லி, கிதியோனுக்கு யெருபாகால்* என்று பெயர் வைத்தார்.

33 மீதியானியர்களும்[d] அமலேக்கியர்களும்[e] கிழக்கத்தியர்களும் கூட்
டுச் சேர்ந்துகொண்டு,[f] ஆற்றைக் கடந்து யெஸ்ரயேல் பள்ளத்தாக்குக்கு
வந்து, அங்கே முகாம்போட்டார்கள். **34** யெகோவாவின் சக்தி கிதியோ
னுக்குக் கிடைத்ததும்[g] அவர் ஊதுகொம்பை ஊதினார்.[h] அப்போது, அபி
யேசரின் வம்சத்தார்[i] அவரிடம் திரண்டு வந்தார்கள். **35** பின்பு அவர்,
மனாசே கோத்திரத்தார் எல்லாரிடமும் தூதுவர்களை அனுப்பினார். அவர்
களும் அவரிடம் திரண்டு வந்தார்கள். பிறகு ஆசேர், செபுலோன், நப்தலி
கோத்திரத்தாரிடமும் தூதுவர்களை அனுப்பினார். அவர்களும் புறப்பட்டு
வந்து அவரைச் சந்தித்தார்கள்.

36 அப்போது கிதியோன் உண்மைக் கடவுளிடம், “நீங்கள் வாக்குக்
கொடுத்தபடியே[j] என் மூலம் இஸ்ரவேலர்களைக் காப்பாற்றப்போகிறீர்
கள் என்றால், **37** இதோ, நான் ஒரு கம்பளித் தோலைக் களத்துமேட்டில்
வைக்கிறேன். கம்பளித் தோலில் மட்டும் பனி பெய்து, தரை முழுவதும்
காய்ந்திருந்தால், நீங்கள் வாக்குக் கொடுத்தபடி என் மூலம் இஸ்ரவேலர்
களைக் காப்பாற்றுவீர்கள் என்பதைத் தெரிந்துகொள்வேன்” என்று சொன்
னார். **38** அவர் கேட்டுக்கொண்டபடியே நடந்தது. அவர் அடுத்த நாள்
விடியற்காலையில் எழுந்து, பனியில் நனைந்திருந்த கம்பளித் தோலைப்
பிழிந்தார். அப்போது, ஒரு பெரிய பாத்திரம் நிரம்பும் அளவுக்கு அதிலி
ருந்து தண்ணீர் வந்தது. **39** ஆனாலும், கிதியோன் உண்மைக் கடவுளிடம்,
“தயவுசெய்து என்மேல் கோபப்படாதீர்கள். இன்னும் ஒரேவொரு தடவை
மட்டும் கேட்கிறேன். கம்பளித் தோலால் சோதித்துப் பார்க்க இன்னும் ஒரு
தடவை மட்டும் எனக்கு அனுமதி கொடுங்கள். தயவுசெய்து தரை முழு
வதும் பனி பெய்து, கம்பளித் தோல் மட்டும் காய்ந்திருக்கும்படி செய்யுங்
கள்” என்று சொன்னார். **40** அவர் கேட்டுக்கொண்டபடியே கடவுள் அன்
றைக்கு ராத்திரியும் செய்தார். தரை முழுவதும் பனி பெய்திருந்தது,
கம்பளித் தோல் மட்டும் காய்ந்திருந்தது.

7 பின்பு யெருபாகாலும், அதாவது கிதியோனும்,[k] அவரோடு இருந்த
ஆட்கள் எல்லாரும் விடியற்காலையில் எழுந்து ஆரத் என்ற நீரூற்றுக்
குப் பக்கத்தில் முகாம்போட்டார்கள். அவர்களுடைய முகாமுக்கு வடக்கே,
மோரேயின் குன்றுக்குப் பக்கத்திலுள்ள சமவெளியில் மீதியானியர்கள்
முகாம்போட்டிருந்தார்கள். **2** அப்போது யெகோவா கிதியோனிடம், “உன்
னோடு நிறைய வீரர்கள் இருப்பதால், மீதியானியர்களை உங்கள் கையில்
கொடுக்க மாட்டேன்.[l] அப்படிக் கொடுத்தால், ‘எங்கள் பலத்தால்தான்
வெற்றி கிடைத்தது’ என்று என் முன்னால் பெருமை பேசுவீர்கள்.[m] **3** அத
னால், ‘பயத்தில் நடுங்குகிற எல்லாரும் வீட்டுக்குப் போய்விடுங்கள்’ என்று

6:32 * அர்த்தம், “பாகால் வாதாடட்டும்.”

அதி. 6
a நியா 6:11
b உபா 13:5; உபா 17:2-5
c 1ரா 18:26, 27; சங் 115:5; எரே 10:5
d எண் 25:17, 18; நியா 6:2
e யாத் 17:16; எண் 24:20; உபா 25:19
f நியா 6:3; நியா 7:12
g நியா 3:9, 10; நியா 11:29; நியா 13:24, 25; நியா 14:6; நியா 15:14; சக 4:6
h நியா 3:26, 27
i யோசு 17:2
j நியா 6:14

அதி. 7
k நியா 6:11, 32
l 1சா 14:6; 2நா 14:11
m 1சா 17:47

தயவுசெய்து அறிவிப்பு செய்”[a] என்று சொன்னார். கிதியோனும் அந்த அறி
விப்பைச் செய்து, அவர்களைச் சோதித்துப் பார்த்தார். அப்போது 22,000
பேர் திரும்பிப் போனார்கள். 10,000 பேர் மட்டும் மீதியாக இருந்தார்கள்.

4 பின்பு யெகோவா கிதியோனிடம், “இப்போதும்கூட நிறைய வீரர்கள்
இருக்கிறார்கள். அவர்களை நீரோடைக்குக் கூட்டிக்கொண்டு போ. உனக்
காக நான் அவர்களைச் சோதித்துப் பார்ப்பேன். யாரெல்லாம் உன்னோடு
வரலாம் என்று சொல்கிறேனோ அவர்கள் உன்னோடு வரலாம். யாரெல்
லாம் வரக் கூடாது என்று சொல்கிறேனோ அவர்கள் உன்னோடு வரக்
கூடாது” என்றார். **5** அதனால் கிதியோன் தன் வீரர்களைக் கூட்டிக்
கொண்டு நீரோடைக்குப் போனார்.

அப்போது யெகோவா கிதியோனிடம், “தண்ணீரைக் கையில் அள்ளி
நாய்போல் நக்கிக் குடிக்கிற எல்லாரையும் தனியாக நிற்க வை. மண்டி
போட்டுக் குடிக்கிற எல்லாரையும் தனியாக நிற்க வை” என்று சொன்னார்.
6 தண்ணீரைக் கையில் அள்ளி நக்கிக் குடித்தவர்கள் 300 பேர். மற்றவர்
கள் எல்லாரும் மண்டிபோட்டுக் குடித்தார்கள்.

7 அப்போது யெகோவா கிதியோனிடம், “தண்ணீரைக் கையில் அள்ளி
நக்கிக் குடித்த 300 பேரை வைத்து நான் உங்களைக் காப்பாற்றி, மீதியானி
யர்களை உங்கள் கையில் கொடுப்பேன்.[b] மற்றவர்கள் எல்லாரும்
வீட்டுக்குப் போகட்டும்” என்று சொன்னார். **8** அதன்படியே, கிதியோன்
300 பேரை மட்டும் வைத்துக்கொண்டு, மற்றவர்களை அவரவர் வீட்டுக்கு
அனுப்பிவிட்டார். அனுப்பப்பட்டவர்களிடம் இருந்த உணவுப் பொருள்க
ளையும் ஊதுகொம்புகளையும் இவர்கள் வாங்கிக்கொண்டார்கள். இஸ்ரவே
லர்களின் முகாமுக்குக் கீழே இருந்த சமவெளியில் மீதியானியர்கள் முகாம்
போட்டிருந்தார்கள்.[c]

9 அன்றைக்கு ராத்திரி யெகோவா அவரிடம், “புறப்பட்டுப் போய்,
அவர்களுடைய முகாமைத் தாக்கு. அவர்களை உன் கையில் கொடுத்
துவிட்டேன்.[d] **10** அவர்களைத் தாக்குவதற்குப் பயமாக இருந்தால், உன்
னுடைய உதவியாளன் பூராவைக் கூட்டிக்கொண்டு அவர்களுடைய முகா
முக்குப் போ. **11** அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று கவனி.
அப்போது, அவர்களுடைய முகாமைத் தாக்க உனக்குத் தைரியம் வரும்”
என்று சொன்னார். உடனே அவரும் அவருடைய உதவியாளன் பூராவும்
அந்த முகாமின் எல்லைக்குப் போனார்கள்.

12 மீதியானியர்களும் அமலேக்கியர்களும் கிழக்கத்தியர்கள்[e] எல்லா
ரும் வெட்டுக்கிளி கூட்டம்போல் அந்தச் சமவெளி முழுவதும் குவிந்திருந்
தார்கள். கடற்கரை மணலைப் போல எண்ண முடியாத அளவுக்கு
அவர்களிடம் ஒட்டகங்கள் இருந்தன.[f] **13** கிதியோன் அங்கு வந்தபோது,
ஒருவன் தன் நண்பனிடம், “எனக்கு ஒரு கனவு வந்தது. அந்தக் கனவில்
வட்டமான பார்லி ரொட்டி ஒன்று மீதியானியர்களின் முகாமுக்குள்
உருண்டு வந்து ஒரு கூடாரத்தின் மேல் பலமாக மோதியது. அப்போது அந்
தக் கூடாரம் அப்படியே கவிழ்ந்து, தரைமட்டமானது”[g] என்று சொல்லிக்
கொண்டிருந்தான். **14** அதற்கு அவனுடைய நண்பன், “அது யோவாசின்
மகனாகிய கிதியோனின் வாளாகத்தான் இருக்க வேண்டும்.[h] கடவுள் அந்த
இஸ்ரவேலனின் கையில் மீதியானியர்களையும் இந்தப் படை முழுவதை
யும் கொடுத்துவிட்டார்”[i] என்று சொன்னான்.

அதி. 7
a உபா 20:8
b நியா 7:2
c நியா 6:33
d நியா 3:9, 10; நியா 4:14
e நியா 6:33
f நியா 6:3, 5
g நியா 6:16
h நியா 6:14
i நியா 7:7

15 அந்தக் கனவையும் அதற்கான விளக்கத்தையும் கிதியோன் கேட்ட
வுடன்[a] மண்டிபோட்டு கடவுளை வணங்கினார். அதன்பின், இஸ்ரவே
லர்களின் முகாமுக்குத் திரும்பி வந்து, “புறப்படுங்கள், மீதியானியர்களின்
படையை யெகோவா உங்கள் கையில் கொடுத்துவிட்டார்” என்று சொன்
னார். **16** பின்பு, அந்த 300 வீரர்களையும் மூன்று பிரிவாகப் பிரித்து,
அவர்கள் எல்லாருடைய கையிலும் ஓர் ஊதுகொம்பையும்[b] ஒரு பெரிய
ஜாடியையும் கொடுத்தார். அந்த ஜாடிக்குள் ஒரு தீப்பந்தத்தை வைத்துக்
கொடுத்தார். **17** அதன்பின் அவர், “நான் செய்வதை நன்றாகக் கவனித்து,
அதேபோல் செய்யுங்கள். முகாமின் எல்லையை அடைந்ததும் நான்
செய்வது போலவே நீங்களும் செய்ய வேண்டும். **18** நானும் என்னோடு
இருப்பவர்களும் ஊதுகொம்பை ஊதியவுடனே முகாமைச் சூழ்ந்து நிற்கிற
நீங்களும் ஊதுகொம்பை ஊத வேண்டும். ‘இது யெகோவாவின் போர்! கிதி
யோனின் போர்!’ என்று முழங்க வேண்டும்” என்றார்.

19 நடுஜாமம்* தொடங்கிய நேரத்தில், காவலர்கள் மாற்றி நிறுத்
தப்பட்ட கொஞ்ச நேரத்தில், கிதியோனும் அவரோடு இருந்த 100 வீரர்க
ளும் முகாமின் எல்லையை அடைந்தார்கள். உடனே, தங்களுடைய
ஊதுகொம்புகளை[c] ஊதி கையிலிருந்த பெரிய ஜாடிகளை உடைத்தார்கள்.[d]
20 மூன்று பிரிவினரும் அதேபோல் ஊதுகொம்புகளை ஊதி ஜாடிகளை
உடைத்தார்கள். தங்களுடைய இடது கையில் தீப்பந்தத்தைப் பிடித்துக்
கொண்டு, வலது கையிலிருந்த ஊதுகொம்பை ஊதி, “இது யெகோவா
வின் போர்! கிதியோனின் போர்!” என்று முழங்கினார்கள். **21** அப்போது,
அவர்கள் எல்லாரும் முகாமைச் சுற்றி அவரவர் இடத்தில் நின்றுகொண்டி
ருந்தார்கள். ஆனால், முகாமிலிருந்த எதிரிகள் எல்லாரும் கத்திக்கொண்டே
தலைதெறிக்க ஓடினார்கள்.[e] **22** இஸ்ரவேலின் 300 வீரர்களும் ஊதுகொம்
புகளை ஊதிக்கொண்டே இருந்தபோது, முகாமிலிருந்த எதிரிகள் எல்லா
ரும் ஒருவரை ஒருவர் வாளால் வெட்டிக் கொல்லும்படி[f] யெகோவா செய்
தார். அந்தப் படைவீரர்கள் சேரெராவுக்கு நேராக பெத்-சித்தா வரையிலும்,
தாபத்துக்குப் பக்கத்திலுள்ள ஆபேல்-மெகொல்லாவின்[g] எல்லை வரையி
லும் ஓடினார்கள்.

23 அப்போது நப்தலி, ஆசேர், மனாசே கோத்திரங்களிலிருந்து இஸ்
ரவேல் வீரர்கள் வர வைக்கப்பட்டார்கள்.[h] அவர்கள் மீதியானியர்க
ளைத் துரத்திக்கொண்டு போனார்கள். **24** கிதியோன் உடனே எப்பிராயீம்
மலைப்பகுதி முழுக்க தூதுவர்களை அனுப்பி, “மீதியானியர்களைத் தாக்க
கீழே இறங்கி வாருங்கள். பெத்-பாராவரை இருக்கிற யோர்தானின் ஆற்
றுத்துறைகளையும்* அதனுடைய கிளை ஆறுகளின் ஆற்றுத்துறைக
ளையும் கைப்பற்றுங்கள்” என்று சொன்னார். அதனால், எப்பிராயீம் வீரர்
கள் எல்லாரும் ஒன்றுதிரட்டப்பட்டார்கள். அவர்கள் பெத்-பாராவரை
இருக்கிற யோர்தானின் ஆற்றுத்துறைகளையும் அதனுடைய கிளை ஆறு
களின் ஆற்றுத்துறைகளையும் கைப்பற்றினார்கள். **25** அதோடு, மீதியா
னின் அதிகாரிகளான ஒரேபையும் சேபையும் பிடித்தார்கள். ஒரேபை
ஒரு கற்பாறையில் கொன்றார்கள், பிற்பாடு அது ஒரேபின் கற்பாறை என்று
அழைக்கப்பட்டது.[i] சேபை ஒரு திராட்சரச ஆலையில் கொன்றார்கள், பிற்

7:19 * இது ராத்திரி சுமார் 10 மணிமுதல் அதிகாலை 2 மணி வரையிலான சமயம்.
7:24 * ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதிகள்.

அதி. 7
a நியா 7:11
b நியா 7:8
c நியா 7:8
d நியா 7:16
e யாத் 14:25, 2ரா 7:6, 7
f 2நா 20:23
g 1ரா 19:16
h நியா 6:35
i சங் 83:11, ஏசா 10:26

அதி. 7
a நியா 8:4

அதி. 8
b நியா 7:2
c நியா 12:1; 2நா 25:10
d நியா 6:11, 34
e நியா 7:24
f நியா 7:24, 25
g நியா 8:16
h நியா 8:17
i நியா 7:12
j எண் 32:34, 35

பாடு அது சேபின் திராட்சரச ஆலை என்று அழைக்கப்பட்டது. அவர்கள்
மீதியானியர்களைத் துரத்திக்கொண்டே போனார்கள்.[a] பின்பு, ஒரேபின்
தலையையும் சேபின் தலையையும் யோர்தான் பிரதேசத்தில் இருந்த கிதி
யோனிடம் கொண்டுவந்தார்கள்.

8 அப்போது எப்பிராயீம் வீரர்கள் அவரிடம், "மீதியானியர்களோடு
போர் செய்யப் போனபோது ஏன் எங்களைக் கூப்பிடவில்லை?[b] ஏன்
இப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்டு, அவரோடு பயங்கரமாக வாக்குவா
தம் செய்தார்கள்.[c] **2** ஆனால் அவர் அவர்களிடம், "உங்களைப் போல
நான் பெரிதாக ஒன்றுமே செய்யவில்லை. அபியேசரின் வம்சத்தாராகிய[d]
எங்களைவிட எப்பிராயீமின் வம்சத்தாராகிய நீங்கள்தான் பெரிய காரியங்
களைச் செய்திருக்கிறீர்கள்!*[e] **3** மீதியானின் அதிகாரிகளான ஒரேபை
யும் சேபையும் கடவுள் உங்கள் கையில்தானே கொடுத்தார்.[f] உங்களைப்
போல நான் பெரிதாக எதையும் செய்யவில்லை" என்று சொன்னார். அவர்
இப்படிப் பேசியதால், அவர்களுடைய கோபம் தணிந்தது.

4 பின்பு கிதியோன், யோர்தான் ஆற்றுக்கு வந்து அதைக் கடந்தார். அவ
ரும் அவரோடு இருந்த 300 வீரர்களும் களைத்துப்போயிருந்தார்கள். ஆனா
லும், விடாமல் எதிரிகளைத் துரத்திக்கொண்டு போனார்கள். **5** அதனால்,
அவர் சுக்கோத்தைச் சேர்ந்த பெரியோர்களிடம்,* "என்னோடு இருப்பவர்
களுக்குத் தயவுசெய்து ரொட்டி கொடுங்கள், அவர்கள் களைப்பாக இருக்
கிறார்கள். இப்போது நாங்கள் மீதியானிய ராஜாக்களான செபாவையும்
சல்முனாவையும் துரத்திக்கொண்டு போகிறோம்" என்றார். **6** ஆனால் சுக்
கோத்தின் அதிகாரிகள், "நீ என்னமோ செபாவையும் சல்முனாவையும் ஏற்
கெனவே பிடித்துவிட்ட மாதிரி உன் வீரர்களுக்கு ரொட்டி கேட்கிறாயே" என்
றார்கள். **7** அதற்கு கிதியோன், "இப்படியா பேசுகிறீர்கள்? செபாவையும்
சல்முனாவையும் யெகோவா என் கையில் கொடுக்கும்போது, வனாந்தரத்தி
லுள்ள முட்களாலும் நெருஞ்சிகளாலும் உங்கள் தோலை எப்படிக் கிழிக்கப்
போகிறேன் என்று பாருங்கள்"[g] என்றார். **8** பின்பு அங்கிருந்து பெனூவே
லுக்குப் போய், அந்த ஜனங்களிடமும் அதேபோல் கேட்டார். சுக்கோத்தில்
இருந்த ஆட்கள் சொன்னது போலவே பெனூவேலில் இருந்த ஆட்களும்
சொன்னார்கள். **9** அப்போது அவர் பெனூவேலில் இருந்த ஆட்களிடம்,
"நான் வெற்றியோடு திரும்பி வரும்போது இந்தக் கோட்டையை* இடித்துப்
போடுவேன்" என்று சொன்னார்.[h]

10 அப்போது செபாவும் சல்முனாவும் கிட்டத்தட்ட 15,000 படைவீரர்க
ளோடு கர்கோரில் இருந்தார்கள். கிழக்கத்தியர்களின் படையில்[i] இவர்கள்
மட்டும்தான் மீதியாக இருந்தார்கள். ஏனென்றால், வாளேந்திய வீரர்களில்
1,20,000 பேர் ஏற்கெனவே கொல்லப்பட்டிருந்தார்கள். **11** கிதியோன்,
நாடோடிகள் வாழ்கிற இடத்தின் வழியாக நோபாக்குக்கும் யொகிபேயாவுக்
கும்[j] கிழக்கே தொடர்ந்து போய், அந்தப் படைமேல் திடீர்த் தாக்குதல் நடத்
தினார். **12** மீதியானிய ராஜாக்களாகிய செபாவும் சல்முனாவும் தப்பித்து
ஓடியபோது, அவர்களைத் துரத்திக்கொண்டு போய்ப் பிடித்து, படையிலி
ருந்த எல்லாரையும் பீதியடைய வைத்தார்.

8:2 * நே.மொ., "அபியேசர் அறுவடை செய்த திராட்சைகளைவிட எப்பிராயீம் எடுத்துக்கொண்ட மீதியான திராட்சைகள் சிறந்தவை அல்லவா?" **8:5** * வே.வா., "மூப்பர்களிடம்." **8:9** * வே.வா., "கோபுரத்தை."

13 பின்பு, யோவாசின் மகன் கிதியோன் போரை முடித்துவிட்டு எரேசுக்
குப் போகும் கணவாய்* வழியாகத் திரும்பினார். **14** வழியில் சுக்கோத்
தைச் சேர்ந்த ஒரு வாலிபனைப் பிடித்து விசாரித்தார். அப்போது அவன்
சுக்கோத்திலிருந்த அதிகாரிகள், பெரியோர்கள் என 77 ஆட்களின் பெயர்
களை எழுதிக் கொடுத்தான். **15** உடனே அவர் சுக்கோத்திலிருந்த ஆட்க
ளிடம் போய், "'நீ என்னமோ செபாவையும் சல்முனாவையும் ஏற்கெ
னவே பிடித்துவிட்ட மாதிரி உன் வீரர்களுக்கு ரொட்டி கேட்கிறாயே' என்று
சொல்லி என்னைக் கேலி செய்தீர்களே,[a] இதோ அந்த செபாவையும் சல்மு
னாவையும் பாருங்கள்" என்றார். **16** பின்பு, அந்த நகரத்தின் பெரியோர்க
ளைப் பிடித்து, வனாந்தரத்திலுள்ள முட்களாலும் நெருஞ்சிகளாலும் அவர்
களுடைய தோலைக் கிழித்தார். இப்படி, சுக்கோத்தின் ஆட்களுக்குப் பாடம்
புகட்டினார்.[b] **17** அதன்பின் பெனூவேலில் இருந்த கோட்டையை இடித்
துப்போட்டு,[c] அந்த நகரத்திலிருந்த ஆண்களைக் கொன்றுபோட்டார்.

18 அவர் செபாவிடமும் சல்முனாவிடமும், "தாபோரில் நீங்கள் கொன்று
போட்ட ஆண்கள் பார்ப்பதற்கு எப்படி இருந்தார்கள்?" என்று கேட்டார்.
அதற்கு அவர்கள், "எல்லாரும் உன்னைப் போலவே ஒரு இளவரசன் மாதிரி
இருந்தார்கள்" என்று சொன்னார்கள். **19** அப்போது அவர், "அவர்கள்
என் சகோதரர்கள், என் அம்மா வயிற்றில் பிறந்தவர்கள். உயிருள்ள கடவு
ளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* நீங்கள் அவர்களை
உயிரோடு விட்டிருந்தால், நானும் இப்போது உங்களை உயிரோடு விட்டி
ருப்பேன்" என்றார். **20** பின்பு தன்னுடைய மூத்த மகனாகிய யெத்தேரிடம்,
"இவர்களைக் கொன்றுபோடு" என்று சொன்னார். ஆனால், அவன் இளம்
வாலிபனாக இருந்ததால் வாளை உருவ பயப்பட்டான். **21** அப்போது
செபாவும் சல்முனாவும் கிதியோனிடம், "துணிச்சல் இருந்தால்,* நீயே
எழுந்து வந்து எங்களைக் கொன்றுபோடு" என்று சொன்னார்கள். உடனே
கிதியோன் எழுந்து போய் செபாவையும் சல்முனாவையும் கொன்றுபோட்
டார்.[d] பின்பு, அவர்களுடைய ஒட்டகங்களின் கழுத்தில் இருந்த பிறை
வடிவ ஆபரணங்களை எடுத்துக்கொண்டார்.

22 அதன்பின், இஸ்ரவேல் ஆண்கள் கிதியோனிடம் வந்து, "மீதியானி
யர்களின் கையிலிருந்து நீங்கள் எங்களைக் காப்பாற்றியதால்,[e] நீங்க
ளும் உங்கள் மகனும் பேரனும்தான் எங்களை ஆட்சி செய்ய வேண்
டும்" என்று சொன்னார்கள். **23** ஆனால் கிதியோன், "நானும் உங்களை
ஆட்சி செய்ய மாட்டேன், என்னுடைய மகனும் உங்களை ஆட்சி
செய்ய மாட்டான். யெகோவாதான் உங்களை ஆட்சி செய்வார்"[f] என்று
சொன்னார். **24** அதோடு, "நான் உங்களிடம் ஒன்றை மட்டும் கேட்கி
றேன். நீங்கள் கைப்பற்றிய பொருள்களிலிருந்து ஒவ்வொருவரும் ஒரு
மூக்குவளையத்தைக் கொடுங்கள்" என்றார். ஏனென்றால், தங்கத்தில் மூக்கு
வளையம் போட்டுக்கொள்வது இஸ்மவேலர்களின்[g] வழக்கமாக இருந்தது.
25 அதற்கு அவர்கள், "கண்டிப்பாகக் கொடுப்போம்" என்று சொன்னார்
கள். பின்பு ஓர் அங்கியை விரித்து, தாங்கள் கைப்பற்றிய பொருள்களி

அதி. 8
a நியா 8:5, 6
b நியா 8:7
c நியா 8:8, 9
d சங் 83:11
e நியா 6:14
f யாத் 15:18; 1சா 10:19; ஏசா 33:22; ஏசா 43:15
g ஆதி 16:11; ஆதி 25:13; ஆதி 28:9; ஆதி 37:28

8:13 *கணவாய் என்பது இரண்டு மலைகளுக்கு இடையில் இயற்கையாக அமைந்துள்ள பாதை. **8:19** *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." **8:21** *வே.வா., "நீ சரியான ஆண்மகன் என்றால்."

லிருந்து ஒவ்வொருவரும் ஒரு மூக்குவளையத்தை அதில் போட்டார்கள்.
26 அவர் கேட்டு வாங்கிய அந்தத் தங்க மூக்குவளையங்களின் எடை
1,700 தங்கச் சேக்கலாக* இருந்தது. அதைத் தவிர, பிறை வடிவ ஆபர
ணங்கள், பதக்கங்கள், மீதியானிய ராஜாக்களின் ஊதா நிற கம்பளி உடை
கள், அவர்களுடைய ஒட்டகங்களின் கழுத்திலிருந்த அணிகலன்கள்[a] ஆகி
யவற்றையும் அந்த ஆட்கள் கொடுத்தார்கள்.

27 அவர்கள் கொடுத்த தங்கத்தை வைத்து கிதியோன் ஓர் ஏபோத்தைச்
செய்து,[b] அதைத் தன்னுடைய நகரமாகிய ஒப்ராவில்[c] வைத்தார். ஆனால்
இஸ்ரவேலர்கள் எல்லாரும் அதை வணங்கி, கடவுளுக்குத் துரோகம் செய்
தார்கள்.[d] அந்த ஏபோத் கிதியோனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும்
கண்ணியாக ஆனது.[e]

28 இப்படி, மீதியானியர்களை[f] இஸ்ரவேலர்கள் அடக்கிவிட்டார்கள்.
அதன்பின், அவர்கள் இஸ்ரவேலர்களோடு போர் செய்ய வரவில்லை. கிதி
யோனின் காலத்தில் 40 வருஷங்களுக்குத் தேசத்தில் அமைதி இருந்தது.[g]

29 யோவாசின் மகன் யெருபாகால்[h] தன்னுடைய வீட்டுக்குத் திரும்பிப்
போய், அங்கேயே வாழ்ந்துவந்தார்.

30 கிதியோனுக்கு நிறைய மனைவிகளும் 70 மகன்களும் இருந்தார்
கள். **31** சீகேமிலிருந்த அவருடைய மறுமனைவிக்கும் ஒரு மகன் பிறந்
தான். அவனுக்கு அபிமெலேக்கு[i] என்று கிதியோன் பெயர் வைத்தார்.
32 யோவாசின் மகனாகிய கிதியோன் நிறைய காலம் மனநிறைவோடு
வாழ்ந்தபின் இறந்துபோனார். அபியேசரின் வம்சத்தார் வாழ்ந்த ஒப்ரா
வில்,[j] தன்னுடைய அப்பா யோவாசின் கல்லறையில் கிதியோன் அடக்கம்
செய்யப்பட்டார்.

33 கிதியோன் இறந்த உடனேயே, இஸ்ரவேலர்கள் மறுபடியும் பாகால்
களை வணங்கி கடவுளுக்குத் துரோகம் செய்தார்கள்.[k] பாகால்-பேரீத்தைத்
தங்களுடைய தெய்வமாக வைத்துக்கொண்டார்கள்.[l] **34** சுற்றியிருந்த எதி
ரிகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்றிய[m] அவர்களுடைய கடவுளாகிய
யெகோவாவை மறந்துவிட்டார்கள்.[n] **35** அவர்களுக்காக யெருபாகால்
என்ற கிதியோன் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருந்தாலும்
அவருடைய குடும்பத்தாருக்கு அவர்கள் விசுவாசமாக இருக்கவில்லை.[o]

9 பிற்பாடு, யெருபாகாலின் மகனாகிய அபிமெலேக்கு[p] சீகேமிலிருந்த
தன்னுடைய தாய்மாமன்களிடம் போய், அவர்களிடமும் தன் தாத்தா*
குடும்பத்தார் எல்லாரிடமும், **2** "'யெருபாகாலின் 70 மகன்கள்[q] உங்களை
ஆட்சி செய்வது நல்லதா, அல்லது ஒரு ஆள் மட்டும் உங்களை
ஆட்சி செய்வது நல்லதா?' என்று சீகேமின் தலைவர்களிடம்* தயவுசெய்து
கேளுங்கள். நான் அவர்களுடைய சொந்த இரத்தம்# என்பதை அவர்
களுக்கு ஞாபகப்படுத்துங்கள்" என்று சொன்னான்.

3 அதனால், அவனுடைய தாய்மாமன்கள் சீகேமின் தலைவர்களிடம்
போய், அபிமெலேக்கு சொன்னதையெல்லாம் சொன்னார்கள். அவர்கள்
அதைக் கேட்டபோது, "அவன் நம்முடைய சொந்த சகோதரன்" என்று
சொல்லி, அபிமெலேக்கின் பக்கம் சேர்ந்துகொள்ள ஆசைப்பட்டார்கள்.

அதி. 8
a நியா 8:21
b யாத் 28:6; நியா 17:5
c நியா 6:11
d நியா 2:17
e சங் 106:36
f நியா 6:1
g நியா 3:11; நியா 5:31
h நியா 6:32; 1சா 12:11
i நியா 9:1, 2; 2சா 11:21
j நியா 6:11, 24
k நியா 2:17, 19; நியா 10:6
l நியா 9:4
m சங் 106:43
n நியா 3:7
o நியா 9:16-18

அதி. 9
p நியா 8:30, 31
q நியா 8:30

8:26 *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **9:1** *நே.மொ., "அம்மாவுடைய அப்பா." **9:2** *அல்லது, "நிலச் சொந்தக்காரர்களிடம்." #நே.மொ., "எலும்பும் சதையுமாக இருக்கிறேன்."

4 பின்பு, பாகால்-பேரீத் கோயிலிலிருந்து[a] 70 வெள்ளிக் காசுகளை எடுத்து
அபிமெலேக்கிடம் தந்தார்கள். ஆனால் அவன், வேலைவெட்டி இல்லாத
திமிர்பிடித்த ஆட்களுக்கு அந்தப் பணத்தைக் கூலியாகக் கொடுத்து அவர்
களைத் தன் அடியாட்களாக வைத்துக்கொண்டான். **5** அதன்பின், ஒப்ரா
விலிருந்த தன் அப்பாவின் வீட்டுக்குப்[b] போய், அங்கே யெருபாகா
லின் மகன்களாகிய தன் சகோதரர்கள் 70 பேரையும் ஒரே கல்லின் மேல்
கொன்றான்.[c] ஆனால், யெருபாகாலின் கடைசி மகனாகிய யோதாம் ஒளிந்
துகொண்டதால் அவர் மட்டும் தப்பித்துவிட்டார்.

6 பின்பு, சீகேமின் தலைவர்களும் பெத்-மில்லோவில் இருந்தவர்க
ளும் ஒன்றுகூடி, சீகேமிலிருந்த பெரிய மரத்தின் பக்கத்திலே, அங்கிருந்த
தூணுக்கு முன்னால், அபிமெலேக்கை ராஜாவாக்கினார்கள்.[d]

7 இந்த விஷயம் யோதாமுக்குச் சொல்லப்பட்டபோது, அவர் உடனே
கெரிசீம் மலை[e] உச்சிக்குப் போய் நின்றுகொண்டு, சத்தமாக அவர்களிடம்,
“சீகேமின் தலைவர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள், அப்போதுதான்
கடவுளும் உங்கள் வேண்டுதலைக் கேட்பார்.

8 ஒருசமயம், சில மரங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவைத் தேர்ந்தெடுக்க*
நினைத்தன. அதனால் அவை ஒலிவ மரத்தைப் பார்த்து, ‘நீ எங்களுக்கு
ராஜாவாக இரு’ என்றன.[f] **9** ஆனால் ஒலிவ மரம், ‘நான் தரும் எண்
ணெய் கடவுளுக்கும் மனுஷர்களுக்கும் மகிமை சேர்க்கிறது. அதைத் தரு
வதை விட்டுவிட்டு நான் எதற்காக உங்களை ஆட்சி செய்ய வேண்டும்?’*
என்று கேட்டது. **10** பின்பு, அந்த மரங்கள் அத்தி மரத்தைப் பார்த்து,
‘நீ வந்து எங்களுக்கு ராஜாவாக இரு’ என்றன. **11** அதற்கு அந்த அத்தி
மரம், ‘தித்திப்பான நல்ல பழங்களைத் தருவதை விட்டுவிட்டு, நான் எதற்
காக உங்களை ஆட்சி செய்ய வேண்டும்?’* என்று கேட்டது. **12** அடுத்
ததாக அந்த மரங்கள் திராட்சைக் கொடியிடம் போய், ‘நீ வந்து எங்க
ளுக்கு ராஜாவாக இரு’ என்றன. **13** அதற்குத் திராட்சைக் கொடி, ‘நான்
தரும் புதிய திராட்சமது கடவுளுக்கும் மனுஷர்களுக்கும் சந்தோஷம் தரு
கிறது. அதைத் தருவதை விட்டுவிட்டு நான் எதற்காக உங்களை ஆட்சி
செய்ய வேண்டும்?’* என்று கேட்டது. **14** கடைசியாக, அந்த மரங்க
ளெல்லாம் முட்செடியிடம் வந்து, ‘நீ எங்களுக்கு ராஜாவாக இரு’[g] என்றன.
15 அதற்கு முட்செடி, ‘நீங்கள் உண்மையிலேயே என்னை ராஜாவாக்க
விரும்புகிறீர்கள் என்றால், என் நிழலில் வந்து பாதுகாப்பாக இருங்கள். இல்
லாவிட்டால், என்னிடமிருந்து நெருப்பு கிளம்பி லீபனோனின் தேவதாரு
மரங்களைச் சுட்டுப் பொசுக்கும்’ என்றது.

16 அபிமெலேக்கை ராஜாவாக்கியதால்[h] நீங்கள் நேர்மையாகவும் நியா
யமாகவும் நடந்துகொண்டதாக நினைக்கிறீர்களோ? யெருபாகாலுக்கும் அவ
ருடைய வீட்டாருக்கும் நல்லது செய்துவிட்டதாகவும், அவருக்குக் கொடுக்க
வேண்டிய மதிப்பைக் கொடுத்துவிட்டதாகவும் நினைக்கிறீர்களோ?
17 என்னுடைய அப்பா உங்களுக்காகப் போர் செய்தபோது,[i] மீதியானியர்க
ளின் கையிலிருந்து உங்களைக் காப்பாற்ற தன்னுடைய உயிரையே பணயம்
வைத்தார்.[j] **18** ஆனால், இன்று நீங்கள் என்னுடைய அப்பாவின் குடும்
பத்தாருக்கு விரோதமாக வந்து அவருடைய 70 மகன்களை ஒரே கல்லின்

9:8 *வே.வா., “அபிஷேகம் செய்ய.” **9:9, 11, 13** *நே.மொ., “மற்ற மரங்களுக்கு மேல் அசைந்தாட வேண்டும்?”

அதி. 9
a நியா 8:33; நியா 9:46
b நியா 6:11; நியா 8:27
c 2ரா 11:1; 2நா 21:4
d உபா 17:14; 1சா 8:7
e உபா 11:29; யோசு 8:33; யோவா 4:20
f நியா 8:22
g நியா 9:6
h நியா 9:6
i நியா 7:9
j நியா 8:28

அதி. 9
a நியா 9:5
b நியா 8:30, 31
c நியா 9:6, 49
d நியா 9:39, 53
e நியா 9:5
f ஆதி 9:6 நியா 9:5
g யோசு 21: 20, 21 யோசு 24:1
h நியா 8:33
i நியா 6:32

மேல் கொன்றுபோட்டீர்கள்.[a] அவருடைய அடிமைப் பெண்ணின் மகனா
கிய அபிமெலேக்கு[b] உங்கள் சகோதரனாக இருப்பதால் அவனை சீகேமின்
தலைவர்களான உங்களுக்கு ராஜாவாக்கினீர்கள். **19** இன்றைக்கு நீங்கள்
யெருபாகாலிடமும் அவருடைய குடும்பத்தாரிடமும் நேர்மையாகவும் நியா
யமாகவும் நடக்கிறீர்கள் என்றால், அபிமெலேக்கை நினைத்து சந்தோஷப்
படுங்கள், அவனும் உங்களை நினைத்து சந்தோஷப்படட்டும். **20** இல்லா
விட்டால், அபிமெலேக்கிடமிருந்து நெருப்பு கிளம்பி சீகேம், பெத்-மில்லோ
தலைவர்களைச் சுட்டுப் பொசுக்கட்டும்.[c] சீகேம், பெத்-மில்லோ தலைவர்க
ளிடமிருந்து நெருப்பு கிளம்பி அபிமெலேக்கைச் சுட்டுப் பொசுக்கட்டும்"[d]
என்று சொன்னார்.

21 பின்பு, யோதாம்[e] அங்கிருந்து பேயேருக்குத் தப்பியோடினார். தன்
னுடைய சகோதரனாகிய அபிமெலேக்குக்குப் பயந்து அங்கேயே வாழ்ந்து
வந்தார்.

22 அபிமெலேக்கு மூன்று வருஷங்கள் இஸ்ரவேலை ஆட்சி செய்தான்.
23 பின்பு, அபிமெலேக்குக்கும் சீகேமின் தலைவர்களுக்கும் இடையே
பகை வளர கடவுள் விட்டுவிட்டதால், அவர்கள் அபிமெலேக்குக்கு எதி
ராகச் சதி செய்தார்கள். **24** யெருபாகாலின் 70 மகன்களைக் கொடூரமாய்க்
கொன்றதற்காக அவர்களுடைய சகோதரன் அபிமெலேக்கின் மேலும்,
அதற்கு உடந்தையாய் இருந்த சீகேமின் தலைவர்களின் மேலும் கொலைப்
பழி* சுமத்தப்படுவதற்காகவும் அவர்கள் பழிவாங்கப்படுவதற்காகவும்[f]
அப்படி நடந்தது. **25** மலை உச்சிகளில் பதுங்கியிருந்து அபிமெலேக்
கைத் தாக்குவதற்காக சீகேமின் தலைவர்கள் ஆட்களை ஏற்பாடு செய்தார்
கள். அவர்கள் அந்த வழியாகப் போய்வந்த ஆட்களிடம் கொள்ளையடித்
தார்கள். இந்த விஷயம் பிற்பாடு அபிமெலேக்கிடம் சொல்லப்பட்டது.

26 எபெத்தின் மகனாகிய காகால் தன்னுடைய சகோதரர்களோடு சீகே
முக்கு[g] வந்தான். சீகேமின் தலைவர்கள் அவன்மேல் நம்பிக்கை வைத்தார்
கள். **27** அவர்கள் எல்லாரும் சேர்ந்து வயல்வெளிக்குப் போய், தங்க
ளுடைய திராட்சைத் தோட்டங்களிலிருந்து பழங்களைப் பறித்து, அவற்றை
மிதித்து, அவற்றின் ரசத்தைப் பிழிந்தெடுத்தார்கள். பின்பு, விழா கொண்டா
டினார்கள். அதோடு, தங்களுடைய தெய்வத்தின் கோயிலுக்குள்* போய்ச்[h]
சாப்பிட்டார்கள், குடித்தார்கள், அபிமெலேக்கைச் சபித்தார்கள். **28** அப்
போது எபெத்தின் மகனாகிய காகால், "யார் அந்த அபிமெலேக்கு? யார்
அந்த சீகேம்? நாம் ஏன் அவனுக்குச் சேவை செய்ய வேண்டும்? அவன்
யெருபாகாலின் மகன்தானே?[i] சேபூல் அவன் நியமித்த அதிகாரிதானே?
சீகேமின் அப்பாவான ஏமோரின் ஆட்களுக்குச் சேவை செய்யுங்கள்!
நாம் ஏன் அபிமெலேக்குக்குச் சேவை செய்ய வேண்டும்? **29** ஜனங்கள்
மட்டும் என் பக்கம் இருந்தால் அபிமெலேக்கை நான் சிம்மாசனத்தைவிட்டு
இறக்கிவிடுவேன்" என்று சொன்னான். பின்பு அபிமெலேக்கிடம், "இன்
னும் நிறைய படைகளோடு வந்து என்னோடு மோதிப் பார்" என்று சவால்
விட்டான்.

30 எபெத்தின் மகனாகிய காகால் பேசியதை அந்த நகரத்தின் அதிகா
ரியாகிய சேபூல் கேட்டபோது, அவனுக்குப் பயங்கர கோபம் வந்தது.

9:24 * வே.வா., "இரத்தப்பழி." **9:27** * நே.மொ., "வீட்டுக்குள்."

31 அதனால் அவன் அபிமெலேக்கிடம் ரகசியமாக* தூதுவர்களை
அனுப்பி, “எபெத்தின் மகன் காகாலும் அவன் சகோதரர்களும் இப்போது
சீகேமில் இருக்கிறார்கள். இந்த நகரத்தில் இருக்கிற ஜனங்களை உங்க
ளுக்கு எதிராகத் தூண்டிவிடுகிறார்கள். **32** அதனால், நீங்களும் உங்களு
டைய ஆட்களும் ராத்திரியில் வந்து நகரத்துக்கு வெளியே பதுங்கியிருங்
கள். **33** விடிந்தவுடன் எழுந்து வந்து நகரத்தைத் தாக்குங்கள். அவனும்
அவன் ஆட்களும் உங்களைத் திருப்பித் தாக்க வரும்போது, எப்படியாவது
அவனைத் தோற்கடித்துவிடுங்கள்”* என்று சொன்னான்.

34 அதனால், அபிமெலேக்கும் அவனோடு இருந்த ஆட்களும் ராத்தி
ரியில் புறப்பட்டு வந்து, சீகேமைத் தாக்குவதற்காக நான்கு பிரிவுகளாகப்
பிரிந்து பதுங்கிக்கொண்டார்கள். **35** எபெத்தின் மகனாகிய காகால் நகர
வாசலில் வந்து நின்றபோது, அபிமெலேக்கும் அவனோடு இருந்த ஆட்க
ளும் தாங்கள் பதுங்கியிருந்த இடங்களிலிருந்து வெளியே வந்தார்கள்.
36 காகால் அவர்களைப் பார்த்தவுடன் சேபூலிடம், “அங்கே பார், மலை
உச்சிகளிலிருந்து ஆட்கள் இறங்கி வருகிறார்கள்” என்று சொன்னான்.
ஆனால் சேபூல், “மலைகளின் நிழலைப் பார்த்து ஆட்கள் என்று நினைத்
துவிட்டாய்” என்று சொன்னான்.

37 பின்பு காகால் அவனிடம், “அங்கே பார், தேசத்தின் நடுவிலி
ருந்து ஆட்கள் இறங்கி வருகிறார்கள். ஒரு பிரிவினர் மெயொனெனீமில்
பெரிய மரம் இருக்கிற பாதை வழியாக வருகிறார்கள்” என்று சொன்னான்.
38 அதற்கு சேபூல், “நீதானே இந்த ஆட்களுக்கு எதிராகப் பேசினாய்?
‘யார் அந்த அபிமெலேக்கு? நாம் ஏன் அவனுக்குச் சேவை செய்ய வேண்
டும்?’[a] என்று ஆணவத்தோடு கேட்டாயே. இப்போது நீயே போய் இவர்க
ளோடு சண்டை போடு” என்று சொன்னான்.

39 காகால் உடனே சீகேமின் தலைவர்களைக் கூட்டிக்கொண்டு போய்
அபிமெலேக்கோடு சண்டை போட்டான். **40** ஆனால் அபிமெலேக்கு
அவனைத் துரத்தினான், அப்போது அவன் தப்பித்து ஓடினான். நகரவாசல்
வரை நிறைய பேர் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள்.

41 பின்பு, அபிமெலேக்கு அருமாவுக்குத் திரும்பி வந்து அங்கே
தங்கினான். காகாலையும் அவனுடைய சகோதரர்களையும் சீகேமிலி
ருந்து சேபூல்[b] துரத்திவிட்டான். **42** அடுத்த நாள் ஜனங்கள் நகரத்தை
விட்டு வெளியே வந்தார்கள்; இந்த விஷயம் அபிமெலேக்கிடம்
சொல்லப்பட்டது. **43** அதனால், அவன் தன்னுடைய ஆட்களை மூன்று
பிரிவுகளாகப் பிரித்து, நகரத்துக்கு வெளியே அவர்களோடு சேர்ந்து பதுங்
கியிருந்தான். நகரத்தைவிட்டு ஜனங்கள் வெளியே வருவதைப் பார்த்தவு
டன், அவர்களை வெட்டி வீழ்த்தினான். **44** அபிமெலேக்கும் அவனோடு
இருந்த ஒரு பிரிவினரும் வேகமாகப் போய் நகரவாசலில் தயாராக நின்
றார்கள். அதேசமயத்தில், மற்ற இரண்டு பிரிவினர் நகரத்துக்கு வெளியே
இருந்த எல்லாரையும் வெட்டிச் சாய்த்தார்கள். **45** அபிமெலேக்கு அந்த
நாள் முழுக்க போர் செய்து அந்த நகரத்தைக் கைப்பற்றினான். நகரத்திலி
ருந்த ஜனங்களைக் கொன்றுபோட்டு, நகரத்தை இடித்துத் தரைமட்டமாக்கி
னான்.[c] பின்பு, நகரமெங்கும் உப்பைக் கொட்டினான்.

9:31 * வே.வா., “தந்திரமாக.” **9:33** * வே.வா., “அவனைத் தோற்கடிக்க என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்.”

அதி. 9
a நியா 9:28, 29
b நியா 9:30
c 1ரா 12:25

அதி. 9
a நியா 8:33
நியா 9:4, 27
b 2சா 11:21
c ஆதி 9:6
நியா 9:5, 24
d நியா 6:32
e நியா 9:7, 20

அதி. 10
f நியா 2:16

46 சீகேம் கோட்டையில் இருந்த தலைவர்கள் இதைக் கேள்விப்பட்ட
தும், எல்-பேரீத் கோயிலில்[a] உள்ள மறைவான அறைக்குப் போய் ஒளிந்து
கொண்டார்கள். **47** அந்தத் தலைவர்கள் எல்லாரும் ஒன்றாக இருக்கிற
விஷயம் அபிமெலேக்கிடம் சொல்லப்பட்டது. **48** உடனே, அவனும் அவ
னோடு இருந்த ஆட்களும் சால்மோன் மலைக்கு ஏறிப் போனார்கள். அபி
மெலேக்கு ஒரு கோடாலியை எடுத்து மரக் கிளை ஒன்றை வெட்டி அதைத்
தன்னுடைய தோளில் வைத்துக்கொண்டான். பின்பு தன்னோடு இருந்தவர்க
ளிடம், “சீக்கிரம்! நான் செய்வதைப் போலவே நீங்களும் செய்யுங்கள்” என்று
சொன்னான். **49** அதனால், அவனோடு இருந்த ஆட்கள் ஒவ்வொருவ
ரும் மரக் கிளைகளை வெட்டி எடுத்துக்கொண்டு அவன் பின்னால் போனார்
கள். பின்பு, மரக் கிளைகளைச் சுற்றிலும் வைத்து அந்த மறைவான அறை
யைக் கொளுத்தினார்கள். சீகேம் கோட்டையிலிருந்த ஆண்கள், பெண்கள்
எனக் கிட்டத்தட்ட 1,000 பேரும் செத்துப்போனார்கள்.

50 பின்பு, அபிமெலேக்கு தேபேஸ் நகரத்துக்குப் போய், அதற்கு எதி
ராக முகாம்போட்டு, அதைக் கைப்பற்றினான். **51** அந்த நகரத்தின்
நடுப்பகுதியில் ஒரு பலமான கோட்டை இருந்தது. நகரத்தில் இருந்த ஆண்
களும் பெண்களும் தலைவர்களும் அதற்குள் ஓடிப்போய், அதைப் பூட்டி
விட்டு, கோட்டையின் உச்சிக்கு ஏறினார்கள். **52** அபிமெலேக்கு அந்தக்
கோட்டைவரை போய் அதைத் தாக்கினான். கோட்டையைக் கொளுத்து
வதற்காக அதன் வாசலுக்குப் பக்கத்தில் போனான். **53** அப்போது ஒரு
பெண், மாவு அரைக்கிற கல்லின்* மேற்கல்லை எடுத்து அபிமெலேக்கின்
தலைமேல் போட்டாள். அவனுடைய மண்டை உடைந்தது.[b] **54** உடனே,
அவன் தன்னுடைய ஆயுதங்களைச் சுமந்த பணியாளனைக் கூப்பிட்டு,
“உன் வாளை உருவி என்னைக் கொன்றுவிடு. அப்போதுதான், ‘இவன் ஒரு
பெண்ணின் கையால் செத்தான்’ என்று யாரும் சொல்ல மாட்டார்கள்” என்
றான். அதனால், அவனுடைய பணியாளன் அவனை வாளால் குத்தினான்,
அவன் செத்துப்போனான்.

55 அபிமெலேக்கு செத்துப்போனதை இஸ்ரவேலர்கள் பார்த்தபோது,
அவரவர் வீட்டுக்குத் திரும்பினார்கள். **56** இப்படி, அபிமெலேக்கு தன்னு
டைய 70 சகோதரர்களைக் கொன்று தன் அப்பாவுக்குக் கெடுதல் செய்த
தால் கடவுள் அவனைத் தண்டித்தார்.[c] **57** அதோடு, சீகேமின் ஆட்
கள் செய்த எல்லா கெடுதலும் அவர்களுக்கே வரும்படி செய்தார். இப்படி,
யெருபாகாலின்[d] மகனாகிய யோதாம் கொடுத்த சாபம்[e] பலித்தது.

10 அபிமெலேக்கு இறந்த பிறகு, இசக்கார் கோத்திரத்தைச் சேர்ந்த
தோலா என்பவர் இஸ்ரவேலர்களைக் காப்பாற்றுவதற்காக நியாயா
திபதியாய் நியமிக்கப்பட்டார்.[f] அவர் தோதோவின் மகனாகிய பூவா என்
பவரின் மகன். எப்பிராயீம் மலைப்பகுதியிலுள்ள சாமீரில் வாழ்ந்துவந்தார்.
2 அவர் 23 வருஷங்கள் இஸ்ரவேலர்களுக்கு நியாயாதிபதியாக இருந்தார்.
பின்பு இறந்துபோய், சாமீரில் அடக்கம் செய்யப்பட்டார்.

3 அவருக்குப்பின் கீலேயாத்தைச் சேர்ந்த யாவீர் 22 வருஷங்கள்
இஸ்ரவேலர்களுக்கு நியாயாதிபதியாக இருந்தார். **4** அவருக்கு 30 மகன்
கள் இருந்தார்கள். அவர்கள் 30 கழுதைகளில் சவாரி செய்தார்கள். அவர்
களுக்கு 30 நகரங்கள் இருந்தன. கீலேயாத் பிரதேசத்தில் இருக்கும் அந்த

9:53 * வே.வா., “திரிகைக் கல்லின்.”

நகரங்கள் இன்றுவரை அவோத்-யாவீர்[a] என்று அழைக்கப்படுகின்றன.
5 பின்பு யாவீர் இறந்துபோய், காமோனில் அடக்கம் செய்யப்பட்டார்.

6 அதன்பின், இஸ்ரவேலர்கள் மறுபடியும் யெகோவாவுக்குப் பிடிக்காத
காரியங்களைச் செய்தார்கள்.[b] பாகால்களின் சிலைகளையும்[c] அஸ்தரோத்
தின் சிலைகளையும் அராமின்* தெய்வங்களையும் சீதோனின் தெய்வங்க
ளையும் மோவாபின் தெய்வங்களையும்[d] அம்மோனியர்களின் தெய்வங்க
ளையும்[e] பெலிஸ்தியர்களின் தெய்வங்களையும்[f] கும்பிட ஆரம்பித்தார்கள்.
அவர்கள் யெகோவாவை வணங்காமல் அவரைவிட்டு விலகினார்கள்.
7 அதனால், யெகோவாவின் கோபம் இஸ்ரவேலர்கள்மேல் பற்றியெரிந்தது.
பெலிஸ்தியர்களின் கையிலும் அம்மோனியர்களின் கையிலும் அவர்களை
அவர் விட்டுவிட்டார்.*[g] **8** அந்த வருஷம் தொடங்கி 18 வருஷங்களுக்கு
அவர்கள் இஸ்ரவேலர்களைக் கொடுமைப்படுத்தி, ரொம்பவே அடக்கி
ஒடுக்கினார்கள். யோர்தானுக்குக் கிழக்குப் பக்கத்தில், அதாவது எமோரியர்
களின் தேசமான கீலேயாத்தில், வாழ்ந்துவந்த எல்லா இஸ்ரவேலர்களையும்
அடக்கி ஒடுக்கினார்கள். **9** யூதா, பென்யமீன், எப்பிராயீம் கோத்திரத்தாரு
டனும் போர் செய்ய அம்மோனியர்கள் யோர்தானைக் கடந்து வந்தார்கள்.
அதனால், இஸ்ரவேலர்கள் பெரிய இக்கட்டில் சிக்கித் தவித்தார்கள்.
10 அப்போது யெகோவாவிடம், “எங்கள் கடவுளே, நாங்கள் உங்களை
விட்டுவிட்டு பாகால்களை வணங்கி, உங்களுக்கு விரோதமாகப் பாவம்
செய்துவிட்டோம்”[h] என்று சொல்லி, உதவிக்காகக் கெஞ்சினார்கள்.[i]

11 ஆனால் யெகோவா இஸ்ரவேலர்களிடம், “எகிப்தியர்களும்,[j] எமோ
ரியர்களும்,[k] அம்மோனியர்களும், பெலிஸ்தியர்களும்,[l] **12** சீதோனியர்க
ளும், அமலேக்கியர்களும், மீதியானியர்களும் உங்களை அடக்கி ஒடுக்கிய
போது, அவர்களிடமிருந்து நான் உங்களைக் காப்பாற்றவில்லையா? நீங்கள்
என்னிடம் கதறி அழுதபோது, அவர்களுடைய கையிலிருந்து நான் உங்க
ளைக் காப்பாற்றவில்லையா? **13** ஆனால், நீங்கள் என்னை விட்டுவிட்டு
மற்ற தெய்வங்களை வணங்கினீர்கள்.[m] அதனால், இனி நான் உங்களைக்
காப்பாற்ற மாட்டேன்.[n] **14** நீங்கள் தேடிப்போன தெய்வங்களிடமே உதவி
கேளுங்கள்.[o] கஷ்ட காலத்தில் அந்த தெய்வங்களே உங்களைக் காப்பாற்
றட்டும்”[p] என்று சொன்னார். **15** அப்போது இஸ்ரவேலர்கள் யெகோவா
விடம், “நாங்கள் பாவம் செய்துவிட்டோம். அதற்காக எங்களை என்ன
வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் இன்று மட்டும் தயவுசெய்து எங்
களைக் காப்பாற்றுங்கள்” என்று கெஞ்சினார்கள். **16** அதோடு, தங்களிடமி
ருந்த பொய் தெய்வங்கள் எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு யெகோ
வாவை வணங்கினார்கள்.[q] அதனால், அவர்கள் கஷ்டப்படுவதை அதற்கு
மேலும் அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.[r]

17 பின்பு, அம்மோனியர்கள்[s] போருக்காக ஒன்றுதிரண்டு, கீலேயாத்தில்
முகாம்போட்டார்கள். இஸ்ரவேலர்களும் ஒன்றுதிரண்டு மிஸ்பாவில் முகாம்
போட்டார்கள். **18** அப்போது, கீலேயாத் ஜனங்களும் அதிகாரிகளும்,
“அம்மோனியர்களை எதிர்த்துப் போர் செய்ய யார் நமக்குத் தலைமை
தாங்குவாரோ[t] அவர்தான் கீலேயாத் ஜனங்கள் எல்லாருக்கும் தலைவராக
இருக்க வேண்டும்” என்று பேசிக்கொண்டார்கள்.

10:6 * வே.வா., “சீரியாவின்.” **10:7** * நே.மொ., “விற்றுப்போட்டார்.”

அதி. 10
a உபா 3:14
b நியா 2:19; நியா 4:1; நியா 6:1; நெ 9:28
c நியா 3:7; சங் 106:36-38
d எண் 25:1, 2
e 1ரா 11:5; 2ரா 23:13
f நியா 16:23; 1சா 5:4; 2ரா 1:2
g உபா 28:15, 48; உபா 31:17; நியா 2:14; நியா 4:2
h நியா 2:13; நியா 3:7; 1சா 12:9, 10
i உபா 4:30
j யாத் 14:30
k எண் 21:23-25
l நியா 3:31
m நியா 2:12
n 2நா 15:2; மீ 3:4
o 1ரா 18:27
p எரே 2:28
q உபா 7:26
r 2நா 7:14; 2நா 33:13, 15; சங் 106:44; ஏசா 63:9
s ஆதி 19:36, 38; நியா 3:13
t நியா 11:1

11 கீலேயாத்தைச் சேர்ந்த யெப்தா[a] மாவீரராக இருந்தார். அவரு
டைய அம்மா ஒரு விபச்சாரியாக இருந்தவள். அவருடைய அப்பா
பெயர் கீலேயாத். **2** கீலேயாத்தின் மனைவியும்* அவருக்கு மகன்களைப்
பெற்றெடுத்தாள். அந்த மகன்கள் வளர்ந்து பெரியவர்களானபோது யெப்தா
விடம், “நீ வேறொருத்திக்குப் பிறந்தவன், எங்களுடைய அப்பாவின் சொத்
தில் உனக்குப் பங்கு கிடையாது” என்று சொல்லி அவரைத் துரத்திவிட்டார்
கள். **3** அதனால், யெப்தா தன்னுடைய சகோதரர்களைவிட்டு ஓடிப்போய்
தோப் தேசத்தில் குடியிருந்தார். வேலை இழந்த சிலர் அவரோடு சேர்ந்து
கொண்டு எதிரிகளைத் தாக்குவதற்காகப் போனார்கள்.

4 கொஞ்சக் காலம் கழித்து, இஸ்ரவேலர்களுடன் அம்மோனியர்கள்
போர் செய்தார்கள்.[b] **5** அப்போது, கீலேயாத்தின் பெரியோர்கள்* யெப்
தாவை தோப் தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டு வர உடனடியாகப் புறப்
பட்டுப் போனார்கள். **6** அவர்கள் யெப்தாவிடம், “நீங்கள் வந்து எங்க
ளுக்குப் படைத் தளபதியாக இருங்கள், நாம் அம்மோனியர்களோடு போர்
செய்யலாம்” என்று சொன்னார்கள். **7** ஆனால் யெப்தா கீலேயாத்தின்
பெரியோர்களிடம், “நீங்கள்தானே என்னை ஒரேயடியாக வெறுத்து, என்னு
டைய அப்பாவின் வீட்டிலிருந்து துரத்தியடித்தீர்கள்?[c] உங்களுக்குக் கஷ்
டம் வரும்போது மட்டும் ஏன் என்னைத் தேடி வருகிறீர்கள்?” என்று கேட்
டார். **8** அப்போது கீலேயாத்தின் பெரியோர்கள் யெப்தாவிடம், “நீங்கள்
சொல்வது உண்மைதான், ஆனால் இப்போது உங்களைக் கூட்டிக்
கொண்டு போவதற்காக வந்திருக்கிறோம். நீங்கள் எங்களுடன் வந்து அம்
மோனியர்களோடு போர் செய்தால், கீலேயாத் ஜனங்களுக்கு உங்களைத்
தலைவராக்குவோம்”[d] என்று சொன்னார்கள். **9** அதனால் யெப்தா கீலே
யாத்தின் பெரியோர்களிடம், “அம்மோனியர்களோடு போர் செய்ய நீங்
கள் என்னைக் கூட்டிக்கொண்டு போன பிறகு, அவர்களை யெகோவா
என் கையில் கொடுத்தால், நான் நிச்சயம் உங்களுக்குத் தலைவராக
இருப்பேன்!” என்று சொன்னார். **10** அதற்கு கீலேயாத்தின் பெரியோர்கள்,
“உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் யெகோவாவே சாட்சியாக இருக்
கட்டும். நீங்கள் சொன்னபடி நாங்கள் செய்யாவிட்டால் அவர் எங்களைத்
தண்டிக்கட்டும்” என்று சொன்னார்கள். **11** அதனால், கீலேயாத்தின் பெரி
யோர்களுடன் யெப்தா புறப்பட்டுப் போனார். ஜனங்கள் அவரைத் தங்க
ளுடைய தலைவராகவும் படைத் தளபதியாகவும் ஆக்கினார்கள். யெப்தா
தான் சொன்ன எல்லாவற்றையும் மிஸ்பாவில்[e] யெகோவாவுக்கு முன்னால்
திரும்பவும் சொன்னார்.

12 பின்பு யெப்தா அம்மோனியர்களின்[f] ராஜாவிடம் தூதுவர்களை
அனுப்பி, “எங்கள்மேல் உங்களுக்கு என்ன விரோதம்? ஏன் எங்களுடைய
தேசத்தைத் தாக்க வந்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார். **13** அம்மோனியர்
களின் ராஜா யெப்தாவின் தூதுவர்களிடம், “இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து
வந்தபோது, அர்னோனிலிருந்து[g] யாபோக் வரையும் யோர்தான் வரையும்[h]
இருக்கிற என்னுடைய தேசத்தைப் பிடுங்கிக்கொண்டார்கள்.[i] அதனால்
தான் தாக்க வந்தோம். இப்போது, சமாதானமாக அதைத் திருப்பிக்
கொடுக்க வேண்டும்” என்று சொன்னான். **14** ஆனால், யெப்தா மறுபடியும்

அதி. 11
a நியா 12:7; 1சா 12:11; எபி 11:32
b நியா 10:17
c நியா 11:2
d நியா 10:18
e நியா 10:17; நியா 11:34
f ஆதி 19:36, 38
g எண் 21:26
h உபா 3:16, 17
i எண் 21:23, 24

11:2 * அநேகமாக, “மற்றொரு மனைவி.” **11:5** * வே.வா., “மூப்பர்கள்.”

தன்னுடைய தூதுவர்களை அம்மோனியர்களின் ராஜாவிடம் அனுப்பி,
15 “யெப்தா சொல்கிறது என்னவென்றால்,
‘மோவாபியர்களின் தேசத்தையும் அம்மோனியர்களின் தேசத்தையும்
இஸ்ரவேலர்கள் பிடுங்கிக்கொள்ளவில்லை.[a] **16** அவர்கள் எகிப்திலி
ருந்து வந்தபோது, வனாந்தரம் வழியாக செங்கடல் வரைக்கும் நடந்து
வந்து[b] காதேசை அடைந்தார்கள்.[c] **17** அப்போது, இஸ்ரவேலர்கள் ஏதோ
மின் ராஜாவிடம் தூதுவர்களை அனுப்பி,[d] “தயவுசெய்து உங்கள் தேசத்தின்
வழியாகக் கடந்துபோக எங்களுக்கு அனுமதி கொடுங்கள்” என்று கேட்டார்
கள், ஆனால் ஏதோமின் ராஜா ஒத்துக்கொள்ளவில்லை. அதேபோல்
மோவாபின்[e] ராஜாவிடமும் கேட்டார்கள், அவனும் சம்மதிக்கவில்லை. அத
னால், இஸ்ரவேலர்கள் காதேசிலேயே[f] தங்கினார்கள். **18** வனாந்தரம் வழி
யாக அவர்கள் நடந்துபோனபோது, ஏதோம் தேசத்தையும் மோவாப் தேசத்
தையும் சுற்றிக்கொண்டு போனார்கள்.[g] அவர்கள் மோவாப் தேசத்துக்குக்
கிழக்கே போய்,[h] மோவாபின் எல்லைக்குள்[i] வருவதற்குப் பதிலாக அதன்
எல்லையில் இருந்த அர்னோனின் சுற்றுவட்டாரத்திலேயே முகாம்போட்
டார்கள்.

19 பின்பு எமோரியர்களின் ராஜாவாகிய சீகோனிடம், அதாவது
எஸ்போனின் ராஜாவிடம், இஸ்ரவேலர்கள் தங்கள் தூதுவர்களை அனுப்பி,
“உங்களுடைய தேசம் வழியாக எங்களுடைய இடத்துக்குப் போய்ச் சேர
தயவுசெய்து அனுமதி கொடுங்கள்” என்று கேட்டார்கள்.[j] **20** ஆனால்
சீகோன் இஸ்ரவேலர்களை நம்பாததால், தன்னுடைய தேசத்தைக் கடந்து
போக அவர்களை அனுமதிக்கவில்லை. அவன் தன்னுடைய படையைத்
திரட்டி, யாகாசில் முகாம்போட்டு, இஸ்ரவேலர்களோடு போர் செய்தான்.[k]
21 அதனால், சீகோனையும் அவன் படை முழுவதையும் இஸ்ரவேலின்
கடவுளாகிய யெகோவா தன்னுடைய ஜனங்கள் கையில் கொடுத்தார்.
அவர்கள் அவனைத் தோற்கடித்து, எமோரியர்களின் தேசம் முழுவதையும்
சொந்தமாக்கிக்கொண்டார்கள்.[l] **22** இப்படித்தான் அவர்கள் அர்னோன்
தொடங்கி யாபோக் வரையும், வனாந்தரம் தொடங்கி யோர்தான் வரையும்
இருக்கிற எமோரியர்களின் பிரதேசம் முழுவதையும் சொந்தமாக்கிக்கொண்
டார்கள்.[m]

23 இஸ்ரவேலர்களின் கடவுளாகிய யெகோவாதான் அவர்களுக்கு முன்
னால் எமோரியர்களைத் துரத்தியடித்தார்.[n] இப்போது நீங்கள் இஸ்ரவேலர்
களைத் துரத்தப்போகிறீர்களா? **24** உங்களுடைய கேமோஷ் தெய்வம்[o]
எந்தத் தேசத்தை உங்களுக்குக் கொடுக்கிறதோ அந்தத் தேசத்தைத்தானே
நீங்கள் சொந்தமாக்கிக்கொள்வீர்கள்? அப்படித்தான் நாங்களும் எங்கள்
கடவுளாகிய யெகோவா எந்த ஜனங்களைத் துரத்தியடிக்கிறாரோ அந்த
ஜனங்களுடைய தேசத்தைத்தான் சொந்தமாக்கிக்கொள்வோம்.[p] **25** சிப்
போரின் மகனும் மோவாபின் ராஜாவுமாகிய பாலாக்கைவிட[q] நீங்கள் பெரி
யவரா? அவர் எப்போதாவது இஸ்ரவேலர்களோடு வாதாடினாரா, அவர்க
ளோடு போர் செய்தாரா? **26** இஸ்ரவேலர்கள் எஸ்போனிலும் அதன்
சிற்றூர்களிலும்*[r] ஆரோவேரிலும் அதன் சிற்றூர்களிலும் அர்னோன்
ஆற்றங்கரையில் உள்ள எல்லா நகரங்களிலும் 300 வருஷங்களாகக் குடி
யிருந்து வருகிறார்கள். ஏன் இவ்வளவு காலம் நீங்கள் அதைத் திரும்பக்

11:26 * வே.வா, “அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும்.”

அதி. 11
a ஆதி 19:36, 37
உபா 2:9
உபா 2:19, 37
b எண் 14:25
c எண் 20:1
d ஆதி 36:1
எண் 20:14
உபா 2:4
e ஆதி 19:36, 37
f எண் 20:22
g எண் 21:4
h எண் 21:11
i எண் 21:13
j எண் 21:21-26
உபா 2:26, 27
k உபா 2:32, 33
l யோசு 13:15, 21
m உபா 2:36
n நெ 9:22
o 1ரா 11:7
p யாத் 23:28
யாத் 34:11
எண் 33:53
உபா 9:5
உபா 18:12
q எண் 22:2, 3
யோசு 24:9
r எண் 21:25

கேட்கவில்லை?[a] **27** நாங்கள் உங்களுக்கு விரோதமாகப் பாவம் செய்ய
வில்லை, நீங்கள்தான் எங்களை அநியாயமாகத் தாக்க வருகிறீர்கள். நியா
யாதிபதியாகிய யெகோவாவே[b] இன்று இஸ்ரவேலர்களுக்கும் அம்மோனி
யர்களுக்கும் இடையில் நியாயாதிபதியாக இருந்து, தீர்ப்பு கொடுக்கட்டும்’”
என்று சொன்னார்.

28 ஆனால், யெப்தா சொல்லி அனுப்பிய செய்தியை அம்மோனியர்க
ளுடைய ராஜா காதில் போட்டுக்கொள்ளவில்லை.

29 யெப்தாவுக்கு யெகோவாவின் சக்தி கிடைத்தது.[c] அவர் கீலேயாத்
பிரதேசத்தையும் மனாசே பிரதேசத்தையும் கடந்து கீலேயாத்திலுள்ள மிஸ்
பேக்கு வந்தார்.[d] பின்பு, அம்மோனியர்களோடு போர் செய்யப் போனார்.

30 அப்போது யெப்தா யெகோவாவிடம், “அம்மோனியர்களை நீங்கள்
என் கையில் கொடுத்தால், **31** யெகோவாவே, நான் வெற்றியோடு திரும்
பும்போது என் வீட்டு வாசலிலிருந்து என்னைச் சந்திக்க யார் முதலில் வரு
கிறாரோ அவரை உங்களுக்கு அர்ப்பணிப்பேன்.[e] அவரைத் தகன பலியா
கச் செலுத்துவேன்”*[f] என்று சொல்லி நேர்ந்துகொண்டார்.[g]

32 பின்பு, அம்மோனியர்களோடு போர் செய்ய யெப்தா போனார்.
யெகோவா அந்த ஜனங்களை அவர் கையில் கொடுத்தார். **33** ஆரோ
வேர் தொடங்கி மின்னித்துக்குப் போகும் வழிவரை, யெப்தா 20 நகரங்க
ளைக் கைப்பற்றி, ஆபேல்-கெராமிம்வரை ஏராளமானவர்களை வெட்டிக்
கொன்றார். இப்படி, அம்மோனியர்களை அடக்கிவிட இஸ்ரவேலர்களுக்
குக் கடவுள் உதவினார்.

34 பின்பு, மிஸ்பாவிலிருந்த[h] தன்னுடைய வீட்டுக்கு யெப்தா வந்தார்.
அப்போது, அவருடைய மகள் கஞ்சிராவைத் தட்டிக்கொண்டும் நடனமா
டிக்கொண்டும் அவரை வரவேற்க வெளியே வந்தாள். அவள் அவருடைய
ஒரே மகள், அவளைத் தவிர அவருக்கு வேறு மகளோ மகனோ இல்லை.
35 அவர் அவளைப் பார்த்தவுடன் தன்னுடைய உடையைக் கிழித்துக்
கொண்டு, “ஐயோ, என் மகளே! என் இதயத்தை நொறுக்கிவிட்டாயே! உன்
னையே நான் அனுப்ப வேண்டியதாகிவிட்டதே! நான் வாய் திறந்து
யெகோவாவிடம் சொல்லிவிட்டேன், அதை என்னால் மாற்ற முடியாதே”[i]
என்றார்.

36 அதற்கு அவள், “அப்பா, நீங்கள் வாய் திறந்து யெகோவாவிடம்
சொல்லியிருந்தால், அவருக்கு வாக்குக் கொடுத்தபடியே[j] எனக்குச் செய்து
விடுங்கள். ஏனென்றால், உங்கள் எதிரிகளான அம்மோனியர்களை
யெகோவா பழிக்குப்பழி வாங்கிவிட்டார்” என்று சொன்னாள். **37** பின்பு
தன் அப்பாவிடம், “எனக்காக ஒன்று மட்டும் செய்யுங்கள். இரண்டு மாதங்
களுக்கு என்னைத் தனியாக விட்டுவிடுங்கள். நான் மலைகளுக்குப் போகி
றேன். கன்னியாகவே இருக்கப்போவதை நினைத்து என் தோழிகளுடன்
சேர்ந்து அழுதுவிட்டு வருகிறேன்” என்று சொன்னாள்.

38 அதற்கு அவர் “போய் வா!” என்று சொல்லி, அவளை இரண்டு மாதங்
களுக்கு அனுப்பிவைத்தார். கன்னியாகவே இருக்கப்போவதை நினைத்துத்
தன் தோழிகளுடன் சேர்ந்து அழுதுவிட்டு வருவதற்காக அவள் மலைகளுக்
குப் போனாள். **39** இரண்டு மாதங்கள் கழித்து தன் அப்பாவிடம் திரும்பி

11:31 *அநேகமாக, கடவுளுடைய சேவைக்கு முழுமையாக அர்ப்பணிப்பதைக் குறிக்கும் உருவக அணி.

அதி. 11
a எண் 21:26
b ஏசா 33:22
c நியா 3:9, 10; சக 4:6
d நியா 10:17
e 1சா 1:11
f 1சா 1:24
g உபா 23:21
h நியா 10:17; நியா 11:11
i எண் 30:2; சங் 15:4; பிர 5:4
j நியா 11:30, 31

வந்தாள். அப்போது அவர், தான் நேர்ந்துகொண்டபடியே செய்தார்.[a] அவள்
கல்யாணம் செய்துகொள்ளவே இல்லை. **40** கீலேயாத்தைச் சேர்ந்த யெப்
தாவின் மகளைப் பார்த்துப் பாராட்டுவதற்காக இஸ்ரவேலிலுள்ள இளம்
பெண்கள் வருஷா வருஷம் நான்கு நாட்களுக்கு அவளிடம் போய் வந்
தார்கள். இது இஸ்ரவேலில் ஒரு வழக்கமாக ஆனது.

12 பின்பு எப்பிராயீம் ஆண்கள் ஒன்றுதிரண்டு, ஆற்றைக் கடந்து
சாப்போனுக்கு* போய் யெப்தாவைச் சந்தித்தார்கள். அவர்கள்
அவரிடம், "அம்மோனியர்களோடு போர் செய்யப் போனபோது நீ ஏன்
எங்களைக் கூப்பிடவில்லை?[b] உன்னை உன் வீட்டோடு சேர்த்துக் கொளுத்
தப்போகிறோம்" என்று சொன்னார்கள். **2** அதற்கு யெப்தா, "எனக்கும் என்
ஜனங்களுக்கும் அம்மோனியர்களோடு பெரிய சண்டை வந்தபோது, உத
விக்காக நான் உங்களைக் கூப்பிட்டேன். நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற
வரவில்லை. **3** நீங்கள் உதவிக்கு வர மாட்டீர்கள் என்று தெரிந்த பிறகு
தான், என்னுடைய உயிரைப் பணயம் வைத்து அம்மோனியர்களோடு போர்
செய்தேன்.[c] யெகோவா அவர்களை என் கையில் கொடுத்தார். இப்போது
நீங்கள் ஏன் என்னிடம் வந்து சண்டை போடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

4 பின்பு யெப்தா கீலேயாத்தின் ஆண்களையெல்லாம்[d] ஒன்றுதிரட்டி
எப்பிராயீம் ஆண்களோடு போர் செய்தார். அந்த எப்பிராயீம் ஆண்
கள்தான் முன்பு, "எப்பிராயீமுக்கும் மனாசேக்கும் சொந்தமான பகுதிகளில்
இருக்கிற கீலேயாத்தியர்களே, நீங்கள் எப்பிராயீமைவிட்டு ஓடிப்போனவர்
கள்தானே" என்று சொல்லியிருந்தார்கள். அவர்களை கீலேயாத்தின்
ஆண்கள் தோற்கடித்தார்கள். **5** எப்பிராயீமியர்களின் பகுதிக்கு முன்னால்
இருந்த யோர்தான் ஆற்றுத்துறைகளை* கைப்பற்றினார்கள்.[e] தப்பித்து ஓட
முயற்சி செய்த எப்பிராயீம் ஆண்கள் ஒவ்வொருவரும் ஆற்றைக் கடக்க
அனுமதி கேட்டபோது, கீலேயாத்தின் ஆண்கள் அவர்களிடம், "நீ எப்பி
ராயீமைச் சேர்ந்தவனா?" என்று கேட்டார்கள். அவர்கள், "இல்லை" என்று
சொன்னபோது, **6** "அப்படியானால் ஷிபோலேத் என்று சொல்" என்றார்
கள். ஆனால் அவர்கள், "சிபோலேத்" என்று சொன்னார்கள். ஏனென்றால்,
அவர்களுக்கு அந்த வார்த்தை சரியாக உச்சரிக்க வரவில்லை. உடனே,
கீலேயாத்தின் ஆண்கள் அவர்களைப் பிடித்து யோர்தான் ஆற்றுத்துறைக
ளில் வெட்டிப்போட்டார்கள். இப்படி, அந்தச் சமயத்தில் 42,000 எப்பிராயீ
மியர்கள் கொல்லப்பட்டார்கள்.

7 யெப்தா ஆறு வருஷங்களுக்கு இஸ்ரவேலில் நியாயாதிபதியாக
இருந்தார். அதன்பின் அவர் இறந்துபோய், கீலேயாத்திலிருந்த அவரு
டைய நகரத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

8 யெப்தாவுக்குப்பின் பெத்லகேமைச் சேர்ந்த இப்சான் இஸ்ரவேலில்
நியாயாதிபதியாக ஆனார்.[f] **9** அவருக்கு 30 மகன்களும் 30 மகள்களும்
இருந்தார்கள். தன்னுடைய மகள்களைச் சொந்தத்துக்கு வெளியே கல்யா
ணம் செய்துகொடுத்தார். அவர் தன்னுடைய மகன்களுக்கும் சொந்தத்துக்கு
வெளியே பெண்ணெடுத்தார். அவர் ஏழு வருஷங்களுக்கு இஸ்ரவேலில்
நியாயாதிபதியாக இருந்தார். **10** பின்பு அவர் இறந்துபோய், பெத்லகே
மில் அடக்கம் செய்யப்பட்டார்.

12:1 *அல்லது, "வடக்கே." **12:5** *ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதிகள்.

அதி. 11
a 1சா 1:22, 24

அதி. 12
b நியா 8:1
c நியா 11:29
d உபா 3:12, 13
e நியா 3:28
நியா 7:24
f நியா 2:16

11 அவருக்குப்பின், செபுலோனியரான ஏலோன் 10 வருஷங்களுக்கு
இஸ்ரவேலில் நியாயாதிபதியாக இருந்தார். **12** பின்பு அவர் இறந்து
போய், செபுலோன் தேசத்தில் இருந்த ஆயலோனில் அடக்கம் செய்யப்
பட்டார்.

13 அவருக்குப்பின் பிரத்தோன் ஊரைச் சேர்ந்த இல்லேலின் மகன் அப்
தோன் இஸ்ரவேலில் நியாயாதிபதியாக ஆனார். **14** அவருக்கு 40 மகன்
களும் 30 பேரன்களும் இருந்தார்கள். அவர்கள் 70 கழுதைகளில் சவாரி
செய்தார்கள். அப்தோன் எட்டு வருஷங்களுக்கு இஸ்ரவேலில் நியாயாதி
பதியாக இருந்தார். **15** பின்பு, பிரத்தோனைச் சேர்ந்த இல்லேலின் மகன்
அப்தோன் இறந்துபோனார். எப்பிராயீம் தேசத்தில் அமலேக்கியர்களின்[a]
மலையிலிருந்த பிரத்தோனில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

13 மறுபடியும் இஸ்ரவேலர்கள் யெகோவா வெறுக்கிற காரியங்க
ளைச் செய்தார்கள்.[b] யெகோவா அவர்களை 40 வருஷங்களுக்கு
பெலிஸ்தியர்களின் கையில் விட்டுவிட்டார்.[c]

2 அந்தக் காலகட்டத்தில், தாண் கோத்திரத்தைச்[d] சேர்ந்த ஒருவர் சோரா
என்ற ஊரில்[e] வாழ்ந்துவந்தார். அவருடைய பெயர் மனோவா.[f] அவரு
டைய மனைவிக்குக் குழந்தை பாக்கியம் இல்லை.[g] **3** ஒருநாள் யெகோவா
வின் தூதர் அவள் முன்னால் வந்து, “இதுவரை உனக்குக் குழந்தை
பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனால், சீக்கிரத்தில் நீ கர்ப்பமாகி ஒரு மக
னைப் பெற்றெடுப்பாய்.[h] **4** அதுவரை திராட்சமதுவையோ வேறெந்த மது
வையோ நீ குடிக்கக் கூடாது.[i] தீட்டான எதையும்[j] சாப்பிடக் கூடாது.
5 நீ கர்ப்பமாகி கண்டிப்பாக ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். அவனுடைய
தலைமுடியை நீ வெட்டவே கூடாது.[k] ஏனென்றால், பிறக்கும் சமயத்திலி
ருந்தே அவன் கடவுளுக்கு நசரேயனாக* இருப்பான். பெலிஸ்தியர்க
ளின் கையிலிருந்து இஸ்ரவேலர்களை அவன் காப்பாற்றுவான்”[l] என்று
சொன்னார்.

6 உடனே அவள் தன் கணவனிடம் போய், “உண்மைக் கடவுளின் ஊழி
யர் ஒருவர் என்னிடம் வந்து பேசினார். நான் அவரைப் பார்த்து அப்படியே
பிரமித்துப்போய்விட்டேன், ஏனென்றால் அவர் உண்மைக் கடவுளின் தூத
ரைப் போலவே இருந்தார். அவர் எங்கிருந்து வந்தாரென்று நான் கேட்க
வில்லை, அவரும் தன்னுடைய பெயரைச் சொல்லவில்லை.[m] **7** ஆனால்
அவர் என்னிடம், ‘நீ கர்ப்பமாகி கண்டிப்பாக ஒரு மகனைப் பெற்றெ
டுப்பாய். அதுவரை திராட்சமதுவையோ வேறெந்த மதுவையோ நீ குடிக்
கக் கூடாது. தீட்டான எதையும் சாப்பிடக் கூடாது. ஏனென்றால், பிறக்கிற
நாளிலிருந்து சாகிற நாள்வரை அவன் கடவுளுக்கு நசரேயனாக இருப்பான்’
என்று சொன்னார்” என்றாள்.

8 அப்போது மனோவா, “யெகோவாவே, என்னை மன்னித்துவிடுங்
கள். நீங்கள் கொஞ்ச நேரத்துக்கு முன்பு அனுப்பிய உங்களுடைய ஊழிய
ரைத் தயவுசெய்து மறுபடியும் அனுப்புங்கள். பிறக்கப்போகிற குழந்தையை
எப்படி வளர்க்க வேண்டும் என்று அவர் எங்களுக்குச் சொல்லிக்கொடுக்க
வேண்டும்” என்று யெகோவாவிடம் கெஞ்சினார். **9** மனோவாவின்
வேண்டுதலை உண்மைக் கடவுள் கேட்டார். அவருடைய மனைவி வெளி
யில் உட்கார்ந்திருந்த சமயத்தில், உண்மைக் கடவுளின் தூதர் மறுபடியும்

அதி. 12
a ஆதி 36:12, யாத் 17:16, எண் 13:29, 1சா 15:2

அதி. 13
b நியா 2:11, 19; நியா 10:6
c யோசு 13:1-3; நியா 10:7
d ஆதி 49:16
e யோசு 15:20, 33; யோசு 19:41, 48
f நியா 16:31
g ஆதி 30:22, 23
h ஆதி 18:10; 1சா 1:20; லூ 1:11, 13
i எண் 6:2, 3; லூ 1:15
j லேவி 11:26, 27
k எண் 6:2, 5
l நியா 2:16; நியா 13:1; நெ 9:27
m நியா 13:17, 18

13:5 * அதாவது, “அர்ப்பணிக்கப்பட்டவனாக.”

அவளிடம் வந்தார். அவளுடைய கணவன் மனோவா அப்போது அவ
ளோடு இல்லை. **10** அதனால் அவள் சட்டென்று தன் கணவனிடம் ஓடிப்
போய், "அன்றைக்கு என்னைப் பார்க்க வந்த மனுஷர் திரும்பவும் வந்தி
ருக்கிறார்!"[a] என்று சொன்னாள்.

11 உடனே மனோவா எழுந்து தன்னுடைய மனைவியுடன் போய், அந்த
மனிதரைப் பார்த்து, "அன்றைக்கு நீங்கள்தான் என் மனைவியிடம் பேசினீர்
களா?" என்று கேட்டார். அதற்கு அவர், "ஆமாம்" என்றார். **12** அப்போது
மனோவா, "நீங்கள் சொன்னபடியே நடக்கட்டும்! அந்தக் குழந்தையை எப்
படி வளர்க்க வேண்டும்? அவன் என்ன வேலை செய்வான்?"[b] என்று
கேட்டார். **13** அதற்கு யெகோவாவின் தூதர், "நான் உன்னுடைய மனைவி
யிடம் சொன்னதையெல்லாம்[c] அவள் அப்படியே செய்ய வேண்டும்.
14 திராட்சைக் கொடியில் விளைகிற எதையும் அவள் சாப்பிடக் கூடாது.
திராட்சமதுவையோ வேறெந்த மதுவையோ குடிக்கக் கூடாது,[d] தீட்டான
எதையும் சாப்பிடக் கூடாது.[e] நான் கொடுத்த எல்லா கட்டளைகளையும்
அவள் கடைப்பிடிக்க வேண்டும்" என்று சொன்னார்.

15 அப்போது மனோவா யெகோவாவின் தூதரிடம், "தயவுசெய்து
இங்கேயே இருங்கள். உங்களுக்காக ஒரு வெள்ளாட்டுக் குட்டியை
வெட்டி சமைத்துக்கொண்டு வருகிறோம்"[f] என்று சொன்னார். **16** ஆனால்
யெகோவாவின் தூதர் மனோவாவிடம், "நான் இங்கே இருந்தாலும் நீங்
கள் கொடுக்கிற உணவைச் சாப்பிட மாட்டேன். நீங்கள் யெகோவாவுக்குத்
தகன பலி செலுத்த விரும்பினால் செலுத்தலாம்" என்றார். அவர்
யெகோவாவின் தூதர் என்ற விஷயம் மனோவாவுக்குத் தெரியவில்லை.
17 அப்போது மனோவா யெகோவாவின் தூதரிடம், "நீங்கள் சொன்ன
தெல்லாம் நிறைவேறும்போது நாங்கள் உங்களைக் கௌரவிக்க வேண்
டும். அதனால் தயவுசெய்து உங்கள் பெயரைச் சொல்லுங்கள்"[g] என்றார்.
18 ஆனால் யெகோவாவின் தூதர், "என் பெயரை ஏன் கேட்கிறாய்? அது
அற்புதமானது என்று உனக்குத் தெரியாதா?" என்றார்.

19 பின்பு, மனோவா வெள்ளாட்டுக் குட்டியையும் உணவுக்
காணிக்கையையும் பாறைமேல் வைத்து அவற்றை யெகோவாவுக்குச்
செலுத்தினார். மனோவாவும் அவருடைய மனைவியும் பார்த்துக்கொண்டி
ருந்தபோதே கடவுள் ஓர் அற்புதத்தைச் செய்தார். **20** அந்தப் பலிபீடத்
திலிருந்து தீ ஜுவாலை வானத்துக்கு நேராக எழும்பியது. மனோவாவும்
அவருடைய மனைவியும் பார்க்கப் பார்க்கவே அந்தத் தீ ஜுவாலையில்
யெகோவாவின் தூதர் மேலே போனார். உடனே அவர்கள் இரண்டு பேரும்
சாஷ்டாங்கமாக விழுந்தார்கள். **21** அதன்பின், மனோவாவுக்கும் அவரு
டைய மனைவிக்கும் முன்னால் யெகோவாவின் தூதர் வரவில்லை. அவர்
யெகோவாவின் தூதர் என்பதை மனோவா அப்போது புரிந்துகொண்டார்.[h]
22 உடனே தன்னுடைய மனைவியிடம், "நாம் கடவுளையே பார்த்து
விட்டோம், அதனால் கண்டிப்பாகச் சாகப்போகிறோம்"[i] என்று சொன்
னார். **23** ஆனால் அவருடைய மனைவி, "யெகோவா நம்மைக் கொல்ல
நினைத்திருந்தால், நாம் செலுத்திய தகன பலியையும் உணவுக் காணிக்கை
யையும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்.[j] இதையெல்லாம் நமக்குக் காட்டி
யிருக்க மாட்டார், சொல்லியிருக்கவும் மாட்டார்" என்றாள்.

24 பிற்பாடு, அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தக்
குழந்தைக்கு சிம்சோன்[k] என்று பெயர் வைத்தாள். சிம்சோன் வளர்ந்துவந்த

அதி. 13
a நியா 13:3
b நியா 13:8
c நியா 13:4
d எண் 6:2, 3
e லேவி 11:26, 27
f ஆதி 18:5, 7 நியா 6:18, 19 எபி 13:2
g ஆதி 32:29 நியா 13:6
h நியா 6:22, 23
i யாத் 33:20 யோவா 1:18
j நியா 13:16
k எபி 11:32

காலமெல்லாம் யெகோவா அவரை ஆசீர்வதித்துக்கொண்டே இருந்தார்.
25 பின்பு, சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும்[a] இடையில் உள்ள மக்னி-
தாணில்[b] அவர் இருந்தபோது, யெகோவாவின் சக்தி அவரைச் செயல்ப
டத் தூண்டியது.[c]

14 அப்போது, சிம்சோன் திம்னாவுக்குப் போனார். அங்கே ஒரு
பெலிஸ்தியப் பெண்ணைப் பார்த்தார். **2** அவர் தன்னுடைய
அம்மா அப்பாவிடம் போய், “திம்னாவில் ஒரு பெலிஸ்தியப் பெண்
ணைப் பார்த்தேன். அவளை எனக்குக் கல்யாணம் செய்து வையுங்கள்”
என்று சொன்னார். **3** ஆனால் அவருடைய அம்மாவும் அப்பாவும், “நம்
முடைய சொந்தத்திலும் ஜனத்திலும் உனக்குப் பெண் கிடைக்கவில்
லையா?[d] விருத்தசேதனம் செய்யாத பெலிஸ்திய ஜனங்களிடமிருந்துதான்
நீ பெண்ணெடுக்க வேண்டுமா?” என்று கேட்டார்கள். அதற்கு சிம்சோன்
தன் அப்பாவிடம், “அவள்தான் எனக்குப் பொருத்தமானவள், அவளையே
எனக்குக் கல்யாணம் செய்து வையுங்கள்” என்று சொன்னார். **4** அது
யெகோவாவின் செயல் என்பது அவருடைய அம்மா அப்பாவுக்குத் தெரி
யவில்லை. பெலிஸ்தியர்களோடு சண்டை போட சிம்சோன் சரியான சம
யம் பார்த்துக்கொண்டிருந்தார். ஏனென்றால், அந்தக் காலத்தில் பெலிஸ்தி
யர்கள் இஸ்ரவேலர்களை ஆட்சி செய்துவந்தார்கள்.[e]

5 சிம்சோன் தன்னுடைய அம்மா அப்பாவோடு திம்னாவுக்குப் புறப்
பட்டுப் போனார். அங்கிருந்த திராட்சைத் தோட்டத்துக்கு அவர் போய்ச்
சேர்ந்தபோது, ஒரு சிங்கம் கர்ஜித்தபடி அவருக்கு நேராகப் பாய்ந்து வந்
தது. **6** அப்போது யெகோவாவின் சக்தியால் அவர் பலம் பெற்று,[f] ஓர்
ஆட்டுக்குட்டியை இரண்டாகக் கிழிப்பதுபோல் அந்தச் சிங்கத்தை வெறுங்
கையால் இரண்டாகக் கிழித்தார். ஆனால், இதைப் பற்றித் தன் அம்மா
விடமோ அப்பாவிடமோ சொல்லவில்லை. **7** பின்பு, அங்கிருந்து போய்
அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசினார். அப்போதும், அவள்தான் அவ
ருக்குப் பொருத்தமானவளாகத் தெரிந்தாள்.[g]

8 பிற்பாடு, அவளைத் தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வரு
வதற்காகப்[h] போனபோது, தான் கொன்றுபோட்டிருந்த சிங்கத்தைப் பார்ப்
பதற்காகத் திரும்பினார். அந்தச் சிங்கத்தின் உடலுக்குள் தேனீக்கூட்டமும்
தேனும் இருந்தது. **9** அதைக் கையில் எடுத்து சாப்பிட்டுக்கொண்டே,
தன் அம்மா அப்பாவிடம் வந்து, அவர்களுக்கும் கொஞ்சம் கொடுத்தார்.
ஆனால், அதைச் சிங்கத்தின் உடலிலிருந்து எடுத்த விஷயத்தை அவர்க
ளிடம் சொல்லவில்லை.

10 அவருடைய அப்பா அந்தப் பெண்ணைப் பார்க்கப் போனார்.
அங்கே சிம்சோன் ஒரு விருந்து வைத்தார். பொதுவாக, மணமகன்கள் அப்
படி விருந்து வைப்பது வழக்கம். **11** சிம்சோனுக்காக 30 மாப்பிள்ளைத்
தோழர்கள் வர வைக்கப்பட்டார்கள். **12** சிம்சோன் அவர்களிடம், “நான்
உங்களுக்கு ஒரு விடுகதை சொல்கிறேன். விருந்து நடக்கிற ஏழு நாட்க
ளுக்குள் நீங்கள் அதற்குப் பதில் கண்டுபிடித்துவிட்டால், நான் உங்க
ளுக்கு 30 நாரிழை* உடைகளையும் 30 மேலங்கிகளையும் கொடுப்பேன்.
13 பதில் கண்டுபிடிக்காவிட்டால், நீங்கள் எனக்கு 30 நாரிழை உடைகளை
யும் 30 மேலங்கிகளையும் கொடுக்க வேண்டும், சம்மதமா?” என்று

14:12 * அதாவது, “லினன்.”

அதி. 13
a யோசு 15:20, 33
b நியா 18:11, 12
c நியா 3:9, 10; நியா 6:34; நியா 11:29; 1சா 11:6

அதி. 14
d உபா 7:3
e நியா 13:1
f நியா 13:24, 25
g நியா 14:2
h ஆதி 24:67; மத் 1:24

கேட்டார். அதற்கு அவர்கள், “சரி, உன் விடுகதையைச் சொல், நாங்கள்
அதைக் கேட்க வேண்டும்” என்றார்கள். **14** அப்போது சிம்சோன்,

“உண்கிறவனிடமிருந்து உணவு வந்தது,
பலவானிடமிருந்து தித்திப்பானது வந்தது”[a]

என்று சொன்னார்.

மூன்று நாட்கள் வரைக்கும் அவர்களால் அந்த விடுகதைக்குப் பதில்
கண்டுபிடிக்க முடியவில்லை. **15** நான்காம் நாள் அவர்கள் சிம்சோனின்
மனைவியிடம், “உன் புருஷனிடமிருந்து தந்திரமாக[b] அந்த விடுகதைக்
குப் பதில் தெரிந்துகொண்டு வா. இல்லாவிட்டால், உன்னையும் உன் அப்
பாவின் வீட்டையும் கொளுத்திவிடுவோம். எங்கள் பொருள்களைப் பறித்
துக்கொள்ளவா எங்களை வர வைத்தீர்கள்?” என்றார்கள். **16** அதனால்,
சிம்சோனின் மனைவி அவர் முன்னால் அழுதபடியே, “நீங்கள் என்னை
வெறுக்கிறீர்கள், என்மேல் உங்களுக்கு அன்பே இல்லை.[c] என் ஜனங்களி
டம் ஒரு விடுகதை சொன்னீர்கள். ஆனால், பதிலை என்னிடம் சொல்லா
மல் மறைக்கிறீர்கள்” என்றாள். அதற்கு அவர், “நான் அதை என் அப்பா
அம்மாவிடம்கூட சொல்லவில்லை, உன்னிடம் மட்டும் சொல்வேனா?”
என்று கேட்டார். **17** அதனால், அந்த ஏழு நாள் விருந்தின் மீதி நாட்க
ளும் அவள் அழுதுகொண்டே இருந்தாள். அவரை நச்சரித்துக்கொண்டே
இருந்தாள். கடைசியில், ஏழாம் நாளில் விடுகதைக்கான பதிலை அவளிடம்
அவர் சொல்லிவிட்டார். அதை அவள் தன்னுடைய ஜனங்களிடம் சொன்
னாள்.[d] **18** ஏழாம் நாளில் சூரியன் மறைவதற்கு முன்பு,* அந்த நகரத்தி
லிருந்த ஆண்கள் அவரிடம்,

“தேனைவிட தித்திப்பானது எது,
சிங்கத்தைவிட பலமானது எது?”[e]

என்றார்கள். அதற்கு அவர்,

“என் இளம் பசுவை வைத்து நீங்கள் உழாமல் இருந்திருந்தால்#[f]
என் விடுகதைக்குப் பதில் சொல்லியிருக்க முடியாது”

என்று சொன்னார்.

19 அப்போது, யெகோவாவின் சக்தியால் அவர் பலம் பெற்றார்.[g]
உடனே, அவர் அஸ்கலோனுக்குப்[h] போய் 30 ஆட்களைக் கொன்று,
அவர்களுடைய உடைகளை எடுத்து, தன் விடுகதைக்குப் பதில் சொன்ன
வர்களுக்குக் கொடுத்தார்.[i] பின்பு, பயங்கர கோபத்தோடு தன்னுடைய அப்
பாவின் வீட்டுக்குத் திரும்பிப்போனார்.

20 சிம்சோனின் மனைவி,[j] அவருக்கு மாப்பிள்ளைத் தோழனாக
இருந்த ஒருவனுக்குக் கல்யாணம் செய்து வைக்கப்பட்டாள்.[k]

15 கொஞ்சக் காலத்துக்குப் பின்பு, கோதுமை அறுவடை நடந்துகொண்
டிருந்தபோது, ஒரு வெள்ளாட்டுக் குட்டியை எடுத்துக்கொண்டு சிம்
சோன் தன்னுடைய மனைவியைப் பார்க்கப் போனார். “நான் என் மனைவி
யின் படுக்கை அறைக்குப் போய் அவளைப் பார்க்க வேண்டும்” என்று
சொன்னார். ஆனால், உள்ளே போக அவளுடைய அப்பா அவரை விட

14:18 * அல்லது, “உள்ளறைக்கு அவர் போவதற்கு முன்பு.” # அதாவது, “என் மனைவியை வளைத்துப்போட்டிருக்காவிட்டால்.”

அதி. 14
a நியா 14:8, 9
b நியா 16:5
c நியா 16:15
d நியா 16:16, 18
e நியா 14:14
f நியா 14:15
g நியா 13:24, 25; நியா 14:6; நியா 15:14
h யோசு 13:2, 3; நியா 1:18
i நியா 14:12
j நியா 14:2
k நியா 14:11; நியா 15:1, 2

அதி. 15

வில்லை. **2** அவர் சிம்சோனிடம், “நீங்கள் அவளை அடியோடு வெறுத்து
விட்டதாக[a] நினைத்து, உங்களுடைய மாப்பிள்ளைத் தோழனாக இருந்தவ
னுக்கு அவளைக் கொடுத்துவிட்டேன்.[b] அவளுடைய தங்கை அவளைவிட
ரொம்ப அழகானவள். அவளுக்குப் பதிலாகத் தயவுசெய்து இவளைக்
கல்யாணம் செய்துகொள்ளுங்கள்” என்றார். **3** ஆனால் சிம்சோன், “நான்
பெலிஸ்தியர்களுக்கு என்ன செய்யப்போகிறேன் என்று பாருங்கள்! இந்தத்
தடவை அவர்கள் என்மேல் குற்றம் சொல்ல முடியாது” என்றார்.

4 பின்பு, சிம்சோன் போய் 300 குள்ளநரிகளைப் பிடித்துக்கொண்டு வந்
தார். அதன்பின், இரண்டிரண்டு குள்ளநரிகளை வாலோடு வாலாகச்
சேர்த்து, அவற்றின் நடுவில் ஒரு தீப்பந்தத்தை வைத்துக் கட்டினார்.
5 பிறகு அந்தத் தீப்பந்தங்களைப் பற்ற வைத்து, பெலிஸ்தியர்களின் வயல்
களில் அந்தக் குள்ளநரிகளை ஓடவிட்டார். அதனால் கதிர்க்கட்டுகள், பயிர்
கள், திராட்சைத் தோட்டங்கள், ஒலிவத் தோப்புகள் என எல்லாமே எரிந்து
சாம்பலானது.

6 “யார் இப்படிச் செய்தது?” என்று பெலிஸ்தியர்கள் கேட்டார்கள்.
“திம்னா ஊர்க்காரனின் மருமகன் சிம்சோன்தான் இப்படிச் செய்திருக்கி
றான். அவனுடைய மனைவி அவனுக்கு மாப்பிள்ளைத் தோழனாக இருந்
தவனுக்குக் கொடுக்கப்பட்டதால்[c] கோபத்தில் இப்படிச் செய்திருக்கிறான்”
என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. உடனே, பெலிஸ்தியர்கள்
போய் சிம்சோனின் மனைவியையும் மாமனாரையும் கொளுத்தினார்கள்.[d]
7 அப்போது சிம்சோன் அவர்களிடம், “நீங்கள் செய்த காரியத்துக்கு உங்
களைப் பழிவாங்காமல் விட மாட்டேன்”[e] என்றார். **8** பின்பு, அவர்க
ளைச் சரமாரியாக வெட்டிக் குவித்தார். அதன்பின், ஏத்தாம் மலைப்பாறை
யில் இருந்த ஒரு குகையில்* தங்கினார்.

9 பிற்பாடு, பெலிஸ்தியர்கள் திரண்டு வந்து யூதா பிரதேசத்தில் முகாம்
போட்டு, லேகியில்[f] வெறியோடு அலைந்துகொண்டிருந்தார்கள். **10** அப்
போது யூதா கோத்திரத்து ஆண்கள் அவர்களிடம், “ஏன் எங்களைத் தாக்க
வந்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், “சிம்சோனைப்
பிடிக்க* வந்திருக்கிறோம். அவனைப் பழிக்குப்பழி வாங்கப்போகிறோம்”
என்று சொன்னார்கள். **11** அப்போது, யூதா கோத்திரத்தைச் சேர்ந்த
3,000 ஆண்கள் ஏத்தாம் மலைப்பாறையின் குகைக்குள் இருந்த சிம்சோ
னிடம் வந்து, “நாம் பெலிஸ்தியர்களுடைய ஆட்சியின் கீழ் இருக்கிறோம்[g]
என்று உனக்குத் தெரியாதா? ஏன் இப்படிச் செய்தாய்?” என்று கேட்டார்
கள். அதற்கு அவர், “அவர்கள் எனக்குச் செய்ததைத்தான் நானும் அவர்
களுக்குச் செய்தேன்” என்றார். **12** அப்போது அவர்கள், “உன்னைப்
பிடித்து பெலிஸ்தியர்களின் கையில் கொடுப்பதற்காக வந்திருக்கிறோம்”
என்றார்கள். ஆனால் அவர், “நீங்கள் என்னைக் கொல்ல மாட்டீர்கள் என்று
சத்தியம் செய்து கொடுங்கள்” என்றார். **13** அதற்கு அவர்கள், “நாங்கள்
உன்னைக் கொல்ல மாட்டோம், வெறுமனே உன்னைக் கட்டி அவர்களிடம்
ஒப்படைப்போம்” என்றார்கள்.

பின்பு, இரண்டு புதிய கயிறுகளால் அவரைக் கட்டி, அந்தக் குகை
யிலிருந்து கொண்டுவந்தார்கள். **14** அவர் லேகிக்குக் கொண்டுவரப்பட்ட
தைப் பார்த்ததும் அங்கிருந்த பெலிஸ்தியர்கள் சந்தோஷமாகக் கோஷம்

a நியா 14:17
b நியா 14:11, 20
c நியா 14:11, 20
d நியா 14:15
e நியா 14:4
f 2சா 23:11, 12
g நியா 13:1

15:8 * வே.வா., “இடுக்கில்.” **15:10** * வே.வா., “கட்டி இழுத்துக்கொண்டு போக.”

போட்டார்கள். அப்போது, யெகோவாவின் சக்தியால் சிம்சோன் பலம் பெற்
றார்.[a] அவர் கையில் கட்டப்பட்டிருந்த கயிறுகள் நெருப்பு பட்ட நூல்போல்
அறுந்து, கீழே விழுந்தன.[b] **15** அந்தச் சமயத்தில், அவர் ஓர் ஆண் கழு
தையின் பச்சைத் தாடை எலும்பைப் பார்த்தார். உடனே, அதை எடுத்து
1,000 பேரைக் கொன்றார்.[c] **16** அதன்பின் சிம்சோன்,

“கழுதையின் தாடை எலும்பால் பிணங்களைக் குவியல்களாகக்
குவித்தேன்!
கழுதையின் தாடை எலும்பால் 1,000 பேரைக் கொன்றுபோட்டேன்!”[d]

என்று சொன்னார்.

17 இப்படிச் சொல்லி முடித்தபின், அந்தத் தாடை எலும்பைத் தூக்கி
யெறிந்துவிட்டு, அந்த இடத்துக்கு ராமாத்-லேகி*[e] என்று பெயர் வைத்தார்.
18 அப்போது அவருக்கு ரொம்பத் தாகமாக இருந்தது. அவர் யெகோவா
விடம், “இந்த அடியேனுக்கு நீங்கள் மாபெரும் வெற்றியைக் கொடுத்தீர்
களே. ஆனால், இப்போது நான் தாகத்தால் செத்துக்கொண்டிருக்கிறேன்.
விருத்தசேதனம் செய்யப்படாத இந்த ஆட்களின் கையில் என் உயிர்போக
வேண்டுமா?” என்று கெஞ்சினார். **19** அப்போது, லேகியில் இருந்த ஒரு
பள்ளத்தைக் கடவுள் பிளந்தார், அதிலிருந்து தண்ணீர் பொங்கி வந்தது.[f]
அதைக் குடித்ததும் அவருக்கு உயிர் வந்தது, புத்துணர்ச்சி கிடைத்தது. அத
னால், அந்த இடத்துக்கு என்-நக்கோரி* என்று பெயர் வைத்தார். அது இன்
றுவரை லேகியில் இருக்கிறது.

20 பெலிஸ்தியர்களின் காலத்திலே சிம்சோன் 20 வருஷங்களுக்கு இஸ்
ரவேலில் நியாயாதிபதியாக இருந்தார்.[g]

16 சிம்சோன் ஒருநாள் காசாவுக்குப் போனார். அங்கே ஒரு விபச்சா
ரியைப் பார்த்து அவள் வீட்டுக்குப் போனார். **2** சிம்சோன் அங்கு
வந்திருக்கும் செய்தி அந்த நகரத்திலிருந்த ஜனங்களுக்குச் சொல்லப்
பட்டது. உடனே, அவர்கள் அந்த இடத்தைச் சுற்றிவளைத்து, நகரவாசலில்
ராத்திரி முழுவதும் பதுங்கியிருந்தார்கள். “பொழுது விடிந்ததும் அவனைத்
தீர்த்துக்கட்டிவிடலாம்” என்று சொல்லி ராத்திரி முழுக்க அமைதியாகக் காத்
திருந்தார்கள்.

3 சிம்சோன் நடுராத்திரிவரை அங்கே படுத்திருந்தார். பின்பு எழுந்து,
நகரவாசலின் கதவுகளையும் அவற்றின் இரண்டு நிலைக்கால்களையும்
தாழ்ப்பாளோடு சேர்த்துப் பெயர்த்தெடுத்தார். அவற்றைத் தன்னுடைய
தோள்களில் சுமந்துகொண்டு எப்ரோனுக்கு எதிரில் இருந்த மலையின் உச்
சிக்குப் போனார்.

4 பிற்பாடு, சோரேக் பள்ளத்தாக்கில்* இருந்த ஒரு பெண்ணை அவர்
காதலித்தார். அவள் பெயர் தெலீலாள்.[h] **5** பெலிஸ்தியர்களின் தலைவர்
கள் அவளிடம் வந்து, “அவனுக்கு எப்படி இவ்வளவு பலம் வந்தது என்
பதை அவன் வாயிலிருந்தே தந்திரமாக வர வை.[i] நாங்கள் அவனை எப்ப
டிப் பிடித்துக் கட்டிப்போட்டு அடக்கலாம் என்பதையும் கண்டுபிடி. அதற்கு
நாங்கள் ஒவ்வொருவரும் உனக்கு 1,100 வெள்ளிக் காசுகள் தருகிறோம்”
என்று சொன்னார்கள்.

15:17 * அர்த்தம், “தாடை எலும்பின் உயர்ந்த இடம்.” **15:19** * அர்த்தம், “மன்றாடுகி
றவரின் ஊற்று.” **16:4** * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கில்.”

அதி. 15
a நியா 13:24, 25; நியா 14:5, 6
b நியா 16:9, 12
c நியா 3:31
d நியா 16:30
e நியா 15:9
f யாத் 17:6
g ஆதி 49:16; நியா 2:16; நியா 13:1, 5; நியா 16:31; எபி 11:32

அதி. 16
h நியா 16:18
i நியா 14:15

அதி. 16
a நியா 15:14

6 பின்பு தெலீலாள் சிம்சோனிடம், “உங்களுக்கு இவ்வளவு பலம் எப்
படி வந்தது? எதை வைத்து உங்களைக் கட்டிப்போட்டு அடக்குவது? தயவு
செய்து எனக்குச் சொல்லுங்கள்” என்று கேட்டாள். **7** அதற்கு சிம்சோன்,
“உலராத ஏழு நாண்களை* கொண்டுவந்து என்னைக் கட்டினால் என்னு
டைய பலமெல்லாம் போய்விடும், நான் சாதாரண மனுஷன்போல் ஆகி
விடுவேன்” என்று சொன்னார். **8** அதனால், பெலிஸ்தியர்களின் தலைவர்
கள் உலராத ஏழு நாண்களைக் கொண்டுவந்து அவளிடம் கொடுத்தார்கள்.
அவள் அவற்றை வைத்து சிம்சோனைக் கட்டினாள். **9** அந்தத் தலைவர்
கள் அங்கிருந்த உள்ளறையில் சிலரைப் பதுங்கியிருக்க வைத்திருந்தார்கள்.
b நியா 16:9
அப்போது அவள், “சிம்சோன், உங்களைப் பிடிக்க பெலிஸ்தியர்கள் வந்து
விட்டார்கள்!” என்று கத்தினாள். உடனே, சிம்சோன் அந்த நாண்களை
அறுத்தெறிந்தார். நெருப்பு பட்ட நாரிழைபோல் அவை சட்டென்று அறுந்து
விழுந்தன.[a] அவருடைய பலத்தின் ரகசியம் யாருக்கும் தெரியவில்லை.

10 பின்பு தெலீலாள் சிம்சோனிடம், “நீங்கள் என்னை ஏமாற்றிவிட்
டீர்கள், என்னிடம் பொய் சொல்லிவிட்டீர்கள். உங்களை எதை வைத்துக்
கட்டிப்போட முடியும்? தயவுசெய்து இப்போதாவது சொல்லுங்கள்” என்று
கேட்டாள். **11** அதற்கு அவர், “இதுவரை பயன்படுத்தப்படாத புதிய கயி
c நியா 16:7, 11
றுகளை வைத்து என்னைக் கட்டினால், என்னுடைய பலமெல்லாம் போய்
விடும், நான் சாதாரண மனுஷன்போல் ஆகிவிடுவேன்” என்று சொன்
னார். **12** அதனால், தெலீலாள் புதிய கயிறுகளை எடுத்து அவரைக் கட்டி,
“சிம்சோன், உங்களைப் பிடிக்க பெலிஸ்தியர்கள் வந்துவிட்டார்கள்!” என்று
கத்தினாள். உடனே அவர் தன்னுடைய கைகளிலிருந்த கயிறுகளை நூல்
போல அறுத்துப்போட்டார்.[b] அதெல்லாம் நடந்தபோது, உள்ளறையில்
ஆட்கள் பதுங்கியிருந்தார்கள்.

13 அப்போது தெலீலாள் சிம்சோனிடம், “திரும்பத் திரும்ப என்னை
d நியா 14:16
ஏமாற்றிக்கொண்டே இருக்கிறீர்கள், என்னிடம் பொய் சொல்கிறீர்கள்.[c]
எதை வைத்து உங்களைக் கட்டிப்போட்டு அடக்கலாம் என்று சொல்
லுங்கள்” என்று கேட்டாள். அதற்கு அவர், “என்னுடைய ஏழு ஜடைகளை
யும் பாவு நூலோடு* சேர்த்து நெய்துவிட்டால் போதும்” என்று சொன்னார்.
14 அப்படியே அவள் அவற்றை நெசவு ஆணியடித்து மாட்டி, “சிம்
சோன், உங்களைப் பிடிக்க பெலிஸ்தியர்கள் வந்துவிட்டார்கள்!” என்று கத்
தினாள். ஆனால் அவர் தூக்கத்திலிருந்து எழுந்து அந்த நெசவு ஆணியை
யும் பாவு நூலையும் பிடுங்கி எறிந்தார்.

e நியா 16:7
நியா 16:11
நியா 16:13
15 அப்போது அவள், “நீங்கள் என்னை மனதார* நேசிக்கவே இல்லை.
என்னை நேசிப்பதாக வாயளவில்தான் சொல்கிறீர்கள்.[d] இந்த மூன்று தட
வையும் என்னை ஏமாற்றிவிட்டீர்கள், உங்கள் பலத்தின் ரகசியத்தை என்
னிடம் சொல்லாமலேயே இருக்கிறீர்கள்”[e] என்றாள். **16** தினம் தினம்
அவள் அவரை நச்சரித்துக்கொண்டும் வற்புறுத்திக்கொண்டும் இருந்தாள்.
செத்தால் போதும் என்று அவர் நினைக்கும் அளவுக்கு அவரை நோகடித்
தாள்.[f] **17** கடைசியில் அவர், “என்னுடைய தலைமுடியை நான் இது
வரை வெட்டியதே கிடையாது. பிறந்ததிலிருந்தே கடவுளுக்கு நசரேயனாக

16:7 *வில்லை வளைத்துக் கட்டப்பட்டிருக்கும் நாண்கள் அல்லது மிருகங்களின் தசை நாண்கள். **16:13** *பாவு நூல் என்பது தறியில் நீளவாட்டில் செல்லும் இழை. **16:15** *வே.வா., “நெஞ்சார.”

f நியா 14:17

இருக்கிறேன்.[a] என் முடியை வெட்டிவிட்டால், என்னுடைய பலமெல்லாம் போய்விடும். நான் பலம் இழந்து மற்ற மனுஷர்களைப் போலாகிவிடுவேன்" என்று உள்ளம் திறந்து சொல்லிவிட்டார்.

18 அவர் எல்லாவற்றையும் உள்ளம் திறந்து சொல்லிவிட்டதை தெலீலாள் புரிந்துகொண்டவுடன், பெலிஸ்தியர்களின் தலைவர்களிடம் ஆள் அனுப்பி,[b] "இந்தத் தடவை கண்டிப்பாக வந்துவிடுங்கள். அவன் உள்ளம் திறந்து ரகசியத்தைச் சொல்லிவிட்டான்" என்றாள். அதனால், பெலிஸ்தியர்களின் தலைவர்கள் பணத்தை எடுத்துக்கொண்டு அவளிடம் வந்தார்கள். **19** சிம்சோனை அவள் தன்னுடைய மடியில் தூங்க வைத்தாள். பின்பு, ஓர் ஆளை வரவழைத்து அவருடைய ஏழு ஜடைகளையும் வெட்டினாள். அவருடைய பலம் அவரைவிட்டுப் போனதால் அவரைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அவளால் முடிந்தது. **20** அவள் சத்தமாக, "சிம்சோன், உங்களைப் பிடிக்க பெலிஸ்தியர்கள் வந்துவிட்டார்கள்!" என்று கத்தினாள். அவர் தூக்கத்திலிருந்து எழுந்து, "எப்போதும் போலவே[c] இப்போதும் நான் தப்பித்துப் போய்விடுவேன்" என்று சொல்லிக்கொண்டார். யெகோவா அவரைவிட்டு விலகிவிட்டதை அவர் உணரவில்லை. **21** பெலிஸ்தியர்கள் அவரைப் பிடித்து, அவருடைய கண்களைத் தோண்டி எடுத்து, அவரை காசாவுக்குக் கொண்டுவந்தார்கள். பின்பு, அவருக்கு இரண்டு செம்பு விலங்குகளை மாட்டினார்கள். அதுமட்டுமல்ல, சிறைச்சாலையில் அவரை மாவு அரைக்க வைத்தார்கள். **22** நாட்கள் போகப் போக, வெட்டப்பட்ட அவருடைய தலைமுடி[d] மறுபடியும் வளர ஆரம்பித்தது.

23 பெலிஸ்தியர்களின் தலைவர்கள், "நம்முடைய எதிரி சிம்சோனை நம் தெய்வம் நம்முடைய கையில் கொடுத்துவிட்டது" என்று சொல்லி, தாகோன்[e] என்ற தங்களுடைய தெய்வத்துக்குப் பெரிய அளவில் பலி செலுத்தவும் விழா கொண்டாடவும் ஒன்றுகூடினார்கள். **24** ஜனங்கள் சிம்சோனைப் பார்த்தவுடன், "நம் தேசத்தை நாசம்செய்து,[f] நம் ஆட்கள் நிறைய பேரைக் கொன்றுபோட்டவனை[g] நம்முடைய தெய்வம் நம் கையில் கொடுத்துவிட்டது" என்று சொல்லி தங்கள் தெய்வத்தைப் புகழ்ந்தார்கள்.

25 அவர்கள் குஷியாக இருந்ததால், "சிம்சோனைக் கொண்டுவாருங்கள், அவன் நமக்கு வேடிக்கை காட்டட்டும்" என்று சொன்னார்கள். பின்பு, அவரை வைத்து வேடிக்கை பார்ப்பதற்காகச் சிறைச்சாலையிலிருந்து கூட்டிக்கொண்டு வந்து, தூண்களுக்கு நடுவில் நிற்க வைத்தார்கள். **26** சிம்சோன் தன்னுடைய கையைப் பிடித்திருந்த பையனிடம், "இந்தக் கோயிலின் தூண்களைத் தொடும்படி என்னை நிற்க வை. நான் அவற்றின் மேல் சாய வேண்டும்" என்றார். **27** அந்தச் சமயத்தில், அந்தக் கோயில் முழுக்க ஆண்களும் பெண்களும் நிறைந்திருந்தார்கள். பெலிஸ்தியர்களின் தலைவர்கள் எல்லாரும் அங்கே இருந்தார்கள். ஏறக்குறைய 3,000 ஆண்களும் பெண்களும் சிம்சோனை மேல்தளத்திலிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

28 அப்போது சிம்சோன்[h] யெகோவாவிடம், "உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, தயவுசெய்து என்னை நினைத்துப் பாருங்கள். கடவுளே, தயவுசெய்து இந்த ஒரேவொரு தடவை மட்டும் என்னைப் பலப்படுத்துங்கள்.[i] என்னுடைய இரண்டு கண்களில்[j] ஒரு கண்ணுக்காவது நான் பெலிஸ்தியர்களைப் பழிவாங்க வேண்டும்" என்று கெஞ்சினார்.

அதி. 16
a எண் 6:5; நியா 13:5, 7
b நியா 16:5
c நியா 16:9; நியா 16:12; நியா 16:14
d நியா 13:5
e 1சா 5:4
f நியா 15:4, 5
g நியா 15:7, 8; நியா 15:15, 16
h எபி 11:32
i நியா 14:5, 6; நியா 14:19; நியா 15:14
j நியா 16:21

29 பின்பு, அந்தக் கோயிலின் நடுவே அதைத் தாங்கிக்கொண்டிருந்த
இரண்டு தூண்களில் ஒன்றின் மேல் தன் வலது கையையும் இன்னொன்றின்
மேல் தன் இடது கையையும் வைத்து, **30** “பெலிஸ்தியர்களுடன் சேர்ந்து
என்னுடைய உயிரும் போகட்டும்!” என்று சத்தமாகச் சொல்லி, தன்னுடைய
முழு பலத்தோடு அந்தத் தூண்களைத் தள்ளினார். அப்போது, அங்கிருந்த
தலைவர்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் அந்தக் கோயில் இடிந்து
விழுந்தது.[a] இப்படி, அவர் உயிரோடு இருந்தபோது கொன்றவர்களைவிட[b]
சாகும்போது கொன்றவர்கள்தான் ஏராளம்.

31 பிற்பாடு, அவருடைய சகோதரர்களும் அப்பாவின் குடும்பத்தா
ரும் வந்து அவருடைய உடலை எடுத்துக்கொண்டு போய், அவருடைய
தகப்பன் மனோவாவின்[c] கல்லறையில் அடக்கம் செய்தார்கள். இது சோரா
வுக்கும்[d] எஸ்தாவோலுக்கும் இடையில் இருந்தது. சிம்சோன் 20 வருஷங்
களுக்கு இஸ்ரவேலில் நியாயாதிபதியாக இருந்தார்.[e]

17 எப்பிராயீம் மலைப்பகுதியில்[f] மீகா என்ற ஒருவன் வாழ்ந்துவந்
தான். **2** அவன் தன்னுடைய அம்மாவிடம், “நீங்கள் வைத்திருந்த
1,100 வெள்ளிக் காசுகள் தொலைந்தபோது, அதை எடுத்தவனை என் காது
பட சபித்தீர்களே, இதோ, அந்த வெள்ளிக் காசுகள். நான்தான் அதை எடுத்
தேன்” என்று சொன்னான். அதற்கு அவனுடைய அம்மா, “என் மகனே,
யெகோவா உன்னை ஆசீர்வதிக்கட்டும்!” என்று சொன்னாள். **3** அப்
போது அவன் அந்த 1,100 வெள்ளிக் காசுகளைத் தன்னுடைய அம்மாவி
டம் திருப்பிக் கொடுத்தான். அதற்கு அவனுடைய அம்மா, “இதை நான்
யெகோவாவுக்காக அர்ப்பணிக்கிறேன். இதை வைத்து நீ உனக்காக ஒரு
செதுக்கப்பட்ட சிலையையும் ஒரு உலோகச் சிலையையும் செய்ய வேண்
டும்.[g] இப்போது இந்தக் காசுகளை உன்னிடமே திருப்பிக் கொடுக்கிறேன்”
என்று சொன்னாள்.

4 அவன் தன்னுடைய அம்மாவிடம் வெள்ளிக் காசுகளைத் திருப்
பிக் கொடுத்த பின்பு, அவள் அதிலிருந்து 200 வெள்ளிக் காசுகளை எடுத்து
வெள்ளி ஆசாரியிடம் கொடுத்தாள். ஆசாரி ஒரு செதுக்கப்பட்ட சிலையை
யும் ஒரு உலோகச் சிலையையும் செய்தான். அவற்றை மீகா தன்னுடைய
வீட்டில் வைத்தான். **5** மீகாவுக்குச் சொந்தமாக ஒரு கோயில் இருந்தது.
அவன் ஏபோத்தையும்[h] குலதெய்வச் சிலைகளையும்[i] செய்து தன்னுடைய
மகன்களில் ஒருவனைப் பூசாரியாக வைத்தான்.[j] **6** அந்தக் காலத்தில்,
இஸ்ரவேலர்களுக்கு ராஜா இல்லாததால்[k] எல்லாரும் அவரவர் இஷ்டப்படி
நடந்துவந்தார்கள்.[l]

7 அப்போது யூதாவிலுள்ள பெத்லகேமில்,[m] லேவியனாகிய[n] ஒரு வாலி
பன் யூதா குடும்பத்தோடு கொஞ்சக் காலம் தங்கியிருந்தான். **8** பின்பு,
வேறொரு இடத்தில் வாழ்வதற்காக யூதாவிலுள்ள பெத்லகேமைவிட்டுப்
புறப்பட்டுப் போனான். வழியில் எப்பிராயீம் மலைப்பகுதியைச் சேர்ந்த
மீகாவின்[o] வீட்டுப்பக்கம் வந்தான். **9** மீகா அவனிடம், “நீ எங்கிருந்து
வருகிறாய்?” என்று கேட்டான். அதற்கு அவன், “யூதாவிலுள்ள பெத்லகே
மைச் சேர்ந்த லேவியன் நான். தங்குவதற்கு இடம் தேடிப் போய்க்கொண்டி
ருக்கிறேன்” என்று சொன்னான். **10** மீகா அவனிடம், “நீ என்னோடு
தங்கியிரு. எனக்கு ஆலோசகனாகவும்* பூசாரியாகவும் இரு. வருஷத்துக்கு

17:10 * வே.வா., “தகப்பனாகவும்.”

அதி. 16
a நியா 16:27
b நியா 14:19
நியா 15:7, 8
நியா 15:15, 16
c நியா 13:8
d நியா 13:2
e நியா 2:16
நியா 15:20

அதி. 17
f யோசு 17:14, 15
g யாத் 20:4
லேவி 26:1
உபா 27:15
h யாத் 28:6
நியா 8:27
i ஆதி 31:19
j எண் 3:10
உபா 12:11, 13
2நா 13:8, 9
k 1சா 8:4, 5
l நியா 21:25
m மீ 5:2
n எண் 3:45
யோசு 14:3
யோசு 18:7
o நியா 17:1, 5

10 வெள்ளிக் காசுகளும், உடையும், சாப்பாடும் தருகிறேன்” என்று சொன்
னான். அதனால், அந்த லேவியன் மீகாவின் வீட்டுக்குள் போனான்.
11 அந்த லேவியன் மீகாவோடு தங்கியிருக்க சம்மதித்ததால், அவன் மீகா
வின் மகன்களில் ஒருவனைப் போல ஆனான். **12** மீகா அந்த லேவிய
னைப் பூசாரியாக வைத்துக்கொண்டான்.[a] அவன் மீகாவின் வீட்டிலேயே
வாழ்ந்துவந்தான். **13** அப்போது மீகா, “நான் ஒரு லேவியனைப் பூசாரி
யாக வைத்திருப்பதால் இப்போது யெகோவா எனக்கு நல்லது செய்வார்”
என்று சொல்லிக்கொண்டான்.

18 அந்தக் காலத்தில், இஸ்ரவேலர்களுக்கு ராஜா இல்லை.[b] தாண்
கோத்திரத்தாருக்கு[c] இஸ்ரவேல் கோத்திரங்களின் நடுவில் போது
மான இடம் அதுவரை கிடைக்காததால், குடியிருப்பதற்கு இடம் தேடிக்
கொண்டிருந்தார்கள்.[d]

2 அதனால், தேசத்தை உளவு பார்ப்பதற்காக அவர்கள் சோராவிலிருந்
தும் எஸ்தாவோலிலிருந்தும்[e] திறமையான ஐந்து ஆட்களைத் தேர்ந்தெ
டுத்தார்கள். அவர்களிடம், “தேசத்தைப் பார்த்துவிட்டு வாருங்கள்” என்று
சொல்லி அனுப்பினார்கள். அந்த ஆட்கள் எப்பிராயீம் மலைப்பகுதியில்
இருந்த மீகாவின்[f] வீடு வரைக்கும் போய், அன்றைக்கு ராத்திரி அங்கே
தங்கினார்கள். **3** அவர்கள் மீகாவின் வீட்டுக்குப் பக்கத்தில் போனபோது,
அங்கே தங்கியிருந்த வாலிபனாகிய லேவியனின் குரலை* அடையாளம்
கண்டுகொண்டார்கள். அதனால் அவனிடம் போய், “நீ எப்படி இங்கே வந்
தாய்? இங்கே என்ன செய்கிறாய்? உனக்கு இங்கே என்ன வேலை?” என்
றெல்லாம் கேட்டார்கள். **4** அப்போது அவன், மீகா தனக்குச் செய்த
தையெல்லாம் சொன்னான். அதோடு, “அவர் எனக்குச் சம்பளம் கொடுத்து
பூசாரியாக வைத்திருக்கிறார்”[g] என்று சொன்னான். **5** அதற்கு அவர்கள்,
“நாங்கள் போகிற வேலை நல்லபடியாக முடியுமா என்று தயவுசெய்து கட
வுளிடம் கேட்டுச் சொல்” என்றார்கள். **6** அதற்கு அந்தப் பூசாரி, “நிம்மதி
யாகப் போங்கள். யெகோவா உங்களுக்குத் துணையாக வருவார்” என்று
சொன்னான்.

7 அதனால் அந்த ஐந்து ஆட்களும் அங்கிருந்து கிளம்பி லாயீ
சுக்குப்[h] போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்த ஜனங்கள் சீதோனியர்களைப்
போலவே எந்த ஊர்க்காரர்களின் உதவியையும் எதிர்பார்க்காமல் வாழ்ந்து
வந்ததை அவர்கள் பார்த்தார்கள். அந்த ஜனங்கள், அவர்கள் உண்டு அவர்
கள் வேலை உண்டு என்று அமைதியாக வாழ்ந்துவந்தார்கள்.[i] அவர்களை
யாரும் அடக்கி ஆளவில்லை. அவர்கள் சீதோனியர்களிடமிருந்து ரொம்
பத் தூரத்தில் இருந்தார்கள். வேறு யாரோடும் எந்தத் தொடர்பும் இல்லா
மல் வாழ்ந்துவந்தார்கள்.

8 சோரா, எஸ்தாவோல் நகரங்களுக்கு[j] அந்த ஐந்து ஆட்களும்
திரும்பி வந்தபோது, “போன விஷயம் என்ன ஆனது?” என்று அவர்களு
டைய சகோதரர்கள் கேட்டார்கள். **9** அதற்கு அவர்கள், “அது ரொம்ப
நல்ல தேசம். நாம் போய் அதைக் கைப்பற்றிவிடலாம். ஏன் தயங்குகிறீர்
கள்? வாருங்கள், உடனடியாகப் போய் அந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்
கொள்ளலாம். **10** அங்குள்ள ஜனங்கள், தாங்கள் உண்டு தங்கள் வேலை
உண்டு என்று வாழ்ந்துவருகிறார்கள்.[k] அவர்களுடைய தேசம் ரொம்பப்

18:3 * வே.வா., “உச்சரிப்பை.”

அதி. 17
a எண் 3:10
நியா 17:5

அதி. 18
b நியா 8:23
1சா 8:4, 5
c யோசு 19:40
d யோசு 19:47, 48
நியா 1:34
e யோசு 19:41, 48
f நியா 17:1, 5
g நியா 17:9, 10
h யோசு 19:47, 48
நியா 18:29
i நியா 18:27
j யோசு 15:20, 33
நியா 18:2
k நியா 18:7, 27

பெரிய தேசம். அதைக் கடவுள் உங்கள் கையில் கொடுத்திருக்கிறார். உல
கத்தில் கிடைக்கிற எல்லாமே அந்த இடத்தில் கிடைக்கும்"[a] என்று சொன்
னார்கள்.

11 உடனே, தாண் கோத்திரத்தைச் சேர்ந்த 600 வீரர்கள் ஆயுதம்
எடுத்துக்கொண்டு சோரா, எஸ்தாவோல் நகரங்களிலிருந்து[b] புறப்பட்டுப்
போனார்கள். **12** அவர்கள் போய் யூதாவிலுள்ள கீரியாத்-யெயாரீமுக்
குப்[c] பக்கத்தில் முகாம்போட்டார்கள். அதனால்தான், கீரியாத்-யெயாரீ
முக்கு மேற்கே இருக்கிற அந்த இடம், மக்னி-தாண்*[d] என்று இந்த நாள்
வரை அழைக்கப்படுகிறது. **13** பின்பு, அவர்கள் அங்கிருந்து எப்பிராயீம்
மலைப்பகுதியில் இருந்த மீகாவின்[e] வீடுவரை போனார்கள்.

14 அப்போது, லாயீசை உளவு பார்த்த அந்த ஐந்து ஆட்களும்[f] தங்
களுடைய சகோதரர்களிடம், "உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? இந்த
வீடுகளில் ஏபோத்தும் குலதெய்வச் சிலைகளும் செதுக்கப்பட்ட சிலை
யும் உலோகச் சிலையும் இருக்கின்றன.[g] இப்போது என்ன செய்யலா
மென்று யோசித்துப் பாருங்கள்" என்று சொன்னார்கள். **15** அதனால்,
அவர்கள் மீகாவின் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த வாலிபனாகிய லேவி
யனின்[h] வீட்டுக்குப் போய் அவனிடம் நலம் விசாரித்தார்கள். **16** அந்தச்
சமயத்தில், தாண் கோத்திரத்தைச் சேர்ந்த 600 வீரர்கள்[i] ஆயுதங்களோடு
நுழைவாசலில் நின்றுகொண்டிருந்தார்கள். **17** செதுக்கப்பட்ட சிலையை
யும் ஏபோத்தையும்[j] குலதெய்வச் சிலைகளையும்[k] உலோகச் சிலையை
யும்[l] எடுத்துக்கொள்வதற்காக, லாயீசை உளவு பார்த்த அந்த ஐந்து பேரும்[m]
உள்ளே போனார்கள். அந்தப் பூசாரி[n] ஆயுதங்களோடு வந்த 600 வீரர்களு
டன் நுழைவாசலில் நின்றுகொண்டிருந்தான். **18** அவர்கள் மீகாவின் வீட்
டுக்குள் போய், செதுக்கப்பட்ட சிலையையும் ஏபோத்தையும் குலதெய்வச்
சிலைகளையும் உலோகச் சிலையையும் எடுத்துக்கொண்டார்கள். அப்போது
அந்தப் பூசாரி, "என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டான். **19** அதற்கு அவர்
கள், "சத்தம் போடாதே! பேசாமல் எங்களுடன் வந்து எங்களுக்கு
ஆலோசகனாகவும்* குருவாகவும் இரு. ஒரேவொரு மனுஷனுடைய வீட்
டில் பூசாரியாக இருப்பது[o] நல்லதா, இஸ்ரவேல் குடும்பங்களுக்கே,
சொல்லப்போனால் ஒரு கோத்திரத்துக்கே, பூசாரியாக இருப்பது[p] நல்லதா?
நீயே யோசித்துக்கொள்" என்று சொன்னார்கள். **20** அது அந்தப் பூசாரிக்கு
நல்லதாகப் பட்டதால், ஏபோத்தையும் குலதெய்வச் சிலைகளையும் செதுக்
கப்பட்ட சிலையையும்[q] எடுத்துக்கொண்டு அவர்களோடு போனான்.

21 அவர்கள் தொடர்ந்து பயணம் செய்தார்கள். பிள்ளைகளையும் கால்ந
டைகளையும் விலை உயர்ந்த பொருள்களையும் முன்னால் அனுப்பி வைத்
தார்கள். **22** அவர்கள் மீகாவின் வீட்டிலிருந்து கொஞ்சத் தூரம் போனதும்,
அவனும் அக்கம்பக்கத்து ஆண்களும் ஒன்றுதிரண்டு தாண் கோத்திரத்தா
ரைத் துரத்திக்கொண்டு போய், **23** சத்தமாக அவர்களைக் கூப்பிட்டார்கள்.
தாண் கோத்திரத்தார் திரும்பிப் பார்த்து, "என்ன பிரச்சினை? ஏன் எல்லாரும்
திரண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று மீகாவிடம் கேட்டார்கள். **24** அதற்கு
அவன், "நான் உண்டாக்கிய தெய்வங்களை எடுத்துக்கொண்டீர்கள், என்
னுடைய பூசாரியையும் கூட்டிக்கொண்டு போகிறீர்கள். எனக்கு வேறென்ன
இருக்கிறது? செய்வதெல்லாம் செய்துவிட்டு, 'உனக்கு என்ன பிரச்சினை'

அதி. 18
a யாத் 3:8, உபா 8:7-9
b நியா 18:2
c 1சா 7:1
d நியா 13:24, 25
e நியா 17:1, 5
f நியா 18:2, நியா 18:29
g உபா 27:15, நியா 17:4, 5
h நியா 17:7, 12, நியா 18:30
i நியா 18:11
j யாத் 28:6, நியா 8:27
k ஆதி 31:19
l லேவி 19:4, உபா 27:15, நியா 17:3-5
m நியா 18:2
n நியா 17:12
o நியா 17:12
p நியா 18:30
q நியா 17:4, 5

18:12 *அர்த்தம், "தாணின் முகாம்." **18:19** *வே.வா., "தகப்பனாகவும்."

என்று கேட்கிறீர்களா?” என்றான். 25 அதற்கு தாண் கோத்திரத்தார்,
“சும்மா சத்தம் போடாதே. சத்தம் போட்டால், எங்கள் ஆட்கள் ஆத்திரத்
தில் உன்னையும் உன் குடும்பத்தாரையும் தீர்த்துக்கட்டிவிடுவார்கள்” என்று
சொன்னார்கள். 26 பின்பு, தாண் கோத்திரத்தார் தங்கள் வழியே போனார்
கள். அவர்கள் தன்னைவிட பலசாலிகள் என்று தெரிந்தவுடன் மீகா தன்னு
டைய வீட்டுக்குத் திரும்பிப் போனான்.

27 மீகா செய்து வைத்திருந்த பொருள்களையும் அவனுடைய பூசா
ரியையும் தாண் கோத்திரத்தார் லாயீசுக்குக்[a] கொண்டுபோனார்கள். அங்கே,
தாங்கள் உண்டு தங்கள் வேலை உண்டு என்று அமைதியாக வாழ்ந்துவந்த
ஜனங்களை[b] வாளால் தாக்கி அந்த நகரத்தைச் சுட்டெரித்தார்கள்.
28 அவர்களைக் காப்பாற்ற யாரும் வரவில்லை. ஏனென்றால், அந்த
நகரம் சீதோனிலிருந்து ரொம்பத் தூரத்தில் இருந்தது. அதோடு, அவர்
கள் யாரோடும் எந்தத் தொடர்பும் இல்லாமல் வாழ்ந்துவந்தார்கள். அந்த
நகரம் பெத்-ரேகோபைச்[c] சேர்ந்த சமவெளியில் இருந்தது. தாண் கோத்தி
ரத்தார் அதைத் திரும்பவும் கட்டி அதில் குடியேறினார்கள். 29 அதோடு,
இஸ்ரவேலின் மகனும் தங்களுடைய மூதாதையுமாகிய தாணின்[d] நினை
வாக, அந்த நகரத்துக்கு தாண்[e] என்று பெயர் வைத்தார்கள். முன்பு அது
லாயீஸ் என்று அழைக்கப்பட்டது.[f] 30 அதன்பின் தாண் கோத்திரத்தார்,
செதுக்கப்பட்ட அந்தச் சிலையை[g] அங்கே வைத்தார்கள். அந்தத் தேசத்
தார் சிறைபிடிக்கப்பட்ட நாள்வரை, மோசேயின் மகனாகிய கெர்சோமின்[h]
வம்சத்தில் வந்த யோனத்தானும்[i] அவனுடைய மகன்களும் அவர்களுக்
குப் பூசாரிகளாக இருந்தார்கள். 31 தாண் கோத்திரத்தார், செதுக்கப்பட்ட
அந்தச் சிலையை அங்கேயே வைத்துக்கொண்டார்கள். உண்மைக் கடவு
ளின் கூடாரம் சீலோவில்[j] இருந்த காலம் முழுவதும் அந்தச் சிலை அங்கே
இருந்தது.

19 அந்தக் காலத்தில், இஸ்ரவேலர்களுக்கு ராஜா இல்லை.[k] எப்பி
ராயீம் மலைப்பகுதியில்[l] உள்ள ஓர் ஒதுக்குப்புறத்தில் ஒரு லேவி
யன் வாழ்ந்துவந்தான். யூதாவிலுள்ள பெத்லகேமைச்[m] சேர்ந்த ஓர் இளம்
பெண்ணை அவன் கூட்டிக்கொண்டு வந்து தனக்கு மறுமனைவியாக வைத்
துக்கொண்டான். 2 ஆனால் அவள் அவனுக்குத் துரோகம் செய்துவிட்டு,
அவனிடமிருந்து பிரிந்து, யூதாவிலுள்ள பெத்லகேமில் இருந்த தன்னுடைய
அப்பாவின் வீட்டுக்குப் போய்விட்டாள். நான்கு மாதங்களாக அங்கேயே
தங்கியிருந்தாள். 3 அவளை எப்படியாவது சம்மதிக்க வைத்து வீட்டுக்குக்
கூட்டிக்கொண்டு வருவதற்காக அந்த லேவியன் இரண்டு கழுதைகளோடும்
தன்னுடைய வேலைக்காரனோடும் கிளம்பிப் போனான். அங்கே போய்ச்
சேர்ந்ததும், அவள் அவனை வீட்டுக்குள் கூட்டிக்கொண்டு போனாள். அவ
னைப் பார்த்தவுடன் அவனுடைய மாமனாருக்கு ஒரே சந்தோஷம். 4 அத
னால், தன்னோடு மூன்று நாட்கள் தங்கச் சொல்லி அவனை அவர் வற்புறுத்
தினார். அந்த மூன்று நாட்களும் அவர்கள் சாப்பிட்டார்கள், குடித்தார்கள்.
அவன் அங்கேயே தங்கினான்.

5 நான்காம் நாள் விடியற்காலையிலேயே அவர்கள் எழுந்து புறப்படத்
தயாரானார்கள். அப்போது மாமனார் தன்னுடைய மருமகனிடம், “ஏதாவது
சாப்பிட்டுவிட்டுத் தெம்பாகப் புறப்படுங்கள்” என்று சொன்னார். 6 அத
னால் அவர்கள் உட்கார்ந்து சாப்பிட்டார்கள், குடித்தார்கள். பின்பு, மாமனார்

அதி. 18
a யோசு 19:47, 48; நியா 18:29
b நியா 18:7, 10
c எண் 13:17, 21
d ஆதி 30:6; ஆதி 32:28
e யோசு 19:47, 48; நியா 20:1; 1ரா 4:25; 1ரா 12:28, 29
f நியா 18:7
g நியா 17:1, 4; நியா 18:18
h யாத் 2:21, 22
i நியா 17:12
j யாத் 40:2; யோசு 18:1; 1சா 1:3

அதி. 19
k 1சா 8:4, 5
l யோசு 17:14, 15
m ஆதி 35:19; மீ 5:2

அதி. 19
a யோசு 15: 8, 63 யோசு 18:28 நியா 1:8
b யோசு 18:28
c யோசு 18: 21, 25
d ஆதி 19:2
e நியா 19:1
f யோசு 18: 21, 28
g நியா 19:1, 2

தன்னுடைய மருமகனிடம், “தயவுசெய்து இன்றைக்கு ராத்திரியும் சந்தோ
ஷமாக இங்கேயே தங்குங்கள்” என்று சொன்னார். **7** காலையில் அவன்
புறப்படத் தயாரானபோது, அவனுடைய மாமனார் திரும்பத் திரும்பக் கெஞ்
சினார். அதனால், அன்றைக்கு ராத்திரியும் அங்கேயே தங்கினான்.

8 ஐந்தாம் நாள் விடியற்காலையிலேயே எழுந்து அவன் புறப்படத்
தயாரானபோது, அவனுடைய மாமனார் அவனிடம், “தயவுசெய்து ஏதாவது
சாப்பிட்டுவிட்டுத் தெம்பாகப் போங்கள்” என்று சொன்னார். அவர்களும்
சாயங்காலம்வரை அங்கேயே இருந்தார்கள். இரண்டு பேரும் சாப்பிட்டுக்
கொண்டு பொழுதைக் கழித்தார்கள். **9** பின்பு, அவன் எழுந்து தன்னு
டைய மறுமனைவியையும் வேலைக்காரனையும் கூட்டிக்கொண்டு புறப்ப
டத் தயாரானபோது, அவனுடைய மாமனார் அவனிடம், “பாருங்கள்,
பொழுது சாயப்போகிறது. தயவுசெய்து இன்றைக்கு ராத்திரியும் இங்கேயே
தங்குங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் இருட்டிவிடும். தயவுசெய்து இந்த
ராத்திரியும் சந்தோஷமாக இங்கேயே தங்குங்கள். நாளைக்கு விடிந்தவுடன்
எழுந்து உங்கள் வீட்டுக்குப் புறப்பட்டுப் போகலாம்” என்று சொன்னார்.
10 ஆனால், அந்த ராத்திரியும் அங்கேயே தங்க அவன் விரும்பவில்லை.
அதனால் எழுந்து புறப்பட்டான். சேணம்* வைத்த இரண்டு கழுதைகளோ
டும் தன் மறுமனைவியோடும் வேலைக்காரனோடும் எபூசுவரை, அதாவது
எருசலேம்வரை,[a] போனான்.

11 அவர்கள் எபூசுவை நெருங்கியபோது, பொழுது சாய ஆரம்பித்து
விட்டது. அதனால் அந்த வேலைக்காரன் தன்னுடைய எஜமானிடம், “எபூ
சியர்களுடைய இந்த நகரத்திலேயே ராத்திரி தங்கிவிடலாமா?” என்று கேட்
டான். **12** அதற்கு அவனுடைய எஜமான், “இவர்கள் இஸ்ரவேலர்கள்
கிடையாது, அன்னியர்கள். அதனால், இவர்களுடைய நகரத்தில் நாம் தங்
கக் கூடாது. கிபியாவரை[b] போகலாம்” என்று சொன்னான். **13** அதன்பின்,
“வா, நாம் கிபியாவுக்கோ ராமாவுக்கோ[c] போய்ச் சேரலாம்; அந்த இடங்கள்
ஒன்றில் ராத்திரி தங்கலாம்” என்று சொன்னான். **14** அதனால், அவர்கள்
தொடர்ந்து பயணம் செய்தார்கள். பென்யமீனியர்களுக்குச் சொந்தமான
கிபியாவை அவர்கள் நெருங்கியபோது பொழுது சாய்ந்துவிட்டது.

15 அவர்கள் தங்களுடைய பயணத்தை நிறுத்திவிட்டு, ராத்திரி தங்குவ
தற்காக கிபியாவுக்குள் போனார்கள். அங்கே போனதும் அந்த நகரத்
தின் பொது சதுக்கத்தில் உட்கார்ந்தார்கள். ஆனால், ராத்திரி தங்குவதற்காக
யாருமே அவர்களை வீட்டுக்குக் கூப்பிடவில்லை.[d] **16** பெரியவர் ஒரு
வர் சாயங்காலம்வரை வயலில் வேலை செய்துவிட்டு அந்தப் பக்கம் வந்
தார். அவர் எப்பிராயீம் மலைப்பகுதியைச் சேர்ந்தவர்.[e] கொஞ்சக் காலம்
கிபியாவில் தங்கியிருந்தார். ஆனால், அந்த நகரத்தில் இருந்தவர்கள் பென்
யமீன் கோத்திரத்தார்.[f] **17** அவர் பொது சதுக்கத்தில் உட்கார்ந்திருந்த
லேவியனைப் பார்த்து, “எங்கிருந்து வருகிறாய், எங்கே போக வேண்டும்?”
என்று கேட்டார். **18** அதற்கு அவன், “யூதாவிலுள்ள பெத்லகேமிலிருந்து
நாங்கள் வருகிறோம். எப்பிராயீம் மலைப்பகுதியில் இருக்கிற ஒதுக்குப்புற
மான ஊருக்குப் போகிறோம். அதுதான் என்னுடைய ஊர். நான் யூதாவி
லுள்ள பெத்லகேமுக்குப் போயிருந்தேன்,[g] இப்போது யெகோவாவின்

19:10 *சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை.

வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறேன்.* ஆனால், இங்கே யாரும்
என்னை வீட்டுக்குக் கூப்பிடவில்லை. **19** கழுதைகளுக்கு வேண்டிய
வைக்கோலையும் தீவனத்தையும்[a] நாங்கள் வைத்திருக்கிறோம். எனக்கும்
இவளுக்கும் என் வேலைக்காரனுக்கும் தேவையான ரொட்டியும்[b] திராட்ச
மதுவும்கூட வைத்திருக்கிறோம். எல்லாமே எங்களிடம் இருக்கிறது" என்று
சொன்னான். **20** அதற்கு அந்தப் பெரியவர், "என்னுடைய வீட்டில் வந்து
தங்குங்கள்!* உங்களுக்கு என்ன தேவைப்பட்டாலும் நான் கொடுக்கிறேன்.
இந்தப் பொது சதுக்கத்தில் மட்டும் ராத்திரி தங்காதீர்கள்" என்று சொல்லி,
21 அவனைத் தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார். பின்பு,
அவனுடைய கழுதைகளுக்குத் தீவனம் கொடுத்தார். அவர்களும் தங்களு
டைய பாதங்களைக் கழுவிவிட்டு சாப்பிட்டார்கள், குடித்தார்கள்.

22 அவர்கள் சந்தோஷமாகப் பேசிக்கொண்டு இருந்தபோது, அந்த
நகரத்திலிருந்த போக்கிரிகள் சிலர் அவருடைய வீட்டைச் சூழ்ந்து
கொண்டு கதவைப் பலமாகத் தட்டிக்கொண்டே இருந்தார்கள். அந்த வீட்
டுக்குச் சொந்தக்காரரான பெரியவரிடம், "உன்னுடைய வீட்டுக்கு வந்திருக்
கிற ஆளை வெளியே கொண்டுவா, நாங்கள் அவனோடு உறவுகொள்ள
வேண்டும்"[c] என்று கத்திக்கொண்டே இருந்தார்கள். **23** அந்த வீட்டின்
சொந்தக்காரர் வெளியே போய், "என் சகோதரர்களே, வேண்டாம்! அட்டூ
ழியம் செய்யாதீர்கள்! அவர் என் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருக்கிறார்.
இந்தக் கேவலமான காரியத்தைத் தயவுசெய்து செய்யாதீர்கள். **24** இதோ,
கன்னிப்பெண்ணான என் மகளும் என் வீட்டுக்கு வந்திருக்கிறவரின் மறு
மனைவியும் இருக்கிறார்கள். அவர்களை வெளியே கொண்டுவருகிறேன்,
வேண்டுமானால் அவர்களை உங்கள் இஷ்டம் போல நடத்துங்கள்.[d]
ஆனால், அந்த மனுஷனிடம் மட்டும் கேவலமாக நடந்துகொள்ளாதீர்கள்"
என்று சொன்னார்.

25 அந்த ஆண்கள் அவருடைய பேச்சைக் காதில் வாங்கிக்கொள்
ளவில்லை. அதனால், அந்த லேவியன் தன்னுடைய மறுமனைவியைப்[e]
பிடித்து வெளியே கொண்டுவந்து விட்டான். அவர்கள் ராத்திரியிலிருந்து
காலைவரை அவளைப் பலாத்காரம் செய்து, கொடுமைப்படுத்தினார்கள்.
பொழுது விடிந்ததும் அவளை அனுப்பிவிட்டார்கள். **26** விடியற்காலையி
லேயே அந்தப் பெண் தன்னுடைய புருஷன் தங்கியிருந்த வீட்டின்
வாசற்படிவரை வந்து கீழே விழுந்துகிடந்தாள். வெளிச்சம் வரும்வரை அப்
படியே கிடந்தாள். **27** அவளுடைய புருஷன் காலையில் எழுந்து, அங்கி
ருந்து கிளம்புவதற்காகக் கதவுகளைத் திறந்தான். அப்போது, அவனுடைய
மறுமனைவி கைகளைக் கதவுநிலையில் போட்டபடி வாசற்படியில் விழுந்து
கிடந்தாள்! **28** உடனே அவன், "எழுந்திரு, போகலாம்" என்றான். ஆனால்
பதிலே வரவில்லை. அதனால், அவன் அவளைக் கழுதையின் மேல் தூக்
கிப் போட்டுக்கொண்டு தன்னுடைய வீட்டுக்குப் புறப்பட்டான்.

29 வீட்டுக்கு வந்ததும் ஒரு வெட்டுக்கத்தியை எடுத்து தன்னுடைய மறு
மனைவியை 12 துண்டுகளாக வெட்டி இஸ்ரவேலிலுள்ள ஒவ்வொரு கோத்
திரத்துக்கும் ஒரு துண்டை அனுப்பி வைத்தான். **30** அதைப் பார்த்த எல்
லாரும், "இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வந்த நாளிலிருந்து இப்படி ஒரு

19:18 *அல்லது, "யெகோவாவின் வீட்டில் சேவை செய்துகொண்டிருக்கிறேன்."
19:20 *நே.மொ., "உங்களுக்குச் சமாதானம்!"

அதி. 19
a ஆதி 24:32
b ஆதி 18:5, ஆதி 19:3
c ஆதி 19:4, 5, லேவி 20:13, ரோ 1:27, 1கொ 6:9, 10, யூ 7
d ஆதி 19:6-8
e நியா 19:2

காரியம் நடந்ததே இல்லை, இப்படி ஒன்றை யாரும் பார்த்ததே இல்லை.
அதனால், இதைப் பற்றி நன்றாக யோசித்துவிட்டு, கூடிப் பேசி,[a] என்ன
செய்ய வேண்டுமென்று எங்களுக்குச் சொல்லுங்கள்” என்றார்கள்.

20 அதனால், தாண்முதல்[b] பெயெர்-செபாவரை இருந்த இஸ்ரவேலர்
களும் கீலேயாத் பிரதேசத்தில்[c] இருந்த இஸ்ரவேலர்களும், மிஸ்பா
வில் யெகோவாவுக்கு முன்னால் ஒருமனதாகக் கூடினார்கள்.[d] **2** ஜனங்க
ளின் தலைவர்களும் இஸ்ரவேலின் எல்லா கோத்திரங்களும் கடவுளுடைய
ஜனங்களின் சபையிலே அவரவர் இடத்தில் நின்றார்கள். அங்கே நான்கு
லட்சம் காலாட்படையினர் வாளோடு நின்றார்கள்.[e]

3 இஸ்ரவேல் ஆண்கள் மிஸ்பாவரை வந்திருக்கிற செய்தியை பென்ய
மீனியர்கள் கேள்விப்பட்டார்கள்.

இஸ்ரவேல் ஆண்கள் அந்த லேவியனிடம், “சொல்லுங்கள், இந்தப்
பயங்கரமான சம்பவம் எப்படி நடந்தது?”[f] என்று கேட்டார்கள். **4** கொல்
லப்பட்ட பெண்ணின் கணவனாகிய அந்த லேவியன்[g] அவர்களிடம்,
“ராத்திரி தங்குவதற்காக நான் என்னுடைய மறுமனைவியோடு பென்யமீனி
யர்களின் ஊரான கிபியாவுக்குப்[h] போயிருந்தேன். **5** கிபியா ஊர்க்காரர்
கள்* ராத்திரியில் வெறியோடு வந்து, நான் தங்கியிருந்த வீட்டைச் சூழ்ந்து
கொண்டார்கள். அவர்கள் என்னைக் கொல்லப் பார்த்தார்கள். கடைசியில்,
என் மறுமனைவியைப் பலாத்காரம் செய்தார்கள், அவள் செத்துப்போ
னாள்.[i] **6** நான் அவளுடைய உடலை எடுத்துக் கொண்டுபோய் அதைத்
துண்டு துண்டாக வெட்டி இஸ்ரவேலின் எல்லா கோத்திரங்களுக்கும்
அனுப்பி வைத்தேன்.[j] ஏனென்றால், அவர்கள் இஸ்ரவேலில் கேவலமான,
கீழ்த்தரமான காரியத்தைச் செய்திருக்கிறார்கள். **7** இப்போது, இஸ்ரவேல்
ஜனங்களாகிய நீங்கள் எல்லாரும் கலந்துபேசி ஒரு முடிவைச் சொல்லுங்
கள்”[k] என்றான்.

8 அப்போது ஜனங்கள் எல்லாரும் ஒருமனதாக, “நாம் யாருமே நம்
முடைய கூடாரத்துக்கோ வீட்டுக்கோ திரும்பிப் போகக் கூடாது. **9** குலுக்
கல் முறையில் வீரர்களைத் தேர்ந்தெடுத்து,[l] பென்யமீன் கோத்திரத்தைச்
சேர்ந்த கிபியா ஜனங்களுக்கு விரோதமாகப் போக வேண்டும். **10** இஸ்ர
வேலில் கேவலமான காரியத்தைச் செய்திருக்கிற அந்த ஜனங்களைப் பழி
வாங்கப் போகிற வீரர்களுக்காக உணவுப் பொருள்களை எடுத்துவர, இஸ்
ரவேலிலுள்ள எல்லா கோத்திரங்களிலிருந்தும் 100 பேரில் 10 பேரையும்,
1,000 பேரில் 100 பேரையும், 10,000 பேரில் 1,000 பேரையும் தேர்ந்தெடுக்க
வேண்டும்” என்று சொன்னார்கள். **11** பின்பு, இஸ்ரவேல் வீரர்கள் எல்லா
ரும் அந்த நகரத்தைத் தாக்குவதற்குத் திரண்டு போனார்கள்.

12 அதன்பின், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் பென்யமீன்
கோத்திரத்தைச் சேர்ந்த எல்லாரிடமும் ஆள் அனுப்பி, “உங்கள் நடுவில்
இப்பேர்ப்பட்ட அக்கிரமம் எப்படி நடக்கலாம்? **13** கிபியாவில் இருக்
கிற போக்கிரிகளை[m] இப்போது எங்களிடம் ஒப்படைத்துவிடுங்கள். நாங்
கள் அவர்களைக் கொன்று, இஸ்ரவேலிலிருந்து தீமையை ஒழித்துக்கட்ட
வேண்டும்”[n] என்று சொன்னார்கள். ஆனால், அந்த பென்யமீனியர்கள் தங்
களுடைய சகோதரர்களாகிய இஸ்ரவேலர்கள் சொன்னதைக் காதில் போட்
டுக்கொள்ளவே இல்லை.

20:5 * அல்லது, “கிபியாவின் நிலச் சொந்தக்காரர்கள்.”

அதி. 19
a நியா 20:7

அதி. 20
b யோசு 19:47, 48; நியா 18:29
c யோசு 22:9
d 1சா 7:5; 1சா 10:17; 2ரா 25:23
e நியா 20:17; 2சா 24:9
f நியா 19:22
g நியா 19:1, 2
h நியா 19:12, 14
i நியா 19:25, 26
j நியா 19:29
k நியா 19:30
l நியா 20:18; நீதி 16:33
m நியா 19:22, 25
n உபா 13:5; உபா 17:7; உபா 22:22; 1கொ 5:6, 13

14 பின்பு அந்த பென்யமீனியர்கள் தங்களுடைய நகரங்களிலிருந்து
திரண்டு வந்து, இஸ்ரவேல் வீரர்களோடு போர் செய்ய கிபியாவுக்குப்
போனார்கள். **15** அன்றைக்கு பென்யமீனியர்களின் நகரங்களிலிருந்து
வாளோடு ஒன்றுதிரண்டு வந்த வீரர்கள் மொத்தம் 26,000 பேர். இவர்க
ளைத் தவிர, கிபியாவிலிருந்து வந்த திறமைசாலிகளான வீரர்கள் 700 பேர்.
16 இந்தப் படையில், இடது கை பழக்கமுள்ள திறமைசாலியான வீரர்கள்
700 பேர் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும், குறி* தப்பாமல் கவண்
கல் எறிவதில் கெட்டிக்காரர்கள்.

17 பென்யமீன் கோத்திரத்தாரைத் தவிர, வாளோடு போன இஸ்ரவேல்
வீரர்கள் மொத்தம் நான்கு லட்சம் பேர்.[a] அவர்கள் ஒவ்வொருவரும் போர்
செய்வதில் அனுபவசாலிகள். **18** கடவுளிடம் விசாரிப்பதற்காக[b] இஸ்ர
வேலர்கள் பெத்தேலுக்குப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் யெகோவா
விடம், "பென்யமீனியர்களோடு போர் செய்ய யார் முதலில் போக வேண்
டும்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "யூதா கோத்திரத்தார்தான்
முதலில் போக வேண்டும்" என்று சொன்னார்.

19 அதன்பின், இஸ்ரவேலர்கள் காலையில் எழுந்து கிபியாவுக்கு எதி
ராக முகாம்போட்டார்கள்.

20 இஸ்ரவேல் வீரர்கள் பென்யமீனியர்களோடு போர் செய்வதற்காகப்
புறப்பட்டுப் போய், கிபியாவுக்கு வெளியே அணிவகுத்து நின்றார்கள்.
21 அதனால், பென்யமீனியர்கள் கிபியாவிலிருந்து வெளியே வந்து இஸ்ர
வேல் வீரர்களில் 22,000 பேரை அன்றைக்கு வெட்டிச் சாய்த்தார்கள்.
22 ஆனாலும், இஸ்ரவேல் வீரர்கள் முதல் நாளில் நின்ற இடத்திலேயே
மறுபடியும் தைரியமாகப் போய் அணிவகுத்து நின்றார்கள். **23** இஸ்ரவேல்
ஆண்கள் போய், சாயங்காலம்வரை யெகோவாவுக்கு முன்னால் அழுது
கொண்டே, "எங்களுடைய சகோதரர்களாகிய பென்யமீனியர்களுக்கு எதி
ராக நாங்கள் மறுபடியும் போருக்குப் போகலாமா?" என்று யெகோவாவிடம்
கேட்டார்கள்.[c] அதற்கு யெகோவா, "போங்கள்" என்று சொன்னார்.

24 அதனால், இஸ்ரவேல் வீரர்கள் இரண்டாம் நாள் பென்யமீனியர்க
ளைத் தாக்குவதற்கு நெருங்கிப்போனார்கள். **25** அன்றைக்கு பென்யமீனி
யர்கள் கிபியாவிலிருந்து வெளியே வந்து இஸ்ரவேல் வீரர்களில் இன்னும்
18,000 பேரை வெட்டிச் சாய்த்தார்கள்.[d] கொல்லப்பட்ட எல்லாரும் வாளேந்
திய வீரர்கள். **26** அப்போது, இஸ்ரவேல் ஆண்கள் எல்லாரும் பெத்தே
லுக்குப் போய் யெகோவாவின் முன்னால் உட்கார்ந்து அழுதார்கள்.[e] அன்
றைக்குச் சாயங்காலம்வரை விரதமிருந்து,[f] யெகோவாவுக்குத் தகன
பலிகளையும்[g] சமாதான பலிகளையும்[h] செலுத்தினார்கள். **27** அதன்பின்,
இஸ்ரவேல் ஆண்கள் யெகோவாவிடம் விசாரித்தார்கள்.[i] ஏனென்றால்,
அந்தக் காலத்தில் உண்மைக் கடவுளின் ஒப்பந்தப் பெட்டி அங்கே இருந்
தது. **28** ஆரோனின் பேரனும் எலெயாசாரின் மகனுமாகிய பினெகாஸ்[j]
அதன் முன்னால் சேவை செய்துவந்தார். அப்போது இஸ்ரவேல் ஆண்கள்
அவரிடம், "எங்களுடைய சகோதரர்களாகிய பென்யமீனியர்களோடு மறுப
டியும் போருக்குப் போகலாமா அல்லது போரை விட்டுவிடலாமா?"[k] என்று
கேட்டார்கள். அதற்கு யெகோவா, "போங்கள், நாளைக்கு அவர்களை உங்
கள் கையில் கொடுப்பேன்" என்று சொன்னார். **29** பின்பு, பதுங்கியிருந்து

20:16 * நே.மொ., "ஒரு மயிரிழைகூட."

அதி. 20
a நியா 20:2
b யாத் 28:30; எண் 27:21; நியா 20:27
c நியா 20:28
d நியா 20:21
e நியா 20:23
f 2நா 20:3; எஸ்றா 8:21
g லேவி 1:3
h லேவி 3:1
i எண் 27:21; நியா 20:18
j யாத் 6:25; எண் 25:7
k நியா 20:23

தாக்குவதற்காக[a] இஸ்ரவேலர்கள் கிபியாவைச் சுற்றிலும் வீரர்களை நிறுத்
தினார்கள்.

30 இஸ்ரவேலர்கள் மூன்றாம் நாளும் பென்யமீனியர்களோடு போர்
செய்யப் போனார்கள். மற்ற சமயங்களில் செய்தது போலவே இந்தத்
தடவையும் கிபியாவுக்கு எதிராக அணிவகுத்து நின்றார்கள்.[b] **31** எதிர்த்
துப் போர் செய்வதற்காக பென்யமீனியர்கள் தங்களுடைய நகரத்தைவிட்
டுத் தூரமாக வர வேண்டியதாகிவிட்டது.[c] பென்யமீனியர்கள் மற்ற சமயங்
களில் செய்தது போலவே, பெத்தேலுக்குப் போகிற நெடுஞ்சாலையிலும்
கிபியாவிலிருந்து வருகிற நெடுஞ்சாலையிலும் இஸ்ரவேல் வீரர்களில் கிட்
டத்தட்ட 30 பேரை வெட்டவெளியில் வெட்டிச் சாய்த்தார்கள்.[d] **32** அத
னால் அந்த பென்யமீனியர்கள், "முன்பு போலவே இப்போதும் இஸ்ரவேலர்
கள் நம்மிடம் தோற்றுப்போகிறார்கள்"[e] என்று சொல்லிக்கொண்டார்கள்.
ஆனால் இஸ்ரவேலர்கள், "நாம் பின்வாங்குவதுபோல் நடித்து அவர்
களை நகரத்திலிருந்து நெடுஞ்சாலைகளுக்கு வர வைக்கலாம்" என்று
பேசி வைத்திருந்தார்கள். **33** பின்பு, இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும் தங்
களுடைய இடங்களிலிருந்து எழுந்து பாகால்-தாமாரில் அணிவகுத்து நின்
றார்கள். இதற்கிடையில், கிபியாவுக்கு வெளியே பதுங்கியிருந்த மற்ற
இஸ்ரவேல் வீரர்கள் பாய்ந்து வந்தார்கள். **34** இஸ்ரவேலிலிருந்து திறமை
சாலியான வீரர்கள் 10,000 பேர் கிபியாவுக்கு எதிரே வந்தார்கள். போர் தீவி
ரமடைந்தது. ஆனால், தங்களுக்கு அழிவு நெருங்கிவிட்ட விஷயம் பென்
யமீனியர்களுக்குத் தெரியவில்லை.

35 இஸ்ரவேலர்களிடம் பென்யமீனியர்கள் தோற்றுப்போகும்படி
யெகோவா செய்தார்.[f] பென்யமீனியர்களில் 25,100 வீரர்களை இஸ்ர
வேலர்கள் அன்றைக்கு வெட்டிப்போட்டார்கள். கொல்லப்பட்ட எல்லாரும்
வாளேந்திய வீரர்கள்.[g]

36 பதுங்கியிருந்த வீரர்கள் கிபியாவைக் கண்டிப்பாகத் தாக்குவார்கள்[h]
என்று தெரிந்துதான் இஸ்ரவேலர்கள் பின்வாங்குவதுபோல் நடித்தார்கள்.[i]
ஆனால் பென்யமீனியர்கள் அதைப் பார்த்தபோது, இஸ்ரவேலர்கள் தோற்
றுவிடுவார்கள் என்று நினைத்துக்கொண்டார்கள். **37** அப்போது, பதுங்கி
யிருந்த வீரர்கள் உடனடியாக கிபியாவை நோக்கிப் பாய்ந்தார்கள். அவர்
கள் நகரமெங்கும் போய் எல்லாரையும் வாளால் வெட்டிக் கொன்றார்கள்.

38 பதுங்கியிருக்கிற வீரர்கள் அடையாளத்துக்காக நகரத்திலிருந்து
புகை எழும்பும்படி செய்ய வேண்டும் என்று இஸ்ரவேலர்கள் முன்னதா
கவே பேசிவைத்திருந்தார்கள்.

39 இஸ்ரவேலர்கள் பின்வாங்கி ஓடியபோது பென்யமீன் வீரர்கள் ஒரு
வரை ஒருவர் பார்த்து, "முன்பு அவர்கள் நம்மிடம் தோற்றுப்போனது
போலவே[j] இப்போதும் நம்மிடம் கண்டிப்பாகப் தோற்றுப்போவார்கள்"
என்று சொல்லி, அவர்களில் கிட்டத்தட்ட 30 பேரை வெட்டிச் சாய்க்க
ஆரம்பித்தார்கள்.[k] **40** ஆனால் இஸ்ரவேலர்கள் பேசி வைத்தபடியே, நக
ரத்திலிருந்து புகைமண்டலத்தை மேலே எழும்ப வைத்தார்கள். பென்யமீன்
வீரர்கள் திரும்பிப் பார்த்தபோது, வானத்தையே எட்டும் அளவுக்கு நகரத்தி
லிருந்து புகைமண்டலம் எழும்பிக்கொண்டிருந்தது. **41** அப்போது, ஓடிக்
கொண்டிருந்த இஸ்ரவேல் வீரர்கள் அப்படியே திரும்பி, பென்யமீனியர்க
ளைத் தாக்க ஆரம்பித்தார்கள். பென்யமீன் வீரர்கள், தாங்கள்

அதி. 20

a யோசு 8:3, 4
b நியா 20:20, 22
c நியா 20:36
d நியா 20:39
e நியா 20:21, 25
f நியா 20:28, 48
g நியா 20:14, 15
நியா 20:46
h நியா 20:29
i நியா 20:31
j நியா 20:21, 25
k நியா 20:31

வசமாக மாட்டிக்கொண்டதைப் பார்த்துக் கதிகலங்கிப்போய், **42** இஸ்ர
வேல் வீரர்களைவிட்டு வனாந்தரத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள்.
ஆனால், இஸ்ரவேல் வீரர்கள் அவர்களைத் துரத்திக்கொண்டு போனார்கள்.
நகரங்களிலிருந்து வந்த வீரர்களும் இவர்களோடு சேர்ந்துகொண்டு அவர்
களை வெட்டிக் கொன்றார்கள். **43** இவர்கள் பென்யமீனியர்களை
எல்லா பக்கத்திலும் சுற்றிவளைத்தார்கள். விடாமல் துரத்திக்கொண்டு
போய், கிபியாவுக்கு எதிரில் கிழக்குப் பக்கத்திலே அவர்களை மிதித்துப்
போட்டார்கள். **44** பென்யமீனைச் சேர்ந்த 18,000 மாவீரர்கள் கொல்லப்
பட்டார்கள்.[a]

45 மீதமுள்ள பென்யமீன் வீரர்கள் திரும்பி, வனாந்தரத்திலுள்ள
ரிம்மோன் மலைப்பாறைக்கு[b] ஓடினார்கள். அவர்களில் 5,000 பேரை இஸ்ர
வேலர்கள் நெடுஞ்சாலைகளில் கொன்றுபோட்டார்கள். அதோடு, கீதோம்
வரை துரத்திக்கொண்டே போய் இன்னும் 2,000 பேரை வெட்டி வீழ்த்தி
னார்கள். **46** அன்றைக்குக் கொல்லப்பட்ட பென்யமீனியர்கள் மொத்தம்
25,000 பேர். இவர்கள் எல்லாரும் வாளேந்திய மாவீரர்கள்.[c] **47** ஆனால்,
600 பேர் வனாந்தரத்திலுள்ள ரிம்மோன் மலைப்பாறைக்குத் தப்பியோடி
னார்கள். அங்கே நான்கு மாதங்கள் தங்கினார்கள்.

48 இஸ்ரவேல் வீரர்கள் திரும்பி வந்து, பென்யமீனியர்களின் நகரங்களில்
இருந்த எல்லா மனிதர்களையும் மிருகங்களையும் வெட்டிப்போட்டார்கள்.
வழியிலிருந்த நகரங்களையெல்லாம் தீ வைத்துக் கொளுத்தினார்கள்.

21 இஸ்ரவேல் ஆண்கள் மிஸ்பாவில்[d] கூடியிருந்தபோது, அவர்கள்
பென்யமீனியர்களுக்குப் பெண் கொடுக்கப் போவதில்லை என்று
உறுதிமொழி எடுத்திருந்தார்கள்.[e] **2** அதனால் இஸ்ரவேலர்கள் பெத்தே
லுக்கு[f] வந்து உண்மைக் கடவுளின் முன்னால் உட்கார்ந்து சாயங்காலம்
வரை கதறி அழுதார்கள். **3** “இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவே,
எங்களுக்கு ஏன் இப்படி நடந்தது? இஸ்ரவேலிலிருந்து ஒரு முழு கோத்தி
ரமே ஏன் அழிய வேண்டும்?” என்று கேட்டார்கள். **4** அவர்கள் அடுத்த
நாள் விடியற்காலையில் எழுந்து, அங்கே ஒரு பலிபீடம் கட்டி, அதில் தகன
பலிகளையும் சமாதான பலிகளையும்[g] செலுத்தினார்கள்.

5 பின்பு இஸ்ரவேலர்கள், “எந்தக் கோத்திரத்தார் யெகோவாவின் முன்
னால் வரவில்லை?” என்று கேட்டார்கள். ஏனென்றால், மிஸ்பாவில் யெகோ
வாவின் முன்னால் வராதவர்கள் கண்டிப்பாகக் கொல்லப்பட வேண்டு
மென்று அவர்கள் உறுதிமொழி எடுத்திருந்தார்கள். **6** இஸ்ரவேலர்கள் தங்
களுடைய சகோதரர்களாகிய பென்யமீனியர்களை நினைத்து வேதனைப்
பட்டார்கள். “இன்று ஒரு இஸ்ரவேல் கோத்திரத்துக்கு முடிவு வந்துவிட்டதே.
7 அவர்களில் மீதியிருக்கிற ஆண்களுக்கு மனைவிகள் கிடைக்க நாம்
என்ன செய்வது? நம்முடைய மகள்களை அவர்களுக்குக் கொடுக்க மாட்
டோமென்று[h] யெகோவாவின் பெயரில் உறுதிமொழி[i] எடுத்திருக்கிறோமே”
என்று சொன்னார்கள்.

8 பின்பு அவர்கள், “இஸ்ரவேலில் எந்தக் கோத்திரத்தார் மிஸ்பாவில்
யெகோவாவின் முன்னால் வரவில்லை?”[j] என்று கேட்டார்கள். யாபேஸ்–
கீலேயாத்தைச் சேர்ந்த ஒருவர்கூட சபையார் கூடிவந்திருந்த இடத்துக்கு வர
வில்லை. **9** ஜனங்களைக் கணக்கெடுத்தபோது, யாபேஸ்–கீலேயாத்தைச்
சேர்ந்த ஒருவர்கூட அங்கு இல்லை என்பது தெரியவந்தது. **10** அத

அதி. 20
a நியா 20:15
b நியா 21:13
c நியா 20: 15, 35

அதி. 21
d நியா 20:1
e நியா 21:18
f நியா 20: 18, 26
g லேவி 3:1
h நியா 21:1, 18
i லேவி 5:4 லேவி 19:12 மத் 5:33
j நியா 20:1

னால், ஜனங்களின் பிரதிநிதிகள் மாவீரர்களான 12,000 பேரைக் கூப்பிட்டு,
"யாபேஸ்-கீலேயாத்துக்குப் புறப்பட்டுப் போய், அங்குள்ள ஜனங்களை
வெட்டிப்போடுங்கள். பெண்களையும் பிள்ளைகளையும்கூட விட்டுவைக்கா
தீர்கள்.[a] 11 எல்லா ஆண்களையும் பெண்களையும் கொன்றுபோடுங்கள்.
கன்னிப்பெண்களை மட்டும் விட்டுவிடுங்கள்" என்று சொல்லி, அனுப்பி
வைத்தார்கள். 12 யாபேஸ்-கீலேயாத் ஜனங்களில், கன்னிப்பெண்கள்
400 பேரை அந்த வீரர்கள் கண்டுபிடித்தார்கள். அவர்களை கானான் தேசத்
தில் சீலோவிலிருந்த[b] முகாமுக்குக் கொண்டுவந்தார்கள்.

13 பின்பு, இஸ்ரவேலர்கள் எல்லாரும் ரிம்மோன் மலைப்பாறையில்
இருந்த பென்யமீனியர்களுக்குச்[c] சமாதான செய்தியை அனுப்பினார்
கள். 14 பென்யமீனியர்கள் திரும்பி வந்தபோது, யாபேஸ்-கீலேயாத்தி
லிருந்து பிடித்து வந்திருந்த பெண்களை[d] அவர்களுக்குக் கொடுத்தார்கள்.
ஆனால், போதுமான பெண்கள் இருக்கவில்லை. 15 பென்யமீனியர்
களை நினைத்து ஜனங்கள் வருத்தப்பட்டார்கள்.[e] ஏனென்றால், இஸ்ரவேல்
கோத்திரங்களுக்கும் பென்யமீன் கோத்திரத்துக்கும் இடையில் யெகோவா
பிரிவினை உண்டாக்கியிருந்தார். 16 அதனால் இஸ்ரவேலின் பெரியோர்
கள்,* "பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த பெண்கள் எல்லாரும் கொல்
லப்பட்டதால் மீதியிருக்கிற பென்யமீன் ஆட்களுக்கு மனைவிகள் கிடைக்க
நாம் என்ன செய்வது?" என்று கேட்டார்கள். 17 பின்பு, "பென்யமீனியர்க
ளில் மீதியிருக்கிற ஆண்களுக்கு வாரிசு* வேண்டும். அப்போதுதான்
இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் அழிந்துபோகாமல் இருக்கும். 18 ஆனால்,
'பென்யமீனியர்களுக்குப் பெண் கொடுக்கிறவன் சபிக்கப்பட்டவன்' என்று
நாம் உறுதிமொழி எடுத்திருப்பதால்[f] நம்முடைய மகள்களை அவர்களுக்
குக் கொடுக்க முடியாதே" என்றார்கள்.

19 பின்பு, "பெத்தேலுக்கு வடக்கேயும் பெத்தேலிலிருந்து சீகேமுக்குப்
போகும் நெடுஞ்சாலையின் கிழக்கேயும் லிபோனாவுக்குத் தெற்கேயும்
இருக்கிற சீலோவில்[g] வருஷா வருஷம் யெகோவாவுக்குப் பண்டிகை நடக்
கிறதே" என்று சொல்லி, 20 பென்யமீன் ஆண்களிடம், "நீங்கள் போய்
திராட்சைத் தோட்டங்களில் பதுங்கியிருங்கள். 21 சீலோவிலுள்ள இளம்
பெண்கள் நடனமாட* வருவார்கள். அப்போது, நீங்கள் திராட்சைத் தோட்
டங்களிலிருந்து வந்து ஒவ்வொருவரும் ஒரு பெண்ணைத் தூக்கிக்
கொண்டு பென்யமீன் தேசத்துக்குத் திரும்பிப் போங்கள். 22 அவர்களு
டைய அப்பாக்களோ சகோதரர்களோ எங்களிடம் வந்து முறையிட்டால்,
நாங்கள் அவர்களிடம், 'தயவுசெய்து கொஞ்சம் பெரியமனதுபண்ணுங்கள்.
போருக்குப் போய்ப் பிடித்து வந்தும் எங்களால் அவர்கள் ஒவ்வொருவ
ருக்கும் ஒரு பெண்ணைக் கொடுக்க முடியவில்லை.[h] நீங்களாகவே அவர்
களுக்குப் பெண் கொடுத்தாலும் அது குற்றமாகிவிடும்'[i] என்று சொல்லிவி
டுகிறோம்" என்றார்கள்.

23 அவர்கள் சொன்னபடியே பென்யமீன் ஆண்கள் செய்தார்கள். நடன
மாடிக்கொண்டிருந்த பெண்களிலிருந்து ஒவ்வொருவரும் ஒரு பெண்ணைத்
தூக்கிக்கொண்டு போனார்கள். பின்பு, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பகு
திக்குப் போய், நகரங்களைத் திரும்பவும் கட்டி,[j] அங்கே குடியிருந்தார்கள்.

21:16 * வே.வா., "மூப்பர்கள்." **21:17** * நே.மொ., "சொத்து." **21:21** * நே.மொ., "சுற்றிச் சுற்றி நடனமாட."

அதி. 21
a நியா 21:5
b யோசு 18:1
c நியா 20:46, 47
d நியா 21:8, 12
e நியா 21:6
f லேவி 19:12; நியா 21:1
g யோசு 18:1
h நியா 21:12, 14
i நியா 21:1, 18
j நியா 20:48

24 இஸ்ரவேலர்கள் அங்கிருந்து பிரிந்து அவரவர் கோத்திரத்தாரிடமும்
குடும்பத்தாரிடமும் திரும்பிப்போய், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதி
யில் குடியிருந்தார்கள்.
25 அந்தக் காலத்தில், இஸ்ரவேலர்களுக்கு ராஜா இல்லை.[a] அதனால்
அவரவர் இஷ்டப்படி நடந்துவந்தார்கள்.

அதி. 21
a நியா 17:6
1சா 8:4, 5

ரூத்

முக்கியச் குறிப்புகள்

1 எலிமெலேக்கின் குடும்பம் மோவாபுக்குக் குடிமாறிப் போகிறது (1, 2)
நகோமியும், ஓர்பாளும், ரூத்தும் விதவை ஆகிறார்கள் (3-6)
நகோமிக்கும் அவளுடைய கடவுளுக்கும் ரூத் உண்மையாக இருக்கிறாள் (7-17)
ரூத்துடன் நகோமி எருசலேமுக்குத் திரும்புகிறாள் (18-22)

2 போவாசின் வயலில் கதிர் பொறுக்க ரூத் போகிறாள் (1-3)
போவாஸ் ரூத்தைச் சந்தித்துப் பேசுகிறார் (4-16)
போவாஸ் கருணை காட்டியதைப் பற்றி நகோமியிடம் ரூத் சொல்கிறாள் (17-23)

3 ரூத்துக்கு நகோமி ஆலோசனை சொல்கிறாள் (1-4)
போரடிக்கும் களத்தில் ரூத்தும் போவாசும் (5-15)
ரூத் நகோமியிடம் திரும்பிப் போகிறாள் (16-18)

4 போவாஸ் மீட்டுக்கொள்ளும் உரிமையைப் பயன்படுத்துகிறார் (1-12)
போவாசுக்கும் ரூத்துக்கும் ஓபேத் பிறக்கிறார் (13-17)
தாவீதின் வம்சாவளி (18-22)

1 நியாயாதிபதிகள்[a] நியாயம் வழங்கிவந்த காலத்தில், இஸ்ரவேல் தேசத்
தில் பஞ்சம் ஏற்பட்டது. அதனால், யூதாவிலுள்ள பெத்லகேமைச்[b]
சேர்ந்த ஒருவர் பிழைப்புக்காகத் தன் மனைவியோடும் இரண்டு மகன்க
ளோடும் மோவாப்[c] தேசத்துக்குப் புறப்பட்டுப் போனார். **2** அவருடைய
பெயர் எலிமெலேக்கு,* அவருடைய மனைவியின் பெயர் நகோமி.# அவ
ருடைய இரண்டு மகன்களின் பெயர்கள் மக்லோன், கிலியோன். அவர்கள்
யூதாவிலுள்ள பெத்லகேமைச் சேர்ந்த எப்பிராத்தியர்கள். அவர்கள்
மோவாப் தேசத்துக்குப் போய்க் குடியிருந்தார்கள்.
3 கொஞ்சக் காலத்துக்குப் பின்பு, நகோமியின் கணவர் எலிமெலேக்கு
இறந்துபோனார். அவள் தனியாகத் தன்னுடைய இரண்டு மகன்களோடு
வாழ்ந்துவந்தாள். **4** அதன்பின், அவளுடைய மகன்கள் மோவாபியப்
பெண்களைக் கல்யாணம் செய்துகொண்டார்கள். ஒருத்தி பெயர் ஓர்பாள்,
இன்னொருத்தி பெயர் ரூத்.[d] அவர்கள் அங்கே கிட்டத்தட்ட 10 வருஷங்கள்
வாழ்ந்துவந்தார்கள். **5** பிற்பாடு, மக்லோனும் கிலியோனும்கூட இறந்து

1:2 *அர்த்தம், "என் கடவுள்தான் ராஜா." #அர்த்தம், "இனிமையானவள்."

அதி. 1
a நியா 2:16
b மீ 5:2
c ஆதி 19:36, 37
உபா 2:9
நியா 3:30
d மத் 1:5

அதி. 1
[a] யாத் 34:6; ரூ 2:20
[b] ரூ 3:1
[c] உபா 25:5, 6
[d] ரூ 1:20
[e] ரூ 2:11, 12

போனார்கள். நகோமி தன் கணவனையும் இரண்டு மகன்களையும் பறி
கொடுத்ததால் தனிமரமானாள். **6** யெகோவா இஸ்ரவேலில் பஞ்சத்தைப்
போக்கி தன்னுடைய ஜனங்களுக்குக் கருணை காட்டியிருந்த விஷயத்தை
அவள் மோவாப் தேசத்தில் கேள்விப்பட்டாள். அதனால் தன் தேசத்துக்கே
திரும்பிப் போக முடிவுசெய்தாள். அவளுடைய இரண்டு மருமகள்களும்
அவளோடு கிளம்பினார்கள்.

7 நகோமி அந்தத் தேசத்தைவிட்டுத் தன்னுடைய இரண்டு மருமகள்க
ளோடும் யூதா தேசத்துக்கு நடந்து போய்க்கொண்டிருந்தபோது, **8** தன்னு
டைய இரண்டு மருமகள்களிடமும், "நீங்கள் இரண்டு பேரும் உங்களுடைய
அம்மா வீட்டுக்கே திரும்பிப் போங்கள். இறந்துபோன உங்கள் கணவர்க
ளுக்கும் எனக்கும் நீங்கள் எப்போதும் அன்பு* காட்டியது போல
யெகோவாவும் எப்போதும் உங்களுக்கு அன்பு காட்டட்டும்.[a] **9** நீங்
கள் கல்யாணம் செய்துகொண்டு நிம்மதியாக வாழ்வதற்கு யெகோவா
வழி செய்யட்டும்"[b] என்று சொல்லி, அவர்களுக்கு முத்தம் கொடுத்தாள்.
அவர்கள் கதறி அழுது, **10** "இல்லை அம்மா, நாங்களும் வந்து உங்
கள் ஜனங்களோடு வாழ்கிறோம்" என்று சொல்லிக்கொண்டே இருந்தார்
கள். **11** ஆனால் நகோமி, "வேண்டாம், என் மகள்களே. நீங்கள் ஏன் என்
னோடு வர வேண்டும்? உங்களுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க
என்னால் இனி மகன்களைப் பெற்றுத்தர முடியுமா?[c] **12** என் மகள்
களே, உங்கள் வீட்டுக்கே போய்விடுங்கள். எனக்கு வயதாகிவிட்டது,
இனிமேல் நான் கல்யாணம் செய்துகொள்ள முடியுமா? அப்படியே நான்
இன்று ஒரு கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு மகன்களைப் பெற்றெடுத்தாலும்,
13 அவர்கள் வளர்ந்து ஆளாகிற வரைக்கும் நீங்கள் காத்துக்கொண்டி
ருக்க முடியுமா? அதுவரைக்கும் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பீர்
களா? வேண்டாம், என் மகள்களே, யெகோவாவின் கை எனக்கு எதிராகத்
திரும்பிவிட்டதால் நீங்களும் கஷ்டப்படுகிறீர்கள். அதைப் பார்க்கும்போது
எனக்கு ரொம்ப வேதனையாக இருக்கிறது"[d] என்று சொன்னாள்.

14 மறுபடியும் அவர்கள் கதறி அழுதார்கள், அதன்பின் ஓர்பாள் தன்
மாமியாருக்கு முத்தம் கொடுத்துவிட்டுத் திரும்பிப் போனாள். ஆனால்,
ரூத் மட்டும் நகோமியைவிட்டுப் போகவே இல்லை. **15** அதனால்
நகோமி அவளிடம், "பார், உன் ஓரகத்தி* தன்னுடைய ஜனங்களிடமும்
தன்னுடைய தெய்வங்களிடமும் திரும்பிப் போய்விட்டாள். நீயும் திரும்பிப்
போ" என்று சொன்னாள்.

16 ஆனால் ரூத், "தயவுசெய்து என்னைத் திரும்பிப் போகச் சொல்லா
தீர்கள். உங்களோடு வர வேண்டாமென்று சொல்லாதீர்கள். நீங்கள் எங்கே
போகிறீர்களோ அங்கே நானும் வருவேன், நீங்கள் எங்கே தங்குகிறீர்
களோ அங்கே நானும் தங்குவேன். உங்களுடைய ஜனங்கள்தான் என்னு
டைய ஜனங்கள், உங்களுடைய கடவுள்தான் என்னுடைய கடவுள்.[e]
17 நீங்கள் எங்கே சாவீர்களோ அங்கேதான் நானும் சாவேன், அங்கே
தான் அடக்கம் செய்யப்படுவேன். சாகிற வரைக்கும் நான் உங்களைவிட்
டுப் பிரியவே மாட்டேன். அப்படிப் பிரிந்தால், யெகோவா என்னைக் கடு
மையாகத் தண்டிக்கட்டும்" என்று சொன்னாள்.

1:8 *வே.வா., "மாறாத அன்பு." **1:15** *அதாவது, "கணவனுடைய சகோதரனின் மனைவி."

18 நகோமியுடன் போவதில் ரூத் உறுதியாக இருந்ததால், அதற்கு
மேலும் அவளுடைய மனதை மாற்ற நகோமி முயற்சி செய்யவில்லை.
19 அவர்கள் இரண்டு பேரும் தொடர்ந்து பயணம் செய்தார்கள். அவர்
கள் பெத்லகேமுக்குப் போய்ச் சேர்ந்ததும்,[a] ஊரே பரபரப்பாகிவிட்டது.
அங்குள்ள பெண்கள் அவளைப் பார்த்து, “நகோமியா இது?” என்று
பேசிக்கொண்டார்கள். **20** நகோமி அவர்களிடம், “என்னை நகோமி*
என்று கூப்பிடாதீர்கள். மாராள்# என்று கூப்பிடுங்கள். சர்வவல்லமையுள்ள
வர் என் வாழ்க்கையை ரொம்பவே கசப்பாக்கிவிட்டார்.[b] **21** நான் இங்கி
ருந்து போனபோது எனக்கு எந்தக் குறையும் இல்லை. ஆனால், இப்
போது யெகோவா என்னை வெறுங்கையோடு திரும்பிவர வைத்துவிட்டார்.
யெகோவா எனக்கு எதிராகத் திரும்பியிருக்கும்போது, சர்வவல்லமையுள்ள
வர் எனக்குப் பயங்கரமான வேதனையைக் கொடுத்திருக்கும்போது,[c] நீங்
கள் ஏன் என்னை நகோமி என்று கூப்பிடுகிறீர்கள்?” என்று கேட்டாள்.

22 இப்படித்தான், நகோமி தன்னுடைய மருமகளான மோவாபியப்
பெண் ரூத்துடன் அந்தத் தேசத்திலிருந்து[d] திரும்பி வந்தாள். பார்லி அறு
வடை[e] ஆரம்பித்த சமயத்தில் அவர்கள் பெத்லகேமுக்கு வந்துசேர்ந்
தார்கள்.

2 நகோமிக்குத் தன் கணவன் வழியில் ஒரு சொந்தக்காரர் இருந்தார்.
அவர் பெரிய பணக்காரர். அவருடைய பெயர் போவாஸ்.[f] அவர் எலி
மெலேக்கின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

2 ஒருநாள், நகோமியிடம் மோவாபியப் பெண்ணாகிய ரூத், “நான்
வயல்வெளிக்குப் போகட்டுமா? யார் எனக்குக் கருணை காட்டுகிறாரோ
அவருடைய வயலில் கதிர்களைப் பொறுக்கிக்கொண்டு[g] வரட்டுமா?”
என்று கேட்டாள். அதற்கு நகோமி, “போய் வா, என் மகளே” என்று சொன்
னாள். **3** உடனே அந்த இளம் பெண் அங்கிருந்து போய், அறுவடை
செய்கிறவர்களின் பின்னால் கதிர் பொறுக்க ஆரம்பித்தாள். அந்த வயல்
நிலம் எலிமெலேக்கின்[h] குடும்பத்தைச் சேர்ந்த போவாசின்[i] வயல்நிலம்
என்பது அவளுக்குத் தெரியவில்லை. **4** கொஞ்ச நேரம் கழித்து, பெத்
லகேமிலிருந்து போவாஸ் அங்கு வந்தார். அவர் அறுவடை செய்கிறவர்
களைப் பார்த்து, “யெகோவா உங்களோடு இருக்கட்டும்!” என்று வாழ்த்தி
னார். அதற்கு அவர்கள், “யெகோவா உங்களை ஆசீர்வதிக்கட்டும்!” என்று
வாழ்த்தினார்கள்.

5 பின்பு போவாஸ், அறுவடை வேலையை மேற்பார்வை செய்துவந்த
வாலிபனிடம், “இவள் யார் வீட்டுப் பெண்?” என்று கேட்டார். **6** அதற்கு
அவன், “இவள் மோவாபியப் பெண்.[j] மோவாப் தேசத்திலிருந்து[k] நகோமி
யோடு வந்திருக்கிறாள். **7** இவள் என்னிடம், ‘அறுப்பவர்கள் சிந்துகிற
கதிர்களை* தயவுசெய்து பொறுக்கிக்கொள்ளட்டுமா?’[l] என்று கேட்டாள்.
காலையிலிருந்தே இங்கு கதிர் பொறுக்கிக்கொண்டிருக்கிறாள். இப்போது
தான் பந்தலில் கொஞ்சம் ஓய்வாக உட்கார்ந்தாள்” என்று சொன்னான்.

8 பின்பு போவாஸ் ரூத்திடம், “என் மகளே, கதிர் பொறுக்க இனி நீ வேறு
எந்த வயலுக்கும் போக வேண்டாம். இங்கேயே இரு, என்னுடைய வேலைக்

1:20 * அர்த்தம், “இனிமையானவள்.” # அர்த்தம், “கசப்பு.” **2:7** * அல்லது, “அறுப்ப
வர்கள் விட்டுவிட்டுப் போகிற கதிர்க்கட்டுகளிலிருந்து சிந்துகிறவற்றை.”

அதி. 1
a ரூ 1:1, 2
b ரூ 1:13
c ரூ 1:3, 5
d எண் 21:13
ரூ 1:1
e ரூ 2:23

அதி. 2
f ரூ 2:20
ரூ 4:21, 22
மத் 1:5
லூ 3:23, 32
g லேவி 23:22
உபா 24:19
h ரூ 1:2
i ரூ 2:20
j ரூ 1:3, 4
k ரூ 1:16, 22
l லேவி 23:22
உபா 24:19

காரப் பெண்களின் கூடவே இரு.[a] **9** அவர்கள் எங்கே போய் அறுக்கிறார்
கள் என்பதைப் பார்த்து, அவர்கள் பின்னாலேயே போ. உனக்குத் தொல்லை
கொடுக்க* கூடாதென்று என்னுடைய வேலைக்காரப் பையன்களிடம் எச்ச
ரித்திருக்கிறேன். உனக்குத் தாகமெடுத்தால், ஜாடிகளில் அவர்கள் ஊற்றி
வைத்திருக்கிற தண்ணீரைக் குடித்துக்கொள்” என்று சொன்னார்.

10 அப்போது அவள் மண்டிபோட்டு, தரைவரைக்கும் குனிந்து, “நான்
வேறு தேசத்துப் பெண்ணாக[b] இருந்தும் என்மேல் இவ்வளவு அக்கறை
யும் கருணையும் காட்டுகிறீர்களே, ஏன்?” என்று கேட்டாள். **11** அதற்கு
போவாஸ், “உன்னுடைய கணவர் இறந்தபின், நீ உன் மாமியாருக்குச் செய்த
எல்லா நல்ல காரியங்களையும் பற்றி நான் கேள்விப்பட்டேன். நீ உன்னு
டைய அப்பாவையும் அம்மாவையும் ஊரையும் உறவையும் விட்டுவிட்டு
முன்பின் தெரியாத ஜனங்களோடு வாழ வந்ததைப் பற்றியும் கேள்விப்பட்
டேன்.[c] **12** நீ செய்த எல்லாவற்றுக்கும் யெகோவா உனக்குப் பலன் தரட்
டும்![d] இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் சிறகுகளின் கீழ் அடைக்
கலம்[e] தேடி வந்திருக்கிற உனக்கு அவர் நிறைவான பலன் தரட்டும்” என்று
சொன்னார். **13** அதற்கு அவள், “எஜமானே, உங்கள் கருணை எனக்கு
எப்போதும் கிடைக்கட்டும். நான் உங்களுடைய வேலைக்காரியாக இல்லா
விட்டால்கூட, என்னிடம் ஆறுதலாகப் பேசினீர்கள், எனக்கு நம்பிக்கை தந்
தீர்கள்” என்று சொன்னாள்.

14 சாப்பாட்டு நேரத்தில் போவாஸ் அவளிடம், “மகளே, இங்கே வந்து
கொஞ்சம் ரொட்டியை எடுத்து, காடியில் தொட்டுச் சாப்பிடு” என்று சொன்
னார். அதனால் அறுவடை செய்கிறவர்களின் பக்கத்தில் போய் உட்
கார்ந்துகொண்டாள். வறுத்த தானியத்தையும் அவர் கொஞ்சம் கொடுத்தார்,
அவள் அதைத் திருப்தியாகச் சாப்பிட்ட பின்பு மீதியை எடுத்து வைத்துக்
கொண்டாள். **15** பின்பு, கதிர் பொறுக்க[f] அவள் எழுந்தபோது போவாஸ்
தன்னுடைய வேலைக்காரப் பையன்களைப் பார்த்து, “அறுத்துப் போடப்
பட்டிருக்கிற கதிர்களிலிருந்தும்* அவள் பொறுக்கிக்கொள்ளட்டும், அவ
ளுக்குத் தொல்லை கொடுக்காதீர்கள்.[g] **16** கட்டுகளிலிருந்துகூட சில
கதிர்களை அவளுக்காக உருவிப் போடுங்கள். அவற்றை அவள் எடுத்துக்
கொள்ளட்டும், எதையாவது சொல்லி அவளைத் தடுத்துவிடாதீர்கள்” என்று
சொன்னார்.

17 அதனால், சாயங்காலம்வரை அவள் கதிர் பொறுக்கினாள்.[h] அந்தக்
கதிர்களை அவள் அடித்து உதிர்த்தபோது ஒரு எப்பா அளவு* பார்லி
கிடைத்தது. **18** பின்பு, அவற்றை எடுத்துக்கொண்டு நகரத்துக்குள் போய்,
தன் மாமியாரிடம் காட்டினாள். அதோடு, தான் சாப்பிட்டதுபோக மீதியிருந்
ததைத்[i] தன்னுடைய மாமியாருக்குக் கொடுத்தாள்.

19 அப்போது அவளுடைய மாமியார், “இன்றைக்கு நீ எங்கே கதிர்
பொறுக்கினாய்? எங்கே வேலை செய்தாய்? உன்னைக் கவனித்து உன்
மேல் அக்கறை காட்டியவரைக் கடவுள் ஆசீர்வதிக்கட்டும்”[j] என்று
சொன்னாள். அதற்கு ரூத், “போவாஸ் என்பவருடைய வயலில் நான்
வேலை செய்தேன்” என்று சொன்னாள். **20** அதற்கு நகோமி, “உயிரோடு

2:9 *வே.வா., “உன்னைத் தொட.” **2:15** *அல்லது, “கதிர்க்கட்டுகளிலிருந்தும்.”
2:17 *அதாவது, “சுமார் 13 கிலோ.”

அதி. 2
a ரூ 2:22
b யாத் 23:9; லேவி 19:34
c ரூ 1:14, 16
d ரூ 4:11, 17; மத் 1:5, 16
e சங் 17:8; சங் 36:7; சங் 57:1; சங் 63:7
f லேவி 19:9; ரூ 2:2
g ரூ 2:9
h ரூ 2:7
i ரூ 2:14
j சங் 41:1

இருக்கிறவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் பேரன்பு* காட்டிய யெகோவா
அவரை ஆசீர்வதிக்கட்டும்![a] அவர் நமக்குச் சொந்தக்காரர்.[b] நம்மை மீட்
கும் உரிமையுள்ளவர்களில்# ஒருவர்"[c] என்று சொன்னாள். **21** அப்போது
மோவாபியப் பெண்ணாகிய ரூத், "அதுமட்டுமல்ல, அவருடைய வேலைக்
காரப் பெண்கள் அறுவடையை முடிக்கும்வரை அவர்களோடு கூடவே
இருக்கச் சொன்னார்"[d] என்றாள். **22** அதனால், நகோமி தன்னுடைய மரு
மகள் ரூத்திடம், "என் மகளே, வேறொருவனுடைய வயலுக்குப் போய் இம்
சைப்படுவதைவிட அவருடைய வேலைக்காரப் பெண்களோடு இருப்பது
தான் உனக்கு நல்லது" என்று சொன்னாள்.

23 அதனால், பார்லி அறுவடையும்[e] கோதுமை அறுவடையும் முடியும்
வரை, போவாசின் வேலைக்காரப் பெண்களின் கூடவே இருந்து ரூத் கதிர்
பொறுக்கினாள். அவள் தன் மாமியாருடனேயே வாழ்ந்துவந்தாள்.[f]

3 ஒருநாள், அவளுடைய மாமியார் நகோமி அவளிடம், "என் மகளே,
உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தர வேண்டியது
என் கடமை இல்லையா?[g] **2** போவாஸ் நம்முடைய சொந்தக்காரர்,[h] அவ
ருடைய வேலைக்காரப் பெண்களோடுதான் நீ இவ்வளவு நாட்கள் வேலை
செய்தாய். அவர் இன்றைக்குச் சாயங்காலம் களத்துமேட்டில் பார்லியைத்
தூற்றிக்கொண்டிருப்பார்.* **3** நீ குளித்துவிட்டு, கொஞ்சம் வாசனை எண்
ணெயைப் பூசிக்கொள். பின்பு, நல்ல உடையைப் போட்டுக்கொண்டு
களத்துமேட்டுக்குப் போ. அவர் சாப்பிட்டுக் குடிக்கும்வரை அவருடைய
கண்ணில் படாதே. **4** அவர் எங்கே படுக்கிறார் என்பதைப் பார்த்து வைத்
துக்கொள். பின்பு, நீ போய் அவருடைய பாதத்தை மூடியிருக்கிற போர்
வையை ஒதுக்கிவிட்டு கால்மாட்டில் படுத்துக்கொள். அதற்குமேல் நீ
செய்ய வேண்டியதை அவர் உனக்குச் சொல்வார்" என்றாள்.

5 அதற்கு அவள், "நீங்கள் சொல்கிறபடியெல்லாம் செய்கிறேன்" என்
றாள். **6** பின்பு, அவள் களத்துமேட்டுக்குப் போய்த் தன்னுடைய மாமியார்
சொன்னபடியெல்லாம் செய்தாள். **7** இதற்கிடையில், போவாஸ் சாப்பிட்
டார், குடித்தார், சந்தோஷமாக இருந்தார். பின்பு, தானியக் குவியலின் ஓரத்
தில் படுத்துத் தூங்கினார். கொஞ்ச நேரம் கழித்து, ரூத் சத்தமில்லாமல்
வந்து, அவருடைய பாதத்தை மூடியிருந்த போர்வையை ஒதுக்கிவிட்டு
கால்மாட்டில் படுத்துக்கொண்டாள். **8** நடுராத்திரி அவர் குளிரில் நடுங்கிய
தால் எழுந்து உட்கார்ந்தார். அப்போது, கால்மாட்டில் ஒரு பெண் படுத்திருந்
ததைப் பார்த்தார். **9** உடனே அவர், "யார் நீ?" என்று கேட்டார். அதற்கு
அவள், "நான் உங்களுடைய வேலைக்காரி ரூத். தயவுசெய்து என்னை ஏற்
றுக்கொள்ளுங்கள்.* என்னை மீட்கும் உரிமையுள்ளவர்[i] நீங்கள்தான்" என்று
சொன்னாள். **10** அப்போது அவர், "என் மகளே, யெகோவா உன்னை
ஆசீர்வதிக்கட்டும்! இதுவரை நீ காட்டிய அன்பைவிட*[j] இப்போது காட்டு
கிற அன்பு மேலானது. ஏனென்றால், நீ ஒரு பணக்கார வாலிபனையோ
ஏழை வாலிபனையோ தேடிப்போகவில்லை. **11** பயப்படாதே, என்

2:20 * வே.வா., "மாறாத அன்பு." # சொல் பட்டியலைப் பாருங்கள். **3:2** * தூற்றுவது என்றால் தானியங்களைப் பதரிலிருந்து பிரித்தெடுப்பதற்குக் காற்றடிக்கும் திசையில் அள்ளி வீசுவது. **3:9** * நே.மொ., "என்னை உங்களுடைய போர்வையால் மூடுங்கள்." **3:10** * நே.மொ., "மாறாத அன்பைவிட."

அதி. 2
a யாத் 34:6
ரூ 1:8
சங் 36:7
b ரூ 2:1
c லேவி 25:25
உபா 25:5, 6
ரூ 3:9, 12
d ரூ 2:8
e ரூ 1:22
f ரூ 1:16

அதி. 3
g ரூ 1:9
h ரூ 2:1, 20
i லேவி 25:25
உபா 25:5, 6
ரூ 2:20
j ரூ 1:14, 16

மகளே. நீ கேட்டுக்கொண்டபடியே உனக்குச் செய்வேன்.[a] நீ ரொம்ப நல்ல
பெண் என்பது இந்த ஊருக்கே தெரியும். **12** நான் உன்னை மீட்டுக்கொள்
ளும் உரிமையுள்ளவன்தான்.[b] ஆனால் அந்த உரிமை இன்னொருவனுக்கும்
இருக்கிறது, அவன்தான் என்னைவிட உனக்கு நெருங்கிய சொந்தக்காரன்.[c]
13 இந்த ராத்திரி இங்கேயே இரு, அவன் உன்னை மீட்டுக்கொள்கிறானா
இல்லையா என்று காலையில் பார்ப்போம். அப்படி அவன் உன்னை மீட்
டுக்கொண்டால்,[d] நல்லது! இல்லாவிட்டால், நானே உன்னை மீட்டுக்கொள்கி
றேன். இது உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை!* காலைவரை
இங்கேயே படுத்திரு” என்று சொன்னார்.

14 அதனால், பொழுது விடியும்வரை அவள் அவருடைய கால்மாட்
டிலேயே படுத்திருந்தாள். பின்பு, யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக
இருட்டோடு இருட்டாகவே எழுந்துகொண்டாள். அப்போது அவர், “களத்து
மேட்டுக்கு ஒரு பெண் வந்த விஷயம் யாருக்கும் தெரியக் கூடாது” என்று
சொன்னார். **15** பின்பு அவளிடம், “நீ போர்த்தியிருக்கிற சால்வையை
விரித்துப் பிடி” என்று சொன்னார். அவள் விரித்துப் பிடித்தபோது, ஆறு
படி* பார்லியை அதில் போட்டு அவள் தலையில் தூக்கி வைத்தார். அதன்
பிறகு, அவர் நகரத்துக்குள் போனார்.

16 ரூத் தன்னுடைய மாமியாரிடம் வந்துசேர்ந்தாள். அப்போது நகோமி,
“மகளே, நீ போன காரியம் என்ன ஆனது?”* என்று கேட்டாள். போவாஸ்
தனக்குச் செய்த எல்லாவற்றையும் அவள் சொன்னாள். **17** அதோடு,
“‘உன் மாமியாரிடம் வெறுங்கையோடு போகாதே’ என்று சொல்லி, இந்த
ஆறு படி பார்லியையும் கொடுத்தார்” என்று சொன்னாள். **18** அதற்கு
நகோமி, “மகளே, என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.
இன்றைக்கு இந்தக் காரியத்தை முடித்துவிட்டுதான் அவர் மறுவேலை
பார்ப்பார்” என்று சொன்னாள்.

4 இதற்கிடையில், போவாஸ் நகரவாசலுக்குப்[e] போய் உட்கார்ந்தார்.
அவர் சொல்லியிருந்த அந்த நெருங்கிய சொந்தக்காரன்*[f] அந்த வழி
யாகப் போனான். உடனே போவாஸ் அந்த ஆளிடம்,# “கொஞ்சம் இங்கே
வந்து உட்காருகிறாயா?” என்றார். அவன் போய் அங்கே உட்கார்ந்தான்.
2 பிறகு, ஊர்ப் பெரியோர்களில்*[g] 10 பேரை போவாஸ் கூப்பிட்டு,
“இங்கே வந்து உட்காருங்கள்” என்று சொன்னார். அவர்களும் உட்கார்ந்
தார்கள்.

3 அப்போது போவாஸ் அந்த ஆளிடம்,*[h] “மோவாப் தேசத்திலிருந்து
திரும்பி வந்திருக்கிற நகோமி,[i] நம்முடைய சகோதரன் எலிமெலேக்கின்[j]
நிலத்தை விற்கப்போகிறார். **4** அதை உன்னிடம் தெரியப்படுத்த வேண்டு
மென்று நினைத்தேன். ஊர்க்காரர்கள் முன்னிலையிலும் பெரியோர்கள் முன்
னிலையிலும் நீ அதை வாங்கிக்கொள்.[k] அதை மீட்டுக்கொள்ள உனக்கு
இஷ்டம் இருந்தால் மீட்டுக்கொள். இல்லாவிட்டால், என்னிடம் சொல்.

அதி. 3
a ரூ 3:9
b லேவி 25:25; ரூ 2:20
c ரூ 4:1
d ரூ 4:5

அதி. 4
e உபா 25:7; நீதி 31:23
f ரூ 3:12
g உபா 16:18
h லேவி 25:25; உபா 25:5, 6; ரூ 2:20; ரூ 3:9, 12
i ரூ 1:1, 6
j ரூ 1:2
k ஆதி 23:18; எரே 32:9, 10

3:13 * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்.” **3:15** * ஒருவேளை, “ஆறு சியா அளவு,” அதாவது, “சுமார் 20 கிலோ.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **3:16** * நே.மொ., “நீ யார்?” **4:1** * நே.மொ., “மீட்கும் உரிமையுள்ளவன்.” # இவன் பெயர் குறிப்பிடப்படவில்லை. **4:2** * வே.வா., “மூப்பர்களில்.” **4:3** * நே.மொ., “மீட்கும் உரிமையுள்ளவனிடம்.”

அதை மீட்டுக்கொள்ளும் உரிமை முதலில் உனக்குத்தான் இருக்கிறது,
அடுத்ததுதான் எனக்கு” என்றார். அதற்கு அவன், “நான் அதை மீட்டுக்
கொள்கிறேன்” என்றான்.[a] **5** அப்போது போவாஸ், “நகோமியிடமிருந்து
மட்டுமல்ல, இறந்துபோனவனுடைய மனைவியாகிய மோவாபியப் பெண்
ரூத்திடமிருந்தும் நீ அந்த நிலத்தை வாங்க வேண்டும். அப்போதுதான், இறந்
துபோனவனுடைய பெயரிலேயே அந்தச் சொத்து தொடர்ந்து இருக்கும்”[b]
என்றார். **6** அதற்கு அந்த ஆள், “என்னால் அதை மீட்டுக்கொள்ள முடி
யாது. ஏனென்றால், எனக்கு நஷ்டம் வந்துவிடும்.* அதனால், மீட்டுக்கொள்
ளும் உரிமையை நான் உங்களுக்கு விட்டுக்கொடுக்கிறேன், நீங்களே அதை
மீட்டுக்கொள்ளுங்கள். என்னால் முடியாது” என்று சொன்னான்.

7 அந்தக் காலத்தில் இஸ்ரவேலர்களுக்கு ஒரு வழக்கம் இருந்தது.
ஒன்றை மீட்டுக்கொள்ளும்போதோ கைமாற்றும்போதோ கொடுக்கல் வாங்
கலை உறுதிப்படுத்துவதற்காக ஒருவர் தன்னுடைய செருப்பைக் கழற்றி[c] மற்
றவரிடம் கொடுப்பார். ஓர் ஒப்பந்தத்தைச் சட்டப்படி உறுதிப்படுத்துவதற்கு
இப்படிச் செய்வதுதான் இஸ்ரவேலில் வழக்கம். **8** அதனால் போவாசி
டம் அந்த ஆள், “நீங்களே அதை வாங்கிக்கொள்ளுங்கள்” என்று
சொல்லிவிட்டு, தன்னுடைய செருப்பைக் கழற்றிக் கொடுத்தான். **9** அப்
போது போவாஸ் அங்கிருந்த பெரியோர்களையும் எல்லா ஜனங்களையும்
பார்த்து, “எலிமெலேக்கு, கிலியோன், மக்லோன் ஆகியவர்களுக்குச் சொந்
தமான எல்லாவற்றையும் நகோமியிடமிருந்து நான் இன்று வாங்கிக்கொள்கி
றேன் என்பதற்கு நீங்கள்தான் சாட்சிகள்.[d] **10** அதோடு, இறந்துபோன
மக்லோனுடைய பெயரில் சொத்து தொடர்ந்து இருப்பதற்கு அவனு
டைய மனைவியாகிய மோவாபியப் பெண் ரூத்தை என்னுடைய மனைவி
யாக ஏற்றுக்கொள்கிறேன்.[e] இறந்துபோனவனுடைய பெயரை அவனுடைய
சகோதரர்களும் இந்த நகரத்திலுள்ள ஜனங்களும் மறந்துபோகாமல் இருப்
பதற்காக இதைச் செய்கிறேன். இதற்கு நீங்கள்தான் சாட்சிகள்”[f] என்று
சொன்னார்.

11 அப்போது, நகரவாசலில் இருந்த எல்லா ஜனங்களும் பெரியோர்
களும், “ஆமாம், நாங்கள்தான் சாட்சிகள்! உங்களுடைய வீட்டுக்கு வரும்
மனைவியை யெகோவா ஆசீர்வதிக்கட்டும்! இஸ்ரவேல் ஜனங்களைத்
தழைக்கச் செய்த ராகேலைப் போலவும் லேயாளைப் போலவும் அவளை
ஆசீர்வதிக்கட்டும்![g] எப்பிராத்தாவில்[h] நீங்கள் சீர்சிறப்போடு வாழ வேண்
டும்! பெத்லகேமில் பேர்புகழோடு வாழ வேண்டும்![i] **12** அந்த இளம்
பெண் மூலம் யெகோவா கொடுக்கிற வாரிசால்[j] உங்கள் குடும்பம் தழைக்
கட்டும்! யூதாவுக்கு தாமார் பெற்றெடுத்த பாரேசின்[k] குடும்பம் போலப்
பெருகட்டும்!” என்று வாழ்த்தினார்கள்.

13 பின்பு, போவாஸ் ரூத்தைக் கூட்டிக்கொண்டு வந்து மனைவியாக்
கிக்கொண்டார். யெகோவாவின் ஆசீர்வாதத்தால் அவள் கர்ப்பமாகி ஒரு
மகனைப் பெற்றெடுத்தாள். **14** அப்போது அங்கிருந்த பெண்கள் நகோ
மியைப் பார்த்து, “மீட்கும் உரிமையுள்ளவரை உங்களுக்குத் தந்த யெகோ
வாவுக்குப் புகழ் சேரட்டும்! இந்தப் பிள்ளையின் பெயர் இஸ்ரவேலில் பிர
பலமாகட்டும். **15** இவன் உங்களுக்குப் புது வாழ்வு தந்திருக்கிறான்.
உங்களுடைய வயதான காலத்தில் உங்களைக் காப்பாற்றுவான். ஏனென்

4:6 * வே.வா., “என் சொத்தின் மதிப்புக் குறைந்துவிடும்.”

அதி. 4
a ரூ 3:13
b ஆதி 38:7, 8; உபா 25:5, 6
c உபா 25:7, 9
d ஆதி 23:18; ரூ 4:4; எரே 32:12
e ஆதி 38:7, 8; உபா 25:5, 6
f ரூ 4:4
g ஆதி 28:3; ஆதி 35:23-26; ஆதி 46:15, 18; ஆதி 46:22, 25
h ஆதி 35:19
i ரூ 1:1; மீ 5:2
j சங் 127:3
k ஆதி 38:29; எண் 26:20; மத் 1:3

அதி. 4
a ரூ 1:14, 16
b மத் 1:5
லூ 3:23, 32
c ஏசா 11:1
ரோ 15:12
d ரூ 4:12
மத் 1:2-6
e ஆதி 46:12
எண் 26:21
1நா 2:5
f 1நா 2:9-15
g யாத் 6:23
h ரூ 4:17
1சா 16:1
i 2சா 7:8
1நா 2:13, 15

றால், உங்களை நேசிக்கிற மருமகளின்[a] பிள்ளை இவன்! ஏழு மகன்களை
விட உங்களுக்கு அருமையாக இருக்கிற மருமகள் பெற்ற பிள்ளை
இவன்!" என்று சொன்னார்கள்.
16 நகோமி அந்தக் குழந்தையை எடுத்து
நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். அவனைத் தாலாட்டி சீராட்டி வளர்த்
தாள்.
17 பின்பு அக்கம்பக்கத்து பெண்கள், "நகோமிக்கு ஒரு மகன் பிறந்
திருக்கிறான்" என்று சொல்லி, அவனுக்கு ஓபேத்[b] என்று பெயர் வைத்தார்
கள். ஓபேத்துக்குப் பிறந்த ஈசாயின்[c] மகன்தான் தாவீது.

18 இதுதான் பாரேசின் வம்ச வரலாறு:[d] பாரேசின் மகன் எஸ்ரோன்.[e]
19 எஸ்ரோனின் மகன் ராம். ராமின் மகன் அம்மினதாப்.[f]
20 அம்மின
தாபின்[g] மகன் நகசோன். நகசோனின் மகன் சல்மோன்.
21 சல்மோனின்
மகன் போவாஸ். போவாசின் மகன் ஓபேத்.
22 ஓபேத்தின் மகன் ஈசாய்.[h]
ஈசாயின் மகன் தாவீது.[i]

முதலாம்
சாமுவேல்

முக்கியக் குறிப்புகள்

1 எல்க்கானாவும் அவருடைய மனைவிகளும் (1-8)
குழந்தை இல்லாத அன்னாள் ஒரு மகன் வேண்டுமென்று ஜெபம் செய்கிறாள் (9-18)
சாமுவேல் பிறக்கிறான்; யெகோவாவுக்கு அர்ப்பணிக்கப்படுகிறான் (19-28)

2 அன்னாளின் ஜெபம் (1-11)
ஏலியின் இரண்டு மகன்களும் செய்கிற பாவங்கள் (12-26)
ஏலியின் குடும்பத்தாருக்கு யெகோவா தீர்ப்பு கொடுக்கிறார் (27-36)

3 சாமுவேல் ஒரு தீர்க்கதரிசி ஆகிறார் (1-21)

4 பெலிஸ்தியர்கள் ஒப்பந்தப் பெட்டியைக் கைப்பற்றுகிறார்கள் (1-11)
ஏலியும் அவருடைய மகன்களும் செத்துப்போகிறார்கள் (12-22)

5 பெலிஸ்தியர்களின் பகுதியில் ஒப்பந்தப் பெட்டி (1-12)
தாகோனுக்கு அவமானம் (1-5)
பெலிஸ்தியர்கள் மூலநோயால் தாக்கப்படுகிறார்கள் (6-12)

6 பெலிஸ்தியர்கள் ஒப்பந்தப் பெட்டியை இஸ்ரவேலர்களிடம் திருப்பி அனுப்புகிறார்கள் (1-21)

7 கீரியாத்-யெயாரீமில் ஒப்பந்தப் பெட்டி (1)
'யெகோவாவை மட்டுமே வணங்குங்கள்' என்கிறார் சாமுவேல் (2-6)
மிஸ்பாவில் இஸ்ரவேலர்களுக்கு வெற்றி (7-14)
சாமுவேல் இஸ்ரவேலர்களுக்கு நீதிபதியாக இருக்கிறார் (15-17)

8 ஒரு ராஜா வேண்டும் என்று இஸ்ரவேலர்கள் கேட்கிறார்கள் (1-9)
சாமுவேல் ஜனங்களை எச்சரிக்கிறார் (10-18)
ஒரு ராஜா வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு யெகோவா ஒப்புதல் அளிக்கிறார் (19-22)

9 சவுலை சாமுவேல் சந்திக்கிறார் (1-27)

10 ராஜாவாக சவுல் அபிஷேகம் செய்யப்படுகிறார் (1-16)
ஜனங்களுக்கு முன்னால் சவுல் கொண்டுவரப்படுகிறார் (17-27)

11 அம்மோனியர்களை சவுல் தோற்கடிக்கிறார் (1-11)
சவுல்தான் ராஜா என்று மறுபடியும் அறிவிக்கப்படுகிறது (12-15)

12 சாமுவேல் ஜனங்களிடம் கடைசியாகப் பேசுகிறார் (1-25)

"வீணான தெய்வங்களைத் தேடிப்போகாதீர்கள்" (21)
யெகோவா தன் ஜனங்களைக் கைவிட மாட்டார் (22)

13 சவுல் படைவீரர்களைத் தேர்ந்தெடுக்கிறார் (1-4)
சவுல் அகங்காரத்தோடு நடந்துகொள்கிறார் (5-9)
சாமுவேல் சவுலைக் கண்டிக்கிறார் (10-14)
இஸ்ரவேலர்களிடம் எந்த ஆயுதங்களும் இல்லை (15-23)

14 மிக்மாசில் யோனத்தானின் வீரச் செயல் (1-14)
இஸ்ரவேலர்களின் எதிரிகளைக் கடவுள் ஒழித்துக்கட்டுகிறார் (15-23)
சவுல் யோசிக்காமல் ஒரு கட்டளை கொடுக்கிறார் (24-46)
ஜனங்கள் இரத்தத்தோடு இறைச்சியைச் சாப்பிடுகிறார்கள் (32-34)
சவுலின் போர்கள்; அவருடைய குடும்பம் (47-52)

15 சவுல் கீழ்ப்படியாமல் ஆகாகை உயிரோடு விட்டுவைக்கிறார் (1-9)
சவுலை சாமுவேல் கண்டிக்கிறார் (10-23)
"பலி செலுத்துவதைவிட கீழ்ப்படிவதுதான் முக்கியம்" (22)
சவுல் ராஜாவாக இல்லாதபடி ஒதுக்கித்தள்ளப்படுகிறார் (24-29)
சாமுவேல் ஆகாகைக் கொன்றுபோடுகிறார் (30-35)

16 சாமுவேல் தாவீதை அடுத்த ராஜாவாக அபிஷேகம் செய்கிறார் (1-13)
'யெகோவா இதயத்தைப் பார்க்கிறார்' (7)
கடவுளுடைய சக்தி சவுலைவிட்டு விலகுகிறது (14-17)
தாவீது சவுலுக்கு யாழ் வாசிக்கிறவராக ஆகிறார் (18-23)

17 தாவீது கோலியாத்தைத் தோற்கடிக்கிறார் (1-58)
இஸ்ரவேலர்களிடம் கோலியாத் சவால்விடுகிறான் (8-10)
தாவீது சவாலை ஏற்றுக்கொள்கிறார் (32-37)
தாவீது யெகோவாவின் பெயரில் போர் செய்கிறார் (45-47)

18 தாவீதுக்கும் யோனத்தானுக்கும் இடையிலுள்ள நட்பு (1-4)
தாவீதின் வெற்றிகளைப் பார்த்து சவுல் பொறாமைப்படுகிறார் (5-9)
தாவீதைக் கொல்ல சவுலின் முயற்சி (10-19)
சவுலின் மகளான மீகாளை தாவீது கல்யாணம் செய்கிறார் (20-30)

19 தாவீதின் மேல் சவுலின் வெறுப்பு அதிகமாகிறது (1-13)
சவுலிடமிருந்து தாவீது ஓடிப் போகிறார் (14-24)

20 யோனத்தான் தாவீதுக்கு உண்மையாக இருக்கிறார் (1-42)

21 நோபுவில் தாவீது படையல் ரொட்டியைச் சாப்பிடுகிறார் (1-9)
காத்தில் பைத்தியக்காரன்போல் தாவீது நடிக்கிறார் (10-15)

22 அதுல்லாமிலும் மிஸ்பேவிலும் தாவீது (1-5)
நோபுவைச் சேர்ந்த குருமார்களை சவுல் கொன்றுபோடுகிறார் (6-19)
அபியத்தார் தப்பித்துவிடுகிறார் (20-23)

23 கேகிலா நகரத்தாரை தாவீது காப்பாற்றுகிறார் (1-12)
சவுல் தாவீதை விடாமல் தேடி அலைகிறார் (13-15)
தாவீதை யோனத்தான் பலப்படுத்துகிறார் (16-18)
சவுல் தன்னை நெருங்கிவிட்டபோதும் தாவீது தப்பித்துக்கொள்கிறார் (19-29)

24 தாவீது சவுலைக் கொல்லாமல் விடுகிறார் (1-22)
யெகோவாவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு தாவீது மதிப்புக் கொடுக்கிறார் (6)

25 சாமுவேல் இறந்துபோகிறார் (1)
நாபால் தாவீதின் ஆட்களை அலட்சியப்படுத்துகிறான் (2-13)
அபிகாயில் ஞானமாகச் செயல்படுகிறாள் (14-35)
'யெகோவா உங்களுடைய உயிரைத் தன் பொக்கிஷப் பையில் வைத்துப் பாதுகாப்பார்' (29)
புத்தியில்லாத நாபாலை யெகோவா தண்டிக்கிறார் (36-38)
அபிகாயில் தாவீதின் மனைவி ஆகிறாள் (39-44)

26 தாவீது மறுபடியும் சவுலைக் கொல்லாமல் விடுகிறார் (1-25)
யெகோவாவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு தாவீது மதிப்புக் கொடுக்கிறார் (11)

27 பெலிஸ்தியர்கள் தாவீதுக்கு சிக்லாகு ஊரைக் கொடுக்கிறார்கள் (1-12)

28 ஆவிகளோடு பேசுகிற ஒரு பெண்ணை சவுல் எந்தோரில் சந்திக்கிறார் (1-25)

29 பெலிஸ்தியர்கள் தாவீதை நம்ப மறுக்கிறார்கள் (1-11)

30 அமலேக்கியர்கள் சிக்லாகுவைச் சூறையாடி அதைத் தீ வைத்துக் கொளுத்துகிறார்கள் (1-6)
கடவுளுடைய உதவியால் தாவீது பலம் பெறுகிறார் (6)
தாவீது அமலேக்கியர்களை வீழ்த்துகிறார் (7-31)
பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்களை தாவீது மீட்டுக்கொண்டு வருகிறார் (18, 19)
கைப்பற்றிய பொருள்களைப் பங்கிடுவது பற்றி தாவீது கொடுத்த விதிமுறை (23, 24)

31 சவுலும் அவருடைய மகன்களில் மூன்று பேரும் இறந்துபோகிறார்கள் (1-13)

அதி. 1
a யோசு 16:5
b 1சா 1:19
1சா 7:15, 17
c 1நா 6:22, 27
d யாத் 23:14
யாத் 34:23
உபா 12:5, 6
யோசு 18:1
நியா 21:19
லூ 2:41
e 1சா 2:12, 22
1சா 4:17
f எண் 3:10
உபா 33:10
மல் 2:7
g லேவி 7:15
h உபா 16:16
1சா 2:18, 19

1 எப்பிராயீம்[a] மலைப்பகுதியைச் சேர்ந்த ராமாத்தாயீம்-சோப்பீமில்*[b]
எல்க்கானா[c] என்பவர் வாழ்ந்துவந்தார். அவர் ஓர் எப்பிராயீமியர்.#
அவர் சூப் என்பவருக்குப் பிறந்த தோகுவின் கொள்ளுப்பேரன், எலிகூ
வின் பேரன், எரோகாமின் மகன். **2** அவருக்கு இரண்டு மனைவிகள்
இருந்தார்கள். ஒருத்தி பெயர் அன்னாள், இன்னொருத்தி பெயர் பெனின்
னாள். பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள், ஆனால் அன்னா
ளுக்குப் பிள்ளைகள் இல்லை. **3** பரலோகப் படைகளின் யெகோவாவை
வணங்கி அவருக்குப் பலி செலுத்த எல்க்கானா வருஷா வருஷம் சீலோ
வுக்குப் போனார்.[d] ஏலியின் இரண்டு மகன்களான ஓப்னியும் பினெகாசும்[e]
சீலோவில் யெகோவாவின் சன்னிதியில் குருமார்களாகச் சேவை செய்து
வந்தார்கள்.[f]

4 ஒருநாள், எல்க்கானா பலி செலுத்திவிட்டு, அந்தப் பலியின் பங்
குகளைத் தன்னுடைய மனைவி பெனின்னாளுக்கும் அவளுடைய
எல்லா மகன்களுக்கும் மகள்களுக்கும் கொடுத்தார்.[g] **5** அதேசமயத்தில்,
அன்னாளுக்கு ஒரு விசேஷ பங்கு கொடுத்தார். ஏனென்றால், அவ
ளைத்தான் அவர் ரொம்பவே நேசித்தார். ஆனால், யெகோவா அவ
ளுக்குக் குழந்தை பாக்கியம் தரவில்லை. **6** அதுமட்டுமல்ல, யெகோவா
அவளுக்குக் குழந்தை பாக்கியம் தராததைக் குத்திக்காட்டி பெனின்னாள்
அவளை நோகடித்தாள், அவளைப் பழித்துப் பேசிக்கொண்டே இருந்
தாள். **7** வருஷா வருஷம் யெகோவாவின் சன்னிதிக்கு அன்னாள் போன
போதெல்லாம்[h] இப்படித்தான் அவள் செய்தாள். அன்னாளுக்குக் குழந்தை
இல்லாததை ரொம்பவே குத்திக்காட்டினாள். அதனால் வேதனை தாங்கா
மல் அன்னாள் அழுதுகொண்டே இருந்தாள், சாப்பிடவே இல்லை.
8 அவளுடைய கணவர் எல்க்கானா அவளிடம், “அன்னாள், ஏன் சாப்பி
டாமல் அழுதுகொண்டிருக்கிறாய்? ஏன் இவ்வளவு சோகமாக இருக்கி
றாய்? 10 மகன்களைவிட நான் உனக்கு மேலானவன் இல்லையா?” என்று
கேட்டார்.

9 அவர்கள் சீலோவில் சாப்பிட்டார்கள், குடித்தார்கள். பின்பு அங்கி
ருந்து அன்னாள் எழுந்து போனாள். அந்தச் சமயத்தில், யெகோவாவுடைய

1:1 * வே.வா., “ராமாவில் சோப்பீமியரான.” # எப்பிராயீம் பிரதேசத்தில் குடியிருந்த தால் எப்பிராயீமியர் என்று அழைக்கப்பட்டார், உண்மையில் இவர் ஒரு லேவியர்.

ஆலயத்தின்*[a] கதவுக்குப் பக்கத்தில் குருவாகிய ஏலி ஓர் இருக்கையில் உட்கார்ந்திருந்தார். **10** அன்னாள் ரொம்பவே மனமுடைந்துபோயிருந்தாள். அதனால், தேம்பித் தேம்பி அழுதுகொண்டே யெகோவாவிடம் ஜெபம் செய்தாள்.[b] **11** அப்போது அவள், “பரலோகப் படைகளின் யெகோவாவே, உங்களுடைய அடிமைப்பெண் படுகிற வேதனையைப் பாருங்கள். இந்த அடிமைப்பெண்ணை மறக்காமல் நினைத்துப் பார்த்து ஒரு ஆண் குழந்தையைக் கொடுங்கள்.[c] யெகோவாவே, அவனை வாழ்நாள் முழுக்க உங்களுக்கே அர்ப்பணித்துவிடுகிறேன். அவனுடைய தலைமுடியை நாங்கள் வெட்டவே மாட்டோம்”[d] என்று நேர்ந்துகொண்டாள்.

12 அவள் ரொம்ப நேரம் யெகோவாவிடம் ஜெபம் செய்துகொண்டிருந்தாள். அப்போது, ஏலி அவள் வாயைக் கவனித்துக்கொண்டே இருந்தார். **13** அன்னாள் தன்னுடைய உள்ளத்தில் வேண்டிக்கொண்டிருந்தாள். அவளுடைய உதடுகள் மட்டும்தான் துடித்தன, வெளியே சத்தம் கேட்கவில்லை. அதனால், அவள் குடிபோதையில் இருப்பதாக ஏலி நினைத்துக்கொண்டார். **14** உடனே ஏலி அவளிடம், “ஏன் இப்படிக் குடித்துவிட்டு வந்திருக்கிறாய்? போதை தெளிந்த பிறகு வா” என்று சொன்னார். **15** அதற்கு அன்னாள், “அப்படியில்லை, என் எஜமானே! நான் ரொம்ப வேதனையில் இருக்கிறேன். நான் மதுபானம் எதுவும் குடிக்கவில்லை. என் இதயத்தில் இருப்பதைத்தான் யெகோவாவிடம் கொட்டிக்கொண்டிருந்தேன்.[e] **16** உங்களுடைய அடிமைப்பெண்ணை மட்டமாக நினைத்துவிடாதீர்கள். நான் இவ்வளவு நேரமாக ரொம்பத் துக்கத்தோடும் வேதனையோடும்தான் கடவுளிடம் வேண்டிக்கொண்டிருந்தேன்” என்று சொன்னாள். **17** அப்போது ஏலி, “நிம்மதியாகப் போ. நீ வேண்டிக்கொண்டதை[f] இஸ்ரவேலின் கடவுள் உனக்குத் தருவார்” என்று சொன்னார். **18** அதற்கு அவள், “இந்த அடிமைப்பெண்ணுக்கு எப்போதும் உங்கள் கருணை கிடைக்க வேண்டும்” என்று சொன்னாள். பின்பு அங்கிருந்து போய், சாப்பிட ஆரம்பித்தாள். அதன் பிறகு அவள் முகம் வாடியிருக்கவில்லை.

19 அவர்கள் எல்லாரும் விடியற்காலையில் எழுந்து யெகோவாவை வணங்கினார்கள். பின்பு, ராமாவிலுள்ள தங்களுடைய வீட்டுக்குத்[g] திரும்பிப் போனார்கள். எல்க்கானா தன்னுடைய மனைவி அன்னாளுடன் உறவுகொண்டார். யெகோவா அவளுடைய வேண்டுதலை நினைத்துப் பார்த்தார்.[h] **20** ஒரு வருஷத்துக்குள்* அவள் கர்ப்பமடைந்து ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். அப்போது அவள், “இவனை யெகோவாவிடம் கேட்டுப் பெற்றேன்” என்று சொல்லி, குழந்தைக்கு சாமுவேல்# என்று பெயர் வைத்தாள்.[i]

21 பிற்பாடு எல்க்கானா, யெகோவாவுக்கு வருடாந்தர பலியைச் செலுத்தவும்[j] நேர்ந்துகொண்ட பலியைச் செலுத்தவும் தன்னுடைய குடும்பத்தாரோடு புறப்பட்டார். **22** ஆனால், அன்னாள் அவருடன் போகவில்லை.[k] அவள் அவரிடம், “பிள்ளை தாய்ப்பால் மறந்தவுடனே அவனை யெகோவாவின் சன்னிதிக்குக் கூட்டிக்கொண்டு வருகிறேன். அதன் பின்பு அவன் அங்கேயே இருந்து சேவை செய்யட்டும்”[l] என்று அவரிடம் சொன்னாள். **23** அதற்கு அவளுடைய கணவர் எல்க்கானா, “உனக்கு எது

1:9 *அதாவது, “வழிபாட்டுக் கூடாரத்தின்.” **1:20** *அல்லது, “குறித்த காலத்தில்.” #அர்த்தம், “கடவுளுடைய பெயர்.”

அதி. 1
a யாத் 25:8, 1சா 3:3, 2சா 7:2
b சங் 55:22, சங் 65:2
c ஆதி 30:22
d எண் 6:5
e சங் 42:6, சங் 62:8, சங் 142:2
f 1சா 1:11
g 1சா 1:1
h 1சா 1:11, சங் 66:19, நீதி 15:29
i ஆதி 5:29, ஆதி 41:51, யாத் 2:21, 22, மத் 1:21
j 1சா 1:3
k உபா 16:16
l 1சா 1:11, 1சா 2:11, 2நா 31:16

நல்லதாகப் படுகிறதோ அதையே செய். அவன் தாய்ப்பால் மறக்கும்வரை
வீட்டிலேயே இரு. நீ சொன்னது போல எல்லாம் நல்லபடியாக நடப்பதற்கு
யெகோவா உதவி செய்யட்டும்” என்றார். அதனால், அவள் தன்னுடைய
வீட்டில் தங்கியிருந்து, அவன் தாய்ப்பால் மறக்கும்வரை அவனுக்குப்
பாலூட்டினாள்.

24 அந்தச் சிறுவன் தாய்ப்பால் மறந்தவுடன் அவனைக் கூட்டிக்
கொண்டு சீலோவிலுள்ள யெகோவாவின் சன்னிதிக்குப்[a] போனாள். அப்
போது, மூன்று வயது காளையையும் ஒரு எப்பா அளவு* மாவையும் ஒரு
பெரிய ஜாடி நிறைய திராட்சமதுவையும் கொண்டுபோனாள்.[b] **25** அவர்
கள் அந்தக் காளையைப் பலி கொடுத்த பின்பு சிறுவனை ஏலியிடம்
கொண்டுவந்தார்கள். **26** அப்போது அவள், “என் எஜமானே, உங்கள்
உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* இங்கே உங்களுக்கு முன்
னால் நின்றுகொண்டு யெகோவாவிடம் ஜெபம் செய்த பெண்[c] நான்தான்.
27 இந்தப் பிள்ளைக்காகத்தான் நான் ஜெபம் செய்தேன். யெகோவா நான்
கேட்டதைக் கொடுத்துவிட்டார்.[d] **28** இப்போது நான் இவனை யெகோ
வாவுக்கே திரும்பக் கொடுக்கிறேன். வாழ்நாளெல்லாம் யெகோவாவுக்குச்
சேவை செய்ய இவனை அர்ப்பணிக்கிறேன்” என்று சொன்னாள்.

அங்கே அவர்* யெகோவாவை வணங்கினார்.

2 பின்பு அன்னாள் கடவுளிடம்,
“யெகோவாவே, என் நெஞ்சம் சந்தோஷத்தில் துள்ளுகிறது.[e]
யெகோவாவே, நீங்கள் எனக்குப் பலம் தருகிறீர்கள்.*
என் எதிரிகளுக்கு நான் இனி பதிலடி கொடுப்பேன்.
நீங்கள் தரும் மீட்பினால் எனக்குள் சந்தோஷம் பொங்குகிறது.
2 யெகோவாவே, உங்களைப் போலப் பரிசுத்தமானவர் யாரும் இல்லை,
உங்களைத் தவிர யாருமே இல்லை.[f]
எங்கள் கடவுளே, உங்களைப் போல நம்பகமானவர்* யாரும்
இல்லை.[g]
3 இனிமேல் யாரும் அகங்காரத்தோடு பேசக் கூடாது,
ஆணவத்தோடு எதையும் சொல்லக் கூடாது.
யெகோவாவே, நீங்கள் எல்லாமே தெரிந்தவர்,*[h]
மனிதர்களுடைய செயல்களைச் சரியாக எடை போடுகிறவர்.
4 பலசாலிகளின் வில் முறிகிறது.
பலம் இல்லாதவர்களுக்குப் பலம் கிடைக்கிறது.[i]
5 வயிறார சாப்பிட்டவர்கள் இனி வயிற்றுப்பாட்டுக்காக வேலை
செய்வார்கள்.
பசியால் வாடியவர்கள் இனி வயிறார சாப்பிடுவார்கள்.[j]
பிள்ளை இல்லாதவள் ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுப்பாள்.[k]
நிறைய பிள்ளைகளைப் பெற்றவளுக்கு இனி பிள்ளையே பிறக்காது.

1:24 *அதாவது, “சுமார் 10 கிலோ.” **1:26** *வே.வா., “நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **1:28** *அநேகமாக, “எல்க்கானா.” **2:1** *நே.மொ., “என் கொம்பு யெகோவாவினால் உயர்த்தப்படுகிறது.” சொல் பட்டியலில் “கொம்பு” என்ற தலைப்பைப் பாருங்கள். **2:2** *நே.மொ., “கற்பாறை.” **2:3** *வே.வா., “எல்லா அறிவும் உள்ள கடவுள்.”

அதி. 1
a யோசு 18:1
b எண் 15:8-10
c 1சா 1:15
d 1சா 1:11, 17; சங் 66:19

அதி. 2
e சங் 13:6; லூ 1:46
f யாத் 15:11; உபா 4:35; சங் 73:25; சங் 86:8; சங் 89:6
g உபா 32:4
h யோபு 36:4; யோபு 37:16; ரோ 11:33
i ஏசா 40:29
j லூ 1:53
k 1சா 1:11, 20

6 யெகோவாவே, உங்களால் உயிரை அழிக்கவும் முடியும்,
காப்பாற்றவும் முடியும்,
ஒருவரைக் கல்லறைக்கு அனுப்பவும் முடியும், அங்கிருந்து எழுப்பவும்
முடியும்.[a]
7 யெகோவாவே, உங்களால் ஒருவரை ஏழையாக்கவும் முடியும்,
பணக்காரராக்கவும் முடியும்,[b]
தாழ்த்தவும் முடியும், உயர்த்தவும் முடியும்.[c]
8 நீங்கள் எளியவர்களைப் புழுதியிலிருந்து எழுப்புகிறீர்கள்.
ஏழைகளைச் சாம்பலிலிருந்து* தூக்கிவிடுகிறீர்கள்.[d]
உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களோடு அவர்களை உட்கார
வைக்கிறீர்கள்.
அவர்களுக்குக் கௌரவமான இடத்தைத் தருகிறீர்கள்.
யெகோவாவே, பூமியின் அஸ்திவாரங்கள் உங்களுக்குத்தான்
சொந்தம்.[e]
அவற்றின் மேல் பூமியை நிறுத்தியவர் நீங்கள்தான்.
9 உண்மையுள்ளவர்கள்* எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியையும்
காக்கிறீர்கள்.[f]
கெட்டவர்களை இருட்டில் சமாதியாக்குகிறீர்கள்.[g]
எந்த மனிதனும் சொந்த பலத்தால் ஜெயிக்க முடியாது.[h]
10 யெகோவாவே, உங்களை எதிர்த்து நிற்பவர்களை நொறுக்குவீர்கள்.*[i]
கோபத்தில் வானத்திலிருந்து இடிபோல் முழங்குவீர்கள்.[j]
யெகோவாவே, நீங்கள் முழு பூமிக்கும் நீதி வழங்குவீர்கள்.[k]
நீங்கள் ராஜாவாகத் தேர்ந்தெடுத்தவருக்கு அதிகாரம் தருவீர்கள்.[l]
நீங்கள் தேர்ந்தெடுத்தவருக்குப்[m] பலம் கொடுப்பீர்கள்"# என்று ஜெபம்
செய்தாள்.

11 பின்பு, ராமாவிலுள்ள தன்னுடைய வீட்டுக்கு எல்க்கானா போனார்.
அந்தச் சிறுவன், குருவாகிய ஏலியின் தலைமையில் யெகோவாவுக்குச்
சேவை செய்துவந்தான்.[n]

12 ஏலியின் மகன்கள் கெட்டவர்களாக இருந்தார்கள்.[o] யெகோவா
வைத் துளியும் மதிக்கவில்லை. **13** ஜனங்கள் செலுத்தும் பலிகளிலி
ருந்து குருமார்களுக்கான பங்கை எடுத்துக்கொள்ளும் விஷயத்தில்,[p] ஏலி
யின் மகன்கள் முறைகேடாக நடந்துகொண்டார்கள். யாராவது பலி
செலுத்தினால், குருவானவரின் பணியாள் பெரிய முள்கரண்டியைக் கொண்
டுவந்து இறைச்சி வேகும்போதே பானையிலோ பாத்திரத்திலோ விடுவான்.
14 பின்பு, அந்த முள்கரண்டியில் சிக்குவதையெல்லாம் குருவானவருக்
காக எடுத்துக்கொள்வான், குருவானவரும் வாங்கிக்கொள்வார். சீலோவுக்கு
வரும் இஸ்ரவேலர்கள் எல்லாரிடமும் அவர்கள் இப்படித்தான் நடந்துகொள்
வார்கள். **15** அதோடு, பலி செலுத்துகிறவர் கொழுப்பைத் தகனிப்பதற்கு
முன்பே[q] குருவானவரின் பணியாள் வந்து, "இறைச்சியை குருவானவருக்

2:8 *அல்லது, "குப்பைமேட்டிலிருந்து." **2:9** *வே.வா., "பற்றுமாறாதவர்கள்." **2:10** *அல்லது, "உங்களோடு மோதுகிறவர்கள் கதிகலங்கிப்போவார்கள்." #நே.மொ., "உங்களால் அபிஷேகம் செய்யப்பட்டவரின் கொம்பை உயர்த்துவீர்கள்." சொல் பட்டியலில் "கொம்பு" என்ற தலைப்பைப் பாருங்கள்.

அதி. 2
a உபா 32:39
யோபு 14:13
சங் 30:3
சங் 49:15
சங் 68:20
ஓசி 13:14
யோவா 11:24
1கொ 15:55
b உபா 8:18
உபா 28:12
2நா 1:11, 12
யோபு 42:12
நீதி 10:22
c சங் 75:7
d சங் 113:5, 7
லூ 1:52
e சங் 102:25
f சங் 91:11
சங் 97:10
சங் 121:3
g சங் 37:28
h சங் 33:16
சக 4:6
i யாத் 15:6
j 1சா 7:10
2சா 22:14
சங் 18:13
k சங் 96:13
அப் 17:31
l சங் 2:6
சங் 110:1
மத் 28:18
m லூ 1:70
அப் 4:27
n 1சா 1:11
1சா 3:1, 15
o 1சா 2:22
p லேவி 7:34
q லேவி 3:3-5

குச் சுட்டுக் கொடுக்க வேண்டும். வெந்த கறி வேண்டாம், பச்சைக் கறியைத்
தா. அதைத்தான் அவர் வாங்கிக்கொள்வார்" என்று கேட்பான். **16** அதற்கு
அந்த நபர், "அவர்கள் முதலில் கொழுப்பைத் தகனிக்கட்டும்,[a] பின்பு என்ன
வேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்வார். ஆனால்
அந்தப் பணியாள், "வேண்டாம், இப்போதே தா. நீ தராவிட்டால், நானே
எடுத்துக்கொள்வேன்!" என்று சொல்வான். **17** இப்படி, அந்தப் பணியாட்க
ளும் யெகோவாவின் பார்வையில் மிக மோசமான பாவத்தைச் செய்தார்
கள்.[b] யெகோவாவுக்குச் செலுத்தப்பட்ட பலியை அந்த ஆட்கள் கொஞ்சம்
கூட மதிக்கவில்லை.

18 அப்போது, சாமுவேல் யெகோவாவின் முன்னிலையில் சேவை செய்
துவந்தான்.[c] அவன் சிறுவனாக இருந்தாலும் நாரிழை* ஏபோத்தைப் போட்
டிருந்தான்.[d] **19** அதோடு, கையில்லாத சின்ன அங்கி ஒன்றை வருஷா
வருஷம் அவனுடைய அம்மா தைத்துக்கொண்டு வருவாள், வருடாந்தர
பலி செலுத்த[e] கணவரோடு வரும்போது அதை அவனுக்குக் கொடுப்பாள்.
20 ஏலி ஒருசமயம் எல்க்கானாவிடமும் அன்னாளிடமும், "நீங்கள் யெகோ
வாவுக்கு அர்ப்பணித்த இந்தப் பிள்ளைக்குப்[f] பதிலாக வேறொரு பிள்
ளையை யெகோவா உங்களுக்குக் கொடுப்பார்" என்று சொல்லி ஆசீர்வதித்
தார். பின்பு, அவர்கள் வீட்டுக்குத் திரும்பிப் போனார்கள். **21** யெகோவா
அன்னாளுக்குக் கருணை காட்டினார்.[g] அவள் இன்னும் மூன்று மகன்க
ளையும் இரண்டு மகள்களையும் பெற்றெடுத்தாள். சிறுவன் சாமுவேல்
யெகோவாவின் முன்னிலையில் வளர்ந்துவந்தான்.[h]

22 அப்போது, ஏலி மிகவும் வயதானவராக இருந்தார். தன்னுடைய மகன்
கள் இஸ்ரவேலர்களிடம் நடந்துகொண்ட விதத்தைப்[i] பற்றியெல்லாம் அவர்
கேள்விப்பட்டார். சந்திப்புக் கூடாரத்தின் வாசலில் சேவை செய்த பெண்க
ளோடு அவர்கள் உறவுகொண்ட விஷயத்தையும்[j] கேள்விப்பட்டார்.
23 அதனால் அவர்களிடம், "ஏன் இப்படியெல்லாம் செய்கிறீர்கள்? நீங்கள்
செய்கிற கெட்ட காரியங்களைப் பற்றி எல்லாரும் என்னிடம் சொல்கிறார்கள்.
24 அப்படிச் செய்யாதீர்கள், என் பிள்ளைகளே. யெகோவாவின் ஜனங்களி
டமிருந்து நான் உங்களைப் பற்றி ஒரு நல்ல விஷயத்தைக்கூட கேள்விப்
படவில்லை. **25** ஒருவன் இன்னொருவனுக்கு விரோதமாகப் பாவம் செய்
தால், பாவம் செய்தவனுக்கு உதவச் சொல்லி யாராவது யெகோவாவிடம்
கேட்க முடியும்.* ஆனால், ஒருவன் யெகோவாவுக்கு விரோதமாகவே
பாவம் செய்தால்,[k] யார் அவனுக்காக வேண்டிக்கொள்ள முடியும்?" என்று
சொல்லிக்கொண்டே இருந்தார். ஆனால், அவர்கள் தங்களுடைய அப்பா
வின் பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அதனால், அவர்களை
அழிக்க யெகோவா முடிவுசெய்தார்.[l] **26** இதற்கிடையில், சிறுவன் சாமு
வேல் பெரியவனாக வளர்ந்து, யெகோவாவுக்கும் ஜனங்களுக்கும் மிகவும்
பிரியமானவனாக இருந்தான்.[m]

27 கடவுளால் அனுப்பப்பட்ட ஒருவர் ஏலியிடம் வந்து, "யெகோவா
சொல்வது என்னவென்றால், 'உன் மூதாதையின் வம்சத்தார் எகிப்தில்
பார்வோனுக்கு அடிமைகளாக இருந்தபோது நான் அவர்களுக்கு என்
னைப் பற்றித் தெரியப்படுத்தினேன்.[n] **28** என் சன்னிதியில் குருவாகச்

2:18 * அதாவது, "லினன்." **2:25** * அல்லது, "கடவுள் அவர்கள் இரண்டு பேருக்கும் நடுவில் நீதிபதியாக இருந்து தீர்ப்பு சொல்ல முடியும்."

அதி. 2
a லேவி 3:16; லேவி 7:25, 31
b 1சா 2:29
c 1சா 2:11; 1சா 3:15
d 2சா 6:14
e யாத் 23:14; 1சா 1:3, 21
f 1சா 1:27, 28
g ஆதி 21:1, 2; 1சா 1:19
h 1சா 2:26; 1சா 3:19
i 1சா 2:12-17
j யாத் 38:8; லேவி 21:6
k எண் 15:31; 1சா 2:17; 1சா 3:13, 14
l நீதி 29:1; நீதி 30:17
m 1சா 2:21
n யாத் 4:14, 27

சேவை செய்யவும், என் பலிபீடத்தில்[a] பலிகள் செலுத்தவும், தூபம் காட்
டவும்,* ஏபோத்தைப் போட்டுக்கொள்ளவும் இஸ்ரவேலின் எல்லா கோத்
திரத்திலிருந்தும் உன் மூதாதையைத் தேர்ந்தெடுத்தேன்.[b] இஸ்ரவேலர்கள்
எனக்குக் கொண்டுவந்த தகன பலிகளில் அவனுக்கும் அவன் வம்சத்தா
ருக்கும் பங்கு கொடுத்தேன்.[c] **29** ஆனால், இப்போது நீயும் உன் மகன்க
ளும் என் சன்னிதியில்[d] நான் செலுத்தச் சொன்ன பலிகளையும் காணிக்
கைகளையும் ஏன் அவமதிக்கிறீர்கள்?* ஏன் என்னுடைய ஜனங்கள்
செலுத்துகிற எல்லா பலிகளிலிருந்தும் மிகச் சிறந்ததைத் தின்று கொழுத்
துப்போகிறீர்கள்? நீ ஏன் என்னைவிட உன் மகன்களுக்கு அதிக மதிப்புக்
கொடுக்கிறாய்?[e]

30 “உன் மூதாதையின் வம்சத்தாரும் உன் வம்சத்தாரும் என்றென்
றும் என் சன்னிதியில் சேவை செய்வார்கள் என்று நான் சொன்னது
உண்மைதான்”[f] என இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்கிறார்.
ஆனால், “இனி அப்படி நடக்காது. ஏனென்றால், என்னை மதிக்கிறவர்களை
நான் மதிப்பேன்,[g] என்னை அவமதிக்கிறவர்கள் அவமதிக்கப்படுவார்கள்”
என்று யெகோவா சொல்கிறார். **31** ஒரு காலம் வரும், அப்போது உன்
பலத்தையும் உன் முன்னோர்களுடைய வம்சத்தாரின் பலத்தையும் அழிப்
பேன். அதனால், உன் வம்சத்தாரில் ஒருவன்கூட முதிர்வயதுவரை உயிரோ
டிருக்க மாட்டான்.[h] **32** இஸ்ரவேலர்கள் என்னுடைய ஆசீர்வாதங்களை
அனுபவிக்கும்போது, நான் குடியிருக்கிற இடத்தில் நீ எதிரியைப் பார்ப்
பாய்.[i] உன் வம்சத்தில் இனி யாரும் முதிர்வயதுவரை உயிரோடிருக்க
மாட்டார்கள். **33** என் பலிபீடத்தில் சேவை செய்ய உன் வம்சத்தில் நான்
யாரை விட்டுவைக்கிறேனோ, அவனால் உன் கண்கள் இருண்டுபோ
கும், உன் மனம் துக்கத்தில் துவண்டுபோகும். உன் வம்சத்தாரில் ஏராள
மானவர்கள் வாளுக்குப் பலியாவார்கள்.[j] **34** நான் சொன்னதெல்லாம்
நடக்கும் என்பதற்கு அடையாளமாக, உன் மகன்கள் ஓப்னியும் பினெகா
சும் ஒரே நாளில் செத்துப்போவார்கள்.[k] **35** பின்பு, உண்மையுள்ள* ஒரு
வனை குருவாக நான் நியமிப்பேன்.[l] அவன் என்னுடைய நெஞ்சத்துக்குப்
பிரியமாக நடப்பான். நான் அவனுக்கு நிரந்தரமான வீட்டைக் கட்டுவேன்.#
நான் தேர்ந்தெடுத்தவருக்கு முன்னால் அவன் என்றென்றும் சேவை செய்
வான். **36** உன் வம்சத்தாரில் யாராவது மீதியிருந்தால் கூலிக்காகவும்
ரொட்டிக்காகவும் அவன் முன்னால் தலைவணங்கி, “என் வயிற்றுப்பாட்டுக்
காக என்னையும் தயவுசெய்து குருத்துவச் சேவையில் சேர்த்துக்கொள்ளுங்
கள்”[m] என்று கெஞ்சுவார்கள்’” என்று சொன்னார்.

3 இதற்கிடையில், சிறுவன் சாமுவேல் ஏலியின் தலைமையில் யெகோ
வாவுக்குச் சேவை செய்துவந்தான்.[n] அந்தக் காலத்தில் யெகோவாவி
டமிருந்து செய்தி வருவது அபூர்வமாக இருந்தது, தரிசனங்களும்[o] அவ்வ
ளவாகக் கிடைக்கவில்லை.

2 ஒருநாள், ஏலி வழக்கமாகத் தூங்கும் இடத்தில் தூங்கிக்கொண்டி
ருந்தார். அவருடைய கண்பார்வை மங்கியிருந்ததால் அவரால் பார்க்க முடி

2:28 * அல்லது, “தகன பலிகளை எரிக்கவும்.” **2:29** * நே.மொ., “எட்டி உதைக்கிறீர்கள்?” **2:35** * வே.வா., “நம்பகமான.” # அதாவது, “என்றென்றும் எனக்குக் குருமார்களாகச் சேவை செய்யும் வாய்ப்பை அவனுடைய வம்சத்தாருக்குக் கொடுப்பேன்.”

அதி. 2
a எண் 18:7
b யாத் 28:1; லேவி 8:12; எண் 17:5, 8
c லேவி 2:3; லேவி 6:16; லேவி 10:14; எண் 5:9; எண் 18:9
d யாத் 25:8; யோசு 18:1; 1சா 1:3
e 1சா 2:14-16
f யாத் 28:43
g சங் 18:20; சங் 91:14
h 1சா 3:14; 1சா 4:11, 18; 1சா 22:18; 1ரா 2:27
i சங் 78:60, 61
j 1சா 22:18, 21
k 1சா 4:11, 17
l 1ரா 2:27, 35; 1நா 29:22
m லேவி 2:3; எண் 5:9

அதி. 3
n 1சா 2:11, 18
o எண் 12:6; 1நா 17:15

யவில்லை.[a] **3** கடவுளுடைய விளக்கு[b] இன்னும் எரிந்துகொண்டிருந்தது.
சாமுவேல் யெகோவாவின் பெட்டி வைக்கப்பட்டிருந்த ஆலயத்தில்* படுத்
திருந்தான்.[c] **4** அப்போது, யெகோவா சாமுவேலைக் கூப்பிட்டார். அதற்கு
அவன், “இதோ, வந்துவிட்டேன்” என்று சொன்னான். **5** அவன் ஏலியிடம்
ஓடிவந்து, “என்னைக் கூப்பிட்டீர்களா?” என்று கேட்டான். அதற்கு அவர்,
“நான் உன்னைக் கூப்பிடவில்லையே. நீ போய்ப் படுத்துக்கொள்” என்று
சொன்னார். அவன் போய்ப் படுத்துக்கொண்டான். **6** யெகோவா மறுபடி
யும், “சாமுவேல்!” என்று கூப்பிட்டார். உடனே, சாமுவேல் எழுந்து ஏலியி
டம் போய், “என்னைக் கூப்பிட்டீர்களா?” என்று கேட்டான். ஆனால்
ஏலி, “நான் உன்னைக் கூப்பிடவில்லை, மகனே. நீ போய்ப் படுத்துக்கொள்”
என்று சொன்னார். **7** அப்போது, யெகோவாவைப் பற்றி சாமுவேலுக்கு
முழுமையாகத் தெரிந்திருக்கவில்லை, யெகோவாவிடமிருந்து அவனுக்கு
எந்தச் செய்தியும் அதுவரை கிடைக்கவில்லை.[d] **8** யெகோவா மூன்றாவது
தடவை, “சாமுவேல்!” என்று கூப்பிட்டார். உடனே, அவன் எழுந்து ஏலியி
டம் போய், “என்னைக் கூப்பிட்டீர்களா?” என்று கேட்டான்.

அந்தச் சிறுவனைக் கூப்பிட்டது யெகோவாதான் என்பதை அப்போது
ஏலி புரிந்துகொண்டார். **9** அதனால் அவர் சாமுவேலிடம், “நீ போய்ப்
படுத்துக்கொள். அவர் மறுபடியும் கூப்பிட்டால், ‘சொல்லுங்கள் யெகோ
வாவே, அடியேன் கேட்கிறேன்’ என்று சொல்” என்றார். அதனால், சாமு
வேல் போய் அவனுடைய இடத்தில் படுத்துக்கொண்டான்.

10 யெகோவா அங்கே வந்து நின்று, “சாமுவேல், சாமுவேல்!”
என்று மறுபடியும் கூப்பிட்டார். உடனே சாமுவேல், “சொல்லுங்கள், அடி
யேன் கேட்கிறேன்” என்றான். **11** அப்போது யெகோவா சாமுவேலிடம்,
“நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்யப்போகிறேன். அதைக் கேட்
கிற எவனும் அதிர்ச்சி அடைவான்.*[e] **12** ஏலியின் குடும்பத்தாரைப்
பற்றி நான் சொன்ன எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் அந்த நாளில்
நிறைவேற்றுவேன்.[f] **13** அவனுடைய குடும்பத்தாரை என்றென்றும் தண்
டிப்பேன் என்று நீ அவனிடம் சொல். அவனுடைய மகன்கள் என்னை அவ
மதிக்கிறார்கள்,[g] அவர்கள் செய்கிற அக்கிரமங்களைப் பற்றித் தெரிந்திருந்
தும்[h] அவர்களை அவன் கண்டிக்கவில்லை.[i] **14** அதனால்தான், ஏலியின்
குடும்பத்தாருடைய அக்கிரமத்துக்கு எந்தப் பலிகளையும் காணிக்கைகளை
யும் கொடுத்து பரிகாரம் செய்ய முடியாதென்று[j] அவர்களுக்கு ஆணையிட்
டுச் சொல்லியிருக்கிறேன்” என்றார்.

15 காலைவரை சாமுவேல் தூங்கிக்கொண்டிருந்தான். பின்பு, எழுந்து
யெகோவாவின் ஆலயக் கதவுகளைத் திறந்தான். அந்தத் தரிசனத்தைப்
பற்றி ஏலியிடம் சொல்வதற்குப் பயந்தான். **16** ஆனால் ஏலி, “சாமு
வேலே, என் மகனே!” என்று கூப்பிட்டார். அதற்கு அவன், “கூப்பிட்டீர்
களா?” என்று கேட்டான். **17** அப்போது அவர், “கடவுள் உன்னிடம்
என்ன சொன்னார்? தயவுசெய்து சொல், என்னிடம் எதையும் மறைக்காதே.
ஒரு வார்த்தையை நீ மறைத்தால்கூட, கடவுள் உன்னைக் கடுமையாகத்
தண்டிப்பார்” என்று சொன்னார். **18** அதனால், கடவுள் சொன்ன எதையும்
மறைக்காமல் எல்லாவற்றையும் சாமுவேல் சொன்னான். அப்போது ஏலி

அதி. 3
a 1சா 4:15
b லேவி 24:2
c 1சா 1:9; 1சா 3:15
d ஆமோ 3:7
e 1சா 4:17
f எண் 23:19; 1சா 2:31-34; ஏசா 55:10, 11
g எண் 15:30; 1சா 2:12, 17
h 1சா 2:22, 23; யோவா 15:22; யாக் 4:17
i பிர 8:11
j 1சா 4:11; 1சா 22:21; 1ரா 2:27

3:3 * அதாவது, “வழிபாட்டுக் கூடாரத்தில்.” **3:11** * நே.மொ., “அதைக் கேட்கிற எவனுடைய காதும் கூசும்.”

அவனிடம், “இது யெகோவாவின் சித்தம். அவருக்குச் சரியென்று படுவதை
அவர் செய்யட்டும்” என்று சொன்னார்.

19 சாமுவேல் பெரியவனாக வளர்ந்துவந்தான், யெகோவா அவனுக்குத்
துணையாக இருந்தார்.[a] அவன் மூலம் சொன்ன எல்லாவற்றையும் அவர்
நிறைவேற்றினார். **20** அதனால், சாமுவேல் யெகோவாவின் தீர்க்கதரிசி
என்பதை தாண்முதல் பெயெர்-செபாவரை உள்ள இஸ்ரவேலர்கள் எல்லா
ரும் தெளிவாகத் தெரிந்துகொண்டார்கள். **21** யெகோவா சீலோவில்
தொடர்ந்து தரிசனம் தந்தார். அங்கே யெகோவா சாமுவேலுக்குத் தன்னை
வெளிப்படுத்தினார், அதாவது தன்னுடைய செய்திகளின் மூலம் யெகோவா
தன்னைப் பற்றித் தெரியப்படுத்தினார்.[b]

4 கடவுளுடைய செய்திகளை இஸ்ரவேலர்களுக்கு சாமுவேல் சொல்லி
வந்தார்.

ஒருசமயம், பெலிஸ்தியர்களை எதிர்த்துப் போர் செய்ய இஸ்ரவேலர்
கள் புறப்பட்டுப் போய், எபெனேசருக்குப் பக்கத்தில் முகாம்போட்டார்கள்.
பெலிஸ்தியர்களும் ஆப்பெக்கில் முகாம்போட்டிருந்தார்கள். **2** அவர்கள்
அணிவகுத்து நின்று இஸ்ரவேலர்களோடு போர் செய்தார்கள். அந்தப் போர்
இஸ்ரவேலர்களுக்குச் சாதகமாக இருக்கவில்லை. பெலிஸ்தியர்கள் இஸ்ரவே
லர்களைத் தோற்கடித்து, சுமார் 4,000 வீரர்களைப் போர்க்களத்தில் வெட்டிச்
சாய்த்தார்கள். **3** மற்ற வீரர்கள் முகாமுக்குத் திரும்பியபோது இஸ்ரவேல்
பெரியோர்கள்* அவர்களிடம், “இன்று யெகோவா ஏன் நம்மை பெலிஸ்தி
யர்களிடம் தோற்றுப்போக விட்டுவிட்டார்?[c] யெகோவாவின் ஒப்பந்தப்
பெட்டியை சீலோவிலிருந்து எடுத்துவருவோம்,[d] அது நமக்குத் துணையாக
இருக்கும், எதிரிகளிடமிருந்து நம்மைக் காப்பாற்றும்” என்று சொன்னார்கள்.
4 அதனால், வீரர்கள் சீலோவுக்கு ஆட்களை அனுப்பி, கேருபீன்களுக்கு
மேலாக* சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும்[e] பரலோகப் படைகளின்
யெகோவாவுடைய ஒப்பந்தப் பெட்டியை அங்கிருந்து தூக்கிக்கொண்டு வந்
தார்கள். ஏலியின் இரண்டு மகன்களான ஓப்னியும் பினெகாசும்[f] உண்மைக்
கடவுளின் ஒப்பந்தப் பெட்டியோடு இருந்தார்கள்.

5 முகாமுக்குள் யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டி வந்தவுடன், இஸ்ர
வேலர்கள் எல்லாரும் சந்தோஷமாகக் கோஷம்போட்டார்கள், அதனால்
அந்த இடமே அதிர்ந்தது. **6** பெலிஸ்தியர்கள் அந்தக் கோஷத்தைக் கேட்
டதும், “எபிரெயர்களுடைய முகாமில் ஏன் இவ்வளவு சத்தம்?” என்று கேட்
டார்கள். பின்பு, யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டி அங்கு வந்திருப்பதைத்
தெரிந்துகொண்டார்கள். **7** “இஸ்ரவேலர்களின் முகாமுக்குள் கடவுள் வந்
துவிட்டார்!” என்று சொல்லி பெலிஸ்தியர்கள் பயந்து நடுங்கினார்கள்.[g] அத
னால், “ஐயோ, ஆபத்து! இதுபோல் ஒருபோதும் நடந்ததில்லை!
8 ஐயோ, ஆபத்து வந்துவிட்டது! மகத்தான இந்தத் தெய்வத்திடமி
ருந்து யார் நம்மைக் காப்பாற்றுவார்கள்? வனாந்தரத்தில் எகிப்தியர்களைக்
கொன்று குவித்தது இந்தத் தெய்வம்தான்![h] **9** பெலிஸ்தியர்களே, தைரிய
மாக இருங்கள். துணிந்து போர் செய்யுங்கள். அப்போதுதான், எபிரெயர்கள்
உங்களுக்கு அடிமைகளாக ஆனதுபோல்[i] நீங்கள் அவர்களுக்கு அடிமை
களாக ஆகமாட்டீர்கள். வீரத்தோடு போர் செய்யுங்கள்!” என்று சொன்னார்
கள். **10** அதன்படியே, பெலிஸ்தியர்கள் போர் செய்து இஸ்ரவேலர்களைத்

4:3 * வே.வா., “மூப்பர்கள்.” **4:4** * அல்லது, “நடுவில்.”

அதி. 3
a 1சா 2:21
b 1சா 3:1, 4; சங் 99:6

அதி. 4
c உபா 28:15, 25; உபா 32:30; நியா 2:14
d 2சா 15:25
e யாத் 25:18; எண் 7:89; 2ரா 19:15; சங் 80:1
f 1சா 2:12
g யாத் 14:25; யாத் 15:14
h யாத் 7:5; சங் 78:43, 51
i உபா 28:48; நியா 10:7; நியா 13:1

தோற்கடித்தார்கள்.[a] இஸ்ரவேலர்கள் அவரவர் கூடாரத்துக்குத் தப்பியோ
டினார்கள். ஆனால், ஏராளமான வீரர்கள் பெலிஸ்தியர்களின் வாளுக்குப்
பலியானார்கள். காலாட்படை வீரர்களில் 30,000 பேர் செத்து விழுந்தார்கள்.
11 கடவுளுடைய பெட்டியும் கைப்பற்றப்பட்டது. ஏலியின் இரண்டு மகன்
களான ஓப்னியும் பினெகாசும் செத்துப்போனார்கள்.[b]

12 அன்று ஒரு பென்யமீனியன் தன்னுடைய உடையைக் கிழித்துக்
கொண்டும், தன் தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்டும்[c] போர்க்
களத்திலிருந்து சீலோவுக்கு ஓடிவந்தான். **13** அப்போது, ஏலி வழியோர
மாக இருந்த ஓர் இருக்கையில் உட்கார்ந்தபடி காத்துக்கொண்டிருந்தார்.
ஏனென்றால், உண்மைக் கடவுளின் பெட்டியை நினைத்து அவருடைய
நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது.[d] அந்த ஆள் நகரத்துக்
குள் வந்து செய்தியைச் சொன்னான். நகரத்தார் எல்லாரும் அழுது
புலம்ப ஆரம்பித்தார்கள். **14** அழுகுரலைக் கேட்ட ஏலி, “ஏன் ஒரே
கூச்சல் குழப்பமாக இருக்கிறது?” என்று கேட்டார். அந்த ஆள் வேகமாக
ஓடிவந்து ஏலியிடம் விஷயத்தைச் சொன்னான். **15** அப்போது ஏலிக்கு
98 வயது, அவருக்குக் கண் தெரியவில்லை.[e] **16** அந்த ஆள் ஏலியி
டம், “நான் போர்க்களத்திலிருந்து வந்திருக்கிறேன். இன்றைக்குத்தான் அங்
கிருந்து தப்பித்து வந்திருக்கிறேன்” என்றான். அதற்கு ஏலி, “என் மகனே,
என்ன நடந்தது?” என்று கேட்டார். **17** செய்தி கொண்டுவந்த அந்த ஆள்
அவரிடம், “இஸ்ரவேலர்கள் படுதோல்வி அடைந்துவிட்டார்கள்.[f] பெலிஸ்
திய வீரர்களிடமிருந்து பயந்து ஓடிவிட்டார்கள். உங்களுடைய இரண்டு
மகன்கள் ஓப்னியும் பினெகாசும் இறந்துவிட்டார்கள்.[g] அதுமட்டுமல்ல,
உண்மைக் கடவுளின் பெட்டியை எதிரிகள் கைப்பற்றிவிட்டார்கள்”[h] என்று
சொன்னான்.

18 உண்மைக் கடவுளின் பெட்டியைப் பற்றிச் சொன்னதும், நகரவாசலுக்
குப் பக்கத்திலிருந்த இருக்கையில் உட்கார்ந்திருந்த ஏலி அப்படியே மல்
லாக்க விழுந்தார். அவர் வயதானவராகவும் தடித்தவராகவும் இருந்ததால்,
விழுந்ததுமே அவருடைய கழுத்து முறிந்து, இறந்துபோனார். இஸ்ரவேலர்
களுக்கு 40 வருஷங்கள் அவர் நியாயாதிபதியாக இருந்தார். **19** அவரு
டைய மருமகளான பினெகாசின் மனைவி நிறைமாத கர்ப்பிணியாக
இருந்தாள். உண்மைக் கடவுளின் பெட்டி கைப்பற்றப்பட்டதைப் பற்றி
யும், தன்னுடைய மாமனாரும் கணவரும் இறந்துபோனதைப் பற்றியும்
கேள்விப்பட்டவுடன், அதிர்ச்சியில் அவளுக்குப் பிரசவ வலி வந்தது. அப்
படியே வயிற்றைப் பிடித்துக்கொண்டு குனிந்தாள், அவளுக்குக் குழந்தை
பிறந்தது. **20** அவளுடைய உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தபோது, பக்கத்
தில் நின்ற ஒரு பெண் அவளிடம், “பயப்படாதே, உனக்கு ஒரு மகன் பிறந்தி
ருக்கிறான்” என்று சொன்னாள். ஆனால், அவள் அதைக் காதில் வாங்கவும்
இல்லை, அதற்குப் பதில் சொல்லவும் இல்லை. **21** ஆனால், உண்மைக்
கடவுளின் பெட்டி கைப்பற்றப்பட்டதாலும் தன்னுடைய மாமனாரும் கண
வரும் இறந்ததாலும்,[i] “இஸ்ரவேலைவிட்டு மகிமை போய்விட்டதே!”[j]
என்று சொல்லி, அந்தக் குழந்தைக்கு இக்கபோத்*[k] என்று பெயர் வைத்
தாள். **22** “உண்மைக் கடவுளின் பெட்டி கைப்பற்றப்பட்டதால் இஸ்ரவே
லைவிட்டு மகிமை போய்விட்டதே”[l] என்று சொன்னாள்.

அதி. 4
a லேவி 26:14, 17; உபா 28:25; 1சா 4:2
b 1சா 2:31, 34; 1சா 4:3, 17; சங் 78:61, 64
c யோசு 7:6
d 1சா 4:4
e 1சா 3:2
f 1சா 3:11
g 1சா 2:34
h 1சா 4:10, 11
i 1சா 2:32, 34; 1சா 4:5, 11
j சங் 78:61
k 1சா 14:3
l 1சா 4:11; எரே 7:12

4:21 * அர்த்தம், “மகிமை எங்கே?”

5 உண்மைக் கடவுளுடைய பெட்டியைக் கைப்பற்றிய[a] பெலிஸ்தியர்கள்,
அதை எபெனேசரிலிருந்து அஸ்தோத்துக்குக் கொண்டுபோனார்கள்.
2 அந்தப் பெட்டியை தாகோன் கோயிலில்* இருந்த தாகோன்[b] சிலையின்
பக்கத்தில் வைத்தார்கள். **3** அஸ்தோத் ஊர்க்காரர்கள் அடுத்த நாள் விடி
யற்காலையில் வந்து பார்த்தபோது, யெகோவாவின் பெட்டிக்கு முன்னால்
தாகோன் சிலை தரையில் குப்புற விழுந்துகிடப்பதைப் பார்த்தார்கள்.[c]
அதனால், அவர்கள் அந்தச் சிலையைத் தூக்கி, அதன் இடத்தில் வைத்
தார்கள்.[d] **4** அவர்கள் அடுத்த நாள் விடியற்காலையிலும் வந்து பார்த்த
போது, யெகோவாவின் பெட்டிக்கு முன்னால் தாகோன் சிலை தரையில்
குப்புற விழுந்துகிடப்பதைப் பார்த்தார்கள். தாகோனின் தலையும் அதன்
இரண்டு கைகளும் உடைந்து வாசற்படியில் கிடந்தன. மீன்வடிவ உடல்
பாகம் மட்டுமே உடையாமல் இருந்தது.* **5** அதனால்தான், இன்றுவரை
தாகோன் பூசாரிகளும் பக்தர்களும் அஸ்தோத்திலுள்ள அந்தக் கோயிலுக்
குள் போகும்போது அதன் வாசற்படியை மிதிப்பதில்லை.

6 அஸ்தோத் ஊர்க்காரர்களை யெகோவா கடுமையாகத் தண்டித்தார்.
அஸ்தோத்திலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வாழ்ந்த ஜனங்
களை மூலநோயால்* தாக்கி அவதிப்பட வைத்தார்.[e] **7** இதனால் அஸ்
தோத் ஜனங்கள், “இஸ்ரவேலின் கடவுளுடைய பெட்டி நம்மிடம் இருக்கக்
கூடாது. நம்மையும் நம்முடைய தாகோன் தெய்வத்தையும் அவர் பயங்கர
மாகத் தாக்கிவிட்டார்” என்று சொன்னார்கள். **8** அதோடு, ஆள் அனுப்பி
பெலிஸ்தியர்களின் தலைவர்கள் எல்லாரையும் வரவழைத்து, “இஸ்ர
வேலின் கடவுளுடைய பெட்டியை என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்
டார்கள். அதற்கு அவர்கள், “இஸ்ரவேலின் கடவுளுடைய பெட்டியை காத்
நகரத்துக்குக்[f] கொண்டுபோங்கள்” என்று சொன்னார்கள். அதன்படியே,
அந்தப் பெட்டியை அங்கே கொண்டுபோனார்கள்.

9 அவர்கள் அதைக் கொண்டுபோன பின்பு, யெகோவா காத் நகரத்தின்
ஜனங்களைத் தண்டித்தார். அங்கே பயங்கர பீதியை உண்டாக்கினார். சிறி
யவர்கள்முதல் பெரியவர்கள்வரை எல்லாரையும் மூலநோயால் தாக்கினார்.[g]
10 அதனால், உண்மைக் கடவுளுடைய பெட்டியை எக்ரோனுக்குக்[h]
கொண்டுபோனார்கள். ஆனால் அந்தப் பெட்டி எக்ரோனுக்கு வந்தவு
டன், “இஸ்ரவேலின் கடவுளுடைய பெட்டியை எங்களிடம் கொண்டுவந்து
விட்டார்களே, எங்கள் எல்லாரையும் சாகடிக்கப் பார்க்கிறார்களே!”[i] என்று
சொல்லி எக்ரோன் ஜனங்கள் அலறினார்கள். **11** அவர்கள் ஆள் அனுப்பி
பெலிஸ்தியர்களின் தலைவர்கள் எல்லாரையும் வரவழைத்து, “இஸ்ர
வேலின் கடவுளுடைய பெட்டியை இங்கிருந்து கொண்டுபோங்கள். அத
னுடைய இடத்துக்கே அதை அனுப்பிவிடுங்கள். இல்லாவிட்டால், நாங்கள்
எல்லாரும் கொல்லப்படுவோம்” என்று சொன்னார்கள். ஏனென்றால், நகரத்
திலிருந்த எல்லாருக்கும் மரண பயம் வந்திருந்தது. உண்மைக் கடவுள் அவர்
களைக் கடுமையாகத் தண்டித்திருந்தார்.[j] **12** சாகாமல் உயிரோடு இருந்த
எல்லாரையும் மூலநோயால் தாக்கியிருந்தார். அதனால், நகர ஜனங்கள் எல்
லாரும் உதவிக்காக வானத்தைப் பார்த்துக் கதறி அழுதார்கள்.

5:2 * நே.மொ., “வீட்டில்.” **5:4** * தாகோன் சிலை, பாதி மனித உருவத்திலும் பாதி மீன் உருவத்திலும் இருந்ததாகத் தெரிகிறது. **5:6** * அதாவது, “மூலக்கட்டிகளால்.”

அதி. 5
a 1சா 4:11
b நியா 16:23; 1நா 10:8-10
c யாத் 12:12; 1நா 16:26; சங் 97:7
d ஏசா 46:6, 7
e 1சா 6:5, 6
f 1சா 17:4
g 1சா 5:6
h யோசு 15:20, 45; 2ரா 1:2; ஆமோ 1:8
i 1சா 5:7
j 1சா 5:6, 9

6 யெகோவாவின் பெட்டி[a] பெலிஸ்தியர்களின் தேசத்தில் ஏழு மாதம்
இருந்தது. **2** பூசாரிகளையும் குறிசொல்கிறவர்களையும்[b] பெலிஸ்தி
யர்கள் வரவழைத்து, “யெகோவாவின் பெட்டியை நாங்கள் என்ன செய்ய
வேண்டும்? அதனுடைய இடத்துக்கு எப்படித் திருப்பி அனுப்ப வேண்
டும்? எங்களுக்குச் சொல்லுங்கள்” என்று கேட்டார்கள். **3** அதற்கு அவர்
கள், “இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியை
நீங்கள் அனுப்புவதாக இருந்தால், காணிக்கை இல்லாமல் சும்மா அனுப்
பக் கூடாது. கட்டாயம் குற்ற நிவாரண காணிக்கையையும் சேர்த்து அனுப்ப
வேண்டும்.[c] அப்போதுதான் நீங்கள் குணமாவீர்கள். அவர் ஏன் உங்களைத்
தண்டிக்கிறார் என்பதும் தெரியவரும்” என்று சொன்னார்கள். **4** அதற்கு
இவர்கள், “குற்ற நிவாரண காணிக்கையாக நாம் அவருக்கு எதை அனுப்ப
வேண்டும்?” என்று கேட்டார்கள். அப்போது அவர்கள், “பெலிஸ்தியர்களு
டைய தலைவர்களின் எண்ணிக்கைப்படி,[d] ஐந்து மூலக்கட்டி உருவங்களை
யும் ஐந்து சுண்டெலி உருவங்களையும் தங்கத்தில் செய்து அனுப்புங்கள்.
ஏனென்றால், உங்களையும் உங்களுடைய தலைவர்களையும் ஒரேவித
மான கொடிய நோய் தாக்கியிருக்கிறது. **5** உங்களுக்கு வந்த மூலக்கட்டி
யின் உருவங்களையும் உங்களுடைய தேசத்தை நாசமாக்குகிற சுண்டெலி
களின் உருவங்களையும் நீங்கள் செய்ய வேண்டும்.[e] இஸ்ரவேலின்
கடவுளை மகிமைப்படுத்த வேண்டும். அப்போது, அவர் உங்களையும்
உங்களுடைய தெய்வத்தையும் தேசத்தையும் ஒருவேளை தண்டிக்காமல்
விட்டுவிடலாம்.[f] **6** எகிப்தியர்களுடைய இதயமும் பார்வோனுடைய இத
யமும் இறுகிப்போனபோது[g] என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரி
யாதா? அவர்களை அவர் கடுமையாகத் தண்டித்தாரே.[h] அதனால் இஸ்ர
வேலர்களை அவர்கள் அனுப்ப வேண்டியதாகிவிட்டதே.[i] நீங்கள் ஏன்
அவர்களைப் போல நடந்துகொள்கிறீர்கள்? **7** இப்போது நீங்கள் ஒரு
புதிய வண்டி செய்து, இதுவரை நுகத்தடியில் பூட்டப்படாத இரண்டு
பசு மாடுகளை அதில் பூட்டுங்கள். ஆனால், அவற்றின் கன்றுக்குட்டி
களை அவற்றுக்குப் பின்னால் போகவிடாமல் தொழுவத்தில் கட்டிவையுங்
கள். **8** பின்பு, யெகோவாவின் பெட்டியை அந்த வண்டியில் வையுங்கள்.
குற்ற நிவாரண காணிக்கையாக நீங்கள் அனுப்பும் தங்கச் சாமான்களை
ஒரு பெட்டியில் போட்டு, அதன் பக்கத்தில் வையுங்கள்.[j] அதன்பின்
வண்டியை அனுப்பிவிடுங்கள். **9** அது எங்கே போகிறதென்று பாருங்
கள். அது நெடுஞ்சாலை வழியாக பெத்-ஷிமேசுக்குப்[k] போனால், அதா
வது நேராக அதனுடைய இடத்துக்கே போனால், இந்த மிகப் பெரிய
தண்டனையை இஸ்ரவேலின் கடவுள்தான் நமக்குக் கொடுத்திருக்கிறார்
என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அது அங்கு போகாவிட்டால், அவர்
நம்மைத் தாக்கவில்லை, எதேச்சையாகத்தான் இது நமக்கு நடந்திருக்கிறது
என்று தெரிந்துகொள்ளலாம்” என்றார்கள்.

10 பூசாரிகள் சொன்ன ஆலோசனைப்படியே பெலிஸ்தியர்கள் செய்
தார்கள். இரண்டு பசு மாடுகளைப் பிடித்து அவற்றை வண்டியில் பூட்டி
னார்கள், அவற்றின் கன்றுக்குட்டிகளைத் தொழுவத்தில் கட்டிவைத்தார்கள்.
11 பின்பு, அந்த வண்டியில் யெகோவாவின் பெட்டியையும், தங்கத்தாலான
சுண்டெலி உருவங்களும் மூலக்கட்டி உருவங்களும் இருந்த பெட்டியையும்
வைத்தார்கள். **12** அப்போது, அந்த மாடுகள் பெத்-ஷிமேசுக்குப் போகும்

அதி. 6
a 1சா 4:11, 1சா 5:1, சங் 78:61
b உபா 18:9, 10, ஏசா 2:6
c 1சா 6:4, 17
d யோசு 13:2, 3, 1சா 6:16
e 1சா 6:18
f 1சா 5:6, 11
g யாத் 7:13, யாத் 8:15, யாத் 14:17
h யாத் 9:14, 16, ரோ 9:17, 18
i யாத் 6:1, யாத் 11:1, யாத் 12:33
j 1சா 6:3, 4
k யோசு 15:10, 12, யோசு 21:8, 16, 2நா 28:18

பாதையில் நேராகப் போயின.[a] வலது பக்கமோ இடது பக்கமோ திரும்பா
மல், அதே நெடுஞ்சாலையில் கத்திக்கொண்டே போயின. பெத்-ஷிமேசின்
எல்லைவரை அவற்றின் பின்னாலேயே பெலிஸ்திய தலைவர்கள் நடந்து
போனார்கள். **13** அந்தச் சமயத்தில், பெத்-ஷிமேஸ் ஜனங்கள் சமவெளி
யிலே கோதுமை அறுவடை செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் நிமிர்ந்து
அந்தப் பெட்டியைப் பார்த்தபோது, அவர்களுக்குச் சந்தோஷம் தாங்க
முடியவில்லை. **14** அந்த வண்டி பெத்-ஷிமேஸ் ஊரைச் சேர்ந்த யோசுவா
வின் வயலுக்கு வந்து, அங்கிருந்த ஒரு பாறைக்குப் பக்கத்தில் நின்றது. அப்
போது, அவர்கள் வண்டியின் பலகைகளைப் பிளந்துபோட்டு, அந்த மாடு
களை[b] யெகோவாவுக்குத் தகன பலியாகச் செலுத்தினார்கள்.

15 யெகோவாவின் பெட்டியையும் தங்கச் சாமான்கள் வைக்கப்பட்டி
ருந்த பெட்டியையும் லேவியர்கள்[c] எடுத்து அந்தப் பாறைமேல் வைத்தார்
கள். அன்றைக்கு பெத்-ஷிமேசின்[d] ஆட்கள் தகன பலிகளையும் மற்ற பலி
களையும் யெகோவாவுக்குச் செலுத்தினார்கள்.

16 பெலிஸ்தியர்களின் ஐந்து தலைவர்களும் அதைப் பார்த்துவிட்டு,
அன்றைக்கே எக்ரோனுக்குத் திரும்பினார்கள். **17** குற்ற நிவாரண காணிக்
கையாக அஸ்தோத்துக்கு[e] ஒன்று, காசாவுக்கு ஒன்று, அஸ்கலோனுக்கு
ஒன்று, காத்துக்கு[f] ஒன்று, எக்ரோனுக்கு[g] ஒன்று என ஐந்து மூலக்கட்டி உரு
வங்களை யெகோவாவுக்கு பெலிஸ்தியர்கள் அனுப்பி வைத்திருந்தார்கள்.[h]
18 ஐந்து தலைவர்களுக்கும் சொந்தமான மதில் சூழ்ந்த நகரங்கள் மற்றும்
மதில் இல்லாத கிராமங்களின் எண்ணிக்கைப்படி, தங்கத்தாலான சுண்டெலி
உருவங்களை அனுப்பி வைத்திருந்தார்கள்.

யெகோவாவின் பெட்டி வைக்கப்பட்டிருந்த பாறை பெத்-ஷிமேஸ்
ஊரைச் சேர்ந்த யோசுவாவின் வயலில் இன்றுவரை சாட்சியாக நிற்கிறது.
19 பெத்-ஷிமேஸ் ஆட்கள் யெகோவாவின் பெட்டியைப் பார்த்ததால்,
அவர்களில் 50,070 பேரைக் கடவுள் கொன்றுபோட்டார்.[i] அத்தனை பேரை
யெகோவா கொன்றதால் ஜனங்கள் துக்கம் தாங்காமல் அழுதார்கள்.
20 பெத்-ஷிமேஸ் ஆட்கள், “பரிசுத்த கடவுளாகிய யெகோவாவுக்குமுன்[j]
யாரால் நிற்க முடியும்? அவர் நம்மைவிட்டு வேறு யாரிடமாவது போகக்
கூடாதா?”[k] என்று சொல்லிக்கொண்டார்கள். **21** பின்பு, கீரியாத்-யெயா
ரீம்[l] ஊர்க்காரர்களிடம் ஆட்களை அனுப்பி, “யெகோவாவின் பெட்டியை
பெலிஸ்தியர்கள் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். வந்து அதை எடுத்துக்
கொண்டு போங்கள்”[m] என்றார்கள்.

7 அதனால், கீரியாத்-யெயாரீமைச் சேர்ந்த ஆட்கள் யெகோவாவின்
பெட்டியை எடுத்துக்கொண்டு போய், குன்றின் மேலிருந்த அபினதா
பின் வீட்டில் வைத்தார்கள்.[n] யெகோவாவின் பெட்டியைக் காவல் காக்க
அவருடைய மகன் எலெயாசாரை நியமித்தார்கள்.*

2 அந்தப் பெட்டி கீரியாத்-யெயாரீமுக்குக் கொண்டுவரப்பட்டு 20 வரு
ஷங்களான பிறகு, இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் யெகோவாவின் உத
வியைத் தேட ஆரம்பித்தார்கள்.[o] **3** அப்போது சாமுவேல் அவர்களிடம்,
“நீங்கள் முழு இதயத்தோடு யெகோவாவிடம் திரும்பிவர விரும்பினால்,[p]
மற்ற தெய்வங்களையும் அஸ்தரோத் சிலைகளையும் தூக்கி வீசுங்கள்.[q]

7:1 * நே.மொ., “புனிதப்படுத்தினார்கள்.”

அதி. 6
a 1சா 6:8, 9
b 1சா 6:7
c எண் 3:30, 31
d யோசு 21:8, 16
e 1சா 5:1
f 1சா 5:8
g நியா 1:18; 1சா 5:10
h 1சா 6:4
i எண் 4:15, 20; 1நா 13:10
j லேவி 11:45
k எண் 17:12, 13; 2சா 6:8, 9; சங் 76:7
l யோசு 18:14; 1நா 13:5, 6
m 1நா 16:1; 2நா 1:4

அதி. 7
n 2சா 6:2, 4; 1நா 13:5, 7
o நெ 9:28
p 1சா 12:24
q யோசு 24:14, 23; நியா 2:13; நியா 3:7; நியா 10:6; 1ரா 11:33

உங்கள் இதயத்தில் யெகோவாவுக்கு மட்டுமே இடம்கொடுங்கள், அவரை
மட்டுமே வணங்குங்கள்.[a] அப்போது, பெலிஸ்தியர்களின் கையிலிருந்து
அவர் உங்களைக் காப்பாற்றுவார்”[b] என்று சொன்னார். **4** உடனே, இஸ்ர
வேலர்கள் பாகால்களின் சிலைகளையும் அஸ்தரோத்தின் சிலைகளையும்
ஒழித்துவிட்டு யெகோவாவை மட்டுமே வணங்கினார்கள்.[c]

5 பின்பு சாமுவேல், “இஸ்ரவேலர்கள் எல்லாரையும் மிஸ்பாவில் ஒன்று
கூடி வரச் சொல்லுங்கள்.[d] உங்களுக்காக நான் யெகோவாவிடம் ஜெபம்
செய்வேன்”[e] என்றார். **6** அதனால், அவர்கள் மிஸ்பாவில் ஒன்றுகூடி வந்
தார்கள். அன்று யெகோவாவுக்கு முன்னால் தண்ணீரைக் கொண்டுவந்து
ஊற்றி,* விரதம் இருந்து,[f] “நாங்கள் யெகோவாவுக்கு விரோதமாகப் பாவம்
செய்துவிட்டோம்”[g] என்று சொல்லி வருத்தப்பட்டார்கள். மிஸ்பாவில் சாமு
வேல் இஸ்ரவேலர்களுக்கு நியாயாதிபதியாகச் சேவை செய்ய ஆரம்
பித்தார்.[h]

7 இஸ்ரவேலர்கள் மிஸ்பாவில் ஒன்றுகூடி வந்திருப்பதை பெலிஸ்தி
யர்கள் கேள்விப்பட்டபோது, அவர்களுடைய தலைவர்கள்[i] இஸ்ரவேலர்க
ளோடு போர் செய்யப் புறப்பட்டார்கள். இஸ்ரவேலர்கள் இதைக் கேள்
விப்பட்டதும் பெலிஸ்தியர்களை நினைத்துப் பயந்தார்கள். **8** அதனால்
அவர்கள் சாமுவேலிடம், “எங்களை பெலிஸ்தியர்களின் கையிலிருந்து காப்
பாற்றும்படி நம் கடவுளான யெகோவாவிடம் ஓயாமல் வேண்டிக்கொள்ளுங்
கள்”[j] என்று சொன்னார்கள். **9** பின்பு சாமுவேல், பால்குடிக்கிற ஒரு செம்
மறியாட்டுக் குட்டியைப் பிடித்து, அதை யெகோவாவுக்குத் தகன பலியாகச்[k]
செலுத்தினார். இஸ்ரவேலர்களுக்காக சாமுவேல் யெகோவாவிடம் உதவி
கேட்டுக் கெஞ்சினார், யெகோவா அவருக்குப் பதில் தந்தார்.[l] **10** சாமு
வேல் தகன பலி செலுத்திக்கொண்டிருந்த சமயத்தில், பெலிஸ்தியர்கள் இஸ்ர
வேலர்களை நெருங்கினார்கள். அப்போது, யெகோவா பயங்கரமான இடி
முழக்கங்களை உண்டாக்கி[m] பெலிஸ்தியர்களைக் குழம்பிப்போக வைத்
தார்.[n] அவர்கள் இஸ்ரவேலர்களிடம் தோற்றுப்போனார்கள்.[o] **11** உடனே,
இஸ்ரவேல் வீரர்கள் மிஸ்பாவிலிருந்து பெலிஸ்தியர்களைத் துரத்திக்
கொண்டு போனார்கள், பெத்-காரீமின் தெற்குப் பகுதிவரை பின்தொடர்ந்து
போய் அவர்களை வெட்டிச் சாய்த்தார்கள். **12** பின்பு, சாமுவேல் ஒரு
கல்லை[p] எடுத்து அதை மிஸ்பாவுக்கும் எஷானாவுக்கும் இடையில் நாட்டி
னார். “இதுவரை யெகோவா நமக்கு உதவி செய்திருக்கிறார்”[q] என்று
சொல்லி, அந்தக் கல்லுக்கு எபெனேசர்* என்று பெயர் வைத்தார்.
13 இப்படி, அந்த நாளில் பெலிஸ்தியர்களை இஸ்ரவேலர்கள் அடக்கிவிட்
டார்கள். அதன் பிறகு அவர்கள் இஸ்ரவேலர்களின் எல்லைக்குள் வரவே
இல்லை.[r] சாமுவேலின் காலம் முழுவதும் யெகோவா பெலிஸ்தியர்க
ளுக்கு விரோதமாகவே இருந்தார்.[s] **14** பெலிஸ்தியர்கள் கைப்பற்றிய நக
ரங்கள், அதாவது எக்ரோன்முதல் காத்வரையுள்ள நகரங்கள், இஸ்ரவேலர்
களுக்குத் திரும்பக் கிடைத்தன. இஸ்ரவேலர்கள் தங்களுக்குச் சொந்தமான
இடங்களை பெலிஸ்தியர்களிடமிருந்து மீட்டுக்கொண்டார்கள்.

அதோடு, இஸ்ரவேலர்களும் எமோரியர்களும் சமாதானமாக இருந்
தார்கள்.[t]

7:6 * துக்கப்பட்டு மனம் திருந்துவதற்கு அடையாளமாக இஸ்ரவேலர்கள் இந்தச் சடங்
கைச் செய்தார்கள். **7:12** * அர்த்தம், “உதவிக்கான கல்.”

அதி. 7
a உபா 10:20; உபா 13:4; லூ 4:8
b உபா 28:1
c நியா 10:16
d நியா 20:1; 1சா 10:17; 2ரா 25:23; எரே 40:6
e 1சா 12:23; யாக் 5:16
f 2நா 20:3; நெ 9:1; யோவே 2:12
g நியா 10:10
h நியா 2:18
i யோசு 13:2, 3; 1சா 6:4
j 1சா 12:19; ஏசா 37:4
k லேவி 1:10
l சங் 99:6
m 1சா 2:10; 2சா 22:14
n யோசு 10:10; நியா 4:15
o உபா 20:4; உபா 28:7
p யோசு 4:9; யோசு 24:26
q சங் 44:3
r 1சா 9:16; 1சா 13:5
s 1சா 14:22, 23; 1சா 17:51
t ஆதி 15:18, 21

15 சாமுவேல் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இஸ்ரவேலர்களுக்கு
நியாயாதிபதியாக இருந்தார்.[a] **16** அவர் வருஷா வருஷம் பெத்தேலுக்
கும்[b] கில்காலுக்கும்[c] மிஸ்பாவுக்கும்[d] சுற்றுமுறையில் பயணம் செய்து,
இஸ்ரவேலர்களுக்கு நீதி வழங்கிவந்தார். **17** பின்பு, ஒவ்வொரு முறையும்
ராமாவுக்குத்[e] திரும்பினார். ஏனென்றால், அவருடைய வீடு அங்கே இருந்
தது. அங்கேயும் இஸ்ரவேலர்களுக்கு அவர் நீதி வழங்கிவந்தார். அங்கே
யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினார்.[f]

8 சாமுவேலுக்கு வயதானபோது, அவர் தன்னுடைய மகன்களை
இஸ்ரவேலர்களுக்கு நியாயாதிபதிகளாக நியமித்தார். **2** அவருடைய
மூத்த மகன் பெயர் யோவேல், இரண்டாவது மகன் பெயர் அபியா.[g] அவர்
கள் பெயெர்-செபாவில் நியாயாதிபதிகளாக இருந்தார்கள். **3** ஆனால்,
அவர்கள் இரண்டு பேரும் அவர்களுடைய அப்பாவைப் போல் நடந்து
கொள்ளவில்லை. குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு[h] லஞ்
சம் வாங்கினார்கள்,[i] நியாயத்தைப் புரட்டினார்கள்.[j]

4 ஒருநாள், இஸ்ரவேலின் பெரியோர்கள்* எல்லாரும் ராமாவிலிருந்த
சாமுவேலிடம் வந்து, **5** "உங்களுக்கு வயதாகிவிட்டது. உங்களுடைய
மகன்களும் உங்களைப் போல நேர்மையாக நடப்பதில்லை. அதனால்,
மற்ற தேசங்களுக்கு ராஜா இருப்பது போல எங்களுக்கும் ஒரு ராஜா
வேண்டும். அவர் எங்களுக்கு நீதி வழங்கட்டும்"[k] என்று சொன்னார்கள்.
6 நீதி வழங்க ஒரு ராஜா வேண்டும் என்று அவர்கள் சொன்னதைக் கேட்டு
சாமுவேல் வேதனைப்பட்டார். அதனால் யெகோவாவிடம் முறையிட்டார்.
7 அப்போது யெகோவா சாமுவேலிடம், "இந்த ஜனங்கள் உன்னிடம்
சொல்வதையெல்லாம் கேள். அவர்கள் உன்னை ஒதுக்கித்தள்ளவில்லை,
அவர்களுடைய ராஜாவாகிய என்னைத்தான் ஒதுக்கித்தள்ளியிருக்கிறார்
கள்.[l] **8** நான் அவர்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்த நாளிலி
ருந்து இன்றுவரை இதைத்தான் செய்துவருகிறார்கள். மறுபடியும் மறுபடியும்
என்னை ஒதுக்கித்தள்ளிவிட்டு[m] மற்ற தெய்வங்களை வணங்குகிறார்கள்.[n]
உன்னையும் அப்படித்தான் ஒதுக்கித்தள்ளுகிறார்கள். **9** இப்போது அவர்
கள் சொல்வதைக் கேள். அதேசமயத்தில், அவர்களுக்குக் கடுமையான எச்
சரிப்பைக் கொடு. அவர்களை ஆட்சி செய்யும் ராஜாவுக்கு அவர்களை எப்
படி வேண்டுமானாலும் அடக்கி ஆள* உரிமை இருக்கிறது என்பதை
எடுத்துச் சொல்" என்றார்.

10 அதனால், யெகோவா சொன்ன எல்லாவற்றையும் சாமுவேல் அந்த
ஜனங்களிடம் சொன்னார். **11** அவர் அவர்களிடம், "உங்களை ஆட்சி
செய்யும் ராஜாவுக்கு உங்களை எப்படி வேண்டுமானாலும் அடக்கி ஆள
உரிமை இருக்கிறது:[o] அவனுடைய ரத வீரர்களாகவும்[p] குதிரை வீரர்களாக
வும்[q] அவன் உங்கள் மகன்களை வைத்துக்கொள்வான்.[r] அவனுடைய
ரதங்களுக்கு முன்னால் சிலரை ஓட வைப்பான். **12** 1,000 பேருக்குத்
தலைவர்களையும்,[s] 50 பேருக்குத் தலைவர்களையும்[t] நியமித்து அவர்க
ளிடம் வேலை வாங்குவான். நிலத்தை உழுவதற்கும்,[u] அறுவடை செய்வ
தற்கும்,[v] போர் ஆயுதங்கள் தயாரிப்பதற்கும், ரதங்களுக்குத்[w] தேவை
யான கருவிகள் செய்வதற்கும் உங்களை வைத்துக்கொள்வான்.

8:4 *வே.வா., "மூப்பர்கள்." **8:9** *வே.வா., "அவர்களிடம் எதை வேண்டுமானாலும் வற்புறுத்திக் கேட்க."

அதி. 7
a 1சா 3:20; 1சா 12:11; 1சா 25:1; அப் 13:20
b யோசு 16:1
c யோசு 15:7, 12; 1சா 11:15
d 1சா 7:5
e 1சா 1:1; 1சா 8:4; 1சா 19:18
f யாத் 20:25

அதி. 8
g 1நா 6:28
h யாத் 18:21
i யாத் 23:8; உபா 16:19; சங் 15:5; நீதி 29:4
j உபா 24:17
k உபா 17:14, 15; 1சா 12:13; அப் 13:21
l நியா 8:23; 1சா 10:19; 1சா 12:12; ஏசா 33:22
m உபா 9:24
n நியா 2:19
o 1சா 10:25
p 1ரா 9:22; 1ரா 10:26
q 1ரா 4:26
r 1சா 14:52
s 2சா 18:1; 1நா 27:1
t 2ரா 1:14
u 1நா 27:26
v 1ரா 4:7
w 1ரா 4:26

13 உங்களுடைய மகள்களை வாசனைத் தைலம் செய்கிறவர்களாகவும்
சமையல்காரிகளாகவும் ரொட்டி சுடுகிறவர்களாகவும் வைத்துக்கொள்
வான்.[a] **14** உங்களுடைய செழிப்பான வயல்களையும் திராட்சைத் தோட்
டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் பிடுங்கி[b] அவனுடைய ஊழியர்க
ளுக்குக் கொடுப்பான். **15** உங்களுடைய வயல்களிலும் திராட்சைத்
தோட்டங்களிலும் விளைகிறவற்றில் பத்திலொரு பாகத்தை எடுத்து அவ
னுடைய அரண்மனை அதிகாரிகளுக்கும் சேவகர்களுக்கும் கொடுப்பான்.
16 உங்களுடைய வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் புஷ்டி
யான கால்நடைகளையும் கழுதைகளையும் கொண்டுபோய் அவனுடைய
வேலைக்கு வைத்துக்கொள்வான்.[c] **17** உங்களுடைய மந்தைகளில் பத்தி
லொரு பாகத்தை எடுத்துக்கொள்வான்.[d] நீங்கள் அவனுக்கு அடிமைகளாக
இருப்பீர்கள். **18** நீங்கள் தேர்ந்தெடுக்கிற ராஜா உங்களுக்குச் செய்வதை
யெல்லாம் பார்த்து[e] ஒருநாள் யெகோவாவிடம் முறையிடுவீர்கள். ஆனால்,
அவர் உங்களுக்குப் பதில் சொல்ல மாட்டார்” என்றார்.

19 சாமுவேல் சொன்னதை அந்த ஜனங்கள் காதில் போட்டுக்கொள்
ளவே இல்லை. அவரிடம், “நீங்கள் என்ன சொன்னாலும் சரி, எங்களுக்
குக் கண்டிப்பாக ஒரு ராஜா வேண்டும். **20** அப்போதுதான் மற்ற தேசத்
தாரைப் போல் எங்களையும் ஒரு ராஜா ஆட்சி செய்வார். அவர்
எங்களுக்கு நீதி வழங்குவார், எங்களுக்கு வழிகாட்டுவார், எங்களுக்காகப்
போர் செய்வார்” என்று சொன்னார்கள். **21** ஜனங்கள் சொன்னதையெல்
லாம் சாமுவேல் கேட்டுவிட்டு, அதை யெகோவாவிடம் சொன்னார்.
22 அப்போது யெகோவா சாமுவேலிடம், “அவர்கள் சொல்வதைக் கேள்.
அவர்களை ஆட்சி செய்ய ஒரு ராஜாவை ஏற்படுத்து”[f] என்று சொன்னார்.
அதனால், சாமுவேல் இஸ்ரவேலர்களிடம், “எல்லாரும் அவரவர் நகரங்க
ளுக்குத் திரும்பிப் போங்கள்” என்று சொன்னார்.

9 அந்தக் காலத்தில், கீஸ் என்பவர் வாழ்ந்துவந்தார். இவர் பென்ய
மீன் கோத்திரத்தைச்[g] சேர்ந்தவர்.[h] அபியேல், சேரோர், பெகோ
ராத், அபையா ஆகியவர்களின் வம்சத்தில் வந்தவர், பெரிய பணக்காரர்.
2 இவருக்கு சவுல்[i] என்ற மகன் இருந்தார். அவர் அழகான ஓர் இளைஞர்.
அவரைவிட அழகானவர் இஸ்ரவேலில் யாருமே இல்லை. அவர் ரொம்ப
உயரமாக இருந்தார். மற்ற எல்லாரும் அவருடைய தோளுக்குக் கீழ்தான்
இருந்தார்கள்.

3 ஒருசமயம், சவுலின் அப்பாவுடைய கழுதைகள் தொலைந்துபோயின.
அதனால் அவர் சவுலிடம், “தயவுசெய்து ஒரு வேலைக்காரனைக் கூட்
டிக்கொண்டு போய் நம்முடைய கழுதைகளைத் தேடிக் கண்டுபிடி” என்று
சொன்னார். **4** சவுலும் அந்த வேலைக்காரனும், எப்பிராயீம் மலைப்பகுதி
யையும் சலீஷா பிரதேசத்தையும் கடந்துபோனார்கள், ஆனால் அவற்றைக்
கண்டுபிடிக்க முடியவில்லை. பின்பு, சாலீம் பிரதேசம் வழியாகத் தேடிப்
போனார்கள், அவை அங்கேயும் இல்லை. அதன்பின், பென்யமீனியர்களு
டைய பிரதேசம் முழுவதும் தேடினார்கள், அங்கும் அவை இல்லை.

5 பிறகு, சூப் என்ற பிரதேசத்துக்கு அவர்கள் போனபோது சவுல்
தன் வேலைக்காரனிடம், “வா, நாம் திரும்பிப் போய்விடலாம். இல்லா
விட்டால், கழுதைகளை நினைத்துக் கவலைப்படுவதற்குப் பதிலாக அப்பா
நம்மை நினைத்துக் கவலைப்பட ஆரம்பித்துவிடுவார்”[j] என்று சொன்னார்.

அதி. 8
a 1ரா 4:22
b 1நா 27:28, 31
c 1ரா 5:15, 16
d 1ரா 4:22, 23
e 1ரா 12:3, 4
f 1சா 8:7
ஓசி 13:11

அதி. 9
g நியா 21:17
h 1சா 14:51
1நா 8:33
அப் 13:21
i 1சா 11:15
1சா 13:13
1சா 15:26
1சா 28:7
1சா 31:4
2சா 1:23
j 1சா 10:2

6 அதற்கு அந்த வேலைக்காரன், “அதோ, அந்த நகரத்தில் கடவுளுடைய
ஊழியர் ஒருவர் இருக்கிறார். ஜனங்கள் மத்தியில் அவருக்கு நல்ல மதிப்பு
மரியாதை இருக்கிறது. அவர் சொல்வதெல்லாம் அப்படியே நடக்கும்.[a] இப்
போது அவரிடம் போகலாம். நாம் எங்கே போய்த் தேட வேண்டுமென்று
ஒருவேளை அவர் சொல்வார்” என்றான். **7** அதற்கு சவுல், “சரி போகலாம்,
ஆனால் அவருக்கு என்ன கொண்டுபோவது? உண்மைக் கடவுளுடைய
ஊழியருக்கு அன்பளிப்பாகக் கொடுக்க ஒன்றும் இல்லையே. பையில்
ரொட்டிகூட இல்லையே. நீ ஏதாவது வைத்திருக்கிறாயா?” என்று கேட்
டார். **8** அதற்கு அவன், “என்னிடம் கால் சேக்கல்* வெள்ளி இருக்கிறது.
உண்மைக் கடவுளுடைய ஊழியருக்கு இதைக் கொடுக்கலாம். கழுதை
களை எங்கே போய்த் தேடலாமென்று அவர் நமக்குச் சொல்வார்” என்றான்.
9 (முன்பெல்லாம் இஸ்ரவேலில், ஒருவன் கடவுளிடம் விசாரிப்பதற்காகப்
போகும்போது, “வா, நாம் இறைவாக்கு சொல்பவரிடம்[b] போகலாம்” என்று
தான் சொல்வான். ஏனென்றால், அந்தக் காலத்தில் தீர்க்கதரிசிகளை இறை
வாக்கு சொல்கிறவர்கள் என்றுதான் கூப்பிட்டார்கள்.) **10** அப்போது சவுல்
தன்னுடைய வேலைக்காரனிடம், “சரி, நீ சொன்னபடியே செய்வோம், வா
போகலாம்” என்றார். பின்பு, உண்மைக் கடவுளுடைய ஊழியர் இருந்த நக
ரத்துக்கு அவர்கள் புறப்பட்டுப் போனார்கள்.

11 அவர்கள் அந்த நகரத்துக்கு ஏறிப் போய்க்கொண்டிருந்தபோது,
தண்ணீர் எடுக்க வந்த இளம் பெண்களைப் பார்த்தார்கள். அவர்களிடம்,
“இந்த இடத்தில் இறைவாக்கு சொல்பவர்[c] இருக்கிறாரா?” என்று கேட்டார்
கள். **12** அதற்கு அவர்கள், “ஆமாம். அதோ, அங்கேதான் இருக்கிறார்.
சீக்கிரம் போங்கள். இன்றைக்கு ஆராதனை மேட்டில்[d] பலி செலுத்துகிறார்
கள்.[e] அதனால், இந்த நகரத்துக்கு அவர் வந்திருக்கிறார். **13** நகரத்துக்குள்
நீங்கள் சீக்கிரமாகப் போனால், ஆராதனை மேட்டுக்கு அவர் சாப்பிடப்
போவதற்கு முன்பே பார்த்துவிடலாம். அவர் வரும்வரை ஜனங்கள் சாப்
பிட மாட்டார்கள். ஏனென்றால், அந்தப் பலியை ஆசீர்வதிக்கச் சொல்லி
அவர்தான் ஜெபம் செய்வார். அதற்குப் பின்புதான் அழைக்கப்பட்டவர்
கள் சாப்பிட வேண்டும். நீங்கள் உடனே போனால் அவரைப் பார்க்க
லாம்” என்று சொன்னார்கள். **14** அதனால், அவர்கள் அந்த நகரத்துக்குப்
போனார்கள். உள்ளே பாதி தூரம் போனபோது, அவர்களை ஆராதனை
மேட்டுக்குக் கூட்டிக்கொண்டு போவதற்காக சாமுவேல் அவர்களிடம் வந்து
கொண்டிருந்தார்.

15 சவுல் வருவதற்கு ஒருநாள் முன்புதான் யெகோவா சாமுவேலிடம்,
16 “பென்யமீன் பிரதேசத்தைச்[f] சேர்ந்த ஒருவனை நாளைக்கு இதே நேரத்
தில் உன்னிடம் அனுப்புவேன். என்னுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்க
ளுக்கு நீ அவனைத் தலைவனாக அபிஷேகம் செய்ய வேண்டும்.[g]
பெலிஸ்தியர்களிடமிருந்து அவன் என் ஜனங்களைக் காப்பாற்றுவான். என்
ஜனங்கள் படுகிற கஷ்டங்களைப் பார்த்தேன், அவர்களுடைய கதறல் சத்
தம் என் சன்னிதியை எட்டியது”[h] என்று சொல்லியிருந்தார். **17** இப்போது,
சாமுவேல் சவுலைப் பார்த்தார். யெகோவா அவரிடம், “இதோ, இவனைப்
பற்றித்தான் நான் உன்னிடம் சொன்னேன், இவன்தான் என் ஜனங்களை
ஆட்சி செய்வான்”[i] என்றார்.

9:8 * ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 9
a 1சா 3:19
b 1சா 9:19; 2சா 15:27; 1நா 9:22; 1நா 29:29
c 1சா 9:19
d 1ரா 3:2; 1நா 16:39; 2நா 1:3
e 1சா 7:9; 1சா 16:5
f யோசு 18:11
g 1சா 10:1; 1சா 15:1
h சங் 106:43, 44; சங் 107:19
i 1சா 10:24; 1சா 15:17; அப் 13:21

18 பின்பு சவுல், நுழைவாசல் பக்கமாக வந்த சாமுவேலிடம் போய்,
“இறைவாக்கு சொல்பவரின் வீடு எங்கே இருக்கிறது? தயவுசெய்து சொல்
லுங்கள்” என்று கேட்டார். **19** அதற்கு சாமுவேல், “இறைவாக்கு சொல்ப
வன் நான்தான். நீ எனக்கு முன்னால் ஆராதனை மேட்டுக்குப் போ.
இன்றைக்கு நீ என்னோடு சாப்பிட வேண்டும்.[a] நீ தெரிந்துகொள்ள விரும்
புகிற எல்லா விஷயங்களையும் காலையில் உனக்குச் சொல்லி, உன்னை
வழியனுப்பி வைப்பேன். **20** மூன்று நாட்களுக்கு முன்பு தொலைந்து
போன கழுதைகளைப்[b] பற்றிக் கவலைப்பட வேண்டாம், அவை கிடைத்
துவிட்டன. இஸ்ரவேலில் இருக்கிற அருமையானதெல்லாம் உனக்கும் உன்
அப்பாவின் குடும்பத்துக்கும்தானே சொந்தம்?”[c] என்றார். **21** அதற்கு
சவுல், “இஸ்ரவேல் கோத்திரங்களிலேயே என்னுடைய பென்யமீன் கோத்
திரம்தானே ரொம்பவும் சின்னது?[d] பென்யமீன் குடும்பங்களிலேயே என்
னுடைய குடும்பம்தானே ரொம்பவும் சாதாரணமானது? அப்படியிருக்கும்
போது, நீங்கள் ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?” என்று கேட்டார்.

22 அப்போது, சாமுவேல் சவுலையும் அவருடைய வேலைக்காரனை
யும் சாப்பாட்டு அறைக்குக் கூட்டிக்கொண்டு வந்து, விருந்தாளிகளின் நடு
வில் முக்கியமான ஓர் இடத்தில் உட்கார வைத்தார். அங்கே கிட்டத்தட்ட
30 ஆண்கள் இருந்தார்கள். **23** சாமுவேல் அங்கிருந்த சமையல்காரனி
டம், “தனியாக எடுத்து வைக்கச் சொல்லி உன்னிடம் கொடுத்திருந்தேனே,
அதை எடுத்துக்கொண்டு வா” என்றார். **24** உடனே அந்தச் சமையல்கா
ரன், தொடைக் கறியை எடுத்துவந்து சவுலுக்கு முன்னால் வைத்தான். அப்
போது சாமுவேல், “உனக்காக எடுத்து வைக்கப்பட்ட இறைச்சியைச் சாப்பிடு.
விருந்தாளிகள் வருவார்கள் என்று நான் அவர்களிடம் சொல்லியிருந்தேன்.
அதனால் இதை உனக்காகவே எடுத்து வைத்திருக்கிறார்கள்” என்றார். அத
னால், சவுல் அன்றைக்கு சாமுவேலோடு சாப்பிட்டார். **25** பின்பு, அவர்
கள் ஆராதனை மேட்டிலிருந்து இறங்கி[e] நகரத்துக்கு வந்தார்கள். சாமு
வேல் சவுலுடன் மொட்டைமாடியில் பேசிக்கொண்டிருந்தார். **26** அடுத்த
நாள் விடியற்காலையில் அவர்கள் எழுந்தார்கள். அப்போது சாமுவேல்
மொட்டைமாடியில் சவுலைக் கூப்பிட்டு, “புறப்படு, நான் உன்னை வழி
யனுப்பி வைக்கிறேன்” என்றார். சவுலும் புறப்பட்டார். அவரும் சாமுவே
லும் வெளியே வந்தார்கள். **27** அவர்கள் நகரத்தின் எல்லையை நோக்கி
இறங்கி வந்தபோது, “உன் வேலைக்காரனை[f] முன்னால் போகச் சொல்”
என்று சவுலிடம் சாமுவேல் சொன்னார். அதனால் அந்த வேலைக்காரன்,
முன்னால் நடந்துபோனான். பின்பு சாமுவேல் சவுலிடம், “கொஞ்சம் நில்.
கடவுளுடைய செய்தியை உனக்குச் சொல்ல வேண்டும்” என்றார்.

10 பின்பு சாமுவேல், குடுவையைத் திறந்து சவுலின் தலையில் எண்
ணெய் ஊற்றினார்.[g] அதன்பின், அவருக்கு முத்தம் கொடுத்து
விட்டு, “யெகோவா உன்னைத் தன்னுடைய சொத்தாகிய ஜனங்களுக்குத்[h]
தலைவனாக அபிஷேகம் செய்திருக்கிறார்.[i] **2** இன்றைக்கு நீ இங்கிருந்து
போகும் வழியில், பென்யமீன் பிரதேசத்தில் இருக்கிற செல்சாவில், ராகே
லின் கல்லறைக்குப்[j] பக்கத்திலே இரண்டு பேரைப் பார்ப்பாய். அவர்கள்
உன்னிடம், ‘நீங்கள் தேடிக்கொண்டிருக்கிற கழுதைகள் கிடைத்துவிட்டன.
இப்போது உன் அப்பாவுக்கு உங்களைப் பற்றித்தான் கவலை.[k] “என் மக
னைக் காணோமே, என்ன செய்வேன்?” என்று புலம்பிக்கொண்டிருக்கிறார்’

அதி. 9
a 1சா 9:13, 24
b 1சா 9:3
c 1சா 8:5, 19; 1சா 12:13
d நியா 20:46, 47
e 1சா 9:13, 19
f 1சா 9:3, 10

அதி. 10
g 1சா 16:13; 2ரா 9:2, 3
h யாத் 19:5; உபா 32:9
i 1சா 9:16; அப் 13:21
j ஆதி 35:19
k 1சா 9:3, 5

என்று சொல்வார்கள். **3** நீ அங்கிருந்து புறப்பட்டு தாபோரில் இருக்கிற பெரிய மரத்துக்குப் பக்கத்தில் போ. உண்மைக் கடவுளை வணங்க பெத்தேலுக்குப்[a] போய்க்கொண்டிருக்கிற மூன்று பேரை அங்கே பார்ப்பாய். ஒருவர் மூன்று வெள்ளாட்டுக் குட்டிகளையும் இன்னொருவர் மூன்று ரொட்டிகளையும் மற்றொருவர் ஒரு பெரிய ஜாடி நிறைய திராட்சமதுவையும் வைத்திருப்பார். **4** அவர்கள் உன்னை நலம் விசாரித்துவிட்டு, உனக்கு இரண்டு ரொட்டிகள் கொடுப்பார்கள். நீ அவற்றை வாங்கிக்கொள். **5** பின்பு, உண்மைக் கடவுளின் மலையில் பெலிஸ்தியர்களின் காவல்படை இருக்கிற இடத்துக்குப் போ. அங்கிருக்கிற நகரத்துக்குள் நீ போகும்போது, ஆராதனை மேட்டிலிருந்து இறங்கி வருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்தைப் பார்ப்பாய். அவர்கள் தீர்க்கதரிசனம்* சொல்லிக்கொண்டு போகும்போது, அவர்களுக்கு முன்னால் ஜனங்கள் நரம்பிசைக் கருவியையும் கஞ்சிராவையும் புல்லாங்குழலையும் யாழையும் வாசித்துக்கொண்டு போவார்கள். **6** அப்போது நீ யெகோவாவின் சக்தியைப் பெற்று,[b] அவர்களோடு சேர்ந்து தீர்க்கதரிசனம் சொல்வாய். ஒரு புது ஆளாக மாறிவிடுவாய்.[c] **7** இந்த எல்லா அடையாளங்களும் நிறைவேறிய பின்பு முடிந்தளவுக்கு உன் பொறுப்பை நன்றாக நிறைவேற்று. ஏனென்றால், உண்மைக் கடவுள் உன்னோடு இருக்கிறார். **8** எனக்கு முன்னதாகவே நீ கில்காலுக்குப்[d] போ. தகன பலிகளும் சமாதான பலிகளும் செலுத்துவதற்காக ஏழு நாட்கள் கழித்து நான் அங்கே வருவேன். அதுவரை நீ எனக்காகக் காத்திரு. நீ செய்ய வேண்டியதை நான் வந்து சொல்வேன்” என்றார்.

9 சாமுவேலிடமிருந்து சவுல் புறப்பட்ட உடனேயே, கடவுள் அவருடைய சுபாவத்தை* மாற்றத் தொடங்கினார். சாமுவேல் சொன்ன எல்லா சம்பவங்களும் அன்றைக்கே நடந்தன. **10** சவுலும் அவருடைய வேலைக்காரனும் அந்த மலைக்குப் போனபோது, தீர்க்கதரிசிகள் அவரைச் சந்தித்தார்கள். உடனே, அவருக்குக் கடவுளுடைய சக்தி கிடைத்தது.[e] அவர்களுடன் சேர்ந்து அவர் தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தார்.[f] **11** அவரைப் பற்றி ஏற்கெனவே தெரிந்தவர்கள், தீர்க்கதரிசிகளுடன் சேர்ந்து அவர் தீர்க்கதரிசனம் சொல்வதைப் பார்த்தார்கள். அப்போது, “கீசின் மகன் சவுலுக்கு என்ன ஆனது? சவுலும் ஒரு தீர்க்கதரிசியா?” என்று ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டார்கள். **12** அங்கிருந்த ஓர் ஆள், “இவர்களுடைய அப்பா யார்?” என்று கேட்டார். இப்படித்தான், “சவுலும் ஒரு தீர்க்கதரிசியா?” என்ற வழக்குச்சொல் வந்தது.[g]

13 சவுல் தீர்க்கதரிசனம் சொல்லி முடித்துவிட்டு ஆராதனை மேட்டுக்குப் போனார். **14** பிற்பாடு, சவுலுடைய அப்பாவின் சகோதரன் அவரையும் வேலைக்காரனையும் பார்த்து, “எங்கே போனீர்கள்?” என்று கேட்டார். அதற்கு சவுல், “கழுதைகளைத் தேடிப்போனோம்.[h] ஆனால், அவற்றைக் கண்டுபிடிக்க முடியாததால் சாமுவேலிடம் போனோம்” என்று சொன்னார். **15** அதற்கு அவர், “சாமுவேல் உங்களிடம் என்ன சொன்னார்? தயவுசெய்து சொல்லுங்கள்” என்றார். **16** சவுல் அவரிடம், “கழுதைகள் கிடைத்துவிட்டதாகச் சொன்னார்” என்றார். ஆனால், தான் ராஜாவாகப்போவதைப் பற்றி சாமுவேல் சொன்ன விஷயத்தைச் சொல்லவில்லை.

10:5 * இதற்கான எபிரெய வார்த்தை, உணர்ச்சி பொங்க கடவுளைப் புகழ்ந்து பேசுவதைக் குறிப்பதாகத் தெரிகிறது. **10:9** * நே.மொ., “இதயத்தை.”

அதி. 10

a ஆதி 28:19, 22
b எண் 11:25
c 1சா 10:10
d 1சா 7:15, 16; 1சா 11:14
e நியா 14:5, 6; 1சா 11:6; 1சா 16:13
f 1சா 10:6; 1சா 19:23
g 1சா 19:24
h 1சா 9:3

17 பின்பு, மக்கள் எல்லாரையும் மிஸ்பாவில் யெகோவாவுக்கு முன்
பாக சாமுவேல் வரவழைத்தார்.[a] **18** அவர்களிடம், “இஸ்ரவேலின் கடவு
ளாகிய யெகோவா சொல்வது என்னவென்றால், ‘நான்தான் உங்களை
எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தேன்.[b] எகிப்தின் பிடியிலிருந்தும் உங்
களை அடக்கி ஒடுக்கிய எல்லா ராஜ்யங்களின் பிடியிலிருந்தும் நான்
தான் உங்களைக் காப்பாற்றினேன். **19** ஆனால், எல்லா கஷ்டங்களிலிருந்
தும் வேதனைகளிலிருந்தும் உங்களைக் காப்பாற்றிய உங்கள் கடவுளாகிய
என்னை ஒதுக்கித்தள்ளிவிட்டு,[c] “எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும்” என்று
கேட்டீர்கள். அதனால், இப்போது அவரவர் கோத்திரத்தின்படியும் குடும்பத்
தின்படியும்* யெகோவாவுக்கு முன்னால் வந்து நில்லுங்கள்’” என்று
சொன்னார்.

20 அதனால், மக்கள் எல்லாரையும் கோத்திரம் கோத்திரமாக முன்
னால் வரும்படி[d] சாமுவேல் சொன்னார். அப்போது, பென்யமீன் கோத்தி
ரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.[e] **21** பின்பு, பென்யமீன் கோத்திரத்தாரைக்
குடும்பம் குடும்பமாக முன்னால் வரச் சொன்னார். அப்போது, மாத்திரிய
ரின் குடும்பம் தேர்ந்தெடுக்கப்பட்டது. கடைசியில், கீசின் மகனாகிய சவுல்
தேர்ந்தெடுக்கப்பட்டார்.[f] ஆனால் அவரைத் தேடியபோது, எங்கேயும்
கண்டுபிடிக்க முடியவில்லை. **22** அதனால், “அவர் இன்னும் இங்கு வர
வில்லையா?” என்று யெகோவாவிடம் கேட்டார்கள்.[g] அதற்கு யெகோவா,
“அதோ, மூட்டைமுடிச்சுகளின் நடுவில் ஒளிந்துகொண்டிருக்கிறான்” என்று
சொன்னார். **23** உடனே, அவர்கள் ஓடிப்போய் அவரைக் கூட்டிக்
கொண்டு வந்தார்கள். அவர் ஜனங்களின் நடுவில் நின்றபோது, எல்லாரை
யும்விட ரொம்ப உயரமாக இருந்தார். மற்றவர்கள் அவருடைய தோளுக்
குக் கீழ்தான் இருந்தார்கள்.[h] **24** அப்போது சாமுவேல் ஜனங்களிடம்,
“இதோ, பாருங்கள்! யெகோவா தேர்ந்தெடுத்த ராஜா![i] இவரைப் போல
வேறு யாருமே இல்லை” என்று சொன்னார். அப்போது ஜனங்கள் எல்லா
ரும், “ராஜா நீடூழி வாழ்க!” என்று கோஷம் போட்டார்கள்.

25 பின்பு, ராஜாவுக்கு ஜனங்கள் செய்ய வேண்டிய கடமைகளை[j] சாமு
வேல் சொன்னார். அவற்றை ஒரு புத்தகத்தில் எழுதி யெகோவாவின் முன்
னிலையில் வைத்தார். அதன்பின், ஜனங்கள் எல்லாரையும் அவரவர் வீட்
டுக்கு அனுப்பி வைத்தார். **26** சவுலும் கிபியாவிலிருந்த தன் வீட்டுக்குத்
திரும்பிப்போனார். படைவீரர்களும் அவருடன் போனார்கள். ஏனென்றால்,
அவர்களுடைய இதயத்தை யெகோவா தூண்டியிருந்தார். **27** ஆனால்
உதவாக்கரை ஆட்கள் சிலர், “இவனா நம்மைக் காப்பாற்றப்போகிறான்?”[k]
என்று சொல்லி அவரை அலட்சியப்படுத்தினார்கள், அவருக்கு எந்த
அன்பளிப்பும் கொண்டுவரவில்லை.[l] ஆனாலும், சவுல் ஒன்றும் சொல்லா
மல் அமைதியாக இருந்தார்.*

11 பின்பு, அம்மோன்[m] தேசத்தின் ராஜாவாகிய நாகாஸ், கீலே
யாத்திலுள்ள யாபேஸ்[n] ஊருக்கு எதிராக வந்து முகாம்போட்
டான். உடனே, யாபேஸ் ஊர்க்காரர்கள் அவனிடம், “எங்களோடு ஒப்பந்
தம் செய்யுங்கள். நாங்கள் உங்களுக்கு அடிமைகளாக இருப்போம்” என்று
சொன்னார்கள். **2** அதற்கு நாகாஸ், “உங்களோடு ஒப்பந்தம் செய்கிறேன்,

அதி. 10
a 1சா 7:5
b யாத் 13:14; உபா 4:34
c 1சா 8:7; 1சா 12:12
d யோசு 7:16-18; அப் 1:24
e 1சா 9:21
f அப் 13:21
g நியா 1:1; நியா 20:18, 28; 1சா 23:2
h 1சா 9:2
i உபா 17:14, 15; 1சா 9:17
j 1சா 8:11-18
k 1சா 11:12
l 1ரா 10:1, 10; 2நா 17:5

அதி. 11
m உபா 2:19
n நியா 21:8; 1சா 31:11, 12

10:19 * நே.மொ., “ஆயிரம் ஆயிரம் பேராகவும்.” **10:27** * நே.மொ., “ஊமைபோல் இருந்தார்.”

ஆனால் ஒரு நிபந்தனை! முதலில் உங்கள் எல்லாருடைய வலது கண்ணை
யும் நான் தோண்டியெடுத்து, இஸ்ரவேலர்கள் எல்லாரையும் அவமானப்
படுத்துவேன். சம்மதமா?” என்று கேட்டான். **3** அதற்கு யாபேஸ் ஊரின்
பெரியோர்கள்,* “எங்களுக்கு ஏழு நாட்கள் அவகாசம் கொடுங்கள். இஸ்
ரவேல் தேசமெங்கும் தூதுவர்களை அனுப்பி உதவி கேட்கிறோம். எங்க
ளைக் காப்பாற்ற யாரும் வராவிட்டால், அப்போது உங்களிடம் சரண
டைகிறோம்” என்று சொன்னார்கள். **4** அவர்கள் அனுப்பிய தூதுவர்கள்
சவுலின் ஊராகிய கிபியாவுக்கு[a] வந்து ஜனங்களிடம் இதைச் சொன்ன
போது, எல்லாரும் சத்தமாக அழுதார்கள்.

5 அந்தச் சமயத்தில், சவுல் தன்னுடைய வயலிலிருந்து மாடுகளை ஓட்
டிக்கொண்டு வந்தார். “என்ன நடந்தது? ஏன் எல்லாரும் அழுகிறார்
கள்?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், யாபேஸ் ஊர்க்காரர்கள்
சொன்ன செய்தியைச் சொன்னார்கள். **6** அப்போது சவுலுக்குக் கடவு
ளுடைய சக்தி கிடைத்தது.[b] அவர் பயங்கர கோபத்தோடு, **7** ஒரு ஜோடி
காளைகளைப் பிடித்து துண்டு துண்டாக வெட்டி, தூதுவர்களின் மூலம் இஸ்
ரவேலர்களுடைய எல்லா பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார். அந்தத் தூது
வர்கள் போய், “சவுலோடும் சாமுவேலோடும் வராதவர்களுடைய மாடுக
ளுக்கு இந்தக் கதிதான் வரும்!” என்று அறிவிப்பு செய்தார்கள். அப்போது,
ஜனங்கள் எல்லாரும் பயபக்தியோடு ஒன்றுகூடி வரும்படி யெகோவா
செய்தார். **8** பேசேக்கு என்ற இடத்தில் சவுல் அவர்களைக் கணக்கெடுத்த
போது, இஸ்ரவேலர்களில் 3,00,000 பேரும், யூதா கோத்திரத்து ஆண்களில்
30,000 பேரும் இருந்தார்கள். **9** பின்பு, சவுலும் அவருடைய வீரர்களும்
அந்தத் தூதுவர்களிடம், “கீலேயாத்திலுள்ள யாபேஸ் ஊர்க்காரர்களிடம்
போய், ‘நாளைக்கு உச்சி வெயில் வருவதற்குள் உங்களைக் காப்பாற்றிவி
டுவோம்’ என்று சொல்லுங்கள்” என்றார்கள். அந்தத் தூதுவர்கள் யாபேஸ்
ஊர்க்காரர்களிடம் போய் அதைச் சொன்னபோது, அவர்களுக்கு ரொம்
பவே சந்தோஷமாகிவிட்டது. **10** அதனால் நாகாசிடம், “நாளைக்கு உங்க
ளிடம் சரணடைவோம். அதன்பின் உங்கள் இஷ்டப்படி எங்களை என்ன
வேண்டுமானாலும் செய்யலாம்”[c] என்று சொன்னார்கள்.

11 அடுத்த நாள், சவுல் தன்னுடைய படையை மூன்று பிரிவுகளாகப்
பிரித்தார். அவர்கள் மூன்றாம் ஜாமத்தில்* எதிரியின் முகாமுக்குள் வந்து,
நடுப்பகல்வரை அம்மோனியர்களை[d] வெட்டிச் சாய்த்தார்கள். உயிர்தப்பி
யவர்கள் ஆளுக்கொரு பக்கம் சிதறி ஓடினார்கள். **12** அப்போது ஜனங்
கள் சாமுவேலிடம், “‘இந்த சவுலா நமக்கு ராஜா’[e] என்று சொன்னவர்கள்
எங்கே? அவர்களை எங்களிடம் ஒப்படையுங்கள், நாங்கள் அவர்களைக்
கொல்ல வேண்டும்” என்றார்கள். **13** ஆனால் சவுல், “இன்றைக்கு யாரை
யும் கொல்லக் கூடாது.[f] ஏனென்றால், இன்று யெகோவா இஸ்ரவேலர்க
ளைக் காப்பாற்றியிருக்கிறார்” என்று சொன்னார்.

14 பிற்பாடு சாமுவேல் ஜனங்களிடம், “வாருங்கள், நாம் கில்காலுக்குப்[g]
போய், சவுல்தான் ராஜா என்பதை மறுபடியும் அறிவிப்போம்”[h] என்று
சொன்னார். **15** அதனால், ஜனங்கள் எல்லாரும் கில்காலுக்குப் போய்,
யெகோவாவின் முன்னால் சவுலை ராஜாவாக்கினார்கள். பின்பு, யெகோ

11:3 *வே.வா., “மூப்பர்கள்.” **11:11** *அதாவது, “அதிகாலை சுமார் 2 மணிமுதல் 6 மணிவரை.”

அதி. 11
a 1சா 10:26
1சா 14:2
b நியா 3:9, 10
நியா 6:34
நியா 11:29
நியா 14:5, 6
1சா 10:10, 11
1சா 16:13
c 1சா 11:3
d 1சா 11:1
e 1சா 10:26, 27
f 2சா 19:22
g 1சா 7:15, 16
h 1சா 10:17, 24

வாவின் முன்னால் சமாதான பலிகளைச்[a] செலுத்தினார்கள். சவுலும்
இஸ்ரவேலர்கள் எல்லாரும் அந்த நாளைச் சந்தோஷமாகக் கொண்டாடி
னார்கள்.[b]

12 பின்பு, சாமுவேல் இஸ்ரவேலர்கள் எல்லாரிடமும், "நீங்கள்
கேட்டதையெல்லாம் நான் செய்துவிட்டேன், உங்களை ஆட்சி
செய்வதற்கு ஒரு ராஜாவையும் ஏற்படுத்திவிட்டேன்.[c] **2** இனிமேல் இவர்
தான் உங்களுக்குத் தலைமைதாங்குவார்.[d] எனக்கு வயதாகிவிட்டது, தலை
நரைத்துவிட்டது. என் மகன்கள் உங்களோடு இருக்கிறார்கள்.[e] நான் இளம்
வயதிலிருந்து உங்களை வழிநடத்தி வந்திருக்கிறேன்.[f] **3** பாருங்கள், இப்
போது உங்கள் முன்னால்தான் நிற்கிறேன். யாருக்காவது என்மேல் குறை
இருந்தால் யெகோவாவுக்கும் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கும்*[g]
முன்னால் வந்து சொல்லுங்கள். யாருடைய மாட்டையாவது கழுதையையா
வது நான் எடுத்துக்கொண்டேனா?[h] யாரையாவது ஏமாற்றினேனா? யாரை
யாவது கொடுமைப்படுத்தினேனா? யாரிடமாவது லஞ்சம் வாங்கி நீதியைப்
புரட்டினேனா?[i] அப்படியிருந்தால் சொல்லுங்கள், அதையெல்லாம் திருப்
பித் தந்துவிடுகிறேன்"[j] என்றார். **4** அதற்கு அவர்கள், "நீங்கள் எங்களை
ஏமாற்றவில்லை, கொடுமைப்படுத்தவில்லை, யார் கையிலிருந்தும் எதை
யும் வாங்கவில்லை" என்று சொன்னார்கள். **5** அப்போது அவர், "என்
மேல் உங்களுக்கு எந்தக் குறையும் இல்லை என்பதற்கு இன்று யெகோவா
சாட்சியாக இருக்கிறார். அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் சாட்சியாக
இருக்கிறார்" என்று சொன்னார். அதற்கு அவர்கள், "ஆமாம், அவர் சாட்சி
யாக இருக்கிறார்" என்றார்கள்.

6 அப்போது சாமுவேல் ஜனங்களிடம், "மோசேயையும் ஆரோனையும்
பயன்படுத்தி உங்கள் முன்னோர்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு
வந்த யெகோவா[k] எனக்குச் சாட்சியாக இருக்கிறார். **7** இப்போது அப்ப
டியே நில்லுங்கள். உங்களுக்கும் உங்கள் முன்னோர்களுக்கும் யெகோவா
செய்திருக்கிற நீதியான காரியங்களை எடுத்துச் சொல்லி, யெகோவாவின்
முன்னிலையில் உங்களோடு வழக்காடுகிறேன்.

8 யாக்கோபு எகிப்துக்கு வந்த[l] சமயத்தைக் கொஞ்சம் நினைத்துப்
பாருங்கள். யெகோவாவிடம் உங்களுடைய முன்னோர்கள் உதவி கேட்டுக்
கெஞ்சியபோது,[m] யெகோவா மோசேயையும்[n] ஆரோனையும் அனுப்பி
அவர்களை எகிப்திலிருந்து இங்கு கொண்டுவந்து சேர்த்தார்.[o] **9** ஆனால்,
அவர்கள் தங்களுடைய கடவுளாகிய யெகோவாவை மறந்தார்கள். அத
னால், அவர்களை ஆத்சோரின் படைத் தளபதி சிசெராவின் கையிலும்[p]
பெலிஸ்தியர்களின் கையிலும்[q] மோவாப் ராஜாவின் கையிலும்[r] அவர்
விட்டுவிட்டார்.*[s] அந்த ஆட்கள் உங்களுடைய முன்னோர்களோடு போர்
செய்தார்கள். **10** அப்போது, உங்கள் முன்னோர்கள் யெகோவாவிடம்
உதவி கேட்டு,[t] 'யெகோவாவே, நாங்கள் உங்களை விட்டுவிட்டு பாகால்
களின் சிலைகளையும் அஸ்தரோத்தின் சிலைகளையும் வணங்கி[u] பாவம்
செய்துவிட்டோம்.[v] இனிமேல் உங்களைத்தான் வணங்குவோம். அத
னால் இப்போது எங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுங்கள்' என்று கெஞ்
சினார்கள். **11** அப்போது, யெகோவா யெருபாகாலையும்[w] பேதானையும்

12:3 *வே.வா., "அபிஷேகம் செய்யப்பட்டவருக்கும்." **12:9** *நே.மொ., "விற்றுப்
போட்டார்."

அதி. 11
a லேவி 7:11
b 1ரா 1:39, 40
2ரா 11:12, 14
1நா 12:39, 40

அதி. 12
c 1சா 8:5
1சா 10:24
1சா 11:14, 15
d 1சா 8:20
e 1சா 8:1, 3
f 1சா 3:19
g 1சா 9:16, 17
1சா 10:1
h எண் 16:15
i உபா 16:19
j யாத் 22:4
லேவி 6:4
k யாத் 6:26
l ஆதி 46:6
m யாத் 2:23
n யாத் 3:9, 10
o யோசு 11:23
p நியா 4:2
q நியா 10:7
நியா 13:1
r நியா 3:12
s உபா 32:
18, 30
நியா 2:12, 14
t நியா 2:18
நியா 3:9
u நியா 2:13
நியா 3:7
v நியா 10:10, 15
w நியா 6:32

யெப்தாவையும்[a] சாமுவேலையும்[b] அனுப்பி, சுற்றியுள்ள எல்லா எதிரிகளி
டமிருந்தும் உங்களைக் காப்பாற்றி, பாதுகாப்பாக வாழ வைத்தார்.[c]
12 அம்மோனியர்களின் ராஜாவாகிய நாகாஸ்[d] உங்களோடு போர் செய்ய
வந்தபோது, ‘எங்களுக்குக் கண்டிப்பாக ராஜா வேண்டும்!’ என்று என்னி
டம் கேட்டுக்கொண்டே இருந்தீர்கள்.[e] உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களுக்கு ராஜாவாக இருந்தும்,[f] வேறு ராஜா வேண்டுமென்று கேட்டுக்
கொண்டே இருந்தீர்கள். **13** இதோ, நீங்கள் விரும்பிக் கேட்ட ராஜா
இங்கே இருக்கிறார். நீங்கள் கேட்டபடியே யெகோவா உங்களுக்கு ஒரு
ராஜாவைத் தந்திருக்கிறார்.[g] **14** நீங்கள் யெகோவாவின் கட்டளையை
மீறாமல், யெகோவாவுக்குப் பயந்து,[h] அவருக்குக் கீழ்ப்படிந்து,[i] அவரையே
வணங்க வேண்டும்.[j] நீங்களும் உங்கள் ராஜாவும் உங்கள் கடவுளாகிய
யெகோவாவைப் பின்பற்றி நடக்க வேண்டும். அப்படிச் செய்தால், நல்லது.
15 ஆனால், நீங்கள் யெகோவாவின் பேச்சைக் கேட்காமல், யெகோவா
வின் கட்டளையை மீறினால், உங்களையும் உங்கள் தகப்பன்களையும்
யெகோவா தண்டிப்பார்.[k] **16** இப்போது நீங்கள் அப்படியே நின்று,
யெகோவா உங்கள் கண் முன்னால் செய்யப்போகிற மாபெரும் அற்புதத்
தைப் பாருங்கள். **17** இன்று கோதுமையை அறுவடை செய்ய வேண்டிய
நாள்தானே? இடியுடன்கூடிய மழை வர வேண்டுமென்று நான் யெகோவா
விடம் வேண்டிக்கொள்கிறேன். ஒரு ராஜா வேண்டுமென்று நீங்கள் கேட்டது
யெகோவாவின் பார்வையில் எவ்வளவு மோசமான காரியம் என்பதை அப்
போது நன்றாகப் புரிந்துகொள்வீர்கள்”[l] என்று சொன்னார்.

18 பின்பு, சாமுவேல் யெகோவாவிடம் வேண்டிக்கொண்டார்.
யெகோவா அன்று இடியுடன்கூடிய மழையைப் பெய்ய வைத்தார். அத
னால், ஜனங்கள் எல்லாரும் யெகோவாவுக்கும் சாமுவேலுக்கும் மிகவும்
பயந்தார்கள். **19** அவர்கள் சாமுவேலிடம், “உங்கள் கடவுளாகிய
யெகோவாவிடம் எங்களுக்காக ஜெபம் செய்யுங்கள்.[m] நாங்கள் சாக விரும்
பவில்லை. ராஜா வேண்டுமென்று கேட்டு நாங்கள் பாவத்துக்குமேல் பாவம்
செய்துவிட்டோம்” என்று சொன்னார்கள்.

20 அதற்கு சாமுவேல், “பயப்படாதீர்கள். நீங்கள் பாவம் செய்திருந்
தாலும், இனிமேலாவது யெகோவாவைவிட்டு விலகாமல் இருங்கள்.[n] முழு
இதயத்தோடு யெகோவாவுக்குச் சேவை செய்யுங்கள்.[o] **21** அவரை விட்
டுவிட்டு ஒன்றுக்கும் உதவாத[p] வீணான தெய்வங்களைத்[q] தேடிப்போ
காதீர்கள். ஏனென்றால், அவை வீணானவை. **22** யெகோவா உங்களைத்
தன்னுடைய ஜனங்களாக விரும்பித் தேர்ந்தெடுத்திருப்பதால்[r] உங்களைக்
கைவிட மாட்டார். யெகோவா தன்னுடைய மகத்தான பெயரை மனதில்
வைத்து,[s] உங்களைக் கைவிடாமல் இருப்பார்.[t] **23** என்னைப் பொறுத்
தவரை, உங்களுக்காக ஜெபம் செய்யாமல் இருப்பதை என்னால் நினைத்
துக்கூடப் பார்க்க முடியாது. ஏனென்றால், அது யெகோவாவுக்கு முன்னால்
ஒரு பாவம். அதனால், நான் உங்களுக்கு நல்ல வழியைத் தொடர்ந்து கற்
றுக்கொடுப்பேன். **24** யெகோவாவுக்கு மட்டும் பயப்படுங்கள்,[u] முழு இத
யத்தோடும் உண்மையோடும் அவருக்குச் சேவை செய்யுங்கள். உங்க
ளுக்காக அவர் எப்பேர்ப்பட்ட அற்புதங்களைச் செய்திருக்கிறார் என்பதை
யோசித்துப் பாருங்கள்.[v] **25** நீங்கள் பாவம் செய்யத் துணிந்தால் நீங்க
ளும் சரி, உங்களுடைய ராஜாவும் சரி,[w] அடியோடு அழிக்கப்படுவீர்கள்”[x]
என்று சொன்னார்.

அதி. 12
a நியா 11:1
b எபி 11:32
c லேவி 26:6
d 1சா 11:1
e 1சா 8:5, 19
f நியா 8:23; 1சா 8:7; ஏசா 33:22
g 1சா 9:16, 17; 1சா 10:24
h உபா 10:12; உபா 17:19
i உபா 13:4; உபா 28:2
j யோசு 24:14
k லேவி 26:14, 17; உபா 28:15; யோசு 24:20
l 1சா 8:7; ஓசி 13:11
m 1சா 7:5; 1சா 12:23
n உபா 31:29; யோசு 23:6; 1சா 12:15
o உபா 6:5
p சங் 115:4, 5; எரே 16:19
q உபா 32:21; எரே 2:11
r யாத் 19:5; உபா 7:7
s யோசு 7:9; சங் 23:3; சங் 106:8; எரே 14:21; எசே 20:14
t 1ரா 6:13; சங் 94:14; ரோ 11:1
u 1சா 12:14; சங் 111:10; பிர 12:13
v உபா 10:12, 21
w உபா 28:15, 36
x யோசு 24:20

13 சவுல் ராஜாவானபோது[a] அவருக்கு . . .* வயது. அவர் இஸ்ரவேலில் இரண்டு வருஷங்கள் ஆட்சி செய்த பிறகு, **2** இஸ்ரவேல் வீரர்களிலிருந்து 3,000 பேரைத் தேர்ந்தெடுத்தார். அவர்களில் 2,000 பேர் மிக்மாசிலும் பெத்தேலைச் சுற்றியுள்ள மலைப்பகுதியிலும் சவுலோடு இருந்தார்கள். 1,000 பேர் பென்யமீனியர்களின் பகுதியாகிய கிபியாவில்[b] யோனத்தானோடு[c] இருந்தார்கள். மற்ற வீரர்களை அவரவர் வீட்டுக்கு சவுல் அனுப்பிவிட்டார். **3** கெபாவிலிருந்த[d] பெலிஸ்தியர்களின்[e] காவல் படை வீரர்களை யோனத்தான் வெட்டிச் சாய்த்தார். இதை பெலிஸ்தியர்கள் கேள்விப்பட்டார்கள். அப்போது சவுல், “எபிரெயர்களும் இதைக் கேள்விப்படட்டும்!” என்று சொல்லி, தேசமெங்கும் ஊதுகொம்பை ஊதும்படி[f] கட்டளை கொடுத்தார். **4** “பெலிஸ்தியர்களின் காவல்படை வீரர்களை சவுல் வெட்டிச் சாய்த்துவிட்டார், அதனால் இஸ்ரவேலர்கள்மேல் பெலிஸ்தியர்கள் வெறியோடு இருக்கிறார்கள்” என்ற செய்தியை இஸ்ரவேலர்கள் எல்லாரும் கேள்விப்பட்டார்கள். பின்பு சவுல், மற்ற எல்லாரையும் கில்காலுக்கு[g] வரச் சொன்னார்.

5 இஸ்ரவேலர்களோடு போர் செய்ய பெலிஸ்தியர்கள் 30,000 போர் ரதங்களோடும், 6,000 குதிரை வீரர்களோடும், கடற்கரை மணலைப் போல ஏராளமாக இருந்த மற்ற வீரர்களோடும்[h] பெத்-ஆவேனுக்குக்[i] கிழக்கே இருக்கிற மிக்மாசில் முகாம்போட்டார்கள். **6** இஸ்ரவேலர்கள் தாங்கள் பெரிய சிக்கலில் மாட்டிக்கொண்டதைப் பார்த்தபோது, குகைகளிலும்[j] பாறை இடுக்குகளிலும் பதுங்கு குழிகளிலும் நிலத்தடி தண்ணீர்த் தொட்டிகளிலும் ஒளிந்துகொண்டார்கள். **7** எபிரெயர்களில் சிலர் யோர்தானைக் கடந்து காத் பிரதேசத்துக்கும் கீலேயாத்[k] பிரதேசத்துக்கும்கூட போனார்கள். ஆனால், சவுல் கில்காலில்தான் இருந்தார். அவரோடு இருந்த வீரர்கள் எல்லாரும் நடுநடுங்கிக்கொண்டிருந்தார்கள். **8** சாமுவேல் சொன்னபடி, சவுல் ஏழு நாட்கள் அவருக்காகக் காத்திருந்தார். ஆனால், சாமுவேல் கில்காலுக்கு வரவில்லை. வீரர்களும் சவுலைவிட்டுப் போக ஆரம்பித்தார்கள். **9** கடைசியில் சவுல், “தகன பலியையும் சமாதான பலிகளையும் என்னிடம் கொண்டுவாருங்கள்” என்று சொல்லி, தகன பலியைச் செலுத்தினார்.[l]

10 சவுல் தகன பலியைச் செலுத்தி முடித்ததுமே சாமுவேல் அங்கு வந்துசேர்ந்தார். சவுல் போய் அவரை வரவேற்றார். **11** ஆனால் சாமுவேல் அவரிடம், “என்ன காரியம் செய்திருக்கிறாய்?” என்று கேட்டார். அதற்கு சவுல், “சொன்ன நேரத்தில் நீங்கள் வரவில்லை. பெலிஸ்தியர்களும் மிக்மாசுக்குத் திரண்டு வந்துவிட்டார்கள்.[m] அதோடு, என் வீரர்கள் என்னை விட்டுப் போக ஆரம்பித்துவிட்டார்கள்.[n] **12** அதனால், நான் யெகோவாவிடம் உதவி கேட்பதற்கு முன்பே பெலிஸ்தியர்கள் கில்காலுக்கு வந்து என்னைத் தாக்கிவிடுவார்களோ என்று பயந்துதான், வேறு வழியில்லாமல் தகன பலி செலுத்திவிட்டேன்” என்று சொன்னார்.

13 அதற்கு சாமுவேல், “நீ முட்டாள்தனமாக நடந்துகொண்டாய். உன் கடவுளாகிய யெகோவா சொன்ன கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போய்விட்டாய்.[o] கீழ்ப்படிந்திருந்தால், இஸ்ரவேலை என்றென்றும் ஆளுகிற உரிமையை உனக்கும் உன் வம்சத்துக்கும் யெகோவா தந்திருப்பார்.

13:1 * எத்தனை வயது என்பது எபிரெய மூலப்பிரதியில் இல்லை.

அதி. 13
a அப் 13:21
b யோசு 18:28; 1சா 10:26
c 1சா 18:1; 2சா 1:4; 2சா 21:7
d யோசு 21:8, 17
e யோசு 13:2, 3; 1சா 9:16
f நியா 3:26, 27; நியா 6:34; 2சா 2:28
g யோசு 5:9; 1சா 11:14
h உபா 20:1
i யோசு 7:2; யோசு 18:11, 12; 1சா 14:23
j 1சா 14:11
k எண் 32:1, 33; யோசு 13:24, 25
l 1சா 15:22, 23
m 1சா 13:5
n 1சா 13:6, 8
o 1சா 15:11

14 இனி உன் ஆட்சி நீடிக்காது.[a] யெகோவாவின் கட்டளைக்கு நீ கீழ்ப்ப
டியாததால்,[b] யெகோவா தன்னுடைய இதயத்துக்குப் பிடித்த இன்னொருவ
ரைக் கண்டுபிடிப்பார்.[c] யெகோவா அவரைத் தன்னுடைய ஜனங்களுக்குத்
தலைவராக நியமிப்பார்”[d] என்று சொன்னார்.

15 பின்பு, சாமுவேல் கில்காலிலிருந்து புறப்பட்டு பென்யமீனியர்களின்
பகுதியாகிய கிபியாவுக்குப் போனார். வீரர்களை சவுல் எண்ணிப் பார்த்த
போது இன்னும் அவருடன் ஏறக்குறைய 600 பேர் இருந்தார்கள்.[e]
16 சவுலும் அவருடைய மகன் யோனத்தானும் அவர்களோடு இருந்த வீரர்
களும் பென்யமீனியர்களின் பகுதியாகிய கெபாவில்[f] தங்கியிருந்தார்கள்.
பெலிஸ்தியர்கள் மிக்மாசில்[g] முகாம்போட்டிருந்தார்கள். **17** இஸ்ரவேலர்
களைச் சூறையாடுவதற்காக பெலிஸ்தியர்கள் தங்களுடைய முகாமிலிருந்து
மூன்று பிரிவுகளாகப் போனார்கள். ஒரு பிரிவினர் ஒப்ராவின் சாலை வழி
யாக சூவால் பிரதேசத்தை நோக்கிப் போனார்கள். **18** மற்றொரு பிரிவினர்
பெத்-ஓரோன்[h] சாலை வழியாகப் போனார்கள். இன்னொரு பிரிவினர்
செபோயிம் பள்ளத்தாக்குக்கு எதிரில் இருந்த எல்லைப் பகுதியின்
சாலையை நோக்கி, அதாவது வனாந்தரத்தை நோக்கி, போனார்கள்.

19 அந்தச் சமயத்தில், இஸ்ரவேல் தேசமெங்கும் ஒரு கொல்லன்கூட
இருக்கவில்லை. ஏனென்றால், எபிரெயர்கள் தங்களுக்காக வாளோ ஈட்
டியோ செய்யாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பெலிஸ்தியர்கள்
பேசி வைத்திருந்தார்கள். **20** இஸ்ரவேலர்கள் எல்லாரும் தங்களுடைய
கலப்பைக் கொழுக்களையும் மண்கொத்திகளையும் கோடாலிகளையும் அரி
வாள்களையும் தீட்டுவதற்காக பெலிஸ்தியர்களிடம்தான் போக வேண்டி
யிருந்தது. **21** கலப்பைக் கொழுக்கள், மண்கொத்திகள், வைக்கோல் வாரி
கள், கோடாலிகள் ஆகியவற்றைத் தீட்டுவதற்கும் தார்க்கோல்களை*
பழுதுபார்ப்பதற்கும் எட்டு கிராம் வெள்ளியை# கூலியாகக் கொடுக்க வேண்
டியிருந்தது. **22** போர் நடந்த நாளில் சவுலையும் யோனத்தானையும் தவிர
வேறெந்த வீரன் கையிலும் வாளோ ஈட்டியோ இருக்கவில்லை.[i] சவுலும்
யோனத்தானும் மட்டும்தான் ஆயுதங்கள் வைத்திருந்தார்கள்.

23 அப்போது, பெலிஸ்தியர்களின் காவல்படை ஒன்று மிக்மாசிலுள்ள[j]
கணவாய்க்கு* வந்தது.

14 ஒருநாள், சவுலின் மகன் யோனத்தான்[k] தன்னுடைய ஆயுதங்க
ளைச் சுமப்பவனிடம், “வா, அந்தப் பக்கத்தில் இருக்கிற பெலிஸ்தி
யர்களின் புறக்காவல் படைக்குப் போகலாம்” என்றார். ஆனால், அதைத்
தன் அப்பாவிடம் சொல்லவில்லை. **2** அப்போது, கிபியாவின்[l] எல்லை
யில் இருந்த மிக்ரோனில், ஒரு மாதுளை மரத்தின் கீழே சவுல் தங்கியிருந்
தார். அவரோடு சுமார் 600 வீரர்கள் இருந்தார்கள்.[m] **3** (அகியா என்பவர்
ஏபோத்தைப்[n] போட்டிருந்தார். இவர் சீலோவில்[o] யெகோவாவுக்குக் குருத்
துவச் சேவை செய்த ஏலியின்[p] பேரனும் பினெகாசின்[q] மகனும் இக்கபோத்
தின்[r] சகோதரருமான அகிதூப்புக்குப்[s] பிறந்தவர்.) யோனத்தான் புறப்பட்
டுப்போன விஷயம் யாருக்கும் தெரியவில்லை. **4** மலைப்பாதைகள்

13:21 *சொல் பட்டியலைப் பாருங்கள். #நே.மொ., “ஒரு பிம்மை.” ஒரு பிம் என்பது ஒரு சேக்கலில் சுமார் மூன்றில் இரண்டு பாகமுள்ள பழங்காலத்து எடை. **13:23** *கணவாய் என்பது இரண்டு மலைகளுக்கு இடையில் இயற்கையாக அமைந்துள்ள பாதை.

அதி. 13
a 1சா 15:28
b நீதி 11:2
c 1சா 16:1; 2சா 7:15; சங் 78:70; அப் 13:22
d ஆதி 49:10; 2சா 5:2; 2சா 7:8; 1நா 28:4
e 1சா 13:7; 1சா 14:2
f 1சா 13:3
g 1சா 13:2
h யோசு 10:11
i 1சா 17:47, 50
j 1சா 13:2; 1சா 14:4, 5

அதி. 14
k 1சா 14:49; 1சா 18:1; 2சா 1:4
l 1சா 10:26
m 1சா 13:15
n யாத் 29:5; எண் 27:21
o யோசு 18:1; 1சா 1:3
p 1சா 1:9
q 1சா 2:12; 1சா 4:17
r 1சா 4:21
s 1சா 22:9

வழியாக பெலிஸ்தியர்களின் புறக்காவல் படைக்குப் போக யோனத்தான்
முயற்சி செய்தார். அந்த மலைப்பாதைகளின் ஒரு பக்கத்தில் ஒரு செங்
குத்தான* கற்பாறையும், இன்னொரு பக்கத்தில் இன்னொரு செங்குத்தான
கற்பாறையும் இருந்தது. ஒரு கற்பாறையின் பெயர் போசேஸ், இன்னொரு
கற்பாறையின் பெயர் சேனே. **5** ஒரு கற்பாறை வடக்கே மிக்மாசைப்
பார்த்தபடி தூண்போல் நின்றது. மற்றொரு கற்பாறை தெற்கே கெபாவைப்[a]
பார்த்தபடி நின்றது.

6 யோனத்தான் தன்னுடைய ஆயுதங்களைச் சுமப்பவனிடம், "வா, அந்
தப் பக்கம் போய், விருத்தசேதனம் செய்யாதவர்களின்[b] புறக்காவல் படை
யைத் தாக்கலாம். ஒருவேளை, யெகோவா நமக்கு உதவி செய்வார்.
யெகோவா நினைத்தால், அவருடைய ஜனங்களைக் கொஞ்சம் பேரை
வைத்தும் காப்பாற்ற முடியும் நிறைய பேரை வைத்தும் காப்பாற்ற முடியும்.[c]
அவரை யாராலும் தடுக்க முடியாது" என்று சொன்னார். **7** அதற்கு அவன்,
"உங்கள் மனதில்* தோன்றுகிறபடியே செய்யலாம், உங்கள் இஷ்டப்படியே
போகலாம். உங்கள் மனதில்* தோன்றுகிறபடி நீங்கள் எங்கே போனாலும்
நான் உங்கள் பின்னால் வருவேன்" என்று சொன்னான். **8** அதற்கு
யோனத்தான், "நாம் அந்தப் பக்கம் போய், அவர்கள் கண்ணில் படுகிற
மாதிரி நிற்கலாம். **9** அவர்கள் நம்மிடம், 'அங்கேயே நில்லுங்கள், நாங்கள்
வருகிறோம்' என்று சொன்னால் அவர்களிடம் ஏறிப்போகாமல் அங்கேயே
நிற்கலாம். **10** ஆனால் அவர்கள், 'சண்டைக்கு வாருங்கள்!' என்று சொன்
னால், நாம் ஏறிப்போகலாம். அவர்களை யெகோவா நம் கையில் கொடுப்
பார் என்பதற்கு இதுதான் அடையாளம்"[d] என்றார்.

11 அதன்பின், அவர்கள் இரண்டு பேரும் பெலிஸ்தியர்களுடைய புறக்
காவல் படையினரின் கண்ணில் படும்படி நின்றார்கள். அப்போது அந்தப்
புறக்காவல் படையினர், "பாருங்கள்! பொந்துகளில் ஒளிந்துகொண்டிருந்த
எபிரெயர்கள்[e] வெளியே வருகிறார்கள்" என்று சொன்னார்கள். **12** அவர்
கள் யோனத்தானையும் அவருடைய ஆயுதங்களைச் சுமப்பவனையும்
பார்த்து, "மேலே ஏறி வாருங்கள், உங்களுக்குச் சரியான பாடம் புகட்டுகி
றோம்!"[f] என்றார்கள். உடனே, யோனத்தான் தன்னுடைய ஆயுதங்களைச்
சுமப்பவனிடம், "என் பின்னால் வா, யெகோவா அவர்களை இஸ்ரவேலர்
களின் கையில் கொடுப்பார்"[g] என்று சொன்னார். **13** யோனத்தான் தன்
னுடைய கை கால்களால் ஊர்ந்து மேலே ஏறினார். அவருடைய ஆயுதங்
களைச் சுமப்பவனும் அவர் பின்னால் ஏறினான். பின்பு, பெலிஸ்தியர்களை
யோனத்தான் வெட்டிக்கொண்டே போனார். அவருடைய ஆயுதங்களைச்
சுமப்பவன் அவருக்குப் பின்னால் பெலிஸ்தியர்களை கொன்றுபோட்டுக்
கொண்டே வந்தான். **14** யோனத்தானும் அவனும் நடத்திய இந்த முதல்
தாக்குதலில், சுமார் அரை ஏக்கர் நிலப்பரப்பில்* கிட்டத்தட்ட 20 பேர் வெட்
டிச் சாய்க்கப்பட்டார்கள்.

15 அப்போது, முகாமில் இருந்த வீரர்களும் புறக்காவல் படையில்
இருந்த வீரர்களும் கதிகலங்கிப்போனார்கள். சூறையாடப் போன பிரிவி
னர்களும்கூட[h] பயந்து நடுங்கினார்கள். பூமி அதிர ஆரம்பித்தது. கடவுள்
அவர்கள் எல்லாரையும் குலைநடுங்க வைத்தார். **16** எங்கு பார்த்தாலும்

14:4 *நே.மொ., "பல்போன்ற வடிவத்திலிருந்த." **14:7** *நே.மொ., "இதயத்தில்."
14:14 *அதாவது, "ஒரு நாளில் மாடுகள் ஏர் உழும் தூரத்தில் பாதித் தூரத்துக்கு."

அதி. 14
a 1சா 13:2, 3
b ஆதி 17:9, 10; நியா 14:3; நியா 15:18; 1சா 17:36; 1நா 10:4
c நியா 7:2; 2ரா 6:15, 16; 2நா 14:11
d ஆதி 24:14; நியா 7:11; 1சா 10:7
e 1சா 13:6; 1சா 14:22
f 1சா 14:10
g 1சா 14:6; 2சா 5:23, 24; 2ரா 6:15, 16
h 1சா 13:17

ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருப்பதை[a] பென்யமீனியர்களின் பகுதியான
கிபியாவிலிருந்த[b] சவுலின் காவல்காரர்கள் கவனித்தார்கள்.

17 அப்போது, சவுல் தன்னோடிருந்த வீரர்களிடம், “யாரெல்லாம் நம்
மோடு இல்லை என்பதைத் தயவுசெய்து கணக்கெடுங்கள்” என்றார். அவர்
கள் கணக்கெடுத்தபோது, யோனத்தானும் அவருடைய ஆயுதங்களைச்
சுமப்பவனும் இல்லை என்பது தெரியவந்தது. **18** உடனே சவுல் அகியா
விடம்,[c] “உண்மைக் கடவுளின் பெட்டியை இங்கே கொண்டுவாருங்கள்!”
என்றார். (அந்தச் சமயத்தில் உண்மைக் கடவுளின் பெட்டி இஸ்ரவேலர்களி
டம் இருந்தது.) **19** குருவாகிய அகியாவோடு சவுல் பேசிக்கொண்டிருந்த
போது, பெலிஸ்தியர்களின் முகாமில் கூச்சலும் குழப்பமும் அதிகமாகிக்
கொண்டே போனது. அதனால் சவுல் அகியாவிடம், “நீங்கள் செய்து
கொண்டிருப்பதை நிறுத்திவிடுங்கள்” என்று சொல்லிவிட்டு, **20** தன்னோடு
இருந்த வீரர்களுடன் சேர்ந்து போர் செய்யப் போனார். அங்கே பெலிஸ்தி
யர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்திருப்பதையும், ஒரே கலவரமாக
இருப்பதையும் அவர்கள் பார்த்தார்கள். **21** முன்பு பெலிஸ்தியர்களோடு
சேர்ந்துகொண்டு அவர்களுடைய முகாமில் திரிந்துகொண்டிருந்த எபிரெ
யர்கள் சிலர், சவுலோடும் யோனத்தானோடும் இருந்த இஸ்ரவேல் படை
யோடு சேர்ந்துகொண்டார்கள். **22** பெலிஸ்தியர்கள் தப்பித்து ஓடுவதை
எப்பிராயீம் மலைப்பகுதியில் ஒளிந்திருந்த இஸ்ரவேலர்கள்[d] எல்லாரும்
கேள்விப்பட்டபோது, அவர்களும் சேர்ந்து எதிரிகளைத் துரத்திக்கொண்டு
போனார்கள். **23** பெத்-ஆவேன்வரை[e] போர் நடந்தது. யெகோவா அன்
றைக்கு இஸ்ரவேலர்களைக் காப்பாற்றினார்.[f]

24 இஸ்ரவேல் வீரர்கள் அன்றைக்கு மிகவும் களைத்துப்போனார்கள்.
ஏனென்றால் சவுல் அவர்களிடம், “நான் என்னுடைய எதிரிகளைப் பழிவாங்
கித் தீரும்வரை பொறுத்திருக்காமல் சாயங்காலத்துக்கு முன்பே உணவு சாப்
பிடுகிற எவனும் சபிக்கப்பட்டவன்!” என்று ஆணையிட்டுச் சொல்லியிருந்
தார். அதனால், வீரர்களில் யாரும் எதுவும் சாப்பிடவில்லை.[g]

25 வீரர்கள் எல்லாரும் காட்டுக்கு வந்தார்கள். அங்கே தேன்கூட்டி
லிருந்து தேன் ஒழுகி, தரையில் சிந்திக் கிடந்ததைப் பார்த்தார்கள்.
26 ஆனால், ஒழுகிக்கொண்டிருந்த அந்தத் தேனை யாருமே எடுத்துச்
சாப்பிடவில்லை. ஏனென்றால், அவர்கள் சவுலின் கட்டளையை நினைத்துப்
பயந்தார்கள். **27** ஆனால், சவுலின் மகன் யோனத்தானுக்கு அந்தக் கட்ட
ளையைப் பற்றித் தெரியவில்லை.[h] அதனால், தான் வைத்திருந்த
கோலின் முனையைத் தேன்கூட்டில் குத்தி, தேனை எடுத்துச் சாப்பிட்
டார். அப்போது, அவருக்குத் தெம்பு கிடைத்தது.* **28** அப்போது வீரர்
களில் ஒருவன், “‘இன்றைக்குச் சாப்பிடுகிறவன் சபிக்கப்பட்டவன்!’[i] என்று
உங்களுடைய அப்பா ஆணையிட்டுச் சொல்லியிருக்கிறார். அதனால்
தான் வீரர்கள் இவ்வளவு களைப்பாக இருக்கிறார்கள்” என்று சொன்னான்.
29 அதற்கு யோனத்தான், “என்னுடைய அப்பாவால் ஜனங்களுக்கு எவ்வ
ளவு கஷ்டம்! கொஞ்சம் தேன் சாப்பிட்டதற்கே நான் எவ்வளவு தெம்
பாக இருக்கிறேன்* என்று பாருங்கள். **30** அப்படியிருக்கும்போது, எதிரி
களிடம் கைப்பற்றிய ஆடுமாடுகளை வீரர்கள் வயிறார சாப்பிட்டிருந்தால்[j]

14:27 * நே.மொ., “அவருடைய கண்கள் பிரகாசித்தன.” **14:29** * நே.மொ., “என் கண்
கள் எவ்வளவு பிரகாசிக்கின்றன.”

அதி. 14
a 1சா 14:20
b 1சா 10:26
1சா 14:2
c 1சா 14:3
d 1சா 13:6
e 1சா 13:5
f உபா 33:29
நியா 2:18
g லேவி 5:4
எண் 30:2
உபா 23:21
h 1சா 14:17
i 1சா 14:24
j 1சா 14:26

இன்னும் எத்தனை பெலிஸ்தியர்களை வெட்டிக் குவித்திருக்கலாம்!” என்று
சொன்னார்.

31 அன்று அவர்கள் மிக்மாஷ்முதல் ஆயலோன்வரை[a] பெலிஸ்தியர்
களை வெட்டிச் சாய்த்திருந்ததால், வீரர்கள் ரொம்பவும் களைத்துப்போயி
ருந்தார்கள். 32 பசிவெறியில், தாங்கள் கைப்பற்றிய ஆடுமாடுகளையும்
கன்றுக்குட்டிகளையும் பிடித்துத் தரையில் வெட்டிக் கொன்று, இறைச்
சியை இரத்தத்தோடு சாப்பிட்டார்கள்.[b] 33 “வீரர்கள் இறைச்சியை இரத்
தத்தோடு சாப்பிட்டு யெகோவாவுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்
கள்”[c] என்று சவுலிடம் சொல்லப்பட்டது. அதற்கு அவர், “நீங்கள்
பாவம் செய்துவிட்டீர்கள். உடனடியாக ஒரு பெரிய கல்லை உருட்டிக்
கொண்டு வாருங்கள்” என்றார். 34 பின்பு அவர், “நீங்கள் எல்லாரிடமும்
போய், ‘ஒவ்வொருவரும் தன்னுடைய மாட்டையும் ஆட்டையும் இங்கே
கொண்டுவந்து கொன்று சாப்பிட வேண்டும். இறைச்சியை இரத்தத்தோடு
சாப்பிட்டு யெகோவாவுக்கு விரோதமாகப் பாவம் செய்யக் கூடாது’[d] என்று
சொல்லுங்கள்” என்றார். அதனால், அன்றைக்கு ராத்திரி ஒவ்வொருவரும்
தங்களுடைய மாட்டை அங்கே கொண்டுவந்து வெட்டிக் கொன்றார்கள்.
35 அப்போது, சவுல் யெகோவாவுக்கு ஒரு பலிபீடம் கட்டினார்.[e] யெகோ
வாவுக்கு அவர் கட்டிய முதல் பலிபீடம் அதுதான்.

36 பிற்பாடு சவுல், “இன்றைக்கு ராத்திரி பெலிஸ்தியர்களைத் துரத்திக்
கொண்டு போய், அவர்களுக்குச் சொந்தமானதையெல்லாம் விடியும்வரை
கைப்பற்றலாம். ஒருவனைக்கூட விட்டுவைக்கக் கூடாது” என்று சொன்
னார். அதற்கு வீரர்கள், “உங்களுக்கு எது சரியென்று படுகிறதோ அதையே
செய்யுங்கள்” என்றார்கள். ஆனால் குருவானவர், “இங்கே உண்மைக் கட
வுளிடம் நாம் கேட்டுப் பார்க்கலாம்”[f] என்று சொன்னார். 37 அப்போது
சவுல் கடவுளிடம், “பெலிஸ்தியர்களை நான் துரத்திக்கொண்டு போக
லாமா?[g] அவர்களை இஸ்ரவேலர்களின் கையில் கொடுப்பீர்களா?” என்று
விசாரித்தார். ஆனால், அன்றைக்குக் கடவுள் அவருக்குப் பதில் தர
வில்லை. 38 அதனால் சவுல், “தலைவர்கள் எல்லாரும் இங்கே வாருங்
கள். இன்றைக்கு யார் என்ன பாவம் செய்தார்கள் என்று கண்டுபிடியுங்கள்.
39 இஸ்ரவேலர்களைக் காப்பாற்றிய உயிருள்ள கடவுளாகிய யெகோவா
மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* பாவம் செய்தது என் மகன் யோனத்
தானாகவே இருந்தாலும் அவன் சாக வேண்டும்” என்றார். ஆனால்,
யாருமே அவருக்குப் பதில் சொல்லவில்லை. 40 அப்போது அவர்
இஸ்ரவேலர்களிடம், “நீங்கள் எல்லாரும் ஒரு பக்கம் நில்லுங்கள், நானும்
என் மகன் யோனத்தானும் இன்னொரு பக்கம் நிற்கிறோம்” என்றார்.
அதற்கு அந்த வீரர்கள், “உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்” என்
றார்கள்.

41 பின்பு சவுல் யெகோவாவிடம், “இஸ்ரவேலின் கடவுளே, தும்மீம்[h]
மூலம் எனக்குப் பதில் சொல்லுங்கள்!” என்றார். அப்போது, யோனத்தா
னின் பெயரிலும் சவுலின் பெயரிலும் குலுக்கல் விழுந்தது, வீரர்கள் தப்
பினார்கள். 42 உடனே சவுல், “எனக்கும் என் மகன் யோனத்தானுக்கும்
இடையில் குலுக்கல்[i] போட்டுப் பாருங்கள்” என்று சொன்னார். அப்போது,

அதி. 14
a யோசு 10:12
b ஆதி 9:4; லேவி 3:17; லேவி 17:10; உபா 12:16; அப் 15:29
c உபா 12:23
d 1சா 14:32
e 1சா 7:15, 17
f எண் 27:21; 1சா 30:7, 8
g நியா 1:1; 1சா 30:8; 2சா 5:19
h யாத் 28:30; உபா 33:8; எஸ்றா 2:62, 63
i நீதி 16:33

14:39 * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.”

யோனத்தானின் பெயரில் குலுக்கல் விழுந்தது. **43** சவுல் யோனத்தானி
டம், “நீ என்ன செய்தாய், சொல்” என்று கேட்டார். அதற்கு யோனத்தான்,
“என் கோலை நீட்டிக் கொஞ்சம் தேனை மட்டும் எடுத்துச் சாப்பிட்டேன்.[a]
அதற்காக இப்போது நான் சாகத் தயார்!” என்று சொன்னார்.

44 அதற்கு சவுல், “நான் உனக்கு மரண தண்டனை கொடுக்காவிட்
டால் கடவுள் எனக்குக் கடுமையான தண்டனை கொடுக்கட்டும்”[b] என்றார்.
45 அப்போது வீரர்கள், “இஸ்ரவேலர்களுக்கு இவ்வளவு பெரிய வெற்றி
யைத் தேடித் தந்த யோனத்தான்[c] சாக வேண்டுமா? கூடவே கூடாது!
இது உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை,* யோனத்தானின்
தலையிலிருந்து ஒரு முடிகூட கீழே விழக் கூடாது. இன்றைக்கு அவர் கடவு
ளுடைய துணையோடுதான் போர் செய்தார்”[d] என்றார்கள். இப்படி, அந்த
வீரர்கள் யோனத்தானின் உயிரைக் காப்பாற்றினார்கள்.

46 பெலிஸ்தியர்களைத் துரத்திக்கொண்டு போவதை சவுல் விட்டு
விட்டார், பெலிஸ்தியர்களும் தங்களுடைய தேசத்துக்குத் திரும்பிப்
போனார்கள்.

47 சவுல் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் தன்னுடைய கட்டுப்
பாட்டுக்குள் கொண்டுவந்து, சுற்றிலும் இருந்த எதிரிகளான மோவாபியர்க
ளோடும்,[e] அம்மோனியர்களோடும்,[f] ஏதோமியர்களோடும்,[g] சோபாவின்[h]
ராஜாக்களோடும், பெலிஸ்தியர்களோடும்[i] போர் செய்தார். படையெடுத்
துப் போன எல்லா இடங்களிலும் அவர்களைத் தோற்கடித்தார். **48** அவர்
வீரத்தோடு போர் செய்து அமலேக்கியர்களை[j] ஜெயித்தார். சூறையாடுகிற
வர்களின் கையிலிருந்து இஸ்ரவேலர்களைக் காப்பாற்றினார்.

49 சவுலுக்கு யோனத்தான், இஸ்வி, மல்கிசூவா என்ற மகன்கள் இருந்
தார்கள்.[k] அவருக்கு இரண்டு மகள்களும் இருந்தார்கள். மூத்தவள் பெயர்
மேரப்,[l] சின்னவள் பெயர் மீகாள்.[m] **50** அவருடைய மனைவியின் பெயர்
அகினோவாம். இவள் அகிமாசின் மகள். சவுலின் படைத் தலைவரு
டைய பெயர் அப்னேர்.[n] இவர் சவுலின் சொந்தக்காரரான நேரின் மகன்.
51 சவுலின் அப்பா பெயர் கீஸ்.[o] அப்னேரின் அப்பா நேர்,[p] நேரின்
அப்பா அபியேல்.

52 சவுலின் காலம் முழுவதும் இஸ்ரவேலர்களும் பெலிஸ்தியர்களும்
பயங்கரமாகச் சண்டை போட்டுக்கொண்டே இருந்தார்கள்.[q] தைரியமும்
துணிச்சலும் உள்ள யாரைப் பார்த்தாலும், சவுல் உடனடியாக அவனைத்
தன்னுடைய படையில் சேர்த்துக்கொள்வார்.[r]

15 பின்பு சாமுவேல் சவுலிடம், “யெகோவா என்னை அனுப்பி
உன்னை இஸ்ரவேலர்களுக்கு ராஜாவாக அபிஷேகம் செய்தார்,[s]
இல்லையா? இப்போது, யெகோவா சொல்வதைக் கேள்.[t] **2** பரலோகப்
படைகளின் யெகோவா சொல்வது என்னவென்றால், ‘இஸ்ரவேலர்கள்
எகிப்திலிருந்து வந்தபோது அவர்களோடு போர் செய்த அமலேக்கியர்
களை நான் பழிவாங்கப்போகிறேன்.[u] **3** இப்போது நீ போய் அமலேக்கி
யர்களை வெட்டித்தள்ளு.[v] ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், கைக்குழந்
தைகள் என எல்லாரையும் கொன்றுபோடு.*[w] அவர்களுக்குச் சொந்தமான

14:45 *வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்.” **15:3** *வே.வா., “என யாருக்கும் கருணை காட்டாதே.”

அதி. 14
a 1சா 14:27
b 1சா 14:24
c 1சா 14:14
d 1சா 14:6
e 1சா 12:9
f 1சா 11:11
g ஆதி 36:8
h 2சா 10:6
i 1சா 9:16, 17
j யாத் 17:14 உபா 25:19 1சா 15:3
k 1சா 31:2 1நா 8:33 1நா 9:39
l 1சா 18:17
m 1சா 18:27 1சா 25:44 2சா 3:13 2சா 6:20
n 1சா 17:55 2சா 2:8 2சா 3:27
o 1சா 9:1
p 1நா 2:5
q ஆதி 49:27 1சா 9:16, 17
r 1சா 8:11 1சா 10:26

அதி. 15
s 1சா 9:16 1சா 10:1
t 1சா 12:14
u யாத் 17:8 எண் 24:20 உபா 25: 17, 18
v யாத் 17:14 உபா 25:19 1நா 4:43
w லேவி 27:29 உபா 9:1, 3 1சா 15:18

ஆடுமாடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும், மற்ற எல்லா
வற்றையும் அழித்துவிடு’”[a] என்று சொன்னார். **4** சவுல் தன்னுடைய போர்
வீரர்களை தெலாயிமுக்கு வரவழைத்து அவர்களைக் கணக்கெடுத்தார்.
யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்களில் 10,000 வீரர்களும் மற்ற கோத்திரங்
களைச் சேர்ந்தவர்களில் 2,00,000 காலாட்படையினரும் இருந்தார்கள்.[b]

5 அமலேக்கின் நகரம்வரை சவுல் போனார். அங்கிருந்த பள்ளத்தாக்
கின்* பக்கத்தில் வீரர்களைப் பதுங்கியிருக்க வைத்தார். **6** அவர்
கேனியர்களிடம்,[c] “இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வந்தபோது அவர்
களுக்கு நீங்கள் பெரிய உதவி செய்தீர்கள்.*[d] அதனால், அமலேக்கியர்க
ளோடு சேர்த்து உங்களையும் அழிக்க நான் விரும்பவில்லை.[e] தயவு
செய்து அவர்களைவிட்டு விலகிப் போங்கள்” என்று சொன்னார். அதனால்,
கேனியர்கள் அமலேக்கியர்களைவிட்டு விலகிப் போனார்கள். **7** அதன்
பின் சவுல், ஆவிலா[f] தொடங்கி எகிப்துக்குப் பக்கத்திலுள்ள ஷூர்வரை[g]
போய் அமலேக்கியர்களை வெட்டிப்போட்டார்.[h] **8** அமலேக்கிய ராஜா
வான ஆகாகை உயிரோடு பிடித்தார்,[i] ஆனால் ஜனங்கள் எல்லாரையும்
வாளால் வெட்டிப்போட்டார்.[j] **9** சவுலும் அவருடைய வீரர்களும் ஆகா
கைக் கொல்லாமல் விட்டுவைத்ததோடு,* மந்தையிலிருந்த முதல் தரமான
கொழுத்த ஆடுமாடுகளையும் செம்மறியாட்டுக் கடாக்களையும் நல்ல
நல்ல பொருள்களையும் விட்டுவைத்தார்கள்.[k] அவற்றை அழிக்க அவர்
களுக்கு மனம் வரவில்லை. ஆனால், வீணானவற்றையும் வேண்டாதவற்
றையும் அழித்தார்கள்.

10 பின்பு, யெகோவா சாமுவேலிடம், **11** “சவுல் என் பேச்சைக்
கேட்டு நடக்காமல் என்னிடமிருந்து விலகிவிட்டான்.[l] அவனை ராஜாவாக்
கியதற்காக நான் வருத்தப்படுகிறேன்” என்று சொன்னார். அதைக் கேட்டு
சாமுவேல் மிகவும் வேதனைப்பட்டார். ராத்திரி முழுவதும் யெகோவா
விடம் கதறிக்கொண்டே இருந்தார்.[m] **12** சவுலைப் போய்ப் பார்க்க சாமு
வேல் விடியற்காலையிலேயே எழுந்தார். அப்போது, சவுல் கர்மேலுக்
குப்[n] போயிருந்ததாகவும், அங்கே தனக்காக ஒரு நினைவுச் சின்னத்தை
நாட்டியதாகவும்,[o] பின்பு அங்கிருந்து திரும்பி கில்காலுக்குப் போய்விட்
டதாகவும் கேள்விப்பட்டார். **13** கடைசியில், சாமுவேல் சவுலிடம் வந்து
சேர்ந்தார். அப்போது சவுல் அவரிடம், “யெகோவா உங்களை ஆசீர்வதிக்
கட்டும். யெகோவா சொன்னபடியே நான் செய்துவிட்டேன்” என்றார்.
14 அப்போது சாமுவேல், “அப்புறம் எப்படி ஆடுமாடுகளின் சத்தம் கேட்
கிறது?”[p] என்று கேட்டார். **15** அதற்கு சவுல், “அவற்றை அமலேக்கியர்
களிடமிருந்து கொண்டுவந்தோம். உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப்
பலி செலுத்துவதற்காகக் கொழுத்த ஆடுமாடுகளை என் வீரர்கள் கொல்லா
மல் விட்டுவைத்திருக்கிறார்கள். ஆனால், மற்ற எல்லாவற்றையும் நாங்கள்
அழித்துவிட்டோம்” என்று சொன்னார். **16** அப்போது சாமுவேல் சவுலி
டம், “போதும் நிறுத்து! நேற்று ராத்திரி யெகோவா என்னிடம் சொன்னதை[q]
இப்போது உன்னிடம் சொல்கிறேன்” என்றார். அதற்கு சவுல், “சொல்லுங்
கள்!” என்றார்.

15:5 *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்.” **15:6** *வே.வா., “மாறாத அன்பு காட்டினீர்கள்.” **15:9** *வே.வா., “ஆகாகுக்குக் கருணை காட்டியதோடு.”

அதி. 15
- *a* உபா 13:17; யோசு 6:18
- *b* 1சா 11:8; 1சா 13:15
- *c* எண் 10:29, 32; எண் 24:21; நியா 1:16
- *d* யாத் 18:9, 12
- *e* ஆதி 18:25; ஆதி 19:12, 13; யோசு 6:17
- *f* ஆதி 25:17, 18
- *g* 1சா 27:8
- *h* உபா 25:19; 1சா 14:47, 48
- *i* 1சா 15:33
- *j* லேவி 27:29; 1சா 15:3
- *k* யோசு 7:12
- *l* 1சா 13:13; 1சா 15:3
- *m* 1சா 16:1
- *n* யோசு 15:20, 55
- *o* 2சா 18:18
- *p* 1சா 15:3
- *q* 1சா 15:10, 11

17 அப்போது சாமுவேல், “இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவ
னாகவும் ராஜாவாகவும் யெகோவா உன்னைத் தேர்ந்தெடுத்தபோது*[a]
நீ அதற்குக் கொஞ்சமும் தகுதி இல்லாதவன்[b] என்றுதானே நினைத்
தாய்? **18** பிற்பாடு, யெகோவா உனக்கு ஒரு வேலை கொடுத்து, ‘நீ போய்
இந்தப் பொல்லாத அமலேக்கியர்களை அழித்துப்போடு.[c] அவர்களோடு
போர் செய்து அவர்களை அடியோடு ஒழித்துக்கட்டு’[d] என்று சொன்னார்,
இல்லையா? **19** நீ ஏன் யெகோவா சொன்னபடி செய்யவில்லை? கைப்
பற்றிய பொருள்களைப் பேராசையோடு எடுத்துவந்து,[e] யெகோவா வெறுக்
கிறதைச் செய்துவிட்டாயே!” என்று சொன்னார்.

20 ஆனால் சவுல் சாமுவேலிடம், “இல்லை, நான் யெகோவா சொன்
னபடிதான் செய்தேன்! யெகோவா எந்த வேலைக்காக என்னை அனுப்பி
னாரோ அதைச் செய்து முடித்தேன். அமலேக்கிய ராஜாவான ஆகாகைப்
பிடித்துக்கொண்டு வந்தேன், ஜனங்களை அடியோடு அழித்துவிட்டேன்.[f]
21 ஆனால், அழிக்க வேண்டிய மிருகங்களை வீரர்கள்தான் எடுத்துக்
கொண்டார்கள். அதுவும் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு கில்காலில்
பலி செலுத்துவதற்காகத்தான், தாங்கள் கைப்பற்றிய ஆடுமாடுகளில் முதல்
தரமானவற்றைக் கொண்டுவந்தார்கள்”[g] என்று சொன்னார்.

22 அதற்கு சாமுவேல், “யெகோவாவுக்குக் கீழ்ப்படிவதைவிட தகன
பலிகளும் காணிக்கைகளும் யெகோவாவுக்குப் பிரியமாக இருக்குமா?[h]
பலி செலுத்துவதைவிட கீழ்ப்படிவதுதான் முக்கியம்,[i] செம்மறியாட்டுக்
கடாவின் கொழுப்பைச்[j] செலுத்துவதைவிட அவர் பேச்சைக் கேட்பது
தான் முக்கியம். **23** கீழ்ப்படியாமல் போவது[k] பில்லிசூனியத்தில் ஈடுப
டும் பாவத்துக்குச்[l] சமம். அகங்காரத்தோடு* நடந்துகொள்வது மாயமந்தி
ரம் செய்வதற்கும் சிலைகளை# வணங்குவதற்கும் சமம். யெகோவாவின்
கட்டளையை[m] நீ ஒதுக்கித்தள்ளிவிட்டாய், அதனால் ராஜாவாக இல்லாத
படி அவர் உன்னை ஒதுக்கித்தள்ளிவிட்டார்”[n] என்று சொன்னார்.

24 அதற்கு சவுல், “நான் பாவம் செய்துவிட்டேன், யெகோவாவின் கட்
டளையையும் உங்களுடைய வார்த்தையையும் மீறிவிட்டேன். ஜனங்க
ளுக்குப் பயந்து அவர்கள் சொன்னபடி செய்துவிட்டேன். **25** தயவுசெய்து
என் பாவத்தை மன்னித்துவிட்டு என்னோடு வாருங்கள், நான் யெகோ
வாவை வணங்க வேண்டும்”[o] என்றார். **26** ஆனால் சாமுவேல் சவுலிடம்,
“நான் உன்னோடு வர மாட்டேன், நீ யெகோவாவின் வார்த்தையை ஒதுக்
கித்தள்ளிவிட்டாய். அதனால், இஸ்ரவேலர்களுக்கு ராஜாவாக இல்லாதபடி
உன்னை யெகோவா ஒதுக்கித்தள்ளிவிட்டார்”[p] என்றார். **27** சாமுவேல்
அங்கிருந்து புறப்பட்டுப் போகத் திரும்பியபோது, அவர் போட்டிருந்த
கையில்லாத மேலங்கியின் ஓரத்தை சவுல் பிடித்தார், அது கிழிந்துவிட்
டது. **28** அப்போது சாமுவேல் சவுலிடம், “இன்றைக்கு யெகோவா உன்
னிடமிருந்து ஆட்சியைப் பிடுங்கி,* உன்னைவிட தகுதியான ஒருவருக்
குக் கொடுப்பார்.[q] **29** இஸ்ரவேலின் மகா உன்னதமான கடவுள்[r] பொய்

15:17 * வே.வா., “அபிஷேகம் செய்தபோது.” **15:23** * இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. # வே.வா., “குலதெய்வச் சிலைகளை.” **15:28** * நே.மொ., “கிழித்து.”

அதி. 15

a 1சா 9:16, 1சா 10:1
b 1சா 9:21, 1சா 10:22
c 1சா 15:3
d உபா 25:19
e உபா 13:17, 1சா 15:9
f லேவி 27:29, உபா 7:16, 1சா 15:3, 9
g 1சா 15:15
h ஏசா 1:11
i நீதி 21:3, ஓசி 6:6, மாற் 12:33
j லேவி 3:16
k 1சா 12:15
l லேவி 20:6, உபா 18:10, 12, 1நா 10:13
m 1சா 15:3
n 1சா 13:14, 1சா 16:1, அப் 13:22
o 1சா 15:30
p 1சா 13:14, 1சா 16:1
q 1சா 13:14, 1சா 16:12, 13, அப் 13:22
r 1நா 29:11

சொல்ல மாட்டார்,[a] மனம் மாறவும் மாட்டார். மனம் மாற அவர் மனிதன்
இல்லையே”[b] என்றார்.

30 அதற்கு சவுல், “நான் பாவம் செய்துவிட்டேன். ஆனால், இஸ்ர
வேலின் பெரியோர்களுக்கு* முன்பும் வீரர்களுக்கு முன்பும் தயவுசெய்து
என்னைக் கௌரவப்படுத்துங்கள். உங்கள் கடவுளாகிய யெகோவாவை
நான் வணங்க வேண்டும், என்னோடு வாருங்கள்”[c] என்றார். **31** அதனால்,
சாமுவேல் சவுலோடு போனார், சவுல் யெகோவாவை வணங்கினார்.
32 அப்போது சாமுவேல், “அமலேக்கிய ராஜா ஆகாகை என்னிடம்
கொண்டுவாருங்கள்” என்றார். அப்போது, ஆகாக் அவரிடம் தயங்கித் தயங்
கிப் போனான்.* ஏனென்றால், இனி தன்னுடைய உயிருக்கு ஆபத்தில்லை
என்று அவன் நினைத்திருந்தான். **33** ஆனால் சாமுவேல் அவனிடம்,
“உன் வாளினால் எத்தனையோ தாய்கள் தங்களுடைய பிள்ளைகளைப் பறி
கொடுத்துத் தவித்தது போல உன் தாயும் உன்னைப் பறிகொடுத்துத் தவி
யாய்த் தவிப்பாள்” என்று சொல்லி, கில்காலில் யெகோவாவுக்கு முன்னால்
அவனைத் துண்டு துண்டாக வெட்டிப்போட்டார்.[d]

34 பின்பு, சாமுவேல் ராமாவுக்குப் போனார். சவுல் கிபியாவிலுள்ள
தன்னுடைய வீட்டுக்குப் போனார். **35** அதன்பின், சாமுவேல் தான் சாகும்
வரை சவுலைப் பார்க்கவே இல்லை. சவுலை நினைத்து அவர் துக்கப்
பட்டுக்கொண்டே இருந்தார்.[e] சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக்கியதற்காக
யெகோவா வருத்தப்பட்டார்.[f]

16 கடைசியில் யெகோவா சாமுவேலிடம், “நீ இன்னும் எத்தனை
நாளைக்குத்தான் சவுலை நினைத்துத் துக்கப்பட்டுக் கொண்டிருப்
பாய்?[g] நான்தான் அவனை ராஜாவாக இல்லாதபடி ஒதுக்கித்தள்ளிவிட்
டேனே.[h] இப்போது ஒரு கொம்பில்* எண்ணெயை நிரப்பிக்கொண்டு[i]
புறப்படு. பெத்லகேம் ஊரைச் சேர்ந்த ஈசாயிடம்[j] போ. அவனுடைய மகன்
களில் ஒருவனை ராஜாவாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்”[k] என்று சொன்
னார். **2** ஆனால் சாமுவேல், “நான் எப்படிப் போவேன்? சவுலுக்கு விஷ
யம் தெரிந்தால் என்னைக் கொன்றுவிடுவானே”[l] என்றார். அதற்கு
யெகோவா, “ஒரு இளம் பசுவை ஓட்டிக்கொண்டு போய், யெகோவா
வுக்குப் பலி கொடுக்க வந்திருப்பதாகச் சொல். **3** பலி செலுத்துகிற இடத்
துக்கு ஈசாயை வரச் சொல். அதன்பின் நீ என்ன செய்ய வேண்டுமென்று
அப்போது சொல்வேன். நான் யாரைக் காட்டுகிறேனோ அவனை நீ அபி
ஷேகம் செய்ய வேண்டும்”[m] என்று சொன்னார்.

4 யெகோவா சொன்னபடியே சாமுவேல் செய்தார். அவர் பெத்லகே
முக்கு[n] வந்தபோது, நகரத்துப் பெரியோர்கள்* அவரைப் பார்த்து, “நல்ல
விஷயமாகத்தானே வந்திருக்கிறீர்கள்?” என்று பதற்றத்தோடு கேட்டார்கள்.
5 அதற்கு அவர், “ஆமாம், நல்ல விஷயமாகத்தான் வந்திருக்கிறேன்.
யெகோவாவுக்குப் பலி செலுத்த வந்திருக்கிறேன். உங்களைப் புனிதப்
படுத்திக்கொண்டு, பலி செலுத்தும் இடத்துக்கு என்னோடு வாருங்கள்” என்
றார். பின்பு, ஈசாயையும் அவருடைய மகன்களையும் அவர் புனிதப்படுத்தி
னார். அதன்பின், பலி செலுத்தும் இடத்துக்கு அவர்களை வரச் சொன்னார்.

அதி. 15
a தீத் 1:2; எபி 6:18
b எண் 23:19
c 1சா 15:25
d யாத் 17:14; உபா 25:19; 1சா 15:3
e 1சா 16:1
f 1சா 15:11

அதி. 16
g 1சா 15:35
h 1சா 15:23, 26
i 1ரா 1:39
j ரூ 4:17; 1நா 2:12
k ஆதி 49:10; 1சா 13:14; சங் 78:70; அப் 13:22
l 1சா 22:17
m சங் 89:20
n ரூ 4:11; 1சா 20:6

15:30 * வே.வா., “மூப்பர்களுக்கு.” **15:32** * அல்லது, “நம்பிக்கையோடு போனான்.” **16:1** * சொல் பட்டியலில் “கொம்பு” என்ற தலைப்பைப் பாருங்கள். **16:4** * வே.வா., “மூப்பர்கள்.”

6 அவர்கள் அங்கே வந்தார்கள். சாமுவேல் எலியாபைப்[a] பார்த்தபோது,
“நிச்சயம் இவனைத்தான் யெகோவா தேர்ந்தெடுத்திருப்பார்” என்று நினைத்
துக்கொண்டார். **7** ஆனால் யெகோவா சாமுவேலிடம், “இவன் தோற்றத்
தையோ உயரத்தையோ பார்க்காதே.[b] நான் இவனைத் தேர்ந்தெடுக்க
வில்லை. மனிதன் பார்ப்பதுபோல் நான் பார்ப்பதில்லை. மனிதன்
வெளித்தோற்றத்தை மட்டும்தான் பார்க்கிறான். ஆனால், யெகோவாவா
கிய நான் இதயத்தைப் பார்க்கிறேன்”[c] என்று சொன்னார். **8** பின்பு, ஈசாய்
சாமுவேலின் முன்னால் அபினதாபை[d] நிறுத்தினார். அப்போது சாமுவேல்,
“யெகோவா இவனையும் தேர்ந்தெடுக்கவில்லை” என்றார். **9** அடுத்ததாக,
ஈசாய் சாமுவேலின் முன்னால் சம்மாவை[e] நிறுத்தினார். ஆனால் சாமு
வேல், “யெகோவா இவனையும் தேர்ந்தெடுக்கவில்லை” என்றார்.
10 இப்படியே, ஈசாய் தன்னுடைய ஏழு மகன்களையும் ஒவ்வொருவராக
சாமுவேலின் முன்னால் நிறுத்தினார். ஆனால் சாமுவேல் ஈசாயிடம், “இவர்
களில் யாரையும் யெகோவா தேர்ந்தெடுக்கவில்லை” என்று சொன்னார்.

11 கடைசியாக சாமுவேல் ஈசாயிடம், “இவர்களைத் தவிர வேறு மகன்
கள் உனக்கு இருக்கிறார்களா?” என்று கேட்டார். அதற்கு அவர்,
“கடைசி பையன்[f] ஒருவன் இருக்கிறான், அவன் ஆடு மேய்க்கப் போயி
ருக்கிறான்”[g] என்று சொன்னார். அப்போது சாமுவேல் ஈசாயிடம், “உடனே
ஆள் அனுப்பி அவனை வரச் சொல். அவன் வரும்வரை யாரும் சாப்பிடப்
போவதில்லை” என்று சொன்னார். **12** அதனால், ஈசாய் ஆள் அனுப்பி
அவனை வரவழைத்தார். அவன் அழகான கண்களோடு செக்கச்செவேல்
என்று இருந்தான், பார்ப்பதற்கு ரொம்பவும் லட்சணமாக இருந்தான்.[h] அப்
போது யெகோவா, “இவனைத்தான் நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்,
இவனை அபிஷேகம் செய்!”[i] என்று சொன்னார். **13** உடனே சாமுவேல்,
எண்ணெய் நிரப்பிய கொம்பை[j] எடுத்து, அவனுடைய சகோதரர்களுக்கு
முன்பாக அவனை அபிஷேகம் செய்தார். அந்த நாளிலிருந்து, யெகோவா
வின் சக்தியால் தாவீது பலம் பெற்றான்.[k] பிறகு, சாமுவேல் ராமாவுக்குப்
புறப்பட்டுப் போனார்.[l]

14 அந்தச் சமயத்தில், யெகோவாவின் சக்தி சவுலைவிட்டு விலகியி
ருந்தது.[m] அவருடைய மனம்* அவரை ஆட்டிப்படைப்பதற்கு யெகோவா
விட்டுவிட்டார்.[n] **15** சவுலின் ஊழியர்கள் அவரிடம் வந்து, “எஜமானே,
உங்கள் மனம் உங்களை ஆட்டிப்படைப்பதற்குக் கடவுள் விட்டுவிட்டார்.
16 யாழ் வாசிப்பதில் திறமைசாலியான ஒருவனைத்[o] தேடிப் பிடித்து
உங்கள் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறோம், தயவுசெய்து உத்த
ரவு கொடுங்கள். உங்கள் மனம் உங்களை ஆட்டிப்படைக்கும் சமயங்களில்
அவன் யாழ் வாசிக்கட்டும். அப்போது, உங்களுக்கு நிம்மதி கிடைக்கும்”
என்று சொன்னார்கள். **17** அதற்கு சவுல், “அப்படியென்றால், நன்றாக
வாசிக்கிற ஒருவனைத் தயவுசெய்து தேடிப் பிடித்து என்னிடம் கூட்டிக்
கொண்டு வாருங்கள்” என்று சொன்னார்.

18 அவருடைய ஊழியர்களில் ஒருவன், “பெத்லகேம் ஊரானாகிய
ஈசாயின் மகன் ஒருவன் திறமையாக யாழ் வாசிப்பதைப் பார்த்திருக்கி
றேன். அவன் தைரியசாலி, அவன் ஒரு மாவீரன்.[p] அதுமட்டுமல்ல, அவ

16:14 *வே.வா., “கெட்ட சிந்தை.”

அதி. 16
a 1சா 17:28, 1நா 2:13
b 1சா 10:21, 23
c 1ரா 8:39, 1நா 28:9, சங் 7:9, நீதி 24:12, எரே 17:10, அப் 1:24
d 1சா 17:13, 1நா 2:13
e 2சா 13:3
f 1சா 17:14
g 2சா 7:8, சங் 78:70
h 1சா 17:42
i 1சா 13:14, சங் 89:20, அப் 13:22
j 1சா 16:1, 1ரா 1:39
k எண் 11:17, நியா 3:9, 10, 1சா 10:6, 2சா 23:2
l 1சா 1:1, 19
m 1சா 18:12, 1சா 28:15
n 1சா 18:10, 1சா 19:9
o நீதி 22:29
p 1சா 17:32, 36, 1சா 17:45, 46

னுக்கு நல்ல பேச்சுத் திறமை இருக்கிறது, பார்க்கவும் அழகாக இருப்பான்.[a]
யெகோவா அவனோடு இருக்கிறார்"[b] என்றான். **19** அப்போது சவுல் ஈசா
யிடம் ஆட்களை அனுப்பி, "ஆடு மேய்க்கிற உங்கள் மகன் தாவீதை என்னி
டம் அனுப்பி வையுங்கள்"[c] என்று சொன்னார். **20** அதைக் கேட்ட ஈசாய்,
ரொட்டியையும் ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும் ஒரு தோல் பையில்
திராட்சமதுவையும் கழுதைமேல் ஏற்றி தன் மகன் தாவீதிடம் கொடுத்து
அனுப்பினார். **21** இப்படி, தாவீது சவுலிடம் வந்து அவருக்குப் பணிவிடை
செய்ய ஆரம்பித்தான்.[d] சவுல் அவனை மிகவும் நேசித்தார், அவன் அவ
ருடைய ஆயுதங்களைச் சுமக்கிற வேலை செய்துவந்தான். **22** சவுல் ஈசா
யிடம் ஆள் அனுப்பி, "தாவீதை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது.
தயவுசெய்து அவன் இங்கேயே இருந்து எனக்குப் பணிவிடை செய்யட்
டும்" என்று சொன்னார். **23** சவுலின் மனம் அவரை ஆட்டிப்படைப்பதற்
குக் கடவுள் எப்போதெல்லாம் விட்டுவிட்டாரோ அப்போதெல்லாம் தாவீது
யாழ் வாசித்தான். அதனால், சவுலுக்கு ஆறுதலும் நிம்மதியும் கிடைத்தது,
அவருடைய மனமும் அவரை ஆட்டிப்படைக்கவில்லை.[e]

17 போர் செய்வதற்காக பெலிஸ்தியர்கள்[f] படைகளைத் திரட்டி
னார்கள். யூதாவுக்குச் சொந்தமான சோக்கோவில்[g] அவர்கள் ஒன்
றுகூடி, சோக்கோவுக்கும் அசெக்காவுக்கும்[h] இடையில் எபேஸ்-தம்மீம்[i]
என்ற இடத்தில் முகாம்போட்டார்கள். **2** சவுலும் இஸ்ரவேல் வீரர்களும்
திரண்டு வந்து ஏலா பள்ளத்தாக்கில்[j] முகாம்போட்டு, பெலிஸ்தியர்களோடு
போர் செய்வதற்காக அணிவகுத்து நின்றார்கள். **3** ஒரு பக்கத்திலுள்ள
மலையில் பெலிஸ்தியர்கள் நின்றார்கள், இன்னொரு பக்கத்திலுள்ள மலை
யில் இஸ்ரவேலர்கள் நின்றார்கள், நடுவே பள்ளத்தாக்கு இருந்தது.

4 பின்பு, பெலிஸ்தியர்களுடைய முகாமிலிருந்து ஒரு மாவீரன் வந்
தான். அவனுடைய பெயர் கோலியாத்.[k] அவன் காத்[l] நகரத்தைச் சேர்ந்த
வன். அவனுடைய உயரம் சுமார் ஒன்பது அடி, ஆறு அங்குலம்.*
5 செம்பினால் செய்யப்பட்ட தலைக்கவசத்தையும், செதில்செதிலாக வடிவ
மைக்கப்பட்ட உடல்கவசத்தையும் அவன் போட்டிருந்தான். அந்தச் செம்பு
உடல்கவசத்தின்[m] எடை 5,000 சேக்கல்.* **6** கால்களில் அவன் செம்
புக் கவசங்களைப் போட்டிருந்தான், செம்பினால் செய்யப்பட்ட சிறிய ஈட்
டியை[n] முதுகுக்குப் பின்னால் வைத்திருந்தான். **7** அவன் கையில் வைத்
திருந்த பெரிய ஈட்டியின் கம்பு, நெசவாளர்களுடைய தறிக்கட்டையைப்
போல்[o] இருந்தது. அந்த ஈட்டியின் இரும்பு முனை 600 சேக்கல்* எடை
யுள்ளதாக இருந்தது. அவனுடைய கேடயத்தைச் சுமந்தவன் அவனுக்கு
முன்னால் நடந்துவந்தான். **8** பின்பு, கோலியாத் இஸ்ரவேல் படையைப்
பார்த்து,[p] "எதற்காகப் போருக்கு அணிவகுத்து நிற்கிறீர்கள்? நான் ஒரு
பெலிஸ்திய வீரன். ஆனால், நீங்கள் சவுலின் அடிமைகள். என்னோடு
மோதுவதற்குச் சரியான ஒரு ஆளை அனுப்புங்கள். **9** அவன் என்
னோடு சண்டைபோட்டு என்னைக் கொன்றுவிட்டால், நாங்கள் உங்க
ளுக்கு அடிமைகளாக இருப்போம். ஆனால் நான் அவனைக் கொன்றுவிட்
டால், நீங்கள் எங்களுக்கு அடிமைகளாக இருப்பீர்கள்" என்று கத்தினான்.

17:4 *வே.வா., "உயரம் ஆறு முழம், ஒரு சாண்." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **17:5** *சுமார் 57 கிலோ. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **17:7** *சுமார் 6.84 கிலோ. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 16
a 1சா 16:12
b 1சா 18:12
c 1சா 17:15
d நீதி 22:29
e 1சா 16:14, 1சா 18:10, 1சா 19:9

அதி. 17
f நியா 3:1, 3, 1சா 9:16, 1சா 14:52
g 2நா 28:18
h யோசு 15:20, 35, எரே 34:7
i 1நா 11:12, 13
j 1சா 21:9
k 1சா 17:23
l யோசு 11:22, 2சா 21:20, 21
m 1சா 17:38, 39, 1ரா 22:34
n 1சா 17:45
o 1நா 20:5
p எண் 33:55

10 அதோடு, “இன்று இஸ்ரவேல் படைக்குச் சவால்விடுகிறேன்.[a]
என்னோடு மோதுவதற்கு ஒருவனை அனுப்புங்கள், இரண்டில் ஒன்று பார்த்
துவிடலாம்!” என்று சொன்னான்.

11 அந்தப் பெலிஸ்தியன் பேசியதை சவுலும் இஸ்ரவேலர்களும் கேட்டு
பயந்து நடுங்கினார்கள்.

12 யூதாவிலுள்ள பெத்லகேமைச்[b] சேர்ந்த எப்பிராத்தியரான[c] ஈசாயின்[d]
மகன்களில் ஒருவன்தான் தாவீது. ஈசாய்க்கு மொத்தம் எட்டு மகன்கள்[e]
இருந்தார்கள். சவுலின் காலத்தில் ஈசாய் வயதானவராக இருந்தார். **13** இவ
ருடைய மூத்த மகன் எலியாபும்,[f] இரண்டாம் மகன் அபினதாபும்,[g] மூன்றாம்
மகன் சம்மாவும்[h] சவுலோடு போருக்குப் போயிருந்தார்கள்.[i] **14** தாவீது
தான் கடைசி மகன்.[j] மூத்தவர்கள் மூன்று பேரும் சவுலோடு போயிருந்
தார்கள்.

15 சவுலுக்குப் பணிவிடை செய்துவந்த தாவீது, தன்னுடைய அப்
பாவின் ஆடுகளை மேய்ப்பதற்காக[k] பெத்லகேமுக்குப் போவதும் வருவ
துமாக இருந்தான். **16** இதற்கிடையில், அந்தப் பெலிஸ்தியன் 40 நாட்க
ளுக்குக் காலையிலும் சாயங்காலத்திலும் வந்துவந்து நின்றான்.

17 ஈசாய் தன்னுடைய மகன் தாவீதிடம், “ஒரு எப்பா அளவு* உள்ள
இந்த வறுத்த தானியத்தையும் பத்து ரொட்டிகளையும் தயவுசெய்து எடுத்
துக்கொண்டு, முகாமில் இருக்கிற உன் அண்ணன்களிடம் சீக்கிரமாகப்
போ. **18** ஆயிரம் வீரர்களின் தலைவனுக்கு இந்தப் பத்துப் பாலாடைக்
கட்டிகளைக் கொடு. அதோடு, உன் அண்ணன்கள் பத்திரமாக இருக்கி
றார்கள் என்பதற்கு அடையாளமாக அவர்களிடமிருந்து ஏதாவது வாங்கிக்
கொண்டு வா” என்று சொன்னார். **19** பெலிஸ்தியர்களுடன் போர் செய்
வதற்காக[l] அவர்கள் சவுலோடும் மற்ற எல்லா இஸ்ரவேல் வீரர்களோடும்
ஏலா பள்ளத்தாக்கில்[m] கூடியிருந்தார்கள்.

20 தாவீது விடியற்காலையிலேயே எழுந்து, ஆடுகளை வேறொருவனி
டம் ஒப்படைத்துவிட்டு, ஈசாய் சொன்னபடியே எல்லாவற்றையும் எடுத்துக்
கொண்டு புறப்பட்டுப் போனான். அவன் முகாமுக்குள் போனபோது
படைவீரர்கள் போர் முழக்கம் செய்தபடி அணிவகுத்துப் போய்க்கொண்டி
ருந்தார்கள். **21** இஸ்ரவேல் படையும் பெலிஸ்தியப் படையும் எதிரெதிராக
அணிவகுத்து நின்றன. **22** தாவீது உடனே மூட்டைமுடிச்சுகளைக் காவ
லனிடம் ஒப்படைத்துவிட்டுப் போர்க்களத்துக்கு நேராக ஓடினான். அங்கு
போய்ச் சேர்ந்தவுடன், தன் அண்ணன்களிடம் நலம் விசாரித்தான்.[n]

23 அவர்களிடம் தாவீது பேசிக்கொண்டிருந்த சமயத்தில், காத் நக
ரத்தைச் சேர்ந்த மாவீரன் கோலியாத்[o] பெலிஸ்தியப் படையிலிருந்து
வந்து, முன்பு சொல்லிய அதே வார்த்தைகளைச் சொல்லி[p] சவால்விட்
டான். அதை தாவீது கேட்டான். **24** இஸ்ரவேல் வீரர்கள் கோலியாத்தைப்
பார்த்தபோது பயந்துபோய்,[q] தலைதெறிக்க ஓடினார்கள். **25** இஸ்ரவேலர்
கள் ஒருவருக்கொருவர், “இஸ்ரவேல் படைக்கு முன்னால் வந்து நின்று
கொண்டு சவால் விடுகிற[r] மனிதனைப் பார்த்தீர்களா? அவனை ஜெயிக்கி
றவனுக்கு ராஜா பெரிய சன்மானம் கொடுப்பாராம், தன்னுடைய மகளையே
கல்யாணம் செய்து கொடுப்பாராம்.[s] அதுமட்டுமல்ல, இஸ்ரவேலில் அவ

17:17 * அதாவது, “சுமார் 10 கிலோ.”

அதி. 17
a 1சா 17:26; 2ரா 19:22
b 1சா 17:58; மீ 5:2; மத் 2:6
c ஆதி 35:16, 19; ரூ 1:2
d ரூ 4:22
e 1நா 2:13-15
f 1சா 16:6
g 1சா 16:8
h 1சா 16:9
i எண் 1:3
j 1நா 2:13, 15
k 1சா 16:11, 19
l 1சா 9:16, 17
m 1சா 17:2; 1சா 21:9
n 1சா 17:17, 18
o 1சா 17:4
p 1சா 17:10
q 1சா 17:11
r 1சா 17:10
s யோசு 15:16; 1சா 14:49; 1சா 18:17, 21

னுடைய அப்பாவின் குடும்பத்துக்கு விசேஷ சலுகைகளும் செய்வாராம்”
என்று சொல்லிக்கொண்டார்கள்.

26 தாவீது தனக்குப் பக்கத்தில் நின்றவர்களிடம், “அந்தப் பெலிஸ்திய
னைக் கொன்று, இஸ்ரவேலர்களின் பெயரைக் காப்பாற்றுகிறவனுக்கு
என்ன கிடைக்கும்? விருத்தசேதனம் செய்யாத அந்தப் பெலிஸ்தியன் எப்
படி உயிருள்ள கடவுளின் படைக்குச் சவால்விடலாம்?”[a] என்று கேட்டான்.
27 அப்போது அந்த வீரர்கள், அவனைக் கொன்றுபோடுகிறவனுக்கு என்
னவெல்லாம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருந்ததோ அதை தாவீதிடம்
சொன்னார்கள். **28** வீரர்களிடம் தாவீது பேசிக்கொண்டிருப்பதை மூத்த
அண்ணன் எலியாப்[b] கேட்டபோது அவன்மேல் கோபப்பட்டு, “நீ எதற்கு
இங்கே வந்தாய்? இருக்கிற கொஞ்சநஞ்ச ஆடுகளையும் வனாந்தரத்தில்
யாரிடம் விட்டுவிட்டு வந்தாய்?[c] போர் நடப்பதை வேடிக்கை பார்க்கத்
தானே வந்தாய்? எனக்குத் தெரியும், நீ கெட்ட எண்ணம்பிடித்தவன், திமிர்
பிடித்தவன்” என்றான். **29** அதற்கு தாவீது, “இப்போது நான் என்ன செய்
துவிட்டேன்? ஒரேவொரு கேள்விதானே கேட்டேன்!” என்றான்.
30 பின்பு, வேறொருவனிடம் திரும்பி, முன்பு கேட்டதையே கேட்டான்.[d]
அங்கிருந்தவர்களும் முன்பு சொன்னதையே சொன்னார்கள்.[e]

31 தாவீது பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட சிலர் சவுலிடம் போய்
அதைச் சொன்னார்கள். உடனே, சவுல் அவனைக் கூட்டிக்கொண்டு வரச்
சொன்னார். **32** தாவீது சவுலிடம் வந்து, “அந்தப் பெலிஸ்தியனைப் பார்த்து
யாரும் பயப்பட வேண்டாம். நான் போய் அவனோடு சண்டை போடுகி
றேன்”[f] என்று சொன்னான். **33** அதற்கு சவுல், “அந்தப் பெலிஸ்தியனை
எதிர்த்து உன்னால் சண்டை போட முடியாது. நீ சின்னப் பையன்,[g] ஆனால்
அவன் சின்ன வயதிலிருந்தே ஒரு போர்வீரன்” என்று சொன்னார். **34** அப்
போது தாவீது, “உங்கள் அடியேனாகிய நான் என்னுடைய அப்பாவின்
ஆடுகளை மேய்த்துவருகிறேன். ஒருநாள் ஒரு சிங்கமும்,[h] இன்னொரு நாள்
ஒரு கரடியும் வந்து மந்தையிலுள்ள ஆட்டைக் கவ்விக்கொண்டு போனது.
35 நான் அதைத் துரத்திக் கொண்டுபோய், அதன் வாயிலிருந்து ஆட்
டைக் காப்பாற்றினேன். அது என்மேல் பாய்ந்தபோது, அதன் தாடையைப்
பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன். **36** சிங்கம், கரடி இரண்
டையுமே அடித்துக் கொன்றேன். விருத்தசேதனம் செய்யாத இந்தப் பெலிஸ்
தியனுக்கும் அதே கதிதான் வரும்! உயிருள்ள கடவுளின் படையிடமே
அவன் சவால்விட்டிருக்கிறானே!”[i] என்றான். **37** அதோடு, “சிங்கத்தின்
பிடியிலிருந்தும் கரடியின் பிடியிலிருந்தும் என்னைக் காப்பாற்றிய யெகோ
வாதான் இந்தப் பெலிஸ்தியனிடமிருந்தும் என்னைக் காப்பாற்றுவார்”[j] என்
றான். அதற்கு சவுல், “சரி, புறப்பட்டுப் போ, யெகோவா உன்னோடு இருப்
பார்!” என்று சொன்னார்.

38 பின்பு, சவுல் தாவீதுக்குத் தன்னுடைய உடைகளைப் போட்டு
விட்டார். அதோடு, செம்பினால் செய்யப்பட்ட தலைக்கவசத்தையும் உடல்
கவசத்தையும் போட்டுவிட்டார். **39** அதன்பின், தாவீது சவுலின் வாளைத்
தன் உடைமேல் வைத்துக் கட்டிக்கொண்டு, நடந்து பார்த்தான். அதை
யெல்லாம் போட்டுப் பழக்கமில்லாததால் அவனால் நடக்க முடியவில்லை.
அதனால் சவுலிடம், “எனக்குப் பழக்கமில்லாததால் இதையெல்லாம் போட்
டுக்கொண்டு என்னால் நடக்க முடியவில்லை” என்று சொல்லி, அவற்றைக்

அதி. 17
a 1சா 17:10, எரே 10:10
b 1சா 16:6, 7; 1நா 2:13
c 1சா 17:20
d 1சா 17:26
e 1சா 17:25
f 1சா 16:18
g 1சா 17:42
h ஏசா 31:4
i 1சா 17:10, எரே 10:10
j உபா 7:21; 2ரா 6:16; எபி 11:32-34

கழற்றிவிட்டான். **40** பின்பு, ஆற்றுப்படுகையிலிருந்து* ஐந்து கூழாங்கற்களைத் தேர்ந்தெடுத்து, மேய்ப்பனுக்குரிய தன் பையில் போட்டுக்கொண்டு, தடியையும் கவணையும்[a] எடுத்துக்கொண்டு அந்தப் பெலிஸ்தியனின் முன்னால் போனான்.

41 அந்தப் பெலிஸ்தியன் தாவீதை நெருங்கிக்கொண்டே வந்தான், அவனுடைய கேடயத்தைச் சுமந்தவன் அவனுக்கு முன்னால் நடந்துவந்தான். **42** செக்கச்செவேல் என்று அழகாக இருந்த தாவீது அவன் முன்னால் போனான். தாவீது வெறும் சின்னப் பையனாக[b] இருந்ததால் அவனை அந்தப் பெலிஸ்தியன் ரொம்பவே இளக்காரமாகப் பார்த்தான். **43** அவன் தாவீதிடம், “ஒரு தடியை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறாயே, நான் என்ன நாயா?”[c] என்று கேட்டான். பின்பு, தன்னுடைய தெய்வங்களின் பெயரைச் சொல்லி அவனைச் சபித்தான். **44** அதோடு, “இங்கே வா, உன்னுடைய உடலை வானத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் இரையாகப் போடுகிறேன்” என்று மிரட்டினான்.

45 அதற்கு தாவீது, “நீ வாளோடும் பெரிய ஈட்டியோடும்[d] சிறிய ஈட்டியோடும் என்னை எதிர்த்து வருகிறாய். ஆனால் நான் பரலோகப் படைகளின் யெகோவாவுடைய பெயரில் உன்னை எதிர்த்து வருகிறேன்,[e] நீ சவால்விட்ட இஸ்ரவேல் படையின் கடவுளுடைய பெயரில் வருகிறேன்.[f] **46** இன்றைக்கு யெகோவா உன்னை என் கையில் கொடுப்பார்.[g] நான் உன்னைக் கொல்வேன், உன் தலையை வெட்டுவேன். இன்று பெலிஸ்திய வீரர்களின் உடல்களை வானத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் இரையாகப் போடுவேன். அப்போது, இஸ்ரவேலின் கடவுள்தான் உண்மைக் கடவுள் என்பதைப் பூமியிலுள்ள எல்லாரும் தெரிந்துகொள்வார்கள்.[h] **47** யெகோவாவுக்குத் தன்னுடைய ஜனங்களைக் காப்பாற்ற வாளோ ஈட்டியோ தேவையில்லை[i] என்பதை இங்கே இருக்கிற எல்லாரும் தெரிந்துகொள்வார்கள். இந்தப் போர் யெகோவாவின் போர்,[j] உங்கள் எல்லாரையும் அவர் எங்கள் கையில் கொடுப்பார்”[k] என்று சொன்னான்.

48 அந்தப் பெலிஸ்தியன் தாவீதை நெருங்கிக்கொண்டே வந்தான், தாவீதும் அவனைத் தாக்குவதற்காகப் போர்க்களத்தில் வேகமாக ஓடினான். **49** தன்னுடைய பையிலிருந்து ஒரு கல்லை எடுத்து, அதைக் கவணில் வைத்துச் சுழற்றி, அந்தப் பெலிஸ்தியனின் நெற்றியைக் குறிபார்த்து வீசினான். அது அந்தப் பெலிஸ்தியனின் நெற்றியைத் துளைத்தது, அவன் அப்படியே தரையில் குப்புற விழுந்தான்.[l] **50** இப்படி, தாவீது ஒரு கவணையும் கல்லையும் வைத்தே அந்தப் பெலிஸ்தியனை ஜெயித்தான். கையில் வாள் இல்லாமலேயே அவனைத் தாக்கிக் கொன்றுபோட்டான்.[m] **51** பின்பு, ஓடிப்போய் அந்தப் பெலிஸ்தியன்மேல் ஏறி நின்று, அந்தப் பெலிஸ்தியனின் வாளை உருவி,[n] அவனுடைய தலையை வெட்டி, அவன் செத்துவிட்டதை ஊர்ஜிதப்படுத்தினான். தங்களுடைய மாவீரன் செத்துப்போனதை பெலிஸ்தியர்கள் பார்த்தபோது அங்கிருந்து தலைதெறிக்க ஓடினார்கள்.[o]

52 உடனே, இஸ்ரவேல் வீரர்களும் யூதாவின் வீரர்களும் கத்திக் கூச்சல் போட்டுக்கொண்டே பள்ளத்தாக்கிலிருந்து[p] எக்ரோனின்[q] நுழைவாசல்கள்

17:40 * வே.வா., “காட்டாற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து.”

அதி. 17
a நியா 20:15, 16
b 1சா 16:12; 1சா 17:33
c 1சா 24:14; 2சா 16:9; 2ரா 8:13
d 1சா 17:4, 6
e 2சா 5:10; எபி 11:32-34
f 1சா 17:10; 2ரா 19:22
g உபா 9:1-3; யோசு 10:8
h யாத் 9:16; உபா 28:10; 1ரா 8:43; 2ரா 19:19; தானி 3:29
i சங் 44:6, 7; சக 4:6
j 2நா 20:15; நீதி 21:31
k உபா 20:4
l 1சா 17:37; 2சா 21:22
m நியா 3:31; நியா 15:15, 16; 1சா 17:47
n 1சா 21:9
o உபா 28:7; யோசு 23:10; எபி 11:32-34
p 1சா 17:2, 19
q யோசு 15:20, 45

வரைக்கும் பெலிஸ்தியர்களைத் துரத்திக்கொண்டு போனார்கள். சாராயிமுக்
குப்[a] போகும் சாலை தொடங்கி காத் மற்றும் எக்ரோன் வரைக்கும் பெலிஸ்
தியர்களை வழியெல்லாம் வெட்டிச் சாய்த்தார்கள். **53** பெலிஸ்தியர்களை
விரட்டிப் பிடித்து சாகடித்த பின்பு அவர்களுடைய முகாம்களுக்கு வந்து
அவற்றைச் சூறையாடினார்கள்.

54 பின்பு, தாவீது அந்தப் பெலிஸ்தியனுடைய தலையை எருசலேமுக்
குக் கொண்டுவந்தான். அந்தப் பெலிஸ்தியனுடைய ஆயுதங்களை தன்னு
டைய வீட்டில் வைத்துக்கொண்டான்.[b]

55 அந்தப் பெலிஸ்தியனோடு சண்டை போட தாவீது புறப்பட்டுப்
போனதை சவுல் பார்த்தபோது தன்னுடைய படைத் தளபதி அப்னேரி
டம்,[c] “இவன் யாருடைய பையன்?”[d] என்று கேட்டார். அதற்கு அப்
னேர், “ராஜாவே, உங்கள் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* எனக்
குத் தெரியாது!” என்றான். **56** அதற்கு ராஜா, “அப்படியென்றால், இவன்
யாருடைய பையன் என்று விசாரி” என்றார். **57** தாவீது அந்தப் பெலிஸ்தி
யனைக் கொன்றுவிட்டுத் திரும்பியதும் அப்னேர் அவனை சவுலிடம் கூட்
டிக்கொண்டு வந்தான். தாவீது அந்தப் பெலிஸ்தியனுடைய தலையைக்[e]
கையில் வைத்திருந்தான். **58** அப்போது சவுல் அவனிடம், “நீ யாருடைய
பையன்?” என்று கேட்டார். அதற்கு தாவீது, “பெத்லகேம் ஊரைச் சேர்ந்த[f]
உங்கள் அடிமை ஈசாயின்[g] பையன்” என்று சொன்னான்.

18 சவுலிடம் தாவீது பேசியதைக் கேட்ட பிறகு, யோனத்தான்[h]
தாவீதை உயிருக்கு உயிராக நேசிக்க ஆரம்பித்தார். தாவீதும்
யோனத்தானும் நெருங்கிய நண்பர்களானார்கள்.[i] **2** அந்த நாளிலிருந்து
சவுல், தாவீதை அவனுடைய அப்பாவின் வீட்டுக்குப் போக விடாமல் தன்
னுடனேயே வைத்துக்கொண்டார்.[j] **3** யோனத்தான் தாவீதை உயிருக்கு
உயிராக நேசித்ததால்,[k] அவரும் தாவீதும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்
கள்.[l] **4** பின்பு யோனத்தான், தான் போட்டிருந்த கையில்லாத அங்கியை
யும், தன்னுடைய உடை, வாள், வில், இடுப்புவார் ஆகியவற்றையும் தாவீதுக்
குக் கொடுத்தார். **5** தாவீது போருக்குப் போக ஆரம்பித்தார். அவர் சவுல்
அனுப்பிய எல்லா இடங்களுக்கும் போய் வெற்றியோடு திரும்பியதால்,*[m]
அவரை சவுல் போர்வீரர்களுக்குத் தலைவராக்கினார்.[n] அதைப் பார்த்து
எல்லா ஜனங்களும் சவுலின் ஊழியர்களும் சந்தோஷப்பட்டார்கள்.

6 தாவீதும் மற்ற வீரர்களும் பெலிஸ்தியர்களை வீழ்த்திவிட்டுத் திரும்
பியபோதெல்லாம், இஸ்ரவேலின் எல்லா நகரங்களிலிருந்தும் பெண்கள்
கூடிவந்து, கஞ்சிராவோடும்[o] தம்பூராவோடும் சந்தோஷமாக ஆடிப்பாடி[p]
சவுல் ராஜாவை வரவேற்றார்கள். **7** வெற்றியைக் கொண்டாடிய அந்தப்
பெண்கள்,

“சவுல் கொன்றது ஆயிரம்,
தாவீது கொன்றது பல்லாயிரம்”[q]

என்று பாடினார்கள். **8** அவர்கள் அப்படிப் பாடியது சவுலுக்குப் பிடிக்
கவே இல்லை. அவர் பயங்கர எரிச்சலோடு,[r] “தாவீதுக்குப் பல்லாயிரமாம்,
எனக்கு ஆயிரமாம். இனி அரச பதவி மட்டும்தான் அவனுக்கு பாக்கி!”[s]

17:55 * வே.வா., “நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்ச
யமாகச் சொல்கிறேன்.” **18:5** * வே.வா., “ஞானமாக நடந்துகொண்டதால்.”

அதி. 17
a யோசு 15:20, 36
b 1சா 21:9
c 1சா 14:50
d 1சா 16:19, 21
e 1சா 17:54
f 1சா 17:12
g ரூ 4:22; 1சா 16:1; 1நா 2:13, 15; மத் 1:6; லூ 3:23, 32; அப் 13:22

அதி. 18
h 1சா 14:1, 49
i 1சா 19:2; 1சா 20:17, 41; 2சா 1:26
j 1சா 8:11; 1சா 16:22; 1சா 17:15
k நீதி 17:17; நீதி 18:24
l 1சா 20:8, 42; 1சா 23:18; 2சா 9:1; 2சா 21:7
m 1சா 18:30
n 1சா 14:52
o நியா 11:34
p யாத் 15:20, 21; நியா 5:1
q 1சா 21:11; 1சா 29:5
r ஆதி 4:5; நீதி 14:30
s 1சா 13:14; 1சா 15:27, 28; 1சா 16:13; 1சா 20:31; 1சா 24:17, 20

என்றார். **9** அந்த நாளிலிருந்து சவுல் எப்போதும் தாவீதைச் சந்தேகக்
கண்ணோடுதான் பார்த்தார்.

10 அடுத்த நாள், சவுலின் மனம்* அவரை ஆட்டிப்படைக்கும்படி
கடவுள் விட்டுவிட்டார்.[a] அரண்மனைக்குள் அவர் வினோதமாக# நடந்து
கொள்ள ஆரம்பித்தார். அப்போது தாவீது வழக்கம் போலவே யாழ்
இசைத்துக்கொண்டிருந்தார்.[b] சவுல் தன் கையில் ஈட்டியை வைத்திருந்தார்.[c]
11 அவர் தன் மனதில், "தாவீதைச் சுவரோடு சுவராகக் குத்திக் கொல்லப்
போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு அந்த ஈட்டியை எறிந்தார்.[d] இரண்டு
தடவை அவர் அதை எறிந்தபோதும் தாவீது அவரிடமிருந்து தப்பினார்.
12 யெகோவா தன்னைவிட்டு விலகி[e] தாவீதோடு இருப்பதை சவுல் புரிந்
துகொண்டதால், தாவீதை நினைத்துப் பயந்தார்.[f] **13** அதனால், தாவீதைத்
தன் முன்னாலிருந்து அனுப்பிவிட்டு, அவரை ஆயிரம் வீரர்களுக்குத்
தலைவராக்கினார். தாவீதின் தலைமையில் வீரர்கள் போருக்குப் போனார்
கள்.[g] **14** தாவீது எல்லாவற்றிலும் வெற்றி பெற்றார்,*[h] யெகோவா அவ
ரோடு இருந்தார்.[i] **15** தாவீதுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைப்பதைப்
பார்த்து சவுல் பயந்துபோனார். **16** ஆனால், இஸ்ரவேலிலும் யூதாவி
லும் இருந்த ஜனங்கள் எல்லாரும் தாவீதை நேசித்தார்கள். ஏனென்
றால், போருக்குப் போகும்போது அவர்தான் அவர்களுக்குத் தலைமை
தாங்கினார்.

17 சவுல் தன் மனதில், 'இவன்மேல் நான் கை வைப்பது நல்லதல்ல,
பெலிஸ்தியர்களே இவனை வெட்டிச் சாய்க்கட்டும்'[j] என்று நினைத்தார். அத
னால் தாவீதிடம், "என் மூத்த மகள் மேரபை[k] உனக்குக் கல்யாணம்
செய்து வைக்கிறேன்.[l] ஆனால், நீ எனக்காகத் தொடர்ந்து உன் வீரத்தைக்
காட்டி யெகோவாவின் போர்களைத் தலைமைதாங்கி நடத்த வேண்டும்"[m]
என்று சொன்னார். **18** அதற்கு தாவீது, "ராஜாவின் மருமகனாவதற்கு எனக்
கென்ன அருகதை இருக்கிறது? இஸ்ரவேலில் என் அப்பாவின் குடும்பம்
சாதாரணக் குடும்பம்தானே?"[n] என்றார். **19** சவுல் தன் மகள் மேரபை தாவீ
துக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டிய சமயம் வந்தபோது, மெகொல்
லாத்தியனாகிய ஆதரியேலுக்கு[o] அவளைக் கொடுத்துவிட்டார்.

20 சவுலின் மகள் மீகாள்[p] தாவீதைக் காதலித்தாள். இந்த விஷயம் சவுலி
டம் சொல்லப்பட்டபோது அவர் சந்தோஷப்பட்டார். **21** "அவன் கதையை
முடிக்க இதுதான் நல்ல சந்தர்ப்பம்; அவளை அவனுக்குக் கல்யாணம் செய்
துகொடுப்பதாகச் சொல்லி பெலிஸ்தியர்களின் கையில் சிக்க வைத்துவிடுகி
றேன்"[q] என்று தன் மனதில் சொல்லிக்கொண்டார். பின்பு தாவீதிடம் இரண்
டாவது தடவையாக, "நீ என் மகளைக் கல்யாணம் செய்துகொள், இன்று நாம்
சம்பந்தம் பண்ணலாம்" என்றார். **22** அதோடு, சவுல் தன்னுடைய ஊழியர்
களைக் கூப்பிட்டு, "நீங்கள் தாவீதிடம் போய், 'ராஜாவுக்கு உன்னைப்
பிடித்துவிட்டது, அவருடைய ஊழியர்கள் எல்லாரும் உன்மேல் பிரியமாக
இருக்கிறார்கள். அதனால் ராஜாவின் மாப்பிள்ளை ஆகிவிடு' என்று ரகசிய
மாகச் சொல்லுங்கள்" என்றார். **23** சவுலின் ஊழியர்கள் இந்த விஷயத்தை
தாவீதின் காதில் போட்டபோது அவர் அவர்களிடம், "ராஜாவின் மாப்பிள்

18:10 *வே.வா., "கெட்ட சிந்தை." #வே.வா., "தீர்க்கதரிசிபோல்." **18:14** *வே.வா., "ஞானமாக நடந்துகொண்டார்."

அதி. 18
a 1சா 16:14
b 1சா 16:16, 23
c 1சா 19:9, 10
d 1சா 20:33
e 1சா 16:14
f 1சா 18:28, 29
g 2சா 5:2
h 1சா 18:5
i ஆதி 39:2; யோசு 6:27; 1சா 10:7; 1சா 16:18
j 1சா 18:25
k 1சா 14:49
l 1சா 17:25
m 1சா 25:28
n 2சா 7:18
o 2சா 21:8
p 1சா 14:49; 1சா 19:11; 1சா 25:44; 2சா 3:13; 2சா 6:16
q 1சா 18:17

ளையாக ஆவது உங்களுக்கு அவ்வளவு லேசாகத் தெரிகிறதா? நானே ஒரு ஏழை, ரொம்பச் சாதாரண ஆள்”[a] என்றார். **24** தாவீது சொன்னதை சவுலின் ஊழியர்கள் அவரிடம் சொன்னார்கள்.

25 பெலிஸ்தியர்களின் கையால் தாவீதைச் சாகடிக்க சவுல் திட்டம் போட்டதால் தன் ஊழியர்களிடம், “நீங்கள் தாவீதிடம் போய், ‘ராஜாவுக்கு மணமகள் விலை*[b] எதுவும் வேண்டாமாம், 100 பெலிஸ்தியர்களின் நுனித்தோல்களை#[c] கொண்டுவந்தால் போதுமாம்’ என்று சொல்லுங்கள்” என்றார். **26** அதன்படியே, அவருடைய ஊழியர்கள் தாவீதிடம் போய் இதைச் சொன்னார்கள். ராஜாவின் மாப்பிள்ளை ஆவதற்கு தாவீதும் ஆசைப்பட்டார்.[d] சவுல் கொடுத்த கெடு முடிவதற்கு முன்பே, **27** தாவீது தன்னுடைய ஆட்களோடு போய் 200 பெலிஸ்தியர்களை வெட்டிச் சாய்த்தார். ராஜாவின் மாப்பிள்ளை ஆவதற்காக அந்த 200 பெலிஸ்தியர்களின் நுனித்தோல்களையும் கொண்டுவந்து கொடுத்தார். அதனால், சவுல் தன்னுடைய மகள் மீகாளை அவருக்குக் கல்யாணம் செய்து வைத்தார்.[e] **28** யெகோவா தாவீதோடு இருப்பதையும்,[f] தன் மகள் மீகாள் தாவீதை நேசிப்பதையும்[g] சவுல் புரிந்துகொண்டதால், **29** தாவீதை நினைத்து இன்னும் அதிகமாகப் பயந்தார். வாழ்நாள் முழுக்க அவரை எதிரியாகவே பார்த்தார்.[h]

30 பெலிஸ்தியர்களின் தலைவர்கள் போர் செய்ய வந்த ஒவ்வொரு தடவையும், சவுலின் ஊழியர்கள் எல்லாரையும்விட தாவீதுக்கு அதிக வெற்றி கிடைத்தது.*[i] அதனால், அவருக்குப் பேரும் புகழும் கிடைத்தது.[j]

19 பிற்பாடு, தாவீதைத் தீர்த்துக்கட்ட வேண்டுமென்று[k] சவுல் தன்னுடைய மகன் யோனத்தானிடமும் எல்லா ஊழியர்களிடமும் சொன்னார். **2** சவுலின் மகன் யோனத்தான் தாவீதின் மேல் ரொம்பப் பிரியம் வைத்திருந்ததால்[l] அவரிடம், “என்னுடைய அப்பா உன்னைத் தீர்த்துக்கட்ட நினைக்கிறார். அதனால், காலையில் நீ ஜாக்கிரதையோடு இருந்து, யாருக்கும் தெரியாமல் ஒரு இடத்தில் போய் ஒளிந்துகொள். **3** நானும் என் அப்பாவும் அந்தப் பக்கமாக வருவோம். நான் அவருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு அவரிடம் உன்னைப் பற்றிப் பேசுவேன். அவர் ஏதாவது சொன்னால் கண்டிப்பாக உன்னிடம் சொல்வேன்”[m] என்றார்.

4 யோனத்தான் தன்னுடைய அப்பா சவுலிடம் தாவீதைப் பற்றி நல்ல விதமாகப் பேசி,[n] “ராஜாவாக இருக்கிற நீங்கள் உங்களுடைய ஊழியனாகிய தாவீதுக்கு எந்தக் கெடுதலும் செய்யக் கூடாது. ஏனென்றால், அவன் உங்களுக்கு எந்தக் கெடுதலும் செய்யவில்லை. சொல்லப்போனால், உங்களுக்கு நல்லதுதான் செய்திருக்கிறான். **5** தன் உயிரையே பணயம் வைத்து அந்தப் பெலிஸ்தியனைக் கொன்றுபோட்டிருக்கிறான்.[o] அதனால், இஸ்ரவேலுக்கு யெகோவா மாபெரும் வெற்றி தந்தார். அதை உங்கள் கண்ணாலேயே பார்த்து ரொம்பவும் சந்தோஷப்பட்டீர்கள். இப்போது மட்டும் ஏன் காரணமே இல்லாமல் தாவீதைக் கொன்று,[p] ஒரு அப்பாவியின் சாவுக்குக் காரணமாக வேண்டும்?” என்றார். **6** சவுல் யோனத்தானின் பேச்சைக் கேட்டு, “உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச்

18:25 *கல்யாணம் செய்துகொள்ளப்போகிற பெண்ணுக்காக மாப்பிள்ளை வீட்டார் கொடுக்கும் பணம். #அதாவது, “ஆண்களுடைய பிறப்புறுப்பின் நுனித்தோல்களை.” **18:30** *வே.வா., “தாவீது ரொம்ப ஞானமாக நடந்துகொண்டார்.”

அதி. 18
- a 1சா 18:18
- b ஆதி 29:18
- c 1சா 17:26, 36; 2சா 3:14
- d 1சா 18:21
- e 1சா 17:25
- f 1சா 16:13; 1சா 24:17, 20
- g 1சா 18:20
- h 1சா 18:9, 12; 1சா 20:33
- i 1சா 18:5
- j 2சா 7:9

அதி. 19
- k 1சா 18:9; நீதி 27:4
- l 1சா 18:1; நீதி 18:24
- m 1சா 20:9, 13; நீதி 17:17
- n 1சா 22:14
- o 1சா 17:49
- p 1சா 20:32

சொல்கிறேன்,* நான் அவனைக் கொல்ல மாட்டேன்” என்று சொன் அதி. 19
னார். **7** பின்பு, யோனத்தான் தாவீதைக் கூப்பிட்டு எல்லா விஷயங்களை *a* 1சா 16:21
யும் சொன்னார். அதன்பின், தாவீதை சவுலிடம் கூட்டிக்கொண்டு வந்தார், 1சா 18:2, 13
தாவீதும் முன்பு போலவே சவுலுக்குச் சேவை செய்தார்.[a]

8 பெலிஸ்தியர்களோடு மறுபடியும் போர் மூண்டது. உடனே, தாவீது
போய் அவர்களோடு போர் செய்து ஏராளமான வீரர்களைக் கொன்று
குவித்தார். மற்ற வீரர்கள் அவர் முன்னால் நிற்க முடியாமல் தலைதெறிக்க
ஓடினார்கள்.

9 ஒருசமயம், சவுல் தன்னுடைய கையில் ஈட்டியுடன் அரண்மனையில் *b* 1சா 18:10, 11
உட்கார்ந்திருந்தார், தாவீது அவர் முன்னால் யாழ் இசைத்துக்கொண்டிருந்
தார்.[b] அப்போது, சவுலின் மனம்* அவரை ஆட்டிப்படைக்கும்படி
யெகோவா விட்டுவிட்டார்.[c] **10** சவுல் தாவீதைச் சுவரோடு சுவராகக் குத்
திக் கொல்வதற்காக ஈட்டியை எறிந்தார். ஆனால், தாவீது நழுவிக்கொண்ட
தால் அந்த ஈட்டி சுவரில் பாய்ந்தது. அந்த ராத்திரியே தாவீது அங்கிருந்து
தப்பித்து ஓடினார். **11** பின்பு, தாவீதின் வீட்டை நோட்டமிட்டு காலையில் *c* 1சா 16:14
அவரைத் தீர்த்துக்கட்டுவதற்காக சவுல் தன் ஆட்களை அனுப்பினார்.[d]
ஆனால், தாவீதின் மனைவி மீகாள் அவரிடம், “இன்றைக்கு ராத்திரி நீங்கள்
தப்பித்துப் போகாவிட்டால், நாளைக்கு உங்களைக் கொன்றுவிடுவார்கள்”
என்று எச்சரித்துவிட்டு, **12** உடனே அவரை ஜன்னல் வழியாக இறக்கி
விட்டாள். அவரும் அங்கிருந்து தப்பித்து ஓடினார். **13** பின்பு, மீகாள் தன்
னிடமிருந்த குலதெய்வச் சிலையைப் படுக்கைமேல் கிடத்தி, வெள்ளாட்டு *d* சங் 59:
மயிராலான வலைப்பின்னல் துணியைத் தலைமாட்டில் வைத்து, ஓர் அங் மே.கு., 3
கியால் மூடினாள்.

14 தாவீதைப் பிடித்துக்கொண்டு வர சவுல் தன் ஆட்களை அனுப்பி
னார். மீகாள் அவர்களிடம், “அவருக்கு உடம்பு சரியில்லை” என்று சொன்
னாள். **15** மறுபடியும் சவுல் தன் ஆட்களை தாவீதின் வீட்டுக்கு அனுப்பி,
“அவனை அப்படியே கட்டிலோடு தூக்கிக்கொண்டு வாருங்கள், அவ *e* 1சா 18:9
னைத் தீர்த்துக்கட்ட வேண்டும்”[e] என்றார். **16** அந்த ஆட்கள் போய்ப்
பார்த்தபோது, படுக்கைமேல் குலதெய்வச் சிலையும் தலைமாட்டில் வெள்
ளாட்டு மயிராலான வலைப்பின்னல் துணியும்தான் இருந்தன. **17** பின்பு
சவுல் மீகாளிடம், “ஏன் என்னிடம் இப்படி நாடகமாடினாய்? என் எதி
ரியை[f] ஏன் தப்பிக்க வைத்தாய்?” என்று கேட்டார். அதற்கு மீகாள், “அவ
ரைத் தப்பிக்க விடவில்லை என்றால் என்னைக் கொன்றுவிடுவதாக மிரட் *f* 1சா 18:29
டினார்” என்று சொன்னாள்.

18 தப்பியோடிய தாவீது ராமாவில்[g] இருந்த சாமுவேலிடம் வந்தார்.
சவுல் தனக்குச் செய்த எல்லாவற்றையும் அவரிடம் சொன்னார். அதன்
பின் அவரும் சாமுவேலும் நாயோத்தில்[h] தங்கியிருந்தார்கள். **19** பிற்
பாடு, “ராமாவிலுள்ள நாயோத்தில் தாவீது தங்கியிருக்கிறான்” என்று சவுலி
டம் சொல்லப்பட்டது. **20** உடனே, தாவீதைப் பிடித்துக்கொண்டு வர *g* 1சா 7:15, 17
சவுல் தன் ஆட்களை அனுப்பினார். வயதான தீர்க்கதரிசிகள் தீர்க்கதரி
சனம் சொல்வதையும், சாமுவேல் அங்கே நின்று தலைமை தாங்குவதை
யும் அவர்கள் பார்த்தார்கள். அப்போது, கடவுளுடைய சக்தி அந்த ஆட்க

19:6 * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்
சயமாகச் சொல்கிறேன்.” **19:9** * வே.வா., “கெட்ட சிந்தை.” *h* 1சா 20:1

ளுக்குக் கிடைத்தது, அவர்களும் தீர்க்கதரிசிகளைப் போல் நடந்துகொள்ள
ஆரம்பித்தார்கள்.

21 இந்த விஷயம் சவுலிடம் சொல்லப்பட்டபோது, அவர் உடனே
வேறு சில ஆட்களை அனுப்பினார். அவர்களும் தீர்க்கதரிசிகளைப் போல்
நடந்துகொள்ள ஆரம்பித்தார்கள். சவுல் மறுபடியும் ஆட்களை அனுப்பி
னார், மூன்றாவது தடவை போனவர்களும் தீர்க்கதரிசிகளைப் போல் நடந்து
கொள்ள ஆரம்பித்தார்கள். **22** கடைசியில், அவரே ராமாவுக்குப் புறப்
பட்டுப் போனார். சேக்குவில் இருந்த பெரிய தண்ணீர்த் தொட்டிக்குப் பக்
கத்தில் வந்தபோது, "சாமுவேலும் தாவீதும் எங்கே இருக்கிறார்கள்?" என்று
கேட்டார். "ராமாவிலுள்ள நாயோத்தில் இருக்கிறார்கள்"[a] என்று அவரிடம்
சொல்லப்பட்டது. **23** ராமாவிலுள்ள நாயோத்துக்கு சவுல் போய்க்கொண்
டிருந்தபோது அவருக்கும் கடவுளுடைய சக்தி கிடைத்தது. ராமாவிலுள்ள
நாயோத்துக்குப் போய்ச் சேரும்வரை அவரும் ஒரு தீர்க்கதரிசியைப்
போல் நடந்துகொண்டார். **24** அவரும் தன் உடைகளைக் கழற்றிவிட்டு,
சாமுவேலின் முன்னால் ஒரு தீர்க்கதரிசியைப் போல் நடந்துகொண்டார்.
பகல் முழுவதும் ராத்திரி முழுவதும் வெற்று உடம்போடு* அங்கே படுத்
துக் கிடந்தார். அதனால்தான், "சவுலும் ஒரு தீர்க்கதரிசியா?" என்ற வழக்
குச் சொல் வந்தது.[b]

20 பின்பு, ராமாவிலுள்ள நாயோத்தைவிட்டு தாவீது ஓடிப்போனார்.
அவர் யோனத்தானிடம் வந்து, "நான் அப்படி என்ன செய்துவிட்
டேன்?[c] என்மேல் என்ன குற்றம் இருக்கிறது? உங்களுடைய அப்பாவுக்கு
என்ன பாவம் செய்தேன்? அவர் ஏன் என்னைக் கொல்லத் துடிக்கிறார்?"
என்று கேட்டார். **2** அதற்கு யோனத்தான், "அப்படியெல்லாம் நடக்காது![d]
உன் உயிருக்கு எந்த ஆபத்தும் வராது. சின்ன விஷயமோ பெரிய
விஷயமோ, என்னிடம் சொல்லாமல் என் அப்பா எதையும் செய்ய மாட்
டார். இதை மட்டும் ஏன் மறைக்கப்போகிறார்? நீ நினைக்கிற மாதிரி
யெல்லாம் அவர் செய்ய மாட்டார்" என்று சொன்னார். **3** ஆனால் தாவீது,
"நாம் இரண்டு பேரும் நெருங்கிய நண்பர்கள்[e] என்பது உங்களுடைய அப்
பாவுக்கு நன்றாகவே தெரியும். அதனால், 'யோனத்தானுக்கு இந்த விஷயம்
தெரிய வேண்டாம், தெரிந்தால் அவன் வருத்தப்படுவான்' என்று நினைத்
திருப்பார். உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கி
றேன்,* உங்கள் உயிர்மேல் ஆணையாகவும் சொல்கிறேன்,# எனக்குச் சாவு
நெருங்கிவிட்டது!"[f] என்று சொன்னார்.

4 அப்போது யோனத்தான் தாவீதிடம், "நான் என்ன செய்ய வேண்டு
மென்று சொல், உனக்காக எதையும் செய்வேன்" என்றார். **5** அதற்கு
தாவீது, "நாளைக்கு மாதப் பிறப்பு.*[g] நான் ராஜாவோடு விருந்து சாப்
பிட வேண்டிய நாள். ஆனால், விருந்துக்கு வராமல் அதற்கு அடுத்த நாள்
சாயங்காலம்வரை ஊருக்கு வெளியே ஒளிந்துகொள்ள எனக்கு அனுமதி
கொடுங்கள். **6** நான் ஏன் வரவில்லை என்று உங்களுடைய அப்பா

அதி. 19
a 1சா 19:18
b 1சா 10:11

அதி. 20
c 1சா 24:11
சங் 18:20
d 1சா 19:6
e 1சா 18:1
1சா 19:2
f 1சா 27:1
g எண் 10:10
2நா 2:4

19:24 *வே.வா., "வெறும் உள்ளாடைகளோடு." **20:3** *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." #வே.வா., "நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." **20:5** *வே.வா., "முதலாம் பிறை."

கேட்டால், 'தாவீதின் குடும்பத்தார் எல்லாரும் அவர்களுடைய ஊராகிய
பெத்லகேமில்[a] வருஷா வருஷம் பலி செலுத்துவார்கள். அதனால், அங்கு
அவசரமாகப் போய்விட்டு வருவதாக என்னிடம் கெஞ்சிக் கேட்டான்'[b]
என்று சொல்லுங்கள். **7** அதற்கு உங்கள் அப்பா, 'சரி, போய்விட்டு வரட்
டும்' என்று சொன்னால், உங்கள் ஊழியன்மேல் அவருக்கு எந்த வெறுப்
பும் இல்லை என்று அர்த்தம். ஆனால், அதைக் கேட்டவுடன் அவர்
கோபப்பட்டால், என்னைத் தீர்த்துக்கட்ட குறியாக இருக்கிறார் என்று நீங்
கள் தெரிந்துகொள்ளலாம். **8** உங்கள் ஊழியன்மேல் எப்போதும் அன்பு*
காட்டுங்கள்.[c] யெகோவாவின் முன்னால் நீங்கள் என்னோடு ஒப்பந்தம்
செய்திருக்கிறீர்கள்.[d] என்மேல் ஏதாவது குற்றம் இருந்தால்,[e] நீங்களே என்
னைக் கொன்றுபோடுங்கள், உங்கள் அப்பாவின் கையில் கொடுத்துவிடா
தீர்கள்" என்றார்.

9 அதற்கு யோனத்தான், "அப்படியெல்லாம் நான் மனதில்கூட நினைக்
கவில்லை! என் அப்பா உன்னைத் தீர்த்துக்கட்ட குறியாக இருக்கிறார்
என்று தெரியவந்தால், உன்னிடம் சொல்லாமல் மறைப்பேனா?"[f] என்
றார். **10** அப்போது தாவீது, "உங்களுடைய அப்பா உங்களிடம் கோப
மாகப் பேசினாரா இல்லையா என்று நான் எப்படித் தெரிந்துகொள்வது?"
என்று கேட்டார். **11** அதற்கு யோனத்தான், "வா, இப்போது நாம் ஊருக்கு
வெளியே போகலாம்" என்றார். பின்பு, அவர்கள் இரண்டு பேரும் ஊருக்கு
வெளியே போனார்கள். **12** யோனத்தான் தாவீதிடம், "இஸ்ரவேலின் கட
வுளாகிய யெகோவாவைச் சாட்சியாக வைத்துச் சொல்கிறேன், என்னு
டைய அப்பா என்ன நினைக்கிறார் என்று நாளைக்கு இந்நேரமோ அதற்கு
அடுத்த நாளோ கண்டுபிடித்துவிடுவேன். அவருக்கு உன்மேல் எந்தக்
கோபமும் இல்லையென்று தெரிந்தால், அதை உனக்குத் தெரியப்படுத்து
வேன். **13** ஒருவேளை, அவர் உன்னைத் தீர்த்துக்கட்ட நினைத்திருந்தால்,
நான் உனக்கு அதைத் தெரியப்படுத்தி உன்னைத் தப்பித்துப்போக வைப்
பேன். அப்படிச் செய்யாவிட்டால், யெகோவா எனக்குக் கடுமையான தண்
டனை கொடுக்கட்டும். யெகோவா என் அப்பாவோடு இருந்தது போல[g]
உன்னோடும் இருக்கட்டும்.[h] **14** நான் உயிரோடு இருந்தாலும் சரி, செத்
தாலும் சரி, யெகோவாவைப் போல நீயும் என்னிடம் எப்போதும் அன்பு*
காட்டுவாய்தானே?[i] **15** உன் எதிரிகளையெல்லாம் யெகோவா இந்தப்
பூமியிலிருந்து ஒழித்துக்கட்டினால்கூட, நீ என் குடும்பத்துக்கு அன்பு* காட்
டுவதை ஒருநாளும் விட்டுவிடக் கூடாது"[j] என்று சொன்னார். **16** பின்பு,
யோனத்தான் தாவீதின் வம்சத்தோடு ஒப்பந்தம் செய்து, "இந்த ஒப்பந்
தத்தை மீறுகிறவனை யெகோவா பழிவாங்குவார், உன் எதிரிகளைத் தண்
டிப்பார்" என்று சொன்னார். **17** தாவீது யோனத்தானை நேசித்ததால்,
யோனத்தான் மறுபடியும் அவரிடம் சத்தியம் வாங்கிக்கொண்டார். அவர்
தாவீதை உயிருக்கு உயிராக நேசித்தார்.[k]

18 பின்பு யோனத்தான் அவரிடம், "நாளைக்கு மாதப் பிறப்பு.[l] விருந்து
நடக்கும்போது நீ உட்காருகிற இடம் காலியாக இருக்கும், அதனால் உன்
னைத் தேடுவார்கள். **19** அதற்கு அடுத்த நாள் கண்டிப்பாக விசாரிப்பார்
கள். நீ முன்பு ஒளிந்திருந்த இதே இடத்துக்கு வந்து இந்தப் பாறைக்குப் பக்
கத்தில் ஒளிந்துகொள். **20** அப்போது, குறிபார்த்து அம்பு எறிவது போல,

---

20:8, 14, 15 *வே.வா., "மாறாத அன்பு."

அதி. 20
a 1சா 16:4, 18
b 1சா 20:28, 29
c நீதி 17:17
d 1சா 18:3; 1சா 23:18
e 1சா 20:1
f 1சா 19:2
g 1சா 10:7; 1சா 11:6
h 1சா 16:13; 1சா 17:37
i 2சா 9:1, 3; 2சா 9:6, 7
j 2சா 21:7
k 1சா 18:1, 3; 2சா 1:26; நீதி 18:24
l 1சா 20:5

பாறையின் ஒரு பக்கமாக மூன்று அம்புகளை நான் எறிவேன். **21** என்
வேலைக்காரனிடம், 'போ, அம்புகளைத் தேடி எடுத்துக்கொண்டு வா' என்று
சொல்லி அனுப்புவேன். பின்பு அவனிடம், 'அம்புகள் உனக்குப் பக்கத்தி
லேயே இருக்கிறது, எடுத்துக்கொண்டு வா' என்று சொன்னால், உனக்கு எந்த
ஆபத்தும் இல்லை, நீ நிம்மதியாக இருக்கலாம் என்று அர்த்தம். உயிருள்ள
கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* நீ திரும்பி
வரலாம். **22** ஆனால் என் வேலைக்காரனிடம், 'பார், அம்புகள் தூரமா
கக் கிடக்கின்றன' என்று சொன்னால், நீ போய்விடு. யெகோவா உன்னைப்
போகச் சொல்கிறார் என்று அர்த்தம். **23** நீயும் நானும் செய்துகொண்ட ஒப்
பந்தத்துக்கு[a] யெகோவாவே என்றென்றும் சாட்சி"[b] என்றார்.

24 அதன்படியே, தாவீது ஊருக்கு வெளியில் ஒளிந்துகொண்டார்.
மாதப் பிறப்பு நாளில், விருந்து சாப்பிட ராஜா தன்னுடைய இடத்தில்
வந்து உட்கார்ந்தார்.[c] **25** வழக்கம் போலவே, சுவர் ஓரமாக இருந்த இடத்
தில் அவர் உட்கார்ந்தார். அவருக்கு எதிரில் யோனத்தான் உட்கார்ந்தார்.
ராஜாவுக்குப் பக்கத்தில் அப்னேர்[d] உட்கார்ந்தார். ஆனால், தாவீது உட்
காரும் இடம் காலியாக இருந்தது. **26** சவுல் அன்றைக்கு எதுவும் கேட்க
வில்லை. ஏனென்றால், 'அவனுக்கு ஏதோ நடந்திருக்கும், அவன் தீட்டுப்
பட்டிருப்பான்.[e] கண்டிப்பாக அப்படித்தான் ஏதாவது ஆகியிருக்கும்' என்று
நினைத்துக்கொண்டார். **27** மாதப் பிறப்புக்கு அடுத்த நாளும், அதாவது
இரண்டாம் நாளும், தாவீது உட்காரும் இடம் காலியாகவே இருந்தது. அப்
போது சவுல் தன்னுடைய மகன் யோனத்தானிடம், "ஈசாயின் மகன்[f] ஏன்
நேற்றைக்கும் இன்றைக்கும் விருந்துக்கு வரவில்லை?" என்று கேட்டார்.
28 அப்போது யோனத்தான் சவுலிடம், "பெத்லகேமுக்குப் போக அனுமதி
தரச் சொல்லி அவன் கெஞ்சிக் கேட்டான்.[g] **29** அவன் என்னிடம், 'தயவு
செய்து எனக்கு அனுமதி கொடுங்கள், ஊரில் நாங்கள் குடும்பமாகப் பலி
செலுத்த வேண்டும். அதற்காக என்னுடைய அண்ணன் என்னை உடனே
வரச் சொன்னார். நீங்கள் பெரியமனதுபண்ணி, என் அண்ணன்களைப்
போய்ப் பார்க்க அனுமதி கொடுங்கள்' என்று கேட்டான். அதனால்தான்
ராஜாவுடைய விருந்துக்கு அவன் வரவில்லை" என்று சொன்னார்.
30 அப்போது, சவுல் யோனத்தான்மேல் பயங்கரமாகக் கோபப்பட்டு,
"அடங்காதவனே, நீ அந்த ஈசாயின் மகனுக்கு வக்காலத்து வாங்குவது
எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாயா? உனக்கும் மானக்கேடு, உன்
னைப் பெற்றவளுக்கும் மானக்கேடு! **31** ஈசாயின் மகன் உயிரோடு இருக்
கிற வரைக்கும் நீ ராஜாவாக முடியாது, உன்னுடைய ஆட்சியும் நிலைக்
காது.[h] உடனே ஆள் அனுப்பி அவனைப் பிடித்துக்கொண்டு வா, அவன்
சாக வேண்டும்"[i] என்று சொன்னார்.

32 ஆனால், யோனத்தான் தன்னுடைய அப்பாவிடம், "அவன் எதற்
காகச் சாக வேண்டும்?[j] அப்படி என்ன தப்பு செய்துவிட்டான்?" என்று
கேட்டார். **33** உடனே, சவுல் அவர்மேல் ஈட்டியை எறிந்தார்.[k] அப்போது,
தாவீதைத் தீர்த்துக்கட்ட சவுல் குறியாக இருந்ததை யோனத்தான் புரிந்து
கொண்டார்.[l] **34** உடனே, அவர் பயங்கர கோபத்தோடு எழுந்து
போனார். அன்றைக்கு, அதாவது மாதப் பிறப்புக்கு அடுத்த நாள்,

20:21 * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 20
a 1சா 20:13, 14
b 1சா 20:42
c 1சா 20:5
d 1சா 14:50
e லேவி 11:23, 24; லேவி 15:4, 5; லேவி 15:16, 18; எண் 19:16
f 1சா 17:12
g 1சா 20:6
h 1சா 18:8
i 1சா 19:6, 10
j 1சா 19:5; நீதி 17:17; நீதி 18:24
k 1சா 18:11; 1சா 19:10
l 1சா 20:6, 7

யோனத்தான் ஒன்றுமே சாப்பிடவில்லை. தாவீதைத் தன்னுடைய அப்பா
அவமானப்படுத்தியதை நினைத்து அவர் மனம் நொந்துபோயிருந்தார்.[a]

35 காலையில் யோனத்தான் ஒரு வேலைக்காரப் பையனைக் கூட்
டிக்கொண்டு தாவீதைப் பார்க்க ஊருக்கு வெளியே போனார்.[b] **36** அந்
தப் பையனிடம், "நீ ஓடிப்போய், நான் எறிகிற அம்பை எடுத்துக்கொண்டு
வா" என்றார். உடனே, அந்தப் பையன் ஓடினான். யோனத்தான் தூரத்தில்
அம்பை எறிந்தார். **37** அவர் அம்பு எறிந்த இடத்துக்கு அந்தப் பையன்
போனபோது, "அம்பு உனக்குத் தூரமாகக் கிடக்கிறது, பார்!" என்று சத்தமாகச்
சொன்னார். **38** அதோடு, "சீக்கிரம்! வேகமாகப் போ! நிற்காதே!" என்று சத்
தமாகச் சொன்னார். அதன்படியே, அந்தப் பையன் போய் அம்புகளை எடுத்
துக்கொண்டு தன்னுடைய எஜமானிடம் வந்தான். **39** அந்த வேலைக்காரப்
பையனுக்கு ஒன்றுமே புரியவில்லை. யோனத்தானுக்கும் தாவீதுக்கும் மட்
டும்தான் அதன் அர்த்தம் தெரிந்திருந்தது. **40** யோனத்தான் தன்னுடைய
ஆயுதங்களை அந்தப் பையனிடம் கொடுத்து, "இவற்றை எடுத்துக்கொண்டு
ஊருக்குப் போ" என்று சொன்னார்.

41 வேலைக்காரப் பையன் போனவுடன், தெற்குப் பக்கமாக இருந்த
இடத்திலிருந்து தாவீது எழுந்து வந்தார். பின்பு மண்டிபோட்டு, மூன்று
தடவை தரைவரைக்கும் குனிந்து வணங்கினார். அதன்பின் அவர்கள் ஒரு
வருக்கொருவர் முத்தம் கொடுத்துவிட்டு, அழுதார்கள். தாவீதுதான் ரொம்
பவே அழுதார். **42** யோனத்தான் தாவீதிடம், "'நம் இரண்டு பேருக்கு
இடையிலும், நம் இரண்டு பேருடைய சந்ததிக்கு இடையிலும் யெகோவா
என்றென்றும் சாட்சியாக இருப்பார்'[c] என்று நாம் யெகோவாவின் பெய
ரில் சத்தியம் செய்திருக்கிறோம்.[d] அதனால், நீ நிம்மதியாகப் போ" என்று
சொன்னார்.

அப்போது, தாவீது அங்கிருந்து புறப்பட்டுப் போனார், யோனத்தானும்
ஊருக்குத் திரும்பினார்.

21 அதன்பின் தாவீது, நோபு நகரத்தில் இருக்கிற குருவாகிய அகிமெ
லேக்கிடம் போனார்.[e] அவரைப் பார்த்ததும் அகிமெலேக்கு பதற்
றத்தோடு அவரிடம் வந்து, "தனியாக வந்திருக்கிறீர்களே, வேறு யாரும்
உங்களோடு வரவில்லையா?"[f] என்று கேட்டார். **2** அதற்கு தாவீது, "ராஜா
எனக்கு ஒரு வேலை கொடுத்து அனுப்பியிருக்கிறார். ஆனால், அதைப் பற்
றியோ அது சம்பந்தமாக அவர் சொன்ன விஷயங்களைப் பற்றியோ யாரி
டமும் சொல்லக் கூடாது என்று கட்டளை கொடுத்திருக்கிறார். ஒரு
இடத்தில் வந்து என்னைச் சந்திக்கும்படி என் ஆட்களிடம் சொல்லியிருக்கி
றேன். **3** இப்போது உங்களிடம் ஐந்து ரொட்டிகள் இருந்தால் கொடுங்கள்
அல்லது என்ன இருக்கிறதோ அதைக் கொடுங்கள்" என்று கேட்டார்.
4 அதற்கு அவர், "என்னிடம் பரிசுத்த ரொட்டிதான் இருக்கிறது,[g] வேறெந்த
ரொட்டியும் இல்லை. உங்கள் ஆட்கள் தங்களுடைய மனைவியோடு உறவு
கொள்ளாமல் இருந்திருந்தால் அதைத் தருகிறேன்"[h] என்றார். **5** அப்போது
தாவீது, "போருக்குப் போகும் சமயங்களில் எங்கள் மனைவியோடு உறவு
கொள்ளவே மாட்டோம்.[i] சாதாரண வேலைக்குப் போகும்போதே என்
ஆட்கள் சுத்தமாயிருப்பார்கள் என்றால், இன்றைக்கு இன்னும் எவ்வளவு
சுத்தமாயிருப்பார்கள்!" என்றார். **6** அதனால், குருவானவர் பரிசுத்த ரொட்
டிகளை அவருக்குக் கொடுத்தார்.[j] பரிசுத்தமான அந்தப் படையல் ரொட்டி

அதி. 20
a 1சா 18:1
b 1சா 20:19-22
c 1சா 23:18
2சா 9:7
d 1சா 20:17, 23

அதி. 21
e 1சா 22:9, 19
f 1சா 18:13
g யாத் 25:30
லேவி 24:5, 9
மத் 12:3, 4
h யாத் 19:15
லேவி 15:16
2சா 11:11
i லேவி 15:18
j லேவி 24:7-9
மாற் 2:25, 26
லூ 6:3, 4

களைத் தவிர வேறெந்த ரொட்டியும் அவரிடம் இல்லை. வழக்கம் போலவே
அவர் யெகோவாவின் சன்னிதியில் புதிய ரொட்டிகளை வைத்தபோது அந்
தப் பழைய ரொட்டிகளை எடுத்து வைத்திருந்தார்.

7 அன்றைக்கு சவுலின் ஊழியர்களில் ஒருவன் ஏதோவொரு கட்டா
யத்தினால் அங்கே யெகோவாவின் வழிபாட்டுக் கூடாரத்தில் இருந்தான்.
அவன் பெயர் தோவேக்.[a] அவன் ஓர் ஏதோமியன்,[b] சவுலின் மேய்ப்பர்க
ளுக்குத் தலைவன்.

8 பின்பு தாவீது அகிமெலேக்கிடம், "உங்களிடம் ஈட்டியோ வாளோ
இருக்குமா? ராஜா அவசரமாகப் போகச் சொன்னதால் என்னுடைய வாளை
யும் ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு வரவில்லை" என்று சொன்னார்.
9 அதற்கு அவர், "ஏலா பள்ளத்தாக்கில் நீங்கள் கொன்றுபோட்ட[c] அந்தப்
பெலிஸ்தியன் கோலியாத்தின் வாள்[d] இங்கே இருக்கிறது. அதை ஒரு துணி
யில் சுற்றி ஏபோத்துக்குப்[e] பின்னால் வைத்திருக்கிறேன். வேண்டுமானால்
அதை எடுத்துக்கொள்ளுங்கள், அது ஒன்றுதான் இங்கே இருக்கிறது" என்
றார். அதற்கு தாவீது, "அதைவிட நல்ல வாள் கிடையாது. அதையே எனக்
குக் கொடுங்கள்" என்றார்.

10 அதன்பின், அவர் மறுபடியும் சவுலிடமிருந்து தப்பித்து ஓடி,[f] கடைசி
யில் காத் ராஜாவாகிய ஆகீசிடம் போய்ச் சேர்ந்தார்.[g] **11** ஆகீசின் ஊழி
யர்கள் அவனிடம், "இவன் தாவீதுதானே, இஸ்ரவேலின் ராஜாதானே?

'சவுல் கொன்றது ஆயிரம்,
தாவீது கொன்றது பல்லாயிரம்'

என்று இவனைப் பற்றித்தானே பெண்கள் புகழ்ந்து பாடினார்கள்?"[h] என்று
சொன்னார்கள். **12** அவர்கள் சொன்னதை தாவீது யோசிக்க யோசிக்க,
காத் ராஜாவாகிய ஆகீஸ் தன்னை என்ன செய்வானோ என்று ரொம்பவே
பயந்துபோனார்.[i] **13** அதனால், புத்தி பேதலித்தவன் போல அவர்கள்
முன்னால் நடித்தார்.[j] ஒரு பைத்தியக்காரன் போலக் கதவுகளில் கீறிக்கொண்
டும் எச்சிலைத் தாடியில் ஒழுகவிட்டுக்கொண்டும் இருந்தார். **14** அதைப்
பார்த்த ஆகீஸ் தன்னுடைய ஊழியர்களிடம், "இவன் ஒரு பைத்தியக்காரன்!
இவனை ஏன் என்னிடம் கொண்டுவந்தீர்கள்? **15** இங்கே இருக்கும் பைத்
தியக்காரர்கள் போதாதென்று இவன் வேறா? இந்தக் கிறுக்கனை எதற்காக
என் வீட்டுக்குள் கொண்டுவந்தீர்கள்?" என்று கேட்டான்.

22 பின்பு, தாவீது அங்கிருந்து அதுல்லாம் குகைக்குத் தப்பித்துப்
போனார்.[k] அவருடைய அண்ணன்களும் அப்பாவின் குடும்பத்
தார் எல்லாரும் அதைக் கேள்விப்பட்டபோது, அவரிடம் போனார்கள்.
2 பிரச்சினைகளில் சிக்கியிருந்தவர்களும் கடன்தொல்லையால் அவதிப்
பட்டவர்களும் அநீதியினால் கொதித்துப்போனவர்களும் தாவீதோடு சேர்ந்
துகொண்டார்கள். அவர்களுக்கு அவர் தலைவரானார். சுமார் 400 ஆண்
கள் அவரோடு இருந்தார்கள்.

3 பின்பு, தாவீது அங்கிருந்து மோவாபிலுள்ள மிஸ்பேக்குப் போனார்.
அவர் மோவாப்[l] ராஜாவைப் பார்த்து, 'கடவுள் எனக்கு ஒரு வழி காட்டும்
வரை என் அப்பா அம்மா உங்கள் தேசத்தில் தங்குவதற்குத் தயவுசெய்து
அனுமதி கொடுங்கள்" என்று கேட்டார். **4** பிறகு, அவர்களை மோவாப்
ராஜாவின் பொறுப்பில் விட்டுவிட்டுப் போனார். தாவீது மலையில் தங்கியி
ருந்த காலம் முழுவதும் அவர்கள் மோவாபில் வாழ்ந்துவந்தார்கள்.[m]

அதி. 21
a 1சா 22:9
சங் 52:மே.கு.
b ஆதி 36:1
c 1சா 17:2, 50
d 1சா 17:51, 54
e யாத் 28:6
f 1சா 27:1
g யோசு 11:22
1சா 5:8
1சா 17:4
1சா 27:2
சங் 56:மே.கு.
h 1சா 18:6-8
1சா 29:4, 5
i சங் 56:3, 6
j சங் 34:மே.கு.

அதி. 22
k யோசு 15:
20, 35
1சா 21:10
2சா 23:13
சங் 34:19
சங் 56:13
l ரூ 4:10, 17
1சா 14:47
m 1சா 22:1

5 சிலகாலம் கழித்து, காத்[a] தீர்க்கதரிசி தாவீதிடம், “மலையில் தங்க
வேண்டாம். அங்கிருந்து யூதா தேசத்துக்குப் போய்விடுங்கள்”[b] என்று
சொன்னார். அதனால், தாவீது அங்கிருந்து ஏரேத் என்ற காட்டுக்குப்
போனார்.

6 தாவீதும் அவருடைய ஆட்களும் எந்த இடத்தில் இருக்கிறார்கள்
என்ற விஷயம் சவுலின் காதுக்கு எட்டியது. அப்போது, கிபியாவில்[c] ஒரு
குன்றின் மேலிருந்த சவுக்கு மரத்தடியில் சவுல் உட்கார்ந்துகொண்டிருந்
தார். அவருடைய கையில் ஈட்டி இருந்தது. அவருடைய ஊழியர்கள் எல்
லாரும் அவரைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். **7** சவுல் அவர்களிடம்,
“பென்யமீன் கோத்திரத்தாரே, தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள்.
என்னைப் போல ஈசாயின் மகன்[d] உங்களுக்கு வயல்களையும் திராட்சைத்
தோட்டங்களையும் கொடுப்பானா? உங்கள் எல்லாரையும் 1,000 பேருக்
குத் தலைவர்களாகவும் 100 பேருக்குத் தலைவர்களாகவும் நியமிப்பானா?[e]
8 நீங்கள் எல்லாரும் எனக்கு எதிராகச் சதி செய்துவிட்டீர்கள்! அந்த ஈசா
யின் மகனோடு என் சொந்த மகனே ஒப்பந்தம் செய்த விஷயத்தை[f]
நீங்கள் யாரும் என்னிடம் சொல்லவில்லை. உங்கள் ஒருவருக்குக்கூட என்
மேல் அனுதாபம் இல்லை. எனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ய என் மகனே
என் ஊழியனைத் தூண்டியிருக்கிறான், அதையும்கூட யாருமே என்னிடம்
சொல்லவில்லை” என்றார்.

9 அப்போது, சவுலின் ஊழியர்களுக்கு அதிகாரியாக இருந்த ஏதோமி
யனாகிய தோவேக்,[g] “நான் அந்த ஈசாயின் மகனை நோபுவில் பார்த்தேன்.
அகிதூப்பின் மகன் அகிமெலேக்கைப் பார்க்க அவன் வந்திருந்தான்.[h]
10 அகிமெலேக்கு அவனுக்காக யெகோவாவிடம் விசாரித்தார், அவ
னுக்கு உணவு கொடுத்தார். பெலிஸ்தியன் கோலியாத்தின் வாளையும்கூட
கொடுத்தார்”[i] என்று சவுலிடம் சொன்னான். **11** உடனே, நோபுவில் இருக்
கிற குருவாகிய அகிதூப்பின் மகன் அகிமெலேக்கையும் அவருடைய அப்
பாவின் குடும்பத்தாராகிய குருமார்கள் எல்லாரையும் வரச் சொல்லி ராஜா
ஆள் அனுப்பினார். அவர்கள் எல்லாரும் ராஜாவிடம் வந்தார்கள்.

12 அப்போது சவுல், “அகிதூப்பின் மகனே, நான் கேட்பதற்குப் பதில்
சொல்” என்றார். அதற்கு அவர், “என்ன விஷயம், எஜமானே!” என்றார்.
13 அப்போது சவுல், “நீயும் அந்த ஈசாயின் மகனும் ஏன் எனக்கு எதிரா
கச் சதி செய்தீர்கள்? நீ ஏன் அவனுக்கு ரொட்டியும் வாளும் கொடுத்தாய்?
ஏன் அவனுக்காகக் கடவுளிடம் விசாரித்தாய்? அவன் என்னை எதிர்க்கி
றான், எனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிறான்” என்றார். **14** அதற்கு அகி
மெலேக்கு, “உங்கள் ஊழியர்களில் தாவீதைப் போல நம்பகமானவர் யாரா
வது இருக்கிறார்களா?[j] ராஜாவே, அவர் உங்கள் மருமகன்,[k] உங்கள்
மெய்க்காவலரின் தலைவர், உங்களுடைய குடும்பத்தாரின் மதிப்பு மரியா
தையைப் பெற்றவர்.[l] **15** அவருக்காக நான் கடவுளிடம் விசாரிப்பது இது
தான் முதல் தடவையா?[m] உங்களுக்குத் துரோகம் செய்வதை என்னால்
நினைத்துக்கூடப் பார்க்க முடியாது! தயவுசெய்து இந்த ஊழியன் மேலோ
என் அப்பாவின் குடும்பத்தார் மேலோ குற்றம் சுமத்தாதீர்கள். உங்கள்
ஊழியனுக்கு இதைப் பற்றி எதுவுமே தெரியாது”[n] என்றார்.

16 அதற்கு ராஜா, “அகிமெலேக்கு, நீ கண்டிப்பாகச் சாக வேண்டும்,[o]
நீ மட்டுமல்ல உன் அப்பாவின் குடும்பத்தார் எல்லாரும் சாக வேண்

அதி. 22

a 2சா 24:11, 12; 1நா 21:9, 10; 1நா 29:29; 2நா 29:25
b 1சா 23:3
c 1சா 10:26
d ரூ 4:22
e 1சா 8:11, 12
f 1சா 18:3; 1சா 20:17
g 1சா 21:1, 7; சங் 52:மே.கு.; சங் 52:2, 3
h 1சா 14:3; 1சா 22:20
i 1சா 21:6, 9
j 1சா 19:4; 1சா 20:32; 1சா 24:11; 1சா 26:23
k 1சா 17:25; 1சா 18:27
l 1சா 18:5, 13
m 1சா 22:10
n 1சா 21:1, 2
o 1சா 14:44; 1சா 20:31

டும்!”[a] என்றார். **17** பின்பு, தன்னைச் சுற்றி நின்ற காவலர்களிடம், “இதோ,
யெகோவாவுக்குச் சேவை செய்கிற இந்தக் குருமார்களைக் கொன்றுபோ
டுங்கள். இவர்கள் தாவீதின் பக்கம் சேர்ந்துவிட்டார்கள்! அவன் தப்
பித்து ஓடுகிற விஷயம் தெரிந்திருந்தும் எனக்குச் சொல்லவில்லை” என்
றார். ஆனால், யெகோவாவுக்குச் சேவை செய்யும் குருமார்கள்மேல் கை
வைக்க ராஜாவின் ஊழியர்களுக்கு மனம் வரவில்லை. **18** அதனால்
தோவேக்கிடம்[b] ராஜா, “இந்தக் குருமார்களை நீயே கொன்றுபோடு!” என்
றார். உடனே, ஏதோமியனாகிய[c] தோவேக் ஒரே ஆளாக நின்று குருமார்
களை வெட்டிக் கொன்றுபோட்டான். நாரிழை* ஏபோத்தைப் போட்டிருந்த
85 குருமார்களை அன்றைக்குக் கொன்றுபோட்டான்.[d] **19** குருமார்கள்
வாழ்ந்த நோபு நகரத்தையும்[e] தாக்கி, ஆண்கள், பெண்கள், பிள்ளைகள்,
கைக்குழந்தைகள் எல்லாரையும் வாளுக்குப் பலியாக்கினான். ஆடுமாடு
களையும் கழுதைகளையும்கூட வாளால் வெட்டிப்போட்டான்.

20 ஆனால், அகிதூப்பின் மகனாகிய அகிமெலேக்கின் மகன்களில் ஒரு
வர் தாவீதிடம் சேர்ந்துகொள்வதற்காகத் தப்பித்து ஓடினார். அவருடைய
பெயர் அபியத்தார்.[f] **21** அவர் தாவீதிடம் போய், “யெகோவாவுக்குச்
சேவை செய்யும் குருமார்களை சவுல் கொன்றுவிட்டார்” என்று சொன்னார்.
22 அதற்கு தாவீது, “அன்றைக்கு ஏதோமியனாகிய தோவேக்கை அங்கு
பார்த்தபோதே நினைத்தேன்,[g] இவன் கண்டிப்பாக சவுலிடம் சொல்லிவிடு
வான் என்று. உங்களுடைய அப்பாவின் குடும்பத்தாருடைய சாவுக்கு
நான்தான் காரணம். **23** என்னோடு தங்கியிருங்கள். பயப்படாதீர்கள், உங்
களைக் கொல்ல நினைக்கிறவர்தான் என்னையும் கொல்ல நினைக்கிறார்.
நான் உங்களுக்குப் பாதுகாப்பு தருகிறேன்”[h] என்றார்.

23 ஒருநாள், தாவீதின் ஆட்கள் அவரிடம், “பெலிஸ்தியர்கள் கேகிலா[i]
நகரத்தைத் தாக்கி, அங்குள்ள களத்துமேடுகளைச் சூறையாடுகி
றார்கள்” என்று சொன்னார்கள். **2** உடனே அவர் யெகோவாவிடம், “நான்
போய் பெலிஸ்தியர்களைத் தாக்கட்டுமா?” என்று விசாரித்தார்.[j] அதற்கு
யெகோவா, “போ, பெலிஸ்தியர்களைத் தாக்கி கேகிலா நகரத்தாரைக் காப்
பாற்று” என்றார். **3** ஆனால் தாவீதின் ஆட்கள் அவரிடம், “இங்கு
யூதாவில் இருக்கும்போதே[k] பயந்துகொண்டு இருக்கிறோம். இதில், கேகி
லாவுக்கு வேறு போய் பெலிஸ்தியப் படையை எதிர்க்க வேண்டுமா?”[l] என்
றார்கள். **4** அதனால் தாவீது மறுபடியும் யெகோவாவிடம் விசாரித்தார்.[m]
அதற்கு யெகோவா, “கேகிலாவுக்குப் புறப்பட்டுப் போ. பெலிஸ்தியர்களை
உன்னுடைய கையில் கொடுப்பேன்”[n] என்று சொன்னார். **5** அதனால்,
தாவீது தன் ஆட்களோடு கேகிலாவுக்குப் போய் பெலிஸ்தியர்களோடு
போர் செய்து அவர்களுடைய கால்நடைகளைக் கைப்பற்றினார். அவர்
களில் ஏராளமானவர்களை வெட்டிச் சாய்த்து, கேகிலாவின் ஜனங்களைக்
காப்பாற்றினார்.[o]

6 அகிமெலேக்கின் மகன் அபியத்தார்[p] கேகிலாவிலிருந்த தாவீதிடம்
ஓடிப்போனபோது ஏபோத்தையும் கொண்டுபோனார். **7** தாவீது கேகிலா
வுக்கு வந்த விஷயம் சவுலுக்குச் சொல்லப்பட்டது. உடனே அவர்,
“அவனைக் கடவுள் என் கையில் கொடுத்துவிட்டார்.[q] கோட்டைக் கதவுக
ளும் தாழ்ப்பாள்களும் உள்ள நகரத்துக்குள் வந்து அவன் வசமாக

22:18 * அதாவது, “லினன்.”

அதி. 22
a 1சா 2:27, 32
b சங் 52:மே.கு.
c ஆதி 25:30
d 1சா 2:27, 31
e 1சா 21:1; 1சா 22:9
f 1சா 23:6; 1சா 30:7; 2சா 20:25; 1ரா 2:27
g 1சா 21:1, 7
h 1ரா 2:26

அதி. 23
i யோசு 15:20, 44
j 1சா 30:8; 2சா 5:19; சங் 37:5
k 1சா 22:5
l 1சா 13:5; 1சா 14:52
m நியா 6:39
n 1சா 14:6; 2சா 5:19
o 1சா 23:1
p 1சா 22:20
q 1சா 23:14

மாட்டிக்கொண்டான்” என்றார். **8** கேகிலாவுக்குப் போய் போர் செய்து
தாவீதையும் அவருடைய ஆட்களையும் வளைத்துப் பிடிப்பதற்காக வீரர்
கள் எல்லாரையும் சவுல் வரச் சொன்னார். **9** தன்னைப் பிடிக்க சவுல் திட்
டம் தீட்டியிருப்பது தாவீதுக்குத் தெரியவந்ததும் குருவாகிய அபியத்தாரி
டம், “ஏபோத்தை இங்கே கொண்டுவாருங்கள்”[a] என்றார். **10** அதன்பின்,
“இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவே, என்னைக் கொல்வதற்காக
சவுல் இந்த கேகிலா நகரத்தையே அழிக்கத் திட்டம் போட்டிருப்பதாக[b]
அடியேன் கேள்விப்பட்டேன். **11** கேகிலாவின் தலைவர்கள்* என்னை
அவருடைய கையில் ஒப்படைத்துவிடுவார்களா? நான் கேள்விப்பட்டபடி,
சவுல் இங்கே வருவாரா? இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவே, தயவு
செய்து உங்களுடைய அடியேனுக்குச் சொல்லுங்கள்” என்றார். அதற்கு
யெகோவா, “அவன் வருவான்” என்று சொன்னார். **12** அப்போது தாவீது,
“என்னையும் என் ஆட்களையும் கேகிலாவின் தலைவர்கள் சவுலின்
கையில் கொடுத்துவிடுவார்களா?” என்று கேட்டார். அதற்கு யெகோவா,
“ஆமாம், கொடுத்துவிடுவார்கள்” என்றார்.

13 உடனே, தாவீது தன்னோடு இருந்த சுமார் 600 ஆட்களைக்[c]
கூட்டிக்கொண்டு கேகிலாவைவிட்டுப் புறப்பட்டார். அவர் ஒவ்வொரு இட
மாக மாறிக்கொண்டே இருந்தார். தாவீது கேகிலாவிலிருந்து தப்பித்துவிட்ட
விஷயம் சவுலுக்குத் தெரிவிக்கப்பட்டதால் அவர் தாவீதைத் தேடி அங்கே
போகவில்லை. **14** சீப் வனாந்தரத்தில்[d] உள்ள மலைப்பகுதியில் இருக்
கிற குகைகளில்* தாவீது பதுங்கியிருந்தார். சவுல் விடாமல் அவரைத் தேடி
னார்,[e] ஆனால் யெகோவா அவரை சவுலின் கையில் கொடுக்கவில்லை.
15 சீப் வனாந்தரத்திலுள்ள ஓரேசில் தாவீது இருந்தபோது, தன்னைக்
கொல்ல சவுல் மறுபடியும் தேடி அலைவதைத் தெரிந்துகொண்டார்.*

16 தாவீதைப் பார்க்க சவுலின் மகனாகிய யோனத்தான் ஓரேசுக்குப்
போனார். யெகோவாமேல் அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவர்
தாவீதுக்கு உதவினார்.*[f] **17** அவர் தாவீதிடம், “பயப்படாதே, என் அப்பா
உன்னை எதுவும் செய்ய முடியாது. நீதான் இஸ்ரவேலின் ராஜாவாக இருப்
பாய்,[g] நான் உனக்கு அடுத்தபடியாகத்தான் இருப்பேன். இது என் அப்பா
வுக்கும் தெரியும்”[h] என்றார். **18** பின்பு, இரண்டு பேரும் யெகோவாவின்
முன்னால் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.[i] தாவீது ஓரேசில் தங்கினார்,
யோனத்தானோ தன் வீட்டுக்குத் திரும்பினார்.

19 அதன்பின், சீப் நகரத்தார் கிபியாவிலிருந்த[j] சவுலிடம் வந்து, “தாவீது
எங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள குகைகளில்* ஒளிந்திருக்கிறான்.[k] எஷி
மோனுக்கு#[l] தெற்கே ஆகிலாவின்[m] குன்றிலிருக்கிற ஓரேசில்[n] பதுங்கியி
ருக்கிறான். **20** ராஜாவே, உங்களுக்கு எப்போது முடியுமோ அப்போது
வாருங்கள். நாங்கள் அவனை உங்கள் கையில் பிடித்துக் கொடுக்கிறோம்”[o]
என்றார்கள். **21** அதற்கு சவுல், “நீங்கள் எனக்கு ரொம்ப உதவியாக இருக்
கிறீர்கள், யெகோவா உங்களை ஆசீர்வதிக்கட்டும். **22** இப்போது தயவு
செய்து போய், அவன் உண்மையில் எங்கே இருக்கிறான் என்றும்,

23:11 * அல்லது, “நிலச் சொந்தக்காரர்கள்.” **23:14, 19** * நே.மொ., “எளிதில் நெருங்க முடியாத இடங்களில்.” **23:15** * அல்லது, “தேடி அலைந்ததால் பயப்பட்டார்.” **23:16** * நே.மொ., “யெகோவாவுக்குள் அவருடைய கையைப் பலப்படுத்தினார்.” **23:19** # அல்லது, “வனாந்தரத்துக்கு.”

அதி. 23
a எண் 27:21; 1சா 30:7
b 1சா 22:19
c 1சா 22:1, 2; 1சா 25:13; 1சா 30:9
d யோசு 15:20, 55; 1சா 23:19; 1சா 26:1
e 1சா 18:29; 1சா 20:33; 1சா 27:1
f சங் 37:5; நீதி 17:17
g 1சா 16:13; 2சா 2:4; 2சா 5:3
h 1சா 20:31; 1சா 24:17, 20
i 1சா 18:3; 1சா 20:42
j 1சா 10:26
k 1சா 26:1; சங் 54:மே.கு.
l 1சா 23:24
m 1சா 26:3
n 1சா 23:15
o சங் 54:3

அவனை அங்கே பார்த்தது யார் என்றும் நன்றாக விசாரியுங்கள். ஏனென்
றால், ஏமாற்றுவதில் அவன் பெரிய கில்லாடி என்று கேள்விப்பட்டிருக்கி
றேன். **23** அவன் எங்கெல்லாம் போய் ஒளிந்துகொள்கிறான் என்று கவ
னமாகப் பார்த்துவிட்டு ஆதாரத்துடன் என்னிடம் வாருங்கள். அதன்
பிறகு நான் உங்களோடு வருகிறேன். யூதாவில் இருக்கிற குடும்பங்கள்*
நடுவில் அவன் ஒளிந்திருந்தாலும் நான் தேடிக் கண்டுபிடித்துவிடுவேன்"
என்று சொன்னார்.

24 அதனால், அவர்கள் புறப்பட்டு சவுலுக்கு முன்னதாகவே சீப்[a]
நகரத்துக்குப் போனார்கள். அப்போது, தாவீதும் அவருடைய ஆட்களும்
மாகோன் வனாந்தரத்தில்,[b] எஷிமோனுக்குத் தெற்கே உள்ள அரபாவில்[c]
இருந்தார்கள். **25** பின்பு, சவுல் தன்னுடைய ஆட்களோடு தாவீதைத்
தேடி அங்கே வந்தார்.[d] அதை தாவீது கேள்விப்பட்டவுடன் மாகோன்
வனாந்தரத்தில் இருக்கிற மலைப்பாறைக்குப்[e] போய்ப் பதுங்கிக்கொண்
டார். அதை சவுல் தெரிந்துகொண்டவுடன், தாவீதைத் துரத்திக்கொண்டு
மாகோன் வனாந்தரத்துக்குப் போனார். **26** மலையின் ஒரு பக்கத்தில்
சவுல் வந்தபோது, தாவீதும் அவருடைய ஆட்களும் மலையின் இன்
னொரு பக்கத்தில் இருந்தார்கள். சவுலிடம் மாட்டிக்கொள்ளாமல் இருக்க
தாவீது வேக வேகமாகப் போய்க்கொண்டிருந்தார்.[f] ஆனால், தாவீதையும்
அவருடைய ஆட்களையும் வளைத்துப் பிடிக்க சவுலும் அவருடைய
ஆட்களும் நெருங்கிவிட்டார்கள்.[g] **27** அப்போது தூதுவன் ஒருவன் சவு
லிடம் வந்து, "உடனே வாருங்கள், பெலிஸ்தியர்கள் நம் தேசத்துக்குள் வந்து
திடீர்த் தாக்குதல் நடத்துகிறார்கள்" என்றான். **28** சவுல் அதைக் கேட்ட
தும், தாவீதைத் துரத்துவதை விட்டுவிட்டு[h] பெலிஸ்தியர்களோடு போர்
செய்யப் போனார். அதனால்தான் அந்த இடம் சேலா-அம்மாலிகோத்*
என்று அழைக்கப்படுகிறது.

29 பின்பு, தாவீது அங்கிருந்து என்-கேதிக்குப்[i] போய், குகைகளில்*
தங்கினார்.

24 சவுல் பெலிஸ்தியர்களைத் துரத்தியடித்துவிட்டுத் திரும்பியவுடன்
அவருடைய ஆட்கள் அவரிடம், "தாவீது என்-கேதி வனாந்தரத்
தில் ஒளிந்திருக்கிறான்"[j] என்று சொன்னார்கள்.

2 அதனால், இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து 3,000 வீரர்களை சவுல் தேர்ந்
தெடுத்து, வரையாடுகள் திரிகிற செங்குத்தான பாறைகளின் நடுவே தாவீதை
யும் அவருடைய ஆட்களையும் தேடிக்கொண்டு போனார். **3** வழியோரத்
தில் ஆட்டுத் தொழுவங்கள்* இருந்த இடத்துக்கு வந்தார். இயற்கைக்
கடன் கழிக்க அங்கிருந்த ஒரு குகைக்குள் போனார். அப்போது, தாவீ
தும் அவருடைய ஆட்களும் அந்தக் குகையின் உள்ளே இருந்த பொந்து
களில் பதுங்கியிருந்தார்கள்.[k] **4** தாவீதின் ஆட்கள் அவரிடம், "இன்றைக்கு
யெகோவா உங்களிடம், 'நான் உன்னுடைய எதிரியை உன் கையில் கொடுக்
கிறேன்,[l] நீ அவனை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்' என்று சொல்
கிறார்" என்றார்கள். அதனால், தாவீது எழுந்து சத்தமில்லாமல் போய், சவுல்

23:23 * நே.மொ., "ஆயிரங்கள்." அதாவது, "ஆயிரம் பேர் கொண்ட தொகுதிகள்." **23:28** * அர்த்தம், "பிரிவுகளின் மலைப்பாறை." **23:29** * நே.மொ., "எளிதில் நெருங்க முடியாத இடங்களில்." **24:3** * இவை கற்சுவர்களால் கட்டப்பட்ட நிரந்தரத் தொழுவங்களைக் குறிக்கின்றன.

அதி. 23
a 1சா 23:14
b யோசு 15:20, 55; 1சா 25:2, 3
c உபா 1:7
d 1சா 26:2; சங் 54:3
e 1சா 23:28
f சங் 31:22
g சங் 17:9
h சங் 54:7
i யோசு 15:20, 62; உன் 1:14

அதி. 24
j 1சா 23:28, 29
k சங் 57:மே.கு.; சங் 142:மே.கு.
l 1சா 26:8, 23

போட்டிருந்த கையில்லாத அங்கியின் ஓரத்தை வெட்டி எடுத்தார்.
5 ஆனால், அதற்குப் பின்பு தாவீதின் நெஞ்சம் அடித்துக்கொண்டே*
இருந்தது.[a] ஏனென்றால், சவுல் போட்டிருந்த கையில்லாத அங்கியின்
ஓரத்தை அவர் வெட்டி எடுத்திருந்தார். **6** அவர் தன்னுடைய ஆட்களி
டம், “யெகோவா தேர்ந்தெடுத்திருக்கிற* என் எஜமான்மேல் கை வைப்பதை
என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. யெகோவாவின் பார்வையில்
இப்படிப்பட்ட பாவத்தை நான் செய்யவே மாட்டேன். ஏனென்றால், இவரை
யெகோவாவே தேர்ந்தெடுத்திருக்கிறார்”[b] என்றார். **7** இப்படிச் சொல்லி
தாவீது தன் ஆட்களைத் தடுத்தார்,* சவுலைத் தாக்க அவர்களை அனுமதிக்
கவில்லை. சவுலோ குகையிலிருந்து எழுந்து வெளியே போனார்.

8 அப்போது, தாவீதும் அந்தக் குகையிலிருந்து வெளியே போய், “என்
எஜமானே, ராஜாவே”[c] என்று சொல்லி சவுலைக் கூப்பிட்டார். சவுல் திரும்
பிப் பார்த்தபோது, தாவீது அவர்முன் சாஷ்டாங்கமாக விழுந்தார்.
9 பின்பு அவர் சவுலிடம், “நான் உங்களைக் கொல்லத் துடிப்பதாக மற்ற
வர்கள் சொல்வதை நீங்கள் நம்பலாமா?[d] **10** நீங்கள் குகையில் இருந்த
போது யெகோவா உங்களை எப்படி என் கையில் கொடுத்தார் என்பதை
இன்றைக்கு நீங்களே பார்த்தீர்கள். உங்களைக் கொல்லச் சொல்லி ஒருவன்
என்னிடம் சொன்னான்.[e] ஆனால், நான் உங்களைப் பார்த்து இரக்கப்பட்டு,
‘என்னுடைய எஜமான்மேல் கை வைக்க மாட்டேன், ஏனென்றால் அவர்
யெகோவாவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்’[f] என்று சொன்னேன். **11** என்
தகப்பனே, இதோ பாருங்கள். உங்களுடைய கையில்லாத அங்கியின்
ஓரத்தை வெட்டி எடுத்துக்கொண்டேன். நான் இதை மட்டும்தான் வெட்டி
எடுத்தேன், உங்களைக் கொல்லவில்லை. நான் உங்களுக்குக் கெடுதல்
செய்யவோ உங்களுக்கு எதிராகக் கலகம் செய்யவோ நினைக்கவில்லை
என்று இதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ளலாம். நான் உங்களுக்கு எந்
தப் பாவமும் செய்யவில்லை.[g] ஆனால், நீங்கள் என் உயிரை வேட்டை
யாடுகிறீர்கள்.[h] **12** உங்களுக்கும் எனக்கும் நடுவில் நின்று யெகோவாவே
தீர்ப்பு கொடுக்கட்டும்,[i] எனக்காக யெகோவாவே உங்களைப் பழிவாங்
கட்டும்.[j] ஆனால், நான் உங்கள்மேல் கை வைக்க மாட்டேன்.[k] **13** ‘கெட்
டவனிடமிருந்தே கெட்டது பிறக்கும்’ என்ற பழமொழி உங்களுக்கே
தெரியும், அதனால் நான் உங்களுக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்
டேன். **14** இஸ்ரவேலின் ராஜா யாரைத் தேடி அலைகிறார்? யாரைத் துரத்
திக்கொண்டு வருகிறார்? இந்தச் செத்த நாயையா? இந்தச் சாதாரண பூச்சி
யையா?[l] **15** யெகோவாவே நியாயாதிபதியாக இருந்து, உங்களுக்கும்
எனக்கும் நடுவில் நின்று தீர்ப்பு கொடுக்கட்டும். அவர் எல்லாவற்றையும்
பார்த்து எனக்காக வழக்காடுவார்,[m] எனக்குத் தீர்ப்பு கொடுப்பார், உங்கள்
கையிலிருந்து என்னைக் காப்பாற்றுவார்” என்று சொன்னார்.

16 தாவீது பேசி முடித்தவுடன் சவுல் அவரிடம், “என் மகன் தாவீதே,
இது உன் குரல்தானே?” என்று கேட்டார்.[n] பின்பு கதறி அழுதபடி, **17** “நீ
என்னைவிட நல்லவன்.* நீ எனக்கு நல்லது செய்தாய், நான்தான் உனக்குக்
கெடுதல் செய்துவிட்டேன்.[o] **18** இன்றைக்கு யெகோவா என்னை உன்
கையில் கொடுத்தும் நீ என்னைக் கொல்லவில்லை. நீ செய்த இந்த நல்ல

24:5 * வே.வா., “மனசாட்சி உறுத்திக்கொண்டே.” **24:6** * வே.வா., “அபிஷேகம் செய்திருக்கிற.” **24:7** * அல்லது, “அனுப்பிவிட்டார்.” **24:17** * வே.வா., “நீதிமான்.”

அதி. 24
a 2சா 24:10
b யாத் 22:28; 1சா 26:11; 2சா 1:14; 1நா 16:22
c 1சா 26:17
d 1சா 26:19
e 1சா 24:4
f 1சா 9:16; 1சா 10:1; 1சா 26:9; சங் 105:15
g 1சா 26:18; சங் 35:7
h 1சா 23:14
i 1சா 26:23
j உபா 32:35
k 1சா 26:11
l 1சா 26:20
m 1சா 25:39; சங் 35:1
n 1சா 26:17
o 1சா 26:21

காரியத்தை உன் வாயாலேயே தெரிந்துகொண்டேன்.[a] **19** வசமாக மாட்
டிக்கொள்ளும் எதிரியை யாராவது சும்மா விடுவார்களா? இன்று நீ எனக்கு
நல்லது செய்ததற்காக யெகோவா உனக்கு நல்லது செய்வார்.[b] **20** நீ
நிச்சயம் ராஜாவாக ஆவாய்,[c] இஸ்ரவேல் ராஜ்யத்தைக் காலம்காலமாகக்
கட்டிக்காப்பாய். **21** இப்போது, நீ என் வம்சத்தாரை ஒழித்துக்கட்ட மாட்
டாய் என்றும், என் அப்பாவின் குடும்பத்திலிருந்து என்னுடைய பெயரை
அழித்துவிட மாட்டாய்[d] என்றும் யெகோவாவின் பெயரில் எனக்குச் சத்தி
யம் செய்து கொடு"[e] என்றார். **22** அதனால், தாவீது சவுலுக்குச் சத்தியம்
செய்து கொடுத்தார். அதன்பின், சவுல் தன் வீட்டுக்குப் போனார்.[f] தாவீதும்
அவருடைய ஆட்களும் தாங்கள் தங்கியிருந்த பாதுகாப்பான இடத்துக்குப்
போனார்கள்.[g]

25 சில காலம் கழித்து சாமுவேல்[h] இறந்துபோனார். இஸ்ரவேலர்
கள் எல்லாரும் ஒன்றுகூடி அவருக்காகத் துக்கம் அனுசரித்தார்
கள். ராமாவிலிருந்த அவருடைய வீட்டுக்குப்[i] பக்கத்தில் அவரை அடக்
கம் செய்தார்கள். அதன்பின், தாவீது பாரான் வனாந்தரத்துக்குப் போனார்.

2 மாகோன்[j] நகரத்திலே ஒரு பெரிய பணக்காரன் இருந்தான்.
அவன் கர்மேலில்*[k] தொழில் செய்துவந்தான். அவனுக்கு 3,000 செம்மறி
யாடுகளும் 1,000 வெள்ளாடுகளும் இருந்தன. அந்தச் சமயத்தில் அவன்
கர்மேலில் தன்னுடைய செம்மறியாடுகளுக்கு மயிர் கத்தரித்துக்கொண்டி
ருந்தான். **3** அவன் ஒரு காலேபியன்.[l] அவன் பெயர் நாபால்,[m] அவ
னுடைய மனைவி பெயர் அபிகாயில்.[n] அவள் புத்திசாலி, அழகானவள்.
ஆனால், அவளுடைய கணவன் ஒரு முரடன், ரொம்ப மோசமானவன்.[o]
4 நாபால் தன்னுடைய செம்மறியாடுகளுக்கு மயிர் கத்தரித்துக்கொண்டி
ருப்பதாக வனாந்தரத்திலிருந்த தாவீது கேள்விப்பட்டார். **5** அதனால்,
தன்னுடைய ஆட்களில் பத்துப் பேரைக் கூப்பிட்டு, "நீங்கள் கர்மேலுக்குப்
போய் நாபாலைப் பார்த்து, அவரை நான் நலம் விசாரித்ததாகச் சொல்லுங்
கள். **6** பின்பு அவரிடம், 'நீங்கள் நீடூழி வாழ வேண்டும்! நீங்களும் உங்
கள் குடும்பத்தாரும் சந்தோஷமாக வாழ வேண்டும்! உங்களுடைய
சொத்து பெருக வேண்டும்! **7** இப்போது உங்களுடைய ஆடுகளுக்கு நீங்
கள் மயிர் கத்தரிப்பதாகக் கேள்விப்பட்டேன். உங்களுடைய மேய்ப்பர்கள்
எங்களோடு இருந்தபோது, நாங்கள் அவர்களுக்கு எந்தக் கெடுதலும் செய்
யவில்லை.[p] கர்மேலில் அவர்கள் இருந்த நாளெல்லாம் அவர்களுக்குச்
சொந்தமான எதுவும் தொலைந்துபோகவில்லை. **8** வேண்டுமானால், உங்
களுடைய ஆட்களிடமே கேட்டுப் பாருங்கள், அவர்கள் சொல்வார்கள்.
நீங்கள் எல்லாரும் சந்தோஷமாக இருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய
ஆட்கள் உங்களிடம் வந்திருக்கிறார்கள். அதனால் கொஞ்சம் கருணை
காட்டி, உங்கள் ஊழியர்களாகிய இவர்களுக்கும் உங்கள் மகன் தாவீதுக்கும்
உங்களால் முடிந்ததைத் தயவுசெய்து கொடுத்தனுப்புங்கள்'[q] என்று சொல்
லுங்கள்" என்றார்.

9 அதன்படியே, தாவீதின் ஆட்கள் நாபாலிடம் போய் தாவீது சொல்லி
அனுப்பிய எல்லாவற்றையும் சொன்னார்கள். **10** உடனே நாபால் அவர்க
ளிடம், "யார் அந்த தாவீது? யார் அந்த ஈசாயின் மகன்? இந்தக் காலத்தில்

25:2 * இது யூதாவில் இருந்த ஒரு நகரம், கர்மேல் மலை அல்ல.

அதி. 24
a 1சா 24:4, 10
b 1சா 26:25; சங் 18:20
c 1சா 13:14; 1சா 15:28; 1சா 18:8; 1சா 20:31; 1சா 23:17
d 2சா 9:1; 2சா 21:7
e லேவி 19:12; உபா 6:13
f 1சா 15:34
g 1சா 23:29

அதி. 25
h 1சா 1:20; 1சா 2:18; 1சா 3:20; சங் 99:6
i 1சா 7:15, 17
j 1சா 23:24
k யோசு 15:20, 55
l எண் 13:6; எண் 32:11, 12
m 1சா 25:25
n 1சா 27:3
o 1சா 25:17, 21
p 1சா 25:14-16
q உபா 15:7

எத்தனையோ வேலைக்காரர்கள் எஜமானைவிட்டு ஓடிப்போய்விடுகிறார்
கள்.[a] **11** நான் எதற்காக என்னுடைய ரொட்டியையும், என்னுடைய தண்
ணீரையும், என் ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கிற ஆட்களுக்காக வெட்டி
வைத்த இறைச்சியையும் எடுத்து ஊர் பேர் தெரியாத ஆட்களுக்கெல்லாம்
கொடுக்க வேண்டும்?" என்று கேட்டான்.

12 அதனால், தாவீதின் ஆட்கள் திரும்பிப் போய் அவரிடம் இதை
யெல்லாம் சொன்னார்கள். **13** உடனே, தாவீது தன்னுடைய ஆட்களிடம்,
"எல்லாரும் வாளை இடுப்பில் கட்டிக்கொள்ளுங்கள்!"[b] என்றார். அதனால்,
அவர்கள் எல்லாரும் வாளை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார்கள்.
தாவீதும் தன்னுடைய வாளை இடுப்பில் கட்டிக்கொண்டார். சுமார் 400 பேர்
தாவீதோடு போனார்கள், 200 பேர் மூட்டைமுடிச்சுகளைக் காவல் காப்ப
தற்காக இருந்துவிட்டார்கள்.

14 இதற்கிடையில், நாபாலின் வேலைக்காரர்களில் ஒருவன் அவனு
டைய மனைவி அபிகாயிலிடம் போய், "நம்முடைய எஜமானுக்கு வாழ்த்து
செய்தி சொல்ல தாவீது வனாந்தரத்திலிருந்து ஆட்களை அனுப்பியிருந்
தார். ஆனால், இவர் அவர்களைக் கண்டபடி திட்டி அனுப்பிவிட்டார்.[c]
15 நாங்கள் வெளிநிலங்களில் இருந்தபோது அந்த ஆட்கள் எங்களுக்கு
ரொம்ப ஒத்தாசையாக இருந்தார்கள். எங்களுக்கு ஒரு கெடுதலும் செய்ய
வில்லை. நாங்கள் ஒன்றாக இருந்த நாளெல்லாம் எங்களுக்குச் சொந்தமான
எதுவும் தொலைந்துபோகவில்லை.[d] **16** நாங்கள் ஆடுகளை மேய்த்து
வந்த சமயம் முழுவதும் அவர்கள் ராத்திரி பகலாக எங்களைச் சுற்றிப் பாது
காப்பான மதில்போல் இருந்தார்கள். **17** இப்போது என்ன செய்யப்போகி
றீர்கள் என்று முடிவுசெய்யுங்கள். ஏனென்றால், நம் எஜமானுக்கும் நம்
எல்லாருக்கும் பெரிய ஆபத்து வந்துகொண்டிருக்கிறது![e] நம் எஜமான் ஒன்
றுக்கும் உதவாதவர்,[f] அவரிடம் யாரும் வாய் திறக்கவே முடியாது" என்று
சொன்னான்.

18 உடனே, அபிகாயில்[g] 200 ரொட்டிகளையும், இரண்டு பெரிய ஜாடி
நிறைய திராட்சமதுவையும், ஐந்து ஆடுகளின் இறைச்சியையும், ஐந்து
படி* வறுத்த தானியங்களையும், 100 திராட்சை அடைகளையும், 200 அத்
திப்பழ அடைகளையும் அவசர அவசரமாக எடுத்து கழுதைகள்மேல் ஏற்
றினாள்.[h] **19** பின்பு, தன்னுடைய வேலைக்காரர்களிடம், "நீங்கள் முன்னால்
போங்கள், நான் உங்களுக்குப் பின்னால் வருகிறேன்" என்றாள். ஆனால்,
இதைப் பற்றி அவளுடைய கணவன் நாபாலிடம் அவள் எதுவும் சொல்
லவில்லை.

20 அவள் ஒரு கழுதைமேல் ஏறி, மலையின் மறைவில் வந்துகொண்டி
ருந்தாள். அப்போது, தாவீதும் அவருடைய ஆட்களும் எதிரில் வந்து
கொண்டிருந்தார்கள். கடைசியில், அவள் அவர்களைச் சந்தித்தாள்.
21 அதற்கு முன்புதான் தாவீது தன் ஆட்களிடம், "நான் அந்த ஆளுக்குச்
செய்ததெல்லாம் வீண். அவனுக்குச் சொந்தமான எல்லாவற்றையும் வனாந்
தரத்தில் காவல் காத்தேன். அவனுக்குச் சொந்தமான எதுவும் தொலைந்து
போகவில்லை.[i] நான் அவனுக்கு நல்லது செய்தும் அவன் எனக்குக்
கெட்டதுதான் செய்திருக்கிறான்.[j] **22** நாளை விடிவதற்குள் அவனுடைய
ஆட்களில் ஒருவனைக்கூட உயிரோடு விட்டுவைக்க மாட்டேன். அப்ப

25:18 * நே.மொ., "ஐந்து சியா அளவு." இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 25
a 1சா 22:2
b சங் 37:8
நீதி 15:1
பிர 7:9
c 1சா 25:10
d 1சா 25:7
e 1சா 25:13
f 1சா 25:3
g 1சா 25:3
h 2சா 16:1
2சா 17:27-29
i 1சா 25:7
j 1சா 25:10
சங் 35:12

டியே நான் விட்டுவைத்தாலும் கடவுள் என் எதிரிகளுக்கு* கடுமையான
தண்டனை கொடுக்கட்டும்" என்று சொல்லியிருந்தார்.

23 தாவீதைப் பார்த்தவுடன் அபிகாயில் கழுதையைவிட்டு அவசர
அவசரமாக இறங்கி, அவருக்கு முன்னால் போய் மண்டிபோட்டு, தரைவ
ரைக்கும் குனிந்து வணங்கினாள். **24** பின்பு அவருடைய காலில் விழுந்து,
"என் எஜமானே, இந்தப் பழியை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களிடம்
பேச இந்த அடிமைப் பெண்ணை அனுமதியுங்கள், இந்த அடிமைப் பெண்
சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். **25** என் எஜமானே, ஒன்றுக்கும் உத
வாத அந்த நாபால்[a] பேசியதையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ளாதீர்
கள். நாபால்* என்ற பெயருக்கு ஏற்ற மாதிரிதான் அவர் நடக்கிறார். அவர்
புத்தியில்லாதவர். எஜமானே, உங்கள் ஆட்கள் வந்ததை இந்த அடிமைப்
பெண் பார்க்கவில்லை. **26** எஜமானே, உயிருள்ள கடவுளாகிய யெகோ
வாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* உங்கள் உயிர்மேல் ஆணையாக
வும் சொல்கிறேன்,# நீங்கள் கொலைப்பழிக்கு△[b] ஆளாகாதபடிக்கும் பழிக்
குப்பழி வாங்காதபடிக்கும் யெகோவாதான் உங்களைத் தடுத்திருக்கிறார்.[c]
உங்களுடைய எதிரிகளும் உங்களுக்குக் கெடுதல் செய்ய நினைக்கிற
வர்களும் நாபாலைப் போல ஆகட்டும். **27** எஜமானே, இந்த அடிமைப்
பெண் கொண்டுவந்த அன்பளிப்பைத்[d] தயவுசெய்து ஏற்றுக்கொண்டு, உங்
களுடைய ஆட்களுக்குக்[e] கொடுங்கள். **28** தயவுசெய்து இந்த அடிமைப்
பெண் செய்த குற்றத்தை மன்னித்துவிடுங்கள். என் எஜமானாகிய உங்
கள் வம்சத்துக்கு யெகோவா என்றென்றும் ஆட்சியைக் கொடுப்பார்.*[f]
ஏனென்றால், நீங்கள் யெகோவாவின் போர்களைத் தலைமைதாங்கி நடத்
துகிறீர்கள்,[g] இந்த நாள்வரை நீங்கள் எந்தக் கெட்ட காரியத்தையும் செய்
தது இல்லை.[h] **29** எஜமானே, உங்களைப் பிடித்துக் கொன்றுபோட யாரா
வது வந்தால், உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுடைய உயிரைத்
தன்னுடைய பொக்கிஷப் பையில் வைத்துப் பாதுகாப்பார். ஆனால் எதிரி
களின் உயிரை, கவணில் வைத்து எறியும் கல்போல் எறிந்துவிடுவார்.
30 எஜமானே, யெகோவா உங்களுக்குத் தந்த அருமையான வாக்குறுதி
களை நிறைவேற்றி உங்களை இஸ்ரவேலின் தலைவராக நியமிக்கும்
போது,[i] **31** காரணமில்லாமல் இரத்தம் சிந்தியதற்காகவும் பழிவாங்கியதற்
காகவும்[j] நீங்கள் வருத்தப்படவோ வேதனைப்படவோ வேண்டியிருக்காது.
எஜமானே, யெகோவா உங்களை ஆசீர்வதிக்கும்போது, இந்த அடிமைப்
பெண்ணை நினைத்துக்கொள்ளுங்கள்" என்றாள்.

32 அப்போது தாவீது அபிகாயிலிடம், "இன்றைக்கு உன்னை என்
னிடம் அனுப்பிய இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்குப் புகழ்
சேரட்டும்! **33** புத்திசாலியாக நடந்துகொண்ட உன்னைக் கடவுள் ஆசீர்வ
திக்கட்டும்! கொலைப்பழிக்கு[k] ஆளாகாதபடிக்கும் பழிக்குப்பழி வாங்காத
படிக்கும் இன்று என்னைத் தடுத்த உன்னை அவர் ஆசீர்வதிக்கட்டும்!

அதி. 25
a 1சா 25:17
b ஆதி 9:6
c ஆதி 20:6
d 1சா 25:18
e 1சா 22:2; 1சா 25:13
f 1சா 15:28; 2சா 7:8, 11; 1ரா 9:5
g 1சா 17:45; 1சா 18:17
h 1சா 24:11; 1ரா 15:5
i 1சா 13:13, 14; 1சா 23:17; 2சா 6:21; 2சா 7:8; சங் 89:20
j உபா 32:35; 1சா 24:15
k உபா 19:10; 1சா 25:26

25:22 *அல்லது, "எனக்கு." **25:25** *அர்த்தம், "புத்தியில்லாதவன்; முட்டாள்." **25:26** *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." #வே.வா., "நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." △வே.வா., "இரத்தப்பழிக்கு." **25:28** *நே.மொ., "யெகோவா என் எஜமானுக்கு நிரந்தரமான வீட்டைக் கண்டிப்பாகக் கட்டுவார்."

34 நீ உடனே என்னிடம் புறப்பட்டு வராமல் இருந்திருந்தால்,[a] காலைக்
குள் நாபாலின் ஆட்கள் அத்தனை பேரையும் வெட்டிச் சாய்த்திருப்பேன்.[b]
உனக்கு எந்தக் கெடுதலும் செய்யாதபடி என்னைத் தடுத்த[c] இஸ்ரவேலின்
உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாக இதைச் சொல்கி
றேன்"* என்றார். **35** பின்பு, அவள் கொண்டுவந்ததை ஏற்றுக்கொண்டு,
"நிம்மதியாக உன் வீட்டுக்குப் போ. நீ சொன்னதைக் கேட்டு, உன் விருப்
பப்படியே செய்கிறேன்" என்றார்.

36 அதன்பின், அபிகாயில் நாபாலிடம் திரும்பிப்போனாள். அப்போது,
அவன் தன்னுடைய வீட்டில் குஷியாக ராஜபோக விருந்து சாப்பிட்டுக்
கொண்டும், போதை தலைக்கேறும் அளவுக்குக் குடித்துக்கொண்டும் இருந்
தான். அதனால், அடுத்த நாள் காலைவரை அவள் எதைப் பற்றியும் அவ
னிடம் சொல்லவில்லை. **37** காலையில், அவனுக்குப் போதை தெளிந்த
பிறகு அவள் எல்லா விஷயங்களையும் சொன்னாள். அப்போது, அவன்
இதயம் செத்தவனுடைய இதயத்தைப் போல ஆனது, ஒரு கல்லைப் போல
அவன் அசையாமல் இருந்தான். **38** கிட்டத்தட்ட பத்து நாட்கள் கழித்து
யெகோவா நாபாலைத் தாக்கினார், அவன் செத்துப்போனான்.

39 நாபால் செத்துப்போன விஷயத்தை தாவீது கேள்விப்பட்டதும்,
"யெகோவாவுக்கு நன்றி, என்னை அவமானப்படுத்திய நாபாலைத்[d] தண்
டித்து எனக்கு நீதி வழங்கியிருக்கிறார்.[e] அவருடைய ஊழியனாகிய
நான் எந்தத் தவறும் செய்யாதபடி தடுத்திருக்கிறார்.[f] நாபால் செய்த
கெடுதல் அவனுக்கே திரும்பி வரும்படி யெகோவா செய்துவிட்டார்" என்
றார். பின்பு, அபிகாயிலைக் கல்யாணம் செய்துகொள்ள அவளுடைய சம்
மதத்தைக் கேட்டு வரும்படி ஆட்களை அனுப்பினார். **40** அவர்கள் கர்
மேலில் இருந்த அபிகாயிலிடம் வந்து, "தாவீது எங்களை அனுப்பினார்,
உங்களைக் கல்யாணம் செய்துகொள்ள அவர் ஆசைப்படுகிறார்" என்றார்
கள். **41** அவள் உடனடியாக எழுந்து மண்டிபோட்டு, தரைவரைக்கும்
குனிந்து, "இதோ, உங்கள் அடிமைப் பெண்! என் எஜமானுடைய ஊழியர்
களின் பாதங்களைக் கழுவக்கூட[g] நான் தயார்" என்றாள். **42** பின்பு, அபி
காயில்[h] சட்டென்று எழுந்து கழுதைமேல் ஏறிப்போனாள், அவளுடைய
பணிப்பெண்களில் ஐந்து பேர் அவளுக்குப் பின்னால் நடந்துபோனார்கள்.
அவள் தாவீதின் ஆட்களுடன் போய், அவருக்கு மனைவியானாள்.

43 தாவீது ஏற்கெனவே யெஸ்ரயேலைச்[i] சேர்ந்த அகினோவாமைக்[j]
கல்யாணம் செய்திருந்தார். இந்த இரண்டு பெண்களும் அவருக்கு மனை
விகளாக இருந்தார்கள்.[k]

44 ஆனால், சவுல் தன்னுடைய மகளும் தாவீதின் மனைவியுமாகிய
மீகாளை[l] காலீமைச் சேர்ந்த லாயீசின் மகன் பல்த்திக்குக்[m] கொடுத்தி
ருந்தார்.

26 சீப்[n] நகரத்தார் கிபியாவிலிருந்த[o] சவுலிடம் வந்து, "எஷிமோ
னுக்கு* எதிரில் இருக்கிற ஆகிலா குன்றில் தாவீது ஒளிந்திருக்கி
றான்"[p] என்று சொன்னார்கள். **2** அதனால், சவுல் 3,000 இஸ்ரவேல் வீரர்
களைத் தேர்ந்தெடுத்து, தாவீதைத் தேடி சீப் வனாந்தரத்துக்குப் போனார்.[q]
3 எஷிமோனுக்கு எதிரில் இருக்கிற ஆகிலா குன்றுக்குப் போகிற வழி

25:34 * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாக இதைச் சொல்கிறேன்." **26:1** * அல்லது, "வனாந்தரத்துக்கு."

அதி. 25
a 1சா 25:18
b 1சா 25:22
c 1சா 25:24
d 1சா 25:10, 14
e 1சா 24:15; சங் 35:1
f 1சா 25:34
g ஆதி 18:3, 4; லூ 7:44
h 1சா 25:3
i யோசு 15:20, 56
j 1சா 27:3; 2சா 3:2; 1நா 3:1
k 1சா 30:5; 2சா 5:13
l 1சா 18:20
m 2சா 3:14, 15

அதி. 26
n யோசு 15:20, 55
o நியா 19:14; 1சா 10:26
p 1சா 23:14; 1சா 23:19, 24; சங் 54:மே.கு.
q 1சா 24:2

யில் சவுல் முகாம்போட்டிருந்தார். அப்போது, வனாந்தரத்தில் தங்கியிருந்த
தாவீது, தன்னைத் தேடி சவுல் அங்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்டார்.
4 சவுல் நிஜமாகவே வந்திருக்கிறாரா என்பதை உறுதி செய்துகொள்ள
தாவீது உளவாளிகளை அனுப்பினார். **5** பிற்பாடு, சவுல் முகாம்போட்டி
ருந்த இடத்துக்கு தாவீது போனார். அங்கே, சவுலும் அவருடைய படைத்
தலைவராகிய நேரின் மகன் அப்னேரும்[a] தூங்கிக்கொண்டிருந்ததைப் பார்த்
தார். அந்த முகாமில் சவுலைச் சுற்றிலும் அவருடைய படைவீரர்கள்
படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். **6** தாவீது ஏத்தியனாகிய[b] அகிமெ
லேக்கிடமும் செருயாவின்[c] மகனும் யோவாபின் சகோதரனுமாகிய அபிசா
யிடமும்,[d] "சவுலின் முகாமுக்குள்ளே என்னோடு யார் வருகிறீர்கள்?" என்று
கேட்டார். அதற்கு அபிசாய், "நான் வருகிறேன்" என்றார். **7** படைவீரர்கள்
இருந்த இடத்துக்கு தாவீதும் அபிசாயும் ராத்திரியில் போனார்கள். அங்கே
சவுல் தூங்கிக்கொண்டிருந்ததைப் பார்த்தார்கள். அவருடைய தலைமாட்
டில் அவருடைய ஈட்டி தரையில் குத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்னேரும்
மற்ற வீரர்களும் அவரைச் சுற்றிப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

8 அப்போது அபிசாய் தாவீதிடம், "இன்றைக்குக் கடவுள் உங்களுடைய
எதிரியை உங்கள் கையில் கொடுத்துவிட்டார்.[e] ஒரு வார்த்தை சொல்
லுங்கள், ஈட்டியால் அவரை ஒரே குத்தாகக் குத்திப்போடுகிறேன், அடுத்த
குத்துக்கு அவசியமே இருக்காது" என்றார். **9** ஆனால் தாவீது அபிசாயி
டம், "அவரை ஒன்றும் செய்துவிடாதே! யெகோவாவினால் தேர்ந்தெடுக்கப்
பட்டவர்மேல்*[f] கை வைத்துவிட்டு, அந்தக் குற்றத்திலிருந்து யாராவது தப்
பிக்க முடியுமா?"[g] என்று கேட்டார். **10** அதோடு, "உயிருள்ள கடவுளாகிய
யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* யெகோவாவே அவரைப்
பழிவாங்குவார்.[h] இல்லையென்றால், அவர் இயற்கையாகவோ போரிலோ
சாவார்,[i] அந்த நாள் கண்டிப்பாக வரும்.[j] **11** யெகோவாவினால் தேர்ந்
தெடுக்கப்பட்டவர்மேல் கை வைப்பதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க
முடியாது![k] அது யெகோவாவின் பார்வையில் பெரிய பாவம். அதனால், நீ
தயவுசெய்து அவருடைய தலைமாட்டில் இருக்கிற ஈட்டியையும் தண்ணீர்
ஜாடியையும் எடுத்துக்கொள், நாம் போகலாம்" என்றார். **12** சவுலின் தலை
மாட்டில் இருந்த ஈட்டியையும் தண்ணீர் ஜாடியையும் எடுத்துக்கொண்ட
பிறகு அவர்கள் அங்கிருந்து போனார்கள். சவுலின் ஆட்கள் யாரும் அவர்
களைப் பார்க்கவோ கவனிக்கவோ இல்லை,[l] யாரும் தூக்கத்திலிருந்து
எழுந்திருக்கவும் இல்லை. ஏனென்றால், யெகோவா அவர்கள் எல்லாருக்
கும் ஆழ்ந்த தூக்கத்தை வர வைத்திருந்தார். **13** பின்பு, தாவீது எதிர்ப்பக்
கம் போய், தங்களுக்கு நடுவே நிறைய இடைவெளி இருக்கும்படி, தூரத்தி
லிருந்த மலையின் உச்சியில் நின்றார்.

14 தாவீது அங்கிருந்த வீரர்களையும் நேரின் மகன் அப்னேரையும்
சத்தமாகக் கூப்பிட்டு,[m] "அப்னேரே, உங்களுக்குக் கேட்கிறதா?" என்
றார். அதற்கு அப்னேர், "ராஜாவைக் கூப்பிடுவது யார்?" என்று கேட்டார்.
15 அப்போது தாவீது, "நீங்கள் வீரர்தானே? இஸ்ரவேலில் உங்களைப்
போல யாராவது இருக்கிறார்களா? பிறகு ஏன் உங்களுடைய எஜமானை

26:9 * வே.வா., "அபிஷேகம் செய்யப்பட்டவர்மேல்." **26:10** * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 26
a 1சா 14:50, 1சா 17:55, 2சா 2:8, 2சா 3:27
b ஆதி 10:15
c 2சா 2:18, 1நா 2:15, 16
d 2சா 16:9, 2சா 18:5, 2சா 23:18
e 1சா 24:4, 1சா 26:23
f 1சா 10:1
g 1சா 24:6, 2சா 1:14, 1நா 16:22, சங் 20:6
h உபா 32:35, 1சா 24:12, 1சா 25:38, சங் 94:1, 23
i 1சா 31:3, 6
j சங் 37:12, 13
k லேவி 19:18, 1சா 24:6, 1நா 16:22, சங் 105:15
l 1சா 24:4
m 1சா 14:50, 1சா 17:55, 2சா 2:8, 2சா 3:8

நீங்கள் பாதுகாக்கவில்லை? உங்களுடைய ராஜாவைக் கொல்வதற்கு ஒரு
படைவீரன் அங்கு வந்திருந்தான்.[a] **16** ஆனால், நீங்கள் யெகோவாவி
னால் தேர்ந்தெடுக்கப்பட்ட[b] உங்கள் எஜமானைப் பாதுகாக்கவில்லை.
பெரிய தப்பு செய்துவிட்டீர்கள். அதனால், உயிருள்ள கடவுளாகிய யெகோ
வாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* உங்களுக்கு மரண தண்டனைதான்
கிடைக்க வேண்டும். இப்போது சுற்றுமுற்றும் பாருங்கள். ராஜாவின் தலை
மாட்டில் இருந்த ஈட்டியும் தண்ணீர் ஜாடியும்[c] எங்கே?" என்றார்.

17 அப்போது, சவுல் தாவீதின் குரலை அடையாளம் கண்டு
கொண்டு, "என் மகன் தாவீதே, இது உன் குரல்தானே?"[d] என்றார்.
அதற்கு தாவீது, "ஆமாம், என் எஜமானாகிய ராஜாவே, என் குரல்தான்"
என்றார். **18** அதோடு, "எஜமானே, ஏன் என்னைத் துரத்திக்கொண்டு
வருகிறீர்கள்?[e] அடியேன் என்ன பாவம் செய்தேன்? அப்படியென்ன குற்
றம் செய்துவிட்டேன்?[f] **19** எஜமானே, ராஜாவே, தயவுசெய்து அடியேன்
பேசுவதைக் கேளுங்கள். என்னைக் கொல்ல யெகோவா உங்களைத்
தூண்டியிருந்தால், நான் செலுத்தும் உணவுக் காணிக்கையை அவர் ஏற்
றுக்கொள்ளட்டும். ஆனால், மனுஷர்கள் யாராவது உங்களைத் தூண்டியி
ருந்தால்,[g] அவர்கள் யெகோவாவின் முன்னால் சபிக்கப்படட்டும். ஏனென்
றால், யெகோவாவின் சொத்தைவிட்டு[h] என்னைப் பிரிப்பதற்காக, 'போய்
வேறு தெய்வங்களைக் கும்பிடு!' என்று சொல்லித் துரத்தியிருக்கிறார்கள்.
20 இப்போது யெகோவாவின் சன்னிதியிலிருந்து ரொம்பத் தூரத்தில் நான்
சாகும்படி செய்துவிடாதீர்கள். மலைகளில் கவுதாரியை வேட்டையாடுவது
போல் இஸ்ரவேலின் ராஜா ஒரு சாதாரண பூச்சியை[i] வேட்டையாடலாமா?"
என்றார்.

21 அதற்கு சவுல், "தாவீதே, என் மகனே, நான் பாவம் செய்துவிட்
டேன்.[j] இனி நான் உனக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டேன். ஏனென்
றால், இன்றைக்கு நீ என்னுடைய உயிருக்கு மதிப்புக் காட்டினாய்.[k] நான்தான்
முட்டாள்தனமாக நடந்துகொண்டேன், பெரிய தப்பு செய்துவிட்டேன்" என்
றார். **22** அப்போது தாவீது, "இதோ, ராஜாவின் ஈட்டி இங்கே இருக்கிறது.
உங்களுடைய ஆட்களில் ஒருவன் வந்து இதை எடுத்துக்கொள்ளட்டும்.
23 யெகோவாதான் அவரவருடைய நீதிக்கும் உண்மைக்கும் தகுந்தபடி
அவரவருக்கு* பலன் அளிப்பார்.[l] இன்றைக்கு யெகோவா உங்களை என்
கையில் கொடுத்தார். ஆனால், யெகோவாவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட
உங்களைக் கொல்ல எனக்கு மனம் வரவில்லை.[m] **24** இன்றைக்கு எனக்கு
எப்படி உங்களுடைய உயிர் மதிப்புள்ளதாக இருந்ததோ அதுபோல் என்னு
டைய உயிரும் யெகோவாவின் பார்வையில் மதிப்புள்ளதாக இருக்கட்டும்.
எல்லா கஷ்டங்களிலிருந்தும் அவர் என்னைக் காப்பாற்றட்டும்"[n] என்றார்.
25 அதற்கு சவுல், "தாவீதே, என் மகனே, கடவுள் உன்னை ஆசீர்வதிக்கட்
டும்! நீ கண்டிப்பாகப் பெரிய காரியங்களைச் சாதிப்பாய்! உனக்கு வெற்றி
மேல் வெற்றி கிடைக்கும்"[o] என்றார். பின்பு, தாவீது புறப்பட்டுப் போனார்,
சவுலும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினார்.[p]

26:16 * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." **26:23** * வே.வா., "நீதியாகவும் உண்மையாகவும் நடக்கிற ஒவ்வொருவருக்கும்."

அதி. 26
a 1சா 26:8
b 1சா 9:16, 17; 1சா 10:1
c 1சா 26:11
d 1சா 24:8, 16
e சங் 35:7
f 1சா 24:9, 11
g 1சா 24:9
h யாத் 19:5; உபா 26:18
i 1சா 24:14
j 1சா 24:17
k 1சா 24:10; 1சா 26:11
l சங் 7:8; சங் 18:20
m 1சா 24:6; 1சா 26:9
n சங் 34:19
o 1சா 24:19
p 1சா 24:22; 1சா 27:4

27 ஆனாலும், தாவீது தன் உள்ளத்தில், ‘என்றைக்காவது ஒருநாள்
சவுல் என்னைக் கொன்றுவிடுவார். அதனால், பெலிஸ்தியர்களின்
தேசத்துக்குத் தப்பித்துப் போவதுதான் நல்லது.[a] அப்போதுதான், இஸ்ர
வேல் முழுக்க என்னைத் தேடித்தேடி[b] சவுல் அலுத்துப்போவார், நானும்
அவருடைய கையில் சிக்க மாட்டேன்’ என்று நினைத்துக்கொண்டார்.
2 அதனால், அவர் தன்னோடு இருந்த 600 ஆட்களைக்[c] கூட்டிக்கொண்டு,
மாயோக்கின் மகனும் காத்தின் ராஜாவுமாகிய ஆகீசிடம்[d] போனார்.
3 அதன்பின், தாவீதும் அவருடைய ஆட்களும் அவரவர் குடும்பத்தா
ரோடு காத் நகரத்தில் ஆகீசுடன் தங்கினார்கள். தாவீதுடன் அவருடைய
இரண்டு மனைவிகளான யெஸ்ரயேலைச் சேர்ந்த அகினோவாமும்[e] கர்மே
லைச் சேர்ந்த அபிகாயிலும்[f] இருந்தார்கள். இந்த அபிகாயில், இறந்துபோன
நாபாலின் மனைவி. **4** காத் நகரத்துக்கு தாவீது தப்பியோடிய செய்தி சவு
லுக்கு எட்டியது. அதன்பின், அவர் தாவீதைத் தேடவில்லை.[g]

5 ஒருநாள் தாவீது ஆகீசிடம், “என்மேல் உங்களுக்குப் பிரியமிருந்
தால், நான் குடியிருப்பதற்கு ஒரு சின்ன ஊரில் தயவுசெய்து இடம்
கொடுங்கள். ராஜா வாழும் நகரத்தில் அடியேன் இருக்க வேண்டாம் என்
பதால்தான் கேட்கிறேன்” என்றார். **6** அதனால், அன்று ஆகீஸ் அவருக்கு
சிக்லாகு[h] என்ற ஊரைக் கொடுத்தான். அதனால்தான், சிக்லாகு இன்றுவரை
யூதாவின் ராஜாக்களுக்குச் சொந்தமாக இருக்கிறது.

7 பெலிஸ்தியர்களுடைய அந்த ஊரில் தாவீது ஒரு வருஷமும் நான்கு
மாதங்களும் தங்கியிருந்தார்.[i] **8** அந்தச் சமயத்தில், அவர் தன்னுடைய
ஆட்களுடன் போய் கேசூரியர்கள்,[j] கெஸ்ரியர்கள், அமலேக்கியர்கள்[k]
ஆகியவர்கள்மேல் திடீர்த் தாக்குதல் நடத்தினார். அந்த ஜனங்கள் தெலாம்
முதல் ஷூர்[l] வரையும் எகிப்து தேசம் வரையும் வாழ்ந்துவந்தார்கள்.
9 தாவீது அந்தப் பகுதிகளைத் தாக்கும்போதெல்லாம் அங்கிருந்த ஆண்
கள், பெண்கள் எல்லாரையும் ஒருவர்விடாமல் கொன்றுபோடுவார்.[m]
ஆனால், அவர்களுடைய ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஒட்டகங்க
ளையும் துணிமணிகளையும் எடுத்துக்கொள்வார். பின்பு, ஆகீசிடம் திரும்பி
வருவார். **10** ஆகீஸ் அவரிடம், “இன்றைக்கு நீங்கள் எல்லாரும் எங்கே
தாக்குதல் நடத்தினீர்கள்?” என்று கேட்கும்போது, “யூதாவின்[n] தென்பக்கத்
தில்”* என்பார், அல்லது “யெர்மெயேலியர்களின்[o] தென்பக்கத்தில்” என்பார்,
அல்லது “கேனியர்களின்[p] தென்பக்கத்தில்” என்று சொல்வார். **11** ஆண்
கள், பெண்கள் யாரையுமே காத் நகரத்துக்கு அவர் உயிரோடு கொண்டுவர
மாட்டார். (பெலிஸ்தியர்களின் ஊரில் வாழ்ந்த காலமெல்லாம் அவர் அப்
படித்தான் செய்துவந்தார்.) ஏனென்றால், அவர்கள் தன்னையும் தன் ஆட்க
ளையும் காட்டிக்கொடுத்துவிடுவார்கள் என்று நினைத்தார். **12** தாவீது
சொன்னதையெல்லாம் ஆகீஸ் நம்பினான். அதனால், ‘தாவீது இஸ்ரவேலர்
களின் வெறுப்புக்கு ஆளாகிவிட்டதால் இனி எப்போதுமே எனக்குத்தான்
ஊழியனாக இருப்பான்’ என்று நினைத்துக்கொண்டான்.

28 அந்தக் காலத்தில், பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்களோடு போர்
செய்ய[q] படைகளை ஒன்றுதிரட்டினார்கள். அப்போது ஆகீஸ் தாவீ
திடம், “நீயும் உன்னுடைய ஆட்களும் என்னோடு போருக்கு வர வேண்
டும் என்பது உனக்குத் தெரியும்தானே?”[r] என்று கேட்டான். **2** அதற்கு

27:10 * வே.வா., “நெகேபில்.”

அதி. 27
a 1சா 19:18; 1சா 22:1, 5
b 1சா 18:29; 1சா 23:23
c 1சா 25:13; 1சா 30:9
d 1சா 21:10, 14; 1சா 27:12
e 1சா 25:43
f 1சா 25:39, 42
g 1சா 23:14; 1சா 26:25
h யோசு 19:1, 5; 1சா 30:1; 2சா 1:1; 1நா 12:1, 20
i 1சா 29:3
j யோசு 13:1, 2
k ஆதி 36:12; யாத் 17:8, 14; எண் 13:29; 1சா 15:2; 2சா 1:1
l ஆதி 25:17, 18; யாத் 15:22; 1சா 15:7
m உபா 25:19; 1சா 15:3
n யோசு 15:1, 2
o 1நா 2:9
p எண் 24:21; 1சா 15:6

அதி. 28
q 1சா 14:52
r 1சா 27:12; 1சா 29:3

தாவீது, “அடியேன் என்ன செய்வேன் என்று உங்களுக்கே தெரியும்” என்
றார். அப்போது ஆகீஸ், “அதனால்தான் உன்னை என்னுடைய நிரந்தர
மெய்க்காப்பாளனாக நியமிக்கப்போகிறேன்”[a] என்றான்.

3 இதற்கு முன்பே சாமுவேல் இறந்துபோயிருந்தார். அவருக்காக
இஸ்ரவேலர்கள் எல்லாரும் துக்கம் அனுசரித்து, அவருடைய ஊராகிய
ராமாவில் அவரை அடக்கம் செய்திருந்தார்கள்.[b] ஆவிகளோடு பேசுகிற
வர்களையும் குறிசொல்கிறவர்களையும் சவுல் தேசத்திலிருந்து துரத்தியடித்
திருந்தார்.[c]

4 பெலிஸ்தியர்கள் ஒன்றுதிரண்டு வந்து சூனேமில்[d] முகாம்போட்டார்
கள். சவுல் இஸ்ரவேலர்களை ஒன்றுதிரட்டி கில்போவாவில்[e] முகாம்போட்
டார். **5** ஆனால், பெலிஸ்தியர்களின் படையைப் பார்த்தவுடன் சவுல்
பயந்துபோனார். அவருடைய இதயம் படபடவென்று அடித்தது.[f] **6** சவுல்
யெகோவாவிடம் விசாரித்தார்.[g] ஆனால், யெகோவா அவருக்குக் கனவு
கள் மூலமாகவோ ஊரீம்[h] மூலமாகவோ தீர்க்கதரிசிகள் மூலமாகவோ
பதில் சொல்லவே இல்லை. **7** கடைசியில், சவுல் தன்னுடைய ஊழியர்க
ளிடம், “ஆவிகளோடு பேசுகிற ஒரு பெண்ணைக் கண்டுபிடியுங்கள்.[i] நான்
அவளிடம் போய் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன்” என்றார். அதற்கு அவர்
கள், “ஆவிகளோடு பேசுகிற ஒரு பெண் எந்தோரில்[j] இருக்கிறாள்” என்று
சொன்னார்கள்.

8 அதனால், சவுல் அந்தப் பெண்ணைப் பார்க்க மாறுவேடத்தில்
இரண்டு ஆட்களோடு ராத்திரியில் போனார். அவர் அவளிடம், “உன்னு
டைய மந்திர சக்தியால் ஆவியுலகத்தோடு தொடர்புகொண்டு[k] நான்
சொல்கிற ஆளைத் தயவுசெய்து கூப்பிடு” என்றார். **9** ஆனால் அவள்,
“ஆவிகளோடு பேசுகிறவர்களையும் குறிசொல்கிறவர்களையும் தேசத்திலி
ருந்து சவுல் துரத்தியடித்த விஷயம்[l] உங்களுக்குத் தெரிந்திருக்கும். அப்
படித் தெரிந்திருந்தும், என் உயிருக்கு உலை வைக்கப் பார்க்கிறீர்
களா?”[m] என்று கேட்டாள். **10** அப்போது சவுல், “உனக்கு எந்தத் தண்ட
னையும் கிடைக்காது, இது உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல்
ஆணை”* என்று சொல்லி, யெகோவாவின் பெயரில் சத்தியம் செய்து
கொடுத்தார். **11** அந்தப் பெண், “உங்களுக்காக நான் யாரைக் கூப்பிட
வேண்டும்?” என்று கேட்டாள். அதற்கு சவுல், “சாமுவேலைக் கூப்பிடு”
என்றார். **12** அவள் “சாமுவேலை”*[n] பார்த்ததும் தொண்டைகிழியக் கத்
தினாள். பின்பு சவுலைப் பார்த்து, “ஏன் என்னை ஏமாற்றினீர்கள்? நீங்
கள் சவுல்தானே?” என்று கேட்டாள். **13** அதற்கு ராஜா, “பயப்படாதே,
நீ என்ன பார்க்கிறாய்?” என்று கேட்டார். அப்போது அவள், “கடவுளைப்
போல ஒருவர் பூமிக்கு அடியிலிருந்து எழுந்து வருவதைப் பார்க்கிறேன்”
என்றாள். **14** உடனே சவுல், “அவர் பார்ப்பதற்கு எப்படி இருக்கிறார்?”
என்று கேட்டார். அதற்கு அவள், “வயதானவராக இருக்கிறார், கையில்லாத
ஒரு மேலங்கியைப் போட்டிருக்கிறார்”[o] என்றாள். அது “சாமுவேல்” என்
பதை சவுல் புரிந்துகொண்டதுமே மண்டிபோட்டு, தரைவரைக்கும் குனிந்து
வணங்கினார்.

28:10 *வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்.” **28:12** *அதாவது, “சாமுவேலைப் போல நடித்த ஒரு கெட்ட தேவதூதனை.”

அதி. 28
a 1சா 29:2
b 1சா 25:1
c யாத் 22:18, லேவி 19:31, லேவி 20:6, 27, உபா 18:10, 11, வெளி 21:8
d யோசு 19:17, 18, 2ரா 4:8
e 1சா 31:1, 2சா 1:21, 2சா 21:12
f 1சா 28:20
g 1சா 14:37
h யாத் 28:30, எண் 27:21
i யாத் 22:18, லேவி 19:31, லேவி 20:6, 1சா 15:23, 1சா 28:3
j யோசு 17:11
k உபா 18:10, 11, 1நா 10:13
l 1சா 28:3
m யாத் 22:18, லேவி 20:27
n 1சா 28:3
o 1சா 15:27

15 அப்போது “சாமுவேல்” சவுலிடம், “நீ ஏன் என்னைக் கூப்பிட்டுத்
தொந்தரவு செய்கிறாய்?” என்று கேட்டார். அதற்கு சவுல், “பயங்கரமான
ஒரு இக்கட்டில் இருக்கிறேன். பெலிஸ்தியர்கள் என்னோடு போர் செய்
வதற்கு வந்திருக்கிறார்கள். கடவுள் என்னைவிட்டு விலகிவிட்டார். அவர்
தீர்க்கதரிசிகள் மூலமாகவும் பதில் சொல்வதில்லை, கனவுகள் மூலமாகவும்
பதில் சொல்வதில்லை.[a] அதனால்தான் நான் உங்களைக் கூப்பிட்டேன்,
நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்”[b] என்றார்.

16 அப்போது “சாமுவேல்” சவுலிடம், “யெகோவாவே உன்னைவிட்டு
விலகி[c] உனக்கு விரோதியாகிவிட்டார். அப்படியிருக்கும்போது, நீ ஏன்
என்னிடம் வந்து கேட்கிறாய்? **17** யெகோவா என் மூலம் முன்பு
சொன்னதை இப்போது நிறைவேற்றுவார். யெகோவா உன்னிடமிருந்து
ஆட்சியைப் பிடுங்கி உன் ஊழியனாகிய தாவீதுக்குக் கொடுப்பார்.[d]
18 நீ யெகோவாவுக்குக் கீழ்ப்படியவில்லை, அவருடைய கோபத்தைக்
கிளறிய அமலேக்கியர்களை அழிக்கவில்லை.[e] அதனால்தான், இன்றைக்கு
யெகோவா உனக்கு இப்படிச் செய்கிறார். **19** உன்னையும் இஸ்ரவேலர்க
ளையும் பெலிஸ்தியர்களின் கையில் யெகோவா கொடுப்பார்.[f] நாளைக்கு
நீயும்[g] உன் மகன்களும்[h] என்னோடு இருப்பீர்கள். யெகோவா இஸ்ரவேல்
படையை பெலிஸ்தியர்களிடம் தோற்றுப்போக வைப்பார்”[i] என்று
சொன்னார்.

20 உடனே, சவுல் சாஷ்டாங்கமாக விழுந்தார். “சாமுவேல்” சொன்ன
விஷயங்களைக் கேட்டு ரொம்பவும் பயந்துபோனார். பகல் முழுவதும் ராத்
திரி முழுவதும் அவர் ஒன்றுமே சாப்பிடாததால் அவருக்குக் கொஞ்சம்
கூட தெம்பு இருக்கவில்லை. **21** அந்தப் பெண் சவுலின் பக்கத்தில் வந்து
அவர் ரொம்பவே கதிகலங்கிப்போயிருப்பதைப் பார்த்து, “இந்த அடிமைப்
பெண் உங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்தேன், என் உயிரைப் பணயம்
வைத்து[j] நீங்கள் சொன்னதைச் செய்தேன். **22** இப்போது, உங்களுடைய
அடிமைப் பெண் சொல்வதைத் தயவுசெய்து கேளுங்கள். உங்களுக்குக்
கொஞ்சம் ரொட்டி தருகிறேன். அதைச் சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சம் தெம்பா
கப் புறப்பட்டுப் போங்கள்” என்றாள். **23** ஆனால் அவர், “நான் சாப்பிட
மாட்டேன்” என்று சொன்னார். அவருடைய ஊழியர்களும் அந்தப் பெண்
ணும் அவரைத் திரும்பத் திரும்ப வற்புறுத்தினார்கள். கடைசியில் அவர் ஒத்
துக்கொண்டு, தரையிலிருந்து எழுந்து கட்டிலில் உட்கார்ந்தார். **24** அந்தப்
பெண்ணின் வீட்டில் ஒரு கொழுத்த கன்றுக்குட்டி இருந்தது. அவள் சீக்கிர
மாக அதை வெட்டிச் சமைத்தாள். பின்பு, மாவை எடுத்துப் பிசைந்து, புளிப்
பில்லாத ரொட்டி சுட்டாள். **25** சவுலுக்கும் அவருடைய ஊழியர்களுக்கும்
அவற்றைப் பரிமாறினாள், அவர்கள் சாப்பிட்டார்கள். அதன்பின், அந்த ராத்
திரியே அங்கிருந்து புறப்பட்டுப் போனார்கள்.[k]

29 பெலிஸ்தியர்கள்[l] தங்களுடைய எல்லா படைகளையும் ஆப்பெக்
கில் ஒன்றுதிரட்டினார்கள். இஸ்ரவேலர்கள் யெஸ்ரயேலில்[m] உள்ள
நீரூற்றுக்குப் பக்கத்தில் முகாம்போட்டார்கள். **2** நூறு நூறாகவும் ஆயிரம்
ஆயிரமாகவும் அணிவகுத்து வந்த வீரர்களோடு பெலிஸ்தியத் தலைவர்
கள் போருக்குப் போனார்கள். தாவீதும் அவருடைய ஆட்களும் அவர்க
ளுக்குப் பின்னால் ஆகீசுடன் அணிவகுத்துப் போனார்கள்.[n] **3** ஆனால்
பெலிஸ்தியத் தலைவர்கள், “இந்த எபிரெயர்கள் ஏன் வருகிறார்கள்?” என்று

அதி. 28
a 1சா 28:6
b லேவி 19:31
c 1சா 15:23; 1சா 16:14
d 1சா 13:14; 1சா 15:28; 1சா 16:13; 1சா 24:20
e 1சா 15:9; 1நா 10:13
f 1சா 28:1; 1சா 31:1
g 1சா 31:5
h 1சா 31:2; 2சா 2:8
i 1சா 31:7
j லேவி 20:27
k 1சா 28:8

அதி. 29
l 1சா 28:1
m யோசு 19:17, 18; 1சா 29:11
n 1சா 28:2

கேட்டார்கள். அதற்கு ஆகீஸ், “இவன்தான் தாவீது, இஸ்ரவேல் ராஜாவா
கிய சவுலுக்கு ஊழியனாக இருந்தான். ஒரு வருஷத்துக்கும் மேலாக
என்னோடுதான் இருக்கிறான்.[a] என்னிடம் வந்த நாளிலிருந்து இன்றுவரை
நான் இவனிடம் எந்தக் குற்றமும் குறையும் பார்க்கவில்லை” என்று சொன்
னான். **4** அப்போது பெலிஸ்தியத் தலைவர்கள் ஆகீசின் மேல் பயங்கர
மாகக் கோபப்பட்டு, “உடனே இவனைத் திருப்பி அனுப்புங்கள்.[b] நீங்
கள் தங்கவைத்த ஊருக்கே இவன் திரும்பிப் போகட்டும். இவன் நம்மோடு
போருக்கு வர வேண்டாம். அப்படி வந்தால், நம்மையே தாக்கினாலும்
தாக்குவான்.[c] தன்னுடைய எஜமானிடம் நல்ல பெயர் வாங்குவதற்கு இவ
னுக்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்குமா? நம்முடைய ஆட்களின்
தலையை வெட்டிக் கொண்டுபோய்க் கொடுத்தாலே போதுமே! **5** இந்த
தாவீதைப் பற்றித்தானே,

‘சவுல் கொன்றது ஆயிரம்,
தாவீது கொன்றது பல்லாயிரம்’

என்று பெண்கள் புகழ்ந்து பாடினார்கள்?”[d] என்றார்கள்.

6 அதனால், ஆகீஸ்[e] தாவீதைக் கூப்பிட்டு, “உயிருள்ள கடவுளாகிய
யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* நீ நேர்மையானவன். நீ
என்னிடம் வந்த நாளிலிருந்து இன்றுவரை நான் உன்மேல் எந்தக் குற்றமும்
குறையும் பார்க்கவில்லை.[f] என்னுடைய படையோடு சேர்ந்து நீ போருக்கு
வருவது எனக்கு விருப்பம்தான்.[g] ஆனால், மற்ற தலைவர்களுக்கு உன்
மேல் நம்பிக்கை இல்லை.[h] **7** அதனால், சமாதானமாகத் திரும்பிப் போய்
விடு. பெலிஸ்தியத் தலைவர்களுக்குக் கோபம் வருவது போல எதையும்
செய்துவிடாதே” என்றான். **8** ஆனால் தாவீது ஆகீசிடம், “ஏன்? உங்களு
டைய ஊழியன் என்ன செய்துவிட்டேன்? நான் உங்களிடம் வந்த நாளி
லிருந்து இன்றுவரை என்னிடம் எந்தக் குற்றமும் குறையும் நீங்கள் பார்க்
கவில்லையே. என் எஜமானாகிய ராஜாவின் எதிரிகளோடு போர் செய்ய
நான் ஏன் வரக் கூடாது?” என்று கேட்டார். **9** அதற்கு ஆகீஸ், “என்
னைப் பொறுத்தவரை, நீ கடவுளுடைய தூதனைப் போல ரொம்ப நல்ல
வன்.[i] ஆனால், பெலிஸ்தியத் தலைவர்கள்தான் நீ எங்களோடு போருக்கு
வரக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். **10** அதனால், நீயும் உன்னு
டைய ஆட்களும் விடியற்காலையிலேயே எழுந்து, வெளிச்சம் வந்ததுமே
போய்விடுங்கள்” என்றான்.

11 அவன் சொன்னபடி, தாவீதும் அவருடைய ஆட்களும் விடியற்
காலையிலேயே எழுந்து பெலிஸ்தியர்களின் தேசத்துக்குத் திரும்பிப்
போனார்கள். பெலிஸ்தியர்கள் யெஸ்ரயேலுக்குப் போனார்கள்.[j]

30 மூன்றாம் நாள் தாவீதும் அவருடைய ஆட்களும் சிக்லாகுவுக்கு[k]
வந்து பார்த்தபோது, தெற்குப் பகுதியிலும் சிக்லாகுவிலும் அமலேக்
கியர்கள்[l] திடீர்த் தாக்குதல் நடத்தியிருந்தார்கள். சிக்லாகுவைத் தீ வைத்துக்
கொளுத்தியிருந்தார்கள். **2** அங்கிருந்த பெண்களையும்[m] மற்ற எல்லாரை
யும் பிடித்துக்கொண்டு போயிருந்தார்கள். யாரையும் கொல்லாமல், சிறியவர்
கள், பெரியவர்கள் என எல்லாரையும் பிடித்துக்கொண்டு போயிருந்தார்கள்.

29:6 *வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.”

அதி. 29
a 1சா 27:7, 12
b 1நா 12:19
c 1சா 14:21
d 1சா 18:7; 1சா 21:11
e 1சா 21:10; 1சா 27:2
f 1சா 27:11, 12
g 1சா 28:2
h 1சா 29:3, 9
i 1சா 27:12
j யோசு 19:17, 18; 1சா 29:1

அதி. 30
k யோசு 15:21, 31; 1சா 27:5, 6
l ஆதி 36:12; யாத் 17:14; 1சா 15:2; 1சா 27:8
m 1சா 27:3

3 தாவீதும் அவருடைய ஆட்களும் நகரத்துக்கு வந்தபோது, அது தீ வைத்
துக் கொளுத்தப்பட்டிருந்ததைப் பார்த்தார்கள். அவர்களுடைய மனைவி
மக்கள் பிடித்துக்கொண்டு போகப்பட்டிருந்ததையும் பார்த்தார்கள். **4** அத
னால், தாவீதும் அவருடைய ஆட்களும் சத்தமாக அழுதார்கள். அழுவ
தற்குச் சக்தியே இல்லாமல் போகும்வரை அழுதார்கள். **5** தாவீதின்
இரண்டு மனைவிகளான யெஸ்ரயேலைச் சேர்ந்த அகினோவாமும், இறந்து
போன கர்மேல் ஊரானாகிய நாபாலின் மனைவி அபிகாயிலும்[a] பிடித்
துக்கொண்டு போகப்பட்டிருந்தார்கள். **6** தாவீதின் ஆட்கள், தங்களுடைய
மகன்களும் மகள்களும் பிடித்துக்கொண்டு போகப்பட்டதால் கொதித்துப்
போய், தாவீதின் மேல் கல்லெறிய வேண்டுமென்று பேசிக்கொண்டார்கள்.
அதனால், தாவீது மிகவும் வேதனைப்பட்டார். ஆனால், தன்னுடைய கடவு
ளாகிய யெகோவாவின் உதவியால் பலம் பெற்றார்.[b]

7 பின்பு, தாவீது அகிமெலேக்கின் மகனும் குருவுமாகிய அபியத்தாரி
டம்,[c] "தயவுசெய்து ஏபோத்தைக் கொண்டுவாருங்கள்"[d] என்றார். அப்ப
டியே, அவர் தாவீதிடம் ஏபோத்தைக் கொண்டுவந்தார். **8** அப்போது
தாவீது, "நான் இந்தக் கொள்ளைக்கூட்டத்தைத் துரத்திக்கொண்டு போகட்
டுமா? அவர்களைப் பிடித்துவிடுவேனா?" என்று யெகோவாவிடம் விசா
ரித்தார்.[e] அதற்கு அவர், "அவர்களைத் துரத்திக்கொண்டு போ, கண்டிப்பாக
அவர்களைப் பிடித்துவிடுவாய், உன்னுடைய ஆட்களையும் பொருள்களை
யும் மீட்டுக்கொள்வாய்"[f] என்று சொன்னார்.

9 உடனே, தாவீது தன்னோடு இருந்த 600 ஆட்களையும்[g] கூட்
டிக்கொண்டு போனார். பேசோர் பள்ளத்தாக்குக்கு* வந்ததும் சிலர் அங்
கேயே இருந்துவிட்டார்கள். **10** அந்த 200 பேரும் பேசோர் பள்ளத்
தாக்கை கடக்க முடியாதளவு களைத்துப்போயிருந்தார்கள்.[h] அதனால்,
மற்ற 400 ஆட்களைக் கூட்டிக்கொண்டு தாவீது தொடர்ந்து போனார்.

11 தாவீதின் ஆட்கள் வழியில் ஓர் எகிப்தியனைப் பார்த்து, அவனை
அவரிடம் கொண்டுவந்தார்கள். அவனுக்கு உணவும் தண்ணீரும் கொடுத்
தார்கள். **12** அதோடு, அத்திப்பழ அடையில் ஒரு துண்டையும் இரண்டு
திராட்சை அடைகளையும் கொடுத்தார்கள். அதையெல்லாம் சாப்பிட்ட பிற
குதான் அவனுக்குத் தெம்பு வந்தது. ஏனென்றால், அவன் மூன்று நாட்களா
கச் சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் கிடந்திருந்தான். **13** தாவீது அவனிடம்,
"உன் எஜமான் யார், நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார். அதற்கு
அவன், "நான் ஒரு எகிப்தியன், ஒரு அமலேக்கியனுடைய அடிமை. மூன்று
நாட்களுக்கு முன்பு என்னுடைய உடல்நிலை மோசமானதால் என்னுடைய
எஜமான் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார். **14** இதற்கு முன்பு நாங்
கள் கிரேத்தியர்களின்[i] தெற்குப் பகுதியையும் யூதா பிரதேசத்தையும்
காலேபின்[j] தெற்குப் பகுதியையும் தாக்கி, அங்கிருந்தவற்றைச் சூறையாடி
னோம். சிக்லாகுவைத் தீ வைத்துக் கொளுத்தினோம்" என்று சொன்னான்.
15 அதற்கு தாவீது, "அந்தக் கொள்ளைக்கூட்டம் இருக்கிற இடத்தைக்
காட்டுகிறாயா?" என்று கேட்டார். அதற்கு அவன், "என்னைக் கொல்லவோ
என் எஜமானிடம் என்னை ஒப்படைக்கவோ மாட்டீர்கள் என்று கடவுள்
பெயரில் சத்தியம் செய்யுங்கள், அப்போதுதான் அவர்கள் இருக்கும் இடத்
தைக் காட்டுவேன்" என்று சொன்னான்.

30:9 * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்குக்கு." சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 30
a 1சா 25:42; 1சா 25:43
b சங் 18:6; சங் 31:1, 9; சங் 34:19; சங் 143:5
c 1சா 22:20; 1ரா 2:26
d 1சா 23:9
e எண் 27:21; நியா 20:28; 1சா 23:2, 11; 1சா 28:6
f 1சா 30:18; சங் 34:19
g 1சா 23:13; 1சா 27:2
h 1சா 30:21
i 2சா 8:18; 1ரா 1:38; 1நா 18:17; எசே 25:16; செப் 2:5
j யோசு 14:13

16 பின்பு, தாவீதையும் அவருடைய ஆட்களையும் அவன் அந்த இடத்
துக்குக் கூட்டிக்கொண்டு போனான். அந்தப் பகுதியெங்கும் அந்தக் கொள்
ளைக்கூட்டத்தார் இருந்தார்கள். பெலிஸ்தியத் தேசத்திலிருந்தும் யூதா
தேசத்திலிருந்தும் ஏராளமான பொருள்களைக் கைப்பற்றி வந்திருந்ததால்,
அவர்கள் சாப்பிட்டுக்கொண்டும் குடித்துக்கொண்டும் கும்மாளம் போட்டுக்
கொண்டும் இருந்தார்கள். **17** அன்று அதிகாலையிலிருந்து சாயங்காலம்
வரைக்கும் அவர்களை தாவீது வெட்டிச் சாய்த்தார்.[a] ஒட்டகங்களில் ஏறிப்
போன 400 ஆண்களைத் தவிர வேறு யாருமே தப்பிக்கவில்லை. **18** அம
லேக்கியர்கள் கைப்பற்றிக் கொண்டுபோன எல்லாவற்றையும் தாவீது
மீட்டுக்கொண்டார்.[b] தன்னுடைய இரண்டு மனைவிகளையும் அவர்களி
டமிருந்து காப்பாற்றினார். **19** சிறியவர்கள்முதல் பெரியவர்கள்வரை ஒரு
வர்விடாமல் எல்லாரையும் அவர்கள் காப்பாற்றினார்கள். தங்களுடைய
மகன்களையும் மகள்களையும் பொருள்களையும் மீட்டுக்கொண்டார்கள்.[c]
எதிரிகளால் கைப்பற்றப்பட்ட எல்லாவற்றையும் தாவீது மீட்டுக்கொண்டார்.
20 அதுமட்டுமல்ல, அமலேக்கியர்களின் ஆடுமாடுகள் எல்லாவற்றையும்
தாவீது பிடித்துக்கொண்டு வந்தார். தாவீதின் ஆட்கள் அவற்றைத் தங்களு
டைய ஆடுமாடுகளுக்கு முன்னால் ஓட்டிச்சென்று, “இது தாவீது கைப்பற்
றியவை” என்று சொன்னார்கள்.

21 ரொம்பவும் களைத்துப்போனதால் தாவீதுடன் போகாமல் பேசோர்
பள்ளத்தாக்கிலேயே இருந்துவிட்ட 200 பேரிடம் தாவீது வந்தார்.[d] அவர்
கள் தாவீதையும் அவருடன் இருந்த ஆட்களையும் பார்ப்பதற்காக எதிரில்
வந்தார்கள். பக்கத்தில் வந்ததும் தாவீது அவர்களிடம் நலம் விசாரித்தார்.
22 ஆனால், தாவீதுடன் போயிருந்தவர்களில் கெட்ட புத்தியுள்ள, உதவாக்
கரை ஆட்கள் சிலர், “அவர்கள் நம்மோடு வராததால், கைப்பற்றிய பொருள்
களில் எதையும் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. அவர்களுடைய
மனைவிகளையும் பிள்ளைகளையும் மட்டும் கூட்டிக்கொண்டு போகட்
டும்” என்று சொன்னார்கள். **23** அதற்கு தாவீது, “என் சகோதரர்களே,
அப்படிச் செய்யக் கூடாது. இது யெகோவா நமக்குக் கொடுத்தது. அவர்
தான் நம்மைக் காப்பாற்றி, அந்தக் கொள்ளைக்கூட்டத்தாரை நம் கையில்
கொடுத்தார்.[e] **24** அதனால், நீங்கள் சொல்வதை யார் ஒத்துக்கொள்வார்
கள்? போருக்குப் போனவர்களுக்கு மட்டுமல்ல, மூட்டைமுடிச்சுகளைக்
காவல் காத்தவர்களுக்கும் பங்கு கிடைக்க வேண்டும்.[f] எல்லாருக்கும் சரிச
மமாகப் பங்கு கிடைக்க வேண்டும்”[g] என்றார். **25** அன்றுமுதல் இஸ்ரவே
லர்களுக்கு அதை ஒரு விதிமுறையாகவும் சட்டமாகவும் ஏற்படுத்தினார்.
இன்றுவரை அது அப்படித்தான் இருந்துவருகிறது.

26 தாவீது சிக்லாகுவுக்குத் திரும்பியபின், கைப்பற்றிய பொருள்களில்
சிலவற்றைத் தன் நண்பர்களான யூதாவின் பெரியோர்களுக்கு* அனுப்பி,
“யெகோவாவின் எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதில், இதோ உங்களுக்கும்
ஒரு அன்பளிப்பு” என்று சொன்னார். **27** அதோடு பெத்தேலிலும்,[h]
நெகேபிலுள்ள* ராமோத்திலும், யாத்தீரிலும்,[i] **28** ஆரோவேரிலும், சிப்
மோத்திலும், எஸ்தெமொவாவிலும்,[j] **29** ராக்காலிலும், யெர்மெயேலியர்க
ளின்[k] நகரங்களிலும், கேனியர்களின்[l] நகரங்களிலும், **30** ஓர்மாவிலும்,[m]

30:26 *வே.வா., “மூப்பர்களுக்கு.” **30:27** *வே.வா., “தெற்கிலுள்ள.”

அதி. 30
a யாத் 17:14
b 1சா 30:3
c 1சா 30:8
சங் 34:19
d 1சா 30:10
e 1சா 30:8
f 1சா 30:10
g எண் 31:27
யோசு 22:8
சங் 68:12
h யோசு 19:4, 8
i யோசு 15:
20, 48
யோசு 21:
8, 14
j யோசு 15:
20, 50
யோசு 21:
8, 14
k 1சா 27:10
1நா 2:9
l நியா 1:16
1சா 15:6
m எண் 21:3
யோசு 19:1, 4
நியா 1:17

பொராசானிலும், ஆத்தக்கிலும், **31** எப்ரோனிலும்,[a] தன் ஆட்களோடு
அடிக்கடி போய்வந்த இடங்களிலும் வாழ்கிறவர்களுக்குக்கூட பங்கு
அனுப்பினார்.

31

பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்களுக்கு எதிராகப் போர் செய்
தார்கள்.[b] அப்போது, இஸ்ரவேலர்கள் பெலிஸ்தியர்களிடம் தோற்
றுப்போய் ஓடினார்கள். பலர் கில்போவா மலையில்[c] வெட்டிச் சாய்க்கப்
பட்டார்கள். **2** சவுலையும் அவருடைய மகன்களையும் பெலிஸ்தியர்கள்
துரத்திக்கொண்டே பக்கத்தில் வந்துவிட்டார்கள். பின்பு, அவருடைய மகன்
களான[d] யோனத்தானையும்[e] அபினதாபையும் மல்கிசூவாவையும் கொன்
றுபோட்டார்கள். **3** சவுலை எதிர்த்து அவர்கள் தீவிரமாகப் போர் செய்
தார்கள். கடைசியில், வில்வீரர்கள் அவரைக் கண்டு அவர்மேல் அம்பு
எறிந்தார்கள், அவர் படுகாயம் அடைந்தார்.[f] **4** அதனால், சவுல் தன்
னுடைய ஆயுதங்களைச் சுமந்தவனிடம், “உன் வாளை உருவி என்னைக்
குத்திப்போடு. இல்லாவிட்டால், விருத்தசேதனம் செய்யாத அந்த ஆட்
கள்[g] வந்து என்னைக் குத்திக் கொடூரமாக* கொன்றுவிடுவார்கள்” என்
றார். ஆனால், அவன் மிகவும் பயந்ததால் தன்னால் முடியாதென்று சொல்
லிவிட்டான். அதனால், சவுல் தன்னுடைய வாளை எடுத்துத் தன் உயிரைப்
போக்கிக்கொண்டார்.[h] **5** சவுல் இறந்துவிட்டதைப்[i] பார்த்தபோது அவ
னும் தன்னுடைய வாளை எடுத்துத் தன் உயிரைப் போக்கிக்கொண்டான்.
6 இப்படி, சவுலும் அவருடைய மூன்று மகன்களும் அவருடைய ஆயுதங்
களைச் சுமந்தவனும் அவருடைய எல்லா ஆட்களும் ஒரே நாளில் செத்
துப்போனார்கள்.[j] **7** இஸ்ரவேல் வீரர்கள் ஓடிவிட்டார்கள் என்பதையும்,
சவுலும் அவருடைய மகன்களும் இறந்துவிட்டார்கள் என்பதையும் பள்ளத்
தாக்கு மற்றும் யோர்தான் பகுதிகளில் வாழ்ந்துவந்த இஸ்ரவேலர்கள் கேள்
விப்பட்டபோது தங்கள் நகரங்களைவிட்டு ஓடிப்போனார்கள்.[k] பெலிஸ்தி
யர்கள் வந்து அங்கே குடியேறினார்கள்.

8 கொல்லப்பட்டவர்களின் பொருள்களை எடுத்துக்கொள்ள அடுத்த
நாள் பெலிஸ்தியர்கள் வந்தபோது, சவுலும் அவருடைய மூன்று மகன்க
ளும் கில்போவா மலையில் செத்துக் கிடப்பதைப் பார்த்தார்கள்.[l] **9** அப்
போது, சவுலின் தலையை வெட்டி, அவருடைய ஆயுதங்களை எடுத்
துக்கொண்டார்கள். பின்பு, தங்கள் கோயில்களிலும்[m] ஜனங்கள் மத்தியிலும்
இந்தச் செய்தியை அறிவிப்பதற்காக பெலிஸ்தியர்களின் தேசமெங்கும் தூது
வர்களை அனுப்பினார்கள்.[n] **10** அதன்பின், அவருடைய ஆயுதங்களை
அஸ்தரோத் கோயிலில் வைத்தார்கள். பிற்பாடு, அவருடைய உடலை பெத்-
சானின்[o] மதிலில் தொங்கவிட்டார்கள். **11** பெலிஸ்தியர்கள் சவுலுக்கு இப்
படிச் செய்ததை யாபேஸ்-கீலேயாத்தைச்[p] சேர்ந்த ஜனங்கள் கேள்விப்பட்
டார்கள். **12** உடனே, அங்கிருந்த வீரர்கள் எல்லாரும் புறப்பட்டு, ராத்திரி
முழுவதும் பயணம் செய்து, சவுலின் உடலையும் அவருடைய மகன்களின்
உடலையும் பெத்-சானின் மதிலிலிருந்து இறக்கினார்கள். பின்பு, அவற்றை
யாபேசுக்கு எடுத்துவந்து தகனம் செய்தார்கள். **13** அதன்பின், அவர்களு
டைய எலும்புகளை[q] எடுத்து யாபேசிலிருந்த சவுக்கு மரத்தடியில் புதைத்து
விட்டு,[r] ஏழு நாட்களுக்கு விரதமிருந்தார்கள்.

31:4 * வே.வா., “கேவலமாக.”

அதி. 30
a யோசு 14:13, 2சா 2:1

அதி. 31
b 1சா 14:52, 1சா 29:1
c 1சா 28:4, 2சா 1:21, 1நா 10:1-5
d 1நா 8:33
e 1சா 13:2
f 2சா 1:4, 6
g 1சா 17:26, 2சா 1:20
h 1நா 10:4
i 1சா 26:10, 1நா 10:13
j 1சா 28:19, 1நா 10:6, 7
k 1சா 13:6
l 1சா 28:4, 1சா 31:1, 2சா 1:6, 1நா 10:8-12
m நியா 16:23
n 2சா 1:20
o யோசு 17:11, நியா 1:27
p 1சா 11:1, 9-11
q 2சா 21:12
r 2சா 2:4, 5

இரண்டாம்

சாமுவேல்

முக்கியக் குறிப்புகள்

1 சவுல் இறந்த செய்தியை தாவீது கேள்விப்படுகிறார் (1-16)

சவுலுக்காகவும் யோனத்தானுக்காகவும் தாவீதின் புலம்பல் பாடல் (17-27)

2 தாவீது யூதாவின் ராஜாவாகிறார் (1-7)

இஸ்போசேத் இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (8-11)

தாவீதின் வீட்டாருக்கும் சவுலின் வீட்டாருக்கும் சண்டை (12-32)

3 தாவீதின் வீட்டார் வலிமை பெறுகிறார்கள் (1)

தாவீதின் மகன்கள் (2-5)

தாவீதின் பக்கம் அப்னேர் சேர்ந்துகொள்கிறார் (6-21)

அப்னேரை யோவாப் கொன்றுபோடுகிறார் (22-30)

அப்னேருக்காக தாவீது அழுது புலம்புகிறார் (31-39)

4 இஸ்போசேத் கொலை செய்யப்படுகிறார் (1-8)

தாவீது தன் ஆட்களை வைத்து கொலைகாரர்களைக் கொல்கிறார் (9-12)

5 இஸ்ரவேல் முழுவதுக்கும் தாவீது ராஜாவாகிறார் (1-5)

எருசலேம் கைப்பற்றப்படுகிறது (6-16)

சீயோன், 'தாவீதின் நகரம்' (7)

பெலிஸ்தியர்களை தாவீது தோற்கடிக்கிறார் (17-25)

6 கடவுளின் பெட்டி எருசலேமுக்குக் கொண்டுவரப்படுகிறது (1-23)

பெட்டியை ஊசா பிடிக்கிறான், கொல்லப்படுகிறான் (6-8)

தாவீதை மீகாள் கேவலமாக நினைக்கிறாள் (16, 20-23)

7 ஆலயத்தை தாவீது கட்ட மாட்டார் (1-7)

தாவீதோடு செய்யப்பட்ட அரசாங்க ஒப்பந்தம் (8-17)

தாவீது நன்றி சொல்லி ஜெபிக்கிறார் (18-29)

8 தாவீதுக்குக் கிடைத்த வெற்றிகள் (1-14)

தாவீதின் நிர்வாகம் (15-18)

9 மேவிபோசேத்துக்கு தாவீது மாறாத அன்பைக் காட்டுகிறார் (1-13)

10 அம்மோனியர்களையும் சீரியர்களையும் தோற்கடிக்கிறார் (1-19)

11 பத்சேபாளோடு முறைகேடான உறவு (1-13)

உரியாவைக் கொல்ல ஏற்பாடு (14-25)

பத்சேபாளைத் தன் மனைவியாக்கிக்கொள்கிறார் (26, 27)

12 தாவீதை நாத்தான் கண்டிக்கிறார் (1-15அ)

பத்சேபாளின் மகன் செத்துப்போகிறான் (15ஆ-23)

பத்சேபாள் சாலொமோனைப் பெற்றெடுக்கிறாள் (24, 25)

அம்மோனியர்களின் நகரமான ரப்பா கைப்பற்றப்படுகிறது (26-31)

13 அம்னோன் தாமாரைக் கெடுக்கிறான் (1-22)

அப்சலோம் அம்னோனைக் கொல்கிறான் (23-33)

அப்சலோம் கேசூருக்குத் தப்பியோடுகிறான் (34-39)

14 யோவாபும் தெக்கோவாவைச் சேர்ந்த பெண்ணும் (1-17)

யோவாபின் திட்டத்தை தாவீது கண்டுபிடிக்கிறார் (18-20)

அப்சலோமைத் திரும்பி வரச்சொல்கிறார் (21-33)

15 அப்சலோமின் சதியும் கலகமும் (1-12)

தாவீது எருசலேமிலிருந்து தப்பியோடுகிறார் (13-30)

அப்சலோமுடன் அகித்தோப்பேல் சேர்ந்துகொள்கிறான் (31)

அகித்தோப்பேலின் திட்டத்தை முறியடிக்க ஊசாய் அனுப்பப்படுகிறார் (32-37)

16 மேவிபோசேத்தைப் பற்றி சீபா பொய் சொல்கிறான் (1-4)

சீமேயி தாவீதைச் சபிக்கிறான் (5-14)

அப்சலோம் ஊசாயை ஏற்றுக்கொள்கிறான் (15-19)

அகித்தோப்பேல் சொன்ன ஆலோசனை (20-23)

17 ஊசாய் அகித்தோப்பேலின் ஆலோசனையை எடுபடாமல் போக வைக்கிறார் (1-14)

தாவீது எச்சரிக்கப்படுகிறார்; அப்சலோமிடமிருந்து தப்பிக்கிறார் (15-29)
பர்சிலாவும் மற்றவர்களும் பொருள் உதவி செய்கிறார்கள் (27-29)

18 அப்சலோமின் தோல்வியும் மரணமும் (1-18)
அப்சலோம் இறந்த விஷயம் தாவீதுக்குத் தெரிவிக்கப்படுகிறது (19-33)

19 அப்சலோமை நினைத்து தாவீது புலம்பி அழுகிறார் (1-4)
தாவீதை யோவாப் கண்டிக்கிறார் (5-8அ)
தாவீது எருசலேமுக்குத் திரும்புகிறார் (8ஆ-15)
சீமேயி மன்னிப்பு கேட்கிறான் (16-23)
மேவிபோசேத்மீது தவறு இல்லை என்பது நிரூபிக்கப்படுகிறது (24-30)
பர்சிலாவுக்கு மரியாதை (31-40)
கோத்திரங்கள் மத்தியில் வாக்குவாதம் (41-43)

20 சேபா கலகம் செய்கிறான்; அமாசாவை யோவாப் கொல்கிறார் (1-13)
சேபாவைத் துரத்துகிறார்கள், அவன் தலை வெட்டப்படுகிறது (14-22)
தாவீதின் நிர்வாகம் (23-26)

21 சவுலின் குடும்பத்தை கிபியோனியர்கள் பழிவாங்குகிறார்கள் (1-14)
பெலிஸ்தியர்களுக்கு எதிரான போர்கள் (15-22)

22 தன்னைக் காப்பாற்றியதற்காகக் கடவுளை தாவீது புகழ்கிறார் (1-51)
"யெகோவாதான் என்னுடைய மாபெரும் கற்பாறை" (2)
உண்மையுள்ளவர்களுக்கு யெகோவா உண்மையுள்ளவர் (26)

23 தாவீதின் கடைசி வார்த்தைகள் (1-7)
தாவீதுடைய மாவீரர்களின் செயல்கள் (8-39)

24 மக்களைக் கணக்கெடுத்து தாவீது பாவம் செய்கிறார் (1-14)
கொள்ளைநோயால் 70,000 பேர் சாகிறார்கள் (15-17)
தாவீது பலிபீடம் கட்டுகிறார் (18-25)
இலவசமாக வாங்கி பலி கொடுக்கக் கூடாது (24)

அதி. 1

a 1சா 27:5, 6
b 1சா 31:1, 6; 1நா 10:4, 6
c 1சா 28:4; 1நா 10:1
d 1சா 31:3; 1நா 10:3

1 சவுல் இறந்துபோன பின்பு, தாவீது அமலேக்கியர்களைத் தோற்க
டித்து* சிக்லாகுவுக்குத்[a] திரும்பி வந்து, இரண்டு நாட்கள் தங்கினார்.
2 மூன்றாம் நாளில், சவுலுடைய படையிலிருந்து ஒருவன் தன்னுடைய
உடையைக் கிழித்துக்கொண்டும், தன் தலையில் மண்ணை வாரிப்போட்
டுக்கொண்டும் தாவீதிடம் வந்து அவர் முன்னால் சாஷ்டாங்கமாய்
விழுந்தான்.
3 தாவீது அவனிடம், "நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார்.
அதற்கு அவன், "இஸ்ரவேல் படையிலிருந்து ஓடிவருகிறேன்" என்று சொன்
னான். **4** அப்போது தாவீது, "என்ன நடந்தது? தயவுசெய்து சொல்" என்று
கேட்டார். அதற்கு அவன், "இஸ்ரவேல் வீரர்கள் போர்க்களத்தைவிட்டு
ஓடிப்போய்விட்டார்கள், நிறைய பேர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். சவு
லும் அவருடைய மகன் யோனத்தானும்கூட செத்துப்போய்விட்டார்கள்"[b]
என்று சொன்னான். **5** அதற்கு தாவீது, "சவுலும் அவருடைய மகன்
யோனத்தானும் செத்துப்போய்விட்டார்கள் என்று உனக்கு எப்படித் தெரி
யும்?" என்று தன்னிடம் செய்தி சொன்ன அந்த இளைஞனிடம் கேட்டார்.
6 அதற்கு அவன், "நான் எதேச்சையாக கில்போவா மலைக்குப்[c]
போயிருந்தேன். அங்கே சவுல் அவருடைய ஈட்டிமீது சாய்ந்துகொண்டிருப்
பதைப் பார்த்தேன்; பெலிஸ்திய ரதவீரர்களும் குதிரைவீரர்களும் அவரை
நெருங்கிக்கொண்டிருந்தார்கள்.[d] **7** அவர் சுற்றுமுற்றும் பார்த்து என்னைக்

1:1 * வே.வா., "கொன்றுபோட்டு."

கூப்பிட்டார்; அதற்கு நான், 'சொல்லுங்கள், எஜமானே' என்றேன். **8** அவர்
என்னிடம், 'நீ யார்?' என்று கேட்டார். அதற்கு, 'நான் ஒரு அமலேக்கியன்'[a]
என்று சொன்னேன். **9** அப்போது அவர், 'நான் மரண வேதனையில்
துடிக்கிறேன், என் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. தயவுசெய்து என் பக்
கத்தில் வந்து என்னைக் கொன்றுபோடு' என்று சொன்னார். **10** அவர் படு
காயம் அடைந்திருந்தார்; அதனால் இனிமேல் பிழைக்க மாட்டார் என்று
நினைத்து, அவர் பக்கத்தில் போய் அவரைக் கொன்றுபோட்டேன்.[b] அவ
ருடைய தலையிலிருந்த கிரீடத்தையும்* கையிலிருந்த காப்பையும் எடுத்
துக்கொண்டு வந்திருக்கிறேன், எஜமானே" என்று சொன்னான்.

11 அதைக் கேட்டதும், தாவீது தன்னுடைய உடைகளைக் கிழித்
துக்கொண்டார்; அவருடன் இருந்த எல்லா ஆட்களும்கூட தங்களுடைய
உடைகளைக் கிழித்துக்கொண்டார்கள். **12** சவுலும் அவருடைய மகன்
யோனத்தானும் யெகோவாவின் மக்கள் பலரும் இஸ்ரவேலர்கள்[c] பல
ரும் வாளுக்கு இரையானதால் அவர்கள் கதறினார்கள், புலம்பி அழுதார்
கள்; சாயங்காலம்வரை ஒன்றும் சாப்பிடாமல் இருந்தார்கள்.[d]

13 பின்பு தாவீது அந்த இளைஞனிடம், "நீ யார், எங்கிருந்து வரு
கிறாய்?" என்று கேட்டார்; அதற்கு அவன், "நான் இஸ்ரவேலில் அன்னிய
னாகக் குடியிருக்கிற ஒரு அமலேக்கியனுடைய மகன்" என்று சொன்னான்.
14 அப்போது தாவீது, "எவ்வளவு துணிச்சல் இருந்தால், யெகோவாவினால்
அபிஷேகம் செய்யப்பட்டவரையே கொன்றுபோட்டிருப்பாய்?"[e] என்று
கேட்டார். **15** பின்பு அவர் தன்னுடைய ஆட்களில் ஒருவனைக் கூப்
பிட்டு, "போ, அவனை வெட்டிப்போடு" என்று சொன்னார். அவன் அந்த
இளைஞனை வெட்டிப்போட்டான், அவன் செத்துப்போனான்.[f] **16** அப்
போது தாவீது, "'யெகோவாவினால் அபிஷேகம் செய்யப்பட்டவரை நான்
தான் கொன்றுபோட்டேன்'[g] என்று உன் வாயாலேயே சொன்னாய்; அத
னால், உன்னுடைய சாவுக்கு நீயேதான் காரணம்"* என்றார்.

17 பின்பு சவுலுக்காகவும் அவருடைய மகன் யோனத்தானுக்காகவும்
தாவீது புலம்பல் பாடலைப் பாடினார்;[h] **18** யாசேர் புத்தகத்தில்,[i] "வில்"
என்ற தலைப்பில் எழுதப்பட்ட இந்தப் புலம்பல் பாடலை யூதா மக்களுக்
குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமெனக் கட்டளையிட்டார்:

19 "இஸ்ரவேலே, அழகானவர்கள் உன்னுடைய மலைகளில் வீழ்ந்து
கிடக்கிறார்களே![j]
மாவீரர்கள் வீழ்ந்தார்களே!
20 இதை காத் நகரத்திலே சொல்லாதீர்கள்;[k]
அஸ்கலோன் வீதிகளிலே அறிவிக்காதீர்கள்,
இதைக் கேள்விப்பட்டால் பெலிஸ்தியப் பெண்கள்
கொண்டாடுவார்களே!
விருத்தசேதனம் செய்யப்படாதவர்களின் மகள்கள் துள்ளிக்
குதிப்பார்களே!
21 கில்போவா மலைத்தொடர்களே,[l]
பனியோ மழையோ உங்கள்மேல் பொழியாமல் இருக்கட்டும்,

1:10 * வே.வா., "மகுடத்தையும்." **1:16** * நே.மொ., "உன் இரத்தப்பழி உன் தலைமேல் இருக்கும்."

அதி. 1
a யாத் 17:16 உபா 25:19 1சா 15:20 1சா 30:1
b 1சா 31:4
c 1சா 31:1
d 1சா 31:11, 13
e எண் 12:8 1சா 24:6 1சா 26:9 1சா 31:4
f 2சா 4:10
g 2சா 1:6, 10
h 1சா 31:6
i யோசு 10:13
j 1சா 31:8
k 1சா 31:9
l 1சா 31:1 1நா 10:1

பரிசுத்த காணிக்கையாகக் கொடுக்க உங்களுடைய நிலங்களில்
எதுவும் விளையாமல் போகட்டும்.[a]
ஏனென்றால், மாவீரர்களின் கேடயம் அங்கே கறைபடிந்து கிடக்கிறது,
சவுலின் கேடயம் எண்ணெய் பூசப்படாமல் இருக்கிறது.
22 எதிரிகளின் இரத்தத்தைக் குடிக்காமல், வீரர்களின் கொழுப்பை
எடுக்காமல்,
யோனத்தானின் அம்பு திரும்பியதில்லை;[b]
வெற்றி பெறாமல் சவுலின் வாள் வந்ததில்லை.[c]
23 சவுலும் யோனத்தானும்[d] அன்பானவர்கள், அருமையானவர்கள்,*
சாவிலும்கூட இணைபிரியாதவர்கள்.[e]
கழுகைவிட வேகமானவர்கள்,[f]
சிங்கத்தைவிட வலிமையானவர்கள்.[g]
24 இஸ்ரவேல் பெண்களே, சவுலுக்காக அழுது புலம்புங்கள்;
வேலைப்பாடுகள் நிறைந்த சிவப்பு ஆடைகளால் அவர் உங்களை
அலங்கரித்தாரே,
உங்கள் உடைகள்மீது தங்க நகைகளை அணிவித்தாரே.
25 மாவீரர்கள் போரில் வீழ்ந்தார்களே!
மலையில் யோனத்தான் விழுந்து கிடக்கிறாரே![h]
26 யோனத்தானே, என் சகோதரரே, உயிருக்கு உயிரானவரே,[i]
உங்களை நினைத்து என் மனம் துடியாய்த் துடிக்கிறது.
பெண்களின் அன்பைவிட உங்கள் அன்பு மிக அருமையானது.[j]
27 மாவீரர்கள் வீழ்ந்தார்களே!
அவர்களுடைய போராயுதங்கள் அழிந்துபோனதே!"

2 அதன் பின்பு தாவீது யெகோவாவிடம், "யூதாவிலிருக்கிற ஒரு நகரத்
துக்குப் போய்த் தங்கட்டுமா?" என்று விசாரித்தார்.[k] யெகோவா
அவரிடம், "போ" என்று சொன்னார். அப்போது தாவீது, "எந்த நகரத்துக்
குப் போகட்டும்?" என்று கேட்டார். அதற்கு அவர், "எப்ரோனுக்குப்[l] போ"
என்று சொன்னார். **2** அதனால், தாவீது தன்னுடைய இரண்டு மனைவிக
ளையும், அதாவது யெஸ்ரயேலைச் சேர்ந்த அகினோவாமையும்[m] இறந்து
போன கர்மேல் ஊரானாகிய நாபாலின் மனைவி அபிகாயிலையும்,[n]
கூட்டிக்கொண்டு அங்கே போனார். **3** அதோடு, தன்னுடன் இருந்த ஆட்
களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும் கூட்டிக்கொண்டு போனார்;[o]
அவர்கள் எப்ரோனைச் சுற்றியுள்ள நகரங்களில் குடியேறினார்கள்.
4 பின்பு, யூதாவைச் சேர்ந்த ஆண்கள் அங்கே வந்து, தாவீதை யூதா வம்
சத்துக்கு ராஜாவாக அபிஷேகம் செய்தார்கள்.[p]
அவர்கள் தாவீதிடம், "யாபேஸ்-கீலேயாத்தைச் சேர்ந்தவர்கள்தான்
சவுலை அடக்கம் செய்தார்கள்" என்று சொன்னார்கள். **5** அதனால்,
யாபேஸ்-கீலேயாத்தைச் சேர்ந்தவர்களிடம் தாவீது தன்னுடைய ஆட்
களை அனுப்பி, "உங்கள் எஜமானாகிய சவுலை அடக்கம் செய்து அவ
ருக்கு மாறாத அன்பு காட்டியிருக்கிறீர்கள்;[q] அதனால் யெகோவா உங்
களை ஆசீர்வதிக்கட்டும். **6** யெகோவா உங்களுக்கு மாறாத அன்பையும்

1:23 * வே.வா., "இனிமையானவர்கள்."

அதி. 1
a லேவி 27:16
b 1சா 18:4; 1சா 20:20
c 1சா 14:47
d 1சா 18:1
e 1சா 31:6; 1நா 10:6
f யோபு 9:26
g நீதி 30:30
h 1சா 31:8
i 1சா 18:1, 3
j 1சா 19:2; 1சா 20:17, 41; 1சா 23:16-18; நீதி 17:17; நீதி 18:24

அதி. 2
k எண் 27:21; 1சா 28:6
l ஆதி 23:2; எண் 13:22; யோசு 14:14; யோசு 20:7; 2சா 5:1; 1ரா 2:11
m 1சா 25:43
n 1சா 25:42; 1சா 30:5
o 1சா 22:1, 2; 1சா 27:2; 1நா 12:1
p ஆதி 49:10; 1சா 15:24, 28; 1சா 16:13; 2சா 5:4, 5; 1நா 11:3
q 1சா 31:11-13

உண்மைத்தன்மையையும் காட்டட்டும். நீங்கள் செய்த இந்த நல்ல காரி
யத்துக்காக நானும் உங்களுக்குக் கருணை காட்டுவேன்.[a] **7** நீங்கள் தைரி
யமாயிருங்கள், உறுதியோடிருங்கள். உங்களுடைய எஜமான் சவுல் இறந்து
விட்டதால், யூதா வம்சத்தார் என்னைத் தங்களுடைய ராஜாவாக
அபிஷேகம் செய்திருக்கிறார்கள்" என்று சொன்னார்.

8 ஆனால், சவுலின் படைத் தளபதியும் நேரின் மகனுமாகிய அப்னேர்,[b]
சவுலின் மகன் இஸ்போசேத்தைக்[c] கூட்டிக்கொண்டு யோர்தானைக் கடந்து
மக்னாயீமுக்குப்[d] போய், **9** அஷூரியருக்கும் கீலேயாத்துக்கும்[e] யெஸ்ர
யேலுக்கும்[f] எப்பிராயீமுக்கும்[g] பென்யமீனுக்கும், சொல்லப்போனால் இஸ்
ரவேல் முழுவதுக்கும், அவரை ராஜாவாக்கினார். **10** சவுலின் மகன் இஸ்
போசேத் இஸ்ரவேலுக்கு ராஜாவானபோது அவருக்கு 40 வயது; அவர்
இரண்டு வருஷங்கள் ஆட்சி செய்தார். யூதா வம்சத்தாரோ தாவீதை ஆத
ரித்தார்கள்.[h] **11** அவர் எப்ரோனிலிருந்து யூதா வம்சத்தார்மீது ஏழு வரு
ஷம் ஆறு மாதம் ஆட்சி செய்தார்.[i]

12 கொஞ்சக் காலத்துக்குப் பிறகு, நேரின் மகன் அப்னேரும் சவுலின்
மகன் இஸ்போசேத்தின் ஊழியர்களும் மக்னாயீமிலிருந்து[j] கிபியோனுக்
குப்[k] போனார்கள். **13** செருயாவின்[l] மகன் யோவாபும்[m] தாவீதின் ஊழி
யர்களும்கூட புறப்பட்டுப் போய் கிபியோனிலுள்ள குளத்துக்குப் பக்கத்
தில் அவர்களை நேருக்கு நேர் சந்தித்தார்கள்; குளத்துக்கு இந்தப் பக்கத்தில்
இவர்களும், குளத்துக்கு அந்தப் பக்கத்தில் அவர்களும் உட்கார்ந்தார்கள்.
14 அப்போது அப்னேர் யோவாபிடம், "இளைஞர்கள் எழுந்து வந்து ஒரு
வரோடு ஒருவர் மோதட்டும்"* என்று சொன்னார். அதற்கு யோவாப், "சரி,
மோதட்டும்" என்று சொன்னார். **15** அப்போது, இரண்டு பக்கத்தில் இருந்
தவர்களும் ஆட்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள். சவுலின் மகன்
இஸ்போசேத்தின் ஊழியர்களில் 12 பென்யமீனியர்களும் தாவீதின் ஊழியர்
களில் 12 பேரும் போனார்கள். **16** அவர்கள் ஒருவருக்கொருவர் தலைமு
டியைப் பிடித்து, வாளால் ஒருவரை ஒருவர் விலாவில் குத்தினார்கள்;
இதனால் அவர்கள் எல்லாரும் ஒன்றாகச் செத்து விழுந்தார்கள். அதனால்
தான், கிபியோனில் இருக்கிற அந்த இடம் எல்காத்-அசூரிம் என்று அழைக்
கப்பட்டது.

17 அதன் பின்பு, இரண்டு தரப்பினரும் அன்று பயங்கர வெறியோடு
சண்டை போட்டார்கள்; கடைசியில், அப்னேரும் இஸ்ரவேல் ஆண்களும்
தாவீதின் ஊழியர்களிடம் தோற்றுப்போனார்கள். **18** அங்கே செருயா
வின்[n] மூன்று மகன்களான யோவாபும்[o] அபிசாயும்[p] ஆசகேலும்[q] இருந்
தார்கள்; காட்டிலிருக்கிற கலைமான்* போல ஆசகேல் மிக வேகமாய் ஓடுப
வர். **19** அவர் வலது பக்கமோ இடது பக்கமோ திரும்பாமல் அப்னேரைத்
துரத்திக்கொண்டு ஓடினார். **20** அப்னேர் திரும்பிப் பார்த்து, "நீ ஆசகேல்
தானே?" என்று கேட்டார். அதற்கு அவர், "ஆமாம், நான்தான்" என்று சொன்
னார். **21** அப்போது அப்னேர் அவரிடம், "நீ என்னைத் துரத்திக்கொண்டு
வராதே, இளைஞர்களில் ஒருவனைப் பிடித்து அவனிடம் இருப்பதைப்
பிடுங்கிக்கொள்" என்று சொன்னார். ஆனாலும் ஆசகேல், அவரை விடா
மல் துரத்தினார். **22** அதனால் அப்னேர் மறுபடியும் அவரிடம், "என்
னைத் துரத்திக்கொண்டு வராதே; வந்தால் உன்னை வெட்டி விடுவேன்.

2:14 *வே.வா., "போட்டி போடட்டும்." **2:18** *வே.வா., "நவ்வி மான்."

அதி. 2
a 2சா 9:7; 2சா 10:2
b 1சா 14:50; 1சா 17:55; 1சா 26:5; 2சா 4:1; 1ரா 2:5
c 2சா 4:5-8; 2சா 4:12
d ஆதி 32:1, 2; யோசு 13:29, 30
e யோசு 13:8, 11
f யோசு 19:17, 18
g யோசு 16:5-8
h 2சா 2:4
i 1நா 3:4
j 2சா 2:8
k யோசு 10:12; யோசு 18:21, 25; யோசு 21:8, 17; 2சா 20:8; 2நா 1:3
l 1நா 2:15, 16
m 2சா 8:16; 2சா 20:23; 1ரா 1:5, 7
n 1நா 2:15, 16
o 2சா 10:7; 2சா 24:2; 1ரா 11:15; 1நா 11:6
p 1சா 26:6; 2சா 20:6; 1நா 11:20
q 2சா 3:27; 2சா 23:24; 1நா 27:1, 7

உன்னைக் கொன்றுவிட்டு, உன் சகோதரன் யோவாப் முகத்தில் நான் எப்படி
முழிப்பேன்?” என்று கேட்டார். **23** ஆனால், ஆசகேல் அவரை விடாமல்
துரத்திக்கொண்டே இருந்தார். அதனால், அப்னேர் தன்னுடைய ஈட்டியின்
பின்புறத்தால் அவருடைய அடிவயிற்றில் குத்தினார்;[a] அந்த ஈட்டி அவரு
டைய உடலை ஊடுருவி பின்பக்கமாக வந்தது. அவர் அந்த இடத்திலேயே
விழுந்து செத்துப்போனார். ஆசகேல் செத்துக் கிடந்த இடத்துக்கு வந்தவர்
கள் எல்லாரும் கொஞ்ச நேரம் அங்கேயே நின்றார்கள்.

24 பின்பு யோவாபும் அபிசாயும் அப்னேரைத் துரத்திக்கொண்டு
போனார்கள். சூரியன் மறைந்துகொண்டிருந்த சமயத்தில், அம்மாவு என்ற
குன்றுக்கு வந்துசேர்ந்தார்கள்; இது கிபியோன் வனாந்தரத்துக்குப் போகும்
வழியில் கீயாவுக்கு எதிரில் இருக்கிறது. **25** அங்கே பென்யமீனியர்கள்
எல்லாரும் அப்னேருக்குப் பின்னால் ஒன்றுதிரண்டு, ஒரு குன்றின் உச்சி
யில் கூட்டமாக நின்றார்கள். **26** அப்போது அப்னேர் யோவாபிடம், “இன்
னும் எவ்வளவு நேரத்துக்குத்தான் சண்டை போட்டுக்கொண்டிருப்பாய்? இப்
படியே சண்டை போட்டுக்கொண்டிருந்தால் வேதனைதான் மிஞ்சும் என்று
உனக்குத் தெரியாதா? தங்களுடைய சொந்த சகோதரர்களிடம் சண்டை
போடுவதை நிறுத்தச்சொல்லி உன்னுடைய ஆட்களிடம் சொல்ல மாட்
டாயா?” என்று சத்தமாகக் கேட்டார். **27** அதற்கு யோவாப், “உண்மைக்
கடவுள்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* நீங்கள் மட்டும் இதைச் சொல்
லாமல் இருந்திருந்தால், வீரர்கள் தங்களுடைய சகோதரர்களைக் காலை
வரை துரத்திக்கொண்டேதான் இருந்திருப்பார்கள்” என்றார். **28** உடனே
யோவாப் ஊதுகொம்பை எடுத்து ஊதினார்; அவருடைய வீரர்கள் இஸ்ரவே
லர்களைத் துரத்துவதை நிறுத்தினார்கள், சண்டையும் ஓய்ந்தது.

29 அப்னேரும் அவருடைய வீரர்களும் அன்று ராத்திரி முழுவதும்
அரபா[b] வழியாகப் பயணம் செய்து, யோர்தானைக் கடந்தார்கள்; பின்பு பள்
ளத்தாக்கை* கடந்து கடைசியில் மக்னாயீமுக்கு[c] வந்துசேர்ந்தார்கள்.
30 அப்னேரைத் துரத்துவதை யோவாப் நிறுத்திய பின்பு தன்னுடைய வீரர்
களை ஒன்றுதிரட்டினார். தாவீதின் ஊழியர்களில் ஆசகேலும் இன்னும்
19 பேரும் கொல்லப்பட்டிருந்தார்கள். **31** ஆனால், பென்யமீன் வம்சத்
தைச் சேர்ந்தவர்களையும் அப்னேரின் ஆட்களையும் தாவீதின் ஊழியர்கள்
தோற்கடித்திருந்தார்கள், மொத்தம் 360 பேரைக் கொன்று போட்டிருந்தார்
கள். **32** ஆசகேலை[d] பெத்லகேமிலுள்ள[e] அவருடைய அப்பாவின் கல்ல
றையில் அடக்கம் செய்தார்கள். யோவாபும் அவருடைய வீரர்களும் ராத்திரி
முழுவதும் நடந்து, விடியற்காலையில் எப்ரோனுக்கு[f] வந்துசேர்ந்தார்கள்.

3 சவுலின் வீட்டாருக்கும் தாவீதின் வீட்டாருக்கும் சண்டை ஓயவே
இல்லை; தாவீது மேலும் மேலும் வலிமை பெற்றுவந்தார்;[g] சவுலின்
வீட்டாரோ படிப்படியாக வலிமை இழந்துவந்தார்கள்.[h]

2 இதற்கிடையே, எப்ரோனில் இருந்தபோது தாவீதுக்கு மகன்கள் பிறந்
தார்கள்.[i] யெஸ்ரயேலைச் சேர்ந்த அகினோவாமுக்குப்[j] பிறந்த அம்
னோன்[k] அவருடைய மூத்த மகன். **3** இரண்டாம் மகன் கீலேயாப்; இறந்து
போன கர்மேல் ஊரானாகிய நாபாலின் மனைவி அபிகாயில்[l] இவனைப்
பெற்றாள். மூன்றாம் மகன் அப்சலோம்;[m] கேசூர் தேசத்து ராஜாவான

2:27 * வே.வா., “உண்மைக் கடவுள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்த
ளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **2:29** * அல்லது, “பித்ரோன் முழுவதையும்.”

அதி. 2
a 2சா 3:27
b உபா 1:7; யோசு 12:2, 3
c யோசு 21:8, 38; 2சா 2:8
d 2சா 2:18; 1நா 2:15, 16
e ஆதி 35:19; ரூ 4:11; 1சா 16:1
f 2சா 2:1, 3; 1நா 11:1

அதி. 3
g 1சா 15:27, 28; 1சா 24:17, 20; 1சா 26:25
h 2சா 2:17
i 1நா 3:1-4
j 1சா 25:43
k 2சா 13:1
l 1சா 25:42
m 2சா 15:12

தல்மாயின்[a] மகளாகிய மாக்காள் இவனைப் பெற்றாள். **4** ஆகீத் பெற்ற
அதோனியா[b] நான்காம் மகன்; அபித்தாள் பெற்ற செப்பத்தியா ஐந்தாம்
மகன். **5** தாவீதின் மனைவி எக்லாள் பெற்ற இத்ரேயாம் ஆறாம் மகன்.
இவர்களே எப்ரோனில் தாவீதுக்குப் பிறந்த மகன்கள்.

6 சவுலின் வீட்டாருக்கும் தாவீதின் வீட்டாருக்கும் சண்டை நடந்து
கொண்டிருந்த சமயத்தில், சவுலின் வீட்டில் அப்னேர்[c] தன்னுடைய செல்
வாக்கை வலுப்படுத்திக்கொண்டே வந்தார். **7** அயாவின் மகளாகிய ரிஸ்
பாள்[d] சவுலுக்கு மறுமனைவியாக இருந்தவள். ஒருசமயம் இஸ்போசேத்[e]
அப்னேரிடம், “நீங்கள் ஏன் என் அப்பாவின் மறுமனைவியோடு உறவு
கொண்டீர்கள்?”[f] என்று கேட்டார். **8** அதைக் கேட்டதும் அப்னேர் பயங்
கர கோபமடைந்து, “நான் என்ன யூத நாயா?* உன்னுடைய அப்பா
குடும்பத்துக்கும் அவருடைய அண்ணன் தம்பிகளுக்கும் நண்பர்களுக்கும்
இன்றுவரை விசுவாசமாக இருந்திருக்கிறேன்.# தாவீதிடம் பிடித்துக்
கொடுக்காமல் உன்னைக் காப்பாற்றியிருக்கிறேன்; அப்படியிருக்கும்போது,
ஒரு பெண் விஷயத்தில் என்னைக் குற்றம்சாட்டுகிறாயா? **9** ‘சவுலின் வம்
சத்தாரிடமிருந்து ஆட்சியைப் பிடுங்கி தாவீதுக்குக் கொடுப்பேன், தாண்
முதல் பெயெர்-செபாவரை[g] இஸ்ரவேல்மீதும் யூதாமீதும் தாவீதின் ஆட்
சியை நிலைநாட்டுவேன்’ என்று தாவீதுக்கு யெகோவா ஆணையிட்டுக்
கொடுத்திருந்தாரே.[h] **10** அந்த ஆணைப்படி தாவீதுக்கு நான் செய்யா
விட்டால் கடவுள் எனக்குக் கடும் தண்டனை கொடுக்கட்டும்” என்று சொன்
னார். **11** இஸ்போசேத் அப்னேருக்குப் பயந்ததால் பதிலுக்கு ஒரு வார்த்
தைகூட பேசவில்லை.[i]

12 உடனே அப்னேர் தாவீதிடம் ஆட்களை அனுப்பி, “இந்தத் தேசம்
முழுவதும் யாருக்குச் சொந்தம்? என்னோடு ஒப்பந்தம் செய்துகொள்ளுங்
கள். இஸ்ரவேலர்கள் எல்லாரையும் உங்கள் பக்கம் திருப்ப என்ன உதவி
வேண்டுமானாலும் செய்கிறேன்”[j] என்று சொன்னார். **13** அதற்கு தாவீது,
“நல்லது! நான் உங்களோடு ஒப்பந்தம் செய்துகொள்கிறேன். ஆனால், நீங்
கள் எனக்காக ஒன்றைச் செய்ய வேண்டும். நீங்கள் வரும்போது சவுலின்
மகள் மீகாளைக்[k] கூட்டிக்கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால், என்
னைப் பார்க்க வராதீர்கள்” என்று சொன்னார். **14** பின்பு சவுலின் மகன்
இஸ்போசேத்திடம்[l] தாவீது ஆட்களை அனுப்பி, “என் மனைவி மீகாளை
என்னிடம் அனுப்பிவையுங்கள். நூறு பெலிஸ்தியர்களின் நுனித்தோலைக்
கொடுத்து நான் அவளைக் கல்யாணம் செய்திருக்கிறேன்”[m] என்று சொன்
னார். **15** அதனால் இஸ்போசேத் அவளுடைய கணவனிடமிருந்து, அதா
வது லாயீசின் மகன் பல்த்தியேலிடமிருந்து,[n] அவளைக் கூட்டிக்கொண்டு
வர ஆட்களை அனுப்பினார். **16** ஆனால், அவளுடைய கணவன்
அழுதுகொண்டு பகூரிம்வரை[o] அவள் பின்னாலேயே வந்தான். அப்னேர்
அவனிடம், “பின்னால் வராதே, போய்விடு” என்று சொன்னார். அதனால்,
அவன் திரும்பிப் போனான்.

17 இதற்கிடையே, இஸ்ரவேலின் பெரியோர்களிடம்* அப்னேர் ஆள்
அனுப்பி, “தாவீது உங்களுக்கு ராஜாவாக வேண்டுமென்று கொஞ்ச நாளா
கவே ஆசைப்பட்டீர்கள், இல்லையா? **18** இதோ, அதற்கு நேரம் வந்து

3:8 * நே.மொ., “நாய் தலையா?” # வே.வா., “இன்றுவரை மாறாத அன்பு காட்டியிருக்
கிறேன்.” **3:17** * வே.வா., “மூப்பர்களிடம்.”

அதி. 3
a 2சா 13:37
b 1ரா 1:5
c 2சா 2:8
d 2சா 21:8-11
e 2சா 2:10
f 2சா 16:21; 1ரா 2:22
g நியா 3:10; 2சா 24:2
h 1சா 15:27, 28; சங் 78:70; சங் 89:20
i 2சா 3:39
j 2சா 5:3
k 1சா 18:20; 1சா 19:11; 1நா 15:29
l 2சா 2:10
m 1சா 18:25, 27
n 1சா 25:44
o 2சா 16:5; 1ரா 2:8

விட்டது! ஏனென்றால், ‘என் மக்களை பெலிஸ்தியர்களிடமிருந்தும் எல்லா
எதிரிகளிடமிருந்தும் என் ஊழியனாகிய தாவீதின் மூலம் காப்பாற்றுவேன்’[a]
என்று யெகோவா தாவீதிடம் சொல்லியிருக்கிறாரே” என்றார். **19** பின்பு,
இதைப் பற்றி பென்யமீன் வம்சத்தாரிடமும்[b] அப்னேர் பேசினார். அதோடு,
இஸ்ரவேலர்களும் பென்யமீன் வம்சத்தார் எல்லாரும் தாவீதை ராஜாவாக்க
ஒத்துக்கொண்ட விஷயத்தை எப்ரோனில் இருந்த தாவீதிடம் சொல்வதற்
காக அப்னேர் புறப்பட்டுப் போனார்.

20 தாவீதைச் சந்திக்க 20 ஆட்களுடன் எப்ரோனுக்கு அப்னேர் வந்த
போது, அவருக்கும் அவருடைய ஆட்களுக்கும் தாவீது விருந்து வைத்
தார். **21** பின்பு அப்னேர் தாவீதிடம், “என் எஜமானே, நான் போய்
இஸ்ரவேலர்கள் எல்லாரையும் ராஜாவாகிய உங்கள் முன்னால் ஒன்றுகூட்
டுகிறேன். அவர்கள் உங்களோடு ஒப்பந்தம் செய்வார்கள். நீங்கள் விரும்
பியபடியே தேசம் முழுவதையும் ஆட்சி செய்யுங்கள்” என்று சொன்னார்.
அதன் பின்பு, தாவீது அப்னேரை வழியனுப்பினார், அவரும் சமாதானமா
கத் திரும்பிப் போனார்.

22 அப்போதுதான், தாவீதின் ஊழியர்களும் யோவாபும் திடீர்த் தாக்
குதல் நடத்திவிட்டு, எக்கச்சக்கமான பொருள்களைக் கைப்பற்றிக்
கொண்டு திரும்பி வந்தார்கள். அந்தச் சமயத்தில் அப்னேர் எப்ரோனில்
இல்லை. ஏனென்றால், தாவீது அவரைச் சமாதானமாக அனுப்பி வைத்தி
ருந்தார். **23** யோவாபும்[c] அவரோடு போன எல்லா வீரர்களும் திரும்பி
வந்தபோது, “ராஜாவைப் பார்க்க நேரின்[d] மகன் அப்னேர்[e] வந்திருந்தார்.
ராஜா அவரைச் சமாதானமாக அனுப்பி வைத்துவிட்டார்” என்று யோவா
பிடம் சொன்னார்கள். **24** அதனால் ராஜாவிடம் யோவாப் போய், “ஏன்
இப்படிச் செய்தீர்கள்? உங்களைப் பார்க்க அப்னேர் வந்தானே, அவனை
ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டீர்களே? **25** நேரின் மகன் அப்னேரைப்
பற்றி உங்களுக்குத் தெரியாதா? அவன் உங்களை முட்டாளாக்கப் பார்க்கி
றான். நீங்கள் என்ன செய்கிறீர்கள், ஏது செய்கிறீர்கள் என்பதை நோட்டமி
டத்தான் அவன் வந்தான்” என்று சொன்னார்.

26 பின்பு யோவாப் அங்கிருந்து போய், அப்னேரைக் கூட்டிக்கொண்டு
வருவதற்காக அவர் பின்னாலேயே ஆட்களை அனுப்பினார். அவர்கள்
அவரை சீரா தண்ணீர்த் தொட்டிக்குப் பக்கத்தில் பார்த்து, திரும்பக்
கூட்டிக்கொண்டு வந்தார்கள். ஆனால், தாவீதுக்கு இதைப் பற்றி எது
வுமே தெரிந்திருக்கவில்லை. **27** அப்னேர் எப்ரோனுக்குள் நுழைந்ததும்,[f]
யோவாப் அவரிடம் தனியாகப் பேசுவதற்கு நகரத்தின் நுழைவாசலுக்
குள் ஓர் ஓரமான இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போனார். ஆனால்,
அங்கே போனதும் அவருடைய அடிவயிற்றில் வாளால் குத்தினார்,
அப்னேர் செத்துப்போனார்.[g] தன்னுடைய சகோதரன் ஆசகேலைக்
கொன்றதற்காக* அப்னேரைப் பழிவாங்கத்தான் யோவாப் அப்படிச் செய்
தார்.[h] **28** தாவீது இதைக் கேள்விப்பட்டபோது, “நேரின் மகன் அப்
னேரின் கொலைக்கு* நானோ என் அரசோ பொறுப்பில்லை. யெகோவா
வின் பார்வையில் நாங்கள் குற்றமற்றவர்கள்.#[i] **29** இந்தக் கொலைப்பழி*
யோவாப்மீதும் அவருடைய தகப்பன் வீட்டார்மீதும் விழட்டும்.[j]

அதி. 3
a 1சா 13:14; 1சா 15:27, 28; 1சா 16:1, 13; சங் 89:3, 20; சங் 132:17; அப் 13:22
b 1சா 10:20, 21; 1நா 12:29
c 2சா 8:16
d 1சா 14:51
e 1சா 14:50; 2சா 2:8, 22
f 2சா 3:20
g 1ரா 2:5
h 2சா 2:22, 23
i ஆதி 9:6; யாத் 21:12; எண் 35:33; உபா 21:9
j சங் 7:16; சங் 55:23; நீதி 5:22

3:27 *நே.மொ., “ஆசகேலின் இரத்தத்துக்காக.” **3:28** *வே.வா., “இரத்தப்பழிக்கு.” #வே.வா., “எங்கள்மீது இரத்தப்பழி இல்லை.” **3:29** *வே.வா., “இரத்தப்பழி.”

பிறப்புறுப்பில் ஒழுக்கு நோய் உள்ளவனும்[a] தொழுநோயாளியும்[b]
கைராட்டை சுற்றுகிறவனும்* வாளுக்கு இரையாகிறவனும் சாப்பாட்டுக்கே
வழியில்லாமல் திண்டாடுகிறவனும்[c] யோவாப் வம்சத்தில் எப்போதுமே
இருக்கட்டும்!" என்று சொன்னார். **30** யோவாபும் அவர் சகோதரன் அபி
சாயும்[d] அப்னேரைக்[e] கொலை செய்திருந்தார்கள்; ஏனென்றால், கிபியோ
னில் நடந்த சண்டையில் ஆசகேலை அப்னேர் கொன்றுபோட்டிருந்தார்.[f]

31 பின்பு தாவீது யோவாபையும் அவரோடிருந்த மக்கள் எல்லாரையும்
பார்த்து, "உங்கள் உடைகளைக் கிழித்துக்கொண்டு, துக்கத் துணியை* கட்
டிக்கொள்ளுங்கள்; அப்னேருக்காக அழுது புலம்புங்கள்" என்று சொன்னார்.
அப்னேரின் பாடையைத் தூக்கிக்கொண்டு போனபோது, அதன் பின்னால்
தாவீது ராஜாவும் நடந்துபோனார். **32** அப்னேரை எப்ரோனில் அடக்கம்
செய்தார்கள்; அவருடைய கல்லறையில் ராஜா கதறி அழுதார்; மக்கள் எல்
லாரும் அழுதார்கள். **33** அப்னேருக்காக ராஜா புலம்பி அழுது,

"அப்னேரே, புத்தியில்லாதவர் போல் நீங்கள் சாக வேண்டுமா?
34 உங்கள் கைகள் கட்டப்படவில்லையே,
உங்கள் கால்களில் விலங்கு* பூட்டப்படவில்லையே,
குற்றவாளிகள்# கையில் வீழ்வதுபோல் வீழ்ந்தீர்களே"[g]

என்று சொல்லி அழுதார்.

அதைக் கேட்டதும் மக்கள் எல்லாரும் அப்னேருக்காக மறுபடியும் அழு
தார்கள்.

35 தாவீதை ஆறுதல்படுத்துவதற்காக, சூரியன் மறைவதற்கு முன்பே
மக்கள் எல்லாரும் அவருக்கு உணவு கொண்டுவந்தார்கள். ஆனால் அவர்,
"பொழுதுசாய்வதற்கு முன்னால் நான் ஏதாவது சாப்பிட்டால் கடவுள் எனக்
குக் கடும் தண்டனை கொடுக்கட்டும்!"[h] என்று ஆணையிட்டுச் சொன்னார்.
36 மக்கள் எல்லாரும் அதைக் கவனித்தார்கள், அவர் செய்தது அவர்க
ளுக்குச் சரியாகப் பட்டது, ராஜா செய்த மற்ற காரியங்கள் எல்லாம்
அவர்களுக்குப் பிடித்திருந்தது போலவே இதுவும் அவர்களுக்குப் பிடித்தி
ருந்தது. **37** அதனால், நேரின் மகன் அப்னேரின் சாவுக்கு ராஜா காரண
மில்லை என்பதை தாவீதின் ஆட்களும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் அன்
றைக்குத் தெரிந்துகொண்டார்கள்.[i] **38** ராஜா தன்னுடைய ஊழியர்களிடம்,
"இன்று இஸ்ரவேலில் ஒரு தலைவர் இறந்துவிட்டார், ஒரு பெரிய மனிதர்
போய்விட்டார்.[j] **39** நான் அபிஷேகம் செய்யப்பட்ட ராஜாதான்,[k] ஆனா
லும் நான் இப்போது ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறேன். செரு
யாவின் மகன்கள்[l] கொடூரமானவர்களாக இருக்கிறார்கள்.[m] தீமை செய்கிற
வனுக்கு அவன் செய்த தீமைக்குத் தக்க தண்டனையை யெகோவா
கொடுக்கட்டும்"[n] என்று சொன்னார்.

4 எப்ரோனில் அப்னேர் இறந்த விஷயத்தை[o] சவுலின் மகன் இஸ்போ
சேத்[p] கேள்விப்பட்டதும் நிலைகுலைந்துபோனார்.* இஸ்ரவேலர்கள்
எல்லாரும் கதிகலங்கினார்கள். **2** சவுலுடைய மகனின் படையில் திடீர்த்

அதி. 3
a லேவி 15:2
b லேவி 13:44; எண் 5:2
c உபா 27:24; சங் 109:2, 10
d 2சா 2:24
e 2சா 2:8
f 2சா 2:23
g 1ரா 2:31, 32
h நியா 20:26
i 2சா 3:28; 1ரா 2:5
j 1சா 14:50; 2சா 2:8; 2சா 3:12
k 2சா 2:4
l 1நா 2:15, 16
m 2சா 19:13; 2சா 20:10
n 2சா 3:29; 1ரா 2:5, 34

அதி. 4
o 2சா 3:27
p 2சா 2:8

3:29 *ஊனமுற்றதால் பெண்களுடைய வேலையைச் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டவனைக் குறிக்கலாம். **3:31** *சொல் பட்டியலைப் பாருங்கள். **3:34** *நே.மொ., "செம்பு." #நே.மொ., "அநீதியின் மகன்கள்." **4:1** *நே.மொ., "அவருடைய கைகள் தளர்ந்துபோயின."

தாக்குதல் நடத்தும் பிரிவுக்கு இரண்டு பேர் அதிகாரிகளாக இருந்தார்கள்.
ஒருவன் பெயர் பாணா, மற்றொருவன் பெயர் ரேகாப். இவர்கள் பென்யமீன்
கோத்திரத்தைச் சேர்ந்த ரிம்மோன் என்பவரின் மகன்கள். இந்த ரிம்மோன்,
பேரோத் என்ற ஊரைச் சேர்ந்தவர். (பேரோத்[a] பென்யமீனியரின் ஒரு பகுதி
யாகக் கருதப்பட்டது. **3** பேரோத் ஊர்க்காரர்கள் கித்தாயீமுக்கு[b] ஓடிப்
போனார்கள்; இன்றுவரை அங்கே அன்னியர்களாகக் குடியிருக்கிறார்கள்.)

4 சவுலின் மகன் யோனத்தானுக்கு,[c] இரண்டு காலும் ஊனமான மகன்
ஒருவன் இருந்தான்.[d] அவன் பெயர் மேவிபோசேத்.[e] சவுலும் யோனத்தா
னும் இறந்த செய்தி யெஸ்ரயேலிலிருந்து[f] வந்தபோது, அவனுடைய தாதி*
அவனைத் தூக்கிக்கொண்டு தப்பித்து ஓடினாள். அவள் பதறியடித்து
ஓடியபோது, அவன் கீழே விழுந்து முடமானான்; அப்போது, அவனுக்கு
ஐந்து வயது.

5 பேரோத்தைச் சேர்ந்த ரிம்மோனின் மகன்களான ரேகாபும் பாணாவும்
இஸ்போசேத்தின் வீட்டுக்கு உச்சிவெயில் நேரத்தில் போனார்கள். அந்த
மதிய வேளையில் இஸ்போசேத் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். **6** ரேகா
பும் அவனுடைய சகோதரன் பாணாவும்[g] கோதுமை எடுக்க வந்தவர்கள்
போல் வீட்டுக்குள் நுழைந்து, அவருடைய அடிவயிற்றில் வாளால் குத்தி
விட்டு தப்பித்துப் போனார்கள். **7** அவர்கள் அந்த வீட்டுக்குள்
நுழைந்தபோது, படுக்கையறையில் இருந்த கட்டிலில் அவர் படுத்திருந்
தார். அவரைக் குத்திக் கொலை செய்துவிட்டு அவருடைய தலையை
வெட்டினார்கள். அந்தத் தலையை எடுத்துக்கொண்டு அரபாவுக்குப்
போகும் வழியாக ராத்திரி முழுவதும் நடந்தார்கள். **8** பின்பு, இஸ்போ
சேத்தின்[h] தலையை எப்ரோனில் இருந்த தாவீது ராஜாவிடம் கொண்டு
வந்து, "எஜமானே, இதோ, உங்களைக் கொல்லத் துடித்த[i] உங்கள் எதிரியா
கிய சவுலின்[j] மகன் இஸ்போசேத்தின் தலை! ராஜாவாகிய உங்களுக்காக
சவுலையும் அவருடைய வம்சத்தாரையும் யெகோவா இன்றைக்குப் பழி
வாங்கியிருக்கிறார்" என்று சொன்னார்கள்.

9 ஆனால் தாவீது, பேரோத்தைச் சேர்ந்த ரிம்மோனின் மகன்களான
ரேகாபையும் அவனுடைய சகோதரன் பாணாவையும் பார்த்து, "எல்லா துன்
பங்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றிய உயிருள்ள கடவுளாகிய யெகோ
வாமேல்[k] ஆணையாகச் சொல்கிறேன்,* கேளுங்கள்: **10** எனக்கு நல்ல
செய்தி சொல்வதாக நினைத்துக்கொண்டு ஒருவன் என்னிடம் வந்து,
'சவுல் இறந்துவிட்டார்'[l] என்று சொன்னான்; நான் அவனைப் பிடித்து சிக்
லாகுவில் கொன்றுபோட்டேன்.[m] செய்தி சொன்னவனுக்கு நான் கொடுத்த
பரிசு அதுதான்! **11** அப்படியென்றால், தன் வீட்டிலே படுத்திருந்த ஒரு
அப்பாவியைக் கொன்றுபோட்ட அயோக்கியர்களான உங்களை மட்டும்
சும்மா விட்டுவிடுவேனா? அவருடைய இரத்தத்துக்காக உங்களிடம் கணக்
குக் கேட்காமல் இருப்பேனா?[n] இந்தப் பூமியிலிருந்தே உங்களை
ஒழித்துக்கட்டுகிறேன்" என்று சொன்னார். **12** பின்பு அவர்களைக் கொல்
லச் சொல்லி தன் வீரர்களிடம் கட்டளையிட்டார்.[o] அந்த வீரர்கள்
அவர்களைக் கொன்றுபோட்டார்கள். பின்பு, அவர்களுடைய கைகளையும்

4:4 *தாதி என்பவர் குழந்தைகளைக் கவனித்துக்கொள்பவர். **4:9** *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 4
a யோசு 9:17, யோசு 18:21, 25
b நெ 11:31, 33
c 1சா 20:16
d 2சா 9:3
e 2சா 9:13, 1நா 8:34
f 1சா 29:1, 11
g 2சா 4:2
h 2சா 2:10
i 1சா 18:10, 11, 1சா 20:1, 33, 1சா 23:15
j 1சா 18:28, 29
k 1சா 24:12, 1சா 26:25, 2சா 12:7, சங் 34:7
l 2சா 1:2, 4
m 2சா 1:13-15
n ஆதி 9:6, யாத் 21:12, எண் 35:16, 30
o சங் 55:23

கால்களையும் வெட்டி, உடல்களை எப்ரோனிலுள்ள குளத்தின் அருகே
தொங்கவிட்டார்கள்.[a] ஆனால், இஸ்போசேத்தின் தலையை எடுத்து எப்
ரோனிலுள்ள அப்னேரின் கல்லறையில் அடக்கம் செய்தார்கள்.

5 பின்பு, இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லாரும் எப்ரோனில் இருந்த தாவீ
திடம்[b] வந்து, “நாங்கள் உங்களுடைய இரத்த சொந்தம்.*[c] **2** சவுல்
எங்களுக்கு ராஜாவாக இருந்தபோது, நீங்கள்தான் இஸ்ரவேலின் படைக்
குத் தலைமை தாங்கினீர்கள்.[d] யெகோவா உங்களிடம், ‘நீதான் என் மக்க
ளாகிய இஸ்ரவேலர்களுக்கு மேய்ப்பனாக இருப்பாய், அவர்களுக்குத்
தலைவனாக இருப்பாய்’[e] என்று சொல்லியிருக்கிறாரே” என்றார்கள்.
3 பின்பு, இஸ்ரவேலின் பெரியோர்கள்* எல்லாரும் எப்ரோனில் இருந்த
ராஜாவிடம் வந்தார்கள்; தாவீது ராஜா எப்ரோனில் அவர்களோடு
யெகோவா முன்னால் ஒப்பந்தம் செய்தார்.[f] அதன் பின்பு, அவர்கள்
தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் செய்தார்கள்.[g]

4 ராஜாவானபோது தாவீதுக்கு 30 வயது; அவர் 40 வருஷங்கள் ஆட்சி
செய்தார்.[h] **5** யூதா கோத்திரத்தாரை எப்ரோனிலிருந்து ஏழு வருஷம்
ஆறு மாதம் ஆட்சி செய்தார். அதன் பின்பு, இஸ்ரவேலையும் யூதாவை
யும் எருசலேமிலிருந்து[i] 33 வருஷங்கள் ஆட்சி செய்தார். **6** எருசலே
மில் குடியிருந்த எபூசியர்களுக்கு[j] எதிராக ராஜாவும் அவருடைய வீரர்க
ளும் போர் செய்யப் போனார்கள். அப்போது தாவீதிடம் அந்த எதிரிகள்,
“உன்னால் எங்களை நெருங்கவே முடியாது![k] குருடர்களும் முடவர்களுமே
உன்னை விரட்டியடித்துவிடுவார்கள்” என்று கேலி செய்தார்கள். ‘தாவீது
இங்கே வரவே முடியாது!’ என்று அவர்கள் நினைத்துக்கொண்டார்கள்.
7 ஆனால், சீயோன் கோட்டையை தாவீது கைப்பற்றினார். அது பிற்பாடு
‘தாவீதின் நகரம்’[l] என்று அழைக்கப்பட்டது. **8** அன்று தாவீது தன் வீரர்க
ளிடம், “எபூசியர்களைத் தாக்குகிறவர்கள் தண்ணீர்ச் சுரங்கம் வழியாகப்
போய் தாவீது வெறுக்கிற அந்த ‘முடவர்களையும் குருடர்களையும்’ தாக்க
வேண்டும்” என்று சொன்னார். அதனால்தான், “குருடர்களும் முடவர்களும்
வீட்டுக்குள் வரவே கூடாது” என்று சொல்லப்படுகிறது. **9** பின்பு, சீயோன்
கோட்டையில் தாவீது குடியேறினார். அது ‘தாவீதின் நகரம்’ என்று அழைக்
கப்பட்டது.* பின்பு, மில்லோவை#[m] சுற்றிலும் நகரத்தின் மற்ற இடங்களிலும்
மதில்களையும் மற்ற கட்டிடங்களையும் தாவீது கட்டினார்.[n] **10** தாவீது
மேலும் மேலும் வலிமை அடைந்துகொண்டே போனார்.[o] பரலோகப் படை
களின் கடவுளான யெகோவா அவருக்குத் துணையாக இருந்தார்.[p]

11 தீருவின் ராஜாவாகிய ஈராம்[q] தாவீதிடம் தூதுவர்களை அனுப்பி
னார்; அதன் பின்பு, தேவதாரு மரங்களையும்[r] தச்சர்களையும் மதில் கட்டு
வதற்குக் கொத்தனார்களையும் அனுப்பிவைத்தார். அவர்கள் தாவீதுக்கு
ஓர் அரண்மனையை* கட்ட ஆரம்பித்தார்கள்.[s] **12** இஸ்ரவேல்மீது தன்னு
டைய ஆட்சியை யெகோவாதான் வலுப்படுத்தினார்[t] என்பதையும், அவரு
டைய மக்களாகிய இஸ்ரவேலர்களுக்காகத்[u] தன்னுடைய ஆட்சியை அவர்
தான் உயர்த்தினார்[v] என்பதையும் தாவீது புரிந்துகொண்டார்.

5:1 *நே.மொ., “எலும்பும் சதையுமாக இருக்கிறோம்.” **5:3** *வே.வா., “மூப்பர்கள்.”
5:9 *அல்லது, “அதை ‘தாவீதின் நகரம்’ என்று அவர் அழைத்தார்.” #அர்த்தம்,
“மண்மேடு.” இது ஒரு கோட்டையாக இருந்திருக்கலாம். **5:11** *நே.மொ., “ஒரு
வீட்டை.”

அதி. 4
a உபா 21:22

அதி. 5
b 2சா 2:1, 11
1நா 12:23
c 1நா 11:1-3
d 1சா 18:13
1சா 25:28
e ஆதி 49:10
1சா 16:1
1சா 25:30
2சா 6:21
2சா 7:8
1நா 28:4
சங் 78:71
f 2ரா 11:17
g 1சா 16:13
2சா 2:4
அப் 13:22
h 1நா 29:26, 27
i ஆதி 14:18
j யாத் 23:23
யோசு 15:63
நியா 1:8, 21
k 1நா 11:4-6
l 1ரா 2:10
நெ 12:37
m 1ரா 9:15, 24
1ரா 11:27
2நா 32:5
n 1நா 11:7-9
o 1சா 16:13
2சா 3:1
p 1சா 17:45
q 1ரா 5:1, 8
r 2நா 2:3
s 2சா 7:2
1நா 14:1, 2
t 2சா 7:16
சங் 41:11
சங் 89:21
u 1ரா 10:9
2நா 2:11
v சங் 89:27

13 எப்ரோனிலிருந்து எருசலேமுக்கு வந்த பின்பு, தாவீது நிறைய
மனைவிகளையும் மறுமனைவிகளையும் சேர்த்துக்கொண்டார்;[a] அவருக்கு
நிறைய மகன்களும் மகள்களும் பிறந்தார்கள்.[b] **14** எருசலேமில் அவருக்
குப் பிறந்த மகன்களின் பெயர்கள்: சம்முவா, சோபாப், நாத்தான்,[c] சாலொ
மோன்,[d] **15** இப்பார், எலிசூவா, நெப்பேக், யப்பியா, **16** எலிஷாமா,
எலியாதா, எலிப்பேலேத்.

17 தாவீது இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டதை[e]
பெலிஸ்தியர்கள் கேள்விப்பட்டபோது, அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்
காக அவர்கள் எல்லாரும் வந்தார்கள்.[f] இது தாவீதின் காதுக்கு எட்டியதும்
மறைவான ஓரிடத்துக்குப் போனார்.[g] **18** பெலிஸ்தியர்கள் வந்து ரெப்பா
யீம் பள்ளத்தாக்கு[h] முழுவதும் பரவினார்கள். **19** அப்போது தாவீது
யெகோவாவிடம், "நான் இந்த பெலிஸ்தியர்களோடு போர் செய்யப்
போகலாமா? அவர்களை என் கையில் கொடுப்பீர்களா?" என்று விசாரித்
தார்.[i] அதற்கு யெகோவா, "போ, பெலிஸ்தியர்களை நிச்சயம் உன்
கையில் கொடுப்பேன்"[j] என்று சொன்னார். **20** அதனால், தாவீது பாகால்–
பிராசீமுக்கு வந்து பெலிஸ்தியர்களை வெட்டி வீழ்த்தினார். அப்போது,
"சீறிப்பாயும் வெள்ளம்போல் யெகோவா எனக்கு முன்னால் போய் என்
எதிரிகளை அழித்துப்போட்டார்"[k] என்று சொன்னார். அதனால் அந்த இடத்
துக்கு பாகால்–பிராசீம்*[l] என்று பெயர் வைத்தார். **21** பெலிஸ்தியர்கள் தங்
களுடைய சிலைகளை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். தாவீதும்
அவருடைய வீரர்களும் அவற்றை எடுத்து அழித்துப்போட்டார்கள்.

22 பின்பு, பெலிஸ்தியர்கள் மறுபடியும் திரண்டு வந்து ரெப்பாயீம் பள்
ளத்தாக்கில்[m] பரவினார்கள். **23** தாவீது யெகோவாவிடம் விசாரித்த
போது, "நீ நேரடியாக எதிர்த்துப் போகாதே. பின்பக்கமாகச் சுற்றிப்போய்
பேக்கா புதர்ச்செடிகளுக்குப் பின்னால் ஒளிந்துகொள். பின்பு, வெளியே
வந்து அவர்களோடு போர் செய். **24** படைகள் அணிவகுத்து வருகிற சத்
தம் பேக்கா புதர்ச்செடிகளின் மேலே கேட்கும்போது உடனே தாக்கு.
ஏனென்றால், பெலிஸ்தியர்களின் படையைத் தாக்குவதற்கு யெகோவா
உனக்கு முன்னால் போயிருப்பார்" என்று சொன்னார். **25** யெகோவா கட்
டளையிட்டபடியே தாவீது செய்தார். கெபாமுதல்[n] கேசேர்வரை[o] பெலிஸ்
தியர்களை வெட்டி வீழ்த்திக்கொண்டே போனார்.[p]

6 இஸ்ரவேலில் இருந்த தலைசிறந்த வீரர்கள் எல்லாரையும் தாவீது மறு
படியும் ஒன்றுகூட்டினார்; அவர்கள் மொத்தம் 30,000 பேர். **2** அந்
தச் சமயத்தில், உண்மைக் கடவுளின் பெட்டி[q] பாலை–யூதாவில் இருந்
தது; கேருபீன்களுக்கு மேலே* அமர்ந்திருக்கும்[r] பரலோகப் படைகளின்
யெகோவாவுடைய[s] பெயரைச் சொல்லி, மக்கள் எல்லாரும் அந்தப் பெட்
டிக்கு முன்னால் வேண்டிக்கொள்வார்கள். அந்தப் பெட்டியைக் கொண்டு
வர தாவீதும் அவருடைய வீரர்களும் அங்கே புறப்பட்டுப் போனார்கள்.
3 ஒரு குன்றின் மேலிருந்த அபினதாபின் வீட்டிலிருந்து[t] உண்மைக் கடவு
ளின் பெட்டியை எடுத்து ஒரு புதிய மாட்டுவண்டியில் ஏற்றினார்கள்.[u] அபி
னதாபின் மகன்களான ஊசாவும் அகியோவும் அந்தப் புதிய மாட்டுவண்
டிக்கு முன்னால் நடந்துபோனார்கள்.

5:20 * அர்த்தம், "சீறிப் பாயும் தலைவர்." **6:2** * அல்லது, "நடுவில்."

அதி. 5
a 2சா 15:16
b 1நா 3:5-9; 1நா 14:3-7
c லூ 3:23, 31
d 2சா 12:24
e 2சா 5:3
f சங் 2:2
g 1சா 22:1, 5; 1சா 24:22; 2சா 23:14; 1நா 14:8
h யோசு 15:8, 12; 1நா 11:15; 1நா 14:9
i எண் 27:21
j 1நா 14:10-12
k 2சா 22:41
l ஏசா 28:21
m யோசு 15:8, 12; 1நா 11:15; 1நா 14:13-17
n யோசு 18:21, 24
o யோசு 16:10
p லேவி 26:7

அதி. 6
q 1சா 7:2; 1ரா 8:1; 1நா 13:1-5
r யாத் 25:22; 1சா 4:4; 1நா 13:6-11; சங் 80:1
s உபா 20:4; 1சா 1:3; 1நா 17:24
t 1சா 7:1
u யாத் 25:14; எண் 7:9; யோசு 3:14

4 குன்றின் மேலிருந்த அபினதாபின் வீட்டிலிருந்து உண்மைக் கடவுளின்
பெட்டியைக் கொண்டுவந்தபோது, பெட்டிக்கு முன்னால் அகியோ நடந்து
போய்க்கொண்டிருந்தான். **5** தாவீதும் இஸ்ரவேல் மக்கள் எல்லாரும்
யெகோவாவுக்கு முன்னால் உற்சாகம் பொங்க கொண்டாடினார்கள். ஆபால்
மரத்தில் செய்யப்பட்ட இசைக் கருவிகள், யாழ்கள், மற்ற நரம்பிசைக்
கருவிகள்,[a] கஞ்சிராக்கள்,[b] ஜால்ராக்கள், தாள வாத்தியங்கள் ஆகியவற்றை
இசைத்துக்கொண்டு வந்தார்கள்.[c] **6** ஆனால் நாகோனின் களத்துமேட்
டுக்கு அவர்கள் வந்தபோது, மாடுகள் தடுமாறியதால் உண்மைக் கடவுளின்
பெட்டி கீழே விழப்போனது. உடனே ஊசா தன்னுடைய கையை நீட்டி அந்
தப் பெட்டியைப் பிடித்தான்.[d] **7** அதனால், ஊசாமீது யெகோவாவுக்குப்
பயங்கர கோபம் வந்தது. கடவுளுடைய சட்டத்தை மதிக்காமல்[e] ஊசா இப்
படி நடந்துகொண்டதால், அவனை அந்த இடத்திலேயே உண்மைக் கடவுள்
கொன்றுபோட்டார்.[f] உண்மைக் கடவுளின் பெட்டிக்குப் பக்கத்திலேயே
ஊசா விழுந்து செத்தான். **8** யெகோவா கடும் கோபத்தோடு ஊசாவைக்
கொன்றுபோட்டதால் தாவீது கோபம்* அடைந்தார். அதனால், அந்த இடம்
இன்றுவரை பேரேஸ்-ஊசா# என்று அழைக்கப்படுகிறது. **9** அன்றைக்கு
தாவீது யெகோவாவுக்குப் பயந்து,[g] "யெகோவாவின் பெட்டியை எப்படி
என்னுடைய இடத்துக்குக் கொண்டுபோவேன்?"[h] என்றார். **10** யெகோவா
வின் பெட்டியை 'தாவீதின் நகரத்தில்'[i] இருந்த தன்னுடைய இடத்துக்குக்
கொண்டுபோக அவர் விரும்பவில்லை. அதனால், காத்* நகரத்தைச் சேர்ந்த
ஓபேத்-ஏதோமின் வீட்டுக்கு[j] அதை அனுப்பிவைத்தார்.

11 யெகோவாவின் பெட்டி காத் நகரத்தைச் சேர்ந்த ஓபேத்-ஏதோமின்
வீட்டில் மூன்று மாதம் இருந்தது; அப்போது, அவரையும் அவருடைய
வீட்டிலிருந்த எல்லாரையும் யெகோவா ஆசீர்வதித்து வந்தார்.[k] **12** "உண்
மைக் கடவுளின் பெட்டி ஓபேத்-ஏதோமின் வீட்டில் இருப்பதால்
யெகோவா அவரையும் அவருக்குச் சொந்தமான எல்லாவற்றையும் ஆசீர்
வதித்திருக்கிறார்" என்ற செய்தி தாவீது ராஜாவுக்குக் கிடைத்தது. அத
னால், உண்மைக் கடவுளின் பெட்டியை ஓபேத்-ஏதோமின் வீட்டிலிருந்து
'தாவீதின் நகரத்துக்கு' கொண்டுவருவதற்காக தாவீது அங்கே சந்தோஷ
மாகப் போனார்.[l] **13** யெகோவாவின் பெட்டியைச் சுமந்தவர்கள்[m] ஆறடி
எடுத்து வைத்ததும், ஒரு காளையையும் கொழுத்த கன்றையும் பலி
கொடுத்தார்.

14 நாரிழை* ஏபோத்தைப் போட்டுக்கொண்டு யெகோவாவுக்கு முன்
னால் தாவீது உற்சாகம் பொங்க நடனமாடிக்கொண்டு வந்தார்.[n]
15 தாவீதும் இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடும்[o]
ஊதுகொம்பின் முழக்கத்தோடும்[p] யெகோவாவின் பெட்டியைக்[q] கொண்
டுவந்தார்கள். **16** யெகோவாவின் பெட்டியை 'தாவீதின் நகரத்துக்குள்'
அவர்கள் கொண்டுவந்தபோது, சவுலின் மகளான மீகாள்[r] ஜன்னல் வழியா
கப் பார்த்தாள். யெகோவாவுக்கு முன்னால் தாவீது ராஜா துள்ளிக் குதித்து
நடனமாடுவதைப் பார்த்து, மனதுக்குள் அவரைக் கேவலமாக நினைத்
தாள்.[s] **17** யெகோவாவின் பெட்டியை வைப்பதற்காக தாவீது போட்டி
ருந்த கூடாரத்துக்குள் அதைக் கொண்டுவந்து வைத்தார்கள்.[t] பின்பு,

---

6:8 *வே.வா., "மனவேதனை." #அர்த்தம், "ஊசாமீது மூண்ட கடும் கோபம்." **6:10** *'காத்' என்பது காத்-ரிம்மோன் நகரத்தைக் குறிக்கலாம். **6:14** *அதாவது, "லினன்."

அதி. 6
a 1சா 10:5
b யாத் 15:20
c சங் 150:3-5
d எண் 4:15; 1நா 15:2
e நீதி 11:2
f லேவி 10:1, 2; 1சா 6:19
g 1சா 6:20; சங் 119:120
h 1நா 13:12-14
i 2சா 5:7
j 1நா 15:25
k ஆதி 30:27; ஆதி 39:5
l 1நா 15:25, 26; சங் 24:7; சங் 68:24
m எண் 4:15; எண் 7:9; யோசு 3:3; 1நா 15:2, 15
n 1நா 15:27, 28
o 1நா 15:16
p சங் 150:3
q யாத் 37:1; சங் 132:8
r 1சா 14:49; 1சா 18:20, 27; 2சா 3:14
s 1நா 15:29
t 1நா 15:1

யெகோவாவுக்கு முன்னால் தாவீது தகன பலிகளையும்[a] சமாதான பலிக
ளையும்[b] கொடுத்தார்.[c] **18** தாவீது தகன பலிகளையும் சமாதான பலிக
ளையும் கொடுத்த பின்பு, பரலோகப் படைகளின் யெகோவாவுடைய பெய
ரில் மக்களை ஆசீர்வதித்தார். **19** அதோடு, அங்கே திரண்டு வந்திருந்த
இஸ்ரவேலர்கள் எல்லாருக்கும், ஆண்கள் பெண்கள் ஒவ்வொருவருக்கும்,
ஒரு வட்ட ரொட்டியையும் பேரீச்ச அடையையும் உலர்ந்த திராட்சை
அடையையும் கொடுத்தார். பின்பு, மக்கள் எல்லாரும் தங்கள் வீடுகளுக்
குத் திரும்பிப் போனார்கள்.

20 தாவீது தன்னுடைய வீட்டில் இருப்பவர்களை ஆசீர்வதிக்க வந்த
போது, சவுலின் மகளான மீகாள்[d] அவரைப் பார்க்க வெளியே வந்தாள்.
அப்போது அவரிடம், “இஸ்ரவேலின் ராஜா தன்னுடைய ஊழியர்களின்
பணிப்பெண்கள் முன்னால் இன்றைக்கு பைத்தியக்காரன் மாதிரி அரை
குறை ஆடையோடு ஆடியது ரொம்பவே பிரமாதம்!”[e] என்று சொன்
னாள். **21** அதற்கு தாவீது, “உன் அப்பாவுக்கும் அவருடைய வம்சத்
துக்கும் பதிலாக என்னைத் தேர்ந்தெடுத்த யெகோவாவுக்கு முன்னால்தான்
நான் ஆடிப்பாடி கொண்டாடினேன்; தன்னுடைய மக்களான இஸ்ரவேலர்
களுக்கு என்னைத் தலைவனாக்கியது யெகோவாதான்.[f] அதனால், யெகோ
வாவுக்கு முன்பாக நான் மகிழ்ச்சியோடு ஆடிப்பாடுவேன்; **22** இதைவிட
வும் என்னைத் தாழ்த்திக்கொண்டு, என் கண்களிலேயே அற்பமானவனாக
ஆவேன். ஆனாலும், நீ சொன்ன அந்தப் பணிப்பெண்கள் என்னைப் பற்
றிப் பெருமையாகத்தான் பேசுவார்கள்” என்று சொன்னார். **23** அதனால்,
சாகும்வரை சவுலின் மகளான மீகாளுக்குக்[g] குழந்தை பாக்கியம் இருக்
கவில்லை.

7 தாவீது ராஜா தன்னுடைய அரண்மனையில் குடியிருந்தார்.[h] சுற்
றியிருந்த எதிரிகள் எல்லாருடைய தொல்லையிலிருந்தும் விடுவித்து
யெகோவா அவருக்கு நிம்மதி கொடுத்திருந்தார். **2** அப்போது அவர்
நாத்தான்[i] தீர்க்கதரிசியிடம், “பாருங்கள், தேவதாரு மரத்தால் கட்டப்பட்ட
அரண்மனையில்* நான் குடியிருக்கிறேன்,[j] ஆனால் உண்மைக் கடவுளின்
பெட்டி சாதாரண கூடாரத்தில் இருக்கிறது”[k] என்று சொன்னார். **3** அதற்கு
நாத்தான், “நீங்கள் போய், உங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறீர்களோ
அதைச் செய்யுங்கள், யெகோவா உங்களுக்குத் துணையாக இருக்கிறார்”[l]
என்று சொன்னார்.

4 அன்று ராத்திரியே நாத்தானிடம் யெகோவா பேசினார். **5** “என் ஊழி
யன் தாவீதிடம் நீ போய், ‘யெகோவா சொல்வது என்னவென்றால்: “நான்
குடியிருக்க ஒரு ஆலயத்தை நீ கட்டப்போகிறாயா?[m] **6** இஸ்ரவேல் மக்
களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டுவந்த நாள்முதல் இந்த நாள்வரை
நான் ஒரு ஆலயத்தில் குடியிருக்கவில்லையே.[n] இடம்விட்டு இடம் மாற்றப்
பட்ட கூடாரத்தில்தானே குடியிருந்தேன்?*[o] **7** இவ்வளவு காலமாக இஸ்
ரவேலர்களோடு இருந்தும், அவர்களை வழிநடத்துவதற்கு நான் நியமித்த
கோத்திரத் தலைவர்கள் யாரிடமாவது, ‘ஏன் எனக்காக தேவதாரு மரத்
தில் ஒரு ஆலயத்தைக் கட்டவில்லை?’ என்று ஒரு வார்த்தை கேட்டிருப்
பேனா? என்று சொல்.”’ **8** அதோடு, நீ என் ஊழியன் தாவீதிடம்,
‘பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: “புல்வெளியில்

7:2 * நே.மொ., “வீட்டில்.” **7:6** * நே.மொ., “நடந்துகொண்டிருந்தேன்.”

அதி. 6
a லேவி 1:3
b லேவி 3:1
c 1நா 16:1-3
d 1சா 18:27
e யாத் 22:28
f 1சா 13:13, 14; 1சா 15:27, 28; 1சா 16:1, 12
g 1சா 14:49; 2சா 6:16

அதி. 7
h 1நா 17:1
i 2சா 12:1; 1நா 29:29
j 2சா 5:11
k 2சா 6:17
l 1ரா 8:17; 1நா 17:2; 1நா 22:7
m 1ரா 5:3; 1ரா 8:17-19; 1நா 17:4-6; 1நா 22:7, 8
n யோசு 18:1
o யாத் 40: 18, 34

ஆடு மேய்த்துக்கொண்டிருந்த உன்னைக்[a] கூட்டிக்கொண்டு வந்து, என்னு
டைய மக்களான இஸ்ரவேலர்களுக்குத் தலைவனாக்கினேன்.[b] **9** அத
னால், நீ எங்கே போனாலும் நான் உனக்குத் துணையாக இருப்பேன்.[c] உன்
எதிரிகள் எல்லாரையும் ஒழித்துக்கட்டுவேன்.[d] இந்தப் பூமியில் வாழ்ந்த மாம
னிதர்களைப் போல் நீ பேரும் புகழும் பெறுவாய்.[e] **10** என்னுடைய மக்க
ளான இஸ்ரவேலர்களை ஒரே இடத்தில் குடியிருக்க வைப்பேன். அங்கே
அவர்கள் எந்தத் தொந்தரவும் இல்லாமல் நிம்மதியாக வாழ்வார்கள். முன்பு
கெட்டவர்கள் அவர்களை அடக்கி ஒடுக்கியதுபோல் இனிமேல் ஒடுக்க
மாட்டார்கள்.[f] **11** இஸ்ரவேலர்களுக்கு நான் நியாயாதிபதிகளை ஏற்படுத்
திய காலத்தில்[g] அடக்கி ஒடுக்கியதுபோல் அவர்களை ஒடுக்க மாட்டார்கள்.
உன் எதிரிகளின் தொல்லையில்லாமல் நீ நிம்மதியாக இருப்பாய்.[h]

அதோடு, யெகோவா உன் வம்சத்தை ராஜ வம்சமாக்குவார்* என்று
யெகோவாவே உன்னிடம் சொல்லியிருக்கிறார்.[i] **12** நீ இறந்து[j] உன் முன்
னோர்களைப் போல் நல்லடக்கம் செய்யப்பட்ட* பின்பு, உன் சந்ததியை,
உன் சொந்த மகனை, ராஜாவாக ஏற்படுத்துவேன். அவனுடைய ஆட்
சியை உறுதியாக நிலைநாட்டுவேன்.[k] **13** அவன்தான் என்னுடைய பெய
ருக்காக ஒரு ஆலயத்தைக் கட்டுவான்.[l] அவனுடைய சிம்மாசனத்தை
என்றென்றும் நிலைக்க வைப்பேன்.[m] **14** நான் அவனுக்குத் தகப்பனாக
இருப்பேன், அவன் எனக்கு மகனாக இருப்பான்.[n] தவறு செய்யும்போது
அவனைக் கண்டிப்பேன்,* மனிதர்கள்# தண்டிப்பதுபோல் பிரம்பினால்
தண்டிப்பேன்.[o] **15** உன்னை ராஜாவாக்குவதற்காக சவுலை நீக்கினேன்,
அவனுக்கு மாறாத அன்பு காட்டுவதை நிறுத்திக்கொண்டது போல[p] உனக்
குச் செய்ய மாட்டேன். **16** உன் ராஜ வம்சமும் ஆட்சியும் என்றென்றும்
நிலைக்கும். உன்னுடைய சிம்மாசனம் என்றென்றும் நிலைக்கும்"[q] என்று
சொல்'" என்றார்.

17 தரிசனத்தில் சொல்லப்பட்ட இந்த எல்லா விஷயங்களையும் தாவீதி
டம் நாத்தான் சொன்னார்.[r]

18 அதைக் கேட்டதும் தாவீது ராஜா உள்ளே போய் யெகோவாவுக்கு
முன்னால் உட்கார்ந்து, "உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, எனக்கும்
என் வீட்டாருக்கும் என்ன தகுதி இருக்கிறது? என்னை இந்தளவு உயர்த்தி
யிருக்கிறீர்களே![s] **19** உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, இது போதா
தென்று, உங்களுடைய ஊழியனின் வம்சம் காலம்காலமாக நிலைத்திருக்கும்
என்றுகூட சொல்லியிருக்கிறீர்கள். உன்னதப் பேரரசராகிய யெகோவாவே,
இதை எந்த மனிதனாலும் மாற்ற முடியாது.* **20** உன்னதப் பேரரசராகிய
யெகோவாவே, என்னைப் பற்றித்தான் உங்களுக்கு நன்றாகத் தெரியுமே,[t]
அப்படியிருக்கும்போது உங்கள் ஊழியனாகிய நான் வேறென்ன சொல்ல
முடியும்? **21** உங்கள் வார்த்தையையும் இதயத்திலிருந்த விருப்பத்தையும்
நிறைவேற்ற இந்த மாபெரும் செயல்களைச் செய்திருக்கிறீர்கள்; அவற்றை
இந்த அடியேனுக்கும் தெரிவித்திருக்கிறீர்கள்.[u] **22** அதனால்தான், நீங்கள்
மிகவும் உயர்ந்தவர்.[v] உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, உங்களுக்குச்

7:11 *நே.மொ., "உனக்கு ஒரு வீட்டை உண்டாக்குவார்." **7:12** *நே.மொ., "முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட." **7:14** *நே.மொ., "மனிதர்களுடைய பிரம்பால் அவனைக் கண்டிப்பேன்." #அல்லது, "ஆதாமின் பிள்ளைகள்." **7:19** *நே.மொ., "இதுவே மனிதர்கள் எல்லாருக்கும் கொடுக்கப்படும் சட்டம்."

அதி. 7
a 1சா 16:11
b 2சா 5:2
1நா 17:7-10
1நா 28:4
சங் 78:70, 71
c 1சா 18:14
2சா 5:10
d 2சா 22:1
சங் 18:37
e 1நா 14:2, 17
f நியா 2:16
g நியா 2:14
சங் 89:20, 22
h உபா 25:19
i 1ரா 2:24
சங் 89:4
j 1ரா 2:1
k ஆதி 49:10
1ரா 8:20
1நா 17:11-14
சங் 132:11
ஏசா 9:7
ஏசா 11:1
மத் 21:9
மத் 22:42
லூ 1:32, 33
யோவா 7:42
அப் 2:30
l 1ரா 5:5
1ரா 6:12
சக 6:12, 13
m 1ரா 1:37
1நா 22:10
1நா 28:7
சங் 89:4, 36
n 1நா 28:6
மத் 3:17
எபி 1:5
o சங் 89:30, 32
எரே 52:3
p 1சா 15:23, 26
q சங் 45:6
சங் 89:36
தானி 2:44
எபி 1:8
வெளி 11:15
r 1நா 17:15
s 1நா 17:16-22
t 1சா 16:7
சங் 17:3
u சங் 25:14
v உபா 3:24
1நா 16:25

சமமானவர் யாருமில்லை.[a] உங்களைத் தவிர வேறு கடவுள் இல்லை.[b] நாங்
கள் எங்களுடைய காதால் கேட்ட எல்லாவற்றையும் வைத்து இதை
ஆணித்தரமாக நம்புகிறோம். **23** உங்களுடைய மக்களான இஸ்ரவேலர்க
ளைப் போல் இந்த உலகத்தில் வேறெந்த மக்கள் இருக்கிறார்கள்?*[c]
தேவனே, இஸ்ரவேலர்களை உங்களுடைய சொந்த மக்களாக ஆக்குவதற்
கென்று நீங்களே போய் அவர்களை விடுவித்து வந்தீர்களே,[d] அற்புதங்க
ளையும் பிரமிப்பூட்டும் செயல்களையும் செய்து[e] உங்களுடைய பெயருக்
குப் புகழ் சேர்த்தீர்களே.[f] நீங்கள் எகிப்திலிருந்து விடுவித்த உங்கள்
மக்களுக்காக, மற்ற தேசத்தாரை அவர்களுடைய தெய்வங்களோடு சேர்த்து
விரட்டியடித்தீர்களே. **24** இஸ்ரவேலர்களை என்றென்றும் உங்களுடைய
சொந்த மக்களாக ஆக்கினீர்கள்.[g] யெகோவாவே, நீங்கள் அவர்களுடைய
கடவுளாக ஆகியிருக்கிறீர்கள்.[h]

25 யெகோவா தேவனே, உங்களுடைய ஊழியனையும் அவனுடைய
வம்சத்தையும் பற்றி நீங்கள் கொடுத்த வாக்கை என்றென்றும் நிறைவேற்
றுங்கள்; நீங்கள் சொன்னபடியே செய்யுங்கள்.[i] **26** உங்களுடைய பெயர்
என்றென்றும் உயர்ந்தோங்கட்டும்;[j] 'பரலோகப் படைகளின் யெகோவா
தான் இஸ்ரவேலின் கடவுள்' என்று எல்லாரும் சொல்லட்டும். உங்களு
டைய ஊழியனான தாவீதின் ராஜ வம்சம் உங்கள் முன்னால் எப்போதும்
நிலைத்திருக்கட்டும்.[k] **27** பரலோகப் படைகளின் யெகோவாவே, இஸ்ர
வேலின் கடவுளே, 'உன் வம்சத்தை ராஜ வம்சமாக்குவேன்' என்று உங்களு
டைய ஊழியனுக்குத் தெரியப்படுத்தினீர்களே.[l] அந்தத் தைரியத்தில்
தான் உங்களுடைய ஊழியனாகிய நான் இப்படி வேண்டிக்கொள்கிறேன்.
28 உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, நீங்கள்தான் உண்மையான
கடவுள். உங்களுடைய வார்த்தைகளே உண்மையானவை.[m] இந்த நல்ல
விஷயங்களை உங்களுடைய ஊழியனுக்கு வாக்குறுதியாகக் கொடுத்ததும்
நீங்கள்தான். **29** உங்கள் ஊழியனுடைய வம்சத்தைத் தயவுசெய்து ஆசீர்
வதியுங்கள். அது உங்களுக்கு முன்னால் என்றென்றும் நிலைத்திருக்கட்
டும்.[n] உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, இப்படிச் செய்வதாக நீங்கள்
வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள்; உங்களுடைய ஆசீர்வாதத்தால் உங்
கள் ஊழியனுடைய வம்சம் என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கட்டும்!"[o]
என்று சொன்னார்.

8 சில காலம் கழித்து, தாவீது பெலிஸ்தியர்களோடு[p] போர் செய்து அவர்
களைத் தோற்கடித்தார்.[q] அவர்களிடமிருந்து மேத்தேக்-அம்மா என்ற
நகரத்தைக் கைப்பற்றினார்.

2 அவர் மோவாபியர்களைத்[r] தோற்கடித்து, அவர்களை வரிசையாகத்
தரையில் படுக்க வைத்தார். அந்த வரிசையை அளவுநூலால் அளந்தார்;
அந்த வரிசையில் மூன்றில் இரண்டு பங்கு ஆட்களைக் கொன்றுபோட்டார்;
ஒரு பங்கு ஆட்களை உயிரோடு விட்டுவிட்டார்.[s] மோவாபியர்கள் தாவீ
துக்குச் சேவை செய்து, அவருக்குக் கப்பம் கட்டினார்கள்.[t]

3 சோபாவின்[u] ராஜாவான ரேகோபின் மகன் ஆதாதேசர் என்பவன்
யூப்ரடிஸ்* ஆற்றுக்குப் பக்கத்திலிருந்த பகுதியை மீண்டும் தன் கட்டுப்
பாட்டில் கொண்டுவர[v] போய்க்கொண்டிருந்தான். அப்போது தாவீது அவ
னைத் தோற்கடித்தார். **4** அவனிடமிருந்து 1,700 குதிரைவீரர்களையும்

அதி. 7
a யாத் 15:11; சங் 83:18
b உபா 4:35
c உபா 4:7; சங் 147:19, 20
d யாத் 3:8; யாத் 19:5; ஏசா 63:9
e உபா 10:21
f யாத் 9:16
g உபா 26:18
h யாத் 15:2
i 1நா 17:23-27; சங் 89:20, 28
j 1நா 29:11; சங் 72:19; மத் 6:9; யோவா 12:28
k ஏசா 9:7; எரே 33:22
l 2சா 7:11
m எண் 23:19; சங் 89:35; சங் 132:11; யோவா 17:17
n சங் 89:20, 36; சங் 132:12
o 2சா 22:51; சங் 72:17

அதி. 8
p யோசு 13:2, 3; 2சா 21:15
q 1நா 18:1
r எண் 24:17; நியா 3:29; 1சா 14:47; சங் 60:8
s உபா 23:3-6
t 2ரா 3:4; 1நா 18:2
u 2சா 10:6; 1ரா 11:23; சங் 60:மே.கு.
v ஆதி 15:18; யாத் 23:31; 1ரா 4:21; 1நா 18:3, 4

7:23 * நே.மொ., "தேசம் இருக்கிறது?" **8:3** * அதாவது, "ஐப்பிராத்து."

20,000 காலாட்படை வீரர்களையும் பிடித்தார். 100 ரதக் குதிரைகளைத்
தவிர, மற்ற எல்லா ரதக் குதிரைகளையும்[a] நொண்டியாக்கினார்.*

5 சோபாவின் ராஜாவான ஆதாதேசருக்கு உதவி செய்ய தமஸ்கு
வைச் சேர்ந்த சீரியர்கள்[b] வந்தபோது, அவர்களில் 22,000 பேரை தாவீது
வெட்டி வீழ்த்தினார்.[c] **6** அதன் பின்பு, சீரியாவின் தலைநகரான தமஸ்
குவில் காவல்படைகளை நிறுத்திவைத்தார். சீரியர்கள் தாவீதுக்குச் சேவை
செய்து, கப்பம் கட்டினார்கள். அவர் போன இடமெல்லாம் யெகோவா அவ
ருக்கு வெற்றி தேடித்தந்தார்.[d] **7** ஆதாதேசருக்குச் சேவை செய்த ஆட்
களிடமிருந்து வட்டவடிவ தங்கக் கேடயங்களை எடுத்துக்கொண்டு
தாவீது எருசலேமுக்கு வந்தார்;[e] **8** ஆதாதேசரின் ஆட்சிக்குட்பட்ட பேத்
தாக், பேரொத்தாய் நகரங்களிலிருந்து தாவீது ராஜா ஏராளமான செம்பைக்
கொண்டுவந்தார்.

9 ஆதாதேசரின் மொத்த படையையும் தாவீது தோற்கடித்தார்[f] என்
பதை காமாத்தின்[g] ராஜாவான தோயீ கேள்விப்பட்டார். **10** அப்போது,
தாவீது ராஜாவிடம் நலம் விசாரிக்கவும் ஆதாதேசரைத் தோற்கடித்த
தற்கு வாழ்த்துச் சொல்லவும் தோயீ தன்னுடைய மகன் யொராமை
அனுப்பினார். (ஏனென்றால், ஆதாதேசர் அடிக்கடி தோயீயை எதிர்த்துப்
போர் செய்துவந்தான்) தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் செய்யப்
பட்ட பொருள்களை தாவீதுக்கு யொராம் கொடுத்தார். **11** தாவீது ராஜா
இவற்றை யெகோவாவுக்கு அர்ப்பணித்தார்.* அதோடு, தான் தோற்க
டித்த எல்லா தேசங்களிலிருந்தும் கொண்டுவந்த தங்கம், வெள்ளி பொருள்
களைக் கடவுளுக்கு அர்ப்பணித்தார்.[h] **12** சீரியர்கள், மோவாபியர்கள்,[i]
அம்மோனியர்கள், பெலிஸ்தியர்கள்,[j] அமலேக்கியர்கள்,[k] சோபாவின்
ராஜாவான ரேகோபின் மகன் ஆதாதேசர்[l] ஆகியோரிடமிருந்து கைப்
பற்றிய பொருள்களையும் கடவுளுக்கு அர்ப்பணித்தார். **13** தாவீது 18,000
ஏதோமியர்களை உப்புப் பள்ளத்தாக்கில் வீழ்த்தி பேரும் புகழும் சம்பாதித்
தார்.[m] **14** ஏதோமில், சொல்லப்போனால் ஏதோம் முழுவதிலும், காவல்ப
டைகளை நிறுத்திவைத்தார். ஏதோமியர்கள் எல்லாரும் தாவீதுக்குச் சேவை
செய்ய ஆரம்பித்தார்கள்.[n] அவர் போன இடமெல்லாம் அவருக்கு வெற்றி
கிடைக்க யெகோவா உதவி செய்தார்.[o]

15 இஸ்ரவேல் முழுவதையும் தாவீது ஆட்சி செய்துவந்தார்.[p] தன்னு
டைய மக்கள் எல்லாருக்கும் நீதி நியாயம் வழங்கிவந்தார்.[q] **16** செருயா
வின் மகன் யோவாப்[r] படைத் தளபதியாக இருந்தார். அகிலூத்தின் மகன்
யோசபாத்[s] பதிவாளராக இருந்தார். **17** அகிதூப்பின் மகன் சாதோக்
கும்[t] அபியத்தாரின் மகன் அகிமெலேக்கும் குருமார்களாகச் சேவை
செய்தார்கள். செராயா செயலாளராக இருந்தார். **18** யோய்தாவின் மகன்
பெனாயா,[u] கிரேத்தியர்களுக்கும் பிலேத்தியர்களுக்கும்[v] தலைவராக இருந்
தார். தாவீதின் மகன்கள் முக்கிய மந்திரிகளாக* இருந்தார்கள்.

9 பின்பு தாவீது, “சவுலின் குடும்பத்தில் இன்னும் யாராவது உயிரோடு
இருக்கிறார்களா? நான் அவர்களுக்கு மாறாத அன்பு காட்ட வேண்
டும். யோனத்தானுக்காக அப்படிச் செய்ய விரும்புகிறேன்”[w] என்று சொன்

8:4 * அதாவது, “குதிரைகளின் பின்தொடை தசைநார்களை வெட்டினார்.”
8:11 * நே.மொ., “புனிதப்படுத்தினார்.” **8:18** * நே.மொ., “தாவீதின் மகன்கள் குருமார்
களாக.”

அதி. 8
a உபா 17:16; சங் 20:7; சங் 33:17
b ஏசா 7:8
c 1நா 18:5, 6
d உபா 7:24; 2சா 8:14
e 1நா 18:7, 8
f 1நா 18:9-11
g 2ரா 14:28
h யோசு 6:19; 1ரா 7:51; 1நா 22:14; 1நா 26:27
i 2சா 8:2
j 2சா 8:1
k 1சா 30:18
l 2சா 8:7
m 1நா 18:12, 13; சங் 60:மே.கு.
n ஆதி 25:23, 26; ஆதி 27:29, 37; எண் 24:18
o சங் 60:12
p 2சா 5:3, 5
q 1ரா 3:6; 1நா 18:14-17
r 2சா 20:23; 1நா 11:6
s 2சா 20:24; 1ரா 4:3
t 2சா 15:27; 1நா 6:8; 1நா 24:3
u 2சா 23:20; 1ரா 1:44; 1ரா 2:35
v 2சா 15:18; 2சா 20:7

அதி. 9
w 1சா 18:1, 3; 1சா 20:15, 42

னார். **2** சீபா[a] என்பவன் சவுலின் வீட்டில் வேலைக்காரனாக இருந்தான்.
அவனை தாவீதிடம் கூட்டிக்கொண்டு வந்தார்கள். ராஜா அவனிடம்,
“நீதான் சீபாவா?” என்று கேட்டார். அதற்கு அவன், “உங்கள் வேலைக்கா
ரனாகிய சீபா நான்தான்” என்று சொன்னான். **3** ராஜா அவனிடம், “சவு
லின் குடும்பத்தில் இன்னும் யாராவது உயிரோடு இருக்கிறார்களா? கடவுள்
காட்டுவது போல நானும் அவர்களுக்கு மாறாத அன்பு காட்ட வேண்
டும்” என்று சொன்னார். சீபா அவரிடம், “யோனத்தானின் மகன் ஒருவர்
இருக்கிறார். அவருக்கு இரண்டு கால்களும் ஊனம்”[b] என்று சொன்னான்.
4 அதற்கு ராஜா, “அவன் எங்கே இருக்கிறான்?” என்று கேட்டார். அதற்கு
சீபா, “அவர் லோ-தேபாரில் குடியிருக்கிறார், அம்மியேலின் மகனான மாகீ
ரின்[c] வீட்டில் இருக்கிறார்” என்று சொன்னான்.

5 உடனே தாவீது ராஜா ஆள் அனுப்பி, லோ-தேபாரில் அம்மியே
லின் மகனான மாகீரின் வீட்டிலிருந்து அவரைக் கூட்டிக்கொண்டு வந்தார்.
6 சவுலின் பேரனும் யோனத்தானின் மகனுமாகிய மேவிபோசேத் தாவீதின்
முன்னால் சாஷ்டாங்கமாய் விழுந்தார். அப்போது தாவீது, “மேவிபோசேத்!”
என்று கூப்பிட்டார். அதற்கு அவர், “சொல்லுங்கள், எஜமானே” என்று சொன்
னார். **7** தாவீது அவரிடம், “பயப்படாதே, உன் அப்பா யோனத்தானுக்காக
நான் உனக்கு மாறாத அன்பு காட்டுவேன்.[d] உன் தாத்தா சவுலுக்குச் சொந்
தமான எல்லா நிலங்களையும் திருப்பித் தருவேன். இனி எப்போதும் நீ என்
மேஜையில் சாப்பிட வேண்டும்”[e] என்று சொன்னார்.

8 அப்போது அவர் சாஷ்டாங்கமாய் விழுந்து, “இந்தச் செத்த நாய்க்
குப்[f] போய்க் கருணை காட்டுகிறீர்களே, எனக்கு என்ன தகுதி இருக்கிறது?”
என்று கேட்டார். **9** ராஜா உடனே சவுலின் வேலைக்காரன் சீபாவை வர
வழைத்து, “இறந்துபோன உன் எஜமான் சவுலுக்கும் அவருடைய குடும்பத்
துக்கும் சொந்தமான எல்லாவற்றையும் அவருடைய பேரனிடம் கொடுக்
கிறேன்.[g] **10** நீயும் உன் மகன்களும் உன் வேலைக்காரர்களும்
அவனுடைய நிலத்தில் பயிர்செய்ய வேண்டும். உன் எஜமானுடைய பேர
னின் குடும்பம் சாப்பிடுவதற்காக விளைச்சலைக் கொடுக்க வேண்டும்.
ஆனால், உன் எஜமானுடைய பேரன் மேவிபோசேத் இனிமேல் என்
மேஜையில்தான் சாப்பிடுவான்”[h] என்று சொன்னார்.

சீபாவுக்கு 15 மகன்களும் 20 வேலைக்காரர்களும் இருந்தார்கள்.[i]
11 அதற்கு சீபா, “ராஜாவே, நீங்கள் கட்டளை போட்டபடியெல்லாம் அடி
யேன் செய்வேன்” என்று சொன்னான். இளவரசர்களில் ஒருவரைப்
போல மேவிபோசேத்தும் தாவீதின்* மேஜையில் சாப்பிட்டார். **12** மேவி
போசேத்துக்கு ஒரு மகன் இருந்தான், அந்தச் சிறுவனின் பெயர் மிக்கா.[j]
சீபாவின் வீட்டிலிருந்த எல்லாரும் மேவிபோசேத்துக்கு வேலைக்காரர்க
ளாக ஆனார்கள். **13** இரண்டு கால்களும் ஊனமாக இருந்த[k] மேவிபோ
சேத் எருசலேமில் குடியிருந்தார். அவர் தினமும் ராஜாவின் மேஜையில்
சாப்பிட்டார்.[l]

10 பின்பு அம்மோனியர்களின்[m] ராஜா இறந்துபோனார், அடுத்ததாக
அவருடைய மகன் ஆனூன் ராஜாவானான்.[n] **2** அப்போது
தாவீது, “நாகாஸ் எனக்கு மாறாத அன்பு காட்டியதுபோல் நானும் அவரு
டைய மகன் ஆனூனுக்கு மாறாத அன்பு காட்டுவேன்” என்று சொன்னார்.

அதி. 9
a 2சா 16:1; 2சா 19:17
b 2சா 4:4; 2சா 9:13; 2சா 19:26
c 2சா 17:27-29
d நீதி 11:17
e 2சா 19:28; நீதி 11:25
f 1சா 24:14
g 2சா 9:1; 2சா 16:4; 2சா 19:29
h 2சா 19:28
i 2சா 19:17
j 1நா 8:34; 1நா 9:40
k 2சா 4:4
l 2சா 9:7; 2சா 19:28

அதி. 10
m ஆதி 19:36, 38; நியா 10:7; நியா 11:12, 33; 1சா 11:1
n 1நா 19:1-5

9:11 * அல்லது, “என்.”

அதனால், அவனுக்கு ஆறுதல் சொல்ல தன்னுடைய ஊழியர்களை அனுப்
பிவைத்தார். தாவீதின் ஊழியர்கள் அம்மோனியர்களின் தேசத்துக்குப்
போனார்கள். **3** அப்போது அந்தத் தேசத்தின் தலைவர்கள் ஆனூன் ராஜா
விடம், “தாவீது ஆறுதல் சொல்வதற்காக ஆட்களை அனுப்பியிருக்கிறானே,
அது உங்கள் அப்பா மீதிருக்கிற மரியாதையால் என்று நினைத்துக்கொள்ளா
தீர்கள். நகரத்தை ஆராய்ந்து உளவு பார்ப்பதற்காகவும், பின்பு அதை அழிப்
பதற்காகவும்தான் இவர்களை அனுப்பியிருக்கிறான்” என்று சொன்னார்
கள். **4** அதனால், ஆனூன் தாவீதுடைய ஊழியர்களைப் பிடித்து ஒருபக்க
தாடியைச் சிரைத்தான்,[a] அவர்களுடைய அங்கிகளை இடுப்புக்குக் கீழே
வெட்டிவிட்டு அவர்களைத் துரத்தியடித்தான். **5** இந்த விஷயம் தாவீதுக்
குத் தெரிவிக்கப்பட்டவுடனே, அவர்களைச் சந்திக்க ஆட்களை அனுப்பி
னார். ஏனென்றால், அவர்கள் மிகவும் அவமானப்படுத்தப்பட்டிருந்தார்கள்.
“தாடி வளரும்வரை எரிகோவில்[b] தங்கிவிட்டு, பின்பு திரும்பி வாருங்கள்”
என்று ராஜா அவர்களிடம் சொல்லச் சொன்னார்.

6 அதன் பின்பு, தாங்கள் தாவீதின் வெறுப்புக்கு ஆளாகிவிட்டதை
அம்மோனியர்கள் புரிந்துகொண்டார்கள். அதனால், பெத்-ரேகோபிலிருந்
தும்[c] சோபாவிலிருந்தும்[d] சீரியர்களைக் கூலி கொடுத்து வரவழைத்தார்கள்;
20,000 காலாட்படையினர் வந்தார்கள். மாக்காவின்[e] ராஜாவையும் 1,000
வீரர்களையும் இஷ்தோப்பிலிருந்து* 12,000 வீரர்களையும் வரவழைத்
தார்கள்.[f] **7** தாவீது இதைக் கேள்விப்பட்டபோது, யோவாபின் தலைமை
யில் முழு படையையும் தலைசிறந்த வீரர்களையும் அனுப்பினார்.[g]
8 அம்மோனியர்கள் வெளியே வந்து தங்களுடைய நகரத்தின் நுழைவா
சலில் அணிவகுத்து நின்றார்கள்; ஆனால், சோபாவையும் ரேகோபையும்
சேர்ந்த சீரியர்களும், இஷ்தோப்* மற்றும் மாக்காவைச் சேர்ந்த வீரர்களும்
இன்னொரு அணியாக வெட்டவெளியில் நின்றார்கள்.

9 முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் எதிரிகள் தன்னைத் தாக்க வரு
வதை யோவாப் பார்த்தார், அதனால் இஸ்ரவேலர்களில் மிகச் சிறந்த
வீரர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து சீரியர்களோடு போர் செய்வதற்காக அவர்
களை அணிவகுத்து நிற்க வைத்தார்.[h] **10** அம்மோனியர்களோடு[i] போர்
செய்வதற்காக மற்ற வீரர்களைத் தன்னுடைய சகோதரன் அபிசாயின்[j]
தலைமையில் அணிவகுத்து நிற்க வைத்தார். **11** யோவாப் அபிசாயிடம்,
“சீரியர்களை என்னால் சமாளிக்க முடியவில்லை என்றால், நீ வந்து எனக்கு
உதவி செய். அம்மோனியர்களை உன்னால் சமாளிக்க முடியவில்லை என்
றால், நான் வந்து உனக்கு உதவி செய்கிறேன். **12** நம்முடைய மக்களையும்
நம்முடைய கடவுளின் நகரங்களையும் பாதுகாப்பதற்காகத் தைரியத்தோடும்
உறுதியோடும்[k] போர் செய்வோம். யெகோவா தன்னுடைய பங்கில் என்ன
செய்ய வேண்டுமோ அதைச் செய்வார்”[l] என்று சொன்னார்.

13 யோவாபும் அவரோடு இருந்த வீரர்களும் சீரியர்களோடு போர்
செய்ய முன்னேறிப் போனார்கள், அப்போது சீரியர்கள் அங்கிருந்து தலை
தெறிக்க ஓடினார்கள்.[m] **14** சீரியர்கள் தப்பித்து ஓடியதை அம்மோனி
யர்கள் பார்த்ததும், அவர்களும் அபிசாயிடமிருந்து பின்வாங்கி நகரத்துக்

10:6 * வே.வா., “தோப் என்ற இடத்தைச் சேர்ந்த ஆட்களிலிருந்து.” **10:8** * வே.வா., “தோப் என்ற இடத்தைச் சேர்ந்த ஆட்கள்.”

அதி. 10
a லேவி 19:27
b யோசு 18:21
c எண் 13:21
d 2சா 8:5
e யோசு 13:13
f 1நா 19:6, 7
g 2சா 23:8; 1நா 19:8, 9
h 1நா 19:10-13
i எண் 21:24
j 1சா 26:6; 2சா 2:18; 2சா 23:18; 1நா 2:15, 16
k உபா 31:6
l சங் 37:5; சங் 44:5; நீதி 29:25
m 1நா 19:14, 15

குள் ஓடிப்போனார்கள். இதற்குப் பின்பு, யோவாப் எருசலேமுக்குத்
திரும்பினார்.

15 இஸ்ரவேலர்களிடம் தோற்றுப்போன சீரியர்கள் மறுபடியும் படை
திரட்டினார்கள்.[a] **16** அதற்காக ஆற்றுப்பகுதிக்கு* பக்கத்தில்[b] குடியி
ருந்த சீரியர்களை ஆதாதேசர்[c] வரவழைத்தான். ஆதாதேசரின் படைத்
தளபதியான சோபாக்கின் தலைமையில் ஈலாம் என்ற இடத்துக்கு அவர்கள்
வந்தார்கள்.

17 தாவீதுக்கு இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது, உடனே அவர் இஸ்
ரவேல் வீரர்கள் எல்லாரையும் ஒன்றுதிரட்டி, யோர்தானைக் கடந்து ஈலா
முக்கு வந்தார். சீரியர்கள் தாவீதுக்கு எதிராக அணிவகுத்து நின்று, அவரை
எதிர்த்துப் போர் செய்தார்கள்.[d] **18** ஆனால், சீரியர்கள் இஸ்ரவேலர்க
ளிடம் தோற்றுப்போய் ஓடினார்கள். சீரியர்களுடைய 700 ரதவீரர்களையும்
40,000 குதிரைவீரர்களையும் தாவீது கொன்றுபோட்டார். அவர்களுடைய
படைத் தளபதியான சோபாக்கையும் கொன்றுபோட்டார்; அவன் அங்கே
செத்துப்போனான்.[e] **19** ஆதாதேசரின் ஊழியர்களாக இருந்த ராஜாக்கள்
எல்லாரும் இஸ்ரவேலர்களிடம் தோற்றுப்போனதால் அவர்கள் உடனடி
யாக இஸ்ரவேலர்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்து, அவர்களுக்கு அடி
பணிந்தார்கள்.[f] அதன் பின்பு, அம்மோனியர்களுக்கு உதவி செய்ய சீரியர்
கள் பயந்தார்கள்.

11 வருஷத்தின் ஆரம்பத்தில்,* ராஜாக்கள் போருக்குப் போவது
வழக்கம். அப்போது, அம்மோனியர்களை அழிப்பதற்காக யோவா
பையும் அவருடைய ஊழியர்களையும்# இஸ்ரவேல் படை முழுவதையும்
தாவீது அனுப்பிவைத்தார். அவர்கள் ரப்பாவை[g] முற்றுகையிட்டார்கள்.
ஆனால், தாவீது எருசலேமிலேயே தங்கிவிட்டார்.[h]

2 ஒருநாள் சாயங்காலம்* படுக்கையிலிருந்து எழுந்து, அரண்மனை
மேல்மாடியில் தாவீது நடந்துகொண்டிருந்தார். அப்போது, ஒரு பெண்
குளித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார். அவள் மிகவும் அழகாக இருந்
தாள். **3** அவள் யாரென்று விசாரிக்க தாவீது ஒருவரை அனுப்பினார்.
“அவள் எலியாமின்[i] மகள் பத்சேபாள்,[j] ஏத்தியனான[k] உரியாவின்[l]
மனைவி” என்று அவர் சொன்னார். **4** அவளைக் கூட்டிக்கொண்டு வருவ
தற்காக தாவீது ஆட்களை அனுப்பினார்.[m] அவள் தாவீதிடம் வந்தபோது,
அவர் அவளுடன் உறவுகொண்டார்.[n] (அவள் தன்னுடைய தீட்டுக் கழிக்க
சுத்திகரித்துக்கொண்டிருந்த சமயத்தில்* இது நடந்தது.)[o] பின்பு, அவள் தன்
னுடைய வீட்டுக்குத் திரும்பிப் போனாள்.

5 அவள் கர்ப்பமானாள். அப்போது, “நான் கர்ப்பமாக இருக்கிறேன்”
என்று தாவீதுக்குச் சொல்லி அனுப்பினாள். **6** அதைக் கேட்டதும், “ஏத்தி
யனான உரியாவை என்னிடம் அனுப்பி வை” என்று யோவாபுக்கு தாவீது
செய்தி அனுப்பினார். அதனால், உரியாவை யோவாப் அனுப்பி வைத்தார்.
7 உரியா வந்ததும், யோவாபையும் வீரர்களையும் போர் நிலவரத்தையும்
பற்றி தாவீது விசாரித்தார். **8** பின்பு, “வீட்டுக்குப் போய் ஓய்வெடு” என்று

10:16 *அதாவது, “யூப்ரடிஸ் ஆற்றுப்பகுதிக்கு.” **11:1** *அதாவது, “வசந்த காலத்தில்.” #ஒருவேளை, தாவீதின் ஊழியர்களைக் குறிக்கலாம். **11:2** *வே.வா., “பிற்பகலில்.” **11:4** *அநேகமாக, மாதவிலக்கிலிருந்து சுத்திகரிக்கும் சமயமாக இருந்திருக்கலாம்.

அதி. 10
a 1நா 19:16
b ஆதி 15:18; யாத் 23:31
c 2சா 8:3-5
d 1நா 19:17-19
e உபா 20:1; சங் 18:37, 38
f ஆதி 15:18; உபா 20:10, 11

அதி. 11
g 2சா 12:26
h 1நா 20:1
i 1நா 3:5, 9
j 2சா 12:24; 1ரா 1:11
k ஆதி 10:15; உபா 20:17
l 2சா 23:8, 39; 1ரா 15:5
m யாத் 20:14, 17
n லேவி 18:20; லேவி 20:10; நீதி 6:32; எபி 13:4
o லேவி 12:2; லேவி 15:19; லேவி 18:19

உரியாவிடம் சொன்னார். அங்கிருந்து அவர் புறப்பட்டபோது அவருடைய
வீட்டுக்கு ராஜா அன்பளிப்பை* அனுப்பினார். **9** ஆனால், உரியா தன்
னுடைய வீட்டுக்குப் போகாமல், ராஜாவின் மற்ற ஊழியர்கள் எல்லாரோ
டும் சேர்ந்து அரண்மனை முற்றத்திலேயே படுத்துத் தூங்கினார்.
10 உரியா தன்னுடைய வீட்டுக்குப் போகவில்லை என்பதை தாவீது தெரிந்
துகொண்டார். அதனால் உரியாவிடம் “நீ ரொம்பத் தூரம் பயணம் செய்து
வந்திருக்கிறாய், ஏன் உன்னுடைய வீட்டுக்குப் போகவில்லை?” என்று கேட்
டார். **11** அதற்கு உரியா, “கடவுளுடைய பெட்டி[a] கூடாரத்தில் இருக்கிறது,
இஸ்ரவேல் ஆட்களும் யூதா ஆட்களும் கூடாரத்தில் தங்கியிருக்கிறார்கள்,
என் எஜமான் யோவாபும் அவருடைய ஊழியர்களும் வெட்டவெளியில்
முகாம்போட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, நான் மட்டும் எப்படி
வீட்டுக்குப் போய் சாப்பிட்டுக் குடித்து மனைவியோடு சந்தோஷமாக
இருக்க* முடியும்?[b] உங்கள் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,#
நான் கண்டிப்பாக வீட்டுக்குப் போக மாட்டேன்!” என்று சொன்னார்.

12 அதற்கு தாவீது, “சரி, இன்றைக்கும் இங்கே தங்கியிரு. நாளைக்கு
உன்னை அனுப்பி வைக்கிறேன்” என்று உரியாவிடம் சொன்னார். அத
னால், உரியா அன்றும் அடுத்த நாளும் எருசலேமில் தங்கியிருந்தார்.
13 பின்பு தாவீது, தன்னுடன் சாப்பிட்டுக் குடிப்பதற்காக உரியாவை வரவ
ழைத்தார். போதை தலைக்கேறும் அளவுக்கு உரியாவைக் குடிக்க வைத்
தார். ஆனாலும், உரியா சாயங்காலத்தில் தன்னுடைய வீட்டுக்குப் போக
வில்லை. அதற்குப் பதிலாக, ராஜாவின் ஊழியர்கள் படுத்திருந்த
இடத்துக்குப் போய்த் தன் படுக்கையில் படுத்துக்கொண்டார். **14** தாவீது
அடுத்த நாள் காலையில் யோவாபுக்குக் கடிதம் எழுதி அதை உரியா
வின் கையில் கொடுத்து அனுப்பினார். **15** அந்தக் கடிதத்தில், “போர்
மிகத் தீவிரமாக நடக்கும் இடத்தில் உரியாவை நிறுத்து. போர்முனையில்
அவனை விட்டுவிட்டுப் பின்னால் வந்துவிடு. எதிரிகள் அவனைக்
கொன்றுபோடட்டும்”[c] என்று எழுதியிருந்தார்.

16 நகரத்தை யோவாப் உன்னிப்பாகக் கவனித்திருந்தார். அதனால், எதிரி
படையைச் சேர்ந்த மாவீரர்கள் இருந்த இடத்தில் உரியாவை நிற்க வைத்தார்.
17 எதிரிகள் நகரத்தைவிட்டு வெளியே வந்து யோவாபுடன் போர் செய்த
போது, தாவீதின் வீரர்களில் சிலர் செத்தார்கள்; அவர்களில் ஏத்தியனான
உரியாவும் ஒருவர்.[d] **18** உடனே, போர்க்களத்தில் நடந்தவற்றை தாவீதுக்கு
யோவாப் சொல்லி அனுப்பினார். **19** செய்தி கொண்டுபோகும் ஆளிடம்,
“ராஜாவிடம் போர் நிலவரத்தைப் பற்றிச் சொல்லும்போது, **20** அவர் ஒரு
வேளை கோபப்படலாம். அவர் உன்னிடம், ‘நகரத்துக்கு இவ்வளவு பக்கத்
தில் போய் ஏன் போர் செய்தீர்கள்? மதில் மேலிருந்து அம்பு எறிவார்கள்
என்று உங்களுக்குத் தெரியாதா? **21** எருப்பேசேத்தின்*[e] மகன் அபிமெ
லேக்கு[f] எப்படிச் செத்துப்போனான்? தேபேசில் மதில்மேல் நின்றுகொண்
டிருந்த ஒரு பெண்தானே மாவு அரைக்கிற கல்லின்# மேற்கல்லை அவன்

11:8 * அதாவது, “விருந்தளிப்பவர் மதிப்புக்குரிய விருந்தாளிக்குக் கொடுக்கும் அன்பளிப்பை.” **11:11** * நே.மொ., “மனைவியோடு படுத்துக்கொள்ள.” # வே.வா., “நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **11:21** * யெருபாகால், அதாவது கிதியோனின் மறுபெயர் (நியா 6:32) # வே.வா., “திரிகைக் கல்லின்.”

அதி. 11
a 2சா 6:17
2சா 7:2
b லேவி 15:16
1சா 21:5
c சங் 51:14
நீதி 3:29
d 2சா 12:9
e நியா 6:32
நியா 7:1
f நியா 9:50-53

மேல் தூக்கிப்போட்டாள்? அப்புறம் ஏன் மதிலுக்கு இவ்வளவு பக்கத்தில் போய் சண்டை போட்டீர்கள்?' என்று கேட்டால், 'உங்கள் போர்வீரர்களில் ஏத்தியனான உரியாவும் செத்துப்போனான்' என்று சொல்" என்றார்.

22 யோவாப் சொல்லி அனுப்பிய விவரங்களை எல்லாம் தாவீதிடம் அந்த வீரன் சொன்னான்: **23** "எதிரிகளுடைய கை ஓங்கியது. நகரத்துக்கு வெளியே வந்து அவர்கள் எங்களோடு போர் செய்தார்கள். ஆனால், நாங்கள் அவர்களை நகரத்தின் நுழைவாசலுக்கே துரத்தியடித்தோம். **24** வில் வீரர்கள் மதில் மேலிருந்து அம்பு எறிந்தார்கள், நம்முடைய வீரர்களில் சிலர் செத்துப்போனார்கள். ஏத்தியனான உரியாவும் செத்துப்போனார்"[a] என்று சொன்னான். **25** அதற்கு தாவீது, "இதை நினைத்து கவலைப்பட வேண்டாம் என்று யோவாபிடம் சொல். போர் என்றாலே சிலர் வாளுக்கு இரையாகத்தான் செய்வார்கள். தீவிரமாகப் போர் செய்து, நகரத்தைக் கைப்பற்றும்படி[b] அவரிடம் சொல். அதோடு, அவரைத் தைரியமாக இருக்கச் சொல்" என்றார்.

26 உரியா இறந்துபோனதைக் கேள்விப்பட்டதும் அவருடைய மனைவி அவருக்காகத் துக்கம் அனுசரித்தாள். **27** துக்கம் அனுசரிக்கிற நாட்கள் முடிந்தவுடனே, தாவீது ஆள் அனுப்பி அவளைத் தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்தார். அவள் அவருடைய மனைவியாகி,[c] ஒரு மகனைப் பெற்றாள். ஆனால், தாவீது செய்த காரியம் யெகோவாவுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.*[d]

12 அதனால், யெகோவா நாத்தானை[e] தாவீதிடம் அனுப்பினார். அவர் தாவீதைப் பார்த்து,[f] "ஒரு ஊரில் இரண்டு பேர் இருந்தார்கள். ஒருவன் பணக்காரன், மற்றவன் ஏழை. **2** பணக்காரனிடம் ஏராளமான ஆடுமாடுகள் இருந்தன;[g] **3** ஆனால், ஏழையிடம் ஒரேவொரு பெண் ஆட்டுக்குட்டிதான் இருந்தது. அதை அவன் விலைக்கு வாங்கியிருந்தான்.[h] அதை நன்றாகக் கவனித்துக்கொண்டான். அந்த வீட்டில் அவனோடும் அவனுடைய மகன்களோடும் அந்த ஆட்டுக்குட்டி வளர்ந்து வந்தது. அவனிடம் இருக்கும் கொஞ்ச உணவைச் சாப்பிட்டு, அவனுடைய கிண்ணத்தில் இருப்பதைக் குடித்து, அவனுடைய மடியில் தூங்கியது. அது அவனுக்கு ஒரு மகளைப் போல் இருந்தது. **4** ஒருநாள் அந்தப் பணக்காரனுடைய வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தான். அவனுக்கு விருந்து வைக்க தன்னிடமிருந்த ஆட்டையோ மாட்டையோ வெட்டாமல், அந்த ஏழையின் ஆட்டுக்குட்டியைப் பிடித்துச் சமைத்தான்"[i] என்று சொன்னார்.

5 அதைக் கேட்டதும் தாவீதுக்கு அந்தப் பணக்காரன்மீது பயங்கர கோபம் வந்தது; "உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,*[j] அந்த மனிதன் கொல்லப்பட வேண்டும்! **6** அவன் ஈவிரக்கம் இல்லாமல் நடந்துகொண்டான், அதனால் நஷ்ட ஈடாக நான்கு ஆட்டுக்குட்டிகளைக் கொடுக்க வேண்டும்"[k] என்று நாத்தானிடம் சொன்னார்.

7 உடனே நாத்தான், "நீங்கள்தான் அந்த மனிதன்! இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது என்னவென்றால், 'உன்னை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் செய்தேன்.[l] சவுலிடமிருந்து உன்னைக்

அதி. 11
a 2சா 11:17
b 2சா 12:26
c 2சா 5:13; 2சா 12:9
d ஆதி 39:7-9; 1ரா 15:5; சங் 5:6; சங் 11:4; எபி 13:4

அதி. 12
e 1ரா 1:8; 1நா 17:1; 1நா 29:29
f சங் 51:மே.கு.
g 2சா 5:13; 2சா 15:16
h 2சா 11:3
i 2சா 11:4
j உபா 6:13
k யாத் 22:1
l 1சா 16:13; 2சா 7:8

11:27 *நே.மொ., "யெகோவாவின் கண்களில் மோசமானதாக இருந்தது." **12:5** *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

காப்பாற்றினேன்.[a] **8** உன் எஜமானுடைய சொத்துகளையும்[b] அவனு
டைய மனைவிகளையும்[c] உனக்குத் தர தயாராயிருந்தேன். இஸ்ரவேலுக்
கும் யூதாவுக்கும் உன்னை ராஜாவாக்கினேன்.[d] இது போதாதென்றால்
இதற்கு மேலேயும் உனக்குக் கொடுக்கத் தயாராக இருந்தேன்.[e] **9** அப்ப
டியிருக்கும்போது, யெகோவாவின் வார்த்தையை அலட்சியப்படுத்திவிட்டு,
அவருக்குப் பிடிக்காததை ஏன் செய்தாய்? ஏத்தியனான உரியாவை வாளால்
வெட்டிக் கொன்றாய்![f] அவனை அம்மோனியர்களின் வாளுக்கு இரை
யாக்கிவிட்டு,[g] அவனுடைய மனைவியை எடுத்துக்கொண்டாய்.[h] **10** ஏத்தி
யனான உரியாவின் மனைவியை எடுத்துக்கொண்டு என்னை அவமதித்த
தால், உன் வம்சத்தை எப்போதும் வாள் துரத்திக்கொண்டே இருக்கும்.'[i]
11 மேலும் யெகோவா சொல்வது என்னவென்றால், 'உன் சொந்த குடும்
பத்தார் மூலமாகவே பயங்கரமான கஷ்டங்களை உனக்குக் கொடுப்பேன்.[j]
உன் கண்ணெதிரில் உன் மனைவிகளை வேறொருவனுக்குக் கொடுப்பேன்.[k]
அவன் பகிரங்கமாக* உன் மனைவிகளோடு உறவுகொள்வான்.[l] **12** நீ ரக
சியமாகச் செய்தாய்,[m] நானோ இஸ்ரவேலர்கள் எல்லாருக்கும் முன்னால் பட்
டப்பகலில்* செய்ய வைப்பேன்'" என்று சொன்னார்.

13 உடனே தாவீது, "நான் யெகோவாவுக்கு விரோதமாகப் பாவம் செய்து
விட்டேன்"[n] என்று சொன்னார். அதற்கு நாத்தான், "யெகோவா உங்கள்
பாவத்தை மன்னித்துவிட்டார்.[o] நீங்கள் சாக மாட்டீர்கள்.[p] **14** ஆனாலும்,
இந்த விஷயத்தில் யெகோவாவை நீங்கள் துளிகூட மதிக்காததால், உங்க
ளுக்கு இப்போது பிறந்த குழந்தை கண்டிப்பாகச் செத்துவிடும்" என்று
சொன்னார்.

15 அதன் பின்பு, நாத்தான் தன்னுடைய வீட்டுக்குப் போனார்.

உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண் குழந்தையை யெகோவா
தாக்கினார்; அது நோய்வாய்ப்பட்டது. **16** குழந்தைக்காக உண்மைக் கடவு
ளிடம் தாவீது கெஞ்சி மன்றாடினார். கடுமையாக விரதமிருந்து, தன்
அறைக்குள் போய் ராத்திரி முழுவதும் தரையிலேயே கிடந்தார்.[q] **17** வீட்
டிலுள்ள பெரியோர்கள்* சுற்றி நின்று அவரை எழுப்ப முயற்சி செய்தார்
கள். ஆனால், அவர் எழுந்திருக்கவுமில்லை, சாப்பிடவுமில்லை. **18** ஏழாம்
நாளில் குழந்தை இறந்துபோனது. ஆனால், அவரிடம் விஷயத்தைச்
சொல்ல அவருடைய ஊழியர்கள் பயந்தார்கள். "குழந்தை உயிரோடு இருந்
தபோதே நாம் சொன்னதை அவர் கேட்கவில்லை. இப்போது குழந்தை
இறந்துவிட்டதென்று சொன்னால் ஏதாவது விபரீதமாகச் செய்துவிடு
வாரோ?" என்று பேசிக்கொண்டார்கள்.

19 ஊழியர்கள் கிசுகிசுவென்று பேசிக்கொள்வதைப் பார்த்து, குழந்தை
இறந்துவிட்டதென்று தாவீது புரிந்துகொண்டார். "குழந்தை இறந்துவிட்
டதா?" என்று கேட்டார்; அதற்கு அவர்கள், "ஆமாம்" என்று சொன்
னார்கள். **20** உடனே அவர் தரையிலிருந்து எழுந்து, குளித்து, எண்ணெய்
பூசிக்கொண்டார்;[r] பின்பு, உடை மாற்றிக்கொண்டு யெகோவாவின் கூடா
ரத்துக்குப்[s] போய் தரையில் விழுந்து வணங்கினார். அதன் பின்பு அரண்
மனைக்கு வந்து, உணவு கொண்டுவரச் சொல்லி சாப்பிட்டார். **21** அவரு
டைய ஊழியர்கள், "நீங்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? குழந்தை

12:11 * நே.மொ., "சூரியனின் கண் முன்னால்." **12:12** * நே.மொ., "சூரியனுக்கு முன்னால்." **12:17** * வே.வா., "மூப்பர்கள்."

அதி. 12
a 1சா 18:10, 11; 1சா 19:10; 1சா 23:14
b 1சா 13:13, 14; 1சா 15:26, 28
c 2சா 3:7; 1ரா 2:22
d 2சா 2:4; 2சா 5:5
e 2சா 7:19
f யாத் 20:13
g 2சா 11:15, 27
h யாத் 20:14, 17
i எண் 14:18; 2சா 13:32; 2சா 18:33; கலா 6:7
j 2சா 12:15, 19; 2சா 13:10-15; 2சா 15:14
k யாத் 21:24; யோபு 31:9-11; யோபு 34:11
l 2சா 16:21, 22
m 2சா 11:4, 15
n ஆதி 39:9; சங் 32:5; சங் 38:3; சங் 51:மே.கு., 4; நீதி 28:13
o யாத் 34:6; சங் 32:1
p லேவி 20:10; சங் 103:10
q 2சா 12:22; யோனா 3:8, 9
r ரூ 3:3; 2சா 14:2
s 2சா 6:17

உயிரோடு இருந்தபோது விரதமிருந்து அழுதுகொண்டிருந்தீர்கள்; குழந்தை
இறந்தவுடனே எழுந்து வந்து சாப்பிடுகிறீர்களே?” என்று கேட்டார்கள்.
22 அதற்கு அவர், “குழந்தை உயிரோடு இருந்தபோது விரதமிருந்து[a] அழு
துகொண்டிருந்தேன்; யெகோவா ஒருவேளை என்மேல் இரக்கம் காட்டி
குழந்தைக்கு உயிர்ப்பிச்சை தருவார்[b] என்று நினைத்தேன். **23** ஆனால்
இப்போதுதான் குழந்தை இறந்துவிட்டதே, இனி விரதமிருந்து என்ன பிர
யோஜனம்? குழந்தையை என்னால் உயிரோடு கொண்டுவரவா முடியும்?[c]
எனக்கு வேண்டுமானால் சாவு வரலாம்,[d] அவன் என்னிடம் திரும்பி வர
மாட்டான்”[e] என்று சொன்னார்.

24 தாவீது தன் மனைவி பத்சேபாளுக்கு[f] ஆறுதல் சொன்னார். பின்பு,
அவளுடன் உறவுகொண்டார். அவள் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்,
அவனுக்கு சாலொமோன்*[g] என்று பெயர் வைத்தார். யெகோவா அவனை
நேசித்தார்.[h] **25** யெகோவா அவன்மேல் அன்பு வைத்ததால்,* அவ
னுக்கு யெதிதியா# என்று பெயர் வைக்கும்படி நாத்தான்[i] தீர்க்கதரிசியிடம்
சொன்னார்.

26 அம்மோனியர்களின்[j] நகரமான ரப்பாவுக்கு[k] எதிராக யோவாப்
தொடர்ந்து போர் செய்து அந்த ராஜ நகரத்தைக் கைப்பற்றினார்.[l]
27 பின்பு தாவீதிடம் ஆட்களை அனுப்பி, “ரப்பாவுக்கு எதிராகப் போர்
செய்து,[m] அந்தத் தண்ணீர் நகரத்தை* பிடித்துவிட்டேன். **28** நகரத்தையும்
நானே கைப்பற்றிவிட்டால், அதற்கான பேரும் புகழும் எனக்கு வந்துவிடும்.
அதனால் உடனே அங்கிருக்கிற வீரர்களைத் திரட்டிக்கொண்டு வந்து, நகரத்
தின் மீது போர் செய்து அதைக் கைப்பற்றுங்கள்” என்று சொன்னார்.

29 அதனால் தாவீது எல்லா வீரர்களையும் திரட்டிக்கொண்டு ரப்பாவுக்
குப் போய் போர் செய்து அதைக் கைப்பற்றினார். **30** பின்பு, அவர் மல்
காம் தெய்வத்தின் தலையிலிருந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டார். அதன்
எடை ஒரு தாலந்து* தங்கம். அதில் விலைமதிப்புமிக்க கற்கள் பதிக்கப்பட்
டிருந்தன. அதை தாவீதின் தலையில் வைத்தார்கள். அந்த நகரத்திலிருந்து
ஏராளமான பொருள்களையும் அவர் கைப்பற்றினார்.[n] **31** அங்கிருந்த
மக்களை நகரத்துக்கு வெளியே கொண்டுவந்து அவர்களுக்குக் கல் அறுக்
கும் வேலை கொடுத்தார். கூர்மையான இரும்புக் கருவிகளையும் இரும்புக்
கோடாலிகளையும் பயன்படுத்தி வேலை செய்ய வைத்தார். செங்கல் செய்
கிற வேலையையும் கொடுத்தார். அம்மோனியர்களுடைய நகரங்களில்
இருந்த எல்லாரிடமும் இப்படியே வேலை வாங்கினார். கடைசியில், தன்
னுடைய படை முழுவதையும் கூட்டிக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பிப்
போனார்.

13 தாவீதின் மகன் அப்சலோமுக்கு ஓர் அழகிய தங்கை இருந்தாள்.
அவள் பெயர் தாமார்.[o] தாவீதின் மகன் அம்னோன்[p] அவள்மீது
காதல்கொண்டான். **2** தாமாரை நினைத்து எப்போதும் ஏங்கினான், அந்த
ஏக்கத்தில் நோயாளியாய் ஆகிவிட்டான். அவள் கன்னிப்பெண்ணாக இருந்
ததால் அவளை அவனால் நெருங்க முடியவில்லை. **3** அம்னோனுக்கு

12:24 *“சமாதானம்” என்ற அர்த்தத்தைத் தருகிற எபிரெய வார்த்தையிலிருந்து இந்தப் பெயர் வந்தது. 12:25 *நே.மொ., “யெகோவாவுக்காக.” #அர்த்தம், “‘யா’வின் அன்புக்குரியவர்.” 12:27 *அந்த நகரத்திலிருந்த நீர்நிலைகளைக் குறிக்கலாம். 12:30 *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 12
a 2சா 12:16; யோவே 1:14
b ஏசா 38:3, 5; யோவே 2:13, 14; ஆமோ 5:15; யோனா 3:8, 9
c பிர 9:6
d யோபு 30:23; பிர 3:20; அப் 2:29, 34; அப் 13:36
e பிர 9:5, 10
f 2சா 11:3
g 1நா 3:5, 9; 1நா 22:9; 1நா 28:5; மத் 1:6
h 2சா 7:12; 1நா 29:1
i 2சா 7:4, 5; 2சா 12:1; 1ரா 1:8
j உபா 23:3, 6
k உபா 3:11; யோசு 13:24, 25
l 2சா 11:25; 1நா 20:1
m 2சா 11:1
n 2சா 8:11, 12; 1நா 20:2, 3

அதி. 13
o 1நா 3:9
p 2சா 3:2

ஒரு நண்பன் இருந்தான்; அவன் பெயர் யோனதாப்,[a] அவன் தாவீதின்
அண்ணனாகிய சிமியாவின்[b] மகன். அவன் மிகவும் சாமர்த்தியமானவன்.
4 அவன் அம்னோனிடம், “இளவரசனே, நீ ஏன் எப்போது பார்த்தாலும்
சோகமாகவே இருக்கிறாய்? என்னிடம் சொல்லக் கூடாதா?” என்று கேட்
டான். அதற்கு அம்னோன், “என் சகோதரன் அப்சலோமின் தங்கை தாமா
ரைக் காதலிக்கிறேன்”[c] என்று சொன்னான். **5** அதற்கு யோனதாப், “நீ படுக்
கையில் படுத்துக்கொண்டு நோயாளி மாதிரி நடி. உன்னைப் பார்க்க உன்
அப்பா வரும்போது, ‘தயவுசெய்து என் தங்கை தாமாரை இங்கே அனுப்பி
வையுங்கள், அவள் எனக்குக் கொஞ்சம் உணவு தரட்டும். நோயாளிகளுக்
குக் கொடுக்கிற உணவை அவள் எனக்குச் சமைத்துக் கொடுக்கட்டும், நான்
அவள் கையால் சாப்பிட வேண்டும்’ என்று சொல்” என்றான்.

6 அதனால், அம்னோன் படுக்கையில் படுத்துக்கொண்டு நோயாளி
போல் நடித்தான். ராஜா அவனைப் பார்க்க வந்தபோது, “என் தங்கை தாமா
ரைக் கொஞ்சம் இங்கே அனுப்பி வையுங்கள். அவள் என் கண் முன்னால்
இரண்டு ரொட்டி* சுட்டுத் தரட்டும். அவள் கையால் சாப்பிட ஆசைப்படு
கிறேன்” என்று சொன்னான். **7** உடனே தாவீது தாமாரின் வீட்டுக்கு ஆள்
அனுப்பி, “உன் அண்ணன் அம்னோனின் வீட்டுக்குப் போய், கொஞ்சம்
அவனுக்குச் சமைத்துக் கொடு” என்று சொல்லச் சொன்னார். **8** அதனால்,
தாமார் தன்னுடைய அண்ணன் அம்னோனின் வீட்டுக்குப் போனாள்;
அங்கே அவன் படுக்கையில் படுத்திருந்தான். அவள் மாவு பிசைந்து
அவன் கண் முன்னாலேயே ரொட்டி சுட்டாள். **9** பின்பு, அதை ஒரு
பாத்திரத்தில் வைத்து அவனுக்குப் பரிமாறினாள். ஆனால் அவன் சாப்பிட
மறுத்தான், “எல்லாரையும் இங்கிருந்து போகச் சொல்” என்று சொன்னான்.
அதனால், எல்லாரும் அங்கிருந்து வெளியே போனார்கள்.

10 அப்போது அம்னோன் தாமாரிடம், “ரொட்டியைப் படுக்கையறைக்
குக் கொண்டுவா, நான் உன் கையால் சாப்பிட ஆசைப்படுகிறேன்”
என்று சொன்னான். அதனால், தாமார் தான் சுட்ட ரொட்டிகளை எடுத்
துக்கொண்டு அம்னோனின் படுக்கையறைக்குப் போனாள். **11** ரொட்டிக
ளைப் பக்கத்தில் கொண்டுபோனபோது அவன் அவளைப் பிடித்திழுத்து,
“என் தங்கையே வா, என்னோடு வந்து படு” என்று சொன்னான்.
12 அதற்கு அவள், “வேண்டாம் அண்ணா! என்னைச் சீரழித்துவிடாதீர்
கள். இப்படிப்பட்ட காரியத்தை இஸ்ரவேலில் யாரும் செய்ய மாட்டார்
கள்.[d] இந்தக் கேவலமான காரியத்தைச் செய்யாதீர்கள்.[e] **13** காலம் முழுவ
தும் இந்த அவமானத்தோடு நான் எப்படி வாழ்வேன்? இஸ்ரவேலில்
உள்ள கேவலமான ஆட்களில் ஒருவராக உங்களையும் நினைத்துவிடுவார்
களே. தயவுசெய்து ராஜாவிடம் பேசுங்கள். அவர் கண்டிப்பாக என்னை
உங்களுக்குக் கொடுப்பார்” என்று சொன்னாள். **14** ஆனால், அவன் எதை
யும் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. பலவந்தமாகப் பிடித்து அவளைக்
கெடுத்தான். **15** அதன் பின்பு, அவளை ரொம்பவே வெறுக்க ஆரம்பித்
தான்; அவள்மீது எந்தளவுக்கு ஆசை வைத்திருந்தானோ அதைவிட அதி
கமாக வெறுக்க ஆரம்பித்தான். அவளிடம், “எழுந்து, வெளியே போ” என்று
சொன்னான். **16** அதைக் கேட்டதும், “வேண்டாம் அண்ணா, என்னைச் சீர

13:6 * நே.மொ., “இதய வடிவிலான ரொட்டி.”

அதி. 13
a 2சா 13:35
b 1சா 16:9; 1நா 2:13
c லேவி 18:9; லேவி 20:17
d லேவி 18:9, 29; லேவி 20:17; உபா 27:22
e ஆதி 34:2, 7; நியா 20:5, 6

ழித்ததைவிட இப்படித் துரத்தியடிப்பது ரொம்பக் கொடுமை!” என்று சொன்
னாள். ஆனால், அவள் சொன்னதை அவன் கேட்கவே இல்லை.

17 அவன் தன்னுடைய வேலைக்கார வாலிபனைக் கூப்பிட்டு, “தயவு
செய்து, இவளை வெளியே தள்ளி கதவைப் பூட்டு” என்று சொன்னான்.
18 (அரச குடும்பத்தைச் சேர்ந்த கன்னிப்பெண்கள் அணியும் விசேஷ*
அங்கியை அவள் அணிந்திருந்தாள்.) அதனால், அந்த வேலைக்காரன்
அவளை வெளியே அனுப்பி கதவைப் பூட்டினான். **19** உடனே தாமார்
தன் தலையில் சாம்பலை வாரிப்போட்டுக்கொண்டு,[a] தான் அணிந்தி
ருந்த அழகிய அங்கியைக் கிழித்துக்கொண்டாள்; தன்னுடைய தலையில்
கையை வைத்துக்கொண்டு, அழுதுகொண்டே போனாள்.

20 அவளுடைய அண்ணன் அப்சலோம்[b] அவளைப் பார்த்து,
“உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது அம்னோன்தானே? என் தங்
கையே, அழாதே, அவன் உன்னுடைய அண்ணன்.[c] அதனால் யாரிடமும்
இதைப் பற்றி மூச்சுவிடாதே, இதையே நினைத்து நினைத்து அழுதுகொண்
டிருக்காதே” என்று சொன்னான். பின்பு, தாமார் தன்னுடைய அண்ணனாகிய
அப்சலோம் வீட்டில் தனிமையில் வாழ்ந்தாள். **21** இதையெல்லாம் கேள்
விப்பட்டதும் தாவீது ராஜாவுக்குப் பயங்கர கோபம் வந்தது.[d] ஆனாலும்,
அம்னோன் மனதை அவர் புண்படுத்த விரும்பவில்லை; அவன் அவரு
டைய மூத்த மகனாக இருந்ததால், அவனை நேசித்தார். **22** அப்சலோம்
அம்னோனிடம் இதைப் பற்றி எதுவும் பேசவில்லை; இருந்தாலும், தன்னு
டைய தங்கை தாமாரை அவன் கெடுத்ததால்[e] அவனை வெறுத்தான்.[f]

23 இரண்டு வருஷங்கள் உருண்டோடின; அப்போது, எப்பிராயீமுக்குப்[g]
பக்கத்தில் இருந்த பாகால்-ஆசோரில் அப்சலோம் தன்னுடைய ஆட்களை
வைத்து ஆடுகளுக்கு மயிர் கத்தரித்தான்; அங்கே இளவரசர்கள் எல்லா
ரையும் விருந்துக்குக் கூப்பிட்டான்.[h] **24** பின்பு ராஜாவை அப்சலோம் சந்
தித்து, “என்னுடைய ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கிறேன். தயவுசெய்து ராஜா
வும் அவருடைய ஊழியர்களும் என்னுடன் வர வேண்டும்” என்று
சொன்னான். **25** அதற்கு ராஜா அவனிடம், “வேண்டாம் மகனே, நாங்கள்
எல்லாரும் வந்தால், உனக்கு ரொம்பச் சிரமமாக இருக்கும்” என்று சொன்
னார். அவன் வற்புறுத்திக் கூப்பிட்டபோதும், அவர் அவனுடன் போவதற்
குச் சம்மதிக்கவில்லை; ஆனால் அவனை ஆசீர்வதித்தார். **26** அப்போது
அப்சலோம், “சரி, நீங்கள் வராவிட்டாலும் பரவாயில்லை, தயவுசெய்து என்
அண்ணன் அம்னோனையாவது எங்களுடன் அனுப்பி வையுங்கள்”[i] என்று
சொன்னான். அதற்கு ராஜா, “அவனை ஏன் கூப்பிடுகிறாய்?” என்று கேட்
டார். **27** ஆனாலும், அப்சலோம் வற்புறுத்திக் கேட்டதால், அம்னோனை
யும் இளவரசர்கள் எல்லாரையும் அவனுடன் அனுப்பிவைத்தார்.

28 அப்சலோம் தன்னுடைய வேலைக்காரர்களிடம், “சமயம் பார்த்துக்
கொண்டே இருங்கள்; அம்னோன் திராட்சமது குடித்து குஷியாக இருக்கும்
போது, ‘அம்னோனை வெட்டுங்கள்!’ என்று சொல்வேன், அப்போது அவ
னைத் தீர்த்துக்கட்டிவிடுங்கள். எதற்கும் பயப்படாதீர்கள். நான்தானே
உங்களுக்குக் கட்டளை கொடுக்கிறேன்? அதனால், தைரியமாகவும் உறுதி
யாகவும் இருங்கள்” என்று சொன்னான். **29** அப்சலோமின் வேலைக்காரர்
கள் அவன் கட்டளையிட்டபடியே அம்னோனைக் கொன்றுபோட்டார்கள்;

அதி. 13
a யோசு 7:6; எஸ்தர் 4:1; எரே 6:26
b 2சா 3:3; 2சா 13:1
c லேவி 18:9; உபா 27:22
d நீதி 19:13
e ஆதி 34:7
f நீதி 18:19
g யோவா 11:54
h 1ரா 1:9, 19
i சங் 55:21; நீதி 10:18; நீதி 26:24-26

13:18 * வே.வா., “அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த.”

அப்போது, மற்ற இளவரசர்கள் எல்லாரும் எழுந்து தங்களுடைய கோவேறு
கழுதைகளில்* ஏறி தப்பித்துப் போனார்கள். **30** அவர்கள் போய்க்கொண்
டிருந்தபோதே, "இளவரசர்கள் எல்லாரையும் அப்சலோம் கொன்றுவிட்டான்,
ஒருவர்கூட தப்பிக்கவில்லை" என்ற செய்தி ராஜாவுக்கு எட்டியது.
31 உடனே ராஜா எழுந்து தன்னுடைய உடையைக் கிழித்துக்கொண்டு தரை
யில் படுத்தார்; அவருடைய ஊழியர்கள் எல்லாரும் தங்களுடைய உடைக
ளைக் கிழித்துக்கொண்டு அவர் பக்கத்தில் நின்றார்கள்.

32 அப்போது தாவீதின் அண்ணனாகிய சிமியாவின்[a] மகன் யோன
தாப்[b] அவரிடம், "எஜமானே, இளவரசர்கள் எல்லாரும் கொல்லப்பட்டதாக
நினைத்துக்கொள்ளாதீர்கள். அம்னோன் மட்டும்தான் கொல்லப்பட்டான்.[c]
அப்சலோமின் கட்டளைப்படிதான் இது நடந்தது. அவன் தங்கை தாமாரை
அம்னோன் என்றைக்குக் கெடுத்தானோ[d] அன்றைக்கே அவனைத் தீர்த்
துக்கட்ட முடிவு பண்ணிவிட்டான்.[e] **33** ராஜாவே, 'இளவரசர்கள் எல்லா
ரும் செத்துவிட்டார்கள்' என்ற செய்தியை நம்பாதீர்கள். அது வெறும் வதந்தி
தான்; அம்னோன் மட்டும்தான் செத்துப்போனான்" என்று சொன்னான்.

34 இதற்கிடையே, அப்சலோம் ஓடிப்போனான்.[f] பிற்பாடு, மலையோர
மாக இருந்த சாலையில் நிறைய பேர் வந்துகொண்டிருப்பதைக் காவல்
காரன் பார்த்தான். **35** ராஜாவிடம் யோனதாப்,[g] "இதோ! பாருங்கள், நான்
சொன்ன மாதிரியே இளவரசர்கள் வருகிறார்கள்" என்றான். **36** அவன்
பேசி முடித்ததும், இளவரசர்கள் சத்தமாக அழுதுகொண்டே உள்ளே வந்
தார்கள்; ராஜாவும் அவருடைய ஊழியர்கள் எல்லாரும்கூட பயங்கரமாகக்
கதறி அழுதார்கள். **37** ஆனால் அப்சலோம் ஓடிப்போய், கேசூரின் ராஜா
வும் அம்மியூத்தின் மகனுமாகிய தல்மாயிடம்[h] தஞ்சம் புகுந்தான். தாவீது
தன்னுடைய மகன் அம்னோனுக்காகப் பல நாட்கள் துக்கம் அனுசரித்தார்.
38 அப்சலோம் கேசூருக்குத்[i] தப்பித்து ஓடி அங்கே மூன்று வருஷங்கள்
தங்கியிருந்தான்.

39 கடைசியில், அம்னோன் இறந்த துக்கத்திலிருந்து தாவீது ராஜா மீண்
டார். அதனால், அப்சலோமைப் பார்க்க ஏங்கினார்.

14 அப்சலோமைப் பார்க்க ராஜா ஏங்குகிறார்[j] என்பதை செருயா
வின்[k] மகனான யோவாப் புரிந்துகொண்டார். **2** அதனால் தெக்
கோவாவுக்கு[l] ஆள் அனுப்பி புத்திசாலி பெண் ஒருத்தியை வரவழைத்தார்;
அவளிடம், "செத்துப்போன ஒருத்தருக்காகத் துக்கம் அனுசரிக்கிற மாதிரி
நடி. துக்க உடையைப் போட்டுக்கொள். உடம்பில் எண்ணெய் பூசிக்கொள்
ளாதே.[m] யாரையோ பறிகொடுத்துவிட்டு ரொம்ப நாளாக அழுது புலம்பு
வதுபோல் காட்டிக்கொள். **3** பின்பு, ராஜாவிடம் போய் நான் சொல்லிக்
கொடுக்கிற மாதிரி பேசு" என்று சொன்னார். ராஜாவிடம் என்னென்ன பேச
வேண்டும் என்பதை யோவாப் அவளுக்குச் சொல்லிக்கொடுத்தார்.

4 தெக்கோவா ஊரைச் சேர்ந்த அந்தப் பெண் ராஜாவின் முன்னால்
போய் சாஷ்டாங்கமாய் விழுந்தாள்; பின்பு அவரிடம், "ராஜாவே, எனக்கு
உதவி செய்யுங்கள்!" என்று கெஞ்சினாள். **5** அதற்கு ராஜா, "என்ன விஷ
யம்?" என்று கேட்டார். அப்போது அவள், "நான் ஒரு விதவை, என் கண
வர் இறந்துவிட்டார். **6** எனக்கு இரண்டு மகன்கள்; வயலில் இருந்தபோது

13:29 *பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்த விலங்குகள்.

அதி. 13
a 1சா 16:9, 1நா 2:13
b 2சா 13:3
c 2சா 12:10
d லேவி 18: 9, 29, 2சா 13:12-14
e ஆதி 27:41, சங் 7:14, நீதி 18:19
f 2சா 13:38
g 2சா 13:3
h 2சா 3:3
i உபா 3:14, யோசு 12:4, 5, 2சா 14:23

அதி. 14
j 2சா 13:39, 2சா 18:33, 2சா 19:2
k 2சா 2:18, 1நா 2:15, 16
l 2நா 11:5, 6, 2நா 20:20, ஆமோ 1:1
m பிர 9:8, தானி 10:3

அதி. 14
a எண் 35:19
உபா 19:11, 12
b எண் 35:19, 27
உபா 19:6
c உபா 6:13
பிர 8:4
d யாத் 19:5
எண் 6:27
e 2சா 13:38
f 2சா 14:2, 7

இரண்டு பேரும் சண்டை போட்டுக்கொண்டார்கள். அவர்களை விலக்கி
விட யாரும் இல்லாததால் ஒருவன் இன்னொருவனை வெட்டிக் கொன்று
விட்டான். **7** இப்போது குடும்பத்தில் இருக்கிற எல்லாரும் இந்த அடி
மைப் பெண்ணுக்கு எதிராக வந்து, 'சகோதரனைக் கொன்ற அந்தக்
கொலைகாரனை எங்கள் கையில் ஒப்படைத்துவிடு. சகோதரனைக் கொன்ற
தற்காக அவனைப் பழிவாங்காமல் விட மாட்டோம்;[a] உனக்கு வாரிசே
இல்லாமல் போனாலும் பரவாயில்லை!' என்று சொல்கிறார்கள். என்னிடம்
இருக்கிற கடைசி தணலையும் அவர்கள் அணைத்துவிட்டால், இந்தப் பூமி
யில் என் கணவருடைய பெயர் சொல்ல வாரிசே இல்லாமல் போய்விடும்"
என்று சொன்னாள்.

8 அதற்கு ராஜா அவளிடம், "நீ வீட்டுக்குப் போ, நான் பார்த்துக்கொள்கி
றேன்" என்று சொன்னார். **9** தெக்கோவா ஊரைச் சேர்ந்த அந்தப் பெண்,
"ராஜாவே, என் எஜமானே, என் மகன் செய்த பாவத்துக்கு நானும் என் தகப்
பன் குடும்பமும் பழியை ஏற்றுக்கொள்கிறோம். ராஜாவுக்கோ அவருடைய
அரசுக்கோ எந்தக் களங்கமும் வராது" என்று சொன்னாள். **10** அதற்கு
ராஜா அவளிடம், "இதைப் பற்றி உன்னிடம் எவனாவது வாய் திறந்தால்,
அவனை என்னிடம் கூட்டிக்கொண்டு வா; இனிமேல் அவன் உனக்கு எந்
தத் தொந்தரவும் தராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொன்னார்.
11 அதற்கு அவள், "ராஜாவே, தயவுசெய்து உங்கள் கடவுளாகிய யெகோ
வாவை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். பழிவாங்கத் திரிகிறவன்[b] எனக்
கிருக்கும் ஒரே மகனையும் கொன்று என் கஷ்டத்தைக் கூட்டாமல் பார்த்
துக்கொள்ளுங்கள்" என்று சொன்னாள். அதற்கு அவர், "உயிருள்ள
கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,*[c] அவனு
டைய தலையிலிருந்து ஒரு முடிகூட கீழே விழாது" என்று சொன்னார்.
12 அந்தப் பெண் அவரிடம், "ராஜாவே, என் எஜமானே, இந்த அடிமைப்
பெண் உங்களிடம் ஒன்று சொல்லலாமா?" என்று கேட்டாள். அதற்கு அவர்,
"சொல்!" என்றார்.

13 அந்தப் பெண், "ராஜாவே, கடவுளுடைய ஜனங்களுக்குக்[d] கெடுதல்
வருகிற மாதிரியான காரியத்தை ஏன் செய்கிறீர்கள்? இப்போது நீங்கள்
சொன்ன வார்த்தைகளால் உங்களையே குற்றவாளியாக்கிக்கொண்டீர்களே.
நீங்களே உங்கள் மகனைத் திருப்பிக் கூப்பிடாமல் ஒதுக்கி வைத்திருக்கி
றீர்களே.[e] **14** தரையில் சிந்திய தண்ணீரைத் திரும்பவும் அள்ள முடியாது.
அதே மாதிரிதான் நம் உயிரும், போனால் போனதுதான். இருந்தாலும், நாம்
யாரும் சாவதைக் கடவுள் விரும்புவதில்லை. தவறு செய்ததற்காக
ஒதுக்கி வைக்கப்பட்டவனை அப்படியே விட்டுவிடாமல் அவனை மறுபடி
யும் சேர்த்துக்கொள்ளத்தான் கடவுள் வழிதேடுகிறார். **15** எஜமானே, மக்
கள் என்னைப் பயமுறுத்தியதால்தான் உங்களிடம் இதைச் சொல்ல வந்
தேன். 'ராஜாவிடம் பேசிப் பார்க்கலாம், ஒருவேளை அவர் இந்த அடிமைப்
பெண்ணின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வார்; **16** ராஜா நான் சொல்வ
தைக் கேட்டு, கடவுள் தந்த தேசத்தில் நானும் என்னுடைய ஒரே
மகனும் பழிவாங்கத் திரிகிறவன் கையில் அழிந்துபோகாமல் காப்பாற்று
வார்'[f] என்று நினைத்து வந்தேன். **17** அதோடு, ராஜாவிடம் போனால்

14:11 *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

ஆறுதல் கிடைக்கும் என்று நினைத்து வந்தேன். எஜமானே, உண்மைக் கட
வுளின் தூதரைப் போல் எது சரி எது தவறு என்று உங்களுக்கு நன்றாகவே
தெரியும். உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குத் துணையாக இருக்
கட்டும்” என்று சொன்னாள்.

18 அப்போது ராஜா அவளிடம், “நான் கேட்கிற கேள்விக்கு மறைக்கா
மல் பதில் சொல்” என்றார். அதற்கு அவள், “கேளுங்கள் ராஜாவே” என்று
சொன்னாள். **19** ராஜா அவளிடம், “யோவாப்தானே உன்னை அனுப்பி
வைத்தான்?”[a] என்று கேட்டார். அதற்கு அவள், “ஆமாம் ராஜாவே, நீங்கள்
சொல்வது சரிதான்.* உங்கள் உயிர்மீது ஆணையாகச் சொல்கிறேன்.# உங்
கள் ஊழியர் யோவாப்தான் இப்படியெல்லாம் பேசச்சொல்லி என்னிடம்
சொன்னார். **20** இப்போது இருக்கிற நிலைமையைச் சரிசெய்யத்தான் உங்
கள் ஊழியர் யோவாப் இப்படிச் செய்தார். ஆனால், என் எஜமான் உண்
மைக் கடவுளின் தூதரைப் போல ஞானமுள்ளவர். எந்த மூலையில் எது
நடந்தாலும் உங்களுக்குத் தெரியாமல் போகாது” என்று சொன்னாள்.

21 பின்பு ராஜா யோவாபைக் கூப்பிட்டு, “சரி, நீ சொன்னபடியே செய்கி
றேன்.[b] நீ போய் அப்சலோமைக் கூட்டிக்கொண்டு வா”[c] என்று சொன்னார்.
22 அதைக் கேட்டதும் யோவாப் தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்து,
ராஜாவைப் புகழ்ந்தார். அதோடு, “ராஜாவே, அடியேனின் வேண்டு
கோளை ஏற்றுக்கொண்டீர்கள். எஜமானே, என்மீது உங்களுக்குப் பிரியம்
இருக்கிறது என்பதை இன்றைக்குத் தெரிந்துகொண்டேன்” என்று சொன்
னார். **23** பின்பு, யோவாப் கேசூருக்குப்[d] போய் அப்சலோமை எருசலே
முக்குக் கூட்டிக்கொண்டு வந்தார். **24** ஆனால் ராஜா அவரிடம், “அவன்
என் முகத்தில் முழிக்க வேண்டாம், அவனுடைய வீட்டுக்கே போகட்
டும்” என்று சொல்லிவிட்டார். அதனால் அப்சலோம் தன்னுடைய வீட்டுக்
குப் போனான், அவன் ராஜாவைப் பார்க்கவில்லை.

25 இஸ்ரவேல் தேசத்தில், அப்சலோமைப் போல் பேரழகன் யாருமே
இல்லை. எல்லாரும் அவனுடைய அழகைப் புகழ்ந்தார்கள். உச்சிமுதல்
உள்ளங்கால்வரை அவனிடம் எந்தக் குறையும் இருக்கவில்லை. **26** தன்
னுடைய தலைமுடியின் பாரம் தாங்க முடியாமல் ஒவ்வொரு வருஷத்தின்
முடிவிலும் அதை வெட்டிக்கொள்வான். அரண்மனை எடைக்கல்லின்படி,*
அதன் எடை 200 சேக்கல்.# **27** அப்சலோமுக்கு மூன்று மகன்களும்[e]
ஒரு மகளும் இருந்தார்கள். அவனுடைய மகள் பெயர் தாமார். அவள்
ரொம்ப அழகாக இருந்தாள்.

28 அப்சலோம் எருசலேமுக்கு வந்து இரண்டு வருஷம் ஓடிவிட்டது,
ஆனால் ராஜாவின் முகத்தை அவன் பார்க்கவில்லை.[f] **29** அதனால்,
ராஜாவிடம் தூதுபோக யோவாபை வரச் சொல்லி அப்சலோம் ஆள்
அனுப்பினான். ஆனால் அவர் வரவில்லை. இரண்டாவது தடவை கூப்பிட்
டும் வரவில்லை. **30** கடைசியில் அப்சலோம் தன் வேலைக்காரர்களிடம்,

---

14:19 * வே.வா., “உங்களுடைய வார்த்தைக்கு இடது பக்கமோ வலது பக்கமோ யாரா லும் போக முடியாது.” # வே.வா., “நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **14:26** * இது அரண்மனையில் வைக்கப்பட்டிருந்த எடைக்கல்லாக இருந்திருக்கலாம் அல்லது சாதாரண சேக்கலிலிருந்து வித்தியாசப்பட்ட “ராஜ” சேக்கலாக இருந்திருக்கலாம். # சுமார் 2.3 கிலோ. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 14
a 2சா 14:1-3
b 2சா 14:13
c 2சா 13:38
d உபா 3:14
2சா 3:3
2சா 13:37
e 2சா 18:18
f 2சா 14:24

“யோவாபின் வயல் என்னுடைய வயலுக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது.
அதில் அவர் பார்லி பயிரிட்டிருக்கிறார். நீங்கள் போய், அதைத் தீ
வைத்துக் கொளுத்துங்கள்” என்று சொன்னான். அதனால், அப்சலோமின்
வேலைக்காரர்கள் யோவாபின் வயலுக்குத் தீ வைத்தார்கள். **31** உடனே,
யோவாப் எழுந்து அப்சலோம் வீட்டுக்கு வந்தார். அவனிடம், “ஏன்
உன் வேலைக்காரர்கள் என் வயலுக்குத் தீ வைத்தார்கள்?” என்று கேட்
டார். **32** அதற்கு அப்சலோம், “உங்களை வரச் சொல்லி ஆள் அனுப்பி
னேனே. எனக்காக ராஜாவிடம் நீங்கள் பேச வேண்டும் என்பதற்காகத்தான்
உங்களைக் கூப்பிட்டேன். நீங்கள் ராஜாவிடம் போய், ‘கேசூரிலிருந்து நான்
எதற்காக வந்தேன்?[a] நான் அங்கேயே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்
கும். இப்போது ராஜாவைப் பார்க்க எனக்கு அனுமதி வேண்டும். என்மேல்
தப்பு இருந்தால் அவர் என்னைக் கொல்லட்டும்’ என்று சொல்லி எனக்கா
கப் பேச வேண்டும்” என்று சொன்னான்.

33 யோவாப் இந்த விவரத்தை ராஜாவிடம் போய் சொன்னார். உடனே
அப்சலோமை ராஜா வரவழைத்தார். அவன் ராஜா முன்னால் போய் சாஷ்
டாங்கமாய் விழுந்தான். ராஜா அவனுக்கு முத்தம் கொடுத்தார்.[b]

15 இவற்றுக்குப் பின்பு, குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தை அப்சலோம்
வாங்கினான். தன்னுடைய ரதத்துக்கு முன்னால் ஓட 50 ஆட்களை
வேலைக்கு வைத்தான்.[c] **2** அவன் விடியற்காலையிலேயே எழுந்து நகர
வாசலுக்குப்[d] போகிற வழியில் நின்றுகொள்வான். ராஜாவிடம் நீதி கேட்க[e]
யாராவது வந்தால் அவரைக் கூப்பிட்டு, “எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்?”
என்று கேட்பான்; அதற்கு அவர், “அடியேன் இஸ்ரவேலில் இந்தக் கோத்தி
ரத்தைச் சேர்ந்தவன், இந்த ஊரிலிருந்து வருகிறேன்” என்று பதில் சொல்வார்.
3 பின்பு அப்சலோம் அவரிடம், “நீங்கள் சொல்வதெல்லாம் நியாயமாக
இருக்கிறது, ஆனால் உங்கள் வழக்கை விசாரிக்க ராஜா தரப்பில் ஒரு ஆள்
கூட இல்லையே” என்று சொல்வான். **4** அதோடு, “நான் மட்டும் இந்தத்
தேசத்துக்கே நீதிபதியாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! யாருக்கா
வது ஏதாவது வழக்கு இருந்தாலோ, ஏதாவது பிரச்சினையைத் தீர்க்க வேண்
டியிருந்தாலோ என்னிடம் வந்தால் போதும், நான் அவர்களுக்குக் கண்டிப்
பாக நியாயம் வழங்குவேன்” என்று சொல்வான்.

5 அவன் முன்னால் தலைவணங்க யாராவது வந்தால், தன் கையை
நீட்டி அவரை அரவணைத்து முத்தம் கொடுப்பான்.[f] **6** ராஜாவிடம் நீதி
கேட்க வருகிற இஸ்ரவேலர்கள் எல்லாரிடமும் இப்படித்தான் நடந்துகொள்
வான். இப்படியே இஸ்ரவேல் ஆண்களைத் தன் பக்கம் ஈர்த்துக்கொண்
டான்.*[g]

7 நான்கு* வருஷங்களுக்குப் பின்பு ராஜாவை அப்சலோம் பார்த்து,
“நான் யெகோவாவிடம் நேர்ந்திருக்கிறேன். அதனால் எப்ரோனுக்குப்[h]
போய் அதைச் செலுத்திவிட்டு வரட்டுமா? **8** எருசலேமுக்குத் திரும்பிவர
யெகோவா எனக்கு உதவி செய்தால், யெகோவாவுக்குப் பலி கொடுப்ப
தாக,* சீரியாவிலுள்ள கேசூரில் தங்கியிருந்தபோது[i] நேர்ந்துகொண்டேன்”[j]

15:6 *நே.மொ., “இஸ்ரவேலர்களுடைய இதயத்தைத் திருடிக்கொண்டான்.” **15:7** *அல்லது, “நாற்பது.” ஒருவேளை, 1சா 16:13-ன்படி தாவீது அபிஷேகம் செய்யப்பட்டு 40 வருஷங்களுக்குப் பின்பு. **15:8** *வே.வா., “யெகோவாவை வழிபடுவதாக.” நே.மொ., “யெகோவாவுக்குச் சேவை செய்வதாக.”

அதி. 14
a 2சா 14:23
b ஆதி 45:15

அதி. 15
c 1சா 8:11, 1ரா 1:5, நீதி 11:2
d உபா 25:7, ரூ 4:1
e 1சா 8:20, 2சா 8:15
f சங் 10:9, சங் 55:21, நீதி 26:25
g நீதி 11:9
h 2சா 3:2
i 2சா 13:38, 2சா 14:23
j லேவி 22:21

என்று சொன்னான். **9** அதற்கு ராஜா, “சரி, நல்லபடியாகப் போய்விட்டு வா”* என்று சொன்னார். அவன் புறப்பட்டு எப்ரோனுக்குப் போனான்.

10 அப்சலோம் இஸ்ரவேலின் எல்லா கோத்திரங்களுக்கும் உளவாளிகளை அனுப்பினான். “ஊதுகொம்பின் சத்தத்தைக் கேட்டதும் ‘அப்சலோம் எப்ரோனில்[a] ராஜாவாகிவிட்டார்!’ என்று முழங்குங்கள்” என அவர்களிடம் சொல்லியிருந்தான். **11** எருசலேமிலிருந்து 200 ஆண்கள் அப்சலோமுடன் எப்ரோனுக்குப் போயிருந்தார்கள். அப்சலோம்தான் அவர்களைக் கூப்பிட்டிருந்தான். அவர்களும் சந்தேகப்படாமல் போயிருந்தார்கள். அவனுடைய திட்டத்தைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. **12** அவன் பலி கொடுத்தபோது, கீலோ[b] நகரத்தைச் சேர்ந்த அகித்தோப்பேல்[c] என்பவனை அங்கிருந்து வரவழைத்தான்; அவன் தாவீதின் ஆலோசகன்.[d] அப்சலோமின் சதித்திட்டம் தீவிரமடைந்தது; ஆதரவாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே போனது.[e]

13 பின்பு தூதுவன் ஒருவன் தாவீதிடம் வந்து, “இஸ்ரவேல் ஆண்கள் அப்சலோம் பக்கம் சேர்ந்துவிட்டார்கள்!” என்று சொன்னான். **14** உடனே தாவீது எருசலேமில் தன்னுடன் இருந்த ஊழியர்கள் எல்லாரிடமும், “எழுந்திருங்கள், இங்கிருந்து ஓடிவிடலாம்.[f] இல்லாவிட்டால் அப்சலோமிடமிருந்து ஒருவர்கூட தப்பிக்க முடியாது! உடனே கிளம்புங்கள், அவன் சீக்கிரமாக நம்மைத் துரத்திப் பிடித்துக் கொன்றுவிடுவான். நகரத்தில் இருக்கிறவர்களை வெட்டிச் சாய்த்துவிடுவான்!”[g] என்று சொன்னார். **15** அதற்கு ராஜாவின் ஊழியர்கள், “எஜமானே, நீங்கள் என்ன சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறோம்”[h] என்று சொன்னார்கள். **16** அதனால், ராஜா அங்கிருந்து புறப்பட்டார், அவருடைய வீட்டார் எல்லாரும் அவர் பின்னால் போனார்கள். அரண்மனையைக் கவனித்துக்கொள்வதற்காகத் தன்னுடைய மறுமனைவிகள் 10 பேரை[i] மட்டும் விட்டுவிட்டுப் போனார். **17** ராஜாவின் பின்னால் மக்கள் எல்லாரும் போனார்கள். அவர்கள் பெத்-மெராக்கில்* சற்று நின்றார்கள்.

18 ராஜாவுடன் புறப்பட்ட எல்லா ஊழியர்களும் கிரேத்தியர்களும் பிலேத்தியர்களும்[j] காத் நகரத்திலிருந்து வந்த 600 ஆட்களும்[k] அணிவகுத்துப் போனார்கள். ராஜா அவர்களைப் பார்வையிட்டார்.* **19** அப்போது காத் நகரத்தைச் சேர்ந்த ஈத்தாயிடம்,[l] “நீயும் ஏன் எங்களுடன் வருகிறாய்? நீ திரும்பிப் போய்ப் புதிய ராஜாவோடு இரு. நீ அன்னிய தேசத்தைச் சேர்ந்தவன், உன்னுடைய ஊரைவிட்டு வேறு ஓடிவந்திருக்கிறாய். **20** நேற்றைக்குத்தான் நீ வந்தாய், இன்றைக்கே உன்னை அங்கும் இங்கும் நான் அலைய வைக்கலாமா? உன் ஆட்களைக் கூட்டிக்கொண்டு திரும்பிப் போ. யெகோவா உனக்கு உண்மையுள்ளவராக இருந்து மாறாத அன்பு காட்டுவார்!”[m] என்று சொன்னார். **21** அதற்கு ஈத்தாய், “ராஜாவே, எஜமானே, உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்.* உங்கள் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்.# வாழ்வோ சாவோ,

---

15:9 *நே.மொ., “சமாதானத்தோடு போ.” **15:17** *அநேகமாக, கடைசி வீட்டில். **15:18** *வே.வா., “அவர்கள் ராஜாவின் முகத்துக்கு முன்னால் கடந்துபோனார்கள்.” **15:21** *வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” #வே.வா., “நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.”

அதி. 15

a 2சா 2:1; 2சா 5:1, 5; 1நா 3:4
b யோசு 15:20, 51
c 2சா 16:23; 2சா 17:14; 2சா 23:8, 34
d சங் 41:9; சங் 55:12, 13; யோவா 13:18
e சங் 3:1; நீதி 24:21
f 2சா 19:9; சங் 3:மே.கு.
g 2சா 12:11
h நீதி 18:24
i 2சா 12:11; 2சா 16:21; 2சா 20:3
j 2சா 8:18; 2சா 20:7; 1ரா 1:38; 1நா 18:17
k யோசு 13:2, 3; 1சா 27:4; 1நா 18:1
l 2சா 18:2
m 2சா 2:5, 6; சங் 25:10; சங் 57:3; சங் 61:7; சங் 89:14

நீங்கள் எங்கே இருந்தாலும் அடியேன் உங்களோடுதான் இருப்பேன்!”[a]
என்று சொன்னார். **22** அதற்கு தாவீது, “சரி, பள்ளத்தாக்கைக் கடந்து போ”
என்று சொன்னார். அதனால், காத் நகரத்தைச் சேர்ந்த ஈத்தாய்[b] தன்னுடைய
எல்லா ஆட்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் கூட்டிக்கொண்டு
பள்ளத்தாக்கைக் கடந்து போனார்.

23 ராஜாவும் அவருடைய ஆட்களும் போனபோது, எருசலேமிலும்
அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் வாழ்ந்த மக்கள் கதறி அழுதார்கள்.
கீதரோன் பள்ளத்தாக்கின்[c] பக்கத்தில் ராஜா நின்றுகொண்டிருந்தார்; அவ
ருடன் வந்தவர்கள் எல்லாரும் வனாந்தரத்துக்குப் போகும் பாதையில்
போவதற்காகப் பள்ளத்தாக்கைக் கடந்துகொண்டிருந்தார்கள். **24** சாதோக்
கும்கூட[d] அங்கே இருந்தார். உண்மைக் கடவுளின் ஒப்பந்தப் பெட்டி
யைச் சுமந்துகொண்டு[e] லேவியர்கள்[f] எல்லாரும் அவருடன் வந்திருந்தார்
கள்; அவர்கள் உண்மைக் கடவுளின் பெட்டியைக் கீழே வைத்தார்கள்.
அபியத்தாரும்[g] அங்கே வந்திருந்தார். அந்தச் சமயத்தில் தாவீதுடன்
வந்தவர்கள் எல்லாரும் நகரத்திலிருந்து வெளியேறி பள்ளத்தாக்கைக் கடந்
துவிட்டார்கள். **25** ஆனால் சாதோக்கிடம் ராஜா, “உண்மைக் கடவுளின்
பெட்டியை நகரத்துக்குக் கொண்டுபோங்கள்.[h] யெகோவாவுக்கு என்மேல்
கருணை இருந்தால், அவர் என்னைத் திரும்பக் கூட்டிக்கொண்டு வருவார்.
அப்போது நான் இந்தப் பெட்டியையும் இதன் கூடாரத்தையும் பார்ப்பேன்.[i]
26 அவருக்கு என்னைப் பிடிக்காவிட்டால், அவருக்கு எது சரியென்று படு
கிறதோ அதையே செய்யட்டும்” என்று சொன்னார். **27** அதோடு குருவா
கிய சாதோக்கைப் பார்த்து, “நீங்கள் இறைவாக்கு சொல்பவர்,[j] இல்
லையா? நிம்மதியாக எருசலேமுக்குத் திரும்பிப் போங்கள். உங்கள்
மகன் அகிமாசையும் அபியத்தாரின் மகன் யோனத்தானையும்[k] உங்க
ளுடன் கூட்டிக்கொண்டு போங்கள். **28** உங்களிடமிருந்து தகவல் வரும்
வரை நான் வனாந்தரத்திலுள்ள ஆற்றுத்துறைகளில்* காத்திருப்பேன்”[l]
என்று சொன்னார். **29** அதனால், சாதோக்கும் அபியத்தாரும் உண்மைக்
கடவுளின் பெட்டியை எடுத்துக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பிப்போய்,
அங்கேயே இருந்தார்கள்.

30 தாவீது அழுதுகொண்டே ஒலிவமலையில்[m] ஏறினார்; தலையில்
முக்காடு போட்டுக்கொண்டு வெறுங்காலில் ஏறினார். அவருடன் போன
மக்கள் எல்லாரும்கூட தலையில் முக்காடு போட்டுக்கொண்டு அழுதப
டியே ஏறினார்கள். **31** “இந்தச் சதியில் அப்சலோமுடன்[n] அகித்தோப்பே
லும் சேர்ந்துகொண்டார்”[o] என்ற செய்தி தாவீதுக்கு வந்தது. உடனே தாவீது,
“யெகோவாவே, தயவுசெய்து அகித்தோப்பேலின் ஆலோசனையை முட்
டாள்களின் ஆலோசனைபோல் ஆக்கிவிடுங்கள்”[p] என்று சொல்லி மன்றா
டினார்.[q]

32 மக்கள் எல்லாரும் கடவுளை வழிபட்டுவந்த மலை உச்சிக்கு தாவீது
வந்துசேர்ந்தபோது, அற்கியனான[r] ஊசாய்[s] அவரைச் சந்திக்க வந்தார்;
அவர் தன்னுடைய அங்கியைக் கிழித்து, தலையில் மண்ணை வாரிப்போட்
டிருந்தார். **33** தாவீது அவரிடம், “நீ என்னோடு வந்தால் எனக்குப் பாரமா
கத்தானே இருப்பாய். **34** அதனால் நகரத்துக்கே திரும்பி போ. அப்சலோ
மிடம் போய், ‘ராஜாவே, நான் உங்கள் ஊழியன். இதுவரை உங்கள்

15:28 * ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதிகள்.

அதி. 15
a நீதி 17:17; நீதி 18:24
b 2சா 18:2
c 1ரா 2:36, 37; 2நா 30:14; யோவா 18:1
d 2சா 8:17; 2சா 20:25; 1ரா 1:8; 1ரா 2:35; 1நா 6:8
e யாத் 37:1; லேவி 16:2; எண் 4:15; எண் 7:9; 1நா 15:2
f எண் 8:19
g 1சா 22:20; 1சா 30:7
h 2சா 6:17
i 2சா 7:2; சங் 26:8; சங் 27:4
j 1சா 9:9
k 2சா 17:17
l 2சா 15:36; 2சா 17:16, 21
m மத் 21:1; மத் 24:3; அப் 1:12
n சங் 3:மே.கு.
o சங் 41:9; சங் 55:12, 13; யோவா 13:18
p 2சா 16:23; 2சா 17:14
q சங் 3:7
r யோசு 16:1, 2
s 2சா 16:16

அப்பாவுக்கு ஊழியம் செய்தேன், இனி உங்களுக்கு ஊழியம் செய்
வேன்’[a] என்று சொல். அப்போதுதான் அகித்தோப்பேலின் ஆலோச
னையை உன்னால் ஒன்றுமில்லாமல் ஆக்க முடியும்.[b] **35** குருமார்களான
சாதோக்கும் அபியத்தாரும் உனக்குத் துணையாக இருப்பார்கள். அரண்ம
னையில் உனக்கு என்ன தகவல் தெரிந்தாலும் அதை அவர்களுக்குத்
தெரியப்படுத்து.[c] **36** சாதோக்கின் மகன் அகிமாசும்[d] அபியத்தாரின் மகன்
யோனத்தானும்[e] அவர்களுடன்தான் இருக்கிறார்கள். உன் காதுக்கு வருகிற
விஷயங்களையெல்லாம் அவர்கள் மூலம் எனக்குச் சொல்லி அனுப்பு”
என்று சொன்னார். **37** அதனால், தாவீதின் நண்பர்* ஊசாய்[f] நகரத்துக்குள்
போனார். அதேசமயத்தில், அப்சலோமும் எருசலேமுக்குள் நுழைந்தான்.

16 தாவீது மலை உச்சியைக் கடந்து சற்றுத் தூரம் போனபோது,[g]
மேவிபோசேத்தின்[h] வேலைக்காரனான சீபா[i] அவரைச் சந்திக்க
வந்தான். இரண்டு கழுதைகள்மீது 200 ரொட்டிகளையும் 100 உலர்ந்த
திராட்சை அடைகளையும் 100 கோடைக் காலத்துப் பழ* அடைகளையும்
ஒரு பெரிய ஜாடி நிறைய திராட்சமதுவையும் ஏற்றிக்கொண்டு வந்தான்.[j]
2 அப்போது சீபாவிடம், “இதையெல்லாம் எதற்காகக் கொண்டுவந்தாய்?”
என்று ராஜா கேட்டார். அதற்கு சீபா, “ராஜாவின் குடும்பத்தார் பயணம்
செய்வதற்காகக் கழுதைகளையும், அவருடைய ஆட்கள் சாப்பிடுவதற்காக
ரொட்டிகளையும் அடைகளையும், வனாந்தரத்தில் நடந்து களைத்துப்போகி
றவர்களுக்காகத் திராட்சமதுவையும் கொண்டுவந்தேன்”[k] என்று சொன்
னான். **3** ராஜா அவனிடம், “சரி, உன் எஜமானுடைய பேரன் எங்கே?”[l]
என்று கேட்டார். அதற்கு சீபா, “அவர் எருசலேமில்தான் இருக்கிறார். ‘என்
அப்பாவிடமிருந்து பறிபோன ஆட்சியை இஸ்ரவேலர்கள் இன்று எனக்
குத் திருப்பிக் கொடுப்பார்கள்’ என்று சொன்னார்”[m] என்றான். **4** உடனே
ராஜா, “மேவிபோசேத்தின் சொத்துகளையெல்லாம் நீ எடுத்துக்கொள்”
என்று சொன்னார்.[n] அதற்கு சீபா, “ராஜாவே, என் எஜமானே, உங்கள் முன்
னால் தலைவணங்குகிறேன். உங்கள் கருணை எனக்கு எப்போதும் வேண்
டும்”[o] என்று சொன்னான்.

5 பகூரிம் என்ற இடத்துக்கு தாவீது ராஜா வந்துசேர்ந்தபோது, சவுலின்
வம்சத்தைச் சேர்ந்த கேராவின் மகன் சீமேயி[p] அவரைச் சபித்துக்கொண்டே
வந்தான்.[q] **6** தாவீதுமீதும் அவருடைய எல்லா ஊழியர்கள்மீதும் கற்களை
எறிந்துகொண்டே இருந்தான். அதோடு, தாவீதின் வலது பக்கத்திலும்
இடது பக்கத்திலும் இருந்த எல்லா ஆட்கள்மீதும் மாவீரர்கள்மீதும் கற்களை
எறிந்துகொண்டே இருந்தான். **7** சீமேயி அவரைப் பார்த்து, “கொலைகா
ரனே!* தொலைந்துபோ, கேடுகெட்டவனே! ஓடிப்போ. **8** சவுலின் குடும்
பத்தை ஒழித்துக்கட்டிவிட்டுத்தானே நீ ராஜாவாக ஆனாய்? அந்தப் பழி
பாவத்துக்குத்தான் யெகோவா இப்போது உன்னிடம் கணக்குக் கேட்கிறார்.
யெகோவா உன்னை நீக்கிவிட்டு உன் மகன் அப்சலோமை ராஜாவாக்கியி
ருக்கிறார். கொலைகாரனே, நீ செய்த பாவத்துக்குத்தான் இப்போது நன்றாக
அனுபவிக்கிறாய்!”[r] என்று சொல்லி சபித்தான்.

9 அப்போது செருயாவின்[s] மகன் அபிசாய் தாவீது ராஜாவைப் பார்த்து,
“எஜமானே, இந்தச் செத்த நாய்[t] உங்களைச் சபிப்பதா?[u] ராஜாவே, சொல்

15:37 *வே.வா., “ஆலோசகர்.” **16:1** *முக்கியமாக, அத்திப்பழங்கள். பேரீச்சம் பழங்களாகவும் இருந்திருக்கலாம். **16:7** *வே.வா., “இரத்தப்பழி உள்ளவனே.”

அதி. 15
a 2சா 16:18, 19
b 2சா 17:7, 14
c 2சா 17:15, 16
d 2சா 18:19
e 2சா 17:17
1ரா 1:42
f 2சா 16:16
1நா 27:33

அதி. 16
g 2சா 15:30
h 2சா 9:6
i 2சா 9:2, 9
j 1சா 25:18
k 2சா 17:27-29
l 2சா 9:3
m 2சா 19:25-27
n 2சா 9:9, 10
o நீதி 26:22
p 2சா 19:16
1ரா 2:8, 44
q யாத் 22:28
பிர 10:20
r 1சா 24:6, 7
1சா 26:9, 11
சங் 3:1, 2
சங் 7:1
சங் 71:10, 11
s 1நா 2:15, 16
t 1சா 24:14
u யாத் 22:28

லுங்கள், அவன் தலையைச் சீவிவிடுகிறேன்!"[a] என்று சொன்னார்.
10 அதற்கு ராஜா, "செருயாவின் மகன்களே,[b] நீங்கள் ஏன் தலையிடுகிறீர்
கள்? விடுங்கள், அவன் என்னைச் சபிக்கட்டும்.[c] 'தாவீதைச் சபி' என்று
யெகோவாவே அவனிடம் சொல்லியிருக்கிறார்.[d] அப்படியிருக்கும்போது,
'ஏன் இப்படிச் செய்கிறாய்?' என்று யார் கேள்வி கேட்க முடியும்?" என்றார்.
11 பின்பு தாவீது அபிசாயிடமும் அவருடைய எல்லா ஊழியர்களிடமும்,
"நான் பெற்ற மகனே என்னைக் கொன்றுபோடத் துடிக்கும்போது,[e] இந்த
பென்யமீன் கோத்திரத்தான்[f] சும்மாவா இருப்பான்? யெகோவாதான் அவ
னைச் சபிக்கச் சொல்லியிருக்கிறார்; அவன் சபிக்கட்டும், விட்டுவிடுங்கள்.
12 ஒருவேளை நான் படுகிற கஷ்டத்தை யெகோவா பார்ப்பார்.[g] இன்று
இவன் கொடுத்த சாபத்தை ஆசீர்வாதமாக யெகோவா மாற்றுவார்"[h]
என்று சொன்னார். **13** தாவீதும் அவருடைய ஆட்களும் மலையிலி
ருந்து இறங்கிக்கொண்டிருந்தார்கள். அப்போது, சீமேயியும் அவரைச் சபித்
துக்கொண்டே பக்கவாட்டில் நடந்துவந்தான்;[i] அவர்மீது கற்களை எறிந்து
கொண்டும் மண்ணை வாரி இறைத்துக்கொண்டும் வந்தான்.

14 ராஜாவும் அவருடன் இருந்த எல்லாரும் நீண்ட நேரம் பயணம்
செய்து ஓரிடத்துக்கு வந்துசேர்ந்தார்கள்; களைத்துப்போனதால் அங்கே
ஓய்வெடுத்தார்கள்.

15 இதற்கிடையே, அப்சலோமும் இஸ்ரவேலைச் சேர்ந்த அவனுடைய
எல்லா ஆட்களும் எருசலேமுக்கு வந்துசேர்ந்தார்கள்; அகித்தோப்பேலும்[j]
அவர்களுடன் வந்தான். **16** தாவீதின் நண்பரான* அற்கியன்[k] ஊசாயும்[l]
அங்கே வந்து, "ராஜா பல்லாண்டு வாழ்க![m] ராஜா பல்லாண்டு வாழ்க!" என்று
அப்சலோமிடம் சொன்னார். **17** அதற்கு அவன், "இதுதான் உங்கள் நண்
பருக்கு நீங்கள் காட்டுகிற விசுவாசமா?* நீங்கள் ஏன் உங்கள் நண்பருடன்
போகவில்லை?" என்று கேட்டான். **18** அதற்கு ஊசாய், "யெகோவாவும்
இங்கிருக்கிற மக்களும் இஸ்ரவேல் ஆண்கள் எல்லாரும் யாரைத் தேர்ந்தெ
டுத்திருக்கிறார்களோ அவருக்குத்தான் நான் ஆதரவு கொடுப்பேன். அவர்
கூடத்தான் இருப்பேன். **19** மறுபடியும் சொல்கிறேன், உங்கள் அப்பா
வுக்கு எப்படிச் சேவை செய்தேனோ, அதேமாதிரி உங்களுக்கும் சேவை
செய்வேன்.[n] இப்போது நான் யாருக்குச் சேவை செய்கிறேன்? அவருடைய
மகனுக்குத்தானே?" என்று சொன்னார்.

20 பின்பு அப்சலோம் அகித்தோப்பேலிடம், "நான் என்ன செய்ய
வேண்டும், சொல்லுங்கள்"*[o] என்று கேட்டான். **21** அதற்கு அகித்தோப்
பேல், "அரண்மனையைக் கவனித்துக்கொள்வதற்காக உங்கள் அப்பா அவ
ருடைய மறுமனைவிகளை விட்டுவிட்டுப் போயிருக்கிறார்,[p] இல்லையா?
அவர்களோடு உறவுகொள்ளுங்கள்.[q] நீங்கள் உங்களுடைய அப்பா
வைக் கேவலப்படுத்திய விஷயம் இஸ்ரவேலர்கள் எல்லாருக்கும் தெரிய
வரும்போது, உங்கள் ஆதரவாளர்களுக்கு இன்னும் தைரியம் கிடைக்கும்"
என்று சொன்னான். **22** அதனால், அரண்மனை மாடியில் அப்சலோ
முக்காக ஒரு கூடாரம் போட்டார்கள்.[r] இஸ்ரவேலர்கள் எல்லாருக்கும் முன்
னால்[s] அப்சலோம் தன்னுடைய அப்பாவின் மறுமனைவிகளோடு உறவு
கொண்டான்.[t]

16:16 *வே.வா., "ஆலோசகரான." **16:17** *வே.வா., "மாறாத அன்பா?" **16:20** *வே.வா., "எனக்கு ஆலோசனை சொல்லுங்கள்."

அதி. 16
a 1சா 26:8
b 2சா 19:22, 1ரா 2:5
c சங் 37:8, 1பே 2:23
d 2சா 12:10
e 2சா 12:11, 2சா 15:14, 2சா 17:12
f 2சா 19:16
g ஆதி 29:32, யாத் 3:7, சங் 25:18
h சங் 109:28
i 2சா 16:5
j 2சா 15:12, 31
k யோசு 16:1, 2
l 2சா 15:32, 37, 1நா 27:33
m 1ரா 1:25
n 2சா 15:34
o சங் 37:12
p 2சா 15:16
q லேவி 18:8, லேவி 20:11, 1ரா 2:22
r 2சா 11:2
s 2சா 12:11, 12
t உபா 22:30, 2சா 20:3

23 அந்தக் காலத்தில், அகித்தோப்பேல் கொடுத்த ஆலோசனை உண்
மைக் கடவுளின் ஆலோசனையாகவே கருதப்பட்டது. தாவீதும் சரி, அப்ச
லோமும் சரி, அகித்தோப்பேல் கொடுத்த எல்லா ஆலோசனைகளையும்[a]
அப்படித்தான் உயர்வாகக் கருதினார்கள்.

17 அகித்தோப்பேல் அப்சலோமிடம், "12,000 வீரர்களைத் தேர்ந்தெ
டுத்து இன்று ராத்திரி தாவீதைத் துரத்திக்கொண்டு போக எனக்கு
அனுமதி கொடுங்கள். **2** அவர் அலுத்துக் களைத்திருக்கும்* சமயம்[b]
பார்த்து அவரைத் தாக்குவேன், அவரைக் கதிகலங்க வைப்பேன். அவரு
டன் இருப்பவர்கள் எல்லாரும் சிதறி ஓடிவிடுவார்கள். அப்போது ராஜாவை
மட்டும் வெட்டி வீழ்த்துவேன்.[c] **3** பின்பு, மக்கள் எல்லாரையும் உங்களி
டம் திரும்பக் கூட்டிக்கொண்டு வருவேன். நீங்கள் தேடுகிற ஆள் ஒழிந்
தால்தான் அவர்கள் எல்லாரும் திரும்பி வருவார்கள். அதன் பின்பு, மக்கள்
எல்லாரும் சமாதானமாக இருப்பார்கள்" என்று சொன்னான். **4** அப்சலோ
முக்கும் இஸ்ரவேலின் பெரியோர்கள்* எல்லாருக்கும் இந்த ஆலோசனை
ரொம்பவே பிடித்திருந்தது.

5 அப்போது அப்சலோம், "அற்கியனான ஊசாயைக்[d] கூப்பிடுங்கள்.
அவரிடமும் ஒரு வார்த்தை கேட்டுவிடலாம்" என்று சொன்னான்.
6 ஊசாய் வந்ததும், "அகித்தோப்பேல் இப்படி ஆலோசனை சொன்னார்.
அவர் சொன்னபடி செய்யலாமா? இல்லையென்றால், நீங்கள் ஏதாவது
ஆலோசனை சொல்லுங்கள்" என்று அப்சலோம் கேட்டான். **7** அதற்கு
ஊசாய், "இந்தத் தடவை அகித்தோப்பேல் சொன்ன ஆலோசனை எனக்
குச் சரியாகப் படவில்லை"[e] என்று சொன்னார்.

8 "உங்கள் அப்பாவும் அவருடைய ஆட்களும் பலசாலிகள்[f] என்பது
உங்களுக்கே நன்றாகத் தெரியும். குட்டிகளைப் பறிகொடுத்த கரடி மாதிரி
இப்போது அவர்கள் வெறியோடு அலைகிறார்கள்.*[g] அதோடு, உங்கள்
அப்பா ஒரு போர்வீரர்.[h] ராத்திரி நேரத்தில் மக்களோடு தங்க மாட்டார்.
9 இந்த நிமிஷம்கூட அவர் ஒரு குகையிலோ* வேறு எங்கோதான்
பதுங்கியிருப்பார்.[i] ஒருவேளை அவர் நம்மை முதலில் தாக்க ஆரம்பித்
தால், அதைக் கேள்விப்படுகிற எல்லாரும், 'அப்சலோமின் வீரர்கள் தோற்
றுப்போனார்கள்!' என்று சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள். **10** அதைக்
கேட்டால், சிங்கம் போல வீரமாக[j] இருக்கிறவன்கூட பயத்தில் வெலவெ
லத்துப் போய்விடுவான். உங்கள் அப்பா ஒரு பலசாலி,[k] அவருடன் இருக்
கிற ஆட்கள் தைரியசாலிகள். இது இஸ்ரவேலர்கள் எல்லாருக்கும் தெரியும்.
11 அதனால், என்னுடைய ஆலோசனை இதுதான்: தாண்முதல் பெயெர்-
செபாவரை[l] இருக்கிற இஸ்ரவேலர்கள் எல்லாரையும் ஒன்றுதிரட்டுவோம்.
கடற்கரை மணல்போல் எண்ண முடியாத[m] வீரர்களுக்கு நீங்களே தலை
மைதாங்கிச் செல்லுங்கள். **12** அவரை எங்கே பார்த்தாலும் சரி, தாக்கு
வோம். தரையில் இறங்கும் பனிபோல் சூழ்ந்துகொள்வோம். அவரும்
அவருடன் இருக்கும் யாரும் தப்பிக்க முடியாது. **13** அவர் ஏதாவது ஒரு
நகரத்துக்குள் பதுங்கிக்கொண்டால், இஸ்ரவேலர்கள் எல்லாரும் சேர்ந்து

17:2 *வே.வா., "அவருடைய இரண்டு கைகளும் தளர்ந்திருக்கும்." **17:4** *வே.வா., "மூப்பர்கள்." **17:8** *வே.வா., "மனக்கசப்புடன் இருக்கிறார்கள்." **17:9** *வே.வா., "குழியிலோ, பள்ளத்தாக்கிலோ."

அதி. 16
a 2சா 15:12; 2சா 17:14, 23

அதி. 17
b 2சா 16:14
c சங் 37:12; சங் 41:9; சங் 55:12, 13
d 2சா 15:32; 2சா 16:16
e 2சா 15:34
f 1சா 16:18; 2சா 15:18; 2சா 23:8, 18; 1நா 11:26
g நீதி 17:12
h 1சா 17:50; 1சா 18:7; 1சா 19:8; 2சா 10:18
i 1சா 22:1; 1சா 23:19
j ஆதி 49:9; 2சா 1:23; ஏசா 31:4
k 1சா 18:5
l நியா 20:1
m 1ரா 4:20

அந்த நகரத்தைக் கயிறு கட்டி இழுத்துவருவோம்; சின்னக் கல்லைக்
கூட மிச்சம் வைக்காமல் அப்படியே பள்ளத்தாக்குக்குள் தள்ளிவிடுவோம்”
என்று சொன்னார்.

14 அப்போது அப்சலோமும் அவனோடு இருந்த இஸ்ரவேல் ஆண்
கள் எல்லாரும், “அகித்தோப்பேல் சொன்னதைவிட அற்கியனான ஊசாய்
சொன்ன ஆலோசனை நன்றாக இருக்கிறது!”[a] என்றார்கள். அகித்தோப்
பேல் சொன்ன நல்ல ஆலோசனையை[b] எடுபடாமல் போக வைக்க வேண்
டும் என்று யெகோவா தீர்மானித்திருந்தார்.* அப்சலோமை அழிப்பதற்காக
யெகோவா இப்படித் தீர்மானித்திருந்தார்.[c]

15 பின்பு, ஊசாய் குருமார்களான சாதோக்கையும் அபியத்தாரையும்[d]
பார்த்து, “அப்சலோமுக்கும் இஸ்ரவேலின் பெரியோர்களுக்கும்* அகித்
தோப்பேல் இப்படியெல்லாம் ஆலோசனை கொடுத்திருக்கிறார். ஆனால்,
நான் இப்படியெல்லாம் ஆலோசனை கொடுத்திருக்கிறேன். **16** உடனே
தாவீதுக்குத் தகவல் அனுப்பி அவரை எச்சரியுங்கள். அவரிடம் போய்,
‘நீங்கள் இன்று ராத்திரி வனாந்தரத்திலுள்ள ஆற்றுத்துறைகளில்* தங்கா
மல், உடனடியாக யோர்தானைக் கடந்துபோக வேண்டும். இல்லையென்
றால், ராஜாவும் அவருடன் இருக்கிற மக்கள் எல்லாரும் அழிந்துவிடுவார்
கள்’# என்று சொல்லுங்கள்”[e] என்றார்.

17 நகரத்துக்குள் போனால் யாராவது பார்த்துவிடுவார்கள் என்பதால்
யோனத்தானும்[f] அகிமாசும்[g] என்-ரொகேலில்[h] தங்கியிருந்தார்கள். ஒரு
வேலைக்காரப் பெண் அவர்களிடம் போய் விஷயத்தைச் சொன்னாள்.
உடனே அவர்கள் தாவீது ராஜாவிடம் தகவல் சொல்ல கிளம்பினார்கள்.
18 அவர்களை ஒரு வாலிபன் பார்த்துவிட்டு, அப்சலோமிடம் தெரிவித்
தான். அதனால் அவர்கள் இரண்டு பேரும் வேகவேகமாக பகூரிமுக்
குப்[i] போய், ஒருவருடைய வீட்டு முற்றத்தில் இருந்த கிணற்றுக்குள் இறங்கி
ஒளிந்துகொண்டார்கள். **19** அவருடைய மனைவி அந்தக் கிணற்றை ஒரு
துணியால் மூடி, அதன்மேல் நொய்யைப் பரப்பி வைத்தாள். அவர்கள்
ஒளிந்திருந்த விஷயம் யாருக்கும் தெரியாது. **20** அப்சலோமின் ஊழியர்
கள் அவளுடைய வீட்டுக்கு வந்து, “அகிமாசும் யோனத்தானும் எங்கே?”
என்று கேட்டார்கள். அதற்கு அவள், “அவர்கள் ஆற்றுப்பக்கம் போய்விட்
டார்கள்” என்று சொன்னாள்.[j] எவ்வளவு தேடியும் அந்த ஆட்களால் அவர்
களைக் கண்டுபிடிக்க முடியவில்லை; அதனால், அவர்கள் மறுபடியும் எரு
சலேமுக்கே திரும்பிப்போனார்கள்.

21 அவர்கள் போன பின்பு, யோனத்தானும் அகிமாசும் கிணற்றிலி
ருந்து வெளியே வந்தார்கள். தாவீது ராஜாவிடம் போய், “உடனே கிளம்பி,
யோர்தானைக் கடந்துபோய்விடுங்கள். அகித்தோப்பேல் உங்களுக்கு எதி
ராக இப்படியெல்லாம் ஆலோசனை கொடுத்திருக்கிறார்”[k] என்று சொன்
னார்கள். **22** உடனே தாவீதும் அவருடன் இருந்த எல்லா ஆட்களும்
எழுந்து யோர்தானைக் கடந்தார்கள். விடிவதற்குள், ஒருவர் விடாமல் அத்
தனை பேரும் யோர்தானைக் கடந்திருந்தார்கள்.

23 தன்னுடைய ஆலோசனைப்படி அப்சலோம் நடக்கவில்லை எனத்

அதி. 17
a நீதி 21:1
b 2சா 15:31, 34; 2சா 16:23; நீதி 19:21; நீதி 21:30
c உபா 2:30; 2நா 25:20
d 2சா 8:17; 2சா 15:35
e சங் 35:24, 25
f 1ரா 1:42
g 2சா 15:27, 36; 2சா 18:19
h யோசு 15:7, 12; யோசு 18:16, 20; 1ரா 1:9
i 2சா 16:5; 2சா 19:16
j யாத் 1:19; யோசு 2:3-5; 1சா 19:12, 14; 1சா 21:2
k 2சா 17:1, 2

17:14 *வே.வா., “கட்டளையிட்டிருந்தார்.” **17:15** *வே.வா., “மூப்பர்களுக்கும்.”
17:16 *அல்லது, “பாலைநிலங்களில்.” #நே.மொ., “விழுங்கப்படுவார்கள்.”

தெரிந்ததும், அகித்தோப்பேல் ஒரு கழுதைமேல் சேணம்* வைத்துத் தன்
னுடைய சொந்த ஊருக்குப் போனான்.[a] வீட்டில் இருப்பவர்களிடம் சொல்ல
வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டு,[b] தூக்குப்போட்டுக்கொண்டு செத்
தான்.[c] பின்பு, அவனுடைய முன்னோர்களின் கல்லறையில் அடக்கம் செய்
யப்பட்டான்.

24 இதற்கிடையே தாவீது மக்னாயீம்[d] என்ற இடத்துக்குப் போனார்.
ஆனால், அப்சலோம் இஸ்ரவேல் ஆண்கள் எல்லாரையும் கூட்டிக்
கொண்டு யோர்தானைக் கடந்தான். **25** அப்சலோம் யோவாபுக்குப்[e] பதி
லாக அமாசாவை[f] படைத் தளபதியாக ஏற்படுத்தினான். எத்திரா என்ற
இஸ்ரவேலரின் மகன்தான் அமாசா. இந்த எத்திரா அபிகாயிலுடன்[g] உறவு
வைத்திருந்தார்.* அபிகாயில் நாகாசின் மகள்; யோவாபின் அம்மாவான
செருயாவின் சகோதரி. **26** அப்சலோமும் இஸ்ரவேல் ஆண்கள் எல்லா
ரும் கீலேயாத்[h] பிரதேசத்தில் முகாம்போட்டார்கள்.

27 தாவீது மக்னாயீமுக்கு வந்தவுடனே, அம்மோனியர்களின் நகரமான
ரப்பாவைச்[i] சேர்ந்த நாகாசின் மகன் சோபியும் லோ-தேபாரைச் சேர்ந்த
அம்மியேலின் மகன் மாகீரும்[j] ரோகிலிமைச் சேர்ந்த கீலேயாத்தியரான பர்
சிலாவும்[k] அவரைப் பார்க்க வந்தார்கள். **28** பாய்கள், பாத்திரங்கள், மண்
பானைகள், கோதுமை, பார்லி, மாவு, வறுத்த தானியங்கள், மொச்சைப்
பயறுகள், பருப்புகள், சுட்ட கதிர்கள், **29** தேன், வெண்ணெய், செம்மறியா
டுகள், பாலாடைக் கட்டிகள் ஆகியவற்றைக் கொண்டுவந்தார்கள். தாவீதும்
அவருடன் இருந்தவர்களும் சாப்பிடுவதற்காக இவற்றையெல்லாம் கொண்
டுவந்தார்கள்.[l] "வனாந்தரத்தில் இந்த மக்கள் பசிதாகத்தோடு இருப்பார்கள்,
களைத்துப்போயிருப்பார்கள் என்பதால் இவற்றைக் கொண்டுவந்தோம்"[m]
என்று சொன்னார்கள்.

18 பின்பு தாவீது தன்னுடன் இருந்த வீரர்களைக் கணக்கெடுத்தார்.
அவர்களில் நூறு நூறு பேருக்கும் ஆயிரம் ஆயிரம் பேருக்கும்
தலைவர்களை ஏற்படுத்தினார்.[n] **2** தாவீது தன்னுடைய வீரர்களை மூன்று
பிரிவுகளாகப் பிரித்து, ஒரு பிரிவை யோவாப்[o] தலைமையிலும்,* மற்றொரு
பிரிவை செருயாவின்[p] மகனும் யோவாபின் சகோதரனுமான அபிசாய்[q]
தலைமையிலும், இன்னொரு பிரிவை காத் நகரத்தைச் சேர்ந்த ஈத்தாய்[r]
தலைமையிலும் அனுப்பினார். அப்போது ராஜா, "நானும் உங்களோடு வரு
கிறேன்" என்று அவர்களிடம் சொன்னார். **3** அவர்களோ, "நீங்கள் எங்க
ளோடு வர வேண்டாம்.[s] நாங்கள் தப்பித்து ஓடினால், அவர்கள் கவலைப்
பட மாட்டார்கள். எங்களில் பாதிப் பேர் செத்தாலும் கண்டுகொள்ள
மாட்டார்கள். நீங்கள் ஒருவர் எங்களில் 10,000 பேருக்குச் சமம்.[t] அதனால்,
நீங்கள் நகரத்திலிருந்தே எங்களுக்கு உதவி செய்தால் போதும்" என்று
சொன்னார்கள். **4** அதற்கு ராஜா, "உங்களுக்கு எது சரியென்று படுகிறதோ
அதையே செய்கிறேன்" என்று சொன்னார். பின்பு, ராஜா நகரவாசலுக்குப்
பக்கத்தில் நின்றுகொண்டார். வீரர்கள் எல்லாரும் நூறு நூறாகவும் ஆயிரம்
ஆயிரமாகவும் புறப்பட்டுப் போனார்கள். **5** ராஜா யோவாபையும் அபி
சாயையும் ஈத்தாயையும் பார்த்து, "எனக்காக என் மகன் அப்சலோமிடம்

17:23 *சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை. **17:25** *அநேகமாக, எத்திரா அபிகாயிலின் கணவராக இருந்திருக்கலாம். **18:2** *நே.மொ., "கையிலும்."

அதி. 17
a யோசு 15:20, 51; 2சா 15:12
b 2ரா 20:1
c 1சா 31:4; 1ரா 16:18; சங் 5:10; சங் 55:23; மத் 27:3, 5; அப் 1:18
d ஆதி 32:1, 2; யோசு 13:24, 26
e 2சா 8:16
f 2சா 19:13; 2சா 20:4, 10
g 1நா 2:16, 17
h எண் 32:1; உபா 3:15
i உபா 3:11; யோசு 13:24, 25; 2சா 12:26, 29
j 2சா 9:3-5
k 2சா 19:31, 32; 1ரா 2:7
l நீதி 11:25
m 1சா 25:18; 2சா 16:2

அதி. 18
n நீதி 20:18
o 2சா 8:16; 2சா 10:7
p 1நா 2:15, 16
q 2சா 23:18, 19
r 2சா 15:19, 21
s 2சா 21:17
t 2சா 17:1-3; புல 4:20

மென்மையாக நடந்துகொள்ளுங்கள்” என்று கட்டளையிட்டார்.[a] தலைவர்
கள் எல்லாருக்கும் ராஜா கொடுத்த இந்தக் கட்டளையை எல்லா வீரர்களும்
கேட்டார்கள்.

6 தாவீதின் வீரர்கள் இஸ்ரவேல் படையுடன் போர் செய்யப் போனார்
கள். எப்பிராயீமிலுள்ள காட்டில் போர் நடந்தது.[b] **7** தாவீதின் வீரர்கள்[c]
இஸ்ரவேல் படையைத்[d] தோற்கடித்தார்கள். அன்று ஏராளமானோர்
கொன்று குவிக்கப்பட்டார்கள். மொத்தம் 20,000 வீரர்கள் கொல்லப்பட்டார்
கள். **8** அந்தப் பகுதி முழுவதும் போர் நடந்தது. அந்தப் போரில் வாளுக்
குப் பலியானவர்களைவிட காட்டிலிருந்த ஆபத்துகளில் சிக்கி பலியானவர்
கள்தான் அதிகம்.

9 கடைசியில், தாவீதின் வீரர்கள் தன் எதிரே வருவதை அப்சலோம்
பார்த்தான். அவன் ஒரு கோவேறு கழுதைமேல் போய்க்கொண்டிருந்தான்.
அடர்ந்த கிளைகளைக் கொண்ட ஒரு பெரிய மரத்துக்குக் கீழே அந்தக்
கழுதை போனபோது அவனுடைய தலை மரக் கிளையில் மாட்டிக்கொண்
டது. அவன் ஏறி வந்த கழுதை முன்னால் போய்விட்டதால், அவன் அப்
படியே அந்தரத்தில்* தொங்கினான். **10** அப்சலோமைப் பார்த்ததும் ஒரு
வீரன் யோவாபிடம்[e] போய், “அதோ! அப்சலோம் ஒரு பெரிய மரத்தில்
தொங்கிக்கொண்டிருக்கிறான்!” என்று சொன்னான். **11** அதற்கு யோவாப்,
“நீ அவனைப் பார்த்தும் ஏன் அங்கேயே வெட்டிப்போடவில்லை? அப்படிச்
செய்திருந்தால், நான் சந்தோஷமாக உனக்கு 10 வெள்ளிக் காசுகளும் இடுப்
புவாரும் பரிசாகக் கொடுத்திருப்பேனே” என்று அவனிடம் சொன்னார்.
12 அதற்கு அவன், “நீங்கள் எனக்கு 1,000 வெள்ளிக் காசுகள் கொடுத்
தாலும்* ராஜாவின் மகன்மேல் கை வைக்க மாட்டேன். ‘என் மகன் அப்
சலோமை யாரும் எதுவும் செய்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்’ என்று
உங்களுக்கும் அபிசாய்க்கும் ஈத்தாய்க்கும் ராஜா கட்டளையிட்டதை நாங்
களும் கேட்டோம்.[f] **13** அதை மீறி நான் அப்சலோமைக் கொன்று
போட்டிருந்தால் அது எப்படியும் ராஜா காதுக்குப் போயிருக்கும். அப்
போது, நீங்கள்கூட என்னைக் காப்பாற்றியிருக்க மாட்டீர்கள்” என்று
சொன்னான். **14** அதற்கு யோவாப், “உன்னிடம் பேசி நேரத்தை வீணாக்க
விரும்பவில்லை” என்று சொன்னார். பின்பு, அவர் கூர்மையான மூன்று கம்
பிகளை* எடுத்து, மரத்தில் உயிரோடு தொங்கிக்கொண்டிருந்த அப்சலோ
மின் நெஞ்சில் குத்தினார். **15** யோவாபின் ஆயுதங்களைச் சுமந்த
10 வீரர்களும் அப்சலோமைச் சூழ்ந்துகொண்டு அவன் சாகும்வரை அவ
னைத் தாக்கிக்கொண்டே இருந்தார்கள்.[g] **16** அப்போது யோவாப் ஊது
கொம்பை எடுத்து ஊதினார். இஸ்ரவேலர்களைத் துரத்துவதை விட்டு
விட்டு, உடனே அவருடைய வீரர்கள் திரும்பி வந்தார்கள். போரை நிறுத்தச்
சொல்லி யோவாப் அவர்களுக்குக் கட்டளையிட்டார். **17** அவர்கள் அப்
சலோமின் உடலை எடுத்து காட்டிலிருந்த ஒரு பெரிய குழியில் வீசி,
அதன்மீது கற்களை மிகப் பெரிய குவியலாகக் குவித்து வைத்தார்கள்.[h]
இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும் தங்களுடைய வீடுகளுக்குத் தப்பித்து ஓடி
னார்கள்.

18:9 *நே.மொ., “வானத்துக்கும் பூமிக்கும் நடுவே.” **18:12** *நே.மொ., “என் கையில் 1,000 வெள்ளிக் காசுகளை நிறுத்துக் கொடுத்தாலும்.” **18:14** *அல்லது, “ஈட்டிகளை.”

அதி. 18
a 2சா 18:12
b 2சா 17:26
c சங் 3:7; நீதி 24:21, 22
d 2சா 16:15
e 2சா 8:16; 2சா 18:2
f 2சா 18:5
g 2சா 12:10; நீதி 2:22; நீதி 20:20; நீதி 30:17
h யோசு 7:24, 26; யோசு 8:29; யோசு 10:23, 27

18 அப்சலோம் உயிரோடு இருந்தபோது, “என் பேர் சொல்ல எனக்கு
ஒரு மகன் இல்லை”[a] என்று சொல்லி ராஜா-பள்ளத்தாக்கில்[b] ஒரு தூணை
நிறுத்தி வைத்திருந்தான். அந்தத் தூணுக்குத் தன்னுடைய பெயரையே
வைத்திருந்தான். அது அப்சலோமின் நினைவுத் தூண் என்று இன்றுவரை
அழைக்கப்படுகிறது.

19 சாதோக்கின் மகனான அகிமாஸ்[c] யோவாபிடம் வந்து, “நான் ஓடிப்
போய் ராஜாவிடம் விஷயத்தைச் சொல்லட்டுமா? எதிரிகளிடமிருந்து ராஜா
வைக் காப்பாற்றி யெகோவா நியாயம் வழங்கியிருக்கிறார்”[d] என்று சொன்
னான். **20** அதற்கு யோவாப், “செய்தி சொல்ல இன்றைக்கு நீ போக
வேண்டாம். இன்னொரு சமயம் போகலாம். ராஜாவின் மகனே செத்துப்
போயிருப்பதால் இன்றைக்கு நீ போய் செய்தி சொல்ல வேண்டாம்”[e] என்
றார். **21** பின்பு யோவாப் ஒரு கூஷியனைக்[f] கூப்பிட்டு, “போ, நீ பார்த்
ததை ராஜாவிடம் போய்ச் சொல்” என்றார். உடனே அந்த கூஷியன் அவர்
முன்னால் தலைவணங்கிவிட்டு ஓட ஆரம்பித்தான். **22** சாதோக்கின்
மகன் அகிமாஸ் மறுபடியும் யோவாபைப் பார்த்து, “நானும் அந்த கூஷியன்
பின்னால் ஓடட்டுமா?” என்று கேட்டான். ஆனால் யோவாப், “என் மகனே,
அவன்தான் போயிருக்கிறானே, அப்புறம் நீ போய் என்ன செய்தி சொல்
லப்போகிறாய்?” என்று கேட்டார். **23** அதற்கு அவன், “பரவாயில்லை,
நானும் போகிறேனே” என்று சொன்னான். அதற்கு யோவாப், “சரி, போ!”
என்று சொன்னார். யோர்தான் பிரதேசத்தின் வழியாகப் போகும் பாதையில்
அகிமாஸ் ஓடியதால், அந்த கூஷியனை முந்திவிட்டான்.

24 நகரவாசல்கள் இரண்டுக்கும் நடுவே தாவீது உட்கார்ந்துகொண்டிருந்
தார்.[g] காவல்காரன்[h] மதிலை ஒட்டியிருந்த நுழைவாசலின் கூரைக்குப்
போய் ஏறெடுத்துப் பார்த்தபோது, ஓர் ஆள் தனியாக ஓடிவருவது தெரிந்
தது. **25** உடனே அந்தக் காவல்காரன் ராஜாவைக் கூப்பிட்டு அதை
அறிவித்தான். அதற்கு ராஜா, “அவன் தனியாக வந்தால், கண்டிப்பாக
ஏதாவது செய்தி இருக்கும்” என்று சொன்னார். அவன் நெருங்கிக்கொண்டி
ருந்தபோது, **26** அவனுக்குப் பின்னால் இன்னொரு ஆள் ஓடிவருவதை
யும் காவல்காரன் பார்த்தான். உடனே அவன் வாயிற்காவலனிடம் “இதோ,
இன்னொரு ஆள் தனியாக ஓடிவருகிறான்!” என்று சத்தமாகச் சொன்னான்.
அதற்கு ராஜா, “இவனும் ஏதோ செய்தியோடுதான் வருகிறான்” என்று சொன்
னார். **27** அப்போது காவல்காரன், “முதலில் ஓடிவருகிற ஆளைப் பார்த்
தால் சாதோக்கின் மகன் அகிமாஸ்[i] மாதிரி தெரிகிறது” என்று சொன்னான்.
அதற்கு ராஜா, “அவன் நல்ல மனிதன். நல்ல செய்தியோடுதான் வரு
வான்” என்று சொன்னார். **28** அகிமாஸ் ராஜாவைப் பார்த்து, “ராஜாவே,
நல்ல செய்தி!” என்று சத்தமாகச் சொல்லிவிட்டு, மண்டிபோட்டு தரைவரை
குனிந்து வணங்கினான். பின்பு, “ராஜாவே, உங்கள் கடவுளாகிய யெகோ
வாவுக்குப் புகழ் சேரட்டும். என் எஜமானாகிய உங்களுக்கு எதிராகக் கல
கம் செய்தவர்களை* அவர் உங்கள் கையில் கொடுத்துவிட்டார்”[j] என்று
சொன்னான்.

29 ஆனால் ராஜா அவனிடம், “என் மகன் அப்சலோமுக்கு ஒன்றும்
ஆகவில்லையே?” என்று கேட்டார். அதற்கு அகிமாஸ், “அடியேனை
யும் ராஜாவின் ஊழியனையும் யோவாப் அனுப்பியபோது அங்கே ஒரே

18:28 * நே.மொ., “கை ஓங்கியவர்களை.”

அதி. 18

a 2சா 14:27

b ஆதி 14:17

c 2சா 15:35, 36
2சா 17:17

d சங் 9:4

e 2சா 18:5

f ஆதி 10:6

g 2சா 18:4

h 2ரா 9:17

i 2சா 18:19

j 2சா 22:47
சங் 144:1

கூச்சல் குழப்பமாக இருந்தது. ஆனால், என்ன நடந்தது என்று எனக்குத்
தெரியாது”[a] என்று சொன்னான். **30** அப்போது ராஜா, “சரி, அந்தப் பக்கம்
போய் நில்” என்று சொன்னார். உடனே அவன் சற்றுத் தள்ளி நின்றான்.

31 பின்பு அந்த கூஷியன் வந்து,[b] “ராஜாவே, என் எஜமானே, உங்க
ளுக்கு எதிராகத் திரண்ட கலகக்காரர்கள் எல்லாரிடமிருந்தும் யெகோவா
உங்களைக் காப்பாற்றி நியாயம் வழங்கியிருக்கிறார்”[c] என்று சொன்
னான். **32** ஆனால் ராஜா அந்த கூஷியனிடம், “என் மகன் அப்சலோ
முக்கு ஒன்றும் ஆகவில்லையே?” என்று கேட்டார். அதற்கு அவன்,
“ராஜாவே, உங்களுடைய எல்லா எதிரிகளும் உங்களை அழிக்கத் திரண்ட
எல்லா கலகக்காரர்களும் அவனைப் போலவே அழிந்துபோகட்டும்”[d] என்று
சொன்னான்.

33 அதைக் கேட்டு ராஜா மனம் கலங்கினார். நுழைவாசலின் மேலி
ருந்த அறைக்கு ஏறிப் போய்க் கதறினார். அப்படி ஏறிப் போகும்போது,
“என் மகனே, அப்சலோமே, அப்சலோமே, என் மகனே! உனக்குப் பதிலாக
நான் செத்துப்போயிருந்தால் நன்றாக இருந்திருக்குமே, அப்சலோமே, என்
மகனே, என் மகனே!” என்று கதறினார்.[e]

19 அப்சலோமை நினைத்து ராஜா அழுது புலம்பிக்கொண்டிருப்ப
தாக*[f] யோவாபிடம் தெரிவிக்கப்பட்டது. **2** மகன் இறந்ததால்
துக்கம் தாங்காமல் ராஜா அழுதுகொண்டிருக்கிறார் என்பதை மக்கள்
கேள்விப்பட்டார்கள். அதனால், வெற்றி கிடைத்த அந்த நாள் எல்லாருக்
கும் துக்க நாளாக மாறியது. **3** போரில் தோற்றுப்போனவர்கள் அவமா
னப்பட்டுத் திரும்பி வருவதுபோல[g] மக்கள் சத்தமில்லாமல் நகரத்துக்குத்
திரும்பி வந்தார்கள். **4** ராஜா தன்னுடைய முகத்தை மூடிக்கொண்டு, “அப்
சலோமே, என் மகனே, அப்சலோமே, என் மகனே, என் மகனே!” என்று
அழுதுகொண்டிருந்தார்.[h]

5 பின்பு ராஜா தங்கியிருந்த வீட்டுக்கு யோவாப் போய், “இன்றைக்கு
உங்களுடைய ஊழியர்கள்தான் உங்கள் உயிரைக் காப்பாற்றினார்கள்; உங்
கள் மகன்கள்,[i] மகள்கள்,[j] மனைவிகள், மறுமனைவிகள்[k] எல்லாருடைய
உயிரையும் பாதுகாத்தார்கள். ஆனால், உங்கள் ஊழியர்கள் எல்லாரையும்
நீங்கள் அவமானப்படுத்திவிட்டீர்கள். **6** உங்களை வெறுக்கிறவர்கள்மேல்
பாசத்தைக் காட்டுகிறீர்கள், ஆனால் உங்கள்மேல் உயிரையே வைத்திருப்ப
வர்களை வெறுக்கிறீர்கள். படைத் தலைவர்களும் ஊழியர்களும் உங்க
ளுக்கு முக்கியம் இல்லை என்பதை இன்றைக்கு நன்றாகக் காட்டிவிட்டீர்கள்.
அப்சலோம் மட்டும் உயிரோடு இருந்து, நாங்கள் எல்லாரும் செத்துப்போயி
ருந்தால் உங்களுக்கு நன்றாக இருந்திருக்கும், இல்லையா? **7** இப்போதே
எழுந்து போய் உங்களுடைய ஊழியர்களை உற்சாகப்படுத்துங்கள்.
யெகோவாமீது ஆணையாகச் சொல்கிறேன், நீங்கள் இப்போது போகாவிட்
டால் இன்று ராத்திரி ஒருவன்கூட உங்களோடு இருக்க மாட்டான். சிறு வய
திலிருந்து உங்களுக்கு வந்த கஷ்டத்தைவிட இது படுபயங்கரமாக இருக்
கும்” என்று சொன்னார். **8** அதனால், ராஜா எழுந்து போய் நகரவாசலில்
உட்கார்ந்துகொண்டார்; நகரவாசலில் ராஜா உட்கார்ந்திருக்கிறார் என்ற
செய்தி மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது, மக்கள் எல்லாரும்
ராஜாவின் முன்னால் வந்தார்கள்.

19:1 * நே.மொ., “துக்கம் அனுசரிப்பதாக.”

அதி. 18
a 2சா 18:22
b 2சா 18:21
c 2சா 22:49, சங் 55:18, சங் 94:1, சங் 124:2, 3
d சங் 27:2
e 2சா 12:10, 2சா 17:14, 2சா 19:1, நீதி 19:13

அதி. 19
f 2சா 18:5, 2சா 18:14
g 2சா 17:24
h 2சா 18:33
i 2சா 3:2-5, 2சா 5:14-16
j 2சா 13:1
k 2சா 5:13, 2சா 15:16

இஸ்ரவேலர்களோ தங்களுடைய வீடுகளுக்குத் தப்பித்து ஓடினார்கள்.[a]
9 இஸ்ரவேலிலுள்ள எல்லா கோத்திரத்தாரும் வாக்குவாதம் செய்துகொண்
டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள், “நம்முடைய எதிரிகளிடமிருந்து
தாவீது ராஜா நம்மை விடுதலை செய்தார்,[b] பெலிஸ்தியர்களின் கையிலி
ருந்து நம்மைக் காப்பாற்றினார். ஆனால், அப்சலோமால் அவர் இப்போது
தேசத்தைவிட்டே போய்விட்டார்.[c] **10** நாம் அப்சலோமை ராஜாவாக
அபிஷேகம் செய்தோம்.[d] அவரும் போரில் செத்துப்போய்விட்டார்.[e] இப்
போது ராஜாவைத் திரும்பக் கூட்டிக்கொண்டு வராமல் ஏன் சும்மா இருக்
கிறீர்கள்?” என்று பேசிக்கொண்டார்கள்.

11 குருமார்களான சாதோக்கிற்கும்[f] அபியத்தாருக்கும்[g] தாவீது ராஜா
தகவல் அனுப்பினார். அவர்களிடம், “நீங்கள் யூதாவிலுள்ள பெரியோர்களி
டம்*[h] போய், ‘அரண்மனைக்குத் திரும்பிவரச் சொல்லி இஸ்ரவேலிலுள்ள
எல்லா கோத்திரத்தாரும் ராஜாவுக்குச் செய்தி அனுப்பிவிட்டார்கள். அப்
படியிருக்கும்போது, நீங்கள் மட்டும் ஏன் ராஜாவைத் திரும்பக் கூப்பி
டத் தயங்குகிறீர்கள்? **12** நீங்கள் என் சகோதரர்கள், என் இரத்த சொந்
தம்.* எல்லாரும் கூப்பிட்ட பின்பு கடைசியாகத்தான் நீங்கள் ராஜாவைக்
கூப்பிடப்போகிறீர்களா?’ என்று கேளுங்கள். **13** அதோடு அமாசாவிடம்[i]
போய், ‘நீ என் இரத்த சொந்தம்தானே?* இன்றுமுதல் யோவாபுக்குப் பதி
லாக நீதான் படைத் தளபதி.[j] அப்படி உன்னை நியமிக்காவிட்டால் கடவுள்
எனக்குக் கடும் தண்டனை கொடுக்கட்டும்’ என்று ராஜா சொன்னதாகச்
சொல்லுங்கள்” என்றார்.

14 ராஜாவின் பேச்சு யூதா ஆண்களுடைய இதயத்தைத் தொட்டது;
அதனால், அவர்கள் எல்லாரும் ஒருமனதாகத் தீர்மானித்து, “நீங்களும் உங்
களுடைய ஊழியர்கள் எல்லாரும் திரும்பி வாருங்கள்” என்று ராஜாவுக்குச்
சொல்லி அனுப்பினார்கள்.

15 அதனால், ராஜா புறப்பட்டு யோர்தானுக்குப் போனார்; அவரைச் சந்
திக்கவும் அவர் யோர்தானைக் கடக்கும்போது அவருக்குத் துணையாகப்
போகவும் யூதா கோத்திரத்தார் கில்காலுக்கு[k] வந்தார்கள். **16** பகூரிமில்
குடியிருந்த பென்யமீன் கோத்திரத்தானும் கேராவின் மகனுமாகிய சீமேயி,[l]
தாவீது ராஜாவைச் சந்திக்க அவர்களோடு அவசர அவசரமாக வந்தான்;
17 அவனோடு, பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த 1,000 ஆண்கள் வந்
தார்கள். சவுலின் வேலைக்காரனாகிய சீபாவும்[m] தன்னுடைய 15 மகன்க
ளையும் 20 வேலைக்காரர்களையும் கூட்டிக்கொண்டு வேக வேகமாக வந்
தான்; ராஜா வருவதற்கு முன்பே யோர்தானுக்கு வந்துசேர்ந்தான்.
18 யோர்தானைக் கடக்க ராஜாவின் வீட்டாருக்கு உதவி செய்வதற்கும்,
ராஜா விரும்பியதையெல்லாம் செய்வதற்கும் அவன்* ஆற்றுத்துறையை#
கடந்து இக்கரைக்கு வந்தான். ராஜா யோர்தானைக் கடக்கப்போகும் சமயத்
தில், கேராவின் மகன் சீமேயி வந்து அவர் காலில் விழுந்தான். **19** அவன்
ராஜாவிடம், “ராஜாவே, என் எஜமானே, என்னை மன்னித்துவிடுங்கள்,
நீங்கள் எருசலேமிலிருந்து போனபோது அடியேன் செய்த தவறை மனதில்
வைத்துக்கொள்ளாதீர்கள்.[n] ராஜாவே, நான் செய்ததைப் பெரிதாக எடுத்துக்

19:11 *வே.வா., “மூப்பர்களிடம்.” **19:12** *நே.மொ., “எலும்பும் சதையுமாக இருக்கி
றீர்கள்.” **19:13** *நே.மொ., “எலும்பும் சதையுமாக இருக்கிறாய்தானே?” **19:18**
*அல்லது, “அவர்கள்.” #ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதி.

அதி. 19
a 2சா 18:17
b 1சா 17:50, 1சா 18:7, 1சா 19:5, 2சா 5:25, 2சா 8:5
c 2சா 15:14
d 2சா 15:10, 12
e 2சா 18:14
f 2சா 8:17, 2சா 15:25, 1ரா 1:8
g 1சா 22:20, 1சா 30:7, 2சா 15:24, 1நா 15:11, 12
h 2சா 2:4
i 2சா 17:25, 1நா 2:16, 17
j 2சா 8:16, 2சா 18:5, 14
k யோசு 5:9, 1சா 11:14
l 2சா 16:5, 1ரா 2:8, 9
m 2சா 9:2, 10, 2சா 16:1
n 2சா 16:5

கொள்ளாதீர்கள். **20** நான் பாவம் செய்துவிட்டேன். அது அடியேனுக்கு
நன்றாகத் தெரியும். அதனால்தான், இன்று யோசேப்பின் வம்சத்தார் எல்லா
ருக்கும் முன்பாக முதல் ஆளாக என் எஜமானாகிய ராஜாவைச் சந்திக்க
வந்தேன்” என்று சொன்னான்.

21 உடனே செருயாவின்[a] மகன் அபிசாய்,[b] “யெகோவாவினால் அபி
ஷேகம் செய்யப்பட்டவரையே சபித்தானே, இவனைக் கொல்ல வேண்
டாமா?”[c] என்று கேட்டார். **22** அதற்கு தாவீது, “செருயாவின் மகன்களே,[d]
நீங்கள் ஏன் அநாவசியமாகத் தலையிடுகிறீர்கள்? எனக்கு எதிராக எதை
யும் செய்யாதீர்கள்! நான் இன்று மறுபடியும் இஸ்ரவேலின் ராஜாவாக ஆகி
யிருக்கிறேன், இன்று இஸ்ரவேலில் யாராவது கொல்லப்படலாமா?” என்று
கேட்டார். **23** பின்பு சீமேயியைப் பார்த்து, “உன்னைக் கொல்ல மாட்
டேன்” என்று உறுதிமொழி தந்தார்.[e]

24 சவுலின் பேரன் மேவிபோசேத்தும்[f] ராஜாவை வரவேற்க வந்தார்.
ராஜா எருசலேமிலிருந்து போன நாள்முதல் அவர் பத்திரமாகத் திரும்பி
வந்த நாள்வரை மேவிபோசேத் தன்னுடைய பாதங்களைக் கழுவவு
மில்லை, தாடிமீசையை வெட்டவுமில்லை, உடைகளைத் துவைக்கவு
மில்லை. **25** ராஜாவைப் பார்க்க அவர் எருசலேமுக்கு* வந்தபோது
ராஜா அவரிடம், “மேவிபோசேத், நீ ஏன் என்னுடன் வரவில்லை?” என்று
கேட்டார். **26** அதற்கு அவர், “ராஜாவே, என் எஜமானே, என் வேலைக்
காரன்[g] சதி செய்துவிட்டான். என் கால் ஊனமாக இருப்பதால்,[h] ‘கழுதை
மேல் சேணம்* வைத்துக் கொடு, நானும் ராஜாவுடன் போகிறேன்’ என்று
அவனிடம் சொன்னேன். **27** ஆனால் ராஜாவே, என் எஜமானே, அவன்
உங்களிடம் வந்து என்னைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும்
சொல்லிவிட்டான்.[i] ஆனால், என் எஜமானாகிய நீங்கள் உண்மைக் கடவு
ளின் தூதரைப் போன்றவர். அதனால், உங்களுக்கு எது நல்லதாகப் படுகி
றதோ அதையே செய்யுங்கள். **28** என் எஜமானே, ராஜாவே, நீங்கள்
நினைத்திருந்தால் என்னுடைய அப்பாவின் வம்சத்தையே அடியோடு
அழித்திருக்கலாம். இருந்தாலும், உங்களுடைய மேஜையில் உங்களோடு
சாப்பிடும் பாக்கியத்தை அடியேனுக்குத் தந்தீர்கள்.[j] ராஜாவாகிய உங்க
ளிடம் இதற்குமேல் எதையாவது மன்றாடிக் கேட்க எனக்கு என்ன உரிமை
இருக்கிறது?” என்று சொன்னார்.

29 ராஜா அவரிடம், “இந்த விஷயத்தைப் பற்றி இதற்குமேல் நீ ஒன்
றும் பேச வேண்டாம். நீயும் சீபாவும் நிலத்தைச் சரிசமமாகப் பங்குபோட்
டுக்கொள்ளுங்கள்.[k] இதுதான் என் முடிவு” என்று சொன்னார். **30** அதற்கு
மேவிபோசேத், “ராஜாவே, அவனே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளட்
டும். என் எஜமான் சமாதானத்தோடு திரும்பி வந்ததே எனக்குப் போதும்”
என்று சொன்னார்.

31 பின்பு, யோர்தான் ஆறுவரை ராஜா கூடவே போவதற்காக, ரோகி
லிமைச் சேர்ந்த கீலேயாத்தியரான பர்சிலா[l] யோர்தானுக்கு வந்தார்.
32 பர்சிலா வயது முதிர்ந்தவர்; அவருக்கு 80 வயது. அவர் பெரிய பணக்
காரராக இருந்ததால், மக்னாயீமில் ராஜா தங்கியிருந்த சமயத்தில்
அவருக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொடுத்திருந்தார்.[m]

19:25 * அல்லது, “எருசலேமிலிருந்து.” **19:26** * சேணம் என்பது மிருகங்களின் முது
கில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை.

அதி. 19
a 2சா 2:18
b 2சா 23:18
c யாத் 22:28; 2சா 16:7; 1ரா 21:13
d 2சா 3:39; 2சா 16:10
e 1ரா 2:8, 9
f 2சா 9:3, 6; 2சா 16:3, 4
g 2சா 9:9
h 2சா 4:4
i லேவி 19:16; 2சா 16:3
j 2சா 9:7-10
k 2சா 16:4
l 2சா 17:27-29; 1ரா 2:7
m நீதி 3:27

33 அதனால் ராஜா அவரிடம், “நீங்களும் யோர்தானைக் கடந்து என்னு
டன் வந்துவிடுங்கள். எருசலேமில் நீங்கள் எப்போதும் என்னோடு உணவு
சாப்பிடுவீர்கள்”[a] என்று சொன்னார். 34 அதற்கு பர்சிலா, “ராஜாவே, எரு
சலேமுக்கு வந்து நான் என்ன செய்யப்போகிறேன்? இன்னும் எத்தனை
நாளைக்கு உயிரோடு இருக்கப்போகிறேனோ தெரியவில்லை. 35 இப்
போதே எனக்கு 80 வயதாகிவிட்டது.[b] இனி வாழ்க்கையில் எனக்கு என்ன
இருக்கிறது? என்ன சாப்பிட்டாலும், குடித்தாலும் ருசி தெரியவா போகி
றது? பாடகர் பாடகிகளின் பாட்டு காதில் கேட்கவா போகிறது?[c] எஜமானே,
நான் வந்து உங்களுக்குப் பாரமாக இருக்க வேண்டுமா? 36 யோர்தான்
வரை உங்களோடு வந்ததே அடியேனுக்குப் போதும். இதற்குமேல் நீங்
கள் எதையும் எனக்குத் திருப்பிச் செய்ய வேண்டாம். 37 ஊருக்குத்
திரும்பிப் போக அடியேனுக்குத் தயவுசெய்து அனுமதி கொடுங்கள். என்
சொந்த ஊருக்கே போகிறேன், என்னுடைய அப்பா அம்மாவின் கல்லறை
இருக்கிற இடத்தில்தான் சாக ஆசைப்படுகிறேன்.[d] இதோ, உங்கள் ஊழி
யன் கிம்காம் இருக்கிறான்.[e] அவனை உங்களோடு கூட்டிக்கொண்டு போங்
கள். உங்களுக்கு எது நல்லதாகத் தோன்றுகிறதோ அதையே அவனுக்குச்
செய்யுங்கள்” என்று சொன்னார்.

38 அதற்கு ராஜா, “கிம்காம் என்னோடு வரட்டும். உங்கள் விருப்
பப்படியே அவனைப் பார்த்துக்கொள்கிறேன், நீங்கள் எதைக் கேட்டாலும்
அதைச் செய்யத் தயாராக இருக்கிறேன்” என்று சொன்னார். 39 தாவீ
துடன் இருந்தவர்கள் எல்லாரும் யோர்தானைக் கடக்க ஆரம்பித்தார்
கள். ஆற்றைக் கடப்பதற்கு முன்பு பர்சிலாவுக்கு ராஜா முத்தம் கொடுத்து[f]
அவரை ஆசீர்வதித்தார். பின்பு, பர்சிலா வீடு திரும்பினார். 40 ராஜாவோ
யோர்தானைக் கடந்து கில்காலுக்குப் போனார்.[g] கிம்காமும் அவர்கூடவே
போனான். ராஜா யோர்தானைக் கடந்தபோது யூதா கோத்திரத்தார் எல்லா
ரும், இஸ்ரவேல் மக்களில் பாதிப் பேரும் அவருடன் போனார்கள்.[h]

41 பின்பு, இஸ்ரவேல் ஆண்கள் எல்லாரும் ராஜாவிடம் வந்து, “எங்கள்
சகோதரர்களான யூதா கோத்திரத்தார் ஏன் உங்களை இப்படித் திருட்டுத்த
னமாகக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள்? உங்களையும் உங்கள் குடும்
பத்தாரையும் உங்களுடைய எல்லா ஊழியர்களையும் ஏன் இப்படி யோர்
தானைக் கடக்கச் செய்திருக்கிறார்கள்?”[i] என்று கேட்டார்கள். 42 அதற்கு
யூதாவைச் சேர்ந்த ஆண்கள் எல்லாரும், “ராஜா எங்களுக்குச் சொந்தக்கா
ரர்.[j] இப்போது நீங்கள் ஏன் அநாவசியமாகக் கோபப்படுகிறீர்கள்? நாங்கள்
என்ன ராஜாவின் பணத்தில் சாப்பிட்டோமா? அல்லது எங்களுக்கு ஏதா
வது அன்பளிப்புதான் கிடைத்துவிட்டதா?” என்று இஸ்ரவேல் ஆண்களி
டம் கேட்டார்கள்.

43 அதற்கு இஸ்ரவேல் ஆண்கள், “ராஜ்யத்தில் பத்துப் பாகம் எங்களு
டையது. அதனால் தாவீதிடம் உங்களைவிட எங்களுக்குத்தான் உரிமை
அதிகம். அப்படியிருக்கும்போது, நீங்கள் ஏன் எங்களை ஒதுக்கிவிட்டீர்
கள்? ராஜாவைக் கூட்டிக்கொண்டுவர நாங்கள்தானே முதலில் போயி
ருக்க வேண்டும்?” என்று கேட்டார்கள். ஆனால், யூதா ஆண்களிடம் அவர்
களால் பேசி ஜெயிக்க முடியவில்லை.*

19:43 *வே.வா., “ஆண்களின் பேச்சு அவர்களுடைய பேச்சைவிட கடுமையாக இருந்தது.”

அதி. 19
a நீதி 11:25
b சங் 90:10
c பிர 2:8
d ஆதி 50:13
e 1ரா 2:7
f ஆதி 31:55; 1சா 20:41; அப் 20:37
g 1சா 11:14
h 2சா 2:4
i நியா 8:1; நியா 12:1; 2சா 19:15
j சங் 78:68, 70

20 பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த பிக்கிரியின் மகன் சேபா[a]
அங்கே இருந்தான். அவன் ஒரு கலகக்காரன். அவன் ஊது
கொம்பை ஊதி,[b] “தாவீதுக்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை,
ஈசாயின் மகன்மீது எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை.[c] இஸ்ரவேல்
ஆண்களே, நீங்கள் எல்லாரும் அவரவர் தெய்வங்களைப் பின்பற்றுங்
கள்”*[d] என்று சொன்னான். **2** உடனே இஸ்ரவேல் ஆண்கள் எல்லாரும்
தாவீதை விட்டுவிட்டு பிக்கிரியின் மகன் சேபாவின் பின்னால் போனார்
கள்.[e] ஆனால், யூதா ஆண்கள் ராஜாவைவிட்டு விலகாமல் யோர்தானிலி
ருந்து எருசலேம்வரை அவர் கூடவே போனார்கள்.[f]

3 தாவீது எருசலேமிலுள்ள தன்னுடைய அரண்மனைக்கு வந்துசேர்ந்
தார்.[g] அரண்மனையைக் கவனித்துக்கொள்வதற்காக விட்டுவிட்டுப்போன
10 மறுமனைவிகளையும்[h] வேறொரு வீட்டில் காவலில் வைத்தார். வேளா
வேளைக்கு அவர்களுக்கு உணவு கொடுத்துவந்தார். ஆனால், அவர்க
ளோடு உறவுகொள்ளவில்லை.[i] அவர்கள் சாகும்வரை வீட்டுக் காவலில்
தான் இருந்தார்கள்; கணவர் உயிரோடு இருந்தபோதே விதவைகள் போல்
வாழ்ந்துவந்தார்கள்.

4 பின்பு தாவீது ராஜா அமாசாவைப்[j] பார்த்து, “மூன்று நாட்களுக்குள்
யூதாவைச் சேர்ந்த ஆண்கள் எல்லாரையும் வரச் சொல்லி செய்தி அனுப்பு.
நீயும் வந்துவிடு” என்று சொன்னார். **5** யூதா கோத்திரத்தார் எல்லாரை
யும் கூப்பிட அமாசா புறப்பட்டுப் போனார்; ஆனால், தாவீது சொல்லியி
ருந்த சமயத்துக்குள் அவர் வந்துசேரவில்லை. **6** அதனால் தாவீது அபி
சாயைப்[k] பார்த்து, “அப்சலோமைவிட பிக்கிரியின் மகன் சேபா[l] ரொம்ப
ஆபத்தானவன்.[m] அதனால், என்னுடைய* ஊழியர்களைக் கூட்டிக்
கொண்டு அவனைத் துரத்திக்கொண்டு போ. இல்லாவிட்டால், அவன் ஏதா
வது மதில் சூழ்ந்த நகரத்துக்குள் போய் ஒளிந்துகொண்டு நம்மிடமிருந்து
தப்பித்துவிடுவான்” என்று சொன்னார். **7** அதன்படியே, யோவாபின்
ஆட்களும்[n] கிரேத்தியர்களும் பிலேத்தியர்களும்[o] மாவீரர்கள் எல்லாரும்
அவர்* பின்னால் போனார்கள். பிக்கிரியின் மகன் சேபாவைப் பிடிப்பதற்
காக எருசலேமிலிருந்து புறப்பட்டுப் போனார்கள். **8** கிபியோனில்[p]
உள்ள பெரிய கல் பக்கத்தில் அவர்கள் வந்தபோது அவர்களைச் சந்திக்க
அமாசா[q] வந்தார். அப்போது, யோவாப் போர் உடையை அணிந்திருந்தார்.
உறையில் இருந்த வாளை இடுப்பில் செருகி வைத்திருந்தார். அவர் நடந்து
வந்தபோது, அவருடைய வாள் கீழே விழுந்தது.

9 யோவாப் அமாசாவைப் பார்த்து, “என் சகோதரனே, எப்படி இருக்கி
றாய்?” என்று கேட்டார். பின்பு, முத்தம் கொடுக்க வருவதுபோல் காட்
டிக்கொண்டு தன்னுடைய வலது கையால் அமாசாவின் தாடியைப் பிடித்
தார். **10** யோவாபின் கையில் இருந்த வாளை அமாசா கவனிக்கவில்லை.
யோவாப் தன்னுடைய வாளால் அவருடைய அடிவயிற்றில் குத்தினார்,[r]
அவருடைய குடல்கள் வெளியே வந்து விழுந்தன. அவரைக் கொல்வதற்கு
ஒரு குத்தே போதுமானதாக இருந்தது, இன்னொரு தடவை குத்த வேண்
டிய அவசியம் இருக்கவில்லை. பின்பு, யோவாபும் அவருடைய சகோத
ரன் அபிசாயும் பிக்கிரியின் மகன் சேபாவைப் பிடிக்கப் போனார்கள்.

அதி. 20

- *a* 2சா 20:21
- *b* நியா 3:26, 27; 2சா 15:10
- *c* 2சா 19:43
- *d* 1ரா 12:16
- *e* நீதி 24:21
- *f* 2சா 19:15; 2சா 19:41, 42
- *g* 2சா 5:11
- *h* 2சா 15:16
- *i* 2சா 16:21, 22
- *j* 2சா 17:25; 2சா 19:13; 1நா 2:17
- *k* 1சா 26:6; 2சா 10:10; 2சா 23:18; 1நா 18:12
- *l* 2சா 20:1
- *m* 2சா 15:12
- *n* 2சா 8:16
- *o* 2சா 8:18; 2சா 15:18; 1ரா 1:38
- *p* யோசு 18:21, 25; யோசு 21:8, 17
- *q* 2சா 17:25; 2சா 19:13
- *r* 2சா 3:27; 1ரா 2:5

20:1 * அல்லது, “கூடாரங்களுக்குப் போய்விடுங்கள்.” **20:6** * நே.மொ., “உன் எஜமானின்.” **20:7** * அநேகமாக, “அபிசாய்.”

11 யோவாபுடன் இருந்த வாலிபர்களில் ஒருவன் அமாசாவுக்குப் பக்கத்
தில் நின்றுகொண்டு, “யோவாபையும் தாவீதையும் ஆதரிக்கிறவர்கள் எல்லா
ரும் யோவாபின் பின்னால் போங்கள்!” என்று சொன்னான். **12** அதுவரை,
சாலையின் நடுவே அமாசா இரத்த வெள்ளத்தில் புரண்டுகொண்டிருந்
தார். அங்கே வருகிற ஆட்கள் எல்லாரும் நின்றுவிடுவதைப் பார்த்த அந்த
வாலிபன் அமாசாவை இழுத்து பக்கத்திலிருந்த வயலில் போட்டான். அப்
படியும் அங்கே வருகிற எல்லாரும் நின்றுவிட்டதால் அவர்மீது ஒரு துணி
யைப் போட்டு மூடினான். **13** அவன் அமாசாவை சாலையிலிருந்து இழுத்
துப் போட்ட பிறகு, பிக்கிரியின் மகன் சேபாவைப்[a] பிடிப்பதற்காக எல்லா
ஆட்களும் யோவாபின் பின்னால் போனார்கள்.

14 சேபா இஸ்ரவேலின் எல்லா கோத்திரங்கள் வழியாகவும் பயணம்
செய்து, பெத்-மாக்காவின்[b] ஆபேல் என்ற நகரத்துக்குப் போனான். பிக்கிரி
யர்களும் அவனோடு சேர்ந்துகொண்டு அந்த நகரத்துக்குள் போனார்கள்.

15 யோவாபும் அவருடைய ஆட்களும் பெத்-மாக்காவின் ஆபேலுக்கு
வந்து அதை முற்றுகையிட்டார்கள். மதில் சூழ்ந்த அந்த நகரத்தைப் பிடிப்
பதற்காகச் சுற்றிலும் மண்மேடு அமைத்தார்கள். பின்பு, மதிலைத் தகர்ப்ப
தற்காக யோவாபின் ஆட்கள் எல்லாரும் அதன் அடியில் தோண்ட
ஆரம்பித்தார்கள். **16** அப்போது புத்திசாலியான ஒரு பெண் அந்த மதில்
மேலிருந்து சத்தமாகக் கூப்பிட்டு, “வீரர்களே, கேளுங்கள்! தயவுசெய்து
யோவாபை இங்கே வரச் சொல்லுங்கள். நான் அவரிடம் பேச வேண்டும்”
என்று சொன்னாள். **17** அதனால், யோவாப் பக்கத்தில் போனார். அப்
போது அவள், “நீங்கள்தான் யோவாபா?” என்று கேட்டாள். அதற்கு அவர்,
“ஆமாம்” என்று சொன்னார். அப்போது அவள், “இந்த அடிமைப் பெண்
சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்” என்றாள். அவர், “சரி சொல்” என்றார்.
18 அப்போது அவள், “அந்தக் காலத்தில், ‘ஆபேலுக்குப் போய் ஆலோ
சனை கேளுங்கள். எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும்’ என்று சொல்
வார்கள். **19** இஸ்ரவேலில் உண்மையாகவும் சமாதானமாகவும் வாழ்கிற
ஆட்களின் சார்பாகப் பேசுகிறேன். இஸ்ரவேலில் இருக்கிற ஒரு முக்கிய
மான* நகரத்தை ஒழித்துக்கட்ட# பார்க்கிறீர்களே. யெகோவாவின் மக்
களை△[c] அழிப்பது நியாயமா?” என்று கேட்டாள். **20** அதற்கு யோவாப்,
“இந்த நகரத்தை அழிக்க வேண்டுமென்ற எண்ணமே எனக்குக் கிடையாது.
21 நான் அதற்காக இங்கே வரவில்லை. எப்பிராயீம் மலைப்பகுதியைச்[d]
சேர்ந்த பிக்கிரியின் மகன் சேபா,[e] தாவீது ராஜாவை எதிர்த்துக் கலகம்
செய்திருக்கிறான்.* அவன் ஒருவனை மட்டும் ஒப்படைத்துவிட்டால் நான்
இங்கிருந்து போய்விடுவேன்” என்று சொன்னார். அதற்கு அந்தப் பெண்,
“சரி, அவனுடைய தலையை மதில் மேலிருந்து தூக்கியெறிகிறோம்” என்று
சொன்னாள்.

22 புத்திசாலியான அந்தப் பெண் உடனே உள்ளே போய் ஊர்மக்
கள் எல்லாரிடமும் விஷயத்தைச் சொன்னாள். அவர்கள் பிக்கிரியின்
மகன் சேபாவின் தலையை வெட்டி, யோவாபிடம் தூக்கிப் போட்டார்கள்.
அப்போது, அவர் ஊதுகொம்பை எடுத்து ஊதினார். உடனே ஆட்கள்

20:19 *நே.மொ., “தாய் போன்ற.” #நே.மொ., “விழுங்க.” △நே.மொ., “சொத்தை.”
20:21 *நே.மொ., “கை ஓங்கியிருக்கிறான்.”

அதி. 20
a 2சா 20:1
b 1ரா 15:20
2ரா 15:29
c யாத் 19:5
உபா 32:9
d யோசு 17:
14, 15
நியா 2:8, 9
e 2சா 20:1

அங்கிருந்து கலைந்து தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பினார்கள்.[a]
யோவாப் எருசலேமில் இருந்த ராஜாவிடம் வந்தார்.

23 இஸ்ரவேலின் முழு படைக்கும் யோவாப் தளபதியாக இருந்தார்.[b]
யோய்தாவின்[c] மகன் பெனாயா[d] கிரேத்தியர்களுக்கும் பிலேத்தியர்களுக்
கும் தலைவராக இருந்தார்.[e] **24** அடிமை வேலை வாங்கப்பட்ட ஆட்க
ளுக்கு அதோராம்[f] அதிகாரியாக இருந்தார்; அகிலூத்தின் மகன் யோசபாத்
பதிவாளராக இருந்தார்.[g] **25** சேவா செயலாளராக இருந்தார்; சாதோக்
கும்[h] அபியத்தாரும்[i] குருமார்களாக இருந்தார்கள். **26** யாவீரியனாகிய
ஈரா தாவீதின் முக்கிய மந்திரியாக* இருந்தார்.

21 தாவீதின் ஆட்சிக் காலத்தில் தொடர்ச்சியாக மூன்று வருஷங்க
ளுக்குப் பஞ்சம் ஏற்பட்டது;[j] அதனால் தாவீது யெகோவாவிடம்
அதைப் பற்றி விசாரித்தார்; அதற்கு யெகோவா, “கிபியோனியர்களை
சவுல் கொன்றுபோட்டதால் அவன்மீதும் அவனுடைய குடும்பத்தார்மீதும்
கொலைப்பழி* இருக்கிறது”[k] என்று சொன்னார். **2** அதனால், ராஜா
கிபியோனியர்களைக்[l] கூப்பிட்டுப் பேசினார். (கிபியோனியர்கள் இஸ்ர
வேல் வம்சத்தார் அல்ல; எமோரியர்களில்[m] மீதியிருந்தவர்கள்; ‘உங்
களை அழிக்க மாட்டோம்’ என்று அவர்களுக்கு இஸ்ரவேலர்கள் ஆணை
யிட்டுக் கொடுத்திருந்தார்கள்.[n] ஆனால், இஸ்ரவேலர்களோடும் யூதா
கோத்திரத்தாரோடும் அவர்கள் வாழ்வது பொறுக்காமல் சவுல் அவர்
களை ஒழித்துக்கட்ட முயற்சி செய்தார்.) **3** தாவீது கிபியோனியர்களைப்
பார்த்து, “சொல்லுங்கள், நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்,
யெகோவாவின் மக்களை* நீங்கள் ஆசீர்வதிப்பதற்காக நான் என்ன
பரிகாரம் செய்ய வேண்டும்?” என்று கேட்டார். **4** அதற்கு கிபியோனியர்
கள், “சவுலும் அவருடைய குடும்பமும் செய்த பாவத்தைத் தங்கமோ வெள்
ளியோ கொடுத்து ஈடுகட்ட முடியாது.[o] இஸ்ரவேலில் யாரையும் கொல்வ
தற்கு எங்களுக்கு உரிமையும் கிடையாது” என்று சொன்னார்கள். அதற்கு
தாவீது, “நீங்கள் என்ன சொன்னாலும் நான் செய்கிறேன்” என்றார். **5** அப்
போது அவர்கள், “எங்களை ஒழித்துக்கட்டி, இஸ்ரவேல் தேசத்திலிருந்து
எங்களைத் துடைத்தழிக்கத் திட்டம் போட்டாரே,[p] **6** அவருடைய மகன்
களில் ஏழு பேரை எங்களிடம் ஒப்படைத்துவிடுங்கள். நாங்கள் அவர்க
ளைக் கொன்று, யெகோவா தேர்ந்தெடுத்த சவுலின்[q] ஊராகிய கிபியாவில்[r]
யெகோவாவின் முன்னால் அவர்களுடைய உடல்களைத் தொங்கவிடு
வோம்”*[s] என்று ராஜாவிடம் சொன்னார்கள். அதற்கு ராஜா, “சரி, அவர்
களை ஒப்படைக்கிறேன்” என்று சொன்னார்.

7 ஆனால், சவுலின் பேரனும் யோனத்தானின் மகனுமான மேவிபோ
சேத்துக்கு ராஜா கருணை காட்டினார்.[t] ஏனென்றால், தாவீதும் சவுலின்
மகன் யோனத்தானும் யெகோவாவுக்கு முன்னால் ஒருவருக்கொருவர் உறு
திமொழி கொடுத்திருந்தார்கள்.[u] **8** அயாவின் மகளாகிய ரிஸ்பாள்[v]
சவுலுக்குப் பெற்ற இரண்டு மகன்களான அர்மோனியையும் மேவிபோசேத்
தையும், சவுலின் மகளாகிய மீகாள்*[w] மெகொல்லாத்தியனான பர்சிலாவின்

அதி. 20
a பிர 9:14, 15; பிர 9:18
b 2சா 8:16; 2சா 19:13
c 1நா 12:27
d 2சா 23:20; 1நா 27:5
e 2சா 8:18; 2சா 15:18; 1ரா 1:38, 44
f 1ரா 4:6; 1ரா 12:18
g 1ரா 4:3
h 2சா 15:27
i 2சா 17:15; 2சா 19:11; 1ரா 4:4

அதி. 21
j லேவி 26:18, 20
k ஆதி 9:6; யாத் 20:13; எண் 35:30, 33
l யோசு 9:3, 27
m ஆதி 10:15, 16
n யோசு 9:15
o எண் 35:31
p 2சா 21:1
q 1சா 9:17
r 1சா 10:26
s எண் 25:4; உபா 21:22
t 2சா 4:4; 2சா 9:10; 2சா 19:24
u 1சா 18:3; 1சா 20:42
v 2சா 3:7
w 1சா 18:20; 1சா 25:44; 2சா 3:14; 2சா 6:23

20:26 *நே.மொ., “தாவீதின் குருவாக.” **21:1** *வே.வா., “இரத்தப்பழி.” **21:3** *நே.மொ., “சொத்தை.” **21:6** *அதாவது, “அவர்களுடைய கைகளையும் கால்களையும் வெட்டித் தொங்கவிடுவோம்.” **21:8** *அல்லது, “மேராப்.”

மகன் ஆதரியேலுக்குப்[a] பெற்ற ஐந்து மகன்களையும் கொண்டுபோய்,
9 கிபியோனியர்களிடம் ஒப்படைத்தார். கிபியோனியர்கள் அவர்களைக்
கொன்று, அவர்களுடைய உடல்களை மலையில் யெகோவாவின் முன்
னால் தொங்கவிட்டார்கள்.[b] அந்த ஏழு பேரும் ஒரே சமயத்தில் செத்துப்
போனார்கள். அறுவடைக் காலத்தின் தொடக்கத்தில், அதாவது பார்லி அறு
வடையின் தொடக்கத்தில், அவர்கள் கொல்லப்பட்டார்கள். **10** அயாவின்
மகளாகிய ரிஸ்பாள்[c] துக்கத் துணியை* எடுத்துக்கொண்டுபோய் கற்பாறை
யின் மேல் விரித்தாள். அறுவடைக் காலம் தொடங்கியதுமுதல் வானத்தி
லிருந்து மழை கொட்டும்வரை அங்கேயே இருந்தாள். பகலில் வானத்துப்
பறவைகளோ இரவில் காட்டு மிருகங்களோ அவர்களுடைய உடல்களை
நெருங்க அவள் விடவே இல்லை.

11 அயாவின் மகளும் சவுலின் மறுமனைவியுமான ரிஸ்பாள் இப்படிச்
செய்தது தாவீதின் காதுக்கு எட்டியது. **12** அப்போது, தாவீது போய்
யாபேஸ்-கீலேயாத்தின்[d] தலைவர்களிடமிருந்து* சவுலின் எலும்புகளையும்
யோனத்தானின் எலும்புகளையும் பெற்றுக்கொண்டார். கில்போவாவில்
சவுலை வீழ்த்திய பிறகு, அவர்களுடைய உடல்களை பெத்-சானின் பொது
சதுக்கத்தில்தான் பெலிஸ்தியர்கள் தொங்கவிட்டிருந்தார்கள்;[e] அதனால்,
இந்தத் தலைவர்கள் அங்கிருந்து அவற்றை யாருக்கும் தெரியாமல் எடுத்து
வந்திருந்தார்கள். **13** தாவீது யாபேஸ்-கீலேயாத்திலிருந்து சவுலின் எலும்
புகளையும் யோனத்தானின் எலும்புகளையும் கொண்டுவந்தார். அதோடு,
கிபியோனியர்களால் கொல்லப்பட்ட ஆட்களின் எலும்புகளையும்கூட
அவருடைய ஊழியர்கள் எடுத்து வந்தார்கள்.[f] **14** பின்பு, சவுலின் எலும்
புகளையும் அவருடைய மகன் யோனத்தானின் எலும்புகளையும் பென்ய
மீன் பிரதேசத்தில் உள்ள சேலாவில்[g] சவுலின் அப்பா கீசுடைய[h] கல்லறை
யில் வைத்தார்கள். ராஜா கட்டளையிட்ட எல்லாவற்றையும் அவருடைய
ஊழியர்கள் செய்தார்கள். அதன் பின்பு, தேசத்துக்காக அவர்கள் செய்த
வேண்டுதல்களைக் கடவுள் கேட்டார்.[i]

15 பெலிஸ்தியர்களுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் இடையே மறுபடியும்
போர் மூண்டது.[j] அதனால், தாவீதும் அவருடைய ஊழியர்களும்
பெலிஸ்தியர்களுடன் போர் செய்தார்கள். அப்போது, தாவீது களைப்ப
டைந்தார். **16** ரெப்பாயீம் வம்சத்தைச்[k] சேர்ந்த இஸ்பி-பெனோப் அங்கே
இருந்தான். அவனிடம் 300 சேக்கல்* எடையுள்ள செம்பு ஈட்டி இருந்தது,[l]
ஒரு புதிய வாளையும் வைத்திருந்தான். அவன் தாவீதைக் கொல்லப்பார்த்
தான். **17** உடனே, செருயாவின் மகன் அபிசாய்[m] தாவீதின் உதவிக்கு
வந்து, அந்தப் பெலிஸ்தியனை வெட்டிக் கொன்றார்.[n] அப்போது தாவீதின்
ஆட்கள், "இனிமேல் நீங்கள் எங்களோடு போருக்கு வரக் கூடாது.[o] இஸ்ர
வேலின் விளக்கை நீங்கள் அணைத்துவிடக் கூடாது!"[p] என்று ஆணை
யிட்டுச் சொன்னார்கள்.

18 இதற்குப் பின்பு, கோப் என்ற இடத்தில் இஸ்ரவேலர்களுக்கும்
பெலிஸ்தியர்களுக்கும் மறுபடியும் போர் நடந்தது.[q] அப்போது, ரெப்பாயீம்
வம்சத்தைச்[r] சேர்ந்த சாப் என்பவனை உஷாத்தியனான சிபெக்காய்[s]
வெட்டிக் கொன்றார்.

21:10 *சொல் பட்டியலைப் பாருங்கள். **21:12** *அல்லது, "நிலச் சொந்தக்காரர்களி
டமிருந்து." **21:16** *சுமார் 3.42 கிலோ. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 21
a 1சா 18:19
b எண் 35:31; உபா 19:21
c 2சா 3:7
d 2சா 2:5
e 1சா 28:4; 1சா 31:1; 1சா 31:11, 12; 2சா 1:6; 1நா 10:8
f 2சா 21:9
g யோசு 18:28
h 1சா 9:1; 1சா 10:11
i யோசு 7:24-26; 2சா 24:25
j 2சா 5:17, 22
k உபா 2:11
l 1சா 17:4, 7; 1நா 11:23
m 2சா 23:18, 19
n 2சா 22:19
o 2சா 18:3
p 1ரா 11:36; 1ரா 15:4; 2ரா 8:19
q 1நா 20:4
r ஆதி 14:5
s 1நா 11:26, 29; 1நா 27:1, 11

19 கோப் என்ற இடத்தில் பெலிஸ்தியர்களுடன் மறுபடியும் போர் நடந்
தது.[a] பெத்லகேமைச் சேர்ந்த யாரெ-யொர்கிமினின் மகன் எல்க்கானான்,
காத் நகரத்தைச் சேர்ந்த கோலியாத்தை வெட்டிக் கொன்றார். கோலி
யாத் வைத்திருந்த ஈட்டியின் கம்பு, நெசவாளர்களுடைய தறிக்கட்டையைப்
போல் பெரிதாக இருந்தது.[b]

20 மறுபடியும் காத் நகரத்தில் போர் நடந்தது. அங்கே ரெப்பாயீம் வம்
சத்தைச் சேர்ந்த ஒருவன் இருந்தான். அவன் மிக மிக உயரமாக இருந்தான்.
அவனுடைய கைகள் கால்கள் ஒவ்வொன்றிலும் ஆறாறு விரல்கள் இருந்
தன. மொத்தம் 24 விரல்கள் இருந்தன.[c] **21** அவன் இஸ்ரவேலர்களைக்
கேலி செய்துகொண்டே இருந்தான்.[d] அதனால், தாவீதின் அண்ணனாகிய
சீமேயியின்[e] மகன் யோனத்தான் அவனை வெட்டிச் சாய்த்தான்.

22 ரெப்பாயீம் வம்சத்தாரான இந்த நான்கு பேரும் காத் நகரத்தைச்
சேர்ந்தவர்கள். அவர்களை தாவீதும் அவருடைய ஊழியர்களும் வெட்டி
வீழ்த்தினார்கள்.[f]

22 சவுலிடமிருந்தும் மற்ற எல்லா எதிரிகளிடமிருந்தும் யெகோவா
தாவீதைக் காப்பாற்றினார்.[g] அப்போது, யெகோவாவுக்கு முன்பாக
தாவீது இந்தப் பாடலைப் பாடினார்.[h] **2** அவர் பாடியது:

“யெகோவாதான் என்னுடைய மாபெரும் கற்பாறை, என் கோட்டை.[i]
என்னைக் காப்பாற்றுபவர்.[j]
3 என் கடவுள்தான் நான் தஞ்சம் தேடும் கற்பாறை.[k]
அவர்தான் என் கேடயம்,[l] பலம்படைத்த மீட்பர்,* பாதுகாப்பான#
அடைக்கலம்,[m]
என் புகலிடம்,[n] என் மீட்பர்,[o] வன்முறையிலிருந்து என்னைக் காப்பவர்.
4 எல்லா புகழையும் பெறத் தகுதியுள்ளவரான யெகோவாவை நான்
கூப்பிடுவேன்,
எதிரிகளிடமிருந்து அவர் என்னைக் காப்பாற்றுவார்.
5 மரண அலைகள் என்னைச் சுற்றி அடித்தன;[p]
ஒன்றுக்கும் உதவாதவர்கள் வெள்ளம்போல் திரண்டு வந்து எனக்குத்
திகிலூட்டினார்கள்.[q]
6 கல்லறையின்* கயிறுகள் என்னைச் சுற்றி இறுக்கின.[r]
சாவின் கண்ணிகள் என் முன்னால் இருந்தன.[s]
7 இக்கட்டில் தவித்தபோது நான் யெகோவாவைக் கூப்பிட்டேன்,[t]
என் கடவுளை நோக்கிக் கூப்பிட்டுக்கொண்டே இருந்தேன்.
அப்போது, அவருடைய ஆலயத்திலிருந்து அவர் என் குரலைக்
கேட்டார்,
என் கதறல் அவருடைய காதுகளை எட்டியது.[u]
8 பூமி அதிர்ந்து பயங்கரமாகக் குலுங்கியது;[v]
அவருடைய கோபத்தால் வானத்தின் அஸ்திவாரங்கள் அதிர்ந்தன,[w]
அவை கிடுகிடுவென ஆடின.[x]

22:3 *நே.மொ., “என்னை மீட்கும் கொம்பு.” சொல் பட்டியலில் “கொம்பு” என்ற தலைப்பைப் பாருங்கள். #வே.வா., “உயர்ந்த.” **22:6** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 21
a 1நா 20:5
b 1சா 17:4, 7
c 1நா 20:6-8
d 1சா 17:10, 45; 2ரா 19:22
e 1சா 16:9; 1சா 17:13; 1நா 2:13
f சங் 60:12

அதி. 22
g 1சா 23:14; சங் 18:மே.கு.; சங் 34:19
h யாத் 15:1; நியா 5:1
i சங் 31:3
j சங் 18:2, 3
k உபா 32:4; 1சா 2:1, 2
l ஆதி 15:1; உபா 33:29; சங் 3:3
m சங் 9:9; நீதி 18:10
n சங் 59:16
o ஏசா 12:2; லூ 1:46, 47; தீத் 3:4
p சங் 69:14
q சங் 18:4
r சங் 116:3, 4
s சங் 18:5
t சங் 142:1; யோனா 2:2
u யாத் 3:7; சங் 18:6; சங் 34:15
v நியா 5:4
w யோபு 26:11
x சங் 18:7-12; சங் 77:18

9 அவருடைய மூக்கிலிருந்து புகை எழும்பியது.
சுட்டுப்பொசுக்கும் தீ அவர் வாயிலிருந்து புறப்பட்டது.[a]
தகதகக்கும் தணல்கள் அவரிடமிருந்து தெறித்தன.
10 அவர் இறங்கியபோது வானத்தை வளைத்தார்,[b]
கார்மேகங்கள் அவருடைய காலடியில் இருந்தன.[c]
11 கேருபீனின் மேல் ஏறி அவர் பறந்து வந்தார்.[d]
தேவதூதரின்* இறக்கைகள்மேல் காட்சி தந்தார்.[e]
12 பின்பு, இருளையும் கருத்த மழை மேகங்களையும்
ஒரு கூடாரம்போல் தன்னைச் சுற்றிப் போட்டுக்கொண்டார்.[f]
13 அவருடைய பிரகாசமான சன்னிதியில் நெருப்புத் தணல்கள்
தகதகத்தன.
14 பின்பு, யெகோவா வானத்திலிருந்து இடிபோல் முழங்கினார்;[g]
உன்னதமான கடவுள் தன்னுடைய குரலைக் கேட்கச் செய்தார்.[h]
15 அம்புகளை எறிந்து[i] எதிரிகளைச் சிதறிப்போக வைத்தார்;
மின்னலை அனுப்பி அவர்களைக் குழம்பிப்போக வைத்தார்.[j]
16 யெகோவா அதட்டினார்,
அவருடைய மூச்சுக்காற்று பலமாக அடித்தது.[k]
அப்போது, கடலின் அடிப்பரப்பு வெளியே தெரிந்தது;[l]
பூமியின் அஸ்திவாரங்களும் தெரிந்தன.
17 உயரத்திலிருந்து அவர் தன்னுடைய கையை நீட்டி,
என்னைப் பிடித்து, ஆழமான தண்ணீரிலிருந்து தூக்கிவிட்டார்.[m]
18 பலம்படைத்த எதிரியிடமிருந்து என்னைக் காப்பாற்றினார்,[n]
என்னைவிட வலிமையான விரோதிகளிடமிருந்து என்னை
விடுவித்தார்.
19 ஆபத்து நாளில் அவர்கள் எனக்கு எதிராக வந்தார்கள்,[o]
ஆனால், யெகோவா எனக்குத் துணையாக இருந்தார்.
20 பாதுகாப்பான* இடத்துக்கு என்னைக் கொண்டுவந்தார்;[p]
என்மேல் வைத்திருந்த பிரியத்தால் என்னைக் காப்பாற்றினார்.[q]
21 யெகோவா என் நீதிக்குப் பலன் தருகிறார்.[r]
கறைபடியாத என் கைகளுக்குப் பரிசு கொடுக்கிறார்.[s]
22 நான் எப்போதும் யெகோவாவின் வழிகளில் நடக்கிறேன்.
என் கடவுளைவிட்டு நான் விலகவில்லை, அந்தப் பாவத்தை நான்
செய்யவில்லை.
23 அவருடைய நீதித்தீர்ப்புகளைக்[t] கண் முன்னால்
வைத்திருக்கிறேன்.
அவருடைய சட்டதிட்டங்களை விட்டுவிலக மாட்டேன்.[u]
24 அவர் முன்னால் எப்போதும் குற்றமற்றவனாக இருப்பேன்,[v]
தவறு செய்யாமல் ஜாக்கிரதையாக இருப்பேன்.[w]
25 யெகோவா என் நீதிக்குப் பலன் தரட்டும்.[x]
கறைபடியாமல் இருக்கும் எனக்குப் பலன் கொடுக்கட்டும்.[y]

22:11 * வே.வா., “காற்றின்.” **22:20** * வே.வா., “விசாலமான.”

அதி. 22
a ஏசா 30:27
b சங் 144:5; ஏசா 64:1
c உபா 4:11; 1ரா 8:12; சங் 18:9; சங் 97:2
d 1சா 4:4; சங் 80:1; சங் 99:1
e எபி 1:7
f யோபு 36:29
g யாத் 19:16; 1சா 2:10
h சங் 18:13-16; ஏசா 30:30
i சங் 7:13; சங் 77:17
j சங் 144:6
k யாத் 15:8
l யாத் 14:21; சங் 106:9; சங் 114:3
m சங் 18:16-19; சங் 124:2-4; சங் 144:7
n சங் 3:7; சங் 56:9
o 1சா 19:11; 1சா 23:26; 2சா 15:10
p சங் 31:8
q சங் 149:4
r 1சா 26:23; 1ரா 8:32
s சங் 18:20-24; சங் 24:3, 4
t உபா 6:1; சங் 19:9
u உபா 8:11
v சங் 84:11
w சங் 18:23; நீதி 14:16
x யோபு 34:11; ஏசா 3:10; எபி 11:6
y சங் 18:24; நீதி 5:21

அதி. 22
a சங் 37:28
சங் 97:10
b சங் 18:25-30
c மத் 5:8
1பே 1:16
d சங் 125:5
e யோபு 34:28
f தானி 4:37
1பே 5:5
g சங் 27:1
h சங் 97:11
i சங் 18:29
பிலி 4:13
எபி 11:33, 34
j உபா 32:4
k சங் 12:6
நீதி 30:5
l சங் 35:2
சங் 91:4
m ஏசா 44:6
n உபா 32:31
சங் 18:31-42
o சங் 27:1
ஏசா 12:2
p ஏசா 26:7
q ஏசா 33:15, 16
ஆப 3:19
r சங் 18:35
சங் 113:6-8
s சங் 17:5
t யாத் 14:13
u 1சா 23:5
v 1சா 17:49
சங் 44:3, 5
w ஆதி 49:8
x சங் 18:40

26 உண்மையுள்ளவரிடம்* நீங்கள் உண்மையுள்ளவராக#
நடந்துகொள்கிறீர்கள்;[a]
குற்றமற்றவரிடம் நீங்கள் குற்றமற்றவராக நடந்துகொள்கிறீர்கள்;[b]
27 தூய்மையானவருக்கு நீங்கள் தூய்மையானவராக இருக்கிறீர்கள்,[c]
குறுக்குபுத்திக்காரரிடம் நீங்கள் புத்திசாலித்தனமாக*
நடந்துகொள்கிறீர்கள்.[d]
28 தாழ்மையுள்ளவர்களைக் காப்பாற்றுகிறீர்கள்,[e]
கர்வமுள்ளவர்களை உங்களுடைய கண்கள் வெறுக்கின்றன; நீங்கள்
அவர்களைத் தாழ்த்துகிறீர்கள்.[f]
29 யெகோவாவே, என் விளக்கு நீங்கள்தான்.[g]
என் இருளை வெளிச்சமாக்குகிறவர் யெகோவாதான்.[h]
30 உங்கள் துணையால் கொள்ளைக்கூட்டத்தைத் தாக்குவேன்;
உங்கள் சக்தியால் மதிலையும் தாண்டுவேன்.[i]
31 உண்மைக் கடவுளுடைய வழிகள் குறை இல்லாதவை.[j]
யெகோவாவுடைய வார்த்தைகள் புடமிடப்பட்டவை.[k]
தன்னிடம் தஞ்சம் தேடி வருகிற எல்லாருக்கும் அவர் கேடயமாக
இருக்கிறார்.[l]
32 யெகோவாவைத் தவிர வேறு கடவுள் உண்டா?[m]
நம் கடவுளைத் தவிர வேறு கற்பாறை உண்டா?[n]
33 உண்மைக் கடவுள் எனக்கு வலிமையான கோட்டையாக இருக்கிறார்,[o]
அவர் என் வழியைச் சீராக்குவார்.[p]
34 அவர் என் கால்களை மானின் கால்களைப் போலாக்குகிறார்.
உயரமான இடங்களில் என்னை நிற்க வைக்கிறார்.[q]
35 போர் செய்ய என் கைகளுக்குப் பயிற்சி தருகிறார்;
அதனால், என் கைகளால் செம்பு வில்லை வளைக்க முடியும்.
36 உங்களுடைய மீட்பின் கேடயத்தை எனக்குக் கொடுக்கிறீர்கள்,
உங்கள் மனத்தாழ்மையால் என்னை உயர்த்துகிறீர்கள்.[r]
37 நான் நடக்கும் பாதையை அகலமாக்குகிறீர்கள்.
அதனால், என் கால்கள்* தடுமாறாது.[s]
38 நான் எதிரிகளைத் துரத்திக்கொண்டு போய்த் தீர்த்துக்கட்டுவேன்.
அவர்களை அடியோடு அழித்துவிட்டுத்தான் திரும்புவேன்.
39 அவர்களை ஒழித்துக்கட்டுவேன், மறுபடியும் எழுந்து வர முடியாதபடி
நொறுக்குவேன்;[t]
அவர்கள் என் காலடியில் விழுவார்கள்.
40 போர் செய்ய நீங்கள் எனக்குப் பலம் தருவீர்கள்.[u]
எதிரிகளை என் காலடியில் விழ வைப்பீர்கள்.[v]
41 என் பகைவர்களைப் பின்வாங்கி ஓட வைப்பீர்கள்.[w]
என் விரோதிகளை நான் ஒழித்துக்கட்டுவேன்.*[x]

22:26 *வே.வா., “பற்றுமாறாதவரிடம்.” #வே.வா., “பற்றுமாறாதவராக.” **22:27** *வே.வா., “சாமர்த்தியமாக.” **22:37** *வே.வா., “கணுக்கால்கள்.” **22:41** *நே.மொ., “மவுனமாக்குவேன்.”

42 அவர்கள் உதவி கேட்டுக் கதறுகிறார்கள், ஆனால் அவர்களைக் காப்பாற்ற யாரும் இல்லை.
அவர்கள் யெகோவாவிடமும் கதறுகிறார்கள், ஆனால் அவர் பதில் சொல்வதில்லை.[a]
43 தரையில் கிடக்கிற தூசியைப் போல் அவர்களை நான் தூள்தூளாக்குவேன்;
அவர்களைச் சுக்குநூறாக்கி, தெருக்களில் கிடக்கிற சேற்றைப் போல் மிதித்துப்போடுவேன்.
44 என்னை எதிர்க்கிற* ஜனங்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுவீர்கள்.[b]
என்னைப் பாதுகாத்து தேசங்களுக்குத் தலைவனாக்குவீர்கள்;[c]
முன்பின் தெரியாத மக்கள் எனக்குச் சேவை செய்வார்கள்.[d]
45 மற்ற தேசத்து மக்கள் என் முன்னால் அடங்கி ஒடுங்கி நிற்பார்கள்.[e]
என்னைப் பற்றிக் கேள்விப்பட்டு எனக்குக் கீழ்ப்படிவார்கள்.
46 மற்ற தேசத்து மக்கள் வெலவெலத்துப்போவார்கள்.*
அவர்களுடைய கோட்டைகளிலிருந்து நடுநடுங்கிக்கொண்டு வருவார்கள்.
47 யெகோவாதான் உயிருள்ள கடவுள்! அவரே என் கற்பாறை![f] அவருக்குப் புகழ் சேரட்டும்!
கடவுள்தான் என்னை மீட்கும் கற்பாறை, அவர் போற்றப்படட்டும்.[g]
48 உண்மைக் கடவுள் எனக்காகப் பழிவாங்குகிறார்.[h]
மக்களை என் முன்னால் அடிபணிய வைக்கிறார்.[i]
49 எதிரிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுகிறார்.
என்னைத் தாக்க வருகிறவர்களின் கைக்கு எட்டாதபடி என்னைத் தூக்கிக்கொள்கிறார்.[j]
கொடியவனிடமிருந்து என்னைப் பாதுகாக்கிறார்.[k]
50 அதனால் யெகோவாவே, எல்லா மக்கள் மத்தியிலும் உங்களுக்கு நன்றி சொல்வேன்,[l]
உங்களுடைய பெயரைப் புகழ்ந்து பாடுவேன்:*[m]
51 தான் நியமித்த ராஜாவை மீட்பதற்காக அவர் மாபெரும் செயல்களைச் செய்கிறார்.*[n]
தான் தேர்ந்தெடுத்த# தாவீதுக்கும் அவருடைய சந்ததிக்கும்
மாறாத அன்பை என்றென்றும் காட்டுகிறார்.”[o]

23 கடைசியாக தாவீது சொன்னது இதுதான்:[p]
“ஈசாயின் மகன் தாவீது சொன்ன செய்தி,[q]
மிகவும் உயர்த்தப்பட்டவனின் வார்த்தை,[r]
இவன் யாக்கோபின் கடவுளால் அபிஷேகம் செய்யப்பட்டவன்,[s]
இஸ்ரவேலின் பாடல்களை இனிமையாகப் பாடும்[t] பாடகன்.
2 யெகோவாவின் சக்தி என் மூலம் பேசியது;[u]
அவருடைய வார்த்தை என் நாவில் இருந்தது.[v]

22:44 *வே.வா., “என்னைக் குறைசொல்கிற.” 22:46 *வே.வா., “வாடிப்போவார்கள்.” 22:50 *வே.வா., “இசை இசைப்பேன்.” 22:51 *வே.வா., “மாபெரும் வெற்றிகளைக் குவிக்கிறார்.” #வே.வா., “அபிஷேகம் செய்த.”

அதி. 22
a 1சா 28:6, நீதி 1:28, ஏசா 1:15, மீ 3:4
b 1சா 30:6, 2சா 15:12
c 2சா 8:3, சங் 2:8, சங் 60:8
d சங் 18:43-45
e உபா 33:29
f உபா 32:4
g சங் 18:46, சங் 89:26
h 1சா 25:29, 2சா 18:19
i சங் 18:47, சங் 110:1, சங் 144:1, 2
j 2சா 5:12, 2சா 7:9
k சங் 18:48
l உபா 32:43, சங் 117:1
m 1நா 16:9, சங் 145:2, ரோ 15:9
n சங் 2:6, சங் 21:1
o சங் 89:20, 29, லூ 1:32, 33

அதி. 23
p ஆதி 49:1, உபா 33:1
q 1சா 17:58, மத் 1:6
r 2சா 7:8
s 1சா 16:13
t 1நா 16:9
u மாற் 12:36, 2தீ 3:16
v அப் 1:16, 2பே 1:21

3 இஸ்ரவேலின் கடவுள் பேசினார்;
இஸ்ரவேலின் கற்பாறை[a] என்னிடம் சொன்னார்:
‘மனிதர்கள்மீது ஆட்சி செய்கிறவன் நீதியாக நடந்தால்,[b]
கடவுளுக்குப் பயந்து ஆட்சி செய்தால்,[c]
4 அந்த ஆட்சி மேகம் இல்லாத வானில் பிரகாசிக்கிற
காலைநேர வெளிச்சம்போல் இருக்கும்,[d]
மழை ஓய்ந்த பின்பு, மண்ணிலிருந்து பசும்புல்லைத் துளிர்க்க வைக்கிற
சூரிய ஒளிபோல் இருக்கும்.’[e]
5 என் வம்சமும் கடவுளுக்கு முன்னால் அப்படித்தானே இருக்கும்?
அவர்தான் என்னோடு நிரந்தர ஒப்பந்தம் செய்திருக்கிறாரே;[f]
அதைக் கச்சிதமாய், கவனமாய்த் தயார்படுத்தியிருக்கிறாரே.
அது எனக்கு முழுமையான மீட்பும் அளவில்லாத ஆனந்தமும்
அளிக்கும்;
அதனால்தானே என் வம்சத்தை அவர் செழித்தோங்கச் செய்கிறார்?[g]
6 ஒன்றுக்கும் உதவாத ஆட்களெல்லாம் முட்செடிகள்போல்
தூக்கியெறியப்படுவார்கள்,[h]
அவற்றை யாராலும் வெறும் கையால் எடுக்க முடியாதே.
7 அவற்றை ஒருவன் தொட வேண்டுமென்றால்
அவனுக்கு இரும்புக் கருவிகளும் ஈட்டியும் வேண்டும்.
அவை இருக்கும் இடத்திலேயே அவற்றை முற்றிலும் சுட்டெரித்துவிட
வேண்டும்.”

8 தாவீதுடன் இருந்த மாவீரர்களின் பெயர்கள்:[i] தக்கெமோனியனான
யோசேப்-பாசெபெத், அவர் மூன்று மாவீரர்களில் ஒருவர்;[j] அவர்தான்
அந்த மாவீரர்களுக்குத் தலைவர். ஒரு சமயம், அவர் தன்னுடைய ஈட்டி
யால் 800 பேரைக் கொன்றுபோட்டார். **9** அவருக்கு அடுத்த இடத்தில்,
அகோகியின் பேரனும் தோதோவின்[k] மகனுமான எலெயாசார்[l] இருந்தார்.
ஒருசமயம், இஸ்ரவேலர்களோடு போர் செய்ய பெலிஸ்தியர்கள் வந்தார்
கள். தாவீதுடன் இருந்த மாவீரர்கள் மூன்று பேரும் பெலிஸ்தியர்களுக்குச்
சவால் விட்டார்கள். அவர்களில் இந்த எலெயாசாரும் ஒருவர். ஆனால்,
மற்ற இஸ்ரவேல் வீரர்கள் பின்வாங்கினார்கள். **10** அப்போது எலெயா
சார் துணிந்துநின்று சண்டைபோட்டார், பெலிஸ்தியர்களை வெட்டி வீழ்த்தி
னார். கை ஓய்ந்துபோகும்வரை அவர்களை வெட்டிச் சாய்த்துக்கொண்டே
இருந்தார். வாளைப் பிடித்துப் பிடித்து அவருடைய கையே விறைத்துப்
போனது.[m] அவர்களுக்கு யெகோவா அன்று மாபெரும் வெற்றியைத் தந்
தார்.[n] கொல்லப்பட்ட ஆட்களிடமிருந்து கொள்ளையடிப்பதற்காக எலெயா
சாரின் பின்னால் வீரர்கள் போனார்கள்.

11 அவருக்கு அடுத்த இடத்தில் ஆராரியனான ஆகேயின் மகன் சம்மா
இருந்தார். ஒருநாள், லேகி என்ற இடத்தில் பெலிஸ்தியர்கள் திரண்டு வந்தார்
கள். அங்கே இருந்த வயலில் பயறு செழித்து விளைந்திருந்தது. பெலிஸ்தி
யர்களைப் பார்த்து வீரர்கள் தலைதெறிக்க ஓடினார்கள். **12** ஆனால்,
அவர் அந்த வயல் நடுவில் நின்று அதைப் பாதுகாத்தார். பெலிஸ்தியர்களை
வெட்டி வீழ்த்திக்கொண்டே இருந்தார். அன்று அவர் மூலம் யெகோவா
மாபெரும் வெற்றியைத் தந்தார்.[o]

அதி. 23
a உபா 32:4; சங் 144:1
b நீதி 29:2; ஏசா 9:7; ஏசா 32:1
c யாத் 18:21; ஏசா 11:3
d மல் 4:2; மத் 17:2; வெளி 1:16
e சங் 72:1, 6
f 2சா 7:16, 19; 1நா 17:11; சங் 89:3; சங் 89:28, 29; சங் 132:11
g ஏசா 9:7; ஏசா 11:1; ஆமோ 9:11
h சங் 37:10
i 2சா 10:7; 2சா 20:7; 1நா 11:10
j 1நா 11:11
k 1நா 27:1, 4
l 1நா 11:12-14
m நியா 8:4
n நியா 15:14, 16; 1சா 14:6; 1சா 19:5
o சங் 3:8; சங் 44:3

13 அறுவடை சமயத்தில் 30 தலைவர்களில் மூன்று பேர்
அதுல்லாம் குகையிலிருந்த தாவீதிடம் போனார்கள்.[a] பெலிஸ்தியர்களின்
படையோ ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் முகாம்போட்டிருந்தது.[b] **14** அப்
போது, தாவீது பாதுகாப்பான ஓர் இடத்தில் இருந்தார்.[c] பெலிஸ்தியர்களின்
புறக்காவல் படை ஒன்று பெத்லகேமில் இருந்தது. **15** அப்போது தாவீது,
“பெத்லகேம் நுழைவாசலில் இருக்கும் தண்ணீர்த் தொட்டியிலிருந்து தண்
ணீரைக் குடிக்க ஆசையாக இருக்கிறது” என்று ஏக்கத்தோடு சொன்னார்.
16 உடனே அந்த மூன்று மாவீரர்களும் பெலிஸ்தியர்களோடு சண்டை
போட்டுக்கொண்டே அவர்களுடைய முகாமுக்குள் நுழைந்து பெத்லகேம்
நுழைவாசலில் இருக்கும் தண்ணீர்த் தொட்டியிலிருந்து தண்ணீர் கொண்டு
வந்தார்கள். ஆனால் தாவீது அதைக் குடிக்க மறுத்து, யெகோவாவுக்காகக்
கீழே ஊற்றிவிட்டார்.[d] **17** அப்போது தாவீது, “யெகோவாவே, இப்படிச்
செய்வதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது! எனக்காக உயி
ரையே பணயம் வைத்துப் போன என் வீரர்களின் இரத்தத்தை நான் குடிக்க
வேண்டுமா?”[e] என்றார். இப்படி, அந்தத் தண்ணீரைக் குடிக்க மறுத்துவிட்
டார். இவையே அந்த மூன்று மாவீரர்கள் செய்த செயல்கள்.

18 செருயாவின்[f] மகனும் யோவாபின் சகோதரனுமான அபிசாய்[g] இன்
னும் மூன்று மாவீரர்களுக்குத் தலைவராக இருந்தார்; அவர் தன்னுடைய
ஈட்டியால் 300 பேரைக் கொன்றுபோட்டார். முதல் மூன்று மாவீரர்களைப்
போலவே இவரும் புகழ் பெற்றிருந்தார்.[h] **19** மாவீரர்கள் மூன்று பேரில்
தனிச்சிறப்பு பெற்றவராகவும் தலைவராகவும் இருந்தாலும், முதல் மூன்று
மாவீரர்களுக்கு அவர் சமமாக இல்லை.

20 யோய்தாவின் மகன் பெனாயா[i] அஞ்சாநெஞ்சம் உள்ளவர். கப்செ
யேலில்[j] வீரச்செயல்கள் பலவற்றைச் செய்திருந்தார். மோவாபியனான அரி
யேலின் இரண்டு மகன்களைக் கொன்றுபோட்டார். ஒருநாள், பனி பெய்து
கொண்டிருந்தபோது தண்ணீர்த் தொட்டிக்குள் இறங்கி ஒரு சிங்கத்தைக்
கொன்றுபோட்டார்.[k] **21** அதோடு, மிக மிக உயரமாக இருந்த ஓர் எகிப்தி
யனையும் கொன்றுபோட்டார். அந்த எகிப்தியன் கையில் ஈட்டி இருந்தது.
ஆனாலும், பெனாயா ஒரு கம்பை எடுத்துக்கொண்டு அவனை எதிர்த்துச்
சண்டைபோடப் போனார். அவனுடைய கையிலிருந்த ஈட்டியைப் பிடுங்கி,
அந்த ஈட்டியாலேயே அவனைக் குத்திக் கொன்றார். **22** இவையெல்லாம்
யோய்தாவின் மகன் பெனாயாவின் செயல்கள். முதல் மூன்று மாவீரர்க
ளைப் போலவே இவரும் புகழ் பெற்றிருந்தார். **23** மாவீரர்கள் 30 பேரை
விட இவர் தனிச்சிறப்பு பெற்றிருந்தார். ஆனால், முதல் மூன்று மாவீரர்க
ளுக்கு இவர் சமமாக இல்லை. ஆனாலும், தாவீது இவரைத் தன்னுடைய
மெய்க்காவலர்களுக்குத் தலைவராக நியமித்தார்.

24 யோவாபின் சகோதரன் ஆசகேலும்[l] அந்த மாவீரர்கள் 30 பேரில்
ஒருவர். அவர்கள் யாரென்றால்: பெத்லகேமைச் சேர்ந்த தோதோவின்
மகன் எல்க்கானான்,[m] **25** ஆரத்தியனான சம்மா, ஆரத்தியனான எலிக்கா,
26 பல்தியனான ஏலெஸ்,[n] தெக்கோவா ஊரைச் சேர்ந்த இக்கேசின்
மகன் ஈரா,[o] **27** ஆனதோத்தியனான[p] அபியேசர்,[q] உஷாத்தியனான
மெபுன்னாய், **28** அகோகியனான சால்மோன், நெத்தோபாத்தியனான மக
ராய்,[r] **29** நெத்தோபாத்தியனான பாணாவின் மகன் ஏலேப், பென்யமீன்
கோத்திரத்தாருடைய கிபியாவைச் சேர்ந்த ரிபாயின் மகன் ஈத்தாய்,

அதி. 23

a யோசு 15:20, 35; 1சா 22:1
b யோசு 15:1, 8; 2சா 5:22; 1நா 11:15-19
c 1சா 22:1, 4; 1நா 12:16
d லேவி 9:9; லேவி 17:13
e ஆதி 9:4; லேவி 17:10
f 2சா 2:18; 1நா 2:15, 16
g 1சா 26:6; 2சா 21:17
h 1நா 11:20, 21
i 2சா 8:18; 2சா 20:23; 1ரா 1:8; 1ரா 2:29; 1நா 27:5, 6
j யோசு 15:21
k 1நா 11:22-25; நீதி 30:30
l 2சா 2:18, 23; 1நா 2:15, 16; 1நா 27:1, 7
m 1நா 11:26-41
n 1நா 27:1, 10
o 1நா 27:1, 9
p யோசு 21:8, 18; எரே 1:1
q 1நா 27:1, 12
r 1நா 27:1, 13

30 பிரத்தோனியனான பெனாயா,[a] காயாஸ் பள்ளத்தாக்கை*[b] சேர்ந்த
ஹித்தாய், **31** அர்பாத்தியனான அபி-அல்பொன், பருமியனான அஸ்மா
வேத், **32** சால்பீமியனான எலியாபா, யாசேனின் மகன்கள், யோனத்தான்,
33 ஆராரியனான சம்மா, ஆராரியனான ஷாராரின் மகன் அகியாம்,
34 மாகாத்தியனின் மகனாகிய அகஸ்பாயின் மகன் எலிப்பேலேத், கீலோ
ஊரைச் சேர்ந்த அகித்தோப்பேலின்[c] மகன் எலியாம், **35** கர்மேல் ஊரைச்
சேர்ந்த எஸ்ரோ, அராபியனான பாராய், **36** சோபாவைச் சேர்ந்த நாத்தா
னின் மகன் ஈகால், காத் கோத்திரத்தானான பானி, **37** அம்மோனியனான
சேலேக், பேரோத்தியனும் செருயாவின் மகனாகிய யோவாபின் ஆயுதங்
களைச் சுமப்பவனுமான நகராய், **38** இத்தரியனான ஈரா, இத்தரியனான[d]
காரேப், **39** ஏத்தியனான உரியா.[e] மொத்தம் 37 பேர்.

24 இஸ்ரவேலர்கள்மீது யெகோவாவுக்கு மறுபடியும் பயங்கர கோபம்
வந்தது.[f] ஏனென்றால், “நீங்கள் போய் இஸ்ரவேலையும் யூதா
வையும் கணக்கெடுங்கள்”[g] என்று உத்தரவிடும்படி தாவீது தூண்டப்பட்டி
ருந்தார். அவர்களுக்கு விரோதமாகச் செயல்படுவதற்கு ஒருவன் அவரைத்
தூண்டியிருந்தான்.*[h] **2** ராஜா தன்னோடு இருந்த படைத் தளபதி யோவா
பிடம்,[i] “தயவுசெய்து, தாண்முதல் பெயெர்-செபாவரை[j] இருக்கிற எல்லா
இஸ்ரவேல் கோத்திரங்களுக்கும் போய் மக்களை* பெயர்ப்பதிவு செய்து,
என்னிடம் வந்து சொல்லுங்கள். மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்கள்
என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்” என்று சொன்னார்.
3 ஆனால் யோவாப், “ராஜாவே, உங்கள் கடவுளாகிய யெகோவா இந்த
மக்களை இன்னும் நூறு மடங்கு பெருகச் செய்வார்; அதை என் எஜமானா
கிய நீங்களே பார்ப்பீர்கள். அதனால் ராஜாவே, என் எஜமானே, ஏன் இப்
படியொரு காரியத்தைச் செய்ய விரும்புகிறீர்கள்?” என்று கேட்டார்.

4 ஆனால், யோவாபும் மற்ற படைத் தலைவர்களும் சொன்ன
வார்த்தைகள் எடுபடவில்லை, ராஜாவின் வார்த்தைதான் ஜெயித்தது. அத
னால், இஸ்ரவேல் மக்களைப் பெயர்ப்பதிவு செய்வதற்காக யோவாபும் மற்ற
படைத் தலைவர்களும் புறப்பட்டுப் போனார்கள்.[k] **5** அவர்கள் யோர்தா
னைக் கடந்து ஆரோவேரில்[l] தங்கினார்கள், பள்ளத்தாக்கின்* நடுவே
இருந்த நகரத்தின் வலது பக்கத்தில்# தங்கினார்கள்; பின்பு, காத் கோத்திரத்
தாரின் பிரதேசத்துக்கும் யாசேருக்கும்[m] போனார்கள். **6** அடுத்ததாக, கீலே
யாத்துக்கும்[n] தாதீம்-ஒத்சி பகுதிக்கும் போனார்கள்; தாண்-யானுக்குப்
போய் அங்கிருந்து சுற்றி சீதோனுக்குப்[o] போனார்கள். **7** அதன் பின்பு,
தீரு கோட்டைக்கும்[p] ஏவியர்களுடைய[q] எல்லா நகரங்களுக்கும் கானா
னியர்களுடைய எல்லா நகரங்களுக்கும் போனார்கள்; கடைசியாக நெகே
புக்கு,[r] அதாவது யூதா தேசத்திலுள்ள பெயெர்-செபாவுக்கு,[s] போனார்கள்.
8 இப்படி தேசமெங்கும் போய்விட்டு, ஒன்பது மாதங்கள் 20 நாட்களுக்குப்
பின்பு எருசலேமுக்கு வந்துசேர்ந்தார்கள். **9** பெயர்ப்பதிவு செய்யப்பட்ட
மக்கள் மொத்தம் எத்தனை பேர் என்பதை ராஜாவிடம் யோவாப்

அதி. 23
a 1நா 27:1, 14
b நியா 2:8, 9
c 2சா 15:31; 2சா 16:23; 2சா 17:23; 1நா 27:33
d 1நா 2:53
e 2சா 11:3; 1ரா 15:5

அதி. 24
f 2சா 21:1
g 1நா 27:23, 24
h 1நா 21:1-3
i 2சா 8:16; 2சா 20:23
j நியா 20:1
k எண் 1:2; 1நா 21:4
l உபா 2:36; யோசு 13:8, 9
m எண் 32:34, 35
n எண் 32:40
o ஆதி 10:15; ஆதி 49:13; யோசு 11:8
p யோசு 19:24, 29
q யோசு 11:19
r யோசு 15:1
s ஆதி 21:31; யோசு 15:21, 28

23:30 *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கை.” சொல் பட்டியலைப் பாருங்கள். **24:1** *வே.வா., “ஒருவனால் தாவீது தூண்டப்பட்டிருந்தார்.” **24:2** *அநேகமாக, படையில் சேருவதற்கான வயதை எட்டிய ஆண்களைக் குறிக்கலாம். **24:5** *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்.” #வே.வா., “தென் திசையில்.”

தெரிவித்தார். இஸ்ரவேலில் வாளேந்திய வீரர்கள் மொத்தம் 8,00,000 பேர் இருந்தார்கள்; யூதாவில் 5,00,000 ஆண்கள் இருந்தார்கள்.[a]

10 மக்களைக் கணக்கெடுத்த பின்பு தாவீதின் மனம் அடித்துக் கொண்டே* இருந்தது.[b] அதனால் தாவீது யெகோவாவிடம், "இந்தக் காரி யத்தைச் செய்ததன் மூலம் நான் பெரிய பாவம் செய்துவிட்டேன்.[c] யெகோ வாவே, தயவுசெய்து அடியேனின் தவறை மன்னித்துவிடுங்கள்;[d] நான் ரொம்ப முட்டாள்தனமாக நடந்துகொண்டேன்"[e] என்று சொன்னார்.
11 தாவீது காலையில் எழுந்தபோது, தாவீதின் தரிசனக்காரரான காத் தீர்க்க தரிசியிடம்[f] யெகோவா ஒரு செய்தி சொன்னார். **12** "நீ தாவீதிடம் போய், 'உனக்கு முன்னால் மூன்று தண்டனைகளை வைக்கிறேன். எது வேண்டும் என்பதை நீயே தீர்மானித்துக்கொள்' என்று யெகோவா சொல்கிறார் என்று சொல்"[g] என்றார். **13** அதனால் அவர் தாவீதிடம் வந்து, "உங்களுடைய தேசத்தில் ஏழு வருஷங்கள் பஞ்சம் வர வேண்டுமா?[h] அல்லது உங்களைத் துரத்துகிற எதிரிகளுக்குப் பயந்து நீங்கள் மூன்று மாதங்களுக்குத் தப்பித்து ஓட வேண்டுமா?[i] அல்லது உங்கள் தேசத்தில் மூன்று நாட்களுக்குக் கொள் ளைநோய் வர வேண்டுமா?[j] என்னை அனுப்பியவருக்கு நான் என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதை நீங்கள் நன்றாக யோசித்துச் சொல்லுங்கள்" என்றார். **14** அப்போது தாவீது காத் தீர்க்கதரிசியிடம், "நான் ரொம்ப நொந் துபோயிருக்கிறேன். யெகோவா மகா இரக்கமுள்ளவர்,[k] அதனால், தயவு செய்து அவரே நம்மைத் தண்டிக்கட்டும்;[l] மனிதர்களின் கையில் நம்மை விட்டுவிட வேண்டாம்"[m] என்று சொன்னார்.

15 அப்போது, காலை தொடங்கி ஒரு குறிப்பிட்ட நேரம்வரை இஸ்ர வேலர்களை யெகோவா கொள்ளைநோயால் தாக்கினார்;[n] அதனால், தாண் முதல் பெயெர்-செபாவரை[o] 70,000 பேர் செத்தார்கள்.[p] **16** எருச லேமை அழிக்க அந்த நகரத்துக்கு நேராக தேவதூதர் கைநீட்டினார்; கொள்ளைநோயால் மக்கள் தாக்கப்படுவதை நினைத்து யெகோவா வருத் தப்பட்டார்;*[q] அதனால் அழிவைக் கொண்டுவந்த அந்தத் தேவதூதரிடம், "போதும், உன் கையைக் கீழே போடு!" என்று சொன்னார். அப்போது, எபூ சியனான[r] அர்வனாவின் களத்துமேட்டுக்குப் பக்கத்தில் யெகோவாவின் தூதர் இருந்தார்.[s]

17 மக்களை அழித்துக்கொண்டிருந்த தேவதூதரை தாவீது பார்த்த போது அவர் யெகோவாவிடம், "நான்தானே பாவம் செய்தேன், நான் தானே தவறு செய்தேன்; இந்த ஆடுகள்[t] என்ன தவறு செய்தன? தயவு செய்து நீங்கள் என்னையும் என் தகப்பன் குடும்பத்தையும் தண்டியுங்கள்"[u] என்று சொன்னார்.

18 அதனால் அன்று காத் தீர்க்கதரிசி தாவீதிடம் வந்து, "நீ போய் எபூ சியனான அர்வனாவின் களத்துமேட்டில் யெகோவாவுக்கு ஒரு பலிபீடம் கட்டு"[v] என்று சொன்னார். **19** காத் தீர்க்கதரிசி மூலம் யெகோவா கொடுத்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தாவீது அங்கே போனார். **20** ராஜா வும் அவருடைய ஊழியர்களும் தன்னிடம் வருவதை அர்வனா பார்த் தார்; உடனே களத்துமேட்டிலிருந்து வெளியே வந்து ராஜா முன்னால் மண்டிபோட்டு தரைவரைக்கும் குனிந்து வணங்கினார். **21** பின்பு அவர், "ராஜாவே, என் எஜமானே, நீங்கள் ஏன் இந்த அடியேனைப் பார்க்க வந்தி

24:10 * வே.வா., "மனசாட்சி உறுத்திக்கொண்டே." **24:16** * வே.வா., "துக்கப்பட்டார்."

அதி. 24
a எண் 2:32; எண் 26:51; 1நா 21:5, 6; 1நா 27:23
b 1சா 24:5; ரோ 2:15
c 2சா 12:13
d சங் 130:3; ஓசி 14:2; 1யோ 1:9
e 1நா 21:8-13
f 1சா 22:5; 1நா 29:29
g நீதி 3:12
h லேவி 26:18, 20; 2சா 21:1
i லேவி 26:14, 17
j லேவி 26:16
k சங் 103:8; சங் 119:156
l எபி 12:6
m 2நா 28:1, 5
n எண் 16:46; 1நா 27:24
o 2சா 24:2
p 1நா 21:14, 15
q சங் 78:38; எரே 26:19; யோவே 2:13
r ஆதி 10:15, 16; யோசு 15:8
s 2நா 3:1
t சங் 95:7
u 1நா 21:16, 17
v 1நா 21:18-23; 2நா 3:1

ருக்கிறீர்கள்?” என்று கேட்டார். அதற்கு தாவீது, “இந்தக் களத்து
மேட்டை உன்னிடமிருந்து வாங்க வந்திருக்கிறேன்; இங்கே யெகோவா
வுக்கு ஒரு பலிபீடம் கட்டப்போகிறேன்; அப்போதுதான், மக்களைத் தாக்
குகிற கொள்ளைநோயைக் கடவுள் நிறுத்துவார்”[a] என்று சொன்னார்.
22 அப்போது அர்வனா தாவீதிடம், “ராஜாவே, என் எஜமானே, தாராள
மாக எடுத்துக்கொள்ளுங்கள், உங்களுடைய விருப்பப்படியே பலி கொடுங்
கள். இதோ, தகன பலி கொடுப்பதற்கு மாடுகள் இருக்கின்றன, போரடிக்கும்
பலகையையும் நுகத்தடியையும் விறகாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
23 ராஜாவே, இவை எல்லாவற்றையும் உங்களுக்குத் தருகிறேன்”* என்று
சொன்னார். அதோடு அவர், “உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை
ஆசீர்வதிக்கட்டும்” என்றும் சொன்னார்.

24 ஆனால் ராஜா, “இல்லை, நான் உன்னிடமிருந்து விலைக்குத்தான்
வாங்குவேன். இலவசமாக வாங்கி என் கடவுளாகிய யெகோவாவுக்குத்
தகன பலிகளைக் கொடுக்க மாட்டேன்” என்று அர்வனாவிடம் சொன்னார்.
அதனால், தாவீது அந்தக் களத்துமேட்டையும் மாடுகளையும் 50 வெள்ளி
சேக்கலுக்கு* வாங்கினார்.[b] **25** அங்கே யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்
தைக் கட்டி,[c] தகன பலிகளையும் சமாதான பலிகளையும் கொடுத்தார். அப்
போது, தேசத்துக்காக அவர்கள் செய்த மன்றாட்டை யெகோவா கேட்டு,[d]
இஸ்ரவேலர்கள்மீது கொண்டுவந்த தண்டனையை நிறுத்தினார்.

24:23 *நே.மொ., “அர்வனா தருகிறார்.” **24:24** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 24
a எண் 16: 46, 47; எண் 25:8; 2சா 24:15
b 1நா 21:24-28
c யாத் 20:25; 1நா 22:1
d 2சா 21:14; 2நா 33:13

முதலாம்
ராஜாக்கள்

முக்கியக் குறிப்புகள்

1 தாவீதும் அபிஷாக்கும் (1-4)
அதோனியா ஆட்சியைப் பிடிக்க விரும்புகிறான் (5-10)
நாத்தானும் பத்சேபாளும் நடவடிக்கை எடுக்கிறார்கள் (11-27)
சாலொமோனை அபிஷேகம் செய்ய தாவீது கட்டளையிடுகிறார் (28-40)
அதோனியா பலிபீடத்துக்கு ஓடுகிறான் (41-53)

2 சாலொமோனுக்கு தாவீதின் அறிவுரை (1-9)
தாவீது இறந்துபோகிறார்; சாலொமோன் சிம்மாசனத்தில் உட்காருகிறார் (10-12)
அதோனியாவின் திட்டம் அவன் உயிருக்கே உலை வைக்கிறது (13-25)
அபியத்தார் ஊரைவிட்டு துரத்தப்படுகிறார்; யோவாப் கொல்லப்படுகிறார் (26-35)
சீமேயி கொல்லப்படுகிறான் (36-46)

3 பார்வோனின் மகளை சாலொமோன் கல்யாணம் செய்கிறார் (1-3)
சாலொமோனின் கனவில் யெகோவா (4-15)
சாலொமோன் ஞானம் கேட்கிறார் (7-9)
இரண்டு தாய்மார்களுக்கு சாலொமோனின் தீர்ப்பு (16-28)

4 சாலொமோனின் நிர்வாகம் (1-19)
சாலொமோனின் ஆட்சியில் செழிப்பு (20-28)
திராட்சைக் கொடியின் நிழலிலும் அத்திமரத்தின் நிழலிலும் பாதுகாப்பு (25)

சாலொமோனின் ஞானமும் நீதிமொழிகளும் (29-34)

5 கட்டுமானப் பொருள்களை ஈராம் ராஜா தருகிறார் (1-12)
சாலொமோன் தன் வேலைக்கு ஆட்களை வைக்கிறார் (13-18)

6 சாலொமோன் ஆலயத்தைக் கட்டுகிறார் (1-38)
மகா பரிசுத்த அறை (19-22)
கேருபீன்கள் (23-28)
செதுக்கு வேலைப்பாடுகள், கதவுகள், உட்பிரகாரம் (29-36)
சுமார் 7 வருஷங்களில் ஆலயம் கட்டி முடிக்கப்படுகிறது (37, 38)

7 சாலொமோன் கட்டிய அரண்மனை வளாகம் (1-12)
சாலொமோனுக்கு ஈராம் உதவுகிறார் (13-47)
இரண்டு செம்புத் தூண்கள் (15-22)
‘செம்புக் கடல்’ தொட்டி வார்க்கப்படுகிறது (23-26)
10 தள்ளுவண்டிகளும் செம்புத் தொட்டிகளும் (27-39)
தங்கச் சாமான்கள் செய்து முடிக்கப்படுகின்றன (48-51)

8 கடவுளின் பெட்டி ஆலயத்துக்குக் கொண்டுவரப்படுகிறது (1-13)
மக்களிடம் சாலொமோன் பேசுகிறார் (14-21)
ஆலய அர்ப்பணிப்பின்போது சாலொமோன் செய்த ஜெபம் (22-53)
மக்களை சாலொமோன் ஆசீர்வதிக்கிறார் (54-61)
பலிகளும் அர்ப்பண விழாவும் (62-66)

9 யெகோவா மறுபடியும் சாலொமோனுக்குத் தோன்றுகிறார் (1-9)
ஈராம் ராஜாவுக்கு சாலொமோனின் அன்பளிப்பு (10-14)
சாலொமோனின் மற்ற கட்டுமானத் திட்டங்கள் (15-28)

10 சேபா தேசத்து ராணி சாலொமோனைச் சந்திக்கிறாள் (1-13)
சாலொமோனிடம் குவிந்திருந்த செல்வம் (14-29)

11 சாலொமோனின் மனைவிகள் அவருடைய இதயத்தை வழிவிலகச் செய்கிறார்கள் (1-13)
சாலொமோனின் எதிரிகள் (14-25)
யெரொபெயாமுக்கு 10 கோத்திரங்கள் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி (26-40)
சாலொமோன் இறந்துபோகிறார்; ரெகொபெயாம் ராஜாவாகிறார் (41-43)

12 ரெகொபெயாமின் கடுமையான பதில் (1-15)
10 கோத்திரத்தார் கலகம் செய்கிறார்கள் (16-19)
யெரொபெயாம் இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (20)
ரெகொபெயாம் இஸ்ரவேல்மீது போர் செய்யக் கூடாது (21-24)
யெரொபெயாமின் கன்றுக்குட்டி வழிபாடு (25-33)

13 பெத்தேலிலுள்ள பலிபீடத்துக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் (1-10)
பலிபீடம் வெடித்துச் சிதறுகிறது (5)
கடவுளின் ஊழியர் கீழ்ப்படியாமல் போகிறார் (11-34)

14 யெரொபெயாமுக்கு எதிராக அகியாவின் தீர்க்கதரிசனம் (1-20)
ரெகொபெயாம் யூதாவை ஆட்சி செய்கிறார் (21-31)
சீஷாக் படையெடுத்து வருகிறான் (25, 26)

15 அபியாம் யூதாவின் ராஜாவாகிறார் (1-8)
ஆசா யூதாவின் ராஜாவாகிறார் (9-24)
நாதாப் இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (25-32)
பாஷா இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (33, 34)

16 பாஷாவுக்கு எதிராக யெகோவாவின் தீர்ப்பு (1-7)
ஏலா இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (8-14)
சிம்ரி இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (15-20)
உம்ரி இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (21-28)
ஆகாப் இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (29-33)
ஈயேல் எரிகோவைத் திரும்பக் கட்டுகிறான் (34)

17 வறட்சியைப் பற்றி எலியாவின் தீர்க்கதரிசனம் (1)
எலியாவுக்கு அண்டங்காக்கைகள் உணவு கொண்டுவருகின்றன (2-7)
சாறிபாத்தில் ஒரு விதவையை எலியா சந்திக்கிறார் (8-16)
விதவையின் மகன் இறந்துபோகிறான், பின்பு உயிரோடு எழுப்பப்படுகிறான் (17-24)

18 ஒபதியாவையும் ஆகாபையும் எலியா சந்திக்கிறார் (1-18)
கர்மேலில் எலியாவும் பாகால் தீர்க்கதரிசிகளும் (19-40)
‘இரண்டு மனதாக இருக்கிறார்கள்’ (21)

மூன்றரை வருஷ வறட்சி முடிவடைகிறது (41-46)

19 யேசபேலுக்குப் பயந்து எலியா ஓடுகிறார் (1-8)
ஓரேபில் எலியாவுக்கு யெகோவா தோன்றுகிறார் (9-14)
அசகேல், யெகூ, எலிசா ஆகியோரை எலியா அபிஷேகம் செய்ய வேண்டும் (15-18)
எலியாவுக்குப் பின்பு எலிசா நியமனம் (19-21)

20 ஆகாபுக்கு எதிராக சீரியர்களின் போர் (1-12)
சீரியர்களை ஆகாப் தோற்கடிக்கிறார் (13-34)
ஆகாபுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் (35-43)

21 நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தின் மீது ஆகாப் ஆசைப்படுகிறார் (1-4)
சதித்திட்டம் போட்டு நாபோத்தை யேசபேல் கொல்கிறாள் (5-16)
ஆகாபுக்கு எதிராக எலியாவின் செய்தி (17-26)
ஆகாப் தாழ்மையாக நடக்கிறார் (27-29)

22 ஆகாபுடன் யோசபாத் கூட்டுச் சேர்கிறார் (1-12)
தோல்வியைப் பற்றி மிகாயாவின் தீர்க்கதரிசனம் (13-28)
ஆகாபை ஏமாற்ற பொய்யான செய்தி (21, 22)
ராமோத்-கீலேயாத்தில் ஆகாப் கொல்லப்படுகிறார் (29-40)
யோசபாத் யூதாவின் ராஜாவாகிறார் (41-50)
அகசியா இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (51-53)

---

1 தாவீது ராஜா மிகவும் வயதானவராக இருந்தார்.[a] போர்வைகளைப்
போர்த்தியும் அவருடைய உடல் கதகதப்பாகவில்லை. **2** அதனால்
அவருடைய ஊழியர்கள், “ராஜாவே, எஜமானே, உங்களுக்காக ஒரு கன்
னிப்பெண்ணைத் தேடிக் கண்டுபிடிக்கிறோம். அவள் உங்களுக்குப் பணி
விடை செய்து உங்களைக் கவனித்துக்கொள்ளட்டும்; உங்கள் பக்கத்தில்
படுத்துக்கொள்ளட்டும். அப்போது ராஜாவே, எஜமானே, உங்களுக்குக் கத
கதப்பாக இருக்கும்” என்று சொன்னார்கள். **3** ஓர் அழகிய கன்னிப்பெண்
ணுக்காக இஸ்ரவேல் தேசமெங்கும் தேடி அலைந்தார்கள். கடைசியில்,
சூனேமைச்[b] சேர்ந்த அபிஷாக்கைப்[c] பார்த்து ராஜாவிடம் கூட்டிக்
கொண்டு வந்தார்கள். **4** அந்தப் பெண் பேரழகியாக இருந்தாள்; அவள்
ராஜாவோடு இருந்து அவருக்குப் பணிவிடை செய்தாள். ஆனால், ராஜா
அவளுடன் உறவுகொள்ளவில்லை.

5 இதற்கிடையே, தாவீதின் மனைவியான ஆகீத் பெற்றெடுத்த அதோ
னியா,[d] “அடுத்த ராஜா நான்தான்!” என்று சொல்லிக்கொண்டான்; இப்
படி, தன்னை ஒரு பெரிய ஆளாகக் காட்டிக்கொண்டான். ஒரு ரதத்தை
ஏற்பாடு செய்து, அந்த ரதத்தோடு சேர்ந்து வருவதற்கு குதிரைவீரர்க
ளையும், அதன் முன்னால் ஓடுவதற்கு 50 ஆட்களையும் வைத்துக்கொண்
டான்.[e] **6** ஆனால், “ஏன் இப்படியெல்லாம் செய்கிறாய்?” என்று அவனு
டைய அப்பா அவனை ஒருபோதும் கண்டிக்கவே இல்லை.* அவன்
மிகவும் அழகாக இருந்தான். அவன் அப்சலோமுக்குப் பின்பு பிறந்த
வன். **7** செருயாவின் மகன் யோவாபுடனும் குருவாகிய அபியத்தாருட
னும்[f] தன்னுடைய திட்டத்தைப் பற்றிக் கலந்துபேசினான். அவர்கள் அதோ
னியாவுக்கு ஆதரவு தருவதாகவும் உதவி செய்வதாகவும் சொன்னார்கள்.[g]
8 ஆனால், குருவாகிய சாதோக்,[h] யோய்தாவின் மகன் பெனாயா,[i] நாத்
தான்[j] தீர்க்கதரிசி, சீமேயி,[k] ரேயி, தாவீதின் மாவீரர்கள்[l] ஆகியோர் அதோ
னியாவை ஆதரிக்கவில்லை.

அதி. 1
a 2சா 5:4; 1நா 29:26, 27
b யோசு 19:17, 18
c 1ரா 2:17, 22
d 2சா 3:2, 4; 1நா 3:1, 2
e 2சா 15:1
f 2சா 20:25
g 1ரா 2:22
h 2சா 8:17
i 2சா 20:23; 1நா 27:5
j 2சா 7:2; 2சா 12:1
k 1ரா 4:7, 18
l 2சா 23:8; 1நா 11:10

1:6 * வே.வா., “புண்படுத்தவே இல்லை.”

9 ஒருநாள் அதோனியா, என்-ரொகேலுக்கு அருகிலிருந்த சோகெலெத்
பாறைக்குப் பக்கத்தில் ஆடுமாடுகளையும் கொழுத்த கன்றுக்குட்டிகளை
யும் பலி கொடுத்தான்.[a] தன்னுடைய சகோதரர்களான எல்லா இளவரசர்க
ளையும் யூதாவைச் சேர்ந்த எல்லா அரசு ஊழியர்களையும் வரச் சொல்லி
அழைத்திருந்தான். **10** ஆனால், நாத்தான் தீர்க்கதரிசியையோ பெனாயா
வையோ தாவீதின் மாவீரர்களையோ தன்னுடைய சகோதரனாகிய சாலொ
மோனையோ அழைக்கவில்லை. **11** அப்போது நாத்தான்[b] சாலொ
மோனின் அம்மா[c] பத்சேபாளைச்[d] சந்தித்து, "ஆகீத்தின் மகன்
அதோனியா[e] ராஜாவான விஷயத்தை நீங்கள் கேள்விப்படவில்லையா?
இதைப் பற்றி தாவீது ராஜாவுக்குக்கூட தெரியாதாமே. **12** தயவுசெய்து
நான் சொல்கிறபடி செய்யுங்கள். அப்போதுதான், உங்கள் உயிரையும் உங்
கள் மகன் சாலொமோனுடைய உயிரையும் காப்பாற்ற முடியும்.[f] **13** நீங்
கள் தாவீது ராஜாவிடம் போய், 'ராஜாவே, என் எஜமானே, "எனக்குப்
பிறகு உன்னுடைய மகன் சாலொமோன்தான் ராஜாவாக இருப்பான், அவன்
தான் என்னுடைய சிம்மாசனத்தில் உட்காருவான்" என்று இந்த அடிமைப்
பெண்ணுக்குச் சத்தியம் செய்து கொடுத்தீர்களே.[g] பிறகு எப்படி அதோ
னியா ராஜாவானான்?' என்று கேளுங்கள். **14** நீங்கள் ராஜாவிடம் பேசிக்
கொண்டிருக்கும்போது, நான் அங்கே வந்து நீங்கள் சொன்னது உண்மை
தான் என்று சொல்கிறேன்" என்றார்.

15 அதன்படி, ராஜாவின் படுக்கை அறைக்கு பத்சேபாள் போனாள்.
ராஜா மிகவும் வயதானவராக இருந்தார், சூனேமைச் சேர்ந்த அபிஷாக்[h]
அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். **16** அப்போது, ராஜா
வுக்கு முன்னால் பத்சேபாள் மண்டிபோட்டு தரைவரைக்கும் குனிந்து
வணங்கினாள். ராஜா அவளிடம், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்
டார். **17** அதற்கு அவள், "எஜமானே, 'எனக்குப் பிறகு உன்னுடைய மகன்
சாலொமோன்தான் ராஜாவாக இருப்பான், அவன்தான் என்னுடைய சிம்மா
சனத்தில் உட்காருவான்' என்று உங்கள் கடவுளான யெகோவா பெயரில்
எனக்குச் சத்தியம் செய்து கொடுத்தீர்களே.[i] **18** ஆனால், ராஜாவே, என்
எஜமானே, உங்களுக்குத் தெரியாமல் இப்போது அதோனியா ராஜாவாகி
விட்டான்.[j] **19** அவன் ஏராளமான ஆடுமாடுகளையும் கொழுத்த கன்றுக்
குட்டிகளையும் பலி கொடுத்திருக்கிறான்; எல்லா இளவரசர்களையும்
குருவாகிய அபியத்தாரையும் படைத் தளபதி யோவாபையும்[k] அழைத்தி
ருக்கிறான். ஆனால், உங்கள் ஊழியனான சாலொமோனை அழைக்க
வில்லை.[l] **20** ராஜாவே, என் எஜமானே, உங்கள் வார்த்தைக்காகத்தான்
இஸ்ரவேல் தேசமே காத்திருக்கிறது. என் எஜமானாகிய உங்களுக்குப்
பிறகு சிம்மாசனத்தில் உட்காரப்போவது யாரென்பதை நீங்கள்தான்
சொல்ல வேண்டும். **21** இல்லாவிட்டால், நீங்கள் இறந்ததும்* நானும் என்
மகனும் துரோகிகளாகத்தான் கருதப்படுவோம்" என்று சொன்னாள்.

22 ராஜாவிடம் அவள் பேசிக்கொண்டிருந்தபோதே நாத்தான் தீர்க்க
தரிசி உள்ளே வந்தார்.[m] **23** உடனே ராஜாவிடம், "இதோ, நாத்தான் தீர்க்க
தரிசி வந்திருக்கிறார்!" என்று சொன்னார்கள். அவர் உள்ளே வந்து
ராஜா முன்னால் மண்டிபோட்டு தரைவரைக்கும் குனிந்து வணங்கினார்.
24 பின்பு நாத்தான், "ராஜாவே, என் எஜமானே, உங்களுக்குப் பிறகு

1:21 * நே.மொ., "உங்கள் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்."

அதி. 1
a 2சா 15:12
b 2சா 7:4, 5
c 2சா 12:24
d 2சா 11:3, 27
e 2சா 3:2, 4
f நியா 9:4-6
1ரா 1:21
2ரா 11:1
g 1நா 22:9
1நா 28:5
1நா 29:1
h 1ரா 1:1, 3
i 1ரா 1:13
1நா 22:9, 10
j 1ரா 1:5, 11
k 1ரா 1:7
l 1ரா 1:9, 10
m 1ரா 1:14

அதி. 1

அதோனியாதான் ராஜாவாக இருப்பான், அவன்தான் உங்களுடைய சிம்
மாசனத்தில் உட்காருவான் என்று எப்போதாவது சொன்னீர்களா?[a]
25 இன்று அவன் எக்கச்சக்கமான ஆடுமாடுகளையும் கொழுத்த கன்
றுக்குட்டிகளையும் பலி கொடுத்திருக்கிறான்.[b] எல்லா இளவரசர்களையும்
படைத் தலைவர்களையும் குருவாகிய அபியத்தாரையும் அழைத்திருக்கி
றான்.[c] அவர்கள் அவனோடு சாப்பிட்டுக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள்.
‘அதோனியா ராஜா வாழ்க!’ என்று கோஷம் போட்டுக்கொண்டிருக்கிறார்
கள். **26** ஆனால், உங்கள் ஊழியனான என்னையோ குருவாகிய
சாதோக்கையோ யோய்தாவின் மகன் பெனாயாவையோ[d] உங்கள் ஊழி
யன் சாலொமோனையோ அவன் அழைக்கவில்லை. **27** ராஜாவே, என்
எஜமானே, இதையெல்லாம் செய்ய அதோனியாவுக்கு நீங்கள்தான் அதி
காரம் கொடுத்தீர்களா? அவன்தான் உங்களுக்குப் பிறகு சிம்மாசனத்தில்
உட்காரப்போகிறானா? இதுவரை உங்கள் ஊழியனான என்னிடம் நீங்கள்
இதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே?” என்று கேட்டார்.

28 அதற்கு தாவீது ராஜா, “பத்சேபாளைக் கூப்பிடுங்கள்” என்று சொன்
னார். உடனே அவள் உள்ளே வந்து ராஜா முன்னால் நின்றாள். **29** அப்
போது ராஜா, “எல்லா கஷ்டத்திலிருந்தும் என்னைக் காப்பாற்றிய உயிருள்ள
கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,*[e] **30** ‘எனக்
குப் பிறகு உன்னுடைய மகன் சாலொமோன்தான் ராஜாவாக இருப்பான்.
அவன்தான் என்னுடைய சிம்மாசனத்தில் உட்காருவான்’ என்று இஸ்ர
வேலின் கடவுளான யெகோவாமீது உனக்குச் சத்தியம் செய்து கொடுத்
திருந்தேனே. அதை இன்று நிறைவேற்றப்போகிறேன்” என்று சொன்
னார். **31** அதைக் கேட்டதும் பத்சேபாள் மண்டிபோட்டு தரைவரைக்கும்
குனிந்து வணங்கி, “தாவீது ராஜாவே, என் எஜமானே, நீங்கள் என்றென்றும்
வாழ்க!” என்று சொன்னாள்.

32 உடனே தாவீது ராஜா, “குருவாகிய சாதோக்கையும் நாத்தான் தீர்க்கத
ரிசியையும் யோய்தாவின் மகன்[f] பெனாயாவையும்[g] கூப்பிடுங்கள்” என்று
சொன்னார். அவர்கள் ராஜா முன்னால் வந்தார்கள். **33** ராஜா அவர்களி
டம், “என் மகன் சாலொமோனை என்னுடைய கோவேறு கழுதைமேல்*[h]
உட்கார வைத்து கீகோனுக்குக்[i] கூட்டிக்கொண்டு போங்கள். மற்ற ஊழியர்
களும் உங்களோடு வரட்டும். **34** அங்கே குருவாகிய சாதோக்கும் நாத்
தான் தீர்க்கதரிசியும் அவனை இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாக அபிஷே
கம் செய்ய வேண்டும்.[j] பின்பு, ஊதுகொம்பை ஊதி, ‘சாலொமோன் ராஜா
பல்லாண்டு வாழ்க!’ என்று முழங்குங்கள்.[k] **35** அதன் பின்பு, அவனைத்
திரும்பக் கூட்டிக்கொண்டு வாருங்கள். அவன் வந்து என் சிம்மாசனத்தில்
உட்காருவான். எனக்குப் பதிலாக அவன் ராஜாவாக இருப்பான். அவனை
இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் தலைவனாக நியமிப்பேன்” என்று சொன்
னார். **36** உடனே யோய்தாவின் மகன் பெனாயா, “ஆமென்!* என்னு
டைய எஜமானின் கடவுளான யெகோவாவின் விருப்பமும் அதுவாகவே
இருக்கட்டும். **37** ராஜாவே, என் எஜமானே, யெகோவா உங்களோடு
இருந்ததுபோல், சாலொமோனோடும் இருக்கட்டும்.[l] என் எஜமானாகிய

1:29 * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **1:33** * பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்த விலங்கு. **1:36** * அதாவது, “அப்படியே ஆகட்டும்!”

a 1ரா 1:5
b 2சா 15:12
c 1ரா 1:5, 7
d 1நா 27:5
e சங் 71:23; சங் 103:4
f 1ரா 1:8
g 2சா 20:23; 2சா 23:20; 1நா 27:5
h 1ரா 1:38; லூ 19:33-35
i 2நா 32:30
j 1சா 16:13
k 1சா 10:1, 24; 2சா 15:10; 2ரா 11:12
l 1நா 28:20

தாவீது ராஜாவின் சிம்மாசனத்தைவிட அவருடைய சிம்மாசனத்தை உயர்த்
தட்டும்”[a] என்று ராஜாவிடம் சொன்னார்.

38 பின்பு, குருவாகிய சாதோக்கும் நாத்தான் தீர்க்கதரிசியும் யோய்
தாவின் மகன் பெனாயாவும்[b] கிரேத்தியர்களும் பிலேத்தியர்களும்[c] புறப்
பட்டுப் போய், தாவீது ராஜாவுடைய கோவேறு கழுதையின் மேல் சாலொ
மோனை உட்கார வைத்து கீகோனுக்குக்[d] கூட்டிக்கொண்டு போனார்கள்.[e]
39 குருவாகிய சாதோக் எண்ணெய் நிரப்பப்பட்ட கொம்பைக்[f] கூடாரத்தி
லிருந்து[g] எடுத்து வந்திருந்தார்; அந்த எண்ணெயை ஊற்றி சாலொ
மோனை அபிஷேகம் செய்தார்.[h] அப்போது, அவருடன் இருந்தவர்கள்
ஊதுகொம்பை ஊதினார்கள். மக்கள் எல்லாரும், “சாலொமோன் ராஜா
பல்லாண்டு வாழ்க!” என்று ஆரவாரம் செய்தார்கள். **40** பின்பு, எல்லா
ரும் அவர் பின்னால் புல்லாங்குழல்களை ஊதிக்கொண்டும், சந்தோஷமாக
ஆரவாரம் செய்துகொண்டும் போனார்கள். பூமியே அதிரும் அளவுக்கு
ஆரவாரம் செய்தார்கள்.[i]

41 அதோனியாவும் அவனுடைய விருந்தாளிகளும் சாப்பிட்டு முடித்த
போது அந்த ஆரவாரத்தைக் கேட்டார்கள்.[j] ஊதுகொம்பின் சத்தம் கேட்ட
தும், “ஊருக்குள் ஒரே அமளியாக இருக்கிறதே, என்ன விஷயம்?” என்று
யோவாப் கேட்டார். **42** அதே நேரத்தில், குருவாகிய அபியத்தாரின் மகன்
யோனத்தான்[k] அங்கே வந்தார். அதோனியா அவரிடம், “உள்ளே வா, நீ
நல்லவன். நல்ல செய்தியோடுதான் வந்திருப்பாய்” என்று சொன்னான்.
43 அதற்கு யோனத்தான், “இல்லை! நம் எஜமானாகிய தாவீது ராஜா,
சாலொமோனை ராஜாவாக்கிவிட்டார். **44** குருவாகிய சாதோக்கையும் நாத்
தான் தீர்க்கதரிசியையும் யோய்தாவின் மகன் பெனாயாவையும் கிரேத்தியர்
களையும் பிலேத்தியர்களையும் சாலொமோனோடு அனுப்பினார். அவர்
கள் ராஜாவுடைய கோவேறு கழுதையின் மேல் சாலொமோனை உட்கார
வைத்து கூட்டிக்கொண்டு போனார்கள்.[l] **45** பின்பு, குருவாகிய சாதோக்
கும் நாத்தான் தீர்க்கதரிசியும் கீகோனில் அவரை ராஜாவாக அபிஷே
கம் செய்தார்கள். அங்கிருந்து சந்தோஷமாகத் திரும்பி வந்தார்கள். அத
னால்தான், ஊருக்குள் ஒரே அமளியாக இருக்கிறது. அந்தச் சத்தத்தைத்தான்
நீங்கள் கேட்டீர்கள். **46** அதோடு, சாலொமோன் இப்போது ராஜாவின் சிம்
மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறார். **47** அரசு ஊழியர்கள் நம்முடைய எஜ
மானாகிய தாவீதுக்கு வாழ்த்துச் சொல்ல வந்தார்கள். ‘உங்களுடைய
பெயரைவிட சாலொமோனுடைய பெயருக்குக் கடவுள் இன்னும் அதிக புக
ழைக் கொடுக்கட்டும். உங்களுடைய சிம்மாசனத்தைவிட அவருடைய சிம்
மாசனத்தை உயர்த்தட்டும்!’ என்று வாழ்த்தினார்கள். அதைக் கேட்டு
ராஜா தன் படுக்கையில் இருந்தபடியே தலைவணங்கினார். **48** பின்பு
ராஜா, ‘இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்குப் புகழ் சேரட்டும்! என்
வாரிசை சிம்மாசனத்தில் உட்கார வைத்து, அதைப் பார்க்கும் பாக்கியத்தை
இன்று எனக்குக் கொடுத்திருக்கிறார்’ என்று சொன்னார்” என்றார்.

49 அதைக் கேட்டதும் அதோனியாவின் விருந்தாளிகள் எல்லாரும்
கதிகலங்கிப்போனார்கள். உடனே அங்கிருந்து எழுந்து அவரவர் வழியில்
போய்விட்டார்கள். **50** சாலொமோனை நினைத்து அதோனியா பயந்
தான். அதனால், அங்கிருந்து புறப்பட்டுப் போய் பலிபீடத்தின் கொம்பு
களைப் பிடித்துக்கொண்டான்.[m] **51** “சாலொமோன் ராஜாவை நினைத்து

அதி. 1

a 1ரா 3:12; 1ரா 10:23; சங் 72:8
b 1நா 27:5
c 2சா 15:18; 1நா 18:17
d 2நா 32:30
e 1ரா 1:33; மத் 21:7
f யாத் 30:23-25; 1சா 16:13
g 2சா 6:17
h 1நா 29:22
i 1சா 4:5
j 1ரா 1:9, 25
k 2சா 15:36; 2சா 17:17
l 1ரா 1:33, 34
m யாத் 21:14; யாத் 38:1, 2; 1ரா 2:28

அதோனியா பயந்துபோயிருக்கிறான். பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்
துக்கொண்டிருக்கிறான். 'அடியேனைக் கொல்லப்போவதில்லை என்று முத
லில் சாலொமோன் ராஜா சத்தியம் செய்து தரட்டும்' என்று சொல்கிறான்"
என்ற விஷயம் சாலொமோனுக்குத் தெரிவிக்கப்பட்டது. **52** அதற்கு
சாலொமோன், "அவன் ஒழுங்காக நடந்துகொண்டால், அவன் தலையில்
இருக்கிற ஒரு முடிகூட கீழே விழாது. ஆனால், அவன் ஏதாவது கெட்டது
செய்தால், மரண தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது"[a] என்று சொன்
னார். **53** பலிபீடத்திலிருந்து அவனைக் கூட்டிக்கொண்டுவர சாலொ
மோன் ராஜா தன்னுடைய ஆட்களை அனுப்பினார்; பின்பு, அவன் வந்து
சாலொமோன் ராஜா முன்னால் தலைவணங்கினான். அப்போது ராஜா,
"நீ உன் வீட்டுக்குப் போ" என்று சொன்னார்.

2 வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் தாவீது தன்னுடைய மகன்
சாலொமோனுக்கு இந்த அறிவுரைகளைச் சொன்னார்: **2** "நான் சீக்கி
ரத்தில் கண்மூடிவிடுவேன்.* அதனால், நீ தைரியத்தோடும்[b] உறுதியோடும்
இருக்க வேண்டும்.[c] **3** உன்னுடைய கடவுளான யெகோவாவுக்குக் கீழ்ப்
படிந்து நடக்க வேண்டும்; மோசேயின் திருச்சட்டத்திலுள்ள சட்டதிட்டங்க
ளையும் கட்டளைகளையும் நீதித்தீர்ப்புகளையும் நினைப்பூட்டுதல்களையும்
அப்படியே கடைப்பிடிக்க வேண்டும்.[d] அப்போது, நீ எதைச் செய்தாலும்,
எங்கே போனாலும் உனக்கு வெற்றி கிடைக்கும்.* **4** யெகோவா என்னி
டம், 'உன் வாரிசுகள் எனக்கு உண்மையாக இருந்தால், முழு இதயத்தோடும்
முழு மூச்சோடும் கீழ்ப்படிந்து என் வழியில் நடந்தால்,[e] இஸ்ரவேலின் சிம்
மாசனத்தில் உட்கார்ந்து ஆட்சி செய்ய உனக்கு வாரிசு இல்லாமல் போவ
தில்லை'[f] என்று வாக்குக் கொடுத்திருந்தார், இந்த வாக்கை அவர் நிறை
வேற்றுவார்.

5 செருயாவின் மகன் யோவாப் எனக்கு எதிராக என்ன செய்தான் என்
பது உனக்கே நன்றாகத் தெரியும். இஸ்ரவேலின் படைத் தளபதிகளான
நேரின் மகன் அப்னேரையும்[g] யெத்தேரின் மகன் அமாசாவையும்[h] அவன்
கொன்றுபோட்டது உனக்குத் தெரியும். போர் இல்லாத அமைதியான காலத்
தில் அவர்களுடைய இரத்தத்தைச் சிந்தியதால்[i] அவனுடைய இடுப்புவாரி
லும் செருப்பிலும் இரத்தக்கறை படிந்திருக்கிறது. **6** அந்த வயதான ஆள்
நிம்மதியாகச் சாகக் கூடாது. நீயே ஞானமாக யோசித்து ஏதாவது செய்.[j]

7 ஆனால், கீலேயாத்தியரான பர்சிலாவின்[k] வாரிசுகளுக்கு* நீ மாறாத
அன்பு காட்ட வேண்டும். அவர்கள் உன்னுடைய மேஜையில் சாப்பிட
வேண்டும். உன்னுடைய சகோதரன் அப்சலோமிடமிருந்து நான் தப்பி ஓடி
யபோது[l] அவர்கள்தான் எனக்குப் பக்கபலமாக இருந்தார்கள்.[m]

8 பகூரிமைச் சேர்ந்த பென்யமீனியனான கேராவின் மகன் சீமேயி பக்
கத்து ஊரில்தான் குடியிருக்கிறான். நான் மக்னாயீமுக்குப்[n] போய்க்கொண்
டிருந்தபோது அவன் என்னைக் கேவலமாகப் பேசி, சபித்தான்.[o] ஆனால்,
என்னைப் பார்ப்பதற்காகப் பிறபாடு அவன் யோர்தானுக்கு வந்தபோது,
'நான் உன்னைக் கொல்ல மாட்டேன்' என்று யெகோவாவின் பெயரில்

2:2 *நே.மொ., "பூமியில் இருக்கிற எல்லாரும் போகிற வழியிலேயே நானும் போகி
றேன்." **2:3** *நே.மொ., "நீ ஞானமாக நடந்துகொள்வாய்." **2:7** *நே.மொ., "மகன்
களுக்கு."

அதி. 1
a 1ரா 2:23

அதி. 2
b உபா 31:6, யோசு 1:6, 1நா 28:20
c 1ரா 3:7
d உபா 17:18-20, பிர 12:13
e உபா 6:5, 2ரா 20:3, 2ரா 23:3, 2நா 17:3, மத் 22:37
f 2சா 7:12, 16, 1ரா 8:25, 1நா 17:11, சங் 132:11, 12
g 2சா 3:27, 30
h 2சா 17:25, 2சா 20:10, 1நா 2:17
i எண் 35:33, 2சா 3:28
j 2சா 3:29, 1ரா 2:31-34
k 2சா 19:31
l 2சா 15:14
m 2சா 17:27-29
n 2சா 17:24
o 2சா 16:5-7

அவனுக்குச் சத்தியம் செய்து கொடுத்தேன்.[a] **9** நீ அவனைச் சும்மா விடக்
கூடாது.[b] நீ புத்திசாலி, அவனை என்ன செய்ய வேண்டுமென்பது உனக்கே
தெரியும். வயதான காலத்தில் இயற்கையாகச் சாவதற்கு அவனை விட்டு
விடாதே"*[c] என்று சொன்னார்.

10 பின்பு, தாவீது இறந்துபோனார்.* 'தாவீதின் நகரத்தில்'[d] அவர் அடக்
கம் செய்யப்பட்டார். **11** அவர் 40 வருஷங்கள் இஸ்ரவேலை ஆட்சி
செய்தார். எப்ரோனில்[e] 7 வருஷங்களும், எருசலேமில் 33 வருஷங்களும்
ஆட்சி செய்தார்.[f]

12 சாலொமோன் தன்னுடைய அப்பாவாகிய தாவீதின் சிம்மாசனத்தில்
உட்கார்ந்து ஆட்சி செய்தார்; படிப்படியாகத் தன்னுடைய ஆட்சியைப்
பலப்படுத்தினார்.[g]

13 ஒருநாள், சாலொமோனின் அம்மாவான பத்சேபாளைப் பார்க்க
ஆகீத்தின் மகன் அதோனியா வந்தான். "நல்ல விஷயமாகத்தானே வந்தி
ருக்கிறாய்?" என்று பத்சேபாள் கேட்டாள். அதற்கு அவன், "ஆமாம், நல்ல
விஷயம்தான்" என்று சொன்னான். **14** பின்பு, "நான் உங்களிடம் ஒன்று
சொல்ல வேண்டும்" என்றான். அதற்கு அவள், "சொல்" என்றாள்.
15 அவன், "நான்தான் ராஜாவாகியிருக்க வேண்டும், அது உங்களுக்கே
நன்றாகத் தெரியும். அதைத்தான் இஸ்ரவேலர்கள் எல்லாரும் எதிர்பார்த்துக்
கொண்டிருந்தார்கள்.[h] ஆனால், என் சகோதரன் ராஜாவாக வேண்டுமென்ப
துதான் யெகோவாவின் விருப்பம். அதனால், அரச பதவி எனக்குக் கிடைக்
காமல் அவனுக்குக் கிடைத்துவிட்டது;[i] **16** பரவாயில்லை, இப்போது
நான் உங்களிடம் ஒரேவொரு உதவி கேட்கிறேன். முடியாது என்று சொல்
லிவிடாதீர்கள்" என்றான். அதற்கு அவள், "என்ன வேண்டும், சொல்" என்
றாள். **17** அப்போது அவன், "சூனேமைச் சேர்ந்த அபிஷாக்கை[j] எனக்
குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கச் சொல்லி தயவுசெய்து சாலொமோன்
ராஜாவிடம் கேளுங்கள். நீங்கள் கேட்டால் அவர் மறுக்க மாட்டார்" என்
றான். **18** அதற்கு பத்சேபாள், "நல்ல விஷயம்தான்! ராஜாவிடம் உனக்
காக நான் பேசுகிறேன்" என்று சொன்னாள்.

19 அதோனியாவுக்காகப் பேசுவதற்கு சாலொமோன் ராஜாவிடம் பத்
சேபாள் போனாள். உடனே ராஜா எழுந்து போய் அவள் முன்னால்
தலைவணங்கினார். பின்பு, தன்னுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்தார். தன்
னுடைய அம்மாவுக்காக ஒரு சிம்மாசனத்தைக் கொண்டுவரச் சொன்னார்;
அவருடைய வலது பக்கத்தில் அவள் உட்கார்ந்தாள். **20** அப்போது,
"உன்னிடம் ஒரு சின்ன உதவி கேட்பதற்காக வந்தேன். முடியாது என்று
சொல்லிவிடாதே" என்றாள். அதற்கு அவர், "சொல்லுங்கள், அம்மா. நீங்
கள் கேட்டு நான் இல்லையென்று சொல்வேனா?" என்றார். **21** அப்
போது அவள், "சூனேமைச் சேர்ந்த அபிஷாக்கை உன்னுடைய சகோத
ரன் அதோனியாவுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும்" என்றாள்.
22 அதற்கு சாலொமோன் ராஜா, "அவனுக்காக சூனேமைச் சேர்ந்த அபி
ஷாக்கை மட்டும் ஏன் கேட்கிறீர்கள், அரச பதவியையும் சேர்த்து

2:9 *நே.மொ., "அவனுடைய நரை முடியை இரத்தத்தோடு கல்லறைக்குள் இறங்கச் செய்ய வேண்டும்." **2:10** *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்."

அதி. 2
a 2சா 19:23
b யாத் 22:28
c 1ரா 2:44, 46
d 2சா 5:7; 1நா 11:7; 1நா 29:26, 27; அப் 2:29
e 1நா 12:23
f 2சா 5:4, 5
g 2சா 7:8, 12; 1நா 29:23; 2நா 1:1; சங் 89:36, 37; சங் 132:12
h 1ரா 1:5, 25
i 1நா 22:9
j 1ரா 1:1, 3

கேட்க வேண்டியதுதானே?[a] அவன் எனக்குச் சகோதரன்தானே,[b] குருவா
கிய அபியத்தாரும் செருயாவின் மகன் யோவாபும்[c] அவன் பக்கம்தானே
இருக்கிறார்கள்"[d] என்று சொன்னார்.

23 பின்பு சாலொமோன் ராஜா யெகோவாமேல் ஆணையிட்டு, "இப்ப
டிக் கேட்டதற்காக அதோனியாவை நான் கொல்லாவிட்டால் கடவுள் எனக்
குக் கடும் தண்டனை கொடுக்கட்டும். **24** என் அப்பா தாவீதின் சிம்மாச
னத்தில் என்னை உட்கார வைத்து, என் ஆட்சியைப் பலப்படுத்தி,[e] வாக்குக்
கொடுத்தபடியே என் வம்சத்தை ராஜ வம்சமாக்கிய[f] உயிருள்ள கடவு
ளான யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* இன்று அதோனியா
கொல்லப்படுவான்"[g] என்று சொன்னார். **25** உடனே, யோய்தாவின் மகன்
பெனாயாவை[h] சாலொமோன் ராஜா அனுப்பினார். அவர் போய் அதோ
னியாவை வெட்டிக் கொன்றார்.

26 குருவாகிய அபியத்தாரை[i] ராஜா கூப்பிட்டு, "உங்களுக்கும் மரண
தண்டனைதான் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், நீங்கள் என் அப்பா
தாவீதுடன் இருந்தபோது உன்னதப் பேரரசராகிய யெகோவாவின் பெட்டி
யைச் சுமந்தீர்கள்.[j] என் அப்பா கஷ்டப்பட்ட எல்லா சமயத்திலும் அவர்
கூடவே இருந்தீர்கள்.[k] அதனால், உங்களை உயிரோடு விடுகிறேன். உங்க
ளுடைய நிலங்கள் இருக்கிற ஆனதோத்துக்குப்[l] போய்விடுங்கள்!" என்று
சொன்னார். **27** குருவாக யெகோவாவுக்குச் சேவை செய்யும் பொறுப்பி
லிருந்து அபியத்தாரை சாலொமோன் நீக்கிவிட்டார். இப்படி, ஏலியின் வம்
சத்துக்கு[m] எதிராக சீலோவில்[n] யெகோவா சொன்ன வார்த்தை நிறை
வேறியது.

28 யோவாப் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டார். அவர் அப்சலோம்
பக்கம் சேராவிட்டாலும்[o] அதோனியாவோடு கூட்டுச் சேர்ந்திருந்தார்.[p]
அதனால், அவர் யெகோவாவின் கூடாரத்துக்கு[q] ஓடிப்போய் பலிபீடத்தின்
கொம்புகளைப் பிடித்துக்கொண்டார். **29** "யோவாப் யெகோவாவின் கூடா
ரத்துக்கு ஓடிப்போய்விட்டார், அங்கே பலிபீடத்துக்குப் பக்கத்தில் இருக்கி
றார்" என்று சாலொமோன் ராஜாவுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதைக் கேட்
டதும், யோய்தாவின் மகனான பெனாயாவை அனுப்பி, "போய், அவரைக்
கொன்றுபோடுங்கள்!" என்று சாலொமோன் கட்டளையிட்டார். **30** அத
னால் யெகோவாவின் கூடாரத்துக்கு பெனாயா போய், "வெளியே வாருங்
கள்! இது ராஜாவின் கட்டளை" என்று சொன்னார். ஆனால் யோவாப்,
"மாட்டேன், நான் இங்கேயே சாகிறேன்" என்று சொன்னார். அதை அப்ப
டியே ராஜாவிடம் போய் பெனாயா சொன்னார். **31** அதற்கு ராஜா,
"அவர் சொன்னபடியே செய்யுங்கள். அவரைக் கொன்று அடக்கம் செய்யுங்
கள். அப்போதுதான், என்மீதும் என் அப்பா குடும்பத்தின் மீதும் விழுந்த
கொலைப்பழி நீங்கும். ஏனென்றால், யோவாப் அநியாயமாக இரத்தம் சிந்
தியிருக்கிறார்.[r] **32** இஸ்ரவேலின் படைத் தளபதியும்[s] நேரின் மகனுமான
அப்னேரையும்,[t] யூதாவின் படைத் தளபதியும்[u] யெத்தேரின் மகனுமான
அமாசாவையும்[v] அவர் கொன்றுபோட்டார். அவரைவிட நீதிமான்களாக,
சிறந்தவர்களாக இருந்த இந்த இரண்டு பேரையும் என் அப்பா தாவீதுக்குத்

2:24 * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 2
a 2சா 16:21
b 1நா 3:1, 2, 5
c 2சா 8:16
d 1ரா 1:7
e 1நா 22:9, 10
f 2சா 7:11; 1நா 17:10
g 1ரா 1:51, 52
h 2சா 8:18; 1ரா 1:8; 1நா 27:5
i 1சா 22:20; 1ரா 1:7
j 1சா 23:6; 2சா 15:24; 1நா 15:11, 12
k 1சா 22:22, 23
l யோசு 21:8, 18; எரே 1:1
m 1சா 2:31; 1சா 3:12
n யோசு 18:1
o 2சா 18:14
p 1ரா 1:7
q 1நா 21:29
r ஆதி 9:6; யாத் 21:14; எண் 35:33; உபா 19:13; 1ரா 2:5
s 2சா 2:8
t 2சா 3:26, 27
u 2சா 17:25
v 2சா 20:10

தெரியாமல் தீர்த்துக்கட்டினார். அவர் சிந்திய இரத்தத்துக்காக யெகோவா
அவருக்குச் சரியான கூலி கொடுப்பார். **33** அவர்கள் இரண்டு பேருடைய
இரத்தமும் யோவாபுடைய தலைமீதும் அவருடைய சந்ததியின் தலைமீதும்
காலாகாலத்துக்கும் இருக்கட்டும்.[a] ஆனால், தாவீதுக்கும் அவருடைய சந்த
திக்கும் ராஜ வம்சத்துக்கும் ராஜ்யத்துக்கும்* யெகோவா என்றென்றும் சமா
தானம் தரட்டும்" என்று சொன்னார். **34** அப்போது, யோய்தாவின் மகன்
பெனாயா போய் யோவாபை வெட்டிக் கொன்றார். யோவாப் இறந்ததும்,
வனாந்தரத்தில் இருந்த அவருடைய வீட்டுக்குப் பக்கத்தில் அடக்கம் செய்
யப்பட்டார். **35** யோவாபுக்குப் பதிலாக யோய்தாவின்[b] மகன் பெனா
யாவைப் படைத் தளபதியாக ராஜா நியமித்தார். அபியத்தாருக்குப் பதிலாக
சாதோக்கைக்[c] குருவாக நியமித்தார்.

36 பின்பு சீமேயியைக்[d] கூப்பிட்டு, "எருசலேமில் வீடு கட்டி தங்கியிரு.
இந்த இடத்தைவிட்டு வேறு எங்கேயும் போகக் கூடாது. **37** கீதரோன்
பள்ளத்தாக்கை[e] நீ தாண்டிப்போனால், கண்டிப்பாக அதே நாளில் கொல்
லப்படுவாய். உன் சாவுக்கு நீயே பொறுப்பாளி ஆகிவிடுவாய்"* என்று
சொன்னார். **38** அதற்கு சீமேயி, "ராஜாவே, என் எஜமானே, நீங்கள்
சொன்னது சரிதான். உங்கள் வார்த்தையின்படியே அடியேன் செய்கிறேன்"
என்றான். அதனால், சீமேயி கொஞ்சக் காலத்துக்கு எருசலேமைவிட்டு எங்
கும் போகவில்லை.

39 ஆனால் மூன்று வருஷங்களுக்குப் பிறகு, சீமேயியின் அடி
மைகள் இரண்டு பேர் அவனைவிட்டு ஓடிப்போனார்கள். அவர்கள் மாக்
காவின் மகனும் காத்தின் ராஜாவுமான ஆகீசிடம்[f] போய்விட்டார்கள்.
"உன்னுடைய அடிமைகள் காத் நகரத்தில் இருக்கிறார்கள்" என்று சீமேயியி
டம் தெரிவிக்கப்பட்டது. **40** அதைக் கேட்டவுடனே சீமேயி தன் கழுதை
மேல் சேணம்* வைத்து காத் நகரத்துக்குப் புறப்பட்டான். ஆகீசைப்
பார்த்து தன் அடிமைகளைக் கூட்டிக்கொண்டு வருவதற்காகப் போனான்.
பின்பு, காத் நகரத்திலிருந்து தன் அடிமைகளுடன் சீமேயி திரும்பி வந்தான்.
41 "சீமேயி எருசலேமிலிருந்து காத் நகரத்துக்குப் போய் வந்திருக்கிறான்"
என்று சாலொமோனிடம் தெரிவிக்கப்பட்டது. **42** ராஜா உடனடியாக சீமே
யியைக் கூப்பிட்டார். "இந்த இடத்தைவிட்டுப் போனால் கண்டிப்பாக
அதே நாளில் கொல்லப்படுவாய் என்று நான் உன்னை எச்சரித்திருந்
தேனே. யெகோவாமேல் ஆணையிட வைத்திருந்தேனே. 'நீங்கள் சொன்
னது சரிதான், உங்கள் வார்த்தையின்படியே செய்கிறேன்' என்று நீயும்
சொன்னாயே.[g] **43** அப்படியிருக்கும்போது, யெகோவா முன்னால் செய்த
ஆணையை ஏன் அலட்சியம் செய்தாய், என் கட்டளையை ஏன் மீறி
னாய்?" என்று கேட்டார். **44** அதோடு, "நீ என் அப்பாவுக்கு என்னென்ன
கெடுதல் செய்தாய் என்பது உன் மனதுக்கே நன்றாகத் தெரியும்.[h] அதை
யெல்லாம் யெகோவா உன் தலையிலேயே விழ வைப்பார்.[i] **45** ஆனால்,
சாலொமோன் ராஜா ஆசீர்வதிக்கப்படுவார்.[j] தாவீதின் சிம்மாசனம் யெகோ
வாவுக்கு முன்னால் என்றென்றும் உறுதியாக நிலைத்திருக்கும்" என்று
சொன்னார். **46** பின்பு, சீமேயியைக் கொன்றுபோடும்படி யோய்தாவின்

2:33 * நே.மொ., "சிம்மாசனத்துக்கும்." **2:37** * நே.மொ., "உன் இரத்தப்பழி உன் தலை
மேல் இருக்கும்." **2:40** * சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி
செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை.

அதி. 2
a 2சா 3:29
b 1நா 11:24; 1நா 27:5
c 1சா 2:35; 1நா 6:50, 53; 1நா 12:28; 1நா 16:37, 39; 1நா 24:3
d 1ரா 2:8
e 2சா 15:23; 2ரா 23:6; யோவா 18:1
f 1சா 21:10; 1சா 27:2
g 1ரா 2:38
h 2சா 16:5, 13
i சங் 7:16; நீதி 5:22
j சங் 21:6; சங் 72:17

மகன் பெனாயாவுக்குக் கட்டளையிட்டார். அவர் போய் சீமேயியைக்
கொன்றுபோட்டார்.[a]

இப்படி, சாலொமோனின் ஆட்சி அவருடைய முழு கட்டுப்பாட்டுக்குள்
வந்தது.[b]

3 எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடன் சாலொமோன் சம்பந்தம் பண்
ணினார்; அவனுடைய மகளைக் கல்யாணம் செய்து,[c] 'தாவீதின் நக
ரத்துக்கு'[d] கூட்டிக்கொண்டு வந்தார். அரண்மனையையும்[e] யெகோவாவின்
ஆலயத்தையும்[f] எருசலேம் நகரத்தின் மதிலையும் கட்டி முடிக்கும்வரை[g]
அவளை அங்கேயே தங்க வைத்தார். 2 அந்தச் சமயத்தில் யெகோவா
வின் பெயருக்காக ஓர் ஆலயம் கட்டப்படவில்லை.[h] அதனால், மக்கள்
இன்னமும் ஆராதனை மேடுகளில்தான் பலி கொடுத்து வந்தார்கள்.[i]
3 சாலொமோன் தன்னுடைய அப்பா தாவீது சொல்லிக்கொடுத்தபடியே
யெகோவாவின் சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து, கடவுள்மீது தொடர்ந்து
அன்பு காட்டிவந்தார். ஆனால், இன்னமும் ஆராதனை மேடுகளில்தான்
பலிகளை எரித்து, அவற்றின் புகையை எழும்பிவரச் செய்தார்.[j]

4 மிக முக்கியமான ஆராதனை மேடு கிபியோனில் இருந்ததால்,[k] பலி
கொடுப்பதற்காக ஒருநாள் ராஜா அங்கே போனார். அங்கிருந்த பலிபீடத்
தில் 1,000 தகன பலிகளைக் கொடுத்தார்.[l] 5 சாலொமோன் கிபியோ
னில் இருந்தபோது ராத்திரியில் அவருடைய கனவில் யெகோவா
தோன்றி, "உனக்கு என்ன வேண்டும், கேள்"[m] என்றார். 6 அதற்கு சாலொ
மோன், "உங்கள் ஊழியரான என் அப்பா தாவீது உங்கள் முன்னால் உண்
மையோடும் நீதியோடும் நேர்மையான உள்ளத்தோடும் நடந்துகொண்டார்.
அதனால், அவர்மீது அளவுகடந்த அன்பை* காட்டியிருக்கிறீர்கள். அவ
ருடைய சிம்மாசனத்தில் உட்கார ஒரு வாரிசைத் தந்து இன்று வரைக்
கும் அதே அன்பைக் காட்டி வந்திருக்கிறீர்கள்.[n] 7 யெகோவா தேவனே,
உங்கள் ஊழியனாகிய நான் சின்னப் பையன், அனுபவம் இல்லாதவன்.[o]
ஆனாலும், என் அப்பா தாவீதின் சிம்மாசனத்தில் என்னை ராஜாவாக உட்
கார வைத்திருக்கிறீர்கள். 8 நீங்கள் தேர்ந்தெடுத்த இந்த மக்கள்[p] எண்ண
முடியாத அளவுக்கு ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களை ஆட்சி
செய்ய அடியேனை நியமித்திருக்கிறீர்கள். 9 அதனால், உங்களுடைய
மக்களுக்கு நீதி வழங்குவதற்கும், நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து பார்ப்
பதற்கும்[q] உங்களுக்குக் கீழ்ப்படிகிற இதயத்தை அடியேனுக்குக் கொடுங்
கள்.[r] இல்லாவிட்டால், இந்தத் திரளான* மக்களுக்கு என்னால் எப்படி நீதி
வழங்க முடியும்?" என்றார்.

10 சாலொமோன் சொன்னதைக் கேட்டு யெகோவா மிகவும் சந்தோ
ஷப்பட்டார்.[s] 11 அதனால் அவரிடம், "நீண்ட ஆயுசையோ செல்வத்
தையோ எதிரிகளின் உயிரையோ நீ கேட்கவில்லை. அதற்குப் பதிலாக, நீதி
வழங்குவதற்குத் தேவையான ஞானத்தைக் கேட்டிருக்கிறாய்.[t] 12 அத
னால், நீ கேட்டபடியே ஞானமும் புரிந்துகொள்ளுதலும் உள்ள இதயத்தை
உனக்குத் தருவேன்.[u] உன்னைப் போல் ஞானமுள்ளவர் உனக்கு முன்பும்
இருந்ததில்லை, உனக்குப் பின்பும் இருக்கப்போவதில்லை.[v] 13 அதோடு,
நீ கேட்காத செல்வத்தையும் புகழையும்கூட[w] உனக்குத் தருவேன்.[x] உன்
காலத்தில் வேறெந்த ராஜாவும் உனக்குச் சமமாக இருக்க மாட்டார்.[y]

3:6 * வே.வா., "மாறாத அன்பை." 3:9 * அல்லது, "கடினமான." நே.மொ., "பாரமான."

அதி. 2
a 1ரா 2:8, 9
b 2நா 1:1
நீதி 16:12

அதி. 3
c உபா 7:3, 4
1ரா 7:8
1ரா 9:24
1ரா 11:1
நெ 13:25-27
d 2சா 5:7
1நா 11:7
e 1ரா 7:1
f 1ரா 8:17-19
g 1ரா 9:15
h உபா 12:5, 6
1ரா 5:3
1நா 28:6
i 2நா 33:17
j 1சா 7:9
1சா 10:8
1நா 21:26
k 1நா 16:39, 40
1நா 21:29
l 2நா 1:3-6
m 2நா 1:7-10
n 1ரா 2:1, 4
o 1நா 29:1
எரே 1:6
p யாத் 19:5, 6
q எபி 5:14
r சங் 72:1
சங் 119:34
s நீதி 15:8
t 1நா 22:12
1நா 29:19
2நா 1:11, 12
நீதி 16:16
u 1ரா 4:29
நீதி 2:3-5
பிர 1:16
யாக் 1:5
1யோ 5:14
v மத் 12:42
w 1ரா 4:21
பிர 7:11
x சங் 84:11
மத் 6:33
எபே 3:20
y 1ரா 10:23

14 உன் அப்பா தாவீதைப் போல்[a] நீயும் என்னுடைய விதிமுறைகளையும் கட்டளைகளையும் கடைப்பிடித்து என்னுடைய வழியில் நடந்தால், நீண்ட ஆயுசையும்கூட உனக்குத் தருவேன்”[b] என்று சொன்னார்.

15 சாலொமோன் தூங்கி எழுந்தபோது கனவில்தான் கடவுள் தன்னிடம் பேசினார் என்பதைத் தெரிந்துகொண்டார். பின்பு, அவர் எருசலேமுக்குப் போய் யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டிக்கு முன்னால் நின்றார். அங்கே தகன பலிகளையும் சமாதான பலிகளையும்[c] கொடுத்தார். அதோடு, தன்னுடைய ஊழியர்கள் எல்லாருக்கும் விருந்து வைத்தார்.

16 ஒருநாள், இரண்டு விபச்சாரிகள் ராஜா முன்னால் வந்து நின்றார்கள். **17** முதல் பெண் அவரிடம், “எஜமானே, நானும் இந்தப் பெண்ணும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். இவள் என்னோடு வீட்டில் இருந்தபோது எனக்குக் குழந்தை பிறந்தது. **18** மூன்று நாள் கழித்து இவளுக்கும் குழந்தை பிறந்தது. வீட்டில் நாங்கள் இரண்டு பேர் மட்டும்தான் இருந்தோம். வேறு யாருமே இல்லை. **19** ராத்திரி தூங்கும்போது இவள் தன்னுடைய குழந்தைமேல் புரண்டு படுத்துவிட்டாள், அதனால் இவளுடைய மகன் செத்துவிட்டான். **20** உங்கள் அடிமைப் பெண்ணாகிய நான் அசந்து தூங்கிக்கொண்டிருந்தபோது, இவள் நடுராத்திரியில் எழுந்து என் பக்கத்தில் இருந்த குழந்தையைத் தூக்கி தன் பக்கத்தில் வைத்துக்கொண்டாள். இறந்துபோன குழந்தையை என் பக்கத்தில் வைத்துவிட்டாள். **21** குழந்தைக்குப் பால் கொடுக்க காலையில் எழுந்து பார்த்தபோதுதான் அது செத்துக்கிடந்தது எனக்குத் தெரிந்தது. அந்தக் குழந்தையை நன்றாகப் பார்த்தபோது அது நான் பெற்ற குழந்தை இல்லையென்று தெரிந்துகொண்டேன்” என்று சொன்னாள். **22** அதற்கு இன்னொரு பெண், “இல்லை, உயிரோடு இருப்பது என் குழந்தை, செத்துப்போனதுதான் உன் குழந்தை” என்று சொன்னாள். ஆனால் முதல் பெண், “இல்லை, செத்துப்போனது உன் குழந்தை, உயிரோடு இருப்பதுதான் என் குழந்தை” என்று சொன்னாள். இப்படி, ராஜாவின் முன்னால் அவர்கள் வாக்குவாதம் பண்ணினார்கள்.

23 அப்போது ராஜா, “‘உயிரோடு இருப்பது என் குழந்தை, செத்துப்போனது உன் குழந்தை’ என்று இவள் சொல்கிறாள். அவளோ, ‘இல்லை, செத்துப்போனது உன் குழந்தை, உயிரோடு இருப்பதுதான் என் குழந்தை’ என்று சொல்கிறாள்” என்றார். **24** பின்பு, “வாளைக் கொண்டுவாருங்கள்” என்று கட்டளையிட்டார். ஒரு வாளை ராஜாவிடம் கொண்டுவந்தார்கள். **25** அப்போது அவர், “உயிரோடு இருக்கிற குழந்தையை இரண்டாக வெட்டி, ஒரு பாதியை இவளுக்கும் இன்னொரு பாதியை அவளுக்கும் கொடுங்கள்” என்று சொன்னார். **26** உடனே உயிரோடு இருக்கிற குழந்தையின் அம்மா பதறினாள். பெற்ற மனம் அந்தக் குழந்தைக்காகத் துடித்தது.* அதனால் அவள், “எஜமானே, உயிரோடு இருக்கிற குழந்தையை அவளுக்கே கொடுத்துவிடுங்கள், தயவுசெய்து குழந்தையைக் கொன்றுவிடாதீர்கள்!” என்று கெஞ்சினாள். ஆனால் மற்ற பெண்ணோ, “உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம். குழந்தையை வெட்டிப்போடுங்கள்” என்று சொன்னாள். **27** அப்போது ராஜா, “குழந்தையைக் கொல்லாதீர்கள். அந்த முதல் பெண்தான் அவனுடைய அம்மா, அவளிடமே அவனைக் கொடுங்கள்” என்று சொன்னார்.

3:26 * வே.வா., “அவளுக்குள் கரிசனை பொங்கியது.”

அதி. 3
a 1ரா 15:5
b சங் 21:4; சங் 91:14, 16; நீதி 3:13, 16
c லேவி 7:11

28 ராஜா சொன்ன தீர்ப்பை இஸ்ரவேலர்கள் எல்லாரும் கேள்விப்பட்
டார்கள். கடவுள் கொடுத்த ஞானத்தால்தான் அவர் நியாயம் வழங்குகிறார்
என்பதைப் புரிந்துகொண்டார்கள்.[a] அதனால், ராஜாவைப் பார்த்து பிரமித்
துப்போனார்கள்.*[b]

4 இஸ்ரவேல் தேசம் முழுவதையும் சாலொமோன் ஆட்சி செய்தார்.[c]
2 அவரோடு இருந்த உயர் அதிகாரிகள்: சாதோக்கின்[d] மகன் அச
ரியா குருவாக இருந்தார். **3** ஷீசாவின் மகன்களான எலிகோரேப்பும் அகி
யாவும் செயலாளர்களாக இருந்தார்கள்.[e] அகிலூத்தின் மகன் யோசபாத்[f]
பதிவாளராக இருந்தார். **4** யோய்தாவின் மகன் பெனாயா[g] படைத் தள
பதியாக இருந்தார். சாதோக்கும் அபியத்தாரும்[h] குருமார்களாகச் சேவை
செய்தார்கள். **5** நாத்தானின்[i] மகன் அசரியா நிர்வாகிகளுக்குத் தலைவ
ராக இருந்தார். நாத்தானின் மகன் சாபூத் குருவாகவும் ராஜாவின் ஆலோ
சகராகவும் இருந்தார்.[j] **6** அகீஷார் அரண்மனை அதிகாரியாக இருந்தார்.
அடிமை வேலை வாங்கப்பட்ட ஆட்களுக்கு[k] அப்தாவின் மகன் அதோ
னீராம் அதிகாரியாக இருந்தார்.[l]

7 இஸ்ரவேல் முழுவதையும் கவனித்துக்கொள்ள 12 நிர்வாகிகளை
சாலொமோன் நியமித்திருந்தார். ராஜாவுக்கும் அவருடைய அரண்மனை
யில் இருந்தவர்களுக்கும் தேவையான உணவுப் பொருள்களைக் கொண்டு
வந்து கொடுக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. அவர்கள்
ஒவ்வொருவரும் வருஷத்தில் ஒவ்வொரு மாதம் உணவுப் பொருள்களைக்
கொண்டுவந்து கொடுத்தார்கள்.[m] **8** அந்த நிர்வாகிகளைப் பற்றிய தகவல்:
எப்பிராயீம் மலைப்பகுதியை ஹூரின் மகன் நிர்வகித்தார்; **9** மாக்காத்ஸ்,
சால்பீம்,[n] பெத்-ஷிமேஸ், ஏலோன்-பெத்-தானான் ஆகிய இடங்களை
தேக்கேரின் மகன் நிர்வகித்தார்; **10** அருபோத்தை ஏசேத்தின் மகன் நிர்
வகித்தார் (சோக்கோவும் ஹேப்பேர் பகுதி முழுவதும் அவருடைய கட்டுப்
பாட்டில் இருந்தது); **11** தோர் மலைச் சரிவுகள் முழுவதையும் அபினதா
பின் மகன் நிர்வகித்து வந்தார் (இவர் சாலொமோனின் மகள் தாபாத்தைக்
கல்யாணம் செய்தார்); **12** தானாக், மெகிதோ,[o] யெஸ்ரயேலுக்குக் கீழும்
சார்தானுக்குப் பக்கத்திலும் இருக்கிற பெத்-செயான் பகுதி முழுவதும்,[p]
பெத்-செயானிலிருந்து ஆபேல்-மெகொல்லா வரையிலும், யோக்மேயாம்[q]
வரையிலும் இருந்த பகுதிகள் எல்லாம் அகிலூத்தின் மகன் பானாவின் கட்
டுப்பாட்டில் இருந்தன. **13** ராமோத்-கீலேயாத்தை[r] கேபேரின் மகன் நிர்
வகித்தார் (மனாசேயின் வம்சத்தில் வந்த யாவீரின்[s] சிற்றூர்கள் இவருடைய
கட்டுப்பாட்டில் இருந்தன. அவை கீலேயாத்தில்[t] இருந்தன; பாசானிலுள்ள[u]
அர்கோப்[v] பிரதேசமும் இவருடைய கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தப்
பகுதியில் மதில்களும் செம்புத் தாழ்ப்பாள்களும் கொண்ட 60 பெரிய நக
ரங்கள் இவருடைய கட்டுப்பாட்டில் இருந்தன); **14** இத்தோவின் மகன்
அகினதாப் மக்னாயீமை[w] நிர்வகித்தார். **15** நப்தலி பகுதியை அகிமாஸ்
நிர்வகித்தார் (இவர் சாலொமோனின் மற்றொரு மகளான பஸ்மாத்தைக்
கல்யாணம் செய்தார்); **16** ஆசேர், பெயாலோத் ஆகிய பகுதிகளை ஊசா
யின் மகன் பானா நிர்வகித்தார்; **17** இசக்கார் பகுதியை பருவாவின்
மகன் யோசபாத் நிர்வகித்தார்; **18** பென்யமீன்[x] பகுதியை ஏளாவின்
மகன் சீமேயி[y] நிர்வகித்தார்; **19** எமோரியர்களின் ராஜாவான சீகோனும்[z]

3:28 * நே.மொ., "பயந்தார்கள்."

அதி. 3
a 1ரா 3:9, 10
b 1நா 29:23-25; சங் 72:5

அதி. 4
c 2நா 9:30; பிர 1:12
d 1நா 6:8; 1நா 27:16, 17
e 2சா 8:17; 1நா 27:32
f 2சா 8:16; 2சா 20:24
g 1ரா 1:8; 1ரா 2:35; 1நா 27:5
h 1ரா 2:26
i 1ரா 1:9, 10
j 2சா 15:37; 1நா 27:33
k 1ரா 9:15
l 2சா 20:24; 1ரா 5:14; 1ரா 12:18
m 1நா 27:1
n யோசு 19:42, 48
o 2ரா 23:29
p யோசு 17:11; 1சா 31:8, 10
q யோசு 21:34
r உபா 4:41-43; 1ரா 22:3
s எண் 32:41; உபா 3:14
t எண் 32:1
u யோசு 13:8, 11
v உபா 3:4
w ஆதி 32:1, 2; 2சா 2:8, 9
x யோசு 18:11
y 1ரா 1:8
z எண் 21:21

பாசானின் ராஜாவான ஓகும்[a] முன்பு ஆட்சி செய்த கீலேயாத் பிரதே
சத்தை[b] ஊரியின் மகன் கேபேர் நிர்வகித்தார். தேசத்திலிருந்த இந்த எல்லா
நிர்வாகிகளுக்கும் ஒரு தலைவர் இருந்தார்.

20 யூதாவிலும் இஸ்ரவேலிலும் கடற்கரை மணலைப் போல ஏராளமான
மக்கள் இருந்தார்கள்.[c] அவர்கள் சாப்பிட்டுக் குடித்து சந்தோஷமாக வாழ்ந்
தார்கள்.[d]

21 ஆறு* தொடங்கி, பெலிஸ்தியர்களின் தேசம் வரையிலும் எகிப்
தின் எல்லை வரையிலும் இருந்த எல்லா தேசங்களையும் சாலொமோன்
ஆட்சி செய்தார்.[e] சாலொமோனின் வாழ்நாள் முழுவதும் அந்தத் தேசங்க
ளைச் சேர்ந்த மக்கள் அவருக்குக் கப்பம் கட்டி சேவை செய்தார்கள்.[f]

22 சாலொமோனின் அரண்மனையில் தினமும் 30 கோர் அளவு*
நைசான மாவும், 60 கோர் அளவு சாதாரண மாவும், **23** கொழுத்த 10
மாடுகளும் மேய்ச்சல் நிலத்திலிருந்து வந்த 20 மாடுகளும், 100 செம்ம
றியாடுகளும் பலவகை மான்களும்* கொழுத்த குயில்களும் சாப்பாட்டுக்
காகப் பயன்படுத்தப்பட்டன. **24** ஆற்றுக்கு* மேற்கில் இருந்த பகுதிகள்
எல்லாம், அதாவது திப்சாவிலிருந்து காசாவரை,[g] சாலொமோனின் கட்டுப்
பாட்டில் இருந்தது.[h] அங்கே இருந்த எல்லா ராஜாக்களும் அவருக்கு அடி
பணிந்து நடந்தார்கள். அவருடைய தேசம் முழுவதும் சமாதானமாக இருந்
தது. சுற்றியிருந்த எல்லா தேசங்களும் அவரோடு சமாதானமாக இருந்தன.[i]
25 சாலொமோனின் காலமெல்லாம், தாண்முதல் பெயெர்-செபாவரை
இருந்த யூதா மக்களும் இஸ்ரவேல் மக்களும் அவரவருடைய திராட்சைக்
கொடியின் நிழலிலும் அவரவருடைய அத்தி மரத்தின் நிழலிலும் பாதுகாப்
பாகக் குடியிருந்தார்கள்.

26 ரதக் குதிரைகளை நிறுத்துவதற்காக 4,000* லாயங்களும் 12,000 குதி
ரைகளும்# சாலொமோனிடம் இருந்தன.[j]

27 சாலொமோன் ராஜாவுக்கும் அவருடைய மேஜையில் சாப்பிட்ட
எல்லாருக்கும் தேவையான உணவுப் பொருள்களை நிர்வாகிகள் கொண்டு
வந்தார்கள். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நிர்வாகிக்கு அந்தப் பொறுப்பு
கொடுக்கப்பட்டிருந்தது, அதில் ஒரு குறையும் வராமல் அவர்கள் பார்த்துக்
கொண்டார்கள்.[k] **28** ரதக் குதிரைகள் உட்பட எல்லா குதிரைகளுக்கும்
தேவையான பார்லியையும் வைக்கோலையும்கூட அவர்கள் கொண்டுவந்து
கொடுத்தார்கள். தாங்கள் கொடுக்க வேண்டிய அளவின்படி, எந்த இடத்தில்
அவை தேவைப்பட்டாலும் அவற்றைக் கொண்டுபோய்க் கொடுத்தார்கள்.

29 சாலொமோனுக்கு ஞானத்தையும் பகுத்தறிவையும் மிக அதிகமாகக்
கடவுள் கொடுத்தார். கடற்கரை மணலைப் போல் மிகவும் பரந்த இத
யத்தை* கொடுத்தார்.[l] **30** கிழக்கத்திய மக்களையும் எகிப்தியர்களையும்
விட சாலொமோன் ஞானத்தில் சிறந்து விளங்கினார்.[m] **31** ஞானத்தில்
அவருக்குச் சமமாக யாருமே இருக்கவில்லை. எஸ்ராகியனான ஏத்தான்,[n]

4:21 *அதாவது, "யூப்ரடிஸ் ஆறு." **4:22** *ஒரு கோர் என்பது 220 லிட்டருக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **4:23** *அதாவது, "சிவப்பு மான்களும் கலை மான்களும் ரோ மான்களும்." **4:24** *அதாவது, "யூப்ரடிஸ் ஆற்றுக்கு." **4:26** *சில கையெழுத்துப் பிரதிகளிலும் இணை வசனங்களிலும் இந்த எண்ணிக்கைதான் காணப்படுகிறது. மற்ற கையெழுத்துப் பிரதிகளில் 40,000 என உள்ளது. #வே.வா., "குதிரைவீரர்களும்." **4:29** *வே.வா., "புரிந்துகொள்ளும் இதயத்தை."

அதி. 4

a உபா 3:4
b யோசு 17:1
c ஆதி 22:15, 17
d பிர 2:24
e ஆதி 15:18 யாத் 23:31 2சா 8:3 சங் 72:8-10
f சங் 72:10
g ஆதி 10:19
h யோசு 1:4
i 1ரா 5:4 1நா 22:9 சங் 72:7
j உபா 17:15, 16 1ரா 10:24-26 2நா 1:14, 17
k 1ரா 4:7
l 1ரா 10:23 2நா 1:10 நீதி 2:6
m அப் 7:22
n சங் 89:மே.கு.

மாகோலின் மகன்களான ஏமான்,[a] கல்கோல்,[b] தர்தா ஆகியோரைவிட
அவர் ஞானமுள்ளவராக இருந்தார். சுற்றியிருந்த எல்லா தேசங்களுக்கும்
அவருடைய பேரும் புகழும் பரவியது.[c] **32** அவர் சொன்ன நீதிமொழிக
ளின்[d] எண்ணிக்கை 3,000. அவருடைய பாடல்களின்[e] எண்ணிக்கை 1,005.
33 அவர் மரங்களைப் பற்றிப் பேசினார். அதாவது, லீபனோனில் இருக்
கும் தேவதாரு மரத்திலிருந்து சுவரில் வளரும் மருவுச்செடிவரை[f] எல்லாவற்
றையும் பற்றிப் பேசினார். மிருகங்கள்,[g] பறவைகள்,[*][h] ஊரும் பிராணிகள்,[#][i]
மீன்கள் ஆகியவற்றைப் பற்றியும் பேசினார். **34** சாலொமோனின் ஞான
மான வார்த்தைகளைக் கேட்பதற்காக எல்லா தேசங்களிலும் இருந்து மக்கள்
வந்தார்கள். அதோடு, உலகெங்கிலும் இருந்து ராஜாக்களும் அவருடைய
ஞானத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க வந்தார்கள்.[j]

5 தாவீதுக்குப் பிறகு அவருடைய மகன் சாலொமோன் ராஜாவாக
அபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறார் என்ற விஷயத்தை தீருவின்[k]
ராஜாவான ஈராம் கேள்விப்பட்டார். தாவீதின் வாழ்நாள் முழுவதும் ஈராம்
அவருக்கு ஒரு நல்ல நண்பராக இருந்ததால்[*][l] சாலொமோனைச் சந்திக்க
தன்னுடைய ஊழியர்களை அனுப்பினார். **2** சாலொமோனும் ஈராமுக்
குச் செய்தி அனுப்பினார்.[m] **3** “யெகோவாவின் பெயருக்காக ஒரு ஆல
யத்தை என் அப்பாவால் கட்ட முடியவில்லை என்பது உங்களுக்கே நன்
றாகத் தெரியும். ஏனென்றால், சுற்றியிருந்த எதிரிகள் எல்லாரையும்
யெகோவாவின் துணையோடு வீழ்த்தும்வரை அவர் போர் செய்து
கொண்டிருந்தார்.[n] **4** ஆனால், இப்போது எதிரிகள் யாருடைய தொல்
லையும் இல்லாமல் யெகோவா தேவன் என்னை நிம்மதியாக வைத்திருக்
கிறார்.[o] எனக்கு யாருடைய எதிர்ப்பும் இல்லை, எந்தத் தொந்தரவும்
இல்லை.[p] **5** யெகோவா தேவன் என் அப்பா தாவீதிடம், ‘உனக்குப் பின்பு
உன் மகனைச் சிம்மாசனத்தில் ராஜாவாக உட்கார வைப்பேன். அவன்
என் பெயருக்காக ஒரு ஆலயத்தைக் கட்டுவான்’ என்று வாக்குக் கொடுத்
திருந்தார். அவர் சொன்னபடியே என்னுடைய கடவுளான யெகோவாவின்
பெயருக்காக ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்புகிறேன்.[q] **6** லீபனோனில்
உள்ள தேவதாரு மரங்களை[r] எனக்காக வெட்டச் சொல்லி உங்கள் ஆட்
களிடம் கட்டளையிடுங்கள். உங்களுடைய ஆட்களோடு சேர்ந்து என்னு
டைய ஆட்களும் வேலை செய்வார்கள். நீங்கள் கேட்கிற கூலியை உங்க
ளுடைய ஆட்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். சீதோனியர்களைப் போல்
நன்றாக மரம் வெட்டத் தெரிந்தவர்கள் எங்களிடம் ஒருவர்கூட இல்லை
யென்பது உங்களுக்கே தெரியும்”[s] என்று செய்தி அனுப்பினார்.

7 இதைக் கேட்டு ஈராம் மிகவும் சந்தோஷப்பட்டு, “இந்த ஏராளமான
மக்களை ஆட்சி செய்ய தாவீதுக்கு ஞானமுள்ள மகனைக் கொடுத்ததற்காக
யெகோவாவைப் புகழ்கிறேன்”[t] என்று சொன்னார். **8** பின்பு அவர் சாலொ
மோனுக்குச் செய்தி அனுப்பினார். அதில், “உங்களுடைய செய்தி
கிடைத்தது. உங்கள் விருப்பப்படியே எல்லாவற்றையும் செய்கிறேன்,
தேவதாரு மரங்களையும் ஆபால் மரங்களையும்[u] வெட்டி அனுப்புகிறேன்.
9 அவற்றை என்னுடைய ஆட்கள் லீபனோனில் இருந்து கடலுக்குக்

4:33 * வே.வா., “பறக்கும் உயிரினங்கள்.” # பூச்சி இனங்களும் இதில் உட்பட்டிருக்க
லாம். **5:1** * வே.வா., “அவருக்கு அன்பு காட்டியதால்.”

அதி. 4
a சங் 88:மே.கு.
b 1நா 2:4, 6
c 1ரா 10:1, 7; லூ 11:31
d நீதி 1:1; பிர 12:9
e உன் 1:1
f யாத் 12:22
g நீதி 30:30
h நீதி 30:19
i நீதி 6:6; நீதி 30:25
j 2நா 9:1, 23

அதி. 5
k எசே 27:3
l 2சா 5:11
m 2நா 2:3
n 2சா 7:5; 1நா 22:7, 8
o 1ரா 4:24, 25
p நீதி 16:7
q 2சா 7:12, 13; 1நா 22:9, 10; 2நா 2:4
r 1ரா 6:9, 20
s 2நா 2:8
t 2நா 2:11, 12
u 2சா 6:5; 1ரா 6:15; 2நா 3:5

கொண்டுவருவார்கள். அவற்றை ஒன்றாகக் கட்டி நீங்கள் சொல்கிற இடத்
துக்குக் கடல்வழியாக அனுப்பி வைக்கிறேன். அவை வந்துசேர்ந்ததும் என்
னுடைய ஆட்கள் அவற்றை அவிழ்த்துக் கொடுப்பார்கள். அதன் பின்பு,
நீங்கள் எடுத்துக்கொண்டு போகலாம். இதற்காக, என் வீட்டாருக்குத் தேவை
யான உணவுப் பொருள்களைக் கொடுங்கள்”[a] என்று சொன்னார்.

10 சாலொமோன் கேட்டபடியே தேவதாரு மரங்களையும் ஆபால்
மரங்களையும் வேண்டிய அளவு ஈராம் அனுப்பி வைத்தார். **11** ஈராமின்
வீட்டாருக்காக 20,000 கோர் அளவு* கோதுமையையும் 20 கோர் அளவு
உயர்தர ஒலிவ எண்ணெயையும்# ஒவ்வொரு வருஷமும் சாலொமோன்
அனுப்பி வைத்தார்.[b] **12** வாக்குக் கொடுத்தபடியே, சாலொமோனுக்கு
யெகோவா ஞானத்தைத் தந்தார்.[c] சாலொமோனின் தேசத்துக்கும் ஈராமின்
தேசத்துக்கும் இடையே நல்லுறவு இருந்தது. அவர்கள் இரண்டு பேரும் ஒப்
பந்தம் செய்துகொண்டார்கள்.

13 சாலொமோன் ராஜா இஸ்ரவேல் முழுவதிலும் இருந்து 30,000
பேரைத் தேர்ந்தெடுத்து தனக்கு அடிமை வேலை செய்யும்படி கட்டளையிட்
டார்.[d] **14** அவர்களைப் பத்தாயிரம் பத்தாயிரம் பேராக ஒவ்வொரு மாத
மும் லீபனோனுக்கு அனுப்பினார். அவர்கள் ஒரு மாதம் லீபனோனில்
வேலை செய்தார்கள், இரண்டு மாதங்கள் தங்களுடைய வீட்டில் தங்கியிருந்
தார்கள். அடிமை வேலை வாங்கப்பட்ட ஆட்களுக்கு அதோனீராம் அதி
காரியாக இருந்தார்.[e] **15** சுமை சுமக்க 70,000 பேரையும் மலைகளில் கற்
களை வெட்டிச் செதுக்க 80,000 பேரையும் சாலொமோன் வேலைக்கு
வைத்தார்.[f] **16** அவர்களை மேற்பார்வை செய்ய 3,300 நிர்வாகிகளை நிய
மித்தார்.[g] **17** ராஜாவின் கட்டளைப்படி, விலைமதிப்புள்ள பெரிய கற்
களை[h] அவர்கள் வெட்டியெடுத்தார்கள். ஆலயத்துக்கு அஸ்திவாரம் போடு
வதற்காக[i] அவற்றைச் செதுக்கினார்கள்.[j] **18** சாலொமோனின் ஆட்களும்
ஈராமின் ஆட்களும் கேபாலைச் சேர்ந்தவர்களும்[k] கற்களை வெட்டினார்
கள். ஆலயத்தைக் கட்டுவதற்குத் தேவையான மரங்களையும் கற்களையும்
தயார்படுத்தினார்கள்.

6 இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்து[l] 480 வருஷங்கள்
ஆகியிருந்தன. சாலொமோன் இஸ்ரவேலின் ராஜாவான நான்காம்
வருஷத்தில், சிவ்* மாதத்தில்[m] (அதாவது, இரண்டாம் மாதத்தில்) யெகோ
வாவுக்கு ஓர் ஆலயத்தை# கட்ட ஆரம்பித்தார்.[n] **2** யெகோவாவுக்காக
சாலொமோன் ராஜா கட்டிய ஆலயத்தின் நீளம் 60 முழம்,* அகலம்
20 முழம், உயரம் 30 முழம்.[o] **3** ஆலயத்துக்கு முன்னால் இருந்த நுழைவு
மண்டபத்தின்[p] நீளம் 20 முழம். நுழைவு மண்டபத்தின் நீளமும் ஆல
யத்தின் அகலமும் சரிசமமாய் இருந்தது. ஆலயத்தின் முன்பக்கத்திலிருந்து
10 முழ அகலத்தில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

4 ஆலயத்தில் குறுகலான சட்டங்களைக்[q] கொண்ட ஜன்னல்களை
அவர் வைத்தார். **5** ஆலயத்தின் சுவர்களை ஒட்டி, அதாவது பரிசுத்த
அறையின் சுவரையும் மகா பரிசுத்த அறையின்[r] சுவரையும் ஒட்டி, சுற்றிலும்

5:11 *ஒரு கோர் என்பது 220 லிட்டருக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். #நே.மொ., “இடித்துப் பிழிந்த எண்ணெயையும்.” **6:1** *இணைப்பு B15-ஐப் பாருங்கள். #நே.மொ., “வீட்டை.” இணைப்பு B8-ஐப் பாருங்கள். **6:2** *ஒரு முழம் என்பது 44.5 செ.மீ. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 5
a 2நா 2:15, 16; எஸ்றா 3:7
b 2நா 2:10
c 1ரா 3:12; 1ரா 4:29; யாக் 1:5
d 1ரா 9:15
e 2சா 20:24; 1ரா 4:6; 1ரா 12:18
f யோசு 16:10; 1ரா 9:20-22; 1நா 22:15; 2நா 2:2; 2நா 2:17, 18; 2நா 8:7-9
g 1ரா 9:23
h 1ரா 7:9; 1நா 22:2
i வெளி 21:14
j 1ரா 6:7
k யோசு 13:1, 5

அதி. 6
l 1ரா 6:37
m 1நா 28:11, 12; 2நா 3:1, 2
n யாத் 12:14, 51
o 2நா 3:3; எஸ்றா 6:3
p 2நா 3:4
q எசே 41:26
r லேவி 16:2; 2நா 5:7; எபி 9:3

ஒரு கட்டிடம் எழுப்பினார். அதில் பக்கவாட்டு அறைகளைக் கட்டினார்.[a]
6 பக்கவாட்டு அறைகளின் கீழ்த்தளம் 5 முழ அகலமாகவும் நடுத்தளம்
6 முழ அகலமாகவும் மேல்தளம் 7 முழ அகலமாகவும் இருந்தது. பரி
சுத்த அறையையும் மகா பரிசுத்த அறையையும் சுற்றியிருக்கிற சுவர்களில்
அவர் திட்டுகளை அமைத்தார். அதனால், உத்திரங்களை இணைப்பதற்காக
அந்தச் சுவர்களில் ஓட்டை போட வேண்டிய அவசியம் இருக்கவில்லை.[b]

7 ஏற்கெனவே செதுக்கித் தயாராக வைக்கப்பட்டிருந்த கற்களைப்
பயன்படுத்தி ஆலயம் கட்டப்பட்டது.[c] அதனால், ஆலயம் கட்டப்பட்ட
போது சுத்தியல் சத்தமோ உளி சத்தமோ, வேறெந்த இரும்புக் கருவியின்
சத்தமோ கேட்கவில்லை. **8** கீழ்த்தளத்தில் இருக்கிற பக்கவாட்டு அறைக
ளுக்குப் போகும் வாசல், ஆலயத்தின் தெற்கு* பக்கத்தில் இருந்தது.[d] கீழ்த்
தளத்திலிருந்து நடுத்தளத்துக்கும் நடுத்தளத்திலிருந்து மேல்தளத்துக்கும்
போவதற்குச் சுழல் படிக்கட்டுகளை அமைத்தார். **9** ஆலயத்தின் மற்ற
பகுதிகளையும் கட்டி முடித்த பின்பு[e] ஆலயத்தின் உட்கூரையில் தேவ
தாரு உத்திரங்களைப் பொருத்தி, அவற்றைத் தேவதாரு மரப்பலகைகளால்
மூடினார்.[f] **10** ஆலயத்தைச் சுற்றிலும் பக்கவாட்டு அறைகளைக் கட்டி
னார்;[g] அந்த அறைகள் ஒவ்வொன்றின் உயரமும் ஐந்து முழமாக இருந்
தது. ஆலயத்தின் சுவரையும் பக்கவாட்டு அறைகளையும் தேவதாரு உத்
திரங்களால் இணைத்தார்.

11 இதற்கிடையே யெகோவா சாலொமோனிடம், **12** “நீ என்னுடைய
சட்டதிட்டங்களின்படி நடந்தால், என் நீதித்தீர்ப்புகளையும் என்னுடைய
எல்லா கட்டளைகளையும் கடைப்பிடித்தால்,[h] நீ கட்டுகிற இந்த ஆல
யம் சம்பந்தமாக நான் உன்னுடைய அப்பா தாவீதுக்குக் கொடுத்த
வாக்கை நிறைவேற்றுவேன்.[i] **13** நான் இஸ்ரவேலர்களுடன் தங்கியிருப்
பேன்,[j] என் மக்களாகிய இஸ்ரவேலர்களைக் கைவிட மாட்டேன்”[k] என்று
சொன்னார்.

14 சாலொமோன் அந்த ஆலயத்தைத் தொடர்ந்து கட்டினார்.
15 ஆலயத்தின் உட்சுவர்களை தேவதாரு மரப்பலகைகளால் மூடினார்.
இப்படி, தரைமுதல் கூரைவரை எல்லாவற்றையும் மரப்பலகைகளால்
மூடினார். தரையை ஆபால் மரப்பலகைகளால் மூடினார்.[l] **16** ஆலயத்
தின் பின்பகுதியில் 20 முழ நீளத்தில் ஓர் அறையை[m] அமைத்து, தரையி
லிருந்து கூரைவரை தேவதாரு மரப்பலகைகளால் மூடினார். ஆலயத்
தின் உட்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்த அறைதான் மகா பரிசுத்த
அறை.[n] **17** மகா பரிசுத்த அறைக்கு முன்னாலிருந்த பகுதியான பரிசுத்த
அறையின்[o] நீளம் 40 முழம். **18** ஆலயத்தின் உட்புறத்தை மூடிய தேவ
தாரு மரப்பலகைகளில் குமிழ் வடிவங்களும் விரிந்த பூக்களின் வடிவங்க
ளும் செதுக்கப்பட்டன.[p] கற்களே தெரியாத அளவுக்குச் சுவர் முழுவதை
யும் தேவதாரு மரப்பலகைகளால் மூடினார்.

19 யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியை வைப்பதற்காகவே[q] ஆல
யத்தின் மகா பரிசுத்த அறையைத் தயார்படுத்தினார்.[r] **20** மகா பரி
சுத்த அறையின் நீளம் 20 முழம், அகலம் 20 முழம், உயரம்
20 முழம்.[s] அந்த அறை முழுவதற்கும் சுத்தமான தங்கத்தால் தகடு அடித்
தார். பீடத்தை*[t] தேவதாரு பலகைகளால் மூடினார். **21** ஆலயத்திலுள்ள

6:8 * நே.மொ., “வலது.” **6:20** * அதாவது, “தூபபீடத்தை.”

அதி. 6
a 1ரா 6:10; எசே 41:5, 26
b எசே 41:6, 7
c 1ரா 5:17
d எசே 41:11
e 1ரா 6:38
f 1ரா 5:6; 1ரா 6:20
g 1ரா 6:5
h உபா 17:18, 19; 1ரா 8:25; 1நா 28:9
i 2சா 7:13; 1நா 22:9
j யாத் 25:8; லேவி 26:12; சங் 132:13
k 1நா 28:20
l 1ரா 5:8; 2நா 3:5
m 1ரா 6:5
n 2நா 3:8, 9; எபி 9:3
o எபி 9:2
p யாத் 25:33; 1ரா 7:24
q யாத் 40:21; 1ரா 8:6
r எபி 9:3
s 1ரா 6:16
t யாத் 30:1; 1ரா 7:48

பரிசுத்த அறையின் உட்சுவர்கள் முழுவதற்கும் சுத்தமான தங்கத்தால் தகடு
அடித்தார்.[a] தங்கத் தகடு அடிக்கப்பட்ட மகா பரிசுத்த அறையின் முன்ப
குதியில் தங்கச் சங்கிலிகளை இணைத்துக் கட்டினார்.[b] **22** ஆலயம் முழு
வதற்கும் தங்கத்தால் தகடு அடித்தார். மகா பரிசுத்த அறைக்கு வெளியே
இருந்த தூபபீடம் முழுவதற்கும் தங்கத்தால் தகடு அடித்தார்.[c]

23 மகா பரிசுத்த அறையில் வைப்பதற்காக எண்ணெய் மரத்தால்*
இரண்டு கேருபீன்களைச்[d] செய்தார். அவற்றின் உயரம் 10 முழம்.[e]
24 முதல் கேருபீனுடைய ஒரு சிறகின் நீளம் ஐந்து முழம், மற்றொரு சிற
கின் நீளம் ஐந்து முழம். ஒரு சிறகின் முனையிலிருந்து மறு சிறகின்
முனைவரை 10 முழம். **25** இரண்டாவது கேருபீனின் உயரமும் 10 முழம்.
இரண்டு கேருபீன்களும் அளவிலும் உருவத்திலும் ஒரே மாதிரி இருந்தன.
26 ஒவ்வொரு கேருபீனையும் 10 முழ உயரத்தில் செய்தார். **27** பின்பு,
அந்தக் கேருபீன்களை[f] மகா பரிசுத்த அறையில் வைத்தார். கேருபீன்கள்
சிறகுகளை விரித்தபடி நின்றன. அதனால், ஒரு கேருபீனின் சிறகு ஒரு சுவ
ரைத் தொட்டுக்கொண்டிருந்தது, அடுத்த கேருபீனின் சிறகு மறு சுவரைத்
தொட்டுக்கொண்டிருந்தது. இரண்டு கேருபீன்களின் மற்ற சிறகுகள் அறை
யின் நடுப்பக்கத்தில் ஒன்றையொன்று தொட்டபடி இருந்தன. **28** அந்தக்
கேருபீன்கள்மீது அவர் தங்கத் தகடு அடித்தார்.

29 ஆலயத்தில் உள்ள எல்லா சுவர்களிலும், அதாவது உட்புற அறையி
லும் வெளிப்புற அறையிலும் இருக்கிற எல்லா சுவர்களிலும், கேருபீன்கள்,[g]
பேரீச்ச மரங்கள்,[h] விரிந்த பூக்கள் ஆகியவற்றின் வடிவங்கள் செதுக்கப்பட்
டிருந்தன.[i] **30** மகா பரிசுத்த அறை, பரிசுத்த அறை ஆகியவற்றின் தரை
களைத் தங்கத் தகட்டால் மூடினார். **31** மகா பரிசுத்த அறையின் வாசலுக்
காக இரட்டைக் கதவுகளை எண்ணெய் மரத்தால் செய்தார். தூண்களையும்
நிலைக்கால்களையும் அதன் ஐந்தாம் பாகமாக* செய்தார். **32** அந்த
இரட்டைக் கதவுகள் எண்ணெய் மரத்தால் செய்யப்பட்டன. அவற்றில்
கேருபீன்கள், பேரீச்ச மரங்கள், விரிந்த பூக்கள் ஆகியவற்றின் வடிவங்க
ளைச் செதுக்கினார். பின்பு, அவற்றுக்குத் தங்கத் தகடு அடித்தார். கேருபீன்
கள், பேரீச்ச மரங்கள் ஆகியவற்றின்மீது தங்கத் தகடுகளை வைத்து
சுத்தியலால் அடித்தார். **33** பரிசுத்த அறையின் வாசல் நிலைக்கால்களை
எண்ணெய் மரத்தால் செய்தார். இது நான்காம் பாகத்தை* சேர்ந்தது.
34 ஆபால் மரத்தால் இரட்டைக் கதவுகளைச் செய்தார். ஒவ்வொரு கதவி
லும் இரண்டு மடிப்புகள் இருந்தன. திறப்பதற்கு உதவியாக அந்தக் கதவு
கள் சுழல் அச்சுகளோடு இணைக்கப்பட்டிருந்தன.[j] **35** அந்தக் கதவுகளில்
கேருபீன்களையும் பேரீச்ச மரங்களையும் விரிந்த பூக்களையும் செதுக்கி,
அவற்றைத் தங்கத் தகட்டால் மூடினார்.

36 செதுக்கப்பட்ட கற்களை மூன்று வரிசையாக அடுக்கி அதன்மீது
ஒரு வரிசை தேவதாரு மரக்கட்டைகளை வைத்து உட்பிரகாரத்தின்[k] மதில்
சுவரைக் கட்டினார்.[l]

37 நான்காம் வருஷம், சிவ்* மாதத்தில் யெகோவாவுடைய ஆல
யத்துக்கு அஸ்திவாரம் போடப்பட்டது.[m] **38** பதினோராம் வருஷம், பூல்*

6:23 *வே.வா., "பைன் மரத்தால்." அநேகமாக, அலெப்போ பைன் மரமாக இருக்க
லாம். **6:31, 33** *அநேகமாக, கதவு நிலையின் கட்டமைப்பை அல்லது கதவுகளின்
அளவைக் குறிக்கலாம். **6:37, 38** *இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

அதி. 6
a யாத் 26:29
2நா 3:7
b யாத் 26:33
c யாத் 30:1, 3
யாத் 40:5
d ஆதி 3:24
2ரா 19:15
சங் 99:1
e 2நா 3:10-13
2நா 5:8
f சங் 80:1
ஏசா 37:16
எபி 9:4, 5
g 2நா 3:14
h எசே 41:17, 18
i யாத் 25:33
1ரா 6:18
j எசே 41:
24, 25
k யாத் 27:9
2நா 4:9
2நா 7:7
l 1ரா 7:12
m 1ரா 6:1

மாதத்தில் (அதாவது, எட்டாம் மாதத்தில்) ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.
வரைபடத்தில் சொல்லப்பட்ட எல்லா நுட்ப விவரங்களின்படியே ஆலயம்
கட்டி முடிக்கப்பட்டது.[a] சாலொமோன் ஏழு வருஷங்களில் ஆலயத்தைக்
கட்டி முடித்தார்.

7 பின்பு, சாலொமோன் தன்னுடைய அரண்மனையைக் கட்டினார். எல்
லாவற்றையும் கட்டி முடிக்க 13 வருஷங்கள் எடுத்தன.[b]

2 ‘லீபனோன் வன மாளிகையை’ அவர் கட்டினார்.[c] அதன் நீளம்
100 முழம்,* அகலம் 50 முழம், உயரம் 30 முழம். தேவதாரு மரத்தூண்
களை நான்கு வரிசையாக நிறுத்தி, அவற்றின்மீது தேவதாரு உத்திரங்களை[d]
வைத்து இந்த மாளிகையைக் கட்டினார். **3** தூண்களின் மேல் ஆதாரக் கம்
பங்களை வைத்து அமைக்கப்பட்டிருந்த அந்த மாளிகை தேவதாரு மரப்
பலகைகளால் மூடப்பட்டிருந்தது. அந்த மாளிகையில், வரிசைக்கு 15
தூண்கள்* என மொத்தம் 45 தூண்கள் இருந்தன. **4** சட்டங்கள் வைக்கப்
பட்ட ஜன்னல்கள் மூன்று வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன. மூன்று
தளத்திலும் ஜன்னல்கள் ஒன்றுக்கொன்று நேரெதிராக இருந்தன. **5** எல்லா
நுழைவாசல்களுக்கும் நிலைக்கால்களுக்கும் சதுர வடிவ* சட்டங்கள் இருந்
தன. மூன்று தளங்களிலும் ஒன்றுக்கொன்று எதிராக இருந்த ஜன்னல்களைப்
போலவே அவையும் சதுர வடிவில் இருந்தன.

6 அவர் கட்டிய ‘தூண் மண்டபத்தின்’ நீளம் 50 முழம், அகலம்
30 முழம். அதன் முன்னால் இருந்த நுழைவு மண்டபத்தில் நிறைய தூண்
கள் இருந்தன, ஒரு கூரையும் இருந்தது.

7 அவர் ‘சிம்மாசன மண்டபத்தையும்’ கட்டினார்.[e] அது ‘தீர்ப்பு மண்ட
பம்’ என்றும் அழைக்கப்பட்டது.[f] அங்கிருந்துதான் அவர் தீர்ப்பு வழங்கு
வார். அந்த மண்டபம் தரைமுதல் கூரைவரை தேவதாரு மரப்பலகைகளால்
மூடப்பட்டிருந்தது.

8 அந்த மண்டபத்திலிருந்து சற்றுத் தள்ளி, இன்னொரு முற்றத்தில்,[g]
தான் குடியிருப்பதற்காக ஓர் அரண்மனையைக் கட்டினார். அந்த மண்டபத்
தைப் போலவே அரண்மனையிலும் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்
பட்டிருந்தன. சாலொமோன் தான் கல்யாணம் செய்திருந்த பார்வோனின்
மகளுக்காக ஒரு மாளிகையைக் கட்டினார்.[h] அது அந்த மண்டபத்தைப்
போலவே இருந்தது.

9 இந்தக் கட்டிடங்களின் அஸ்திவாரம்முதல் உட்கூரைவரை எல்
லாமே அளந்து செதுக்கப்பட்ட விலைமதிப்புள்ள கற்களால் கட்டப்பட்
டன.[i] பெரிய பிரகாரம்வரை[j] எல்லாமே இந்தக் கற்களால்தான் கட்டப்
பட்டன. இந்தக் கற்களின் எல்லா பக்கங்களும் கல் அறுக்கும் ரம்பத்தால்
சீராக வெட்டப்பட்டிருந்தன. **10** அஸ்திவாரம் போடுவதற்கு விலைமதிப்
புள்ள பெரிய கற்கள் பயன்படுத்தப்பட்டன. சில கற்கள் 10 முழமாக
வும், மற்ற கற்கள் 8 முழமாகவும் இருந்தன. **11** அந்த அஸ்திவாரத்துக்கு
மேலே, அளந்து செதுக்கப்பட்ட விலைமதிப்புள்ள கற்களும் தேவதாரு
மரக்கட்டைகளும் வைக்கப்பட்டன. **12** செதுக்கிய கற்களை மூன்று வரி
சையாகவும் அதன்மீது தேவதாரு மரக்கட்டைகளை ஒரு வரிசையாகவும்

7:2 * ஒரு முழம் என்பது 44.5 செ.மீ. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **7:3** *வே.வா., “அறைகள்; உத்திரங்கள்.” மூலமொழி 15 என்று மட்டுமே குறிப்பிடுகிறது. **7:5** *வே.வா., “நான்கு பக்கங்கள் கொண்ட; செவ்வக வடிவ.”

அதி. 6
a 1நா 28:11, 12

அதி. 7
b 1ரா 9:10; பிர 2:4, 5
c 1ரா 10:16, 17; ஏசா 22:8
d 1ரா 5:8
e 1ரா 10:18; சங் 122:2, 5
f 1ரா 3:9, 28; நீதி 20:8
g 2ரா 20:4
h 1ரா 3:1; 1ரா 9:24; 2நா 8:11
i 1ரா 5:17
j 2நா 4:9

வைத்து பெரிய பிரகாரத்தின் சுற்றுச் சுவரைக் கட்டினார்கள்; இது,
யெகோவாவின் ஆலயத்தையும் அதன் நுழைவு மண்டபத்தையும்[a] சுற்றி
யிருக்கிற உட்பிரகாரத்தின்[b] சுவரைப் போலவே கட்டப்பட்டிருந்தது.

13 தீருவிலிருந்து ஈராம்[c] என்பவரை சாலொமோன் ராஜா வரவழைத்
தார். **14** அவர் நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு விதவையின் மகன்;
அவருடைய அப்பா தீருவைச் சேர்ந்த செம்பு ஆசாரி.[d] எல்லாவித
செம்பு* வேலைகளையும் செய்வதில் அறிவும் அனுபவமும் திறமையும்
ஈராமுக்கு இருந்தது.[e] அதனால், சாலொமோன் ராஜாவிடம் வந்து அவர்
செய்யச் சொன்ன எல்லா வேலைகளையும் செய்து கொடுத்தார்.

15 அவர் இரண்டு செம்புத் தூண்களை வார்த்தார்.[f] ஒவ்வொரு தூணும்
18 முழ உயரமாக இருந்தது. ஒவ்வொரு தூணையும் அளவுநூலால்
அளந்தபோது அதன் சுற்றளவு 12 முழமாக இருந்தது.[g] **16** தூண்களின்
உச்சியில் வைப்பதற்காக இரண்டு செம்புக் கும்பங்களை வார்த்தார். ஒவ்
வொரு கும்பத்தின் உயரமும் ஐந்து முழம். **17** ஒவ்வொரு தூணின் உச்சி
யிலும் இருந்த கும்பத்தில் முறுக்குச் சங்கிலிகளால் ஆன வலைப்பின்
னல் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது.[h] ஒவ்வொரு கும்பத்திலும் ஏழு
வலைப்பின்னல்கள் இருந்தன. **18** தூண்களின் மீதிருந்த அந்தக் கும்பங்
களை அழகுபடுத்துவதற்காக, அவற்றின் மேலிருந்த ஒரு வலைப்பின்ன
லைச் சுற்றிலும் மாதுளம்பழ வடிவங்களை இரண்டு வரிசையாகச் செய்து
வைத்தார். இன்னொரு தூணிலும் இதேபோல் செய்துவைத்தார்.
19 நுழைவு மண்டபத்தின் முன்னால் இருந்த தூண்களின் மேலே அமைக்
கப்பட்ட அந்தக் கும்பங்களில் நான்கு முழ உயரத்துக்கு லில்லிப் பூ வடிவத்
தைச் செய்தார். **20** கும்பத்தின் இந்தப் பகுதி அந்த இரண்டு தூண்களின்
மேல் இருந்தது, வலைப்பின்னல்களை ஒட்டியிருந்த வட்டமான அடிப்பகு
தியைத் தொட்டபடி இருந்தது. ஒவ்வொரு கும்பத்தைச் சுற்றிலும் வரிசை
யாக 200 மாதுளம்பழ வடிவங்கள் செய்யப்பட்டிருந்தன.[i]

21 ஆலய* நுழைவு மண்டபத்தின் முன்னால் அந்தத் தூண்களை நிறுத்
தினார்.[j] ஒரு தூணை வலது பக்கத்தில்# நிறுத்தி அதற்கு யாகீன்△ என்றும்,
மற்றொரு தூணை இடது பக்கத்தில்⊠ நிறுத்தி அதற்கு போவாஸ்□ என்றும்
பெயர் வைத்தார்.[k] **22** அந்தத் தூண்களின் மேற்பகுதியில் லில்லிப் பூ
வடிவில் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்படி, தூண்களின் வேலை
யெல்லாம் செய்து முடிக்கப்பட்டது.

23 பின்பு, 'செம்புக் கடல்' என்றழைக்கப்பட்ட பெரிய தண்ணீர்த்
தொட்டியை உலோகத்தால் அவர் வார்த்தார்.[l] அது வட்ட வடிவில் இருந்
தது. அந்தத் தொட்டியின் ஒரு விளிம்புமுதல் மறு விளிம்புவரை அதன்
விட்டம் 10 முழம், அதன் உயரம் 5 முழம், அளவுநூலால் அளந்த
போது அதன் சுற்றளவு 30 முழமாக இருந்தது.[m] **24** அதன் வாய்ப்பகுதி
யின் கீழே சுற்றிலும் குமிழ் வடிவத்தில் வேலைப்பாடுகள் இருந்தன.[n]
ஒரு முழத்துக்குப் பத்துக் குமிழ்கள் எனத் தொட்டியைச் சுற்றிலும் இருந்

7:14 *வே.வா., “வெண்கல.” இந்த வசனத்திலும் இந்த அதிகாரத்தில் செம்பு என்ற வார்த்தை வருகிற மற்ற இடங்களிலும். **7:21** *இங்கே பரிசுத்த அறையைக் குறிக்கிறது. #வே.வா., “தென் திசையில்.” △அர்த்தம், “அவர் [அதாவது, யெகோவா] உறுதியாய் நிலைநாட்டுவாராக.” ⊠வே.வா., “வட திசையில்.” □அநேகமாக, “பலத்தோடு” என்று அர்த்தம்.

அதி. 7
a 1ரா 6:36; 2நா 4:9; 2நா 7:7
b 1ரா 6:3
c 1ரா 7:40; 2நா 2:13, 14
d 2நா 4:16
e யாத் 36:1
f 1ரா 7:21
g 2ரா 25:13, 17; 2நா 3:15; எரே 52:21
h 2ரா 25:17; 2நா 4:12, 13
i 2ரா 25:17; 2நா 3:16; எரே 52: 22, 23
j 1ரா 6:3; எசே 40:48
k 2நா 3:17
l யாத் 30:18; 2ரா 25:13
m 2நா 4:2-5
n 1ரா 6:18

அதி. 7
a எரே 52:20

தன. அவை இரண்டு வரிசையாக செம்புத் தொட்டியோடு சேர்த்து வார்க்
கப்பட்டிருந்தன. **25** அந்தத் தொட்டி 12 காளை உருவங்களுக்கு மேலே
வைக்கப்பட்டிருந்தது.[a] 3 காளைகள் வடக்கேயும் 3 காளைகள் மேற்கே
யும் 3 காளைகள் தெற்கேயும் 3 காளைகள் கிழக்கேயும் பார்த்தவாறு நின்
றன. அந்தக் காளைகள்மேல் தொட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்தக்
காளைகளின் பின்புறங்கள் தொட்டியின் மையப்பகுதியை நோக்கி இருந்
தன. **26** அந்தத் தொட்டியின் தடிமன் ஒரு கையளவு.* அதன் விளிம்பு
கிண்ணத்தின் விளிம்பைப் போல் இருந்தது. பார்ப்பதற்கு மலர்ந்த லில்லிப்
பூவைப் போல் இருந்தது. அந்தத் தொட்டியில் சுமார் 44,000 லிட்டர்# தண்
ணீர் ஊற்றி வைக்கப்பட்டது.

27 பின்பு, செம்பினால் 10 தள்ளுவண்டிகளை* அவர் செய்தார்.[b] அவை
ஒவ்வொன்றின் நீளம் 4 முழம், அகலம் 4 முழம், உயரம் 3 முழம்.
28 தள்ளுவண்டிகளுக்கு நான்கு பக்கங்கள் இருந்தன, ஒவ்வொரு பக்கத்
திலும் குறுக்குச் சட்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. **29** குறுக்குச் சட்டங்க
ளுக்கு இடையில் இருந்த பலகைகளில் சிங்கம்,[c] காளை, கேருபீன்[d]
ஆகியவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அந்தக் குறுக்குச் சட்
டங்களிலும் அதே உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சிங்கம், காளை
உருவங்களுக்கு மேலும் கீழும் தோரண வடிவில் வேலைப்பாடுகள் செய்
யப்பட்டிருந்தன. **30** ஒவ்வொரு தள்ளுவண்டிக்கும் நான்கு செம்புச் சக்க
ரங்களும் செம்பு அச்சுகளும் இருந்தன. சக்கரங்களையும் அச்சுகளையும்
தாங்குவதற்கு நான்கு மூலைகளிலும் முட்டுகள் பொருத்தப்பட்டிருந்தன.
அந்த முட்டுகள் தொட்டியின் கீழ்ப்பகுதியையும் தாங்கி நின்றன. முட்டுக
ளின் ஒவ்வொரு பக்கத்திலும் தோரண வடிவில் வேலைப்பாடுகள் வார்க்
கப்பட்டிருந்தன. **31** தள்ளுவண்டியின் வாய்ப்பகுதியில் வட்ட வடிவ
வளையம் இருந்தது. அந்த வளையத்தைச் சுற்றிலும் உருவங்கள் பொறிக்
கப்பட்டிருந்தன. அந்த வளையத்துக்குள் தொட்டி பொருத்தப்பட்டிருந்
தது. அந்தத் தொட்டியின் அடிப்பாகத்துக்கும் வளையத்துக்கும் இடையே
இருந்த உயரம் ஒரு முழம். தொட்டியையும் வளையத்தையும் சேர்த்தால்
மொத்தம் ஒன்றரை முழம். தள்ளுவண்டியின் நான்கு பக்கங்களும் வட்ட
மாக இல்லாமல் சதுரமாக இருந்தன. **32** அந்த நான்கு சக்கரங்களும்
நான்கு பக்கங்களின் கீழே இருந்தன. அந்தச் சக்கரங்களுக்குக் கொடுக்
கப்பட்டிருந்த முட்டுகள் வண்டியோடு இணைக்கப்பட்டிருந்தன. ஒவ்
வொரு சக்கரத்தின் உயரமும் ஒன்றரை முழம். **33** நான்கு சக்கரங்களும்
ரதத்தின் சக்கரங்களைப் போல் இருந்தன. சக்கரங்களின் முட்டுகள், வட்டங்
கள், கம்பிகள், குடங்கள்* எல்லாமே உலோகத்தால் வார்க்கப்பட்டிருந்தன.
34 ஒவ்வொரு தள்ளுவண்டியின் நான்கு மூலைகளிலும் நான்கு முட்டு
கள் இருந்தன. அந்த முட்டுகள் வண்டியோடு சேர்த்து வார்க்கப்பட்டிருந்
தன. **35** தள்ளுவண்டியின் மேற்பகுதியில், வட்ட வடிவ கழுத்துப் பகுதி
இருந்தது; அதன் உயரம் அரை முழம்; அந்தக் கழுத்துப் பகுதியில் இருந்த
சட்டங்களும் சுற்றுப்பக்கங்களும் ஒரே பாகமாக வார்க்கப்பட்டிருந்தன.

b 2ரா 25:16
எரே 52:17

c எசே 41:19

d ஆதி 3:24
யாத் 25:18
1ரா 6:27
2நா 3:7
எசே 41:17, 18

7:26 *சுமார் 7.4 செ.மீ. இணைப்பு B14-ஐப் பாருங்கள். #மூலமொழியில், "2,000 பாத்." ஒரு பாத் என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **7:27** *வே.வா., "தண்ணீர் வண்டிகளை." **7:33** *இவையெல்லாம் சக்கரத்திலுள்ள வெவ்வேறு பாகங்களைக் குறிக்கின்றன.

36 கழுத்துப் பகுதியில் இருந்த சட்டங்கள்மீதும் சுற்றுப்பக்கங்கள்மீதும்
கேருபீன்கள், சிங்கங்கள், பேரீச்ச மரங்கள் ஆகியவற்றின் உருவங்கள்
பொறிக்கப்பட்டிருந்தன. எவ்வளவு இடம் இருந்ததோ அதைப் பொறுத்து
இந்த உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சுற்றிலும் தோரண வடிவில்
வேலைப்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.[a] **37** இப்படி, 10 தள்ளுவண்டி
களைச் செய்தார்.[b] அளவிலும் வடிவத்திலும் அவை எல்லாமே ஒரேமாதிரி
வார்க்கப்பட்டிருந்தன.[c]

38 அவர் பத்துச் செம்புத் தொட்டிகளைச் செய்தார்.[d] ஒவ்வொன்றும்
880 லிட்டர்* தண்ணீர் பிடிக்கும். ஒவ்வொரு தொட்டியின் விட்டமும்
4 முழம். 10 தள்ளுவண்டிகளிலும் வைப்பதற்காக 10 தொட்டிகளைச்
செய்தார். **39** ஆலயத்தின் வலது பக்கத்தில் ஐந்து தள்ளுவண்டிகளை
யும் இடது பக்கத்தில் ஐந்து தள்ளுவண்டிகளையும் நிறுத்தினார். ஆலயத்
தின் வலது பக்கத்தில் தென்கிழக்கு திசையில் 'செம்புக் கடல்' என்றழைக்
கப்பட்ட பெரிய தண்ணீர்த் தொட்டியை வைத்தார்.[e]

40 இவை தவிர, அண்டாக்களையும் சாம்பல் அள்ளும் கரண்டிக
ளையும்[f] கிண்ணங்களையும்[g] ஈராம்[h] செய்தார். யெகோவாவின் ஆலயத்
துக்காக சாலொமோன் ராஜா செய்யச் சொல்லியிருந்த எல்லா வேலைகளை
யும் அவர் செய்து முடித்தார்.[i] **41** இரண்டு தூண்கள்,[j] அவற்றின் உச்சியில்
இருந்த கிண்ண வடிவ கும்பங்கள், இரண்டு கும்பங்களையும் அலங்க
ரித்த இரண்டு வலைப்பின்னல்கள்,[k] **42** அந்த இரண்டு வலைப்பின்னல்க
ளிலும் தொங்கவிட 400 மாதுளம்பழ வடிவங்கள் ஆகியவற்றைச் செய்தார்;[l]
ஒவ்வொரு வலைப்பின்னலிலும் இரண்டு வரிசை மாதுளம்பழ வடிவங்கள்
இருந்தன. இரண்டு தூண்களின் உச்சியிலிருந்த இரண்டு கும்பங்களைச் சுற்றி
லும் இந்த வலைப்பின்னல்கள் அமைக்கப்பட்டிருந்தன. **43** பத்துத் தள்ளு
வண்டிகள்,[m] அவற்றில் வைக்க பத்துத் தொட்டிகள்,[n] **44** 'செம்புக் கடல்'
தொட்டி,[o] அதன் கீழிருந்த 12 காளை உருவங்கள், **45** சட்டிகள், சாம்
பல் அள்ளும் கரண்டிகள், கிண்ணங்கள், மற்ற பாத்திரங்கள் ஆகியவற்றை
யும் செய்தார்; இவை எல்லாவற்றையும் பளபளப்பான செம்பினால் செய்
தார். சாலொமோன் ராஜா சொன்னபடியே, யெகோவாவின் ஆலயத்துக்காக
இவை எல்லாவற்றையும் ஈராம் செய்தார். **46** யோர்தான் பிரதேசத்தில், சுக்
கோத்துக்கும் சார்தானுக்கும் இடையிலுள்ள பகுதியில், இவற்றைக் களிமண்
அச்சுகளில் ராஜா வார்த்தார்.

47 இந்தச் சாமான்கள் மிக ஏராளமாக இருந்ததால் சாலொமோன்
இவற்றை எடை போடவில்லை. இவற்றுக்காகப் பயன்படுத்திய செம்பை
யும் எடை போடவில்லை.[p] **48** யெகோவாவின் ஆலயத்துக்காக இந்தச்
சாமான்கள் எல்லாவற்றையும் சாலொமோன் செய்தார்: தங்கப் பீடம்,[q]
படையல் ரொட்டிகளை வைக்க தங்க மேஜை[r] ஆகியவற்றைச் செய்
தார்; **49** மகா பரிசுத்த அறைக்கு முன்னால் வலது பக்கத்தில் வைப்பதற்
காக ஐந்து குத்துவிளக்குகளையும்,[s] இடது பக்கத்தில் வைப்பதற்காக ஐந்து
குத்துவிளக்குகளையும் சுத்தமான தங்கத்தில் செய்தார்; அதற்கான மலர்
கள்,[t] அகல் விளக்குகள், இடுக்கிகள் ஆகியவற்றைத் தங்கத்தில் செய்தார்;[u]
50 அதோடு, அண்டாக்கள், திரி வெட்டும் கருவிகள்,[v] கிண்ணங்கள்,

7:38 *மூலமொழியில், "40 பாத்." ஒரு பாத் என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 7
a 1ரா 6:29, 1ரா 6:32
b 1ரா 7:27
c 1ரா 7:15, 46, 2நா 4:3
d யாத் 30:18
e 2நா 4:6, 10
f யாத் 27:3, 2ரா 25:14
g யாத் 24:6
h 1ரா 7:13, 2நா 2:13
i 2நா 4:11-17
j 1ரா 7:15
k 1ரா 7:17
l 1ரா 7:20
m 1ரா 7:27
n 1ரா 7:38
o 1ரா 7:23
p 1நா 22:14, 16, 2நா 4:18-22
q யாத் 37:25
r யாத் 37:10
s யாத் 37:17, வெளி 1:20
t 1ரா 6:18
u யாத் 37:23
v எரே 52:18

கோப்பைகள்,[a] தணல் அள்ளும் கரண்டிகள்[b] ஆகியவற்றையும் சுத்தமான
தங்கத்தில் செய்தார். கூடுதலாக, உட்புற அறையான மகா பரிசுத்த அறை
யின்[c] கதவுகளுக்காகவும் ஆலயத்தின் கதவுகளுக்காகவும்[d] சுழல் அச்சுக
ளைப் பொருத்துவதற்கான அடிப்பகுதிகளையும் தங்கத்தில் செய்தார்.

51 இப்படி, யெகோவாவின் ஆலயத்துக்காகச் செய்ய வேண்டிய எல்லா
வேலைகளையும் சாலொமோன் ராஜா செய்து முடித்தார். பின்பு, கடவு
ளுக்காகத் தன்னுடைய அப்பா தாவீது அர்ப்பணித்திருந்த பொருள்களை[e]
ஆலயத்துக்குக் கொண்டுவந்தார். வெள்ளியையும் தங்கத்தையும் மற்ற
பொருள்களையும் யெகோவாவின் ஆலயத்திலிருந்த பொக்கிஷ அறைக
ளில் வைத்தார்.[f]

8 அந்தச் சமயத்தில், இஸ்ரவேல் பெரியோர்களை,* அதாவது எல்லா
கோத்திரத் தலைவர்களையும் இஸ்ரவேலில் உள்ள தந்தைவழிக் குடும்
பத் தலைவர்களையும், சாலொமோன் ஒன்றுகூடி வரச் சொன்னார்.[g] ‘தாவீ
தின் நகரத்திலிருந்து,’[h] அதாவது சீயோனிலிருந்து,[i] யெகோவாவின் ஒப்
பந்தப் பெட்டியைக் கொண்டுபோவதற்காக எருசலேமில் இருந்த சாலொ
மோன் ராஜாவிடம் அவர்கள் வந்தார்கள். **2** ஏழாம் மாதமான ஏத்தானீம்*
மாதத்தில் நடக்கிற பண்டிகையின்போது#[j] இஸ்ரவேல் ஆண்கள் எல்
லாரும் சாலொமோன் ராஜா முன்னால் ஒன்றுகூடினார்கள். **3** இஸ்ர
வேல் பெரியோர்கள் எல்லாரும் வந்தபோது, கடவுளுடைய பெட்டியைக்
குருமார்கள் தூக்கினார்கள்.[k] **4** யெகோவாவின் பெட்டி, சந்திப்புக் கூடா
ரம்,[l] அதிலிருந்த பரிசுத்த பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும் குருமார்
களும் லேவியர்களும் சுமந்துகொண்டு போனார்கள்.* **5** சாலொமோன்
ராஜாவும் அவரால் அழைக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் எல்லாரும் கடவு
ளின் பெட்டிக்கு முன்னால் கூடியிருந்தார்கள். அப்போது, எண்ண முடியா
தளவுக்கு ஏராளமான ஆடுமாடுகளைப் பலி கொடுத்தார்கள்.[m]

6 பின்பு, குருமார்கள் யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியைக் கொண்டு
வந்து அதற்குரிய இடத்தில் வைத்தார்கள்,[n] அதாவது ஆலயத்தின் உட்பு
றத்தில் இருந்த மகா பரிசுத்த அறையில் கேருபீன்களுடைய சிறகுகளின்
கீழ் வைத்தார்கள்.[o]

7 பெட்டி வைக்கப்பட்டிருந்த இடத்தின் மேல் கேருபீன்கள் சிறகுகளை
விரித்தபடி இருந்தன; அதனால், அவற்றின் நிழல் அந்தப் பெட்டியின்
மீதும் அதன் கம்புகளின் மீதும் விழுந்தது.[p] **8** அந்தக் கம்புகள்[q] நீளமாக
இருந்ததால், மகா பரிசுத்த அறைக்கு முன்னால் இருந்த பரிசுத்த அறை
யிலிருந்து அவற்றின் முனைகளைப் பார்க்க முடிந்தது, ஆனால் வெளியி
லிருந்து அவற்றைப் பார்க்க முடியாது. இந்நாள்வரை அவை அங்கே
தான் இருக்கின்றன. **9** மோசே ஓரேபில் இருந்தபோது வைத்த[r]
இரண்டு கற்பலகைகளைத்[s] தவிர வேறெதுவும் அந்தப் பெட்டியில்
இருக்கவில்லை. எகிப்து தேசத்திலிருந்து வந்த[t] இஸ்ரவேலர்களோடு ஓரே
பில் யெகோவா ஒப்பந்தம் செய்த[u] சமயத்தில் இந்தக் கற்பலகைகள் அதில்
வைக்கப்பட்டன.

10 பரிசுத்த இடத்திலிருந்து குருமார்கள் வெளியே வந்தபோது, மேகம்[v]
யெகோவாவின் ஆலயத்தைச் சூழ்ந்துகொண்டது.[w] **11** யெகோவாவின்

அதி. 7
- *a* யாத் 25:29
- *b* லேவி 16:12
- *c* 1ரா 6:31
- *d* 1ரா 6:33
- *e* 2சா 8:10-12
- *f* 2நா 5:1

அதி. 8
- *g* 2நா 5:2, 3
- *h* 2சா 6:17
- *i* 2சா 5:7; 1நா 11:5
- *j* லேவி 23:34; உபா 16:13
- *k* 1நா 15:2, 15; 2நா 5:4-6
- *l* யாத் 40:2; 2நா 1:13
- *m* 1நா 16:1
- *n* யாத் 26:33; யாத் 40:21; 2சா 6:17; வெளி 11:19
- *o* 1ரா 6:27; 2நா 5:7; சங் 80:1; எசே 10:5
- *p* யாத் 25:20; 2நா 5:8-10
- *q* யாத் 25:14; யாத் 37:4
- *r* யாத் 40:20; உபா 10:5
- *s* உபா 4:13; எபி 9:4
- *t* யாத் 19:1; எண் 10:11, 12
- *u* யாத் 24:8
- *v* யாத் 40:34; லேவி 16:2
- *w* 2நா 5:11-14

8:1 *வே.வா., “மூப்பர்களை.” **8:2** *இணைப்பு B15-ஐப் பாருங்கள். #அதாவது, “கூடாரப் பண்டிகையின்போது.” **8:4** *நே.மொ., “மேலே கொண்டுபோனார்கள்.”

ஆலயம் யெகோவாவின் மகிமையால் நிறைந்தது. மேகம் சூழ்ந்துகொண்
டதால் அங்கே நின்று சேவை செய்ய குருமார்களால் முடியவில்லை.[a]
12 அப்போது சாலொமோன், “யெகோவாவே, கார்மேகத்தில் குடியிருப்
பேன் என்று சொன்னீர்களே.[b] **13** நான் உங்களுக்காகப் பிரமாண்டமான
ஒரு ஆலயத்தைக் கட்டி முடித்திருக்கிறேன்; நீங்கள் என்றென்றும் குடியி
ருப்பதற்காக நிலையான ஒரு இடத்தைத் தயார் செய்திருக்கிறேன்”[c] என்று
சொன்னார்.

14 பின்பு ராஜா திரும்பி, அங்கே நின்றுகொண்டிருந்த இஸ்ரவேல் சபை
யார் எல்லாரையும் பார்த்து அவர்களை ஆசீர்வதித்தார்.[d] **15** அப்போது
அவர், “இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவைப் புகழ்கிறேன். அவர் தன்
னுடைய வாய் திறந்து என் அப்பா தாவீதுக்கு வாக்குக் கொடுத்து,
அதைத் தன்னுடைய கையால் நிறைவேற்றியும் இருக்கிறார். **16** அவர்
என் அப்பாவிடம், ‘என் மக்களான இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து கூட்
டிக்கொண்டுவந்தேன். அதுமுதல், என் பெயர் நிலைத்திருப்பதற்காக ஒரு
ஆலயத்தைக் கட்டுவதற்கு இஸ்ரவேல் கோத்திரங்கள் நடுவே நான்
எந்த நகரத்தையும் தேர்ந்தெடுக்கவில்லை.[e] ஆனால், என்னுடைய மக்க
ளான இஸ்ரவேலர்களுக்குத் தலைவனாக தாவீதைத் தேர்ந்தெடுத்திருக்கி
றேன்’ என்று சொல்லியிருந்தார். **17** இஸ்ரவேலின் கடவுளான யெகோவா
வின் பெயருக்காக ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று என் அப்பா
தாவீது மனதார ஆசைப்பட்டார்.[f] **18** ஆனால் யெகோவா என் அப்பா
தாவீதிடம், ‘என் பெயருக்காக ஒரு ஆலயத்தைக் கட்ட நீ மனதார
ஆசைப்பட்டாய், அப்படி ஆசைப்பட்டது நல்லதுதான். **19** இருந்தாலும்,
ஆலயத்தை நீ கட்ட மாட்டாய். உனக்குப் பிறக்கப்போகிற உன் மகன்
தான் என் பெயருக்காக ஒரு ஆலயத்தைக் கட்டுவான்’[g] என்று சொன்னார்.
20 கொடுத்த வாக்கை யெகோவா நிறைவேற்றிவிட்டார். யெகோவா வாக்
குக் கொடுத்தபடியே, என் அப்பா தாவீதுக்குப் பிறகு இஸ்ரவேலின் சிம்மா
சனத்தில் நான் ராஜாவாக உட்கார்ந்திருக்கிறேன். அதோடு, இஸ்ரவேலின்
கடவுளான யெகோவாவின் பெயருக்காக ஒரு ஆலயத்தையும் கட்டி
முடித்திருக்கிறேன்.[h] **21** யெகோவா நம் முன்னோர்களை எகிப்திலிருந்து
கூட்டிக்கொண்டு வந்தபோது செய்திருந்த ஒப்பந்தம் அடங்கிய பெட்டியை
வைப்பதற்காகவும்[i] அங்கே ஒரு இடத்தைத் தயார் செய்திருக்கிறேன்”
என்று சொன்னார்.

22 பின்பு, யெகோவாவுடைய பலிபீடத்தின் முன்னால் சாலொமோன்
நின்றார், இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அவர் எதிரில் நின்றுகொண்டி
ருந்தார்கள். அப்போது அவர் தன்னுடைய கைகளை வானத்துக்கு நேராக
விரித்து,[j] **23** “இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவே, மேலே வானத்
திலோ கீழே பூமியிலோ உங்களைப் போல் வேறெந்தக் கடவுளும்
இல்லை.[k] நீங்கள் செய்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்கிறீர்கள், உங்
களுடைய வழியில் முழு இதயத்தோடு நடக்கிற ஊழியர்களுக்கு[l] மாறாத
அன்பைக் காட்டியிருக்கிறீர்கள்.[m] **24** உங்களுடைய ஊழியரான என்
அப்பா தாவீதுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றியிருக்கிறீர்கள். நீங்கள்
வாய் திறந்து சொன்ன வாக்கை இன்றைக்கு உங்கள் கையால் நிறைவேற்
றியிருக்கிறீர்கள்.[n] **25** இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவே, உங்களு
டைய ஊழியரான என் அப்பா தாவீதிடம், ‘நீ என் வழியில் நடந்ததுபோல்
உன் வாரிசுகளும் எனக்குக் கீழ்ப்படிந்து என் வழியில் நடந்தால், இஸ்ர

அதி. 8

a யாத் 40:35
எசே 10:4
எசே 43:4
எசே 44:4
அப் 7:55
வெளி 21:23

b யாத் 20:21
உபா 5:22
2நா 6:1, 2
சங் 18:11
சங் 97:2

c சங் 78:69
சங் 132:13, 14

d 2நா 6:3-11

e உபா 12:11

f 2சா 7:1-3
1நா 17:1, 2

g 2சா 7:12, 13

h 1நா 28:5, 6

i யாத் 34:28
உபா 9:9
உபா 31:26

j 2நா 6:12

k யாத் 15:11
1சா 2:2
2சா 7:22

l 2நா 6:14-17

m உபா 7:9

n 2சா 7:12, 13

வேலின் சிம்மாசனத்தில் உட்கார்ந்து ஆட்சி செய்ய உனக்கு வாரிசு இல்
லாமல் போவதில்லை’[a] என்று நீங்கள் கொடுத்திருந்த வாக்கை இப்போது
நிறைவேற்றுங்கள். **26** இஸ்ரவேலின் கடவுளே, உங்கள் ஊழியரான என்
அப்பா தாவீதுக்குக் கொடுத்த வாக்கு தயவுசெய்து நிறைவேறுவதாக!

27 கடவுளே, நீங்கள் உண்மையிலேயே இந்தப் பூமியில் குடியிருப்
பீர்களா?[b] வானங்கள், ஏன் வானாதி வானங்கள்கூட, நீங்கள் குடியிருப்ப
தற்குப் போதாதே![c] அப்படியிருக்கும்போது நான் கட்டிய இந்த ஆல
யம் உங்களுக்கு முன்னால் ஒன்றுமே இல்லை![d] **28** யெகோவாவே,
என் கடவுளே, இந்த அடியேனின் ஜெபத்தைக் காதுகொடுத்துக் கேளுங்
கள், கருணை காட்டச் சொல்லி நான் உங்களிடம் செய்யும் மன்றாட்
டைக் கேளுங்கள், உதவி கேட்டு நான் கெஞ்சுவதைக் கேளுங்கள்,
இன்று உங்கள் முன்னால் இந்த அடியேன் செய்யும் ஜெபத்தைக் கேளுங்
கள். **29** ‘என் பெயர் தாங்கிய இடம்’[e] என்று இந்த ஆலயத்தைப் பற்றிச்
சொன்னீர்களே. அதனால், இந்த இடத்தை நோக்கி உங்களுடைய ஊழியன்
செய்கிற ஜெபத்தைக் கேட்பதற்காக இரவும் பகலும் உங்களுடைய கண்கள்
இந்த ஆலயத்தின் மேல் இருக்கட்டும்.[f] **30** உங்களுடைய கருணைக்காக
இந்த அடியேன் கெஞ்சுவதைக் கேளுங்கள். இந்த இடத்தை நோக்கி உங்க
ளுடைய மக்களான இஸ்ரவேலர்கள் செய்யும் வேண்டுதலைக் கேளுங்கள்.
பரலோகத்திலுள்ள உங்கள் குடியிருப்பிலிருந்து[g] கேட்டு எங்களை மன்னி
யுங்கள்.[h]

31 தனக்கு எதிராகப் பாவம் செய்ததாக ஒருவன் இன்னொருவன்மீது
குற்றம்சாட்டி, ‘நீ பாவம் செய்யவில்லை என்று எனக்குச் சத்தியம்*
செய்து கொடு’ என்று கேட்கும் பட்சத்தில், சத்தியம் செய்து கொடுத்தவன்
இந்த ஆலயத்திலுள்ள பலிபீடத்துக்கு முன்னால் வரும்போது,[i] **32** நீங்
கள் பரலோகத்திலிருந்து கேட்டு நீதி வழங்குங்கள். தவறு செய்தவனைக் குற்
றவாளி* என்று தீர்ப்பளியுங்கள், அவன் செய்த பாவத்துக்குத் தக்க தண்
டனை கொடுங்கள். தவறு செய்யாதவனை நிரபராதி# என்று தீர்ப்பளித்து,
அவன் செய்த நீதியான செயல்களுக்காக அவனை ஆசீர்வதியுங்கள்.[j]

33 உங்களுக்கு எதிராகப் பாவம் செய்துவந்த இஸ்ரவேலர்கள் எதிரியி
டம் தோற்றுப்போன பின்பு மனம் திருந்தி உங்களிடம் வந்தால்,[k] உங்களு
டைய பெயரை மகிமைப்படுத்தி இந்த ஆலயத்தில் ஜெபம் செய்தால்,
கருணை காட்டச் சொல்லி உங்களிடம் கெஞ்சி மன்றாடினால்,[l] **34** அதை
நீங்கள் பரலோகத்திலிருந்து கேட்டு உங்களுடைய மக்களான இஸ்ரவேலர்
கள் செய்த பாவத்தை மன்னியுங்கள், அவர்களுடைய முன்னோர்களுக்குத்
தந்த தேசத்துக்கு அவர்களை மறுபடியும் கொண்டுவாருங்கள்.[m]

35 அவர்கள் உங்களுக்கு எதிராகத் தொடர்ந்து பாவம் செய்ததால்[n]
வானம் அடைபட்டு மழை பெய்யாமல் போகும்போது,[o] அவர்கள் இந்த
இடத்தை நோக்கி ஜெபம் செய்தால், உங்கள் பெயரை மகிமைப்படுத்தி
னால், அவர்களை நீங்கள் தாழ்த்தியதன்* காரணமாகத் தங்களுடைய
பாவத்தைவிட்டுத் திருந்தினால்,[p] **36** நீங்கள் பரலோகத்திலிருந்து கேட்டு
உங்களுடைய ஊழியர்களும் உங்களுடைய மக்களுமான இஸ்ரவேலர்கள்

8:31 *பொய் சத்தியம் செய்தால் அவர்மீது சாபம் வரும் என்பதையே இந்த எபிரெய வார்த்தை குறிக்கிறது. **8:32** *நே.மொ., “பொல்லாதவன்.” #நே.மொ., “நீதிமான்.” **8:35** *வே.வா., “கஷ்டப்படுத்தியதன்.”

அதி. 8
a 1ரா 2:4; சங் 132:12
b ஏசா 66:1
c சங் 148:13; எரே 23:24
d 2நா 2:6; 2நா 6:18-21; நெ 9:6; அப் 17:24
e யாத் 20:24; 2சா 7:13
f தானி 6:10; 1பே 3:12
g சங் 33:13
h 2நா 7:13, 14; தானி 9:19
i 2நா 6:22, 23
j யோபு 34:11
k லேவி 26:14, 17; யோசு 7:8, 11; 2ரா 17:6, 7; நெ 1:11
l 2ரா 19:19, 20; 2நா 6:24, 25
m சங் 106:47
n எசே 14:13
o லேவி 26:19; உபா 28:23
p 2நா 6:26, 27

செய்த பாவத்தை மன்னியுங்கள். அவர்கள் நடக்க வேண்டிய நல்ல வழி
யைக் கற்றுக்கொடுங்கள்;[a] உங்களுடைய மக்களுக்குச் சொத்தாகக்
கொடுத்த உங்கள் தேசத்தில் மழை பெய்யப் பண்ணுங்கள்.[b]

37 தேசத்தில் பஞ்சமோ கொள்ளைநோயோ வரும்போது,[c] கடும் வெப்
பக் காற்றால் பயிர்கள் கருகிப்போகும்போது, பூஞ்சணம் தொற்றும்
போது,[d] படையெடுத்துவருகிற வெட்டுக்கிளிகளும் அகோரப் பசிகொண்ட
வெட்டுக்கிளிகளும் தாக்கும்போது, இஸ்ரவேல் நகரம் ஒன்றை எதிரி சுற்றி
வளைக்கும்போது, கொடிய வியாதியோ வேறு ஏதாவது நோயோ வரும்
போது,[e] **38** இந்த ஆலயத்துக்கு நேராக தனிநபர்களோ இஸ்ரவேல் மக்
கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்தோ தங்களுடைய கைகளை விரித்து என்ன
வேண்டுதல் செய்தாலும்,[f] கருணை காட்டச் சொல்லி கெஞ்சினாலும்[g] (அவ
ரவருடைய இதயத்தில் இருக்கும் வேதனை அவரவருக்குத்தான் தெரியும்),
39 நீங்கள் குடியிருக்கிற பரலோகத்திலிருந்து[h] அவர்களுடைய மன்றாட்
டைக் கேளுங்கள், அவர்களை மன்னித்து[i] உதவி செய்யுங்கள். ஒவ்வொ
ருவருடைய செயல்களுக்கும் தகுந்த வெகுமதியைக் கொடுங்கள்.[j] ஏனென்
றால், அவர்களுடைய இதயத்தில் இருப்பது உங்களுக்குத் தெரியும்
(ஒவ்வொரு மனிதனுடைய இதயத்தில் இருப்பது உங்களுக்கு மட்டும்தான்
நன்றாகத் தெரியும்);[k] **40** அப்போது, எங்களுடைய முன்னோர்களுக்கு
நீங்கள் கொடுத்த தேசத்தில் காலமெல்லாம் அவர்கள் உங்களுக்குப் பயந்து
நடப்பார்கள்.

41 வெகு தூரத்திலுள்ள தேசத்தில் குடியிருக்கிற இஸ்ரவேலர் அல்
லாத ஒருவர் உங்களுடைய பெயரை* கேள்விப்பட்டு இங்கே வந்து[l]
42 (உங்களுடைய மகத்தான பெயரையும்[m] கைபலத்தையும் மகா வல்ல
மையையும் பற்றி அவர்கள் கேள்விப்படுவார்கள்) இந்த ஆலயத்தை
நோக்கி ஜெபம் செய்தால், **43** நீங்கள் குடியிருக்கிற பரலோகத்திலிருந்து[n]
கேளுங்கள். அந்த நபர் கேட்பதையெல்லாம் கொடுங்கள். அப்போது, உல
கத்திலிருக்கிற எல்லா மக்களும் இஸ்ரவேலர்களைப் போலவே உங்களு
டைய பெயரைத் தெரிந்துகொண்டு உங்களுக்குப் பயப்படுவார்கள்.[o] நான்
கட்டிய இந்த ஆலயம் உங்கள் பெயரைத் தாங்கியிருக்கிறது என்பதைத்
தெரிந்துகொள்வார்கள்.

44 யெகோவாவே, எதிரியோடு போர் செய்ய உங்களுடைய மக்களை
நீங்கள் எங்கே அனுப்பினாலும்[p] சரி, நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிற இந்த
நகரத்தை நோக்கி,[q] உங்கள் பெயருக்காக நான் கட்டிய இந்த ஆலயத்தை
நோக்கி,[r] அவர்கள் உங்களிடம் ஜெபம் செய்தால்,[s] **45** அவர்கள் செய்
கிற ஜெபத்தையும் கருணை காட்டச் சொல்லி அவர்கள் செய்கிற மன்றாட்
டையும் பரலோகத்திலிருந்து கேட்டு அவர்களுக்கு நீதி வழங்குங்கள்.

46 ஒருவேளை, அவர்கள் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்
யும்போது (பாவம் செய்யாத மனிதன் யாருமில்லையே)[t] நீங்கள் பயங்கர
கோபம்கொண்டு எதிரியின் கையில் அவர்களைச் சிக்க வைத்தால், பக்கத்
திலோ தூரத்திலோ இருக்கிற எதிரி தேசத்துக்கு அவர்கள் பிடித்துக்
கொண்டு போகப்பட்டால்,[u] **47** அந்தத் தேசத்தில் இருக்கும்போது அவர்
களுக்குப் புத்திவந்து,[v] 'நாங்கள் பாவம் செய்துவிட்டோம், தப்பு
செய்துவிட்டோம், மோசமாக நடந்துவிட்டோம்'[w] என்று சொல்லி உங்களி

8:41 * வே.வா., "புகழை."

அதி. 8
a ஏசா 30:20; ஏசா 54:13
b 1ரா 18:1
c லேவி 26:16; 2ரா 6:25
d உபா 28:21, 22; ஆமோ 4:9
e 2நா 6:28-31
f நீதி 14:10
g 2நா 33:12, 13
h ஏசா 63:15
i சங் 130:4
j யோபு 34:11; சங் 18:20
k 1சா 16:7; 1நா 28:9; எரே 17:10
l எண் 9:14; ரூ 1:16; 2ரா 5:15; 2நா 6:32, 33; ஏசா 56:6, 7; அப் 8:27
m நெ 9:10
n சங் 11:4
o சங் 67:2; சங் 102:15
p யாத் 23:31; 1ரா 20:13
q சங் 78:68; சங் 132:13
r 2நா 6:34, 35
s 2நா 14:11; 2நா 20:5, 6
t சங் 51:5; சங் 130:3; பிர 7:20; ரோ 3:23; 1யோ 1:8
u உபா 28:15, 36; 2ரா 17:6; 2ரா 25:21; 2நா 6:36-39
v லேவி 26:40
w நெ 1:6; சங் 106:6; நீதி 28:13; தானி 9:5

டம் திரும்பி வந்தால்,[a] கருணை கேட்டுக் கெஞ்சினால்,[b] **48** தங்களைப்
பிடித்துக்கொண்டு போன எதிரிகளின் தேசத்தில் இருக்கும்போது முழு இத
யத்தோடும் முழு மூச்சோடும் உங்களிடம் திரும்பி வந்தால்,[c] முன்னோர்
களுக்கு நீங்கள் கொடுத்த தேசத்தையும் நீங்கள் தேர்ந்தெடுத்த நகரத்
தையும் உங்கள் பெயருக்காக நான் கட்டிய இந்த ஆலயத்தையும் நோக்கி
ஜெபம் செய்தால்,[d] **49** அவர்கள் செய்கிற ஜெபத்தையும் கருணை காட்
டச் சொல்லி உங்களிடம் செய்கிற மன்றாட்டையும் நீங்கள் குடியிருக்கிற
பரலோகத்திலிருந்து[e] கேட்டு அவர்களுக்கு நீதி வழங்குங்கள். **50** உங்க
ளுக்கு எதிராகப் பாவம் செய்த உங்களுடைய மக்களை மன்னியுங்கள்.
உங்களுக்கு விரோதமாக அவர்கள் செய்த எல்லா குற்றங்களையும் மன்
னியுங்கள். அவர்களைப் பிடித்துக்கொண்டு போனவர்கள் அவர்களுக்குக்
கருணை காட்டும்படி செய்யுங்கள், அப்போது உங்கள் மக்களுக்கு அவர்
கள் கருணை காட்டுவார்கள்[f] **51** (அவர்கள் உங்களுடைய மக்கள், உங்க
ளுடைய சொத்து.[g] நீங்கள் அவர்களை எகிப்திலிருந்து, இரும்பு உலையிலி
ருந்து,[h] வெளியே கொண்டுவந்தீர்கள்).[i] **52** உதவி கேட்டு உங்களுடைய
ஊழியன் ஜெபம் செய்யும்போது கண்ணோக்கிப் பாருங்கள், கருணை
காட்டச் சொல்லி[j] இஸ்ரவேல் மக்கள் ஜெபம் செய்யும்போதெல்லாம்* கவ
னித்துக் கேளுங்கள்.[k] **53** உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, எங்
களுடைய முன்னோர்களை எகிப்திலிருந்து நீங்கள் கூட்டிக்கொண்டு
வந்தபோது உங்களுடைய ஊழியரான மோசேயிடம் சொன்னபடியே, உல
கத்திலுள்ள எல்லா மக்களிலிருந்தும் அவர்களைப் பிரித்து உங்களுடைய
சொத்தாக ஆக்கியிருக்கிறீர்கள்”[l] என்று சொன்னார்.

54 வானத்துக்கு நேராக கைகளை விரித்தபடி யெகோவாவின் பலி
பீடத்துக்கு முன்னால் மண்டிபோட்டு சாலொமோன் இந்த முழு ஜெபத்தை
யும் செய்தார். கருணை காட்டச் சொல்லி யெகோவாவிடம் மன்றாடி
முடித்தவுடனே எழுந்து நின்றார்.[m] **55** பின்பு இஸ்ரவேல் சபையார் எல்
லாரையும் உரத்த குரலில் ஆசீர்வதித்து, **56** “யெகோவாவைப் போற்
றிப் புகழ்கிறேன்; அவர் தன்னுடைய மக்களுக்குக் கொடுத்த வாக்குறு
தியை நிறைவேற்றி அவர்களை நிம்மதியாக வாழ வைத்திருக்கிறார்.[n]
தன்னுடைய ஊழியரான மோசே மூலம் அவர் கொடுத்த நல்ல வாக்குறு
திகளில் ஒன்றுகூட நிறைவேறாமல் போகவில்லை.[o] **57** நம்முடைய கட
வுளான யெகோவா நம் முன்னோர்களுக்குத் துணையாக இருந்ததுபோல்
நமக்கும் துணையாய் இருப்பாராக![p] அவர் நம்மைவிட்டுப் போகாம
லும் நம்மைக் கைவிடாமலும் இருப்பாராக![q] **58** அவர் நம்மைத் தன்னு
டைய பாதையில் நடக்க வைப்பாராக![r] நம்முடைய முன்னோர்களுக்குக்
கொடுத்த கட்டளைகளுக்கும் விதிமுறைகளுக்கும் நீதித்தீர்ப்புகளுக்கும்
முழு இதயத்தோடு கீழ்ப்படிய நமக்கு உதவி செய்வாராக! **59** கருணை
காட்டச் சொல்லி யெகோவாவிடம் நான் செய்த இந்த ஜெபத்தை இர
வும் பகலும் நினைவில் வைப்பாராக! அவருடைய ஊழியனான எனக்கும்
அவருடைய மக்களான இஸ்ரவேலர்களுக்கும் தேவைக்கேற்ப ஒவ்வொரு
நாளும் யெகோவா நீதி வழங்குவாராக! **60** அப்போது, யெகோவாதான்
உண்மையான கடவுள், அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை[s] என்பதை
உலகத்திலுள்ள எல்லா மக்களும் தெரிந்துகொள்வார்கள்.[t] **61** அதனால்,

8:52 * வே.வா., “ஜெபம் செய்யும்போது எதைக் கேட்டாலும்.”

அதி. 8
a உபா 30:1, 2
b உபா 4:27, 29; 2நா 33:12, 13
c 1சா 7:3
d தானி 6:10
e ஏசா 63:15
f 2நா 30:9; எஸ்றா 7:28; நெ 2:7, 8
g யாத் 19:5; உபா 9:26
h உபா 4:20
i யாத் 14:30
j 2நா 6:40
k சங் 86:5; சங் 145:18
l யாத் 19:6; உபா 4:34; உபா 32:9
m 2நா 6:12, 13
n 1ரா 4:24, 25
o உபா 10:11; யோசு 21:45
p உபா 31:6; யோசு 1:5; 2நா 32:7; சங் 46:7
q ஏசா 41:10; எபி 13:5
r சங் 86:11; சங் 119:36; 2தெ 3:5
s உபா 4:35, 39; ஏசா 44:6
t யோசு 4:24; 1சா 17:46; எசே 36:23; எசே 39:7

நீங்கள் இன்றுபோல் என்றும் யெகோவாவுடைய விதிமுறைகளின்படி நடப்பதற்காகவும் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதற்காகவும் நம்முடைய கடவுளுக்கு உங்களுடைய இதயத்தை முழுவதுமாக அர்ப்பணித்துவிடுங்கள்"[a] என்று சொன்னார்.

62 பின்பு, ராஜாவும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் சேர்ந்து யெகோ
வாவுக்கு முன்னால் ஏராளமான பலிகளைக் கொடுத்தார்கள்.[b] **63** சாலொ
மோன் 22,000 மாடுகளையும் 1,20,000 ஆடுகளையும் சமாதான பலியாக[c] யெகோவாவுக்குக் கொடுத்தார். இப்படி, ராஜாவும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் யெகோவாவுடைய ஆலயத்தின் அர்ப்பண விழாவை நடத்தினார்
கள்.[d] **64** இத்தனை தகன பலிகளையும் உணவுக் காணிக்கைகளையும் சமாதான பலிகளின் கொழுப்பையும் கொள்ள முடியாதளவுக்கு யெகோவாவின் சன்னிதியில் இருந்த செம்புப் பலிபீடம்[e] சிறியதாக இருந்தது. அதனால், தகன பலிகளையும் உணவுக் காணிக்கைகளையும் சமாதான பலிகளின் கொழுப்பையும்[f] கொடுப்பதற்காக யெகோவாவுடைய ஆலயத்தின் முன்னாலிருந்த பிரகாரத்தின் நடுப்பகுதியை ராஜா அன்றைக்குப் புனிதப்
படுத்த வேண்டியிருந்தது. **65** லெபோ-காமாத்* தொடங்கி எகிப்தின் பள்ளத்தாக்குவரை# குடியிருந்த இஸ்ரவேல்[g] சபையார் எல்லாரும் பெரிய கூட்டமாக அங்கே கூடிவந்திருந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து சாலொமோன் ராஜா நம்முடைய கடவுளான யெகோவாவுக்கு முன்னால் மொத்தம் 14 நாட்கள் பண்டிகை கொண்டாடினார், அதாவது முதலில் 7 நாட்களும் அதைத் தொடர்ந்து 7 நாட்களும் கொண்டாடினார்.[h] **66** அதற்கு அடுத்த
நாள் மக்களை அனுப்பி வைத்தார். அவர்களும் ராஜாவை வாழ்த்திவிட்டு தங்களுடைய வீடுகளுக்கு மிகவும் சந்தோஷமாகத் திரும்பிப் போனார்கள். யெகோவா தன்னுடைய ஊழியரான தாவீதுக்கும் அவருடைய மக்களான இஸ்ரவேலர்களுக்கும் செய்த எல்லா நன்மைகளையும்[i] நினைத்து மனமகிழ்ச்சி அடைந்தார்கள்.

9 யெகோவாவின் ஆலயத்தையும் தன்னுடைய அரண்மனையையும்[j] தான் விரும்பிய எல்லாவற்றையும் சாலொமோன் கட்டி முடித்ததுமே,[k]
2 கிபியோனில் யெகோவா அவருக்குக் கனவில் தோன்றியதுபோல்[l] மறுப
டியும் கனவில் தோன்றினார். **3** அப்போது யெகோவா, "நீ செய்த ஜெபத்தைக் கேட்டேன், கருணை காட்டச் சொல்லி வேண்டியதையும் கேட்டேன். நீ கட்டிய இந்த ஆலயத்தைப் புனிதப்படுத்தினேன்; என்றென்றும் என்னுடைய பெயர் இங்கே நிலைத்திருக்கும்.[m] என் கண்ணும் என் இதயமும் எப்போதும் இங்கேதான் இருக்கும்.[n] **4** என்னுடைய கட்டளைகள் எல்லாவற்
றையும் கடைப்பிடித்து,[o] உன் அப்பா தாவீது உத்தம இதயத்தோடு,[p] நேர்மையாக[q] நடந்ததுபோல்[r] நீயும் நடந்து என் விதிமுறைகளுக்கும் நீதித்தீர்ப்புகளுக்கும் கீழ்ப்படி;[s] **5** அப்படிச் செய்தால், இஸ்ரவேலில் உன் சிம்
மாசனத்தை என்றென்றும் நிலைக்கச் செய்வேன். 'இஸ்ரவேலின் சிம்மாசனத்தில் உட்கார்ந்து ஆட்சி செய்ய உனக்கு வாரிசு இல்லாமல் போவதில்லை' என்று உன் அப்பா தாவீதுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவேன்.[t]
6 நீயோ உன்னுடைய வாரிசுகளோ என் வழியைவிட்டு விலகி, என் கட்டளைகளுக்கும் என் சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படியாமல் போனால்,

---

8:65 * வே.வா., "காமாத்தின் நுழைவாசல்." # அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கு வரை." சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 8
a உபா 18:13; 2ரா 20:3; 1நா 28:9; மத் 22:37
b 2நா 7:4, 5
c லேவி 3:1
d எஸ்றா 6:16; நெ 12:27
e 2நா 4:1
f லேவி 3:16
g ஆதி 15:18; எண் 34:5, 8
h லேவி 23:34
i சங் 31:19; ஏசா 63:7; எரே 31:12

அதி. 9
j 2நா 8:1; பிர 2:4
k 2நா 7:11
l 1ரா 3:5
m உபா 12:5, 6; 1ரா 8:28, 29
n 2நா 6:40; 2நா 16:9; சங் 132:13
o பிர 12:13
p சங் 78:70, 72
q 1நா 29:17
r 1ரா 3:6
s 2நா 7:17, 18
t 2சா 7:16, 17; 1ரா 2:4; சங் 89:20, 29

மற்ற தெய்வங்களை வழிபட்டு அவற்றின் முன்னால் தலைவணங்கினால்,[a]
7 நான் கொடுத்த இந்தத் தேசத்திலிருந்து இஸ்ரவேலர்களை அடியோடு
அழிப்பேன்.[b] என்னுடைய பெயருக்காக நான் புனிதப்படுத்திய இந்த
ஆலயத்தை என் கண் முன்னாலிருந்து ஒதுக்கித்தள்ளிவிடுவேன்.[c] அப்
போது, மற்ற தேசத்து மக்கள் எல்லாரும் இஸ்ரவேல் மக்களை ஏளனமாகப்
பேசுவார்கள், கேலியும் கிண்டலும் செய்வார்கள்.[d] **8** இந்த ஆலயம் மண்
மேடாகும்.[e] இதன் வழியாகப் போகிற எல்லாரும் இதை ஆச்சரியத்தோடு
பார்ப்பார்கள்; 'இந்தத் தேசத்தையும் இந்த ஆலயத்தையும் யெகோவா ஏன்
இந்த நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டார்?' என்று கிண்டலாக* கேட்பார்
கள்.[f] **9** பின்பு, 'இவர்களுடைய முன்னோர்களை எகிப்திலிருந்து கூட்டிக்
கொண்டுவந்த இவர்களுடைய கடவுளாகிய யெகோவாவை விட்டுவிட்டு,
மற்ற தெய்வங்களை ஏற்றுக்கொண்டார்கள், அவற்றின் முன்னால் தலைவ
ணங்கி அவற்றுக்குச் சேவை செய்தார்கள். அதனால்தான், இந்தக் கஷ்டத்
தையெல்லாம் யெகோவா இவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்'[g] என்று சொல்
வார்கள்" என்றார்.

10 யெகோவாவின் ஆலயம், தன்னுடைய அரண்மனை ஆகிய இரண்
டையும் 20 வருஷங்களில் சாலொமோன் கட்டி முடித்தார்.[h] **11** இதற்காக
தேவதாரு மரங்களையும் ஆபால் மரங்களையும் சாலொமோன் விரும்பிய
அளவுக்கு[i] தங்கத்தையும் தீருவின் ராஜாவாகிய ஈராம்[j] கொடுத்திருந்தார்.
அதனால், கலிலேயா பகுதியில் இருந்த 20 நகரங்களை ஈராமுக்கு சாலொ
மோன் ராஜா கொடுத்தார். **12** தீருவிலிருந்து ஈராம் புறப்பட்டு வந்து
சாலொமோன் கொடுத்த நகரங்களைப் பார்த்தார். ஆனால், அவருக்கு
அந்த நகரங்கள் பிடிக்கவில்லை. **13** அதனால் சாலொமோனிடம், "சகோ
தரரே, இந்த நகரங்களைப்போய்க் கொடுத்திருக்கிறீர்களே!" என்று சொன்
னார். அதனால் அது இந்நாள்வரை காபூல் பிரதேசம்* என்று அழைக்கப்
படுகிறது. **14** இதற்கிடையே, சாலொமோன் ராஜாவுக்கு 120 தாலந்து*
தங்கத்தை ஈராம் அனுப்பியிருந்தார்.[k]

15 யெகோவாவின் ஆலயம்,[l] தன்னுடைய அரண்மனை, மில்லோ,*[m]
எருசலேம் மதில், ஆத்சோர்,[n] மெகிதோ,[o] கேசேர்[p] ஆகியவற்றைக் கட்டு
வதற்காக சாலொமோன் ராஜா ஆட்களை அடிமைப்படுத்தி வேலை
வாங்கினார்.[q] **16** (எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் படையெடுத்து
வந்து கேசேரைக் கைப்பற்றி அதைத் தீ வைத்துக் கொளுத்தியிருந்
தான். அதோடு, அந்த நகரத்தில் குடியிருந்த கானானியர்களையும்
கொன்றுபோட்டிருந்தான்.[r] பின்பு அந்த நகரத்தைத் தன்னுடைய மக
ளுக்கு,[s] அதாவது சாலொமோனின் மனைவிக்கு, கல்யாணப் பரிசாக*
கொடுத்திருந்தான்.) **17** சாலொமோன் திரும்பக் கட்டிய* நகரங்கள்:
கேசேர், கீழ் பெத்-ஓரோன்,[t] **18** பாலாத்[u] நகரம், இஸ்ரவேலின்* வனாந்
தரத்திலிருந்த தாமார். **19** அதோடு, சாலொமோன் தன் சேமிப்புக் கிடங்
குகளுக்கான எல்லா நகரங்களையும் ரதங்களுக்கான நகரங்களையும்[v]

அதி. 9
a 1ராஜ 11:4; 2நா 7:19-22
b லேவி 18:28; உபா 4:26; 2சா 7:14; 2ரா 17:22, 23; சங் 89:30-32
c 2ரா 25:9, 10; 2நா 15:2
d உபா 28:37; சங் 44:14
e 2நா 36:19; ஏசா 64:11
f உபா 29: 24, 25; எரே 22:8, 9
g உபா 28:64; எரே 5:19; எரே 12:7
h 1ரா 6:37–7:1; 2நா 8:1, 2
i 1ரா 5:8
j 1ரா 5:1, 7
k 1ரா 10:21
l 1ரா 6:37
m 2சா 5:9; 1ரா 11:27; 2ரா 12:20
n யோசு 19: 32, 36
o யோசு 17:11; நியா 5:19; 2ரா 9:27
p நியா 1:29
q 1ரா 4:6; 1ரா 5:13
r யோசு 16:10
s 1ரா 3:1
t யோசு 16:1, 3; 2நா 8:4-6
u யோசு 19: 44, 48
v 1ரா 4:26

9:8 *நே.மொ., "விசிலடித்து." **9:13** *அல்லது, "ஒன்றுக்கும் உதவாத பிரதேசம்." **9:14** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **9:15** *அர்த்தம், "மண்மேடு." இது ஒரு கோட்டையாக இருந்திருக்கலாம். **9:16** *வே.வா., "சீதனமாக." **9:17** *வே.வா., "வலுப்படுத்திய" **9:18** *நே.மொ., "தேசத்திலுள்ள."

குதிரைவீரர்களுக்கான நகரங்களையும் கட்டினார். எருசலேமிலும் லீபனோ
னிலும் தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதி முழுவதிலும் தான் விரும்பிய
எல்லாவற்றையும் அவர் கட்டினார். **20** மற்ற தேசத்து மக்களான எமோரி
யர்கள், ஏத்தியர்கள், பெரிசியர்கள், ஏவியர்கள், எபூசியர்கள்[a] ஆகியவர்க
ளில் மீதியாக இருந்தவர்களின் வம்சத்தார், **21** அதாவது இஸ்ரவேலர்கள்
அடியோடு அழிக்காமல் விட்டுவைத்திருந்த ஆட்களின் வம்சத்தார், தேசத்
தில் இருந்தார்கள்; சாலொமோன் அவர்களை அடிமைப்படுத்தி வேலை
வாங்கினார்.[b] அவர்கள் இன்றுவரை அவருக்கு அடிமைகளாக இருக்கிறார்
கள்.[c] **22** ஆனால், இஸ்ரவேலர்களில் யாரையும் அடிமையாக்கவில்லை.[d]
ஏனென்றால் அவர்கள் சாலொமோனுடைய போர்வீரர்களாக, ஊழியர்க
ளாக, தலைவர்களாக, படை அதிகாரிகளாக, அவருடைய ரதவீரர்களுக்கும்
குதிரைவீரர்களுக்கும் தலைவர்களாக இருந்தார்கள். **23** சாலொமோனு
டைய வேலையை மேற்பார்வை செய்ய 550 பேர் இருந்தார்கள். இவர்கள்
நிர்வாகிகளுக்குத் தலைவர்களாக இருந்தார்கள். அந்த வேலையைச் செய்த
ஆட்களுக்கு அதிகாரிகளாக இருந்தார்கள்.[e]

24 பார்வோனுடைய மகள்[f] 'தாவீதின் நகரத்தைவிட்டு'[g] சாலொமோன்
அவளுக்காகக் கட்டிய மாளிகையில் குடியேறினாள். அதன் பின்பு, அவர்
மில்லோவை* கட்டினார்.[h]

25 யெகோவாவுக்காகத் தான் கட்டிய பலிபீடத்தில், வருஷத்துக்கு
மூன்று தடவை[i] சாலொமோன் தகன பலிகளையும் சமாதான பலிகளை
யும் கொடுத்தார்.[j] அதோடு, யெகோவாவுக்கு முன்னால் இருந்த பலிபீடத்
தில் பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்தார். இப்படி, அவர் ஆல
யத்தைக் கட்டிமுடித்தார்.[k]

26 ஏதோம் தேசத்தில்[l] செங்கடலின் கரையில், ஏலோத்துக்குப் பக்
கத்திலுள்ள எசியோன்-கேபேரில்[m] சாலொமோன் ராஜா கப்பல்களைக் கட்
டினார். **27** ஈராம் தன்னுடைய கப்பல்களையும் அனுபவமுள்ள மாலுமிக
ளாக இருந்த தன்னுடைய ஊழியர்களையும் அனுப்பி வைத்தார்.[n]
அவர்கள் சாலொமோனின் ஆட்களோடு சேர்ந்து வேலை செய்தார்கள்.
28 அவர்கள் ஓப்பீருக்குப்[o] போய் அங்கிருந்து 420 தாலந்து* தங்கத்தை
சாலொமோன் ராஜாவுக்குக் கொண்டுவந்தார்கள்.

10 சாலொமோனின் புகழைப் பற்றியும், அவருடைய புகழ் யெகோவா
வின் பெயருக்குப் பெருமை சேர்த்ததைப்[p] பற்றியும் சேபா
தேசத்து ராணி கேள்விப்பட்டாள். அதனால், சிக்கலான கேள்விகளைக்
கேட்டு* அவருடைய அறிவைச் சோதித்துப் பார்க்க வந்தாள்;[q] **2** மிகப்
பெரிய பரிவாரத்துடன் எருசலேமுக்கு வந்தாள்.[r] பரிமளத் தைலத்தையும்[s]
ஏராளமான தங்கத்தையும் ரத்தினக் கற்களையும் அவளுடைய ஒட்டகங்
கள் சுமந்துவந்தன. அவள் சாலொமோனைச் சந்தித்து, தன் மனதில் இருந்த
எல்லா விஷயங்களைப் பற்றியும் கேட்டாள். **3** அவள் கேட்ட எல்லா
கேள்விகளுக்கும் சாலொமோன் பதில் சொன்னார்; எந்தக் கேள்வியும் அவ
ருக்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

9:24 * அர்த்தம், "மண்மேடு." இது ஒரு கோட்டையாக இருந்திருக்கலாம். **9:28** * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **10:1** * வே.வா., "புதிர்களைப் போட்டு."

அதி. 9
a எண் 13:29 உபா 7:1 நியா 1:21
b 2நா 8:7-10
c ஆதி 9:25
d லேவி 25:39
e 1ரா 5:16 2நா 2:18
f 1ரா 3:1 1ரா 7:8 2நா 8:11
g 2சா 5:9
h 1ரா 9:15
i யாத் 23:14
j 2நா 8:12, 13
k 2நா 8:16
l 2நா 8:17, 18
m உபா 2:8
n 1ரா 5:12
o ஆதி 10:29 1நா 29:3, 4 சங் 45:9

அதி. 10
p 1ரா 4:29
q 2நா 9:1, 2 மத் 12:42
r சங் 72:10
s யாத் 25:3, 6 2ரா 20:13

4 எல்லா விஷயங்களிலும் சாலொமோனுக்கு இருந்த ஞானம்,[a] அவர்
கட்டிய அரண்மனை,[b] **5** மேஜையில் பரிமாறப்பட்ட உணவு,[c] ஊழியர்
கள் உட்கார்ந்திருந்த வரிசை, உணவு பரிமாறப்பட்ட விதம், பரிமாறுகிறவர்
களின் உடை, பானம் பரிமாறுகிற ஆட்கள், யெகோவாவின் ஆலயத்
தில் அவர் வழக்கமாகச் செலுத்திய தகன பலிகள் ஆகியவற்றைப் பார்த்து
சேபா தேசத்து ராணி வாயடைத்துப்போனாள்.* **6** அதனால் ராஜாவிடம்,
“உங்களுடைய சாதனைகளையும்* ஞானத்தையும் பற்றி எங்கள் தேசத்
தில் நான் கேள்விப்பட்டது அத்தனையும் உண்மை. **7** ஆனால், நேரில்
வந்து பார்க்கும்வரை அதையெல்லாம் நான் நம்பவே இல்லை. அதில் பாதி
யைக்கூட நான் கேள்விப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். உங்
களுடைய ஞானமும் செல்வச்செழிப்பும் நான் கேள்விப்பட்டதைவிட பல
மடங்கு அதிகமாக இருக்கிறது. **8** உங்களுடைய மக்கள் எவ்வளவு சந்
தோஷமானவர்கள்! எப்போதும் உங்களோடு இருந்து, உங்களுடைய ஞான
மான வார்த்தைகளைக் கேட்கிற உங்களுடைய ஊழியர்கள் எவ்வளவு
சந்தோஷமானவர்கள்![d] **9** உங்கள்மீது பிரியம் வைத்து இஸ்ரவேலின் சிம்
மாசனத்தில் உங்களை உட்கார வைத்த உங்களுடைய கடவுளான
யெகோவாவைப் போற்றிப் புகழ்கிறேன்.[e] இஸ்ரவேலர்கள்மீது யெகோவா
என்றென்றும் அன்பு வைத்திருப்பதால் அவர்களுக்கு நீதி நியாயம் வழங்க
உங்களை ராஜாவாக ஆக்கியிருக்கிறார்” என்று சொன்னாள்.

10 பின்பு, 120 தாலந்து* தங்கத்தையும் பெருமளவு பரிமளத்
தைலத்தையும்[f] ரத்தினக் கற்களையும்[g] சாலொமோன் ராஜாவுக்கு அவள்
கொடுத்தாள். சேபா தேசத்து ராணி கொண்டுவந்த அளவுக்குப் பரிமளத்
தைலத்தை அதன் பிறகு வேறு யாருமே கொண்டுவரவில்லை.

11 ஓப்பீரிலிருந்து தங்கத்தை[h] மட்டுமல்லாமல், ஏராளமான சந்தன மரங்
களையும்[i] விலைமதிப்புள்ள கற்களையும் ஈராமின் கப்பல்கள் கொண்டுவந்
தன.[j] **12** அந்தச் சந்தன மரங்களைப் பயன்படுத்தி, யெகோவாவின் ஆல
யத்துக்கும் தன்னுடைய அரண்மனைக்கும் தேவையான பிடிமானங்களை
ராஜா செய்தார். அதோடு, பாடகர்களுக்காக யாழ்களையும் நரம்பிசைக் கரு
விகளையும் செய்தார்.[k] அவ்வளவு சந்தன மரங்களை அதன் பின்பு யாரும்
கொண்டுவரவுமில்லை, இன்றுவரை யாரும் பார்த்ததுமில்லை.

13 சாலொமோன் ராஜாவும்கூட சேபா தேசத்து ராணிக்குத் தாராளமாக
அன்பளிப்புகளைக் கொடுத்தார். அதோடு, அவள் ஆசைப்பட்டுக் கேட்ட
எல்லாவற்றையும் கொடுத்தார். அதன் பின்பு, அவள் தன் ஊழியர்களோடு
தன்னுடைய தேசத்துக்குத் திரும்பிப் போனாள்.[l]

14 ஒவ்வொரு வருஷமும் சாலொமோனுக்குக் கிடைத்த தங்கத்தின்
எடை 666 தாலந்து.[m] **15** இது தவிர, வியாபாரிகளிடமிருந்தும் பயண
வியாபாரிகளிடமிருந்தும் அரேபியாவிலுள்ள எல்லா ராஜாக்களிடமிருந்
தும் இஸ்ரவேல் ஆளுநர்களிடமிருந்தும் வருமானம் வந்தது.

16 சாலொமோன் ராஜா கலப்புத் தங்கத்தில் 200 பெரிய கேடயங்க
ளைச் செய்தார்[n] (ஒவ்வொரு கேடயத்தையும் செய்ய 600 சேக்கல்* தங்கம்

அதி. 10
a 1ரா 3:28, பிர 12:9
b 2நா 9:3-8
c 1ரா 4:22
d நீதி 8:34
e 1ரா 5:7
f ஆதி 43:11
g சங் 72:10
h 1ரா 9:27, 28, சங் 45:9
i 2நா 2:8
j 2நா 9:10, 11
k 2நா 5:12, சங் 150:3
l 2நா 9:12
m 2நா 9:13, 14
n 1ரா 14:25, 26

10:5 *வே.வா., “ராணிக்குப் பேச்சு மூச்சே இல்லாமல் போனது.” **10:6** *வே.வா., “வார்த்தைகளையும்.” **10:10** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **10:16** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

பயன்படுத்தப்பட்டது).[a] **17** அதோடு, கலப்புத் தங்கத்தில் 300 சிறிய கேட
யங்களையும்* செய்தார். (இவை ஒவ்வொன்றையும் செய்ய மூன்று மினா#
தங்கம் பயன்படுத்தப்பட்டது). பின்பு, 'லீபனோன் வன மாளிகையில்'[b]
அவற்றை வைத்தார்.

18 அதோடு, யானைத்தந்தத்தில் மிகப் பெரிய சிம்மாசனம் ஒன்றைச்
செய்து,[c] அதன்மீது சொக்கத்தங்கத்தால் தகடு அடித்தார்.[d] **19** அந்தச்
சிம்மாசனத்துக்கு ஏறிப் போக ஆறு படிக்கட்டுகள் இருந்தன. சிம்மாச
னத்தின் மேலே வட்ட வடிவில் அலங்காரக் கூரையும் இருந்தது. இருக்கை
யின் இரண்டு பக்கங்களிலும் கைப்பிடிகள் இருந்தன, ஒவ்வொரு கைப்பிடி
யின் பக்கத்திலும் ஒரு சிங்க உருவம்[e] வைக்கப்பட்டிருந்தது. **20** அதோடு,
ஆறு படிக்கட்டுகளிலும் இந்தப் பக்கம் ஒரு சிங்கம், அந்தப் பக்கம் ஒரு சிங்
கம் என மொத்தம் 12 சிங்க உருவங்கள் வைக்கப்பட்டிருந்தன. வேறெந்த
ராஜ்யத்திலும் இப்படிப்பட்ட சிம்மாசனம் செய்யப்படவில்லை.

21 சாலொமோன் ராஜா குடிக்கப் பயன்படுத்திய பாத்திரங்கள் எல்
லாமே தங்கத்தில் செய்யப்பட்டிருந்தன. 'லீபனோன் வன மாளிகையில்'[f]
இருந்த எல்லா பாத்திரங்களும் சுத்தமான தங்கத்தில் செய்யப்பட்டிருந்தன,
எதுவும் வெள்ளியில் செய்யப்படவில்லை. ஏனென்றால், சாலொமோன்
காலத்தில் வெள்ளி ஒரு பொருட்டாகவே மதிக்கப்படவில்லை.[g] **22** ராஜா
விடம் 'தர்ஷீஸ்[h] கப்பல்கள்' இருந்தன. ஈராமின் கப்பல்களோடு சேர்ந்து
இவையும் கடலில் சென்றன. மூன்று வருஷங்களுக்கு ஒருமுறை தங்கம்,
வெள்ளி, யானைத்தந்தம்,[i] வாலில்லா குரங்குகள், மயில்கள் ஆகியவற்றை
இந்தக் கப்பல்கள் கொண்டுவந்தன.

23 இப்படி, உலகத்திலிருந்த வேறெந்த ராஜாவையும்விட செல்வத்
திலும்[j] ஞானத்திலும் சாலொமோன் ராஜா தலைசிறந்தவராக இருந்தார்.[k]
24 சாலொமோனைச் சந்தித்து, கடவுள் தந்த ஞானத்தால்[l] அவர் பேசிய
வார்த்தைகளைக் கேட்க உலகத்திலிருந்த எல்லா தேசத்து மக்களும்
ஆசைப்பட்டார்கள். **25** அவரைச் சந்திக்க வந்த ஒவ்வொருவரும் தங்கப்
பொருள்கள், வெள்ளிப் பொருள்கள், உடைகள், ஆயுதங்கள், பரிமளத்
தைலம், குதிரைகள், கோவேறு கழுதைகள் ஆகியவற்றை அன்பளிப்பாகக்
கொண்டுவந்தார்கள். வருஷா வருஷம் இப்படிச் செய்துவந்தார்கள்.

26 ரதங்களையும் குதிரைகளையும்* சாலொமோன் ஏராளமாகச் சேர்த்
துக்கொண்டே இருந்தார். அவரிடம் 1,400 ரதங்களும் 12,000 குதிரைக
ளும்# இருந்தன.[m] ரதங்களுக்கான நகரங்களிலும் எருசலேமில் ராஜா குடி
யிருந்த இடத்துக்குப் பக்கத்திலும் அவற்றை நிறுத்தி வைத்தார்.[n]

27 வெள்ளியைக் கற்களைப் போலவும், தேவதாரு மரங்களை சேப்
பெல்லாவிலுள்ள காட்டத்தி மரங்களைப் போலவும் சாலொமோன் ராஜா
எருசலேமில் ஏராளமாகக் கிடைக்கச் செய்தார்.[o]

28 எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகளை சாலொமோன்
வைத்திருந்தார். ராஜாவின் வியாபாரிகள் குதிரைக் கூட்டங்களை* மொத்த

10:17 *பொதுவாக, வில்வீரர்கள் இவற்றை வைத்திருப்பார்கள். #எபிரெய வேதாகமத்தில், ஒரு மினா என்பது 570 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **10:26** *வே.வா., "குதிரைவீரர்களையும்." #வே.வா., "குதிரைவீரர்களும்." **10:28** *அல்லது, "குதிரைக் கூட்டங்களை எகிப்திலிருந்தும் கியூவிலிருந்தும்; ராஜாவின் வியாபாரிகள் அவற்றை கியூவிலிருந்து." கியூ என்பது சிலிசியாவைக் குறிக்கலாம்.

அதி. 10

a 2நா 9:15, 16

b 1ரா 7:2

c சங் 122:2, 5

d 2நா 9:17-19

e ஆதி 49:9; எண் 23:24; எண் 24:9

f 1ரா 7:2

g 2நா 9:20, 21

h ஆதி 10:4; சங் 72:10; எசே 27:12; யோனா 1:3

i 1ரா 10:18

j பிர 5:19

k 1ரா 3:12, 13; 1ரா 4:29; 2நா 9:22-24

l நீதி 2:6

m உபா 17:15, 16; 1ரா 4:26

n 2நா 1:14; 2நா 9:25

o 2நா 1:15; 2நா 9:27

விலைக்கு வாங்குவார்கள்.[a] **29** எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
ஒரு ரதத்தின் விலை 600 வெள்ளிக் காசுகள். ஒரு குதிரையின் விலை
150 வெள்ளிக் காசுகள். பின்பு, இவற்றை சீரியாவின் ராஜாக்கள் எல்லாருக்
கும் ஏத்திய[b] ராஜாக்கள் எல்லாருக்கும் ஏற்றுமதி செய்வார்கள்.

11 பார்வோனின் மகளை[c] மட்டுமல்லாமல், மோவாபிய,[d] அம்மோ
னிய,[e] ஏதோமிய, சீதோனிய,[f] ஏத்திய[g] பெண்கள் என மற்ற தேசத்
துப் பெண்கள் பலரையும் சாலொமோன் ராஜா நேசித்தார்.[h] **2** ஆனால்,
அந்தத் தேசத்து மக்களைப் பற்றி யெகோவா ஏற்கெனவே இஸ்ரவேலர்க
ளுக்கு எச்சரிப்பு கொடுத்திருந்தார்; "நீங்கள் அவர்களோடு எந்தச் சம்பந்த
மும் வைத்துக்கொள்ளக் கூடாது,* அவர்களும் உங்களோடு எந்தச் சம்பந்
தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. அப்படிச் சம்பந்தம் வைத்தால்,
அவர்கள் கண்டிப்பாக உங்கள் மனதை மாற்றி, தங்களுடைய தெய்வங்
களை வணங்க வைத்துவிடுவார்கள்"[i] என்று சொல்லியிருந்தார். ஆனால்
சாலொமோன் அந்தப் பெண்கள்மீது# கொள்ளை ஆசை வைத்திருந்தார்,
அவர்களை நேசித்தார். **3** சாலொமோனுக்கு 700 மனைவிகள் இருந்
தார்கள். அவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களைத்
தவிர, அவருக்கு 300 மறுமனைவிகளும் இருந்தார்கள். அவருடைய மனை
விகள் கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய இதயத்தை வழிவிலகச் செய்
தார்கள்.* **4** வயதான காலத்தில்,[j] அவருடைய மனைவிகள் அவர் இத
யத்தை வழிவிலகச் செய்து மற்ற தெய்வங்களை வணங்க வைத்தார்கள்.[k]
இதனால், அவர் தன்னுடைய அப்பாவாகிய தாவீதைப் போல் தன் கடவு
ளான யெகோவாவை முழு இதயத்தோடு வணங்கவில்லை. **5** சீதோனி
யர்களின் தேவியாகிய அஸ்தரோத்தையும்[l] அம்மோனியர்கள் வணங்கிய
அருவருப்பான தெய்வமாகிய மில்கோமையும்[m] சாலொமோன் வணங்
கினார். **6** யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்தார், தன்னுடைய
அப்பாவாகிய தாவீதைப் போல் யெகோவாவை முழு இதயத்தோடு
வணங்கவில்லை.[n]

7 அதன் பிறகு, மோவாபியர்கள் வணங்கிய அருவருப்பான தெய்வமா
கிய கேமோஷுக்கு அவர் ஓர் ஆராதனை மேட்டைக்[o] கட்டினார். அம்
மோனியர்கள் வணங்கிய[p] அருவருப்பான தெய்வமாகிய மோளேகுக்
கும்[q] ஓர் ஆராதனை மேட்டைக் கட்டினார். இவற்றை எருசலேமுக்கு
முன்னாலிருந்த மலையில் கட்டினார். **8** மற்ற தேசத்தைச் சேர்ந்த அவரு
டைய மனைவிகள் தங்களுடைய தெய்வங்களுக்காகப் பலிகளை எரித்து
அவற்றிலிருந்து புகை எழும்பிவரச் செய்தார்கள்; அவர்கள் எல்லாருக்காக
வும் இதுபோன்ற ஆராதனை மேடுகளை அவர் கட்டித் தந்தார்.

9 சாலொமோனின் இதயம் இஸ்ரவேலின் கடவுளான யெகோவா
வைவிட்டு வழிவிலகிப்போனதால் யெகோவாவுக்கு அவர்மீது பயங்கர
கோபம் வந்தது.[r] முன்பு சாலொமோனுக்கு அவர் இரண்டு தடவை தரிச
னம் தந்திருந்தார்,[s] **10** மற்ற தெய்வங்களை வணங்கக் கூடாது என்று எச்
சரித்திருந்தார்.[t] அப்படி எச்சரித்திருந்தும் யெகோவாவுடைய கட்டளைக்கு
சாலொமோன் கீழ்ப்படியவில்லை. **11** அதனால் யெகோவா அவரிடம்,

அதி. 10
a 2நா 1:16, 17
2நா 9:28
b யோசு 1:4

அதி. 11
c 1ரா 3:1
d ஆதி 19:36, 37
e 1ரா 14:21
f 1ரா 16:30, 31
g ஆதி 26:34, 35
h உபா 17:15, 17
நெ 13:26
i யாத் 34:16
உபா 7:3
யோசு 23:12, 13
2கொ 6:14
j 1ரா 11:42
k உபா 7:3, 4
நெ 13:26
l நியா 2:11, 13
நியா 10:6
1சா 7:3
m செப் 1:5
n 1ரா 15:5
o லேவி 26:30
எண் 33:52
2ரா 21:1, 3
p 2ரா 23:13
q லேவி 18:21
அப் 7:43
r உபா 7:3, 4
நீதி 4:23
s 1ரா 3:5
1ரா 9:2
t 2நா 7:19, 20

11:2 *வே.வா., "அவர்களைக் கல்யாணம் செய்யக் கூடாது." #ஒருவேளை, தெய்வச் சிலைகளையும் குறிக்கலாம். **11:3** *வே.வா., "மனைவிகள் அவர்மீது அதிக செல்வாக்கு செலுத்தினார்கள்."

“நீ என்னைவிட்டு விலகிப் போய்விட்டாய், என் ஒப்பந்தத்தையும் மீறிவிட்
டாய்; நான் கொடுத்த சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் போய்விட்
டாய். அதனால், நான் கண்டிப்பாக ஆட்சியை உன் கையிலிருந்து பிடுங்கி,
உன்னுடைய ஊழியர்களில் ஒருவரிடம் கொடுப்பேன்.[a] **12** ஆனால், உன்
அப்பாவாகிய தாவீதுக்காக இதை உன் காலத்தில் செய்ய மாட்டேன். அதற்
குப் பதிலாக, உன்னுடைய மகன் கையிலிருந்து ஆட்சியைப் பிடுங்கிவிடு
வேன்.[b] **13** ஆனால், ஆட்சியை முழுவதுமாக அவனிடமிருந்து பிடுங்
கிவிட மாட்டேன்.[c] ஒரு கோத்திரத்தை உன்னுடைய வாரிசுக்குக் கொடுப்
பேன்.[d] இதை என்னுடைய ஊழியன் தாவீதுக்காகவும் நான் தேர்ந்தெடுத்த
எருசலேமுக்காகவும் செய்வேன்”[e] என்று சொன்னார்.

14 யெகோவா, ஆதாத் என்பவனை சாலொமோனுடைய எதிரியாக்கி
னார்.[f] இவன் ஏதோமின் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்.[g] **15** தாவீது
ஏதோமியர்களைத் தோற்கடித்த சமயத்தில்,[h] இறந்துபோனவர்களை அடக்
கம் பண்ணுவதற்கு படைத் தளபதி யோவாப் போனார். ஏதோமிலிருந்த
ஆண்கள் எல்லாரையும் கொன்றுபோட முயற்சி செய்தார். **16** (யோவா
பும் இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும் ஆறு மாதத்துக்கு அங்கேயே தங்கி
யிருந்து, ஏதோமிலிருந்த ஆண்கள் எல்லாரையும் கொன்றுபோட்டார்கள்.)
17 ஆனால், சின்னப் பையனாக இருந்த ஆதாத் தன்னுடைய அப்பாவின்
ஊழியர்களான ஏதோமியர்கள் சிலரோடு அங்கிருந்து தப்பித்து எகிப்துக்
குப் போய்விட்டான். **18** அவர்கள் மீதியான்* என்ற இடத்திலிருந்து பாரா
னுக்குப்[i] போனார்கள். பாரானிலிருந்து சில ஆட்களைக் கூட்டிக்
கொண்டு எகிப்தின் ராஜாவான பார்வோனிடம் போனார்கள். பார்வோன்
அவர்களுக்கு உணவும் வீடும் நிலமும் கொடுத்தான். **19** பார்வோனுக்கு
ஆதாத்தை ரொம்பவே பிடித்துவிட்டது. அதனால், தன்னுடைய மனைவி
யும் ராணியுமாகிய தாப்பெனேசின் சகோதரியை அவனுக்குக் கல்யாணம்
செய்து வைத்தான். **20** பின்பு, தாப்பெனேசின் சகோதரி அவனுக்கு ஒரு
மகனைப் பெற்றெடுத்தாள்; அவன் பெயர் கேனுபாத்; அவனை பார்வோ
னின் அரண்மனையில் தாப்பெனேஸ் வளர்த்தாள்,* பார்வோனின் மகன்க
ளோடு அவனும் அரண்மனையில் இருந்தான்.

21 தாவீது இறந்துவிட்டார்,*[j] அவருடைய படைத் தளபதி யோவா
பும் இறந்துவிட்டார்[k] என்ற செய்தியை எகிப்திலிருந்த ஆதாத் கேள்விப்
பட்டான். அதனால் அவன் பார்வோனிடம், “நான் என் சொந்த தேசத்துக்
குப் போக வேண்டும், எனக்கு அனுமதி கொடுங்கள்” என்று கேட்டான்.
22 ஆனால் பார்வோன், “ஏன் உன் தேசத்துக்குப் போக நினைக்கிறாய்?
இங்கே உனக்கு என்ன குறை?” என்று கேட்டான். அதற்கு அவன், “ஒரு
குறையும் இல்லை, ஆனாலும் தயவுசெய்து எனக்கு அனுமதி கொடுங்கள்”
என்று சொன்னான்.

23 எலியாதாவின் மகனான ரேசோன் என்பவனையும் சாலொமோனு
டைய எதிரியாகக் கடவுள் ஆக்கினார்;[l] சோபாவின் ராஜாவும் தன் எஜமானு
மாகிய ஆதாதேசரிடமிருந்து[m] இவன் தப்பித்து ஓடியிருந்தான். **24** சோபா

11:18 *அநேகமாக, ஏதோமுக்குள் இருக்கிற அல்லது ஏதோமுக்குப் பக்கத்தில் இருக்கிற ஓர் இடமாக இருக்கலாம். **11:20** *அல்லது, “பால்குடி மறக்க வைத்தாள்.” **11:21** *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்.”

அதி. 11
a 2ரா 17:21
b 2நா 10:18, 19
c 2சா 7:12, 15
d 1ரா 12:20; 2நா 11:1
e உபா 12:11
f 2சா 7:12, 14
g ஆதி 27:40
h 2சா 8:13
i எண் 10:12
j 1ரா 2:10
k 1ரா 2:34
l 1ரா 11:14
m 2சா 8:3

அதி. 11
a 2சா 10:18
b 2சா 8:5
1ரா 19:15
ஏசா 7:8
c 1ரா 11:31
1ரா 12:32
1ரா 14:10
2நா 11:14
2நா 13:3, 20
d 2நா 13:6
e 1ரா 9:22
f 1ரா 9:15, 24
g 2சா 5:7
h 1ரா 5:16
i 1ரா 12:15
1ரா 14:2
2நா 9:29
j 1ரா 12:16
k ஆதி 49:10
l உபா 12:5, 6
1ரா 11:13
சங் 132:13
m 1ரா 12:20
2நா 11:1
n உபா 28:15
2நா 15:2
o 1ரா 9:4, 5
சங் 89:49
சங் 132:17
ஏசா 9:7

தேசத்துப் படைவீரர்களை தாவீது தோற்கடித்தபோது,*[a] ரேசோன் தன்
னோடு ஆட்களைச் சேர்த்துக்கொண்டு, ஒரு கொள்ளைக்கூட்டத்துக்குத்
தலைவன் ஆனான். அவர்கள் தமஸ்குவுக்குப்[b] போய்க் குடியேறினார்
கள், அவன் அங்கே ஆட்சி செய்ய ஆரம்பித்தான். **25** சாலொமோனின்
காலமெல்லாம் அவன் அவரை எதிர்த்துவந்தான், ஆதாத்தைப் போலவே
ரேசோனும் அவருக்குத் தொந்தரவு கொடுத்துவந்தான். அவன் சீரியாவை
ஆட்சி செய்தான், இஸ்ரவேலர்களைப் பயங்கரமாக வெறுத்தான்.

26 அதோடு, நேபாத்தின் மகன் யெரொபெயாமும்[c] ராஜாவை எதிர்த்
துக் கலகம் செய்துவந்தார்.[d] இவர் எப்பிராயீமிலுள்ள சேரேதாவைச் சேர்ந்
தவர், சாலொமோனின் ஊழியர்;[e] இவருடைய அம்மா பெயர் செரூகாள்,
இவள் ஒரு விதவை. **27** யெரொபெயாம் கலகம் செய்ததற்குக் காரணம்
இதுதான்: சாலொமோன் மில்லோவை* கட்டியிருந்தார்,[f] தன்னுடைய அப்
பாவான 'தாவீதின் நகரத்தை'[g] சுற்றி மதிலைக் கட்டி முடித்தார். **28** இளை
ஞரான யெரொபெயாம் திறமைசாலியாகவும் கடின உழைப்பாளியாகவும்
இருப்பது சாலொமோனுக்குத் தெரியவந்ததும், யோசேப்பின் வம்சத்தாரில்
கட்டாய வேலை செய்கிறவர்களுக்கு அவரை அதிகாரியாக நியமித்தார்.[h]
29 அப்போது ஒருநாள், யெரொபெயாம் எருசலேமிலிருந்து வெளியே
போய்க்கொண்டிருந்தார், சீலோனியரான அகியா தீர்க்கதரிசி[i] அவரை வழி
யில் சந்தித்தார். அகியா ஒரு புது அங்கியைப் போட்டிருந்தார்.
ஊருக்கு வெளியே அவர்கள் இரண்டு பேர் மட்டும்தான் இருந்தார்கள்.
30 அப்போது, அகியா தான் போட்டிருந்த புது அங்கியை 12 துண்டுகளா
கக் கிழித்தார். **31** பின்பு அவர் யெரொபெயாமிடம்,

"நீ 10 துண்டுகளை எடுத்துக்கொள். இஸ்ரவேலின் கடவுளான யெகோவா
சொல்வது என்னவென்றால், 'நான் சாலொமோனிடமிருந்து ஆட்சியைப்
பிடுங்கி 10 கோத்திரத்தை உனக்குத் தருவேன்.[j] **32** ஆனால், என்னு
டைய பெயரை நிலைநாட்டுவதற்காக என்னுடைய ஊழியன் தாவீதுக்கா
கவும்[k] இஸ்ரவேலில் உள்ள எல்லா கோத்திரத்திலிருந்தும் நான் தேர்ந்தெ
டுத்த எருசலேம் நகரத்துக்காகவும்[l] ஒரு கோத்திரத்தை மட்டும் அவனிடம்
விட்டு வைப்பேன்.[m] **33** என்னுடைய மக்கள் என்னை விட்டுவிட்டு[n]
சீதோனியர்களின் தேவியாகிய அஸ்தரோத்தையும் மோவாபியர்களின்
தெய்வமாகிய கேமோஷையும் அம்மோனியர்களின் தெய்வமாகிய மில்கோ
மையும் வணங்குகிறார்கள். அவர்கள் என் வழிகளில் நடக்கவில்லை, எனக்
குப் பிடித்த காரியங்களைச் செய்யவில்லை. சாலொமோனுடைய அப்பா
தாவீதைப் போல் என்னுடைய சட்டதிட்டங்களையும் நீதித்தீர்ப்புகளை
யும் பின்பற்றவில்லை. அதனால்தான் இப்படிச் செய்யப்போகிறேன்.
34 ஆனால், ஆட்சியை முழுமையாக அவனிடமிருந்து பிடுங்கிவிட மாட்
டேன். அவனுடைய வாழ்நாள் முழுக்க அவனைத் தலைவனாக வைத்திருப்
பேன்; ஏனென்றால், நான் தேர்ந்தெடுத்த என்னுடைய ஊழியன் தாவீது[o] என்
னுடைய கட்டளைகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடந்ததால்,
தாவீதுக்காக அப்படிச் செய்வேன். **35** ஆட்சியை அவனுடைய மகன்
கையிலிருந்து பிடுங்கி உனக்குக் கொடுப்பேன்; அதாவது, பத்துக்

11:24 * நே.மொ., "கொன்றுபோட்டபோது." **11:27** * அர்த்தம், "மண்மேடு." இது ஒரு கோட்டையாக இருந்திருக்கலாம்.

கோத்திரங்களை உனக்குக் கொடுப்பேன்.[a] **36** என்னுடைய பெயரை
நிலைநாட்டுவதற்காக நான் தேர்ந்தெடுத்த எருசலேம் நகரத்தில் என் முன்
னால் தாவீதுடைய விளக்கு அணையாமல்* காக்கப்பட வேண்டும்[b] என்ப
தற்காக அவனுடைய மகனுக்கு ஒரு கோத்திரத்தைத் தருவேன். **37** நான்
உன்னை ராஜாவாக நியமிப்பேன், நீ விரும்புகிற எல்லாவற்றின் மீதும்
ஆட்சி செய்வாய், இஸ்ரவேல் தேசத்துக்கு ராஜாவாக ஆவாய். **38** என்
னுடைய ஊழியன் தாவீதைப் போல்[c] நான் கட்டளையிட்ட எல்லாவற்
றுக்கும் கீழ்ப்படிந்து என் வழிகளில் நடந்தால், என்னுடைய சட்டதிட்டங்க
ளுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து எனக்குப் பிடித்ததைச் செய்தால்,
நான் உனக்கும் துணையாக இருப்பேன்; தாவீதின் வம்சத்தைப் போலவே
உன் வம்சமும் என்றென்றும் ராஜ வம்சமாக இருக்கும்.[d] இஸ்ரவேல் தேசத்
துக்கு உன்னை ராஜாவாக நியமிப்பேன். **39** இப்படிச் செய்து தாவீதின் சந்
ததியை நான் அவமானப்படுத்துவேன்;[e] ஆனால், என்றென்றும் அப்படிச்
செய்ய மாட்டேன்’”[f] என்று சொன்னார்.

40 அதனால், யெரொபெயாமைக் கொலை செய்ய சாலொமோன்
முயற்சி செய்தார். ஆனால், யெரொபெயாம் எகிப்துக்குத் தப்பித்துப் போய்
எகிப்தின் ராஜாவாகிய[g] சீஷாக்கிடம்[h] தங்கியிருந்தார். சாலொமோன்
சாகும்வரை அவர் அங்கேயே இருந்தார்.

41 சாலொமோனின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றி
யும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும், அவருடைய ஞானத்தைப் பற்
றியும் சாலொமோனின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[i]
42 எருசலேமிலிருந்து இஸ்ரவேல் முழுவதையும் 40 வருஷங்கள் சாலொ
மோன் ஆட்சி செய்தார். **43** சாலொமோன் இறந்ததும்* அவருடைய
அப்பாவான ‘தாவீதின் நகரத்தில்’ அடக்கம் செய்யப்பட்டார்; அவருக்குப்
பிறகு, அவருடைய மகன் ரெகொபெயாம்[j] ராஜாவானார்.

12 ரெகொபெயாம் சீகேமுக்குப்[k] போனார். ஏனென்றால், அவரை
ராஜாவாக்க இஸ்ரவேலர்கள் எல்லாரும் அங்கே வந்திருந்தார்கள்.[l]
2 இந்த விஷயத்தை நேபாத்தின் மகன் யெரொபெயாம் கேள்விப்பட்டார்;
(அந்தச் சமயத்தில், அவர் எகிப்தில் இருந்தார்; முன்பு சாலொமோன் ராஜா
வுக்குப் பயந்து அவர் எகிப்துக்கு ஓடிப்போயிருந்தார்.)[m] **3** உடனே, இஸ்ர
வேலர்கள் ஆள் அனுப்பி அவரை வரவழைத்தார்கள். பின்பு யெரொபெ
யாமும் இஸ்ரவேல் சபையார் எல்லாரும் ரெகொபெயாமிடம் வந்து,
4 “உங்களுடைய அப்பா எங்கள்மேல் பாரமான சுமையைச் சுமத்தி
னார்.[n] நீங்கள் அந்தச் சுமையைக் குறைத்து எங்களுடைய வேலையைச்
சுலபமாக்கினால், நாங்கள் உங்களுக்குச் சேவை செய்வோம்” என்று சொன்
னார்கள்.

5 அதற்கு அவர், “சரி, நீங்கள் போய்விட்டு மூன்றாம் நாள் என்னை
வந்து பாருங்கள்” என்று சொன்னார்; அவர்களும் அங்கிருந்து போனார்
கள்.[o] **6** அப்போது ரெகொபெயாம் ராஜா பெரியோர்களிடம்,* அதாவது
தன்னுடைய அப்பாவான சாலொமோனின் காலத்தில் ஆலோசகர்களாக
இருந்தவர்களிடம், “இந்த மக்களுக்கு என்ன பதில் சொல்லலாம், நீங்கள்
என்ன நினைக்கிறீர்கள்?” என்று கேட்டார். **7** அதற்கு அவர்கள், “மக்களு

11:36 * அதாவது, “வம்சம் அழியாமல்.” **11:43** * நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்.” **12:6** * வே.வா., “மூப்பர்களிடம்.”

அதி. 11
a 1ரா 12:20; 2நா 10:16
b 2சா 7:29; 1ரா 15:4; 2ரா 8:19
c 1ரா 15:5
d 2சா 7:11
e 1ரா 12:16
f ஆதி 49:10; ஏசா 11:1; லூ 1:32, 33
g 2நா 10:2
h 1ரா 14:25
i 2நா 9:29–31
j 1நா 3:10; 2நா 13:7; மத் 1:7

அதி. 12
k ஆதி 12:6; யோசு 20:7, 9; நியா 9:1, 2; அப் 7:15, 16
l 2நா 10:1–4
m 1ரா 11:26, 40
n 1சா 8:11–18; 1ரா 4:7
o 2நா 10:5–7

டைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு நல்ல பதில் சொல்லுங்கள். இன்றைக்கு நீங்கள் அவர்களுக்குச் சேவை செய்தால் அவர்கள் என்றைக்கும் உங்களுக்குச் சேவை செய்வார்கள்” என்று சொன்னார்கள்.

8 ஆனால், பெரியோர்கள் கொடுத்த ஆலோசனையை அவர் ஒதுக்கித்தள்ளிவிட்டு, தன்னோடு வளர்ந்து இப்போது தனக்குச் சேவை செய்கிற இளைஞர்களிடம் ஆலோசனை கேட்டார்.[a] **9** அவர்களிடம், “‘எங்கள் மீது உங்களுடைய அப்பா சுமத்திய பாரமான சுமையைக் குறைக்க வேண்டும்’ என்று மக்கள் கேட்கிறார்கள். இவர்களுக்கு என்ன பதில் சொல்லலாம், உங்களுடைய ஆலோசனை என்ன?” என்று கேட்டார். **10** அதற்கு அந்த இளைஞர்கள், “‘உங்களுடைய அப்பா சுமத்திய பாரமான சுமையைக் குறைக்க வேண்டும்’ என்று கேட்டவர்களிடம், ‘என் அப்பாவைவிட நான் ரொம்பக் கண்டிப்பானவன்.* **11** என் அப்பா உங்கள்மீது பாரமான சுமையைச் சுமத்தினார், நான் அதைவிட பாரமான சுமையை உங்கள்மீது சுமத்துவேன். என் அப்பா உங்களைச் சாட்டையால் அடித்தார், நான் முள்சாட்டையால் அடிப்பேன்’ என்று சொல்லுங்கள்” என்றார்கள்.

12 “மூன்றாம் நாள் என்னை வந்து பாருங்கள்”[b] என்று ரெகொபெயாம் ராஜா சொன்னபடியே யெரொபெயாமும் மற்ற எல்லாரும் அவரிடம் வந்தார்கள். **13** அப்போது ராஜா அவர்களிடம் கடுமையாகப் பேசினார், பெரியோர்கள் கொடுத்த ஆலோசனையை ஒதுக்கித்தள்ளிவிட்டார். **14** இளைஞர்கள் கொடுத்த ஆலோசனைப்படியே, “என் அப்பா உங்கள் மீது பாரமான சுமையைச் சுமத்தினார், நான் அதைவிட பாரமான சுமையை உங்கள்மீது சுமத்துவேன். என் அப்பா உங்களைச் சாட்டையால் அடித்தார், நான் முள்சாட்டையால் அடிப்பேன்” என்று அந்த மக்களிடம் சொன்னார். **15** மக்களின் வேண்டுகோளை ராஜா ஏற்றுக்கொள்ளவில்லை. இதெல்லாம் யெகோவாவின் செயலாக இருந்தது.[c] சீலோனியரான அகியா மூலம் நேபாத்தின் மகனான யெரொபெயாமிடம் தான் சொன்னதை[d] நிறைவேற்றுவதற்காக யெகோவா இப்படிச் செய்தார்.

16 தங்களுடைய வேண்டுகோளை ராஜா ஏற்றுக்கொள்ளாததால் இஸ்ரவேலர்கள் எல்லாரும் ராஜாவைப் பார்த்து, “எங்களுக்கும் தாவீதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவரிடமிருந்து எங்களுக்கு ஒரு பலனும் கிடைக்கப்போவதில்லை. தன்னுடைய சொத்தை ஈசாயின் மகனே வைத்துக்கொள்ளட்டும். இஸ்ரவேலர்களே, நீங்கள் போய் உங்கள் தெய்வங்களை வழிபடுங்கள். தாவீதே, உன்னுடைய வம்சத்தை மட்டும் பார்த்துக்கொள்” என்று சொன்னார்கள். இப்படிச் சொல்லிவிட்டு இஸ்ரவேலர்கள் தங்களுடைய வீடுகளுக்கு* திரும்பிப் போனார்கள்.[e] **17** ஆனால், யூதாவின் நகரங்களில் வாழ்ந்த இஸ்ரவேலர்களை ரெகொபெயாம் ஆட்சி செய்துவந்தார்.[f]

18 பின்பு, அடிமை வேலை வாங்கப்பட்ட ஆட்களுக்கு அதிகாரியான அதோராமை[g] இஸ்ரவேலர்களிடம் ரெகொபெயாம் ராஜா அனுப்பினார். அவர்கள் எல்லாரும் அதோராமைக் கல்லெறிந்து கொன்றார்கள். ஆனால், ரெகொபெயாம் ராஜா எப்படியோ அவர்களிடமிருந்து தப்பித்து, தன்னுடைய ரதத்தில் ஏறி எருசலேமுக்குப் போய்விட்டார்.[h] **19** இன்றுவரை

12:10 *நே.மொ., “என் அப்பாவின் இடுப்பைவிட என்னுடைய சுண்டுவிரல் பருமனாக இருக்கும்.” **12:16** *நே.மொ., “கூடாரங்களுக்கு.”

அதி. 12
a 2நா 10:8-11
b 2நா 10:12-15
c உபா 2:30; 2நா 22:7; ரோ 9:18
d 1ரா 11:31
e 2நா 10:16, 17
f 1ரா 11:12, 13; 2நா 11:13, 16
g 2சா 20:24; 1ரா 4:6; 1ரா 5:13, 14
h 2நா 10:18, 19

தாவீதின் வம்சத்துக்கு எதிராக இஸ்ரவேலர்கள் கலகம் செய்துகொண்டு
தான் இருக்கிறார்கள்.[a]

20 யெரொபெயாம் திரும்பி வந்த விஷயம் இஸ்ரவேலர்கள் எல்லாருக்
கும் தெரிந்ததும் அவர்கள் ஒன்றுகூடி வந்தார்கள். அந்தக் கூட்டத்துக்கு
அவரை வரவழைத்து இஸ்ரவேல் முழுவதற்கும் ராஜாவாக்கினார்கள்.[b]
யூதா கோத்திரத்தாரைத் தவிர வேறு யாரும் தாவீதின் வம்சத்தாருக்கு ஆத
ரவு கொடுக்கவில்லை.[c]

21 சாலொமோனின் மகன் ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்த
வுடனே, போர்ப் பயிற்சி பெற்ற 1,80,000 வீரர்களை யூதா வம்சத்திலிருந்தும்
பென்யமீன் கோத்திரத்திலிருந்தும் ஒன்றுதிரட்டினார். இஸ்ரவேல் மக்களு
டன் போர் செய்து அதை மறுபடியும் தன்னுடைய ஆட்சியின்கீழ் கொண்
டுவருவதற்காக அப்படிச் செய்தார்.[d] **22** அப்போது உண்மைக் கடவுள்,
தீர்க்கதரிசி* செமாயாவிடம்,[e] **23** "யூதாவின் ராஜாவான சாலொமோனின்
மகன் ரெகொபெயாமிடமும் யூதா வம்சத்தார் எல்லாரிடமும் பென்யமீன்
வம்சத்தாரிடமும் மற்றவர்களிடமும் நீ போய், **24** 'உங்கள் சகோதரர்க
ளான இஸ்ரவேலர்களை எதிர்த்து நீங்கள் போர் செய்யக் கூடாது. அவரவர்
தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிப் போய்விட வேண்டும். ஏனென்
றால், நான்தான் இப்படி நடக்க வைத்தேன்' என்று யெகோவா சொல்வதா
கச் சொல்"[f] என்றார். அவர்கள் யெகோவாவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்
தார்கள். யெகோவா சொன்னபடியே தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்
போனார்கள்.

25 பின்பு, யெரொபெயாம் எப்பிராயீம் மலைப்பகுதியில் இருந்த
சீகேம் நகரத்தைக்[g] கட்டி* அங்கே குடியேறினார். அங்கிருந்து போய்
பெனூவேல் நகரத்தைக் கட்டினார்.[h] **26** பின்பு யெரொபெயாம், "இஸ்ர
வேல் முழுவதும் தாவீதின் வம்சத்தாருடைய கையில் போய்விடாமல்
இருக்க நான் ஏதாவது செய்ய வேண்டும்.[i] **27** யெகோவாவின் ஆல
யத்தில் பலி கொடுக்க இந்த மக்கள் தொடர்ந்து எருசலேமுக்குப் போய்
வந்தால்,[j] காலப்போக்கில் இவர்களுடைய இதயம் தங்கள் எஜமானாகிய
ரெகொபெயாம் பக்கம் சாய்ந்துவிடும். பின்பு, அவர்கள் என்னைக் கொன்று
விட்டு யூதாவின் ராஜாவான ரெகொபெயாமுடன் சேர்ந்துவிடுவார்கள்"
என்று நினைத்தார். **28** அதனால் தன்னுடைய ஆலோசகர்களுடன் கலந்
துபேசி, இரண்டு தங்கக் கன்றுக்குட்டிகளைச் செய்தார்.[k] பின்பு மக்களிடம்,
"இஸ்ரவேலர்களே, எருசலேமுக்குப் போய் வருவது உங்களுக்கு ரொம்பக்
கஷ்டமாக இருக்கும். இதோ! உங்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு
வந்த உங்கள் கடவுள்"[l] என்று சொன்னார். **29** அவற்றில் ஒன்றை பெத்தே
லிலும்[m] மற்றொன்றை தாணிலும்[n] வைத்தார். **30** மக்கள் பாவக்குழியில்
விழுவதற்கு இது காரணமானது.[o] தாணில் இருந்த கன்றுக்குட்டியை வழி
பட மக்கள் அவ்வளவு தூரம் பயணம் செய்தார்கள்.

31 ஆராதனை மேடுகளில் கோயில்களைக் கட்டி, லேவியராக இல்லா
தவர்களைக் குருமார்களாக யெரொபெயாம் நியமித்தார்.[p] **32** யூதாவில்
கொண்டாடப்படும் பண்டிகையைப் போலவே ஒரு பண்டிகையை எட்டாம்

12:22 *நே.மொ., "உண்மைக் கடவுளின் மனிதரான." **12:25** *வே.வா., "வலுப்
படுத்தி."

அதி. 12
a 2ரா 17:21
b 1ரா 11:30, 31
c 1ரா 11:12, 13; ஓசி 11:12
d 2நா 11:1-4; 2நா 25:5
e 2நா 12:5
f 1ரா 11:30, 31
g 1ரா 12:1
h ஆதி 32:30; நியா 8:13, 17
i 1ரா 11:38
j உபா 12:5, 6
k யாத் 20:4; 2ரா 10:29
l யாத் 32:4, 8; 2நா 11:15, 16
m ஆதி 12:8, 9; ஆதி 28:19
n ஆதி 14:14; உபா 34:1; நியா 18:29; நியா 20:1
o 2ரா 10:31; 2ரா 17:21-23
p எண் 3:10; 1ரா 13:33; 2நா 11:14; 2நா 13:9

மாதம் 15-ஆம் தேதி ஆரம்பித்து வைத்தார்.[a] பெத்தேலில்[b] தான் கட்டிய
பலிபீடத்தில் அந்தக் கன்றுக்குட்டிகளுக்குப் பலி கொடுத்தார். பெத்தேலில்
தான் கட்டிய ஆராதனை மேடுகளில் சேவை செய்ய குருமார்களை நிய
மித்தார். **33** இஸ்ரவேல் மக்கள் பண்டிகை கொண்டாடுவதற்கு எட்டாம்
மாதத்தை அவராகவே தேர்ந்தெடுத்தார். அந்த மாதம் 15-ஆம் தேதியில்
அங்கே பலிகளைக் கொடுக்க ஆரம்பித்தார். பலிபீடத்தின் மேல் ஏறி பலி
களைக் கொடுத்து, அவற்றின் புகையை எழும்பிவரச் செய்தார்.

13 யெகோவாவினால் அனுப்பப்பட்ட ஊழியர்*[c] ஒருவர் யூதாவிலி
ருந்து பெத்தேலுக்கு வந்தார். அப்போது, பலிகளை எரித்து புகை
எழும்பிவரச் செய்வதற்காகப் பலிபீடத்துக்குப்[d] பக்கத்தில் யெரொபெயாம்
நின்றுகொண்டிருந்தார். **2** யெகோவாவின் கட்டளைப்படியே பலிபீடத்
துக்கு விரோதமாக அந்தத் தீர்க்கதரிசி பேசினார். "பலிபீடமே, பலிபீடமே!
தாவீதின் வம்சத்தில் யோசியா[e] என்ற ஒருவன் பிறப்பான். ஆராதனை
மேடுகளில் சேவை செய்கிற குருமார்களை, உன்மேல் பலிகளை எரித்து
புகை எழும்பிவரச் செய்கிற குருமார்களை, உன்மேல் பலியிடுவான். மனித
எலும்புகளை உன்மேல் சுட்டெரிப்பான். இது யெகோவாவின் செய்தி"[f]
என்று சொன்னார். **3** அன்றைக்கு அவர் ஓர் அடையாளத்தைக் கொடுத்
தார். "இதோ! இந்தப் பலிபீடம் வெடித்து, அதிலிருக்கிற சாம்பல்* சிதறிவி
டும். யெகோவாதான் இந்தச் செய்தியைச் சொன்னார் என்பதற்கு இதுவே
அடையாளம்" என்று சொன்னார்.

4 பெத்தேலில் இருக்கிற பலிபீடத்துக்கு விரோதமாக உண்மைக்
கடவுளின் ஊழியர் சொன்னதை யெரொபெயாம் கேட்டவுடன், பலிபீடத்
திலிருந்து தன் கையை நீட்டி, "அவனைப் பிடியுங்கள்!"[g] என்று கட்டளை
யிட்டார். உடனே அவருடைய கை விறைத்துப்போனது.* அவரால் மறு
படியும் கையை மடக்க முடியவில்லை.[h] **5** அப்போது அந்தப் பலிபீடம்
வெடித்து, அதிலிருந்த சாம்பல் சிதறியது. உண்மைக் கடவுளின் ஊழியர்
மூலம் யெகோவா கொடுத்த அடையாளம் அப்படியே நிறைவேறியது.

6 அப்போது ராஜா உண்மைக் கடவுளின் ஊழியரிடம், "எனக்குக்
கருணை காட்டச் சொல்லி உங்களுடைய கடவுளான யெகோவாவிடம்
தயவுசெய்து கெஞ்சிக் கேளுங்கள். என்னுடைய கை குணமாக வேண்டு
மென்று எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்"[i] என்று சொன்னார். அவருக்
குக் கருணை காட்டும்படி உண்மைக் கடவுளின் ஊழியர் யெகோவாவிடம்
கெஞ்சினார். அப்போது, ராஜாவின் கை குணமாகி முன்புபோல் ஆனது.
7 உடனே ராஜா உண்மைக் கடவுளின் ஊழியரிடம், "என்னோடு வீட்டுக்கு
வந்து சாப்பிடுங்கள். போகும்போது நான் உங்களுக்கு அன்பளிப்பு கொடுக்
கிறேன்" என்று சொன்னார். **8** அதற்கு உண்மைக் கடவுளின் ஊழியர், "உங்
கள் சொத்தில் பாதியைக் கொடுத்தாலும் நான் உங்களோடு வரமாட்டேன்,
இந்த இடத்தில் சாப்பிடவோ தண்ணீர் குடிக்கவோ மாட்டேன். **9** ஏனென்
றால், 'நீ சாப்பிடவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது, வந்த வழியில் திரும்
பிப் போகக் கூடாது' என்று யெகோவா எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்"
என்று சொன்னார். **10** அதனால், பெத்தேலுக்கு வந்த வழியில் அவர்
திரும்பிப் போகாமல், வேறொரு வழியாகத் திரும்பிப் போனார்.

அதி. 12
a லேவி 23:34
b ஆமோ 7:13

அதி. 13
c 2ரா 23:16, 17
d 1ரா 12:32; ஆமோ 3:14
e 2ரா 21:24; 2ரா 22:1
f 2ரா 23:15, 16; 2நா 34:33
g 2நா 16:10; எரே 20:2
h 2ரா 6:18
i யாத் 10:16, 17; எண் 21:7; எரே 37:3; அப் 8:24

13:1 * நே.மொ., "கடவுளின் மனிதர்." **13:3** * வே.வா., "பலிகளின் கொழுப்பு கலந்த சாம்பல்." **13:4** * வே.வா., "பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டது."

11 வயதான தீர்க்கதரிசி ஒருவர் பெத்தேலில் குடியிருந்தார்; அவரு
டைய மகன்கள் வீட்டுக்கு வந்து, அன்றைக்கு பெத்தேலில் உண்மைக் கட
வுளின் ஊழியர் செய்தவற்றையும் ராஜாவிடம் சொன்னவற்றையும் அவரி
டம் விலாவாரியாகத் தெரிவித்தார்கள். அப்போது அவர்களுடைய அப்பா,
12 "அவர் எந்த வழியாகப் போனார்?" என்று கேட்டார். யூதாவிலிருந்து
வந்த உண்மைக் கடவுளின் ஊழியர் திரும்பிப் போன வழியை அவர்
கள் காட்டினார்கள். **13** அப்போது அவர், "கழுதைமேல் சேணம்* வைத்
துக் கொடுங்கள்" என்று தன்னுடைய மகன்களிடம் சொன்னார். அவர்கள்
சேணம் வைத்துக் கொடுத்ததும் அதில் ஏறிப்போனார்.

14 உண்மைக் கடவுளின் ஊழியர் போன பாதையில் அவர் போனார்,
கடைசியில் ஒரு பெரிய மரத்தடியில் அவர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார்.
"யூதாவிலிருந்து வந்த உண்மைக் கடவுளின் ஊழியர் நீங்கள்தானா?"[a] என்று
அவரிடம் கேட்டார். அதற்கு அவர், "ஆமாம்" என்று சொன்னார். **15** அப்
போது அவரிடம், "என்னோடு வீட்டுக்கு வந்து சாப்பிடுங்கள்" என்று சொன்
னார். **16** அதற்கு அந்த ஊழியர், "உங்கள் அழைப்பை ஏற்று நான் உங்க
ளோடு வரமுடியாது, நான் இந்த ஊரில் சாப்பிடவோ தண்ணீர் குடிக்கவோ
கூடாது. **17** ஏனென்றால், 'நீ அங்கே சாப்பிடவோ தண்ணீர் குடிக்கவோ
கூடாது, வந்த வழியில் திரும்பிப் போகக் கூடாது' என்று யெகோவா எனக்
குக் கட்டளையிட்டிருக்கிறார்" என்று சொன்னார். **18** அதற்கு அவர், "உங்
களைப் போல நானும் ஒரு தீர்க்கதரிசிதான். ஒரு தேவதூதர் மூலம்
யெகோவா என்னிடம், 'அவரை உன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுவந்து
உணவும் தண்ணீரும் கொடு' என்று சொன்னார்" என்றார். (இப்படிச் சொல்லி
அவரை ஏமாற்றினார்.) **19** அதனால், உணவு சாப்பிட்டு தண்ணீர் குடிப்ப
தற்காக உண்மைக் கடவுளின் ஊழியர் அவருடன் போனார்.

20 அவர்கள் மேஜையில் உட்கார்ந்திருந்தபோது, அவரைத் திரும்பக்
கூட்டிக்கொண்டுவந்த வயதான தீர்க்கதரிசியிடம் யெகோவா ஒரு செய்
தியைச் சொன்னார். **21** அப்போது, வயதான தீர்க்கதரிசி யூதாவிலிருந்து
வந்த உண்மைக் கடவுளின் ஊழியரைப் பார்த்து உரத்த குரலில், "நீ
யெகோவாவின் வார்த்தையை மீறிவிட்டாய். உன் கடவுளான யெகோவா
கொடுத்த கட்டளைக்கு நீ கீழ்ப்படியவில்லை. **22** 'சாப்பிடவோ தண்ணீர்
குடிக்கவோ கூடாது' என்று நான் சொல்லியிருந்த இடத்துக்குப் போய் சாப்
பிட்டு தண்ணீர் குடித்தாய். அதனால், உன் உடல் உன்னுடைய முன்னோர்
களின் கல்லறையில் அடக்கம் செய்யப்படாது என்று யெகோவா சொல்
கிறார்"[b] என்றார்.

23 உண்மைக் கடவுளின் ஊழியர் சாப்பிட்டுக் குடித்த பின்பு, அவ
ரைக் கூட்டிக்கொண்டுவந்த வயதான தீர்க்கதரிசி அவருடைய கழுதை
மேல் சேணம் வைத்துக் கொடுத்தார். **24** உண்மைக் கடவுளின் ஊழியர்
அங்கிருந்து புறப்பட்டுப் போனார். ஆனால், வழியில் ஒரு சிங்கம் வந்து
அவரைக் கொன்றுபோட்டது.[c] சாலையில் அவருடைய உடல் கிடந்தது,
பக்கத்தில் கழுதை நின்றுகொண்டிருந்தது. அந்தச் சிங்கமும் பக்கத்தில் நின்
றுகொண்டிருந்தது. **25** சாலையில் உடல் கிடப்பதையும் அதன் பக்கத்தில்
சிங்கம் நிற்பதையும் அந்த வழியாகப் போனவர்கள் பார்த்தார்கள். உடனே,

---

13:13 *சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை.

அதி. 13
a 1ரா 13:1
b 1ரா 13:30
2ரா 23:17, 18
c 2சா 6:7
1ரா 20:35, 36
2ரா 17:25

வயதான தீர்க்கதரிசி குடியிருந்த நகரத்துக்கு வந்து விஷயத்தைச் சொன்
னார்கள்.

26 வயதான தீர்க்கதரிசி அதைக் கேள்விப்பட்டவுடன், “உண்மைக் கடவு
ளுடைய ஊழியரின் உடல்தான் அது. அவர் யெகோவாவின் கட்டளையை
மீறிவிட்டார்.[a] அதனால், யெகோவா அனுப்பிய சிங்கம் அவரை அடித்துக்
கொன்றுபோட்டது. யெகோவா அவரிடம் சொன்னபடியே நடந்திருக்கிறது”[b]
என்று சொன்னார். **27** பின்பு தன்னுடைய மகன்களிடம், “கழுதைமேல்
சேணம் வைத்துக் கொடுங்கள்” என்று சொன்னார். அவர்களும் அப்படியே
செய்தார்கள். **28** அவர் புறப்பட்டுப் போய் சாலையில் கிடந்த உடலைப்
பார்த்தார்; கழுதையும் சிங்கமும் அதன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தன.
சிங்கம் அந்த உடலைச் சாப்பிடவும் இல்லை, கழுதையை அடித்துக் கொல்
லவும் இல்லை. **29** அவர் உண்மைக் கடவுளுடைய ஊழியரின் உடலை
எடுத்து கழுதைமேல் வைத்தார். துக்கம் அனுசரித்து அடக்கம் செய்வதற்
காக அவருடைய உடலைத் தன்னுடைய சொந்த நகரத்துக்குக் கொண்டுவந்
தார். **30** பின்பு, தன்னுடைய கல்லறையில் அந்த உடலை வைத்தார். அப்
போது “ஐயோ, என் சகோதரனே!” என்று அவர்கள் அழுது புலம்பினார்கள்.
31 உடலை அடக்கம் செய்த பிறகு வயதான தீர்க்கதரிசி தன்னுடைய மகன்
களிடம், “நான் இறந்ததும் உண்மைக் கடவுளின் ஊழியரை அடக்கம் செய்த
இடத்திலேயே என்னையும் அடக்கம் செய்யுங்கள். அவருடைய எலும்புக
ளுக்குப் பக்கத்தில் என்னுடைய எலும்புகளை வையுங்கள்.[c] **32** பெத்தே
லில் உள்ள பலிபீடத்துக்கும் சமாரியாவின் நகரங்களிலுள்ள[d] எல்லா ஆரா
தனை மேடுகளுக்கும்[e] விரோதமாக அவர் மூலம் யெகோவா சொன்ன
வார்த்தை நிச்சயம் நிறைவேறும்” என்று சொன்னார்.

33 இதெல்லாம் நடந்த பிறகும் யெரொபெயாம் தன்னுடைய கெட்ட
வழியைவிட்டு விலகவில்லை. லேவியராக இல்லாதவர்களை ஆராதனை
மேடுகளில் குருமார்களாக நியமித்து வந்தார்.[f] குருவாக வேண்டுமென்று
யாராவது ஆசைப்பட்டால், “இவனும் ஆராதனை மேட்டில் குருவாக
இருக்கட்டும்”[g] என்று சொல்லி நியமித்துவிடுவார். **34** யெரொபெயாமின்
வீட்டார் செய்த இந்தப் பாவம்தான்[h] அவர்கள் இந்தப் பூமியிலிருந்து அடி
யோடு அழியக் காரணமானது.[i]

14 பின்பு, யெரொபெயாமின் மகன் அபியா நோய்வாய்ப்பட்டான்.
2 அப்போது யெரொபெயாம் தன்னுடைய மனைவியிடம், “நீ
உடனே சீலோவுக்குப் போய் அகியா தீர்க்கதரிசியைப் பார்த்துவிட்டு வா.
இஸ்ரவேல் மக்கள்மீது நான் ராஜாவாக ஆவேன் என்று சொன்னவர் அவர்
தான்.[j] நீ என்னுடைய மனைவி என்று யாருக்கும் தெரியாமல் இருப்பதற்
காக மாறுவேஷத்தில் போ. **3** பத்து ரொட்டிகளையும் அப்பங்களையும்
ஒரு ஜாடியில் தேனையும் எடுத்துக்கொண்டு போ. நம்முடைய மகனுக்கு
என்ன ஆகும் என்பதை அவர் சொல்வார்” என்றார்.

4 அவர் சொன்னபடியே யெரொபெயாமின் மனைவி செய்தாள். சீலோ
வில்[k] இருந்த அகியாவின் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனாள். அகியா வய
தானவராக இருந்தார், அதனால் அவருக்குக் கண் தெரியவில்லை.

5 ஏற்கெனவே யெகோவா அகியாவிடம், “நோய்வாய்ப்பட்ட தன் மக
னுக்கு என்ன ஆகும் என்று விசாரிப்பதற்காக யெரொபெயாமின் மனைவி
வந்துகொண்டிருக்கிறாள். தன்னை அடையாளம் கண்டுபிடிக்காமலிருக்க

அதி. 13
a 1ரா 13:9
b 1ரா 13:21, 22
c 2ரா 23:17, 18
d 2ரா 23:15, 19
e லேவி 26:30; 1ரா 12:29, 31
f 1ரா 12:25, 31
g 2நா 11:14, 15
h 1ரா 16:30, 31; 2ரா 3:1, 3; 2ரா 10:31; 2ரா 13:1, 2
i 1ரா 14:10; 1ரா 15:25-29; 2ரா 17:22, 23

அதி. 14
j 1ரா 11:30, 31
k யோசு 18:1; 1சா 4:3

மாறுவேஷத்தில் வருகிறாள். நான் சொல்வதை நீ அவளிடம் சொல்ல
வேண்டும்” என்று சொல்லியிருந்தார்.

6 அவள் அகியாவின் வீட்டு வாசலில் நுழைந்தபோதே அவ
ளுடைய காலடி சத்தத்தை அகியா கேட்டார். உடனே, “யெரொபெயாமின்
மனைவியே, உள்ளே வா. ஏன் மாறுவேஷத்தில் வந்திருக்கிறாய்? கடவுள்
உன்னிடம் கெட்ட செய்தியைச் சொல்லச் சொல்லியிருக்கிறார். **7** நீ போய்
யெரொபெயாமிடம் இந்தச் செய்தியைச் சொல். ‘இஸ்ரவேலின் கடவு
ளான யெகோவா சொல்வது என்னவென்றால், “நான் உன்னைச் சாதாரண
மக்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுத்து, என்னுடைய மக்களான இஸ்ர
வேலர்களுக்குத் தலைவனாக்கினேன்.[a] **8** தாவீதுடைய வம்சத்தின் கையி
லிருந்த ஆட்சியைப் பிடுங்கி உனக்குக் கொடுத்தேன்.[b] ஆனால், நீ
என் ஊழியனான தாவீதைப் போல் நடந்துகொள்ளவில்லை. தாவீது என்
னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தான். முழு இதயத்தோடு என்
வழியில் நடந்தான். எனக்குப் பிடித்ததை மட்டுமே செய்தான்.[c] **9** நீயோ,
உனக்கு முன்பிருந்த எல்லாரையும்விட படுமோசமாக நடந்துகொண்டாய்.
என்னைப் புண்படுத்துவதற்காக இன்னொரு தெய்வத்தை உருவாக்கினாய்,
உலோகச் சிலைகளைச் செய்தாய்.[d] இப்படியெல்லாம் செய்து நீ என்னை
ஒதுக்கித்தள்ளிவிட்டாய்.[e] **10** அதனால், உன்னுடைய வம்சத்துக்கு முடிவு
கட்டுவேன். உன் வம்சத்து ஆண்கள் எல்லாரையும்,* ஆதரவற்றவர்க
ளையும் அற்பமானவர்களையும்கூட, அடியோடு அழிப்பேன். சாணத்
தைத் துடைத்து சுத்தமாக்குவதைப் போல், யெரொபெயாமின் வம்சத்தைத்
துடைத்து அழித்துவிடுவேன்.[f] **11** யெரொபெயாமின் வம்சத்தைச் சேர்ந்த
எவனாவது நகரத்துக்குள்ளே செத்துப்போனால் அவனை நாய்கள் தின்
னும். நகரத்துக்கு வெளியே செத்துப்போனால் வானத்துப் பறவைகள் தின்
னும். யெகோவாவே இதைச் சொல்லியிருக்கிறார்.”’

12 இப்போது புறப்பட்டு உன் வீட்டுக்குப் போ. நகரத்துக்குள்ளே நீ
காலெடுத்து வைக்கும்போது உன் மகன் இறந்துவிடுவான். **13** இஸ்ர
வேலர்கள் எல்லாரும் அவனுக்காகத் துக்கம் அனுசரிப்பார்கள், பின்பு
அவனை அடக்கம் செய்வார்கள். ஏனென்றால், அவனிடம் மட்டும்தான்
இஸ்ரவேலின் கடவுளான யெகோவா ஏதோவொரு நல்ல காரியத்தைப்
பார்த்திருக்கிறார். அதனால், யெரொபெயாமின் வம்சத்தில் அவன் ஒரு
வன் மட்டும்தான் கல்லறையில் வைக்கப்படுவான். **14** யெகோவா தனக்
காக இன்னொரு ராஜாவை இஸ்ரவேல்மீது ஏற்படுத்துவார். அந்த நாளில்
அவன் யெரொபெயாமின் வம்சத்தை அடியோடு அழித்துப்போடுவான்.[g]
கடவுள் நினைத்தால் இப்போதே அதைச் செய்துவிடுவார். **15** யெகோவா
இஸ்ரவேலர்களைத் தண்டிப்பார், தண்ணீரில் அலைக்கழிக்கப்படும் நாணற்
புல் போலாக்குவார். அவர்களுடைய முன்னோர்களுக்குக் கொடுத்த இந்த
அருமையான தேசத்திலிருந்து அவர்களை வேரோடு பிடுங்கிப்போடு
வார்.[h] ஆற்றுக்கு* அப்பால் அவர்களைச் சிதறிப்போகச் செய்வார்.[i]
ஏனென்றால், அவர்கள் பூஜைக் கம்பங்களை#[j] செய்து யெகோவாவைப்
புண்படுத்தினார்கள். **16** யெரொபெயாம் செய்த பாவத்துக்காகவும் அவ

14:10 * நே.மொ., “சுவரில் சிறுநீர் கழிக்கிற எவரையும்.” வெறுப்பைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட இந்த எபிரெய வார்த்தைகள் ஆண்களைக் குறிக்கின்றன. **14:15** * அதாவது, “யூப்ரடிஸ் ஆற்றுக்கு.” # சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 14
a 1ரா 11:30, 31; 1ரா 12:20
b 1ரா 12:16
c 1ரா 15:5; அப் 13:22
d உபா 27:15; 2நா 11:15
e நெ 9:26; சங் 50:17
f 1ரா 15:25-29
g 1ரா 15:25-29
h உபா 8:7-9; உபா 29:28; யோசு 23:15; 2ரா 17:6
i உபா 28:64; 2ரா 15:29; 2ரா 18:11
j உபா 12:3

னுடைய தூண்டுதலால் இஸ்ரவேலர்கள் செய்த பாவத்துக்காகவும் அவர்
இஸ்ரவேலர்களைக் கைவிட்டுவிடுவார்”[a] என்று சொன்னார்.

17 அதன் பின்பு, யெரொபெயாமின் மனைவி திர்சாவுக்குப் புறப்
பட்டுப் போனாள். வீட்டு வாசலில் அவள் நுழைந்தபோது அவளு
டைய மகன் இறந்துபோனான். **18** பின்பு, அவனை அடக்கம் செய்தார்
கள். இஸ்ரவேலர்கள் எல்லாரும் அவனுக்காகத் துக்கம் அனுசரித்தார்கள்.
யெகோவா தன்னுடைய ஊழியரான அகியா தீர்க்கதரிசி மூலம் சொன்ன
வார்த்தை நிறைவேறியது.

19 யெரொபெயாமின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அதா
வது அவருடைய ஆட்சியைப் பற்றியும் அவர் செய்த போர்களைப் பற்றி
யும், இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்
றன.[b] **20** யெரொபெயாம் 22 வருஷங்கள் ஆட்சி செய்தார், அதன் பிறகு
அவர் இறந்துபோனார்;*[c] அவருக்குப் பின்பு அவருடைய மகன் நாதாப்
ராஜாவானார்.[d]

21 இதற்கிடையே, சாலொமோனின் மகன் ரெகொபெயாம் யூதாவில்
ராஜாவாக ஆகியிருந்தார். அப்போது, அவருக்கு 41 வயது. யெகோவா தன்
னுடைய பெயரை நிலைநாட்டுவதற்காக இஸ்ரவேலில் உள்ள எல்லா கோத்
திரத்திலிருந்தும் தேர்ந்தெடுத்திருந்த எருசலேம் நகரத்திலிருந்து 17 வருஷங்
கள் ஆட்சி செய்தார்.[e] ரெகொபெயாமின் அம்மா பெயர் நாமாள்; அவள்
ஓர் அம்மோனியப் பெண்.[f] **22** யெகோவா வெறுக்கிற காரியங்களை
யூதா மக்கள் செய்தார்கள்.[g] அவர்கள் பயங்கரமான பாவங்களைச் செய்து
தங்களுடைய முன்னோர்களைவிட அதிகமாக அவரைக் கோபப்படுத்தி
னார்கள்.[h] **23** அதோடு, எல்லா மலைகளின் மீதும்[i] அடர்த்தியான எல்லா
மரங்களின் கீழும்[j] ஆராதனை மேடுகளைக் கட்டினார்கள், பூஜைத் தூண்
களையும் பூஜைக் கம்பங்களையும்*[k] வைத்தார்கள். **24** அந்தத் தேசத்
திலுள்ள கோயில்களில் ஆண் விபச்சாரக்காரர்களும் இருந்தார்கள்.[l] இஸ்ர
வேலர்களின் கண் முன்னால் யெகோவா விரட்டியடித்த மற்ற தேசத்தாரின்
அருவருப்பான செயல்கள் எல்லாவற்றையும் யூதா மக்கள் செய்தார்கள்.

25 ரெகொபெயாம் ராஜா ஆட்சி செய்த ஐந்தாம் வருஷத்தில்,
எகிப்தின் ராஜாவான சீஷாக்[m] எருசலேம்மீது படையெடுத்து வந்தான்.[n]
26 யெகோவாவின் ஆலயத்தில் இருந்த பொக்கிஷங்களையும் அரண்ம
னையில் இருந்த பொக்கிஷங்களையும் எடுத்துக் கொண்டுபோனான்.[o]
சாலொமோன் செய்து வைத்திருந்த தங்கக் கேடயங்கள் உட்பட, எல்லா
வற்றையும் எடுத்துக் கொண்டுபோனான்.[p] **27** அதனால், ரெகொபெயாம்
ராஜா அந்தத் தங்கக் கேடயங்களுக்குப் பதிலாக செம்புக் கேடயங்களைச்
செய்து, அரண்மனை வாசலைக் காக்கிற காவலாளிகளின் தலைவர்களி
டம் ஒப்படைத்தார். **28** யெகோவாவின் ஆலயத்துக்கு ராஜா போகும்போ
தெல்லாம் காவலாளிகள் அவற்றை எடுத்துக்கொண்டு போவார்கள். பின்பு,
அவற்றைக் காவலாளிகளின் அறையில் திரும்பக் கொண்டுவந்து வைத்து
விடுவார்கள்.

29 ரெகொபெயாமின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்
றியும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் யூதா ராஜாக்களின் சரித்திரப்

14:20 * நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்.” **14:23** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 14
a 1ரா 12:28-30; 1ரா 13:33, 34
b 2நா 12:15; 2நா 13:3
c 2நா 13:20
d 1ரா 15:25
e யாத் 20:24; உபா 12:5, 6; 1ரா 8:16, 17; சங் 78:68; சங் 132:13
f 1ரா 11:1; 2நா 12:13
g 1ரா 11:7; 2நா 12:1
h ஏசா 65:2
i ஏசா 65:7
j உபா 12:2, 3; ஏசா 57:5; எரே 2:20; ஓசி 4:13
k லேவி 26:1
l உபா 23:17, 18; 1ரா 15:11, 12; 1ரா 22:46; 2ரா 23:7; ஓசி 4:14
m 1ரா 11:40
n 2நா 12:2-4
o 1ரா 7:51; 1ரா 15:18; 2ரா 18:14, 15; 2ரா 24:12, 13
p 1ரா 10:16, 17; 2நா 12:9-11

புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[a] **30** ரெகொபெயாமுக்கும் யெரொபெ
யாமுக்கும் தொடர்ந்து போர் நடந்துவந்தது.[b] **31** ரெகொபெயாம் இறந்த
தும்,* அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்த 'தாவீ
தின் நகரத்தில்' அடக்கம் செய்யப்பட்டார்.[c] அவருடைய அம்மா பெயர்
நாமாள்; இவள் ஓர் அம்மோனியப் பெண்.[d] ரெகொபெயாமுக்குப் பிறகு
அவருடைய மகன் அபியாம்#[e] ராஜாவானார்.

15 நேபாத்தின் மகனான யெரொபெயாம் ராஜா[f] ஆட்சி செய்த
18-ஆம் வருஷத்தில், அபியாம் யூதாவின் ராஜாவானார்.[g]
2 அவர் மூன்று வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார்; அவரு
டைய அம்மா பெயர் மாக்காள்,[h] அவள் அபிசலோமின்* பேத்தி. **3** தன்
அப்பா செய்த பாவங்களையெல்லாம் அபியாமும் செய்துவந்தார். அவரு
டைய மூதாதையான தாவீதைப் போல், யெகோவா தேவனுக்கு முழு இத
யத்தோடு உண்மையாக நடந்துகொள்ளவில்லை. **4** இருந்தாலும் தாவீதுக்
காக,[i] அவருடைய கடவுளாகிய யெகோவா அபியாமுக்கு ஒரு விளக்கை*
கொடுத்தார்,[j] அபியாமின் மகனை எருசலேமில் ராஜாவாக ஏற்படுத்தி
னார். எருசலேம் தொடர்ந்து நிலைத்திருக்க அனுமதித்தார். **5** ஏனென்
றால், யெகோவாவுக்குப் பிடித்த காரியங்களையே தாவீது செய்திருந்தார்.
அவருடைய வாழ்நாள் முழுவதும் கடவுளுடைய கட்டளைகள் எதையுமே
மீறவில்லை; ஏத்தியனான உரியா விஷயத்தில் மட்டும்தான் தவறு செய்தி
ருந்தார்.[k] **6** காலம் முழுக்க ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும்
போர் நடந்துகொண்டே இருந்தது.[l]

7 அபியாமின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும்,
அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்த
கத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[m] அபியாமுக்கும் யெரொபெயாமுக்கும்கூட
போர் நடந்தது.[n] **8** அபியாம் இறந்த* பின்பு, 'தாவீதின் நகரத்தில்' அடக்
கம் செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு, அவருடைய மகன் ஆசா[o] ராஜா
வானார்.[p]

9 யெரொபெயாம் ராஜா இஸ்ரவேலை ஆட்சி செய்த 20-ஆம் வருஷத்
தில், ஆசா யூதாவின் ராஜாவானார். **10** அவர் எருசலேமில் 41 வருஷங்
கள் ஆட்சி செய்தார்; அவருடைய பாட்டியின் பெயர் மாக்காள்,[q]
இவள் அபிசலோமின் பேத்தி. **11** ஆசா தன்னுடைய மூதாதையான
தாவீதைப் போலவே, யெகோவாவுக்குப் பிடித்த காரியங்களைச் செய்தார்.[r]
12 கோயில்களில் இருந்த ஆண் விபச்சாரக்காரர்களைத் தேசத்தைவிட்டே
துரத்தினார்.[s] தன்னுடைய முன்னோர்கள் செய்து வைத்திருந்த அருவ
ருப்பான* சிலைகளையெல்லாம்[t] உடைத்துப்போட்டார். **13** பூஜைக் கம்
பத்தின்* வழிபாட்டுக்காக அவருடைய பாட்டி மாக்காள்[u] அருவருப்பான
சிலையைச் செய்து வைத்திருந்ததால், ராஜமாதா# அந்தஸ்தை அவளிடமி
ருந்து பறித்துவிட்டார்; அருவருப்பான அந்தச் சிலையைத் தகர்த்துப்

14:31 *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்." #அபியா என்றும் அழைக்கப்படுகிறார். **15:2** *அப்சலோமின் இன்னொரு பெயராக இருக்கலாம். **15:4** *அதாவது, "வாரிசை." **15:8** *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட." **15:12** *இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **15:13** *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., "ராணி."

அதி. 14
a 1நா 27:24; 2நா 12:15
b 1ரா 15:6
c 1ரா 11:43
d 1ரா 11:1; 2நா 12:13
e 1நா 3:10; மத் 1:7

அதி. 15
f 1ரா 12:20
g 2நா 13:1, 2
h 2நா 11:20-22
i 2சா 7:8, 12; சங் 89:33-37; ஏசா 37:35; எரே 33:20, 21
j 1ரா 11:36; 2நா 21:7; சங் 132:13, 17
k 2சா 11:4, 15; சங் 51:மே.கு.
l 1ரா 14:30; 2நா 12:15
m 2நா 13:22
n 2நா 13:3
o 1நா 3:10; மத் 1:7
p 2நா 14:1
q 2நா 11:21, 22
r 2நா 14:2-5; 2நா 14:11; 2நா 15:17
s உபா 23:17, 18; 1ரா 14:24; 1ரா 22:45, 46
t 1ரா 11:7; 1ரா 14:22, 23
u 2நா 11:18, 20

போட்டு,[a] கீதரோன் பள்ளத்தாக்கில் சுட்டெரித்தார்.[b] **14** ஆனால், ஆரா
தனை மேடுகள் அழிக்கப்படவில்லை.[c] இருந்தாலும், ஆசா தன்னுடைய
வாழ்நாளெல்லாம் யெகோவாவுக்கு முழு இதயத்தோடு உண்மையாக
நடந்துகொண்டார். **15** தானும் தன்னுடைய அப்பாவும் யெகோவாவுக்கு
அர்ப்பணித்திருந்த தங்கத்தையும் வெள்ளியையும் மற்ற சாமான்களையும்[d]
கொண்டுவந்து ஆலயத்தில் வைத்தார்.

16 ஆசாவுக்கும் இஸ்ரவேலின் ராஜாவான பாஷாவுக்கும்[e] தொடர்ந்து
போர் நடந்துவந்தது. **17** அதனால், இஸ்ரவேலின் ராஜாவான பாஷா
யூதாவுக்கு விரோதமாக வந்தார்; யூதாவின் ராஜாவான ஆசாவின் ஆட்சிக்
குட்பட்ட பகுதிக்குள் மக்கள் போய் வருவதைத் தடுப்பதற்காக ராமா[f] நக
ரத்தைக் கட்ட* ஆரம்பித்தார்.[g] **18** உடனே ஆசா, யெகோவாவின் ஆல
யத்திலுள்ள பொக்கிஷ அறைகளிலும் அரண்மனை கஜானாக்களிலும்
மீதியிருந்த எல்லா வெள்ளியையும் தங்கத்தையும் எடுத்து தன்னுடைய
ஊழியர்களிடம் கொடுத்தார். அவற்றை தமஸ்குவில் குடியிருந்த சீரியா
ராஜாவிடம்,[h] அதாவது எசியோனின் பேரனும் தப்ரிமோனின் மகனுமான
பெனாதாத்திடம், கொடுக்கச் சொன்னார். **19** அப்படிக் கொடுத்து அனுப்
பும்போது, “என் அப்பாவும் உங்கள் அப்பாவும் செய்ததுபோல், நானும்
நீங்களும் ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அதனால், நான் அனுப்பியிருக்
கிற தங்கத்தையும் வெள்ளியையும் அன்பளிப்பாக ஏற்றுக்கொண்டு, இஸ்ர
வேலின் ராஜாவான பாஷாவோடு நீங்கள் செய்திருக்கிற ஒப்பந்தத்தை
ரத்து செய்யுங்கள். அப்படிச் செய்தால் அவர் எங்களைவிட்டுப் பின்வாங்
கிப் போய்விடுவார்” என்று சொல்லச் சொன்னார். **20** ஆசா ராஜா சொன்
னதை பெனாதாத் ஏற்றுக்கொண்டான். அதனால், இஸ்ரவேல் நகரங்களைத்
தாக்குவதற்காகத் தன்னுடைய படைத் தலைவர்களை அனுப்பினான்.
அவர்கள் ஈயோனையும்[i] தாணையும்[j] ஆபேல்-பெத்-மாக்காவையும் கின்
னரேத் முழுவதையும் நப்தலி பகுதி முழுவதையும் நாசமாக்கினார்கள்.
21 பாஷா அதைக் கேள்விப்பட்டதும், ராமா நகரத்தைக் கட்டுவதை*
உடனடியாக நிறுத்திவிட்டு, திர்சாவுக்குப்[k] போய் அங்கேயே குடியிருந்தார்.
22 பின்பு ஆசா ராஜா, யூதாவிலிருந்த அத்தனை பேரையும், ஒருவர் விடா
மல் எல்லாரையும், வரச் சொல்லிக் கட்டளையிட்டார். ராமா நகரத்தைக்
கட்டுவதற்கு பாஷா பயன்படுத்திய கற்களையும் மரங்களையும் அவர்கள்
அங்கிருந்து கொண்டுவந்தார்கள். அவற்றை வைத்து பென்யமீன் பகுதியில்
கெபாவையும்[l] மிஸ்பாவையும்[m] ஆசா கட்டினார்.*

23 ஆசாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவருடைய வீர
தீர செயல்கள், அவர் கட்டிய* நகரங்கள் ஆகிய எல்லாவற்றையும் பற்றி
யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. வயதான
காலத்தில், பாதங்களில் வந்த நோயால் ஆசா அவதிப்பட்டார்.[n] **24** அவர்
இறந்த* பின்பு, அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்
தில், அதாவது அவருடைய மூதாதையான ‘தாவீதின் நகரத்தில்,’ அடக்கம்
செய்யப்பட்டார். அடுத்து, அவருடைய மகன் யோசபாத்[o] ராஜாவானார்.

அதி. 15
- a உபா 7:5; 2ரா 18:1, 4; 2நா 34:1, 4
- b 2சா 15:23; 2நா 15:16-18; யோவா 18:1
- c எண் 33:52; உபா 12:2; 1ரா 22:41, 43
- d 1நா 26:26, 27
- e 1ரா 16:3, 12
- f யோசு 18:21, 25
- g 2நா 16:1-6
- h 2நா 16:7
- i 2ரா 15:29
- j நியா 18:29; 1ரா 12:28, 29
- k 1ரா 14:17; உன் 6:4
- l யோசு 21:8, 17
- m யோசு 18:21, 26; நியா 20:1; 1சா 7:5; எரே 40:6
- n 2நா 16:11-14
- o 1ரா 22:42; 2நா 17:3, 4; 2நா 18:1; 2நா 19:4; மத் 1:8

15:17 *வே.வா., “வலுப்படுத்த; திரும்பக் கட்ட.” **15:21** *வே.வா., “வலுப்படுத்துவதை; திரும்பக் கட்டுவதை.” **15:22** *வே.வா., “வலுப்படுத்தினார்; திரும்பக் கட்டினார்.” **15:23** *வே.வா., “வலுப்படுத்திய; திரும்பக் கட்டிய.” **15:24** *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட.”

25 ஆசா ராஜா யூதாவை ஆட்சி செய்த இரண்டாம் வருஷத்தில்
யெரொபெயாமின் மகன் நாதாப்[a] இஸ்ரவேலின் ராஜாவானார்; அவர்
இரண்டு வருஷங்கள் ஆட்சி செய்தார். **26** யெகோவா வெறுக்கிற காரி
யங்களைச் செய்துவந்தார். தன்னுடைய அப்பாவைப் போலவே கெட்ட
வழியில் நடந்தார்,[b] அவரைப் போலவே இஸ்ரவேலர்களைப் பாவம் செய்
யத் தூண்டினார்.[c] **27** இசக்கார் கோத்திரத்தைச் சேர்ந்த அகியாவின் மக
னான பாஷா இவருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டினார். நாதாபும்
இஸ்ரவேலர்கள் எல்லாரும் பெலிஸ்தியர்களுக்குச் சொந்தமான கிபெத்தோ
னைச்[d] சுற்றிவளைத்தபோது, அங்கே பாஷா அவரைக் கொன்றுபோட்டார்.
28 இப்படி, யூதாவை ஆட்சி செய்த ஆசா ராஜாவின் மூன்றாம் வருஷத்
தில் நாதாபைக் கொன்றுவிட்டு அவருக்குப் பதிலாக பாஷா ராஜாவானார்.
29 அவர் ராஜாவாக ஆனவுடன், யெரொபெயாமின் வீட்டார் எல்லாரையும்
கொன்றுபோட்டார். யெரொபெயாமின் வீட்டாரில் ஒருவரைக்கூட உயிரோடு
விட்டுவைக்கவில்லை. சீலோவைச் சேர்ந்த அகியா என்ற தன்னுடைய ஊழி
யர் மூலம் யெகோவா சொன்ன வார்த்தையின்படியே, பாஷா அவர்களை
அடியோடு அழித்துப்போட்டார்.[e] **30** ஏனென்றால், யெரொபெயாம் தான்
பாவம் செய்தது மட்டுமல்லாமல், இஸ்ரவேலர்களையும் பாவம் செய்யத்
தூண்டியிருந்தார்; இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவை மிகவும் புண்ப
டுத்தியிருந்தார். **31** நாதாபின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப்
பற்றியும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின்
சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **32** ஆசாவுக்கும் இஸ்ரவேல்
ராஜாவான பாஷாவுக்கும் தொடர்ந்து போர் நடந்துவந்தது.[f]

33 ஆசா ராஜா யூதாவை ஆட்சி செய்த மூன்றாம் வருஷத்தில், அகி
யாவின் மகனான பாஷா இஸ்ரவேல் முழுவதுக்கும் ராஜாவானார்.
அவர் திர்சாவிலிருந்து 24 வருஷங்கள் ஆட்சி செய்தார்.[g] **34** ஆனால்,
யெகோவா வெறுக்கிற காரியங்களையே செய்துவந்தார்.[h] யெரொபெயா
மைப் போலவே மோசமான வழியில் நடந்தார், அவரைப் போலவே இஸ்
ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டினார்.[i]

16 அனானியின்[j] மகன் யெகூ[k] மூலம் பாஷாவுக்கு விரோதமாக
யெகோவா ஒரு செய்தியைச் சொன்னார். **2** “தூசியில் கிடந்த
உன்னை உயர்த்தி, என் மக்களான இஸ்ரவேலர்களுக்குத் தலைவனாக்கி
னேன்.[l] நீயோ, யெரொபெயாமைப் போலவே மோசமான வழியில் நடந்
தாய். என் மக்களான இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டினாய்.
அவர்களும் பாவம் செய்து என்னைப் புண்படுத்தினார்கள்.[m] **3** அத
னால், பாஷாவையும் அவனுடைய வீட்டாரையும் அடியோடு அழிப்பேன்.
நேபாத்தின் மகனான யெரொபெயாமின் குடும்பத்துக்கு ஏற்பட்ட கதிதான்[n]
இவர்களுக்கும் ஏற்படும். **4** பாஷாவின் வீட்டாரில் எவனாவது நகரத்துக்
குள்ளே செத்துப்போனால் அவனை நாய்கள் தின்னும்; அவர்களில் எவ
னாவது நகரத்துக்கு வெளியே செத்துப்போனால் அவனை வானத்துப் பற
வைகள் தின்னும்” என்று சொன்னார்.

5 பாஷாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவருடைய
வீரதீர செயல்கள் ஆகியவற்றைப் பற்றி இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப்
புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **6** பாஷா இறந்ததும்,* அவரை திர்சா

16:6 * நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்.”

அதி. 15
a 1ரா 14:20
b 1ரா 14:7, 9
c 1ரா 12:28-30, 1ரா 13:33
d யோசு 19:44, 48; யோசு 21:20, 23; 1ரா 16:15
e 1ரா 14:9, 10
f 2நா 12:15
g 1ரா 16:8
h 1ரா 16:7
i 1ரா 12:28-30, 1ரா 13:33

அதி. 16
j 2நா 16:7
k 2நா 19:2, 2நா 20:34
l 1சா 2:8
m 1ரா 13:33
n 1ரா 14:10, 11; 1ரா 15:29

வில் அடக்கம் செய்தார்கள்.[a] அடுத்ததாக, அவருடைய மகன் ஏலா ராஜா
வானார். **7** அனானியின் மகனும் தீர்க்கதரிசியுமான யெகூ மூலம் பாஷா
வுக்கும் அவருடைய வீட்டாருக்கும் விரோதமாக யெகோவா தீர்ப்பு சொல்
லியிருந்தார்; ஏனென்றால், யெகோவா வெறுக்கிற எல்லா காரியங்களையும்
பாஷா செய்திருந்தார்; யெரொபெயாமின் வீட்டாரைப் போலவே நடந்து
கடவுளைப் புண்படுத்தியிருந்தார்; அதோடு, நாதாபை* கொன்றுபோட்டி
ருந்தார்.[b]

8 ஆசா ராஜா யூதாவை ஆட்சி செய்த 26-ஆம் வருஷத்தில், பாஷா
வின் மகன் ஏலா திர்சாவில் ராஜாவானார். அவர் இஸ்ரவேலை இரண்டு
வருஷங்கள் ஆட்சி செய்தார். **9** அவருடைய பாதி ரதப் படைகளுக்குத்
தலைவரான சிம்ரி அவரைக் கொன்றுபோட சதித்திட்டம் தீட்டினார். திர்சா
விலிருந்த அரண்மனை அதிகாரியான அர்சாவின் வீட்டில் ஏலா குடிபோ
தையில் இருந்தபோது, **10** சிம்ரி அங்கே வந்து அவரைக் கொன்றுபோட்
டார்.[c] ஆசா ராஜா யூதாவை ஆட்சி செய்த 27-ஆம் வருஷத்தில்
ஏலாவுக்குப் பதிலாக சிம்ரி ராஜாவானார். **11** ராஜாவானதுமே, பாஷா
வின் வீட்டார் எல்லாரையும் கொன்றுபோட்டார். அவருடைய சொந்தக்கா
ரர்களிலும்* நண்பர்களிலும் ஆண்கள்# ஒருவரைக்கூட உயிரோடு
விட்டுவைக்கவில்லை. **12** பாஷாவின் வீட்டாரை சிம்ரி ஒட்டுமொத்த
மாக ஒழித்துக்கட்டினார். இப்படி, பாஷாவுக்கு விரோதமாக யெகூ தீர்க்க
தரிசியின் மூலம் யெகோவா சொன்ன வார்த்தை[d] நிறைவேறியது.
13 பாஷாவுக்கு ஏன் இந்தக் கதி வந்ததென்றால், அவரும் அவருடைய
மகன் ஏலாவும் நிறைய பாவங்கள் செய்திருந்தார்கள். அதோடு, இஸ்ர
வேல் மக்களையும் பாவம் செய்யத் தூண்டியிருந்தார்கள். அதனால், இஸ்
ரவேல் மக்கள் ஒன்றுக்கும் உதவாத சிலைகளை வணங்கி இஸ்ரவேலின்
கடவுளான யெகோவாவைப் புண்படுத்தினார்கள்.[e] **14** ஏலாவின் வாழ்க்
கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும், அவர் செய்த எல்லாவற்
றைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்
டிருக்கிறது.

15 ஆசா ராஜா யூதாவை ஆட்சி செய்த 27-ஆம் வருஷத்தில், சிம்ரி
ராஜாவானார். அவர் திர்சாவில் ஏழு நாட்கள் ஆட்சி செய்தார். அந்தச்
சமயத்தில், பெலிஸ்தியர்களுக்குச் சொந்தமான கிபெத்தோனுக்கு[f] எதிரா
கப் போர் செய்ய இஸ்ரவேல் படைகள் முகாம்போட்டிருந்தன. **16** சிம்ரி
சதித்திட்டம் போட்டு ராஜாவைக் கொன்றுவிட்ட செய்தியை முகாமிலிருந்த
படைவீரர்கள் கேள்விப்பட்டார்கள். அதனால் அன்றைக்கு இஸ்ரவேலர்கள்
எல்லாரும் படைத் தளபதியான உம்ரியை[g] அந்த முகாமில் இஸ்ரவேலின்
ராஜாவாக்கினார்கள். **17** பின்பு, உம்ரியும் அவரோடு இருந்த இஸ்ரவேலர்
கள் எல்லாரும் கிபெத்தோனிலிருந்து புறப்பட்டுப் போய் திர்சாவை முற்று
கையிட்டார்கள். **18** அந்த நகரத்தை அவர்கள் கைப்பற்றிய விஷயம்
சிம்ரிக்குத் தெரிந்தவுடன், அரண்மனையில் இருந்த பாதுகாப்பான கோபு
ரத்துக்குள் நுழைந்தார். அதற்குத் தீ வைத்துவிட்டு, அந்தத் தீயில் தானும்

அதி. 16
a 1ரா 15:21, 33
b 1ரா 15:25-29
c 2ரா 9:31
d 1ரா 16:1-3
e உபா 32:21; 1சா 12:21; 2ரா 17:15; ஏசா 41:29
f யோசு 19:44, 48; யோசு 21:20, 23; 1ரா 15:27

16:7 *அதாவது, “யெரொபெயாமின் மகன் நாதாபை.” **16:11** *வே.வா., “கொலை செய்தவரைப் பழிவாங்குபவர்களிலும்.” #நே.மொ., “சுவரில் சிறுநீர் கழிக்கிறவர்கள்.” வெறுப்பைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட இந்த எபிரெய வார்த்தைகள் ஆண்களைக் குறிக்கின்றன.

g 2ரா 8:26; மீ 6:16

செத்துப்போனார்.[a] **19** அவர் யெரொபெயாமைப் போலவே, யெகோவா
வெறுக்கிற காரியங்களைச் செய்திருந்தார். இஸ்ரவேலர்களையும் பாவம்
செய்யத் தூண்டியிருந்தார்.[b] அதனால்தான், அவருக்கு இந்தக் கதி ஏற்பட்
டது. **20** சிம்ரியின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவர்
போட்ட சதித்திட்டம் ஆகியவற்றைப் பற்றி இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்
திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

21 அந்தச் சமயத்தில், இஸ்ரவேல் மக்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்
தார்கள். ஒரு பிரிவினர் கீனாத்தின் மகனான திப்னியை ராஜாவாக்க
விரும்பி அவரை ஆதரித்தார்கள், இன்னொரு பிரிவினர் உம்ரியை ஆத
ரித்தார்கள். **22** ஆனால், உம்ரியின் ஆதரவாளர்கள் கீனாத்தின் மகனான
திப்னியின் ஆதரவாளர்களை வீழ்த்தினார்கள்; திப்னி இறந்துபோனார்,
உம்ரி ராஜாவானார்.

23 ஆசா ராஜா யூதாவை ஆட்சி செய்த 31-ஆம் வருஷத்தில், உம்ரி
இஸ்ரவேலின் ராஜாவானார். அவர் 12 வருஷங்கள் ஆட்சி செய்தார். அதில்
ஆறு வருஷங்கள் திர்சாவில் ஆட்சி செய்தார்; **24** சேமேரிடமிருந்து
இரண்டு தாலந்து* வெள்ளிக்கு சமாரியா மலையை வாங்கினார். அந்த
மலையில் ஒரு நகரத்தைக் கட்டி, அந்த மலையின் உரிமையாளருடைய
பெயரின்படி அதற்கு சமாரியா#[c] என்று பெயர் வைத்தார். **25** யெகோவா
வெறுக்கிற காரியங்களை உம்ரி செய்துவந்தார். அவருக்கு முன்பிருந்த
ராஜாக்கள் எல்லாரையும்விட படுமோசமானவராக இருந்தார்.[d] **26** நேபாத்
தின் மகனான யெரொபெயாமின் வழியில் நடந்து, இஸ்ரவேல் மக்களைப்
பாவம் செய்யத் தூண்டினார். அதனால், மக்கள் ஒன்றுக்கும் உதவாத சிலை
களை வணங்கி யெகோவாவைப் புண்படுத்தினார்கள்.[e] **27** உம்ரியின்
வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவருடைய வீரதீர செயல்கள்
ஆகியவை இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்
கின்றன. **28** உம்ரி இறந்ததும்,* அவரை சமாரியாவில் அடக்கம் செய்தார்
கள். அடுத்ததாக, அவருடைய மகன் ஆகாப்[f] ராஜாவானார்.

29 ஆசா ராஜா யூதாவை ஆட்சி செய்த 38-ஆம் வருஷத்தில் உம்ரி
யின் மகன் ஆகாப் சமாரியாவில்[g] ராஜாவானார். அவர் இஸ்ரவேலை 22
வருஷங்கள் ஆட்சி செய்தார். **30** உம்ரியின் மகனான ஆகாப் யெகோவா
வெறுக்கிற காரியங்களைச் செய்துவந்தார். அவருக்கு முன்பிருந்த ராஜாக்
கள் எல்லாரையும்விட படுமோசமானவராக இருந்தார்.[h] **31** நேபாத்தின்
மகனான யெரொபெயாம் செய்த பாவங்களை[i] இவரும் செய்தார். இது
போதாதென்று, சீதோனியர்களின்[j] ராஜாவாகிய ஏத்பாகாலின் மகளான யேச
பேலைக்[k] கல்யாணம் செய்தார், பாகாலுக்கு முன்னால் தலைவணங்கி,
அதற்குச் சேவை செய்ய ஆரம்பித்தார்.[l] **32** சமாரியாவில் பாகாலுக்கு ஒரு
கோயில்*[m] கட்டி, அங்கே பலிபீடத்தையும் அமைத்தார். **33** அதோடு,
பூஜைக் கம்பத்தையும்*[n] நிறுத்தினார். தனக்கு முன்பிருந்த இஸ்ரவேல்
ராஜாக்கள் எல்லாரையும்விட படுமோசமான காரியங்களைச் செய்து இஸ்ர
வேலின் கடவுளான யெகோவாவைப் புண்படுத்தினார்.

16:24 * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். # இதன் அர்த்தம், “சேமேர் குலத்துக்குச் சொந்தம்.” **16:28** * நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்.” **16:32** * நே.மொ., “வீடு.” **16:33** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 16
a நியா 9:53, 54; 1சா 31:4; 2சா 17:23
b 1ரா 12:28-30; 1ரா 14:7, 9
c 1ரா 20:1; 2ரா 17:24; ஆமோ 6:1; அப் 8:5
d மீ 6:16
e 1ரா 12:28-30; 1ரா 13:33
f 1ரா 16:33; 1ரா 21:4; 1ரா 21:20-22; 2ரா 10:1
g 1ரா 16:23, 24; ஏசா 7:9
h 1ரா 16:25; 1ரா 21:25; 2ரா 3:1, 2
i 1ரா 12:28-30
j ஆதி 10:15
k 1ரா 18:4, 19; 1ரா 21:7; 2ரா 9:30; வெளி 2:20
l நியா 2:11; நியா 10:6; 2ரா 10:19; 2ரா 17:16
m 2ரா 10:21, 27
n யாத் 34:13; 2ரா 10:26, 28; 2ரா 13:6

அதி. 16
a யோசு 6:26

அதி. 17
b யோசு 22:9
c 1ரா 17:15, 16; 1ரா 17:22, 24; 1ரா 18:36, 38; 1ரா 18:46; 2ரா 2:8, 11; லூ 1:17; யோவா 1:19, 21
d உபா 28:15, 23; எரே 14:22; லூ 4:25; யாக் 5:17
e சங் 37:25; மத் 6:11
f எண் 11:23; நியா 15:19
g 1ரா 18:5
h லூ 4:25, 26
i எபி 11:32, 37
j 2ரா 4:2

34 ஆகாபின் ஆட்சிக் காலத்தில், பெத்தேலைச் சேர்ந்த ஈயேல் என்பவன் எரிகோவைத் திரும்பக் கட்டினான். அதற்கு அஸ்திவாரம் போட்டபோது அவருடைய முதல் மகன் அபிராம் இறந்துபோனான். அதற்குக் கதவுகள் வைத்தபோது அவனுடைய கடைசி மகன் செகூப் இறந்துபோனான். நூனின் மகனான யோசுவா மூலம் யெகோவா சொன்ன வார்த்தை[a] அப்போது நிறைவேறியது.

17 கீலேயாத்[b] பிரதேசத்தைச் சேர்ந்த திஸ்பியனான எலியா*[c] ஆகாபிடம் வந்து, "நான் சேவை செய்கிற இஸ்ரவேலின் கடவுளான யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,# சில வருஷங்களுக்கு இந்தத் தேசத்தில் பனியோ மழையோ பெய்யாது, நான் சொன்ன பிறகுதான் பெய்யும்!"[d] என்றார்.

2 பின்பு யெகோவா அவரிடம், **3** "இங்கிருந்து புறப்பட்டு கிழக்குத் திசையில் போ. யோர்தானுக்குக் கிழக்கே இருக்கிற கேரீத் பள்ளத்தாக்கு* பக்கத்தில் ஒளிந்துகொள். **4** அங்கே இருக்கிற ஓடையிலிருந்து தண்ணீர் குடி. உனக்கு உணவு கொடுக்க அண்டங்காக்கைகளை அனுப்புவேன்"[e] என்று சொன்னார். **5** யெகோவா சொன்னபடி அவர் உடனே புறப்பட்டுப் போனார்; யோர்தானுக்குக் கிழக்கே இருக்கிற கேரீத் பள்ளத்தாக்கு* பக்கத்தில் தங்கினார். **6** காலையிலும் மாலையிலும் அண்டங்காக்கைகள் ரொட்டியும் இறைச்சியும் கொண்டுவந்தன. அவர் அதைச் சாப்பிட்டு, ஓடைத் தண்ணீரைக் குடித்தார்.[f] **7** அந்தத் தேசத்தில் மழையே பெய்யாததால் சில நாட்களில் அந்த ஓடை வறண்டுபோனது.[g]

8 பின்பு யெகோவா அவரிடம், **9** "இங்கிருந்து புறப்பட்டு சீதோனில் இருக்கிற சாறிபாத் நகரத்துக்குப் போய் அங்கேயே தங்கியிரு. அந்த நகரத்தில் இருக்கிற ஒரு விதவை மூலம் உனக்கு உணவு கொடுப்பேன்"[h] என்று சொன்னார். **10** அதனால், எலியா அங்கிருந்து புறப்பட்டு சாறிபாத் நகரத்துக்குப் போனார். அந்த நகரத்தின் நுழைவாசலுக்கு அவர் வந்தபோது, அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். அவளைக் கூப்பிட்டு, "தயவுசெய்து குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவாருங்கள்"[i] என்று சொன்னார். **11** அவள் தண்ணீர் கொண்டுவரப் போனபோது அவளைக் கூப்பிட்டு, "தயவுசெய்து கொஞ்சம் ரொட்டியும் கொண்டுவாருங்கள்" என்று சொன்னார். **12** அதற்கு அவள், "உங்களுடைய கடவுளான யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,# என்னிடம் ரொட்டியே இல்லை. பெரிய ஜாடியில் ஒரு கைப்பிடி மாவும், சின்ன ஜாடியில் கொஞ்சம் எண்ணெயும்தான் இருக்கிறது.[j] இப்போது கொஞ்சம் விறகு பொறுக்கிக்கொண்டிருக்கிறேன், இனிமேல்தான் எனக்கும் என் மகனுக்கும் எதையாவது சமைக்க வேண்டும். இதுதான் எங்களுக்குக் கடைசி உணவு. அதன் பின்பு, நானும் என் மகனும் சாக வேண்டியதுதான்" என்று சொன்னாள்.

13 அப்போது எலியா, "கவலைப்படாதீர்கள். வீட்டுக்குப் போய் நீங்கள் சொன்னபடியே சமையுங்கள். முதலில், உங்களிடம் இருப்பதை வைத்து வட்டமான ஒரு சின்ன ரொட்டியைச் செய்து எனக்குக் கொண்டுவாருங்கள். அதன் பிறகு, உங்களுக்கும் உங்கள் மகனுக்கும் சமைக்கலாம்.

17:1 * அர்த்தம், "யெகோவா என் கடவுள்." **17:1, 12** # வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." **17:3, 5** * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கு."

14 ‘யெகோவா மறுபடியும் இந்தத் தேசத்தில் மழை பெய்ய வைக்கும்வரை,
பெரிய ஜாடியில் இருக்கிற மாவும் குறைந்துபோகாது, சின்ன ஜாடியில்
இருக்கிற எண்ணெயும் தீர்ந்துபோகாது’[a] என்று இஸ்ரவேலின் கடவுளான
யெகோவா சொல்கிறார்” என்றார். **15** அவள் போய் எலியா சொன்னப
டியே செய்தாள். அதனால், அவளுடைய குடும்பத்தாரும் எலியாவும் பல
நாட்களுக்குச் சாப்பிட்டார்கள்.[b] **16** எலியா மூலம் யெகோவா சொன்னப
டியே, பெரிய ஜாடியில் இருந்த மாவும் குறையவில்லை, சின்ன ஜாடியில்
இருந்த எண்ணெயும் தீர்ந்துபோகவில்லை.

17 பின்பு ஒருநாள் அந்தப் பெண்ணின் மகன், அதாவது அந்த வீட்டுச்
சொந்தக்காரியின் மகன், நோய்வாய்ப்பட்டான். அவனுடைய உடல்நிலை
ரொம்ப மோசமாகிக்கொண்டே வந்தது; கடைசியில், அவன் இறந்துபோ
னான்.[c] **18** அப்போது அவள் எலியாவிடம், “உண்மைக் கடவுளின் ஊழி
யரே, நான் உங்களுக்கு என்ன பாவம் செய்தேன்? நான் செய்த குற்றத்தை
ஞாபகப்படுத்தி, என் மகனைச் சாகடிக்கவா வந்தீர்கள்?”[d] என்று கேட்டாள்.
19 எலியா அவளிடம், “உங்கள் மகனை என்னிடம் கொடுங்கள்” என்
றார். அவள் கையிலிருந்து பிள்ளையை வாங்கி, தான் தங்கியிருந்த மாடி
அறைக்குக் கொண்டுபோனார். அவனைத் தன்னுடைய கட்டிலில் படுக்க
வைத்தார்.[e] **20** பின்பு, “யெகோவாவே, என் கடவுளே,[f] நான் தங்குவ
தற்கு இடம் கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகடித்து, அவளுக்
கும் வேதனை தந்துவிட்டீர்களா?” என்று சொல்லி யெகோவாவிடம் ஜெபம்
செய்தார். **21** அதன் பின்பு, அந்தப் பிள்ளையின் மீது மூன்று தடவை
படுத்து, “யெகோவாவே, என் கடவுளே, தயவுசெய்து இந்தப் பிள்ளைக்கு
உயிர் கொடுங்கள்” என்று யெகோவாவிடம் கெஞ்சினார். **22** எலியா
செய்த ஜெபத்தை யெகோவா கேட்டார்.[g] அந்தப் பையனுக்கு உயிர் வந்
தது, அவன் பிழைத்துக்கொண்டான்.[h] **23** எலியா அந்தப் பிள்ளையை
மாடி அறையிலிருந்து கூட்டிக்கொண்டு வந்து அவனுடைய அம்மாவிடம்
கொடுத்தார். அப்போது எலியா, “இங்கே பாருங்கள், உங்கள் மகன்
உயிரோடிருக்கிறான்”[i] என்று சொன்னார். **24** அப்போது அந்தப் பெண்,
“நிஜமாகவே நீங்கள் கடவுள் அனுப்பிய தீர்க்கதரிசிதான்,[j] உங்கள் மூலம்
யெகோவா சொல்கிற வார்த்தையெல்லாம் உண்மை என்பதை இப்போது
புரிந்துகொண்டேன்” என்று சொன்னாள்.

18 சில காலம் கழித்து, அதாவது மூன்றாம் வருஷத்தில்,[k] யெகோவா
எலியாவிடம், “நீ புறப்பட்டு ஆகாபிடம் போ. நான் இந்த மண்
ணில் மழை பெய்ய வைப்பேன்”[l] என்று சொன்னார். **2** அதனால், ஆகா
பைச் சந்திக்க எலியா புறப்பட்டுப் போனார். அந்தச் சமயத்தில் சமாரியா
வில் பஞ்சம் கடுமையாக இருந்தது.[m]

3 இதற்கிடையே, ஆகாப் தன்னுடைய அரண்மனை அதிகாரியான ஒப
தியாவைக் கூப்பிட்டார். (யெகோவாமீது ஒபதியா அதிக பயபக்தி வைத்தி
ருந்தார், **4** யெகோவாவின் தீர்க்கதரிசிகளை யேசபேல்[n] ஒழித்துக்கட்டிய
சமயத்தில், இவர் 100 தீர்க்கதரிசிகளைப் பாதுகாத்து வந்திருந்தார். அவர்
களை ஐம்பது ஐம்பது பேராகக் குகைகளில் ஒளித்து வைத்து, அவர்களுக்கு
ரொட்டியும் தண்ணீரும் கொடுத்து வந்திருந்தார்.) **5** ஆகாப் அவரிடம், “நீ
போய் தேசத்திலிருக்கிற நீரூற்றுகளையும் பள்ளத்தாக்குகளையும்* ஒன்று

18:5 * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குகளையும்.”

அதி. 17
a சங் 34:10
சங் 37:17, 19
பிலி 4:19
b மத் 10:41, 42
லூ 4:25, 26
c 2ரா 4:19, 20
d யோபு 13:26
e 2ரா 4:21, 32
f சங் 99:6
g யாக் 5:16
h உபா 32:39
1சா 2:6
2ரா 4:32, 34
2ரா 13:21
லூ 7:15
லூ 8:54, 55
யோவா 5:
28, 29
யோவா 11:44
அப் 9:40, 41
அப் 20:9, 10
ரோ 14:9
எபி 11:17, 19
i எபி 11:35
j யோவா 3:2

அதி. 18
k லூ 4:25
யாக் 5:17
l சங் 65:9, 10
எரே 14:22
m லேவி 26:26
உபா 28:24
n 1ரா 16:31

அதி. 18
a 2ரா 1:8
b 1ரா 17:2, 3
c 2ரா 2:15, 16 மத் 4:1 அப் 8:39
d 1ரா 18:4

விடாமல் பார்த்துவிட்டு வா. ஒருவேளை, நம்முடைய குதிரைகளையும்
கோவேறு கழுதைகளையும் காப்பாற்றுவதற்குப் போதுமான புல் கிடைக்க
லாம். அப்போதுதான், நம்முடைய எல்லா மிருகங்களையும் இழக்க வேண்
டியிருக்காது" என்று சொன்னார். **6** தேட வேண்டிய பகுதிகளை இரண்டு
பேரும் தங்களுக்குள் பிரித்துக்கொண்டார்கள். பின்பு ஆகாப் ஒரு வழியில்
போனார், ஒபதியா மற்றொரு வழியில் போனார்.

7 ஒபதியா போய்க்கொண்டிருந்தபோது, அவரைப் பார்க்க எலியா வந்
தார். உடனே ஒபதியா அவரை அடையாளம் கண்டுகொண்டு, அவர் முன்
னால் சாஷ்டாங்கமாக விழுந்து, "நீங்கள் என் எஜமான் எலியாதானே?"[a]
என்று கேட்டார். **8** அதற்கு எலியா, "ஆமாம். நீ போய் உன் எஜமானி
டம், 'எலியா இங்கேதான் இருக்கிறார்' என்று சொல்" என்றார். **9** அதற்கு
அவர், "இதைச் சொன்னால் ஆகாப் என்னைக் கொன்றுபோட மாட்
டாரா? நான் உங்களுக்கு என்ன பாவம் செய்தேன்? உங்கள் அடி
யேனை ஏன் அவர் கையில் சிக்க வைக்கிறீர்கள்? **10** உங்கள் கடவுளான
யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* என் எஜமான் உங்களைத்
தேடாத இடமே இல்லை. உங்களைக் கண்டுபிடிப்பதற்காக எல்லா தேசங்
களுக்கும் ராஜ்யங்களுக்கும் ஆட்களை அனுப்பினார். 'எலியா இங்கே
இல்லை' என்று அங்கிருந்தவர்கள் சொன்னபோது, அதைச் சத்தியம்
பண்ணி சொல்லச் சொன்னார்.[b] **11** இப்போது நீங்கள், 'உன் எஜமானி
டம் போய், "எலியா இங்கேதான் இருக்கிறார்"' என்று சொல்லச் சொல்கிறீர்
களே. **12** நான் இங்கிருந்து போனதும், யெகோவாவின் சக்தி உங்களை
வேறொரு இடத்துக்குக் கொண்டுபோய்விடும்.[c] நான் சொன்னதைக் கேட்டு
ஆகாப் உங்களைப் பார்க்க வரும்போது நீங்கள் இங்கே இல்லாவிட்டால்,
அவர் என்னைக் கண்டிப்பாகக் கொன்றுவிடுவார். ஆனால், நான் சின்ன
வயதிலிருந்தே யெகோவாவுக்குப் பயந்து நடப்பவன். **13** எஜமானே,
யெகோவாவின் தீர்க்கதரிசிகளை யேசபேல் கொன்றுபோட்டுக் கொண்டி
ருந்தபோது, அவர்களில் 100 பேரைக் காப்பாற்றினேனே! யெகோவா
வின் தீர்க்கதரிசிகளை ஐம்பது ஐம்பது பேராகக் குகைகளில் ஒளித்து
வைத்து அவர்களுக்கு ரொட்டியும் தண்ணீரும் தந்தேனே![d] இதையெல்
லாம் யாரும் உங்களிடம் சொல்லவில்லையா? **14** அப்படியிருக்க, 'உன்
எஜமானிடம் போய், "எலியா இங்கேதான் இருக்கிறார்"' என்று சொல்லச்
சொல்கிறீர்களே. அவர் என்னைக் கண்டிப்பாகக் கொன்றுவிடுவார்" என்று
சொன்னார். **15** அதற்கு எலியா, "நான் சேவை செய்கிற பரலோகப் படை
களின் யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* இன்று நான் நிச்ச
யம் ஆகாப் முன்னால் நிற்பேன்" என்று சொன்னார்.

16 அதனால் ஒபதியா அங்கிருந்து போய் ஆகாபிடம் விஷயத்தைச்
சொன்னார். அப்போது, எலியாவைச் சந்திக்க ஆகாப் வந்தார்.

17 எலியாவைப் பார்த்ததும், "இஸ்ரவேலர்களுக்குக் கஷ்டத்துக்குமேல்
கஷ்டம் கொடுக்கிறவன் நீதானே?" என்று ஆகாப் கேட்டார்.

18 அதற்கு அவர், "இஸ்ரவேலர்கள் படுகிற கஷ்டத்துக்கு நான்
காரணமில்லை. நீங்களும் உங்கள் அப்பா வீட்டாரும்தான் காரணம். நீங்
கள் யெகோவாவின் கட்டளைகளை ஒதுக்கித்தள்ளிவிட்டு பாகால்களை

18:10, 15 * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

வணங்கியதால்தான் இவ்வளவு கஷ்டமும் வந்தது.[a] **19** இப்போது இஸ்ர
வேலர்கள் எல்லாரையும் கர்மேல் மலையில்[b] என் முன்னால் வரச்
சொல்லுங்கள். யேசபேலின் மேஜையில் சாப்பிடுகிற 450 பாகால் தீர்க்க
தரிசிகளையும் பூஜைக் கம்பத்தை*[c] வழிபடுகிற 400 தீர்க்கதரிசிகளையும்
வரச்சொல்லுங்கள்” என்று சொன்னார். **20** அதனால், இஸ்ரவேலர்கள் எல்
லாருக்கும் ஆகாப் செய்தி அனுப்பினார். அவர்களையும் அந்தத் தீர்க்கத
ரிசிகளையும் கர்மேல் மலைக்கு வரவழைத்தார்.

21 பின்பு எலியா அங்கே கூடிவந்திருந்த மக்கள் எல்லாரையும் பார்த்து,
“நீங்கள் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இரண்டு மனதாக இருப்பீர்
கள்?*[d] யெகோவாதான் உண்மையான கடவுள் என்றால் அவரை வணங்
குங்கள்;#[e] பாகால்தான் உண்மையான கடவுள் என்றால் அவனை வணங்
குங்கள்!”# என்று சொன்னார். ஆனால், மக்கள் அவருக்கு எந்தப் பதிலும்
சொல்லாமல் அமைதியாக இருந்தார்கள். **22** பின்பு எலியா அவர்களிடம்,
“யெகோவாவின் தீர்க்கதரிசிகளில் நான் மட்டும்தான் இப்போது உயிரோடு
இருக்கிறேன்.[f] ஆனால் பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேர் இருக்கிறார்கள்.
23 அவர்களிடம் இரண்டு இளம் காளைகளைக் கொண்டுவரச் சொல்லுங்
கள். அவற்றில் ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுத்து, துண்டு துண்டாக
வெட்டி விறகுகள்மேல் வைக்கட்டும். ஆனால், அவற்றுக்கு நெருப்பு வைக்
கக் கூடாது. நானும் இன்னொரு காளையைத் துண்டு துண்டாக வெட்டி விற
குகள்மேல் வைப்பேன். ஆனால், நெருப்பு வைக்க மாட்டேன். **24** நீங்கள்
உங்களுடைய கடவுளின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்ளுங்கள்.[g]
நான் யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்வேன். எந்தக்
கடவுள் நெருப்பை அனுப்பி பதில் தருகிறாரோ அவர்தான் உண்மையான
கடவுள்”[h] என்று சொன்னார். அதற்கு மக்கள் எல்லாரும், “சரி, அப்படியே
செய்யலாம்” என்று சொன்னார்கள்.

25 அப்போது எலியா பாகால் தீர்க்கதரிசிகளிடம், “நீங்கள் நிறைய
பேர் இருக்கிறீர்கள். அதனால் முதலில் நீங்கள் போய் இளம் காளை
ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். பலிகொடுக்க அதைத் தயார் செய்து, உங்க
ளுடைய கடவுள் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்ளுங்கள். ஆனால்,
நெருப்பு வைக்கக் கூடாது” என்று சொன்னார். **26** அதனால், அவர்கள்
தாங்கள் தேர்ந்தெடுத்த இளம் காளையைப் பலிகொடுக்கத் தயார் செய்தார்
கள். பின்பு காலையிலிருந்து மத்தியானம்வரை, “பாகாலே! பதில் தா” என்று
வேண்டிக்கொண்டே இருந்தார்கள். ஆனால் எந்தச் சத்தமும் வரவில்லை,
யாரும் பதில் தரவுமில்லை.[i] தாங்கள் கட்டிய பலிபீடத்தைச் சுற்றி அவர்
கள் குதித்துக் குதித்து ஆடினார்கள். **27** மத்தியானத்தில் எலியா அவர்க
ளைப் பார்த்து, “தொண்டை கிழிய கத்துங்கள்! அவன் ஒரு கடவுள்தானே![j]
ஏதாவது ஆழ்ந்த யோசனையில் இருப்பான். இல்லை, கழிப்பிடத்துக்குப்
போயிருப்பான்,* ஒருவேளை தூங்கினாலும் தூங்கியிருப்பான். யாரா
வது அவனை எழுப்பினால்தான் உண்டு!” என்று கேலி செய்தார்.
28 அவர்கள் தொண்டை கிழிய கத்திக்கொண்டிருந்தார்கள்; தங்கள்
வழக்கப்படி, குத்துவாள்களையும் பெரிய ஈட்டிகளையும் வைத்து உடம்

18:19 *சொல் பட்டியலைப் பாருங்கள். **18:21** *நே.மொ., “இரண்டு கருத்துகளுக்கு நடுவே நொண்டி நொண்டி நடப்பீர்கள்?” #வே.வா., “பின்பற்றுங்கள்.” **18:27** *அல்லது, “பயணம் போயிருப்பான்.”

அதி. 18
a யாத் 20:4; 1ரா 9:9; 1ரா 16:30-33
b யோசு 19:26, 31
c 1ரா 16:33
d எரே 2:11; ஓசி 10:2; மத் 12:30; 1கொ 10:21; 2கொ 6:14, 15
e யாத் 20:5; யோசு 24:15; 1சா 7:3; சங் 100:3
f 1ரா 19:9, 10
g நியா 6:31
h லேவி 9:23, 24; உபா 4:24; நியா 6:21; 1நா 21:26; 2நா 7:1
i ஏசா 45:20; எரே 10:5; தானி 5:23; ஆப 2:18, 19; 1கொ 8:4
j ஏசா 41:23

பைக் கீறிக்கொண்டிருந்தார்கள்; அதனால், அவர்களுடைய உடம்பு முழு
வதும் இரத்தம் கொட்டியது. **29** மத்தியானம்முதல் மாலையில் உணவுக்
காணிக்கை செலுத்தும் நேரம்வரை வெறித்தனமாய்க் கத்திக்கொண்டிருந்
தார்கள். ஆனால் எந்தச் சத்தமும் வரவில்லை, யாரும் பதில் தரவுமில்லை,
அவர்களுடைய வேண்டுதலை யாரும் கேட்கவுமில்லை.[a]

30 கடைசியில் எலியா அந்த மக்கள் எல்லாரையும் பார்த்து, “இங்கே
வாருங்கள்” என்று சொன்னார். மக்கள் எல்லாரும் அவரிடம் போனார்கள்.
இடித்துப் போடப்பட்டிருந்த யெகோவாவின் பலிபீடத்தை அவர் சரிசெய்
தார்.[b] **31** யாக்கோபின் மகன்கள் மூலம் உருவான கோத்திரங்களின் எண்
ணிக்கைப்படி, எலியா 12 கற்களை எடுத்தார். அந்த யாக்கோபிடம்தான்,
“உன்னுடைய பெயர் இஸ்ரவேல்”[c] என்று யெகோவா சொல்லியிருந்தார்.
32 அந்த 12 கற்களை வைத்து யெகோவாவின் பெயருக்குப் புகழ் சேர்ப்
பதற்காக எலியா ஒரு பலிபீடத்தைக் கட்டினார்.[d] பின்பு, இரண்டு சியா
அளவு* விதை விதைக்கும் அளவுக்கு இடம்விட்டு, அந்தப் பலிபீடத்
தைச் சுற்றி பெரிய வாய்க்காலை வெட்டினார். **33** பலிபீடத்தின் மீது விற
குகளை அடுக்கினார், இளம் காளையைத் துண்டு துண்டாக வெட்டி
அவற்றின்மேல் வைத்தார்.[e] பின்பு, “நான்கு பெரிய குடங்களில் தண்ணீர்
கொண்டுவந்து இந்தத் தகன பலிமீதும் விறகுகள்மீதும் ஊற்றுங்கள்” என்று
சொன்னார். **34** அதன் பின்பு, “மறுபடியும் ஊற்றுங்கள்” என்று சொன்னார்.
அவர்கள் அப்படியே செய்தார்கள். பின்பு, “மூன்றாவது தடவையும் ஊற்
றுங்கள்” என்று சொன்னார். அவர்கள் மூன்றாவது தடவையும் ஊற்றினார்
கள். **35** பலிபீடத்தைச் சுற்றிலும் தண்ணீர் ஓடியது. எலியா அந்த வாய்க்
காலையும் தண்ணீரால் நிரப்பினார்.

36 மாலையில் உணவுக் காணிக்கை செலுத்துகிற நேரத்தில்,[f] பலிபீடத்
துக்குப் பக்கத்தில் எலியா தீர்க்கதரிசி வந்து, “யெகோவாவே, ஆபிரகாம்,[g]
ஈசாக்கு,[h] இஸ்ரவேல் ஆகியோரின் தேவனே, நீங்கள்தான் இஸ்ரவேலின்
கடவுள் என்பதையும், நான் உங்களுடைய ஊழியன் என்பதையும், நீங்கள்
சொல்லித்தான் இவை எல்லாவற்றையும் செய்தேன்[i] என்பதையும் இன்று
எல்லாருக்கும் தெரியப்படுத்துங்கள். **37** யெகோவாவே, எனக்குப் பதில்
கொடுங்கள்! நீங்கள்தான் உண்மையான கடவுள் என்பதையும், நீங்கள்தான்
அவர்களுடைய இதயத்தை உங்கள் பக்கம் திருப்புகிறீர்கள் என்பதையும்
இந்த மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதனால், யெகோவாவே எனக்
குப் பதில் கொடுங்கள்”[j] என்று ஜெபம் செய்தார்.

38 உடனடியாக, யெகோவா அனுப்பிய நெருப்பு வானத்திலிருந்து வந்து,
தகன பலியையும் விறகுகளையும் கற்களையும் மண்ணையும் சுட்டெரித்
தது.[k] வாய்க்காலில் இருந்த தண்ணீரையும் உறிஞ்சியது.[l] **39** மக்கள் எல்
லாரும் அதைப் பார்த்தவுடன் சாஷ்டாங்கமாய் விழுந்து, “யெகோவா
தான் உண்மையான கடவுள்! யெகோவாதான் உண்மையான கடவுள்”
என்று சொன்னார்கள். **40** அப்போது எலியா அவர்களிடம், “பாகால் தீர்க்
கதரிசிகளைப் பிடியுங்கள்! ஒருவனைக்கூட விடாதீர்கள்!” என்று சொன்
னார். உடனே அவர்களைப் பிடித்தார்கள். எலியா அவர்கள் எல்லாரையும்
கீசோன் நீரோடைக்கு*[m] கொண்டுபோய் வெட்டிப்போட்டார்.[n]

18:32 * ஒரு சியா என்பது 7.33 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **18:40** * வே.வா., “காட்டாற்றுப் பள்ளத்தாக்குக்கு.”

அதி. 18
a ஏசா 44:19, 20
b 1ரா 19:14
c ஆதி 32:28, 30; ஆதி 35:10; ஏசா 48:1
d யாத் 20:25; உபா 27:6
e ஆதி 22:9; லேவி 1:7, 8
f யாத் 29:41
g ஆதி 26:24
h ஆதி 28:13
i எண் 16:28; யோவா 11:42
j எரே 31:18; எசே 33:11
k லேவி 9:23, 24; நியா 6:21; 2நா 7:1
l 1ரா 18:23, 24
m நியா 5:20, 21; சங் 83:9
n உபா 13:1-5; உபா 18:20

41 அப்போது எலியா ஆகாபைப் பார்த்து, “நீங்கள் போய் சாப்
பிட்டுக் குடியுங்கள். கனமழை பெய்கிற சத்தம் கேட்கிறது”[a] என்று சொன்
னார். **42** அதனால், ஆகாப் சாப்பிடவும் குடிக்கவும் போனார். எலியாவோ
கர்மேல் மலை உச்சிக்குப் போய் அங்கே தரையில் மண்டிபோட்டு,
குனிந்து தன் தலையை முழங்கால்களுக்கு இடையே வைத்துக்கொண்டார்.[b]
43 பின்பு தன் ஊழியனிடம், “தயவுசெய்து ஏறிப்போய் கடல் பக்கமாய்ப்
பார்” என்று சொன்னார். அவனும் ஏறிப்போய்ப் பார்த்துவிட்டு வந்து, “ஒன்
றுமே இல்லை” என்று சொன்னான். இப்படி ஏழு தடவை அவனை அனுப்பி,
“போய்ப் பார்” என்று சொன்னார். **44** ஏழாவது தடவை அந்த ஊழியன்
வந்து, “அதோ, கையளவுக்குச் சிறிய மேகம் ஒன்று கடலில் இருந்து
மேலே வருகிறது” என்று சொன்னான். உடனே அவர், “நீ போய் ஆகாபி
டம், ‘ரதத்தைத் தயார்படுத்தி புறப்படுங்கள். இல்லையென்றால், பலத்த மழை
யில் மாட்டிக்கொள்வீர்கள்’ என்று சொல்” என்றார். **45** இதற்கிடையே,
வானத்தில் கார்மேகங்கள் சூழ்ந்தன. பலத்த காற்று வீசியது, மழையும்
பயங்கரமாகக் கொட்டியது.[c] ஆகாப் தன்னுடைய ரதத்தில் யெஸ்ரயேலுக்
குப்[d] போய்க்கொண்டிருந்தார். **46** எலியாவுக்கு யெகோவா விசேஷ பலத்
தைக் கொடுத்ததால்,* அவர் தன்னுடைய அங்கியை இடுப்பில் இழுத்துக்
கட்டிக்கொண்டு ஆகாபுக்கு முன்னால் ஓடி யெஸ்ரயேலை அடைந்தார்.

19 எலியா செய்த எல்லா காரியங்களைப் பற்றியும், தீர்க்கதரிசிகள் எல்
லாரையும் அவர் வாளால் வெட்டிக் கொன்றதைப் பற்றியும்[e] யேச
பேலிடம்[f] ஆகாப்[g] சொன்னார். **2** உடனே யேசபேல் எலியாவிடம் ஆள்
அனுப்பி, “அந்தத் தீர்க்கதரிசிகளை நீ தீர்த்துக்கட்டியதுபோல் நாளைக்கு
இந்நேரத்துக்குள் நான் உன்னைத் தீர்த்துக்கட்டுகிறேன், பார்! அப்படிச்
செய்யாவிட்டால் தெய்வங்கள் எனக்குக் கடும் தண்டனை கொடுக்கட்டும்!”
என்று சொன்னாள். **3** அதைக் கேட்டதும் எலியா கதிகலங்கிப்போனார்.
தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அங்கிருந்து தப்பித்து யூதாவி
லுள்ள பெயெர்-செபாவுக்கு[h] ஓடிப்போனார்;[i] அங்கே தன்னுடைய
ஊழியனை விட்டுவிட்டு, **4** வனாந்தரத்தில் ஒருநாள் முழுவதும் நடந்து
போனார்; ஒரு புதர்ச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாக வேண்டுமென்று
கடவுளிடம் வேண்டினார். “போதும், யெகோவாவே! என் உயிரை எடுத்து
விடுங்கள்.[j] செத்துப்போன என் முன்னோர்களைவிட நான் எந்த விதத்தி
லும் மேலானவன் அல்ல” என்று வேண்டினார்.

5 பின்பு, அந்தப் புதர்ச்செடியின்கீழ் படுத்துத் தூங்கிவிட்டார். திடீரென்று
ஒரு தேவதூதர் அவரைத் தொட்டு,[k] “எழுந்து சாப்பிடு”[l] என்று சொன்னார்.
6 அவர் எழுந்து பார்த்தபோது, சூடாக்கப்பட்ட கற்கள்மீது ரொட்டியும்
ஒரு ஜாடியில் தண்ணீரும் அவருடைய தலைமாட்டில் இருந்தன. அதைச்
சாப்பிட்டு தண்ணீர் குடித்துவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டார். **7** பிற்
பாடு, யெகோவாவின் தூதர் இரண்டாவது தடவை வந்து அவரைத் தொட்டு,
“எழுந்து சாப்பிடு, ரொம்பத் தூரம் பயணம் செய்ய உனக்குச் சக்தி வேண்
டும்” என்று சொன்னார். **8** அதனால் அவர் எழுந்து சாப்பிட்டு, தண்ணீர்
குடித்தார். அந்தத் தெம்பில் 40 நாட்கள் ராத்திரியும் பகலும் நடந்து உண்
மைக் கடவுளின் மலையாகிய ஓரேபுக்குப்[m] போய்ச் சேர்ந்தார்.

18:46 * நே.மொ., “யெகோவாவின் கை எலியாவின்மேல் இருந்ததால்.”

அதி. 18
a 1ரா 17:1
b யாக் 5:17, 18
c 1சா 12:18; யோபு 38:37
d யோசு 19:17, 18; 1ரா 21:1

அதி. 19
e 1ரா 18:40
f 1ரா 16:31
g 1ரா 16:29; 1ரா 21:25
h ஆதி 21:31; யோசு 15:21, 28
i யாத் 2:15; 1சா 27:1
j எண் 11:15; யோபு 3:21; யோனா 4:3
k தானி 10:8-10; அப் 12:7
l சங் 34:7; எபி 1:7, 14
m யாத் 3:1; யாத் 19:18; மல் 4:4

9 அன்று ராத்திரி அங்கிருந்த ஒரு குகையில் தங்கினார்.[a] அப்போது
யெகோவா அவரிடம், “எலியா, இங்கே என்ன செய்கிறாய்?” என்று கேட்
டார். **10** அதற்கு அவர், “பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா
வுக்கு வைராக்கியமாகச் சேவை செய்து வந்திருக்கிறேன்.[b] ஆனால்,
இஸ்ரவேல் மக்கள் உங்களுடைய ஒப்பந்தத்தை மீறிவிட்டார்கள்,[c] உங்களு
டைய பலிபீடங்களை இடித்துப் போட்டுவிட்டார்கள், உங்களுடைய தீர்க்க
தரிசிகளை வாளால் கொன்றுவிட்டார்கள்,[d] நான் ஒருவன் மட்டும்தான் மீதி
யிருக்கிறேன். இப்போது என் உயிரையும் பறிக்கப் பார்க்கிறார்கள்”[e] என்று
சொன்னார். **11** கடவுள் அவரிடம், “நீ வெளியே போய் இந்த மலையில்
யெகோவா முன்னால் நில்” என்று சொன்னார். அப்போது, யெகோவா கடந்
துபோனார்.[f] பலத்த காற்று வீசியது. அதனால், யெகோவா முன்னால் மலை
கள் பிளந்தன, பாறைகள் தகர்ந்தன.[g] ஆனால், யெகோவா அந்தக் காற்
றில் இருக்கவில்லை. காற்று ஓய்ந்த பிறகு நிலநடுக்கம் ஏற்பட்டது;[h]
ஆனால், யெகோவா அந்த நிலநடுக்கத்திலும் இருக்கவில்லை. **12** நில
நடுக்கத்துக்குப் பிறகு, நெருப்பு வந்தது.[i] ஆனால், யெகோவா அந்த நெருப்
பிலும் இருக்கவில்லை. நெருப்புக்குப் பிறகு அமைதியான, மென்மையான
ஒரு குரல் கேட்டது.[j] **13** எலியா அதைக் கேட்டதும், தன்னுடைய அங்கி
யால்* முகத்தை மூடிக்கொண்டு,[k] வெளியே வந்து அந்தக் குகையின் வாச
லில் நின்றுகொண்டார். அப்போது அந்தக் குரல், “எலியா, இங்கே என்ன
செய்கிறாய்?” என்று கேட்டது. **14** அதற்கு அவர், “பரலோகப் படைக
ளின் கடவுளான யெகோவாவுக்கு வைராக்கியமாகச் சேவை செய்து வந்தி
ருக்கிறேன். ஆனால், இஸ்ரவேல் மக்கள் உங்களுடைய ஒப்பந்தத்தை மீறி
விட்டார்கள்,[l] உங்களுடைய பலிபீடங்களை இடித்துப் போட்டுவிட்டார்கள்,
உங்களுடைய தீர்க்கதரிசிகளை வாளால் கொன்றுவிட்டார்கள், நான் ஒரு
வன் மட்டும்தான் மீதியிருக்கிறேன். இப்போது என் உயிரையும் பறிக்கப்
பார்க்கிறார்கள்”[m] என்று சொன்னார்.

15 அப்போது யெகோவா அவரிடம், “நீ இங்கிருந்து தமஸ்குவிலுள்ள
வனாந்தரத்துக்குப் போ. அங்கே போனதும், அசகேலை[n] சீரியாவின் ராஜா
வாக அபிஷேகம் செய். **16** நிம்சியின் பேரன் யெகூவை இஸ்ரவேலின்
ராஜாவாக அபிஷேகம் செய்.[o] உனக்குப் பின்பு தீர்க்கதரிசியாகச் சேவை
செய்ய ஆபேல்-மெகொல்லாவைச் சேர்ந்த சாப்பாத்தின் மகன் எலிசாவை*
அபிஷேகம் செய்.[p] **17** அசகேலின் வாளுக்குத்[q] தப்புகிறவர்களை யெகூ
கொன்றுபோடுவான்,[r] யெகூவின் வாளுக்குத் தப்புகிறவர்களை எலிசா
கொன்றுபோடுவான்.[s] **18** பாகால்முன் மண்டிபோடாத,[t] அவனை முத்த
மிடாத[u] 7,000 பேர் இன்னும் இஸ்ரவேலில் இருக்கிறார்கள்”[v] என்று
சொன்னார்.

19 எலியா அங்கிருந்து போய் சாப்பாத்தின் மகனான எலிசாவைப்
பார்த்தார். எலிசாவுக்கு முன்னால் 12 ஜோடி காளைகள் ஏர் உழுதுகொண்டி
ருந்தன. பன்னிரண்டாவது ஜோடி காளைகளை வைத்து எலிசா உழுது
கொண்டிருந்தார். அப்போது, எலியா அவரிடம் போய்த் தன்னுடைய அங்
கியை*[w] அவர்மேல் போட்டார். **20** உடனே எலிசா அந்தக் காளைகளை

19:13 * அதாவது, “தீர்க்கதரிசியின் அங்கியால்.” **19:16** * அர்த்தம், “கடவுளே மீட்பு.”
19:19 * அதாவது, “தீர்க்கதரிசியின் அங்கியை.”

அதி. 19
a எபி 11:32, 38
b யாத் 20:4, 5; எண் 25:11; சங் 69:9
c உபா 29:24, 25; நியா 2:20; 1ரா 8:9; 2ரா 17:15
d 1ரா 18:4
e 1ரா 19:2; ரோ 11:2, 3
f யாத் 33:22
g சங் 50:3; ஏசா 29:6
h 1சா 14:15; யோபு 9:6; சங் 68:8; நாகூ 1:5
i உபா 4:11
j யாத் 34:5, 6
k யாத் 3:6
l உபா 31:20; சங் 78:37; ஏசா 1:4; எரே 22:9
m ரோ 11:2, 3
n 2ரா 8:7, 8; ஆமோ 1:4
o 2ரா 9:1-3; 2ரா 9:30-33
p 2ரா 2:9, 15
q 2ரா 8:12; 2ரா 10:32; 2ரா 13:3
r 2ரா 9:14, 24; 2ரா 10:6, 7; 2ரா 10:23, 25
s 2ரா 2:23, 24
t யாத் 20:5
u ஓசி 13:2
v ரோ 11:4
w 2ரா 2:8

விட்டுவிட்டு எலியா பின்னால் ஓடிவந்து, “நான் போய் என் அப்பா
அம்மாவிடமிருந்து விடைபெற்று வர* தயவுசெய்து அனுமதி கொடுங்கள்.
பிறகு, உங்களோடு வருகிறேன்” என்று சொன்னார். அதற்கு எலியா,
“போய் வா, நான் ஒன்றும் உன்னைத் தடுக்கவில்லையே” என்று சொன்னார்.
21 அதனால், எலிசா போய் ஒரு ஜோடி காளைகளை வெட்டினார்.* உழு
வதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளை விறகாகப் பயன்படுத்தி இறைச்
சியை வேக வைத்தார். அதை மக்களுக்குச் சாப்பிடக் கொடுத்தார். பின்பு,
அங்கிருந்து புறப்பட்டு எலியாவுடன் போய், அவருக்குப் பணிவிடை
செய்துவந்தார்.[a]

20 சீரியாவின்[b] ராஜாவான பெனாதாத்[c] தன்னுடைய முழு படையை
யும் திரட்டிக்கொண்டு சமாரியாவை எதிர்த்துப் போர் செய்ய
வந்தான். தன்னோடு 32 ராஜாக்களையும் அவர்களுடைய குதிரைகளையும்
ரதங்களையும் கொண்டுவந்தான்; அவன் சமாரியாவை[d] முற்றுகையிட்டு,[e]
அதற்கு எதிராகப் போர் செய்தான். **2** அப்போது தன்னுடைய தூதுவர்
களை நகரத்தில் இருந்த இஸ்ரவேலின் ராஜாவான ஆகாபிடம்[f] அனுப்பி,
3 “உன்னுடைய தங்கமும் வெள்ளியும் எனக்குச் சொந்தம். உன்னுடைய
அழகிய மனைவிகளும் அருமையான மகன்களும் எனக்குச் சொந்தம்
என்று பெனாதாத் சொல்கிறார்” என்று சொல்லச் சொன்னான். **4** அதற்கு
இஸ்ரவேலின் ராஜா, “என் எஜமானே, ராஜாவே, நீங்கள் சொன்னபடியே
செய்கிறேன். நான் உங்கள் ஊழியன். என்னிடம் இருக்கிற எல்லாமே உங்
களுக்குத்தான் சொந்தம்”[g] என்று சொல்லி அனுப்பினார்.

5 மறுபடியும் அந்தத் தூதுவர்கள் ஆகாபிடம் வந்து, “பெனாதாத் சொல்
வது என்னவென்றால், ‘உன்னுடைய தங்கத்தையும் வெள்ளியையும், மனை
விகளையும் மகன்களையும் நீ எனக்குத் தந்துவிட வேண்டும்’ என்று உனக்
குச் சொல்லி அனுப்பியிருந்தேன். **6** ஆனால், நாளைக்கு இதே நேரம்
நான் என்னுடைய ஊழியர்களை அனுப்புவேன். அவர்கள் உன் அரண்ம
னையிலும் உன் ஊழியர்களின் மாளிகைகளிலும் நன்றாகத் தேடிப் பார்த்து,
விலைமதிப்புமிக்க எல்லா பொருள்களையும் அள்ளிக்கொண்டு வந்துவிடு
வார்கள்” என்று சொன்னார்கள்.

7 அதைக் கேட்டதும் இஸ்ரவேலின் ராஜா தன்னுடைய தேசத்
திலுள்ள பெரியோர்கள்* எல்லாரையும் வரவழைத்து, “தயவுசெய்து நான்
சொல்வதைக் கவனியுங்கள். இவன் நமக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டும்
என்பதில் குறியாக இருக்கிறான். ஏற்கெனவே, என்னுடைய மனைவிகளை
யும் மகன்களையும் வெள்ளியையும் தங்கத்தையும் கேட்டான். நானும் ஒத்
துக்கொண்டேன்” என்று சொன்னார். **8** அதற்கு பெரியோர்கள் எல்லாரும்
மக்கள் எல்லாரும் அவரிடம், “அவன் சொல்கிறபடி செய்யாதீர்கள், எதற்கும்
ஒத்துக்கொள்ளாதீர்கள்” என்று சொன்னார்கள். **9** அதனால் அவர் பெனா
தாத்தின் தூதுவர்களிடம், “‘நீங்கள் முதலில் கேட்டதையெல்லாம் கொடுக்க
அடியேன் தயாராக இருக்கிறேன். ஆனால், இப்போது நீங்கள் சொல்வ
துபோல் செய்ய முடியாது’ என்று ராஜாவாகிய என் எஜமானிடம் போய்ச்
சொல்லுங்கள்” என்று சொன்னார். அவர்களும் போய் பெனாதாத்திடம்
இதைச் சொன்னார்கள்.

19:20 *நே.மொ., “அப்பா அம்மாவுக்கு முத்தம் கொடுத்துவிட்டு வர.” **19:21** *நே.மொ., “பலி கொடுத்தார்.” **20:7** *வே.வா., “மூப்பர்கள்.”

அதி. 19
a யாத் 24:13, 2ரா 2:3, 2ரா 3:11

அதி. 20
b 2சா 8:6, 2ரா 5:2, ஏசா 9:12
c 2ரா 8:7
d 2ரா 6:24, 2ரா 17:5
e உபா 28:52
f 1ரா 16:29
g உபா 28:15, 48

அதி. 20
a நீதி 16:18
நீதி 27:1
பிர 7:8

10 அதற்கு பெனாதாத், "என்னுடைய வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு
கைப்பிடி மண்கூட கிடைக்காதளவுக்கு சமாரியாவைத் தரைமட்டமாக்கு
வேன். அப்படிச் செய்யாவிட்டால் தெய்வங்கள் எனக்குக் கடும் தண்டனை
கொடுக்கட்டும்" என்று சொல்லி அனுப்பினான். **11** அப்போது இஸ்ர
வேலின் ராஜா, "போரே ஆரம்பிக்கவில்லை, அதற்குள் போரில் ஜெயித்த
மாதிரி பெருமையடிக்க வேண்டாம் என்று சொல்லுங்கள்"[a] என்றார்.
12 தூதுவர்கள் போய் இதை பெனாதாத்திடம் சொன்ன சமயத்தில் அவ
னும் மற்ற ராஜாக்களும் தங்களுடைய கூடாரங்களில் மது குடித்துக்கொண்
டிருந்தார்கள். தூதுவன் சொன்ன விஷயத்தைக் கேட்டவுடன், "போருக்குத்
தயாராகுங்கள்!" என்று பெனாதாத் கட்டளையிட்டான். அதனால், அவர்கள்
அந்த நகரத்தைத் தாக்குவதற்குத் தயாரானார்கள்.

13 அப்போது, தீர்க்கதரிசி ஒருவர் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகா
பைச்[b] சந்தித்து, "நீ இந்த மாபெரும் படையைப் பார்த்தாயா? இதைத் தோற்
கடிக்க இன்று நான் உனக்கு உதவி செய்வேன். அப்போது, நான்
யெகோவா என்பதை நீ தெரிந்துகொள்வாய் என்று யெகோவா சொல்
கிறார்"[c] என்றார். **14** அதற்கு ஆகாப், "யார் மூலம் வெற்றி கிடைக்கும்?"
என்று கேட்டார். அதற்கு அவர், "மாகாணங்களின் தலைவர்களுடைய
ஊழியர்கள் மூலம் என்று யெகோவா சொல்கிறார்" என்றார். அப்போது
ஆகாப், "யார் முதலில் போரை ஆரம்பிக்க வேண்டும்?" என்று கேட்டார்.
அதற்கு அந்தத் தீர்க்கதரிசி, "நீங்கள்தான்" என்று சொன்னார்.

b 1ரா 16:29

15 அப்போது, மாகாணங்களின் தலைவர்களுடைய ஊழியர்கள்
எத்தனை பேர் என ஆகாப் கணக்கெடுத்தார்; அவர்கள் மொத்தம் 232 பேர்
இருந்தார்கள். அதன் பிறகு, இஸ்ரவேல் வீரர்களைக் கணக்கெடுத்தார்;
அவர்கள் மொத்தம் 7,000 பேர் இருந்தார்கள். **16** மத்தியான வேளையில்
அவர்கள் புறப்பட்டுப் போனபோது, பெனாதாத் தனக்கு உதவியாக வந்த
32 ராஜாக்களுடன் கூடாரங்களில் போதை தலைக்கேற குடித்துக்கொண்டி
ருந்தான். **17** மாகாணங்களின் தலைவர்களுடைய ஊழியர்கள்தான் முத
லில் நகரத்தைவிட்டு வெளியே வந்தார்கள். என்ன நடக்கிறதென்று
தெரிந்துகொள்ள உடனடியாக பெனாதாத் தன்னுடைய ஆட்களை அனுப்
பினான். அவர்கள் பார்த்து வந்து, "சமாரியாவிலிருந்து ஆட்கள் வெளியே
வந்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். **18** அதற்கு அவன், "அவர்கள்
சமாதானம் பண்ணுவதற்காக வந்திருந்தாலும் சரி, போருக்காக வந்திருந்
தாலும் சரி, அவர்களை உயிரோடு பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று
சொன்னான். **19** ஆனால், மாகாணங்களின் தலைவர்களுடைய ஊழியர்
களும் அவர்களுக்குப் பின்னால் திரண்டிருந்த படைவீரர்களும் நகரத்
தைவிட்டு வெளியே வந்தபோது, **20** ஒவ்வொருவரும் தங்களை எதிர்த்து
வந்தவர்களை வெட்டி வீழ்த்தினார்கள். அப்போது, சீரியர்கள் தலைதெறிக்க
ஓடினார்கள்.[d] அவர்களை இஸ்ரவேலர்கள் துரத்திக்கொண்டு போனார்
கள். ஆனால், சீரியாவின் ராஜா பெனாதாத்தும் அவனுடைய குதிரைவீரர்
கள் சிலரும் குதிரைகளில் ஏறித் தப்பித்தார்கள். **21** இஸ்ரவேலின் ராஜா
நகரத்தைவிட்டு வெளியே வந்து குதிரைகளிலும் ரதங்களிலும் இருந்த
வீரர்களை வீழ்த்தினார்.* அன்றைக்கு சீரியர்களைப் படுதோல்வி அடைய
வைத்தார்.

c யாத் 14:18
சங் 37:20

d லேவி 26:8
உபா 28:7

20:21 * வே.வா., "வெட்டிக் கொன்றார்."

22 பிற்பாடு அந்தத் தீர்க்கதரிசி[a] இஸ்ரவேலின் ராஜாவிடம் வந்து,
“அடுத்த வருஷத்தின்* ஆரம்பத்தில் சீரியாவின் ராஜா உங்களுக்கு
எதிராகப் போர் செய்வதற்கு வருவான்.[b] அதனால், நீங்கள் போய் உங்க
ளுடைய படையை வலுப்படுத்துங்கள்.[c] என்ன செய்யலாம் என்பதை இப்
போதே திட்டமிடுங்கள்” என்று சொன்னார்.

23 சீரியா ராஜாவின் ஊழியர்கள் அவனிடம், “இஸ்ரவேலர்களின்
கடவுள் மலைகளின் கடவுள். அதனால்தான் அவர்கள் நம்மைத் தோற்க
டித்துவிட்டார்கள். ஆனால் சமவெளியில் போர் செய்தால் நாம்தான்
ஜெயிப்போம். **24** அதோடு, எல்லா ராஜாக்களையும் நீக்கிவிட்டு[d] அவர்
களுக்குப் பதிலாக ஆளுநர்களைப் படைத் தலைவர்களாக நியமியுங்
கள். **25** நீங்கள் இழந்துபோன அதே அளவு வீரர்களையும் குதிரைகளை
யும் ரதங்களையும் ஒன்றுதிரட்டுங்கள். அவர்களை எதிர்த்து சமவெளியில்
போர் செய்தால் கண்டிப்பாக நாம் ஜெயித்துவிடலாம்” என்று சொன்னார்
கள். அவனும் அவர்கள் சொன்னபடியே செய்தான்.

26 அடுத்த வருஷத்தின்* ஆரம்பத்தில், பெனாதாத் சீரியர்களைத் திரட்
டிக்கொண்டு இஸ்ரவேலர்களோடு போர் செய்ய ஆப்பெக்கிற்குப்[e]
போனான். **27** இஸ்ரவேல் வீரர்களும் தேவையான பொருள்களோடு
படைதிரண்டு, சீரியர்களை எதிர்த்துப் போர் செய்யப் போனார்கள். சீரியர்க
ளின் படைக்கு முன்னால் இஸ்ரவேலர்களின் படை இரண்டு சின்னஞ்சிறிய
ஆட்டு மந்தையைப் போல் இருந்தது. சீரியர்களின் படையோ அந்த இடம்
முழுவதும் பரவியிருந்தது.[f] **28** பின்பு இஸ்ரவேலின் ராஜாவிடம் உண்
மைக் கடவுளின் ஊழியர் வந்து, “‘யெகோவா மலைகளின் கடவுள்; சமவெ
ளிகளின் கடவுள் அல்ல’ என்று சீரியர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
அதனால், இந்த மாபெரும் படையைத் தோற்கடிக்க நான் உனக்கு உதவி
செய்வேன்.[g] அப்போது, நான் யெகோவா என்று நீ நிச்சயம் தெரிந்துகொள்
வாய்[h] என்று யெகோவா சொல்கிறார்” என்றார்.

29 ஏழு நாட்களுக்கு இரண்டு படைகளும் எதிரெதிராக முகாம்போட்
டிருந்தன, ஏழாவது நாள் போர் ஆரம்பித்தது. இஸ்ரவேல் வீரர்கள் சீரி
யர்களின் காலாட்படையைச் சேர்ந்த 1,00,000 பேரை ஒரே நாளில் வீழ்த்தி
னார்கள். **30** மிச்சமிருந்த 27,000 சீரியர்கள் ஆப்பெக்[i] நகரத்துக்குள்
ஓடிப்போனார்கள். ஆனால், அவர்கள்மீது மதில் இடிந்து விழுந்தது. பெனா
தாத்தும் தப்பித்து ஓடினான். நகரத்துக்குள் போய் அங்கிருந்த வீட்டின் உள்
ளறையில் ஒளிந்துகொண்டான்.

31 அப்போது அவனுடைய ஊழியர்கள், “இஸ்ரவேலின் ராஜாக்கள்
எல்லாரும் ரொம்ப இரக்கமுள்ளவர்கள்* என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.
அதனால், நாங்கள் எல்லாரும் இடுப்பில் துக்கத் துணியை# கட்டிக்
கொண்டு, தலையில் கயிற்றைச் சுற்றிக்கொண்டு இஸ்ரவேலின் ராஜாவி
டம் போகிறோம். ஒருவேளை, அவர் உங்களுக்கு உயிர்ப்பிச்சை தரலாம்”[j]
என்று சொன்னார்கள். **32** அதனால், அவர்கள் துக்கத் துணியை இடுப்
பில் கட்டிக்கொண்டு தலையில் கயிற்றைச் சுற்றிக்கொண்டு இஸ்ரவேலின்
ராஜாவிடம் வந்தார்கள். அவரிடம், “‘எனக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள்’
என்று உங்களுடைய ஊழியன் பெனாதாத் கேட்கிறார்” என்று சொன்

20:22, 26 * அதாவது, “அடுத்த வசந்த காலத்தின்.” **20:31** * வே.வா., “மாறாத அன்புள்ளவர்கள்.” # சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 20
a 1ரா 20:13
b 2சா 11:1
c நீதி 20:18
d 1ரா 20:1, 16
e 2ரா 13:17
f நியா 6:5, 6; 1சா 13:5; 2நா 32:7
g உபா 32:26, 27; எசே 20:9; எசே 36:22
h யாத் 6:7; யாத் 7:5; சங் 83:18; எசே 6:14; எசே 39:7
i 1ரா 20:26
j யோனா 3:8, 9

அதி. 20
a 2ரா 2:3

னார்கள். அதற்கு அவர், “அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரா? அவர் என்
சகோதரன்” என்று சொன்னார். **33** அவர்கள் இதை ஒரு நல்ல அறிகுறி
யாக எடுத்துக்கொண்டு, “பெனாதாத் உங்கள் சகோதரன்தான்” என்று அவர்
சொன்னதையே அவரிடம் திருப்பிச் சொன்னார்கள். அப்போது ராஜா,
“நீங்கள் போய் அவரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்” என்று சொன்னார்.
பின்பு பெனாதாத் வெளியே வந்தபோது, அவனைத் தன்னுடைய ரதத்தில்
ஏற்றிக்கொண்டார்.

34 அப்போது பெனாதாத், “உங்களுடைய அப்பாவிடமிருந்து என்
அப்பா கைப்பற்றிய நகரங்களை நான் திருப்பித் தந்துவிடுகிறேன். என்னு
டைய அப்பா சமாரியாவில் கடைவீதிகளை அமைத்ததுபோல் நீங்களும்
தமஸ்குவில் அமைத்துக்கொள்ளலாம்” என்று சொன்னான்.

அதற்கு ஆகாப், “நீங்கள் என்னோடு இந்த ஒப்பந்தம் செய்ததால் நான்
உங்களை விட்டுவிடுகிறேன்” என்று சொன்னார்.

b 2ரா 10:24
அப் 12:19
அப் 16:27

அதன்படியே, அவனோடு ஒப்பந்தம் செய்துகொண்டு அவனை
அனுப்பிவிட்டார்.

35 அந்தச் சமயத்தில், யெகோவாவுடைய கட்டளைப்படி தீர்க்கதரி
சிகளின் மகன்களில்*[a] ஒருவர் இன்னொருவரிடம், “தயவுசெய்து என்னை
அடி” என்று சொன்னார். ஆனால், அவர் அடிக்க மறுத்துவிட்டார்.
36 அதற்கு அவர், “நீ யெகோவாவின் பேச்சைக் கேட்காததால், இங்கி
ருந்து போனவுடன் ஒரு சிங்கம் உன்னைக் கொன்றுபோடும்” என்று சொன்
னார். அதேபோல், அவர் அங்கிருந்து போனதும் ஒரு சிங்கம் வந்து அவ
ரைக் கொன்றுபோட்டது.

37 பின்பு அந்தத் தீர்க்கதரிசி வேறொரு ஆளைப் பார்த்து, “தயவுசெய்து
என்னை அடி” என்று சொன்னார். அவர் சொன்னபடியே அந்த ஆள்
அவரை அடித்துக் காயப்படுத்தினான்.

c 1ரா 20:35

38 பின்பு, ராஜா வரும் வழியில் அந்தத் தீர்க்கதரிசி காத்திருந்தார். தான்
யார் என்பதைக் காட்டிக்கொள்ளாமல் இருக்க கண்கள்மீது கட்டுப்போட்
டுக்கொண்டார். **39** ராஜா அந்த வழியாகப் போனபோது ராஜாவைச் சத்
தமாகக் கூப்பிட்டு, “போர் தீவிரமாக நடந்துகொண்டிருந்த இடத்துக்கு
அடியேன் போயிருந்தேன். அங்கே ஒருவன் இன்னொருவனைக் கொண்டு
வந்து, ‘இவனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். இவன் தப்பித்துவிட்
டால், இவனுக்குப் பதிலாக உன் உயிரைத் தர வேண்டும்;[b] இல்லை
யென்றால் ஒரு தாலந்து* வெள்ளியைத் தர வேண்டும்’ என்று சொன்
னான். **40** ஆனால் நான் வேலை மும்முரத்தில் இருந்தபோது, அவன்
தப்பித்துவிட்டான்” என்று சொன்னார். அதற்கு இஸ்ரவேலின் ராஜா, “உனக்
குக் கொடுக்க வேண்டிய தீர்ப்பை உன் வாயாலேயே நீ சொல்லிவிட்
டாய்” என்று சொன்னார். **41** உடனே அந்தத் தீர்க்கதரிசி கண்களுக்குப்
போட்டிருந்த கட்டை வேகமாய் அவிழ்த்தார். அப்போது, அவர் ஒரு தீர்க்க
தரிசி என்பதை ராஜா தெரிந்துகொண்டார்.[c] **42** அந்தத் தீர்க்கதரிசி அவ
ரிடம், “கொல்லச் சொல்லி நான் ஒருவனை உன் கையில் ஒப்படைத்தேன்.
ஆனால், அவனை நீ தப்பிக்க விட்டுவிட்டாய்.[d] அதனால் அவனுக்குப்

d லேவி 27:29
1சா 15:9
எரே 48:10

20:35 *‘தீர்க்கதரிசிகளின் மகன்கள்,’ பயிற்சி பெறுகிற தீர்க்கதரிசிகளின் குழுவை அல்லது தீர்க்கதரிசிகளின் சங்கத்தைக் குறிக்கலாம். **20:39** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

பதிலாக நீ சாவாய்,[a] அவனுடைய மக்களுக்குப் பதிலாக உன்னுடைய
மக்கள் சாவார்கள்[b] என்று யெகோவா சொல்கிறார்" என்றார். **43** அதைக்
கேட்டதும் இஸ்ரவேலின் ராஜா முகத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு, சமா
ரியாவிலிருந்த[c] தன் வீட்டுக்குச் சோகமாகப் போனார்.

21 இதற்குப் பிறகு, யெஸ்ரயேலைச் சேர்ந்த நாபோத்தின் திராட்சைத்
தோட்டம் சம்பந்தமாக ஒரு சம்பவம் நடந்தது. அந்தத் தோட்
டம் யெஸ்ரயேலில்,[d] சமாரியாவின் ராஜா ஆகாபின் அரண்மனைக்குப் பக்
கத்தில் இருந்தது. **2** ஒருநாள் ஆகாப் நாபோத்திடம், "உன்னுடைய திராட்
சைத் தோட்டம் என் அரண்மனைக்குப் பக்கத்தில் இருப்பதால், அதை
எனக்குக் கொடுத்துவிடு. அதை நான் காய்கறித் தோட்டமாக்கப்போகி
றேன். அதற்குப் பதிலாக வேறொரு நல்ல திராட்சைத் தோட்டத்தைத் தரு
கிறேன். வேண்டுமென்றால், பணமாகவும் கொடுத்துவிடுகிறேன்" என்று
சொன்னார். **3** ஆனால் நாபோத், "பூர்வீகச் சொத்தை விற்கக் கூடாது
என்று யெகோவா கட்டளையிட்டிருக்கிறார். அதனால், அதை உங்களுக்கு
விற்பதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது"[e] என்று சொன்னார்.
4 'என்னுடைய பூர்வீகச் சொத்தை உங்களிடம் விற்க மாட்டேன்' என்று
யெஸ்ரயேலைச் சேர்ந்த நாபோத் சொன்னதால், ஆகாப் தன்னுடைய முகத்
தைத் தூக்கிவைத்துக்கொண்டு வீட்டுக்குச் சோகமாக வந்தார். தன்னுடைய
முகத்தைத் திருப்பிக்கொண்டு, தன் கட்டிலில் படுத்துக்கொண்டார், சாப்பி
டவும் மறுத்துவிட்டார்.

5 அப்போது அவருடைய மனைவி யேசபேல்[f] வந்து, "சாப்பாடுகூட
சாப்பிடாமல் ஏன் இவ்வளவு சோகமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.
6 அதற்கு ஆகாப், "யெஸ்ரயேலைச் சேர்ந்த நாபோத்திடம் அவனுடைய
திராட்சைத் தோட்டத்தை விலைக்குக் கேட்டேன். பணம் வேண்டாமென்
றால், அதற்குப் பதிலாக வேறொரு திராட்சைத் தோட்டத்தைத் தருவதா
கச் சொன்னேன். ஆனால், அவன் முடியாதென்று சொல்லிவிட்டான்"
என்று சொன்னார். **7** அதற்கு அவருடைய மனைவி யேசபேல், "நீங்கள்
தானே இஸ்ரவேலின் ராஜா? எழுந்து வந்து சாப்பிடுங்கள். சந்தோஷமாக
இருங்கள். யெஸ்ரயேலைச் சேர்ந்த நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை
நான் வாங்கித் தருகிறேன்"[g] என்று சொன்னாள். **8** அதனால், ஆகாபின்
பெயரில் கடிதங்கள் எழுதி அவருடைய முத்திரையைக் குத்தி,[h] நாபோத்
தின் நகரத்தில் இருந்த பெரியோர்களுக்கும்*[i] பிரமுகர்களுக்கும் அவற்றை
அனுப்பி வைத்தாள். **9** அந்தக் கடிதங்களில், "எல்லாரையும் விரதம்
இருக்கச் சொல்லி அறிவியுங்கள். மக்களை ஒன்றுகூட்டி அவர்களுக்கு
முன்னால் நாபோத்தை உட்கார வையுங்கள். **10** ஒன்றுக்கும் உதவாத
இரண்டு பேரை அவன் முன்னால் உட்கார வைத்து, 'கடவுளையும் ராஜா
வையும் நீ சபித்துப் பேசினாய்'[j] என்று பொய் சாட்சி சொல்லச் சொல்லுங்
கள்.[k] பின்பு, நாபோத்தை நகரத்துக்கு வெளியே கொண்டுபோய்க் கல்லெ
றிந்து கொல்லுங்கள்"[l] என்று எழுதியிருந்தாள்.

11 யேசபேல் கடிதத்தில் எழுதி அனுப்பியபடியே, நாபோத்தின் நக
ரத்தில் வாழ்ந்த பெரியோர்களும் பிரமுகர்களும் செய்தார்கள். **12** மக்கள்
எல்லாரையும் விரதம் இருக்கச் சொல்லி அறிவித்து, அவர்கள் முன்னால்

21:8 * வே.வா., "மூப்பர்களுக்கும்."

அதி. 20
a 1ரா 22:31, 35; 2நா 18:33
b 2ரா 6:24; 2ரா 8:12; 2நா 18:16
c 1ரா 16:29

அதி. 21
d யோசு 19:17, 18
e லேவி 25:23; எண் 36:7
f 1ரா 16:31; 1ரா 18:4; 1ரா 19:2; 1ரா 21:25
g மீ 2:1; மீ 7:3
h நெ 9:38; எஸ்தர் 8:8
i உபா 16:18
j யாத் 22:28
k யாத் 20:16; உபா 17:6
l லேவி 24:16; யோவா 10:33

நாபோத்தை உட்கார வைத்தார்கள். **13** அப்போது, ஒன்றுக்கும் உதவாத
இரண்டு பேர் நாபோத்தின் முன்னால் வந்து உட்கார்ந்து, “கடவுளையும்
ராஜாவையும் நாபோத் சபித்துப் பேசினான்!”[a] என்று பொய் சாட்சி சொன்
னார்கள். அதன் பின்பு, அவரை நகரத்துக்கு வெளியே கொண்டுபோய்க்
கல்லெறிந்து கொன்றார்கள்.[b] **14** பின்பு, “நாபோத் கல்லெறிந்து கொல்லப்
பட்டான்”[c] என்று யேசபேலுக்குச் செய்தி அனுப்பினார்கள்.

15 நாபோத் கல்லெறிந்து கொல்லப்பட்ட விஷயம் யேசபேலுக்குத் தெரி
யவந்ததும் அவள் ஆகாபிடம், “யெஸ்ரயேலைச் சேர்ந்த நாபோத் உங்க
ளுக்கு விற்க மாட்டேன் என்று சொன்னானே, அந்தத் திராட்சைத் தோட்
டத்தை இப்போது நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.[d] அவன் உயிரோடு
இல்லை, செத்துவிட்டான்” என்று சொன்னாள். **16** யெஸ்ரயேலைச் சேர்ந்த
நாபோத் இறந்துபோன விஷயத்தை ஆகாப் கேட்டவுடனே, நாபோத்தின்
திராட்சைத் தோட்டத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள எழுந்து போனார்.

17 அப்போது திஸ்பியனான எலியாவிடம்[e] யெகோவா, **18** “நீ புறப்
பட்டு, சமாரியாவை ஆட்சி செய்கிற ஆகாப் ராஜாவிடம்[f] போ. அவன் இப்
போது நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தில் இருக்கிறான். அதைச் சொந்
தமாக்கிக்கொள்வதற்காக அங்கே போயிருக்கிறான். **19** நீ அவனைப்
பார்த்து, ‘ஒருவனைக் கொன்றதும் இல்லாமல்[g] அவன் சொத்தையும் எடுத்
துக்கொண்டாயா?’[h] என்று யெகோவா கேட்கிறார் என்று சொல். ‘நாபோத்
தின் இரத்தத்தை நாய்கள் நக்கிய அதே இடத்தில் உன்னுடைய இரத்தத்
தையும் நாய்கள் நக்கும்’[i] என்று யெகோவா சொல்கிறார் என்றும் சொல்”
என்றார்.

20 ஆகாப் எலியாவைப் பார்த்து, “எதிரியே,[j] என்னைக் கண்டுபிடித்து
இங்கேயும் வந்துவிட்டாயா?” என்று கேட்டார். அதற்கு எலியா, “ஆமாம்,
கண்டுபிடித்துவிட்டேன். கடவுள் சொல்வது என்னவென்றால், ‘யெகோவா
வெறுக்கிற காரியங்களைச் செய்தே தீருவேன் என்று உறுதியாக இருக்கி
றாயே.[k] **21** அதனால் உனக்கு முடிவுகட்டுவேன், உன் வம்சத்தை அடி
யோடு அழிப்பேன்; ஆகாபின் வீட்டிலிருக்கிற எல்லா ஆண்களையும்,*
ஆதரவற்றவர்களையும் அற்பமானவர்களையும்கூட, ஒழித்துக்கட்டுவேன்.[l]
22 நீ என் கோபத்தைக் கிளறிவிட்டாய், இஸ்ரவேலர்களைப் பாவம் செய்
யத் தூண்டிவிட்டாய். அதனால், நேபாத்தின் மகன் யெரொபெயாமின் வம்
சத்துக்கும்[m] அகியாவின் மகன் பாஷாவின் வம்சத்துக்கும்[n] ஏற்பட்ட அதே
கதிதான் உன் வம்சத்துக்கும் ஏற்படும். **23** யெஸ்ரயேலில் உள்ள நிலத்தில்
யேசபேலின் உடலை நாய்கள் தின்னும்[o] என்றும் யெகோவா சொல்கிறார்.
24 அதோடு, ஆகாபின் வீட்டாரில் எவனாவது நகரத்துக்குள்ளே செத்துப்
போனால் அவனை நாய்கள் தின்னும்; அவர்களில் எவனாவது நகரத்துக்கு
வெளியே செத்துப்போனால் அவனை வானத்துப் பறவைகள் தின்னும்.[p]
25 உன் மனைவி யேசபேலின்[q] பேச்சைக் கேட்டு, யெகோவா வெறுக்கிற
காரியங்களைச் செய்தே தீருவேன் என்று உறுதியாக இருந்தாய். சொல்லப்
போனால், வேறெந்த ராஜாவும் உன்னைப் போல மோசமாக நடந்துகொள்ள
வில்லை.[r] **26** இஸ்ரவேலர்களுக்கு முன்னால் யெகோவா விரட்டியடித்த[s]

அதி. 21
a ஆமோ 5:12; ஆப 1:4
b 2ரா 9:25, 26; பிர 4:1
c பிர 5:8; பிர 8:14; ஆப 1:13
d 1ரா 21:7
e 1ரா 17:1
f 1ரா 16:29
g ஆதி 4:8, 10
h உபா 5:21; ஆப 2:9
i 1ரா 22:37, 38; 2ரா 9:25, 26
j 1ரா 18:17; ஆமோ 5:10
k 1ரா 16:30
l 2ரா 9:7-9; 2ரா 10:7, 17
m 1ரா 15:25-29
n 1ரா 16:3, 11
o 2ரா 9:10, 35
p 1ரா 14:11; 1ரா 16:4
q 1ரா 16:31; 2நா 22:2, 3; வெளி 2:20
r 1ரா 16:30
s யாத் 23:28; உபா 9:5

21:21 * நே.மொ., “சுவரில் சிறுநீர் கழிக்கிற எவரையும்.” வெறுப்பைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட இந்த எபிரெய வார்த்தைகள் ஆண்களைக் குறிக்கின்றன.

எமோரியர்களைப் போலவே அருவருப்பான* சிலைகளை வணங்கி,
மிகவும் கேவலமாய் நடந்துகொண்டாய்' என்று சொல்கிறார்" என்றார்.

27 இதைக் கேட்டவுடன், ஆகாப் தன்னுடைய உடையைக் கிழித்
துக்கொண்டு துக்கத் துணியை* போட்டுக்கொண்டார்; பல நாட்கள் சாப்பி
டாமல், துக்கத் துணிமீது படுத்துக்கிடந்தார், ரொம்பச் சோகமாக இருந்
தார். **28** அப்போது திஸ்பியனான எலியாவிடம் யெகோவா, **29** "நான்
சொன்னதைக் கேட்டு ஆகாப் இப்போது தாழ்மையாக நடப்பதைப் பார்த்
தாயா?[a] அவன் என் முன்னால் தாழ்மையாக நடப்பதால், நான் சொன்ன
தண்டனையை அவனுடைய வாழ்நாளில் கொண்டுவர மாட்டேன். அவனு
டைய மகனின் வாழ்நாளில் கொண்டுவருவேன்"[b] என்று சொன்னார்.

22 சீரியாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையே மூன்று வருஷங்கள்
போர் நடக்கவில்லை. **2** மூன்றாம் வருஷத்தில், இஸ்ரவேலின்
ராஜாவைச் சந்திக்க யூதாவின் ராஜாவான யோசபாத்[c] வந்தார்.[d] **3** அப்
போது இஸ்ரவேலின் ராஜா தன் ஊழியர்களிடம், "ராமோத்-கீலேயாத்[e]
நமக்குத்தானே சொந்தம்? பிறகு ஏன் சீரியாவின் ராஜாவிடமிருந்து அதைக்
கைப்பற்றாமல் இருக்கிறோம்?" என்று கேட்டார். **4** பின்பு யோசபாத்திடம்,
"ராமோத்-கீலேயாத்தை எதிர்த்துப் போர் செய்ய நீங்களும் என்னோடு வரு
வீர்களா?" என்று கேட்டார். அதற்கு யோசபாத், "நீங்கள் வேறு நான் வேறு
அல்ல. என்னுடைய மக்கள் உங்களுடைய மக்கள், என்னுடைய குதிரை
கள் உங்களுடைய குதிரைகள்"[f] என்று சொன்னார்.

5 அதோடு, "தயவுசெய்து முதலில் யெகோவாவிடம் விசாரியுங்கள்"[g]
என்று இஸ்ரவேலின் ராஜாவிடம் யோசபாத் சொன்னார். **6** அதனால்,
இஸ்ரவேலின் ராஜா தீர்க்கதரிசிகளை வரவழைத்தார். சுமார் 400 பேர் கூடி
வந்தார்கள். அவர்களிடம், "நான் ராமோத்-கீலேயாத்தின் மீது படையெடுத்
துப் போகலாமா, வேண்டாமா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள்,
"போங்கள், யெகோவா அதை உங்கள் கையில் கொடுப்பார்" என்று சொன்
னார்கள்.

7 அப்போது யோசபாத், "யெகோவாவின் தீர்க்கதரிசி வேறு யாரா
வது இருக்கிறாரா? இருந்தால், அவர் மூலமாகவும் விசாரித்துவிடலாம்"[h]
என்றார். **8** அதற்கு இஸ்ரவேலின் ராஜா, "இன்னும் ஒருவன் இருக்கிறான்.
அவன் மூலமாகவும் யெகோவாவிடம் விசாரிக்கலாம்.[i] ஆனால், அவனை
எனக்குச் சுத்தமாகப் பிடிக்காது.[j] ஏனென்றால், இதுவரை அவன் என்னைப்
பற்றி நல்ல விஷயத்தைத் தீர்க்கதரிசனமாகச் சொன்னதே கிடையாது,
கெட்ட விஷயத்தைத்தான் சொல்வான்.[k] அவன் பெயர் மிகாயா, இம்லா
வின் மகன்" என்றார். அதற்கு யோசபாத், "ராஜாவே, நீங்கள் இப்படியெல்
லாம் பேசக் கூடாது" என்று சொன்னார்.

9 அதனால், இஸ்ரவேலின் ராஜா தன்னுடைய அரண்மனை அதிகாரி
ஒருவரைக் கூப்பிட்டு, "இம்லாவின் மகன் மிகாயாவை உடனே கூட்டிக்
கொண்டு வாருங்கள்"[l] என்று சொன்னார். **10** அப்போது, இஸ்ரவேலின்
ராஜாவும் யூதாவின் ராஜா யோசபாத்தும் ராஜ உடை உடுத்திக்கொண்டு
சமாரியாவின் நகரவாசலில் இருந்த களத்துமேட்டில் சிம்மாசனம் போட்டு

21:26 *இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்
புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.
21:27 *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 21
a சங் 78:34
b 2ரா 9:25, 26; 2ரா 10:7, 11

அதி. 22
c 1ரா 15:24
d 2நா 18:2, 3
e யோசு 20:8, 9; 1ரா 4:7, 13
f 2ரா 3:7; 2நா 19:2
g எண் 27:21; 2நா 18:4, 5
h 2ரா 3:11; 2நா 18:6, 7
i 1ரா 18:4
j 1ரா 21:20; 2நா 36:16
k ஏசா 30:9, 10; எரே 38:4
l 2நா 18:8-11

உட்கார்ந்திருந்தார்கள். தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவர்கள் முன்னால்
தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.[a] **11** அப்போது கெனானா
வின் மகனான சிதேக்கியா இரும்புக் கொம்புகளைச் செய்து, "இவற்றை
வைத்து நீங்கள் சீரியர்களை முட்டித் தள்ளி, அவர்களை அடியோடு
அழிப்பீர்கள் என்று யெகோவா சொல்கிறார்" என்றான். **12** மற்ற தீர்க்கத
ரிசிகள் எல்லாரும்கூட இதேபோல் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். "நீங்கள்
ராமோத்-கீலேயாத்துக்கு எதிராகப் போர் செய்யுங்கள், உங்களுக்கு வெற்றி
கிடைக்கும். அதைப் பிடிக்க யெகோவா உங்களுக்கு உதவி செய்வார்"
என்று சொன்னார்கள்.

13 மிகாயாவைக் கூட்டிக்கொண்டு வருவதற்காகப் போனவர் அவ
ரிடம், "இங்கே பாருங்கள், எல்லா தீர்க்கதரிசிகளும் ராஜாவுக்குச் சாதகமா
கத் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து நீங்களும் அவர்க
ளைப் போலவே சாதகமாகச் சொல்லுங்கள்"[b] என்றார். **14** அதற்கு
மிகாயா, "உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கி
றேன்,* யெகோவா என்னிடம் என்ன சொல்கிறாரோ அதைத்தான் சொல்
வேன்" என்றார். **15** பின்பு அவர் ராஜாவிடம் வந்தார். ராஜா அவரிடம்,
"மிகாயா, ராமோத்-கீலேயாத்தை எதிர்த்துப் போர் செய்ய நாங்கள் போக
லாமா, வேண்டாமா?" என்று கேட்டார். உடனே அவர், "போங்கள், உங்க
ளுக்கு வெற்றி கிடைக்கும். யெகோவா அதை உங்கள் கையில் கொடுப்பார்"
என்று சொன்னார். **16** அதற்கு ராஜா, "யெகோவாவின் பெயரில் உண்மை
யைத்தான் பேச வேண்டும் என்று எத்தனை தடவை உன்னிடம் சத்தியம்
வாங்க வேண்டும்?" என்று கேட்டார். **17** அதற்கு மிகாயா, "இஸ்ரவேலர்
கள் எல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல் மலைகளில்
சிதறிப்போவதைப் பார்க்கிறேன்.[c] யெகோவா என்னிடம், 'இவர்களுக்கு எஜ
மான் இல்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய வீடுகளுக்குச் சமாதானமா
கத் திரும்பிப் போகட்டும்' என்று சொல்கிறார்" என்றார்.

18 அப்போது இஸ்ரவேலின் ராஜா, "'இவன் என்னைப் பற்றி நல்ல
விஷயத்தைத் தீர்க்கதரிசனமாகச் சொல்ல மாட்டான், கெட்ட விஷயத்தைத்
தான் சொல்வான்' என்று அப்போதே சொன்னேன், இல்லையா?"[d] என்று
யோசபாத்திடம் சொன்னார்.

19 பின்பு மிகாயா, "யெகோவா சொல்வதைக் கேளுங்கள். யெகோவா
தன்னுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன்.[e] பரலோ
கப் படை முழுவதும் அவருடைய வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும்
நின்றுகொண்டிருந்தது.[f] **20** அப்போது யெகோவா, 'ராமோத்-கீலேயாத்
துக்குப் போய்ச் சாகும்படி யார் ஆகாபை ஏமாற்றி அங்கே அனுப்பு
வீர்கள்?' என்று கேட்டார். அதற்கு ஒரு தேவதூதர் ஒரு விதமாகவும்
இன்னொரு தேவதூதர் இன்னொரு விதமாகவும் கருத்துச் சொன்னார்கள்.
21 அப்போது ஒரு தேவதூதர்[g] யெகோவா முன்னால் வந்து, 'ஆகாபை
நான் ஏமாற்றுவேன்' என்று சொன்னார். அதற்கு யெகோவா, 'எப்படி ஏமாற்
றுவாய்?' என்று கேட்டார். **22** அந்தத் தேவதூதர், 'நான் போய் ஆகாபின்
தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாயிலிருந்தும் பொய்யான செய்தியை வர
வைப்பேன்'[h] என்று சொன்னார். அதற்கு அவர், 'நீ சொன்னபடியே செய்.

22:14 *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 22
a எசே 13:2, 3
b 2நா 18:12-16
c உபா 28: 15, 25
d 2நா 18:17
e ஏசா 6:1 எசே 1:26
f 2நா 18:18-22 யோபு 1:6 தானி 7:9, 10 மத் 18:10 வெளி 5:11
g சங் 104:4 எபி 1:7, 14
h 1ரா 22:6

நீ அவனை ஏமாற்றுவாய், உனக்குக் கண்டிப்பாக வெற்றி கிடைக்கும்' என்று
சொன்னார். **23** அதனால்தான், யெகோவா ஒரு தேவதூதரை அனுப்பி
எல்லா தீர்க்கதரிசிகள் வாயிலிருந்தும் பொய்யான செய்தியை வர வைத்தி
ருக்கிறார்.[a] ஆனால், நீங்கள் அழிய வேண்டும் என்று யெகோவா தீர்மா
னித்துவிட்டார்"[b] என்று சொன்னார்.

24 அப்போது, கெனானாவின் மகனான சிதேக்கியா மிகாயாவிடம்
வந்து, அவருடைய கன்னத்தில் அறைந்து, "எப்போதிருந்து யெகோவா
வின் சக்தி என்னை விட்டுவிட்டு உன்னிடம் பேச ஆரம்பித்தது?"[c] என்று
கேட்டான். **25** அதற்கு மிகாயா, "நீ போய் உள்ளறையில் ஒளிந்துகொள்
ளும் நாளில் உன் கேள்விக்குப் பதில் கிடைக்கும்" என்று சொன்னார்.
26 அப்போது இஸ்ரவேலின் ராஜா, "மிகாயாவைக் கொண்டுபோய் நகர
அதிகாரி ஆமோனிடமும் ராஜாவின் மகன் யோவாசிடமும் ஒப்படையுங்
கள். **27** அவர்களிடம், 'இந்த ஆளைச் சிறையில் தள்ளுங்கள்.[d] நான் சமா
தானமாகத் திரும்பி வரும்வரை இவனுக்குக் கொஞ்சம் ரொட்டியும் தண்
ணீரும் மட்டுமே கொடுங்கள்' என்று ராஜா கட்டளையிட்டார் என்று
சொல்லுங்கள்" என்றார். **28** அதற்கு மிகாயா, "நீங்கள் சமாதானமாகத்
திரும்பி வந்துவிட்டால், யெகோவா என் மூலம் பேசவில்லை என்று அர்த்
தம்"[e] என்று சொன்னார். அதோடு, "மக்களே, எல்லாரும் இதைக் கேட்டுக்
கொள்ளுங்கள்" என்றும் சொன்னார்.

29 பின்பு, இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின் ராஜா யோசபாத்தும்
ராமோத்-கீலேயாத்துக்குப் போனார்கள்.[f] **30** அப்போது யோசபாத்திடம்
இஸ்ரவேலின் ராஜா, "நீங்கள் ராஜ உடையைப் போட்டுக்கொண்டு போர்க்
களத்துக்கு வாருங்கள், நான் மாறுவேஷத்தில் வருகிறேன்" என்று சொன்
னார். அதன்படியே, இஸ்ரவேலின் ராஜா மாறுவேஷம் போட்டுக்கொண்டு[g]
போர்க்களத்துக்குப் போனார். **31** சீரியாவின் ராஜா தன்னுடைய ரதத்
தலைவர்கள் 32 பேரையும் பார்த்து,[h] "வேறு யாரோடும்* போர் செய்யா
மல், இஸ்ரவேலின் ராஜாவோடு மட்டும் போர் செய்யுங்கள்" என்று சொல்
லியிருந்தான். **32** ரதத் தலைவர்கள் யோசபாத்தைப் பார்த்ததும், "இவர்
தான் இஸ்ரவேலின் ராஜா" என்று நினைத்துக்கொண்டு, அவரைத் தாக்க
வந்தார்கள். அப்போது, யோசபாத் உதவி கேட்டுக் கதறினார். **33** அவர்
இஸ்ரவேலின் ராஜா அல்ல என்பது தெரிந்ததும் ரதத் தலைவர்கள் அவ
ரைத் துரத்தாமல் உடனடியாக விலகிப்போனார்கள்.

34 அதன்பின், ஒருவன் எதேச்சையாக எறிந்த அம்பு இஸ்ரவேலின்
ராஜாவுடைய உடல்கவசத்தின் இணைப்புகளுக்கு இடையே பாய்ந்தது. அப்
போது ராஜா தன்னுடைய ரத ஓட்டியிடம், "எனக்குப் பயங்கரமாகக் காயம்
பட்டுவிட்டது; ரதத்தைத் திருப்பி, என்னைப் போர்க்களத்திலிருந்து*
வெளியே கொண்டுபோ"[i] என்று சொன்னார். **35** அன்று முழுவதும் கடு
மையான போர் நடந்ததால், சீரியர்களைப் பார்த்தவாறு ராஜாவை ரதத்
தில் நிற்க வைக்க வேண்டியிருந்தது. அவருடைய காயத்திலிருந்து இரத்தம்
கொட்டியது, அதனால் ரதத்துக்குள்ளே ஒரே இரத்தமாக இருந்தது.
அன்று சாயங்காலத்தில் அவர் இறந்துபோனார்.[j] **36** சூரியன் மறையும்

22:31 *நே.மொ., "சிறியோரோடும் பெரியோரோடும்." **22:34** *நே.மொ., "முகா
மிலிருந்து."

அதி. 22
a எசே 14:9
b 1ரா 20:42
c 2நா 18:23-27
d எபி 11:32, 36
e எண் 16:28, 29
f 2நா 18:28-32
g 2நா 35:22
h 1ரா 20:1
i 2நா 18:33, 34
j 1ரா 20:42

சமயத்தில் போர்வீரர்களிடம், “எல்லாரும் அவரவர் தேசத்துக்குப் போய்வி
டுங்கள்! அவரவர் நகரத்துக்குப் போய்விடுங்கள்!”[a] என்று அறிவிக்கப்பட்
டது. **37** ராஜா இறந்தவுடன் அவருடைய உடலை சமாரியாவுக்குக் கொண்
டுவந்து, அங்கே அடக்கம் செய்தார்கள். **38** சமாரியாவிலுள்ள குளத்துத்
தண்ணீரில் போர் ரதத்தைக் கழுவியபோது அவருடைய இரத்தத்தை
நாய்கள் நக்கின, விபச்சாரிகள் அங்கே குளித்துக்கொண்டிருந்தார்கள்.*
யெகோவா சொன்ன வார்த்தை[b] அப்படியே நிறைவேறியது.

39 ஆகாபின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும்,
அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும், யானைத்தந்தம்[c] பதிக்கப்பட்ட
அரண்மனையைக் கட்டியதைப் பற்றியும், அவர் கட்டிய எல்லா நகரங்க
ளைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்
டிருக்கிறது. **40** ஆகாப் இறந்துபோன* பின்பு[d] அவருடைய மகன் அக
சியா[e] ராஜாவானார்.

41 இஸ்ரவேலின் ராஜாவான ஆகாப் ஆட்சி செய்த நான்காம் வருஷத்
தில், ஆசாவின் மகன் யோசபாத்[f] யூதாவின் ராஜாவானார். **42** யோசபாத்
ராஜாவானபோது அவருக்கு 35 வயது; அவர் எருசலேமில் 25 வருஷங்
கள் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர் அசுபாள்; இவள் சில்கி
யின் மகள். **43** யோசபாத் தன்னுடைய அப்பாவான ஆசாவின் வழியில்
நடந்துவந்தார்,[g] அதைவிட்டு விலகவில்லை; யெகோவாவுக்குப் பிரியமா
னதைச் செய்துவந்தார்.[h] இருந்தாலும், ஆராதனை மேடுகள் அழிக்கப்பட
வில்லை;[i] மக்கள் இன்னமும் அங்கே பலிகளை எரித்து புகை எழும்பிவ
ரச் செய்துகொண்டிருந்தார்கள். **44** இஸ்ரவேலின் ராஜாவோடு யோசபாத்
எப்போதும் நல்லுறவு வைத்திருந்தார்.[j] **45** யோசபாத்தின் வாழ்க்கையில்
நடந்த மற்ற விஷயங்கள், அவருடைய வீரதீர செயல்கள், போர்கள்
எல்லாவற்றையும் பற்றி யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்
பட்டிருக்கிறது. **46** கோயில்களில் இருந்த ஆண் விபச்சாரக்காரர்களை,[k]
அவருடைய அப்பா ஆசாவின் காலத்தில் விட்டுவைக்கப்பட்ட சிலரை,
தேசத்திலிருந்து அவர் துரத்தினார்.[l]

47 அப்போது ஏதோம்[m] தேசத்துக்கு ராஜா இல்லை; அதனால், ஒரு நிர்
வாகி அதை ஆட்சி செய்துவந்தார்.[n]

48 ஓப்பீரிலிருந்து தங்கம் கொண்டுவருவதற்காக ‘தர்ஷீஸ் கப்பல்
களை’*[o] யோசபாத் கட்டினார். அந்தக் கப்பல்கள் எசியோன்-கேபேரில்[p]
உடைந்துபோனதால் ஓப்பீருக்குப் போக முடியவில்லை. **49** அப்போது
யோசபாத்திடம், “கப்பல்களில் உங்களுடைய ஆட்களோடு என்னுடைய
ஆட்களையும் அனுப்பி வைக்கட்டுமா?” என்று ஆகாபின் மகன் அகசியா
கேட்டார். ஆனால், யோசபாத் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை.

50 யோசபாத் இறந்த* பின்பு,[q] அவருடைய முன்னோர்கள் அடக்
கம் செய்யப்பட்ட இடத்தில், அதாவது அவருடைய மூதாதையான ‘தாவீ
தின் நகரத்தில்,’ அடக்கம் செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு, அவருடைய
மகன் யோராம் ராஜாவானார்.[r]

22:38 *அல்லது, “விபச்சாரிகள் குளிக்கும் இடத்தில் நாய்கள் அவருடைய இரத்தத்தை நக்கின.” **22:40, 50** *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட.” **22:48** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 22
a 1ரா 22:17
b 1ரா 21:18, 19
c 1ரா 10:22; எசே 27:15
d 1ரா 16:28
e 2ரா 1:2; 2நா 20:35
f 1நா 3:10; 2நா 17:1; 2நா 20:31; மத் 1:8
g 1ரா 15:11; 2நா 14:11; 2நா 15:8
h 2நா 17:3
i உபா 12:14; 1ரா 14:23; 1ரா 15:14
j 2நா 18:1; 2நா 19:2
k உபா 23:17, 18; 1ரா 14:24
l 1ரா 15:11, 12
m ஆதி 36:1, 9
n 2சா 8:14; 2ரா 8:20-22; சங் 108:9
o 1ரா 10:22
p 1ரா 9:26; 2நா 20:35-37
q 1ரா 2:10
r 2ரா 8:16; 2நா 21:1, 5

51 யூதாவின் ராஜா யோசபாத் ஆட்சி செய்த 17-ஆம் வருஷத்தில்,
ஆகாபின் மகன் அகசியா[a] இஸ்ரவேலின் ராஜாவானார். அவர் இரண்டு
வருஷங்கள் இஸ்ரவேலை ஆட்சி செய்தார். **52** தன்னுடைய அப்பா
அம்மாவைப்[b] போலவே, யெகோவா வெறுப்பதைச் செய்துவந்தார்.[c] இஸ்
ரவேலைப் பாவம் செய்யத் தூண்டிய நேபாத்தின் மகன் யெரொபெயா
மின் வழியில் நடந்தார்.[d] **53** தன்னுடைய அப்பாவைப் போலவே இவ
ரும் பாகால்முன் தலைவணங்கி அதற்குச் சேவை செய்துவந்தார்;[e] இப்படி,
இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவை மிகவும் புண்படுத்தினார்.[f]

அதி. 22
a 2ரா 1:2
b 1ரா 21:25
c 1ரா 16:30
d 1ரா 12:28-30, 1ரா 13:33
e 1ரா 16:31, 32, 2ரா 1:2
f யாத் 20:3, யாத் 34:14

இரண்டாம்
ராஜாக்கள்

முக்கியக் குறிப்புகள்

1 அகசியாவின் சாவைப் பற்றிய எலியாவின் தீர்க்கதரிசனம் (1-18)

2 எலியா சுழல்காற்றில் கொண்டுபோகப்படுகிறார் (1-18)
- எலியாவின் அங்கி எலிசாவுக்குக் கிடைக்கிறது (13, 14)

எரிகோவின் தண்ணீரை எலிசா சுத்தமாக்குகிறார் (19-22)
பெத்தேலைச் சேர்ந்த சிறுவர்களைக் கரடிகள் கொன்றுவிடுகின்றன (23-25)

3 யோராம் இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (1-3)
இஸ்ரவேலுக்கு எதிராக மோவாப் கலகம் (4-25)
மோவாப் தோற்கடிக்கப்படுகிறது (26, 27)

4 விதவை வைத்திருந்த எண்ணெயை எலிசா பல மடங்காக்குகிறார் (1-7)
சூனேமியப் பெண் உபசரிக்கிறாள் (8-16)
அவளுக்கு அற்புதமாக மகன் பிறக்கிறான்; அவன் இறந்துவிடுகிறான் (17-31)
இறந்தவனை எலிசா உயிரோடு எழுப்புகிறார் (32-37)
கூழில் இருந்த விஷத்தை எலிசா நீக்குகிறார் (38-41)
ரொட்டிகளை எலிசா பல மடங்காக்குகிறார் (42-44)

5 நாகமானின் தொழுநோயை எலிசா குணமாக்குகிறார் (1-19)
கேயாசியை தொழுநோய் தொற்றிக்கொள்கிறது (20-27)

6 கோடாலியின் முனையை எலிசா தண்ணீரில் மிதக்க வைக்கிறார் (1-7)
எலிசாவும் சீரியர்களும் (8-23)
- எலிசாவின் ஊழியனுடைய கண்கள் திறக்கப்படுகின்றன (16, 17)
- சீரியர்களின் மனக்கண்கள் குருடாக்கப்படுகின்றன (18, 19)

முற்றுகையிடப்பட்ட சமாரியாவில் பஞ்சம் (24-33)

7 பஞ்சம் முடியப்போவதை எலிசா முன்னறிவிக்கிறார் (1, 2)
ஓடிப்போன சீரியர்களின் முகாமில் உணவு (3-15)
எலிசாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது (16-20)

8 சூனேமியப் பெண்ணின் நிலம் மீட்கப்படுகிறது (1-6)
எலிசா, பெனாதாத், அசகேல் (7-15)
யோராம் யூதாவின் ராஜாவாகிறார் (16-24)
அகசியா யூதாவின் ராஜாவாகிறார் (25-29)

9 யெகூ ராஜாவாக அபிஷேகம் செய்யப்படுகிறார் (1-13)
யோராமையும் அகசியாவையும் யெகூ கொன்றுபோடுகிறார் (14-29)
யேசபேல் கொல்லப்படுகிறாள்; உடலை நாய்கள் தின்கின்றன (30-37)

10 ஆகாபின் குடும்பத்தாரை யெகூ கொன்றுபோடுகிறார் (1-17)

யெகூவுடன் யோனதாப் சேர்ந்துகொள்கிறார் (15-17)
பாகாலின் பக்தர்களை யெகூ கொன்றுபோடுகிறார் (18-27)
யெகூவின் ஆட்சியைப் பற்றிய சுருக்கம் (28-36)

11 அத்தாலியாள் ஆட்சியைப் பறிக்கிறாள் (1-3)
யோவாஸ் ரகசியமாக ராஜாவாக்கப்படுகிறார் (4-12)
அத்தாலியாள் கொல்லப்படுகிறாள் (13-16)
யோய்தா சீர்திருத்தம் செய்கிறார் (17-21)

12 யோவாஸ் யூதாவின் ராஜாவாகிறார் (1-3)
ஆலயத்தை யோவாஸ் பழுதுபார்க்கிறார் (4-16)
சீரியர்கள் படையெடுத்து வருகிறார்கள் (17, 18)
யோவாஸ் கொல்லப்படுகிறார் (19-21)

13 யோவாகாஸ் இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (1-9)
யோவாஸ் இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (10-13)
யோவாசின் வைராக்கியத்தை எலிசா சோதிக்கிறார் (14-19)
எலிசா இறந்துபோகிறார்; அவருடைய எலும்புகள் பட்டதும் இறந்தவன் உயிர்பெறுகிறான் (20, 21)
எலிசாவின் கடைசி தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது (22-25)

14 அமத்சியா யூதாவின் ராஜாவாகிறார் (1-6)
ஏதோமுடனும் இஸ்ரவேலுடனும் போர் (7-14)
இஸ்ரவேலின் ராஜாவான யோவாஸ் இறந்துபோகிறார் (15, 16)
அமத்சியா இறந்துபோகிறார் (17-22)
இரண்டாம் யெரொபெயாம் இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (23-29)

15 அசரியா யூதாவின் ராஜாவாகிறார் (1-7)
இஸ்ரவேலின் கடைசி ராஜாக்கள்: சகரியா (8-12), சல்லூம் (13-16), மெனாகேம் (17-22), பெக்காகியா (23-26), பெக்கா (27-31)
யோதாம் யூதாவின் ராஜாவாகிறார் (32-38)

16 ஆகாஸ் யூதாவின் ராஜாவாகிறார் (1-6)
அசீரியர்களுக்கு ஆகாஸ் லஞ்சம் கொடுக்கிறார் (7-9)
பொய் தெய்வத்தின் பலிபீடத்தைப் போலவே ஒரு பலிபீடத்தை ஆகாஸ் கட்டுகிறார் (10-18)
ஆகாஸ் இறந்துபோகிறார் (19, 20)

17 ஓசெயா இஸ்ரவேலின் ராஜாவாகிறார் (1-4)
இஸ்ரவேலின் வீழ்ச்சி (5, 6)
விசுவாசதுரோகத்தால் இஸ்ரவேலர்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போகிறார்கள் (7-23)
சமாரியாவின் நகரங்களில் மற்ற தேசத்தார் குடியேற்றப்படுகிறார்கள் (24-26)
சமாரியர்களின் கலப்பு மதம் (27-41)

18 எசேக்கியா யூதாவின் ராஜாவாகிறார் (1-8)
இஸ்ரவேலின் வீழ்ச்சி பற்றிய ஒரு சுருக்கம் (9-12)
யூதாமீது சனகெரிப் படையெடுக்கிறான் (13-18)
யெகோவாவை ரப்சாக்கே பழித்துப் பேசுகிறான் (19-37)

19 ஏசாயா மூலம் கடவுளின் உதவியை எசேக்கியா நாடுகிறார் (1-7)
எருசலேமை சனகெரிப் பயமுறுத்துகிறான் (8-13)
எசேக்கியாவின் ஜெபம் (14-19)
கடவுளின் பதிலை ஏசாயா தெரியப்படுத்துகிறார் (20-34)
1,85,000 அசீரியர்களை ஒரு தேவதூதர் கொன்றுபோடுகிறார் (35-37)

20 எசேக்கியா வியாதிப்படுவதும் குணமாவதும் (1-11)
பாபிலோனிலிருந்து தூதுவர்கள் வருகிறார்கள் (12-19)
எசேக்கியா இறந்துபோகிறார் (20, 21)

21 மனாசே யூதாவின் ராஜாவாகிறார்; அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கிறார் (1-18)
எருசலேம் அழிக்கப்படுகிறது (12-15)
ஆமோன் யூதாவின் ராஜாவாகிறார் (19-26)

22 யோசியா யூதாவின் ராஜாவாகிறார் (1, 2)
ஆலயத்தைப் பழுதுபார்க்க அறிவுரைகள் (3-7)
திருச்சட்ட புத்தகம் கண்டெடுக்கப்படுகிறது (8-13)
அழிவைப் பற்றி உல்தாள் சொன்ன தீர்க்கதரிசனம் (14-20)

23 யோசியா சீர்திருத்தம் செய்கிறார் (1-20)
பஸ்கா கொண்டாடப்படுகிறது (21-23)
யோசியா செய்த கூடுதலான சீர்திருத்தங்கள் (24-27)
யோசியா இறந்துபோகிறார் (28-30)
யோவாகாஸ் யூதாவின் ராஜாவாகிறார் (31-33)
யோயாக்கீம் யூதாவின் ராஜாவாகிறார் (34-37)

24 யோயாக்கீமின் கலகமும் மரணமும் (1-7)
யோயாக்கீன் யூதாவின் ராஜாவாகிறார் (8, 9)
மக்கள் முதல் தடவையாக பாபிலோனுக்குப் பிடித்துக்கொண்டு போகப்படுகிறார்கள் (10-17)
சிதேக்கியா யூதாவின் ராஜாவாகிறார்; அவர் செய்த கலகம் (18-20)
25 எருசலேமை நேபுகாத்நேச்சார் முற்றுகையிடுகிறான் (1-7)
எருசலேமும் அதன் ஆலயமும் அழிக்கப்படுகிறது; மக்கள் இரண்டாவது தடவையாகப் பிடித்துக்கொண்டு போகப்படுகிறார்கள் (8-21)
கெதலியா ஆளுநராக நியமிக்கப்படுகிறார் (22-24)
கெதலியா கொலை செய்யப்படுகிறார்; மக்கள் எகிப்துக்குத் தப்பி ஓடுகிறார்கள் (25, 26)
பாபிலோனில் யோயாக்கீன் விடுதலை செய்யப்படுகிறார் (27-30)

1 ஆகாப் இறந்த பின்பு, இஸ்ரவேலை எதிர்த்து மோவாப்[a] கலகம்
செய்தது.
2 அந்தச் சமயத்தில், சமாரியாவிலுள்ள அரண்மனைக் கூரையின்
சாளரம்* வழியாக அகசியா விழுந்து காயமடைந்தார். அதனால் தூதுவர்
களைக் கூப்பிட்டு, “எனக்குக் குணமாகுமா ஆகாதா என்று எக்ரோனின்[b]
தெய்வமான பாகால்-செபூபிடம் போய் விசாரித்துவிட்டு வாருங்கள்”[c]
என்று சொல்லி அனுப்பினார். **3** அப்போது யெகோவாவின் தூதர் திஸ்பி
யனான எலியாவிடம்,*[d] “நீ புறப்பட்டுப் போய் சமாரியா ராஜாவின் தூது
வர்களைப் பார்த்து, ‘இஸ்ரவேலில் கடவுள் இல்லையென்றா எக்ரோனின்
தெய்வமான பாகால்-செபூபிடம் விசாரிக்கப் போகிறீர்கள்?[e] **4** அதனால்,
“நீ படுத்த படுக்கையாகவே கிடப்பாய். நிச்சயம் செத்துப்போவாய்”’ என்று
யெகோவா சொல்கிறார் என்பதாகச் சொல்” என்றார். அதன்படியே, எலியா
அங்கிருந்து போனார்.
5 தூதுவர்கள் திரும்பி வந்ததும் அகசியா அவர்களிடம், “ஏன் திரும்பி
வந்துவிட்டீர்கள்?” என்று கேட்டார். **6** அதற்கு அவர்கள் ராஜாவிடம் இப்
படிச் சொன்னார்கள்: “வழியில் ஒருவர் எங்களைப் பார்க்க வந்தார்.
அவர் எங்களிடம், ‘உங்களை அனுப்பிய ராஜாவிடம் திரும்பிப் போங்கள்.
அவரிடம், “இஸ்ரவேலில் கடவுள் இல்லையென்றா எக்ரோனின் தெய்வ
மான பாகால்-செபூபிடம் விசாரிக்க ஆட்களை அனுப்பினாய்? அதனால்,
நீ படுத்த படுக்கையாகவே கிடப்பாய். நிச்சயம் செத்துப்போவாய்”[f] என்று
யெகோவா சொல்கிறார் என்பதாகச் சொல்லுங்கள்’ என்றார்.” **7** அப்
போது அவர், “உங்களிடம் இந்தச் செய்தியைச் சொன்னவர் பார்ப்பதற்கு
எப்படி இருந்தார்?” என்று கேட்டார். **8** அதற்கு அவர்கள், “அவர் ரோமத்
தாலான உடையைப்[g] போட்டிருந்தார். இடுப்பில் தோல் வாரைக் கட்டியி
ருந்தார்”[h] என்று சொன்னார்கள். உடனே அகசியா, “அவர் திஸ்பியனான
எலியாதான்” என்று சொன்னார்.
9 பின்பு, ராஜா 50 வீரர்களின் தலைவரையும் அவருடைய 50 வீரர்களை
யும் எலியாவிடம் அனுப்பினார். அவர் அங்கே போனபோது எலியா ஒரு
மலைமேல் உட்கார்ந்திருந்தார். அந்தத் தலைவர் அவரிடம், “உண்மைக்

1:2 * அநேகமாக, “கூரையிலிருந்த ஒரு திறப்பின் மேல் வைக்கப்பட்ட மரத்தாலான மூடி.” **1:3** * அர்த்தம், “யெகோவா என் கடவுள்.”

அதி. 1
a ஆதி 19:36, 37; 2சா 8:2; சங் 60:8
b யோசு 13:2, 3; 1சா 5:10
c 2ரா 1:16
d 1ரா 17:1; 1ரா 18:36
e ஏசா 8:19; எரே 2:11
f 1நா 10:13, 14
g 1ரா 19:19; சக 13:4; எபி 11:32, 37
h மத் 3:4

கடவுளின் ஊழியரே,[a] ராஜா உங்களைக் கீழே வரச் சொல்கிறார்” என்றார்.
10 அதற்கு எலியா, “நான் கடவுளின் ஊழியன் என்றால், வானத்திலிருந்து
நெருப்பு வந்து[b] உன்னையும் உன்னுடன் வந்த 50 பேரையும் அழித்துப்
போடட்டும்” என்று சொன்னார். உடனே, வானத்திலிருந்து நெருப்பு வந்து
அந்தத் தலைவரையும் 50 வீரர்களையும் அழித்துப்போட்டது.

11 மறுபடியும் ராஜா வேறொரு 50 வீரர்களின் தலைவரையும் அவரு
டைய 50 வீரர்களையும் எலியாவிடம் அனுப்பினார். எலியாவிடம் அந்தத்
தலைவர் போய், “உண்மைக் கடவுளின் ஊழியரே, ராஜா உங்களை உடனே
கீழே வரச் சொல்கிறார்” என்றார். **12** அதற்கு எலியா, “நான் உண்மைக்
கடவுளின் ஊழியன் என்றால், வானத்திலிருந்து நெருப்பு வந்து உன்னையும்
உன்னுடன் வந்த 50 பேரையும் அழித்துப்போடட்டும்” என்று சொன்னார்.
உடனே, கடவுள் அனுப்பிய நெருப்பு வானத்திலிருந்து வந்து அந்தத் தலை
வரையும் 50 வீரர்களையும் அழித்துப்போட்டது.

13 மூன்றாவது தடவையாக இன்னொரு 50 வீரர்களின் தலைவரையும்
அவருடைய 50 வீரர்களையும் எலியாவிடம் ராஜா அனுப்பினார். அந்தத்
தலைவர் எலியாவிடம் போய் அவர் முன்னால் மண்டிபோட்டு, கருணை
காட்டச் சொல்லி மன்றாடினார். “உண்மைக் கடவுளின் ஊழியரே, தயவு
செய்து எனக்கும் உங்களுடைய ஊழியர்களான இந்த 50 பேருக்கும்
உயிர்ப்பிச்சை கொடுங்கள். **14** இதற்கு முன்னால் வானத்திலிருந்து
நெருப்பு வந்து 50 வீரர்களுக்குத் தலைவர்கள் இரண்டு பேரையும் அவர்
களுடன் வந்த ஐம்பது ஐம்பது வீரர்களையும் அழித்துப்போட்டது. அதே
போல் என்னையும் அழித்துவிடாதீர்கள்” என்று கெஞ்சினார்.

15 அப்போது யெகோவாவின் தூதர் எலியாவிடம், “இவரோடு போ.
எதற்கும் பயப்படாதே” என்று சொன்னார். அதனால், எலியா அவருடன்
போய் ராஜாவைச் சந்தித்தார்; **16** “எக்ரோனின்[c] தெய்வமான பாகால்–
செபூபிடம் விசாரிக்க ஆட்களை அனுப்பினாயே. ஏன், இஸ்ரவேலில்
கடவுள் இல்லையா?[d] நீ ஏன் அவரிடம் விசாரிக்கவில்லை? அதனால், நீ
படுத்த படுக்கையாகவே கிடப்பாய். நிச்சயம் செத்துப்போவாய் என்று
யெகோவா சொல்கிறார்” என்று ராஜாவிடம் சொன்னார். **17** எலியா
மூலம் யெகோவா சொன்னபடியே அகசியா இறந்துபோனார். அவருக்கு
மகன் இல்லாததால், அடுத்து யோராம்*[e] ராஜாவானார். யூதாவின் ராஜா
வான யோசபாத்தின் மகனாகிய யோராம் ஆட்சி செய்த இரண்டாம் வரு
ஷத்தில் இது நடந்தது.[f]

18 அகசியாவின்[g] வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவர்
செய்த காரியங்கள் எல்லாம் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்
தில் எழுதப்பட்டிருக்கிறது.

2 ஒரு சுழல்காற்றில்[h] எலியாவை[i] யெகோவா வானத்துக்குக் கொண்டு
போவதற்கு முன்பு, எலியாவும் எலிசாவும்[j] கில்காலிலிருந்து*[k] புறப்பட்
டார்கள். **2** அப்போது எலியா அவரிடம், “தயவுசெய்து நீ இங்கேயே இரு,
யெகோவா என்னை பெத்தேலுக்குப் போகச் சொல்லியிருக்கிறார்” என்றார்.
ஆனால் எலிசா, “உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச்

1:17 *அதாவது, “அகசியாவின் சகோதரன்.” **2:1** *இது எரிகோவுக்குப் பக்கத்தி
லுள்ள கில்கால் அல்ல, பெத்தேலுக்கு அருகில் மலைப்பகுதியில் உள்ள கில்கால்.

அதி. 1
a உபா 33:1
b எண் 11:1
எண் 16:35
லூ 9:54
யூ 7
c யோசு 13:2, 3
d 2ரா 1:3
e 2ரா 3:1
2ரா 9:22
f 2ரா 8:16
g 1ரா 22:51

அதி. 2
h 2ரா 2:11
i 1ரா 17:1
j 1ரா 19:16
k 2ரா 4:38

சொல்கிறேன்,* உங்கள் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,# நான்
உங்களைவிட்டுப் போக மாட்டேன்” என்று சொன்னார். அதனால், அவர்கள்
இரண்டு பேரும் பெத்தேலுக்குப்[a] போனார்கள். **3** அப்போது, பெத்தே
லில் இருந்த தீர்க்கதரிசிகளின் மகன்கள்* எலிசாவிடம் வந்து, “இன்றைக்கு
யெகோவா உங்கள் எஜமானைக் கொண்டுபோய்விடுவார், உங்களுடைய
தலைவர் உங்களைவிட்டுப் போகப்போகிறார், உங்களுக்குத் தெரியுமா?”[b]
என்று கேட்டார்கள். அதற்கு எலிசா, “எனக்குத் தெரியும், நீங்கள் பேசாமல்
இருங்கள்” என்று சொன்னார்.

4 பின்பு எலியா அவரிடம், “எலிசா, தயவுசெய்து நீ இங்கேயே இரு.
யெகோவா என்னை எரிகோவுக்குப்[c] போகச் சொல்லியிருக்கிறார்” என்
றார். ஆனால் எலிசா, “உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை
யாகச் சொல்கிறேன்,* உங்கள் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,#
நான் உங்களைவிட்டுப் போக மாட்டேன்” என்று சொன்னார். அதனால்
அவர்கள் இரண்டு பேரும் எரிகோவுக்குப் போனார்கள். **5** எரிகோவில்
இருந்த தீர்க்கதரிசிகளின் மகன்கள் எலிசாவிடம் வந்து, “இன்றைக்கு
யெகோவா உங்கள் எஜமானைக் கொண்டுபோய்விடுவார், உங்களுடைய
தலைவர் உங்களைவிட்டுப் போகப்போகிறார், உங்களுக்குத் தெரியுமா?”
என்று கேட்டார்கள். அதற்கு எலிசா, “எனக்குத் தெரியும், நீங்கள் பேசாமல்
இருங்கள்” என்று சொன்னார்.

6 பின்பு எலியா அவரிடம், “தயவுசெய்து நீ இங்கேயே இரு. யெகோவா
என்னை யோர்தானுக்குப் போகச் சொல்லியிருக்கிறார்” என்றார். ஆனால்
எலிசா, “உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கி
றேன்,* உங்கள் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,# நான் உங்களை
விட்டுப் போக மாட்டேன்” என்று சொன்னார். அதனால் அவர்கள் இரண்டு
பேரும் சேர்ந்தே போனார்கள். **7** தீர்க்கதரிசிகளின் மகன்களில் 50 பேர்
அவர்கள் பின்னால் போனார்கள்; ஆனால், எலியாவும் எலிசாவும் யோர்
தான் ஆற்றங்கரைக்கு வந்து நின்றபோது, அந்த 50 பேரும் சற்றுத்
தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். **8** பின்பு எலியா தன்னு
டைய அங்கியை* கழற்றி,[d] அதைச் சுருட்டி ஆற்றுத் தண்ணீரை அடித்
தார். உடனே தண்ணீர் இரண்டாகப் பிரிந்தது. அவர்கள் இரண்டு பேரும்
வறண்ட தரையில் நடந்து ஆற்றைக் கடந்தார்கள்.[e]

9 அவர்கள் இரண்டு பேரும் ஆற்றைக் கடந்தவுடன் எலியா அவ
ரிடம், “எலிசா, நான் உன்னைவிட்டுப் போகப்போகிறேன், உனக்கு என்ன
வேண்டுமோ கேள்” என்றார். அதற்கு எலிசா, “உங்களிடம் இருக்கிற கடவு
ளுடைய சக்தியில்*[f] இரண்டு பாகத்தைத் தயவுசெய்து எனக்குத் தருவீர்
களா?”[g] என்று கேட்டார். **10** அப்போது எலியா, “கஷ்டமான ஒன்றைக்
கேட்கிறாய். இருந்தாலும், நான் கொண்டுபோகப்படுவதை நீ பார்த்தால், நீ
கேட்டது கிடைக்கும். இல்லாவிட்டால், கிடைக்காது” என்று சொன்னார்.

2:2, 4, 6 * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **2:2, 4, 6** # வே.வா., “நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **2:3** * “தீர்க்கதரிசிகளின் மகன்கள்,” பயிற்சி பெறுகிற தீர்க்கதரிசிகளின் குழுவை அல்லது தீர்க்கதரிசிகளின் சங்கத்தைக் குறிக்கலாம். **2:8** * அதாவது, “தீர்க்கதரிசியின் அங்கியை.” **2:9** * இது எலியாவின் மனப்பான்மையையும் குறிக்கலாம்.

அதி. 2
a ஆதி 28:18, 19; 1ரா 12:28, 29; 2ரா 2:23
b 1ரா 19:16
c யோசு 6:26; 1ரா 16:34
d 1ரா 19:19
e யாத் 14:21, 22; யோசு 3:17; 2ரா 2:13, 14
f உபா 34:9; 1ரா 19:16; லூ 1:17
g உபா 21:17

அதி. 2
a 2ரா 6:17
சங் 68:17
b 2நா 21:5, 12
யோவா 3:13
c 2ரா 13:14
d 2சா 1:11, 12
யோபு 1:
19, 20
e 1ரா 19:19
2ரா 1:8
சக 13:4
மத் 3:4
f யோசு 3:13
2ரா 2:8
g எண் 11:24, 25
எண் 27:18, 20
2ரா 2:9
h 1ரா 18:11, 12
i யோசு 6:26
1ரா 16:34
j உபா 34:1-3
k யாத் 15:23-25
2ரா 4:38-41

11 அவர்கள் பேசிக்கொண்டே நடந்து போனபோது, திடீரென்று அவர்
களுக்கு இடையே ஒரு ரதமும் குதிரைகளும்[a] வந்தன; அவை நெருப்பைப்
போல் தகதகவென்று பிரகாசித்தன. எலியா சுழல்காற்றில் வானத்துக்குக்
கொண்டுபோகப்பட்டார்.[b] **12** எலிசா அதைப் பார்த்துக்கொண்டிருந்த
போது, "தகப்பனே, தகப்பனே! இஸ்ரவேலின் ரதமே, குதிரைவீரரே!"[c] என்று
சத்தமாகக் கூப்பிட்டார். அவருடைய பார்வையிலிருந்து எலியா மறைந்த
தும், எலிசா தன்னுடைய உடையை இரண்டாகக் கிழித்துக்கொண்டார்.[d]
13 எலியா போட்டிருந்த அங்கி*[e] கீழே விழுந்து கிடந்ததால், எலிசா அதை
எடுத்துக்கொண்டு மறுபடியும் யோர்தான் ஆற்றங்கரையில் போய் நின்றார்.
14 எலியாவின் அங்கியால் ஆற்றுத் தண்ணீரை அடித்து, "எலியாவின் கட
வுளான யெகோவா எங்கே?" என்று கேட்டார். அவர் தண்ணீரை அடித்த
தும், அது இரண்டாகப் பிரிந்தது. எலிசா ஆற்றைக் கடந்து போனார்.[f]

15 எரிகோவிலிருந்து வந்த தீர்க்கதரிசிகளின் மகன்கள் தூரத்திலிருந்து
எலிசாவைப் பார்த்ததும், "எலியாவிடமிருந்த கடவுளின் சக்தி எலிசாவுக்
குக் கிடைத்துவிட்டது"[g] என்று சொன்னார்கள். அதனால், அவர்கள் எலி
சாவிடம் போய் அவர் முன்னால் மண்டிபோட்டு தலைவணங்கினார்கள்.
16 பின்பு அவர்கள், "உங்களுடைய ஊழியர்களான எங்களுடன் 50 பலசா
லிகள் இருக்கிறார்கள். அவர்கள் போய் உங்கள் எஜமானைத் தேடிக் கண்டு
பிடிக்க தயவுசெய்து அனுமதி கொடுங்கள். ஒருவேளை யெகோவாவின்
சக்தி* அவரைக் கொண்டுபோய் ஏதாவது மலையிலோ பள்ளத்தாக்கிலோ
போட்டிருக்கலாம்"[h] என்று சொன்னார்கள். ஆனால் எலிசா, "வேண்டாம்,
அவர்களை அனுப்பாதீர்கள்" என்று சொன்னார். **17** இருந்தாலும், அவர்
கள் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதனால் அவர்
சங்கடத்தோடு, "சரி, அனுப்புங்கள்" என்று சொன்னார். அவர்கள் அந்த
50 பேரை அனுப்பினார்கள். அவர்கள் மூன்று நாட்கள் விடாமல் தேடியும்
எலியாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. **18** அவர்கள் திரும்பி வந்த
போது எலிசா எரிகோவில்[i] தங்கியிருந்தார். அவர்களைப் பார்த்து, "போக
வேண்டாமென்று நான் அப்போதே உங்களிடம் சொன்னேன், இல்லையா?"
என்றார்.

19 கொஞ்சக் காலம் கழித்து, அந்த நகரத்து ஆட்கள் எலிசாவிடம்
வந்து, "எஜமானே, இந்த ஊர் அருமையான இடத்தில் அமைந்திருக்கிறது[j]
என்று உங்களுக்கே தெரியும். ஆனால், தண்ணீர்தான் மோசம். அதனால்,
இந்த இடத்தில் விளைச்சலே இல்லை"* என்று சொன்னார்கள். **20** அதற்கு
அவர், "ஒரு புதிய கிண்ணத்தில் உப்பைக் கொண்டுவாருங்கள்" என்று
சொன்னார். அவர்களும் கொண்டுவந்தார்கள். **21** அப்போது எலிசா,
தண்ணீர் ஊற்றெடுக்கும் இடத்துக்குப் போய் அந்த உப்பைக் கொட்டினார்;[k]
அப்போது, "நான் இந்தத் தண்ணீரைச் சுத்தமாக்கிவிட்டேன். இனிமேல் இந்
தத் தண்ணீரால் மரணமோ மலட்டுத்தன்மையோ* ஏற்படாது என்று
யெகோவா சொல்கிறார்" என்றார். **22** எலிசா சொன்னபடியே அந்தத்
தண்ணீர் இன்றுவரை சுத்தமாக இருக்கிறது.

23 பின்பு, அவர் அங்கிருந்து புறப்பட்டு பெத்தேலுக்குப் போனார்.

2:13 *அதாவது, "தீர்க்கதரிசியின் அங்கி." **2:16** *வே.வா., "காற்று." **2:19** *அல்லது, "இந்த இடத்தில் உள்ளவர்களுக்குக் கருச்சிதைவு ஏற்படுகிறது." **2:21** *அல்லது, "கருச்சிதைவோ."

அவர் போய்க்கொண்டிருந்தபோது, நகரத்திலிருந்து சிறுவர்கள் சிலர் வந்து
அவரைப் பார்த்து கேலி செய்தார்கள்.[a] “வழுக்கைத் தலையா, ஏறிப் போ!
வழுக்கைத் தலையா, ஏறிப் போ!” என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.
24 கடைசியில் எலிசா அவர்களைத் திரும்பிப் பார்த்து யெகோவாவின்
பெயரில் சபித்தார். அப்போது, இரண்டு பெண் கரடிகள்[b] காட்டிலிருந்து
வந்து அந்த 42 சிறுவர்களையும் பீறிப்போட்டன.[c] **25** அவர் கர்மேல்
மலைக்குப்[d] போனார், பின்பு அங்கிருந்து சமாரியாவுக்குத் திரும்பிப்
போனார்.

3 யோசபாத் ராஜா யூதாவை ஆட்சி செய்த 18-ஆம் வருஷத்தில், ஆகா
பின் மகன் யோராம்[e] சமாரியாவில் ராஜாவானார். அவர் இஸ்ரவேலை
12 வருஷங்கள் ஆட்சி செய்தார். **2** யெகோவாவுக்குப் பிடிக்காததைச்
செய்துவந்தாலும், அவருடைய அப்பா அம்மா அளவுக்கு அவர் மோசமா
னவராக இல்லை; ஏனென்றால், பாகாலுக்காகத் தன்னுடைய அப்பா நிறுத்
தியிருந்த பூஜைத் தூணை அவர் உடைத்துப்போட்டார்.[f] **3** இருந்தா
லும், இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டிய நேபாத்தின் மகனான
யெரொபெயாமின் பாவ வழியைவிட்டு விலகவே இல்லை,[g] விடாப்பிடி
யாக அந்தக் கெட்ட வழியிலேயே நடந்தார்.

4 அந்தக் காலத்தில், மோவாபின் ராஜாவான மேசா ஆட்டு மந்தை
களை வைத்திருந்தான். 1,00,000 செம்மறி ஆட்டுக்குட்டிகளையும் மயிர் கத்த
ரிக்கப்படாத 1,00,000 செம்மறி ஆட்டுக்கடாக்களையும் இஸ்ரவேல் ராஜாவுக்
குக் கப்பம் கட்டிவந்திருந்தான். **5** ஆகாப் இறந்ததும்,[h] மோவாபின் ராஜா
இஸ்ரவேலின் ராஜாவுக்கு எதிராகக் கலகம் செய்தான்.[i] **6** அப்போது,
யோராம் ராஜா சமாரியாவிலிருந்து போய் இஸ்ரவேல் வீரர்கள் எல்லா
ரையும் ஒன்றுதிரட்டினார். **7** அதோடு, யூதாவின் ராஜாவான யோசபாத்துக்
குச் செய்தியும் அனுப்பினார்; “மோவாபின் ராஜா எனக்கு எதிராகக் கலகம்
செய்கிறான். அவனை எதிர்த்துப் போர் செய்ய என்னோடு வருவீர்களா?”
என்று கேட்டார். அதற்கு யோசபாத், “வருகிறேன்.[j] நீங்கள் வேறு நான் வேறு
அல்ல. என்னுடைய மக்கள் உங்களுடைய மக்கள், என்னுடைய குதிரைகள்
உங்களுடைய குதிரைகள்”[k] என்று சொன்னார். **8** பின்பு யோசபாத், “நாம்
எந்த வழியாகப் போகலாம்?” என்று கேட்டார். அதற்கு யோராம், “ஏதோம்
வனாந்தரத்தின் வழியாகப் போகலாம்” என்று சொன்னார்.

9 யூதாவின் ராஜாவையும் ஏதோமின்[l] ராஜாவையும் கூட்டிக்கொண்டு
இஸ்ரவேலின் ராஜா கிளம்பினார். அவர்கள் சுற்றுவழியில் ஏழு நாட்கள் பய
ணம் செய்தார்கள். அவர்களோடு வந்த வீரர்களுக்கும் கால்நடைகளுக்கும்
தண்ணீர் கிடைக்கவில்லை. **10** அப்போது இஸ்ரவேலின் ராஜா, “மோவா
பியர்களின் கையில் கொடுப்பதற்காக இந்த மூன்று ராஜாக்களையும்
யெகோவா வரவழைத்திருக்கிறாரே, என்ன கொடுமை!” என்று சொன்னார்.
11 அதற்கு யோசபாத், “இங்கே யெகோவாவின் தீர்க்கதரிசி யாராவது
இருக்கிறார்களா? இருந்தால், அவர் மூலம் யெகோவாவிடம் விசாரிக்க
லாமே?”[m] என்று சொன்னார். அப்போது இஸ்ரவேல் ராஜாவின் ஊழியர்
களில் ஒருவர், “சாப்பாத்தின் மகன் எலிசா[n] இங்கே இருக்கிறார்;
எலியா கை கழுவ தண்ணீர் ஊற்றிவந்தவர் இவர்தான்”*[o] என்று சொன்

3:11 * வே.வா., “எலியாவின் ஊழியராக இருந்தவர் இவர்தான்.”

அதி. 2
a 2நா 36:15, 16; லூ 10:16
b நீதி 17:12
c 2ரா 1:10
d 2ரா 4:25

அதி. 3
e 2ரா 1:17
f 1ரா 16:30-33
g 1ரா 12:28-30
h 1ரா 22:37
i 2சா 8:2
j 2நா 19:2
k 1ரா 22:3, 4
l 2சா 8:14
m 1ரா 22:7
n 1ரா 19:16; 2ரா 2:15
o 1ரா 19:19, 21

னார். **12** அதற்கு யோசபாத், “அவர் யெகோவாவின் செய்தியைச் சொல்
பவர்” என்றார். அதனால், யோசபாத்தும் இஸ்ரவேலின் ராஜாவும் ஏதோ
மின் ராஜாவும் எலிசாவிடம் போனார்கள்.

13 எலிசா இஸ்ரவேலின் ராஜாவிடம், “நீங்கள் ஏன் என்னிடம் வந்தீர்
கள்?*[a] உங்கள் அப்பாவின் தீர்க்கதரிசிகளிடமும் அம்மாவின் தீர்க்கதரிசி
களிடமும் போய்க் கேளுங்கள்”[b] என்று சொன்னார். அதற்கு இஸ்ர
வேலின் ராஜா, “அப்படிச் சொல்லாதீர்கள். மோவாபியர்களின் கையில்
கொடுப்பதற்காக மூன்று ராஜாக்களையும் யெகோவாதான் வரவழைத்தி
ருக்கிறார்” என்று சொன்னார். **14** அப்போது எலிசா, “நான் சேவை செய்
கிற பரலோகப் படைகளின் யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,*
யூதாவின் ராஜா யோசபாத்மீது[c] வைத்திருக்கிற மரியாதையால்தான் உங்க
ளிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்; இல்லாவிட்டால், உங்கள் முகத்தைக்கூட
பார்த்திருக்க மாட்டேன்.[d] **15** யாழ் வாசிக்கிற*[e] ஒருவனை வரச் சொல்
லுங்கள்” என்றார். அவன் யாழ் வாசிக்க ஆரம்பித்ததும், யெகோவாவின்
சக்தி# எலிசாமீது வந்தது.[f] **16** அப்போது அவர், “இந்தப் பள்ளத்தாக்கு*
முழுவதும் குழிகளைத் தோண்டுங்கள் என்று யெகோவா சொல்கிறார்.
17 ‘காற்றும் அடிக்காது, மழையும் பெய்யாது, ஆனாலும் இந்தப் பள்ளத்
தாக்கு* முழுவதும் தண்ணீர் நிரம்பிவழியும்.[g] அந்தத் தண்ணீரை நீங்களும்
குடிப்பீர்கள், உங்களுடைய கால்நடைகளும் மற்ற விலங்குகளும் குடிக்கும்’
என்று யெகோவா சொல்கிறார். **18** இதெல்லாம் யெகோவாவுக்கு ஒன்
றுமே இல்லை.[h] மோவாபைத் தோற்கடிக்கக்கூட அவர் உங்களுக்கு உதவி
செய்வார்.[i] **19** மதில் சூழ்ந்த எல்லா நகரங்களையும்[j] முக்கியமான எல்லா
நகரங்களையும் தரைமட்டமாக்குங்கள். நல்ல மரங்கள் எல்லாவற்றையும்
வெட்டிப் போடுங்கள். எல்லா நீரூற்றுகளையும் அடைத்துவிடுங்கள். நல்ல
நிலங்கள் எல்லாவற்றிலும் கற்களைப் போட்டு நாசமாக்குங்கள்”[k] என்று
சொன்னார்.

20 காலையில், அதாவது உணவுக் காணிக்கை கொடுக்கும் நேரத்தில்,[l]
ஏதோமின் திசையிலிருந்து திடீரென்று தண்ணீர் பாய்ந்து வந்தது; அதனால்,
அந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் தண்ணீரால் நிரம்பியது.

21 தங்களுக்கு எதிராகப் போர் செய்ய ராஜாக்கள் வந்திருக்கிறார்கள்
என்பதை மோவாபியர்கள் எல்லாரும் கேள்விப்பட்டவுடன், ஆயுதமேந்தி
போர் செய்யக்கூடிய ஆண்கள் எல்லாரையும் ஒன்றுதிரட்டினார்கள். பின்பு,
அவர்கள் எல்லையில் போய் நின்றார்கள். **22** விடியற்காலையில் அவர்
கள் எழுந்து பார்த்தபோது, பள்ளத்தாக்கிலிருந்த தண்ணீர்மீது சூரிய ஒளி
பட்டது; எதிர் திசையில் இருந்த மோவாபியர்களுக்கு அது இரத்தம்போல்
சிவப்பாகத் தெரிந்தது. **23** உடனே அவர்கள், “அதோ பாருங்கள், இரத்
தம்! அந்த ராஜாக்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு செத்துவிட்டார்
கள். மோவாபியர்களே, வாருங்கள் கொள்ளையடிக்கலாம்!”[m] என்று
சொல்லிக்கொண்டார்கள். **24** அவர்கள் இஸ்ரவேலர்களின் முகாமுக்குள்
வந்ததும், இஸ்ரவேல் வீரர்கள் எழுந்து மோவாபியர்களை வெட்டி வீழ்த்த

3:13 * நே.மொ., “உங்களுக்கும் எனக்கும் என்ன?” **3:14** * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **3:15** * வே.வா., “இசைக்கலைஞன்.” # நே.மொ., “கை.” **3:16, 17** * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கு.”

அதி. 3

a 1சா 2:30; எசே 14:3
b நியா 10:14; 1ரா 18:19; 1ரா 22:6
c 2நா 17:3, 4; 2நா 19:3, 4
d நீதி 15:29
e 1சா 10:5; 1நா 25:1
f 1ரா 18:46; எசே 1:3; அப் 11:21
g சங் 107:35
h எரே 32:17; மாற் 10:27
i உபா 28:7
j உபா 3:5
k 2ரா 3:25
l யாத் 29:39, 40
m யாத் 15:9, 10

ஆரம்பித்தார்கள். உடனே அவர்கள் தப்பி ஓடினார்கள்.[a] அவர்களைத்
துரத்திக்கொண்டு இஸ்ரவேலர்கள் மோவாபுக்குள் போனார்கள். வழியெல்
லாம் மோவாபியர்களை வீழ்த்திக்கொண்டே போனார்கள். **25** மோவாபி
யர்களின் நகரங்களை இஸ்ரவேலர்கள் தரைமட்டமாக்கினார்கள். வீரர்கள்
ஒவ்வொருவரும் நல்ல நிலங்களில் கற்களை எறிந்தார்கள், அவை எல்லா
வற்றையும் கற்களால் நிரப்பினார்கள். எல்லா நீரூற்றுகளையும் அடைத்துப்
போட்டார்கள்,[b] நல்ல மரங்கள் எல்லாவற்றையும் வெட்டிப் போட்டார்கள்.[c]
கற்களால் கட்டப்பட்ட கீர்-ஆரேசேத்தின்[d] மதில் மட்டும்தான் கடைசியாக
மிஞ்சியிருந்தது. கல்லெறியும் வீரர்கள் அதைச் சூழ்ந்துகொண்டு அதையும்
தாக்கினார்கள்.

26 தன்னுடைய படை தோற்றுப்போனது என்று மோவாபின் ராஜா
வுக்குத் தெரிந்ததும், வாளேந்திய 700 வீரர்களை அவன் கூட்டிக்கொண்டு
போய் எதிரி படைக்குள் நுழைந்து ஏதோமின் ராஜாவைத்[e] தாக்க முயற்சி
செய்தான்; ஆனால் அவர்களால் முடியவில்லை. **27** அதனால், அவன்
தனக்குப் பிறகு ராஜாவாக வேண்டிய தன்னுடைய மூத்த மகனை மதில்மீது
தகன பலி கொடுத்தான்.[f] இஸ்ரவேலர்களுக்கு எதிராகப் பயங்கர கோபம்
மூண்டது; அதனால், அவர்கள் அவனைவிட்டுப் பின்வாங்கி தங்களுடைய
தேசத்துக்குத் திரும்பினார்கள்.

4 தீர்க்கதரிசிகளின் மகன்களில்[g] ஒருவருடைய மனைவி எலிசாவிடம்
வந்து, “உங்களுடைய ஊழியரான என் கணவர் இறந்துவிட்டார். அவர்
எப்போதுமே யெகோவாவுக்குப் பயந்து நடந்தவர்[h] என்பது உங்களுக்கு
நன்றாகத் தெரியும். ஆனால், கடன் கொடுத்த ஒருவன் இப்போது என்னு
டைய இரண்டு பிள்ளைகளையும் அடிமையாக்க வந்திருக்கிறான்” என்று
வேதனையோடு சொன்னாள். **2** அதற்கு எலிசா, “நான் உனக்கு என்ன
செய்ய வேண்டும்? சரி, உன் வீட்டில் என்ன இருக்கிறது, சொல்” என்றார்.
அதற்கு அவள், “ஜாடியில் இருக்கிற எண்ணெயைத் தவிர வீட்டில் வேறு
எதுவுமே இல்லை”[i] என்று சொன்னாள். **3** அப்போது அவர், “நீ போய்
அக்கம்பக்கத்தில் இருக்கிற எல்லாரிடமும் காலி பாத்திரங்களை வாங்கிக்
கொள். எத்தனை வாங்க முடியுமோ அத்தனையும் வாங்கிக்கொள்.
4 பிறகு, நீயும் உன்னுடைய மகன்களும் வீட்டுக்குள் போய் கதவைச் சாத்
திக்கொள்ளுங்கள். எல்லா பாத்திரங்களிலும் எண்ணெய் ஊற்றுங்கள்; நிரம்
பிய பாத்திரங்களைத் தனியாக எடுத்து வைத்துவிடுங்கள்” என்று சொன்
னார். **5** அதன்படியே, அவள் அங்கிருந்து போனாள்.

அவளும் அவளுடைய மகன்களும் வீட்டுக்குள் போய் கதவைச் சாத்
திக்கொண்டார்கள். அவளுடைய மகன்கள் ஒவ்வொரு பாத்திரமாக அவ
ளிடம் கொடுக்க, அவளும் அவற்றில் எண்ணெய் ஊற்றிக்கொண்டே இருந்
தாள்.[j] **6** பாத்திரங்கள் எல்லாம் நிரம்பியதும் தன்னுடைய மகன்களில்
ஒருவனிடம், “இன்னொரு பாத்திரத்தைத் தா”[k] என்று கேட்டாள். அப்போது
அவன், “அவ்வளவுதான், வேறு பாத்திரம் இல்லை” என்று சொன்னான்.
அத்துடன் எண்ணெய் வருவது நின்றுவிட்டது.[l] **7** பின்பு, உண்மைக் கட
வுளின் ஊழியரிடம் அவள் வந்து நடந்ததைச் சொன்னாள். அதற்கு அவர்,
“நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனை அடைத்துவிடு. மீதியி
ருக்கிற பணத்தை வைத்து நீயும் உன் மகன்களும் பிழைத்துக்கொள்ளுங்
கள்” என்று சொன்னார்.

அதி. 3
a லேவி 26:7
b ஆதி 26:15
2நா 32:4
c 2ரா 3:19
d ஏசா 16:7
e 2ரா 3:9
f உபா 12:31
2நா 28:1, 3
சங் 106:37, 38

அதி. 4
g 2ரா 2:3, 5
h 1ரா 19:18
i 1ரா 17:9, 12
j மாற் 6:41
மாற் 8:6-8
யோவா 2:7-9
k மத் 14:19
l யோசு 5:12
1ரா 17:14

அதி. 4

8 ஒருநாள், சூனேம்[a] ஊருக்கு எலிசா போனார். அங்கே செல்
வாக்குள்ள ஒரு பெண் இருந்தாள். அவள் தன்னுடைய வீட்டில் சாப்பிடச்
சொல்லி எலிசாவை வற்புறுத்தினாள்.[b] அதனால், அந்த வழியாகப் போகும்
போதெல்லாம் அவளுடைய வீட்டில்தான் அவர் சாப்பிடுவார். **9** ஒருநாள்
அவள் தன் கணவனிடம், “அடிக்கடி இந்த வழியாகப் போகிறாரே, அவர்
கடவுளின் ஊழியர்.* **10** அதனால், மொட்டைமாடியில் அவருக்கு ஒரு
சின்ன அறை[c] கட்டிக்கொடுக்கலாம். அதில் ஒரு கட்டிலையும் மேஜை நாற்
காலியையும் விளக்குத்தண்டையும் வைக்கலாம். இங்கே வரும்போதெல்
லாம் அந்த அறையில் அவர் தங்கிக்கொள்ளட்டும்”[d] என்று சொன்னாள்.

11 ஒருநாள், எலிசா அவளுடைய வீட்டுக்கு வந்தார்; பின்பு, படுத்
துக்கொள்ள மாடி அறைக்குப் போனார். **12** அப்போது தன்னுடைய
ஊழியன் கேயாசியிடம்,[e] “அந்த சூனேமியப்[f] பெண்ணைக் கூப்பிடு”
என்று சொன்னார். அவனும் கூப்பிட்டான், அந்தப் பெண் அங்கே வந்து
நின்றாள். **13** பின்பு அவர் கேயாசியைப் பார்த்து, “நீ அந்தப் பெண்ணி
டம், ‘நீ எங்களுக்காக எவ்வளவோ சிரமப்பட்டிருக்கிறாய்.[g] உனக்கு என்ன
வேண்டும்?[h] உனக்காக ராஜாவிடமோ படைத் தளபதியிடமோ பேச
வேண்டுமா?’[i] என்று நான் கேட்டதாகத் தயவுசெய்து சொல்” என்றார்.
அதற்கு அவள், “எனக்கு எதுவும் வேண்டாம், சொந்த ஊரில் நிம்மதியாகத்
தான் இருக்கிறேன்” என்று சொன்னாள். **14** அதனால் எலிசா, “அவளுக்கு
வேறென்ன உதவி செய்யலாம்?” என்று கேயாசியிடம் கேட்டார். அதற்கு
கேயாசி, “அவளுக்கு மகன் இல்லை,[j] அவளுடைய கணவருக்கும் வயதா
கிவிட்டது” என்று சொன்னான். **15** உடனே அவர், “அவளைக் கூப்பிடு”
என்று சொன்னார். கேயாசி அவளைக் கூப்பிட்டபோது, அவள் கதவருகே
வந்து நின்றாள். **16** அப்போது எலிசா, “அடுத்த வருஷம் இந்த நேரத்தில்
உன் மடியில் ஒரு மகன் இருப்பான்”[k] என்று சொன்னார். அதற்கு அவள்,
“எஜமானே, நீங்கள் உண்மைக் கடவுளின் ஊழியர். இந்த அடிமைப் பெண்
ணிடம் பொய் சொல்லாதீர்கள்” என்றாள்.

17 ஆனால், எலிசா சொன்னபடியே அந்தப் பெண் கர்ப்பமாகி, அடுத்த
வருஷம் அதே சமயத்தில் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். **18** அந்தப்
பையன் வளர்ந்தான்; ஒருநாள், அவனுடைய அப்பா அறுவடை செய்கிற
வர்களுடன் இருந்தார், அவன் அங்கே போனான். **19** தன் அப்பாவிடம்,
“தலை வலிக்கிறது, தலை வலிக்கிறது” என்று சொல்லிக்கொண்டே இருந்
தான். அதனால் அவர் தன்னுடைய வேலைக்காரனிடம், “இவனைக்
கொண்டுபோய் இவனுடைய அம்மாவிடம் விடு” என்று சொன்னார்.
20 அவனும் அந்தப் பையனைத் தூக்கிக்கொண்டுபோய் அவனுடைய
அம்மாவிடம் விட்டான். அந்தப் பையன் மத்தியானம்வரை அவளுடைய
மடியில் உட்கார்ந்திருந்தான், பின்பு இறந்துவிட்டான்.[l] **21** அப்போது,
அவள் மாடிக்குப் போய் உண்மைக் கடவுளுடைய ஊழியரின்[m] கட்டிலில்
அவனைக் கிடத்தினாள். பின்பு, கதவைச் சாத்திவிட்டு வந்தாள். **22** தன்
கணவனைக் கூப்பிட்டு, “தயவுசெய்து ஒரு வேலைக்காரனையும் கழு
தையையும் என்னோடு அனுப்பி வையுங்கள். நான் சீக்கிரமாக உண்மைக்
கடவுளின் ஊழியரைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்” என்று சொன்னாள்.
23 அதற்கு அவர், “இன்று மாதப் பிறப்போ*[n] ஓய்வுநாளோ இல்லையே,

a யோசு 19:17, 18
b ஆதி 19:1-3; நியா 13:15
c நியா 3:20; 1ரா 17:19
d மத் 10:41; ரோ 12:13; எபி 13:2
e 2ரா 5:25-27; 2ரா 8:4
f யோசு 19:17, 18
g ரோ 16:6
h 2ரா 4:1, 2; எபி 6:10
i 2ரா 8:3
j ஆதி 15:2; ஆதி 30:1
k ஆதி 18:10
l 1ரா 17:17
m 2ரா 4:9, 10
n எண் 10:10; எண் 28:11

4:9 * நே.மொ., “பரிசுத்த மனிதர்.” **4:23** * வே.வா., “முதலாம் பிறையோ.”

ஏன் இன்றைக்குப் போகிறாய்?” என்று கேட்டார். அவளோ, “பரவாயில்லை,
போய்விட்டு வருகிறேன்” என்று சொன்னாள். **24** கழுதைமேல் சேணம்*
வைத்து ஏறியதும் தன் வேலைக்காரனிடம், “வேகமாகப் போ, நான் சொன்
னால் தவிர எங்கேயும் நிற்காதே” என்று சொன்னாள்.

25 உண்மைக் கடவுளின் ஊழியரைப் பார்க்க கர்மேல் மலைக்குப்
போனாள். அவள் தூரத்தில் வரும்போதே அவர் பார்த்துவிட்டார். உடனே
தன் ஊழியனான கேயாசியிடம், “அதோ பார், சூனேமியப் பெண் வந்து
கொண்டிருக்கிறாள். **26** நீ ஓடிப்போய் அவளிடம், ‘நன்றாக இருக்கிறாயா?
உன் கணவரும் மகனும் நன்றாக இருக்கிறார்களா?’ என்று தயவுசெய்து
கேள்” என்றார். அவன் போய் அவளிடம் விசாரித்தபோது, “எல்லாரும் நன்
றாக இருக்கிறோம்” என்று சொன்னாள். **27** உண்மைக் கடவுளின் ஊழி
யரிடம் அவள் வந்தவுடன், அவருடைய காலைக் கெட்டியாகப் பிடித்துக்
கொண்டாள்.[a] அதைப் பார்த்ததும் அவளைத் தள்ளிவிடுவதற்காக கேயாசி
வந்தான். ஆனால் உண்மைக் கடவுளின் ஊழியரோ, “அவளை விட்டுவிடு,
அவள் ரொம்ப நொந்துபோயிருக்கிறாள். அதற்கான காரணம் எனக்குத்
தெரியாது, யெகோவா அதைப் பற்றி என்னிடம் சொல்லவில்லை” என்றார்.
28 அப்போது அவள், “எஜமானே, எனக்கு ஒரு மகன் வேண்டுமென்று
நான் உங்களிடம் கேட்டேனா? ‘என்னை ஏமாற்றாதீர்கள்’[b] என்று நான் உங்
களிடம் சொன்னேன், இல்லையா?” என்று கேட்டாள்.

29 உடனே அவர் கேயாசியிடம், “உன்னுடைய உடையை இடுப்பில்
இழுத்துக் கட்டிக்கொண்டு[c] புறப்படு, என்னுடைய தடியைக் கையில் எடுத்
துக்கொள். வழியில் யாரிடமும் நலம் விசாரித்துக்கொண்டிருக்காதே; யாரா
வது உன்னிடம் விசாரித்தாலும், எதுவும் பேசாதே. போய் அந்தப் பையனு
டைய முகத்தில் என்னுடைய தடியை வை” என்று சொன்னார்.
30 அப்போது அந்தப் பையனின் அம்மா அவரிடம், “உயிருள்ள கடவு
ளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* உங்கள் உயிர்மேல்
ஆணையாகச் சொல்கிறேன்,# நீங்கள் வராமல் நான் இங்கிருந்து போகவே
மாட்டேன்”[d] என்று சொன்னாள். அதனால், எலிசாவும் அவளுடன்
போனார். **31** கேயாசி அவர்களுக்கு முன்னால் போய் அந்தப் பையனின்
முகத்தில் தடியை வைத்தான். ஆனாலும், அவனுக்குப் பேச்சுமூச்சே வர
வில்லை.[e] அதனால் கேயாசி எலிசாவிடம் வந்து, “பையன் எழுந்திருக்க
வில்லை” என்று சொன்னான்.

32 எலிசா அவளுடைய வீட்டுக்கு வந்தபோது, செத்துப்போன அந்தப்
பையனின் உடல் அவருடைய கட்டிலில் இருந்தது.[f] **33** அவர்கள் இரண்டு
பேரும் வெளியில் நிற்க, அவர் மட்டும் உள்ளே போய் கதவைச் சாத்திக்
கொண்டு யெகோவாவிடம் ஜெபம் செய்தார்.[g] **34** பின்பு, கட்டிலில் ஏறி
தன் வாயை அந்தப் பையனின் வாய்மீதும், தன் கண்களை அவனு
டைய கண்கள்மீதும், தன் உள்ளங்கைகளை அவனுடைய உள்ளங்கைகள்
மீதும் வைத்துப் படுத்துக்கொண்டார். அப்போது, அவனுடைய உடல்

4:24 *சேணம் என்பது மிருகங்களின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்வதற்குப் போடப்படும் தோலினால் ஆன இருக்கை. **4:30** *வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” #வே.வா., “நீங்கள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.”

அதி. 4
a மத் 28:9
b 2ரா 4:16
c 1ரா 18:46
d மத் 15:22, 28
e மத் 17:15, 16
மாற் 9:17, 18
f 2ரா 4:21
g 1ரா 17:19, 20
யோவா 11:41
அப் 9:40

சூடாக ஆரம்பித்தது.[a] **35** எலிசா அந்த வீட்டுக்குள் அங்குமிங்கும்
நடந்துவிட்டு, மறுபடியும் கட்டிலில் ஏறி அந்தப் பையன்மீது படுத்துக்
கொண்டார். அப்போது அந்தப் பையன் ஏழு தடவை தும்மிவிட்டு, தன் கண்
களைத் திறந்தான்.[b] **36** எலிசா உடனே கேயாசியைக் கூப்பிட்டு, “சூனேமி
யப் பெண்ணை வரச் சொல்” என்றார். அவன் கூப்பிட்டதும் அவள் உள்ளே
வந்தாள். அப்போது எலிசா, “உன்னுடைய மகனைத் தூக்கிக்கொள்”[c] என்று
சொன்னார். **37** அவள் உள்ளே வந்து அவருடைய காலடியில் மண்டி
போட்டு தலைவணங்கினாள். பிறகு, தன்னுடைய மகனைத் தூக்கிக்கொண்டு
போனாள்.

38 அதன் பின்பு, எலிசா கில்காலுக்குத் திரும்பிப் போனார்; அந்தச் சம
யத்தில், அந்த இடம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருந்தது.[d] தீர்க்கதரிசிக
ளின் மகன்கள்[e] அவர் முன்னால் உட்கார்ந்திருந்தார்கள். அவர் தன்னு
டைய ஊழியனிடம்,[f] “பெரிய பானையில் கூழ் காய்ச்சி தீர்க்கதரிசிகளின்
மகன்களுக்குக் கொடு” என்று சொன்னார். **39** அதனால், அங்கிருந்த
ஒருவர் காய்கறிகளைப் பறித்துவர வயலுக்குப் போனார். வரும்போது காட்
டுச் செடியிலிருந்து கொம்மட்டிக் காய்களைப் பறித்து, தன் உடை நிறைய
கொண்டுவந்தார். தான் பறித்து வந்தது என்னவென்றே தெரியாமல்,
அவற்றை நறுக்கி கூழ் பானையில் போட்டார். **40** பின்பு, தீர்க்கதரிசிக
ளின் மகன்களுக்கு அதைப் பரிமாறினார்கள். அந்தக் கூழை வாயில்
வைத்தவுடன், “கடவுளின் ஊழியரே, இந்தப் பானையில் இருப்பது விஷம்!”
என்று அவர்கள் அலறினார்கள். அதற்குமேல் அவர்களால் அதைச் சாப்
பிட முடியவில்லை. **41** அதனால் எலிசா, “கொஞ்சம் மாவு கொண்டு
வாருங்கள்” என்று சொன்னார். அதைப் பானையில் போட்டு, “இப்போது
மக்களுக்குப் பரிமாறுங்கள்” என்று சொன்னார். அப்போது, அந்தக் கூழில்
இருந்த விஷம் போயிருந்தது.[g]

42 பாகால்-சலீஷாவிலிருந்து[h] ஒருவர் உண்மைக் கடவுளின் ஊழியரி
டம் வந்தார். முதல் அறுவடையிலிருந்து செய்யப்பட்ட 20 பார்லி
ரொட்டிகளையும்,[i] பை நிறைய புது தானியத்தையும்[j] அவரிடம் கொண்டு
வந்தார். அப்போது எலிசா, “இவற்றை மக்களுக்குக் கொடுங்கள், அவர்கள்
சாப்பிடட்டும்” என்று சொன்னார். **43** அப்போது அவருடைய ஊழியன்,
“இதை எப்படி 100 பேருக்குப் பரிமாறுவது?”[k] என்று கேட்டான். அதற்கு
எலிசா, “மக்களுக்குக் கொடுங்கள். ‘அவர்கள் திருப்தியாகச் சாப்பிட்ட பிற
குகூட மீதியிருக்கும்’[l] என்று யெகோவா சொல்கிறார்” என்று சொன்னார்.
44 அந்த ஊழியன் அவர்களுக்குப் பரிமாறினான். யெகோவா சொன்னப
டியே, அவர்கள் சாப்பிட்ட பிறகுகூட கொஞ்சம் மீதியிருந்தது.[m]

5 சீரியா தேசத்து ராஜாவின் படைத் தளபதி நாகமான் செல்வாக்குள்ள
வராக இருந்தார். அவர் மூலம் சீரியாவுக்கு யெகோவா வெற்றி தந்தி
ருந்ததால், நாகமான்மீது அவருடைய ராஜா அதிக மதிப்பும் மரியாதையும்
வைத்திருந்தார். நாகமான் ஒரு மாவீரர், ஆனால் அவருக்குத் தொழு
நோய்* இருந்தது. **2** ஒருசமயம், இஸ்ரவேல்மீது சீரியர்கள் திடீர்த் தாக்கு
தல் நடத்தியபோது, அங்கிருந்து ஒரு சிறுமியைப் பிடித்துக்கொண்டு வந்தி
ருந்தார்கள். அவள் நாகமானின் மனைவிக்கு வேலைக்காரியாக ஆனாள்.
3 அந்தச் சிறுமி தன் எஜமானியிடம், “என் எஜமான் சமாரியாவில்

அதி. 4
a 1ரா 17:21, 22; அப் 20:9, 10
b 2ரா 8:1, 5
c எபி 11:35
d உபா 28:23, 24; 2ரா 8:1; எசே 14:13
e 2ரா 2:3, 5
f 2ரா 4:12
g யாத் 15:23-25; 2ரா 2:19-21
h 1சா 9:3, 4
i யோவா 6:9
j 1சா 9:6, 7
k மத் 14:17; மாற் 8:4
l மத் 14:20; மாற் 8:8
m லூ 9:17; யோவா 6:13

5:1 * வே.வா., “தோல் நோய்.”

இருக்கிற தீர்க்கதரிசியைப்[a] போய்ப் பார்த்தால் நன்றாக இருக்கும்! இவரு
டைய தொழுநோயை அவர் குணப்படுத்திவிடுவார்"[b] என்று சொன்னாள்.
4 அந்த இஸ்ரவேல் சிறுமி சொன்னதை ராஜாவிடம் அவர்* தெரிவித்தார்.

5 அப்போது சீரியா ராஜா, "உடனே புறப்பட்டுப் போங்கள்! இஸ்ரவேல்
ராஜாவுக்கு ஒரு கடிதத்தைக் கொடுத்து அனுப்புகிறேன்" என்று சொன்னார்.
அதனால், 10 தாலந்து* வெள்ளியையும் 6,000 சேக்கல்# தங்கத்தையும் 10
புதிய உடைகளையும் எடுத்துக்கொண்டு நாகமான் புறப்பட்டுப் போனார்.
6 அவர் இஸ்ரவேலின் ராஜாவிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தார்.
அதில், "இந்தக் கடிதத்துடன் என் ஊழியர் நாகமானை உங்களிடம்
அனுப்பியிருக்கிறேன். அவருடைய தொழுநோயைக் குணப்படுத்துங்கள்"
என்று எழுதப்பட்டிருந்தது. **7** அதைப் படித்ததும் இஸ்ரவேலின் ராஜா
தன் உடையைக் கிழித்துக்கொண்டு, "உயிரைக் கொடுப்பதற்கும் எடுப்பதற்
கும் நான் என்ன கடவுளா?[c] இந்த ஆளுக்கு வந்திருக்கிற தொழுநோயைக்
குணப்படுத்தச் சொல்லி இவனை என்னிடம் அனுப்பியிருக்கிறானே! நீங்
களே பாருங்கள், அவன் என்னை வம்புக்கு இழுக்கப் பார்க்கிறான்" என்று
சொன்னார்.

8 இஸ்ரவேலின் ராஜா தன்னுடைய உடையைக் கிழித்துக்கொண்ட
விஷயத்தை உண்மைக் கடவுளின் ஊழியரான எலிசா கேள்விப்பட்டார்.
உடனே, "நீங்கள் ஏன் உடையைக் கிழித்துக்கொண்டீர்கள்? தயவுசெய்து
அவரை என்னிடம் அனுப்புங்கள். இஸ்ரவேலில் ஒரு தீர்க்கதரிசி இருப்
பதை அவர் தெரிந்துகொள்ளட்டும்"[d] என்று சொல்லி அனுப்பினார்.
9 அதனால், நாகமான் தன் குதிரைகளோடும் போர் ரதங்களோடும்
எலிசாவின் வீட்டு வாசலில் போய் நின்றார். **10** ஆனால் எலிசா அவரி
டம் ஓர் ஆளை அனுப்பி, "நீங்கள் போய் யோர்தானில்[e] ஏழு தடவை[f]
முங்கியெழுங்கள். அப்போது, உங்களுடைய உடல் முன்புபோல் நன்றாகி
விடும். நீங்கள் சுத்தமாவீர்கள்" என்று சொல்லச் சொன்னார். **11** அதைக்
கேட்டு நாகமான் பயங்கர கோபமடைந்து, அங்கிருந்து புறப்பட்டார்.
"அவர் என்னுடைய பக்கத்தில் வந்து நின்று, தன்னுடைய கடவுளான
யெகோவா பெயரைச் சொல்லி வேண்டுவார்; தொழுநோய் இருக்கிற இடத்
தில் கையை அப்படியும் இப்படியும் அசைத்துக் குணப்படுத்துவார் என்று
நினைத்துதான் இங்கே வந்தேன். **12** இஸ்ரவேலில் ஓடுகிற அத்தனை
ஆறுகளும் தமஸ்குவில்[g] ஓடுகிற ஆப்னாவுக்கும் பர்பாருக்கும் ஈடாகுமா?
நான் அவற்றில் முங்கியெழுந்து குணமாக முடியாதா?" என்று சொல்லிவிட்
டுக் கோபத்துடன் கிளம்பிப் போனார்.

13 அப்போது அவருடைய ஊழியர்கள் அவரிடம், "தகப்பனே, அந்தத்
தீர்க்கதரிசி வேறு ஏதாவது கஷ்டமான காரியத்தைச் செய்யச் சொல்லி
யிருந்தால், நீங்கள் செய்திருக்க மாட்டீர்களா? 'ஆற்றில் முங்கியெழுங்கள்,
சுத்தமாவீர்கள்' என்றுதானே உங்களிடம் சொன்னார்? இது ஒன்றும் பெரிய
விஷயம் இல்லையே" என்று சொன்னார்கள். **14** உடனே நாகமான் உண்
மைக் கடவுளின் ஊழியர் சொன்னபடி[h] யோர்தான் ஆற்றுக்குப் போய்,
ஏழு தடவை முங்கியெழுந்தார். அப்போது, அவருடைய உடல் ஒரு

5:4 * அநேகமாக, நாகமானைக் குறிக்கலாம். **5:5** * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள் # ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 5

a 1ரா 19:16
b மத் 8:2; மத் 11:5; லூ 4:27
c உபா 32:39
d 1ரா 17:24; 1ரா 19:16; 2ரா 3:11, 12; 2ரா 8:4
e யோவா 9:6, 7
f லேவி 14:7; எண் 19:4
g ஏசா 7:8
h 2ரா 5:10

அதி. 5
a யோபு 33:25
b லூ 4:27; லூ 5:13
c லூ 17:15, 16
d சங் 96:4, 5; ஏசா 43:10
e மத் 10:8
f 1ரா 17:24
g 2ரா 4:12; 2ரா 8:4
h 2ரா 5:1; லூ 4:27
i 2ரா 5:5
j 2ரா 5:16

சின்னப் பிள்ளையின் உடல் போல ஆனது.[a] அவர் தொழுநோய் நீங்கி சுத்
தமானார்.[b]

15 பின்பு நாகமான் தன்னுடைய ஊழியர்கள் எல்லாரையும் கூட்
டிக்கொண்டு உண்மைக் கடவுளின் ஊழியரைப் பார்க்கப் போனார்.[c] அவ
ரிடம், “இஸ்ரவேலின் கடவுள்தான் உண்மையான கடவுள். அவரைத்
தவிர உலகத்தில் வேறு கடவுளே இல்லை என்பதை இப்போது தெரிந்து
கொண்டேன்.[d] தயவுசெய்து இந்த அடியேன் தரும் அன்பளிப்பை வாங்
கிக்கொள்ளுங்கள்” என்று சொன்னார். **16** அதற்கு எலிசா, “நான் சேவை
செய்கிற யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* இதை நான்
வாங்க மாட்டேன்”[e] என்று சொன்னார். நாகமான் எவ்வளவோ வற்பு
றுத்தியும் எலிசா வாங்க மறுத்துவிட்டார். **17** கடைசியில் நாகமான், “சரி,
இங்கிருந்து இரண்டு கோவேறு கழுதைகள்* சுமக்கிற அளவுக்கு
மண்ணை எடுத்துக்கொண்டு போக அடியேனுக்குத் தயவுசெய்து அனுமதி
கொடுங்கள். இனிமேல் யெகோவாவைத் தவிர வேறெந்தக் கடவுளுக்கும்
தகன பலியோ வேறெந்தப் பலியோ கொடுக்க மாட்டேன். **18** ஆனால்,
அடியேன் செய்கிற ஒரேவொரு காரியத்தை மட்டும் யெகோவா மன்
னிக்க வேண்டும். ரிம்மோன் கோயிலுக்கு* போய் என் எஜமான் மண்டி
போட்டு வழிபடும்போது, நான் அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்
கொள்ள வேண்டியிருக்கும்; அப்போது, நானும் அங்கே மண்டிபோட
வேண்டியிருக்கும். இப்படி ரிம்மோன் கோயிலில் நான் மண்டிபோடும்
போது, அடியேனை தயவுசெய்து யெகோவா மன்னிப்பாராக” என்று சொன்
னார். **19** அதற்கு எலிசா, “சமாதானமாகப் போங்கள்” என்று சொன்னார்.
நாகமான் அங்கிருந்து கிளம்பி கொஞ்சத் தூரம் போனதும், **20** உண்மைக்
கடவுளின் ஊழியரான எலிசாவின்[f] ஊழியன் கேயாசி,[g] ‘சீரியாவிலிருந்து
நாகமான்[h] கொண்டுவந்த அன்பளிப்பை வாங்கிக்கொள்ளாமல் என் எஜ
மான் இப்படி அனுப்பிவிட்டாரே. நாகமான் பின்னால் ஓடிப்போய் எதையா
வது வாங்காமல் விடமாட்டேன், இது உயிருள்ள கடவுளாகிய யெகோவா
மேல் ஆணை’* என்று சொல்லிக்கொண்டான். **21** நாகமானின் ரதத்தைப்
பிடிக்க கேயாசி வேகமாக ஓடினான். பின்னால் யாரோ ஓடிவருவதைப்
பார்த்ததும் நாகமான் தன்னுடைய ரதத்திலிருந்து இறங்கினார். கேயாசி
யிடம், “என்ன விஷயம், ஏதாவது பிரச்சினையா?” என்று கேட்டார்.
22 அதற்கு கேயாசி, “பிரச்சினை ஒன்றுமில்லை. எஜமான்தான் என்னை
உங்களிடம் அனுப்பிவைத்தார். ‘தீர்க்கதரிசிகளின் மகன்களில் இரண்டு
இளைஞர்கள் இப்போதுதான் எப்பிராயீம் மலைப்பகுதியிலிருந்து வந்தார்
கள். அவர்களுக்குக் கொடுக்க தயவுசெய்து ஒரு தாலந்து வெள்ளியும்
இரண்டு புது உடைகளும் கொடுங்கள்’[i] என்று சொல்லி அனுப்பினார்” என்
றான். **23** அப்போது நாகமான், “அதற்கென்ன, இரண்டு தாலந்து எடுத்துக்
கொள்ளுங்கள்” என்று சொல்லி ரொம்பவே வற்புறுத்தினார்.[j] பின்பு,
இரண்டு தாலந்து வெள்ளியையும் இரண்டு புது உடைகளையும் இரண்டு
மூட்டைகளில் கட்டி தன்னுடைய ஊழியர்கள் இரண்டு பேரிடம்

5:16 *வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **5:17** *பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்த விலங்குகள். **5:18** *நே.மொ., “வீட்டுக்கு.” **5:20** *வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்.”

கொடுத்தார். அவர்கள் அந்த மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு முன்னால்
போக, பின்னால் கேயாசி போனான்.

24 ஓபேலுக்கு* வந்ததும், கேயாசி அந்த மூட்டைகளை வாங்கி வீட்
டில் வைத்துவிட்டு அவர்களை அனுப்பிவிட்டான். அவர்கள் போனதும்,
25 தன்னுடைய எஜமானிடம் போய் நின்றான். அப்போது எலிசா, “எங்கே
போய்விட்டு வருகிறாய், கேயாசி?” என்று கேட்டார். அதற்கு அவன்,
“அடியேன் எங்கேயும் போகவில்லையே”[a] என்று சொன்னான். **26** அப்
போது எலிசா, “உன்னைச் சந்திக்க ரதத்திலிருந்து அவர் இறங்கியது எனக்
குத் தெரியாதென்று நினைத்தாயா? வெள்ளியையோ உடைகளையோ
ஒலிவத் தோப்புகளையோ திராட்சைத் தோட்டங்களையோ ஆடுமாடுக
ளையோ வேலைக்காரர்களையோ வேலைக்காரிகளையோ வாங்கிக்கொள்
வதற்கான காலமா இது?[b] **27** நாகமானுக்கு வந்த தொழுநோய்[c] உன்னை
யும் உன்னுடைய வம்சத்தையும் என்றென்றும் தொற்றிக்கொள்ளும்” என்று
சொன்னார். அப்போதே அவனுக்குத் தொழுநோய் தொற்றியது, அவனு
டைய உடல் வெண்பனியைப் போல் ஆனது;[d] உடனே அவன் அங்கி
ருந்து போனான்.

6

தீர்க்கதரிசிகளின் மகன்கள்[e] எலிசாவிடம், “உங்களோடு நாங்கள் தங்
கியிருக்கிற இடம் ரொம்ப நெரிசலாக இருக்கிறது. **2** அதனால் தயவு
செய்து எங்களுக்கு அனுமதி கொடுங்கள், நாங்கள் எல்லாரும் யோர்தா
னுக்குப் போய் மரம் வெட்டி, குடியிருக்க அங்கே ஒரு வீடு கட்டுகிறோம்”
என்று சொன்னார்கள். அதற்கு அவர், “சரி, போங்கள்” என்று சொன்னார்.
3 அவர்களில் ஒருவர், “உங்கள் ஊழியர்களோடு தயவுசெய்து நீங்களும்
வருகிறீர்களா?” என்று கேட்டார். அதற்கு எலிசா, “சரி, வருகிறேன்” என்று
சொன்னார். **4** எலிசா அவர்களோடு போனார், அவர்கள் யோர்தான் ஆற்
றுக்கு வந்து மரம் வெட்ட ஆரம்பித்தார்கள். **5** அவர்களில் ஒருவர் மரம்
வெட்டிக்கொண்டிருந்தபோது, கைப்பிடியிலிருந்து கோடாலியின் முனை
கழன்று தண்ணீருக்குள் விழுந்துவிட்டது. உடனே அவர், “ஐயோ, எஜ
மானே, அது கடன் வாங்கியது” என்று கத்தினார். **6** அப்போது உண்மைக்
கடவுளின் ஊழியர், “எங்கே விழுந்தது?” என்று கேட்டார். விழுந்த இடத்தை
அவர் காட்டினார். எலிசா ஒரு மரத்துண்டை வெட்டி அங்கே போட்டதும்,
அந்தக் கோடாலியின் முனை தண்ணீரில் மிதந்தது. **7** உடனே, “அதை
வெளியே எடு” என்று எலிசா சொன்னார். அவரும் கை நீட்டி அதை
எடுத்தார்.

8 பின்பு, சீரியாவின் ராஜா இஸ்ரவேலர்களை எதிர்த்துப் போர் செய்ய
வந்தான்;[f] தன்னுடைய ஊழியர்களோடு கலந்துபேசி, “நாம் போய் இந்த
இடத்தில் முகாம்போடலாம்” என்று சொன்னான். **9** அப்போது உண்மைக்
கடவுளின் ஊழியர்[g] இஸ்ரவேலின் ராஜாவுக்குச் செய்தி அனுப்பி, “இந்த
இடத்துக்குப் போகாதீர்கள், சீரியர்கள் இதைத் தாக்க வருகிறார்கள்” என்று
தெரிவித்தார். **10** உண்மைக் கடவுளின் ஊழியர் எச்சரித்திருந்த இடத்
துக்கு ராஜா செய்தி அனுப்பினார். இப்படியே பலமுறை* ராஜாவை எச்ச
ரித்து வந்ததால், அவரும் அந்த இடங்களுக்கெல்லாம் போகாமல் பார்த்
துக்கொண்டார்.[h]

5:24 *சமாரியாவில் இருந்த இடம். ஒரு குன்றாகவோ கோட்டையாகவோ இருந்தி
ருக்கலாம். **6:10** *வே.வா., “ஓரிரு தடவைக்கு மேலாக.”

அதி. 5
a அப் 5:8, 9
b மத் 10:8
லூ 12:15
அப் 20:33
1தீ 6:10
c 2ரா 5:1
d யாத் 4:6
எண் 12:10

அதி. 6
e 2ரா 2:3, 5
2ரா 9:1
f 1ரா 20:1, 34
1ரா 22:31
g 1ரா 17:24
h மத் 2:12

11 இதனால், சீரியாவின் ராஜா ஆத்திரமடைந்தான்; தன்னுடைய ஊழி
யர்களைக் கூப்பிட்டு, “சொல்லுங்கள், உங்களில் யார் இஸ்ரவேலின் ராஜா
வுக்குக் கையாள்?” என்று கேட்டான். **12** அவருடைய ஊழியர்களில்
ஒருவன், “ராஜாவே, என் எஜமானே, நாங்கள் யாருமில்லை. இஸ்ரவேலில்
இருக்கிற எலிசா தீர்க்கதரிசிதான் நீங்கள் படுக்கை அறையில் பேசுவதைக்
கூட இஸ்ரவேலின் ராஜாவுக்குச் சொல்கிறார்”[a] என்றான். **13** அதற்கு
அவன், “நீங்கள் போய் அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடியுங்கள்,
நான் ஆட்களை அனுப்பி அவரைப் பிடிக்கிறேன்” என்று சொன்னான். பிற்
பாடு, “எலிசா தோத்தானில்[b] இருக்கிறார்” என்ற தகவல் சீரியா ராஜாவுக்குக்
கிடைத்தது. **14** உடனே குதிரைகளையும் போர் ரதங்களையும் பெரிய
படையையும் அங்கே அனுப்பினான். அவனுடைய வீரர்கள் இரவோடு இர
வாக வந்து அந்த நகரத்தைச் சுற்றிவளைத்தார்கள்.

15 விடியற்காலையிலே எலிசாவின் ஊழியன் எழுந்து வெளியே வந்
தான்; அப்போது, குதிரைப்படைகளும் ரதப்படைகளும் அந்த நகரத்தைச்
சுற்றிவளைத்திருப்பதைப் பார்த்தான். உடனே அவன் எலிசாவிடம், “ஐயோ,
எஜமானே! இப்போது என்ன செய்வது?” என்று பதறினான். **16** ஆனால்
எலிசா, “பயப்படாதே![c] அவர்களோடு இருப்பவர்களைவிட நம்மோடு
இருப்பவர்கள்தான் அதிகம்”[d] என்று சொன்னார். **17** பின்பு எலிசா,
“யெகோவாவே, தயவுசெய்து இவனுடைய கண்களைத் திறங்கள்”[e] என்று
ஜெபம் செய்தார். உடனே அந்த ஊழியனுடைய கண்களை யெகோவா
திறந்தார். அப்போது, நெருப்புபோல் பிரகாசித்த குதிரைகளும் போர் ரதங்க
ளும்[f] எலிசா இருந்த மலைப்பகுதி முழுவதையும் சூழ்ந்து நிற்பதை அவன்
பார்த்தான்.[g]

18 எலிசா இருந்த இடத்துக்கு சீரியர்கள் வந்தபோது, “தயவுசெய்து
இவர்களுடைய* கண்களைக் குருடாக்குங்கள்”[h] என்று சொல்லி யெகோவா
விடம் அவர் ஜெபம் செய்தார். எலிசா வேண்டிக்கொண்டபடியே, கடவுள்
அவர்களைக் குருடாக்கினார். **19** எலிசா அவர்களிடம், “நீங்கள் போக
வேண்டிய நகரத்துக்கு இது வழி அல்ல. என் பின்னால் வாருங்கள். நீங்கள்
தேடுகிற ஆளிடம் நான் கூட்டிக்கொண்டு போகிறேன்” என்று சொன்னார்.
ஆனால், அவர்களை சமாரியாவுக்குக்[i] கூட்டிக்கொண்டு போனார்.

20 அவர்கள் சமாரியாவுக்கு வந்ததும், “யெகோவாவே, இவர்களுடைய
கண்களைத் திறங்கள்” என்று எலிசா ஜெபம் செய்தார். அதனால்,
யெகோவா அவர்களுடைய கண்களைத் திறந்தார். அப்போதுதான், தாங்கள்
சமாரியாவின் நடுவில் இருப்பது அவர்களுக்குத் தெரியவந்தது. **21** இஸ்ர
வேலின் ராஜா அவர்களைப் பார்த்தபோது எலிசாவிடம், “தகப்பனே,
நான் அவர்களை வெட்டிக் கொல்லட்டுமா?” என்று கேட்டார். **22** அதற்கு
அவர், “நீங்கள் அவர்களைக் கொல்லக் கூடாது. நீங்கள் வாள்முனையில்
பிடித்துக்கொண்டு வருகிறவர்களை வெட்டிக் கொல்வீர்களா? அவர்களுக்கு
உணவும் தண்ணீரும் கொடுங்கள். அவர்கள் சாப்பிட்டுக் குடித்துவிட்டு,[j] தங்
களுடைய எஜமானிடம் திரும்பிப் போகட்டும்” என்று சொன்னார். **23** அத
னால் ராஜா அவர்களுக்குப் பெரிய விருந்து வைத்தார். அவர்கள் சாப்பிட்
டுக் குடித்தார்கள். பின்பு, அவர்களுடைய எஜமானிடம் அவர்களை

6:18 * நே.மொ., “இந்தத் தேசத்தாருடைய.”

அதி. 6
a தானி 2:22, 28
b ஆதி 37:16, 17
c யாத் 14:13; சங் 3:6
d 2சா 22:31; 2நா 32:7; சங் 18:2; சங் 27:3; சங் 46:7; சங் 55:18; சங் 118:11; ரோ 8:31
e அப் 7:56
f 2ரா 2:11; சங் 68:17; சக 6:1
g சங் 34:7; மத் 26:53
h ஆதி 19:10, 11
i 1ரா 16:29
j நீதி 25:21; ரோ 12:20

அனுப்பி வைத்தார். அதன் பின்பு, சீரியர்களின் கொள்ளைக்கூட்டங்கள்
இஸ்ரவேலுக்குள் ஒரு தடவைகூட வரவில்லை.[a]

24 பின்பு சீரியா ராஜாவான பெனாதாத் தன்னுடைய படை முழுவதை
யும் திரட்டிக்கொண்டு வந்து சமாரியாவை முற்றுகையிட்டான்.[b] **25** முற்
றுகை அந்தளவு தீவிரமாக இருந்ததால், அங்கே கடுமையான பஞ்சம்
ஏற்பட்டது.[c] கடைசியில், ஒரு கழுதைத் தலையை[d] 80 வெள்ளிக் காசுக
ளுக்கும் இரண்டு கைப்பிடி* அளவு புறா எச்சத்தை ஐந்து வெள்ளிக் காசு
களுக்கும் விற்கிற நிலைமை வந்தது. **26** இஸ்ரவேலின் ராஜா மதில்மேல்
நடந்து போய்க்கொண்டிருந்தபோது, ஒரு பெண் அவரைக் கூப்பிட்டு,
“ராஜாவே, என் எஜமானே, எனக்கு உதவி செய்யுங்கள்!” என்று சொன்
னாள். **27** அதற்கு அவர், “யெகோவாவே உனக்கு உதவி செய்யாதபோது
நான் எங்கிருந்து உதவி செய்ய முடியும்? களத்துமேட்டிலிருந்து தானியம்
கொண்டுவந்து தர முடியுமா? திராட்சரச ஆலையிலிருந்தோ எண்ணெய்
ஆலையிலிருந்தோ உனக்கு வேண்டியதைக் கொண்டுவந்து தர முடி
யுமா?” என்று கேட்டார். **28** பின்பு அவளிடம், “என்ன விஷயம், சொல்”
என்று கேட்டார். அதற்கு அவள், “இந்தப் பெண் என்னிடம், ‘உன்னுடைய
மகனைத் தா. இன்று இவனைச் சமைத்துச் சாப்பிடலாம், நாளைக்கு என்
னுடைய மகனைச் சாப்பிடலாம்’[e] என்று சொன்னாள். **29** அதனால்
என்னுடைய மகனை வேக வைத்துச் சாப்பிட்டோம்.[f] அடுத்த நாள், ‘உன்
னுடைய மகனைத் தா, அவனைச் சமைத்துச் சாப்பிடலாம்’ என்று சொன்
னேன். ஆனால், தன்னுடைய மகனை அவள் ஒளித்து வைத்துவிட்டாள்”
என்று சொன்னாள்.

30 அந்தப் பெண் சொன்னதைக் கேட்டவுடனே ராஜா தன்னுடைய
உடையைக் கிழித்துக்கொண்டார்.[g] மதில்மேல் நடந்து போய்க்கொண்டி
ருந்தபோது, அவர் தன்னுடைய உடைக்குள்ளே* துக்கத் துணி# போட்
டிருப்பதை மக்கள் பார்த்தார்கள். **31** பின்பு அவர், “இன்று சாப்பாத்
தின் மகன் எலிசாவின் தலையை நான் எடுக்காவிட்டால், கடவுள் எனக்குக்
கடும் தண்டனை கொடுக்கட்டும்!”[h] என்று சொன்னார்.

32 அப்போது, எலிசா தன்னுடைய வீட்டில் உட்கார்ந்திருந்தார், இஸ்ர
வேலின் பெரியோர்களும்* அவருடன் உட்கார்ந்திருந்தார்கள். ராஜா
தனக்கு முன்னால் ஓர் ஆளை எலிசா வீட்டுக்கு அனுப்பினார். அவன்
வந்து சேருவதற்கு முன்னால் எலிசா அந்தப் பெரியோர்களிடம், “அந்தக்
கொலைகாரனின்[i] மகன் என்னுடைய தலையை எடுக்க ஆள் அனுப்பியி
ருக்கிறான், பார்த்தீர்களா? ஆள் வருவது தெரிந்ததும் கதவைச் சாத்திவிடுங்
கள்; அவன் உள்ளே வர முடியாதபடி கதவை அழுத்திப் பிடித்துக்கொள்
ளுங்கள். அவனுக்குப் பின்னால் அவனுடைய எஜமானின் காலடி சத்தம்
கேட்கிறது” என்று சொன்னார். **33** அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த
போதே, ராஜாவின் ஆள் வந்துவிட்டான். பின்பு ராஜாவும் வந்து, “யெகோ
வாதான் இந்தக் கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறார். இனி நான் ஏன் யெகோ
வாவுக்காகக் காத்திருக்க வேண்டும்?” என்று கேட்டார்.

அதி. 6
a 2ரா 5:2
b உபா 28:52; 1ரா 20:1
c லேவி 26:26; உபா 28:15, 17
d உபா 14:3; எசே 4:14
e லேவி 26:29; உபா 28:53-57; எசே 5:10
f புல 4:10
g ஆதி 37:29; 1ரா 21:27
h எரே 38:4
i 1ரா 18:13; 1ரா 21:9, 10

6:25 *நே.மொ., “கேப் அளவில் நான்கிலொரு பங்கு.” ஒரு கேப் என்பது 1.22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **6:30** *வே.வா., “உடம்போடு ஒட்டி.” #சொல் பட்டியலைப் பாருங்கள். **6:32** *வே.வா., “மூப்பர்களும்.”

அதி. 7

7 அப்போது எலிசா, “யெகோவா சொல்வதைக் கேளுங்கள். ‘நாளைக்கு
இந்நேரம் சமாரியாவின் நகரவாசலில்[*] ஒரு சியா அளவு[#] நைசான
மாவு ஒரு சேக்கலுக்கும்[△] இரண்டு சியா அளவு பார்லி ஒரு சேக்கலுக்கும்
விற்கப்படும்’[a] என்று யெகோவா சொல்கிறார்” என்றார். **2** அதைக் கேட்ட
தும் ராஜாவின் நம்பிக்கைக்குரிய படை அதிகாரி, “யெகோவா வானத்தின்
கதவுகளைத் திறந்து கொட்டினால்கூட இது நடக்காது”[b] என்று உண்மைக்
கடவுளின் ஊழியரிடம் சொன்னார். அதற்கு அவர், “அதை உன் கண்ணால்
பார்ப்பாய்,[c] ஆனால் சாப்பிட மாட்டாய்”[d] என்று சொன்னார்.

3 நகரத்தின் நுழைவாசலுக்குப் பக்கத்தில் தொழுநோயாளிகள் நான்கு
பேர் உட்கார்ந்திருந்தார்கள்.[e] அவர்கள், “நாம் ஏன் இங்கேயே கிடந்து சாக
வேண்டும்? **4** நகரத்தில் இருப்பவர்களே பஞ்சத்தில் அடிபட்டுக் கிடக்கி
றார்கள்.[f] அதனால் நாம் அங்கே போனாலும் சாகத்தான் போகிறோம், இங்
கேயே இருந்தாலும் சாகத்தான் போகிறோம். அதனால், சீரியர்களின் முகா
முக்குப் போகலாம். அவர்கள் நம்மை உயிரோடு விட்டால் விடட்டும்,
இல்லையென்றால் கொன்றுபோடட்டும்” என்று ஒருவருக்கொருவர் சொல்
லிக்கொண்டார்கள். **5** இருட்டத் தொடங்கியபோது, சீரியர்கள் முகாம்
போட்டிருந்த இடத்துக்கு அவர்கள் போனார்கள். முகாமின் எல்லையை
அவர்கள் அடைந்தபோது அங்கே யாருமே இருக்கவில்லை.

6 ஏனென்றால், போர் ரதங்களும் குதிரைகளும் வருகிற சத்தத்தை,
ஒரு பெரிய படை வருகிற சத்தத்தை, சீரியர்கள் கேட்கும்படி யெகோவா
செய்திருந்தார்.[g] அதைக் கேட்டதும், “இஸ்ரவேலின் ராஜா நம்மோடு போர்
செய்வதற்காக ஏத்தியர்களின் ராஜாக்களையும் எகிப்தின் ராஜாக்களை
யும் கூலி கொடுத்து வரவழைத்திருக்கிறான்” என்று பேசிக்கொண்டார்கள்.
7 உடனே எழுந்து, இருட்டத் தொடங்கிய அந்த நேரத்தில் ஓடிப்போனார்
கள். கூடாரங்களையும் குதிரைகளையும் கழுதைகளையும் முகாமில்
இருந்த எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு, உயிரைக் காப்பாற்றிக்
கொள்வதற்காக ஓடிப்போனார்கள்.

8 முகாமின் எல்லையை அந்தத் தொழுநோயாளிகள் நெருங்கியதும்
முதலில் ஒரு கூடாரத்துக்குள் நுழைந்து, சாப்பிட்டுக் குடித்தார்கள். அங்
கிருந்த தங்கத்தையும் வெள்ளியையும் உடைகளையும் எடுத்துக்கொண்டு
போய் ஒளித்து வைத்தார்கள். மறுபடியும் வந்து வேறொரு கூடாரத்துக்
குள் நுழைந்து அங்கிருந்த பொருள்களை எடுத்துக்கொண்டுபோய் ஒளித்து
வைத்தார்கள்.

9 ஆனால் கடைசியில், “நாம் செய்வது சரியில்லை. இந்த நல்ல செய்தி
யைக் கண்டிப்பாக மற்றவர்களிடம் சொல்ல வேண்டும்! விடியும்வரை சொல்
லாமல் இருந்தால் நமக்குத் தண்டனைதான் கிடைக்கும். அதனால், இப்
போதே போய் அரண்மனையில் இருப்பவர்களிடம் சொல்லிவிடலாம்”
என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். **10** அதனால், அவர்கள்
போய் நகரத்தின் வாயிற்காவலர்களைச் சத்தமாகக் கூப்பிட்டு, “நாங்கள் சீரி
யர்களின் முகாமுக்குப் போயிருந்தோம். அங்கே யாருமே இல்லை. ஒரு சத்
தமும் இல்லை. கட்டிப்போடப்பட்டிருந்த குதிரைகளும் கழுதைகளும்தான்
இருந்தன. கூடாரங்களில் எல்லாமே போட்டது போட்டபடியே கிடந்தது”

a உபா 32:36, 2ரா 7:18
b எண் 14:11
c எண் 11:23
d 2ரா 7:17
e லேவி 13:45, 46
f 2ரா 6:25
g உபா 28:7, 2சா 5:24

7:1 [*] வே.வா., “சந்தையில்.” [#] ஒரு சியா என்பது 7.33 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். [△] ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

என்று சொன்னார்கள். **11** உடனே, வாயிற்காவலர்கள் அரண்மனையில்
இருப்பவர்களுக்கு இந்த விஷயத்தைச் சத்தமாகச் சொன்னார்கள்.
12 அந்த ராத்திரி நேரத்தில் ராஜா உடனே எழுந்து தன் ஊழியர்களிடம்,
“சீரியர்கள் ஏன் இப்படிச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் சொல்கிறேன்.
நாம் பசியும் பட்டினியுமாகக் கிடக்கிறோம் என்று அவர்களுக்கு நன்றாகத்
தெரியும்.[a] அதனால், ‘இஸ்ரவேலர்கள் எப்படியும் நகரத்தைவிட்டு வெளியே
வருவார்கள், அவர்களை உயிரோடு பிடித்துவிட்டு, நாம் நகரத்துக்குள்
நுழைந்துவிடலாம்’ என்று சொல்லிக்கொண்டு, முகாமைவிட்டு வெளியே
போய் ஒளிந்திருக்கிறார்கள்”[b] என்று சொன்னார். **13** அப்போது அவரு
டைய ஊழியர்களில் ஒருவர், “என்ன நடந்தது என்று பார்த்துவிட்டு வருவ
தற்காகச் சில ஆட்களை அனுப்பித்தான் பார்க்கலாமே. இப்போது நம்மிடம்
மீதியிருக்கிற குதிரைகளில் ஐந்து குதிரைகளை எடுத்துக்கொண்டு அவர்கள்
போகட்டும். இங்கே பாருங்கள்! நகரத்துக்குள் இருந்தால் மட்டும் இவர்கள்
என்ன சாகாமலா இருக்கப்போகிறார்கள்? இங்கே இருக்கிற இஸ்ரவேலர்கள்
எல்லாருக்கும் என்ன கதியோ அதே கதிதான் இந்த ஆட்களுக்கும் வரப்
போகிறது” என்று சொன்னார். **14** அதனால் ராஜா, “போய்ப் பார்த்துவிட்டு
வாருங்கள்” என்று சொல்லி சீரியர்களின் முகாமுக்குச் சிலரை அனுப்பி
வைத்தார். அவர்களும் இரண்டு ரதங்களில் குதிரைகளைப் பூட்டி கிளம்
பிப் போனார்கள். **15** அவர்கள் யோர்தான் வரைக்கும் போய்ப் பார்த்தார்
கள். சீரியர்கள் பீதியில் தலைதெறிக்க ஓடியபோது வீசியெறிந்த துணிகளும்
சாமான்களும் வழியெங்கும் சிதறிக் கிடந்தன. ராஜா அனுப்பிய ஆட்கள்
திரும்பி வந்து அவரிடம் விஷயத்தைச் சொன்னார்கள்.
16 உடனே மக்கள் நகரத்திலிருந்து வெளியே போய், சீரியர்களின் முகா
முக்குள் புகுந்து கொள்ளையடித்தார்கள். அதனால், யெகோவா சொல்லியி
ருந்தபடியே ஒரு சியா அளவு நைசான மாவு ஒரு சேக்கலுக்கும் இரண்டு
சியா அளவு பார்லி ஒரு சேக்கலுக்கும் விற்கப்பட்டது.[c] **17** ராஜா தன்னு
டைய படை அதிகாரியை நகரவாசலுக்கு மேற்பார்வையாளராக நியமித்தி
ருந்தார். ஆனால், அங்கே தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் அவர் மிதிபட்
டுச் செத்துப்போனார். உண்மைக் கடவுளின் ஊழியர் தன்னுடைய வீட்டுக்கு
வந்திருந்த ராஜாவிடம் சொன்னபடியே நடந்தது. **18** “நாளைக்கு இந்நே
ரம் சமாரியாவின் நகரவாசலில் இரண்டு சியா அளவு பார்லி ஒரு சேக்க
லுக்கும் ஒரு சியா அளவு நைசான மாவு ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும்”
என்று உண்மைக் கடவுளின் ஊழியர் ராஜாவிடம் சொன்னது நிறைவே
றியது.[d] **19** ஆனால் ராஜாவின் படை அதிகாரி, “யெகோவா வானத்தின்
கதவுகளைத் திறந்து கொட்டினால்கூட இப்படிப்பட்ட காரியம் நடக்காது”
என்று உண்மைக் கடவுளின் ஊழியரிடம் சொல்லியிருந்தார். அதற்கு
எலிசா, “அதை உன் கண்ணால் பார்ப்பாய், ஆனால் சாப்பிட மாட்டாய்”
என்று சொல்லியிருந்தார். **20** அவர் சொன்னது அப்படியே நடந்தது; நக
ரவாசலில் தள்ளுமுள்ளு ஏற்பட்டபோது அந்தப் படை அதிகாரி மிதிபட்
டுச் செத்துப்போனார்.

8 எலிசா தான் உயிரோடு எழுப்பிய பையனின்[e] அம்மாவிடம், “இந்தத்
தேசத்தில் ஏழு வருஷங்களுக்குப் பஞ்சம் இருக்கும் என்று யெகோவா
தெரிவித்திருக்கிறார்.[f] அதனால், நீ குடும்பத்தோடு வேறொரு தேசத்துக்குப்
போய்க் குடியிரு” என்று சொல்லியிருந்தார். **2** உண்மைக் கடவுளின் ஊழி

அதி. 7
a 2ரா 6:25
2ரா 6:28, 29
b யோசு 8:4, 12
நியா 20:
29, 37
c எண் 23:19
2ரா 7:1
ஏசா 55:10, 11
d 2ரா 7:1, 2

அதி. 8
e 2ரா 4:32-35
f லேவி 26:19
உபா 28:
15, 23
1ரா 17:1

யர் சொன்னபடியே அந்தப் பெண் செய்தாள். குடும்பத்தோடு பெலிஸ்தியர்
களின் தேசத்துக்குப்[a] போய் ஏழு வருஷங்கள் குடியிருந்தாள்.

3 ஏழு வருஷங்கள் கழித்து பெலிஸ்தியர்களின் தேசத்திலிருந்து அந்தப்
பெண் திரும்பி வந்தாள்; தன்னுடைய வீட்டையும் வயலையும் மீட்டுக்
கொடுக்கச் சொல்லி முறையிடுவதற்காக ராஜாவிடம் போனாள். **4** அந்தச்
சமயத்தில், எலிசாவின் ஊழியனான கேயாசியிடம் ராஜா பேசிக்கொண்டி
ருந்தார். "எலிசா செய்த அற்புத செயல்கள்[b] எல்லாவற்றையும் தயவு
செய்து எனக்கு விலாவாரியாகச் சொல்லுங்கள்" என்று அவனிடம் கேட்
டார். **5** இறந்துபோன பையனை எலிசா எப்படி உயிரோடு எழுப்பினார்[c]
என்பதை அவன் விவரித்துக் கொண்டிருந்தபோதே, அந்தப் பையனின்
அம்மா அங்கே வந்தாள்; வீட்டையும் வயலையும் மீட்டுக் கொடுக்கச்
சொல்லி ராஜாவிடம் முறையிட்டாள்.[d] உடனே கேயாசி, "ராஜாவே, என் எஜ
மானே, நான் சொன்னேனே, அந்தப் பெண் இவள்தான், இவன்தான் அந்தப்
பையன். இவனைத்தான் எலிசா உயிரோடு எழுப்பினார்" என்று சொன்னான்.
6 அப்போது ராஜா அந்தப் பெண்ணிடம் விசாரித்தார், அவளும் நடந்ததை
யெல்லாம் சொன்னாள். பின்பு அரண்மனை அதிகாரி ஒருவரைக் கூப்பிட்டு,
"இந்தப் பெண்ணின் எல்லா சொத்துகளையும் அவள் இல்லாத சமயத்தில்
வயலில் கிடைத்த எல்லா வருமானத்தையும் அவளுக்குக் கொடுத்துவிடுங்
கள்" என்று ராஜா கட்டளையிட்டார்.

7 சீரியா ராஜாவான பெனாதாத்[e] வியாதியாக இருந்த சமயத்தில், தமஸ்கு
வுக்கு[f] எலிசா வந்தார். அப்போது, "உண்மைக் கடவுளின் ஊழியர்[g] இங்கே
வந்திருக்கிறார்" என்ற செய்தி ராஜாவுக்குத் தெரிவிக்கப்பட்டது. **8** உடனே
அசகேலை[h] ராஜா கூப்பிட்டு, "அன்பளிப்புகளை எடுத்துக்கொண்டு உண்
மைக் கடவுளின் ஊழியரைப் போய்ப் பார்.[i] 'இந்த வியாதியிலிருந்து நான்
குணமாகிவிடுவேனா?' என்று அவர் மூலம் யெகோவாவிடம் விசாரித்து
விட்டு வா" என்று சொன்னான். **9** அதனால், தமஸ்குவில் கிடைக்கும்
எல்லா வகையான நல்ல பொருள்களையும் எடுத்துக்கொண்டு எலிசாவைப்
பார்க்க அசகேல் போனான்; 40 ஒட்டகங்கள் சுமக்கும் அளவுக்குப் பொருள்
களைக் கொண்டுபோனான். பின்பு, அவர் முன்னால் வந்து நின்று, "உங்களு
டைய ஊழியனான சீரியா ராஜா பெனாதாத் என்னை அனுப்பினார்.
அவருக்கு வந்திருக்கிற வியாதி குணமாகுமா என்று உங்களிடம் விசாரித்து
விட்டு வரச் சொன்னார்" என்றான். **10** அதற்கு எலிசா, "'நீங்கள் கண்டிப்
பாகக் குணமடைவீர்கள்' என்று நீ அவரிடம் சொல். ஆனால், அவர்
நிச்சயம் இறந்துவிடுவார் என்று யெகோவா எனக்குத் தெரிவித்திருக்கிறார்"[j]
என்று சொன்னார். **11** எலிசா வைத்த கண் வாங்காமல் அவனைப் பார்த்
துக்கொண்டே இருந்தார்; அதனால், அவனுக்கு ரொம்பத் தர்மசங்கடமாகி
விட்டது. அதன் பின்பு, உண்மைக் கடவுளின் ஊழியர் அழ ஆரம்பித்தார்.
12 உடனே அசகேல், "எஜமானே, ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டான்.
அதற்கு எலிசா, "இஸ்ரவேல் மக்களுக்கு நீ செய்யப்போகும் கொடுமை
களை[k] நினைத்துதான் அழுகிறேன். அவர்களுடைய கோட்டைகளைத் தீ
வைத்துக் கொளுத்துவாய், பலசாலிகளை வாளால் வெட்டுவாய், பிள்ளைக
ளைக் கொடூரமாக அடித்துக் கொன்றுபோடுவாய், கர்ப்பிணிப் பெண்களின்
வயிற்றைக் கிழிப்பாய்"[l] என்று சொன்னார். **13** அப்போது அசகேல், "இந்த
நாயைப் பார்த்து இப்படிச் சொல்கிறீர்களே, நான் போய் இப்படியெல்லாம்

அதி. 8
a யோசு 13:2, 3
b 2ரா 2:14; 2ரா 2:20, 21; 2ரா 3:17; 2ரா 4:4, 7; 2ரா 6:5-7; 2ரா 7:1
c 2ரா 4:32-35
d எண் 36:9
e 1ரா 20:1; 2ரா 6:24
f ஏசா 7:8
g 1ரா 17:24
h 1ரா 19:15
i 1சா 9:8; 1ரா 14:2, 3
j 2ரா 8:15
k 2ரா 10:32; 2ரா 12:17; 2ரா 13:3; ஆமோ 1:3
l உபா 28:63; ஆமோ 1:13

செய்வேனா?” என்று கேட்டான். ஆனால் எலிசா, “நீ சீரியாவுக்கு ராஜா
வாகப் போகிறாய் என்று யெகோவா எனக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்”[a]
என்று சொன்னார்.

14 அசகேல் அங்கிருந்து புறப்பட்டு ராஜாவிடம் வந்தான். ராஜா அவ
னிடம், “எலிசா என்ன சொன்னார்?” என்று கேட்டான். அதற்கு அசகேல்,
“நீங்கள் கண்டிப்பாகக் குணமடைவீர்கள் என்று சொன்னார்”[b] என்றான்.
15 அடுத்த நாள் அசகேல் ஒரு போர்வையைத் தண்ணீரில் முக்கியெடுத்து
ராஜாவின் முகத்தில் போட்டு அழுத்தியதால், ராஜா மூச்சுமுட்டி செத்துப்
போனான்.[c] அவனுக்குப் பதிலாக அசகேல் ராஜாவானான்.[d]

16 இஸ்ரவேலின் ராஜாவான ஆகாபின் மகன் யோராம்[e] ஆட்சி செய்த
ஐந்தாம் வருஷத்தில், யோசபாத் யூதாவின் ராஜாவாக இருக்கும்போதே
அவருடைய மகன் யோராம்[f] ராஜாவானார். **17** ராஜாவானபோது அவ
ருக்கு 32 வயது; அவர் எட்டு வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்
தார். **18** ஆகாபின் மகளை அவர் கல்யாணம் செய்ததால்,[g] இஸ்ரவேல்
ராஜாக்களைப் போலவே மோசமான வழியில் நடந்தார்;[h] ஆகாபின் வீட்
டார் செய்த கெட்ட காரியங்களை[i] இவரும் செய்தார்; யெகோவா வெறுக்
கிற காரியங்களைச் செய்துகொண்டே இருந்தார்.[j] **19** ஆனாலும், தன்னு
டைய ஊழியரான தாவீதை முன்னிட்டு யூதா மக்களை அழிக்க யெகோவா
விரும்பவில்லை.[k] ஏனென்றால், தாவீதுக்கும் அவருடைய மகன்களுக்
கும் என்றென்றும் ஒரு விளக்கை* கொடுப்பதாக அவர் தாவீதுக்கு வாக்
குக் கொடுத்திருந்தார்.[l]

20 யோராமின் ஆட்சிக் காலத்தில் யூதாவை எதிர்த்து ஏதோமியர்
கள் கலகம் செய்து,[m] தங்களுக்கென்று ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்
டார்கள்.[n] **21** அதனால், யோராம் தன்னுடைய எல்லா ரதங்களோடும்
சாயீருக்குப் புறப்பட்டுப் போனார். ராத்திரியில் எழுந்து போய், தன்னையும்
ரதத் தலைவர்களையும் சுற்றிவளைத்திருந்த ஏதோமியர்களைத் தோற்கடித்
தார். அதனால், அந்த வீரர்கள் தங்களுடைய கூடாரங்களுக்கு ஓடிப்போ
னார்கள். **22** ஆனாலும், இன்றுவரை யூதாவை எதிர்த்து ஏதோம் கலகம்
செய்துகொண்டுதான் இருக்கிறது. அந்தச் சமயத்தில் லிப்னாவும்[o] கலகம்
செய்தது.

23 யோராமின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும்,
அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்த
கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **24** யோராம் இறந்த* பின்பு, அவருடைய
முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், அதாவது ‘தாவீதின் நக
ரத்தில்,’ அடக்கம் செய்யப்பட்டார்.[p] அடுத்ததாக, அவருடைய மகன் அக
சியா[q] ராஜாவானார்.

25 இஸ்ரவேலின் ராஜாவான ஆகாபின் மகன் யோராம் ஆட்சி செய்த
12-ஆம் வருஷத்தில், யூதாவின் ராஜாவான யோராமின் மகன் அகசியா
ராஜாவானார்.[r] **26** ராஜாவானபோது அவருக்கு 22 வயது. அவர் எருச
லேமில் ஒரு வருஷம் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர் அத்
தாலியாள்;[s] இவள் இஸ்ரவேலின் ராஜாவான உம்ரியின்[t] பேத்தி.

8:19 * அதாவது, “வாரிசை.” **8:24** * நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட.”

அதி. 8
a 1ரா 19:15
b 2ரா 8:10
c 1ரா 16:8, 10; 2ரா 11:1; 2ரா 15:8, 10
d 1ரா 19:15
e 2ரா 1:17
f 1ரா 22:50; 2நா 21:3, 5
g 2ரா 8:26, 27; 2நா 18:1
h 1ரா 12:28-30
i 1ரா 16:32, 33; 1ரா 21:25
j 2நா 21:6, 7
k ஆதி 49:10; 2சா 7:16, 17
l 1ரா 11:36; சங் 132:17
m ஆதி 27:40; 2சா 8:14
n 1ரா 22:47; 2நா 21:8-10
o யோசு 21:13; 2ரா 19:8
p 1ரா 2:10; 2நா 21:18-20
q 1நா 3:10, 11; 2நா 21:16, 17; 2நா 22:1, 2
r 2ரா 9:29
s 2ரா 11:1; 2ரா 11:13, 16
t 1ரா 16:16, 23

27 ஆகாபின் வீட்டாருக்குச் சொந்தக்காரராக இருந்ததால்,[a] அவர்களைப்
போலவே[b] அகசியாவும் மோசமான வழியில் நடந்துவந்தார், யெகோ
வாவுக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்துவந்தார். **28** சீரியாவின் ராஜா
வான அசகேலை எதிர்த்துப் போர் செய்ய ஆகாபின் மகன் யோராமுடன்
ராமோத்-கீலேயாத்துக்குப்[c] போனார். அப்போது, சீரியர்களால் தாக்கப்
பட்டு யோராம் காயமடைந்தார்.[d] **29** சீரியாவின் ராஜாவான அசகேலை
எதிர்த்து ராமாவில்* போர் செய்தபோது யோராம் ராஜா காயமடைந்ததால்,
குணமாவதற்காக யெஸ்ரயேலுக்குத்[e] திரும்பிப் போனார்.[f] ஆகாபின் மக
னான யோராம் காயமடைந்ததால்# அவரைப் பார்க்க யூதாவின் ராஜாவும்
யோராமின் மகனுமான அகசியா யெஸ்ரயேலுக்குப் போனார்.

9 தீர்க்கதரிசிகளுடைய மகன்களில் ஒருவரை எலிசா தீர்க்கதரிசி
கூப்பிட்டு, "உன்னுடைய உடையை இடுப்பில் இழுத்துக் கட்டிக்
கொள், இந்த எண்ணெய்க் குப்பியை எடுத்துக்கொண்டு சீக்கிரமாக
ராமோத்-கீலேயாத்துக்குப் போ.[g] **2** அங்கே போனதும், நிம்சியின் பேர
னும் யோசபாத்தின் மகனுமான யெகூ[h] எங்கே இருக்கிறார் என்று கண்டு
பிடி. உள்ளே போய் அவருடைய சகோதரர்கள் நடுவிலிருந்து அவரைக்
கூட்டிக்கொண்டு உள்ளறைக்குப் போ. **3** பின்பு, குப்பியில் இருக்கிற எண்
ணெயை அவர் தலையில் ஊற்றி, '"உன்னை இஸ்ரவேலின் ராஜாவாக அபி
ஷேகம் செய்கிறேன்" என்று யெகோவா சொல்கிறார்'[i] என்று சொல். பின்பு,
கதவைத் திறந்து வேகமாக ஓடிவந்துவிடு" என்று சொன்னார்.

4 அதனால், எலிசா தீர்க்கதரிசியின் ஊழியர் ராமோத்-கீலேயாத்துக்குப்
போனார். **5** அங்கே படைத் தலைவர்கள் ஒன்றாக உட்கார்ந்திருப்பதைப்
பார்த்தார். அவர்களிடம், "தலைவரே, ஒரு செய்தி சொல்ல வந்திருக்கிறேன்"
என்று சொன்னார். அதற்கு யெகூ, "யாருக்கு?" என்று கேட்டார். அப்போது
அவர், "உங்களுக்குத்தான், தலைவரே" என்று சொன்னார். **6** உடனே
யெகூ எழுந்து அவரோடு வீட்டுக்குள் போனார். அங்கே போனதும் யெகூ
வின் தலையில் அந்த ஊழியர் எண்ணெய் ஊற்றி, "இஸ்ரவேலின் கடவு
ளான யெகோவா சொல்வது இதுதான்: 'யெகோவாவின் மக்களான இஸ்ர
வேலர்களுக்கு உன்னை ராஜாவாக அபிஷேகம் செய்கிறேன்.[j]
7 உன்னுடைய எஜமான் ஆகாபுடைய வீட்டாரை நீ கொன்றுபோட வேண்
டும். யேசபேல் கொன்றுபோட்ட என்னுடைய ஊழியர்களான தீர்க்கதரிசிக
ளுடைய இரத்தத்துக்காகவும் என்னுடைய மற்ற ஊழியர்கள் எல்லாருடைய
இரத்தத்துக்காகவும் யெகோவாவாகிய நான் பழிவாங்குவேன்.[k] **8** ஆகா
பின் வம்சமே அடியோடு அழிந்துபோகும்; அவனுடைய வம்சத்தைச்
சேர்ந்த ஆண்கள் எல்லாரையும்,* ஆதரவற்றவர்களையும் அற்பமானவர்
களையும்கூட, முற்றிலும் ஒழிப்பேன்.[l] **9** நேபாத்தின் மகன் யெரொபெயா
மின் வம்சத்துக்கும் அகியாவின் மகன் பாஷாவின் வம்சத்துக்கும் ஏற்பட்ட
கதிதான்[m] ஆகாபின் வம்சத்துக்கும் ஏற்படும். **10** யெஸ்ரயேலில் இருக்
கிற நிலத்தில் யேசபேலின் உடலை நாய்கள் தின்னும்,[n] அவளை யாரும்
அடக்கம் செய்ய மாட்டார்கள்'" என்று சொல்லிவிட்டு கதவைத் திறந்து
ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார்.[o]

அதி. 8
a 2ரா 8:16, 18; 2நா 22:3, 4
b 1ரா 16:33
c யோசு 21:38; 1ரா 22:2, 3
d 1ரா 19:17; 2நா 22:5
e யோசு 19:17, 18; 1ரா 21:1; 2நா 22:6
f 2ரா 9:15

அதி. 9
g 2ரா 8:25, 28
h 1ரா 19:16, 17
i 2நா 22:7
j 1ரா 19:16
k 1ரா 18:4; 1ரா 19:2; 1ரா 21:15, 25; லூ 18:7
l 1ரா 21:20, 21
m 1ரா 15:28, 29; 1ரா 16:11, 12
n 1ரா 21:23
o 2ரா 9:3

8:29 * ராமோத்-கீலேயாத் என்ற பெயரின் சுருக்கம். # வே.வா., "வியாதிப்பட்டதால்."
9:8 * நே.மொ., "சுவரில் சிறுநீர் கழிக்கிற எவரையும்." வெறுப்பைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட இந்த எபிரெய வார்த்தைகள் ஆண்களைக் குறிக்கின்றன.

11 யெகூ படைத் தலைவர்களிடம் போனதும், “என்ன விஷயம்? இந்
தப் பைத்தியக்காரன் எதற்காக வந்தான்?” என்று அவர்கள் கேட்டார்கள்.
அதற்கு அவர், “இந்த மாதிரி ஆட்களைப் பற்றி உங்களுக்கே தெரியாதா?
அவன் ஏதோ உளறிவிட்டுப் போனான்” என்று சொன்னார். **12** அதற்கு
அவர்கள், “தயவுசெய்து உண்மையைச் சொல்லுங்கள், அவன் என்ன
சொன்னான்?” என்று கேட்டார்கள். அப்போது யெகூ, “அவன் என்னிடம்
இப்படியெல்லாம் சொன்னான். அதோடு, ‘உன்னை இஸ்ரவேலின் ராஜா
வாக அபிஷேகம் செய்கிறேன்’ என்று யெகோவா சொல்கிறார்[a] என்றும்
சொன்னான்” என்றார். **13** அதைக் கேட்டதுமே அவர்கள் எல்லாரும்
தங்களுடைய அங்கியை எடுத்து, அவருக்காகப் படிக்கட்டுகளில் விரித்து,[b]
ஊதுகொம்பை ஊதி, “யெகூ ராஜாவாகிவிட்டார்!”[c] என்று அறிவித்தார்கள்.
14 பின்பு, யோராமுக்கு எதிராக நிம்சியின் பேரனும் யோசபாத்தின் மகனு
மான யெகூ[d] சதித்திட்டம் தீட்டினார்.

சீரியா ராஜாவான அசகேல்[e] ராமோத்-கீலேயாத்தைப்[f] பிடிக்க வந்த
தால், யோராம் ராஜா இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு
அதைப் பாதுகாக்கப் போயிருந்தார். **15** ஆனால், சீரியா ராஜாவான அச
கேலுடன் நடந்த போரில்[g] யோராம் காயமடைந்ததால், அதிலிருந்து குண
மடைவதற்காக யெஸ்ரயேலுக்குத்[h] திரும்பிவந்திருந்தார்.

இப்போது யெகூ, “நீங்கள் எனக்கு ஆதரவாக இருந்தால், யெஸ்ரயேலுக்
குப் போய் இந்த விஷயத்தை அறிவித்துவிடாதபடி இந்த நகரத்திலிருந்து
யாரையும் தப்பிக்க விடாதீர்கள்” என்று சொன்னார். **16** பின்பு, யெகூ தன்
னுடைய ரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனார். காயமடைந்த யோராம்
அங்குதான் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், யூதா ராஜா
வான அகசியா அவரைப் பார்க்க அங்கே போயிருந்தார். **17** யெகூவும்
அவருடைய ஆட்களும் கூட்டமாக வந்துகொண்டிருப்பதை யெஸ்ரயேல்
நகர கோபுரத்தின் மீது நின்றுகொண்டிருந்த காவல்காரன் கவனித்தான்.
உடனே, “ஆட்கள் கூட்டமாக வந்துகொண்டிருக்கிறார்கள்” என்று சொன்
னான். அப்போது யோராம், “ஒரு குதிரைவீரனை அனுப்பு; ‘சமாதான நோக்
கத்தோடுதானே வருகிறீர்கள்?’ என்று கேட்டுவிட்டு வரச் சொல்” என்றார்.
18 அந்தக் குதிரைவீரன் அவரிடம் போய், “‘சமாதான நோக்கத்தோடு
தானே வருகிறீர்கள்?’ என்று ராஜா கேட்கச் சொன்னார்” என்றான். அதற்கு
அவர், “‘சமாதானமா?’ இதைக் கேட்க நீ யார்? பேசாமல் என் பின்னால்
வா!” என்று சொன்னார்.

பின்பு அந்தக் காவல்காரன், “குதிரைவீரன் அவர்களைச் சந்தித்தான்,
ஆனால் திரும்பி வரவில்லை” என்று ராஜாவிடம் சொன்னான். **19** அத
னால், ராஜா மறுபடியும் ஒரு குதிரைவீரனை அனுப்பினார். அவன் யெகூ
விடம் போய், “‘சமாதான நோக்கத்தோடுதானே வருகிறீர்கள்?’ என்று ராஜா
கேட்கச் சொன்னார்” என்றான். அதற்கு அவர், “‘சமாதானமா?’ இதைக்
கேட்க நீ யார்? பேசாமல் என் பின்னால் வா” என்று சொன்னார்.

20 பின்பு அந்தக் காவல்காரன், “இரண்டாவதாகப் போனவனும் அவர்
களைச் சந்தித்தான், ஆனால் திரும்பி வரவில்லை. ரதத்தை வெறித்தனமாக
ஓட்டுவதைப் பார்த்தால் நிம்சியின் பேரன் யெகூ மாதிரி தெரிகிறது” என்று
சொன்னான். **21** உடனே யோராம், “குதிரைகளை ரதத்தில் பூட்டுங்கள்!”
என்று சொன்னார். போர் ரதத்தைக் கொண்டுவந்தவுடன் இஸ்ரவேலின்

அதி. 9
a 2ரா 9:6
b மத் 21:7
c 2சா 15:10; 1ரா 1:34, 39
d 1ரா 19:16
e 1ரா 19:15; 2ரா 8:15; 2ரா 10:32
f 2ரா 8:28
g 2நா 22:6
h யோசு 19:17, 18; 1ரா 21:1

ராஜாவான யோராம் புறப்பட்டார். யூதாவின் ராஜாவான அகசியாவும்[a]
தன்னுடைய போர் ரதத்தில் புறப்பட்டுப் போனார். இரண்டு பேரும் யெகூ
வைப் பார்க்கப் போனார்கள். கடைசியில், யெஸ்ரயேலைச் சேர்ந்த நாபோத்
தின் நிலத்தில்[b] அவரைச் சந்தித்தார்கள்.

22 யெகூவைப் பார்த்தவுடன், "சமாதான நோக்கத்தோடுதானே வந்தி
ருக்கிறாய், யெகூ?" என்று யோராம் கேட்டார். அதற்கு அவர், "உன்னுடைய
அம்மா யேசபேல் விபச்சாரமும் பில்லிசூனியங்களும் செய்துகொண்டிருக்
கும்வரை[c] எப்படிச் சமாதானம் இருக்கும்?"[d] என்று கேட்டார். **23** உடனே,
"அகசியா, நாம் மோசம்போய்விட்டோம்!" என்று சொல்லி யோராம்
தன்னுடைய ரதத்தைத் திருப்பினார். அங்கிருந்து தப்பிக்கப் பார்த்தபோது,
24 யெகூ சட்டென்று தன்னுடைய வில்லை எடுத்து யோராமின் முது
கில் அம்பு எறிந்தார், அது அவருடைய நெஞ்சைத் துளைத்துக்கொண்டு
வெளியே வந்தது. யோராம் தன்னுடைய ரதத்தில் செத்து விழுந்தார்.
25 உடனே யெகூ தன்னுடன் வந்திருந்த படை அதிகாரியான பித்காரி
டம், "இவனைத் தூக்கி யெஸ்ரயேலைச் சேர்ந்த நாபோத்தின் நிலத்தில் வீசி
யெறி.[e] இவனுடைய அப்பா ஆகாபுக்கு எதிராக யெகோவா தீர்ப்பு சொன்
னபோது,[f] நானும் நீயும் அவருக்குப் பின்னால் ஆளுக்கொரு ரதத்தை*
ஓட்டிக்கொண்டு போனோமே, ஞாபகம் இருக்கிறதா? **26** 'நாபோத்தின்
இரத்தமும் அவனுடைய மகன்களின் இரத்தமும் சிந்தப்பட்டதை நேற்று
நான் பார்த்தேன்'[g] என்று ஆகாபிடம் யெகோவா சொன்னார். 'அதற்
காக இதே நிலத்தில் நான் உன்னைப் பழிவாங்கியே தீருவேன்'[h] என்றும்
யெகோவா சொன்னார். யெகோவா சொன்னபடியே, இவனைத் தூக்கி
அந்த நிலத்தில் வீசியெறி"[i] என்று சொன்னார்.

27 இதையெல்லாம் பார்த்ததும், யூதாவின் ராஜாவான அகசியா[j] ஒரு
பெரிய தோட்ட வீட்டின் பக்கமாகத் தப்பித்துப் போனார். (பிற்பாடு யெகூ
அவரைத் துரத்திக்கொண்டு போய், "இவனையும் கொன்றுபோடுங்கள்!"
என்று சொன்னார். உடனே, ரதத்தில் போய்க்கொண்டிருந்த அகசியாவை
அவர்கள் தாக்கினார்கள்; இப்லெயாமுக்குப்[k] பக்கத்தில் இருந்த கூருக்குப்
போகும் வழியில் இது நடந்தது. இருந்தாலும், எப்படியோ மெகிதோவரை
அவர் தப்பித்துப் போனார், ஆனால் அங்கே செத்துப்போனார். **28** அவ
ருடைய ஊழியர்கள் அவருடைய உடலை ஒரு ரதத்தில் வைத்து எருசலே
முக்குக் கொண்டுபோனார்கள். அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்
யப்பட்டிருந்த 'தாவீதின் நகரத்தில்,'[l] அவருடைய கல்லறையில் அடக்கம்
செய்தார்கள். **29** ஆகாபின் மகன் யோராம் ஆட்சி செய்த 11-ஆம் வரு
ஷத்தில் அகசியா[m] யூதாவை ஆட்சி செய்ய ஆரம்பித்திருந்தார்.)

30 யெகூ யெஸ்ரயேலுக்கு[n] வந்ததை யேசபேல்[o] கேள்விப்பட்டாள்.
உடனே தன் கண்களில் மை தீட்டி, தலையை அலங்கரித்துக்கொண்டு ஜன்
னல் வழியாக எட்டிப் பார்த்தாள். **31** வாசலில் யெகூ நுழைந்தபோது, "தன்
னுடைய எஜமானைக் கொன்றுபோட்ட சிம்ரிக்கு வந்த கதி தெரியும்
தானே?"[p] என்று கேட்டாள். **32** அவர் அண்ணாந்து ஜன்னலைப் பார்த்து,
"யார் என் பக்கம் இருக்கிறீர்கள்? யார்?"[q] என்று கேட்டார். உடனே அரண்
மனை அதிகாரிகள் இரண்டு மூன்று பேர் எட்டிப் பார்த்தார்கள். **33** அப்
போது அவர், "அவளைக் கீழே தள்ளுங்கள்!" என்று சொன்னார். அவர்கள்

9:25 * வே.வா., "குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தை."

அதி. 9
a 2ரா 8:25
2ரா 8:29
2நா 22:7
b 1ரா 21:1, 15
c லேவி 20:6
உபா 18:10
1ரா 18:19
d 1ரா 16:31
1ரா 18:4
1ரா 19:2
1ரா 21:7
e 1ரா 21:19
f 1ரா 21:29
g ஆதி 4:8, 10
சங் 9:12
சங் 72:14
h ஆதி 9:5
லேவி 24:17
i 1ரா 21:24
j 2ரா 8:29
2நா 22:7
k யோசு 17:11
l 2சா 5:7
m 2ரா 8:24
2நா 22:2
n 1ரா 21:1
o 1ரா 16:31
1ரா 21:25
p 1ரா 16:15-19
q யாத் 32:26
சங் 94:16

உடனே அவளைக் கீழே தள்ளினார்கள். அவளுடைய இரத்தம் சுவர்
மீதும் குதிரைகள்மீதும் தெறித்தது; அவருடைய குதிரைகள் அவளை மிதித்
துப்போட்டன. **34** பின்பு, யெகூ உள்ளே போய்ச் சாப்பிட்டுக் குடித்தார்.
ஊழியர்களைக் கூப்பிட்டு, “சபிக்கப்பட்ட இந்தப் பெண்ணைத் தயவுசெய்து
அடக்கம் செய்யுங்கள். என்ன இருந்தாலும் அவள் ஒரு ராஜாவின் மகள்”[a]
என்று சொன்னார். **35** அவர்கள் அடக்கம் செய்யப் போனபோது, அவ
ளுடைய மண்டையோடும் பாதங்களும் உள்ளங்கைகளும் தவிர வேறு
எதுவுமே அங்கே இருக்கவில்லை.[b] **36** அவர்கள் திரும்பி வந்து யெகூ
விடம் விஷயத்தைச் சொன்னார்கள். அதற்கு அவர், “திஸ்பியனான எலியா
மூலம் யெகோவா சொன்னது நடந்துவிட்டது.[c] ‘யெஸ்ரயேலில் உள்ள நிலத்
தில் யேசபேலின் உடலை நாய்கள் தின்னும்.[d] **37** “இதுதான் யேசபேல்”
என்று சொல்ல முடியாதபடி, அவளுடைய உடல் யெஸ்ரயேலில் உள்ள
நிலத்துக்கு எருவாக ஆகிவிடும்’ என்று அவர் சொன்னது நிறைவேறிவிட்
டது” என்றார்.

10 ஆகாபின்[e] மகன்கள் 70 பேர் சமாரியாவில் இருந்தார்கள். அத
னால் யெகூ கடிதங்கள் எழுதி, சமாரியாவுக்கும் யெஸ்ரயேலில்
இருந்த அதிகாரிகளுக்கும் பெரியோர்களுக்கும்*[f] ஆகாபின் மகன்களைக்
கவனித்துக்கொண்டவர்களுக்கும்# அனுப்பி வைத்தார். **2** அந்தக் கடிதத்
தில், “உங்கள் எஜமானுடைய மகன்கள் உங்களுடன் இருக்கிறார்கள். உங்
களிடம் போர் ரதங்களும் குதிரைகளும் ஆயுதங்களும் இருக்கின்றன; நீங்
கள் மதில் சூழ்ந்த நகரத்தில் இருக்கிறீர்கள். **3** அதனால் இந்தக் கடிதம்
கையில் கிடைக்கும்போது, உங்கள் எஜமானுடைய மகன்களில் மிகச் சிறந்
தவனை, தகுதியுள்ளவனை* தேர்ந்தெடுத்து அவனுடைய அப்பாவின் சிம்
மாசனத்தில் உட்கார வையுங்கள். பின்பு, உங்கள் எஜமானுடைய வீட்டா
ரைக் காப்பாற்றப் போர் செய்யுங்கள்” என்று எழுதியிருந்தார்.

4 அதைப் படித்ததும் அவர்கள் மிரண்டு போனார்கள். “இரண்டு
ராஜாக்களாலேயே அவரை எதிர்த்து நிற்க முடியவில்லை,[g] நாமெல்லாம்
எந்த மூலைக்கு?” என்று பேசிக்கொண்டார்கள். **5** அரண்மனை அதிகாரி
யும் நகர ஆளுநரும் பெரியோர்களும் ஆகாபின் மகன்களைக் கவனித்
துக்கொண்டவர்களும் யெகூவுக்குப் பதில் கடிதம் அனுப்பினார்கள். “நாங்
கள் எல்லாரும் உங்களுடைய ஊழியர்கள். நீங்கள் என்ன சொன்னாலும்
செய்யத் தயாராக இருக்கிறோம். வேறு யாரையும் ராஜாவாக்க மாட்டோம்.
உங்களுக்கு எது சரியென்று படுகிறதோ அதைச் செய்யுங்கள்” என்று
அதில் எழுதியிருந்தார்கள்.

6 பின்பு, அவர்களுக்கு இரண்டாவதாக ஒரு கடிதத்தை யெகூ எழுதி
னார். அதில், “நீங்கள் என் பக்கம் இருந்தால், என் பேச்சைக் கேட்கத் தயா
ராக இருந்தால், நாளைக்கு இதே நேரம் உங்கள் எஜமானுடைய மகன்க
ளின் தலைகளோடு யெஸ்ரயேலுக்கு வந்து என்னைப் பாருங்கள்” என்று
எழுதினார்.

அந்த இளவரசர்கள் 70 பேரும் தங்களை வளர்த்துவந்த பிரமுகர்களுடன்
இருந்தார்கள். **7** அந்தக் கடிதம் கிடைத்ததும், இளவரசர்கள் 70 பேரையும்
பிடித்து அவர்கள் வெட்டிக் கொன்றார்கள்.[h] அவர்களுடைய தலைகளைக்

10:1 *வே.வா., “மூப்பர்களுக்கும்.” #நே.மொ., “ஆகாபைக் கவனித்துக்கொண்டவர்களுக்கும்.” **10:3** *வே.வா., “நேர்மையானவனை.”

அதி. 9
a 1ரா 16:31
b 2ரா 9:10
c ஏசா 55:10, 11
d 1ரா 21:23

அதி. 10
e 1ரா 16:29
f 1ரா 21:8
g 2ரா 9:24, 27
h 1ரா 21:21

கூடைகளில் போட்டு யெஸ்ரயேலில் இருந்த யெகூவிடம் அனுப்பினார்கள்.
8 அப்போது யெகூவிடம் ஒருவன் வந்து, “இளவரசர்களின் தலைகளைக்
கொண்டுவந்திருக்கிறார்கள்” என்று சொன்னான். உடனே அவர், “நாளை
காலைவரை நகரத்தின் நுழைவாசலில் அவற்றை இரண்டு குவியலாகக்
குவித்து வையுங்கள்” என்று சொன்னார். **9** காலையில் அவர் மக்கள் எல்
லாருக்கும் முன்னால் வந்து நின்று, “நீங்கள் நல்லவர்கள்.* நான்தான்
சதி செய்து என் எஜமானைக் கொன்றுபோட்டேன்.[a] ஆனால், இவர்கள்
எல்லாரையும் கொன்றுபோட்டது யார்? **10** ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்
கள், ஆகாபின் வீட்டாரைப் பற்றி யெகோவா சொன்ன எல்லாமே நிறைவே
றும். யெகோவா சொன்ன ஒரு வார்த்தைகூட நிறைவேறாமல் போகாது.*[b]
தன்னுடைய ஊழியரான எலியா மூலம் சொன்னதைத்தான் யெகோவா
இப்போது செய்திருக்கிறார்”[c] என்று சொன்னார். **11** பின்பு, யெஸ்ரயே
லில் மீதியிருந்த ஆகாபின் வம்சத்தார் எல்லாரையும் யெகூ கொன்றுபோட்
டார். ஆகாபுக்கு நெருக்கமான பிரமுகர்கள், நண்பர்கள், அவனுடைய குரு
மார்கள்[d] ஆகிய எல்லாரையும் கொன்றுபோட்டார். ஆகாபுடைய ஆட்கள்
ஒருவரைக்கூட விட்டு வைக்கவில்லை.[e]

12 பின்பு யெகூ சமாரியாவுக்குப் புறப்பட்டுப் போனார்; வழியில், ஆடு
களுக்கு மயிர் கத்தரிக்கிற இடம்* இருந்தது. **13** அங்கே யூதாவின் ராஜா
வான அகசியாவின்[f] சகோதரர்களை யெகூ பார்த்தார். அவர்களிடம், “நீங்
கள் யார்?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “நாங்கள் அகசியாவின்
அண்ணன் தம்பிகள். ராஜாவின் மகன்களும் ராஜமாதாவின் மகன்களும் நன்
றாக இருக்கிறார்களா என்று விசாரிக்கப் போய்க்கொண்டிருக்கிறோம்” என்று
சொன்னார்கள். **14** உடனே யெகூ, “இவர்களை உயிரோடு பிடியுங்கள்!”
என்று கட்டளையிட்டார். அதனால் அந்த 42 பேரையும் உயிரோடு பிடித்து,
ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கிற இடத்திலிருந்த தண்ணீர்த் தொட்டிக்குப் பக்
கத்தில் வெட்டிக் கொன்றார்கள். ஒருவரைக்கூட தப்பிக்க விடவில்லை.[g]

15 யெகூ அங்கிருந்து போய்க்கொண்டிருந்தபோது, தன்னைச் சந்திக்க
வந்த ரேகாபின்[h] மகன் யோனதாபைப்[i] பார்த்தார். யோனதாப் அவருக்கு
வாழ்த்துச் சொன்னார். அப்போது யெகூ, “என் இதயம் உன் இதயத்துக்கு
உண்மையாக இருப்பதுபோல், உன் இதயம் எனக்கு உண்மையாக இருக்கி
றதா?” என்று கேட்டார்.

அதற்கு யோனதாப், “ஆமாம்” என்று சொன்னார்.

“அப்படியானால், கையைக் கொடு” என்று யெகூ சொன்னார்.

உடனே யோனதாப் தன்னுடைய கையைக் கொடுத்தார், யெகூ அவரைப்
பிடித்து தன்னுடைய ரதத்தில் ஏற்றிக்கொண்டார். **16** அப்போது அவரிடம்,
“என்னோடு வா, யெகோவாவை எதிர்க்கிற யாரையும் நான் சகித்துக்கொள்ள
மாட்டேன்[j] என்பதை நீயே பார்”* என்று சொன்னார். யெகூ தன்னுடைய
போர் ரதத்தில் யோனதாபைக் கூட்டிக்கொண்டு போனார். **17** யெகூ சமா
ரியாவுக்கு வந்தவுடன், அங்கே மீதியிருந்த ஆகாபின் வீட்டார் எல்லா
ரையும் வெட்டிக் கொன்றார்; ஒருவரைக்கூட விட்டுவைக்கவில்லை.[k] எலியா
மூலம் யெகோவா சொன்னபடியே அவர் செய்தார்.[l]

10:9 * வே.வா., “நீதிமான்கள்.” **10:10** * நே.மொ., “தரையில் விழாது.” **10:12** * அநே
கமாக, மயிர் கத்தரிப்பதற்காக ஆடுகளைக் கட்டி வைக்கிற இடம். **10:16** * வே.வா.,
“யெகோவாவுக்காக எனக்கு இருக்கிற பக்திவைராக்கியத்தைப் பார்.”

அதி. 10
a 2ரா 9:14, 24
b 1சா 15:29; ஏசா 14:27
c 1ரா 21:19-24; 2ரா 9:7, 36
d 1ரா 18:19; 2ரா 23:19, 20
e 1ரா 21:21
f 2ரா 8:29; 2ரா 9:21, 27; 2நா 22:1
g 2நா 22:8
h 1நா 2:55
i எரே 35:6, 19
j எண் 25:11; 1ரா 19:10
k 2ரா 9:8; 2நா 22:7
l 1ரா 21:20, 21; 2ரா 9:26

18 பின்பு மக்கள் எல்லாரையும் யெகூ ஒன்றுகூட்டி, “பாகால் வணக்கத்
துக்காக ஆகாப் கொஞ்சம்தான் செய்தான்;[a] ஆனால், நான் நிறைய செய்
யப்போகிறேன். **19** அதனால் பாகால் தீர்க்கதரிசிகள்,[b] பக்தர்கள், பூசாரி
கள் எல்லாரையும்[c] வரச் சொல்லுங்கள். ஒரு ஆள்கூட வராமல்
இருந்துவிடக் கூடாது. ஏனென்றால், நான் பாகாலுக்குப் பெரியளவில் பலி
கொடுக்கப் போகிறேன். யாராவது வராவிட்டால் அவரை உயிரோடு விட
மாட்டேன்” என்று சொன்னார். ஆனால் பாகாலின் பக்தர்களைக் கொன்று
போடுவதற்காகத்தான் யெகூ இப்படித் திட்டம் போட்டார்.

20 அதோடு, “பாகாலுக்கு விசேஷ திருவிழா நடத்தப்போகிறோம் என்று
அறிவியுங்கள்” என்று சொன்னார். அவர்கள் அதை அறிவித்தார்கள்.
21 அதன் பின்பு, இஸ்ரவேல் தேசம் முழுவதும் யெகூ இந்தச் செய்
தியை அனுப்பினார். பாகாலின் பக்தர்கள் எல்லாரும் கூடிவந்தார்கள். ஒரு
வர்கூட வராமல் இருக்கவில்லை. அவர்கள் எல்லாரும் பாகால் கோயி
லுக்குள்[d] போனார்கள், அந்தக் கோயிலே பக்தர்களின் கூட்டத்தால் நிரம்பி
வழிந்தது. **22** அப்போது யெகூ துணிமணி அறைக்குப் பொறுப்பாள
ராக இருந்தவரைக் கூப்பிட்டு, “பாகாலின் பக்தர்கள் எல்லாருக்கும் உடை
களைக் கொண்டுவந்து கொடுங்கள்” என்று சொன்னார். அவரும் உடைக
ளைக் கொண்டுவந்து அவர்களிடம் கொடுத்தார். **23** பின்பு, யெகூவும்
ரேகாபின் மகன் யோனதாபும்[e] பாகால் கோயிலுக்குள் போனார்கள். அப்
போது யெகூ அங்கிருந்த பாகால் பக்தர்களிடம், “நன்றாகத் தேடிப் பாருங்
கள், யெகோவாவை வணங்குகிறவர்கள் யாரும் இங்கே இருக்கக் கூடாது.
பாகாலின் பக்தர்கள் மட்டும்தான் இங்கே இருக்க வேண்டும்” என்று சொன்
னார். **24** கடைசியில், பலிகளையும் தகன பலிகளையும் கொடுப்பதற்காக
அவர்கள் உள்ளே போனார்கள். யெகூ தன்னுடைய ஆட்கள் 80 பேரை
கோயிலுக்கு வெளியே நிறுத்தி வைத்திருந்தார். அவர்களிடம், “நான் உங்கள்
கையில் ஒப்படைக்கிற இந்த ஆட்களில் எவனையாவது நீங்கள் தப்பிக்க
விட்டால், அவனுக்குப் பதிலாக உங்கள் உயிரை எடுத்துவிடுவேன்” என்று
சொல்லியிருந்தார்.

25 தகன பலி கொடுத்தவுடன் காவலாளிகளையும் படை அதிகாரி
களையும் யெகூ கூப்பிட்டு, “உள்ளே வந்து வெட்டிக் கொல்லுங்கள், ஒரு
வனைக்கூட விடாதீர்கள்!”[f] என்று கட்டளையிட்டார். உடனே காவலாளிக
ளும் படை அதிகாரிகளும் உள்ளே போய் அவர்களை வாளால் வெட்டிக்
கொன்றார்கள், உடல்களை வெளியே வீசினார்கள். பாகால் கோயிலின் கரு
வறைவரைக்கும்* போய் அவர்களை வெட்டிச் சாய்த்தார்கள். **26** பின்பு,
அந்தக் கோயிலின் பூஜைத் தூண்களை[g] வெளியே கொண்டுவந்து அவை
எல்லாவற்றையும் சுட்டெரித்தார்கள்.[h] **27** அதோடு, பாகாலுக்காக நிறுத்
தப்பட்ட பூஜைத் தூணைத் தகர்த்துப்போட்டார்கள்.[i] பாகால் கோயிலை[j]
இடித்துப்போட்டு, அதைப் பொதுக் கழிப்பிடமாக ஆக்கினார்கள். இன்று
வரை அது அப்படித்தான் இருக்கிறது.

28 இப்படி, பாகால் வழிபாட்டை இஸ்ரவேலிலிருந்து யெகூ ஒழித்
துக்கட்டினார். **29** ஆனால், இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டிய
நேபாத்தின் மகன் யெரொபெயாமுடைய பாவ வழியைவிட்டு அவர் விலக

10:25 *நே.மொ., “நகரம்வரைக்கும்.” கோட்டை போன்ற அமைப்பாக இருந்தி
ருக்கலாம்.

அதி. 10
a 1ரா 16:32, 33
1ரா 18:22
b 2ரா 3:13
c 2ரா 10:11
d 1ரா 16:30, 32
e 2ரா 10:15
எரே 35:6, 19
f யாத் 32: 26, 27
உபா 13:6-9
எசே 9:5
g லேவி 26:1
h உபா 7:25
i லேவி 26:30
உபா 7:5
j 1ரா 16:30, 32

வில்லை; பெத்தேலிலும் தாணிலும் அவர் வைத்திருந்த தங்கக் கன்றுக்குட்டி
களை[a] அழிக்காமல் அப்படியே விட்டுவைத்தார். **30** பின்பு யெகோவா
யெகூவிடம், "ஆகாபின் வம்சத்துக்கு[b] என்னவெல்லாம் செய்ய வேண்டு
மென்று என் உள்ளத்தில் நினைத்திருந்தேனோ அதையெல்லாம் செய்து
என் விருப்பத்தை நிறைவேற்றினாய், நீ எல்லாவற்றையும் நன்றாகச் செய்
தாய். அதனால், உன் வாரிசுகள் நான்கு தலைமுறையாக இஸ்ரவேலின் சிம்
மாசனத்தில் உட்கார்ந்து ஆட்சி செய்வார்கள்"[c] என்று சொன்னார்.
31 ஆனால், இஸ்ரவேலின் கடவுளான யெகோவா கொடுத்த திருச்சட்
டத்துக்கு யெகூ முழு இதயத்தோடு கீழ்ப்படிந்து நடக்கவில்லை,[d] அதற்குக்
கவனம் செலுத்தவில்லை. இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டிய
யெரொபெயாமின் பாவ வழியைவிட்டு விலகவில்லை.[e]

32 அந்தக் காலத்தில், மற்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக இஸ்ரவேல்
தேசத்தைக் கைப்பற்றுவதற்கு யெகோவா விட்டுவிட்டார். இஸ்ரவேலின்
எல்லா பிரதேசங்களிலும் அசகேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்தான்.[f]
33 யோர்தானுக்குக் கிழக்கே இருந்த கீலேயாத் பிரதேசம் முழுவதையும்,
அதாவது காத், ரூபன், மனாசே கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள்[g] குடியி
ருந்த பிரதேசம் முழுவதையும், தாக்கிவந்தான். அர்னோன் பள்ளத்தாக்கு*
பக்கத்தில் இருந்த ஆரோவேர் தொடங்கி கீலேயாத், பாசான்[h] பிரதேசங்க
ளும் இதில் அடங்கியிருந்தன.

34 யெகூவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும்,
அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும், அவருடைய வீரதீர செயல்கள்
எல்லாவற்றைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில்
எழுதப்பட்டிருக்கிறது. **35** யெகூ இறந்த* பின்பு, சமாரியாவில் அடக்கம்
செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு அவருடைய மகன் யோவாகாஸ் ராஜா
வானார்.[i] **36** இஸ்ரவேலின் ராஜாவான யெகூ சமாரியாவில் 28 வருஷங்
கள் ஆட்சி செய்தார்.

11 அகசியாவின் அம்மா அத்தாலியாள்,[j] தன்னுடைய மகன் அக
சியா இறந்த விஷயத்தைத்[k] தெரிந்துகொண்டதும், ராஜ வம்சத்தைச்
சேர்ந்த வாரிசுகள் எல்லாரையும் கொன்றுபோட்டாள்.[l] **2** ஆனால், அகசி
யாவின் சகோதரியான யோசேபாள் அவருடைய மகன் யோவாசைக்[m] காப்
பாற்றினாள்; அவள் யோராம் ராஜாவின் மகள். மற்ற இளவரசர்கள் கொல்
லப்படவிருந்த சமயத்தில் யோவாசை மட்டும் யாருக்கும் தெரியாமல்
தூக்கிக்கொண்டு போனாள்; பின்பு, அவனையும் அவனுடைய தாதியை
யும்* உட்புற படுக்கையறையில் ஒளித்து வைத்தாள். அவனை எப்ப
டியோ அத்தாலியாளின் கண்ணில் படாமல் மறைத்து வைத்தார்கள்; அத
னால், யோவாசின் உயிர் தப்பியது. **3** யெகோவாவின் ஆலயத்தில்
அவனை ஒளித்து வைத்திருந்தார்கள். அவன் ஆறு வருஷங்களுக்கு அவ
ளோடு இருந்தான். அந்தச் சமயத்தில் அத்தாலியாள் அந்தத் தேசத்தை
ஆட்சி செய்துவந்தாள்.

4 ஏழாம் வருஷத்தில், நூறு வீரர்களுக்குத் தலைவர்களாக இருந்தவர்
களை யெகோவாவின் ஆலயத்துக்கு யோய்தா வரவழைத்தார். அவர்கள்

அதி. 10
a 1ரா 12:28-30, 1ரா 13:33, ஓசி 8:6
b 1ரா 21:21
c 2ரா 13:1, 10, 2ரா 14:23, 2ரா 15:8, 12
d உபா 10:12, ஓசி 1:4
e 1ரா 12:28-30, 1ரா 13:34, 1ரா 14:16
f 1ரா 19:17, 2ரா 8:12, 2ரா 13:22
g எண் 32:33, யோசு 22:9
h உபா 3:13-16, உபா 28:63, யோசு 13:8-12
i 2ரா 13:1

அதி. 11
j 2ரா 8:26, 2ரா 11:20, 2நா 21:5, 6, 2நா 24:7
k 2ரா 9:27
l 2நா 21:4, 2நா 22:10-12
m 2ரா 12:1

10:33 * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கு." **10:35** * நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட." **11:2** * தாதி என்பவர் குழந்தைகளைக் கவனித்துக் கொள்பவர்.

சிறப்பு மெய்க்காவல்படை வீரர்களுக்கும்* அரண்மனைக் காவலாளிகளுக்
கும்[a] தலைவர்களாக இருந்தார்கள். யெகோவாவின் ஆலயத்தில்
அவர்களோடு யோய்தா ஒப்பந்தம் செய்து சத்தியம் வாங்கிக்கொண்ட
பின்பு, ராஜாவின் மகனை அவர்களிடம் காட்டினார்.[b] **5** அவர்களிடம்,
“நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், ஓய்வுநாளில் வேலைக்கு
வருகிற காவலாளிகளை மூன்று குழுக்களாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.
அவற்றில் ஒரு குழுவினர், அரண்மனையைத் தீவிரமாகக் கண்காணிக்க
வேண்டும்.[c] **6** இன்னொரு குழுவினர், ‘அஸ்திவார நுழைவாசலில்’ நிற்க
வேண்டும். இன்னொரு குழுவினர், அரண்மனைக் காவலாளிகள் நிற்கிற
இடத்துக்குப் பின்னால் இருக்கும் நுழைவாசலில் நிற்க வேண்டும். நீங்கள்
மாறி மாறி ஆலயத்தைக் காவல்காக்க வேண்டும். **7** ஓய்வுநாளில் விடுப்பு
எடுக்கிற இரண்டு பிரிவுகளும்கூட அன்றைக்கு வேலைக்கு வர வேண்டும்;
ராஜாவைப் பாதுகாப்பதற்காக யெகோவாவின் ஆலயத்தைத் தீவிரமாகக்
கண்காணிக்க வேண்டும். **8** நீங்கள் எல்லாரும் கைகளில் ஆயுதங்களோடு
ராஜாவைச் சுற்றி நின்று பாதுகாக்க வேண்டும். உங்களை மீறி உள்ளே நுழை
கிற யாரையும் உயிரோடு விடக்கூடாது. ராஜா எங்கே போனாலும் நீங்களும்
அவர் கூடவே போக வேண்டும்” என்று கட்டளையிட்டார்.

9 குருவாகிய யோய்தா சொன்னபடியே, நூறு வீரர்களுக்குத் தலைவர்
கள்[d] செய்தார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய பிரிவிலிருந்த ஆட்கள்
எல்லாரையும், அதாவது ஓய்வுநாளில் வேலைக்கு வந்தவர்கள், அன்றைக்கு
விடுப்பு எடுக்க வேண்டியவர்கள் என எல்லாரையும், கூட்டிக்கொண்டு குரு
வாகிய யோய்தாவிடம் வந்தார்கள்.[e] **10** அவர் யெகோவாவின் ஆலயத்
திலிருந்த தாவீது ராஜாவின் ஈட்டிகளையும் வட்டவடிவ கேடயங்களையும்
எடுத்து நூறு வீரர்களுக்குத் தலைவர்களிடம் கொடுத்தார். **11** அரண்ம
னைக் காவலாளிகள்[f] ஆலயத்தின் வலது பக்கம் தொடங்கி இடது பக்
கம்வரை தங்கள் தங்கள் இடங்களில் ஆயுதம் ஏந்திக்கொண்டு நின்றார்கள்.
அதோடு, பலிபீடத்தின்[g] பக்கத்திலும் ஆலயத்தின் பக்கத்திலும் நின்றார்கள்.
இப்படி, ராஜாவைச் சுற்றிலும் நின்றார்கள். **12** பின்பு ராஜாவின் மகனை[h]
யோய்தா வெளியே கூட்டிக்கொண்டு வந்து, அவனுடைய தலையில் கிரீடத்
தையும்* திருச்சட்ட சுருளையும்[i] வைத்தார். அப்போது அவர்கள் அவனை
அபிஷேகம் செய்து, ராஜாவாக்கினார்கள். அதோடு, கைதட்டி, “ராஜா பல்
லாண்டு வாழ்க!”[j] என்று ஆரவாரம் செய்தார்கள்.

13 மக்கள் ஓடுகிற சத்தத்தை அத்தாலியாள் கேட்டவுடனே, யெகோவா
வின் ஆலயத்தில் அவர்கள் கூடியிருந்த இடத்துக்கு வந்தாள்.[k] **14** வழக்
கத்தின்படி, தூண் பக்கத்தில் ராஜா நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தாள்.[l]
தலைவர்களும் எக்காளம் ஊதுகிறவர்களும்[m] ராஜாவோடு இருந்தார்கள்.
மக்கள் எல்லாரும் சந்தோஷமாக இருந்தார்கள், எக்காளங்களை ஊதிக்
கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்ததும் அத்தாலியாள் தன் உடையைக்
கிழித்துக்கொண்டு, “சதி! சதி!” என்று கூச்சல் போட்டாள். **15** அப்போது,
குருவாகிய யோய்தா நூறு வீரர்களுக்குத் தலைவர்களைக் கூப்பிட்டு,[n]
அதாவது படைக்குத் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களைக் கூப்பிட்டு,
“அவளை வீரர்கள் நடுவிலிருந்து வெளியே கொண்டுபோங்கள். எவனாவது
அவள் பின்னால் போனால் அவனையும் வாளால் வெட்டிக் கொல்லுங்கள்”

11:4 * நே.மொ., “காரியன்களுக்கும்.” **11:12** * வே.வா., “மகுடத்தையும்.”

அதி. 11
a 1ரா 14:27
b 2நா 23:1-3
c 1ரா 7:1; 2நா 23:4-7
d 2ரா 11:4
e 2நா 23:8-11
f 1ரா 14:27
g 1ரா 8:22; 2நா 4:1
h 2ரா 11:2
i யாத் 25:21; யாத் 31:18
j 1ரா 1:39, 40
k 2நா 23:12-15
l 2ரா 23:3
m 2நா 5:12
n 2ரா 11:4; 2நா 23:9

என்று கட்டளையிட்டார். ஏனென்றால், “அவளை யெகோவாவின் ஆலயத்
தில் கொல்ல வேண்டாம்” என்று யோய்தா சொல்லியிருந்தார். **16** அவர்
கள் அத்தாலியாளைப் பிடித்து, அரண்மனைக்குள்[a] குதிரைகள் நுழைகிற
இடத்துக்குக் கொண்டுவந்து அங்கே கொன்றுபோட்டார்கள்.

17 பின்பு யெகோவாவுக்கும், ராஜாவுக்கும் மக்களுக்கும் இடையே
யோய்தா ஓர் ஒப்பந்தம் செய்தார்.[b] அவர்கள் என்றென்றும் யெகோவா
வின் மக்களாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தார்.
அதோடு, ராஜாவுக்கும் மக்களுக்கும் இடையே மற்றொரு ஒப்பந்தத்தைச்
செய்தார்.[c] **18** அதன் பின்பு, மக்கள் எல்லாரும் பாகால் கோயிலுக்குப்
போய் அங்கிருந்த பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்.[d] பாகால் சிலை
களைத் தூள்தூளாக்கினார்கள்.[e] பாகாலின் பூசாரியான[f] மாத்தானை அந்
தப் பலிபீடங்களுக்கு முன்னால் கொன்றுபோட்டார்கள்.

பின்பு குருவாகிய யோய்தா, யெகோவாவின் ஆலயத்தை மேற்
பார்வை செய்ய அதிகாரிகளை நியமித்தார்.[g] **19** அதோடு, நூறு வீரர்க
ளுக்குத் தலைவர்களையும்[h] சிறப்பு மெய்க்காவல்படை வீரர்களையும்*
அரண்மனைக் காவலாளிகளையும்[i] தேசத்து மக்கள் எல்லாரையும் கூட்டிக்
கொண்டு, ராஜாவை யெகோவாவின் ஆலயத்திலிருந்து அரண்மனைக்குப்
பாதுகாப்பாகக் கொண்டுவந்தார். அவர்கள் எல்லாரும் அரண்மனைக் காவ
லாளிகள் நிற்கிற நுழைவாசல் வழியாக வந்தார்கள். அதன் பின்பு, ராஜா
வின் சிம்மாசனத்தில் யோவாஸ் உட்கார்ந்தான்.[j] **20** அரண்மனைக்குப்
பக்கத்தில் அத்தாலியாளை வாளால் வெட்டிக் கொன்றதால், மக்கள் எல்
லாரும் சந்தோஷப்பட்டார்கள், நகரத்தில் அமைதி நிலவியது.

21 யோவாஸ்[k] ராஜாவானபோது அவருக்கு ஏழு வயது.[l]

12 யெகூ[m] ஆட்சி செய்த ஏழாம் வருஷத்தில், யோவாஸ்[n] ராஜாவா
னார்; அவர் 40 வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார். அவ
ருடைய அம்மா பெயெர்-செபாவைச் சேர்ந்த சிபியாள்.[o] **2** குருவாகிய
யோய்தா யோவாசுக்கு அறிவுரை கொடுத்துவந்த காலமெல்லாம், அவர்
யெகோவாவுக்குப் பிரியமாக நடந்துகொண்டார். **3** இருந்தாலும், ஆரா
தனை மேடுகள்[p] அழிக்கப்படவில்லை; மக்கள் இன்னமும் அந்த இடங்க
ளில் பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்துகொண்டிருந்தார்கள்.

4 அவர் குருமார்களிடம், “யெகோவாவின் ஆலயத்துக்குக் காணிக்
கையாகக் கொடுக்கப்படும் எல்லா பணத்தையும் வாங்கிக்கொள்ளுங்
கள்;[q] அதாவது, ஒவ்வொருவரும் கட்ட வேண்டிய வரிப்பணத்தையும்,[r]
நேர்ந்துகொண்டவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தையும், யெகோவா
வின் ஆலயத்துக்காக ஒவ்வொருவரும் மனப்பூர்வமாகக் கொண்டுவரு
கிற பணத்தையும் வாங்கிக்கொள்ளுங்கள்.[s] **5** குருமார்கள் தங்களுக்குத்
தெரிந்தவர்களிடமிருந்து நேரடியாகப் பணத்தை வாங்கிக்கொண்டு, ஆல
யத்தில் எங்கெல்லாம் பழுது* இருக்கிறதோ அங்கெல்லாம் அதைச் சரிப்
படுத்த வேண்டும்”[t] என்று சொன்னார்.

6 யோவாஸ் ஆட்சி செய்த 23-ஆம் வருஷம்வரை ஆலயத்தைக்
குருமார்கள் பழுதுபார்க்கவே இல்லை.[u] **7** அதனால், குருவாகிய யோய்
தாவையும்[v] மற்ற குருமார்களையும் யோவாஸ் ராஜா கூப்பிட்டு,
“நீங்கள் ஏன் ஆலயத்தை இன்னும் பழுதுபார்க்கவில்லை? ஆலயத்தைப்

அதி. 11
- *a* 1ரா 7:1
- *b* 1சா 10:25; 2சா 5:3
- *c* 2நா 23:16, 17
- *d* உபா 12:3
- *e* உபா 7:25
- *f* உபா 13:5
- *g* 2நா 23:18-21
- *h* 2ரா 11:4, 15
- *i* 1ரா 14:27
- *j* 2சா 7:8, 16
- *k* 2ரா 11:2
- *l* 2நா 24:1

அதி. 12
- *m* 1ரா 19:16; 2ரா 10:30
- *n* 2ரா 11:2; 1நா 3:10, 11
- *o* 2நா 24:1, 2
- *p* எண் 33:52
- *q* 2நா 31:12
- *r* யாத் 30:13; 2நா 24:9
- *s* யாத் 25:2; யாத் 35:21
- *t* 2நா 24:7
- *u* 2நா 24:5
- *v* 2ரா 11:4; 2நா 23:1; 2நா 24:15

11:19 *நே.மொ., “காரியன்களையும்.” **12:5** *வே.வா., “விரிசல்.”

பழுதுபார்ப்பதாக இருந்தால் மட்டும்தான் உங்களுக்குத் தெரிந்தவர்களிடமி
ருந்து நீங்கள் பணம் வாங்க வேண்டும், இல்லாவிட்டால் வாங்கக் கூடாது"[a]
என்று சொன்னார். **8** குருமார்கள் அதற்கு ஒத்துக்கொண்டார்கள்; அத
னால் மக்களிடமிருந்து இனி பணம் வாங்குவதில்லை என்றும், ஆலயத்
தைப் பழுதுபார்க்கும் பொறுப்பை ஏற்பதில்லை என்றும் சொன்னார்கள்.

9 பின்பு, குருவாகிய யோய்தா ஒரு பெட்டியை எடுத்து[b] அதன் மூடி
யில் ஓட்டை போட்டு, பலிபீடத்துக்குப் பக்கத்தில் வைத்தார். யெகோவா
வின் ஆலயத்துக்குள் நுழைகிற ஒருவரின் வலது பக்கத்தில் இருக்கும்படி
அதை வைத்தார். காவலாளிகளாகச் சேவை செய்கிற குருமார்கள்,
யெகோவாவின் ஆலயத்துக்குக் கொண்டுவரப்படுகிற எல்லா பணத்தை
யும் அதில் போட்டுவிடுவார்கள்.[c] **10** அந்தப் பெட்டியில் நிறைய பணம்
சேர்ந்துவிட்டதைப் பார்க்கும்போது, யெகோவாவின் ஆலயத்துக்காகக்
கொடுக்கப்பட்ட அந்தப் பணத்தை ராஜாவின் செயலாளரும் தலைமைக்
குருவும் எடுத்து* எண்ணி வைப்பார்கள்.[d] **11** பின்பு, எண்ணி வைக்கப்
பட்ட அந்தப் பணத்தை எடுத்து யெகோவாவின் ஆலயத்தைப் பழுதுபார்க்
கும் வேலையை மேற்பார்வை செய்கிறவர்களிடம் கொடுத்துவிடுவார்கள்.
அவர்கள் இதை வைத்து, யெகோவாவின் ஆலயத்தில் தச்சு வேலை செய்
கிறவர்களுக்கும் கட்டுமான வேலை செய்கிறவர்களுக்கும் கூலி கொடுப்
பார்கள்.[e] **12** அதோடு, கொத்தனார்களுக்கும் கற்களை வெட்டிச் செதுக்
குகிறவர்களுக்கும் கூலி கொடுப்பார்கள். யெகோவாவின் ஆலயத்தைப்
பழுதுபார்ப்பதற்காக மரங்களையும் செதுக்கப்பட்ட கற்களையும் வாங்கு
வார்கள். ஆலயத்தைப் பழுதுபார்க்கும்போது ஏற்படும் மற்ற எல்லா செலவு
களுக்கும் அந்தப் பணத்தைப் பயன்படுத்துவார்கள்.

13 இருந்தாலும், யெகோவாவின் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட
காசை வைத்து, யெகோவாவின் ஆலயத்துக்காக வெள்ளிப் பாத்திரங்க
ளையோ திரி வெட்டும் கருவிகளையோ கிண்ணங்களையோ எக்காளங்க
ளையோ[f] வேறெந்தத் தங்கப் பொருளையோ வெள்ளிப் பொருளையோ
செய்யவில்லை.[g] **14** அதற்குப் பதிலாக, மேற்பார்வையாளர்களிடம் அந்
தப் பணத்தைக் கொடுத்துவிடுவார்கள். அவர்கள் அதை வைத்து
யெகோவாவின் ஆலயத்தைப் பழுதுபார்த்தார்கள். **15** வேலையாட்களுக்
குக் கூலி கொடுப்பதற்காக மேற்பார்வையாளர்களிடம் தந்த பணத்துக்கு
அவர்களிடம் கணக்குக் கேட்கவில்லை. ஏனென்றால், அவர்கள் நம்பக
மான ஆட்களாக இருந்தார்கள்.[h] **16** குற்றநிவாரண பலிக்காகவும்[i] பாவப்
பரிகார பலிக்காகவும் மக்கள் தந்த பணத்தை யெகோவாவின் ஆலயத்தைப்
பழுதுபார்ப்பதற்காகக் கொடுக்கவில்லை. ஏனென்றால், அது குருமார்களுக்
குச் சொந்தம்.[j]

17 அந்தச் சமயத்தில், சீரியாவின் ராஜாவான அசகேல்[k] காத் நக
ரத்துக்கு[l] எதிராகப் போர் செய்து அதைக் கைப்பற்றினான். அதன் பின்பு,
எருசலேமைத் தாக்கத் தீர்மானித்தான்.[m] **18** உடனே, யூதாவின் ராஜா
வான யோவாஸ் யெகோவாவுடைய ஆலயத்தின் பொக்கிஷ அறைகளி
லும் அரண்மனை கஜானாக்களிலும் இருந்த எல்லா தங்கத்தையும் எடுத்து
சீரியாவின் ராஜாவான அசகேலுக்கு அனுப்பி வைத்தார். அதோடு, தன்னு
டைய முன்னோர்களும் யூதாவின் ராஜாக்களுமான யோசபாத், யோராம்,

12:10 * வே.வா., "பைகளில் போட்டு." நே.மொ., "கட்டி."

அதி. 12
a 2நா 24:6
b 2நா 24:8, மாற் 12:41, லூ 21:1
c 2நா 24:10
d 2நா 24:11
e 2ரா 22:4-6, 2நா 24:12
f எண் 10:2, 2நா 5:12
g 2நா 24:14
h 2ரா 22:7
i லேவி 5:15
j லேவி 7:7, எண் 18:8
k 1ரா 19:15, 2ரா 8:13, 2ரா 10:32
l 1நா 18:1
m 2நா 24:23

அகசியா ஆகியோர் கடவுளுக்கு அர்ப்பணித்திருந்த* எல்லா பொருள்க
ளையும், தான் கடவுளுக்கு அர்ப்பணித்திருந்த பொருள்களையும் அனுப்பி
வைத்தார்.[a] அதனால், எருசலேமைத் தாக்காமல் அசகேல் திரும்பிப்
போனான்.

19 யோவாசின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றி
யும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் யூதா ராஜாக்களின் சரித்தி
ரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **20** யோவாசின் ஊழியர்கள் கூட்
டுச் சேர்ந்து அவருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டினார்கள்;[b] சில்லாவுக்குப்
போகும் வழியில் இருக்கிற பெத்-மில்லோவில்*[c] அவரைக் கொன்றுபோட்
டார்கள். **21** அவருடைய ஊழியர்களான சிமியாத்தின் மகன் யோசகாரும்
சோமேரின் மகன் யெகோஸபாத்தும்தான் அவரைத் தாக்கிக் கொன்றுபோட்
டார்கள்.[d] பின்பு, அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்த
‘தாவீதின் நகரத்தில்’ அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு,
அவருடைய மகன் அமத்சியா ராஜாவானார்.[e]

13 யூதாவின் ராஜா அகசியாவுடைய[f] மகன் யோவாஸ்[g] ஆட்சி
செய்த 23-ஆம் வருஷத்தில், யெகூவின் மகன் யோவாகாஸ்[h] சமா
ரியாவில் ராஜாவானார். அவர் 17 வருஷங்கள் இஸ்ரவேலை ஆட்சி செய்
தார். **2** யெகோவா வெறுக்கிற காரியங்களைத் தொடர்ந்து செய்துவந்தார்.
இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டிய நேபாத்தின் மகன் யெரொ
பெயாமுடைய பாவ வழியைவிட்டு விலகவே இல்லை,[i] விடாப்பிடியாக
அந்தக் கெட்ட வழியிலேயே நடந்தார். **3** அதனால், இஸ்ரவேலர்கள்மீது
யெகோவாவுக்குப் பயங்கர கோபம் வந்தது.[j] யோவாகாசின் காலமெல்லாம்
சீரியாவின் ராஜாவான அசகேல்[k] கையிலும் அவனுடைய மகன் பெனா
தாத்[l] கையிலும் இஸ்ரவேலர்களை அவர் விட்டுவிட்டார்.

4 அப்போது, கருணை காட்டச் சொல்லி யெகோவாவிடம் யோவாகாஸ்
கெஞ்சினார். சீரியாவின் ராஜா இஸ்ரவேலர்களைக் கொடுமைப்படுத்துவதை
யெகோவா பார்த்ததால், யோவாகாசின் ஜெபத்தைக் கேட்டார்.[m] **5** சீரியர்க
ளின் பிடியிலிருந்து இஸ்ரவேலர்களை விடுவிக்க யெகோவா அவர்களுக்கு
ஒரு மீட்பரைத் தந்தார்.[n] அதனால் இஸ்ரவேலர்கள் முன்புபோல தங்கள்
வீடுகளில் குடியிருந்தார்கள்.* **6** (ஆனாலும், யெரொபெயாமுடைய வீட்
டார் செய்த பாவத்தைவிட்டு அவர்கள் விலகவில்லை;[o] இஸ்ரவேலர்க
ளைப் பாவம் செய்யத் தூண்டிய யெரொபெயாமின் பாவத்தை அவர்கள்
தொடர்ந்து செய்தார்கள். சமாரியாவிலிருந்த பூஜைக் கம்பம்*[p] அழிக்கப்ப
டாமல் அப்படியேதான் இருந்தது.) **7** கடைசியில், யோவாகாசிடம் வெறும்
50 குதிரைவீரர்களும் 10,000 காலாட்படை வீரர்களும்தான் இருந்தார்கள்;
வெறும் 10 ரதங்கள்தான் இருந்தன. ஏனென்றால், அவருடைய மற்ற ரதங்க
ளையும் வீரர்களையும் சீரியாவின் ராஜா அழித்துவிட்டான்,[q] களத்துமேட்டி
லிருக்கிற பதரைப் போல் மிதித்துப்போட்டான்.[r]

8 யோவாகாசின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும்,
அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப்

12:18 * நே.மொ., “புனிதப்படுத்தியிருந்த.” **12:20** * அர்த்தம், “மண்மேடு.” இது ஒரு கோட்டையாக இருந்திருக்கலாம். **13:5** * அதாவது, “சமாதானமாகவும் பாதுகாப்பாகவும் குடியிருந்தார்கள்.” **13:6** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 12
a 1ரா 15:18; 2ரா 16:8; 2ரா 18:15
b 2நா 24:25, 26; 2நா 25:27
c 2சா 5:9; 1ரா 9:15, 24; 2நா 32:5
d 2ரா 14:1, 5
e 2நா 24:27

அதி. 13
f 2ரா 8:26; 2ரா 9:27
g 2ரா 11:2, 21
h 2ரா 10:30, 35
i 1ரா 12:28-30; 1ரா 13:33; 1ரா 14:16
j லேவி 26:14, 17; எபி 12:29
k 1ரா 19:17; 2ரா 8:12
l 2ரா 13:24
m யாத் 3:7; நியா 10:16; 2ரா 14:26, 27
n நெ 9:27
o 2ரா 10:29; 2ரா 17:21
p உபா 7:5; 1ரா 14:15; 1ரா 16:33
q 2ரா 8:12; 2ரா 10:32
r ஆமோ 1:3

புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **9** யோவாகாஸ் இறந்த* பின்பு, சமாரி
யாவில் அடக்கம் செய்யப்பட்டார்.[a] அடுத்து, அவருடைய மகன்
யோவாஸ் ராஜாவானார்.

10 யூதாவின் ராஜா யோவாஸ் ஆட்சி செய்த 37-ஆம் வருஷத்தில்,
யோவாகாசின்[b] மகன் யோவாஸ் சமாரியாவில் ராஜாவானார். அவர் இஸ்ர
வேலை 16 வருஷங்கள் ஆட்சி செய்தார். **11** யெகோவா வெறுக்கிற
காரியங்களை அவர் தொடர்ந்து செய்துவந்தார். இஸ்ரவேலர்களைப் பாவம்
செய்யத் தூண்டிய யெரொபெயாமின் பாவ வழியைவிட்டு விலகவே
இல்லை.[c] அவர் செய்த பாவங்களையெல்லாம் இவரும் தொடர்ந்து செய்து
வந்தார்.

12 யோவாசின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவருடைய
வீரதீர செயல்கள், யூதாவின் ராஜா அமத்சியாவோடு அவர் போர் செய்த
விதம்[d] ஆகியவற்றைப் பற்றி இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்
தில் எழுதப்பட்டிருக்கிறது. **13** யோவாஸ் இறந்த* பின்பு, இஸ்ரவேலின்
மற்ற ராஜாக்களைப் போல சமாரியாவில் அடக்கம் பண்ணப்பட்டார்.[e]
அடுத்ததாக, யெரொபெயாம்#[f] ராஜாவானார்.

14 எலிசா[g] நோய்வாய்ப்பட்டிருந்தார். அந்த நோயினால் அவர் பிற்
பாடு இறந்துபோனார். நோய்வாய்ப்பட்ட எலிசாவைப் பார்க்க இஸ்ர
வேலின் ராஜாவான யோவாஸ் வந்தார். எலிசாவைக் கட்டிப்பிடித்து, "தகப்
பனே, தகப்பனே! இஸ்ரவேலின் ரதமே, குதிரைவீரரே!"[h] என்று
சொல்லி அழுதார். **15** அப்போது எலிசா அவரிடம், "வில்லையும் அம்
புகளையும் கொண்டுவாருங்கள்" என்று சொன்னார். அவரும் அப்படியே
செய்தார். **16** பின்பு அவர் இஸ்ரவேலின் ராஜாவிடம், "வில்லைக் கையில்
பிடியுங்கள்" என்று சொன்னார். அவர் அதைக் கையில் பிடித்ததும், ராஜா
வின் கைகள்மீது எலிசா தன் கைகளை வைத்தார். **17** "கிழக்கில் இருக்
கும் ஜன்னலைத் திறங்கள்" என்று எலிசா சொன்னார். ராஜா அதைத் திறந்
ததும், "அம்பு எறியுங்கள்" என்று சொன்னார். ராஜா அப்படியே செய்தார்.
அப்போது எலிசா, "இது வெற்றி* தரும் யெகோவாவின் அம்பு, சீரியாவை
வெல்லும் அம்பு! நீங்கள் ஆப்பெக்கில்[i] சீரியர்களின் படையைத் தோற்க
டித்து அதை ஒழித்துக்கட்டுவீர்கள்" என்று சொன்னார்.

18 பின்பு எலிசா இஸ்ரவேலின் ராஜாவிடம், "அம்புகளை எடுங்கள்"
என்று சொன்னார். பின்பு, "தரையில் அடியுங்கள்" என்று சொன்னார்.
ராஜா மூன்று தடவை அடித்துவிட்டு நிறுத்திக்கொண்டார். **19** அதனால்
உண்மைக் கடவுளின் ஊழியர் பயங்கரமாகக் கோபப்பட்டு, "ஐந்து, ஆறு
தடவையாவது அடித்திருக்க வேண்டாமா? அப்படிச் செய்திருந்தால் சீரியர்
களை அடியோடு அழித்திருப்பீர்கள். இப்போது, மூன்று தடவை மட்டும்
தான் தோற்கடிப்பீர்கள்"[j] என்று சொன்னார்.

20 அதன் பின்பு எலிசா இறந்துபோனார், அவரை அடக்கம் செய்
தார்கள். மோவாபைச் சேர்ந்த கொள்ளைக்கூட்டம்[k] ஒவ்வொரு வருஷத்
தின் ஆரம்பத்திலும்* தேசத்துக்குள் படையெடுப்பது வழக்கம். **21** இறந்து
போன ஒருவனை சிலபேர் அடக்கம் செய்துகொண்டிருந்தபோது, அந்தக்

13:9, 13 *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட." **13:13** #அதா
வது, "இரண்டாம் யெரொபெயாம்." **13:17** *வே.வா., "மீட்பு." **13:20** *வசந்த கால
மாக இருக்கலாம்.

அதி. 13
a 2ரா 10:35
b 2ரா 14:1
c 2ரா 10:29
d 2ரா 14:8, 13
e 2ரா 10:35, 2ரா 13:9
f 2ரா 14:28
g 1ரா 19:16
h 2ரா 2:11, 12
i 1சா 29:1, 1ரா 20:26
j 2ரா 13:25
k 2ரா 1:1, 2ரா 24:2

கொள்ளைக்கூட்டத்தைப் பார்த்தார்கள்; உடனே இறந்துபோனவனின்
உடலை எலிசாவின் கல்லறையில் போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். அந்த
உடல் எலிசாவின் எலும்புகள்மீது பட்டவுடனே உயிர் பெற்றது,[a] அவன்
எழுந்து நின்றான்.

22 யோவாகாசின் காலமெல்லாம் சீரியாவின் ராஜா அசகேல்[b] இஸ்ரவே
லர்களை அடக்கி ஒடுக்கினான்.[c] **23** இருந்தாலும், ஆபிரகாம்,[d] ஈசாக்கு,[e]
யாக்கோபு ஆகியோருடன் செய்த ஒப்பந்தத்தின் காரணமாக[f] யெகோவா
அவர்களுக்குக் கருணையும் இரக்கமும் காட்டினார்,[g] அவர்களைக் கரிசனை
யோடு நடத்தினார்; அவர்களை அழித்துப்போட விரும்பவில்லை. இன்று
வரை தன் முன்னாலிருந்து அவர்களைத் தள்ளிவிடவுமில்லை. **24** சீரியா
வின் ராஜா அசகேல் இறந்த பின்பு, அவனுடைய மகன் பெனாதாத் ராஜாவா
னான். **25** யோவாசின் அப்பாவான யோவாகாசுடன் போர் செய்து இஸ்ர
வேலர்களுடைய நகரங்களை அசகேல் கைப்பற்றியிருந்தான். அவனுடைய
மகன் பெனாதாத்திடமிருந்து யோவாஸ் அவற்றை மீட்டார். அவர் மூன்று
தடவை பெனாதாத்தைத் தோற்கடித்து[h] அந்த நகரங்களை மீட்டுக்
கொண்டார்.

14 இஸ்ரவேலின் ராஜா யோவாகாசின் மகன் யோவாஸ்[i] ஆட்சி
செய்த இரண்டாம் வருஷத்தில், யூதாவின் ராஜாவான யோவாசின்
மகன் அமத்சியா ராஜாவானார். **2** அப்போது, அவருக்கு 25 வயது. அவர்
எருசலேமில் 29 வருஷங்கள் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர்
யொவதானாள், அவள் எருசலேமைச் சேர்ந்தவள்.[j] **3** யெகோவாவுக்குப்
பிரியமான காரியங்களை அமத்சியா செய்துவந்தார்; ஆனால், தன்னுடைய
மூதாதையான தாவீது செய்த அளவுக்குச் செய்யவில்லை.[k] தன்னுடைய
அப்பாவான யோவாசைப் போலவே எல்லா காரியங்களையும் செய்தார்.[l]
4 இருந்தாலும், ஆராதனை மேடுகள் அழிக்கப்படவில்லை;[m] மக்கள்
இன்னமும் அந்த இடங்களில் பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்
துகொண்டிருந்தார்கள்.[n] **5** ஆட்சி அதிகாரம் முழுமையாகத் தன்னுடைய
கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன், ராஜாவாக இருந்த தன் அப்பாவைக் கொன்
றுபோட்ட ஊழியர்களை அமத்சியா கொன்றுபோட்டார்.[o] **6** ஆனால்,
அந்தக் கொலைகாரர்களின் மகன்களைக் கொல்லவில்லை. ஏனென்றால்,
மோசேயின் திருச்சட்ட புத்தகத்தில், “பிள்ளைகள் செய்த பாவத்துக்காக அப்
பாவுக்கு மரண தண்டனை கொடுக்கக் கூடாது, அப்பா செய்த பாவத்துக்கா
கப் பிள்ளைகளுக்கு மரண தண்டனை கொடுக்கக் கூடாது. ஒருவன் செய்த
பாவத்துக்காக அவனுக்கு மட்டுமே மரண தண்டனை கொடுக்க வேண்
டும்”[p] என்று எழுதப்பட்டிருந்த யெகோவாவின் கட்டளைக்கு அவர் கீழ்ப்ப
டிந்தார். **7** ஏதோமைச்[q] சேர்ந்த 10,000 வீரர்களை உப்புப் பள்ளத்தாக்கில்[r]
கொன்றுபோட்டார். அந்தப் போரில் சாலா நகரத்தைக் கைப்பற்றினார்.[s] அது
இந்நாள்வரை யோக்தெயேல் என்று அழைக்கப்படுகிறது.

8 பின்பு, இஸ்ரவேலின் ராஜாவான யெகூவின் பேரனும் யோவாகாசின்
மகனுமான யோவாசிடம் அமத்சியா தூதுவர்களை அனுப்பி, “போர்க்களத்
தில் நேருக்கு நேர் மோதலாம் வா”[t] என்று சொன்னார். **9** அதற்கு இஸ்ர
வேலின் ராஜாவான யோவாஸ் யூதாவின் ராஜாவான அமத்சியாவுக்கு
இப்படிச் செய்தி அனுப்பினார்: “லீபனோனில் இருக்கிற முட்செடி அங்கி
ருக்கிற தேவதாரு மரத்துக்குச் செய்தி அனுப்பி, ‘உன்னுடைய மகளை என்

அதி. 13
a யோவா 11:44 எபி 11:35
b 1ரா 19:15
c 2ரா 8:12 2ரா 10:32
d ஆதி 13:14-16
e ஆதி 26:3
f ஆதி 28:13 சங் 105:8 மீ 7:20
g 2ரா 14:26, 27
h 2ரா 13:19

அதி. 14
i 2ரா 13:10
j 2நா 25:1-4
k 1ரா 15:5
l 2நா 24:2
m 1ரா 15:14
n 2ரா 12:1, 3
o 2ரா 12:20 2நா 24:25
p உபா 24:16
q 2ரா 8:20
r 2சா 8:13 1நா 18:12
s 2நா 25:11, 12
t 2நா 25:17-19

மகனுக்குக் கல்யாணம் செய்து கொடு' என்று கேட்டதாம். ஆனால், லீப
னோனில் இருக்கிற காட்டு மிருகம் அந்த வழியாகப் போனபோது அந்த
முட்செடியை மிதித்துப் போட்டதாம். **10** நீ ஏதோமைத் தோற்கடித்தது[a]
என்னவோ உண்மைதான். அதனால் தலைக்கனத்தோடு ஆடுகிறாய். நீ
பெருமைப்பட்டுக்கொள், ஆனால் ஒழுங்காக உன் வீட்டிலேயே* இரு. நீ
ஏன் உனக்கு அழிவைத் தேடிக்கொள்கிறாய், உன்னோடு சேர்த்து ஏன் யூதா
வையும் அழிக்கப் பார்க்கிறாய்?” **11** ஆனால் அமத்சியா அவர் பேச்
சைக் கேட்கவில்லை.[b]

அதனால், இஸ்ரவேலின் ராஜாவான யோவாஸ் போருக்குப் போனார்.
அவரும் யூதாவின் ராஜாவான அமத்சியாவும் யூதாவுக்குச் சொந்தமான
பெத்-ஷிமேசில்[c] நேருக்கு நேர் சண்டை போட்டார்கள். **12** யூதாவைச்
சேர்ந்த வீரர்கள் இஸ்ரவேலர்களிடம் தோற்றுப்போய், அவரவருடைய வீடு
களுக்கு* தப்பித்து ஓடினார்கள். **13** அகசியாவின் பேரனும் யோவாசின்
மகனும் யூதாவின் ராஜாவுமாகிய அமத்சியாவை இஸ்ரவேலின் ராஜா
யோவாஸ் பெத்-ஷிமேசில் பிடித்தார். பின்பு, அவரும் அவருடைய படை
யினரும் எருசலேமுக்கு வந்தார்கள். எருசலேம் மதில் சுவரை 'எப்பிரா
யீம் நுழைவாசல்'[d] தொடங்கி 'மூலை நுழைவாசல்'[e] வரை 400 முழ*
நீளத்துக்கு யோவாஸ் இடித்துப்போட்டார். **14** யெகோவாவின் ஆலயத்தி
லும் ராஜாவின் அரண்மனை கஜானாக்களிலும் இருந்த எல்லா தங்கத்தை
யும் வெள்ளியையும் மற்ற எல்லா பொருள்களையும் எடுத்துக்கொண்டார்.
சிலரைப் பிணைக்கைதிகளாகப் பிடித்துக்கொண்டு சமாரியாவுக்குத் திரும்
பிப் போனார்.

15 யோவாசின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவ
ருடைய வீரதீர செயல்கள், யூதாவின் ராஜாவான அமத்சியாவுடன்
செய்த போர் ஆகியவற்றைப் பற்றி இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப்
புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **16** பின்பு யோவாஸ் இறந்துபோ
னார்,* மற்ற இஸ்ரவேல் ராஜாக்களைப் போல சமாரியாவில் அடக்கம்
செய்யப்பட்டார்.[f] அவருக்குப் பிறகு, அவருடைய மகன் யெரொபெ
யாம்#[g] ராஜாவானார்.

17 இஸ்ரவேலின் ராஜாவான யோவாகாசின் மகன் யோவாஸ்[h] இறந்த
பின்பு, யூதாவின் ராஜாவான யோவாசின் மகன் அமத்சியா[i] 15 வருஷங்
களுக்கு உயிரோடு இருந்தார்.[j] **18** அமத்சியாவின் வாழ்க்கையில்
நடந்த மற்ற விஷயங்கள் எல்லாம் யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்த
கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **19** பிற்பாடு, எருசலேமிலிருந்த சிலர் அவ
ருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டினார்கள்.[k] அதனால், அவர் லாகீசுக்குத்
தப்பித்துப் போனார். ஆனாலும், அவருக்குப் பின்னாலேயே ஆட்களை
அனுப்பி லாகீசில் அவரைக் கொன்றுபோட்டார்கள். **20** குதிரைகள் பூட்
டப்பட்ட ரதத்தில் அவருடைய உடலை எருசலேமுக்குக் கொண்டு
வந்து, அங்கே 'தாவீதின் நகரத்தில்' அடக்கம் செய்தார்கள்.[l] அங்குதான்
அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். **21** யூதா
மக்கள் எல்லாரும், அமத்சியாவுக்கு[m] அடுத்து அவருடைய மகன் அசரி

14:10 *வே.வா., “அரண்மனையிலேயே.” **14:12** *நே.மொ., “கூடாரங்களுக்கு.”
14:13 *சுமார் 584 அடி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **14:16** *நே.மொ., “தன் முன்
னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்.” #அதாவது, “இரண்டாம் யெரொபெயாம்.”

அதி. 14
a 2ரா 14:7
b 2நா 25:15, 16
c யோசு 15:10, 12; யோசு 21:8, 16; 2நா 25:20-24
d நெ 8:16; நெ 12:38, 39
e எரே 31:38; சக 14:10
f 2ரா 10:35; 2ரா 13:9
g ஓசி 1:1; ஆமோ 1:1; ஆமோ 7:10
h 2ரா 13:10
i 2ரா 14:1
j 2நா 25:25-28
k 2ரா 12:20
l 1ரா 2:10
m 2நா 26:1

யாவை*[a] ராஜாவாக்கினார்கள். அப்போது, அவருக்கு 16 வயது.[b]
22 ராஜா* இறந்த# பின்பு, அவர் ஏலாத்தைத்[c] திரும்பக் கட்டி, அதை யூதா
தேசத்துடன் மீண்டும் இணைத்துக்கொண்டார்.[d]

23 யூதாவின் ராஜா யோவாசின் மகன் அமத்சியா ஆட்சி செய்த
15-ஆம் வருஷத்தில், இஸ்ரவேலின் ராஜா யோவாசின் மகன் யெரொபெ
யாம்[e] சமாரியாவில் ராஜாவானார். அவர் இஸ்ரவேலை 41 வருஷங்கள்
ஆட்சி செய்தார். **24** யெகோவா வெறுக்கிற காரியங்களையே தொடர்ந்து
செய்துவந்தார். இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டிய நேபாத்தின்
மகனான யெரொபெயாமின் பாவ வழியைவிட்டு அவர் விலகவே
இல்லை.[f] **25** லெபோ-காமாத்திலிருந்து*[g] அரபா கடல்#[h] வரை இருந்த
பகுதிகளை அவர் மீண்டும் இஸ்ரவேலுடன் இணைத்துக்கொண்டார். இஸ்ர
வேலின் கடவுளான யெகோவா தன்னுடைய தீர்க்கதரிசி யோனா[i] மூலம்,
அதாவது காத்-தேப்பேரைச்[j] சேர்ந்த அமித்தாயின் மகன் மூலம், சொன்
னது இப்படி நிறைவேறியது. **26** ஏனென்றால், இஸ்ரவேலர்கள் அனுப
வித்த படுபயங்கரமான கொடுமைகளை யெகோவா பார்த்திருந்தார்.[k]
அவர்களுக்கு உதவி செய்ய யாருமே அங்கே மீதியிருக்கவில்லை, ஆதர
வற்றவர்களும் அற்பமானவர்களும்கூட இல்லை. **27** இந்தப் பூமியிலி
ருந்து இஸ்ரவேலர்களை அடியோடு அழிக்க மாட்டேன் என்று யெகோவா
வாக்குறுதி கொடுத்திருந்தார்.[l] அதனால், யோவாசின் மகன் யெரொபெ
யாம் மூலம் அவர்களைக் காப்பாற்றினார்.[m]

28 யெரொபெயாமின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்
றியும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும், அவருடைய வீரதீர செயல்
களைப் பற்றியும், அவர் போர் செய்த விதத்தைப் பற்றியும், தமஸ்கு,[n]
காமாத்[o] நகரங்களை மீண்டும் யூதா மற்றும் இஸ்ரவேலின் கட்டுப்பாட்டுக்
குள் கொண்டுவந்த விதத்தைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்தி
ரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **29** பின்பு யெரொபெயாம் இறந்து
போனார்,* இஸ்ரவேலின் ராஜாக்களைப் போல அடக்கம் செய்யப்பட்டார்.
அடுத்ததாக, அவருடைய மகன் சகரியா[p] ராஜாவானார்.

15 யெரொபெயாம்# ராஜா இஸ்ரவேலை ஆட்சி செய்த 27-ஆம் வரு
ஷத்தில், அமத்சியா ராஜாவின்[q] மகனான அசரியா*[r] யூதா
வின் ராஜாவானார்.[s] **2** ராஜாவானபோது அவருக்கு 16 வயது; அவர் எரு
சலேமில் 52 வருஷங்கள் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா
பெயர் எக்கோலியாள், அவள் எருசலேமைச் சேர்ந்தவள். **3** அசரியா தன்
னுடைய அப்பாவான அமத்சியாவைப் போலவே யெகோவாவுக்குப் பிரி
யமானதைச் செய்துவந்தார்.[t] **4** இருந்தாலும், ஆராதனை மேடுகள் அழிக்
கப்படவில்லை.[u] மக்கள் இன்னமும் அந்த இடங்களில் பலிகளை எரித்து
புகை எழும்பிவரச் செய்துகொண்டிருந்தார்கள்.[v] **5** அசரியா ராஜாவை
யெகோவா தண்டித்ததால், சாகும்வரை அவர் தொழுநோயாளியாக

அதி. 14
a மத் 1:8
b 2ரா 15:1, 2
c உபா 2:8, 1ரா 9:26, 2ரா 16:6
d 2நா 26:2
e ஓசி 1:1, ஆமோ 1:1
f 1ரா 12:28-30, 1ரா 13:34, சங் 106:20
g எண் 13:21, எண் 34: 2, 7, 8
h உபா 3:16, 17
i யோனா 1:1, மத் 12:39
j யோசு 19: 10, 13
k யாத் 3:7, நியா 10:16, சங் 106: 43, 44
l எரே 31:20
m 2ரா 13:4, 5
n 2சா 8:6
o 2நா 8:3
p 2ரா 15:8

அதி. 15
q 2ரா 14:1
r 2ரா 14:21
s 2நா 26:1, 3
t 2நா 26:4, 5
u எண் 33:52
v உபா 12: 13, 14, 1ரா 22:41, 43, 2ரா 14:1, 4

14:21; 15:1 *அர்த்தம், “யெகோவா உதவி செய்தார்.” 2ரா 15:13; 2நா 26:1-23; ஏசா 6:1; சக 14:5 ஆகிய வசனங்களில் உசியா என்று அழைக்கப்படுகிறார். **14:22** *அதாவது, “அவருடைய அப்பா அமத்சியா.” #நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட.” **14:25** *வே.வா., “காமாத்தின் நுழைவாசலிலிருந்து.” #அதாவது, “உப்புக் கடல்; சவக் கடல்.” **14:29** *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்.” **15:1** #அதாவது, “இரண்டாம் யெரொபெயாம்.”

இருந்தார்.[a] ஒரு தனி வீட்டில் வாழ்ந்துவந்தார்.[b] அந்தச் சமயத்தில், ராஜா
வின் மகன் யோதாம்[c] அரண்மனையைக் கவனித்துக்கொண்டு, தேசத்து
மக்களுக்கு நீதி வழங்கிவந்தார்.[d] **6** அசரியாவின்[e] வாழ்க்கையில் நடந்த
மற்ற விஷயங்களைப் பற்றியும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும்
யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **7** பின்பு,
அசரியா இறந்துபோனார்.*[f] அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்
யப்பட்ட 'தாவீதின் நகரத்தில்' அடக்கம் செய்யப்பட்டார். அவருக்குப்
பிறகு, அவருடைய மகன் யோதாம் ராஜாவானார்.

8 அசரியா ராஜா[g] யூதாவை ஆட்சி செய்த 38-ஆம் வருஷத்தில்,
யெரொபெயாமின் மகன் சகரியா[h] இஸ்ரவேலின் ராஜாவானார். அவர் சமா
ரியாவில் ஆறு மாதங்கள் ஆட்சி செய்தார். **9** தன்னுடைய முன்னோர்
களைப் போலவே, யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்துவந்தார்;
இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டிய நேபாத்தின் மகன் யெரொ
பெயாமின் பாவ வழியைவிட்டு அவர் விலகவில்லை.[i] **10** பின்பு, யாபே
சின் மகன் சல்லூம் அவருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டி அவரை இப்லெ
யாமில்[j] வெட்டிக் கொன்றார்.[k] அவரைக் கொன்றுபோட்ட பின்பு சல்லூம்
ராஜாவானார். **11** சகரியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள்
எல்லாம் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கி
றது. **12** "உன் வாரிசுகள் நான்கு தலைமுறையாக[l] இஸ்ரவேலின் சிம்மாச
னத்தில் உட்கார்ந்து ஆட்சி செய்வார்கள்"[m] என்று யெகூவிடம் யெகோவா
சொன்ன வார்த்தை இப்படி நிறைவேறியது. ஆம், அவர் சொன்னபடியே
நடந்தது.

13 உசியா ராஜா[n] யூதாவை ஆட்சி செய்த 39-ஆம் வருஷத்தில்,
யாபேசின் மகன் சல்லூம் சமாரியாவில் ராஜாவானார்; ஒரு மாதம் முழுவதும்
ஆட்சி செய்தார். **14** அப்போது, காதியின் மகன் மெனாகேம் திர்சாவிலி
ருந்து[o] சமாரியாவுக்கு வந்து, யாபேசின் மகன் சல்லூமை[p] வெட்டிக் கொன்
றார். அவரைக் கொன்றுபோட்ட பின்பு, மெனாகேம் ராஜாவானார். **15** சல்
லூமின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவர் தீட்டிய
சதித்திட்டம் ஆகியவற்றைப் பற்றி இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்த
கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **16** மெனாகேம் திர்சாவிலிருந்து வந்து திப்
சாவையும் அதைச் சுற்றியிருந்த பகுதியையும் தாக்கினார். திப்சாவில் குடி
யிருந்தவர்கள் எல்லாரையும் வெட்டிக் கொன்றார். நகரவாசலை அவர்கள்
திறக்காததால் அந்த நகரத்தைத் தாக்கி, அங்கிருந்த கர்ப்பிணிகளின் வயிற்
றைக் கிழித்துப்போட்டார்.

17 அசரியா ராஜா யூதாவை ஆட்சி செய்த 39-ஆம் வருஷத்தில், காதி
யின் மகன் மெனாகேம் இஸ்ரவேலின் ராஜாவானார். அவர் சமாரியாவில்
10 வருஷங்கள் ஆட்சி செய்தார். **18** யெகோவா வெறுக்கிற காரியங்
களை அவர் செய்துவந்தார்; இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டிய
நேபாத்தின் மகன் யெரொபெயாமின் பாவ வழியைவிட்டு விலகவில்லை,[q]
காலமெல்லாம் அந்த வழியிலேயே நடந்தார். **19** அப்போது, அசீரியா
வின் ராஜாவான பூல்[r] இஸ்ரவேலை எதிர்த்துப் போர் செய்ய வந்தான்.
அவனுக்கு 1,000 தாலந்து* வெள்ளியைக் கொடுத்து அவனுடைய உதவி

15:7 *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்." **15:19** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்

அதி. 15
a எண் 12:10; 2ரா 5:27
b லேவி 13:45, 46
c 2ரா 15:32
d 2நா 26:16-21
e 2நா 26:22, 23
f ஏசா 6:1
g 2ரா 14:21
h 2ரா 14:29
i 1ரா 12:28-30; 1ரா 13:33; 1ரா 14:16
j யோசு 17:11
k ஓசி 1:4; ஆமோ 7:9
l 2ரா 13:1, 10; 2ரா 14:23, 29
m 2ரா 10:30
n 2நா 26:1
o 1ரா 14:17; 1ரா 15:21; 1ரா 16:8, 17
p 2ரா 15:10
q 1ரா 12:28-30; 1ரா 13:33; 1ரா 14:16
r 1நா 5:26

அதி. 15
a 2ரா 12:18; 2ரா 16:8
b 2ரா 23:35
c 2ரா 15:14
d 1ரா 12:28-30; 1ரா 13:33; 1ரா 14:16
e 2நா 28:6
f 2நா 28:6; ஏசா 7:1, 4
g 1ரா 12:28-30; 1ரா 13:33; 1ரா 14:16
h 1ரா 15:20
i யோசு 20:7, 9
j எண் 32:40
k ஏசா 9:1
l 2ரா 16:7; 1நா 5:6; 1நா 5:26; 2நா 28:19, 20
m லேவி 26:38; உபா 28:64; 2ரா 17:22, 23; ஏசா 8:4
n 2ரா 17:1
o 2நா 27:1
p 2ரா 14:21
q 2நா 27:7; மத் 1:9

யுடன் மெனாகேம் தன்னுடைய ஆட்சியை வலுப்படுத்தினார்.[a] **20** இஸ்
ரவேலில் இருந்த செல்வாக்குமிக்க பணக்காரர்களிடமிருந்து அந்த வெள்
ளியை வசூலித்தார்.[b] அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் 50 வெள்ளி சேக்
கலை* வசூலித்து அசீரிய ராஜாவிடம் தந்தார். அப்போது, அசீரிய ராஜா
இஸ்ரவேலைத் தாக்காமல் திரும்பிப் போனான். **21** மெனாகேமின்[c]
வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும், அவர் செய்த எல்
லாவற்றைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழு
தப்பட்டிருக்கிறது. **22** பின்பு, மெனாகேம் இறந்துபோனார்.* அவருக்குப்
பிறகு, அவருடைய மகன் பெக்காகியா ராஜாவானார்.

23 அசரியா ராஜா யூதாவை ஆட்சி செய்த 50-ஆம் வருஷத்தில்,
மெனாகேமின் மகன் பெக்காகியா இஸ்ரவேலின் ராஜாவானார். அவர் சமா
ரியாவில் 2 வருஷங்கள் ஆட்சி செய்தார். **24** யெகோவா வெறுக்கிற காரி
யங்களை அவர் செய்துவந்தார்; இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்
டிய நேபாத்தின் மகன் யெரொபெயாமின் பாவ வழியைவிட்டு அவர்
விலகவில்லை.[d] **25** பின்பு, அவருடைய ஊழியரான ரெமலியாவின் மக
னும் படை அதிகாரியுமான பெக்கா[e] அவரைக் கொன்றுபோட சதித்திட்டம்
தீட்டினார். சமாரியாவில் ராஜாவின் அரண்மனையில் இருந்த ஒரு கோபுரத்
தில், அர்கோப்புடனும் ஆரியேவுடனும் சேர்ந்து அவரைக் கொன்றுபோட்
டார். அப்போது, கீலேயாத்தைச் சேர்ந்த 50 ஆட்கள் அவருடன் இருந்
தார்கள். பெக்காகியாவைக் கொன்றுபோட்ட பின்பு பெக்கா ராஜாவானார்.
26 பெக்காகியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும்,
அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப்
புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

27 அசரியா ராஜா யூதாவை ஆட்சி செய்த 52-ஆம் வருஷத்தில், ரெம
லியாவின் மகன் பெக்கா[f] இஸ்ரவேலின் ராஜாவானார். அவர் சமாரியா
வில் 20 வருஷங்கள் ஆட்சி செய்தார். **28** யெகோவா வெறுக்கிற காரியங்
களை அவர் செய்துவந்தார்; இஸ்ரவேலர்களைப் பாவம் செய்யத் தூண்டிய
நேபாத்தின் மகன் யெரொபெயாமின் பாவ வழியைவிட்டு விலகவில்லை.[g]
29 பெக்கா ராஜா இஸ்ரவேலை ஆட்சி செய்த காலத்தில், ஈயோன்,
ஆபேல்-பெத்-மாக்கா,[h] யநோகா, கேதேஸ்,[i] ஆத்சோர், கீலேயாத்,[j] கலி
லேயா, அதாவது நப்தலி பகுதி[k] முழுவதையும், அசீரிய ராஜாவான திகி
லாத்-பிலேசர்[l] முற்றுகையிட்டுக் கைப்பற்றினான். அதோடு, அங்கிருந்த
மக்களை அசீரியாவுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போனான்.[m] **30** அதன்
பின்பு, ரெமலியாவின் மகன் பெக்காவைத் தீர்த்துக்கட்ட ஏலாவின் மகன்
ஓசெயா[n] சதித்திட்டம் தீட்டினார்; அவரைக் கொன்றுவிட்டு, ஓசெயா ராஜா
வானார். இது, உசியாவின் மகன் யோதாம்[o] ராஜாவாகி 20-ஆம் வருஷத்
தில் நடந்தது. **31** பெக்காவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப்
பற்றியும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் இஸ்ரவேல் ராஜாக்களின்
சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

32 ரெமலியாவின் மகன் பெக்கா இஸ்ரவேலை ஆட்சி செய்த இரண்
டாம் வருஷத்தில், உசியா[p] ராஜாவின் மகன் யோதாம்[q] யூதாவில் ராஜாவா
னார். **33** ராஜாவானபோது அவருக்கு 25 வயது. அவர் 16 வருஷங்கள்

15:20 *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **15:22** *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்.”

எருசலேமில் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர் எருசாள், இவள்
சாதோக்கின் மகள்.[a] **34** யோதாம் தன்னுடைய அப்பா உசியாவைப்
போலவே யெகோவாவுக்குப் பிரியமாக நடந்துவந்தார்.[b] **35** இருந்தாலும்,
ஆராதனை மேடுகள் அழிக்கப்படவில்லை. மக்கள் இன்னமும் அந்த இடங்
களில் பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்துகொண்டிருந்தார்கள்.[c]
யெகோவாவுடைய ஆலயத்தின் ‘உயர்ந்த நுழைவாசலை’ இவர்தான் கட்டி
னார்.[d] **36** யோதாமின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றி
யும், அவர் செய்தவற்றைப் பற்றியும் யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்
தில் எழுதப்பட்டிருக்கிறது. **37** அந்தக் காலத்தில், யூதாவுடன் போர் செய்ய
சீரியாவின் ராஜா ரேத்சீனையும் ரெமலியாவின் மகன் பெக்காவையும்[e]
யெகோவா அனுப்பத் தொடங்கினார்.[f] **38** யோதாம் இறந்துபோனதும்,*
அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், அவருடைய
மூதாதையான ‘தாவீதின் நகரத்தில்,’ அடக்கம் செய்யப்பட்டார். அவருக்குப்
பிறகு, அவருடைய மகன் ஆகாஸ் ராஜாவானார்.

16 ரெமலியாவின் மகன் பெக்கா ஆட்சி செய்த 17-ஆம் வரு
ஷத்தில், யோதாம் ராஜாவின் மகன் ஆகாஸ்[g] யூதாவில் ராஜாவா
னார். **2** ஆகாஸ் ராஜாவானபோது அவருக்கு 20 வயது; அவர் எருசலே
மில் 16 வருஷங்கள் ஆட்சி செய்தார்; தன்னுடைய மூதாதையான தாவீது
யெகோவா தேவனுக்குப் பிரியமாக நடந்ததுபோல் அவர் நடக்கவில்லை.[h]
3 அதற்குப் பதிலாக, இஸ்ரவேல் ராஜாக்களின் வழியில் நடந்தார்;[i] தன்
னுடைய சொந்த மகனையே நெருப்பில் பலி கொடுத்தார்.*[j] இப்படி, இஸ்ர
வேலர்களின் கண் முன்னால் யெகோவா விரட்டியடித்த மற்ற தேசத்தாரின்
அருவருப்பான பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார்.[k] **4** அதுமட்டுமல்ல,
ஆராதனை மேடுகளிலும் குன்றுகளிலும் அடர்த்தியான மரங்கள் ஒவ்
வொன்றின் கீழும்[l] பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்தார்.[m]

5 அப்போதுதான், சீரியாவின் ராஜாவான ரேத்சீனும், இஸ்ரவேலின்
ராஜாவும் ரெமலியாவின் மகனுமான பெக்காவும் எருசலேமுக்கு எதிராகப்
போர் செய்ய வந்தார்கள். ஆகாஸ் இருந்த அந்த நகரத்தை முற்றுகையிட்
டார்கள்,[n] ஆனால் அதைக் கைப்பற்ற முடியவில்லை. **6** அந்தச் சமயத்
தில், சீரியாவின் ராஜாவான ரேத்சீன் ஏலாத்தைக் கைப்பற்றி[o] மறுபடியும்
அதை ஏதோமுடன் இணைத்தான், யூதர்களை* அங்கிருந்து துரத்திவிட்
டான். பின்பு, ஏதோமியர்கள் ஏலாத்துக்குப் போய் இன்றுவரை அங்குதான்
குடியிருக்கிறார்கள். **7** அப்போது, அசீரிய ராஜாவான திகிலாத்-பிலேசரி
டம்[p] ஆகாஸ் தன்னுடைய தூதுவர்களை அனுப்பி, “நான் உங்கள் ஊழி
யன், உங்கள் பிள்ளை. சீரியா ராஜாவும் இஸ்ரவேல் ராஜாவும் என்னைத்
தாக்குகிறார்கள். நீங்கள் வந்து என்னைக் காப்பாற்றுங்கள்” என்று சொன்
னார். **8** அதோடு, யெகோவாவின் ஆலயத்திலும் அரண்மனை கஜானாக்
களிலும் இருந்த தங்கத்தையும் வெள்ளியையும் எடுத்து அசீரிய ராஜாவுக்கு
லஞ்சமாக அனுப்பி வைத்தார்.[q] **9** அவருடைய வேண்டுகோளை அசீ
ரிய ராஜா ஏற்றுக்கொண்டான். அதனால், தமஸ்குவுக்குப் போய் அதைக்
கைப்பற்றி அங்கிருந்த மக்களை கீர் தேசத்துக்குச் சிறைபிடித்துக்கொண்டு
போனான்;[r] ரேத்சீனைக் கொன்றுபோட்டான்.[s]

15:38 *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்.” **16:3** *நே.மொ., “நெருப்பைக் கடக்க வைத்தார்.” **16:6** *வே.வா., “யூதா ஆண்களை.”

அதி. 15
a 2நா 27:1
b 2நா 27:2
c எண் 33:52; உபா 12:14
d 2நா 27:3
e 2ரா 15:27; 2நா 28:6
f 2ரா 16:5; ஏசா 7:1, 2

அதி. 16
g ஏசா 1:1; ஏசா 7:1; ஓசி 1:1; மீ 1:1; மத் 1:9
h 2நா 28:1-4
i 1ரா 12:28-30; 1ரா 16:33
j லேவி 20:2, 3; 2நா 33:1, 6; எரே 7:31
k உபா 12: 29-31
l உபா 12:2
m எண் 33:52
n 2ரா 15:37; 2நா 28:5, 6
o 2ரா 14:21, 22
p 2ரா 15:29
q 1ரா 15:18, 19
r ஆமோ 1:4, 5
s ஏசா 9:11

10 அசீரிய ராஜாவான திகிலாத்-பிலேசரைச் சந்திக்க ஆகாஸ் ராஜா
தமஸ்குவுக்குப் போனார். அங்கிருந்த பலிபீடத்தைப் பார்த்தபோது, அதன்
வரைபடத்தைக் குருவாகிய ஊரியாவுக்கு அனுப்பி வைத்தார். அதன் வடி
வமைப்பு, கட்டப்பட்ட விதம் போன்ற விவரங்களை அதில் குறிப்பிட்டிருந்
தார்.[a] **11** ஆகாஸ் ராஜா தமஸ்குவிலிருந்து அனுப்பிய எல்லா விவரங்
களையும் வைத்து குருவாகிய ஊரியா[b] ஒரு பலிபீடத்தைக் கட்டினார்.[c]
தமஸ்குவிலிருந்து ஆகாஸ் ராஜா திரும்பி வருவதற்குள் அந்தப் பலிபீடத்
தைக் கட்டி முடித்துவிட்டார். **12** தமஸ்குவிலிருந்து ராஜா திரும்பி வந்து
அந்தப் பலிபீடத்தைப் பார்த்தார், அதன் பக்கத்தில் போய் அதன்மேல் பலி
களைச் செலுத்தினார்.[d] **13** அந்தப் பலிபீடத்தில் தன்னுடைய தகன பலி
களையும் உணவுக் காணிக்கைகளையும் எரித்துவந்தார். அதோடு, திராட்ச
மது காணிக்கைகளை ஊற்றி, சமாதான பலிகளின் இரத்தத்தை அதன்மேல்
தெளித்தார். **14** ஆலயத்துக்கு முன்பக்கத்தில் யெகோவாவின் முன்னி
லையில் இருந்த செம்புப் பலிபீடத்தை[e] நீக்கிவிட்டார்; அதாவது, தன்னு
டைய பலிபீடத்துக்கும் யெகோவாவின் ஆலயத்துக்கும் இடையே இருந்த
செம்புப் பலிபீடத்தை நீக்கிவிட்டு, அதைத் தன்னுடைய பலிபீடத்துக்கு
வடக்குப் பக்கத்தில் வைத்தார். **15** அதோடு, குருவாகிய ஊரியாவிடம்,[f]
“காலையில் கொடுக்கப்படுகிற தகன பலியையும், மாலையில் கொடுக்கப்ப
டுகிற உணவுக் காணிக்கையையும்,[g] ராஜாவின் தகன பலியையும், உணவுக்
காணிக்கையையும், மக்கள் கொண்டுவருகிற தகன பலிகளையும், உணவுக்
காணிக்கைகளையும், திராட்சமது காணிக்கைகளையும் பெரிய பலிபீடத்தில்
கொடுக்க வேண்டும்.[h] தகன பலிகளின் இரத்தம் முழுவதையும் மற்ற பலி
களின் இரத்தம் முழுவதையும் அதன்மீது தெளிக்க வேண்டும். செம்புப் பலி
பீடத்தை என்ன செய்வதென்று அப்புறம் யோசித்துச் சொல்கிறேன்” என்று
சொன்னார். **16** ஆகாஸ் ராஜா கட்டளையிட்ட எல்லாவற்றையும் குருவா
கிய ஊரியா செய்தார்.[i]

17 அதோடு, தள்ளுவண்டியின்[j] நான்கு பக்கங்களையும் தனித்தனி
யாக அறுத்து, அதிலிருந்த தொட்டிகளை ஆகாஸ் ராஜா எடுத்துவிட்
டார்.[k] காளை உருவங்களின் மீது வைக்கப்பட்டிருந்த ‘செம்புக் கடல்’
தொட்டியை[l] வெளியே எடுத்து கல்தளத்தில் வைத்தார்.[m] **18** யெகோவா
வின் ஆலயத்தில், ஓய்வுநாளுக்காக அமைக்கப்பட்டிருந்த கூரையுடன்கூ
டிய பகுதியையும் ராஜாவின் நுழைவாசலையும் வேறொரு இடத்துக்கு மாற்
றினார். அசீரிய ராஜாவுக்குப் பயந்துதான் இப்படிச் செய்தார்.

19 ஆகாசின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றி யூதா
ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[n] **20** ஆகாஸ்
இறந்ததும்,* அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்ட ‘தாவீ
தின் நகரத்தில்’ அடக்கம் செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு, அவருடைய
மகன் எசேக்கியா#[o] ராஜாவானார்.

17

ஆகாஸ் ராஜா யூதாவை ஆட்சி செய்த 12-ஆம் வருஷத்தில், ஏலா
வின் மகன் ஓசெயா[p] இஸ்ரவேலின் ராஜாவானார். அவர் சமாரியா
வில் ஒன்பது வருஷங்கள் ஆட்சி செய்தார். **2** யெகோவா வெறுக்கிற காரி
யங்களைச் செய்துவந்தார். ஆனால், தனக்கு முன்பிருந்த இஸ்ரவேல்

அதி. 16
a உபா 12:30
b ஏசா 8:2
c எரே 23:11; எசே 22:26
d 2நா 28:22, 23; 2நா 28:25
e 2நா 4:1
f ஏசா 8:2
g யாத் 29:39-41
h 2நா 28:23
i 2ரா 16:11
j 1ரா 7:27, 28
k 1ரா 7:38; 2நா 4:6
l 1ரா 7:23, 25
m 2நா 28:24; 2நா 29:19
n 2நா 28:26, 27
o 2ரா 18:1; 2நா 29:1; ஏசா 1:1; ஓசி 1:1; மத் 1:9

அதி. 17
p 2ரா 15:30

16:20 * நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்.” # அர்த்தம், “யெகோவா பலப்படுத்துகிறார்.”

ராஜாக்கள் அளவுக்கு மோசமாக நடக்கவில்லை. **3** அப்போது, அசீரிய
ராஜா சல்மனாசார் அவரோடு போர் செய்ய வந்தான்.[a] அதனால், ஓசெயா
அவனுக்கு அடிபணிந்து கப்பம் கட்டிவந்தார்.[b] **4** ஆனால், தனக்கு எதி
ராக ஓசெயா சூழ்ச்சி செய்வதை அசீரிய ராஜா தெரிந்துகொண்டான்.
ஏனென்றால், எகிப்தின் ராஜாவான சோவிடம் உதவி கேட்டு தூதுவர்களை
ஓசெயா அனுப்பியிருந்தார்;[c] அதோடு, முந்தைய வருஷங்களில் அசீரிய
ராஜாவுக்குக் கொடுத்து வந்த கப்பத்தையும் கொடுக்காமல் நிறுத்திவிட்டார்.
அதனால், அசீரிய ராஜா அவரைக் கட்டி சிறையில் அடைத்தான்.

5 இஸ்ரவேல் தேசத்தின் மீது அசீரிய ராஜா படையெடுத்து வந்தான்;
சமாரியாவை மூன்று வருஷங்களுக்கு முற்றுகையிட்டான். **6** ஓசெயா
ஆட்சி செய்த ஒன்பதாம் வருஷத்தில், சமாரியாவை அசீரிய ராஜா
கைப்பற்றினான்.[d] பின்பு, இஸ்ரவேல் மக்களை அசீரியாவுக்குச் சிறைபிடித்
துக்கொண்டு போய்[e] ஆலாவிலும் கோசான் ஆற்றுக்குப்[f] பக்கத்திலிருந்த
ஆபோரிலும் மேதியர்களுடைய நகரங்களிலும் குடியேற்றினான்.[g]

7 இஸ்ரவேலர்கள் தங்களுடைய கடவுளாகிய யெகோவாவுக்கு எதிராக,
அதாவது எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் பிடியிலிருந்து தங்களை
விடுதலை செய்து கூட்டிக்கொண்டு வந்தவருக்கு எதிராக, பாவம் செய்தார்
கள்;[h] அவர்கள் மற்ற தெய்வங்களை வணங்கினார்கள்,*[i] **8** இஸ்ரவேலர்க
ளின் கண் முன்னால் யெகோவா விரட்டியடித்த தேசத்தாரின் பழக்கவழக்
கங்களைப் பின்பற்றினார்கள், இஸ்ரவேலின் ராஜாக்கள் ஏற்படுத்திய
பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார்கள்; அதனால்தான் இப்படி நடந்தது.

9 இஸ்ரவேலர்கள் தங்களுடைய கடவுளான யெகோவா வெறுக்கிற
காரியங்களை விடாப்பிடியாகச் செய்துவந்தார்கள். எல்லா நகரங்களிலும்,
காவற்கோபுரங்கள் தொடங்கி மதில் சூழ்ந்த நகரங்கள்வரை* எல்லா இடங்
களிலும், ஆராதனை மேடுகளை அமைத்துவந்தார்கள்.[j] **10** ஒவ்வொரு
குன்றின் மேலும் அடர்த்தியான ஒவ்வொரு மரத்தின் கீழும்[k] பூஜைத் தூண்
களையும் பூஜைக் கம்பங்களையும்* நிறுத்திவந்தார்கள்.[l] **11** இஸ்ரவேலர்
களின் கண் முன்னால் யெகோவா துரத்தியடித்த தேசத்தாரைப் போலவே
எல்லா ஆராதனை மேடுகளிலும் பலிகளை எரித்து புகை எழும்பிவரச்
செய்தார்கள்.[m] மோசமான காரியங்களைச் செய்து யெகோவாவைப் புண்ப
டுத்திக்கொண்டே இருந்தார்கள்.

12 “நீங்கள் இப்படிச் செய்யக் கூடாது”[n] என்று யெகோவா ஏற்கெ
னவே சொல்லியிருந்தபோதிலும், இஸ்ரவேலர்கள் அருவருப்பான* சிலை
களை[o] வணங்கிவந்தார்கள். **13** யெகோவா தன்னுடைய தீர்க்கதரிசிகள்
எல்லாரையும், தரிசனக்காரர்கள் ஒவ்வொருவரையும் அனுப்பி இஸ்ரவேலை
யும் யூதாவையும் எச்சரித்துக்கொண்டே இருந்தார்.[p] “பொல்லாத வழிகளை
விட்டு மனம் திருந்துங்கள்![q] என்னுடைய கட்டளைகளுக்கும் சட்டதிட்டங்
களுக்கும் கீழ்ப்படியுங்கள்; உங்களுடைய முன்னோர்கள் மூலம் நான்
கொடுத்த எல்லா சட்டங்களுக்கும், என்னுடைய தீர்க்கதரிசிகள் மூலம் நான்

17:7 *நே.மொ., “தெய்வங்களுக்குப் பயந்தார்கள்.” **17:9** *அதாவது, “மக்
கள்தொகை குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும்.” **17:10** *சொல் பட்
டியலைப் பாருங்கள். **17:12** *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற
வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது
பயன்படுத்தப்படுகிறது.

அதி. 17
a 2ரா 18:9, ஏசா 10:5, 6, ஓசி 10:14, 15
b 2ரா 18:14
c ஏசா 31:1
d ஓசி 13:16
e லேவி 26:32, 33, உபா 4:27, உபா 28:64, 1ரா 14:15
f 1நா 5:26
g 2ரா 18:9-11
h யாத் 20:2
i யாத் 20:5
j ஓசி 12:11
k உபா 12:2, ஏசா 57:5
l யாத் 34:13, உபா 16:21, 22
m லேவி 20:23
n யாத் 20:3-5, லேவி 26:1, உபா 4:23
o 1ரா 12:28-30, 1ரா 21:25, 26
p 2நா 24:18, 19, 2நா 36:15, 16, எரே 25:4
q ஏசா 55:7

சொன்ன எல்லா வார்த்தைகளுக்கும் கீழ்ப்படியுங்கள்” என்று சொல்லியிருந்
தார். **14** ஆனால், அவர் பேச்சை அவர்கள் கேட்கவில்லை. தங்களு
டைய கடவுளான யெகோவாமீது விசுவாசம் வைக்காத முன்னோர்களைப்
போலவே இவர்களும் முரட்டுப் பிடிவாதம் பிடித்தார்கள்.[a] **15** அவரு
டைய விதிமுறைகளை ஒதுக்கித்தள்ளிக்கொண்டே இருந்தார்கள்.[b] தங்களு
டைய முன்னோர்களோடு அவர் செய்த ஒப்பந்தத்தையும் மீறிக்கொண்டே
இருந்தார்கள். அவர் திரும்பத் திரும்பத் தங்களை எச்சரித்தபோதிலும்
அதை அலட்சியம் செய்துகொண்டே இருந்தார்கள்.[c] ஒன்றுக்கும் உத
வாத சிலைகளை வணங்கிவந்தார்கள்,[d] கடைசியில் அவர்களும் ஒன்றுக்
கும் உதவாதவர்களாய் ஆனார்கள்.[e] சுற்றியிருந்த தேசத்தாரைப் பின்பற்ற
வேண்டாமென்று யெகோவா கட்டளையிட்டிருந்தும், அவர்களைப் பின்பற்
றினார்கள்.[f]

16 தங்களுடைய கடவுளான யெகோவா தந்த எல்லா கட்டளைக
ளையும் அலட்சியம் செய்துகொண்டே இருந்தார்கள். இரண்டு உலோகக்
கன்றுக்குட்டிகளைச் செய்தார்கள்,[g] பூஜைக் கம்பத்தை* நிறுத்தினார்கள்;[h]
வானத்துப் படைகள் முன்னால் மண்டிபோட்டார்கள்,[i] பாகாலை வழிபட்
டார்கள்.[j] **17** தங்களுடைய மகன்களையும் மகள்களையும் நெருப்பில்
பலி கொடுத்தார்கள்,*[k] குறி கேட்டார்கள்,[l] சகுனம் பார்த்தார்கள், யெகோ
வாவைப் புண்படுத்துவதற்காக அவர் வெறுக்கிற காரியங்களை வேண்டு
மென்றே செய்துவந்தார்கள்.

18 அதனால், இஸ்ரவேலர்கள்மீது யெகோவா பயங்கர கோபமடைந்
தார், அவர்களைத் தன்னுடைய கண் முன்னாலிருந்தே நீக்கிவிட்டார்.[m] யூதா
கோத்திரத்தாரைத் தவிர வேறு யாரையும் அவர் விட்டுவைக்கவில்லை.

19 ஆனால், யூதா மக்கள்கூட தங்களுடைய கடவுளான யெகோவா
வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவில்லை;[n] இஸ்ரவேலர்களுடைய பழக்
கவழக்கங்களை இவர்களும் பின்பற்றினார்கள்.[o] **20** இஸ்ரவேலர்களின்
வம்சத்தில் வந்த எல்லாரையும் யெகோவா ஒதுக்கித்தள்ளினார்; அவர்
களை அவமானப்படுத்தி கொள்ளைக்காரர்களின் கையில் விட்டுவிட்டார்.
கடைசியில், அவர்களைத் தன் முன்னாலிருந்தே நீக்கிவிட்டார். **21** தாவீ
தின் வம்சத்திலிருந்து இஸ்ரவேலைப் பிரித்தெடுத்தார். அவர்கள் நேபாத்
தின் மகன் யெரொபெயாமை ராஜாவாக்கினார்கள்.[p] ஆனால், இஸ்ரவேலர்
கள் யெகோவாவைவிட்டு விலகிப்போக யெரொபெயாம் காரணமானார்,
அவர்களை மிகப் பெரிய பாவம் செய்ய வைத்தார். **22** யெரொபெ
யாம் செய்த எல்லா பாவங்களையும் இஸ்ரவேல் மக்கள் செய்துவந்தார்
கள்,[q] அவற்றைவிட்டு விலகவில்லை. **23** யெகோவா தன்னுடைய ஊழி
யர்களான எல்லா தீர்க்கதரிசிகள் மூலம் எச்சரித்தபடியே[r] அவர்களைத்
தன்னுடைய கண் முன்னாலிருந்து நீக்கும்வரை அப்படியேதான் செய்துவந்
தார்கள். அதனால், இஸ்ரவேலர்கள் தங்களுடைய தேசத்திலிருந்து அசீரி
யாவுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள்,[s] அவர்கள் இன்றுவரை அங்
குதான் இருக்கிறார்கள்.

24 பின்பு பாபிலோன், கூத்தா, ஆவா, காமாத், செப்பர்வாயிம்[t]
ஆகிய இடங்களிலிருந்த மக்களை அசீரிய ராஜா கொண்டுவந்து,

17:16 *சொல் பட்டியலைப் பாருங்கள். **17:17** *நே.மொ., “நெருப்பைக் கடக்க வைத்தார்கள்.”

அதி. 17

a உபா 1:32; உபா 31:27
b உபா 5:2; உபா 29:12
c ஓசி 4:6
d உபா 32:21; 1சா 12:21
e சங் 115:4-8; ஏசா 44:9
f உபா 12:30
g 1ரா 12:28-30
h 1ரா 14:15; 1ரா 16:33
i உபா 4:19; எரே 8:2
j 1ரா 16:30, 31; 1ரா 22:51, 53; 2ரா 10:21; 2ரா 23:4, 5
k 2ரா 16:1, 3
l உபா 18:10; மீ 5:12
m யோசு 23:12, 13; ஏசா 42:24
n 1ரா 14:22; எரே 3:8
o எசே 23:4, 11
p 1ரா 12:20
q 1ரா 12:28-30
r உபா 28:45, 63; 1ரா 14:16; ஓசி 1:4; ஆமோ 5:27; மீ 1:6
s 2ரா 18:11
t 2ரா 19:11, 13

இஸ்ரவேலர்களுக்குப் பதிலாக அவர்களை சமாரியா நகரங்களில் குடியேற்
றினான். அவர்கள் சமாரியா நகரங்களைச் சொந்தமாக்கிக்கொண்டு அங்கே
குடியிருந்தார்கள். **25** அவர்கள் அங்கே குடியேறிய சமயத்தில் யெகோ
வாவை வணங்கவில்லை. அதனால், யெகோவா அவர்களுடைய ஊருக்
குள் சிங்கங்களை அனுப்பினார்,[a] அவை அவர்களில் சிலரைக் கொன்று
போட்டன. **26** அப்போது, அசீரிய ராஜாவிடம், “வேறு தேசங்களிலிருந்து
சிறைபிடித்துவந்து சமாரியா நகரங்களில் நீங்கள் குடியேற்றிய மக்களுக்கு
அந்தத் தேசத்து கடவுளைப் பற்றியோ மதத்தை* பற்றியோ தெரிய
வில்லை. அதனால், அவர் சிங்கங்களை ஊருக்குள் அனுப்பிக்கொண்டே
இருக்கிறார். அவை அந்த மக்களைக் கொன்றுபோடுகின்றன. அந்தத்
தேசத்து கடவுளைப் பற்றியோ மதத்தைப் பற்றியோ அவர்களில் ஒருவருக்
குக்கூட தெரியவில்லை” என்று சொல்லப்பட்டது.

27 அப்போது அசீரிய ராஜா, “அங்கிருந்து நீங்கள் சிறைபிடித்துவந்த
குருமார்களில் ஒருவரை அங்கேயே திருப்பி அனுப்பிவிடுங்கள். அங்கி
ருக்கிற மக்களுக்கு அந்தத் தேசத்தின் கடவுளைப் பற்றியும் மதத்தைப் பற்
றியும் அவர் சொல்லிக்கொடுக்கட்டும்” என்று கட்டளையிட்டார்.
28 அதனால், சமாரியாவிலிருந்து அவர்கள் சிறைபிடித்துப்போன குருமார்
களில் ஒருவர் பெத்தேலுக்குத்[b] திரும்பி வந்து அங்கே குடியேறி, யெகோ
வாவை எப்படி வணங்க வேண்டும் என்று சொல்லிக்கொடுக்க ஆரம்
பித்தார்.[c]

29 ஆனால், ஒவ்வொரு தேசத்தாரும் அவரவருக்கென்று ஒரு தெய்வச்
சிலையைச் செய்துகொண்டார்கள். ஆராதனை மேடுகளில் சமாரியர்கள்
கட்டியிருந்த கோயில்களில் அவற்றை வைத்தார்கள். ஒவ்வொரு தேசத்தா
ரும் தாங்கள் குடியிருந்த நகரங்களில் இப்படித்தான் செய்தார்கள். **30** பாபி
லோனியர்கள் சுக்கோத்-பெனோத் சிலையையும், கூத்தியர்கள் நேர்கால்
சிலையையும், காமாத்தியர்கள்[d] அசிமா சிலையையும் செய்தார்கள்;
31 ஆவீமியர்கள் நிபேகாஸ், தர்தாக் தெய்வங்களின் சிலைகளைச் செய்தார்
கள்; செப்பர்வாயிமியர்கள் தங்களுடைய தெய்வங்களான[e] அத்ரமலேக்கு,
அன்னமலேக்கு ஆகியவற்றுக்குத் தங்கள் மகன்களை நெருப்பில் பலியிட்
டார்கள். **32** அவர்கள் யெகோவாவுக்குப் பயந்தபோதிலும், தங்களுடைய
ஆட்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து கோயில்களில் பூசாரிகளாக நிய
மித்துக்கொண்டார்கள். அங்கிருந்த கோயில்களில் அவர்கள் பூஜை செய்
தார்கள்.[f] **33** இப்படி, அவர்கள் யெகோவாவுக்குப் பயந்தபோதிலும், எந்
தத் தேசத்திலிருந்து பிடித்துவரப்பட்டார்களோ அந்தத் தேசத்து மக்களின்
மதத்தை* பின்பற்றி, அவர்களுடைய தெய்வங்களை வழிபட்டார்கள்.[g]

34 முன்பு தாங்கள் பின்பற்றிய மதங்களைத்தான்* இன்றுவரை பின்பற்
றுகிறார்கள். அவர்கள் யாரும் யெகோவாவை வழிபடுவதில்லை;
யெகோவாவின் சட்டதிட்டங்களையும், நீதித்தீர்ப்புகளையும், திருச்சட்டத்
தையும், இஸ்ரவேல் என்று அவர் பெயர் மாற்றிய யாக்கோபுடைய
மகன்களுக்குக் கொடுத்த கட்டளைகளையும் அவர்கள் யாரும் பின்பற்றுவ
தில்லை.[h] **35** இஸ்ரவேலர்களோடு யெகோவா ஒப்பந்தம் செய்தபோது,[i]
“மற்ற தெய்வங்களை நீங்கள் வழிபடக் கூடாது. நீங்கள் அவற்றுக்கு முன்

17:26, 33 *வே.வா., “மத சம்பிரதாயங்களை.” **17:34** *வே.வா., “மத சம்பிரதாயங்க
ளைத்தான்.”

அதி. 17
a யாத் 23:29
b ஆதி 28:18, 19; யோசு 16:1; 1ரா 12:28, 29
c யோவா 4:20–22
d 2ரா 17:24
e 2ரா 18:34
f 1ரா 12:31, 32; 1ரா 13:33
g 2ரா 17:24, 41
h ஆதி 32:28
i யாத் 19:5; யாத் 24:7; உபா 29:1

னால் தலைவணங்கவோ அவற்றுக்குச் சேவை செய்யவோ அவற்றுக்
குப் பலி கொடுக்கவோ கூடாது.[a] **36** மகா வல்லமையாலும் பலத்தாலும்
எகிப்து தேசத்திலிருந்து உங்களை விடுதலை செய்து கூட்டிக்கொண்டுவந்த
யெகோவாவைத்தான்[b] நீங்கள் வணங்க வேண்டும்;[c] அவருக்கு முன்னால்
தான் தலைவணங்க வேண்டும், அவருக்குத்தான் பலி கொடுக்க வேண்
டும். **37** அவர் தந்த விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும் திருச்சட்டத்
தையும் கட்டளைகளையும்[d] நீங்கள் அப்படியே பின்பற்ற வேண்டும்; மற்ற
தெய்வங்களுக்கு நீங்கள் பயபக்தி காட்டக் கூடாது. **38** உங்களுடன் நான்
செய்த ஒப்பந்தத்தை நீங்கள் மறந்துவிடக் கூடாது;[e] மற்ற தெய்வங்களுக்குப்
பயபக்தி காட்டக் கூடாது. **39** உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு மட்
டும்தான் நீங்கள் பயபக்தி காட்ட வேண்டும்; ஏனென்றால், உங்களுடைய
எல்லா எதிரிகளிடமிருந்தும் உங்களைக் காப்பாற்றப்போகிறவர் அவர்தான்"
என்று கட்டளையிட்டிருந்தார்.

40 ஆனால், அவர்கள் அவருக்குக் கீழ்ப்படியவில்லை, முன்பு பின்
பற்றி வந்த மதத்தைத்தான்* பின்பற்றினார்கள்.[f] **41** இப்படி, அந்தத்
தேசத்தார் யெகோவாவுக்குப் பயபக்தி காட்டியபோதிலும்,[g] தங்களுடைய
தெய்வச் சிலைகளையும் வழிபட்டார்கள். அவர்களுடைய மகன்களும்
பேரன்களும் தங்களுடைய முன்னோர்கள் செய்தது போலவே இன்றுவரை
செய்துவருகிறார்கள்.

18 ஏலாவின் மகன் ஓசெயா[h] ராஜா இஸ்ரவேலை ஆட்சி செய்த மூன்
றாம் வருஷத்தில், ஆகாஸ்[i] ராஜாவின் மகன் எசேக்கியா[j] யூதா
வின் ராஜாவானார். **2** அப்போது, அவருக்கு 25 வயது. அவர் 29 வரு
ஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர்
அபி;* அவள் சகரியாவின் மகள்.[k] **3** எசேக்கியா தன்னுடைய மூதா
தையான தாவீதைப் போலவே,[l] யெகோவாவுக்குப் பிரியமாக நடந்துவந்
தார்.[m] **4** அவர்தான் ஆராதனை மேடுகளை அழித்தார்,[n] பூஜைத் தூண்
களைத் தகர்த்தார், பூஜைக் கம்பத்தை* வெட்டிப்போட்டார்.[o] அதோடு,
மோசே செய்திருந்த செம்புப் பாம்பை[p] நொறுக்கினார்; ஏனென்றால், அது
வரைக்கும் இஸ்ரவேல் மக்கள் அதன் முன்னால் பலிகளை எரித்து புகை
எழும்பிவரச் செய்திருந்தார்கள். அதை நிகுஸ்தான்# என்று அழைத்தார்கள்.
5 அவர் இஸ்ரவேலின் கடவுளான யெகோவாமீது நம்பிக்கை வைத்தார்.[q]
அவருக்கு முன்பும் சரி, பின்பும் சரி, யூதா ராஜாக்களில் வேறு யாரும் அவ
ரைப் போல இருக்கவில்லை. **6** அவர் யெகோவாவை உறுதியாகப் பிடித்
துக்கொண்டார்.[r] அவருடைய வழியைவிட்டு விலகவே இல்லை. மோசே
யிடம் யெகோவா கொடுத்த கட்டளைகளுக்கு எப்போதும் கீழ்ப்படிந்து
நடந்தார். **7** யெகோவா அவருக்குத் துணையாக இருந்ததால், எல்லாவற்
றையும் ஞானமாகச் செய்தார். அசீரிய ராஜாவுக்கு எதிராகக் கலகம் செய்
தார், அவனுக்குச் சேவை செய்ய மறுத்துவிட்டார்.[s] **8** காசா வரையிலும்,
அதன் சுற்றுப்பகுதிகள் வரையிலும் இருந்த பெலிஸ்திய நகரங்கள் எல்லா
வற்றையும் பிடித்தார்;[t] காவற்கோபுரங்கள் தொடங்கி மதில் சூழ்ந்த நகரங்
கள்வரை* எல்லா இடங்களையும் கைப்பற்றினார்.

17:40 *வே.வா., "மத சம்பிரதாயங்களைத்தான்." **18:2** *அபியாள் என்பதன் சுருக்
கம். **18:4** *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., "செம்புப் பாம்பு சிலை."
18:8 *அதாவது, "மக்கள்தொகை குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும்."

அதி. 17
a யாத் 20:3-5 யாத் 23:24 யாத் 34:14 உபா 5:9
b யாத் 6:6
c உபா 6:12, 13
d உபா 31:9
e உபா 4:23
f 2ரா 17:34
g எஸ்றா 4:1, 2

அதி. 18
h 2ரா 15:30 2ரா 17:1
i 2ரா 16:2, 20
j 2நா 28:27 மத் 1:9
k 2நா 29:1, 2
l 1ரா 15:5
m 2ரா 20:3 2நா 31:20, 21 சங் 119:128
n எண் 33:52 1ரா 3:2 2ரா 14:1, 4
o உபா 7:5 உபா 12:3 2நா 31:1
p எண் 21:8, 9
q 2ரா 19:15 2நா 32:7, 8
r உபா 10:20 யோசு 23:8
s 2ரா 16:7
t 2நா 28:18, 19 ஏசா 14:28, 29

9 எசேக்கியா ராஜா ஆட்சி செய்த நான்காம் வருஷத்தில், அதாவது
ஏலாவின் மகன் ஓசெயா ராஜா[a] இஸ்ரவேலை ஆட்சி செய்த ஏழாம் வரு
ஷத்தில், அசீரிய ராஜாவான சல்மனாசார் சமாரியாமீது படையெடுத்து வந்து
அதை முற்றுகையிட்டான்.[b] **10** மூன்றாம் வருஷத்தின் முடிவில், அவ
னுடைய வீரர்கள் அதைக் கைப்பற்றினார்கள்.[c] எசேக்கியா ஆட்சி செய்த
ஆறாம் வருஷத்தில், அதாவது ஓசெயா ராஜா இஸ்ரவேலை ஆட்சி செய்த
ஒன்பதாம் வருஷத்தில், சமாரியா கைப்பற்றப்பட்டது. **11** பின்பு, அசீரிய
ராஜா இஸ்ரவேலர்களை அசீரியாவுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போய்[d]
ஆலாவிலும் கோசான் ஆற்றுக்குப் பக்கத்திலிருந்த ஆபோரிலும் மேதியர்
களுடைய நகரங்களிலும் குடியேற்றினான்.[e] **12** இஸ்ரவேலர்கள் தங்களு
டைய கடவுளான யெகோவாவின் பேச்சைக் கேட்காமல் அவருடைய ஒப்
பந்தத்தை மீறிக்கொண்டே இருந்ததால், யெகோவா தன்னுடைய ஊழியரான
மோசே மூலம் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாததால், இப்படியெல்
லாம் நடந்தது.[f] அவர்கள் அவருடைய பேச்சைக் கேட்கவுமில்லை, அவருக்
குக் கீழ்ப்படியவுமில்லை.

13 எசேக்கியா ராஜா ஆட்சி செய்த 14-ஆம் வருஷத்தில், யூதாவிலி
ருந்த மதில் சூழ்ந்த நகரங்கள் எல்லாவற்றின் மேலும் அசீரிய ராஜா[g] சன
கெரிப் படையெடுத்து வந்து அவற்றைக் கைப்பற்றினான்.[h] **14** அதனால்,
லாகீசில் இருந்த அசீரிய ராஜாவான சனகெரிப்புக்கு எசேக்கியா ராஜா
செய்தி அனுப்பினார்; "நான் தவறு செய்துவிட்டேன். நீங்கள் என்ன கேட்டா
லும் தந்துவிடுகிறேன், எங்களைத் தாக்காமல் திரும்பிப் போய்விடுங்கள்"
என்று சொன்னார். அப்போது, யூதாவின் ராஜாவான எசேக்கியாவிடம்,
300 தாலந்து* வெள்ளியையும் 30 தாலந்து தங்கத்தையும் அபராதம் கட்டச்
சொல்லி அசீரிய ராஜா சொன்னான். **15** அதனால், யெகோவாவின் ஆல
யத்திலும் அரண்மனை கஜானாக்களிலும் இருந்த எல்லா வெள்ளியையும்
எடுத்து எசேக்கியா கொடுத்து அனுப்பினார்.[i] **16** அதோடு, யெகோவா
வின் ஆலயத்திலிருந்த கதவுகளையும்[j] நிலைக்கால்களையும் வெட்டியெ
டுத்து, அதன்மீது தான் அடித்திருந்த தங்கத் தகடுகளையும்[k] அசீரிய ராஜா
வுக்குக் கொடுத்து அனுப்பினார்.

17 பின்பு தர்தான்,* ரப்சாரிஸ்,# ரப்சாக்கே△ ஆகியோரை எருசலே
மிலிருந்த எசேக்கியா ராஜாவிடம் அசீரிய ராஜா அனுப்பினான்.[l] அவர்க
ளோடு பெரிய படையையும் லாகீசிலிருந்து[m] அனுப்பினான். அவர்கள் எரு
சலேமுக்கு வந்து மேல்குளத்தின் வாய்க்கால் பக்கத்தில் நின்றார்கள்.
அது வண்ணார் பகுதிக்குப் பக்கத்திலிருந்த நெடுஞ்சாலையில் இருந்
தது.[n] **18** ராஜாவை வெளியே வரச் சொல்லி அங்கிருந்து அவர்கள் சத்
தம்போட்டுக் கூப்பிட்டார்கள். அப்போது, அரண்மனை நிர்வாகியும் இல்க்
கியாவின் மகனுமான எலியாக்கீம்,[o] செயலாளரான செப்னா,[p] பதிவாளரும்
ஆசாப்பின் மகனுமான யோவா ஆகியோர் புறப்பட்டு அவர்களிடம் வந்
தார்கள்.

19 அப்போது ரப்சாக்கே அவர்களிடம், "மன்னாதி மன்னரான அசீரிய
ராஜா சொல்லி அனுப்பிய இந்தச் செய்தியைத் தயவுசெய்து எசேக்கியாவி

18:14 * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.
18:17 * வே.வா., "படைத் தளபதி." # வே.வா., "அரண்மனையின் முக்கிய அதிகாரி."
△ வே.வா., "பானம் பரிமாறுகிறவர்களின் தலைவன்."

அதி. 18
a 2ரா 17:1
b 2ரா 17:3-6
c ஓசி 13:16 ஆமோ 3:11 மீ 1:6
d ஏசா 8:4 ஆமோ 6:1, 7
e 2ரா 17:6 1நா 5:26
f உபா 8:20 1ரா 14:15
g ஏசா 10:5
h 2நா 32:1 ஏசா 36:1
i 2ரா 12:18 2ரா 16:8 2நா 16:2, 3
j 1ரா 6:33-35
k 2நா 29:1, 3
l 2நா 32:9
m யோசு 15:20, 39 2நா 11:5, 9
n ஏசா 36:2, 3
o 2ரா 19:2 ஏசா 22:20-24
p ஏசா 22:15-19

டம் போய்ச் சொல்லுங்கள், ‘என்ன தைரியத்தில் நீ இப்படியெல்லாம் செய்
கிறாய்?[a] **20** என்னோடு போர் செய்ய உனக்குச் சாமர்த்தியமும் பலமும்
இருப்பதாகப் பிதற்றுகிறாயே. யாரை நம்பி என்னையே எதிர்க்கத் துணிந்
துவிட்டாய்?[b] **21** இதோ! எகிப்தைப்போய் நம்பிக்கொண்டிருக்கிறாயே.[c]
அது ஒடிந்துபோன நாணல். அதன்மேல் யாராவது கை ஊன்றினால், அது
அவனுடைய கையைக் குத்திக் கிழித்துவிடும். எகிப்தின் ராஜாவான பார்
வோனை நம்பியிருக்கிற எல்லாருக்கும் அதே கதிதான் ஏற்படும்.
22 “எங்கள் கடவுளான யெகோவாமேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்”[d]
என்று ஒருவேளை நீ சொல்லலாம். ஆனால், அவருடைய ஆராதனை
மேடுகளையும் பலிபீடங்களையும்தான் நீ அழித்துவிட்டாயே![e] “எருசலே
மில் இருக்கிற இந்தப் பலிபீடத்தின் முன்னால்தான் நீங்கள் மண்டிபோட
வேண்டும்” என்று யூதாவிலும் எருசலேமிலும் இருப்பவர்களுக்குச் சொல்
லியிருக்கிறாயே!’[f] **23** இதோ, என் எஜமானாகிய அசீரிய ராஜா உனக்குச்
சவால் விடுகிறார், கேள். நான் உனக்கு 2,000 குதிரைகளைத் தருகி
றேன், அதில் சவாரி செய்வதற்காவது உன்னிடம் ஆட்கள் இருக்கிறார்
களா பார்க்கலாம்![g] **24** ரதங்களுக்கும் குதிரைவீரர்களுக்கும் நீ எகிப்திடம்
கையேந்தி நிற்கிறாயே, என் எஜமானுக்கு வேலை செய்கிற ஒரு சாதாரண
ஆளுநரையாவது உன்னால் விரட்டியடிக்க முடியுமா? **25** யெகோவா
வின் உத்தரவு இல்லாமலா நான் இந்த இடத்தை அழிக்க வந்திருக்கி
றேன்? ‘இந்த நகரத்துக்கு எதிராகப் படையெடுத்துப் போய் அதை அழித்
துப்போடு’ என்று யெகோவாதான் என்னிடம் சொன்னார்” என்றான்.

26 அதற்கு இல்க்கியாவின் மகன் எலியாக்கீமும் செப்னாவும்[h] யோவா
வும், “உங்கள் ஊழியர்களான எங்களுக்கு அரமேயிக் மொழி*[i] தெரியும்.
தயவுசெய்து அரமேயிக் மொழியிலேயே பேசுங்கள். மதில்மேல் இருக்கிற
வர்களுக்குக் கேட்கிற மாதிரி யூதர்களுடைய மொழியில் பேச வேண்டாம்”[j]
என்று ரப்சாக்கேயிடம்[k] சொன்னார்கள். **27** அதற்கு ரப்சாக்கே, “உங்களி
டமும் உங்கள் எஜமானிடமும் மட்டும் பேசுவதற்காகவா ராஜா என்னை
அனுப்பி வைத்தார்? மதில்மேல் உட்கார்ந்திருக்கிற இந்த ஆட்களிடமும்
பேசத்தானே என்னை அனுப்பி வைத்தார்? உங்களோடு சேர்ந்து அவர்க
ளும்தானே தங்களுடைய மலத்தைத் தின்று தங்களுடைய சிறுநீரைக் குடிக்
கப்போகிறார்கள்?” என்று சொன்னான்.

28 பின்பு, ரப்சாக்கே நின்றுகொண்டு, யூதர்களுடைய மொழியில் சத்
தமாக, “மன்னாதி மன்னரான அசீரிய ராஜா சொல்லி அனுப்பிய செய்தி
யைக் கேளுங்கள்.[l] **29** ராஜாவின் செய்தி இதுதான்: ‘எசேக்கியாவின் பேச்
சைக் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள். அவனால் உங்களை என் கையிலிருந்து
காப்பாற்ற முடியாது.[m] **30** யெகோவாவை நம்பும்படி எசேக்கியா உங்களி
டம் சொல்வான். “யெகோவா நிச்சயம் நம்மைக் காப்பாற்றுவார், இந்த
நகரத்தை அசீரிய ராஜாவின் கையில் கொடுக்க மாட்டார்”[n] என்று சொல்
வான். அதையெல்லாம் நம்பாதீர்கள். **31** எசேக்கியாவின் பேச்சைக் கேட்
காதீர்கள். அசீரிய ராஜா இப்படிச் சொல்கிறார்: “என்னோடு சமாதானம் பண்
ணிக்கொண்டு, சரணடைந்து விடுங்கள். அப்போது நீங்கள் ஒவ்வொருவரும்
உங்கள் திராட்சைக் கொடியிலிருந்தே பழங்களைச் சாப்பிடுவீர்கள், உங்
கள் அத்தி மரத்திலிருந்தே பழங்களைச் சாப்பிடுவீர்கள், உங்கள் தண்ணீர்த்

18:26 *வே.வா., “சீரியர்களின் மொழி.”

அதி. 18
a 2நா 32:10
ஏசா 36:4-10
b 2ரா 18:7
c ஏசா 30:1, 2
d 2நா 32:8
e 2நா 31:1
f உபா 12:11, 13
2நா 32:12
g ஏசா 10:12, 13
h 2ரா 18:18
i எஸ்றா 4:7
தானி 2:4
j ஏசா 36:11, 12
k 2ரா 18:17
l ஏசா 36:13-20
m 2நா 32:15
n 2ரா 19:32-34

தொட்டியிலிருந்தே தண்ணீரைக் குடிப்பீர்கள். **32** பின்பு நான் வந்து, உங்
கள் தேசத்தைப் போலவே செழிப்பாக இருக்கும் தேசத்துக்கு உங்களைக்
கூட்டிக்கொண்டு போவேன்.[a] அது, தானியமும் புதிய திராட்சமதுவும் ரொட்
டியும் தேனும் ஏராளமாகக் கிடைக்கிற தேசம்; திராட்சைத் தோட்டங்களும்
ஒலிவ மரங்களும் ஏராளமாக இருக்கிற தேசம். நீங்கள் சாகாமல் அந்தத்
தேசத்தில் நன்றாக வாழ்வீர்கள். ‘யெகோவா நம்மைக் காப்பாற்றுவார்’ என்று
எசேக்கியா சொல்வதைக் கேட்டு ஏமாந்துபோகாதீர்கள். **33** எந்தத் தெய்வ
மாவது அசீரிய ராஜாவின் பிடியிலிருந்து தன்னுடைய நகரத்தைக் காப்
பாற்றியிருக்கிறதா? **34** காமாத்திலும்[b] அர்பாத்திலும் உள்ள தெய்வங்க
ளால் என்ன செய்ய முடிந்தது? செப்பர்வாயிமிலும்[c] ஏனாவிலும் ஈவாவிலும்
உள்ள தெய்வங்களால் என்ன செய்ய முடிந்தது? அவற்றால் சமாரியாவை
என்னிடமிருந்து காப்பாற்ற முடிந்ததா?[d] **35** இதுவரைக்கும் எந்தத் தெய்
வத்தால் தன்னுடைய நகரத்தை என் கையிலிருந்து காப்பாற்ற முடிந்திருக்கி
றது? அப்படியிருக்கும்போது, யெகோவா மட்டும் எப்படி எருசலேமை என்
னிடமிருந்து காப்பாற்றுவார்?”’”[e] என்று கேட்டான்.

36 ஆனால் மக்கள், பதிலுக்கு ஒரு வார்த்தைகூட பேசாமல் அமை
தியாக இருந்தார்கள். ஏனென்றால், “நீங்கள் அவனுக்குப் பதில் சொல்லக்
கூடாது”[f] என்று ராஜா கட்டளை கொடுத்திருந்தார். **37** அரண்மனை நிர்
வாகியும் இல்க்கியாவின் மகனுமான எலியாக்கீம், செயலாளரான செப்னா,
பதிவாளரும் ஆசாப்பின் மகனுமான யோவா ஆகியோர் தங்களுடைய
உடைகளைக் கிழித்துக்கொண்டு, எசேக்கியாவிடம் வந்து, ரப்சாக்கே சொன்
னதையெல்லாம் சொன்னார்கள்.

19 எசேக்கியா ராஜா அதைக் கேட்டவுடனே தன்னுடைய உடையைக்
கிழித்துக்கொண்டார். பின்பு, துக்கத் துணியை* போட்டுக்கொண்டு
யெகோவாவின் ஆலயத்துக்குப் போனார்.[g] **2** அதன்பின், அரண்மனை
நிர்வாகியான எலியாக்கீமையும் செயலாளரான செப்னாவையும் மூத்த குரு
மார்களையும் ஆமோத்சின் மகனாகிய ஏசாயா தீர்க்கதரிசியிடம்[h] அனுப்பி
னார். அவர்கள் துக்கத் துணியைப் போட்டுக்கொண்டு ஏசாயாவிடம்
போய், **3** “‘இந்த நாள் நமக்கு இக்கட்டான நாள். இன்று நாம் அவம
திக்கப்பட்டோம்,* கேவலப்படுத்தப்பட்டோம். பிரசவ நேரம் நெருங்கி
யும் பிள்ளை பெற்றெடுக்கச் சக்தியில்லாத பெண்ணைப் போல ஆகிவிட்
டோம்.[i] **4** அசீரிய ராஜா தன்னுடைய ஊழியன் ரப்சாக்கேயை அனுப்பி,
உயிருள்ள கடவுளைப் பழித்துப் பேசியிருக்கிறான்;[j] அவன் பேசிய பேச்
சையெல்லாம் உங்கள் கடவுளான யெகோவா கேட்டிருப்பார். அவனுக்கு
யெகோவா தக்க தண்டனை தருவார். அதனால், இப்போது தேசத்தில் மீதி
யிருக்கிற மக்களுக்காக அவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்’[k] என்று எசேக்
கியா உங்களிடம் சொல்லச் சொன்னார்” என்றார்கள்.

5 எசேக்கியா ராஜாவின் ஊழியர்கள் இதை ஏசாயாவிடம்[l] சொன்
னபோது, **6** ஏசாயா அவர்களிடம், “‘யெகோவா சொல்வது என்னவென்
றால், “அசீரிய ராஜாவின் ஊழியர்கள் என்னை நிந்தித்துப் பேசியதைக்[m]
கேட்டு நீங்கள் பயப்படாதீர்கள்.[n] **7** அவன் மனதில் ஒரு யோசனையை
வர வைப்பேன். ஒரு செய்தியைக் கேட்டு தன்னுடைய தேசத்துக்கு அவ
னைத் திரும்பிப் போக வைப்பேன்; அவனுடைய தேசத்திலேயே அவனை

அதி. 18
a 2ரா 17:6
b எண் 13:21
c 2ரா 17:24
d 2ரா 17:6
e 2ரா 19:17-19; 2நா 32:15; ஏசா 37:23
f ஏசா 36:21, 22

அதி. 19
g ஏசா 37:1-4
h ஏசா 1:1
i ஏசா 26:17, 18
j 1சா 17:45; 2ரா 18:35
k 2சா 22:7; 2நா 20:9; 2நா 32:20; சங் 50:15
l ஏசா 37:5-7
m 2ரா 18:17
n உபா 20:3; ஏசா 41:10; ஏசா 51:7

19:1 * சொல் பட்டியலைப் பாருங்கள். **19:3** * வே.வா., “கண்டிக்கப்பட்டோம்.”

வாளுக்குப் பலியாக்குவேன்.”’[a] இதை உங்கள் எஜமானிடம் போய்ச் சொல்
லுங்கள்” என்றார்.

8 அசீரிய ராஜா லாகீசிலிருந்து போய்விட்டதை ரப்சாக்கே கேள்விப்
பட்டு,[b] அவரிடம் திரும்பிப் போனான். அப்போது, அசீரிய ராஜா லிப்னா
வுக்கு எதிராகப் போர் செய்துகொண்டிருந்தான்.[c] **9** அந்தச் சமயத்தில், “எத்
தியோப்பிய ராஜாவான திராக்கா உங்களோடு போர் செய்ய வந்திருக்கிறார்”
என்று அசீரிய ராஜாவிடம் சொல்லப்பட்டது. அதனால், அவன் மறுபடியும்
எசேக்கியாவிடம் தூதுவர்களை அனுப்பினான்.[d] **10** அந்தத் தூதுவர்களி
டம், “நீங்கள் யூதாவின் ராஜா எசேக்கியாவிடம் போய் இப்படிச் சொல்லுங்
கள்: ‘“எருசலேமை அசீரிய ராஜாவின் கையில் கொடுக்கப்போவதில்லை”[e]
என்று நீ நம்புகிற கடவுள் சொன்னால் அதைக் கேட்டு ஏமாந்துவிடாதே.
11 இதோ பார்! அசீரிய ராஜாக்கள் மற்ற எல்லா தேசங்களையும் அடி
யோடு அழித்துப்போட்டதை நீ கேள்விப்படவில்லையா?[f] நீ மட்டும் என்
கையிலிருந்து தப்பித்துவிடுவாயா? **12** என்னுடைய முன்னோர்கள் மற்ற
தேசங்களை அழித்தபோது அங்கிருந்த தெய்வங்களால் காப்பாற்ற முடிந்
ததா? கோசான் மக்களும் ஆரான்[g] மக்களும் ரேத்சேப் மக்களும் தெல்-
ஆசாரில் குடியிருந்த ஏதேன் மக்களும் எங்கே? **13** காமாத்தின் ராஜாவும்
அர்பாத்தின் ராஜாவும் எங்கே? செப்பர்வாயிம், ஏனா, ஈவா[h] நகரங்களின்
ராஜாக்களெல்லாம் இப்போது எங்கே?’” என்று கேட்டான்.

14 அசீரிய ராஜா அனுப்பிய கடிதங்களைத் தூதுவர்களிடமிருந்து எசேக்
கியா வாங்கிப் படித்தார். பின்பு, யெகோவாவின் ஆலயத்துக்குப் போய்
அவற்றை* யெகோவாவின் முன்னால் விரித்து வைத்து,[i] **15** யெகோவா
முன்னால் இப்படி ஜெபம் செய்தார்:[j] “யெகோவாவே, இஸ்ரவேலின்
தேவனே, கேருபீன்களுக்கு மேலே* வீற்றிருப்பவரே,[k] நீங்கள் ஒருவர்தான்
பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களுக்கும் கடவுள்.[l] நீங்கள்தான் வானத்தையும்
பூமியையும் படைத்த உண்மைக் கடவுள். **16** யெகோவாவே, தயவுசெய்து
காதுகொடுத்துக் கேளுங்கள்![m] யெகோவாவே, உங்கள் கண்களைத் திறந்து
பாருங்கள்![n] உயிருள்ள கடவுளாகிய உங்களைப் பழித்து சனகெரிப் என்
னவெல்லாம் எழுதி அனுப்பியிருக்கிறான் என்று பாருங்கள். **17** யெகோ
வாவே, அசீரிய ராஜாக்கள் மற்ற தேசங்களையும் அங்கிருந்த நகரங்களை
யும் அழித்துப்போட்டது உண்மைதான்.[o] **18** அங்கிருந்த மக்கள்
வணங்கிய தெய்வங்களையும் நெருப்பில் எரித்துப்போட்டார்கள். அவை
யெல்லாம் கடவுள் கிடையாதே,[p] மனுஷர்கள் செய்தவைதானே,[q] வெறும்
மரக்கட்டையும் கல்லும்தானே. அதனால்தான் அவர்களால் அவற்றை
அழிக்க முடிந்தது. **19** ஆனால் யெகோவாவே, எங்கள் கடவுளே, நீங்
கள் மட்டும்தான் கடவுள் என்பதைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களும்
புரிந்துகொள்ள வேண்டும்.[r] அதனால் யெகோவாவே, எதிரியின் கையிலி
ருந்து தயவுசெய்து எங்களைக் காப்பாற்றுங்கள்” என்று சொன்னார்.

20 பின்பு, எசேக்கியாவுக்கு ஆமோத்சின் மகன் ஏசாயா இப்படிச்
செய்தி அனுப்பினார்: “இஸ்ரவேலின் கடவுளான யெகோவா சொல்வது
என்னவென்றால், ‘அசீரிய ராஜா சனகெரிப்பைப்[s] பற்றி நீ செய்த ஜெபத்
தைக் கேட்டேன்.[t] **21** யெகோவாவாகிய நான் அவனுக்கு எதிராகச்
சொல்வது இதுதான்:

19:14 * நே.மொ., “அதை.” **19:15** * அல்லது, “நடுவில்.”

அதி. 19
a 2நா 32:21; ஏசா 37:37, 38
b 2ரா 18:14
c ஏசா 37:8-13
d 2ரா 18:17
e 2நா 32:15
f 2ரா 17:5; 2நா 32:10, 13; ஏசா 10:8-11
g ஆதி 11:31
h 2ரா 17:24; 2ரா 18:33, 34
i 1ரா 8:30; ஏசா 37:14-20
j 2நா 32:20
k யாத் 25:22
l 1நா 29:10, 11
m 1ரா 8:29; சங் 65:2
n 2நா 16:9; தானி 9:18
o 2ரா 16:8, 9; 2ரா 17:6, 24
p ஏசா 41:29
q எரே 10:3
r சங் 83:17, 18; ஏசா 45:5, 6
s ஏசா 37:21, 22
t 2ரா 19:15

“சீயோன் கன்னிப்பெண் உன்னை ஏளனம் செய்கிறாள், கேலி
செய்கிறாள்.
எருசலேம் மகள் உன்னைப் பார்த்துக் கிண்டலாகத் தலை
ஆட்டுகிறாள்.
22 நீ இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளையே பழித்துப் பேசிவிட்டாய்!
அவரையே நிந்தித்துவிட்டாய்![a]
அவரிடமே குரலை உயர்த்திப் பேசினாய்![b]
அவரையே ஆணவமாகப் பார்த்தாய்![c]
23 தூதுவர்களை அனுப்பி[d] யெகோவாவுக்கே சவால் விட்டு,[e]
‘ஏராளமான போர் ரதங்களோடு வருவேன்,
மலைகளின் உச்சிக்கே ஏறுவேன்,
லீபனோனின் எல்லைகளுக்குப் போவேன்.
அங்கே உயர்ந்தோங்கி நிற்கும் தேவதாரு மரங்களையும் செழிப்பான
ஆபால் மரங்களையும் வெட்டுவேன்;
அதன் எல்லைகளுக்கும், அடர்த்தியான காடுகளுக்கும் போவேன்.
24 கிணறுகளைத் தோண்டி, புதுத் தண்ணீரைக் குடிப்பேன்;
என் பாதம் பட்டதும் எகிப்தின் ஆறுகளெல்லாம்* வறண்டுபோகும்’
என்று சொன்னாய்.
25 நடக்க வேண்டியதை நான்தான் வெகு காலத்துக்கு முன்பே
முடிவுசெய்தேன்,[f] இதை நீ கேள்விப்படவில்லையா?
நான்தான் ஆரம்பக் காலத்திலிருந்தே இதை ஏற்பாடு செய்தேன்.*[g]
இப்போது இதை நிறைவேற்றப்போகிறேன்.[h]
மதில் சூழ்ந்த நகரங்களை நீ மண்மேடுகளாக்குவாய்.[i]
26 அவற்றின் குடிமக்கள் எதுவும் செய்ய முடியாமல் தவிப்பார்கள்;
கதிகலங்கிப்போவார்கள், அவமானப்படுவார்கள்.
புல்பூண்டுகளைப் போல் வாடிப்போவார்கள்,[j]
கூரையில் முளைத்து, கிழக்குக் காற்றில் பட்டுப்போகும் புல்லைப்
போல் ஆவார்கள்.
27 நீ எப்போது உட்காருகிறாய், எப்போது போகிறாய், எப்போது
வருகிறாய் என்றெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்,[k]
எனக்கு எதிராக நீ கொதித்தெழுவதும் தெரியும்,[l]
28 என்மேல் இருக்கிற ஆத்திரத்தில்[m] நீ கத்துவதைக் கேட்டேன்.[n]
அதனால் உன் மூக்கில் கொக்கி மாட்டி, உன் வாயில் கடிவாளம்
போட்டு,[o]
வந்த வழியிலேயே உன்னைத் திரும்பிப் போக வைப்பேன்.”[p]

29 எசேக்கியா, உனக்கு நான் தரும் அடையாளம் இதுதான்: இந்த
வருஷம் தானாக விளைந்ததை* சாப்பிடுவீர்கள்; அடுத்த வருஷம் அதி
லிருந்து முளைக்கிற பயிர்களைச் சாப்பிடுவீர்கள்;[q] ஆனால், அதற்கடுத்த
வருஷம் நீங்களே விதைத்து அறுவடை செய்வீர்கள், திராட்சைத் தோட்
டங்களை அமைத்து அவற்றின் பழங்களைச் சாப்பிடுவீர்கள்.[r] 30 யூதா

19:24 * வே.வா., “நைல் நதியின் கால்வாய்களெல்லாம்.” **19:25** * வே.வா., “உருவாக்கினேன்.” **19:29** * வே.வா., “சிந்திய தானியங்களிலிருந்து விளைந்ததை.”

அதி. 19
a 2ரா 19:10
b 2ரா 18:30, ஏசா 10:12, 13
c ஏசா 37:23-25
d 2ரா 18:17
e 2நா 32:17, ஏசா 10:10, 11
f ஏசா 14:24
g சங் 33:11
h ஏசா 46:10
i ஏசா 10:5, ஏசா 37:26, 27
j ஏசா 40:7
k நீதி 5:21, எபி 4:13
l ஏசா 37:28, 29
m சங் 46:6, ஏசா 10:5, 15
n 2ரா 18:35, ஏசா 10:12, 13
o சங் 32:9
p 2ரா 19:33
q லேவி 25:4-6
r ஏசா 37:30-32

மக்களில் மீதியிருக்கிற ஆட்கள்[a] மரம்போல் வேரூன்றி நிற்பார்கள், காய்த்
துக் குலுங்குவார்கள். **31** மீதியிருக்கிற மக்கள் எருசலேமிலிருந்தும், உயிர்
தப்புகிற ஆட்கள் சீயோன் மலையிலிருந்தும் புறப்பட்டுப் போவார்கள். பர
லோகப் படைகளின் யெகோவாவுடைய வைராக்கியம் இதைச் செய்யும்.[b]

32 அசீரிய ராஜாவைப் பற்றி யெகோவா சொல்வது என்னவென்றால்,[c]

“இந்த நகரத்துக்குள் அவன் வர மாட்டான்.[d]
இங்கே ஒரு அம்புகூட எறிய மாட்டான்.
கேடயத்தை எடுத்துக்கொண்டு போர் செய்ய மாட்டான்.
மண்மேடுகள் அமைத்து முற்றுகையிடவும் மாட்டான்.[e]
33 வந்த வழியிலேயே அவன் திரும்பிப் போவான்;
இந்த நகரத்துக்குள் நுழைய மாட்டான்” என்று யெகோவா சொல்கிறார்.
34 “என்னுடைய பெயருக்காகவும்[f] என்னுடைய ஊழியன்
தாவீதுக்காகவும்[g]
இந்த நகரத்தைப் பாதுகாப்பேன்,[h] இதைக் காப்பாற்றுவேன்.”’”

35 அன்றைக்கு இரவே யெகோவாவின் தூதர் புறப்பட்டுப் போய் அசீ
ரியர்களின் முகாமில் இருந்த 1,85,000 வீரர்களைக் கொன்றுபோட்டார்.[i]
மக்கள் விடியற்காலையில் எழுந்தபோது, அவர்கள் எல்லாரும் பிணமாகக்
கிடப்பதைப் பார்த்தார்கள்.[j] **36** அதனால், அசீரிய ராஜாவான சனகெ
ரிப் நினிவேக்குத்[k] திரும்பிப் போய் அங்கேயே தங்கினான்.[l] **37** ஒரு
நாள், அவனுடைய தெய்வமான நிஸ்ரோக்கின் கோயிலில் அவன் மண்டி
போட்டு வணங்கிக்கொண்டிருந்தான். அப்போது, அவனுடைய மகன்கள்
அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனை வாளால் வெட்டிக் கொன்று
விட்டு,[m] அரராத் பகுதிக்குத்[n] தப்பியோடினார்கள். அவனுக்குப் பிறகு அவ
னுடைய மகன் எசரத்தோன்[o] ராஜாவானான்.

20 ஒருசமயம், எசேக்கியா வியாதிப்பட்டு சாகும் நிலையில் இருந்
தார்.[p] ஆமோத்சின் மகனான ஏசாயா தீர்க்கதரிசி அவரிடம் வந்து,
“யெகோவா சொல்வது என்னவென்றால், ‘நீ குணமாக மாட்டாய், இறந்து
போவாய். அதனால், உன் வீட்டில் இருப்பவர்களிடம் சொல்ல வேண்டி
யதையெல்லாம் இப்போதே சொல்லிவிடு’”[q] என்றார். **2** அதைக் கேட்ட
தும் எசேக்கியா சுவர் பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு யெகோவா
விடம் ஜெபம் செய்ய ஆரம்பித்தார். **3** “யெகோவாவே, நான் எப்போதும்
உங்களுக்கு உண்மையாக நடந்திருக்கிறேன், முழு இதயத்தோடு கீழ்ப்படிந்
திருக்கிறேன், உங்களுக்குப் பிரியமானதைச் செய்திருக்கிறேன்; தயவு
செய்து இதையெல்லாம் நினைத்துப் பாருங்கள். உங்களிடம் கெஞ்சிக் கேட்
கிறேன்”[r] என்று சொல்லிக் கதறி அழுதார்.

4 ஏசாயா அங்கிருந்து புறப்பட்டு நடுமுற்றம் வரைகூட போயிருக்க
மாட்டார்; அதற்குள் யெகோவா அவரிடம்,[s] **5** “நீ திரும்பிப் போய் என்
மக்களின் தலைவனான எசேக்கியாவிடம் இப்படிச் சொல்: ‘உன் மூதாதை
யாகிய தாவீதின் கடவுளான யெகோவா சொல்வது என்னவென்றால், “நீ
செய்த ஜெபத்தை நான் கேட்டேன். நீ கண்ணீர்விட்டு அழுததைப் பார்த்
தேன்.[t] நான் உன்னைக் குணமாக்குகிறேன்.[u] மூன்றாம் நாளில் நீ
யெகோவாவின் ஆலயத்துக்குப் போவாய்.[v] **6** உன் வாழ்நாளை இன்
னும் 15 வருஷங்களுக்குக் கூட்டுகிறேன். உன்னையும் இந்த நகரத்தையும்

அதி. 19
a 2நா 32:22; ஏசா 10:20
b ஏசா 59:17; சக 1:14, 15
c ஏசா 10:24
d 2நா 32:22
e ஏசா 37:33-35
f 1சா 12:22; ஏசா 43:25; எசே 36:22
g 2ரா 20:6; எரே 23:5
h ஏசா 31:5
i 2நா 32:21; ஏசா 31:8
j யாத் 12:30; ஏசா 37:36-38
k யோனா 1:2
l 2ரா 19:7, 28
m 2நா 32:21
n ஆதி 8:4
o எஸ்றா 4:2

அதி. 20
p 2நா 32:24
q ஏசா 38:1-3
r 2நா 31:20, 21; சங் 25:7; சங் 119:49
s ஏசா 38:4-6
t சங் 39:12
u உபா 32:39; சங் 41:3; சங் 103:3; சங் 147:3
v சங் 66:13; சங் 116:12-14

அசீரிய ராஜாவிடமிருந்து காப்பாற்றுவேன்.[a] என் பெயருக்காகவும் என்
ஊழியன் தாவீதுக்காகவும் இந்த நகரத்தைப் பாதுகாப்பேன்"'"[b] என்றார்.

7 பின்பு ஏசாயா, "ஒரு அத்திப்பழ அடையைக் கொண்டுவாருங்கள்"
என்று ராஜாவின் ஊழியர்களிடம் சொன்னார். அவர்கள் அதைக் கொண்டு
வந்து எசேக்கியாவுடைய கொப்புளத்தின் மேல் வைத்து, பத்து போட்டார்
கள். அவர் படிப்படியாகக் குணமடைந்தார்.[c]

8 எசேக்கியா ஏசாயாவிடம், "யெகோவா என்னைக் குணமாக்குவார்,
மூன்றாம் நாளில் நான் யெகோவாவின் ஆலயத்துக்குப் போவேன் என்று
சொன்னீர்களே, அதற்கு என்ன அடையாளம்?"[d] என்று கேட்டிருந்தார்.
9 அதற்கு ஏசாயா, "யெகோவா தான் சொன்னதை நிறைவேற்றுவார் என்ப
தற்கு யெகோவா தரும் அடையாளம் இதுதான்: படிக்கட்டில்* விழும் நிழல்
பத்துப் படிகள் முன்னால் போக வேண்டுமா, பத்துப் படிகள் பின்னால்
போக வேண்டுமா?"[e] என்று கேட்டார். **10** அதற்கு எசேக்கியா, "நிழல் பத்
துப் படிகள் முன்னால் போவது சுலபம், பின்னால் போவதுதான் கஷ்டம்"
என்று சொன்னார். **11** அப்போது, ஏசாயா தீர்க்கதரிசி யெகோவாவிடம்
மன்றாடினார். அப்போது ஆகாசின் படிக்கட்டில் விழுந்திருந்த நிழல் பத்
துப் படிகள் பின்னால் போகும்படி கடவுள் செய்தார்.[f]

12 எசேக்கியா வியாதிப்பட்டு இருந்ததை பாபிலோன் ராஜாவும் பலாதா
னின் மகனுமான பெரோதாக்-பலாதான் கேள்விப்பட்டான். அதனால், கடி
தங்களையும் அன்பளிப்பையும் தன்னுடைய ஆட்களிடம் கொடுத்து
அனுப்பினான்.[g] **13** அவர்களை எசேக்கியா வரவேற்று தன் பொக்கிஷ
அறை முழுவதையும் காட்டினார்.[h] தங்கம், வெள்ளி, பரிமளத் தைலம்,
விலைமதிப்புள்ள எண்ணெய் வகைகள் ஆகியவற்றையும் ஆயுதக்கிடங்
கையும் தான் சேர்த்து வைத்திருந்த மற்ற எல்லாவற்றையும் காட்டினார். தன்
அரண்மனையிலும் ராஜ்யத்திலும் இருந்த ஒன்றைக்கூட அவர் காட்டாமல்
இருக்கவில்லை.

14 பின்பு ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவிடம் வந்து, "இந்த
ஆட்கள் என்ன சொன்னார்கள்? எங்கிருந்து வந்தார்கள்?" என்று கேட்
டார். அதற்கு எசேக்கியா, "ரொம்பத் தூரத்திலிருக்கிற பாபிலோனிலிருந்து
வந்தார்கள்"[i] என்று சொன்னார். **15** அப்போது ஏசாயா, "உங்கள் அரண்
மனையில் எதைப் பார்த்தார்கள்?" என்று கேட்டார். அதற்கு எசேக்கியா,
"என் அரண்மனையிலிருந்த எல்லாவற்றையும் பார்த்தார்கள். என்னுடைய
பொக்கிஷங்களில் ஒன்றைக்கூட நான் காட்டாமல் இருக்கவில்லை" என்று
சொன்னார்.

16 அப்போது ஏசாயா எசேக்கியாவிடம், "யெகோவா சொல்வதைக்
கேளுங்கள்.[j] **17** 'இதோ! ஒரு காலம் வரும், அப்போது உன் அரண்ம
னையில் இருக்கிற எல்லா பொருள்களும், இதுவரை உன் முன்னோர்
கள் சேர்த்து வைத்த எல்லா பொருள்களும் பாபிலோனுக்குக் கொண்டுபோ
கப்படும்,[k] எதுவுமே விட்டுவைக்கப்படாது' என்று யெகோவா சொல்கிறார்.
18 'உனக்குப் பிறக்கப்போகிற மகன்கள் சிலரும் பிடித்துக்கொண்டு போகப்
படுவார்கள்.[l] அவர்கள் பாபிலோன் ராஜாவின் அரண்மனையில் அதிகாரி
களாக இருப்பார்கள்'"[m] என்று சொன்னார்.

20:9 *சூரிய கடிகாரத்தைப் போல, நேரத்தைக் கணக்கிடுவதற்காக இந்தப் படிகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

அதி. 20
a 2நா 32:22; ஏசா 10:24
b 2ரா 19:34; ஏசா 37:35
c ஏசா 38:21, 22
d நியா 6:17; ஏசா 7:11
e ஏசா 38:7, 8
f யோசு 10:12; 2நா 32:31
g ஏசா 39:1, 2
h 2நா 32:27
i ஏசா 39:3, 4
j ஏசா 39:5-7
k 2ரா 24:12, 13; 2ரா 25:13; 2நா 36:7, 18; எரே 27:21, 22; தானி 1:2
l 2ரா 24:12
m தானி 1:19; தானி 2:49

19 அதற்கு எசேக்கியா, "யெகோவா சொன்னது நியாயம்தான்.[a] என்னு
டைய வாழ்நாளிலாவது சமாதானமும் பாதுகாப்பும்* இருக்குமே!"[b] என்றார்.
20 எசேக்கியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள், அவ
ருடைய வீரதீர செயல்கள், குளமும் வாய்க்காலும் வெட்டி[c] நகரத்துக்குள்
தண்ணீர் கொண்டுவந்தது[d] ஆகியவை எல்லாம் யூதா ராஜாக்களின் சரித்தி
ரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **21** பின்பு, எசேக்கியா இறந்துபோ
னார்.*[e] அவருக்குப் பிறகு, அவருடைய மகன் மனாசே[f] ராஜாவானார்.[g]

21 மனாசே[h] 12 வயதில் ராஜாவாகி, 55 வருஷங்கள் எருசலேமில்
ஆட்சி செய்தார்.[i] அவருடைய அம்மா பெயர் எப்சிபாள்.
2 யெகோவா வெறுக்கிற காரியங்களை மனாசே செய்தார். இஸ்ரவேலர்க
ளின் கண் முன்னால் யெகோவா விரட்டியடித்த மற்ற தேசத்தாரின் அரு
வருப்பான பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார்;[j] **3** தன்னுடைய அப்பா
வான எசேக்கியா அழித்துப்போட்ட ஆராதனை மேடுகளைத்[k] திரும்பக்
கட்டினார்; இஸ்ரவேலின் ராஜா ஆகாபைப் போலவே[l] இவரும் பாகா
லுக்குப் பலிபீடங்கள் கட்டி, பூஜைக் கம்பத்தை* நிறுத்தினார்.[m] வானத்துப்
படைகள் முன்னால் மண்டிபோட்டு வணங்கி, அவற்றுக்குச் சேவை
செய்தார்.[n] **4** அதோடு, யெகோவாவின் ஆலயத்திலேயே, "எருசலேமில்
என் பெயரை நிலைநாட்டுவேன்"[o] என்று யெகோவா சொல்லியிருந்த
ஆலயத்திலேயே, பலிபீடங்களைக் கட்டினார்.[p] **5** வானத்துப் படைகளை
வணங்குவதற்காக யெகோவாவுடைய ஆலயத்தின் இரண்டு பிரகாரங்களி
லும்[q] பலிபீடங்களைக் கட்டினார்.[r] **6** சொந்த மகனையே நெருப்பில்
பலி கொடுத்தார்.* மாயமந்திர பழக்கங்களில் ஈடுபட்டார், சகுனங்கள் பார்த்
தார்,[s] ஆவிகளோடு பேசுகிறவர்களையும் குறிசொல்கிறவர்களையும் நிய
மித்தார்.[t] யெகோவா வெறுக்கிற காரியங்களைக் கணக்குவழக்கில்லாமல்
செய்து, அவரைப் புண்படுத்தினார்.

7 மனாசே தான் உண்டாக்கிய உருவச் சிலையை, அதாவது பூஜைக்
கம்பத்தை,* கடவுளின் ஆலயத்தில் வைத்தார்;[u] அந்த ஆலயத்தைப் பற்
றித்தான் தாவீதிடமும் அவருடைய மகன் சாலொமோனிடமும் யெகோவா
இப்படிச் சொல்லியிருந்தார்: "இஸ்ரவேலில் உள்ள எல்லா கோத்திரத்தி
லிருந்தும் நான் தேர்ந்தெடுத்த எருசலேமிலும், இந்த ஆலயத்திலும், என்
பெயரை என்றென்றும் நிலைநாட்டுவேன்.[v] **8** இஸ்ரவேலர்களுக்கு நான்
கொடுத்த கட்டளைகள் எல்லாவற்றையும், அதாவது என்னுடைய ஊழி
யன் மோசே கொடுத்த திருச்சட்டம் முழுவதையும், அப்படியே அவர்கள்
பின்பற்றி நடந்தால்[w] அவர்களுடைய முன்னோர்களுக்கு நான் கொடுத்த
தேசத்தைவிட்டு ஒருபோதும் அவர்களை அலைந்து திரிய விடமாட்
டேன்."[x] **9** ஆனால், அவர்கள் கீழ்ப்படியவில்லை. இஸ்ரவேலர்களின்
கண் முன்னால் யெகோவா அழித்துப்போட்ட மற்ற தேசத்தார் செய்ததை
விட படுபயங்கரமான காரியங்களைச் செய்ய மனாசே அந்த மக்களைத்
தூண்டிக்கொண்டே இருந்தார். இப்படி, கடவுளைவிட்டு அவர்கள் வழிவி
லகிப் போகும்படி செய்தார்.[y]

10 யெகோவா தன்னுடைய ஊழியர்களான தீர்க்கதரிசிகள் மூலம்

20:19 *வே.வா., "உண்மையும்." **20:21** *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்." **21:3, 7** *சொல் பட்டியலைப் பாருங்கள். **21:6** *நே.மொ., "நெருப்பைக் கடக்க வைத்தார்."

அதி. 20
a சங் 141:5
b ஏசா 39:8
c யோவா 9:11
d 2நா 32:30
e 1ரா 2:10
f 2ரா 21:16
2ரா 23:26
2நா 33:11-13
g 2நா 32:33

அதி. 21
h 1நா 3:13
மத் 1:10
i 2நா 33:1
j உபா 12:30, 31
2நா 33:2-6
2நா 36:14
எசே 16:51
k 2ரா 18:1, 4
l 1ரா 16:30, 32
m 2ரா 23:4
n உபா 4:19
o உபா 12:5
2சா 7:12, 13
1ரா 8:29
1ரா 9:3
p எரே 32:34
q 1ரா 6:36
1ரா 7:12
r எசே 8:16
s லேவி 19:26
t லேவி 20:27
உபா 18:10, 11
u 2ரா 23:6
v 2நா 33:7-9
w உபா 28:1
x 1நா 17:9
y உபா 7:1

எச்சரித்துக்கொண்டே இருந்தார்.[a] **11** “யூதாவின் ராஜா மனாசே இந்த அருவருப்பான காரியங்களையெல்லாம் செய்திருக்கிறான். அவனுக்கு முன்பிருந்த எமோரியர்கள்[b] எல்லாரையும்விட படுமோசமான காரியங்களைச் செய்திருக்கிறான்.[c] அருவருப்பான* சிலைகளை நிறுத்தி யூதா மக்களைப் பாவம் செய்ய வைத்திருக்கிறான். **12** அதனால், இஸ்ரவேலின் கடவுளான யெகோவா சொல்வது என்னவென்றால், ‘எருசலேம்மீதும் யூதாமீதும் பயங்கரமான அழிவைக் கொண்டுவரப்போகிறேன்.[d] அதைப் பற்றிக் கேள்விப்படுகிறவர்கள் எல்லாரும் அதிர்ச்சியடைவார்கள்.*[e] **13** சமாரியாவை அளந்த[f] அதே அளவுநூலால் எருசலேமையும் அளப்பேன்;[g] ஆகாப் வீட்டாருக்குப் பயன்படுத்திய அதே தூக்குநூலை* எருசலேமுக்கும் பயன்படுத்துவேன்.[h] ஒரு கிண்ணத்தை ஒருவன் சுத்தமாகத் துடைத்துக் கவிழ்த்து வைப்பதுபோல, நான் எருசலேமைத் துடைத்துப்போடுவேன்.[i] **14** என் சொந்த மக்களில்* மீதியாக இருப்பவர்களைக் கைவிடுவேன்,[j] எதிரிகளின் கையில் கொடுப்பேன்; அந்த எதிரிகள் எல்லாரும் அவர்களைக் கொள்ளையடித்து கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போவார்கள்.[k] **15** அவர்களுடைய முன்னோர்கள் எகிப்திலிருந்து வந்த நாள்முதல் இன்றுவரை, நான் வெறுக்கிற காரியங்களைச் செய்து என்னைப் புண்படுத்தியதால் இப்படியெல்லாம் செய்வேன்’”[l] என்று சொன்னார்.

16 யூதா மக்கள் யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்வதற்கு மனாசே காரணமாக இருந்தார்; அதுமட்டுமல்லாமல், எருசலேமின் ஓர் எல்லைமுதல் மறு எல்லைவரை ஏராளமான அப்பாவி மக்களைக் கொன்று குவித்தார்.*[m] **17** மனாசேயின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும், அவர் செய்த பாவங்களைப் பற்றியும் யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **18** பின்பு, மனாசே இறந்துபோனார்.* அவருடைய அரண்மனையிலிருந்த தோட்டத்தில், அதாவது ஊத்சா தோட்டத்தில், அவரை அடக்கம் செய்தார்கள்.[n] அவருக்குப் பிறகு, அவருடைய மகன் ஆமோன் ராஜாவானார்.

19 ஆமோன்[o] 22 வயதில் ராஜாவாகி, இரண்டு வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார்.[p] அவருடைய அம்மா பெயர் மெசுல்லேமேத். அவள் யோத்பாவைச் சேர்ந்த ஆரூத்சின் மகள். **20** ஆமோன் தன்னுடைய அப்பா மனாசேயைப் போலவே யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்துவந்தார்.[q] **21** தன்னுடைய அப்பா வழியிலேயே நடந்தார், தன்னுடைய அப்பா வழிபட்ட அருவருப்பான சிலைகளுக்கு முன்னால் மண்டிபோட்டு வழிபட்டுவந்தார்.[r] **22** தன்னுடைய முன்னோர்களின் கடவுளான யெகோவாவை ஒதுக்கித்தள்ளினார். யெகோவாவின் வழியில் ஆமோன் நடக்கவில்லை.[s] **23** கடைசியில், அவருடைய ஊழியர்கள் அவருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டி, அவருடைய அரண்மனையிலேயே அவரைக்

21:11 *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **21:12** *நே.மொ., “கேள்விப்படுகிறவர்களின் இரண்டு காதுகளும் கூசும்.” **21:13** *வே.வா., “தூக்குக்குண்டை.” **21:14** *நே.மொ., “என் சொத்தில்.” **21:16** *நே.மொ., “அப்பாவிகளின் இரத்தத்தைச் சிந்தினார்.” **21:18** *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்.”

அதி. 21

a 2நா 33:10; 2நா 36:15, 16; எரே 7:25; மத் 23:37
b ஆதி 15:16
c லேவி 18:24, 25; 2ரா 23:26; 2ரா 24:3; எரே 15:4
d 2ரா 22:16, 17; மீ 3:12
e எரே 19:3
f 2ரா 17:6; எசே 23:33
g ஏசா 28:17; புல 2:8
h 1ரா 21:21; 2ரா 10:11
i எரே 25:9
j உபா 32:9; 2ரா 17:18
k லேவி 26:25; உபா 28:63
l உபா 9:21; உபா 31:29; நியா 2:11, 13
m 2ரா 24:3, 4; எரே 2:34; மத் 23:30; எபி 11:37
n 2ரா 21:23, 26
o மத் 1:10
p 2நா 33:21
q 2நா 33:22, 23
r 2ரா 21:1, 3
s 2ரா 22:16, 17; எரே 2:13

கொலை செய்தார்கள். **24** ஆமோன் ராஜாவைக் கொன்ற அந்தச் சதிகா
ரர்கள் எல்லாரையும் பொதுமக்கள் வெட்டிக் கொன்றார்கள். பின்பு, அவரு
டைய மகன் யோசியாவை ராஜாவாக்கினார்கள்.[a] **25** ஆமோனின் வாழ்க்
கையில் நடந்த மற்ற விஷயங்கள் எல்லாம் யூதா ராஜாக்களின் சரித்திரப்
புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **26** ஊத்சா தோட்டத்தில் இருந்த அவ
ருடைய கல்லறையில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.[b] அடுத்ததாக, அவ
ருடைய மகன் யோசியா[c] ராஜாவானார்.

22 யோசியா[d] ராஜாவானபோது அவருக்கு எட்டு வயது; அவர்
31 வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார்.[e] அவருடைய
அம்மா பெயர் எதிதாள். அவள் போஸ்காத்தைச்[f] சேர்ந்த அதாயாவின்
மகள். **2** யெகோவாவுக்குப் பிரியமான காரியங்களை யோசியா செய்
தார். தன்னுடைய மூதாதையான தாவீதின் வழியில் நடந்தார்.[g] அதிலிருந்து
வலது பக்கமோ இடது பக்கமோ விலகவில்லை.

3 யோசியா ராஜா தான் ஆட்சி செய்த 18-ஆம் வருஷத்தில்,
மெசுல்லாமின் மகனான அத்சலியாவின் மகனும் செயலாளருமான சாப்
பானை யெகோவாவின் ஆலயத்துக்கு அனுப்பினார்;[h] அப்போது சாப்
பானிடம், **4** “நீங்கள் போய் தலைமைக் குரு இல்க்கியாவைப்[i] பாருங்கள்;
யெகோவாவின் ஆலயத்துக்கென்று காணிக்கையாக மக்கள் கொண்டுவந்த
எல்லா பணத்தையும் வாயிற்காவலர்கள் வாங்கி வைத்திருப்பார்கள்.[j] அதை
அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளும்படி இல்க்கியாவிடம் சொல்லுங்
கள்.[k] **5** யெகோவாவின் ஆலய வேலையை மேற்பார்வை செய்கிறவர்களி
டம் அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும். மேற்பார்வையாளர்கள் அந்
தப் பணத்தை யெகோவாவின் ஆலயத்தை* பழுதுபார்க்கிறவர்களுக்குக்
கொடுக்க வேண்டும்;[l] **6** அதாவது கைத்தொழிலாளிகள், கட்டிடக் கலை
ஞர்கள், கொத்தனார்கள் ஆகியோருக்குக் கொடுக்க வேண்டும். அதோடு,
ஆலயத்தைப் பழுதுபார்க்கத் தேவையான மரங்களையும் செதுக்கிய கற்க
ளையும் வாங்குவதற்கும் அந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும்.[m]
7 அவர்களிடம் கொடுத்த பணத்துக்குக் கணக்குக் கேட்க வேண்டாம்,
அவர்கள் நம்பகமான ஆட்கள்”[n] என்று ராஜா சொன்னார்.

8 பிற்பாடு, தலைமைக் குருவாகிய இல்க்கியா செயலாளர் சாப்பானி
டம்,[o] “இந்தத் திருச்சட்ட புத்தகத்தை[p] யெகோவாவின் ஆலயத்தில் கண்
டெடுத்தேன்” என்று சொல்லி அதை அவரிடம் கொடுத்தார், அவர்
அதைப் படிக்க ஆரம்பித்தார்.[q] **9** பின்பு சாப்பான் ராஜாவிடம் போய்,
“உங்களுடைய ஊழியர்கள் ஆலயத்தின் காணிக்கை பெட்டியிலிருந்த
எல்லா பணத்தையும் எடுத்து, யெகோவாவின் ஆலய வேலையை மேற்
பார்வை செய்கிறவர்களிடம் கொடுத்துவிட்டார்கள்”[r] என்று சொன்னார்.
10 அதோடு, “குருவாகிய இல்க்கியா என்னிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்
தார்”[s] என்றும் சொன்னார். பின்பு, ராஜாவின் முன்னால் சாப்பான் அதை
வாசிக்க ஆரம்பித்தார்.

11 திருச்சட்ட புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த விஷயங்களைக் கேட்டவு
டனே, ராஜா தன்னுடைய உடையைக் கிழித்துக்கொண்டார்.[t] **12** பின்பு
குருவாகிய இல்க்கியா, சாப்பானின் மகன் அகிக்காம்,[u] மிகாயாவின்
மகன் அக்போர், செயலாளர் சாப்பான், ராஜாவின் ஊழியர் அசாயா

22:5 * வே.வா., “ஆலயத்திலுள்ள விரிசல்களை.”

அதி. 21
a 2நா 33:25
b 2ரா 21:18
c மத் 1:10

அதி. 22
d 1ரா 13:2; எரே 1:2; செப் 1:1
e 2நா 34:1, 2
f யோசு 15:20, 39
g 1ரா 15:5
h 2நா 34:8
i 1நா 6:13
j 2ரா 12:9; 2நா 34:9
k 2ரா 12:4, 5; 2நா 24:8
l 2ரா 12:11, 12; 2நா 34:10
m 2நா 34:11
n 2ரா 12:15; 2நா 34:12
o 2ரா 22:3
p உபா 31:24-26
q 2நா 34:14, 15
r 2நா 34:16-18
s உபா 31:9
t 2நா 34:19-21; யோவே 2:13
u 2ரா 25:22; எரே 26:24

ஆகியோரிடம் ராஜா பேசினார். **13** “நீங்கள் போய் எனக்காகவும் மக்க
ளுக்காகவும் யூதா மக்கள் எல்லாருக்காகவும் யெகோவாவிடம் விசாரியுங்
கள். இப்போது கண்டெடுக்கப்பட்ட இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற
விஷயங்களைப் பற்றி அவரிடம் கேளுங்கள். நாம் பின்பற்ற வேண்டிய கட்
டளைகளெல்லாம் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால்,
நம் முன்னோர்கள் அவை எல்லாவற்றையும் கடைப்பிடிக்கவில்லை, அவற்
றுக்குக் கீழ்ப்படியவில்லை. அதனால், யெகோவாவின் கடும் கோபம் நம்
மீது பற்றியெரிகிறது”[a] என்று சொன்னார்.

14 அப்போது குருவாகிய இல்க்கியா, அகிக்காம், அக்போர், சாப்பான்,
அசாயா ஆகியோர் உல்தாள் என்ற பெண் தீர்க்கதரிசியிடம்[b] போனார்கள்;
அவள் அர்காசின் பேரனும் திக்வாவின் மகனுமான சல்லூமின் மனைவி;
அவளுடைய கணவர்தான் துணிமணி அறைக்குப் பொறுப்பாளராக இருந்
தார். எருசலேமின் புதிய பகுதியில் உல்தாள் குடியிருந்தாள். ராஜா அனுப்
பிய இந்த ஆட்கள் எல்லாரும் அங்கே போய் அவளைச் சந்தித்தார்கள்.[c]
15 அவள் அவர்களிடம், “இஸ்ரவேலின் கடவுளான யெகோவா சொல்வது
இதுதான். ‘என்னிடம் உங்களை அனுப்பியவரிடம் போய் இதைச் சொல்
லுங்கள்: **16** “யெகோவா சொல்வது என்னவென்றால், ‘இந்த இடத்தையும்
இங்கே குடியிருப்பவர்களையும் அழிக்கப்போகிறேன். யூதா ராஜா வாசித்த
புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள எல்லாவற்றையும் செய்வேன்.[d] **17** ஏனென்
றால், இந்த மக்கள் என்னை விட்டுவிட்டு, மற்ற தெய்வங்களுக்கு முன்னால்
பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்கிறார்கள்.[e] அவர்களுடைய
கைவேலைகள் எல்லாவற்றாலும் என்னைப் புண்படுத்துகிறார்கள்.[f] அத
னால், இந்த இடத்தின் மீது என்னுடைய கடும் கோபம் கொழுந்துவிட்டு எரி
யும், அது அணையவே அணையாது.’”[g] **18** ஆனால், யெகோவாவிடம்
விசாரிக்கச் சொல்லி உங்களை அனுப்பிய யூதா ராஜாவிடம் போய் இதைச்
சொல்லுங்கள்: “நீ கேட்ட வார்த்தைகளைப் பற்றி இஸ்ரவேலின் கடவுளா
கிய யெகோவா சொல்வது இதுதான்: **19** ‘இந்த இடத்துக்கும் இந்தக் குடி
மக்களுக்கும் எதிராக நான் சொன்னதைக் கேட்டு நீ மனம் வருந்தினாய்;*
இந்தத் தேசம் கோரமாய்க் கிடக்கும், இந்த மக்கள் சபிக்கப்பட்டவர்களாய்
இருப்பார்கள் என்று நான் சொன்னதைக் கேட்டு யெகோவாவுக்கு முன்
னால் தாழ்மையாக நடந்துகொண்டாய்.[h] உன் உடையைக் கிழித்துக்
கொண்டு[i] என் முன்னால் அழுதாய். அதனால், நானும் உன்னுடைய
மன்றாட்டைக் கேட்டேன் என்று யெகோவா சொல்கிறார். **20** நீ இறந்து
போனதும்* நல்லடக்கம் செய்யப்படுவாய். நான் இந்த இடத்துக்குக் கொண்
டுவரப்போகிற அழிவை நீ பார்க்க மாட்டாய்’”’” என்று சொன்னாள். அவள்
சொன்னதை ராஜாவிடம் போய் அவர்கள் சொன்னார்கள்.

23 அப்போது, ராஜா ஆள் அனுப்பி யூதாவிலும் எருசலேமிலும்
இருந்த எல்லா பெரியோர்களையும்* ஒன்றுகூட்டினார்.[j] **2** பின்பு,
யூதா ஆண்கள் எல்லாரையும் எருசலேம் மக்கள் எல்லாரையும் குரு
மார்களையும் தீர்க்கதரிசிகளையும், சொல்லப்போனால் சிறியவர்கள்முதல்
பெரியவர்கள்வரை எல்லாரையும், கூட்டிக்கொண்டு யெகோவாவின் ஆல

22:19 * நே.மொ., “உன் இதயம் இளகியது.” **22:20** * நே.மொ., “உன் முன்னோர்களு
டன் சேர்க்கப்பட்டதும்.” எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மர
ணத்தைக் குறிக்கின்றன. **23:1** * வே.வா., “மூப்பர்களையும்.”

அதி. 22
a உபா 4:24; உபா 29:27; உபா 31:17
b யாத் 15:20; நியா 4:4; நெ 6:14; லூ 2:36; அப் 21:8, 9
c 2நா 34:22-28
d 2ரா 22:8
e யாத் 20:3; உபா 32:17; நியா 2:12; எரே 2:11
f ஏசா 2:8
g உபா 32:22; ஏசா 33:14; எரே 7:20; எசே 20:48
h 1ரா 21:29; யாக் 4:6
i 2ரா 22:11

அதி. 23
j 2நா 34:29, 30

யத்துக்குப் போனார். யெகோவாவின் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒப்
பந்தப்[a] புத்தகத்தில்[b] உள்ள எல்லா வார்த்தைகளையும் அவர்கள் முன்
னால் சத்தமாக வாசித்தார்.[c] **3** தூணுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு,
இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி நடப்பதாக
யெகோவா முன்னால் ஒப்பந்தம் செய்தார்;*[d] அதாவது யெகோவாவின்
வழியில் நடப்பதாகவும், அவருடைய கட்டளைகளுக்கும் நினைப்பூட்டுதல்
களுக்கும் சட்டதிட்டங்களுக்கும் முழு இதயத்தோடும் முழு மூச்சோடும்
கீழ்ப்படிவதாகவும் ஒப்பந்தம் செய்தார். அந்த ஒப்பந்தத்தின்படி நடப்போம்
என்று மக்கள் எல்லாரும் உறுதிகூறினார்கள்.[e]

4 பின்பு பாகாலுக்காக, பூஜைக் கம்பத்துக்காக,* வானத்துப் படைகளுக்
காகச் செய்யப்பட்ட எல்லா சாமான்களையும் யெகோவாவின் ஆலயத்தி
லிருந்து வெளியே கொண்டுவரச் சொல்லி,[f] தலைமைக் குரு இல்க்கியாவுக்
கும்[g] மற்ற குருமார்களுக்கும் காவலாளிகளுக்கும் ராஜா கட்டளையிட்டார்.
பின்பு, எருசலேமுக்கு வெளியே உள்ள கீதரோன் மலைச் சரிவுகளில்
அவற்றை எரித்து, சாம்பலை பெத்தேலுக்குக் கொண்டுபோனார்.[h]
5 யூதாவின் நகரங்களிலும் எருசலேமின் சுற்றுவட்டாரங்களிலும் இருந்த
ஆராதனை மேடுகளில் பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்வதற்
காக யூதாவின் ராஜாக்கள் நியமித்திருந்த பொய் தெய்வ பூசாரிகளை நீக்
கினார்; பாகாலுக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் ராசி மண்டலத்திலுள்ள
நட்சத்திரங்களுக்கும் வானத்துப் படைகளுக்கும் பலியிட்டு புகை எழும்பி
வரச் செய்கிறவர்களையும் நீக்கினார்.[i] **6** பூஜைக் கம்பத்தை*[j] யெகோவா
வின் ஆலயத்திலிருந்து எடுத்து எருசலேமின் எல்லையில் இருக்கிற கீத
ரோன் பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோய்ச் சுட்டெரித்து,[k] தூள்தூளாக்கி
அந்தத் தூளை பொதுமக்களின் கல்லறையில் தூவிவிட்டார்.[l] **7** அதோடு,
யெகோவாவின் ஆலயத்தில் ஆண் விபச்சாரக்காரர்கள்[m] தங்கியிருந்த
இடங்களையும் இடித்துப்போட்டார்; இங்குதான் பூஜைக் கம்பத்துக்காக*
பெண்கள் கூடாரங்களை நெய்துவந்தார்கள்.

8 கெபாமுதல்[n] பெயெர்-செபாவரை[o] இருந்த ஆராதனை மேடுகளில்
குருமார்கள் பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்திருந்தார்கள்; அந்த
ஆராதனை மேடுகளை மீண்டும் பயன்படுத்த முடியாதபடி யோசியா ராஜா
செய்தார்; பின்பு, அந்தக் குருமார்கள் எல்லாரையும் யூதாவின் நகரங்களிலி
ருந்து எருசலேமுக்குக் கூட்டிக்கொண்டு வந்தார். நகரத் தலைவரான யோசு
வாவின் நுழைவாசலில் இருந்த ஆராதனை மேடுகளையும் இடித்துப்போட்
டார்; நகரவாசலுக்குள் நுழைகிற ஒருவருடைய இடது பக்கத்தில் இவை
இருந்தன. **9** எருசலேமில் இருந்த யெகோவாவின் பலிபீடத்தில் சேவை
செய்ய இந்தக் குருமார்கள் அனுமதிக்கப்படவில்லை,[p] ஆனால் மற்ற குரு
மார்களுடன் சேர்ந்து புளிப்பில்லாத ரொட்டிகளைச் சாப்பிட அனுமதிக்கப்
பட்டார்கள். **10** பென்-இன்னோம்* பள்ளத்தாக்கில்#[q] இருந்த தோப்
பேத்தை△[r] இனி வழிபாட்டுக்காகப் பயன்படுத்த முடியாதபடி யோசியா

23:3 *வே.வா., "ஒப்பந்தத்தைப் புதுப்பித்தார்." **23:4, 6, 7** *சொல் பட்டியலைப் பாருங்கள். **23:10** *அர்த்தம், "இன்னோம் மகன்களின்." #சொல் பட்டியலில் "கெஹென்னா" என்ற தலைப்பைப் பாருங்கள். △இந்த இடம் எருசலேமுக்கு வெளியே இருந்தது; விசுவாசதுரோக இஸ்ரவேலர்கள் தங்களுடைய குழந்தைகளை இங்கு பலி கொடுத்தார்கள்.

அதி. 23
a உபா 31:26
b யாத் 24:8
c 2ரா 22:8
d 2ரா 11:17; 2நா 15:10, 12
e யோசு 24:24, 25; 2நா 34:31, 32
f 2ரா 21:1, 7; 2நா 34:4
g 2ரா 22:4
h 1ரா 12:28, 29
i 2ரா 21:1, 3; எரே 8:1, 2
j 2ரா 21:1, 7
k உபா 7:25
l 2நா 34:4
m லேவி 18:22; உபா 23:17, 18; 1ரா 15:11, 12; 1ரா 22:46
n யோசு 21:17, 19; 1ரா 15:22
o ஆதி 21:31
p எசே 44:10; மல் 2:7, 8
q யோசு 15:8
r எரே 7:31

ராஜா செய்தார்; யாரும் தன்னுடைய மகனையோ மகளையோ மோளேகு
தெய்வத்துக்கு நெருப்பில் பலி கொடுக்கக் கூடாது*[a] என்பதற்காக இப்
படிச் செய்தார். **11** யூதாவின் ராஜாக்களால் சூரியனுக்கு அர்ப்பணிக்கப்
பட்டிருந்த குதிரைகள் நுழைவு மண்டபத்திலிருந்த அரண்மனை அதிகாரி
நாத்தான்-மெலெக்கின் அறை* வழியாக யெகோவாவின் ஆலயத்துக்குள்
நுழைய அனுமதிக்கவில்லை. சூரியனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ரதங்களை[b]
அவர் எரித்துப்போட்டார். **12** ஆகாசின் மாடி அறை மேல்தளத்தில் யூதா
வின் ராஜாக்கள் கட்டியிருந்த பலிபீடங்களை இடித்துப்போட்டார்.[c]
அதோடு, யெகோவாவுடைய ஆலயத்தின் இரண்டு பிரகாரங்களிலும்
மனாசே கட்டியிருந்த பலிபீடங்களையும் தகர்த்துப்போட்டார்.[d] அவற்றைத்
தவிடுபொடியாக்கி, அந்தத் தூளை கீதரோன் பள்ளத்தாக்கில் எறிந்தார்.
13 எருசலேமுக்கு எதிரில், ‘அழிவின் மலைக்கு’* தெற்கில்# இருந்த ஆரா
தனை மேடுகளை வழிபாட்டுக்காகப் பயன்படுத்த முடியாதபடி செய்தார்;
சீதோனியர்கள் வணங்கிய அருவருப்பான அஸ்தரோத் தேவிக்காகவும்,
மோவாபியர்கள் வணங்கிய அருவருப்பான கேமோஷ் தெய்வத்துக்காக
வும், அம்மோனியர்கள் வணங்கிய அருவருப்பான மில்கோம் தெய்வத்துக்
காகவும்[e] இஸ்ரவேலின் ராஜா சாலொமோன் இவற்றைக் கட்டியிருந்தார்.
14 யோசியா ராஜா பூஜைத் தூண்களை நொறுக்கிப்போட்டார், பூஜைக் கம்
பங்களை* வெட்டிப்போட்டார்;[f] அந்த இடங்களை மனித எலும்புகளால்
நிரப்பினார். **15** இஸ்ரவேலர்களைப் பாவத்தில் விழவைக்க நேபாத்தின்
மகன் யெரொபெயாம் பெத்தேலில் கட்டிய ஆராதனை மேட்டையும் பலிபீ
டத்தையும்[g] உடைத்துப்போட்டார். அவற்றை உடைத்த பின்பு ஆராதனை
மேட்டை எரித்துப்போட்டார், அதைத் தூள்தூளாக்கினார்; அங்கிருந்த
பூஜைக் கம்பத்தை* எரித்துப்போட்டார்.[h]

16 யோசியா திரும்பிப் பார்த்தபோது, அங்கே இருக்கிற மலைமேல் கல்
லறைகள் இருப்பதைக் கண்டார்; உடனே, அங்கிருந்த எலும்புகளை எடுத்
துவரச் சொன்னார்; அவற்றை அந்தப் பலிபீடத்தில் எரித்து, அதை வழி
பாட்டுக்காகப் பயன்படுத்த முடியாதபடி செய்தார். இப்படி நடக்குமென்று
உண்மைக் கடவுளின் ஊழியர் மூலம் சொல்லப்பட்ட யெகோவாவின்
வார்த்தை அப்போது நிறைவேறியது.[i] **17** பின்பு, “அதோ தெரிகிறதே,
அது யாருடைய கல்லறை?” என்று ராஜா கேட்டார். அப்போது அந்த நக
ரத்தைச் சேர்ந்த ஆட்கள், “அது யூதாவிலிருந்து வந்த உண்மைக் கடவுளின்
ஊழியருடைய[j] கல்லறை. பெத்தேலில் இருக்கிற பலிபீடத்திற்கு நீங்கள்
இப்படியெல்லாம் செய்வீர்கள் என்பதை அவர் முன்கூட்டியே சொல்லியி
ருந்தார்” என்றார்கள். **18** அதற்கு அவர், “சரி, அவருடைய எலும்புகளை
யாரும் எடுக்க வேண்டாம்; அப்படியே இருக்கட்டும்” என்று சொன்
னார். அதனால், அவருடைய எலும்புகளையும், சமாரியாவிலிருந்து வந்தி
ருந்த தீர்க்கதரிசியின் எலும்புகளையும் அவர்கள் எடுக்கவில்லை.[k]

23:10 *நே.மொ., “மோளேகு தெய்வத்துக்காக நெருப்பைக் கடக்க வைக்கக் கூடாது.” **23:11** *வே.வா., “சாப்பாட்டு அறை.” **23:13** *அதாவது, “ஒலிவ மலைக்கு.” குறிப்பாக, அதன் தென்கோடி ‘குற்றத்தின் மலை’ என்றும் அழைக்கப்படுகிறது. #நே.மொ., “வலது பக்கத்தில்.” ஒருவர் கிழக்கு நோக்கி நிற்கும்போது, தெற்கில். **23:14, 15** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 23
a 2ரா 16:2, 3; எரே 32:35
b உபா 4:19; எசே 8:16
c எரே 19:13; செப் 1:4, 5
d 2ரா 21:1, 5
e 1ரா 11:5, 7; செப் 1:4, 5
f யாத் 23:24; உபா 7:5; 2நா 34:1, 3
g 1ரா 12:28, 33
h 2நா 34:6, 7
i 1ரா 13:2
j 1ரா 13:1
k 1ரா 13:30, 31

19 கடவுளைப் புண்படுத்துவதற்காக, சமாரியா நகரங்களில் இருந்த
ஆராதனை மேடுகளில் இஸ்ரவேலின் ராஜாக்கள் கட்டியிருந்த எல்லா
கோயில்களையும் யோசியா இடித்துப்போட்டார்.[a] பெத்தேலில் செய்தப
டியே இங்கேயும் செய்தார்.[b] **20** அந்த ஆராதனை மேடுகளில் இருந்த
எல்லா குருமார்களையும் பலிபீடங்களின் மேல் கொன்றுபோட்டார். மனித
எலும்புகளை அவற்றின்மேல் எரித்துப்போட்டார்.[c] அதன் பின்பு, எருசலே
முக்குத் திரும்பினார்.

21 பின்பு மக்கள் எல்லாரிடமும், “ஒப்பந்தப் புத்தகத்தில் எழுதப்பட்ட
படி[d] உங்களுடைய கடவுளான யெகோவாவுக்குப் பஸ்கா பண்டிகை
கொண்டாடுங்கள்”[e] என்று ராஜா கட்டளையிட்டார். **22** இஸ்ரவேலில்
நியாயாதிபதிகள் நியாயம் வழங்கிய காலத்திலோ இஸ்ரவேலின் ராஜாக்க
ளும் யூதாவின் ராஜாக்களும் ஆட்சி செய்த காலத்திலோ அந்தளவு பிர
மாண்டமாக பஸ்கா பண்டிகை கொண்டாடப்படவில்லை.[f] **23** யோசியா
ராஜா ஆட்சி செய்த 18-ஆம் வருஷத்தில், எருசலேமில் யெகோவாவுக்கு
இந்த பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது.

24 ஆவிகளோடு பேசுகிறவர்களையும், குறிசொல்கிறவர்களையும்,[g]
குலதெய்வச் சிலைகளையும்,[h] அருவருப்பான* சிலைகளையும், யூதாவி
லும் எருசலேமிலும் இருந்த அருவருப்பான எல்லாவற்றையும் அவர்
ஒழித்துக்கட்டினார். குருவாகிய இல்க்கியா யெகோவாவின் ஆலயத்தில்
கண்டெடுத்த[i] திருச்சட்ட புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தபடியே[j] செய்தார்.
25 யோசியா முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் முழு பலத்தோ
டும் யெகோவா பக்கம் திரும்பினார்;[k] மோசேயின் திருச்சட்டத்தில் உள்ள
எல்லாவற்றையும் கடைப்பிடித்தார். அவருக்கு முன்பும் சரி, பின்பும் சரி,
வேறெந்த ராஜாவும் அவரைப் போல் இருக்கவில்லை.

26 ஆனாலும், யூதா மக்கள்மீது யெகோவாவுக்கு இருந்த கடும்
கோபம் தணியவே இல்லை. ஏனென்றால், கடவுள் அருவருக்கிற காரியங்
களைச் செய்து மனாசே அவரைப் புண்படுத்தியிருந்தார்.[l] **27** அதனால்
யெகோவா, “இஸ்ரவேலை என் கண் முன்னாலிருந்து நீக்கியதுபோல்[m]
யூதாவையும் நீக்கிவிடுவேன்;[n] நான் தேர்ந்தெடுத்த எருசலேம் நகரத்தை
ஒதுக்கித்தள்ளுவேன்; ‘என் பெயர் இங்கே நிலைத்துநிற்கும்’[o] என்று எந்த
ஆலயத்தைப் பற்றி சொன்னேனோ அந்த ஆலயத்தையும் நிராகரிப்பேன்”
என்று சொன்னார்.

28 யோசியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்
றியும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் யூதா ராஜாக்களின் சரித்தி
ரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **29** யோசியாவின் காலத்தில், அசீ
ரிய ராஜாவுக்கு உதவ யூப்ரடிஸ்* ஆற்றின் அருகே எகிப்தின் ராஜாவான
பார்வோன் நேகோ வந்தான். உடனே யோசியா அவனை எதிர்த்துப் போர்
செய்யப் போனார். ஆனால் நேகோ, மெகிதோவில்[p] அவரைப் பார்த்ததும்
அங்கே கொன்றுபோட்டான். **30** அப்போது யோசியாவின் ஊழியர்கள்
அவருடைய உடலை ஒரு ரதத்தில் வைத்து, மெகிதோவிலிருந்து எருசலே
முக்குக் கொண்டுவந்தார்கள்; அங்கே அவருடைய கல்லறையில் அடக்கம்

அதி. 23
a 1ரா 12:25, 31; 1ரா 13:32; 2ரா 17:9
b 2நா 34:6, 7
c 1ரா 13:2
d யாத் 12:3-14
e 2நா 35:1
f 2நா 35:18, 19
g லேவி 19:31; உபா 18:10, 11; 2ரா 21:1, 6; ஏசா 8:19
h ஆதி 31:19
i 2ரா 22:8
j எண் 33:52; உபா 12:2
k உபா 4:29
l 2ரா 21:11, 12; 2ரா 24:3, 4; எரே 15:4
m 2ரா 18:11; 2ரா 21:13
n உபா 29:28; 2ரா 25:11; எசே 23:33
o உபா 12:5; 1ரா 8:29; 1ரா 9:3
p 1ரா 9:15; 2நா 35:20-25; சக 12:11

23:24 *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.
23:29 *அதாவது, “ஐப்பிராத்து.”

செய்தார்கள். பின்பு, பொதுமக்கள் அவருடைய மகன் யோவாகாசை அபி
ஷேகம் செய்து ராஜாவாக்கினார்கள்.[a]

31 யோவாகாஸ்[b] ராஜாவானபோது அவருக்கு 23 வயது; அவர் எருச
லேமில் மூன்று மாதங்கள் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர்
அமுத்தாள்;[c] அவள் லிப்னாவைச் சேர்ந்த எரேமியாவின் மகள்.
32 யோவாகாஸ் தன்னுடைய முன்னோர்களைப் போலவே யெகோவா
வெறுக்கிற காரியங்களைச் செய்தார்.[d] **33** காமாத் பகுதியிலிருந்த ரிப்லா
வில் பார்வோன் நேகோ[e] அவரைச் சிறையில் அடைத்தான்;[f] எருசலேமில்
அவருடைய ஆட்சிக்கு முடிவுகட்டினான். பின்பு, 100 தாலந்து* வெள்ளி
யையும் ஒரு தாலந்து தங்கத்தையும் தரச்சொல்லி, அவருடைய தேசத்துக்கு
அபராதம் விதித்தான்.[g] **34** அதோடு, யோசியாவின் இடத்தில் அவரு
டைய மகன் எலியாக்கீமை ராஜாவாக நியமித்தான்; எலியாக்கீமின் பெயரை
யோயாக்கீம் என்று மாற்றினான். ஆனால், யோவாகாசை எகிப்துக்குக்
கொண்டுபோனான்;[h] கடைசியில், யோவாகாஸ் அங்கே இறந்துபோனார்.[i]
35 பார்வோன் கேட்ட வெள்ளியையும் தங்கத்தையும் யோயாக்கீம் கொடுத்
தார். ஆனால், அவன் கேட்டதைக் கொடுப்பதற்காக, மக்கள்மீது வரி விதித்
தார். பொதுமக்கள் ஒவ்வொருவரிடமும் இருந்த நிலங்களுக்கு ஏற்ப அவர்
களிடமிருந்து தங்கத்தையும் வெள்ளியையும் வசூலித்தார்.

36 யோயாக்கீம்[j] 25 வயதில் ராஜாவாகி, 11 வருஷங்கள் எருச
லேமில் ஆட்சி செய்தார்.[k] அவருடைய அம்மா பெயர் செபுதாள்; அவள்
ரூமாவைச் சேர்ந்த பெதாயாவின் மகள். **37** யோயாக்கீம் தன்னுடைய
முன்னோர்களைப் போலவே[l] யெகோவாவுக்குப் பிடிக்காத காரியங்களைச்
செய்துவந்தார்.[m]

24 யோயாக்கீமின் ஆட்சிக் காலத்தில் பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்
சார்[n] படையெடுத்து வந்தான்; யோயாக்கீம் மூன்று வருஷங்கள்
அவனுக்குச் சேவை செய்தார், பிற்பாடு அவனுக்கு எதிராகக் கலகம் செய்
தார். **2** அதன் பின்பு கல்தேயர்கள்,[o] சீரியர்கள், மோவாபியர்கள், அம்மோ
னியர்கள் ஆகியோரின் கொள்ளைக்கூட்டங்கள் அடுத்தடுத்து அவருடைய
தேசத்தைச் சூறையாட யெகோவா விட்டுவிட்டார். யெகோவா தன்னுடைய
ஊழியர்களான தீர்க்கதரிசிகள் மூலம் சொன்னபடியே,[p] யூதாவை அழிக்க
அவர்களை அனுப்பிக்கொண்டே இருந்தார். **3** இதெல்லாம் யெகோவா
வின் கட்டளைப்படிதான் நடந்தது; யூதா மக்களைத் தன்னுடைய கண் முன்
னாலிருந்து நீக்குவதற்காகத்தான் இப்படிச் செய்தார்.[q] ஏனென்றால் மனாசே
நிறைய பாவங்கள் செய்திருந்தார்;[r] **4** அப்பாவி மக்களைக் கொன்று
குவித்திருந்தார்;[s] அப்பாவிகளின் இரத்தத்தால் எருசலேமை நிரப்பியிருந்
தார். யெகோவா இதையெல்லாம் மன்னிக்கத் தயாராக இல்லை.[t]

5 யோயாக்கீமின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்
றியும், அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் யூதா ராஜாக்களின் சரித்திரப்
புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[u] **6** யோயாக்கீம் இறந்த* பின்பு அடக்
கம் செய்யப்பட்டார்;[v] அவருக்குப் பிறகு, அவருடைய மகன் யோயாக்கீன்
ராஜாவானார்.

23:33 *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **24:6** *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட."

அதி. 23
a 2நா 36:1, 2
b எரே 22:11
c 2ரா 24:18
d 2ரா 21:1, 2; 2ரா 21:19-21
e 2ரா 23:29
f எரே 39:5; எரே 52:10
g 2நா 36:3
h 2நா 36:4, 5
i எரே 22:11, 12
j எரே 1:3; எரே 22:18, 19
k 2நா 36:5
l 2நா 28:24, 25; 2நா 33:1, 4
m எரே 26:21; எரே 36:22-24

அதி. 24
n எரே 25:1; எரே 46:2; தானி 1:1; தானி 3:1; தானி 4:33
o ஆப 1:6
p லேவி 26:27, 28; உபா 28:15; 2ரா 23:27
q லேவி 26:33; உபா 4:26
r 2ரா 21:11; 2ரா 23:26
s 2ரா 21:16; எரே 2:34; எரே 19:4
t எரே 15:1; புல 3:42
u 2நா 36:8
v எரே 22:18, 19; எரே 36:30

7 எகிப்தின் ராஜா அதன் பின்பு தன்னுடைய தேசத்திலிருந்து படை
களை அனுப்பவே இல்லை. ஏனென்றால், எகிப்தின் பள்ளத்தாக்குமுதல்*[a]
யூப்ரடிஸ்# ஆறுவரை[b] எகிப்து ராஜாவுக்குச் சொந்தமான எல்லா பகுதிக
ளையும் பாபிலோன் ராஜா பிடித்துவிட்டான்.[c]

8 யோயாக்கீன்[d] ராஜாவானபோது அவருக்கு 18 வயது. அவர் எருச
லேமில் மூன்று மாதங்கள் ஆட்சி செய்தார்.[e] அவருடைய அம்மா
பெயர் நெகுஸ்தாள்; அவள் எருசலேமைச் சேர்ந்த எல்நாத்தானின் மகள்.
9 யோயாக்கீன் தன்னுடைய அப்பாவைப் போலவே யெகோவா வெறுக்
கிற காரியங்களைச் செய்துவந்தார். **10** அப்போது பாபிலோன் ராஜா
வான நேபுகாத்நேச்சாரின் வீரர்கள் எருசலேம்மீது படையெடுத்து வந்து நக
ரத்தை முற்றுகையிட்டார்கள்.[f] **11** அவனுடைய வீரர்கள் முற்றுகையிட்ட
சமயத்தில், பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சாரும் அந்த நகரத்துக்கு
வந்தான்.

12 யூதாவின் ராஜாவான யோயாக்கீன் தன்னுடைய அம்மாவையும்
ஊழியர்களையும் உயர் அதிகாரிகளையும்* அரண்மனை அதிகாரிகளை
யும்[g] கூட்டிக்கொண்டு பாபிலோன் ராஜாவிடம் போனார்.[h] பாபிலோன்
ராஜா தான் ஆட்சி செய்த எட்டாம் வருஷத்தில் அவரைக் கைதியாகப்
பிடித்துக்கொண்டு போனான்.[i] **13** பின்பு, யெகோவாவின் ஆலயத்திலும்
ராஜாவின் அரண்மனையிலும் இருந்த எல்லா பொக்கிஷங்களையும்
எடுத்துக்கொண்டான்.[j] யெகோவாவின் ஆலயத்தில் இஸ்ரவேலின் ராஜா
வான சாலொமோன் செய்து வைத்திருந்த தங்கச் சாமான்கள்[k] எல்லாவற்
றையும் நொறுக்கிப்போட்டான். யெகோவா சொன்னபடியே இது நடந்தது.
14 எருசலேமில் இருந்த உயர் அதிகாரிகள்,[l] மாவீரர்கள், கைத்தொழிலாளி
கள், கொல்லர்கள்*[m] என எல்லாரையும் சிறைபிடித்துக்கொண்டு போனான்;
மொத்தம் 10,000 பேரைக் கொண்டுபோனான். பரம ஏழைகளைத் தவிர
வேறு யாரையுமே நகரத்தில் விட்டுவைக்கவில்லை.[n] **15** இப்படி, யோயாக்
கீனையும்[o] அவருடைய அம்மாவையும் மனைவிகளையும் அரண்மனை
அதிகாரிகளையும் பிரபலமான ஆண்களையும் எருசலேமிலிருந்து பாபி
லோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போனான்.[p] **16** அதோடு, 7,000
போர்வீரர்களையும், 1,000 கைத்தொழிலாளிகளையும் கொல்லர்களையும்*
சிறைபிடித்துக்கொண்டு போனான்; போர்ப் பயிற்சி பெற்ற அந்த மாவீரர்
கள் எல்லாரையும் சிறைபிடித்துக்கொண்டு போனான். **17** யோயாக்கீனுக்
குப் பதிலாக அவருடைய சித்தப்பா மத்தனியாவை[q] ராஜாவாக்கி, அவரு
டைய பெயரை சிதேக்கியா[r] என்று மாற்றினான்.

18 சிதேக்கியா ராஜாவானபோது அவருக்கு 21 வயது; அவர் எருசலே
மில் 11 வருஷங்கள் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர்
அமுத்தாள்;[s] அவள் லிப்னாவைச் சேர்ந்த எரேமியாவின் மகள்.
19 யோயாக்கீமைப் போலவே இவரும் யெகோவா வெறுக்கிற காரியங்
களையே செய்துவந்தார்.[t] **20** எருசலேமிலும் யூதாவிலும் இப்படிப்பட்ட

24:7 *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குமுதல்.” சொல் பட்டியலைப் பாருங்கள். #அதாவது, “ஐப்பிராத்து.” **24:12** *வே.வா., “ராஜாவின் மகன்களையும்.” **24:14** *அல்லது, “கோட்டை கொத்தளங்களைக் கட்டுகிறவர்கள்.” **24:16** *அல்லது, “கோட்டை கொத்தளங்கள் கட்டுகிறவர்களையும்.”

அதி. 24
a எண் 34:2, 5
b ஆதி 15:18, 1ரா 4:21
c எரே 46:2
d எரே 24:1, எரே 37:1
e 2நா 36:8
f தானி 1:1
g எரே 29:1, 2
h 2நா 36:9, 10, எரே 24:1, எசே 17:12
i எரே 52:28
j 2ரா 20:13, 17
k 1ரா 7:48-50, எஸ்றா 1:7, தானி 5:2
l தானி 1:3, 6
m எரே 24:1
n 2ரா 25:12
o 2ரா 25:27, 1நா 3:17
p எரே 22:24, 25
q 1நா 3:15
r 2நா 36:10-12, எரே 37:1, எரே 52:1
s 2ரா 23:31
t 2ரா 23:36, 37, எரே 24:8, எரே 37:1, 2, எரே 38:5, 6, எசே 21:25

காரியங்கள் நடந்து வந்ததால் யெகோவாவின் கோபம் பற்றியெரிந்தது.
கடைசியில், அவர்களைத் தன்னுடைய கண் முன்னாலிருந்தே ஒதுக்கித்
தள்ளிவிட்டார்.[a] பாபிலோன் ராஜாவுக்கு எதிராக சிதேக்கியா கலகம்
செய்தார்.[b]

25 சிதேக்கியா ஆட்சி செய்த ஒன்பதாம் வருஷம் 10-ஆம் மாதம்
10-ஆம் தேதியில், பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சார்[c] தன்
னுடைய படை முழுவதையும் திரட்டிக்கொண்டு எருசலேமுடன் போர்
செய்ய வந்தான்.[d] நகரத்துக்கு எதிராக முகாம்போட்டு, அதைச் சுற்றிலும்
முற்றுகைச் சுவர் எழுப்பினான்.[e] **2** சிதேக்கியா ராஜா ஆட்சி செய்த
11-ஆம் வருஷம்வரை முற்றுகை நீடித்தது. **3** நான்காம் மாதம் ஒன்பதாம்
தேதியில், நகரத்தில் பஞ்சம் மிகக் கடுமையாக இருந்தது;[f] குடிமக்களுக்
குக் கொஞ்சம்கூட உணவு கிடைக்கவில்லை.[g] **4** நகரத்தின் மதில் உடைக்
கப்பட்டது;[h] கல்தேயர்கள் நகரத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டிருந்தார்
கள். அப்போது, எல்லா வீரர்களும் ராஜாவின் தோட்டத்துக்குப் பக்கத்தில்
இரண்டு மதில்களுக்கு இடையிலிருந்த நுழைவாசல் வழியாக ராத்திரியில்
தப்பித்து ஓடினார்கள். அரபா வழியாக ராஜா தப்பித்துப் போனார்.[i]
5 ஆனால், கல்தேய வீரர்கள் அவரைத் துரத்திக்கொண்டுபோய், எரிகோ
பாலைநிலத்தில் பிடித்தார்கள்; அவருடைய வீரர்கள் எல்லாரும் அவரை
விட்டு சிதறி ஓடினார்கள். **6** கல்தேய வீரர்கள் ராஜாவைப் பிடித்து,[j] ரிப்லா
வில் இருந்த பாபிலோன் ராஜாவிடம் கொண்டுபோனார்கள். அங்கே
அவருக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. **7** சிதேக்கியாவின் கண்
முன்னாலேயே அவருடைய மகன்களைப் படுகொலை செய்தார்கள்.
பின்பு, நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி, அவருக்
குச் செம்பு விலங்குகளை மாட்டி அவரை பாபிலோனுக்குக் கொண்டு
போனான்.[k]

8 ஐந்தாம் மாதம் ஏழாம் தேதியில், அதாவது பாபிலோன் ராஜா நேபு
காத்நேச்சார் ஆட்சி செய்த 19-ஆம் வருஷத்தில், நேபுசராதான்[l] எருசலே
முக்கு வந்தான்;[m] இவன் காவலாளிகளின் தலைவன், பாபிலோன் ராஜாவின்
ஊழியன். **9** யெகோவாவின் ஆலயத்தையும் ராஜாவின் அரண்மனையை
யும்[n] எருசலேமிலிருந்த எல்லா வீடுகளையும்[o] அவன் தீ வைத்துக்
கொளுத்தினான்.[p] பிரமுகர்கள் எல்லாருடைய வீடுகளையும் எரித்துப்போட்
டான்.[q] **10** காவலாளிகளின் தலைவனோடு இருந்த கல்தேய வீரர்கள் எல்
லாரும் சேர்ந்து எருசலேமைச் சுற்றியிருந்த மதில்களை இடித்துப்போட்டார்
கள்.[r] **11** நகரத்தில் மிச்சமிருந்த மக்களையும், பாபிலோன் ராஜாவிடம்
சரணடைந்தவர்களையும், மற்ற மக்களையும் காவலாளிகளின் தலைவன்
நேபுசராதான் சிறைபிடித்துக்கொண்டு போனான்.[s] **12** ஆனால், திராட்
சைத் தோட்டங்களிலும் வயல்களிலும் கட்டாய வேலை செய்வதற்காக
பரம ஏழைகள் சிலரை அங்கேயே விட்டுவிட்டுப் போனான்.[t] **13** கல்தே
யர்கள் யெகோவாவின் ஆலயத்திலிருந்த செம்புத் தூண்களையும்[u]
யெகோவாவின் ஆலயத்திலிருந்த தள்ளுவண்டிகளையும்[v] 'செம்புக் கடல்'
தொட்டியையும்[w] உடைத்து, அவற்றின் செம்பை பாபிலோனுக்குக் கொண்
டுபோனார்கள்.[x] **14** சட்டிகள், சாம்பல் அள்ளும் கரண்டிகள், திரி வெட்
டும் கருவிகள், கோப்பைகள் ஆகியவற்றையும், ஆலயத்தில் பயன்படுத்தப்
பட்ட எல்லா செம்புப் பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு போனார்கள்.

அதி. 24
a 2ரா 23:27
b 2நா 36:11, 13; எரே 27:12; எரே 38:17; எசே 17:12-15

அதி. 25
c எரே 27:8; எரே 43:10; தானி 4:1
d 2நா 36:17; எரே 34:2; எசே 24:1, 2
e ஏசா 29:3; எரே 32:2, 28; எரே 39:1; எரே 52:4, 5; எசே 4:1, 2; எசே 21:21, 22
f லேவி 26:26; உபா 28:53; எரே 37:21; எரே 38:2; புல 4:4; எசே 4:16; எசே 5:10, 12
g எரே 52:6-11
h எரே 21:4; எரே 39:2, 4-7
i எசே 12:12
j எரே 21:7
k எரே 32:4, 5; எசே 17:16
l எரே 40:1
m எரே 52:12-14; புல 4:12
n 1ரா 7:1
o எரே 34:22
p 1ரா 9:8; சங் 79:1; ஏசா 64:11; எரே 7:14; புல 1:10; புல 2:7; மீ 3:12
q 2நா 36:19
r நெ 1:3; எரே 39:8
s எரே 15:2; எரே 39:9; எரே 52:15, 30; எசே 5:2
t எரே 39:10; எரே 52:16
u 1ரா 7:15
v 1ரா 7:27
w 1ரா 7:23
x 2ரா 20:17; எரே 52:17-20

15 சொக்கத்தங்கத்திலும் வெள்ளியிலும் செய்யப்பட்ட தணல் அள்ளும்
கரண்டிகளையும் கிண்ணங்களையும்[a] காவலாளிகளின் தலைவன் கொண்
டுபோனான். **16** யெகோவாவின் ஆலயத்தில் சாலொமோன் செய்து
வைத்த இரண்டு தூண்கள், ‘செம்புக் கடல்’ தொட்டி, தள்ளுவண்டிகள்
ஆகியவற்றின் செம்பு எடைபோட முடியாதளவுக்கு மிக அதிகமாக இருந்
தது.[b] **17** ஒவ்வொரு தூணும் 18 முழ* உயரமாக இருந்தது.[c] அதன் மேலி
ருந்த கும்பம் செம்பினால் செய்யப்பட்டிருந்தது. அந்தக் கும்பத்தின் உய
ரம் மூன்று முழம். கும்பத்தைச் சுற்றியிருந்த வலைப்பின்னலும் மாதுளம்பழ
வடிவங்களும் செம்பினால் செய்யப்பட்டிருந்தன.[d] மற்றொரு தூணும் இதே
போல் இருந்தது.

18 முதன்மை குரு செராயாவையும்,[e] இரண்டாம் குரு செப்பனியா
வையும்,[f] காவலாளிகள் மூன்று பேரையும் நேபுசராதான் பிடித்துக்
கொண்டு போனான்.[g] **19** போர்வீரர்களுக்குத் தலைவரான அரண்மனை
அதிகாரி ஒருவரையும், நகரத்தில் இருந்த ராஜாவின் நெருங்கிய நண்பர்
கள் ஐந்து பேரையும், போருக்கு ஆட்களைத் திரட்டுகிற படைத் தளபதி
யின் செயலாளரையும், நகரத்தில் மிச்சமிருந்த பாமர மக்களில் 60 ஆண்க
ளையும் பிடித்துக்கொண்டு போனான். **20** காவலாளிகளின் தலைவன்
நேபுசராதான்[h] இவர்களைப் பிடித்து ரிப்லாவில் இருந்த பாபிலோன் ராஜா
விடம் கொண்டுபோனான்.[i] **21** காமாத் பகுதியிலிருந்த[j] ரிப்லாவில் பாபி
லோன் ராஜா இவர்களை வெட்டிக் கொன்றான். இப்படி, யூதா மக்கள் தங்
களுடைய தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள்.[k]

22 பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார், யூதா தேசத்தில் தான் விட்டு
வைத்திருந்த மக்களுக்கு அதிகாரியாக கெதலியாவை[l] நியமித்தான்;[m] இவர்
அகிக்காமின்[n] மகன், சாப்பானின்[o] பேரன். **23** கெதலியாவை பாபிலோன்
ராஜா அதிகாரியாக நியமித்த விஷயத்தை படைத் தலைவர்கள் எல்லாரும்
அவர்களுடைய ஆட்களும் கேள்விப்பட்டவுடனே, மிஸ்பாவிலிருந்த கெத
லியாவிடம் வந்தார்கள். அதாவது, நெத்தனியாவின் மகன் இஸ்மவேல், கரே
யாவின் மகன் யோகனான், நெத்தோபாத்தியனான தன்கூமேத்தின் மகன்
செராயா, மாகாத்தியன் ஒருவனுடைய மகன் யசினியா ஆகியோரும் அவர்
களுடைய ஆட்களும் வந்தார்கள்.[p] **24** அப்போது, கெதலியா அவர்க
ளுக்கும் அவர்களுடைய ஆட்களுக்கும் உறுதிமொழி கொடுத்தார்; “கல்தே
யர்களுக்குச் சேவை செய்ய பயப்படாதீர்கள். இந்தத் தேசத்திலேயே தங்கி,
பாபிலோன் ராஜாவுக்குச் சேவை செய்யுங்கள். அப்போது எந்தக் கஷ்டமும்
இல்லாமல் வாழ்வீர்கள்”[q] என்று சொன்னார்.

25 எலிஷாமாவின் பேரனும் நெத்தனியாவின் மகனும் ராஜ வம்சத்தைச்
சேர்ந்தவனுமான இஸ்மவேல்,[r] ஏழாம் மாதத்தில் பத்து ஆட்களைக் கூட்
டிக்கொண்டு வந்தான்; அவர்கள் எல்லாரும் சேர்ந்து கெதலியாவை வெட்
டிக் கொன்றார்கள். மிஸ்பாவில் அவருடன் இருந்த யூதர்களையும் கல்தேயர்
களையும் கொன்றுபோட்டார்கள்.[s] **26** அதன் பின்பு, படைத் தலைவர்கள்
உட்பட மக்கள் எல்லாரும், அதாவது சிறியவர்கள், பெரியவர்கள் எல்லாரும்,
கல்தேயர்களுக்குப் பயந்து[t] எகிப்துக்கு ஓடிப்போனார்கள்.[u]

27 ஏவில்-மெரொதாக் என்பவன் பாபிலோனின் ராஜாவான வருஷத்
தில், யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச்[v] சிறையிலிருந்து விடுதலை

25:17 * ஒரு முழம் என்பது 44.5 செ.மீ. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 25
a 1ரா 7:48, 50; 2நா 24:14; 2நா 36:18; எஸ்றா 1:7, 10, 11; தானி 5:2
b 1ரா 7:47
c 1ரா 7:15
d 1ரா 7:16, 20; எரே 52:21-23
e எஸ்றா 7:1
f எரே 21:1, 2; எரே 29:25, 29
g எரே 52:24-27
h 2ரா 25:8; எரே 39:9; எரே 40:1
i எரே 39:5
j எண் 34:2, 8; 1ரா 8:65
k உபா 28:36, 64; 2ரா 23:27; எரே 25:11
l எரே 39:13, 14
m எரே 40:5, 6
n எரே 26:24
o 2ரா 22:8
p எரே 40:7-9
q எரே 27:12
r எரே 40:15
s எரே 41:1, 2
t எரே 41:17, 18
u எரே 42:14; எரே 43:4, 7
v 2ரா 24:8, 12; எரே 24:1; மத் 1:11

செய்தான்;[a] அது, யோயாக்கீன் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப்
போன 37-ஆம் வருஷம், 12-ஆம் மாதம், 27-ஆம் நாள். **28** யோயாக்
கீனிடம் ஏவில்-மெரொதாக் அன்பாகப் பேசினான். பாபிலோனில்
தன்னோடு இருந்த மற்ற ராஜாக்களைவிட அவருக்கு உயர்ந்த ஸ்தானத்
தைக் கொடுத்தான்.* **29** அதன் பின்பு, யோயாக்கீன் கைதி உடை
யைப் போட்டுக்கொள்ளவில்லை; வாழ்நாள் முழுக்க ராஜாவுடன் சேர்ந்து
சாப்பிட்டார். **30** ராஜாவின் கட்டளைப்படியே, யோயாக்கீன் உயிரோடு
இருந்த நாளெல்லாம் தினமும் அவருக்கு உணவுப் பொருள்கள் கொடுக்
கப்பட்டன.

25:28 * வே.வா., "அவருடைய சிம்மாசனத்தை உயர்த்தினான்."

அதி. 25
a எரே 52: 31-34

முதலாம்
நாளாகமம்

முக்கியக் குறிப்புகள்

நாள்+ஆகமம்=நாளாகமம். இதற்கான எபிரெயப் பெயரின் அர்த்தம், "கால வரலாற்றுப் பதிவு."

1 ஆதாம்முதல் ஆபிரகாம்வரை (1-27)
ஆபிரகாமின் வம்சத்தார் (28-37)
ஏதோமியர்கள், அவர்களின் ராஜாக்கள், குலத்தலைவர்கள் (38-54)

2 இஸ்ரவேலின் 12 மகன்கள் (1, 2)
யூதாவின் வம்சத்தார் (3-55)

3 தாவீதின் வம்சத்தார் (1-9)
தாவீதின் ராஜ வம்சம் (10-24)

4 யூதாவின் மற்ற வம்சத்தார் (1-23)
யாபேஷ் செய்த ஜெபம் (9, 10)
சிமியோன் வம்சத்தார் (24-43)

5 ரூபன் வம்சத்தார் (1-10)
காத் வம்சத்தார் (11-17)
ஆகாரியர்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள் (18-22)
மனாசேயின் பாதிக் கோத்திரம் (23-26)

6 லேவி வம்சத்தார் (1-30)
ஆலயப் பாடகர்கள் (31-47)
ஆரோன் வம்சத்தார் (48-53)
லேவியர்கள் தங்கியிருந்த இடங்கள் (54-81)

7 இசக்கார் வம்சத்தார் (1-5), பென்யமீன் வம்சத்தார் (6-12), நப்தலி வம்சத்தார் (13), மனாசே வம்சத்தார் (14-19), எப்பிராயீம் வம்சத்தார் (20-29), ஆசேர் வம்சத்தார் (30-40)

8 பென்யமீன் வம்சத்தார் (1-40)
சவுலின் வாரிசுகளுடைய பட்டியல் (33-40)

9 சிறையிருப்பிலிருந்து திரும்பிய பின்பு வம்சாவளிப் பட்டியல் (1-34)
மறுபடியும் சவுலின் வாரிசுகளுடைய பட்டியல் (35-44)

10 சவுலும் அவருடைய மகன்களும் செத்துப்போகிறார்கள் (1-14)

11 எல்லா இஸ்ரவேலர்களும் தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்கிறார்கள் (1-3)
தாவீது சீயோனைக் கைப்பற்றுகிறார் (4-9)
தாவீதின் மாவீரர்கள் (10-47)

12 தாவீதின் ஆட்சியை ஆதரித்தவர்கள் (1-40)

13 கீரியாத்-யெயாரீமிலிருந்து கடவுளின் பெட்டி கொண்டுவரப்படுகிறது (1-14)
ஊசா கொல்லப்படுகிறான் (9, 10)

14 தாவீதின் ஆட்சி வலுப்படுத்தப்படுகிறது (1, 2)
தாவீதின் குடும்பம் (3-7)
பெலிஸ்தியர்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள் (8-17)

15 கடவுளின் பெட்டியை லேவியர்கள் எருசலேமுக்குக் கொண்டுவருகிறார்கள் (1-29)
தாவீதைப் பற்றி மீகாள் கேவலமாக நினைக்கிறாள் (29)

16 கடவுளின் பெட்டி கூடாரத்தில் வைக்கப்படுகிறது (1-6)
தாவீதின் நன்றிப் பாடல் (7-36)
“யெகோவா ராஜாவாகிவிட்டார்!” (31)
கடவுளின் பெட்டிக்கு முன்னால் சேவை (37-43)

17 ஆலயத்தை தாவீது கட்ட மாட்டார் (1-6)
ஓர் அரசாங்கத்துக்காக தாவீதோடு ஒப்பந்தம் (7-15)
தாவீது நன்றி சொல்லி ஜெபம் செய்கிறார் (16-27)

18 தாவீதின் வெற்றிகள் (1-13)
தாவீதின் நிர்வாகம் (14-17)

19 தாவீதின் தூதுவர்களை அம்மோனியர்கள் அவமானப்படுத்துகிறார்கள் (1-5)
அம்மோனியர்களையும் சீரியர்களையும் தோற்கடிக்கிறார் (6-19)

20 ரப்பா கைப்பற்றப்படுகிறது (1-3)
பெலிஸ்தியப் பலவான்கள் கொல்லப்படுகிறார்கள் (4-8)

21 மக்களை தாவீது கணக்கெடுக்கிறார் (1-6)
யெகோவாவிடமிருந்து தண்டனை (7-17)
தாவீது ஒரு பலிபீடம் கட்டுகிறார் (18-30)

22 ஆலயம் கட்ட தாவீதின் ஏற்பாடுகள் (1-5)
சாலொமோனுக்கு தாவீதின் அறிவுரைகள் (6-16)
சாலொமோனுக்கு உதவச் சொல்லி தலைவர்களுக்குக் கட்டளை (17-19)

23 லேவியர்களை தாவீது ஒழுங்கமைக்கிறார் (1-32)
ஆரோனுக்கும் அவருடைய மகன்களுக்கும் பொறுப்பு கொடுக்கப்படுகிறது (13)

24 குருமார்களை 24 பிரிவுகளாகப் பிரிக்கிறார் (1-19)
லேவியர்களுடைய மற்ற வேலைகள் (20-31)

25 கடவுளின் ஆலயத்தில் இசைக் கலைஞர்களும் பாடகர்களும் (1-31)

26 வாயிற்காவலர்களின் பிரிவுகள் (1-19)
பொக்கிஷ அறைகளின் அதிகாரிகளும் மற்ற அதிகாரிகளும் (20-32)

27 ராஜாவுக்குச் சேவை செய்த அதிகாரிகள் (1-34)

28 ஆலயம் கட்டுவதைப் பற்றி மக்களிடம் தாவீது பேசுகிறார் (1-8)
சாலொமோனுக்கு அறிவுரை தருகிறார்; கட்டிட வரைபடத்தைக் கொடுக்கிறார் (9-21)

29 ஆலயத்துக்காக நன்கொடைகள் (1-9)
தாவீதின் ஜெபம் (10-19)
மக்கள் மகிழ்கிறார்கள்; சாலொமோன் ராஜாவாகிறார் (20-25)
தாவீது இறந்துபோகிறார் (26-30)

1 ஆதாம்,
சேத்,[a]
ஏனோஸ்,
2 கேனான்,
மகலாலெயேல்,[b]
யாரேத்,[c]
3 ஏனோக்கு,[d]
மெத்தூசலா,
லாமேக்கு,[e]
4 நோவா,[f]
சேம்,[g] காம், யாப்பேத்.[h]
5 யாப்பேத்தின் மகன்கள்: கோமர், மாகோகு, மாதாய், யாவான்,
தூபால்,[i] மேசேக்,[j] தீராஸ்.[k]
6 கோமரின் மகன்கள்: அஸ்கினாஸ், ரீப்பாத், தொகர்மா.[l]

அதி. 1
a ஆதி 4:25
b ஆதி 5:12, 15
c ஆதி 5:18
d எபி 11:5
e ஆதி 5:25, 28
f ஆதி 5:29
g ஆதி 11:10
h ஆதி 6:10
i ஏசா 66:19
j எசே 27:13
k ஆதி 10:2
l ஆதி 10:3
எசே 27:14

7 யாவானின் மகன்கள்: எலிஷா, தர்ஷீஸ், கித்தீம், ரொதானீம்.
8 காமின் மகன்கள்: கூஷ்,[a] மிஸ்ராயீம், பூத், கானான்.[b]
9 கூஷின் மகன்கள்: சிபா,[c] ஆவிலா, சப்தா, ராமாகு,[d] சப்திகா.
ராமாகுவின் மகன்கள்: சேபா, தேதான்.[e]

10 கூஷின் மகன் நிம்ரோது.[f] இந்தப் பூமியில் நிம்ரோதுதான் முதன்
முதலில் பலம்படைத்தவனாக ஆனான்.

11 மிஸ்ராயீமின் மகன்கள்: லூதீம்,[g] அனாமீம், லெகாபீம், நப்தூகீம்,[h]
12 பத்ருசீம்,[i] கஸ்லூகிம் (இவருடைய வம்சத்தார்தான் பெலிஸ்தியர்கள்),[j]
கப்தோரிம்.[k]

13 கானானின் முதல் மகன் சீதோன்.[l] இன்னொரு மகன் ஏத்;[m]
14 அதோடு எபூசியர்கள்,[n] எமோரியர்கள்,[o] கிர்காசியர்கள்,[p] **15** ஏவி
யர்கள்,[q] அர்கீயர்கள், சீநியர்கள், **16** அர்வாதியர்கள்,[r] செமாரியர்கள்,
காமாத்தியர்கள் ஆகியோருக்கும் கானான்தான் மூதாதை.

17 சேமின் மகன்கள்: ஏலாம்,[s] அஷூர்,[t] அர்பக்சாத், லூத், அராம்,
மேலும்* ஊத்ஸ், கூல், கேத்தெர், மாஸ்.[u]

18 அர்பக்சாத்தின் மகன் சேலா,[v] சேலாவின் மகன் ஏபேர்.

19 ஏபேருக்கு இரண்டு மகன்கள் பிறந்தார்கள்; ஒரு மகனின்
பெயர் பேலேகு.*[w] ஏனென்றால், அவருடைய வாழ்நாளில்தான் மக்கள்
எல்லா இடங்களுக்கும் பிரிந்துபோனார்கள். இன்னொரு மகனின் பெயர்
யொக்தான்.

20 யொக்தானின் மகன்கள்: அல்மோதாத், சாலேப், ஆசர்மாவேத்,
யேராக்,[x] **21** ஹதோராம், ஊசால், திக்லா, **22** ஓபால், அபிமாவேல்,
சேபா, **23** ஓப்பீர்,[y] ஆவிலா,[z] யோபாப்; இவர்கள் எல்லாரும் யொக்தா
னுக்குப் பிறந்தவர்கள்.

24 சேம்,
அர்பக்சாத்,
சேலா,
25 ஏபேர்,
பேலேகு,[a]
ரெகூ,[b]
26 சேரூக்,[c]
நாகோர்,[d]
தேராகு,[e]
27 ஆபிராம், அதாவது ஆபிரகாம்.[f]

28 ஆபிரகாமின் மகன்கள்: ஈசாக்கு,[g] இஸ்மவேல்.[h]

29 இவர்கள்தான் இஸ்மவேலின் வம்சத்தார்: இஸ்மவேலின் மூத்த மகன்
நெபாயோத்.[i] அவனுக்குப் பிறகு கேதார்,[j] அத்பியேல், மிப்சாம்,[k]
30 மிஷ்மா, தூமா, மாஸா, ஆதாத், தீமா, **31** யெத்தூர், நாபீஸ், கேத்மா
ஆகிய மகன்களும் இஸ்மவேலுக்குப் பிறந்தார்கள்.

32 ஆபிரகாமின் மறுமனைவி கேத்தூராள்[l] பெற்ற மகன்கள்: சிம்ரான்,
யக்ஷான், மேதான், மீதியான்,[m] இஸ்பாக், சுவாகு.[n]

1:17 *பின்வருபவை அராமின் மகன்களுடைய பெயர்கள். ஆதி 10:23-ஐப் பாருங்கள். **1:19** *அர்த்தம், “பிரிவு.”

அதி. 1
a ஏசா 11:11
b ஆதி 10:6
c சங் 72:10
d எசே 27:22
e ஆதி 10:7
f ஆதி 10:8, 9
g எரே 46:9
h ஆதி 10: 13, 14
i எசே 29:14
j யோசு 13:2, 3
k உபா 2:23 ஆமோ 9:7
l ஏசா 23:2
m ஆதி 10: 15–18
n நியா 1:21
o ஆதி 15:16 எண் 13:29 உபா 3:8
p உபா 7:1
q யோசு 9:3, 7
r எசே 27:11
s எஸ்றா 4:9
t எசே 27:23
u ஆதி 10: 22, 23
v ஆதி 11:14
w ஆதி 11:19
x ஆதி 10: 26–29
y 1ரா 9:28
z ஆதி 2:11 ஆதி 25:18
a ஆதி 11:19
b ஆதி 11:21
c ஆதி 11:23
d ஆதி 11:25
e ஆதி 11:26
f ஆதி 17:5
g ஆதி 21:3
h ஆதி 16: 11, 12
i ஆதி 28:9
j எசே 27:21
k ஆதி 25: 13–15
l ஆதி 25:1–4
m ஆதி 37:28
n யோபு 2:11

யக்ஷானின் மகன்கள்: சேபா, தேதான்.[a]
33 மீதியானின் மகன்கள்: ஏப்பா,[b] ஏப்பேர், ஆனோக்கு, அபிதா,
எல்தாகா.
இவர்கள் எல்லாரும் கேத்தூராளின் பேரன்கள்.
34 ஆபிரகாமின் மகன் ஈசாக்கு.[c] ஈசாக்கின் மகன்கள்: ஏசா,[d] இஸ்
ரவேல்.[e]
35 ஏசாவின் மகன்கள்: எலிப்பாஸ், ரெகுவேல், எயூஷ், யாலாம்,
கோராகு.[f]
36 எலிப்பாசின் மகன்கள்: தேமான்,[g] ஓமார், செப்போ, கத்தாம்,
கேனாஸ், திம்ணா, அமலேக்.[h]
37 ரெகுவேலின் மகன்கள்: நாகாத், சேராகு, சம்மா, மீசா.[i]
38 சேயீரின்[j] மகன்கள்: லோத்தான், சோபால், சிபியோன், ஆனாகு,
திஷோன், ஏத்சேர், திஷான்.[k]
39 லோத்தானின் மகன்கள்: ஓரி, ஓமாம். லோத்தானின் சகோதரி
திம்ணா.[l]
40 சோபாலின் மகன்கள்: அல்வான், மானகாத், ஏபால்,
செப்போ, ஓனாம்.
சிபியோனின் மகன்கள்: அயா, ஆனாகு.[m]
41 ஆனாகுவின் மகன்* திஷோன்.
திஷோனின் மகன்கள்: எம்தான், எஸ்பான், இத்தரான், கேரான்.[n]
42 ஏத்சேரின்[o] மகன்கள்: பில்கான், சகவான், அக்கான்.
திஷானின் மகன்கள்: ஊத்ஸ், அரான்.[p]
43 இஸ்ரவேலர்களை ராஜாக்கள் ஆட்சி செய்வதற்குமுன் ஏதோம்[q]
தேசத்தை ஆட்சி செய்த ராஜாக்களின் விவரம் இதுதான்:[r] பெயோரின்
மகன் பேலா; அவன் ஆட்சி செய்த நகரத்தின் பெயர் தின்காபா.
44 பேலா இறந்தபின், போஸ்றாவைச்[s] சேர்ந்த சேராகுவின் மகன்
யோபாப் ஆட்சிக்கு வந்தான். **45** யோபாப் இறந்த பின்பு, தேமானியர்க
ளின் தேசத்தைச் சேர்ந்த ஊசாம் ஆட்சிக்கு வந்தான். **46** ஊசாம் இறந்த
பின்பு, பேதாத்தின் மகன் ஆதாத் ஆட்சிக்கு வந்தான். அவன் மோவாப்
பிரதேசத்தில் மீதியானியர்களைத் தோற்கடித்திருந்தான். அவன் ஆட்சி
செய்த நகரத்தின் பெயர் ஆவீத். **47** ஆதாத் இறந்த பின்பு, மஸ்ரேக்கா
வைச் சேர்ந்த சம்லா ஆட்சிக்கு வந்தான். **48** சம்லா இறந்தபின், ஆற்றுக்
குப் பக்கத்தில் இருந்த ரெகொபோத்தைச் சேர்ந்த சாவூல் ஆட்சிக்கு வந்
தான். **49** சாவூல் இறந்தபின், அக்போரின் மகன் பாகால்-கானான்
ஆட்சிக்கு வந்தான். **50** பாகால்-கானான் இறந்தபின், ஆதாத் ஆட்சிக்கு
வந்தான். அவன் ஆட்சி செய்த நகரத்தின் பெயர் பாகு. அவனுடைய
மனைவியின் பெயர் மெகேதபேல்; இவள் மத்ரேத்தின் மகள், மேசகாப்பின்
பேத்தி. **51** பின்பு, ஆதாத் இறந்துபோனான்.
ஏதோமின் குலத்தலைவர்கள்: திம்ணா, ஆல்வா, ஏதேத்,[t] **52** அகோலி
பாமா, ஏலா, பினோன், **53** கேனாஸ், தேமான், மிப்சார், **54** மக்தியேல்,
இராம். இவர்கள்தான் ஏதோமின் குலத்தலைவர்கள்.

1:41 * நே.மொ., “மகன்கள்.”

அதி. 1
a ஏசா 21:13
b ஏசா 60:6
c அப் 7:8
d ஆதி 25:25
e ஆதி 32:28
f ஆதி 36:4, 5
g ஒப 9
h ஆதி 36: 11, 12
i ஆதி 36:13
j ஆதி 36:8
k ஆதி 36: 20, 21
l ஆதி 36:22
m ஆதி 36: 23, 24
n ஆதி 36: 25, 26
o 1நா 1:38
p ஆதி 36: 27, 28
q ஆதி 32:3
r ஆதி 36: 31-39
s எரே 49:13
t ஆதி 36: 40-43

2 இஸ்ரவேலின்[a] மகன்கள்: ரூபன்,[b] சிமியோன்,[c] லேவி,[d] யூதா,[e] இசக்
கார்,[f] செபுலோன்,[g] **2** தாண்,[h] யோசேப்பு,[i] பென்யமீன்,[j] நப்தலி,[k]
காத்,[l] ஆசேர்.[m]

3 யூதாவின் மகன்கள்: ஏர், ஓனேன், சேலா. இவர்கள் மூவரும் சூவா
வின் மகள் மூலம் அவருக்குப் பிறந்தவர்கள். அவள் கானான் தேசத்து
பெண்.[n] யூதாவின் மூத்த மகன் ஏர் யெகோவாவுக்குப் பிடிக்காததைச் செய்
துவந்தான், அதனால் அவர் அவனைக் கொன்றுபோட்டார். **4** யூதாவின்
மருமகள் தாமார் மூலம் அவருக்குப் பிறந்த மகன்கள்: பாரேஸ்,[o] சேராகு.
யூதாவுக்கு மொத்தம் ஐந்து மகன்கள்.

5 பாரேசின் மகன்கள்: எஸ்ரோன், ஆமூல்.[p]

6 சேராகுவின் மகன்கள்: சிம்ரி, ஏத்தான், ஏமான், கல்கோல், தர்தா.
மொத்தம் ஐந்து பேர்.

7 கர்மீயின் மகன்* ஆக்கர்;# இவன், கடவுள் அழிக்கச் சொல்லி
யிருந்த பொருள்களைத் திருடி அவருக்கு உண்மையில்லாமல் நடந்து
கொண்டான்.[q] இதனால், இஸ்ரவேலர்களுக்கு அழிவு வந்தது.

8 ஏத்தானின் மகன்* அசரியா.

9 எஸ்ரோனின் மகன்கள்: யெர்மெயேல்,[r] ராம்,[s] கெலுபா.*

10 ராமின் மகன் அம்மினதாப்; அம்மினதாபின்[t] மகன் நகசோன்.[u]
இவர் யூதா வம்சத்துக்குத் தலைவர். **11** நகசோனின் மகன் சல்மா.[v]
சல்மாவின் மகன் போவாஸ்.[w] **12** போவாசின் மகன் ஓபேத். ஓபேத்
தின் மகன் ஈசாய்.[x] **13** ஈசாயின் மூத்த மகன் எலியாப், இரண்டாம்
மகன் அபினதாப், மூன்றாம் மகன் சிமேயா,[y] **14** நான்காம் மகன் நெத
னெயேல், ஐந்தாம் மகன் ரதாயி, **15** ஆறாம் மகன் ஓத்சேம், ஏழாம்
மகன் தாவீது.[z] **16** இவர்களுடைய சகோதரிகள்: செருயா, அபிகாயில்.[a]
செருயாவின் மகன்கள்: அபிசாய்,[b] யோவாப்,[c] ஆசகேல்[d] ஆகிய மூவர்.
17 அபிகாயிலின் மகன் அமாசா.[e] இஸ்மவேலனான யெத்தேர் அமாசா
வின் தகப்பன்.

18 எஸ்ரோனின் மகன் காலேபுக்கு* அவருடைய மனைவி அசுபாள்
மூலமாகவும் எரீயோத் மூலமாகவும் மகன்கள் பிறந்தார்கள்; அவளு
டைய மகன்கள்: ஏசேர், சோபாப், அர்தோன். **19** அசுபாள் இறந்த பின்பு
எப்பிராத்[f] என்பவளை காலேப் திருமணம் செய்தார்; அவள் அவ
ருக்கு ஹூரைப்[g] பெற்றாள். **20** ஹூரின் மகன் ஊரி; ஊரியின் மகன்
பெசலெயேல்.[h]

21 கீலேயாத்தின்[i] தகப்பன் மாகீர். எஸ்ரோன் 60 வயதில் மாகீரின்[j] மக
ளைத் திருமணம் செய்து அவளோடு உறவுகொண்டார். அவள் அவருக்கு
செகூப்பைப் பெற்றாள். **22** செகூப்பின் மகன் யாவீர்;[k] கீலேயாத் பிரதே
சத்தில் 23 நகரங்கள் இவருக்குச் சொந்தமாக இருந்தன. **23** பின்பு, கேசூ
ரிலும்[l] சீரியாவிலும்[m] உள்ள மக்கள் யாவீரின் வம்சத்தாரிடமிருந்து
அவோத்-யாவீரைக்[n] கைப்பற்றினார்கள்; அதோடு, கேனாத்[o] அதன் சிற்

2:7, 8 *நே.மொ., “மகன்கள்.” **2:7** #அர்த்தம், “அழிவைக் கொண்டுவருபவன்.” யோசு 7:1-ல், ஆகான் என்றும் அழைக்கப்படுகிறான். **2:9** *18, 19, 42 வசனங்களில் காலேப் என்றும் அழைக்கப்படுகிறார். **2:18** *9-ஆம் வசனத்தில் கெலுபா என்றும் அழைக்கப்படுகிறார்.

அதி. 2
a ஆதி 32:28
b ஆதி 29:32
ஆதி 49:3, 4
c ஆதி 29:33
d ஆதி 29:34
ஆதி 49:5-7
e ஆதி 29:35
ஆதி 49:8-12
எபி 7:14
f ஆதி 30:18
g ஆதி 30:20
ஆதி 49:13
h ஆதி 49:16-18
i ஆதி 49:22-26
j ஆதி 49:27
k ஆதி 49:21
l ஆதி 49:19
m ஆதி 49:20
n ஆதி 38:2-5
o லூ 3:23, 33
p எண் 26:21
q உபா 7:26
யோசு 6:18
யோசு 22:20
r 1சா 27:10
s ரூ 4:19-21
மத் 1:3
t மத் 1:4, 5
u எண் 2:3
v லூ 3:23, 32
w ரூ 2:1
x ரூ 4:17, 22
1சா 16:1
y 1சா 16:6-10
z 1சா 16:13
1சா 17:12
மத் 1:6
a 2சா 17:25
b 2சா 21:17
2சா 23:18, 19
c 1நா 11:6
d 2சா 2:18
2சா 3:30
e 1ரா 2:5
f 1நா 4:4
g யாத் 17:12
யாத் 24:14
h யாத் 36:1
யாத் 37:1
i எண் 26:29
யோசு 17:1
j ஆதி 50:23
1நா 7:14
k உபா 3:14
l 2சா 3:3
2சா 13:38
m 2சா 8:6
n 1ரா 4:13
o எண் 32:42

அதி. 2
a ஆதி 46:12
b 1நா 4:5
c நெ 3:5
d 1நா 2:9
e யோசு 15: 20, 58 நெ 3:16
f யோசு 15: 21, 31
g யோசு 15: 20, 57

றூர்கள்* என மொத்தம் 60 நகரங்களைக் கைப்பற்றினார்கள். இவர்கள் எல்லாரும் கீலேயாத்தின் தகப்பனாகிய மாகீரின் வம்சத்தார்.

24 காலேப்-எப்பிராத்தாவில் எஸ்ரோன்[a] இறந்த பின்பு அவருடைய மனைவி அபியா அவருக்கு அசூரைப்[b] பெற்றாள்; இவர் தெக்கோவாவின்[c] தகப்பன்.*

25 எஸ்ரோனின் மூத்த மகனாகிய யெர்மெயேலின் மகன்கள்: மூத்த மகன் ராம்; பின்பு பூனா, ஓரென், ஓத்சேம், அகியா. 26 யெர்மெயேலுக்கு இன்னொரு மனைவி இருந்தாள், அவளுடைய பெயர் அத்தாராள். அவள் ஓனாமின் தாய். 27 யெர்மெயேலின் மூத்த மகனான ராமின் மகன்கள்: மாத்ஸ், யாமின், எக்கேர். 28 ஓனாமின் மகன்கள்: சம்மாய், யாதா. சம்மாயின் மகன்கள்: நாதாப், அபிசூர். 29 அபிசூரின் மனைவி அபியாயேல்; அவள் அவருக்கு அக்பானையும் மோளித்தையும் பெற்றாள். 30 நாதாபின் மகன்கள்: சேலேத், அப்பாயிம். ஆனால், சேலேத் ஆண் வாரிசு இல்லாமல் இறந்துபோனார். 31 அப்பாயிமின் மகன்* இஷி. இஷியின் மகன்* சேசான்; சேசானின் மகன்* அக்லாய். 32 சம்மாயின் சகோதரனாகிய யாதாவின் மகன்கள்: யெத்தேர், யோனத்தான். யெத்தேர் ஆண் வாரிசு இல்லாமல் இறந்துபோனார். 33 யோனத்தானின் மகன்கள்: பேலேத், சாசா. இவர்கள் யெர்மெயேலின் வம்சத்தார்.

34 சேசானுக்கு மகன்கள் இல்லை, மகள்கள் மட்டுமே இருந்தார்கள். சேசானுக்கு எகிப்திய வேலைக்காரன் ஒருவன் இருந்தான்; அவனுடைய பெயர் யர்கா. 35 சேசான் தன்னுடைய வேலைக்காரன் யர்காவுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து வைத்தார். அவள் அவனுக்கு அத்தாயைப் பெற்றாள். 36 அத்தாயின் மகன் நாத்தான். நாத்தானின் மகன் சாபாத். 37 சாபாத்தின் மகன் எப்லால். எப்லாலின் மகன் ஓபேத். 38 ஓபேத்தின் மகன் யெகூ. யெகூவின் மகன் அசரியா. 39 அசரியாவின் மகன் ஏலெஸ். ஏலெசின் மகன் எலியாசா. 40 எலியாசாவின் மகன் சிஸ்மாய். சிஸ்மாயின் மகன் சல்லூம். 41 சல்லூமின் மகன் எக்கமியா. எக்கமியாவின் மகன் எலிஷாமா.

42 யெர்மெயேலின் சகோதரனாகிய காலேபின்*[d] மகன்கள்: மூத்த மகனும் சீப்பின் தகப்பனுமாகிய மேசா, எப்ரோனின் தகப்பனாகிய மரேஷாவின் மகன்கள். 43 எப்ரோனின் மகன்கள்: கோராகு, தப்புவா, ரெக்கேம், சேமா. 44 சேமாவின் மகன் ரெஹேம். இவருடைய மகன் யோர்க்கேயாம். ரெக்கேமின் மகன் சம்மாய். 45 சம்மாயின் மகன் மாகோன், மாகோனின் மகன் பெத்-சூர்.[e] 46 காலேபின் மறுமனைவியான ஏப்பாள், ஆரானையும் மோசாவையும் காசேசையும் பெற்றாள். ஆரானின் மகன் காசேஸ். 47 யாதாயின் மகன்கள்: ரெகெம், யோதாம், கேசாம், பேலேட், ஏப்பா, சாகாப். 48 காலேபின் மறுமனைவியான மாக்காள் சேபேரையும் திர்கானாவையும் பெற்றாள். 49 பிற்பாடு அவள் மத்மன்னாவின்[f] தகப்பனாகிய சாகாபையும், மக்பேனாவுக்கும் கீபேயாவுக்கும்[g]

2:23 *வே.வா., "அதைச் சுற்றியுள்ள ஊர்கள்." **2:24** *இந்த அதிகாரத்தில் இருக்கிற சில பெயர்கள், ஆட்களைக் குறிக்காமல் இடங்களைக் குறிக்கலாம். 'தகப்பன்' என்பது அந்த நகரத்தை உருவாக்கியவரைக் குறிக்கலாம். **2:31** *நே.மொ., "மகன்கள்." **2:42** *9-ஆம் வசனத்தில் கெலுபா என்றும் அழைக்கப்படுகிறார்.

தகப்பனாகிய சேவாவையும் பெற்றாள். காலேபின்[a] மகள் அக்சாள்.[b]
50 இவர்களே காலேபின் வம்சத்தார்.

எப்பிராத்தாவின்[c] மூத்த மகனான ஹூரின்[d] மகன்கள்: கீரியாத்-
யெயாரீமின்[e] தகப்பன் சோபால், 51 பெத்லகேமின்[f] தகப்பன் சல்மா,
பெத்-காதேரின் தகப்பன் ஆரேப்பு. 52 கீரியாத்-யெயாரீமின் தகப்ப
னான சோபாலின் மகன்கள்: ஆரோவே மற்றும் மெனுகோத்தியரில் பாதிப்
பேர். 53 கீரியாத்-யெயாரீமில் இருந்த வம்சத்தார்: இத்தரியர்கள்,[g] பூகியர்
கள், சுமாத்தியர்கள், மிஸ்ராவியர்கள். இவர்களில் இருந்தே சோராத்தியர்
களும்[h] எஸ்தாவோலியர்களும்[i] வந்தார்கள். 54 சல்மாவின் வம்சத்தார்:
பெத்லகேமியர்கள்,[j] நெத்தோபாத்தியர்கள், ஆத்ரோத்-பெத்-யோவாபியர்
கள், மானகாத்தியரில் பாதிப் பேர், சோரியர்கள். 55 யாபேஷில் வசித்த
எழுத்தர்களின் வம்சத்தார்: திராத்தியர்கள், சிமாத்தியர்கள், சுக்காத்தியர்
கள். ரேகாப் வம்சத்தாரின்[k] மூதாதையான அம்மாத்தின் வழிவந்த கேனி
யர்கள்[l] இவர்களே.

3 எப்ரோனில் தாவீதுக்குப் பிறந்த மகன்கள்:[m] மூத்த மகன் அம்னோன்;[n]
யெஸ்ரயேலைச் சேர்ந்த அகினோவாம்[o] இவனைப் பெற்றாள். இரண்
டாம் மகன் தானியேல்; கர்மேலைச் சேர்ந்த அபிகாயில்[p] இவனைப் பெற்
றாள். 2 மூன்றாம் மகன் அப்சலோம்;[q] கேசூர் ராஜாவான தல்மாயின்
மகளாகிய மாக்காள் இவனைப் பெற்றாள். நான்காம் மகன் அதோனியா;[r]
ஆகீத் இவனைப் பெற்றாள். 3 ஐந்தாம் மகன் செப்பத்தியா; அபித்தாள்
இவனைப் பெற்றாள். ஆறாம் மகன் இத்ரேயாம்; தாவீதின் மனைவி எக்
லாள் இவனைப் பெற்றாள். 4 இந்த ஆறு மகன்களும் எப்ரோனில் அவ
ருக்குப் பிறந்தவர்கள்; அங்கே அவர் ஏழு வருஷம் ஆறு மாதம் ஆட்சி
செய்தார், 33 வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார்.[s]

5 எருசலேமில் அவருக்குப் பிறந்த மகன்கள்:[t] சிமேயா, சோபாப், நாத்
தான்,[u] சாலொமோன்;[v] இவர்கள் நான்கு பேரையும் அம்மியேலின் மக
ளான பத்சேபாள்[w] பெற்றாள். 6 அவருக்குப் பிறந்த மற்ற ஒன்பது மகன்
கள்: இப்பார், எலிஷாமா, எலிப்பேலேத், 7 நோகா, நெப்பேக், யப்பியா,
8 எலிஷாமா, எலியாதா, எலிப்பேலேத். 9 இவர்கள் எல்லாரும் தாவீதின்
மகன்கள்; இவர்களைத் தவிர மறுமனைவிகளின் மகன்களும் இருந்தார்கள்.
தாமார்[x] இவர்களுடைய சகோதரி.

10 சாலொமோனின் மகன் ரெகொபெயாம்;[y] ரெகொபெயாமின்
மகன் அபியா,[z] அபியாவின் மகன் ஆசா,[a] ஆசாவின் மகன் யோச
பாத்,[b] 11 யோசபாத்தின் மகன் யோராம்,[c] யோராமின் மகன் அகசியா,[d]
அகசியாவின் மகன் யோவாஸ்,[e] 12 யோவாசின் மகன் அமத்சியா,[f]
அமத்சியாவின் மகன் அசரியா,[g] அசரியாவின் மகன் யோதாம்,[h]
13 யோதாமின் மகன் ஆகாஸ்,[i] ஆகாசின் மகன் எசேக்கியா,[j] எசேக்கி
யாவின் மகன் மனாசே,[k] 14 மனாசேயின் மகன் ஆமோன்,[l] ஆமோ
னின் மகன் யோசியா.[m] 15 யோசியாவின் மகன்கள்: மூத்த மகன் யோக
னான், இரண்டாம் மகன் யோயாக்கீம்,[n] மூன்றாம் மகன் சிதேக்கியா,[o]
நான்காம் மகன் சல்லூம். 16 யோயாக்கீமின் மகன்* எகொனியா,[p] எகொ
னியாவின் மகன் சிதேக்கியா. 17 சிறைக்கைதி எகொனியாவின் மகன்
கள்: சலாத்தியேல், 18 மல்கீராம், பெதாயா, சேனாசார், எக்கமியா, ஒசாமா,

3:16 * நே.மொ., “மகன்கள்.”

அதி. 2
a 1நா 2:18
b யோசு 15:16, 17
c 1நா 2:19
d யாத் 17:12; யாத் 24:14
e யோசு 15:9, 12; 1நா 13:5
f ஆதி 35:19; யோவா 7:42
g 1நா 11:10, 40
h 1நா 4:2
i யோசு 15:20, 33
j ஆதி 35:19; மத் 2:1
k 2ரா 10:15; எரே 35:6, 19
l நியா 1:16; நியா 4:11; 1சா 15:6

அதி. 3
m 2சா 3:2-5
n 2சா 13:32
o 1சா 25:43
p 1சா 25:2, 39
q 2சா 13:28, 37; 2சா 15:10; 2சா 18:14
r 1ரா 1:5, 11; 1ரா 2:24
s 2சா 5:5
t 2சா 5:13-16; 1நா 14:3-7
u லூ 3:23, 31
v மத் 1:7
w 2சா 11:3, 27
x 2சா 13:1
y 1ரா 11:43
z 2நா 13:1
a 2நா 14:1
b 2நா 20:31
c 2நா 21:5
d 2நா 22:2
e 2நா 24:1
f 2நா 25:1
g 2ரா 14:21
h 2நா 27:1
i 2நா 28:1
j 2நா 29:1
k 2ரா 21:1
l 2ரா 21:19
m 2ரா 22:1
n 2ரா 23:34; 2நா 36:5
o 2ரா 24:17; 2நா 36:11
p 2ரா 24:6, 8; 2ரா 25:27; எஸ்தர் 2:6

நெதபியா. **19** பெதாயாவின் மகன்கள்: செருபாபேல், சீமேயி; செருபாபே
லின்[a] மகன்கள்: மெசுல்லாம், அனனியா (அவர்களுடைய சகோதரி செலோ
மித்); **20** அவருடைய மற்ற ஐந்து மகன்கள்: அசூபா, ஒகேல், பெர
கியா, அசதியா, ஊசாபேசேத். **21** அனனியாவின் மகன்கள்: பெலத்தியா,
யெசாயா; யெசாயாவின் மகன்* ரெபாயா; ரெபாயாவின் மகன்* அர்னான்;
அர்னானின் மகன்* ஒபதியா; ஒபதியாவின் மகன்* செக்கனியா; **22** செக்
கனியாவின் வம்சத்தார்: அவருடைய மகன் செமாயா, செமாயாவின் மகன்
கள் அத்தூஸ், ஈகால், பாரியா, நெயாரியா, சாப்பாத் என மொத்தம் ஆறு
பேர். **23** நெயாரியாவின் மகன்கள்: எலியோனாய், இஸ்கியா, அசரீக்காம்
ஆகிய மூன்று பேர். **24** எலியோனாயின் மகன்கள்: ஒதாவியா, எலியாசிப்,
பெலாயா, அக்கூப், யோகனான், தெலாயா, ஆனானி ஆகிய ஏழு பேர்.

4 யூதாவின் மகன்கள்: பாரேஸ்,[b] எஸ்ரோன்,[c] கர்மீ, ஹூர்,[d] சோபால்.[e]
2 சோபாலின் மகன் ராயா. ராயாவின் மகன் யாகாத்; யாகாத்தின்
மகன்கள்: அகுமாய், லாகாத். இவர்களே சோராத்தியர் வம்சத்தார்.[f] **3** ஏத்
தாமின்[g] தகப்பனுடைய* மகன்கள்: யெஸ்ரயேல், இஷ்மா, இத்பாஸ், (இவர்
களுடைய சகோதரியின் பெயர் அத்செலெல்போனி), **4** கேதோரின் தகப்
பன் பெனூவேல்; உஷாவின் தகப்பன் ஏத்சேர். இவர்கள் எப்பிராத்தாவின்
மூத்த மகனும் பெத்லகேமின்[h] தகப்பனுமான ஹூரின்[i] மகன்கள்; **5** தெக்
கோவாவின்[j] தகப்பன் அசூருக்கு[k] ஏலாள், நாராள் என இரண்டு மனைவி
கள் இருந்தார்கள். **6** நாராள் அவருக்கு அகுசாமையும் ஹேப்பேரையும்
தெமனியையும் ஆகாஸ்தாரியையும் பெற்றாள். இவர்களே நாராளின் மகன்
கள். **7** ஏலாளின் மகன்கள்: செரேத், இத்சேயார், எத்னான். **8** கோசின்
மகன்கள்: அனூப், சோபேபாகு. ஆருமின் மகன் அகர்கேலின் வம்சத்தாரு
டைய மூதாதைதான் கோஸ்.

9 யாபேஷ் தன் சகோதரர்களைவிட மதிப்பு மரியாதை பெற்றிருந்தார்;
அவருடைய தாய், "நான் ரொம்ப வேதனைப்பட்டு அவனைப் பெற்றேன்"
என்று சொல்லி அவருக்கு யாபேஷ்* என்று பெயர் வைத்தாள்.
10 யாபேஷ் இஸ்ரவேலின் கடவுளிடம், "என்னை ஆசீர்வதியுங்கள், என்
எல்லைகளை விரிவாக்குங்கள், உங்களுடைய கை எப்போதும் எனக்கு
உதவி செய்யட்டும், கஷ்டங்களால் எனக்கு எந்தப் பாதிப்பும் வராமல்
பார்த்துக்கொள்ளுங்கள்!" என்று வேண்டினார். அவர் வேண்டிக்கொண்டப
டியே கடவுள் அவருக்கு உதவினார்.

11 சூகாவின் சகோதரனாகிய கேலூபின் மகன் மேகீர்; மேகீரின்
மகன் எஸ்தோன். **12** எஸ்தோனின் மகன்கள்: பெத்ராபா, பசெயா,
தெகினா; தெகினாவின் மகன் இர்-நாகாஷ். இவர்களே ரேகாவில் வாழ்ந்
தவர்கள். **13** கேனாசின் மகன்கள்: ஒத்னியேல்,[l] செராயா; ஒத்னியேலின்
மகன்* ஹாத்தாத். **14** மெயோனத்தாயின் மகன் ஒப்ரா. செராயாவின்
மகன் யோவாப்; யோவாப் கெ-ஹாரஷிமின்* தகப்பன்; அவர்கள் கைத்
தொழிலாளிகளாக இருந்ததால் இந்தப் பெயர் வந்தது.

அதி. 3
a எஸ்றா 5:2; மத் 1:12; லூ 3:23, 27

அதி. 4
b ஆதி 38:29; எண் 26:20; ரூ 4:18; மத் 1:3
c ஆதி 46:12; 1நா 2:5
d யாத் 17:12; யாத் 24:14; 1நா 2:19
e 1நா 2:50
f 1நா 2:53
g 2நா 11:5, 6
h மீ 5:2
i 1நா 2:19
j 2நா 11:5, 6
k 1நா 2:24
l யோசு 15:16, 17; நியா 3:9, 11

3:21; 4:13 *நே.மொ., "மகன்கள்." **4:3** *இந்த அதிகாரத்தில் இருக்கிற சில பெயர்கள், ஆட்களைக் குறிக்காமல் இடங்களைக் குறிக்கலாம். 'தகப்பன்' என்பது அந்த நகரத்தை உருவாக்கியவரைக் குறிக்கலாம். **4:9** *யாபேஷ் என்ற பெயர், "வேதனை" என்பதற்குரிய எபிரெய வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். **4:14** *அர்த்தம், "கைத்தொழிலாளிகளின் பள்ளத்தாக்கு."

15 எப்புன்னேயின் மகனான காலேபின்[a] மகன்கள்: ஈரு, ஏலா, நாகாம்.
ஏலாவின் மகன் கேனாஸ். **16** எகலெலேலின் மகன்கள்: சீப், சீப்பா,
திரியா, அசாரெயேல். **17** எஸ்ராகுவின் மகன்கள்: யெத்தேர், மேரேத்,
ஏப்பேர், யாலோன். அவள்* கர்ப்பமாகி மிரியாம், சம்மாய், இஸ்பா ஆகி
யோரைப் பெற்றாள். இஸ்பா எஸ்தெமொவாவின் தகப்பன். **18** (அவரு
டைய யூத மனைவி, யெரேத்தையும் ஹேபெரையும் எக்குத்தியேலையும்
பெற்றாள்; யெரேத், கேதோரின் தகப்பன்; ஹேபெர், சோகோவின் தகப்பன்;
எக்குத்தியேல் சனோவாவின் தகப்பன்.) இவர்களே பார்வோனின் மகளான
பித்தியாளின் மகன்கள். இவளை மேரேத் திருமணம் செய்திருந்தார்.

19 ஒதியாவின் மனைவியுடைய, அதாவது நாஹாமின் சகோதரியு
டைய, மகன்கள்: கர்மியருடைய கேகிலாவின் தகப்பன், மாகாத்தியரு
டைய எஸ்தெமொவாவின் தகப்பன். **20** ஷீமோனின் மகன்கள்: அம்
னோன், ரின்னா, பென்-கானான், தீலோன். இஷியின் மகன்கள்: சோகேத்,
பென்-சோகேத்.

21 யூதாவின் மகனான சேலாவின்[b] மகன்கள்: லேக்காவின் தகப்பன்
ஏர், மரேஷாவின் தகப்பன் லாதா, அஸ்பெயாவின் குடும்பத்தார், அதா
வது உயர்தர துணிகளை நெய்த தொழிலாளர் குடும்பத்தார், **22** யோக்
கீம், கோசேபாவைச் சேர்ந்த ஆண்கள், யசுபி-லெகேம், மோவாபியப்
பெண்களை மணந்த யோவாஸ், சாராப். இந்தத் தகவல் பழங்காலப் பதிவுக
ளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. **23** இவர்கள் குயவர்கள். நெத்தாயிமிலும்
கெதேராவிலும் குடியிருந்து ராஜாவுக்காக வேலை பார்த்தார்கள்.

24 சிமியோனின் மகன்கள்:[c] நேமுவேல், யாமின், யாரிப், சேராகு,
சாவூல்.[d] **25** சாவூலின் மகன் சல்லூம், சல்லூமின் மகன் மிப்சாம், மிப்
சாமின் மகன் மிஷ்மா. **26** மிஷ்மாவின் மகன்கள்: அம்முவேல், அம்மு
வேலின் மகன் சக்கூர், சக்கூரின் மகன் சீமேயி. **27** சீமேயிக்கு 16 மகன்க
ளும் 6 மகள்களும் இருந்தார்கள்; ஆனால், அவருடைய சகோதரர்களுக்கு
நிறைய மகன்கள் இல்லை. அவர்களுடைய வம்சம் யூதா வம்சத்தைப்[e]
போல் பெருகவில்லை. **28** அவர்கள் பெயெர்-செபா,[f] மொலாதா,[g] ஆத்
சார்-சுவால்,[h] **29** பில்கா, ஆத்சேம்,[i] தோலாத், **30** பெத்துவேல்,[j]
ஓர்மா,[k] சிக்லாகு,[l] **31** பெத்-மார்காபோத், ஆத்சார்-சூசிம்,[m] பெத்-பிரி,
சாராயிம் ஆகிய இடங்களில் வாழ்ந்தார்கள். தாவீதின் ஆட்சி தொடங்கும்
வரை இவையே அவர்களுடைய நகரங்கள்.

32 அவர்கள் குடியிருந்த பகுதிகள்: ஏத்தாம், ஆயின், ரிம்மோன்,
தோகேன், ஆசான்[n] ஆகிய ஐந்து நகரங்கள்; **33** அந்த நகரங்களைச் சுற்
றியிருந்த கிராமங்கள், பாகால் நகரம்வரை இருந்த கிராமங்கள். அவர்களு
டைய வம்சாவளிப் பட்டியலும் அவர்கள் வசித்த இடங்களும்
இவையே. **34** சிமியோனின் வம்சத்தைச் சேர்ந்த தலைவர்கள்: மெசோ
பாப், யம்லேக், அமத்சியாவின் மகன் யோஷா, **35** யோவேல், ஆசியே
லின் மகனாகிய செராயாவின் பேரனும் யோசிபியாவின் மகனுமாகிய யெகூ,
36 எலியோனாய், யாக்கோபா, யெசொகாயா, அசாயா, ஆதியேல், யெசிமி
யேல், பெனாயா, **37** செமாயாவின் மகனான ஷிம்ரிக்குப் பிறந்த யெதாயா
வுடைய கொள்ளுப்பேரனும் அல்லோனின் பேரனும் சீப்பியின் மகனுமான
சீசா; **38** இந்தப் பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்கள் தங்களு

4:17 * அநேகமாக 18-ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுகிற பித்தியாளாக இருக்கலாம்.

அதி. 4
a எண் 32:11, 12 யோசு 15:13
b ஆதி 38:2, 5 எண் 26:20
c ஆதி 46:10
d எண் 26:12, 13
e எண் 26:22
f யோசு 19:1, 2
g யோசு 15: 21, 26
h யோசு 15: 21, 28 யோசு 19:1, 3 நெ 11:25-27
i யோசு 15: 21, 29
j யோசு 19:1, 4
k நியா 1:17
l யோசு 15: 20, 31 யோசு 19:1, 5 1சா 27:5, 6
m யோசு 19:1, 5
n யோசு 19:1, 7

டைய வம்சத்துக்குத் தலைவர்களாக இருந்தார்கள்; இவர்களுடைய தந்தைவ
ழிக் குடும்பத்தார் ஏராளமாகப் பெருகினார்கள். **39** தங்களுடைய மந்தைக
ளுக்கு மேய்ச்சல் நிலங்களைத் தேடி கேதோரின் நுழைவாசல்வரை,
பள்ளத்தாக்கின் கிழக்குப் பக்கம்வரை, இவர்கள் போனார்கள். **40** கடைசி
யில், செழிப்பான நல்ல மேய்ச்சல் நிலங்களைப் பார்த்தார்கள். அந்தப் பிர
தேசம் பரந்து விரிந்திருந்தது, அமைதியாக இருந்தது, எதிரிகளின் தொல்லை
இல்லாமல் இருந்தது. முன்பு காமின் வம்சத்தார்[a] அங்கே வாழ்ந்துவந்தார்
கள். **41** இந்தப் பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்கள் யூதாவை
ஆண்ட எசேக்கியா[b] ராஜாவின் காலத்தில் அங்கே போய் காமின் வம்சத்
தாருடைய கூடாரங்களையும் அங்கிருந்த மெயூனீம் மக்களையும் அழித்துப்
போட்டார்கள்; ஒருவரைக்கூட விட்டுவைக்கவில்லை. மந்தைகளுக்கு மேய்ச்
சல் நிலங்கள் இருந்ததால், இவர்கள் அங்கே குடியேறினார்கள்.

42 சிமியோனியர்களில் சிலர், அதாவது 500 பேர், இஷியின் மகன்களா
கிய பெலத்தியா, நெயாரியா, ரெபாயா, ஊசியேல் ஆகியோரின் தலைமை
யில் சேயீர் மலைப்பகுதிக்குப்[c] போனார்கள். **43** அங்கே தப்பித்து
வந்திருந்த அமலேக்கியர்களை அவர்கள் வெட்டி வீழ்த்தினார்கள்;[d] இந்
நாள்வரை அங்கே வாழ்ந்துவருகிறார்கள்.

5 இஸ்ரவேலின் மூத்த மகன் ரூபன்.[e] ஆனால், அவர் தன்னுடைய அப்
பாவின் படுக்கையைக் களங்கப்படுத்தியதால்[f] மூத்த மகனின் உரிமை
இஸ்ரவேலின் மகனாகிய யோசேப்பின் மகன்களுக்குக்[g] கொடுக்கப்பட்
டது. அதனால், வம்சாவளிப் பட்டியலில் ரூபன் மூத்த மகனாகக் குறிப்பி
டப்படவில்லை. **2** யூதா[h] தன்னுடைய சகோதரர்களைவிட உயர்ந்தவராக
இருந்தார், வருங்காலத் தலைவர் அவருடைய வம்சத்தில்தான் வரவி
ருந்தார்;[i] இருந்தாலும், மூத்த மகனின் உரிமை யோசேப்புக்கே கிடைத்
தது. **3** இஸ்ரவேலின் மூத்த மகனாகிய ரூபனின் மகன்கள்: ஆனோக்கு,
பல்லூ, எஸ்ரோன், கர்மீ.[j] **4** யோவேலின் மகன் செமாயா; செமாயாவின்
மகன் கோகு; கோகுவின் மகன் சீமேயி, **5** சீமேயியின் மகன் மீகா, மீகா
வின் மகன் ராயா; ராயாவின் மகன் பாகால், **6** பாகாலின் மகன் பீராகு;
இவரை அசீரிய ராஜாவாகிய தில்காத்-பில்நேசர்[k] சிறைபிடித்துக்கொண்டு
போனான்; ரூபன் கோத்திரத்தில் இவரும் ஒரு தலைவர். **7** வம்சாவளிப்
பட்டியலில் குடும்பம்வாரியாகக் குறிப்பிடப்பட்ட அவருடைய சகோதரர்
கள்: தலைவர் எயியேல், சகரியா, **8** யோவேலின் மகனாகிய சேமாவின்
பேரனும் ஆசாசின் மகனுமாகிய பேலா; இவருடைய வம்சத்தார் ஆரோ
வேரில்[l] குடியிருந்தார்கள், நேபோ, பாகால்-மெயோன்[m] வரையிலும் குடியி
ருந்தார்கள். **9** கிழக்குப் பகுதியில் யூப்ரடிஸ்* ஆற்றின் அருகே இருக்கிற
வனாந்தரத்தின் எல்லைவரை குடியிருந்தார்கள்.[n] ஏனென்றால், கீலேயாத்
பிரதேசத்தில்[o] இருந்தபோது அவர்களுடைய கால்நடைகள் ஏராளமாய்ப்
பெருகியிருந்தன. **10** சவுலின் காலத்தில், அவர்கள் ஆகாரியர்களோடு
போர் செய்து, அவர்களைத் தோற்கடித்தார்கள். அதன் பின்பு, கீலேயாத்
தின் கிழக்குப் பகுதியெங்கும் இருந்த ஆகாரியர்களின் கூடாரங்களில் குடி
யிருந்தார்கள்.

11 காத் வம்சத்தார் இவர்களுக்கு அருகே பாசான் பிரதேசத்தில், சல்கா[p]
நகரம்வரை குடியிருந்தார்கள். **12** பாசானில், யோவேல் தலைவராக

5:9 * அதாவது, "ஐப்பிராத்து."

அதி. 4
a ஆதி 10:6, 20
b 2நா 29:1
c ஆதி 36:8
d யாத் 17:14, 16; 1சா 15:7

அதி. 5
e ஆதி 29:32; ஆதி 49:3, 4
f ஆதி 35:22
g ஆதி 49: 22, 26; யோசு 14:4
h ஆதி 49:8, 10; எண் 2:3; எண் 10:14; நியா 1:1, 2; சங் 60:7
i மத் 2:6; எபி 7:14
j ஆதி 46:9; யாத் 6:14
k 2ரா 16:7
l உபா 2:36
m எண் 32: 34, 38; யோசு 13: 15, 17; எசே 25:9, 10
n ஆதி 15:18; உபா 1:7; யோசு 1:4; 2சா 8:3
o யோசு 22:9
p உபா 3:8, 10; யோசு 12:4, 5

இருந்தார். அவருக்கு அடுத்த இடத்தில் சாப்பாம் இருந்தார்; யானாயும் சாப்
பாத்தும்கூட தலைவர்களாக இருந்தார்கள். **13** அவர்களுடைய தந்தைவ
ழிக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள்: மிகாவேல், மெசுல்லாம், சேபா,
யொராய், யாக்கான், சீயா, ஏபேர் என மொத்தம் ஏழு பேர். **14** இவர்கள்
ஹூரியின் மகனாகிய அபியாயேலின் மகன்கள்; யெரொவாவின் மகன்
ஹூரி, கீலேயாத்தின் மகன் யெரொவா, மிகாவேலின் மகன் கீலேயாத், எசி
சாயின் மகன் மிகாவேல், யாதோவின் மகன் எசிசாய், பூசின் மகன் யாதோ.
15 கூனியின் மகனாகிய அப்தியேலுக்குப் பிறந்த அகி அவர்களுடைய
தந்தைவழிக் குடும்பத் தலைவராக இருந்தார். **16** இவர்கள் கீலேயாத்தி
லும்[a] பாசானிலும்[b] அவற்றின் சிற்றூர்களிலும்* சாரோன் மேய்ச்சல் நிலங்
களின் எல்லைவரையிலும் குடியிருந்தார்கள். **17** யூதாவின் ராஜாவாகிய
யோதாம்[c] காலத்திலும் இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாம்*[d]
காலத்திலும் இவர்கள் எல்லாருடைய பெயர்களும் வம்சாவளிப் பட்டியலில்
பதிவு செய்யப்பட்டன.

18 ரூபன் கோத்திரத்திலும் காத் கோத்திரத்திலும் மனாசேயின்
பாதிக் கோத்திரத்திலும் இருந்த மாவீரர்கள் மொத்தம் 44,760 பேர்; எல்லா
ரும் கேடயமும் வாளும் வில்லும் ஏந்திய வீரர்கள், போர்ப் பயிற்சி
பெற்றவர்கள். **19** ஆகாரியர்களோடும்[e] யெத்தூர், நாபீஸ்,[f] நோதாப் வம்
சத்தாரோடும் அவர்கள் போர் செய்தார்கள். **20** அப்படிப் போர் செய்த
போது அவர்களுக்குக் கடவுளுடைய உதவி கிடைத்தது; அதனால்,
ஆகாரியர்களையும் அவர்களோடு இருந்த அத்தனை பேரையும் ஜெயித்
தார்கள். ஏனென்றால், போரின்போது கடவுளிடம் அவர்கள் உதவி கேட்டுக்
கெஞ்சினார்கள், அவர்மேல் நம்பிக்கை வைத்தார்கள்; அதனால், கடவுள்
அவர்களுடைய மன்றாட்டைக் கேட்டு உதவி செய்தார்.[g] **21** ஆகாரியர்
களுடைய கால்நடைகளை, அதாவது 50,000 ஒட்டகங்களையும் 2,50,000
செம்மறியாடுகளையும் 2,000 கழுதைகளையும், பிடித்துக்கொண்டு வந்தார்
கள். அதோடு 1,00,000 ஆட்களையும் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு வந்
தார்கள். **22** அவர்களுக்காக உண்மைக் கடவுள் போர் செய்ததால்,
ஏராளமான ஆட்களை வெட்டி வீழ்த்தினார்கள்.[h] சிறைபிடிக்கப்பட்டுப்
போகும்வரை அவர்கள் அங்கேயே குடியிருந்தார்கள்.[i]

23 மனாசேயின் பாதிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்,[j] பாசான் பிரதே
சம்முதல் பாகால்-எர்மோன், செனீர், எர்மோன் மலைவரை[k] குடியிருந்தார்
கள். அவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாய் இருந்தது. **24** அவர்
களுடைய தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள்: ஏப்பேர், இஷி, ஏலியேல்,
அசரியேல், எரேமியா, ஒதாவியா, யாதியேல்; இவர்கள் மாவீரர்களாக,
புகழ்பெற்றவர்களாக, தந்தைவழிக் குடும்பத் தலைவர்களாக இருந்தார்கள்.
25 தங்களுடைய கண் முன்னால் கடவுள் அழித்த மற்ற தேசத்தாருடைய
தெய்வங்களை மக்கள் வணங்கினார்கள்;* இப்படித் தங்களுடைய முன்
னோர்களின் கடவுளுக்குத் துரோகம் செய்தார்கள்.[l] **26** அதனால், ரூபன்
கோத்திரத்தாரையும் காத் கோத்திரத்தாரையும் மனாசேயின் பாதிக் கோத்
திரத்தாரையும் அசீரிய ராஜாவாகிய பூல் (அதாவது, அசீரிய ராஜாவாகிய

5:16 *வே.வா, "அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும்." **5:17** *அதாவது, "இரண்டாம் யெரொபெயாம்." **5:25** *வே.வா., "தெய்வங்களோடு விபச்சாரம் செய்தார்கள்." மற்ற தேசத்தாரின் தெய்வச் சிலைகளை வணங்குவதை இது குறிக்கிறது.

அதி. 5

a எண் 32:1

b உபா 3:3, 13
உபா 32:14

c 2ரா 15:32
2நா 27:1
ஏசா 1:1
ஓசி 1:1
மீ 1:1

d 2ரா 14:16, 28

e 1நா 5:10

f ஆதி 25:13, 15
1நா 1:31

g சங் 20:7
சங் 22:4

h யோசு 10:42
1சா 17:45, 47
2நா 20:15

i 2ரா 15:29
2ரா 17:6

j யோசு 13:29, 30

k உபா 4:47, 48

l உபா 5:7-9
நியா 2:17
நியா 8:33
2ரா 17:10, 11

தில்காத்-பில்நேசர்)[a] சிறைபிடித்துக்கொண்டு போனான்; இஸ்ரவேலின் கட
வுள்தான் அவன் மனதில் இந்த எண்ணத்தை ஏற்படுத்தினார்;[b] சிறைபிடித்த
மக்களை ஆலா, ஆபோர், ஆரா ஆகிய இடங்களுக்கும் கோசான் ஆற்
றுப்பகுதிக்கும்[c] அவன் கொண்டுபோனான். இன்றுவரை அவர்கள் அங்கே
தான் குடியிருக்கிறார்கள்.

6 லேவியின் மகன்கள்:[d] கெர்சோன், கோகாத்,[e] மெராரி.[f] **2** கோகாத்
தின் மகன்கள்: அம்ராம், இத்சேயார்,[g] எப்ரோன், ஊசியேல்.[h] **3** அம்
ராமின்[i] பிள்ளைகள்:* ஆரோன்,[j] மோசே,[k] மிரியாம்.[l] ஆரோனின் மகன்
கள்: நாதாப், அபியூ,[m] எலெயாசார்,[n] இத்தாமார்.[o] **4** எலெயாசாரின் மகன்
பினெகாஸ்;[p] பினெகாசின் மகன் அபிசுவா. **5** அபிசுவாவின் மகன் புக்கி;
புக்கியின் மகன் உசீ. **6** உசீயின் மகன் செராகியா; செராகியாவின் மகன்
மெராயோத். **7** மெராயோத்தின் மகன் அமரியா; அமரியாவின் மகன்
அகிதூப்.[q] **8** அகிதூப்பின் மகன் சாதோக்;[r] சாதோக்கின் மகன் அகிமாஸ்.[s]
9 அகிமாசின் மகன் அசரியா; அசரியாவின் மகன் யோகனான். **10** யோக
னானின் மகன் அசரியா. எருசலேமில் சாலொமோன் கட்டிய ஆலயத்தில்
அவர் குருவாகச் சேவை செய்தார்.

11 அசரியாவின் மகன் அமரியா; அமரியாவின் மகன் அகிதூப்.
12 அகிதூப்பின் மகன் சாதோக்;[t] சாதோக்கின் மகன் சல்லூம். **13** சல்லூ
மின் மகன் இல்க்கியா;[u] இல்க்கியாவின் மகன் அசரியா. **14** அசரியா
வின் மகன் செராயா;[v] செராயாவின் மகன் யோசதாக்.[w] **15** யெகோவா,
நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்தி யூதா மக்களையும் எருசலேம் மக்களை
யும் சிறைபிடித்துக்கொண்டு போனபோது, யோசதாக்கும் கொண்டுபோகப்
பட்டார்.

16 லேவியின் மகன்கள்: கெர்சோம்,* கோகாத், மெராரி. **17** கெர்சோ
மின் மகன்களுடைய பெயர்கள்: லிப்னி, சீமேயி.[x] **18** கோகாத்தின் மகன்
கள்: அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல்.[y] **19** மெராரியின் மகன்
கள்: மகேலி, மூசி.

லேவியர்களின் முன்னோர்களும் அவர்களின் குடும்பங்களும்:[z]
20 கெர்சோமின் வம்சத்தில் வந்தவர்கள்:[a] அவருடைய மகன் லிப்னி,
லிப்னியின் மகன் யாகாத், யாகாத்தின் மகன் சிம்மா, **21** சிம்மாவின் மகன்
யோவா; யோவாவின் மகன் இத்தோ; இத்தோவின் மகன் சேராகு; சேராகு
வின் மகன் யாத்திராய்; **22** கோகாத்தின் வம்சத்தில் வந்தவர்கள்: அவரு
டைய மகன் அம்மினதாப், அம்மினதாபின் மகன் கோராகு,[b] கோராகுவின்
மகன் ஆசீர், **23** ஆசீரின் மகன் எல்க்கானா; எல்க்கானாவின் மகன் எபி
யாசாப்,[c] எபியாசாப்பின் மகன் ஆசீர், **24** ஆசீரின் மகன் தாகாத், தாகாத்
தின் மகன் ஊரியேல், ஊரியேலின் மகன் உசியா, உசியாவின் மகன்
சாவூல். **25** எல்க்கானாவின் மகன்கள்: அமாசாய், ஆகிமோத். **26** எல்க்
கானாவின் வம்சத்தில் வந்தவர்கள்: அவருடைய மகன் சோபாய், சோபா
யின் மகன் நாகாத், **27** நாகாத்தின் மகன் எலியாப், எலியாபின் மகன்
எரோகாம், எரோகாமின் மகன் எல்க்கானா.[d] **28** சாமுவேலின்[e] மகன்கள்:
மூத்த மகன் யோவேல், இரண்டாம் மகன் அபியா.[f] **29** மெராரியின் வம்
சத்தில் வந்தவர்கள்: அவருடைய மகன் மகேலி,[g] மகேலியின் மகன் லிப்னி,

---

6:3 *நே.மொ., “மகன்கள்.” **6:16** *வசனம் 1-ல் கெர்சோன் என்றும் அழைக்கப்படுகிறார்.

அதி. 5
a 2ரா 15:19, 29
b எஸ்றா 1:1; நீதி 21:1
c 2ரா 17:6; 2ரா 18:11

அதி. 6
d ஆதி 29:34; யாத் 6:16
e யாத் 6:18; எண் 3:27
f எண் 3:17; எண் 26:57
g யாத் 6:21
h யாத் 6:22; லேவி 10:4
i யாத் 6:20
j 1நா 23:13
k யாத் 6:26; அப் 7:37, 38
l யாத் 15:20
m யாத் 24:1; லேவி 10:1
n எண் 3:32; உபா 10:6
o யாத் 6:23; யாத் 28:1; எண் 4:28; 1நா 24:2, 4
p யாத் 6:25; எண் 25:11
q 2சா 8:17
r 1ரா 1:8; 1ரா 2:35
s 2சா 15:27, 36
t நெ 11:11
u 2நா 34:14
v 2ரா 25:18
w ஆகா 1:1
x எண் 3:18
y எண் 3:19, 20
z எண் 26:57
a எண் 3:18
b எண் 16:1, 32; எண் 26:10, 11; யூ 11
c யாத் 6:24
d 1சா 1:1
e 1சா 1:20
f 1சா 8:1, 2
g யாத் 6:19; 1நா 23:21

லிப்னியின் மகன் சீமேயி, சீமேயியின் மகன் ஊசா, **30** ஊசாவின் மகன்
சிமேயா, சிமேயாவின் மகன் ஹகியா, ஹகியாவின் மகன் அசாயா.

31 யெகோவாவின் வீட்டில் ஒப்பந்தப் பெட்டியை வைத்த பின்பு, பாட
கர்களுக்குத் தலைவர்களாகச் சிலரை தாவீது நியமித்தார்.[a] **32** வழிபாட்டுக்
கூடாரமாகிய சந்திப்புக் கூடாரத்தில் பாடப்படும் பாடல்களுக்கு இவர்கள்
தான் பொறுப்பு. எருசலேமில் யெகோவாவுக்கு ஓர் ஆலயத்தை சாலொ
மோன் கட்டும்வரை[b] தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை அவர்கள்
செய்துவந்தார்கள்.[c] **33** தங்களுடைய மகன்களுடன் சேர்ந்து சேவை செய்
தவர்கள் இவர்களே: கோகாத்தியர்களில் பாடகர் ஏமான்;[d] இவருடைய தகப்
பன் யோவேல்,[e] யோவேலின் தகப்பன் சாமுவேல், **34** சாமுவேலின் தகப்
பன் எல்க்கானா,[f] எல்க்கானாவின் தகப்பன் எரோகாம், எரோகாமின்
தகப்பன் ஏலியேல், ஏலியேலின் தகப்பன் தோவா, **35** தோவாவின் தகப்
பன் சூப், சூப்பின் தகப்பன் எல்க்கானா, எல்க்கானாவின் தகப்பன் மகாத்,
மகாத்தின் தகப்பன் அமாசாய், **36** அமாசாயின் தகப்பன் எல்க்கானா,
எல்க்கானாவின் தகப்பன் யோவேல், யோவேலின் தகப்பன் அசரியா, அச
ரியாவின் தகப்பன் செப்பனியா, **37** செப்பனியாவின் தகப்பன் தாகாத்,
தாகாத்தின் தகப்பன் ஆசீர், ஆசீரின் தகப்பன் எபியாசாப், எபியாசாப்
பின் தகப்பன் கோராகு. **38** கோராகுவின் தகப்பன் இத்சேயார், இத்சேயா
ரின் தகப்பன் கோகாத், கோகாத்தின் தகப்பன் லேவி, லேவியின் தகப்பன்
இஸ்ரவேல்.

39 ஏமானின் வலது பக்கத்தில் அவருடைய சகோதரரான ஆசாப்[g]
நிற்பார்; ஆசாப்பின் தகப்பன் பெரகியா, பெரகியாவின் தகப்பன் சிமேயா.
40 சிமேயாவின் தகப்பன் மிகாவேல், மிகாவேலின் தகப்பன் பாசெயா,
பாசெயாவின் தகப்பன் மல்கீயா, **41** மல்கீயாவின் தகப்பன் எத்னி, எத்னி
யின் தகப்பன் சேராகு, சேராகுவின் தகப்பன் அதாயா, **42** அதாயா
வின் தகப்பன் ஏத்தான், ஏத்தானின் தகப்பன் சிம்மா, சிம்மாவின் தகப்பன்
சீமேயி. **43** சீமேயியின் தகப்பன் யாகாத், யாகாத்தின் தகப்பன் கெர்சோம்,
கெர்சோமின் தகப்பன் லேவி.

44 ஏமானின் இடதுபக்கத்தில் அவருடைய சகோதரரான ஏத்தான் நிற்
பார்; இவர் மெராரி வம்சத்தைச்[h] சேர்ந்தவர்; ஏத்தானின்[i] தகப்பன் கிஷி,
கிஷியின் தகப்பன் அப்தி, அப்தியின் தகப்பன் மல்லூக், **45** மல்லூக்கின்
தகப்பன் அஷபியா, அஷபியாவின் தகப்பன் அமத்சியா, அமத்சியாவின்
தகப்பன் இல்க்கியா, **46** இல்க்கியாவின் தகப்பன் அம்சி, அம்சியின் தகப்
பன் பானி, பானியின் தகப்பன் சேமேர், **47** சேமேரின் தகப்பன் மகேலி,
மகேலியின் தகப்பன் மூசி, மூசியின் தகப்பன் மெராரி, மெராரியின் தகப்
பன் லேவி.

48 இவர்களுடைய சகோதரர்களான மற்ற லேவியர்கள் வழிபாட்டுக்
கூடாரத்திலிருந்த, அதாவது உண்மைக் கடவுளின் வீட்டிலிருந்த, வேலை
கள் அனைத்தையும் செய்வதற்கு நியமிக்கப்பட்டார்கள்.[j] **49** ஆரோனும்
அவருடைய மகன்களும்[k] தகன பலிக்கான பலிபீடத்தில் பலிகளை
எரித்து[l] புகை எழும்பிவரச் செய்தார்கள்; தூபப்பொருளைத் தூபபீடத்தில்
எரித்தார்கள்;[m] மகா பரிசுத்த பொருள்கள் சம்பந்தமான எல்லா வேலைக
ளையும் செய்தார்கள், இஸ்ரவேலர்களுக்காகப் பாவப் பரிகாரம் செய்தார்
கள்,[n] இவை எல்லாவற்றையும் உண்மைக் கடவுளின் ஊழியரான மோசே
கட்டளையிட்டபடியே செய்தார்கள். **50** ஆரோனின் வம்சத்தார்:[o] அவ

அதி. 6
a 2சா 6:17; 1நா 15:16
b 1ரா 6:14
c 2நா 35:15
d 1நா 15:16, 17
e 1சா 8:1, 2
f 1சா 1:1
g 1நா 25:1; 2நா 5:12; சங் 50:மே.கு.
h 1நா 23:6
i 1நா 15:16, 17
j எண் 3:5-7
k யாத் 28:1; எண் 3:10
l யாத் 29:38
m யாத் 30:7
n யாத் 30:10; லேவி 4:20; லேவி 17:11; 2நா 29:24
o யாத் 6:23

ருடைய மகன் எலெயாசார்,[a] எலெயாசாரின் மகன் பினெகாஸ், பினெகா
சின் மகன் அபிசுவா, **51** அபிசுவாவின் மகன் புக்கி, புக்கியின் மகன் உசீ,
உசீயின் மகன் செராகியா, **52** செராகியாவின் மகன் மெராயோத், மெரா
யோத்தின் மகன் அமரியா, அமரியாவின் மகன் அகிதூப்,[b] **53** அகிதூப்
பின் மகன் சாதோக், சாதோக்கின்[c] மகன் அகிமாஸ்.

54 லேவியர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் முகாம்போட்டி
ருந்தார்கள். அவர்கள் தங்கியிருந்த இடங்கள் இவையே: ஆரோனின் வம்
சத்தில் வந்த கோகாத்தியர்களுக்கு முதல் குலுக்கல் விழுந்தது. **55** அதன்
படி, யூதா பிரதேசத்தில் எப்ரோனும் அதைச் சுற்றியுள்ள மேய்ச்சல்
நிலங்களும் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.[d] **56** ஆனால், அந்த நக
ரத்தைச் சேர்ந்த காட்டுவெளிகளும் அதன் கிராமங்களும் எப்புன்னே
யின் மகன் காலேபுக்குக் கொடுக்கப்பட்டன.[e] **57** ஆரோனின் வம்சத்தா
ருக்கு அடைக்கல நகரங்களான*[f] எப்ரோனும்,[g] அதோடு, லிப்னாவும்[h]
அதன் மேய்ச்சல் நிலங்களும், யாத்தீரும்,[i] எஸ்தெமொவாவும் அதன் மேய்ச்
சல் நிலங்களும்,[j] **58** ஈலேனும் அதன் மேய்ச்சல் நிலங்களும், தெபீரும்[k]
அதன் மேய்ச்சல் நிலங்களும், **59** ஆசானும்[l] அதன் மேய்ச்சல் நிலங்க
ளும், பெத்-ஷிமேசும்[m] அதன் மேய்ச்சல் நிலங்களும் கொடுக்கப்பட்டன;
60 ஆரோனின் வம்சத்தாருக்கு பென்யமீன் கோத்திரத்தார் கொடுத்த இடங்
கள்: கெபாவும்[n] அதன் மேய்ச்சல் நிலங்களும், அலெமேத்தும் அதன்
மேய்ச்சல் நிலங்களும், ஆனதோத்தும்[o] அதன் மேய்ச்சல் நிலங்களும்.
மொத்தம் 13 நகரங்கள் அவர்களுடைய வம்சத்தாருக்குக் கிடைத்தன.[p]

61 கோகாத்தியர்களான மற்றவர்களுக்கு 10 நகரங்கள் கொடுக்கப்பட்
டன;* இன்னொரு கோத்திரத்தைச் சேர்ந்த குடும்பத்துக்கும், மனாசேயின்
பாதிக் கோத்திரத்தாருக்கும் ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து இவை கொடுக்கப்
பட்டன.[q]

62 கெர்சோம் வம்சத்தைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கு 13 நகரங்
கள் கொடுக்கப்பட்டன; இசக்கார் கோத்திரத்துக்கும் ஆசேர் கோத்திரத்துக்
கும் நப்தலி கோத்திரத்துக்கும் பாசானிலுள்ள மனாசே கோத்திரத்துக்கும்
ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து இவை கொடுக்கப்பட்டன.[r]

63 மெராரியர்களின் குடும்பங்களுக்கு 12 நகரங்கள் கொடுக்கப்பட்டன;
இவை ரூபன் கோத்திரத்துக்கும் காத் கோத்திரத்துக்கும் செபுலோன் கோத்
திரத்துக்கும் ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து குலுக்கல் முறையில் கொடுக்கப்
பட்டன.[s]

64 இப்படி, இந்த நகரங்களையும் இவற்றின் மேய்ச்சல் நிலங்களையும்
இஸ்ரவேலர்கள் லேவியர்களுக்குக் கொடுத்தார்கள்.[t] **65** பேர் பேராகக்
குறிப்பிடப்பட்ட இந்த நகரங்கள் யூதா கோத்திரத்துக்கும் சிமியோன் கோத்
திரத்துக்கும் பென்யமீன் கோத்திரத்துக்கும் ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து
குலுக்கல் முறையில் கொடுக்கப்பட்டன.

66 எப்பிராயீம் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்த நகரங்
கள் கோகாத் வம்சத்தில் வந்த சிலருக்குக் கொடுக்கப்பட்டன.[u] **67** அவர்
களுக்கு அடைக்கல நகரங்களான* சீகேமும்[v] எப்பிராயீம் மலைப்பகுதியி
லுள்ள அதன் மேய்ச்சல் நிலங்களும், கேசேரும்[w] அதன் மேய்ச்சல்

6:57 *அல்லது, யோசு 21:13-ன்படி "நகரமான." **6:61** *வே.வா., "குலுக்கல் முறை
யில் கொடுக்கப்பட்டன." **6:67** *அல்லது, யோசு 21:21-ன்படி "நகரமான."

அதி. 6
a யாத் 28:1; எண் 3:32
b 2சா 8:17
c 1ரா 2:35
d எண் 13:22; யோசு 21:8, 11
e யோசு 14:13; நியா 1:20
f எண் 35:12, 13
g யோசு 20:7, 9
h யோசு 15:20, 42
i யோசு 15:20, 48
j யோசு 21:13-16
k நியா 1:11
l 1நா 4:24, 32
m யோசு 15:10, 12
n யோசு 18:21, 24
o யோசு 21:8, 18; எரே 1:1
p யோசு 21:4
q யோசு 21:5
r யோசு 21:27-33
s யோசு 21:34-40
t எண் 35:2-4
u யோசு 21:20-26
v யோசு 20:7, 9
w யோசு 16:10

நிலங்களும், **68** யோக்மேயாமும் அதன் மேய்ச்சல் நிலங்களும் பெத்-
ஓரோனும்[a] அதன் மேய்ச்சல் நிலங்களும், **69** ஆயலோனும்[b] அதன்
மேய்ச்சல் நிலங்களும், காத்-ரிம்மோனும்[c] அதன் மேய்ச்சல் நிலங்களும்
கொடுக்கப்பட்டன; **70** கோகாத்தியர்களின் மற்ற குடும்பங்களுக்கு, மனா
சேயின் பாதிக் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்த ஆநேரும்
அதன் மேய்ச்சல் நிலங்களும் பீலியாமும் அதன் மேய்ச்சல் நிலங்களும்
கொடுக்கப்பட்டன.

71 கெர்சோம் வம்சத்துக்குக் கொடுக்கப்பட்ட பகுதிகள்: மனாசேயின்
பாதிக் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து பாசானில் இருக்கிற
கோலானும்[d] அதன் மேய்ச்சல் நிலங்களும், அஸ்தரோத்தும் அதன்
மேய்ச்சல் நிலங்களும்;[e] **72** இசக்கார் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட பங்
கிலிருந்து கேதேசும் அதன் மேய்ச்சல் நிலங்களும், தாபராத்தும்[f] அதன்
மேய்ச்சல் நிலங்களும்,[g] **73** ராமோத்தும் அதன் மேய்ச்சல் நிலங்களும்,
ஆனேமும் அதன் மேய்ச்சல் நிலங்களும்; **74** ஆசேர் கோத்திரத்துக்கு
ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து மாஷாலும் அதன் மேய்ச்சல் நிலங்களும், அப்
தோனும் அதன் மேய்ச்சல் நிலங்களும்,[h] **75** உக்கோக்கும் அதன்
மேய்ச்சல் நிலங்களும், ரேகோபும்[i] அதன் மேய்ச்சல் நிலங்களும்; **76** நப்
தலி கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து கலிலேயாவில்[j] இருக்கிற
கேதேசும்[k] அதன் மேய்ச்சல் நிலங்களும், ஹம்மோனும் அதன் மேய்ச்சல்
நிலங்களும், கீரியாத்தாயீமும் அதன் மேய்ச்சல் நிலங்களும்.

77 மெராரியர்களான மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதிகள்: செபு
லோன் கோத்திரத்துக்கு[l] ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து ரிம்மோனோவும்
அதன் மேய்ச்சல் நிலங்களும், தாபோரும் அதன் மேய்ச்சல் நிலங்க
ளும்; **78** ரூபன் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து, அதாவது
யோர்தான் பிரதேசத்தில் எரிகோவுக்கு அருகிலும் யோர்தானுக்குக் கிழக்கி
லும் இருந்த பகுதியிலிருந்து, வனாந்தரத்திலுள்ள பேசேரும் அதன் மேய்ச்
சல் நிலங்களும், யாகாசும்[m] அதன் மேய்ச்சல் நிலங்களும்; **79** அதோடு,
கெதெமோத்தும்[n] அதன் மேய்ச்சல் நிலங்களும், மேபாகாத்தும் அதன்
மேய்ச்சல் நிலங்களும்; **80** காத் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட பங்கிலி
ருந்து கீலேயாத்தில் இருக்கிற ராமோத்தும் அதன் மேய்ச்சல் நிலங்களும்,
மக்னாயீமும்[o] அதன் மேய்ச்சல் நிலங்களும், **81** எஸ்போனும்[p] அதன்
மேய்ச்சல் நிலங்களும், யாசேரும்[q] அதன் மேய்ச்சல் நிலங்களும்.

7 இசக்காரின் மகன்கள்: தோலா, பூவா, யாசூப், சிம்ரோன்[r] என நான்கு
பேர். **2** தோலாவின் மகன்கள்: உசீ, ரெபாயா, யெரியேல், யக்மாய்,
இப்சாம், ஷெமுவேல்; இவர்கள் தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்
துக்குத் தலைவர்களாக இருந்தார்கள். தோலாவின் வம்சத்தைச் சேர்ந்தவர்
கள் மாவீரர்களாக இருந்தார்கள், தாவீதின் காலத்தில் அவர்களுடைய எண்
ணிக்கை 22,600. **3** உசீயின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்: இஸ்ரகியா,
இவருடைய மகன்கள் மிகாவேல், ஒபதியா, யோவேல், இஷியா. இந்த
ஐந்து பேரும் தலைவர்களாக இருந்தார்கள். **4** இவர்களுடைய வம்சத்தில்
வந்தவர்களுக்கு நிறைய மனைவிகளும் மகன்களும் இருந்தார்கள். அத
னால், போர் செய்வதற்கு அவர்களுடைய தந்தைவழியில் மொத்தம் 36,000
போர்வீரர்கள் இருந்தார்கள். **5** இசக்கார் வம்சத்தைச் சேர்ந்த மற்ற குடும்
பங்களில் இருந்த அவர்களுடைய சகோதரர்கள் மாவீரர்களாக இருந்தார்

அதி. 6
a யோசு 10:11
b யோசு 10:12; நியா 1:35
c யோசு 19:45, 48
d உபா 4:41-43
e யோசு 21:27
f யோசு 19:12, 16
g யோசு 21:8, 28
h யோசு 21:8, 30
i யோசு 19:28, 31; நியா 1:31
j மத் 3:13
k யோசு 20:7, 9; யோசு 21:32, 33
l யோசு 21:34-39
m எண் 21:23
n உபா 2:26
o ஆதி 32:1, 2; 2சா 2:8
p எண் 21:26
q எண் 32:1

அதி. 7
r ஆதி 46:13; எண் 26:23, 24

கள். அவர்கள் மொத்தம் 87,000 பேர். இவர்களுடைய பெயர்கள் வம்சாவ
ளிப் பட்டியலில் இருக்கின்றன.[a]

6 பென்யமீனின் மகன்கள்:[b] பேலா,[c] பெகேர்,[d] யெதியாயேல்[e] என
மூன்று பேர். **7** பேலாவின் மகன்கள்: இஸ்போன், உசீ, ஊசியேல், யெரி
மோத், இரி. இந்த ஐந்து பேரும் தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்துக்குத்
தலைவர்களாகவும் மாவீரர்களாகவும் இருந்தார்கள். இவர்களுடைய வம்சா
வளிப் பட்டியலில் மொத்தம் 22,034 ஆட்களின் பெயர்கள் இருக்கின்றன.[f]
8 பெகேரின் மகன்கள்: செமிரா, யோவாஸ், எலியேசர், எலியோனாய்,
உம்ரி, எரேமோத், அபியா, ஆனதோத், அலெமேத்; இவர்கள் எல்லாரும்
பெகேரின் மகன்கள். **9** இவர்களுடைய வம்சத்தில் குடும்பத் தலைவர்க
ளாகவும் மாவீரர்களாகவும் இருந்தவர்கள் மொத்தம் 20,200 பேர்; வம்சாவ
ளிப் பட்டியலில் இவர்களுடைய பெயர்கள் இருக்கின்றன. **10** யெதியா
யேலின்[g] வம்சத்தில் வந்தவர்கள்: அவருடைய மகன் பில்கான், பில்கானின்
மகன்களான எயூஷ், பென்யமீன், ஏகூத், கெனானா, சேத்தான், தர்ஷீஸ்,
அகிஷாகார். **11** யெதியாயேல் வம்சத்தில் வந்த இவர்கள் எல்லாரும்
தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்துக்குத் தலைவர்களாக இருந்தார்கள்;
இவர்களுடைய வம்சத்தில் வந்தவர்களில் போருக்குத் தயாராக இருந்த
மாவீரர்கள் 17,200 பேர்.

12 சுப்பீமியரும் உப்பிமியரும்* இர்[h] என்பவரின் வம்சத்தில் வந்தவர்
கள்; ஊசிமியர்# ஆகேரின் வம்சத்தில் வந்தவர்கள்.

13 நப்தலியின் மகன்கள்:[i] யாத்ஸியல், கூனி, எத்செர், சல்லூம்; இவர்கள்
பில்காளின் வம்சத்தில்[j] வந்தவர்கள்.

14 மனாசேயின்[k] மகன்கள்: அஸ்ரியேல், இவர் மனாசேயின் மறுமனை
விக்குப் பிறந்தவர். அவள் சீரியாவைச் சேர்ந்த பெண். (கீலேயாத்தின் தகப்
பன் மாகீரும்[l] இவளுக்குப் பிறந்தவர். **15** உப்பிமுக்கும் சுப்பீமுக்கும்
மாகீர் திருமணம் செய்து வைத்தார்; இவர்களுடைய சகோதரி மாக்காள்.)
மனாசேயின் இரண்டாம் மகன் செலோப்பியாத்,[m] இவருக்கு மகள்கள்தான்
இருந்தார்கள்.[n] **16** மாகீரின் மனைவியான மாக்காள் ஒரு மகனைப் பெற்
றெடுத்தாள். அவனுக்கு பேரேஸ் என்று பெயர் வைத்தாள். அவனுடைய
சகோதரன் பெயர் சேரேஸ்; அவனுடைய மகன்கள்: ஊலாம், ரெக்கேம்.
17 ஊலாமின் மகன் பேதான்; இவர்கள் மனாசேயின் பேரனும் மாகீரின் மக
னுமாகிய கீலேயாத்தின் வம்சத்தில் வந்தவர்கள். **18** கீலேயாத்தின் சகோ
தரி அம்மொளேகேத். இஸ்கோத்தையும் அபியேசரையும் மக்லாவையும்
அவள் பெற்றெடுத்தாள். **19** செமீதாவின் மகன்கள்: அகியான், சீகேம்,
லிக்கே, அனியாம்.

20 எப்பிராயீமின் வம்சத்தில்[o] வந்தவர்கள்: அவருடைய மகன் சுத்
தெலாக்,[p] சுத்தெலாக்கின் மகன் பேரேத், பேரேத்தின் மகன் தாகாத், தாகாத்
தின் மகன் எலாதா, எலாதாவின் மகன் தாகாத், **21** தாகாத்தின் மகன்
சாபாத், சாபாத்தின் மகன் சுத்தெலாக்; ஏத்சேரும் எலியத்தும்கூட எப்பிராயீ
மின் மகன்கள். எப்பிராயீம் வம்சத்தில் வந்தவர்களுடைய கால்நடைகளைப்
பிடித்து வருவதற்காக ஒருசமயம் காத்[q] நகரத்தைச் சேர்ந்தவர்கள் போனார்
கள்; அப்போது, ஏச்சேரையும் எலியத்தையும் அவர்கள் கொன்றுபோட்
டார்கள். **22** அவர்களுடைய தகப்பன் எப்பிராயீம் அவர்களுக்காகப் பல

7:12 * அல்லது, “சுப்பீமும், உப்பிமும்.” # அல்லது, “ஊசிம்.”

அதி. 7
a எண் 26:25
b ஆதி 35:16, 18; எண் 26:38, 39
c 1நா 8:1
d ஆதி 46:21
e 1நா 7:10
f எண் 26:41
g 1நா 7:6
h 1நா 7:7
i எண் 26:48, 49
j ஆதி 30:3, 8; ஆதி 46:24, 25
k ஆதி 41:50, 51
l ஆதி 50:23; எண் 26:29; உபா 3:15
m எண் 26:33
n எண் 27:1, 7
o எண் 1:33
p எண் 26:35
q 1சா 7:14; 1சா 17:4

நாட்கள் துக்கம் அனுசரித்தார்; ஆறுதல் சொல்ல அவருடைய சகோதரர்கள்
அடிக்கடி வந்தார்கள். **23** பின்பு, அவர் தன்னுடைய மனைவியோடு உற
வுகொண்டார்; அவள் கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றாள்; அந்தக் குடும்
பத்துக்குக் கஷ்டம் வந்த சமயத்தில் அவன் பிறந்ததால் அவனுக்கு
பெரீயா* என்று அவர் பெயர் வைத்தார்; **24** அவருடைய மகள் பெயர்
ஷீராள்; மேல் பெத்-ஓரோனையும்[a] கீழ் பெத்-ஓரோனையும்[b] ஊசேன்-ஷீரா
வையும் அவள் கட்டினாள். **25** ரேப்பாக்கும் ரேசேப்பும் எப்பிராயீம் வம்
சத்தில் வந்தவர்கள்; ரேசேப்பின் மகன் தேலாக், தேலாக்கின் மகன் தாகான்,
26 தாகானின் மகன் லாதான், லாதானின் மகன் அம்மியூத், அம்மியூத்தின்
மகன் எலிஷாமா, **27** எலிஷாமாவின் மகன் நூன், நூனின் மகன்
யோசுவா.*[c]

28 அவர்களுக்குச் சொந்தமான இடங்கள்: பெத்தேலும்[d] அதன் சிற்றூர்
களும்,* கிழக்கே நாரானும், மேற்கே கேசேரும் அதன் சிற்றூர்களும், சீகே
மும் அதன் சிற்றூர்களும், அய்யாவும்# அதன் சிற்றூர்களும்; **29** மனாசே
வம்சத்தாருடைய எல்லைக்குப் பக்கத்திலிருந்த பகுதிகளான பெத்-செயா
னும்[e] அதன் சிற்றூர்களும், தானாக்கும்[f] அதன் சிற்றூர்களும், மெகிதோ
வும்[g] அதன் சிற்றூர்களும், தோரும்[h] அதன் சிற்றூர்களுமே. இந்தப் பகுதி
களில் இஸ்ரவேலின் மகனாகிய யோசேப்பின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்
குடியிருந்தார்கள்.

30 ஆசேரின் மகன்கள்: இம்னா, இஸ்வா, இஸ்வி, பெரீயா.[i] இவர்
களுடைய சகோதரி சேராள்.[j] **31** பெரீயாவின் மகன்கள்: ஹேபெர், மல்கி
யேல், இவர் பிர்சாவீத்தின் தகப்பன். **32** ஹேபெரின் மகன்கள்: யப்லேத்,
சோமேர், ஒத்தாம். அவர்களுடைய சகோதரி சூவா. **33** யப்லேத்தின்
மகன்கள்: பாசாக், பிம்மால், அஸ்வாத். இவர்களே யப்லேத்தின் மகன்கள்.
34 சேமேரின்* மகன்கள்: அகி, ரோகா, எகூபா, அராம். **35** அவருடைய
சகோதரன் ஏலேமின்* மகன்கள்: சோபாகு, இம்ணா, சேலேஸ், ஆமால்.
36 சோபாகுவின் மகன்கள்: சூவாக், அர்னெப்பர், சூவால், பேரி, இம்ரா,
37 பேசேர், ஒத், ஷம்மா, சில்சா, இத்தரான், பீரா. **38** யெத்தேரின் மகன்
கள்: எப்புன்னே, பிஸ்பா, ஏரா. **39** உல்லாவின் மகன்கள்: ஆராக், அன்
னியேல், ரித்சியா. **40** இவர்கள் எல்லாரும் ஆசேர் வம்சத்தைச் சேர்ந்த
வர்கள், தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள், மிகச் சிறந்த மாவீரர்கள்,
மிக முக்கியமான தலைவர்கள்; வம்சாவளிப் பட்டியலின்படி,[k] போர் செய்
வதற்கு மொத்தம் 26,000 போர்வீரர்கள்[l] இருந்தார்கள்.

8 பென்யமீனின்[m] மகன்கள்: மூத்த மகன் பேலா,[n] இரண்டாம் மகன்
அஸ்பேல்,[o] மூன்றாம் மகன் அகராக், **2** நான்காம் மகன் நோஹா,
ஐந்தாம் மகன் ரஃபா. **3** பேலாவின் மகன்கள்: ஆதார், கேரா,[p] அபி
யுத், **4** அபிசுவா, நாகமான், அகோவா, **5** கேரா, செப்புப்பான், ஊராம்.
6 கெபா[q] நகர மக்களுக்கு ஏகூத்தின் மகன்கள் தலைவர்களாக இருந்தார்
கள்; மானகாத் என்ற இடத்துக்கு அவர்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போனார்

7:23 *அர்த்தம், "கஷ்டத்துடன்." **7:27** *வே.வா., "யெஹோஷுவா"; அர்த்தம், "யெகோவாவே மீட்பு." **7:28** *வே.வா., "அதைச் சுற்றியுள்ள ஊர்களும்." #அல்லது, "காசாவும்." ஆனால், பெலிஸ்தியாவிலுள்ள காசா அல்ல. **7:34** *32-ஆம் வசனத்தில் சோமேர் என அழைக்கப்படுகிறார். **7:35** *32-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்ட ஒத்தாமாக இருக்கலாம்.

அதி. 7
a யோசு 16:5 யோசு 21:20, 22 2நா 8:3, 5
b யோசு 16:1, 3
c யாத் 33:11 எண் 11:28 எண் 32:11, 12 உபா 34:9 யோசு 1:1
d ஆதி 28:16, 19 யோசு 16:1, 2
e யோசு 17:11 1சா 31:8, 10
f நியா 5:1, 19
g நியா 1:27 1ரா 9:15
h 1ரா 4:7, 11
i எண் 26:44, 45
j ஆதி 46:17
k யாத் 30:14
l எண் 1:41 எண் 26:47

அதி. 8
m ஆதி 35:16, 18
n 1நா 7:6
o ஆதி 46:21
p ஆதி 46:21
q யோசு 21:8, 17 1சா 13:16

கள். தந்தைவழிக் குடும்பத் தலைவர்களாக இருந்த ஏகூத்தின் மகன்கள்:
7 நாகமான், அகியா, கேரா; கேராவின் தலைமையில் அவர்கள் மானகாத்
துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். இவர் ஊத்சாவுக்கும் அகியூத்துக்கும்
தகப்பன். **8** மோவாப் பகுதியில் குடியிருந்த மக்களை* சகராயீம் துரத்தி
விட்டார்; அதன் பின்பு, அவருக்குப் பிள்ளைகள் பிறந்தார்கள். ஊசிமும்
பாராளும் அவருடைய மனைவிகள். **9** அவருடைய இன்னொரு மனை
வியான ஓதேஸ் மூலம் அவருக்குப் பிறந்த மகன்கள்: யோபாப், சீபீயா,
மேசா, மல்காம், **10** எயூஸ், சாகியா, மிர்மா. இவர்களே அவருடைய மகன்
கள், தங்களுடைய தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள்.

11 அவருடைய மனைவி ஊசிம் அவருக்கு அபிதூப்பையும் எல்
பாலையும் பெற்றாள். **12** எல்பாலின் மகன்கள்: ஏபேர், மீஷாம்,
சாமேத் (இவர் ஓனோவையும்[a] லோதுவையும்[b] அதன் சிற்றூர்களையும்*
கட்டினார்), **13** பெரீயா, சேமா. இவர்கள் ஆயலோன்[c] நகர மக்களின்
தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள். இவர்கள் காத் நகரத்தில் குடியிருந்தவர்
களைத் துரத்திவிட்டார்கள். **14** அகியோ, சாஷாக், எரேமோத், **15** செப
தியா, ஆராத், ஏதேர், **16** மிகாவேல், இஷ்பா, யோஹா ஆகியோர்
பெரீயாவின் வம்சத்தில் வந்தவர்கள்; **17** செபதியா, மெசுல்லாம், இஸ்கி,
ஹேபெர், **18** இஸ்மெராயி, இஸ்லியா, யோபாப் ஆகியோர் எல்பாலின்
வம்சத்தில் வந்தவர்கள்; **19** யாக்கிம், சிக்ரி, சப்தி, **20** எலியேனாய், சில்த்
தாய், ஏலியேல், **21** அதாயா, பெராயா, சிம்ராத் ஆகியோர் சீமேயியின்
வம்சத்தில் வந்தவர்கள்; **22** இஸ்பான், ஏபேர், ஏலியேல், **23** அப்தோன்,
சிக்ரி, ஆனான், **24** அனனியா, ஏலாம், அந்தோதியா, **25** இபிதியா,
பெனூவேல் ஆகியோர் சாஷாக்கின் வம்சத்தில் வந்தவர்கள்; **26** சம்சே
ராய், ஷெகரியா, அத்தாலியா, **27** யரெஷியா, எலியா, சிக்ரி ஆகியோர்
எரோகாமின் வம்சத்தில் வந்தவர்கள். **28** வம்சாவளிப் பட்டியலின்படி,
இவர்கள் தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்தின் தலைவர்களாக இருந்
தார்கள். இந்தத் தலைவர்கள் எருசலேமில் குடியிருந்தார்கள்.

29 கிபியோனின் தகப்பனான எயியேல் கிபியோனில்[d] குடியிருந்தார்.
அவருடைய மனைவி பெயர் மாக்காள்.[e] **30** அவருடைய மூத்த மகன்
அப்தோன்; மற்ற மகன்கள்: சூர், கீஸ், பாகால், நாதாப், **31** கேதோர்,
அகியோ, சேகேர். **32** மிக்லோத்தின் மகன் சிமியா. இவர்கள் எல்லாரும்
எருசலேமில் தங்களுடைய சகோதரர்களுக்குப் பக்கத்தில், மற்ற சகோதரர்
களுடன் குடியிருந்தார்கள்.

33 நேரின்[f] மகன் கீஸ்; கீசின் மகன் சவுல்;[g] சவுலின் மகன்கள்:
யோனத்தான்,[h] மல்கிசூவா,[i] அபினதாப்,[j] எஸ்பால்.*[k] **34** யோனத்தானின்
மகன் மெரிபால்.*[l] மெரிபாலின் மகன் மீகா.[m] **35** மீகாவின் மகன்கள்: பித்
தோன், மேலேக், தரியா, ஆகாஸ். **36** ஆகாசின் மகன் யோகதா; யோகதா
வின் மகன்கள்: அலெமேத், அஸ்மாவேத், சிம்ரி. சிம்ரியின் மகன் மோசா.
37 மோசாவின் மகன் பினியா; பினியாவின் மகன் ரப்பாஹ், ரப்பாஹின்
மகன் எலியாசா, எலியாசாவின் மகன் ஆத்சேல். **38** ஆத்சேலுக்கு ஆறு
மகன்கள் இருந்தார்கள்; அவர்களுடைய பெயர்கள்: அசரீக்காம், பொக்குரு,

---

8:8 *அல்லது, “தன்னுடைய மனைவிகளான ஊசிமையும் பாராளையும்.” **8:12** *வே.வா., “அதைச் சுற்றியுள்ள ஊர்களையும்.” **8:33** *இஸ்போசேத் என்றும் அழைக்கப்படுகிறார். **8:34** *மேவிபோசேத் என்றும் அழைக்கப்படுகிறார்.

அதி. 8
a நெ 6:2
b எஸ்றா 2:1, 33
c யோசு 19:42, 48; யோசு 21:8, 24
d யோசு 9:15, 17; யோசு 21:8, 17; 1நா 21:29
e 1நா 9:35-38
f 1சா 14:50
g 1சா 9:1, 2; 1சா 11:15
h 1சா 14:45
i 1சா 14:49
j 1சா 31:2
k 2சா 2:8; 1நா 9:39-44
l 2சா 4:4
m 2சா 9:12

இஸ்மவேல், சேராயா, ஒபதியா, ஆனான். இவர்கள் எல்லாரும் ஆத்சேலின்
மகன்கள். **39** அவருடைய சகோதரன் எசேக்கின் மகன்கள்: மூத்த மகன்
ஊலாம், இரண்டாம் மகன் எயூஷ், மூன்றாம் மகன் எலிப்பேலேத்.
40 ஊலாமின் மகன்கள் மாவீரர்கள், அம்பு எறிவதில் வல்லவர்கள்; இவர்க
ளுக்கு நிறைய மகன்களும் பேரன்களும் இருந்தார்கள், மொத்தம் 150 பேர்.
இவர்கள் எல்லாரும் பென்யமீன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.

9 இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் தங்களுடைய வம்சத்தின்படி பதிவு
செய்யப்பட்டார்கள். அவர்களுடைய பெயர்கள் இஸ்ரவேல் ராஜாக்க
ளின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. யூதா மக்கள் கடவுளுக்கு
உண்மையாக இல்லாததால்தான் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப்
போனார்கள்.[a] **2** இஸ்ரவேல் மக்கள் சிலரும் குருமார்களும் லேவியர்க
ளும் ஆலயப் பணியாளர்களும்தான்*[b] முதன்முதலில் தங்களுடைய
சொந்த தேசத்துக்குத் திரும்பிவந்தார்கள். **3** யூதா,[c] பென்யமீன்,[d] எப்பிரா
யீம், மனாசே ஆகியோரின் வம்சத்தைச் சேர்ந்த சிலர் எருசலேமில் குடி
யேறினார்கள். அவர்களைப் பற்றிய விவரம்: **4** யூதாவின் மகனான பாரே
சின்[e] வம்சத்தில் வந்த ஊத்தாய்; இந்த ஊத்தாய் அம்மியூத்தின் மகன்,
அம்மியூத் உம்ரியின் மகன், உம்ரி இம்ரியின் மகன், இம்ரி பானியின்
மகன். **5** சேலாவின் வம்சத்தில் வந்த அசாயாவும் அவருடைய மகன்க
ளும்; அசாயா மூத்த மகனாக இருந்தார். **6** சேராகுவின்[f] வம்சத்தில் வந்
தவர்களில் யெகுவேல், அவர்களுடைய சகோதரர்கள் 690 பேர்.

7 பென்யமீன் வம்சத்தைச் சேர்ந்த சல்லு என்பவர் மெசுல்லாமின் மகன்,
மெசுல்லாம் ஒதாவியாவின் மகன், ஒதாவியா அசெனூவாவின் மகன்.
8 இப்னெயா என்பவர் எரோகாமின் மகன். ஏலா என்பவர் உசீயின் மகன்,
உசீ மிக்கிரியின் மகன். மெசுல்லாம் என்பவர் செப்பத்தியாவின் மகன், செப்
பத்தியா ரெகுவேலின் மகன், ரெகுவேல் இப்னியாவின் மகன். **9** வம்சாவ
ளிப் பட்டியலின்படி இவர்களுடைய சகோதரர்கள் மொத்தம் 956 பேர். இவர்
கள் எல்லாரும் தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்தின் தலைவர்கள்.

10 குருமார்கள்: யெதாயா, யோயாரீப், யாகீன்,[g] **11** அசரியா; இந்த
அசரியா இல்க்கியாவின் மகன், இல்க்கியா மெசுல்லாமின் மகன், மெசுல்லாம்
சாதோக்கின் மகன், சாதோக் மெராயோத்தின் மகன், மெராயோத் அகிதூப்
பின் மகன், இந்த அகிதூப் உண்மைக் கடவுளுடைய ஆலய அதிகாரிகளில்
ஒருவர். **12** அதாயா என்பவர் எரோகாமின் மகன், எரோகாம் பஸ்கூரின்
மகன், பஸ்கூர் மல்கீயாவின் மகன். மாசாய் என்பவர் ஆதியேலின் மகன்,
ஆதியேல் யாசெராவின் மகன், யாசெரா மெசுல்லாமின் மகன், மெசுல்லாம்
மெசில்லேமித்தின் மகன், மெசில்லேமித் இம்மேரின் மகன். **13** அதோடு,
இந்தக் குருமார்களுடைய சகோதரர்களும் வந்தார்கள்; இவர்கள் தங்களு
டைய தந்தைவழிக் குடும்பத்தின் தலைவர்களாக இருந்தார்கள்; இந்த 1,760
பேரும் உண்மைக் கடவுளுடைய ஆலயத்தில் வேலை செய்தார்கள். இவர்
கள் பலசாலிகளாகவும் திறமைசாலிகளாகவும் இருந்தார்கள்.

14 லேவியர்கள்: மெராரி வம்சத்தைச் சேர்ந்த செமாயா[h] என்பவர் அசூப்
பின் மகன், அசூப் அசரீக்காமின் மகன், அசரீக்காம் அஷபியாவின் மகன்.
15 பக்பக்கார், ஏரேஷ், காலால், மத்தனியா என்பவர் மிக்காவின் மகன்,
மிக்கா சிக்ரியின் மகன், சிக்ரி ஆசாப்பின் மகன். **16** ஒபதியா என்பவர்

9:2 * வே.வா., “நிதனீமியர்களும்தான்.” நே.மொ., “கொடுக்கப்பட்டவர்களும்தான்.”

அதி. 9
a எரே 39:9
b யோசு 9:3, 27
எஸ்றா 2:
43–54
எஸ்றா 2:70
எஸ்றா 8:20
நெ 7:73
நெ 11:3
c நெ 11:4, 5
d நெ 11:7–9
e ஆதி 46:12
1நா 2:4
f 1நா 2:4, 6
g நெ 11:10–14
h நெ 11:15

செமாயாவின் மகன், செமாயா காலாலின் மகன், காலால் எதித்தூனின் மகன்.
பெரகியா என்பவர் ஆசாவின் மகன், ஆசா எல்க்கானாவின் மகன்; இவர்
நெத்தோபாத்தியர்களின் கிராமங்களில் தங்கியிருந்தார்.[a]
17 வாயிற்காவலர்கள்:[b] சல்லூம், அக்கூப், தல்மோன், அகீமான். இவர்க
ளுடைய சகோதரரான சல்லூம் இவர்களுக்குத் தலைவராக இருந்தார்;
18 அந்தச் சமயம்வரை கிழக்கே அரண்மனை வாசலில்[c] காவல்காத்து வந்
தார். லேவியர்கள் குடியிருந்த பகுதிகளின் வாயிற்காவலர்கள் இவர்களே.
19 கோராகுவின் கொள்ளுப்பேரனும் எபியாசாப்பின் பேரனும் கோரே
யின் மகனுமாகிய சல்லூமும் அவருடைய தந்தைவழியில் வந்த சகோதரர்
களாகிய கோராகியர்களும் காவல்காக்கும் வேலைகளை மேற்பார்வை
செய்துவந்தார்கள், அதோடு, வழிபாட்டுக் கூடாரத்தையும் காவல்காத்து
வந்தார்கள்; யெகோவாவுடைய கூடாரத்தின் வாசலில் காவல்காக்கும்
வேலையை அவர்களுடைய முன்னோர்கள் மேற்பார்வை செய்துவந்தார்
கள். **20** முற்காலத்தில் எலெயாசாரின்[d] மகன் பினெகாஸ்[e] அவர்களுக்
குத் தலைவராக இருந்தார். யெகோவா அவருக்குத் துணையாக இருந்தார்.
21 மெசெலேமியாவின் மகன் சகரியா[f] சந்திப்புக் கூடாரத்தின் வாயிற்காவ
லராக இருந்தார்.

22 வழிபாட்டுக் கூடாரத்தின் வாயிற்காவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்
பட்டவர்கள் மொத்தம் 212 பேர். வம்சாவளிப் பட்டியலில் குறிப்பிட்ட
படி, இவர்கள் தங்களுடைய பகுதிகளில் குடியிருந்தார்கள்.[g] இவர்கள் நம்
பிக்கைக்குரியவர்களாக இருந்ததால், தாவீதும் இறைவாக்கு சொல்பவ
ரான[h] சாமுவேலும் இவர்களை இந்த வேலையில் நியமித்திருந்தார்கள்.
23 இவர்களும் இவர்களுடைய மகன்களும் யெகோவாவுடைய வீட்
டின், அதாவது கூடாரத்தின், வாசலைக் காவல்காக்கும் வேலையை
மேற்பார்வை செய்துவந்தார்கள்.[i] **24** கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
என நான்கு பக்கமும் வாயிற்காவலர்கள் நின்றார்கள்.[j] **25** இவர்களு
டைய சகோதரர்கள் தங்களுடைய குடியிருப்புகளிலிருந்து அவ்வப்போது
அங்கே வந்து ஏழு நாட்கள் இவர்களுடன் வேலை செய்தார்கள். **26** நம்
பிக்கைக்குரிய நான்கு பேர் தலைமை வாயிற்காவலர்களாக இருந்தார்கள்.
உண்மைக் கடவுளின் வீட்டிலுள்ள சாப்பாட்டு அறைகளையும் பொக்கிஷ
அறைகளையும் காவல்காக்கும் பொறுப்பு இந்த லேவியர்களுக்கு இருந்
தது.[k] **27** ராத்திரி முழுக்க உண்மைக் கடவுளின் வீட்டைச் சுற்றிலும் நின்று
அவர்கள் காவல் காப்பார்கள்; ஏனென்றால், காவல்காக்கும் பொறுப்பு
அவர்களுக்கு இருந்தது, சாவியும் அவர்களிடம்தான் இருந்தது. அதனால்,
தினமும் காலையில் கதவுகளைத் திறந்துவிடுவார்கள்.

28 இவர்களில் சிலர் பரிசுத்த பாத்திரங்களுக்குப் பொறுப்பாளிகளாக
இருந்தார்கள்.[l] அந்தப் பாத்திரங்களை உள்ளே வைக்கும்போதும்
வெளியே எடுக்கும்போதும் எண்ணினார்கள். **29** அந்தப் பாத்திரங்களுக்
கும் மற்ற எல்லா பரிசுத்த பாத்திரங்களுக்கும்[m] நைசான மாவுக்கும்[n] திராட்
சமதுவுக்கும்[o] எண்ணெய்க்கும்[p] சாம்பிராணிக்கும்[q] பரிமளத் தைலத்துக்
கும்[r] சிலர் பொறுப்பாளிகளாக நியமிக்கப்பட்டார்கள். **30** குருமார்களின்
மகன்களில் சிலர் பரிமளத் தைலத்தைக் கலந்து வாசனைத் தைலத்தைத்
தயாரித்தார்கள். **31** கோராகியரான சல்லூமின் மூத்த மகனும் லேவியரு
மான மத்தித்தியா நம்பிக்கைக்குரியவராக இருந்ததால் ரொட்டி சுடும்
வேலையை மேற்பார்வை செய்துவந்தார்.[s] **32** ஒவ்வொரு ஓய்வுநாளிலும்

அதி. 9
a 1நா 2:54; நெ 12:28
b எஸ்றா 2:1, 42; நெ 11:19
c நெ 3:29
d யாத் 6:25; எண் 3:32
e எண் 25:11, 13; யோசு 22:30; நியா 20:28
f 1நா 26:14, 19
g 1நா 9:1
h 1சா 9:9
i 2நா 23:16, 19; நெ 12:45
j 1நா 26:14-16
k 1நா 26:20; 1நா 28:11, 12; 2நா 31:12
l எண் 1:50
m 1ரா 8:4
n லேவி 2:1; 1நா 23:29
o லேவி 23:12, 13
p யாத் 27:20
q லேவி 2:1, 2
r யாத் 25:3, 6
s லேவி 2:5, 7

படையல் ரொட்டிகளைத்[a] தயாராக வைக்கிற பொறுப்பு[b] அவர்களுடைய
சகோதரர்களான கோகாத்தியர்கள் சிலருக்கு இருந்தது.

33 இவர்களில் சிலர் பாடகர்களாகவும், தங்களுடைய தந்தைவழிக்
குடும்பத்தின் தலைவர்களாகவும் இருந்தார்கள்; இவர்கள் ஆலய அறைக
ளில்* இருந்தார்கள். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை இரவும் பக
லும் செய்ய வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. அதனால், மற்ற
வேலைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. **34** வம்சாவளிப் பட்டி
யலின்படி இவர்கள் லேவியர்களுடைய தந்தைவழிக் குடும்பத்தின் தலைவர்
களாக இருந்தார்கள், இந்தத் தலைவர்கள் எருசலேமில் குடியிருந்தார்கள்.

35 கிபியோனின் தகப்பனான எயியேல் கிபியோனில்[c] குடியிருந்தார்.
அவருடைய மனைவி பெயர் மாக்காள். **36** அவருடைய மூத்த மகன்
அப்தோன்; மற்ற மகன்கள்: சூர், கீஸ், பாகால், நேர், நாதாப், **37** கேதோர்,
அகியோ, சகரியா, மிக்லோத். **38** மிக்லோத்தின் மகன் சீமியாம். இவர்
கள் எல்லாரும் எருசலேமில் தங்களுடைய சகோதரர்களுக்குப் பக்கத்தில்,
மற்ற சகோதரர்களுடன் குடியிருந்தார்கள். **39** நேரின்[d] மகன் கீஸ்; கீசின்
மகன் சவுல்;[e] சவுலின் மகன்கள்: யோனத்தான்,[f] மல்கிசூவா,[g] அபினதாப்,[h]
எஸ்பால். **40** யோனத்தானின் மகன் மெரிபால்.[i] மெரிபாலின் மகன் மீகா.[j]
41 மீகாவின் மகன்கள்: பித்தோன், மேலேக், தரேயா, ஆகாஸ். **42** ஆகா
சின் மகன் யாராக்; யாராக்கின் மகன்கள்: அலெமேத், அஸ்மாவேத், சிம்ரி.
சிம்ரியின் மகன் மோசா. **43** மோசாவின் மகன் பினியா; பினியாவின்
மகன் ரெபாயா, ரெபாயாவின் மகன் எலியாசா, எலியாசாவின் மகன் ஆத்
சேல். **44** ஆத்சேலுக்கு ஆறு மகன்கள் இருந்தார்கள்; அவர்களுடைய
பெயர்கள்: அசரீக்காம், பொக்குரு, இஸ்மவேல், சேராயா, ஒபதியா, ஆனான்.
இவர்கள் ஆத்சேலின் மகன்கள்.

10 பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்களுக்கு எதிராகப் போர் செய்தார்கள்.
அப்போது, இஸ்ரவேலர்கள் பெலிஸ்தியர்களிடம் தோற்றுப்போய்
ஓடினார்கள்; பலர் கில்போவா மலையில் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள்.[k]
2 சவுலையும் அவருடைய மகன்களையும் பெலிஸ்தியர்கள் துரத்திக்
கொண்டே பக்கத்தில் வந்துவிட்டார்கள்; பின்பு, அவருடைய மகன்களான
யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூவாவையும்[l] கொன்றுபோட்
டார்கள். **3** சவுலை எதிர்த்து அவர்கள் தீவிரமாகப் போர் செய்தார்கள்;
கடைசியில் வில்வீரர்கள் அவரைக் கண்டு அவர்மேல் அம்பு எறிந்தார்கள்,
அவர் காயமடைந்தார்.[m] **4** அதனால் சவுல் தன்னுடைய ஆயுதங்களைச்
சுமந்தவனிடம், "உன் வாளை உருவி என்னைக் குத்திப்போடு; இல்லாவிட்
டால், விருத்தசேதனம் செய்யாத அந்த ஆட்கள் வந்து என்னைக் கொடூர
மாக* கொன்றுவிடுவார்கள்"[n] என்று சொன்னார். ஆனால், அவன் மிக
வும் பயந்ததால் தன்னால் முடியாதென்று சொல்லிவிட்டான். அதனால்,
சவுல் தன்னுடைய வாளை எடுத்துத் தன் உயிரைப் போக்கிக்கொண்டார்.[o]
5 சவுல் இறந்துவிட்டதைப் பார்த்தபோது அவனும் தன்னுடைய வாளை
எடுத்துத் தன் உயிரைப் போக்கிக்கொண்டான். **6** இப்படி, சவுலும் அவரு
டைய மூன்று மகன்களும் அவரோடு இருந்த அவருடைய வீட்டார் எல்லா
ரும் ஒரே நாளில் செத்துப்போனார்கள்.[p] **7** இஸ்ரவேல் வீரர்கள் எல்லாரும்
ஓடிவிட்டார்கள் என்பதையும், சவுலும் அவருடைய மகன்களும் இறந்துவிட்

9:33 * வே.வா., "சாப்பாட்டு அறைகளில்." **10:4** * வே.வா., "கேவலப்படுத்தி."

அதி. 9
a 2நா 2:4; 2நா 13:11
b லேவி 24:6, 8
c யோசு 21: 8, 17
d 1சா 14:50
e 1சா 9:1, 2; 1சா 11:15
f 1சா 14:45; 1சா 18:1; 2சா 1:23
g 1சா 14:49
h 1சா 31:2
i 2சா 4:4
j 2சா 9:12

அதி. 10
k 1சா 31:1-5; 2சா 1:21, 25
l 1நா 8:33
m 1சா 26:9, 10
n நியா 16: 21, 23
o 1நா 10:13
p 1சா 31:6, 7

டார்கள் என்பதையும் பள்ளத்தாக்குப் பகுதியில் வாழ்ந்துவந்த இஸ்ரவேலர்
கள் எல்லாரும் கேள்விப்பட்டபோது தங்கள் நகரங்களைவிட்டு ஓடிப்போ
னார்கள், பெலிஸ்தியர்கள் வந்து அங்கே குடியேறினார்கள்.

8 கொல்லப்பட்டவர்களின் பொருள்களை எடுத்துக்கொள்ள அடுத்த
நாள் பெலிஸ்தியர்கள் வந்தபோது, சவுலும் அவருடைய மகன்களும்
கில்போவா மலையில் செத்துக் கிடப்பதைப் பார்த்தார்கள்.[a] **9** அப்போது
சவுலிடமிருந்த எல்லாவற்றையும் உருவிக்கொண்டார்கள், அவருடைய
தலையை வெட்டினார்கள், அவருடைய ஆயுதங்களையும் எடுத்துக்கொண்
டார்கள்; பின்பு, தங்கள் கோயில்களிலும்[b] மக்கள் மத்தியிலும் இந்தச் செய்
தியை அறிவிப்பதற்காக பெலிஸ்தியர்களின் தேசமெங்கும் தூதுவர்களை
அனுப்பினார்கள். **10** அதன்பின், அவருடைய ஆயுதங்களைத் தங்களு
டைய கோயிலில் வைத்தார்கள்; அவருடைய தலையை தாகோனின் கோயி
லில்[c] தொங்கவிட்டார்கள்.

11 பெலிஸ்தியர்கள் சவுலுக்கு இப்படிச் செய்ததை கீலேயாத்திலுள்ள
யாபேஸ்[d] ஊர் மக்கள் எல்லாரும் கேள்விப்பட்டார்கள்.[e] **12** உடனே
அங்கிருந்த வீரர்கள் எல்லாரும் புறப்பட்டுப் போய், சவுலின் உடலையும்
அவருடைய மகன்களின் உடல்களையும் எடுத்துக்கொண்டு யாபேசுக்கு
வந்தார்கள்; பின்பு, அவர்களுடைய எலும்புகளை அங்கிருந்த பெரிய மரத்
தடியில் புதைத்துவிட்டு,[f] ஏழு நாட்களுக்கு விரதமிருந்தார்கள்.

13 யெகோவாவுக்கு சவுல் உண்மையாக இல்லாததால் செத்துப்
போனார். அவர் யெகோவாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை.[g]
14 யெகோவாவிடம் விசாரிப்பதற்குப் பதிலாக, ஆவிகளோடு பேசுகிறவர்
களிடம் விசாரித்தார்;[h] அதனால், கடவுள் அவரைச் சாகடித்து அவருடைய
அரச பதவியை ஈசாயின் மகன் தாவீதிடம் கொடுத்தார்.[i]

11 பின்பு, இஸ்ரவேலர்கள் எல்லாரும் எப்ரோனில்[j] இருந்த தாவீ
திடம் வந்து, "நாங்கள் உங்களுடைய இரத்த சொந்தம்.*[k] **2** சவுல்
ராஜாவாக இருந்தபோது, நீங்கள்தான் இஸ்ரவேலின் படைக்குத் தலைமை
தாங்கினீர்கள்.[l] உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களிடம், 'நீதான் என்
மக்களாகிய இஸ்ரவேலர்களுக்கு மேய்ப்பனாக இருப்பாய், என் மக்களா
கிய இஸ்ரவேலர்களுக்குத் தலைவனாக இருப்பாய்' என்று சொல்லியிருக்கி
றாரே"[m] என்றார்கள். **3** இஸ்ரவேலின் பெரியோர்கள்* எல்லாரும் எப்
ரோனில் இருந்த ராஜாவிடம் வந்தார்கள்; தாவீது எப்ரோனில் அவர்களோடு
யெகோவா முன்னால் ஒப்பந்தம் செய்தார். சாமுவேல் மூலம் யெகோவா
சொன்னபடியே[n] அவர்கள் தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்
செய்தார்கள்.[o]

4 பின்பு, தாவீதும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் எருசலேம் நகரத்தை,
அதாவது எபூசு நகரத்தை,[p] கைப்பற்றுவதற்காகப் போனார்கள். அந்தச் சம
யத்தில் எபூசியர்கள்[q] அங்கே குடியிருந்தார்கள். **5** அவர்கள் தாவீதிடம்,
"உன்னால் எங்களை நெருங்கவே முடியாது!"[r] என்று சொல்லி கேலி செய்
தார்கள். ஆனால், சீயோன் கோட்டையை தாவீது கைப்பற்றினார்;[s] அது பிற்
பாடு 'தாவீதின் நகரம்'[t] என்று அழைக்கப்பட்டது. **6** "எபூசியர்களை யார்
முதலில் வெட்டி வீழ்த்துகிறாரோ அவரைப் படைத் தளபதியாக
ஆக்குவேன்" என்று தாவீது சொல்லியிருந்தார். செருயாவின் மகன்

11:1 * நே.மொ., "எலும்பும் சதையுமாக இருக்கிறோம்." **11:3** * வே.வா., "மூப்பர்கள்."

அதி. 10
a 1சா 28:4; 1சா 31:8-10
b நியா 16: 23, 24
c 1சா 5:2
d 1சா 11:1
e 1சா 31:11-13
f 2சா 2:5; 2சா 21:12
g 1சா 13:13; 1சா 15:22, 23
h லேவி 20:6; 1சா 28:7
i ரூ 4:17; 1சா 13:14; 1சா 15:27, 28; 2சா 5:3

அதி. 11
j எண் 13:22; 2சா 2:1; 2சா 5:5; 1நா 12:23
k 2சா 5:1, 2
l 1சா 18:6, 13
m 2சா 6:21; 2சா 7:8, 9; சங் 78:70, 71
n 1சா 15:27, 28
o 1சா 16:13; 2சா 2:4; 2சா 5:3
p யோசு 15:63; நியா 1:21; நியா 19:10
q ஆதி 10: 15, 16; ஆதி 15: 18, 21; யாத் 3:17
r 2சா 5:6-10
s 1ரா 8:1; சங் 2:6; சங் 48:2
t 1ரா 2:10

யோவாப்[a] முதலில் சென்று வெட்டி வீழ்த்தியதால், அவர் படைத் தளபதி
யாக ஆனார். 7 பின்பு, சீயோன் கோட்டையில் தாவீது குடியேறினார். அத
னால்தான் அது 'தாவீதின் நகரம்' என்று அழைக்கப்பட்டது. 8 மில்
லோவை* சுற்றிலும் நகரத்தின் மற்ற இடங்களிலும் மதில்களையும் மற்ற
கட்டிடங்களையும் தாவீது கட்டினார்; நகரத்தின் மற்ற பகுதிகளை யோவாப்
பழுதுபார்த்தார். 9 தாவீது மேலும் மேலும் வலிமை அடைந்துகொண்டே
போனார்.[b] பரலோகப் படைகளின் யெகோவா அவருக்குத் துணையாக
இருந்தார்.

10 தாவீதுடன் இருந்த மாவீரர்களின் தலைவர்களைப் பற்றிய தகவல்
இது; தாவீது ராஜாவாக ஆவதற்கு மற்ற இஸ்ரவேலர்கள் எல்லாரோடும்
சேர்ந்து இவர்கள் ஆதரவு தந்தார்கள். இஸ்ரவேலர்களுக்கு யெகோவா
வாக்குறுதி கொடுத்தபடியே அவரை ராஜாவாக்கினார்கள்.[c] 11 தாவீது
டன் இருந்த மாவீரர்களின் பட்டியல் இதுவே: அக்மோனியனின் மகன்
யாஷோபியாம்.[d] அவர் மூன்று மாவீரர்களில் ஒருவர், அவர்தான்
அந்த மாவீரர்களுக்குத் தலைவர்.[e] ஒரு சமயம், அவர் தன்னுடைய ஈட்
டியால் 300 பேரைக் கொன்றுபோட்டார்.[f] 12 அவருக்கு அடுத்த இடத்
தில், அகோகியனான[g] தோதோவின் மகன் எலெயாசார்[h] இருந்தார். மூன்று
மாவீரர்களில் அவரும் ஒருவர். 13 பெலிஸ்தியர்கள் போர் செய்வதற்
காகத் திரண்டு வந்திருந்தபோது பாஸ்-தம்மீம்[i] என்ற இடத்தில் தாவீதுடன்
அவர் இருந்தார்; பெலிஸ்தியர்களைப் பார்த்ததும் வீரர்கள் தலைதெறிக்க
ஓடிப்போய்விட்டார்கள். அங்கே இருந்த வயலில் பார்லி செழித்து வளர்ந்
திருந்தது. 14 அவர் அந்த வயல் நடுவில் நின்று அதைப் பாதுகாத்தார்.
பெலிஸ்தியர்களை வெட்டி வீழ்த்திக்கொண்டே இருந்தார். அன்று அவர்
மூலம் யெகோவா மாபெரும் வெற்றியைத் தந்தார்.[j]

15 கற்பாறையிலிருந்த, அதாவது அதுல்லாம் குகையிலிருந்த,[k] தாவீதி
டம் 30 தலைவர்களில் மூன்று பேர் போனார்கள். அந்தச் சமயத்தில்,
பெலிஸ்தியர்களின் படை ரெப்பாயீம் பள்ளத்தாக்கில்[l] முகாம்போட்டிருந்
தது. 16 அப்போது, தாவீது பாதுகாப்பான ஓர் இடத்தில் இருந்தார்.
பெலிஸ்தியர்களின் காவல்படை ஒன்று பெத்லகேமில் இருந்தது. 17 அப்
போது தாவீது, "பெத்லகேம்[m] நுழைவாசலில் இருக்கும் தண்ணீர்த்
தொட்டியிலிருந்து தண்ணீரைக் குடிக்க ஆசையாக இருக்கிறது" என்று ஏக்
கத்தோடு சொன்னார். 18 உடனே அந்த மூன்று பேரும் பெலிஸ்தியர்க
ளோடு சண்டை போட்டுக்கொண்டே அவர்களுடைய முகாமுக்குள்
நுழைந்து, பெத்லகேம் நுழைவாசலில் இருக்கும் தண்ணீர்த் தொட்டியிலி
ருந்து தண்ணீர் கொண்டுவந்தார்கள். ஆனால் தாவீது அதைக் குடிக்க
மறுத்து, யெகோவாவுக்காகக் கீழே ஊற்றிவிட்டார். 19 அப்போது அவர்,
"நான் கடவுளுக்குப் பயந்து நடப்பவன். அதனால், இப்படிச் செய்வதை என்
னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது! எனக்காக உயிரையே பணயம்
வைத்த என் வீரர்களின் இரத்தத்தை நான் குடிக்க வேண்டுமா? இவர்கள்
தங்கள் உயிரைப் பணயம் வைத்து இதைக் கொண்டுவந்திருக்கிறார்களே!"[n]
என்று சொன்னார். இப்படி, அந்தத் தண்ணீரைக் குடிக்க மறுத்துவிட்டார்.
இவையே அந்த மூன்று மாவீரர்கள் செய்த செயல்கள்.

20 யோவாபின்[o] சகோதரனாகிய அபிசாய்,[p] இன்னும் மூன்று மாவீரர்க

11:8 * அர்த்தம், "மண்மேடு." இது ஒரு கோட்டையாக இருந்திருக்கலாம்.

அதி. 11
a 2சா 2:18
b 2சா 3:1
c 1சா 16:12, 13
d 1நா 27:1, 2
e 2சா 23:8
f யோசு 23:10
g 1நா 8:1, 4
h 2சா 23:9, 10
2சா 23:15-17
i 1சா 17:1
j சங் 18:50
k 1சா 22:1
l யோசு 15: 8, 12
2சா 23:13-17
m 1சா 20:6
n ஆதி 9:4
லேவி 17:10
o 2சா 3:30
p 1சா 26:6
2சா 2:18
2சா 18:2

ளுக்குத் தலைவரானார். அவர் தன்னுடைய ஈட்டியால் 300 பேரைக் கொன்றுபோட்டார். முதல் மூன்று மாவீரர்களைப் போலவே இவரும் புகழ் பெற்றிருந்தார்.[a] **21** மாவீரர்கள் மூன்று பேரில் தனிச்சிறப்பு பெற்றவராகவும் தலைவராகவும் இருந்தாலும், முதல் மூன்று மாவீரர்களுக்கு அவர் சமமாக இல்லை.

22 யோய்தாவின் மகன் பெனாயா[b] அஞ்சாநெஞ்சம் உள்ளவர். கப்செயேலில்[c] வீரச்செயல்கள் பலவற்றைச் செய்திருந்தார். மோவாபியனான அரியேலின் இரண்டு மகன்களைக் கொன்றுபோட்டார். ஒருநாள், பனி பெய்துகொண்டிருந்தபோது தண்ணீர்த் தொட்டிக்குள் இறங்கி ஒரு சிங்கத்தைக் கொன்றுபோட்டார்.[d] **23** அதோடு, மிக மிக உயரமாக இருந்த ஓர் எகிப்தியனையும் கொன்றுபோட்டார். அந்த எகிப்தியனின் உயரம் சுமார் 7.3 அடி.*[e] அவன் கையில் இருந்த ஈட்டியின் கம்பு நெசவாளர்களுடைய தறிக்கட்டையைப் போல் இருந்தது.[f] ஆனாலும், பெனாயா ஒரு கம்பை எடுத்துக்கொண்டு அவனை எதிர்த்துச் சண்டைபோடப் போனார். அவனுடைய கையிலிருந்த ஈட்டியைப் பிடுங்கி, அந்த ஈட்டியாலேயே அவனைக் குத்திக் கொன்றார்.[g] **24** இவையெல்லாம் யோய்தாவின் மகன் பெனாயாவின் செயல்கள். முதல் மூன்று மாவீரர்களைப் போலவே இவரும் புகழ் பெற்றிருந்தார். **25** மாவீரர்கள் 30 பேரைவிட இவர் தனிச்சிறப்பு பெற்றிருந்தார். ஆனால், முதல் மூன்று மாவீரர்களுக்கு இவர் சமமாக இல்லை.[h] ஆனாலும், தாவீது இவரைத் தன்னுடைய மெய்க்காவலர்களுக்குத் தலைவராக நியமித்தார்.

26 தாவீதின் படையில் இருந்த மாவீரர்கள்: யோவாபின் சகோதரன் ஆசகேல்,[i] பெத்லகேமைச் சேர்ந்த தோதோவின் மகன் எல்க்கானான்,[j] **27** ஆரத்தியனான சம்மோத், பெலோனியனான ஏலெஸ், **28** தெக்கோவா ஊரைச் சேர்ந்த இக்கேசின் மகன் ஈரா,[k] ஆனதோத்தியனான அபியேசர்,[l] **29** உஷாத்தியனான சிபெக்காய்,[m] அகோகியனான ஈலாய், **30** நெத்தோபாத்தியனான மகராய்,[n] நெத்தோபாத்தியனான பாணாவின் மகன் ஏலேத்,[o] **31** பென்யமீன் கோத்திரத்தாருடைய[p] கிபியாவைச் சேர்ந்த ரிபாயின் மகன் இத்தாய், பிரத்தோனியனான பெனாயா, **32** காயாஸ்[q] பள்ளத்தாக்கை* சேர்ந்த ஊராய், அர்பாத்தியனான அபியேல், **33** பகூரிமியனான அஸ்மாவேத், சால்பீமியனான எலியாபா, **34** கீசோனியனான ஆசேமின் மகன்கள், ஆராரியனான சாகியின் மகன் யோனத்தான், **35** ஆராரியனான சாக்காரின் மகன் அகியாம், ஊரின் மகன் எலிபால், **36** மெகராத்தியனான ஹேப்பேர், பெலோனியனான அகியா, **37** கர்மேல் ஊரைச் சேர்ந்த எஸ்ரோ, எஸ்பாயின் மகன் நாராய், **38** நாத்தானின் சகோதரன் யோவேல், அகரியின் மகன் மிப்கார், **39** அம்மோனியனான சேலேக், செருயாவின் மகனாகிய யோவாபின் ஆயுதங்களைச் சுமந்த பெரோத்தியனான நகராய், **40** இத்தரியனான ஈரா, இத்தரியனான காரேப், **41** ஏத்தியனான உரியா,[r] அக்லாயின் மகன் சாபாத், **42** ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவனும் அதன் தலைவனுமான ஷீஸாவின் மகன் அதினா, அவனோடு இருந்த 30 பேர்; **43** மாக்காவின் மகன் ஆனான், மிதினியனான யொஷபாத், **44** அஸ்தரோத்தியனான உத்சியா, ஆரோவேரியனான ஓத்தாமின்

11:23 * நே.மொ., “5 முழம்.” **11:32** * அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கை.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 11
a 2சா 23:18, 19
b 1ரா 4:4; 1நா 27:1, 5
c யோசு 15:21
d நியா 14:5, 6; 1சா 17:36, 37; 2சா 23:20-23
e 1சா 17:4
f 1சா 17:7
g 1சா 17:51
h 1நா 11:19
i 2சா 2:18, 23; 1நா 27:1, 7
j 2சா 23:24-39
k 1நா 27:1, 9
l 1நா 27:1, 12
m 2சா 21:18; 1நா 27:1, 11
n 1நா 27:1, 13
o 1நா 27:1, 15
p நியா 20:15; 1நா 12:1, 2
q யோசு 24:30
r 2சா 11:3, 17; 2சா 12:9; 1ரா 15:5

மகன்களான சமாவும் எயியேலும்; **45** ஷிம்ரியின் மகன் யெதியாயேல்,
அவன் சகோதரன் தித்சியனான யோஹா, **46** மாகாவியனான ஏலியேல்,
எல்நாமின் மகன்களான எரிபாயும் யொசவியாவும், மோவாபியனான
இத்மா; **47** ஏலியேல், ஓபேத், மெசோபாயா ஊரானான யாசீயேல்.

12 கீசின் மகனான சவுலுக்குப் பயந்து[a] சிக்லாகுவில்[b] தாவீது ஒளிந்து
கொண்டிருந்தபோது அவருடன் சேர்ந்துகொண்ட ஆட்களைப் பற்
றிய தகவல். போரில் அவருக்கு உதவி செய்த மாவீரர்களுடன் இந்த ஆட்
கள் சேர்ந்துகொண்டார்கள்.[c] **2** இவர்கள் வில்வீரர்கள்; வலது கையாலும்
இடது கையாலும்[d] திறமையாகக் கவண்கல் எறிகிறவர்கள்,[e] அம்பு எறிகிற
வர்கள். இவர்கள் பென்யமீன்[f] கோத்திரத்தைச் சேர்ந்த சவுலின் சகோதரர்
கள்.* **3** இவர்களுடைய பெயர்கள்: தலைவர் அகியேசேர் மற்றும்
யோவாஸ்; இவர்கள் இரண்டு பேரும் கிபியா[g] ஊரைச் சேர்ந்த செமா
வின் மகன்கள். அஸ்மாவேத்தின்[h] மகன்களான எசியேல், பேலேட்,
பெராக்கா, ஆனதோத்தியனான யெகூ. **4** மாவீரர்கள் 30 பேரில் ஒருவ
ரும்[i] அவர்களுக்குத் தலைவருமான இஸ்மாயா; இவர் கிபியோன்[j] ஊரைச்
சேர்ந்தவர். எரேமியா, யகாசியேல், யோகனான், கெதேராவியனான யோச
பத், **5** எலுசாய், யெரிமோத், பிகலியா, செமரியா, ஆரீப்பியனான செப்பத்
தியா, **6** கோராகியர்களான[k] எல்க்கானா, இஷியா, அசரெயேல், யொவே
சேர், யாஷோபியாம்; **7** கேதோரைச் சேர்ந்த எரோகாமின் மகன்களாகிய
யொவேலா, செபதியா.

8 வனாந்தரத்திலுள்ள ஒரு குகையில் தாவீது இருந்தபோது[l] காத் கோத்
திரத்தார் சிலர் அவருடன் சேர்ந்துகொண்டார்கள்; அவர்கள் போர்ப் பயிற்சி
பெற்ற மாவீரர்கள்; பெரிய கேடயத்தையும் ஈட்டியையும் வைத்துக்கொண்டு
தயாராக இருந்தார்கள். அவர்களுடைய முகம் சிங்க முகம்போல் இருந்தது;
மலைகளில் திரியும் மான்கள்போல் படுவேகமாக ஓடினார்கள். **9** வீரதீர
செயல்களைச் செய்வதில் ஏத்சேர் முதலிடத்தில் இருந்தார்; ஒபதியா இரண்
டாம் இடத்திலும், எலியாப் மூன்றாம் இடத்திலும், **10** மிஸ்மன்னா நான்
காம் இடத்திலும், எரேமியா ஐந்தாம் இடத்திலும், **11** அத்தாய் ஆறாம்
இடத்திலும், ஏலியேல் ஏழாம் இடத்திலும், **12** யோகனான் எட்டாம் இடத்
திலும், எல்சபாத் ஒன்பதாம் இடத்திலும், **13** எரேமியா பத்தாம் இடத்தி
லும், மக்பன்னாய் பதினோராம் இடத்திலும் இருந்தார்கள். **14** காத் கோத்தி
ரத்தைச்[m] சேர்ந்த இவர்கள், தாவீதின் படைத் தலைவர்களாக இருந்தார்கள்.
கடைசி இடத்தில் இருந்தவர் 100 பேருக்குச் சமம். முதலிடத்தில் இருந்தவர்
1,000 பேருக்குச் சமம்.[n] **15** முதல் மாதத்தில் யோர்தானில் வெள்ளம் கரை
புரண்டு ஓடியபோது இவர்கள்தான் அதைக் கடந்து போனார்கள்; தாழ்வான
பிரதேசங்களில் குடியிருந்த எல்லாரையும் கிழக்கேயும் மேற்கேயும் துரத்தி
யடித்தார்கள்.

16 பென்யமீன், யூதா கோத்திரங்களைச் சேர்ந்த சிலரும்கூட தாவீதைப்
பார்க்க அந்தக் குகைக்கு வந்தார்கள்.[o] **17** தாவீது வெளியே வந்து அவர்
களிடம், “எனக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு நீங்
கள் வந்திருந்தால், நாம் நண்பர்களாக இருக்கலாம். ஆனால், எந்தத் தப்பும்
செய்யாத என்னைக் காட்டிக்கொடுக்க வந்திருந்தால், நம் முன்னோர்களின்
கடவுளே அதைப் பார்த்து தீர்ப்பு சொல்லட்டும்”[p] என்றார். **18** அப்போது,

---

12:2 * அதாவது, “ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.”

அதி. 12
a 1சா 27:1
b 1சா 27:5, 6; 2சா 1:1
c 1நா 11:10
d நியா 3:15; நியா 20:15, 16
e 1சா 17:49
f ஆதி 49:27
g 1சா 11:4
h 1நா 11:26, 33
i 1நா 11:15
j யோசு 9:3
k எண் 26:10, 11
l 1சா 23:14, 29; 1சா 24:22; 1நா 11:16
m ஆதி 49:19; உபா 33:20
n லேவி 26:8
o 1சா 22:1; 1சா 23:14; 1சா 24:22
p 1சா 24:12, 15; 1சா 26:23; சங் 7:6

30 பேருக்குத் தலைவரான அமாசாய்க்குக் கடவுளுடைய சக்தி கிடைத்
தது;[a] அவர்,

“தாவீதே, நாங்கள் உங்களுடைய ஆட்கள்; ஈசாயின் மகனே,
நாங்கள் உங்களுடைய பக்கம் இருக்கிறோம்.[b]
சமாதானம்! உங்களுக்குச் சமாதானம் கிடைக்கட்டும்,
உங்களுக்குத் துணையாக இருப்பவர்களுக்கும் சமாதானம்
கிடைக்கட்டும்!
கடவுள் உங்களுக்குத் துணையாக இருக்கிறார்”[c]

என்று சொன்னார். அதனால், தாவீது அவர்களைத் தன்னுடன் சேர்த்துக்
கொண்டு படைத் தலைவர்களாக நியமித்தார்.

19 மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த சிலரும் தாவீதுடன் சேர்ந்து
கொண்டார்கள்; அந்தச் சமயத்தில், சவுலுக்கு எதிராகப் போர் செய்யப்
போன பெலிஸ்தியர்களுடன் தாவீதும் போனார். ஆனால், பெலிஸ்திய
தலைவர்கள்[d] கூடிப்பேசினார்கள்; “அவன் தன்னுடைய எஜமானாகிய சவுலு
டன் சேர்ந்துகொண்டு நம் தலைக்கே குறி வைத்துவிடுவான்” என்று சொல்லி
தாவீதை அங்கிருந்து அனுப்பிவிட்டார்கள். அதனால், அவர் பெலிஸ்தியர்க
ளுக்கு உதவி செய்யவில்லை.[e] **20** தாவீது சிக்லாகுவுக்குப்[f] போனபோது,
அவரோடு சேர்ந்துகொண்ட மனாசே கோத்திரத்தார் இவர்களே: அத்னா,
யோசபத், யெதியாயேல், மிகாவேல், யோசபத், எலிகூ, சில்த்தாய்; இவர்கள்
மனாசே கோத்திரத்திலுள்ள ஒவ்வொரு ஆயிரம் வீரர்களுக்கும் தலைவர்க
ளாக இருந்தார்கள்.[g] **21** கொள்ளைக்கூட்டத்தாரைப் பிடிக்க தாவீதுக்கு
உதவி செய்தார்கள்; ஏனென்றால், இவர்கள் எல்லாரும் பலசாலிகளாகவும்
தைரியசாலிகளாகவும் இருந்தார்கள்;[h] இவர்கள் அவருடைய படைத் தலை
வர்களாக ஆனார்கள். **22** தினமும் வீரர்கள் வந்து தாவீதோடு சேர்ந்து
கொண்டே இருந்தார்கள்;[i] அதனால், அவருடைய படை கடவுளுடைய
படையைப் போல மிகப் பெரியதாக ஆனது.[j]

23 யெகோவாவின் உத்தரவுப்படி சவுலின் அரச பதவியை தாவீதுக்குக்
கொடுக்க[k] எப்ரோனுக்குச் சிலர் வந்தார்கள்.[l] ஆயுதமேந்திய அந்த வீரர்க
ளின் எண்ணிக்கை இதுவே: **24** யூதா கோத்திரத்தில் ஆயுதமேந்திய வீரர்
கள் 6,800 பேர்; அவர்கள் பெரிய கேடயமும் ஈட்டியும் பிடித்திருந்தார்கள்.
25 சிமியோன் கோத்திரத்தில், பலசாலிகளாகவும் தைரியசாலிகளாகவும்
இருந்தவர்கள் 7,100 பேர்.

26 லேவியரில், 4,600 பேர் வந்தார்கள். **27** ஆரோனின் வம்சத்தாருக்
குத்[m] தலைவராக இருந்த யோய்தாவுடன்[n] 3,700 பேர் வந்தார்கள்; **28** பல
சாலியாகவும் தைரியசாலியாகவும் இருந்த இளம் வீரர் சாதோக்கும்[o] அவ
ருடைய தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள் 22 பேரும் வந்தார்கள்.

29 பென்யமீன் கோத்திரத்தார், அதாவது சவுலின் சகோதரர்கள்,*[p]
3,000 பேர் வந்தார்கள்; பென்யமீன் கோத்திரத்தில் பெரும்பாலோர்
முன்பு சவுலின் குடும்பத்துக்கு விசுவாசமாக இருந்தார்கள். **30** எப்பிரா
யீம் கோத்திரத்திலிருந்து பலசாலிகளாகவும் தைரியசாலிகளாகவும் இருந்த
20,800 பேர் வந்தார்கள்; இவர்கள் தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்தில்
பிரபலமாக இருந்தார்கள்.

12:29 * அதாவது, “ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.”

அதி. 12
- *a* நியா 6:34; நியா 13:24, 25
- *b* 2சா 15:21
- *c* சங் 54:4
- *d* நியா 3:1, 3
- *e* 1சா 29:2-4
- *f* 1சா 30:1
- *g* உபா 33:17
- *h* 1நா 5:23, 24; 1நா 11:10
- *i* 2சா 2:3
- *j* 2சா 3:1
- *k* 1சா 16:1, 13; 1நா 11:10
- *l* 2சா 2:1; 2சா 5:1
- *m* 1நா 6:49
- *n* 1நா 27:1, 5
- *o* 2சா 8:17; 1ரா 1:8; 1ரா 2:35; 1நா 6:1, 8; 1நா 27:16, 17
- *p* 1நா 8:1, 33; 1நா 12:1, 2

31 மனாசேயின் பாதிக் கோத்திரத்திலிருந்து பெயர் பெயராகத் தேர்ந்
தெடுக்கப்பட்ட 18,000 பேர் தாவீதை ராஜாவாக்க வந்தார்கள். **32** இசக்
கார் கோத்திரத்திலிருந்து 200 தலைவர்கள் வந்தார்கள். தாங்கள் வாழ்கிற
காலத்தைப் பற்றியும், இஸ்ரவேலர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப்
பற்றியும் இவர்கள் புரிந்து வைத்திருந்தார்கள். இந்தத் தலைவர்களுடைய
சகோதரர்கள்* எல்லாரும் இவர்களுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு
நடந்தார்கள். **33** செபுலோன் கோத்திரத்திலிருந்து 50,000 பயிற்சி பெற்ற
வீரர்கள் வந்தார்கள். இவர்கள் போருக்கு அணிவகுத்துப் போகத் தயாராயி
ருந்தார்கள். இவர்களிடம் எல்லா விதமான போர் ஆயுதங்களும் இருந்தன.
தாவீதுக்கு உண்மையாக* இருக்க வேண்டும் என்ற உறுதியோடு இவர்கள்
எல்லாரும் அவருடன் சேர்ந்துகொண்டார்கள்.# **34** நப்தலி கோத்திரத்தி
லிருந்து 1,000 தலைவர்கள் வந்தார்கள்; பெரிய கேடயத்தோடும் ஈட்டி
யோடும் 37,000 வீரர்கள் அவர்களுடன் வந்தார்கள். **35** தாண் கோத்திரத்
திலிருந்து, போருக்கு அணிவகுத்துப் போகத் தயாராக இருந்த 28,600 பேர்
வந்தார்கள். **36** ஆசேர் கோத்திரத்திலிருந்து, போருக்கு அணிவகுத்துப்
போகத் தயாராக இருந்த 40,000 வீரர்கள் வந்தார்கள்.

37 யோர்தானுக்கு அக்கரையிலிருந்து[a] 1,20,000 வீரர்கள் வந்தார்கள்;
இவர்கள் ரூபன் கோத்திரத்தையும் காத் கோத்திரத்தையும் மனாசேயின்
பாதிக் கோத்திரத்தையும் சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லா விதமான போர்
ஆயுதங்களையும் வைத்திருந்தார்கள். **38** இவர்கள் எல்லாரும் போர்வீரர்
கள், போருக்கு அணிவகுத்துப் போகத் தயாராக இருந்தார்கள்; இஸ்ரவேல்
முழுவதுக்கும் தாவீதை ராஜாவாக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு எப்
ரோனுக்கு வந்தார்கள்; இவர்களைப் போல், இஸ்ரவேலில் இருந்த மற்ற எல்
லாரும்கூட தாவீதை ராஜாவாக்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு*
இருந்தார்கள்.[b] **39** அவர்கள் தாவீதோடு மூன்று நாட்கள் தங்கியிருந்து
சாப்பிட்டார்கள், குடித்தார்கள்; எல்லா ஏற்பாடுகளையும் அவர்களுடைய
சகோதரர்கள் செய்திருந்தார்கள். **40** அதோடு, யூதா கோத்திரத்தாருக்
குப் பக்கத்தில் குடியிருந்தவர்களும், இசக்கார், செபுலோன், நப்தலி கோத்
திரத்தாரைப் போல் தூரத்தில் குடியிருந்தவர்களும் கழுதைகள், ஒட்டகங்
கள், கோவேறு கழுதைகள்,* மாடுகள் ஆகியவற்றின்மீது உணவு
வகைகளை ஏற்றிக் கொண்டுவந்தார்கள்; மாவில் தயாரிக்கப்பட்ட உணவு
வகைகள், அத்திப்பழ அடைகள், உலர்ந்த திராட்சை அடைகள், திராட்ச
மது, எண்ணெய், ஆடுமாடுகள் ஆகியவற்றை ஏராளமாய்க் கொண்டுவந்
தார்கள்; ஏனென்றால், இஸ்ரவேலர்கள் எல்லாரும் மிகவும் சந்தோஷமாக
இருந்தார்கள்.

13 ஆயிரம் வீரர்களுக்குத் தலைவர்களோடும் நூறு வீரர்களுக்குத்
தலைவர்களோடும் மற்ற எல்லா தலைவர்களோடும்[c] தாவீது கலந்
துபேசினார். **2** பின்பு தாவீது இஸ்ரவேல் சபையார் எல்லாரிடமும், "உங்க
ளுக்கு நல்லதாகப் பட்டால், நம் கடவுளாகிய யெகோவா விரும்பினால்,
இஸ்ரவேல் தேசம் முழுவதும் குடியிருக்கிற நம்முடைய மற்ற சகோதரர்க

அதி. 12
a எண் 32:33
யோசு 13:8

b ஆதி 49:8, 10
1நா 11:10

அதி. 13
c 1நா 15:25

12:32 * அதாவது, "ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்." **12:33** * வே.வா., "பற்றுமா
றாமல்." # வே.வா., "தாவீதோடு சேர்ந்துகொண்ட யாருமே இரண்டு இதயத்தோடு
இல்லை." **12:38** * நே.மொ., "இதயத்தோடு." **12:40** * பெண் குதிரைக்கும் ஆண்
கழுதைக்கும் பிறந்த விலங்கு.

ளையும் வரச் சொல்லி செய்தி அனுப்புவோம்; தங்களுடைய நகரங்களில்*
குடியிருக்கிற குருமார்களையும் லேவியர்களையும்கூட வரவழைப்போம்.[a]
3 பின்பு, எல்லாரும் சேர்ந்துபோய் நம் கடவுளுடைய பெட்டியைக் கொண்
டுவருவோம்"[b] என்று சொன்னார். ஏனென்றால், சவுலின் காலத்தில் அவர்
கள் அந்தப் பெட்டியைக் கண்டுகொள்ளாமல் விட்டிருந்தார்கள்.[c] **4** தாவீது
சொன்னது எல்லா மக்களுக்கும் சரியாகப் பட்டதால், சபையார் எல்லா
ரும் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். **5** அதனால், உண்மைக் கடவுளுடைய
பெட்டியை கீரியாத்-யெயாரீமிலிருந்து[d] கொண்டுவருவதற்காக இஸ்ரவேலர்
கள் எல்லாரையும் தாவீது ஒன்றுகூட்டினார்; சீகோர்முதல்* லெபோ-காமாத்
வரை#[e] குடியிருந்த மக்கள் எல்லாரையும் ஒன்றுகூட்டினார்.

6 அந்தச் சமயத்தில் உண்மைக் கடவுளுடைய பெட்டி யூதாவுக்குச்
சொந்தமான பாலாவில் இருந்தது,[f] அதாவது கீரியாத்-யெயாரீமில் இருந்
தது; கேருபீன்களுக்கு மேலே* அமர்ந்திருக்கும் யெகோவாவுடைய[g]
பெயரைச் சொல்லி, மக்கள் எல்லாரும் அந்தப் பெட்டிக்கு முன்னால்
வேண்டிக்கொள்வார்கள். அந்தப் பெட்டியைக் கொண்டுவர தாவீதும்
இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் புறப்பட்டுப் போனார்கள். **7** உண்மைக்
கடவுளுடைய பெட்டியை அபினதாபின் வீட்டிலிருந்து எடுத்து ஒரு புதிய
மாட்டுவண்டியில் ஏற்றினார்கள்.[h] ஊசாவும் அகியோவும் அந்த மாட்டு
வண்டிக்கு முன்னால் நடந்துபோனார்கள்.[i] **8** தாவீதும் இஸ்ரவேல் மக்கள்
எல்லாரும் உண்மைக் கடவுளுக்கு முன்னால் உற்சாகம் பொங்கக் கொண்
டாடினார்கள்; பாடல்களைப் பாடிக்கொண்டும், யாழ்கள், மற்ற நரம்பி
சைக் கருவிகள், கஞ்சிராக்கள்[j] ஆகியவற்றை இசைத்துக்கொண்டும், ஜால்
ராக்களைத்[k] தட்டிக்கொண்டும், எக்காளங்களை[l] ஊதிக்கொண்டும் நடந்து
போனார்கள். **9** அவர்கள் கீதோனின் களத்துமேட்டுக்கு வந்தபோது,
மாடுகள் தடுமாறியதால் கடவுளுடைய பெட்டி கீழே விழப்போனது.
உடனே ஊசா தன்னுடைய கையை நீட்டி அந்தப் பெட்டியைப் பிடித்
தான். **10** அதனால், ஊசாமீது யெகோவாவுக்குப் பயங்கர கோபம் வந்
தது. ஊசா தன்னுடைய கையை நீட்டி அந்தப் பெட்டியைப் பிடித்ததால்,
அவனைக் கடவுள் கொன்றுபோட்டார்.[m] அவன் அந்த இடத்திலேயே
கடவுளுக்கு முன்னால் விழுந்து செத்தான்.[n] **11** யெகோவா கடும்
கோபத்தோடு ஊசாவைக் கொன்றுபோட்டதால் தாவீது கோபம்* அடைந்
தார். அதனால், அந்த இடம் இன்றுவரை பேரேஸ்-ஊசா# என்று அழைக்
கப்படுகிறது.

12 அன்றைக்கு தாவீது உண்மைக் கடவுளுக்குப் பயந்து, "உண்மைக்
கடவுளுடைய பெட்டியை எப்படி என்னுடைய இடத்துக்குக் கொண்டு
போவேன்?"[o] என்றார். **13** கடவுளுடைய பெட்டியை 'தாவீதின் நகரத்
திலிருந்த' தன்னுடைய இடத்துக்கு அவர் கொண்டுபோகவில்லை. அதற்
குப் பதிலாக, காத்* நகரத்தைச் சேர்ந்த ஓபேத்-ஏதோம் வீட்டுக்கு அதை
அனுப்பிவைத்தார். **14** உண்மைக் கடவுளுடைய பெட்டி ஓபேத்-ஏதோ
மின் வீட்டில் மூன்று மாதம் இருந்தது; அப்போது, அவருடைய

அதி. 13
a எண் 35:2
b 1சா 7:2
c 1சா 14:18
d 1சா 6:21–7:1; 2சா 6:1, 2; 1நா 15:3
e எண் 34:2, 8
f யோசு 15: 9, 12
g யாத் 25:22; எண் 7:89; 1சா 4:4; 2சா 6:2
h யாத் 37:5
i 2சா 6:3-8
j யாத் 15:20
k 1நா 25:1
l 2நா 5:13
m எண் 4:15
n லேவி 10:1, 2
o 2சா 6:9-11

13:2 *நே.மொ., "மேய்ச்சல் நிலங்களுடன் சேர்ந்த நகரங்களில்." **13:5** *வே.வா., "எகிப்து ஆறுமுதல்." #வே.வா., "காமாத்தின் நுழைவாசல்வரை." **13:6** *அல்லது, "நடுவில்." **13:11** *வே.வா., "மனவேதனை." #அர்த்தம், "ஊசாமீது மூண்ட கடும் கோபம்." **13:13** *'காத்' என்பது காத்-ரிம்மோன் நகரத்தைக் குறிக்கலாம்.

வீட்டிலிருந்த எல்லாரையும் அவருக்குச் சொந்தமான எல்லாவற்றையும்
யெகோவா ஆசீர்வதித்து வந்தார்.[a]

14 தீருவின் ராஜாவாகிய ஈராம்[b] தாவீதிடம் தூதுவர்களை அனுப்பி
னார்; அதோடு, தாவீதுக்கு ஓர் அரண்மனை கட்டுவதற்காக
தேவதாரு மரங்களையும் கொத்தனார்களையும்* தச்சர்களையும் அனுப்பி
வைத்தார்.[c] **2** இஸ்ரவேல்மீது தன்னுடைய ஆட்சியை யெகோவாதான்
வலுப்படுத்தினார்[d] என்பதையும், அவருடைய மக்களாகிய இஸ்ரவேலர்க
ளுக்காகத் தன்னுடைய ஆட்சியை அவர்தான் மிகவும் உயர்த்தினார்[e] என்
பதையும் தாவீது புரிந்துகொண்டார்.

3 தாவீது எருசலேமில் இருந்தபோது நிறைய மனைவிகளைச் சேர்த்
துக்கொண்டார்.[f] அவருக்கு நிறைய மகன்களும் மகள்களும் பிறந்தார்
கள்.[g] **4** எருசலேமில் அவருக்குப் பிறந்த பிள்ளைகளின் பெயர்கள்:[h] சம்
முவா, சோபாப், நாத்தான்,[i] சாலொமோன்,[j] **5** இப்பார், எலிசூவா,
எல்பெலேத், **6** நோகா, நெப்பேக், யப்பியா, **7** எலிஷாமா, பெலியாதா,
எலிப்பேலேத்.

8 தாவீது இஸ்ரவேல் முழுவதுக்கும் ராஜாவாக அபிஷேகம் செய்யப்
பட்டதை[k] பெலிஸ்தியர்கள் கேள்விப்பட்டபோது, அவரைத் தேடிக் கண்டு
பிடிப்பதற்காக அவர்கள் எல்லாரும் வந்தார்கள்.[l] இது தாவீதின் காதுக்கு
எட்டியதும், அவர்களோடு போர் செய்யப் புறப்பட்டுப் போனார்.
9 பெலிஸ்தியர்கள் வந்து ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் குடியிருந்தவர்கள்மீது
திடீர்த் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தார்கள்.[m] **10** அப்போது தாவீது
கடவுளிடம், "நான் இந்த பெலிஸ்தியர்களோடு போர் செய்யப் போகலாமா?
அவர்களை என் கையில் கொடுப்பீர்களா?" என்று விசாரித்தார். அதற்கு
யெகோவா, "போ, அவர்களை நிச்சயம் உன் கையில் கொடுப்பேன்"[n]
என்று சொன்னார். **11** அதனால் தாவீது பாகால்-பிராசீமுக்குப்[o] போய்,
பெலிஸ்தியர்களை வெட்டி வீழ்த்தினார். அப்போது, "சீறிப்பாயும் வெள்ளம்
போல் உண்மைக் கடவுள் என் எதிரிகளை அழித்துப்போட்டார், என் மூலம்
இதைச் செய்தார்" என்று சொன்னார். அதனால், அந்த இடத்துக்கு பாகால்-
பிராசீம்* என்று பெயர் வைத்தார்கள். **12** பெலிஸ்தியர்கள் தங்களு
டைய சிலைகளை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். அவற்றை
எரித்துப்போடச் சொல்லி தாவீது கட்டளையிட்டார், அதன்படியே வீரர்கள்
அவற்றை எரித்துப்போட்டார்கள்.[p]

13 பின்பு, பள்ளத்தாக்கில் குடியிருந்தவர்கள்மீது பெலிஸ்தியர்கள் மறுப
டியும் திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள்.[q] **14** தாவீது மறுபடியும் உண்
மைக் கடவுளிடம் விசாரித்தார்; அதற்கு அவர், "நீ அவர்களை நேரடியாக
எதிர்த்துப் போகாதே. பின்பக்கமாகச் சுற்றிப்போய் பேக்கா புதர்ச்செடிக
ளுக்குப் பின்னால் ஒளிந்துகொள்.[r] பின்பு, வெளியே வந்து அவர்களோடு
போர் செய். **15** படைகள் அணிவகுத்து வருகிற சத்தம் பேக்கா புதர்ச்செ
டிகளுக்கு மேலே கேட்கும்போது உடனே தாக்கு. ஏனென்றால், பெலிஸ்தி
யர்களின் படையைத் தாக்குவதற்கு உண்மைக் கடவுள் உனக்கு முன்னால்
போயிருப்பார்"[s] என்று சொன்னார். **16** உண்மைக் கடவுள் கட்டளையிட்
டபடியே தாவீது செய்தார்.[t] பெலிஸ்திய வீரர்களை கிபியோன்முதல்

14:1 *வே.வா., "மதில் கட்டுகிறவர்களையும்." **14:11** *அர்த்தம், "சீறிப் பாயும் தலைவர்."

அதி. 13
a ஆதி 30:27
ஆதி 39:5

அதி. 14
b 1ரா 5:6, 8
c 2சா 5:11, 12
d சங் 89:20, 21
e 2சா 7:8
f உபா 17:17
g 2சா 5:13-16
h 1நா 3:5-9
i லூ 3:23, 31
j 1ரா 1:47
மத் 1:6
k 1நா 11:3
l 2சா 5:17
சங் 2:2
m 2சா 5:18, 22
2சா 23:13
n 2சா 5:19-21
o ஏசா 28:21
p உபா 7:25
q 2சா 5:22-25
r யோசு 8:2
சங் 18:34
s உபா 23:14
நியா 4:14
t ஆதி 6:22
யாத் 39:32

கேசேர்வரை[a] தாவீதின் வீரர்கள் வெட்டி வீழ்த்தினார்கள். **17** தாவீதின்
புகழ் எல்லா தேசங்களுக்கும் பரவியது. எல்லா தேசத்து மக்களும் அவ
ரைப் பார்த்துப் பயந்து நடுங்கும்படி யெகோவா செய்தார்.[b]

15 பின்பு, 'தாவீதின் நகரத்தில்' தனக்காக நிறைய அரண்மனைகளை
தாவீது கட்டினார்; உண்மைக் கடவுளின் பெட்டியை வைக்க இடம்
ஒதுக்கி அதற்கு ஒரு கூடாரத்தைப் போட்டார்.[c] **2** அப்போது அவர்,
"லேவியர்களைத் தவிர வேறு யாரும் உண்மைக் கடவுளின் பெட்டியைச்
சுமக்கக் கூடாது. யெகோவாவின் பெட்டியைச் சுமப்பதற்கும் அவருக்கு
என்றென்றும் சேவை செய்வதற்கும் அவர்களைத்தான் யெகோவா தேர்ந்
தெடுத்திருக்கிறார்"[d] என்று சொன்னார். **3** பின்பு, யெகோவாவின் பெட்
டிக்காகத் தான் தயார் செய்திருந்த இடத்துக்கு அதைக் கொண்டுவர இஸ்ர
வேலர்கள் எல்லாரையும் தாவீது எருசலேமில் ஒன்றுகூட்டினார்.[e]

4 ஆரோனின் வம்சத்தில் வந்தவர்களையும்[f] மற்ற லேவியர்களையும்[g]
தாவீது ஒன்றுகூட்டினார். **5** கோகாத்தியர்களில் தலைவர் ஊரியேலும்
அவருடைய சகோதரர்கள் 120 பேரும் வந்தார்கள்; **6** மெராரியர்களில்
தலைவர் அசாயாவும்[h] அவருடைய சகோதரர்கள் 220 பேரும் வந்தார்கள்;
7 கெர்சோமியர்களில் தலைவர் யோவேலும்[i] அவருடைய சகோதரர்கள்
130 பேரும் வந்தார்கள்; **8** எலிசாப்பான்[j] வம்சத்தில் தலைவர் செமாயா
வும் அவருடைய சகோதரர்கள் 200 பேரும் வந்தார்கள்; **9** எப்ரோன் வம்
சத்தில் தலைவர் ஏலியேலும் அவருடைய சகோதரர்கள் 80 பேரும் வந்
தார்கள்; **10** ஊசியேல்[k] வம்சத்தில் தலைவர் அம்மினதாபும் அவருடைய
சகோதரர்கள் 112 பேரும் வந்தார்கள்; **11** பின்பு, குருமார்களான சாதோக்
கையும்[l] அபியத்தாரையும்[m] லேவியர்களான ஊரியேல், அசாயா,
யோவேல், செமாயா, ஏலியேல், அம்மினதாப் ஆகியோரையும் தாவீது வர
வழைத்தார். **12** அவர்களிடம், "நீங்கள்தான் லேவி வம்சத்தைச் சேர்ந்த
குடும்பத் தலைவர்கள்; அதனால், நீங்களும் உங்களுடைய சகோதரர்க
ளும் உங்களைப் புனிதப்படுத்திக்கொண்டு, நான் தயார்செய்த இடத்துக்கு
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் பெட்டியை எடுத்துக்கொண்டு
வாருங்கள். **13** முதல் தடவை, அந்தப் பெட்டியை நீங்கள் சுமந்து
கொண்டு வராததால்[n] நம் கடவுளாகிய யெகோவா பயங்கர கோபமடைந்து
நம்மைத் தாக்கினார்.[o] ஏனென்றால், நாம் சரியான முறையைத்[p] தெரிந்து
கொள்ள முயற்சி செய்யாமல் இருந்துவிட்டோம்" என்று சொன்னார்.
14 அதனால், இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் பெட்டியை
எடுத்துவருவதற்காக, குருமார்களும் லேவியர்களும் தங்களைப் புனிதப்ப
டுத்திக்கொண்டார்கள்.

15 பின்பு, உண்மைக் கடவுளின் பெட்டியில் செருகப்பட்டிருந்த கம்பு
களை[q] லேவியர்கள் தங்களுடைய தோள்களில் வைத்து அந்தப் பெட்டி
யைச் சுமந்துகொண்டு போனார்கள். மோசே மூலம் யெகோவா கொடுத்த
கட்டளையின்படியே செய்தார்கள். **16** தாவீது லேவியர்களின் தலைவர்க
ளிடம், "யாழ்களையும்[r] மற்ற நரம்பிசைக் கருவிகளையும் வாசித்து, ஜால்
ராக்களைத்[s] தட்டி, சந்தோஷமாகப் பாடுவதற்காக உங்கள் சகோதரர்களான
பாடகர்களை நியமியுங்கள்" என்று சொன்னார்.

17 அதனால், யோவேலின் மகன் ஏமானையும்[t] அவருடைய சகோதரர்
களில் பெரகியாவின் மகன் ஆசாப்பையும்,[u] தங்கள் சகோதரர்களான

அதி. 14
a யோசு 16:10
b உபா 2:25; உபா 11:25; யோசு 2:9

அதி. 15
c 2சா 7:1, 2; 1நா 16:1; சங் 132:1-5
d எண் 4:15; உபா 10:8
e 2சா 6:12; 1நா 13:5
f எண் 3:2, 3
g 1நா 6:1
h 1நா 6:29, 30
i 1நா 23:6-8
j யாத் 6:18, 22
k யாத் 6:16, 18
l 2சா 8:17
m 1சா 22:20; 1ரா 2:27, 35
n 2சா 6:3
o 2சா 6:8
p எண் 4:15; உபா 31:9
q யாத் 25:14; எண் 4:6; 2நா 5:9
r சங் 33:2
s 1நா 16:5; 2நா 5:12, 13
t 1நா 6:31, 33; 1நா 25:5
u 1நா 6:31, 39; 1நா 25:1, 2; சங் 83:மே.கு.

மெராரியர்களில் குஷாயாவின் மகன் ஏத்தானையும்[a] லேவியர்கள் நியமித்
தார்கள். **18** சகரியா, பென், யாசியேல், செமிரமோத், யெகியேல், உன்னி,
எலியாப், பெனாயா, மாசெயா, மத்தித்தியா, எலிப்பெலேகு, மிக்னேயா,
வாயிற்காவலர்களான ஓபேத்-ஏதோம், எயியேல் ஆகிய தங்கள் சகோதரர்
களை இரண்டாவது பிரிவாக[b] நியமித்தார்கள். **19** பாடகர்களான ஏமான்,[c]
ஆசாப்,[d] ஏத்தான் ஆகியோரை செம்பு ஜால்ராக்களைத்[e] தட்டி ஓசையெ
ழுப்ப நியமித்தார்கள். **20** சகரியா, ஆசியேல், செமிரமோத், யெகியேல்,
உன்னி, எலியாப், மாசெயா, பெனாயா ஆகியோர் நரம்பிசைக் கருவிகளை
அல்மோத்*[f] இசையில் வாசித்தார்கள். **21** மத்தித்தியா,[g] எலிப்பெலேகு,
மிக்னேயா, ஓபேத்-ஏதோம், எயியேல், அசசியா ஆகியோர் செமினீத்*
இசையில்[h] யாழ் இசைத்தார்கள், இவர்கள் இசைக் குழுவின் தலைவர்க
ளாக இருந்தார்கள். **22** பெட்டியைச் சுமக்கும் பொறுப்பை லேவியர்க
ளின் தலைவரான கெனானியா[i] மேற்பார்வை செய்தார்; ஏனென்றால், அந்த
வேலையில் அவர் திறமைசாலியாக இருந்தார். **23** பெரகியாவும் எல்க்கா
னாவும் பெட்டியைக் காவல்காத்தார்கள். **24** குருமார்களான ஷெபனியா,
யொஷபாத், நெதனெயேல், அமாசாய், சகரியா, பெனாயா, எலியேசர் ஆகி
யோர் உண்மைக் கடவுளின் பெட்டிக்கு முன்னால் எக்காளங்களைச் சத்த
மாக ஊதினார்கள்;[j] ஓபேத்-ஏதோமும் எகியாவும்கூட பெட்டியைக் காவல்
காத்தார்கள்.

25 ஓபேத்-ஏதோமின் வீட்டிலிருந்து[k] யெகோவாவின் ஒப்பந்தப்
பெட்டியைக் கொண்டுவர தாவீதும் இஸ்ரவேல் பெரியோர்களும்* ஆயி
ரம் வீரர்களுக்குத் தலைவர்களும் சந்தோஷமாகப் போனார்கள்.[l] **26** ஒப்
பந்தப் பெட்டியைச் சுமந்துவந்த லேவியர்களுக்கு உண்மைக் கடவுளான
யெகோவா உதவி செய்ததால் ஏழு இளம் காளைகளையும் ஏழு செம்மறி
யாட்டுக் கடாக்களையும் பலியிட்டார்கள்.[m] **27** தாவீதும், பெட்டியைச்
சுமந்த எல்லா லேவியர்களும், பாடகர்களும், பெட்டியைச் சுமக்கிற பாடகர்
களுக்குத் தலைவரான கெனானியாவும் உயர்தர துணியில் நெய்யப்பட்ட
கையில்லாத அங்கியைப் போட்டிருந்தார்கள்; தாவீது நாரிழை* ஏபோத்
தையும் போட்டிருந்தார்.[n] **28** இஸ்ரவேலர்கள் எல்லாரும் மகிழ்ச்சி
ஆரவாரம் செய்துகொண்டும்,[o] ஊதுகொம்பை ஊதிக்கொண்டும், எக்கா
ளங்களை முழங்கிக்கொண்டும்,[p] ஜால்ராக்களைத் தட்டிக்கொண்டும், நரம்
பிசைக் கருவிகள், யாழ்கள் ஆகியவற்றைச் சத்தமாக இசைத்துக்கொண்
டும்[q] யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியைக் கொண்டுவந்தார்கள்.

29 யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியை 'தாவீதின் நகரத்துக்கு'[r] அவர்
கள் கொண்டுவந்தபோது சவுலின் மகளான மீகாள்[s] ஜன்னல் வழியாகப்
பார்த்தாள்; தாவீது ராஜா துள்ளிக் குதித்து நடனமாடுவதையும் கொண்டாடு
வதையும் பார்த்து மனதுக்குள் அவரைக் கேவலமாக நினைத்தாள்.[t]

16 உண்மைக் கடவுளின் பெட்டியை வைப்பதற்காக தாவீது போட்டி
ருந்த கூடாரத்துக்குள் அதைக் கொண்டுவந்து வைத்தார்கள்.[u]
பின்பு, உண்மைக் கடவுளுக்கு முன்னால் தகன பலிகளையும் சமாதான பலி
களையும் கொடுத்தார்கள்.[v] **2** தாவீது தகன பலிகளையும்[w] சமாதான பலி
களையும்[x] கொடுத்த பின்பு, யெகோவாவுடைய பெயரில் மக்களை

15:20, 21 *சொல் பட்டியலைப் பாருங்கள். **15:25** *வே.வா., "மூப்பர்களும்."
15:27 *அதாவது, "லினன்."

அதி. 15
a 1நா 6:31, 44
b 1நா 25:9
c 1நா 6:31-33
d 1நா 25:1
e 1நா 13:8
f சங் 46:மே.கு.
g 1நா 16:4, 5
h சங் 6:மே.கு.
i 1நா 15:27
j 1நா 16:4, 6
k 1நா 13:14
l 2சா 6:4, 5
2சா 6:12
m 2சா 6:13
n 2சா 6:14, 15
o 1நா 13:8
p 1நா 16:4, 6
q 2சா 6:5
r 1நா 17:1
s 1சா 18:27
2சா 3:13, 14
t 2சா 6:16

அதி. 16
u 1ரா 8:1
1நா 15:1
v 2சா 6:17-19
1ரா 8:5
w லேவி 1:3
x லேவி 3:1

ஆசீர்வதித்தார். **3** அதோடு, அங்கே வந்திருந்த இஸ்ரவேலர்கள் எல்லா
ருக்கும், ஆண்கள் பெண்கள் ஒவ்வொருவருக்கும், ஒரு வட்ட ரொட்டியை
யும் பேரீச்ச அடையையும் உலர்ந்த திராட்சை அடையையும் கொடுத்தார்.
4 பின்பு, யெகோவாவின் பெட்டிக்கு[a] முன்னால் சேவை செய்வதற்கும்
இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவை மகிமைப்படுத்துவதற்கும்*
போற்றிப் புகழ்வதற்கும் அவருக்கு நன்றி சொல்வதற்கும் சில லேவியர்
களை நியமித்தார். **5** அவர்களுடைய தலைவர் ஆசாப்.[b] அவருக்கு
அடுத்த இடத்தில் சகரியா இருந்தார். எயியேல், செமிரமோத், யெகியேல்,
மத்தித்தியா, எலியாப், பெனாயா, ஓபேத்-ஏதோம், எயியேல்[c] ஆகியோர்
யாழ்களையும் மற்ற நரம்பிசைக் கருவிகளையும் வாசித்தார்கள்.[d] ஆசாப்
ஜால்ராக்களைத் தட்டி ஓசையெழுப்பினார்.[e] **6** குருமார்களான பெனாயா
வும் யகாசியேலும் உண்மைக் கடவுளின் ஒப்பந்தப் பெட்டிக்கு முன்னால்
எப்போதும் எக்காளங்களை ஊதினார்கள்.

7 அன்று யெகோவாவுக்கு முதன்முதலில் தாவீது நன்றிப் பாடலை எழு
தினார், அந்தப் பாடலைப் பாடச் சொல்லி ஆசாப்பிடமும்[f] அவருடைய
சகோதரர்களிடமும் சொன்னார். அந்தப் பாடல் இதுதான்:

8 “யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள்,[g] அவருடைய பெயரைச்
சொல்லி வேண்டிக்கொள்ளுங்கள்.
அவருடைய செயல்களை எல்லாருக்கும் சொல்லுங்கள்![h]
9 அவருக்காகப் பாடல் பாடுங்கள், அவரைப் புகழ்ந்து பாடுங்கள்,[i]
அவருடைய அதிசயமான செயல்கள் எல்லாவற்றையும் ஆழ்ந்து
யோசியுங்கள்.*[j]
10 அவருடைய பரிசுத்த பெயரைப் பற்றிப் பெருமையாகப் பேசுங்கள்.[k]
யெகோவாவை நாடுகிறவர்களின் இதயம் சந்தோஷத்தில் துள்ளட்டும்.[l]
11 யெகோவாவைத் தேடுங்கள்,[m] அவரிடம் பலம் கேட்டு வேண்டுங்கள்.
எப்போதும் அவருடைய முகத்தையே நாடுங்கள்.[n]
12 அவருடைய ஊழியரான இஸ்ரவேலின் சந்ததியே,[o] யாக்கோபின்
வம்சமே, கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனமே![p]
13 அவர் செய்த அதிசயமான செயல்களையும்[q] அற்புதங்களையும்
அவர் கொடுத்த நீதித்தீர்ப்புகளையும் நினைத்துப் பாருங்கள்.
14 அவர்தான் நம் கடவுளாகிய யெகோவா.[r]
அவருடைய நீதித்தீர்ப்புகள் பூமி முழுவதும் கொடுக்கப்படுகின்றன.[s]
15 அவர் செய்த ஒப்பந்தத்தை எப்போதும் நினைத்துப் பாருங்கள்;
ஆயிரமாயிரம் தலைமுறைகளுக்குத் தந்த வாக்குறுதியை நினைத்துப்
பாருங்கள்.[t]
16 ஆபிரகாமோடு செய்த ஒப்பந்தத்தையும்,[u]
ஈசாக்குக்குக் கொடுத்த உறுதிமொழியையும்[v] நினைத்துப் பாருங்கள்,
17 அதை யாக்கோபுக்கு ஓர் ஆணையாகவும்,[w]
இஸ்ரவேலுக்கு ஒரு நிரந்தர ஒப்பந்தமாகவும் கொடுத்து
உறுதிப்படுத்தினார்.
18 அப்போது, ‘கானான் தேசத்தை[x] உனக்குச் சொத்தாகத் தருவேன்’[y]
என்று சொன்னார்.

அதி. 16
a எண் 18:2
b 1நா 6:31, 39
c 1நா 15:18
d 1நா 15:21
e 1நா 15:17, 19
f 1நா 6:31, 39
g சங் 106:1
h சங் 67:2; சங் 105:1-6; ஏசா 12:4
i 2சா 23:1; எபே 5:19
j சங் 107:43
k லேவி 22:32; ஏசா 45:25; எரே 9:24
l 1நா 28:9; பிலி 4:4
m ஆமோ 5:4; செப் 2:3
n சங் 24:5, 6
o ஏசா 41:8
p சங் 135:4
q சங் 111:2-4
r சங் 95:7
s சங் 105:7-11
t உபா 7:9
u ஆதி 15:18; ஆதி 17:1, 2
v ஆதி 26:3-5
w ஆதி 28:14
x ஆதி 12:7; ஆதி 17:8; ஆதி 35:12
y உபா 32:8

16:4 * நே.மொ., “நினைத்துப் பார்ப்பதற்கும்.” **16:9** * அல்லது, “அறிவியுங்கள்.”

19 அந்தச் சமயத்தில் அவர்கள் கொஞ்சம் பேர்தான் இருந்தார்கள்,
கொஞ்சத்திலும் கொஞ்சம் பேர்தான் இருந்தார்கள், அந்தத் தேசத்தில்
அன்னியர்களாக இருந்தார்கள்.[a]
20 தேசம் தேசமாக அவர்கள் அலைந்து திரிந்தார்கள்,
ராஜ்யம் ராஜ்யமாகச் சுற்றித் திரிந்தார்கள்.[b]
21 அவர்களை அடக்கி ஒடுக்க எந்த மனிதனையும் கடவுள்
அனுமதிக்கவில்லை,[c]
ஆனால், அவர்களுக்காக ராஜாக்களையே கண்டித்து,[d]
22 'நான் தேர்ந்தெடுத்தவர்கள்மேல்* கை வைக்காதீர்கள்,
என் தீர்க்கதரிசிகளுக்கு எந்தக் கெடுதலும் செய்யாதீர்கள்'[e] என்று
சொன்னார்.
23 பூமியெங்கும் உள்ளவர்களே, யெகோவாவைப் புகழ்ந்து பாடுங்கள்!
அவர் தரும் மீட்பைப் பற்றித் தினம் தினம் அறிவியுங்கள்![f]
24 அவருடைய மகிமையைப் பற்றித் தேசங்களுக்குச் சொல்லுங்கள்,
அவருடைய அற்புதமான செயல்களைப் பற்றி எல்லா மக்களுக்கும்
தெரியப்படுத்துங்கள்.
25 யெகோவா மகத்தானவர், எல்லா புகழையும் பெறத் தகுதியானவர்.
மற்ற எல்லா தெய்வங்களையும்விட அதிக பயபக்திக்குரியவர்.[g]
26 மக்கள் வணங்கும் தெய்வங்களெல்லாம் ஒன்றுக்குமே உதவாத
தெய்வங்கள்,[h]
ஆனால், யெகோவாதான் வானத்தைப் படைத்தவர்.[i]
27 மகத்துவமும் மேன்மையும் அவருடைய சன்னிதியில் இருக்கின்றன.[j]
பலமும் சந்தோஷமும் அவருடைய வீட்டில் இருக்கின்றன.[k]
28 ஜனங்களின் வம்சங்களே, யெகோவாவுக்குச் செலுத்த வேண்டிய
புகழைச் செலுத்துங்கள்,
யெகோவாவின் மகிமைக்கும் பலத்துக்கும் செலுத்த வேண்டிய
புகழைச் செலுத்துங்கள்.[l]
29 யெகோவாவின் பெயருக்குக் கொடுக்க வேண்டிய மகிமையைக்
கொடுங்கள்;[m]
காணிக்கையோடு அவர் முன்னால் வாருங்கள்.[n]
பரிசுத்த உடையில்* யெகோவாவை வணங்குங்கள்.# [o]
30 பூமியெங்கும் உள்ளவர்களே! அவர் முன்னால் நடுநடுங்குங்கள்!
பூமி உறுதியாக நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது, அதை அசைக்கவே
முடியாது.[p]
31 வானம் சந்தோஷப்படட்டும், பூமி பூரித்துப்போகட்டும்;[q]
'யெகோவா ராஜாவாகிவிட்டார்!' என்று தேசங்களுக்குச்
சொல்லுங்கள்.[r]
32 கடலும் அதில் நிறைந்திருப்பவையும் முழக்கம் செய்யட்டும்;
வயல்களும் அவற்றிலுள்ள அனைத்தும் ஆனந்தப்படட்டும்.

16:22 *வே.வா., "அபிஷேகம் செய்தவர்கள்மேல்." **16:29** *நே.மொ., "அலங்காரத் தோடு." #அல்லது, "யெகோவா பரிசுத்தத்தில் மகத்தானவராக இருப்பதால் அவரை வணங்குங்கள்."

அதி. 16
a ஆதி 34:30, உபா 26:5, சங் 105:12-15
b ஆதி 20:1, ஆதி 46:6
c ஆதி 31:7, 42
d ஆதி 12:17, ஆதி 20:3
e ஆதி 20:7
f சங் 40:10, சங் 96:1-6
g யாத் 15:11
h ஏசா 45:20, 1கொ 8:4
i ஏசா 44:24
j உபா 33:26, சங் 8:1
k 1தீ 1:11
l சங் 68:34, சங் 96:7-13
m உபா 28:58, நெ 9:5, சங் 148:13
n 1நா 29:3-5, மத் 5:23
o உபா 26:10
p சங் 104:5, பிர 1:4
q சங் 97:1
r வெளி 19:6

33 அவற்றோடு சேர்ந்து காட்டு மரங்களும் கடவுளுக்குமுன் சந்தோஷக் குரல் எழுப்பட்டும்.
ஏனென்றால், யெகோவா பூமிக்குத் தீர்ப்பு கொடுக்க வருகிறார்.
34 யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள், அவர் நல்லவர்;[a]
அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.[b]
35 'எங்களை மீட்கிற கடவுளே, எங்களைக் காப்பாற்றுங்கள்,[c]
மற்ற தேசங்களிலிருந்து எங்களைக் கூட்டிச்சேர்த்து எங்களைக் காப்பாற்றுங்கள்.
அப்போது, உங்களுடைய பரிசுத்தமான பெயருக்கு நன்றி சொல்வோம்,[d]
சந்தோஷம் பொங்க உங்களைப் புகழ்வோம்.[e]
36 இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவுக்கு என்றென்றும் புகழ் சேரட்டும்.'"

இந்தப் பாடலைக் கேட்ட மக்கள் எல்லாரும், "ஆமென்!"* என்று சொல்லி யெகோவாவைப் புகழ்ந்தார்கள்.

37 பின்பு, யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டிக்கு முன்னால் எப்
போதும் சேவை செய்ய ஆசாப்பையும்[f] அவருடைய சகோதரர்களையும்
தாவீது நியமித்தார்.[g] அங்கே வழக்கமாகச் செய்ய வேண்டிய வேலைகளை
அவர்கள் தினமும் செய்வதற்காக[h] அவர்களை நியமித்தார். **38** அதோடு,
ஓபேத்-ஏதோமையும் அவருடைய சகோதரர்கள் 68 பேரையும் நியமித்
தார். எதித்தூனின் மகன் ஓபேத்-ஏதோமையும் ஓசாவையும் வாயிற்காவலர்
களாக நியமித்தார்; **39** யெகோவாவின் வழிபாட்டுக் கூடாரம் கிபியோனி
லுள்ள[i] ஆராதனை மேட்டில் இருந்தது. அங்கே குருவாகிய சாதோக்கும்[j]
மற்ற குருமார்களும் சேவை செய்தார்கள். **40** தகன பலிக்கான பலிபீடத்
தில் காலையும் மாலையும் தவறாமல் யெகோவாவுக்குத் தகன பலி
கொடுத்தார்கள். இஸ்ரவேலுக்கு யெகோவா கொடுத்த திருச்சட்டத்தில் உள்
ளபடியே எல்லாவற்றையும் செய்தார்கள்.[k] **41** அவர்களோடு ஏமானை
யும் எதித்தூனையும்[l] பெயர் பெயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற ஆண்
களையும் யெகோவாவுக்கு நன்றிப் பாடல் பாடுவதற்காக நியமித்தார்கள்;[m]
"அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்" என்று சொல்லி கட
வுளை அவர்கள் புகழ்ந்து பாடினார்கள்.[n] **42** ஏமானும்[o] எதித்தூனும் எக்
காளங்களை ஊதி, ஜால்ராக்களைத் தட்டி, மற்ற இசைக் கருவிகளை
இசைத்து உண்மைக் கடவுளைப் புகழ்ந்தார்கள். எதித்தூனின்[p] மகன்கள்
வாயிற்காவலர்களாகச் சேவை செய்தார்கள். **43** பின்பு, மக்கள் எல்லாரும்
தங்களுடைய வீடுகளுக்குப் போனார்கள். தாவீதும் தன்னுடைய குடும்பத்
தாரை ஆசீர்வதிப்பதற்காகப் போனார்.

17 தாவீது தன்னுடைய அரண்மனைக்குக் குடிவந்தவுடன் நாத்தான்[q]
தீர்க்கதரிசியிடம், "பாருங்கள், தேவதாரு மரத்தால் கட்டப்பட்ட
அரண்மனையில் நான் குடியிருக்கிறேன்,[r] ஆனால் யெகோவாவின் ஒப்பந்
தப் பெட்டி சாதாரண கூடாரத்தில் இருக்கிறது"[s] என்று சொன்னார்.
2 அதற்கு நாத்தான், "உங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறீர்களோ

16:36 * அதாவது, "அப்படியே ஆகட்டும்!"

அதி. 16
a 2நா 5:13; லூ 18:19
b சங் 103:17; எரே 31:3; புல 3:22
c சங் 68:20
d சங் 122:4
e ஏசா 43:21
f 1நா 15:16, 17
g 1நா 16:4-6
h யாத் 29:38; 2நா 13:11; எஸ்றா 3:4
i 1ரா 3:4
j 1நா 12:28
k யாத் 29:39; 2நா 2:4
l 1நா 25:1
m 1நா 16:4
n 2நா 5:13; எஸ்றா 3:11
o 1நா 6:31, 33; 1நா 15:16, 17
p 1நா 25:1, 3

அதி. 17
q 1ரா 1:8; 1நா 29:29
r 1நா 14:1
s 2சா 7:1-3; 1நா 15:1; 2நா 1:4

அதைச் செய்யுங்கள், உண்மைக் கடவுள் உங்களுக்குத் துணையாக இருக்
கிறார்” என்று சொன்னார்.

3 அன்று ராத்திரியே நாத்தானிடம் கடவுள் பேசினார். **4** “என் ஊழியன்
தாவீதிடம் நீ போய், ‘யெகோவா சொல்வது என்னவென்றால்: “நான் குடியி
ருக்க ஒரு ஆலயத்தை நீ கட்டப்போவதில்லை.[a] **5** இஸ்ரவேல் மக்களை
எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டுவந்த நாள்முதல் இந்த நாள்வரை நான் ஒரு
ஆலயத்தில் குடியிருக்கவில்லையே; ஒரு கூடாரத்திலிருந்து இன்னொரு
கூடாரத்துக்கும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கும் மாறிக்
கொண்டேதான் இருந்தேன்.[b] **6** இவ்வளவு காலமாக இஸ்ரவேலர்களோடு
இருந்தும், அவர்களை வழிநடத்துவதற்கு நான் நியமித்த நியாயாதிபதிகள்
யாரிடமாவது, ‘ஏன் எனக்காக தேவதாரு மரத்தில் ஒரு ஆலயத்தைக் கட்ட
வில்லை?’ என்று ஒரு வார்த்தை கேட்டிருப்பேனா? என்று சொல்.”’

7 அதோடு நீ என் ஊழியன் தாவீதிடம், ‘பரலோகப் படைகளின்
யெகோவா சொல்வது இதுதான்: “புல்வெளியில் ஆடு மேய்த்துக்கொண்
டிருந்த உன்னைக் கூட்டிக்கொண்டு வந்து, என்னுடைய மக்களான இஸ்
ரவேலர்களுக்குத் தலைவனாக்கினேன்.[c] **8** அதனால், நீ எங்கே போனா
லும் நான் உனக்குத் துணையாக இருப்பேன்.[d] உன் எதிரிகள் எல்லாரையும்
ஒழித்துக்கட்டுவேன்.[e] இந்தப் பூமியில் வாழ்ந்த மாமனிதர்களைப் போல நீ
பேரும் புகழும் பெறுவாய்.[f] **9** என்னுடைய மக்களான இஸ்ரவேலர்களை
ஒரே இடத்தில் குடியிருக்க வைப்பேன். அங்கே அவர்கள் எந்தத் தொந்
தரவும் இல்லாமல் நிம்மதியாக வாழ்வார்கள். முன்பு கெட்டவர்கள் அவர்
களை அடக்கி ஒடுக்கியதுபோல் இனிமேல் ஒடுக்க மாட்டார்கள்.[g]
10 இஸ்ரவேலர்களுக்கு நான் நியாயாதிபதிகளை ஏற்படுத்திய காலத்தில்[h]
அடக்கி ஒடுக்கியதுபோல் அவர்களை ஒடுக்க மாட்டார்கள். உன் எதிரி
கள் எல்லாரையும் தோற்கடிப்பேன்.[i] அதோடு, ‘யெகோவா உன் வம்சத்தை
ராஜ வம்சமாக்குவார்.’ *

11 நீ இறந்து உன் முன்னோர்களைப் போல் நல்லடக்கம் செய்யப்
பட்ட பின்பு, உன் சந்ததியை, உன் மகன்களில் ஒருவனை,[j] ராஜாவாக ஏற்ப
டுத்துவேன். அவனுடைய ஆட்சியை உறுதியாக நிலைநாட்டுவேன்.[k]
12 அவன்தான் எனக்காக ஒரு ஆலயத்தைக் கட்டுவான்.[l] அவனுடைய
சிம்மாசனத்தை என்றென்றும் நிலைக்க வைப்பேன்.[m] **13** நான் அவனுக்
குத் தகப்பனாக இருப்பேன், அவன் எனக்கு மகனாக இருப்பான்.[n] உனக்கு
முன்பு இருந்தவனுக்கு[o] மாறாத அன்பு காட்டுவதை நிறுத்திக்கொண்டது
போல அவனுக்குச் செய்ய மாட்டேன்.[p] **14** அவனை என் சிம்மாசனத்தில்
உட்கார வைத்து என்றென்றும் ஆட்சி செய்ய வைப்பேன்.[q] அவனுடைய
ஆட்சியையும் ராஜ வம்சத்தையும் என்றென்றும் நிலைக்கச் செய்வேன்”[r]
என்று சொல்’” என்றார்.

15 தரிசனத்தில் சொல்லப்பட்ட இந்த எல்லா விஷயங்களையும் தாவீதி
டம் நாத்தான் சொன்னார்.

16 அதைக் கேட்டதும் தாவீது ராஜா உள்ளே போய் யெகோவா
வுக்கு முன்னால் உட்கார்ந்து, “யெகோவா தேவனே, எனக்கும் என் வீட்
டாருக்கும் என்ன தகுதி இருக்கிறது? என்னை இந்தளவு உயர்த்தியிருக்கி
றீர்களே![s] **17** தேவனே, இது போதாதென்று, உங்களுடைய ஊழியனின்

17:10 * நே.மொ., “உனக்கு ஒரு வீட்டை உண்டாக்குவார்.”

அதி. 17
a 2சா 7:4-7
1ரா 8:17-19
1நா 22:7, 8
b யாத் 40:2
எண் 4:24, 25
2சா 6:17
சங் 78:60
c 1சா 16:11, 12
1சா 17:15
1சா 25:30
2சா 7:8-11
சங் 78:70, 71
d 1சா 18:14
2சா 8:6
e 1சா 25:29
1சா 26:10
சங் 89:20, 22
f 1சா 18:30
g யாத் 2:23
h நியா 2:16
i சங் 18:40
j 1ரா 8:20
சங் 132:11
k 2சா 7:12-17
1ரா 9:5
1நா 28:5
எரே 23:5
l 1ரா 5:5
1நா 22:10
m சங் 89:3, 4
ஏசா 9:7
தானி 2:44
n 2சா 7:14
லூ 9:35
எபி 1:5
o 1சா 15:24, 28
1நா 10:13, 14
p ஏசா 55:3
q தானி 2:44
யோவா 1:49
2பே 1:11
r சங் 89:36
எரே 33:
20, 21
லூ 1:32, 33
எபி 1:8
வெளி 3:21
s 2சா 7:8
2சா 7:18-20

வம்சம் காலம்காலமாக நிலைத்திருக்கும் என்றுகூட சொல்லியிருக்கிறீர்
கள்.[a] யெகோவா தேவனே, ஒரு பெரிய மனிதனைப் பார்ப்பதுபோல்* என்
னைப் பார்க்கிறீர்களே. **18** உங்கள் ஊழியனாகிய என்னைப் பற்றித்தான்
உங்களுக்கு நன்றாகத் தெரியுமே,[b] அப்படியிருக்கும்போது நீங்கள் எனக்
குக் கொடுத்த கௌரவத்தைப் பற்றி நான் வேறென்ன சொல்ல முடி
யும்? **19** யெகோவாவே, உங்களுடைய ஊழியனாகிய எனக்காக நீங்கள்
இதையெல்லாம் செய்திருக்கிறீர்கள். அதோடு, உங்கள் இதயத்தின் விருப்பப்
படியே* இந்த மாபெரும் செயல்களைச் செய்து உங்களுடைய மகத்துவத்
தைக் காட்டியிருக்கிறீர்கள்.[c] **20** யெகோவாவே, உங்களுக்குச் சமமானவர்
யாருமில்லை.[d] உங்களைத் தவிர வேறு கடவுள் இல்லை.[e] நாங்கள் எங்க
ளுடைய காதால் கேட்ட எல்லாவற்றையும் வைத்து இதை ஆணித்தரமாக
நம்புகிறோம். **21** உங்களுடைய மக்களான இஸ்ரவேலர்களைப் போல்
இந்த உலகத்தில் வேறெந்த மக்கள் இருக்கிறார்கள்?*[f] உண்மைக் கட
வுளே, இஸ்ரவேலர்களை உங்களுடைய சொந்த மக்களாக ஆக்குவதற்
கென்று நீங்களே போய் அவர்களை விடுவித்து வந்தீர்களே,[g] அற்புதங்க
ளையும் பிரமிப்பூட்டும் செயல்களையும் செய்து உங்களுடைய பெயருக்குப்
புகழ் சேர்த்தீர்களே.[h] நீங்கள் எகிப்திலிருந்து விடுவித்த உங்கள் மக்களின்
கண் முன்னால் மற்ற தேசத்து மக்களை விரட்டியடித்தீர்களே.[i] **22** இஸ்ர
வேலர்களை என்றென்றும் உங்களுடைய சொந்த மக்களாக ஆக்கினீர்கள்.[j]
யெகோவாவே, நீங்கள் அவர்களுடைய கடவுளானீர்கள்.[k] **23** யெகோ
வாவே, உங்களுடைய ஊழியனையும் அவனுடைய வம்சத்தையும் பற்றி
நீங்கள் கொடுத்த வாக்கை என்றென்றும் நிறைவேற்றுங்கள்; நீங்கள் சொன்
னபடியே செய்யுங்கள்.[l] **24** உங்களுடைய பெயர் எப்போதும் நிலைத்தி
ருக்கட்டும், என்றென்றும் உயர்ந்தோங்கட்டும்;[m] 'இஸ்ரவேலின் கடவுள்தான்,
பரலோகப் படைகளின் யெகோவாதான், இஸ்ரவேல் மக்களின் கடவுள்'
என்று எல்லாரும் சொல்லட்டும். உங்களுடைய ஊழியனான தாவீதின் ராஜ
வம்சம் உங்கள் முன்னால் எப்போதும் நிலைக்கட்டும்.[n] **25** என் தேவனே,
உங்கள் ஊழியனின் வம்சத்தை ராஜ வம்சமாக்க வேண்டுமென்ற உங்கள்
நோக்கத்தைத் தெரியப்படுத்தினீர்களே. அந்த நம்பிக்கையில்தான் உங்களு
டைய ஊழியனாகிய நான் இப்படி வேண்டிக்கொள்கிறேன். **26** யெகோ
வாவே, நீங்கள்தான் உண்மையான கடவுள். உங்களுடைய ஊழியனைப்
பற்றிய இந்த நல்ல விஷயங்களை வாக்குறுதியாகக் கொடுத்ததும் நீங்கள்
தான். **27** உங்கள் ஊழியனுடைய வம்சத்தைத் தயவுசெய்து ஆசீர்வதியுங்
கள். அது உங்களுக்கு முன்னால் என்றென்றும் நிலைத்திருக்கட்டும். யெகோ
வாவே, உங்கள் ஊழியனுடைய வம்சத்தை ஆசீர்வதித்திருக்கிறீர்கள், அது
என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கட்டும்!" என்று சொன்னார்.

18 சில காலம் கழித்து, தாவீது பெலிஸ்தியர்களோடு போர் செய்து
அவர்களைத் தோற்கடித்தார்.[o] காத் நகரத்தையும்[p] அதன் சிற்றூர்
களையும்* அவர்களிடமிருந்து கைப்பற்றினார். **2** அதன் பின்பு மோவா
பியர்களைத் தோற்கடித்தார்;[q] அவர்கள் தாவீதுக்குச் சேவை செய்து, அவ
ருக்குக் கப்பம் கட்டினார்கள்.[r]

அதி. 17
a மத் 22:42
அப் 13:34
வெளி 22:16
b சங் 139:1
c 2சா 7:21-24
d யாத் 15:11
e ஏசா 43:10
f உபா 4:7
சங் 147:20
g யாத் 19:5
சங் 77:15
h உபா 4:34
நெ 9:10
ஏசா 63:12
எசே 20:9
i உபா 7:1
யோசு 10:42
யோசு 21:44
j 1சா 12:22
k ஆதி 17:7
உபா 7:6, 9
l 2சா 7:25-29
m 2நா 6:33
சங் 72:19
மத் 6:9
யோவா 12:28
n சங் 89:35, 36

அதி. 18
o 2சா 8:1
p 1சா 5:8
2சா 1:20
q எண் 24:17
சங் 60:8
r 2சா 8:2
2ரா 3:4

17:17 *வே.வா., "உயர் பதவியிலுள்ள ஒருவனைப் போல்." **17:19** *வே.வா., "உங்கள் சித்தத்தின்படியே." **17:21** *நே.மொ., "தேசம் இருக்கிறது?" **18:1** *வே.வா., "அதைச் சுற்றியுள்ள ஊர்களையும்."

3 யூப்ரடிஸ்* ஆற்றுக்குப் பக்கத்திலிருந்த பகுதியைத் தன்னுடைய கட்
டுப்பாட்டில் கொண்டுவர[a] சோபாவின்[b] ராஜா ஆதாதேசர்[c] போய்க்கொண்
டிருந்தான். காமாத்துக்குப்[d] பக்கத்தில் தாவீது அவனைத் தோற்கடித்தார்.
4 அதோடு, அவனிடமிருந்து 1,000 ரதங்களையும், 7,000 குதிரைவீரர்களை
யும் 20,000 காலாட்படை வீரர்களையும் பிடித்தார்.[e] 100 ரதக் குதிரைகளைத்
தவிர, மற்ற எல்லா ரதக் குதிரைகளையும் நொண்டியாக்கினார்.*[f] **5** சோபா
வின் ராஜாவான ஆதாதேசருக்கு உதவி செய்ய தமஸ்குவைச் சேர்ந்த சீரி
யர்கள் வந்தபோது, அவர்களில் 22,000 பேரை தாவீது வெட்டி வீழ்த்தினார்.[g]
6 அதன் பின்பு, சீரியாவின் தலைநகரான தமஸ்குவில் காவல்படைகளை
நிறுத்திவைத்தார். சீரியர்கள் தாவீதுக்குச் சேவை செய்து, கப்பம் கட்டினார்
கள். அவர் போன இடமெல்லாம் யெகோவா அவருக்கு வெற்றி தேடித்தந்
தார்.[h] **7** ஆதாதேசருக்குச் சேவை செய்த ஆட்களிடமிருந்து வட்டவடிவ
தங்கக் கேடயங்களை எடுத்துக்கொண்டு தாவீது எருசலேமுக்கு வந்தார்;
8 ஆதாதேசரின் ஆட்சிக்குட்பட்ட திப்காத், கூன் ஆகிய நகரங்களிலிருந்து
தாவீது ராஜா ஏராளமான செம்பைக் கொண்டுவந்தார். அதை வைத்துதான்,
‘செம்புக் கடல்’ என்றழைக்கப்பட்ட தொட்டியையும்[i] தூண்களையும் பாத்தி
ரங்களையும்[j] பிற்பாடு சாலொமோன் செய்தார்.

9 சோபாவின்[k] ராஜாவான ஆதாதேசரின்[l] மொத்த படையையும் தாவீது
தோற்கடித்தார் என்பதை காமாத்தின் ராஜாவான தோயூ கேள்விப்பட்
டார். **10** உடனே, தாவீது ராஜாவிடம் நலம் விசாரிக்கவும் ஆதாதேசரைத்
தோற்கடித்ததற்கு வாழ்த்துச் சொல்லவும் தோயூ தன்னுடைய மகன் ஹதோ
ராமை அனுப்பினார். (ஏனென்றால், ஆதாதேசர் அடிக்கடி தோயூவை எதிர்த்
துப் போர் செய்துவந்தான்) தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் செய்
யப்பட்ட பலவிதமான பொருள்களை தாவீதுக்கு ஹதோராம் கொடுத்தார்.
11 தாவீது ராஜா இவற்றை யெகோவாவுக்கு அர்ப்பணித்தார்.*[m] அதோடு,
ஏதோமியர்கள், மோவாபியர்கள், அம்மோனியர்கள்,[n] பெலிஸ்தியர்கள்,[o]
அமலேக்கியர்கள்[p] ஆகிய எல்லா மக்களிடமிருந்தும் எடுத்துவந்த தங்கத்
தையும் வெள்ளியையும்கூட அர்ப்பணித்தார்.

12 செருயாவின்[q] மகனான அபிசாய்[r] 18,000 ஏதோமியர்களை
உப்புப் பள்ளத்தாக்கில் வீழ்த்தினார்.[s] **13** அதோடு, ஏதோமில் காவல்ப
டைகளை நிறுத்திவைத்தார். ஏதோமியர்கள் எல்லாரும் தாவீதுக்குச்
சேவை செய்ய ஆரம்பித்தார்கள்.[t] அவர் போன இடமெல்லாம் அவ
ருக்கு வெற்றி கிடைக்க யெகோவா உதவி செய்தார்.[u] **14** இஸ்ரவேல்
முழுவதையும் தாவீது ஆட்சி செய்துவந்தார்.[v] தன்னுடைய மக்கள் எல்லா
ருக்கும் நீதி நியாயம் வழங்கிவந்தார்.[w] **15** செருயாவின் மகன் யோவாப்
படைத் தளபதியாக இருந்தார்.[x] அகிலூத்தின் மகன் யோசபாத்[y] பதிவாள
ராக இருந்தார். **16** அகிதூப்பின் மகன் சாதோக்கும் அபியத்தாரின் மகன்
அகிமெலேக்கும் குருமார்களாகச் சேவை செய்தார்கள். சவிஷா செயலாள
ராக இருந்தார். **17** யோய்தாவின் மகன் பெனாயா, கிரேத்தியர்களுக்கும்[z]
பிலேத்தியர்களுக்கும்[a] தலைவராக இருந்தார். தாவீது ராஜாவுக்கு அடுத்த
ஸ்தானத்தில் அவருடைய மகன்கள் இருந்தார்கள்.

18:3 * அதாவது, “ஐப்பிராத்து.” **18:4** * அதாவது, “குதிரைகளின் பின்தொடை தசை நார்களை வெட்டினார்.” **18:11** * நே.மொ., “புனிதப்படுத்தினார்.”

அதி. 18
a ஆதி 15:18; யாத் 23:31; 2சா 8:3, 4
b 1சா 14:47; 2சா 10:6; சங் 60:மே.கு.
c 1ரா 11:23
d 2நா 8:3
e சங் 20:7
f உபா 17:16; சங் 33:17
g 2சா 8:5-8
h 1நா 17:8
i 1ரா 7:23
j 1ரா 7:15, 45
k 2சா 8:9-11
l 2சா 8:3
m யோசு 6:19; 2நா 5:1
n 1நா 20:1
o 2சா 5:25
p 1சா 27:8, 9; 1சா 30:18, 20
q 1நா 2:15, 16
r 1சா 26:6; 2சா 3:30; 2சா 10:10; 2சா 20:6; 2சா 21:17
s 2சா 8:13, 14
t ஆதி 25:23; ஆதி 27:40
u சங் 18:48; சங் 144:10
v 1ரா 2:11
w 2சா 8:15-18; 2சா 23:3, 4; சங் 78:70-72
x 1நா 11:6
y 1ரா 4:3
z 1சா 30:14; செப் 2:5
a 1ரா 1:38

அதி. 19

19 பின்பு, அம்மோனியர்களின் ராஜா நாகாஸ் இறந்துபோனார்; அடுத்
ததாக, அவருடைய மகன் ராஜாவானான்.[a] **2** அப்போது தாவீது,
“நாகாஸ் எனக்கு மாறாத அன்பு காட்டியதால் நானும் அவருடைய மகன்
ஆனூனுக்கு மாறாத அன்பு காட்டுவேன்”[b] என்று சொன்னார். அதனால்,
அவனுக்கு ஆறுதல் சொல்ல தூதுவர்களை அனுப்பிவைத்தார். அதன்ப
டியே, ஆனூனுக்கு ஆறுதல் சொல்ல தாவீதின் ஊழியர்கள் அம்மோ
னியர்களின்[c] தேசத்துக்குப் போனார்கள். **3** அப்போது அந்தத் தேசத்
தின் தலைவர்கள் ஆனூனிடம், “தாவீது ஆறுதல் சொல்வதற்காக
ஆட்களை அனுப்பியிருக்கிறானே, அது உங்கள் அப்பா மீதிருக்கிற மரியா
தையால் என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். தேசத்தை நன்றாக ஆராய்ந்து
உளவு பார்ப்பதற்காகவும், பின்பு அதை அழிப்பதற்காகவும்தான் அவனு
டைய ஊழியர்கள் வந்திருக்கிறார்கள்” என்று சொன்னார்கள். **4** அதனால்,
ஆனூன் தாவீதுடைய ஊழியர்களைப் பிடித்து அவர்களுடைய தாடி
யைச் சிரைத்தான்,[d] அவர்களுடைய அங்கிகளை இடுப்புக்குக் கீழே வெட்
டிவிட்டு அவர்களைத் துரத்தியடித்தான். **5** இந்த விஷயம் தாவீதுக்குத்
தெரிவிக்கப்பட்டவுடனே, அவர்களைச் சந்திக்க ஆட்களை அனுப்பினார்.
ஏனென்றால், அவர்கள் மிகவும் அவமானப்படுத்தப்பட்டிருந்தார்கள். “தாடி
வளரும்வரை எரிகோவில்[e] தங்கிவிட்டு, பின்பு திரும்பி வாருங்கள்” என்று
ராஜா அவர்களிடம் சொல்லச் சொன்னார்.

6 அதன் பின்பு, தாங்கள் தாவீதின் வெறுப்புக்கு ஆளாகிவிட்டதை
அம்மோனியர்கள் புரிந்துகொண்டார்கள். அதனால், ஆனூனும் அம்மோனி
யர்களும் 1,000 வெள்ளி தாலந்தை* கூலியாகக் கொடுத்து மெசொப்பொத்
தாமியா,# அராம்-மாக்கா, சோபா ஆகிய இடங்களிலிருந்து ரதங்களையும்
குதிரைவீரர்களையும் வரவழைத்தார்கள்.[f] **7** இப்படி அவர்கள் 32,000 ரதங்
களை வரவழைத்தார்கள். அதோடு, மாக்காவின் ராஜாவையும் அவருடைய
வீரர்களையும் கூலி கொடுத்து வரவழைத்தார்கள்; இவர்கள் எல்லாரும் வந்து
மேதேபாவுக்கு[g] முன்னால் முகாம்போட்டார்கள். போர் செய்ய அம்மோனி
யர்கள் தங்களுடைய நகரங்களிலிருந்து திரண்டு வந்தார்கள்.

8 தாவீது இதைக் கேள்விப்பட்டபோது, யோவாபின்[h] தலைமையில்
முழு படையையும் தலைசிறந்த வீரர்களையும் அனுப்பினார்.[i] **9** அம்மோ
னியர்கள் வெளியே வந்து தங்களுடைய நகரத்தின் நுழைவாசலில் அணிவ
குத்து நின்றார்கள்; மற்ற தேசத்து ராஜாக்கள் இன்னொரு அணியாக வெட்
டவெளியில் நின்றார்கள்.

10 முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் எதிரிகள் தன்னைத் தாக்க வரு
வதை யோவாப் பார்த்தார், அதனால் இஸ்ரவேலர்களில் மிகச் சிறந்த
வீரர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து சீரியர்களோடு போர் செய்வதற்காக அவர்
களை அணிவகுத்து நிற்க வைத்தார்.[j] **11** அம்மோனியர்களோடு போர்
செய்வதற்காக மற்ற வீரர்களைத் தன்னுடைய சகோதரன் அபிசாயின்[k] தலை
மையில் அணிவகுத்து நிற்க வைத்தார். **12** யோவாப் அபிசாயிடம், “சீரியர்
களை[l] என்னால் சமாளிக்க முடியவில்லை என்றால், நீ வந்து எனக்கு உதவி
செய். அம்மோனியர்களை உன்னால் சமாளிக்க முடியவில்லை என்றால்,

19:6 * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோ. இணைப்பு B14-ஐப் பாருங்கள். # நே.மொ., “அராம்-நகராயிம்.”

a 2சா 10:1-5
b 2சா 9:7
c ஆதி 19:36, 38
d லேவி 19:27
e 1ரா 16:34
f 1சா 14:47; 2சா 8:3; 2சா 10:6
g யோசு 13:8, 9
h 2சா 8:16
i 2சா 10:7, 8; 2சா 23:8
j 2சா 10:9-12
k 1நா 11:20, 21
l 2சா 8:5

நான் வந்து உனக்கு உதவி செய்கிறேன். **13** நம்முடைய மக்களையும்
நம்முடைய கடவுளின் நகரங்களையும் பாதுகாப்பதற்காகத் தைரியத்தோடும்
உறுதியோடும்[a] போர் செய்வோம். யெகோவா தன்னுடைய பங்கில் என்ன
செய்ய வேண்டுமோ அதைச் செய்வார்" என்று சொன்னார்.

14 யோவாபும் அவரோடு இருந்த வீரர்களும் சீரியர்களோடு போர்
செய்ய முன்னேறிப் போனார்கள், அப்போது சீரியர்கள் அங்கிருந்து தலை
தெறிக்க ஓடினார்கள்.[b] **15** சீரியர்கள் தப்பித்து ஓடியதை அம்மோனி
யர்கள் பார்த்ததும், அவருடைய சகோதரன் அபிசாயிடமிருந்து பின்வாங்கி
நகரத்துக்குள் ஓடிப்போனார்கள். இதற்குப் பின்பு, யோவாப் எருசலேமுக்
குத் திரும்பினார்.

16 இஸ்ரவேலர்களிடம் தோற்றுப்போன சீரியர்கள், ஆற்றுப்பகுதிக்கு*
பக்கத்தில்[c] குடியிருந்த மற்ற சீரியர்களை வரச் சொல்லி தூதுவர்களை
அனுப்பினார்கள். ஆதாதேசரின் படைத் தளபதியான சோப்பாக்கின் தலை
மையில் அவர்கள் வந்தார்கள்.[d]

17 தாவீதுக்கு இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது, உடனே அவர் இஸ்ர
வேல் வீரர்கள் எல்லாரையும் ஒன்றுதிரட்டி, யோர்தானைக் கடந்து அவர்க
ளிடம் வந்தார். தன்னுடைய வீரர்களை சீரியர்களுக்கு எதிராக அணிவ
குத்து நிற்க வைத்தார். அப்படி அவர்கள் அணிவகுத்து நின்றபோது,
சீரியர்கள் தாவீதை எதிர்த்துப் போர் செய்தார்கள்.[e] **18** ஆனால், சீரியர்
கள் இஸ்ரவேலர்களிடம் தோற்றுப்போய் ஓடினார்கள். சீரியர்களுடைய
7,000 ரதவீரர்களையும் 40,000 காலாட்படை வீரர்களையும் தாவீது கொன்று
போட்டார். அவர்களுடைய படைத் தளபதியான சோப்பாக்கையும் கொன்
றுபோட்டார். **19** இஸ்ரவேலர்களிடம் தோற்றுப்போனதால்[f] ஆதாதேசரின்
ஊழியர்கள் உடனடியாக தாவீதுடன் சமாதான ஒப்பந்தம் செய்து அவருக்கு
அடிபணிந்தார்கள்.[g] அதன் பின்பு, அம்மோனியர்களுக்கு உதவி செய்ய சீரி
யர்கள் விரும்பவில்லை.

20 வருஷத்தின் ஆரம்பத்தில்,* ராஜாக்கள் போருக்குப் போவது வழக்
கம். அப்போது, யோவாப்[h] படையெடுத்துப் போய் அம்மோனியர்
களின் தேசத்தை அழித்துப்போட்டார்; அவர் ரப்பாவுக்கு[i] வந்து அதை முற்
றுகையிட்டார்; ஆனால், தாவீது எருசலேமிலேயே தங்கிவிட்டார்.[j] யோவாப்
ரப்பாவைத் தாக்கி அதைத் தரைமட்டமாக்கினார்.[k] **2** பின்பு, மல்காம் தெய்
வத்தின் தலையிலிருந்த கிரீடத்தை தாவீது எடுத்துக்கொண்டார். அதன்
எடை ஒரு தாலந்து* தங்கம். அதில் விலைமதிப்புமிக்க கற்கள் பதிக்கப்பட்
டிருந்தன. அதை தாவீதின் தலையில் வைத்தார்கள். அந்த நகரத்திலி
ருந்து ஏராளமான பொருள்களையும் அவர் கைப்பற்றினார்.[l] **3** அங்கிருந்த
மக்களை நகரத்துக்கு வெளியே கொண்டுவந்து கல் அறுக்கும் வேலையை
அவர்களுக்குக் கொடுத்தார்.[m] கூர்மையான இரும்புக் கருவிகளையும்
கோடாலிகளையும் பயன்படுத்தி வேலை செய்ய வைத்தார். அம்மோனியர்
களுடைய நகரங்களில் இருந்த எல்லாரிடமும் இப்படியே வேலை வாங்கி
னார். கடைசியில், தன்னுடைய படை முழுவதையும் கூட்டிக்கொண்டு எரு
சலேமுக்குத் திரும்பிப் போனார்.

19:16 *அதாவது, "யூப்ரடிஸ் ஆற்றுப்பகுதிக்கு." **20:1** *அதாவது, "வசந்த காலத்தில்." **20:2** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 19
a உபா 31:6; யோசு 1:9
b லேவி 26:7, 8; உபா 28:7; 2சா 10:13, 14
c 2சா 8:3
d 2சா 10:15, 16
e 2சா 10:17-19
f சங் 18:39
g 1நா 14:17; சங் 18:44

அதி. 20
h 1நா 11:6
i உபா 3:11
j 2சா 11:1
k 2சா 12:26
l 2சா 8:11, 12; 2சா 12:30, 31
m 1ரா 9:20, 21

4 இதற்குப் பின்பு, கேசேர் என்ற இடத்தில் இஸ்ரவேலர்களுக்கும்
பெலிஸ்தியர்களுக்கும் போர் நடந்தது. அப்போது, ரெப்பாயீம்[a] வம்சத்
தைச் சேர்ந்த சிப்பாய் என்பவனை உஷாத்தியனான சிபெக்காய்[b] வெட்டிக்
கொன்றார். அந்தப் போரில் பெலிஸ்தியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

5 மறுபடியும் பெலிஸ்தியர்களுடன் போர் நடந்தது. காத் நகரத்தைச்
சேர்ந்த கோலியாத்தின்[c] சகோதரன் லாகேமியை யாவீரின் மகன் எல்க்கா
னான் வெட்டிக் கொன்றார். லாகேமி வைத்திருந்த ஈட்டியின் கம்பு, நெசவா
ளர்களுடைய தறிக்கட்டையைப் போல் பெரிதாக இருந்தது.[d]

6 மறுபடியும் காத்[e] நகரத்தில் போர் நடந்தது. அங்கே ரெப்பாயீம்
வம்சத்தைச் சேர்ந்த ஒருவன் இருந்தான். அவன் மிக மிக உயரமாக
இருந்தான்.[f] அவனுடைய கைகள் கால்கள் ஒவ்வொன்றிலும் ஆறாறு
விரல்கள் இருந்தன; மொத்தம் 24 விரல்கள் இருந்தன.[g] **7** அவன் இஸ்
ரவேலர்களைக் கேலி செய்துகொண்டே இருந்தான்.[h] அதனால், தாவீதின்
அண்ணனாகிய சிமேயாவுடைய[i] மகன் யோனத்தான் அவனை வெட்டிச்
சாய்த்தான்.

8 ரெப்பாயீம் வம்சத்தாரான[j] இவர்கள் எல்லாரும் காத் நகரத்தைச்
சேர்ந்தவர்கள்.[k] அவர்களை தாவீதும் அவருடைய ஊழியர்களும் வெட்டி
வீழ்த்தினார்கள்.

21 பின்பு, இஸ்ரவேலர்களைத் தாக்க சாத்தான்* தீர்மானித்ததால்
அவர்களைக் கணக்கெடுக்க தாவீதைத் தூண்டினான்.[l] **2** அத
னால் தாவீது யோவாபையும்[m] மற்ற தலைவர்களையும் கூப்பிட்டு, “நீங்கள்
போய் பெயெர்-செபாமுதல் தாண்வரை[n] குடியிருக்கிற இஸ்ரவேலர்களைக்
கணக்கெடுத்து வந்து சொல்லுங்கள்; மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்
கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்” என்று சொன்னார்.
3 ஆனால் யோவாப், “ராஜாவே, என் எஜமானே, யெகோவா தன்னுடைய
மக்களை இன்னும் நூறு மடங்கு பெருகச் செய்வார்! ஏற்கெனவே இவர்கள்
எல்லாரும் உங்களுடைய ஊழியர்கள்தானே? என் எஜமானே, பிறகு ஏன்
இப்படியொரு காரியத்தைச் செய்ய விரும்புகிறீர்கள்? இஸ்ரவேலர்கள்மீது
பழிபாவம் வருவதற்கு நீங்கள் ஏன் காரணமாக வேண்டும்?” என்று
கேட்டார்.

4 ஆனால், யோவாபின் வார்த்தை எடுபடவில்லை, ராஜாவின் வார்த்
தைதான் ஜெயித்தது. அதனால் யோவாப் இஸ்ரவேல் முழுவதும் பயணம்
செய்துவிட்டு, எருசலேமுக்குத் திரும்பி வந்தார்.[o] **5** பெயர்ப்பதிவு செய்
யப்பட்ட மக்கள் மொத்தம் எத்தனை பேர் என்பதை தாவீதிடம்
யோவாப் தெரிவித்தார். இஸ்ரவேலின் எல்லா கோத்திரங்களிலும் வாளேந்
திய வீரர்கள் மொத்தம் 11,00,000 பேர் இருந்தார்கள்; யூதாவில் வாளேந்
திய வீரர்கள் 4,70,000 பேர் இருந்தார்கள்.[p] **6** ராஜாவின் கட்டளையைக்
கேட்டு யோவாப்[q] வெறுப்படைந்ததால் லேவி கோத்திரத்தாரையும் பென்
யமீன் கோத்திரத்தாரையும் கணக்கெடுக்கவில்லை.[r]

7 தாவீது செய்த காரியம் உண்மைக் கடவுளுக்குக் கொஞ்சம்கூட
பிடிக்கவில்லை, அதனால் அவர் இஸ்ரவேலர்களைத் தண்டித்தார். **8** அப்
போது தாவீது உண்மைக் கடவுளிடம், “இந்தக் காரியத்தைச் செய்ததன்

21:1 * அல்லது, “எதிர்ப்பவன்.”

அதி. 20
a உபா 3:13
b 2சா 21:18; 1நா 11:26, 29
c 1சா 17:4, 7; 1சா 21:9
d 2சா 21:19; 1நா 11:23, 24
e யோசு 11:22; 1சா 7:14
f எண் 13:33; உபா 2:10; உபா 3:11
g 2சா 21:16; 2சா 21:20-22
h 1சா 17:10; 2ரா 19:22
i 1நா 2:13
j உபா 2:11
k 1சா 17:4

அதி. 21
l 2சா 24:1-3
m 2சா 8:16
n நியா 18:29; 2சா 17:11
o 2சா 24:4, 8
p 2சா 24:9
q 1நா 27:23, 24
r எண் 1:47

மூலம் நான் பெரிய பாவம் செய்துவிட்டேன்.[a] தயவுசெய்து அடியே
னின் தவறை மன்னித்துவிடுங்கள்;[b] நான் ரொம்ப முட்டாள்தனமாக நடந்
துகொண்டேன்"[c] என்று சொன்னார். **9** பின்பு, தாவீதின் தரிசனக்காரரான
காத்திடம் யெகோவா பேசினார். அவரிடம்,[d] **10** "நீ தாவீதிடம் போய்,
'உனக்கு முன்னால் மூன்று தண்டனைகளை வைக்கிறேன். எது வேண்டும்
என்பதை நீயே தீர்மானித்துக்கொள்' என்று யெகோவா சொல்கிறார் என்று
சொல்" என்றார். **11** அதனால் அவர் தாவீதிடம் வந்து, "'உன்னுடைய
தேசத்தில் ஏழு வருஷங்கள் பஞ்சம் வர வேண்டுமா?[e] **12** அல்லது
மூன்று மாதங்களுக்கு உன் எதிரிகளுடைய வாள் உன்னைத் தாக்கி
அழிக்க வேண்டுமா?[f] அல்லது உன்னுடைய தேசத்தில் மூன்று நாட்க
ளுக்கு யெகோவா அனுப்புகிற வாள் வர வேண்டுமா, அதாவது கொள்ளை
நோய் வர வேண்டுமா?[g] அப்படி வந்தால் யெகோவாவின் தூதர் இஸ்ர
வேல் முழுவதும் போய் மக்களை அழிப்பார்'[h] என்று யெகோவா
சொல்கிறார். என்னை அனுப்பியவருக்கு நான் என்ன பதில் சொல்ல வேண்
டும் என்பதை நீங்களே யோசித்துச் சொல்லுங்கள்" என்றார். **13** அப்
போது தாவீது காத் தீர்க்கதரிசியிடம், "நான் ரொம்ப நொந்துபோயிருக்கி
றேன். யெகோவா மகா இரக்கமுள்ளவர்,[i] அதனால், தயவுசெய்து அவரே
என்னைத் தண்டிக்கட்டும்; மனிதர்களின் கையில் என்னை விட்டுவிட
வேண்டாம்"[j] என்று சொன்னார்.

14 அப்போது, இஸ்ரவேலர்களை யெகோவா கொள்ளைநோயால் தாக்
கினார்;[k] அதனால், அவர்களில் 70,000 பேர் செத்தார்கள்.[l] **15** அதோடு,
எருசலேமை அழிக்க உண்மைக் கடவுள் ஒரு தேவதூதரை அனுப்பினார்;
ஆனால், அவர் எருசலேமை அழிக்கப்போகிற நேரத்தில் யெகோவா
அதை நினைத்து வருத்தப்பட்டார்;[m] அதனால் அழிவைக் கொண்டுவந்த
அந்தத் தேவதூதரிடம், "போதும்,[n] உன் கையைக் கீழே போடு!" என்று
சொன்னார். அப்போது, எபூசியனான[o] ஒர்னானுடைய களத்துமேட்டுக்குப்[p]
பக்கத்தில் யெகோவாவின் தூதர் நின்றுகொண்டிருந்தார்.

16 வானத்துக்கும் பூமிக்கும் நடுவே யெகோவாவின் தூதர் ஒரு
வாளைப் பிடித்துக்கொண்டு நிற்பதை தாவீது பார்த்தார்;[q] அந்த வாளை
அவர் எருசலேமுக்கு நேராக நீட்டியிருந்தார். துக்கத் துணியைப்[r] போட்
டிருந்த தாவீதும் மற்ற பெரியோர்களும்* உடனே சாஷ்டாங்கமாக விழுந்
தார்கள்.[s] **17** அப்போது தாவீது உண்மைக் கடவுளிடம், "நான்தானே மக்
களைக் கணக்கெடுக்கச் சொன்னேன். நான்தானே பாவம் செய்தேன்,
நான்தானே தவறு செய்தேன்;[t] இந்த ஆடுகள் என்ன தவறு செய்தன?
யெகோவா தேவனே, தயவுசெய்து என்னையும் என் தகப்பன் குடும்பத்
தையும் தண்டியுங்கள்; உங்களுடைய மக்களுக்கு இந்தத் தண்டனையைக்
கொடுக்காதீர்கள்"[u] என்று சொன்னார்.

18 அப்போது, யெகோவாவின் தூதர் காத் தீர்க்கதரிசியிடம்,[v] "நீ தாவீதி
டம் போய், எபூசியனான ஒர்னானின் களத்துமேட்டில் யெகோவாவுக்கு ஒரு
பலிபீடத்தைக் கட்டச் சொல்"[w] என்றார். **19** யெகோவாவின் பெயரில் காத்
தீர்க்கதரிசி சொன்ன வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தாவீது அங்கே போனார்.
20 இதற்கிடையே, ஒர்னான் தன்னுடைய களத்துமேட்டில் கோதுமையைப்
போரடித்துக்கொண்டிருந்தார். அவர் திரும்பியபோது அந்தத் தேவதூதரைப்

21:16 * வே.வா., "மூப்பர்களும்."

அதி. 21
- a 2சா 12:13
- b சங் 25:11; சங் 51:1
- c 2சா 24:10-14
- d 1நா 29:29
- e லேவி 26:26
- f லேவி 26:14, 17
- g லேவி 26:25
- h 2ரா 19:35
- i யாத் 34:6; சங் 51:1; ஏசா 55:7; புல 3:22
- j 2நா 28:9
- k எண் 16:46
- l 2சா 24:15, 16
- m யாத் 32:14; உபா 32:36
- n சங் 90:13
- o 2சா 5:6
- p 2நா 3:1
- q எண் 22:31; யோசு 5:13
- r 2ரா 19:1
- s 2சா 24:17
- t சங் 51:4
- u யாத் 32:12; எண் 16:22
- v 2சா 24:11
- w 2சா 24:18-23; 2நா 3:1

பார்த்தார்; அப்போது, அவருடன் இருந்த நான்கு மகன்களும் ஓடி ஒளிந்
துகொண்டார்கள். **21** தாவீது தன்னிடம் வருவதை ஓர்னான் பார்த்தார்.
உடனே களத்துமேட்டிலிருந்து வெளியே வந்து அவர் முன்னால் மண்டி
போட்டு தரைவரைக்கும் குனிந்து வணங்கினார். **22** அப்போது தாவீது ஓர்
னானிடம், “இந்தக் களத்துமேட்டில் யெகோவாவுக்கு ஒரு பலிபீடம் கட்ட
வேண்டும். அப்போதுதான் மக்களைத் தாக்குகிற கொள்ளைநோயைக்
கடவுள் நிறுத்துவார்.[a] அதனால் இதை எனக்கு விற்றுவிடு, இந்த இடத்துக்கு
என்ன விலையோ அதை உனக்குத் தந்துவிடுகிறேன்” என்று சொன்னார்.
23 அப்போது ஓர்னான், “ராஜாவே, என் எஜமானே, இந்த இடத்தை நீங்கள்
சும்மாவே எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் விருப்பப்படியே இங்கே பலிபீ
டம் கட்டுங்கள். இதோ, இந்த மாடுகளைத் தகன பலி கொடுங்கள், போர
டிக்கும் பலகையை[b] விறகாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். கோதுமையை
உணவுக் காணிக்கையாகக் கொடுங்கள். இவை எல்லாவற்றையும் உங்களுக்
குத் தருகிறேன்” என்று சொன்னார்.

24 ஆனால் ராஜா, “இல்லை, இதற்குரிய முழு விலையையும் கொடுத்து
தான் வாங்குவேன். உனக்குச் சொந்தமானதை எடுத்து யெகோவாவுக்
குக் காணிக்கை கொடுக்க மாட்டேன், உன்னிடமிருந்து இலவசமாக வாங்கி
என் கடவுளுக்குத் தகன பலிகளைக் கொடுக்க மாட்டேன்”[c] என்று ஓர்னா
னிடம் சொன்னார். **25** அதனால், தாவீது 600 சேக்கல்* தங்கத்தை நிறுத்
துக் கொடுத்து அந்த இடத்தை வாங்கினார். **26** அங்கே யெகோவாவுக்கு
ஒரு பலிபீடத்தைக் கட்டி,[d] தகன பலிகளையும் சமாதான பலிகளையும்
தாவீது கொடுத்தார்; அவர் யெகோவாவிடம் வேண்டிக்கொண்டபோது,
வானத்திலிருந்து நெருப்பு வந்து தகன பலிக்கான பலிபீடத்தின் மேலிருந்த
பலிகளைச் சுட்டெரித்தது;[e] இப்படி, கடவுள் அவருக்குப் பதில் கொடுத்தார்.
27 பின்பு, வாளைத் திரும்பவும் உறையில் போடச் சொல்லி யெகோவா
தன்னுடைய தூதரிடம் கட்டளையிட்டார்.[f] **28** எபூசியனான ஓர்னானின்
களத்துமேட்டில் தாவீது தொடர்ந்து பலி கொடுத்துவந்தார். ஏனென்றால்,
யெகோவா அவருக்கு அங்குதான் பதில் கொடுத்திருந்தார். **29** வனாந்
தரத்தில் மோசே செய்த யெகோவாவின் வழிபாட்டுக் கூடாரம் கிபியோ
னில் உள்ள ஆராதனை மேட்டில்[g] இருந்தது, தகன பலிக்கான பலிபீடமும்
அங்குதான் இருந்தது. **30** ஆனால், கடவுளிடம் ஆலோசனை கேட்க
தாவீது அங்கே போகவில்லை. ஏனென்றால், யெகோவாவின் தூதருடைய
வாளுக்குப் பயந்தார்.

22 பின்பு தாவீது, “உண்மைக் கடவுளாகிய யெகோவாவுக்கு இங்
குதான் ஆலயம் கட்ட வேண்டும், இங்கே இருக்கிற பலிபீடத்தில்
இஸ்ரவேலர்கள் தகன பலி கொடுக்க வேண்டும்”[h] என்று சொன்னார்.

2 இஸ்ரவேலில் குடியிருக்கும் மற்ற தேசத்து மக்களை[i] ஒன்றுகூட்டச்
சொல்லி தாவீது கட்டளையிட்டார்; பின்பு, உண்மைக் கடவுளின் ஆல
யத்துக்குத் தேவையான கற்களை வெட்டிச் செதுக்கும் வேலையை அவர்க
ளுக்குக் கொடுத்தார்.[j] **3** ஆலயத்தின் கதவுகளுக்குத் தேவையான ஆணி
களையும் கீல்களையும் செய்ய ஏராளமான இரும்பையும் எடைபோட
முடியாதளவு செம்பையும்[k] தாவீது சேகரித்தார். **4** அவர் சேர்த்து வைத்த
தேவதாரு மரங்களுக்கு[l] அளவே இல்லை; அவ்வளவு மரங்களை

அதி. 21
a எண் 25:8
b ஏசா 28:27
c 2சா 24:24, 25
d யாத் 20:25
e லேவி 9:23, 24; 1ரா 18:38; 2நா 7:1
f 2சா 24:16; சங் 103:20
g 1ரா 3:4; 1நா 16:39; 2நா 1:3

அதி. 22
h உபா 12:5, 6; 2சா 24:18; 2நா 3:1
i 1ரா 9:20, 21; 2நா 2:17, 18
j 1ரா 5:15, 17; 1ரா 6:7; 1ரா 7:9
k 1ரா 7:47
l 2சா 5:11

21:25 * ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

சீதோனியர்களும்[a] தீருவைச் சேர்ந்தவர்களும்[b] தாவீதிடம் கொடுத்தார்
கள். **5** பின்பு தாவீது, “என்னுடைய மகன் சாலொமோன் சின்னப்
பையன், அவனுக்கு அனுபவம் போதாது;*[c] யெகோவாவின் ஆலயமோ
மிக மிகப் பிரமாண்டமாய் இருக்க வேண்டும்;[d] அதன் அழகையும் புகழை
யும்[e] பற்றி உலகமே பேச வேண்டும்.[f] அதனால், சாலொமோனுக்காக நான்
எல்லாவற்றையும் தயார் செய்து வைப்பேன்” என்று சொன்னார். அதன்படி,
தாவீது தன்னுடைய மரணத்துக்கு முன்பே எக்கச்சக்கமான பொருள்களைச்
சேர்த்து வைத்தார்.

6 அதோடு, தாவீது தன்னுடைய மகன் சாலொமோனைக் கூப்பிட்டு,
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு ஆலயம் கட்டச் சொன்னார்.
7 அவர் சாலொமோனிடம், “என் கடவுளாகிய யெகோவாவின் பெயருக்
காக ஒரு ஆலயத்தைக் கட்ட நான் மனதார ஆசைப்பட்டேன்.[g]
8 ஆனால் யெகோவா என்னிடம், ‘நீ பல பேரைக் கொன்றுபோட்டிருக்கி
றாய்,* நிறைய போர் செய்திருக்கிறாய். இப்படி என் முன்னால் பல பேரைக்
கொன்றுபோட்டதால் என் பெயருக்காக நீ ஆலயம் கட்ட வேண்டாம்.[h]
9 உனக்கு ஒரு மகன் பிறப்பான்,[i] அவன் சமாதானப் பிரியனாய் இருப்பான்;
அதனால், அவனுக்கு சாலொமோன்*[j] என்று பெயர் வைக்க வேண்டும்.
சுற்றியிருக்கிற எந்த எதிரியின் தொல்லையும் இல்லாமல் அவனை நிம்மதி
யாக வாழ வைப்பேன்;[k] அவனுடைய ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேல் எங்
கும் சமாதானமும் அமைதியும் இருக்கும்.[l] **10** என் பெயருக்காக அவன்
தான் ஆலயம் கட்டுவான்.[m] அவன் எனக்கு மகனாக இருப்பான், நான் அவ
னுக்குத் தகப்பனாக இருப்பேன்.[n] இஸ்ரவேலில் அவனுடைய ஆட்சியை
என்றென்றும் நிலைக்க வைப்பேன்’[o] என்று சொன்னார்.

11 என் மகனே, உன் கடவுளாகிய யெகோவா உனக்குத் துணையாக
இருப்பார்; அவர் உன்னைப் பற்றிச் சொன்னபடியே உன் கடவுளாகிய
யெகோவாவுக்கு நீ வெற்றிகரமாக ஒரு ஆலயத்தைக் கட்டு.[p] **12** இஸ்ர
வேலை ஆட்சி செய்யும் அதிகாரத்தை யெகோவா உனக்குக் கொடுக்கும்
போது, உன் கடவுளாகிய யெகோவாவின் சட்டத்தைக் கடைப்பிடிப்ப
தற்குத்[q] தேவையான விவேகத்தையும் புரிந்துகொள்ளும் திறனையும் அவர்
உனக்குத் தருவார்.[r] **13** மோசே மூலம் இஸ்ரவேலர்களுக்கு யெகோவா
கொடுத்த விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும்[s] அப்படியே கடைப்
பிடி. அப்போதுதான், நீ சீரும் சிறப்புமாக இருப்பாய்.[t] தைரியமாகவும் உறு
தியாகவும் இரு; எதற்கும் பயப்படாதே, திகிலடையாதே.[u] **14** நான் நிறைய
முயற்சியெடுத்து யெகோவாவின் ஆலயத்துக்காக 1,00,000 தாலந்து* தங்க
மும், 10,00,000 தாலந்து வெள்ளியும், எடையே போட முடியாத அளவுக்கு
செம்பும் இரும்பும் சேர்த்து வைத்திருக்கிறேன்;[v] மரங்களையும் கற்களையும்
கூட தயாராக வைத்திருக்கிறேன்;[w] இவற்றோடு நீயும் பொருள்களைச்
சேர்த்து வைக்க வேண்டும். **15** கற்களை வெட்டிச் செதுக்குகிறவர்களும்
கொத்தனார்களும்[x] தச்சர்களும் எல்லா விதமான வேலைகளையும் திறமை
யாகச் செய்கிறவர்களும் உன்னுடன் இருக்கிறார்கள்.[y] வேலையாட்களுக்குப்
பஞ்சமே இல்லை. **16** தங்கமும் வெள்ளியும் செம்பும் இரும்பும் நம்

22:5 * வே.வா., “அவன் மென்மையானவன்.” **22:8** * நே.மொ., “மிக அதிகமாக இரத்தம் சிந்தியிருக்கிறாய்.” **22:9** * எபிரெயுவில் இதன் அர்த்தம், “சமாதானம்.” **22:14** * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோ. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 22
a 1ரா 5:6, 8
b 2நா 2:3
c 1ரா 3:7
d 2நா 2:5
e ஆகா 2:3
f சங் 68:29
g உபா 12:5, 6; 2சா 7:2; சங் 132:3-5
h 1நா 17:4
i 1நா 28:5
j 2சா 12:24
k 2சா 7:12, 13; 1ரா 4:25; 1ரா 5:4
l சங் 72:7
m 1ரா 5:5
n 2சா 7:14; எபி 1:5
o 1நா 17:12-14; சங் 89:35, 36
p 1நா 28:20
q உபா 4:6
r 2நா 1:10; சங் 72:1
s உபா 12:1; உபா 17:18, 19; யோசு 1:8; 1ரா 2:3; 1நா 28:7; சங் 19:8, 11
t லேவி 19:37; 1நா 28:7
u யோசு 1:6, 9; 1நா 28:20
v 1நா 29:6, 7
w 1நா 29:2-4
x 1ரா 5:17; 1ரா 6:7; 1ரா 7:9
y 1ரா 7:13, 14

மிடம் குவிந்து கிடக்கின்றன.[a] அதனால், உடனே வேலையைத் தொடங்கு,
யெகோவா உனக்குத் துணையாக இருப்பார்”[b] என்று சொன்னார்.
17 பின்பு, தன்னுடைய மகன் சாலொமோனுக்கு உதவச் சொல்லி இஸ்
ரவேல் தலைவர்கள் எல்லாருக்கும் கட்டளையிட்டார். **18** அவர்களிடம்,
“உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குத் துணையாக இருக்கிறார்,
சுற்றியிருக்கிற எதிரிகளுடைய தொல்லை இல்லாமல் நிம்மதியாக வாழ
வைத்திருக்கிறார். இந்தத் தேசத்தில் முன்பு குடியிருந்த மக்களைத் தோற்க
டிக்க எனக்கு உதவி செய்தார்; இப்போது இந்தத் தேசம் யெகோவாவுக்கும்
அவருடைய மக்களுக்கும் முன்பாக அடிபணிய வைக்கப்பட்டிருக்கிறது.
19 உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு முழு இதயத்தோடும் முழு மூச்
சோடும் சேவை செய்யத் தீர்மானமாக இருங்கள்;[c] யெகோவாவின் பெய
ருக்காகக் கட்டப்படும் ஆலயத்தில்[d] யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியை
யும் பரிசுத்த பொருள்களையும் கொண்டுவந்து வையுங்கள்.[e] உண்மைக்
கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்தைக் கட்ட ஆரம்பியுங்கள்”[f] என்று
கட்டளையிட்டார்.

23 தாவீது தன்னுடைய வயதான காலத்தில், தான் இறப்பதற்கு முன்பு,
தன்னுடைய மகன் சாலொமோனை இஸ்ரவேல் தேசத்துக்கு ராஜா
வாக்கினார்.[g] **2** பின்பு, இஸ்ரவேலில் இருந்த எல்லா தலைவர்களையும்
குருமார்களையும்[h] லேவியர்களையும்[i] வரவழைத்தார். **3** முப்பது அல்லது
அதற்கு மேற்பட்ட வயதுடைய லேவியர்கள் எத்தனை பேர் இருக்கிறார்
கள் என்று கணக்கெடுத்தார்.[j] அவர்கள் மொத்தம் 38,000 பேர். **4** இவர்க
ளில் 24,000 பேர் மேற்பார்வையாளர்களாக இருந்து யெகோவாவின்
ஆலய வேலையைச் செய்தார்கள்; 6,000 பேர் அதிகாரிகளாகவும் நீதிப
திகளாகவும்[k] இருந்தார்கள். **5** 4,000 பேர் வாயிற்காவலர்களாக இருந்தார்
கள்;[l] 4,000 பேர் இசைக் கலைஞர்களாக இருந்தார்கள்.[m] கடவுளைப்
புகழ்ந்து பாடுவதற்காக தாவீது செய்து வைத்திருந்த இசைக் கருவிகளை
வாசித்து யெகோவாவை இவர்கள் புகழ்ந்து பாடினார்கள்.
6 தாவீது இவர்களை லேவியின் மகன்களான கெர்சோன், கோகாத்,
மெராரி[n] ஆகியோரின் குடும்பங்களின்படி பிரித்தார்.[o] **7** கெர்சோனியர்
கள்: லாதான், சீமேயி. **8** லாதானின் மகன்கள்: தலைவர் யெகியேல், சேத்
தாம், யோவேல்[p] ஆகிய மூன்று பேர். **9** சீமேயியின் மகன்கள்: செலெ
மோத், ஹாசியேல், ஆரான் ஆகிய மூன்று பேர். இவர்கள் லாதானின்
வம்சத்தில் வந்த தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள். **10** யாகாத், சீனா,
எயூஷ், பெரீயா ஆகிய நான்கு பேரும் சீமேயியின் மகன்கள். **11** யாகாத்
தலைவராக இருந்தார், சீசாகு அவருக்கு இரண்டாவது இடத்தில் இருந்தார்.
எயூஷுக்கும் பெரீயாவுக்கும் நிறைய மகன்கள் இல்லாததால் அவர்கள்
ஒரே தந்தைவழிக் குடும்பமாகக் கருதப்பட்டார்கள், ஒரேவிதமான வேலை
யைச் செய்தார்கள்.
12 கோகாத்தின் மகன்கள்: அம்ராம், இத்சேயார்,[q] எப்ரோன், ஊசி
யேல்[r] என நான்கு பேர். **13** அம்ராமின் மகன்கள்: ஆரோன்,[s]
மோசே.[t] மகா பரிசுத்த அறையைப் புனிதமாக வைத்திருக்கும் பொறுப்பு
ஆரோனுக்கும் அவருடைய மகன்களுக்கும் நிரந்தரமாகக் கொடுக்கப்பட்
டது.[u] அதோடு, யெகோவாவின் சன்னிதியில் பலிகளைச் செலுத்துவதும்,
அவருக்குச் சேவை செய்வதும், எப்போதும் கடவுளின் சார்பாக மக்களை

அதி. 22
a 1நா 22:3
b 2நா 1:1
c உபா 4:29; 2நா 20:3; தானி 9:3
d உபா 12:21; 1ரா 8:29; 1ரா 9:3
e 1ரா 8:6, 21
f 1ரா 6:1

அதி. 23
g 1ரா 1:33, 39; 1நா 28:5
h யாத் 29:8, 9
i எண் 3:6
j எண் 4:2, 3
k உபா 16:18; 1நா 26:29; 2நா 19:8
l 1நா 26:12
m 1நா 6:31, 32
n யாத் 6:16
o 2நா 8:14; 2நா 31:2
p 1நா 26:21, 22
q யாத் 6:21
r யாத் 6:18
s யாத் 4:14
t யாத் 6:20, 26
u யாத் 28:1

ஆசீர்வதிப்பதும் இவர்களுடைய பொறுப்பாக இருந்தது.[a] **14** உண்மைக்
கடவுளின் ஊழியரான மோசேயும் அவருடைய மகன்களும் லேவி கோத்தி
ரத்தாரோடு சேர்த்து எண்ணப்பட்டார்கள். **15** மோசேயின் மகன்கள்: கெர்
சோம்,[b] எலியேசர்.[c] **16** கெர்சோமின் மகன்களில் செபுவேல்[d] தலைவ
ராக இருந்தார். **17** எலியேசரின் வம்சத்தைச் சேர்ந்தவர்களுக்கு ரெகபியா[e]
தலைவராக இருந்தார்; எலியேசருக்கு வேறு மகன்கள் இல்லை; ஆனால்,
ரெகபியாவுக்கு நிறைய மகன்கள் இருந்தார்கள். **18** இத்சேயாரின்[f] வம்சத்
தைச் சேர்ந்தவர்களுக்கு செலோமித்[g] தலைவராக இருந்தார். **19** எப்ரோ
னின் மகன்கள்: தலைவர் எரியா, இரண்டாவது மகன் அமரியா, மூன்றாவது
மகன் யகாசியேல், நான்காவது மகன் எக்காமியாம்.[h] **20** ஊசியேலின் வம்
சத்தார்:[i] தலைவர் மீகா, அவருக்கு அடுத்த இடத்திலிருந்த இஷியா.

21 மெராரியின் மகன்கள்: மகேலி, மூசி.[j] மகேலியின் மகன்கள்: எலெ
யாசார், கீஸ். **22** எலெயாசார் இறந்துபோனார், ஆனால் அவருக்கு
மகன்கள் இல்லை, மகள்கள்தான் இருந்தார்கள். அவர்களுடைய சொந்
தக்காரர்களான* கீசின் மகன்கள் அந்தப் பெண்களைக் கல்யாணம் செய்து
கொண்டார்கள். **23** மூசியின் மகன்கள்: மகேலி, ஏதேர், எரேமோத் என
மூன்று பேர்.

24 தங்களுடைய தந்தைவழி குடும்பத்தின்படியும் தந்தைவழிக் குடும்
பத் தலைவர்களின்படியும் பதிவு செய்யப்பட்ட லேவியின் வம்சத்தார்
இவர்களே; 20 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய லேவியர்கள் ஒவ்
வொருவரும் எண்ணப்பட்டார்கள், பட்டியலில் அவர்களுடைய பெயர்கள்
சேர்க்கப்பட்டன. யெகோவாவின் ஆலயத்தில் சேவை செய்வதற்காக இவர்
கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். **25** “இஸ்ரவேலின் கடவுளான யெகோவா
தன்னுடைய மக்களுக்கு ஓய்வு தந்திருக்கிறார்,[k] அவர் எருசலேமில் என்
றென்றும் குடியிருப்பார்.[l] **26** அதோடு, வழிபாட்டுக் கூடாரத்தையோ
அதற்குரிய பாத்திரங்களையோ லேவியர்கள் இனி சுமக்க வேண்டியிருக்
காது”[m] என்று தாவீது சொன்னார். **27** தாவீது கடைசியாகக் கொடுத்த கட்
டளைகளின்படி, 20 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய லேவியர்கள்
கணக்கெடுக்கப்பட்டார்கள். **28** யெகோவாவின் ஆலயத்தில் சேவை செய்
யும் ஆரோனின் வம்சத்தாருக்கு உதவி செய்ய வேண்டியது இவர்களுடைய
பொறுப்பாக இருந்தது.[n] பிரகாரங்களையும்[o] சாப்பாட்டு அறைகளையும்
கவனித்துக்கொள்வதற்கும், எல்லா புனிதப் பொருள்களையும் சுத்தப்படுத்து
வதற்கும் ஆரோனின் வம்சத்தாருக்கு இவர்கள் உதவி செய்ய வேண்டும்.
அதோடு, உண்மைக் கடவுளின் ஆலயத்தில் செய்யப்படும் எல்லா வேலை
களிலும் அவர்களுக்குக் கூடமாட உதவி செய்ய வேண்டும். **29** படை
யல் ரொட்டிகளையும்[p] உணவுக் காணிக்கையாகக் கொடுக்கப்படுகிற
நைசான மாவையும், புளிப்பில்லாத மெல்லிய ரொட்டியையும்,[q] வட்டக் கல்
லில் செய்யப்படும் பணியாரங்களையும், எண்ணெய்விட்டுப் பிசைந்த
மாவையும்[r] தயாரிக்க அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதோடு,
எல்லாவற்றின் அளவையும் எடையையும் கணக்கிட உதவி செய்ய வேண்
டும். **30** தினமும் காலையும்[s] மாலையும் அவர்கள் யெகோவாவுக்கு
நன்றி சொல்லி அவரைப் புகழ்ந்துபாட வேண்டும்.[t] **31** திருச்சட்டத்தில்
எழுதப்பட்டபடி, ஓய்வுநாளிலும்[u] மாதப்பிறப்பு நாட்களிலும்*[v] பண்டிகைக்

23:22 * நே.மொ., “சகோதரர்களான.” **23:31** * வே.வா., “முதலாம் பிறையிலும்.”

அதி. 23
a லேவி 9:22
எண் 6:23-27
உபா 21:5
b யாத் 2:21, 22
c யாத் 18:3, 4
d 1நா 26:24
e 1நா 26:25
f எண் 3:27
g 1நா 24:20, 22
h 1நா 24:20, 23
i யாத் 6:22
j யாத் 6:19
k 2சா 7:1
l 1ரா 8:12, 13
சங் 135:21
m எண் 4:15
n எண் 3:9
o 1ரா 6:36
p லேவி 24:5, 6
1நா 9:32
q யாத் 29:1, 2
லேவி 2:4
r லேவி 7:12
s யாத் 29:39
t 1நா 16:4, 37
u யாத் 20:10
v எண் 10:10
சங் 81:3

காலங்களிலும்[a] யெகோவாவின் சன்னிதியில் குருமார்கள் யெகோவாவுக்
குத் தகன பலி கொடுக்கும்போதெல்லாம் குருமார்களுக்கு இவர்கள் உதவி
செய்ய வேண்டும். **32** சந்திப்புக் கூடாரத்தில் செய்ய வேண்டிய வேலை
கள், பரிசுத்த இடத்தில் செய்ய வேண்டிய வேலைகள் ஆகியவற்றைக் கவ
னித்துக்கொள்ள வேண்டும். அதோடு, இவர்களுடைய சகோதரர்களான
ஆரோனின் வம்சத்தாருக்கு யெகோவாவின் ஆலயத்தில் உதவி செய்ய
வேண்டும்.

24 ஆரோனின் வம்சத்தைச் சேர்ந்த குருமார்களின் பிரிவுகளைப்
பற்றிய விவரம். நாதாப், அபியூ,[b] எலெயாசார், இத்தாமார்[c]
ஆகியோர் ஆரோனின் மகன்கள். **2** நாதாபும் அபியூவும் அவர்களு
டைய அப்பாவுக்கு முன்பே இறந்துவிட்டார்கள்.[d] அவர்களுக்கு மகன்கள்
இல்லை. ஆனால், எலெயாசாரும்[e] இத்தாமாரும் குருமார்களாகச் சேவை
செய்துவந்தார்கள். **3** குருமார்கள் செய்ய வேண்டிய வேலைகளை தாவீது
பிரித்துக் கொடுத்தார். எலெயாசாரின் வம்சத்தில் வந்த சாதோக்கும்[f] இத்
தாமாரின் வம்சத்தில் வந்த அகிமெலேக்கும் அவருக்கு உதவி செய்தார்
கள். **4** இத்தாமாரின் வம்சத்தைவிட எலெயாசாரின் வம்சத்தில்தான்
நிறைய தலைவர்கள் இருந்தார்கள். அதற்கேற்றபடி அவர்கள் குழுக்களாகப்
பிரிக்கப்பட்டார்கள். எலெயாசாரின் வம்சத்தில் வந்த தந்தைவழிக் குடும்பத்
தலைவர்கள் மொத்தம் 16 பேர். இத்தாமாரின் வம்சத்தில் வந்த தந்தைவ
ழிக் குடும்பத் தலைவர்கள் மொத்தம் 8 பேர்.

5 பரிசுத்த இடத்தில் சேவை செய்த தலைவர்களும் உண்மைக் கட
வுளுக்குச் சேவை செய்த தலைவர்களும் எலெயாசார், இத்தாமார் ஆகிய
இரண்டு பேரின் வம்சத்திலும் இருந்தார்கள்; அதனால், இந்த இரண்டு வம்
சத்திலும் வந்த தலைவர்களைக் குலுக்கல் முறையில்[g] மாறிமாறி தேர்ந்தெ
டுத்தார்கள்; அவர்கள் எப்போது சேவை செய்ய வேண்டும் என்பதை இப்
படித் தீர்மானித்தார்கள். **6** ராஜா, அதிகாரிகள், குருவாகிய சாதோக்,[h]
அபியத்தாரின்[i] மகன் அகிமெலேக்கு[j] ஆகியோர் முன்பாகவும், குருமார்
கள் மற்றும் லேவியர்களின் தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள் முன்பாக
வும் செமாயா அந்தப் பெயர்களை எழுதினார்; இவர் லேவியர்களின் செய
லாளரான நெதனெயேலின் மகன். எலெயாசார் வம்சம், இத்தாமார் வம்சம்
என மாறிமாறி குலுக்கல் போட்டுத் தேர்ந்தெடுத்தார்கள்.

7 குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்: முதலாவது யோயா
ரீப், இரண்டாவது யெதாயா, **8** மூன்றாவது ஆரீம், நான்காவது செயோரீம்,
9 ஐந்தாவது மல்கீயா, ஆறாவது மியாமின், **10** ஏழாவது அக்கோஸ், எட்
டாவது அபியா,[k] **11** ஒன்பதாவது யெசுவா, பத்தாவது செக்கனியா,
12 பதினோராவது எலியாசிப், பன்னிரண்டாவது யாக்கிம், **13** பதின்மூன்
றாவது உப்பா, பதினான்காவது எசெபெயாப், **14** பதினைந்தாவது பில்கா,
பதினாறாவது இம்மேர், **15** பதினேழாவது ஏசீர், பதினெட்டாவது அப்
சேஸ், **16** பத்தொன்பதாவது பெத்தகியா, இருபதாவது எகெசெக்கியேல்,
17 இருபத்தோராவது யாகீன், இருபத்திரண்டாவது காமுவேல், **18** இரு
பத்து மூன்றாவது தெலாயா, இருபத்து நான்காவது மாசியா.

19 யெகோவாவின் ஆலயத்தில் சேவை செய்வதற்கு இந்த முறையில்
தான் நியமிக்கப்பட்டார்கள்.[l] தங்களுடைய மூதாதையான ஆரோன்
ஏற்படுத்திய வழக்கத்தின்படியே அவர்கள் சேவை செய்துவந்தார்கள்.

அதி. 23
a உபா 16:16

அதி. 24
b லேவி 10:1
c யாத் 6:23; யாத் 28:1
d எண் 26:61
e எண் 16:39, 40
f 2சா 8:17
g நீதி 16:33
h 1ரா 2:35
i 2சா 19:11; 1ரா 1:5, 7
j 2சா 8:17
k லூ 1:5
l 2ரா 11:9; லூ 1:8, 23

இஸ்ரவேலின் கடவுளான யெகோவாதான் ஆரோனுக்கு இப்படிச் செய்யச்
சொல்லி கட்டளை கொடுத்திருந்தார்.

20 லேவி வம்சத்தைச் சேர்ந்த மற்றவர்கள்: அம்ராமின்[a] மகன்களில்,
சூபவேல்;[b] சூபவேலின் மகன்களில், எகேதியா; **21** ரெகபியாவின்[c] மகன்
களில் தலைவராக இருந்த இஷியா; **22** இத்சேயாரின் மகன்களில்,
செலெமோத்;[d] செலெமோத்தின் மகன்களில், யாகாத்; **23** எப்ரோனின்
மகன்களில் தலைவராக இருந்த எரியா,[e] இரண்டாவதாக அமரியா, மூன்றா
வதாக யகாசியேல், நான்காவதாக எக்காமியாம். **24** ஊசியேலின் மகன்க
ளில், மீகா; மீகாவின் மகன்களில், சாமீர்; **25** மீகாவின் சகோதரன் இஷியா;
இஷியாவின் மகன்களில், சகரியா.

26 மெராரியின்[f] மகன்கள்: மகேலி, மூசி; யாசியாவின் வம்சத்தில்,
பெனோ. **27** மெராரியின் வம்சத்தில் வந்த யாசியாவின் வம்சத்தார்:
பெனோ, சோகாம், சக்கூர், இப்ரி; **28** மகேலியின் மகன் எலெயாசார்.
எலெயாசாருக்கு மகன்கள் இல்லை;[g] **29** கீசின் மகன்களில், யெர்மெ
யேல்; **30** மூசியின் மகன்களில், மகேலி, ஏதேர், யெரிமோத்.

இந்த லேவியர்கள் எல்லாரும் தங்களுடைய தந்தைவழிக் குடும்பம்
வாரியாகப் பட்டியலிடப்பட்டவர்கள். **31** அவர்களுடைய சகோதரர்களான
ஆரோனின் வம்சத்தார் செய்தது போலவே இவர்களும் தாவீது ராஜா,
சாதோக், அகிமெலேக்கு, குருமார்களின் தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள்,
லேவியர்களின் தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள் ஆகியோரின் முன்னால்
குலுக்கல்[h] போட்டார்கள். தந்தைவழிக் குடும்பத் தலைவர்களில் மூத்தவர்க
ளும் சரி, இளையவர்களும் சரி, சரிசமமாக நடத்தப்பட்டார்கள்.

25 பின்பு, தாவீதும் ஆலயக் குழுக்களின் தலைவர்களும் ஆசாப்,
ஏமான், எதித்தூன் ஆகியோருடைய மகன்களில் சிலரைத் தேர்ந்
தெடுத்தார்கள்.[i] யாழ்களையும் நரம்பிசைக் கருவிகளையும் இசைத்து, ஜால்
ராக்களைத் தட்டி, தீர்க்கதரிசனம் சொல்வதற்கு அவர்களை நியமித்தார்கள்.[j]
இப்படிப் பொறுப்பு கொடுக்கப்பட்டவர்களைப் பற்றிய விவரம்: **2** ஆசாப்
பின் மகன்களில் சக்கூர், யோசேப்பு, நெத்தனியா, அஷாரேலா ஆகியோர்
தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆசாப்பின் மகன்களான இவர்கள் ஆசாப்பின்
மேற்பார்வையில் சேவை செய்தார்கள். ராஜாவுடைய மேற்பார்வையில்
ஆசாப் தீர்க்கதரிசனம் சொன்னார். **3** எதித்தூனின்[k] மகன்களில் கெத
லியா, சேரீ, யெசாயா, சீமேயி, அஷபியா, மத்தித்தியா[l] ஆகியோர் தேர்ந்
தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் ஆறு பேரும் தங்களுடைய அப்பா எதித்
தூனின் மேற்பார்வையில் சேவை செய்தார்கள். அவர்கள் யாழ் இசைத்து
தீர்க்கதரிசனம் சொன்னார்கள், யெகோவாவுக்கு நன்றி சொல்லி போற்
றிப் புகழ்ந்தார்கள்.[m] **4** ஏமானின்[n] மகன்களில் புக்கியா, மத்தனியா, ஊசி
யேல், செபுவேல், யெரிமோத், அனனியா, அனானி, எலியாத்தா, கிதல்தி,
ரொமந்தியேசர், யோஸ்பேக்காஷா, மலோத்தி, ஒத்திர், மகாசியோத் ஆகி
யோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். **5** இவர்கள் எல்லாரும் ஏமானின் மகன்
கள்; இவர் உண்மைக் கடவுளிடமிருந்து கிடைக்கும் தரிசனங்களை ராஜா
விடம் சொல்லி அவருக்குப் புகழ் சேர்த்தார். அதனால், ஏமானுக்கு 14
மகன்களையும் 3 மகள்களையும் உண்மைக் கடவுள் கொடுத்தார். **6** ஏமா
னின் மகன்கள் எல்லாரும் தங்களுடைய அப்பாவின் மேற்பார்வையில்
யெகோவாவின் ஆலயத்தில் பாடல்களைப் பாடினார்கள். ஜால்ராக்களைத்

அதி. 24
a யாத் 6:18
b 1நா 23:16; 1நா 26:24
c 1நா 23:17
d 1நா 23:18
e 1நா 26:31
f ஆதி 46:11
g 1நா 23:22
h நீதி 16:33

அதி. 25
i 1நா 16:41, 42; 2நா 5:11, 12; 2நா 35:15
j 1சா 10:5; 1நா 15:16
k 1நா 16:41, 42
l 1நா 15:16, 18
m எபே 5:19
n 1நா 15:16, 19

தட்டி, நரம்பிசைக் கருவிகளையும் யாழ்களையும் இசைத்து உண்மைக் கடவுளின் ஆலயத்தில் பாடினார்கள்.[a]

ஆசாப், எதித்தூன், ஏமான் ஆகியோர் ராஜாவின் நேரடி மேற்பார்வையில் சேவை செய்தார்கள்.

7 யெகோவாவைப் புகழ்ந்து பாடுவதற்கு அவர்களும் அவர்களுடைய சகோதரர்களும் பயிற்சி பெற்றிருந்தார்கள். மொத்தம் 288 பேரும் வித்வான்களாக இருந்தார்கள். **8** இளையவர்கள், மூத்தவர்கள், மாணவர்கள், வித்வான்கள் என எந்த வித்தியாசமும் இல்லாமல் எல்லாரும் குலுக்கல் முறையில்[b] தங்களுடைய வேலைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

9 முதல் குலுக்கல் ஆசாப்பின் மகன் யோசேப்புக்கு விழுந்தது.[c] இரண்டாவது கெதலியாவுக்கு விழுந்தது.[d] அவரையும் அவருடைய சகோதரர்களையும் அவருடைய மகன்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர்; **10** மூன்றாவது சக்கூருக்கு விழுந்தது.[e] அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **11** நான்காவது இஸ்ரிக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **12** ஐந்தாவது நெத்தனியாவுக்கு விழுந்தது.[f] அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **13** ஆறாவது புக்கியாவுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **14** ஏழாவது எசரேலாவுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **15** எட்டாவது யெசாயாவுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **16** ஒன்பதாவது மத்தனியாவுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **17** பத்தாவது சீமேயிக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **18** பதினொன்றாவது அசரெயேலுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **19** பன்னிரண்டாவது அஷபியாவுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **20** பதின்மூன்றாவது சூபவேலுக்கு விழுந்தது.[g] அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **21** பதினான்காவது மத்தித்தியாவுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **22** பதினைந்தாவது எரேமோத்துக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **23** பதினாறாவது அனனியாவுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **24** பதினேழாவது யோஸ்பேக்காஷாவுக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **25** பதினெட்டாவது அனானிக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **26** பத்தொன்பதாவது மலோத்திக்கு விழுந்தது. அவருடைய மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **27** இருபதாவது எலியாத்தாவுக்கு விழுந்தது. அவருடைய

அதி. 25
a 1நா 13:8
1நா 15:16
1நா 16:5
b நீதி 16:33
c 1நா 25:1, 2
d 1நா 25:1, 3
e 1நா 25:1, 2
f 1நா 25:1, 2
g 1நா 25:1, 4

மகன்களையும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர்.
28 இருபத்தொன்றாவது ஒத்திருக்கு விழுந்தது. அவருடைய மகன்களை
யும் அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **29** இரு
பத்திரண்டாவது கிதல்திக்கு விழுந்தது.[a] அவருடைய மகன்களையும் அவ
ருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **30** இருபத்து
மூன்றாவது மகாசியோத்துக்கு விழுந்தது.[b] அவருடைய மகன்களையும்
அவருடைய சகோதரர்களையும் சேர்த்து மொத்தம் 12 பேர். **31** இருபத்து
நான்காவது ரொமந்தியேசருக்கு விழுந்தது.[c] அவருடைய மகன்களையும்
அவருடைய சகோதரர்களையும் சேர்த்து 12 பேர்.

26 இவையெல்லாம் வாயிற்காவலர்களின்[d] பிரிவுகள்: கோராகியர்க
ளில் மெசெலேமியா;[e] இவர் கோரேயின் மகன். கோரே, ஆசாப்
பின் மகன்களில் ஒருவர். **2** மெசெலேமியாவின் மகன்கள்: முதலாவது சக
ரியா, இரண்டாவது யெதியாயேல், மூன்றாவது செபதியா, நான்காவது
யதனியேல், **3** ஐந்தாவது ஏலாம், ஆறாவது யெகோனான், ஏழாவது
எலியோவெனாய். **4** ஓபேத்-ஏதோமின் மகன்கள்: முதலாவது செமாயா,
இரண்டாவது யெகோஸபாத், மூன்றாவது யோவா, நான்காவது சாக்கார்,
ஐந்தாவது நெதனெயேல், **5** ஆறாவது அம்மியேல், ஏழாவது இசக்கார்,
எட்டாவது பெயுள்தாய்; இந்தப் பிள்ளைகளைத் தந்து ஓபேத்-ஏதோமை
கடவுள் ஆசீர்வதித்திருந்தார்.

6 இவருடைய பேரன்கள், அதாவது செமாயாவின் மகன்கள், பலசா
லிகளாகவும் திறமைசாலிகளாகவும் இருந்தார்கள். அதனால், இவர்கள் தங்
களுடைய தந்தைவழிக் குடும்பத் தலைவர்களாக இருந்தார்கள். **7** செமா
யாவின் மகன்கள்: ஒத்னி, ரெப்பாயேல், ஓபேத், எல்சபாத். எல்சபாத்தின்
சகோதரர்களான எலிகூவும் செமகியாவும்கூட திறமைசாலிகளாக இருந்
தார்கள். **8** இவர்கள் எல்லாரும் ஓபேத்-ஏதோமின் மகன்கள். இவர்களும்
இவர்களுடைய மகன்களும் சகோதரர்களும் திறமைசாலிகளாக இருந்
தார்கள், தங்களுடைய சேவையைச் செய்யத் தகுதியுள்ளவர்களாக இருந்
தார்கள்; இவர்கள் மொத்தம் 62 பேர். **9** மெசெலேமியாவின்[f] மகன்களும்
சகோதரர்களும் மொத்தம் 18 பேர்; இவர்கள் திறமைசாலிகளாக இருந்தார்
கள். **10** மெராரியின் வம்சத்தில் வந்த ஓசாவுக்கு மகன்கள் இருந்தார்கள்.
அவர்களுக்கு ஷிம்ரி தலைவராக இருந்தார். அவர் மூத்த மகனாக இல்லா
விட்டாலும், அவருடைய அப்பா அவரைத் தலைவராக நியமித்தார்.
11 ஓசாவின் இரண்டாவது மகன் இல்க்கியா, மூன்றாவது மகன் தெபலியா,
நான்காவது மகன் சகரியா; ஓசாவின் மகன்கள், சகோதரர்கள் என எல்லா
ரையும் சேர்த்து மொத்தம் 13 பேர்.

12 இந்த வாயிற்காவலர்களின் பிரிவில் இருந்த தலைவர்களுக்கு அவர்
களுடைய சகோதரர்களைப் போலவே யெகோவாவின் வீட்டில் வேலைகள்
இருந்தன. **13** அதனால், சிறியவர், பெரியவர் என்று எந்த வித்தியாசமும்
பார்க்காமல், அவர்களுடைய தந்தைவழிக் குடும்பங்களின்படி குலுக்கல்
போட்டார்கள்.[g] எந்த வாசலை யார் காவல்காக்க வேண்டும் என்பதை
இந்த முறையில் தேர்ந்தெடுத்தார்கள். **14** கிழக்கு வாசலுக்கான குலுக்கல்
செலேமியாமின் பெயருக்கு விழுந்தது. விவேகமான ஆலோசகராகிய அவ
ருடைய மகன் சகரியாவுக்குக் குலுக்கல் போட்டபோது, வடக்கு வாசல் அவ
ருடைய பெயருக்கு விழுந்தது. **15** தெற்கு வாசல் ஓபேத்-ஏதோமின் பெய

அதி. 25
a 1நா 25:1, 4
b 1நா 25:1, 4
c 1நா 25:1, 4

அதி. 26
d 1நா 9:2, 22
2நா 23:16, 19
e 1நா 26:14, 19
f 1நா 26:14, 19
g நீதி 16:33

ருக்கு விழுந்தது. சாமான் அறைகளைக் காவல்காக்க அவருடைய
மகன்கள்[a] நியமிக்கப்பட்டார்கள். **16** மேற்கு வாசல் சுப்பீம் மற்றும் ஓசா
வின்[b] பெயருக்கு விழுந்தது; இந்த வாசல் மேல்நோக்கிப் போகிற நெடுஞ்
சாலையை ஒட்டியிருந்த ‘ஷல்லேகத் நுழைவாசலுக்கு’ பக்கத்தில் இருந்தது.
இந்தக் காவலாளிகள் அருகருகே நின்று காவல் காத்தார்கள். **17** கிழக்கு
வாசலை ஆறு லேவியர்கள் காவல் காத்தார்கள். வடக்கு வாசலைத் தினந்
தோறும் நான்கு பேர் காவல் காத்தார்கள். தெற்கு வாசலைத் தினந்தோ
றும் நான்கு பேர் காவல் காத்தார்கள். சாமான் அறைகளை[c] இரண்டு
பேர் காவல் காத்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் இன்னும் இரண்டு பேர்
காவலுக்கு நின்றார்கள். **18** மேற்கில் ஒரு மண்டபம் இருந்தது, நெடுஞ்சா
லைக்குப் பக்கத்தில்[d] நான்கு பேரும், மண்டபத்தை இரண்டு பேரும் காவல்
காத்தார்கள். **19** கோராகியர்களிலிருந்தும் மெராரியர்களிலிருந்தும் தேர்ந்
தெடுக்கப்பட்ட வாயிற்காவலர்களின் பிரிவுகள் இவையே.

20 மற்ற லேவியர்களில் அகியா என்பவர் உண்மைக் கடவுளுடைய
வீட்டிலுள்ள பொக்கிஷ அறைகளுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட* பொருள்கள்
வைக்கப்பட்டிருந்த பொக்கிஷ அறைகளுக்கும்[e] அதிகாரியாக இருந்தார்.
21 லாதானின் மகன்கள்: லாதானின் வம்சத்தில் வந்த கெர்சோனியர்களின்
மகன்களில், அதாவது கெர்சோனியரான லாதான் வம்சத்தில் வந்த தந்
தைவழிக் குடும்பத் தலைவர்களில், ஒருவரான யெகியேலி;[f] **22** யெகியே
லியின் மகன்களான சேத்தாம், சேத்தாமின் சகோதரன் யோவேல். இவர்கள்
யெகோவாவின் வீட்டிலுள்ள பொக்கிஷ அறைகளுக்கு[g] அதிகாரிகளாக
இருந்தார்கள். **23** அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல்[h] ஆகியோரு
டைய வம்சத்திலிருந்து செபுவேல் தேர்ந்தெடுக்கப்பட்டார்; **24** இவர்
மோசேயின் மகனான கெர்சோமின் வம்சத்தில் வந்தவர். சாமான் அறை
களை மேற்பார்வை செய்யும் அதிகாரியாக இருந்தார். **25** இவருடைய
சகோதரர்களான ரெகபியா,[i] யெசாயா, யொராம், சிக்ரி, செலெமோத் ஆகி
யோர் எலியேசரின்[j] வம்சத்தைச் சேர்ந்தவர்கள். **26** கடவுளுக்கு அர்ப்ப
ணிக்கப்பட்ட பொருள்கள் வைக்கப்பட்டிருந்த பொக்கிஷ அறைகள் எல்லா
வற்றுக்கும் செலெமோத்தும் அவருடைய சகோதரர்களும் அதிகாரிகளாக
இருந்தார்கள். தாவீது ராஜா,[k] தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள்,[l] ஆயி
ரம் வீரர்களுக்குத் தலைவர்கள், நூறு வீரர்களுக்குத் தலைவர்கள், படைப்பி
ரிவுத் தலைவர்கள் ஆகியோர் இந்தப் பொருள்களைக் கடவுளுக்கு அர்ப்
பணித்திருந்தார்கள்.[m] **27** போர்களில்[n] கைப்பற்றப்பட்ட பொருள்களின்[o]
ஒரு பகுதியை யெகோவாவின் வீட்டைப் பராமரிப்பதற்காக அர்ப்பணித்தி
ருந்தார்கள். **28** அதோடு, இறைவாக்கு சொல்பவரான[p] சாமுவேல், கீசின்
மகன் சவுல், நேரின் மகன் அப்னேர்,[q] செருயாவின் மகன்[r] யோவாப்[s] ஆகி
யோரும்கூட கடவுளுக்காகப் பொருள்களை அர்ப்பணித்திருந்தார்கள். கட
வுளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட எல்லா பொருள்களையும் செலோமித்தும்
அவருடைய சகோதரர்களும் காவல் காத்தார்கள்.

29 இத்சேயார்[t] வம்சத்தில் வந்த கெனானியாவுக்கும் அவருடைய
மகன்களுக்கும் கடவுளுடைய வீட்டுடன் சம்பந்தப்படாத மற்ற நிர்வாகப்
பணிகள் கொடுக்கப்பட்டன. அவர்கள் இஸ்ரவேல் மக்களுக்கு அதிகாரிக
ளாகவும் நீதிபதிகளாகவும்[u] இருந்தார்கள்.

26:20 * வே.வா., “பரிசுத்தமாக்கப்பட்ட.”

அதி. 26
a 1நா 26:4, 5
b 1நா 26:10, 11
c 1நா 26:15
d 1நா 26:16
e 1ரா 7:51; 1ரா 14:25, 26; 1நா 9:26; 1நா 18:10, 11
f 1நா 29:8
g 1ரா 15:18
h எண் 3:27
i 1நா 23:17
j யாத் 18:3, 4
k 1நா 29:3, 4
l 1நா 29:6, 7
m எண் 31:50; 1நா 18:10, 11
n யோசு 6:19
o எண் 31:28
p 1சா 9:9
q 1சா 14:50
r 2சா 2:18
s 2சா 20:23
t 1நா 23:12
u உபா 17:9; 2நா 19:8

30 எப்ரோன்[a] வம்சத்தில் வந்தவர்களில் அஷபியாவும் அவருடைய
சகோதரர்களுமாகிய 1,700 பேர் திறமைசாலிகளாக இருந்தார்கள். இஸ்ர
வேல் தேசத்தில், யோர்தானுக்கு மேற்கே உள்ள பகுதிகளை நிர்வகிக்கும்
பொறுப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது; அங்கே யெகோவாவுக்கு
எல்லாவித வேலைகளையும் செய்துவந்தார்கள், ராஜாவுக்குச் சேவையும்
செய்துவந்தார்கள். **31** எப்ரோன் வம்சத்தில் வந்த தந்தைவழிக் குடும்பங்
களுக்கு, எறியா[b] தலைவராக இருந்தார். தாவீது தன்னுடைய ஆட்சிக்
காலத்தின் 40-ஆம் வருஷத்தில்,[c] எப்ரோனியர்களில் பலசாலிகளாகவும்
திறமைசாலிகளாகவும் இருந்த ஆட்களைத் தேடிக் கண்டுபிடித்தார்; இவர்
கள் கீலேயாத்திலுள்ள யாசேரில்[d] இருந்தார்கள். **32** எறியாவின் சகோத
ரர்கள் 2,700 பேர்; இவர்கள் திறமைசாலிகளாகவும் தங்களுடைய தந்
தைவழிக் குடும்பங்களுக்குத் தலைவர்களாகவும் இருந்தார்கள். இவர்களை
ரூபன் கோத்திரம், காத் கோத்திரம், மனாசேயின் பாதிக் கோத்திரம் ஆகிய
வற்றுக்கு அதிகாரிகளாக தாவீது ராஜா நியமித்தார்; இவர்கள் அங்கே உண்
மைக் கடவுள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும், ராஜா சம்பந்தப்
பட்ட விஷயங்களையும் கவனித்துக்கொண்டார்கள்.

27 ராஜாவின் படையில் இஸ்ரவேல் வீரர்கள் பல பிரிவுகளாகச்
சேவை செய்தார்கள். தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள், ஆயிரம்
வீரர்களுக்குத் தலைவர்கள், நூறு வீரர்களுக்குத் தலைவர்கள்,[e] ராஜாவுக்
காக அந்தப் பிரிவுகளைக் கவனித்துக்கொண்ட அதிகாரிகள்[f] ஆகியோர்
அந்தப் பிரிவுகளில் இருந்தார்கள். வருஷம் முழுக்க ஒவ்வொரு மாதமும்
ஒவ்வொரு பிரிவினர் சேவை செய்தார்கள். ஒவ்வொரு பிரிவிலும் 24,000
பேர் இருந்தார்கள். அந்தப் பிரிவுகள் இவையே:

2 முதலாம் மாதம் சேவை செய்த முதலாவது பிரிவுக்கு சப்தியேலின்
மகன் யாஷோபியாம்[g] தலைவராக இருந்தார். அவருடைய பிரிவில்
24,000 பேர் இருந்தார்கள்; **3** அவர் பாரேசின்[h] வம்சத்தில் வந்தவர். முத
லாம் மாதம் சேவை செய்த பிரிவிலுள்ள எல்லா அதிகாரிகளுக்கும் தலை
வராக இருந்தார். **4** இரண்டாம் மாதம் சேவை செய்த பிரிவுக்கு தோதாய்[i]
தலைவராக இருந்தார்; இவர் அகோகி[j] வம்சத்தில் வந்தவர்; இவருக்குக்
கீழே மிக்லோத் என்பவர் அதிகாரியாக இருந்தார். அவருடைய பிரிவில்
24,000 வீரர்கள் இருந்தார்கள். **5** மூன்றாம் மாதம் சேவை செய்த மூன்றா
வது பிரிவுக்கு பெனாயா[k] தலைவராக இருந்தார்; இவர் முதன்மை குருவா
கிய யோய்தாவின்[l] மகன். அவருடைய பிரிவில் 24,000 பேர் இருந்தார்கள்.
6 மாவீரர்கள் முப்பது பேரில் பெனாயா ஒருவராக இருந்தார். அவர்களுக்
குத் தலைவராகவும் இருந்தார். அந்தப் பிரிவுக்கு அவருடைய மகன் அமி
சபாத் அதிகாரியாக இருந்தார். **7** நான்காம் மாதம் சேவை செய்த நான்கா
வது பிரிவுக்கு யோவாபின் சகோதரன்[m] ஆசகேல்[n] தலைவர். அவருக்குப்
பிறகு அவருடைய மகன் செபதியா தலைவரானார். அவருடைய பிரி
வில் 24,000 வீரர்கள் இருந்தார்கள். **8** ஐந்தாம் மாதம் சேவை செய்த ஐந்தா
வது பிரிவுக்கு இஸ்ராகியனான சம்கூத் தலைவராக இருந்தார். அவருடைய
பிரிவில் 24,000 வீரர்கள் இருந்தார்கள். **9** ஆறாம் மாதம் சேவை செய்த
ஆறாவது பிரிவுக்கு ஈரா[o] தலைவராக இருந்தார்; இவர் தெக்கோவாவைச்[p]
சேர்ந்த இக்கேசின் மகன். இவருடைய பிரிவில் 24,000 வீரர்கள் இருந்தார்
கள். **10** ஏழாம் மாதம் சேவை செய்த ஏழாவது பிரிவுக்கு பெலோனிய

அதி. 26
a 1நா 23:12
b 1நா 23:19
c 1நா 29:26, 27
d யோசு 13:24, 25; யோசு 21:8, 39

அதி. 27
e யாத் 18:25; உபா 1:15; 1சா 8:11, 12
f 1நா 28:1
g 1நா 11:11
h எண் 26:20, 21
i 2சா 23:9
j 1நா 8:1, 4
k 2சா 23:20-23; 1ரா 4:4
l 1நா 12:27
m 1நா 2:15, 16
n 2சா 2:18; 2சா 23:8, 24
o 2சா 23:8, 26
p 2நா 11:5, 6; ஆமோ 1:1

னான ஏலெஸ்[a] தலைவராக இருந்தார்; இவர் எப்பிராயீமியர். இவரு
டைய பிரிவில் 24,000 வீரர்கள் இருந்தார்கள். **11** எட்டாம் மாதம் சேவை
செய்த எட்டாவது பிரிவுக்கு உஷாத்தியரான சிபெக்காய்[b] தலைவராக இருந்
தார்; இவர் சேராகியர்.[c] இவருடைய பிரிவில் 24,000 வீரர்கள் இருந்தார்கள்.
12 ஒன்பதாம் மாதம் சேவை செய்த ஒன்பதாவது பிரிவுக்கு ஆனதோத்
தியரான[d] அபியேசர்[e] தலைவராக இருந்தார்; இவர் பென்யமீனியர். இவரு
டைய பிரிவில் 24,000 வீரர்கள் இருந்தார்கள். **13** பத்தாம் மாதம் சேவை
செய்த 10-வது பிரிவுக்கு நெத்தோபாத்தியரான மகராய்[f] தலைவராக இருந்
தார்; இவர் சேராகியர்.[g] இவருடைய பிரிவில் 24,000 வீரர்கள் இருந்தார்கள்.
14 பதினொன்றாம் மாதம் சேவை செய்த 11-வது பிரிவுக்கு பிரத்தோனிய
ரான பெனாயா[h] தலைவராக இருந்தார்; இவர் எப்பிராயீம் வம்சத்தைச் சேர்ந்
தவர். இவருடைய பிரிவில் 24,000 வீரர்கள் இருந்தார்கள். **15** பன்னிரண்
டாம் மாதம் சேவை செய்த 12-வது பிரிவுக்கு நெத்தோபாத்தியரான எல்தாய்
தலைவராக இருந்தார்; இவர் ஒத்னியேல் வம்சத்தில் வந்தவர். இவருடைய
பிரிவில் 24,000 வீரர்கள் இருந்தார்கள்.

16 இஸ்ரவேல் கோத்திரத் தலைவர்கள்: ரூபன் கோத்திரத்துக்கு சிக்
ரியின் மகன் எலியேசர்; சிமியோன் கோத்திரத்துக்கு மாக்காவின் மகன்
செப்பத்தியா; **17** லேவி கோத்திரத்துக்கு கேமுவேலின் மகன் அஷ
பியா; ஆரோன் வம்சத்துக்கு சாதோக்; **18** யூதா கோத்திரத்துக்கு எலிகூ,[i]
இவர் தாவீதின் அண்ணன்களில் ஒருவர்; இசக்கார் கோத்திரத்துக்கு மிகா
வேலின் மகன் உம்ரி; **19** செபுலோன் கோத்திரத்துக்கு ஒபதியாவின்
மகன் இஸ்மாயா; நப்தலி கோத்திரத்துக்கு அசரியேலின் மகன் யெரிமோத்;
20 எப்பிராயீம் கோத்திரத்துக்கு அசசியாவின் மகன் ஓசெயா; மனாசேயின்
பாதிக் கோத்திரத்துக்கு பெதாயாவின் மகன் யோவேல். **21** கீலேயாத்தில்
குடியிருந்த மனாசேயின் இன்னொரு பாதிக் கோத்திரத்துக்கு சகரியா
வின் மகன் இத்தோ; பென்யமீன் கோத்திரத்துக்கு அப்னேரின்[j] மகன் யாசீ
யேல்; **22** தாண் கோத்திரத்துக்கு எரோகாமின் மகன் அசரெயேல். இவர்
களே இஸ்ரவேல் கோத்திரத்தின் தலைவர்கள்.

23 இருபது அல்லது அதற்குக் குறைவான வயதுள்ளவர்களை தாவீது
கணக்கெடுக்கவில்லை. ஏனென்றால், இஸ்ரவேலர்களை வானத்து நட்சத்தி
ரங்களைப் போல் பெருகச் செய்வதாக யெகோவா வாக்குறுதி கொடுத்தி
ருந்தார்.[k] **24** செருயாவின் மகன் யோவாப் இஸ்ரவேல் மக்களைக் கணக்
கெடுக்க ஆரம்பித்திருந்தார், ஆனால் முடிக்கவில்லை. கணக்கெடுத்த
காரணத்துக்காக இஸ்ரவேல் மக்கள்மீது கடவுள் கோபப்பட்டார்.[l] தாவீது
ராஜாவின் காலத்தில் எழுதப்பட்ட சரித்திரப் பதிவுகளில் அந்த எண்
ணிக்கை பதிவு செய்யப்படவில்லை.

25 ராஜாவின் கஜானாவுக்கு[m] ஆதியேலின் மகன் அஸ்மாவேத் அதி
காரியாக இருந்தார். வயல்வெளிகளிலும் நகரங்களிலும் கிராமங்களிலும்
கோபுரங்களிலும் இருந்த கிடங்குகளுக்கு உசியாவின் மகன் யோனத்
தான் அதிகாரியாக இருந்தார். **26** வயலில் பயிரிடுகிற விவசாயிகளுக்கு
கேலூப்பின் மகன் எஸ்ரி அதிகாரியாக இருந்தார். **27** ராமா ஊரைச்
சேர்ந்த சீமேயி திராட்சைத் தோட்டங்களை மேற்பார்வை செய்தார். திராட்
சமது கிடங்குகளுக்கு சேப்பாமை* சேர்ந்த சப்தி அதிகாரியாக இருந்தார்.

27:27 * அல்லது, “சிப்மோத்தை.”

அதி. 27
a 1நா 11:10, 27
b 2சா 21:18
c எண் 26:20
d 1நா 6:60, 64
e 2சா 23:8, 27
f 2சா 23:8, 28
g எண் 26:20
h 2சா 23:8, 30
i 1சா 16:1, 6; 1சா 17:28
j 1சா 14:50; 2சா 3:27
k ஆதி 15:5
l 2சா 24:2, 15; 1நா 21:6, 7
m 2ரா 18:15

28 சேப்பெல்லாவில்[a] இருந்த ஒலிவத் தோப்புகளுக்கும் காட்டத்தி மரங்
களுக்கும்[b] கெதேரா ஊரைச் சேர்ந்த பாகால்-கானான் அதிகாரியாக
இருந்தார்; எண்ணெய்க் கிடங்குகளுக்கு யோவாஸ் அதிகாரியாக இருந்
தார். **29** சாரோனில்[c] மேய்கிற மாட்டு மந்தைகளுக்கு அதே பகுதியைச்
சேர்ந்த சித்ராய் மேற்பார்வையாளராக இருந்தார்; சமவெளிகளில் மேய்கிற
மாட்டு மந்தைகளுக்கு அத்லாயின் மகன் சாப்பாத் மேற்பார்வையாளராக
இருந்தார். **30** ஒட்டகங்களுக்கு இஸ்மவேலரான ஓபில் மேற்பார்வையா
ளராக இருந்தார். கழுதைகளுக்கு மெரோனோத்தியரான எகேதியா மேற்
பார்வையாளராக இருந்தார். **31** ஆட்டு மந்தைகளுக்கு ஆகாரியரான
யாசிஸ் மேற்பார்வையாளராக இருந்தார். இவர்கள் எல்லாரும் தாவீது ராஜா
வின் சொத்துப்பத்துகளை மேற்பார்வை செய்துவந்தார்கள்.

32 தாவீதின் அண்ணன் மகனான யோனத்தான்[d] புத்திசாலியாக இருந்
தார்; அவர் ஆலோசகர்களில் ஒருவராகவும், செயலாளராகவும் இருந்
தார். அக்மோனியின் மகன் யெகியேல் ராஜாவின் மகன்களைக்[e] கவனித்
துக்கொண்டார். **33** அகித்தோப்பேல்[f] ராஜாவின் ஆலோசகர்களில் ஒரு
வர்; அற்கியனான ஊசாய்[g] ராஜாவின் நண்பராக* இருந்தார். **34** அகித்
தோப்பேலுக்குப் பின்பு பெனாயாவின்[h] மகன் யோய்தாவும் அபியத்தா
ரும்[i] ஆலோசகர்களாக இருந்தார்கள்; யோவாப்[j] படைத் தளபதியாக
இருந்தார்.

28 இஸ்ரவேல் தலைவர்கள் எல்லாரையும் தாவீது எருசலேமுக்கு வர
வழைத்தார். கோத்திரத் தலைவர்கள், ராஜாவுக்குச் சேவை செய்
கிற பிரிவுகளின் தலைவர்கள்,[k] ஆயிரம் வீரர்களுக்குத் தலைவர்கள், நூறு
வீரர்களுக்குத் தலைவர்கள்,[l] ராஜாவுக்கும் அவருடைய மகன்களுக்கும்[m]
சொந்தமான சொத்துகளையும் மந்தைகளையும் மேற்பார்வை செய்கிறவர்
கள்,[n] அரண்மனை அதிகாரிகள் ஆகியோரையும், பலசாலிகளாக, திறமை
சாலிகளாக[o] இருந்த எல்லாரையும் வரவழைத்தார். **2** பின்பு, தாவீது ராஜா
எழுந்து நின்று அவர்களிடம்:

"என் சகோதரர்களே, என் மக்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்.
யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியை வைப்பதற்கும், நம் கடவுளுக்குக்
கால்மணையாக இருப்பதற்கும் ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று
மனதார ஆசைப்பட்டேன்.[p] அதற்காக முன்கூட்டியே எல்லா ஏற்பாடுகளை
யும் செய்தேன்.[q] **3** ஆனால் உண்மைக் கடவுள், 'என்னுடைய பேர்புகழுக்
காக நீ ஆலயம் கட்ட வேண்டாம்.[r] ஏனென்றால், நீ நிறைய போர்
செய்திருக்கிறாய், நிறைய பேரைக் கொன்றுபோட்டிருக்கிறாய்'*[s] என்று
என்னிடம் சொன்னார். **4** இருந்தாலும், இஸ்ரவேல் தேசத்தை என்றைக்கும்
ஆட்சி செய்ய நம் கடவுளாகிய யெகோவா என் அப்பா வம்சத்தில் என்
னைத்தான் தேர்ந்தெடுத்தார்.[t] ஏனென்றால், அவர் யூதாவைத் தலைவராகத்
தேர்ந்தெடுத்திருந்தார்,[u] யூதா வம்சத்தில் என் அப்பாவின் குடும்பத்தைத்
தேர்ந்தெடுத்தார்.[v] அவருடைய மகன்களில் என்னைத் தேர்ந்தெடுத்து, இஸ்
ரவேல் முழுவதுக்கும் ராஜாவாக்கினார்.[w] **5** என் மகன்களில் சாலொமோ
னைத்தான் யெகோவா தேர்ந்தெடுத்தார்.[x] யெகோவா எனக்கு நிறைய மகன்
களைத் தந்திருந்தாலும்[y] அவருடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்து ஆட்சி
செய்ய அவனைத்தான் தேர்ந்தெடுத்தார்.[z]

27:33 * வே.வா., "ஆலோசகராக." **28:3** * நே.மொ., "இரத்தம் சிந்தியிருக்கிறாய்."

அதி. 27
a 2நா 26:9, 10
b 2நா 9:27
c ஏசா 35:2
d 2சா 13:3; 2சா 21:21
e 1நா 3:1-9
f 2சா 15:12; 2சா 16:23; 2சா 17:23
g 2சா 15:37; 2சா 16:16, 17
h 2சா 23:20-23; 1ரா 2:35
i 1ரா 1:7
j 1நா 11:6

அதி. 28
k 1நா 27:1
l யாத் 18:25
m 1நா 27:25, 29
n 1நா 3:1-9
o 1நா 11:10
p சங் 132:3-5
q 1நா 22:2-4
r 1நா 17:4
s 1நா 22:7, 8
t 1சா 16:1, 13; 2சா 7:8; சங் 89:20
u ஆதி 49:10; 1நா 5:2; சங் 60:7
v ரூ 4:22
w 1சா 13:14; 1சா 16:11, 12
x 1நா 22:9
y 1நா 3:1-9
z 1நா 17:14; 2நா 1:8

6 கடவுள் என்னிடம், ‘என் ஆலயத்தையும் பிரகாரங்களையும் உன்
னுடைய மகன் சாலொமோன்தான் கட்டுவான். அவன் எனக்கு மகனாக
இருப்பான். நான் அவனுக்குத் தகப்பனாக இருப்பேன்.[a] 7 என் கட்டளைக
ளையும் நீதித்தீர்ப்புகளையும் இன்று போலவே என்றும் அவன் உறுதியாகக்
கடைப்பிடித்தால்[b] அவனுடைய ஆட்சியை என்றென்றைக்கும் நிலைக்க
வைப்பேன்’[c] என்று சொன்னார். 8 அதனால், யெகோவாவின் சபையா
ரான இஸ்ரவேலர்கள் எல்லாருடைய கண்களுக்கும் முன்னால், நம்முடைய
கடவுளின் காதுகள் கேட்க, நான் உங்களிடம் சொல்கிறேன்: யெகோவா
தந்த எல்லா சட்டதிட்டங்களையும் புரிந்துகொண்டு, அவற்றை அப்படியே
கடைப்பிடியுங்கள். அப்போது, இந்த அருமையான தேசம் உங்களுக்
குச் சொந்தமாகும்.[d] உங்களுக்குப் பின்பு உங்கள் பிள்ளைகளுக்கு அதைச்
சொத்தாகக் கொடுப்பீர்கள்.

9 சாலொமோனே, என் மகனே, உன் அப்பாவின் கடவுளை நன்
றாகத் தெரிந்துகொள், அவருக்கு முழு இதயத்தோடு[e] சந்தோஷமாக*
சேவை செய். யெகோவா எல்லாருடைய இதயத்தையும் ஆராய்ந்து பார்க்
கிறார்.[f] மனதில் இருக்கிற ஒவ்வொரு யோசனையையும் நோக்கத்தையும்
அவர் தெரிந்து வைத்திருக்கிறார்.[g] நீ அவரைத் தேடினால், அவரைக் கண்
டடைய உதவி செய்வார்.[h] நீ அவரை விட்டுவிட்டால், அவரும் உன்னை
நிரந்தரமாக ஒதுக்கிவிடுவார்.[i] 10 ஆலயத்தைக் கட்ட யெகோவா உன்
னைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார். அதனால் தைரியமாக இரு, வேலை
யைத் தொடங்கு”* என்று சொன்னார்.

11 பின்பு ஆலயத்தின் நுழைவு மண்டபம்,[j] அதன் அறைகள்,
சாமான் அறைகள், மாடி அறைகள், உட்புற அறைகள், பிராயச்சித்த
மூடி வைக்கப்பட்டிருக்கிற அறை*[k] ஆகியவற்றைக் கட்டுவதற்கான வரை
படத்தை[l] தாவீது தன்னுடைய மகன் சாலொமோனுக்குக் கொடுத்தார்.
12 யெகோவாவின் ஆலயப் பிரகாரங்கள்,[m] அதைச் சுற்றியுள்ள சாப்
பாட்டு அறைகள், உண்மைக் கடவுளுடைய ஆலயத்தின் பொக்கிஷ அறை
கள், பரிசுத்த* பொருள்களை வைக்கும் பொக்கிஷ அறைகள்[n] ஆகியவற்
றைக் கட்டுவதற்கான எல்லா விவரங்களும் அடங்கிய அந்த வரைபடத்தை,
அதாவது கடவுளுடைய சக்தியால் தனக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்த வரை
படத்தை, சாலொமோனிடம் கொடுத்தார். 13 அதோடு, குருமார்களின் பிரி
வுகள்,[o] லேவியர்களின் பிரிவுகள், யெகோவாவின் ஆலயத்தில் அவர்கள்
செய்ய வேண்டிய சேவைகள், யெகோவாவின் ஆலயத்தில் பயன்படுத்தப்
படும் பொருள்கள் எல்லாவற்றையும் பற்றி தாவீது விளக்கினார். 14 ஆல
யத்தின் வெவ்வேறு வேலைகளுக்காக எல்லா விதமான தங்கப் பொருள்
களையும் எல்லா விதமான வெள்ளிப் பொருள்களையும் செய்ய வேண்டி
யிருந்தது. அதற்கு எவ்வளவு தங்கமும் வெள்ளியும் தேவைப்படும் என்று
அவர் சொன்னார். 15 விளக்குத்தண்டுகளையும்[p] அவற்றின் அகல்
விளக்குகளையும் தங்கத்தில் செய்வதற்கும் வெள்ளியில் செய்வதற்கும்
எவ்வளவு தங்கமும் வெள்ளியும் தேவைப்படும் என்று சொன்னார்.
விளக்குத்தண்டுகளும் விளக்குகளும் எத்தனை தேவைப்பட்டதோ அத்த
னையும் செய்ய வேண்டியிருந்தது. 16 படையல் ரொட்டிகளை வைக்கும்

அதி. 28
- *a* 2சா 7:13, 14
- *b* உபா 12:1; 1ரா 6:12
- *c* 1நா 17:13, 14; சங் 72:8
- *d* உபா 6:3
- *e* உபா 10:12
- *f* 1சா 16:7; 1நா 29:17; நீதி 17:3; வெளி 2:23
- *g* உபா 31:21; சங் 139:2
- *h* மத் 7:7; எபி 11:6; யாக் 4:8
- *i* உபா 31:17; 2நா 15:2; எபி 10:38
- *j* 2நா 3:4
- *k* லேவி 16:2; 1ரா 6:19
- *l* எபி 8:5
- *m* 1ரா 6:36; 1ரா 7:12
- *n* 1நா 9:26; 1நா 26:20
- *o* 1நா 24:1
- *p* 2நா 4:7

28:9 *வே.வா., “மனப்பூர்வமாக.” **28:10** *வே.வா., “செய்.” **28:11** *வே.வா., “பிரா
யச்சித்த அறை.” **28:12** *வே.வா., “அர்ப்பணிக்கப்பட்ட.”

மேஜைகள்[a] ஒவ்வொன்றையும் செய்வதற்கு எவ்வளவு தங்கம் வேண்டும்
என்பதைச் சொன்னார். அதோடு, வெள்ளி மேஜைகளைச் செய்ய எவ்
வளவு வெள்ளி தேவைப்படும் என்பதையும் சொன்னார். **17** முள்கரண்டி
கள், கிண்ணங்கள், கூஜாக்கள் ஆகியவற்றைச் சுத்தமான தங்கத்தில் செய்ய
எவ்வளவு தங்கம் தேவைப்படும் என்பதைச் சொன்னார். அதோடு, தங்கக்
கிண்ணங்களில், ஒவ்வொரு சிறிய கிண்ணத்தையும்,[b] வெள்ளிக் கிண்ணங்
களில், ஒவ்வொரு சிறிய கிண்ணத்தையும் செய்வதற்கு எவ்வளவு தங்க
மும் வெள்ளியும் தேவைப்படும் என்பதைச் சொன்னார். **18** தூப
பீடத்தைச் சொக்கத்தங்கத்தில் செய்வதற்கு எவ்வளவு தங்கம் தேவைப்
படும் என்பதையும் சொன்னார்.[c] அதோடு, சிறகுகளை விரித்து யெகோவா
வின் ஒப்பந்தப் பெட்டிமீது நிழலிடுகிற கேருபீன்களை,[d] அதாவது கடவு
ளுடைய ரதத்துக்கு[e] அடையாளமாக இருந்த கேருபீன்களை, தங்கத்தில்
செய்வதற்கு எவ்வளவு தங்கம் தேவைப்படும் என்பதையும் அவர் சொன்
னார். **19** "யெகோவாவின் சக்தி* என்மீது இருந்தது, வரைபடத்தில்[f]
உள்ள நுணுக்கமான விவரங்கள் எல்லாவற்றையும் எழுதிவைக்க[g] அவர்
எனக்கு விவேகத்தைத் தந்தார்" என்று தாவீது சொன்னார்.

20 பின்பு தாவீது தன் மகன் சாலொமோனிடம், "தைரியமாகவும் உறு
தியாகவும் இரு; வேலையைத் தொடங்கு.* எதற்கும் பயப்படாதே, திகில
டையாதே. என் கடவுளாகிய யெகோவா உன் கூடவே இருக்கிறார்.[h]
அவர் உன்னைவிட்டு விலகவும் மாட்டார், உன்னைக் கைவிடவும் மாட்
டார்.[i] யெகோவாவின் ஆலயத்தைக் கட்டி முடிக்கும்வரை அவர் உனக்
குத் துணையாக இருப்பார். **21** உண்மைக் கடவுளின் ஆலயத்தில் செய்ய
வேண்டிய எல்லா வேலைகளையும் குருமார்கள் பிரிவினரும்,[j] லேவியர்
கள்[k] பிரிவினரும் கவனித்துக்கொள்வார்கள். எல்லா விதமான வேலைக
ளையும் செய்வதற்குத் திறமையான ஆட்கள் தயாராக இருக்கிறார்கள்.[l]
அதுமட்டுமல்ல, நீ சொல்கிறபடியெல்லாம் செய்வதற்குத் தலைவர்களும்[m]
எல்லா மக்களும்கூட தயாராக இருக்கிறார்கள்" என்றார்.

29

இஸ்ரவேல் சபையார் எல்லாரிடமும் தாவீது ராஜா இப்படிச் சொன்
னார்: "கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னுடைய மகன் சாலொ
மோன்[n] சின்னப் பையன், அவனுக்கு அவ்வளவு அனுபவம் இல்லை.*[o]
ஆனால் நாம் செய்யப்போவது மிகப் பிரமாண்டமான வேலை. ஏனென்
றால், நாம் யெகோவா தேவனுக்கு ஆலயம்# கட்டப்போகிறோம், சாதாரண
மனிதனுக்கு அல்ல.[p] **2** என் கடவுளுடைய ஆலயத்துக்குத் தேவையான
பொருள்களைச் சேர்த்து வைக்க நான் ரொம்ப முயற்சி எடுத்தேன். தங்கப்
பொருள்களைச் செய்ய தங்கத்தையும், வெள்ளிப் பொருள்களைச் செய்ய
வெள்ளியையும், செம்புப் பொருள்களைச் செய்ய செம்பையும், இரும்
புப் பொருள்களைச் செய்ய இரும்பையும்,[q] மர வேலைகளைச் செய்ய
மரங்களையும்,[r] கோமேதகக் கற்களையும், சாந்து பூசி பதிப்பதற்கு விசே
ஷக் கற்களையும், பலவர்ணக் கற்களையும், எல்லா விதமான ரத்தினக் கற்
களையும், ஏராளமான வெண்சலவைக் கற்களையும் சேர்த்து வைத்தேன்.
3 என் கடவுளுக்கு ஆலயம் கட்ட வேண்டுமென்ற ஆசையால்,[s] பரிசுத்த
ஆலயத்துக்காக நான் சேர்த்து வைத்த பொருள்களைத் தவிர என்னுடைய

28:19 *நே.மொ., "கை." **28:20** *வே.வா., "செய்." **29:1** *வே.வா., "அவன் மென்மையானவன்." #வே.வா., "கோட்டை; அரண்மனை."

அதி. 28
a 2நா 4:8, 19
b 1ரா 7:48, 50
c 1ரா 7:48
d யாத் 25:20; 1சா 4:4; 1ரா 6:23
e சங் 18:10
f 1நா 28:11
g யாத் 25:9, 40
h உபா 31:6; யோசு 1:6, 9; ரோ 8:31
i யோசு 1:5
j 1நா 24:1
k 1நா 24:20
l யாத் 36:1, 2
m 1நா 22:17; 1நா 28:1

அதி. 29
n 1நா 28:5
o 1ரா 3:7
p 2நா 2:4
q 1நா 22:3, 16
r 1நா 22:4, 14
s சங் 26:8; சங் 27:4; சங் 122:1

சொத்திலிருந்தும்[a] தங்கத்தையும் வெள்ளியையும் என் கடவுளுடைய ஆல
யத்துக்காகக் கொடுக்கிறேன். **4** நான் 3,000 தாலந்து* ஓப்பீர் தங்கத்
தையும்[b] 7,000 தாலந்து சுத்தமான வெள்ளியையும் தருகிறேன்; ஆலயத்
திலுள்ள வெவ்வேறு அறைகளின்# சுவர்களை மூடுவதற்காக இவற்றைத்
தருகிறேன். **5** அதோடு, தங்கப் பொருள்களையும் வெள்ளிப் பொருள்க
ளையும் எல்லா விதமான கைவேலைகளையும் செய்வதற்காக இவற்றைத்
தருகிறேன். இன்று யெகோவாவுக்குக் காணிக்கை கொடுக்க யாரெல்லாம்
விரும்புகிறீர்கள்?”[c] என்று கேட்டார்.

6 தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள், இஸ்ரவேலின் வம்சத் தலைவர்
கள், ஆயிரம் வீரர்களுக்குத் தலைவர்கள், நூறு வீரர்களுக்குத் தலைவர்கள்,[d]
ராஜாவின் வேலைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரிகள்[e] ஆகியோர்
விருப்பப்பட்டு காணிக்கை கொடுத்தார்கள். **7** உண்மைக் கடவுளுடைய
ஆலயத்தைக் கட்டுவதற்காக 5,000 தாலந்து தங்கமும் 10,000 தங்கக் காசு
களும்* 10,000 தாலந்து வெள்ளியும் 18,000 தாலந்து செம்பும்
1,00,000 தாலந்து இரும்பும் கொடுத்தார்கள். **8** விலைமதிப்புமிக்க கற்
களை வைத்திருந்தவர்கள் யெகோவாவின் ஆலயத்திலிருந்த பொக்கிஷ
அறைக்கு அவற்றைக் கொடுத்தார்கள். கெர்சோனியரான[f] யெகியேல்
பொக்கிஷ அறைக்கு அதிகாரியாக இருந்தார்.[g] **9** மக்கள் முழு இத
யத்தோடு யெகோவாவுக்குக் காணிக்கை கொடுத்தார்கள்.[h] இப்படி அவர்க
ளாகவே விருப்பப்பட்டு காணிக்கை கொடுத்ததால் சந்தோஷப்பட்டார்கள்.
தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டார்.

10 பின்பு, தாவீது சபையார் எல்லாருக்கும் முன்பாக யெகோவாவைப்
புகழ்ந்து, “எங்கள் மூதாதையான இஸ்ரவேலின் கடவுளே, யெகோவா
தேவனே, உங்களுக்கு என்றென்றும் புகழ் சேரட்டும். **11** யெகோவாவே,
நீங்கள் மகத்துவமும்[i] வல்லமையும்[j] அழகும் மாண்பும் கம்பீரமும்*[k] உள்
ளவர். பரலோகத்திலும் பூமியிலும் இருக்கிற எல்லாமே உங்களுக்குத்தான்
சொந்தம்.[l] யெகோவாவே, ஆட்சி உங்களுடையது.[m] நீங்கள்தான் எல்லா
ருக்கும் தலைவர். **12** நீங்கள்தான் செல்வத்தையும் புகழையும் தருகிறீர்
கள்.[n] எல்லாவற்றையும் ஆட்சி செய்கிறீர்கள்.[o] உங்கள் கையில் பலமும்[p]
மகா வல்லமையும் இருக்கிறது.[q] யாரை வேண்டுமானாலும் உங்களால்
உயர்த்த முடியும்;[r] யாருக்கு வேண்டுமானாலும் பலம் தர முடியும்.[s]
13 எங்கள் கடவுளே, இப்போது உங்களுக்கு நன்றி சொல்கிறோம்; உங்க
ளுடைய அருமையான பெயரைப் புகழ்கிறோம்.

14 இப்படிக் காணிக்கை கொடுப்பதற்கு நான் யார்? என் மக்கள் யார்?
எல்லாவற்றையும் நீங்கள்தான் தந்தீர்கள். உங்கள் கையிலிருந்து வாங்கி
யதைத்தான் உங்களுக்குத் திருப்பித் தந்திருக்கிறோம். **15** எங்கள் முன்
னோர்கள் எல்லாரையும் போல நாங்கள் உங்களுடைய பார்வையில் அன்
னியர்களாகவும், தற்காலிகக் குடிகளாகவும் இருக்கிறோம்.[t] இந்த உலகத்தில்
எங்களுடைய வாழ்க்கை நிழலைப் போல்[u] நிலையில்லாமல் இருக்கிறது.
16 யெகோவா தேவனே, உங்களுடைய பரிசுத்த பெயருக்காக ஆலயம்
கட்ட நாங்கள் சேர்த்து வைத்திருக்கும் எல்லா பொருள்களையும்

29:4 * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். # நே.மொ., “வீடுகளின்.” **29:7** * மூலமொழியில், “தாரிக்.” இது பெர்சிய நாட்டு தங்கக் காசு. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **29:11** * வே.வா., “கண்ணியமும்.”

அதி. 29
a 1நா 21:24
b யோபு 28:16
c யாத் 35:5
d யாத் 18:25
e 1நா 27:25, 29; 1நா 27:31
f 1நா 6:1
g 1நா 26:21, 22
h 2கொ 9:7
i சங் 145:3; 1தீ 1:17
j வெளி 5:13
k 1நா 16:27; சங் 8:1
l சங் 24:1; ஏசா 42:5
m சங் 103:19; மத் 6:10
n உபா 8:18; நீதி 10:22; பிலி 4:19
o 2நா 20:6
p ஏசா 40:26
q உபா 3:24; எபே 1:19; வெளி 15:3
r 2நா 1:11, 12
s 2நா 16:9; சங் 18:32; ஏசா 40:29
t லேவி 25:23; எபி 11:13
u யோபு 14:1, 2; யாக் 4:13, 14

நீங்கள்தான் எங்களுக்குத் தந்தீர்கள், இவை எல்லாமே உங்களுக்குத்தான்
சொந்தம். **17** கடவுளே, நீங்கள் இதயத்தை ஆராய்கிறவர்,[a] நேர்மையாக
நடக்கிறவர்களை உங்களுக்குப் பிடிக்கும்[b] என்று எனக்கு நன்றாகத் தெரி
யும். இந்தக் காணிக்கைகள் எல்லாவற்றையும் நான் உங்களுக்கு உண்மை
மனதோடு கொடுத்தேன், நானாகவே விருப்பப்பட்டுக் கொடுத்தேன்.
இந்த மக்களும் அவர்களாகவே விருப்பப்பட்டு உங்களுக்குக் காணிக்கை
கொடுப்பதைப் பார்க்கும்போது எனக்கு ரொம்பச் சந்தோஷமாக இருக்
கிறது. **18** எங்கள் முன்னோர்களான ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் இஸ்
ரவேலுக்கும் கடவுளாகிய யெகோவாவே, இப்படித் தாராளமாகக் கொடுக்
கிற எண்ணமும் ஆசையும் இந்த மக்களுக்கு எப்போதும் இருக்க உதவி
செய்யுங்கள், உங்களுக்கு முழு இதயத்தோடு சேவை செய்ய அவர்களுக்கு
உதவி செய்யுங்கள்.[c] **19** உங்களுடைய கட்டளைகளையும்[d] நினைப்பூட்
டுதல்களையும் விதிமுறைகளையும் முழு இதயத்தோடு[e] கடைப்பிடிக்க
என் மகன் சாலொமோனுக்கு உதவி செய்யுங்கள். அவற்றையெல்லாம் அப்
படியே கடைப்பிடிக்கவும், எந்த ஆலயத்தை* கட்டுவதற்கு நான் முன்னேற்
பாடு செய்திருக்கிறேனோ[f] அந்த ஆலயத்தைக் கட்டுவதற்கும் அவனுக்கு
உதவி செய்யுங்கள்" என்று சொன்னார்.

20 பின்பு, தாவீது சபையார் எல்லாரிடமும், "உங்கள் கடவுளாகிய
யெகோவாவைப் புகழுங்கள்" என்று சொன்னார். உடனே எல்லாரும் தங்
களுடைய முன்னோர்களின் கடவுளாகிய யெகோவாவைப் புகழ்ந்தார்கள்.
யெகோவாவுக்கும் ராஜாவுக்கும் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்தார்
கள். **21** அடுத்த நாள்வரை யெகோவாவுக்குப் பலிகளையும், தகன பலி
களையும்[g] கொடுத்தார்கள். 1,000 இளம் காளைகள், 1,000 செம்மறியாட்டுக்
கடாக்கள், 1,000 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள், அவற்றோடு கொடுக்
கும் திராட்சமது காணிக்கைகள்[h] ஆகியவற்றை யெகோவாவுக்குக் கொடுத்
தார்கள். இஸ்ரவேலர்கள் எல்லாருக்காகவும் ஏராளமான பலிகளைக்
கொடுத்தார்கள்.[i] **22** அன்று யெகோவாவுக்கு முன்னால் அவர்கள் அதிக
மகிழ்ச்சியோடு சாப்பிட்டார்கள், குடித்தார்கள்.[j] தாவீதின் மகன் சாலொ
மோனை யெகோவாவுக்கு முன்னால் இரண்டாவது தடவையாக அபிஷே
கம் செய்து, இஸ்ரவேல் மக்களுக்குத் தலைவராக்கினார்கள்.[k] அதோடு,
சாதோக்கை குருவாக நியமித்தார்கள்.[l] **23** சாலொமோன் தன்னுடைய
அப்பாவாகிய தாவீதுக்குப் பதிலாக யெகோவாவின் சிம்மாசனத்தில் ராஜா
வாக உட்கார்ந்தார்.[m] அவர் சீரும் சிறப்புமாக ஆட்சி செய்தார். இஸ்ரவேலர்
கள் எல்லாரும் அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தார்கள். **24** எல்லா தலை
வர்களும்[n] மாவீரர்களும்[o] தாவீது ராஜாவின் மற்ற எல்லா மகன்களும்[p]
சாலொமோன் ராஜாவுக்கு அடிபணிந்தார்கள். **25** இஸ்ரவேலர்கள் எல்லா
ருடைய பார்வையிலும் யெகோவா அவரை உயர்த்தி, அவருக்குப் பேரும்
புகழும் தந்தார். இஸ்ரவேலில் எந்த ராஜாவுக்கும் அதுவரை கிடைக்காத
ராஜ மகிமை அவருக்குக் கிடைத்தது.[q]

26 இப்படி, ஈசாயின் மகனான தாவீது இஸ்ரவேல் முழுவதையும் ஆட்சி
செய்தார். **27** அவர் 40 வருஷங்கள் இஸ்ரவேலை ஆட்சி செய்தார்.
எப்ரோனில் 7 வருஷங்களும்,[r] எருசலேமில் 33 வருஷங்களும் ஆட்சி
செய்தார்.[s] **28** அவர் நீண்ட காலம் சீரும் சிறப்புமாக வாழ்ந்த பின்பு

29:19 *வே.வா., "கோட்டையை; அரண்மனையை."

அதி. 29
a 1நா 28:9
b நீதி 11:20; நீதி 15:8; எபி 1:9
c சங் 10:17; சங் 86:11
d 1ரா 6:12
e மாற் 12:30
f 1நா 22:14
g லேவி 1:3
h லேவி 23:12, 13; எண் 15:5
i 1ரா 8:63, 64
j உபா 12:7; 2நா 7:10; நெ 8:12
k 1ரா 1:38-40; 1நா 23:1
l 1ரா 2:35
m 1நா 28:5
n 1நா 22:17
o 1நா 28:1
p 1நா 3:1-9
q 1ரா 3:12; 2நா 1:1, 12; பிர 2:9
r 2சா 2:11
s 2சா 5:4, 5

இறந்துபோனார்.[a] அவருக்குப் பிறகு அவருடைய மகன் சாலொமோன்
ராஜாவானார்.[b] **29** இறைவாக்கு சொல்பவரான சாமுவேல், தீர்க்கதரிசி
யான நாத்தான்,[c] தரிசனக்காரரான காத்[d] ஆகியோர் தாவீது ராஜாவின்
முழு சரித்திரத்தையும் எழுதியிருக்கிறார்கள். **30** அவருடைய ஆட்சியை
யும் வீரதீர செயல்களையும், அவர் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை
யும், அந்தச் சமயத்தில் இஸ்ரவேலிலும் சுற்றியுள்ள எல்லா தேசங்களிலும்
நடந்த சம்பவங்களையும் பற்றி அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

அதி. 29
a 1ரா 1:1
b 1ரா 2:10-12
c 2சா 7:2
2சா 12:1
d 1நா 21:9, 10

இரண்டாம்

நாளாகமம்

முக்கியக் குறிப்புகள்

1 ஞானத்துக்காக சாலொமோன் வேண்டுகிறார் (1-12)
சாலொமோனின் செல்வம் (13-17)

2 ஆலயம் கட்ட ஏற்பாடுகள் (1-18)

3 சாலொமோன் ஆலயம் கட்ட ஆரம்பிக்கிறார் (1-7)
மகா பரிசுத்த அறை (8-14)
இரண்டு செம்புத் தூண்கள் (15-17)

4 பலிபீடம், ‘செம்புக் கடல்,’ தொட்டிகள் (1-6)
குத்துவிளக்குகள், மேஜைகள், பிரகாரங்கள் (7-11அ)
ஆலயத்துக்குத் தேவையானவற்றைச் செய்து முடிக்கிறார்கள் (11ஆ-22)

5 ஆலய அர்ப்பணிப்புக்கான ஏற்பாடுகள் (1-14)
கடவுளின் பெட்டி ஆலயத்துக்குக் கொண்டுவரப்படுகிறது (2-10)

6 மக்கள் முன்னால் சாலொமோன் பேசுகிறார் (1-11)
அர்ப்பண விழாவின்போது சாலொமோன் செய்த ஜெபம் (12-42)

7 ஆலயம் யெகோவாவின் மகிமையால் நிறைகிறது (1-3)
அர்ப்பண விழா கொண்டாட்டம் (4-10)
யெகோவா சாலொமோனுக்குத் தோன்றுகிறார் (11-22)

8 சாலொமோன் கட்டிய மற்ற கட்டிடங்கள் (1-11)
ஆலயத்தில் வழிபாடு சரியாக நடக்க ஏற்பாடுகள் (12-16)
சாலொமோனின் கப்பல்கள் (17, 18)

9 சேபா தேசத்து ராணி சாலொமோனைச் சந்திக்கிறாள் (1-12)
சாலொமோனின் செல்வம் (13-28)
சாலொமோனின் மரணம் (29-31)

10 ரெகொபெயாமுக்கு எதிராக இஸ்ரவேலின் கலகம் (1-19)

11 ரெகொபெயாமின் ஆட்சி (1-12)
உண்மையுள்ள லேவியர்கள் யூதாவுக்கு வருகிறார்கள் (13-17)
ரெகொபெயாமின் குடும்பம் (18-23)

12 எருசலேமை சீஷாக் தாக்குகிறான் (1-12)
ரெகொபெயாமின் ஆட்சி முடிவுக்கு வருகிறது (13-16)

13 அபியா யூதாவின் ராஜாவாகிறார் (1-22)
யெரொபெயாமை அபியா தோற்கடிக்கிறார் (3-20)

14 அபியா இறந்துபோகிறார் (1)
ஆசா யூதாவின் ராஜாவாகிறார் (2-8)
ஆசா 10,00,000 எத்தியோப்பியர்களைத் தோற்கடிக்கிறார் (9-15)

15 ஆசா செய்த சீர்திருத்தங்கள் (1-19)

16 சீரியாவுடன் ஆசா செய்த ஒப்பந்தம் (1-6)
ஆசாவை அனானி கண்டிக்கிறார் (7-10)
ஆசா இறந்துபோகிறார் (11-14)

17 யோசபாத் யூதாவின் ராஜாவாகிறார் (1-6)
கற்றுக்கொடுப்பதற்கான திட்டம் (7-9)
யோசபாத்தின் படை பலம் (10-19)

18 ஆகாபுடன் யோசபாத் கூட்டுச்சேர்கிறார் (1-11)
தோற்றுப்போவார்கள் என்று மிகாயா தீர்க்கதரிசனம் சொல்கிறார் (12-27)
ராமோத்-கீலேயாத்தில் ஆகாப் கொல்லப்படுகிறார் (28-34)

19 யோசபாத்தை யெகூ கண்டிக்கிறார் (1-3)
யோசபாத் செய்த சீர்திருத்தங்கள் (4-11)

20 பக்கத்து தேசங்கள் யூதாவை மிரட்டுகின்றன (1-4)
உதவி கேட்டு யோசபாத் ஜெபம் செய்கிறார் (5-13)
யெகோவாவிடமிருந்து பதில் (14-19)
யூதா அற்புதமாகக் காப்பாற்றப்படுகிறது (20-30)
யோசபாத்துடைய ஆட்சியின் முடிவு (31-37)

21 யோராம் யூதாவின் ராஜாவாகிறார் (1-11)
எலியாவின் கடிதம் (12-15)
யோராமுக்கு வந்த பயங்கரமான முடிவு (16-20)

22 அகசியா யூதாவின் ராஜாவாகிறார் (1-9)
அத்தாலியாள் ஆட்சியைப் பிடிக்கிறாள் (10-12)

23 யோய்தா தலையிடுகிறார்; யோவாசை ராஜாவாக்குகிறார் (1-11)
அத்தாலியாள் கொல்லப்படுகிறாள் (12-15)
யோய்தா செய்த சீர்திருத்தங்கள் (16-21)

24 யோவாசின் ஆட்சி (1-3)
யோவாஸ் ஆலயத்தைப் புதுப்பிக்கிறார் (4-14)
யோவாஸ் கடவுளைவிட்டு விலகுகிறார் (15-22)
யோவாஸ் கொல்லப்படுகிறார் (23-27)

25 அமத்சியா யூதாவின் ராஜாவாகிறார் (1-4)
ஏதோமுடன் போர் (5-13)
அமத்சியா சிலைகளை வணங்குகிறார் (14-16)
இஸ்ரவேல் ராஜாவான யோவாசுடன் போர் (17-24)
அமத்சியா இறந்துபோகிறார் (25-28)

26 உசியா யூதாவின் ராஜாவாகிறார் (1-5)
உசியாவின் போர் நடவடிக்கைகள் (6-15)
ஆணவம்பிடித்த உசியாவுக்குத் தொழுநோய் (16-21)
உசியா இறந்துபோகிறார் (22, 23)

27 யோதாம் யூதாவின் ராஜாவாகிறார் (1-9)

28 ஆகாஸ் யூதாவின் ராஜாவாகிறார் (1-4)
சீரியாவிடமும் இஸ்ரவேலிடமும் தோற்றுப்போகிறார் (5-8)
இஸ்ரவேலை ஓதேத் எச்சரிக்கிறார் (9-15)
யூதாவுக்கு வந்த அவமானம் (16-19)
ஆகாஸ் சிலைகளை வணங்குகிறார்; இறந்துபோகிறார் (20-27)

29 எசேக்கியா யூதாவின் ராஜாவாகிறார் (1, 2)
எசேக்கியா செய்த சீர்திருத்தங்கள் (3-11)
ஆலயம் சுத்தப்படுத்தப்படுகிறது (12-19)
ஆலய வேலைகள் மறுபடியும் ஆரம்பம் (20-36)

30 எசேக்கியா பஸ்காவை அனுசரிக்கிறார் (1-27)

31 பொய் வழிபாட்டை எசேக்கியா அழிக்கிறார் (1)
குருமார்களுக்கும் லேவியர்களுக்கும் ஆதரவு (2-21)

32 சனகெரிப்பால் எருசலேமுக்கு ஆபத்து (1-8)
சனகெரிப் யெகோவாவுக்குச் சவால் விடுகிறான் (9-19)
அசீரிய படையை தேவதூதர் அழிக்கிறார் (20-23)
எசேக்கியா வியாதிப்படுகிறார்; ஆணவமாக நடக்கிறார் (24-26)
எசேக்கியாவின் சாதனைகளும் மரணமும் (27-33)

33 மனாசே யூதாவின் ராஜாவாகிறார் (1-9)
மனாசே திருந்துகிறார் (10-17)
மனாசே இறந்துபோகிறார் (18-20)
ஆமோன் யூதாவின் ராஜாவாகிறார் (21-25)

34 யோசியா யூதாவின் ராஜாவாகிறார் (1, 2)
யோசியா செய்த சீர்திருத்தங்கள் (3-13)
திருச்சட்ட புத்தகம் கண்டெடுக்கப்படுகிறது (14-21)
அழிவைப் பற்றி உல்தாள் தீர்க்கதரிசனம் சொல்கிறாள் (22-28)
மக்கள்முன் யோசியா புத்தகத்தை வாசிக்கிறார் (29-33)

35 மிகப் பெரிய பஸ்காவுக்கு யோசியாவின் ஏற்பாடு (1-19)
பார்வோன் நேகோ யோசியாவைக் கொன்றுபோடுகிறான் (20-27)

36 யோவாகாஸ் யூதாவின் ராஜாவாகிறார் (1-3)
யோயாக்கீம் யூதாவின் ராஜாவாகிறார் (4-8)
யோயாக்கீன் யூதாவின் ராஜாவாகிறார் (9, 10)
சிதேக்கியா யூதாவின் ராஜாவாகிறார் (11-14)
எருசலேமின் அழிவு (15-21)
ஆலயத்தை மறுபடியும் கட்ட கோரேஸ் ஆணையிடுகிறார் (22, 23)

1 தாவீதின் மகன் சாலொமோனுடைய ஆட்சி மேலும் மேலும் உறுதியாக
ஆனது. அவருடைய கடவுளான யெகோவா அவருக்குத் துணையாக
இருந்தார், அவருக்கு அதிக பேரும் புகழும் கிடைக்கச் செய்தார்.[a]
2 இஸ்ரவேல் முழுவதிலும் இருந்த நூறு வீரர்களுக்குத் தலைவர்க
ளையும் ஆயிரம் வீரர்களுக்குத் தலைவர்களையும் நீதிபதிகளையும் இஸ்ர
வேலின் எல்லா கோத்திரத் தலைவர்களையும் தந்தைவழிக் குடும்பத்
தலைவர்களையும் சாலொமோன் வரவழைத்தார். **3** பின்பு, சாலொமோ
னும் சபையார் எல்லாரும் கிபியோனில் இருந்த ஆராதனை மேட்டுக்குப்
போனார்கள்.[b] யெகோவாவின் ஊழியரான மோசே வனாந்தரத்தில் இருந்த
போது செய்த உண்மைக் கடவுளின் சந்திப்புக் கூடாரம் அங்கேதான்
இருந்தது. **4** ஆனால் தாவீது, உண்மைக் கடவுளின் பெட்டியை கீரி
யாத்-யெயாரீமிலிருந்து[c] எருசலேமில் தான் தயார் செய்திருந்த இடத்துக்குக்
கொண்டுவந்திருந்தார். அதற்கென்று தான் போட்டிருந்த கூடாரத்தில் அதை
வைத்திருந்தார்.[d] **5** ஹூரின் பேரனும் ஊரியின் மகனுமான பெசலெ
யேல்[e] செய்திருந்த செம்புப் பலிபீடம்[f] யெகோவாவின் வழிபாட்டுக் கூடா
ரத்துக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தது. சாலொமோனும் சபையாரும்
அந்தக் கூடாரத்துக்கு முன்னால் வேண்டிக்கொள்வது* வழக்கம். **6** சந்திப்
புக் கூடாரத்துக்கு முன்னால் இருந்த செம்புப் பலிபீடத்தில், யெகோவாவுக்
குமுன் 1,000 தகன பலிகளை சாலொமோன் செலுத்தினார்.[g]
7 அன்றைக்கு ராத்திரி சாலொமோனின் கனவில் கடவுள் தோன்றி,
"உனக்கு என்ன வேண்டும், கேள்"[h] என்றார். **8** அதற்கு சாலொமோன்,
"என் அப்பா தாவீதுமேல் நீங்கள் அளவுகடந்த அன்பை* காட்டியிருக்கி
றீர்கள்.[i] அவருடைய இடத்தில் என்னை ராஜாவாக உட்கார வைத்திருக்கி
றீர்கள்.[j] **9** யெகோவா தேவனே, என் அப்பா தாவீதுக்குக் கொடுத்த
வாக்குறுதியை இப்போது நிறைவேற்றுங்கள்.[k] ஏனென்றால், பூமியிலுள்ள
மணலைப் போல் ஏராளமாக இருக்கிற மக்களுக்கு என்னை ராஜாவாக
ஆக்கியிருக்கிறீர்கள்.[l] **10** இந்த மக்களை நல்ல முறையில் வழிநடத்த இப்
போது எனக்கு ஞானத்தையும் அறிவையும் கொடுங்கள்.[m] இல்லாவிட்டால்,
இத்தனை ஏராளமான மக்களுக்கு என்னால் எப்படி நீதி வழங்க முடியும்?"[n]
என்றார்.
11 அதற்குக் கடவுள், "செல்வத்தையோ பொருளையோ பேர்புக
ழையோ எதிரிகளின் உயிரையோ நீண்ட ஆயுசையோ நீ கேட்கவில்லை.
அதற்குப் பதிலாக, என்னுடைய மக்களுக்கு* நீதி வழங்க ஞானத்தை
யும் அறிவையும் கேட்டிருக்கிறாய்.[o] அதனால், நீ மனதார ஆசைப்பட்டப
டியே, **12** ஞானத்தையும் அறிவையும் உனக்குத் தருவேன். அதோடு,
உனக்கு முன்பும் சரி, பின்பும் சரி, வேறெந்த ராஜாவுக்கும் இல்லாத அள
வுக்குச் செல்வத்தையும் பொருளையும் பேர்புகழையும் தருவேன்"[p] என்று
சொன்னார்.
13 பின்பு சாலொமோன் கிபியோனிலிருந்த ஆராதனை மேட்டிலி
ருந்து,[q] அதாவது சந்திப்புக் கூடாரத்திலிருந்து, புறப்பட்டு எருசலேமுக்கு
வந்தார்; அவர் இஸ்ரவேல் தேசத்தை ஆட்சி செய்தார். **14** ரதங்களையும்

அதி. 1
a 1நா 29:25; பிர 2:9; மத் 6:28, 29; மத் 12:42
b 1ரா 3:4; 1நா 21:29
c 1நா 13:5
d 1நா 16:1
e யாத் 31:2-5
f யாத் 38:1, 2
g 1ரா 3:4
h 1ரா 3:5-9
i 2சா 7:8
j 1நா 28:5; சங் 89:28, 29
k 2சா 7:12; 1நா 28:6; சங் 132:11
l ஆதி 13:14, 16
m நீதி 2:6; யாக் 1:5
n சங் 72:1, 2
o 1ரா 3:10-13; 1ரா 3:28
p 1நா 29:25; 2நா 9:22; பிர 2:9
q 1ரா 3:4

1:5 *வே.வா., "விசாரிப்பது." **1:8** *வே.வா., "மாறாத அன்பை." **1:11** *நே.மொ., "எந்த மக்களுக்கு உன்னை ராஜாவாக நியமித்தேனோ அந்த மக்களுக்கு."

குதிரைகளையும்* சாலொமோன் ஏராளமாகச் சேர்த்துக்கொண்டே இருந்
தார். அவரிடம் 1,400 ரதங்களும் 12,000 குதிரைகளும்#[a] இருந்தன. ரதங்க
ளுக்கான நகரங்களிலும்[b] எருசலேமில் ராஜா குடியிருந்த இடத்துக்குப்
பக்கத்திலும் அவற்றை நிறுத்தி வைத்தார்.[c] **15** தங்கத்தையும் வெள்ளி
யையும் கற்களைப் போலவும், தேவதாரு மரங்களை சேப்பெல்லாவிலுள்ள
காட்டத்தி மரங்களைப் போலவும் சாலொமோன் ராஜா எருசலேமில் ஏராள
மாகக் கிடைக்கச் செய்தார்.[d] **16** எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
குதிரைகளை சாலொமோன் வைத்திருந்தார்.[e] ராஜாவின் வியாபாரிகள் குதி
ரைக் கூட்டங்களை* மொத்த விலைக்கு வாங்குவார்கள்.[f] **17** எகிப்திலி
ருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு ரதத்தின் விலை 600 வெள்ளிக் காசு
கள், ஒரு குதிரையின் விலை 150 வெள்ளிக் காசுகள். பின்பு, இவற்றை
சீரியாவின் ராஜாக்கள் எல்லாருக்கும், ஏத்திய ராஜாக்கள் எல்லாருக்கும் ஏற்
றுமதி செய்வார்கள்.

2 யெகோவாவின் பெயருக்காக ஓர் ஆலயத்தையும் தனக்காக ஓர் அரண்
மனையையும் கட்டச்[g] சொல்லி சாலொமோன் கட்டளையிட்டார்.[h]
2 சுமை சுமக்க 70,000 ஆண்களையும் மலைகளில் கற்களை வெட்டிச்
செதுக்க 80,000 ஆண்களையும் வேலைக்கு வைத்தார்;[i] இவர்களை மேற்
பார்வை செய்ய 3,600 பேரை நியமித்தார்.[j] **3** தீருவின் ராஜாவான ஈரா
முக்கு சாலொமோன் செய்தி அனுப்பினார்;[k] "அரண்மனை கட்ட என்
அப்பா தாவீதுக்கு தேவதாரு மரங்களை அனுப்பி வைத்ததுபோல் எனக்
கும் அனுப்பி வையுங்கள்.[l] **4** இப்போது என்னுடைய கடவுளான
யெகோவாவின் பெயருக்காக ஒரு ஆலயத்தைக் கட்டி, அவருக்கு அர்ப்ப
ணிக்கப்போகிறேன்.* அவருடைய சன்னிதியில் நறுமண தூபப்பொருளை
எரிப்பதற்காகவும்[m] படையல் ரொட்டிகளை எப்போதும் வைப்பதற்காகவும்[n]
அதைக் கட்டப்போகிறேன்; காலையிலும் மாலையிலும்[o] ஓய்வுநாட்களி
லும்[p] மாதப்பிறப்பு# நாட்களிலும்[q] பண்டிகை நாட்களிலும்[r] எங்கள் கடவு
ளான யெகோவாவுக்குத் தகன பலிகள் செலுத்துவதற்காக அதைக் கட்டப்
போகிறேன். ஏனென்றால், இது இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட
நிரந்தரக் கட்டளை. **5** மற்ற எல்லா கடவுள்களையும்விட எங்களுடைய
கடவுள் மிக மிக உயர்ந்தவர். அதனால், நான் அவருக்குப் பிரமாண்டமான
ஆலயத்தைக் கட்டப்போகிறேன். **6** அற்ப மனிதனால் அவருக்கு ஒரு
ஆலயம் கட்ட முடியுமா? வானங்கள், ஏன் வானாதி வானங்கள்கூட, அவ
ருக்குப் போதாதே.[s] அப்படியிருக்கும்போது, அவர் குடியிருப்பதற்காக ஒரு
ஆலயத்தை என்னால் கட்ட முடியுமா? அவர் முன்னால் பலிகளை எரித்து
புகை எழும்பிவரச் செய்வதற்கான ஒரு இடத்தைத்தான் என்னால் கட்ட
முடியும். **7** அதனால் தங்கம், வெள்ளி, செம்பு,[t] இரும்பு, ஊதா நிற கம்பளி
நூல், கருஞ்சிவப்பு நிற நூல், நீல நிற நூல் ஆகியவற்றை வைத்து வேலை
செய்வதில் கைதேர்ந்த ஒருவனை அனுப்பி வையுங்கள்; கலைநயத்துடன்
செதுக்கவும் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்; என் அப்பா தாவீது நிய

1:14 *வே.வா., "குதிரைவீரர்களையும்." #வே.வா., "குதிரைவீரர்களும்." **1:16** *அல்லது, "குதிரைக் கூட்டங்களை எகிப்திலிருந்தும் கியூவிலிருந்தும்; ராஜாவின் வியாபாரிகள் அவற்றை கியூவிலிருந்து." கியூ என்பது சிலிசியாவைக் குறிக்கலாம். **2:4** *நே.மொ., "புனிதப்படுத்தப்போகிறேன்." #வே.வா., "முதலாம் பிறை."

அதி. 1
a உபா 17:16
1ரா 4:26
b 2நா 8:5, 6
c 2நா 9:25
d 1ரா 10:21
1ரா 10:27
2நா 9:27
e 2நா 9:28
f 1ரா 10:28, 29

அதி. 2
g 1ரா 7:1
h உபா 12:11
1நா 22:10
i 1ரா 5:15
j 1ரா 5:16
1ரா 9:22
2நா 2:17, 18
k 1ரா 5:1
l 2சா 5:11
m யாத் 30:7
n யாத் 25:30
o எண் 28:4
p எண் 28:9
q எண் 28:11
r உபா 16:16
s 1ரா 8:27
ஏசா 66:1
அப் 17:24
t 1ரா 7:13, 14

மித்த திறமையான கைத்தொழிலாளிகளோடு சேர்ந்து யூதாவிலும் எருசலே
மிலும் அவன் வேலை செய்வான்.[a] **8** லீபனோனில் இருந்து தேவதாரு
மரங்களையும் ஆபால் மரங்களையும்[b] சந்தன மரங்களையும்[c] எனக்கு
அனுப்பி வையுங்கள். லீபனோனிலுள்ள மரங்களை வெட்டுவதில் உங்களு
டைய ஆட்கள் திறமைசாலிகள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.[d] ஏரா
ளமான மரங்களைத் தயார் செய்வதற்காக, **9** உங்களுடைய ஆட்களோடு
சேர்ந்து என்னுடைய ஆட்களும் வேலை செய்வார்கள்;[e] ஏனென்றால், நான்
மிகவும் பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டப்போகிறேன். **10** மரம் வெட்
டுகிற உங்களுடைய ஆட்களின் சாப்பாட்டுக்காக 20,000 கோர் அளவு*
கோதுமையும் 20,000 கோர் அளவு பார்லியும் 20,000 ஜாடி# திராட்சமதுவும்
20,000 ஜாடி எண்ணெயும் அனுப்பி வைக்கிறேன்"[f] என்று சொன்னார்.

11 சாலொமோனுக்கு தீருவின் ராஜாவான ஈராம் பதில் எழுதி அனுப்பி
னார். அதில், "யெகோவா அவருடைய மக்களை மிகவும் நேசிக்கிறார்; அத
னால்தான், உங்களை அவர்களுக்கு ராஜாவாக்கியிருக்கிறார். **12** வானத்
தையும் பூமியையும் படைத்த இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவைப்
புகழ்கிறேன். அவர் தாவீது ராஜாவுக்கு ஞானமுள்ள மகனைக் கொடுத்
திருக்கிறார்.[g] உங்களுக்கு விவேகத்தையும் புரிந்துகொள்ளும் திறனை
யும் தந்திருக்கிறார்.[h] நீங்கள் யெகோவாவுக்கு ஒரு ஆலயத்தையும் உங்க
ளுக்கு ஒரு அரண்மனையையும் கட்டுவீர்கள். **13** கைவேலைப்பாடுகள்
செய்வதில் திறமைசாலியான ஈராம்-அபியை இப்போது அனுப்பி வைக்கி
றேன். இந்த வேலைகளைச் செய்வதில் அவர் கெட்டிக்காரர்.[i] **14** அவரு
டைய அம்மா தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவர், அப்பா தீருவைச் சேர்ந்த
வர். தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, கற்கள், மரங்கள், ஊதா நிற
கம்பளி நூல், நீல நிற நூல், கருஞ்சிவப்பு நிற நூல், உயர்தர துணி ஆகிய
வற்றைப் பயன்படுத்தி வேலை செய்வதில் அவர் அனுபவசாலி.[j] எல்
லாவித செதுக்கு வேலையையும் செய்வார்; எந்த வரைபடத்தைக்
கொடுத்தாலும் அதன்படியே செய்துகொடுப்பார்.[k] உங்களுடைய திறமை
யான கைத்தொழிலாளிகளோடும், என் எஜமானாகிய உங்கள் அப்பா தாவீ
துடைய திறமையான கைத்தொழிலாளிகளோடும் சேர்ந்து அவர் வேலை
செய்வார். **15** எஜமானே, நீங்கள் சொன்னபடியே கோதுமை, பார்லி,
எண்ணெய், திராட்சமது ஆகியவற்றை என் ஆட்களுக்குக் கொடுங்கள்.[l]
16 உங்களுக்கு எத்தனை மரங்கள் தேவைப்பட்டாலும் லீபனோனிலிருந்து
வெட்டித் தருகிறோம்.[m] அவற்றை ஒன்றாகக் கட்டி கடல் வழியே யோப்
பாவுக்குக் கொண்டுவருகிறோம்.[n] அவற்றை நீங்கள் அங்கிருந்து எருசலே
முக்குக் கொண்டுபோகலாம்"[o] என்று எழுதியிருந்தார்.

17 பின்பு, மற்ற தேசத்தைச் சேர்ந்த ஆண்கள் எத்தனை பேர் இஸ்ர
வேலில் இருக்கிறார்கள் என்பதை சாலொமோன் கணக்கெடுத்தார்.[p] இதற்கு
முன்பு அவருடைய அப்பா தாவீது கணக்கெடுத்திருந்தார்.[q] அவர்கள்
மொத்தம் 1,53,600 பேர் இருந்தார்கள். **18** அவர்களில் 70,000 பேரைச்
சுமை சுமக்கவும், 80,000 பேரை மலைகளில் கற்களை வெட்டிச் செதுக்கவும்
நியமித்தார்.[r] இவர்களை மேற்பார்வை செய்ய 3,600 பேரை நியமித்தார்.[s]

2:10 * ஒரு கோர் என்பது 220 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். # மூலமொழியில், "பாத்." ஒரு பாத் என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 2
a 1நா 22:15
b 1ரா 5:6, 8; 2நா 3:5
c 1ரா 10:11
d 1ரா 5:9
e 1ரா 5:14
f 1ரா 5:11
g 1ரா 5:7
h 2நா 1:11, 12
i 1ரா 7:13, 14; 2நா 4:11-16
j 2நா 3:14
k யாத் 31:2-5
l 2நா 2:10
m 1ரா 5:6, 8
n யோசு 19:46, 48; எஸ்றா 3:7
o 1ரா 5:9
p 2நா 8:7, 8
q 1நா 22:2
r 1ரா 5:17, 18; 1நா 22:15
s 1ரா 5:15, 16

3 பின்பு, சாலொமோன் எருசலேமிலிருந்த மோரியா மலையில்[a] யெகோ
வாவுக்கு ஓர் ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தார்.[b] அவருடைய அப்
பாவான தாவீதுக்கு யெகோவா தரிசனம் தந்த இடத்தில்,[c] அதாவது ஆல
யம் கட்டுவதற்காக எபூசியனான ஒர்னானின் களத்துமேட்டில் தாவீது தயார்
செய்திருந்த இடத்தில்,[d] அதைக் கட்டத் தொடங்கினார். **2** சாலொமோன்
ராஜாவாக ஆன நான்காம் வருஷம் இரண்டாம் மாதம் இரண்டாம் தேதியில்,
ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தார். **3** உண்மைக் கடவுளின் ஆலயத்துக்கு
அஸ்திவாரம் போட்டார்; பழங்கால அளவின்படி,* அதன் நீளம் 60 முழம்,
அகலம் 20 முழம்.[e] **4** ஆலயத்துக்கு முன்னால் இருந்த நுழைவு மண்டபத்
தின் உயரம் 120,* நீளம் 20 முழம். நுழைவு மண்டபத்தின் நீளமும்
ஆலயத்தின் அகலமும் சரிசமமாய் இருந்தது. அதன் உட்புறத்தில் சுத்தமான
தங்கத்தால் தகடு அடித்தார்.[f] **5** ஆலயத்தின் பெரிய அறையை* ஆபால்
மரப்பலகைகளால் மூடி, சொக்கத்தங்கத்தால் தகடு அடித்தார்.[g] பின்பு,
அதன்மீது பேரீச்ச மரங்களின் உருவங்களைப் பொறித்தார்;[h] சங்கிலி
வேலைப்பாடுகளையும் செய்தார்.[i] **6** அதோடு, விலைமதிப்புள்ள அழகிய
கற்களை அந்த அறையில் பதித்தார்.[j] அவர் பயன்படுத்திய தங்கம்[k] பர்வா
யீம் தங்கம். **7** அந்த அறையின் உட்கூரையையும் நிலைக்கால்களையும்
சுவர்களையும் கதவுகளையும் தங்கத்தால் தகடு அடித்தார்.[l] சுவர்களில் கேரு
பீன் உருவங்களைப் பொறித்தார்.[m]

8 பின்பு, மகா பரிசுத்த அறையைக் கட்டினார்.[n] அதன் நீளமும்
ஆலயத்தின் அகலமும் சரிசமமாய் இருந்தது, அதாவது நீளம் 20 முழமா
கவும் அகலம் 20 முழமாகவும் இருந்தது. அந்த அறையின் உட்புறத்தில்
600 தாலந்து* சொக்கத்தங்கத்தால் தகடு அடித்தார்.[o] **9** ஆணிகள் செய்ய
பயன்படுத்தப்பட்ட தங்கத்தின் எடை 50 சேக்கல்.* மேல் அறைகளின் உட்
கூரையில் தங்கத் தகடு அடித்தார்.

10 மகா பரிசுத்த அறையில் இரண்டு கேருபீன் உருவங்களைச்
செய்து, அவற்றின்மீது தங்கத் தகடு அடித்தார்.[p] **11** அந்தக் கேருபீன்களு
டைய சிறகுகளின்[q] நீளம் மொத்தம் 20 முழம்; முதல் கேருபீனுடைய ஒரு
சிறகின் நீளம் 5 முழம். அது அறையின் ஒரு சுவரைத் தொட்டுக்கொண்டி
ருந்தது. மற்றொரு சிறகின் நீளம் 5 முழம்; அது இரண்டாவது கேருபீனின்
சிறகைத் தொட்டுக்கொண்டிருந்தது. **12** இரண்டாவது கேருபீனுடைய ஒரு
சிறகின் நீளம் 5 முழம். அது முதல் கேருபீனின் சிறகைத் தொட்டுக்கொண்
டிருந்தது. இன்னொரு சிறகின் நீளம் 5 முழம். அது அறையின் இன்னொரு
சுவரைத் தொட்டுக்கொண்டிருந்தது. **13** அந்தக் கேருபீன்கள் 20 முழ நீளத்
துக்குச் சிறகுகளை விரித்திருந்தன; அவற்றின் பாதங்கள் தரையைத் தொட்
டுக்கொண்டிருந்தன. அவற்றின் முகங்கள் பரிசுத்த அறையைப் பார்த்தபடி
இருந்தன.

3:3 *ஒரு முழம் என்பது 44.5 செ.மீ. ஆனால், "பழங்கால அளவு" என்பது பெரிய முழத்தை (51.8 செ.மீ.) குறிக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **3:4** *அளவு குறிப்பிடப்படவில்லை. **3:5** *அநேகமாக, ஆலயத்தின் பரிசுத்த அறையைக் குறிக்கலாம். **3:8** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **3:9** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 3
a ஆதி 22:2, 14
b 1ரா 6:1; 1ரா 6:37
c 2சா 24:25; 1நா 21:18
d 2சா 24:18; 1நா 21:22
e 1ரா 6:2
f 1ரா 6:3
g 1ரா 6:15, 22
h 1ரா 6:29
i 1ரா 6:21
j 1நா 29:2, 8
k 1நா 29:3, 4
l யாத் 26:29
m யாத் 26:1; 1ரா 6:29
n யாத் 26:33; 1ரா 8:6; எபி 9:24
o 1ரா 6:20
p 1ரா 6:23-28
q 1ரா 8:6; 1நா 28:18

14 நீல நிற நூல், ஊதா நிற கம்பளி நூல், கருஞ்சிவப்பு நிற நூல், உயர்
தர துணி ஆகியவற்றால் திரைச்சீலையைச் செய்து,[a] அதில் கேருபீன் உரு
வங்களைத் தையல் போட்டார்.[b]

15 ஆலயத்தின் முன்பகுதியில் இரண்டு தூண்களை நிறுத்தினார்;[c]
அவற்றின் உயரம் 35 முழமாக இருந்தது; ஒவ்வொரு தூணின் உச்சியிலி
ருந்த கும்பத்தின் உயரமும் 5 முழமாக இருந்தது.[d] **16** கழுத்தில் அணி
யும் ஆபரணங்களைப் போல் சங்கிலிகள் செய்து, தூண்களின் உச்சியிலி
ருந்த கும்பங்களில் வைத்தார். அதோடு, 100 மாதுளம்பழ வடிவங்களைச்
செய்து அந்தச் சங்கிலிகளில் தொங்கவிட்டார். **17** அந்தத் தூண்களை
ஆலயத்தின் முன்பகுதியில் நிறுத்தினார். ஒரு தூணை வலது பக்கத்தில்*
நிறுத்தி அதற்கு யாகீன்# என்று பெயர் வைத்தார்; மற்றொரு தூணை இடது
பக்கத்தில்△ நிறுத்தி அதற்கு போவாஸ்⊠ என்று பெயர் வைத்தார்.

4 பின்பு, செம்புப் பலிபீடத்தைச் செய்தார்;[e] அதன் நீளம் 20 முழம், அக
லம் 20 முழம், உயரம் 10 முழம்.

2 'செம்புக் கடல்' என்றழைக்கப்பட்ட பெரிய தண்ணீர்த் தொட்டியை[f]
உலோகத்தால் அவர் வார்த்தார். அது வட்ட வடிவில் இருந்தது. அந்தத்
தொட்டியின் ஒரு விளிம்புமுதல் மறு விளிம்புவரை அதன் விட்டம்
10 முழம்; அதன் உயரம் 5 முழம். அளவுநூலால் அளந்தபோது அதன் சுற்ற
ளவு 30 முழமாக இருந்தது.[g] **3** அந்த விளிம்புக்குக் கீழே சுற்றிலும் குமிழ்
வடிவத்தில் வேலைப்பாடுகள் இருந்தன.[h] ஒரு முழத்துக்குப் பத்துக் குமிழ்
கள் எனத் தொட்டியைச் சுற்றிலும் இருந்தன. அந்தக் குமிழ்கள் இரண்டு
வரிசையாக இருந்தன, செம்புத் தொட்டியோடு சேர்த்து வார்க்கப்பட்டிருந்
தன. **4** அந்தத் தொட்டி 12 காளை உருவங்களுக்கு மேலே வைக்கப்பட்
டிருந்தது.[i] மூன்று காளைகள் வடக்கேயும் மூன்று காளைகள் மேற்கேயும்
மூன்று காளைகள் தெற்கேயும் மூன்று காளைகள் கிழக்கேயும் பார்த்தவாறு
நின்றன. அந்தக் காளைகள்மேல் தொட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்தக்
காளைகளின் பின்புறங்கள் தொட்டியின் மையப்பகுதியை நோக்கி இருந்
தன. **5** அந்தத் தொட்டியின் தடிமன் ஒரு கையளவு.* அதன் விளிம்பு
கிண்ணத்தின் விளிம்பைப் போல் இருந்தது. பார்ப்பதற்கு மலர்ந்த லில்
லிப் பூவைப் போல் இருந்தது. அந்தத் தொட்டியின் கொள்ளளவு சுமார்
66,000 லிட்டர்.#

6 அதோடு, தகன பலிக்குரிய எல்லாவற்றையும் கழுவுவதற்காக
10 தொட்டிகளை அவர் செய்தார்;[j] ஆலயத்தின் வலது பக்கத்தில் ஐந்து
தொட்டிகளையும் இடது பக்கத்தில் ஐந்து தொட்டிகளையும் வைத்தார்.[k]
'செம்புக் கடல்' தொட்டியோ, குருமார்கள் தங்களுடைய கைகளையும் கால்
களையும் கழுவுவதற்காகச் செய்யப்பட்டது.[l]

7 பின்பு, கொடுக்கப்பட்ட அளவின்படி[m] தங்கத்தில் 10 குத்துவிளக்குக
ளைச் செய்து[n] அவற்றை ஆலயத்தில் வைத்தார். வலது பக்கத்தில் ஐந்து

3:17 *வே.வா., "தென் திசையில்." #அர்த்தம், "அவர் [அதாவது, யெகோவா] உறுதியாய் நிலைநாட்டுவாராக." △வே.வா., "வட திசையில்." ⊠அநேகமாக, "பலத்தோடு" என்று அர்த்தம். **4:5** *சுமார் 7.4 செ.மீ. இணைப்பு B14-ஐப் பாருங்கள். #மூலமொழியில், "3,000 பாத்." ஒரு பாத் என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 3
a மத் 27:51; எபி 10:19, 20
b யாத் 26:31, 33
c 2ரா 25:13
d 1ரா 7:15-22; 2ரா 25:17; 2நா 4:11-13; எரே 52:22, 23

அதி. 4
e யாத் 38:1, 2; 1ரா 8:22
f யாத் 30:20; யாத் 38:8
g 1ரா 7:23-26
h 1ரா 6:18
i எரே 52:20
j லேவி 1:9; லேவி 9:14
k 1ரா 7:38, 39
l யாத் 29:4
m 1நா 28:12, 15
n யாத் 37:17

குத்துவிளக்குகளையும் இடது பக்கத்தில் ஐந்து குத்துவிளக்குகளையும்
வைத்தார்.[a]

8 அதோடு, 10 மேஜைகளைச் செய்து ஆலயத்தில் வைத்தார். வலது
பக்கத்தில் ஐந்து மேஜைகளையும் இடது பக்கத்தில் ஐந்து மேஜைகளையும்
வைத்தார்.[b] தங்கத்தில் 100 கிண்ணங்களைச் செய்தார்.

9 பின்பு, குருமார்களுக்கான பிரகாரத்தையும்[c] பெரிய பிரகாரத்தையும்
கட்டினார்;[d] அந்தப் பிரகாரங்களுக்குக் கதவுகளைச் செய்து, அவற்றின் மீது
செம்புத் தகடு அடித்தார். **10** ஆலயத்தின் வலது பக்கத்தில், தென்கிழக்கு
திசையில், 'செம்புக் கடல்' என்றழைக்கப்பட்ட பெரிய தண்ணீர்த் தொட்
டியை வைத்தார்.[e]

11 சட்டிகள், சாம்பல் அள்ளும் கரண்டிகள், கிண்ணங்கள் ஆகியவற்
றையும் ஈராம் செய்தார்.[f]

உண்மைக் கடவுளின் ஆலயத்துக்காக சாலொமோன் ராஜா செய்யச்
சொல்லியிருந்த வேலைகளை ஈராம் செய்து முடித்தார்.[g] **12** இரண்டு
தூண்கள்,[h] அவற்றின் உச்சியில் இருந்த கிண்ண வடிவ கும்பங்கள், இரண்டு
கும்பங்களையும் அலங்கரித்த இரண்டு வலைப்பின்னல்கள்,[i] **13** அந்த
இரண்டு வலைப்பின்னல்களிலும் தொங்கவிட 400 மாதுளம்பழ வடிவங்
கள் ஆகியவற்றைச் செய்தார்;[j] ஒவ்வொரு வலைப்பின்னலிலும் இரண்டு
வரிசை மாதுளம்பழ வடிவங்கள் இருந்தன. தூண்களின் உச்சியிலிருந்த
இரண்டு கும்பங்களைச் சுற்றிலும் இந்த வலைப்பின்னல்கள் அமைக்கப்
பட்டிருந்தன.[k] **14** அதோடு, பத்துத் தள்ளுவண்டிகள்,* அவற்றில் வைக்க
பத்துத் தொட்டிகள்,[l] **15** 'செம்புக் கடல்' தொட்டி, அதன் கீழிருந்த 12
காளை உருவங்கள்,[m] **16** சட்டிகள், சாம்பல் அள்ளும் கரண்டிகள், முள்
கரண்டிகள்,[n] மற்ற பாத்திரங்கள் ஆகியவற்றையும் செய்தார். இவை எல்
லாவற்றையும் பளபளப்பான செம்பினால் செய்தார். சாலொமோன் ராஜா
சொன்னபடியே யெகோவாவின் ஆலயத்துக்காக இவை எல்லாவற்றை
யும் ஈராம்-அபி*[o] செய்தார். **17** யோர்தான் பிரதேசத்தில், சுக்கோத்துக்
கும்[p] சேரேதாவுக்கும் இடையிலுள்ள பகுதியில், இவற்றைக் களிமண் அச்சு
களில் ராஜா வார்த்தார். **18** இந்தச் சாமான்களையெல்லாம் சாலொமோன்
மிக ஏராளமாகச் செய்தார்; இவற்றுக்காகப் பயன்படுத்திய செம்பை எடை
போடவில்லை.[q]

19 உண்மைக் கடவுளின் ஆலயத்துக்காக இந்தச் சாமான்கள் எல்லாவற்
றையும் சாலொமோன் செய்தார்:[r] தங்கப் பீடம்,[s] படையல் ரொட்டிகளை
வைக்க மேஜைகள்[t] ஆகியவற்றைச் செய்தார்; **20** மகா பரிசுத்த அறைக்கு
முன்னால் எரிந்துகொண்டிருப்பதற்காக விளக்குத்தண்டுகளையும் அவற்றின்
அகல் விளக்குகளையும் சுத்தமான தங்கத்தில் செய்தார்.[u] இவை எல்லாவற்
றையும் முறைப்படி செய்தார். **21** அதற்கான மலர்கள், அகல் விளக்குகள்,
இடுக்கிகள் ஆகியவற்றைத் தங்கத்தில், அதுவும் சொக்கத்தங்கத்தில் செய்
தார். **22** திரி வெட்டும் கருவிகள், கிண்ணங்கள், கோப்பைகள், தணல் அள்
ளும் கரண்டிகள் ஆகியவற்றைச் சுத்தமான தங்கத்தில் செய்தார். ஆலயத்
தின் நுழைவாசல், மகா பரிசுத்த அறையின் உட்புற கதவுகள்,[v] ஆலயத்தின்*
கதவுகள் ஆகியவற்றையும் தங்கத்தில் செய்தார்.[w]

4:14 *வே.வா., "தண்ணீர் வண்டிகள்." **4:16** *நே.மொ., "ஈராம்-அபிவ்." இது மற்
றொரு உச்சரிப்பு. **4:22** *இந்த வசனத்தில், இது பரிசுத்த அறையைக் குறிக்கிறது.

அதி. 4
a யாத் 40:24
b 2நா 4:19
c யாத் 27:9, லேவி 6:16, 1ரா 6:36
d 1ரா 7:12
e 1ரா 7:39
f யாத் 27:3
g 1ரா 7:40-46
h 2நா 3:17
i 1ரா 7:17
j 1ரா 7:20
k எரே 52:22
l 1ரா 7:27, 38
m 1ரா 7:23, 25
n யாத் 38:3
o 2நா 2:13, 14
p யோசு 13:27, 28
q 1ரா 7:47, 1நா 22:3, 14, எரே 52:20
r 2ரா 24:13
s யாத் 37:25, 26, வெளி 8:3
t யாத் 25:23, 24, 1ரா 7:48-50, 2நா 4:8
u யாத் 25:31, 37
v 1ரா 6:31, 32
w 1ரா 6:33-35

5 யெகோவாவின் ஆலயத்துக்காகச் செய்ய வேண்டிய எல்லா வேலைக
ளையும் சாலொமோன் செய்து முடித்தார்.[a] பின்பு, கடவுளுக்காகத் தன்
னுடைய அப்பா தாவீது அர்ப்பணித்திருந்த* பொருள்களை ஆலயத்துக்குக்
கொண்டுவந்தார்.[b] தங்கத்தையும் வெள்ளியையும் மற்ற எல்லா பொருள்
களையும் உண்மைக் கடவுளின் ஆலயத்திலிருந்த பொக்கிஷ அறைக
ளில் வைத்தார்.[c] **2** அந்தச் சமயத்தில், இஸ்ரவேல் பெரியோர்களை,*
அதாவது எல்லா கோத்திரத் தலைவர்களையும் இஸ்ரவேலில் உள்ள தந்தை
வழிக் குடும்பத் தலைவர்களையும், சாலொமோன் ஒன்றுகூடி வரச் சொன்
னார்; 'தாவீதின் நகரத்திலிருந்து,' அதாவது சீயோனிலிருந்து, யெகோவாவின்
ஒப்பந்தப் பெட்டியைக் கொண்டுவருவதற்காக அவர்கள் எருசலேமுக்கு வந்
தார்கள்.[d] **3** ஏழாம் மாதத்தில் நடக்கிற பண்டிகையின்போது* இஸ்ரவேல்
ஆண்கள் எல்லாரும் ராஜா முன்னால் ஒன்றுகூடினார்கள்.[e]

4 இஸ்ரவேல் பெரியோர்கள் எல்லாரும் வந்தபோது, கடவுளுடைய
பெட்டியை லேவியர்கள் தூக்கினார்கள்.[f] **5** பெட்டி, சந்திப்புக் கூடாரம்,[g]
அதிலிருந்த பரிசுத்த பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும் குருமார்க
ளும் லேவியர்களும்* சுமந்துகொண்டு போனார்கள். **6** சாலொமோன்
ராஜாவும் அவரால் அழைக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் எல்லாரும் கடவு
ளின் பெட்டிக்கு முன்னால் கூடியிருந்தார்கள். அப்போது, எண்ண முடியா
தளவுக்கு ஏராளமான ஆடுமாடுகளைப் பலி கொடுத்தார்கள்.[h] **7** பின்பு,
குருமார்கள் யெகோவாவின் ஒப்பந்தப் பெட்டியைக் கொண்டுவந்து அதற்
குரிய இடத்தில் வைத்தார்கள்; அதாவது, ஆலயத்தின் உட்புறத்தில் இருந்த
மகா பரிசுத்த அறையில் கேருபீன்களுடைய சிறகுகளின்கீழ் வைத்தார்கள்.[i]
8 பெட்டி வைக்கப்பட்டிருந்த இடத்தின் மேல் கேருபீன்கள் சிறகுகளை
விரித்தபடி இருந்தன; அதனால், அவற்றின் நிழல் அந்தப் பெட்டியின்
மீதும் அதன் கம்புகளின்[j] மீதும் விழுந்தது. **9** அந்தக் கம்புகள் நீளமாக
இருந்ததால், மகா பரிசுத்த அறைக்கு முன்னால் இருந்த பரிசுத்த அறை
யிலிருந்து அவற்றின் முனைகளைப் பார்க்க முடிந்தது, ஆனால் வெளியி
லிருந்து அவற்றைப் பார்க்க முடியாது. இந்நாள்வரை அவை அங்கே
தான் இருக்கின்றன. **10** மோசே ஓரேபில் இருந்தபோது வைத்த இரண்டு
கற்பலகைகளைத் தவிர வேறெதுவும் அந்தப் பெட்டியில் இருக்கவில்லை.[k]
எகிப்திலிருந்து வந்த இஸ்ரவேலர்களோடு ஓரேபில் யெகோவா ஒப்பந்தம்[l]
செய்த சமயத்தில்[m] இந்தக் கற்பலகைகள் அதில் வைக்கப்பட்டன.

11 பரிசுத்த இடத்திலிருந்து குருமார்கள் வெளியே வந்தபோது (அங்கே
வந்திருந்த குருமார்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்
சரி, எல்லாரும் தங்களைப் புனிதப்படுத்தியிருந்தார்கள்),[n] **12** ஆசாப்,[o]
ஏமான்,[p] எதித்தூன்,[q] இவர்களுடைய மகன்கள், சகோதரர்கள் ஆகியோ
ரின் குழுவைச் சேர்ந்த லேவிய பாடகர்கள்[r] எல்லாரும் உயர்தர உடையை
அணிந்துகொண்டு, ஜால்ராக்களையும் நரம்பிசைக் கருவிகளையும் யாழ்
களையும் பிடித்துக்கொண்டு பலிபீடத்துக்குக் கிழக்கே நின்றார்கள். இவர்
களுடன் 120 குருமார்கள் எக்காளங்களை ஊதினார்கள்.[s] **13** எக்கா
ளம் ஊதுகிறவர்களும் பாடகர்களும் ஒன்றுசேர்ந்து யெகோவாவுக்கு நன்றி

அதி. 5
a 1ரா 6:38
b 1நா 22:14
c 1ரா 7:51; 1நா 26:26
d 2சா 6:12; 1ரா 8:1, 2; 2நா 1:4; சங் 2:6
e லேவி 23:34; 2நா 7:8
f யாத் 25:14; எண் 4:15; 1ரா 8:3-5; 1நா 15:2, 15
g யாத் 40:35; எண் 4:29, 31
h 2சா 6:13
i 1ரா 6:20, 23; 1ரா 8:6-9
j யாத் 25:14
k யாத் 34:1; யாத் 40:20
l யாத் 19:5; யாத் 24:7
m யாத் 19:1
n யாத் 19:10; எண் 8:21; 1நா 24:1
o 1நா 6:31, 39
p 1நா 6:31, 33
q 1நா 16:41; 1நா 25:1, 6; 1நா 25:3
r 1நா 15:16
s 1நா 15:24

5:1 * நே.மொ., "புனிதப்படுத்தியிருந்த." **5:2** * வே.வா., "மூப்பர்களை." **5:3** * அதாவது, "கூடாரப் பண்டிகையின்போது." **5:5** * வே.வா., "லேவி கோத்திரத்தைச் சேர்ந்த குருமார்களும்."

சொல்லி புகழ் பாடினார்கள். எக்காளங்களையும் ஜால்ராக்களையும் மற்ற
இசைக் கருவிகளையும் இசைத்துக்கொண்டே, "அவர் நல்லவர், என்றென்
றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்"[a] என்று சொல்லி யெகோவாவைப்
புகழ்ந்து பாடினார்கள்; அப்போது யெகோவாவின் ஆலயத்தை மேகம்
சூழ்ந்துகொண்டது.[b] **14** உண்மைக் கடவுளின் ஆலயம் யெகோவாவின்
மகிமையால் நிறைந்தது.[c] மேகம் சூழ்ந்துகொண்டதால் அங்கே நின்று
சேவை செய்ய குருமார்களால் முடியவில்லை.

6 அப்போது சாலொமோன், "யெகோவாவே, கார்மேகத்தில் குடியிருப்
பேன் என்று சொன்னீர்களே.[d] **2** இப்போது நான் உங்களுக்காகப் பிர
மாண்டமான ஒரு ஆலயத்தைக் கட்டியிருக்கிறேன், நீங்கள் என்றென்றும்
குடியிருப்பதற்காக நிலையான ஒரு இடத்தைத் தயார் செய்திருக்கிறேன்"[e]
என்று சொன்னார்.

3 பின்பு ராஜா திரும்பி, அங்கே நின்றுகொண்டிருந்த இஸ்ரவேல் சபை
யார் எல்லாரையும் பார்த்து அவர்களை ஆசீர்வதித்தார்.[f] **4** அப்போது
அவர், "இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவைப் புகழ்கிறேன். அவர் தன்
னுடைய வாய் திறந்து என் அப்பா தாவீதுக்கு வாக்குக் கொடுத்து, அதைத்
தன்னுடைய கைகளால் நிறைவேற்றியும் இருக்கிறார். **5** அவர் என் அப்
பாவிடம், 'என் மக்களை எகிப்து தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டுவந்தேன்.
அதுமுதல், என் பெயர் நிலைத்திருப்பதற்காக ஒரு ஆலயத்தைக் கட்டுவ
தற்கு இஸ்ரவேல் கோத்திரங்கள் நடுவே நான் எந்த நகரத்தையும் தேர்ந்தெ
டுக்கவில்லை.[g] என்னுடைய மக்களான இஸ்ரவேலர்களுக்குத் தலைவனாக
எந்தவொரு மனிதனையும் தேர்ந்தெடுக்கவில்லை. **6** ஆனால், இப்
போது என் பெயர் நிலைத்திருக்கும் இடமாக எருசலேமைத் தேர்ந்தெடுத்
திருக்கிறேன்.[h] என்னுடைய மக்களான இஸ்ரவேலர்களுக்குத் தலைவ
னாக தாவீதைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்'[i] என்று சொல்லியிருந்தார்.
7 இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவின் பெயருக்காக ஒரு ஆலயத்
தைக் கட்ட வேண்டுமென்று என் அப்பா தாவீது மனதார ஆசைப்பட்
டார்.[j] **8** ஆனால் யெகோவா என் அப்பா தாவீதிடம், 'என் பெயருக்காக
ஒரு ஆலயத்தைக் கட்ட நீ மனதார ஆசைப்பட்டாய், அப்படி ஆசைப்பட்
டது நல்லதுதான். **9** இருந்தாலும், ஆலயத்தை நீ கட்ட மாட்டாய். உனக்
குப் பிறக்கப்போகிற உன் மகன்தான் என் பெயருக்காக ஒரு ஆலயத்தைக்
கட்டுவான்'[k] என்று சொன்னார். **10** கொடுத்த வாக்கை யெகோவா நிறை
வேற்றிவிட்டார். யெகோவா வாக்குக் கொடுத்தபடியே,[l] என் அப்பா தாவீ
துக்குப் பிறகு இஸ்ரவேலின் சிம்மாசனத்தில் நான் ராஜாவாக உட்கார்ந்திருக்
கிறேன்.[m] அதோடு, இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவின் பெயருக்காக
ஒரு ஆலயத்தையும் கட்டி முடித்திருக்கிறேன். **11** இஸ்ரவேலர்களுடன்
யெகோவா செய்திருந்த ஒப்பந்தம் அடங்கிய பெட்டியை[n] அங்கே வைத்
திருக்கிறேன்" என்று சொன்னார்.

12 பின்பு யெகோவாவுடைய பலிபீடத்தின் முன்னால் சாலொமோன்
நின்றார், இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அவர் எதிரில் நின்றுகொண்டிருந்
தார்கள். அப்போது அவர் தன்னுடைய கைகளை வானத்துக்கு நேராக விரித்
தார்;[o] **13** (சாலொமோன் ஒரு செம்பு மேடையைச் செய்து அதைப் பிரகா
ரத்தின் நடுவில் வைத்திருந்தார்.[p] அதன் நீளம் 5 முழம்,* அகலம்

6:13 * ஒரு முழம் என்பது 44.5 செ.மீ. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 5
a 1நா 16:34
b யாத் 40:34, 35; 1ரா 8:10, 11
c 2நா 7:1, 2; எசே 10:4; வெளி 21:23

அதி. 6
d யாத் 20:21; 1ரா 8:12, 13; சங் 97:2
e சங் 132:13, 14
f 1ரா 8:14-21
g உபா 12:5, 6
h சங் 48:1
i 2சா 7:8; 1நா 28:4
j 2சா 7:2; 1ரா 5:3
k 1நா 17:4
l 1நா 17:11
m 1நா 28:5; 1நா 29:23
n யாத் 40:20; 1ரா 8:9
o 1ரா 8:22
p 1ரா 6:36

5 முழம், உயரம் 3 முழம்; அதன்மீது அவர் நின்றார்.) இஸ்ரவேல்
சபையார் எல்லாருக்கும் முன்னால் மண்டிபோட்டு தன்னுடைய கைகளை
வானத்துக்கு நேராக விரித்து,[a] **14** "இஸ்ரவேலின் கடவுளான யெகோ
வாவே, வானத்திலோ பூமியிலோ உங்களைப் போல் வேறெந்தக் கடவு
ளும் இல்லை. நீங்கள் செய்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்கிறீர்கள், உங்
களுடைய வழியில் முழு இதயத்தோடு நடக்கிற ஊழியர்களுக்கு
மாறாத அன்பைக் காட்டியிருக்கிறீர்கள்.[b] **15** உங்களுடைய ஊழியரான
என் அப்பா தாவீதுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றியிருக்கிறீர்கள்.[c]
நீங்கள் வாய் திறந்து சொன்ன வாக்கை இன்றைக்கு உங்கள் கையால் நிறை
வேற்றியிருக்கிறீர்கள்.[d] **16** இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவே, உங்
களுடைய ஊழியரான என் அப்பா தாவீதிடம், 'நீ என் வழியில் நடந்தது
போல் உன் வாரிசுகளும் என் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து என் வழியில்
நடந்தால், இஸ்ரவேலின் சிம்மாசனத்தில் உட்கார்ந்து ஆட்சி செய்ய
உனக்கு வாரிசு இல்லாமல் போவதில்லை'[e] என்று நீங்கள் கொடுத்திருந்த
வாக்கை இப்போது நிறைவேற்றுங்கள்.[f] **17** யெகோவாவே, இஸ்ரவேலின்
கடவுளே, உங்கள் ஊழியரான தாவீதுக்கு நீங்கள் கொடுத்த வாக்கு நிறை
வேறுவதாக!

18 கடவுளே, நீங்கள் உண்மையிலேயே இந்தப் பூமியிலுள்ள மனிதர்க
ளோடு குடியிருப்பீர்களா?[g] வானங்கள், ஏன் வானாதி வானங்கள்கூட, நீங்
கள் குடியிருப்பதற்குப் போதாதே![h] அப்படியிருக்கும்போது நான் கட்டிய
இந்த ஆலயம் உங்களுக்கு முன்னால் ஒன்றுமே இல்லை![i] **19** யெகோ
வாவே, என் கடவுளே, இந்த அடியேனின் ஜெபத்தைக் காதுகொடுத்துக்
கேளுங்கள், கருணை காட்டச் சொல்லி நான் உங்களிடம் செய்யும் மன்றாட்
டைக் கேளுங்கள்; உதவி கேட்டு நான் கெஞ்சுவதைக் கேளுங்கள். உங்கள்
முன்னால் இந்த அடியேன் செய்யும் ஜெபத்தைக் கேளுங்கள். **20** உங்க
ளுடைய பெயருக்குப் புகழ்சேர்க்க இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்ப
தாகச் சொன்னீர்களே.[j] அதனால், இந்த இடத்தை நோக்கி உங்களுடைய
ஊழியன் செய்கிற ஜெபத்தைக் கேட்பதற்காக இரவும் பகலும் உங்களு
டைய கண்கள் இந்த ஆலயத்தின் மேல் இருக்கட்டும். **21** உங்களிடம்
உதவி கேட்டு இந்த அடியேன் கெஞ்சுவதைக் கேளுங்கள். இந்த இடத்தை
நோக்கி உங்களுடைய மக்களான இஸ்ரவேலர்கள் செய்யும் வேண்டுத
லைக் கேளுங்கள்.[k] நீங்கள் குடியிருக்கிற பரலோகத்திலிருந்து கேட்டு[l] எங்
களை மன்னியுங்கள்.[m]

22 தனக்கு எதிராகப் பாவம் செய்ததாக ஒருவன் இன்னொருவன்மீது
குற்றம்சாட்டி, 'நீ பாவம் செய்யவில்லை என்று எனக்குச் சத்தியம் செய்து
கொடு'* என்று கேட்கும் பட்சத்தில், சத்தியம் செய்து கொடுத்தவன் இந்த
ஆலயத்திலுள்ள பலிபீடத்துக்கு முன்னால் வரும்போது,[n] **23** நீங்கள் பர
லோகத்திலிருந்து கேட்டு நீதி வழங்குங்கள். தவறு செய்தவனுக்குச் சரி
யான பதிலடி கொடுங்கள், அவன் செய்த பாவத்துக்குத் தக்க தண்டனை
கொடுங்கள்.[o] தவறு செய்யாதவனை* நிரபராதி என்று தீர்ப்பளித்து, அவன்
செய்த நீதியான செயல்களுக்காக அவனை ஆசீர்வதியுங்கள்.[p]

24 உங்களுக்கு எதிராகப் பாவம் செய்துவந்த இஸ்ரவேலர்கள்

6:22 *பொய் சத்தியம் செய்தால் அவர்மீது சாபம் வரும் என்பதையே இதற்கான எபிரெய வார்த்தை குறிக்கிறது. **6:23** *நே.மொ., "நீதிமானை."

அதி. 6
a 1ரா 8:54
b உபா 7:9; 1ரா 8:23-26
c 1ரா 3:6
d 2சா 7:12, 13; 1நா 22:10
e சங் 132:12
f 1ரா 2:4
g அப் 7:48
h 2நா 2:6; ஏசா 40:12; அப் 17:24
i 1ரா 8:27-30; ஏசா 66:1
j உபா 26:2
k தானி 6:10
l 2ரா 19:20; 2நா 30:27
m 2நா 7:12-14; மீ 7:18
n 1ரா 8:31, 32
o யோபு 34:11
p ஏசா 3:10, 11; எசே 18:20

எதிரியிடம் தோற்றுப்போன பின்பு[a] மனம் திருந்தி வந்தால், உங்களுடைய
பெயரை மகிமைப்படுத்தி[b] இந்த ஆலயத்தில் உங்கள் முன்னால் ஜெபம்
செய்தால்,[c] கருணை காட்டச் சொல்லி உங்களிடம் கெஞ்சி மன்றாடினால்,[d]
25 அதை நீங்கள் பரலோகத்திலிருந்து கேட்டு[e] உங்களுடைய மக்களான
இஸ்ரவேலர்கள் செய்த பாவத்தை மன்னியுங்கள்; அவர்களுக்கும் அவர்
களுடைய முன்னோர்களுக்கும் தந்த தேசத்துக்கு அவர்களை மறுபடியும்
கொண்டுவாருங்கள்.[f]

26 அவர்கள் உங்களுக்கு எதிராகத் தொடர்ந்து பாவம் செய்ததால்[g]
வானம் அடைபட்டு மழை பெய்யாமல் போகும்போது,[h] அவர்கள் இந்த
இடத்தை நோக்கி ஜெபம் செய்தால், உங்கள் பெயரை மகிமைப்படுத்தி
னால், அவர்களை நீங்கள் தாழ்த்தியதன்* காரணமாகத் தங்களுடைய
பாவத்தைவிட்டுத் திருந்தினால்,[i] **27** நீங்கள் பரலோகத்திலிருந்து கேட்டு
உங்களுடைய ஊழியர்களும் உங்களுடைய மக்களுமான இஸ்ரவேலர்கள்
செய்த பாவத்தை மன்னியுங்கள். அவர்கள் நடக்க வேண்டிய நல்ல வழி
யைக் கற்றுக்கொடுங்கள்;[j] உங்களுடைய மக்களுக்குச் சொத்தாகக்
கொடுத்த உங்கள் தேசத்தில் மழை பெய்யப் பண்ணுங்கள்.[k]

28 தேசத்தில் பஞ்சமோ[l] கொள்ளைநோயோ[m] வரும்போது, கடும்
வெப்பக் காற்றால் பயிர்கள் கருகிப்போகும்போது, பூஞ்சணம் தொற்றும்
போது,[n] படையெடுத்துவருகிற வெட்டுக்கிளிகளும் அகோரப் பசிகொண்ட
வெட்டுக்கிளிகளும்[o] தாக்கும்போது, இஸ்ரவேல் நகரம் ஒன்றை எதிரிகள்
சுற்றிவளைக்கும்போது,[p] கொடிய வியாதியோ வேறு ஏதாவது நோயோ
வரும்போது,[q] **29** இந்த ஆலயத்துக்கு நேராக தனிநபர்களோ இஸ்ர
வேல் மக்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்தோ தங்களுடைய கைகளை
விரித்து[r] என்ன வேண்டுதல் செய்தாலும்,[s] கருணை காட்டச் சொல்லி கெஞ்
சினாலும்[t] (அவரவருடைய இதயத்தில் இருக்கும் கஷ்டமும் வேதனையும்
அவரவருக்குத்தான் தெரியும்),[u] **30** நீங்கள் குடியிருக்கிற பரலோகத்திலி
ருந்து[v] அவர்களுடைய மன்றாட்டைக் கேட்டு அவர்களை மன்னியுங்கள்.[w]
ஒவ்வொருவருடைய செயல்களுக்கும் தகுந்த வெகுமதியைக் கொடுங்கள்.
ஏனென்றால், அவர்களுடைய இதயத்தில் இருப்பது உங்களுக்குத் தெரி
யும் (மனிதனுடைய இதயத்தில் இருப்பது உங்களுக்கு மட்டும்தான் நன்றா
கத் தெரியும்);[x] **31** அப்போது, எங்களுடைய முன்னோர்களுக்கு நீங்கள்
கொடுத்த தேசத்தில் காலமெல்லாம் அவர்கள் உங்களுக்குப் பயந்து உங்க
ளுடைய வழிகளில் நடப்பார்கள்.

32 வெகு தூரத்திலுள்ள தேசத்தில் குடியிருக்கிற இஸ்ரவேலர் அல்லாத
ஒருவர் உங்களுடைய மகத்தான பெயரையும்*[y] கைபலத்தையும் மகா
வல்லமையையும் பற்றிக் கேள்விப்பட்டு இங்கே வந்து இந்த ஆலயத்தை
நோக்கி ஜெபம் செய்தால்,[z] **33** நீங்கள் குடியிருக்கிற பரலோகத்திலிருந்து
கேளுங்கள். அந்த நபர் கேட்பதையெல்லாம் கொடுங்கள். அப்போது, உல
கத்திலிருக்கிற எல்லா மக்களும் இஸ்ரவேலர்களைப் போலவே உங்களு
டைய பெயரைத் தெரிந்துகொண்டு[a] உங்களுக்குப் பயப்படுவார்கள். நான்
கட்டிய இந்த ஆலயம் உங்கள் பெயரைத் தாங்கியிருக்கிறது என்பதைத்
தெரிந்துகொள்வார்கள்.

34 எதிரிகளோடு போர் செய்ய உங்களுடைய மக்களை நீங்கள் எங்கே

6:26 * வே.வா., "கஷ்டப்படுத்தியதன்." **6:32** * வே.வா., "புகழையும்."

அதி. 6
a லேவி 26:14, 17; யோசு 7:8, 11; நியா 2:14
b தானி 9:3, 19
c எஸ்றா 9:5
d 1ரா 8:33, 34
e ஏசா 57:15
f சங் 106:47
g எசே 14:13
h லேவி 26:19; உபா 28:23
i 1ரா 8:35, 36
j ஏசா 30:20, 21; ஏசா 54:13
k 1ரா 18:1
l ரூ 1:1; 2ரா 6:25
m லேவி 26:14, 16; உபா 28:21, 22
n ஆமோ 4:9; ஆகா 2:17
o உபா 28:38; யோவே 1:4
p 2நா 12:2; 2நா 32:1
q 1ரா 8:37-40
r தானி 6:10
s 2நா 20:5, 6
t 2நா 33:13
u நீதி 14:10
v ஏசா 63:15
w சங் 130:4
x 1சா 16:7; 1நா 28:9; எரே 11:20; எரே 17:10
y யாத் 12:48; ரூ 1:16; 2ரா 5:15; ஏசா 56:6, 7; அப் 8:27
z 1ரா 8:41-43
a சங் 22:27; சங் 46:10

அனுப்பினாலும் சரி,[a] நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிற இந்த நகரத்தை
நோக்கி, உங்கள் பெயருக்காக நான் கட்டிய இந்த ஆலயத்தை நோக்கி,[b]
அவர்கள் உங்களிடம் ஜெபம் செய்தால்,[c] **35** அவர்கள் செய்யும் ஜெபத்
தையும் கருணை காட்டச் சொல்லி அவர்கள் செய்கிற மன்றாட்டையும் பர
லோகத்திலிருந்து கேட்டு அவர்களுக்கு நீதி வழங்குங்கள்.[d]

36 ஒருவேளை, அவர்கள் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்யும்போது
(பாவம் செய்யாத மனிதன் யாருமில்லையே)[e] நீங்கள் பயங்கர கோபம்
கொண்டு எதிரியின் கையில் அவர்களைச் சிக்க வைத்தால், பக்கத்திலோ
தூரத்திலோ இருக்கிற தேசத்துக்கு அவர்கள் பிடித்துக்கொண்டு போகப்பட்
டால்,[f] **37** அந்தத் தேசத்தில் இருக்கும்போது அவர்களுக்குப் புத்திவந்து,
'நாங்கள் பாவம் செய்துவிட்டோம், தப்பு செய்துவிட்டோம், மோசமாக நடந்
துவிட்டோம்' என்று சொல்லி உங்களிடம் திரும்பி வந்தால், கருணை கேட்
டுக் கெஞ்சினால்,[g] **38** தங்களைப் பிடித்துக்கொண்டு போன எதிரிகளின்
தேசத்தில் இருக்கும்போது[h] முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் உங்க
ளிடம் திரும்பி வந்தால்,[i] முன்னோர்களுக்கு நீங்கள் கொடுத்த தேசத்தை
யும் நீங்கள் தேர்ந்தெடுத்த நகரத்தையும் உங்கள் பெயருக்காக நான் கட்டிய
இந்த ஆலயத்தையும் நோக்கி ஜெபம் செய்தால்,[j] **39** அவர்கள் செய்கிற
ஜெபத்தையும் கருணை காட்டச் சொல்லி உங்களிடம் செய்கிற மன்றாட்
டையும் நீங்கள் குடியிருக்கிற பரலோகத்திலிருந்து கேட்டு அவர்களுக்கு
நீதி வழங்குங்கள்.[k] உங்களுக்கு எதிராகப் பாவம் செய்த உங்களுடைய மக்
களை மன்னியுங்கள்.

40 என் கடவுளே, இந்த இடத்திலிருந்து* ஒருவர் ஜெபம் செய்யும்போது
தயவுசெய்து கண்ணோக்கிப் பாருங்கள், காதுகொடுத்துக் கேளுங்கள்.[l]
41 யெகோவா தேவனே, நீங்களும் உங்களுடைய பலத்துக்கு அடையாள
மாக இருக்கிற ஒப்பந்தப் பெட்டியும் இந்த இடத்தில் தங்கியிருக்க வேண்
டும்.[m] யெகோவா தேவனே, உங்களுடைய குருமார்கள் மீட்பை அணிந்து
கொள்ளட்டும். உங்களுக்கு உண்மையாக* இருப்பவர்கள் நீங்கள் செய்த
நன்மைகளை நினைத்து சந்தோஷப்படட்டும்.[n] **42** யெகோவா தேவனே,
நீங்கள் அபிஷேகம் செய்தவரை ஒதுக்கிவிடாதீர்கள்.[o] உங்கள் ஊழிய
ரான தாவீதுக்கு நீங்கள் காட்டிய மாறாத அன்பை நினைத்துப் பாருங்கள்"[p]
என்று சொல்லி ஜெபம் செய்தார்.

7 சாலொமோன் ஜெபம் செய்து முடித்ததுமே,[q] வானத்திலிருந்து நெருப்பு
வந்து[r] தகன பலியையும் மற்ற பலிகளையும் சுட்டெரித்தது. ஆல
யம் யெகோவாவின் மகிமையால் நிறைந்தது.[s] **2** யெகோவாவின் மகிமை
யெகோவாவின் ஆலயத்தில் நிறைந்ததன் காரணமாக, குருமார்களால்
யெகோவாவின் ஆலயத்துக்குள் நுழைய முடியவில்லை.[t] **3** வானத்திலி
ருந்து நெருப்பு வந்ததையும், ஆலயம் யெகோவாவின் மகிமையால் நிறைந்
ததையும் இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.
அப்போது, அவர்கள் அங்கே தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்
கினார்கள், "அவர் நல்லவர், என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்"
என்று புகழ்ந்து பாடி யெகோவாவுக்கு நன்றி சொன்னார்கள்.

4 பின்பு, ராஜாவும் மக்கள் எல்லாரும் சேர்ந்து யெகோவாவுக்கு முன்
னால் பலிகளைக் கொடுத்தார்கள்.[u] **5** சாலொமோன் ராஜா 22,000

6:40 * வே.வா., "இடத்தைப் பற்றி." **6:41** * வே.வா., "பற்றுமாறாமல்."

அதி. 6
a எண் 31:2; யோசு 8:1; நியா 1:1, 2; 1சா 15:3
b 1ரா 8:44, 45
c 2நா 14:11; 2நா 20:5, 6
d ஏசா 37:36
e சங் 130:3; பிர 7:20; ரோ 3:23
f லேவி 26:34; 1ரா 8:46-50; தானி 9:7
g லேவி 26:40; எஸ்றா 9:6; நெ 1:6; சங் 106:6; தானி 9:5
h உபா 30:1-3; தானி 9:2, 3
i 1சா 7:3
j தானி 6:10
k எரே 51:36, 37
l 2நா 7:15; 2நா 16:9; சங் 65:2; ஏசா 37:17
m 1நா 28:2
n சங் 65:4; சங் 132:8-10
o 1ரா 1:34; சங் 18:50
p அப் 13:34

அதி. 7
q 1ரா 8:54
r லேவி 9:24; 1நா 21:26
s யாத் 40:34, 35
t 1ரா 8:11
u 1ரா 8:62, 63

மாடுகளையும் 1,20,000 ஆடுகளையும் பலி கொடுத்தார். இப்படி, ராஜாவும்
மக்கள் எல்லாரும் உண்மைக் கடவுளுடைய ஆலயத்தின் அர்ப்பண
விழாவை நடத்தினார்கள்.[a] **6** குருமார்கள் அவரவர் பணி செய்யும் இடங்
களில் நின்றுகொண்டிருந்தார்கள். அதேபோல, லேவியர்களும் யெகோ
வாவுக்குப் பாடல்கள் பாட இசைக் கருவிகளை வைத்துக்கொண்டு நின்று
கொண்டிருந்தார்கள்.[b] (யெகோவாவுக்கு நன்றிப் பாடல் பாடுவதற்காக இந்த
இசைக் கருவிகளை தாவீது ராஜா உருவாக்கியிருந்தார். தாவீது பாடும்
போது, “அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்” என்று
சொல்லி அவர்கள்* பதில்பாட்டுப் பாடுவார்கள்.) பின்பு, லேவியர்களுக்கு
எதிரில் இருந்த குருமார்கள் சத்தமாக எக்காளங்களை ஊதினார்கள்.[c] அப்
போது, இஸ்ரவேலர்கள் எல்லாரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

7 இத்தனை தகன பலிகளையும்[d] உணவுக் காணிக்கைகளையும்[e]
பலிகளின் கொழுப்பையும்[f] கொடுப்பதற்கு சாலொமோன் செய்திருந்த
செம்புப் பலிபீடத்தில்[g] இடம் போதவில்லை. அதனால், தகன பலிக
ளையும் சமாதான பலிகளின் கொழுப்பையும் கொடுப்பதற்கு, யெகோவா
வுடைய ஆலயத்தின் முன்னாலிருந்த பிரகாரத்தின் நடுப்பகுதியை சாலொ
மோன் அன்றைக்குப் புனிதப்படுத்தினார். **8** லெபோ-காமாத்* தொடங்கி
எகிப்தின் பள்ளத்தாக்குவரை# குடியிருந்த இஸ்ரவேல் சபையார்[h] எல்லா
ரும் மிகப் பெரிய கூட்டமாக அங்கே கூடிவந்திருந்தார்கள். சாலொமோன்
ராஜா அவர்களுடன் சேர்ந்து ஏழு நாட்கள் பண்டிகை கொண்டாடினார்;[i]
9 முதல் ஏழு நாட்கள் பலிபீடத்தின் அர்ப்பண விழாவையும், அடுத்த ஏழு
நாட்கள் பண்டிகையையும் அவர்கள் கொண்டாடினார்கள்; எட்டாம்
நாளில்* விசேஷ மாநாட்டை நடத்தினார்கள்.[j] **10** பின்பு, ஏழாம் மாதம்
23-ஆம் நாளில், மக்கள் எல்லாரையும் அவரவருடைய வீடுகளுக்கு
சாலொமோன் அனுப்பி வைத்தார். அவர்களும் தங்களுடைய வீடுகளுக்கு
மிகவும் சந்தோஷமாகத் திரும்பிப் போனார்கள்.[k] தாவீதுக்கும் சாலொமோ
னுக்கும் தன்னுடைய மக்களான இஸ்ரவேலர்களுக்கும் யெகோவா செய்த
நன்மைகளை நினைத்து மனமகிழ்ச்சி அடைந்தார்கள்.[l]

11 இப்படி, யெகோவாவின் ஆலயத்தையும் தன்னுடைய அரண்மனை
யையும் சாலொமோன் கட்டி முடித்தார்;[m] யெகோவாவின் ஆலயத்துக்கா
கவும் தன்னுடைய அரண்மனைக்காகவும் தான் செய்ய நினைத்த வேலை
களையெல்லாம் வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.[n] **12** அன்றிரவு
சாலொமோனின் கனவில் யெகோவா தோன்றி,[o] “நீ செய்த ஜெபத்தைக்
கேட்டேன். எனக்குப் பலி கொடுப்பதற்கான இடமாக இந்த ஆலயத்தைத்
தேர்ந்தெடுத்தேன்.[p] **13** மழை பெய்யாதபடி நான் வானத்தை அடைக்கும்
போது, நிலத்தை அழிப்பதற்கு வெட்டுக்கிளிகளை அனுப்பும்போது, என்
மக்களைத் தாக்க கொள்ளைநோயை அனுப்பும்போது **14** என் பெய
ரால் அழைக்கப்படும் என் மக்கள்[q] தாழ்மையாக நடந்து[r] என்னிடம்
ஜெபம் செய்தால், பரலோகத்திலிருந்து அதைக் கேட்பேன்; தங்களுடைய
பொல்லாத வழிகளைவிட்டு விலகி என்னைத் தேடினால்,[s] அவர்களுடைய
பாவத்தை மன்னிப்பேன், அவர்களுடைய தேசத்தைச் செழிப்பாக்குவேன்.[t]

7:6 *அநேகமாக, லேவியர்கள். **7:8** *வே.வா., “காமாத்தின் நுழைவாசல்.” #அதா
வது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குவரை.” சொல் பட்டியலைப் பாருங்கள். **7:9** *பண்
டிகைக்கு அடுத்த நாள், அதாவது 15-ஆம் நாளில்.

அதி. 7
a எஸ்றா 6:16
b 1நா 25:7; 2நா 5:11, 12
c 2நா 5:13
d லேவி 1:3
e லேவி 2:1
f லேவி 4:8-10; 1ரா 8:64-66
g 2நா 4:1
h எண் 34:2, 5, 8
i லேவி 23:34; உபா 16:13
j லேவி 23:36
k உபா 16:15
l 2நா 6:41
m பிர 2:4
n 1ரா 9:1-3
o 2நா 1:7
p உபா 12:5, 6; சங் 78:68
q ஏசா 43:10
r லேவி 26:41; 2நா 33:12, 13
s ஏசா 55:7
t 2நா 6:39

15 இந்த இடத்திலிருந்து ஒருவர் ஜெபம் செய்யும்போது நான் கண்ணோக்
கிப் பார்ப்பேன், காதுகொடுத்துக் கேட்பேன்.[a] 16 இந்த ஆலயத்தில் என்
னுடைய பெயர் என்றென்றும் நிலைத்திருப்பதற்காக இந்த ஆலயத்தைத்
தேர்ந்தெடுத்து புனிதப்படுத்தினேன்;[b] என் கண்ணும் என் இதயமும் எப்
போதும் இங்கேதான் இருக்கும்.[c]

17 உன் அப்பா தாவீதைப் போல் நீயும் என்னுடைய கட்டளைகள் எல்
லாவற்றையும் கடைப்பிடித்தால், என் விதிமுறைகளுக்கும் நீதித்தீர்ப்புகளுக்
கும் கீழ்ப்படிந்தால்,[d] 18 உன் சிம்மாசனத்தை நிலைக்கச் செய்வேன்;[e]
'இஸ்ரவேலை ஆட்சி செய்ய உனக்கு வாரிசு இல்லாமல் போவதில்லை'[f]
என்று உன் அப்பா தாவீதோடு செய்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவேன்.[g]
19 ஆனால், நீ என் வழியைவிட்டு விலகி என் சட்டதிட்டங்களையும்
என் கட்டளைகளையும் மீறினால், மற்ற தெய்வங்களை வழிபட்டு அவற்
றின் முன்னால் தலைவணங்கினால்,[h] 20 நான் கொடுத்த இந்தத் தேசத்தி
லிருந்து இஸ்ரவேலர்களை வேரோடு பிடுங்கியெறிவேன்.[i] என்னுடைய
பெயருக்காக நான் புனிதப்படுத்திய இந்த ஆலயத்தை என் கண் முன்னா
லிருந்து ஒதுக்கித்தள்ளிவிடுவேன். எல்லா மக்களும் அதைப் பார்த்து ஏளன
மாகப் பேசும்படி செய்வேன், கேலி கிண்டல் செய்யும் நிலைக்குக் கொண்டு
வருவேன்.[j] 21 இந்த ஆலயம் மண்மேடாகும். இதன் வழியாகப் போகிற
எல்லாரும் இதை ஆச்சரியத்தோடு பார்ப்பார்கள்;[k] 'இந்தத் தேசத்தையும்
இந்த ஆலயத்தையும் யெகோவா ஏன் இந்த நிலைமைக்குக் கொண்டுவந்
துவிட்டார்?'[l] என்று கேட்பார்கள். 22 பின்பு, 'இவர்களுடைய முன்னோர்
களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டுவந்த[m] இவர்களுடைய முன்னோர்க
ளின் கடவுளாகிய யெகோவாவை விட்டுவிட்டு,[n] மற்ற தெய்வங்களை
ஏற்றுக்கொண்டார்கள், அவற்றின் முன்னால் தலைவணங்கி அவற்றுக்குச்
சேவை செய்தார்கள்.[o] அதனால்தான் இந்தக் கஷ்டத்தையெல்லாம் இவர்க
ளுக்குக் கொடுத்திருக்கிறார்'[p] என்று சொல்வார்கள்" என்றார்.

8 யெகோவாவின் ஆலயத்தையும் தன்னுடைய அரண்மனையையும்
20 வருஷங்களில் சாலொமோன் கட்டி முடித்தார்.[q] 2 அதன் பின்பு,
ஈராம்[r] தனக்குக் கொடுத்த நகரங்களை சாலொமோன் திரும்பக் கட்டி, இஸ்
ரவேலர்களை அங்கே குடியேற்றினார். 3 அதோடு, காமாத்-சோபாவு
டன் போர் செய்து அதைக் கைப்பற்றினார். 4 பின்பு, வனாந்தரத்தில்
தத்மோர் நகரத்தையும், காமாத்[s] பகுதியில் தன்னுடைய சேமிப்புக் கிடங்
குகள்[t] இருந்த நகரங்களையும் வலுப்படுத்தினார்.* 5 மேல் பெத்-ஓரோ
னையும்[u] கீழ் பெத்-ஓரோனையும்[v] வலுப்படுத்தினார்; மதில்கள், கதவுகள்,
தாழ்ப்பாள்கள் கொண்ட பாதுகாப்பான நகரங்களாக அவற்றை மாற்றினார்.
6 பாலாத்[w] நகரத்தையும் சாலொமோனின் சேமிப்புக் கிடங்குகளுக்கான
எல்லா நகரங்களையும் ரதங்களுக்கான எல்லா நகரங்களையும்[x] குதிரை
வீரர்களுக்கான நகரங்களையும் கட்டினார். அதோடு, எருசலேமிலும் லீப
னோனிலும் தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதி முழுவதிலும் தான்
விரும்பிய எல்லாவற்றையும் அவர் கட்டினார்.

7 மற்ற தேசத்து மக்களான[y] ஏத்தியர்கள், எமோரியர்கள், பெரிசியர்
கள், ஏவியர்கள், எபூசியர்கள்[z] ஆகியவர்களில் மீதியாக இருந்தவர்களின்

8:4 * வே.வா., "திரும்பக் கட்டினார்."

அதி. 7
a 2நா 6:40
b உபா 12:21
c 2நா 6:20
d 1ரா 9:4, 5
e 2சா 7:12, 13
f 1ரா 2:4
g சங் 89:28, 29
h யாத் 20:5; 1ரா 9:6-9
i உபா 4:25, 26; 2ரா 17:20
j உபா 28:37; எரே 24:9
k 2நா 29:8; தானி 9:12
l உபா 29:24, 25; 2ரா 25:8, 9; எரே 22:8, 9
m யாத் 12:51
n 2நா 15:2
o ஏசா 2:8; எரே 2:11
p 2நா 36:17

அதி. 8
q 1ரா 6:37, 38; 1ரா 7:1; 1ரா 9:10
r 1ரா 5:1
s 2ரா 14:28
t 1ரா 9:17-19
u யோசு 16:5
v யோசு 16:1, 3; 1நா 7:24
w யோசு 19:44, 48
x 1ரா 4:26
y 1ரா 9:20-23
z ஆதி 15:18-21; எண் 13:29

வம்சத்தார், **8** அதாவது இஸ்ரவேலர்கள் அடியோடு அழிக்காமல் விட்டு
வைத்திருந்த ஆட்களின் வம்சத்தார்,[a] தேசத்தில் இருந்தார்கள்; சாலொ
மோன் அவர்களை அடிமைப்படுத்தி வேலை வாங்கினார். அவர்கள்
இன்றுவரை அவருக்கு அடிமைகளாக இருக்கிறார்கள்.[b] **9** ஆனால், இஸ்
ரவேலர்களில் யாரையும் அடிமையாக்கி வேலை வாங்கவில்லை;[c] ஏனென்
றால், அவர்கள் சாலொமோனுடைய போர்வீரர்களாக, அவருடைய படை
அதிகாரிகளுக்குத் தலைவர்களாக, அவருடைய ரதவீரர்களுக்கும் குதிரை
வீரர்களுக்கும் தலைவர்களாக இருந்தார்கள்.[d] **10** சாலொமோன் ராஜாவு
டைய வேலைகளை மேற்பார்வை செய்ய 250 பேர் இருந்தார்கள். இவர்கள்
நிர்வாகிகளுக்குத் தலைவர்களாக இருந்தார்கள். வேலை செய்த ஆட்க
ளுக்கு இவர்கள் அதிகாரிகளாக இருந்தார்கள்.[e]

11 சாலொமோன் பார்வோனுடைய மகளை[f] 'தாவீதின் நகரத்திலி
ருந்து' கூட்டிக்கொண்டுவந்து, அவளுக்காகத் தான் கட்டிய மாளிகையில்
குடிவைத்தார்.[g] "என் மனைவியாக இருந்தாலும்கூட, இஸ்ரவேலின் ராஜா
வான தாவீதின் அரண்மனையில் அவள் குடியிருக்கக் கூடாது; யெகோவா
வின் பெட்டி இருக்கும் இடங்களெல்லாம் பரிசுத்தமானவை"[h] என்று அவர்
நினைத்ததால் அப்படிச் செய்தார்.

12 பின்பு, நுழைவு மண்டபத்துக்கு[i] முன்னால் யெகோவாவுக்கென்று
தான் கட்டியிருந்த பலிபீடத்தில்[j] யெகோவாவுக்குத் தகன பலிகளைக்[k]
கொடுத்தார். **13** மோசே கொடுத்த கட்டளைப்படி, சாலொமோன் தினமும்
பலிகள் கொடுத்துவந்தார்; அதேபோல், ஓய்வுநாளிலும்[l] ஒவ்வொரு மாதப்
பிறப்பிலும்*[m] கொடுத்துவந்தார். புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகை,[n]
வாரங்களின் பண்டிகை,[o] கூடாரப் பண்டிகை[p] என வருஷா வருஷம்
கொண்டாடப்படுகிற மூன்று பண்டிகை நாட்களிலும்[q] பலிகள் கொடுத்துவந்
தார். **14** தன்னுடைய அப்பா தாவீதின் கட்டளைப்படியே, குருமார்களைப்
பல பிரிவுகளாகப் பிரித்து,[r] ஆலயத்தில் சேவை செய்ய நியமித்தார்.
அதோடு, லேவியர்களுக்கும் வேலைகளை நியமித்தார்; தினமும் கடவு
ளைப் புகழ்ந்து பாடுவதற்கும்[s] குருமார்களுக்கு உதவி செய்வதற்கும்*
அவர்களை நியமித்தார்; வெவ்வேறு வாசல்களில் காவல் காப்பதற்கு வாயிற்
காவலர்களின் பிரிவுகளை ஏற்படுத்தினார்.[t] இப்படிச் செய்யச் சொல்லி உண்
மைக் கடவுளின் ஊழியரான தாவீது கட்டளையிட்டிருந்தார். **15** சேமிப்பு
அறைகள் சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தாலும் சரி, வேறெந்த விஷ
யமாக இருந்தாலும் சரி, ராஜா கொடுத்த கட்டளைகளுக்குக் குருமார்களும்
லேவியர்களும் அப்படியே கீழ்ப்படிந்தார்கள். **16** யெகோவாவின் ஆல
யத்துக்கு அஸ்திவாரம் போட்ட நாள்முதல்[u] அதைக் கட்டிமுடித்த நாள்
வரை, எல்லா வேலைகளையும் சாலொமோன் நன்றாகத் திட்டமிட்டுச் செய்
தார்.* இப்படி, யெகோவாவின் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.[v]

17 அதன் பின்பு, ஏதோம் தேசத்தின்[w] கடலோரத்தில் இருந்த ஏலோத்
துக்கும்[x] எசியோன்-கேபேருக்கும்[y] சாலொமோன் போனார். **18** ஈராம்[z]
தன்னுடைய ஊழியர்கள் மூலம் சாலொமோனுக்குக் கப்பல்களை அனுப்பி
வைத்தார், அதோடு அனுபவமுள்ள மாலுமிகளையும் அனுப்பி வைத்தார்.

8:13 *வே.வா., "முதலாம் பிறையிலும்." **8:14** *வே.வா., "குருமார்கள் முன்னி
லையில் சேவை செய்வதற்கும்." **8:16** *வே.வா., "ஒழுங்கான முறையில் செய்துமு
டித்தார்."

அதி. 8
a யோசு 15:63
யோசு 17:12
b யோசு 16:10
2நா 2:17, 18
c லேவி 25:39
d 1சா 8:11, 12
e 1ரா 5:16
1ரா 9:23
2நா 2:18
f 1ரா 3:1
g 1ரா 7:8
1ரா 9:24
h யாத் 29:43
i 1ரா 6:3
j 2நா 4:1
k லேவி 1:3
l எண் 28:9
m எண் 28:11-15
n உபா 16:16
o லேவி 23:6
p லேவி 23:
15, 16
q லேவி 23:34
r 1நா 24:1
s 1நா 6:31, 32
1நா 15:16
1நா 16:37, 42
1நா 25:1
t 1நா 26:1
u 1ரா 6:1
v 1ரா 7:51
w 1ரா 9:26-28
x உபா 2:8
2ரா 14:21, 22
2ரா 16:6
y எண் 33:1, 35
1ரா 22:48
z 2சா 5:11

அவர்கள் சாலொமோனின் ஆட்களோடு ஓப்பீருக்குப்[a] போய், அங்கி
ருந்து 450 தாலந்து* தங்கத்தை[b] சாலொமோன் ராஜாவுக்குக்[c] கொண்டுவந்
தார்கள்.

9 சாலொமோனைப் பற்றி சேபா தேசத்து ராணி[d] கேள்விப்பட்டாள்;
அதனால், சிக்கலான கேள்விகளைக் கேட்டு* அவருடைய அறிவைச்
சோதித்துப் பார்க்க, மிகப் பெரிய பரிவாரத்துடன் எருசலேமுக்கு வந்
தாள். பரிமளத் தைலத்தையும் ஏராளமான தங்கத்தையும்[e] ரத்தினக் கற்களை
யும் அவளுடைய ஒட்டகங்கள் சுமந்துவந்தன. அவள் சாலொமோனைச் சந்
தித்து, தன் மனதில் இருந்த எல்லா விஷயங்களைப் பற்றியும் கேட்டாள்.[f]
2 அவள் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் சாலொமோன் பதில் சொன்னார்.
எந்தக் கேள்வியும் அவருக்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

3 சாலொமோனின் ஞானம்,[g] அவர் கட்டிய அரண்மனை,[h] **4** அவரு
டைய ஊழியர்கள் உட்கார்ந்திருந்த வரிசை, மேஜையில் பரிமாறப்பட்ட
உணவு,[i] பரிமாறப்பட்ட விதம், பரிமாறியவர்களின் உடை, பானம் பரிமாறிய
ஆட்கள், அவர்களுடைய உடை, யெகோவாவின் ஆலயத்தில் அவர் வழக்
கமாகச் செலுத்திய தகன பலிகள்[j] ஆகியவற்றைப் பார்த்து சேபா தேசத்து
ராணி வாயடைத்துப்போனாள்.* **5** அதனால் ராஜாவிடம், "உங்களுடைய
சாதனைகளையும்* ஞானத்தையும் பற்றி எங்கள் தேசத்தில் நான் கேள்விப்
பட்டது அத்தனையும் உண்மை. **6** ஆனால், நேரில் வந்து பார்க்கும்வரை
அதையெல்லாம் நான் நம்பவே இல்லை.[k] உங்களுடைய மகா ஞானத்தைப்[l]
பற்றிப் பாதிகூட நான் கேள்விப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்
டும். நான் கேள்விப்பட்டதைவிட நீங்கள் பல மடங்கு சிறந்தவராக இருக்
கிறீர்கள்.[m] **7** உங்களுடைய மக்கள் எவ்வளவு சந்தோஷமானவர்கள்! எப்
போதும் உங்களோடு இருந்து, உங்களுடைய ஞானமான வார்த்தைகளைக்
கேட்கிற உங்களுடைய ஊழியர்கள் எவ்வளவு சந்தோஷமானவர்கள்!
8 உங்கள்மீது பிரியம் வைத்து, தன்னுடைய சிம்மாசனத்தில் உங்களை உட்
கார வைத்த உங்களுடைய கடவுளான யெகோவாவைப் போற்றிப் புகழ்கி
றேன். இஸ்ரவேலர்கள்மீது இன்றுபோல் என்றும் அன்பு காட்ட வேண்டு
மென்று யெகோவா விரும்புவதால்,[n] அவர்களுக்கு நீதி நியாயம் வழங்க
உங்களை ராஜாவாக ஆக்கியிருக்கிறார்" என்று சொன்னாள்.

9 பின்பு, 120 தாலந்து* தங்கத்தையும்[o] பெருமளவு பரிமளத் தைலத்
தையும் ரத்தினக் கற்களையும் சாலொமோன் ராஜாவுக்குக் கொடுத்தாள்.[p]
சேபா தேசத்து ராணி கொண்டுவந்த அளவுக்குப் பரிமளத் தைலத்தை
அதன் பிறகு வேறு யாருமே கொண்டுவரவில்லை.

10 ஓப்பீரிலிருந்து தங்கம் கொண்டுவந்த ஈராமின் ஆட்களும் சாலொ
மோனின் ஆட்களும்,[q] சந்தன மரங்களையும் விலைமதிப்புள்ள கற்க
ளையும்கூட கொண்டுவந்தார்கள்.[r] **11** அந்தச் சந்தன மரங்களைப் பயன்
படுத்தி யெகோவாவின் ஆலயத்திலும் தன்னுடைய அரண்மனையிலும்[s]
படிக்கட்டுகளை[t] ராஜா அமைத்தார். அதோடு, பாடகர்களுக்காக யாழ்க
ளையும் நரம்பிசைக் கருவிகளையும் செய்தார்.[u] இதற்கு முன்பு யாருமே
இவ்வளவு தரமான மரங்களை யூதா தேசத்தில் பார்த்ததில்லை.

8:18; 9:9 * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்
கள். **9:1** * வே.வா., "புதிர்களைப் போட்டு." **9:4** * நே.மொ., "ராணிக்குப் பேச்சு
மூச்சே இல்லாமல் போனது." **9:5** * வே.வா., "வார்த்தைகளையும்."

அதி. 8
a 1ரா 22:48, சங் 45:9
b 1ரா 10:22
c பிர 2:8

அதி. 9
d மத் 12:42, லூ 11:31
e சங் 72:15
f 1ரா 10:1-3
g 1ரா 3:28, பிர 12:9
h 1ரா 10:4-9
i 1ரா 4:22, 23
j 2நா 8:12, 13
k லூ 11:31
l பிர 1:16
m 1ரா 4:31, 34, 2நா 1:11, 12
n 2நா 2:11
o சங் 72:10
p 1ரா 10:10
q 1ரா 9:27, 28, 1ரா 10:22, 2நா 8:18
r 1ரா 10:11, 12
s 1ரா 7:1
t 1ரா 6:8
u 1நா 25:1, சங் 92:3

12 சாலொமோன் ராஜாவும்கூட சேபா தேசத்து ராணி ஆசைப்பட்டுக்
கேட்ட எல்லாவற்றையும் கொடுத்தார். அவள் கொண்டுவந்ததைவிட அதி
கமான அன்பளிப்புகளைக் கொடுத்தார்.* அதன் பின்பு, அவள் தன் ஊழி
யர்களோடு தன்னுடைய தேசத்துக்குத் திரும்பிப் போனாள்.[a]

13 ஒவ்வொரு வருஷமும் சாலொமோனுக்குக் கிடைத்த தங்கத்தின்
எடை 666 தாலந்து.[b] **14** இது தவிர, வியாபாரிகளும் பயண வியாபாரிக
ளும் அவருக்குப் பொருள்களைக் கொண்டுவந்தார்கள். அரேபியாவி
லுள்ள எல்லா ராஜாக்களும் இஸ்ரவேல் ஆளுநர்களும் அவருக்குத் தங்க
மும் வெள்ளியும் கொண்டுவந்தார்கள்.[c]

15 சாலொமோன் ராஜா கலப்புத் தங்கத்தில் 200 பெரிய கேடயங்க
ளைச் செய்தார்[d] (ஒவ்வொரு கேடயத்துக்கும் 600 சேக்கல்* கலப்புத் தங்
கம் பயன்படுத்தப்பட்டது).[e] **16** அதோடு, கலப்புத் தங்கத்தில் 300 சிறிய
கேடயங்களையும்* செய்தார். (இவை ஒவ்வொன்றையும் செய்ய மூன்று
மினா# தங்கம் பயன்படுத்தப்பட்டது). பின்பு, ‘லீபனோன் வன மாளிகை
யில்’[f] அவற்றை வைத்தார்.

17 அதோடு, யானைத்தந்தத்தில் மிகப் பெரிய சிம்மாசனம் ஒன்றைச்
செய்து, அதன்மீது சுத்தமான தங்கத்தால் தகடு அடித்தார்.[g] **18** அந்தச் சிம்
மாசனத்துக்கு ஏறிப் போக ஆறு படிக்கட்டுகள் இருந்தன. அதனுடன் ஒரு
தங்கக் கால்மணையும் இணைக்கப்பட்டிருந்தது. இருக்கையின் இரண்டு பக்
கங்களிலும் கைப்பிடிகள் இருந்தன, ஒவ்வொரு கைப்பிடியின் பக்கத்திலும்
ஒரு சிங்க உருவம்[h] வைக்கப்பட்டிருந்தது. **19** அதோடு, ஆறு படிக்கட்
டுகளிலும் இந்தப் பக்கம் ஒரு சிங்கம், அந்தப் பக்கம் ஒரு சிங்கம்
என மொத்தம் 12 சிங்க உருவங்கள்[i] வைக்கப்பட்டிருந்தன. வேறெந்த ராஜ்
யத்திலும் இப்படிப்பட்ட சிம்மாசனம் செய்யப்படவில்லை. **20** சாலொ
மோன் ராஜா குடிக்கப் பயன்படுத்திய பாத்திரங்கள் எல்லாமே தங்கத்தில்
செய்யப்பட்டிருந்தன. ‘லீபனோன் வன மாளிகையில்’ இருந்த எல்லா பாத்தி
ரங்களும் சுத்தமான தங்கத்தில் செய்யப்பட்டிருந்தன, எதுவும் வெள்ளியில்
செய்யப்படவில்லை. ஏனென்றால், சாலொமோன் காலத்தில் வெள்ளி[j] ஒரு
பொருட்டாகவே மதிக்கப்படவில்லை. **21** ராஜாவின் கப்பல்கள் ஈராமின்[k]
ஆட்களோடு தர்ஷீசுக்குப்[l] போய்வந்தன. மூன்று வருஷங்களுக்கு ஒரு
முறை தங்கம், வெள்ளி, யானைத்தந்தம்,[m] வாலில்லா குரங்குகள், மயில்கள்
ஆகியவற்றை ‘தர்ஷீஸ் கப்பல்கள்’ கொண்டுவந்தன.

22 இப்படி, உலகத்திலிருந்த வேறெந்த ராஜாவையும்விட செல்வத்தி
லும் ஞானத்திலும்[n] சாலொமோன் ராஜா தலைசிறந்தவராக இருந்தார்.
23 சாலொமோனைச் சந்தித்து, உண்மைக் கடவுள் தந்த ஞானத்தால்[o]
அவர் பேசிய வார்த்தைகளைக் கேட்க உலகத்திலிருந்த எல்லா தேசத்து
ராஜாக்களும் ஆசைப்பட்டார்கள். **24** அவரைச் சந்திக்க வந்த ஒவ்வொ
ருவரும் தங்கப் பொருள்கள், வெள்ளிப் பொருள்கள், உடைகள்,[p] ஆயுதங்

9:12 *அல்லது, “அவள் கொண்டுவந்த அன்பளிப்புகளின் மதிப்பைவிட அதிக மாகக் கொடுத்தார்.” **9:15** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராமுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **9:16** *பொதுவாக, வில்வீரர்கள் இவற்றை வைத்திருப்பார்கள். #எபிரெய வேதாகமத்தில், ஒரு மினா என்பது 570 கிராமுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 9

a 1ரா 10:13

b 1ரா 10:14, 15; 2நா 1:15; சங் 68:29; சங் 72:15

c சங் 72:10

d 2நா 12:9

e 1ரா 10:16, 17

f 1ரா 7:2

g 1ரா 10:18-20

h ஆதி 49:9

i எண் 23:24

j 1ரா 10:21, 22; 1ரா 10:27

k 1ரா 9:27

l சங் 72:10; யோனா 1:3

m 1ரா 10:18

n 1ரா 3:12, 13; 1ரா 4:29; 1ரா 10:23-25

o 1ரா 3:28; 1ரா 4:34; 2நா 1:12; நீதி 2:6

p மத் 6:29

கள், பரிமளத் தைலம், குதிரைகள், கோவேறு கழுதைகள்* ஆகிய
வற்றை அன்பளிப்பாகக் கொண்டுவந்தார்கள்; வருஷா வருஷம் இப்ப
டிச் செய்துவந்தார்கள். **25** சாலொமோனிடம் 4,000 குதிரை லாயங்களும்,
ரதங்களும், 12,000 குதிரைகளும்*[a] இருந்தன; ரதங்களுக்கான நகரங்களி
லும் எருசலேமில் ராஜா குடியிருந்த இடத்துக்குப் பக்கத்திலும் அவற்றை
நிறுத்தி வைத்தார்.[b] **26** ஆறு* தொடங்கி பெலிஸ்தியர்களின் தேசம்
வரையிலும் எகிப்தின் எல்லை வரையிலும் இருந்த எல்லா அரசர்களையும்
அவர் ஆட்சி செய்தார்.[c] **27** வெள்ளியைக் கற்களைப் போலவும், தேவ
தாரு மரங்களை சேப்பெல்லாவிலுள்ள காட்டத்தி மரங்களைப்[d] போல
வும் சாலொமோன் ராஜா எருசலேமில் ஏராளமாகக் கிடைக்கச் செய்தார்.
28 எகிப்திலிருந்தும் மற்ற தேசங்களிலிருந்தும் சாலொமோனுக்காகக் குதி
ரைகள் கொண்டுவரப்பட்டன.[e]

29 ஆரம்பம்முதல் முடிவுவரை சாலொமோனின் வாழ்க்கையில் நடந்த
மற்ற விஷயங்கள்[f] எல்லாம் நாத்தான்[g] தீர்க்கதரிசி எழுதிய புத்தகத்திலும்,
சீலோனியரான அகியா[h] எழுதிய தீர்க்கதரிசனப் புத்தகத்திலும் உள்ளன.
தரிசனக்காரரான இத்தோ[i] எழுதிய தரிசனப் புத்தகத்திலும் உள்ளன; இவர்
நேபாத்தின் மகன் யெரொபெயாமைப்[j] பற்றியும் எழுதினார். **30** இஸ்ர
வேல் முழுவதையும் எருசலேமிலிருந்து சாலொமோன் 40 வருஷங்கள்
ஆட்சி செய்தார். **31** பின்பு, சாலொமோன் இறந்ததும், அவருடைய அப்
பாவான 'தாவீதின் நகரத்தில்' அடக்கம் செய்யப்பட்டார்;*[k] அவருக்குப்
பிறகு, அவருடைய மகன் ரெகொபெயாம் ராஜாவானார்.[l]

10 ரெகொபெயாம் சீகேமுக்குப்[m] போனார்; ஏனென்றால், அவரை
ராஜாவாக்க இஸ்ரவேலர்கள் எல்லாரும் அங்கே வந்திருந்தார்கள்.[n]
2 இந்த விஷயத்தை நேபாத்தின் மகன் யெரொபெயாம்[o] கேள்விப்பட்டவு
டன், எகிப்திலிருந்து திரும்பி வந்தார் (அந்தச் சமயத்தில் அவர் எகிப்தில்
இருந்தார்; முன்பு சாலொமோன் ராஜாவுக்குப் பயந்து எகிப்துக்கு ஓடிப்போ
யிருந்தார்.)[p] **3** இஸ்ரவேலர்கள் ஆள் அனுப்பி அவரை வரவழைத்தார்
கள். பின்பு யெரொபெயாமும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் ரெகொபெயாமி
டம் வந்து, **4** "உங்களுடைய அப்பா எங்கள்மேல் பாரமான சுமையைச்
சுமத்தினார்.[q] நீங்கள் அந்தச் சுமையைக் குறைத்து எங்களுடைய வேலை
யைச் சுலபமாக்கினால், நாங்கள் உங்களுக்குச் சேவை செய்வோம்" என்று
சொன்னார்கள்.

5 அதற்கு அவர், "சரி, நீங்கள் போய்விட்டு மூன்றாம் நாள் என்னை
வந்து பாருங்கள்" என்று சொன்னார்; அவர்களும் அங்கிருந்து போனார்
கள்.[r] **6** அப்போது ரெகொபெயாம் ராஜா பெரியோர்களிடம்,* அதா
வது தன்னுடைய அப்பாவான சாலொமோனின் காலத்தில் ஆலோசகர்க
ளாக இருந்தவர்களிடம், "இந்த மக்களுக்கு என்ன பதில் சொல்லலாம்,
நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார். **7** அதற்கு அவர்கள்,
"இந்த மக்களுக்குப் பிடித்த மாதிரி நடந்துகொள்ளுங்கள்; அவர்களுக்குத்
தயவு காட்டி, நல்ல பதில் சொல்லுங்கள். அப்படிச் செய்தால் அவர்கள் என்
றைக்கும் உங்களுக்குச் சேவை செய்வார்கள்" என்று சொன்னார்கள்.

9:24 * பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்த விலங்குகள். **9:25** * வே.வா., "குதிரைவீரர்களும்." **9:26** * அதாவது, "யூப்ரடிஸ் ஆறு." **9:31** * நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்." **10:6** * வே.வா., "மூப்பர்களிடம்."

அதி. 9
a உபா 17:16; 1ரா 4:26
b 1ரா 10:26
c 1ரா 4:21
d 1ரா 10:27; 1நா 27:28
e 1ரா 10:28; 2நா 1:16
f 1ரா 11:41-43
g 2சா 7:2; 2சா 12:1; 1ரா 1:8; 1நா 29:29
h 1ரா 11:30, 31; 1ரா 14:2; 1ரா 14:6, 10
i 2நா 12:15; 2நா 13:22
j 1ரா 11:26
k 2சா 5:9; 1ரா 2:10
l 1ரா 14:21

அதி. 10
m யோசு 20:7; யோசு 24:1; நியா 9:1
n 1ரா 12:1-4
o 1ரா 11:28
p 1ரா 11:40
q 1சா 8:11-18; 1ரா 4:7
r 1ரா 12:5-7

8 ஆனால், பெரியோர்கள் கொடுத்த ஆலோசனையை அவர் ஒதுக்
கித்தள்ளிவிட்டு, தன்னோடு வளர்ந்து இப்போது தனக்குச் சேவை செய்கிற
இளைஞர்களிடம் ஆலோசனை கேட்டார்.[a] **9** அவர்களிடம், "'எங்கள்
மீது உங்களுடைய அப்பா சுமத்திய பாரமான சுமையைக் குறைக்க வேண்
டும்' என்று மக்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு என்ன பதில் சொல்ல
லாம், உங்களுடைய ஆலோசனை என்ன?" என்று கேட்டார். **10** அதற்கு
அந்த இளைஞர்கள், "'உங்களுடைய அப்பா சுமத்திய பாரமான சுமையைக்
குறைக்க வேண்டும்' என்று கேட்டவர்களிடம், 'என் அப்பாவைவிட நான்
ரொம்பக் கண்டிப்பானவன்.* **11** என் அப்பா உங்கள்மீது பாரமான சுமை
யைச் சுமத்தினார், நான் அதைவிட பாரமான சுமையை உங்கள்மீது சுமத்
துவேன். என் அப்பா உங்களைச் சாட்டையால் அடித்தார், நானோ முள்
சாட்டையால் அடிப்பேன்' என்று சொல்லுங்கள்" என்றார்கள்.

12 "மூன்றாம் நாள்[b] என்னை வந்து பாருங்கள்" என்று ரெகொபெயாம்
ராஜா சொன்னபடியே யெரொபெயாமும் மற்ற எல்லாரும் அவரிடம் வந்தார்
கள். **13** ஆனால், ராஜா அவர்களிடம் கடுமையாகப் பேசினார். இப்படி,
பெரியோர்கள் சொன்ன ஆலோசனையை ரெகொபெயாம் ராஜா ஒதுக்கித்
தள்ளிவிட்டார். **14** இளைஞர்கள் கொடுத்த ஆலோசனைப்படியே, "என்
அப்பா உங்கள்மீது பாரமான சுமையைச் சுமத்தினார், நான் அதைவிட பார
மான சுமையை உங்கள்மீது சுமத்துவேன்; என் அப்பா உங்களைச் சாட்
டையால் அடித்தார், நான் முள்சாட்டையால் அடிப்பேன்" என்று அந்த
மக்களிடம் சொன்னார். **15** மக்களின் வேண்டுகோளை ராஜா ஏற்றுக்
கொள்ளவில்லை. இதெல்லாம் உண்மைக் கடவுளின் செயலாக இருந்தது.[c]
சீலோனியரான அகியா[d] மூலம் நேபாத்தின் மகனான யெரொபெயாமிடம்
தான் சொன்னதை நிறைவேற்றுவதற்காக யெகோவா இப்படிச் செய்தார்.

16 தங்களுடைய வேண்டுகோளை ராஜா ஏற்றுக்கொள்ளாததால் இஸ்ர
வேலர்கள் எல்லாரும் ராஜாவைப் பார்த்து, "எங்களுக்கும் தாவீதுக்கும்
எந்தச் சம்பந்தமும் இல்லை. அவரிடமிருந்து எங்களுக்கு ஒரு பலனும்
கிடைக்கப்போவதில்லை. தன்னுடைய சொத்தை ஈசாயின் மகனே வைத்துக்
கொள்ளட்டும். இஸ்ரவேலர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் போய் உங்கள்
தெய்வங்களை வழிபடுங்கள். தாவீதே,[e] உன்னுடைய வம்சத்தை மட்டும்
பார்த்துக்கொள்" என்று சொன்னார்கள். இப்படிச் சொல்லிவிட்டு இஸ்ரவேலர்
கள் எல்லாரும் தங்களுடைய வீடுகளுக்கு* திரும்பிப் போனார்கள்.[f]

17 ஆனால், யூதாவின் நகரங்களில் வாழ்ந்த இஸ்ரவேலர்களை ரெகொ
பெயாம் ஆட்சி செய்துவந்தார்.[g]

18 பின்பு, அடிமை வேலை வாங்கப்பட்ட ஆட்களுக்கு அதிகாரியான
ஹதோராமை*[h] இஸ்ரவேலர்களிடம் ரெகொபெயாம் ராஜா அனுப்பினார்.
அவர்கள் ஹதோராமைக் கல்லெறிந்து கொன்றார்கள். ஆனால், ரெகொ
பெயாம் ராஜா எப்படியோ அவர்களிடமிருந்து தப்பித்து, தன்னுடைய
ரதத்தில் ஏறி எருசலேமுக்குப் போய்விட்டார்.[i] **19** இன்றுவரை தாவீதின்
வம்சத்துக்கு எதிராக இஸ்ரவேலர்கள் கலகம் செய்துகொண்டுதான் இருக்கி
றார்கள்.

10:10 *நே.மொ., "என் அப்பாவின் இடுப்பைவிட என்னுடைய சுண்டுவிரல் பரும
னாக இருக்கும்." **10:16** *நே.மொ., "கூடாரங்களுக்கு." **10:18** *1ரா 4:6-ல் அதோ
னீராம், 1ரா 12:18-ல் அதோராம்.

அதி. 10
a 1ரா 12:8-11
b 1ரா 12:12-15
c உபா 2:30
2சா 17:14
d 1ரா 11:29-31
e 1ரா 11:32
f 1ரா 12:16, 17
g 1ரா 11:35, 36
h 2சா 20:24
1ரா 4:6
i 1ரா 12:18, 19

அதி. 11

11 ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தவுடனே, போர்ப் பயிற்சி பெற்ற 1,80,000 வீரர்களை யூதா வம்சத்திலிருந்தும் பென்யமீன் வம்சத்திலிருந்தும்[a] ஒன்றுதிரட்டினார். இஸ்ரவேலுடன் போர் செய்து அதை மறுபடியும் தன்னுடைய ஆட்சியின்கீழ் கொண்டுவருவதற்காக அப்படிச் செய்தார்.[b] **2** அப்போது யெகோவா, தீர்க்கதரிசி* செமாயாவிடம்,[c] **3** “யூதாவின் ராஜாவான சாலொமோனின் மகன் ரெகொபெயாமிடமும் யூதாவிலும் பென்யமீனிலும் இருக்கிற இஸ்ரவேலர்கள் எல்லாரிடமும் நீ போய், **4** ‘உங்கள் சகோதரர்களை எதிர்த்து நீங்கள் போர் செய்யக் கூடாது. அவரவர் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிப் போய்விட வேண்டும். ஏனென்றால், நான்தான் இப்படி நடக்க வைத்தேன்’[d] என்று யெகோவா சொல்வதாகச் சொல்” என்றார். அவர்கள் யெகோவாவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, யெரொபெயாமை எதிர்த்துப் போர் செய்யாமல் திரும்பிப் போனார்கள்.

5 ரெகொபெயாம் எருசலேமில் குடியிருந்தார், யூதா தேசத்தில் மதில் சூழ்ந்த நகரங்களைக் கட்டினார். **6** அதாவது பெத்லகேம்,[e] ஏத்தாம், தெக்கோவா,[f] **7** பெத்-சூர், சோகோ,[g] அதுல்லாம்,[h] **8** காத்,[i] மரேஷா, சீப்,[j] **9** அதோராயீம், லாகீஸ்,[k] அசெக்கா,[l] **10** சோரா, ஆயலோன்,[m] எப்ரோன்[n] ஆகிய நகரங்களைக் கட்டினார்;* மதில் சூழ்ந்த இந்த நகரங்கள் யூதா, பென்யமீன் பகுதிகளில் இருந்தன. **11** மதில் சூழ்ந்த இந்த நகரங்களை அவர் இன்னும் வலுப்படுத்தி, அவற்றை மேற்பார்வை செய்ய படைத் தலைவர்களை நியமித்தார்; உணவுப் பொருள்கள், எண்ணெய், திராட்சமது ஆகியவற்றை அவர்களுக்கு அனுப்பி வைத்தார். **12** இந்த எல்லா நகரங்களுக்கும் பெரிய கேடயங்களையும் ஈட்டிகளையும் அனுப்பி வைத்து, அவற்றை மிகவும் வலுப்படுத்தினார். யூதா மக்களையும் பென்யமீன் மக்களையும் அவர் ஆட்சி செய்துவந்தார்.

13 இஸ்ரவேல் எங்கும் இருந்த குருமார்களும் லேவியர்களும் தங்களுடைய பகுதிகளைவிட்டு வந்து ரெகொபெயாம் பக்கம் சேர்ந்துகொண்டார்கள். **14** லேவியர்கள் தங்களுடைய மேய்ச்சல் நிலங்களையும் நகரங்களையும் விட்டுவிட்டு[o] யூதாவுக்கும் எருசலேமுக்கும் வந்தார்கள்; ஏனென்றால், யெரொபெயாமும் அவருடைய மகன்களும் அவர்களை யெகோவாவின் சேவையிலிருந்து நீக்கியிருந்தார்கள்.[p] **15** பின்பு யெரொபெயாம், ஆராதனை மேடுகளில் தான் வைத்திருந்த ஆட்டு உருவப் பேய்களுக்கும்*[q] கன்றுக்குட்டி சிலைகளுக்கும்[r] சேவை செய்ய மற்ற ஆட்களைக் குருமார்களாக[s] நியமித்திருந்தார். **16** இஸ்ரவேலின் எல்லா கோத்திரங்களையும் சேர்ந்த சிலர், இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவைத்தான் வழிபட வேண்டுமென உறுதியாக இருந்தார்கள்; அதனால் குருமார்களையும் லேவியர்களையும் பின்பற்றி, இவர்கள் தங்களுடைய முன்னோர்களின் கடவுளான யெகோவாவுக்குப் பலி கொடுக்க எருசலேமுக்கு வந்தார்கள்.[t] **17** யூதாவின் ராஜாவும் சாலொமோனின் மகனுமான ரெகொபெயாமின் ஆட்சிக்கு மூன்று வருஷங்கள் ஆதரவு கொடுத்தார்கள். ஏனென்றால், அவர்கள் தாவீதின் வழியிலும் சாலொமோனின் வழியிலும் மூன்று வருஷங்கள் நடந்தார்கள்.

18 பின்பு, ரெகொபெயாம் மகலாத்தைக் கல்யாணம் செய்துகொண்டார்;

11:2 * நே.மொ., “உண்மைக் கடவுளின் மனிதரான.” **11:10** * வே.வா., “வலுப்படுத்தினார்.” **11:15** * நே.மொ., “வெள்ளாடுகளுக்கும்.”

a ஆதி 49:27; 2நா 14:8
b 1ரா 12:21-24
c 2நா 12:15
d 1ரா 11:31; 2நா 10:15
e ஆதி 35:19; மத் 2:1
f ஆமோ 1:1
g 2நா 28:18
h 1சா 22:1
i 1நா 18:1
j 1சா 23:14
k 2நா 32:9
l யோசு 10:10; எரே 34:7
m யோசு 19:42, 48
n யோசு 14:14, 15; 2சா 2:1
o எண் 35:2, 3
p 1ரா 12:31, 32
q லேவி 17:7
r 1ரா 12:26, 28
s 1ரா 13:33
t உபா 12:11; 1நா 22:1; 2நா 15:8, 9; 2நா 30:10, 11

அவள் தாவீதின் மகனான யெரிமோத்துக்கும் ஈசாயின் பேத்தியும் எலியா
பின்[a] மகளுமாகிய அபியாயேலுக்கும் பிறந்தவள். **19** எயூஷ், செமரியா,
சாகாம் ஆகியோரை ரெகொபெயாமுக்கு மகலாத் பெற்றாள். **20** அடுத்து,
அப்சலோமின்[b] பேத்தி மாக்காளை ரெகொபெயாம் கல்யாணம் செய்து
கொண்டார். அபியா,[c] அத்தாய், சீசா, செலோமித் ஆகியோரை அவள்
பெற்றாள். **21** ரெகொபெயாமுக்கு 18 மனைவிகளும் 60 மறுமனைவிக
ளும் இருந்தார்கள்.[d] ஆனாலும், அவர்கள் எல்லாரையும்விட அப்சலோ
மின் பேத்தி மாக்காளைத்தான் அவர் அதிகமாக நேசித்தார். அவருக்கு
28 மகன்களும் 60 மகள்களும் இருந்தார்கள். **22** தனக்கு அடுத்து மாக்கா
ளின் மகன் அபியாவை ராஜாவாக்க வேண்டுமென்று ரெகொபெயாம்
ஆசைப்பட்டார்; அதனால், தன்னுடைய எல்லா மகன்களுக்கும் அவரைத்
தலைவராக ஆக்கினார். **23** அதோடு, புத்திசாலித்தனமாகத் தன்னுடைய
மகன்களில் சிலரை யூதா, பென்யமீன் பகுதிகளில் இருந்த மதில் சூழ்ந்த நக
ரங்கள்[e] எல்லாவற்றுக்கும் அனுப்பிவிட்டார்; அவர்களுக்குத் தேவையான
எல்லாவற்றையும் ஏராளமாக வழங்கினார், அவர்களுக்கு நிறைய பெண்க
ளைக் கல்யாணம் செய்து வைத்தார்.

12 ரெகொபெயாமின் ஆட்சி உறுதியாக நிலைநாட்டப்பட்டு,[f] அவர்
வலிமையுள்ள ராஜாவாக ஆனவுடனே யெகோவாவின் சட்டத்தை
ஒதுக்கித்தள்ளினார்;[g] அவருடன் இருந்த இஸ்ரவேலர்கள் எல்லாரும் அவ
ரைப் போலவே நடந்துகொண்டார்கள். **2** ரெகொபெயாம் ஆட்சி செய்த
ஐந்தாம் வருஷத்தில் எகிப்தின் ராஜாவான சீஷாக்[h] எருசலேமை எதிர்த்
துப் போர் செய்ய வந்தான். இஸ்ரவேலர்கள் யெகோவாவுக்கு உண்மையாக
இல்லாததால்தான் இப்படி நடந்தது. **3** சீஷாக் 1,200 ரதங்களோடும் 60,000
குதிரைவீரர்களோடும் வந்தான்; லீபியர்கள், சூக்கியர்கள், எத்தியோப்பி
யர்கள் ஆகிய எண்ணற்ற வீரர்களையும் எகிப்திலிருந்து[i] திரட்டிக்கொண்டு
வந்தான். **4** யூதாவின் மதில் சூழ்ந்த நகரங்களைக் கைப்பற்றிய பின்பு,
கடைசியில் எருசலேமைத் தாக்க வந்தான்.

5 சீஷாக்குக்குப் பயந்து எருசலேமில் கூடியிருந்த யூதாவின் அதிகாரிக
ளையும் ரெகொபெயாமையும் சந்திக்க செமாயா[j] தீர்க்கதரிசி வந்தார். அவர்
களிடம், “யெகோவா சொல்வது இதுதான்: ‘நீங்கள் என்னை ஒதுக்கிவிட்டீர்
கள்; அதனால் நானும் உங்களை ஒதுக்கிவிட்டு,[k] சீஷாக்கின் கையில்
கொடுத்துவிட்டேன்’” என்று சொன்னார். **6** அதைக் கேட்டதும் இஸ்ர
வேலின் அதிகாரிகளும் ராஜாவும் தாழ்மையுடன் நடந்துகொண்டு,[l]
“யெகோவா நீதியுள்ளவர்” என்று சொன்னார்கள். **7** அவர்கள் தாழ்மை
யாக நடந்துகொண்டதை யெகோவா கவனித்தார்; அதனால் செமாயாவி
டம், “அவர்கள் தாழ்மையாக நடந்துகொண்டார்கள்; அதனால் அவர்களை
அழிக்க மாட்டேன்,[m] சீக்கிரத்தில் அவர்களைக் காப்பாற்றுவேன். சீஷாக்
கைப் பயன்படுத்தி என் கோபத்தை எருசலேம்மீது கொட்ட மாட்டேன்.
8 ஆனால், அவர்கள் அவனுக்குச் சேவை செய்யும் நிலைமை வரும். அப்
போதுதான், எனக்குச் சேவை செய்வதற்கும் மற்ற தேசத்து ராஜாக்க
ளுக்கு* சேவை செய்வதற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்வார்
கள்” என்று யெகோவா சொன்னார்.

12:8 * நே.மொ., “மற்ற ராஜ்யங்களுக்கு.”

அதி. 11
a 1சா 16:6; 1சா 17:13
b 2சா 13:1; 2சா 18:33
c 1ரா 15:1; 2நா 12:16; மத் 1:7
d உபா 17:17
e 2நா 11:5, 11

அதி. 12
f 2நா 11:17
g உபா 32:15; 2நா 26:11, 16
h 1ரா 11:40; 1ரா 14:25
i நாகூ 3:9
j 1ரா 12:22-24
k உபா 28:15; 2நா 15:2
l 2நா 33:10, 12
m 1ரா 21:29; 2நா 34:26, 27

9 எகிப்தின் ராஜாவான சீஷாக் எருசலேம்மீது படையெடுத்து வந்தான்;
யெகோவாவின் ஆலயத்தில் இருந்த பொக்கிஷங்களையும்[a] அரண்மனை
யில் இருந்த பொக்கிஷங்களையும் எடுத்துக் கொண்டுபோனான். சாலொ
மோன் செய்து வைத்திருந்த தங்கக் கேடயங்கள் உட்பட எல்லாவற்றை
யும் எடுத்துக் கொண்டுபோனான்.[b] **10** அதனால், ரெகொபெயாம் ராஜா
அந்தத் தங்கக் கேடயங்களுக்குப் பதிலாக செம்புக் கேடயங்களைச்
செய்து, அரண்மனை வாசலைக் காக்கிற காவலாளிகளின் தலைவர்களிடம்
ஒப்படைத்தார். **11** யெகோவாவின் ஆலயத்துக்கு ராஜா போகும்போ
தெல்லாம் காவலாளிகள் அவற்றை எடுத்துக்கொண்டு அவருடன் போவார்
கள். பின்பு, அவற்றைக் காவலாளிகளின் அறையில் திரும்பக் கொண்டு
வந்து வைத்துவிடுவார்கள். **12** ராஜா தாழ்மையாக நடந்துகொண்டதால்,
அவர்மீது யெகோவாவுக்கு இருந்த கோபம் தணிந்தது;[c] யூதா மக்களும்
சில நல்ல காரியங்களைச் செய்தார்கள்;[d] அதனால், கடவுள் அவர்களை
அடியோடு அழிக்கவில்லை.[e]

13 ரெகொபெயாம் ராஜா எருசலேமில் தன் அதிகாரத்தை வலுப்படுத்
திக்கொண்டு தொடர்ந்து ஆட்சி செய்தார். ராஜாவானபோது அவருக்கு 41
வயது; யெகோவா தன்னுடைய பெயரை நிலைநாட்டுவதற்காக இஸ்ரவே
லில் உள்ள எல்லா கோத்திரத்திலிருந்தும் தேர்ந்தெடுத்திருந்த எருசலேம்
நகரத்திலிருந்து 17 வருஷங்கள் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா
பெயர் நாமாள், அவள் ஓர் அம்மோனியப் பெண்.[f] **14** யெகோவாவைத்
தேட வேண்டும் என்று ரெகொபெயாம் தன் இதயத்தில் உறுதியான தீர்மா
னம் எடுக்காததால்,[g] மோசமான காரியங்களைச் செய்தார்.

15 ஆரம்பம்முதல் முடிவுவரை ரெகொபெயாம் செய்த காரியங்
களெல்லாம், செமாயா[h] தீர்க்கதரிசி எழுதிய வம்சாவளிப் பதிவிலும் தரிச
னக்காரரான இத்தோ[i] எழுதிய வம்சாவளிப் பதிவிலும் இருக்கிறது.
ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் இடையே எப்போதும் போர்
நடந்துகொண்டிருந்தது.[j] **16** ரெகொபெயாம் இறந்ததும்,* அவருடைய
முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்த 'தாவீதின் நகரத்தில்'[k] அடக்
கம் செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு அவருடைய மகன் அபியா[l] ராஜா
வானார்.

13 யெரொபெயாம் ராஜா ஆட்சி செய்த 18-ஆம் வருஷத்தில்,
அபியா யூதாவின் ராஜாவானார்.[m] **2** அவர் மூன்று வருஷங்கள்
எருசலேமில் ஆட்சி செய்தார்; அவருடைய அம்மா பெயர் மிகாயா,[n]
அவள் கிபியாவைச்[o] சேர்ந்த ஊரியேலின் மகள். அபியாவுக்கும் யெரொ
பெயாமுக்கும் இடையே போர் நடந்தது.[p]

3 போர்ப் பயிற்சி பெற்ற[q] 4,00,000 மாவீரர்களுடன் அபியா படை
யெடுத்துப் போனார். அதேபோல், போர்ப் பயிற்சி பெற்ற 8,00,000 மாவீரர்
களுடன் யெரொபெயாம் அவரை எதிர்த்து வந்து அணிவகுத்து நின்றார்.
4 அப்போது, எப்பிராயீம் மலைப்பகுதியில் இருக்கிற செமராயிம் என்ற
மலையில் அபியா நின்றுகொண்டு, "யெரொபெயாமே, இஸ்ரவேலர்களே,
நான் சொல்வதைக் கேளுங்கள். **5** இஸ்ரவேலின் கடவுளான யெகோவா
தாவீதோடு நிரந்தர ஒப்பந்தம்*[r] செய்து, இஸ்ரவேலை என்றென்றும்

12:16 *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்." **13:5** *நே.மொ., "உப்பு ஒப்பந்தம்."

அதி. 12
a 1ரா 7:51
b 1ரா 10:16, 17; 1ரா 14:25-28
c 2நா 33:10, 12
d ஆதி 18:23-25; 1ரா 14:1, 13; 2நா 19:2, 3
e புல 3:22
f உபா 23:3; 1ரா 11:1; 1ரா 14:21
g 1சா 7:3; 1ரா 18:21; மாற் 12:30
h 1ரா 12:22-24
i 2நா 9:29; 2நா 13:22
j 1ரா 14:30, 31
k 2சா 5:9
l மத் 1:7

அதி. 13
m 1ரா 15:1, 2
n 2நா 11:20, 21
o யோசு 18:28; 1சா 10:26
p 1ரா 15:6
q 2நா 11:1
r சங் 89:28, 29

ஆளுகிற அதிகாரத்தை[a] அவருக்கும் அவருடைய வாரிசுகளுக்கும்[b]
கொடுத்திருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா? **6** ஆனால்,
நேபாத்தின் மகனும் சாலொமோனின் ஊழியனுமாகிய இந்த யெரொபெ
யாம்[c] தன் எஜமானுக்கு எதிராகக் கலகம் செய்தான்.[d] **7** வேலைவெட்டி
இல்லாத உதவாக்கரைகள் அவன் பக்கம் சேர்ந்துகொண்டார்கள். சாலொ
மோனின் மகன் ரெகொபெயாம் தைரியமோ அனுபவமோ இல்லாத இளை
ஞனாக இருந்த சமயத்தில், அந்தக் கலகக்காரர்களின் கை ஓங்கியது;
ரெகொபெயாமால் அவர்களை அடக்க முடியவில்லை.

8 இப்போது உங்களிடம் நிறைய பேர் இருக்கிறார்கள், யெரொ
பெயாம் செய்து வைத்த தங்கக் கன்றுக்குட்டிகளைத் தெய்வமாக[e] வழிபட்
டுக்கொண்டிருக்கிறீர்கள், அதனால் தாவீதின் வாரிசுகள் கையில் இருக்கிற
யெகோவாவின் ஆட்சியையே எதிர்த்து நிற்க முடியுமென்று நினைத்துக்
கொண்டிருக்கிறீர்கள். **9** யெகோவா நியமித்த ஆரோன் வம்சத்து குருமார்
களையும் லேவியர்களையும் துரத்திவிட்டு,[f] மற்ற தேசத்து மக்களைப்
போல் நீங்களே குருமார்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டீர்கள்.[g] ஒரு
இளம் காளையையும் ஏழு செம்மறியாட்டுக் கடாக்களையும் கொண்டுவந்
தவனையெல்லாம் பொய் தெய்வங்களுக்குப் பூஜை செய்கிற குருமாராக்கி
விட்டீர்கள். **10** ஆனால், எங்களுக்கு யெகோவாதான் கடவுள்,[h] அவரை
விட்டு நாங்கள் விலகவில்லை; ஆரோனின் வம்சத்தில் வந்த எங்கள்
குருமார்கள் யெகோவாவுக்குச் சேவை செய்கிறார்கள், லேவியர்கள் அவர்
களுக்கு உதவியாக இருக்கிறார்கள். **11** தினமும் காலையிலும் மாலையி
லும் யெகோவாவுக்குத் தகன பலிகளைக் கொடுத்து,[i] நறுமண தூபம்
காட்டுகிறார்கள்;[j] சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்ட மேஜையில் படையல்
ரொட்டிகளை வைக்கிறார்கள்;[k] தினமும் மாலையில் தங்க விளக்குத்தண்
டில்[l] இருக்கிற அகல் விளக்குகளை ஏற்றுகிறார்கள்;[m] இப்படி, எங்கள் கட
வுளான யெகோவா கொடுத்த பொறுப்புகளை நாங்கள் கண்ணும்கருத்துமா
கச் செய்துவருகிறோம். ஆனால், நீங்கள் அவரைவிட்டு விலகிவிட்டீர்கள்.
12 இதோ பாருங்கள், உண்மைக் கடவுள் எங்களுடன் இருக்கிறார், எங்
களை வழிநடத்துகிறார்; உங்களுக்கு எதிராக எக்காளங்களை ஊதி, போர்
முழக்கம் செய்ய குருமார்கள் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் வீரர்களே, உங்
களுடைய முன்னோர்களின் கடவுளான யெகோவாவுக்கு எதிராகப் போர்
செய்யாதீர்கள், அப்படிச் செய்தால் தோற்றுதான் போவீர்கள்"[n] என்று
சொன்னார்.

13 ஆனால் யெரொபெயாம், யூதா வீரர்களைப் பின்பக்கத்திலிருந்து
பதுங்கித் தாக்குவதற்கு ஒரு படையை ஏற்பாடு செய்திருந்தார்; அவரும்
அவருடன் இருந்த படைவீரர்களும் முன்பக்கத்திலிருந்து தாக்க வந்தார்கள்.
14 யூதா வீரர்கள் திரும்பிப் பார்த்தபோது, முன்பக்கத்திலும் பின்பக்கத்தி
லும் படைகள் சூழ்ந்திருப்பதைக் கண்டார்கள். அதனால், அவர்கள் உதவிக்
காக யெகோவாவிடம் கூக்குரலிட்டார்கள்;[o] அப்போது, குருமார்கள் சத்த
மாக எக்காளங்களை ஊதிக்கொண்டிருந்தார்கள். **15** யூதா வீரர்கள் போர்
முழக்கம் செய்தார்கள். அப்போது, யெரொபெயாமும் இஸ்ரவேல் வீரர்கள்
எல்லாரும் அபியாவிடமும் யூதா வீரர்களிடமும் தோற்றுப்போகும்படி உண்
மைக் கடவுள் செய்தார். **16** இஸ்ரவேல் வீரர்கள் யூதா வீரர்களிடமிருந்து
தப்பித்து தலைதெறிக்க ஓடினார்கள். அவர்களை யூதா வீரர்களின் கையில்

அதி. 13

a ஆதி 49:10; 2சா 7:8; சங் 78:70, 71

b 2சா 7:12, 13; 1நா 17:11, 14; லூ 1:32

c 2நா 10:2

d 1ரா 11:26, 27; 1ரா 12:20

e 1ரா 12:26, 28; 2நா 11:15

f 2நா 11:14

g 1ரா 12:31, 33; 1ரா 13:33

h 2நா 11:16

i யாத் 29:39

j யாத் 30:1

k யாத் 25:30

l யாத் 25:31

m யாத் 27:20

n எண் 10:9

o 2நா 14:11; 2நா 18:31

கடவுள் கொடுத்தார். **17** அபியாவும் அவருடைய வீரர்களும் ஏராளமான இஸ்ரவேல் வீரர்களை வெட்டிச் சாய்த்துக்கொண்டே இருந்தார்கள். போர்ப் பயிற்சி பெற்ற 5,00,000 இஸ்ரவேல் வீரர்கள் கொல்லப்பட்டார்கள். **18** இப்படி, இஸ்ரவேல் வீரர்கள் அன்றைக்குத் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆனால், யூதா வீரர்கள் தங்களுடைய முன்னோர்களின் கடவுளான யெகோவாவை நம்பியிருந்ததால் ஜெயித்தார்கள்.[a] **19** யெரொபெயாமை அபியா விடாமல் துரத்திக்கொண்டே போய், அவரிடமிருந்து நகரங்களைக் கைப்பற்றினார்; அதாவது, பெத்தேலையும்[b] அதன் சிற்றூர்களையும்,* எஷானாவையும் அதன் சிற்றூர்களையும், எப்பெரேனையும்[c] அதன் சிற்றூர்களையும் கைப்பற்றினார். **20** அபியாவின் ஆட்சிக்காலம் முழுவதிலும் யெரொபெயாமால் மறுபடியும் தலைதூக்கவே முடியவில்லை. பின்பு, யெரொபெயாமை யெகோவா தண்டித்தார், அதனால் அவர் செத்துப்போனார்.[d]

21 அபியாவின் ஆட்சி நாளுக்கு நாள் வலிமையடைந்தது. காலப்போக்கில், அவர் 14 பெண்களைக் கல்யாணம் செய்தார்,[e] அவருக்கு 22 மகன்களும் 16 மகள்களும் பிறந்தார்கள். **22** அபியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களும், அவர் செய்த செயல்களும் அவர் சொன்ன வார்த்தைகளும் இத்தோ தீர்க்கதரிசியின் புத்தகத்தில்*[f] எழுதப்பட்டிருக்கின்றன.

14 அபியா இறந்த* பின்பு, 'தாவீதின் நகரத்தில்'[g] அடக்கம் செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு, அவருடைய மகன் ஆசா ராஜாவானார்; அவருடைய ஆட்சியில், பத்து வருஷங்களுக்குத் தேசத்தில் அமைதி இருந்தது.

2 ஆசா தன்னுடைய கடவுளான யெகோவாவுக்குப் பிடித்த காரியங்களைச் செய்தார், சரியான செயல்களைச் செய்தார். **3** பொய் தெய்வங்களின் பலிபீடங்களையும் ஆராதனை மேடுகளையும் அழித்துப்போட்டார்,[h] பூஜைத் தூண்களை நொறுக்கிப்போட்டார்,[i] பூஜைக் கம்பங்களை* வெட்டிப்போட்டார்.[j] **4** அதோடு, தங்களுடைய முன்னோர்களின் கடவுளான யெகோவாவை வழிபட வேண்டும் என்றும், அவர் தந்த திருச்சட்டத்தையும் கட்டளைகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் யூதா மக்களிடம் சொன்னார். **5** யூதாவின் எல்லா நகரங்களிலும் இருந்த ஆராதனை மேடுகளையும் தூபபீடங்களையும் அழித்துப்போட்டார்.[k] அவருடைய ஆட்சியில் எதிரிகளின் தொல்லையே இருக்கவில்லை. **6** தேசத்தில் அமைதி நிலவ யெகோவா உதவி செய்ததால் அந்தக் காலப்பகுதியில் போரோ எதிரிகளின் தொல்லையோ இருக்கவில்லை;[l] அதனால், யூதாவில் மதில் சூழ்ந்த நகரங்களை அவர் கட்டினார்.[m] **7** அவர் யூதா மக்களிடம், "இந்த நகரங்களை வலுப்படுத்தி, சுற்றிலும் மதில்களையும் கோபுரங்களையும் கட்டலாம்,[n] கதவுகளையும்* தாழ்ப்பாள்களையும் வைக்கலாம். நம்முடைய கடவுளான யெகோவாவை நாம் தேடுவதால், தேசம் முழுவதும் நம்முடைய கையில்தான் இருக்கிறது. நாம் அவரைத் தேடுவதால், எந்தப் பக்கத்திலிருந்தும் எதிரிகளின் தொல்லை இல்லாமல் நம்மை நிம்மதியாக வாழ வைத்திருக்கிறார்" என்று சொன்னார். அவர்கள் அந்த நகரங்களை வெற்றிகரமாகக் கட்டி முடித்தார்கள்.[o]

13:19 *வே.வா., "அதைச் சுற்றியுள்ள ஊர்களையும்." **13:22** *வே.வா., "விளக்கவுரையில்." **14:1** *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட." **14:3** *சொல் பட்டியலைப் பாருங்கள். **14:7** *நே.மொ., "இரட்டைக் கதவுகளையும்."

அதி. 13
a 2ரா 18:1, 5; 1நா 5:20; 2நா 16:8; சங் 22:5; சங் 37:5; நாகூ 1:7
b 1ரா 12:28, 29
c யோவா 11:54
d 1சா 25:38; 1ரா 14:20; அப் 12:21-23
e உபா 17:17
f 2நா 9:29; 2நா 12:15

அதி. 14
g 2சா 5:9
h உபா 7:5
i யாத் 23:24
j 1ரா 14:22, 23; 2ரா 18:1, 4
k 2நா 34:1, 4
l 2நா 15:15; நீதி 16:7
m 2நா 11:5
n 2நா 32:2, 5
o சங் 127:1

8 யூதாவைச் சேர்ந்த 3,00,000 வீரர்கள் ஆசாவின் படையில் இருந்தார்
கள். அவர்களிடம் பெரிய கேடயங்களும் ஈட்டிகளும் இருந்தன. பென்
யமீனைச் சேர்ந்த 2,80,000 மாவீரர்களும் இருந்தார்கள்; அவர்களிடம் சிறிய
கேடயங்களும்* வில்லுகளும் இருந்தன.[a]
9 பின்பு, எத்தியோப்பியனான சேராகு 10,00,000 வீரர்களுடனும் 300
ரதங்களுடனும்[b] யூதாமீது படையெடுத்து வந்தான். அவன் மரேஷாவுக்கு[c]
வந்தபோது, **10** ஆசா அவனை எதிர்த்துப் போர் செய்யப் போனார்;
அவருடைய வீரர்கள் மரேஷாவுக்குப் பக்கத்தில் இருக்கிற செப்பத்தா
பள்ளத்தாக்கில் அணிவகுத்து நின்றார்கள். **11** அப்போது, ஆசா தன்னு
டைய கடவுளான யெகோவாவிடம் மன்றாடினார்.[d] “யெகோவாவே, நாங்
கள் நிறைய பேரோ கொஞ்சப் பேரோ, எங்களுக்குச் சக்தி இருக்கிறதோ
இல்லையோ, எப்படியிருந்தாலும் உங்களால் உதவி செய்ய முடியும்.[e]
அதனால் யெகோவா தேவனே, எங்களுக்கு உதவி செய்யுங்கள். நாங்கள்
உங்களைத்தான் நம்பியிருக்கிறோம்,[f] இந்தக் கூட்டத்தை எதிர்த்துப் போர்
செய்ய உங்கள் பெயரில் வந்திருக்கிறோம்.[g] யெகோவாவே, நீங்கள்தான்
எங்களுடைய கடவுள். அற்ப மனிதன் உங்களை ஜெயிக்க விட்டுவிடாதீர்
கள்”[h] என்று கெஞ்சினார்.
12 அப்போது, எத்தியோப்பியர்களைத் தோற்கடிக்க ஆசாவுக்கும் யூதா
வீரர்களுக்கும் யெகோவா உதவி செய்தார். அதனால் எத்தியோப்பியர்
கள் தோற்று ஓடினார்கள்.[i] **13** ஆசாவும் அவருடைய ஆட்களும் எத்தி
யோப்பியர்களைத் துரத்திக்கொண்டு போனார்கள். கேரார்வரை[j] அவர்
களை வெட்டி வீழ்த்திக்கொண்டே போனார்கள். யெகோவாவும் அவரு
டைய படைவீரர்களும் எத்தியோப்பியர்களை அடியோடு அழித்துப்போட்
டார்கள், ஒருவர்கூட உயிர்தப்பவில்லை. அதன் பின்பு, யூதா வீரர்கள் ஏரா
ளமான பொருள்களை அவர்களிடமிருந்து கைப்பற்றி வந்தார்கள்.
14 அதோடு, கேராரைச் சுற்றியுள்ள எல்லா நகரங்களையும் தாக்கினார்கள்;
ஏனென்றால், யெகோவாவை நினைத்து அந்த நகரத்தில் இருந்தவர்கள் கதி
கலங்கிப்போயிருந்தார்கள். அங்கே ஏகப்பட்ட பொருள்கள் இருந்தன, அத
னால் யூதா வீரர்கள் அவற்றையெல்லாம் கைப்பற்றிக் கொண்டுவந்தார்கள்.
15 அதுமட்டுமல்ல, மேய்ப்பர்களுடைய கூடாரங்களைக் கீழே தள்ளி ஏரா
ளமான ஆடுகளையும் ஒட்டகங்களையும் ஓட்டிக்கொண்டு எருசலேமுக்
குத் திரும்பி வந்தார்கள்.

15 அப்போது, ஓதேத்தின் மகன் அசரியாமீது கடவுளுடைய சக்தி வந்
தது. **2** அதனால் அவர் ஆசாவிடம் போய், “ஆசா ராஜாவே!
யூதா, பென்யமீன் மக்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள்
யெகோவாவின் பக்கம் இருக்கும்வரை அவர் உங்களுடன் இருப்பார்.[k] அவ
ரைத் தேடினால் அவரைக் கண்டடைய உங்களுக்கு உதவி செய்வார்.[l] நீங்
கள் அவரை விட்டுவிட்டால், அவரும் உங்களை விட்டுவிடுவார்.[m] **3** பல
காலமாக இஸ்ரவேல் மக்கள் உண்மைக் கடவுளை வணங்காமல் இருந்தார்
கள், குருமார்களும் அவரைப் பற்றிக் கற்றுக்கொடுக்காமல் இருந்தார்கள்,
மக்களும் திருச்சட்டத்தைப் பின்பற்றாமல் இருந்தார்கள்.[n] **4** ஆனால், கஷ்
டம் வந்தபோது அவர்கள் மனம் திருந்தி, இஸ்ரவேலின் கடவுளான

14:8 * பொதுவாக, வில்வீரர்கள் இவற்றை வைத்திருப்பார்கள்.

அதி. 14
a 2நா 11:1, 12; 2நா 13:3
b 2நா 16:8
c யோசு 15:20, 44; 2நா 11:5, 8
d யாத் 14:10; 1நா 5:20; 2நா 32:20
e நியா 7:7; 1சா 14:6
f 2நா 13:12; 2நா 32:7, 8
g 1சா 17:45; சங் 20:5; நீதி 18:10
h யோசு 7:9; சங் 9:19
i உபா 28:7
j ஆதி 20:1

அதி. 15
k யாக் 4:8
l ஏசா 55:6
m 1நா 28:9; எபி 10:38
n உபா 33:8, 10; 2நா 17:8, 9; மல் 2:7

அதி. 15
a சங் 106:43, 44; ஏசா 55:7
b உபா 28:15, 48
c யோசு 1:9; 1நா 28:20
d 2ரா 23:24
e 2நா 8:12
f 2நா 11:16; 2நா 30:25
g உபா 4:29; 2ரா 23:3; நெ 10:28, 29
h யாத் 22:20
i 2நா 15:2
j நீதி 16:7
k 1ரா 15:9, 10
l உபா 13:6-9
m 1ரா 15:13, 14
n 1ரா 14:22, 23; 1ரா 22:43; 2ரா 14:3, 4; 2ரா 23:19, 20

யெகோவாவைத் தேடினார்கள். அதனால், தன்னைக் கண்டடைய கடவுள்
அவர்களுக்கு உதவி செய்தார்.[a] **5** அந்தக் காலத்தில் யாருமே பாதுகாப்
பாகப் பயணம் செய்ய முடியவில்லை. ஏனென்றால், இஸ்ரவேல் முழுவதும்
குடியிருந்த மக்கள் மத்தியில் ஒரே கலவரமாக இருந்தது. **6** ஒரு கோத்திரத்
தார் இன்னொரு கோத்திரத்தாரை அழித்தார்கள், ஒரு நகரத்தார் இன்னொரு
நகரத்தாரை ஒழித்தார்கள். எல்லா விதமான கஷ்டங்களாலும் அவர்கள்
நிம்மதியில்லாமல் தவிக்கும்படி கடவுள் அவர்களை விட்டுவிட்டிருந்தார்.[b]
7 ஆனால், நீங்கள் தைரியமாயிருங்கள், சோர்ந்துபோகாதீர்கள்;*[c] உங்களு
டைய செயல்களுக்குக் கைமேல் பலன் கிடைக்கும்" என்று சொன்னார்.

8 அசரியா சொன்ன விஷயங்களையும், ஓதேத் தீர்க்கதரிசி சொன்ன
தீர்க்கதரிசனத்தையும் கேட்டவுடன் ஆசாவுக்குத் தைரியம் வந்தது. உடனே
அவர் யூதா, பென்யமீன் நகரங்கள் எல்லாவற்றிலும் எப்பிராயீம் மலைப்பகு
தியில் தான் கைப்பற்றிய நகரங்களிலும் இருந்த அருவருப்பான சிலைகளை
அழித்துப்போட்டார்.[d] யெகோவாவுடைய ஆலயத்தின் நுழைவு மண்டபத்
துக்கு எதிரிலிருந்த யெகோவாவின் பலிபீடத்தைப் புதுப்பித்தார்.[e] **9** பின்பு
யூதா, பென்யமீன் மக்களையும் எப்பிராயீம், மனாசே, சிமியோன்[f] பகுதிக
ளிலிருந்து வந்து அவர்களோடு தங்கியிருந்த மற்ற தேசத்து மக்களை
யும் ஆசா ஒன்றுகூட்டினார்; அவருடைய கடவுளான யெகோவா அவருக்
குத் துணையாக இருக்கிறார் என்று இவர்கள் கண்டு, பெருங்கூட்டமாக வந்து
அவருடன் சேர்ந்துகொண்டிருந்தார்கள். **10** ஆசா ஆட்சி செய்த 15-ஆம்
வருஷம் மூன்றாம் மாதத்தில், அவர்கள் எல்லாரும் எருசலேமில் ஒன்றுகூ
டினார்கள். **11** எதிரிகளிடமிருந்து பிடித்துவந்த ஆடுமாடுகளில் 700 மாடு
களையும் 7,000 ஆடுகளையும் அவர்கள் அன்றைக்கு யெகோவாவுக்குப்
பலி கொடுத்தார்கள். **12** அதோடு, முன்னோர்களின் கடவுளான யெகோ
வாவை முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் தேடுவோம் என்று
சொல்லி ஒப்பந்தம் செய்தார்கள்;[g] **13** பெரியவரோ சிறியவரோ, ஆணோ
பெண்ணோ, இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவைத் தேடாதவர்கள்
யாராக இருந்தாலும் அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று ஒப்பந்தம்
செய்தார்கள்.[h] **14** எக்காளங்களும் ஊதுகொம்புகளும் முழங்க, சந்தோஷ
ஆரவாரத்தோடு யெகோவாவுக்கு முன்னால் சத்தமாக உறுதிமொழி எடுத்
துக்கொண்டார்கள். **15** இப்படி முழு இதயத்தோடு உறுதிமொழி எடுத்துக்
கொண்டதாலும், ஆர்வத்தோடு கடவுளைத் தேடியதாலும், தன்னைக் கண்
டடைய கடவுள் அவர்களுக்கு உதவியதாலும்[i] யூதா மக்கள் எல்லாரும்
மிகவும் சந்தோஷப்பட்டார்கள். சுற்றியிருந்த எதிரிகளின் தொல்லையில்லா
மல் நிம்மதியாக வாழ யெகோவா அவர்களுக்கு உதவினார்.[j]

16 பூஜைக் கம்பத்தின்* வழிபாட்டுக்காக ஆசா ராஜாவின் பாட்டி
மாக்காள்[k] அருவருப்பான சிலையைச் செய்து வைத்திருந்ததால், ராஜ
மாதா# அந்தஸ்தை அவளிடமிருந்து பறித்துவிட்டார்.[l] அருவருப்பான அந்
தச் சிலையைத் தகர்த்துப்போட்டு, தூள்தூளாக்கி, கீதரோன் பள்ளத்தாக்கில்
சுட்டெரித்தார்.[m] **17** ஆனால், இஸ்ரவேலில் இருந்த ஆராதனை மேடுகள்
அழிக்கப்படவில்லை.[n] இருந்தாலும், ஆசா தன்னுடைய வாழ்நாளெல்லாம்

15:7 *நே.மொ., "உங்களுடைய கைகளைத் தளர விடாதீர்கள்." **15:16** *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., "ராணி."

கடவுளுக்கு முழு இதயத்தோடு உண்மையாக நடந்துகொண்டார்.[a]
18 தானும் தன்னுடைய அப்பாவும் கடவுளுக்கு அர்ப்பணித்திருந்த தங்கத்
தையும் வெள்ளியையும் மற்ற சாமான்களையும் கொண்டுவந்து உண்மைக்
கடவுளின் ஆலயத்தில் வைத்தார்.[b] **19** ஆசா ஆட்சி செய்த 35-ஆம்
வருஷம்வரை தேசத்தில் போரே நடக்கவில்லை.[c]

16 ஆசா ஆட்சி செய்த 36-ஆம் வருஷத்தில், இஸ்ரவேலின் ராஜா
வான பாஷா[d] யூதாவுக்கு விரோதமாக வந்தார்; யூதாவின் ராஜா
வான ஆசாவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிக்குள் மக்கள் போய் வருவதைத்
தடுப்பதற்காக ராமா[e] நகரத்தைக் கட்ட* ஆரம்பித்தார்.[f] **2** உடனே ஆசா,
யெகோவாவின் ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைகளிலும்[g] அரண்மனை
கஜானாக்களிலும் இருந்த வெள்ளியையும் தங்கத்தையும் எடுத்து, தமஸ்கு
வில் குடியிருந்த சீரியா ராஜாவான பெனாதாத்துக்கு[h] அனுப்பி வைத்தார்.
3 அப்படி அனுப்பி வைக்கும்போது, "என் அப்பாவும் உங்கள் அப்பாவும்
செய்ததுபோல, நானும் நீங்களும் ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அதனால்,
நான் அனுப்பியிருக்கிற தங்கத்தையும் வெள்ளியையும் ஏற்றுக்கொண்டு,
இஸ்ரவேலின் ராஜாவான பாஷாவோடு நீங்கள் செய்திருக்கிற ஒப்பந்தத்தை
ரத்து செய்யுங்கள். அப்படிச் செய்தால், அவர் எங்களைவிட்டுப் பின்வாங்
கிப் போய்விடுவார்" என்று சொல்லச் சொன்னார்.

4 ஆசா ராஜா சொன்னதை பெனாதாத் ஏற்றுக்கொண்டான். அதனால்,
இஸ்ரவேல் நகரங்களைத் தாக்குவதற்காகத் தன்னுடைய படைத் தலைவர்
களை அனுப்பினான். அவர்கள் ஈயோனையும்[i] தாணையும்[j] ஆபேல்-
மாயீமையும் நப்தலியைச் சேர்ந்த நகரங்களில் இருந்த கிடங்குகள் எல்
லாவற்றையும் நாசமாக்கினார்கள்.[k] **5** பாஷா அதைக் கேள்விப்பட்டதும்,
ராமா நகரத்தைக் கட்டுவதை* உடனடியாக நிறுத்திவிட்டார். **6** பின்பு
ஆசா ராஜா, யூதாவிலிருந்த அத்தனை பேரையும் ராமாவுக்குக்[l] கூட்டிக்
கொண்டு போனார். அந்த நகரத்தைக் கட்டுவதற்கு பாஷா பயன்படுத்திய
கற்களையும் மரங்களையும் அவர்கள் அங்கிருந்து கொண்டுவந்தார்கள்.[m]
அவற்றை வைத்து கெபாவையும்[n] மிஸ்பாவையும்[o] ஆசா கட்டினார்.*

7 இறைவாக்கு சொல்பவரான அனானி[p] என்பவர் யூதா ராஜாவான
ஆசாவிடம் வந்து, "உங்களுடைய கடவுளான யெகோவாமேல் நம்பிக்கை
வைக்காமல் சீரியா ராஜாமேல் நீங்கள் நம்பிக்கை வைத்ததால், அவனுடைய
படை உங்கள் கையிலிருந்து தப்பித்துவிட்டது.[q] **8** ஒருசமயம், எத்தியோப்
பியர்களும் லீபியாவைச் சேர்ந்தவர்களும் நிறைய ரதங்களோடும் குதிரை
வீரர்களோடும் மிகப் பெரிய படையாக வந்தார்கள், இல்லையா? அப்போது
நீங்கள் யெகோவாமேல் நம்பிக்கை வைத்தீர்கள். அதனால்தான் அவ்வ
ளவு பெரிய படையை அவர் உங்கள் கையில் கொடுத்தார்.[r] **9** தன்னை
முழு இதயத்தோடு நம்புகிறவர்களுக்குத் தன்னுடைய பலத்தைக் காட்டுவ
தற்காக* யெகோவாவுடைய கண்கள் இந்தப் பூமி முழுவதையும் உன்னிப்
பாகப் பார்த்துக்கொண்டே இருக்கின்றன.[s] இந்தத் தடவை நீங்கள் முட்டாள்
தனமாக நடந்துகொண்டீர்கள். அதனால் இப்போதுமுதல் நீங்கள் நிறைய
போர்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்"[t] என்று சொன்னார்.

16:1 *வே.வா., "வலுப்படுத்த; திரும்பக் கட்ட." **16:5** *வே.வா., "வலுப்படுத்துவதை; திரும்பக் கட்டுவதை." **16:6** *வே.வா., "வலுப்படுத்தினார்; திரும்பக் கட்டினார்." **16:9** *வே.வா., "நம்புகிறவர்களுக்கு உதவி செய்வதற்காக."

அதி. 15
a 1ரா 8:61
b 1ரா 7:51; 1ரா 15:15; 1நா 26:26
c 2நா 14:1

அதி. 16
d 1ரா 15:25, 27
e யோசு 18:21, 25
f 1ரா 15:17-19
g 1ரா 7:51
h 1ரா 20:1; 2ரா 12:18; 2ரா 16:8
i 2ரா 15:29
j நியா 18:29
k 1ரா 15:20-22
l யோசு 18:21, 25
m 1ரா 15:17
n யோசு 18:21, 24; 1நா 6:60, 64
o யோசு 18:21, 26; நியா 20:1
p 1ரா 16:1; 2நா 19:2; 2நா 20:34
q எரே 17:5
r 2நா 14:9, 11; சங் 37:39, 40
s சக 4:10; 1பே 3:12
t 1ரா 15:32

10 அதைக் கேட்டதும் ஆசாவுக்குப் பயங்கர கோபம் வந்தது. கோபம்
தலைக்கேறியதால் அனானியைப் பிடித்து சிறையில் தள்ளினார். அந்தச்
சமயத்தில், பொதுமக்களில் சிலரையும் கொடுமைப்படுத்த ஆரம்பித்தார்.
11 ஆரம்பம்முதல் முடிவுவரை ஆசாவின் வாழ்க்கையில் நடந்த விஷயங்
கள், யூதா மற்றும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்
பட்டிருக்கின்றன.[a]

12 ஆசா ஆட்சி செய்த 39-ஆம் வருஷத்தில், அவருடைய காலில்
ஒரு நோய் வந்தது. அந்த நோய் முற்றிக்கொண்டே போனதால் அவரு
டைய உடல்நிலை மிகவும் மோசமானது. அந்தச் சமயத்திலும்கூட, அவர்
யெகோவாவிடம் உதவி கேட்காமல் மருத்துவர்களிடம் போனார்.
13 தான் ஆட்சி செய்த 41-ஆம் வருஷத்தில் இறந்துபோனார்.*[b]
14 'தாவீதின் நகரத்தில்'[c] ஆசா தனக்காக வெட்டி வைத்திருந்த பிரமாண்ட
மான கல்லறையில் அவரை அடக்கம் செய்தார்கள். பலவித வாசனை எண்
ணெயும் வாசனைப் பொருள்களும் கலந்து செய்யப்பட்ட தைலத்தையும்
பரிமளத் தைலத்தையும் பாடையில் ஊற்றி, அதில் அவருடைய உடலை
வைத்தார்கள்.[d] அதோடு, அவருக்கு மரியாதை செய்வதற்காக எக்கச்சக்க
மான வாசனைப் பொருள்களையும் எரித்தார்கள்.

17 அடுத்து, அவருடைய மகன் யோசபாத்[e] ராஜாவாகி, இஸ்ர
வேலில் தன்னுடைய ஆட்சியை வலுப்படுத்தினார். **2** யூதாவிலி
ருந்த மதில் சூழ்ந்த நகரங்கள் எல்லாவற்றிலும் தன் படைகளை நிறுத்தினார்.
அதுமட்டுமல்ல, யூதா தேசத்திலும் தன்னுடைய அப்பா ஆசா கைப்பற்றிய
எப்பிராயீம் நகரங்களிலும்[f] புறக்காவல் படைகளை நிறுத்தினார். **3** பாகால்
தெய்வங்களை வணங்காமல் யோசபாத் தன்னுடைய மூதாதையான தாவீ
தின் வழியில்[g] நடந்ததால் யெகோவா எப்போதும் அவருக்குத் துணை
யாக இருந்தார். **4** அவர் தன்னுடைய அப்பாவின் கடவுளைத் தேடி,[h]
அவர் கொடுத்த கட்டளைகளின்படி நடந்தார்; இஸ்ரவேல் தேசத்து மக்க
ளுடைய பழக்கவழக்கங்களின்படி நடக்கவில்லை.[i] **5** அவருடைய ஆட்
சியை யெகோவா வலுப்படுத்தினார்.[j] யூதா மக்கள் எல்லாரும் அவருக்கு
அன்பளிப்புகளைக் கொடுத்துவந்தார்கள். அவருக்குச் செல்வமும் புகழும்
ஏராளமாகக் கிடைத்தன.[k] **6** அவர் யெகோவாவின் வழிகளில் தைரியமாக
நடந்தார். யூதா தேசத்திலிருந்த ஆராதனை மேடுகளையும் பூஜைக் கம்பங்
களையும்* அழித்துப்போட்டார்.[l]

7 அவர் ஆட்சி செய்த மூன்றாம் வருஷத்தில், பென்னாயில், ஒபதியா,
சகரியா, நெதனெயேல், மிகாயா ஆகிய அதிகாரிகளை வரவழைத்து, யூதா
வின் நகரங்களில் இருப்பவர்களுக்குக் கற்றுக்கொடுக்கச் சொல்லி அனுப்பி
னார். **8** லேவியர்களான செமாயா, நெத்தனியா, செபதியா, ஆசகேல்,
செமிரமோத், யெகோனத்தான், அதோனியா, தொபையா, தோபத்தோனியா
ஆகியோரும் குருமார்களான எலிஷாமாவும் யோராமும் அவர்களுடன்
போனார்கள்.[m] **9** யெகோவாவின் திருச்சட்ட புத்தகத்தை அவர்கள் எடுத்
துக்கொண்டு போய் யூதா மக்களுக்குக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார்கள்.[n]
அதற்காக, யூதா தேசத்திலுள்ள எல்லா நகரங்களுக்கும் போனார்கள்.

10 யூதாவைச் சுற்றியிருந்த எல்லா ராஜ்யங்களும் யெகோவாவை

அதி. 16
a 1ரா 15:23
b 1ரா 15:24
c 2சா 5:7
d மாற் 16:1; லூ 23:55, 56; யோவா 19:40

அதி. 17
e 1ரா 15:24; 1ரா 22:41
f 2நா 15:8
g 2சா 8:15
h உபா 4:29; 2நா 26:1, 5
i 1ரா 12:28-30; 1ரா 13:33
j 1ரா 9:4, 5; சங் 132:12
k 2நா 18:1
l உபா 7:5; 1ரா 22:42, 43
m உபா 33:8, 10; மல் 2:7
n உபா 31:11; யோசு 1:7, 8; நெ 8:7

16:13 *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்." **17:6** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

நினைத்துப் பயந்து நடுங்கியதால் யோசபாத்துக்கு எதிராகப் போர் செய்ய
வரவில்லை. **11** பெலிஸ்தியர்கள் யோசபாத்துக்குப் பரிசுகளைக் கொண்டு
வந்து கொடுத்தார்கள், பணத்தைக் கப்பமாகக் கட்டினார்கள். அரேபியர்கள்
தங்களுடைய மந்தையிலிருந்து 7,700 செம்மறியாட்டுக் கடாக்களையும்
7,700 வெள்ளாட்டுக் கடாக்களையும் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

12 யோசபாத் நாளுக்கு நாள் வலிமைமிக்கவராக ஆனார்.[a] யூதா தேசத்
தில், கோட்டைகளையும் கிடங்குகளுக்கான நகரங்களையும் கட்டிக்
கொண்டே இருந்தார்.[b] **13** யூதாவின் நகரங்களில் பெரிய பெரிய திட்டங்
களை நிறைவேற்றினார். எருசலேமில் அவருக்கு மாவீரர்கள் இருந்தார்கள்.
14 இந்த மாவீரர்களைக் குடும்பம்வாரியாகப் பிரித்தார்; யூதா கோத்திரத்
தைச் சேர்ந்தவர்களில் ஆயிரம் வீரர்களுக்குத் தலைவர்கள் இருந்தார்கள்.
அவர்களில், அத்னா என்ற தலைவர் இருந்தார். அவருடன் 3,00,000 மாவீ
ரர்கள் இருந்தார்கள்.[c] **15** அவருக்குக்கீழ் யெகோனான் என்பவர் தலைவ
ராக இருந்தார்; அவருடன் 2,80,000 வீரர்கள் இருந்தார்கள். **16** அதோடு,
அத்னாவுக்குக்கீழ் சிக்ரியின் மகன் அமசியா இருந்தார். இவர் யெகோ
வாவுக்குச் சேவை செய்ய சந்தோஷமாக முன்வந்தார். அவருடன் 2,00,000
மாவீரர்கள் இருந்தார்கள். **17** பென்யமீன்[d] கோத்திரத்தில், மாவீரரான எலி
யாதா என்பவர் இருந்தார், வில்லும் கேடயமும் வைத்திருந்த 2,00,000 வீரர்
கள் அவருடன் இருந்தார்கள்.[e] **18** அவருக்குக்கீழ் யெகோஸபாத் இருந்
தார். அவருடன் 1,80,000 வீரர்கள் இருந்தார்கள், அவர்கள் போர்ப் பயிற்சி
பெற்றவர்கள். **19** யூதா முழுவதிலும் இருந்த மதில் சூழ்ந்த நகரங்களில்
ராஜா நியமித்திருந்த ஆட்களைத் தவிர, இவர்களும் ராஜாவுக்குச் சேவை
செய்தார்கள்.[f]

18 யோசபாத்துக்கு ஏராளமான செல்வமும் பேரும் புகழும் இருந்
தும்கூட,[g] ஆகாப் குடும்பத்தோடு அவர் சம்பந்தம் செய்து
கொண்டார்.[h] **2** அதனால், சில வருஷங்களுக்குப் பின்பு, ஆகாபைப்
பார்க்க சமாரியாவுக்குப் போனார்.[i] யோசபாத்துக்காகவும் அவருடன் வந்தி
ருந்த ஆட்களுக்காகவும் எக்கச்சக்கமான ஆடுமாடுகளை ஆகாப் வெட்டி
னார்.* பின்பு, ராமோத்-கீலேயாத்தை[j] எதிர்த்துப் போர் செய்யத் தன்னோடு
வரச் சொல்லி அவரை வேண்டிக்கொண்டார்.# **3** “ராமோத்-கீலேயாத்
தைப் பிடிக்க நீங்களும் என்னோடு வருவீர்களா?” என்று யூதாவின் ராஜா
வான யோசபாத்திடம் ஆகாப் கேட்டார். அதற்கு யோசபாத், “நீங்கள் வேறு
நான் வேறு அல்ல. என்னுடைய மக்கள் உங்களுடைய மக்கள். போர் செய்
யும்போது நாங்கள் உங்களுக்கு ஆதரவு தருகிறோம்” என்று சொன்னார்.
4 அதோடு, “தயவுசெய்து முதலில் யெகோவாவிடம் விசாரியுங்கள்”[k]
என்று இஸ்ரவேல் ராஜாவிடம் யோசபாத் சொன்னார். **5** அதனால், இஸ்ர
வேலின் ராஜா தீர்க்கதரிசிகளை வரவழைத்தார்; 400 பேர் கூடிவந்தார்
கள். அவர்களிடம், “நாங்கள் ராமோத்-கீலேயாத்தின் மீது படையெடுத்துப்
போகலாமா, வேண்டாமா?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “போங்
கள், உண்மைக் கடவுள் அதை உங்கள் கையில் கொடுப்பார்” என்று சொன்
னார்கள்.

6 அப்போது யோசபாத், “யெகோவாவின் தீர்க்கதரிசி வேறு யாராவது
இருக்கிறாரா?[l] இருந்தால், அவர் மூலமாகவும் விசாரித்துவிடலாம்”[m] என்

அதி. 17
a 2நா 18:1
b 1ரா 9:19; 2நா 8:3, 4; 2நா 14:2, 6
c 2நா 13:3; 2நா 26:11-13
d ஆதி 49:27
e 2நா 14:8
f 2நா 11:5, 23

அதி. 18
g 2நா 17:5
h 1ரா 16:28, 33; 1ரா 21:25
i 1ரா 22:2-4; 2நா 19:2
j உபா 4:41-43; 1நா 6:77, 80
k 2சா 2:1; 1ரா 22:5, 6
l 2ரா 3:11
m 1ரா 22:7, 8

18:2 * நே.மொ., “பலி கொடுத்தார்.” # வே.வா., “சம்மதிக்க வைத்தார்.”

றார். **7** அதற்கு இஸ்ரவேலின் ராஜா, “இன்னும் ஒருவன் இருக்கிறான்.[a]
அவன் மூலமாகவும் யெகோவாவிடம் விசாரிக்கலாம். ஆனால், அவனை
எனக்குச் சுத்தமாகப் பிடிக்காது. ஏனென்றால், இதுவரை அவன் என்னைப்
பற்றி நல்ல விஷயத்தைத் தீர்க்கதரிசனமாகச் சொன்னதே கிடையாது, எப்
போதும் கெட்ட விஷயத்தைத்தான் சொல்வான்.[b] அவன் பெயர் மிகாயா,
இம்லாவின் மகன்” என்றார். அதற்கு யோசபாத், “ராஜாவே, நீங்கள் இப்ப
டியெல்லாம் பேசக் கூடாது” என்று சொன்னார்.

8 அதனால், இஸ்ரவேலின் ராஜா தன்னுடைய அரண்மனை அதிகாரி
ஒருவரைக் கூப்பிட்டு, “இம்லாவின் மகன் மிகாயாவை உடனே கூட்டிக்
கொண்டு வாருங்கள்”[c] என்று சொன்னார். **9** அப்போது, இஸ்ரவேலின்
ராஜாவும் யூதாவின் ராஜா யோசபாத்தும் ராஜ உடை உடுத்திக்கொண்டு
சமாரியாவின் நகரவாசலில் இருந்த களத்துமேட்டில் சிம்மாசனம் போட்டு
உட்கார்ந்திருந்தார்கள். தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவர்கள் முன்னால்
தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். **10** அப்போது, கெனானா
வின் மகனான சிதேக்கியா இரும்புக் கொம்புகளைச் செய்து, “இவற்றை
வைத்து நீங்கள் சீரியர்களை முட்டித் தள்ளி, அவர்களை அடியோடு
அழிப்பீர்கள் என்று யெகோவா சொல்கிறார்” என்றான். **11** மற்ற தீர்க்கத
ரிசிகள் எல்லாரும்கூட இதேபோல தீர்க்கதரிசனம் சொன்னார்கள். “நீங்கள்
ராமோத்-கீலேயாத்துக்கு எதிராகப் போர் செய்யுங்கள், உங்களுக்கு வெற்றி
கிடைக்கும்.[d] அதைப் பிடிக்க யெகோவா உங்களுக்கு உதவி செய்வார்”
என்று சொன்னார்கள்.

12 மிகாயாவைக் கூட்டிக்கொண்டு வருவதற்காகப் போனவர் அவ
ரிடம், “இங்கே பாருங்கள், எல்லா தீர்க்கதரிசிகளும் ராஜாவுக்குச் சாதகமா
கத் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து நீங்களும் அவர்க
ளைப் போலவே சாதகமாகச் சொல்லுங்கள்”[e] என்றார். **13** அதற்கு
மிகாயா, “உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்
கிறேன்,* என் கடவுள் என்ன சொல்கிறாரோ அதைத்தான் சொல்வேன்”[f]
என்றார். **14** பின்பு, அவர் ராஜாவிடம் வந்தார். ராஜா அவரிடம், “ராமோத்-
கீலேயாத்தை எதிர்த்துப் போர் செய்ய நாங்கள் போகலாமா, வேண்டாமா?”
என்று கேட்டார். உடனே மிகாயா, “போங்கள், உங்களுக்கு வெற்றி கிடைக்
கும். அங்கிருக்கிற மக்கள் உங்கள் கையில் கொடுக்கப்படுவார்கள்” என்று
சொன்னார். **15** அதற்கு ராஜா, “யெகோவாவின் பெயரில் உண்மையைத்
தான் பேச வேண்டும் என்று எத்தனை தடவை உன்னிடம் சத்தியம்
வாங்க வேண்டும்?” என்று கேட்டார். **16** அப்போது மிகாயா, “இஸ்ர
வேலர்கள் எல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல் மலைகளில்
சிதறிப்போவதைப் பார்க்கிறேன்.[g] யெகோவா என்னிடம், ‘இவர்களுக்கு எஜ
மான் இல்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய வீடுகளுக்குச் சமாதானமா
கத் திரும்பிப் போகட்டும்’ என்று சொல்கிறார்” என்றார்.

17 அப்போது இஸ்ரவேலின் ராஜா, “‘இவன் என்னைப் பற்றி நல்ல
விஷயத்தைத் தீர்க்கதரிசனமாகச் சொல்ல மாட்டான், கெட்ட விஷயத்தைத்
தான் சொல்வான்’ என்று அப்போதே சொன்னேன், இல்லையா?”[h] என்று
யோசபாத்திடம் சொன்னார்.

18:13 * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.”

அதி. 18
a 1ரா 18:4; 1ரா 19:9, 10
b எரே 38:4
c 1ரா 22:9-12
d மீ 3:5
e 1ரா 22:13-17; ஏசா 30:9, 10
f எரே 23:28; அப் 20:27
g லேவி 26:14, 17; எண் 27:16, 17
h 1ரா 22:18

18 அப்போது மிகாயா, “யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
யெகோவா தன்னுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன்.[a]
பரலோகப் படை[b] முழுவதும் அவருடைய வலது பக்கத்திலும் இடது பக்கத்
திலும் நின்றுகொண்டிருந்தது.[c] **19** அப்போது யெகோவா, ‘ராமோத்-கீலே
யாத்துக்குப் போய்ச் சாகும்படி யார் இஸ்ரவேலின் ராஜாவான ஆகாபை
ஏமாற்றி அங்கே அனுப்புவீர்கள்?’ என்று கேட்டார். அதற்கு ஒரு தேவ
தூதர் ஒரு விதமாகவும் இன்னொரு தேவதூதர் இன்னொரு விதமாகவும்
கருத்துச் சொன்னார்கள். **20** அப்போது ஒரு தேவதூதர்[d] யெகோவா
முன்னால் வந்து, ‘ஆகாபை நான் ஏமாற்றுவேன்’ என்று சொன்னார்.
அதற்கு யெகோவா, ‘எப்படி ஏமாற்றுவாய்?’ என்று கேட்டார். **21** அந்தத்
தேவதூதர், ‘நான் போய் ஆகாபின் தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாயிலி
ருந்தும் பொய்யான செய்தியை வர வைப்பேன்’ என்று சொன்னார். அதற்கு
அவர், ‘நீ சொன்னபடியே செய். நீ அவனை ஏமாற்றுவாய், உனக்குக் கண்
டிப்பாக வெற்றி கிடைக்கும்’ என்று சொன்னார். **22** அதனால்தான்,
யெகோவா ஒரு தேவதூதரை அனுப்பி தீர்க்கதரிசிகள் வாயிலிருந்து பொய்
யான செய்தியை வர வைத்திருக்கிறார்.[e] ஆனால், நீங்கள் அழிய வேண்
டும் என்று யெகோவா தீர்மானித்துவிட்டார்” என்று சொன்னார்.

23 அப்போது, கெனானாவின் மகனான சிதேக்கியா[f] மிகாயாவிடம்[g]
வந்து, அவருடைய கன்னத்தில் அறைந்து,[h] “எப்போதிருந்து யெகோவா
வின் சக்தி என்னை விட்டுவிட்டு உன்னிடம் பேச ஆரம்பித்தது?”[i]
என்று கேட்டான். **24** அதற்கு மிகாயா, “நீ போய் உள்ளறையில் ஒளிந்
துகொள்ளும் நாளில் உன் கேள்விக்குப் பதில் கிடைக்கும்” என்று சொன்
னார். **25** அப்போது இஸ்ரவேலின் ராஜா, “மிகாயாவைக் கொண்டுபோய்
நகர அதிகாரி ஆமோனிடமும் ராஜாவின் மகன் யோவாசிடமும் ஒப்படை
யுங்கள். **26** அவர்களிடம், ‘இந்த ஆளைச் சிறையில் தள்ளுங்கள்.[j] நான்
சமாதானமாகத் திரும்பி வரும்வரை இவனுக்குக் கொஞ்சம் ரொட்டியும் தண்
ணீரும் மட்டுமே கொடுங்கள்’ என்று ராஜா கட்டளையிட்டார் என்று சொல்
லுங்கள்” என்றார். **27** அதற்கு மிகாயா, “நீங்கள் சமாதானமாகத் திரும்பி
வந்துவிட்டால், யெகோவா என் மூலம் பேசவில்லை என்று அர்த்தம்”[k]
என்று சொன்னார். அதோடு, “மக்களே, எல்லாரும் இதைக் கேட்டுக்கொள்
ளுங்கள்” என்றும் சொன்னார்.

28 பின்பு, இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின் ராஜா யோசபாத்தும்
ராமோத்-கீலேயாத்துக்குப் போனார்கள்.[l] **29** அப்போது யோசபாத்திடம்
இஸ்ரவேலின் ராஜா, “நீங்கள் ராஜ உடையைப் போட்டுக்கொண்டு போர்க்
களத்துக்கு வாருங்கள், நான் மாறுவேஷத்தில் வருகிறேன்” என்று
சொன்னார். அதன்படியே, இஸ்ரவேலின் ராஜா மாறுவேஷம் போட்டுக்
கொண்டார்; பின்பு, அவர்கள் போர்க்களத்துக்குப் போனார்கள். **30** சீரியா
வின் ராஜா தன்னுடைய ரதத் தலைவர்களைப் பார்த்து, “வேறு யாரோடும்*
போர் செய்யாமல், இஸ்ரவேலின் ராஜாவோடு மட்டும் போர் செய்யுங்கள்”
என்று சொல்லியிருந்தான். **31** ரதத் தலைவர்கள் யோசபாத்தைப் பார்த்
ததும், “இவர்தான் இஸ்ரவேலின் ராஜா” என்று நினைத்துக்கொண்டு, அவ
ரைத் தாக்க வந்தார்கள். அப்போது, யோசபாத் உதவி கேட்டுக் கதறினார்,[m]
யெகோவாவும் அவருக்கு உதவி செய்தார். உடனடியாக எதிரிகளைத்

18:30 * நே.மொ., “சிறியோரோடும் பெரியோரோடும்.”

அதி. 18
a ஏசா 6:1
எசே 1:26
வெளி 20:11
b யோபு 1:6
தானி 7:9, 10
c 1ரா 22:19-23
d சங் 104:4
e ஏசா 19:14
எசே 14:9
f 2நா 18:10
g 2நா 18:7
h எரே 20:2
மாற் 14:65
i 1ரா 22:24-28
j 2நா 16:10
அப் 5:18
k எண் 16:29
l யோசு 20:8
1ரா 22:29-33
2நா 18:2
m யாத் 14:10
2நா 13:14

திசைதிருப்பி அவரைக் காப்பாற்றினார். **32** அவர் இஸ்ரவேலின் ராஜா
அல்ல என்பது தெரிந்ததும் ரதத் தலைவர்கள் அவரைத் துரத்தாமல் உட
னடியாக விலகிப்போனார்கள்.

33 அதன்பின், ஒருவன் எதேச்சையாக எறிந்த அம்பு இஸ்ரவேலின்
ராஜாவுடைய உடல்கவசத்தின் இணைப்புகளுக்கு இடையே பாய்ந்தது.
அப்போது ராஜா தன்னுடைய ரத ஓட்டியிடம், “எனக்குப் பயங்கரமாகக்
காயம்பட்டுவிட்டது; ரதத்தைத் திருப்பி, என்னைப் போர்க்களத்திலிருந்து*
வெளியே கொண்டுபோ”[a] என்று சொன்னார். **34** அன்று முழுவதும் கடு
மையான போர் நடந்ததால், சாயங்காலம்வரை சீரியர்களைப் பார்த்தவாறு
ராஜாவை ரதத்தில் நிற்கவைக்க வேண்டியிருந்தது. சூரியன் மறையும் நேரத்
தில் அவர் இறந்துபோனார்.[b]

19 பின்பு, யூதாவின் ராஜாவான யோசபாத் எருசலேமில் உள்ள தன்
னுடைய அரண்மனைக்குப் பத்திரமாக* திரும்பி வந்தார்.[c] **2** தரிச
னக்காரரான அனானியின்[d] மகன் யெகூ[e] அவரைப் பார்க்க வந்தார். அவர்
யோசபாத்திடம், “மோசமான ஆட்களுக்கு நீங்கள் உதவி செய்தது சரியா?[f]
யெகோவாவை வெறுக்கிற ஆட்கள்மீது அன்பு காட்டியது சரியா?[g] இத
னால் யெகோவா உங்கள்மேல் பயங்கர கோபமாக இருக்கிறார். **3** ஆனா
லும், நீங்கள் செய்த நல்ல காரியங்களை அவர் கவனித்திருக்கிறார்.[h]
ஏனென்றால், நீங்கள் பூஜைக் கம்பங்களை* அழித்தீர்கள், உண்மைக் கட
வுளைத் தேட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தீர்கள்”#[i] என்று
சொன்னார்.

4 எருசலேமில் வாழ்ந்த யோசபாத் தன் மக்களை மறுபடியும் போய்ச்
சந்திப்பதற்காகப் பயணம் செய்தார்; அதற்காக பெயெர்-செபாமுதல் எப்பி
ராயீம் மலைப்பகுதிவரை போனார்;[j] தங்கள் முன்னோர்களின் கடவுளான
யெகோவாவைத் திரும்பவும் வழிபட ஆரம்பிக்கும்படி[k] அவர்களை உற்
சாகப்படுத்தினார். **5** அதோடு, யூதா தேசத்திலிருந்த மதில் சூழ்ந்த நகரங்
கள் ஒவ்வொன்றிலும் நீதிபதிகளை நியமித்தார்.[l] **6** அவர்களிடம், “நீங்கள்
தீர்ப்பு சொல்லும்போது கவனமாக இருங்கள், ஏனென்றால் நீங்கள் யாரோ
ஒரு மனிதனின் சார்பாகத் தீர்ப்பு சொல்லவில்லை, யெகோவாவின் சார்
பாகத் தீர்ப்பு சொல்கிறீர்கள். நீங்கள் தீர்ப்பு சொல்லும்போது அவர் உங்க
ளோடு இருக்கிறார்.[m] **7** யெகோவாவுக்குப் பயந்து நடந்துகொள்ளுங்
கள்;[n] நம்முடைய கடவுளான யெகோவா அநியாயம் செய்ய மாட்டார்,[o]
பாரபட்சம் பார்க்க மாட்டார்,[p] லஞ்சம் வாங்க மாட்டார்.[q] அதனால், எச்ச
ரிக்கையாக நடந்துகொள்ளுங்கள்” என்று சொன்னார்.

8 அதோடு, எருசலேமிலும் லேவியர்கள், குருமார்கள், தந்தைவழிக்
குடும்பத் தலைவர்கள் ஆகியோரில் சிலரை நீதிபதிகளாக நியமித்தார். அவர்
கள் அங்கிருந்த மக்களுடைய வழக்குகளை விசாரித்து யெகோவாவின் சார்
பாகத் தீர்ப்பு சொன்னார்கள்.[r] **9** அவர்களிடம், “உங்களுக்குக் கொடுக்கப்
பட்ட வேலைகளை நீங்கள் யெகோவாவுக்குப் பயந்து, அவருக்கு
உண்மையாகச் செய்ய வேண்டும், முழு இதயத்தோடு செய்ய வேண்
டும். **10** மற்ற நகரங்களில் இருக்கிற உங்கள் சகோதரர்கள் கொலை

18:33 *நே.மொ., “முகாமிலிருந்து.” **19:1** *வே.வா., “சமாதானமாக.” **19:3** *சொல்பட்டியலைப் பாருங்கள். #வே.வா., “கடவுளைத் தேடுவதற்கு இதயத்தைத் தயார்படுத்தினீர்கள்.”

அதி. 18
a 1ரா 22:34, 35
b 2நா 18:22

அதி. 19
c 2நா 18:31, 32
d 2நா 16:7
e 1ரா 16:1
f 1ரா 21:25
g சங் 139:21
h 1ரா 14:1, 13
i 2நா 17:3-6
j யோசு 17:14, 15
k 2நா 15:8
l உபா 16:18
m உபா 1:16, 17; சங் 82:1
n யாத் 18:21
o ஆதி 18:25; உபா 32:4
p அப் 10:34; ரோ 2:11; 1பே 1:17
q உபா 10:17; உபா 16:19
r உபா 17:9; உபா 21:5; உபா 25:1

வழக்குகளை உங்களிடம் கொண்டுவரலாம்,[a] அல்லது ஒரு சட்டத்தையோ
கட்டளையையோ விதிமுறைகளையோ நீதித்தீர்ப்புகளையோ பற்றி விளக்
கம் கேட்டு வரலாம். அவர்கள் யெகோவாவுக்கு முன்னால் குற்றமுள்ளவர்
களாக ஆகிவிடாமல் இருப்பதற்காக அவர்களை நீங்கள் எச்சரிக்க வேண்
டும். இல்லாவிட்டால், நீங்களும் அவர்களும் கடவுளுடைய கோபத்துக்கு
ஆளாக வேண்டியிருக்கும். உங்கள்மீது பழி வராமல் இருக்க வேண்டு
மென்றால் நான் சொன்னபடி செய்யுங்கள். **11** யெகோவாவின் சேவை சம்
பந்தப்பட்ட எல்லாவற்றையும் முதன்மை குரு அமரியா கவனிப்பார்.[b]
ராஜாவின் வேலை சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் இஸ்மவேலின் மகனும்
யூதா வம்சத்தின் தலைவருமான செபதியா கவனிப்பார். லேவியர்கள் உங்க
ளுக்காக அதிகாரிகளாய்ச் சேவை செய்வார்கள். தைரியமாக வேலை செய்
யுங்கள். நல்லது செய்கிறவர்களுக்கு* யெகோவா துணையாக இருப்பார்"[c]
என்று சொன்னார்.

20 பின்பு, மோவாபியர்களும்[d] அம்மோனியர்களும்[e] யோசபாத்தை
எதிர்த்துப் போர் செய்ய வந்தார்கள்; அவர்களுடன் அம்மோனிமி
யர்கள்* சிலரும் வந்தார்கள். **2** அப்போது, "உங்களோடு போர் செய்ய கட
லோர* பகுதியில் இருக்கிற ஏதோமிலிருந்து[f] பெரிய படை வந்திருக்கிறது;
அந்தப் படை அத்சாத்சோன்-தாமாரில், அதாவது என்-கேதியில்,[g] முகாம்
போட்டிருக்கிறது" என்ற செய்தி யோசபாத்துக்குக் கிடைத்தது. **3** அதைக்
கேட்டதும் யோசபாத் பயந்துபோனார். யெகோவாவைத் தேட வேண்டு
மென்று மனதில் தீர்மானித்தார்.[h] யூதா மக்கள் எல்லாரும் விரதமிருக்க
வேண்டுமென்று அறிவித்தார். **4** பின்பு, யூதா மக்கள் யெகோவாவிடம்
விசாரிப்பதற்காக ஒன்றுகூடி வந்தார்கள்.[i] யூதாவின் எல்லா நகரங்களிலிருந்
தும் யெகோவாவிடம் ஆலோசனை கேட்க வந்தார்கள்.

5 அப்போது, யெகோவாவுடைய ஆலயத்தின் புதிய பிரகாரத்தில் கூடி
யிருந்த யூதா, எருசலேம் சபையார் முன்னால் நின்று, **6** யோசபாத் ஜெபம்
செய்தார்.

"யெகோவாவே, எங்கள் முன்னோர்களின் கடவுளே, பரலோகத்திலிருக்
கிற கடவுள் நீங்கள் மட்டும்தானே?[j] உலகத்தில் இருக்கிற எல்லா ராஜ்யங்
கள்மீதும் உங்களுக்குத்தானே அதிகாரம் இருக்கிறது?[k] உங்களுக்கு எவ்வ
ளவு பலமும் சக்தியும் இருக்கிறது! யாராலும் உங்களை எதிர்த்துநிற்க
முடியாது.[l] **7** எங்கள் கடவுளே, உங்கள் மக்களான இஸ்ரவேலர்களின்
கண் முன்னால் இங்கே குடியிருந்தவர்களைத் துரத்தியடித்துவிட்டு, உங்கள்
நண்பரான ஆபிரகாமின் சந்ததிக்கு[m] இந்தத் தேசத்தை நிரந்தர சொத்தாகக்
கொடுத்தீர்களே! **8** உங்களுடைய மக்களும் இங்கே குடியேறினார்கள்,
உங்களுடைய பெயருக்காக ஒரு ஆலயத்தைக் கட்டி[n] உங்களிடம் ஜெபம்
செய்தார்கள். **9** 'எங்களுக்குக் கஷ்டம் வரும்போது, போரினாலோ தண்ட
னையினாலோ கொடிய நோயினாலோ பஞ்சத்தினாலோ நாங்கள் தாக்
கப்படும்போது, இந்த ஆலயத்துக்கு வந்து உங்கள் முன்னால் நின்று
மன்றாடுவோம்; (ஏனென்றால், இந்த ஆலயம் உங்களுடைய பெயரைத் தாங்
கியிருக்கிறது)[o] கஷ்டத்தைப் போக்கச் சொல்லி நாங்கள் கெஞ்சும்போது,
எங்களுடைய ஜெபத்தைக் கேட்டு உதவி செய்யுங்கள்'[p] என்று வேண்டிக்

19:11 *வே.வா., "நல்லதுக்கு." **20:1** *அல்லது, "மெயூனீம்கள்." **20:2** *அநேகமாக, சவக் கடல்.

அதி. 19
a உபா 17:8
b மல் 2:7
c 2நா 15:2

அதி. 20
d நியா 3:14, 2சா 8:2, சங் 83:2, 6
e ஆதி 19:36-38
f யோசு 15:1
g யோசு 15:20, 62
h 2நா 19:1, 3
i உபா 4:29-31
j 1ரா 8:23, மத் 6:9
k 1நா 29:11, தானி 4:17
l 1நா 29:12, ஏசா 40:15, 17, தானி 4:35
m ஆதி 12:7, நெ 9:7, 8, ஏசா 41:8, யாக் 2:23
n 2நா 2:4
o 2நா 6:20
p 1ரா 8:33, 34, 2நா 6:28-30

கொண்டார்கள். **10** இப்போது பாருங்கள்! அம்மோனியர்களும் மோவாபி
யர்களும் சேயீர் மலைப்பகுதியில்[a] வாழ்கிறவர்களும் எங்களுக்கு எதிராகப்
படையெடுத்து வந்திருக்கிறார்கள். இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்திலிருந்து
வந்தபோது இவர்களுடைய தேசத்தைப் பிடிக்க வேண்டாமென்று நீங்கள்
சொல்லியிருந்தீர்கள், அதனால் இஸ்ரவேலர்களும் இவர்களை அழிக்காமல்
விலகிப் போனார்கள்.[b] **11** ஆனால் கொஞ்சம்கூட நன்றியே இல்லாமல்,
நீங்கள் சொத்தாகக் கொடுத்த இந்தத் தேசத்திலிருந்து எங்களைத் துரத்த
இவர்கள் வந்திருக்கிறார்கள்.[c] **12** எங்கள் கடவுளே, நீங்கள் அவர்களைத்
தண்டிக்க மாட்டீர்களா?[d] எங்களைத் தாக்க வந்திருக்கிற இந்தப் பெரிய
படையை எதிர்க்க எங்களுக்குச் சக்தியில்லை, என்ன செய்வதென்றே எங்
களுக்குத் தெரியவில்லை.[e] எங்களுடைய கண்கள் உங்களையே பார்த்துக்
கொண்டிருக்கின்றன"[f] என்று ஜெபம் செய்தார்.

13 அந்தச் சமயத்தில், யூதாவைச் சேர்ந்த ஆட்கள் எல்லாரும் தங்களு
டைய மனைவிகளோடும் பிள்ளைகளோடும் சின்னக் குழந்தைகளோடும்
வந்து யெகோவா முன்னால் நின்றுகொண்டிருந்தார்கள்.

14 அந்தச் சபையார் நடுவில் இருந்த யகாசியேல்மீது யெகோவா
வின் சக்தி வந்தது. இவருடைய அப்பா பெயர் சகரியா, சகரியாவின்
அப்பா பெயர் பெனாயா; பெனாயாவின் அப்பா பெயர் எயியேல், எயியே
லின் அப்பா பெயர் மத்தனியா, இவர் ஆசாப்பின் வம்சத்தில் வந்த லேவி
யர். **15** அப்போது யகாசியேல் அங்கிருந்த மக்களிடம், "யூதா மக்களே,
எருசலேம் மக்களே, யோசபாத் ராஜாவே, நீங்கள் எல்லாரும் கவனமாகக்
கேளுங்கள். யெகோவா சொல்வது என்னவென்றால், 'இந்தப் பெரிய படை
யைப் பார்த்துப் பயப்படாதீர்கள், திகிலடையாதீர்கள். ஏனென்றால், இது
உங்களுடைய போர் அல்ல, கடவுளுடைய போர்.[g] **16** நாளைக்கு அவர்
களை எதிர்த்துப் போர் செய்யப் போங்கள். அவர்கள் சிஸ் கணவாய்* வழி
யாக வருவார்கள். யெருவேல் வனாந்தரத்துக்குப் பக்கத்தில் இருக்கிற பள்
ளத்தாக்கின்# எல்லையில் அவர்களைச் சந்திப்பீர்கள். **17** ஆனால்,
நீங்கள் போர் செய்ய வேண்டியதில்லை. அணிவகுத்துப் போய் நில்லுங்
கள், அசையாமல் அப்படியே நில்லுங்கள்,[h] யெகோவா உங்களை எப்ப
டிக் காப்பாற்றுகிறார் என்று பாருங்கள்.[i] யூதா மக்களே, எருசலேம் மக்களே,
பயப்படாதீர்கள், திகிலடையாதீர்கள்.[j] நாளைக்கு அவர்களை எதிர்த்துப்
போர் செய்யப் போங்கள். யெகோவா உங்களோடு இருப்பார்'"[k] என்று
சொன்னார்.

18 உடனே, யோசபாத் யெகோவாவுக்கு முன்னால் மண்டிபோட்டு தரை
வரைக்கும் குனிந்து வணங்கினார்; யூதா மக்கள் எல்லாரும் எருசலேமில்
குடியிருந்தவர்களும் யெகோவாவுக்கு முன்னால் விழுந்து வணங்கினார்
கள். **19** பின்பு கோகாத்,[l] கோராகு ஆகியோரின் வம்சத்தில் வந்த லேவி
யர்கள் எழுந்து நின்று இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவைப் புகழ்ந்து
மிகவும் சத்தமாகப் பாடினார்கள்.[m]

20 அடுத்த நாள் விடியற்காலையிலேயே எழுந்து எல்லாரும் தெக்
கோவா[n] வனாந்தரத்துக்குப் போனார்கள். அவர்கள் புறப்பட்டபோது

20:16 *கணவாய் என்பது இரண்டு மலைகளுக்கு இடையில் இயற்கையாக அமைந்துள்ள பாதை. #அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்." சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 20

a ஆதி 36:8

b எண் 20:17, 18; உபா 2:5, 9, 19

c நியா 11: 23, 24; சங் 83:2, 4

d நியா 11: 27, 28; சங் 7:6

e 2ரா 6:15, 16

f 2நா 14:11; சங் 25:15; சங் 62:1

g உபா 1:29, 30; யோசு 11:4, 6; 2நா 32:7, 8

h ஏசா 30:15

i யாத் 14:13, 14; யாத் 15:2; 1சா 2:1; 1நா 16:23; புல 3:26

j உபா 31:8; யோசு 10:25

k எண் 14:9; 2நா 15:2

l 1நா 23:12

m 1நா 15:16

n 2நா 11:5, 6

யோசபாத் எழுந்து நின்று, “யூதா மக்களே, எருசலேம் மக்களே, உங்கள்
கடவுளான யெகோவாமேல் நம்பிக்கை வையுங்கள். அப்போதுதான், உங்
களால் உறுதியாக நிற்க* முடியும். அவருடைய தீர்க்கதரிசிகள் சொன்னதை
நம்புங்கள்,[a] உங்களுக்கு வெற்றி நிச்சயம்” என்றார்.

21 மக்களிடம் கலந்துபேசிவிட்டு, யெகோவாவைப் புகழ்ந்து பாடுவதற்
குப் பாடகர்களை நியமித்தார்.[b] பரிசுத்த உடையைப் போட்டுக்கொண்டு,
போர்வீரர்களுக்கு முன்னால் நடந்துகொண்டே, “யெகோவாவுக்கு நன்றி
சொல்லுங்கள், அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்”[c]
என்று பாடுவதற்காக அவர்களை நியமித்தார்.

22 அப்படி அவர்கள் சந்தோஷமாகப் புகழ்ந்து பாடியபோது, யூதா
தேசத்துக்கு எதிராகப் படையெடுத்து வந்த அம்மோனியர்களையும்
மோவாபியர்களையும் சேயீர் மலைப்பகுதியில் வாழ்கிறவர்களையும்
பதுங்கித் தாக்குவதற்கு யெகோவா ஏற்பாடு செய்தார். எதிரிகள் ஒரு
வரை ஒருவர் வெட்டிச் சாய்த்தார்கள்.[d] **23** முதலில், அம்மோனியர்களும்
மோவாபியர்களும் சேயீர் மலைப்பகுதியைச்[e] சேர்ந்த வீரர்களை ஒழித்துக்
கட்டினார்கள். அதன் பின்பு, அம்மோனியர்களும் மோவாபியர்களும் ஒரு
வரை ஒருவர் வெட்டிக் கொன்றார்கள்.[f]

24 யூதா மக்கள் வனாந்தரத்திலிருந்த காவற்கோபுரத்துக்கு[g] வந்து எதி
ரிகள் இருந்த திசையில் பார்த்தபோது, அவர்கள் எல்லாரும் பிணமாகக்
கிடப்பது தெரிந்தது,[h] ஒருவர்கூட உயிரோடு இல்லை. **25** செத்துக்கிடந்த
வர்களிடம் இருந்த பொருள்களை எடுத்துக்கொண்டு போவதற்காக யோச
பாத்தும் மக்களும் வந்தார்கள். அங்கே ஏகப்பட்ட பொருள்களும் துணிம
ணிகளும் நல்ல நல்ல சாமான்களும் இருப்பதைப் பார்த்தார்கள்.
இதற்குமேல் சுமக்க முடியாது என்று சொல்லுமளவுக்கு ஏகப்பட்ட பொருள்
களை எடுத்துக்கொண்டார்கள்.[i] பொருள்கள் எக்கச்சக்கமாக இருந்ததால்
அதையெல்லாம் அள்ளிக்கொண்டு போகவே மூன்று நாட்கள் ஆனது.
26 நான்காம் நாளில் அவர்கள் எல்லாரும் ஒரு பள்ளத்தாக்கில் கூடிவந்து,
யெகோவாவைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அதனால், அந்தப் பள்ளத்தாக்
குக்கு பெராக்கா*[j] என்று பெயர் வைத்தார்கள். இன்றுவரை அது அந்தப்
பெயரில்தான் அழைக்கப்படுகிறது.

27 பின்பு, யோசபாத்தின் தலைமையில் யூதா, எருசலேம் மக்கள் எல்லா
ரும் கொண்டாட்டத்தோடு எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். யெகோவா
அவர்களுக்கு வெற்றி தேடித் தந்ததால் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.[k]
28 நரம்பிசைக் கருவிகள், யாழ்கள்,[l] எக்காளங்கள்[m] ஆகியவற்றை இசைத்
துக்கொண்டு எருசலேமுக்கு வந்தார்கள். பின்பு, யெகோவாவின் ஆலயத்
துக்குப் போனார்கள்.[n] **29** இஸ்ரவேலர்களின் எதிரிகளோடு யெகோவா
போர் செய்தார் என்பதை எல்லா ராஜ்யங்களும் கேள்விப்பட்டதால்,
அவரை நினைத்துப் பயந்து நடுங்கின.[o] **30** அதனால், யோசபாத்தின்
ஆட்சியில் அமைதி நிலவியது. சுற்றியிருந்த தேசங்களின் தொல்லையில்
லாமல் நிம்மதியாக வாழ அவருடைய கடவுள் உதவி செய்தார்.[p]

31 யூதா தேசத்தை யோசபாத் தொடர்ந்து ஆட்சி செய்தார். ராஜாவான
போது அவருக்கு 35 வயது; அவர் எருசலேமில் 25 வருஷங்கள்
ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர் அசுபாள், இவள் சில்கியின்

20:20 * வே.வா., “உங்களால் சகித்திருக்க.” **20:26** * அர்த்தம், “புகழ்வது.”

அதி. 20
a யாத் 14:31
யாத் 19:9
b 1நா 15:16
c யாத் 34:6
d நியா 7:22
1சா 14:20
e உபா 2:5
f யாத் 14:25
எசே 38:21
g 2நா 20:16
h யாத் 14:30
சங் 110:5, 6
ஏசா 37:36
i யாத் 12:35
2ரா 7:15, 16
j யாத் 17:14, 15
1சா 7:12
k 1சா 2:1
சங் 20:5
சங் 30:1
l 2சா 6:5
1நா 16:5
m எண் 10:8
1நா 13:8
2நா 29:26
n சங் 116:19
o யாத் 15:13, 14
யோசு 9:3, 9
2நா 17:10
p யோசு 23:1
2சா 7:1
2நா 15:15

மகள்.[a] **32** யோசபாத் தன்னுடைய அப்பாவான ஆசாவின் வழியில்
நடந்துவந்தார்,[b] அதைவிட்டு விலகவில்லை; யெகோவாவுக்குப் பிரியமா
னதைச் செய்துவந்தார்.[c] **33** இருந்தாலும், ஆராதனை மேடுகள் அழிக்கப்
படவில்லை;[d] தங்கள் முன்னோர்களின் கடவுளைத் தேடுவதற்கு மக்கள்
தங்களுடைய இதயத்தைத் தயார்படுத்தவில்லை.[e]

34 ஆரம்பம்முதல் முடிவுவரை யோசபாத்தின் வாழ்க்கையில் நடந்த
மற்ற விஷயங்கள் அனானியின்[f] மகனான யெகூவின் புத்தகத்தில் எழுதப்
பட்டிருக்கிறது.[g] அந்த விஷயங்கள் எல்லாம் இஸ்ரவேல் ராஜாக்களின்
சரித்திரப் புத்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. **35** இதற்கு பின்பு, மோச
மான காரியத்தைச் செய்த இஸ்ரவேலின் ராஜாவான அகசியாவுடன்[h] யூதா
வின் ராஜாவான யோசபாத் கூட்டுச் சேர்ந்துகொண்டார். **36** தர்ஷீசுக்குப்[i]
போவதற்காக இவர்கள் இரண்டு பேரும் கூட்டுச் சேர்ந்து எசியோன்-
கேபேரில்[j] கப்பல்களைக் கட்டினார்கள். **37** ஆனால், யோசபாத்துக்கு எதி
ராக மரேசாவைச் சேர்ந்த தொதாவாவு என்பவரின் மகனான எலியேசர்
தீர்க்கதரிசனம் சொன்னார். அவர் யோசபாத்திடம், "அகசியாவுடன் கூட்டுச்
சேர்ந்துகொண்டதால் நீங்கள் செய்த எல்லாவற்றையும் யெகோவா அழித்து
விடுவார்"[k] என்று சொன்னார். அதன்படியே, அவருடைய கப்பல்கள் சேத
மடைந்தன,[l] அதனால் அவை தர்ஷீசுக்குப் போக முடியவில்லை.

21 யோசபாத் இறந்த* பின்பு, அவருடைய முன்னோர்கள் அடக்கம்
செய்யப்பட்ட இடத்தில், அதாவது 'தாவீதின் நகரத்தில்,' அடக்கம்
செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு, அவருடைய மகன் யோராம் ராஜாவா
னார்.[m] **2** அசரியா, யெகியேல், சகரியா, அசரியா, மிகாவேல், செப்பத்
தியா ஆகியோர் யோராமின் தம்பிகள். இவர்கள் எல்லாரும் இஸ்ரவேலின்
ராஜாவான யோசபாத்தின் மகன்கள். **3** நிறைய தங்கத்தையும் வெள்ளி
யையும் விலைமதிப்புள்ள பொருள்களையும் யூதா தேசத்தில் இருந்த மதில்
சூழ்ந்த நகரங்களையும் அவர்களுடைய அப்பா அவர்களுக்கு அன்பளிப்
பாகக் கொடுத்திருந்தார்.[n] ஆனால், யோராம் மூத்த மகனாக இருந்ததால்,
அவருக்கு ராஜ்யத்தையே கொடுத்தார்.[o]

4 ஆட்சி யோராமின் கைக்கு வந்ததும், அதைத் தக்கவைத்துக்கொள்
வதற்காக தன்னுடைய தம்பிகள் எல்லாரையும் வாளால் வெட்டிக் கொன்
றார்.[p] இஸ்ரவேலில் இருந்த அதிகாரிகள் சிலரையும் கொன்றுபோட்டார்.
5 ராஜாவானபோது யோராமுக்கு 32 வயது; அவர் எட்டு வருஷங்கள்
எருசலேமில் ஆட்சி செய்தார்.[q] **6** ஆகாபின் மகளை அவர் கல்யாணம்
செய்ததால்,[r] இஸ்ரவேல் ராஜாக்களைப் போலவே மோசமான வழியில்
நடந்தார்,[s] ஆகாபின் வீட்டார் செய்த கெட்ட காரியங்களை இவரும் செய்
தார். யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்துகொண்டே இருந்தார்.
7 ஆனாலும், தாவீதின் வம்சத்தை அழிக்க யெகோவா விரும்பவில்லை.
ஏனென்றால், தாவீதுடன் அவர் ஒப்பந்தம் செய்து,[t] எருசலேமில் தாவீதுக்
கும் அவருடைய மகன்களுக்கும் என்றென்றும் ஒரு விளக்கை* கொடுப்ப
தாக வாக்குக் கொடுத்திருந்தார்.[u]

8 யோராமின் ஆட்சிக் காலத்தில், யூதாவை எதிர்த்து ஏதோமியர்கள் கல
கம் செய்து,[v] தங்களுக்கென்று ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டார்கள்.[w]

21:1 *நே.மொ., "தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட." **21:7** *அதாவது, "வாரிசை."

அதி. 20
a 1ரா 22:41, 42
b 1ரா 15:11
c 2நா 17:3, 4; 2நா 19:2, 3
d 1ரா 15:14; 1ரா 22:43; 2நா 17:1, 6
e 1ரா 18:21
f 2நா 16:7
g 1ரா 16:1; 2நா 19:2
h 2ரா 1:2, 16
i 1ரா 10:22, 23
j எண் 33:1, 35; உபா 2:8; 1ரா 9:26
k 2நா 19:2; சங் 127:1
l 1ரா 22:48

அதி. 21
m 1ரா 22:50
n 2நா 11:5, 23
o 2ரா 8:16
p நியா 9:5, 6
q 2ரா 8:17-19
r 2நா 22:2; நெ 13:26
s 1ரா 14:7, 9; ஓசி 4:1
t 2சா 23:5; சங் 89:20, 28; எரே 33: 20, 21
u 2சா 7:12, 16; 1ரா 11:36; சங் 132:11
v ஆதி 27:40
w 1ரா 22:47; 2ரா 8:20-22

9 அதனால், யோராம் தன்னுடைய படைத் தலைவர்களோடும், தன்னு
டைய எல்லா ரதங்களோடும் புறப்பட்டுப் போனார். ராத்திரியில் எழுந்து
போய், தன்னையும் ரதத் தலைவர்களையும் சுற்றிவளைத்திருந்த ஏதோமி
யர்களைத் தோற்கடித்தார். **10** ஆனாலும், இன்றுவரை யூதாவை எதிர்த்து
ஏதோம் கலகம் செய்துகொண்டுதான் இருக்கிறது. அந்தச் சமயத்தில் லிப்
னாவும்[a] அவருக்கு எதிராகக் கலகம் செய்தது. யோராம் தன்னுடைய முன்
னோர்களின் கடவுளாகிய யெகோவாவைவிட்டு விலகியதால்தான் இதெல்
லாம் நடந்தது.[b] **11** யூதாவிலுள்ள மலைகளில் அவர் ஆராதனை
மேடுகளைக் கட்டினார்.[c] இப்படி, எருசலேம் மக்கள் கடவுளுக்குத் துரோ
கம் செய்வதற்கும் யூதா மக்கள் கடவுளைவிட்டு விலகுவதற்கும் அவர் கார
ணமாக இருந்தார்.

12 பிற்பாடு, எலியா[d] தீர்க்கதரிசியிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்
தது. அதில், “உன்னுடைய மூதாதையான தாவீதின் கடவுளாகிய யெகோவா
சொல்வது இதுதான்: ‘உன்னுடைய அப்பா யோசபாத்தையும்[e] யூதாவின்
ராஜா ஆசாவையும் போல் நீ நல்ல வழியில் நடக்கவில்லை.[f] **13** அதற்குப்
பதிலாக, இஸ்ரவேல் ராஜாக்களின் வழியில் நடந்தாய்,[g] ஆகாபின் வீட்டார்
செய்ததுபோல்[h] யூதா மக்களையும் எருசலேம் மக்களையும் கடவுளுக்குத்
துரோகம் செய்ய வைத்தாய்.[i] இது போதாதென்று, உன்னைவிட நல்லவர்க
ளாக இருந்த உன் அப்பாவின் பிள்ளைகளைக் கொன்றுபோட்டாய்,[j] சொந்
தத் தம்பிகள் என்றுகூட பார்க்கவில்லை. **14** அதனால், யெகோவா உன்னு
டைய மக்களுக்கும், உன் மகன்களுக்கும், மனைவிகளுக்கும் மிகப் பெரிய
தண்டனை கொடுக்கப்போகிறார், உன் சொத்துகளையெல்லாம் பறித்துவிடு
வார். **15** உனக்கு ஏகப்பட்ட நோய்கள் வரும். உன் குடலிலும் ஒரு நோய்
வரும். அந்த நோய் நாளுக்கு நாள் மோசமாகி, கடைசியில் உன்னுடைய
குடல் வெளியே வந்துவிடும்’” என்று எழுதியிருந்தார்.

16 பின்பு, யோராமை எதிர்த்துப் போர் செய்வதற்காக பெலிஸ்தியர்
களையும்,[k] எத்தியோப்பியர்களுக்குப் பக்கத்தில் இருந்த அரேபியர்களை
யும்[l] யெகோவா தூண்டினார்.[m] **17** அதனால் அவர்கள் யூதா தேசத்தின்
மேல் படையெடுத்து வந்து, அதைத் தாக்கினார்கள்; அரண்மனையில்
இருந்த எல்லா பொருள்களையும் கொள்ளையடித்தார்கள்.[n] அதோடு,
ராஜாவின் மகன்களையும் மனைவிகளையும் பிடித்துக்கொண்டு போனார்
கள். அவருடைய கடைசி மகன் யோவாகாசை*[o] மட்டும் அவரிடம் விட்
டுவிட்டார்கள். **18** இதற்குப் பிறகு, யெகோவா அவரைத் தண்டித்ததால்,
யோராமின் குடலில் தீராத நோய் வந்தது.[p] **19** சில காலத்துக்குப் பின்பு,
அதாவது இரண்டு வருஷங்களுக்குப் பின்பு, அந்த நோயால் அவருடைய
குடல்கள் வெளியே வந்தன. அவர் கடைசிவரை பயங்கரமாகக் கஷ்டப்
பட்டு இறந்துபோனார். வாசனைப் பொருள்களை எரித்து அவருடைய முன்
னோர்களை அடக்கம் செய்ததுபோல், யோராமை அவருடைய மக்கள்
அடக்கம் செய்யவில்லை.[q] **20** ராஜாவானபோது அவருக்கு 32 வயது.
அவர் எட்டு வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார். அவர் இறந்து
போனதற்காக யாருமே வருத்தப்படவில்லை. அவரை ‘தாவீதின் நகரத்தில்’[r]
அடக்கம் செய்தார்கள். ஆனால், ராஜாக்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்
தில் அடக்கம் செய்யவில்லை.[s]

21:17 * அகசியா என்றும் அழைக்கப்படுகிறார்.

அதி. 21
a யோசு 21:13; 2ரா 19:8
b 2நா 15:2; எரே 2:13
c உபா 12:2
d 2ரா 2:1, 11
e 2நா 17:3
f 1ரா 15:11; 2நா 14:2, 5
g 1ரா 16:25, 33
h 2ரா 9:22
i யாத் 34:15; எரே 3:8
j 2நா 21:4
k யோசு 13:1, 2; 2சா 8:1
l 2நா 17:11
m 1ரா 11:14; 2நா 33:11; ஏசா 10:5
n 1ரா 14:25, 26
o 2நா 22:1
p அப் 12:21-23
q 2நா 16:13, 14; எரே 34:4, 5
r 1ரா 2:10
s 2நா 24:24, 25; 2நா 28:27

22 பின்பு, எருசலேம் மக்கள் யோராமின் கடைசி மகனான அக
சியாவை அடுத்த ராஜாவாக்கினார்கள். ஏனென்றால், அரேபியர்க
ளுடன் வந்த கொள்ளைக்கூட்டத்தார் யூதாவின் முகாமைத் தாக்கி, அவரு
டைய மூத்த மகன்கள் எல்லாரையும் கொன்றுபோட்டிருந்தார்கள்.[a]
அதனால், யோராமின் கடைசி மகனான அகசியா யூதாவை ஆட்சி செய்ய
ஆரம்பித்தார்.[b] **2** ராஜாவானபோது அவருக்கு 22 வயது. அவர் எருசலே
மில் ஒரு வருஷம் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர் அத்தாலி
யாள்,[c] இவள் உம்ரியின்[d] பேத்தி.

3 ஆகாபின் வீட்டாரைப் போலவே[e] அகசியா நடந்துகொண்டார்;
மோசமான வழியில் நடப்பதற்கு அவருடைய அம்மா அவருக்கு ஆலோ
சனை கொடுத்தாள்; **4** அவருடைய அப்பா இறந்த பின்பு ஆகாபின் வீட்
டார் அவருக்கு ஆலோசகர்களாக ஆனார்கள். அதனால், அவர்களைப்
போலவே யெகோவாவுக்குப் பிடிக்காத காரியங்களை அகசியா செய்து
வந்தார். அவருடைய அழிவுக்கு இதுதான் காரணம். **5** அவர்களுடைய
பேச்சைக் கேட்டு, இஸ்ரவேலின் ராஜாவான ஆகாபின் மகன் யோராமுடன்
சேர்ந்து இவரும் போருக்குப் போனார். சீரியாவின் ராஜாவான அசகேலை[f]
எதிர்த்துப் போர் செய்ய ராமோத்-கீலேயாத்துக்கு[g] யோராமுடன் போனார்.
அந்தப் போரில் வில்வீரர்கள் அம்பு எறிந்து யோராமைத் தாக்கிக் காயப்
படுத்தினார்கள். **6** சீரியாவின் ராஜாவான அசகேலை எதிர்த்து ராமாவில்
போர் செய்தபோது யோராம் காயமடைந்ததால், குணமாவதற்காக யெஸ்ர
யேலுக்குத்[h] திரும்பிப் போனார்.[i]

ஆகாபின் மகனான யோராம்[j] காயமடைந்ததால்*[k] அவரைப் பார்க்க
யூதாவின் ராஜாவும் யோராமின்[l] மகனுமான அகசியா# யெஸ்ரயேலுக்
குப் போனார். **7** யோராமைப் பார்க்க அகசியா போயிருந்த சமயத்தில்
கடவுள் அவருக்கு அழிவைக் கொண்டுவந்தார். அகசியா அங்கே போயி
ருந்தபோது, நிம்சியின் பேரனான யெகூவைப்[m] பார்ப்பதற்காக யோராமு
டன் போனார். யெகோவா ஆகாபின் வீட்டாரை அழிப்பதற்காக யெகூவை
அபிஷேகம் செய்திருந்தார்.[n] **8** ஆகாபின் வீட்டாரை யெகூ ஒழித்துக்
கட்ட ஆரம்பித்தபோது, யூதாவிலிருந்த அதிகாரிகளையும் அகசியாவின்
சகோதரர்களின் மகன்களையும் பார்த்து அவர்களைக் கொன்றுபோட்டார்.[o]
இவர்கள் அகசியாவின் அமைச்சர்களாக இருந்தார்கள். **9** பின்பு, அவர்
அகசியாவைத் தேடினார். சமாரியாவில் ஒளிந்துகொண்டிருந்த அகசியா
வைப் பிடித்து யெகூவிடம் கொண்டுவந்தார்கள். பின்பு, அவரைக் கொன்
றுபோட்டார்கள். “என்ன இருந்தாலும், இவர் யெகோவாவை முழு இத
யத்தோடு வணங்கிய யோசபாத்தின் பேரன், இல்லையா?”[p] என்று சொல்லி
அவரை அடக்கம் செய்தார்கள்.[q] அகசியாவுக்கு அடுத்தபடியாகத்
தேசத்தை ஆட்சி செய்யும் அளவுக்கு அவருடைய குடும்பத்தில் வேறு
யாருமே இருக்கவில்லை.

10 அகசியாவின் அம்மா அத்தாலியாள்,[r] தன்னுடைய மகன் அக
சியா இறந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டதும், யூதாவின் ராஜ வம்சத்
தைச் சேர்ந்த வாரிசுகள் எல்லாரையும் கொன்றுபோட்டாள்.[s] **11** ஆனால்,
யோராம் ராஜாவின்[t] மகளான யோசேபியாத் அகசியாவின் மகன்

22:6 *வே.வா., “வியாதிப்பட்டதால்.” #எபிரெய கையெழுத்து பிரதிகள் சிலவற்றில் “அசரியா” என்று இருக்கிறது.

அதி. 22
a 2நா 21:16, 17
b 2ரா 8:24-26
c 2ரா 11:1; 2ரா 11:13, 16; 2நா 24:7
d 1ரா 16:28
e 1ரா 16:33; 2ரா 8:27, 28; மீ 6:16
f 2ரா 8:15; 2ரா 10:32
g 1ரா 22:3; 2நா 18:14
h யோசு 19: 18, 23
i 2ரா 9:15
j 2ரா 3:1
k 2ரா 9:16
l 2ரா 8:16
m 1ரா 19:16; 2ரா 9:20, 21
n 2ரா 9:6, 7
o 2ரா 10:10-14
p 2நா 17:3, 4
q 2ரா 9:27, 28
r 2நா 22:2
s 2ரா 11:1-3
t 2ரா 8:16

யோவாசைக்[a] காப்பாற்றினாள்; (அவள் குருவாகிய யோய்தாவின்[b] மனைவி, அகசியாவின் சகோதரி.) மற்ற இளவரசர்கள் கொல்லப்படவிருந்த சமயத்தில், யாருக்கும் தெரியாமல் யோவாசை மட்டும் அங்கிருந்து தூக்கிக்கொண்டு போனாள்; பின்பு, அவனையும் அவனுடைய தாதியையும்* உட்புற படுக்கை யறையில் ஒளித்து வைத்தாள். அவனை எப்படியோ அத்தாலியாளின் கண்ணில் படாமல் மறைத்து வைத்தார்கள்; அதனால், யோவாசின் உயிர் தப்
பியது.[c] **12** உண்மைக் கடவுளின் ஆலயத்தில் அவனை ஒளித்து வைத்தி
ருந்தார்கள். அவன் ஆறு வருஷங்களுக்கு அவர்களோடு இருந்தான். அந்தச் சமயத்தில் அத்தாலியாள் அந்தத் தேசத்தை ஆட்சி செய்துவந்தாள்.

23 ஏழாம் வருஷத்தில், யோய்தா தைரியமாக ஒரு காரியத்தைச் செய்தார். அதாவது, நூறு வீரர்களுக்குத் தலைவர்களாக இருந்த எரோகாமின் மகன் அசரியா, யெகோனானின் மகன் இஸ்மவேல், ஓபேதின் மகன் அசரியா, அதாயாவின் மகன் மாசெயா, சிக்ரியின் மகன் எலிஷாபாத் ஆகி
யோருடன் ஓர் ஒப்பந்தம் செய்தார்.[d] **2** அவர்கள் யூதாவிலிருந்த எல்லா நகரங்களுக்கும் போய், அங்கிருந்த லேவியர்களையும்[e] இஸ்ரவேலின் தந்தைவழிக் குடும்பத் தலைவர்களையும் ஒன்றுகூட்டினார்கள். அவர்கள் எல்
லாரும் எருசலேமுக்கு வந்ததும், **3** சபையார் எல்லாரும் உண்மைக் கடவு
ளின் ஆலயத்தில் ராஜாவுடன் ஒப்பந்தம் செய்தார்கள்.[f] பின்பு, யோய்தா அவர்களிடம்,

“தாவீதின் வாரிசுகள் ஆட்சி செய்வார்கள் என்று யெகோவா வாக்குக்
கொடுத்தபடியே, ராஜாவின் மகன் ஆட்சி செய்வான்.[g] **4** நீங்கள் செய்ய
வேண்டியது என்னவென்றால், ஓய்வுநாளில் வேலைக்கு வருகிற குருமார்களையும் லேவியர்களையும் மூன்று குழுக்களாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.[h]
ஒரு குழுவினர், வாசலைக் காவல்காக்க வேண்டும்.[i] **5** இன்னொரு குழுவி
னர், அரண்மனையைக் காவல்காக்க வேண்டும்.[j] மற்றொரு குழுவினர், ‘அஸ்திவார நுழைவாசலில்’ நிற்க வேண்டும். மக்கள் எல்லாரும் யெகோவா
வுடைய ஆலயத்தின் பிரகாரங்களில் நிற்க வேண்டும்.[k] **6** வேலைக்கு வரு
கிற குருமார்களையும் லேவியர்களையும் தவிர வேறு யாரையும் யெகோவாவின் ஆலயத்துக்குள்ளே அனுமதிக்காதீர்கள்.[l] பரிசுத்த வேலைக்காக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் மட்டும் நுழையலாம். மற்ற எல்லாரும் ஆலயத்துக்கு வெளியே நின்றுகொண்டு, யெகோவாவுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும். **7** லேவியர்
கள் தங்களுடைய கைகளில் ஆயுதங்களோடு ராஜாவைச் சுற்றி நின்று பாதுகாக்க வேண்டும். உங்களை மீறி ஆலயத்துக்குள் நுழைகிற யாரையும் உயிரோடு விடக்கூடாது. ராஜா எங்கே போனாலும் நீங்களும் அவர் கூடவே போக வேண்டும்” என்று சொன்னார்.

8 குருவாகிய யோய்தா சொன்னபடியே லேவியர்களும் யூதா மக்கள் எல்லாரும் செய்தார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய பிரிவிலிருந்த ஆட்கள் எல்லாரையும், அதாவது ஓய்வுநாளில் வேலைக்கு வந்தவர்கள், அன்றைக்கு விடுப்பு எடுக்க வேண்டியவர்கள் என எல்லாரையும், கூட்டிக்கொண்டு குருவாகிய யோய்தாவிடம் வந்தார்கள்.[m] ஏனென்றால், விடுப்பு எடுக்க வேண்டிய பிரிவினர்களையும் அன்றைக்கு யோய்தா வேலைக்கு
வரச் சொல்லியிருந்தார்.[n] **9** உண்மைக் கடவுளின் ஆலயத்திலிருந்த[o]

22:11 *தாதி என்பவர் குழந்தைகளைக் கவனித்துக்கொள்பவர்.

அதி. 22
a 2ரா 11:21
b 2நா 23:1
c 2சா 7:12, 13
1ரா 15:4
2நா 21:7

அதி. 23
d 2ரா 11:4
e 2நா 8:14
f 2சா 5:3
g 2சா 7:8, 12
1ரா 2:4
1ரா 9:5
சங் 89:20, 29
h 1நா 24:3
i 2ரா 11:5-8
1நா 9:22-25
1நா 26:1
j 1ரா 7:1
k 1ரா 7:12
l 1நா 23:28, 32
m 2ரா 11:9-12
n 1நா 24:1
1நா 26:1
o 1நா 26:26, 27
2நா 5:1

அதி. 23
a 2சா 8:7
b 2ரா 11:4
c 2ரா 11:2
d உபா 17:18
e 1சா 10:1, 24
f 2ரா 11:13-16
g 2நா 23:1
h 1ரா 1:39, 40
i 2ரா 11:17, 18
2நா 34:1, 31
j 2ரா 10:27, 28
k உபா 12:3
2நா 34:1, 4
l உபா 13:5
1ரா 18:40
m யாத் 29:38
எண் 28:2
n 1நா 23:6
1நா 23:30, 31

தாவீது ராஜாவின் ஈட்டிகளையும் சிறிய கேடயங்களையும்* வட்டவடிவ
கேடயங்களையும்[a] எடுத்து நூறு வீரர்களுக்குத் தலைவர்களிடம்[b] குருவா
கிய யோய்தா கொடுத்தார். **10** ஆலயத்தின் வலது பக்கம் தொடங்கி
இடது பக்கம் வரையிலும், பலிபீடத்தின் பக்கத்திலும் ஆலயத்தின் பக்கத்
திலும் எல்லா ஆட்களையும் ஆயுதம் ஏந்திக்கொண்டு நிற்க வைத்தார். இப்
படி, ராஜாவைச் சுற்றிலும் நிற்க வைத்தார். **11** பின்பு, அவர்கள் ராஜாவின்
மகனை வெளியே கூட்டிக்கொண்டு வந்து,[c] அவனுடைய தலையில் கிரீ
டத்தையும்* திருச்சட்ட சுருளையும்[d] வைத்து அவனை ராஜாவாக்கினார்
கள். யோய்தாவும் அவருடைய மகன்களும் அவனை அபிஷேகம் செய்
தார்கள். “ராஜா பல்லாண்டு வாழ்க!”[e] என்று சொன்னார்கள்.

12 மக்கள் ஓடுகிற சத்தத்தையும் ராஜாவைப் புகழ்கிற சத்தத்தையும்
அத்தாலியாள் கேட்டவுடனே, யெகோவாவின் ஆலயத்தில் அவர்கள் கூடி
யிருந்த இடத்துக்கு வந்தாள்.[f] **13** வாசலில் இருந்த தூண்* பக்கத்தில்
ராஜா நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தாள். தலைவர்களும்[g] எக்காளம்
ஊதுகிறவர்களும் ராஜாவோடு இருந்தார்கள். மக்கள் எல்லாரும் சந்தோ
ஷமாக இருந்தார்கள்,[h] எக்காளங்களை ஊதிக்கொண்டிருந்தார்கள். இசைக்
கருவிகளை வைத்திருந்த பாடகர்கள் அந்தக் கொண்டாட்டத்தை முன்நின்று
நடத்தினார்கள். அதைப் பார்த்ததும் அத்தாலியாள் தன் உடையைக் கிழித்
துக்கொண்டு, “சதி! சதி!” என்று கூச்சல் போட்டாள். **14** அப்போது நூறு
வீரர்களுக்குத் தலைவர்களை, அதாவது படைக்குத் தலைவர்களாக நியமிக்
கப்பட்டவர்களை, குருவாகிய யோய்தா வெளியே கூப்பிட்டு, “அவளை
வீரர்கள் நடுவிலிருந்து வெளியே கொண்டுபோங்கள். எவனாவது அவள்
பின்னால் போனால் அவனையும் வாளால் வெட்டிக் கொல்லுங்கள்!” என்று
கட்டளையிட்டார். ஏனென்றால், “அவளை யெகோவாவின் ஆலயத்தில்
கொல்ல வேண்டாம்” என்று அவர் சொல்லியிருந்தார். **15** அதனால் அவர்
கள் அத்தாலியாளைப் பிடித்து, அரண்மனையிலிருந்த ‘குதிரை நுழைவாச
லுக்கு’ கொண்டுபோய் உடனடியாகக் கொன்றுபோட்டார்கள்.

16 பின்பு, என்றென்றும் யெகோவாவின் மக்களாக இருக்க வேண்
டும் என்பதற்காக தனக்கும், மக்கள் எல்லாருக்கும் ராஜாவுக்கும் இடையே
யோய்தா ஓர் ஒப்பந்தம் செய்தார்.[i] **17** அதன் பின்பு, மக்கள் எல்லாரும்
பாகால் கோயிலுக்குப் போய் அதை இடித்துப்போட்டார்கள்.[j] பாகாலின்
பலிபீடங்களையும் சிலைகளையும் தூள்தூளாக்கினார்கள்.[k] பாகாலின் பூசா
ரியான மாத்தானை அந்தப் பலிபீடங்களுக்கு முன்னால் கொன்றுபோட்
டார்கள்.[l] **18** பின்பு, யெகோவாவின் ஆலயத்தை மேற்பார்வை செய்கிற
பொறுப்பை குருமார்களுக்கும் லேவியர்களுக்கும் யோய்தா கொடுத்தார்.
யெகோவாவின் ஆலயத்தைக் கவனித்துக்கொள்வதற்காக தாவீது அவர்
களைப் பல பிரிவுகளாகப் பிரித்திருந்தபடியே யோய்தாவும் அவர்க
ளைப் பிரித்து, மோசேயின் திருச்சட்டத்தில் எழுதியிருந்தபடி[m] யெகோவா
வுக்குத் தகன பலிகளைச் செலுத்துவதற்காகவும்[n] தாவீது சொல்லியிருந்த
படி சந்தோஷமாகப் பாடல்கள் பாடுவதற்காகவும் அவர்களை நியமித்தார்.
19 எந்த விதத்திலாவது தீட்டுப்பட்ட ஆட்கள் உள்ளே நுழைந்துவிடக்
கூடாது என்பதற்காக யெகோவாவின் ஆலயக் கதவுகளுக்குப் பக்கத்தில்

23:9 *பொதுவாக, வில்வீரர்கள் இவற்றை வைத்திருப்பார்கள். **23:11** *வே.வா., “மகுடத்தையும்.” **23:13** *நே.மொ., “அவருடைய தூண்.”

வாயிற்காவலர்களை நிறுத்தினார்.[a] **20** நூறு வீரர்களுக்குத் தலைவர்களை
யும்,[b] முக்கியப் பிரமுகர்களையும், மக்களை ஆளுகிறவர்களையும்,
தேசத்து மக்கள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, ராஜாவை யெகோவா
வின் ஆலயத்திலிருந்து அரண்மனைக்குப் பாதுகாப்பாகக் கொண்டுவந்
தார். அவர்கள் எல்லாரும் 'உயர்ந்த நுழைவாசல்' வழியாக அரண்மனைக்கு
வந்து, யோவாசை சிம்மாசனத்தில் உட்கார வைத்தார்கள்.[c] **21** அத்தாலி
யாளை வாளால் வெட்டிக் கொன்றதால், மக்கள் எல்லாரும் சந்தோஷப்பட்
டார்கள், நகரத்தில் நிம்மதி நிலவியது.

24 யோவாஸ் ராஜாவானபோது அவருக்கு ஏழு வயது.[d] அவர் 40
வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா,
பெயெர்-செபாவைச்[e] சேர்ந்த சிபியாள். **2** குருவாகிய யோய்தா உயி
ரோடு இருந்த காலமெல்லாம் யோவாஸ் யெகோவாவுக்குப் பிரியமாக
நடந்துகொண்டார்.[f] **3** யோய்தா இரண்டு பெண்களை யோவாசுக்குக்
கல்யாணம் செய்து வைத்தார். அவருக்கு மகன்களும் மகள்களும் பிறந்
தார்கள்.

4 யெகோவாவின் ஆலயத்தைப் புதுப்பிக்க[g] வேண்டுமென்று
யோவாஸ் மனதார ஆசைப்பட்டார். **5** அதனால் குருமார்களையும் லேவி
யர்களையும் அவர் ஒன்றுகூட்டி, "உங்கள் கடவுளின் ஆலயத்தை ஒவ்
வொரு வருஷமும் பழுதுபார்க்க வேண்டும்.[h] அதனால், யூதாவில் இருக்கிற
எல்லா நகரங்களுக்கும் போய், இஸ்ரவேல் மக்கள் எல்லாரிடமும் நன்
கொடை வாங்குங்கள். தாமதிக்காமல் உடனே செய்யுங்கள்" என்று சொன்
னார். ஆனால், லேவியர்கள் அதை உடனடியாகச் செய்யவில்லை.[i] **6** அத
னால் தலைமைக் குருவான யோய்தாவை ராஜா கூப்பிட்டு,[j] "சாட்சிக்
கூடாரத்துக்காக[k] இஸ்ரவேல் சபையார் புனித வரியைக் கட்ட வேண்டு
மென்று யெகோவாவின் ஊழியரான மோசே கட்டளையிட்டிருந்தார், இல்
லையா?[l] பிறகு ஏன் யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிற மக்களிடமிருந்து
புனித வரியை வாங்குவதற்காக லேவியர்களை அனுப்பவில்லை? **7** அந்
தப் பொல்லாத அத்தாலியாளின் மகன்கள்[m] யெகோவாவின் ஆலயத்துக்
குள் அத்துமீறி நுழைந்து,[n] அங்கிருந்த பரிசுத்த பொருள்கள் எல்லாவற்றை
யும் எடுத்து பாகாலை வணங்குவதற்காகப் பயன்படுத்தியது உங்களுக்கே
தெரியும்" என்று சொன்னார். **8** பின்பு, ராஜாவின் கட்டளைப்படி, ஒரு
பெட்டியைச்[o] செய்து யெகோவாவுடைய ஆலயத்தின் வாசலுக்கு வெளியே
வைத்தார்கள்.[p] **9** இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் இருந்தபோது கடவு
ளின் ஊழியரான மோசே கட்டளையிட்ட புனித வரியை[q] யெகோவாவுக்
குக் கொடுக்கச் சொல்லி யூதா எங்கும் எருசலேம் எங்கும் அறிவிப்பு செய்
யப்பட்டது. **10** அதைக் கேட்டு எல்லா மக்களும் எல்லா அதிகாரிகளும்
மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.[r] பெட்டி நிரம்பி வழியும்வரை* காணிக்கை
களைக் கொண்டுவந்து அதில் போட்டுக்கொண்டே இருந்தார்கள்.

11 அந்தப் பெட்டியில் நிறைய பணம் சேர்ந்துவிட்டதைப் பார்க்கும்
போது லேவியர்கள் அதை ராஜாவிடம் கொண்டுவருவார்கள். பின்பு, ராஜா
வின் செயலாளரும் முதன்மை குருவின் உதவியாளரும் பணத்தை
வெளியே எடுத்துவிட்டு,[s] அந்தப் பெட்டியைக் கொண்டுபோய் பழையபடி
அதன் இடத்தில் வைத்துவிடுவார்கள். இப்படி ஒவ்வொரு நாளும்

24:10 * அல்லது, "எல்லாரும் கொடுத்து முடிக்கும்வரை."

அதி. 23
a 1நா 9:26; 1நா 26:1, 13
b 2ரா 11:9
c 1ரா 7:7; 2ரா 11:19, 20

அதி. 24
d 2ரா 11:21
e ஆதி 21:14; 2சா 3:10; 2ரா 12:1
f 2ரா 12:2
g 2ரா 22:3-5
h 2ரா 12:4, 5; 2நா 29:1, 3; 2நா 34:9, 10
i 2ரா 12:6
j 2ரா 12:7
k எண் 1:50
l யாத் 30:12-16
m 2நா 22:2, 3
n 2நா 28:24
o மாற் 12:41
p 2ரா 12:9
q யாத் 30:12-16; நெ 10:32; மத் 17:24
r 1நா 29:9
s 2ரா 12:10

செய்து, ஏராளமான பணத்தைச் சேர்த்தார்கள். **12** ராஜாவும் யோய்தாவும்
யெகோவாவின் ஆலய வேலையை மேற்பார்வை செய்கிறவர்களிடம் அந்
தப் பணத்தைக் கொடுத்தார்கள். இவர்கள், யெகோவாவின் ஆலயத்
தைப் புதுப்பிப்பதற்காகக் கற்களை வெட்டிச் செதுக்குகிறவர்களையும் கைத்
தொழிலாளிகளையும் வேலைக்கு வைத்தார்கள்.[a] அதோடு, இரும்பையும்
செம்பையும் வைத்து வேலை செய்கிறவர்களையும் யெகோவாவின் ஆல
யத்தைப் பழுதுபார்க்கிற வேலைக்காக நியமித்தார்கள். **13** மேற்
பார்வை செய்கிறவர்கள் வேலையை ஆரம்பித்து வைத்தார்கள். அவர்களு
டைய மேற்பார்வையில் பழுதுபார்க்கும் வேலை நன்றாக முன்னேறியது.
உண்மைக் கடவுளின் ஆலயத்தை உறுதியாகக் கட்டி, பழைய நிலைக்
குக் கொண்டுவந்தார்கள். **14** ஆலய வேலை முடிந்தவுடன், மிச்சமிருந்த
பணத்தை ராஜாவிடமும் யோய்தாவிடமும் கொண்டுவந்து கொடுத்தார்
கள். அவர்கள் அந்தப் பணத்தை வைத்து யெகோவாவின் ஆலயத்துக்
குத் தேவையான சாமான்களைச் செய்தார்கள். ஆலய வேலைக்கும்
பலி செலுத்துவதற்கும் தேவையான சாமான்கள், கிண்ணங்கள், வெள்ளிச்
சாமான்கள், தங்கச் சாமான்கள் ஆகியவற்றைச் செய்தார்கள்.[b] யோய்தா
உயிரோடு இருந்தவரை, யெகோவாவின் ஆலயத்தில் தவறாமல் தகன பலி
களைக் கொடுத்துவந்தார்கள்.[c]

15 யோய்தா பல வருஷங்கள் திருப்தியாக வாழ்ந்து, வயதாகி கடைசி
யில் இறந்துபோனார். அப்போது, அவருக்கு 130 வயது. **16** அவர் இஸ்ர
வேல் மக்களுக்கும் உண்மைக் கடவுளுக்கும் அவருடைய ஆலயத்துக்கும்
நிறைய நல்லது செய்திருந்தார்.[d] அதனால் 'தாவீதின் நகரத்தில்,' ராஜாக்கள்
அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.[e]

17 யோய்தா இறந்த பிறகு, யூதாவிலிருந்த அதிகாரிகள் ராஜாவிடம்
வந்து அவர் முன்னால் தலைவணங்கினார்கள். ராஜா அவர்கள் பேச்
சைக் கேட்டார். **18** மக்கள் தங்களுடைய முன்னோர்களின் கடவுளான
யெகோவாவின் ஆலயத்தை அலட்சியம் செய்துவிட்டு, பூஜைக் கம்பங்க
ளையும்* சிலைகளையும் வணங்க ஆரம்பித்தார்கள். இப்படிப் பாவம் செய்
ததால் யூதாமீதும் எருசலேம்மீதும் கடவுள் மிகவும் கோபப்பட்டார்.
19 அவர்கள் தன்னிடம் திரும்பிவருவதற்காக யெகோவா தன்னுடைய
தீர்க்கதரிசிகளை மீண்டும் மீண்டும் அனுப்பினார். அவர்களும் தொடர்ந்து
எச்சரிக்கை கொடுத்தார்கள். ஆனால், மக்கள் அதையெல்லாம் காதில்
வாங்கிக்கொள்ளவே இல்லை.[f]

20 குருவாகிய யோய்தாவின்[g] மகன் சகரியாமீது கடவுளுடைய சக்தி
வந்தது. அப்போது அவர் ஓர் உயரமான இடத்தில் நின்றுகொண்டு மக்க
ளைப் பார்த்து, "உண்மைக் கடவுள் சொல்வது என்னவென்றால், 'ஏன்
யெகோவாவின் கட்டளைகளை மீறி நடக்கிறீர்கள்? அவருடைய கட்ட
ளைகளை மீறினால் நீங்கள் செய்கிற எதிலும் வெற்றி கிடைக்காது. நீங்கள்
யெகோவாவை ஒதுக்கிவிட்டீர்கள், அதனால் அவரும் உங்களை ஒதுக்கி
விடுவார்'"[h] என்று சொன்னார். **21** அதனால், சகரியாவுக்கு எதிராக அவர்
கள் சதித்திட்டம் போட்டார்கள்.[i] ராஜாவின் கட்டளைப்படி, யெகோவா
வுடைய ஆலயத்தின் பிரகாரத்தில் அவரைக் கல்லெறிந்து கொன்றார்கள்.[j]
22 யோய்தா காட்டிய மாறாத அன்பை நினைத்துப் பார்க்காமல்

24:18 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 24
a 2ரா 12:11, 12; 2நா 34:10, 11
b யாத் 37:16; எண் 7:84
c எண் 28:3
d 2நா 23:1
e 1ரா 2:10
f 2ரா 17:13, 14; 2நா 36:15, 16; எரே 7:25, 26
g 2நா 23:11
h உபா 29:24, 25; 1நா 28:9; 2நா 15:2
i எரே 11:19
j மத் 23:35; லூ 11:51

அவருடைய மகன் சகரியாவை யோவாஸ் ராஜா கொன்றுபோட்டார்.
சகரியா சாகும்போது, “இதற்கெல்லாம் யெகோவா உங்களுக்குச் சரியான
தண்டனை கொடுப்பார்”[a] என்று சொல்லிவிட்டு இறந்துபோனார்.

23 அடுத்த வருஷத்தின் ஆரம்பத்தில் யோவாசுக்கு எதிராக சீரியர்
கள் படையெடுத்து வந்து, யூதாவையும் எருசலேமையும் தாக்கினார்கள்.[b]
எல்லா அதிகாரிகளையும் கொன்றுபோட்டார்கள்.[c] அங்கிருந்து கொள்
ளையடித்த எல்லா பொருள்களையும் தமஸ்கு ராஜாவுக்கு அனுப்பி வைத்
தார்கள். **24** சீரியர்கள் கொஞ்சம் வீரர்களோடு படையெடுத்து வந்தபோ
திலும், யூதாவின் மிகப் பெரிய படையைத் தோற்கடித்தார்கள்.[d] மக்கள்
தங்களுடைய முன்னோர்களின் கடவுளான யெகோவாவை அலட்சியம்
செய்ததால், யெகோவா அவர்களைத் தோற்றுப்போக வைத்தார். சீரியர்கள்
யோவாசுக்குத் தண்டனை கொடுத்தார்கள். **25** (அவர்களுடைய தாக்குத
லால் யோவாஸ் பயங்கரமாகக் காயமடைந்திருந்தார்*), அவர்கள் அங்கி
ருந்து திரும்பிப் போனதும் அவருடைய ஊழியர்களே அவருக்கு எதிராகச்
சதித்திட்டம் போட்டார்கள். ஏனென்றால், அவர் குருவாகிய யோய்தா
வின்[e] மகன்களுடைய# இரத்தத்தைச் சிந்தியிருந்தார். அவருடைய படுக்
கையிலேயே அவரைப் படுகொலை செய்தார்கள்.[f] அவர் இறந்ததும் ‘தாவீ
தின் நகரத்தில்’[g] அடக்கம் செய்யப்பட்டார். ஆனால், ராஜாக்கள் அடக்கம்
செய்யப்பட்ட இடத்தில் அடக்கம் செய்யப்படவில்லை.[h]

26 அம்மோனியப் பெண்ணான சிமியாத்தின் மகன் சாபாத்தும் மோவா
பியப் பெண்ணான சிம்ரீத்தின் மகன் யெகோஸபாத்தும்தான் அவருக்கு
எதிராகச் சதி செய்தவர்கள்.[i] **27** யோவாசின் மகன்களைப் பற்றியும், அவ
ருக்கு எதிரான தண்டனைத் தீர்ப்புகளைப்[j] பற்றியும், உண்மைக் கடவுளின்
ஆலயம் புதுப்பிக்கப்பட்டதைப்[k] பற்றியும் ராஜாக்களின் புத்தகத்தில் எழு
தப்பட்டிருக்கிறது. அவருக்குப் பிறகு, அவருடைய மகன் அமத்சியா ராஜா
வானார்.

25 அமத்சியா ராஜாவானபோது அவருக்கு 25 வயது; அவர் எருசலே
மில் 29 வருஷங்கள் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா
பெயர் யோவதானாள். அவள் எருசலேமைச் சேர்ந்தவள்.[l] **2** யெகோவா
வுக்குப் பிரியமான காரியங்களை அமத்சியா செய்துவந்தார், ஆனால்,
முழு இதயத்தோடு செய்யவில்லை. **3** ஆட்சி அதிகாரம் முழுமையாகத்
தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன், ராஜாவாக இருந்த தன் அப்பா
வைக் கொன்றுபோட்ட ஊழியர்களை அமத்சியா கொன்றுபோட்டார்.[m]
4 ஆனால், அவர்களுடைய மகன்களைக் கொல்லவில்லை. ஏனென்றால்,
திருச்சட்டத்தில் எழுதப்பட்ட கட்டளைக்கு, அதாவது மோசேயின் புத்தகத்
தில் யெகோவா கொடுத்த கட்டளைக்கு, அவர் கீழ்ப்படிந்தார். “பிள்ளைகள்
செய்த பாவத்துக்காக அப்பா சாகக் கூடாது, அப்பா செய்த பாவத்துக்கா
கப் பிள்ளைகள் சாகக் கூடாது. ஒருவன் செய்த பாவத்துக்காக அவன்தான்
சாக வேண்டும்”[n] என்று கடவுள் அதில் கட்டளையிட்டிருந்தார்.

5 யூதா வீரர்கள் எல்லாரையும் அமத்சியா ஒன்றுகூட்டினார்; பின்பு, யூதா
விலும் பென்யமீனிலும் இருந்த வீரர்கள் எல்லாரையும் தந்தைவழிக் குடும்

24:25 *வே.வா., “நிறைய நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தார்.” #வே.வா., “மகனு
டைய.” அநேகமாக, மரியாதைக்காகப் பன்மையில் சொல்லப்பட்டிருக்கலாம்.

அதி. 24
a ஆதி 9:5, சங் 94:1, எரே 11:20, எபி 10:30
b 2ரா 12:17
c 2நா 24:17, 18
d லேவி 26:17, 37, உபா 32:30
e 2நா 24:20, 21
f 2ரா 12:20
g 2சா 5:9, 1ரா 2:10
h 2நா 21:16, 20, 2நா 28:27
i 2ரா 12:21
j 2நா 24:20
k 2நா 24:13

அதி. 25
l 2ரா 14:1-6
m 2நா 24:26
n உபா 24:16

அதி. 25
a 1சா 8:11, 12
b எண் 1:2, 3
c 2நா 19:2
d 2நா 14:11
2நா 20:6
e 1சா 2:7
நீதி 10:22
ஆகா 2:8
f 2சா 8:13
சங் 60:மே.கு.
g 2ரா 14:7
2நா 20:10, 11
h 2நா 25:9
i 1ரா 16:29
j 2நா 8:3, 5
k யாத் 20:3, 5
உபா 7:25
2நா 28:22, 23
l 2நா 24:20
சங் 115:8
எரே 2:5
எரே 10:5

பம்வாரியாக நிற்க வைத்தார். ஆயிரம் பேருக்குத் தலைவர்கள், நூறு பேருக்
குத் தலைவர்கள் ஆகியோரின் கீழ் அவர்களை நிற்க வைத்தார்.[a]
இருபதும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள ஆண்கள்[b] எவ்வளவு பேர் இருக்
கிறார்கள் என்று கணக்கெடுத்து பதிவு செய்தார்; படையில் சேவை
செய்ய பயிற்சி பெற்ற வீரர்கள் 3,00,000 பேர் இருந்தார்கள். பெரிய ஈட்டி
யும் பெரிய கேடயமும் பிடித்துக்கொண்டு போர் செய்வதில் அவர்கள்
திறமைசாலிகளாக இருந்தார்கள். **6** அதோடு, 100 தாலந்து* வெள்ளி
யைக் கூலியாகக் கொடுத்து 1,00,000 மாவீரர்களை இஸ்ரவேலிலிருந்து வர
வழைத்தார். **7** அப்போது, உண்மைக் கடவுளின் ஊழியர் ஒருவர் வந்து,
“ராஜாவே, இஸ்ரவேலுக்கு யெகோவா துணையாக இல்லை,[c] எப்பிராயீ
மைச் சேர்ந்தவர்களுக்கு அவர் துணையாக இல்லை. அதனால், இஸ்ரவேல்
படையை உங்களுடன் கூட்டிக்கொண்டு போகாதீர்கள். **8** நீங்கள் மட்
டும் போய், தைரியமாகப் போர் செய்யுங்கள். இவர்களையும் கூட்டிக்
கொண்டு போனால், கடவுள் உங்களைத் தோற்றுப்போக வைப்பார். ஏனென்
றால், கடவுளால் உதவி செய்யவும் முடியும்,[d] தோற்றுப்போக வைக்கவும்
முடியும்” என்று சொன்னார். **9** அதற்கு அமச்சியா, “ஆனால், இஸ்ர
வேல் வீரர்களுக்கு 100 தாலந்து கொடுத்துவிட்டேனே” என்று உண்மைக்
கடவுளின் ஊழியரிடம் சொன்னார். அதற்கு அவர், “யெகோவாவினால்
அதைவிட அதிகமாக உங்களுக்குக் கொடுக்க முடியும்”[e] என்று சொன்
னார். **10** அப்போது, எப்பிராயீமிலிருந்து வந்த வீரர்களை அவர்களுடைய
ஊருக்கே அமச்சியா திருப்பி அனுப்பிவிட்டார். அதனால், யூதாமீது அவர்
கள் பயங்கரமாகக் கோபப்பட்டு, கொதிப்புடன் தங்கள் ஊருக்குத் திரும்பிப்
போனார்கள்.

11 அமச்சியா தைரியமடைந்து, தன்னுடைய படைவீரர்களைக் கூட்டிக்
கொண்டு உப்புப் பள்ளத்தாக்குக்குப்[f] போனார்; அங்கே சேயீரைச் சேர்ந்த
10,000 வீரர்களைக் கொன்றுபோட்டார்.[g] **12** 10,000 பேரை யூதா வீரர்கள்
உயிரோடு பிடித்தார்கள். பின்பு, அவர்களை ஒரு மலை உச்சிக்குக் கொண்
டுபோய் அங்கிருந்து கீழே தள்ளினார்கள். அவர்கள் எல்லாரும் உடல்
சிதறி செத்துப்போனார்கள். **13** போருக்கு வர வேண்டாம் என்று சொல்லி
அமச்சியா திருப்பி அனுப்பிய வீரர்கள்,[h] யூதா நகரங்கள்மீது திடீர்த் தாக்கு
தல் நடத்தினார்கள். சமாரியாமுதல்[i] பெத்-ஓரோன்வரை[j] தாக்குதல் நடத்தி
3,000 பேரைக் கொன்றுபோட்டார்கள்; அதோடு, ஏராளமான பொருள்க
ளைக் கொள்ளையடித்துக்கொண்டு போனார்கள்.

14 ஏதோமியர்களைக் கொன்றுவிட்டு அமச்சியா திரும்பி வந்தபோது,
சேயீர் மக்கள் வழிபட்ட தெய்வங்களையும் எடுத்துக்கொண்டு வந்தார்;
அவற்றை வழிபட ஆரம்பித்தார்.[k] அவற்றுக்கு முன்னால் தலைவணங்கி
னார், பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்தார். **15** அதனால்,
அமச்சியாமீது யெகோவாவுக்குப் பயங்கர கோபம் வந்தது. அவர் ஒரு
தீர்க்கதரிசியை அமச்சியாவிடம் அனுப்பினார். அந்தத் தீர்க்கதரிசி அவ
ரிடம் வந்து, “நீங்கள் வழிபடுகிற மற்ற தேசத்து தெய்வங்களால் தங்களு
டைய சொந்த மக்களைக்கூட உங்களிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை.
அவற்றைப் போய் ஏன் வணங்குகிறீர்கள்?”[l] என்று கேட்டார். **16** அவர்

25:6 * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

பேசிக்கொண்டிருக்கும்போதே ராஜா அவரிடம், “போதும் நிறுத்து![a] உன்னி
டம் நான் ஆலோசனை கேட்டேனா?[b] இதற்கு மேல் பேசினால் உன்னைக்
கொன்றுவிடுவேன்!” என்று சொன்னார். அப்போது அந்தத் தீர்க்கதரிசி,
“நீங்கள் சிலைகளை வணங்குகிறீர்கள்; நான் சொன்ன ஆலோசனையையும்
கேட்கவில்லை. அதனால், உங்களை அழிப்பதற்குக் கடவுள் முடிவுசெய்து
விட்டார்”[c] என்று சொல்லிவிட்டு பேசுவதை நிறுத்தினார்.

17 அமத்சியா தன்னுடைய ஆலோசகர்களுடன் கலந்துபேசிய பின்பு,
இஸ்ரவேலின் ராஜாவான யெகூவின் பேரனும் யோவாகாசின் மகனு
மான யோவாசிடம் தூதுவர்களை அனுப்பி, “போர்க்களத்தில் நேருக்கு
நேர் மோதலாம் வா”[d] என்று சொன்னார். **18** அதற்கு இஸ்ரவேலின் ராஜா
வான யோவாஸ் யூதாவின் ராஜாவான அமத்சியாவுக்கு இப்படிச் செய்தி
அனுப்பினார்: “லீபனோனில் இருக்கிற முட்செடி அங்கிருக்கிற தேவதாரு
மரத்துக்குச் செய்தி அனுப்பி, ‘உன்னுடைய மகளை என் மகனுக்குக் கல்யா
ணம் செய்து கொடு’ என்று கேட்டதாம். ஆனால், லீபனோனில் இருக்கிற
காட்டு மிருகம் அந்த வழியாகப் போனபோது அந்த முட்செடியை மிதித்
துப் போட்டதாம். **19** ‘ஏதோமைத் தோற்கடித்துவிட்டேன், பார்!’[e] என்று
சொன்னாய். அதனால், தலைக்கனத்தோடு ஆடுகிறாய், பேர்புகழுக்காக
அலைகிறாய். இப்போது ஒழுங்காக உன் வீட்டிலேயே* இரு. நீ ஏன்
உனக்கு அழிவைத் தேடிக்கொள்கிறாய், உன்னோடு சேர்த்து ஏன் யூதாவை
யும் அழிக்கப் பார்க்கிறாய்?”

20 ஆனால், அமத்சியா அவர் பேச்சைக் கேட்கவில்லை;[f] உண்மைக்
கடவுளால்தான் இப்படி நடந்தது. ஏதோமின் தெய்வங்களை வழிபட்ட
தால்,[g] எதிரியிடம் அவர்கள் தோற்றுப்போக வேண்டுமெனக் கடவுள்
தீர்மானித்திருந்தார்.[h] **21** அதனால், இஸ்ரவேலின் ராஜாவான யோவாஸ்
போருக்குப் போனார். அவரும் யூதாவின் ராஜாவான அமத்சியாவும் யூதா
வுக்குச் சொந்தமான பெத்-ஷிமேசில்[i] நேருக்கு நேர் சண்டை போட்டார்
கள். **22** யூதாவைச் சேர்ந்த வீரர்கள் இஸ்ரவேலர்களிடம் தோற்றுப்போய்,
அவரவருடைய வீடுகளுக்கு* தப்பித்து ஓடினார்கள். **23** யோவாகா
சின்* பேரனும் யோவாசின் மகனும் யூதாவின் ராஜாவுமாகிய அமத்சி
யாவை இஸ்ரவேலின் ராஜா யோவாஸ் பெத்-ஷிமேசில் பிடித்தார். பின்பு,
அவரை எருசலேமுக்குக் கொண்டுவந்தார். எருசலேம் மதில் சுவரை ‘எப்
பிராயீம் நுழைவாசல்’[j] தொடங்கி ‘மூலை நுழைவாசல்’[k] வரை 400 முழ#
நீளத்துக்கு யோவாஸ் இடித்துப்போட்டார். **24** உண்மைக் கடவுளின் ஆல
யத்தில் ஓபேத்-ஏதோமின் பொறுப்பில் இருந்த எல்லா தங்கத்தையும் வெள்
ளியையும், மற்ற எல்லா பொருள்களையும் எடுத்துக்கொண்டார். ராஜாவின்
அரண்மனை கஜானாக்களில் இருந்த பொக்கிஷங்களையும் எடுத்துக்
கொண்டார்.[l] சிலரைப் பிணைக்கைதிகளாகப் பிடித்துக்கொண்டு சமாரியா
வுக்குத் திரும்பிப் போனார்.

25 இஸ்ரவேலின் ராஜா யோவாகாசின்[m] மகன் யோவாஸ்[n] இறந்த
பின்பு, யூதாவின் ராஜாவான யோவாசின் மகன் அமத்சியா[o] 15 வரு
ஷங்களுக்கு உயிரோடு இருந்தார். **26** ஆரம்பம்முதல் முடிவுவரை அமத்

25:19 *வே.வா., “அரண்மனையிலேயே.” **25:22** *நே.மொ., “கூடாரங்களுக்கு.”
25:23 *அகசியா என்றும் அழைக்கப்படுகிறார். #சுமார் 584 அடி. இணைப்பு
B14-ஐப் பாருங்கள்.

அதி. 25
a ஏசா 30:10
b 2நா 16:10
2நா 18:25, 26
c 1சா 2:25
நீதி 29:1
d 2ரா 14:8-10
e 2நா 25:11
f 2ரா 14:11-14
g 2நா 25:14
h 2நா 22:7
i யோசு 21:
8, 16
1சா 6:19
j நெ 8:16
நெ 12:38, 39
k 2நா 26:9
எரே 31:38
சக 14:10
l 1ரா 7:51
1ரா 15:18
2ரா 24:12, 13
2ரா 25:13-15
2நா 12:9
m 2ரா 14:17-20
n 2ரா 13:10
o 2ரா 14:1

சியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்கள் எல்லாம் யூதா மற்
றும் இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.
27 அமத்சியா யெகோவாவை விட்டு விலகிய சமயத்திலிருந்தே, எருச
லேமில் அவருக்கு எதிராகச் சிலர் சதித்திட்டம் தீட்டினார்கள்.[a] அத
னால், அவர் லாகீசுக்குத் தப்பித்துப் போனார். ஆனாலும், அவருக்குப்
பின்னாலேயே ஆட்களை அனுப்பி லாகீசில் அவரைக் கொன்றுபோட்டார்
கள். **28** குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தில் அவருடைய உடலைக் கொண்
டுவந்து, அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்ட யூதாவின் நக
ரத்தில் அடக்கம் செய்தார்கள்.

26 யூதா மக்கள் எல்லாரும் அமத்சியாவுக்கு அடுத்து, அவருடைய
மகன் உசியாவை[b] ராஜாவாக்கினார்கள்; அப்போது, அவருக்கு
16 வயது.[c] **2** ராஜா* இறந்த# பின்பு, அவர் ஏலோத்தைத்[d] திரும்பக்
கட்டி, அதை யூதா தேசத்துடன் மீண்டும் இணைத்துக்கொண்டார்.[e]
3 உசியா[f] ராஜாவானபோது அவருக்கு 16 வயது; அவர் எருசலேமில்
52 வருஷங்கள் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர் எக்கோலி
யாள், அவள் எருசலேமைச் சேர்ந்தவள்.[g] **4** உசியா தன்னுடைய அப்பா
வான அமத்சியாவைப் போலவே யெகோவாவுக்குப் பிரியமானதைச் செய்
துவந்தார்.[h] **5** உண்மைக் கடவுளுக்குப் பயந்து நடக்க வேண்டுமென்று
சகரியா அவருக்குச் சொல்லிக்கொடுத்திருந்தார்; அதனால், சகரியா உயி
ரோடு இருந்த காலமெல்லாம் உசியா உண்மைக் கடவுளைத் தேடினார்.
அப்படித் தேடியபோது, யெகோவா அவரை ஆசீர்வதித்தார்.[i]

6 அவர் பெலிஸ்தியர்களை எதிர்த்துப் போர் செய்யப் போனார்.[j] அவர்
களோடு போர் செய்து, காத் நகரத்தின் மதிலையும்,[k] யப்னே நகரத்தின்
மதிலையும்[l] அஸ்தோத் நகரத்தின் மதிலையும் உடைத்தார்.[m] பின்பு, அஸ்
தோத்துக்குப் பக்கத்திலும் பெலிஸ்தியர்களின் பகுதியிலும் நகரங்களைக்
கட்டினார். **7** பெலிஸ்தியர்களையும் கூர்பாகாலில் குடியிருந்த அரேபியர்
களையும்[n] மெயூனீம்களையும் தோற்கடிக்க உண்மைக் கடவுள் அவருக்கு
உதவி செய்துகொண்டே இருந்தார். **8** அம்மோனியர்கள்[o] உசியாவுக்குக்
கப்பம் கட்ட ஆரம்பித்தார்கள். அவர் மிகவும் வலிமைமிக்க ராஜாவாக
ஆனதால் அவருடைய புகழ் எகிப்துவரை பரவியது. **9** எருசலேமில்
இருந்த 'மூலை நுழைவாசல்,'[p] 'பள்ளத்தாக்கு நுழைவாசல்,'[q] முட்டுச்சுவர்
ஆகியவற்றின்மீது பலமான கோபுரங்களைக் கட்டினார்.[r] **10** அதோடு,
வனாந்தரத்தில் கோபுரங்களைக் கட்டினார்,[s] நிறைய தண்ணீர்த் தொட்டி
களை அமைத்தார்;* (ஏனென்றால், அவரிடம் ஏராளமான கால்நடைகள்
இருந்தன.) இதேபோல், சேப்பெல்லாவிலும் சமவெளியிலும்# செய்தார்.
அவருக்கு விவசாயத்தில் அதிக ஆர்வம் இருந்தது. அதனால், மலைகளி
லும் கர்மேல் பகுதியிலும் விவசாயிகளையும் திராட்சைத் தோட்டக்காரர்க
ளையும் வேலைக்கு வைத்திருந்தார்.

11 அதோடு, போர் செய்வதற்குத் தயார் நிலையில் ஒரு போர்ப்
படையை வைத்திருந்தார். போருக்குப் போகும்போது அந்தப் படைவீரர்கள்
அணி அணியாகப் போவார்கள். அவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்

26:2 *அதாவது, "அவருடைய அப்பா அமத்சியா." #நே.மொ., "தன் முன்னோர்
களோடு படுக்க வைக்கப்பட்ட." **26:10** *அநேகமாக, பாறைகளில் வெட்டியிருக்க
லாம். #வே.வா., "பீடபூமியிலும்."

அதி. 25
a 2ரா 12:20; 2ரா 15:8, 10; 2ரா 21:23

அதி. 26
b மத் 1:8
c 2ரா 14:21
d 1ரா 9:26; 2ரா 16:6
e 2ரா 14:22
f ஏசா 1:1; ஏசா 6:1
g 2ரா 15:2
h 2ரா 14:1, 3
i 2நா 14:7; சங் 1:2, 3
j 2சா 8:1; 2நா 21:16; ஏசா 14:29
k 1நா 18:1
l யோசு 15:11, 12
m யோசு 15:20, 46; 1சா 5:1
n 2நா 17:11
o ஆதி 19:36, 38; நியா 11:15
p 2ரா 14:13; எரே 31:38; சக 14:10
q நெ 3:13
r 2நா 14:2, 7
s 2ரா 9:17

என்பதைச் செயலாளரான[a] எயியேலும் அதிகாரியான மாசெயாவும் கணக்
கெடுத்து, அதைப் பதிவு செய்தார்கள்.[b] இவர்கள் இரண்டு பேரும், ராஜா
வுக்குச் சேவை செய்த அதிகாரிகளில் ஒருவரான அனனியாவின் தலை
மையில் வேலை செய்தார்கள். **12** தந்தைவழிக் குடும்பத் தலைவர்களின்
மொத்த எண்ணிக்கை 2,600. இவர்கள் இந்த மாவீரர்களுக்கு அதிகாரிகளாக
இருந்தார்கள். **13** ஆயுதம் ஏந்திய 3,07,500 வீரர்கள், இவர்களுடைய தலை
மையில் போருக்குப் போக எப்போதும் தயாராக இருந்தார்கள். எதிரிகளைத்
தாக்குவதற்கு இந்த வலிமையான படை ராஜாவுக்குப் பக்கபலமாக இருந்
தது.[c] **14** படையில் இருந்த எல்லாருக்கும் கேடயங்களையும் ஈட்டிகளை
யும்[d] தலைக்கவசங்களையும் உடல்கவசங்களையும்[e] வில்லையும் கவண்
கற்களையும்[f] உசியா கொடுத்தார். **15** அதுமட்டுமல்ல, பொறியாளர்களால்
வடிவமைக்கப்பட்ட போர் இயந்திரங்களை எருசலேமில் செய்தார்; அவற்
றைக் கோபுரங்களின் மீதும்[g] மதில்களின் ஓரங்களிலும் வைத்தார்கள். அவற்
றைப் பயன்படுத்தி அம்புகளையும் பெரிய கற்களையும் எறிய முடியும்.
அவருக்கு நிறைய உதவி கிடைத்ததால், அவர் வலிமைமிக்கவராக ஆனார்,
அவருடைய புகழ் எல்லா தேசங்களுக்கும் பரவியது.

16 வலிமைமிக்கவராக ஆனதும், அவருக்கு ஆணவம் தலைக்கே
றியது. அதுவே அவருடைய அழிவுக்குக் காரணமானது. யெகோவா
வின் ஆலயத்துக்குள்ளே நுழைந்து தூபபீடத்தில் தூபம் காட்டப் போனதன்
மூலம் தன்னுடைய கடவுளான யெகோவாவின் கட்டளையை அவர் மீறி
னார்.[h] **17** உடனே குருவாகிய அசரியாவும் யெகோவாவுக்குச் சேவை
செய்துவந்த தைரியமுள்ள 80 குருமார்களும் அவருக்குப் பின்னால்
போனார்கள். **18** அவர்கள் உசியா ராஜாவைத் தடுத்து, "உசியா, நீங்கள்
யெகோவாவுக்குத் தூபம் காட்டுவது சரியில்லை! குருமார்கள் மட்டும்தான்
தூபம் காட்ட வேண்டும்,[i] அவர்கள்தான் ஆரோனின் வம்சத்தில் வந்தவர்
கள்,[j] அவர்கள்தான் இந்த வேலைக்காகப் புனிதப்படுத்தப்பட்டவர்கள்.
பரிசுத்த இடத்தைவிட்டு வெளியே போங்கள். நீங்கள் உண்மையில்லாமல்
நடந்துகொண்டீர்கள். இப்படிச் செய்ததற்காக யெகோவா தேவனிடமிருந்து
உங்களுக்கு எந்த மகிமையும் கிடைக்காது" என்று சொன்னார்கள்.

19 அதைக் கேட்டதும், தூபம் காட்டுவதற்காகக் கையில் தூபக்கரண்டி
யுடன் நின்றுகொண்டிருந்த உசியாவுக்குப் பயங்கர கோபம் வந்தது.[k] குரு
மார்களிடம் அவர் கோபமாகப் பேசியபோதே, அவர்களுக்கு முன்னால்
அவருடைய நெற்றியில் தொழுநோய்[l] வர ஆரம்பித்தது. அப்போது
யெகோவாவின் ஆலயத்தில் இருந்த தூபபீடத்துக்குப் பக்கத்தில் அவர்
நின்றுகொண்டிருந்தார். **20** முதன்மை குருவான அசரியாவும் மற்ற குரு
மார்கள் எல்லாரும் அவரைப் பார்த்தபோது, அவருடைய நெற்றியில்
தொழுநோய் வந்திருந்தது. யெகோவா அவருக்குத் தண்டனை கொடுத்த
தால், அவரை அவசர அவசரமாக வெளியேற்றினார்கள். அவரும் வேக
மாக வெளியேறினார்.

21 சாகும்வரை உசியா ராஜா தொழுநோயாளியாக இருந்தார். அத
னால், யெகோவாவின் ஆலயத்திலிருந்து அவர் விலக்கி வைக்கப்பட்டிருந்
தார்.[m] ஒரு தனி வீட்டில் வாழ்ந்துவந்தார். அந்தச் சமயத்தில், அவருடைய
மகன் யோதாம் அரண்மனையைக் கவனித்துக்கொண்டு, தேசத்து மக்க
ளுக்கு நீதி வழங்கிவந்தார்.[n]

அதி. 26
a 2நா 24:11
b எண் 1:2, 3; 2சா 24:9
c 2நா 11:1; 2நா 13:3; 2நா 14:8; 2நா 17:14; 2நா 25:5
d 2நா 11:5, 12
e 1சா 17:4, 5
f நியா 20:16; 1சா 17:49; 1நா 12:1, 2
g 2நா 14:2, 7
h எண் 1:51
i எண் 16:39, 40; எண் 18:7
j யாத் 30:7; 1நா 23:13
k 2நா 16:10; 2நா 25:15, 16
l எண் 12:10; 2ரா 5:27
m 2ரா 15:5-7
n லேவி 13:45, 46; எண் 5:2; எண் 12:14, 15

22 உசியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களை ஆரம்பம் முதல் முடிவுவரை ஆமோத்சின் மகனான ஏசாயா தீர்க்கதரிசி எழுதி வைத்தார்.[a] **23** உசியா இறந்த* பிறகு அவருடைய முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார். அவர் ஒரு தொழுநோயாளி என்பதால் ராஜாக்களை அடக்கம் செய்கிற இடத்துக்கு வெளியே இருந்த நிலத்தில் அவரை அடக்கம் செய்தார்கள். அவருக்குப் பிறகு, அவருடைய மகன் யோதாம் ராஜாவானார்.[b]

27 யோதாம்[c] ராஜாவானபோது அவருக்கு 25 வயது. அவர் 16 வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர் எருசாள், இவள் சாதோக்கின் மகள்.[d] **2** யோதாம் தன்னுடைய அப்பா உசியாவைப் போலவே யெகோவாவுக்குப் பிரியமாக நடந்து வந்தார்.[e] ஆனால், தன்னுடைய அப்பாவைப் போல் யெகோவாவின் ஆலயத்துக்குள்ளே அத்துமீறி நுழையவில்லை.[f] இருந்தாலும், மக்கள் இன்னமும் மோசமான காரியங்களைத்தான் செய்துகொண்டிருந்தார்கள். **3** யெகோவாவுடைய ஆலயத்தின் ‘உயர்ந்த நுழைவாசலை’[g] அவர் கட்டினார். ஓபேலில்[h] இருந்த மதில்மேல் நிறைய கட்டுமான வேலைகளைச் செய்தார். **4** அதோடு, யூதாவின் மலைப்பகுதியில்[i] நகரங்களைக் கட்டினார்.[j] காட்டுப் பகுதிகளில் கோட்டைகளையும்[k] கோபுரங்களையும் கட்டினார்.[l] **5** அம்மோனியர்களின்[m] ராஜாவோடு போர் செய்து, கடைசியில் வெற்றி பெற்றார். அதனால், அம்மோனியர்கள் அந்த வருஷம் அவருக்கு 100 தாலந்து* வெள்ளியையும் 10,000 கோர் அளவு# கோதுமையையும் 10,000 கோர் அளவு பார்லியையும் கொடுத்தார்கள். அடுத்த வருஷமும் அதற்கடுத்த வருஷமும் இதேபோல் கொடுத்தார்கள்.[n] **6** யோதாம் தன்னுடைய கடவுளான யெகோவாவின் வழியில் நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததால், அவர் நாளுக்கு நாள் வலிமையுள்ளவராக ஆனார்.

7 யோதாம் செய்த எல்லா போர்களைப் பற்றியும் அவருடைய வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும் இஸ்ரவேல் மற்றும் யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[o] **8** அவர் 25 வயதில் ராஜாவாகி, 16 வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார்.[p] **9** யோதாம் இறந்துபோனதும்,* ‘தாவீதின் நகரத்தில்’[q] அவரை அடக்கம் செய்தார்கள். அவருக்குப் பிறகு, அவருடைய மகன் ஆகாஸ் ராஜாவானார்.[r]

28 ஆகாஸ்[s] ராஜாவானபோது அவருக்கு 20 வயது. அவர் எருசலேமில் 16 வருஷங்கள் ஆட்சி செய்தார். தன்னுடைய மூதாதையான தாவீது யெகோவாவுக்குப் பிரியமாக நடந்ததுபோல் அவர் நடக்கவில்லை.[t] **2** அதற்குப் பதிலாக, இஸ்ரவேல் ராஜாக்களின் வழியில் நடந்தார்;[u] பாகால்களுக்கு உலோகச் சிலைகளைச் செய்யும் அளவுக்குப் போய்விட்டார்.[v] **3** அதோடு, பென்-இன்னோம்* பள்ளத்தாக்கில்# பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்தார், தன்னுடைய மகன்களை நெருப்பில் சுட்டெரித்தார்.[w]

26:23 *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்ட.” **27:5** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். #ஒரு கோர் அளவு என்பது சுமார் 220 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **27:9** *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டதும்.” **28:3** *அர்த்தம், “இன்னோம் மகனின்.” #சொல் பட்டியலில் “கெஹென்னா” என்ற தலைப்பைப் பாருங்கள்.

அதி. 26
a ஏசா 1:1; ஏசா 6:1
b 2ரா 15:32

அதி. 27
c ஏசா 1:1; ஓசி 1:1; மீ 1:1; மத் 1:9
d 2ரா 15:33
e 2ரா 15:34, 35; 2நா 26:3, 4
f 2நா 26:16-18
g எரே 26:10
h 2நா 33:1, 14; நெ 3:26
i யோசு 14:12, 13
j 2நா 11:5; 2நா 14:2, 7
k 2நா 17:12
l 2ரா 9:17; 2நா 26:9, 10
m நியா 11:4; 2சா 10:6; 2நா 20:1; எரே 49:1
n 2நா 26:8
o 2ரா 15:36
p 2ரா 15:33
q 2சா 5:9
r 2ரா 15:38

அதி. 28
s ஓசி 1:1; மீ 1:1; மத் 1:9
t 2ரா 16:2
u 1ரா 12:26, 28; 1ரா 16:33
v யாத் 34:17
w 2நா 33:1, 6; எரே 7:31

இப்படி, இஸ்ரவேலர்களின் கண் முன்னால் யெகோவா விரட்டியடித்த
மற்ற தேசத்தாரின் அருவருப்பான பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார்.[a]
4 அதுமட்டுமல்ல, ஆராதனை மேடுகளிலும்[b] குன்றுகளிலும் அடர்த்தி
யான மரங்கள்[c] ஒவ்வொன்றின் கீழும் பலிகளை எரித்து புகை எழும்பிவரச்
செய்தார்.

5 அதனால், அவருடைய கடவுளான யெகோவா அவரை சீரியா ராஜா
வின் கையில் கொடுத்தார்.[d] சீரியர்கள் அவரைத் தோற்கடித்து, ஏராள
மான மக்களை தமஸ்குவுக்குப்[e] பிடித்துக்கொண்டு போனார்கள். கடவுள்
அவரை இஸ்ரவேல் ராஜாவின் கையிலும் கொடுத்தார். இஸ்ரவேல் ராஜா
அவரைத் தோற்கடித்து, எக்கச்சக்கமான வீரர்களைக் கொன்று குவித்தார்.
6 ரெமலியாவின் மகனான பெக்கா[f] யூதாவிலிருந்த 1,20,000 தைரியமிக்க
ஆண்களை ஒரே நாளில் கொன்றுபோட்டார். தங்களுடைய முன்னோர்க
ளின் கடவுளான யெகோவாவை விட்டு விலகியதால்தான் அவர்களுக்கு
இந்த நிலைமை வந்தது.[g] 7 ராஜாவின் மகனான மாசெயாவையும், அரண்
மனையைக் கவனித்துக்கொண்ட அசரீக்காம் என்ற அதிகாரியையும், ராஜா
வுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்த எல்க்கானாவையும் எப்பிராயீமைச்
சேர்ந்த சிக்ரி என்ற வீரர் கொன்றுபோட்டார். 8 அதோடு, யூதாவைச்
சேர்ந்த தங்கள் சகோதரர்களில் 2,00,000 பேரை இஸ்ரவேலர்கள் பிடித்துக்
கொண்டு போனார்கள். அந்தக் கூட்டத்தில் பெண்களும் ஆண் பிள்
ளைகளும் பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்கள் எக்கச்சக்கமான
பொருள்களைக் கைப்பற்றி சமாரியாவுக்குக்[h] கொண்டுபோனார்கள்.

9 யெகோவாவின் தீர்க்கதரிசி ஓதேத் அங்கே இருந்தார். அவர் சமாரி
யாவுக்கு வந்துகொண்டிருந்த படைவீரர்களிடம் போய், “இங்கே பாருங்கள்,
உங்கள் முன்னோர்களின் கடவுளான யெகோவா யூதா மக்கள்மேல் கோப
மாக இருந்ததால்தான் அவர்களை உங்களிடம் தோற்றுப்போக வைத்தார்.[i]
ஆனால், நீங்கள் அவர்களை வெறித்தனமாகக் கொன்றுபோட்டீர்கள். உங்
களுடைய செயல் வானத்தையே எட்டியிருக்கிறது. 10 இப்போது யூதா
மக்களையும் எருசலேம் மக்களையும் வேலைக்காரர்களாகவும் வேலைக்
காரிகளாகவும் வைத்துக்கொள்ள நினைக்கிறீர்களே![j] உங்கள் கடவுளாகிய
யெகோவாவுக்கு விரோதமாக நீங்கள் மட்டும் எந்தத் தவறும் செய்யவில்
லையா? 11 இப்போது நான் சொல்வதைக் கேளுங்கள். யெகோவா உங்
கள்மேல் பயங்கர கோபமாக இருக்கிறார். அதனால், யூதாவில் இருக்கும்
உங்கள் சகோதரர்களிடமிருந்து நீங்கள் பிடித்துக்கொண்டுவந்த மக்களைத்
திருப்பி அனுப்பிவிடுங்கள்” என்று சொன்னார்.

12 அதைக் கேட்டதும் எப்பிராயீம் தலைவர்களில் சிலரான யெகோனா
னின் மகன் அசரியாவும், மெசில்லேமோத்தின் மகன் பெரகியாவும், சல்லூ
மின் மகன் எகிஸ்கியாவும், ஹத்லாயின் மகன் அமாசாவும் போர் செய்துவிட்
டுத் திரும்பி வந்துகொண்டிருந்த வீரர்களிடம் பேசினார்கள். 13 “நீங்கள்
பிடித்துவந்த மக்களை இங்கே கொண்டுவராதீர்கள். அப்படிச் செய்தால்,
யெகோவாவுக்கு முன்னால் நாம் குற்றவாளிகளாக ஆகிவிடுவோம். ஏற்கெ
னவே பெரிய பாவம் செய்துவிட்டோம், கடவுளுடைய கோபம் இஸ்ர
வேலுக்கு எதிராகப் பற்றியெரிகிறது. நீங்கள் இந்தக் காரியத்தையும் செய்
தால், பாவத்துக்குமேல் பாவம்தான் சேரும்” என்று சொன்னார்கள்.
14 அதனால், ஆயுதம் ஏந்திய அந்த வீரர்கள், தாங்கள் பிடித்து வந்த ஆட்
களையும் கைப்பற்றிய பொருள்களையும்[k] அதிகாரிகளிடமும் சபையார்

அதி. 28
a உபா 12:31
b லேவி 26:30
c ஏசா 57:4, 5
d 2ரா 16:5, 6; 2நா 24:24
e 2சா 8:6; 1நா 18:5
f 2ரா 15:37; ஏசா 7:1
g 2நா 15:2; சங் 73:27
h 1ரா 16:23, 24; 1ரா 22:51
i நியா 2:14; நியா 3:8
j லேவி 25:39, 46; 2நா 8:9
k 2நா 28:8

எல்லாரிடமும் ஒப்படைத்தார்கள். **15** பின்பு, பெயர் பெயராகத் தேர்ந்தெ
டுக்கப்பட்ட ஆண்கள், சிறைபிடித்து கொண்டுவரப்பட்டவர்களைக் கவனித்
துக்கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்களில் போதிய உடையில்லாமல்
இருந்த எல்லாருக்கும் தாங்கள் கைப்பற்றிய துணிமணிகளைக் கொடுத்தார்
கள். அதோடு, செருப்பு, உணவு, தண்ணீர், உடம்பில் பூசிக்கொள்ள எண்
ணெய் ஆகியவற்றையும் கொடுத்தார்கள். நடக்க முடியாதவர்களைக் கழு
தைகளின் மேல் ஏற்றி, பேரீச்ச மரங்களின் நகரமான எரிகோவுக்குக்
கூட்டிக்கொண்டு போனார்கள். அவர்களுடைய சகோதரர்களிடம் அவர்
களை ஒப்படைத்துவிட்டு, சமாரியாவுக்குத் திரும்பி வந்தார்கள்.

16 அந்தச் சமயத்தில், அசீரிய ராஜாக்களிடம் ஆகாஸ் ராஜா
உதவி கேட்டார்.[a] **17** மறுபடியும் ஏதோமியர்கள் யூதாமீது படையெடுத்து
வந்து தாக்குதல் நடத்தினார்கள், அங்கிருந்த மக்களைப் பிடித்துக்கொண்டு
போனார்கள். **18** அதோடு, பெலிஸ்தியர்களும்[b] சேப்பெல்லா[c] பகுதியில்
இருந்த நகரங்களிலும் யூதாவின் நெகேபிலும் திடீர்த் தாக்குதல் நடத்தினார்
கள். அங்கிருந்த பெத்-ஷிமேசையும்[d] ஆயலோனையும்[e] கெதெரோத்தை
யும் சோகோவையும் அதன் சிற்றூர்களையும்,* திம்னாவையும்[f] அதன் சிற்
றூர்களையும், கிம்சோவையும் அதன் சிற்றூர்களையும் பிடித்தார்கள். பின்பு,
அங்கே குடியேறினார்கள். **19** யூதா மக்கள் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கை
வாழ்வதற்கு இஸ்ரவேலின் ராஜாவான ஆகாஸ் காரணமாக இருந்தார்,
அவர்கள் யெகோவாவுக்குக் கொஞ்சம்கூட உண்மையாக இருக்க
வில்லை. அதனால்தான், யூதா மக்களுக்கு இப்பேர்ப்பட்ட அவமானத்தை
யெகோவா ஏற்படுத்தினார்.

20 அசீரிய ராஜாவான தில்காத்-பில்நேசர்[g] ஆகாசுக்கு உதவி செய்வ
தற்குப் பதிலாக, அவரையே எதிர்த்து வந்து அவருக்குக் கஷ்டம்
கொடுத்தான்.[h] **21** யெகோவாவின் ஆலயத்திலும் அரண்மனையிலும்[i]
உயர் அதிகாரிகளின் மாளிகைகளிலும் இருந்த எல்லா பொருள்களையும்
ஆகாஸ் ராஜா எடுத்து அசீரிய ராஜாவுக்கு ஏற்கெனவே அன்பளிப்பாகக்
கொடுத்திருந்தார். அப்படியிருந்தும் அவருக்கு எந்த உதவியும் கிடைக்க
வில்லை. **22** இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில்கூட, ஆகாஸ்
ராஜா யெகோவாவுக்கு இன்னும் அதிகமாகத்தான் துரோகம் செய்தார்.
23 தன்னைத் தோற்கடித்த[j] தமஸ்குவின் தெய்வங்களுக்கே பலி கொடுக்க
ஆரம்பித்தார்.[k] "சீரியா ராஜாக்களுடைய தெய்வங்கள் அவர்களுக்கு
உதவி செய்கின்றன. அந்தத் தெய்வங்களுக்குப் பலி கொடுத்தால், எனக்
கும் அவை உதவி செய்யும்"[l] என்று நினைத்துக்கொண்டார். ஆனால்,
அவரும் இஸ்ரவேலர்கள் எல்லாரும் வீழ்ந்துபோக அவை காரணமாயின.
24 ராஜாவான ஆகாஸ், இவ்வளவு செய்தது போதாதென்று உண்மைக் கட
வுளின் ஆலயத்திலிருந்த சாமான்களைச் சேகரித்து, அவற்றை உடைத்துப்
போட்டார்.[m] யெகோவாவுடைய ஆலயத்தின் கதவுகளை அடைத்துவிட்
டார்.[n] எருசலேமின் மூலைமுடுக்கெல்லாம் தனக்காகப் பலிபீடங்களைக்
கட்டினார். **25** மற்ற தெய்வங்களுக்குப் பலிகளை எரித்து புகை எழும்பிவ
ரச் செய்வதற்காக, யூதாவிலிருந்த எல்லா நகரங்களிலும் ஆராதனை மேடு
களை அமைத்தார்.[o] இப்படியெல்லாம் செய்து, தன்னுடைய முன்னோர்க
ளின் கடவுளான யெகோவாவின் மனதைப் புண்படுத்தினார்.

28:18 * வே.வா., "அதைச் சுற்றியுள்ள ஊர்களையும்."

அதி. 28

a 2ரா 16:7, 8; ஏசா 7:10-12
b 2நா 26:1, 6
c 2நா 26:10
d யோசு 15:10, 12
e 2நா 11:10
f நியா 14:1
g 2ரா 15:29; 2ரா 16:7, 8; 1நா 5:26
h 2ரா 17:5; ஏசா 7:20
i 2ரா 18:15, 16; 2நா 12:9
j 2ரா 16:10-13
k 2நா 25:14
l எரே 44:18
m 2ரா 16:17
n 1ரா 6:33, 34; 2நா 29:7
o 1ரா 14:22, 23; 2ரா 15:32, 35; 2நா 21:5, 11; 2நா 33:1, 3

26 ஆரம்பம்முதல் முடிவுவரை ஆகாசின் வாழ்க்கையில் நடந்த மற்ற
விஷயங்கள் எல்லாம் யூதா மற்றும் எருசலேம் ராஜாக்களின் சரித்திரப் புத்
தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[a] **27** ஆகாஸ் இறந்ததும் இஸ்ரவேல்
ராஜாக்களை அடக்கம் செய்த இடத்தில் அவரை அடக்கம் செய்யாமல்,
எருசலேம் நகரத்தில் அடக்கம் செய்தார்கள்.[b] அவருக்குப் பிறகு, அவரு
டைய மகன் எசேக்கியா ராஜாவானார்.

29 எசேக்கியா[c] 25 வயதில் ராஜாவானார். அவர் 29 வருஷங்கள் எரு
சலேமில் ஆட்சி செய்தார். அவருடைய அம்மா பெயர்
அபியா, அவள் சகரியாவின் மகள்.[d] **2** எசேக்கியா தன்னுடைய மூதாதை
யான தாவீதைப் போலவே,[e] யெகோவாவுக்குப் பிரியமாக நடந்துவந்தார்.[f]
3 அவர் ஆட்சி செய்த முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில், யெகோவா
வுடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து அவற்றைப் பழுதுபார்த்தார்.[g]
4 பின்பு, ஆலயத்தின் கிழக்குப் பகுதியிலிருந்த சதுக்கத்தில் குருமார்க
ளையும் லேவியர்களையும் ஒன்றுகூட்டினார். **5** அவர்களிடம், "லேவியர்
களே, நான் சொல்வதைக் கேளுங்கள். இப்போது நீங்கள் உங்களைப் புனி
தப்படுத்திக்கொண்டு,[h] உங்களுடைய முன்னோர்களின் கடவுளான
யெகோவாவின் ஆலயத்தைப் புனிதப்படுத்துங்கள். அருவருப்பான சிலை
களைப் பரிசுத்த இடத்திலிருந்து வெளியே தூக்கிப் போடுங்கள்.[i] **6** நம்
முடைய அப்பாக்கள் யெகோவா தேவனுக்கு உண்மையாக இருக்க
வில்லை. அவருக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்து,[j] அவரைவிட்டு
விலகிப்போனார்கள். யெகோவாவின் கூடாரத்துக்கு மரியாதை காட்டாமல்,
அவரை ஒதுக்கித்தள்ளினார்கள்.[k] **7** நுழைவு மண்டபத்தின் கதவுகளை[l]
இழுத்து மூடி, விளக்குகளை அணைத்துவிட்டார்கள்.[m] இஸ்ரவேலின் கடவு
ளுடைய ஆலயத்தில் தூபம் காட்டுவதையும், தகன பலி செலுத்துவதையும்
நிறுத்திவிட்டார்கள்.[n] **8** அதனால், யூதாமீதும் எருசலேம்மீதும் யெகோ
வாவுக்குப் பயங்கர கோபம் வந்தது.[o] மற்றவர்கள் அதிர்ச்சி அடையுமள
வுக்கு அவர்களுக்குக் கோர முடிவைக் கொண்டுவந்தார், மற்றவர்கள்
கேலி செய்யுமளவுக்குக் கேவலமான நிலையில் அவர்களை விட்டுவிட்
டார். இதையெல்லாம் நீங்கள் உங்களுடைய கண்ணால் பார்க்கிறீர்களே.[p]
9 நம்முடைய முன்னோர்கள் தாங்கள் செய்த தவறுக்குத் தண்டனையாக
வாளுக்கு இரையானார்கள்;[q] நம்முடைய மகன்களையும் மகள்களையும்
மனைவிகளையும் எதிரிகள் பிடித்துக்கொண்டு போனார்கள்.[r] **10** அத
னால், இப்போது இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவுடன் ஒப்பந்தம்[s]
செய்ய மனதார ஆசைப்படுகிறேன். அப்போதுதான், அவருக்கு நம்மீது
இருக்கிற கடும் கோபம் தணியும். **11** என் மகன்களே, ஏனோதானோ
என்று இருப்பதற்கு* இது நேரமல்ல. ஏனென்றால், யெகோவா முன்
னால் நின்று அவருக்குச் சேவை செய்வதற்காகவும்[t] பலிகளை எரித்து
புகை எழும்பிவரச் செய்வதற்காகவும்[u] அவர் உங்களைத் தேர்ந்தெடுத்தி
ருக்கிறார்" என்று சொன்னார்.

12 அதைக் கேட்டதும் லேவியர்கள் எழுந்து நின்றார்கள். கோகாத்திய
ரான[v] அமாசாயின் மகன் மகாத், அசரியாவின் மகன் யோவேல்; மெரா
ரியரான[w] அப்தியின் மகன் கீஸ், அசரியாவின் மகன் எகலெலேல்;
கெர்சோனியரான[x] சிம்மாவின் மகன் யோவா, யோவாவின் மகன் ஏதேன்;

29:11 * வே.வா., "மகன்களே, ஓய்வெடுப்பதற்கு."

அதி. 28
a 2ரா 16:19
b 2நா 21:16, 20
2நா 33:20

அதி. 29
c ஏசா 1:1
ஓசி 1:1
மத் 1:10
d 2ரா 18:1, 2
e 1ரா 15:5
2ரா 18:3
f 2நா 31:20
g 1ரா 6:33, 34
2நா 28:24
h 1நா 15:11, 12
i 2ரா 18:4
j 2நா 28:22, 23
எரே 44:21
k எரே 2:27
எசே 8:16
l 1ரா 6:33, 34
m லேவி 24:2
n யாத் 29:38
யாத் 30:8
o 2நா 24:18
p லேவி 26:32
உபா 28:
15, 25
q லேவி 26:
14, 17
r 2நா 28:5-8
s 2நா 15:10-13
t எண் 3:6
உபா 10:8
u 1நா 23:13
v எண் 4:2, 3
1நா 23:12
w 1நா 23:21
x 1நா 23:7

13 எலிசாப்பானின் வம்சத்தில் வந்த ஷிம்ரி, யெகுவேல்; ஆசாப்பின் வம்
சத்தில்[a] வந்த சகரியா, மத்தனியா; **14** ஏமானின் வம்சத்தில்[b] வந்த
யெகியேல், சீமேயி; எதித்தூனின் வம்சத்தில்[c] வந்த செமாயா, ஊசியேல்
ஆகியோர் எழுந்து நின்றார்கள். **15** பின்பு, அந்த லேவியர்கள் தங்க
ளுடைய சகோதரர்களை ஒன்றுகூட்டி தங்களைப் புனிதப்படுத்திக்கொண்டு
யெகோவாவின் ஆலயத்துக்கு வந்தார்கள். ஏனென்றால், யெகோவா
சொன்னபடி அவருடைய ஆலயத்தைச் சுத்தப்படுத்த வேண்டுமென்று
ராஜா கட்டளையிட்டிருந்தார்.[d] **16** பின்பு, குருமார்கள் யெகோவாவின்
ஆலயத்துக்கு உள்ளே போய் சுத்தம் செய்தார்கள்; யெகோவாவின் ஆல
யத்திலிருந்த பொய் வழிபாடு சம்பந்தப்பட்ட பொருள்களையெல்லாம்
வெளியே கொண்டுவந்து, யெகோவாவுடைய ஆலயத்தின் பிரகாரத்தில்[e]
போட்டார்கள். லேவியர்கள் அவற்றை எடுத்து கீதரோன் பள்ளத்தாக்கில்[f]
கொண்டுபோய்ப் போட்டார்கள். **17** முதலாம் மாதம் முதலாம் தேதியில்
புனிதப்படுத்தும் வேலையை ஆரம்பித்தார்கள்; இப்படிப் புனிதப்படுத்திக்
கொண்டே, எட்டாம் தேதியில் யெகோவாவுடைய ஆலயத்தின் நுழைவு
மண்டபத்துக்கு[g] வந்து சேர்ந்தார்கள். யெகோவாவின் ஆலயத்தைப் புனி
தப்படுத்தும் வேலையை இன்னும் எட்டு நாட்களுக்குச் செய்தார்கள். முத
லாம் மாதம் 16-ஆம் தேதியில் வேலையை முடித்தார்கள்.

18 அதன் பின்பு, அவர்கள் எசேக்கியா ராஜாவிடம் போய், “நாங்கள்
யெகோவாவின் ஆலயம் முழுவதையும் சுத்தப்படுத்திவிட்டோம், தகன
பலிக்கான பலிபீடத்தையும்[h] அதற்கான எல்லா சாமான்களையும்[i] படை
யல் ரொட்டிகளை வைக்கிற மேஜையையும்[j] அதற்கான எல்லா சாமான்க
ளையும் சுத்தப்படுத்திவிட்டோம். **19** ஆகாஸ் ராஜா ஆட்சி செய்தபோது
கடவுளுக்கு உண்மையாக நடக்காமல்[k] ஆலயத்திலிருந்த சாமான்களை
யெல்லாம் வெளியே தூக்கிப்போட்டார், இல்லையா? அவற்றைச் சரிசெய்து,
புனிதப்படுத்திவிட்டோம்.[l] இப்போது அவற்றை யெகோவாவின் பலிபீடத்
துக்கு முன்னால் வைத்திருக்கிறோம்” என்று சொன்னார்கள்.

20 எசேக்கியா ராஜா காலையில் சீக்கிரமாக எழுந்து நகரத்திலிருந்த
அதிகாரிகளை ஒன்றுகூட்டினார். அவர்கள் எல்லாரும் யெகோவாவின்
ஆலயத்துக்குப் போனார்கள். **21** ஏழு காளைகளையும் ஏழு செம்மறி
யாட்டுக் கடாக்களையும் ஏழு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளையும் ஏழு
வெள்ளாட்டுக் கடாக்களையும் பாவப் பரிகார பலியாகக் கொடுப்பதற்குக்
கொண்டுவந்தார்கள். அவற்றை ராஜ்யத்துக்காகவும் ஆலயத்துக்காகவும்
யூதா மக்களுக்காகவும் பலியாகக் கொடுப்பதற்குக் கொண்டுவந்தார்கள்.[m]
அவற்றை யெகோவாவின் பலிபீடத்தில் செலுத்தச் சொல்லி, ஆரோ
னின் வம்சத்தில் வந்த குருமார்களிடம் ராஜா சொன்னார். **22** காளை
கள் வெட்டப்பட்டதும்,[n] குருமார்கள் அவற்றின் இரத்தத்தை எடுத்து
பலிபீடத்தில் தெளித்தார்கள்.[o] அடுத்து, செம்மறியாட்டுக் கடாக்கள் வெட்
டப்பட்டதும், அவற்றின் இரத்தத்தை எடுத்து பலிபீடத்தில் தெளித்தார்
கள், செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் வெட்டப்பட்டதும், அவற்றின்
இரத்தத்தை எடுத்து பலிபீடத்தில் தெளித்தார்கள். **23** பின்பு, பாவப் பரி
கார பலியாகக் கொடுக்க வேண்டிய வெள்ளாட்டுக் கடாக்களை ராஜாவுக்
கும் சபையாருக்கும் முன்னால் கொண்டுவந்து, அவற்றின் தலையில்
கைகளை வைத்தார்கள். **24** குருமார்கள் அவற்றை வெட்டி இரத்தத்தைப்
பலிபீடத்தில் தெளித்து பாவப் பரிகார பலியாகக் கொடுத்தார்கள்; இப்படி,

அதி. 29
a 1நா 15:16, 17; 1நா 25:1, 2
b 1நா 25:5
c 1நா 25:1
d 2நா 29:5
e 1ரா 6:36
f 2ரா 23:4, 6; 2நா 15:16; யோவா 18:1
g 1ரா 6:3; 1நா 28:11
h 2நா 4:1
i 1ரா 7:40
j 1ரா 7:48
k 2நா 28:1, 2; 2நா 28:24
l 2நா 29:5
m லேவி 4:3; லேவி 4:13, 14; எண் 15:22-24
n லேவி 4:4
o லேவி 4:7, 18

இஸ்ரவேலர்கள் எல்லாருக்காகவும் பாவப் பரிகாரம் செய்தார்கள். ஏனென்
றால், இஸ்ரவேலர்கள் எல்லாருக்காகவும் தகன பலியையும் பாவப் பரிகார
பலியையும் கொடுக்க வேண்டும் என்று ராஜா சொல்லியிருந்தார்.

25 இதற்கிடையே, அவர் லேவியர்களின் கையில் ஜால்ராக்களையும்
நரம்பிசைக் கருவிகளையும் யாழ்களையும்[a] கொடுத்து யெகோவாவின்
ஆலயத்தில் நிற்க வைத்திருந்தார். ஆலயத்தில் பாடுவதற்காக, தாவீதும்[b]
தரிசனக்காரரான காத்தும்[c] நாத்தான் தீர்க்கதரிசியும் ஏற்படுத்தியிருந்த
முறையை[d] எசேக்கியா பின்பற்றினார். இதையெல்லாம் யெகோவா தன்னு
டைய தீர்க்கதரிசிகள் மூலம் தெரிவித்திருந்தார். **26** தாவீது உருவாக்கிய
இசைக் கருவிகளுடன் லேவியர்கள் நின்றுகொண்டிருந்தார்கள், எக்காளங்
களைப்[e] பிடித்துக்கொண்டு குருமார்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

27 பின்பு, பலிபீடத்தில் தகன பலி கொடுக்கச் சொல்லி எசேக்கியா கட்
டளையிட்டார்.[f] தகன பலி கொடுக்க ஆரம்பித்ததும் யெகோவாவுக்காகப்
பாடல் பாடினார்கள். அதோடு, எக்காளங்களையும் ஊதினார்கள்; இஸ்ர
வேலின் ராஜாவான தாவீது உருவாக்கிய இசைக் கருவிகளின் இசைக்கு
ஏற்றபடி அவற்றை ஊதினார்கள். **28** தகன பலியைக் கொடுத்து முடிக்
கும்வரை பாடல் பாடினார்கள், எக்காளங்களை ஊதினார்கள். அந்தச் சம
யத்தில் சபையார் எல்லாரும் தலைவணங்கினார்கள். **29** பலி கொடுத்து
முடித்ததும், ராஜாவும் அவருடன் இருந்த எல்லாரும் சாஷ்டாங்கமாக
விழுந்து வணங்கினார்கள். **30** யெகோவாவைப் புகழ்வதற்காக தாவீதும்[g]
தரிசனக்காரரான ஆசாப்பும் எழுதிய பாடல்களைப் பாடச் சொல்லி,[h]
எசேக்கியா ராஜாவும் அதிகாரிகளும் லேவியர்களிடம் சொன்னார்கள்.
அவர்கள் மிகவும் சந்தோஷமாகக் கடவுளைப் புகழ்ந்து பாடி, சாஷ்டாங்க
மாக விழுந்து வணங்கினார்கள்.

31 பின்பு எசேக்கியா, “யெகோவாவுக்குச் சேவை செய்ய நீங்கள்
தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். அதனால், பலிகளையும் நன்றிப் பலிக
ளையும் எடுத்துக்கொண்டு யெகோவாவின் ஆலயத்துக்கு வாருங்கள்”
என்று சொன்னார். அதனால், சபையார் பலிகளையும் நன்றிப் பலிகளையும்
கொண்டுவந்தார்கள். மனப்பூர்வமாகக் காணிக்கை கொடுக்க விரும்பிய எல்
லாரும் தகன பலிகளைக் கொண்டுவந்தார்கள்.[i] **32** தகன பலி கொடுப்ப
தற்காக,[j] 70 காளைகளையும் 100 செம்மறியாட்டுக் கடாக்களையும்
200 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளையும் சபையார் கொண்டுவந்தார்கள்.
இவை எல்லாவற்றையும் யெகோவாவுக்குத் தகன பலி கொடுப்பதற்காகக்
கொண்டுவந்தார்கள். **33** அதோடு, 600 காளைகளையும் 3,000 செம்மறியா
டுகளையும் பரிசுத்த காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள். **34** தகன பலி
செலுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட ஆடுமாடுகள் எல்லாவற்றையும்
குருமார்களால் தோலுரிக்க முடியவில்லை. அதனால், அந்த வேலையைச்
செய்து முடிக்கும்வரைக்கும், குருமார்கள் தங்களைப் புனிதப்படுத்தி முடிக்
கும்வரைக்கும்,[k] அவர்களுடைய சகோதரர்களான லேவியர்கள் உதவி செய்
தார்கள்.[l] குருமார்களைவிட லேவியர்கள்தான் தங்களைப் புனிதப்படுத்திக்
கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தார்கள். **35** தகன பலிகளும்[m]
சமாதான பலிகளின் கொழுப்பும்[n] அதிகமாக இருந்தன. அதேபோல், தகன
பலிகளோடு செலுத்தப்பட்ட திராட்சமது காணிக்கைகளும்[o] அதிகமாக
இருந்தன. இப்படி, யெகோவாவின் ஆலய சேவை மறுபடியும் ஆரம்பமா

அதி. 29
a 1நா 25:1, 6; 2நா 9:11
b 1நா 28:12, 13; 2நா 8:12, 14
c 2சா 24:11, 12; 1நா 29:29
d 2சா 7:2; 2சா 12:1
e எண் 10:8; 1நா 15:24
f லேவி 1:3, 4
g 2சா 23:1
h 1நா 16:7
i லேவி 1:3
j 1ரா 3:4; 1ரா 8:63; 1நா 29:21, 22
k 2நா 30:2, 3
l எண் 8:19; 2நா 30:17; 2நா 35:10, 11
m 2நா 29:32
n லேவி 3:1; லேவி 3:14-16
o எண் 15:5

னது. **36** உண்மைக் கடவுள் தங்களுக்கு உதவி செய்ததையும், வேலைக
ளெல்லாம் வேகமாக நடந்து முடிந்ததையும் நினைத்து எசேக்கியாவும் மக்
கள் எல்லாரும் ரொம்பச் சந்தோஷப்பட்டார்கள்.[a]

30 இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவுக்கு பஸ்கா பண்டிகை[b]
கொண்டாடுவதற்காக, எருசலேமில் இருக்கிற யெகோவாவின் ஆல
யத்துக்கு வரச் சொல்லி இஸ்ரவேலிலும் யூதாவிலும் இருக்கிற எல்லா மக்க
ளுக்கும் எசேக்கியா தகவல் அனுப்பினார்.[c] எப்பிராயீம், மனாசே[d] கோத்
திரத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கடிதங்கள்கூட அனுப்பினார். **2** பஸ்கா
பண்டிகையை இரண்டாம் மாதத்தில் கொண்டாடலாம்[e] என்று ராஜாவும்
அதிகாரிகளும் எருசலேமில் இருந்த சபையார் எல்லாரும் தீர்மானம் எடுத்
தார்கள். **3** ஏனென்றால், இன்னும் நிறைய குருமார்கள் தங்களைப் புனிதப்
படுத்திக்கொள்ளவில்லை.[f] மக்களும் எருசலேமில் கூடிவரவில்லை. அத
னால், வழக்கம்போல் முதலாம் மாதத்தில் பஸ்கா பண்டிகையைக் கொண்
டாட முடியவில்லை.[g] **4** இரண்டாம் மாதத்தில் கொண்டாடுவதுதான் சரி
யாக இருக்கும் என்று ராஜாவும் சபையார் எல்லாரும் நினைத்தார்கள்.
5 அதனால், இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவுக்கு பஸ்கா பண்டிகை
யைக் கொண்டாட எருசலேமுக்கு வரச் சொல்லி இஸ்ரவேல் முழுவதுக்
கும், அதாவது தாண்முதல்[h] பெயெர்-செபாவரை குடியிருக்கிற எல்லா
ருக்கும், அறிவிக்க வேண்டுமென்று தீர்மானம் எடுத்தார்கள். ஏனென்றால்,
திருச்சட்டத்தில் சொல்லப்பட்டபடி அவர்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து
அதுவரை பஸ்காவைக் கொண்டாடவில்லை.[i]

6 ராஜாவும் அதிகாரிகளும் கொடுத்த கடிதங்களை எடுத்துக்கொண்டு
இஸ்ரவேல் முழுவதும் யூதா முழுவதும் தூதுவர்கள் போனார்கள். ராஜா கட்
டளையிட்டபடி மக்களிடம் போய், “இஸ்ரவேல் மக்களே, ஆபிரகாம்,
ஈசாக்கு, இஸ்ரவேல் ஆகியோரின் கடவுளான யெகோவாவிடம் திரும்பி
வாருங்கள். அப்போதுதான், அசீரிய ராஜாக்களின்[j] கையிலிருந்து தப்பித்து
மீதியாயிருக்கும் உங்களிடம் அவர் திரும்பி வருவார். **7** தங்களுடைய
முன்னோர்களின் கடவுளான யெகோவாவுக்கு உண்மையாக இல்லாத உங்
களுடைய முன்னோர்களையும் சகோதரர்களையும் போல் இருக்காதீர்கள்.
உண்மையாக இல்லாததால்தான் கடவுள் அவர்களை அழித்தார். அதை நீங்
களே கண்கூடாகப் பார்க்கிறீர்கள்.[k] **8** உங்கள் முன்னோர்களைப் போல
நீங்கள் பிடிவாதமாக இருக்காதீர்கள்.[l] யெகோவாவுக்கு அடிபணிந்து நடங்
கள். உங்களுடைய கடவுளான யெகோவா நிரந்தரமாகப் புனிதப்படுத்திய
ஆலயத்துக்கு வந்து,[m] அவருக்குச் சேவை செய்யுங்கள். அப்போதுதான்,
உங்கள்மீது அவருக்கு இருக்கிற கடும் கோபம் குறையும்.[n] **9** நீங்கள்
யெகோவாவிடம் திரும்பி வந்தால், உங்களுடைய சகோதரர்களையும் மகன்
களையும் பிடித்துக்கொண்டு போனவர்கள் அவர்களுக்கு இரக்கம் காட்டு
வார்கள்,[o] அவர்களை மறுபடியும் இந்தத் தேசத்துக்கே திருப்பி அனுப்புவார்
கள்.[p] உங்கள் கடவுளான யெகோவா கரிசனையுள்ளவர்,* இரக்கமுள்ளவர்.[q]
நீங்கள் அவரிடம் திரும்பி வந்தால் அவர் முகத்தைத் திருப்பிக்கொள்ள
மாட்டார்”[r] என்று சொன்னார்கள்.

10 எப்பிராயீம், மனாசே[s] பகுதிகளில் இருந்த ஒவ்வொரு நகரத்துக்
கும் அந்தத் தூதுவர்கள் போனார்கள், செபுலோனுக்கும்கூட போனார்கள்.

30:9 * வே.வா., “கனிவானவர்.”

அதி. 29
a 2நா 30:12

அதி. 30
b யாத் 12:43
லேவி 23:5
உபா 16:2
2நா 35:1
c 2நா 11:14, 16
d 2நா 34:1, 6, 7
e எண் 9:10, 11
f 2நா 29:34
g யாத் 12:18
h நியா 18:29
i 2நா 35:18
j 2ரா 15:29
1நா 5:26
2நா 28:20, 21
k 2நா 29:8, 9
l யாத் 32:9
m உபா 12:5, 6
சங் 132:13
n 2நா 29:10
o 1ரா 8:49, 50
p உபா 30:1-3
q யாத் 34:6
சங் 86:5
மீ 7:18
r 2நா 15:2
ஏசா 55:7
யாக் 4:8
s 2நா 30:1

ஆனால், மக்கள் அவர்களைப் பார்த்து கேலி கிண்டல் செய்தார்கள்.[a]
11 இருந்தாலும் ஆசேரையும் மனாசேயையும் செபுலோனையும் சேர்ந்த
சிலர் தங்களைத் தாழ்த்திக்கொண்டு எருசலேமுக்கு வந்தார்கள்.[b]
12 யூதா மக்கள்மீது யெகோவாவின் ஆசீர்வாதம் இருந்தது. அவருடைய
வார்த்தையின்படி ராஜாவும் அதிகாரிகளும் கொடுத்த கட்டளைக்கு ஒரும
னதாகக் கீழ்ப்படிய அந்த மக்களுக்கு அவர் உதவி செய்தார்.

13 இரண்டாம் மாதத்தில்,[c] புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகைக்காக[d]
எருசலேமுக்கு மக்கள் திரண்டு வந்தார்கள். அங்கே பெரிய கூட்டமாகக்
கூடி வந்தார்கள். **14** பொய் தெய்வங்களுக்காக எருசலேமில் கட்டப்
பட்ட பலிபீடங்கள்,[e] தூபபீடங்கள் எல்லாவற்றையும் பெயர்த்தெடுத்து[f] கீத
ரோன் பள்ளத்தாக்கில் வீசினார்கள். **15** இரண்டாம் மாதம் 14-ஆம் நாளில்,
பஸ்கா பலியை வெட்டினார்கள். அதையெல்லாம் பார்த்தபோது குருமார்க
ளுக்கும் லேவியர்களுக்கும் அவமானமாக இருந்தது. அதனால், அவர்கள்
தங்களைப் புனிதப்படுத்திக்கொண்டு யெகோவாவின் ஆலயத்துக்குத் தகன
பலிகளைக் கொண்டுவந்தார்கள். **16** உண்மைக் கடவுளின் ஊழியரான
மோசேயின் திருச்சட்டத்தின்படி, அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில்
நின்றார்கள். லேவியர்களிடமிருந்து பலிகளின் இரத்தத்தை வாங்கி குருமார்
கள் பலிபீடத்தில் தெளித்தார்கள்.[g] **17** சபையாரில் நிறைய பேர் தங்க
ளைப் புனிதப்படுத்தாமல் வந்திருந்தார்கள். சுத்தமாக இல்லாத ஒவ்வொருவ
ருடைய நன்மைக்காகவும் பஸ்கா ஆட்டுக்குட்டிகளை வெட்டுகிற பொறுப்பு
லேவியர்களுக்கு இருந்தது.[h] யெகோவாவுக்கு அவர்களைப் புனிதப்படுத்து
வதற்காக லேவியர்கள் இதைச் செய்தார்கள். **18** ஏராளமான மக்கள், முக்கி
யமாக எப்பிராயீம், மனாசே,[i] இசக்கார், செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்த
மக்கள், தங்களைச் சுத்தப்படுத்திக்கொள்ளாமல் வந்திருந்தார்கள்; அப்படியி
ருந்தும், கடவுள் கொடுத்த சட்டத்தை மீறி பஸ்கா உணவைச் சாப்பிட்
டார்கள். அதனால் எசேக்கியா அவர்களுக்காக ஜெபம் செய்தார். "யெகோ
வாவே, நீங்கள் நல்லவர்.[j] **19** முன்னோர்களின் கடவுளான யெகோவாவே,
உண்மைக் கடவுளே, உங்களைத் தேடுவதற்காகத்[k] தங்கள் இதயத்தைத்
தயார்படுத்தியிருக்கிற ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களு
டைய சட்டத்தின்படி தங்களைச் சுத்தப்படுத்திக்கொள்ளாதவர்களைத்[l] தயவு
செய்து மன்னித்துவிடுங்கள்" என்று கெஞ்சினார். **20** எசேக்கியா செய்த
ஜெபத்தைக் கேட்டு, யெகோவா அவர்களை மன்னித்தார்.*

21 அதனால், எருசலேமுக்கு வந்திருந்த இஸ்ரவேலர்கள் எல்லாரும்
புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையைச்[m] சந்தோஷம் பொங்க ஏழு நாட்
கள் கொண்டாடினார்கள்.[n] லேவியர்களும் குருமார்களும் தினமும் யெகோ
வாவைப் புகழ்ந்து பாடினார்கள், யெகோவாவைப் புகழ்வதற்காக இசைக்
கருவிகளைச் சத்தமாக வாசித்தார்கள்.[o] **22** யெகோவாவுக்கு விவேகமா
கச் சேவை செய்த லேவியர்கள் எல்லாரையும் எசேக்கியா ஊக்கப்படுத்
தினார். பண்டிகை நடந்த ஏழு நாட்களும் அவர்கள் விருந்து சாப்பிட்
டார்கள்;[p] சமாதான பலிகளைக் கொடுத்து,[q] முன்னோர்களின் கடவுளான
யெகோவாவுக்கு நன்றி சொன்னார்கள்.

23 பின்பு, சபையார் எல்லாரும் இன்னும் ஏழு நாட்களுக்குப் பண்
டிகை கொண்டாடத் தீர்மானித்தார்கள். அதனால், அடுத்த ஏழு நாட்க

30:20 * நே.மொ., "குணமாக்கினார்."

அதி. 30
a 2நா 36:15, 16
b 2நா 11:14, 16
c எண் 9:10, 11
d லேவி 23:6
e 2ரா 18:22
f 2நா 28:24
g லேவி 1:5
h 2நா 29:34
i 2நா 30:1
j சங் 86:5
k 2நா 19:2, 3; எஸ்றா 7:10
l எண் 9:6, 10
m லேவி 23:6
n உபா 12:5, 7; நெ 8:10
o 2நா 29:25
p லேவி 23:6
q லேவி 3:1

ளும் சந்தோஷமாகக் கொண்டாடினார்கள்.[a] **24** எசேக்கியா ராஜா 1,000
காளைகளையும் 7,000 செம்மறியாடுகளையும் சபையாருக்கு நன்கொ
டையாகக் கொடுத்தார். அதிகாரிகளும் 1,000 காளைகளையும் 10,000
செம்மறியாடுகளையும் கொடுத்தார்கள்.[b] குருமார்கள் பலர் தங்களைப்
புனிதப்படுத்திக்கொண்டார்கள்.[c] **25** யூதா சபையார் எல்லாரும் குருமார்
களும் லேவியர்களும் இஸ்ரவேலில் இருந்து வந்திருந்த சபையார் எல்லா
ரும்,[d] இஸ்ரவேலிலும் யூதாவிலும் குடியிருந்த மற்ற தேசத்து மக்களும்[e] சந்
தோஷமாகக் கொண்டாடினார்கள். **26** எல்லாரும் எருசலேமில் மிகவும்
சந்தோஷமாகப் பண்டிகையைக் கொண்டாடினார்கள். ஏனென்றால், இஸ்ர
வேலின் ராஜாவான தாவீதின் மகன் சாலொமோன் காலத்திலிருந்து அது
வரை எருசலேமில் இதுபோல் நடந்ததே இல்லை.[f] **27** கடைசியாக, லேவி
வம்சத்தைச் சேர்ந்த குருமார்கள் எழுந்து மக்களை ஆசீர்வதித்தார்கள்.[g]
அவர்கள் செய்த ஜெபத்தைக் கடவுள் கேட்டார், அது கடவுள் குடியிருக்
கிற பரிசுத்த இடமான பரலோகத்தை எட்டியது.

31 பண்டிகை முடிந்தவுடன், அங்கே வந்திருந்த இஸ்ரவேலர்கள் எல்
லாரும் யூதா நகரங்களுக்குப் போய் அங்கிருந்த பூஜைத் தூண்
களை நொறுக்கினார்கள்,[h] பூஜைக் கம்பங்களை* வெட்டினார்கள்;[i] யூதா,
பென்யமீன் முழுவதிலும் இருந்த ஆராதனை மேடுகளையும்[j] பலிபீடங்க
ளையும் அழித்தார்கள்.[k] அதுமட்டுமல்ல, எப்பிராயீமிலும் மனாசேயிலும்[l]
இருந்தவற்றையும் அழித்தார்கள். எல்லாவற்றையும் அடியோடு அழித்த
பின்பு, இஸ்ரவேலர்கள் எல்லாரும் அவரவருடைய நகரங்களுக்குத் திரும்
பினார்கள்.

2 குருமார்களும் லேவியர்களும் தங்களுடைய வேலைகளைச் செய்வ
தற்காக[m] எசேக்கியா அவர்களைப் பல பிரிவுகளாகப் பிரித்தார்.[n] தகன பலி
கள் மற்றும் சமாதான பலிகள் கொடுப்பதற்கும், யெகோவாவுடைய
ஆலயத்தின் பிரகாரங்களில் வேலை செய்வதற்கும், அங்கிருக்கிற வாசல்
களில் நன்றி சொல்லி அவரைப் புகழ்வதற்கும் அவர்களை நியமித்தார்.[o]
3 யெகோவாவின் திருச்சட்டத்தில் எழுதப்பட்டிருந்தபடி, தகன பலிகளுக்
காகவும்[p] காலையிலும் மாலையிலும் செலுத்த வேண்டிய பலிகளுக்கா
கவும்[q] ஓய்வுநாளிலும்[r] மாதப்பிறப்பு நாளிலும்[s] பண்டிகை நாட்களிலும்[t]
செலுத்த வேண்டிய தகன பலிகளுக்காகவும் ராஜா தன்னுடைய சொத்திலி
ருந்து ஒரு பகுதியைக் கொடுத்தார்.

4 அதோடு, குருமார்களும் லேவியர்களும் யெகோவாவின் சட்டத்தை
உறுதியாகக் கடைப்பிடிப்பதற்கு உதவியாக* அவர்களுக்குக் கொடுக்க
வேண்டிய பங்கைக் கொடுக்கச் சொல்லி எருசலேமில் குடியிருந்த மக்க
ளுக்குக் கட்டளையிட்டார்.[u] **5** ராஜாவின் கட்டளையைக் கேட்டதுமே
இஸ்ரவேலர்கள் தங்களுடைய முதல் அறுவடையில் கிடைத்த தானியத்
தையும், புதிய திராட்சமதுவையும், எண்ணெயையும்,[v] தேனையும், நிலத்தில்
விளைந்த எல்லாவற்றையும் ஏராளமாகக் கொண்டுவந்தார்கள்.[w] எல்லாவற்
றிலும் பத்திலொரு பாகத்தைத் தாராளமாகக் கொண்டுவந்து கொடுத்தார்
கள்.[x] **6** யூதா நகரங்களில் குடியிருந்த இஸ்ரவேல் மக்களும் யூதா மக்க
ளும்கூட ஆடுமாடுகளில் பத்தில் ஒன்றைக் கொண்டுவந்தார்கள். தங்கள்

31:1 *சொல் பட்டியலைப் பாருங்கள். **31:4** *வே.வா., “யெகோவாவின் சட்டத்துக்குத் தங்களை அர்ப்பணிப்பதற்கு உதவியாக.”

அதி. 30
a 1ரா 8:65
b 2நா 35:7, 8
c 2நா 29:34
d 2நா 30:11, 18
e யாத் 12:49
f 1ரா 8:65, 66
g எண் 6:23-26; உபா 10:8

அதி. 31
h யாத் 23:24
i உபா 7:5; 2ரா 18:1, 4; 2நா 14:2, 3; 2நா 34:1, 3
j உபா 12:2
k 2நா 23:16, 17
l 2நா 30:1, 18
m 2நா 8:14
n 1நா 23:6; 1நா 24:1
o 1நா 23:13; 1நா 23:27-30
p 2நா 30:24
q யாத் 29:39
r எண் 28:9
s எண் 10:10
t உபா 16:16
u எண் 18:21; நெ 10:38, 39
v எண் 18:12
w யாத் 22:29; யாத் 23:19; நெ 10:37
x நீதி 3:9

கடவுளான யெகோவாவுக்காக அர்ப்பணிக்கப்பட்ட* பரிசுத்த பொருள்
களில் பத்திலொரு பாகத்தைக்[a] கொண்டுவந்து குவியல் குவியலாகக்
குவித்து வைத்தார்கள். **7** மூன்றாம் மாதத்தில்[b] காணிக்கைகளைக்
கொண்டுவந்து குவிக்க ஆரம்பித்து, ஏழாம் மாதத்தில்[c] கொடுத்து முடித்
தார்கள். **8** குவித்து வைக்கப்பட்டிருந்த காணிக்கைகளைப் பார்த்தபோது
எசேக்கியாவும் அதிகாரிகளும் யெகோவாவைப் புகழ்ந்தார்கள், அவரு
டைய மக்களான இஸ்ரவேலர்களை ஆசீர்வதித்தார்கள்.

9 காணிக்கைகளைப் பற்றிக் குருமார்களிடமும் லேவியர்களிடமும்
எசேக்கியா விசாரித்தார். **10** அதற்கு சாதோக்கின் வம்சத்தில் வந்த
முதன்மை குரு அசரியா, "யெகோவாவின் ஆலயத்துக்குக் காணிக்கை
கொடுக்க ஆரம்பித்ததிலிருந்து[d] மக்கள் திருப்தியாகச் சாப்பிடுகிறார்கள்,
சாப்பிட்டதுபோக இன்னும் ஏராளமாகவும் இருக்கிறது. யெகோவா தன்னு
டைய மக்களை ஆசீர்வதித்திருக்கிறார், அதனால்தான் இவ்வளவு மீதியாக
இருக்கிறது"[e] என்று சொன்னார்.

11 எசேக்கியா அதைக் கேட்டதும் யெகோவாவின் ஆலயத்தில்
சேமிப்பு அறைகளை* தயார்படுத்தச் சொன்னார்.[f] அவர் சொன்னப
டியே அவர்கள் செய்தார்கள். **12** காணிக்கைகளையும் பத்திலொரு பாகத்
தையும்*[g] பரிசுத்த பொருள்களையும் தவறாமல் கொண்டுவந்தார்கள். இவை
எல்லாவற்றையும் மேற்பார்வை செய்ய லேவியரான கொனனியா நிய
மிக்கப்பட்டார். அவருடைய சகோதரன் சீமேயி அவருக்குக் கீழே அதிகா
ரியாக இருந்தார். **13** கொனனியாவுக்கும் அவருடைய சகோதரர் சீமேயிக்
கும் உதவியாக யெகியேல், அசசியா, நாகாத், ஆசகேல், யெரிமோத்,
யோசபத், ஏலியேல், இஸ்மகியா, மகாத், பெனாயா ஆகியோர் நியமிக்கப்
பட்டார்கள். எசேக்கியா ராஜாவின் ஆணைப்படி, இவர்கள் அதிகாரிக
ளாக நியமிக்கப்பட்டார்கள். அசரியா உண்மைக் கடவுளுடைய ஆலயத்தின்
மேற்பார்வையாளராக இருந்தார். **14** மக்கள் தாங்களாகவே விருப்பப்
பட்டு உண்மைக் கடவுளுக்குக் கொடுத்த காணிக்கைகளைக்[h] கவனித்துக்
கொள்ளும் பொறுப்பு கிழக்கு வாசலைக் காவல்காக்கும் இம்னாவின்
மகன் கோரேவுக்குக் கொடுக்கப்பட்டது.[i] யெகோவாவுக்காகக் கொடுக்கப்
பட்ட காணிக்கையையும்[j] மகா பரிசுத்த பொருள்களையும் அவர் பிரித்துக்
கொடுத்தார்.[k] **15** ஏதேன், மினியாமீன், யெசுவா, செமாயா, அமரியா, செக்
கனியா ஆகியோர் அவருக்குக் கீழே வேலை பார்த்தார்கள். குருமார்களின்
நகரங்களில்[l] இருந்துகொண்டு தங்களுடைய பிரிவைச் சேர்ந்த[m] பெரியவர்
களுக்கும் சிறியவர்களுக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுக்க வேண்டிய நம்
பகமான பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. **16** அதோடு, வம்
சாவளிப் பட்டியலில் இருந்தவர்களுக்கும் அந்தப் பொருள்களை அவர்கள்
பிரித்துக் கொடுத்தார்கள். அதாவது, யெகோவாவின் ஆலயத்தில் சேவை
செய்வதற்காகவும் தங்களுடைய பிரிவுகளுக்குரிய வேலைகளைச் செய்வ
தற்காகவும் வந்த ஆட்களுக்கும், மூன்று வயதும் அதற்கு மேற்பட்ட வயது
முடைய அவர்களுடைய மகன்களுக்கும் அவற்றைக் கொடுத்தார்கள்.

17 குருமார்கள் தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்தின்படி[n] வம்சாவ

அதி. 31
a லேவி 27:30
உபா 14:28
b லேவி 23:16
c லேவி 23:24
d எண் 18:8
e மல் 3:10
f நெ 10:38, 39
நெ 12:44
g லேவி 27:30
உபா 14:28
h உபா 12:5, 6
உபா 16:10
i 1நா 26:17, 19
j எண் 18:8
k லேவி 2:10
லேவி 7:1
l யோசு 21:19
m 1நா 24:1
n 1நா 24:4

31:6 *நே.மொ., "புனிதமாக்கப்பட்ட." **31:11** *வே.வா., "சாப்பாட்டு அறைகளை."
31:12 *வே.வா., "தசமபாகத்தையும்."

ளிப் பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள். அதேபோல், இருபதும் அதற்கு மேற்
பட்ட வயதுமுள்ள லேவியர்கள்[a] தங்களுடைய தந்தைவழிக் குடும்பத்தின்
படியும் தங்களுடைய பிரிவுக்குக்[b] கொடுக்கப்பட்ட வேலையின்படியும்
வம்சாவளிப் பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள். **18** வம்சாவளிப் பட்டிய
லில் லேவியர்களுடைய மனைவிகள், சின்னப் பிள்ளைகள், மகன்கள்,
மகள்கள் என எல்லாருடைய பெயரையும் பதிவு செய்திருந்தார்கள். லேவி
யர்களுடைய குடும்பங்கள் எல்லாமே பதிவு செய்யப்பட்டன. ஏனென்றால்,
நம்பிக்கையோடு ஒப்படைக்கப்பட்ட பரிசுத்த வேலையைச் செய்வதற்
காக லேவியர்கள் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள்.* **19** நகரங்களுக்கு
வெளியே* குடியிருந்த ஆரோனின் வம்சத்தைச் சேர்ந்த குருமார்களும்
இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தார்கள்;[c] குருமார்களுடைய குடும்பத்
தைச் சேர்ந்த ஆண்கள் எல்லாருக்கும், லேவியர்களின் வம்சாவளிப் பட்டி
யலில் இருந்த எல்லாருக்கும் உணவுப் பொருள்களைப் பிரித்துக் கொடுக்க
எல்லா நகரங்களிலும் ஆட்கள் பேர்பேராக நியமிக்கப்பட்டார்கள்.

20 யூதா முழுவதும் எசேக்கியா இப்படிச் செய்தார். தன்னுடைய கடவு
ளான யெகோவாவுக்குப் பிடித்த நல்ல காரியங்களைச் செய்துவந்தார்.
அவருக்கு உண்மையாக நடந்துகொண்டார். **21** கடவுளை வணங்குவது
சம்பந்தமாக எதைச் செய்தாலும், உண்மைக் கடவுளின் ஆலய வேலை
யைச்[d] செய்வதாக இருந்தாலும் சரி, திருச்சட்டத்தையும் கட்டளைகளையும்
கடைப்பிடிப்பதாக இருந்தாலும் சரி, எல்லாவற்றையும் அவர் முழு இதயத்
தோடு செய்ததால் வெற்றி பெற்றார்.

32 எசேக்கியா இவை எல்லாவற்றையும் உண்மையுடன் செய்து முடித்
தார்.[e] அதன் பின்பு, யூதா தேசத்தின் மீது அசீரிய ராஜா சனகெரிப்
படையெடுத்து வந்து மதில் சூழ்ந்த நகரங்களை முற்றுகையிட்டான், மதில்
களை உடைத்து அவற்றைக் கைப்பற்ற வேண்டும் என்று குறியாக
இருந்தான்.[f]

2 சனகெரிப் படையெடுத்து வந்திருப்பதையும் எருசலேம் நகரத்தின்
மீது தாக்குதல் நடத்த திட்டம் போட்டிருப்பதையும் எசேக்கியா தெரிந்து
கொண்டார். **3** உடனே தன்னுடைய அதிகாரிகளிடமும் வீரர்களிடமும்
கலந்துபேசி, நகரத்துக்கு வெளியே இருக்கிற நீரூற்றுகளை அடைத்துவிட
வேண்டும் என்று முடிவுசெய்தார்;[g] அவர்களும் அதற்கு ஆதரவு கொடுத்
தார்கள். **4** பின்பு நிறைய ஆட்கள் ஒன்றுகூடி, “அசீரிய ராஜாக்கள் வரும்
போது அவர்களுக்குத் தண்ணீரே கிடைக்கக் கூடாது” என்று சொல்லி,
அந்தப் பகுதியில் இருந்த எல்லா நீரூற்றுகளையும் அங்கே ஓடிக்கொண்டி
ருந்த ஓடையையும் அடைத்துப்போட்டார்கள்.

5 எசேக்கியா மன உறுதியோடு செயல்பட்டார். இடிந்து கிடந்த மதில்
முழுவதையும் திரும்பக் கட்டினார், அதன்மேல் கோபுரங்களைக் கட்டினார்.
அந்த மதிலுக்கு வெளியே இன்னொரு மதிலையும் கட்டினார். ‘தாவீதின் நக
ரத்தில்’ இருந்த மில்லோவையும்*[h] பழுதுபார்த்தார். ஏராளமான ஆயுதங்க
ளையும் கேடயங்களையும் செய்தார். **6** வீரர்களுக்குத் தலைமை தாங்கு
வதற்காகப் படைத் தலைவர்களை நியமித்து, அவர்கள் எல்லாரையும்

அதி. 31
a எண் 4:2, 3
எண் 8:24
1நா 23:24

b 1நா 23:6

c லேவி 25:
33, 34
எண் 35:2
யோசு 21:13

d 2நா 29:35

அதி. 32
e 2நா 31:20

f 2ரா 18:7, 13
ஏசா 36:1

g 2ரா 20:20

h 2சா 5:9
1ரா 9:24
1ரா 11:27
2ரா 12:20

31:18 * நே.மொ., “புனிதப்படுத்தியிருந்தார்கள்.” **31:19** * நே.மொ., “மேய்ச்சல் நிலங்
களில்.” **32:5** * அர்த்தம், “மண்மேடு.” இது ஒரு கோட்டையாக இருந்திருக்கலாம்.

நகரவாசலில் இருந்த பொது சதுக்கத்தில் ஒன்றுகூட்டினார். **7** அவர்களி
டம், "தைரியமாகவும் உறுதியாகவும் இருங்கள். அசீரிய ராஜாவையும்
அவனோடு வந்திருக்கிற பெரிய படையையும் பார்த்துப் பயப்படாதீர்கள்,[a]
திகிலடையாதீர்கள். அவனோடு இருக்கிறவர்களைவிட நம்மோடு இருக்கி
றவர்கள் அதிகம்.[b] **8** சாதாரண மனிதர்கள்தான் அவனுக்குத் துணையாக
இருக்கிறார்கள், நமக்கோ, நம்முடைய கடவுளான யெகோவா துணையாக
இருக்கிறார்; அவர் நமக்காகப் போர் செய்வார்"[c] என்று சொல்லி ஊக்கப்
படுத்தினார். யூதா ராஜாவான எசேக்கியா சொன்னதைக் கேட்டதும் அவர்
களுக்குத் தைரியம் வந்தது.[d]

9 அசீரிய ராஜா சனகெரிப் ஒரு பெரிய படையுடன் லாகீஸ்[e] பக்கத்
தில் இருந்துகொண்டு, தன்னுடைய அதிகாரிகளை எருசலேமுக்கு அனுப்
பினான். யூதா ராஜாவான எசேக்கியாவிடமும் எருசலேமில் குடியிருக்கிற
யூதா மக்கள் எல்லாரிடமும்[f] அவர்கள் போய்,

10 "அசீரிய ராஜா சனகெரிப் சொல்வதைக் கேளுங்கள்: 'எருசலேமை
நாங்கள் முற்றுகையிட்ட பிறகும் நீங்கள் எந்த நம்பிக்கையில் இன்னும்
இங்கே இருக்கிறீர்கள்?[g] **11** "அசீரிய ராஜாவிடமிருந்து நம்முடைய கடவு
ளான யெகோவா நம்மைக் காப்பாற்றுவார்"[h] என்று சொல்லி எசேக்கியா
உங்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறான். அவன் பேச்சைக் கேட்டால் குடிக்
கத் தண்ணீர்கூட உங்களுக்குக் கிடைக்காது, பஞ்சத்தில் அடிபட்டுச்
சாவீர்கள். **12** உங்கள் கடவுளுடைய ஆராதனை மேடுகளையும்[i] பலி
பீடங்களையும் இந்த எசேக்கியாதானே இடித்துப்போட்டான்?[j] "ஒரேவொரு
பலிபீடத்துக்கு முன்னால்தான் மண்டிபோட வேண்டும், அங்குதான் பலி
களை எரித்து புகை எழும்பி வரச் செய்ய வேண்டும்"[k] என்று யூதா மக்களிட
மும் எருசலேம் மக்களிடமும் அவன்தானே சொன்னான்? **13** நானும் என்
முன்னோர்களும் மற்ற தேசங்கள்மீது படையெடுத்துப் போனபோது அந்தத்
தேசத்து மக்கள் எல்லாருடைய கதியும் என்ன ஆனது என்று உங்களுக்
குத் தெரியாதா?[l] அவர்களுடைய தெய்வங்களால் என்னிடமிருந்து அவர்
களைக் காப்பாற்ற முடிந்ததா?[m] **14** என்னுடைய முன்னோர்கள் அடி
யோடு அழித்துப்போட்ட அந்த மக்களுடைய தெய்வங்களில் ஏதாவது
ஒன்றால் அவர்களை என் கையிலிருந்து காப்பாற்ற முடிந்ததா? அப்படி
யிருக்கும்போது உங்கள் கடவுளால் மட்டும் எப்படிக் காப்பாற்ற முடியும்?[n]
15 எசேக்கியா பேச்சைக் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள்! அவன் சொல்வதை
நம்பாதீர்கள்.[o] என் கையிலிருந்தும் என் முன்னோர்கள் கையிலிருந்தும், மக்
களைக் காப்பாற்ற இதுவரை எந்தத் தேசத்தின் கடவுளாலும் எந்த ராஜ்யத்
தின் கடவுளாலும் முடியவில்லை. அப்படியிருக்கும்போது, உங்கள் கடவுள்
எந்த மூலைக்கு?'"[p] என்று சொன்னார்கள்.

16 இதுமட்டுமில்லாமல், உண்மைக் கடவுளான யெகோவாவையும்
அவருடைய ஊழியரான எசேக்கியாவையும் பற்றி அவர்கள் இன்னும்
கேவலமாகப் பேசினார்கள். **17** அதோடு, இஸ்ரவேலின் கடவுளான
யெகோவாவைக் கேவலப்படுத்தி[q] எசேக்கியாவுக்குக் கடிதங்களையும் சன
கெரிப் எழுதினான்.[r] அதில், "மற்ற தேசத்து தெய்வங்களால் தங்களுடைய
மக்களை என்னிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை.[s] அதேபோல, எசேக்
கியாவின் கடவுளாலும் என்னிடமிருந்து அவனுடைய மக்களைக் காப்
பாற்ற முடியாது" என்று கடவுளைப் பழித்து எழுதியிருந்தான். **18** அவன்

அதி. 32
a 2ரா 19:6
b உபா 31:6, 8; யோசு 1:6, 9; 2ரா 6:16, 17; 2நா 20:15
c எண் 14:9; உபா 20:1, 4; யோசு 10:42; எரே 17:5
d 2நா 20:20
e ஏசா 37:8
f 2ரா 18:17; ஏசா 36:2
g 2ரா 18:19; ஏசா 36:4
h 2ரா 18:29, 30; 2ரா 19:10
i 2ரா 18:1, 4
j 2நா 31:1
k 2ரா 18:22; ஏசா 36:7
l 2ரா 15:29; 2ரா 17:5; ஏசா 37:12
m 2ரா 18:33, 34; 2ரா 19:17, 18
n யாத் 14:3; யாத் 15:9
o 2ரா 18:29
p யாத் 5:2; உபா 32:27; தானி 3:14, 15
q ஏசா 37:29
r 2ரா 19:14
s 2ரா 17:6; 2ரா 19:12

அனுப்பிய ஆட்கள், மதில்மேல் நின்றுகொண்டிருந்த எருசலேம் மக்களைப் பார்த்து யூத மொழியில் சத்தமாகப் பேசிக்கொண்டே இருந்தார்கள். அவர்களைப் பயமுறுத்தி, கதிகலங்க வைத்து, நகரத்தைப் பிடிப்பதற்காக அப்படிச் செய்தார்கள்.[a] **19** மற்ற தேசத்து மக்கள் வணங்கிய தெய்வங்களை, அதாவது மனிதர்களின் கையால் செய்யப்பட்ட சிலைகளை, பழித்துப் பேசியது போலவே எருசலேமின் கடவுளையும் பழித்துப் பேசினார்கள். **20** ஆனால், எசேக்கியா ராஜாவும் ஆமோத்சின் மகனான ஏசாயா தீர்க்கதரிசியும்[b] பரலோகத்தில் இருக்கிற கடவுளிடம் உதவிகேட்டு மன்றாடிக்கொண்டே இருந்தார்கள்.[c]

21 பின்பு யெகோவா ஒரு தேவதூதரை அனுப்பி, அசீரிய ராஜாவின் முகாமில் இருந்த மாவீரர்கள், அதிகாரிகள், படைத் தலைவர்கள் என ஒருவர் விடாமல் எல்லாரையும் கொன்றுபோட்டார்.[d] அதனால், அசீரிய ராஜா தன்னுடைய தேசத்துக்கு அவமானத்தோடு திரும்பிப் போனான். பின்பு, அவன் தன்னுடைய கடவுளை வணங்குவதற்காகக் கோயிலுக்குள் போனபோது அவனுடைய மகன்களில் சிலர் அவனை வாளால் வெட்டிக் கொன்றார்கள்.[e] **22** இப்படி, அசீரிய ராஜா சனகெரிப்பிடமிருந்தும் மற்ற எதிரிகள் எல்லாரிடமிருந்தும் எசேக்கியாவையும் எருசலேம் மக்களையும் யெகோவா காப்பாற்றினார்; அதனால் சுற்றியிருந்த எதிரிகளின் தொல்லையில்லாமல் அவர்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள். **23** யெகோவாவுக்குக் காணிக்கைகளை எடுத்துக்கொண்டு நிறைய பேர் எருசலேமுக்கு வந்தார்கள்; யூதா ராஜாவான எசேக்கியாவுக்குச் சிறந்த அன்பளிப்புகளைக் கொண்டுவந்தார்கள்.[f] எல்லா தேசத்து மக்களும் அவருக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் காட்டினார்கள்.

24 ஒருசமயம், எசேக்கியா வியாதிப்பட்டு சாகும் நிலையில் இருந்தார். அப்போது, அவர் யெகோவாவிடம் ஜெபம் செய்தார்.[g] கடவுள் அவருக்குப் பதில் கொடுத்ததோடு, ஓர் அடையாளத்தையும் கொடுத்தார்.[h] **25** எசேக்கியாவுக்குத் தலைக்கனம் வந்ததால் கடவுள் செய்த உதவிக்கு அவர் நன்றி காட்டவில்லை. அதனால், அவர்மீதும் யூதாமீதும் எருசலேம் மீதும் கடவுளுக்குப் பயங்கர கோபம் வந்தது. **26** ஆனால், நெஞ்சில் ஆணவத்தோடு இருந்த எசேக்கியா தாழ்மையாக நடந்துகொண்டார்.[i] எருசலேம் மக்களும் தாழ்மையாக நடந்துகொண்டார்கள். அதனால் எசேக்கியா ஆட்சி செய்த சமயத்தில் யெகோவா அவர்களுக்குத் தண்டனை கொடுக்கவில்லை.[j]

27 எசேக்கியாவிடம் செல்வம் ஏராளமாய்க் குவிந்தது, அவருக்குப் பேரும் புகழும் கிடைத்தது.[k] தங்கத்தையும் வெள்ளியையும் விலைமதிப்புள்ள கற்களையும் பரிமளத் தைலத்தையும் கேடயங்களையும் அருமையான மற்ற எல்லா பொருள்களையும் சேர்த்து வைப்பதற்காக அறைகளைக் கட்டினார்.[l] **28** தானியங்களையும் புதிய திராட்சமதுவையும் எண்ணெயையும் வைக்க சேமிப்புக் கிடங்குகளைக் கட்டினார். வெவ்வேறு கால்நடைகளைக் கட்டி வைக்க தொழுவங்களையும், ஆடுகளை அடைத்து வைக்க பட்டிகளையும் அமைத்தார். **29** அவர் தனக்காக நகரங்களைக் கட்டினார்; ஆடுமாடுகளும் மற்ற விலங்குகளும் அவரிடம் ஏராளமாக இருந்தன. கடவுள்தான் அவருக்கு இவ்வளவு சொத்துகளையும் கொடுத்தார். **30** கீகோன்[m] நீரூற்றின் மேற்பகுதியில் இருந்த திறப்பை

அதி. 32
- a 2ரா 18:26, 28; ஏசா 36:11, 13
- b 2ரா 19:2, 20; ஏசா 37:2
- c 2ரா 19:14, 15; 2நா 14:11
- d சங் 76:5
- e 2ரா 19:35-37; ஏசா 37:37, 38
- f 1ரா 4:21; 2நா 17:1, 5
- g 2ரா 20:1, 2; ஏசா 38:1, 2
- h 2ரா 20:5, 9; 2நா 32:31; ஏசா 38:8
- i எரே 26:18, 19
- j 2ரா 20:19
- k 2நா 1:11, 12; 2நா 17:1, 5
- l 1ரா 9:17-19
- m 1ரா 1:33, 45

அடைத்துவிட்டு,[a] அதிலிருந்து வரும் தண்ணீரை மேற்கே ‘தாவீதின் நகரத்
துக்கு’[b] திருப்பிவிட்டார். எசேக்கியா எல்லா வேலைகளையும் வெற்றிகர
மாகச் செய்து முடித்தார். 31 தேசத்தில் ஏற்பட்ட அடையாளத்தைப்[c]
பற்றி விசாரிக்க பாபிலோன் அதிகாரிகள் அனுப்பிய பிரதிநிதிகள் அவரி
டம் வந்தார்கள். அப்போது, அவரைச் சோதித்துப் பார்ப்பதற்காக,[d] அவரு
டைய இதயத்தில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக,[e]
உண்மைக் கடவுள் அவரை விட்டுவிட்டார்.

32 எசேக்கியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றி
யும், அவர் மாறாத அன்புடன் செய்த செயல்களைப் பற்றியும்[f] ஆமோத்
சின் மகனான ஏசாயா தீர்க்கதரிசி எழுதிய புத்தகத்திலும்[g] யூதா மற்றும்
இஸ்ரவேல் ராஜாக்களின் புத்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது.[h] 33 பின்பு
எசேக்கியா இறந்துபோனார்,* தாவீதின் வாரிசுகளுடைய கல்லறைக்குப்
போகிற வழியில், ஒரு மலைச் சரிவில் அவரை அடக்கம் செய்தார்கள்.[i]
அவர் இறந்தபோது, யூதா மக்கள் எல்லாரும் எருசலேம் மக்களும் அவ
ருக்கு மரியாதை செலுத்தினார்கள். அவருக்குப் பிறகு, அவருடைய மகன்
மனாசே ராஜாவானார்.

33 மனாசே[j] 12 வயதில் ராஜாவாகி, 55 வருஷங்கள் எருசலேமில்
ஆட்சி செய்தார்.[k]

2 யெகோவா வெறுக்கிற காரியங்களை மனாசே செய்தார்; இஸ்ரவேலர்
களின் கண் முன்னால் யெகோவா விரட்டியடித்த மற்ற தேசத்தாரின் அரு
வருப்பான பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார்.[l] 3 தன்னுடைய அப்
பாவான எசேக்கியா இடித்துப்போட்ட ஆராதனை மேடுகளைத் திரும்பக்
கட்டினார்;[m] பாகால்களுக்குப் பலிபீடங்களைக் கட்டி, பூஜைக் கம்பங்களை*
நிறுத்தினார். வானத்துப் படைகள் முன்னால் மண்டிபோட்டு வணங்கி,
அவற்றுக்குச் சேவை செய்தார்.[n] 4 அதோடு, யெகோவாவின் ஆலயத்தி
லேயே, “எருசலேமில் என் பெயரை என்றென்றும் நிலைநாட்டுவேன்”[o]
என்று யெகோவா சொல்லியிருந்த ஆலயத்திலேயே, பலிபீடங்களைக் கட்
டினார்.[p] 5 வானத்துப் படைகளை வணங்குவதற்காக யெகோவாவுடைய
ஆலயத்தின் இரண்டு பிரகாரங்களிலும் பலிபீடங்களைக் கட்டினார்.[q]
6 பென்-இன்னோம்* பள்ளத்தாக்கில்,#[r] சொந்த மகன்களையே நெருப்பில்
பலி கொடுத்தார்.△[s] மாயமந்திர பழக்கங்களில் ஈடுபட்டார்,[t] குறிசொன்னார்,
பில்லிசூனியம் செய்தார், ஆவிகளோடு பேசுகிறவர்களையும் குறிசொல்கிற
வர்களையும் நியமித்தார்.[u] யெகோவா வெறுக்கிற காரியங்களைக் கணக்கு
வழக்கில்லாமல் செய்து, அவரைப் புண்படுத்தினார்.

7 மனாசே தான் உண்டாக்கிய உருவச் சிலையை உண்மைக் கட
வுளின் ஆலயத்தில் வைத்தார்;[v] அந்த ஆலயத்தைப் பற்றித்தான் தாவீதி
டமும் அவருடைய மகன் சாலொமோனிடமும் கடவுள் இப்படிச் சொல்லி
யிருந்தார்: “இஸ்ரவேலில் உள்ள எல்லா கோத்திரத்திலிருந்தும் நான்
தேர்ந்தெடுத்த எருசலேமிலும் இந்த ஆலயத்திலும் என் பெயரை என்
றென்றும் நிலைநாட்டுவேன்.[w] 8 இஸ்ரவேலர்களுக்கு நான் கொடுத்த கட்

32:33 *நே.மொ., “தன் முன்னோர்களோடு படுக்க வைக்கப்பட்டார்.” **33:3** *சொல் பட்டியலைப் பாருங்கள். **33:6** *அர்த்தம், “இன்னோம் மகனின்.” #சொல் பட்டியலில் “கெஹென்னா” என்ற தலைப்பைப் பாருங்கள். △நே.மொ., “நெருப்பைக் கடக்க வைத்தார்.”

அதி. 32
a 2நா 32:4
b 2சா 5:9
c 2ரா 20:8-11; 2ரா 20:12; ஏசா 38:8; ஏசா 39:1
d ஆதி 22:1
e உபா 8:2; சங் 7:9; சங் 139:23
f 2நா 31:20, 21
g ஏசா 1:1
h 2ரா 20:20
i 1ரா 11:43

அதி. 33
j மத் 1:10
k 2ரா 21:1
l 2ரா 21:2-6
m 2ரா 18:1, 4
n உபா 4:19; 2ரா 23:5
o உபா 12:11; 2நா 6:6
p 2ரா 16:10, 11
q 1ரா 6:36; 1ரா 7:12
r யோசு 15:8, 12; 2ரா 23:10
s 2ரா 16:1, 3
t லேவி 19:26
u லேவி 20:6; உபா 18:10, 11
v 2ரா 23:6
w 2ரா 21:7-9; 2ரா 23:27; 2நா 7:16

டளைகள் எல்லாவற்றையும், அதாவது மோசே மூலம் நான் கொடுத்த
திருச்சட்டம் முழுவதையும் விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும், அப்
படியே அவர்கள் பின்பற்றி நடந்தால் அவர்களுடைய முன்னோர்க
ளுக்கு நான் கொடுத்த தேசத்திலிருந்து இனி ஒருபோதும் அவர்களைத்
துரத்திவிட மாட்டேன்." **9** இஸ்ரவேலர்களின் கண் முன்னால் யெகோவா
அழித்துப்போட்ட மற்ற தேசத்தார் செய்ததைவிட படுமோசமான காரியங்
களைச் செய்ய யூதா மக்களையும் எருசலேம் மக்களையும் மனாசே தூண்
டிக்கொண்டே இருந்தார். இப்படி, கடவுளைவிட்டு அவர்கள் வழிவிலகிப்
போகும்படி செய்தார்.[a]

10 மனாசேக்கும் அவருடைய மக்களுக்கும் யெகோவா அறிவுரை
சொல்லிக்கொண்டே இருந்தார். ஆனால், அவர்கள் அதையெல்லாம் காதில்
வாங்கிக்கொள்ளவே இல்லை.[b] **11** அதனால், அவர்களுக்கு எதிராக அசீ
ரிய ராஜாவின் படைத் தலைவர்களை யெகோவா அனுப்பினார். அவர்கள்
மனாசேயைப் பிடித்து கொக்கிகள் மாட்டி,* இரண்டு செம்பு விலங்குகள்
போட்டு பாபிலோனுக்குக் கொண்டுபோனார்கள். **12** அவர் இக்கட்டில்
தவித்தபோது, கருணை காட்டச் சொல்லி யெகோவா தேவனிடம் கெஞ்
சினார். தன்னுடைய முன்னோர்களின் கடவுள் முன்னால் மிகவும் தாழ்மை
யோடு நடந்துகொண்டார். **13** கடவுளிடம் ஜெபம் செய்துகொண்டே இருந்
தார். அவர் கெஞ்சுவதைப் பார்த்து கடவுள் இரக்கப்பட்டார், கருணை
காட்டச் சொல்லி அவர் மன்றாடியபோது அதைக் கேட்டார். அதனால்,
அவரை மறுபடியும் எருசலேமின் ராஜாவாக்கினார்.[c] யெகோவாதான் உண்
மையான கடவுள் என்பதை மனாசே அப்போது புரிந்துகொண்டார்.[d]

14 இதற்குப் பின்பு, அவர் 'தாவீதின் நகரத்துக்கு'[e] வெளியே மதிலைக்
கட்டினார்; பள்ளத்தாக்கில்* இருக்கிற கீகோனுக்கு மேற்கே[f] 'மீன் நுழைவா
சல்'[g] வரை கட்டினார், அங்கிருந்து அந்த நகரத்தைச் சுற்றி ஓபேல் வரை
அதைக் கட்டினார்;[h] அந்த மதிலை மிக உயரமாகக் கட்டினார். அதோடு,
யூதாவிலிருந்த மதில் சூழ்ந்த நகரங்கள் எல்லாவற்றிலும் படைத் தலை
வர்களை நியமித்தார். **15** பின்பு, பொய் தெய்வங்களின் சிலைகளையும்
அந்த உருவச் சிலையையும் யெகோவாவின் ஆலயத்திலிருந்து எடுத்துப்
போட்டார்.[i] யெகோவாவின் ஆலயம் இருந்த மலையிலும் எருசலேமிலும்
தான் கட்டியிருந்த எல்லா பலிபீடங்களையும் இடித்து,[j] அவற்றை நகரத்
துக்கு வெளியே வீசினார். **16** அதோடு, யெகோவாவின் பலிபீடத்தைப்
பழுதுபார்த்து,[k] சமாதான பலிகளையும் நன்றிப் பலிகளையும்[l] கொடுக்க
ஆரம்பித்தார்;[m] இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவை வணங்கச்
சொல்லி யூதா மக்களை ஊக்கப்படுத்தினார். **17** மக்கள் இன்னும் ஆரா
தனை மேடுகளில்தான் பலி கொடுத்து வந்தார்கள். ஆனால், தங்கள் கடவு
ளான யெகோவாவுக்கு மட்டும்தான் பலி கொடுத்து வந்தார்கள்.

18 மனாசேயின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களும், கடவுளிடம்
அவர் செய்த ஜெபமும், இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவின் பெயரில்
பேசிய தரிசனக்காரர்கள் அவரிடம் சொன்ன விஷயங்களும் இஸ்ரவேல்
ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. **19** அதோடு,

33:11 *அல்லது, "பாறையிலிருந்த இடுக்கில் ஒளிந்துகொண்டிருந்த மனாசேயைப் பிடித்து." **33:14** *அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கில்." சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 33
a லேவி 18:24; யோசு 24:8; 2ரா 21:11, 16
b 2நா 36:15, 16
c ஏசா 1:18
d தானி 4:25
e 2சா 5:9; 2நா 32:2, 5
f 2நா 32:30
g நெ 3:3
h 2நா 27:1, 3
i 2ரா 21:1, 7
j 2ரா 21:1, 4, 5
k 2நா 29:18
l லேவி 7:12
m லேவி 3:1

தரிசனக்காரர்கள் அவரைப் பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள். அதாவது,
அவர் செய்த ஜெபத்தைப்[a] பற்றியும் அவருடைய மன்றாட்டுக்குப் பதில்
கிடைத்ததைப் பற்றியும் அவர் செய்த எல்லா பாவங்களைப் பற்றியும் கட
வுளுக்கு உண்மையாக நடந்துகொள்ளாததைப் பற்றியும் எழுதி வைத்திருக்
கிறார்கள்.[b] அதோடு, மனம் திருந்துவதற்கு முன்பு எங்கெல்லாம் ஆராதனை
மேடுகளைக் கட்டினார் என்பதைப் பற்றியும் எங்கெல்லாம் பூஜைக் கம்பங்
களையும்*[c] உருவச் சிலைகளையும் நிறுத்தினார் என்பதைப் பற்றியும் எழுதி
வைத்திருக்கிறார்கள். **20** மனாசே இறந்துபோனதும்,* அவருடைய அரண்
மனைக்குப் பக்கத்தில் அவரை அடக்கம் செய்தார்கள். அவருக்குப் பிறகு,
அவருடைய மகன் ஆமோன் ராஜாவானார்.[d]

21 ஆமோன்[e] 22 வயதில் ராஜாவாகி, இரண்டு வருஷங்கள் எருசலே
மில் ஆட்சி செய்தார்.[f] **22** ஆமோன் தன்னுடைய அப்பா மனாசேயைப்
போலவே யெகோவா வெறுக்கிற காரியங்களைச் செய்துவந்தார்.[g] தன்னு
டைய அப்பா மனாசே செய்து வைத்திருந்த எல்லா உருவச் சிலைகளுக்
கும் பலி கொடுத்து,[h] அவற்றை வழிபட்டுவந்தார். **23** அவருடைய அப்பா
மனாசே மனம் திருந்தி யெகோவா முன்னால் தாழ்மையாக நடந்துகொண்ட
துபோல்[i] ஆமோன் நடந்துகொள்ளவில்லை.[j] பாவத்துக்குமேல் பாவம் செய்
துகொண்டே போனார். **24** கடைசியில், அவருடைய ஊழியர்கள் அவ
ருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டி,[k] அவருடைய அரண்மனையிலேயே
அவரைக் கொலை செய்தார்கள். **25** ஆமோன் ராஜாவைக் கொன்ற அந்
தச் சதிகாரர்கள் எல்லாரையும் பொதுமக்கள் வெட்டிக் கொன்றார்கள்.[l] பின்பு,
அவருடைய மகன் யோசியாவை ராஜாவாக்கினார்கள்.[m]

34 யோசியா[n] ராஜாவானபோது அவருக்கு எட்டு வயது; அவர் 31
வருஷங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார்.[o] **2** யெகோவாவுக்
குப் பிரியமான காரியங்களை யோசியா செய்தார். தன்னுடைய மூதாதை
யான தாவீதின் வழியில் நடந்தார். அதிலிருந்து வலது பக்கமோ இடது பக்
கமோ விலகவில்லை.

3 ராஜாவான எட்டாம் வருஷத்தில், இன்னும் சின்னப் பையனாக இருந்
தபோதே, தன்னுடைய மூதாதையான தாவீதின் கடவுளைத் தேட ஆரம்பித்
தார்;[p] 12-ஆம் வருஷத்தில், யூதாவிலும் எருசலேமிலும் இருந்த ஆராதனை
மேடுகளையும்[q] பூஜைக் கம்பங்களையும்* செதுக்கப்பட்ட சிலைகளை
யும்[r] உலோகச் சிலைகளையும் அழித்துப்போட ஆரம்பித்தார்.[s] **4** அவ
ருடைய மேற்பார்வையில் பாகால்களின் பலிபீடங்களை மக்கள் இடித்துப்
போட்டார்கள். அவற்றின் மேல்பகுதியில் இருந்த தூபபீடங்களை யோசியா
உடைத்துப்போட்டார்; பூஜைக் கம்பங்களையும்* செதுக்கப்பட்ட சிலைக
ளையும் உலோகச் சிலைகளையும் உடைத்து தூள்தூளாக்கி, அவற்றுக்குப்
பலி செலுத்திவந்த ஆட்களின் கல்லறைகளில் வீசியெறிந்தார்.[t] **5** அங்கே
பலி செலுத்திய குருமார்களின் எலும்புகளை அவர்களுடைய பலிபீடங்களி
லேயே எரித்துப்போட்டார்.[u] இப்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்தப்
படுத்தினார்.

6 மனாசே, எப்பிராயீம்,[v] சிமியோன் ஆகிய பகுதிகளில் இருந்த நகரங்
களில் மட்டுமல்லாமல், நப்தலி பகுதியிலும் அதைச் சுற்றியிருந்த

அதி. 33
- a 2நா 33:12, 13
- b 2ரா 21:2, 9
- c 2ரா 21:3, 7
- d 2ரா 21:18, 19
- e மத் 1:10
- f 2ரா 21:19-24
- g 2நா 33:1, 2
- h 2ரா 21:1, 7
- i 2நா 33:12, 13
- j எரே 8:12
- k 2ரா 12:20 2நா 25:27
- l 2நா 25:1, 3
- m 2ரா 21:25, 26

அதி. 34
- n 1ரா 13:2 செப் 1:1 மத் 1:10
- o 2ரா 22:1, 2
- p 2நா 15:2
- q 2நா 33:17
- r 2நா 33:21, 22
- s 2ரா 23:4, 14
- t 2ரா 23:6
- u 1ரா 13:2 2ரா 23:16
- v 2ரா 23:19 2நா 30:1

33:19; 34:3, 4 * சொல் பட்டியலைப் பாருங்கள். **33:20** * நே.மொ., "தன் முன்னோர்
களோடு படுக்க வைக்கப்பட்டதும்."

பாழான பகுதிகளிலும் **7** கட்டப்பட்டிருந்த பலிபீடங்களையும் உடைத்
துப்போட்டார், பூஜைக் கம்பங்களை* வெட்டிப்போட்டார், செதுக்கப்பட்ட
சிலைகளைத்[a] தூள்தூளாக நொறுக்கிப்போட்டார். இஸ்ரவேல் தேசமெங்
கும் இருந்த தூபபீடங்கள் எல்லாவற்றையும் உடைத்துப்போட்டார்.[b] அதன்
பின்பு, எருசலேமுக்குத் திரும்பினார்.

8 தேசத்தையும் ஆலயத்தையும் யோசியா ராஜா சுத்தப்படுத்திய பின்பு,
தான் ஆட்சி செய்த 18-ஆம் வருஷத்தில் தன்னுடைய கடவுளான
யெகோவாவின் ஆலயத்தைப் பழுதுபார்க்க[c] விரும்பினார்; அதற்காக, அத்
சலியாவின் மகன் சாப்பானையும்,[d] நகரத் தலைவர் மாசெயாவையும், பதிவா
ளரான யோவாகாசின் மகன் யோவாவையும் அனுப்பினார். **9** அவர்கள்
எல்லாரும் தலைமைக் குரு இல்க்கியாவிடம் வந்து, கடவுளுடைய ஆலயத்
துக்காக மக்கள் தந்த காணிக்கை பணத்தைக் கொடுத்தார்கள். வாயிற்காவலர்
களாக இருக்கிற லேவியர்கள் இந்தப் பணத்தை மனாசே, எப்பிராயீம் கோத்
திரத்தாரிடமிருந்தும், இஸ்ரவேலின் மற்ற எல்லா கோத்திரத்தாரிடமிருந்தும்,[e]
யூதா, பென்யமீன் கோத்திரத்தாரிடமிருந்தும், எருசலேம் மக்களிடமிருந்
தும் வாங்கி வைத்திருந்தார்கள். **10** பின்பு, அந்தப் பணத்தை யெகோவா
வின் ஆலய வேலையை மேற்பார்வை செய்கிறவர்களிடம் கொடுத்தார்கள்.
யெகோவாவின் ஆலயத்தில் வேலை செய்தவர்கள் ஆலயத்தைப் பழுது
பார்ப்பதற்காக அந்தப் பணத்தைப் பயன்படுத்தினார்கள். **11** அவர்கள்
அந்தப் பணத்தைக் கைத்தொழிலாளிகளிடமும் கட்டிடக் கலைஞர்களிடமும்
கொடுத்தார்கள். செதுக்கிய கற்கள், முட்டுக்கொடுப்பதற்கு மரங்கள் ஆகிய
வற்றை வாங்குவதற்காகவும், யூதா ராஜாக்களால் பாழடைந்த நிலைக்குத்
தள்ளப்பட்ட அந்த ஆலயத்தின் உத்திரங்களை மாற்றுவதற்காகவும் அந்தப்
பணத்தைப் பயன்படுத்தினார்கள்.[f]

12 அந்த ஆட்கள் உண்மையுடன் வேலை செய்தார்கள்.[g] மெராரிய
ரான[h] யாகாத், ஒபதியா ஆகியோரும், கோகாத்தியரான[i] சகரியா, மெசுல்
லாம் ஆகிய லேவியர்களும் இந்த வேலையை மேற்பார்வை செய்தார்கள்.
திறமையான இசைக் கலைஞர்களாக[j] இருந்த மற்ற லேவியர்களும்
13 அங்கே வேலை செய்தவர்களை* மேற்பார்வை செய்தார்கள்; வெவ்
வேறு வேலைகளைச் செய்த எல்லா ஆட்களையும் அவர்கள் மேற்பார்வை
செய்தார்கள். லேவியர்களில் சிலர் செயலாளர்களாகவும், சிலர் அதிகாரிக
ளாகவும், சிலர் வாயிற்காவலர்களாகவும் இருந்தார்கள்.[k]

14 யெகோவாவின் ஆலயத்துக்காக மக்கள் கொடுத்த பணத்தை அவர்
கள் எடுத்துக்கொண்டிருந்தபோது,[l] மோசே மூலம்[m] கொடுக்கப்பட்ட
யெகோவாவின் திருச்சட்ட புத்தகத்தை குருவாகிய இல்க்கியா ஆலயத்தில்
கண்டுபிடித்தார்.[n] **15** உடனே இல்க்கியா செயலாளரான சாப்பானிடம்
போய், "இந்தத் திருச்சட்ட புத்தகத்தை யெகோவாவின் ஆலயத்தில் கண்
டெடுத்தேன்" என்று சொல்லி அதைக் கொடுத்தார். **16** சாப்பான் அந்தப்
புத்தகத்தை எடுத்துக்கொண்டு ராஜாவிடம் போய், "கொடுக்கப்பட்ட எல்லா
வேலைகளையும் உங்களுடைய ஊழியர்கள் நன்றாகச் செய்கிறார்கள்.
17 யெகோவாவுடைய ஆலயத்தின் காணிக்கைப் பெட்டியிலிருந்த எல்லா
பணத்தையும் எடுத்து, மேற்பார்வை செய்கிறவர்களிடமும் வேலை செய்கி
றவர்களிடமும் கொடுத்துவிட்டார்கள்" என்று சொன்னார். **18** அதோடு,

அதி. 34
a 2ரா 17:41
b 2நா 31:1
c 2ரா 22:3-6
d 2ரா 22:12
e 2நா 30:11, 18
f 2ரா 12:11, 12
g 2ரா 12:15
h 1நா 23:6
i 2நா 20:19
j 1நா 25:1
k 2நா 8:14
l 2ரா 22:4
m லேவி 26:46
n உபா 17:18; உபா 31:24-26; யோசு 1:8; 2ரா 22:8

34:7 *சொல் பட்டியலைப் பாருங்கள். **34:13** *வே.வா., "சுமை சுமக்கிறவர்களை."

“குருவாகிய இல்க்கியா என்னிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்தார்”[a] என்றும்
சொன்னார். பின்பு, ராஜாவின் முன்னால் சாப்பான் அதிலிருந்து வாசிக்க
ஆரம்பித்தார்.[b]

19 திருச்சட்டத்தில் எழுதப்பட்டிருந்த விஷயங்களைக் கேட்டவுடனே,
ராஜா தன்னுடைய உடையைக் கிழித்துக்கொண்டார்.[c] **20** பின்பு இல்க்
கியா, சாப்பானின் மகன் அகிக்காம்,[d] மீகாவின் மகன் அப்தோன், செய
லாளர் சாப்பான், ராஜாவின் ஊழியர் அசாயா ஆகியோரிடம், **21** “நீங்கள்
போய் எனக்காகவும் இஸ்ரவேலிலும் யூதாவிலும் மீதியிருக்கிற மக்களுக்கா
கவும் யெகோவாவிடம் விசாரியுங்கள். இப்போது கண்டெடுக்கப்பட்ட
இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற விஷயங்களைப் பற்றி அவரிடம்
கேளுங்கள். ஏனென்றால், இந்தப் புத்தகத்தில் யெகோவா எழுதி வைத்தி
ருக்கிற கட்டளைகள் எல்லாவற்றையும் நம்முடைய முன்னோர்கள் கடைப்
பிடிக்கவில்லை, அவற்றுக்குக் கீழ்ப்படியவில்லை. அதனால், யெகோவா
தன்னுடைய கடும் கோபத்தை நம்மீது கொட்டப்போகிறார்”[e] என்று ராஜா
சொன்னார்.

22 அப்போது, ராஜா அனுப்பிய ஆட்களைக் கூட்டிக்கொண்டு உல்
தாள் என்ற பெண் தீர்க்கதரிசியிடம்[f] இல்க்கியா போனார். அவள் அர்கா
சின் பேரனும் திக்வாவின் மகனுமான சல்லூமின் மனைவி. அவளுடைய
கணவர்தான் துணிமணி அறைக்குப் பொறுப்பாளராக இருந்தார். எருசலே
மின் புதிய பகுதியில் உல்தாள் குடியிருந்தாள். ராஜா அனுப்பிய இந்த ஆட்
கள் எல்லாரும் அங்கே போய் அவளைச் சந்தித்தார்கள்.[g] **23** அவள்
அவர்களிடம், “இஸ்ரவேலின் கடவுளான யெகோவா சொல்வது இதுதான்.
‘என்னிடம் உங்களை அனுப்பியவரிடம் போய் இதைச் சொல்லுங்கள்:
24 “யெகோவா சொல்வது என்னவென்றால், ‘இந்த இடத்தையும் இங்கே
குடியிருப்பவர்களையும் அழிக்கப்போகிறேன்.[h] யூதா ராஜாவின் முன்னால்
வாசிக்கப்பட்ட புத்தகத்தில் உள்ள எல்லா சாபங்களையும் வரச் செய்
வேன்.[i] **25** ஏனென்றால், இந்த மக்கள் என்னை விட்டுவிட்டு,[j] மற்ற தெய்
வங்களுக்கு முன்னால் பலிகளை எரித்து புகை எழும்பிவரச் செய்கிறார்கள்.
அவர்களுடைய கைவேலைகள் எல்லாவற்றாலும் என்னைப் புண்படுத்
துகிறார்கள்.[k] அதனால், இந்த இடத்தின் மீது என்னுடைய கடும் கோபத்
தைக் கொட்டுவேன், அது அணையவே அணையாது.’”[l] **26** ஆனால்,
யெகோவாவிடம் விசாரிக்கச் சொல்லி உங்களை அனுப்பிய யூதா ராஜா
விடம் போய் இதைச் சொல்லுங்கள்: “நீ கேட்ட வார்த்தைகளைப்[m] பற்றி
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது இதுதான்: **27** ‘இந்த
இடத்துக்கும் இந்தக் குடிமக்களுக்கும் எதிராக நான் சொன்னதைக் கேட்டு
நீ மனம் வருந்தினாய்;* கடவுளுக்கு முன்னால் தாழ்மையாக நடந்து
கொண்டாய். என் முன்னால் உன்னைத் தாழ்த்திக்கொண்டு, உடையைக்
கிழித்துக்கொண்டு என்னிடம் அழுதாய். அதனால், நானும் உன்னுடைய
மன்றாட்டைக் கேட்டேன்[n] என்று யெகோவா சொல்கிறார். **28** நீ இறந்து
போனதும்* நல்லடக்கம் செய்யப்படுவாய். இந்த இடத்தின் மீதும் இங்கே

34:27 *நே.மொ., “உன் இதயம் இளகியது.” **34:28** *நே.மொ., “உன் முன்னோர்களுடன் சேர்க்கப்பட்டதும்.” எபிரெயுவில் கவிதை நடையிலுள்ள இந்த வார்த்தைகள் மரணத்தைக் குறிக்கின்றன.

அதி. 34
a 2ரா 22:8
b உபா 17:18, 19
c 2ரா 22:11-13
d 2ரா 25:22; எரே 40:14
e உபா 30:17, 18; உபா 31:16; உபா 31:24-26; யோசு 1:8
f யாத் 15:20; நியா 4:4; லூ 2:36; அப் 21:8, 9
g 2ரா 22:14-20
h எரே 35:17
i லேவி 26:16; உபா 28:15; உபா 30:17, 18; தானி 9:11
j உபா 28:20
k 2ரா 21:1, 3, 6; 2நா 28:1, 3
l உபா 29:22, 23; எரே 7:20
m 2நா 34:19
n 2நா 32:26; 2நா 33:11, 13

குடியிருக்கிறவர்கள் மீதும் நான் கொண்டுவரப்போகிற அழிவை நீ பார்க்க
மாட்டாய்’”’”[a] என்று சொன்னாள்.
அவள் சொன்னதை ராஜாவிடம் போய் அவர்கள் சொன்னார்கள்.
29 அப்போது, ராஜா ஆள் அனுப்பி யூதாவிலும் எருசலேமிலும் இருந்த
எல்லா பெரியோர்களையும்* ஒன்றுகூட்டினார்.[b] **30** பின்பு யூதா ஆண்கள்
எல்லாரையும், எருசலேம் மக்கள் எல்லாரையும், குருமார்களையும், லேவி
யர்களையும், சொல்லப்போனால் சிறியவர்கள்முதல் பெரியவர்கள்வரை
எல்லாரையும், கூட்டிக்கொண்டு யெகோவாவின் ஆலயத்துக்குப் போனார்.
யெகோவாவின் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒப்பந்தப் புத்தகத்தில்
உள்ள எல்லா வார்த்தைகளையும் அவர்கள் முன்னால் சத்தமாக வாசித்
தார்.[c] **31** தன்னுடைய இடத்தில் நின்றுகொண்டு, இந்தப் புத்தகத்தில் எழு
தப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி நடப்பதாக யெகோவா முன்னால் ஒப்பந்தம்
செய்தார்.[d] அதாவது யெகோவாவின் வழியில் நடப்பதாகவும், அவருடைய
கட்டளைகளுக்கும் நினைப்பூட்டுதல்களுக்கும் விதிமுறைகளுக்கும் முழு
இதயத்தோடும் முழு மூச்சோடும்[e] கீழ்ப்படிவதாகவும் ஒப்பந்தம் செய்தார்.[f]
32 அதோடு, இந்த ஒப்பந்தத்திற்குக் கீழ்ப்படியச் சொல்லி எருசலேமையும்
பென்யமீனையும் சேர்ந்த எல்லாரையும் ஊக்கப்படுத்தினார். அதனால், எரு
சலேம் மக்கள் எல்லாரும் தங்களுடைய முன்னோர்களின் கடவுளுடன்
செய்த ஒப்பந்தத்தின்படி நடக்க ஆரம்பித்தார்கள்.[g] **33** இஸ்ரவேலர்களுக்
குச் சொந்தமான பகுதிகள் எல்லாவற்றிலும் இருந்த எல்லா அருவருப்பான
சிலைகளையும் யோசியா அழித்துப்போட்டார்.[h] இஸ்ரவேல் மக்கள் எல்லா
ரையும் தங்கள் கடவுளான யெகோவாவை வணங்க வைத்தார். யோசியா
உயிரோடு இருந்தவரை, அவர்கள் தங்களுடைய முன்னோர்களின் கடவு
ளான யெகோவாவைவிட்டு விலகவே இல்லை.

35 எருசலேமில் யெகோவாவுக்கு பஸ்கா[i] பண்டிகையை யோசியா
கொண்டாடினார். முதல் மாதம் 14-ஆம் நாளில்[j] அவர்கள் பஸ்கா
ஆட்டுக்குட்டியை வெட்டினார்கள்.[k] **2** யெகோவாவின் ஆலயத்தில்
செய்ய வேண்டிய வேலைகளைக் குருமார்களுக்கு நியமித்து, அதையெல்
லாம் நல்லபடியாகச் செய்யச் சொல்லி ராஜா ஊக்கப்படுத்தினார்.[l] **3** இஸ்ர
வேலர்கள் எல்லாருக்கும் திருச்சட்டத்தைச் சொல்லித்தரும் பொறுப்பு
லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.[m] யெகோவாவின் வேலைக்
காக அவர்கள் பிரித்து வைக்கப்பட்டிருந்தார்கள். யோசியா ராஜா லேவியர்
களைப் பார்த்து, “இஸ்ரவேலின் ராஜாவான தாவீதின் மகன் சாலொ
மோன் கட்டிய ஆலயத்தில்[n] பரிசுத்த பெட்டியை வையுங்கள். இனிமேல்
நீங்கள் அதைத் தோளில் சுமக்க வேண்டாம்.[o] உங்களுடைய கடவுளான
யெகோவாவுக்கும் அவருடைய மக்களான இஸ்ரவேலர்களுக்கும் இப்
போது சேவை செய்யுங்கள். **4** உங்களுடைய தந்தைவழிக் குடும்பத்தின்
படியும் உங்களுடைய பிரிவின்படியும் சேவை செய்யத் தயாராக இருங்கள்.
இஸ்ரவேலின் ராஜா தாவீதும் அவருடைய மகன் சாலொமோனும்
எழுதி வைத்திருக்கும் முறையைப் பின்பற்றுங்கள்.[p] **5** பரிசுத்த இடத்துக்
குப் போய், அவரவருடைய பிரிவின்படி நில்லுங்கள். அப்போதுதான் மக்க
ளுக்குச் சேவை செய்து, உங்களுடைய தந்தைவழிக் குடும்பத்தில் இருக்கிற

34:29 * வே.வா., “மூப்பர்களையும்.”

அதி. 34
a 1ரா 21:29; ஏசா 39:8
b 2ரா 23:1
c 2ரா 23:2; 2நா 17:3, 9; நெ 8:3
d எஸ்றா 10:3
e உபா 6:5
f உபா 31:24-26; 2ரா 22:8
g 2நா 30:1, 12; 2நா 33:1, 16
h 2ரா 23:5

அதி. 35
i யாத் 12:3-11; 2ரா 23:21
j லேவி 23:5; உபா 16:1
k யாத் 12:21
l 2நா 23:18; 2நா 31:2
m உபா 33:10; 2நா 17:8, 9; நெ 8:7, 8
n 1ரா 6:38; 2நா 5:7
o எண் 4:15; 1நா 23:25, 26
p 1நா 23:6; 2நா 8:14

லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நிறைவேற்ற முடியும்.
6 பஸ்கா ஆட்டுக்குட்டியை வெட்டிய[a] பின்பு உங்களைப் புனிதப்படுத்திக்
கொள்ளுங்கள். பின்பு, மோசே மூலம் யெகோவா கொடுத்த கட்டளையை
உங்கள் சகோதரர்கள் நிறைவேற்றுவதற்குத் தேவையானவற்றைத் தயார்ப
டுத்துங்கள்" என்று சொன்னார்.

7 அங்கே வந்திருந்த மக்கள் எல்லாரும் பஸ்கா பலி செலுத்துவதற்
காக அவர்களுக்குச் செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளையும் வெள்ளாட்டுக்
கடாக் குட்டிகளையும் யோசியா நன்கொடையாகக் கொடுத்தார். தனக்குச்
சொந்தமானவற்றில் 30,000 ஆட்டுக்குட்டிகளையும் 3,000 காளைகளையும்
கொடுத்தார்.[b] **8** அவருடைய அதிகாரிகளும்கூட மக்களுக்காகவும் குரு
மார்களுக்காகவும் லேவியர்களுக்காகவும் தாங்களாகவே விருப்பப்பட்டு
நன்கொடை கொடுத்தார்கள். உண்மைக் கடவுளின் ஆலய அதிகாரிகளான
இல்க்கியா,[c] சகரியா, யெகியேல் ஆகியோர் 2,600 பஸ்கா ஆட்டுக்குட்டிக
ளையும் 300 காளைகளையும் குருமார்களிடம் கொடுத்தார்கள். **9** லேவி
யர்களின் தலைவர்களான அஷபியா, எயியேல், யோசபத் ஆகியோருடன்
சேர்ந்து கொனனியாவும், அவருடைய சகோதரர்களான செமாயா, நெதனே
யேல் ஆகியோரும் 5,000 பஸ்கா ஆட்டுக்குட்டிகளையும் 500 காளைகளை
யும் நன்கொடையாகக் கொடுத்தார்கள்.

10 பண்டிகைக்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.
ராஜா கட்டளையிட்டபடி குருமார்கள் அவரவருடைய இடங்களில் நின்றார்
கள்; லேவியர்கள் அவரவருடைய பிரிவுகளின்படி நின்றார்கள்.[d] **11** பின்பு,
பஸ்கா ஆட்டுக்குட்டிகளை அவர்கள் வெட்டினார்கள்.[e] லேவியர்களிடமி
ருந்து இரத்தத்தை வாங்கி குருமார்கள் தெளித்தார்கள்,[f] அந்தச் சமயத்தில்
ஆடுகளின் தோலை லேவியர்கள் உரித்துக்கொண்டிருந்தார்கள்.[g] **12** அவ
ரவருடைய தந்தைவழிக் குடும்பத்தின்படி நின்றுகொண்டிருந்த மக்களுக்குத்
தகன பலிகளைப் பிரித்துக் கொடுப்பதற்காக அவற்றைத் தயார் செய்தார்
கள். மோசேயின் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளபடி யெகோவாவுக்குப் பலி
செலுத்துவதற்காக அவற்றைத் தயார் செய்தார்கள். காளைகளையும் இதே
போல் தயார் செய்தார்கள். **13** வழக்கப்படி, பஸ்கா ஆட்டுக்குட்டிகளை
நெருப்பில் சமைத்தார்கள்.*[h] பரிசுத்த பலிகளைப் பானைகளிலும் அண்டாக்
களிலும் சட்டிகளிலும் சமைத்தார்கள். பின்பு, உடனடியாக அவற்றை மக்கள்
எல்லாரிடமும் கொண்டுவந்து கொடுத்தார்கள். **14** தங்களுக்காகவும் குரு
மார்களுக்காகவும் பஸ்கா பலியை லேவியர்கள் தயார் செய்தார்கள். ஆரோ
னின் வம்சத்தில் வந்த குருமார்கள் தகன பலிகளையும் கொழுப்பையும்
ராத்திரிவரை செலுத்திக்கொண்டிருந்ததால், லேவியர்கள் தங்களுக்காகவும்
ஆரோனின் வம்சத்தில் வந்த குருமார்களுக்காகவும் பஸ்கா பலியைத் தயார்
செய்தார்கள்.

15 தாவீதும்[i] ஆசாப்பும்[j] ஏமானும் ராஜாவின் தரிசனக்காரரான எதித்தூ
னும் கொடுத்த கட்டளைப்படி,[k] ஆசாப்பின்[l] வம்சத்தில் வந்த பாடகர்கள்
தங்களுடைய இடத்தில் நின்றார்கள். வாயிற்காவலர்கள் வெவ்வேறு வாசல்
களில் நின்றார்கள்.[m] தேவையான எல்லா ஏற்பாடுகளையும் அவர்களு
டைய சகோதரர்களான லேவியர்கள் செய்திருந்தார்கள். அதனால், அவர்
கள் தங்களுடைய இடத்தைவிட்டுப் போக வேண்டிய அவசியம்

35:13 * அல்லது, "சுட்டார்கள்."

அதி. 35
a யாத் 12:21
2நா 30:1, 15
b 2நா 30:24
c 2ரா 23:4
2நா 34:14
d 1நா 23:6
e யாத் 12:3, 6
f 2நா 30:16
g 2நா 29:34
h யாத் 12:8
உபா 16:6, 7
i 1நா 23:5
j 1நா 25:1, 2
k 1நா 16:41, 42
1நா 25:3
l 1நா 16:37
m 1நா 26:12, 13

ஏற்படவில்லை. **16** யோசியா ராஜாவின் கட்டளைப்படி,[a] யெகோவாவுக்குப் பஸ்கா[b] பண்டிகையைக் கொண்டாடுவதற்கும், யெகோவாவின் பலிபீடத்தில் தகன பலிகளைக் கொடுப்பதற்கும் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

17 அங்கே வந்திருந்த இஸ்ரவேலர்கள் பஸ்கா பண்டிகையையும் புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையையும் ஏழு நாட்களுக்குக் கொண்டாடினார்கள்.[c] **18** சாமுவேல் தீர்க்கதரிசி காலத்திலிருந்து அதுவரை இஸ்ரவேலில் இந்தளவு சிறப்பாக பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டதே இல்லை.[d] யோசியா, குருமார்கள், லேவியர்கள், பண்டிகைக்காக வந்திருந்த யூதா மக்கள், இஸ்ரவேல் மக்கள், எருசலேம் மக்கள் ஆகியோர் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடியதைப் போல் வேறெந்த இஸ்ரவேல் ராஜாவும் சிறப்பாகக் கொண்டாடவில்லை. **19** யோசியா ஆட்சி செய்த 18-ஆம் வருஷத்தில் இந்த பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது.

20 கடவுளுடைய ஆலயத்தை யோசியா ராஜா நல்ல நிலைக்குக் கொண்டுவந்த பின்பு, யூப்ரடிஸ்* ஆற்றோரத்தில் இருந்த கர்கேமிஸ் என்ற இடத்துக்கு எகிப்தின் ராஜாவான நேகோ[e] போர் செய்ய வந்தான். அப்போது, யோசியா அவனை எதிர்த்துப் போர் செய்யப் போனார்.[f] **21** அதனால் நேகோ தன்னுடைய தூதுவர்களை அவரிடம் அனுப்பி, “யூதா ராஜாவே, நீங்கள் ஏன் என்னோடு சண்டை போட வருகிறீர்கள்? நான் உங்களை எதிர்த்து வரவில்லை. வேறொரு தேசத்தோடு சண்டை போடத்தான் வந்தேன். அந்தத் தேசத்தை உடனடியாகத் தாக்கச் சொல்லி கடவுள் என்னை அனுப்பினார். கடவுள் எனக்குத் துணையாக இருக்கிறார். அதனால் திரும்பிப் போவதுதான் உங்களுக்கு நல்லது. இல்லையென்றால், அவர் உங்களை அழித்துவிடுவார்” என்று சொன்னான். **22** ஆனால், யோசியா அங்கிருந்து போகவில்லை. நேகோவுடன் போர் செய்வதற்காக மாறுவேஷத்தில் போனார்.[g] நேகோ மூலம் கடவுள் சொன்ன செய்தியைக் காதில் வாங்காமல், அவனுடன் போர் செய்வதற்காக மெகிதோ சமவெளிக்குப் போனார்.[h]

23 வில்வீரர்கள் எறிந்த அம்பு யோசியா ராஜாமீது பாய்ந்தது. அப்போது அவர் தன்னுடைய ஊழியர்களிடம், “எனக்குப் பயங்கரமாகக் காயம் பட்டுவிட்டது, உடனே என்னை இங்கிருந்து கொண்டுபோங்கள்” என்று சொன்னார். **24** அதனால், அந்த ரதத்திலிருந்து வேறொரு போர் ரதத்தில் அவரை ஏற்றி எருசலேமுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். ஆனால், அவர் இறந்துபோனார். அப்போது, அவருடைய முன்னோர்களின் கல்லறையில் அவரை அடக்கம் செய்தார்கள்.[i] யூதா, எருசலேம் மக்கள் எல்லாரும் அவருக்காகத் துக்கம் அனுசரித்தார்கள். **25** யோசியாவுக்காக எரேமியா[j] புலம்பல் பாடல் பாடினார். பாடகர்கள், பாடகிகள் எல்லாரும்[k] புலம்பல் பாடல் பாடும்போது இன்றுவரை யோசியாவைப் பற்றிப் பாடுகிறார்கள். இஸ்ரவேலில் அந்தப் பாடல்கள் பாடப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. புலம்பல் பாடல்கள் எழுதப்பட்ட புத்தகத்தில் இந்தப் பாடல்கள் இருக்கின்றன.

26 யோசியாவின் வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களும், யெகோவாவின் திருச்சட்டத்தில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகளுக்குக்

35:20 * அதாவது, “ஐப்பிராத்து.”

அதி. 35
a 2ரா 23:21
b லேவி 23:5
c யாத் 12:15, லேவி 23:6, உபா 16:3, 2நா 30:1, 21
d 2ரா 23:22, 23, 2நா 30:5, 26
e எரே 46:2
f 2ரா 23:29
g 1ரா 22:30
h நியா 1:27, நியா 5:19, சக 12:11, வெளி 16:16
i 2ரா 23:30, 2நா 34:28
j எரே 1:1
k எரே 9:17, 20

கீழ்ப்படிந்து மாறாத அன்புடன் அவர் செய்த செயல்களும், **27** ஆரம்பம்
முதல் முடிவுவரை செய்த எல்லா செயல்களும் இஸ்ரவேல் மற்றும் யூதா
ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.[a]

36 யோசியாவுக்குப் பிறகு அவருடைய மகன் யோவாகாசை[b] பொது
மக்கள் எருசலேமில் ராஜாவாக்கினார்கள்.[c] **2** யோவாகாஸ் ராஜா
வானபோது அவருக்கு 23 வயது; அவர் எருசலேமில் மூன்று மாதங்கள்
ஆட்சி செய்தார். **3** ஆனால், அவர் எருசலேமில் ஆட்சி செய்யாதபடி
எகிப்தின் ராஜா அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டான். 100 தாலந்து*
வெள்ளியையும் ஒரு தாலந்து தங்கத்தையும் தரச்சொல்லி, அவருடைய
தேசத்துக்கு அபராதம் விதித்தான்.[d] **4** அதோடு, யோவாகாசின் சகோதரன்
எலியாக்கீமை யூதாவுக்கும் எருசலேமுக்கும் ராஜாவாக நியமித்தான்; அவ
ருடைய பெயரை யோயாக்கீம் என்று மாற்றினான். ஆனால், அவருடைய
சகோதரன் யோவாகாசை நேகோ[e] எகிப்துக்குக் கொண்டுபோனான்.[f]

5 யோயாக்கீம்[g] 25 வயதில் ராஜாவாகி, 11 வருஷங்கள் எருசலேமில்
ஆட்சி செய்தார். தன்னுடைய கடவுளான யெகோவாவுக்குப் பிடிக்காத காரி
யங்களைச் செய்துவந்தார்.[h] **6** இரண்டு செம்பு விலங்குகள் போட்டு
அவரை பாபிலோனுக்குக் கொண்டுபோவதற்காக[i] பாபிலோன் ராஜா நேபு
காத்நேச்சார்[j] படையெடுத்து வந்தான். **7** அந்தச் சமயத்தில், யெகோவா
வின் ஆலயத்திலிருந்த பாத்திரங்கள் சிலவற்றை பாபிலோனுக்குக் கொண்
டுபோய்த் தன்னுடைய அரண்மனையில் வைத்தான்.[k] **8** யோயாக்கீமின்
வாழ்க்கையில் நடந்த மற்ற விஷயங்களும் அவர் செய்த அருவருப்பான
செயல்களும் அவரைப் பற்றிய மோசமான விஷயங்களும் இஸ்ரவேல் மற்
றும் யூதா ராஜாக்களின் சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவ
ருக்குப் பிறகு, அவருடைய மகன் யோயாக்கீன் ராஜாவானார்.[l]

9 யோயாக்கீன்[m] ராஜாவானபோது அவருக்கு 18 வயது. அவர் எரு
சலேமில் மூன்று மாதங்கள், பத்து நாட்கள் ஆட்சி செய்தார். யெகோவா
வெறுக்கிற காரியங்களையே அவர் செய்துவந்தார்.[n] **10** வருஷத்தின்*
ஆரம்பத்தில், யோயாக்கீனையும் யெகோவாவின் ஆலயத்திலிருந்த
விலைமதிப்புள்ள பொருள்களையும்[o] பாபிலோனுக்குக் கொண்டுபோவ
தற்காகப் படைவீரர்களை நேபுகாத்நேச்சார் அனுப்பினான்.[p] யோயாக்கீ
னுக்குப் பதிலாக, அவருடைய சித்தப்பாவான சிதேக்கியாவை யூதாவுக்கும்
எருசலேமுக்கும் ராஜாவாக்கினான்.[q]

11 சிதேக்கியா[r] ராஜாவானபோது அவருக்கு 21 வயது; அவர் எருசலே
மில் 11 வருஷங்கள் ஆட்சி செய்தார்.[s] **12** இவரும் தன்னுடைய கடவு
ளான யெகோவா வெறுக்கிற காரியங்களையே செய்துவந்தார். யெகோவா
வின் கட்டளைப்படி எரேமியா தீர்க்கதரிசி இவரிடம் பேசினார்.[t] ஆனாலும்,
அவர் முன்னால் சிதேக்கியா தாழ்மையாக நடந்துகொள்ளவில்லை.
13 சிதேக்கியாவிடமிருந்து கடவுளுடைய பெயரில் நேபுகாத்நேச்சார் ராஜா
உறுதிமொழி வாங்கியிருந்தும், அவனை எதிர்த்துக் கலகம் செய்தார்,[u] பிடி
வாதமாக இருந்தார், வீம்பாக நடந்துகொண்டார், இஸ்ரவேலின் கடவுளான
யெகோவாவிடம் திரும்பிவர மறுத்தார். **14** மக்கள் மட்டுமல்ல, முக்கிய
மான குருமார்கள் எல்லாரும்கூட மற்ற தேசத்து மக்கள் செய்துவந்த அருவ

36:3 * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.
36:10 * அதாவது, “அடுத்த வசந்த காலத்தின்.”

அதி. 35
a 2ரா 23:28

அதி. 36
b 1நா 3:15, எரே 22:11
c 2ரா 23:30, 31
d 2ரா 18:14, 2ரா 23:33
e 2ரா 23:29, எரே 46:2
f 2ரா 23:34, எரே 22:11, 12
g எரே 26:20, 21, எரே 36:32
h 2ரா 23:36, 37
i 2ரா 24:16, தானி 1:1
j 2ரா 24:1, 2ரா 25:1, எரே 25:1
k எஸ்றா 1:7, எரே 27:16, தானி 1:2, தானி 5:2
l 2ரா 24:5, 6
m எரே 22:24, மத் 1:12
n 2ரா 24:8, 9
o 2ரா 24:13, எரே 27:17, 18
p 2ரா 24:10, எரே 29:1, 2, எசே 1:2
q 2ரா 24:17
r எரே 37:1
s 2ரா 24:18-20, எரே 52:1-3
t எரே 21:1, 2, எரே 34:2, எரே 38: 14, 24
u 2ரா 24:20, எசே 17:12-15

ருப்பான எல்லா காரியங்களையும் செய்தார்கள். கடவுளுக்கு உண்மையாக
இல்லாமல் படுமோசமாக நடந்துகொண்டார்கள்; யெகோவா புனிதப்படுத்
திய எருசலேம் ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினார்கள்.[a]

15 இருந்தாலும், அவர்களுடைய முன்னோர்களின் கடவுளான
யெகோவா தன்னுடைய மக்களையும் ஆலயத்தையும் நினைத்து பரிதாபப்
பட்டு, தன்னுடைய தூதுவர்களை அனுப்பி அவர்களை எச்சரித்தார். திரும்
பத் திரும்ப எச்சரித்துக்கொண்டே இருந்தார். **16** ஆனால், உண்மைக்
கடவுள் அனுப்பிய தூதுவர்களை அவர்கள் கேலி செய்துகொண்டே இருந்
தார்கள்.[b] அவருடைய வார்த்தைகளை அலட்சியம் செய்தார்கள்,[c] அவரு
டைய தீர்க்கதரிசிகளைக் கிண்டல் செய்தார்கள்.[d] திருத்தவே முடியாத
அளவுக்கு மோசமானார்கள். அதனால், யெகோவாவுக்கு அவருடைய மக்
கள்மேல் பயங்கர கோபம் வந்தது.[e]

17 எனவே, கல்தேயர்களின் ராஜாவை அவர்களுக்கு விரோதமாக
அனுப்பினார்.[f] அவர்களுடைய ஆலயத்திலேயே[g] இளைஞர்களை அவன்
வாளால் வெட்டிக் கொன்றான்.[h] இளைஞர்கள் என்றோ கன்னிப்பெண்
கள் என்றோ பார்க்கவில்லை, வயதானவர்கள் என்றோ பலவீனமானவர்
கள் என்றோ பரிதாபப்படவில்லை.[i] சொல்லப்போனால், எல்லாவற்றையும்
கடவுள் அவர்கள் கையில் கொடுத்துவிட்டார்.[j] **18** உண்மைக் கடவுளின்
ஆலயத்திலிருந்த எல்லா பாத்திரங்களையும் அவன் பாபிலோனுக்குக்
கொண்டுபோனான். பெரிய பாத்திரங்கள், சிறிய பாத்திரங்கள் என எல்லா
வற்றையும் அள்ளிக்கொண்டு போனான். யெகோவாவின் ஆலயத்திலிருந்த
பொக்கிஷங்களையும், ராஜாவுக்கும் அவருடைய அதிகாரிகளுக்கும் சொந்
தமான பொக்கிஷங்களையும் கொண்டுபோனான்.[k] **19** உண்மைக் கடவு
ளின் ஆலயத்தைத் தீ வைத்துக் கொளுத்தினான்,[l] எருசலேமின் மதிலை
இடித்துப்போட்டான்,[m] கோட்டைகள் எல்லாவற்றையும் சுட்டெரித்தான்,
மதிப்புமிக்க எல்லாவற்றையும் அழித்துப்போட்டான்.[n] **20** வாளுக்குத் தப்
பியவர்களை பாபிலோனுக்குப் பிடித்துக்கொண்டு போனான்.[o] பெர்சிய சாம்
ராஜ்யத்தின் ஆட்சி ஆரம்பமாகும்வரை[p] அவனுக்கும் அவனுடைய
மகன்களுக்கும் அவர்கள் வேலைக்காரர்களாக இருந்தார்கள்.[q] **21** இப்படி,
எரேமியா மூலம் யெகோவா சொன்ன வார்த்தை நிறைவேறியது.[r] அந்தத்
தேசம் கடைப்பிடிக்காமல் விட்டுவிட்ட ஓய்வுநாட்களுக்கு ஈடாக,[s] 70 வரு
ஷங்களுக்கு அது பாழாய்க் கிடந்தது.[t]

22 பெர்சிய ராஜா கோரேஸ்[u] ஆட்சி செய்த முதலாம் வருஷத்திலே,
எரேமியா மூலம் சொன்னதை[v] நிறைவேற்றுவதற்காக கோரேசின் மனதை
யெகோவா தூண்டினார்; யெகோவாவின் தூண்டுதலால், கோரேஸ் தன்னு
டைய சாம்ராஜ்யம் முழுவதும் ஓர் அறிவிப்பு செய்து, அதை எழுதியும்
வைத்தார்.[w] அதில், **23** “பெர்சிய ராஜா கோரேஸ் அறிவிப்பது என்ன
வென்றால், ‘பரலோகத்தின் கடவுளாகிய யெகோவா இந்த உலகத்தில்
இருக்கிற எல்லா தேசங்களையும் என் கையில் கொடுத்திருக்கிறார்.[x] யூதா
விலுள்ள எருசலேமில் அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டும்படி என்னிடம்
கட்டளையிட்டிருக்கிறார்.[y] அவருடைய ஜனங்களில் யாரெல்லாம் இங்கே
இருக்கிறார்களோ, அவர்களெல்லாம் புறப்பட்டுப் போகலாம்.[z] அவர்களு
டைய கடவுளான யெகோவா அவர்களுடன் இருப்பாராக’” என்று எழுதப்
பட்டிருந்தது.

அதி. 36
a 2ரா 16:11; எசே 8:10, 11
b 2நா 30:1, 10
c எரே 5:12
d எரே 20:7
e சங் 74:1
f 2ரா 24:2
g எசே 9:7
h லேவி 26:31; உபா 28:25; சங் 79:2
i புல 2:21
j உபா 28:49-51
k 2ரா 20:16, 17; ஏசா 39:6; எரே 27:19-22; எரே 52:17
l சங் 74:4-7
m எரே 52:14
n 1ரா 9:7; 2ரா 25:9, 10; சங் 79:1
o 2ரா 25:21; சங் 137:1
p எஸ்றா 1:1-3
q எரே 27:6, 7
r எரே 25:9
s லேவி 26:34
t எரே 25:12; சக 1:12
u ஏசா 44:28; ஏசா 45:1
v எரே 29:14; எரே 32:42; எரே 33:10, 11
w எஸ்றா 1:1-4
x தானி 5:18
y ஏசா 44:28
z எஸ்றா 7:12, 13

எஸ்றா

முக்கியக் குறிப்புகள்

1 ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதற்கு கோரேஸ் ராஜாவின் கட்டளை (1-4)
பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பி வர ஜனங்கள் தயாராகிறார்கள் (5-11)

2 சிறையிருப்பிலிருந்து வந்தவர்களின் பட்டியல் (1-67)
ஆலயப் பணியாளர்கள் (43-54)
சாலொமோனுடைய ஊழியர்களின் வம்சத்தார் (55-57)
ஆலயத்திற்காக விருப்பப்பட்டுத் தந்த காணிக்கைகள் (68-70)

3 பலிபீடம் திரும்பக் கட்டப்பட்டு பலிகள் செலுத்தப்பட்டன (1-7)
ஆலயத்தைத் திரும்பக் கட்ட ஆரம்பிக்கிறார்கள் (8, 9)
ஆலயத்துக்கு அஸ்திவாரம் போடப்பட்டது (10-13)

4 ஆலயத்தைத் திரும்பக் கட்டும் வேலைக்கு எதிர்ப்பு (1-6)
அர்த்தசஷ்டா ராஜாவுக்கு எதிரிகள் எழுதிய கடிதம் (7-16)
அர்த்தசஷ்டா அனுப்பிய பதில் (17-22)
ஆலயத்தின் கட்டுமான வேலை தடைபட்டது (23, 24)

5 யூதர்கள் ஆலயத்தைத் திரும்பக் கட்ட ஆரம்பிக்கிறார்கள் (1-5)
தரியு ராஜாவுக்கு தத்னாய் எழுதிய கடிதம் (6-17)

6 பதிவேடுகளை ஆராய்ந்தபின் தரியு கொடுத்த ஆணை (1-12)
ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு அர்ப்பண விழா கொண்டாடப்படுகிறது (13-18)
பஸ்கா பண்டிகை கொண்டாடப்படுகிறது (19-22)

7 எஸ்றா எருசலேமுக்கு வருகிறார் (1-10)
எஸ்றாவுக்கு அர்தசஷ்டாவின் கடிதம் (11-26)
எஸ்றா யெகோவாவைப் புகழ்கிறார் (27, 28)

8 எஸ்றாவுடன் திரும்பி வந்தவர்களின் பட்டியல் (1-14)
பயணத்திற்கான ஏற்பாடுகள் (15-30)
ஜனங்கள் பாபிலோனிலிருந்து புறப்பட்டு எருசலேமுக்கு வந்துசேருகிறார்கள் (31-36)

9 இஸ்ரவேலில் கலப்புத் திருமணம் (1-4)
பாவத்தை ஒத்துக்கொண்டு எஸ்றா செய்யும் ஜெபம் (5-15)

10 வேறு தேசத்து மனைவிகளை அனுப்பிவிட ஒப்பந்தம் (1-14)
வேறு தேசத்து மனைவிகள் அனுப்பிவிடப்படுகிறார்கள் (15-44)

1 பெர்சிய ராஜா கோரேஸ்[a] ஆட்சி செய்த முதலாம் வருஷத்திலே, எரே
மியா மூலம் சொன்னதை[b] நிறைவேற்றுவதற்காக கோரேசின் மனதை
யெகோவா தூண்டினார். யெகோவாவின் தூண்டுதலால், கோரேஸ் தன்
னுடைய சாம்ராஜ்யம் முழுவதும் ஓர் அறிவிப்பு செய்து, அதை எழுதியும்
வைத்தார்.[c] அதில்,
2 "பெர்சிய ராஜா கோரேஸ் அறிவிப்பது என்னவென்றால், 'பரலோகத்
தின் கடவுளாகிய யெகோவா இந்த உலகத்தில் இருக்கிற எல்லா தேசங்
களையும் என் கையில் கொடுத்திருக்கிறார்.[d] யூதாவிலுள்ள எருசலேமில்
அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டும்படி என்னிடம் கட்டளையிட்டிருக்கி
றார்.[e] **3** அவருடைய ஜனங்களில் யாரெல்லாம் இங்கே இருக்கிறார்
களோ அவர்களெல்லாம் யூதாவிலுள்ள எருசலேமுக்குப் போய், இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்தைத் திரும்பக் கட்ட

அதி. 1
a ஏசா 45:1
தானி 10:1
b எரே 25:12
எரே 29:14
எரே 33:10, 11
c 2நா 36:22, 23
d தானி 4:34, 35
e ஏசா 44:28

வேண்டும். அவர்களுடைய கடவுள் அவர்களோடு இருப்பாராக. அவர்
தான் உண்மைக் கடவுள்; அவருடைய ஆலயம் எருசலேமில் இருந்
தது.* **4** அவருடைய ஜனங்கள் எங்கு தங்கியிருந்தாலும் சரி,[a] அக்கம்பக்
கத்தில் இருக்கிறவர்கள் அவர்களுக்கு வெள்ளியையும் தங்கத்தையும்
மற்ற பொருள்களையும் ஆடுமாடுகளையும் கொடுத்து உதவ வேண்டும்.
அதோடு, உண்மைக் கடவுளின் ஆலயத்தைக் கட்டுவதற்காகக் காணிக்கை
களைக் கொடுத்தனுப்ப வேண்டும்’”[b] என்று எழுதப்பட்டிருந்தது.

5 அப்போது, யூதா கோத்திரத்தையும் பென்யமீன் கோத்திரத்தையும்
சேர்ந்த தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள், குருமார்கள், லேவியர்கள் என
யாருடைய மனதை உண்மைக் கடவுள் தூண்டினாரோ அவர்கள் எல்லா
ரும் எருசலேமில் இருந்த யெகோவாவின் ஆலயத்தைத் திரும்பக் கட்டுவ
தற்காகப் புறப்பட்டார்கள். **6** அக்கம்பக்கத்தில் இருந்த எல்லாரும் அவர்
களிடம் காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அதோடு, வெள்ளிப்
பாத்திரங்களையும், தங்கப் பாத்திரங்களையும், விலைமதிப்புள்ள பொருள்
களையும், மற்ற சாமான்களையும், ஆடுமாடுகளையும் கொடுத்து உதவி
னார்கள்.*

7 முன்பு ஒரு சமயம் நேபுகாத்நேச்சார் எருசலேமில் யெகோவாவின்
ஆலயத்திலிருந்த பாத்திரங்களை எடுத்துவந்து அவனுடைய தெய்வத்தின்
கோயிலில் வைத்திருந்தான்.[c] அவற்றையும் திருப்பிக் கொடுக்க கோரேஸ்
ராஜா உத்தரவு போட்டார். **8** அவற்றைக் கோயிலிலிருந்து எடுத்து யூதா
கோத்திரத் தலைவரான சேஸ்பாத்சாரிடம்*[d] எண்ணிக் கொடுக்கும்படி
பொக்கிஷ அறை அதிகாரியான மித்திரேதாத்துக்குக் கட்டளை தந்தார்.

9 எண்ணிக் கொடுக்கப்பட்டவை இவைதான்: தங்கக் கூடைகள்
30, வெள்ளிக் கூடைகள் 1,000, மாற்றுப் பாத்திரங்கள் 29, **10** சிறிய தங்
கக் கிண்ணங்கள் 30, சிறிய வெள்ளிக் கிண்ணங்கள் 410, வேறு பாத்திரங்
கள் 1,000. **11** தங்கப் பாத்திரங்களும் வெள்ளிப் பாத்திரங்களும் மொத்
தம் 5,400. பாபிலோனிலிருந்து விடுதலையான ஆட்களோடு[e] சேர்ந்து
எருசலேமுக்குப் போனபோது சேஸ்பாத்சார் இவற்றை எடுத்துக்கொண்டு
போனார்.

2 மாகாணத்தை* சேர்ந்த அந்த ஜனங்களை நேபுகாத்நேச்சார் ராஜா
பாபிலோனுக்குப்[f] பிடித்துக்கொண்டு போயிருந்தான்.[g] அவர்கள் அங்
கிருந்து எருசலேமுக்கும் யூதாவுக்கும் திரும்பி வந்து அவரவர் நகரங்க
ளில் குடியேறினார்கள்.[h] **2** அவர்கள் எல்லாரும் செருபாபேல்,[i] யெசுவா,[j]
நெகேமியா, செராயா, ரெலாயா, மொர்தெகாய், பில்சான், மிஸ்பார், பிக்
வாய், ரெகூம், பாணா ஆகியவர்களோடு திரும்பி வந்திருந்தார்கள்.

திரும்பி வந்த இஸ்ரவேல் ஆண்களின் எண்ணிக்கை இது
தான்:[k] **3** பாரோஷின் வம்சத்தார் 2,172; **4** செப்பத்தியாவின் வம்சத்
தார் 372; **5** ஆராகின் வம்சத்தார்[l] 775; **6** பாகாத்-மோவாபின் பரம்பரை
யில்[m] வந்த யெசுவா மற்றும் யோவாபின் வம்சத்தார் 2,812; **7** ஏலாமின்
வம்சத்தார்[n] 1,254; **8** சத்தூவின் வம்சத்தார்[o] 945; **9** சக்காயின் வம்சத்
தார் 760; **10** பானியின் வம்சத்தார் 642; **11** பெபாயின் வம்சத்தார் 623;

1:3 * அல்லது, “அவர் எருசலேமில் இருக்கிறார்.” **1:6** * நே.மொ., “அவர்களுடைய கைகளைப் பலப்படுத்தினார்கள்.” **1:8** * ஒருவேளை, “செருபாபேலிடம்.” **2:1** * ஒருவேளை, பாபிலோனையோ யூதாவையோ குறிக்கலாம்.

அதி. 1
a 2ரா 17:6; எரே 9:16
b யாத் 35:21; 1நா 29:9; எஸ்றா 7:14-16
c 2ரா 24:11, 13; 2நா 36:7, 18; எஸ்றா 6:5; தானி 1:1, 2; தானி 5:2
d எஸ்றா 5:14, 16; ஆகா 1:1, 14; ஆகா 2:23
e 2ரா 24:14, 15; 2நா 36:20

அதி. 2
f 2ரா 24:15, 16; 2ரா 25:11; 2நா 36:20
g எஸ்றா 8:1
h நெ 7:6, 7
i எஸ்றா 1:8, 11; ஆகா 1:14; மத் 1:12
j எஸ்றா 3:8; எஸ்றா 5:2; சக 3:1
k நெ 7:8-38
l நெ 6:17, 18
m எஸ்றா 10:30, 44; நெ 3:11
n எஸ்றா 10:26, 44
o எஸ்றா 10:27, 44

12 அஸ்காத்தின் வம்சத்தார் 1,222; **13** அதோனிகாமின் வம்சத்தார் 666;
14 பிக்வாயின் வம்சத்தார் 2,056; **15** ஆதினின் வம்சத்தார் 454;
16 அதேரின் வழிவந்த எசேக்கியாவின் வம்சத்தார் 98; **17** பேசாயின்
வம்சத்தார் 323; **18** யோராவின் வம்சத்தார் 112; **19** ஆசூமின் வம்சத்
தார்[a] 223; **20** கிபாரின் வம்சத்தார் 95; **21** பெத்லகேம் ஊர் ஆண்கள்
123; **22** நெத்தோபா ஊர் ஆண்கள் 56; **23** ஆனதோத்[b] ஊர் ஆண்கள்
128; **24** அஸ்மாவேத் ஊர் ஆண்கள் 42; **25** கீரியாத்-யெயாரீம், கெப்
பிரா, பேரோத் ஊர்களின் ஆண்கள் 743; **26** ராமா,[c] கெபா[d] ஊர்களின்
ஆண்கள் 621; **27** மிக்மாஸ் ஊர் ஆண்கள் 122; **28** பெத்தேல், ஆயி[e]
ஊர்களின் ஆண்கள் 223; **29** நேபோ ஊர் ஆண்கள்[f] 52; **30** மக்பீஷ்
ஊர் ஆண்கள் 156; **31** மற்றொரு ஏலாமின் வம்சத்தார் 1,254; **32** ஆரீ
மின் வம்சத்தார் 320; **33** லோது, ஆதீத், ஓனோ ஊர்களின் ஆண்கள் 725;
34 எரிகோ ஊர் ஆண்கள் 345; **35** சேனாகா ஊர் ஆண்கள் 3,630.

36 குருமார்கள்:[g] யெதாயாவின்[h] வம்சத்தாராகிய யெசுவாவின்[i] குடும்
பத்தார் 973; **37** இம்மேரின் வம்சத்தார்[j] 1,052; **38** பஸ்கூரின் வம்சத்
தார்[k] 1,247; **39** ஆரீமின் வம்சத்தார்[l] 1,017.

40 லேவியர்கள்:[m] ஒதாவியாவின் வழிவந்த யெசுவா மற்றும் கத்
மியேலின்[n] வம்சத்தார் 74. **41** பாடகர்கள்:[o] ஆசாபின்[p] வம்சத்தார் 128.
42 வாயிற்காவலர்கள்:[q] சல்லூமின் வம்சத்தார், அதேரின் வம்சத்தார், தல்
மோனின்[r] வம்சத்தார், அக்கூபின்[s] வம்சத்தார், அதிதாவின் வம்சத்தார்,
ஷோபாயின் வம்சத்தார் என மொத்தம் 139 பேர்.

43 ஆலயப் பணியாளர்கள்:*[t] சீகாவின் வம்சத்தார், அசுபாவின் வம்
சத்தார், தபாகோத்தின் வம்சத்தார், **44** கேரோசின் வம்சத்தார், சீயாகா
வின் வம்சத்தார், பாதோனின் வம்சத்தார், **45** லெபானாவின் வம்சத்தார்,
அகாபாவின் வம்சத்தார், அக்கூபின் வம்சத்தார், **46** ஹாகாபின் வம்சத்
தார், சல்மாயின் வம்சத்தார், ஆனானின் வம்சத்தார், **47** கித்தேலின் வம்
சத்தார், காகாரின் வம்சத்தார், ராயாவின் வம்சத்தார், **48** ரேத்சீனின் வம்
சத்தார், நெகோதாவின் வம்சத்தார், காசாமின் வம்சத்தார், **49** ஊத்சாவின்
வம்சத்தார், பசெயாவின் வம்சத்தார், பெசாயின் வம்சத்தார், **50** அஸ்னா
வின் வம்சத்தார், மெயூனீமின் வம்சத்தார், நெபுசீமின் வம்சத்தார், **51** பக்
பூக்கின் வம்சத்தார், அகுபாவின் வம்சத்தார், அர்கூரின் வம்சத்தார்,
52 பஸ்லூத்தின் வம்சத்தார், மெகிதாவின் வம்சத்தார், அர்ஷாவின் வம்சத்
தார், **53** பர்கோசின் வம்சத்தார், சிசெராவின் வம்சத்தார், தாமாவின் வம்
சத்தார், **54** நெத்சியாவின் வம்சத்தார், அதிபாவின் வம்சத்தார்.

55 சாலொமோனுடைய ஊழியர்களின் வம்சத்தார்: சோதாயின் வம்
சத்தார், சொபெரேத்தின் வம்சத்தார், பெருதாவின் வம்சத்தார்,[u] **56** யாலா
ஹின் வம்சத்தார், தர்கோனின் வம்சத்தார், கித்தேலின் வம்சத்தார்,
57 செப்பத்தியாவின் வம்சத்தார், அத்தீலின் வம்சத்தார், பொகெரேத்-
செபாயிமின் வம்சத்தார், ஆமியின் வம்சத்தார்.

58 ஆலயப் பணியாளர்களும்* சாலொமோனுடைய ஊழியர்களின்
வம்சத்தாரும் மொத்தம் 392 பேர்.

2:43 *வே.வா., "நிதனீமியர்கள்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்கள்; அர்ப்பணிக்கப்பட்டவர்கள்." **2:58** *வே.வா., "நிதனீமியர்களும்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்களும்; அர்ப்பணிக்கப்பட்டவர்களும்."

அதி. 2
a எஸ்றா 10:33, 44
b யோசு 21:8, 18; எரே 1:1
c யோசு 18:21, 25
d யோசு 18:21, 24
e யோசு 7:2
f எஸ்றா 10:43, 44
g நெ 7:39-42
h 1நா 9:2, 10; நெ 11:3, 10
i 1நா 24:3, 11
j 1நா 24:3, 14; எஸ்றா 10:20, 44
k எஸ்றா 10:22, 44
l 1நா 24:3, 8; எஸ்றா 10:21, 44
m நெ 7:43
n எஸ்றா 3:9; நெ 12:8, 24
o நெ 7:44
p 1நா 15:16, 17; நெ 11:3, 17
q நெ 7:45
r 1நா 9:2, 17; நெ 11:3, 19
s நெ 12:25, 26
t யோசு 9:3, 27; 1நா 9:2; நெ 3:26; நெ 7:46-56
u நெ 7:57-60

59 தெல்-மெலா, தெல்-அர்சா, கேருப், ஆதோன், இம்மேர் ஆகிய இடங்
களிலிருந்து சிலர் வந்தார்கள். ஆனால், தந்தைவழிக் குடும்பத்தையும் பூர்வீ
கத்தையும் பற்றிய அத்தாட்சிகள் அவர்களிடம் இல்லை. அதனால், தாங்கள்
இஸ்ரவேலர்கள் என்பதை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை.[a] அவர்க
ளுடைய விவரம்: **60** தெலாயாவின் வம்சத்தார், தொபியாவின் வம்சத்தார்
மற்றும் நெகோதாவின் வம்சத்தார் 652 பேர். **61** குருமார்களின் வம்சத்தார்:
அபாயாவின் வம்சத்தார், அக்கோசின் வம்சத்தார்,[b] பர்சிலாவின் வம்சத்தார்;
இந்த பர்சிலா, கீலேயாத்தியனான பர்சிலாவின்[c] மகள்களில் ஒருத்தியைக்
கல்யாணம் செய்ததால் அவளுடைய குடும்பப் பெயரால் அழைக்கப்பட்
டார். **62** இவர்கள் எல்லாரும் தங்களுடைய வம்சாவளியை உறுதிசெய்ய
பதிவேடுகளைத் தேடினார்கள். ஆனால், அவற்றைக் கண்டுபிடிக்க முடியா
ததால் குருமார்களாகச் சேவை செய்யும் தகுதியை இழந்தார்கள்.[d] **63** குரு
வானவர் வந்து ஊரீமையும் தும்மீமையும் வைத்து கடவுளை விசாரிக்கும்
வரை[e] மகா பரிசுத்தமான உணவுப் பொருள்கள்[f] எதையும் இவர்கள்
சாப்பிடக் கூடாதென்று ஆளுநர்* சொல்லிவிட்டார்.

64 சபையார் மொத்தம் 42,360 பேர்.[g] **65** அவர்களைத் தவிர
வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் 7,337 பேர்; பாடகர் பாடகிகள்
200 பேர். **66** குதிரைகள் 736, கோவேறு கழுதைகள்* 245, **67** ஒட்டகங்
கள் 435, கழுதைகள் 6,720.

68 எல்லாரும் எருசலேமுக்கு வந்தபோது, தந்தைவழிக் குடும்பத் தலை
வர்கள் சிலர் உண்மைக் கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்தை
அதே இடத்தில்[h] திரும்பக் கட்டுவதற்காக அவர்களாகவே விருப்பப்
பட்டு காணிக்கைகளைத்[i] தந்தார்கள். **69** அவரவருடைய வசதிப்படி, கட்
டுமான வேலைக்காக 61,000 தங்கக் காசுகளையும்,* 5,000 வெள்ளிக்
காசுகளையும்,#[j] குருமார்களுக்கான 100 உடைகளையும் கொடுத்தார்கள்.
70 குருமார்களும், லேவியர்களும், பொது ஜனங்களில் சிலரும், பாடகர்க
ளும், வாயிற்காவலர்களும், ஆலயப் பணியாளர்களும்* மற்ற இஸ்ரவேலர்
கள் எல்லாரும் அவரவர் நகரங்களில் குடியேறினார்கள்.[k]

3 அவரவர் நகரங்களில் குடியேறியிருந்த இஸ்ரவேலர்கள் எல்லாரும்,
ஏழாம் மாதம்[l] வந்தபோது ஒருமனதாக எருசலேமில் கூடினார்கள்.
2 யோசதாக்கின் மகன் யெசுவாவும்,[m] அவருடன் குருமார்களாக இருந்த
வர்களும், சலாத்தியேலின்[n] மகன் செருபாபேலும்,[o] அவருடைய சகோதரர்
களும் இஸ்ரவேலின் கடவுளுக்குப் பலிபீடம் கட்டினார்கள். உண்மைக் கட
வுளின் ஊழியரான மோசேயின் திருச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள தகன
பலிகளைச் செலுத்துவதற்காக அதைக் கட்டினார்கள்.[p]

3 சுற்றியிருந்த மற்ற தேசத்தாரை நினைத்து அவர்கள் பயந்தாலும்,[q]

2:63 *வே.வா., “திர்ஷாதா.” இது ஒரு மாகாணத்தின் ஆளுநருக்குக் கொடுக்கப்பட்ட பெர்சியப் பட்டப்பெயர். **2:66** *இவை பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்தவை. **2:69** *நே.மொ., “தங்க திராக்மாவையும்.” இவை கிரேக்க வேதாகமத்தில் வரும் திராக்மா அல்ல. 8.4 கிராம் எடையுள்ள பெர்சிய நாட்டு தங்க தாரிக் காசுகள் என்று கருதப்படுகிறது. இணைப்பு B14-ஐப் பாருங்கள். #மூலமொழியில், “மினாவையும்.” எபிரெய வேதாகமத்தில் ஒரு மினா என்பது 570 கிராம் எடையுள்ளது. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **2:70** *வே.வா., “நிதனீமியர்களும்.” நே.மொ., “கொடுக்கப்பட்டவர்களும்; அர்ப்பணிக்கப்பட்டவர்களும்.”

அதி. 2
a நெ 7:61-65
b 1நா 24:3, 10; நெ 3:21
c 2சா 17:27-29; 1ரா 2:7
d எண் 3:10
e யாத் 28:30; எண் 27:21; 1சா 28:6
f லேவி 2:3; லேவி 6:26; எண் 18:11
g நெ 7:66-69; ஏசா 10:21; எரே 23:3
h 2நா 3:1
i யாத் 35:5; 1நா 29:5; நெ 7:70-72
j எஸ்றா 8:25
k நெ 7:73

அதி. 3
l 1ரா 8:2
m ஆகா 1:1
n 1நா 3:17; மத் 1:12
o எஸ்றா 1:7, 8; லூ 3:23, 27
p யாத் 20:24; யாத் 40:29
q எஸ்றா 4:4

பலிபீடத்தை முன்பிருந்த இடத்திலேயே அமைத்து, காலையிலும் மாலை
யிலும் யெகோவாவுக்குச் செலுத்த வேண்டிய தகன பலிகளைச்[a]
செலுத்த ஆரம்பித்தார்கள். **4** பின்பு, திருச்சட்டத்தில் எழுதியிருந்தபடியே
கூடாரப் பண்டிகையைக் கொண்டாடினார்கள்.[b] தினசரி கணக்கின்படி[c]
ஒவ்வொரு நாளும் தகன பலிகளைச் செலுத்தினார்கள். **5** அதன்பின்,
தினமும் செலுத்துகிற* தகன பலியையும்,[d] மாதப்பிறப்புக்கான# பலிகளை
யும்,[e] யெகோவாவின் புனித பண்டிகைகளுக்கான[f] பலிகளையும்,
யெகோவாவுக்காக ஜனங்கள் விருப்பப்பட்டுக் கொண்டுவந்த காணிக்
கைகளையும்[g] செலுத்தினார்கள். **6** இப்படி, ஏழாம் மாதம், முதல் நாளிலி
ருந்தே[h] யெகோவாவுக்குத் தகன பலிகளைச் செலுத்த ஆரம்பித்தார்கள்.
ஆனால், யெகோவாவின் ஆலயத்துக்கு அதுவரை அஸ்திவாரம் போடப்
படவில்லை.

7 கற்களை வெட்டிச் செதுக்குகிறவர்களுக்கும்[i] கைத்தொழிலாளிகளுக்
கும்[j] அவர்கள் பணம் கொடுத்தார்கள். அதோடு, சீதோனையும் தீருவை
யும் சேர்ந்த ஜனங்களுக்கு உணவையும் பானத்தையும் எண்ணெயையும்
கொடுத்தார்கள். ஏனென்றால், அந்த ஜனங்கள் பெர்சிய ராஜா கோரேசின்
உத்தரவுப்படி[k] தேவதாரு மரங்களை லீபனோனிலிருந்து யோப்பாவுக்குக்
கடல் வழியாகக் கொண்டுவந்திருந்தார்கள்.[l]

8 சலாத்தியேலின் மகன் செருபாபேலும், யோசதாக்கின் மகன் யெசு
வாவும், அவர்களுடைய மற்ற சகோதரர்களான குருமார்களும், லேவியர்
களும், மற்றவர்களும் எருசலேமுக்குத் திரும்பி வந்த பின்பு,[m] இரண்டாம்
வருஷம் இரண்டாம் மாதத்தில் உண்மைக் கடவுளான யெகோவாவின்
ஆலயத்தைக் கட்டும் வேலையை ஆரம்பித்தார்கள். அதை மேற்பார்வை
செய்ய 20 வயதும் அதற்கு அதிகமான வயதுமுள்ள லேவியர்களை அவர்
கள் நியமித்தார்கள். **9** அதனால், யூதா என்பவரின் வம்சத்தைச் சேர்ந்த
யெசுவாவும் அவருடைய மகன்களும் சகோதரர்களும், கத்மியேலும் அவ
ருடைய மகன்களும் உண்மைக் கடவுளின் ஆலய வேலையை மேற்
பார்வை செய்தார்கள். அவர்களோடு சேர்ந்து லேவியர்களான எனாதாத்
தின் வம்சத்தாரும்[n] அவர்களுடைய மகன்களும் சகோதரர்களும் அந்த
வேலையை மேற்பார்வை செய்தார்கள்.

10 யெகோவாவின் ஆலயத்துக்கு அஸ்திவாரம் போடப்பட்டபோது,[o]
குருமார்கள் தங்களுக்குரிய உடையில் எக்காளங்களோடும்,[p] லேவியர்க
ளான ஆசாபின் வம்சத்தார் ஜால்ராக்களோடும் எழுந்து நின்று யெகோவா
வைப் புகழ்ந்து பாடினார்கள்; இஸ்ரவேல் ராஜா தாவீது கட்டளை கொடுத்தி
ருந்தபடியே[q] அப்படிச் செய்தார்கள். **11** அவர்கள் யெகோவாவுக்கு நன்றி
சொல்லி, "அவர் நல்லவர், இஸ்ரவேலர்களிடம் என்றென்றும் மாறாத அன்
பைக் காட்டுகிறவர்"[r] என்று மாறிமாறி அவரைப் புகழ்ந்து பாடினார்கள்.[s]
யெகோவாவின் ஆலயத்துக்கு அஸ்திவாரம் போடப்பட்டதால் ஜனங்களும்
மிக சத்தமாக யெகோவாவைப் புகழ்ந்தார்கள். **12** முன்பிருந்த ஆலயத்
தைக்[t] கண்ணால் பார்த்திருந்த பெரியோர்களான குருமார்கள், லேவியர்கள்,
தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள் பலர் இந்த ஆலயத்துக்கு அஸ்திவாரம்
போடப்பட்டதைப் பார்த்தபோது சத்தமாக அழுதார்கள்; மற்றவர்கள் சந்
தோஷமாகக் கோஷம் போட்டார்கள்.[u] **13** ரொம்பத் தூரம் கேட்கும் அள

3:5 *வே.வா., "வழக்கமான." #வே.வா., "முதலாம் பிறைக்கான."

அதி. 3
a எண் 28:3, 4
b யாத் 23:16 லேவி 23:34
c யாத் 29:38 எண் 29:12, 13
d யாத் 29: 39, 42
e எண் 10:10 சங் 81:3
f உபா 16:16
g உபா 12:5, 6
h எண் 29:1
i 1ரா 5:17
j எஸ்றா 5:8
k எஸ்றா 1:2, 3 எஸ்றா 6:3, 4
l யோசு 19: 46, 48 1நா 22:3, 4 2நா 2:10, 16
m நெ 7:6, 7
n நெ 3:18
o சக 4:9
p எண் 10:8
q 1நா 6:31, 32 1நா 23:5 1நா 25:1
r 1நா 16:34 2நா 7:3
s யாத் 15:21 நெ 12:24
t 1ரா 6:22 ஆகா 2:3
u சங் 126:1, 6 ஏசா 35:10 சக 4:9

வுக்கு ஜனங்கள் சத்தமிட்டதால், ஆனந்தக் குரலுக்கும் அழுகைக் குரலுக்கும் வித்தியாசமே தெரியவில்லை.

4 சிறைபிடிக்கப்பட்டுப் போன யூதா, பென்யமீன் ஜனங்கள் திரும்பி வந்து[a] இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவுக்கு ஆலயம் கட்டிக்கொண்டிருந்ததை எதிரிகள்[b] கேள்விப்பட்டார்கள். **2** உடனே அவர்கள் செருபாபேலிடமும் தந்தைவழிக் குடும்பத் தலைவர்களிடமும் போய், "உங்களோடு சேர்ந்து நாங்களும் ஆலயத்தைக் கட்ட விரும்புகிறோம். உங்களுடைய கடவுளைத்தான் நாங்களும் வணங்குகிறோம்.[c] எங்களை இங்கு கொண்டுவந்த[d] அசீரிய ராஜா எசரத்தோனின்[e] காலத்திலிருந்தே உங்கள் கடவுளுக்குப் பலி செலுத்திவருகிறோம்" என்றார்கள். **3** அதற்கு செருபாபேலும் யெசுவாவும் இஸ்ரவேலின் தந்தைவழிக் குடும்பத் தலைவர்களும், "எங்களோடு சேர்ந்து எங்கள் கடவுளுக்கு ஆலயத்தைக் கட்ட உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை.[f] பெர்சிய ராஜா கோரேஸ் எங்களுக்கு ஆணை கொடுத்தபடி,[g] இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவுக்கு நாங்கள் மட்டும்தான் ஆலயம் கட்டுவோம்" என்று சொன்னார்கள்.

4 அதனால் சுற்றியிருந்த தேசத்தார், யூதா ஜனங்களைச் சோர்ந்துபோக வைத்து கட்டுமான வேலையை நிறுத்துவதற்காக முயற்சி செய்துகொண்டே இருந்தார்கள்.[h] **5** யூதர்களுடைய திட்டங்களை முறியடிப்பதற்காக[i] ஆலோசகர்களுக்குக் கூலி கொடுத்தார்கள். பெர்சிய ராஜாக்களான கோரேசின் ஆட்சிக்காலம் முதல் தரியுவின் ஆட்சிக்காலம் வரைக்கும்[j] இப்படித்தான் செய்துவந்தார்கள். **6** அகாஸ்வேரு ராஜா ஆட்சிசெய்ய ஆரம்பித்த சமயத்தில், அவர்கள் யூதா ஜனங்களையும் எருசலேம் ஜனங்களையும் குற்றம்சாட்டி ஒரு கடிதம் எழுதினார்கள். **7** பின்பு பெர்சிய ராஜா அர்தசஷ்டாவின் ஆட்சிக்காலத்தில், பிஸ்லாமும் மித்திரேதாத்தும் தபேயாலும் அவனோடு சேர்ந்தவர்களும் அர்தசஷ்டாவுக்குக் கடிதம் எழுதினார்கள். அதை அரமேயிக் பாஷையில் மொழிபெயர்த்து,[k] அரமேயிக் எழுத்துக்களில் எழுதினார்கள்.*

8* தலைமை அரசதிகாரி ரெகூமும் எழுத்தர் சிம்சாயும் எருசலேம் ஜனங்களைக் குற்றம்சாட்டி அர்தசஷ்டா ராஜாவுக்குக் கடிதம் எழுதினார்கள். அதில், **9** "(தலைமை அரசதிகாரி ரெகூம், எழுத்தர் சிம்சாய், அவர்களோடு சேர்ந்த நீதிபதிகள், துணை ஆளுநர்கள், செயலாளர்கள், ஏரேக்[l] நகரவாசிகள், பாபிலோனியர்கள், ஏலாமியர்களான[m] சூசா[n] நகரவாசிகள்,* **10** மாண்பும் மதிப்பும் உள்ள அஸ்னாப்பார் ராஜா சமாரியாவின் நகரங்களிலும் ஆற்றுக்கு அப்பாலுள்ள* பிரதேசத்திலும் குடிவைத்த மற்ற ஜனங்கள்[o] ஆகிய எல்லாரும் **11** எழுதி அனுப்பும் கடிதம்.)

ஆற்றுக்கு அப்பால் வாழ்கிற ஊழியர்கள் அர்தசஷ்டா ராஜாவுக்கு எழுதுவதாவது: **12** ராஜாவே, யூதர்கள் உங்களிடமிருந்து எருசலேமுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். அந்த நகரம் கலகக்காரர்களின் நகரம், அக்கிரமக்காரர்களின் நகரம். அப்படிப்பட்ட நகரத்தை அவர்கள் திரும்பக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதன் மதில்களைக் கட்டி முடிக்கப்போகிறார்கள்,[p]

4:7 * அல்லது, "அரமேயிக் மொழியில் எழுதி, அதன்பின் மொழிபெயர்த்தார்கள்." **4:8** * எஸ்றா 4:8 முதல் 6:18 வரையான வசனங்கள் ஆரம்பத்தில் அரமேயிக் மொழியில் எழுதப்பட்டன. **4:9** * அதாவது, "சூசான்வாசிகள்." **4:10** * அதாவது, "யூப்ரடிஸ் ஆற்றுக்கு மேற்கிலுள்ள."

அதி. 4
- *a* எஸ்றா 2:1, 64
- *b* எஸ்றா 4:6-8; நெ 4:7, 8
- *c* 2ரா 17:33, 34
- *d* 2ரா 17:24
- *e* 2ரா 19:36, 37
- *f* நெ 2:19, 20; யோவா 4:9, 22
- *g* 2நா 36:23; எஸ்றா 1:1-3; எஸ்றா 6:3, 4
- *h* நெ 6:9
- *i* நெ 6:10-12
- *j* எஸ்றா 4:24; எஸ்றா 5:5; எஸ்றா 6:1
- *k* 2ரா 18:26
- *l* ஆதி 10:9, 10
- *m* ஆதி 10:22; ஏசா 11:11; எரே 49:35, 36
- *n* நெ 1:1; எஸ்தர் 1:2; தானி 8:2
- *o* 2ரா 17:24
- *p* நெ 1:3

அஸ்திவாரங்களைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். **13** ராஜாவே,
அவர்கள் அந்த நகரத்தையும் அதன் மதில்களையும் திரும்பக் கட்டி
விட்டால் எந்த வரியையும்*[a] செலுத்த மாட்டார்கள். அதனால் ராஜாக்க
ளின் கஜானாவுக்கு வருமானம் குறைந்துவிடும். **14** நாங்கள் அரண்மனை
உப்பைச் சாப்பிடுவதால்,* ராஜாவுக்குப் பாதிப்பு ஏற்படுவதைப் பார்த்துக்
கொண்டு சும்மா இருக்க முடியாது. அதனால்தான் ராஜாவுக்கு இந்தக் கடி
தத்தை அனுப்புகிறோம். **15** உங்களுடைய முன்னோர்களின் வரலாற்றுப்
பதிவுகளைத்[b] தயவுசெய்து அலசி ஆராயும்படி கேட்டுக்கொள்கிறோம்.
அப்போது நீங்களே உண்மையைத் தெரிந்துகொள்வீர்கள். அந்த நகரம்
கலகக்காரர்களின் நகரம், ராஜாக்களுக்கும் மாகாணங்களுக்கும் கேடு உண்
டாக்குகிற நகரம், பூர்வ காலத்திலிருந்தே தேசத் துரோகம் செய்துவருகிற
நகரம். அதனால்தான் அது அழிக்கப்பட்டது.[c] **16** ராஜாவே, அந்த நகர
மும் அதன் மதில்களும் கட்டி முடிக்கப்பட்டால், ஆற்றுக்கு[d] அப்பாலுள்ள
பிரதேசம் உங்கள் கைவிட்டுப் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறோம்" என்று எழுதி அனுப்பினார்கள்.

17 சமாரியாவிலும் ஆற்றுக்கு அப்பாலுள்ள பிரதேசத்திலும் வாழ்ந்து
வந்த தலைமை அரசதிகாரி ரெகூமுக்கும் எழுத்தர் சிம்சாயுக்கும் அவர்க
ளோடு சேர்ந்தவர்களுக்கும் ராஜா இப்படிப் பதில் அனுப்பினார்:

"வாழ்த்துக்கள்! **18** நீங்கள் அனுப்பிய கடிதம் எனக்குத் தெளிவாக
வாசித்துக் காட்டப்பட்டது.* **19** என் ஆணைப்படி பதிவுகள் அலசி ஆரா
யப்பட்டன. ஆரம்பத்திலிருந்தே எருசலேமில் கலகங்களும் போராட்டங்
களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்துவந்திருப்பதைத் தெரிந்துகொண்டேன்.[e]
20 அந்த நகரத்தில் பெரிய பெரிய ராஜாக்கள் இருந்திருக்கிறார்கள், ஆற்
றுக்கு அப்பாலுள்ள பிரதேசம் முழுவதையும் ஆட்சி செய்திருக்கிறார்கள்,
எல்லா விதமான வரிகளையும்* வசூலித்திருக்கிறார்கள். **21** அதனால்,
கட்டுமான வேலையை நிறுத்தும்படி அவர்களுக்கு இப்போதே ஆணை
கொடுங்கள். நான் உத்தரவு கொடுக்கும்வரை அவர்கள் அந்த நகரத்தைத்
திரும்பக் கட்டக் கூடாது. **22** கவனக்குறைவாக இருந்துவிடாதீர்கள்! உட
னடியாகப் போய் வேலையை நிறுத்துங்கள்! இனி ராஜாவுக்கு எந்தப் பாதிப்
பும் வரக் கூடாது."[f]

23 அர்தசஷ்டா ராஜா அனுப்பிய கடிதம், ரெகூமுக்கும் எழுத்தர் சிம்சா
யுக்கும் அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும் வாசித்துக் காட்டப்பட்டவுடன்,
அவர்கள் அவசர அவசரமாக எருசலேமுக்குப் போய், கட்டுமான வேலை
யைப் பலவந்தமாகத் தடுத்து நிறுத்தினார்கள். **24** இப்படி, எருசலேமிலி
ருந்த ஆலயத்தின் கட்டுமான வேலை தடைபட்டது. பெர்சிய ராஜா தரியு
ஆட்சி செய்த இரண்டாம் வருஷம்வரை அது நிறுத்தி வைக்கப்பட்டது.[g]

5 பின்பு, தீர்க்கதரிசிகளான ஆகாயும்[h] இத்தோவின்[i] பேரன் சகரி
யாவும்[j] யூதாவிலும் எருசலேமிலும் வாழ்ந்த யூதர்களுக்குத் தீர்க்கதரி
சனம் சொன்னார்கள். தங்களை வழிநடத்திய இஸ்ரவேலின் கடவு
ளுடைய பெயரில் அதைச் சொன்னார்கள். **2** அப்போது, சலாத்தியேலின்

அதி. 4
a 2ரா 23:35; நெ 5:4
b எஸ்தர் 2:23; எஸ்தர் 6:1
c எரே 52:3
d உபா 11:24
e 2ரா 18:1, 7; 2ரா 24:20; எஸ்றா 4:15
f எஸ்றா 4:13
g எஸ்றா 5:5; எஸ்றா 6:1; ஆகா 1:14, 15

அதி. 5
h ஆகா 1:1
i நெ 12:1, 4
j சக 1:1

4:13 *நே.மொ., "தலை வரியையோ கலால் வரியையோ சுங்க வரியையோ." **4:14** *வே.வா., "அரண்மனையிலிருந்து சம்பளம் வாங்குவதால்." **4:18** *அல்லது, "மொழிபெயர்க்கப்பட்டு என்முன் வாசிக்கப்பட்டது." **4:20** *நே.மொ., "தலை வரியையும் கலால் வரியையும் சுங்க வரியையும்."

மகன் செருபாபேலும்[a] யோசதாக்கின் மகன் யெசுவாவும்[b] எருசலேமிலி
ருந்த ஆலயத்தைத் திரும்பக் கட்ட ஆரம்பித்தார்கள்.[c] கடவுளுடைய
அந்தத் தீர்க்கதரிசிகள் அவர்களோடு இருந்து, அவர்களை ஆதரித்தார்கள்.[d]
3 அந்தச் சமயத்தில், ஆற்றுக்கு அப்பாலுள்ள* பிரதேசத்தின் ஆளுநர்
தத்னாயும், சேத்தார்-பொஸ்னாயும், அவர்களோடு சேர்ந்தவர்களும் வந்து,
"இந்த ஆலயத்தையும் இதன் மதில்களையும் கட்டி முடிக்க உங்களுக்கு யார்
உத்தரவு கொடுத்தது?" என்று கேட்டார்கள். **4** அதோடு, "யாரெல்லாம் இந்
தக் கட்டிடத்தைக் கட்டுகிறீர்கள்? உங்களுடைய பெயர்களைச் சொல்லுங்
கள்" என்றார்கள். **5** ஆனால், யூத ஜனங்களின் பெரியோர்களை* கடவுள்
பாதுகாத்துவந்தார்.#[e] அதனால், தரியுவுக்குக் கடிதம் எழுதி அவரிடமிருந்து
பதில் வரும்வரை அந்த ஆட்களால் கட்டுமான வேலையை நிறுத்த முடி
யவில்லை.

6 ஆற்றுக்கு அப்பாலுள்ள பிரதேசத்தின் ஆளுநர் தத்னாயும், சேத்தார்-
பொஸ்னாயும், அவரோடு சேர்ந்த துணை ஆளுநர்களும் தரியு ராஜாவுக்
குக் கடிதம் எழுதி அனுப்பினார்கள். **7** அந்தக் கடிதத்தில்,

"தரியு ராஜாவே:

வாழ்த்துக்கள்! **8** ராஜாவே, யூதா மாகாணத்திலுள்ள மகா தேவனின்
ஆலயத்தை நாங்கள் போய்ப் பார்த்தோம். பெரிய பெரிய கற்களை உருட்டி
வந்து கட்டிடத்தைக் கட்டுகிறார்கள். மரச்சட்டங்களை வைத்து மதில்களைக்
கட்டுகிறார்கள். ஜனங்கள் மும்முரமாக வேலை செய்கிறார்கள். அதனால்
வேலை மடமடவென்று நடக்கிறது. **9** நாங்கள் அவர்களுடைய பெரியோர்
களைப் பார்த்து, 'இந்த ஆலயத்தையும் இதன் மதில்களையும் கட்டி முடிக்க
உங்களுக்கு யார் உத்தரவு கொடுத்தது?' என்று கேட்டோம்.[f] **10** அந்த
வேலையைத் தலைமைதாங்கி நடத்துகிறவர்கள் யாரென்று உங்களுக்கு
எழுதி அனுப்புவதற்காக அவர்களுடைய பெயர்களைக்கூட கேட்டோம்.

11 அதற்கு அவர்கள், 'பரலோகத்துக்கும் பூமிக்கும் கடவுளாக இருப்
பவரின் ஊழியர்கள் நாங்கள். பல வருஷங்களுக்கு முன்பு இஸ்ர
வேலின் மகா ராஜா ஒருவர் கட்டி முடித்த ஆலயத்தை[g] இப்போது திரும்பக்
கட்டிக்கொண்டிருக்கிறோம். **12** எங்கள் முன்னோர்கள் பரலோகத்தின் கட
வுளைக் கோபப்படுத்தினார்கள்.[h] அதனால் அவர் பாபிலோன் ராஜாவான
நேபுகாத்நேச்சார் கையில் அவர்களைக் கொடுத்துவிட்டார்.[i] அந்தக் கல்தே
யன் இந்த ஆலயத்தை அழித்து,[j] ஜனங்களை பாபிலோனுக்குக் கொண்டு
போனான்.[k] **13** ஆனால் பாபிலோன் ராஜா கோரேஸ், தன்னுடைய
ஆட்சியின் முதலாம் வருஷத்தில் இந்த ஆலயத்தைத் திரும்பக் கட்டுவ
தற்கு உத்தரவு கொடுத்தார்.[l] **14** அதோடு, நேபுகாத்நேச்சார் எருசலேமிலி
ருந்து எடுத்துக்கொண்டு போய் பாபிலோனின் கோயிலில் வைத்த தங்கப்
பாத்திரங்களையும் வெள்ளிப் பாத்திரங்களையும்[m] ஆளுநராக[n] தான் நிய
மித்திருந்த சேஸ்பாத்சாரிடம்* ஒப்படைத்தார்.[o] **15** அப்போது அவரிடம்,
"இந்தப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போய் எருசலேமிலுள்ள ஆலயத்
தில் வையுங்கள். கடவுளுடைய ஆலயம் முன்பிருந்த இடத்திலேயே
திரும்பக் கட்டப்பட வேண்டும்" என்றார்.[p] **16** அதன்படியே, சேஸ்பாத்சார்

5:3 * அதாவது, "யூப்ரடிஸ் ஆற்றுக்கு மேற்கிலுள்ள." **5:5** * வே.வா., "மூப்பர்களை."
நே.மொ., "கடவுளுடைய கண் யூத ஜனங்களின் பெரியோர்கள்மேல் இருந்தது."
5:14 * ஒருவேளை, "செருபாபேலிடம்."

அதி. 5
a மத் 1:12
b சக 6:11
c எஸ்றா 3:2, 8
d எஸ்றா 6:14; ஆகா 2:4, 21; சக 4:7
e எஸ்றா 7:6, 28; எஸ்றா 8:22
f எஸ்றா 5:3, 4
g 1ரா 7:51
h உபா 31:17; 2நா 34:24, 25
i 2ரா 24:1; 2ரா 25:1
j 2ரா 25:8, 9
k 2ரா 25:11
l எஸ்றா 1:1-3
m 2ரா 25:14, 15; 2நா 36:7, 18
n ஆகா 1:1, 14
o எஸ்றா 1:8, 11
p எஸ்றா 1:2, 7

எருசலேமுக்கு வந்து கடவுளுடைய ஆலயத்துக்கு அஸ்திவாரம் போட்
டார்.[a] அன்று ஆரம்பித்த கட்டுமான வேலை இன்றுவரை நடக்கிறது, இன்
னும் முடிவடையவில்லை'[b] என்று சொன்னார்கள்.
17 அதனால் ராஜாவே, உங்களுக்குச் சரியென்று பட்டால், பாபிலோ
னின் அரண்மனை கஜானாவை* ஆராயுங்கள். எருசலேமிலிருந்த ஆலயத்
தைத் திரும்பக் கட்டும்படி கோரேஸ் ராஜா உத்தரவு கொடுத்தது உண்மை
தானா[c] என்று பாருங்கள். அதன்பின், உங்கள் தீர்மானத்தைத் தயவுசெய்து
எங்களுக்குத் தெரிவியுங்கள்" என்று எழுதி அனுப்பினார்கள்.

6 அதனால், தரியு ராஜாவின் உத்தரவுப்படி பாபிலோனின் கஜானாக்
களில் வைக்கப்பட்டிருந்த பதிவேடுகள் ஆராயப்பட்டன. **2** மேதிய
மாகாணத்தில், அக்மேதா நகரிலிருந்த கோட்டையில் ஒரு சுருள் கண்டெ
டுக்கப்பட்டது. அதில்,
3 "கோரேஸ் ராஜா தனது ஆட்சியின் முதலாம் வருஷத்தில் எரு
சலேம் ஆலயம் சம்பந்தமாகக் கொடுத்த உத்தரவு இதுதான்:[d] 'ஆலயத்தை
முன்பிருந்த இடத்தில் திரும்பக் கட்டி, அங்கு பலிகளைச் செலுத்த வேண்
டும். அதன் அஸ்திவாரங்களைப் பழுதுபார்க்க வேண்டும். அதன் உயரம்
60 முழமாகவும்,* அகலம் 60 முழமாகவும் இருக்க வேண்டும்.[e] **4** பெரிய
கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக மூன்று வரிசைகளிலும், மரங்களை[f] ஒரு
வரிசையிலும் வைத்துக் கட்ட வேண்டும். அதற்கான செலவுகள் ராஜாவின்
கஜானாவிலிருந்து தரப்படும்.[g] **5** அதோடு, நேபுகாத்நேச்சார் எருசலே
மில் உள்ள கடவுளுடைய ஆலயத்திலிருந்து பாபிலோனுக்கு எடுத்துவந்த
தங்கப் பாத்திரங்களும் வெள்ளிப் பாத்திரங்களும்[h] திருப்பிக் கொடுக்கப்
பட வேண்டும். எருசலேமிலுள்ள கடவுளுடைய ஆலயத்தில் அவை
இருந்த இடத்திலேயே வைக்கப்பட வேண்டும்.'[i]
6 அதனால், ஆற்றுக்கு அப்பாலுள்ள* பிரதேசத்தின் ஆளுநர் தத்
னாயுக்கும், சேத்தார்-பொஸ்னாயுக்கும், உங்களோடு சேர்ந்த துணை
ஆளுநர்களுக்கும்[j] நான் இப்போது கொடுக்கும் கட்டளை என்னவென்
றால், யூதர்களுடைய விஷயத்தில் தலையிடாதீர்கள். **7** கடவுளுடைய
ஆலய வேலையைத் தடுக்காதீர்கள். யூதர்களின் ஆளுநரும் பெரியோர்க
ளும்* அந்த ஆலயத்தை முன்பிருந்த இடத்தில் திரும்பக் கட்டுவார்கள்.
8 அந்தக் கட்டுமான வேலைக்காக யூத ஜனங்களின் பெரியோர்களுக்கு
நீங்கள் உதவ வேண்டுமென்று ஆணையிடுகிறேன். அவர்கள் எந்தத் தடை
யும் இல்லாமல் வேலையைத் தொடர்ந்து செய்வதற்காக[k] அரசு கஜானாவி
லிருந்து,[l] முக்கியமாக ஆற்றுக்கு அப்பாலுள்ள பிரதேசத்தில் வசூலிக்கப்
படுகிற வரியிலிருந்து, உடனடியாக அவர்களுக்குப் பணம் கொடுக்க
வேண்டும். **9** தேவைப்படுகிற மற்ற எல்லாவற்றையும்கூட கொடுக்க
வேண்டும். அதாவது, எருசலேமிலுள்ள குருமார்கள் சொல்கிறபடியே
பரலோகத்தின் கடவுளுக்குத் தகன பலி செலுத்த இளம் காளைகள்,[m]
செம்மறியாட்டுக் கடாக்கள்,[n] செம்மறியாட்டுக் குட்டிகள்[o] ஆகியவற்றை
யும், கோதுமையையும்,[p] உப்பையும்,[q] திராட்சமதுவையும்,[r] எண்ணெயை
யும்[s] ஒவ்வொரு நாளும் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். **10** அப்போ

5:17 * வே.வா., "அரசுப் பதிவேடுகளை." **6:3** * அதாவது, "சுமார் 87.6 அடியாகவும்." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **6:6** * அதாவது, "யூப்ரடிஸ் ஆற்றுக்கு மேற்கிலுள்ள." **6:7** * வே.வா., "மூப்பர்களும்."

அதி. 5
a எஸ்றா 3:10; ஆகா 2:18; சக 4:9
b எஸ்றா 4:23, 24
c 2நா 36:22, 23; எஸ்றா 6:3, 4

அதி. 6
d 2நா 36:22, 23; எஸ்றா 1:1-3
e 1ரா 6:2
f எஸ்றா 3:7; எஸ்றா 5:8
g எஸ்றா 7:20; ஏசா 49:23
h 2ரா 25:13-15; 2நா 36:7, 18; தானி 1:1, 2; தானி 5:2
i எஸ்றா 1:8, 11
j எஸ்றா 5:3, 6
k எஸ்றா 5:5
l எஸ்றா 7:20; ஆகா 2:7, 8
m லேவி 1:3, 5
n லேவி 1:10
o எண் 28:3
p லேவி 2:1
q லேவி 2:13
r எண் 15:5
s யாத் 27:20; லேவி 2:4

துதான், அவர்களால் பரலோகத்தின் கடவுளுக்குப் பிரியமான பலிகளைத்
தவறாமல் செலுத்தி, ராஜாவும் அவருடைய மகன்களும் நீடூழி வாழ்வதற்
காகப் பிரார்த்தனை செய்ய முடியும்.[a] **11** இந்த ஆணையை யார் மீறினா
லும் சரி, அவனுடைய வீட்டிலிருந்து ஒரு மரச்சட்டம் உருவி எடுக்கப்பட்டு,
அதன்மீதே அவன் தொங்கவிடப்படுவான். என்னுடைய உத்தரவை மீறிய
குற்றத்துக்காக அவன் வீடு பொதுக் கழிப்பிடமாக* மாற்றப்படும்.
12 ராஜாக்களிலோ ஜனங்களிலோ யாராவது இந்த ஆணையை மீறி எரு
சலேம் ஆலயத்தை அழிக்க நினைத்தால், அங்கு தன்னுடைய பெயரை
நிலைநாட்டியிருக்கிற கடவுள்[b] அவனை அழிக்கட்டும்! தரியுவாகிய நான்
இந்த உத்தரவைக் கொடுக்கிறேன், இது உடனடியாக அமலுக்கு வருகிறது”
என்று எழுதப்பட்டிருந்தது.

13 ஆற்றுக்கு அப்பாலுள்ள பிரதேசத்தின் ஆளுநர் தத்னாயும், சேத்
தார்-பொஸ்னாயும்,[c] அவர்களோடு சேர்ந்தவர்களும் தரியு ராஜா கட்ட
ளையிட்ட எல்லாவற்றையும் உடனடியாகச் செய்தார்கள். **14** ஆகாயும்[d]
இத்தோவின் பேரன் சகரியாவும்[e] தீர்க்கதரிசனம் சொன்னதைக் கேட்டு உற்
சாகம் அடைந்த யூத ஜனங்களின் பெரியோர்கள், கட்டுமான வேலையில்
முழு வீச்சில் ஈடுபட்டார்கள்.[f] இஸ்ரவேலின் கடவுளுடைய கட்டளைப்படி
யும்[g] கோரேஸ், தரியு, பெர்சிய ராஜாவான அர்தசஷ்டா ஆகியவர்களின்
ஆணைப்படியும்[h] ஆலயத்தைக் கட்டி முடித்தார்கள். **15** இப்படி, தரியு
ராஜா ஆட்சி செய்த ஆறாம் வருஷம், ஆதார்* மாதம், மூன்றாம் நாளில்
ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

16 பின்பு, இஸ்ரவேலர்களும் குருமார்களும் லேவியர்களும்[i] சிறை
யிருப்பிலிருந்து திரும்பி வந்த மற்றவர்களும் கடவுளுடைய ஆலயத்தின்
அர்ப்பண விழாவைச் சந்தோஷமாகக் கொண்டாடினார்கள். **17** அந்த
விழாவின்போது 100 காளைகளையும், 200 செம்மறியாட்டுக் கடாக்களை
யும், 400 செம்மறியாட்டுக் குட்டிகளையும், பாவப் பரிகார பலியாக
இஸ்ரவேல் கோத்திரங்களின் எண்ணிக்கைப்படி 12 வெள்ளாட்டுக் கடாக்க
ளையும் செலுத்தினார்கள்.[j] **18** மோசேயின் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள
படியே,[k] குருமார்களை வெவ்வேறு தொகுதிகளாகவும் லேவியர்களை
வெவ்வேறு பிரிவுகளாகவும் பிரித்து,[l] எருசலேமில் கடவுளுக்குச் சேவை
செய்வதற்காக நியமித்தார்கள்.

19 சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள், முதலாம் மாதம்
14-ஆம் நாளில் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடினார்கள்.[m] **20** எல்லா
குருமார்களும் லேவியர்களும் தங்களைத் தூய்மைப்படுத்திக்கொண்டு சுத்
தமாக இருந்தார்கள்.[n] அதனால் அந்தப் பண்டிகை நாளில், சிறையிருப்பி
லிருந்து திரும்பி வந்த எல்லாருக்காகவும் மற்ற குருமார்களுக்காகவும் தங்க
ளுக்காகவும் ஆட்டுக்குட்டிகளைப் பலி கொடுத்தார்கள். **21** பின்பு
திரும்பி வந்தவர்களும், அவர்களோடு சேர்ந்துகொண்ட எல்லாரும், அதா
வது இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவை வணங்குவதற்காக* வேறு
தேசங்களின் அசுத்தமான பழக்கங்களைவிட்டு விலகிய எல்லாரும்,
அவற்றைச் சாப்பிட்டார்கள்.[o] **22** புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையை
யும்[p] ஏழு நாட்கள் கொண்டாடினார்கள். அவர்களுடைய சந்தோஷத்துக்குக்

அதி. 6
a எஸ்றா 7:23
b உபா 12:5, 6; 2நா 7:16
c எஸ்றா 5:6
d ஆகா 1:12
e எஸ்றா 5:1, 2; சக 1:1, 7; சக 6:15
f எஸ்றா 3:8; எஸ்றா 4:3
g ஆகா 1:8
h 2நா 36:23; எஸ்றா 1:2, 3; எஸ்றா 6:12; எஸ்றா 7:12, 13; ஏசா 44:28
i 1நா 9:2; நெ 7:73
j 2நா 7:5
k எண் 3:6
l 1நா 23:6
m யாத் 12:2, 14; லேவி 23:5; உபா 16:1; எஸ்தர் 3:7
n யாத் 30:19, 20; லேவி 21:8; லேவி 22:2, 3
o யாத் 12:48; எண் 9:14
p யாத் 12:17; லேவி 23:6

6:11 *அல்லது, “குப்பைமேடாக; சாணம் கொட்டும் இடமாக.” **6:15** *இணைப்பு B15-ஐப் பாருங்கள். **6:21** *நே.மொ., “தேடுவதற்காக.”

காரணம் யெகோவாவே. அவர்தான் அவர்களை அசீரிய ராஜாவின் இதயத்
தில் இடம்பிடிக்கச் செய்திருந்தார்.[a] அதனால், அந்த ராஜா இஸ்ர
வேலின் கடவுளாகிய உண்மைக் கடவுளின் ஆலய வேலைக்கு ஆதரவு தந்
திருந்தான்.

7 பின்பு, பெர்சிய ராஜா அர்தசஷ்டாவின் ஆட்சிக்காலத்தில்[b] எஸ்றா*[c]
எருசலேமுக்குத் திரும்பி வந்தார். இவர் செராயாவின் மகன், செராயா[d]
அசரியாவின் மகன், அசரியா இல்க்கியாவின்[e] மகன், **2** இல்க்கியா சல்
லூமின் மகன், சல்லூம் சாதோக்கின் மகன், சாதோக் அகிதூப்பின் மகன்,
3 அகிதூப் அமரியாவின் மகன், அமரியா அசரியாவின்[f] மகன், அசரியா
மெராயோத்தின் மகன், **4** மெராயோத் செராகியாவின் மகன், செராகியா
உசீயின் மகன், உசீ புக்கியின் மகன், **5** புக்கி அபிசுவாவின் மகன், அபி
சுவா பினெகாசின்[g] மகன், பினெகாஸ் எலெயாசாரின்[h] மகன், எலெயாசார்
முதன்மை குருவான ஆரோனின்[i] மகன். **6** பாபிலோனிலிருந்து வந்த
எஸ்றா, இஸ்ரவேலின் கடவுளான யெகோவா மோசேயின் மூலம் கொடுத்
திருந்த திருச்சட்டத்தில் புலமை பெற்றிருந்தார்;[j] அதை நகலெடுப்பவராக
வும்* இருந்தார். அவருடைய கடவுளாகிய யெகோவா அவருக்குத் துணை
யாக இருந்ததால் அவர் கேட்ட எல்லாவற்றையும் ராஜா கொடுத்தார்.

7 குருமார்கள், லேவியர்கள்,[k] பாடகர்கள்,[l] வாயிற்காவலர்கள்,[m] ஆல
யப் பணியாளர்கள்*[n] ஆகிய இஸ்ரவேலர்கள் சிலர் அர்தசஷ்டா ராஜா
ஆட்சி செய்த ஏழாம் வருஷத்தில் எருசலேமுக்கு வந்தார்கள். **8** அதே
வருஷம், ஐந்தாவது மாதம் எஸ்றா எருசலேமுக்கு வந்தார். **9** அவரு
டைய கடவுள் அவருக்கு உறுதுணையாக இருந்ததால், முதலாம் மாதம்
முதலாம் நாளில் பாபிலோனிலிருந்து புறப்பட்டு, ஐந்தாம் மாதம் முதலாம்
நாளில் எருசலேமுக்கு வந்து சேர்ந்தார்.[o] **10** யெகோவாவின் திருச்சட்டத்
தைப் படித்துப் பின்பற்றவும்,[p] அதிலுள்ள விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புக
ளையும் இஸ்ரவேலில் கற்றுக்கொடுக்கவும்[q] அவர் தன் இதயத்தைத் தயார்
படுத்தியிருந்தார்.*

11 இஸ்ரவேலர்களுக்கு யெகோவா கொடுத்த கட்டளைகளையும் விதி
முறைகளையும் ஆராய்வதில் நிபுணராகவும், அவற்றை நகலெடுப்பவராக
வும்* இருந்த குருவாகிய எஸ்றாவுக்கு அர்தசஷ்டா ராஜா ஒரு கடிதத்தைக்
கொடுத்திருந்தார். அதில்,

12 * "ராஜாதி ராஜாவாகிய அர்தசஷ்டா,[r] பரலோகத்தின் கடவுளுடைய
திருச்சட்டத்தை நகலெடுப்பவரும்# குருவுமாகிய எஸ்றாவுக்கு எழுதுவ
தாவது: உனக்கு வாழ்த்துக்கள்! **13** என் ராஜ்யத்தில் குடியிருக்கிற இஸ்ர
வேலர்களிலும் அவர்களுடைய குருமார்களிலும் லேவியர்களிலும்
யாரெல்லாம் உன்னுடன் எருசலேமுக்குப் போக விரும்புகிறார்களோ அவர்
களெல்லாம் போகலாம் என்று உத்தரவு கொடுக்கிறேன்.[s] **14** ராஜாவா
கிய நானும் என்னுடைய ஏழு ஆலோசகர்களும் உன்னை அனுப்புகிறோம்.
உன் கையிலுள்ள உன் கடவுளுடைய திருச்சட்டத்தை யூதாவிலும் எருச

7:1 * அர்த்தம், "உதவி." **7:6** * வே.வா., "அவர் ஒரு எழுத்தராகவும்." **7:7** * வே.வா., "நிதனீமியர்கள்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்கள்; அர்ப்பணிக்கப்பட்டவர்கள்." **7:10** * வே.வா., "தன் இதயத்தில் தீர்மானித்திருந்தார்." **7:11** * வே.வா., "ஒரு எழுத்தராகவும்." **7:12** * எஸ்றா 7:12 முதல் 7:26 வரையான வசனங்கள் முதன்முதலாக அரமேயிக் மொழியில் எழுதப்பட்டன. # வே.வா., "திருச்சட்டத்தின் எழுத்தரும்."

அதி. 6
a எஸ்றா 7:27; நீதி 21:1

அதி. 7
b நெ 2:1
c நெ 8:2; நெ 12:26
d 1நா 6:14
e 2ரா 22:8
f 2நா 31:10
g எண் 25:11; நியா 20:28
h யாத் 6:23, 25; எண் 3:32; உபா 10:6
i யாத் 7:1; யாத் 28:1
j நெ 8:1, 4
k எஸ்றா 8:18, 19
l 1நா 6:31, 32
m 1நா 9:22-27
n 1நா 9:2; எஸ்றா 8:20
o எஸ்றா 8:22
p உபா 5:1; உபா 17:10
q உபா 33:8, 10; மல் 2:7
r எஸ்றா 6:14; நெ 2:1
s எஸ்றா 1:2, 3

லேமிலும் வாழ்கிறவர்கள் கடைப்பிடிக்கிறார்களா என்று நீ போய்ப் பார்க்க வேண்டும். **15** ராஜாவாகிய நானும் என் ஆலோசகர்களும் மனப்பூர்வமாகக் கொடுக்கிற வெள்ளியையும் தங்கத்தையும், எருசலேமில் குடிகொண்டுள்ள இஸ்ரவேலின் கடவுளுக்கு நீ எடுத்துக்கொண்டு போக வேண்டும். **16** அதோடு, உன் ஜனங்களும் குருமார்களும் எருசலேமிலுள்ள தங்கள் கடவுளின் ஆலயத்துக்காக மனப்பூர்வமாகத் தருகிற காணிக்கைகளையும், பாபிலோன் மாகாணம் முழுவதும் உனக்குக் கிடைக்கிற வெள்ளியையும் தங்கத்தையும் நீ எடுத்துக்கொண்டு போக வேண்டும்.[a] **17** இந்தப் பணத்தை வைத்து காளைகளையும்,[b] செம்மறியாட்டுக் கடாக்களையும்,[c] செம்மறியாட்டுக் குட்டிகளையும்,[d] அவற்றோடு செலுத்த வேண்டிய உணவுக் காணிக்கைகளையும்,[e] திராட்சமது காணிக்கைகளையும்[f] உடனடியாக வாங்கி, எருசலேமிலுள்ள உன் கடவுளுடைய ஆலயத்தின் பலிபீடத்தில் செலுத்த வேண்டும்.

18 மீதமுள்ள வெள்ளியையும் தங்கத்தையும் என்ன செய்ய வேண்டுமென்று நீயும் உன் சகோதரர்களும் நினைக்கிறீர்களோ அதை உங்கள் கடவுளுடைய விருப்பப்படி* செய்யலாம். **19** உன் கடவுளுடைய ஆலய சேவைக்காகக் கொடுக்கப்படுகிற எல்லா பாத்திரங்களையும் எருசலேமிலுள்ள கடவுளுடைய சன்னிதியில் நீ வைக்க வேண்டும்.[g] **20** உன் கடவுளுடைய ஆலயத்துக்குத் தேவையான மற்ற எல்லாவற்றையுமே அரசு கஜானாவிலிருந்து[h] வாங்கிக் கொடுக்க வேண்டும்.

21 ஆற்றுக்கு அப்பாலுள்ள* பிரதேசத்தைச் சேர்ந்த பொக்கிஷ அறை அதிகாரிகள் எல்லாருக்கும் அர்தசஷ்டா ராஜாவாகிய நான் உத்தரவிடுவது என்னவென்றால், பரலோகத்தின் கடவுளுடைய திருச்சட்டத்தை நகலெடுப்பவரும்# குருவுமாகிய எஸ்றா[i] கேட்கிற எல்லாவற்றையும் நீங்கள் உடனே கொடுக்க வேண்டும். **22** அதிகபட்சமாக 100 தாலந்து* வெள்ளியும், 100 கோர் அளவு# கோதுமையும், 100 ஜாடி△ திராட்சமதுவும்,[j] 100 ஜாடி எண்ணெயும்[k] கொடுக்க வேண்டும், உப்பையும்[l] தாராளமாக அள்ளிக் கொடுக்க வேண்டும். **23** பரலோகத்தின் கடவுள் தன்னுடைய ஆலயத்துக்காக என்னவெல்லாம் கொடுக்க வேண்டுமென்று கட்டளை தந்திருக்கிறாரோ[m] அதையெல்லாம் பக்திவைராக்கியத்தோடு கொடுக்க வேண்டும். அப்போதுதான், ராஜாவின் குடிமக்களும் அவருடைய மகன்களும் பரலோகத்தின் கடவுளுடைய கடும் கோபத்துக்கு ஆளாகாமல் இருப்பார்கள்.[n] **24** குருமார்கள், லேவியர்கள், இசைக் கலைஞர்கள்,[o] வாயிற்காவலர்கள், ஆலயப் பணியாளர்கள்*[p] என அந்த ஆலயத்தில் சேவை செய்கிற யார் மேலும் எந்த வரியையும்#[q] சுமத்தக் கூடாது.

25 எஸ்றாவே, உன் கடவுள் தந்திருக்கிற ஞானத்தால் நீ நடுவர்களையும் நீதிபதிகளையும் நியமிக்க வேண்டும். ஆற்றுக்கு அப்பாலுள்ள

7:18 *வே.வா., "சித்தத்தின்படி." **7:21** *அதாவது, "யூப்ரடிஸ் ஆற்றுக்கு மேற்கிலுள்ள." #வே.வா., "திருச்சட்டத்தின் எழுத்தரும்." **7:22** *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். #ஒரு கோர் அளவு என்பது சுமார் 170 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். △மூலமொழியில், "பாத்." ஒரு பாத் என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **7:24** *வே.வா., "நிதனீமியர்கள்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்கள்; அர்ப்பணிக்கப்பட்டவர்கள்." #நே.மொ., "தலை வரியையோ கலால் வரியையோ சுங்க வரியையோ."

அதி. 7
a எஸ்றா 1:5, 6; எஸ்றா 8:25
b லேவி 1:3
c லேவி 1:10
d எண் 28:3
e எண் 15:4
f எண் 15:5
g எஸ்றா 8:30
h எஸ்றா 6:3, 4; எஸ்றா 6:8
i எஸ்றா 7:6; நெ 8:2
j எண் 15:5
k யாத் 27:20; லேவி 2:1
l லேவி 2:13
m எஸ்றா 1:2
n எஸ்றா 6:9, 10
o 1நா 15:16
p 1நா 9:2
q நெ 5:4

பிரதேசத்தில் வசிக்கிற எல்லாருக்கும், அதாவது உன் கடவுளுடைய சட்ட
திட்டங்களைத் தெரிந்துவைத்திருக்கிற எல்லாருக்கும், அவர்கள் நீதி
வழங்க வேண்டும். அந்தச் சட்டதிட்டங்களைப் பற்றித் தெரியாதவர்க
ளுக்கு நீ அவற்றைக் கற்றுத்தர வேண்டும்.[a] **26** உன் கடவுளுடைய திருச்
சட்டத்துக்கும் ராஜாவின் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாதவர்களை உட
னடியாகத் தண்டிக்க வேண்டும். அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற
வேண்டும் அல்லது அவர்களுக்கு மரண தண்டனையோ சிறைத் தண்ட
னையோ அபராதமோ விதிக்க வேண்டும்” என்று எழுதியிருந்தார்.

27 எருசலேமிலுள்ள யெகோவாவின் ஆலயத்தை அழகுபடுத்த ராஜா
வின் இதயத்தைத் தூண்டிய நம் முன்னோர்களின் கடவுளான யெகோவா
வுக்குப் புகழ் சேருவதாக![b] **28** ராஜாவுக்கும் அவருடைய ஆலோசகர்க
ளுக்கும்[c] உயர் அதிகாரிகளுக்கும் முன்னால் கடவுள் எனக்கு மாறாத
அன்பைக் காட்டினார்.[d] என் கடவுள் யெகோவா எனக்குத் துணையாக
இருந்ததால் நான் தைரியமடைந்து, என்னோடு கூட்டிக்கொண்டு போவதற்
காக இஸ்ரவேலர்களில் முக்கியமானவர்களைத் தேர்ந்தெடுத்தேன்.

8 அர்தசஷ்டா ராஜாவின் ஆட்சிக்காலத்தில்[e] பாபிலோனிலிருந்து என்
னுடன் வந்த தந்தைவழிக் குடும்பத் தலைவர்களுடைய வம்சாவ
ளிப் பட்டியல் இதுதான்: **2** பினெகாஸ்[f] வம்சத்தில் வந்த கெர்சோம்; இத்
தாமார்[g] வம்சத்தில் வந்த தானியேல்; தாவீது வம்சத்தில் வந்த அத்தூஸ்;
3 பாரோஷின் பரம்பரையைச் சேர்ந்த செக்கனியாவின் வம்சத்தில் வந்த
சகரியா; இவருடன் வந்த ஆண்கள் 150 பேர்; **4** பாகாத்-மோவாப் வம்சத்
தில்[h] வந்த செராகியாவின் மகன் எலியோவெனாய்; இவருடன் வந்த
ஆண்கள் 200 பேர்; **5** சத்தூ வம்சத்தில்[i] வந்த யகாசியேலின் மகன்
செக்கனியா; இவருடன் வந்த ஆண்கள் 300 பேர்; **6** ஆதின் வம்சத்தில்[j]
வந்த யோனத்தானின் மகன் எபெத்; இவருடன் வந்த ஆண்கள் 50 பேர்;
7 ஏலாம் வம்சத்தில்[k] வந்த அத்தாலியாவின் மகன் யெசாயா; இவரு
டன் வந்த ஆண்கள் 70 பேர்; **8** செப்பத்தியா வம்சத்தில்[l] வந்த மிகாவே
லின் மகன் செபதியா; இவருடன் வந்த ஆண்கள் 80 பேர்; **9** யோவாப்
வம்சத்தில் வந்த யெகியேலின் மகன் ஒபதியா; இவருடன் வந்த ஆண்கள்
218 பேர்; **10** பானி வம்சத்தில் வந்த யொசிபியாவின் மகன் செலோமித்;
இவருடன் வந்த ஆண்கள் 160 பேர்; **11** பெபாய் வம்சத்தில்[m] வந்த
பெபாயின் மகன் சகரியா; இவருடன் வந்த ஆண்கள் 28 பேர்; **12** அஸ்
காத் வம்சத்தில்[n] வந்த அக்கத்தானின் மகன் யோகனான்; இவருடன் வந்த
ஆண்கள் 110 பேர்; **13** அதோனிகாம் வம்சத்தில்[o] கடைசியாக வந்தவர்
கள் எலிப்பேலேத், எயியேல், செமாயா; இவர்களுடன் வந்த ஆண்கள் 60
பேர்; **14** பிக்வாய் வம்சத்தில்[p] வந்தவர்கள் ஊத்தாய், சபூத்; இவர்களுடன்
வந்த ஆண்கள் 70 பேர்.

15 அகாவா[q] வழியாக ஓடுகிற ஆற்றுக்குப் பக்கத்தில் இவர்கள் எல்லா
ரையும் நான் கூடிவரச் செய்தேன். அங்கு மூன்று நாட்கள் கூடாரம்
போட்டுத் தங்கினோம். ஆனால், ஜனங்களையும் குருமார்களையும் நான்
பார்வையிட்டபோது லேவியர்களில் ஒருவர்கூட அங்கு இல்லை. **16** அத
னால், தலைவர்களான எலியேசர், அரியேல், செமாயா, எல்நாத்தான்,
யாரிப், எல்நாத்தான், நாத்தான், சகரியா, மெசுல்லாம் ஆகியவர்களையும்,
போதகர்களான யோயாரிபையும் எல்நாத்தானையும் வரச் சொன்னேன்.

அதி. 7
a நெ 8:2, 3
b எஸ்றா 6:22 நீதி 21:1 ஏசா 60:13
c எஸ்றா 7:14
d எஸ்றா 9:9 நெ 1:11

அதி. 8
e எஸ்றா 7:7
f 1நா 6:3, 4
g யாத் 6:23
h எஸ்றா 2:1, 6
i எஸ்றா 2:1, 8 எஸ்றா 10: 27, 44
j எஸ்றா 2:1, 15
k எஸ்றா 2:1, 7
l எஸ்றா 2:1, 4
m எஸ்றா 2:1, 11 எஸ்றா 10: 28, 44
n எஸ்றா 2:1, 12
o நெ 7:6, 18
p எஸ்றா 2:1, 14
q எஸ்றா 8:31

17 கசிப்பியா என்ற இடத்திலிருந்த இத்தோ என்ற தலைவரைப் போய்ப்
பார்க்கும்படி நான் அவர்களுக்குக் கட்டளை கொடுத்தேன். எங்கள் கடவு
ளுடைய ஆலயத்தில் சேவை செய்ய ஊழியர்களை அனுப்பி வைக்கும்படி
இத்தோவிடமும் கசிப்பியாவில் ஆலயப் பணியாளர்களாக* இருந்த அவ
ருடைய சகோதரர்களிடமும் சொல்லச் சொன்னேன். **18** எங்கள் கடவுள்
எங்களுக்கு உறுதுணையாக இருந்ததால், விவேகமுள்ளவரான செரெபியா
வையும், அவருடைய மகன்களையும், சகோதரர்களையும் அவர்கள் கூட்
டிக்கொண்டு வந்தார்கள். இவர்கள் மொத்தம் 18 பேர். இந்த செரெபியா[a]
இஸ்ரவேலுக்குப் பிறந்த லேவியின் பேரனான மகேலியின்[b] வம்சத்
தைச் சேர்ந்தவர். **19** அதோடு அஷபியா, மெராரியரான[c] யெசாயா, அவ
ருடைய சகோதரர்கள், அவர்களுடைய மகன்கள் என 20 பேரை அவர்
கள் கூட்டிக்கொண்டு வந்தார்கள். **20** தாவீது ராஜாவும் அதிகாரிகளும்
லேவியர்களுக்கு உதவியாக நியமித்திருந்த ஆலயப் பணியாளர்களில்*
220 பேரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும்
பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டவர்கள்.

21 பின்பு, கடவுளுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்தவும், பயணத்தின்
போது எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் பொருள்களையும்
பாதுகாக்கும்படி அவரிடம் கெஞ்சிக் கேட்கவும் அகாவா ஆற்றுக்குப் பக்
கத்தில் எல்லாரையும் விரதமிருக்கச் சொன்னேன். **22** வழியில் எதிரிகளி
டம் சிக்காமல் இருக்க படைவீரர்களையும் குதிரைவீரர்களையும் துணைக்கு
அனுப்பும்படி ராஜாவிடம் கேட்பதற்கு எனக்கு வெட்கமாக இருந்தது.
ஏனென்றால், "எங்கள் கடவுள் தன்னைத் தேடி வருகிற எல்லாரையும் காப்
பாற்றுவார்.[d] ஆனால், தன்னைவிட்டு விலகிப்போகிற எல்லாருக்கும் எதி
ராகத் தன்னுடைய பலத்தையும் கோபத்தையும் காட்டுவார்"[e] என்று அவரி
டம் சொல்லியிருந்தோம். **23** அதனால், இதற்காக நாங்கள் விரதமிருந்து,
ஜெபம் செய்தோம். அவர் எங்கள் ஜெபத்தைக் கேட்டார்.[f]

24 பின்பு, முதன்மை குருமார்களாகிய செரெபியா, அஷபியா,[g] அவர்
களுடைய 10 சகோதரர்கள் என மொத்தம் 12 பேரை நான் தேர்ந்தெடுத்
தேன். **25** எங்கள் கடவுளுடைய ஆலயத்துக்காக ராஜாவும் அவருடைய
ஆலோசகர்களும் அதிகாரிகளும் அங்கிருந்த இஸ்ரவேலர்கள் எல்லாரும்
காணிக்கையாகக் கொடுத்த வெள்ளியையும் தங்கத்தையும் பாத்திரங்களை
யும் எடைபோட்டுக் கொடுத்தேன்.[h] **26** அவற்றின் விவரம்: 650 தாலந்து*
வெள்ளி, 2 தாலந்து மதிப்புள்ள 100 வெள்ளிப் பாத்திரங்கள், 100 தாலந்து
தங்கம், **27** 1,000 தங்கக் காசுகள்* மதிப்புள்ள 20 சிறிய தங்கக் கிண்ணங்
கள், தங்கத்தைப் போல மதிப்புள்ள, பளபளப்பான 2 உயர்தர செம்புப் பாத்
திரங்கள்.

28 அதன்பின் நான் அவர்களிடம், "நீங்கள் யெகோவாவுக்குப் பரி
சுத்தமானவர்கள்,[i] இந்தப் பாத்திரங்களும் பரிசுத்தமானவை. இந்த வெள்
ளியும் தங்கமும் உங்கள் முன்னோர்களின் கடவுளான யெகோவாவுக்குச்

அதி. 8
a எஸ்றா 8: 24, 25
b எண் 3:20
c 1நா 6:16
d 2நா 16:9; எஸ்றா 7:6; எஸ்றா 7:28; சக 4:6
e 2நா 15:2
f 2நா 7:14; எரே 29:10, 12; எரே 50:4, 5
g எஸ்றா 8: 18, 19
h எஸ்றா 7: 14-16; எஸ்றா 7:19
i லேவி 21:6-8; ஏசா 52:11

8:17 * வே.வா., "நிதனீமியர்களாக." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்களாக; அர்ப்பணிக்கப்பட்டவர்களாக." **8:20** * வே.வா., "நிதனீமியர்களில்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்களில்; அர்ப்பணிக்கப்பட்டவர்களில்." **8:26** * ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **8:27** * மூலமொழியில், "தாரிக்." இவை பெர்சிய நாட்டு தங்கக் காசுகள். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

சொந்த விருப்பத்தோடு கொடுக்கப்பட்ட காணிக்கைகள். **29** எருசலேமி
லுள்ள யெகோவாவின் ஆலய அறைகளில்* முதன்மை குருமார்களிடமும்
லேவியர்களிடமும் தந்தைவழிக் குடும்பத் தலைவர்களிடமும் மிகக் கவன
மாக எடைபோட்டுக் கொடுக்கும்வரை இவற்றைப் பத்திரமாகப் பார்த்துக்
கொள்ளுங்கள்”[a] என்று சொன்னேன். **30** குருமார்களும் லேவியர்களும்,
தங்களிடம் எடைபோட்டுக் கொடுக்கப்பட்ட வெள்ளியையும் தங்கத்தை
யும் பாத்திரங்களையும் எருசலேம் ஆலயத்துக்கு எடுத்துக்கொண்டு போவ
தற்காக வாங்கிக்கொண்டார்கள்.

31 கடைசியில், முதலாம் மாதம்[b] 12-ஆம் நாளில் அகாவா ஆற்
றைவிட்டு[c] எருசலேமுக்குப் புறப்பட்டோம். எங்கள் கடவுள் எங்களுக்
குத் துணையாக இருந்து, வழியில் எதிரிகளிடமிருந்தும் திருடர்களிடமிருந்
தும் பாதுகாத்தார். **32** பின்பு, நாங்கள் எருசலேமுக்குப் போய்ச் சேர்ந்து,[d]
அங்கே மூன்று நாட்கள் தங்கினோம். **33** நான்காம் நாளில், எங்கள்
கடவுளுடைய ஆலயத்தில் வெள்ளியையும் தங்கத்தையும் பாத்திரங்களை
யும் எடைபோட்டு,[e] ஊரியாவின் மகனும் குருவுமாகிய மெரெமோத்திடம்[f]
ஒப்படைத்தோம். அவரோடு பினெகாசின் மகன் எலெயாசாரும், லேவியர்
களான யெசுவாவின் மகன் யோசபத்தும்,[g] பின்னூயின்[h] மகன் நொவதி
யாவும் இருந்தார்கள். **34** எல்லாமே எண்ணப்பட்டு, எடைபோடப்பட்டன.
எல்லாவற்றின் எடையும் பதிவு செய்யப்பட்டது. **35** சிறையிருப்பிலிருந்து
திரும்பி வந்தவர்கள் இஸ்ரவேலின் கடவுளுக்குத் தகன பலிகளைச்
செலுத்தினார்கள். இஸ்ரவேலர்கள் எல்லாருக்காகவும் 12 காளைகளையும்,[i]
96 செம்மறியாட்டுக் கடாக்களையும்,[j] 77 செம்மறியாட்டுக் கடாக் குட்டிக
ளையும், பாவப் பரிகார பலியாக 12 வெள்ளாட்டுக் கடாக்களையும்[k]
யெகோவாவுக்குத் தகன பலியாகச் செலுத்தினார்கள்.[l]

36 பின்பு, நாங்கள் ராஜாவின் உத்தரவுக் கடிதத்தை[m] அதிபதிகளி
டமும்* ஆற்றுக்கு அப்பாலுள்ள# பிரதேசத்தின்[n] ஆளுநர்களிடமும்
கொடுத்தோம். அவர்கள் உண்மைக் கடவுளின் ஜனங்களுக்கும் ஆலயத்
துக்கும் ஆதரவு தந்தார்கள்.[o]

9 பின்பு அதிகாரிகள் என்னிடம் வந்து, “வேறு தேசத்தாரான கானா
னியர்கள், ஏத்தியர்கள், பெரிசியர்கள், எபூசியர்கள், அம்மோனியர்கள்,
மோவாபியர்கள், எகிப்தியர்கள்,[p] எமோரியர்கள்[q] ஆகியவர்களோடு இஸ்ர
வேல் ஜனங்களும் குருமார்களும் லேவியர்களும் ஒட்டி உறவாடுகிறார்
கள். அவர்களுடைய அருவருப்பான பழக்கங்களைப் பின்பற்றுகிறார்கள்.[r]
2 அவர்களுடைய குடும்பங்களிலிருந்து தங்களுக்கும் தங்கள் மகன்களுக்
கும் பெண் எடுக்கிறார்கள்.[s] பரிசுத்த சந்ததியாகிய[t] இவர்கள் இப்போது
வேறு தேசத்தாரோடு ஒன்றாகக் கலந்துவிட்டார்கள்.[u] அதிகாரிகளும் துணை
அதிகாரிகளும்தான் இதில் முக்கியக் குற்றவாளிகள்” என்றார்கள்.

3 இதைக் கேட்டதும் நான் என் உடையை* கிழித்து, என் தலை
யிலிருந்தும் தாடியிலிருந்தும் முடியைப் பிடுங்கி, அதிர்ச்சியில் அப்படியே
உட்கார்ந்துவிட்டேன். **4** அப்போது, இஸ்ரவேலின் கடவுளுடைய வார்த்

8:29 * வே.வா., “ஆலயத்தின் சாப்பாட்டு அறைகளில்.” **8:36** * அதாவது, “பெர்சிய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த மாகாணங்களின் ஆளுநர்களிடமும்.” # அதாவது, “யூப்ரடிஸ் ஆற்றுக்கு மேற்கிலுள்ள.” **9:3** * வே.வா., “உள்ளங்கியையும் மேலங்கியையும்.”

அதி. 8
- *a* எஸ்றா 7:19, எஸ்றா 8:33
- *b* எஸ்தர் 3:7
- *c* எஸ்றா 8: 15, 21
- *d* எஸ்றா 7:8
- *e* எஸ்றா 7:19, எஸ்றா 8:29
- *f* நெ 3:4, 21
- *g* நெ 8:7
- *h* நெ 12:1, 8
- *i* லேவி 1:3
- *j* லேவி 1:10
- *k* லேவி 22: 18, 19
- *l* எஸ்றா 7:17
- *m* எஸ்றா 7:21
- *n* ஆதி 15:18
- *o* எஸ்றா 6:13

அதி. 9
- *p* லேவி 18:3
- *q* ஆதி 15:16
- *r* லேவி 20:23, உபா 12: 29, 30
- *s* யாத் 34:15, 16, எஸ்றா 10:44
- *t* யாத் 19:5, 6
- *u* நெ 13:1, 3

தைகளுக்குப் பயந்த எல்லாரும், சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்க
ளுடைய பாவங்களின் காரணமாக என்னிடம் கூடிவந்தார்கள். ஆனால்,
நான் சாயங்காலத்தில் உணவுக் காணிக்கை[a] செலுத்தப்படும்வரை அதிர்ச்
சியில் அப்படியே உட்கார்ந்திருந்தேன்.

5 துக்கத்தில் மூழ்கிப்போயிருந்த நான், சாயங்காலத்தில் உணவுக்
காணிக்கை[b] செலுத்தப்படும் நேரம் வந்தபோது, கிழிந்த உடையோடு*
மண்டிபோட்டு, என் கடவுளாகிய யெகோவாவிடம் கைகளை விரித்து
இப்படிக் கெஞ்சினேன்: 6 “என் கடவுளே, உங்களை ஏறெடுத்துப் பார்க்
கக்கூட என்னால் முடியவில்லை, அவமானத்தில் கூனிக்குறுகி நிற்கிறேன்.
என் கடவுளே, நாங்கள் செய்த பாவங்களுக்குக் கணக்கே இல்லை, அவை
வானத்தையே தொட்டுவிடும்.[c] 7 முன்னோர்களின் காலத்திலிருந்து இன்
றுவரை நாங்கள் செய்துவந்திருக்கிற அக்கிரமங்களுக்கு அளவே
இல்லை.[d] அதனால், நாங்களும் எங்கள் ராஜாக்களும் எங்கள் குருமார்
களும் வேறு தேசத்து ராஜாக்களின் கையில் விடப்பட்டோம், வாளுக்குப்
பலியாக்கப்பட்டோம்,[e] கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போகப்பட்டோம்,[f]
கொள்ளையடிக்கப்பட்டோம்,[g] அவமானப்படுத்தப்பட்டோம். இன்றுவரை
எங்கள் நிலை இதுதான்.[h] 8 ஆனால் எங்கள் கடவுளாகிய யெகோ
வாவே, கொஞ்சக் காலத்துக்கு எங்கள்மேல் கருணை காட்டி, எங்களில்
சிலருக்கு விடுதலை தந்திருக்கிறீர்கள். உங்களுடைய பரிசுத்தமான இடத்
தில் பாதுகாப்பாக வைத்திருக்கிறீர்கள்.[i] எங்கள் கடவுளே, அடிமைத்தனத்
திலிருந்து கொஞ்சம் விடுதலை கொடுத்து எங்கள் கண்களைப் பிரகாசிக்
கச் செய்திருக்கிறீர்கள். 9 எங்கள் கடவுளே, நாங்கள் அடிமைகளாக
இருந்தாலும்[j] அந்த அடிமைத்தனத்திலேயே நீங்கள் எங்களை விட்டுவி
டவில்லை. எங்களுக்குப் புது வாழ்வு கொடுப்பதற்காக பெர்சிய ராஜாக்க
ளுக்குமுன் எங்களுக்கு மாறாத அன்பைக் காட்டினீர்கள்.[k] பாழாய்க் கிடக்
கிற உங்களுடைய ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதற்காகவும்,[l] யூதாவிலும்
எருசலேமிலும் எங்களுக்கென்று கற்சுவரை* எழுப்புவதற்காகவும் அப்ப
டிச் செய்தீர்கள்.

10 எங்கள் கடவுளே, இனி நாங்கள் என்ன சொல்வது? தீர்க்கதரிசி
கள் மூலம் நீங்கள் கொடுத்த கட்டளைகளை நாங்கள் விட்டுவிட்டோமே.
11 நாங்கள் சொந்தமாக்கப்போகிற தேசம், ஒரு முனையிலிருந்து இன்
னொரு முனைவரை வேறு தேசத்தாரின் அசுத்தத்தினாலும் அருவருப்பான
பழக்கங்களினாலும் நிறைந்திருக்கிற தேசம் என்று அவர்கள் மூலம் சொல்
லியிருந்தீர்கள்.[m] 12 நாங்கள் வலிமையான தேசமாகி, நிலத்தின் விளைச்
சலை அனுபவித்து, தலைமுறை தலைமுறையாக அங்கு வாழ வேண்டு
மென்றால், அவர்களுக்குப் பெண் கொடுக்கவோ அவர்களிடம் பெண்
எடுக்கவோ கூடாது[n] என்று சொல்லியிருந்தீர்கள். அவர்களுடைய சமாதா
னத்துக்காகவும் சந்தோஷத்துக்காகவும் எதையும் செய்யக் கூடாது[o]
என்றும் கட்டளை கொடுத்திருந்தீர்கள். ஆனால், நாங்கள் அதைக் கேட்கா
மல் போய்விட்டோம். 13 நாங்கள் செய்த கெட்ட காரியங்களாலும்
பெரிய பாவங்களாலும்தான் எங்களுக்கு இப்படியெல்லாம் நடந்தது. ஆனா
லும் எங்கள் கடவுளே, எங்களுடைய குற்றத்துக்குத் தகுந்த தண்டனையை

9:5 *வே.வா., “உள்ளங்கியோடும் மேலங்கியோடும்.” 9:9 *வே.வா., “பாதுகாப்புச் சுவரை.”

அதி. 9
a யாத் 29:41
b எண் 28:4, 5
c தானி 9:7
d எண் 32:14; 2நா 29:6
e 2ரா 10:32; 2நா 36:17
f 2ரா 17:22, 23; 2ரா 25:6, 7
g 2ரா 17:20
h நெ 9:32
i நெ 9:31; சங் 138:7
j நெ 9:36, 37
k எஸ்றா 1:1-3
l எஸ்றா 6:14; சக 4:9
m லேவி 18:24; உபா 12:30, 31; உபா 18:9-11
n யாத் 23:32; யாத் 34:15, 16; உபா 7:3, 4; யோசு 23:12, 13
o உபா 23:3, 6

நீங்கள் கொடுக்கவில்லை.[a] எங்களைக் காப்பாற்றி இங்கே கொண்டுவந்து
சேர்த்திருக்கிறீர்கள்.[b] **14** அப்படியிருக்கும்போது, அருவருப்பானதைச்
செய்கிற ஜனங்களோடு நாங்கள் சம்பந்தம்* பண்ணி மறுபடியும் உங்களு
டைய கட்டளைகளை எப்படி மீற முடியும்?[c] அப்படிச் செய்தால், நீங்கள்
கோபத்தில் பொங்கியெழுந்து எங்களில் ஒருவரைக்கூட விட்டுவைக்காமல்
எல்லாரையும் அடியோடு அழித்துவிட மாட்டீர்களா? **15** இஸ்ரவேலின்
கடவுளாகிய யெகோவாவே, நீங்கள் நீதியுள்ளவர்.[d] அதனால்தான், இன்று
கொஞ்சம் பேராவது மிஞ்சியிருக்கிறோம். இதோ, நாங்கள் குற்றவாளிகள்,
உங்கள் முன்னால் நிற்கக்கூட எங்களுக்கு அருகதை இல்லை."[e]

10 இப்படி, எஸ்றா உண்மைக் கடவுளுடைய ஆலயத்தின் முன்னால்
சாஷ்டாங்கமாக விழுந்து, கண்ணீரோடு ஜெபம் செய்துகொண்
டும்,[f] பாவங்களை ஒத்துக்கொண்டும் இருந்தார். அப்போது ஆண்கள்,
பெண்கள், பிள்ளைகள் என இஸ்ரவேலர்கள் பெருங்கூட்டமாக வந்து அவ
ரைச் சூழ்ந்துகொண்டு, கதறி அழுதார்கள். **2** பின்பு, ஏலாம் வம்சத்தைச்[g]
சேர்ந்த யெகியேலின்[h] மகன் செக்கனியா எஸ்றாவிடம், "நாங்கள் வேறு
தேசத்துப் பெண்களைக் கல்யாணம் செய்து,* கடவுளுக்குத் துரோகம் செய்
துவிட்டோம்.[i] ஆனாலும், இஸ்ரவேலுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது.
3 இப்போது, நம் கடவுளாகிய யெகோவாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்து,[j]
அந்தப் பெண்களையும் அவர்களுடைய பிள்ளைகளையும் அனுப்பிவிட
லாம். கடவுளுடைய அறிவுரை அதுதான்; அவருடைய கட்டளைகளுக்குப்
பயந்து வாழ்கிறவர்களுடைய[k] ஆலோசனையும் அதுதான். நாம் திருச்சட்
டம் சொல்கிறபடியே நடக்கலாம். **4** எழுந்திருங்கள், இது உங்கள் கடமை.
நாங்கள் உங்களோடு இருப்போம். தைரியமாக நடவடிக்கை எடுங்கள்"
என்று சொன்னார்.

5 உடனே எஸ்றா எழுந்து, "இதைச் செய்வதாக உறுதிமொழி கொடுங்
கள்" என்று முதன்மை குருமார்களிடமும் லேவியர்களிடமும் இஸ்ரவேலர்
கள் எல்லாரிடமும் கேட்டார்.[l] அவர்களும் உறுதிமொழி கொடுத்தார்கள்.
6 பின்பு, எஸ்றா உண்மைக் கடவுளுடைய ஆலயத்தின் முன்னாலிருந்து
எழுந்து எலியாசிபின் மகனான யெகோனானின் அறைக்குள்* போனார்.
ஆனாலும், சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் செய்திருந்த பாவத்தை
நினைத்துத் துக்கப்பட்டுக்கொண்டிருந்ததால் எஸ்றா எதையும் சாப்பிட
வில்லை, தண்ணீர்கூட குடிக்கவில்லை.[m]

7 அதன்பின், சிறையிருப்பிலிருந்து வந்த எல்லாரும் எருசலேமில் கூடி
வர வேண்டுமென்று யூதாவிலும் எருசலேமிலும் அறிவிப்பு செய்யப்பட்டது.
8 மூன்று நாட்களுக்குள் வந்து சேராதவர்களின் பொருள்கள் எல்லாமே பறி
முதல் செய்யப்படும் என்றும், சிறையிருப்பிலிருந்து வந்தவர்களின் சபையி
லிருந்து அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் அதிகாரிகளும்
பெரியோர்களும்* முடிவெடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.[n] **9** அதன்
படியே யூதா, பென்யமீன் கோத்திரங்களைச் சேர்ந்த ஆண்கள் எல்லாரும்
மூன்று நாட்களுக்குள் எருசலேமில் ஒன்றுகூடி வந்தார்கள். அதாவது, ஒன்
பதாம் மாதம் 20-ஆம் நாளில் கூடி வந்தார்கள். ஜனங்கள் எல்லாரும் என்ன
நடக்குமோ என்று பயந்துபோயிருந்தார்கள். மழை வேறு பலமாகப் பெய்து

9:14 *வே.வா., "கலப்புத் திருமணம்." **10:2** *வே.வா., "வீட்டிற்கு அழைத்துவந்து."
10:6 *வே.வா., "சாப்பாட்டு அறைக்குள்." **10:8** *வே.வா., "மூப்பர்களும்."

அதி. 9
a சங் 103:8, 10; புல 3:22
b சங் 106:46
c எஸ்றா 9:1; நெ 13:23
d நெ 9:33; தானி 9:7
e சங் 130:3; சங் 143:2

அதி. 10
f எஸ்றா 9:5, 6
g எஸ்றா 2:1, 7
h எஸ்றா 10:26, 44
i எஸ்றா 9:2
j 2ரா 11:17; 2நா 29:10; 2நா 34:31
k எஸ்றா 9:4
l நெ 10:28-30
m எஸ்றா 9:3, 4; தானி 9:3-5
n எஸ்றா 7:26

கொண்டிருந்தது. அதனால் அவர்கள் நடுங்கியபடியே, உண்மைக் கடவு
ளுடைய ஆலயத்தின் பிரகாரத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

10 குருவான எஸ்றா எழுந்து அவர்களிடம், “நீங்கள் வேறு தேசத்
துப் பெண்களைக் கல்யாணம் செய்து கடவுளுக்குத் துரோகம் செய்துவிட்
டீர்கள்.[a] இப்படி, இஸ்ரவேல் சுமக்கிற குற்றத்தைக் கூட்டிவிட்டீர்கள்.
11 அதனால், உங்கள் முன்னோர்களின் கடவுளான யெகோவாவிடம் உங்
களுடைய பாவத்தை ஒத்துக்கொண்டு, அவருக்குப் பிரியமானதைச் செய்
யுங்கள். வேறு தேசத்து ஜனங்களையும் மனைவிகளையும் விட்டுவில
குங்கள்”[b] என்றார். **12** அப்போது சபையார் எல்லாரும் மிகுந்த சத்தமாக,
“நீங்கள் சொன்னபடியே செய்கிறோம், இது எங்கள் கடமை. **13** ஆனால்
நாங்கள் நிறைய பேர் இருக்கிறோம், மழை வேறு பெய்வதால் வெளியி
லேயே நின்றுகொண்டிருக்க முடியாது. அதோடு, நாங்கள் மகா பெரிய
பாவம் செய்திருப்பதால் ஒன்று, இரண்டு நாட்களில் பிரச்சினையைத் தீர்க்க
முடியாது. **14** அதனால், தயவுசெய்து சபையார் எல்லாருடைய சார்பாக
வும் எங்களுடைய அதிகாரிகள் மட்டும் இங்கு இருக்கட்டும்.[c] வேறு
தேசத்துப் பெண்களைக் கல்யாணம் செய்திருக்கிற எல்லாரும் அவரவர் நக
ரத்தின் பெரியோர்களுடனும் நீதிபதிகளுடனும் குறிக்கப்பட்ட ஒரு நாளில்
வரட்டும். கடவுளுடைய கடும் கோபத்தைத் தணிப்பதற்கு என்ன செய்ய
வேண்டுமோ அதைச் செய்யட்டும்” என்றார்கள்.

15 ஆனால் ஆசகேலின் மகன் யோனத்தானும், திக்வாவின் மகன் யக்
சியாவும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். லேவியர்களான மெசுல்லாமும்
சபெதாயும்[d] அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள். **16** ஆனாலும், சிறை
யிருப்பிலிருந்து வந்தவர்கள், மற்ற எல்லாரும் ஒத்துக்கொண்டபடியே செய்
தார்கள். குருவாகிய எஸ்றாவும், பெயர்ப் பட்டியலில் இருந்த தந்தைவழிக்
குடும்பத் தலைவர்களும் பத்தாம் மாதம் முதலாம் நாளில் விசாரணைக்
காகக் கூடி வந்தார்கள். **17** வேறு தேசத்துப் பெண்களைக் கல்யாணம்
செய்திருந்த எல்லாரையும் முதலாம் மாதம் முதலாம் நாளுக்குள் விசா
ரித்து முடித்தார்கள். **18** குருமார்களின் மகன்கள் சிலரும் வேறு தேசத்
துப் பெண்களைக் கல்யாணம் செய்திருந்தது[e] விசாரணையில் தெரிய
வந்தது. அவர்களில், யோசதாக்கின் மகனாகிய யெசுவாவின்[f] மகன்களும்
சகோதரர்களுமான மாசெயா, எலியேசர், யாரிப், கெதலியா ஆகியவர்கள்
இருந்தார்கள். **19** இவர்கள் தங்களுடைய மனைவிகளை அனுப்பிவிடுவ
தாகவும், தாங்கள் செய்த குற்றத்துக்காக ஒரு செம்மறியாட்டுக் கடாவைப்[g]
பலி செலுத்துவதாகவும் வாக்குறுதி கொடுத்தார்கள்.

20 இம்மேரின் வம்சத்தார்:[h] அனானி, செபதியா; **21** ஆரீமின் வம்சத்
தார்:[i] மாசெயா, எலியா, செமாயா, யெகியேல், உசியா; **22** பஸ்கூரின்
வம்சத்தார்:[j] எலியோனாய், மாசெயா, இஸ்மவேல், நெதனெயேல், யோச
பத், எலியாசா. **23** லேவியர்கள்: யோசபத், சீமேயி, கெலாயா (அதாவது,
கேலிதா), பெத்தகியா, யூதா, எலியேசர்; **24** பாடகர்: எலியாசிப்; வாயிற்கா
வலர்கள்: சல்லூம், தேலெம், ஊரி.

25 இஸ்ரவேலர்களில் பாரோஷின் வம்சத்தார்:[k] ரமீயா, யெசியா,
மல்கீயா, மியாமின், எலெயாசார், மல்கீயா, பெனாயா; **26** ஏலாமின் வம்சத்
தார்:[l] மத்தனியா, சகரியா, யெகியேல்,[m] அப்தி, எரேமோத், எலியா;
27 சத்தூவின் வம்சத்தார்:[n] எலியோனாய், எலியாசிப், மத்தனியா,

அதி. 10
a நெ 13:23
b உபா 7:3, 4 நெ 13:3 2கொ 6:17
c எஸ்றா 9:1
d நெ 8:7 நெ 11:16
e எஸ்றா 9:1, 2 நெ 13:28 எசே 44:22 மல் 2:7, 8
f எஸ்றா 2:1, 2 எஸ்றா 3:2 சக 6:11
g லேவி 5:17, 18
h 1நா 24:3, 14 எஸ்றா 2:1, 37
i 1நா 24:3, 8 எஸ்றா 2:1, 39
j எஸ்றா 2:1, 38
k எஸ்றா 2:1, 3 நெ 3:25
l எஸ்றா 2:1, 7 எஸ்றா 8:1, 7
m எஸ்றா 10:2
n எஸ்றா 2:1, 8

எரேமோத், சாபாத், அசிசா; **28** பெபாயின் வம்சத்தார்:[a] யெகோனான்,
அனனியா, சாபாய், அத்லாயி; **29** பானியின் வம்சத்தார்: மெசுல்லாம், மல்
லூக், அதாயா, யாசூப், செயால், எரேமோத்; **30** பாகாத்-மோவாபின் வம்
சத்தார்:[b] அத்னா, கெலால், பெனாயா, மாசெயா, மத்தனியா, பெசலெயேல்,
பின்னூய், மனாசே; **31** ஆரீமின் வம்சத்தார்:[c] எலியேசர், இஸியா, மல்
கீயா,[d] செமாயா, ஷிமியோன், **32** பென்யமீன், மல்லூக், செமரியா;
33 ஆசூமின் வம்சத்தார்:[e] மத்னாய், மத்தத்தா, சாபாத், எலிப்பேலேத்,
எரெமாய், மனாசே, சீமேயி; **34** பானியின் வம்சத்தார்: மாதாய், அம்ராம்,
ஊவேல், **35** பெனாயா, பெதியா, கெல்லூ, **36** வனியா, மெரெமோத்,
எலியாசிப், **37** மத்தனியா, மத்னாய், யாசாய்; **38** பின்னூயின் வம்சத்தார்:
சீமேயி, **39** செலேமியா, நாத்தான், அதாயா, **40** மக்நாத்பாய், சாசாய்,
ஷாராய், **41** அசரெயேல், செலேமியா, செமரியா, **42** சல்லூம், அமரியா,
யோசேப்பு; **43** நேபோ ஊர் ஆண்கள்: எயியேல், மத்தித்தியா, சாபாத்,
செபினா, யதாய், யோவேல், பெனாயா. **44** இவர்கள் எல்லாரும் வேறு
தேசத்தைச் சேர்ந்த தங்கள் மனைவிகளையும்[f] அவர்களுக்குப் பிறந்த பிள்
ளைகளையும் அனுப்பிவிட்டார்கள்.[g]

அதி. 10
a எஸ்றா 2:1, 11
எஸ்றா 8:1, 11
b எஸ்றா 2:1, 6
c எஸ்றா 2:1, 32
d நெ 3:11
e எஸ்றா 2:1, 19
நெ 8:4
f உபா 7:3, 4
g எஸ்றா 10:
16, 17

நெகேமியா

முக்கியக் குறிப்புகள்

1 எருசலேமிலிருந்து ஒரு செய்தி (1-3)
நெகேமியாவின் ஜெபம் (4-11)

2 நெகேமியா எருசலேமுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார் (1-10)
நெகேமியா நகரத்தின் மதில்களைப் பார்வையிடுகிறார் (11-20)

3 மதில்கள் திரும்பக் கட்டப்படுகின்றன (1-32)

4 எதிர்ப்பின் மத்தியிலும் வேலை தொடர்ந்து நடக்கிறது (1-14)
ஆட்கள் ஆயுதங்களை வைத்துக்கொண்டே வேலை செய்கிறார்கள் (15-23)

5 ஜனங்கள் செய்யும் அநியாயத்திற்கு நெகேமியா முடிவுகட்டுகிறார் (1-13)
நெகேமியா சுயநலமில்லாமல் நடந்துகொள்கிறார் (14-19)

6 கட்டுமான வேலைக்குத் தொடர்ந்து எதிர்ப்பு (1-14)
52 நாட்களில் மதில் கட்டி முடிக்கப்படுகிறது (15-19)

7 நகரவாசல்களும் வாயிற்காவலர்களும் (1-4)
சிறையிருப்பிலிருந்து வந்தவர்களின் பட்டியல் (5-69)
ஆலயப் பணியாளர்கள் (46-56)
சாலொமோனுடைய ஊழியர்களின் வம்சத்தார் (57-60)
கட்டுமான வேலைக்காக நன்கொடைகள் (70-73)

8 திருச்சட்டத்தை ஜனங்களுக்கு முன்னால் வாசித்து விளக்குகிறார்கள் (1-12)
கூடாரப் பண்டிகை கொண்டாடப்படுகிறது (13-18)

9 ஜனங்கள் பாவங்களை ஒத்துக்கொள்கிறார்கள் (1-38)
யெகோவா மன்னிக்கிற கடவுள் (17)

10 திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதாக ஜனங்கள் ஒத்துக்கொள்கிறார்கள் (1-39)
“நாங்கள் எங்களுடைய கடவுளுடைய ஆலயத்தை அலட்சியப்படுத்த மாட்டோம்” (39)

11 எருசலேமில் திரும்பவும் ஜனங்கள் குடியேற்றப்படுகிறார்கள் (1-36)
12 குருமார்களும் லேவியர்களும் (1-26)
மதிலின் அர்ப்பண விழா (27-43)
ஆலய சேவைக்கு ஆதரவு (44-47)
13 நெகேமியா சீர்கேடுகளைச் சரிசெய்கிறார் (1-31)
பத்திலொரு பாகம் கொடுக்கப்பட வேண்டும் (10-13)
ஓய்வுநாளை அவமதிக்கக் கூடாது (15-22)
கலப்புத் திருமணம் கண்டிக்கப்படுகிறது (23-28)

அதி. 1
a நெ 1:11, நெ 5:14, நெ 10:1
b எஸ்தர் 1:2, எஸ்தர் 3:15, தானி 8:2
c நெ 7:2
d எரே 52:30
e 1ரா 9:7, நெ 9:36, 37, சங் 79:4
f 2ரா 25:10
g நெ 2:17, புல 1:4
h 2நா 20:3, எஸ்றா 8:21
i உபா 7:9, தானி 9:4
j சங் 88:1, லூ 18:7
k 2நா 29:6, எஸ்றா 9:6
l சங் 106:6
m லேவி 27:34, எண் 36:13, உபா 12:1, நெ 9:34
n லேவி 26:33, உபா 4:27, உபா 28:64

1 அகலியாவின் மகனான நெகேமியாவின்[*][a] வார்த்தைகள்: 20-ஆம் வருஷம் கிஸ்லே[#] மாதத்தில் நான் சூசான்[△][b] கோட்டையில்[⊠] இருந்தேன். **2** அப்போது, என் சகோதரர்களில் ஒருவரான அனானியும்[c] வேறு சிலரும் யூதாவிலிருந்து வந்தார்கள். பாபிலோனிலிருந்து விடுதலையாகிப்[d] போன யூதர்களைப் பற்றியும் எருசலேமைப் பற்றியும் நான் அவர்களிடம் விசாரித்தேன். **3** அதற்கு அவர்கள், "கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போகப்படாமல் யூதா மாகாணத்தில் விடப்பட்ட ஜனங்கள் மோசமான நிலைமையில் இருக்கிறார்கள், ரொம்பவே அவமானப்பட்டுப் போயிருக்கிறார்கள்.[e] எருசலேமின் மதில்கள் இடிந்து கிடக்கின்றன.[f] அதன் நுழைவாசல்கள் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கின்றன"[g] என்று சொன்னார்கள்.

4 இதைக் கேட்டதும் நான் அப்படியே உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன். அதன்பின் சில நாட்களுக்கு அழுது புலம்பிக்கொண்டும், விரதம் இருந்துகொண்டும்,[h] பரலோகத்தின் கடவுளிடம் ஜெபம் செய்துகொண்டும் இருந்தேன். **5** "பரலோகத்தின் கடவுளாகிய யெகோவாவே, அதிசயமும் அற்புதமுமானவரே, உங்கள்மேல் அன்புவைத்து உங்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களிடம்[i] மாறாத அன்பைக் காட்டுபவரே, ஒப்பந்தத்தைக் காப்பவரே, **6** தயவுசெய்து அடியேனைப் பாருங்கள், இன்று நான் செய்யும் ஜெபத்தைக் கேளுங்கள். உங்களுடைய ஊழியர்களான இஸ்ரவேலர்கள் செய்த பாவங்களை உங்கள்முன் ஒத்துக்கொண்டு ராத்திரி பகலாய் அவர்களுக்காகக் கெஞ்சுகிறேன்.[j] நானும் என் ஜனங்களும்[*] பாவம் செய்துவிட்டோம்.[k] **7** உங்களுக்குப் பிடிக்காத வழியில் போய்விட்டோம்.[l] உங்களுடைய ஊழியரான மோசே மூலம் நீங்கள் கொடுத்த கட்டளைகளையும் விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும்[m] பின்பற்றாமல் இருந்துவிட்டோம்.

8 மோசே மூலம் நீங்கள் சொன்னதை[*] தயவுசெய்து நினைத்துப் பாருங்கள். நீங்கள் அவரிடம், 'என் பேச்சைக் கேட்காமல் போனால், உங்களை மற்ற தேசங்களுக்குத் துரத்திவிடுவேன்.[n] **9** ஆனால் என் வழிக்குத் திரும்பி வந்து, என் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால், நீங்கள் பூமியின் எந்த மூலைக்குத் துரத்தப்பட்டிருந்தாலும் அங்கிருந்து உங்களைக்

1:1 [*]அர்த்தம், "'யா' ஆறுதலளிக்கிறார்." "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். [#]இணைப்பு B15-ஐப் பாருங்கள். [△]வே.வா., "சூசா." [⊠]வே.வா., "அரண்மனையில்." **1:6** [*]நே.மொ., "என் தகப்பன் வீட்டாரும்." **1:8** [*]வே.வா., "எச்சரித்ததை."

கூட்டிக்கொண்டு வருவேன்.[a] என் பெயரின் மகிமைக்காக நான் தேர்ந்தெ
டுத்திருக்கிற இடத்தில்[b] உங்களைக் குடிவைப்பேன்' என்று சொன்னீர்களே.
10 இஸ்ரவேலர்கள் உங்களுடைய ஊழியர்கள், உங்களுடைய ஜனங்கள்.
அவர்களை உங்களுடைய மகா வல்லமையாலும் கைபலத்தாலும் விடுவித்
தீர்கள்.[c] **11** யெகோவாவே, அடியேனின் ஜெபத்தையும் உங்களுடைய
பெயருக்குப் பயந்து நடக்க விரும்புகிறவர்களின் ஜெபத்தையும் தயவு
செய்து கேளுங்கள். அடியேன் நினைப்பது இன்று கைகூடி வருவதற்குத்
தயவுசெய்து உதவுங்கள். ராஜா எனக்குக் கரிசனை காட்டும்படி செய்யுங்
கள்"[d] என்று ஜெபம் செய்தேன்.

நான் ராஜாவுக்குப் பானம் பரிமாறுகிறவனாக இருந்தேன்.[e]

2 அது அர்தசஷ்டா ராஜா[f] ஆட்சி செய்த 20-ஆம் வருஷம்,[g] நிசான்*
மாதம். ராஜாவுக்கு முன்னால் திராட்சமது வைக்கப்பட்டிருந்தது. எப்
போதும்போல் நான் திராட்சமதுவை எடுத்து ராஜாவுக்குக் கொடுத்தேன்.[h]
அன்று நான் துக்கமாக இருந்தேன். ராஜாவுக்கு முன்னால் ஒருநாளும் நான்
அப்படி இருந்ததே இல்லை. **2** அதனால் ராஜா என்னிடம், "உன் உடம்
புக்குத்தான் ஒன்றுமில்லையே, அப்புறம் ஏன் உன் முகம் இப்படி வாடியி
ருக்கிறது? உன் மனதுதான்* சரியில்லை என்று நினைக்கிறேன்" என்றார்.
அதைக் கேட்டதும் நான் ரொம்பவே பயந்துபோனேன்.

3 உடனே அவரிடம், "ராஜா நீடூழி வாழ்க! என்னுடைய முன்னோர்கள்
அடக்கம் செய்யப்பட்ட நகரம் பாழடைந்து கிடக்கிறது, அதன் நுழைவாசல்
கள் எரிந்து நாசமாகிவிட்டன.[i] அப்படியிருக்கும்போது என் முகம் வாடா
மல் இருக்குமா, ராஜாவே?" என்று கேட்டேன். **4** அதற்கு ராஜா, "நான்
உனக்கு ஏதாவது செய்ய வேண்டுமா?" என்று கேட்டார். உடனடியாக, பர
லோகத்தின் கடவுளிடம் ஜெபம் செய்தேன்.[j] **5** பின்பு ராஜாவிடம், "உங்க
ளுக்கு நல்லதாகப் பட்டால், என்மேல் உங்களுக்குப் பிரியம் இருந்தால்,
யூதாவுக்குப் போய் என் முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்ட நகரத்
தைத் திரும்பக் கட்டுவதற்கு[k] என்னை அனுப்புங்கள்" என்று சொன்னேன்.
6 அப்போது, பட்டத்து ராணியும் ராஜாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.
ராஜா என்னிடம், "அங்கே போவதற்கு எத்தனை நாளாகும், எப்போது
திரும்பி வருவாய்?" என்று கேட்டார். என்னை அனுப்ப ராஜா விரும்புகி
றார் என்று தெரிந்ததும்,[l] திரும்பி வர இவ்வளவு காலம்[m] ஆகும் என்று
சொன்னேன்.

7 பின்பு ராஜாவிடம், "நான் ஆற்றுக்கு அப்பாலுள்ள* பிரதேசத்தின்[n]
வழியாகத்தான் யூதாவுக்குப் போக வேண்டும். அதனால் உங்களுக்கு நல்ல
தாகப் பட்டால், அந்தப் பிரதேசத்தின் வழியாகப் போக என்னை அனுமதிக்
கும்படி அங்கே இருக்கிற ஆளுநர்களுக்குக் கடிதங்களை எழுதிக் கொடுங்
கள். **8** ஆலயத்தைச் சேர்ந்த கோட்டையின் கதவுகளுக்கும்,[o] நகரத்தின்
மதில்களுக்கும்,[p] நான் தங்கப்போகிற வீட்டுக்கும் வேண்டிய மரச்சட்டங்க
ளைத் தரும்படி ராஜாவுடைய வன* அதிகாரியான ஆசாபுக்கும் கடிதம்
எழுதிக் கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். என் கடவுள் எனக்கு
உறுதுணையாக இருந்ததால்[q] ராஜா அவற்றை எழுதிக் கொடுத்தார்.[r]

2:1 *இணைப்பு B15-ஐப் பாருங்கள். **2:2** *நே.மொ., "இதயம்தான்." **2:7** *அதா
வது, "யூப்ரடிஸ் ஆற்றுக்கு மேற்கிலுள்ள." **2:8** *வே.வா., "ராஜ பூங்காவின்."

அதி. 1
a உபா 30:1-4
b உபா 12:5; சங் 132:13
c லேவி 25:42; உபா 5:15; உபா 9:26, 29
d 1ரா 8:49, 50; எஸ்றா 7:6; சங் 106:46; நீதி 21:1
e நெ 2:1

அதி. 2
f எஸ்றா 7:1; நெ 13:6
g நெ 1:1
h நெ 1:11
i நெ 1:2, 3
j 1சா 1:13
k தானி 9:25
l நெ 1:11
m நெ 5:14; நெ 13:6
n யோசு 1:4; எஸ்றா 5:3
o நெ 7:2
p நெ 1:3
q எஸ்றா 7:6
r எஸ்றா 7:21

9 அதுமட்டுமல்ல, என்னோடு படைத் தலைவர்களையும் குதிரைவீரர்க
ளையும் அனுப்பினார். நான் அங்கிருந்து புறப்பட்டு ஆற்றுக்கு அப்பா
லுள்ள பிரதேசத்தின் ஆளுநர்களிடம் வந்து ராஜாவின் கடிதங்களைக்
கொடுத்தேன். **10** இஸ்ரவேல் ஜனங்களுக்கு நல்லது செய்ய ஒருவர் வந்
திருப்பதை ஓரோனியனான சன்பல்லாத்தும்[a] அம்மோனிய[b] அதிகாரியான
தொபியாவும்[c] கேள்விப்பட்டபோது மிகவும் எரிச்சல் அடைந்தார்கள்.

11 கடைசியில், நான் எருசலேமுக்கு வந்து சேர்ந்தேன். அங்கே மூன்று
நாட்கள் தங்கினேன். **12** ராத்திரியில் எழுந்து, சில ஆட்களைக் கூட்டிக்
கொண்டு வெளியே கிளம்பினேன். ஆனால் எருசலேமுக்காக நான் என்
னென்ன செய்ய வேண்டுமென்று என் கடவுள் என் உள்ளத்தில் உணர்த்
தினாரோ, அதையெல்லாம் நான் யாரிடமும் சொல்லவில்லை. நான்
ஏறிப் போன கழுதையைத் தவிர வேறெந்த மிருகமும் என்னிடம்
இல்லை. **13** அன்றைக்கு ராத்திரி 'பள்ளத்தாக்கு நுழைவாசல்'[d] வழியாக
'பெரிய பாம்பின் நீரூற்றை' கடந்து 'குப்பைமேட்டு நுழைவாசலுக்கு'[e] வந்து
சேர்ந்தேன். இடிந்து கிடக்கும் எருசலேம் மதில்களையும் நெருப்பில் எரிக்
கப்பட்டிருந்த அதன் நுழைவாசல்களையும்[f] பார்வையிட்டேன். **14** அங்
கிருந்து 'நீரூற்று நுழைவாசலுக்கும்'[g] 'ராஜாவின் குளத்துக்கும்' போனேன்.
ஆனால், என்னுடைய கழுதை போவதற்கு அங்கு இடமே இருக்கவில்லை.
15 ஆனாலும், அன்றைக்கு ராத்திரி பள்ளத்தாக்கின்*[h] வழியாகவே போய்
மதில்களைப் பார்வையிட்டேன். பின்பு, 'பள்ளத்தாக்கு நுழைவாசல்' வழியா
கத் திரும்பி வந்துவிட்டேன்.

16 நான் எங்கே போனேன், என்ன செய்தேன் என்றெல்லாம் துணை
அதிகாரிகளுக்குத்[i] தெரியாது. ஏனென்றால், அவர்களிடமும் யூதர்களிட
மும் குருமார்களிடமும் முக்கியப் பிரமுகர்களிடமும் மற்ற வேலையாட்
களிடமும் அதுவரை நான் எதையுமே சொல்லவில்லை. **17** கடைசியில்
அவர்களிடம், "நம்முடைய நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது
என்பது உங்களுக்கே தெரியும். எருசலேம் பாழாய்க் கிடப்பதையும்,
அதன் நுழைவாசல்கள் எரிந்து நாசமாகியிருப்பதையும் நீங்களே பார்க்கிறீர்
கள். இனியும் இந்தக் கேவலமான நிலைமை நமக்கு வேண்டாம். வாருங்
கள், எருசலேமின் மதில்களைத் திரும்பக் கட்டுவோம்" என்று சொன்னேன்.
18 பின்பு, என் கடவுள் எனக்கு எப்படி உறுதுணையாக இருந்தார்*[j] என்ப
தையும், ராஜா என்னிடம் என்ன சொன்னார்[k] என்பதையும் அவர்களி
டம் சொன்னேன். அதற்கு அவர்கள், "நாம் உடனடியாகப் போய் மதிலைக்
கட்ட ஆரம்பிக்கலாம்" என்று சொல்லி, அந்த நல்ல வேலையைச் செய்ய
ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தினார்கள்.[l]

19 இந்த விஷயத்தை ஓரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனிய[m]
அதிகாரியான தொபியாவும்,[n] அரேபியனான கேஷேமும்[o] கேள்விப்பட்ட
போது எங்களைக் கேலி செய்தார்கள்.[p] எங்களைக் கேவலமாகப் பேசி,
"என்ன செய்கிறீர்கள்? ராஜாவுக்கு எதிராகக் கலகம் செய்கிறீர்களோ?" என்று
கேட்டார்கள்.[q] **20** அதற்கு நான், "வேலையை நல்லபடியாக முடிக்க பர
லோகத்தின் கடவுள் எங்களுக்கு உதவுவார்.[r] அவருடைய ஊழியர்களான
நாங்கள் எருசலேம் நகரத்தைத் திரும்பக் கட்டத்தான் போகிறோம். இங்கே

அதி. 2
a நெ 4:1; நெ 6:2
b நெ 13:1
c நெ 2:19; நெ 4:3; நெ 6:14; நெ 13:7
d 2நா 26:9
e நெ 3:13
f நெ 1:3; புல 1:4; புல 2:9
g நெ 3:15; நெ 12:37
h 2சா 15:23; யோவா 18:1
i நெ 4:14
j எஸ்றா 7:6, 28; நெ 2:7, 8
k தானி 9:25
l ஆகா 1:14
m நெ 13:1, 2
n நெ 6:14
o நெ 4:7; நெ 6:1, 2
p சங் 79:4
q நெ 6:6
r சங் 127:1

2:15 * அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்." **2:18** * நே.மொ., "நன்மை செய்யும் என் கடவுளுடைய கை எப்படி என்மேல் இருந்தது."

உங்களுக்கு எந்தப் பங்கும் இல்லை, உரிமையும் இல்லை; எருசலேமின் வர
லாற்றில் உங்களுக்கு இடமும் இல்லை”*[a] என்று சொன்னேன்.

3 தலைமைக் குருவான எலியாசிபும்[b] அவருடைய சகோதரர்களான
குருமார்களும் ‘ஆட்டு நுழைவாசலை’[c] கட்டினார்கள். அதை அர்ப்ப
ணம் செய்து*[d] அதற்குக் கதவுகளை வைத்தார்கள். அவர்கள் மேயா
கோபுரம்வரையிலும்[e] அதைத் தொடர்ந்து அனானெயேல் கோபுரம்வரை
யிலும்[f] மதிலைக் கட்டி அர்ப்பணம் செய்தார்கள். **2** அடுத்த பகுதியை,
எரிகோ ஊர் ஆண்கள்[g] கட்டினார்கள். அடுத்த பகுதியை, இம்ரியின் மகன்
சக்கூர் கட்டினார்.

3 அசெனாவின் வம்சத்தார் ‘மீன் நுழைவாசலை’[h] கட்டினார்கள். அதற்கு
நிலைகளை வைத்து, கதவுகளையும் தாழ்ப்பாள்களையும் தாழ்ப்பாள் கட்
டைகளையும்[i] பொருத்தினார்கள். **4** அடுத்த பகுதியை, அக்கோசுக்குப்
பிறந்த ஊரியாவின் மகன் மெரெமோத்[j] பழுதுபார்த்தார். அடுத்த பகு
தியை, மெஷெசாபெயேலுக்குப் பிறந்த பெரகியாவின் மகன் மெசுல்லாம்[k]
பழுதுபார்த்தார். அடுத்த பகுதியை, பானாவின் மகன் சாதோக் பழுதுபார்த்
தார். **5** அடுத்த பகுதியை, தெக்கோவா ஊர் மக்கள்[l] பழுதுபார்த்தார்கள்.
ஆனால், அவர்களுடைய முக்கியப் பிரமுகர்கள் வேலை செய்ய மறுத்தார்
கள். ஏனென்றால், மேற்பார்வை செய்கிறவர்களின் கீழ் வேலை செய்வதைக்
கௌரவக் குறைச்சலாக நினைத்தார்கள்.

6 பசெயாவின் மகன் யொயதாவும் பேசோதியாவின் மகன் மெசுல்லா
மும் ‘பழைய நகரின் நுழைவாசலை’[m] பழுதுபார்த்தார்கள். அதற்கு நிலை
களை வைத்து, கதவுகளையும் தாழ்ப்பாள்களையும் தாழ்ப்பாள் கட்டைக
ளையும் பொருத்தினார்கள். **7** அடுத்த பகுதியை, கிபியோனியனான[n]
மெலதீயாவும் மிஸ்பாவைச்[o] சேர்ந்த மெரோனோத்தியனான யாதோனும்
பழுதுபார்த்தார்கள். இவர்கள் ஆற்றுக்கு அப்பாலுள்ள* பிரதேசத்தின்[p]
ஆளுநருடைய ஆட்சியின் கீழ் இருந்தார்கள். **8** அடுத்த பகுதியை, தங்க
ஆசாரிகளில் ஒருவரான அராயாவின் மகன் ஊசியேல் பழுதுபார்த்தார்.
அடுத்த பகுதியை, வாசனைத் தைலம் செய்கிறவர்களில் ஒருவரான அன
னியா பழுதுபார்த்தார். இவர்கள் இரண்டு பேரும் ‘அகன்ற மதில்’[q]
வரையாக கல்தளம் அமைத்தார்கள். **9** அடுத்த பகுதியை, ஹூரின் மக
னும் எருசலேமின் பாதி மாகாணத்துக்குத் தலைவருமான ரெபாயா பழுது
பார்த்தார். **10** அடுத்ததாக, அருமாப்பின் மகன் யெதாயா தன்னுடைய
வீட்டுக்கு எதிரில் இருந்த பகுதியைப் பழுதுபார்த்தார். அடுத்த பகுதியை,
ஆசாப்நெயாவின் மகன் அத்தூஸ் பழுதுபார்த்தார்.

11 மற்றொரு பகுதியையும் ‘அடுப்புகளின் கோபுரத்தையும்,’[r] ஆரீமின்
மகன்[s] மல்கீயாவும் பாகாத்-மோவாபின் மகன்[t] அசூபும் பழுதுபார்த்தார்
கள். **12** அடுத்த பகுதியை, அல்லோகேசின் மகனும் எருசலேமின் பாதி
மாகாணத்துக்குத் தலைவருமான சல்லூம் தன்னுடைய மகள்களோடு
சேர்ந்து பழுதுபார்த்தார்.

13 ஆனூனும் சனோவா ஊர்[u] ஜனங்களும் ‘பள்ளத்தாக்கு நுழை
வாசலை’[v] பழுதுபார்த்தார்கள். அதற்கு நிலைகளை வைத்து, கதவுகளை
யும் தாழ்ப்பாள்களையும் தாழ்ப்பாள் கட்டைகளையும் பொருத்தினார்கள்.

2:20 *வே.வா., “எருசலேமில் உங்கள் நினைவாக ஒன்றும் இருக்காது.” **3:1** *வே.வா., “புனிதப்படுத்தி.” **3:7** *அதாவது, “யூப்ரடிஸ் ஆற்றுக்கு மேற்கிலுள்ள.”

அதி. 2
a எஸ்றா 4:1-3

அதி. 3
b நெ 12:10; நெ 13:4, 28
c யோவா 5:2
d நெ 12:30
e நெ 12:38, 39
f எரே 31:38; சக 14:10
g எஸ்றா 2:1, 34
h 2நா 33:1, 14; செப் 1:10
i நெ 2:7, 8
j எஸ்றா 8:33; நெ 3:21
k நெ 3:30; நெ 6:17, 18
l நெ 3:27; ஆமோ 1:1
m நெ 12:38, 39
n 2சா 21:2
o யோசு 18:21, 26; 2நா 16:6; எரே 40:6
p ஆதி 15:18
q நெ 12:38
r நெ 12:38
s எஸ்றா 2:1, 32
t எஸ்றா 2:1, 6
u யோசு 15:20, 34; நெ 11:25, 30
v 2நா 26:9

அவர்கள் 'குப்பைமேட்டு நுழைவாசல்'[a] வரையாக சுமார் 1,460 அடி* நீளத்
துக்கு மதிலைப் பழுதுபார்த்தார்கள். **14** ரேகாபின் மகனும் பெத்-கேரேம்
மாகாணத்துக்குத்[b] தலைவருமான மல்கீயா, 'குப்பைமேட்டு நுழைவாசலை'
பழுதுபார்த்தார். அதற்குக் கதவுகளையும் தாழ்ப்பாள்களையும் தாழ்ப்பாள்
கட்டைகளையும் பொருத்தினார்.

15 கொல்லோசேயின் மகனும் மிஸ்பா மாகாணத்துக்குத்[c] தலைவரு
மான சல்லுன், 'நீரூற்று நுழைவாசலை'[d] பழுதுபார்த்தார். அதற்குக் கூரை
அமைத்து கதவுகளையும் தாழ்ப்பாள்களையும் தாழ்ப்பாள் கட்டைகளை
யும் பொருத்தினார். அதோடு, 'ராஜாவின் தோட்டத்துக்கு'[e] பக்கத்திலுள்ள
'சேலா* குளத்தின்' மதிலை,[f] 'தாவீதின் நகரத்திலிருந்து'[g] கீழே இறங்குகிற
'படிக்கட்டு'[h] வரையாகவும் பழுதுபார்த்தார்.

16 அடுத்ததாக, அஸ்பூகின் மகனும் பெத்-சூரின்[i] பாதி மாகாணத்
துக்குத் தலைவருமான நெகேமியா, 'தாவீதின் கல்லறைத் தோட்டத்துக்கு'[j]
முன்னால் ஆரம்பித்து, வெட்டப்பட்ட குளம் வரையாகவும்[k] 'படைவீரர்க
ளின் பாசறை' வரையாகவும் பழுதுபார்த்தார்.

17 அடுத்த பகுதிகளை லேவியர்கள் பழுதுபார்த்தார்கள். முதலாவதாக,
பானியின் மகன் ரெகூம் பழுதுபார்த்தார். அடுத்ததாக, கேகிலாவின்[l] பாதி
மாகாணத்துக்குத் தலைவரான அஷபியா தன் மாகாணத்தின் சார்பில் பழு
துபார்த்தார். **18** அடுத்த பகுதியை, அவர்களுடைய சகோதரர்கள் பழுது
பார்த்தார்கள். முக்கியமாக, எனாதாத்தின் மகனும் கேகிலாவின் பாதி மாகா
ணத்துக்குத் தலைவருமான பாபாய் பழுதுபார்த்தார்.

19 அடுத்ததாக, மேட்டுப் பகுதிக்கு முன்னால் ஆரம்பித்து முட்டுச்சுவ
ருக்குப்[m] பக்கத்திலுள்ள ஆயுதக்கிடங்கு வரையான பகுதியை, யெசுவா
வின் மகனும்[n] மிஸ்பாவின் தலைவருமான ஏத்சேர் பழுதுபார்த்தார்.

20 அடுத்ததாக, முட்டுச்சுவரில் ஆரம்பித்து தலைமைக் குருவான எலி
யாசிபின்[o] வீட்டுவாசல் வரையுள்ள பகுதியை, சாபாயின் மகன்[p] பாருக்
மிக மும்முரமாகப் பழுதுபார்த்தார்.

21 அடுத்ததாக, எலியாசிபுடைய வீட்டின் வாசலிலிருந்து அதன் முனை
வரையுள்ள பகுதியை, அக்கோசுக்குப் பிறந்த ஊரியாவின் மகன் மெரெ
மோத்[q] பழுதுபார்த்தார்.

22 அடுத்ததாக, யோர்தான்* பிரதேசத்தைச்[r] சேர்ந்த குருமார்கள் பழுது
பார்த்தார்கள். **23** அடுத்ததாக, பென்யமீனும் அசூபும் தங்களுடைய வீட்
டுக்கு எதிரே உள்ள பகுதியைப் பழுதுபார்த்தார்கள். அடுத்ததாக, அனனெ
யாவுக்குப் பிறந்த மாசெயாவின் மகன் அசரியா தன் வீட்டுக்குப் பக்கத்தில்
பழுதுபார்த்தார். **24** அடுத்ததாக, அசரியாவின் வீட்டிலிருந்து முட்டுச்சு
வர்[s] வரைக்கும், அதைத் தொடர்ந்து மூலைவரைக்கும் உள்ள பகுதியை,
எனாதாத்தின் மகன் பின்னூய் பழுதுபார்த்தார்.

25 அடுத்ததாக, முட்டுச்சுவருக்கும் ராஜாவின் அரண்மனையை[t] ஒட்டிய
கோபுரத்துக்கும், அதாவது 'காவலர் முற்றத்தில்'[u] இருந்த உயர்ந்த கோபுரத்
துக்கும், எதிரே உள்ள பகுதியை உசாயின் மகன் பாலால் பழுதுபார்த்தார்.
அடுத்த பகுதியை, பாரோஷின் மகன்[v] பெதாயா பழுதுபார்த்தார்.

3:13 *நே.மொ., "1,000 முழ." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **3:15** *அர்த்தம், "கால்வாய்." **3:22** *அல்லது, "பக்கத்திலுள்ள."

அதி. 3
a நெ 2:13
b எரே 6:1
c யோசு 18:21, 26
d நெ 2:14, நெ 12:37
e எரே 39:4
f ஏசா 22:9
g 2சா 5:7
h நெ 12:37
i யோசு 15:20, 58, 2நா 11:5-7
j 1ரா 2:10, 2நா 16:13, 14
k நெ 2:14
l யோசு 15:20, 44
m 2நா 26:9, நெ 3:24
n எஸ்றா 2:1, 40
o நெ 3:1, நெ 13:4
p எஸ்றா 10:28, 44
q எஸ்றா 8:33
r ஆதி 13:10
s நெ 3:19
t 2சா 5:11, நெ 12:37
u எரே 37:21
v எஸ்றா 2:1, 3

26 ஓபேலில்[a] வாழ்ந்த ஆலயப் பணியாளர்கள்,*[b] கிழக்கே இருக்கிற
'தண்ணீர் நுழைவாசலுக்கும்'[c] மதிலுக்கு வெளிப்பக்கமாக நீட்டிக்கொண்டி
ருக்கும் கோபுரத்துக்கும் முன்னாலுள்ள பகுதிவரை பழுதுபார்த்தார்கள்.
27 அடுத்ததாக, மதிலுக்கு வெளிப்பக்கமாக நீட்டிக்கொண்டிருக்கும்
பெரிய கோபுரத்தின் முன்னால் ஆரம்பித்து ஓபேலின் மதில் வரையுள்ள
மற்றொரு பகுதியை, தெக்கோவா ஊர் மக்கள்[d] பழுதுபார்த்தார்கள்.
28 'குதிரை நுழைவாசல்'[e] தொடங்கி, குருமார்கள் ஒவ்வொருவரும்
அவரவர் வீட்டுக்கு எதிரே உள்ள பகுதியைப் பழுதுபார்த்தார்கள்.
29 அடுத்ததாக, இம்மேரின் மகன் சாதோக்[f] தன்னுடைய வீட்டுக்கு
எதிரே உள்ள பகுதியைப் பழுதுபார்த்தார்.
அடுத்த பகுதியை, 'கிழக்கு நுழைவாசலின்' காவலரும்[g] செக்கனியாவின்
மகனுமான செமாயா பழுதுபார்த்தார்.
30 அடுத்த பகுதியை, செலேமியாவின் மகனான அனனியாவும் சாலா
பின் ஆறாவது மகனான ஆனூனும் பழுதுபார்த்தார்கள்.
அடுத்ததாக, பெரகியாவின் மகனான மெசுல்லாம்[h] தன்னுடைய வீட்
டுக்கு* முன்னால் உள்ள பகுதியைப் பழுதுபார்த்தார்.
31 அடுத்ததாக, தங்க ஆசாரிகளின் சங்கத்தைச் சேர்ந்த மல்கீயா,
'சோதனை நுழைவாசலின்' எதிரில் ஆலயப் பணியாளர்களும்* வியாபாரி
களும் தங்கியிருக்கிற வீடுவரைக்கும்,[i] மூலையில் உள்ள மேல்மாடிவரைக்
கும் பழுதுபார்த்தார்.
32 மூலையில் உள்ள மேல்மாடிக்கும் 'ஆட்டு நுழைவாசலுக்கும்'[j] இடை
யிலிருந்த பகுதியை, தங்க ஆசாரிகளும் மற்ற வியாபாரிகளும் பழுதுபார்த்
தார்கள்.

4 நாங்கள் மதிலைத் திரும்பக் கட்டுவதைப் பற்றிக் கேள்விப்பட்டதும்,
சன்பல்லாத்[k] கோபத்தில் கொதித்துப்போனான். அதனால், யூதர்களை
மட்டம்தட்டிப் பேச ஆரம்பித்தான். **2** "கையாலாகாத இந்த யூதர்கள்
என்ன செய்வதாக நினைக்கிறார்கள்? அவர்களாகவே மதிலைக் கட்டிவிடு
வார்களோ? எரிந்து பாழாகக் கிடக்கிற கற்களை[l] வைத்தே அதைக் கட்டி
எழுப்புவார்களோ? ஒரே நாளில் வேலையை முடித்துவிட்டு பலி செலுத்து
வார்களோ?" என்று தன்னுடைய சகோதரர்களுக்கும் சமாரியப் படைவீரர்
களுக்கும் முன்னால் ஏளனமாகப் பேசினான்.
3 அவனுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அம்மோனியனான[m]
தொபியா,[n] "ஏதோ மதில் கட்டுகிறார்களாம், ஒரு குள்ளநரி ஏறினால்கூட
அது பொலபொலவென்று இடிந்து விழுந்துவிடும்" என்று சொன்னான்.
4 அப்போது நான், "எங்கள் கடவுளே, கேளுங்கள். அந்த ஆட்கள் எங்
களைக் கேவலப்படுத்துகிறார்கள்.[o] அவர்கள் வாய்க்கு வந்தபடி பேசுவதெல்
லாம் அவர்களுக்கே பலிக்கும்படி செய்யுங்கள்.[p] சூறையாடப்பட்ட பொரு
ளைப் போல அவர்களை எதிரிகளின் கையில் கொடுங்கள். அவர்களை
வேறு தேசத்துக்குத் துரத்துங்கள். **5** மதில் கட்டுகிறவர்களை அவர்கள்
மட்டமாகப் பேசுகிறார்கள். அவர்களுடைய குற்றத்தைக் கண்டும்காணாமல்

அதி. 3
a 2நா 27:1, 3; 2நா 33:1, 14; நெ 11:21
b யோசு 9:3, 27; 1நா 9:2; எஸ்றா 2:43–54; எஸ்றா 8:17, 20
c நெ 8:1; நெ 12:37
d நெ 3:5
e எரே 31:40
f நெ 13:13
g 1நா 9:17, 18
h நெ 6:17, 18
i நெ 3:26
j நெ 3:1; யோவா 5:2

அதி. 4
k நெ 2:10; நெ 6:1, 2; நெ 13:28
l நெ 4:10
m நெ 13:1, 2
n நெ 2:19
o சங் 123:3
p சங் 79:12

3:26 *வே.வா., "நிதனீமியர்கள்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்கள்; அர்ப்பணிக்கப்பட்டவர்கள்." **3:30** *வே.வா., "அறைக்கு." **3:31** *வே.வா., "நிதனீமியர்களும்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்களும்; அர்ப்பணிக்கப்பட்டவர்களும்."

விட்டுவிடாதீர்கள், அவர்களுடைய பாவத்தை மன்னிக்காதீர்கள்”[a] என்று
ஜெபம் செய்தேன்.

6 பின்பு, நாங்கள் தொடர்ந்து மதிலைக் கட்டினோம். அதிலிருந்த எல்லா
இடைவெளிகளையும் இணைத்து, பாதி உயரம்வரை கட்டி முடித்தோம்.
ஜனங்கள் முழு மூச்சோடு* வேலை செய்துகொண்டே இருந்தார்கள்.

7 எருசலேமின் மதில்களைப் பழுதுபார்க்கும் வேலை மும்முரமாக நடப்
பதையும், அதன் இடைவெளிகள் அடைக்கப்பட்டு வருவதையும் சன்பல்
லாத்தும் தொபியாவும்[b] அரேபியர்களும்[c] அம்மோனியர்களும் அஸ்தோத்
தியர்களும்[d] கேள்விப்பட்டவுடன் கொதித்தெழுந்தார்கள். **8** கும்பலாகப்
போய் எருசலேமைத் தாக்கி அங்கே கலவரம் உண்டாக்க சதித்திட்டம் தீட்
டினார்கள். **9** ஆனால், நாங்கள் எங்களுடைய கடவுளிடம் ஜெபம் செய்து
விட்டு, பாதுகாப்புக்காக ராத்திரி பகலாகக் காவலர்களை நிறுத்தினோம்.

10 இருந்தாலும் யூதா ஜனங்கள், “வேலை செய்கிறவர்கள்* ரொம்பவே
ஓய்ந்துவிட்டார்கள், அள்ள அள்ள கல்லும் மண்ணும் வந்துகொண்டே
இருக்கிறது. மதிலை நம்மால் கட்டி முடிக்கவே முடியாது” என்று சொன்
னார்கள்.

11 எங்கள் எதிரிகள்கூட, “நாம் திடுதிப்பென்று போய் அவர்களைத்
தீர்த்துக்கட்டிவிடலாம், அவர்களுடைய வேலையை முடக்குவதற்கு அது
தான் வழி” என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

12 எதிரிகளைச் சுற்றி வாழ்ந்த யூதர்கள் எங்களிடம் வந்தபோதெல்
லாம், “அந்த ஆட்கள் எல்லா பக்கத்திலிருந்தும் வந்து தாக்கப்போகிறார்
கள்!” என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.

13 மதிலுக்குப் பின்புறம் எதிரிகளுக்குச் சாதகமாக இருக்கிற மிகத் தாழ்
வான இடங்களில் நான் காவலுக்கு ஆட்களை நிறுத்தினேன். வாள், ஈட்டி,
வில் ஆகியவற்றோடு குடும்பம் குடும்பமாக அவர்களை நிற்க வைத்தேன்.
14 அவர்கள் பயப்படுவதை நான் பார்த்தவுடனே, முக்கியப் பிரமுகர்களிட
மும்[e] துணை அதிகாரிகளிடமும் ஜனங்களிடமும், “எதிரிகளை நினைத்துப்
பயப்படாதீர்கள்.[f] அதிசயமானவரும் அற்புதமானவருமான யெகோ
வாவை[g] நினைத்துப் பாருங்கள். உங்கள் சகோதரர்களுக்காகவும் மனைவி
மக்களுக்காகவும் வீடுகளுக்காகவும் துணிந்து போராடுங்கள்” என்று
சொன்னேன்.

15 எதிரிகள் தங்களுடைய சதி அம்பலமானதையும் தங்களுடைய திட்
டத்தை உண்மைக் கடவுள் குலைத்துவிட்டதையும் புரிந்துகொண்டார்கள்.
அதன்பின், நாங்கள் எல்லாரும் மதிலைக் கட்டும் வேலையில் மறுபடியுமாக
இறங்கினோம். **16** அந்த நாளிலிருந்து, என்னுடைய ஆட்களில் பாதிப்
பேர் வேலை செய்தார்கள்,[h] மீதிப் பேர் ஈட்டியோடும் கேடயத்தோடும்
வில்லோடும் உடல்கவசத்தோடும் நின்றார்கள். மதிலைக் கட்டிக்கொண்டி
ருந்த யூதா ஜனங்களுக்கு அவர்களுடைய தலைவர்கள்[i] ஆதரவு தந்
தார்கள்.* **17** சுமை சுமப்பவர்கள் ஒரு கையில் வேலை செய்தார்கள், இன்
னொரு கையில் ஆயுதத்தைப் பிடித்திருந்தார்கள். **18** கட்டுமான வேலை
செய்த ஒவ்வொருவரும் தங்களுடைய இடுப்பில் வாளைக் கட்டிக்கொண்
டார்கள். ஊதுகொம்பை ஊத வேண்டியவன்[j] எனக்குப் பக்கத்தில் நின்றான்.

அதி. 4
a எரே 18:23
b நெ 4:3
c நெ 2:19
d யோசு 13:2, 3; நெ 13:23
e நெ 13:17
f எண் 14:9; உபா 20:3; யோசு 1:9
g உபா 7:21; உபா 10:17
h நெ 5:16
i நெ 11:1
j எண் 10:9; 2நா 13:12

4:6 *வே.வா., “இதயப்பூர்வமாக.” **4:10** *வே.வா., “சுமை சுமக்கிறவர்கள்.” **4:16** *நே.மொ., “யூதா ஜனங்களுக்குப் பின்னால் நின்றார்கள்.”

19 பின்பு, நான் முக்கியப் பிரமுகர்களிடமும் துணை அதிகாரிகளி
டமும் ஜனங்களிடமும், “இன்னும் நிறைய வேலை பாக்கி இருக்கிறது. நாம்
மதிலைச் சுற்றிலும் தூரதூரமாக நிற்கிறோம். **20** அதனால், ஊதுகொம்
பின் சத்தத்தைக் கேட்கும்போது எல்லாரும் இங்கே கூடிவர வேண்டும். நம்
முடைய கடவுள் நமக்காகப் போர் செய்வார்”[a] என்றேன்.

21 அதனால், விடியற்காலையில் ஆரம்பித்து நட்சத்திரங்கள் தோன்றும்
வரை எங்களில் பாதிப் பேர் வேலை செய்துகொண்டிருந்தார்கள், மீதிப்
பேர் ஈட்டிகளோடு நின்றுகொண்டிருந்தார்கள். **22** அப்போது நான் ஜனங்
களைப் பார்த்து, “ராத்திரியில் ஆண்கள் தங்கள் உதவியாளருடன் எருசலே
முக்குள் தங்க வேண்டும். அவர்கள் ராத்திரியில் மாறிமாறி நம்மைக்
காவல் காப்பார்கள், பகலில் வேலை செய்வார்கள்” என்று சொன்னேன்.
23 நானும், என் சகோதரர்களும், என் உதவியாளர்களும்,[b] என் பின்
னால் வந்த காவலர்களும் எங்கள் உடைகளைக் கழற்றவே இல்லை; வலது
கையில் ஆயுதத்தைப் பிடித்துக்கொண்டே இருந்தோம்.

5 பின்பு, ஆண்களும் பெண்களும்* தங்களுடைய யூத சகோதரர்கள்
செய்த அநியாயங்களைப் பொறுக்க முடியாமல் புலம்பித் தள்ளினார்
கள்.[c] **2** சிலர், “நாங்கள் குழந்தைகுட்டிகளோடு நிறைய பேர் இருக்கி
றோம். தானியத்தைக் கடன் வாங்கித்தான் எல்லாரும் உயிர்வாழ வேண்டி
யிருக்கிறது” என்று சொன்னார்கள். **3** இன்னும் சிலர், “வயல்களையும்
திராட்சைத் தோட்டங்களையும் வீடுகளையும் அடமானம் வைத்துதான்
இந்தப் பஞ்சகாலத்தில் தானியம் வாங்குகிறோம்” என்று சொன்னார்கள்.
4 வேறு சிலர், “ராஜாவுக்கு வரி செலுத்துவதற்காக* எங்கள் வயல்களையும்
திராட்சைத் தோட்டங்களையும் அடமானம் வைத்துவிட்டோம்.[d] **5** நாங்
களும் எங்கள் சகோதரர்களும் ஒரே இரத்தம்தானே, எங்களுடைய பிள்
ளைகளும் அவர்களுடைய பிள்ளைகள் மாதிரிதானே! ஆனால், நாங்கள்
மட்டும் எங்கள் பிள்ளைகளை அடிமைகளாக விற்க வேண்டியிருக்கிறது,
எங்களுடைய பெண் பிள்ளைகள் சிலரை ஏற்கெனவே விற்றுவிட்டோம்.[e]
எங்கள் வயல்களும் திராட்சைத் தோட்டங்களும் மற்றவர்கள் கைக்குப்
போய்விட்டதால், இப்போது எங்களால் எதுவுமே செய்ய முடியவில்லை”
என்று புலம்பினார்கள்.

6 அவர்கள் புலம்பியதைக் கேட்டபோது எனக்குக் கோபம் பற்
றிக்கொண்டு வந்தது. **7** இந்தப் பிரச்சினையைப் பற்றி யோசித்துப் பார்த்
தேன். பின்பு, முக்கியப் பிரமுகர்களையும் துணை அதிகாரிகளையும்
பார்த்து, “உங்களுடைய சகோதரர்களிடமிருந்தே ஏன் வட்டி வாங்குகிறீர்
கள்?”[f] என்று சொல்லி, அவர்களுடைய தப்பைத் தட்டிக்கேட்டேன்.

அதோடு, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஜனங்கள் எல்லாரை
யும் கூடிவரச் சொன்னேன். **8** நான் அவர்களிடம், “நம்முடைய யூத சகோ
தரர்கள் மற்ற தேசத்தாரிடம் விற்கப்பட்டிருந்தார்கள். நாங்கள் முடிந்தளவுக்கு
அவர்களை மீட்டுக்கொண்டு வந்தோம். இப்போது அவர்களை நீங்களே
விற்கலாமா?[g] அவர்களை மறுபடியும் நாங்கள் மீட்க வேண்டுமா?” என்று
கேட்டேன். அவர்கள் பதில் சொல்ல முடியாமல் அமைதியாகிவிட்டார்கள்.
9 பின்பு நான் அவர்களிடம், “நீங்கள் செய்வது கொஞ்சம்கூட சரியில்லை.

5:1 *நே.மொ., “அவர்களுடைய மனைவிகளும்.” **5:4** *வே.வா., “கப்பம் கட்டு
வதற்காக.”

அதி. 4
a உபா 1:30
யோசு 23:10
b நெ 13:19

அதி. 5
c உபா 15:9
d உபா 28:15, 33
நெ 9:36, 37
e யாத் 21:7
உபா 15:12
f யாத் 22:25
உபா 23:19
சங் 15:5
எசே 22:12
g லேவி 25:35
உபா 15:7, 8
எரே 34:8, 9

அதி. 5
a லேவி 25:36
நெ 5:15
b எசே 18:5, 8
c நெ 5:3
d எஸ்றா 8:1
e நெ 10:1
f நெ 2:1
g நெ 13:6
h 1கொ 9:14, 15
2தெ 3:8
i நெ 5:9
2கொ 11:9
2கொ 12:14
j அப் 20:33
2கொ 12:17

நீங்கள் நம்முடைய கடவுளுக்குப் பயந்து நடக்க வேண்டாமா?[a] எதிரி
கள் நம்மைக் கேவலமாகப் பேசுவதற்கு இடம் கொடுக்கலாமா? **10** நானும்
என் சகோதரர்களும் உதவியாளர்களும் பணத்தையும் தானியத்தையும் கட
னாகக் கொடுத்துவருகிறோம். இனி வட்டிக்குக் கடன் கொடுப்பதைத் தயவு
செய்து நாம் நிறுத்திவிடலாம்.[b] **11** ஜனங்களுடைய வயல்களையும், திராட்
சைத் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும், வீடுகளையும், நீங்கள்
வட்டியாக வாங்குகிற நூற்றிலொரு பங்கு* பணத்தையும், தானியத்தையும்,
புதிய திராட்சமதுவையும், எண்ணெயையும் இன்றைக்கே தயவுசெய்து திருப்
பிக் கொடுத்துவிடுங்கள்”[c] என்று சொன்னேன்.

12 அதற்கு அந்த ஜனங்கள், “நாங்கள் எல்லாவற்றையும் திருப்பிக்
கொடுத்துவிடுகிறோம், இனிமேல் எதையும் கேட்க மாட்டோம். நீங்கள்
சொல்கிறபடியே செய்கிறோம்” என்றார்கள். அப்போது நான் குருமார்
களை வரவழைத்து, சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதாக அந்த
ஜனங்களைச் சத்தியம் செய்து கொடுக்கச் சொன்னேன். **13** அதோடு,
என் மேலங்கியின் மடிப்புகளை உதறி, “சொன்ன வார்த்தையைக் காப்பாற்
றாத எவனையும் உண்மைக் கடவுள் இதேபோல் உதறித்தள்ளட்டும். அவ
னுடைய வீட்டிலிருந்து இதேபோல் அவனை உதறித்தள்ளி, உடைமைகள்
எதுவும் இல்லாமல் செய்துவிடட்டும்” என்று சொன்னேன். அதற்கு சபை
யார் எல்லாரும், “ஆமென்!”* என்று சொல்லி யெகோவாவைப் புகழ்ந்தார்
கள். கொடுத்த வாக்கை அவர்கள் காப்பாற்றினார்கள்.

14 அர்தசஷ்டா ராஜா[d] என்னை யூதாவின் ஆளுநராக[e] நியமித்த நாளி
லிருந்து, அதாவது அவருடைய ஆட்சியின் 20-ஆம் வருஷத்திலிருந்து[f]
32-ஆம் வருஷம் வரைக்கும்,[g] இந்த 12 வருஷங்களாக நானும் என்
சகோதரர்களும் ஆளுநருக்குக் கொடுக்கப்படுகிற உணவை வாங்கிச் சாப்
பிடவில்லை.[h] **15** ஆனால், எனக்கு முன்பு ஆளுநர்களாக இருந்தவர்கள்
உணவுக்காகவும் திராட்சமதுவுக்காகவும் தினசரி 40 வெள்ளி சேக்கலை*
வசூலித்து, ஜனங்களைக் கஷ்டப்படுத்திவந்தார்கள். அந்த ஆளுநர்களின்
உதவியாளர்களும் ஜனங்களை அடக்கி ஒடுக்கினார்கள். ஆனால் நான்,
கடவுளுக்குப் பயந்து நடந்ததால் அப்படிச் செய்யவில்லை.[i]

16 மதிலைக் கட்டுகிறவர்களோடு சேர்ந்து நானும் வேலை செய்தேன்.
என்னுடைய உதவியாளர்கள் எல்லாரும்கூட வேலை செய்ய அங்கே கூடி
வந்தார்கள். நாங்கள் எந்த நிலத்தையும் எடுத்துக்கொள்ளவில்லை.[j]
17 யூதர்களிலும் துணை அதிகாரிகளிலும் 150 பேருக்கு நான் உணவு
கொடுத்தேன். மற்ற தேசங்களிலிருந்து வந்தவர்களுக்கும் உணவு கொடுத்
தேன். **18** என்னுடைய செலவில் தினமும் ஒரு காளையும், கொழுமை
யான ஆறு செம்மறியாடுகளும், பறவைகளும் சமைக்கப்பட்டன. அதோடு,
பத்து நாட்களுக்கு ஒரு தடவை விதவிதமான திராட்சமது ஏராளமாகப் பரி
மாறப்பட்டது. அப்படியிருந்தும், ஆளுநருக்குக் கொடுக்கப்படும் உணவை
நான் கேட்டு வாங்கவில்லை. ஏனென்றால் ஜனங்கள் ஏற்கெனவே கஷ்டப்
பட்டு சேவை* செய்துகொண்டிருந்தார்கள். **19** என் கடவுளே, இந்த

5:11 * அதாவது, “மாதந்தோறும் வாங்குகிற 1 சதவீத பங்கு.” **5:13** * அதாவது, “அப்படியே ஆகட்டும்!” **5:15** * ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **5:18** * வே.வா., “ராஜாவுக்காக வேலை.”

ஜனங்களுக்கு நான் செய்த உதவிகளை மறந்துவிடாமல், என்னைப் பிரியத்
தோடு நினைத்துப் பாருங்கள்.[a]

6 நான் மதிலைத் திரும்பக் கட்டி[b] அதன் எல்லா இடைவெளிகளையும்
அடைத்துவிட்ட விஷயத்தை சன்பல்லாத்தும், தொபியாவும்,[c] அரேபி
யனான கேஷேமும்,[d] மற்ற எதிரிகளும் கேள்விப்பட்டார்கள். (ஆனா
லும், நுழைவாசல்களில் அதுவரை நான் கதவுகளைப் பொருத்தவில்லை.)[e]
2 சன்பல்லாத்தும் கேஷேமும் உடனடியாக என்னிடம் ஆட்களை
அனுப்பி, "ஓனோ சமவெளியில் உள்ள[f] கிராமப்புறத்தில் நாம் சந்தித்துப்
பேசலாம், வா" என்று சொன்னார்கள். உண்மையில் அவர்கள் என்னைத்
தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டியிருந்தார்கள். **3** அதனால் நான் அவர்களிடம்
ஆட்களை அனுப்பி, "நான் ஒரு பெரிய வேலையைச் செய்துகொண்டிருக்
கிறேன். அதை விட்டுவிட்டு உங்களைப் பார்க்க வந்தால் வேலை நின்று
போகும். என்னால் வர முடியாது" என்று சொன்னேன். **4** நான்கு தடவை
அவர்கள் அதே விஷயத்தைச் சொல்லி அனுப்பினார்கள், ஒவ்வொரு தட
வையும் நான் அதே பதிலைச் சொல்லி அனுப்பினேன்.

5 அதன்பின், ஐந்தாவது தடவையாக சன்பல்லாத் அதே விஷயத்தை
ஒரு கடிதத்தில் எழுதி, அதற்கு முத்திரை போடாமல் தன் உதவியாளனிடம்
கொடுத்து அனுப்பினான். **6** அதில், "நீ மற்ற யூதர்களோடு சேர்ந்து கலகம்
செய்யத் திட்டம் போட்டிருப்பதாகவும்,[g] அதற்காகத்தான் மதிலைக் கட்டுவ
தாகவும் சுற்றியுள்ள எல்லா தேசத்தாரும் பேசிக்கொள்கிறார்கள். கேஷேம்
கூட[h] அப்படித்தான் சொல்கிறான். கிடைத்த தகவல்களை வைத்துப் பார்க்
கும்போது, நீ எந்த நேரத்திலும் அவர்களுடைய ராஜாவாகிவிடுவாய்.
7 அதனால்தான், 'யூதாவை ஆள ராஜா வந்துவிட்டார்!' என்று எருசலேம்
முழுக்க உன்னைப் பற்றி அறிவிப்பதற்கு தீர்க்கதரிசிகளை நியமித்திருக்கி
றாய். இதெல்லாம் ராஜாவின் காதுக்கு எட்டப்போகிறது. அதனால், நீ வந்து
எங்களைச் சந்தித்துப் பேசு" என்று எழுதியிருந்தான்.

8 அதற்கு நான், "நீ சொல்வது எதுவுமே உண்மையில்லை. சும்மா கதை
அளக்காதே" என்று பதில் அனுப்பினேன். **9** அவர்கள் எல்லாரும் எங்
களைப் பயமுறுத்தப் பார்த்தார்கள். "யூதர்கள் சோர்ந்துபோய் வேலையை
விட்டுவிடுவார்கள், அவர்களால் மதிலைக் கட்டி முடிக்கவே முடியாது"[i]
என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் நான், "கடவுளே, எனக்குப்
பலம் கொடுங்கள்"*[j] என்று ஜெபம் செய்தேன்.

10 பின்பு, மெகேதபேலின் பேரனும் தெலாயாவின் மகனுமான செமா
யாவைப் பார்க்கப் போனேன். அவன் அவனுடைய வீட்டில் அடைபட்டுக்
கிடந்தான். என்னைப் பார்த்ததும், "எதிரிகள் உங்களைக் கொலை செய்ய
வருகிறார்கள், அதுவும் இன்றைக்கு ராத்திரியே வரப்போகிறார்கள். அத
னால், நாம் உண்மைக் கடவுளுடைய ஆலயத்துக்குள் போய்க் கதவுகளை
மூடிக்கொண்டு பத்திரமாக இருக்கலாம்" என்று சொன்னான். **11** ஆனால்
நான், "என்னை மாதிரி ஒரு ஆள் இப்படி ஓடி ஒளிந்துகொள்ளலாமா? என்
னைப் போல ஒருவன் ஆலயத்துக்குள் போனால் மரண தண்டனையிலி
ருந்து தப்ப முடியுமா?[k] நான் வர மாட்டேன்!" என்று சொன்னேன்.
12 கடவுள் அவனை அனுப்பியிருக்க முடியாது என்றும், எனக்கு எதி
ராகத் தீர்க்கதரிசனம் சொல்ல தொபியாவும் சன்பல்லாத்தும்தான்[l] அவ

6:9 * நே.மொ., "என் கைகளைப் பலப்படுத்துங்கள்."

அதி. 5
a நெ 13:14; சங் 18:24; ஏசா 38:3; மல் 3:16

அதி. 6
b தானி 9:25
c நெ 2:10; நெ 4:3
d நெ 2:19; நெ 4:7
e நெ 3:1, 3
f 1நா 8:12; நெ 11:31, 35
g எஸ்றா 4:14, 15
h நெ 2:19
i எஸ்றா 4:4
j சங் 68:35; சங் 138:3; ஏசா 41:10
k எண் 1:51; எண் 18:7; 2நா 26:18, 19
l நெ 2:10

னுக்குக் கூலி கொடுத்திருக்க வேண்டும் என்றும் நான் புரிந்துகொண்டேன்.
13 என்னைப் பயமுறுத்தி பாவம் செய்ய வைக்கத்தான் அவர்கள் அவனுக்
குக் கூலி கொடுத்திருந்தார்கள். என் பெயரைக் கெடுத்து, என்னைக் கேவ
லப்படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களுடைய எண்ணம்.

14 “என் கடவுளே, தொபியாவும்[a] சன்பல்லாத்தும் செய்கிற அநியாயங்
களைப் பாருங்கள். நொவதியாளும் மற்ற தீர்க்கதரிசிகளும்கூட என்னை
எப்போதும் மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள், அவர்களைச் சும்மா விடாதீர்
கள்” என்று நான் ஜெபம் செய்தேன்.

15 மொத்தம் 52 நாட்களில், அதாவது எலூல்* மாதம் 25-ஆம் நாளில்,
மதில் கட்டி முடிக்கப்பட்டது.

16 அதைக் கேள்விப்பட்ட எதிரிகளும், அதைப் பார்த்த சுற்று
வட்டார ஜனங்களும் ரொம்பவே அவமானப்பட்டுப்போனார்கள்.[b] எங்கள்
கடவுளுடைய உதவியால்தான் இந்த வேலையை முடித்தோம் என்பதைப்
புரிந்துகொண்டார்கள். **17** அந்த நாட்களில், யூதாவைச் சேர்ந்த முக்கியப்
பிரமுகர்கள்[c] தொபியாவுக்குப் பல கடிதங்களை அனுப்பி வைத்தார்கள்,
தொபியாவும் அவர்களுக்குப் பதில் அனுப்பி வைத்தான். **18** யூதாவில்
நிறைய பேர் அவனை ஆதரிப்பதாக உறுதிமொழி எடுத்தார்கள். ஏனென்
றால், அவன் ஆராகின் மகனாகிய[d] செக்கனியாவுக்கு மருமகனாக இருந்
தான். அதோடு, அவனுடைய மகன் யெகோனான், பெரகியாவுக்குப் பிறந்த
மெசுல்லாமின்[e] மகளைக் கல்யாணம் செய்திருந்தான். **19** அந்த முக்கியப்
பிரமுகர்கள் தொபியாவைப் பற்றி என்னிடம் புகழ்ந்து பேசிக்கொண்டே
இருப்பார்கள். பின்பு, நான் சொன்னதை அவனுக்குத் தெரியப்படுத்துவார்
கள். உடனே, தொபியா என்னை மிரட்டி கடிதங்கள் அனுப்புவான்.[f]

7 மதில் கட்டி முடிக்கப்பட்டதும்[g] நான் அதற்குக் கதவுகளை
வைத்தேன்.[h] பின்பு, வாயிற்காவலர்களையும்[i] பாடகர்களையும்[j] லேவி
யர்களையும்[k] நியமித்தேன். **2** எருசலேமை நிர்வகிக்கும் பொறுப்பை,
என் சகோதரன் அனானிக்கும்[l] கோட்டைத்[m] தலைவர் அனனியாவுக்கும்
கொடுத்தேன். அனனியா மிகவும் நம்பகமானவர், மற்றவர்களைவிட அதிக
பயபக்தியுள்ளவர்.[n] **3** நான் அவர்கள் இரண்டு பேரிடமும், “வெயில் ஏறும்
வரை எருசலேமின் நுழைவாசல்கள் திறக்கப்படக் கூடாது. இருட்டுவதற்கு
முன்பே வாயிற்காவலர்கள் அவற்றின் கதவுகளை மூடி தாழ்ப்பாள் போட
வேண்டும். எருசலேமில் குடியிருக்கிற ஜனங்களிலிருந்து நீங்கள் காவலர்க
ளைத் தேர்ந்தெடுத்து, சிலரைக் காவல் இடங்களிலும் மற்றவர்களை அவர
வர் வீட்டுக்கு முன்னாலும் நிறுத்துங்கள்” என்று சொன்னேன். **4** நகரம்
பெரிதாகவும் விசாலமாகவும் இருந்தது. ஆனால், அங்கு கொஞ்சம் பேர்
தான் குடியிருந்தார்கள்,[o] ஒருசில வீடுகள்தான் கட்டப்பட்டிருந்தன.

5 அந்தச் சமயத்தில், முக்கியப் பிரமுகர்களையும் துணை அதிகாரி
களையும் ஜனங்களையும் ஒன்றுகூட்டி அவர்களுடைய பெயர்களை வம்
சாவளிப் பட்டியலில் பதிவு செய்வதற்கு[p] என் கடவுள் என் உள்ளத்தைத்
தூண்டினார். அப்போது, முதலில் வந்தவர்களுடைய வம்சாவளிப் பட்டிய
லின் புத்தகத்தை நான் பார்த்தேன். அதில் இப்படி எழுதியிருந்தது:

6 மாகாணத்தைச் சேர்ந்த இந்த ஜனங்களை நேபுகாத்நேச்சார்
ராஜா[q] பாபிலோனுக்குப் பிடித்துக்கொண்டு போயிருந்தான்.[r] அவர்கள்

அதி. 6
a நெ 4:3, 4
b நெ 4:7; சங் 129:5
c நெ 5:7
d எஸ்றா 2:1, 5
e நெ 3:4
f நெ 6:9; நெ 6:10, 13

அதி. 7
g நெ 2:17; நெ 6:15; தானி 9:25
h நெ 3:1, 6, 13
i 1நா 26:1; எஸ்றா 2:1, 42
j 1நா 9:33; எஸ்றா 2:1, 41
k எஸ்றா 3:8
l நெ 1:2
m நெ 2:8
n நெ 5:15
o நெ 11:1
p 1நா 9:1; எஸ்றா 2: 59, 62
q 2ரா 25:1; தானி 3:1
r 2ரா 24:12, 14; 2நா 36:17, 20; எரே 39:9; எரே 52: 15, 28

6:15 *இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

அங்கிருந்து எருசலேமுக்கும் யூதாவுக்கும் திரும்பி வந்து அவரவர் நகரங்
களில் குடியேறினார்கள்.[a] **7** அவர்கள் எல்லாரும் செருபாபேல்,[b]
யெசுவா,[c] நெகேமியா, அசரியா, ராமியா, நகமானி, மொர்தெகாய், பில்சான்,
மிஸ்பெரேத், பிக்வாய், நெகூம், பாணா ஆகியவர்களுடன் திரும்பி வந்தி
ருந்தார்கள்.

திரும்பி வந்த இஸ்ரவேல் ஆண்களின் எண்ணிக்கை
இதுதான்:[d] **8** பாரோஷின் வம்சத்தார் 2,172; **9** செப்பத்தியாவின் வம்சத்
தார் 372; **10** ஆராகின் வம்சத்தார்[e] 652; **11** பாகாத்-மோவாபின் பரம்ப
ரையில்[f] வந்த யெசுவா மற்றும் யோவாபின் வம்சத்தார்[g] 2,818; **12** ஏலா
மின் வம்சத்தார்[h] 1,254; **13** சத்தூவின் வம்சத்தார் 845; **14** சக்காயின்
வம்சத்தார் 760; **15** பின்னூயின் வம்சத்தார் 648; **16** பெபாயின் வம்சத்
தார் 628; **17** அஸ்காத்தின் வம்சத்தார் 2,322; **18** அதோனிகாமின் வம்
சத்தார் 667; **19** பிக்வாயின் வம்சத்தார் 2,067; **20** ஆதினின் வம்சத்தார்
655; **21** அதேரின் வழிவந்த எசேக்கியாவின் வம்சத்தார் 98; **22** ஆசூ
மின் வம்சத்தார் 328; **23** பேசாயின் வம்சத்தார் 324; **24** ஆரீப்பின்
வம்சத்தார் 112; **25** கிபியோனின் வம்சத்தார்[i] 95; **26** பெத்லகேம் மற்
றும் நெத்தோபா ஊர் ஆண்கள் 188; **27** ஆனதோத் ஊர்[j] ஆண்கள் 128;
28 பெத்-அஸ்மாவேத் ஊர் ஆண்கள் 42; **29** கீரியாத்-யெயாரீம்,[k] கெப்
பிரா, மற்றும் பேரோத் ஊர்[l] ஆண்கள் 743; **30** ராமா மற்றும் கெபா ஊர்[m]
ஆண்கள் 621; **31** மிக்மாஸ் ஊர்[n] ஆண்கள் 122; **32** பெத்தேல்[o] மற்றும்
ஆயி ஊர்[p] ஆண்கள் 123; **33** மற்றொரு நேபோ ஊரின் ஆண்கள் 52;
34 மற்றொரு ஏலாமின் வம்சத்தார் 1,254; **35** ஆரீமின் வம்சத்தார் 320;
36 எரிகோ ஊர் ஆண்கள் 345; **37** லோது, ஆதீத், மற்றும் ஓனோ ஊர்[q]
ஆண்கள் 721; **38** சேனாகா ஊர் ஆண்கள் 3,930.

39 குருமார்கள்:[r] யெதாயாவின் வம்சத்தாராகிய யெசுவாவின் குடும்பத்
தார் 973; **40** இம்மேரின் வம்சத்தார் 1,052; **41** பஸ்கூரின் வம்சத்தார்[s]
1,247; **42** ஆரீமின் வம்சத்தார்[t] 1,017.

43 லேவியர்கள்:[u] ஒதாவியாவின் வழிவந்த கத்மியேலின் வம்சத்தா
ரான[v] யெசுவாவின் வம்சத்தார் 74. **44** பாடகர்கள்:[w] ஆசாபின்[x] வம்சத்
தார் 148. **45** வாயிற்காவலர்கள்:[y] சல்லூமின் வம்சத்தார், அதேரின் வம்
சத்தார், தல்மோனின் வம்சத்தார், அக்கூபின்[z] வம்சத்தார், அதிதாவின்
வம்சத்தார், மற்றும் ஷோபாயின் வம்சத்தார் மொத்தம் 138 பேர்.

46 ஆலயப் பணியாளர்கள்:*[a] சீகாவின் வம்சத்தார், அசுபாவின் வம்
சத்தார், தபாகோத்தின் வம்சத்தார், **47** கேரோசின் வம்சத்தார், சீயா
வின் வம்சத்தார், பாதோனின் வம்சத்தார், **48** லெபானாவின் வம்சத்தார்,
அகாபாவின் வம்சத்தார், சல்மாயின் வம்சத்தார், **49** ஆனானின் வம்சத்
தார், கித்தேலின் வம்சத்தார், காகாரின் வம்சத்தார், **50** ராயாவின் வம்சத்
தார், ரேத்சீனின் வம்சத்தார், நெகோதாவின் வம்சத்தார், **51** காசாமின் வம்
சத்தார், ஊத்சாவின் வம்சத்தார், பசெயாவின் வம்சத்தார், **52** பெசாயின்
வம்சத்தார், மெயூனீமின் வம்சத்தார், நெபிஷசீமின் வம்சத்தார், **53** பக்பூக்
கின் வம்சத்தார், அகுபாவின் வம்சத்தார், அர்கூரின் வம்சத்தார், **54** பஸ்
லீத்தின் வம்சத்தார், மெகிதாவின் வம்சத்தார், அர்ஷாவின் வம்சத்தார்,

---

7:46 * வே.வா., "நிதனீமியர்கள்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்கள்; அர்ப்பணிக்கப்பட்
டவர்கள்."

அதி. 7
a எஸ்றா 2:1
b எஸ்றா 1:8, 11
சக 4:9
மத் 1:12
c எஸ்றா 3:8
எஸ்றா 5:2
ஆகா 1:14
சக 3:1
d எஸ்றா 2:2-35
e நெ 6:17, 18
f எஸ்றா 10:30, 44
g எஸ்றா 8:1, 9
h எஸ்றா 10:26, 44
i யோசு 11:19
2சா 21:2
நெ 3:7
j யோசு 21:8, 18
எரே 1:1
k 1சா 7:2
l யோசு 18:25, 28
m யோசு 18:21, 24
n 1சா 13:5
o 1ரா 12:32
p யோசு 7:2
q நெ 6:2
நெ 11:31, 35
r எஸ்றா 2:36-39
s எஸ்றா 10:22, 44
t 1நா 24:3, 8
u எஸ்றா 2:40
v எஸ்றா 3:9
w 1நா 25:7
எஸ்றா 2:41
x 1நா 6:31, 39
y எஸ்றா 2:42
நெ 7:1
z 1நா 9:2, 17
நெ 11:19
நெ 12:25
a யோசு 9:3, 27
1நா 9:2
எஸ்றா 2:43-54
எஸ்றா 2:58

55 பர்கோசின் வம்சத்தார், சிசெராவின் வம்சத்தார், தாமாவின் வம்சத்தார்,
56 நெத்சியாவின் வம்சத்தார், அதிபாவின் வம்சத்தார்.

57 சாலொமோனுடைய ஊழியர்களின் வம்சத்தார்:[a] சோதாயின் வம்சத்
தார், சொபெரேத்தின் வம்சத்தார், பெரிதாவின் வம்சத்தார், **58** யாலாவின்
வம்சத்தார், தர்கோனின் வம்சத்தார், கித்தேலின் வம்சத்தார், **59** செப்
பத்தியாவின் வம்சத்தார், அத்தீலின் வம்சத்தார், பொகெரேத்-செபாயிமின்
வம்சத்தார், ஆமோனின் வம்சத்தார். **60** ஆலயப் பணியாளர்களும்*[b]
சாலொமோனுடைய ஊழியர்களின் வம்சத்தாரும் மொத்தம் 392 பேர்.

61 தெல்-மெலா, தெல்-அர்சா, கேருப், ஆதோன், இம்மேர் ஆகிய இடங்
களிலிருந்து சிலர் வந்தார்கள். ஆனால், தந்தைவழிக் குடும்பத்தையும் பூர்வீ
கத்தையும் பற்றிய அத்தாட்சிகள் அவர்களிடம் இல்லை. அதனால், தாங்கள்
இஸ்ரவேலர்கள் என்பதை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை.[c] அவர்க
ளுடைய விவரம்: **62** தெலாயாவின் வம்சத்தார், தொபியாவின் வம்சத்
தார், மற்றும் நெகோதாவின் வம்சத்தார் 642 பேர். **63** குருமார்களின் வம்
சத்தார்: அபாயாவின் வம்சத்தார், அக்கோசின் வம்சத்தார்,[d] பர்சிலாவின்[e]
வம்சத்தார்; இந்த பர்சிலா, கீலேயாத்தியனான பர்சிலாவின் மகள்களில் ஒருத்
தியைக் கல்யாணம் செய்ததால் அவளுடைய குடும்பப் பெயரால் அழைக்
கப்பட்டார். **64** இவர்கள் எல்லாரும் தங்களுடைய வம்சாவளியை உறுதி
செய்ய பதிவேடுகளைத் தேடினார்கள். ஆனால், அவற்றைக் கண்டுபிடிக்க
முடியாததால் குருமார்களாகச் சேவை செய்யும் தகுதியை இழந்தார்கள்.[f]
65 குருவானவர் வந்து ஊரீமையும் தும்மீமையும்[g] வைத்து கடவுளை விசா
ரிக்கும்வரை மகா பரிசுத்தமான உணவுப் பொருள்கள் எதையும் இவர்கள்
சாப்பிடக் கூடாதென்று[h] ஆளுநர்*[i] சொல்லிவிட்டார்.

66 சபையார் மொத்தம் 42,360 பேர்.[j] **67** அவர்களைத் தவிர வேலைக்
காரர்களும் வேலைக்காரிகளும்[k] 7,337 பேர்; பாடகர் பாடகிகள்[l] 245 பேர்.
68 குதிரைகள் 736, கோவேறு கழுதைகள்* 245, **69** ஒட்டகங்கள் 435,
கழுதைகள் 6,720.

70 தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள் சிலர் கட்டுமான வேலைக்காக
நன்கொடைகளைக் கொடுத்தார்கள்.[m] ஆளுநர்* 1,000 தங்கக் காசுகளை
யும்# 50 கிண்ணங்களையும் குருமார்களுக்கான 530 அங்கிகளையும்[n] நன்
கொடையாகத் தந்தார். **71** தந்தைவழிக் குடும்பத் தலைவர்கள் சிலர்
20,000 தங்கக் காசுகளையும் 2,200 வெள்ளிக் காசுகளையும்* நன்கொடை
யாகத் தந்தார்கள். **72** மற்ற ஜனங்கள் 20,000 தங்கக் காசுகளையும் 2,000
வெள்ளிக் காசுகளையும் குருமார்களுக்கான 67 அங்கிகளையும் கொடுத்
தார்கள்.

73 குருமார்களும் லேவியர்களும் வாயிற்காவலர்களும் பாடகர்களும்[o]

7:60 * வே.வா., "நிதனீமியர்களும்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்களும்; அர்ப்பணிக்கப்பட்டவர்களும்." **7:65, 70** * வே.வா., "திர்ஷாதா." இது ஒரு மாகாணத்தின் ஆளுநருக்குக் கொடுக்கப்பட்ட பெர்சியப் பட்டப்பெயர். **7:68** * இவை பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்தவை. **7:70** # நே.மொ., "தங்க திராக்மாவையும்." இவை கிரேக்க வேதாகமத்தில் வரும் திராக்மா அல்ல. 8.4 கிராம் எடையுள்ள, பெர்சிய நாட்டு தங்க தாரிக் காசுகள் என்று கருதப்படுகிறது. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **7:71** * மூலமொழியில், "மினாவையும்." எபிரெய வேதாகமத்தில், ஒரு மினா என்பது 570 கிராம் எடையுள்ளது. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 7
a எஸ்றா 2:55-58; நெ 11:3
b யோசு 9:3, 27; நெ 3:26
c எஸ்றா 2:59-63
d 1நா 24:3, 10; நெ 3:21
e 2சா 17:27-29; 2சா 19:31; 1ரா 2:7
f எண் 18:7
g யாத் 28:30; 1சா 28:6
h லேவி 2:3; எண் 18:8, 9
i நெ 8:9; நெ 10:1
j எஸ்றா 2:64-67
k லேவி 25:44
l யாத் 15:21; 1சா 18:6
m எஸ்றா 2:68, 69
n லேவி 6:10
o நெ 7:1

ஆலயப் பணியாளர்களும்* பொது ஜனங்களில் சிலரும் மற்றவர்களும்
அவரவர் நகரங்களில் குடியேறினார்கள்.[a] ஏழாம் மாதம் ஆரம்பிப்பதற்
குள்,[b] இஸ்ரவேலர்கள் எல்லாருமே அவரவர் நகரங்களில் குடியேறியிருந்
தார்கள்.[c]

8 ‘தண்ணீர் நுழைவாசலின்’[d] எதிரில் இருந்த பொது சதுக்கத்தில் ஜனங்
கள் எல்லாரும் ஒருமனதாகக் கூடிவந்தார்கள். இஸ்ரவேலர்களுக்கு
மோசேயின் மூலம் யெகோவா கொடுத்திருந்த திருச்சட்ட புத்தகத்தை[e]
எடுத்து வரும்படி நகலெடுப்பவராகிய* எஸ்றாவை[f] அவர்கள் கேட்டுக்
கொண்டார்கள். **2** அது ஏழாம் மாதம் முதல் நாள்.[g] குருவாகிய எஸ்றா
சபையாகக்[h] கூடிவந்திருந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும், புரிந்துகொள்
கிற வயதிலிருந்த பிள்ளைகளுக்கும் முன்பாகத் திருச்சட்டத்தை எடுத்து
வந்தார். **3** ‘தண்ணீர் நுழைவாசலின்’ எதிரில் பொது சதுக்கத்தில் கூடி
வந்திருந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும், புரிந்துகொள்கிற வயதிலிருந்த
பிள்ளைகளுக்கும் முன்பாக விடியற்காலை தொடங்கி மத்தியானம்வரை
அவர் அதைச் சத்தமாக வாசித்தார்.[i] எல்லாரும் திருச்சட்ட புத்தகத்தின்
வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்துக் கேட்டார்கள்.[j] **4** நகலெடுப்பவரா
கிய* எஸ்றா, அந்த நாளுக்காகவே செய்யப்பட்ட மரத்தாலான ஒரு
மேடைமேல் நின்றுகொண்டிருந்தார். அவருடைய வலது பக்கத்தில் மத்தித்
தியா, சேமா, ஆனாயா, உரியா, இல்க்கியா, மாசெயா ஆகியவர்களும், அவ
ருடைய இடது பக்கத்தில் பெதாயா, மீஷாவேல், மல்கீயா,[k] ஆசூம், அஸ்-
பதானா, சகரியா, மெசுல்லாம் ஆகியவர்களும் நின்றுகொண்டிருந்தார்கள்.

5 உயரமான மேடையில் நின்றுகொண்டிருந்த எஸ்றா, ஜனங்கள் எல்லா
ரும் பார்க்கும்படி அந்தப் புத்தகத்தைத் திறந்தார். உடனே, எல்லாரும்
எழுந்து நின்றார்கள். **6** அப்போது எஸ்றா, மகத்துவமுள்ள உண்மைக் கட
வுளாகிய யெகோவாவைப் புகழ்ந்தார். உடனே ஜனங்கள் எல்லாரும்,
“ஆமென்! ஆமென்!”*[l] என்று சொல்லி, தங்கள் கைகளை வானத்துக்கு
நேராக விரித்தார்கள். பின்பு, யெகோவாவுக்கு முன்பாக மண்டிபோட்டு,
தரைவரைக்கும் குனிந்து வணங்கினார்கள். **7** அதன்பின் யெசுவா, பானி,
செரெபியா,[m] யாமின், அக்கூப், சபெதாய், ஒதியா, மாசெயா, கேலிதா, அச
ரியா, யோசபத்,[n]ஆனான், பெலாயா ஆகிய லேவியர்கள் திருச்சட்டத்தை
விளக்கிச் சொன்னார்கள்.[o] ஜனங்களும் நின்றுகொண்டே அதைக் கேட்
டார்கள். **8** இப்படி, எஸ்றாவும் லேவியர்களும் உண்மைக் கடவுளுடைய
திருச்சட்ட புத்தகத்திலிருந்து சத்தமாக வாசித்து, அதைத் தெளிவாக
விளக்கி, அதன் அர்த்தத்தை ஜனங்களின் மனதில் பதிய வைத்தார்கள்.
வாசிக்கப்பட்ட விஷயங்களை எல்லாரும் புரிந்துகொள்வதற்கு உதவி செய்
தார்கள்.*[p]

9 திருச்சட்டத்திலுள்ள வார்த்தைகளைக் கேட்ட ஜனங்கள் எல்லாரும்
அழுதுகொண்டிருந்தார்கள். அதனால் ஆளுநராக* இருந்த நெகேமியா

7:73 * வே.வா., “நிதனீமியர்களும்.” நே.மொ., “கொடுக்கப்பட்டவர்களும்; அர்ப்பணிக்கப்பட்டவர்களும்.” **8:1, 4** * வே.வா., “எழுத்தராகிய.” **8:6** * அதாவது, “அப்படியே ஆகட்டும்! அப்படியே ஆகட்டும்!” **8:8** * வே.வா., “ஜனங்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் வாசித்தார்கள்.” **8:9** * வே.வா., “திர்ஷாதாவாக.” திர்ஷாதா என்பது மாகாணத்தின் ஆளுநருக்குக் கொடுக்கப்பட்ட பெர்சியப் பட்டப்பெயர்.

அதி. 7
a நெ 11:20
b லேவி 23:24, 27; 1ரா 8:2; எஸ்றா 3:1
c எஸ்றா 2:70

அதி. 8
d நெ 3:26; நெ 12:37
e லேவி 27:34; உபா 31:9; யோசு 1:8
f எஸ்றா 7:6
g லேவி 23:24; 1ரா 8:2
h உபா 31:12; 2நா 17:8, 9; மல் 2:7
i அப் 13:15; அப் 15:21
j அப் 16:14; அப் 17:11
k நெ 12:40, 42
l உபா 27:26
m நெ 9:4
n எஸ்றா 8:33; நெ 11:16
o உபா 33:8, 10
p லூ 24:27; அப் 8:30, 31

வும், நகலெடுப்பவரும்* குருவுமான எஸ்றாவும்,[a] ஜனங்களுக்குக் கற்
றுக்கொடுத்த லேவியர்களும் அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து,
“இந்த நாள் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பரிசுத்தமான
நாள்.[b] அதனால் வருத்தப்படாதீர்கள், அழாதீர்கள்” என்று சொன்னார்கள்.
10 பின்பு நெகேமியா அவர்களிடம், “நீங்கள் போய் நல்ல நல்ல
உணவு வகைகளைச் சாப்பிடுங்கள், இனிப்பான பானங்களைக் குடியுங்
கள், ஒன்றுமே இல்லாதவர்களுக்குப் பலகாரங்களை அனுப்பி வையுங்
கள்.[c] இந்த நாள் நம் எஜமானுக்குப் பரிசுத்தமான நாள். அதனால் சோக
மாக இருக்காதீர்கள். யெகோவா தரும் சந்தோஷம்தான் உங்களுக்குப்
பலத்த கோட்டை”* என்று சொன்னார். **11** லேவியர்களும், “அழாதீர்கள்!
இது பரிசுத்தமான நாள், வருத்தப்படாதீர்கள்” என்று சொல்லி ஜனங்
களை அமைதிப்படுத்தினார்கள். **12** உடனே ஜனங்கள் எல்லாரும், சாப்
பிடவும் குடிக்கவும் பலகாரங்களைக் கொடுக்கவும் கொண்டாடி மகிழவும்[d]
அங்கிருந்து புறப்பட்டுப் போனார்கள். ஏனென்றால், அவர்கள் எல்லா
ரும் தங்களுக்கு விளக்கிச் சொல்லப்பட்ட விஷயங்களைப் புரிந்துகொண்
டார்கள்.[e]

13 இரண்டாம் நாளில், திருச்சட்ட வார்த்தைகளை இன்னும் ஆழமாகப்
புரிந்துகொள்வதற்காக, தந்தைவழிக் குடும்பத் தலைவர்களும் குருமார்க
ளும் லேவியர்களும் நகலெடுப்பவராகிய* எஸ்றாவைச் சூழ்ந்துகொண்டார்
கள். **14** ஏழாம் மாதப் பண்டிகையின்போது[f] இஸ்ரவேலர்கள் கூடாரங்க
ளில் தங்க வேண்டுமென்று மோசே மூலம் யெகோவா கொடுத்த கட்டளை
திருச்சட்டத்தில் எழுதப்பட்டிருந்ததை அப்போது அவர்கள் தெரிந்து
கொண்டார்கள். **15** அதோடு, எல்லா நகரங்களிலும் எருசலேமிலும்
இருக்கிற ஜனங்களிடம், “திருச்சட்டத்தில் எழுதியிருக்கிறபடியே மலைப்ப
குதிக்குப் போய் ஒலிவ மரக் கிளைகளையும், எண்ணெய் மர* கிளைகளை
யும், குழிநாவல் மரக் கிளைகளையும், பேரீச்ச ஓலைகளையும், மற்ற
அடர்ந்த மரக் கிளைகளையும் கொண்டுவந்து கூடாரங்களை அமையுங்
கள்” என்று அறிவிப்பு செய்ய வேண்டுமென்ற[g] விஷயத்தையும் தெரிந்து
கொண்டார்கள்.

16 அதன்படியே, ஜனங்கள் போய் அடர்ந்த மரக் கிளைகளைக்
கொண்டுவந்து தங்கள் மொட்டைமாடிகளிலும், முற்றங்களிலும், உண்மைக்
கடவுளுடைய ஆலயப் பிரகாரங்களிலும்,[h] ‘தண்ணீர் நுழைவாசலின்’[i] பக்
கத்தில் இருந்த பொது சதுக்கத்திலும், ‘எப்பிராயீம் நுழைவாசலின்’[j] பக்கத்
தில் இருந்த பொது சதுக்கத்திலும் கூடாரங்களை அமைத்தார்கள். **17** இப்
படி, எருசலேமுக்குத் திரும்பி வந்த சபையார் எல்லாரும் கூடாரங்களை
அமைத்து அதில் தங்கினார்கள். நூனின் மகனான யோசுவாவின்[k] நாளிலி
ருந்து அந்த நாள்வரை இஸ்ரவேலர்கள் அவ்வளவு சிறப்பாக அந்தப் பண்
டிகையைக் கொண்டாடியதே இல்லை. சந்தோஷத்தில் தேசமே களைகட்
டியது.[l] **18** முதல் நாளிலிருந்து கடைசி நாள்வரை, உண்மைக் கடவுளின்
திருச்சட்ட புத்தகம் தினமும் வாசிக்கப்பட்டது.[m] ஏழு நாட்களுக்குப் பண்
டிகை கொண்டாடப்பட்டது. எட்டாம் நாளில், திருச்சட்டத்தின்படியே ஒரு
விசேஷ மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.[n]

8:9 * வே.வா., “எழுத்தரும்.” **8:10** * வே.வா., “உங்களுக்குப் பலம்.” **8:13** * வே.வா., “எழுத்தராகிய.” **8:15** * நே.மொ., “பைன் மர.”

அதி. 8
a எஸ்றா 7:11
b லேவி 23:24
c எஸ்தர் 9:19
d சங் 126:1-3
e நெ 8:8
f லேவி 23:34, 42; உபா 16:13, 16; யோவா 7:2
g லேவி 23:4
h 1ரா 6:36; 1ரா 7:12; 2நா 4:9; 2நா 20:5
i நெ 3:26; நெ 8:1, 3
j 2ரா 14:13; நெ 12:38, 39
k யோசு 1:1
l உபா 16:14, 15
m உபா 31:10-12
n லேவி 23:34, 36

9 அந்த மாதம் 24-ஆம் நாளில் இஸ்ரவேலர்கள் கூடிவந்தார்கள்.
துக்கத் துணி* உடுத்திக்கொண்டு, தங்கள்மேல் மண்ணை வாரிப்போட்
டுக்கொண்டு, விரதம் இருந்தார்கள்.[a] **2** இஸ்ரவேலர்கள் மற்ற தேசத்தா
ரைவிட்டுப் பிரிந்து நின்று,[b] தாங்களும் தங்கள் முன்னோர்களும் செய்த
பாவங்களை ஒத்துக்கொண்டார்கள்.[c] **3** பின்பு அவர்கள் அங்கேயே
நின்று, அவர்களுடைய கடவுளாகிய யெகோவாவின் திருச்சட்ட புத்த
கத்தை மூன்று மணிநேரத்துக்கு சத்தமாக வாசித்தார்கள்.[d] அடுத்த மூன்று
மணிநேரத்துக்குத் தங்கள் பாவங்களை ஒத்துக்கொண்டும், தங்களுடைய
கடவுளாகிய யெகோவாவை வணங்கிக்கொண்டும் இருந்தார்கள்.

4 யெசுவா, பானி, கத்மியேல், ஷெபனியா, புன்னி, செரெபியா,[e] பானி,
கெனானி ஆகியவர்கள் லேவியர்களின் மேடையில் நின்றுகொண்டு,[f] சத்த
மாக தங்கள் கடவுளாகிய யெகோவாவிடம் வேண்டினார்கள். **5** யெசுவா,
கத்மியேல், பானி, ஆசாப்நெயா, செரெபியா, ஒதியா, ஷெபனியா, பெத்த
கியா ஆகிய லேவியர்கள் இப்படிச் சொன்னார்கள்: "எழுந்து, உங்கள்
கடவுளாகிய யெகோவாவை என்றென்றும் புகழுங்கள்.[g] எங்கள் கடவுளே,
உங்களுடைய மகிமையான பெயரை இவர்கள் புகழட்டும். உங்கள் பெயரை
நாங்கள் எவ்வளவு புகழ்ந்தாலும் போற்றினாலும் போதாது.

6 யெகோவாவே, நீங்கள் ஒருவர்தான் கடவுள்.[h] நீங்கள்தான் வானத்
தையும், ஏன் வானாதி வானத்தையும், அதன் படைகளையும்,* பூமியை
யும் அதிலுள்ள எல்லாவற்றையும், கடலையும் அதிலுள்ள எல்லாவற்றை
யும் படைத்தீர்கள். நீங்கள்தான் எல்லா உயிர்களையும் வாழ வைக்கிறீர்கள்.
வானத்திலுள்ள படைகள்* உங்களுக்கு முன்னால் தலைவணங்குகின்றன.
7 யெகோவாவே, நீங்கள்தான் உண்மைக் கடவுள். ஆபிராமைத் தேர்ந்தெ
டுத்து,[i] ஊர் என்ற கல்தேயர்களின் நகரத்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்து,[j]
அவருக்கு ஆபிரகாம் என்று பெயர் வைத்தவர்[k] நீங்கள்தான். **8** ஆபிர
காம் நெஞ்சார விசுவாசம் வைத்திருந்ததை நீங்கள் பார்த்து,[l] கானானியர்க
ளுக்கும் ஏத்தியர்களுக்கும் எமோரியர்களுக்கும் பெரிசியர்களுக்கும் எபூசி
யர்களுக்கும் கிர்காசியர்களுக்கும் சொந்தமான தேசத்தை அவருடைய
சந்ததிக்கு கொடுப்பதாக ஒப்பந்தம் செய்தீர்கள்.[m] நீங்கள் நீதியுள்ளவர் என்
பதால், கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றினீர்கள்.

9 எகிப்தில் எங்கள் முன்னோர்கள் பட்ட பாடுகளைப் பார்த்தீர்கள்,[n]
செங்கடலுக்கு முன்னால் அவர்கள் கதறிய கதறலைக் கேட்டீர்கள்.
10 பார்வோனும் அவனுடைய ஊழியர்களும் அவனுடைய ஜனங்க
ளும் எங்கள் முன்னோர்களிடம் அகங்காரத்தோடு* நடந்துகொண்டதால்,[o]
அவர்களுக்கு எதிராக அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்தீர்
கள்.[p] இப்படி, உங்கள் பெயருக்கு இன்றுவரை புகழ் சேர்த்திருக்கிறீர்கள்.[q]
11 எங்கள் முன்னோர்களுக்கு முன்பாகக் கடலைப் பிளந்தீர்கள், அவர்
கள் காய்ந்த தரையில் நடந்துபோனார்கள்.[r] ஆனால் அவர்களைத் துரத்திக்
கொண்டு வந்தவர்களை, கொந்தளிக்கும் கடலுக்குள் கல்லைத் தூக்கி
எறிவதுபோல் தூக்கி எறிந்தீர்கள்.[s] **12** பகலில் மேகத் தூண் மூலம்

9:1 * சொல் பட்டியலைப் பாருங்கள். **9:6** * நட்சத்திரங்களையும் குறிக்கலாம், தேவ தூதர்களையும் குறிக்கலாம். **9:10** * இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது.

அதி. 9
a யோசு 7:6 யோனா 3:5, 6
b எஸ்றா 9:1, 2 நெ 13:3
c லேவி 26:40 எஸ்றா 9:6 சங் 106:6 தானி 9:8
d நெ 8:3, 8
e நெ 8:7
f நெ 8:4
g எரே 33:10, 11
h உபா 6:4
i ஆதி 12:1, 2
j ஆதி 11:31
k ஆதி 17:5
l ஆதி 22:10-12
m ஆதி 15:18
n யாத் 2:23-25 யாத் 3:7
o யாத் 5:2
p யாத் 7:3 உபா 6:22
q யாத் 9:16
r யாத் 14:21, 22
s யாத் 15:1, 5, 10

வழி காட்டினீர்கள், ராத்திரியில் நெருப்புத் தூண் மூலம் வெளிச்சம் காட்டி
னீர்கள்.[a] **13** பரலோகத்திலிருந்து சீனாய் மலைக்கு இறங்கி வந்து அவர்
களிடம் பேசினீர்கள்.[b] நீதியான தீர்ப்புகளையும் நம்பகமான* சட்டங்களை
யும் அருமையான விதிமுறைகளையும் கட்டளைகளையும் கொடுத்தீர்கள்.[c]
14 உங்களுடைய பரிசுத்தமான ஓய்வுநாளைப் பற்றி அவர்களுக்குத் தெரி
யப்படுத்தி,[d] உங்கள் ஊழியராகிய மோசே மூலம் கட்டளைகளையும் விதி
முறைகளையும் சட்டங்களையும் கொடுத்தீர்கள். **15** அவர்களுக்குப் பசி
யெடுத்தபோது வானத்திலிருந்து உணவைக் கொடுத்தீர்கள்,[e] தாகமெடுத்த
போது கற்பாறையிலிருந்து தண்ணீரைத் தந்தீர்கள்.[f] நீங்கள் கொடுப்பதாக
உறுதிமொழி தந்த தேசத்துக்குப் போய் அதைச் சொந்தமாக்கிக்கொள்ளும்
படி அவர்களிடம் சொன்னீர்கள்.

16 ஆனால், எங்கள் முன்னோர்கள் அகங்காரமாக நடந்தார்கள்,[g] முரட்
டுப் பிடிவாதம் பிடித்தார்கள்,[h] உங்கள் கட்டளைகளை அலட்சியம் செய்
தார்கள். **17** உங்களுடைய பேச்சைக் கேட்க மறுத்தார்கள்.[i] நீங்கள் செய்த
மாபெரும் அற்புதங்களை மறந்தார்கள். அவர்கள் முரட்டுப் பிடிவாதம்
பிடித்து, எகிப்துக்கே அடிமைகளாய்த் திரும்பிப் போவதற்காக ஒரு தலை
வரை நியமித்தார்கள்.[j] ஆனால் கடவுளே, நீங்கள் மன்னிக்கிறவர்,* கரிச
னையும்# இரக்கமும் உள்ளவர், சீக்கிரத்தில் கோபப்படாதவர், மாறாத
அன்பை அளவில்லாமல் காட்டுபவர்.[k] அதனால் நீங்கள் அவர்களைக்
கைவிடவில்லை.[l] **18** அவர்கள் தங்கத்தில் ஒரு கன்றுக்குட்டி சிலையைச்
செய்து, 'நம்மை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்த தெய்வம் இது
தான்'[m] என்று சொன்னபோதிலும், உங்களைத் துளியும் மதிக்காமல் பல
அக்கிரமங்கள் செய்தபோதிலும், **19** அவர்களுக்கு மிகுந்த இரக்கம் காட்
டினீர்கள். நீங்கள் அவர்களை வனாந்தரத்திலேயே விட்டுவிடவில்லை.[n]
பகலில் மேகத் தூண் மூலம் வழி காட்டுவதையும், ராத்திரியில் நெருப்புத்
தூண் மூலம் வெளிச்சம் காட்டுவதையும் நிறுத்திவிடவில்லை.[o] **20** அவர்
கள் விவேகத்தோடு* நடந்துகொள்வதற்காக உங்களுடைய அருமையான
சக்தியைக் கொடுத்தீர்கள்.[p] அவர்களுடைய பசியைப் போக்குவதற்கு மன்
னாவைக் கொடுத்தீர்கள்.[q] அவர்களுடைய தாகத்தைத் தீர்ப்பதற்குத் தண்
ணீரைக் கொடுத்தீர்கள்.[r] **21** வனாந்தரத்தில் 40 வருஷங்களாக அவர்
களுக்கு உணவு தந்தீர்கள்,[s] அவர்களுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை.
அவர்களுடைய உடை பழையதாகிப் போகவும் இல்லை,[t] அவர்களுடைய
பாதங்கள் வீங்கிப் போகவும் இல்லை.

22 அவர்களுக்கு ராஜ்யங்களையும் தேசங்களையும் பகுதி பகுதியாகப்
பங்குபோட்டுக் கொடுத்தீர்கள்.[u] அதனால் எஸ்போனின்[v] ராஜாவாகிய
சீகோனின் தேசத்தையும்[w] பாசானின் ராஜாவாகிய ஓகின்[x] தேசத்தையும்
அவர்கள் கைப்பற்றினார்கள். **23** அவர்களுடைய வம்சத்தாரை வானத்து
நட்சத்திரங்களைப் போலப் பெருக வைத்தீர்கள்.[y] பின்பு, அவர்களுடைய
முன்னோர்களுக்குத் தருவதாக உறுதிமொழி கொடுத்திருந்த தேசத்துக்
குக் கூட்டிக்கொண்டு வந்தீர்கள்.[z] **24** அவர்கள் அந்தத் தேசத்தைச் சொந்
தமாக்கிக்கொண்டார்கள்.[a] அங்கு வாழ்ந்துவந்த கானானியர்களை நீங்கள்
அவர்கள்முன் தோற்கடித்தீர்கள்.[b] அந்த கானானியர்களையும்

அதி. 9
a யாத் 13:21; யாத் 14:19, 20
b யாத் 19:11; உபா 4:10, 36
c உபா 4:8
d யாத் 16:29; யாத் 20:8-11; உபா 5:12-14
e யாத் 16:4
f யாத் 17:6
g எண் 14:44
h உபா 9:6
i எண் 14:11, 41
j எண் 14:1, 4
k யாத் 34:6; எண் 14:18
l உபா 4:31
m யாத் 32:1, 4
n எண் 14:19, 20
o யாத் 40:38; எண் 9:15
p எண் 11:17, 25
q யாத் 16:14, 15
r எண் 20:8
s யாத் 16:35; எண் 14:33; உபா 2:7
t உபா 29:5
u யோசு 11:23
v எண் 21:26
w எண் 21: 23, 24; உபா 2:31
x எண் 21: 33, 35
y ஆதி 15:1, 5
z ஆதி 12:7; ஆதி 26:3
a எண் 14:29-31; யோசு 21:43
b யோசு 18:1

9:13 *வே.வா., "சத்தியத்தின்." **9:17** *வே.வா., "மன்னிக்கத் தயாராக இருக்கிறவர்." #வே.வா., "கனிவும்." **9:20** *வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதலோடு."

அவர்களுடைய ராஜாக்களையும் இஷ்டம்போல் நடத்தும்படி அவர்கள்
கையில் விட்டுவிட்டீர்கள். **25** மதில் சூழ்ந்த நகரங்களையும்[a] செழிப்
பான தேசத்தையும்[b] அவர்கள் கைப்பற்றினார்கள். நல்ல நல்ல பொருள்கள்
நிறைந்த வீடுகளையும், ஏற்கெனவே வெட்டி வைக்கப்பட்டிருந்த தண்ணீர்த்
தொட்டிகளையும், திராட்சைத் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளை
யும்,[c] காய்த்துக் குலுங்கும் மரங்களையும் சொந்தமாக்கிக்கொண்டார்கள்.
திருப்தியாகச் சாப்பிட்டு கொழுகொழுவென்று ஆனார்கள். நீங்கள் அள்
ளிக்கொடுத்த நன்மைகள் எல்லாவற்றையும் அனுபவித்து மகிழ்ந்தார்கள்.

26 நீங்கள் இவ்வளவு செய்தும், உங்கள் பேச்சைக் கேட்காமல் உங்களு
டைய திருச்சட்டத்தை மீறினார்கள்.*[d] உங்களிடம் திருந்தி வரும்படி எச்ச
ரித்த உங்களுடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றார்கள். உங்களைத் துளியும்
மதிக்காமல் அக்கிரமம் செய்தார்கள்.[e] **27** அதனால் எதிரிகளின் பிடியில்
சிக்கித் தவிக்கும்படி அவர்களை விட்டுவிட்டீர்கள்.[f] வேதனை தாங்க முடி
யாதபோதெல்லாம் உங்களிடம் கதறி அழுதார்கள், நீங்கள் பரலோகத்திலி
ருந்து அதைக் கேட்டீர்கள். மிகுந்த இரக்கத்தோடு மீட்பர்களை அனுப்பி,
எதிரிகளின் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்றினீர்கள்.[g]

28 ஆனால், பிரச்சினை தீர்ந்தவுடனேயே அவர்கள் மறுபடியும் கெட்ட
வழியில் போனார்கள்,[h] நீங்கள் மறுபடியும் அவர்களை எதிரிகளின் பிடி
யில் விட்டுவிட்டீர்கள்.[i] அந்த எதிரிகள் அவர்களை ஆட்டிப்படைத்த
போது* திரும்ப உங்களிடம் உதவி கேட்டுக் கெஞ்சினார்கள்.[j] நீங்கள் பர
லோகத்திலிருந்து அதைக் கேட்டு மிகுந்த இரக்கத்தோடு மறுபடியும்
மறுபடியும் அவர்களைக் காப்பாற்றினீர்கள்.[k] **29** திருச்சட்டத்தைக் கடைப்
பிடிக்கச் சொல்லி நீங்கள் எச்சரித்தபோதும், அவர்கள் அகங்காரத்தோடு
உங்கள் கட்டளைகளை மீறினார்கள்;[l] வாழ்வளிக்கும் விதிமுறைகளைப்[m]
பின்பற்றாமல் பாவம் செய்தார்கள். உங்கள் வழிக்குத் திரும்பிவர விடாப்
பிடியாக மறுத்தார்கள், உங்கள் பேச்சைக் கேட்காமல் முரண்டுபிடித்தார்கள்.
30 நீங்கள் எத்தனையோ வருஷங்களாகப் பொறுமையோடு[n] தீர்க்கதரி
சிகளை அனுப்பி எச்சரித்துக்கொண்டே இருந்தீர்கள். ஆனால், அவர்கள்
அதைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. கடைசியில், மற்ற தேசத்தா
ரின் கையில் அவர்களை விட்டுவிட்டீர்கள்.[o] **31** அப்போதும்கூட மிகுந்த
இரக்கம் காட்டி, அவர்களை அழிக்காமல் விட்டீர்கள்.[p] நீங்கள் கரிச
னையும்* இரக்கமும் உள்ள கடவுள்[q] என்பதால் அவர்களைக் கைவிடா
மல் காப்பாற்றினீர்கள்.

32 மகத்துவமுள்ள எங்கள் கடவுளே, மாவல்லவரே, அற்புதமானவரே,
ஒப்பந்தத்தைக் காப்பவரே, மாறாத அன்பைக் காட்டுபவரே,[r] அசீரிய
ராஜாக்களின் நாளிலிருந்து[s] இந்த நாள்வரை நாங்களும் எங்கள் ராஜாக்க
ளும் அதிகாரிகளும்[t] குருமார்களும்[u] தீர்க்கதரிசிகளும்[v] முன்னோர்களும்
அனுபவித்த கஷ்டங்களையெல்லாம் அற்பமாக நினைக்காதீர்கள். **33** எங்
களுக்கு வந்த துன்பங்களுக்காக உங்களை நாங்கள் குற்றப்படுத்த முடியாது.
நீங்கள் நீதியுள்ளவர். நீங்கள் உண்மையாக நடந்துகொண்டீர்கள். நாங்கள்
தான் கெட்ட வழியில் நடந்தோம்.[w] **34** எங்கள் ராஜாக்களும் அதிகாரிக
ளும் குருமார்களும் முன்னோர்களும் உங்கள் திருச்சட்டத்தைக் கடைப்

9:26 *நே.மொ., "தங்களுக்குப் பின்னால் தூக்கியெறிந்தார்கள்." **9:28** *வே.வா.,
"நொறுக்கியபோது." **9:31** *வே.வா., "கனிவும்."

அதி. 9
a உபா 3:4, 5
b உபா 8:7-9
c யோசு 24:13
d உபா 31:20
உபா 32:15
நியா 2:12
e 2ரா 21:11
சங் 106:38
f உபா 31:17
நியா 2:14
g நியா 2:18
நியா 3:9, 15
1சா 12:11
2ரா 13:4, 5
h நியா 2:19
i நியா 4:1, 2
நியா 6:1
j நியா 6:6
k சங் 106:43-45
l 2ரா 17:13, 14
2நா 24:19
m லேவி 18:5
n ரோ 10:21
o 2நா 36:15, 16
ஏசா 42:24
எரே 40:2, 3
p எசே 14:22
q யாத் 34:6
உபா 4:31
r உபா 7:9
தானி 9:4
s 2ரா 17:6
t 2ரா 24:12, 14
u எரே 34:18-20
v புல 4:13, 14
w தானி 9:5

பிடிக்கவில்லை, உங்களுடைய கட்டளைகளையும் எச்சரிப்புகளையும்*
காதுகொடுத்துக் கேட்கவில்லை. **35** அவர்கள் தங்களுடைய ராஜ்யத்தில்
வாழ்ந்து, நீங்கள் அள்ளிக்கொடுத்த நன்மைகள் எல்லாவற்றையும் அனுப
வித்து மகிழ்ந்த காலத்திலும் சரி, நீங்கள் தந்த வளமான, விசாலமான தேசத்
தில் குடியிருந்த காலத்திலும் சரி, உங்களுக்குச் சேவை செய்யவோ[a] கெட்ட
பழக்கங்களைவிட்டு விலகவோ இல்லை. **36** அதனால், இன்று நாங்கள்
அடிமைகளாக இருக்கிறோம்.[b] எந்தத் தேசத்தின் விளைச்சலையும் வளங்
களையும் அனுபவிக்கும்படி எங்கள் முன்னோர்களைக் குடிவைத்தீர்களோ
அந்தத் தேசத்தில் நாங்கள் அடிமைகளாக இருக்கிறோம். **37** நாங்கள்
பாவங்கள் செய்ததால் வேறு ராஜாக்களுக்கு எங்களை அடிமைகளாக்கிவிட்
டீர்கள். எங்கள் தேசத்தின் அமோக விளைச்சலை அவர்கள்தான் அனுப
விக்கிறார்கள்.[c] எங்களையும் எங்கள் ஆடுமாடுகளையும் இஷ்டம்போல்
அடக்கி ஆளுகிறார்கள். நாங்கள் தவியாய்த் தவிக்கிறோம்.

38 அதனால், நாங்கள் உறுதியான தீர்மானத்தோடு ஓர் ஒப்பந்தத்தை[d]
எழுதி வைத்திருக்கிறோம். எங்கள் அதிகாரிகளும் லேவியர்களும் குரு
மார்களும் தங்கள் முத்திரையைப் போட்டு அதை உறுதிப்படுத்தி இருக்கி
றார்கள்."[e]

10 முத்திரை போட்டு[f] அதை உறுதிப்படுத்தியவர்கள் இவர்கள்தான்:
அகலியாவின் மகனும் ஆளுநருமான* நெகேமியா,

சிதேக்கியா, **2** செராயா, அசரியா, எரேமியா, **3** பஸ்கூர், அமரியா,
மல்கீயா, **4** அத்தூஸ், ஷெபனியா, மல்லூக், **5** ஆரீம்,[g] மெரெமோத், ஒப
தியா, **6** தானியேல்,[h] கிநேதோன், பாருக், **7** மெசுல்லாம், அபியா, மியா
மின், **8** மாசியா, பில்காய், செமாயா; இவர்கள் எல்லாரும் குருமார்கள்.

9 அதை உறுதிப்படுத்திய லேவியர்கள் இவர்கள்தான்: அசனியாவின்
மகன் யெசுவா, எனாதாத் வம்சத்தில் வந்த பின்னூய், கத்மியேல்,[i]
10 ஷெபனியா, ஒதியா, கேலிதா, பெலாயா, ஆனான், **11** மிக்கா,
ரேகோப், அஷபியா, **12** சக்கூர், செரெபியா,[j] ஷெபனியா, **13** ஒதியா,
பானி, பெனினு.

14 அதை உறுதிப்படுத்திய ஜனங்களின் தலைவர்கள் இவர்கள்
தான்: பாரோஷ், பாகாத்-மோவாப்,[k] ஏலாம், சத்தூ, பானி, **15** புன்னி,
அஸ்காத், பெபாய், **16** அதோனியா, பிக்வாய், ஆதின், **17** அதேர்,
எசேக்கியா, ஆசூர், **18** ஒதியா, ஆசூம், பேசாய், **19** ஆரீப், ஆன
தோத், நெபாய், **20** மக்பியாஸ், மெசுல்லாம், ஏசீர், **21** மெஷெசாபெ
யேல், சாதோக், யதுவா, **22** பெலத்தியா, ஆனான், ஆனாயா,
23 ஓசெயா, அனனியா, அசூப், **24** அல்லோகேஸ், பில்கா, சோபேக்,
25 ரெகூம், அஷபனா, மாசெயா, **26** அகியா, ஆனான், ஆனன், **27** மல்
லூக், ஆரீம், பாணா.

28 குருமார்கள், லேவியர்கள், வாயிற்காவலர்கள், பாடகர்கள், ஆல
யப் பணியாளர்கள்,* திருச்சட்டத்தைப் பின்பற்றுவதற்காக மற்ற தேசத்தா
ரைவிட்டு வந்தவர்கள்,[l] அவர்களுடைய மனைவிகள், பிள்ளைகள், விவரம்

அதி. 9
a உபா 28:47; உபா 32:15
b உபா 28:48; எஸ்றா 9:9
c உபா 28:15, 33; நெ 5:4
d 2ரா 23:3; 2நா 15:12; எஸ்றா 10:3
e நெ 10:28, 29

அதி. 10
f நெ 9:38
g எஸ்றா 2:1, 39
h எஸ்றா 8:1, 2
i எஸ்றா 3:9; நெ 12:8
j நெ 12:24
k நெ 7:6, 11
l நெ 8:1; நெ 9:2

9:34 * வே.வா., "நினைப்பூட்டுதல்களையும்." **10:1** * வே.வா., "திர்ஷாதாவுமான." திர்ஷாதா என்பது ஒரு மாகாணத்தின் ஆளுநருக்குக் கொடுக்கப்பட்ட பெர்சியப் பட்டப்பெயர். **10:28** * வே.வா., "நிதனீமியர்கள்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்கள்; அர்ப்பணிக்கப்பட்டவர்கள்."

தெரிந்தவர்கள்* ஆகிய எல்லாரும் **29** தங்களுடைய சகோதரர்களோ
டும் முக்கியப் பிரமுகர்களோடும் சேர்ந்து உறுதிமொழி எடுத்தார்கள்.
உண்மைக் கடவுளின் ஊழியரான மோசே மூலம் கொடுக்கப்பட்ட திருச்சட்
டத்தையும் எஜமானாகிய யெகோவாவின் கட்டளைகளையும் நீதித்தீர்ப்பு
களையும் விதிமுறைகளையும் கவனமாய்க் கடைப்பிடிப்பதாக வாக்குறுதி
கொடுத்து,* **30** "நாங்கள் மற்ற தேசத்தாருக்குப் பெண் கொடுக்கவும்
மாட்டோம், அவர்களிடமிருந்து பெண் எடுக்கவும் மாட்டோம்.[a]

31 விற்பனை செய்வதற்காக அவர்கள் தங்களுடைய சரக்குகளையும்
தானியங்களையும் ஓய்வுநாளிலோ[b] வேறெந்தப் பரிசுத்த நாளிலோ[c]
கொண்டுவந்தால் நாங்கள் அவற்றை வாங்க மாட்டோம். ஏழாம் வருஷத்
தில் விவசாயம் செய்ய மாட்டோம்,[d] நாங்கள் கொடுத்த கடன்களையெல்
லாம் ரத்து செய்துவிடுவோம்.[e]

32 நாங்கள் ஒவ்வொருவரும் வருஷா வருஷம் எங்கள் கடவுளின் ஆல
யச் சேவைக்காக ஒரு சேக்கலில்* மூன்றிலொரு பாகத்தைக் கொடுப்பதாக
உறுதிமொழி தருகிறோம்.[f] **33** படையல் ரொட்டிகள்,[g] தினமும் செலுத்து
கிற* உணவுக் காணிக்கைகள்,[h] ஓய்வுநாட்களிலும்[i] மாதப் பிறப்புகளிலும்#[j]
செலுத்த வேண்டிய தகன பலிகள், பண்டிகைக்கால விருந்துகள்,[k] பரிசுத்த
மான பொருள்கள், இஸ்ரவேலர்களின் பாவப் பரிகார பலிகள்[l] ஆகியவற்
றுக்காகவும், எங்கள் கடவுளுடைய ஆலயத்தின் மற்ற எல்லா வேலைகளுக்
காகவும் அந்தத் தொகையைக் காணிக்கையாகக் கொடுப்போம்.

34 திருச்சட்டத்தில் எழுதியிருக்கிறபடியே,[m] வருஷா வருஷம் எங்கள்
கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்தில் எரிப்பதற்கான விறகுகளைக்
கொண்டுவருவோம். தந்தைவழிக் குடும்பங்களின் வரிசைப்படியே குரு
மார்களிலும் லேவியர்களிலும் ஜனங்களிலும் யார்யார் எந்தெந்த காலத்தில்
அவற்றைக் கொண்டுவர வேண்டுமென்று குலுக்கல் போட்டு தீர்மானிப்
போம். **35** வருஷா வருஷம் எங்களுடைய நிலத்தின் முதல் விளைச்ச
லையும் எல்லா வகையான மரங்களின் முதல் கனிகளையும்
யெகோவாவின் ஆலயத்துக்குக் கொண்டுவருவோம்.[n] **36** திருச்சட்டத்
தில் எழுதியிருக்கிறபடி எங்களுடைய மூத்த மகன்களையும் எங்களு
டைய கால்நடைகளின்[o] முதல் குட்டிகளையும் கன்றுகளையும் எங்கள்
கடவுளுடைய ஆலயத்தில் சேவை செய்கிற குருமார்களிடம் கொண்டுவரு
வோம்.[p] **37** எங்களுடைய முதல் விளைச்சலின் முதல் மாவு,*[q] காணிக்
கைகள், எல்லா வகையான மரங்களின் பழங்கள்,[r] புதிய திராட்சமது, எண்
ணெய்[s] ஆகியவற்றை எங்கள் கடவுளுடைய ஆலயத்தின் சேமிப்பு#
அறைகளுக்கு[t] எடுத்து வருவோம். அதுமட்டுமல்லாமல், எங்களுடைய
எல்லா வேளாண்மை நகரங்களிலிருந்தும் பத்திலொரு பாகத்தைச் சேகரிக்
கிற லேவியர்களுக்காக[u] எங்களுடைய நிலத்தின் விளைச்சலிலிருந்து பத்
திலொரு பாகத்தைக் கொண்டுவருவோம்.

10:28 *அல்லது, "புரிந்துகொள்ளும் வயதிலுள்ளவர்கள்." **10:29** *நே.மொ., "ஒரு உறுதிமொழிக்கும் சாபத்துக்கும் தங்களை உட்படுத்திக்கொண்டு." அதாவது, "உறுதிமொழியை நிறைவேற்றாவிட்டால் தங்களுக்குச் சாபம் வரட்டும் என்று சொல்லிக்கொண்டு." **10:32** *ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **10:33** *வே.வா., "வழக்கமான." #வே.வா., "முதலாம் பிறையிலும்." **10:37** *நே.மொ., "கொரகொரப்பான மாவு." #வே.வா., "சாப்பாட்டு."

அதி. 10
a யாத் 34:15, 16; உபா 7:3, 4
b யாத் 20:10
c யாத் 12:16; எண் 29:1, 12
d யாத் 23:10, 11; லேவி 25:4, 5
e உபா 15:1-3
f யாத் 30:13
g லேவி 24:5-7
h யாத் 29:40, 41
i எண் 28:9
j எண் 28:11-13; 1நா 23:31
k உபா 16:16
l லேவி 16:15
m லேவி 1:7; லேவி 6:12, 13
n யாத் 23:19; எண் 18:8, 13; உபா 26:2
o யாத் 13:2; எண் 18:15
p எண் 18:8, 11; 1கொ 9:13
q எண் 15:20
r லேவி 27:30
s எண் 18:8, 12; உபா 18:1, 4
t 2நா 31:11
u எண் 18:21

38 லேவியர்கள் பத்திலொரு பாகத்தைச் சேகரிக்கும்போது ஆரோனின்
வம்சத்தைச் சேர்ந்த குருமார்கள் அவர்களோடு இருப்பார்கள். லேவியர்கள்
அந்தப் பத்திலொரு பாகத்திலிருந்து பத்திலொரு பாகத்தை எடுத்து கடவு
ளுடைய ஆலயத்தின்[a] சேமிப்பு* அறைகளில் வைப்பார்கள். **39** தானி
யம், புதிய திராட்சமது, எண்ணெய்[b] ஆகிய காணிக்கைகளை[c] இஸ்ர
வேலர்களும் லேவியர்களும் அங்கு கொண்டுவருவார்கள். அந்த அறை
களில்தான் ஆலயப் பாத்திரங்கள் வைக்கப்படும். சேவை செய்கிற குருமார்
களும் வாயிற்காவலர்களும் பாடகர்களும் அங்குதான் தங்குவார்கள். நாங்
கள் எங்களுடைய கடவுளுடைய ஆலயத்தை அலட்சியப்படுத்த மாட்
டோம்"[d] என்று சொன்னார்கள்.

11 ஜனங்களின் தலைவர்கள் எருசலேமில்[e] குடியிருந்தார்கள். ஆனால்
ஜனங்களைப் பொறுத்தவரை, பத்துப் பேரில் ஒருவர் அந்தப் பரி
சுத்த நகரத்தில் குடியிருப்பதற்காக குலுக்கல்[f] முறையில் தேர்ந்தெடுக்கப்
பட்டார்கள். மீதி ஒன்பது பேர் அவரவர் நகரங்களிலேயே குடியிருந்தார்கள்.
2 எருசலேமில் குடியிருக்க மனப்பூர்வமாகச் சம்மதித்த ஆட்கள் எல்லா
ரையும் ஜனங்கள் வாழ்த்தினார்கள்.

3 எருசலேமில் குடியிருந்த மாகாணத் தலைவர்கள் இவர்கள்தான். (மற்ற
இஸ்ரவேலர்களும் குருமார்களும் லேவியர்களும் ஆலயப் பணியாளர்க
ளும்*[g] சாலொமோனுடைய ஊழியர்களின் வம்சத்தாரும்[h] யூதாவிலுள்ள
வேறு நகரங்களில் தங்களுடைய சொந்த நிலத்தில் குடியிருந்தார்கள்.[i]

4 அதோடு யூதா, பென்யமீன் ஜனங்களில் சிலர் எருசலேமில் குடி
யிருந்தார்கள்.) யூதா ஜனங்களில் அங்கு குடியிருந்தவர்கள் இவர்கள்
தான்: பாரேசின் வம்சத்தில்[j] வந்த மகலாலெயேலுக்குப் பிறந்த செப்பத்தி
யாவின் எள்ளுப்பேரனும் அமரியாவின் கொள்ளுப்பேரனும் சகரியாவின்
பேரனும் உசியாவின் மகனுமான அத்தாயா, **5** சேலாவியனான சகரி
யாவுக்குப் பிறந்த யோயாரிபின் மகனான அதாயாவின் எள்ளுப்பேரனும்
ஹசாயாயின் கொள்ளுப்பேரனும் கொல்லோசேயின் பேரனும் பாருக்கின்
மகனுமான மாசெயா. **6** எருசலேமில் குடியிருந்த பாரேசின் வம்சத்தைச்
சேர்ந்த திறமையான ஆண்கள் மொத்தம் 468 பேர்.

7 பென்யமீன் ஜனங்களில் அங்கு குடியிருந்தவர்கள் இவர்கள்தான்:
யெசாயாவுக்குப் பிறந்த இத்தியேலின் மகனான மாசெயாவின் எள்ளுப்
பேரனும் கொலாயாவின் கொள்ளுப்பேரனும் பெதாயாவின் பேரனும்
யோவேத்தின் மகனுமான மெசுல்லாமின் மகன் சல்லு,[k] **8** கப்பாய், சல்
லாய் என மொத்தம் 928 பேர். **9** சிக்ரியின் மகன் யோவேல் அவர்களு
டைய கண்காணியாக இருந்தார், நகரத்தின் அடுத்த கண்காணியாக அசெ
னூவாவின் மகன் யூதா இருந்தார்.

10 குருமார்களில் அங்கு குடியிருந்தவர்கள் இவர்கள்தான்: யோயாரிபின்
மகன் யெதாயா, யாகீன்,[l] **11** உண்மைக் கடவுளுடைய ஆலய அதிகாரிக
ளில் ஒருவரான அகிதூப்புக்குப்[m] பிறந்த மெராயோத்தின் எள்ளுப்பேர
னும் சாதோக்கின் கொள்ளுப்பேரனும் மெசுல்லாமின் பேரனும் இல்க்கி
யாவின் மகனுமான செராயா, **12** ஆலய வேலை செய்த அவர்களுடைய

அதி. 10
a எண் 18:26
b உபா 14:23
c உபா 12:5, 6
d நெ 13:10, 11

அதி. 11
e நெ 7:4
f நீதி 16:33
g யோசு 9:3, 27; எஸ்றா 8:17
h எஸ்றா 2:58
i எஸ்றா 2:70
j எண் 26:20
k 1நா 9:3, 7
l 1நா 9:10–13
m 1நா 6:12

10:38 * வே.வா., "சாப்பாட்டு." **11:3** * வே.வா., "நிதனீமியர்களும்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்களும்; அர்ப்பணிக்கப்பட்டவர்களும்."

சகோதரர்கள் என மொத்தம் 822 பேர். மல்கீயாவுக்குப் பிறந்த பஸ்கூரின்[a]
மகனான சகரியாவின் எள்ளுப்பேரனும் அம்சியின் கொள்ளுப்பேரனும்
பெல்லியாவின் பேரனும் எரோகாமின் மகனுமான அதாயா, **13** தந்தை
வழிக் குடும்பத் தலைவர்களான அவருடைய சகோதரர்கள் என மொத்தம்
242 பேர். இம்மேரின் எள்ளுப்பேரனும் மெசில்லேமோத்தின் கொள்ளுப்
பேரனும் அகசாயின் பேரனும் அசரெயேலின் மகனுமான அமாசசாய்,
14 பலசாலிகளாகவும் தைரியசாலிகளாகவும் இருந்த அவர்களுடைய சகோ
தரர்கள் என மொத்தம் 128 பேர். செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்த சப்
தியேல் அவர்களுக்குக் கண்காணியாக இருந்தார்.

15 லேவியர்களில் அங்கு குடியிருந்தவர்கள் இவர்கள்தான்: புன்னி
யின் எள்ளுப்பேரனும் அஷபியாவின் கொள்ளுப்பேரனும் அசரீக்காமின்
பேரனும் அசூப்பின் மகனுமான செமாயா,[b] **16** உண்மைக் கடவுளுடைய
ஆலயத்தின் வெளிவேலைகளைக் கவனித்துவந்த லேவியர்களின் தலை
வர்களான சபெதாய்[c] மற்றும் யோசபத்;[d] **17** ஆசாபின்[e] கொள்ளுப்பேர
னும் சப்தியின் பேரனும் மீகாவின் மகனும் ஜெப நேரத்தில் கடவுளைத்
துதித்துப் பாடும் பாடகர் குழுவின்[f] இயக்குநருமான மத்தனியா,[g] இவரு
டைய இரண்டாவது சகோதரனான பக்புக்கியா, எதித்தூனின்[h] கொள்ளுப்
பேரனும் காலாலின் பேரனும் சம்முவாவின் மகனுமான அப்தா. **18** பரி
சுத்த நகரத்திலிருந்த லேவியர்கள் எல்லாரும் 284 பேர்.

19 வாயிற்காவலர்களில் அங்கு குடியிருந்தவர்கள் இவர்கள்தான்: அக்
கூப், தல்மோன்,[i] அவர்களுடைய சகோதரர்கள் என மொத்தம் 172 பேர்.

20 மீதியிருந்த இஸ்ரவேலர்களும் குருமார்களும் லேவியர்களும் யூதா
வின் மற்ற நகரங்களில் அவரவருடைய சொந்த நிலங்களில் குடியிருந்தார்
கள். **21** ஆலயப் பணியாளர்கள்*[j] ஓபேலில் குடியிருந்தார்கள்.[k] சீகாவும்
கிஸ்பாவும் ஆலயப் பணியாளர்களுக்கு# அதிகாரிகளாக இருந்தார்கள்.

22 பாடகர்களான ஆசாபின் வம்சத்தில் வந்த மிக்காவின் எள்ளுப்பேர
னும் மத்தனியாவின்[l] கொள்ளுப்பேரனும் அஷபியாவின் பேரனும் பானி
யின் மகனுமான உசீ, எருசலேமில் லேவியர்களின் கண்காணியாக இருந்தார்.
இவர் உண்மைக் கடவுளுடைய ஆலய வேலைகளைக் கவனித்துவந்தார்.
23 பாடகர்களுக்கு அந்தந்த நாள் தேவைப்படுவதை* கொடுக்க வேண்டும்
என்று ராஜா கட்டளை கொடுத்திருந்தார்.[m] **24** யூதாவின் மகனான சேரா
குவின் வம்சத்தில் வந்த மெஷெசாபெயேலின் மகன் பெத்தகியா மக்களு
டைய விவகாரங்கள் எல்லாவற்றிலும் ராஜாவுக்கு ஆலோசனை சொல்பவ
ராக இருந்தார்.

25 யூதா ஜனங்களில் சிலர் கீரியாத்-அர்பாவிலும்[n] அதன் சிற்றூர்
களிலும்,* தீபோனிலும் அதன் சிற்றூர்களிலும், எகாப்செயேலிலும்[o] அதன்
கிராமங்களிலும், **26** யெசுவாவிலும், மொலாதாவிலும்,[p] பெத்-பாலேத்தி
லும்,[q] **27** ஆத்சார்-சுவாலிலும்,[r] பெயெர்-செபாவிலும் அதன் சிற்றூர்களி
லும், **28** சிக்லாகுவிலும்,[s] மேகோனாவிலும் அதன் சிற்றூர்களிலும்,
29 என்-ரிம்மோனிலும்,[t] சோராவிலும்,[u] யர்மூத்திலும், **30** சனோவாவி

11:21 *வே.வா., "நிதனீமியர்கள்." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்கள்; அர்ப்பணிக்கப்பட்டவர்கள்." #வே.வா., "நிதனீமியர்களுக்கு." நே.மொ., "கொடுக்கப்பட்டவர்களுக்கு; அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு." **11:23** *வே.வா., "அன்றாடப் படியை." **11:25** *வே.வா, "அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும்."

அதி. 11
a எரே 21:1, 2; எரே 38:1
b 1நா 9:2, 14
c எஸ்றா 10:14, 15
d எஸ்றா 8:33; நெ 8:7
e நெ 7:6, 44
f 1நா 16:4; 2நா 5:13
g நெ 11:22; நெ 12:25
h 1நா 16:41, 42; 2நா 35:15
i 1நா 9:2, 17; எஸ்றா 2:1, 42; நெ 12:25
j எஸ்றா 2:1, 58
k 2நா 27:1, 3; நெ 3:26
l 1நா 9:2, 15
m எஸ்றா 6:3, 9; எஸ்றா 7:21-24
n யோசு 14:15
o யோசு 15:21; 2சா 23:20
p யோசு 15:21, 26; யோசு 19:1, 2
q யோசு 15:21, 27
r யோசு 19:1, 3
s யோசு 19:1, 5; 1சா 27:5, 6
t யோசு 15:21, 32
u யோசு 15:20, 33; யோசு 19:40, 41

லும்,[a] அதுல்லாமிலும் அதன் கிராமங்களிலும், லாகீசிலும்[b] அதன் நிலங்
களிலும், அசெக்காவிலும்[c] அதன் சிற்றூர்களிலும் வாழ்ந்துவந்தார்கள்.
பெயெர்-செபாவிலிருந்து இன்னோம் பள்ளத்தாக்குவரை[d] அவர்கள் குடியி
ருந்தார்கள்.

31 பென்யமீன் ஜனங்கள் கெபாவிலும்,[e] மிக்மாஷிலும், ஆயாவிலும்,
பெத்தேலிலும்[f] அதன் சிற்றூர்களிலும், **32** ஆனதோத்திலும்,[g] நோபுவி
லும்,[h] அனனெயாவிலும், **33** ஆத்சோரிலும், ராமாவிலும்,[i] கித்தாயீமிலும்,
34 ஆதீத்திலும், செபோயிமிலும், நெபலாத்திலும், **35** லோதுவிலும், கைத்
தொழிலாளிகளின் பள்ளத்தாக்காகிய ஓனோவிலும்[j] குடியிருந்தார்கள்.
36 யூதாவில் வாழ்ந்துவந்த லேவியர்களில் சில பிரிவினர் பென்யமீன் பகு
தியில் குடியேறினார்கள்.

12 சலாத்தியேலின்[k] மகன் செருபாபேலுடனும்[l] யெசுவாவுடனும்[m] எரு
சலேமுக்குத் திரும்பி வந்த குருமார்களும் லேவியர்களும் இவர்கள்
தான்: செராயா, எரேமியா, எஸ்றா, **2** அமரியா, மல்லூக், அத்தூஸ்,
3 செக்கனியா, ரெகூம், மெரெமோத், **4** இத்தோ, கிநேதோ, அபியா,
5 மியாமின், மாதியா, பில்கா, **6** செமாயா, யோயாரிப், யெதாயா,
7 சல்லு, ஆமோக், இல்க்கியா, யெதாயா. இவர்கள் யெசுவாவின் காலத்தில்
தங்களுடைய சகோதரர்களுக்கும் குருமார்களுக்கும் தலைவர்களாக இருந்
தார்கள்.

8 திரும்பி வந்த லேவியர்கள் இவர்கள்தான்: யெசுவா, பின்னூய், கத்மி
யேல்,[n] செரெபியா, யூதா, நன்றிப் பாடல்களைப் பாடுவதில் தன் சகோ
தரர்களுக்குத் தலைமைதாங்கிய மத்தனியா.[o] **9** இவர்களுடைய சகோத
ரர்களான பக்புக்கியாவும் உன்னியும் இவர்களுக்கு எதிரில் நின்றுகொண்டு
காவல்காத்தார்கள்.* **10** யெசுவாவுக்குப் பிறந்தவர் யொயகீம், யொயகீ
முக்குப் பிறந்தவர் எலியாசிப்,[p] எலியாசிபுக்குப் பிறந்தவர் யொயதா.[q]
11 யொயதாவுக்குப் பிறந்தவர் யோனத்தான், யோனத்தானுக்குப் பிறந்த
வர் யதுவா.

12 யொயகீமின் காலத்திலிருந்த தந்தைவழிக் குடும்பத் தலைவர்களான
குருமார்கள் இவர்கள்தான்: செராயா[r] குடும்பத்துக்கு மெராயா, எரேமியா
குடும்பத்துக்கு அனனியா, **13** எஸ்றா[s] குடும்பத்துக்கு மெசுல்லாம், அம
ரியா குடும்பத்துக்கு யெகோனான், **14** மெலிகு குடும்பத்துக்கு யோனத்
தான், ஷெபனியா குடும்பத்துக்கு யோசேப்பு, **15** ஆரீம்[t] குடும்பத்துக்கு
அத்னா, மெராயோத் குடும்பத்துக்கு எல்காய், **16** இத்தோ குடும்பத்துக்கு
சகரியா, கிநேதோன் குடும்பத்துக்கு மெசுல்லாம், **17** அபியா[u] குடும்பத்
துக்கு சிக்ரி, மினியாமீன் குடும்பத்துக்கு . . . ,* மொவதியா குடும்பத்துக்கு
பில்தாய், **18** பில்கா[v] குடும்பத்துக்கு சம்முவா, செமாயா குடும்பத்துக்கு
யெகோனத்தான், **19** யோயாரிப் குடும்பத்துக்கு மத்னாய், யெதாயா[w]
குடும்பத்துக்கு உசீ, **20** சல்லாய் குடும்பத்துக்கு கல்லாய், ஆமோக் குடும்
பத்துக்கு ஏபேர், **21** இல்க்கியா குடும்பத்துக்கு அஷபியா, யெதாயா
குடும்பத்துக்கு நெதனெயேல்.

22 குருமார்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டது போலவே எலி
யாசிப், யொயதா, யோகனான், யதுவா[x] ஆகியோரின் காலத்தில் வாழ்ந்த

12:9 *அல்லது, “சேவை செய்தார்கள்.” **12:17** *அநேகமாக, எபிரெய மூலப்பிரதியில் இங்கு ஒரு பெயர் இல்லை.

அதி. 11
a யோசு 15:20, 34; நெ 3:13
b யோசு 15:20, 39; ஏசா 37:8
c யோசு 15:20, 35
d யோசு 15:8, 12; 2ரா 23:10
e யோசு 18:21, 24
f ஆதி 28:19; யோசு 18:11, 13
g யோசு 21:8, 18
h 1சா 21:1
i யோசு 18:21, 25
j 1நா 8:12; எஸ்றா 2:1, 33

அதி. 12
k மத் 1:12
l எஸ்றா 1:8, 11
m சக 3:1
n எஸ்றா 2:1, 40; எஸ்றா 3:9
o 1நா 9:2, 15; நெ 11:17; நெ 12:25
p நெ 3:1
q நெ 13:28
r நெ 11:3, 11
s நெ 12:1
t எஸ்றா 2:1, 39
u நெ 12:1, 4
v நெ 12:1, 5
w நெ 12:1, 6
x நெ 12:10, 11

லேவியர்களுடைய தந்தைவழிக் குடும்பத் தலைவர்களின் பெயர்களும் பதிவு செய்யப்பட்டன. பெர்சிய ராஜாவான தரியுவின் ஆட்சிக் காலம் வரையாக அப்படிப் பதிவு செய்யப்பட்டன.

23 எலியாசிப்பின் மகன் யோகனானின் காலம்வரையாக வாழ்ந்த லேவியர்களுடைய தந்தைவழிக் குடும்பத் தலைவர்களின் பெயர்கள் அந்தக் காலத்தின் சரித்திரப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டன.
24 லேவியர்களின் தலைவர்களான அஷபியா, செரெபியா, கத்மியேலின்[a] மகன் யெசுவா[b] ஆகியவர்களுக்கு எதிரில் அவர்களுடைய சகோதரர்களான காவலர்கள் உண்மைக் கடவுளின் ஊழியரான தாவீது கொடுத்த அறிவுரைகளின்படி[c] கடவுளுக்குப் புகழும் நன்றியும் செலுத்த தொகுதி தொகுதியாக நின்றார்கள்.
25 மத்தனியா,[d] பக்புக்கியா, ஒபதியா, மெசுல்லாம், தல்மோன், அக்கூப்[e] ஆகியவர்கள் நுழைவாசல்களுக்குப் பக்கத்தில் சேமிப்பு அறைகளைக் காவல்காத்தபடி நின்றார்கள்.[f]
26 இவர்கள் யோத்சதாக்குக்குப் பிறந்த யெசுவாவின்[g] மகனான யொயகீமின் காலத்திலும், ஆளுநரான நெகேமியாவும் நகலெடுப்பவரான எஸ்றா[h] என்ற குருவும் வாழ்ந்த காலத்திலும் சேவை செய்தார்கள்.

27 ஜனங்கள் எருசலேம் மதில்களின் அர்ப்பண விழாவைச் சந்தோஷமாகக் கொண்டாட நினைத்தார்கள். அதனால், ஜால்ராக்களோடும் யாழ்களோடும் மற்ற நரம்பிசைக் கருவிகளோடும் நன்றிப் பாடல்கள்[i] பாடுவதற்காக லேவியர்களை எல்லா இடங்களிலிருந்தும் தேடிக் கண்டுபிடித்து எருசலேமுக்குக் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.
28 பாடகர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்* மாகாணத்திலிருந்தும்,# எருசலேமின் சுற்றுவட்டாரத்திலிருந்தும், நெத்தோபாத்தியர்களின் கிராமங்களிலிருந்தும்,[j]
29 பெத்-கில்காலிலிருந்தும்,[k] கெபா[l] மற்றும் அஸ்மாவேத்தின்[m] நாட்டுப்புறங்களிலிருந்தும் வந்து கூடினார்கள். ஏனென்றால், பாடகர்கள் எருசலேமைச் சுற்றியுள்ள பகுதிகளில் தங்களுக்காகக் கிராமங்களை அமைத்திருந்தார்கள்.
30 குருமார்களும் லேவியர்களும் தங்களைத் தூய்மைப்படுத்தியதோடு, ஜனங்களையும்[n] நுழைவாசல்களையும்[o] மதிலையும்[p] தூய்மைப்படுத்தினார்கள்.

31 அதன்பின், நான் யூதாவின் தலைவர்களைக் கூப்பிட்டு மதில்மேல் ஏறும்படி சொன்னேன். அதோடு, நன்றிப் பாடல்கள் பாடுகிறவர்களையும் அவர்களோடு ஊர்வலம் போகிறவர்களையும் இரண்டு பெரிய குழுக்களாகப் பிரித்தேன். முதலாவது குழுவினர் ‘குப்பைமேட்டு நுழைவாசலுக்கு’[q] நேராக வலது பக்கமாக மதில்மேல் நடந்து போனார்கள்.
32 ஓசாயாவும் யூதாவின் தலைவர்களில் பாதிப் பேரும் அவர்களுக்குப் பின்னால் நடந்து போனார்கள்.
33 அவர்களோடு அசரியா, எஸ்றா, மெசுல்லாம்,
34 யூதா, பென்யமீன், செமாயா, எரேமியா ஆகியவர்கள் போனார்கள்.
35 எக்காளங்களைப்[r] பிடித்துக்கொண்டு அவர்களோடு போன குருமார்களின் வம்சத்தார் இவர்கள்தான்: ஆசாபுக்குப்[s] பிறந்த சக்கூரின் மகனான மிகாயாவின் எள்ளுப்பேரனும் மத்தனியாவின் கொள்ளுப்பேரனும் செமாயாவின் பேரனும் யோனத்தானின் மகனுமான சகரியா,
36 அவருடைய சகோதரர்களான செமாயா, அசரெயேல், மிலாலாய், கிலாலாய், மகாய், நெதனெ

12:28 *வே.வா., “பயிற்சி பெற்ற பாடகர்கள்.” #அதாவது, “யோர்தானைச் சுற்றியிருந்த மாகாணத்திலிருந்தும்.”

அதி. 12
a எஸ்றா 2:1, 40
b நெ 8:7
c 1நா 16:4; 1நா 23:28, 30
d 1நா 9:2, 15
e 1நா 9:17; எஸ்றா 2:1, 42; நெ 11:1, 19
f 1நா 9:22-27
g எஸ்றா 3:2, 8
h எஸ்றா 7:1, 6
i 2நா 5:13; 2நா 7:6
j 1நா 2:54; 1நா 9:2, 16; நெ 7:6, 26
k யோசு 15:7, 12
l யோசு 21:8, 17; நெ 11:31
m எஸ்றா 2:1, 24
n யாத் 19:10
o நெ 7:1
p நெ 6:15
q நெ 2:13; நெ 3:13
r எண் 10:2; 2நா 5:12
s 1நா 25:1, 2

யேல், யூதா, அனானி. இவர்கள் உண்மைக் கடவுளின் ஊழியரான தாவீதின்
இசைக் கருவிகளைப்[a] பிடித்துக்கொண்டு போனார்கள். நகலெடுப்பவரான
எஸ்றா[b] இவர்களுக்கு முன்பாக நடந்து போனார். **37** அவர்கள் எல்லா
ரும் 'நீரூற்று நுழைவாசலிலிருந்து'[c] 'தாவீதின் நகரத்துப் படிக்கட்டு'[d] வழி
யாகப் போய், தாவீதின் அரண்மனைக்கு மேலே போகும் மதிலைக் கடந்து,
கிழக்கிலுள்ள 'தண்ணீர் நுழைவாசலை'[e] அடைந்தார்கள்.

38 நன்றிப் பாடல்கள் பாடும் இரண்டாவது குழுவினர் எதிர்த் திசையில்
மதில்மேல் நடந்து வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் நானும் ஜனங்
களில் பாதிப் பேரும் நடந்து போனோம். நாங்கள் 'அடுப்புகளின் கோபு
ரத்தை'[f] கடந்து, 'அகன்ற மதில்'[g] வரைக்கும் போய், **39** அங்கிருந்து 'எப்
பிராயீம் நுழைவாசலை'[h] கடந்து 'பழைய நுழைவாசலுக்கும்,'[i] அதன்பின்
'மீன் நுழைவாசலுக்கும்,'[j] 'அனானெயேல் கோபுரத்துக்கும்,'[k] 'மேயா கோபு
ரத்துக்கும்,' 'ஆட்டு நுழைவாசலுக்கும்'[l] போனோம். அதன்பின், 'காவல்
நுழைவாசலில்' வந்து நின்றோம்.

40 கடைசியில், நன்றிப் பாடல்கள் பாடும் இரண்டு பாடகர் குழுவினரும்
உண்மைக் கடவுளின் ஆலயத்துக்கு முன்னால் வந்து நின்றார்கள். அவர்க
ளோடு நானும் துணை அதிகாரிகளில் பாதிப் பேரும், **41** எக்காளங்களை
வைத்திருந்த எலியாக்கீம், மாசெயா, மினியாமீன், மிகாயா, எலியோனாய்,
சகரியா, அனனியா ஆகிய குருமார்களும், **42** மாசெயா, செமாயா, எலெ
யாசார், உசீ, யெகோனான், மல்கீயா, ஏலாம், ஏத்சேர் ஆகியவர்களும் நின்
றோம். பாடகர்கள் இஸ்ரகியாவின் தலைமையில் சத்தமாகப் பாடினார்கள்.

43 அன்று அவர்கள் பிரமாண்டமான அளவில் பலிகளைச் செலுத்தி
மகிழ்ந்தார்கள்.[m] உண்மைக் கடவுள் அவர்களைச் சந்தோஷத்தின் எல்
லைக்கே கொண்டுபோனார். பெண்களும் பிள்ளைகளும்கூட மிகவும் சந்
தோஷப்பட்டார்கள்.[n] எருசலேம் ஜனங்களின் சந்தோஷக் குரல் ரொம்பத்
தூரம்வரை கேட்டது.[o]

44 காணிக்கைகளும்,[p] முதல் விளைச்சலும்,[q] பத்திலொரு பாகமும்[r]
வைக்கப்படுகிற சேமிப்பு அறைகளைக்[s] கவனிக்க அன்று ஆண்கள் நிய
மிக்கப்பட்டார்கள். அவர்கள், திருச்சட்டத்தின்படி குருமார்களுக்கும் லேவி
யர்களுக்கும்[t] நகரங்களின் வயல்களிலிருந்து வந்து சேர வேண்டிய பங்குக
ளைச்[u] சேகரித்து, அங்கே வைக்க வேண்டியிருந்தது. குருமார்களும்
லேவியர்களும் சேவை செய்வதைப் பார்த்து யூதா ஜனங்கள் எல்லாரும் சந்
தோஷத்தோடு அவற்றைக் கொடுத்தார்கள். **45** குருமார்களும் லேவியர்க
ளும் தங்கள் கடவுளுடைய வேலைகளையும் தூய்மைச் சடங்குகளையும்
செய்தார்கள். பாடகர்களும் வாயிற்காவலர்களும்கூட, தாவீதும் அவருடைய
மகன் சாலொமோனும் கொடுத்திருந்த அறிவுரைகளின்படி தங்களுடைய
வேலைகளைச் செய்தார்கள். **46** தாவீதும் ஆசாபும் வாழ்ந்த பூர்வ காலத்
தில், கடவுளைப் புகழ்ந்தும் அவருக்கு நன்றி சொல்லியும் பாடிய பாடகர்
குழுக்களுக்குத் தலைவர்கள் இருந்தார்கள்.[v] **47** செருபாபேலின்[w] காலத்தி
லும் நெகேமியாவின் காலத்திலும் வாழ்ந்த இஸ்ரவேலர்கள், பாடகர்களுக்
கும்[x] வாயிற்காவலர்களுக்கும்[y] தினசரித் தேவையின்படி பங்குகள் கொடுத்
தார்கள். லேவியர்களுக்குத் தர வேண்டிய பங்கையும் கொடுத்தார்கள்.[z]
லேவியர்கள் ஆரோனின் வம்சத்தாருக்குத் தர வேண்டிய பங்கைக் கொடுத்
தார்கள்.

அதி. 12
a 1நா 23:5
b நெ 8:4
c நெ 2:14
d 2சா 5:7, 9 நெ 3:15
e நெ 3:26 நெ 8:1
f நெ 3:11
g நெ 3:8
h 2ரா 14:13 நெ 8:16
i நெ 3:6
j 2நா 33:14 நெ 3:3
k எரே 31:38 சக 14:10
l நெ 3:1 யோவா 5:2
m எஸ்றா 6: 16, 17
n எரே 31:13
o எஸ்றா 3: 10, 13
p நெ 10:39
q நெ 10:35-37
r நெ 10:38 நெ 13:12, 13
s 2நா 31:11
t எண் 18:21
u யாத் 34:26 எண் 15:18, 19 உபா 26:2
v 1நா 25:1, 6
w எஸ்றா 3:2 ஆகா 1:12 லூ 3:23, 27
x நெ 11:23
y நெ 10:39
z எண் 18:21

13 அன்று ஜனங்களுக்கு முன்னால் மோசேயின் புத்தகம் வாசிக்கப்பட்
டது.[a] அதில், உண்மைக் கடவுளுடைய சபையின் பாகமாக ஆவ
தற்கு அம்மோனியர்களையும் மோவாபியர்களையும்[b] ஒருபோதும் அனும
திக்கக் கூடாது என்று எழுதப்பட்டிருந்தது.[c] **2** ஏனென்றால், அவர்கள்
இஸ்ரவேலர்களுக்கு உணவும் தண்ணீரும் தரவில்லை. அதுமட்டுமல்ல, இஸ்
ரவேலர்களைச் சபிக்கச் சொல்லி பிலேயாமுக்குக் கூலி கொடுத்தார்கள்.[d]
ஆனால், எங்கள் கடவுள் அந்தச் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றினார்.[e]
3 திருச்சட்டம் வாசிக்கப்பட்டதைக் கேட்டதும், மற்ற தேசத்தார்* எல்லாரும்
இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டார்கள்.[f]

4 இதற்குமுன் எங்கள் கடவுளுடைய ஆலயத்தின் சேமிப்பு* அறை
களைக் குருவாகிய எலியாசிப் கவனித்துவந்தார்.[g] அவர் தொபியாவின்[h]
சொந்தக்காரர். **5** அவர் தொபியாவுக்கு ஒரு பெரிய சேமிப்பு* அறையைக்
கொடுத்திருந்தார். அதற்குமுன் அங்குதான் உணவுக் காணிக்கையும் சாம்பி
ராணியும் பாத்திரங்களும் வைக்கப்பட்டிருந்தன. அதோடு, லேவியர்களுக்
கும் பாடகர்களுக்கும் வாயிற்காவலர்களுக்கும் சேர வேண்டிய பத்திலொரு
பாகமான# தானியம்,[i] புதிய திராட்சமது, எண்ணெய்[j] ஆகியவையும் குரு
மார்களுக்குக் கொடுக்கப்படுகிற காணிக்கையும் வைக்கப்பட்டிருந்தன.[k]

6 இதெல்லாம் நடந்தபோது நான் எருசலேமில் இல்லை. அர்தசஷ்டா
ராஜா[l] பாபிலோனை ஆட்சி செய்த 32-ஆம் வருஷத்தில்[m] நான் அவரி
டம் திரும்பிப் போயிருந்தேன். சில காலத்துக்குப் பிறகு நான் அவரிடம்
விடுப்பு கேட்டு வாங்கிக்கொண்டு, **7** மறுபடியும் எருசலேமுக்கு வந்தேன்.
அப்போது எலியாசிப்[n] செய்திருந்த ஒரு பெரிய அநியாயத்தைப் பார்த்
தேன். உண்மைக் கடவுளின் ஆலயப் பிரகாரத்திலுள்ள சேமிப்பு* அறை
ஒன்றை அவர் தொபியாவுக்குக்[o] கொடுத்திருந்தார். **8** அதைப் பார்த்த
தும் எனக்குப் பயங்கர கோபம் வந்தது. அதனால், தொபியாவின் வீட்டுச்
சாமான்களையெல்லாம் அந்தச் சேமிப்பு* அறையிலிருந்து வெளியே தூக்
கியெறிந்தேன். **9** அதன்பின், சேமிப்பு* அறைகளைச்[p] சுத்தம் செய்யும்
படி கட்டளை கொடுத்தேன். உண்மைக் கடவுளுடைய ஆலயத்தின் பாத்தி
ரங்களையும் உணவுக் காணிக்கையையும் சாம்பிராணியையும்[q] திரும்பவும்
அங்கே கொண்டுவந்து வைத்தேன்.

10 லேவியர்களுக்குச் சேர வேண்டிய பங்குகள்[r] கொடுக்கப்படாத
தால்,[s] அவர்களும் பாடகர்களும் ஆலய வேலைகளை விட்டுவிட்டு அவ
ரவர் வயல் நிலங்களுக்குப்[t] போய்விட்டதையும் தெரிந்துகொண்டேன்.
11 அதனால் நான், “உண்மைக் கடவுளுடைய ஆலயத்தை ஏன் இப்படி
அலட்சியமாக விட்டிருக்கிறீர்கள்?”[u] என்று துணை அதிகாரிகளைக் கடு
மையாகத் திட்டினேன்.[v] பின்பு, ஆலய வேலைகளை விட்டுவிட்டுப் போன
வர்களைக் கூட்டிக்கொண்டு வந்து திரும்பவும் அவரவர் பொறுப்பில்
வைத்தேன். **12** யூதா ஜனங்கள் எல்லாரும், பத்திலொரு பாகம்[w] தானியத்
தையும் புதிய திராட்சமதுவையும் எண்ணெயையும் சேமிப்பு அறைக
ளுக்குக் கொண்டுவந்தார்கள்.[x] **13** பின்பு, சேமிப்பு அறைகளைக் கவனிப்
பதற்காக குருவான செலேமியாவையும் நகலெடுப்பவரான சாதோக்கையும்
லேவியர்களில் ஒருவரான பெதாயாவையும் நியமித்தேன். மத்தனியா

13:3 * வே.வா., “கலப்புத் திருமணத்தில் பிறந்தவர்கள்.” **13:4, 5, 7-9** * வே.வா., “சாப்பாட்டு.” **13:5** # வே.வா., “தசமபாகமான.”

அதி. 13
a உபா 31:11; நெ 8:2, 3; அப் 15:21
b ஆதி 19:36-38
c உபா 23:3, 6
d எண் 22:4-6
e எண் 23:8; எண் 24:10
f எஸ்றா 10:10, 11; நெ 9:1, 2
g நெ 3:1; நெ 10:37, 38
h நெ 2:10
i எண் 18:24
j உபா 18:3, 4
k நெ 12:44
l எஸ்றா 7:1; நெ 2:1
m நெ 5:14
n நெ 12:10
o நெ 4:7
p நெ 10:39
q லேவி 2:14, 15
r நெ 10:37; நெ 12:47
s மல் 3:8
t எண் 35:2
u நெ 10:39
v எஸ்றா 9:2
w லேவி 27:30; எண் 18:21
x நெ 10:38, 39; மல் 3:10

அதி. 13
a நெ 5:19
b எபி 6:10
c யாத் 20:10
யாத் 34:21
யாத் 35:2
d எரே 17:21, 27
e நெ 10:31
f யாத் 20:8-10
g உபா 5:12
h நெ 5:19
நெ 13:14
நெ 13:30, 31
i யோசு 13:2, 3
j உபா 23:3, 4
k எஸ்றா 9:1, 2
எஸ்றா 10:10
2கொ 6:14

வின் பேரனும் சக்கூரின் மகனுமான ஆனானை அவர்களுக்கு உதவியா
ளராகத் தேர்ந்தெடுத்தேன். இவர்கள் எல்லாரும் நம்பகமானவர்கள் என்று
பெயரெடுத்தவர்கள். தங்கள் சகோதரர்களுக்குப் பங்குகளைக் கொடுக்கும்
பொறுப்பை இவர்களிடம் ஒப்படைத்தேன்.

14 என் கடவுளே, நான் செய்திருப்பதை நினைத்துப் பாருங்கள்.[a] உங்க
ளுடைய ஆலயத்துக்காகவும் அங்கு வேலை செய்கிற ஆட்களுக்காகவும்
நான் உண்மையோடு செய்த எதையும் மறந்துவிடாதீர்கள்.[b]

15 அந்தக் காலத்தில், யூதா ஜனங்கள் ஓய்வுநாளிலே திராட்சரச ஆலை
களில் வேலை செய்வதையும்,[c] தானிய மூட்டைகளைக் கொண்டுவந்து
கழுதைகள்மேல் ஏற்றுவதையும் பார்த்தேன்.[d] அதோடு, திராட்சமதுவையும்
திராட்சைப் பழங்களையும் அத்திப் பழங்களையும் மற்ற சரக்குகளையும்
அவர்கள் எருசலேமுக்குக் கொண்டுவருவதைப் பார்த்தேன். அதனால்,
ஓய்வுநாளில் பொருள்களை விற்பனை செய்யக் கூடாதென்று அவர்களை
எச்சரித்தேன்.* **16** எருசலேம் நகரத்திலிருந்த தீரு ஜனங்கள், அங்கிருந்த
யூதா ஜனங்களிடம் மீன்களையும் எல்லாவித சரக்குகளையும் ஓய்வுநா
ளில் விற்பனை செய்துகொண்டிருந்தார்கள்.[e] **17** அதனால் நான் யூதாவின்
முக்கியப் பிரமுகர்களிடம், "நீங்கள் ஓய்வுநாளைக்கூட மதிக்காமல் ஏன் இப்
படி அட்டூழியம் செய்கிறீர்கள்? **18** உங்களுடைய முன்னோர்கள் இப்படிச்
செய்ததால்தானே நம் கடவுள் நமக்கும் இந்த நகரத்துக்கும் இந்தக் கதியை
வர வைத்திருக்கிறார்? இப்போது நீங்கள் ஓய்வுநாளை அவமதித்து,[f] இஸ்ர
வேலர்கள்மேல் அவருக்கு இருக்கிற கோபத்தை இன்னும் கிளறிவிடுகிறீர்
கள்" என்று சொல்லி அவர்களைக் கடுமையாகத் திட்டினேன்.

19 அதனால், ஓய்வுநாள் ஆரம்பிப்பதற்கு முன்பே சாயங்காலத்தில்
எருசலேமின் கதவுகளை மூடுவதற்கு உத்தரவு போட்டேன். ஓய்வுநாள்
முடியும்வரை கதவுகளைத் திறக்கக் கூடாது என்றும் கட்டளை கொடுத்
தேன். ஓய்வுநாளில் யாரும் சரக்குகளை உள்ளே கொண்டுவராமல் பார்த்
துக்கொள்ள என்னுடைய உதவியாளர்கள் சிலரைக் கதவுகளுக்குப் பக்கத்
தில் நிறுத்தினேன். **20** அதனால், வியாபாரிகளும் பலவித சரக்குகளை
விற்பவர்களும் ஒன்றிரண்டு தடவை ராத்திரியில் எருசலேமுக்கு வெளியே
காத்துக் கிடந்தார்கள். **21** நான் அவர்களிடம், "எதற்காக ராத்திரி நேரத்
தில் இப்படி மதிலுக்கு வெளியே காத்துக் கிடக்கிறீர்கள்? இன்னொரு
தடவை உங்களை இங்கே பார்த்தால், ஆட்களை வைத்துத் துரத்தியடிப்
பேன்" என்று எச்சரித்தேன். அதன் பிறகு, ஓய்வுநாளில் அவர்கள் அந்தப்
பக்கம் வரவே இல்லை.

22 லேவியர்கள் தங்களைத் தவறாமல் தூய்மைப்படுத்திக்கொண்டு,
நகர நுழைவாசல்களைக் காவல்காத்து, ஓய்வுநாளைப் பரிசுத்தமான நாளாக
அனுசரிக்க வேண்டும்[g] என்று சொன்னேன். என் கடவுளே, இந்த விஷயத்
துக்காகவும் என்னை நினைத்துப் பாருங்கள். எப்போதும் போல இப்போ
தும் அளவுகடந்த அன்போடு* எனக்கு இரக்கம் காட்டுங்கள்.[h]

23 அந்த நாட்களில் யூதர்கள் அஸ்தோத்தியர்களிலும்[i] அம்மோனி
யர்களிலும் மோவாபியர்களிலும்[j] பெண் எடுத்திருந்ததைத்[k] தெரிந்து
கொண்டேன். **24** அவர்களுடைய பிள்ளைகளில் பாதிப் பேர் அஸ்தோத்

13:15 *அல்லது, "பொருள்களை விற்பனை செய்யக் கூடாதென ஓய்வுநாளில் அவர்களை எச்சரித்தேன்." **13:22** *வே.வா., "மாறாத அன்போடு."

மொழியிலும் மற்ற மொழிகளிலும் பேசினார்கள். ஆனால், அவர்களில்
யாருக்குமே யூதர்களின் மொழி தெரியவில்லை. **25** அதனால் நான் அவர்
களைக் கடுமையாகத் திட்டினேன், சபித்தேன்; சிலரை அடித்து,[a] அவர்களு
டைய முடியைப் பிடுங்கினேன். அதோடு, மற்ற தேசத்தாருக்குப் பெண்
கொடுக்கப்போவதில்லை என்றும், அவர்கள் நடுவிலிருந்து தங்களுக்கோ
தங்களுடைய மகன்களுக்கோ பெண் எடுக்கப்போவதில்லை என்றும் கட
வுள்மேல் சத்தியம் செய்து கொடுக்கும்படி சொன்னேன்.[b] **26** பின்பு,
“மற்ற தேசத்துப் பெண்களைக் கல்யாணம் செய்ததால்தானே இஸ்ர
வேலின் ராஜாவான சாலொமோன் பாவம் செய்தார்? அவரைப் போல
ஒரு ராஜா வேறு எங்குமே இருந்ததில்லை.[c] அவரைக் கடவுள் நேசித்த
தால்தான்[d] இஸ்ரவேல் தேசம் முழுவதற்கும் ராஜாவாக்கினார். அப்படிப்பட்
டவரையே மற்ற தேசத்துப் பெண்கள் பாவம் செய்ய வைத்துவிட்டார்கள்.[e]
27 நீங்களும்கூட மற்ற தேசத்துப் பெண்களைக் கல்யாணம் செய்து
கொண்டு நம்முடைய கடவுளுக்குத் துரோகம் செய்திருக்கிறீர்களே.[f] நீங்கள்
இவ்வளவு கேவலமாக நடந்திருப்பதை நம்பவே முடியவில்லை” என்றேன்.

28 தலைமைக் குரு எலியாசிப்பின்[g] மகனான யொயதாவின்[h] மகன்க
ளில் ஒருவன், ஓரோனியனான சன்பல்லாத்தின்[i] மகளைக் கல்யாணம் செய்
திருந்ததால் அவனை என்னிடமிருந்து துரத்தியடித்தேன்.

29 என் கடவுளே, குருத்துவச் சேவையையும் குருமார்களோடும் லேவி
யர்களோடும் செய்யப்பட்ட ஒப்பந்தத்தையும்[j] அவர்கள் எப்படி அவமதித்
தார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

30 மற்ற தேசத்தாருடைய சகவாசத்தை அடியோடு விட்டுவிட்டு சுத்த
மாக வாழ்வதற்கு நான் எல்லாருக்கும் உதவினேன். குருமார்களையும் லேவி
யர்களையும் மறுபடியும் அவரவர் வேலையில் நியமித்தேன்.[k] **31** முதல்
விளைச்சலைக் கொண்டுவரவும், அந்தந்த காலங்களில் விறகுகளைக்
கொண்டுவரவும் ஏற்பாடு செய்தேன்.[l]

என் கடவுளே, என்னைப் பிரியத்தோடு நினைத்துப் பாருங்கள்.[m]

அதி. 13
a உபா 25:2; எஸ்றா 7:26
b உபா 7:3, 4; நெ 10:30
c 1ரா 3:12, 13; 2நா 9:22
d 2சா 12:24
e 1ரா 11:1-5
f எஸ்றா 10:2
g நெ 3:1; நெ 13:4
h நெ 12:10
i நெ 2:10; நெ 6:14
j யாத் 40:15; எண் 25:11-13; மல் 2:4
k 1நா 23:6; 1நா 25:1
l நெ 10:34
m நெ 5:19

எஸ்தர்

முக்கியக் குறிப்புகள்

1 சூசானில் அகாஸ்வேரு ராஜா விருந்து வைக்கிறார் (1-9)
ராஜாவுக்கு வஸ்தி ராணி கீழ்ப்படிய மறுக்கிறாள் (10-12)
நிபுணர்களிடம் ராஜா கலந்துபேசுகிறார் (13-20)
ராஜாவின் கட்டளை எழுதி அனுப்பப்படுகிறது (21, 22)

2 ராஜாவுக்காகப் புதிய பட்டத்து ராணியைத் தேடுகிறார்கள் (1-14)
எஸ்தர் பட்டத்து ராணியாகிறாள் (15-20)
சதித்திட்டத்தை மொர்தெகாய் அம்பலப்படுத்துகிறார் (21-23)

3 ஆமானை ராஜா கௌரவிக்கிறார் (1-4)
யூதர்களை ஒழித்துக்கட்ட ஆமானின் சதித்திட்டம் (5-15)

4 மொர்தெகாய் துக்கம் அனுசரிக்கிறார் (1-5)
ராஜாவிடம் பேசும்படி எஸ்தரிடம் மொர்தெகாய் சொல்கிறார் (6-17)

5 ராஜாவிடம் எஸ்தர் போகிறாள் (1-8)
ஆமானின் ஆத்திரமும் அகங்காரமும் (9-14)
6 மொர்தெகாயை ராஜா கௌரவிக்கிறார் (1-14)
7 ஆமானின் திட்டத்தை எஸ்தர் அம்பலப்படுத்துகிறாள் (1-6அ)
ஆமான் செய்த மரக் கம்பத்திலேயே அவன் தொங்கவிடப்படுகிறான் (6ஆ-10)
8 மொர்தெகாய் உயர் பதவி பெறுகிறார் (1, 2)
ராஜாவிடம் எஸ்தர் மறுபடியும் பேசுகிறாள் (3-6)
ராஜாவின் முதல் ஆணைக்கு எதிர்மாறான இரண்டாம் ஆணை (7-14)
யூதர்களுக்கு நிம்மதியும் சந்தோஷமும் (15-17)
9 யூதர்களுக்கு வெற்றி (1-19)
பூரீம் என்ற பண்டிகையின் ஆரம்பம் (20-32)
10 மொர்தெகாயின் சிறப்பு (1-3)

அதி. 1
a எஸ்தர் 8:9
தானி 6:1
b எஸ்றா 4:9
நெ 1:1
தானி 8:2
c எஸ்றா 1:2
d ஏசா 21:2
எரே 51:11
தானி 5:28
e எஸ்தர் 1:12
எஸ்தர் 2:1, 17

1 இந்தியாமுதல் எத்தியோப்பியாவரை* 127 மாகாணங்களை அகாஸ்
வேரு# ராஜா ஆட்சி செய்துவந்தார்.[a] **2** அவர் சூசான்*[b] கோட்டை
யிலிருந்து# ஆட்சி செய்த காலத்தில், **3** அதாவது அவருடைய ஆட்சி
யின் மூன்றாம் வருஷத்தில், எல்லா தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும்
ஒரு விருந்து வைத்தார். பெர்சிய,[c] மேதிய[d] படை அதிகாரிகளும் உயர்
குடி ஜனங்களும் மாகாணங்களின் தலைவர்களும் அங்கு வந்திருந்தார்கள்.
4 அவர்களுக்குத் தன்னுடைய பிரமாண்டமான சாம்ராஜ்யத்தின் செல்வச்
செழிப்பையும் தன்னுடைய சிறப்பையும் மேன்மையையும் 180 நாட்களா
கக் காட்டிய பின்பு அவர் அந்த விருந்து வைத்தார். **5** அந்த நாட்களுக்
குப் பின்பு, சூசான் கோட்டையிலிருந்த பெரியோர்முதல் சிறியோர்வரை
எல்லாருக்கும் தன்னுடைய அரண்மனைத் தோட்டத்தில் ஏழு நாட்களுக்கு
அவர் விருந்து கொடுத்தார். **6** அங்கே பளிங்குத் தூண்களில் பொருத்தப்
பட்டிருந்த வெள்ளி வளையங்களில், நாரிழையினாலும் உயர்தரமான பருத்
தியினாலும் நீல நிற நூலினாலும் நெய்யப்பட்ட திரைகள் தொங்கிக்கொண்
டிருந்தன. அவை உயர்தரமான நூலிலும் ஊதா நிற கம்பளி நூலிலும்
செய்யப்பட்ட நாடாக்களால் கட்டப்பட்டிருந்தன. அதோடு, கருஞ்சிவப்புக்
கற்கள், வெள்ளை பளிங்குக்கற்கள், முத்துச்சிப்பிகள், கறுப்பு பளிங்குக்கற்
கள் ஆகியவை பதிக்கப்பட்ட தளத்தின் மேல் தங்கத்தாலும் வெள்ளியா
லும் செய்யப்பட்ட இருக்கைகள்* வைக்கப்பட்டிருந்தன.
7 ராஜாவின் அந்தஸ்துக்கு ஏற்ற முதல்தரமான திராட்சமது ஏராள
மாகப் பரிமாறப்பட்டது. அது தங்கக் கிண்ணங்களில் பரிமாறப்பட்டது. அந்
தக் கிண்ணங்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமாக இருந்தன. **8** பொதுவாக,
விருந்துகளில் குறிப்பிட்ட அளவுக்குத் திராட்சமது குடிக்க வேண்டும் என்ற
வழக்கம் இருந்தது. ஆனால், இந்தத் தடவை அந்த வழக்கம் பின்பற்றப்பட
வில்லை. அவரவர் விருப்பப்படி குடிக்கலாம் என்று அரண்மனை அதிகா
ரிகளிடம் ராஜா கட்டளை கொடுத்திருந்தார்.
9 வஸ்தி ராணியும்[e] அகாஸ்வேரு ராஜாவின் அரச மாளிகையில் பெண்
களுக்கு விருந்து வைத்தாள்.

1:1 *அதாவது, "கூஷ்வரை." #இவர், மகா தரியுவின் மகனான முதலாம் சஷ்டா எனக் கருதப்படுகிறார். **1:2** *வே.வா., "சூசா." #வே.வா., "அரண்மனையிலிருந்து." **1:6** *அதாவது, "திவான்கள்."

10 ஏழாம் நாளில், ராஜா திராட்சமதுவைக் குடித்து குஷியாக இருந்தபோது, தன்னுடைய உதவியாளர்களும் அரண்மனை அதிகாரிகளுமான மெகுமான், பிஸ்தா, அற்போனா,[a] பிக்தா, அபக்தா, சேதார், கர்காஸ் ஆகிய ஏழு பேரிடம் **11** வஸ்தி ராணியைக் கூட்டிக்கொண்டு வரும்படி சொன்னார். அவள் பேரழகியாக இருந்ததால் ஜனங்களுக்கும் தலைவர்களுக்கும் அவளுடைய அழகைக் காட்டிப் பெருமைப்படுவதற்காக அவளைக் கிரீடம்* சூடி வரச் சொன்னார். **12** அரண்மனை அதிகாரிகள் வஸ்தி ராணியிடம் போய் ராஜாவின் கட்டளையைச் சொன்னபோது, தன்னால் வர முடியாது என்று அவள் பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள். அதைக் கேள்விப்பட்டதும் ராஜாவுக்குக் கோபமும் ஆத்திரமும் பற்றிக்கொண்டு வந்தது.

13 அதனால், முன்பு நடந்த வழக்குகளைப் பற்றித் தெரிந்து வைத்திருந்த* நிபுணர்களிடம் அவர் கலந்துபேசினார். (இப்படி, சட்டங்களையும் வழக்குகளையும் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருந்த சட்ட வல்லுனர்கள் எல்லாருக்கும் ராஜாவின் பிரச்சினை தெரியவந்தது. **14** அவர்களில் பெர்சிய, மேதிய தலைவர்களான கர்ஷேனா, சேத்தார், அத்மாதா, தர்ஷீஸ், மேரேஸ், மர்சேனா, மெமுகான் ஆகிய ஏழு பேரும்[b] ராஜாவின் அந்தரங்க ஆலோசகர்களாக இருந்தார்கள். அவருடைய சாம்ராஜ்யத்தில் மிக உயர்ந்த பதவியில் இருந்தார்கள். அதனால், எப்போது வேண்டுமானாலும் ராஜாவைச் சந்திக்க அவர்களுக்கு அனுமதி இருந்தது.) **15** ராஜா அவர்களைப் பார்த்து, "அரண்மனை அதிகாரிகளிடம் இந்த அகாஸ்வேரு ராஜா சொல்லி அனுப்பிய கட்டளைக்குக் கீழ்ப்படியாத வஸ்தி ராணியைச் சட்டப்படி என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

16 அப்போது மெமுகான், ராஜாவுக்கும் தலைவர்களுக்கும் முன்னால், "அகாஸ்வேரு ராஜாவுக்கு எதிராக மட்டுமே வஸ்தி ராணி குற்றம் செய்யவில்லை.[c] ராஜாவின் மாகாணங்களில் உள்ள எல்லா தலைவர்களுக்கும் ஜனங்களுக்கும் எதிராகக்கூட குற்றம் செய்திருக்கிறாள். **17** ராணி செய்தது எல்லா பெண்களுக்கும் தெரியவரும். அப்போது அவர்கள், 'அகாஸ்வேரு ராஜா கூப்பிட்டபோது வஸ்தி ராணியே போகவில்லை' என்று சொல்லி, தங்கள் கணவரை மதிக்க மாட்டார்கள். **18** ராணி செய்த குற்றத்தைப் பற்றிக் கேள்விப்படும் பெர்சிய, மேதிய தலைவர்களின் மனைவிகளும் இன்றைக்கே தங்கள் கணவரிடம் அவளைப் போல பேச ஆரம்பித்துவிடுவார்கள். இதனால், குடும்பத்தில் மதிப்பு மரியாதை ரொம்பவே குறைந்துவிடும், எரிச்சல்தான் அதிகமாகும். **19** அகாஸ்வேரு ராஜாவே, உங்களுக்கு நல்லதாகப் பட்டால், வஸ்தி இனி ஒருபோதும் ராஜாவுக்கு முன்னால் வரக் கூடாதென்று ஆணையிடுங்கள். என்றுமே மாற்ற முடியாத பெர்சிய, மேதிய சட்டங்களோடு[d] சேர்த்து இதையும் எழுதி வைக்கும்படி கட்டளை கொடுங்கள். அவளைவிட நல்ல பெண்ணைத் தேர்ந்தெடுத்து ராணியாக்குங்கள். **20** ராஜாவின் ஆணையை அவருடைய சாம்ராஜ்யம் முழுவதும் உள்ள ஜனங்கள் கேள்விப்படும்போது, உயர் குடும்பத்துப் பெண்களிலிருந்து சாதாரண குடும்பத்துப் பெண்கள்வரை எல்லாரும் தங்கள் கணவருக்கு மதிப்பு மரியாதை கொடுப்பார்கள்" என்று சொன்னார்.

21 மெமுகான் சொன்ன ஆலோசனை ராஜாவுக்கும் தலைவர்களுக்கும் பிடித்திருந்தது. அதன்படியே ராஜா செய்தார். **22** "குடும்பத்தில் கண

1:11 * வே.வா., "தலைப்பாகை." **1:13** * வே.வா., "ஆழமாகப் புரிந்து வைத்திருந்த."

அதி. 1
a எஸ்தர் 7:9
b எஸ்றா 7:14
c எஸ்தர் 1:12
d எஸ்தர் 8:8; தானி 6:8

வர்தான் எஜமானாக இருக்க வேண்டும், வீட்டில் அவருடைய தாய்மொழி
தான் பேசப்பட வேண்டும்” என்று கடிதம் எழுதி எல்லா மாகாணங்
களுக்கும் அனுப்பினார்.[a] அந்தந்த மாகாணங்களில் பயன்படுத்தப்பட்ட
எழுத்துக்களிலும் அந்தந்த ஜனங்களின் மொழிகளிலும் அதை எழுதி
அனுப்பினார்.

2 அகாஸ்வேரு ராஜாவின்[b] ஆத்திரம் அடங்கியபோது, வஸ்தி செய்த
குற்றத்தையும்[c] அவளுக்குக் கொடுத்த தீர்ப்பையும்[d] பற்றி அவர்
நினைத்துப் பார்த்தார். **2** அப்போது அவருடைய உதவியாளர்கள்,
“ராஜாவே, உங்களுக்காக அழகான, இளம் கன்னிப் பெண்களைத் தேடிக்
கண்டுபிடிக்க வேண்டும். **3** அதற்காக உங்கள் சாம்ராஜ்யத்தில்[e] இருக்
கிற எல்லா மாகாணங்களிலும் அதிகாரிகளை நியமியுங்கள். அழகான,
இளம் கன்னிப் பெண்கள் எல்லாரையும் சூசான்* கோட்டையின்# அந்தப்பு
ரத்துக்குக் கூட்டிக்கொண்டு வரச் சொல்லுங்கள். ராஜாவின் பணியாளரும்△
பெண்களின் பாதுகாவலருமான யேகாயின்[f] பொறுப்பில் அவர்களை ஒப்
படைக்கச் சொல்லுங்கள். வாசனைத் தைலங்களால் அவர்களுக்கு அழகு
சிகிச்சைகள்⊠ செய்யச் சொல்லுங்கள். **4** அதன்பின் ராஜாவே, உங்களுக்கு
எந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறதோ அந்தப் பெண்ணையே வஸ்திக்குப்
பதிலாக[g] பட்டத்து ராணியாக்குங்கள்” என்று சொன்னார்கள். அந்த ஆலோ
சனை ராஜாவுக்குப் பிடித்திருந்ததால் அப்படியே செய்தார்.

5 பென்யமீன் வம்சத்தைச்[h] சேர்ந்த கீஸ் என்பவரின் கொள்ளுப் பேர
னும், சீமேயின் பேரனும், யாவீரின் மகனுமான மொர்தெகாய்[i] என்ற
யூதர் சூசான்[j] கோட்டையில் இருந்தார். **6** பாபிலோனின் ராஜா நேபு
காத்நேச்சார், யூதாவின் ராஜா எகொனியாவையும்*[k] மற்றவர்களையும்
எருசலேமிலிருந்து பிடித்துக்கொண்டு போனபோது இவரையும்# பிடித்துக்
கொண்டு போயிருந்தான். **7** மொர்தெகாய் தன் அப்பாவுடைய சகோதர
னின் மகளான அத்சாளை,[l] அதாவது எஸ்தரை, தன் சொந்த மகள்
போல வளர்த்துவந்தார். ஏனென்றால், அவளுடைய அம்மாவும் அப்பாவும்
இறந்துவிட்டார்கள். அவள் ரொம்ப அழகாகவும் லட்சணமாகவும் இருந்
தாள். **8** ராஜாவின் ஆணையும் சட்டமும் அறிவிக்கப்பட்டபோது, இளம்
பெண்கள் நிறைய பேர் சூசான் கோட்டைக்குக் கொண்டுவரப்பட்டு யேகா
யின் பொறுப்பில் விடப்பட்டார்கள்.[m] அப்போது, எஸ்தரும் ராஜாவின் மாளி
கைக்குக் கொண்டுவரப்பட்டு, பெண்களின் பாதுகாவலரான யேகாயிடம் ஒப்
படைக்கப்பட்டாள்.

9 அவருக்கு எஸ்தரை மிகவும் பிடித்துவிட்டது; அவள் அவரிடம்
நல்ல பெயரெடுத்ததால், அவளுக்கு அழகு சிகிச்சைகள்⊠[n] செய்வதற்
கும் சத்தான உணவு வகைகளைக் கொடுப்பதற்கும் உடனடியாக ஏற்பாடு
செய்தார். அதோடு, ராஜாவின் மாளிகையிலிருந்த இளம் பெண்களில் ஏழு
பேரை அவளுடைய பணிப்பெண்களாக நியமித்தார். பின்பு, அவளையும்
அந்தப் பணிப்பெண்களையும் அந்தப்புரத்திலிருந்த மிகச் சிறந்த இடத்துக்கு
மாற்றினார். **10** எஸ்தர் தன்னுடைய ஜனங்களைப்[o] பற்றியோ சொந்தபந்
தங்களைப் பற்றியோ யாரிடமும் எதையும் சொல்லவில்லை; ஏனென்றால்,

2:3 *வே.வா., “சூசா.” #வே.வா., “அரண்மனையின்.” △நே.மொ., “அண்ணகரும்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **2:3, 9** ⊠வே.வா., “மசாஜ்.” **2:6** *2ரா 24:8-ல் யோயாக்கீன் என்று அழைக்கப்படுகிறார். #இங்கே ‘இவர்’ என்பது கீசாகவும் இருக்கலாம், மொர்தெகாயாகவும் இருக்கலாம்.

அதி. 1
a எஸ்தர் 3: 12, 14

அதி. 2
b எஸ்தர் 1:1
c எஸ்தர் 1:12
d எஸ்தர் 1:19
e எஸ்தர் 8:9
f எஸ்தர் 2:15
g எஸ்தர் 1:19
h ஆதி 49:27; 1சா 9:21
i எஸ்தர் 3:2; எஸ்தர் 10:3
j எஸ்றா 4:9; நெ 1:1; எஸ்தர் 1:2; தானி 8:2
k 2ரா 24:14, 15; 1நா 3:16; 2நா 36:9, 10; எரே 22:28; எரே 24:1; எரே 37:1; எரே 52:31; மத் 1:11
l எஸ்தர் 2:15
m எஸ்தர் 2:3
n எஸ்தர் 2:12
o எஸ்தர் 3:8

அதைப் பற்றி வாயே திறக்கக் கூடாதென்று[a] மொர்தெகாய்[b] சொல்லி வைத்
திருந்தார். **11** எஸ்தர் எப்படி இருக்கிறாள், அவளுக்கு என்ன நடக்கிறது
என்றெல்லாம் தெரிந்துகொள்வதற்காக மொர்தெகாய் தினமும் அந்தப்புரத்து
முற்றத்தின் வழியாகப் போவதும் வருவதுமாக இருந்தார்.

12 அந்தப்புரத்துக்குக் கொண்டுவரப்பட்ட பெண்களுக்கு, முதல் ஆறு
மாதங்கள் வெள்ளைப்போள*[c] தைலத்தாலும், அடுத்த ஆறு மாதங்கள்
பரிமளத் தைலத்தாலும் விதவிதமான வாசனைத் தைலங்களாலும்[d] அழகு
சிகிச்சை# செய்யப்படும். அந்த 12 மாதங்களுக்குப் பின்பு ஒவ்வொரு
பெண்ணாக அகாஸ்வேரு ராஜாவிடம் கொண்டுபோகப்படுவார்கள்.
13 அந்தப்புரத்திலிருந்து ராஜாவின் மாளிகைக்குக் கொண்டுபோகப்படும்
போது ஒவ்வொரு பெண்ணும் தான் விரும்பிய எல்லாவற்றையும் கேட்
டுப் பெற்றுக்கொள்ளலாம். **14** அவள் சாயங்காலம் ராஜாவிடம் கொண்டு
போகப்படுவாள், பின்பு காலையில் மறுமனைவிகளின் அந்தப்புரத்துக்கு*
கொண்டுபோகப்படுவாள். அங்கு ராஜாவின் பணியாளரும்[e] மறுமனைவி
களின் பாதுகாவலருமான சாஸ்காசிடம் ஒப்படைக்கப்படுவாள். ராஜா
அவளை மிகவும் விரும்பி, பெயர் சொல்லி கூப்பிட்டால் மட்டும்தான் அவ
ளால் அவரிடம் மறுபடியும் போக முடியும்.[f]

15 ராஜாவிடம் கொண்டுபோகப்படுவதற்கு மொர்தெகாயின் அப்பாவு
டைய சகோதரரான அபியாயேலின் மகளாகிய எஸ்தரின் முறை வந்
தது. மொர்தெகாயின் வளர்ப்பு மகளாகிய அவள்,[g] ராஜாவின் பணியாள
ரும் பெண்களின் பாதுகாவலருமான யேகாய் சிபாரிசு செய்ததைத் தவிர
வேறு எதையும் கூடுதலாகக் கேட்கவில்லை. (எஸ்தர் அங்கிருந்த நாளெல்
லாம், பார்க்கிற எல்லாருடைய மனதையும் கவர்ந்திருந்தாள்.) **16** அகாஸ்
வேரு ராஜா ஆட்சி செய்த ஏழாம் வருஷம்,[h] பத்தாம் மாதமாகிய
தேபேத்* மாதத்தில் அவருடைய அரச மாளிகைக்கு எஸ்தர் கொண்டு
போகப்பட்டாள். **17** ராஜா மற்ற எல்லா பெண்களையும்விட எஸ்தரையே
மிகவும் விரும்பினார். மற்ற எல்லா கன்னிப் பெண்களையும்விட அவள்
மேல் அதிக பிரியமும் பாசமும் வைத்தார். அதனால் ராஜா அவளுக்குக்
கிரீடம்* சூட்டி, வஸ்திக்குப் பதிலாக[i] பட்டத்து ராணியாக்கினார்.[j] **18** அவ
ளைக் கௌரவிப்பதற்காகத் தன்னுடைய எல்லா தலைவர்களுக்கும் ஊழி
யர்களுக்கும் பிரமாண்டமான ஒரு விருந்தை ஏற்பாடு செய்தார்.
அதுமட்டுமல்ல, எல்லா மாகாணங்களிலும் பொதுமன்னிப்பு* தருவதாக
அறிவித்து, ராஜாவின் அந்தஸ்துக்குத் தகுந்தபடி அன்பளிப்புகளை வாரி
வழங்கினார்.

19 கன்னிப் பெண்கள்*[k] இரண்டாவது தடவை கொண்டுவரப்பட்ட
போது, மொர்தெகாய் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருந்தார்.
20 மொர்தெகாய் சொல்லியிருந்தபடியே எஸ்தர் தன்னுடைய சொந்தபந்
தங்களையும் ஜனங்களையும்[l] பற்றி யாரிடமும் வாய் திறக்கவில்லை. அவ
ரிடம் வளர்ந்த காலமெல்லாம் அவருடைய பேச்சைத் தட்டாமல் நடந்து
கொண்டது போலவே இப்போதும் நடந்துகொண்டாள்.[m]

2:12 *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., "மசாஜ்." **2:14** *வே.வா., "இரண்
டாம் வீட்டுக்கு." **2:16** *இணைப்பு B15-ஐப் பாருங்கள். **2:17** *வே.வா., "தலைப்
பாகை." **2:18** *வரி செலுத்துவதிலிருந்தும் ராணுவ சேவையிலிருந்தும் விலக்கு
அளிக்கப்படுவதைக்கூட இது உட்படுத்தலாம். **2:19** *வே.வா., "இளம் பெண்கள்."

அதி. 2
a எஸ்தர் 4:12-14
b எஸ்தர் 2:7
c நீதி 7:17; உன் 3:6
d ஆதி 43:11; 1ரா 10:2; 2ரா 20:13
e எஸ்தர் 2:3
f எஸ்தர் 4:11
g எஸ்தர் 2:7
h எஸ்தர் 1:3
i எஸ்தர் 1:19
j எஸ்தர் 4:14
k எஸ்தர் 2:3, 4
l எஸ்தர் 2:5, 6; எஸ்தர் 3:8
m எஸ்தர் 2:7, 10

21 மொர்தெகாய் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருந்தபோது, ராஜாவின் அரண்மனை அதிகாரிகளாகவும் வாயிற்காவலர்களாகவும் வேலை செய்த பிக்தானும் தேரேசும் அகாஸ்வேரு ராஜாவின் மேல் இருந்த கோபத்தில் அவரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினார்கள். **22** மொர்தெகாய்க்கு அது தெரியவந்ததும் எஸ்தர் ராணியின் காதில் விஷயத்தைப் போட்டார். எஸ்தரும் மொர்தெகாய் சொல்லச் சொன்னதாக ராஜாவிடம் அதைத் தெரிவித்தாள். **23** உடனே விசாரணை நடத்தப்பட்டது. மொர்தெகாய் சொன்னது உண்மைதான் என்பது தெரியவந்தபோது, அந்த ஆட்கள் இரண்டு பேரும் மரக் கம்பத்தில் தொங்கவிடப்பட்டார்கள். இவையெல்லாம் அந்தக் காலத்து சரித்திரப் புத்தகத்தில் ராஜாவுக்கு முன்பாகப் பதிவு[a] செய்யப்பட்டன.

3 இதற்குப் பின்பு அகாஸ்வேரு ராஜா, ஆகாகியனான[b] அம்மெதாத்தாவின் மகன் ஆமானைக்[c] கௌரவித்து, எல்லா அதிகாரிகளையும் விட உயர்ந்த பதவியில் வைத்தார்.[d] **2** அரண்மனை வாசலில் இருந்த ராஜாவின் ஊழியர்கள் எல்லாரும், அவருடைய கட்டளைப்படி ஆமானுக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்தார்கள். ஆனால், மொர்தெகாய் அப்படிச் செய்யவில்லை. **3** அதனால், அரண்மனை வாசலில் இருந்த ராஜாவின் ஊழியர்கள் மொர்தெகாயைப் பார்த்து, "ராஜாவுடைய கட்டளையை ஏன் மீறுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். **4** இப்படி ஒவ்வொரு நாளும் அவர்கள் கேட்டுக்கொண்டே இருந்தார்கள், ஆனால் மொர்தெகாய் அதைக் கண்டுகொள்ளவே இல்லை. அதனால் அவர்கள் ஆமானிடம், "மொர்தெகாய் செய்வது சரிதானா என்று நீங்களே பாருங்கள்" என்றார்கள்.[e] தான் ஒரு யூதன்[f] என்று மொர்தெகாய் அவர்களிடம் சொல்லியிருந்தார்.

5 மொர்தெகாய் தனக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழாததை ஆமான் கவனித்தபோது அவனுக்குப் பயங்கர கோபம் வந்தது.[g] **6** அதனால், மொர்தெகாயை ஒழித்துக்கட்ட நினைத்தான். ஆனாலும், மொர்தெகாயின் இனத்தாரைப் பற்றி ராஜாவின் ஊழியர்கள் தன்னிடம் சொல்லியிருந்ததால் அவர்களையும் சேர்த்து ஒழித்தால்தான் தனக்குக் கௌரவம் என்று நினைத்தான். அதனால், அகாஸ்வேருவின் சாம்ராஜ்யம் முழுவதும் வாழ்ந்த மொர்தெகாயின் இனத்தாரான யூதர்கள் எல்லாரையும் தீர்த்துக்கட்ட வழி தேடினான்.

7 அது அகாஸ்வேரு ராஜா ஆட்சி செய்த 12-ஆம் வருஷத்தின்[h] முதலாம் மாதமான நிசான்* மாதம். யூதர்களை எந்த மாதத்தில் எந்த நாளில் தீர்த்துக்கட்டலாம் என்று தீர்மானிப்பதற்காக ஆமானுக்கு முன்னால் 'பூர்'[i] என்ற குலுக்கல் போடப்பட்டது. 12-ஆம் மாதமான ஆதார்* மாதத்திற்குக்[j] குலுக்கல் விழுந்தது. **8** பின்பு அகாஸ்வேரு ராஜாவிடம் ஆமான், "உங்களுடைய சாம்ராஜ்யத்தில் உள்ள[k] எல்லா மாகாணங்களிலும் ஒரு இனத்தார் பரவியிருக்கிறார்கள்.[l] அவர்களுடைய சட்டங்கள் மற்ற இனத்தாருடைய சட்டங்களிலிருந்து வித்தியாசமாக இருக்கின்றன. அவர்கள் ராஜாவின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதே இல்லை. அவர்களை இப்படியே விட்டுவைப்பது ராஜாவுக்கு நல்லதல்ல. **9** ராஜாவுக்குச் சரியாகப் பட்டால், அவர்களைத் தீர்த்துக்கட்ட வேண்டுமென்று சாம்ராஜ்யமெங்கும்

3:7 * இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

அதி. 2
a எஸ்தர் 6:1, 2

அதி. 3
b யாத் 17:16, எண் 24:7, உபா 25:19, 1சா 15:8, 32
c எஸ்தர் 3:10, எஸ்தர் 8:7, எஸ்தர் 9:24
d எஸ்தர் 1:14
e தானி 6:13
f எஸ்தர் 2:5
g எஸ்தர் 5:9
h எஸ்தர் 1:3, எஸ்தர் 2:16
i எஸ்தர் 9:24
j எஸ்தர் 9:1
k எஸ்தர் 1:1
l உபா 4:27, நெ 1:8, எரே 50:17

கட்டளை அனுப்புங்கள். அரண்மனை கஜானாவுக்கு நான் 10,000 வெள்ளி
தாலந்தை* அதிகாரிகளிடம் கொடுக்கிறேன்"# என்று சொன்னான்.

10 உடனே ராஜா, தன்னுடைய முத்திரை மோதிரத்தைக்[a] கழற்றி ஆகா
கியனான[b] அம்மெதாத்தாவின் மகனும் யூதர்களின் எதிரியுமான ஆமானி
டம் கொடுத்தார்.[c] **11** பின்பு அவனிடம், "அந்த ஜனங்களையும் வெள்ளி
யையும் உன்னிடமே ஒப்படைக்கிறேன். உன் இஷ்டப்படி செய்" என்று
சொன்னார். **12** முதலாம் மாதம் 13-ஆம் நாளில் ராஜாவுடைய செயலா
ளர்கள்[d] வரவழைக்கப்பட்டார்கள். ஆமான் ஆணையிட்ட எல்லாவற்றை
யும் அதிபதிகளுக்கும் மாகாணங்களின் ஆளுநர்களுக்கும் எல்லா இனத்
தாரின் தலைவர்களுக்கும், அந்தந்த மாகாணங்களில் பயன்படுத்தப்பட்ட
எழுத்துக்களிலும் அந்தந்த ஜனங்களின் மொழிகளிலும் அவர்கள் எழுதி
னார்கள்.[e] அவை அகாஸ்வேரு ராஜாவின் பெயரில் எழுதப்பட்டு, அவரு
டைய முத்திரை மோதிரத்தால் முத்திரை போடப்பட்டன.[f]

13 ராஜாவின் எல்லா மாகாணங்களுக்கும் தூதுவர்கள்* மூலமாக அந்
தக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. "சிறியவர்கள், பெரியவர்கள், பிள்ளைகள்,
பெண்கள் என்று பார்க்காமல் யூதர்கள் எல்லாரையும் ஒரே நாளில், அதா
வது 12-ஆம் மாதமாகிய ஆதார் மாதம்[g] 13-ஆம் நாளில், கொன்று
போடுங்கள். அவர்களை அடியோடு ஒழித்துக்கட்டுங்கள். அவர்களுக்குச்
சொந்தமானதையெல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள்"[h] என்று அந்தக் கடி
தங்களில் எழுதப்பட்டிருந்தது. **14** அவற்றை எல்லா மாகாணங்களுக்கும்
அனுப்பி, ஒரு சட்டமாக அமல்படுத்த வேண்டியிருந்தது. அந்த நாளுக்
குத் தயாராவதற்காக அந்தச் சட்டத்தை எல்லா ஜனங்களுக்கும் அறிவிக்க
வேண்டியிருந்தது. **15** சூசான்* கோட்டையில்# பிறப்பிக்கப்பட்ட அந்தச்
சட்டம், ராஜாவின் உத்தரவுப்படி தூதுவர்கள் மூலம் வேகமாக அனுப்பப்
பட்டது.[i] பின்பு, ராஜாவும் ஆமானும் திராட்சமது குடிக்க உட்கார்ந்தார்கள்.
ஆனால், சூசான்*[j] நகரம் குழப்பத்தில் மூழ்கியிருந்தது.

4 நடந்ததையெல்லாம் மொர்தெகாய் கேள்விப்பட்டபோது,[k] தன்னு
டைய உடையைக் கிழித்துவிட்டு, துக்கத் துணி* உடுத்திக்கொண்டு,
தன்மேல் சாம்பலைப் போட்டுக்கொண்டார். பின்பு நகரத்தின் நடுவில்
போய், கதறிக் கதறி அழுதார். **2** துக்கத் துணி உடுத்திய யாரும் அரண்
மனை வாசலுக்குள் நுழையக் கூடாது என்பதால் அவர் அந்த வாசல்வரை
தான் போனார். **3** ராஜாவின் கட்டளை எந்தெந்த மாகாணங்களை[l] எட்டி
யதோ அங்கெல்லாம் இருந்த யூதர்கள் விரதமிருந்து,[m] ஓலமிட்டு அழுது,
துக்கம் அனுசரித்தார்கள். நிறைய பேர் துக்கத் துணியிலும்* சாம்பலிலும்[n]
படுத்துக் கிடந்தார்கள். **4** எஸ்தரின் பணிப்பெண்களும் பணியாளர்களும்*
அவளிடம் விஷயத்தைச் சொன்னபோது, அவள் பதறிப்போனாள். துக்
கத் துணி உடுத்தியிருந்த மொர்தெகாய்க்கு வேறு உடைகளைக் கொடுத்து
அனுப்பினாள். ஆனால், அவர் அவற்றை வாங்கிக்கொள்ளவில்லை.

3:9 *ஒரு தாலந்து என்பது 34.2 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். #அல்லது, "இந்தக் கட்டளையை நிறைவேற்றுபவர்களுக்காக நான் 10,000 வெள்ளி தாலந்தை அரண்மனை கஜானாவுக்குத் தருகிறேன்." **3:13** *அதாவது, "விரைவு அஞ்சல்காரர்கள்." **3:15** *வே.வா., "சூசா." #வே.வா., "அரண்மனையில்." **4:1, 3** *சொல் பட்டியலைப் பாருங்கள். **4:4** *நே.மொ., "அண்ணகர்களும்." சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 3
a ஆதி 41:42
b எண் 24:7; 1சா 15:8, 32
c எஸ்தர் 3:1; எஸ்தர் 8:2
d எஸ்தர் 8:9
e தானி 6:8
f எஸ்தர் 8:8; தானி 6:17
g எஸ்தர் 9:1
h எஸ்தர் 8: 11, 12
i எஸ்தர் 8:14
j எஸ்றா 4:9; நெ 1:1; தானி 8:2

அதி. 4
k எஸ்தர் 2:5; எஸ்தர் 3:8-11
l எஸ்தர் 1:1
m 2நா 20:3; எஸ்றா 8:21
n தானி 9:3

5 அதை எஸ்தர் கேள்விப்பட்டபோது, தனக்குப் பணிவிடை செய்ய ராஜா
நியமித்த பணியாளரான ஆத்தாகுவைக் கூப்பிட்டு, என்ன நடந்ததென்று
மொர்தெகாயிடம் விசாரித்து வரும்படி கட்டளை கொடுத்தாள்.

6 அதனால், அரண்மனை வாசலுக்கு எதிரில் நகரத்தின் பொது சதுக்கத்
தில் இருந்த மொர்தெகாயிடம் ஆத்தாகு போனார். **7** மொர்தெகாய்
தனக்கு நடந்ததைப் பற்றியும், யூதர்களைத் தீர்த்துக்கட்ட[a] அரண்மனை
கஜானாவுக்கு ஆமான் தருவதாகச் சொன்ன தொகையைப்[b] பற்றியும் ஆத்
தாகுவிடம் சொன்னார். **8** யூதர்களை அழிப்பதற்காக சூசான்*[c] கோட்
டையில்# பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் நகலை ஆத்தாகுவிடம் கொடுத்து,
அதை எஸ்தரிடம் காட்டும்படியும் அவளுக்கு எல்லாவற்றையும் விளக்கும்
படியும் சொன்னார்.[d] அதோடு, ராஜாவை நேரில் போய்ப் பார்த்து அவளு
டைய ஜனங்களுக்குக் கருணை காட்டும்படி கெஞ்சிக் கேட்கும்படி சொல்
லச் சொன்னார்.

9 ஆத்தாகு திரும்பி வந்து மொர்தெகாய் சொன்ன எல்லாவற்றையும்
எஸ்தரிடம் விளக்கினார். **10** உடனே எஸ்தர் ஆத்தாகுவை மொர்தெகாயி
டம்[e] அனுப்பி, **11** “இந்த 30 நாட்களாக ராஜா என்னைக் கூப்பிடவில்லை.
ராஜா கூப்பிடாமல் அரண்மனை உள்முற்றத்துக்குள்[f] யாராவது போனால்,
அவர் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி, மரண தண்
டனைதான் கிடைக்கும்! ராஜா தன்னுடைய பொன் செங்கோலை நீட்டினால்
மட்டும்தான் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியும்.[g] இது ராஜாவின் எல்லா
ஊழியர்களுக்கும் அவருடைய மாகாணங்களில் வாழ்கிற எல்லா ஜனங்க
ளுக்கும் நன்றாகத் தெரியுமே” என்று சொல்லச் சொன்னாள்.

12 அவரும் எஸ்தர் சொன்னதை மொர்தெகாயிடம் சொன்னார்.
13 அப்போது, மொர்தெகாய் அவரைத் திரும்ப எஸ்தரிடம் அனுப்பி,
“நீ ராஜாவின் அரண்மனையில் இருப்பதால், மற்ற யூதர்கள் கொல்லப்படும்
போது நீ மட்டும் தப்பித்துவிடலாம் என்று நினைக்காதே. **14** நீ இப்போது
அமைதியாக இருந்தால், யூதர்களுக்கு உதவியும் விடுதலையும்
வேறொரு வழியில் கிடைக்கும்,[h] ஆனால் நீயும் உன் அப்பாவின் குடும்
பத்தாரும் அழிந்துபோவீர்கள். யாருக்குத் தெரியும், இப்படிப்பட்ட காலத்தில்
உதவி செய்வதற்காகவே நீ ராணியாக ஆகியிருக்கலாம்”[i] என்று சொல்லச்
சொன்னார்.

15 அதைக் கேட்ட எஸ்தர் மறுபடியும் ஆத்தாகுவை மொர்தெகா
யிடம் அனுப்பி, **16** “நீங்கள் சூசானில் இருக்கும் யூதர்கள் எல்லாரையும்
ஒன்றுகூட்டி எனக்காக விரதமிருங்கள்.[j] மூன்று நாட்களுக்கு ராத்திரியும் பக
லும் எதையும் சாப்பிடவோ குடிக்கவோ வேண்டாம்.[k] என்னுடைய பணிப்
பெண்களோடு சேர்ந்து நானும் விரதமிருக்கிறேன். அதன்பின், சட்டத்தை
மீறி ராஜாவிடம் போகிறேன்; என் உயிர் போனால் போகட்டும்” என்று
சொல்லச் சொன்னாள். **17** உடனே மொர்தெகாய் கிளம்பிப்போய், எஸ்தர்
சொன்ன எல்லாவற்றையும் செய்தார்.

5 மூன்றாம் நாள்,[l] ராணிக்குரிய உடையை எஸ்தர் உடுத்திக்கொண்டு
ராஜாவுடைய மாளிகையின் உள்முற்றத்தில் போய் நின்றாள்.
அதற்கு நேராக இருந்த அரச மாளிகையிலே ராஜா சிம்மாசனத்தில்

4:8 * வே.வா., “சூசா.” # வே.வா., “அரண்மனையில்.”

அதி. 4
a எஸ்தர் 3:8, 13
b எஸ்தர் 3:9
c எஸ்தர் 3:14, 15
d எஸ்தர் 2:20
e எஸ்தர் 2:5, 7
f எஸ்தர் 5:1
g எஸ்தர் 5:2, எஸ்தர் 8:4
h 1சா 12:22, ஏசா 54:17
i எஸ்தர் 2:17
j 2நா 20:3, எஸ்றா 8:21
k எஸ்தர் 5:1

அதி. 5
l எஸ்தர் 4:16

உட்கார்ந்திருந்தார். அந்தச் சிம்மாசனம் நுழைவாசலைப் பார்த்தபடி இருந்
தது. **2** முற்றத்தில் நின்றுகொண்டிருந்த எஸ்தரைப் பார்த்ததும் ராஜா சந்
தோஷப்பட்டார். பின்பு, தன்னுடைய பொன் செங்கோலை எஸ்தரிடம் நீட்
டினார்.[a] அப்போது, எஸ்தர் போய் செங்கோலின் நுனியைத் தொட்டாள்.

3 ராஜா அவளிடம், “என்ன விஷயம், எஸ்தர் ராணியே? உனக்கு
என்ன வேண்டும்? என்னுடைய சாம்ராஜ்யத்தில் பாதியைக் கேட்டாலும்
தருவேன்” என்றார். **4** அதற்கு எஸ்தர், “ராஜாவுக்கு நல்லதாகப் பட்டால்,
இன்று நான் ஏற்பாடு செய்திருக்கும் விருந்துக்கு நீங்கள் ஆமானைக்[b] கூட்
டிக்கொண்டு வர வேண்டும்” என்றாள். **5** உடனே ராஜா தன் ஆட்களிடம்,
“எஸ்தர் கேட்டுக்கொண்டபடி ஆமானைச் சீக்கிரம் வரச் சொல்லுங்கள்”
என்றார். பின்பு, ராஜாவும் ஆமானும் எஸ்தர் ஏற்பாடு செய்திருந்த விருந்
துக்குப் போனார்கள்.

6 விருந்தின் முடிவில் திராட்சமது பரிமாறப்பட்டபோது எஸ்தரைப்
பார்த்து ராஜா, “உனக்கு என்ன வேண்டுமென்று சொல். உனக்காக நான்
எதை வேண்டுமானாலும் செய்வேன். உன் விருப்பம் என்ன? என்னுடைய
சாம்ராஜ்யத்தில் பாதியைக் கேட்டாலும் தருவேன்”[c] என்றார். **7** அதற்கு
எஸ்தர், “எனக்கு என்ன வேண்டுமென்று சொல்கிறேன், ராஜாவே. **8** ராஜா
வுக்கு என்மேல் பிரியம் இருந்தால், என் விருப்பத்தை நிறைவேற்ற விரும்
பினால், நாளைக்கு நான் ஏற்பாடு செய்திருக்கிற விருந்துக்கும் ஆமா
னோடு ராஜா வர வேண்டும். அப்போது, எனக்கு உண்மையில் என்ன
வேண்டுமென்று ராஜாவிடம் சொல்கிறேன்” என்றாள்.

9 அன்று ஆமான் மிகுந்த சந்தோஷத்தோடும் குஷியோடும் அங்
கிருந்து கிளம்பினான். ஆனால், அரண்மனை வாசலில் இருந்த மொர்
தெகாய் தனக்கு முன்னால் பயபக்தியோடு எழுந்து நிற்காததையும் தனக்கு
மரியாதை கொடுக்காததையும் பார்த்தவுடன் அவனுக்குக் கோபம் தலைக்
கேறியது.[d] **10** ஆனாலும், தன்னை அடக்கிக்கொண்டு வீட்டுக்குப் போய்
விட்டான். பின்பு, தன்னுடைய நண்பர்களையும் மனைவி சிரேஷையும்[e]
கூப்பிட்டு, **11** தனக்கு நிறைய சொத்துப்பத்துகளும் மகன்களும்[f] இருப்ப
தைப் பற்றிப் பெருமையடித்தான். அதோடு, எல்லா தலைவர்களையும்
ஊழியர்களையும்விட உயர்ந்த பதவியை ராஜா தனக்குக் கொடுத்து தன்
னைக் கௌரவித்திருப்பதைப் பற்றிப் பெருமையடித்தான்.[g]

12 பின்பு அவன், “ராஜாவோடு விருந்துக்கு வரும்படி எஸ்தர்
ராணி என்னை மட்டும்தான் கூப்பிட்டிருந்தார்![h] அதுமட்டுமல்ல, ராஜா
வோடும் தன்னோடும் விருந்து சாப்பிட நாளைக்கும் என்னைக் கூப்பிட்டி
ருக்கிறார்![i] **13** ஆனாலும் என்ன பிரயோஜனம்? அந்த யூதன் மொர்
தெகாய் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருக்கும்வரை எனக்கு நிம்மதியே
கிடையாது” என்று சொன்னான். **14** இதைக் கேட்ட அவன் மனைவி சிரே
ஷும் அவனுடைய நண்பர்களும், “சுமார் 73 அடி* உயரத்துக்கு ஒரு
மரக் கம்பத்தை நாட்டுங்கள். அதில் மொர்தெகாயைத் தொங்கவிட வேண்டு
மென்று காலையில் ராஜாவிடம் போய்ச் சொல்லுங்கள்.[j] அதன் பிறகு, ராஜா
வோடு சந்தோஷமாக விருந்துக்குப் போங்கள்” என்று சொன்னார்கள். இந்த
ஆலோசனை ஆமானுக்குப் பிடித்திருந்ததால் மரக் கம்பத்தை நாட்ட ஏற்
பாடு செய்தான்.

5:14 * நே.மொ., “50 முழ.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 5
a எஸ்தர் 4:11
எஸ்தர் 8:4
b எஸ்தர் 3:1, 10
c எஸ்தர் 7:2
d எஸ்தர் 3:2-5
e எஸ்தர் 5:14
எஸ்தர் 6:13
f எஸ்தர் 9:7-10
g எஸ்தர் 3:1
h எஸ்தர் 5:5
i எஸ்தர் 5:8
j எஸ்தர் 6:4
எஸ்தர் 7:9

அதி. 6

6 அந்த நாள் ராத்திரி ராஜாவுக்குத் தூக்கம் வரவில்லை. அதனால், தன்
னுடைய காலத்தின் சரித்திரப் புத்தகத்தை[a] எடுத்துவரும்படி சொன்
னார். அது அவருக்கு வாசித்துக் காட்டப்பட்டது. **2** அதில், ராஜாவின்
அரண்மனை அதிகாரிகளாகவும் வாயிற்காவலர்களாகவும் வேலை செய்த
பிக்தானாவும் தேரேசும் அகாஸ்வேரு ராஜாவைக் கொலை செய்ய சதித்
திட்டம் தீட்டியதைப் பற்றி மொர்தெகாய் தெரியப்படுத்திய விஷயம் எழு
தப்பட்டிருந்தது.[b] **3** உடனே ராஜா, “அதற்காக மொர்தெகாயை எப்ப
டிக் கௌரவித்தோம், அவருக்கு என்ன சன்மானம் கொடுத்தோம்?” என்று
கேட்டார். அப்போது ராஜாவின் உதவியாளர்கள், “அவருக்கு நாம் ஒன்
றுமே செய்யவில்லை” என்று சொன்னார்கள்.

4 அதன்பின் ராஜா, “முற்றத்தில் யாராவது இருக்கிறார்களா?” என்று கேட்
டார். அந்தச் சமயம் பார்த்து, ராஜாவுடைய மாளிகையின் வெளிமுற்றத்துக்
குள்[c] ஆமான் வந்து நின்றுகொண்டிருந்தான். தான் நாட்டியிருந்த மரக் கம்
பத்தில் மொர்தெகாயைத் தொங்கவிடுவது பற்றி ராஜாவிடம் பேச அங்கு
வந்திருந்தான்.[d] **5** ராஜாவின் உதவியாளர்கள், “முற்றத்தில் ஆமான்[e] நின்
றுகொண்டிருக்கிறார்” என்று சொன்னார்கள். உடனே ராஜா, “அவனை வரச்
சொல்லுங்கள்” என்றார்.

6 ஆமான் வந்ததும் ராஜா அவனிடம், “யாரையாவது ராஜா கௌர
விக்க விரும்பினால் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார். அப்
போது ஆமான், “என்னைத் தவிர ராஜா யாரைக் கௌரவிக்கப் போகிறார்?”
என்று நினைத்தான்.[f] **7** அதனால் அவரிடம், “யாரையாவது ராஜா கௌர
விக்க விரும்பினால், **8** அவருக்காக ராஜா உடுத்தும் உடை கொண்டுவ
ரப்பட வேண்டும்.[g] ராஜா சவாரி செய்கிற குதிரையும் தலை அலங்காரம்
செய்யப்பட்டுக் கொண்டுவரப்பட வேண்டும். **9** அவை ராஜாவின் மதிப்
புமிக்க அதிகாரிகளில் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அந்த
அதிகாரி, ராஜா யாரைக் கௌரவிக்க விரும்புகிறாரோ அவருக்கு அந்த
உடையைப் போட்டுவிட்டு, அவரை அந்தக் குதிரைமேல் உட்கார
வைத்து, நகரத்தின் பொது சதுக்கத்தில் வலம்வரச் செய்ய வேண்டும்.
அப்போது, ‘ராஜா யாரைக் கௌரவிக்க விரும்புகிறாரோ அவர் இப்படித்
தான் கௌரவிக்கப்படுவார்!’ என்று அவருக்கு முன்னால் ஆட்கள் சொல்
லிக்கொண்டே போக வேண்டும்” என்று சொன்னான்.[h] **10** அதைக் கேட்
டதும் ராஜா ஆமானிடம், “சீக்கிரம்! உடையையும் குதிரையையும்
கொண்டுபோய், நீ சொன்னதையெல்லாம் அரண்மனை வாசலில் உட்
கார்ந்திருக்கும் மொர்தெகாய்க்குச் செய். அதில் ஒன்றைக்கூடச் செய்யாமல்
இருந்துவிடாதே” என்று சொன்னார்.

11 அதனால், ஆமான் அந்த உடையைக் கொண்டுபோய் மொர்
தெகாய்க்குப்[i] போட்டுவிட்டான். அவரை அந்தக் குதிரையின் மேல்
உட்கார வைத்து, நகரத்தின் பொது சதுக்கத்தில் வலம்வரச் செய்து, “ராஜா
யாரைக் கௌரவிக்க விரும்புகிறாரோ அவர் இப்படித்தான் கௌரவிக்
கப்படுவார்!” என்று அவருக்கு முன்னால் சொல்லிக்கொண்டே போனான்.
12 அதன்பின், மொர்தெகாய் அரண்மனை வாசலுக்குத் திரும்பினார்.
ஆனால், ஆமான் துக்கத்தில் முக்காடு போட்டுக்கொண்டு, அவசர அவசர
மாகத் தன் வீட்டுக்குப் போனான். **13** நடந்ததையெல்லாம் தன் மனைவி
சிரேஷிடமும்[j] எல்லா நண்பர்களிடமும் சொன்னான். அதற்கு அவனுடைய

a எஸ்தர் 10:2
b எஸ்தர் 2: 21, 23
c எஸ்தர் 4:11
d எஸ்தர் 5:14
e எஸ்தர் 3:1
f எஸ்தர் 3:2 எஸ்தர் 5:11
g எஸ்தர் 8:15
h ஆதி 41: 42, 43
i எஸ்தர் 2:5, 6
j எஸ்தர் 5: 10, 14

ஆலோசகர்களும் மனைவி சிரேஷும், “மொர்தெகாயிடம் நீங்கள் தோற்று
விட்டீர்கள். அவன் ஒரு யூதனாக இருப்பதால், அவனை உங்களால் ஜெயிக்
கவே முடியாது. உங்கள் கதி அவ்வளவுதான்!” என்று சொன்னார்கள்.

14 இப்படி அவர்கள் பேசிக்கொண்டு இருந்தபோதே அரண்மனை அதி
காரிகள் வந்து, எஸ்தர் ஏற்பாடு செய்திருந்த விருந்துக்கு ஆமானை அவ
சரமாகக் கூட்டிக்கொண்டு போனார்கள்.[a]

7 ராஜாவும் ஆமானும்[b] எஸ்தர் ராணி ஏற்பாடு செய்திருந்த விருந்துக்கு
வந்தார்கள். **2** அந்த இரண்டாம் நாள் விருந்தின் முடிவில் திராட்ச
மது பரிமாறப்பட்டபோது ராஜா மறுபடியும் எஸ்தரிடம், “எஸ்தர் ராணியே,
உனக்கு என்ன வேண்டுமென்று சொல். உனக்காக நான் எதை வேண்டுமா
னாலும் செய்வேன். உன் விருப்பம் என்ன? என்னுடைய சாம்ராஜ்யத்தில்
பாதியைக் கேட்டாலும் தருவேன்” என்று சொன்னார்.[c] **3** அதற்கு எஸ்
தர் ராணி, “ராஜாவுக்கு என்மேல் பிரியம் இருந்தால், ராஜாவுக்கு நல்லதா
கப் பட்டால், எனக்கும் என் ஜனங்களுக்கும்[d] உயிர்ப்பிச்சை தர வேண்டும்.
நான் கேட்டுக்கொள்வது இதுதான். என்னுடைய விருப்பமும் இதுதான்.
4 நானும் என் ஜனங்களும் கொலை செய்யப்படுவதற்காகவும் அடியோடு
அழிக்கப்படுவதற்காகவும் விற்கப்பட்டிருக்கிறோம்.[e] நாங்கள் வெறுமனே
அடிமைகளாக விற்கப்பட்டிருந்தால்கூட, நான் பேசாமல் இருந்திருப்பேன்.
ஆனால், ராஜாவுக்கே நஷ்டம் ஏற்படப்போவதால் இந்தப் பிரச்சினையை
அப்படியே விட்டுவிடுவது நியாயமாக இருக்காது” என்று சொன்னாள்.

5 உடனே அகாஸ்வேரு ராஜா, “இப்படியொரு அக்கிரமத்தைச் செய்யத்
துணிந்தவன் யார்? அவன் எங்கே?” என்று கேட்டார். **6** அதற்கு
எஸ்தர், “இதோ, இந்தக் கேடுகெட்ட ஆமான்தான் அந்த எதிரி!” என்று
சொன்னாள்.

ராஜாவுக்கும் ராணிக்கும் முன்பாக ஆமான் வெலவெலத்துப் போனான்.
7 ராஜா பயங்கர கோபத்துடன் விருந்தைவிட்டு எழுந்து அரண்மனைத்
தோட்டத்துக்குப் போனார். ஆனால் ஆமான், ராஜா எப்படியும் தன்னைத்
தண்டிக்கப்போகிறார் என்பதை உணர்ந்து, தன்னுடைய உயிரைக் காப்பாற்
றும்படி எஸ்தர் ராணியிடம் கெஞ்சிக் கேட்க எழுந்து நின்றான். **8** ராஜா
அரண்மனைத் தோட்டத்திலிருந்து திராட்சமது பரிமாறப்பட்ட இடத்துக்
குத் திரும்பி வந்தபோது, எஸ்தர் உட்கார்ந்திருந்த மெத்தையில் ஆமான்
விழுந்து கிடப்பதைப் பார்த்தார். உடனே, “இவன் என் அரண்மனையி
லேயே என் ராணியைக் கற்பழிக்கக்கூட துணிந்துவிட்டானா?” என்று
கத்தினார். உடனே, அங்கிருந்தவர்கள் ஆமானின் முகத்தைத் துணியால்
மூடினார்கள். **9** அரண்மனை அதிகாரிகளில் ஒருவரான அற்போனா[f]
ராஜாவைப் பார்த்து, “ராஜாவின் உயிரைக் காப்பாற்றிய[g] மொர்தெகாயைத்
தொங்கவிடுவதற்காக ஆமான் ஒரு மரக் கம்பத்தைக்கூட நாட்டி வைத்திருக்
கிறான்.[h] அது அவனுடைய வீட்டுக்கு வெளியில் சுமார் 73 அடி* உயரத்
தில் நிற்கிறது” என்று சொன்னார். அதற்கு ராஜா, “அந்த மரக் கம்பத்திலேயே
இவனைத் தொங்கவிடுங்கள்!” என்றார். **10** அதன்படி, மொர்தெகாய்க்காக
அவன் நாட்டியிருந்த மரக் கம்பத்திலேயே அவனைத் தொங்கவிட்டார்கள்.
அப்போதுதான் ராஜாவின் ஆத்திரம் அடங்கியது.

7:9 * நே.மொ., “50 முழ.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 6
a எஸ்தர் 5:8

அதி. 7
b எஸ்தர் 3:1
c எஸ்தர் 5:3, 6
d எஸ்தர் 2:5, 7
e எஸ்தர் 3:8, 9
எஸ்தர் 3:13
எஸ்தர் 4:7, 8
f எஸ்தர் 1:10
g எஸ்தர் 6:2
h எஸ்தர் 5:14

8 அன்று அகாஸ்வேரு ராஜா, யூதர்களின் எதிரியான[a] ஆமானுடைய
வீட்டை[b] எஸ்தர் ராணிக்குக் கொடுத்தார். எஸ்தர் ராணி, தனக்கும்
மொர்தெகாய்க்கும் இருந்த உறவுமுறையைப்[c] பற்றி ராஜாவிடம் சொல்லி
யிருந்தாள். அதனால், மொர்தெகாய் ராஜாவின் முன்னால் வந்து நின்றார்.
2 அப்போது ராஜா, ஆமானிடமிருந்து திரும்ப வாங்கிக்கொண்ட முத்
திரை மோதிரத்தைக்[d] கழற்றி மொர்தெகாயிடம் கொடுத்தார். எஸ்தரும்,
ஆமானின் வீட்டைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை மொர்தெகாய்க்
குக் கொடுத்தாள்.[e]

3 பின்பு, அவள் ராஜாவிடம் மறுபடியும் பேசினாள். அவருடைய பாதத்
தில் விழுந்து, கண்ணீர்விட்டு அழுது, ஆகாகியனான ஆமான் யூதர்களுக்கு
எதிராகச் செய்த சதியை[f] முறியடிக்கச் சொல்லிக் கெஞ்சினாள். **4** அப்
போது ராஜா, தன்னுடைய பொன் செங்கோலை எஸ்தரிடம் நீட்டினார்.[g] எஸ்
தர் எழுந்து ராஜாவுக்கு முன்னால் நின்று, **5** "ராஜாவே, உங்களுக்கு நல்ல
தாகப் பட்டால், உங்களுக்கு என்மேல் கருணை இருந்தால், உங்களுக்குச்
சரியென்று தோன்றினால், நான் உங்களுக்குப் பிரியமானவளாக இருந்தால்
நான் கேட்டுக்கொள்கிறபடி செய்ய வேண்டும். எல்லா மாகாணங்களிலும்
இருக்கிற யூதர்களை ஒழித்துக்கட்டச் சொல்லி அந்த ஆகாகியனான[h] அம்
மெதாத்தாவின் மகன் ஆமான் எழுதி அனுப்பினானே, அந்தச் சதிகாரனின்
கட்டளைகளை[i] ரத்து செய்யும்படி நீங்கள் ஆணையிட்டு எழுத வேண்டும்.
6 என் ஜனங்கள் அழிந்துபோவதை என்னால் எப்படிப் பார்த்துக்கொண்டி
ருக்க முடியும்? என் சொந்தபந்தங்கள் கொல்லப்படுவதை என்னால் எப்ப
டித் தாங்கிக்கொள்ள முடியும்?" என்றாள்.

7 அதனால் அகாஸ்வேரு ராஜா எஸ்தர் ராணியையும் யூதரான மொர்
தெகாயையும் பார்த்து, "இதோ! ஆமானின் வீட்டை நான் எஸ்தரிடம் ஒப்
படைத்துவிட்டேன்.[j] அவன் யூதர்களைத் தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டியதால்
அவனை மரக் கம்பத்தில் தொங்கவிட்டேன்.[k] **8** இப்போது நீங்கள் யூதர்
களின் சார்பாக எதை எழுத விரும்புகிறீர்களோ அதை ராஜாவின் பெயரில்
எழுதி அவருடைய முத்திரை மோதிரத்தால் முத்திரை போடுங்கள். ராஜா
வின் பெயரில் எழுதப்பட்டு அவருடைய முத்திரை மோதிரத்தால் முத்
திரை போடப்படும் எந்த ஆணையையும் யாராலும் மாற்ற முடியாது"[l]
என்று சொன்னார்.

9 அதனால், மூன்றாம் மாதமாகிய சீவான்* மாதத்தின் 23-ஆம் நாளில்,
ராஜாவின் செயலாளர்கள் வரவழைக்கப்பட்டார்கள். மொர்தெகாய் கட்ட
ளையிட்ட எல்லாவற்றையும் அவர்கள் யூதர்களுக்கும் அதிபதிகளுக்கும்[m]
ஆளுநர்களுக்கும் இந்தியாமுதல் எத்தியோப்பியாவரை உள்ள 127 மாகா
ணங்களின் தலைவர்களுக்கும்[n] எழுதி அனுப்பினார்கள். அந்தந்த மாகா
ணங்களில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களிலும் அந்தந்த ஜனங்களின்
மொழிகளிலும் யூதர்களின் எழுத்துக்களிலும் அவர்களுடைய மொழியி
லும் எழுதி அனுப்பினார்கள்.

10 மொர்தெகாய் அந்தக் கடிதங்களை அகாஸ்வேரு ராஜாவின் பெய
ரில் எழுதி, அவருடைய முத்திரை மோதிரத்தால்[o] முத்திரை போட்டு,
தூதுவர்களிடம் கொடுத்து அனுப்பினார். அரசு அஞ்சல் வேலைக்காகவே
வளர்க்கப்பட்ட அதிவேக குதிரைகளில் அந்தத் தூதுவர்கள் போனார்கள்.

அதி. 8
a எஸ்தர் 3:8, எஸ்தர் 9:24
b எஸ்தர் 5:11
c எஸ்தர் 2:5, 7
d ஆதி 41:41, 42; எஸ்தர் 3:10; தானி 6:17
e தானி 2:48
f எஸ்தர் 3:9; எஸ்தர் 7:4; எஸ்தர் 9:24, 25
g எஸ்தர் 4:11
h யாத் 17:16; எண் 24:7; உபா 25:19; 1சா 15:8, 33
i எஸ்தர் 3:12, 14
j எஸ்தர் 8:1
k எஸ்தர் 7:10
l தானி 6:8, 15
m தானி 6:1
n எஸ்தர் 9:3
o எஸ்தர் 8:2

8:9 * இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

11 எல்லா நகரங்களிலும் யூதர்கள் தங்கள் உயிருக்காக ஒன்றுதிரண்டு
போராடுவதற்கு ராஜா அந்தக் கடிதங்களில் அனுமதி தந்திருந்தார். அவர்
களைத் தாக்க வருகிறவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தா
லும் சரி, எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்க
ளைக் கொன்று போடுவதற்கு அனுமதி கொடுத்திருந்தார். அவர்களுடைய
பெண்களையும், பிள்ளைகளையும்கூட விட்டுவைக்காமல் எல்லாரையும்
அடியோடு ஒழித்துக்கட்டவும் அவர்களுடைய உடைமைகளைக் கைப்
பற்றவும் அனுமதி கொடுத்திருந்தார்.[a] **12** ஆதார்* என்ற 12-ஆம் மாதத்
தின் 13-ஆம் நாளாகிய[b] அந்த ஒரே நாளில், அகாஸ்வேரு ராஜாவின்
எல்லா மாகாணங்களிலும் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டியிருந்தது.
13 அந்த நாளில் எதிரிகளைப் பழிதீர்க்க[c] அவர்கள் தயாராயிருக்க வேண்
டும் என்பதற்காக அந்த ஆணையை எல்லா மாகாணங்களுக்கும் அனுப்பி,
ஒரு சட்டமாக எல்லாருக்கும் அறிவிக்க வேண்டியிருந்தது. **14** ராஜாவின்
கட்டளைப்படியே, தூதுவர்கள் அரசு அஞ்சல் வேலைக்காகவே பயன்படுத்
தப்பட்ட குதிரைகளில் வேகமாகப் போனார்கள். அந்தச் சட்டம் சூசான்*[d]
கோட்டையிலும்# அறிவிக்கப்பட்டது.

15 மொர்தெகாய் பெரிய தங்கக் கிரீடம் சூடிக்கொண்டு, நீலமும் வெள்
ளையும் கலந்த ராஜ உடையையும் உயர்தரமான ஊதா நிற கம்பளி சால்வை
யையும் போட்டுக்கொண்டு,[e] ராஜாவிடமிருந்து கிளம்பிப் போனார். சூசான்
நகரமெங்கும் சந்தோஷ ஆரவாரம் கேட்டது. **16** யூதர்களுக்குக் கிடைத்த
நிம்மதிக்கும் சந்தோஷத்துக்கும் அளவே இல்லை. அவர்களுடைய மதிப்பு
மரியாதை கூடியது. **17** ராஜாவின் ஆணையும் சட்டமும் போய்ச் சேர்ந்த
எல்லா மாகாணங்களிலும் நகரங்களிலும் இருந்த யூதர்கள் சந்தோஷத்
தோடும் குதூகலத்தோடும் விருந்துகளையும் கொண்டாட்டங்களையும் நடத்
தினார்கள். அவர்களை நினைத்து மற்ற ஜனங்கள் மிகவும் பயந்தார்கள். அத
னால், அவர்களில் நிறைய பேர் யூத மதத்துக்கு மாறினார்கள்.[f]

9 ராஜாவின் ஆணையையும் சட்டத்தையும் நிறைவேற்ற[g] வேண்டிய
நாளில், அதாவது 12-ஆம் மாதமாகிய ஆதார்* மாதத்தின் 13-ஆம்
நாளில்,[h] தங்களை ஒழித்துக்கட்ட நினைத்த எதிரிகளை யூதர்கள் ஒழித்
துக்கட்டினார்கள்.[i] **2** அகாஸ்வேரு ராஜாவின் மாகாணங்களில்[j] வாழ்ந்து
வந்த யூதர்கள் தங்களைத் தாக்க வருகிறவர்களை வீழ்த்துவதற்காக அவர
வர் ஊர்களில் ஒன்றுதிரண்டார்கள். மற்ற எல்லா ஜனங்களும் அவர்களை
நினைத்து மிகவும் பயந்ததால்[k] ஒருவரால்கூட அவர்களை எதிர்த்து நிற்க
முடியவில்லை. **3** மாகாணங்களின் தலைவர்கள், அதிபதிகள்,[l] ஆளுநர்
கள், ராஜாவின் வேலைகளைக் கவனித்துவந்தவர்கள் என எல்லாரும்
மொர்தெகாயை நினைத்துப் பயந்ததால் யூதர்களுக்கு ஆதரவு கொடுத்
தார்கள். **4** ராஜாவின் மாளிகையில் மொர்தெகாயின் செல்வாக்கு அதிக
மானது.[m] அவருடைய அதிகாரம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போன
தால், எல்லா மாகாணங்களிலும் அவருடைய புகழ் பரவியது.

5 யூதர்கள் தங்களை வெறுத்த ஆட்களை இஷ்டப்படி பழிவாங்கினார்
கள். எல்லா எதிரிகளையும் வாளால் வெட்டிக் கொன்றார்கள்.[n] **6** சூசான்*[o]
கோட்டையில்# 500 ஆண்களை அவர்கள் வெட்டி வீழ்த்தினார்கள்.

8:12; 9:1 *இணைப்பு B15-ஐப் பாருங்கள். **8:14; 9:6** *வே.வா., "சூசா." **8:14** #வே.வா., "அரண்மனையிலும்." **9:6** #வே.வா., "அரண்மனையில்."

அதி. 8
a எஸ்தர் 9:5-10
b எஸ்தர் 3:13, எஸ்தர் 9:1, 2, எஸ்தர் 9:16, 17
c சங் 149:6, 7
d எஸ்றா 4:9, நெ 1:1, எஸ்தர் 1:2, தானி 8:2
e எஸ்தர் 6:7, 8
f சக 8:23

அதி. 9
g எஸ்தர் 3:13
h எஸ்தர் 3:7, எஸ்தர் 8:11, 12
i உபா 32:36, 2சா 22:41
j எஸ்தர் 1:1
k எஸ்தர் 8:17
l தானி 6:1
m எஸ்தர் 8:15
n எஸ்தர் 8:11
o எஸ்றா 4:9, நெ 1:1, எஸ்தர் 1:2, தானி 8:2

7 அதோடு பர்சான்தாத்தா, தல்போன், அஸ்பாதா, **8** பொராதா, அதலியா,
அரிதாத்தா, **9** பர்மஷ்டா, அரிசாய், அரிதாய், வாய்சாதா ஆகிய பத்துப்
பேரையும் கொன்றார்கள். **10** இவர்கள், யூதர்களின் எதிரியும் அம்மெதாத்
தாவின் மகனுமான ஆமானின்[a] மகன்கள். யூதர்கள் இவர்களைக் கொன்ற
பின்பு இவர்களுடைய எந்த உடைமையையும் கைப்பற்றவில்லை.[b]

11 அன்று சூசான் கோட்டையில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள்
என்று ராஜாவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

12 அப்போது ராஜா எஸ்தர் ராணியிடம், “சூசான் கோட்டையில் யூதர்
கள் 500 ஆண்களையும் ஆமானின் பத்து மகன்களையும் வெட்டிக்
கொன்றிருக்கிறார்கள். அப்படியென்றால், ராஜாவின் மற்ற மாகாணங்க
ளில் எத்தனை பேரைக் கொன்றிருப்பார்கள்?[c] இப்போது உனக்கு என்ன
வேண்டுமென்று சொல். உனக்காக நான் எதையும் செய்வேன். வேறென்ன
வேண்டுமானாலும் கேள். நீ எதைக் கேட்டாலும் தருவேன்” என்று சொன்
னார். **13** அதற்கு எஸ்தர், “ராஜாவுக்குச் சரியென்று பட்டால்,[d] சூசானில்
இருக்கும் யூதர்கள் இன்று செய்தது போலவே[e] நாளையும் செய்ய அனு
மதி தர வேண்டும். அதோடு, ஆமானின் பத்து மகன்களையும் மரக் கம்
பத்தில் தொங்கவிட வேண்டும்”[f] என்றாள். **14** அவள் கேட்டுக்கொண்ட
படியே செய்ய ராஜா ஆணையிட்டார். அதற்காக சூசானில் ஒரு சட்டம்
பிறப்பிக்கப்பட்டது. ஆமானின் பத்து மகன்களும் மரக் கம்பத்தில் தொங்
கவிடப்பட்டார்கள்.

15 சூசானில் இருந்த யூதர்கள் ஆதார் மாதத்தின் 14-ஆம் நாளில்[g] மறு
படியும் ஒன்றுதிரண்டு, அங்கிருந்த 300 ஆண்களைக் கொன்றார்கள்.
ஆனால், அவர்களுடைய எந்த உடைமையையும் கைப்பற்றவில்லை.

16 ராஜாவின் மாகாணங்களில் இருந்த மற்ற யூதர்களும் தங்கள் உயி
ரைக் காப்பாற்றிக்கொள்ள[h] ஒன்றுதிரண்டு போராடினார்கள். விரோதிக
ளில் 75,000 பேரை ஒழித்துக்கட்டினார்கள்,[i] ஆனால் அவர்களுடைய எந்த
உடைமையையும் கைப்பற்றவில்லை. **17** ஆதார் மாதம் 13-ஆம் நாளில்
அப்படி நடந்தது. 14-ஆம் நாளில் அவர்கள் தாக்குதல் நடத்தவில்லை;
அந்த நாளில் விருந்து சாப்பிட்டு சந்தோஷமாக இருந்தார்கள்.

18 சூசானில் இருந்த யூதர்கள், 13-ஆம் நாளிலும்[j] 14-ஆம் நாளிலும்[k]
ஒன்றுதிரண்டு போராடினார்கள். 15-ஆம் நாளில் அவர்கள் தாக்குதல் நடத்
தவில்லை; அந்த நாளில் விருந்து சாப்பிட்டு சந்தோஷமாக இருந்தார்கள்.
19 சூசான் தலைநகரத்தைச் சுற்றியிருந்த சிற்றூர்களில் வாழ்ந்த மற்ற யூதர்
கள், சந்தோஷமாக விருந்து சாப்பிட்டுக்கொண்டும் ஒருவருக்கொருவர்
பலகாரங்களைக் கொடுத்துக்கொண்டும்[l] ஆதார் 14-ஆம் நாளைக் கொண்
டாடினார்கள்.[m]

20 இந்த எல்லா சம்பவங்களையும் மொர்தெகாய்[n] பதிவு செய்து,
அகாஸ்வேரு ராஜாவின் எல்லா மாகாணங்களிலும் குடியிருந்த யூதர்க
ளுக்கு அதிகாரப்பூர்வமான கடிதங்களை அனுப்பினார். **21** ஒவ்வொரு
வருஷமும் ஆதார் மாதம் 14-ஆம் நாளை மட்டுமல்லாமல் 15-ஆம்
நாளையும் கொண்டாடும்படி அந்தக் கடிதங்களில் கட்டளை கொடுத்திருந்
தார். **22** ஏனென்றால், அந்த நாட்களில்தான் யூதர்களுடைய எதிரிகளின்
தொல்லை ஒழிந்தது. அந்த நாட்களில்தான் யூதர்களின் அழுகை[o] ஆனந்
தமாகவும் கவலை கொண்டாட்டமாகவும் மாறியது. அவர்கள் அந்த

அதி. 9
a எஸ்தர் 3:8, 10; எஸ்தர் 7:4-6
b எஸ்தர் 8:11; எஸ்தர் 9:16
c எஸ்தர் 9:16
d எஸ்தர் 5:8; எஸ்தர் 7:3; எஸ்தர் 8:5
e எஸ்தர் 8:11
f எஸ்தர் 7:10
g எஸ்தர் 9:21, 22
h எஸ்தர் 7:3
i எஸ்தர் 8:13; சங் 149:6, 7
j எஸ்தர் 9:1, 2
k எஸ்தர் 9:13, 15
l நெ 8:10
m சங் 124:2, 6
n எஸ்தர் 2:5, 6
o எஸ்தர் 4:1-3

நாட்களைப் பண்டிகை நாட்களாகக் கொண்டாடி, சந்தோஷமாக விருந்து
சாப்பிட்டு, ஒருவருக்கொருவர் பலகாரங்களைக் கொடுத்து, ஏழைகளுக்குத்
தானங்கள் செய்ய வேண்டுமென்று கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது.

23 யூதர்கள் அந்தப் பண்டிகையை அன்றைக்குக் கொண்டாடியது
போலவே என்றைக்கும் கொண்டாடவும், மொர்தெகாய் எழுதியிருந்தப
டியே செய்யவும் ஒத்துக்கொண்டார்கள். **24** ஏனென்றால், யூதர்களுடைய
எதிரியும் ஆகாகியனான[a] அம்மெதாத்தாவின் மகனுமான ஆமான்,[b]
யூதர்களைத் தீர்த்துக்கட்ட[c] சதித்திட்டம் தீட்டியிருந்தான். அவர்களைக்
கதிகலங்க வைக்கவும் அவர்களை ஒழித்துக்கட்டவும் 'பூர்'[d] என்ற குலுக்
கலைப் போட்டிருந்தான். **25** ஆனால் ராஜாவிடம் போய் எஸ்தர் பேசிய
தும், "யூதர்களுக்கு எதிராக அந்தச் சதிகாரன் தீட்டிய திட்டம்[e] அவனுக்கே
பலிக்கட்டும்" என்ற ஆணையை ராஜா எழுதிக் கொடுத்தார்.[f] அதன்ப
டியே, ஆமானும் அவனுடைய மகன்களும் மரக் கம்பத்தில் தொங்கவிடப்
பட்டார்கள்.[g] **26** அதனால், 'பூர்'*[h] என்ற பெயரின் அடிப்படையில் அந்த
நாட்களை 'பூரீம்' என்று யூதர்கள் அழைத்தார்கள். மொர்தெகாய் அனுப்
பிய கடிதத்தில் எழுதியிருந்ததையும், தாங்கள் பார்த்ததையும், தங்களுக்கு
நடந்ததையும் வைத்து இப்படி உறுதிமொழி எடுத்தார்கள்: **27** "யூதர்களும்
அவர்களுடைய வம்சத்தாரும் அவர்களோடு சேர்ந்துகொள்பவர்களும்[i]
அந்த இரண்டு நாட்களைக் கண்டிப்பாகக் கொண்டாட வேண்டும்; அது
சம்பந்தமாக எழுதப்பட்டதை ஒவ்வொரு வருஷமும் அந்தக் குறிப்பிட்ட
நாட்களில் பின்பற்ற வேண்டும். **28** எல்லா தலைமுறைகளும் அந்த நாட்
களை நினைவில் வைத்துக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு மாகாணத்
தையும் நகரத்தையும் குடும்பத்தையும் சேர்ந்தவர்கள் அதைக் கொண்டாட
வேண்டும். யூதர்கள் பூரீம் பண்டிகையைக் கொண்டாடுவதை நிறுத்தவே
கூடாது, அவர்களுடைய வம்சத்தாரும் அந்தப் பண்டிகையை எப்போதும்
ஞாபகம் வைத்துக் கொண்டாட வேண்டும்."

29 பின்பு, பூரீம் பண்டிகையைக் கொண்டாடுவதன் அவசியத்தை உறு
திப்படுத்துவதற்காக, அபியாயேலின் மகளான எஸ்தர் ராணியும் யூதரான
மொர்தெகாயும் முழு அதிகாரத்தோடு இன்னொரு கடிதத்தை எழுதினார்
கள். **30** அகாஸ்வேரு ராஜாவின் ஆட்சிக்குட்பட்ட 127 மாகாணங்களில்[j]
வாழ்ந்த யூதர்களுக்கு அந்த அதிகாரப்பூர்வமான கடிதம் அனுப்பப்பட்
டது. சமாதான வார்த்தைகளும் உண்மையான வார்த்தைகளும் அதில் எழு
தப்பட்டிருந்தன. **31** யூதரான மொர்தெகாயும் எஸ்தர் ராணியும் கட்டளை
கொடுத்தபடியே[k] யூதர்கள் பூரீம் பண்டிகையைக் கொண்டாட வேண்
டும் என்பதை அந்தக் கடிதம் உறுதிப்படுத்தியது. யூதர்கள் தங்களுக்காக
வும் தங்கள் வம்சத்தாருக்காகவும் எடுத்த உறுதிமொழியின்படி[l] அந்த நாட்
களில் அவர்கள் விரதமிருந்து[m] கடவுளிடம் மன்றாட[n] வேண்டும்
என்பதையும் உறுதிப்படுத்தியது. **32** பூரீம்[o] பற்றிய இந்த விஷயங்களை
எஸ்தரின் கட்டளை உறுதிப்படுத்தியது. அது ஒரு புத்தகத்தில் பதிவு செய்
யப்பட்டது.

9:26 * அர்த்தம், "குலுக்கல்." பூர் என்பதன் பன்மை "பூரீம்." இது எபிரெய காலண்ட
ரின்படி 12-ஆம் மாதத்தில் யூதர்கள் கொண்டாடிய பண்டிகையின் பெயராக ஆனது.
இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

அதி. 9

a யாத் 17:16, எண் 24:7, உபா 25:19, 1சா 15:8, 33
b எஸ்தர் 3:1
c எஸ்தர் 3:8, 9
d எஸ்தர் 3:7
e எஸ்தர் 8:3
f எஸ்தர் 8:10
g எஸ்தர் 5:14, எஸ்தர் 7:10, எஸ்தர் 9:14
h எஸ்தர் 3:7
i லேவி 24:22, எஸ்தர் 8:17
j எஸ்தர் 1:1, எஸ்தர் 8:9
k எஸ்தர் 9:20, 21
l எஸ்தர் 9:27
m 2நா 20:3
n எஸ்தர் 4:1
o எஸ்தர் 9:26

அதி. 10
a எஸ்தர் 2:5, 6
b எஸ்தர் 8:15 தானி 2:48
c எஸ்தர் 1:3 தானி 6:15
d எஸ்றா 4:15 எஸ்தர் 6:1

10 அகாஸ்வேரு ராஜா தன் தேசத்திலும் தீவுகளிலும் இருந்தவர்க
ளைக் கொத்தடிமைகள் போல வேலை செய்ய வைத்தார்.
2 அவருடைய சாதனைகளும், வீரதீர செயல்களும், அவர் மொர்தெ
காய்க்கு[a] உயர்ந்த பதவி[b] கொடுத்த விவரங்களும் மேதிய பெர்சிய[c] ராஜாக்
களின் சரித்திரப் புத்தகத்தில்[d] பதிவு செய்யப்பட்டுள்ளன. **3** யூதரான
மொர்தெகாய் அகாஸ்வேரு ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்தார்.
அவர் யூதர்களுடைய அபிமானத்தைப் பெற்றார்,* தன் சகோதரர்களுடைய
மதிப்பு மரியாதையைச் சம்பாதித்தார். அதோடு, தன் ஜனங்களும் அவர்க
ளுடைய பிள்ளைகள் எல்லாரும் நல்லபடியாக வாழ்வதற்குப் பாடுபட்டார்.

10:3 * வே.வா., "யூதர்களால் உயர்வாய்க் கருதப்பட்டார்."

யோபு

முக்கியக் குறிப்புகள்

1 யோபு உத்தமராகவும் வசதியானவராகவும் இருக்கிறார் (1-5)
யோபுவின் உள்நோக்கத்தைப் பற்றி சாத்தான் கேள்வி எழுப்புகிறான் (6-12)
யோபு சொத்துகளையும் பிள்ளைகளையும் இழக்கிறார் (13-19)
யோபு கடவுளைக் குறை சொல்லவில்லை (20-22)

2 யோபுவின் உள்நோக்கத்தைப் பற்றி சாத்தான் மறுபடியும் கேள்வி எழுப்புகிறான் (1-5)
யோபுவின் உடலைத் தாக்க சாத்தான் அனுமதிக்கப்படுகிறான் (6-8)
'கடவுளைத் திட்டித் தீர்த்துவிட்டு செத்துப்போங்கள்!' என்று யோபுவின் மனைவி சொல்கிறாள் (9, 10)
யோபுவின் மூன்று நண்பர்கள் வருகிறார்கள் (11-13)

3 யோபு தான் பிறந்ததை நினைத்துப் புலம்புகிறார் (1-26)
தனக்கு ஏன் இவ்வளவு வேதனை என்று கேட்கிறார் (20, 21)

4 எலிப்பாஸ் முதல் தடவை பேசுகிறான் (1-21)
யோபு உத்தமமாக இருப்பதைப் பற்றிக் கேலி செய்கிறான் (7, 8)
ஓர் உருவம் சொன்ன விஷயத்தைச் சொல்கிறான் (12-17)
"கடவுள் தன்னுடைய ஊழியர்களை நம்புவதே இல்லை" (18)

5 எலிப்பாஸ் தொடர்ந்து பேசுகிறான் (1-27)
'ஞானிகளை அவர்களுடைய தந்திரத்தை வைத்தே கடவுள் மடக்குகிறார்' (13)
'கடவுளின் புத்திமதியை யோபு அசட்டை செய்யக் கூடாது' (17)

6 யோபுவின் பதில் (1-30)
வேதனை தாங்காமல் பேசிவிட்டதாக நியாயப்படுத்துகிறார் (2-6)
யோபுவுக்கு ஆறுதல் சொல்ல வந்தவர்கள் ஏமாற்றம் அளிக்கிறார்கள் (15-18)
"உள்ளதை உள்ளபடி சொல்வது வேதனை தராது" (25)

7 யோபுவின் பதில் தொடர்கிறது (1-21)
வாழ்க்கையே ஒரு போராட்டம்தான் (1, 2)
"ஏன் என்மீதே குறியாக இருக்கிறீர்கள்?" (20)

8 பில்தாத் முதல் தடவையாகப் பேசுகிறான் (1-22)
யோபுவின் பிள்ளைகள் பாவம் செய்திருப்பார்கள் என்று சொல்கிறான் (4)
'நீ நல்லவனாக இருந்தால் கடவுள் உனக்கு உதவி செய்வார்' (6)
யோபு கடவுளை மறந்திருக்கலாம் என்று சொல்கிறான் (13)

9 யோபுவின் பதில் (1-35)
- சாதாரண மனுஷன் கடவுளோடு வழக்காட முடியாது (2-4)
- ‘ஆராய்ந்தறிய முடியாத அதிசயங்களைக் கடவுள் செய்கிறார்’ (10)
- யாராலும் கடவுளோடு வழக்காட முடியாது (32)

10 யோபுவின் பதில் தொடர்கிறது (1-22)
- ‘கடவுள் ஏன் என்னோடு வாதாடுகிறார்?’ (2)
- கடவுளுக்கும் தனக்கும் உள்ள வித்தியாசத்தை யோபு சொல்கிறார் (4-12)
- ‘நான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறேன்’ (20)

11 சோப்பார் முதல் தடவையாகப் பேசுகிறான் (1-20)
- அர்த்தமில்லாமல் பேசுவதாக யோபுவைக் குற்றப்படுத்துகிறான் (2, 3)
- தப்பு செய்வதை விட்டுவிடும்படி யோபுவிடம் சொல்கிறான் (14)

12 யோபுவின் பதில் (1-25)
- “நான் எந்த விதத்திலும் உங்களுக்குக் குறைந்தவன் இல்லை” (3)
- ‘என்னைக் கண்டாலே எல்லாருக்கும் கிண்டல்தான்’ (4)
- ‘கடவுள் ஞானமுள்ளவர்’ (13)
- நீதிபதிகளையும் ராஜாக்களையும்விட கடவுள் உயர்ந்தவர் (17, 18)

13 யோபுவின் பதில் தொடர்கிறது (1-28)
- ‘கடவுளிடம் பேசுவதுதான் நல்லது’ (3)
- “நீங்கள் எதற்கும் லாயக்கில்லாத வைத்தியர்கள்” (4)
- “என் பங்கில் நியாயம் இருப்பது எனக்குத் தெரியும்” (18)
- தன்னைக் கடவுள் ஓர் எதிரிபோல் நினைப்பதாகச் சொல்கிறார் (24)

14 யோபுவின் பதில் தொடர்கிறது (1-22)
- மனுஷன் வாழ்வது கொஞ்சக் காலம்தான், அதுவும் பெரிய போராட்டம்தான் (1)
- “ஒரு மரத்துக்குக்கூட நம்பிக்கை இருக்கிறது” (7)
- ‘நீங்கள் என்னைக் கல்லறையில் புதைத்து வைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!’ (13)
- “மனுஷன் செத்த பின்பு மறுபடியும் உயிரோடு வர முடியுமா?” (14)
- இறந்தவர்களை மறுபடியும் உயிரோடு கொண்டுவர கடவுள் ஏக்கமாக இருக்கிறார் (15)

15 எலிப்பாஸ் இரண்டாவது தடவையாகப் பேசுகிறான் (1-35)
- யோபுவுக்குக் கடவுள் பயமே இல்லை என்று சொல்கிறான் (4)
- யோபுவை அகங்காரம் பிடித்தவன் என்று சொல்கிறான் (7-9)
- “பரிசுத்த தூதர்களையே கடவுள் நம்புவது கிடையாது” (15)
- ‘அக்கிரமம் செய்கிறவன் அவஸ்தைப்படுகிறான்’ (20-24)

16 யோபுவின் பதில் (1-22)
- ‘ஆறுதல்படுத்துவதற்குப் பதிலாக நீங்கள் என் மனதை நோகடிக்கிறீர்கள்’ (2)
- தன்னைத் தாக்குவதிலேயே கடவுள் குறியாய் இருப்பதாக யோபு சொல்கிறார் (12)

17 யோபுவின் பதில் தொடர்கிறது (1-16)
- “கேலி செய்கிறவர்கள் என்னைச் சுற்றிலும் இருக்கிறார்கள்” (2)
- “அவர் என்னைக் கேலி கிண்டலுக்கு ஆளாக்கிவிட்டார்” (6)
- “கல்லறை என் வீடாகிவிடும்” (13)

18 பில்தாத் இரண்டாவது தடவையாகப் பேசுகிறான் (1-21)
- பாவம் செய்கிறவர்களின் கதியைப் பற்றி விவரிக்கிறான் (5-20)
- யோபுவுக்குக் கடவுளைப் பற்றித் தெரியாது என்று மறைமுகமாகச் சொல்கிறான் (21)

19 யோபுவின் பதில் (1-29)
- “நண்பர்கள்” கண்டித்துப் பேசுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் (1-6)
- தான் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாகச் சொல்கிறார் (13-19)
- “என்னை மீட்கிறவர் உயிரோடு இருக்கிறார்” (25)

20 சோப்பார் இரண்டாவது தடவையாகப் பேசுகிறான் (1-29)
- யோபு தன்னைக் கேவலப்படுத்திவிட்டதாக நினைக்கிறான் (2, 3)
- யோபுவைக் கெட்டவன் என்பதுபோல் சொல்கிறான் (5)
- கெட்டதைச் செய்வதில் யோபு சந்தோஷப்படுவதாகச் சொல்கிறான் (12, 13)

21 யோபுவின் பதில் (1-34)
‘கெட்டவர்கள் ஏன் நன்றாக வாழ்கிறார்கள்?’ (7-13)
“ஆறுதல் சொல்ல வந்தவர்களின்” எண்ணத்தை வெட்ட வெளிச்சமாக்குகிறார் (27-34)

22 எலிப்பாஸ் மூன்றாவது தடவையாகப் பேசுகிறான் (1-30)
“மனுஷனால் கடவுளுக்கு ஏதாவது பிரயோஜனம் இருக்கிறதா?” (2, 3)
யோபுவைப் பேராசைக்காரன் என்றும், அநியாயம் செய்கிறவன் என்றும் குற்றம்சாட்டுகிறான் (6-9)
“சர்வவல்லமையுள்ளவரின் பேச்சைக் கேள்; அப்போது பழைய நிலைமைக்கு வந்துவிடுவாய்” (23)

23 யோபுவின் பதில் (1-17)
தன்னுடைய வழக்கைக் கடவுளிடம் கொண்டுவர விரும்புகிறார் (1-7)
கடவுளைப் பார்க்க முடிவதில்லை என்று சொல்கிறார் (8, 9)
“அவருடைய வழியைவிட்டுக் கொஞ்சமும் விலகவில்லை” (11)

24 யோபுவின் பதில் தொடர்கிறது (1-25)
‘கடவுள் தண்டனைத்தீர்ப்பு நாளை ஏன் குறிக்காமல் இருக்கிறார்?’ (1)
கடவுள் கெட்ட காரியங்களை அனுமதிப்பதாகச் சொல்கிறார் (12)
பாவிகள் இருட்டை நேசிக்கிறார்கள் (13-17)

25 பில்தாத் மூன்றாவது தடவையாகப் பேசுகிறான் (1-6)
‘கடவுள் முன்னால் மனுஷன் எப்படிக் குற்றமற்றவனாக இருக்க முடியும்?’ (4)
மனுஷன் உத்தமனாக இருப்பது வீண் என்று சொல்கிறான் (5, 6)

26 யோபுவின் பதில் (1-14)
“சோர்ந்துபோனவனுக்கு ரொம்பவே உதவி செய்துவிட்டீர்கள்!” (1-4)
“பூமியை அந்தரத்தில் தொங்கவிட்டார்” (7)
“இவையெல்லாம் அவருடைய வழிகளின் ஓரங்கள்தான்!” (14)

27 உத்தமமாக இருக்க வேண்டும் என்பதில் யோபு உறுதியாக இருக்கிறார் (1-23)
“என்னுடைய உத்தமத்தை விட மாட்டேன்” (5)
கடவுள்பக்தி இல்லாதவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இருக்காது (8)
‘நீங்கள் சொல்வது எல்லாமே முட்டாள்தனமாக இருக்கிறதே!’ (12)
கெட்டவர்களுக்கு எந்தப் பலனும் கிடைக்காது (13-23)

28 பூமியில் இருக்கும் புதையல்களைவிட ஞானம் ஒப்பற்றது என்று யோபு சொல்கிறார் (1-28)
சுரங்கத்தைத் தோண்ட மனிதன் எடுக்கும் முயற்சிகள் (1-11)
முத்துக்களைவிட ஞானம் ரொம்பவே மதிப்புள்ளது (18)
யெகோவாவுக்குப் பயப்படுவதுதான் உண்மையான ஞானம் (28)

29 கஷ்டங்கள் வருவதற்கு முன்னால் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி யோபு சொல்கிறார் (1-25)
நகரவாசலில் அவருக்குக் கிடைத்த மரியாதை (7-10)
நியாயமாக நடந்துகொண்டதைப் பற்றிச் சொல்கிறார் (11-17)
அவருடைய அறிவுரைகளை எல்லாரும் கேட்டார்கள் (21-23)

30 தன்னுடைய சூழ்நிலை மாறிவிட்டதை யோபு சொல்கிறார் (1-31)
ஒன்றுக்கும் உதவாதவர்கள் அவரைக் கேலி செய்கிறார்கள் (1-15)
கடவுள் உதவிக்கு வராததாக நினைக்கிறார் (20, 21)
‘என் தோலெல்லாம் கறுத்துப்போய்விட்டது’ (30)

31 எப்போதும் உத்தமமாய் நடந்துகொண்டதாக யோபு சொல்கிறார் (1-40)
“என் கண்களை அலையவிடக் கூடாது என்று தீர்மானம் செய்திருக்கிறேன்” (1)
தன்னைத் தராசில் வைத்து கடவுள் நிறுத்துப் பார்க்கட்டும் என்று சொல்கிறார் (6)
ஒழுக்கக்கேட்டில் ஈடுபடாதவர் (9-12)
பண ஆசை இல்லாதவர் (24, 25)
சிலைகளை வணங்காதவர் (26-28)

32 இளம் எலிகூ பேச ஆரம்பிக்கிறார் (1-22)
யோபுமீதும் யோபுவின் நண்பர்கள்மீதும் கோபமாக இருக்கிறார் (2, 3)

மற்றவர்கள் பேசி முடிக்கும்வரை மரியாதையோடு காத்திருந்து பேசுகிறார் (6, 7)

வயதாகிவிட்டால் மட்டும் ஞானம் வந்துவிடாது (9)

பேசுவதற்காக எலிகூ ஆர்வமாக இருக்கிறார் (18-20)

33 தான் நல்லவன் என்று யோபு சொல்லிக்கொள்வதை எலிகூ கண்டிக்கிறார் (1-33)

மீட்பதற்கு வழி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது (24)

மறுபடியும் இளமைத் துடிப்போடு வாழ்வது (25)

34 கடவுளுடைய நீதியும் அவருடைய வழிகளும்தான் சரியானது என்று எலிகூ சொல்கிறார் (1-37)

கடவுளிடமிருந்து தனக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று யோபு சொல்கிறார் (5)

உண்மைக் கடவுள் ஒருபோதும் கெட்டது செய்ய மாட்டார் (10)

யோபு அறிவில்லாமல் பேசுகிறார் (35)

35 யோபு தன்னை நியாயப்படுத்தி தவறாகப் பேசுவதை எலிகூ எடுத்துச் சொல்கிறார் (1-16)

கடவுளைவிட தான் நல்லவன் என்று யோபு சொல்கிறார் (2)

கடவுள் உயரத்தில் இருக்கிறார், மனிதர்கள் பாவம் செய்வதால் அவருக்குப் பாதிப்பு இல்லை (5, 6)

கடவுளுக்காக யோபு காத்திருக்க வேண்டும் (14)

36 ஆராய்ந்தறிய முடியாத கடவுளின் மகிமையைப் பற்றி எலிகூ உயர்வாகப் பேசுகிறார் (1-33)

கீழ்ப்படிகிறவர்கள் நன்றாக வாழ்வார்கள்; கெட்டவர்கள் ஒதுக்கித்தள்ளப்படுவார்கள் (11-13)

‘கற்றுக்கொடுப்பதில் கடவுளை மிஞ்ச யாருமே இல்லை (22)

யோபு கடவுளைப் புகழ்ந்து பேச வேண்டும் (24)

“நாம் நினைத்தே பார்க்க முடியாத அளவுக்குக் கடவுள் அற்புதமானவர்” (26)

மழையும் மின்னலும் கடவுளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன (27-33)

37 இயற்கைச் சக்திகள் கடவுளுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன (1-24)

மனிதர்களுடைய வேலைகளைக் கடவுளால் நிறுத்த முடியும் (7)

‘கடவுள் செய்திருக்கிற அற்புதங்களை யோசித்துப் பாருங்கள்’ (14)

மனிதர்களால் கடவுளைப் புரிந்துகொள்ளவே முடியாது (23)

தனக்கே எல்லாம் தெரியும் என்று மனிதன் நினைக்கக் கூடாது (24)

38 மனிதன் எவ்வளவு அற்பமானவன் என்பதை யெகோவா உணர்த்துகிறார் (1-41)

‘பூமியைப் படைத்தபோது நீ எங்கே இருந்தாய்?’ (4-6)

விடியற்கால நட்சத்திரங்கள் சந்தோஷமாகப் பாடினார்கள் (7)

இயற்கையாக நடக்கிற விஷயங்களைப் பற்றிய கேள்விகள் (8-32)

“வானத்தை இயக்கும் சட்டங்கள்” (33)

39 மிருகங்கள் மனிதனுடைய அறியாமையை வெளிப்படுத்துகின்றன (1-30)

வரையாடுகள், மான்கள் (1-4)

காட்டுக் கழுதை (5-8)

காட்டு எருது (9-12)

நெருப்புக்கோழி (13-18)

குதிரை (19-25)

வல்லூறு, கழுகு (26-30)

40 யெகோவா கேட்கிற இன்னும் சில கேள்விகள் (1-24)

பதில் சொல்ல இனி எதுவுமில்லை என யோபு ஒத்துக்கொள்கிறார் (3-5)

“என் தீர்ப்பையே நீ தப்பு என்று சொல்வாயா?” (8)

பிகெமோத்தின் பலத்தைக் கடவுள் விவரிக்கிறார் (15-24)

41 பிரமாண்டமான லிவியாதானைப் பற்றிக் கடவுள் விளக்குகிறார் (1-34)

42 யோபு யெகோவாவுக்குப் பதில் சொல்கிறார் (1-6)

மூன்று நண்பர்கள் கண்டிக்கப்படுகிறார்கள் (7-9)

யோபுவைப் பழைய நிலைமைக்கு யெகோவா உயர்த்துகிறார் (10-17)

யோபுவின் மகன்களும் மகள்களும் (13-15)

அதி. 1
a எசே 14:14; யாக் 5:10, 11
b ஆதி 6:9
c யோபு 2:3
d ஆதி 8:20; ஆதி 12:7, 8
e ஆதி 18:17, 19
f ஆதி 6:2; உபா 33:2; யோபு 38:7
g 1ரா 22:19; சங் 103:20; தானி 7:13
h சக 3:1; மத் 4:1, 3; லூ 22:31; யோவா 13:2; வெளி 12:9
i யோபு 2:1-3
j 1பே 5:8
k ஆதி 6:9
l வெளி 12:10
m ஆதி 15:1; ஆதி 31:7
n ஆதி 26:12
o யோபு 2:7
p யோபு 1:4

1 யோபு*[a] என்பவர் ஊத்ஸ் தேசத்தில் வாழ்ந்துவந்தார். அவர் கட
வுளுக்குப் பயந்து நடந்தார், நேர்மையானவராகவும் உத்தமராகவும்#
இருந்தார்,[b] கெட்டதை வெறுத்து ஒதுக்கினார்.[c] **2** அவருக்கு ஏழு மகன்க
ளும் மூன்று மகள்களும் இருந்தார்கள். **3** அவர் 7,000 ஆடுகளையும்
3,000 ஒட்டகங்களையும் 1,000 மாடுகளையும் 500 கழுதைகளையும்* ஏரா
ளமான வேலைக்காரர்களையும் வைத்திருந்தார். அதனால், கிழக்குப் பிர
தேசங்களில் வாழ்ந்த எல்லாரையும்விட அவர் அதிக மதிப்பும் மரியாதை
யும் பெற்றவராக இருந்தார்.

4 அவருடைய மகன்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளில் தங்களு
டைய வீட்டில் விருந்து வைப்பார்கள். அப்போது, தங்களுடன் சேர்ந்து
சாப்பிடவும் குடிக்கவும் தங்களுடைய மூன்று சகோதரிகளையும் கூப்பிடு
வார்கள். **5** அந்த விருந்து நாட்கள் முடிந்த பின்பு, அவர்களைப் புனிதப்
படுத்துவதற்காக யோபு அவர்களை வரச் சொல்வார். அடுத்த நாள் விடி
யற்காலையில் எழுந்து அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் தகன பலிகள்
செலுத்துவார்.[d] "ஒருவேளை என் மகன்கள் பாவம் செய்திருக்கலாம், மன
துக்குள்* கடவுளைக் குறை சொல்லியிருக்கலாம்" என்று நினைத்து அந்தப்
பலிகளை வழக்கமாகச் செலுத்திவந்தார்.[e]

6 ஒருநாள், தேவதூதர்கள்*[f] யெகோவாவின் முன்னால் வந்து நின்றார்
கள்.[g] சாத்தானும்[h] அவர்களோடு வந்து நின்றான்.[i]

7 அப்போது யெகோவா சாத்தானிடம், "எங்கிருந்து வருகிறாய்?"
என்று கேட்டார். அவன் யெகோவாவிடம், "பூமியெங்கும் சுற்றித் திரிந்து
விட்டு வருகிறேன்"[j] என்று சொன்னான். **8** அப்போது யெகோவா அவ
னிடம், "என் ஊழியன் யோபுவைக் கவனித்தாயா? பூமியில் அவனைப்
போல் யாருமே இல்லை. அவன் நேர்மையானவன், உத்தமன்.*[k] எனக்குப்
பயந்து நடக்கிறான், கெட்டதை வெறுத்து ஒதுக்குகிறான்" என்று சொன்னார்.
9 சாத்தான் யெகோவாவிடம், "யோபு சும்மாவா உங்களுக்குப் பயந்து
நடக்கிறான்?[l] **10** நீங்கள்தான் அவனையும் அவன் வீட்டையும் அவனி
டம் இருக்கிற எல்லாவற்றையும் சுற்றி வேலிபோட்டு அவனைப் பாதுகாக்
கிறீர்களே.[m] அவன் செய்வதையெல்லாம் ஆசீர்வதிக்கிறீர்களே.[n] அவனு
டைய மந்தைகள் தேசத்தில் பெருகியிருக்கின்றனவே. **11** நீங்கள் மட்டும்
உங்கள் கையை நீட்டி அவனிடம் இருக்கிற எல்லாவற்றையும் தொட்
டுப் பாருங்கள்.* கண்டிப்பாக உங்கள் முகத்துக்கு நேராகவே அவன் உங்
களைத் திட்டித் தீர்ப்பான்" என்று சொன்னான். **12** அப்போது யெகோவா
சாத்தானைப் பார்த்து, "யோபுவிடம் இருக்கிற எல்லாவற்றையும் உன்
கையில் விட்டுவிடுகிறேன். ஆனால், அவன்மேல் மட்டும் கை வைக்
காதே!" என்றார். உடனே, சாத்தான் யெகோவாவின் முன்னிலையிலிருந்து
புறப்பட்டுப் போனான்.[o]

13 ஒருநாள், யோபுவின் மகன்களும் மகள்களும் அவருடைய மூத்த மக
னின் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டும் திராட்சமது குடித்துக்கொண்டும் இருந்
தார்கள்.[p] **14** அந்தச் சமயத்தில், வேலைக்காரன் ஒருவன் யோபுவிடம்

1:1 *ஒருவேளை இதன் அர்த்தம், "பகைக்கப்படுகிறவர்." #வே.வா., "குற்றமற்றவரா கவும்." **1:3** *நே.மொ., "பெட்டைக் கழுதைகளையும்." **1:5** *நே.மொ., "இதயத்தில்." **1:6** *நே.மொ., "உண்மைக் கடவுளின் மகன்கள்." **1:8** *வே.வா., "குற்றமற்றவன்." **1:11** *வே.வா., "தாக்கிப் பாருங்கள்."

வந்து, “உங்களுடைய மாடுகள் உழுதுகொண்டிருந்தன, பக்கத்தில் கழுதை
களும் மேய்ந்துகொண்டிருந்தன. **15** அப்போது திடீரென்று சபேயர்கள்
வந்து அவற்றைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். வேலைக்காரர்
களை வெட்டிக் கொன்றுவிட்டார்கள். நான் ஒருவன் மட்டும்தான் உயிர்
தப்பி இதை உங்களுக்குச் சொல்ல வந்திருக்கிறேன்” என்றான்.

16 அவன் பேசிக்கொண்டிருந்தபோதே இன்னொருவன் வந்து, “கடவுள்
வானத்திலிருந்து நெருப்பை* அனுப்பி, உங்கள் ஆடுகளையும் வேலைக்
காரர்களையும் எரித்து சாம்பலாக்கிவிட்டார்! நான் ஒருவன் மட்டும்தான்
உயிர்தப்பி இதை உங்களுக்குச் சொல்ல வந்திருக்கிறேன்” என்றான்.

17 அவன் பேசிக்கொண்டிருந்தபோதே இன்னொருவன் வந்து, “கல்தே
யர்கள்[a] மூன்று கும்பல்களாகத் திடீரென்று வந்து, உங்கள் ஒட்டகங்களைப்
பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். உங்களுடைய வேலைக்காரர்களை
வெட்டிக் கொன்றுவிட்டார்கள். நான் ஒருவன் மட்டும்தான் உயிர்தப்பி
இதை உங்களுக்குச் சொல்ல வந்திருக்கிறேன்” என்றான்.

18 அவன் பேசிக்கொண்டிருந்தபோதே இன்னொருவனும் வந்து,
“உங்கள் மகன்களும் மகள்களும் உங்களுடைய மூத்த மகனின் வீட்
டில் சாப்பிட்டுக்கொண்டும் திராட்சமது குடித்துக்கொண்டும் இருந்தார்கள்.
19 அப்போது, திடீரென்று வனாந்தரத்திலிருந்து சூறாவளிக் காற்று அடித்
தது. அது அந்த வீட்டின் நான்கு மூலைகளிலும் அடித்ததால் அந்த வீடு
உங்கள் பிள்ளைகள்மேல் இடிந்து விழுந்தது. அவர்கள் எல்லாரும் இறந்து
விட்டார்கள். நான் ஒருவன் மட்டும்தான் உயிர்தப்பி இதை உங்களுக்குச்
சொல்ல வந்திருக்கிறேன்” என்றான்.

20 அதைக் கேட்டதும் யோபு எழுந்து, தன்னுடைய உடையைக் கிழித்
துக்கொண்டார், தலைமுடியை வெட்டிக்கொண்டார். **21** பிறகு, சாஷ்டாங்க
மாக விழுந்து,

“என் தாயின் வயிற்றிலிருந்து வெறுங்கையோடு* வந்தேன்.
வெறுங்கையோடு மண்ணுக்குப் போவேன்.[b]
யெகோவா கொடுத்தார்,[c] யெகோவா எடுத்துக்கொண்டார்.
யெகோவாவின் பெயருக்கு என்றும் புகழ் சேரட்டும்”

என்று சொன்னார். **22** இவ்வளவு நடந்தும் யோபு பாவம் செய்யவில்லை,
கடவுள்மேல் எந்தக் குறையும் சொல்லவில்லை.*

2 பின்பு ஒருநாள், தேவதூதர்கள்*[d] யெகோவாவின் முன்னால் வந்து நின்
றார்கள்.[e] சாத்தானும் அவர்களோடு வந்து யெகோவாவின் முன்னால்
நின்றான்.[f]

2 அப்போது யெகோவா சாத்தானிடம், “எங்கிருந்து வருகிறாய்?” என்று
கேட்டார். அதற்கு அவன் யெகோவாவிடம், “பூமியெங்கும் சுற்றித் திரிந்து
விட்டு வருகிறேன்”[g] என்று சொன்னான். **3** அப்போது யெகோவா, “என்
ஊழியன் யோபுவைக் கவனித்தாயா? பூமியில் அவனைப் போல் யாருமே
இல்லை. அவன் நேர்மையானவன், உத்தமன்.*[h] அவன் எனக்குப் பயந்து

அதி. 1
a ஆதி 11:28
b ஆதி 3:19, சங் 49:17, பிர 5:15, பிர 12:7, 1தீ 6:7
c பிர 5:19, யாக் 1:17

அதி. 2
d ஆதி 6:2, உபா 33:2, யோபு 38:7
e சங் 103:20, தானி 7:13
f யோபு 1:6-8
g 1பே 5:8
h ஆதி 6:9

1:16 * அல்லது, “மின்னலை.” **1:21** * நே.மொ., “நிர்வாணமாக.” **1:22** * வே.வா., “கட
வுளைப் பற்றி எதுவுமே தப்பாகப் பேசவில்லை.” **2:1** * நே.மொ., “உண்மைக் கடவு
ளின் மகன்கள்.” **2:3** * வே.வா., “குற்றமற்றவன்.”

நடக்கிறான், கெட்டதை வெறுத்து ஒதுக்குகிறான். காரணமில்லாமல் அவனை
அழிப்பதற்காக நீ என்னைத் தூண்டிவிடப் பார்த்தாலும்,[a] அவன் இன்னமும்
எனக்கு உத்தமமாகவே இருக்கிறான்"[b] என்று சொன்னார். **4** ஆனால் சாத்
தான் யெகோவாவிடம், "ஒரு மனுஷன் எந்த உயிரையும்விட தன்னு
டைய உயிரைத்தான் பெரிதாக நினைப்பான். அதைக் காப்பாற்றிக்கொள்ள
எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராயிருப்பான்.* **5** அதனால், நீங்
கள் அவனுடைய எலும்பையும் சதையையும் தொட்டுப் பாருங்கள்.*
கண்டிப்பாக உங்கள் முகத்துக்கு நேராகவே உங்களைத் திட்டித் தீர்ப்பான்"[c]
என்று சொன்னான்.

6 அதற்கு யெகோவா, "அவனை உன் கையில் விட்டுவிடுகிறேன்,
அவன் உயிரை மட்டும் எடுத்துவிடாதே" என்று சொன்னார். **7** உடனே,
சாத்தான் யெகோவாவின் முன்னிலையிலிருந்து புறப்பட்டுப் போய்,
யோபுவை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை கொடிய கொப்புளங்க
ளால் வாட்டி வதைத்தான்.[d] **8** யோபு தன் உடம்பிலிருந்த கொப்புளங்க
ளைச் சுரண்டுவதற்காக, உடைந்துபோன ஓடு ஒன்றை எடுத்துக்கொண்டு
சாம்பலில் உட்கார்ந்தார்.[e]

9 அப்போது அவருடைய மனைவி, "இன்னுமா கடவுள் கடவுள் என்று
சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்?* அவரைத் திட்டித் தீர்த்துவிட்டு செத்துப்
போங்கள்!" என்று சொன்னாள். **10** ஆனால் யோபு, "நீ பைத்தியக்காரி
போல் பேசுகிறாய். கடவுள் கொடுக்கிற நல்லதை மட்டும் ஏற்றுக்கொண்டு,
கஷ்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாமா?"[f] என்று கேட்டார்.
இதெல்லாம் நடந்தும்கூட, அவர் தன் வாயால் பாவம் செய்யவில்லை.[g]

11 தேமானியனான எலிப்பாஸ்,[h] சுவாகியனான[i] பில்தாத்,[j] நாகமாத்தி
யனான சோப்பார்[k] ஆகிய மூன்று பேரும் யோபுவின் நண்பர்கள்.*
அவருக்கு வந்த கஷ்டங்களைப் பற்றியெல்லாம் அவர்கள் கேள்விப்பட்ட
போது, அவரவர் வீடுகளிலிருந்து புறப்பட்டு வந்து ஓர் இடத்தில் சந்தித்தார்
கள். யோபுவைப் போய்ப் பார்த்து அவருக்கு அனுதாபம் காட்டவும் ஆறு
தல் சொல்லவும் முடிவு செய்தார்கள். **12** யோபுவைத் தூரத்திலிருந்து
பார்த்தபோது அவர்களுக்கு அடையாளமே தெரியவில்லை. உடனே,
ஓவென்று கத்தி அழ ஆரம்பித்தார்கள். பின்பு, தங்களுடைய உடையைக்
கிழித்துக்கொண்டு, மண்ணை வாரி தங்கள் தலையில் போட்டுக்கொண்டார்
கள்.[l] **13** பின்பு, ஏழு நாட்கள் ராத்திரி பகலாக அவரோடு தரையில் உட்
கார்ந்துகொண்டார்கள். யோபு வலியில் பயங்கரமாய்த் துடித்ததை அவர்
கள் பார்த்ததால் யாரும் அவரிடம் ஒரு வார்த்தைகூட பேசவில்லை.[m]

3 அதன் பின்பு, யோபு பேச ஆரம்பித்தார். அவர் தன்னுடைய பிறந்த
நாளைச் சபித்து,[n] **2** இப்படிச் சொன்னார்:

3 "நான் பிறந்த அந்த நாள் வராமலேயே இருந்திருக்க வேண்டும்![o]
'ஆண் குழந்தை பிறந்திருக்கிறது!' என்று சொல்லப்பட்ட அந்த இரவும்
வராமல் போயிருக்க வேண்டும்!

2:4 *நே.மொ., "தோலுக்குத் தோல். ஒரு மனுஷன் தன் உயிருக்காகத் தன்னிடம் இருக்கிற எல்லாவற்றையும் கொடுப்பான்." **2:5** *வே.வா., "தாக்கிப் பாருங்கள்." **2:9** *வே.வா., "இன்னுமா உங்கள் உத்தமத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறீர்கள்?" **2:11** *வே.வா., "யோபுவுக்குத் தெரிந்தவர்கள்."

அதி. 2
a யோபு 1:11
b யோபு 27:5
c லேவி 24:15, 16; யோபு 1:11, 12; வெளி 12:10
d யோபு 30:30
e எரே 6:26
f யோபு 1:21
g யாக் 5:10, 11
h யோபு 4:1; யோபு 15:1; யோபு 22:1; யோபு 42:7, 9
i ஆதி 25:1, 2
j யோபு 8:1; யோபு 18:1; யோபு 25:1
k யோபு 11:1; யோபு 20:1
l எசே 27:30, 31
m யோபு 16:6

அதி. 3
n எரே 20:14, 15
o யோபு 10:18, 19; எரே 15:10

4 அந்த நாள் இருண்டுபோயிருக்க வேண்டும்!
பரலோகத்திலுள்ள கடவுள் அந்த நாளைக் கண்டும்காணாமல்
விட்டிருக்க வேண்டும்!
ஒளி அதன்மேல் வீசாமல் போயிருக்க வேண்டும்!
5 கும்மிருட்டு* அந்த நாளைச் சூழ்ந்திருக்க வேண்டும்!
மழைமேகம் அதை மூடியிருக்க வேண்டும்!
பயங்கரமான இருட்டு அதன் வெளிச்சத்தை விழுங்கியிருக்க
வேண்டும்!
6 அந்த இரவு படுபயங்கரமான இருளின் பிடியில் சிக்கியிருக்க
வேண்டும்![a]
அது சந்தோஷத்தையே காணாத நாளாக இருந்திருக்க வேண்டும்!
எந்த மாதத்திலும் அந்த நாள் சேர்க்கப்படாமல் போயிருக்க வேண்டும்!
7 அந்த ராத்திரியில் யாரும் பிறக்காமல் போயிருக்க வேண்டும்!
அன்று சந்தோஷக் குரலே கேட்காமல் போயிருக்க வேண்டும்!
8 நாளைச் சபிக்கிறவர்களும் லிவியாதானை*[b] எழுப்ப முடிந்தவர்களும்
அதைச் சபித்திருக்க வேண்டும்!
9 அந்த ராத்திரியில் நட்சத்திரங்கள் மின்னாமல் போயிருக்க வேண்டும்!
பகலுக்காக அது காத்திருந்தது வீணாய்ப் போயிருக்க வேண்டும்!
சூரிய உதயத்தை அது காணாமல் போயிருக்க வேண்டும்!
10 என் தாயின் கர்ப்ப வாசலை அது அடைக்காமல் போனதே.[c]
நான் கஷ்டங்கள் அனுபவிப்பதைத் தடுக்காமல் போனதே.
11 நான் பிறக்கும்போதே ஏன் சாகாமல் போனேன்?
தாயின் வயிற்றிலிருந்து வரும்போதே ஏன் அழியாமல் போனேன்?[d]
12 என் தாயின் மடி ஏன் என்னைத் தாங்கியது?
அவள் மார்பு ஏன் எனக்குப் பாலூட்டியது?
13 நான் தொந்தரவில்லாமல் போய்ச் சேர்ந்திருப்பேனே![e]
ஒரேயடியாகத் தூங்கி ஓய்வெடுத்திருப்பேனே![f]
14 இப்போது பாழாய்க் கிடக்கிற இடங்களைக் கட்டியிருந்த*
ராஜாக்களோடும்
அவர்களுடைய ஆலோசகர்களோடும் அழிந்துபோயிருப்பேனே.
15 தங்கத்தையும் வெள்ளியையும் வீடுகளில் குவித்து வைத்திருந்த
இளவரசர்களோடு
நானும் புதைக்கப்பட்டிருப்பேனே.
16 நான் ஏன் கர்ப்பத்திலேயே கலையவில்லை?
ஒளியைப் பார்ப்பதற்கு முன்பே ஏன் ஒழிந்துபோகவில்லை?
17 சாகும்போது கெட்டவனுக்குக்கூட நிம்மதி கிடைக்கிறதே.
அவதிப்படுகிறவனுக்கு அமைதி கிடைக்கிறதே.[g]
18 கைதிகள் எல்லாருக்கும் கல்லறை விடுதலை தருகிறதே.

3:5 *வே.வா., “இருட்டும் சாவின் நிழலும்.” **3:8** *இது ஒரு முதலை அல்லது நீரில் வாழும் வேறு ஏதாவது ராட்சதப் பிராணி என்று கருதப்படுகிறது. **3:14** *அல்லது, “பாழான இடங்களைத் தங்களுக்குக் கட்டிக்கொண்ட.”

அதி. 3
a யோபு 10:18, 19
b யோபு 41:1, 10; சங் 104:25, 26
c யோபு 10:18
d எரே 20:17, 18
e பிர 9:5, 10
f யோவா 11:11
g சங் 146:4; பிர 9:10; ஏசா 57:1, 2

அவர்களை மிரட்டி வேலை வாங்குபவர்களின் சத்தம் அங்கு கேட்காதே.
19 உயர்ந்தவனுக்கும் தாழ்ந்தவனுக்கும் அங்கே வித்தியாசமில்லை.[a]
அடிமையை எஜமான் அங்கே ஆட்டிப்படைப்பதில்லை.
20 வேதனைப்படுகிறவனைக் கடவுள் ஏன் வாழ வைக்கிறார்?*
விரக்தியில் இருப்பவர்களை[b] ஏன் உயிரோடு விட்டுவைக்கிறார்?
21 அவர்கள் சாவுக்காக ஏங்குகிறார்கள்,[c] புதையலைத் தேடுவதைவிட சாவை அதிகமாகத் தேடுகிறார்கள்.
ஆனால் அது வந்த பாடில்லை.
22 கல்லறையைப் பார்த்ததும் பூரித்துப்போகிறார்கள்.
சந்தோஷத்தில் துள்ளுகிறார்கள்.
23 திக்குத் தெரியாதவனைச் சுற்றிலும் கடவுள் ஏன் வேலி போடுகிறார்?[d]
அவனை ஏன் வாழ வைக்கிறார்?*
24 நான் எதையும் சாப்பிடாமல் சதா பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறேன்.[e]
கொட்டும் அருவிபோல் என் குமுறல் இருக்கிறது.[f]
25 எது நடக்கக் கூடாது என்று நினைத்தேனோ அது நடந்துவிட்டது.
எதை நினைத்துப் பயந்தேனோ அது வந்துவிட்டது.
26 எனக்கு நிம்மதியில்லை, அமைதியில்லை, ஓய்வுமில்லை.
வேதனைக்குமேல் வேதனைதான் வருகிறது."

4 அப்போது, தேமானியனான எலிப்பாஸ்[g] யோபுவைப் பார்த்து,
2 "உன்னிடம் பேசினால், நீ பொறுமை இழந்துவிட மாட்டாய்தானே?
ஏனென்றால், இப்போது என்னால் அமைதியாக இருக்க முடியாது.
3 நீ நிறைய பேரைத் திருத்தியிருப்பது உண்மைதான்.
சோர்ந்துபோனவர்களைப் பலப்படுத்தியிருப்பது நிஜம்தான்.
4 தடுமாறி விழுகிறவர்களை உன் வார்த்தைகளால் தூக்கி நிறுத்தினாய்.
தள்ளாடுகிற முழங்கால்கள் உள்ளவர்களைப் பலப்படுத்தினாய்.
5 ஆனால், உனக்குப் பிரச்சினைகள் வந்தவுடன் நிதானம் இழந்துவிட்டாய்.
கஷ்டங்கள் உன்னைத் தாக்கியவுடன் ஆடிப்போய்விட்டாய்.
6 உன் கடவுள்பக்தி உனக்கு நம்பிக்கை தரவில்லையா?
உன்னுடைய உத்தம குணம்,[h] நல்லது நடக்குமென்ற உறுதியை* கொடுக்கவில்லையா?
7 தயவுசெய்து யோசித்துப் பார், தப்பு செய்யாதவன் எப்போதாவது அழிந்துபோயிருக்கிறானா?
நேர்மையாக நடப்பவன் எப்போதாவது ஒழிந்துபோயிருக்கிறானா?
8 நான் பார்த்தவரையில், வினை* விதைப்பவன் வினை* அறுக்கிறான்.
கெட்டது செய்பவனுக்குக் கெட்டதுதான் நடக்கிறது.

3:20 *நே.மொ., "வேதனைப்படுகிறவனுக்குக் கடவுள் ஏன் வெளிச்சம் தருகிறார்?" **3:23** *நே.மொ., "அவனுக்கு ஏன் வெளிச்சம் தருகிறார்?" **4:6** *வே.வா., "நம்பிக்கையை." **4:8** *வே.வா., "தீமையை."

அதி. 3
a யோபு 30:23; சங் 49:10, 12; பிர 8:8; பிர 9:2
b 1சா 1:10; 2ரா 4:27
c எண் 11:11, 15; 1ரா 19:3, 4; யோபு 7:15, 16; யோனா 4:2, 3
d யோபு 12:14; யோபு 19:8
e சங் 102:9, 10
f சங் 22:1; சங் 38:8

அதி. 4
g யோபு 2:11; யோபு 15:1; யோபு 22:1; யோபு 42:7, 9
h யோபு 1:1

9 கடவுளுடைய மூச்சுக்காற்று அவனை அழிக்கிறது.
அவருடைய கோபம் அவனைப் பொசுக்குகிறது.
10 சிங்கம் கர்ஜிக்கலாம், இளம் சிங்கம் உறுமலாம்.
ஆனால், பலம் படைத்த சிங்கங்களின் பற்கள்கூட
உடைந்துபோகின்றன.
11 இரை கிடைக்காவிட்டால் சிங்கம் செத்துப்போகும்.
சிங்கக்குட்டிகள் சிதறிப்போகும்.
12 எனக்கு ரகசியச் செய்தி ஒன்று வந்தது.
அது லேசாக என் காதில் விழுந்தது.
13 ஜனங்கள் ஆழ்ந்து தூங்கும் ராத்திரி நேரத்தில்,
நான் தரிசனங்களைப் பார்த்துக் கலங்கிப்போனேன்.
14 எனக்குக் குலைநடுங்கியது.
என் எலும்பெல்லாம் ஆடிப்போனது.
15 ஒரு உருவம் என்னைக் கடந்துபோனது.
என் உடம்பெல்லாம் சிலிர்த்தது.
16 பின்பு, அந்த உருவம் அப்படியே நின்றது.
அதன் தோற்றம் எனக்குச் சரியாகத் தெரியவில்லை.
ஆனால், ஏதோவொரு வடிவம் மட்டும் கண்ணுக்குத் தெரிந்தது.
கொஞ்ச நேரத்துக்கு ஒரே அமைதி; அதன் பிறகு ஒரு குரல்,
17 ‘அற்ப மனுஷன் கடவுளைவிட நீதியாக இருக்க முடியுமா?
தன்னைப் படைத்தவரைவிட பரிசுத்தமாக இருக்க முடியுமா?’ என்று
கேட்டது.
18 கடவுள் தன்னுடைய ஊழியர்களை நம்புவதே இல்லை.
தன்னுடைய தூதர்களிடமே* குறை கண்டுபிடிக்கிறார்.
19 அப்படியென்றால், மண்ணில் அஸ்திவாரம் போட்டு,[a]
களிமண் வீடுகளில் குடியிருந்து,
பூச்சி* போல எளிதில் நசுக்கிக் கொல்லப்படும் மனுஷன் எந்த
மூலைக்கு?
20 காலையில் இருக்கிறான், சாயங்காலத்துக்குள் இருந்த இடம்
தெரியாமல் போய்விடுகிறான்.
நிரந்தரமாக அழிக்கப்படுகிறான்; யாரும் கண்டுகொள்வதில்லை.
21 கயிறு அவிழ்க்கப்பட்ட கூடாரம் போலத்தானே அவன் இருக்கிறான்?
அவன் ஞானம் இல்லாமல் செத்துப்போகிறான்” என்று சொன்னான்.

5 பின்பு அவன்,
“தயவுசெய்து யாரையாவது கூப்பிடு! உனக்குப் பதில் கிடைக்கிறதா
என்று பார்க்கலாம்.
எந்தப் பரிசுத்தவானிடம் உதவி கேட்கப்போகிறாய்?
2 பழிவாங்கும் எண்ணம் முட்டாளைக் கொன்றுவிடும்.
பொறாமைக் குணம் ஏமாளியைச் சாகடித்துவிடும்.
3 முட்டாள் சீரும் சிறப்புமாக வாழ்வதை நான் பார்த்திருக்கிறேன்.

4:18 * வே.வா., “தூதுவர்களிடமே.” 4:19 * நே.மொ., “அந்துப்பூச்சி.”

அதி. 4
a ஆதி 3:19

அதி. 5
a நீதி 22:22
ஆமோ 5:12

ஆனால், அவனுடைய வீடு திடீரென்று சபிக்கப்படும்.
4 அவனுடைய மகன்களுக்குப் பாதுகாப்பு இருக்காது.
நகரவாசலில் அவர்கள் ஒடுக்கப்படுவார்கள்,[a]
யாரும் அவர்களைக் காப்பாற்ற மாட்டார்கள்.
5 அவன் அறுவடை செய்ததைப் பசியாயிருப்பவன் சாப்பிடுகிறான்.
முட்களுக்கு நடுவில் இருப்பதைக்கூட எடுத்துக்கொள்கிறான்.
அவர்களுடைய சொத்து எல்லாமே பறிபோகும்.
6 கெட்ட காரியங்கள் மண்ணிலிருந்தா முளைக்கின்றன?
கஷ்டங்கள் நிலத்திலிருந்தா துளிர்விடுகின்றன?
7 நெருப்பிலிருந்து தீப்பொறி பறப்பது உறுதி.
அதுபோல், மனுஷனாகப் பிறக்கிறவனுக்குக் கஷ்டம் வருவது உறுதி.
8 ஆனால், நான் கடவுளிடம் முறையிடுவேன்.
என்னுடைய வழக்கை அவரிடம் கொண்டுபோவேன்.
9 மனுஷனுடைய அறிவுக்கு எட்டாத அதிசயங்களைச்
செய்கிறவர் அவர்.
எண்ண முடியாதளவுக்கு ஏராளமான அற்புதங்களைச்
செய்கிறவர் அவர்.
10 பூமியில் அவர் மழையைப் பொழிகிறார்.
வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார்.
11 தாழ்ந்தவனை மேலே உயர்த்துகிறார்.
விரக்தியில் மூழ்கியிருப்பவனைத் தூக்கி நிறுத்தி, அவனை மீட்கிறார்.
12 சதிகாரர்களின் திட்டங்களை முறியடிக்கிறார்.
அவர்கள் என்ன செய்தாலும் தோல்வியடைய வைக்கிறார்.

b 1கொ 3:19

13 ஞானிகளை அவர்களுடைய தந்திரத்தை வைத்தே மடக்குகிறார்.[b]
சாமர்த்தியசாலிகளின் திட்டங்களைக் கவிழ்க்கிறார்.
14 பகலிலேயே இருள் அவர்களைச் சூழ்ந்துகொள்கிறது.
பட்டப்பகலிலேயே அவர்கள் தட்டுத்தடுமாறுகிறார்கள்.
15 அவர்களுடைய குத்தலான பேச்சிலிருந்து எளியவர்களைக் கடவுள்
காப்பாற்றுகிறார்.
பலம் படைத்தவர்களின் பிடியிலிருந்து ஏழைகளை விடுவிக்கிறார்.
16 அதனால் எளியவர்களுக்கு நம்பிக்கை கிடைக்கிறது,
அக்கிரமக்காரர்களின் வாய் அடங்குகிறது.
17 கடவுள் யாரைக் கண்டிக்கிறாரோ அவர் சந்தோஷமானவர்.
அதனால், சர்வவல்லமையுள்ளவர் கண்டித்துத் திருத்துவதை
அலட்சியம் செய்யாதே!
18 அவர் காயப்படுத்தினாலும் கட்டுப் போடுவார்.
அடித்தாலும் தன்னுடைய கையாலேயே மருந்து போடுவார்.
19 ஆறு விதமான ஆபத்துகளிலிருந்து உன்னைக் காப்பாற்றுவார்.
ஏழாவது ஆபத்தும் உன்னை நெருங்காது.
20 பஞ்ச காலத்தில் பட்டினியில் சாகும்படி உன்னை விட மாட்டார்.
போர்க் காலத்தில் வாளுக்குப் பலியாகும்படி உன்னை விட மாட்டார்.

21 சாட்டையடி போன்ற வார்த்தைகளிலிருந்து[a] நீ
காப்பாற்றப்படுவாய்.
நாசம் ஏற்பட்டாலும் நடுங்க மாட்டாய்.
22 அழிவும் பஞ்சமும் வந்தால்கூட வாய்விட்டுச் சிரிப்பாய்.
காட்டு மிருகங்களைப் பார்த்தும்கூட பயப்பட மாட்டாய்.
23 வயலிலுள்ள கற்கள் உன்னைக் காயப்படுத்தாது.*
காட்டு மிருகங்களும் உன்னைத் தாக்காது.
24 உன் கூடாரம் பாதுகாப்பாக இருப்பதை நீ பார்ப்பாய்.*
உன் மந்தையில் ஒன்றும் குறையாமல் இருப்பதைப் பார்ப்பாய்.
25 நிறைய பிள்ளைகளைப் பெற்று சந்தோஷமாக வாழ்வாய்.
உன்னுடைய வம்சம் பூமியிலுள்ள புல்பூண்டுகளைப் போல்
அளவில்லாமல் பெருகும்.
26 கல்லறைக்குப் போய்ச் சேரும் காலத்தில்கூட நீ கட்டுறுதியோடு
இருப்பாய்.
முற்றிய கதிர்மணிகளைப் போல் இருப்பாய்.
27 இதெல்லாம் நாங்கள் கண்டறிந்த உண்மைகள்.
நன்றாகக் கேட்டு, மனதார ஏற்றுக்கொள்" என்று சொன்னான்.

6 அதற்கு யோபு,
2 "என்னுடைய வேதனையை[b] எடை போட்டுப் பாருங்கள்.
என் கஷ்டங்களையும் தராசில் நிறுத்திப் பாருங்கள்.
3 அது கடற்கரை மணலைவிட கனமாக இருக்கும்.
அந்த வேதனையைத் தாங்க முடியாமல்தான் ஏதேதோ*
பேசிவிட்டேன்.[c]
4 சர்வவல்லமையுள்ளவரின் அம்புகள் என்னைக் குத்திக் கிழித்தன.
அவற்றின் விஷம் என் உடம்பில் ஏறிக்கொண்டிருக்கிறது.[d]
கடவுள் என்னை மாறிமாறி தாக்குவதால் நான்
பயந்துபோயிருக்கிறேன்.
5 புல் இருக்கும்போது காட்டுக் கழுதை[e] கனைக்குமா?
தீவனம் இருக்கும்போது காளை கத்துமா?
6 ருசியில்லாத சாப்பாட்டை உப்பில்லாமல் சாப்பிட முடியுமா?
செடியின் வழுவழுப்பான சாறில் ருசி இருக்குமா?
7 அதையெல்லாம் தொடக்கூட எனக்குப் பிடிக்கவில்லை.
பார்க்கவே அருவருப்பாக இருக்கிறது.
8 கடவுள் என் வேண்டுதலைக் கேட்டு,
என் ஆசையை நிறைவேற்றி,
9 என்னை ஒழித்துக்கட்டக் கூடாதா?
அவருடைய கையாலேயே என்னைக் கொன்றுபோடக் கூடாதா?[f]
10 அப்போதுதான் எனக்கு நிம்மதி கிடைக்கும்.
மரண வலியைக்கூட சந்தோஷமாக ஏற்றுக்கொள்வேன்.

5:23 * வே.வா., "உன்னோடு ஒரு ஒப்பந்தம் செய்யும்." **5:24** * வே.வா., "உன் கூடாரத்தில் நிம்மதியாக இருப்பாய்." **6:3** * வே.வா., "யோசிக்காமல் கொள்ளாமல்."

அதி. 5
a நீதி 12:18

அதி. 6
b சங் 31:9
c பிர 7:7; யாக் 3:2
d நீதி 18:14
e யோபு 24:5
f எண் 11:11, 15; 1ரா 19:3, 4; யோனா 4:3

ஏனென்றால், பரிசுத்தமான கடவுளின்[a] பேச்சை நான்
மறுக்கவில்லையே.*
11 இன்னும் காத்துக்கொண்டிருக்க என் உடம்பில் பலம் ஏது?[b]
இனி நான் வாழ்ந்து என்ன பிரயோஜனம்?
12 நான் என்ன பாறாங்கல்லா?
என் உடம்பு என்ன வெண்கலமா?
13 எனக்கென்று இருந்ததெல்லாம் பறிபோய்விட்டதே.
இனி என்னை நானே எப்படிக் கவனித்துக்கொள்வேன்?
14 மனுஷனுக்கு விசுவாசமாக இல்லாதவன்*[c]
சர்வவல்லமையுள்ளவரின் மேல் பயபக்தியாய் இருக்க மாட்டான்.[d]
15 என் சகோதரர்கள் எனக்கு ஏமாற்றம் அளிக்கிறார்கள்.[e]
அவர்கள் வற்றிப்போன குளிர் கால நீரோடைபோல் இருக்கிறார்கள்.
16 அதன் கலங்கலான தண்ணீர் உறைபனி போல இறுகிக் கிடக்கிறது.
அதன் அடியில் இருக்கும் பனிக்கட்டி உருகி ஓடுகிறது.
17 கோடைக் காலத்தில் அது காய்ந்துபோகிறது.
வெயில் காலத்தில் வறண்டுபோகிறது.
18 அதன் பாதை மாறுகிறது.
பாலைவனத்துக்குள் ஓடுகிறது, பின்பு காணாமல் போகிறது.
19 தீமாவின்[f] பயணிகள் தண்ணீரைத் தேடி வருகிறார்கள்.
சீபாவிலிருந்து வருகிறவர்கள்*[g] அதை எதிர்பார்த்துக்
காத்திருக்கிறார்கள்.
20 நம்பிக்கை வீண்போனதால் அவர்கள் அவமானம் அடைகிறார்கள்.
எதிர்பார்த்தது கிடைக்காததால் ஏமாற்றம் அடைகிறார்கள்.
21 நீங்களும் எனக்கு அந்த நீரோடை போலத்தான் இருக்கிறீர்கள்.[h]
எனக்கு ஏற்பட்ட கொடுமைகளைப் பார்த்துப் பயப்படுகிறீர்கள்.[i]
22 ‘எனக்கு ஏதாவது கொடுங்கள்’ என்று உங்களைக் கேட்டேனா?
எனக்காக யாரிடமாவது பணம் கொடுக்கச் சொன்னேனா?
23 எதிரியின் கையிலிருந்து என்னைக் காப்பாற்றும்படி
கெஞ்சினேனா?
கொடுமைக்காரர்களின் கையிலிருந்து விடுதலை செய்யும்படி
வேண்டினேனா?
24 எனக்குக் கொஞ்சம் சொல்லுங்கள், நான் அமைதியாக
இருந்துவிடுகிறேன்.[j]
என் தப்பை உணர்த்துங்கள்.
25 உள்ளதை உள்ளபடி சொல்வது வேதனை தராது.[k]
ஆனால் நீங்கள் என்னைக் கண்டிப்பதால் ஏதாவது பிரயோஜனம்
இருக்கிறதா?[l]
26 என் வார்த்தைகளைச் சுட்டிக்காட்டி என்னைக் கண்டிக்க சதி
செய்கிறீர்களா?

அதி. 6
a லேவி 19:2, ஓசி 11:9
b யோபு 7:6, 7, சங் 103:15, 16
c நீதி 3:3, நீதி 19:22, ஓசி 6:6, சக 7:9
d 1யோ 3:17
e யோபு 19:19, சங் 38:11
f ஏசா 21:13, 14
g யோபு 1:14, 15
h யோபு 13:4
i சங் 38:11
j யோபு 32:11, 12
k நீதி 12:18, நீதி 25:11
l யோபு 16:2, 3, யோபு 21:34

6:10 * வே.வா., “தட்டவில்லையே.” **6:14** * வே.வா., “மாறாத அன்பு காட்டாதவன்.”
6:19 * வே.வா., “பயணம் செய்கிற சபேயர்கள்.”

விரக்தியில் பேசுகிறவனுடைய வார்த்தைகள்[a] காற்றோடு காற்றாகப் போய்விடுவதில்லையா?
27 அப்பா இல்லாத பிள்ளைகள்மீதும் நீங்கள் குலுக்கல் போடுவீர்கள்.[b]
சொந்த நண்பனையே விற்றுவிடுவீர்கள்.*[c]
28 இப்போது என் முகத்தைப் பாருங்கள்.
உங்கள் முகத்துக்கு நேராக நான் ஏன் பொய் சொல்லப்போகிறேன்?
29 என்னைப் பற்றித் தப்பாக நினைக்காதீர்கள்; தயவுசெய்து உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளுங்கள்.
நீங்களே யோசித்துப் பாருங்கள்; நான் இன்னும் நீதிநேர்மையோடுதான் நடக்கிறேன்.
30 நான் ஏதாவது அநியாயமாகப் பேசுகிறேனா?
எனக்கு வந்த கஷ்டத்தைப் பற்றிப் புரியாமல் பேசுகிறேனா?" என்றார்.

7 பின்பு அவர்,
"அற்ப மனுஷனின் வாழ்க்கையே ஒரு போராட்டம்தான்.
அவன் வாழ்க்கை கூலியாட்களின் வாழ்க்கையைப் போலத்தான் இருக்கிறது.[d]
2 ஒரு அடிமையைப் போல அவன் நிழலுக்காக ஏங்குகிறான்.
ஒரு கூலியாளைப் போலக் கூலிக்காகக் காத்திருக்கிறான்.[e]
3 எத்தனையோ மாதங்கள் எனக்கு வீணாகிவிட்டன.
எத்தனையோ இரவுகள் கவலையிலேயே கரைந்துவிட்டன.[f]
4 'எப்போதுதான் விடியுமோ?' என்று யோசித்துக்கொண்டே படுக்கிறேன்.[g]
ராத்திரி மெதுவாக நகருகிறது, விடியும்வரை தூக்கமில்லாமல் புரண்டு புரண்டு படுக்கிறேன்.
5 என் உடம்பெல்லாம் புழுவும் புழுதியுமாக இருக்கிறது.[h]
புண்களிலிருந்து சீழ் வடிகிறது.[i]
6 என்னுடைய காலம் நெசவுத் தறியைவிட வேகமாக ஓடுகிறது.[j]
எந்த நம்பிக்கையும் இல்லாமல் முடிவுக்கு வருகிறது.[k]
7 கடவுளே, என் வாழ்க்கை காற்றுபோல் பறந்துவிடும்தானே?[l]
இனி எங்கே எனக்குச் சந்தோஷம் கிடைக்கப்போகிறது?*
8 இப்போது என்னைப் பார்க்கிறவர்கள் இனிமேல் பார்க்க மாட்டார்கள்.
நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனால் நான் இருக்க மாட்டேன்.[m]
9 மேகம் கலைந்து மறைவது போல, கல்லறைக்குப் போகிறவன் மறைந்துபோகிறான்.
அவன் திரும்பி வருவதில்லை.[n]
10 அவன் தன் வீட்டுக்குத் திரும்ப மாட்டான்.
இருந்த இடம் தெரியாமல் போய்விடுவான்.[o]
11 அதனால், இப்போது நான் பேசாமல் இருக்க மாட்டேன்.
என் மனம் படுகிற பாட்டைச் சொல்லாமல் விட மாட்டேன்.
என் உள்ளக் குமுறல்களைக் கொட்டித் தீர்ப்பேன்.[p]

6:27 * வே.வா., "பேரம் பேசுவீர்கள்." 7:7 * நே.மொ., "நல்லது நடக்கப்போகிறது?"

அதி. 6
a யோபு 10:1
b யோபு 31:21, 22; மல் 3:5
c ஆதி 37:28

அதி. 7
d யோபு 14:5, 6; சங் 39:4
e லேவி 19:13; உபா 24:15
f சங் 6:6
g யோபு 2:8; யோபு 30:17
h யோபு 30:19
i யோபு 30:30
j சங் 102:11; சங் 103:15; சங் 144:4
k யோபு 17:15
l சங் 89:47; பிர 2:11
m யோபு 7:21; யாக் 4:14
n யோபு 10:21; யோபு 14:12; சங் 78:39; பிர 9:10
o சங் 103:15, 16; சங் 146:4; பிர 9:5
p 1சா 1:10; யோபு 10:1; நீதி 14:10

அதி. 7
a யோபு 3:20, 21
b ஆதி 27:46 1ரா 19:4 யோபு 10:1 யோனா 4:3
c சங் 62:9 சங் 144:4 பிர 6:12
d சங் 8:4 சங் 103:15 சங் 144:3
e யோபு 23:10
f யோபு 14:6
g யோபு 34:21 நீதி 5:21 எரே 16:17 எபி 4:13 1பே 3:12
h ஆதி 3:19 சங் 104:29 பிர 12:7

அதி. 8
i ஆதி 25:1, 2 யோபு 42:9
j யோபு 18:1 யோபு 25:1
k யோபு 11:3
l யோபு 5:8, 9 யோபு 11:13 யோபு 22:23

12 நீங்கள் எனக்குக் காவல் வைக்க நான் என்ன கடலா?
அல்லது கடலில் இருக்கும் ராட்சதப் பிராணியா?
13 என் படுக்கை எனக்கு ஆறுதல் தருமென்று நம்பினேன்.
என் கட்டில் எனக்கு நிம்மதி தருமென்று எதிர்பார்த்தேன்.
14 ஆனால் கடவுளே, நான் படுத்திருக்கும்போது கனவுகளால் என்னைக் கதிகலங்க வைக்கிறீர்கள்.
தரிசனங்களால் திகிலடைய வைக்கிறீர்கள்.
15 நான் மூச்சுத் திணறி செத்துப்போவதே மேல்.
இந்த உடலோடு வாழ்வதைவிட உயிர்விடுவதே மேல்.[a]
16 எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது;[b] உயிரோடு இருக்கவே பிடிக்கவில்லை.
என்னை விட்டுவிடுங்கள், என் வாழ்நாள் வெறும் மூச்சுக்காற்றுதானே?[c]
17 நீங்கள் மதிக்கிற அளவுக்கு மனுஷன் ஒரு பெரிய ஆளே இல்லை.
நீங்கள் அவனை அக்கறையோடு கவனிக்க வேண்டிய அவசியமே இல்லை.[d]
18 அப்படியிருந்தும், ஒவ்வொரு நாள் காலையிலும் அவனை ஏன் ஆராய்ந்து பார்க்கிறீர்கள்?
ஒவ்வொரு நொடியும் அவனை ஏன் சோதித்துப் பார்க்கிறீர்கள்?[e]
19 எவ்வளவு காலம்தான் என்னையே பார்த்துக்கொண்டிருப்பீர்கள்?
எச்சில் விழுங்கும் நேரத்துக்குக்கூட என்னைத் தனியாக விட மாட்டீர்களா?[f]
20 மனுஷனைக் கவனிக்கிறவரே,[g] நான் பாவம் செய்திருந்தாலும் உங்களுக்கு எப்படிக் கெடுதல் செய்ய முடியும்?
ஏன் என்மீதே குறியாக இருக்கிறீர்கள்?
நான் உங்களுக்குப் பாரமாகிவிட்டேனா?
21 என் பாவத்தை ஏன் மன்னிக்காமல் இருக்கிறீர்கள்?
என் குற்றத்தை ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள்?
சீக்கிரத்தில் நான் மண்ணோடு மண்ணாகிவிடுவேன்.[h]
நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனால் நான் இருக்க மாட்டேன்" என்று சொன்னார்.

8 அப்போது, சுவாகியனான[i] பில்தாத்[j] யோபுவிடம்,
2 "எவ்வளவு நேரம்தான் இப்படியே பேசிக்கொண்டிருப்பாய்?[k]
உன் வாயிலிருந்து வார்த்தைகள் புயல்போல் சீறிக்கொண்டு வருகின்றன!
3 கடவுள் நியாயமில்லாமல் நடந்துகொள்வாரா?
சர்வவல்லமையுள்ளவர் நீதியைப் புரட்டுவாரா?
4 உன் பிள்ளைகள் அவருக்கு எதிராக ஏதாவது பாவம் செய்திருப்பார்கள்.
அவர்களுடைய குற்றத்துக்குத் தகுந்த தண்டனையைத்தான் கடவுள் கொடுத்திருக்கிறார்.
5 நீ இப்போது கடவுள்மேல் நம்பிக்கை வை.[l]
சர்வவல்லமையுள்ளவரிடம் கருணைக்காகக் கெஞ்சு.

6 நீ உண்மையிலேயே தூய்மையாகவும் நேர்மையாகவும் நடப்பவனா
என்று அவர் பார்ப்பார்.[a]
நீ நல்லவனாக இருந்தால் உதவி செய்வார்.
பழையபடி உன்னை உயர்த்துவார்.
7 இப்போது உன் நிலைமை மோசமாக இருக்கலாம்,
ஆனால் உன் எதிர்காலம் அருமையாக இருக்கும்.[b]
8 முந்தைய தலைமுறையிடம் தயவுசெய்து கேட்டுப் பார்.
அவர்களுடைய முன்னோர்கள் புரிந்துகொண்ட விஷயங்களை
ஆராய்ந்து பார்.[c]
9 நாம் நேற்று பிறந்தவர்கள், நமக்கு என்ன தெரியும்?
இந்த உலகத்தில் நம் வாழ்க்கை நிழல் போன்றது.
10 அவர்கள் உனக்குக் கற்றுக்கொடுப்பார்கள்.
அவர்களுக்குத் தெரிந்ததைச் சொல்வார்கள்.
11 சேறு இல்லாமல் நாணற்புல்* ஓங்கி வளருமா?
தண்ணீர் இல்லாமல் கோரைப்புல் உயரமாக வளருமா?
12 அது வெட்டப்படாமல் இளசாக இருந்தாலும்,
மற்ற எல்லா புற்களையும்விட சீக்கிரத்தில் காய்ந்துபோகுமே.
13 கடவுளை மறந்துபோகிறவனுக்கும் இதே கதிதான் வரும்.
கெட்டவனின்* எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும்.
14 அவனுடைய நம்பிக்கை வீணானது.
சிலந்தி வலைபோல் உறுதி இல்லாதது.
15 அவன் தன்னுடைய வீட்டின் மேல் சாய்வான், அது சரிந்து விழும்.
அதைப் பிடித்து நிறுத்தப் பார்ப்பான், ஆனால் அது தரைமட்டமாகும்.
16 அவன் சூரிய வெளிச்சத்தில் வளரும் பசுமையான செடிபோல்
இருக்கிறான்.
அவனுடைய கிளைகள் தோட்டமெங்கும் படருகின்றன.[d]
17 அவனுடைய வேர் கற்குவியலுக்குள் பின்னிக்கிடக்கிறது.
அந்தக் கற்களுக்குள் வீட்டைத் தேடுகிறான்.*
18 ஆனால், அவனுடைய இடத்திலிருந்து வேரோடு பிடுங்கப்படுவான்.
அந்த இடம், 'நான் உன்னைப் பார்த்ததே இல்லை' என்று சொல்லும்.[e]
19 இப்படி அவன் இல்லாமல் போவான்.[f]
அதன் பிறகு மற்ற செடிகொடிகள் அந்த இடத்தில் முளைக்கும்.
20 உத்தமர்களை* கடவுள் ஒருபோதும் ஒதுக்கித்தள்ள மாட்டார்.
கெட்டவர்களுக்கு அவர் உதவி செய்யவும் மாட்டார்.
21 இனி அவர் உன்னை வாய்விட்டுச் சிரிக்க வைப்பார்.
சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்க வைப்பார்.
22 உன்னை வெறுக்கிறவர்கள் ரொம்பவே அவமானம் அடைவார்கள்.
கெட்டவர்களின் கூடாரம் அழிந்துபோகும்" என்று சொன்னான்.

8:11 *அதாவது, "பாப்பிரஸ் புல்." **8:13** *வே.வா., "கடவுளைவிட்டு விலகியவனின்; விசுவாசதுரோகியின்." **8:17** *வே.வா., "கற்களாலான வீட்டைப் பார்க்கிறான்." **8:20** *வே.வா., "குற்றமற்றவர்களை."

அதி. 8
a யோபு 1:8
b யோபு 11: 14, 17
c யோபு 15: 17, 18
d யோபு 5:3
e யோபு 20:9
f யோபு 20:5

அதி. 9
a உபா 32:4 சங் 143:1, 2 ரோ 3:23
b யோபு 40:2 ரோ 9:20
c யோபு 36:5 சங் 104:24 ஏசா 40:26 தானி 2:20
d நீதி 14:16 நீதி 28:14 ஏசா 30:1 தானி 5:18, 20 சக 7:12 ரோ 2:5
e சங் 75:3
f ஆதி 1:16
g ஆதி 1:1 சங் 33:6 ஏசா 44:24
h யோபு 38: 8-11
i யோபு 38:31 ஆமோ 5:8
j ஏசா 40:28 ரோ 11:33
k சங் 40:5
l தானி 4:35 ரோ 9:20
m உபா 32:22
n யோபு 26:12
o யோபு 10:15

9 அதற்கு யோபு,
2 “நீங்கள் சொல்வது சரிதான்.
ஆனால், சாதாரண மனுஷன் எப்படிக் கடவுளோடு வழக்காடி ஜெயிக்க முடியும்?[a]
3 அவரோடு வாதாட ஒரு மனுஷன் விரும்பினால்,[b]
அவர் கேட்கிற ஆயிரம் கேள்விகளில் ஒரு கேள்விக்குக்கூட அவனால் பதில் சொல்ல முடியாதே.
4 அவரைப் போல் ஞானமும் மகா வல்லமையும் உள்ளவர் யாராவது உண்டா?[c]
அவருடன் மோதி யாரால் தப்பிக்க முடியும்?[d]
5 ஒருவருக்கும் தெரியாதபடி அவர் மலைகளைப் பெயர்க்கிறார்.
கோபத்தில் அவற்றைக் கவிழ்க்கிறார்.
6 பூமியின் அஸ்திவாரத்தை ஆட்டம்காண வைக்கிறார்.
அதன் தூண்களை அதிர வைக்கிறார்.[e]
7 சூரியனிடம், ‘பிரகாசிக்காதே!’ என்று கட்டளை கொடுக்கிறார்.
நட்சத்திரங்களின் ஒளியை மறைக்கிறார்.[f]
8 அவராகவே வானத்தை விரிக்கிறார்.[g]
பொங்கிவரும் கடல் அலைகளை மிதித்து அமிழ்த்துகிறார்.[h]
9 ஆஷ்,* கீஸில்,# கிமா△ நட்சத்திரக் கூட்டங்களை உண்டாக்கியிருக்கிறார்.[i]
தெற்கிலுள்ள நட்சத்திரக் கூட்டங்களையும் உருவாக்கியிருக்கிறார்.
10 ஆராய்ந்தறிய முடியாத அதிசயங்களை அவர் செய்கிறார்.[j]
எண்ண முடியாத அற்புதங்களை நடத்துகிறார்.[k]
11 அவர் என்னைக் கடந்துபோகிறார், என்னால் பார்க்க முடியவில்லை.
என்னைத் தாண்டிப்போகிறார், என்னால் உணர முடியவில்லை.
12 அவர் நம்மிடமிருந்து எதையாவது பிடுங்கிக்கொண்டால், நம்மால் எதிர்த்துப் போராட முடியுமா?
‘ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?’ என்று தட்டிக்கேட்க முடியுமா?[l]
13 கடவுள் தன்னுடைய கோபத்தை அடக்க மாட்டார்.[m]
ராகாபின்* உதவியாளர்கள்கூட அவர் முன்னால் அடங்கிப்போவார்கள்.[n]
14 அப்படியென்றால், நான் எவ்வளவு கவனமாக அவருக்குப் பதில் சொல்ல வேண்டும்!
அவரோடு வாதாடும்போது எவ்வளவு ஜாக்கிரதையாகப் பேச வேண்டும்!
15 என் பங்கில் நியாயம் இருந்தாலும், நான் அவரிடம் எதிர்த்துப் பேச மாட்டேன்.[o]
இரக்கம் காட்டும்படி என் நீதிபதியிடம்* கெஞ்சிக் கேட்பேன்.

9:9 *இது அர்சா மேஜர் என்ற பெருங்கரடி நட்சத்திரக் கூட்டத்தைக் குறிக்கலாம். #இது ஓரியன் நட்சத்திரக் கூட்டத்தைக் குறிக்கலாம். △இது ரிஷப நட்சத்திரக் கூட்டத்தில் இருக்கும் கார்த்திகை நட்சத்திரங்களைக் குறிக்கலாம். **9:13** *ராகாப் என்பது ராட்சதக் கடல் பிராணியைக் குறிக்கலாம். **9:15** *அல்லது, “என்மீது வழக்கு தொடுத்திருப்பவரிடம்.”

16 நான் கூப்பிட்டால் அவர் பதில் சொல்வாரா என்ன?
அவர் என் குரலைக் கேட்பார் என்ற நம்பிக்கையே எனக்கு இல்லை.
17 சுழல்காற்றினால் அவர் என்னைச் சுக்குநூறாக்குகிறார்.
காரணமே இல்லாமல் காயத்துக்குமேல் காயம் உண்டாக்குகிறார்.[a]
18 மூச்சு இழுக்கக்கூட அவர் என்னை விடுவதில்லை.
நிறைய கஷ்டங்களைக் கொடுத்து என்னை நோகடிக்கிறார்.
19 பலம் என்று வரும்போது, அவர்தான் மகா பலசாலி.[b]
நியாயம் என்று வரும்போது, 'யாரும் என்னைக் கேள்வி கேட்க முடியாது'* என்று அவர் சொல்கிறார்.
20 நான் நல்லவனாக இருந்தாலும், என் வாயே என்னைக் கெட்டவன் என்று சொல்லும்.
நான் உத்தமனாக* இருந்தாலும், அவர் என்னைக் குற்றவாளி என்றுதான் சொல்வார்.
21 நான் உத்தமனாக இருந்தாலும், என்மேல் எனக்கே நம்பிக்கை இல்லை.
இந்த வாழ்க்கையே எனக்கு வேண்டாம்.
22 எல்லாம் ஒன்றுதான். அதனால்தான்,
'நல்லவன், கெட்டவன் என்று பார்க்காமல் எல்லாரையும் அவர் அழிக்கிறார்' என்று சொல்கிறேன்.
23 திடீரென்று வெள்ளம் வந்து நல்லவனை வாரிக்கொண்டு போனால் அவர் சிரிப்பார்.
அவன் தவிப்பதைப் பார்த்து கேலி செய்வார்.
24 பூமியைக் கெட்டவர்களின் கையில் அவர் விட்டுவிட்டார்.[c]
நீதிபதிகளின் கண்களைக் கட்டிவிட்டார்.
அவரைத் தவிர வேறு யார் அப்படிச் செய்வார்கள்?
25 ஒரு ஓட்டக்காரனைவிட வேகமாக என் வாழ்நாள் ஓடுகிறது.[d]
வாழ்க்கையை நன்றாக அனுபவிப்பதற்கு முன்பே அது ஓடிவிடுகிறது.
26 நாணல் படகுகளைப் போல் அது விரைவாகப் போகிறது.
இரையின் மேல் பாயும் கழுகுபோல் வேகமாகக் கடந்துபோகிறது.
27 'நான் சோகத்தை விட்டுவிட்டு சந்தோஷமாக இருக்க வேண்டும்,
இனி புலம்பக் கூடாது' என்று முடிவுசெய்தாலும், என்ன பிரயோஜனம்?
28 என் வேதனைகளை நினைத்து நினைத்துப் பயந்துகொண்டுதான் இருப்பேன்.[e]
கடவுள் எங்கே என்னை நல்லவன் என்று நினைக்கப்போகிறார்?
29 என்னை எப்படியும் குற்றவாளி என்றுதான் சொல்வார்.
அப்படியிருக்கும்போது, நான் ஏன் வீணாகப் போராட வேண்டும்?[f]
30 உருகும் பனியில் நான் குளித்தாலும்,
கைகளைச் சாம்பல் தேய்த்துக் கழுவினாலும், என்ன பிரயோஜனம்?[g]
31 அவர்தான் என்னைச் சேற்றுக் குழிக்குள் தள்ளிவிடுவாரே.
அப்போது, நான் போட்டிருக்கிற துணிக்குக்கூட என்னைப் பிடிக்காமல் போய்விடுமே.

9:19 *வே.வா., "வழக்காட வரச்சொல்லி எனக்கு உத்தரவு போட முடியாது." 9:20 *வே.வா., "நிரபராதியாக."

அதி. 9
a யோபு 2:3; யோபு 34:5, 6
b ஏசா 40:28
c 1யோ 5:19
d யோபு 7:6; சங் 90:10; யாக் 4:14
e யோபு 21:6
f சங் 73:13
g எரே 2:22; மல் 3:2

அதி. 9
a ஏசா 45:9 ரோ 9:20
b யோபு 13:21

அதி. 10
c எண் 11:11, 15 1ரா 19:3, 4 யோபு 7:16 யோனா 4:3
d யோபு 14:15 சங் 138:8 ஏசா 64:8
e சங் 90:2
f யோபு 10:14
g யோபு 1:8 சங் 139:1
h உபா 32:39
i சங் 119:73 சங் 139:13-16
j ஆதி 2:7 ஏசா 45:9 ஏசா 64:8 ரோ 9:21
k ஆதி 3:19 சங் 104:29 பிர 12:7

32 அவர் என்னைப் போல ஒரு மனுஷனா? என்னால் அவரை எதிர்த்துப் பேச முடியுமா?
என்னால் அவரோடு வழக்காட முடியுமா?[a]
33 எங்கள் இரண்டு பேருடைய வழக்கையும் விசாரிக்க* யாரும் இல்லை.
எங்களுக்குத் தீர்ப்பு சொல்ல நீதிபதியும் இல்லை.
34 அவர் என்னைத் தாக்குவதை நிறுத்த வேண்டும்.
என்னைப் பயமுறுத்தாமல் இருக்க வேண்டும்.[b]
35 அப்போதுதான், நான் பயமில்லாமல் அவரிடம் பேசுவேன்.
பயந்து பேசுவது என் சுபாவமே இல்லை” என்று சொன்னார்.

10 பின்பு அவர்,
“எனக்கு வாழ்க்கை கசக்கிறது.[c]
என் குறைகளை வாய்விட்டுச் சொல்லப்போகிறேன்.
என் உள்ளக் குமுறல்களைக் கொட்டித் தீர்க்கப்போகிறேன்.
2 நான் கடவுளிடம், ‘என்னைக் குற்றவாளி என்று சொல்லிவிடாதீர்கள்.
என்னோடு ஏன் வாதாடுகிறீர்கள் என்று முதலில் விளக்குங்கள்’ என்று சொல்வேன்.
3 அதோடு, ‘என்னைக் கொடுமைப்படுத்துவதால் உங்களுக்கு என்ன லாபம்?
நீங்கள் படைத்த மனுஷன்மேல்[d] நீங்களே வெறுப்பைக் கொட்டுவதால் என்ன பிரயோஜனம்?
கெட்டவர்களுடைய திட்டங்களை நீங்கள் ஆதரிக்கலாமா?
4 உங்களுடைய கண்கள் என்ன மனுஷக் கண்களா?
சாதாரண மனுஷன் பார்ப்பது போலவா நீங்கள் பார்க்கிறீர்கள்?
5 உங்கள் வாழ்நாள் மனுஷனின் வாழ்நாளைப் போன்றதா?
அவன் எவ்வளவு காலம் வாழ்கிறானோ அவ்வளவு காலம்தான் நீங்களும் வாழ்கிறீர்களா?[e]
6 பின்பு ஏன் என்னிடம் குற்றம் கண்டுபிடிக்கப் பார்க்கிறீர்கள்?
நான் பாவம் செய்கிறேனா என்று ஏன் துருவித் துருவிப் பார்க்கிறீர்கள்?[f]
7 நான் குற்றம் செய்யவில்லை என்று உங்களுக்குத் தெரியுமே.[g]
யாராலும் என்னை உங்கள் கையிலிருந்து காப்பாற்ற முடியாதே.[h]
8 உங்கள் கைகளால்தானே என்னைப் பார்த்துப் பார்த்து உண்டாக்கினீர்கள்?[i]
இப்போது ஏன் என்னை அடியோடு அழிக்கப் பார்க்கிறீர்கள்?
9 என்னை மண்ணால் உருவாக்கியதைத் தயவுசெய்து நினைத்துப் பாருங்கள்.[j]
இப்போது என்னை மண்ணுக்கே அனுப்ப நினைக்கிறீர்களே![k]
10 என் தாயின் வயிற்றுக்குள் நீங்கள் என்னை வைக்கவில்லையா?*
அங்கே எனக்கு உருவம் கொடுக்கவில்லையா?#

9:33 *வே.வா., “எங்கள் இரண்டு பேருக்கும் மத்தியஸ்தராக இருக்க.” **10:10** *நே.மொ., “நீங்கள் என்னைப் பால் போல ஊற்றவில்லையா?” #நே.மொ., “பாலாடைக் கட்டி போல உறைய வைக்கவில்லையா?”

11 எலும்புகளாலும் தசைநாண்களாலும் எனக்கு வடிவம் கொடுத்தீர்களே.
தோலாலும் சதையாலும் என்னைப் போர்த்தினீர்களே.[a]
12 எனக்கு வாழ்வு தந்து, மாறாத அன்பைக் காட்டினீர்களே.
என் உயிரை* பொத்திப் பொத்திப் பாதுகாத்தீர்களே.[b]
13 ஆனாலும், எனக்குக் கஷ்டங்களைக் கொடுக்க ரகசியமாகத் திட்டம் போட்டீர்கள்.
இந்த எல்லா கஷ்டங்களையும் கொடுத்தது நீங்கள்தான் என்று எனக்குத் தெரியும்.
14 நான் பாவம் செய்தால், நீங்கள் கவனிக்காமல் இருக்க மாட்டீர்கள்.[c]
என் குற்றத்தைக் கண்டுகொள்ளாமல் விட மாட்டீர்கள்.
15 நான் குற்றவாளி என்றால், ஒழிந்துபோகிறேன்!
நான் நிரபராதி என்றாலும், என்னால் தலைநிமிர முடியவில்லை.[d]
ரொம்பவே அசிங்கப்பட்டுவிட்டேன், நொந்துபோய்விட்டேன்.[e]
16 நான் தலைநிமிர்ந்தாலும், சிங்கத்தை வேட்டையாடுவதுபோல் என்னை வேட்டையாடுகிறீர்கள்.[f]
உங்கள் பலத்தை மறுபடியும் என்மேல் காட்டுகிறீர்கள்.
17 எனக்கு எதிராகச் சாட்சி சொல்ல நிறைய பேரைக் கொண்டுவருகிறீர்கள்.
என்மேல் இன்னும் அதிகமாகக் கோபத்தைக் கொட்டுகிறீர்கள்.
எனக்குக் கஷ்டத்துக்குமேல் கஷ்டம் வருகிறது.
18 என் தாயின் வயிற்றிலிருந்து ஏன் என்னை வெளியே கொண்டுவந்தீர்கள்?[g]
யாரும் பார்ப்பதற்கு முன்பே நான் செத்துப்போயிருக்கக் கூடாதா?
19 இப்படிப்பட்ட ஒருவன் இல்லாமலே போயிருப்பானே!
நான் கருவறையிலிருந்து நேராகக் கல்லறைக்குப் போயிருப்பேனே’ என்று கடவுளிடம் சொல்வேன்.
20 இன்னும் கொஞ்ச நாள்தானே வாழப்போகிறேன்?[h] அவர் என்னை விட்டுவிடக் கூடாதா?
கொஞ்ச நேரமாவது அவர் என்னைப் பார்க்காமல் இருந்தால் நான் நிம்மதியாக இருப்பேன்.*[i]
21 அதன் பிறகு, இருட்டிலும் இருட்டான* இடத்துக்குப்[j] போய்விடுகிறேன்.
அங்கிருந்து திரும்பிவர மாட்டேன்.[k]
22 அது பயங்கர இருட்டான ஒரு தேசம்.
கும்மிருட்டும் குழப்பமும் நிறைந்த தேசம்.
அங்கே வெளிச்சம்கூட இருட்டாகத்தான் தெரியும்” என்று சொன்னார்.

11 அதற்கு நாகமாத்தியனான சோப்பார்,[l]
2 “நீ என்ன பேசினாலும் யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறாயா?
ஒருவன் நிறைய* பேசுகிறான் என்பதற்காக நியாயமாகப் பேசுகிறான் என்று அர்த்தமா?

10:12 *வே.வா., “உயிர்மூச்சை.” 10:20 *வே.வா., “கொஞ்சம் சந்தோஷப்படுவேன்.” 10:21 *வே.வா., “இருட்டும் சாவின் நிழலும் உள்ள.” 11:2 *வே.வா., “பெருமை.”

அதி. 10
a சங் 139:15
b சங் 8:4
c சங் 139:1
d யோபு 9:15
e சங் 119:153
f ஏசா 38:13
g யோபு 3:11, எரே 20:18
h யோபு 7:6, யோபு 14:1, 2, சங் 39:5, 6, சங் 103:15, 16
i யோபு 9:27
j யோபு 38:17, சங் 88:12, பிர 9:10
k யோபு 7:9, சங் 115:17, ஏசா 38:11

அதி. 11
l யோபு 20:1, யோபு 42:9

அதி. 11
a யோபு 12:4
b யோபு 6:10
c யோபு 6:29
யோபு 10:7
d யோபு 38:1

3 அர்த்தமில்லாமல் பேசி மற்றவர்களின் வாயை அடைக்கப் பார்க்கிறாயா?
நீ கிண்டலாகப் பேசுவதை[a] யாரும் தட்டிக்கேட்க மாட்டார்களா?
4 நீ கடவுளிடம், 'நான் பேசுவதெல்லாம்* உண்மை,[b]
உங்கள் பார்வையில் சுத்தமாக இருக்கிறேன்'[c] என்று சொல்கிறாய்.
5 ஆனால், கடவுளே உன்னிடம் பேசி,
உனக்குப் பதில் சொன்னால் நன்றாக இருக்கும்![d]
6 ஞானத்தின் ரகசியங்களை அவர் உனக்கு வெளிப்படுத்துவார்.
அதைப் பற்றிய பல விஷயங்களை உனக்குப் புரிய வைப்பார்.
நீ செய்கிற எல்லா குற்றங்களையும் அவர் கணக்கு வைப்பதில்லை என்று அப்போது புரிந்துகொள்வாய்.
7 சர்வவல்லமையுள்ளவரைப் பற்றி நீ முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியுமா?
அவரைப் பற்றிய ஆழமான விஷயங்களை உன்னால் புரிந்துகொள்ள முடியுமா?
8 ஞானம் வானத்தைவிட உயர்ந்தது. உன்னால் என்ன செய்ய முடியும்?
அது கல்லறையைவிட ஆழமானது. உனக்கு என்ன புரியும்?
9 அது பூமியைவிட நீளமானது.
கடலைவிட அகலமானது.
10 அவர் வந்து ஒருவனைப் பிடித்து விசாரணைக்கு நிறுத்தலாம்.
அவரை யாரால் எதிர்க்க முடியும்?
11 மனுஷன் பித்தலாட்டம் செய்வது அவருக்குத் தெரியாதா?
அவர் தீமையைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருப்பாரா?
12 காட்டுக் கழுதையால் எப்படி மனுஷனைப் பெற்றெடுக்க* முடியும்?
அதுபோல், புத்தி இல்லாதவனுக்கு எப்படிப் புத்தி வரும்?
13 நீ உன் இதயத்தைப் பக்குவப்படுத்து.*
கைகளை விரித்து அவரிடம் ஜெபம் செய்.
14 ஏதாவது தப்பு செய்துகொண்டிருந்தால், அதை விட்டுவிடு.
உன் கூடாரங்களில் அக்கிரமத்துக்கு இடம் கொடுக்காதே.
15 அப்போதுதான், நீ குற்றம் இல்லாதவனாகத் தலைநிமிர்ந்து நிற்க முடியும்.
பயமே இல்லாமல் உறுதியாக நிற்க முடியும்.
16 பின்பு உன் கவலையை மறந்துவிடுவாய்.
உன்னைக் கடந்துபோன வெள்ளம் போல அதை நினைப்பாய்.
17 உன் வாழ்க்கை பட்டப்பகலைவிட பிரகாசமாக இருக்கும்.
இருண்ட நேரங்கள்கூட காலைபோல் வெளிச்சமாக இருக்கும்.
18 நீ நம்பிக்கை பெற்று தைரியமாக இருப்பாய்.
சுற்றிலும் ஆபத்து இல்லாததைப் பார்த்து, பாதுகாப்பாகப் படுத்துக்கொள்வாய்.

11:4 * வே.வா., "போதிப்பதெல்லாம்." **11:12** * வே.வா., "காட்டுக்கழுதை எப்படி மனுஷனாகப் பிறக்க." **11:13** * வே.வா., "தயார்படுத்து."

19 யாருடைய பயமும் இல்லாமல் நிம்மதியாகத் தூங்குவாய்.
உதவி கேட்டு பலர் உன்னைத் தேடி வருவார்கள்.
20 ஆனால், கெட்டவர்களின் கண்கள் மங்கிப்போகும்.
ஓடி ஒளிய அவர்களுக்கு இடமே இருக்காது.
சாவை மட்டும்தான் அவர்கள் எதிர்பார்க்க முடியும்”[a] என்று சொன்னான்.

12 அதற்கு யோபு,
2 “நீங்கள்தான் எல்லாம் தெரிந்தவர்கள் ஆயிற்றே!
உங்களுக்குப் பிறகு ஞானிகள் என்று சொல்லிக்கொள்ள யார் இருக்கப்போகிறார்கள்?
3 ஆனால், நான் எந்த விதத்திலும் உங்களுக்குக் குறைந்தவன் இல்லை.
எனக்கும் புத்தி* இருக்கிறது.
நீங்கள் சொல்கிற விஷயங்களெல்லாம் யாருக்குத்தான் தெரியாது?
4 நான் கடவுளிடம் கெஞ்சிக்கொண்டிருக்கிறேன்.[b]
அதைப் பார்த்து என் நண்பர்கள் கேலி செய்கிறார்கள்.[c]
நீதிநேர்மையோடு நடப்பவனைக் கண்டாலே எல்லாருக்கும் கிண்டல்தான்.
5 எதற்கும் கவலைப்படாத ஆட்கள் தங்களுக்கு அழிவே வராது என்று நினைக்கிறார்கள்.
கஷ்டத்தில் துவண்டுபோகிற ஆட்கள்தான்* அழிந்துபோவார்கள் என்று நினைக்கிறார்கள்.
6 கொள்ளைக்காரர்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள்.[d]
சிலைகளை வைத்துக் கும்பிடுகிறவர்களும்,
கடவுளைக் கோபப்படுத்துகிறவர்களும் பத்திரமாக இருக்கிறார்கள்.[e]
7 ஆனால், தயவுசெய்து மிருகங்களைக் கேட்டுப் பாருங்கள்; அவை உங்களுக்குக் கற்றுக்கொடுக்கும்.
பறவைகளை விசாரித்துப் பாருங்கள்; அவை உங்களுக்கு விளக்கிச் சொல்லும்.
8 பூமியைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்;* அது உங்களுக்குச் சொல்லித்தரும்.
கடல்மீனும் உங்களுக்கு எடுத்துச்சொல்லும்.
9 யெகோவாதானே அவற்றையெல்லாம் உண்டாக்கினார்?
இந்த உண்மையை அறியாத படைப்பு எதுவுமே இல்லை.
10 அவருடைய கையில்தான் எல்லா ஜீவன்களின் உயிரும் இருக்கிறது.
மனுஷனின் மூச்சும் அவரிடம்தான் இருக்கிறது.[f]
11 சாப்பாட்டை நாக்கு ருசி பார்ப்பதில்லையா?
அது போல, வார்த்தைகளைக் காது சோதித்துப் பார்ப்பதில்லையா?[g]
12 வயதானவர்கள் ஞானம் உள்ளவர்கள்தானே?[h]
பெரியவர்கள் அனுபவம்* உள்ளவர்கள்தானே?
13 ஆனால், கடவுள்தான் எல்லா ஞானமும் பலமும் உள்ளவர்.[i]

12:3, 12 * வே.வா., “புரிந்துகொள்ளும் திறன்.” **12:5** * வே.வா., “அடி சறுக்கியவர்கள்தான்.” **12:8** * அல்லது, “பூமியிடம் பேசிப் பாருங்கள்.”

அதி. 11
a யோபு 8:13, 14; யோபு 18:5, 14

அதி. 12
b சங் 91:15; மீ 7:7
c யோபு 16:10; யோபு 17:2; யோபு 30:1; சங் 22:7; எபி 11:36
d சங் 37:35; சங் 73:12; எரே 12:1
e யோபு 21:7, 9
f எண் 16:22; சங் 104:30; பிர 12:7; எசே 18:4
g யோபு 34:3
h யோபு 32:6, 7
i யோபு 9:4; தானி 2:20

ஆலோசனையும்* புரிந்துகொள்ளுதலும் உள்ளவர்.[a]
14 அவர் இடித்ததை யாராலும் கட்ட முடியாது.[b]
அவர் மூடியதை எந்த மனுஷனாலும் திறக்க முடியாது.
15 அவர் மழையைத் தடுத்தால், எல்லாமே காய்ந்துபோகும்.[c]
அவர் மழையைத் தந்தால், வெள்ளம் பெருக்கெடுக்கும்.[d]
16 அவரிடம் பலமும் ஞானமும் உண்டு.[e]
ஏமாறுகிறவனும் ஏமாற்றுகிறவனும் அவருடைய கையில்
இருக்கிறார்கள்.
17 ஆலோசகர்களை அவர் வெறுங்காலில் அலைய விடுகிறார்.*
நீதிபதிகளை முட்டாள்களாக்குகிறார்.[f]
18 ராஜாக்களின் அதிகாரத்தைப் பறிக்கிறார்.[g]
அவர்களை அடிமையாக்குகிறார்.
19 குருமார்களை வெறுங்காலில் அலைய விடுகிறார்.[h]
அதிகாரமும் செல்வாக்கும் உள்ளவர்களை வீழ்த்துகிறார்.[i]
20 நம்பகமான ஆலோசகர்களின் வாயை அடைத்துவிடுகிறார்.
பெரியவர்களின் புத்தியை அழித்துவிடுகிறார்.
21 செல்வாக்கு உள்ளவர்களுக்கு மிகுந்த அவமானம் வரும்படி
செய்கிறார்.[j]
பலமுள்ளவர்களைப் பலவீனமாக்குகிறார்.
22 இருட்டுக்குள் மறைந்திருப்பவற்றை வெளிப்படுத்துகிறார்.[k]
கும்மிருட்டுக்குள் புதைந்திருப்பவற்றை வெட்டவெளிச்சமாக்குகிறார்.
23 தேசங்களை வளரவிட்டு அவற்றை அழித்துவிடுகிறார்.
ஜனங்களைப் பெருக வைத்து, அவர்களை வேறு தேசத்துக்குக்
கைதிகளாக அனுப்பிவிடுகிறார்.
24 ஜனங்களுடைய தலைவர்களின் புத்தியை* மழுங்க வைக்கிறார்.
பாதையில்லாத பொட்டல் காடுகளில் அவர்களைத் திரிய வைக்கிறார்.[l]
25 அவர்களை இருட்டில் தட்டுத்தடுமாற வைக்கிறார்.[m]
குடிகாரன் தள்ளாடுவதுபோல் அங்குமிங்கும் தள்ளாட வைக்கிறார்”[n]
என்று சொன்னார்.

13 பின்பு அவர்,
“இதையெல்லாம் என் கண்ணாலேயே பார்த்துவிட்டேன்.
என் காதாலேயே கேட்டுப் புரிந்துகொண்டேன்.
2 உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் எனக்கும் தெரியும்.
நான் உங்களைவிட எந்த விதத்திலும் குறைந்தவன் இல்லை.
3 உங்களிடம் பேசுவதைவிட சர்வவல்லமையுள்ளவரிடம்
பேசுவதுதான் நல்லது.
அவரோடு வழக்காடவே நான் விரும்புகிறேன்.[o]
4 நீங்கள் என்னைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும்
சொல்கிறீர்கள்.

12:13 *வே.வா., “நோக்கமும்; தீர்மானமும்.” 12:17 *வே.வா., “ஆலோசகர்களிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துவிடுகிறார்.” 12:24 *வே.வா., “புரிந்துகொள்ளும் திறனை.”

அதி. 12
a யோபு 36:5; சங் 147:5; ஏசா 40:14; எரே 10:12; ரோ 11:34
b யூ 7
c ஆதி 8:1; யாத் 14:21; நாகூ 1:4
d ஆதி 6:17
e ரோ 1:20
f ஏசா 29:14; ஏசா 44:25
g தானி 2:21
h எரே 14:18
i லூ 1:52
j சங் 107:40
k தானி 2:22
l சங் 107:40
m உபா 28:29
n சங் 107:27

அதி. 13
o யோபு 23:3, 4; யோபு 31:35

நீங்கள் எதற்கும் லாயக்கில்லாத வைத்தியர்கள்.[a]
5 நீங்கள் வாயே திறக்காமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
அதுதான் நீங்கள் செய்கிற ஞானமான காரியமாக இருக்கும்.[b]
6 தயவுசெய்து என் பக்கம் இருக்கிற நியாயத்தைக் கேளுங்கள்.
என்னுடைய விவாதத்தைக் கவனித்துக் கேளுங்கள்.
7 கடவுள் சார்பில் பேசுவதாகச் சொல்லிக்கொண்டு
அநியாயமாகவும் போலித்தனமாகவும் பேசுவீர்களோ?
8 நீங்கள் அவருடைய பக்கம் இருக்கிறீர்களோ?
உண்மைக் கடவுளுக்காக வாதாடுகிறீர்களோ?
9 அவர் சோதித்துப் பார்க்கும்போது, உங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்றா நினைக்கிறீர்கள்?[c]
சாதாரண மனுஷனை முட்டாளாக்குவதுபோல் அவரை முட்டாளாக்கவா பார்க்கிறீர்கள்?
10 நீங்கள் ரகசியமாய் ஓரவஞ்சனையோடு நடந்துகொண்டால்,
அவர் உங்களைக் கடுமையாகக் கண்டிப்பார்.[d]
11 அவருடைய மகிமையால் மிரண்டுபோவீர்கள்.
அவர்மேல் உள்ள பயத்தால் குலைநடுங்குவீர்கள்.
12 உங்களுடைய தத்துவங்கள், வெறும் சாம்பல்தான்.
உங்களுடைய வாதங்கள், வெறும் களிமண் கேடயங்கள்தான்.
13 நான் பேசி முடிக்கும்வரை கொஞ்சம் அமைதியாக இருங்கள்.
அதற்குப்பின், எனக்கு நடப்பது நடக்கட்டும்.
14 நானாகவே ஏன் ஆபத்தைத் தேடிக்கொள்ள வேண்டும்?
என் கையாலேயே என் உயிரை ஏன் எடுக்க வேண்டும்?
15 கடவுள் என்னை வெட்டிப்போட்டால்கூட, அவர்மேல் நம்பிக்கையாக இருப்பேன்.[e]
அவருடைய முகத்துக்கு நேராகவே என் நியாயத்தை எடுத்துச் சொல்வேன்.
16 அப்போது, அவர் என்னை மீட்பார்.[f]
கெட்டவர்கள்* யாரும் அவர் முன்னால் வர முடியாதே.[g]
17 என் வார்த்தைகளைக் கவனமாகக் கேளுங்கள்.
நான் சொல்வதை நன்றாகக் கவனியுங்கள்.
18 இதோ, என் வாதங்களை எடுத்துச் சொல்லத் தயாராகிவிட்டேன்.
என் பங்கில் நியாயம் இருப்பது எனக்குத் தெரியும்.
19 யார் என்னை எதிர்த்து வழக்காடப் போகிறீர்கள்?
நான் எதுவும் பேசாமல் இருந்தால் செத்தே போய்விடுவேன்.*
20 கடவுளே, என்னுடைய இரண்டு வேண்டுகோள்களை மட்டும் நிறைவேற்றுங்கள்.
அப்போதுதான் உங்களிடமிருந்து ஒளிந்துகொள்ள மாட்டேன்.
21 இனியும் உங்கள் கையால் என்னைக் கசக்கிப்பிழியாதீர்கள்.

13:16 *வே.வா., “கடவுளைவிட்டு விலகியவர்கள்; விசுவாசதுரோகிகள்.” **13:19** *அல்லது, “யாராவது அப்படிச் செய்ய முடியுமென்றால், நான் அமைதியாக இருந்து உயிரை விட்டுவிடுகிறேன்.”

அதி. 13
a யோபு 16:2
b நீதி 17:28; யாக் 1:19
c சங் 139:23; எரே 17:10
d சங் 50:20, 21; யாக் 2:9
e யோபு 19:25; சங் 23:4
f யாத் 15:2; சங் 27:1; ஏசா 12:2
g யோபு 27:8; யோபு 36:13; ஏசா 33:14

என்னைப் பயந்து நடுங்க வைக்காதீர்கள்.[a]
22 நீங்கள் பேசுங்கள், நான் பதில் சொல்கிறேன்.
இல்லையென்றால், நான் பேசுகிறேன், நீங்கள் பதில் சொல்லுங்கள்.
23 நான் என்ன குற்றம் செய்தேன்? என்ன பாவம் செய்தேன்?
எதுவாக இருந்தாலும் எனக்குச் சொல்லுங்கள்.
24 உங்கள் முகத்தை ஏன் திருப்பிக்கொள்கிறீர்கள்?*[b]
என்னை ஏன் எதிரியாக நினைக்கிறீர்கள்?[c]
25 காற்றில் அடித்துச் செல்லப்படும் இலையை நீங்கள் பயமுறுத்துவீர்களா?
ஒரு துரும்பைத் துரத்திக்கொண்டு போவீர்களா?
26 எனக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுகளை எழுதி
வைக்கிறீர்களே.
சிறுவயதில் நான் செய்த தவறுகளுக்காக என்னைத் தண்டிக்கிறீர்களே.
27 நீங்கள் என் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவிட்டீர்கள்.
என் வழிகளையெல்லாம் துருவித் துருவிப் பார்க்கிறீர்கள்.
என் காலடித் தடங்களையெல்லாம் தேடிப் பார்க்கிறீர்கள்.
28 மனுஷன்* உருக்குலைந்து போகிறானே!
பூச்சி அரித்த துணிபோல் அழிந்துபோகிறானே!" என்று சொன்னார்.

14 பின்பு அவர்,
"பெண்ணிடம் பிறக்கும் மனுஷன் வாழ்வதே கொஞ்சக்
காலம்தான்.[d]
அதுவும் பெரிய போராட்டம்தான்.*[e]
2 அவன் பூப்போல் பூக்கிறான், பிறகு வாடிப்போகிறான்.*[f]
நிழல்போல் வருகிறான், பிறகு மறைந்துபோகிறான்.[g]
3 ஆனாலும், நீங்கள் அவனையே கண்ணெடுக்காமல் பார்க்கிறீர்கள்.
உங்களோடு வாதாடுவதற்குக் கூப்பிடுகிறீர்கள்.[h]
4 பாவமுள்ளவன் பாவமில்லாதவனைப் பெற்றெடுக்க முடியுமா?[i]
முடியவே முடியாதே!
5 மனுஷனின் வாழ்நாள் காலத்துக்கு எல்லை இருக்கிறது.
அது உங்கள் கையில் இருக்கிறது.
நீங்கள் குறித்திருக்கிற எல்லையை மீறி அவன் வாழ முடியாது.[j]
6 அவனிடமிருந்து உங்கள் பார்வையைக் கொஞ்சம் திருப்புங்கள்.
பாடுபட்டு வேலை செய்தபின் ஓய்வெடுக்கும் கூலியாளைப் போல்
அவன் கொஞ்சம் ஓய்வெடுக்கட்டுமே.[k]
7 ஒரு மரத்துக்குக்கூட நம்பிக்கை இருக்கிறது.
வெட்டிச் சாய்க்கப்பட்டாலும், அது திரும்பவும் துளிர்க்கும்.
மறுபடியும் கிளைகள் விடும்.
8 ஒருவேளை அதன் வேர்கள் பல காலமாக மண்ணுக்குள் கிடக்கலாம்.
அதன் அடிமரம் காய்ந்துபோகலாம்.

13:24 *நே.மொ., "மறைத்துக்கொள்கிறீர்கள்." **13:28** *நே.மொ., "அவன்." ஒருவேளை யோபுவைக் குறிக்கலாம். **14:1** *வே.வா., "அவன் வாழ்க்கையே வேதனைகள் நிறைந்ததுதான்." **14:2** *அல்லது, "கிள்ளி எறியப்படுகிறான்."

அதி. 13
a யோபு 9:34, 35; யோபு 33:6, 7
b சங் 10:1; சங் 13:1; சங் 44:24
c யோபு 16:9; யோபு 19:11; யோபு 33:8-11

அதி. 14
d சங் 39:5, 6; யாக் 4:14
e ஆதி 3:19; ஆதி 47:9; சங் 90:10; பிர 2:23
f சங் 103:15, 16; ஏசா 40:6; யாக் 1:10, 11; 1பே 1:24
g 1நா 29:15; சங் 102:11; சங் 144:4
h சங் 143:2
i ஆதி 5:3; சங் 51:5; ரோ 5:12
j சங் 39:4
k சங் 39:13

9 ஆனாலும், தண்ணீர் பட்டதும் அது துளிர்விடுகிறது.
புதிதாக முளைக்கிற செடிபோல் கிளைகள் விடுகிறது.
10 மனுஷனோ, செத்தபின் ஒரேயடியாக அழிந்துபோகிறான்.
எங்குமே இல்லாமல் போய்விடுகிறான்.[a]
11 கடல் காய்ந்துபோகிறது.
நதி வற்றிப்போகிறது.
12 அதுபோலவே, மனுஷன் கண் மூடிவிட்டால் எழுந்திருப்பதில்லை.[b]
வானம் ஒழிந்துபோகும்வரை அவன் கண்திறக்கப் போவதில்லை.
அவனை யாரும் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பப் போவதில்லை.[c]
13 கடவுளே, நீங்கள் என்னைக் கல்லறையில் புதைத்துவைத்து,[d]
உங்கள் கோபம் தீரும்வரை அங்கேயே மறைத்துவைத்து,
நீங்கள் குறித்திருக்கிற காலம் முடிந்ததும் என்னை நினைத்துப் பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்![e]
14 மனுஷன் செத்த பின்பு மறுபடியும் உயிரோடு வர முடியுமா?[f]
நான் அடிமைப்பட்டிருக்கும்* காலமெல்லாம் காத்திருப்பேன்.
அதன்பின் அங்கிருந்து எனக்கு விடுதலை கிடைக்கும்.[g]
15 நீங்கள் என்னைக் கூப்பிடுவீர்கள், நான் பதில் சொல்வேன்.[h]
உங்கள் கைகளால் உருவாக்கிய என்னைப் பார்க்க நீங்கள் ஏக்கமாக இருப்பீர்கள்.
16 ஆனால், இப்போது நான் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியையும் எண்ணுகிறீர்கள்.
என்னிடம் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே குறியாக இருக்கிறீர்கள்.
17 என் பாவத்தை மூட்டையில் கட்டி வைத்திருக்கிறீர்கள்.
அதைப் பசைபோட்டு ஒட்டி வைத்திருக்கிறீர்கள்.
18 மலை விழுந்து நொறுங்குவது போலவும்,
பாறை இடம் பெயர்வது போலவும்,
19 தண்ணீர் கற்களைத் தேயச் செய்வது போலவும்,
வெள்ளம் மண்ணை அரித்துவிடுவது போலவும்,
அற்ப மனுஷனின் நம்பிக்கையை நீங்கள் அழித்துவிட்டீர்கள்.
20 உயிர் போகும்வரை அவனை ஆட்டிப்படைக்கிறீர்கள்.[i]
அவன் உருவத்தையே மாற்றி மண்ணுக்குள் அனுப்புகிறீர்கள்.
21 அதன்பின் அவனுடைய மகன்கள் கௌரவமாக வாழ்ந்தாலும் அவனுக்குத் தெரிவதில்லை.
அவர்கள் கேவலமாக வாழ்ந்தாலும் தெரிவதில்லை.[j]
22 உயிரோடு இருக்கும்வரைதான் அவன் வலியில் துடிக்கிறான்.
மூச்சு இருக்கும்வரைதான் அழுது புலம்புகிறான்" என்று சொன்னார்.

15 அதற்கு தேமானியனான எலிப்பாஸ்,[k]
2 "புத்திசாலி எப்போதாவது விதண்டாவாதம் செய்வானா?
மனதில் கெட்ட எண்ணங்களை வளர்ப்பானா?*

14:14 * அதாவது, "கல்லறையில் இருக்கும்." 15:2 * நே.மொ., "தன் வயிற்றைக் கிழக்குக் காற்றால் நிரப்புவானா?" கிழக்குக் காற்று என்பது பாலைவனங்களிலிருந்து வீசும் கொடிய வெப்பக் காற்றைக் குறிக்கிறது.

அதி. 14
a பிர 3:19, 20; பிர 9:10
b பிர 9:5; பிர 12:5
c சங் 13:3; யோவா 11:11; அப் 7:59, 60
d 1சா 2:6; ஏசா 57:1, 2
e லூ 23:42; யோவா 5:28, 29; எபி 11:35
f யோவா 11:25; அப் 26:8; 1கொ 15:12; வெளி 20:13
g யோபு 19:25
h தானி 12:13; யோவா 5:28, 29; யோவா 11:43, 44
i பிர 8:8; ஏசா 57:16
j பிர 9:5, 6

அதி. 15
k யோபு 2:11; யோபு 4:1

அதி. 15
a யோபு 42:8

3 வெறும் வார்த்தைகளால் குத்திக்காட்டுவதில் எந்த லாபமும் இல்லை.
வெட்டிப் பேச்சு பேசுவதில் பிரயோஜனமே இல்லை.
4 நீ பேசுவதைக் கேட்டால், கடவுள்பயமே இல்லாமல் போய்விடும்.
அவரைப் பற்றி நினைக்கவே மனம் வராது.
5 நீ தப்பு செய்திருப்பதால்தான் இப்படியெல்லாம் பேசுகிறாய்.
ரொம்பவே சாமர்த்தியமாகப் பேசுகிறாய்.
6 உன்மேல் குற்றம் இருப்பதாக நானா சொல்கிறேன்? நீயேதான் சொல்லிக்கொள்கிறாய்.
உன் வாயே உனக்கு எதிராகச் சாட்சி சொல்கிறது.[a]
7 நீதான் இந்த உலகத்தில் முதன்முதலாகப் பிறந்தாயோ?
மலைகள் உண்டாவதற்கு முன்பே பிறந்துவிட்டாயோ?
8 கடவுள் ரகசியம் பேசுவதைக்கூட உன்னால் கேட்க முடிகிறதோ?
நீ மட்டும்தான் ஞானி என்று நினைக்கிறாயோ?
9 எங்களுக்குத் தெரியாத என்ன விஷயம் உனக்குத் தெரிந்துவிட்டது?[b]
எங்களுக்குப் புரியாத என்ன விஷயம் உனக்குப் புரிந்துவிட்டது?
10 உன் அப்பாவைவிட ரொம்பவே மூத்தவர்களும் நரைமுடி உள்ளவர்களும்
அனுபவம் உள்ளவர்களும்[c] எங்களோடு இருக்கிறார்கள்.
11 கடவுள் தருகிற ஆறுதல் உனக்குப் போதாதா?
உன்னிடம் மென்மையாகச் சொல்லப்பட்ட வார்த்தைகளைக் கேட்க மாட்டாயா?
12 உனக்கு எப்படி இவ்வளவு துணிச்சல் வந்தது?
பார்க்கிற பார்வையிலேயே எரித்துவிடுவாய் போலிருக்கிறதே!
13 கடவுளையே கோபித்துக்கொள்கிறாயே!
வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுகிறாயே!
14 அற்ப மனுஷன் பரிசுத்தமாக இருக்க முடியுமா?
மண்ணில் பிறந்தவன் நீதிமானாக இருக்க முடியுமா?[d]
15 பரிசுத்த தூதர்களையே கடவுள் நம்புவது கிடையாது.
பரலோகம்கூட அவர் பார்வையில் பரிசுத்தமாக இல்லை.[e]
16 அப்படியிருக்கும்போது, அருவருப்பும் அக்கிரமமும் நிறைந்த மனுஷன் எந்த மூலைக்கு?[f]
அநீதி செய்யத் துடிக்கிறவன்* எந்த மூலைக்கு?
17 நான் உனக்கு விளக்குகிறேன், கொஞ்சம் கேள்!
இதுவரை நான் பார்த்ததை வைத்துச் சொல்கிறேன், கொஞ்சம் கவனி!
18 இதெல்லாம் ஞானிகள் சொன்ன விஷயங்கள்.
அவர்களுடைய முன்னோர்கள் அவர்களுக்கு மறைக்காமல் சொன்ன விஷயங்கள்.[g]
19 அந்த முன்னோர்களுக்கு மட்டும்தான் தேசம் கொடுக்கப்பட்டது.
அன்னியர்கள் யாரும் அங்கு நடமாடவில்லை.
20 அக்கிரமம் செய்கிறவன் ஆயுசு முழுக்க அவஸ்தைப்படுகிறான்.
கொடுமை செய்கிறவன் காலமெல்லாம் கஷ்டப்படுகிறான்.

b யோபு 13:2
யோபு 16:2
c யோபு 32:6
d யோபு 25:4
e யோபு 25:5, 6
யோபு 42:7
f யோபு 4:18, 19
g யோபு 8:8

15:16 *நே.மொ., “அநியாயத்தைத் தண்ணீர்போல் குடிக்கிறவன்.”

21 காதில் என்ன சத்தம் விழுந்தாலும் அவன் மிரண்டுபோகிறான்.[a]
அமைதியான காலத்தில்கூட கொள்ளைக்கூட்டத்திடம் சிக்குகிறான்.
22 இருட்டிலிருந்து தப்பிக்க முடியும் என்ற நம்பிக்கையே அவனுக்கு இல்லை.[b]
அவன் வாளால் சாவது உறுதி.
23 அவன் சாப்பாட்டுக்காகக் கூப்பாடு போட்டுக்கொண்டு சுற்றித் திரிகிறான்.
இருண்ட நாள் சீக்கிரத்தில் வரப்போவது அவனுக்குத் தெரியும்.
24 வேதனையும் கவலையும் அவனை ஆட்டிப்படைக்கின்றன.
ராஜா ஒரு நாட்டைப் பிடிப்பதுபோல் அவை அவனைப் பிடித்துக்கொள்கின்றன.
25 அவன்தான் கடவுளையே எதிர்க்கிறானே!
சர்வவல்லமையுள்ளவருக்கே சவால்விடப் பார்க்கிறானே!*
26 கடவுளுடன் மோதியே தீர வேண்டும் என்று ஓட்டமாய் ஓடுகிறான்.
பலமான கேடயத்துடன் பாய்ந்து போகிறான்.
27 அவனுக்கு உடம்பெல்லாம் கொழுப்பு.
அவன் வயிறு தொந்திவிட்டிருக்கிறது.
28 அவனுடைய நகரம் அழிக்கப்படும்.
அவன் வீடு இடிந்துவிழும்.
அங்கே யாரும் குடியிருக்க மாட்டார்கள்.
29 அவனால் வசதியாக வாழ முடியாது; பணமும் பொருளும் சேர்க்க முடியாது.
ஊரெல்லாம் சொத்துகளை வைத்திருக்க முடியாது.
30 இருளிலிருந்து அவன் தப்பிக்க மாட்டான்.
அவனுடைய துளிர்* கருகிவிடும்.
கடவுள் ஒரு ஊது ஊதியதும் அவன் காணாமல் போய்விடுவான்.[c]
31 அவன் வீணானதை நம்பி அதன் பின்னால் போகக் கூடாது.
அப்படிப் போனால், வீணான பலன்தான் அவனுக்குக் கிடைக்கும்.
32 அவனுடைய நாளுக்கு முன்பே அது நடக்கும்.
அவனுடைய கிளைகள் ஒருநாளும் செழிக்காது.[d]
33 பிஞ்சுகள் உதிர்ந்த திராட்சைக் கொடிபோல் அவன் இருப்பான்.
பூக்கள் உதிர்ந்த ஒலிவ மரம்போல் இருப்பான்.
34 கெட்டவர்களின்* வாழ்க்கை வெறுமையானது.[e]
லஞ்சம் வாங்குகிறவர்களின் கூடாரங்கள் சாம்பலாகும்.
35 அவர்கள் கெட்டதை நினைக்கிறார்கள், கெட்டதைச் செய்கிறார்கள்.
மற்றவர்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்றே எப்போதும் யோசிக்கிறார்கள்” என்று சொன்னான்.

15:25 *வே.வா., “சர்வவல்லமையுள்ளவரையே ஜெயிக்கப் பார்க்கிறானே!” **15:30** *அதாவது, “பழையபடி நல்ல நிலைமை வருமென்ற நம்பிக்கை.” **15:34** *வே.வா., “கடவுளைவிட்டு விலகியவர்களின்; விசுவாசதுரோகிகளின்.”

அதி. 15
a யோபு 18:11 யோபு 20:25
b யோபு 18:12
c யோபு 4:9
d யோபு 22: 15, 16
e யோபு 8: 11-13

அதி. 16
a யோபு 13:4, 5 யோபு 19:2, 3
b சங் 109:25 மத் 27:39
c நீதி 27:9 மத் 7:12 ரோ 12:15 1பே 3:8
d யோபு 2:13
e யோபு 7:3
f யோபு 10:16
g யோபு 33: 8-10
h சங் 22:13
i சங் 35:15
j சங் 27:12
k யோபு 1: 12, 17
l யோபு 7:20
m சங் 73:21

16 அதற்கு யோபு,
2 "நான் இதுபோல் எவ்வளவோ கேட்டிருக்கிறேன்.
ஆறுதல்படுத்துவதற்குப் பதிலாக நீங்கள் எல்லாரும் என் மனதை நோகடிக்கிறீர்களே.[a]
3 அர்த்தமில்லாத பேச்சுக்கு ஒரு முடிவே இல்லை.
என்னிடம் ஏன் இப்படி எரிந்து விழுகிறீர்கள்?
4 எனக்கும் உங்களைப் போலப் பேசத் தெரியும்.
என்னுடைய இடத்தில் நீங்கள் இருந்தால்
என்னாலும் உங்களுக்கு எதிராகச் சாமர்த்தியமாய்ப் பேச முடியும்.
கிண்டலாக உங்களைப் பார்த்துத் தலையசைக்க முடியும்.[b]
5 ஆனால் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன்; உங்களைத் தைரியப்படுத்துவேன்.
ஆறுதல் சொல்லி உங்கள் கவலைகளைப் போக்குவேன்.[c]
6 நான் இப்படி என்னதான் பேசினாலும் என் வலி தணிவதில்லை.[d]
பேசுவதை நிறுத்தினாலும் அது குறைவதில்லை.
7 கடவுள் என்னைச் சோகத்தில் தள்ளிவிட்டார்.[e]
எனக்கென்று இருந்த* எல்லாரையும் அழித்துவிட்டார்.
8 இப்போதும் அவர் என்னை ஆட்டிப்படைப்பதை மற்றவர்கள் கண்கூடாகப் பார்க்கிறார்கள்.
தப்பு செய்ததற்குத் தண்டனையாகத்தான் எலும்பும் தோலுமாக இருக்கிறேன் என்று சொல்கிறார்கள்.
9 கோபத்தில் அவர் என்னை நார்நாராகக் கிழித்துவிட்டார்; என்மேல் வெறியோடு இருக்கிறார்.[f]
என்னைப் பார்த்துப் பற்களை நறநறவென்று கடிக்கிறார்.
என் எதிரிகளின் கண்கள் என்னைக் குத்திக் கிழிக்கின்றன.[g]
10 அவர்கள் என்னைப் பற்றி இல்லாததையெல்லாம் சொல்கிறார்கள்.[h]
கன்னத்தில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள்.
எனக்கு எதிராக ஒரு பெரிய கூட்டமே திரண்டிருக்கிறது.[i]
11 கடவுள் என்னைப் பொடியன்களிடம் ஒப்படைத்தார்.
கெட்டவர்களின் கையில் கொடுத்தார்.[j]
12 கவலையில்லாமல் இருந்த என்னை நொறுக்கினார்.[k]
கழுத்தைப் பிடித்துத் தள்ளி என்னை மிதித்தார்.
என்னைத் தாக்குவதிலேயே குறியாக இருந்தார்.
13 அவருடைய வில்வீரர்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறார்கள்.[l]
அவர் ஈவிரக்கமே இல்லாமல் அம்புகளால் என்னை ஆழமாக* துளைக்கிறார்.[m]
என் பித்தநீரைத் தரையில் ஊற்றுகிறார்.
14 மதிலைத் துளைப்பதுபோல் என்னை மாறிமாறி துளைக்கிறார்.
போர்வீரனைப் போல் என்மேல் பாய்கிறார்.

16:7 * வே.வா., "என்னோடு கூடி வாழ்ந்த." 16:13 * நே.மொ., "என் சிறுநீரகங்களை."

15 நான் போட்டுக்கொள்வதற்குத் துக்கத் துணியை* தைத்தேன்.[a]
என் மானம் மரியாதையைக் குழிதோண்டிப் புதைத்தேன்.[b]
16 அழுது அழுது என் முகம் சிவந்துவிட்டது.[c]
கண்ணீர் சிந்தி சிந்தி என் கண்கள் வீங்கிவிட்டன.*
17 இத்தனைக்கும், நான் வன்முறையில் இறங்கியதே இல்லை.
சுத்தமான மனதோடுதான் ஜெபம் செய்கிறேன்.
18 மண்ணே, என் இரத்தத்தை மூடி மறைக்காதே![d]
அது எனக்காக ஓயாமல் கதறட்டும்!
19 இதோ, எனக்குச் சாட்சி சொல்பவர் பரலோகத்தில் இருக்கிறார்.
எனக்காக வாதாடுபவர் மேலே இருக்கிறார்.
20 என் நண்பர்கள் என்னைக் கேலி செய்கிறார்கள்.[e]
நான் கடவுளிடம் கண்ணீர்விட்டுக் கெஞ்சுகிறேன்.*[f]
21 மனுஷனுக்கும் மனுஷனுக்கும் இடையே உள்ள வழக்கை இன்னொரு மனுஷன் தீர்த்துவைப்பது உண்டு.
அதுபோலவே, எனக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள வழக்கை யாராவது தீர்த்துவைக்கட்டும்.[g]
22 இன்னும் சில வருஷங்கள்தான் நான் வாழப்போகிறேன்.
அதன்பின், திரும்பிவர முடியாத இடத்துக்குப் போய்விடுவேன்"[h] என்று சொன்னார்.

17 பின்பு அவர்,
"என் உயிர் ஊசலாடுகிறது, என் காலம் முடிந்துவிட்டது.
கல்லறை எனக்காகக் காத்திருக்கிறது.[i]
2 கேலி செய்கிறவர்கள் என்னைச் சுற்றிலும் இருக்கிறார்கள்.[j]
அவர்களுடைய அக்கிரமங்களைப் பார்த்துப் பார்த்து எனக்கு அலுத்துவிட்டது.
3 கடவுளே, எனக்காகத் தயவுசெய்து உத்தரவாதம் கொடுங்கள்.
வேறு யார் எனக்குக் கைகொடுத்து, எனக்காக உத்தரவாதம் தருவார்கள்?[k]
4 நீங்கள் அவர்களுடைய புத்தியை* மந்தமாக்கினீர்கள்.[l]
அதனால்தான் அவர்களை உயர்த்தாமல் இருக்கிறீர்கள்.
5 நண்பர்களுக்குத் தானம் செய்யப்போவதாக ஒருவன் சொல்கிறான்.
ஆனால், அவனுடைய பிள்ளைகளே மற்றவர்களிடம் கையேந்தி நிற்கிறார்கள்.
6 அவர் என்னைக் கேலிகிண்டலுக்கு ஆளாக்கிவிட்டார்.[m]
மற்றவர்கள் என் முகத்தில் காறித் துப்புகிறார்கள்.[n]
7 அழுது அழுது என் கண்கள் மங்கிவிட்டன.[o]
என் கைகாலெல்லாம் ரொம்பவே மெலிந்துவிட்டன.

16:15 *சொல் பட்டியலைப் பாருங்கள். 16:16 *வே.வா., "என் கண்களில் சாவு நிழலாடுகிறது." 16:20 *அல்லது, "நான் கண் மூடாமல் கடவுளுக்காகக் காத்திருக்கிறேன்." 17:4 *வே.வா., "பகுத்தறிவை."

அதி. 16
a 1ரா 21:27; 2ரா 6:30
b யோபு 30:19; சங் 7:5
c சங் 6:6; சங் 31:9; புல 1:16
d ஆதி 4:8, 10; சங் 72:14
e யோபு 12:4
f சங் 40:1; சங் 142:2
g யோபு 31:35
h யோபு 7:9; யோபு 14:10; பிர 12:5

அதி. 17
i சங் 88:3, 4; ஏசா 38:10
j சங் 35:16; எபி 11:36
k நீதி 17:18
l 2சா 17:14; ஏசா 6:10; மத் 11:25
m சங் 69:11, 12
n யோபு 30:9, 10
o யோபு 16:16; சங் 6:7; சங் 31:9

8 நீதிநேர்மையோடு நடப்பவர்கள் இதைப் பார்த்து அதிர்ச்சி
அடைகிறார்கள்.
கெட்டவர்களை* பார்த்து நல்லவர்கள் கொதித்துப்போகிறார்கள்.
9 நீதிமான் தன் வழியைவிட்டு விலகாமல் இருக்கிறான்.[a]
கைச்சுத்தம் உள்ளவன் பலம் அடைகிறான்.[b]
10 சரி, நீங்கள் எல்லாரும் தொடர்ந்து வாதாடிப் பாருங்கள்.
ஏனென்றால், இதுவரை நீங்கள் யாருமே ஞானமாகப் பேசியதுபோல்
எனக்குத் தெரியவில்லை.[c]
11 என் காலம் முடிந்துவிட்டது.[d]
என்னுடைய திட்டங்களும் இதயத்தின் ஆசைகளும்
சுக்குநூறாகிவிட்டன.[e]
12 நீங்கள் உண்மை பேசுவதற்குப் பதிலாகப் பொய் பேசுகிறீர்கள்.*
இருள் சூழ்ந்திருக்கும்போது, ‘வெளிச்சம் வரப்போகிறது’ என்று
சொல்கிறீர்கள்.
13 நான் கொஞ்சம் காத்திருந்தால், கல்லறை என் வீடாகிவிடும்.[f]
அந்த இருட்டில் என் படுக்கையை விரிப்பேன்.[g]
14 சவக்குழியைப்[h] பார்த்து, ‘நீதான் என் தகப்பன்!’ என்று சொல்வேன்.
புழுக்களைப் பார்த்து, ‘என் தாயே! என் சகோதரியே!’ என்று
சொல்வேன்.
15 எனக்கு எங்கே நம்பிக்கை இருக்கிறது![i]
எனக்கு நம்பிக்கை இருப்பதாக யார்தான் நினைப்பார்கள்?
16 அது* கல்லறைக்குள்# இறங்கும்.
அதோடு சேர்ந்து நானும் மண்ணுக்குள் இறங்குவேன்”[j] என்று
சொன்னார்.

18 அதற்கு சுவாகியனான பில்தாத்,[k]
2 “உன் புராணத்தை எப்போதுதான் நிறுத்தப்போகிறாய்?
கொஞ்சமாவது புரிந்துகொள்; நாங்களும் பேச வேண்டாமா?
3 எங்களை ஏன் மிருகங்களைப் பார்ப்பதுபோல் பார்க்கிறாய்?[l]
நாங்களெல்லாம் உனக்கு முட்டாள்களாக* தெரிகிறோமோ?
4 நீ கோபத்தில் உன்னையே குதறிப்போட்டாலும்,
உனக்காக இந்தப் பூமி வெறுமையாகுமா?
அல்லது, பாறைதான் அதன் இடத்தைவிட்டு நகர்ந்துபோகுமா?
5 கெட்டவனின் தீபம் அணைந்துதான் போகும்.
அவனுடைய தீ சுடர்விட்டு எரியாது.[m]
6 அவனுடைய கூடாரத்தில் வெளிச்சம் இல்லாமல்போகும்.
அவனுடைய விளக்கு அணைக்கப்படும்.
7 அவனுடைய நடையின் வேகம் குறைந்துவிடும்.
அவனுடைய திட்டங்களே அவனைக் கவிழ்த்துவிடும்.[n]

17:8 *வே.வா., “கடவுளைவிட்டு விலகியவர்களை; விசுவாசதுரோகிகளை.” **17:12** *நே.மொ., “அவர்கள் இரவைப் பகலாக்குகிறார்கள்.” **17:16** *அதாவது, “என் நம்பிக்கை.” #நே.மொ., “கல்லறையின் கதவுகளுக்குள்.” **18:3** *அல்லது, “அசுத்தமாக.”

அதி. 17
a சங் 119:165
b சங் 24:3, 4; சங் 84:5, 7
c யோபு 6:29
d யோபு 7:6; யோபு 9:25; ஏசா 38:10
e யாக் 4:13, 14
f பிர 12:5, 7
g யோபு 10:21, 22
h சங் 49:7, 9; சங் 143:7
i யோபு 7:6; யோபு 14:19; யோபு 19:10
j ஆதி 3:19; யோபு 3:19

அதி. 18
k யோபு 2:11; யோபு 8:1
l சங் 73:22
m யோபு 8:13, 14; யோபு 11:20
n யோபு 5:13

8 அவனுடைய கால்களே அவனை வலையில் சிக்க வைக்கும்.
அவன் நேராகப் போய் அதில் மாட்டிக்கொள்வான்.
9 கண்ணி அவன் குதிங்காலைக் கவ்வும்.
பொறி அவனைப் பிடிக்கும்.[a]
10 அவன் வழியில் ஒரு கயிறு மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.
அவன் பாதையில் ஒரு கண்ணி ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது.
11 சுற்றிலும் திகில் அவனை நடுநடுங்க வைக்கிறது.[b]
எங்கே போனாலும் அது அவனைத் துரத்துகிறது.
12 அவனுடைய பலம் அவனுக்குக் கைகொடுக்காது.
ஆபத்தில் மாட்டிக்கொண்டு[c] அவன் தத்தளிப்பான்.
13 படுபயங்கரமான நோய் அவனுடைய தோலைத் தின்கிறது.
அவனுடைய உறுப்புகளை அது உருக்குலைக்கிறது.
14 பாதுகாப்பான கூடாரத்தைவிட்டு அவன் வெளியேற்றப்படுகிறான்.[d]
நடுநடுங்க வைக்கும் ராஜாவிடம்* இழுத்துச் செல்லப்படுகிறான்.
15 முன்பின் தெரியாதவர்கள் அவன் கூடாரத்தில் குடியிருப்பார்கள்.
அவன் வீட்டின் மேல் கந்தகம் தூவப்படும்.[e]
16 அவனுடைய வேர்கள் காய்ந்துபோகும்.
கிளைகள் பட்டுப்போகும்.
17 அவனைப் பற்றிய நினைவுகள் மண்ணைவிட்டு நீங்கும்.
தெருவில் அவனுடைய பெயர் இல்லாமல்போகும்.
18 அவன் வெளிச்சத்திலிருந்து இருட்டுக்குத் துரத்தப்படுவான்.
வளமான தேசத்தைவிட்டு விரட்டப்படுவான்.
19 அவனுக்கு வாரிசும் இருக்காது, வம்சமும் இருக்காது.
அவனுடைய பேர் சொல்ல ஊரில்* ஆளே இருக்க மாட்டார்கள்.
20 அவனுக்கு அழிவு வரும்போது மேற்கில் உள்ளவர்கள்
அதிர்ச்சியடைவார்கள்.
கிழக்கில் உள்ளவர்கள் திகிலடைவார்கள்.
21 தப்பு செய்கிறவனின் கூடாரத்துக்கு வரும் கதி இதுதான்.
கடவுளைப் பற்றித் தெரியாதவனுக்கு வரும் நிலைமை இதுதான்" என்று
சொன்னான்.

19 அதற்கு யோபு,
2 "இன்னும் எவ்வளவு நேரம்தான் என் உயிரை வாங்குவீர்கள்?[f]
பேசிப் பேசியே என்னைக் கொல்கிறீர்களே.[g]
3 ஒரு தடவைக்குப் பத்துத் தடவை என்னைக் கேவலமாகப்
பேசிவிட்டீர்கள்.
கொஞ்சம்கூட ஈவிரக்கமில்லாமல் நடந்துகொள்கிறீர்களே, உங்களுக்கு
வெட்கமாக இல்லையா?[h]
4 அப்படியே நான் தப்பு செய்திருந்தாலும் என்ன?
அந்தப் பழியை நான்தானே சுமக்கப்போகிறேன்?

18:14 *வே.வா., "கொடூரமான சாவைச் சந்திக்க." **18:19** *வே.வா., "அவன் குடியிருக்கும் இடத்தில்."

அதி. 18
a யோபு 5:5; யோபு 22:5, 10
b யோபு 15:21; யோபு 20:25
c யோபு 15:23
d யோபு 11:20
e உபா 29:22, 23

அதி. 19
f சங் 42:10
g சங் 55:21; நீதி 12:18
h நீதி 18:24

அதி. 19
a சங் 22:2
ஆப 1:2
b லூ 18:7
c யோபு 3:23
சங் 88:8
d யோபு 13:24
e சங் 31:11
சங் 69:8
f சங் 38:11
g யோபு 31:32
h யோபு 2:9
i யோபு 17:6
சங் 88:8
j சங் 109:5

5 என்னைவிட நீங்கள்தான் ரொம்ப யோக்கியம் என்று நினைக்கிறீர்கள்.
'நீ செய்த தப்புக்குத்தான் நன்றாக அனுபவிக்கிறாய்' என்று
சொல்கிறீர்கள்.
6 ஆனால் ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள்; கடவுள்தான் எனக்கு
மோசம் செய்துவிட்டார்.
என்னை வலை விரித்துப் பிடித்துவிட்டார்.
7 'கொடுமை தாங்க முடியவில்லையே!' என்று கதறுகிறேன், ஆனால்
பதிலே இல்லை.[a]
உதவிக்காகக் கதறுகிறேன், ஆனால் நியாயம் கிடைத்த பாடில்லை.[b]
8 நான் தாண்டிப்போக முடியாதபடி அவர் என் வழியைக் கற்சுவரால்
அடைத்துவிட்டார்.
என் பாதைகளையெல்லாம் இருட்டாக்கிவிட்டார்.[c]
9 என் கௌரவத்தைப் பறித்துவிட்டார்.
என் தலையிலுள்ள கிரீடத்தை எடுத்துவிட்டார்.
10 நான் செத்தால் போதும் என்று எல்லா பக்கத்திலிருந்தும் தாக்குகிறார்.
என் நம்பிக்கையை வேரோடு பிடுங்குகிறார்.
11 கோபத்தில் என்னைப் பொசுக்குகிறார்.
எதிரிபோல் என்னைப் பார்க்கிறார்.[d]
12 அவருடைய படைகள் திரண்டு வந்து என்னை
வளைத்துக்கொள்கின்றன.
என் கூடாரத்தைச் சுற்றி முகாம்போடுகின்றன.
13 என் அண்ணன் தம்பிகளையே என்னிடம் அண்ட விடாமல்
செய்துவிட்டார்.
பழக்கமானவர்கள் என் பக்கத்தில்கூட வருவதில்லை.[e]
14 ஒட்டி உறவாடியவர்கள்* ஒதுங்கிவிட்டார்கள்.
எனக்கு நன்றாகத் தெரிந்தவர்கள்கூட என்னைச் சுத்தமாக
மறந்துவிட்டார்கள்.[f]
15 என் வீட்டு விருந்தாளிகளும்[g] வேலைக்காரிகளும் என்னை
வெளியாளாக நினைக்கிறார்கள்.
யாரோ எவரோ என்பதுபோல் பார்க்கிறார்கள்.
16 வேலைக்காரனை நான் கூப்பிட்டாலும், அவன்
கண்டுகொள்வதே இல்லை.
உதவிக்காக அவனிடம் கெஞ்சிக் கூத்தாட வேண்டியிருக்கிறது.
17 என்னுடைய மூச்சுக்காற்று பட்டால்கூட என் மனைவி ஒதுங்கிப்
போகிறாள்.[h]
என் அண்ணன் தம்பிகளே என்னை அருவருக்கிறார்கள்.
18 சின்னப் பிள்ளைகளுக்குக்கூட என்னைப் பார்த்தால் கேவலமாக
இருக்கிறது.
நான் எழுந்து நின்றால் கிண்டலாகச் சிரிக்கிறார்கள்.
19 உயிர் நண்பர்கள் என்னை உதறிவிட்டார்கள்.[i]
பாசத்துக்குரியவர்கள் என்னைப் பகைக்கிறார்கள்.[j]

19:14 * வே.வா., "என் உறவினர்கள்."

20 நான் எலும்பும் தோலுமாக ஆகிவிட்டேன்.[a]
கிட்டத்தட்ட செத்துப் பிழைத்திருக்கிறேன்.*
21 நண்பர்களே, இரக்கம் காட்டுங்கள்! தயவுசெய்து எனக்கு இரக்கம் காட்டுங்கள்!
கடவுளுடைய கை என்னைத் தாக்கிவிட்டது.[b]
22 அவரைப் போல் நீங்களும் ஏன் என்னைப் பாடாய்ப் படுத்துகிறீர்கள்?[c]
ஏன் விடாமல் தாக்கிக்கொண்டே இருக்கிறீர்கள்?[d]
23 என் வார்த்தைகள் எழுதி வைக்கப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
அதெல்லாம் ஒரு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டால் சந்தோஷப்படுவேனே!
24 என்றென்றும் அழியாதபடி அவை பாறையில் செதுக்கப்படக் கூடாதா?
இரும்பு எழுத்தாணியாலும் ஈயத்தாலும் பொறிக்கப்படக் கூடாதா?
25 என்னை விடுவிக்கிறவர்[e] உயிரோடு இருக்கிறார் என்று எனக்குத் தெரியும்.
அவர் பிற்பாடு வருவார், பூமிமேல்* எழுந்து நிற்பார்.
26 என் தோல் சிதைந்துபோன பிறகு,
உயிர் இருக்கும்போதே நான் கடவுளைப் பார்ப்பேன்.
27 நானே அவரைப் பார்ப்பேன்.
வேறொருவரின் கண்கள் அல்ல, என் கண்களே அவரைப் பார்க்கும்.[f]
ஆனாலும், இப்போது என் மனம் துடியாய்த் துடிக்கிறது.
28 'நாங்கள் எப்போது உன்னைப் பாடாய்ப் படுத்தினோம்?'[g] என்று கேட்கிறீர்கள்.
பிரச்சினைக்குக் காரணமே நான்தான் என்பதுபோல் பேசுகிறீர்களே.
29 நீங்கள் வாளுக்குப் பயப்படுங்கள்.[h]
தப்பு செய்கிறவர்களை அது தண்டிக்கும்.
நீதிபதி ஒருவர் இருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள்!"[i] என்று சொன்னார்.

20 அப்போது, நாகமாத்தியனான சோப்பார்,[j]
2 "நீ பேசுவதைக் கேட்டு என் இரத்தம் கொதிக்கிறது.
என் மனதில் இருப்பதையெல்லாம் சொல்ல என் வாய் துடிக்கிறது.
3 குத்தலாகப் பேசி என்னைக் கேவலப்படுத்திவிட்டாய்.
என் புத்தி* இப்போது என்னைப் பேச வைக்கிறது.
4 நான் சொல்லப்போவது ஒன்றும் உனக்குத் தெரியாத விஷயம் இல்லை.
மனுஷன் படைக்கப்பட்ட காலத்திலிருந்தே எல்லாருக்கும் தெரிந்த உண்மைதான்.[k]
5 பொல்லாதவனுடைய கூத்தும் கும்மாளமும் கொஞ்ச நாளுக்குத்தான்.
கெட்டவனின்* ஆட்டம்பாட்டமெல்லாம் நொடி நேரத்துக்குத்தான்.[l]

19:20 *நே.மொ., "என் பற்களின் மேலுள்ள தோல்தான் தப்பியிருக்கிறது." 19:25 *நே.மொ., "மண்மேல்." 20:3 *வே.வா., "புரிந்துகொள்ளும் திறன்." 20:5 *வே.வா., "கடவுளைவிட்டு விலகியவனின்; விசுவாசதுரோகியின்."

அதி. 19
a யோபு 30:30; சங் 102:5
b யோபு 1:10-12; சங் 38:2
c யோபு 2:9, 10
d சங் 69:26
e யோபு 14:14; சங் 19:14; சங் 69:18; சங் 103:2, 4; மத் 20:28; மாற் 10:45
f சங் 17:15
g சங் 69:26
h உபா 32:41
i சங் 58:11; மத் 7:1; ரோ 14:4; யாக் 4:12

அதி. 20
j யோபு 2:11; யோபு 11:1
k யோபு 8:8
l யோபு 8:13, 19; யோபு 21:28

அதி. 20
a யோபு 8: 13, 18
b யோபு 20:18
c யோபு 20:10

6 அவனுடைய புகழ் வானத்தைத் தொடலாம்.
அவனுடைய பெருமை மேகத்தை எட்டலாம்.
7 ஆனாலும், அவனுடைய மலத்தைப் போல அவனும் மண்ணோடு மண்ணாகிப்போவான்.
அவனுக்குப் பழக்கமானவர்கள், 'அவன் எங்கே?' என்று கேட்பார்கள்.
8 கனவைப் போல அவன் கலைந்துபோவான்; அவர்கள் தேடினாலும் அவன் கிடைக்க மாட்டான்.
ராத்திரியில் வரும் தரிசனம்போல் அவன் மறைந்துபோவான்.
9 அவனைப் பார்த்த கண்கள் இனி அவனைப் பார்க்காது.
அவன் இருந்த இடத்தில் இனி அவனைப் பார்க்க முடியாது.[a]
10 அவனுடைய பிள்ளைகள் ஏழைகளிடம் கையேந்தி நிற்பார்கள்.
மற்றவர்களிடமிருந்து பறித்துக்கொண்ட பொருள்களை அவனே திருப்பிக்கொடுப்பான்.[b]
11 அவன்* இளமைத்துடிப்போடு இருந்தாலும்,
அது அவனோடு சேர்ந்து மண்ணுக்குப் போகும்.
12 கெட்டதைச் செய்வது அவனுக்கு இனிப்பு சாப்பிடுவதுபோல் இருக்கலாம்.
அதைத் துப்புவதற்கு மனதே இல்லாமல்,
13 நாக்கின் அடியில் வைத்து,
ரசித்து ருசித்துக்கொண்டே இருக்கலாம்.
14 ஆனால் அது வயிற்றுக்குள் போனதும்,
கசப்பாக மாறி, நாகப்பாம்புகளின் விஷம்போல் ஆகிவிடும்.
15 மற்றவர்களின் சொத்துகளை அவன் விழுங்கினான்; ஆனால், விழுங்கியதையெல்லாம் வாந்தியெடுப்பான்.
கடவுள்தான் அவனை வாந்தியெடுக்க வைப்பார்.
16 நாகப்பாம்பின் விஷத்தை அவன் குடிப்பான்.
விரியன் பாம்பு அவன் உயிரைக் குடிக்கும்.
17 இனி நீரோடைகள் அவன் கண்ணில் படாது.
ஆறுபோல் ஓடும் தேனும் நெய்யும் அவனுக்குக் கிடைக்காது.
18 சேர்த்து வைத்த பொருள்களை அனுபவிக்காமலேயே திருப்பிக் கொடுப்பான்.
அவன் சம்பாதித்தவை அவனுக்குச் சந்தோஷம் தராது.[c]
19 ஏனென்றால், அவன் ஏழைகளைக் கொடுமைப்படுத்தினான், ஒதுக்கித்தள்ளினான்.
மற்றவர்களுடைய வீடுகளைப் பிடுங்கிக்கொண்டான்.
20 ஆனாலும், அவனுக்கு நிம்மதியே இருக்காது.
அவனுடைய சொத்து அவனைக் காப்பாற்றாது.
21 ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் அவன் விழுங்கிவிட்டான்.
அதனால், அவனுடைய செல்வமும் செழிப்பும் நிலைக்காது.

20:11 *நே.மொ., "அவனுடைய எலும்புகள்."

22 அவனுக்குப் பணம் வந்து குவியும்போது கவலைகளும் வந்து குவியும்.
அவனுக்கு அடுத்தடுத்து பல அசம்பாவிதங்கள் நடக்கும்.
23 அவன் வயிறு நிறைய சாப்பிடுவான்.
அப்போது, கடவுள் அவன்மேல் தன்னுடைய கோபக் கனலைக் கொட்டுவார்.
அதை அவன் வயிற்றில் கொட்டுவார்.
24 இரும்பு ஆயுதங்களுக்குப் பயந்து அவன் தப்பியோடும்போது,
செம்பு வில்லிலிருந்து பாயும் அம்புகள் அவனைத் துளைக்கும்.
25 முதுகிலிருந்து ஒரு அம்பை உருவி எடுப்பான்.
பித்தப்பையில் பாய்ந்த பளபளக்கும் அம்பைப் பிடுங்கி எடுப்பான்.
பயத்தில் குலைநடுங்கி நிற்பான்.[a]
26 அவன் சொத்துகளெல்லாம் அழிந்துவிடும்.
யாரும் பற்ற வைக்காத* நெருப்பு அவனைப் பொசுக்கிவிடும்.
அவனுடைய கூடாரத்தில் மிச்சமிருக்கிற எல்லாருக்கும் அழிவு வரும்.
27 வானம் அவனுடைய குற்றத்தை வெளிப்படுத்தும்.
பூமி அவனுக்கு எதிராகச் சாட்சி சொல்லும்.
28 கடவுள் கோபத்தைக் காட்டப்போகிற நாளில் பெருவெள்ளம் வரும்.
அது அவனுடைய வீட்டை அடித்துக்கொண்டு போகும்.
29 இதுதான் கெட்டவனுக்குக் கடவுள் கொடுக்கும் கூலி.
இதுதான் கடவுள் அவனுக்கு ஒதுக்கியிருக்கும் சொத்து” என்று சொன்னான்.

21 அதற்கு யோபு,
2 “நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்.
அப்படிக் கேட்டாலே நீங்கள் எனக்கு ஆறுதல் சொல்வதுபோல் இருக்கும்.
3 கொஞ்ச நேரம் நான் பேசுவதைப் பொறுத்துக்கொள்ளுங்கள்.
அதன் பின்பு என்னை எப்படி வேண்டுமானாலும் கேலி செய்யுங்கள்.[b]
4 ஒரு மனுஷனிடமா என் குறையைச் சொல்கிறேன்?
அப்படிச் சொல்லியிருந்தால், பொறுமை இழந்திருப்பேனே.
5 என்னை உற்றுப் பாருங்கள், அப்போது ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.
உங்கள் வாயைக் கையால் பொத்திக்கொள்வீர்கள்.
6 நடந்ததையெல்லாம் நினைக்கும்போது என் மனம் படபடக்கிறது.
உடம்பெல்லாம் நடுநடுங்குகிறது.
7 கெட்டவர்கள் ஏன் ஒழிந்துபோவதில்லை?[c]
அவர்கள் சொத்துசுகத்தோடு* ரொம்ப நாள் வாழ்கிறார்கள்.[d]
8 எப்போதும் பிள்ளைகளோடு சேர்ந்து இருக்கிறார்கள்.
பேரப்பிள்ளைகளைப் பார்க்கும் பாக்கியமும் அவர்களுக்குக் கிடைக்கிறது.
9 எந்தப் பயமும் இல்லாமல் வீட்டில் பத்திரமாக இருக்கிறார்கள்.[e]
கடவுள் அவர்களுக்குத் தண்டனை கொடுப்பதில்லை.

20:26 * வே.வா., “கிளறிவிடாத.” 21:7 * வே.வா., “செல்வாக்கோடு.”

அதி. 20
a யோபு 15:21 யோபு 18:5, 11

அதி. 21
b யோபு 16:10, 20 யோபு 17:2 எபி 11:36
c ஆப 1:3, 13
d யோபு 12:6 சங் 37:7 சங் 73:3 சங் 73:12 எரே 12:1
e சங் 73:3, 5

அதி. 21
a ஏசா 5:12
ஏசா 22:13
ஆமோ 6:4, 5
b சங் 10:4, 11
சங் 73:3, 11
c யாத் 5:2
சங் 10:4
ஓசி 13:6
d மல் 3:14
e லூ 12:19, 20
f சங் 1:1
g நீதி 13:9
நீதி 20:20
நீதி 24:20
h சங் 11:6
ஏசா 26:11
i சங் 75:8
ஏசா 51:17
எரே 25:15
வெளி 14:10
j சங் 55:23
k ஏசா 40:13, 14
ரோ 11:34
1கொ 2:16
l ஏசா 40:23

10 அவர்களுடைய காளைகள் இணைசேருவது வீணாவதில்லை.
அவர்களுடைய பசுக்களுக்கு நல்லபடியாகக் கன்றுகள் பிறக்கின்றன.*
11 அவர்களுடைய பிள்ளைகள் ஆடுகளைப் போல வெளியே துள்ளி ஓடுகிறார்கள்.
சந்தோஷத்தில் குதித்தாடுகிறார்கள்.
12 கஞ்சிராவையும் யாழையும் வைத்துக்கொண்டு பாடுகிறார்கள்.
குழல் ஓசையைக் கேட்டு சந்தோஷப்படுகிறார்கள்.[a]
13 திருப்தியாக வாழ்கிறார்கள்.
நிம்மதியாக* கல்லறைக்குப் போகிறார்கள்.
14 ஆனால் அவர்கள் உண்மைக் கடவுளிடம், 'எங்களை விட்டுவிடுங்கள்!
உங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள எங்களுக்கு விருப்பமே இல்லை' என்று சொல்கிறார்கள்.[b]
15 அதோடு, 'சர்வவல்லமையுள்ளவரா? யார் அவர்? அவரை நாங்கள் ஏன் வணங்க வேண்டும்?[c]
அவரைப் பற்றித் தெரிந்துகொள்வதால் எங்களுக்கு என்ன பிரயோஜனம்?' என்று கேட்கிறார்கள்.[d]
16 ஆனால், அவர்களுடைய செல்வச்செழிப்பு அவர்கள் கையில் இல்லை என்று எனக்குத் தெரியும்.[e]
பொல்லாதவர்களைப் போல் நான் யோசிப்பதே* கிடையாது.[f]
17 பொல்லாதவர்களுடைய வாழ்க்கை எப்போதாவது இருண்டுபோயிருக்கிறதா?*[g]
அவர்களுக்கு எப்போதாவது ஆபத்து வந்திருக்கிறதா?
கடவுள் அவர்களை எப்போதாவது கோபத்தில் அழித்திருக்கிறாரா?
18 அவர்கள் காற்றில் அடித்துச் செல்லப்படும் துரும்பைப் போலக் காணாமல்போகிறார்களா?
புயல்காற்றில் பறந்துபோகும் பதரைப் போல மறைந்துபோகிறார்களா?
19 ஒருவனுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனையை அவனுடைய மகன்களுக்குக் கடவுள் கொடுப்பார்.
ஆனால், அவனுடைய தப்பை உணர்த்துவதற்காக அவனையே கடவுள் தண்டிக்கட்டும்.[h]
20 அவனுக்கு வருகிற அழிவை அவனே பார்க்கட்டும்.
சர்வவல்லமையுள்ளவரின் கோபக் கிண்ணத்திலிருந்து அவன் குடிக்கட்டும்.[i]
21 அவன் கொஞ்சக் காலம்தான் வாழப்போகிறான்[j] என்றால்,
பிள்ளைகளைப் பற்றி அவனுக்கு என்ன கவலை?
22 கடவுளுக்கு யார் கற்றுத்தர* முடியும்?[k]
உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்குக்கூட அவர்தானே தீர்ப்பு கொடுக்கிறார்?[l]

21:10 *வே.வா., "கன்றுகள் செத்துப் பிறப்பதில்லை." **21:13** *வே.வா., "ஒரு நொடியில்." அதாவது, "வேதனைப்படாமல் சட்டென." **21:16** *வே.வா., "சதி செய்வதே." **21:17** *நே.மொ., "பொல்லாதவர்களுடைய விளக்கு எப்போதாவது அணைந்துபோயிருக்கிறதா?" **21:22** *வே.வா., "அறிவைப் புகட்ட."

23 ஒருவன் இளமைத்துடிப்போடு இருக்கும்போது,
கவலையே இல்லாமல் நிம்மதியாக இருக்கும்போது,[a]
24 தொடைகள் கொழுத்திருக்கும்போது,
எலும்புகள் பலமாக இருக்கும்போது செத்துப்போகிறான்.[b]
25 ஆனால், இன்னொருவன் நல்லது எதையுமே அனுபவிக்காமல்
வேதனைக்குமேல் வேதனைப்பட்டு சாகிறான்.
26 இவர்கள் இரண்டு பேருமே மண்ணுக்குத்தான் போகிறார்கள்.[c]
இரண்டு பேருமே புழுபுழுத்துப் போகிறார்கள்.[d]
27 இப்போது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.
எனக்குக் கெடுதல் செய்ய* திட்டம் போடுகிறீர்கள்.[e]
28 'அதிபதியின் வீடு அழிந்துவிட்டதே!
கெட்டவனின் கூடாரம் காணாமல் போய்விட்டதே!' என்று நீங்கள் சொல்கிறீர்கள்.[f]
29 ஊர் ஊராகப் பயணம் செய்பவர்களிடம் நீங்கள் கேட்கவில்லையா?
அவர்கள் சொன்னதையெல்லாம் கவனமாக யோசித்துப் பார்க்கவில்லையா?
30 அழிவு நாளில் கெட்டவனுக்கு ஒன்றும் ஆவதில்லை,
கடும் கோபத்தின் நாளில் அவன் தப்பித்துக்கொள்கிறான் என்றுதானே அவர்கள் சொல்லியிருப்பார்கள்.
31 கெட்டவன் செய்கிற தவறுகளை யாராவது தட்டிக்கேட்கிறார்களா?
அவனுக்கு யாராவது தண்டனை கொடுக்கிறார்களா?
32 அவன் கல்லறையில் அடக்கம் செய்யப்படுவான்.
அவனுடைய சமாதிக்குக் காவல் வைக்கப்படும்.
33 மண்ணுக்குள் படுத்திருப்பது அவனுக்குச் சொகுசாக இருக்கும்.[g]
அவனுக்குமுன் கணக்குவழக்கு இல்லாத ஆட்கள் அங்கே போயிருக்கிறார்கள்.[h]
அவனுக்குப் பின்னும் மனுஷர்கள் எல்லாரும் அங்குதான் போவார்கள்.
34 அதனால், ஏன் வீணாக எனக்கு ஆறுதல் சொல்கிறீர்கள்?[i]
உங்கள் பேச்சில் பொய்யும் புரட்டும் தவிர வேறொன்றும் இல்லை"
என்று சொன்னார்.

22 அதற்கு தேமானியனான எலிப்பாஸ்,[j]
2 "மனுஷனால் கடவுளுக்கு ஏதாவது பிரயோஜனம் இருக்கிறதா?
ஒருவன் விவேகமாக* இருப்பதால் அவருக்கு என்ன பயன்?[k]
3 நீ நீதிமானாக இருப்பதைப் பார்த்து சர்வவல்லமையுள்ளவர் சந்தோஷப்படுகிறாரா?
நீ உத்தமமாக இருப்பதால் அவருக்கு ஏதாவது லாபம் கிடைக்கப்போகிறதா?[l]
4 கடவுள் ஏன் உனக்குக் கஷ்டம் கொடுத்தார் என்று நினைக்கிறாய்?
அவருக்குப் பயந்து நடப்பதாலா உனக்குத் தண்டனை கொடுத்தார்?

21:27 * அல்லது, "என்னைத் தாக்க." **22:2** * வே.வா., "ஒருவனுக்கு ஆழமான புரிந்துகொள்ளுதல்."

அதி. 21
a சங் 73:12, 19; மத் 24:38, 39
b சங் 49:17; லூ 12:19, 20
c யோபு 3:19; பிர 9:2
d யோபு 24:20
e சங் 59:3
f யோபு 20:5, 7
g யோபு 3:17
h ரோ 5:12
i யோபு 16:2, 3

அதி. 22
j யோபு 2:11; யோபு 4:1
k யோபு 15:14, 15
l யோபு 2:3; யோபு 32:3

அதி. 22

a யோபு 1:8 யோபு 4:7

b யோபு 31: 19, 22

c யோபு 31: 17, 22

d யோபு 31: 25, 28

e யோபு 18:5, 9

f யோபு 4: 18, 19

5 நீ நிறைய கெட்ட காரியங்கள் செய்ததால்தானே?
அளவே இல்லாமல் அக்கிரமங்கள் செய்ததால்தானே?[a]
6 உன் சகோதரர்களிடம் அநியாயமாக அடமானம் வாங்கினாய்,
ஏழைகளின் துணிமணிகளைப் பிடுங்கிக்கொண்டாய்.[b]
7 தவித்த வாய்க்கு நீ தண்ணீர் தரவில்லை.
பசித்த வயிறுக்கு சோறு போடவில்லை.[c]
8 உன்னைப் போன்ற செல்வாக்குள்ள ஆட்கள் நிலங்களைப் பறித்துக்கொண்டார்கள்.[d]
அப்படிப்பட்டவர்கள்தான் அங்கே குடியிருக்கிறார்கள்.
9 விதவைகளை நீ வெறுங்கையோடு விரட்டிவிட்டாய்.
அப்பா இல்லாத பிள்ளைகளுக்கு* அநியாயம் செய்தாய்.
10 அதனால்தான் சுற்றிவர ஆபத்துகளில்* சிக்கியிருக்கிறாய்.[e]
எதிர்பாராத சம்பவங்களால் ஆடிப்போயிருக்கிறாய்.
11 அதனால்தான் பயங்கரமான இருட்டுக்குள் கண் தெரியாமல் கிடக்கிறாய்.
வெள்ளத்தில் தத்தளிக்கிறாய்.
12 நட்சத்திரங்கள் எவ்வளவு உயரத்தில் இருக்கிறதென்று பார்.
கடவுள் அதைவிட உயரத்தில்தானே இருக்கிறார்?
13 ஆனால் நீ, 'கடவுளுக்கு என்ன தெரியும்?
இருண்ட மேகங்கள் வழியாகப் பார்த்து அவரால் தீர்ப்பு சொல்ல முடியுமா?' என்று கேட்கிறாய்.
14 'அவர் வானத்தில்* நடக்கிறார்,
மேகங்கள் அவர் கண்களை மறைக்கின்றன' என்று சொல்கிறாய்.
15 முன்பு வாழ்ந்த கெட்டவர்களை நீ பின்பற்றுவாயா?
அவர்கள் போன பாதையில் நீயும் போவாயா?
16 வாழ வேண்டிய காலத்தில் அவர்கள் அழிந்துபோனார்களே.
வெள்ளம் அடித்துக்கொண்டு போவதுபோல் அடித்துக்கொண்டு போகப்பட்டார்களே.[f]
17 அவர்கள் உண்மைக் கடவுளை நினைக்கவே இல்லை.
'சர்வவல்லமையுள்ளவர் எங்களுக்கு என்ன செய்துவிட முடியும்?' என்று கேட்டார்கள்.
18 ஆனால், அவர்களுடைய வீட்டை நல்ல பொருள்களால் நிரப்பியது அவர்தான்.
(அப்படிப்பட்ட கெட்ட எண்ணம் எனக்கு இல்லவே இல்லை.)
19 நீதிமான்கள் அவர்களுடைய அழிவைப் பார்த்து சந்தோஷப்படுவார்கள்.
நேர்மையானவர்கள் அதைப் பார்த்து சிரிப்பார்கள்.
20 'நம் எதிரிகள் அழிந்துபோனார்கள்.
அவர்கள் விட்டுவிட்டுப் போனதெல்லாம் நெருப்பில் அழிக்கப்படும்' என்று சொல்வார்கள்.

22:9 *வே.வா., "அநாதைகளுக்கு." **22:10** *வே.வா., "கண்ணிகளில்." **22:14** *நே.மொ., "வானத்தின் வட்டத்தில்."

21 கடவுளைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள், அப்போது நிம்மதியாக இருப்பாய்.
நிறைய ஆசீர்வாதங்களை அனுபவிப்பாய்.
22 அவருடைய சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்.
அவருடைய வார்த்தைகளை இதயத்தில் வைத்துக்கொள்.[a]
23 சர்வவல்லமையுள்ளவரின் பேச்சைக் கேள்; அப்போது பழைய நிலைமைக்கு வந்துவிடுவாய்.[b]
அநியாயம் செய்வதை விட்டுவிடு.
24 நீ சேர்த்து வைத்திருக்கிற தங்கக்கட்டிகளைத் தூக்கியெறி.
ஓப்பீரின்* தங்கத்தைப்[c] பள்ளத்தாக்கிலே வீசிவிடு.
25 அப்போது, சர்வவல்லமையுள்ளவர் உனக்குத் தங்கக்கட்டிபோல் இருப்பார்.
விலைமதிப்புள்ள வெள்ளி போலவும் இருப்பார்.
26 சர்வவல்லமையுள்ளவரை வணங்குவதில்* நீ ரொம்பவே சந்தோஷப்படுவாய்.
தலைநிமிர்ந்து அவரைப் பார்ப்பாய்.
27 அவரிடம் வேண்டிக்கொள்வாய், அவர் அதைக் கேட்பார்.
நீ உன்னுடைய நேர்த்திக்கடன்களைச் செலுத்துவாய்.
28 நீ நினைப்பதெல்லாம் நடக்கும்.
உன் வாழ்க்கை பிரகாசமாகும்.
29 அகம்பாவத்துடன் பேசினால் உனக்கு அவமானம்தான் வரும்.
தாழ்மையுள்ள ஆட்களைத்தான் அவர் பாதுகாப்பார்.
30 அப்பாவிகளை அவர் விடுவிப்பார்.
உன் கைகள் சுத்தமாக இருந்தால் நிச்சயம் உன்னைக் காப்பாற்றுவார்" என்று சொன்னான்.

23 அதற்கு யோபு,
2 "நீங்கள் என்ன சொன்னாலும் சரி, எனக்காக வாதாடுவதை நிறுத்த மாட்டேன்.[d]
பெருமூச்சுவிட்டு பெருமூச்சுவிட்டு என் பலமெல்லாம் போய்விட்டது.
3 கடவுள் எங்கே இருக்கிறார் என்று தெரிந்தால் நன்றாக இருக்குமே![e]
அங்கேயே நான் போய்விடுவேனே![f]
4 என் வழக்கை அவரிடம் கொண்டுபோவேன்.
என் பக்கம் இருக்கிற நியாயத்தையெல்லாம் சொல்வேன்.
5 அவர் சொல்லும் பதிலைக் கேட்பேன்.
அவர் பேசும்போது நன்றாகக் கவனிப்பேன்.
6 மிகுந்த அதிகாரத்தோடு அவர் என்னிடம் வாதாடுவாரா?
வாதாட மாட்டார், நான் சொல்வதை நிச்சயம் கேட்பார்.[g]
7 நேர்மையானவனுக்கு அவர் நல்ல தீர்ப்பு கொடுப்பார்.
என் நீதிபதி என்னை நிரபராதி என்று சொல்வார்.

அதி. 22
a யோபு 11:13
b யோபு 8:5, 6
c 1ரா 9:28
யோபு 28:16
சங் 45:9
ஏசா 13:12

அதி. 23
d யோபு 10:1
e யோபு 13:3
யோபு 16:21
f யோபு 31:37
g சங் 22:24
ஏசா 57:16

22:24 *ஓப்பீர் என்ற இடம், உயர்தரமான தங்கத்துக்குப் பேர்போனது. **22:26** *வே.வா., "சர்வவல்லமையுள்ளவரில்."

8 ஆனால், நான் கிழக்கே போனாலும் அவர் இல்லை.
மேற்கே போனாலும் அவர் இல்லை.
9 அவர் இடது பக்கம் வேலை செய்யும்போது அவரை என்னால் பார்க்க முடிவதில்லை.
அவர் வலது பக்கம் திரும்பும்போதும் என்னால் பார்க்க முடிவதில்லை.
10 ஆனாலும், நான் எந்த வழியில் போகிறேன் என்று அவருக்குத் தெரியும்.[a]
அவர் என்னைப் புடமிட்டுப் பார்த்தபின் நான் சுத்தமான தங்கம்போல் ஆவேன்.[b]
11 அவருடைய கால்தடத்தை நெருக்கமாகப் பின்பற்றி நடந்தேன்.
அவருடைய வழியைவிட்டுக் கொஞ்சமும் விலகவில்லை.[c]
12 அவருடைய கட்டளைகளை நான் மீறியதே இல்லை.
அவர் என்னிடம் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே அவருடைய வார்த்தையைப் பொக்கிஷமாக மதித்தேன்.[d]
13 அவர் ஒரு முடிவெடுத்தால் அதை யாரால் மாற்ற முடியும்?[e]
அவர் ஒன்றைச் செய்ய நினைத்தால் கண்டிப்பாக அதைச் செய்வார்.[f]
14 என் வாழ்க்கையில் செய்ய நினைத்திருப்பதையும் செய்து முடிப்பார்.
இதுபோல் இன்னும் நிறைய செய்யப்போகிறார்.
15 அதனால்தான், கவலையாக இருக்கிறேன்.
அவரைப் பற்றி நினைத்தாலே எனக்குப் பயம் அதிகமாகிறது.
16 கடவுள் என்னை ஒரு கோழையாக்கிவிட்டார்.
சர்வவல்லமையுள்ளவர் என்னை நடுங்க வைத்துவிட்டார்.
17 இருள் என்னைச் சூழ்ந்துகொண்டது, என் வாழ்க்கையே இருண்டுவிட்டது.
ஆனாலும், நான் பேசாமல் இருக்க மாட்டேன்" என்று சொன்னார்.

24 பின்பு அவர்,
"சர்வவல்லமையுள்ளவர் தண்டனைத் தீர்ப்பு நாளை ஏன் குறிக்காமல் இருக்கிறார்?[g]
அவரைப் பற்றித் தெரிந்தவர்கள் அந்த நாளை ஏன் உணராமல் இருக்கிறார்கள்?
2 அவர்கள் மற்றவர்களுடைய நிலத்தின் எல்லைக் குறியைத் தள்ளிவைக்கிறார்கள்.[h]
ஆட்டு மந்தைகளைத் திருடி தங்களுடைய மேய்ச்சல் நிலத்துக்குக் கொண்டுபோகிறார்கள்.
3 அப்பா இல்லாத பிள்ளையின் கழுதையை ஓட்டிக்கொண்டு போகிறார்கள்.
விதவையின் காளையை அடமானமாகப் பிடுங்கிக்கொள்கிறார்கள்.[i]
4 ஏழைகளைத் தெருவில்கூட நடமாட விடுவதில்லை.
ஆதரவற்றவர்களைப் பயத்தில் ஓடி ஒளிய வைக்கிறார்கள்.[j]
5 காட்டுக் கழுதைகள்[k] உணவுக்காக வனாந்தரத்தில் அலைவது போல ஏழைகளும் அலைகிறார்கள்.
பிள்ளைகளுக்காக உணவு தேடி பாலைவனத்தில் சுற்றித்திரிகிறார்கள்.

அதி. 23
a யோபு 1:8; சங் 1:6; சங் 139:1
b யோபு 31:6; சங் 17:3
c சங் 18:21; சங் 44:18
d சங் 119:11, 127; எரே 15:16
e ரோ 9:19
f எண் 23:19; சங் 135:6; ஏசா 14:24; ஏசா 46:10

அதி. 24
g ஆப 1:2
h உபா 19:14; உபா 27:17; நீதி 23:10; ஓசி 5:10
i உபா 24:17
j சங் 109:16; நீதி 22:16; ஏசா 10:1, 2; யாக் 5:4
k ஏசா 32:14; எரே 14:6

6 அவர்கள் வேறொருவரின் வயலில் அறுவடை செய்கிறார்கள்.*
கெட்டவனின் திராட்சைத் தோட்டத்தில் பழங்களைப்
பொறுக்குகிறார்கள்.
7 உடை இல்லாததால் ராத்திரியில் வெறும் உடம்போடு
படுத்துக்கொள்கிறார்கள்.[a]
குளிரில் போர்த்திக்கொள்ள அவர்களிடம் எதுவும் இல்லை.
8 மலைமேல் பெய்யும் மழையில் தொப்பலாக நனைந்துவிடுகிறார்கள்.
ஒதுங்க இடமில்லாமல் பாறைகளை ஒட்டி நிற்கிறார்கள்.
9 கெட்டவர்கள், விதவைத் தாயிடம் பால் குடித்துக்கொண்டிருக்கிற
குழந்தையைப் பறித்துக்கொண்டு போகிறார்கள்.[b]
ஏழைகளின் துணிமணிகளை அடமானமாக எடுத்துக்கொள்கிறார்கள்.[c]
10 அவர்களை வெறும் உடம்போடு அலைய விடுகிறார்கள்.
பசியோடு கதிர்க் கட்டுகளைச் சுமக்க வைக்கிறார்கள்.
11 மதில்கள் சூழ்ந்த திராட்சைத் தோட்டங்களிலே ஏழைகள்
உச்சி வெயிலில் பாடுபடுகிறார்கள்.*
திராட்சரச ஆலைகளில் கால்வலிக்க திராட்சைகளை மிதிக்கிறார்கள்,
ஆனாலும் தாகத்தில் தவிக்கிறார்கள்.[d]
12 சாகக் கிடப்பவர்கள் நகரத்தில் முனகிக்கொண்டிருக்கிறார்கள்.
படுகாயம் அடைந்தவர்கள் உதவிக்காகக் கதறுகிறார்கள்.[e]
ஆனால், கடவுள் அதைக் கண்டுகொள்வதே இல்லை.*
13 வெளிச்சத்தை வெறுக்கும் ஆட்கள் சிலர் இருக்கிறார்கள்.[f]
அதன் வழிகளை அவர்கள் புரிந்துகொள்வதில்லை.
அதன் பாதைகளில் நடப்பதுமில்லை.
14 கொலைகாரன் விடியற்காலையில் எழுந்திருக்கிறான்.
ஆதரவற்றவர்களையும் ஏழைகளையும் கொலை செய்கிறான்.[g]
ராத்திரியில் திருடுகிறான்.
15 மனைவிக்குத் துரோகம் செய்பவன் இருட்டுவதற்காகக்
காத்திருக்கிறான்.[h]
‘யாரும் என்னைப் பார்க்க மாட்டார்கள்’ என்று நினைக்கிறான்.[i]
தன்னுடைய முகத்தையும் மூடிக்கொள்கிறான்.
16 அவர்கள் ராத்திரியில் வீடுகளை உடைத்து உள்ளே நுழைகிறார்கள்.
பகலில் தங்கள் வீட்டில் பதுங்கிக்கொள்கிறார்கள்.
வெளிச்சத்தில் அவர்கள் தலைகாட்டுவதில்லை.[j]
17 மற்றவர்கள் ராத்திரிக்குப் பயப்படுவதுபோல் அவர்கள் பகலுக்குப்
பயப்படுகிறார்கள்.
ஆனால், ராத்திரி நேர திகில்களுக்கு அவர்கள்
பழக்கப்பட்டிருக்கிறார்கள்.
18 வெள்ளத்தில் அவர்கள் வேகமாக அடித்துச் செல்லப்படுவார்கள்.
அவர்களுடைய நிலம் சபிக்கப்படும்.[k]

24:6 *அல்லது, “மிருகங்களுக்காகப் புல்லை அறுக்கிறார்கள்.” **24:11** *அல்லது, “மதில்கள் சூழ்ந்த இடத்தில் எண்ணெயைப் பிழிந்தெடுக்கிறார்கள்.” **24:12** *அல்லது, “அதற்காகக் கடவுள் யாரையும் குற்றப்படுத்துவதே இல்லை.”

அதி. 24
a யாத் 22:26, 27; உபா 24:13
b 2ரா 4:1
c யாத் 22:26, 27; உபா 24:13
d எரே 22:13; யாக் 5:4
e பிர 4:1
f யோவா 3:19
g சங் 10:4, 8
h நீதி 7:8-10
i 2சா 12:9, 12; சங் 94:3, 7; நீதி 30:20
j யோவா 3:20
k உபா 28:15, 16; நீதி 3:33

அவர்களுடைய திராட்சைத் தோட்டத்துக்கு அவர்கள் திரும்பிவர
மாட்டார்கள்.
19 வறட்சியிலும் வெயிலிலும் பனி மறைந்துவிடுவது போல,
கெட்டவன் கல்லறையில் மறைந்துவிடுவான்.[a]
20 அவனைப் பெற்றவள் அவனை மறந்துவிடுவாள். புழுக்கள் அவனைத்
தின்றுவிடும்.
அவனை யாரும் நினைத்துப் பார்க்க மாட்டார்கள்.[b]
அந்த அக்கிரமக்காரன் மரத்தைப் போல் வெட்டிச் சாய்க்கப்படுவான்.
21 ஏனென்றால், குழந்தையில்லாத பெண்ணிடம் அவன் கேவலமாக
நடந்துகொள்கிறான்.
விதவையைக் கொடுமைப்படுத்துகிறான்.
22 பலமுள்ளவனைக் கடவுள் தன்னுடைய பலத்தால் அழிப்பார்.
அவன் உயர்ந்த நிலையை அடைந்தாலும் அவனுடைய உயிருக்கு
உத்தரவாதம் இல்லை.
23 கடவுள் அவனைத் தைரியத்தோடும் பாதுகாப்போடும் வாழ விடுகிறார்.[c]
ஆனால், அவன் செய்வதையெல்லாம் பார்த்துக்கொண்டுதான்
இருக்கிறார்.[d]
24 அவன் கொஞ்சக் காலத்துக்கு உயர்ந்த நிலையில் இருந்தாலும், பின்பு
காணாமல் போய்விடுவான்.[e]
அவன் தாழ்த்தப்படுவான்,[f] மற்ற எல்லாரையும் போலச்
செத்துப்போவான்.
கதிர்கள் வெட்டப்படுவது போல வெட்டப்படுவான்.
25 இதெல்லாம் பொய் என்று யாராவது சொல்ல முடியுமா?
நான் சொல்வதை யாராவது மறுக்க முடியுமா?" என்றார்.

25 அதற்கு சுவாகியனான பில்தாத்,[g]
2 "கடவுளிடம் அரசாட்சியும் மகா சக்தியும் இருக்கிறது.
அவர் பரலோகத்தில் சமாதானத்தை ஏற்படுத்துகிறார்.
3 அவருடைய படைகளை எண்ண முடியுமா?
அவருடைய வெளிச்சம் யார்மேல் உதிக்காமல் இருக்கிறது?
4 அப்பேர்ப்பட்ட கடவுளுக்குமுன் அற்ப மனுஷன் நீதிமானாக இருக்க
முடியுமா?[h]
பெண்ணின் வயிற்றில் பிறந்தவன் குற்றமற்றவனாக* இருக்க முடியுமா?[i]
5 அவருடைய கண்களுக்கு நிலவுகூட பிரகாசமாக இல்லை.
நட்சத்திரங்களும் தூய்மையாக இல்லை.
6 அப்படியிருக்கும்போது, சாதாரண மனுஷன் எந்த மூலைக்கு!
அவன் அவருக்குமுன் ஒரு சின்ன புழுவைப் போலத்தானே
இருக்கிறான்!" என்று சொன்னான்.

26 அதற்கு யோபு,
2 "சோர்ந்துபோனவனுக்கு ரொம்பவே உதவி செய்துவிட்டீர்கள்!
சக்தி இல்லாமல் கிடந்தவனை நன்றாகவே தூக்கி நிறுத்திவிட்டீர்கள்![j]

25:4 * வே.வா., "சுத்தமானவனாக."

அதி. 24
a சங் 49:13, 14; சங் 55:15; லூ 12:20
b நீதி 10:7; பிர 8:10; பிர 9:5
c பிர 8:11; ஏசா 56:12; லூ 12:19
d சங் 11:4; நீதி 5:21; நீதி 15:3
e சங் 37:10; சங் 92:7; யாக் 1:11
f பிர 8:12, 13

அதி. 25
g யோபு 2:11; யோபு 8:1
h யோபு 4:17, 18; யோபு 22:3
i யோபு 15:14, 15

அதி. 26
j யோபு 16:2, 3

3 புத்தி* இல்லாதவனுக்குப் பெரிதாகப் புத்தி சொல்லிவிட்டீர்கள்![a]
நீங்கள் பெரிய ஞானி என்று காட்டிவிட்டீர்கள்!
4 யாரைப் பார்த்துப் பேசுகிறீர்கள்?
இப்படியெல்லாம் பேச யார் உங்களைத் தூண்டிவிட்டது?
5 செத்துக் கிடக்கிறவர்கள்* கடவுளுக்கு முன்னால் நடுங்குகிறார்கள்.
அவர்கள் கடலையும் கடல் பிராணிகளையும்விட கீழ்மட்டத்தில் இருக்கிறார்கள்.
6 கல்லறை அவர்முன் திறந்தே இருக்கிறது.[b]
புதைகுழி மூடப்படாமல் கிடக்கிறது.
7 வெறுமையான இடத்தில் அவர் வானத்தை* விரித்தார்.[c]
பூமியை அந்தரத்தில் தொங்கவிட்டார்.
8 மேகத்தில் தண்ணீரைக் கட்டி வைக்கிறார்.[d]
அதன் எடையால் மேகம் கிழிவதில்லை.
9 அவருடைய சிம்மாசனத்தை மறைக்கிறார்.
மேகத்தால் அதை மூடுகிறார்.[e]
10 கடலும் வானமும் தொடுவதுபோல் ஒரு எல்லைக்கோட்டைப் போட்டிருக்கிறார்.[f]
வெளிச்சத்துக்கும் இருட்டுக்கும் ஒரு எல்லையைக் குறித்திருக்கிறார்.
11 வானத்தின் தூண்கள் அதிர்கின்றன.
அவர் அதட்டும்போது அவை நடுங்குகின்றன.
12 அவருடைய சக்தியால் கடலைக் கொந்தளிக்க வைக்கிறார்.[g]
அவருடைய புத்தியால்* ராட்சதக் கடல் பிராணியை# நொறுக்குகிறார்.[h]
13 வானத்திலுள்ள மேகங்களை அவருடைய மூச்சுக்காற்றால்* கலைக்கிறார்.
நழுவி# செல்லும் பாம்பை அவருடைய கையால் குத்திக் கொல்கிறார்.
14 இவையெல்லாம் அவருடைய வழிகளின் ஓரங்கள்தான்![i]
அவரைப் பற்றி நம் காதில் விழுந்திருப்பதெல்லாம் ரொம்பவே லேசான சத்தம்தான்!
அப்படியிருக்கும்போது, அவர் உண்டாக்குகிற மாபெரும் இடிமுழக்கத்தை யார்தான் புரிந்துகொள்ள முடியும்?”[j] என்று சொன்னார்.

27 பின்பு யோபு தன்னுடைய பேச்சைத் தொடர்ந்தார். அவர் அவர்களிடம்,
2 “எனக்கு நியாயம் செய்யாத கடவுள்மேல்[k] ஆணையாகச் சொல்கிறேன்,*
என் வாழ்க்கையைக் கசப்பாக்கிவிட்ட சர்வவல்லமையுள்ளவர்மேல் சத்தியமாகச் சொல்கிறேன்,[l]

26:3 *வே.வா., “ஞானம்.” **26:5** *வே.வா., “செத்து செயலிழந்து போனவர்கள்.” **26:7** *நே.மொ., “வடக்குப் பகுதியை.” **26:12** *வே.வா., “புரிந்து கொள்ளுதலால்.” #நே.மொ., “ராகாபை.” **26:13** *வே.வா., “அவருடைய காற்றை அனுப்பி.” #வே.வா, “நெளிந்து.” **27:2** *வே.வா., “கடவுள் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.”

அதி. 26
a யோபு 12:2; யோபு 17:10
b சங் 139:8; எபி 4:13
c யோபு 9:8; சங் 104:2; ஏசா 42:5
d நீதி 30:4; பிர 11:3
e சங் 97:2
f நீதி 8:27; எரே 5:22
g சங் 74:13; ஏசா 51:15
h யோபு 9:13
i சங் 92:5; பிர 3:11; ஏசா 55:9
j யோபு 37:5

அதி. 27
k யோபு 34:5
l ரூ 1:20; 2ரா 4:27

அதி. 27
a ஆதி 2:7
ஏசா 42:5
அப் 17:25
b யோபு 22:1, 5
நீதி 27:11
c யோபு 2:3
d யோபு 13:15, 16
யோபு 36:13
e யோபு 35:12
சங் 18:37, 41
நீதி 28:9
எரே 11:11
யாக் 4:3
f சங் 11:6
பிர 8:13
மல் 3:5
g எஸ்தர் 9:7-10
ஓசி 9:13
h நீதி 13:22
நீதி 28:8
பிர 2:26

3 நான் உயிரோடு இருக்கிற வரைக்கும்,
கடவுள் கொடுத்த உயிர்மூச்சு எனக்குள் இருக்கிற வரைக்கும்,[a]
4 அநியாயமாக எதையும் பேச மாட்டேன்.
பொய் சொல்ல மாட்டேன்.
5 உங்களையெல்லாம் நீதிமான்கள் என்று சொல்ல எனக்கு வாயே வராது.
சாகும்வரை நான் என்னுடைய உத்தமத்தை விட மாட்டேன்.*[b]
6 நான் எப்போதும் நீதியாக நடந்துகொள்வேன், ஒருபோதும் அநியாயம் செய்ய மாட்டேன்.[c]
உயிரோடு இருக்கும்வரை என் உள்ளம் என்னை உறுத்தாது.
7 என் எதிரிகள் பொல்லாதவர்களைப் போல நாசமாகட்டும்.
என்னைத் தாக்குகிறவர்கள் அநியாயம் செய்கிறவர்களைப் போல ஒழிந்துபோகட்டும்.
8 கெட்டவனை* அவர் அழித்துவிடுவார்.
அவனுக்கு இனி எந்த நம்பிக்கையும் இருக்காது.[d]
9 கஷ்டத்தில் அவன் கதறும்போது
கடவுள் கேட்பாரா?[e]
10 அப்படிப்பட்டவன் சர்வவல்லமையுள்ளவரை வணங்குவதில்* சந்தோஷப்படுவானா?
எப்போதும் அவரிடம் ஜெபம் செய்வானா?
11 கடவுள் எவ்வளவு வல்லமை உள்ளவர் என்று* நான் உங்களுக்குச் சொல்லித்தருவேன்.
சர்வவல்லமையுள்ளவரைப் பற்றி எதையும் மறைக்காமல் சொல்வேன்.
12 தரிசனங்களைப் பார்த்ததாக நீங்கள் எல்லாரும் சொல்கிறீர்கள்.
ஆனால், நீங்கள் சொல்வது எல்லாமே முட்டாள்தனமாக இருக்கிறதே!
13 கெட்டவனுக்குக் கடவுள் என்ன கொடுக்கப்போகிறார் தெரியுமா?[f]
கொடுமை செய்கிறவனுக்கு சர்வவல்லமையுள்ளவர் என்ன செய்யப்போகிறார் தெரியுமா?
14 அவனுக்கு நிறைய மகன்கள் பிறந்தாலும் அவர்கள் வாளால் சாவார்கள்.[g]
அவனுடைய பிள்ளைகள் பசியில் தவிப்பார்கள்.
15 அவனுக்குப் பின்பு உயிரோடு இருக்கிறவர்கள் பயங்கரமான வியாதியால் செத்துப்போவார்கள்.
அவர்களுடைய மனைவிகள் அவர்களுக்காக அழ மாட்டார்கள்.
16 வெள்ளியை அவன் ஏராளமாக* குவித்து வைத்தாலும்,
நல்ல துணிமணிகளை நிறைய# சேர்த்து வைத்தாலும்,
17 அவன் சேர்த்து வைத்ததையெல்லாம்
நீதிமான்கள்தான் உடுத்திக்கொள்வார்கள்.[h]

27:5 *வே.வா., "நான் கடவுளுக்கு உண்மையாக இருப்பேன்." **27:8** *வே.வா., "கடவுளைவிட்டு விலகியவனை; விசுவாசதுரோகியை." **27:10** *வே.வா., "சர்வவல்லமையுள்ளவரில்." **27:11** *அல்லது, "கடவுளுடைய உதவியால்." **27:16** *நே.மொ., "மண்ணைப் போல்." #நே.மொ., "களிமண்ணைப் போல்."

அவனுடைய வெள்ளியைப் பழிபாவம் இல்லாதவர்கள்தான்
அனுபவிப்பார்கள்.
18 அவன் கட்டுகிற வீடு ஒரு பூச்சியின்* கூட்டைப் போலவும்,
வயலைக் காவல்காப்பவனுடைய பந்தல் போலவும்[a] உறுதியில்லாமல்
இருக்கும்.
19 அவன் பணக்காரனாகத் தூங்கப் போனாலும், சொத்துகள் சேர்த்திருக்க
மாட்டான்.
அவன் கண்திறந்து பார்க்கும்போது ஒன்றுமே இருக்காது.
20 வெள்ளத்தில் மூழ்குவது போல அவன் பயத்தில் மூழ்குவான்.
ராத்திரியில் புயல்காற்று அவனை அடித்துக்கொண்டு போய்விடும்.[b]
21 கிழக்குக் காற்று அவனை இழுத்துக்கொண்டு போய்விடும்.
அவனுடைய இடத்திலிருந்து அவனை அடித்துக்கொண்டு
போய்விடும், அவன் இல்லாமல்போவான்.[c]
22 அதனிடமிருந்து தப்பிக்க அவன் தலைதெறிக்க ஓடினாலும்,[d]
ஈவிரக்கமில்லாமல் அது அவனை வாரிக்கொள்ளும்.[e]
23 அது அவனைப் பார்த்துக் கைதட்டிச் சிரிக்கும்.
அதன் இடத்திலிருந்து அவனைப் பார்த்துக் கிண்டலாக விசில்
அடிக்கும்"*[f] என்று சொன்னார்.

28 பின்பு அவர்,
"வெள்ளியைத் தோண்டி எடுக்க ஒரு இடம் இருக்கிறது.
தங்கத்தைப் புடமிடவும் ஒரு இடம் இருக்கிறது.[g]
2 மனுஷன் மண்ணிலிருந்து இரும்பை எடுக்கிறான்.
பாறையிலிருந்து செம்பை உருக்கி எடுக்கிறான்.[h]
3 அதற்காக நிலத்துக்கு அடியிலுள்ள இருட்டையும்
வெளிச்சமாக்குகிறான்.
கும்மிருட்டுக்குள் எவ்வளவு தூரம் இறங்க முடியுமோ அவ்வளவு
தூரம் இறங்குகிறான்.
விலைமதிப்புள்ள பொருள்களைத் தேடுகிறான்.
4 ஜனங்கள் குடியிருக்கிற இடத்தைவிட்டு ரொம்பத் தூரத்தில் சுரங்கம்
தோண்டுகிறான்.
மனுஷ நடமாட்டமே இல்லாமல்போன இடத்தில் தோண்டுகிறான்.
சிலர் கயிற்றில் தொங்கிக்கொண்டு கீழே இறங்கி வேலை செய்கிறார்கள்.
5 நிலத்துக்கு மேல் பயிர் விளைகிறது.
நிலத்துக்கு அடியிலோ, தீ வைத்ததுபோல் எல்லாம் தாறுமாறாகிறது.*
6 அங்கே இருக்கிற பாறைகளில் நீலமணிக் கல் கிடைக்கிறது.
அங்கே இருக்கிற மண்ணில் தங்கம் கலந்திருக்கிறது.
7 அந்தச் சுரங்கப் பாதை எந்தக் கழுகின் கண்ணுக்கும் தெரியாது.
கறுப்புப் பருந்தும் அதைப் பார்த்தது கிடையாது.

27:18 *நே.மொ., "அந்துப்பூச்சியின்." **27:23** *அல்லது, "அவனைப் பார்த்து அவர்கள் கைதட்டிச் சிரிப்பார்கள், அவர்களுடைய இடத்திலிருந்து விசில் அடிப்பார்கள்."
28:5 *அநேகமாக, சுரங்க வேலையைக் குறிக்கலாம்.

அதி. 27
a ஏசா 1:8, புல 2:6
b சங் 73:3, 19
c மத் 7:26, 27
d ஏசா 10:3, ஆமோ 2:14
e சங் 83:15
f புல 2:15

அதி. 28
g நீதி 17:3, மல் 3:3
h உபா 8:7, 9

8 கொடிய மிருகங்கள் அங்கே நடமாடியதில்லை.
இளம் சிங்கம் அங்கே சுற்றித் திரிந்ததில்லை.
9 கெட்டியான பாறையை மனுஷன் உடைக்கிறான்.
மலைகளைப் புரட்டிப் போடுகிறான்.
10 பாறையில் வாய்க்கால்களை வெட்டுகிறான்.[a]
விலைமதிப்புள்ள பொருள்களைப் பார்க்கிறான்.
11 நிலத்தடி நீரோடைகளுக்கு அணை போடுகிறான்.
மறைந்து கிடப்பதை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகிறான்.
12 ஆனால், ஞானத்தை எங்கே போய்க் கண்டுபிடிப்பது?[b]
புத்தி* இருக்கிற இடத்தை எங்கே போய்த் தேடுவது?[c]
13 அதன் மதிப்பு எந்த மனுஷனுக்கும் தெரியாது.[d]
இந்த உலகத்தில் எங்கேயும் அதைக் கண்டுபிடிக்க முடியாது.
14 ‘அது எனக்குள்ளே இல்லை’ என்று ஆழ்கடல் சொல்கிறது.
‘அது என்னிடம் இல்லை’ என்று பெருங்கடலும் சொல்கிறது.[e]
15 சுத்தமான தங்கத்தைக் கொடுத்து அதை வாங்க முடியாது.
எவ்வளவு வெள்ளி கொடுத்தாலும் அது கிடைக்காது.[f]
16 ஓப்பீரின்* தங்கத்தைக் கொடுத்து அதை வாங்க முடியாது.[g]
அபூர்வமாகக் கிடைக்கிற கோமேதகத்தையும் நீலமணிக் கல்லையும்
கொடுத்தால்கூட அது கிடைக்காது.
17 தங்கமும் விலை உயர்ந்த கண்ணாடியும் அதன் பக்கத்தில் வர முடியாது.
சொக்கத்தங்கத்தில் செய்த பாத்திரத்தைக் கொடுத்தாலும் அது
கிடைக்காது.[h]
18 பவளமும் படிகக்கல்லும் அதன் பக்கத்தில் நெருங்க முடியாது.[i]
பை நிறைய இருக்கிற முத்துக்களைவிட ஞானம் ரொம்பவே
மதிப்புள்ளது.
19 எத்தியோப்பியாவின்* புஷ்பராகக் கல்லும்[j] அதற்குச் சமமாகாது.
சுத்தமான தங்கத்தைக் கொடுத்தாலும் அதை வாங்க முடியாது.
20 அப்படியென்றால், ஞானம் எங்கேதான் இருக்கிறது?
புத்தி* எங்கிருந்துதான் கிடைக்கிறது?[k]
21 எல்லா உயிர்களின் கண்ணுக்கும் அது மறைவாக இருக்கிறது.[l]
வானத்தில் பறக்கிற பறவைகளாலும் அதைப் பார்க்க முடியாது.
22 ‘அதைப் பற்றி ஏதோ கொஞ்சம் கேள்விப்பட்டிருக்கிறோம்’
என்று கல்லறையும்* சாவும் சொல்கின்றன.
23 அதை எப்படிக் கண்டுபிடிக்கலாம் என்று கடவுளுக்கு மட்டும்தான்
தெரியும்.
அது எங்கே இருக்கிறது என்று அவருக்கு மட்டும்தான் தெரியும்.[m]
24 அவருடைய கண் பூமி முழுவதையும் பார்க்கிறது.
வானத்துக்குக் கீழே இருக்கிற எல்லாவற்றையும் அவர் கவனிக்கிறார்.[n]

அதி. 28
a 2ரா 20:20; 2நா 32:30
b நீதி 2:6; யாக் 1:5
c யோபு 28:28
d நீதி 3:15
e ரோ 11:34
f நீதி 3:13, 14
g ஏசா 13:12
h நீதி 16:16
i நீதி 8:11; நீதி 20:15
j யாத் 28:15, 17
k யோபு 28:12
l பிர 8:17; 1கொ 2:8, 11
m யாக் 1:5
n நீதி 15:3; சக 4:10; 1பே 3:12

28:12, 20 * வே.வா., “புரிந்துகொள்ளுதல்.” **28:16** * ஓப்பீர் என்ற இடம், உயர்தரமான தங்கத்துக்குப் பேர்போனது. **28:19** * எபிரெயுவில், “கூஷின்.” **28:22** * நே.மொ., “அழிவும்.”

25 அவர் காற்றுக்குப் பலத்தைக் கொடுத்தபோது,[a]
தண்ணீரை அளந்து வைத்தபோது,[b]
26 மழைக்குச் சட்டம் போட்டபோது,[c]
மழைமேகத்துக்கும் இடிமுழக்கத்துக்கும் வழியை உண்டாக்கியபோது,[d]
27 அவர் ஞானத்தைப் பார்த்தார், அதை விளக்கிக் காட்டினார்.
அதை நிலைநிறுத்தினார், அதைச் சீர்தூக்கிப் பார்த்தார்.
28 அவர் மனுஷனிடம்,
'யெகோவாவுக்குப் பயப்படுவதுதான் ஞானம்.[e]
கெட்ட காரியங்களை விட்டு விலகுவதுதான் புத்திக்கு* அடையாளம்'[f]
என்று சொன்னார்" என்றார்.

29 பின்பு யோபு தன் பேச்சைத் தொடர்ந்தார். அவர் அவர்களிடம்,
2 "நான் முன்புபோல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
அப்போதெல்லாம் கடவுள் என்னை நன்றாகக் கவனித்துக்கொண்டார்.
3 அவருடைய வெளிச்சம் என்மேல் பிரகாசித்தது.
அதனால், இருட்டிலும் என்னால் நடக்க முடிந்தது.[g]
4 நான் எந்தக் குறையும் இல்லாமல் சந்தோஷமாக வாழ்ந்தேன்.
கடவுளோடு எனக்கிருந்த நட்பினால் என் கூடாரம்
ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது.[h]
5 சர்வவல்லமையுள்ளவர் எனக்குத் துணையாக இருந்தார்.
என் பிள்ளைகள்* என்னைச் சுற்றி இருந்தார்கள்.
6 நான் நடந்துபோன பாதைகளில் நெய் ஓடியது.
எனக்காகப் பாறைகளிலிருந்து எண்ணெய் ஆறாகப் பாய்ந்து வந்தது.[i]
7 நான் நகரவாசலுக்குப்[j] போய்,
பொது சதுக்கத்தில் உட்கார்ந்தபோது,[k]
8 வயதில் சிறியவர்கள் மரியாதையோடு ஒதுங்கி நின்றார்கள்.
வயதில் பெரியவர்களும் எழுந்து நின்றார்கள்.[l]
9 அதிகாரிகள் என் முன்னால் பேசக்கூடத் தயங்கினார்கள்.
கையால் தங்கள் வாயைப் பொத்திக்கொண்டார்கள்.
10 பெரிய மனுஷர்களுடைய குரல் அடங்கிப்போனது.
அவர்களுடைய நாக்கு மேல்வாயோடு ஒட்டிக்கொண்டது.
11 நான் பேசியதைக் கேட்டவர்கள் என்னைப் புகழ்ந்து பாராட்டினார்கள்.
என்னைப் பார்த்தவர்கள் எனக்கு ஆதரவாகப் பேசினார்கள்.
12 ஏனென்றால், உதவிக்காகக் கதறிய ஏழைகளை நான்
காப்பாற்றினேன்.[m]
அப்பா இல்லாத பிள்ளைகளுக்கும் ஆதரவற்ற ஜனங்களுக்கும்
உதவினேன்.[n]
13 சாகக் கிடந்தவர்கள் நன்றியோடு என்னை வாழ்த்தினார்கள்.[o]
விதவைகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தேன்.[p]
14 நீதியை உடைபோல் உடுத்தியிருந்தேன்.
என் நியாயம் மேலாடை போலவும் தலைப்பாகை போலவும் இருந்தது.

28:28 * வே.வா., "புரிந்துகொள்ளுதலுக்கு." 29:5 * வே.வா., "வேலைக்காரர்கள்."

அதி. 28
a சங் 148:8
பிர 1:6
b யோபு 5:10
யோபு 26:8
யோபு 37:10
சங் 135:7
நீதி 30:4
ஏசா 40:12
c சக 10:1
d யோபு 38:25
e உபா 4:6
சங் 111:10
நீதி 9:10
பிர 12:13
ரோ 1:20
f நீதி 3:7

அதி. 29
g சங் 18:28
சங் 119:105
h சங் 25:14
நீதி 3:32
i உபா 32:13
உபா 33:24
j ரூ 4:1
நீதி 31:23
k நெ 8:1
l லேவி 19:32
m நீதி 21:13
நீதி 24:11
n யாக் 1:27
o உபா 24:
12, 13
p உபா 10:17, 18

15 கண் இல்லாதவர்களுக்குக் கண்ணாக இருந்தேன்.
கால் இல்லாதவர்களுக்குக் காலாக இருந்தேன்.
16 ஏழைகளுக்குத் தகப்பனாக இருந்தேன்.[a]
முன்பின் தெரியாதவர்களின் வழக்குகளை விசாரித்தேன்.[b]
17 தப்பு செய்தவர்களின் அட்டகாசத்தை அடக்கினேன்.*[c]
அவர்களிடம்# சிக்கியவர்களைக் காப்பாற்றினேன்.
18 உயிருள்ள வரைக்கும் என் வீட்டிலேயே இருப்பேன் என்று நினைத்தேன்.[d]
எண்ண முடியாத மணலைப் போல என்னுடைய ஆயுசு நாள் இருக்கும் என்று நினைத்தேன்.
19 அதுமட்டுமல்ல, 'என் வேர்கள் தண்ணீர் பக்கமாகப் பரவியிருக்கும்.
என் கிளைகள் ராத்திரியெல்லாம் பனியில் நனைந்திருக்கும்.
20 என் மதிப்புக் கூடிக்கொண்டே போகும்.
என் வில்லிலிருந்து அம்புகள் பாய்ந்துகொண்டே இருக்கும்' என்றெல்லாம் நினைத்தேன்.
21 நான் பேசியதையெல்லாம் ஜனங்கள் ஆர்வமாகக் கேட்டார்கள்.
என் அறிவுரைகளுக்காக அமைதியாகக் காத்திருந்தார்கள்.[e]
22 அவர்கள் என் பேச்சுக்கு மறுபேச்சு பேசவில்லை.
நான் சொன்னதெல்லாம் அவர்களுடைய காதுக்கு இனிமையாக இருந்தது.
23 மழைக்காகக் காத்திருப்பது போல அவர்கள் எனக்காகக் காத்திருந்தார்கள்.
மழைநீரைப் பயிர் உறிஞ்சுவது போல என் வார்த்தைகளை உறிஞ்சிக்கொண்டார்கள்.[f]
24 நான் அன்பாகச் சிரித்ததைப் பார்த்து அவர்கள் ரொம்பச் சந்தோஷப்பட்டார்கள்.
என்னுடைய பிரகாசமான முகத்தைப் பார்த்ததும் அவர்களுக்குள் நம்பிக்கை பிறந்தது.*
25 தலைவனாக இருந்து அவர்களுக்கு வழிகாட்டினேன்.
படைபலம் உள்ள ராஜாவைப் போல இருந்தேன்.[g]
அழுகிறவர்களுக்கு ஆறுதல் சொன்னேன்"[h] என்றார்.

30 பின்பு அவர்,
"இப்போது பார்த்தால்,
வயதில் சிறியவர்கள்கூட என்னைக் கேலி செய்கிறார்கள்.*[i]
அவர்களுடைய அப்பாக்கள் எதற்கும் லாயக்கில்லாதவர்கள்.
என் ஆடுகளைக் காவல்காத்த நாய்களின் பக்கத்தில்கூட அவர்களை நான் விட்டிருக்க மாட்டேன்.
2 அவர்களுடைய கைகளால் எனக்கு என்ன பிரயோஜனம் இருந்தது?
அவர்களுடைய பலமெல்லாம் போய்விட்டதே.

அதி. 29
a லூ 14:13; யாக் 1:27
b நீதி 29:7
c சங் 58:6; நீதி 30:14
d ஆதி 25:8; 2ரா 22:20
e யோபு 29:9
f சங் 72:6; நீதி 16:15
g யோபு 1:3
h பிர 7:2

அதி. 30
i யோபு 12:4

29:17 *நே.மொ., "தாடைகளை உடைத்தேன்." #நே.மொ., "அவர்களுடைய பற்களில்." **29:24** *அல்லது, "அவர்கள் என் முகத்தின் பிரகாசத்தை மங்கச் செய்யவில்லை." **30:1** *வே.வா., "என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்."

3 சாப்பாடு தண்ணீர் இல்லாமல் இளைத்துப்போயிருக்கிறார்கள்.
பாழாய்க் கிடக்கிற வறண்ட நிலத்தில் அலைந்து திரிகிறார்கள்.
அங்குள்ள மண்ணை மென்று தின்கிறார்கள்.
4 உப்புக் கரிக்கும் இலைகளைப் புதர்களிலிருந்து பறிக்கிறார்கள்.
காட்டுச்செடியின் கசப்பான வேரைப் பிடுங்கிச் சாப்பிடுகிறார்கள்.
5 அவர்கள் ஊரைவிட்டு விரட்டப்படுகிறார்கள்.[a]
திருடர்களைப் பார்த்துக் கூச்சல் போடுவதுபோல் ஜனங்கள் அவர்களைப் பார்த்துக் கூச்சல் போடுகிறார்கள்.
6 அதனால் அவர்கள் பள்ளத்தாக்குகளில்* போய்க் குடியிருக்கிறார்கள்.
நிலத்திலுள்ள பொந்துகளிலும் பாறை இடுக்குகளிலும் தங்குகிறார்கள்.
7 புதர்களுக்குள் இருந்து கதறுகிறார்கள்.
முட்செடிகளுக்கு இடையில் கும்பல் கும்பலாகக் கூடியிருக்கிறார்கள்.
8 அவர்கள் அறிவில்லாதவர்களின் பிள்ளைகள், ஒன்றுக்கும் உதவாதவர்களுக்குப் பிறந்தவர்கள்.
ஊரைவிட்டே துரத்தப்பட்டவர்கள்.
9 அப்படிப்பட்ட ஆட்கள் இப்போது என்னைக் கேலி செய்து பாட்டுப் பாடுகிறார்கள்.[b]
என்னைப் பார்த்தாலே அவர்களுக்குக் கிண்டலாகத் தெரிகிறது.[c]
10 என்னை வெறுத்து ஒதுக்குகிறார்கள்.[d]
முகத்தில் காறித் துப்புவதற்குக்கூட தயங்குவதில்லை.[e]
11 என்னால் எதுவும் பண்ண முடியாதபடி கடவுள் செய்துவிட்டார்; என்னைத் துவண்டுபோக வைத்துவிட்டார்.
அதனால், அவர்கள் இன்னும் அதிகமாக என்னை ஆட்டிப்படைக்கிறார்கள்.*
12 என்னைத் தாக்குவதற்காக என்னுடைய வலது பக்கத்தில் கும்பலாக வருகிறார்கள்.
என்னை ஓட ஓட விரட்டுகிறார்கள்.
என்னை வளைத்துப் பிடித்து சாகடிப்பதற்காக வழியெல்லாம் முட்டுக்கட்டைகளைப் போடுகிறார்கள்.
13 நான் ஓடுகிற பாதைகளை நாசமாக்குகிறார்கள்.
நான் தப்பிக்கவே முடியாதபடி செய்கிறார்கள்.[f]
அவர்களைத் தடுக்க* யாருமே இல்லை.
14 பெரிதாகப் பிளந்து நிற்கும் மதில் வழியாக வருவதுபோல் பாய்ந்து வருகிறார்கள்.
சீரழிவுக்குமேல் சீரழிவை உண்டாக்குகிறார்கள்.
15 எனக்குக் கதிகலங்குகிறது.
என் கௌரவம் காற்றில் பறந்துவிட்டது.
பிழைப்பேன் என்ற நம்பிக்கைகூட மேகம்போல் மறைந்துவிட்டது.
16 என் உயிர் கொஞ்சம் கொஞ்சமாகப் போகிறது.[g]
கஷ்ட காலம் என்னைப் பாடாய்ப் படுத்துகிறது.[h]

30:6 *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குகளில்.” **30:11** *வே.வா., “தங்கள் கடிவாளத்தைக் கழற்றி வீசுகிறார்கள்.” **30:13** *அல்லது, “அவர்களுக்கு உதவ.”

அதி. 30
a ஆதி 4:12, சங் 109:10, தானி 4:25
b சங் 69:12, புல 3:14
c யோபு 17:6
d யோபு 19:13
e எண் 12:14, உபா 25:9, ஏசா 50:6, மத் 27:30
f யோபு 16:2, சங் 69:26
g சங் 22:14
h யோபு 10:15

அதி. 30
a சங் 6:2
b யோபு 2:8, 13
யோபு 7:4
c யோபு 19:7
சங் 22:2
d யோபு 7:20
யோபு 19:6
e யோபு 13:25
f நீதி 14:21
நீதி 14:31
நீதி 19:17
g சங் 38:6
சங் 42:9
சங் 43:2
h மீ 1:8
i யோபு 7:5
புல 4:8

17 ராத்திரியில் வேதனை வாட்டியெடுக்கிறது.*[a]
தீராத வலியில் துடிதுடிக்கிறேன்.[b]
18 நான் உடுத்தியிருக்கிற துணி ரொம்பப் பலமாக
இழுக்கப்படுகிறது.*
இறுக்கமான கழுத்துப்பட்டையைப் போல அது என் குரல்வளையை
நெரிக்கிறது.
19 கடவுள் என்னைச் சேற்றில் தள்ளிவிட்டார்.
நான் தூசி போலவும் சாம்பல் போலவும் ஆகிவிட்டேன்.
20 கடவுளே, உங்களிடம் கதறுகிறேன்; நீங்களோ கண்டுகொள்ளாமல்
இருக்கிறீர்கள்.[c]
உங்கள் முன்னால் எழுந்து நிற்கிறேன்; நீங்களோ பார்த்தும்
பார்க்காததுபோல் இருக்கிறீர்கள்.
21 ஈவிரக்கமே இல்லாமல் என்னைக் கொடுமைப்படுத்துகிறீர்கள்.[d]
பலமான உங்கள் கைகளால் ஓங்கி அடிக்கிறீர்கள்.
22 என்னைத் தூக்கிக் காற்றில் வீசுகிறீர்கள்.
புயல்காற்றில் சுழற்றி அடிக்கிறீர்கள்.*
23 நீங்கள் என்னைச் சாகடிக்கப்போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்.
எல்லாரும் கடைசியில் போய்ச் சேரும் இடத்துக்கு என்னை
அனுப்பப்போகிறீர்கள்.
24 ஆதரவற்ற ஒருவன் ஆபத்துக் காலத்தில் உதவிக்காகக் கதறும்போது
யாரும் அவன்மேல் கை ஓங்க மாட்டார்கள்.[e]
25 அவதிப்பட்ட ஜனங்களுக்காக நான் அழவில்லையா?
ஏழைகளுக்காக மனம் உருகவில்லையா?[f]
26 எனக்கு நல்லது நடக்கும் என்று நம்பினேன்; ஆனால் கெட்டதுதான்
நடந்தது.
என் வாழ்க்கை பிரகாசமாகும் என்று நினைத்தேன்; ஆனால்
இருண்டுதான் போனது.
27 என் மனம் தவியாய்த் தவித்தது.
கஷ்டத்துக்குமேல் கஷ்டம் வந்தது.
28 நான் சோகத்தோடு நடமாடுகிறேன்;[g] என் வாழ்க்கையில் சூரியன்
உதிப்பதே இல்லை.
எல்லாருக்கும் முன்னால் எழுந்து நின்று உதவிக்காகக் கதறுகிறேன்.
29 நரிகளுக்குச் சகோதரன் ஆனேன்.
நெருப்புக்கோழிகளுக்கு நண்பன் ஆனேன்.[h]
30 என் தோலெல்லாம் கறுத்துப்போய் உரிந்து விழுந்தது.[i]
என் உடம்பெல்லாம்* நெருப்பாய்க் கொதிக்கிறது.
31 துக்கம் கொண்டாடுவதற்கு மட்டும்தான் யாழை எடுக்கிறேன்.
சோக கீதம் வாசிப்பதற்கு மட்டும்தான் குழலை எடுக்கிறேன்" என்றார்.

30:17 *வே.வா., "ராத்திரியில் வலி என் எலும்புகளைத் துளைக்கிறது." **30:18** *அல்லது, "வேதனையின் கொடுமையால் அடையாளம் தெரியாதபடி ஆகிவிட்டேன்." **30:22** *அல்லது, "நொறுக்கிப் போடுகிறீர்கள்." **30:30** *நே.மொ., "எலும்பெல்லாம்."

31 பின்பு அவர்,
“என் கண்களை அலையவிடக் கூடாது என்று தீர்மானம்
செய்திருக்கிறேன்.*[a]
அப்படியிருக்கும்போது, இன்னொரு பெண்ணை# நான் எப்படிக்
கெட்ட எண்ணத்தோடு பார்ப்பேன்?[b]
2 அப்படி நான் பார்த்தால், கடவுள் என்னை ஆசீர்வதிப்பாரா?
சர்வவல்லமையுள்ள கடவுளிடமிருந்து நான் எதையாவது எதிர்பார்க்க
முடியுமா?
3 தப்பு செய்கிறவன் அழிந்துதானே போவான்?
கெடுதல் செய்கிறவன் ஒழிந்துதானே போவான்?[c]
4 என் வழிகளையெல்லாம் கடவுள் பார்க்கிறார்.[d]
நான் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியையும் அவர் கவனிக்கிறார்.
5 நான் எப்போதாவது பொய் பேசியிருக்கிறேனா?*
மற்றவர்களை ஏமாற்றியிருக்கிறேனா?
6 கடவுள் என்னைத் தராசில்* வைத்து நிறுத்துப் பார்க்கட்டும்.[e]
அப்போது நான் உத்தமன் என்று புரிந்துகொள்வார்.[f]
7 என் கால் தவறான வழியில் போயிருந்தால்,[g]
என் கண்கள் போகிற போக்கில் என் இதயம் போயிருந்தால்,[h]
என் கைகளில் கறை படிந்திருந்தால்,
8 நான் பயிர் செய்வதை இன்னொருவன் சாப்பிடட்டும்.[i]
நான் நடுவதை வேறொருவன் பிடுங்கிப்போடட்டும்.*
9 என் இதயம் ஒரு பெண்ணிடம் மயங்கியிருந்தால்,[j]
அவளுக்காக நான் அடுத்தவனின் வாசலில் காத்துக் கிடந்திருந்தால்,[k]
10 என் மனைவி இன்னொருவனுக்கு மனைவியாகட்டும்.*
மற்ற ஆண்கள் அவளோடு படுக்கட்டும்.[l]
11 நான் ஒழுக்கக்கேடாக நடந்திருந்தால் அது படுகேவலமாக
இருந்திருக்கும்.
அந்தக் குற்றத்துக்காக நீதிபதிகள் என்னைத் தண்டிப்பதே நியாயமாக
இருந்திருக்கும்.[m]
12 எல்லாவற்றையும் பொசுக்கி நாசமாக்குகிற நெருப்பைப் போல
அந்தப் பாவம் எனக்குச் சொந்தமான எல்லாவற்றையும்
அழித்திருக்கும்.[n]
13 வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் என்மேலுள்ள
மனக்குறையைச் சொன்னபோது,*
நான் நியாயத்தை அசட்டை பண்ணியிருந்தால்,
14 கடவுள் அதைப் பற்றிக் கேட்கும்போது என்ன செய்வேன்?
அவர் என்னிடம் விளக்கம் கேட்டால் என்ன பதில் சொல்வேன்?[o]

31:1 *நே.மொ., “என் கண்களோடு ஒப்பந்தம் செய்திருக்கிறேன்.” #வே.வா., “கன்னிப் பெண்ணை.” **31:5** *அல்லது, “பொய் பேசுகிறவர்களோடு கூட்டுச் சேர்ந்திருக்கிறேனா?” **31:6** *நே.மொ., “நீதியின் தராசில்.” **31:8** *வே.வா., “என் சந்ததி அழிந்துபோகட்டும்.” **31:10** *நே.மொ., “மாவு அரைக்கட்டும்.” **31:13** *வே.வா., “என்னோடு வழக்காடியபோது.”

அதி. 31
a நீதி 6:25, 26; மத் 5:28
b யோபு 31:9, 10
c யோபு 20:26-29; சங் 73:3, 18; நீதி 10:29
d ஆதி 16:13; 2நா 16:9; சங் 139:3; நீதி 5:21; எரே 32:19
e 1சா 2:3
f யோபு 2:3; யோபு 27:5; சங் 7:8
g உபா 11:16; எரே 10:23
h எண் 15:39; பிர 11:9; எசே 6:9; மத் 5:29; 1யோ 2:16
i லேவி 26:16
j யோபு 31:1; மத் 5:28
k யோபு 24:15
l 2சா 12:9, 11; எரே 8:10
m ஆதி 38:24; லேவி 20:10; உபா 22:22
n நீதி 6:25-27; நீதி 7:27
o நீதி 22:22, 23; ஏசா 10:1-3

அதி. 31
a யோபு 34:19 நீதி 14:31 நீதி 22:2 மல் 2:10
b சங் 139:16
c உபா 15:7, 8
d உபா 10:18 நீதி 28:27
e எசே 18:5, 7 யாக் 1:27 1யோ 3:17
f ஏசா 58:7 லூ 3:11 யாக் 2:15, 16
g உபா 24:13
h நீதி 31:23
i நீதி 14:21
j சங் 49:6, 7 1தீ 6:17
k உபா 8:17, 18
l எஸ்தர் 5:11 சங் 62:10 நீதி 11:28
m உபா 4:19
n உபா 11:16

15 தாயின் வயிற்றில் என்னை உருவாக்கியவர்தானே அவர்களையும் உருவாக்கினார்?[a]
பிறப்பதற்கு முன்பே எங்களுக்கு உருவம் கொடுத்தவரும் அவர்தானே?[b]
16 ஏழைகள் கேட்டதை நான் கொடுக்காமல் இருந்தேனா?[c]
விதவைகளுக்கு உதவி செய்யாமல் அவர்களைத் தவிக்க வைத்தேனா?[d]
17 என் உணவை நான் மட்டும் சாப்பிட்டேனா?
அநாதைகளோடு அதைப் பகிர்ந்துகொள்ளாமல் இருந்தேனா?[e]
18 (நினைவு தெரிந்த நாளிலிருந்தே நான் அவர்களுக்கு ஒரு அப்பா போலத்தான் இருந்திருக்கிறேன்.
என் வாழ்க்கை முழுவதும் விதவைகளுக்கு ஆதரவாகத்தான் இருந்திருக்கிறேன்.)
19 போட்டுக்கொள்ள துணியில்லாமல் குளிரில் யாராவது செத்துப்போவதை நான் கண்டும்காணாமல் இருந்தேனா?
போர்த்திக்கொள்ள எதுவும் இல்லாமல் ஒரு ஏழை தவிப்பதைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருந்தேனா?[f]
20 குளிரில் போர்த்திக்கொள்ள என் கம்பளியைக் கொடுக்காமல் இருந்தேனா?
அதற்கு அவன் நன்றி சொல்லாமல் இருந்தானா?[g]
21 என் உதவியைத் தேடி நகரவாசலுக்கு[h] வந்த *
அநாதைகளை மிரட்டுவதற்காக கையை ஓங்கினேனா?[i]
22 அப்படிச் செய்திருந்தால் என்னுடைய கை தோள்பட்டையிலிருந்து முறிந்து விழட்டும்.
என் முழங்கை உடைந்து போகட்டும்.
23 உண்மையில், கடவுள் என்னைக் கொன்றுவிடுவாரோ என்று பயந்தேன்.
அவருடைய மகிமைக்குமுன் என்னால் நிற்க முடியவில்லை.
24 தங்கத்தின் மேல் நான் நம்பிக்கை வைத்தேனா?
அல்லது, சொக்கத்தங்கம்தான் எனக்குப் பாதுகாப்பு என்று சொன்னேனா?[j]
25 எனக்கு நிறைய சொத்து இருந்தது.[k]
ஆனால், அதுதான் சந்தோஷத்தைத் தரும் என்று நினைத்தேனா?[l]
26 சூரியன் பிரகாசிப்பதைப் பார்த்தபோதோ,
நிலா அழகாக உலா போவதைக் கண்டபோதோ,[m]
27 மனம்* மயங்கி,
அவற்றைக் கும்பிட்டேனா?#[n]
28 அப்படிச் செய்திருந்தால், உண்மைக் கடவுளுக்குத் துரோகம் செய்தது போல ஆகியிருக்கும்.

31:21 *அல்லது, "நகரவாசலில் எனக்குச் செல்வாக்கு இருந்ததால், அங்கு வந்த" **31:27** *நே.மொ., "இதயம்." #நே.மொ., "என் வாயால் என் கையை முத்த மிட்டேனா?"

அந்தக் குற்றத்துக்கு நீதிபதிகள் என்னைத் தண்டிப்பதே நியாயமாக
இருந்திருக்கும்.
29 என் எதிரி அழிந்துபோவதைப் பார்த்து நான் எப்போதாவது
சந்தோஷப்பட்டேனா?[a]
அவனுக்குக் கெட்டது நடந்தபோது எனக்குக் கொண்டாட்டமாக
இருந்ததா?
30 அவன் நாசமாய்ப் போக வேண்டும் என்று நான் சபித்ததே இல்லை.
என் வாயால் அந்தப் பாவத்தைச் செய்ததே இல்லை.[b]
31 என் வீட்டில் வயிறார சாப்பிடாதவர்கள் யாருமே இருந்ததில்லை.[c]
இதை என் வீட்டு ஆட்கள்கூட எப்போதும் சொல்வார்கள்.
32 வெளியூரிலிருந்து வந்தவர்கள் தெருவில் தங்கியதே இல்லை.[d]
அவர்களுக்காக என் வீட்டு வாசல் திறந்தே இருந்தது.
33 மற்றவர்களைப் போல நான் எப்போதாவது என் தப்பை மூடி
மறைத்தேனா?[e]
யாரிடமும் சொல்லாமல் இருந்துவிட்டேனா?*
34 ஜனங்கள் என்ன சொல்வார்கள் என்று பயந்தோ,
அக்கம்பக்கத்தார் என்னை அவமதிப்பார்கள் என்று நினைத்தோ,
வாயை மூடிக்கொண்டு வீட்டுக்குள்ளேயே இருந்துவிட்டேனா?
35 நான் சொல்வதை யாராவது கேட்கக் கூடாதா?[f]
வேண்டுமென்றால், எழுதி கையெழுத்துகூட போட்டுத் தருகிறேன்.
சர்வவல்லமையுள்ளவர் எனக்குப் பதில் சொல்லட்டும்.[g]
என்னைக் குற்றம்சாட்டுபவர், நான் என்ன குற்றம் செய்தேன் என்று
பத்திரத்தில் எழுதித் தரட்டும்.
36 அதை என் தோள்மேல் சுமப்பேன்.
அதைக் கிரீடம் போலத் தலையில் வைத்துக்கொள்வேன்.
37 நான் செய்த ஒவ்வொன்றுக்கும் அவரிடம் விளக்கம் தருவேன்.
ஒரு இளவரசனைப் போல அவரிடம் தைரியமாகப் போவேன்.
38 என் வயல் என்னைப் பார்த்துப் புலம்பியிருந்தால்,
அதன் சால்கள்* ஒன்றுசேர்ந்து அழுதிருந்தால்,
39 விவசாயிகளுக்குக் கூலி கொடுக்காமல் அதன் விளைச்சலை நான்
சாப்பிட்டிருந்தால்,[h]
அந்த வயலை மற்றவர்களிடமிருந்து நான் பிடுங்கியிருந்தால்,[i]
40 கோதுமைக்குப் பதிலாக முட்செடிகள் அங்கே முளைக்கட்டும்.
பார்லிக்குப் பதிலாக நாற்றமடிக்கும் களைகள் அங்கே வளரட்டும்”
என்றார்.
இப்படியாக, யோபு பேசி முடித்தார்.

32 அந்த மூன்று பேரும் யோபுவுக்குப் பதிலே சொல்லவில்லை;
ஏனென்றால், தன்மேல் எந்தக் குற்றமும் இல்லை என்று யோபு
ஆணித்தரமாகப் பேசினார்.*[j] **2** யோபு கடவுளைவிட தன்னை நல்லவரா

31:33 *நே.மொ., “உடையின் மடிப்பில் என் பாவத்தை மறைத்து வைத்தேனா?” **31:38** *சால்கள் என்பது உழும்போது நிலத்தில் ஏற்படும் பள்ளங்கள். **32:1** *வே.வா., “யோபு தன் பார்வைக்கு நீதிமானாக இருந்தார்.”

அதி. 31
a நீதி 17:5; நீதி 24:17, 18
b மத் 5:44; ரோ 12:14
c ஆதி 18:5; ரோ 12:13
d ஆதி 19:1, 3; எபி 13:2; 1பே 4:9
e ஆதி 3:8; நீதி 28:13; அப் 5:8
f யோபு 19:7
g யோபு 13:22
h யாக் 5:4
i 1ரா 21:15

அதி. 32
j யோபு 6:29; யோபு 27:6

கக் காட்டிக்கொள்ள நினைத்ததால்[a] எலிகூவுக்கு ரொம்பவே கோபம் வந்
தது; இவர் ராமின் வம்சத்திலும், பூசின்[b] குடும்பத்திலும் பிறந்த பரகெயே
லின் மகன். **3** யோபுவின் மூன்று நண்பர்கள்மேலும் எலிகூவுக்குப் பயங்
கர கோபம் வந்தது. ஏனென்றால், அவர்கள் யோபு கேட்ட கேள்விகளுக்குச்
சரியான பதில் சொல்வதை விட்டுவிட்டு கடவுளைக் கெட்டவர் என்று குற்
றம்சாட்டினார்கள்.[c] **4** யோபுவிடம் பேசுவதற்காக எலிகூ அவ்வளவு நேர
மாகக் காத்திருந்தார். ஏனென்றால், அங்கிருந்த எல்லாரையும்விட அவர்
வயதில் சின்னவர்.[d] **5** அந்த மூன்று நண்பர்களால் எதுவும் பேச முடியா
மல் போனதைப் பார்த்தபோது எலிகூவுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்
தது. **6** அதனால், பூஸ் என்பவரின் குடும்பத்தில் பிறந்த பரகெயேலின்
மகன் எலிகூ அவர்களிடம்,

"நான் வயதில் சின்னவன்,
ஆனால் நீங்கள் பெரியவர்கள்.[e]
அதனால், உங்களுக்கு மதிப்புக் கொடுத்து பேசாமல் இருந்தேன்.[f]
எனக்குத் தெரிந்ததைக்கூட சொல்லாமல் அமைதியாக இருந்தேன்.
7 'பெரியவர்கள் பேசட்டும்,
வயதானவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும்' என்று நினைத்தேன்.
8 ஆனால், கடவுள் தரும் சக்திதான் ஜனங்களுக்குப் புத்தியைக்
கொடுக்கிறது.
சர்வவல்லமையுள்ளவரின் மூச்சுதான் அவர்களுக்குப்
புரிந்துகொள்ளும் திறனைக் கொடுக்கிறது.[g]
9 வயதாகிவிட்டால் மட்டும் ஞானம் வந்துவிடாது.
பெரியவர்களுக்கு மட்டும்தான் நல்லது கெட்டது தெரியும் என்று
சொல்ல முடியாது.[h]
10 அதனால், நானும் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்,
தயவுசெய்து கேளுங்கள்.
11 நீங்கள் பேசி முடிக்கும்வரை காத்திருந்தேன்.
நீங்கள் யோசித்து பதில் சொல்லும்வரை அமைதியாக இருந்தேன்.[i]
உங்களுடைய கருத்துகளைக் கவனமாகக்
கேட்டுக்கொண்டிருந்தேன்.[j]
12 நீங்கள் சொன்னதையெல்லாம் நன்றாகக் கவனித்தேன்.
ஆனால், உங்கள் ஒருவரால்கூட யோபுவின் பக்கம் தப்பு இருப்பதாக
நிரூபிக்க முடியவில்லை.*
அவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.
13 அதனால், உங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்பதுபோல்
பேசாதீர்கள்.
'மனுஷனால் அல்ல, கடவுளால்தான் யோபுவின் வாதங்கள் தவறென்று
நிரூபிக்க முடியும்' என்று சொல்லாதீர்கள்.
14 யோபு என்னைப் பார்த்து எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.
அதனால், நீங்கள் நியாயமில்லாமல் அவரிடம் பேசியதைப் போல
நான் பேச மாட்டேன்.

32:12 * வே.வா., "யோபுவைக் கண்டிக்க முடியவில்லை."

அதி. 32
a யோபு 10:2, 3
b ஆதி 22:20, 21
c யாத் 20:7; யோபு 4:18-20; யோபு 22:2, 3; யோபு 25:5, 6; யோபு 42:8
d லேவி 19:32
e யோபு 15:10
f 1தீ 5:1; 1பே 5:5
g 1ரா 3:12; 1ரா 4:29; யோபு 35:11; நீதி 2:6; பிர 2:26; தானி 1:17; மத் 11:25; யாக் 1:5
h சங் 119:100; பிர 4:13
i நீதி 15:28
j யாக் 1:19

15 நீங்கள் எல்லாரும் குழம்பிப்போய் இருக்கிறீர்கள்; பேசுவதற்கு இனி
உங்களிடம் வார்த்தைகளே இல்லை.
என்ன சொல்வதென்றே உங்களுக்குத் தெரியவில்லை.
16 நீங்கள் தொடர்ந்து பேசுவீர்கள் என்று காத்திருந்தேன்.
ஆனால், ஒன்றும் பேசாமல் அப்படியே இருந்தீர்கள்.
17 அதனால், இப்போது நான் பேசுகிறேன்.
எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்.
18 பேச நிறைய விஷயம் இருக்கிறது.
அதைச் சொல்ல எனக்குள் இருக்கும் சக்தி என்னைத் தூண்டுகிறது.
19 நான் பேசத் துடியாய்த் துடிக்கிறேன்.*
பேசவில்லை என்றால் என் இதயமே வெடித்துவிடும்போல்
இருக்கிறது.# [a]
20 பேசினால்தான் என் பாரம் குறையும்.
அதனால், என் மனதில் இருப்பதை இப்போது சொல்கிறேன்.
21 நான் பாரபட்சமாகப் பேச மாட்டேன்.[b]
போலியாக யாரையும் புகழ மாட்டேன்.
22 எனக்கு அப்படியெல்லாம் பேசத் தெரியாது.
அப்படிப் பேசினால், என்னைப் படைத்தவர் என்னைக் கொன்றே
விடுவார்” என்று சொன்னார்.

33 பின்பு அவர்,
“யோபுவே, நான் பேசுவதைத் தயவுசெய்து கேளுங்கள்.
நான் சொல்கிற எல்லாவற்றையும் கவனியுங்கள்.
2 தயவுசெய்து கவனியுங்கள், நான் பேசியே ஆக வேண்டும்.
என்னால் இனியும் அமைதியாக இருக்க முடியாது.
3 நான் நேர்மையான உள்ளத்தோடு பேசுகிறேன்.[c]
எனக்குத் தெரிந்ததை ஒளிவுமறைவு இல்லாமல் சொல்கிறேன்.
4 என்னைப் படைத்தது கடவுளுடைய சக்திதான்.[d]
எனக்கு உயிர் கொடுத்தது சர்வவல்லமையுள்ளவரின் மூச்சுதான்.[e]
5 எனக்குப் பதில் சொல்ல முடிந்தால் சொல்லுங்கள்.
என்னோடு வாதாடுவதற்குத் தயாராக இருங்கள்.
6 உண்மைக் கடவுளுக்கு முன்னால் நீங்களும் நானும் ஒன்றுதான்.
என்னையும் மண்ணிலிருந்துதான் அவர் படைத்தார்.[f]
7 அதனால், என்னைப் பார்த்து நீங்கள் பயப்பட வேண்டாம்.
நான் சொல்வதைக் கேட்டு ஆடிப்போக வேண்டாம்.
8 நீங்கள் பேசியதையெல்லாம் கவனித்தேன்.
உங்கள் வார்த்தைகளையெல்லாம் கேட்டேன்.
9 நீங்கள் எங்களிடம், ‘நான் நேர்மையானவன், எந்தக் குற்றமும்
செய்யவில்லை.[g]

32:19 *நே.மொ., “என் இதயம் அடைத்து வைக்கப்பட்ட திராட்சமதுவைப் போல இருக்கிறது.” #நே.மொ., “வெடிக்கப்போகும் புதிய திராட்சமது தோல்பையைப் போல அது இருக்கிறது.”

அதி. 32
a மத் 9:17
b லேவி 19:15 நீதி 24:23 யாக் 3:17

அதி. 33
c மத் 12:34 லூ 6:45
d சங் 119:73
e ஆதி 2:7 பிர 12:7 அப் 17:25
f ஆதி 2:7
g யோபு 10:7 யோபு 16:16, 17 யோபு 23:11

நான் நல்லவன், எந்தத் தப்பும் பண்ணவில்லை'[a] என்று சொன்னீர்கள்.
10 அதோடு, 'கடவுள்தான் என்னிடம் குற்றம் கண்டுபிடிக்கிறார்.
என்னை எதிரியாகப் பார்க்கிறார்.[b]
11 என் கால்களைத் தொழுமரத்தில் மாட்டுகிறார்.
என் வழிகளையெல்லாம் துருவித் துருவிப் பார்க்கிறார்'[c] என்றும் சொன்னீர்கள்.
12 நீங்கள் பேசியதில் நியாயமே இல்லை; இப்போது நான் பேசுகிறேன், கேளுங்கள்.
அற்ப மனுஷனைவிட கடவுள் எவ்வளவு பெரியவர்![d]
13 அப்படிப்பட்டவரை ஏன் குறை சொல்கிறீர்கள்?[e]
நீங்கள் கேட்டதற்கெல்லாம் அவர் பதில் சொல்லாமல் இருந்ததாலா?[f]
14 உண்மையில், கடவுள் திரும்பத் திரும்பப் பேசுகிறார்.
ஆனால், ஜனங்கள்தான் கவனிப்பதே இல்லை.
15 அவர் கனவில் பேசுகிறார்.
தரிசனத்தின் மூலம் பேசுகிறார்.[g]
ஜனங்கள் ஆழ்ந்து தூங்கும்போது பேசுகிறார்.
16 அவர்களுடைய காதுகளைத் திறக்கிறார்.[h]
தன் அறிவுரைகளை அவர்கள் மனதில் பதிய வைக்கிறார்.
17 இப்படி, மனுஷன் கெட்ட வழியைவிட்டு விலகுவதற்கும்,[i]
கர்வம் அடையாமல் இருப்பதற்கும் உதவுகிறார்.[j]
18 சவக்குழிக்கு* போகாதபடி அவனுடைய உயிரைப் பாதுகாக்கிறார்.[k]
வாளால்# அழியாதபடி அவனைக் காப்பாற்றுகிறார்.
19 ஒருவன் தன்னுடைய படுக்கையில் வேதனைப்படும்போதும்
தீராத எலும்பு வலியால் துடிக்கும்போதும்
தன்னுடைய தப்பை உணருகிறான்.*
20 சாப்பாட்டைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பாக இருக்கிறது.
பிடித்தமான சாப்பாடுகூட அவனுக்கு அருவருப்பாக இருக்கிறது.[l]
21 அவனுடைய உடம்பு வற்றிப்போய்,
எலும்புகள் மட்டும்தான் தெரிகிறது.
22 சீக்கிரத்தில் அவன் சவக்குழிக்குப் போகப்போகிறான்.
அவனை அழிக்க நினைக்கிறவர்களின் கையில் அவனுடைய உயிர் சிக்கப்போகிறது.
23 ஆயிரம் தேவதூதர்களில் ஒருவர்
நீதியான வழிகளை எடுத்துச் சொல்ல அவனிடம் வந்தால்,
24 கடவுள் அவனுக்குக் கருணை காட்டி,
'சவக்குழிக்குள் போகாதபடி அவனைக் காப்பாற்று.[m]
அவனை மீட்பதற்கு வழி கண்டுபிடித்துவிட்டேன்.[n]
25 அவனுடைய உடல் இளமையில் இருந்ததைவிட ஆரோக்கியம் அடையும்.[o]

33:18 *வே.வா., "கல்லறைக்கு." #வே.வா., "ஆயுதத்தால்." 33:19 *வே.வா., "அவன் கண்டிக்கப்படுகிறான்."

அதி. 33
a யோபு 29:14
b யோபு 13:24, யோபு 16:9, யோபு 19:11
c யோபு 13:27, யோபு 14:16, யோபு 31:4
d யோபு 12:13, சங் 8:4, ஏசா 40:25, ஏசா 55:9
e ஏசா 45:9, ரோ 9:20
f யோபு 13:24
g எண் 12:6, தானி 4:5
h யோபு 36:10
i ஆதி 20:6, 7, மத் 27:19
j தானி 4:24, 25
k ஆதி 31:24
l சங் 107:17, 18
m யோபு 14:13
n யோபு 19:25, மத் 20:28
o 2ரா 5:14

அவன் மறுபடியும் இளமைத் துடிப்போடு வாழ்வான்'* [a] என்று
சொல்வார்.
26 அவன் கடவுளிடம் கெஞ்சி ஜெபம் செய்வான்,[b] அதை அவர் கேட்பார்.
அவன் சந்தோஷம் பொங்க அவருடைய முகத்தைப் பார்ப்பான்.
அவர் அவனைத் திரும்பவும் நீதியான வழிக்குக் கொண்டுவருவார்.
27 அவன் மற்றவர்களைப் பார்த்து,
'நான் பாவம் செய்தேன்;[c] உண்மையைத் திரித்துப் பேசினேன்.
ஆனாலும், அதற்குத் தகுந்த தண்டனையைக் கடவுள் எனக்குத்
தரவில்லை.*
28 நான் சவக்குழிக்குள் போகாதபடி அவர் என் உயிரை
மீட்டுக்கொண்டார்.[d]
என் வாழ்க்கை இனி பிரகாசமாக இருக்கும்' என்று சொல்வான்.
29 இதையெல்லாம் மனுஷனுக்காகக் கடவுள் செய்கிறார்.
ஒரு தடவை மட்டுமல்ல, பல தடவை செய்கிறார்.
30 இப்படி, அவனைச் சவக்குழியிலிருந்து காப்பாற்றுகிறார்.
வாழ்வின் ஒளியை அவன்மேல் பிரகாசிக்க வைக்கிறார்.[e]
31 அதனால் யோபுவே, நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.
நான் பேசுவதை அமைதியாகக் கேளுங்கள்.
32 ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லுங்கள்.
தயங்காமல் பேசுங்கள், நீங்கள் நல்லவர் என்பதை எல்லாருக்கும்
காட்ட நான் ஆசைப்படுகிறேன்.
33 சொல்வதற்கு எதுவும் இல்லையென்றால், நான் சொல்வதைக்
கேளுங்கள்.
எது ஞானம் என்பதைச் சொல்லித்தருகிறேன், அமைதியாகக்
கவனியுங்கள்" என்று சொன்னார்.

34 பின்பு எலிகூ,
2 "ஞானிகளே, நான் சொல்வதைக் கேளுங்கள்;
அறிவாளிகளே, நான் சொல்வதைக் கவனியுங்கள்.
3 சாப்பாட்டை நாக்கு ருசி பார்க்கிறது.
அது போல, வார்த்தைகளைக் காது சோதித்துப் பார்க்கிறது.
4 எது சரியானது என்று இப்போது நாம் முடிவுசெய்யலாம்.
எது நல்லது என்று தீர்மானிக்கலாம்.
5 ஏனென்றால் யோபு, 'நான் நேர்மையானவன்.[f]
இருந்தாலும், கடவுளிடமிருந்து எனக்கு நியாயம் கிடைக்கவில்லை.[g]
6 நியாயம் கிடைக்க எனக்குத் தகுதி இல்லை என்று நான் பொய்யா
சொல்ல முடியும்?
நான் எந்தத் தப்பும் செய்யவில்லை, ஆனாலும் என் காயம் ஆறாமல்
இருக்கிறது'[h] என்று சொல்கிறார்.
7 யோபுவைப் போலக் கேலிப்பேச்சை அமைதியாகக் கேட்கிறவர்கள்
யாராவது இருக்க முடியுமா?

33:25 * வே.வா., "அவன் இளமைத் துடிப்போடு இருந்த நாட்களுக்குத் திரும்புவான்."
33:27 * அல்லது, "அதனால் எனக்கு லாபம் கிடைக்கவில்லை."

அதி. 33
a உபா 34:7; யோபு 42:16; சங் 103:3-5
b சங் 30:8
c 2சா 12:13; சங் 32:5; நீதி 28:13; லூ 15:21; 1யோ 1:9
d சங் 19:14; ஏசா 38:17
e சங் 56:13

அதி. 34
f யோபு 29:14; யோபு 33:9
g யோபு 27:2
h யோபு 9:17, 18

8 அவர் தப்பு செய்கிறவர்களோடு பழகுகிறார்.
கெட்டவர்களோடு சகவாசம் வைக்கிறார்.[a]
9 அதனால்தான், 'கடவுளுக்குப் பிரியமாக நடப்பதால்
மனுஷனுக்கு எந்த லாபமும் இல்லை' என்று சொல்கிறார்.[b]
10 புத்திசாலிகளே, நான் சொல்வதைக் கேளுங்கள்.
உண்மைக் கடவுள் ஒருபோதும் கெட்டது செய்ய மாட்டார்.[c]
சர்வவல்லமையுள்ளவர் ஒருபோதும் அநியாயம் செய்ய மாட்டார்.[d]
11 மனுஷன் என்ன செய்கிறானோ அதற்கு ஏற்ற கூலிதான் அவனுக்குக் கிடைக்கிறது.[e]
அதற்குத் தகுந்த பலனைத்தான் அவன் அனுபவிக்கிறான்.
12 கடவுள் அக்கிரமம் செய்ய மாட்டார் என்பது நிச்சயம்.[f]
சர்வவல்லமையுள்ளவர் நியாயத்தைப் புரட்ட மாட்டார் என்பது உறுதி.[g]
13 பூமியை அவருடைய பொறுப்பில் விட்டது யார்?
உலகத்தை அவர் கையில் ஒப்படைத்தது யார்?
14 மனுஷர்கள்மேல் அவர் பகையைக் காட்டி,
அவர்களுடைய உயிரையும் சுவாசத்தையும் எடுத்துக்கொண்டால்,
15 எல்லா மனுஷர்களும் அழிந்துவிடுவார்களே.[h]
அவர்கள் எல்லாரும் மண்ணுக்குப் போய்விடுவார்களே.[i]
16 நீங்கள் புத்திசாலியாக இருந்தால், நான் சொல்வதைக் கேளுங்கள்.
நான் பேசும்போது நன்றாகக் கவனியுங்கள்.
17 நியாயத்தை வெறுக்கிற ஒருவரால் ஆட்சி செய்ய முடியுமா?
அதிகாரமும் நீதியும் உள்ளவர்மேல் நீங்கள் குற்றம் சுமத்துவீர்களா?
18 ஒரு ராஜாவைப் பார்த்து, 'நீ எதற்குமே லாயக்கில்லாதவன்' என்று சொல்வீர்களா?
உங்கள் தலைவனைப் பார்த்து, 'நீ ஒரு அயோக்கியன்' என்று சொல்வீர்களா?[j]
19 அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்குத் தனி சலுகை காட்டாத ஒருவர் இருக்கிறார்.[k]
ஏழைகளைவிட பணக்காரர்களை* அவர் உயர்வாக நினைக்க மாட்டார்.[l]
ஏனென்றால், அவர்கள் எல்லாரையும் படைத்தவர் அவர்தான்.
20 அவர்கள் திடீரென்று நடுராத்திரியில்கூட[m] செத்துப்போய்விடலாம்.[n]
அவர்கள் குலைநடுங்கிப்போய் இறந்துவிடலாம்.
பலம் படைத்தவர்கள்கூட மனுஷனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் ஒழிக்கப்படலாம்.[o]
21 ஏனென்றால், மனுஷன் செய்வதையெல்லாம் கடவுள் கவனிக்கிறார்.[p]
அவன் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியையும் அவர் பார்க்கிறார்.
22 தப்பு செய்கிறவர்கள் எங்கேயும் ஒளிந்துகொள்ள முடியாது.
எப்பேர்ப்பட்ட இருட்டிலும் மறைந்துகொள்ள முடியாது.[q]

34:19 *வே.வா., "அந்தஸ்து இல்லாதவர்களைவிட அந்தஸ்து உள்ளவர்களை."

அதி. 34
a நீதி 1:10, 15; நீதி 4:14
b யோபு 9:22-24; யோபு 35:3
c ஆதி 18:25; 2நா 19:7; சங் 92:15
d உபா 32:4; ரோ 9:14; எபி 6:10
e 1நா 28:9; சங் 62:12; நீதி 24:12; எரே 32:19; எசே 33:20; ரோ 2:6; 2கொ 5:10; கலா 6:7; 1பே 1:17; வெளி 22:12
f யாக் 1:13
g சங் 89:14; சங் 97:2; சங் 99:4; ரோ 2:11
h சங் 104:29; பிர 12:7; ஏசா 42:5; அப் 11:25
i ஆதி 3:19; சங் 146:4; பிர 3:20
j யாத் 22:28; பிர 8:2-4; பிர 10:20
k உபா 10:17; 2நா 19:7; அப் 10:34; ரோ 2:11; எபே 6:9
l யோபு 31:13-15; நீதி 22:2
m யாத் 12:29; தானி 5:30
n சங் 73:3, 19; அப் 12:21-23
o 1சா 25:38
p ஆதி 6:5; 2நா 16:9; யோபு 31:4; நீதி 5:21; நீதி 15:3; எரே 16:17; எரே 32:19; 1பே 3:12
q சங் 139:11, 12; ஏசா 29:15; எரே 23:24; ஆமோ 9:3; எபி 4:13

23 கடவுள் எப்போது வேண்டுமானாலும் தீர்ப்பு கொடுப்பார்.
அதற்காக அவர் முன்கூட்டியே யாருக்கும் நேரம் குறிப்பதில்லை.
24 அதிகாரத்தில் இருப்பவர்களை அவர் விசாரணை செய்துதான் நீக்க வேண்டும் என்றில்லை.
அவர்களுடைய இடத்தில் யாரை வேண்டுமானாலும் வைப்பார்.[a]
25 ஏனென்றால், அவர்கள் செய்வதெல்லாம் அவருக்குத் தெரியும்.[b]
அவர்களை ஒரே ராத்திரியில் கவிழ்ப்பார், அவர்கள் ஒழிந்துபோவார்கள்.[c]
26 அவர்கள் செய்த அக்கிரமத்துக்காக அவர்களைத் தண்டிப்பார்.
எல்லாருடைய கண் முன்னாலும் அதைச் செய்வார்.[d]
27 ஏனென்றால், அவரைவிட்டு அவர்கள் விலகிவிட்டார்கள்.[e]
அவருடைய வழிகளை அவர்கள் மதிப்பதே இல்லை.[f]
28 அவர்களுடைய கொடுமை தாங்காமல் ஏழைகள் கடவுளிடம் கதறி அழுகிறார்கள்.
ஆதரவற்றவர்களின் கதறலை அவர் கேட்கிறார்.[g]
29 ஆனால் அவர் ஒன்றும் செய்யாமல் இருந்தால், யார் அவரைக் குற்றப்படுத்த முடியும்?
அவர் முகத்தை மறைத்துக்கொண்டால், யார் அவரைப் பார்க்க முடியும்?
ஒரு தேசமானாலும் சரி, தனி மனுஷனாலும் சரி, வித்தியாசம் இல்லை.
30 ஆட்சி செய்யவோ ஜனங்களை ஆட்டிப்படைக்கவோ
கெட்டவனை* அவர் விடுவதில்லை.[h]
31 நீங்கள் கடவுளிடம்,
'தப்பு செய்யாமலேயே நான் தண்டனையை அனுபவிக்கிறேன்.[i]
32 எனக்கு ஏதாவது புரியாமல் இருந்தால் அதைப் புரிய வையுங்கள்.
நான் ஏதாவது தப்பு செய்திருந்தால் என்னைத் திருத்திக்கொள்கிறேன்' என்று சொல்கிறீர்கள்.
33 அவருடைய தீர்ப்பை நீங்கள் ஏற்றுக்கொள்வதில்லை.
அப்படியிருக்கும்போது, நீங்கள் சொல்கிறபடி மட்டும் அவர் உங்களை ஆசீர்வதிக்க வேண்டுமா?
இதில் நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை, நீங்கள்தான் முடிவுசெய்ய வேண்டும்.
உங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்றால், அதைச் சொல்லுங்கள்.
34 புத்திசாலிகள் என்னிடம் என்ன சொல்வார்கள் தெரியுமா?
நான் பேசுவதைக் கேட்கிற ஞானிகள் என்ன சொல்வார்கள் தெரியுமா?
35 'யோபு அறிவில்லாமல் பேசுகிறார்;[j]
அவருடைய பேச்சில் அர்த்தமே* இல்லை' என்றுதான் சொல்வார்கள்.

34:30 *வே.வா., "கடவுளைவிட்டு விலகியவனை; விசுவாசதுரோகியை." **34:35** *வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதலே."

அதி. 34
a எசே 21:26, 27; தானி 2:21; தானி 4:25
b ஓசி 7:2
c 1சா 4:17; தானி 5:30
d எண் 12:10
e 1சா 15:11
f சங் 28:5
g யாத் 22:22, 23; யாக் 5:4
h யோபு 13:16; யோபு 27:8
i தானி 9:7; ரோ 3:23
j யோபு 35:16; யோபு 38:2; யோபு 42:3

36 யோபு முழுமையாகச் சோதிக்கப்பட வேண்டும்.*
ஏனென்றால், அக்கிரமக்காரர்கள் பேசுவதுபோல் அவர்
பேசிக்கொண்டிருக்கிறார்.
37 பாவத்துக்குமேல் பாவம் செய்கிறார்.[a]
நம் முன்னால் கைகொட்டிச் சிரிக்கிறார்.
உண்மைக் கடவுளுக்கு எதிராக ஏதேதோ பேசுகிறார்"[b] என்று
சொன்னார்.

35 பின்பு எலிகூ,
2 "'கடவுளைவிட நான் நீதியுள்ளவன்' என்று சொல்கிறீர்களே,
உங்கள்மேல் உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையா?[c]
3 'நான் நீதிமானாக இருந்து என்ன பிரயோஜனம்?*
பாவம் செய்யாததால் அப்படி என்ன பலன் கிடைத்துவிட்டது?'[d] என்று
கேட்கிறீர்களே.
4 நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன்.
உங்களோடு இருக்கிறவர்களுக்கும்[e] சேர்த்து பதில் சொல்கிறேன்.
5 வானத்தைக் கொஞ்சம் அண்ணாந்து பாருங்கள்.
அவ்வளவு உயரத்தில் இருக்கிற மேகங்களைக் கவனித்துப் பாருங்கள்.[f]
6 நீங்கள் பாவம் செய்வதால் கடவுளுக்கு என்ன பாதிப்பு
வரப்போகிறது?[g]
அக்கிரமங்கள் செய்வதால் அவருக்கு என்ன ஆகப்போகிறது?[h]
7 நீங்கள் நீதிமானாக இருப்பதால் அவருக்கு என்ன லாபம்?
நேர்மையாக இருப்பதால் அவருக்கு என்ன பிரயோஜனம்?[i]
8 நீங்கள் அக்கிரமம் செய்வதால் பாதிக்கப்படுவது உங்களைப் போன்ற
மனுஷர்கள்தான்.
உங்கள் நீதியினால் நன்மை அடைவதும் மனுஷர்கள்தான்.
9 கொடுமை தாங்க முடியாமல் ஜனங்கள் கதறி அழுகிறார்கள்.
அடக்கி ஒடுக்குகிறவர்களின் கையிலிருந்து காப்பாற்றும்படி
கெஞ்சுகிறார்கள்.[j]
10 ஆனால் யாருமே, 'என்னுடைய மகத்தான படைப்பாளராகிய கடவுள்
எங்கே?[k]
ராத்திரியில் நான் புகழ் பாடல்களைப் பாடுவதற்குக் காரணமானவர்
எங்கே?'[l] என்று கேட்பதில்லை.
11 மிருகங்களைவிட[m] நமக்கு அதிகமான அறிவைக் கடவுள்
கொடுத்திருக்கிறார்.[n]
பறவைகளைவிட நமக்கு அதிகமான புத்தியைக் கொடுத்திருக்கிறார்.
12 ஆனால், கெட்ட ஜனங்கள் பெருமைபிடித்து அலைகிறார்கள்.[o]
அதனால்தான், அவர்கள் உதவிக்காகக் கெஞ்சினாலும் கடவுள்
கேட்பதில்லை.[p]
13 அவரிடம் நாம் போலித்தனமாகக் கெஞ்சினால் அவர் கேட்பாரா?[q]
சர்வவல்லமையுள்ளவர் கண்டிப்பாக அதைக் காதில் வாங்க மாட்டார்.

34:36 * அல்லது, "என் தகப்பனே, யோபு சோதிக்கப்படட்டும்." **35:3** * ஒருவேளை, "கடவுளுக்கு என்ன பிரயோஜனம்?"

அதி. 34
a யோபு 10:1; யோபு 19:6
b யோபு 35:2

அதி. 35
c யோபு 10:7; யோபு 16:16, 17; யோபு 34:5
d யோபு 9:22-24; யோபு 34:9; சங் 73:13
e யோபு 2:11
f சங் 68:34
g நீதி 8:36; நீதி 9:12
h நீதி 19:3
i ரோ 11:35
j நீதி 29:2
k ஏசா 51:12, 13; 1பே 4:19
l சங் 42:8; சங் 149:5; அப் 16:25
m ஆதி 1:26
n சங் 94:12; ஏசா 48:17
o நீதி 1:28, 29; 1பே 5:5
p சங் 18:41
q நீதி 15:29; ஏசா 1:15; எரே 11:11

14 அப்படியிருக்கும்போது, அவர் உங்களைக் கண்டுகொள்வதில்லை என்று புலம்பினால்[a] அவர் கேட்பாரா?
அவர்தான் உங்களுக்குத் தீர்ப்பு சொல்லப்போகிறார்; அதுவரை பொறுமையோடு காத்திருங்கள்.[b]
15 நீங்கள் அவசரப்பட்டுப் பேசியதை அவர் பெரிதுபடுத்தவில்லை.
கோபத்தோடு உங்களைத் தண்டிக்கவும் இல்லை.[c]
16 யோபுவே, நீங்கள் தேவையில்லாமல் நிறைய பேசிவிட்டீர்கள்.
அறிவில்லாமல் வார்த்தைகளைக் கொட்டிவிட்டீர்கள்"[d] என்று சொன்னார்.

36 அதன் பிறகு எலிகூ,
2 "கடவுளுடைய சார்பில் இன்னும் சில விஷயங்களை நான் பேச வேண்டியிருக்கிறது.
அதனால், இன்னும் கொஞ்ச நேரத்துக்குப் பொறுத்துக்கொள்ளுங்கள்.
3 எனக்குத் தெரிந்ததை விவரமாகச் சொல்கிறேன்.
என்னைப் படைத்தவர் எவ்வளவு நீதியுள்ளவர்[e] என்று காட்டுகிறேன்.
4 நான் சொல்வது எதுவுமே பொய் கிடையாது.
எல்லாம் தெரிந்தவரிடம்*[f] கற்றுக்கொண்ட விஷயங்களைத்தான் சொல்கிறேன்.
5 கடவுளுக்கு நிறைய சக்தி இருக்கிறது;[g] அவர் யாரையுமே ஒதுக்கித்தள்ள மாட்டார்.
அவருக்குப் புரியாத விஷயமே இல்லை.
6 கெட்டவர்களின் உயிரை அவர் காப்பாற்ற மாட்டார்.[h]
ஆனால், கஷ்டப்படுகிறவர்களுக்கு நியாயம் செய்வார்.[i]
7 நீதிமான்களை அவர் எப்போதும் கவனிக்கிறார்;[j] என்றுமே அவர்களை உயர்ந்த நிலையில் வைக்கிறார்.
ராஜாக்களோடு* சிம்மாசனத்தில் உட்கார வைக்கிறார்.[k]
8 அவர்கள் சங்கிலியால் கட்டப்படும்போது,
வேதனையின் கயிறுகளால் நெருக்கப்படும்போது,
9 அவர்கள் செய்த தப்பைச் சுட்டிக்காட்டுகிறார்.
அவர்கள் கர்வத்தோடு செய்த குற்றங்களை உணர்த்துகிறார்.
10 அவர்களுக்குப் புத்திமதிகளைக் கொடுக்கிறார்.
கெட்டது செய்வதை விட்டுவிடும்படி சொல்கிறார்.[l]
11 அவர்கள் கீழ்ப்படிந்தால்,
சீரும் சிறப்புமாக வாழ்வார்கள்.
காலமெல்லாம் சந்தோஷமாக இருப்பார்கள்.[m]
12 அவர்கள் கீழ்ப்படியாவிட்டால், வாளால்* சாவார்கள்.[n]
அறிவைப் பெறாமலேயே இறந்துபோவார்கள்.
13 கெட்டவர்கள்* தங்கள் நெஞ்சத்தில் பகையை வளர்த்துக்கொள்வார்கள்.

36:4 *வே.வா., "எல்லா அறிவும் உள்ளவரிடம்." **36:7** *அல்லது, "ராஜாக்களை." **36:12** *வே.வா., "ஆயுதத்தால்." **36:13** *வே.வா., "கடவுளைவிட்டு விலகியவர்கள்; விசுவாசதுரோகிகள்."

அதி. 35
a யோபு 9:11
b சங் 37:5
c சங் 103:10-12
d யோபு 34:35 யோபு 38:2

அதி. 36
e உபா 32:4 சங் 11:7 சங் 139:14 தானி 9:14 வெளி 15:3
f 1சா 2:3 யோபு 37:16
g சங் 24:8 சங் 99:4 எரே 32:18
h சங் 9:17 சங் 68:2 2பே 2:9
i சங் 10:14 சங் 140:12 நீதி 22:22, 23
j சங் 33:18 சங் 34:15
k சங் 78:70, 71 சங் 113:7, 8 ஏசா 9:7
l எசே 18:30
m எரே 26:13
n யோபு 33:16-18 ஏசா 1:19, 20 ரோ 2:8

அதி. 36
a சங் 55:23
b 1ரா 14:24
c ஏசா 30:21
d சங் 18:19
e ஏசா 55:2
f நீதி 2:22 எரே 25:31
g நீதி 19:19 நீதி 29:22
h யோபு 34:20 சங் 33:16 நீதி 11:4
i எபி 11:24, 25
j ஏசா 40:14
k யோபு 34:10 ரோ 9:14
l யாத் 15:1
m சங் 92:5 சங் 104:24
n சங் 145:3 சங் 148:13 வெளி 15:3
o சங் 90:2 சங் 102:25-27 1தீ 1:17 எபி 1:10-12

கடவுள் அவர்களைக் கட்டிப்போட்டாலும் உதவிக்காக அவரிடம் கெஞ்ச மாட்டார்கள்.
14 அவர்கள் வாலிப வயதிலேயே செத்துப்போகிறார்கள்.[a]
கோயிலில் விபச்சாரம் செய்கிற ஆண்களோடு[b] சேர்ந்து வாழ்க்கையை வீணடிக்கிறார்கள்.*
15 கஷ்டப்படுகிறவர்களை அவர்களுடைய கஷ்டத்திலிருந்து கடவுள் காப்பாற்றுகிறார்.
அவர்கள் கொடுமைக்கு ஆளாகும்போது தன் ஆலோசனைகளைக் கேட்க வைக்கிறார்.
16 அவர் உங்களை வேதனையின் பிடியிலிருந்து விடுவிப்பார்.[c]
நெருக்கடியே இல்லாத விசாலமான இடத்தில் வாழ வைப்பார்.[d]
விருந்து வைத்து உங்கள் மனதைச் சந்தோஷப்படுத்துவார்.[e]
17 அவர் நியாயமான தீர்ப்பைக் கொடுக்கும்போது,
கெட்டவர்கள் தண்டிக்கப்படுவதைப்[f] பார்த்து நீங்கள் நிம்மதி அடைவீர்கள்.
18 ஆனால், ஆத்திரத்தில் கெட்ட எண்ணத்தோடு நடந்துகொள்ளாதபடி* கவனமாக இருங்கள்.[g]
நிறைய லஞ்சம் கிடைக்கும் என்ற ஆசையில் கெட்டதைச் செய்துவிடாதீர்கள்.
19 நீங்கள் என்னதான் அழுது புலம்பினாலும் கஷ்டம் தீருமா?
என்னதான் பாடுபட்டாலும் வேதனை தீருமா?[h]
20 ராத்திரி நேரம் எப்போது வரும் என்று காத்துக்கொண்டு இருக்காதீர்கள்.
ஜனங்கள் எப்போது இல்லாமல் போவார்கள் என்று பார்த்துக்கொண்டு இருக்காதீர்கள்.
21 தப்பான வழியில் போகாதபடி ஜாக்கிரதையாக இருங்கள்.
கஷ்டத்திலிருந்து தப்பிக்க குறுக்கு வழியைத் தேடாதீர்கள்.[i]
22 கடவுள் மகா சக்தி உள்ளவர்.
கற்றுக்கொடுப்பதில் அவரை மிஞ்ச யாருமே இல்லை.
23 என்ன செய்ய வேண்டும் என்று யாராவது அவருக்குச் சொல்ல முடியுமா?*[j]
அல்லது, அவர் செய்வது தப்பு என்று யாராவது சொல்ல முடியுமா?[k]
24 நிறைய பேர் அவருடைய செயல்களைப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள்.[l]
நீங்களும் அவரைப் புகழ்ந்து பேச மறந்துவிடாதீர்கள்.[m]
25 மனுஷர்கள் எல்லாரும் அவற்றைப் பார்க்கிறார்கள்.
அற்ப மனுஷன் அவற்றைத் தூரத்திலிருந்து பார்க்கிறான்.
26 நாம் நினைத்தே பார்க்க முடியாத அளவுக்குக் கடவுள் அற்புதமானவர்.[n]
அவர் எவ்வளவு காலம் வாழ்ந்திருக்கிறார் என்பதை நம்மால் கற்பனைகூட செய்ய முடியாது.[o]

36:14 *அல்லது, “முடித்துக்கொள்கிறார்கள்.” **36:18** *வே.வா., “வன்மத்தோடு கைகொட்டிச் சிரிக்காதபடி.” **36:23** *அல்லது, “அவரை யாராவது குறைசொல்ல முடியுமா?; தட்டிக்கேட்க முடியுமா?”

27 அவர் தண்ணீரை ஆவியாக மேலே போக வைக்கிறார்.[a]
அதை மழையாகவும் பனியாகவும் கீழே வர வைக்கிறார்.
28 அது மேகங்களிலிருந்து பொழிகிறது.[b]
மனுஷர்கள்மேல் பெய்கிறது.
29 மேகங்கள் திரண்டிருக்கும் அதிசயத்தை யாராவது புரிந்துகொள்ள முடியுமா?
அவருடைய கூடாரத்திலிருந்து இடியோசை கேட்கும் அற்புதத்தை யாராவது விளக்க முடியுமா?[c]
30 அந்த மேகங்களில் அவர் மின்னலைப் பிரகாசிக்க வைக்கிறார்.[d]
ஆழ்கடலைத் தண்ணீரால் நிரப்புகிறார்.
31 இவற்றால் ஜனங்களை வாழ வைக்கிறார்.*
அவர்களுக்கு ஏராளமான உணவு தருகிறார்.[e]
32 மின்னலைக் கையில் எடுத்துக்கொள்கிறார்.
பின்பு, குறிபார்த்து எறிகிறார்.[f]
33 அவருடைய இடிமுழக்கம் அவரைப் பற்றிச் சொல்கிறது.
வருவது யாரென்று* மந்தைகூட சொல்கிறது” என்றார்.

37 பின்பு அவர்,
“என் நெஞ்சு படபடக்கிறது.
வெளியே தெறித்து விடும்போல் இருக்கிறது.
2 அதிர வைக்கும் அவருடைய குரலைக் கவனமாகக் கேளுங்கள்.
அவர் இடிபோல் முழங்குவதைக் கேளுங்கள்.
3 வானத்தின் கீழெங்கும் அவர் அதைக் கேட்க வைக்கிறார்.
பூமியெங்கும் மின்னலை மின்னச் செய்கிறார்.[g]
4 பின்பு, அவர் கர்ஜிக்கிறார்.
கம்பீரமாக முழங்குகிறார்.[h]
அப்போதும் மின்னலை நிறுத்தாமல் மின்ன வைக்கிறார்.
5 கடவுள் இடிபோல் முழங்குவது[i] ஒரு அற்புதம்.
நம்மால் புரிந்துகொள்ள முடியாத அதிசயங்களை அவர் செய்கிறார்.[j]
6 பனியைப் பார்த்து, ‘பூமியில் இறங்கு’ என்று சொல்கிறார்.[k]
மழையைப் பார்த்து, ‘பலமாகக் கொட்டு’ என்று சொல்கிறார்.[l]
7 அவருடைய செயலை அற்ப மனுஷர்கள் எல்லாரும் புரிந்துகொள்வதற்காக
அவர்களுடைய வேலைகளையெல்லாம் நிறுத்துகிறார்.
8 காட்டு மிருகங்கள் குகைக்குள் போகின்றன.
அங்கேயே பதுங்கியிருக்கின்றன.
9 புயல்காற்று அதன் இடத்திலிருந்து புறப்பட்டு வருகிறது.[m]
வடக்கிலிருந்து குளிர்காற்று அடிக்கிறது.[n]
10 கடவுளுடைய மூச்சால் பனிக்கட்டி உருவாகிறது.[o]
நீர்நிலைகள்* உறைந்துபோகின்றன.[p]

36:31 *அல்லது, “ஆதரிக்கிறார்.” 36:33 *அல்லது, “என்ன வருகிறதென்று.” 37:10 *கடல், ஆறு, ஏரி போன்றவை.

அதி. 36
a ஆதி 2:6, ஆமோ 5:8
b நீதி 3:20, ஏசா 55:10, எரே 14:22
c 2சா 22:12
d யோபு 37:3
e அப் 14:17
f 2சா 22:15, சங் 18:14, சங் 144:6

அதி. 37
g யோபு 37:11, சங் 97:4
h யோபு 40:9, சங் 29:3, சங் 68:33
i 2சா 22:14
j பிர 3:11, வெளி 15:3
k சங் 147:16
l ஆமோ 9:6
m சங் 104:3
n நீதி 25:23
o சங் 147:16
p யோபு 38:29, 30

அதி. 37
a யோபு 37:3
b சங் 148:8
c யாத் 9:23
1சா 12:17, 18
d 1ரா 18:45
யோபு 36:29, 31
யோபு 38:25–27
யாக் 5:17, 18
e சங் 111:2
சங் 145:5
f யோபு 36:29
g யோபு 36:4
சங் 18:30
சங் 104:24
h லூ 12:55
i ஏசா 44:24
j ரோ 11:34
k 1நா 16:27
சங் 8:1
l சங் 145:3
பிர 3:11
ரோ 11:33
m 1நா 29:11
யோபு 36:22
ஏசா 40:26
n உபா 32:4
சங் 33:5
சங் 37:28
o சங் 11:7
சங் 71:19

11 அவர் மேகங்களைத் தண்ணீர்த் துளிகளால் நிரப்புகிறார்.
அந்த மேகங்களில் மின்னலைத் தெறிக்க வைக்கிறார்.[a]
12 அவர் அனுப்புகிற இடங்களுக்கு மேகங்கள் சுழன்று சுழன்று போகின்றன.
அவர் கொடுக்கிற கட்டளைகளைப் பூமியில் நிறைவேற்றுகின்றன.[b]
13 அவற்றால் அவர் தண்டனையும் கொடுக்கிறார்,[c] நிலத்துக்கு நீரும் பாய்ச்சுகிறார்,[d]
மாறாத அன்பையும் காட்டுகிறார்.
14 யோபுவே, இதைக் கேளுங்கள்.
கடவுள் செய்திருக்கிற அற்புதங்களைக் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள்.[e]
15 கடவுள் எப்படி மேகங்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்* தெரியுமா?
மேகங்களில் மின்னலை எப்படி மின்ன வைக்கிறார் என்று தெரியுமா?
16 மேகங்களை எப்படி வானத்தில் மிதக்க வைக்கிறார் என்று தெரியுமா?[f]
எல்லாம் தெரிந்தவர்* செய்கிற அற்புதங்கள் இவை.[g]
17 தெற்கிலிருந்து வீசும் காற்றினால் உலகமே ஸ்தம்பித்துப்போகும்போது,
உங்கள் உடை ஏன் சூடாகிறது என்று யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா?[h]
18 அவரோடு சேர்ந்து வானத்தை விரிக்க உங்களால் முடியுமா?[i]
பளபளப்பான உலோகத்தை* போல அதை உறுதியாக்க முடியுமா?
19 இப்போது அவரிடம் என்ன சொல்வது?
அவருக்கு எப்படிப் பதில் சொல்ல முடியும்? நாம் இருட்டில் இருக்கிறோமே.
20 நான் கடவுளிடம், 'உங்களுக்கு ஒரு விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும்' என்று சொல்ல முடியுமா?
அவருக்குத் தெரிய வேண்டிய ஒன்றை யாராவது இதுவரை சொன்னது உண்டா?[j]
21 மேகத்தில் மறைந்திருக்கும் சூரியனைக்கூட மனுஷனால் பார்க்க முடியாது.
அது வானத்தில் பிரகாசித்தாலும்,
காற்று அடித்து, மேகங்கள் கலைந்த பின்புதான் அவனுடைய கண்களுக்குத் தெரியும்.
22 வடக்கிலிருந்து தங்க நிறத்தில் ஒளிவீசுகிறது.
கடவுளுடைய மகத்துவம்[k] பிரமிக்க வைக்கிறது.
23 சர்வவல்லமையுள்ளவரை நம்மால் புரிந்துகொள்ளவே முடியாது.[l]
அவர் மகா வல்லமை உள்ளவர்.[m]
அவர் ஒருபோதும் நியாயத்தைப் புரட்ட மாட்டார்;[n] எப்போதும் நீதியாக நடந்துகொள்வார்.[o]

37:15 *வே.வா., "மேகங்களுக்குக் கட்டளை கொடுக்கிறார்." **37:16** *வே.வா., "எல்லா அறிவும் உள்ளவர்." **37:18** *வே.வா., "உலோகக் கண்ணாடியை."

24 அதனால், ஜனங்கள் அவருக்குப் பயந்து நடக்க வேண்டும்.[a]
தங்களுக்கே எல்லாம் தெரியும் என்று நினைக்கிற மேதாவிகளுக்கு
அவர் உதவி செய்யவே மாட்டார்"[b] என்று சொன்னார்.

38 அப்போது, புயல்காற்றிலிருந்து யெகோவா யோபுவிடம்,[c]
2 "நான் சொல்வதை மாற்றிப் பேசுவது யார்?
அறிவு இல்லாமல் பேசுவது யார்?[d]
3 மனுஷனே, தயவுசெய்து தயாராகு.
நான் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்.
4 நான் பூமிக்கு அஸ்திவாரம் போட்டபோது[e] நீ எங்கே இருந்தாய்?
உனக்குத் தெரியும் என்றால் சொல்.
5 அதற்கு அளவுகள் குறித்தது யார் என்று சொல்ல முடியுமா?
நூல் பிடித்து அதை அளந்தது யார் என்று தெரியுமா?
6 அதன் அஸ்திவாரம் எதன்மேல் போடப்பட்டது?
அதற்கு மூலைக்கல் வைத்தது யார்?[f]
7 விடியற்கால நட்சத்திரங்கள்[g] ஒன்றுசேர்ந்து சந்தோஷமாகப் பாடியபோது,
கடவுளுடைய தூதர்கள்*[h] சந்தோஷ ஆரவாரம் செய்தபோது,
நீ எங்கே இருந்தாய்?
8 கருப்பையிலிருந்து வருவதுபோல் கடல் புரண்டு வந்தபோது,
அதற்கு அணை போட்டது யார்?[i]
9 நான் மேகங்களால் அதைப் போர்த்தினேன்.
கருமேகங்களால் அதை மூடினேன்.
10 அதற்கு ஒரு எல்லைக்கோடு கிழித்தேன்.
கதவுகளும் தாழ்ப்பாள்களும் வைத்தேன்.[j]
11 'பொங்கிவரும் அலைகள் இதுவரை வரலாம், இதற்குமேல் வரக் கூடாது.
இந்தக் கோட்டைத் தாண்டக் கூடாது' என்று கட்டளை போட்டேன்;[k]
அப்போதெல்லாம் நீ எங்கே இருந்தாய்?
12 பொழுது விடிய வேண்டும் என்று நீ கட்டளை கொடுத்தது உண்டா?
அது எங்கே விடிய வேண்டும்[l] என்று நீ சொன்னது உண்டா?
13 அது பூமி முழுவதையும் வெளிச்சமாக்குகிறது.
கெட்டவர்களை ஓடி ஒளிய வைக்கிறது.[m]
14 களிமண்ணில் பதியும் முத்திரைபோல் பூமியின் தோற்றம் தெளிவாகத் தெரிகிறது.
அதன் இயற்கை அமைப்புகள் ஒரு உடையிலுள்ள வடிவங்கள்போல் பளிச்சென்று தெரிகின்றன.
15 கெட்டவர்கள் சுறுசுறுப்பாக இருக்கும் நேரம்* முடிவுக்கு வருகிறது.
அவர்களுடைய அட்டகாசம் அடங்குகிறது.
16 கடலுக்கு அடியிலுள்ள ஊற்றுகளை நீ பார்த்திருக்கிறாயா?
கடலின் ஆழங்களை ஆராய்ச்சி செய்திருக்கிறாயா?[n]

38:7 *நே.மொ., "மகன்கள் எல்லாரும்." 38:15 *வே.வா., "கெட்டவர்களின் பகல் வெளிச்சம்."

அதி. 37
a சங் 33:8 நீதி 1:7 மத் 10:28
b நீதி 3:7 மத் 11:25 ரோ 11:20 ரோ 12:16 1கொ 1:26

அதி. 38
c யாத் 19:16, 19 1ரா 19:11
d யோபு 42:3
e ஆதி 1:1 நெ 9:6 சங் 136:6 நீதி 8:29 எபி 1:10
f சங் 104:5
g வெளி 22:16
h ஆதி 6:2 1ரா 22:19 யோபு 1:6 யோபு 2:1 சங் 89:6
i சங் 33:7 நீதி 8:29
j ஆதி 1:9 எரே 5:22
k நீதி 8:29
l ஆதி 1:5 சங் 74:16
m யோபு 24:15 1தெ 5:7
n ஆதி 1:2 சங் 77:19

17 மரணத்தின் வாசலை[a] யாராவது உனக்குக் காட்டியிருக்கிறார்களா?
மரண இருளின் வாசலை[b] நீ பார்த்திருக்கிறாயா?
18 பூமி எவ்வளவு பெரியது என்று உனக்குத் தெரியுமா?[c]
இதற்கெல்லாம் உன்னிடம் பதில் இருந்தால் சொல்.
19 ஒளி எங்கிருந்து வருகிறது?[d]
இருள் எங்கிருந்து வருகிறது?
20 அங்கே போகும் வழி உனக்குத் தெரியுமா?
அங்கேயே அவற்றைத் திருப்பி அனுப்ப உன்னால் முடியுமா?
21 இதெல்லாம் படைக்கப்பட்ட சமயத்திலேயே நீ பிறந்துவிட்டாயோ?
காலம்காலமாக வாழ்ந்து, எல்லாவற்றையும் தெரிந்து
வைத்திருக்கிறாயோ?
22 நீ பனியின் கிடங்குக்குப் போயிருக்கிறாயா?[e]
ஆலங்கட்டியின்* கிடங்கைப் பார்த்திருக்கிறாயா?[f]
23 அவற்றை அழிவு நாளுக்காக நான் சேமித்து வைத்திருக்கிறேன்.
போர் நாளுக்காகச் சேர்த்து வைத்திருக்கிறேன்.[g]
24 ஒளி* எந்தத் திசையிலிருந்து சிதறுகிறது?
கிழக்குக் காற்று எங்கிருந்து புறப்பட்டு வருகிறது?[h]
25 மேலே உள்ள தண்ணீர் கீழே இறங்குவதற்குக் கால்வாய்
வெட்டியது யார்?
மழைமேகத்துக்கும் இடிமுழக்கத்துக்கும் வழியை உண்டாக்கியது யார்?[i]
26 மனுஷ நடமாட்டமே இல்லாத இடத்தில் மழையைக் கொட்டுவது யார்?
ஜனங்கள் வாழாத வனாந்தரத்தில் அதைப் பெய்ய வைப்பது யார்?[j]
27 மழைநீரால் பொட்டல் காடுகளைப் பசுமையாக்குவது யார்?
புல்பூண்டுகளை முளைக்கச் செய்வது யார்?[k]
28 மழையைப் பெற்றெடுத்தது யார்?[l]
பனித்துளியை உருவாக்கியது யார்?[m]
29 பனிக்கட்டியைப் பிறப்பித்தது யார்?
உறைபனியை உண்டாக்கியது யார்?[n]
30 தண்ணீரைக் கல் போல மாற்றுகிறவர் யார்?
கடலின் மேற்பரப்பை உறைய வைக்கிறவர் யார்?[o]
31 கிமா* நட்சத்திரக் கூட்டத்தை உன்னால் ஒன்றுசேர்த்துக் கட்ட
முடியுமா?
கீஸில்# நட்சத்திரக் கூட்டத்தின் கட்டை அவிழ்க்க முடியுமா?[p]
32 ஒரு நட்சத்திரக் கூட்டத்தை அதன் காலத்தில் வரப்பண்ண முடியுமா?
ஆஷ்* நட்சத்திரக் கூட்டத்துக்கு# வழி காட்ட முடியுமா?
33 வானத்தை இயக்கும் சட்டங்கள்[q] உனக்குத் தெரியுமா?
பூமியை அவை* இயக்கும்படி செய்ய உன்னால் முடியுமா?

38:22 * அதாவது, "பனிக்கட்டியின்." **38:24** * அல்லது, "மின்னல்." **38:31** * இது ரிஷப நட்சத்திரக் கூட்டத்தில் இருக்கும் கார்த்திகை நட்சத்திரங்களைக் குறிக்கலாம். # இது ஓரியன் நட்சத்திரக் கூட்டத்தைக் குறிக்கலாம். **38:32** * இது அர்சா மேஜர் என்ற பெருங்கரடி நட்சத்திரக் கூட்டத்தைக் குறிக்கலாம். # நே.மொ., "கூட்டத்துக்கும் அதன் மகன்களுக்கும்." **38:33** * அல்லது, "அவர்."

அதி. 38
a சங் 9:13, மத் 16:18
b யோபு 10:21, 22
c சங் 74:17, சங் 89:11
d ஏசா 45:7
e யோபு 37:6
f யோசு 10:11, ஏசா 30:30
g யாத் 9:24, எசே 13:13
h சங் 135:7
i யோபு 28:26
j சங் 104:13, சங் 107:35
k சங் 147:7, 8
l 1சா 12:18, ஏசா 30:23, எரே 5:24
m ஆதி 27:28
n சங் 147:16
o யோபு 37:10
p ஆமோ 5:8
q நீதி 3:19, எரே 31:35, எரே 33:25

34 மேகத்தை நீ சத்தம்போட்டு கூப்பிட முடியுமா?
உன்மேல் மழையைக் கொட்டும்படி சொல்ல முடியுமா?[a]
35 மின்னலைப் பார்த்து, 'புறப்பட்டுப் போ!' என்று கட்டளை கொடுக்க முடியுமா?
அது திரும்பி வந்து, 'இதோ, வந்துவிட்டேன்!' என்று உன்னிடம் சொல்லுமா?
36 மேகங்களுக்கு* ஞானத்தைக் கொடுத்தது யார்?[b]
வானத்துக்கு# புரிந்துகொள்ளும் திறனைத் தந்தது யார்?[c]
37 மேகங்களைக் கணக்கிடும் அளவுக்குப் புத்திசாலி யாராவது உண்டா?
வானத்தின் தண்ணீர் ஜாடிகளைச் சாய்க்கும் அளவுக்குத் திறமைசாலி யாராவது உண்டா?[d]
38 மழைநீரை மண்ணோடு கலந்து சேறாக ஓட வைக்கிறவர் யார்?
மண்கட்டிகளை ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ள வைக்கிறவர் யார்?
39 சிங்கம் குகையில் பதுங்கியிருக்கும்போது,
சீறிப் பாயக் காத்திருக்கும்போது,
40 அதற்காக நீ இரையை வேட்டையாடித் தர முடியுமா?
சிங்கக் குட்டிகளின் பசியைத் தீர்க்க முடியுமா?[e]
41 அண்டங்காக்கைக் குஞ்சுகள் பசியில் தள்ளாடும்போது,
கடவுளிடம் உதவி கேட்டுக் கெஞ்சும்போது,
அவற்றுக்கு உணவு தருவது யார்?"[f] என்று கேட்டார்.

39

பின்பு அவர்,
"வரையாடுகள் எப்போது குட்டிபோடும் என்று உனக்குத் தெரியுமா?[g]
மான்கள் குட்டிபோடுவதை நீ பார்த்திருக்கிறாயா?[h]
2 அவை எத்தனை மாதங்கள் குட்டிகளைச் சுமக்கும் என்று தெரியுமா?
எப்போது குட்டிபோடும் என்று தெரியுமா?
3 அவை குனிந்து, கால்களை மடக்கி, குட்டிகளைப் போடுகின்றன.
பின்பு வலியை மறந்துவிடுகின்றன.
4 அந்தக் குட்டிகள் வெட்டவெளியில் வளர்ந்து, புஷ்டியாகின்றன.
தாயைவிட்டுப் பிரிந்து போகின்றன, திரும்பி வருவதே இல்லை.
5 காட்டுக் கழுதையைச் சுதந்திரமாகத் திரியவிட்டது யார்?[i]
அதன் கயிறுகளை அவிழ்த்துவிட்டது யார்?
6 நான்தான் பாலைநிலத்தை அதற்கு வீடாகக் கொடுத்தேன்.
உப்புநிலத்தில் அதைத் தங்க வைத்தேன்.
7 நகரத்தின் சந்தடியை அது வெறுக்கிறது.
மனுஷன் அதட்டுவதைக் காதில் வாங்க மறுக்கிறது.
8 மேய்ச்சலுக்காக மலைகளில் திரிகிறது.
எல்லா விதமான புல்பூண்டுகளையும் தேடுகிறது.
9 காட்டு எருது உனக்கு வேலை செய்யுமா?[j]
ராத்திரியில் அது உன்னுடைய தொழுவத்தில் தங்குமா?

38:36 * அல்லது, "மனுஷர்களுக்கு." # அல்லது, "மனதுக்கு."

அதி. 38
a சக 10:1
b எரே 10:12
c சங் 136:5; நீதி 3:20
d எரே 10:13
e சங் 104:21; சங் 145:15, 16; நாகூ 2:12
f சங் 147:9; மத் 6:26; லூ 12:24

அதி. 39
g சங் 104:18
h சங் 29:9
i யோபு 24:5; சங் 104:10, 11
j உபா 33:17

10 அதைக் கயிற்றால் கட்டி உழுவதற்காகக் கொண்டுபோக உன்னால்
முடியுமா?
பள்ளத்தாக்கை உழுவதற்காக* அது உன் பின்னால் வருமா?
11 அதற்கு இருக்கும் அபார பலத்தை நம்பி,
கடினமான வேலைகளை அதற்குக் கொடுப்பாயா?
12 நீ அறுவடை செய்ததை அது சுமந்துவரும் என்று எதிர்பார்ப்பாயா?
களத்துமேட்டுக்கு அவற்றை எடுத்துக்கொண்டு வரும் என்று
காத்திருப்பாயா?
13 நெருப்புக்கோழி சந்தோஷமாகச் சிறகுகளை அடிக்கிறது.
ஆனால், நாரையின் சிறகுகளோடும் இறகுகளோடும் அவற்றை ஒப்பிட
முடியுமா?[a]
14 நெருப்புக்கோழி மண்ணைத் தோண்டி முட்டையிடுகிறது.
அங்கே அடைகாக்கிறது.
15 மனுஷனின் கால்பட்டு அது உடைந்துபோகுமே என்று
கவலைப்படுவதில்லை.
மிருகங்களால் மிதிபட்டு நொறுங்குமே என்றும் நினைப்பதில்லை.
16 இரக்கமே இல்லாமல் குஞ்சுகளை விட்டுவிட்டுப் போய்விடுகிறது.
அவை தன் குஞ்சுகள் என்பதையே மறந்துவிடுகிறது;[b]
முட்டை போட்டதும் அடைகாத்ததும் வீணாகிவிடுமே என்று அது
கவலைப்படுவது இல்லை.
17 கடவுள் அதற்கு ஞானம் கொடுக்கவில்லை.
புத்தியை* தரவில்லை.
18 ஆனால் அது எழுந்து, சிறகுகளை அடித்துக்கொண்டு ஓடும்போது,
குதிரையையும் குதிரைவீரனையும் பார்த்து சிரிக்கிறது.
19 அந்தக் குதிரைக்கு நீயா பலம் கொடுத்தாய்?[c]
அதன் கழுத்தில் நீயா பிடரிமயிரை வளர வைத்தாய்?
20 அதை வெட்டுக்கிளிபோல் துள்ள வைக்க உன்னால் முடியுமா?
அதனுடைய கம்பீரமான சத்தம் நடுநடுங்க வைக்கிறது.[d]
21 அது மண்ணைக் கிளறிக்கொண்டு, எகிறித் துள்ளி ஓடுகிறது.[e]
போர்க்களத்துக்கு வெறித்தனமாக ஓடுகிறது.[f]
22 பயம் என்றாலே அது அலட்சியமாகச் சிரிக்கிறது; எதற்குமே
பயப்படுவது இல்லை.[g]
வாளைப் பார்த்துக்கூட பின்வாங்குவது இல்லை.
23 அது ஓடும் வேகத்தில் வீரனின் அம்புகள் கலகலக்கின்றன.
அவனுடைய ஈட்டிகள் பளபளக்கின்றன.
24 அது துள்ளிக்கொண்டு, வெறித்தனமாகத் தாவி ஓடுகிறது.
ஊதுகொம்பை ஊதிவிட்டால் அதை யாரும் பிடித்து நிறுத்த முடியாது.*
25 ஊதுகொம்பின் சத்தம் கேட்டதும், சந்தோஷத்தில் கனைக்கிறது.
தூரத்திலிருந்தே போரை மோப்பம் பிடிக்கிறது.

அதி. 39
a சங் 104:17; சக 5:9
b புல 4:3
c சங் 147:10; ஏசா 31:1
d எரே 8:16
e நியா 5:22; சங் 32:9
f நீதி 21:31; எரே 46:9; எரே 47:3; ஆப 1:8
g ஏசா 5:28; எரே 8:6

39:10 * வே.வா., "உழுது சமப்படுத்துவதற்காக." **39:17** * வே.வா., "புரிந்துகொள்ளும் திறனை." **39:24** * அல்லது, "ஊதுகொம்பின் சத்தத்தை அது நம்புவதில்லை."

படைத் தளபதிகள் கட்டளையிடும் சத்தத்தையும் போர்
முழக்கத்தையும் கேட்கிறது.[a]
26 உன்னுடைய புத்தியால்தான்* வல்லூறு மேலே எழும்பி,
தெற்கே சிறகுகளை விரித்துப் பறக்கிறதா?
27 நீ கட்டளை கொடுத்ததால்தான் கழுகு மேலே பறக்கிறதா?[b]
நீ சொன்னதால்தான் அது உயரத்தில் கூடு கட்டுகிறதா?[c]
28 அல்லது, பாறை உச்சியில் இரவைக் கழிக்கிறதா?
மலைமேல் இருக்கிற அதன் கோட்டையில் தங்குகிறதா?
29 அவ்வளவு தூரத்திலிருந்து அது இரை தேடுகிறது.[d]
அவ்வளவு தொலைவிலிருந்து அதன் கண்கள் நோட்டமிடுகின்றன.
30 அதன் குஞ்சுகள் இரத்தத்தை உறிஞ்சும்.
பிணம் எங்கேயோ அங்கே அது இருக்கும்"[e] என்று சொன்னார்.

40 பின்பு யெகோவா யோபுவிடம்,
2 "சர்வவல்லமையுள்ளவரைக் குறை சொல்லி, யாராவது
அவரோடு வாதாட முடியுமா?[f]
அவரிடம் குற்றம் கண்டுபிடிக்க* நினைப்பவன் இதற்குப் பதில்
சொல்லட்டும்"[g] என்றார்.
3 அப்போது யோபு யெகோவாவிடம்,
4 "நான் எதற்குமே தகுதி இல்லாதவன்.[h]
என்னால் எப்படி உங்களுக்குப் பதில் சொல்ல முடியும்?
என் வாயைப் பொத்திக்கொள்கிறேன்.[i]
5 ஒன்றிரண்டு தடவை பேசிவிட்டேன், இனி பேச மாட்டேன்.
இனி வாயே திறக்க மாட்டேன்" என்று சொன்னார்.
6 அப்போது யெகோவா புயல்காற்றிலிருந்து யோபுவிடம்,[j]
7 "மனுஷனே, தயவுசெய்து தயாராகு.
நான் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்.[k]
8 என் தீர்ப்பையே நீ தப்பு என்று சொல்வாயா?
நீ செய்வதுதான் சரி என்பதுபோல் என்னைக் குற்றப்படுத்துவாயா?[l]
9 உன் கை உண்மைக் கடவுளுடைய கையைப் போலப் பலம் உள்ளதா?[m]
உன் குரல் அவருடைய குரல் போல முழங்குமா?[n]
10 உன் மேன்மையையும் மகிமையையும் கொஞ்சம் காட்டு.
உன் பெருமையையும் சிறப்பையும் காட்டு.
11 உன் கோபத்தையும் ஆவேசத்தையும் கொட்டு.
தலைக்கனம் பிடித்த எல்லாரையும் தலைகுனிய வை.
12 அகங்காரம் பிடித்த எல்லாரையும் அடக்கு.
கெட்டவர்களை அவர்கள் நிற்கும் இடத்திலேயே மிதித்துப் போடு.
13 அவர்கள் எல்லாரையும் மண்ணில் புதைத்துவிடு.
இருட்டுக்குள் கட்டிப்போடு.

39:26 *வே.வா., "புரிந்துகொள்ளும் திறனால்தான்." **40:2** *வே.வா., "அவரைக் கண்டிக்க."

அதி. 39
a எரே 46:4
b நீதி 23:5; ஏசா 40:31
c எரே 49:16; ஒப 4
d யோபு 9:26; எரே 49:22
e மத் 24:28

அதி. 40
f யோபு 33:12, 13; ஏசா 45:9
g யோபு 13:3; யோபு 23:3-5; யோபு 31:35
h யோபு 42:5, 6
i சங் 39:9; நீதி 30:32
j யோபு 38:1
k யோபு 38:3; யோபு 42:4
l சங் 51:4; ரோ 3:4
m யாத் 15:6; சங் 89:13; ஏசா 40:26; 1கொ 10:22
n யோபு 37:4; சங் 29:3

அதி. 40
a யோசு 3:15

அதி. 41
b சங் 104:25, 26

14 இப்படியெல்லாம் செய்ய முடிந்தால் நீ வல்லவன் என்று
ஒத்துக்கொள்வேன்.*
உன்னை நீயே காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று நம்புவேன்.
15 பிகெமோத்தை* கொஞ்சம் பார்; உன்னைப் படைத்தது போலத்தான்
அதையும் படைத்தேன்.
அது காளையைப் போலப் புல்லைத் தின்கிறது.
16 அதன் இடுப்பில் இருக்கும் பலத்தைப் பார்.
வயிற்றுத் தசைகளில் உள்ள சக்தியைப் பார்.
17 அது தன் வாலை, மரம்போல் நேராக நீட்டுகிறது.
அதன் தொடைகள் தசைநாண்களால் பின்னப்பட்டிருக்கின்றன.
18 அதன் எலும்புகள் செம்புக் குழாய்கள்.
அதன் கால்கள் உறுதியான இரும்புக் கம்பிகள்.
19 அது கடவுளுடைய படைப்புகளில் முதல் இடம் பிடிக்கிறது.
படைத்தவரால் மட்டும்தான் அதை வாளால் வெட்டி வீழ்த்த
முடியும்.
20 மலையெங்கும் உள்ள புல்பூண்டுகளை அது சாப்பிடுகிறது.
அதைச் சுற்றி காட்டு மிருகங்கள் விளையாடுகின்றன.
21 முட்புதர்களின் கீழ் அது படுத்துக்கொள்கிறது.
சேற்றில் வளரும் நாணல்களின் நிழலில் தங்குகிறது.
22 புதர்கள் அதற்கு நிழல் தருகின்றன.
பள்ளத்தாக்கின்* காட்டரசு மரங்கள் அதைச் சூழ்ந்து நிற்கின்றன.
23 ஆறு கரைபுரண்டு ஓடினாலும் அது பதறுவதில்லை.
யோர்தான் ஆற்றின்[a] வெள்ளம் அதன் முகத்தில் மோதினாலும்
அது பயப்படுவதில்லை.
24 யாராவது நேருக்குநேர் போய் அதைப் பிடிக்க முடியுமா?
கொக்கியால்* அதன் மூக்கைத் துளைக்க முடியுமா?” என்றார்.

41 பின்பு அவர்,
“லிவியாதானை*[b] தூண்டில் போட்டுப் பிடிக்க உன்னால் முடியுமா?
அதன் நாக்கைக் கயிற்றால் அழுத்திப் பிடிக்க முடியுமா?
2 அதற்கு மூக்கணாங்கயிறு போட முடியுமா?
அதன் தாடைகளைக் கொக்கியால்* துளைக்க முடியுமா?
3 அது உன்னைப் பார்த்துக் கெஞ்சுமா?
சாந்தமாகப் பேசுமா?
4 அது உன்னோடு ஒப்பந்தம் செய்துகொண்டு,
கடைசி வரைக்கும் உனக்கு அடிமையாக இருக்குமா?
5 குருவியைக் கொஞ்சுவதுபோல் அதை நீ கொஞ்சுவாயா?
உன் செல்ல மகள்கள் விளையாடுவதற்காக அதைக் கட்டிப்
போடுவாயா?

40:14 *வே.வா., “பாராட்டுவேன்.” **40:15** *அதாவது, “நீர்யானையை.” **40:22** *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கின்.” **40:24** *நே.மொ., “கண்ணியால்.” **41:1** *ஒருவேளை, “முதலையை.” **41:2** *நே.மொ., “முள்ளால்.”

6 வியாபாரிகள் அதன் விலையைப் பேரம் பேச முடியுமா?
அதைக் கூறு போட்டு விற்க முடியுமா?
7 அதன் தோலை அம்புகளால் துளைக்க உன்னால் முடியுமா?[a]
அதன் தலையில் ஈட்டிகளைப் பாய்ச்ச முடியுமா?
8 அதன்மேல் உன் கையை வைத்துப் பார்.
அது உன்னை உண்டு இல்லை என்றாக்கிவிடும்; அதன் பிறகு அந்தப் பக்கமே நீ போக மாட்டாய்.
9 அதை ஜெயிக்க முடியும் என்று கற்பனைகூட செய்யாதே.
அதைப் பார்த்தாலே விழுந்தடித்து ஓடுவாய்.
10 அதைச் சீண்டிப் பார்க்க ஒருவனுக்கும் துணிச்சல் வராது.
அப்படியென்றால், என்னோடு மோத யாரால் முடியும்?[b]
11 நான் கைமாறு செய்யும்படி முன்னதாகவே எனக்கு எதையாவது கொடுத்தவன் யார்?[c]
வானத்தின் கீழிருக்கிற எல்லாமே எனக்குத்தான் சொந்தம்.[d]
12 லிவியாதானின் உறுப்புகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?
அதன் பலத்தையும் அழகான வடிவத்தையும் பற்றிச் சொல்கிறேன், கேள்.
13 அதன் தோலை யாராவது உரித்திருக்கிறார்களா?
அதன் வாய்க்குள் யாராவது நுழைந்திருக்கிறார்களா?
14 அதன் வாயைப் பிளக்க யாருக்காவது துணிச்சல் வருமா?
அதன் பற்களைப் பார்த்து நடுங்காதவர்கள் உண்டா?
15 அதன் முதுகில் அடுக்கடுக்காகச் செதில்கள் இருக்கும்.*
அந்தச் செதில்கள் நெருக்க நெருக்கமாக இருக்கும்.
16 காற்று போகக்கூட இடைவெளி இருக்காது.
அவ்வளவு இறுக்கமாக இணைந்திருக்கும்.
17 அவை நன்றாக ஒட்டிக்கொண்டிருக்கும்.
பிரிக்க முடியாத அளவுக்குப் பிணைந்திருக்கும்.
18 அது தும்மல் போடும்போது மின்னல் வெட்டுவதுபோல் இருக்கும்.
கண்களைத் திறக்கும்போது சூரியன் உதிப்பதுபோல் இருக்கும்.
19 அதன் வாயிலிருந்து தீப்பிழம்புகள் புறப்படும்.
தீப்பொறிகள் பறக்கும்.
20 எரியும்* உலையிலிருந்து புகை எழும்புவது போல,
அதன் மூக்கிலிருந்து புகை எழும்பும்.
21 அதன் மூச்சுக்காற்று நிலக்கரியைக்கூட கொளுத்திவிடும்.
அதன் வாயிலிருந்து தீ ஜுவாலை புறப்படும்.
22 அதன் கழுத்தில் அதிக பலம் இருக்கும்.
அதன் முன்னால் வருபவர்களுக்குக் குலைநடுங்கும்.
23 அதன் வயிற்றுப் பகுதி மடிப்பு மடிப்பாக இருக்கும்.

41:15 * அல்லது, "அடுக்கடுக்கான செதில்கள் அதற்குப் பெருமை சேர்க்கும்." **41:20** * வே.வா., "காய்ந்த நாணற்புல்லினால் எரியும்."

அதி. 41
a யோபு 41:26
b 2நா 20:6
தானி 4:35
அப் 11:17
ரோ 9:19
c ரோ 11:35
d உபா 10:14
சங் 24:1
சங் 50:12
1கொ 10:26

அது இரும்புபோல் கெட்டியாகவும் அசைக்க முடியாததாகவும்
இருக்கும்.
24 அதன் இதயம் ஒரு பாறையைப் போன்றது.
மாவு அரைக்கும் கல்லை* போல் கடினமானது.
25 அது எழும்பும்போது பலசாலிகள்கூட பயந்து நடுங்குவார்கள்.
அது வாலை அடித்துக்கொண்டு நீந்தும்போது மிரண்டுபோவார்கள்.
26 ஈட்டியும் வேலும் அம்பும் அதைத் துளைக்காது.
எந்த வாளும் அதை ஊடுருவாது.[a]
27 அதற்கு இரும்புகூட வெறும் துரும்பு.
செம்புகூட உளுத்துப்போன மரக்கொம்பு.
28 அம்புகளை எறிந்தாலும் அது ஓடாமல் நிற்கும்.
கற்களைச் சுழற்றி வீசினாலும் தூசிபோல் உதறித்தள்ளும்.
29 பெரிய தடியைக்கூட ஒரு புல்லைப் போலப் பார்க்கும்.
ஈட்டியின் சத்தம் கேட்டு கிண்டலாகச் சிரிக்கும்.
30 அதன் அடிப்பகுதி கூர்மையான ஓடுகளை அடுக்கி வைத்ததுபோல்
இருக்கும்.
ஒரு பெரிய மரப்பலகையை* போல அது சேற்றில் நகர்ந்து போகும்.[b]
31 அது ஆவேசமாக நீந்தும்போது, உலைபானையைப் போலக் கடல்*
பொங்கியெழும்.
எண்ணெய்ச் சட்டியில் நுரை வருவது போலக் கடலில் நுரை வரும்.
32 அது நீந்திப்போகிற வழியெல்லாம் வெள்ளி போல மின்னும்.
கடலுக்கு நரை தட்டியது போலத் தெரியும்.
33 பூமியில் அது போன்ற பிராணியே கிடையாது.
அதற்கு இருக்கும் துணிச்சல் வேறு எதற்குமே கிடையாது.
34 கர்வமுள்ள எல்லா பிராணிகளையும் அது முறைத்துப் பார்க்கிறது.
பலம் படைத்த எல்லா காட்டு மிருகங்களுக்கும் அதுவே ராஜா” என்று
சொன்னார்.

42 அப்போது யோபு யெகோவாவிடம்,
2 “உங்களால் செய்ய முடியாதது எதுவுமே இல்லை என்று
புரிந்துகொண்டேன்.
நினைப்பதையெல்லாம் செய்ய உங்களால் முடியும் என்று
தெரிந்துகொண்டேன்.[c]
3 ‘நான் சொல்வதை அறிவே இல்லாமல் மாற்றிப் பேசுவது யார்?’[d] என்று
நீங்கள் கேட்டீர்கள்.
உண்மையில், நான்தான் புரிந்துகொள்ளாமல் பேசிவிட்டேன்.
என் புத்திக்கு எட்டாத விஷயங்களைப்[e] பற்றித் தப்பாகப்
பேசிவிட்டேன்.
4 நீங்கள் என்னிடம், ‘நான் பேசுவதைத் தயவுசெய்து கேள்.
நான் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்’[f] என்றீர்கள்.

41:24 *வே.வா., “திரிகைக் கல்லின் அடிக்கல்லை.” **41:30** *அதாவது, “தானியங்களைப் போரடிக்கும் பலகையை.” **41:31** *இதற்கான எபிரெய வார்த்தை பெரிய ஆற்றையும் குறிக்கலாம்.

அதி. 41
a யோபு 41:7
b ஏசா 41:15

அதி. 42
c ஆதி 18:14; சங் 135:6; ஏசா 43:13; ஏசா 55:10, 11; எரே 32:17; மாற் 10:27; லூ 18:27
d யோபு 38:2
e சங் 40:5; சங் 139:6
f யோபு 38:3; யோபு 40:7

5 உங்களைப் பற்றி என் காதுகளால் கேட்டிருக்கிறேன்.
இப்போது என் கண்களாலேயே உங்களைப் பார்க்கிறேன்.
6 அதனால், நான் சொன்னதையெல்லாம் திரும்ப*
வாங்கிக்கொள்கிறேன்.[a]
மண்ணிலும் சாம்பலிலும் உட்கார்ந்து வருத்தப்படுகிறேன்”[b] என்று
சொன்னார்.

7 யெகோவா யோபுவிடம் பேசிய பின்பு தேமானியனான எலிப்பாசிடம்
பேசினார். யெகோவா அவனிடம்,

“உன்மேலும் உன் நண்பர்கள்மேலும்[c] என் கோபம் பற்றியெரிகிறது.
என் ஊழியன் யோபு என்னைப் பற்றிச் சரியாகப் பேசியதுபோல் நீங்கள்
பேசவில்லை.[d] 8 இப்போது ஏழு காளைகளையும் ஏழு செம்மறியாட்டுக்
கடாக்களையும் எடுத்துக்கொண்டு என் ஊழியன் யோபுவிடம் போங்கள்.
அங்கே உங்கள் பாவத்துக்காக அவற்றைத் தகன பலி செலுத்துங்கள். என்
ஊழியன் யோபு உங்களுக்காக ஜெபம் செய்வான்.[e] அவன் என்னைப் பற்றிச் சரியாகப் பேசியதுபோல் நீங்கள் பேசவில்லை. ஆனாலும், உங்களுடைய முட்டாள்தனத்துக்காக உங்களைத் தண்டிக்க வேண்டாமென்று அவன் என்னிடம் கெஞ்சுவான். என் ஊழியன் யோபுவுடைய ஜெபத்தை நான் நிச்சயமாகக் கேட்பேன்” என்றார்.

9 தேமானியனான எலிப்பாசும், சுவாகியனான பில்தாத்தும், நாகமாத்தியனான சோப்பாரும் யெகோவா சொன்னபடியே செய்தார்கள். யெகோவாவும் யோபு செய்த ஜெபத்தைக் கேட்டார்.

10 நண்பர்களுக்காக யோபு ஜெபம் செய்த பின்பு[f] அவருடைய எல்லா
கஷ்டங்களையும் யெகோவா தீர்த்தார்.[g] மறுபடியும் சீரும் சிறப்புமாக
வாழ வைத்தார். முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு ஆசீர்வாதங்களை
யெகோவா தந்தார்.[h] 11 யோபுவின் சகோதரர்களும் சகோதரிகளும் நண்
பர்களும்[i] அவருடைய வீட்டுக்கு வந்து அவரோடு விருந்து சாப்பிட்டார்கள். அவருக்குப் பல கஷ்டங்கள் வரும்படி யெகோவா அனுமதித்திருந்ததை நினைத்து அவர்மேல் அனுதாபப்பட்டார்கள், அவருக்கு ஆறுதல் சொன்னார்கள். பின்பு, ஆளுக்கொரு வெள்ளிக் காசையும் தங்க வளையத்தையும் அவருக்குக் கொடுத்தார்கள்.

12 யெகோவா முன்பைவிட அதிகமாக யோபுவை ஆசீர்வதித்தார்.[j]
14,000 ஆடுகளையும் 6,000 ஒட்டகங்களையும் 1,000 ஜோடி மாடுகளையும்
1,000 கழுதைகளையும்* கொடுத்தார்.[k] 13 யோபுவுக்குத் திரும்பவும் ஏழு
மகன்களும் மூன்று மகள்களும் பிறந்தார்கள்.[l] 14 மூத்த மகளின் பெயர்
எமீமாள், அடுத்தவள் பெயர் கெத்சீயாள், கடைசி மகளின் பெயர் கேரே
னாப்புக். 15 யோபுவின் மகள்களைப் போல அழகான பெண்கள் அந்தத்
தேசத்திலேயே இருக்கவில்லை. மகன்களுக்குக் கொடுத்தது போலவே மகள்களுக்கும் யோபு சொத்துகளைக் கொடுத்தார்.

16 அதன் பிறகு யோபு 140 வருஷங்கள் உயிர்வாழ்ந்து, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள் என நான்கு தலைமுறையைப் பார்த்தார். 17 இப்படி,
யோபு நிறைய காலம் மனநிறைவோடு வாழ்ந்து, பின்பு இறந்துபோனார்.

42:6 * வே.வா., “வாபஸ்.” 42:12 * நே.மொ., “பெட்டைக் கழுதைகளையும்.”

அதி. 42
a யோபு 40:4
b எஸ்றா 9:6; சங் 51:17
c யோபு 2:11
d யோபு 11:6; யோபு 15:14, 15; யோபு 22:2, 3
e ஆதி 20:17; யாக் 5:15
f மத் 6:14
g யோபு 2:6, 7; யாக் 5:11
h ஆதி 32:10; 1சா 2:7; 2நா 25:9; நீதி 22:4; ஏசா 61:7
i யோபு 19:13
j நீதி 3:33; நீதி 10:22; எபி 11:6; யாக் 5:11
k யோபு 1:3
l யோபு 1:1, 2

சங்கீத புத்தகம்

முக்கியக் குறிப்புகள்

1 வித்தியாசமான இரண்டு பாதைகள்
- கடவுளுடைய சட்டத்தைப் படிப்பதால் வரும் சந்தோஷம் (2)
- நீதிமான்கள் கனி தருகிற மரம்போல் இருக்கிறார்கள் (3)
- பொல்லாதவர்கள் பதரைப் போல் இருக்கிறார்கள் (4)

2 யெகோவாவும் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும்
- யெகோவா தேசங்களைப் பார்த்துச் சிரிக்கிறார் (4)
- யெகோவா ஒரு ராஜாவை நியமிக்கிறார் (6)
- மகனுக்கு மதிப்புக் கொடுங்கள் (12)

3 ஆபத்துகளின் மத்தியிலும் கடவுள்மேல் நம்பிக்கை
- 'ஏன் இத்தனை எதிரிகள்?' (1)
- 'யெகோவாதான் மீட்பு தருகிறவர்' (8)

4 நம்பிக்கையோடு செய்யப்படும் ஜெபம்
- "கோபம் வந்தாலும் பாவம் செய்யாதீர்கள்" (4)
- "நான் நிம்மதியாகப் படுத்துத் தூங்குவேன்" (8)

5 யெகோவா நீதிமான்களுக்குத் தஞ்சம்
- அக்கிரமத்தைக் கடவுள் வெறுக்கிறார் (4, 5)
- "உங்களுடைய நீதியான பாதையில் என்னை வழிநடத்துங்கள்" (8)

6 கருணைக்காகக் கெஞ்சுதல்
- இறந்தவர்களால் கடவுளைப் புகழ முடியாது (5)
- கருணைக்காகக் கெஞ்சும்போது கடவுள் கேட்கிறார் (9)

7 யெகோவா நீதி தவறாத நீதிபதி
- 'யெகோவாவே, எனக்குத் தீர்ப்பு கொடுங்கள்' (8)

8 கடவுளுடைய மகிமையும் மனிதனுடைய மதிப்பும்
- 'உங்கள் பெயர் எவ்வளவு மகத்தானது!' (1, 9)
- 'அற்ப மனுஷன் ஒரு பொருட்டா?' (4)
- 'மனுஷனுக்கு மேன்மையைக் கிரீடமாகச் சூட்டினீர்கள்' (5)

9 கடவுளுடைய அற்புதமான செயல்களைப் பற்றி அறிவித்தல்
- யெகோவா பாதுகாப்பான அடைக்கலமாக இருக்கிறார் (9)
- கடவுளுடைய பெயரைத் தெரிந்தவர்கள் அவர்மேல் நம்பிக்கை வைப்பார்கள் (10)

10 ஆதரவற்றவர்களுக்கு யெகோவாவே துணை
- பொல்லாதவன் ஆணவத்தோடு, "கடவுளே இல்லை" என்கிறான் (4)
- ஆதரவற்றவன் யெகோவாவைத் தேடி வருகிறான் (14)
- "யெகோவா என்றென்றும் ராஜாவாக இருக்கிறார்" (16)

11 யெகோவாவிடம் தஞ்சம் புகுதல்
- "யெகோவா தன்னுடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்" (4)
- வன்முறையை விரும்புகிறவனைக் கடவுள் வெறுக்கிறார் (5)

12 யெகோவா நடவடிக்கை எடுக்கிறார்
- கடவுளுடைய வார்த்தைகள் சுத்தமானவை (6)

13 யெகோவா தரும் மீட்புக்காக ஏங்குதல்
- "யெகோவாவே, எத்தனை நாளைக்குத்தான்?" (1, 2)
- யெகோவா அளவில்லாமல் ஆசீர்வதிக்கிறார் (6)

14 முட்டாள்களைப் பற்றிய விவரிப்பு
- "யெகோவா என்று யாருமே கிடையாது" (1)
- "நல்லது செய்கிறவர்கள் யாருமே இல்லை" (3)

15 யெகோவாவின் கூடாரத்தில் யார் விருந்தாளியாக இருக்க முடியும்?
- இதயத்தில் உண்மையைப் பேசுகிறவன் (2)
- இல்லாததையும் பொல்லாததையும் பேசாதவன் (3)
- கஷ்டமாக இருந்தாலும் வாக்கு மீறாதவன் (4)

16 யெகோவா, நல்லதையெல்லாம் தருகிறவர்
- "யெகோவாதான் என் பங்கு" (5)
- 'ராத்திரியில் என் யோசனைகள் என்னைத் திருத்துகின்றன' (7)

‘யெகோவா என் வலது பக்கத்தில் இருக்கிறார்’ (8)

“என்னைக் கல்லறையில் விட்டுவிட மாட்டீர்கள்” (10)

17 பாதுகாப்புக்காக ஜெபம்

“என் இதயத்தை ஆராய்ந்து பார்த்திருக்கிறீர்கள்” (3)

“உங்களுடைய சிறகுகளின் நிழலில்” (8)

18 மீட்புக்காகக் கடவுளைப் புகழ்தல்

“யெகோவாதான் என்னுடைய மாபெரும் கற்பாறை” (2)

உண்மையுள்ளவர்களுக்கு யெகோவா உண்மையுள்ளவர் (25)

கடவுளுடைய வழிகள் குறை இல்லாதவை (30)

“உங்கள் மனத்தாழ்மையால் என்னை உயர்த்துகிறீர்கள்” (35)

19 கடவுளுடைய படைப்பும் சட்டமும் சாட்சி சொல்கின்றன

“வானம் கடவுளுடைய மகிமையைச் சொல்கிறது” (1)

கடவுளுடைய குறையற்ற சட்டம் தெம்பூட்டுகிறது (7)

‘நான் தெரியாமல் செய்த தவறுகள்’ (12)

20 கடவுள் தேர்ந்தெடுத்த ராஜாவுக்கு மீட்பு

“யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்கிறோம்” (7)

21 யெகோவாமேல் நம்பிக்கை வைத்திருக்கும் ராஜாவுக்கு ஆசீர்வாதங்கள்

ராஜாவுக்கு நீண்ட ஆயுள் (4)

கடவுளுடைய எதிரிகள் தோற்கடிக்கப்படுவார்கள் (8-12)

22 முதலில் வேதனைப்படுகிறார், பின்பு புகழ்கிறார்

“என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்கள்?” (1)

“என்னுடைய உடைக்காகக் குலுக்கல் போடுகிறார்கள்” (18)

சபை நடுவில் கடவுளைப் புகழ்தல் (22, 25)

பூமியிலுள்ள எல்லாரும் கடவுளை வணங்குவார்கள் (27)

23 ‘யெகோவா என் மேய்ப்பர்’

“எனக்கு ஒரு குறையும் வராது” (1)

“எனக்குப் புத்துணர்ச்சி தருகிறார்” (3)

“என் கிண்ணம் நிரம்பி வழிகிறது” (5)

24 மகிமையுள்ள ராஜா நுழைவாசல்கள் வழியாக உள்ளே வருகிறார்

‘பூமி யெகோவாவுக்குத்தான் சொந்தம்’ (1)

25 வழிநடத்துதலுக்காகவும் மன்னிப்புக்காகவும் ஜெபம்

“உங்களுடைய வழிகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்” (4)

“யெகோவா நெருங்கிய நண்பராக இருக்கிறார்” (14)

“என் பாவங்களையெல்லாம் மன்னித்துவிடுங்கள்” (18)

26 உத்தமமாக நடப்பது

“யெகோவாவே, என்னை ஆராய்ந்து பாருங்கள்” (2)

கெட்ட சகவாசத்தைத் தவிர்த்தல் (4, 5)

‘கடவுளுடைய பலிபீடத்தைச் சுற்றிவருவேன்’ (6)

27 யெகோவா என் உயிரைப் பாதுகாக்கிற கோட்டை

கடவுளுடைய ஆலயத்தைப் பிரமிப்போடு ரசிப்பது (4)

பெற்றோர் கைவிட்டாலும் யெகோவா கவனித்துக்கொள்வார் (10)

“யெகோவாமேல் நம்பிக்கையாக இரு” (14)

28 சங்கீதக்காரனின் ஜெபம் கேட்கப்படுகிறது

“யெகோவா என் பலம், என் கேடயம்” (7)

29 யெகோவாவின் மகா கம்பீரமான குரல்

பரிசுத்த உடையில் வணங்குங்கள் (2)

“மகிமையான கடவுள் இடிபோல் முழங்குகிறார்” (3)

யெகோவா தன்னுடைய மக்களுக்குப் பலம் தருகிறார் (11)

30 துக்கம் சந்தோஷமாக மாறியது

கடவுளுடைய கருணை ஆயுள் முழுக்க நீடிக்கும் (5)

31 யெகோவாவிடம் அடைக்கலம் புகுதல்

“என் உயிரை உங்களுடைய கையில் ஒப்படைக்கிறேன்” (5)

‘யெகோவா, சத்தியத்தின் கடவுள்’ (5)

கடவுள் தரும் ஏராளமான நன்மைகள் (19)

32 மன்னிக்கப்பட்டவர்கள் சந்தோஷமானவர்கள்

“என் பாவத்தை உங்களிடம் ஒத்துக்கொண்டேன்” (5)

கடவுள் விவேகத்தைத் தருகிறார் (8)

33 படைப்பாளரைப் புகழ்தல்
“அவருக்காகப் புதிய பாடல் பாடுங்கள்” (3)
யெகோவாவின் வார்த்தையாலும் சுவாசத்தாலும் எல்லாமே உருவாக்கப்பட்டது (6)
யெகோவாவின் தேசம் சந்தோஷமானது (12)
யெகோவாவின் கண்கள் உன்னிப்பாகக் கவனிக்கின்றன (18)

34 யெகோவா தன் ஊழியர்களை விடுவிக்கிறார்
“நாம் ஒன்றுசேர்ந்து அவருடைய பெயரை மெச்சிப் பேசலாம்” (3)
யெகோவாவின் தூதர் பாதுகாக்கிறார் (7)
“யெகோவா நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்” (8)
‘அவருடைய எலும்புகளில் ஒன்றுகூட முறிக்கப்படுவதில்லை’ (20)

35 எதிரிகளிடமிருந்து விடுவிக்கப்படுவதற்காகச் செய்யப்படும் ஜெபம்
எதிரிகள் விரட்டியடிக்கப்படுவார்கள் (5)
மக்கள் கூட்டத்தின் நடுவில் கடவுளைப் புகழ்தல் (18)
காரணமில்லாமல் வெறுக்கப்படுதல் (19)

36 கடவுளுடைய மாறாத அன்பு அருமையானது
பொல்லாதவனுக்குக் கடவுள்பயம் இல்லை (1)
கடவுள்தான் உயிரின் ஊற்று (9)
“உங்களுடைய ஒளியால் நாங்கள் வெளிச்சத்தைப் பார்க்கிறோம்” (9)

37 யெகோவாமேல் நம்பிக்கை வைப்பவர்கள் செழிப்பார்கள்
அக்கிரமக்காரர்களைப் பார்த்து எரிச்சலடையக் கூடாது (1)
“யெகோவாவை வணங்குவதில் அளவில்லாமல் சந்தோஷப்படு” (4)
“உன் வழியை யெகோவாவிடம் ஒப்படைத்துவிடு” (5)
“தாழ்மையானவர்கள் இந்தப் பூமியைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்” (11)
நீதிமானுக்கு உணவு இல்லாமல் போகாது (25)
நீதிமான்கள் பூமியில் என்றென்றும் வாழ்வார்கள் (29)

38 மனம் திருந்திய ஒருவர் வேதனையோடு செய்யும் ஜெபம்
“வேதனையில் துடிக்கிறேன், மிகவும் நொந்துபோய் இருக்கிறேன்” (6)
தனக்காகக் காத்திருக்கிறவர்களுக்கு யெகோவா பதில் கொடுக்கிறார் (15)
“என் பாவம் என்னை வாட்டி வதைத்தது” (18)

39 வாழ்க்கை குறுகியது
மனிதன் வெறும் மூச்சுக்காற்றுதான் (5, 11)
“என் கண்ணீரைப் பார்க்காமல் இருந்துவிடாதீர்கள்” (12)

40 நிகரற்ற கடவுளுக்கு நன்றி சொல்லுதல்
கடவுளுடைய செயல்கள் கணக்கில் அடங்காதவை (5)
பலிகளை மட்டுமே கடவுள் முக்கியமானதாக நினைப்பதில்லை (6)
“உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் எனக்குச் சந்தோஷம்” (8)

41 சுகமில்லாமல் படுத்துக் கிடக்கும்போது செய்யப்படும் ஜெபம்
சுகமில்லாமல் கிடக்கிறவனைக் கடவுள் தாங்குகிறார் (3)
நெருங்கிய நண்பனின் துரோகம் (9)

42 மகத்தான மீட்பராகிய கடவுளைப் புகழ்தல்
ஒரு மான் தண்ணீருக்காக ஏங்குவது போல, கடவுளுக்காக ஏங்குதல் (1, 2)
“நான் ஏன் இப்படித் தவிக்கிறேன்?” (5, 11)
“கடவுளுக்காகக் காத்திரு” (5, 11)

43 கடவுள் தீர்ப்பு கொடுத்து, காப்பாற்றுகிறார்
“உங்களுடைய ஒளியையும் சத்தியத்தையும் அனுப்புங்கள்” (3)
“நான் ஏன் இப்படித் தவிக்கிறேன்?” (5)
“கடவுளுக்காகக் காத்திரு” (5)

44 உதவிக்காக ஜெபம்
“எங்களைக் காப்பாற்றியவர் நீங்கள்தான்” (7)
“வெட்டப்படுகிற ஆடுகள் போல” (22)
“எங்களுக்கு உதவி செய்ய எழுந்து வாருங்கள்!” (26)

45 அபிஷேகம் செய்யப்பட்ட ராஜாவின் கல்யாணம்
கனிவான பேச்சு (2)
“கடவுள்தான் என்றென்றும் உங்களுடைய சிம்மாசனம்” (6)
மணப்பெண்ணின் அழகில் ராஜா மயங்குகிறார் (11)
பூமியெங்கும் அதிபதிகளாக நியமிக்கப்படும் மகன்கள் (16)

46 “கடவுள்தான் நம் அடைக்கலம்”
கடவுளின் பிரமிப்பான செயல்கள் (8)
பூமி முழுவதும் போர்களுக்குக் கடவுள் முடிவுகட்டுகிறார் (9)

47 பூமி முழுவதுக்கும் கடவுள்தான் ராஜா
“யெகோவா பயபக்திக்குரியவர்” (2)
கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள் (6, 7)

48 சீயோன், மகா ராஜாவின் நகரம்
உலகத்துக்கே சந்தோஷம் தருகிறது (2)
நகரத்தையும் அதன் கோட்டைகளையும் ஆராய்ந்து பாருங்கள் (11-13)

49 சொத்துகளை நம்புவது முட்டாள்தனம்
எந்த மனிதனாலும் இன்னொருவனின் உயிரை மீட்கவே முடியாது (7, 8)
கல்லறையிலிருந்து கடவுள் விடுவிக்கிறார் (15)
சொத்துப்பத்துகள் எதுவும் சாவிலிருந்து காப்பாற்றாது (16, 17)

50 உண்மையுள்ளவனுக்கும் பொல்லாதவனுக்கும் கடவுள் தீர்ப்பு கொடுக்கிறார்
பலியின் அடிப்படையில் கடவுளோடு செய்யப்படும் ஒப்பந்தம் (5)
“கடவுள்தான் நீதிபதி” (6)
எல்லா மிருகங்களும் கடவுளுடையவை (10, 11)
பொல்லாதவர்களின் செயல்களைக் கடவுள் வெட்டவெளிச்சமாக்குகிறார் (16-21)

51 மனம் திருந்தியவரின் ஜெபம்
தாயின் வயிற்றில் உருவானபோதே பாவிதான் (5)
“என் பாவத்தை நீக்குங்கள்” (7)
“சுத்தமான இதயத்தை எனக்குள் உருவாக்குங்கள்” (10)
நொறுங்கிய நெஞ்சம் கடவுளுக்குப் பிரியமானது (17)

52 கடவுளுடைய மாறாத அன்பை நம்புதல்
கெட்டதைப் பற்றிப் பெருமையடிப்பவர்களுக்கு எச்சரிக்கை (1-5)
கடவுளை நம்பாதவர்கள் சொத்துப்பத்துகளை நம்புகிறார்கள் (7)

53 முட்டாள்களைப் பற்றிய விவரிப்பு
“யெகோவா என்று யாருமே கிடையாது” (1)
“நல்லது செய்கிறவர்கள் யாருமே இல்லை” (3)

54 எதிரிகள் சூழ்ந்திருக்கும்போது உதவிக்காகச் செய்யும் ஜெபம்
“கடவுள் எனக்குத் துணையாக இருக்கிறார்” (4)

55 நண்பன் துரோகம் பண்ணியபோது செய்த ஜெபம்
நெருங்கிய நண்பனால் நோகடிக்கப்படுதல் (12-14)
“யெகோவாமேல் உன் பாரத்தைப் போட்டுவிடு” (22)

56 துன்புறுத்தப்படும்போது செய்யும் ஜெபம்
“கடவுள்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறேன்” (4)
‘என் கண்ணீர்த் துளிகள் உங்கள் தோல் பையில்’ (8)
“அற்ப மனுஷனால் என்னை என்ன செய்ய முடியும்?” (4, 11)

57 கருணை காட்ட வேண்டுதல்
கடவுளுடைய சிறகுகளின் கீழ் தஞ்சம் (1)
எதிரிகள் தோண்டிய குழியில் அவர்களே விழுகிறார்கள் (6)

58 பூமியை நியாயந்தீர்க்கிற கடவுள் ஒருவர் இருக்கிறார்
பொல்லாதவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று செய்யப்படும் ஜெபம் (6-8)

59 கடவுள் கேடயமும் அடைக்கலமுமாக இருக்கிறார்
‘துரோகம் செய்கிறவர்களுக்கு இரக்கம் காட்டாதீர்கள்’ (5)
“நான் உங்களுடைய பலத்தைப் பற்றிப் புகழ்ந்து பாடுவேன்” (16)

60 கடவுள் எதிரிகளை அடக்கிவிடுகிறார்
மனிதர்கள் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் (11)
“கடவுள் எங்களுக்குப் பலம் கொடுப்பார்” (12)

61 கடவுள், எதிரியிடமிருந்து பாதுகாக்கிற பலமான கோட்டை
“நான் என்றென்றும் உங்களுடைய கூடாரத்தில் விருந்தாளியாக இருப்பேன்” (4)

62 உண்மையான மீட்பு கடவுளிடமிருந்து வருகிறது
“கடவுளுக்காக அமைதியாய்க் காத்திருக்கிறேன்” (1, 5)

‘உங்கள் இதயத்தில் இருப்பதைக் கடவுள்முன் ஊற்றிவிடுங்கள்’ (8)
மனிதர்கள் எல்லாரும் வெறும் மூச்சுக்காற்றுதான் (9)
செல்வத்தின் மேல் நம்பிக்கை வைக்காதீர்கள் (10)

63 கடவுளுக்காக ஏங்குதல்
“உங்களுடைய மாறாத அன்பு உயிரைவிட மேலானது” (3)
‘அருமையான விருந்தைச் சாப்பிட்டது போன்ற திருப்தி’ (5)
ராத்திரியில் கடவுளைப் பற்றித் தியானித்தல் (6)
‘கடவுளை இறுக்கமாகப் பிடித்திருக்கிறேன்’ (8)

64 மறைவான தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு
“கடவுள் அவர்கள்மேல் அம்பு எறிவார்” (7)

65 பூமியைக் கடவுள் அக்கறையோடு கவனித்துக்கொள்கிறார்
‘ஜெபத்தைக் கேட்கிறவர்’ (2)
‘உங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர் சந்தோஷமானவர்’ (4)
கடவுள் ஏராளமான நன்மைகளைப் பொழிகிறார் (11)

66 கடவுளுடைய பிரமிப்பான செயல்கள்
“கடவுளுடைய செயல்களை வந்து பாருங்கள்” (5)
“என் நேர்த்திக்கடன்களை உங்களுக்குச் செலுத்துவேன்” (13)
கடவுள் ஜெபத்தைக் கேட்கிறார் (18-20)

67 பூமியெங்கும் உள்ளவர்கள் கடவுளுக்குப் பயப்படுவார்கள்
கடவுளுடைய வழியைப் பற்றி எல்லாரும் தெரிந்துகொள்வார்கள் (2)
‘கடவுளே, எல்லா மக்களும் உங்களைப் புகழட்டும்’ (3, 5)
“கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்” (6, 7)

68 ‘கடவுளுடைய எதிரிகள் சிதறிப்போகட்டும்’
“அப்பா இல்லாத பிள்ளைகளுக்கு அப்பா” (5)
தன்னந்தனியாக இருக்கிறவர்களுக்குக் கடவுள் வீடு தருகிறார் (6)
நல்ல செய்தியை அறிவிக்கிற பெண்கள் (11)
மனிதர்களைப் பரிசுகளாக (18)
‘யெகோவா ஒவ்வொரு நாளும் நம் பாரத்தைச் சுமக்கிறார்’ (19)

69 காப்பாற்றப்படுவதற்காகச் செய்யப்படும் ஜெபம்
“உங்களுடைய வீட்டின் மேலுள்ள பக்திவைராக்கியம் எனக்குள் பற்றியெரிகிறது” (9)
“எனக்குச் சீக்கிரமாகப் பதில் சொல்லுங்கள்” (17)
“என் தாகத்துக்குக் காடியைத் தந்தார்கள்” (21)

70 உடனடியாக உதவும்படி ஜெபம் செய்யப்படுகிறது
“சீக்கிரமாக எனக்கு உதவி செய்யுங்கள்” (5)

71 வயதானவர்களின் நம்பிக்கை
சிறுவயதிலிருந்தே கடவுள்மேல் நம்பிக்கை (5)
“என் உடல் தளர்ந்துபோகும்போது” (9)
‘சிறுவயதிலிருந்து கடவுள் எனக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார்’ (17)

72 கடவுளால் நியமிக்கப்பட்ட ராஜாவின் சமாதானமான ஆட்சி
“நீதிமான்கள் செழிப்பார்கள்” (7)
ஒரு கடலிலிருந்து இன்னொரு கடல் வரைக்கும் குடிமக்கள் இருப்பார்கள் (8)
வன்முறையிலிருந்து விடுதலை (14)
பூமியில் ஏராளமான தானியம் (16)
கடவுளுடைய பெயர் என்றென்றும் புகழப்படும் (19)

73 கடவுள்பக்தி உள்ள ஒருவர் மீண்டும் ஆன்மீகக் கண்ணோட்டத்தைப் பெறுகிறார்
“நான்தான் கிட்டத்தட்ட வழிதவறிப் போய்விட்டேன்” (2)
“நாள் முழுவதும் நான் வேதனைப்பட்டேன்” (14)
“கடைசியில், கடவுளுடைய பரிசுத்த ஆலயத்துக்கு வந்தேன்” (17)
பொல்லாதவர்கள் சறுக்கலான தரையில் நிற்கிறார்கள் (18)
கடவுளிடம் நெருங்கிப் போவதுதான் நல்லது (28)

74 மக்களை நினைத்துப் பார்க்கும்படி கடவுளிடம் செய்யப்படும் ஜெபம்
கடவுள் தந்த மீட்பைப் பற்றி நினைத்துப் பார்க்கப்படுகிறது (12-17)
‘எதிரி பழித்துப் பேசியதை நினைத்துப் பாருங்கள்’ (18)

75 கடவுள் நீதியோடு நியாயந்தீர்க்கிறார்
பொல்லாதவர்கள் யெகோவாவின் கிண்ணத்திலிருந்து குடிப்பார்கள் (8)

76 சீயோனின் எதிரிகளைக் கடவுள் தோற்கடிக்கிறார்
- தாழ்மையான மக்களைக் கடவுள் காப்பாற்றுகிறார் (9)
- கர்வம்பிடித்த எதிரிகள் அடக்கப்படுவார்கள் (12)

77 இக்கட்டான காலத்தில் செய்யப்படும் ஜெபம்
- கடவுளுடைய செயல்களைத் தியானித்துப் பார்த்தல் (11, 12)
- ‘கடவுளே, உங்களைப் போல மகத்தானவர் யார்?’ (13)

78 அக்கறையுள்ள கடவுளும், விசுவாசமில்லாத இஸ்ரவேலர்களும்
- வருங்காலத் தலைமுறைக்குச் சொல்லுங்கள் (2-8)
- “கடவுள்மேல் அவர்கள் விசுவாசம் வைக்கவில்லை” (22)
- ‘வானத்தின் தானியம்’ (24)
- “இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளைத் துக்கப்படுத்தினார்கள்” (41)
- எகிப்திலிருந்து வாக்குக் கொடுக்கப்பட்ட தேசம்வரை (43-55)
- “கடவுளுக்கு எதிராகச் சவால் விட்டுக்கொண்டே இருந்தார்கள்” (56)

79 தேசங்கள் கடவுளுடைய மக்கள்மேல் படையெடுத்து வந்தபோது செய்யப்பட்ட ஜெபம்
- “பழிப்பேச்சுக்கு நாங்கள் ஆளாகிவிட்டோம்” (4)
- ‘உங்கள் பெயரை மனதில் வைத்து எங்களுக்கு உதவுங்கள்’ (9)
- “சுற்றுவட்டார மக்களுக்கு ஏழு மடங்கு தண்டனை கொடுங்கள்” (12)

80 திரும்பவும் கருணை காட்டும்படி இஸ்ரவேலின் மேய்ப்பரிடம் கெஞ்சுதல்
- “கடவுளே, திரும்பவும் எங்களுக்குக் கருணை காட்டுங்கள்” (3)
- இஸ்ரவேல் கடவுளுடைய திராட்சைக் கொடி (8-15)

81 கீழ்ப்படியும்படி ஓர் அறிவுரை
- வேறு தெய்வங்களை வணங்கக் கூடாது (9)
- “என் பேச்சைக் கேட்டால்” (13)

82 நீதியான தீர்ப்பு கொடுக்கும்படி கேட்கப்படுகிறது
- “கடவுள்களின்” நடுவே கடவுள் தீர்ப்பு கொடுக்கிறார் (1)
- ‘எளியவர்களுக்கு நீதி செய்யுங்கள்’ (3)
- “நீங்கள் எல்லாரும் கடவுள்கள்” (6)

83 எதிரிகள் தாக்க வரும்போது செய்யப்படும் ஜெபம்
- “கடவுளே, மவுனமாக இருக்காதீர்கள்” (1)
- எதிரிகள், காற்றில் சுழற்றியடிக்கப்படும் முட்செடிபோல் இருக்கிறார்கள் (13)
- கடவுளுடைய பெயர் யெகோவா (18)

84 கடவுளுடைய மகத்தான கூடாரத்துக்காக ஏங்குதல்
- பறவைபோல் இருக்க ஏங்கும் லேவியன் (3)
- “உங்கள் பிரகாரங்களில் ஒரேவொரு நாள்” (10)
- ‘கடவுள் ஒரு சூரியன், ஒரு கேடயம்’ (11)

85 திரும்பவும் கருணை காட்டும்படி செய்யப்படும் ஜெபம்
- உண்மையாக நடக்கிறவர்களுக்குக் கடவுள் சமாதான வார்த்தைகளைச் சொல்வார் (8)
- மாறாத அன்பும் உண்மைத்தன்மையும் ஒன்றையொன்று சந்திக்கும் (10)

86 யெகோவாவைப் போல வேறு கடவுள் இல்லை
- யெகோவா மன்னிக்கத் தயாராக இருக்கிறார் (5)
- எல்லா தேசங்களும் யெகோவாவை வணங்கும் (9)
- “உங்களுடைய வழியை எனக்குக் கற்றுக்கொடுங்கள்” (11)
- “என் இதயத்தை ஒருமுகப்படுத்துங்கள்” (11)

87 சீயோன், உண்மைக் கடவுளின் நகரம்
- சீயோனில் பிறந்தவர்கள் (4-6)

88 மரணத்திலிருந்து காப்பாற்றும்படி செய்யப்படும் ஜெபம்
- “என் உயிர் கல்லறையின் விளிம்புக்கே வந்துவிட்டது” (3)
- ‘ஒவ்வொரு நாள் காலையிலும் உங்களிடம் ஜெபம் செய்கிறேன்’ (13)

89 யெகோவாவின் மாறாத அன்பைப் பற்றிப் பாடுதல்
- தாவீதோடு செய்த ஒப்பந்தம் (3)
- தாவீதின் சந்ததி என்றென்றும் நிலைத்திருக்கும் (4)
- கடவுளால் அபிஷேகம் செய்யப்பட்டவர் கடவுளை “தகப்பன்” என்று சொல்கிறார் (26)
- தாவீதோடு செய்த ஒப்பந்தம் மீறப்படாது (34-37)
- மனிதன் கல்லறையின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாது (48)

90 என்றென்றும் வாழ்கிற கடவுளும், கொஞ்சக் காலம் வாழ்கிற மனிதனும்
- ஆயிரம் வருஷங்கள் நேற்றைய தினம்போல் இருக்கின்றன (4)
- மனிதன் 70-80 வருஷங்கள் வாழ்கிறான் (10)
- “எங்கள் வாழ்நாட்களை நன்றாகப் பயன்படுத்துவதற்கு கற்றுக்கொடுங்கள்” (12)

91 கடவுளுடைய மறைவிடத்தில் பாதுகாப்பு
- வேடனிடமிருந்து பாதுகாக்கப்படுதல் (3)
- கடவுளுடைய இறக்கைகளின் கீழ் அடைக்கலம் (4)
- ஆயிரம் பேர் விழுந்தாலும் உனக்கு ஒன்றும் ஆகாது (7)
- காக்கும்படி தூதர்களுக்குக் கட்டளை (11)

92 யெகோவா என்றென்றும் உயர்ந்தவர்
- அவருடைய அற்புதமான செயல்களும் ஆழமான யோசனைகளும் (5)
- ‘நீதிமான்கள் மரம்போல் செழித்து வளருவார்கள்’ (12)
- வயதானவர்கள் திடமாகவே இருப்பார்கள் (14)

93 யெகோவாவின் மகத்தான ஆட்சி
- “யெகோவா ராஜாவாகிவிட்டார்!” (1)
- ‘உங்கள் நினைப்பூட்டுதல்கள் நம்பகமானவை’ (5)

94 பழிவாங்கும்படி கடவுளிடம் செய்யப்படும் ஜெபம்
- ‘இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் பொல்லாதவர்கள் இருப்பார்கள்?’ (3)
- கடவுள் திருத்தும்போது சந்தோஷம் கிடைக்கிறது (12)
- கடவுள் தன்னுடைய மக்களைக் கைவிட மாட்டார் (14)
- “சட்டத்தின் பெயரில் பிரச்சினை உண்டாக்குகிறார்கள்” (20)

95 உண்மைக் கடவுளை வணங்குகிறவர்கள் கீழ்ப்படிய வேண்டும்
- “இன்று நீங்கள் அவருடைய பேச்சைக் கேட்டால்” (7)
- “உங்கள் இதயத்தை இறுகிப்போகச் செய்யாதீர்கள்” (8)
- “அவர்கள் என்னோடு சேர்ந்து ஓய்வை அனுபவிக்க மாட்டார்கள்” (11)

96 “யெகோவாவுக்காகப் புதிய பாடல் பாடுங்கள்”
- யெகோவா, எல்லா புகழையும் பெறத் தகுதியானவர் (4)
- மக்கள் வணங்கும் தெய்வங்கள் ஒன்றுக்கும் உதவாதவை (5)
- பரிசுத்த உடையில் வணங்குங்கள் (9)

97 யெகோவா மற்ற தெய்வங்களைவிட மிக மிக உயர்ந்தவர்
- “யெகோவா ராஜாவாகிவிட்டார்!” (1)
- யெகோவாவை நேசியுங்கள், கெட்ட காரியங்களை வெறுத்துவிடுங்கள் (10)
- நீதிமான்களுக்கு ஒளி (11)

98 யெகோவாவே மீட்பர், நீதி தவறாத நீதிபதி
- யெகோவா தரும் மீட்பு தெரியப்படுத்தப்படுகிறது (2, 3)

99 யெகோவா, பரிசுத்தமான ராஜா
- கேருபீன்களுக்கு மேலாக வீற்றிருக்கிறார் (1)
- கடவுள் மன்னிக்கிறவர், தண்டிக்கிறவர் (8)

100 படைப்பாளருக்கு நன்றி சொல்லுதல்
- “சந்தோஷமாக யெகோவாவுக்குச் சேவை செய்யுங்கள்” (2)
- ‘கடவுள்தான் நம்மைப் படைத்தார்’ (3)

101 உத்தமமாக நடந்துகொள்ளும் ஆட்சியாளர்
- ‘ஆணவம் பிடித்தவர்களைப் பொறுத்துக்கொள்ள மாட்டேன்’ (5)
- ‘உண்மையாக நடக்கிறவர்களைக் கருணையோடு பார்ப்பேன்’ (6)

102 அடக்கி ஒடுக்கப்படுகிறவர் வேதனையில் செய்யும் ஜெபம்
- “தனியாக உட்கார்ந்திருக்கிற பறவை போல இருக்கிறேன்” (7)
- “என் நாட்கள் மறைந்துபோகிற நிழல் போல இருக்கின்றன” (11)
- “சீயோனை யெகோவா திரும்பக் கட்டுவார்” (16)
- யெகோவா என்றென்றும் நிலைத்திருக்கிறார் (26, 27)

103 “என் ஜீவன் யெகோவாவைப் புகழட்டும்”
- நம்முடைய குற்றங்களைக் கடவுள் தூரமாகத் தூக்கியெறிகிறார் (12)
- அப்பாபோல் கடவுள் இரக்கம் காட்டுகிறார் (13)
- நாம் மண் என்பதைக் கடவுள் நினைத்துப் பார்க்கிறார் (14)
- யெகோவாவுடைய சிம்மாசனமும் ஆட்சியும் (19)
- கடவுளுடைய வார்த்தையைத் தூதர்கள் நிறைவேற்றுகிறார்கள் (20)

104 அதிசயமான படைப்புகளுக்காகக் கடவுளைப் புகழ்தல்
- பூமி ஒருபோதும் அழியாது (5)
- மனிதனுக்குத் திராட்சமதுவும் உணவும் (15)
- “உங்களுடைய படைப்புகள்தான் எத்தனை எத்தனை!” (24)
- ‘உயிர்சக்தியை எடுத்துவிடும்போது, அவை செத்துப்போகின்றன’ (29)

105 யெகோவா தன் மக்களிடம் உண்மையோடு நடந்துகொள்கிறார்
- யெகோவா தன்னுடைய ஒப்பந்தத்தை நினைத்துப் பார்க்கிறார் (8-10)
- “நான் தேர்ந்தெடுத்தவர்கள்மேல் கை வைக்காதீர்கள்” (15)
- அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பைக் கடவுள் பயன்படுத்துகிறார் (17-22)
- எகிப்தில் கடவுள் அற்புதங்களைச் செய்கிறார் (23-36)
- எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் புறப்படுகிறார்கள் (37-39)
- ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் கடவுள் நினைத்துப் பார்க்கிறார் (42)

106 இஸ்ரவேலர்கள் நன்றி காட்டவில்லை
- கடவுள் செய்தவற்றைச் சீக்கிரத்தில் மறந்துவிட்டார்கள் (13)
- கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய மகிமையைக் காளையின் உருவத்துக்குக் கொடுத்தார்கள் (19, 20)
- கடவுளுடைய வாக்குறுதியில் அவர்கள் துளிகூட விசுவாசம் வைக்கவில்லை (24)
- பாகாலை வணங்க ஆரம்பித்தார்கள் (28)
- பிள்ளைகளைப் பேய்களுக்குப் பலி கொடுத்தார்கள் (37)

107 கடவுளுடைய அற்புதமான செயல்களுக்காக நன்றி சொல்லுங்கள்
- அவர்களைச் சரியான வழியில் அவர் நடத்தினார் (7)
- தாகத்தையும் பசியையும் தீர்த்தார் (9)
- இருட்டிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவந்தார் (14)
- தன் வார்த்தையை அனுப்பி அவர்களைக் குணப்படுத்தினார் (20)
- அடக்கி ஒடுக்கப்படும் ஏழைகளைப் பாதுகாக்கிறார் (41)

108 எதிரிகளைத் தோற்கடிக்க உதவும்படி செய்யப்படும் ஜெபம்
- மனிதர்கள் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் (12)
- “கடவுள் எங்களுக்குப் பலம் கொடுப்பார்” (13)

109 வேதனையில் இருக்கிறவரின் ஜெபம்
- ‘அவனுடைய பொறுப்பை வேறொருவன் எடுத்துக்கொள்ளட்டும்’ (8)
- கடவுள் ஏழையின் பக்கத்தில் நிற்கிறார் (31)

110 மெல்கிசேதேக்கைப் போலவே ராஜாவும் குருவுமாக இருக்கிறவர்
- “உன் எதிரிகளின் நடுவே ஆட்சி செய்” (2)
- மனப்பூர்வமாகத் தங்களை அர்ப்பணிக்கும் வாலிபர்கள் பனித்துளி போன்றவர்கள் (3)

111 யெகோவாவின் மகத்தான செயல்களுக்காக அவரைப் புகழுங்கள்
- கடவுளுடைய பெயர் பரிசுத்தமானது, பயபக்திக்குரியது (9)
- யெகோவாவுக்குப் பயப்படுவதுதான் ஞானம் (10)

112 நீதிமான் யெகோவாவுக்குப் பயப்படுகிறான்
- தாராளமாகக் கொடுக்கிறவன் செழிப்பான் (5)
- “நீதிமான் என்றென்றும் நினைவில் வைக்கப்படுவான்” (6)
- தாராள குணமுள்ளவன் ஏழைகளுக்குக் கொடுக்கிறான் (9)

113 உயர்ந்த இடத்தில் இருக்கிற கடவுள் எளியவனைத் தூக்கிவிடுகிறார்
- யெகோவாவின் பெயர் என்றும் புகழப்படும் (2)
- கடவுள் குனிந்து பார்க்கிறார் (6)

114 இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்
- கடல் விலகி ஓடியது (5)
- மலைகள் செம்மறியாட்டுக் கடாக்களைப் போலத் துள்ளின (6)
- நாணற்புல் நிறைந்த குளமாகப் பாறை மாற்றப்பட்டது (8)

115 கடவுளை மட்டுமே மகிமைப்படுத்த வேண்டும்
- உயிரில்லாத சிலைகள் (4-8)
- பூமி மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (16)
- “இறந்தவர்கள் ‘யா’வைப் புகழ்வதில்லை” (17)

116 நன்றிப் பாடல்
- ‘நான் யெகோவாவுக்கு என்ன கைமாறு செய்வேன்?’ (12)
- “மீட்பு என்ற கிண்ணத்தை எடுத்துக்கொள்வேன்” (13)

'யெகோவாவிடம் நேர்ந்துகொண்டதையெல்லாம் நிறைவேற்றுவேன்' (14, 18)

உண்மையாக இருப்பவர்களின் மரணம் பெரிய இழப்பு (15)

117 யெகோவாவைப் புகழ மற்ற தேசத்தார் அழைக்கப்படுகிறார்கள்

கடவுள் காட்டுகிற மாறாத அன்பு மகத்தானது (2)

118 யெகோவா தந்த வெற்றிக்கு நன்றி சொல்லுதல்

'நான் "யா"வை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் என் குரலைக் கேட்டார்' (5)

"யெகோவா என் பக்கத்தில் இருக்கிறார்" (6, 7)

ஒதுக்கித்தள்ளப்பட்ட கல்லே மூலைக்குத் தலைக்கல்லாகும் (22)

"யெகோவாவின் பெயரில் வருகிறவர்" (26)

119 கடவுளுடைய மதிப்புமிக்க வார்த்தைக்கு நன்றியோடு இருத்தல்

"இளைஞர்கள் எப்படிச் சுத்தமான வாழ்க்கை வாழ முடியும்?" (9)

"உங்கள் நினைப்பூட்டுதல்களை நான் மிகவும் விரும்புகிறேன்" (24)

"உங்களுடைய வார்த்தைமேல் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்" (74, 81, 114)

"உங்களுடைய சட்டத்தை எவ்வளவாய் நேசிக்கிறேன்!" (97)

"எல்லா போதகர்களையும்விட விவேகமாக" (99)

'உங்களுடைய வார்த்தை என் கால்களுக்கு விளக்கு' (105)

"சத்தியம்தான் உங்களுடைய வார்த்தையின் சாராம்சம்" (160)

கடவுளுடைய சட்டத்தை நேசிக்கிறவர்களுக்குச் சமாதானம் (165)

120 ஓர் அன்னியர் சமாதானத்துக்காக ஏங்குகிறார்

'ஏமாற்றுகிற நாவு என் உயிரைப் பறித்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்' (2)

"நான் சமாதானத்தையே விரும்புகிறேன்" (7)

121 யெகோவா தன் மக்களைக் காக்கிறார்

"யெகோவாவிடமிருந்தே எனக்கு உதவி வரும்" (2)

யெகோவா தூங்குவதே இல்லை (3, 4)

122 எருசலேமின் சமாதானத்துக்கான ஜெபம்

யெகோவாவின் ஆலயத்துக்குப் போவதில் சந்தோஷம் (1)

ஒன்றிணைக்கப்பட்ட நகரம் (3)

123 யெகோவாவின் கருணைக்காக எதிர்பார்த்துக் காத்திருத்தல்

'வேலைக்காரர்களைப் போல யெகோவாவுக்காக எதிர்பார்த்திருக்கிறோம்' (2)

"நாங்கள் உச்சக்கட்ட அவமரியாதைக்கு ஆளாகிவிட்டோம்" (3)

124 "யெகோவா மட்டும் நம்மோடு இல்லையென்றால்"

உடைக்கப்பட்ட கண்ணியிலிருந்து தப்பித்தல் (7)

"யெகோவாவின் பெயரே நமக்குத் துணை" (8)

125 யெகோவா தன் மக்களைப் பாதுகாக்கிறார்

"எருசலேமைச் சுற்றிலும் மலைகள் இருப்பது போல" (2)

"இஸ்ரவேலுக்குச் சமாதானம் கிடைக்கட்டும்" (5)

126 மக்கள் சீயோனுக்கு மறுபடியும் வந்தபோது கிடைத்த சந்தோஷம்

'யெகோவா அற்புதமான காரியங்களைச் செய்திருக்கிறார்' (3)

அழுகை ஆனந்தமாக மாறுகிறது (5, 6)

127 கடவுள் இல்லையென்றால் எல்லாமே வீண்

"யெகோவா வீட்டைக் கட்டவில்லையென்றால்" (1)

பிள்ளைகள் கடவுள் தரும் சொத்து (3)

128 யெகோவாவுக்குப் பயந்து நடப்பதில் சந்தோஷம்

மனைவி கனிதருகிற திராட்சைக் கொடி போன்றவள் (3)

'எருசலேம் செழித்தோங்குவதை நீ பார்ப்பாயாக!' (5)

129 தாக்கப்பட்டாலும் தோற்கடிக்கப்படுவதில்லை

சீயோனை வெறுக்கிறவர்களுக்குத் தலைகுனிவு (5)

130 "ஆழத்திலிருந்து உங்களைக் கூப்பிடுகிறேன்"

"நீங்கள் குற்றங்களைக் கவனிக்க ஆரம்பித்தால்" (3)

யெகோவா மனதார மன்னிக்கிறார் (4)

'நான் ஆவலோடு யெகோவாவுக்காகக் காத்திருக்கிறேன்' (6)

131 பால்மறந்த குழந்தைபோல் திருப்தியாக இருத்தல்

பெரிய காரியங்களுக்காக ஆசைப்படாமல் இருத்தல் (1)

132 தேர்ந்தெடுக்கப்பட்ட தாவீதும் சீயோனும்

"நீங்கள் தேர்ந்தெடுத்தவரை ஒதுக்கிவிடாதீர்கள்" (10)

சீயோனின் குருமார்களுக்கு மீட்பின் உடை (16)

133 ஒற்றுமையாகக் கூடி வாழ்வது

ஆரோனின் தலையில் ஊற்றப்பட்ட எண்ணெய்போல் (2)

எர்மோனின் பனிபோல் (3)

134 ராத்திரி நேரங்களில் கடவுளைப் புகழ்தல்

'பரிசுத்தத்தோடு உங்கள் கைகளை உயர்த்துங்கள்' (2)

135 யெகோவா மகத்தானவர் என்பதால் அவரைப் புகழுங்கள்

எகிப்துக்கு எதிரான அடையாளங்களும் அற்புதங்களும் (8, 9)

"உங்களுடைய பெயர் என்றென்றும் நிலைத்திருக்கிறது" (13)

உயிரில்லாத சிலைகள் (15-18)

136 யெகோவா என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்

வானத்தையும் நிலப்பரப்பையும் கைத்திறமையால் படைத்திருக்கிறார் (5, 6)

பார்வோன் செங்கடலில் செத்தான் (15)

துவண்டுபோனவர்களைக் கடவுள் நினைத்துப் பார்க்கிறார் (23)

எல்லா உயிர்களுக்கும் உணவு (25)

137 பாபிலோனின் ஆறுகளுக்குப் பக்கத்தில்

சீயோனைப் பற்றிப் பாடவில்லை (3, 4)

பாபிலோன் அழிக்கப்படும் (8)

138 கடவுள் உயர்ந்தவர், ஆனாலும் அக்கறை காட்டுகிறவர்

'நீங்கள் பதில் கொடுத்தீர்கள்' (3)

'ஆபத்தின் மத்தியிலும் என்னைக் காப்பாற்றுகிறீர்கள்' (7)

139 கடவுளுக்குத் தன் ஊழியர்களை நன்றாகத் தெரியும்

கடவுளுடைய சக்தியிடமிருந்து தப்பிக்க முடியாது (7)

"என்னை அற்புதமாகப் படைத்திருக்கிறீர்கள்!" (14)

'நான் கருவாக இருந்தபோதே என்னைப் பார்த்தீர்கள்' (16)

"முடிவில்லாத பாதையில் என்னை வழிநடத்துங்கள்" (24)

140 யெகோவா, பலம்படைத்த மீட்பர்

அக்கிரமக்காரர்கள் பாம்புகளைப் போல இருக்கிறார்கள் (3)

வன்முறைக்காரர்கள் அழிவார்கள் (11)

141 பாதுகாப்பு கேட்டு செய்யப்படும் ஜெபம்

'என் ஜெபம் தூபப்பொருள்போல் இருக்கட்டும்' (2)

நீதிமானின் கண்டிப்பு எண்ணெய்போல் இருக்கிறது (5)

பொல்லாதவர்கள் தங்கள் வலைகளிலேயே விழுகிறார்கள் (10)

142 துன்புறுத்துகிற ஆட்களிடமிருந்து காப்பாற்றும்படி செய்யப்படும் ஜெபம்

"நான் அடைக்கலம் தேடி ஓடுவதற்கு இடமே இல்லை" (4)

"உங்களை விட்டால் எனக்கு வேறு யாருமே இல்லை" (5)

143 வறண்ட நிலம் மழைக்காக ஏங்குவதுபோல் கடவுளுக்காக ஏங்குதல்

'நீங்கள் செய்தவற்றைப் பற்றி யோசித்துப் பார்க்கிறேன்' (5)

"உங்களுடைய விருப்பப்படி நடக்க எனக்குக் கற்றுக்கொடுங்கள்" (10)

'உங்களுடைய அருமையான சக்தி என்னை வழிநடத்தட்டும்' (10)

144 வெற்றிக்காகச் செய்யப்படும் ஜெபம்

'அற்ப மனுஷன் யார்?' (3)

"எதிரிகளைச் சிதறிப்போகச் செய்யுங்கள்" (6)

யெகோவாவின் மக்கள் சந்தோஷமானவர்கள் (15)

145 மகா ராஜாவான கடவுளைப் புகழ்தல்

'கடவுளுடைய மகத்துவத்தைப் பற்றி அறிவிப்பேன்' (6)

"யெகோவா எல்லாருக்கும் நல்லது செய்கிறார்" (9)

"உங்களுக்கு உண்மையாக இருக்கிறவர்கள் உங்களைப் புகழ்வார்கள்" (10)

கடவுளுடைய ஆட்சி என்றென்றும் நிலைத்திருக்கும் (13)

கடவுளுடைய கை எல்லாரையும் திருப்திப்படுத்துகிறது (16)

146 மனிதர்களை அல்ல, கடவுளை நம்புங்கள்
சாகும்போது மனிதனுடைய யோசனைகள் அழிந்துபோகின்றன (4)
துவண்டுபோனவர்களைக் கடவுள் தூக்கி நிறுத்துகிறார் (8)

147 கடவுளுடைய அன்பான, வல்லமையான செயல்களைப் புகழ்தல்
உள்ளம் உடைந்தவர்களை அவர் குணமாக்குகிறார் (3)
நட்சத்திரங்கள் ஒவ்வொன்றையும் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறார் (4)
வெள்ளைக் கம்பளத்தால் மூடுவதுபோல் பனியால் மூடுகிறார் (16)

148 எல்லா படைப்புகளும் யெகோவாவைப் புகழட்டும்
'தேவதூதர்களே, அவரைப் புகழுங்கள்' (2)
'சூரியனே, சந்திரனே, நட்சத்திரங்களே அவரைப் புகழுங்கள்' (3)
பெரியவர்களும் சிறியவர்களும் கடவுளைப் புகழட்டும் (12, 13)

149 கடவுளின் வெற்றியைப் புகழும் பாடல்
யெகோவா தன்னுடைய மக்களைப் பார்த்து சந்தோஷப்படுகிறார் (4)
கடவுளுக்கு உண்மையாக இருக்கிறவர்களுக்கு பெருமை (9)

150 சுவாசமுள்ள எல்லா உயிர்களும் 'யா'வைப் புகழட்டும்
'யா'வைப் புகழுங்கள்! (1, 6)

பகுதி ஒன்று
(சங்கீதம் 1–41)

1 பொல்லாதவர்கள் சொல்கிற அறிவுரையைக் கேட்காமலும்,
பாவிகள் போகிற பாதையில் போகாமலும்,[a]
கேலி செய்கிறவர்கள்[b] உட்காருகிற இடத்தில் உட்காராமலும்
இருக்கிறவன் சந்தோஷமானவன்.
2 அவன் யெகோவாவின் சட்டத்தை ஆசை ஆசையாகப் படிக்கிறான்.[c]
அதை ராத்திரியும் பகலும் தாழ்ந்த குரலில் வாசிக்கிறான்.*[d]
3 அவன் வாய்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரம் போலவும்,
அந்தந்த பருவத்தில் கனி தருகிற பசுமையான* மரம் போலவும்
இருப்பான்.
அவன் செய்வதெல்லாம் வெற்றி பெறும்.[e]
4 ஆனால், பொல்லாதவர்களின் நிலைமையே வேறு.
அவர்கள் காற்றில் அடித்துக்கொண்டு போகப்படுகிற பதரைப் போல்
இருக்கிறார்கள்.
5 அதனால்தான், நியாயத்தீர்ப்பின்போது பொல்லாதவர்கள் நிலைநிற்க
மாட்டார்கள்.[f]
நீதிமான்களின் கூட்டத்தில் பாவிகள் நிலைநிற்க மாட்டார்கள்.[g]
6 நீதிமான்களின் பாதை யெகோவாவுக்குத் தெரியும்.[h]
ஆனால், பொல்லாதவர்களின் பாதை அழிந்துபோகும்.[i]

2 தேசங்கள் ஏன் கொந்தளிக்கின்றன?
மக்கள் ஏன் வீணாக முணுமுணுக்கிறார்கள்?*[j]
2 யெகோவாவுக்கும் அவரால் அபிஷேகம் செய்யப்பட்டவருக்கும்*[k]
விரோதமாக

அதி. 1
a நீதி 4:14
b நீதி 22:10
c சங் 19:7; சங் 40:8; சங் 112:1; மத் 5:3; ரோ 7:22; யாக் 1:25
d யோசு 1:8; சங் 119:97; 1தீ 4:15
e 1நா 22:13; எரே 17:7, 8
f மத் 25:41
g மல் 3:18; மத் 13:49, 50
h சங் 37:18; எரே 12:3; 1பே 3:12
i நீதி 14:12

அதி. 2
j அப் 4:25-28
k சங் 89:20; ஏசா 61:1

1:2 *வே.வா., "தியானித்துக்கொண்டிருக்கிறான்." 1:3 *நே.மொ., "இலை உதிராத." 2:1 *வே.வா., "யோசிக்கிறார்கள்?" 2:2 *வே.வா., "அவருடைய கிறிஸ்துவுக்கும்."

பூமியின் ராஜாக்கள் அணிவகுத்து நிற்கிறார்கள்,
உயர் அதிகாரிகள் ஒன்றுகூடி வருகிறார்கள்.*[a]
3 ஒருவரை ஒருவர் பார்த்து,
“அவர்கள் நமக்கு மாட்டிய விலங்குகளை உடைத்தெறியலாம்,
அவர்கள் நமக்குக் கட்டிய கயிறுகளை அறுத்தெறியலாம்!”
என்று சொல்கிறார்கள்.
4 பரலோக சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பவர் சிரிப்பார்.
யெகோவா அவர்களைப் பார்த்துக் கேலி செய்வார்.
5 பிறகு, கோபத்தோடு அவர்களிடம் பேசி,
தன்னுடைய ஆக்ரோஷத்தால் அவர்களை நடுநடுங்க வைத்து,
6 “என்னுடைய பரிசுத்த மலையாகிய சீயோனில்,[b]
என் ராஜாவை நியமித்திருக்கிறேன்”[c] என்று சொல்வார்.
7 யெகோவாவின் தீர்மானத்தை இப்போது சொல்கிறேன்.
அவர் என்னிடம், “நீ என்னுடைய மகன்.[d]
இன்று நான் உனக்குத் தகப்பனாக ஆனேன்.[e]
8 நீ கேட்டால், தேசங்களை உனக்குச் சொத்தாகக் கொடுப்பேன்.
பூமி முழுவதையுமே உனக்குச் சொந்தமாகத் தருவேன்.[f]
9 நீ அந்தத் தேசங்களை இரும்புச் செங்கோலால் அடித்து
நொறுக்குவாய்.[g]
மண்பாத்திரத்தை உடைப்பது போல உடைத்து நொறுக்குவாய்”[h]
என்று சொன்னார்.
10 அதனால் ராஜாக்களே, இப்போதே விவேகமாக* நடந்துகொள்ளுங்கள்.
பூமியிலுள்ள நீதிபதிகளே, பாடம் கற்றுக்கொள்ளுங்கள்.#
11 பயத்தோடு யெகோவாவுக்குச் சேவை செய்யுங்கள்.
பயபக்தியோடு அவர்முன் சந்தோஷப்படுங்கள்.
12 அவருடைய மகனுக்கு மதிப்பு* கொடுங்கள்.[i]
இல்லையென்றால், கடவுளுக்கு# பயங்கர கோபம் வரும்.
அவருடைய கோபம் சட்டென்று பற்றியெரியும்.
நீங்கள் அழிந்துபோவீர்கள்.△[j]
அவரிடம் தஞ்சம் அடைகிற எல்லாரும் சந்தோஷமானவர்கள்.

தாவீது தன்னுடைய மகனாகிய அப்சலோமிடமிருந்து தப்பித்து ஓடியபோது பாடிய சங்கீதம்.[k]

3 யெகோவாவே, ஏன் இத்தனை பேர் என் எதிரிகளாகிவிட்டார்கள்?[l]
ஏன் இத்தனை பேர் எனக்கு எதிராகக் கிளம்பிவிட்டார்கள்?[m]
2 “கடவுள் அவனைக் காப்பாற்ற மாட்டார்”
என்று நிறைய பேர் சொல்கிறார்கள்.[n] (*சேலா*)*
3 ஆனால் யெகோவாவே, நீங்கள் கேடயம்போல் எல்லா
பக்கத்திலிருந்தும் என்னைப் பாதுகாக்கிறீர்கள்.[o]

2:2 *வே.வா., “ஆலோசனை செய்கிறார்கள்.” **2:10** *வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதலோடு.” #வே.வா., “எச்சரிக்கையைக் கேளுங்கள்.” **2:12** *நே.மொ., “முத்தம்.” #நே.மொ., “அவருக்கு.” △நே.மொ., “வழியிலிருந்து அழிந்துபோவீர்கள்.” **3:2** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 2
a மத் 27:1, 2; லூ 23:10, 11; வெளி 19:19
b 2சா 5:7; வெளி 14:1
c சங் 45:6; எசே 21:27; தானி 7:13, 14; வெளி 19:16
d மத் 3:16, 17; மாற் 1:9-11; ரோ 1:4
e அப் 13:33; எபி 1:5; எபி 5:5
f சங் 72:8; எபி 1:2; வெளி 11:15
g வெளி 12:5; வெளி 19:15
h தானி 2:44; வெளி 2:26, 27
i பிலி 2:9-11
j யோவா 3:36

அதி. 3
k 2சா 15:14
l 2சா 15:12; 2சா 16:15
m 2சா 12:11
n 2சா 16:7, 8
o ஆதி 15:1

நீங்கள்தான் என் மகிமை,[a] நீங்கள்தான் என்னைத் தலைநிமிர
வைப்பவர்.[b]
4 யெகோவாவை நோக்கி நான் சத்தமாகக் கூப்பிடுவேன்.
பரிசுத்த மலையிலிருந்து[c] அவர் எனக்குப் பதில் சொல்வார். (*சேலா*)
5 யெகோவா எனக்கு எப்போதும் துணையாக இருக்கிறார்.
அதனால், நான் படுத்துத் தூங்கி,
நிம்மதியாக* எழுந்திருப்பேன்.[d]
6 என்னைச் சுற்றி ஆயிரமாயிரம் பேர் திரண்டு நின்றாலும்,
நான் பயப்பட மாட்டேன்.[e]
7 யெகோவாவே, எழுந்து வாருங்கள்! என் கடவுளே, என்னைக்
காப்பாற்றுங்கள்![f]
நீங்கள் என் எதிரிகள் எல்லாருடைய தாடையையும்
நொறுக்குவீர்களே.
பொல்லாதவர்களுடைய பற்களை உடைப்பீர்களே.[g]
8 யெகோவாவே, நீங்கள்தான் மீட்பு தருகிறீர்கள்.[h]
உங்களுடைய ஜனங்களை நீங்கள்தான் ஆசீர்வதிக்கிறீர்கள். (*சேலா*)

இசைக் குழுவின் தலைவனுக்கு; நரம்பிசைக் கருவிகளோடு
பாட வேண்டிய தாவீதின் சங்கீதம்.

4 நீதியுள்ள கடவுளே,[i] நான் கூப்பிடும்போது கேளுங்கள்,
எனக்குப் பதில் சொல்லுங்கள்.
வேதனையிலிருந்து எனக்கு விடுதலை கொடுங்கள்.
என் ஜெபத்தைக் கேளுங்கள், எனக்குக் கருணை காட்டுங்கள்.
2 மனிதர்களே, எவ்வளவு காலத்துக்குத்தான் என் மதிப்பு மரியாதையைக்
கெடுத்து என்னை அவமானப்படுத்துவீர்கள்?
எவ்வளவு காலத்துக்குத்தான் வீணான காரியங்களை விரும்புவீர்கள்?
எவ்வளவு காலத்துக்குத்தான் பொய்யான காரியங்களைத்
தேடிப்போவீர்கள்? (*சேலா*)
3 ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள்: யெகோவா தனக்கு உண்மையாக*
இருப்பவர்களை விசேஷமாகக் கவனித்துக்கொள்வார்.#
நான் கூப்பிடும்போது யெகோவா கேட்பார்.
4 கோபம் வந்தாலும் பாவம் செய்யாதீர்கள்.[j]
சொல்ல நினைப்பதை மனதிலேயே* சொல்லிக்கொண்டு,
அமைதியாகப் படுத்திருங்கள். (*சேலா*)
5 நீதியான பலிகளைச் செலுத்துங்கள்.
யெகோவாமேல் நம்பிக்கை வையுங்கள்.[k]
6 “எங்களுக்கு யார்தான் நல்லது செய்வார்கள்?” என்று நிறைய பேர்
கேட்கிறார்கள்.
யெகோவாவே, உங்கள் முகத்தின் ஒளி எங்கள்மேல் பிரகாசிக்கட்டும்.[l]

3:5 *வே.வா., “பத்திரமாக.” **4:3** *வே.வா., “பற்றுமாறாமல்.” #வே.வா., “தனக்கென்று ஒதுக்கி வைப்பார்; விசேஷமானவர்களாக ஆக்குவார்.” **4:4** *நே.மொ., “இதயத்திலேயே.”

அதி. 3
a ஏசா 45:25
b சங் 27:6
c 2சா 15:25; சங் 2:6
d சங் 4:8; நீதி 3:24
e 2ரா 6:15, 16; சங் 27:3; ரோ 8:31
f 1தீ 4:10
g 2தெ 1:6
h சங் 37:39; ஏசா 43:11; வெளி 19:1

அதி. 4
i சங் 11:7
j எபே 4:26
k சங் 37:3; சங் 62:8; நீதி 3:5; 1பே 4:19
l எண் 6:26; சங் 80:7; நீதி 16:15; 1பே 3:12

7 அமோக அறுவடையும் புதிய திராட்சமதுவும் தருகிற
சந்தோஷத்தைவிட
அதிக சந்தோஷத்தால் என் இதயத்தை நிரப்பியிருக்கிறீர்கள்.
8 நான் நிம்மதியாகப் படுத்துத் தூங்குவேன்,[a]
யெகோவாவே, நீங்கள் மட்டும்தான் எனக்குப் பாதுகாப்பு தருகிறீர்கள்.[b]

நெகிலோத்* இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

5 யெகோவாவே, நான் பேசுவதைக் கேளுங்கள்.[c]
நான் பெருமூச்சு விடுவதைக் கவனியுங்கள்.
2 என் கடவுளே, என் ராஜாவே, உதவிக்காக நான் கதறுவதைக்
கேளுங்கள்.
ஏனென்றால், நான் உங்களிடம்தான் ஜெபம் செய்கிறேன்.
3 யெகோவாவே, காலையில் நீங்கள் என் குரலைக் கேட்பீர்கள்.[d]
என் கவலைகளைக் காலையில் உங்களிடம் கொட்டிவிட்டு,[e]
பதிலுக்காக ஆவலோடு காத்திருப்பேன்.
4 ஏனென்றால், நீங்கள் அக்கிரமத்தைப் பார்த்து சந்தோஷப்படும்
கடவுள் அல்ல.[f]
கெட்டவர்கள் யாரும் உங்களோடு தங்க முடியாது.[g]
5 ஆணவம் பிடித்தவர்கள் யாரும் உங்கள் முன்னால் நிற்க முடியாது.
அக்கிரமம் செய்கிற எல்லாரையும் நீங்கள் வெறுக்கிறீர்கள்.[h]
6 பொய் பேசுகிறவர்களை நீங்கள் அழிப்பீர்கள்.[i]
வன்முறையில் இறங்குகிறவர்களையும்* ஏமாற்றுக்காரர்களையும்
யெகோவா அருவருக்கிறார்.[j]
7 நீங்கள் அளவுகடந்த அன்பை* காட்டுவதால்[k] உங்கள்
ஆலயத்துக்குள் வருவேன்.[l]
உங்கள்மேல் உள்ள பயபக்தியால் உங்கள் பரிசுத்த ஆலயத்தை
நோக்கித் தலைவணங்குவேன்.[m]
8 யெகோவாவே, எதிரிகள் என்னைச் சூழ்ந்திருப்பதால்,
உங்களுடைய நீதியான பாதையில் என்னை வழிநடத்துங்கள்.
உங்களுடைய வழியில் தடைகள் இல்லாமல் நடப்பதற்கு உதவி
செய்யுங்கள்.[n]
9 அவர்கள் சொல்கிற எதையுமே நம்ப முடியாது.
அவர்களுக்கு உடம்பெல்லாம் விஷம்.*
அவர்களுடைய தொண்டை ஒரு திறந்த கல்லறை.
அவர்கள் தங்களுடைய நாவினால் போலியாகப் புகழ்கிறார்கள்.[o]
10 கடவுளே, நீங்கள் அவர்களைக் குற்றவாளிகள் என்று அறிவிப்பீர்கள்.
அவர்களுடைய சதித்திட்டங்களே அவர்களைப் படுகுழியில்
தள்ளிவிடும்.[p]
அவர்கள் உங்களுக்கு அடங்கி நடக்காமல் நிறைய குற்றங்கள்
செய்திருக்கிறார்கள்.

5:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **5:6** *வே.வா., “கொலைகாரர்களையும்.” **5:7** *வே.வா., “மாறாத அன்பை.” **5:9** *வே.வா., “அவர்களுடைய உள்ளத்தில் இருப்பதெல்லாம் கெட்ட எண்ணம்.”

அதி. 4
a சங் 3:5; நீதி 3:24, 26
b லேவி 25:18

அதி. 5
c சங் 65:2; 1பே 3:12
d சங் 55:16, 17
e மாற் 1:35
f சங் 89:14; நீதி 6:16-19; ஆப 1:13
g சங் 15:1-5; நீதி 12:19
h ரோ 12:9; எபி 1:9
i நீதி 20:19; யோவா 8:44; கொலோ 3:9; வெளி 21:8
j ஆதி 9:6; சங் 55:23; நீதி 6:16, 17; 1பே 3:10
k சங் 69:13
l 1சா 3:3; 1நா 16:1
m சங் 28:2; சங் 138:2
n சங் 25:4, 5; சங் 27:11
o நீதி 29:5; ரோ 3:13
p 2சா 15:31; 2சா 17:23; சங் 7:14, 15

அதனால், அவர்களை விரட்டியடியுங்கள்.
11 உங்களிடம் தஞ்சம் அடைகிறவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.[a]
அவர்கள் எப்போதும் சந்தோஷத்தோடு உங்களைப் புகழ்ந்து பாடுவார்கள்.
அவர்களுக்குக் கெடுதல் செய்ய யாரையும் விட மாட்டீர்கள்.
உங்கள் பெயரை நேசிக்கிறவர்கள் உங்களை நினைத்து சந்தோஷப்படுவார்கள்.
12 யெகோவாவே, நீதிமான்களை நீங்கள் ஆசீர்வதிப்பீர்கள்.
அவர்களுக்குக் கருணை காட்டி,* பெரிய கேடயம்போல் எல்லா பக்கத்திலிருந்தும் பாதுகாப்பீர்கள்.[b]

இசைக் குழுவின் தலைவனுக்கு; செமினீத்* இசையில் நரம்பிசைக் கருவிகளோடு பாட வேண்டிய தாவீதின் சங்கீதம்.

6 யெகோவாவே, கோபத்தோடு என்னைக் கண்டிக்காதீர்கள்.
ஆக்ரோஷத்தோடு என்னைத் தண்டிக்காதீர்கள்.[c]
2 யெகோவாவே, நான் பலவீனமாகிக்கொண்டே போகிறேன்; எனக்குக் கருணை* காட்டுங்கள்.
யெகோவாவே, என் எலும்புகள் நடுங்குகின்றன, என்னைக் குணப்படுத்துங்கள்.[d]
3 நான் வேதனையில் தவியாய்த் தவிக்கிறேன்.[e]
யெகோவாவே, நீங்களே சொல்லுங்கள், இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தக் கஷ்டம்?[f]
4 யெகோவாவே, நீங்கள் வந்து என்னுடைய உயிரைக் காப்பாற்றுங்கள்.[g]
உங்களுடைய மாறாத அன்பினால் என்னைக் காப்பாற்றுங்கள்.[h]
5 இறந்த பிறகு யாரால் உங்களைப் பற்றிப் பேச* முடியும்?
கல்லறைக்குப் போன பிறகு யாரால் உங்களைப் புகழ முடியும்?[i]
6 நான் பெருமூச்சுவிட்டு பெருமூச்சுவிட்டுக் களைத்துப்போகிறேன்.[j]
ராத்திரியெல்லாம் அழுது அழுது என் படுக்கையைக் கண்ணீரால் நனைக்கிறேன்,
என் கட்டிலைக் குளமாக்குகிறேன்.[k]
7 துக்கத்தில் என் கண்ணே சோர்ந்துவிட்டது.[l]
என்னைக் கொடுமைப்படுத்துகிற ஆட்களால் என் பார்வையே மங்கிவிட்டது.
8 அக்கிரமம் செய்கிறவர்களே, என்னைவிட்டு விலகிப் போங்கள்.
என்னுடைய கதறலை யெகோவா கண்டிப்பாகக் கேட்பார்.[m]
9 கருணைக்காக நான் கெஞ்சுவதை யெகோவா கேட்பார்.[n]
என்னுடைய ஜெபத்தை யெகோவா ஏற்றுக்கொள்வார்.
10 என்னுடைய எதிரிகள் எல்லாரும் அவமானப்பட்டுப்போய், கதிகலங்குவார்கள்.
அவர்கள் கேவலப்பட்டுப்போய், திடீரென்று பின்வாங்குவார்கள்.[o]

அதி. 5
a சங் 40:16
b ஆதி 15:1; சங் 3:3

அதி. 6
c சங் 38:1; எரே 10:24
d சங் 41:4; சங் 103:2, 3
e மத் 26:38, 39
f சங் 13:1, 2
g சங் 50:15
h சங் 119:88; புல 3:22
i சங் 30:9; சங் 115:17; பிர 9:5, 10
j சங் 69:3
k சங் 39:12
l சங் 31:9
m சங் 3:4; சங் 145:18, 19; எபி 5:7
n சங் 31:22; சங் 40:1; யோனா 2:2
o சங் 40:14; எரே 20:11

5:12 *வே.வா., “அவர்களை அங்கீகரித்து.” **6:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **6:2** *வே.வா., “இரக்கம்.” **6:5** *வே.வா., “நினைத்துப் பார்க்க.”

பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த கூஷ் பேசியதைப் பற்றி யெகோவாவிடம் தாவீது பாடிய புலம்பல் பாடல்.

7 யெகோவாவே, என் கடவுளே, உங்களிடம் தஞ்சம்
அடைந்திருக்கிறேன்.[a]
என்னைப் பாடாய்ப் படுத்துகிற எல்லாரிடமிருந்தும் என்னைக்
காப்பாற்றுங்கள்.[b]
2 இல்லாவிட்டால், சிங்கத்தைப் போல அவர்கள் என்னைக்
கடித்துக் குதறி,[c]
தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்; என்னைக் காப்பாற்ற யாரும்
இருக்க மாட்டார்கள்.
3 யெகோவாவே, என் கடவுளே, நான் ஏதாவது தவறு செய்திருந்தால்,
ஏதாவது அநியாயம் பண்ணியிருந்தால்,
4 நல்லது செய்தவனுக்கு நான் கெட்டது செய்திருந்தால்,[d]
காரணம் இல்லாமல் என் எதிரியின் சொத்துகளைக்
கொள்ளையடித்திருந்தால்,*
5 என் எதிரி என்னைத் துரத்திப் பிடிக்கட்டும்.
என்னை* தரையில் போட்டு மிதிக்கட்டும்.
என் பேரையும் புகழையும் மண்ணோடு மண்ணாக்கட்டும். (*சேலா*)
6 யெகோவாவே, கோபத்தில் கொதித்தெழுங்கள்.
என் எதிரிகளுடைய ஆத்திரத்தை அடக்க வாருங்கள்.[e]
எனக்காக விழித்தெழுங்கள், எனக்கு நியாயம் கிடைக்கக்
கட்டளையிடுங்கள்.[f]
7 உலக மக்கள் உங்களைச் சூழ்ந்து நிற்கட்டும்.
அவர்களுக்கு எதிராக நீங்கள் பரலோகத்திலிருந்து நடவடிக்கை
எடுப்பீர்கள்.
8 யெகோவா மக்களுக்குத் தீர்ப்பு கொடுப்பார்.[g]
யெகோவாவே, என்னுடைய நீதிக்கும் உத்தமத்துக்கும் தகுந்தபடி
எனக்குத் தீர்ப்பு கொடுங்கள்.[h]
9 அக்கிரமக்காரர்கள் செய்கிற அக்கிரமங்களுக்குத் தயவுசெய்து
முடிவுகட்டுங்கள்.
ஆனால், நீதிமான்களை நல்லபடியாக வாழ வையுங்கள்.[i]
ஏனென்றால், நீங்கள் நீதியுள்ள கடவுள்,[j] இதயங்களையும்[k]
ஆழமான உணர்ச்சிகளையும்* ஆராய்கிறவர்.#[l]
10 கடவுள் என் கேடயமாக இருக்கிறார்.[m]
நேர்மையான நெஞ்சமுள்ளவர்களின் மீட்பராக இருக்கிறார்.[n]
11 கடவுள் நீதி தவறாத நீதிபதி.[o]
ஒவ்வொரு நாளும் தன்னுடைய நீதித்தீர்ப்புகளை* கொடுக்கிறார்.
12 மனம் திருந்தாதவர்களைத்[p] தண்டிக்கத் தன்னுடைய வாளைக்
கூர்மையாக்குகிறார்.[q]

7:4 * அல்லது, “என்னை எதிர்க்கிறவனைத் தப்பிக்க விட்டிருந்தால்.” **7:5** * நே.மொ., “என் உயிரை.” **7:9** * வே.வா., “சிறுநீரகங்களையும்.” # வே.வா., “சோதித்தறிகிறவர்.” **7:11** * வே.வா., “கண்டனத் தீர்ப்புகளை.”

அதி. 7
a சங் 18:2 நீதி 18:10
b எரே 15:15 2கொ 4:9 2பே 2:9
c சங் 10:9
d நீதி 17:13
e சங் 3:7 சங் 35:1
f சங் 103:6
g ஆதி 18:25 சங் 9:7, 8
h சங் 18:20 சங் 26:11 சங் 41:12
i சங் 37:25
j உபா 32:4 வெளி 15:3
k 1சா 16:7
l 1நா 28:9 எரே 17:10 வெளி 2:23
m ஆதி 15:1 நீதி 30:5
n நீதி 2:21
o ஆதி 18:25 சங் 9:4 சங் 98:9
p ஏசா 55:7
q உபா 32:41

வில்லை வளைத்து, குறி பார்க்கிறார்.[a]
13 பயங்கரமான ஆயுதங்களைத் தயார்படுத்துகிறார்.
தன்னுடைய அம்புகளைத் தீ பறக்கும் அம்புகளாக்குகிறார்.[b]
14 இதோ! அக்கிரமத்தைச் சுமக்கிறவனைப் பாருங்கள்.
அவன் கெட்ட எண்ணத்தைக் கருத்தரித்து, பொய்களைப்
பிறப்பிக்கிறான்.[c]
15 அவன் ஒரு குழியை வெட்டி அதை ஆழமாகத் தோண்டுகிறான்.
ஆனால், அவன் வெட்டிய குழியிலேயே விழுகிறான்.[d]
16 அவன் செய்கிற அக்கிரமம் அவன் தலையிலேயே வந்து விழும்.[e]
அவன் செய்கிற கொடுமை அவன் தலையிலேயே விடியும்.
17 யெகோவா நியாயம் செய்வதற்காக நான் அவரைப் புகழ்வேன்.[f]
உன்னதமான கடவுளாகிய[g] யெகோவாவின் பெயரைப் புகழ்ந்து
பாடுவேன்.*[h]

இசைக் குழுவின் தலைவனுக்கு; கித்தீத்* இசையில்;
தாவீதின் சங்கீதம்.

8 எங்கள் எஜமானாகிய யெகோவாவே, உங்கள் பெயர் பூமியெங்கும்
எவ்வளவு மகத்தானது!
உங்களுடைய மேன்மையை வானத்துக்கும் மேலாக
உயர்த்தியிருக்கிறீர்கள்!*[i]
2 உங்களுடைய விரோதிகளை அடக்குவதற்காக,
எதிரியையும் பழிவாங்குபவனையும் அடக்குவதற்காக,
பிள்ளைகளின் வாயினாலும் குழந்தைகளின் வாயினாலும்[j]
உங்கள் பலத்தைக் காட்டியிருக்கிறீர்கள்.
3 உங்கள் கைகளால்* படைக்கப்பட்ட வானத்தைப் பார்க்கும்போது,
நீங்கள் உண்டாக்கிய சந்திரனையும் நட்சத்திரங்களையும்
பார்க்கும்போது,[k]
4 அற்ப மனுஷனை நீங்கள் ஞாபகம் வைப்பதற்கோ
மனிதகுமாரனை அக்கறையோடு கவனித்துக்கொள்வதற்கோ
அவன் யார் என்று நினைக்கத் தோன்றுகிறது.[l]
5 தேவதூதர்களைவிட* அவனைக் கொஞ்சம் தாழ்ந்தவனாக
ஆக்கினீர்கள்.
மகிமையையும் மேன்மையையும் அவனுக்குக் கிரீடமாகச்
சூட்டினீர்கள்.
6 உங்கள் கைகளால் படைத்தவற்றின்மேல் அவனுக்கு அதிகாரத்தைக்
கொடுத்தீர்கள்.[m]
எல்லாவற்றையும் அவனுடைய காலடியின் கீழ் கொண்டுவந்தீர்கள்.
7 ஆடுகளையும் மாடுகளையும்
காட்டு மிருகங்களையும்[n]

அதி. 7
a உபா 32:21, 23
b உபா 32:42
c யாக் 1:15
d எஸ்தர் 7:10; சங் 10:2; சங் 35:7, 8; சங் 57:6; நீதி 26:27
e எஸ்தர் 9:24, 25
f சங் 35:28
g தானி 4:17
h ஏசா 25:1; எபி 13:15; வெளி 15:4

அதி. 8
i 1ரா 8:27; சங் 104:1; சங் 148:13
j மத் 21:16; லூ 10:21; 1கொ 1:27
k சங் 19:1; சங் 104:19; ஏசா 40:26; ரோ 1:20
l ஆதி 1:29; ஆதி 9:3; சங் 144:3; மத் 6:25, 30; யோவா 3:16; அப் 14:17; எபி 2:6-8
m ஆதி 1:26; ஆதி 9:1, 2
n ஆதி 1:28; ஆதி 9:3

7:17 *வே.வா., “இசை இசைப்பேன்.” **8:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **8:1** *அல்லது, “உங்களுடைய மேன்மை வானத்துக்கும் மேலாகப் புகழப்படுகிறது!” **8:3** *நே.மொ., “விரல்களால்.” **8:5** *வே.வா., “தெய்வீகத்தன்மை உள்ளவர்களைவிட.”

8 வானத்துப் பறவைகளையும் கடல் மீன்களையும்
கடலில் நீந்துகிற மற்ற எல்லா உயிரினங்களையும் அவனுடைய
கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தீர்கள்.
9 எங்கள் எஜமானாகிய யெகோவாவே, உங்கள் பெயர் பூமியெங்கும்
எவ்வளவு மகத்தானது!

இசைக் குழுவின் தலைவனுக்கு; முத்லபேன்* இசையில்; தாவீதின் சங்கீதம்.

א [*ஆலெஃப்*]

9 யெகோவாவே, உங்களை முழு இதயத்தோடு புகழ்வேன்.
உங்களுடைய அற்புதமான செயல்களைப் பற்றி அறிவிப்பேன்.[a]
2 உங்களை நினைத்து நினைத்து சந்தோஷத்தில் பூரிப்பேன்.
உன்னதமான கடவுளே, உங்களுடைய பெயரைப் புகழ்ந்து
பாடுவேன்.*[b]

ב [*பேத்*]

3 என் எதிரிகள் பின்வாங்கி ஓடும்போது கீழே விழுவார்கள்,[c]
உங்கள் முன்னால் அழிந்துபோவார்கள்.
4 நீங்கள் என் வழக்கை நியாயமாகத் தீர்த்து வைக்கிறீர்கள்.
உங்களுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்து நீதி வழங்குகிறீர்கள்.[d]

ג [*கீமெல்*]

5 தேசங்களைக் கண்டனம் செய்து,[e] பொல்லாதவர்களை ஒழித்தீர்கள்.
அவர்களுடைய பெயரைச் சுவடு தெரியாமல் என்றென்றைக்குமாக
அழித்தீர்கள்.
6 எதிரிகள் அடியோடு அழிக்கப்பட்டார்கள்.
அவர்களுடைய நகரங்களை நீங்கள் தரைமட்டமாக்கினீர்கள்.
அவர்களை இனி யாரும் நினைத்துக்கூடப் பார்க்க மாட்டார்கள்.[f]

ה [*ஹே*]

7 ஆனால், யெகோவா என்றென்றும் சிம்மாசனத்தில்
உட்கார்ந்திருக்கிறார்.[g]
நியாயம் வழங்குவதற்காகவே அவருடைய சிம்மாசனத்தை
உறுதியாக நிலைநிறுத்தியிருக்கிறார்.[h]
8 உலகத்துக்கு அவர் நீதியான தீர்ப்பு வழங்குவார்.[i]
தேசங்களுக்கு நியாயமான தீர்ப்பு கொடுப்பார்.[j]

ו [*வா*]

9 அடக்கி ஒடுக்கப்படுகிற மக்களுக்கு யெகோவா பாதுகாப்பான*
அடைக்கலமாக இருப்பார்.[k]
இக்கட்டான காலத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பான அடைக்கலமாக
இருப்பார்.[l]
10 உங்களுடைய பெயரைத் தெரிந்தவர்கள் உங்கள்மேல் நம்பிக்கை
வைப்பார்கள்.[m]
யெகோவாவே, உங்களைத் தேடி வருகிறவர்களை நீங்கள் கைவிடவே
மாட்டீர்கள்.[n]

9:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **9:2** *வே.வா., “இசை இசைப்பேன்.”
9:9 *வே.வா., “உயர்ந்த.”

அதி. 9
a 1நா 16:12
1நா 29:11
வெளி 4:11
b சங் 28:7
c சங் 56:9
d சங் 89:14
1பே 2:23
e உபா 9:4
f உபா 25:19
g சங் 90:2
1தீ 1:17
h ரோ 14:10
வெளி 20:11
i ஆதி 18:25
சங் 85:11
ஏசா 26:9
j சங் 96:13
சங் 98:9
அப் 17:31
k சங் 91:2
l சங் 46:1
சங் 54:7
m சங் 91:14
நீதி 18:10
எரே 16:21
n 2நா 20:12
சங் 25:15
2கொ 1:10

ז [*ஸாயின்*]

11 சீயோனில் குடியிருக்கிற யெகோவாவைப் புகழ்ந்து பாடுங்கள்.
அவருடைய செயல்களை எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.[a]
12 அவர்களுடைய இரத்தத்துக்காகப் பழிவாங்குகிறவர் அவர்களை நினைத்துப் பார்ப்பார்.[b]
கஷ்டப்படுகிறவர்களின் கூக்குரலை மறக்க மாட்டார்.[c]

ח [*ஹேத்*]

13 மரண வாசல்களிலிருந்து என்னைத் தூக்கிவிடுகிற யெகோவாவே,[d]
எனக்குக் கருணை காட்டுங்கள்.
என்னை வெறுக்கிறவர்கள் எனக்குக் கொடுக்கிற கஷ்டத்தைப் பாருங்கள்.
14 அப்போது, உங்களுடைய அருமையான* செயல்களை சீயோன் மகளுடைய வாசல்களில் சொல்வேன்.[e]
நீங்கள் தரும் மீட்பினால் சந்தோஷப்படுவேன்.[f]

ט [*டேத்*]

15 மக்கள் தாங்கள் வெட்டிய குழியிலேயே விழுந்தார்கள்.
அவர்களுடைய கால் அவர்கள் விரித்த வலையிலேயே சிக்கிக்கொண்டது.[g]
16 யெகோவா நிறைவேற்றும் தண்டனைத் தீர்ப்புகள் அவர் எப்படிப்பட்டவர் என்பதைக் காட்டுகின்றன.[h]
பொல்லாதவன் தன்னுடைய கைகளின் செயல்களினாலேயே ஆபத்தில் சிக்கிக்கொண்டான்.[i]
இகாயோன்.* (*சேலா*)

י [*யோத்*]

17 பொல்லாதவன் கல்லறைக்குப் போய்ச் சேருவான்.
கடவுளை மறந்துவிடுகிற ஜனங்களும் அங்கேதான் போய்ச் சேருவார்கள்.
18 ஆனால், ஏழைகள் என்றைக்குமே மறக்கப்பட மாட்டார்கள்.[j]
தாழ்மையானவர்களின்* நம்பிக்கையும் ஒருபோதும் வீண்போகாது.[k]

כ [*காஃப்*]

19 யெகோவாவே, எழுந்து வாருங்கள்! அற்ப மனுஷனை ஜெயிக்க விடாதீர்கள்.
எல்லா தேசத்து ஜனங்களும் உங்கள் முன்னால் தீர்ப்பு பெறட்டும்.[l]
20 யெகோவாவே, அவர்களைக் கதிகலங்க வையுங்கள்.[m]
தாங்கள் அற்ப மனுஷர்கள்தான் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளட்டும். (*சேலா*)

ל [*லாமேத்*]

10 யெகோவாவே, ஏன் தூரத்தில் நிற்கிறீர்கள்?
இக்கட்டான காலத்தில் ஏன் ஒளிந்துகொள்கிறீர்கள்?[n]
2 பொல்லாதவன் ஆதரவற்றவர்களை அகம்பாவத்தோடு வேட்டையாடுகிறான்.[o]

9:14 *வே.வா., “புகழத்தக்க.” **9:16** *சொல் பட்டியலைப் பாருங்கள். **9:18** *வே.வா., “சாந்தமானவர்களின்.”

அதி. 9

a சங் 96:10
சங் 107:19, 22
ஏசா 12:3, 4

b ஆதி 4:9, 10
ஆதி 9:5
உபா 32:43
2ரா 9:24, 26
2ரா 24:3, 4
லூ 11:49-51

c யாத் 3:7
சங் 72:13, 14
லூ 18:7

d சங் 30:3
ஏசா 38:9, 10
வெளி 1:17, 18

e எரே 17:19, 20

f சங் 13:5
சங் 20:5

g உபா 32:35
நீதி 5:22

h யாத் 14:4
யோசு 2:10
2ரா 19:19

i நீதி 26:27
ஏசா 3:11

j சங் 12:5
சங் 72:4

k சங் 10:17
மத் 5:5

l ஆதி 18:25
சங் 82:8

m யாத் 15:16
யாத் 23:27

அதி. 10

n சங் 13:1
சங் 22:1
எரே 14:8

o யாத் 14:17

ஆனால், அவன் போடுகிற சதித்திட்டங்களில் அவனே
சிக்கிக்கொள்வான்.[a]
3 பொல்லாதவன் தன்னுடைய சுயநல ஆசைகளைப் பற்றிப்
பெருமையடிக்கிறான்.[b]
பேராசைக்காரனைப் பாராட்டுகிறான்.*

נ [*நூன்*]

யெகோவாவை அவமதிக்கிறான்.
4 பொல்லாதவன் தன்னுடைய ஆணவத்தினால் கடவுளைத் தேடாமல்
இருக்கிறான்.
"கடவுளே இல்லை" என்பதுதான் அவனுடைய நினைப்பு.[c]
5 அவன் செய்கிற எல்லாவற்றிலும் அவனுக்கு வெற்றி கிடைக்கிறது.[d]
ஆனால், உங்களுடைய நீதித்தீர்ப்புகளை அவனால் புரிந்துகொள்ள
முடிவதே இல்லை.[e]
தன்னுடைய எதிரிகள் எல்லாரையும் மட்டம்தட்டிப் பேசுகிறான்.
6 அவன் தன் இதயத்தில்,
"என்னை யாரும் அசைக்க முடியாது,*
எத்தனை தலைமுறை வந்தாலும்
எனக்கு ஒன்றுமே ஆகாது" என்று சொல்லிக்கொள்கிறான்.[f]

פ [*பே*]

7 அவன் வாயைத் திறந்தாலே சாபங்களும் பொய்களும்
மிரட்டல்களும்தான் வருகின்றன.[g]
அவனுடைய நாவிலிருந்து வருவதெல்லாம் பொல்லாத
வார்த்தைகளும் புண்படுத்துகிற வார்த்தைகளும்தான்.[h]
8 கிராமங்களுக்குப் பக்கத்தில் அவன் பதுங்கியிருக்கிறான்.
மறைந்திருந்து அப்பாவியைக் கொன்றுபோடுகிறான்.[i]

ע [*ஆயின்*]

யார் சிக்குவார்கள் என்று நோட்டமிட்டுக்கொண்டே இருக்கிறான்.[j]
9 குகையில்* இருக்கிற சிங்கத்தைப் போலப் பதுங்கியிருக்கிறான்.[k]
ஆதரவற்றவனைப் பிடிக்கக் காத்திருக்கிறான்.
அவனைத் தன் வலையில் சிக்க வைத்துப் பிடிக்கிறான்.[l]
10 பின்பு அவனை நொறுக்கித் தள்ளுகிறான்.
அந்தப் பொல்லாதவனின் கோரப்பிடிக்குள் அப்பாவிகள்
சிக்கிக்கொள்கிறார்கள்.
11 அவன் தன்னுடைய இதயத்தில்,
"கடவுள் மறந்துவிட்டார்.[m]
தன்னுடைய முகத்தைத் திருப்பிக்கொண்டார்.
அவர் கவனிப்பதே இல்லை" என்று சொல்லிக்கொள்கிறான்.[n]

ק [*கோஃப்*]

12 யெகோவாவே, எழுந்து வாருங்கள்.[o] கடவுளே, கை நீட்டி உதவுங்கள்.[p]
ஆதரவற்றவர்களை மறந்துவிடாதீர்கள்.[q]

10:3 *அல்லது, "பேராசைக்காரன் தன்னையே பாராட்டிக்கொள்கிறான்." **10:6** *வே.வா., "நான் தடுமாறவே மாட்டேன்." **10:9** *வே.வா., "புதரில்."

அதி. 10
a சங் 7:14, 16; சங் 37:7; நீதி 5:22; நீதி 26:27
b யாத் 15:9; ஓசி 12:8
c சங் 14:1, 2; சங் 53:1; செப் 1:12
d சங் 37:35
e ஏசா 26:11; ஓசி 14:9
f நீதி 14:16; பிர 8:11
g ரோ 3:14
h சங் 7:14; சங் 12:2; சங் 55:21
i நீதி 1:10, 11
j சங் 17:9, 11
k யோபு 38:39, 40; சங் 17:12; சங் 59:3
l சங் 140:5; எரே 5:26
m பிர 8:11
n சங் 73:3, 11; சங் 94:3, 7; எசே 8:12; எசே 9:9
o சங் 3:7
p மீ 5:9
q சங் 9:12; சங் 35:10

13 பொல்லாதவன் ஏன் கடவுளை அவமதிக்கிறான்?
அவன் தன் இதயத்தில்,
“நான் செய்வதையெல்லாம் கடவுள் கண்டுகொள்ள மாட்டார்”
என்று சொல்லிக்கொள்கிறான்.

ר [*ரேஷ்*]

14 ஆனால், தொல்லைகளையும் துன்பங்களையும் நீங்கள் நிச்சயமாகவே
பார்க்கிறீர்கள்.
பார்த்து நடவடிக்கையும் எடுக்கிறீர்கள்.[a]
கொடுமைக்கு ஆளானவன் உங்களைத்தான் தேடி வருகிறான்.[b]
அப்பா இல்லாத பிள்ளைக்கு* நீங்கள்தான் துணை.[c]

ש [*ஷீன்*]

15 அக்கிரமம் செய்கிற பொல்லாதவனின் கையை உடைத்துப்போடுங்கள்.[d]
அதன் பிறகு நீங்கள் தேடிப் பார்த்தாலும்,
அவனிடம் அக்கிரமத்தைக் கண்டுபிடிக்க முடியாது.*
16 யெகோவா என்றென்றும் ராஜாவாக இருக்கிறார்.[e]
தேசங்கள் இந்தப் பூமியிலிருந்து அழிந்துவிட்டன.[f]

ת [*ட்டா*]

17 யெகோவாவே, தாழ்மையானவர்களின்* வேண்டுதலை நீங்கள்
கேட்பீர்கள்.[g]
அவர்களுடைய இதயத்தைத் திடப்படுத்துவீர்கள்,# [h] அவர்களுடைய
வேண்டுதலைக் கவனித்துக் கேட்பீர்கள்.[i]
18 அப்பா இல்லாத பிள்ளைகளுக்கும் அடக்கி ஒடுக்கப்படுகிற
மக்களுக்கும் நியாயம் வழங்குவீர்கள்.[j]
அதன் பிறகு, இந்த உலகத்திலுள்ள அற்ப மனுஷர்கள் யாரும்
அவர்களைப் பயமுறுத்த முடியாது.[k]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் பாடல்.

11 யெகோவாவிடம் நான் தஞ்சம் புகுந்திருக்கிறேன்.[l]
அப்படியிருக்கும்போது, நீங்கள் எப்படி என்னிடம்,
“பறவையைப் போல உன் மலைக்குப் பறந்து போ!” என்று
சொல்லலாம்?
2 அதுமட்டுமல்ல, “பொல்லாதவர்கள் எப்படி வில்லை
வளைக்கிறார்கள், பார்!
நேர்மையான நெஞ்சமுள்ளவர்களைக் கொன்றுபோடுவதற்காக
அவர்கள் இருட்டிலிருந்து அம்பைக் குறிபார்த்து எறிகிறார்கள்.
3 அஸ்திவாரங்களே* தகர்க்கப்படும்போது,
நீதிமான்களால் என்ன செய்ய முடியும்” என்று நீங்கள் எப்படி
என்னிடம் சொல்லலாம்?
4 யெகோவா தன்னுடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்.[m]

10:14 *வே.வா., “அநாதைக்கு.” **10:15** *வே.வா., “அவனிடம் துளியும் அக்கிரமம் காணப்படாத அளவுக்கு அவனைத் தண்டியுங்கள்.” **10:17** *வே.வா., “சாந்தமானவர்களின்.” #வே.வா., “உறுதிப்படுத்துவீர்கள்.” **11:3** *வே.வா., “நியாயத்தின் அஸ்திவாரங்களே.”

அதி. 10
a 2ரா 9:26; 2நா 6:23
b 1பே 4:19
c உபா 10:17, 18; சங் 146:9; எபி 13:6
d யோபு 38:15
e யாத் 15:18; சங் 145:13; எரே 10:10; தானி 4:34; 1தீ 1:17
f சங் 9:5; சங் 44:2
g சங் 9:18
h 1நா 29:18, 19
i நீதி 15:8; 1பே 3:12
j சங் 72:4
k ஏசா 51:12

அதி. 11
l 2நா 14:11; சங் 7:1; சங் 56:11
m மீ 1:2; ஆப 2:20

யெகோவாவின் சிம்மாசனம் பரலோகத்தில் இருக்கிறது.[a]
அவருடைய கூர்மையான* கண்கள் மனிதர்களை ஆராய்கின்றன.[b]
5 நீதிமானையும் பொல்லாதவனையும் யெகோவா ஆராய்கிறார்.[c]
வன்முறையை விரும்புகிற எவனையும் அவர் வெறுக்கிறார்.[d]
6 பொல்லாதவர்கள்மேல் அவர் கண்ணிகளை வர வைப்பார்.*
நெருப்பும் கந்தகமும்[e] அனல் காற்றும் அவர்களைத் தாக்கும்படி
செய்வார்.#
7 யெகோவா நீதியுள்ளவர்;[f] நீதியான செயல்களை விரும்புகிறவர்.[g]
நேர்மையானவர்கள் அவருடைய முகத்தைப் பார்ப்பார்கள்.*[h]

இசைக் குழுவின் தலைவனுக்கு; செமினீத்* இசையில்;
தாவீதின் சங்கீதம்.

12 யெகோவாவே, என்னைக் காப்பாற்றுங்கள். ஏனென்றால்,
உண்மையுள்ளவர்கள்* யாருமே இப்போது இல்லை.
விசுவாசமானவர்கள் இந்த உலகத்திலிருந்து மறைந்துவிட்டார்கள்.
2 எல்லாரும் பொய் பேசுகிறார்கள்.
தங்கள் உதடுகளால் போலியாகப் புகழ்கிறார்கள், வஞ்சக
உள்ளத்தோடு பேசுகிறார்கள்.[i]
3 போலியாகப் புகழ்கிற உதடுகளை யெகோவா வெட்டிப்போடுவார்.
பெருமையடிக்கிற நாவை அறுத்தெறிவார்.[j]
4 “நாங்கள் பேசியே ஜெயித்துவிடுவோம்.
எங்கள் இஷ்டத்துக்குப் பேசுவோம்.
எங்களை யாரும் கேள்வி கேட்க முடியாது!”[k] என்று அவர்கள்
சொல்கிறார்கள்.
5 “கஷ்டத்தில் தவிக்கிறவர்கள் அடக்கி ஒடுக்கப்படுவதாலும்,
ஏழைகள் வேதனையில் பெருமூச்சு விடுவதாலும்,[l]
நான் நடவடிக்கை எடுக்கப்போகிறேன்.
அவர்களைக் கேவலமாக நடத்துகிற ஆட்களிடமிருந்து
காப்பாற்றுவேன்” என்று யெகோவா சொல்கிறார்.
6 யெகோவாவின் வார்த்தைகள் சுத்தமானவை.[m]
அவை களிமண் சூளையில்* ஏழு தடவை புடமிடப்பட்டு
சுத்திகரிக்கப்பட்ட வெள்ளிபோல் இருக்கின்றன.
7 யெகோவாவே, அவர்களை நீங்கள் காத்திடுவீர்கள்.[n]
அவர்கள் ஒவ்வொருவரையும் இந்தத் தலைமுறையிடமிருந்து
என்றென்றுமே பாதுகாப்பீர்கள்.
8 பொல்லாதவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் சுற்றித்திரிகிறார்கள்.
ஏனென்றால், ஒழுக்கக்கேடான காரியங்களை மக்கள் மெச்சிப்
பேசுகிறார்கள்.*[o]

11:4 *வே.வா., “உன்னிப்பான; ஒளிவீசும்.” **11:6** *அல்லது, “எரிகிற தணலைக் கொட்டுவார்.” #நே.மொ., “அவர்களுடைய கிண்ணத்தின் பங்காக இருக்கும்.” **11:7** *வே.வா., “அவருடைய கருணையைப் பெறுவார்கள்.” **12:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **12:1** *வே.வா., “பற்றுமாறாதவர்கள்.” **12:6** *அல்லது, “தரையில் அமைக்கப்பட்ட சுத்திகரிப்பு சூளையில்.” **12:8** *வே.வா., “மக்கள் ஊக்குவிக்கிறார்கள்.”

அதி. 11
a 2நா 20:6
சங் 103:19
வெளி 4:2, 3
b 2நா 16:9
நீதி 15:3
சக 4:10
எபி 4:13
c ஆதி 6:5
ஆதி 7:1
d நீதி 3:31
நீதி 6:16, 17
e ஆதி 19:24
எசே 38:22
f உபா 32:4
g சங் 146:8
h யோபு 36:7
சங் 34:15
1பே 3:12

அதி. 12
i சங் 28:3
j யாத் 15:9, 10
1சா 2:3
எசே 28:2
k சங் 10:5
l யாத் 3:7
m 2சா 22:31
சங் 19:8
n 1சா 2:9
o பிர 8:11

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

13 யெகோவாவே, எத்தனை நாளைக்குத்தான் என்னை
மறந்திருப்பீர்கள்?
என்னை ஒரேயடியாக மறந்துவிடுவீர்களா?
எத்தனை நாளைக்குத்தான் உங்கள் முகத்தை என்னிடமிருந்து
மறைத்துக்கொள்வீர்கள்?[a]
2 எத்தனை நாளைக்குத்தான் நான் கவலையில் தவிக்க வேண்டும்?
எத்தனை நாளைக்குத்தான் இதயத்தில் துக்கத்தைச் சுமக்க வேண்டும்?
எத்தனை நாளைக்குத்தான் என்னுடைய எதிரி ஜெயித்துக்கொண்டே
இருப்பான்?[b]
3 யெகோவாவே, என் கடவுளே, என்னைப் பாருங்கள்.
எனக்குப் பதில் சொல்லுங்கள்.
என் கண்களை ஒளிவீசச் செய்யுங்கள், அப்போதுதான் நான்
ஒரேயடியாகக் கண்மூடிவிடாமல்* இருப்பேன்.
4 அப்போதுதான், "அவனைத் தோற்கடித்துவிட்டேன்!" என்று
என்னுடைய எதிரி சொல்ல மாட்டான்.
விரோதிகள் என்னுடைய தோல்வியைப் பார்த்து
சந்தோஷப்படுவதற்கு விடாதீர்கள்.[c]
5 நீங்கள் மாறாத அன்பு காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு
இருக்கிறது.[d]
நீங்கள் தருகிற மீட்பினால் என் இதயம் சந்தோஷப்படும்.[e]
6 யெகோவா என்னை அளவில்லாமல் ஆசீர்வதித்திருப்பதால்[f]
அவரைப் புகழ்ந்து பாடுவேன்.

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் பாடல்.

14 முட்டாள்கள் தங்களுடைய இதயத்தில்,
"யெகோவா என்று யாருமே கிடையாது"[g] என்று சொல்கிறார்கள்.
அவர்கள் அக்கிரமம் செய்கிறார்கள், அவர்கள் செய்வதெல்லாம்
அருவருப்பாக இருக்கிறது.
ஒருவன்கூட நல்லது செய்வதில்லை.[h]
2 ஆனால், யெகோவா பரலோகத்திலிருந்து மனிதர்களைப் பார்க்கிறார்.
யாராவது விவேகமாக* நடக்கிறார்களா, யெகோவாவைத்
தேடுகிறார்களா என்று பார்க்கிறார்.[i]
3 அவர்கள் எல்லாரும் வழிவிலகிப் போயிருக்கிறார்கள்.[j]
எல்லாரும் ஒரேபோல் சீர்கெட்டுப் போயிருக்கிறார்கள்.
நல்லது செய்கிறவர்கள் யாருமே இல்லை,
ஒருவன்கூட இல்லை.
4 தவறு செய்கிற யாருக்குமே புத்தி* இல்லையா?
உணவை விழுங்குவதுபோல் அவர்கள் என் ஜனங்களை
விழுங்குகிறார்கள்.
அவர்கள் யெகோவாவைக் கூப்பிடுவதில்லை.

13:3 *வே.வா., "மரணத்தில் தூங்கிவிடாமல்." **14:2** *வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதலோடு." **14:4** *வே.வா., "புரிந்துகொள்ளும் திறன்."

அதி. 13
a யோபு 13:24; சங் 6:3; சங் 22:2
b சங் 22:7, 8
c சங் 25:2; சங் 35:19
d சங் 52:8; சங் 147:11; 1பே 5:6, 7
e 1சா 2:1
f சங் 116:7; சங் 119:17

அதி. 14
g சங் 10:4; ஏசா 29:16
h சங் 53; ரோ 3:10-12
i 2நா 16:9; சங் 33:13-15; எபி 11:6
j பிர 7:29

5 அதனால், பயங்கரமான திகில் அவர்களைப் பிடித்துக்கொள்ளும்.[a]
ஏனென்றால், நீதிமான்களின் தலைமுறையோடு யெகோவா
இருக்கிறார்.
6 தவறு செய்கிறவர்களே, நீங்கள் எளியவனின் திட்டங்களைத்
தவிடுபொடியாக்கப் பார்க்கிறீர்கள்.
ஆனால், யெகோவா அவனுக்குத் தஞ்சமாக இருக்கிறார்.[b]
7 சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு மீட்பு வரட்டும்![c]
சிறைபிடிக்கப்பட்ட தன் ஜனங்களை யெகோவா மறுபடியும்
கூட்டிச்சேர்க்கும்போது,
யாக்கோபு சந்தோஷப்படட்டும், இஸ்ரவேல் பூரித்துப்போகட்டும்.

தாவீதின் சங்கீதம்.

15 யெகோவாவே, யார் உங்களுடைய கூடாரத்தில் விருந்தாளியாக
இருக்க முடியும்?
யார் உங்களுடைய பரிசுத்த மலையில் தங்க முடியும்?[d]
2 குற்றமில்லாமல்* நடந்து,[e]
எப்போதும் சரியானதைச் செய்து,[f]
இதயத்தில் உண்மையைப் பேசுகிறவன்தான்.[g]
3 அப்படிப்பட்டவன், மற்றவர்களைப் பற்றி இல்லாததையும்
பொல்லாததையும் பேச மாட்டான்.[h]
மற்றவர்களுக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டான்.[i]
நண்பர்களைப் பற்றிக் கேவலமாகப் பேச மாட்டான்.*[j]
4 கீழ்த்தரமாக நடக்கிறவனோடு சேர மாட்டான்.[k]
யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு மதிப்பு மரியாதை
காட்டுவான்.
எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும்* கொடுத்த வாக்கை மீற
மாட்டான்.[l]
5 வட்டிக்குக் கடன் கொடுக்க மாட்டான்.[m]
அப்பாவிகள்மேல் குற்றம் சுமத்துவதற்காக லஞ்சம் வாங்க மாட்டான்.[n]
இப்படிப்பட்டவன் அசைக்கப்படவே* மாட்டான்.[o]

தாவீதின் மிக்தாம்.*

16 கடவுளே, எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்; நீங்கள்தான் என்
அடைக்கலம்.[p]
2 நான் யெகோவாவிடம், “யெகோவாவே, நல்லதையெல்லாம்
நீங்கள் எனக்குத் தருகிறீர்கள்.*
3 பூமியில் இருக்கிற பரிசுத்தவான்களால்,
அந்த மதிப்புக்குரியவர்களால் என் மனதில் சந்தோஷம்
பொங்குகிறது”[q] என்று சொன்னேன்.

15:2 * வே.வா., “உத்தமமாக.” **15:3** * வே.வா., “நண்பர்களை அவமானப்படுத்த மாட்டான்.” **15:4** * வே.வா., “தனக்கு நஷ்டம் வந்தாலும்.” **15:5** * வே.வா., “தடுமாறவே.” **16:மே.கு.** * சொல் பட்டியலைப் பாருங்கள். **16:2** * வே.வா., “என்னிடம் இருக்கிற நல்லதெல்லாம் உங்களிடமிருந்து வந்ததுதான்.”

அதி. 14
a யாத் 15:16
b சங் 9:9 சங் 142:5
c ரோ 11:26, 27

அதி. 15
d சங் 2:6 சங் 24:3, 4
e சங் 1:1
f ஏசா 33:15, 16 அப் 10:34, 35
g நீதி 3:32 எபே 4:25
h லேவி 19:16 சங் 101:5 நீதி 20:19
i நீதி 14:21 ரோ 12:17
j யாத் 23:1
k எஸ்தர் 3:2
l யோசு 9:18-20 நியா 11:34, 35 சங் 50:14 மத் 5:33
m யாத் 22:25
n யாத் 23:8
o சங் 16:7, 8 நீதி 12:3 2பே 1:10

அதி. 16
p சங் 25:20
q சங் 119:63

4 மற்ற தெய்வங்களைத் தேடிப்போகிறவர்களுக்குக் கஷ்டத்துக்குமேல் கஷ்டம் வரும்.[a]
அவர்களைப் போல நான் அந்தத் தெய்வங்களுக்கு இரத்தத்தைக் காணிக்கையாகக் கொடுக்க மாட்டேன்,
அவற்றின் பெயர்களை உச்சரிக்கவும் மாட்டேன்.[b]
5 யெகோவாதான் என் பங்கு,[c] அவர்தான் என் கிண்ணம்.[d]
நீங்கள்தான் என்னுடைய சொத்தைப் பாதுகாக்கிறீர்கள்.
6 எனக்கு அருமையான இடங்களைச் சொத்தாக அளந்து கொடுத்திருக்கிறீர்கள்.[e]
அதனால், நான் திருப்தியாக இருக்கிறேன்.
7 எனக்கு ஆலோசனை தந்த யெகோவாவை[f] நான் புகழ்வேன்.
ராத்திரியில்கூட என்னுடைய அடிமனதின் யோசனைகள்* என்னைத் திருத்துகின்றன.[g]
8 யெகோவாவை எப்போதும் என் கண் முன்னால் வைத்திருக்கிறேன்.[h]
அவர் என் வலது பக்கத்தில் இருப்பதால் என்னை யாரும் அசைக்க முடியாது.*[i]
9 அதனால் என் இதயம் பூரிக்கிறது, எனக்குள் சந்தோஷம் பொங்கி வழிகிறது.
நான் பாதுகாப்பாக வாழ்கிறேன்.
10 நீங்கள் என்னைக் கல்லறையில்* விட்டுவிட மாட்டீர்கள்.[j]
உங்களுக்கு உண்மையாக# இருப்பவர் சவக்குழியைக் காண△ விட மாட்டீர்கள்.[k]
11 வாழ்வின் பாதையை நீங்கள் எனக்குக் காட்டுகிறீர்கள்.[l]
உங்களுடைய சன்னிதியில் அளவில்லாத சந்தோஷம் உண்டு.[m]
உங்களுடைய வலது பக்கத்தில் முடிவில்லாத மகிழ்ச்சி உண்டு.

தாவீதின் ஜெபம்.

17 யெகோவாவே, நியாயம் கேட்டு நான் முறையிடுவதைக் கேளுங்கள்.
உதவிக்காக நான் கதறுவதைக் கவனியுங்கள்.
கள்ளம்கபடம் இல்லாமல் நான் செய்கிற ஜெபத்தைக் கேளுங்கள்.[n]
2 எனக்கு நியாயமான தீர்ப்பு கொடுங்கள்.[o]
உங்களுடைய கண்கள் நேர்மையானதைப் பார்க்கட்டும்.
3 நீங்கள் என் இதயத்தை ஆராய்ந்து பார்த்திருக்கிறீர்கள், ராத்திரியில் என்னைச் சோதித்துப் பார்த்திருக்கிறீர்கள்.[p]
என்னைப் புடமிட்டிருக்கிறீர்கள்.[q]
நான் எந்தச் சதித்திட்டமும் தீட்டவில்லை என்றும்,
என் வாயால் பாவம் செய்யவில்லை என்றும் நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.

அதி. 16
a உபா 8:19; சங் 97:7; யோனா 2:8
b யாத் 23:13; யோசு 23:6, 7
c சங் 73:26
d சங் 23:5
e சங் 78:55
f ஏசா 48:17
g சங் 17:3; சங் 26:2
h சங் 139:17, 18
i சங் 73:23; அப் 2:25-28
j சங் 49:15; அப் 2:31; அப் 3:15; வெளி 1:17, 18
k யோபு 14:13, 14; அப் 13:34-37
l நீதி 12:28
m சங் 21:6; மத் 5:8

அதி. 17
n சங் 145:18
o சங் 37:5, 6
p சங் 11:5; சங் 16:7; 1கொ 4:4
q சங் 26:2; மல் 3:3; 1பே 1:6, 7

16:7 *வே.வா., "ஆழமான உணர்ச்சிகள்." நே.மொ., "என் சிறுநீரகங்கள்." **16:8** *வே.வா., "நான் தடுமாறவே மாட்டேன்." **16:10** *மூலமொழியில், "ஷியோலில்." சொல் பட்டியலில் "ஷியோல்" என்ற தலைப்பைப் பாருங்கள். #வே.வா., "பற்றுமாறாமல்." △அல்லது, "உண்மையாக இருப்பவரின் உடல் அழிந்துபோக."

4 மற்றவர்கள் எப்படி நடந்துகொண்டாலும் சரி,
நான் உங்களுடைய வார்த்தையின்படியே,
திருடர்களின் பாதைகளில் போகாமல் இருப்பேன்.[a]
5 உங்களுடைய பாதைகளிலேயே நடக்க எனக்கு உதவி செய்யுங்கள்.
அப்போதுதான் என் கால்கள் தடுமாறாமல் இருக்கும்.[b]
6 கடவுளே, நீங்கள் எனக்குப் பதில் சொல்வீர்கள். அதனால்தான் உங்களைக் கூப்பிடுகிறேன்.[c]
நான் பேசுவதைக் கேளுங்கள், காதுகொடுத்து* கேளுங்கள்.[d]
7 உங்களுடைய வலது பக்கத்தில் தஞ்சம் தேடி வருகிறவர்களை மீட்கிறவரே,
உங்களை எதிர்க்கிற ஆட்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றுகிறவரே,
அற்புதமான விதத்தில் உங்களுடைய மாறாத அன்பைக் காட்டுங்கள்.[e]
8 கண்மணிபோல் என்னைப் பார்த்துக்கொள்ளுங்கள்.[f]
உங்களுடைய சிறகுகளின் நிழலில் என்னை மறைத்துக்கொள்ளுங்கள்.[g]
9 என்னைத் தாக்குகிற பொல்லாத ஆட்களிடமிருந்தும்,
என்னைக் கொல்வதற்காகவே சுற்றிவளைக்கிற எதிரிகளிடமிருந்தும் காப்பாற்றுங்கள்.[h]
10 அவர்கள் கல்நெஞ்சக்காரர்களாக ஆகிவிட்டார்கள்.
அவர்கள் அகம்பாவத்தோடு பேசுகிறார்கள்.
11 இப்போது எங்களைச் சுற்றிவளைத்துக்கொண்டார்கள்.[i]
எங்களை வீழ்த்துவதற்கு* சந்தர்ப்பம் தேடுகிறார்கள்.
12 அவர்கள் ஒவ்வொருவரும், கடித்துக் குதறுவதற்குக் காத்திருக்கிற சிங்கத்தைப் போல இருக்கிறார்கள்.
பதுங்கியிருக்கிற இளம் சிங்கத்தைப் போல இருக்கிறார்கள்.
13 யெகோவாவே, எழுந்து வாருங்கள், நேருக்குநேர் மோதி அவர்களை வீழ்த்துங்கள்.[j]
உங்களுடைய வாளால் பொல்லாதவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
14 யெகோவாவே, உங்கள் கையால் என்னை இந்த உலக ஆட்களிடமிருந்து காப்பாற்றுங்கள்.
அவர்கள் இந்த உலக வாழ்க்கையையே முக்கியமென நினைக்கிறார்கள்.[k]
நீங்கள் தருகிற நல்ல நல்ல காரியங்களை[l] அனுபவித்துவிட்டு,
தங்கள் பிள்ளைகளுக்குச் சொத்துகளை விட்டுவிட்டுப் போகிறார்கள்.
15 ஆனால் நான் நீதிமானாக இருப்பதால், உங்களுடைய முகத்தைப் பார்ப்பேன்.
உங்கள் முன்னிலையில் கண் விழிப்பது* எனக்கு மனநிறைவு தருகிறது.[m]

அதி. 17
a சங் 119:9
b சங் 18:36 சங் 94:18 சங் 119:133 சங் 121:3
c சங் 55:16
d ஏசா 37:17
e சங் 31:21 புல 3:22
f உபா 32:9, 10 சக 2:8
g ரூ 2:12 சங் 36:7 சங் 57:1
h 1சா 24:11 சங் 35:4
i 1சா 23:26
j சங் 7:6
k சங் 73:12
l மத் 5:45
m சங் 65:4

17:6 *வே.வா., “குனிந்து.” **17:11** *வே.வா., “தரையில் தள்ளுவதற்கு.” **17:15** *வே.வா., “உங்களுடைய சாயலைப் பார்ப்பது.”

இசைக் குழுவின் தலைவனுக்கு; யெகோவாவின் ஊழியரான தாவீதின் பாடல். எல்லா எதிரிகளிடமிருந்தும் சவுலிடமிருந்தும் தாவீதை யெகோவா காப்பாற்றியபோது யெகோவாவைப் புகழ்ந்து அவர் பாடிய பாடல்:[a]

18 என் பலமாக இருக்கிற யெகோவாவே,[b] உங்கள்மேல் நான் பாசம்
வைத்திருக்கிறேன்.

2 யெகோவாதான் என்னுடைய மாபெரும் கற்பாறை, என் கோட்டை,
என்னைக் காப்பாற்றுபவர்.[c]
என் கடவுள்தான் நான் தஞ்சம் தேடும் கற்பாறை.[d]
அவர்தான் என் கேடயம், பலம்படைத்த மீட்பர்,* பாதுகாப்பான#
அடைக்கலம்.[e]

3 எல்லா புகழையும் பெறத் தகுதியுள்ளவரான யெகோவாவை நான்
கூப்பிடுவேன்.
எதிரிகளிடமிருந்து அவர் என்னைக் காப்பாற்றுவார்.[f]

4 மரணக் கயிறுகள் என்னைச் சுற்றிக்கொண்டன.[g]
ஒன்றுக்கும் உதவாதவர்கள் வெள்ளம்போல் திரண்டு வந்து
எனக்குத் திகிலூட்டினார்கள்.[h]

5 கல்லறையின் கயிறுகள் என்னைச் சுற்றி இறுக்கின.
சாவின் கண்ணிகள் என் முன்னால் இருந்தன.[i]

6 இக்கட்டில் தவித்தபோது நான் யெகோவாவைக் கூப்பிட்டேன்.
என் கடவுளிடம் உதவிக்காகக் கதறிக்கொண்டே இருந்தேன்.
அவருடைய ஆலயத்திலிருந்து அவர் என் குரலைக் கேட்டார்.[j]
என் கதறல் அவருடைய காதுகளை எட்டியது.[k]

7 அப்போது, பூமி பயங்கரமாகக் குலுங்கியது.[l]
அவருடைய கோபத்தால் மலைகளின் அஸ்திவாரங்கள் அதிர்ந்தன.
அவை கிடுகிடுவென ஆடின.[m]

8 அவருடைய மூக்கிலிருந்து புகை எழும்பியது.
சுட்டுப்பொசுக்கும் தீ அவர் வாயிலிருந்து புறப்பட்டது.[n]
தகதகக்கும் தணல்கள் அவரிடமிருந்து தெறித்தன.

9 அவர் இறங்கியபோது வானத்தை வளைத்தார்.[o]
கார்மேகங்கள் அவருடைய காலடியில் இருந்தன.[p]

10 கேருபீனின் மேல் ஏறி அவர் பறந்து வந்தார்.[q]
தேவதூதரின்* இறக்கைகள்மேல் உட்கார்ந்து வேகமாக இறங்கி
வந்தார்.[r]

11 பின்பு, இருளும்[s] கருத்த மழைமேகங்களும்[t]
ஒரு கூடாரம்போல் தன்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்தார்.

12 அவருடைய பிரகாசமான சன்னிதியிலிருந்து
ஆலங்கட்டிகளும்* நெருப்புத் தணல்களும் அந்த மேகங்களைத்
துளைத்துக்கொண்டு வந்தன.

13 பின்பு, யெகோவா வானத்திலிருந்து இடிபோல் முழங்கினார்.[u]

அதி. 18
- *a* 2சா 22:1
- *b* சங் 18:32; ஏசா 12:2
- *c* சங் 3:3; சங் 37:39, 40; சங் 40:17
- *d* உபா 32:4
- *e* ஆதி 15:1; 2சா 22:2-4
- *f* சங் 50:15
- *g* 1சா 20:3; சங் 116:3
- *h* 2சா 20:1; 2சா 22:5, 6; சங் 22:16
- *i* பிர 9:12
- *j* சங் 11:4
- *k* 2சா 22:7; சங் 10:17; சங் 34:15; 1பே 3:12
- *l* நியா 5:4
- *m* 2சா 22:8-16; சங் 77:18
- *n* ஏசா 30:27
- *o* சங் 144:5; ஏசா 64:1
- *p* 2சா 22:10
- *q* சங் 99:1
- *r* சங் 104:3; எபி 1:7
- *s* சங் 97:2
- *t* யோபு 36:29
- *u* 1சா 2:10; 1சா 7:10

18:2 *நே.மொ., “என்னை மீட்கும் கொம்பு.” சொல் பட்டியலில் “கொம்பு” என்ற தலைப்பைப் பாருங்கள். #வே.வா., “உயர்ந்த.” **18:10** *வே.வா., “காற்றின்.” **18:12** *அதாவது, “பனிக்கட்டிகளும்.”

உன்னதமான கடவுள் தன்னுடைய குரலைக் கேட்கச் செய்தார்.[a]
அப்போது, ஆலங்கட்டிகளும் நெருப்புத் தணல்களும் கொட்டின.
14 அம்புகளை எறிந்து எதிரிகளைச் சிதறிப்போக வைத்தார்.[b]
மின்னலை அனுப்பி அவர்களைக் குழம்பிப்போக வைத்தார்.[c]
15 யெகோவாவே, நீங்கள் அதட்டினீர்கள்.
உங்கள் மூச்சுக்காற்று பலமாக அடித்தது.[d]
அப்போது, ஆறுகளின் அடிப்பரப்புகள்* வெளியே தெரிந்தன.[e]
பூமியின் அஸ்திவாரங்களும் தெரிந்தன.
16 உயரத்திலிருந்து அவர் தன்னுடைய கையை நீட்டி,
என்னைப் பிடித்து, ஆழமான தண்ணீரிலிருந்து தூக்கிவிட்டார்.[f]
17 பலம்படைத்த எதிரியிடமிருந்து என்னைக் காப்பாற்றினார்.[g]
என்னைவிட வலிமையான விரோதிகளிடமிருந்து என்னை
விடுவித்தார்.[h]
18 ஆபத்து நாளில் அவர்கள் எனக்கு எதிராக வந்தார்கள்.[i]
ஆனால், யெகோவா எனக்குத் துணையாக இருந்தார்.
19 பாதுகாப்பான* இடத்துக்கு என்னைக் கொண்டுவந்தார்.
என்மேல் வைத்திருந்த பிரியத்தால் என்னைக் காப்பாற்றினார்.[j]
20 யெகோவா என் நீதிக்குப் பலன் தருகிறார்.[k]
கறைபடியாத என் கைகளுக்குப் பலன் கொடுக்கிறார்.[l]
21 நான் எப்போதும் யெகோவாவின் வழிகளில் நடக்கிறேன்.
என் கடவுளைவிட்டு நான் விலகவில்லை, அந்தப் பாவத்தை நான்
செய்யவில்லை.
22 அவருடைய நீதித்தீர்ப்புகளைக் கண் முன்னால் வைத்திருக்கிறேன்.
அவருடைய சட்டதிட்டங்களை அலட்சியம் செய்ய மாட்டேன்.
23 அவர் முன்னால் எப்போதும் குற்றமற்றவனாக இருப்பேன்.[m]
தவறு செய்யாமல் ஜாக்கிரதையாக இருப்பேன்.[n]
24 யெகோவா என் நீதிக்குப் பலன் தரட்டும்.[o]
கறைபடியாத என் கைகளுக்குப் பலன் கொடுக்கட்டும்.[p]
25 உண்மையுள்ளவரிடம்* நீங்கள் உண்மையுள்ளவராக#
நடந்துகொள்கிறீர்கள்.[q]
குற்றமற்றவரிடம் நீங்கள் குற்றமற்றவராக நடந்துகொள்கிறீர்கள்.[r]
26 தூய்மையானவருக்கு நீங்கள் தூய்மையானவராக இருக்கிறீர்கள்.[s]
குறுக்குபுத்திக்காரரிடம் நீங்கள் புத்திசாலித்தனமாக*
நடந்துகொள்கிறீர்கள்.[t]
27 தாழ்ந்தவர்களை* காப்பாற்றுகிறீர்கள்.[u]
கர்வமுள்ளவர்களை# தாழ்த்துகிறீர்கள்.[v]
28 யெகோவாவே, என் விளக்கை ஏற்றுகிறவர் நீங்கள்தான்.
என் கடவுளே, என் இருளை வெளிச்சமாக்குகிறவர் நீங்கள்தான்.[w]

18:15 *வே.வா., "வாய்க்கால்கள்." **18:19** *வே.வா., "விசாலமான." **18:25** *வே.வா., "பற்றுமாறாதவரிடம்." #வே.வா., "பற்றுமாறாதவராக." **18:26** *வே.வா., "சாமர்த்தியமாக." **18:27** *வே.வா., "கஷ்டப்படுகிறவர்களை." #நே.மொ., "ஆணவ மான கண்களை."

அதி. 18
a 2சா 22:14, சங் 29:3
b ஏசா 30:30
c யோபு 36:32, சங் 144:6
d யாத் 15:8, 2சா 22:16
e சங் 74:15, சங் 106:9, சங் 114:1, 3
f 2சா 22:17-20, சங் 124:2-4
g சங் 3:7
h சங் 35:10
i 1சா 19:11, 1சா 23:26
j சங் 149:4
k 1சா 26:23, 1ரா 8:32
l 1சா 24:11, 2சா 22:21-25, சங் 24:3, 4
m சங் 84:11
n 2சா 22:24, நீதி 14:16
o ஏசா 3:10, எபி 11:6
p 2சா 22:25, நீதி 5:21
q சங் 97:10
r 2சா 22:26-31, யோபு 34:11, எரே 32:19
s மத் 5:8
t சங் 125:5
u யோபு 34:28
v நீதி 6:16, 17, ஏசா 2:11, லூ 18:14
w சங் 97:11, ஏசா 42:16

29 உங்கள் துணையால் கொள்ளைக்கூட்டத்தைத் தாக்குவேன்.[a]
உங்கள் சக்தியால் மதிலையும் தாண்டுவேன்.[b]
30 உண்மைக் கடவுளுடைய வழிகள் குறை இல்லாதவை.[c]
யெகோவாவுடைய வார்த்தைகள் புடமிடப்பட்டவை.[d]
தன்னிடம் தஞ்சம் தேடி வருகிற எல்லாருக்கும் அவர் கேடயமாக இருக்கிறார்.[e]
31 யெகோவாவைத் தவிர வேறு கடவுள் உண்டா?[f]
நம் கடவுளைத் தவிர வேறு கற்பாறை உண்டா?[g]
32 உண்மைக் கடவுள்தான் எனக்குப் பலம் தருகிறார்.[h]
அவர் என் வழியைச் சீராக்குவார்.[i]
33 அவர் என் கால்களை மானின் கால்களைப் போலாக்குகிறார்.
உயரமான இடங்களில் என்னை நிற்க வைக்கிறார்.[j]
34 போர் செய்ய என் கைகளுக்குப் பயிற்சி தருகிறார்.
அதனால், என் கைகளால் செம்பு வில்லை வளைக்க முடியும்.
35 உங்களுடைய மீட்பின் கேடயத்தை எனக்குக் கொடுக்கிறீர்கள்.[k]
உங்கள் வலது கையால் என்னைத் தாங்குகிறீர்கள்.
உங்கள் மனத்தாழ்மையால் என்னை உயர்த்துகிறீர்கள்.[l]
36 நான் நடக்கும் பாதையை அகலமாக்குகிறீர்கள்.
அதனால் என் கால்கள்* தடுமாறாது.[m]
37 நான் எதிரிகளைத் துரத்திக்கொண்டு போய்ப் பிடிப்பேன்.
அவர்களை அடியோடு அழித்துவிட்டுத்தான் திரும்புவேன்.
38 மறுபடியும் எழுந்து வர முடியாதபடி அவர்களை நொறுக்குவேன்.[n]
அவர்கள் என் காலடியில் விழுவார்கள்.
39 போர் செய்ய நீங்கள் எனக்குப் பலம் தருவீர்கள்.
எதிரிகளை என் காலடியில் விழ வைப்பீர்கள்.[o]
40 என் பகைவர்களைப் பின்வாங்கி ஓட வைப்பீர்கள்.
என் விரோதிகளை நான் ஒழித்துக்கட்டுவேன்.*[p]
41 அவர்கள் உதவி கேட்டுக் கதறுகிறார்கள், ஆனால் அவர்களைக் காப்பாற்ற யாரும் இல்லை.
அவர்கள் யெகோவாவிடமும் கதறுகிறார்கள், ஆனால் அவர் பதில் சொல்வதில்லை.
42 காற்றில் பறக்கிற தூசியைப் போல அவர்களை நான் தூள்தூளாக்குவேன்.
தெருக்களில் கிடக்கிற சேற்றைப் போல அவர்களை வீசியெறிவேன்.
43 என்னை எதிர்க்கிற* ஜனங்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுவீர்கள்.[q]
தேசங்களுக்கு என்னைத் தலைவனாக்குவீர்கள்.[r]
முன்பின் தெரியாத மக்கள் எனக்குச் சேவை செய்வார்கள்.[s]
44 என்னைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் எனக்குக் கீழ்ப்படிவார்கள்.
மற்ற தேசத்து மக்கள் என் முன்னால் அடங்கி ஒடுங்கி நிற்பார்கள்.[t]

18:36 *வே.வா., “கணுக்கால்கள்.” 18:40 *நே.மொ., “மவுனமாக்குவேன்.” 18:43 *வே.வா., “என்னைக் குறைசொல்கிற.”

அதி. 18
a 2சா 5:19; எபி 11:32-34
b 2சா 22:30; பிலி 4:13
c உபா 32:4; தானி 4:37; வெளி 15:3
d சங் 12:6; சங் 19:8
e சங் 18:2; சங் 84:11
f சங் 86:8; ஏசா 45:5
g உபா 32:31; 1சா 2:2; 2சா 22:32-43
h சங் 84:5, 7
i ஏசா 26:7
j ஆப 3:19
k ஆதி 15:1; உபா 33:29; சங் 28:7
l 2சா 22:36; சங் 113:6-8
m சங் 17:5
n சங் 2:8, 9
o சங் 44:5
p 2சா 22:41; சங் 34:21
q 1சா 30:6
r 2சா 8:3; சங் 2:8
s 2சா 22:44-46
t உபா 33:29

45 மற்ற தேசத்து மக்கள் வெலவெலத்துப்போவார்கள்.*
அவர்களுடைய கோட்டைகளிலிருந்து நடுநடுங்கிக்கொண்டு
வருவார்கள்.
46 யெகோவாதான் உயிருள்ள கடவுள்! அவரே என் கற்பாறை![a]
அவருக்குப் புகழ் சேரட்டும்!
என்னை மீட்கும் கடவுள் போற்றப்படட்டும்.[b]
47 உண்மைக் கடவுள் எனக்காகப் பழிவாங்குகிறார்.[c]
மக்களை என் முன்னால் அடிபணிய வைக்கிறார்.
48 கோபவெறிபிடித்த எதிரிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுகிறார்.
என்னைத் தாக்க வருகிறவர்களின் கைக்கு எட்டாதபடி என்னைத்
தூக்கிக்கொள்கிறார்.[d]
கொடியவனிடமிருந்து என்னைப் பாதுகாக்கிறார்.
49 அதனால் யெகோவாவே, எல்லா மக்கள் மத்தியிலும் உங்களை
மகிமைப்படுத்துவேன்.[e]
உங்களுடைய பெயரைப் புகழ்ந்து பாடுவேன்.*[f]
50 தான் நியமித்த ராஜாவை மீட்பதற்காக அவர் மாபெரும் செயல்களைச்
செய்கிறார்.*[g]
தான் தேர்ந்தெடுத்த#[h] தாவீதுக்கும் அவருடைய சந்ததிக்கும்
மாறாத அன்பை என்றென்றும் காட்டுகிறார்.[i]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

19 வானம் கடவுளுடைய மகிமையைச் சொல்கிறது.[j]
ஆகாயம்* அவருடைய கைவண்ணத்தை அறிவிக்கிறது.[k]
2 ஒவ்வொரு பகலிலும் அவை வார்த்தைகளைப் பொழிகின்றன.
ஒவ்வொரு இரவிலும் அறிவை வெளிப்படுத்துகின்றன.
3 அவற்றுக்குப் பேச்சும் இல்லை, வார்த்தைகளும் இல்லை.
அவற்றின் குரல் கேட்கப்படுவதும் இல்லை.
4 ஆனாலும், அவற்றின் சத்தம்* பூமியெங்கும் எட்டுகிறது.
அவற்றின் செய்தி பூமியின் எல்லைகள்வரை போய்ச் சேருகிறது.[l]
சூரியனுக்காக வானத்தில் ஒரு கூடாரத்தைக் கடவுள் போட்டிருக்கிறார்.
5 மணவறையிலிருந்து வருகிற மணமகனைப் போல
அது பிரகாசத்தோடு வருகிறது.
ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிற வீரனைப் போல அது தன் பாதையில்
சந்தோஷமாக ஓடுகிறது.
6 வானத்தின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு,
அதன் மறுமுனைவரை சுற்றியோடுகிறது.[m]
அதன் வெப்பத்திலிருந்து எதுவும் தப்பிக்க முடியாது.
7 யெகோவாவின் சட்டம் குறையே இல்லாதது,[n] அது
புதுத்தெம்பு அளிக்கிறது.[o]

18:45 *வே.வா., “வாடிப்போவார்கள்.” **18:49** *வே.வா., “இசை இசைப்பேன்.” **18:50** *வே.வா., “மாபெரும் வெற்றிகளைக் குவிக்கிறார்.” #வே.வா., “அபிஷேகம் செய்த.” **19:1** *வே.வா., “ஆகாயவிரிவு.” **19:4** *அல்லது, “அளவு நூல்.”

அதி. 18
a உபா 32:4
b யாத் 15:2; 2சா 22:47-49
c உபா 32:35; நாகூ 1:2; ரோ 12:19
d 2சா 7:9; சங் 59:1
e உபா 32:43; சங் 117:1; ஏசா 11:10
f 2சா 22:50, 51; 1நா 16:9; ரோ 15:9
g சங் 2:6; சங் 144:10
h 2சா 7:15-17; 1ரா 3:6
i சங் 89:20, 36; ஏசா 9:7; லூ 1:32, 33; வெளி 5:5

அதி. 19
j சங் 8:3, 4; ஏசா 40:22; ரோ 1:20
k சங் 150:1; வெளி 4:11
l ரோ 10:18
m சங் 104:19
n சங் 119:72
o சங் 23:3

யெகோவாவின் நினைப்பூட்டுதல் நம்பகமானது,[a] அது பேதையை* ஞானியாக்குகிறது.[b]
8 யெகோவாவின் ஆணைகள் நீதியானவை, அவை இதயத்துக்குச் சந்தோஷத்தைத் தருகின்றன.[c]
யெகோவாவின் கட்டளைகள் தூய்மையானவை, அவை கண்களைப் பிரகாசிக்க வைக்கின்றன.[d]
9 யெகோவாவைப் பற்றிய பயம்[e] தூய்மையானது, அது என்றென்றும் நிலைத்திருக்கிறது.
யெகோவாவின் நீதித்தீர்ப்புகள் உண்மையானவை, முழுக்க முழுக்க நீதியானவை.[f]
10 அவை தங்கத்தைவிடவும்,
குவிந்துகிடக்கிற சொக்கத்தங்கத்தைவிடவும்* விரும்பத்தக்கவை.[g]
அவை தேனைவிடவும்,[h]
தேன்கூட்டிலிருந்து சொட்டுகிற தேனைவிடவும் தித்திப்பானவை.
11 அவை உங்களுடைய ஊழியனை எச்சரிக்கின்றன.[i]
அவற்றின்படி நடக்கும்போது மிகுந்த பலன் கிடைக்கிறது.[j]
12 தன் தவறுகளை உணர்ந்துகொள்கிறவன் யார்?[k]
நான் தெரியாமல் செய்த தவறுகளை மன்னித்துவிடுங்கள்.
13 அகங்காரமான* செயல்களைச் செய்துவிடாதபடி என்னைத் தடுத்து நிறுத்துங்கள்.[l]
அவை என்னை அடக்கி ஆளாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.[m]
அப்போதுதான் நான் குற்றமற்றவனாக இருப்பேன்.[n]
பயங்கரமான பாவங்களை# செய்யாமல் இருப்பேன்.
14 யெகோவாவே, என் கற்பாறையே,[o] என்னை விடுவிக்கிறவரே,[p]
என் வாயிலிருந்து வருகிற வார்த்தைகளும் இதயத்தில் நான் தியானிக்கிற விஷயங்களும் உங்களுக்குப் பிரியமாக இருக்கட்டும்.[q]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

20 இக்கட்டு நாளில் உங்களுடைய ஜெபத்துக்கு யெகோவா பதில் தரட்டும்.
யாக்கோபின் கடவுளுடைய பெயர் உங்களைப் பாதுகாக்கட்டும்.[r]
2 பரிசுத்த ஆலயத்திலிருந்து அவர் உங்களுக்கு உதவி செய்யட்டும்.[s]
சீயோனிலிருந்து உங்களுக்கு ஆதரவு தரட்டும்.[t]
3 நீங்கள் கொடுத்த எல்லா காணிக்கைகளையும் நினைத்துப் பார்க்கட்டும்.
நீங்கள் செலுத்திய தகன பலியைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளட்டும். (*சேலா*)
4 உங்கள் இதயத்திலுள்ள ஆசைகளை நிறைவேற்றி வைக்கட்டும்.[u]
உங்களுடைய எல்லா திட்டங்களும் வெற்றியடைய உதவட்டும்.

அதி. 19
a சங் 119:111, 129
b நீதி 1:5; 2தீ 3:15
c 2நா 24:9, 10
d நீதி 4:4; நீதி 6:23; மத் 6:22
e உபா 10:12; நீதி 1:7; மல் 3:16
f சங் 119:137, 160; வெளி 16:7
g சங் 119:127; நீதி 8:10
h சங் 119:103; நீதி 16:24
i சங் 119:11
j சங் 119:165
k 1கொ 4:4
l ஆதி 20:6; உபா 17:12; 1சா 15:23; 2சா 6:7; 2நா 26:16-18
m சங் 119:133
n ஏசா 38:3
o சங் 18:2
p யோபு 19:25; ஏசா 43:14
q சங் 49:3; சங் 51:15; சங் 143:5; பிலி 4:8

அதி. 20
r சங் 9:10; நீதி 18:10
s 2நா 20:8, 9
t 2சா 5:7; சங் 50:2; சங் 134:3
u சங் 21:1, 2

19:7 *வே.வா., "அனுபவம் இல்லாதவனை." **19:10** *வே.வா., "புடமிடப்பட்ட தங்கத்தைவிடவும்." **19:13** *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. #வே.வா., "நிறைய குற்றங்களை."

5 நீங்கள் தருகிற மீட்பினால் நாங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்வோம்.[a]
எங்கள் கடவுளுடைய பெயரைப் போற்றிப் புகழ்வோம்.*[b]
உங்களுடைய வேண்டுதல்கள் எல்லாவற்றையும் யெகோவா
நிறைவேற்றி வைக்கட்டும்.
6 தான் தேர்ந்தெடுத்தவரை* யெகோவா மீட்கிறார்[c] என்பதை இப்போது
நான் புரிந்துகொண்டேன்.
கடவுள் பரிசுத்தமான பரலோகத்திலிருந்து அவருக்குப் பதில்
சொல்கிறார்.
தன்னுடைய வலது கையால் அவருக்கு மாபெரும் வெற்றியை#
தருகிறார்.[d]
7 சிலர் ரதங்களை நம்புகிறார்கள், சிலர் குதிரைகளை நம்புகிறார்கள்,[e]
ஆனால் நாங்கள் எங்களுடைய கடவுளான யெகோவாவின் பெயரைச்
சொல்லி வேண்டிக்கொள்கிறோம்.[f]
8 அவர்கள் வீழ்ச்சி அடைந்தார்கள்.
ஆனால், நாங்கள் எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்.[g]
9 யெகோவாவே, ராஜாவைக் காப்பாற்றுங்கள்![h]
கடவுளே, நாங்கள் உதவி கேட்டுக் கூப்பிடும் நாளில் எங்களுக்குப்
பதில் கொடுங்கள்.[i]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

21 யெகோவாவே, நீங்கள் பலம் தருவதால் ராஜா சந்தோஷமாக
இருக்கிறார்.[j]
நீங்கள் தரும் மீட்பினால் அவர் எவ்வளவாய்ப் பூரித்துப்போகிறார்![k]
2 மனதுக்குள்* அவர் ஆசைப்பட்டதை நீங்கள்
நிறைவேற்றியிருக்கிறீர்கள்.[l]
அவர் வாய்திறந்து கேட்ட எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறீர்கள்.
(*சேலா*)
3 ஏராளமான ஆசீர்வாதங்களோடு வந்து அவரைச் சந்திக்கிறீர்கள்.
சொக்கத்தங்கத்தில்* செய்யப்பட்ட கிரீடத்தை அவருக்குச்
சூட்டுகிறீர்கள்.[m]
4 அவர் உங்களிடம் ஆயுளைக் கேட்டார், நீங்களும் தந்தீர்கள்.[n]
நீண்ட ஆயுளைத் தந்து, என்றென்றும் வாழ வைத்தீர்கள்.
5 நீங்கள் தரும் மீட்பினால் அவருக்குப் பேரும் புகழும் கிடைக்கிறது.[o]
நீங்கள் அவருக்கு மதிப்பையும் மேன்மையையும் தருகிறீர்கள்.
6 அவரை என்றென்றும் ஆசீர்வதிக்கிறீர்கள்.[p]
உங்கள் சன்னிதியில் இருக்கும் சந்தோஷத்தை அவருக்குக்
கொடுக்கிறீர்கள்.[q]
7 ஏனென்றால், யெகோவாமேல் ராஜா நம்பிக்கை வைத்திருக்கிறார்.[r]
உன்னதமான கடவுள் அவருக்கு மாறாத அன்பைக் காட்டுவதால்
அவர் அசைக்கப்படவே* மாட்டார்.[s]

20:5 * நே.மொ., "பெயரில் கொடிகளை உயர்த்துவோம்." **20:6** * வே.வா., "அபிஷேகம் செய்தவரை." # வே.வா., "மீட்பை." **21:2** * நே.மொ., "இதயத்தில்." **21:3** * வே.வா., "புடமிடப்பட்ட தங்கத்தில்." **21:7** * வே.வா., "தடுமாறவே."

அதி. 20
a சங் 59:16
b 1சா 17:45
c சங் 2:2, 4
d சங் 17:7
e சங் 33:17; ஏசா 31:1
f 2நா 14:11; 2நா 20:12; 2நா 32:8
g நியா 5:31; சங் 125:1
h சங் 18:50
i சங் 44:4

அதி. 21
j சங் 63:11
k சங் 28:7
l சங் 2:8; சங் 20:4
m 2சா 12:30
n சங் 13:3; சங் 61:6
o 2சா 7:8, 9
p சங் 72:17
q சங் 16:11; சங் 45:7
r 1சா 30:6
s சங் 16:8

8 உங்களுடைய கை உங்கள் எதிரிகள் எல்லாரையும் தேடிப் பிடிக்கும்.
உங்களுடைய வலது கை உங்களை வெறுக்கிற எல்லாரையும்
எட்டிப் பிடிக்கும்.
9 அவர்களுக்கு எதிராக நீங்கள் முகத்தைத் திருப்பும்போது, அவர்கள்
நெருப்புச் சூளையைப் போல ஆவார்கள்.
யெகோவா கோபத்தோடு அவர்களை விழுங்குவார், நெருப்பு
அவர்களைச் சுட்டுப்பொசுக்கும்.[a]
10 அவர்களுடைய பிள்ளைகளை இந்தப் பூமியிலிருந்தே
அழித்துவிடுவீர்கள்.
அவர்களுடைய சந்ததியை இந்த உலகத்திலிருந்தே
ஒழித்துக்கட்டுவீர்கள்.
11 ஏனென்றால், அவர்கள் உங்களுக்குக் கெட்டது செய்ய நினைத்தார்கள்.[b]
அவர்கள் போட்ட சதித்திட்டங்கள் எதுவும் வெற்றி பெறாது.[c]
12 ஏனென்றால், அவர்களைக் குறிபார்த்து அம்பு எறிவீர்கள்.
அவர்களைப் பின்வாங்கி ஓட வைப்பீர்கள்.[d]
13 யெகோவாவே, எழுந்து வந்து உங்களுடைய பலத்தைக் காட்டுங்கள்.
உங்களுடைய வல்லமையைப் பற்றி நாங்கள் புகழ்ந்து* பாடுவோம்.

இசைக் குழுவின் தலைவனுக்கு;
“விடியற்கால பெண் மான்” இசையில்;* தாவீதின் சங்கீதம்.

22 என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்கள்?[e]
ஏன் என்னைக் காப்பாற்ற வராமல் இருக்கிறீர்கள்?
நான் வேதனையில் கதறுவதை ஏன் கேட்காமல் இருக்கிறீர்கள்?[f]
2 என் கடவுளே, பகலில் உங்களைக் கூப்பிடுகிறேன்,
ராத்திரியிலும் உங்களிடம் கெஞ்சுகிறேன்,
நீங்கள் பதில் சொல்லாமல் இருக்கிறீர்கள்.[g]
3 நீங்கள் பரிசுத்தமானவர்,[h]
இஸ்ரவேலின் துதிகளால் சூழப்பட்டிருப்பவர்.*
4 எங்களுடைய முன்னோர்கள் உங்களையே நம்பியிருந்தார்கள்.[i]
அவர்கள் உங்களை நம்பியதால் நீங்கள் அவர்களைக் காப்பாற்றி
வந்தீர்கள்.[j]
5 உதவிக்காக உங்களிடம் கெஞ்சினார்கள், நீங்களும் அவர்களைக்
காப்பாற்றினீர்கள்.
உங்கள்மேல் நம்பிக்கை வைத்தார்கள், அந்த நம்பிக்கை
வீண்போகவில்லை.*[k]
6 ஆனால் நான் அவமதிக்கப்படுகிறேன், கேவலப்படுத்தப்படுகிறேன்.
ஜனங்கள் என்னை ஒரு புழுபோல் பார்க்கிறார்கள், மனிதனாகவே
மதிப்பதில்லை.[l]
7 என்னைப் பார்க்கிற எல்லாரும் கேலி செய்கிறார்கள்.[m]
என்னைக் கிண்டல் செய்து, ஏளனமாகத் தலையை ஆட்டுகிறார்கள்.[n]

அதி. 21
a உபா 32:22, சங் 110:5, மல் 4:1
b சங் 34:16
c சங் 2:1
d சங் 9:3, சங் 56:9

அதி. 22
e சங் 22:16, மத் 27:46, மாற் 15:34
f எபி 5:7
g சங் 42:3
h ஏசா 6:3, 1பே 1:15
i ஆதி 15:1, 6
j யாத் 14:13, எபி 11:32-34
k சங் 25:2, சங் 99:6, ரோ 10:11
l சங் 31:11, ஏசா 53:3
m சங் 35:16
n சங் 109:25

21:13 *நே.மொ., “இசை இசைத்து.” **22:மே.கு.** *ஒருவேளை, ஒரு ராகமாகவோ இசைப் பாணியாகவோ இருந்திருக்கலாம். **22:3** *வே.வா., “துதிகளுக்கு நடுவே வீற்றிருப்பவர்.” **22:5** *வே.வா., “அவர்கள் வெட்கப்பட்டுப்போகவில்லை.”

8 “யெகோவாவை நம்பியிருந்தானே, அவர் வந்து இவனைக்
காப்பாற்றட்டும்!
உண்மையிலேயே இவன்மேல் பிரியமாக இருந்தால் இவனைக்
காப்பாற்றட்டும்!” என்று சொல்கிறார்கள்.[a]
9 என் தாயின் வயிற்றிலிருந்து என்னை வெளியே கொண்டுவந்தவர்
நீங்கள்தான்.[b]
என் தாய் எனக்குப் பாலூட்டிய காலத்தில் என்னைப் பாதுகாத்தவரும்
நீங்கள்தான்.
10 பிறந்ததிலிருந்தே நான் உங்களுடைய கவனிப்பில்தான் இருந்து
வருகிறேன்.
என் தாயின் கர்ப்பத்திலிருந்த சமயத்திலிருந்தே நீங்கள்தான்
என் கடவுள்.
11 ஆபத்து நெருங்கி வருகிறது, என்னைவிட்டுத் தூரமாகப்
போய்விடாதீர்கள்.[c]
உங்களை விட்டால் எனக்கு வேறு யாருமே இல்லை.[d]
12 இளம் காளைகள் பல என்னைச் சுற்றி நிற்கின்றன.[e]
பாசானின் கொழுத்த காளைகள் என்னைச் சுற்றிவளைக்கின்றன.[f]
13 கர்ஜிக்கிற சிங்கம் இரையைக் கடித்துக் குதறுவது போல,[g]
எதிரிகள் என்னைக் கடித்துக் குதற வாயைத் திறக்கிறார்கள்.[h]
14 நான் தண்ணீர்போல் ஊற்றப்படுகிறேன்.
என் எலும்புகள் பிசகிவிட்டன.
என் இதயம் மெழுகுபோல் ஆகிவிட்டது.[i]
அது எனக்குள் உருகி ஓடுகிறது.[j]
15 என்னுடைய சக்தியெல்லாம் போய்விட்டது, உடைந்துபோன ஓடுபோல்
ஆகிவிட்டேன்.[k]
என் நாக்கு மேல்வாயோடு ஒட்டிக்கொள்கிறது.[l]
நீங்கள் என்னைச் சவக்குழிக்குள் இறங்க வைக்கிறீர்கள்.[m]
16 நாய்களைப் போல எதிரிகள் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்.[n]
அக்கிரமக்காரர்களின் கும்பலைப் போல என்னைச்
சுற்றிவளைக்கிறார்கள்.[o]
சிங்கத்தைப் போல என் கைகளையும் பாதங்களையும் தாக்குகிறார்கள்.[p]
17 என்னுடைய எலும்புகளையெல்லாம் என்னால் எண்ண முடிகிறது.[q]
அவர்கள் என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.
18 என்னுடைய அங்கிகளைப் பங்கு போட்டுக்கொள்கிறார்கள்,
என்னுடைய உடைக்காகக் குலுக்கல் போடுகிறார்கள்.[r]
19 யெகோவாவே, என்னைவிட்டுத் தூரமாகவே இருந்துவிடாதீர்கள்.[s]
நீங்கள்தான் என்னுடைய பலம்; சீக்கிரமாக வந்து எனக்கு உதவி
செய்யுங்கள்.[t]
20 வாளுக்குப் பலியாகாதபடி என்னைக் காப்பாற்றுங்கள்.
நாய்களின் பிடியிலிருந்து* என்னுடைய அருமையான உயிரைக்
காப்பாற்றுங்கள்.[u]

22:20 * நே.மொ., “கையிலிருந்து.”

அதி. 22
a மத் 27:41-43; லூ 23:35, 36
b சங் 71:6; சங் 139:16
c சங் 10:1
d லூ 23:46; எபி 5:7
e சங் 68:30
f எசே 39:18
g சங் 57:4; 1பே 5:8
h மத் 26:4
i லூ 22:44; யோவா 12:27
j மத் 26:38; மாற் 14:33
k நீதி 17:22
l யோவா 19:28
m ஏசா 53:12; 1கொ 15:3, 4
n சங் 59:5, 6; லூ 22:63
o சங் 86:14
p மத் 27:35; யோவா 20:25
q சங் 34:20; யோவா 19:36
r மாற் 15:24; லூ 23:34; யோவா 19:23, 24
s சங் 10:1
t சங் 40:13
u சங் 22:16

21 சிங்கத்தின் வாயிலிருந்தும்,[a]
காட்டு எருதுகளின் கொம்புகளிலிருந்தும் என்னைக்
காப்பாற்றுங்கள்.
எனக்குப் பதில் கொடுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்.
22 என்னுடைய சகோதரர்களுக்கு உங்களுடைய பெயரை
அறிவிப்பேன்.[b]
சபை நடுவில் உங்களைப் புகழ்வேன்.[c]
23 யெகோவாவுக்குப் பயப்படுகிறவர்களே, அவரைப் புகழுங்கள்!
யாக்கோபின் சந்ததியைச் சேர்ந்தவர்களே, அவரை
மகிமைப்படுத்துங்கள்![d]
இஸ்ரவேல் சந்ததியில் வந்தவர்களே, பயபக்தியோடு அவர் முன்னால்
நில்லுங்கள்.
24 அடக்கி ஒடுக்கப்படுகிறவனின் கஷ்டத்தை அவர் அற்பமாக
நினைக்கவும் இல்லை, அலட்சியப்படுத்தவும் இல்லை.[e]
அவனிடமிருந்து தன்னுடைய முகத்தை அவர் மறைத்துக்கொள்ளவும்
இல்லை.[f]
உதவி கேட்டு அவன் கதறியதை அவர் கேட்டார்.[g]
25 பெரிய சபையில் நான் உங்களைப் புகழ்வேன்.[h]
உங்களுக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு முன்னால் என்
நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவேன்.
26 தாழ்மையானவர்கள்* சாப்பிட்டு, திருப்தியாக இருப்பார்கள்.[i]
யெகோவாவைத் தேடுகிறவர்கள் அவரைப் புகழ்வார்கள்.[j]
அவர்கள் என்றென்றும் வாழ்க்கையை அனுபவித்து மகிழட்டும்.#
27 பூமியெங்கும் இருக்கிறவர்கள் யெகோவாவை நினைத்துப் பார்த்து
அவரிடம் திரும்புவார்கள்.
பூமியிலுள்ள எல்லா குடும்பங்களும் உங்கள் முன்னால்
தலைவணங்கும்.[k]
28 ஏனென்றால், யெகோவாதான் ராஜா.[l]
எல்லா ஜனங்களையும் ஆளுகிறவர் அவர்தான்.
29 பூமியிலுள்ள செல்வச்சீமான்கள்* நன்றாகச் சாப்பிட்டுவிட்டு,
அவர் முன்னால் தலைவணங்குவார்கள்.
மண்ணுக்குள் போகிறவர்கள் அவர் முன்னால் மண்டிபோடுவார்கள்.
அவர்களில் ஒருவரால்கூட தங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள
முடியாது.
30 அவர்களுடைய வம்சத்தில் வருகிறவர்கள் அவருக்குச் சேவை
செய்வார்கள்.
வருங்காலச் சந்ததிக்கு யெகோவாவைப் பற்றிச் சொல்லப்படும்.
31 அவர்கள் வந்து கடவுளுடைய நீதியைப் பற்றிச் சொல்வார்கள்.
அவர் செய்த காரியங்களைப் பற்றி வருங்காலத் தலைமுறைக்குத்
தெரிவிப்பார்கள்.

22:26 *வே.வா., “சாந்தமானவர்கள்.” #நே.மொ., “உங்கள் இதயம் என்றென்றும் வாழட்டும்.” **22:29** *நே.மொ., “கொழுத்துப்போனவர்கள்.”

அதி. 22
a சங் 35:17
b யோவா 17:6
c சங் 40:9; எபி 2:11, 12
d சங் 50:23
e சங் 34:6; சங் 69:33
f எண் 6:25
g எபி 5:7
h சங் 35:18; சங் 40:10; சங் 111:1
i சங் 37:11; ஏசா 65:13
j செப் 2:3
k ஆதி 22:18; வெளி 7:9; வெளி 15:4
l 1நா 29:11; வெளி 11:17

தாவீதின் சங்கீதம்.

23 யெகோவா என் மேய்ப்பராக இருக்கிறார்.[a]
எனக்கு ஒரு குறையும் வராது.[b]
2 பசுமையான புல்வெளிகளில் அவர் என்னைப் படுத்துக்கொள்ள வைக்கிறார்.
நிறைய தண்ணீர் உள்ள இடங்களுக்குக் கொண்டுபோய் என்னை ஓய்வெடுக்க வைக்கிறார்.*[c]
3 எனக்குப் புத்துணர்ச்சி தருகிறார்.[d]
அவருடைய பெயருக்காக என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.[e]
4 பயங்கர இருட்டான பள்ளத்தாக்கிலே நான் நடந்தாலும்,[f]
எந்த ஆபத்தையும் நினைத்துப் பயப்பட மாட்டேன்.[g]
ஏனென்றால், நீங்கள் என்னோடு இருக்கிறீர்கள்.[h]
உங்களுடைய கோலும் தடியும் எனக்கு நம்பிக்கை* தருகின்றன.
5 என் எதிரிகளுக்கு முன்னால் எனக்கு ஒரு விருந்தை ஏற்பாடு செய்கிறீர்கள்.[i]
எண்ணெய் பூசி என் தலையைக் குளிர வைக்கிறீர்கள்.*[j]
என் கிண்ணம் நிரம்பி வழிகிறது.[k]
6 நிச்சயமாகவே, என் வாழ்நாளெல்லாம் நீங்கள் எனக்கு நன்மைகள் செய்து மாறாத அன்பைக் காட்டுவீர்கள்.*[l]
நான் உயிரோடு இருக்கும் நாளெல்லாம் யெகோவாவின் வீட்டில் குடியிருப்பேன்.[m]

தாவீதின் சங்கீதம்.

24 பூமியும் அதிலிருக்கிற அனைத்தும் யெகோவாவுக்குத்தான் சொந்தம்.[n]
நிலப்பரப்பும் அதில் குடியிருக்கிற எல்லாரும் அவருக்குத்தான் சொந்தம்.
2 ஏனென்றால், அவர்தான் கடல்களுக்கு மேலாகவும்,[o]
ஆறுகளுக்கு மேலாகவும் அதை உறுதியாக நிலைநிறுத்தியிருக்கிறார்.
3 யெகோவாவின் மலைக்கு யார் ஏறிப்போக முடியும்?[p]
அவருடைய பரிசுத்த இடத்தில் யார் நிற்க முடியும்?
4 கறைபடியாத கைகளோடும் சுத்தமான இதயத்தோடும் இருந்து,[q]
என்மேல்* பொய் சத்தியம் செய்யாமலும்,
போலியாக உறுதிமொழி எடுக்காமலும் இருக்கிறவன்தான்.[r]
5 அவனுக்கு யெகோவாவிடமிருந்து ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.[s]
அவனை மீட்கிற கடவுளிடமிருந்து[t] நீதி கிடைக்கும்.*
6 கடவுளைத் தேடுகிற தலைமுறை இதுதான்.

23:2 *அல்லது, "அமைதியான தண்ணீர்களிடம் என்னை வழிநடத்துகிறார்." **23:4** *வே.வா., "ஆறுதல்." **23:5** *வே.வா., "எண்ணெயால் என் தலைக்குப் புத்துணர்ச்சி தருகிறீர்கள்." **23:6** *வே.வா., "என் வாழ்நாளெல்லாம் நன்மையும் மாறாத அன்பும் என்னைப் பின்தொடரும்." **24:4** *வே.வா., "என்னுடைய உயிர்மேல்." **24:5** *வே.வா., "அவனுக்கு மீட்பு தருகிற கடவுள் அவனை நீதியுள்ளவனாகக் கருதுவார்."

அதி. 23
a சங் 80:1; எரே 23:3; எசே 34:12; 1பே 2:25
b சங் 34:9; சங் 84:11; மத் 6:33; பிலி 4:19; எபி 13:5
c எசே 34:13, 14
d சங் 19:7; சங் 51:12
e சங் 31:3
f யோபு 38:17
g சங் 3:6; சங் 27:1; ஏசா 41:10
h ஏசா 43:2; ரோ 8:31
i சங் 22:26; சங் 31:19
j லூ 7:46; யாக் 5:14
k சங் 16:5
l சங் 103:17
m சங் 15:1-5; சங் 27:4; சங் 65:4; சங் 122:1

அதி. 24
n 1நா 29:11; யோபு 41:11; 1கொ 10:26
o ஆதி 1:9; யோபு 38:11; சங் 136:6; எரே 5:22
p சங் 15:1-5
q 2சா 22:21; ஏசா 33:15, 16; மத் 5:8
r சங் 34:12, 13; மல் 3:5
s சங் 128:1-5
t ஏசா 12:2

யாக்கோபின் கடவுளே, உங்களுடைய கருணையை* நாடுகிற
தலைமுறை இதுதான். (*சேலா*)
7 கதவுகளே, உங்களை உயர்த்துங்கள்.[a]
பழங்கால நுழைவாசல்களே, திறந்துகொள்ளுங்கள்.*
மகிமையுள்ள ராஜா உள்ளே வரட்டும்![b]
8 மகிமையுள்ள இந்த ராஜா யார்?
அவர்தான் பலமும் வலிமையும் உள்ள யெகோவா.[c]
அவர்தான் போர் செய்வதில் வல்லவரான யெகோவா.[d]
9 கதவுகளே, உங்களை உயர்த்துங்கள்.[e]
பழங்கால நுழைவாசல்களே, திறந்துகொள்ளுங்கள்.
மகிமையுள்ள ராஜா உள்ளே வரட்டும்!
10 மகிமையுள்ள இந்த ராஜா யார்?
மகிமையுள்ள இந்த ராஜா, பரலோகப் படைகளின் யெகோவாதான்.[f]
(*சேலா*)

தாவீதின் பாடல்.

א [*ஆலெஃப்*]

25 யெகோவாவே, நான் உங்களிடம் உதவிக்காகக்
கெஞ்சுகிறேன்.

ב [*பேத்*]

2 என் கடவுளே, நான் உங்களையே நம்பியிருக்கிறேன்.[g]
என்னை அவமானப்பட விட்டுவிடாதீர்கள்.[h]
என்னுடைய வேதனைகளைப் பார்த்து எதிரிகள் சந்தோஷப்படும்படி
செய்துவிடாதீர்கள்.[i]

ג [*கீமெல்*]

3 உங்கள்மேல் நம்பிக்கையாக இருக்கிற யாருமே அவமானப்பட
மாட்டார்கள்.[j]
காரணம் இல்லாமல் துரோகம் செய்கிறவர்களுக்குத்தான் அவமானம்
காத்திருக்கிறது.[k]

ד [*டாலத்*]

4 யெகோவாவே, உங்களுடைய பாதைகளை எனக்குக் காட்டுங்கள்.[l]
உங்களுடைய வழிகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[m]

ה [*ஹே*]

5 உங்களுடைய சத்திய பாதையில் என்னை நடத்தி, எனக்குக்
கற்றுக்கொடுங்கள்.[n]
ஏனென்றால், என்னை மீட்கும் கடவுள் நீங்கள்தான்.

ו [*வா*]

நாள் முழுவதும் உங்களைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

ז [*ஸாயின்*]

6 யெகோவாவே, உங்களுடைய இரக்கத்தையும் மாறாத அன்பையும்[o]
நினைத்துப் பாருங்கள்.
அவற்றை ஆரம்பக் காலத்திலிருந்தே நீங்கள் காட்டி வருகிறீர்களே.[p]

24:6 *வே.வா., "உங்களுடைய முகத்தை; சன்னிதியை." **24:7** *வே.வா., "உயருங்கள்."

அதி. 24
a சங் 118:19; சங் 122:2
b 2சா 6:15; சங் 48:1-3
c சங் 93:1
d யாத் 15:3; 1சா 17:47; 2நா 20:15; ஏசா 42:13
e சங் 118:19
f 1நா 29:11

அதி. 25
g ஏசா 26:3
h ரோ 10:11
i சங் 41:11
j சங் 69:6
k சங் 31:17
l யாத் 33:13; சங் 86:11; சங் 143:8
m சங் 27:11
n சங் 43:3
o யாத் 34:6; ஏசா 55:3
p சங் 103:17; சங் 136:1

ח [*ஹேத்*]
7 நான் இளமையில் செய்த பாவங்களையும் குற்றங்களையும்
நினைத்துப் பார்க்காதீர்கள்.
யெகோவாவே, நீங்கள் நல்ல மனம் உள்ளவராக இருப்பதால்,[a]
உங்களுடைய மாறாத அன்பின்படியே என்னை
நினைத்துப் பாருங்கள்.[b]

ט [*டேத்*]
8 யெகோவா நல்லவர், நேர்மையானவர்.[c]
அதனால்தான், பாவிகளுக்கு நல்ல வழியைக் கற்றுக்கொடுக்கிறார்.[d]

י [*யோத்*]
9 அவர் தாழ்மையானவர்களை* நேர்வழியில் நடத்துவார்.[e]
தாழ்மையானவர்களுக்கு# தன்னுடைய பாதையைக் காட்டுவார்.[f]

כ [*காஃப்*]
10 யெகோவா தன் ஒப்பந்தத்துக்கும்[g] நினைப்பூட்டுதல்களுக்கும்[h]
கீழ்ப்படிகிறவர்களிடம்
எப்போதுமே மாறாத அன்பைக் காட்டி, உண்மையோடு
நடந்துகொள்கிறார்.

ל [*லாமெத்*]
11 யெகோவாவே, நான் செய்த குற்றம் பெரிதாக இருந்தாலும்,
உங்கள் பெயருக்காக[i] என்னை மன்னித்துவிடுங்கள்.

מ [*மேம்*]
12 யெகோவாவுக்குப் பயப்படுகிறவன் யார்?[j]
அவன் தேர்ந்தெடுக்க வேண்டிய வழியைப் பற்றி அவர் அவனுக்குக்
கற்றுக்கொடுப்பார்.[k]

נ [*நூன்*]
13 அவன் நன்மைகளை அனுபவிப்பான்.[l]
அவனுடைய சந்ததிக்கு இந்தப் பூமி சொந்தமாகும்.[m]

ס [*சாமெக்*]
14 தனக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு யெகோவா நெருங்கிய நண்பராக
இருக்கிறார்.[n]
தன்னுடைய ஒப்பந்தத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார்.[o]

ע [*ஆயின்*]
15 என் கண்கள் எப்போதும் யெகோவாவையே எதிர்பார்த்துக்கொண்டு
இருக்கின்றன.[p]
அவரே என் கால்களை வலையிலிருந்து விடுவிப்பார்.[q]

פ [*பே*]
16 உதவிக்கு யாரும் இல்லாமல் நான் தனியாகத் தவிக்கிறேன்.
அதனால், உங்கள் முகத்தை என் பக்கமாகத் திருப்பி, எனக்குக்
கருணை காட்டுங்கள்.

צ [*சாதே*]
17 என் இதயத்தின் வேதனைகள் பெருகிவிட்டன.[r]
இந்தத் தவிப்பிலிருந்து என்னை விடுவியுங்கள்.

25:9 *வே.வா., "சாந்தமானவர்களை." #வே.வா., "சாந்தமானவர்களுக்கு."

அதி. 25
a யாத் 33:19; சங் 27:13
b சங் 6:4; சங் 51:1
c சங் 92:15; சங் 119:68; சங் 145:9; அப் 14:17
d சங் 119:33; ஏசா 30:20; மீ 4:2
e செப் 2:3
f சங் 32:8
g உபா 29:1
h சங் 19:7
i சங் 31:3; சங் 79:9; சங் 109:21; சங் 143:11; எசே 36:22; தானி 9:19; மத் 6:9
j சங் 111:10
k சங் 37:23
l சங் 31:19
m சங் 37:11
n நீதி 3:32; யோவா 15:15
o ஆதி 18:17; ஆதி 22:17; ஆமோ 3:7
p சங் 141:8
q சங் 91:3; சங் 124:6-8
r சங் 73:21

ר [ரேஷ்]

18 நான் படுகிற துன்பத்தையும் துயரத்தையும் பார்த்து,[a]
என் பாவங்களையெல்லாம் மன்னித்துவிடுங்கள்.[b]
19 எத்தனை பேர் என்னை எதிர்க்கிறார்கள் பாருங்கள்!
எவ்வளவு மூர்க்கமாக என்னை வெறுக்கிறார்கள் பாருங்கள்!

ש [ஷீன்]

20 என் உயிரைப் பாதுகாத்து, என்னைக் காப்பாற்றுங்கள்.[c]
என்னைத் தலைகுனிய விட்டுவிடாதீர்கள்.
ஏனென்றால், நான் உங்களிடம் தஞ்சம் அடைந்திருக்கிறேன்.

ת [ட்டா]

21 என்னுடைய உத்தமமும் நேர்மையும் என்னைப் பாதுகாக்கட்டும்.[d]
நான் உங்களையே எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.[e]
22 கடவுளே, எல்லா வேதனைகளிலிருந்தும் இஸ்ரவேலைக் காப்பாற்றுங்கள்.

தாவீதின் பாடல்.

26 யெகோவாவே, நீங்கள் எனக்குத் தீர்ப்பு கொடுங்கள்; நான் உத்தமமாக நடந்திருக்கிறேன்.[f]
யெகோவாவே, உங்கள்மேல் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறேன்.[g]
2 யெகோவாவே, என்னை ஆராய்ந்து பாருங்கள், என்னைச் சோதித்துப் பாருங்கள்.
என்னுடைய இதயத்தையும் அடிமனதின் யோசனைகளையும்* புடமிட்டுப் பாருங்கள்.[h]
3 ஏனென்றால், நான் உங்களுடைய மாறாத அன்பை எப்போதும் நினைத்துப் பார்க்கிறேன்.
உங்களுடைய சத்திய வழியில் நடக்கிறேன்.[i]
4 ஏமாற்றுப் பேர்வழிகளோடு நான் பழகுவதில்லை.*[j]
வெளிவேஷம் போடுகிறவர்களோடு சேருவதில்லை.
5 அக்கிரமக்காரர்களின் கூட்டத்தை வெறுக்கிறேன்.[k]
பொல்லாதவர்களிடமிருந்து ஒதுங்கியிருக்கிறேன்.*[l]
6 யெகோவாவே, நான் குற்றமற்றவனாக என் கைகளைக் கழுவிக்கொண்டு,
உங்களுடைய பலிபீடத்தைச் சுற்றிவருவேன்.
7 அப்போது, சத்தமாக உங்களுக்கு நன்றி சொல்வேன்.[m]
உங்களுடைய அதிசயமான செயல்களையெல்லாம் அறிவிப்பேன்.
8 யெகோவாவே, நீங்கள் குடிகொண்டிருக்கிற வீட்டை நேசிக்கிறேன்.[n]
உங்களுடைய மகிமை தங்கியிருக்கிற இடத்தை விரும்புகிறேன்.[o]
9 பாவிகளோடு சேர்த்து என்னையும் அழித்துவிடாதீர்கள்.[p]
கொடூரமானவர்களோடு* சேர்த்து என் உயிரையும் பறித்துவிடாதீர்கள்.

அதி. 25
a 2சா 16:12
b சங் 32:5; சங் 51:9
c சங் 17:8; சங் 121:7
d சங் 41:12
e சங் 37:34

அதி. 26
f 2ரா 20:3
g சங் 21:7
h சங் 17:3; சங் 66:10
i சங் 43:3; சங் 86:11
j எரே 15:17
k சங் 139:21
l சங் 1:1
m சங் 50:23; சங் 95:2
n 1சா 3:3; 1நா 16:1; சங் 27:4
o சங் 63:2
p 1சா 25:29

26:2 *வே.வா., “ஆழமான உணர்ச்சிகளையும்.” நே.மொ., “என் சிறுநீரகங்களையும்.” **26:4** *நே.மொ., “உட்காருவதில்லை.” **26:5** *நே.மொ., “பொல்லாதவர்களோடு உட்காருவதில்லை.” **26:9** *வே.வா., “இரத்தம் சிந்துகிறவர்களோடு.”

10 அவர்களுடைய கைகள் வெட்கக்கேடான காரியங்களைச் செய்கின்றன.
அவர்களுடைய வலது கையில் லஞ்சம் குவிந்திருக்கிறது.
11 ஆனால், நான் எப்போதும் உத்தமமாக நடப்பேன்.
என்னைக் காப்பாற்றுங்கள்,* எனக்குக் கருணை காட்டுங்கள்.
12 என்னுடைய கால்கள் சமமான இடத்தில் நிற்கின்றன.[a]
மாபெரும் சபையில்* நான் யெகோவாவைப் புகழ்வேன்.[b]

தாவீதின் பாடல்.

27 யெகோவா எனக்கு ஒளியாக இருக்கிறார்,[c] அவர்தான் என்னை மீட்கிறார்.
யாரைப் பார்த்து நான் பயப்பட வேண்டும்?[d]
யெகோவா என் உயிரைப் பாதுகாக்கிற கோட்டை.[e]
யாரைப் பார்த்து நான் நடுங்க வேண்டும்?
2 என் எதிரிகளான அக்கிரமக்காரர்கள் என்னை ஒழித்துக்கட்ட நினைத்து என்னைத் தாக்கினார்கள்.[f]
ஆனால், அவர்கள்தான் தடுமாறி விழுந்தார்கள்.
3 ஒரு படையே வந்து என்னைச் சூழ்ந்துகொண்டாலும்,
என் நெஞ்சம் பயப்படாது.[g]
எனக்கு எதிராகப் போரே மூண்டாலும்,
நான் நம்பிக்கையோடு இருப்பேன்.
4 யெகோவாவிடம் ஒன்றைக் கேட்டேன்.
யெகோவா எவ்வளவு இனிமையானவர் என்பதைப் பார்த்துக்கொண்டும்,
அவருடைய ஆலயத்தைப் பிரமிப்போடு ரசித்துக்கொண்டும்,*[h]
என் வாழ்நாளெல்லாம் யெகோவாவின் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று கேட்டேன்.[i]
அதற்காகத்தான் எப்போதும் ஏங்குவேன்.
5 ஆபத்து நாளில் அவர் என்னைத் தன்னுடைய புகலிடத்தில் மறைத்து வைப்பார்.[j]
தன்னுடைய கூடாரத்தின் மறைவில் என்னை ஒளித்து வைப்பார்.[k]
கற்பாறையின் உயரத்திலே என்னைக் கொண்டுபோய் வைப்பார்.[l]
6 என்னைச் சூழ்ந்திருக்கிற எதிரிகளின் முன்னால் இப்போது தலைநிமிர்ந்து நிற்கிறேன்.
அதனால், சந்தோஷ ஆரவாரத்தோடு அவருடைய கூடாரத்தில் பலிகளைச் செலுத்துவேன்.
யெகோவாவைப் புகழ்ந்து பாடுவேன்.*
7 யெகோவாவே, என் கூக்குரலைக் கேளுங்கள்.[m]
எனக்குக் கருணை காட்டி, பதில் சொல்லுங்கள்.[n]
8 “என்னை* தேடுங்கள்” என்று நீங்கள் கொடுத்த கட்டளையை என் இதயம் எனக்குச் சொன்னது.

26:11 *நே.மொ., “விடுவியுங்கள்.” **26:12** *நே.மொ., “கூட்டங்களில்.” **27:4** *வே.வா., “ஆலயத்தைப் பார்த்துத் தியானித்துக்கொண்டும்.” **27:6** *வே.வா., “இசை இசைப்பேன்.” **27:8** *நே.மொ., “என் முகத்தை.”

அதி. 26
a 1சா 2:9, நீதி 10:9
b சங் 111:1

அதி. 27
c சங் 36:9, சங் 43:3, சங் 119:105
d சங் 23:4, ரோ 8:31, எபி 13:6
e சங் 62:6, ஏசா 12:2
f சங் 22:16
g 2நா 20:15, 2நா 32:7, சங் 3:6
h 1சா 3:3, 1நா 16:1, சங் 26:8
i சங் 23:6, சங் 65:4
j சங் 32:7, சங் 57:1, செப் 2:3
k சங் 61:4
l சங் 40:2
m சங் 130:2
n சங் 4:1, சங் 5:2

யெகோவாவே, நான் நிச்சயம் உங்களைத் தேடுவேன்.[a]
9 உங்கள் முகத்தை என்னிடமிருந்து மறைத்துக்கொள்ளாதீர்கள்.[b]
கோபத்தில் உங்களுடைய ஊழியனை ஒதுக்கிவிடாதீர்கள்.
நீங்கள்தான் எனக்குத் துணை.[c]
என்னை மீட்கும் கடவுளே, என்னைக் கைவிடாமலும் என்னைவிட்டு
விலகாமலும் இருங்கள்.
10 என்னுடைய அப்பாவும் அம்மாவும் என்னைக் கைவிட்டாலும்,[d]
யெகோவா என்னைச் சேர்த்துக்கொள்வார்.[e]
11 யெகோவாவே, உங்களுடைய வழியை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[f]
எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக என்னை நேர்வழியில்
நடத்துங்கள்.
12 விரோதிகளிடம் என்னை ஒப்படைத்துவிடாதீர்கள்.[g]
எனக்கு எதிராகப் பொய் சாட்சி சொல்ல ஆட்கள்
கிளம்பியிருக்கிறார்கள்.[h]
என்னைத் தாக்கப்போவதாக அவர்கள் மிரட்டுகிறார்கள்.
13 என் வாழ்நாளெல்லாம் யெகோவா எனக்கு நல்லது செய்வார் என்ற
விசுவாசம் மட்டும் இல்லையென்றால்,
என் கதி என்ன ஆகியிருக்குமோ?*[i]
14 யெகோவாமேல் நம்பிக்கையாக இரு.[j]
தைரியமாக இரு, நெஞ்சத்தில் உறுதியோடு இரு.[k]
எப்போதும் யெகோவாமேல் நம்பிக்கையாக இரு.

தாவீதின் பாடல்.

28 யெகோவாவே, என் கற்பாறையே,[l] நான் உங்களைக்
கூப்பிட்டுக்கொண்டே இருக்கிறேன்.
உங்கள் காதை அடைத்துக்கொள்ளாதீர்கள்.
நீங்கள் மவுனமாக இருந்தால்,
நான் சவக்குழிக்குள்* போகிறவர்களைப் போல ஆகிவிடுவேன்.[m]
2 உங்களுடைய ஆலயத்திலுள்ள மகா பரிசுத்த அறையைப் பார்த்தபடி
கைகளை உயர்த்தி,
உதவிக்காக நான் கெஞ்சுவதைக் கேளுங்கள்.[n]
3 உள்ளத்தில் கெட்ட எண்ணத்தை வைத்துக்கொண்டு,
வெளியே சமாதானமாகப் பேசுகிற[o] பொல்லாதவர்களோடும்
அக்கிரமக்காரர்களோடும்* சேர்த்து என்னைத் தண்டித்துவிடாதீர்கள்.[p]
4 அவர்களுடைய செயல்களுக்கு ஏற்ற கூலி கொடுங்கள்.[q]
அவர்களுடைய அக்கிரமங்களுக்குத் தகுந்த கூலி கொடுங்கள்.
அவர்களுடைய கைகள் செய்த குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை
கொடுங்கள்.
சரிக்குச் சரிக்கட்டுங்கள்.[r]

27:13 * அல்லது, "என் வாழ்நாளெல்லாம் யெகோவா எனக்கு நல்லது செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாகவே இருக்கிறது." **28:1** * வே.வா., "கல்லறைக்குள்." **28:3** * வே.வா., "மற்றவர்களுக்குத் தீங்கு செய்துகொண்டே இருக்கிறவர்களோடும்."

அதி. 27
a சங் 63:1; சங் 105:4; செப் 2:3
b சங் 69:17; சங் 143:7
c சங் 46:1
d சங் 69:8
e ஏசா 49:15
f சங் 25:4; சங் 86:11; ஏசா 30:20; ஏசா 54:13
g சங் 31:8; சங் 41:2; சங் 41:11
h மத் 26:59-61
i யோபு 33:28-30
j சங் 25:3; சங் 62:5
k ஏசா 40:31

அதி. 28
l உபா 32:4; ஏசா 26:4
m யோபு 33:28
n சங் 5:7
o சங் 62:4
p எண் 16:25, 26; சங் 26:9
q சங் 59:12; எரே 18:22
r சங் 62:12; 2தெ 1:6

5 யெகோவாவின் செயல்களையும் அவருடைய கைகள் செய்தவற்றையும்
அவர்கள் கண்டுகொள்வதே இல்லை.[a]
அதனால் அவர் அவர்களைக் கவிழ்த்துப் போடுவார், கட்டியெழுப்ப மாட்டார்.
6 நான் யெகோவாவைப் புகழ்வேன்.
ஏனென்றால், உதவிக்காக நான் கெஞ்சியபோதெல்லாம் அவர் கேட்டார்.
7 யெகோவா என் பலம்,[b] என் கேடயம்.[c]
என் இதயம் அவரையே நம்பியிருக்கிறது.[d]
அவர் எனக்கு உதவி செய்தார், அதனால் என் இதயம் சந்தோஷப்படுகிறது.
நான் அவரைப் புகழ்ந்து பாடல் பாடுவேன்.
8 யெகோவாதான் தன்னுடைய மக்களுக்குப் பலம்.
அவர்தான் கோட்டை, தான் தேர்ந்தெடுத்தவரை* அற்புதமாக மீட்கிறவர்.[e]
9 கடவுளே, உங்களுடைய மக்களைக் காப்பாற்றுங்கள்; உங்களுடைய சொத்தை ஆசீர்வதியுங்கள்.[f]
அவர்களை மேய்த்து, உங்களுடைய கைகளில் என்றென்றும் சுமந்து செல்லுங்கள்.[g]

தாவீதின் சங்கீதம்.

29

பலம்படைத்தவர்களின் மகன்களே, யெகோவாவுக்குச் செலுத்த வேண்டிய புகழைச் செலுத்துங்கள்.
யெகோவாவின் மகிமைக்கும் பலத்துக்கும் செலுத்த வேண்டிய புகழைச் செலுத்துங்கள்.[h]
2 யெகோவாவின் பெயருக்குக் கொடுக்க வேண்டிய மகிமையைக் கொடுங்கள்.
பரிசுத்த உடையில்* யெகோவாவை வணங்குங்கள்.#
3 யெகோவாவின் குரல் தண்ணீர்மேல் கேட்கிறது.
மகிமையான கடவுள் இடிபோல் முழங்குகிறார்.[i]
திரண்டிருக்கும் தண்ணீர்மேல் யெகோவா இருக்கிறார்.[j]
4 யெகோவாவின் குரல் மகா கம்பீரமானது.[k]
யெகோவாவின் குரல் மகத்தானது.
5 யெகோவாவின் குரல் தேவதாரு மரங்களை முறிக்கிறது.
ஆம், யெகோவாவின் குரல் லீபனோனின் தேவதாரு மரங்களை முறித்துப்போடுகிறது.[l]
6 அவர் லீபனோனை* கன்றுக்குட்டி போலவும்,
சீரியோனை[m] இளம் காட்டெருது போலவும் துள்ள வைக்கிறார்.
7 யெகோவாவின் குரல் தீ ஜுவாலைகளைத் தெறிக்க வைக்கிறது.[n]
8 யெகோவாவின் குரல் வனாந்தரத்தை அதிர வைக்கிறது.[o]

28:8 * வே.வா., “அபிஷேகம் செய்தவரை.” **29:2** * நே.மொ., “பரிசுத்த அலங்காரத் தோடு.” # அல்லது, “யெகோவா பரிசுத்தத்தில் மகத்தானவராக இருப்பதால் அவரை வணங்குங்கள்.” **29:6** * அநேகமாக, “லீபனோன் மலைத்தொடரை.”

அதி. 28
a யோபு 34:26, 27; ஏசா 5:12
b ஏசா 12:2
c ஆதி 15:1; 2சா 22:3; சங் 3:3
d சங் 56:4
e 1சா 16:13; 2சா 22:3; சங் 20:6
f உபா 9:29
g ஏசா 40:11

அதி. 29
h 1நா 16:28, 29
i 1சா 7:10; சங் 18:13
j சங் 104:3
k யோபு 26:11; யோபு 40:9
l ஏசா 2:12, 13
m உபா 3:8, 9
n யாத் 19:18; சங் 77:18
o ஏசா 13:13; எபி 12:26

யெகோவா காதேஸ்[a] வனாந்தரத்தை அதிர வைக்கிறார்.
9 யெகோவாவின் குரல் மான்களை நடுங்கச் செய்து குட்டி போட வைக்கிறது.
அவருடைய குரல் காடுகளை வெட்டவெளியாக்குகிறது.[b]
அவருடைய ஆலயத்திலுள்ள எல்லாரும் அவருக்கு மகிமை சேர்க்கிறார்கள்.*
10 யெகோவா வெள்ளப்பெருக்கின் மேல்* வீற்றிருக்கிறார்.[c]
யெகோவா என்றென்றும் ராஜாவாக வீற்றிருக்கிறார்.[d]
11 யெகோவா தன்னுடைய மக்களுக்குப் பலம் தருவார்.[e]
யெகோவா தன்னுடைய மக்களுக்குச் சமாதானம் அருளுவார்.[f]

வீட்டின் திறப்பு விழாவின்போது தாவீது பாடிய சங்கீதம்.

30 யெகோவாவே, நீங்கள் என்னைக் கைதூக்கிவிட்டதால் உங்களை மகிமைப்படுத்துவேன்.
எதிரிகள் என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்க நீங்கள் விடவில்லை.[g]
2 என் கடவுளாகிய யெகோவாவே, உதவிக்காக உங்களிடம் கெஞ்சினேன். நீங்கள் என்னைக் குணப்படுத்தினீர்கள்.[h]
3 யெகோவாவே, கல்லறையிலிருந்து என்னைக் கைதூக்கிவிட்டீர்கள்.[i]
என் உயிரைக் காப்பாற்றினீர்கள்; சவக்குழியில் புதைந்துவிடாமல் என்னைப் பாதுகாத்தீர்கள்.[j]
4 யெகோவாவுக்கு உண்மையோடு* இருப்பவர்களே, அவரைப் புகழ்ந்து பாடுங்கள்.#[k]
அவருடைய பரிசுத்தமான பெயருக்கு[l] நன்றி சொல்லுங்கள்.
5 ஏனென்றால், அவருடைய கோபம் ஒரு நொடிதான் நீடிக்கும்.[m]
ஆனால், அவருடைய கருணை* ஆயுள் முழுக்க நீடிக்கும்.[n]
சாயங்காலத்தில் அழுகை இருந்தாலும், காலையில் சந்தோஷ ஆரவாரம் உண்டாகும்.[o]
6 நான் நிம்மதியாக இருந்த காலத்தில்,
“நான் அசைக்கப்படவே* மாட்டேன்” என்று சொன்னேன்.
7 யெகோவாவே, நீங்கள் எனக்குக் கருணை* காட்டியபோது, என்னை மலைபோல் உறுதியாக நிற்க வைத்தீர்கள்.[p]
ஆனால், உங்களுடைய முகத்தை மறைத்துக்கொண்டபோது, நான் கதிகலங்கிப்போனேன்.[q]
8 யெகோவாவே, உங்களிடம் வேண்டிக்கொண்டே இருந்தேன்.[r]
கருணை காட்டச் சொல்லி நான் யெகோவாவிடம் கெஞ்சிக்கொண்டே இருந்தேன்.
9 நான் செத்துப்போவதால் என்ன பிரயோஜனம்? நான் சவக்குழிக்குள் போவதால் என்ன லாபம்?[s]

29:9 *வே.வா., “எல்லாரும் ‘மகிமை!’ என்று சொல்கிறார்கள்.” **29:10** *வே.வா., “வானத்தின் பெருங்கடல்மேல்.” **30:4** *வே.வா., “பற்றுமாறாமல்.” #வே.வா., “இசை இசைத்திடுங்கள்.” **30:5, 7** *வே.வா., “அனுக்கிரகம்.” **30:6** *வே.வா., “தடுமாறவே.”

அதி. 29
a எண் 13:26
b ஏசா 10:17, 18; எசே 20:47
c யோபு 38:25
d 1தீ 1:17
e ஏசா 40:29
f சங் 72:7

அதி. 30
g சங் 25:2; சங் 41:11
h 2ரா 20:5; சங் 6:2; சங் 103:3
i சங் 86:13
j சங் 16:10; சங் 28:1; ஏசா 38:17; யோனா 2:6
k சங் 32:11
l யாத் 3:15
m ஏசா 12:1
n ஏசா 54:8
o சங் 126:5
p 2சா 5:12; சங் 89:17
q சங் 10:1; சங் 143:7
r சங் 34:6; சங் 77:1
s சங் 28:1

தூசியால் உங்களைப் புகழ முடியுமா?[a] நீங்கள் எவ்வளவு
நம்பகமானவர்* என்பதைச் சொல்ல முடியுமா?[b]
10 யெகோவாவே, என் வேண்டுதலைக் கேட்டு, எனக்குக் கருணை
காட்டுங்கள்.[c]
யெகோவாவே, எனக்குத் துணையாக இருங்கள்.[d]
11 துக்கத்தில் தவித்த என்னை நீங்கள் சந்தோஷத்தில் துள்ளியாட
வைத்தீர்கள்.
என்னுடைய துக்கத் துணியை எடுத்துவிட்டு, என்னைச்
சந்தோஷத்தால் போர்த்தினீர்கள்.
12 அதனால், உங்களைப் புகழ்ந்து பாடுவேன்; மவுனமாக இருக்க
மாட்டேன்.
என் கடவுளாகிய யெகோவாவே, உங்களை என்றென்றும் புகழ்வேன்.

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

31 யெகோவாவே, உங்களிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறேன்.[e]
நான் அவமானப்படுவதற்கு ஒருபோதும் விட்டுவிடாதீர்கள்.[f]
நீங்கள் நீதியானவர் என்பதால் என்னைக் காப்பாற்றுங்கள்.[g]
2 என் வேண்டுதலைக் காதுகொடுத்து* கேளுங்கள்.
என்னைக் காப்பாற்ற சீக்கிரமாக வாருங்கள்.[h]
மலைக்கோட்டை போல எனக்கு அடைக்கலம் கொடுங்கள்.
மதில் சூழ்ந்த நகரம் போல எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்.[i]
3 நீங்கள் எனக்கு மாபெரும் கற்பாறையாகவும் கோட்டையாகவும்
இருக்கிறீர்கள்.[j]
உங்கள் பெயருக்காக[k] நீங்கள் எனக்கு வழிகாட்டுவீர்கள், என்னை
நடத்திச் செல்வீர்கள்.[l]
4 எதிரிகள் தந்திரமாக விரித்த வலையிலிருந்து என்னை விடுவிப்பீர்கள்.[m]
ஏனென்றால், நீங்கள்தான் என் கோட்டை.[n]
5 என் உயிரை உங்களுடைய கையில் ஒப்படைக்கிறேன்.[o]
யெகோவாவே, சத்தியத்தின்* கடவுளே,[p] நீங்கள் என்னை
விடுவித்திருக்கிறீர்கள்.
6 நான் யெகோவாவையே நம்பியிருக்கிறேன்.
ஒன்றுக்கும் உதவாத வீணான சிலைகளை வணங்குகிற ஆட்களை
வெறுக்கிறேன்.
7 நீங்கள் காட்டும் மாறாத அன்பினால் நான் மிகவும்
சந்தோஷப்படுவேன்.
நான் படுகிற கஷ்டத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்.[q]
என் அடிமனதிலுள்ள வேதனையை அறிந்திருக்கிறீர்கள்.
8 என்னை எதிரியிடம் ஒப்படைக்காமல்,
பாதுகாப்பான* இடத்தில் நிற்க வைத்திருக்கிறீர்கள்.
9 யெகோவாவே, நான் தவியாய்த் தவிக்கிறேன், எனக்குக் கருணை
காட்டுங்கள்.

30:9 *வே.வா., "உண்மையுள்ளவர்." **31:2** *வே.வா., "குனிந்து." **31:5** *வே.வா., "உண்மையுள்ள." **31:8** *வே.வா., "விசாலமான."

அதி. 30
a சங் 6:5, சங் 115:17, பிர 9:10
b சங் 88:11, ஏசா 38:18
c சங் 143:1
d சங் 28:7

அதி. 31
e சங் 18:2
f சங் 22:4, 5, ரோ 10:11
g சங் 143:1
h சங் 40:17, சங் 70:1, சங் 71:2
i 2சா 22:3, சங் 18:2
j 2சா 22:2
k சங் 25:11, எரே 14:7
l சங் 23:3
m சங் 91:3, மத் 6:13
n நீதி 18:10
o லூ 23:46, அப் 7:59
p உபா 32:4
q சங் 9:13

கடுமையான வேதனையில் என் கண்கள் சோர்ந்துவிட்டன,[a]
என்னுடைய முழு உடலுமே தளர்ந்துவிட்டது.[b]
10 என் வாழ்நாள் துக்கத்தில்தான் கழிகிறது.[c]
என் ஆயுள்காலம் மனக் குமுறலில்தான் கடந்துபோகிறது.[d]
நான் செய்த பாவத்தால் என் சக்தி கரைந்துபோகிறது.
என் எலும்புகள் பலவீனமாகின்றன.[e]
11 எதிரிகள் எல்லாரும், முக்கியமாக அக்கம்பக்கத்தில் இருக்கிற
எல்லாரும்,
என்னைக் கேலி கிண்டல் செய்கிறார்கள்.[f]
பழக்கமானவர்கள்கூட என்னைப் பார்த்துப் பயப்படுகிறார்கள்.
தெருவில் என்னைப் பார்த்தால் ஓடிப்போகிறார்கள்.[g]
12 நான் ஏதோ செத்துவிட்டது போல என்னை அடியோடு
மறந்துவிட்டார்கள்.
நான் உடைந்த ஜாடிபோல் ஆகிவிட்டேன்.
13 என்னைப் பற்றி நிறைய வதந்திகளைக் கேள்விப்படுகிறேன்.
எங்கே திரும்பினாலும் திகிலாக இருக்கிறது.[h]
எதிரிகள் எனக்கு எதிராக ஒன்றுதிரண்டு,
என்னைத் தீர்த்துக்கட்ட திட்டம் போடுகிறார்கள்.[i]
14 ஆனால் யெகோவாவே, நான் உங்களை நம்பியிருக்கிறேன்.[j]
“நீங்கள்தான் என் கடவுள்” என்று சொல்கிறேன்.[k]
15 என் வாழ்நாள் உங்கள் கையில் இருக்கிறது.
என்னை எதிர்க்கிற ஆட்களிடமிருந்தும் துன்புறுத்துகிற
ஆட்களிடமிருந்தும் காப்பாற்றுங்கள்.[l]
16 உங்களுடைய ஊழியன்மேல் உங்கள் முகத்தைப் பிரகாசிக்கச்
செய்யுங்கள்.[m]
உங்களுடைய மாறாத அன்பினால் என்னைக் காப்பாற்றுங்கள்.
17 யெகோவாவே, உங்களைக் கூப்பிடுகிறேன்; நான்
வெட்கப்பட்டுப்போவதற்கு விடாதீர்கள்.[n]
ஆனால், பொல்லாதவர்கள் வெட்கப்பட்டுப்போகட்டும்.[o]
கல்லறையில் அவர்கள் அமைதியாகக் கிடக்கட்டும்.[p]
18 பொய் பேசுகிற வாய் ஊமையாகட்டும்.[q]
நீதிமானுக்கு எதிராக ஆணவத்தோடும் அகம்பாவத்தோடும்
அவமரியாதையோடும் பேசுகிற உதடுகள் திறக்காமல் போகட்டும்.
19 நீங்கள் தரும் நன்மைகள் எவ்வளவு ஏராளம்![r]
உங்களுக்குப் பயந்து நடப்பவர்களுக்காக அவற்றைச் சேமித்து
வைத்திருக்கிறீர்கள்.[s]
உங்களிடம் அடைக்கலம் புகுந்தவர்களுக்காக எல்லார் முன்னாலும்
அவற்றைப் பொழிந்திருக்கிறீர்கள்.[t]
20 மனிதர்களுடைய சதித்திட்டங்களில் சிக்காதபடி,
அவர்களை உங்களுடைய சன்னிதியின் மறைவில் நீங்கள் ஒளித்து
வைப்பீர்கள்.[u]

அதி. 31
a சங் 6:7
b சங் 22:14
c நீதி 15:13
d சங் 71:9
e சங் 32:3, சங் 102:3, 5
f சங் 22:6, சங் 42:10, சங் 102:8
g சங் 38:11
h எரே 20:10
i சங் 57:4
j சங் 56:4
k சங் 43:5
l சங் 142:6
m எண் 6:25
n சங் 25:2, ஏசா 50:7
o நெ 6:16, ஏசா 41:11, எரே 20:11
p 1சா 2:9
q சங் 12:3, சங் 63:11
r சங் 73:1, ஏசா 63:7
s ஏசா 64:4, 1கொ 2:9
t சங் 126:2, ஏசா 26:12
u சங் 27:5, சங் 32:7

அபாண்டமாகத் தாக்கிப் பேசுகிறவர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக,
அவர்களை உங்களுடைய கூடாரத்தில் மறைத்து வைப்பீர்கள்.[a]
21 சுற்றிவளைக்கப்பட்ட நகரத்திலே,[b]
யெகோவா மாறாத அன்பை எனக்கு அற்புதமான விதத்தில் காட்டினார்.[c]
அதனால் அவருக்குப் புகழ் சேரட்டும்.
22 பதற்றத்தில் நான்,
“உங்கள்முன் இல்லாதபடி ஒழிந்துபோய்விடுவேனே” என்று சொன்னேன்.[d]
ஆனால், உதவிக்காக நான் கதறியதை நீங்கள் கேட்டீர்கள்.[e]
23 யெகோவாவுக்கு உண்மையாக* இருக்கிறவர்களே,[f] அவரை நேசியுங்கள்!
உண்மையாக இருக்கிறவர்களை யெகோவா பாதுகாக்கிறார்.[g]
ஆனால், ஆணவமாக நடக்கிறவர்களைக் கடுமையாகத் தண்டிக்கிறார்.[h]
24 யெகோவாவுக்காகக் காத்திருக்கிறவர்களே,[i]
தைரியமாக இருங்கள், நெஞ்சத்தில் உறுதியோடு இருங்கள்.[j]

தாவீதின் பாடல். மஸ்கீல்.*

32 யாருடைய குற்றம் மன்னிக்கப்படுகிறதோ,
யாருடைய பாவம் மூடப்படுகிறதோ,* அவர் சந்தோஷமானவர்.[k]
2 யெகோவா யாரைக் குற்றவாளி என்று தீர்க்காமல் இருக்கிறாரோ,[l]
யாருடைய மனதில் சூதுவாது இல்லையோ, அவர் சந்தோஷமானவர்.
3 நான் எதையும் வெளியே சொல்லாத வரைக்கும்,
நாளெல்லாம் குமுறிக் குமுறியே என் எலும்புகள் தளர்ந்துபோயின.[m]
4 ராத்திரி பகலாக உங்களுடைய கை என்னை அழுத்திக்கொண்டே இருந்தது.*[n]
கோடை வெயிலில் வற்றிப்போகும் தண்ணீர்போல் என் சக்தியெல்லாம் வற்றிப்போனது. (*சேலா*)
5 கடைசியில், என் பாவத்தை உங்களிடம் ஒத்துக்கொண்டேன்.
என் தவறுகள் எதையும் மறைக்கவில்லை.[o]
“என்னுடைய குற்றங்களை யெகோவாவிடம் சொல்வேன்”[p] என்றேன்.
நீங்களும் என்னுடைய பாவங்களையெல்லாம் மன்னித்தீர்கள்.[q] (*சேலா*)
6 அதனால், உங்களுக்கு உண்மையோடு* இருக்கிற ஒவ்வொருவரும் உங்களிடம் ஜெபம் செய்வார்கள்.[r]
வாய்ப்பு இருக்கும்போதே உங்களைத் தேடுவார்கள்.[s]
அப்போது, பாய்ந்து வரும் வெள்ளம்கூட அவர்களை நெருங்காது.
7 நீங்கள் எனக்குப் புகலிடமாக இருக்கிறீர்கள்.
நீங்கள் என்னை வேதனையிலிருந்து பாதுகாப்பீர்கள்.[t]

31:23; 32:6 *வே.வா., “பற்றுமாறாமல்.” **32:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **32:1** *நே.மொ., “மன்னிக்கப்படுகிறதோ.” **32:4** *வே.வா., “உங்களுடைய வெறுப்பு எனக்குப் பாரமாக இருந்தது.”

அதி. 31
a சங் 64:2, 3
b 1சா 23:7
c சங் 17:7
d யோனா 2:4
e 2நா 33:13; சங் 6:9; நீதி 15:29; எபி 5:7
f உபா 10:12
g 1சா 2:9; சங் 145:20
h 2சா 22:28; ஏசா 2:11; யாக் 4:6
i சங் 62:1; புல 3:20, 21; மீ 7:7
j ஏசா 35:4

அதி. 32
k ஏசா 1:18; அப் 3:19
l ரோ 4:7, 8
m நீதி 28:13
n சங் 38:2
o சங் 38:18; சங் 51:4; 1யோ 1:9
p லேவி 5:5; சங் 41:4
q 2சா 12:13; சங் 86:5; சங் 103:3; ஏசா 44:22
r சங் 65:2, 3
s சங் 69:13; ஏசா 55:6
t சங் 9:9

எனக்கு விடுதலை தந்து, என்னைச் சுற்றிலும் சந்தோஷ ஆரவாரம்
கேட்கும்படி செய்வீர்கள்.[a] (*சேலா*)
8 “நான் உனக்கு விவேகத்தை* தந்து, நீ நடக்க வேண்டிய வழியை
உனக்குக் காட்டுவேன்.[b]
உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு அறிவுரை சொல்வேன்.[c]
9 கடிவாளமோ கயிறோ போட்டுக் கட்டினால் தவிர
உன் பக்கத்தில் கொண்டுவர முடியாத
குதிரை போலவோ கோவேறு கழுதை* போலவோ
நீ புத்தி# இல்லாமல் நடந்துகொள்ளாதே.”[d]
10 பொல்லாதவனுக்குப் பல வேதனைகள் வரும்.
ஆனால், யெகோவாமேல் நம்பிக்கையாக இருக்கிறவனை
அவருடைய மாறாத அன்பு சூழ்ந்துகொள்ளும்.[e]
11 நீதிமான்களே, யெகோவாவை நினைத்து சந்தோஷத்தில் துள்ளுங்கள்.
நேர்மையான நெஞ்சமுள்ளவர்களே, சந்தோஷ ஆரவாரம் செய்யுங்கள்.

33 நீதிமான்களே, யெகோவாவை நினைத்து சந்தோஷ ஆரவாரம்
செய்யுங்கள்.[f]
நேர்மையானவர்கள் அவரைப் புகழ்வது பொருத்தமானது.
2 யாழ் இசைத்து யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள்.
பத்து நரம்புகள் கொண்ட யாழை இசைத்து அவரைப் புகழ்ந்து
பாடுங்கள்.
3 அவருக்காகப் புதிய பாடல் பாடுங்கள்.[g]
நரம்பிசைக் கருவிகளைத் திறமையாக வாசித்து, சந்தோஷக் குரல்
எழுப்புங்கள்.
4 ஏனென்றால், யெகோவாவின் வார்த்தை உண்மையானது.[h]
அவருடைய செயல்கள் எல்லாமே நம்பகமானது.
5 நீதியையும் நியாயத்தையும் அவர் நேசிக்கிறார்.[i]
இந்தப் பூமி யெகோவாவின் மாறாத அன்பினால் நிறைந்திருக்கிறது.[j]
6 யெகோவாவின் வார்த்தையால் வானம் உண்டாக்கப்பட்டது.[k]
அவருடைய வாயின் சுவாசத்தால் வானத்திலுள்ள எல்லாமே
உருவாக்கப்பட்டது.
7 அவர் கடல் நீரை அணைபோல் தேக்கி வைக்கிறார்.[l]
பொங்கியெழும் தண்ணீரைக் களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறார்.
8 பூமி முழுவதும் யெகோவாவுக்குப் பயப்படட்டும்.[m]
இந்த உலகத்தில் வாழ்கிற எல்லாரும் அவருக்குப் பயபக்தி காட்டட்டும்.
9 ஏனென்றால், அவர் சொன்னவுடன் பூமி உருவானது.[n]
அவர் கட்டளை கொடுத்தவுடன் அது உறுதியாக நின்றது.[o]
10 தேசங்கள் செய்த சூழ்ச்சிகளை* யெகோவா முறியடித்தார்.[p]
ஜனங்கள் போட்ட திட்டங்களை# அவர் குலைத்துப்போட்டார்.[q]

32:8 *வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதலை.” **32:9** *பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்த விலங்கு. #வே.வா., “புரிந்துகொள்ளும் திறன்.” **33:10** *வே.வா., “ஆலோசனைகளை.” #வே.வா., “ஜனங்களுடைய எண்ணங்களை.”

அதி. 32
a யாத் 15:1; 2சா 22:1
b சங் 86:11
c நீதி 3:6
d நீதி 26:3; எரே 8:6
e சங் 34:8; நீதி 13:21; நீதி 16:20

அதி. 33
f பிலி 4:4
g சங் 40:3; சங் 98:1; சங் 149:1; ஏசா 42:10; வெளி 5:9
h சங் 12:6
i யோபு 37:23; சங் 11:7; சங் 45:7
j சங் 145:16; அப் 14:17
k எபி 11:3
l ஆதி 1:9; யோபு 38:8-11; நீதி 8:29; எரே 5:22
m வெளி 14:7
n சங் 148:4, 5
o சங் 119:90
p ஏசா 8:10; ஏசா 19:3
q சங் 21:8, 11

11 ஆனால், யெகோவாவின் தீர்மானங்களும்,*
அவருடைய உள்ளத்தின் யோசனைகளும் தலைமுறை
தலைமுறையாக நிலைநிற்கும்.[a]
12 யெகோவாவைக் கடவுளாகக் கொண்ட தேசம் சந்தோஷமானது.[b]
தன்னுடைய சொத்தாக அவர் தேர்ந்தெடுத்திருக்கிற ஜனம்
சந்தோஷமானது.[c]
13 யெகோவா பரலோகத்திலிருந்து கீழே பார்க்கிறார்.
எல்லா மக்களையும் பார்க்கிறார்.[d]
14 அவர் குடிகொண்டிருக்கிற இடத்திலிருந்து
பூமியிலுள்ள ஜனங்களைக் கவனிக்கிறார்.
15 எல்லாருடைய இதயங்களையும் உருவாக்குகிறவர் அவர்தான்.
அவர்களுடைய செயல்களையெல்லாம் ஆராய்கிறவர் அவர்தான்.[e]
16 எந்த ராஜாவும் தன் படை பலத்தால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள
முடியாது.[f]
எந்தப் பலசாலியும் தன் மகா பலத்தால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள
முடியாது.[g]
17 குதிரை இருந்தால் வெற்றி கிடைத்துவிடும்* என்பது வெறும் கனவு.[h]
அதற்கு அதிக பலம் இருந்தாலும், அது உயிர்தப்ப உதவுமென்று
சொல்ல முடியாது.
18 யெகோவாவின் கண்கள் அவருக்குப் பயந்து நடக்கிறவர்களையும்,[i]
அவருடைய மாறாத அன்புக்காகக் காத்திருக்கிறவர்களையும்
உன்னிப்பாகக் கவனிக்கின்றன.
19 மரணத்திலிருந்து காப்பாற்றவும்,
பஞ்சத்திலிருந்து பாதுகாக்கவும் அவர்களைக் கவனிக்கின்றன.[j]
20 நாம் யெகோவாவுக்காகக் காத்திருக்கிறோம்.
அவர்தான் நமக்குத் துணை, அவர்தான் நம் கேடயம்.[k]
21 அவரை நினைத்து நம் இதயம் சந்தோஷப்படுகிறது.
ஏனென்றால், அவருடைய பரிசுத்தமான பெயரை நாம்
நம்பியிருக்கிறோம்.[l]
22 யெகோவாவே, நாங்கள் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறோம்.[m]
உங்களுடைய மாறாத அன்பை எப்போதும் எங்கள்மேல்
பொழியுங்கள்.[n]

அபிமெலேக்கின் முன்னால் பைத்தியம்போல் நடித்து,[o]
அவனால் துரத்தப்பட்ட பிறகு, தாவீது பாடிய பாடல்.

א [*ஆலெஃப்*]

34 எல்லா சமயத்திலும் நான் யெகோவாவைப் புகழ்வேன்.
என் உதடுகள் ஓயாமல் அவரைப் புகழும்.

ב [*பேத்*]

2 நான் யெகோவாவைப் பற்றிப் பெருமையாகப் பேசுவேன்.[p]
தாழ்மையானவர்கள்* அதைக் கேட்டு சந்தோஷப்படுவார்கள்.

33:11 *வே.வா., "ஆலோசனைகளும்." **33:17** *வே.வா., "காப்பாற்றப்படுவோம்."
34:2 *வே.வா., "சாந்தமானவர்கள்."

அதி. 33
a நீதி 19:21; ஏசா 46:10
b உபா 33:29
c சங் 65:4; சங் 135:4; 1பே 2:9
d சங் 11:4; சங் 14:2; நீதி 15:3; எபி 4:13
e 1நா 28:9; யோபு 34:21; நீதி 24:12
f யோசு 11:6
g 2நா 32:21; சங் 44:4, 5
h 2ரா 7:6, 7; சங் 20:7; நீதி 21:31; ஏசா 31:1
i யோபு 36:7; சங் 34:15
j ஏசா 33:15, 16
k உபா 33:29
l சங் 28:7; நீதி 18:10
m மீ 7:7
n சங் 32:10

அதி. 34
o 1சா 21:12, 13
p எரே 9:24; 1கொ 1:31

ג [கீமெல்]
3 என்னோடு சேர்ந்து யெகோவாவை மகிமைப்படுத்துங்கள்.[a]
நாம் ஒன்றுசேர்ந்து அவருடைய பெயரை மெச்சிப் பேசலாம்.
ד [டாலத்]
4 நான் யெகோவாவிடம் விசாரித்தேன், அவர் எனக்குப் பதில் சொன்னார்.[b]
எல்லா பயத்திலிருந்தும் அவர் என்னை விடுவித்தார்.[c]
ה [ஹே]
5 அவரை நம்பியிருந்தவர்களின் முகங்கள் பிரகாசித்தன.
அவர்களுடைய முகங்களில் அவமானமே இல்லை.
ז [ஸாயின்]
6 இந்த எளியவன் கூப்பிட்டபோது யெகோவா கேட்டார்.
எல்லா இக்கட்டிலிருந்தும் என்னை விடுவித்தார்.[d]
ח [ஹேத்]
7 யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவர்களை
அவருடைய தூதர் சூழ்ந்து நின்று,[e] காப்பாற்றுகிறார்.[f]
ט [டேத்]
8 யெகோவா நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்.[g]
அவரிடம் தஞ்சம் அடைகிறவர்கள் சந்தோஷமானவர்கள்.
י [யோத்]
9 யெகோவாவின் பரிசுத்தவான்களே, அவருக்குப் பயப்படுங்கள்.
அவருக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு குறையும் இருக்காது.[h]
כ [காஃப்]
10 பலமுள்ள இளம் சிங்கங்கள்கூட இரை இல்லாமல் தவிக்கலாம்.
ஆனால், யெகோவாவைத் தேடுகிறவர்களுக்கு ஒரு குறையும் வராது.*[i]
ל [லாமெத்]
11 என் மகன்களே, வாருங்கள்; நான் சொல்வதைக் கேளுங்கள்.
யெகோவாவுக்குப் பயந்து நடக்க நான் உங்களுக்குக் கற்றுக்கொடுப்பேன்.[j]
מ [மேம்]
12 நீங்கள் சந்தோஷமாக வாழ விரும்புகிறீர்களா?
நீண்ட காலத்துக்கு நன்றாக வாழ ஆசைப்படுகிறீர்களா?[k]
נ [நூன்]
13 அப்படியானால், கெட்ட விஷயங்களைப் பேசாதபடி உங்கள் நாவையும்,[l]
பொய் பேசாதபடி உங்கள் உதடுகளையும் அடக்கி வையுங்கள்.[m]
ס [சாமெக்]
14 கெட்டதைவிட்டு விலகி, நல்லது செய்யுங்கள்.[n]
சமாதானத்தைத் தேடுங்கள், அதற்காகவே பாடுபடுங்கள்.[o]
ע [ஆயின்]
15 யெகோவாவின் கண்கள் நீதிமான்களைக் கவனிக்கின்றன.[p]
அவருடைய காதுகள் அவர்களுடைய கூக்குரலைக் கேட்கின்றன.[q]

34:10 * வே.வா., "எந்த நன்மையும் கிடைக்காமல் போகாது."

அதி. 34
a சங் 35:27
b எபி 5:7
c சங் 18:48
d 2சா 22:1
e 2ரா 6:17; சங் 91:11; மத் 18:10; எபி 1:7, 14
f 2ரா 19:35; தானி 6:22; அப் 5:18, 19; அப் 12:11
g 1பே 2:3
h சங் 23:1; பிலி 4:19
i சங் 23:6; சங் 84:11
j யோபு 28:28; நீதி 1:7; நீதி 8:13
k உபா 6:1, 2; உபா 30:19, 20; 1பே 3:10-12
l யாக் 1:26; யாக் 3:8
m நீதி 12:19; நீதி 15:4; 1பே 2:1
n சங் 37:27; சங் 97:10; ஆமோ 5:15; ரோ 12:9
o மத் 5:9; எபி 12:14
p யோபு 36:7; சங் 33:18
q சங் 18:6; ஏசா 59:1

פ [பே]

16 ஆனால், யெகோவாவுடைய முகம் கெட்டவர்களுக்கு விரோதமாக இருக்கிறது.
அவர்களைப் பற்றிய நினைவுகூட இந்தப் பூமியில் இல்லாதபடி அவர் செய்துவிடுவார்.[a]

צ [சாதே]

17 நீதியுள்ளவர்கள் உதவி கேட்டுக் கெஞ்சியபோது யெகோவா கேட்டார்.[b]
எல்லா வேதனைகளிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றினார்.[c]

ק [கோஃப்]

18 உள்ளம் உடைந்துபோனவர்களின் பக்கத்திலேயே யெகோவா இருக்கிறார்.[d]
மனம் நொந்துபோனவர்களை* அவர் காப்பாற்றுகிறார்.[e]

ר [ரேஷ்]

19 நீதிமானுக்குப் பல கஷ்டங்கள் வரும்.[f]
ஆனால், அவை எல்லாவற்றிலிருந்தும் யெகோவா அவரை விடுவிக்கிறார்.[g]

ש [ஷீன்]

20 அவருடைய எல்லா எலும்புகளையும் அவர் பாதுகாக்கிறார்.
அவற்றில் ஒன்றுகூட முறிக்கப்படுவதில்லை.[h]

ת [ட்டா]

21 பொல்லாதவன் பேரழிவில் செத்துப்போவான்.
நீதிமானை வெறுக்கிறவர்கள் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்படுவார்கள்.
22 யெகோவா தன்னுடைய ஊழியர்களின் உயிரை மீட்கிறார்.
அவரிடம் தஞ்சம் அடைகிற யாருமே குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட மாட்டார்கள்.[i]

தாவீதின் பாடல்.

35 யெகோவாவே, எனக்கு எதிராக வழக்காடுகிறவர்களோடு வழக்காடுங்கள்.[j]
எனக்கு எதிராகப் போர் செய்கிறவர்களோடு போர் செய்யுங்கள்.[k]
2 உங்களுடைய சிறிய கேடயத்தையும்* பெரிய கேடயத்தையும் எடுத்துக்கொண்டு,[l]
எனக்கு உதவி செய்ய எழுந்து வாருங்கள்.[m]
3 என்னைத் துரத்துகிறவர்களைத்[n] தாக்குவதற்காக
உங்களுடைய ஈட்டியையும் கோடாலியையும் ஓங்குங்கள்.
"நான் உன்னை மீட்பேன்" என்று என்னிடம் சொல்லுங்கள்.[o]
4 என்னுடைய உயிரை வேட்டையாடுகிறவர்கள் அவமானப்பட்டுத் தலைகுனியட்டும்.[p]
என்னைத் தீர்த்துக்கட்ட சூழ்ச்சி செய்கிறவர்கள் வெட்கத்தில் பின்வாங்கட்டும்.
5 அவர்கள் காற்றில் பறந்துபோகிற பதரைப் போல ஆகட்டும்.

34:18 *வே.வா., "சோர்ந்துபோனவர்களை." **35:2** *பொதுவாக, வில்வீரர்கள் இவற்றை வைத்திருப்பார்கள்.

அதி. 34
a சங் 37:10 நீதி 10:7
b சங் 145:18, 19
c 2நா 32:22 அப் 12:11
d சங் 147:3 ஏசா 61:1
e சங் 51:17 ஏசா 57:15 ஏசா 66:2
f நீதி 24:16 2தீ 3:12
g தானி 6:21, 22 1கொ 10:13
h யோவா 19:36
i சங் 84:11

அதி. 35
j 1சா 24:15
k சங் 3:7
l யாத் 15:3
m ஏசா 42:13
n 1சா 23:26
o ஏசா 12:2
p எரே 17:18

யெகோவாவின் தூதர் அவர்களை விரட்டியடிக்கட்டும்.[a]
6 யெகோவாவின் தூதர் அவர்களைத் துரத்தும்போது,
அவர்களுடைய பாதை இருண்டுபோகட்டும், சறுக்கலாகட்டும்.
7 ஏனென்றால், காரணமே இல்லாமல் என்னைப் பிடிக்க வலை விரித்திருக்கிறார்கள்.
காரணமே இல்லாமல் எனக்குக் குழி தோண்டியிருக்கிறார்கள்.
8 அவர்களுக்குத் திடீரென்று அழிவு வரட்டும்.
அவர்கள் விரித்த வலையிலேயே அவர்கள் சிக்கிக்கொள்ளட்டும்.
அதில் விழுந்து அழிந்துபோகட்டும்.[b]
9 ஆனால், நான் யெகோவாவை நினைத்து சந்தோஷப்படுவேன்.
அவர் தரும் மீட்பினால் பூரிப்படைவேன்.
10 என் எலும்புகளெல்லாம் அவரிடம்,
"யெகோவாவே, உங்களைப் போல யார் இருக்கிறார்கள்?
பலசாலிகளிடமிருந்து ஆதரவற்றவர்களைக் காப்பாற்றுகிறவர் நீங்கள்தான்.[c]
மோசடிக்காரர்களிடமிருந்து ஏழை எளியவர்களை விடுவிக்கிறவர் நீங்கள்தான்"[d] என்று சொல்லும்.
11 கெட்ட எண்ணம்பிடித்த சாட்சிகள் எனக்கு எதிராக எழும்புகிறார்கள்.[e]
எனக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றியெல்லாம் கேள்வி கேட்கிறார்கள்.
12 நான் நல்லது செய்திருந்தாலும் எனக்குக் கெட்டதுதான் செய்கிறார்கள்.[f]
என்னைத் துக்கத்தில் தவிக்க வைக்கிறார்கள்.
13 அவர்கள் வியாதியாகக் கிடந்தபோது, நான் துக்கத் துணி போட்டுக்கொண்டேன்.
விரதமிருந்து என்னை வருத்திக்கொண்டேன்.
அவர்களுக்காக நான் செய்த ஜெபத்துக்குப் பதில் கிடைக்காமல் போனபோது,
14 நண்பனை இழந்தவன்போல் துக்கப்பட்டேன்.
கூடப்பிறந்தவனைப் பறிகொடுத்தவன்போல் நடமாடினேன்.
தாயை இழந்தவன்போல் துக்கத்தில் தலைகுனிந்தபடி இருந்தேன்.
15 ஆனால் எனக்கு அடிசறுக்கியபோது, அவர்கள் ஒன்றுசேர்ந்து சிரித்தார்கள்.
பதுங்கியிருந்து என்னைத் தாக்குவதற்காக ஒன்றுகூடினார்கள்.
அமைதியாக இல்லாமல் என்னை நார் நாராகக் கிழித்தார்கள்.
16 கடவுளுக்குப் பயப்படாதவர்கள் என்னைப் பார்த்துக் கேவலமாகப் பேசுகிறார்கள்.*
கோபத்தில் பற்களை நறநறவென்று கடிக்கிறார்கள்.[g]
17 யெகோவாவே, இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் பார்த்துக்கொண்டே இருப்பீர்கள்?[h]

35:16 * அல்லது, "கடவுளுக்குப் பயப்படாதவர்கள் ஒரு துண்டு ரொட்டிக்காகக் கேவலமாய்ப் பேசுகிறார்கள்."

அதி. 35
a யாத் 14:19, 20; ஏசா 37:36
b சங் 57:6; சங் 141:10
c சங் 18:17
d சங் 40:17; நீதி 22:22, 23
e சங் 27:12; மத் 26:59
f 1சா 19:4, 5; 1சா 20:33; எரே 18:20
g சங் 37:12
h ஆப 1:13

அவர்களுடைய தாக்குதல்களிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.[a]
அந்த இளம் சிங்கங்களிடமிருந்து என் அருமையான உயிரைக் காப்பாற்றுங்கள்.[b]
18 அப்போது, மாபெரும் சபையில் உங்களுக்கு நன்றி சொல்வேன்.[c]
மக்கள் கூட்டத்தின் நடுவில் உங்களைப் புகழ்வேன்.
19 காரணமில்லாமல் என்னை எதிர்க்கிறவர்கள் என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும்படி விட்டுவிடாதீர்கள்.
காரணமில்லாமல் என்னை வெறுக்கிறவர்கள்[d] கண் ஜாடை காட்டி என்னை ஏளனம் செய்ய விட்டுவிடாதீர்கள்.[e]
20 அவர்கள் சமாதான வார்த்தைகளைப் பேசுவதில்லை.
தேசத்தில் சமாதானமாக வாழ்கிறவர்களுக்கு எதிராகச் சதிதான் செய்கிறார்கள்.[f]
21 என்மேல் குற்றம் சுமத்துவதற்குத் துடிக்கிறார்கள்.
"ஆஹா! ஆஹா! நம் கண்களாலேயே பார்த்துவிட்டோம்!" என்று சொல்கிறார்கள்.
22 யெகோவாவே, இதை நீங்களே பார்த்திருக்கிறீர்கள்!
இனிமேலும் மவுனமாக இருக்காதீர்கள்.[g]
யெகோவாவே, தூரத்தில் இருக்காதீர்கள்.[h]
23 எழுந்து வந்து, எனக்கு ஆதரவு கொடுங்கள்.
யெகோவாவே, என் கடவுளே, எனக்காக வாதாடுங்கள்.
24 என் கடவுளாகிய யெகோவாவே, உங்களுடைய நீதியின்படி எனக்குத் தீர்ப்பு கொடுங்கள்.[i]
எதிரிகள் என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும்படி விட்டுவிடாதீர்கள்.
25 அவர்கள் என்னைப் பார்த்து, "ஆஹா! நாம் ஆசைப்பட்டபடியே நடந்துவிட்டது!" என்றோ,
"அவனை ஒழித்துக்கட்டிவிட்டோம்!" என்றோ ஒருபோதும் சொல்லாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.[j]
26 என்னுடைய கஷ்டத்தைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிற எல்லாரும் அவமானப்பட்டுத் தலைகுனியட்டும்.
என்னிடம் திமிராக நடந்துகொள்கிற எல்லாருமே வெட்கப்பட்டுக் கேவலப்பட்டுப் போகட்டும்.
27 ஆனால், என்னுடைய நீதியை விரும்புகிறவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்யட்டும்.
"தன்னுடைய ஊழியன் சமாதானமாக வாழ்வதை விரும்புகிற யெகோவாவுக்கு மகிமை சேரட்டும்!"[k] என்று
அவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கட்டும்.
28 நானும் உங்களுடைய நீதியைப் பற்றிச் சொல்லிக்கொண்டே* இருப்பேன்.[l]
நாள் முழுவதும் உங்களைப் புகழ்ந்துகொண்டே இருப்பேன்.[m]

35:28 * வே.வா., "தியானித்துக்கொண்டே."

அதி. 35
a சங் 142:6
b சங் 22:20 சங் 57:4
c சங் 22:22
d சங் 69:4 யோவா 15:24, 25
e நீதி 6:12, 13
f சங் 31:13 எரே 11:19 மத் 26:4
g சங் 28:1
h சங் 10:1 சங் 71:12
i சங் 26:1 சங் 96:13
j சங் 41:1, 2
k சங் 84:11 சங் 149:4
l சங் 51:14
m சங் 71:24

இசைக் குழுவின் தலைவனுக்கு; யெகோவாவின் ஊழியரான தாவீதின் பாடல்.

36 பொல்லாதவனுடைய இதயத்தின் ஆழத்திலே குற்றத்தின் குரல் கேட்கிறது.
அவனுக்குக் கடவுள்பயம் துளிகூட இல்லை.[a]
2 அவனுடைய கண்களில் அவன் பெரிய ஆளாக இருப்பதால்,
அவனுடைய குற்றத்தை அவனால் உணரவோ வெறுக்கவோ முடிவதில்லை.[b]
3 அவன் வாயிலிருந்து வருகிற வார்த்தைகள் புண்படுத்துகின்றன, ஏமாற்றுகின்றன.
நல்லது செய்வதற்குத் தேவையான விவேகம்* அவனிடம் இல்லை.
4 படுத்திருக்கும்போதுகூட அவன் சதித்திட்டங்களைத் தீட்டுகிறான்.
தவறான பாதையிலேயே போகிறான்.
கெட்ட விஷயங்களை ஒதுக்கித்தள்ளாமல் இருக்கிறான்.
5 யெகோவாவே, உங்களுடைய மாறாத அன்பு வானத்தைப் போல உயர்ந்தது.[c]
உங்களுடைய உண்மைத்தன்மை மேகங்களைப் போல உயர்ந்தது.
6 உங்களுடைய நீதி கம்பீரமான மலைகளை* போல இருக்கிறது.[d]
உங்களுடைய நீதித்தீர்ப்புகள் மாபெரும் ஆழ்கடலைப் போல இருக்கின்றன.[e]
யெகோவாவே, மனிதர்களையும் மிருகங்களையும் நீங்கள்தான் பாதுகாக்கிறீர்கள்.# [f]
7 கடவுளே, உங்களுடைய மாறாத அன்பு எவ்வளவு அருமையானது![g]
உங்களுடைய சிறகுகளின் நிழலில்
மக்கள் தஞ்சம் அடைகிறார்கள்.[h]
8 உங்கள் வீட்டில் கிடைக்கும் ஏராளமான நன்மைகளால்* அவர்கள் திருப்தியடைகிறார்கள்.[i]
நீங்கள் சந்தோஷத்தைப் பெருக்கெடுத்து ஓட வைத்து, அவர்களுடைய தாகத்தைத் தீர்க்கிறீர்கள்.[j]
9 உயிரின் ஊற்று நீங்கள்தான்.[k]
உங்களுடைய ஒளியால் நாங்கள் வெளிச்சத்தைப் பார்க்கிறோம்.[l]
10 உங்களைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு உங்களுடைய மாறாத அன்பை எப்போதும் காட்டுங்கள்.[m]
நேர்மையான நெஞ்சமுள்ளவர்களுக்கு உங்களுடைய நீதியை எப்போதும் காட்டுங்கள்.[n]
11 ஆணவமுள்ளவர்கள் என்னைக் காலில் போட்டு மிதிக்கும்படி விட்டுவிடாதீர்கள்,
பொல்லாதவர்கள் என்னை விரட்டியடிக்க விட்டுவிடாதீர்கள்.
12 அதோ! அக்கிரமக்காரர்கள் விழுந்தார்கள்.
எழுந்திருக்க முடியாதபடி அவர்கள் தள்ளப்பட்டார்கள்.[o]

36:3 *வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதல்." **36:6** *நே.மொ., "கடவுளின் மலைகளை." #வே.வா., "காப்பாற்றுகிறீர்கள்." **36:8** *நே.மொ., "உங்கள் வீட்டின் கொழுமையால்."

அதி. 36
a ரோ 3:18
b உபா 29:19, 20
c சங் 103:11
d சங் 71:19
e ரோ 11:33
f சங் 145:9; 1தீ 4:10
g மீ 7:18
h ரூ 2:12; சங் 17:8; சங் 91:4
i சங் 65:4
j சங் 16:11
k யோபு 33:4; எரே 2:13; அப் 17:28; வெளி 4:11
l சங் 27:1; சங் 43:3; யாக் 1:17; 1பே 2:9
m சங் 103:17
n சங் 7:10; சங் 97:11
o சங் 1:5

தாவீதின் பாடல்.

א [*ஆலெஃப்*]

37 அக்கிரமக்காரர்களைப் பார்த்து எரிச்சலடையாதே.*
பொல்லாதவர்களைப் பார்த்துப் பொறாமைப்படாதே.[a]
2 அவர்கள் புல்லைப் போலச் சீக்கிரமாக வாடிப்போவார்கள்.[b]
பசும்புல்லைப் போல வாடி வதங்கிப்போவார்கள்.

ב [*பேத்*]

3 யெகோவாமேல் நம்பிக்கை வைத்து, நல்லது செய்.[c]
பூமியில் குடியிருந்து, உண்மையோடு நடந்துகொள்.[d]
4 யெகோவாவை வணங்குவதில்* அளவில்லாமல் சந்தோஷப்படு.
அப்போது, உன் இதயத்திலுள்ள ஆசைகளை அவர் நிறைவேற்றி வைப்பார்.

ג [*கீமெல்*]

5 உன் வழியை யெகோவாவிடம் ஒப்படைத்துவிடு.[e]
அவரையே சார்ந்திரு, அவர் உனக்காக எல்லாவற்றையும் செய்வார்.[f]
6 உன்னுடைய நீதியை விடியற்கால வெளிச்சம் போலவும்,
உன்னுடைய நியாயத்தை நடுப்பகல் வெளிச்சம் போலவும் அவர் பிரகாசிக்க வைப்பார்.

ד [*டாலத்*]

7 யெகோவாவுக்கு முன்னால் அமைதியாக இரு.[g]
அவருக்காக நம்பிக்கையோடு* காத்திரு.
சதித்திட்டங்கள் தீட்டி அவற்றைச் சாமர்த்தியமாக நடத்திக் காட்டுகிற
மனுஷனைப் பார்த்து நீ எரிச்சலடையாதே.[h]

ה [*ஹே*]

8 கோபத்தையும் ஆத்திரத்தையும் விட்டுவிடு.[i]
எரிச்சல்பட்டு ஏதாவது தப்பு செய்துவிடாதே.*
9 அக்கிரமக்காரர்கள் அடியோடு அழிக்கப்படுவார்கள்.[j]
ஆனால், யெகோவாமேல் நம்பிக்கையாக இருக்கிறவர்கள்
இந்தப் பூமியைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.[k]

ו [*வா*]

10 இன்னும் கொஞ்ச நேரம்தான், பொல்லாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள்.[l]
அவர்கள் இருந்த இடத்தில் தேடினாலும் அவர்களைப் பார்க்க முடியாது.[m]
11 ஆனால், தாழ்மையானவர்கள்* இந்தப் பூமியைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.[n]
அவர்கள் அளவில்லாத சமாதானத்தையும், முடிவில்லாத சந்தோஷத்தையும் அனுபவிப்பார்கள்.[o]

ז [*ஸாயின்*]

12 நீதிமானுக்கு எதிராகப் பொல்லாதவன் சூழ்ச்சி செய்கிறான்.[p]

37:1 *வே.வா., “கொதிப்படையாதே.” **37:4** *வே.வா., “யெகோவாவில்.” **37:7** *வே.வா., “பொறுமையோடு.” **37:8** *அல்லது, “எரிச்சல் அடையாதே, அதனால் தீமைதான் ஏற்படும்.” **37:11** *வே.வா., “சாந்தமானவர்கள்.”

அதி. 37
a சங் 73:3; நீதி 23:17
b சங் 73:12, 19
c ஏசா 1:17; எபி 13:16
d நீதி 28:20
e சங் 55:22; நீதி 16:3
f மத் 6:33; பிலி 4:6; 1பே 5:6, 7
g சங் 62:1; புல 3:26
h யோபு 21:7; சங் 73:3; எரே 12:1
i நீதி 14:29; எபே 4:26
j சங் 55:23
k சங் 25:12, 13; சங் 37:29; மத் 5:5; 2பே 2:9
l யோபு 24:24
m 1சா 25:39; சங் 52:4, 5
n ஏசா 45:18; மத் 5:5; வெளி 21:3
o சங் 72:7; சங் 119:165; ஏசா 48:18
p 1சா 18:21, 25

அவனைப் பார்த்துப் பற்களை நறநறவென்று கடிக்கிறான்.
13 ஆனால், அந்தப் பொல்லாதவனைப் பார்த்து யெகோவா சிரிப்பார்.
ஏனென்றால், அவனுக்கு முடிவு வருமென்று அவருக்குத் தெரியும்.[a]

ח [*ஹேத்*]

14 அடக்கி ஒடுக்கப்படுகிற ஏழைகளைக் கொன்றுபோடுவதற்காக,
நேர்மையாக நடக்கிறவர்களைப் படுகொலை செய்வதற்காக,
பொல்லாதவர்கள் தங்களுடைய வாளை உருவுகிறார்கள்,
வில்லை வளைக்கிறார்கள்.
15 ஆனால், அவர்களுடைய வாள் அவர்களுடைய நெஞ்சிலேயே பாயும்.[b]
அவர்களுடைய வில்லுகள் முறிந்துபோகும்.

ט [*டேத்*]

16 பொல்லாதவர்கள் வைத்திருக்கிற ஏராளமான பொருள்களைவிட
நீதிமான்கள் வைத்திருக்கிற கொஞ்சம் பொருளே மேல்.[c]
17 பொல்லாதவர்களின் கைகள் முறிக்கப்படும்.
ஆனால், நீதிமான்களுக்கு யெகோவா கைகொடுத்து உதவுவார்.

י [*யோத்*]

18 குற்றமற்றவர்கள் படுகிற கஷ்டம் யெகோவாவுக்குத் தெரியும்.
அவர்களுடைய சொத்து அழியாமல் என்றென்றும் நிலைத்திருக்கும்.[d]
19 அழிவு காலத்தில் அவர்களுக்குத் தலைகுனிவு ஏற்படாது.
பஞ்ச காலத்தில் அவர்களிடம் ஏராளமான உணவு இருக்கும்.

כ [*காஃப்*]

20 ஆனால், பொல்லாதவர்கள் அழிந்துபோவார்கள்.[e]
யெகோவாவின் எதிரிகள் செழுமையான புல்வெளிகளைப் போலவும்,
புகையைப் போலவும் மறைந்துபோவார்கள்.

ל [*லாமெத்*]

21 பொல்லாதவன் கடன் வாங்கிவிட்டுத் திருப்பிக்கொடுக்காமல் இருக்கிறான்.
ஆனால், நீதிமான் தாராள மனதோடு* அள்ளிக் கொடுக்கிறான்.[f]
22 கடவுளுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள் இந்தப் பூமியைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.
ஆனால், அவருடைய சாபத்தைப் பெற்றவர்கள் அழிந்துபோவார்கள்.[g]

מ [*மேம்*]

23 ஒருவன் போகிற வழி யெகோவாவுக்குப் பிரியமாக இருந்தால்,[h]
அவன் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் அவனுக்கு அவர் வழிகாட்டுவார்.*[i]
24 அவன் தடுமாறினாலும் கீழே விழுந்துவிட மாட்டான்.[j]
ஏனென்றால், யெகோவா அவனுடைய கையைப் பிடித்திருக்கிறார்.[k]

נ [*நூன்*]

25 நான் வாலிபனாக இருந்தேன், இப்போது முதியவனாகவும் ஆகிவிட்டேன்.

37:21 *வே.வா., “கருணையோடு.” **37:23** *வே.வா., “அவனுடைய காலடிகளை உறுதிப்படுத்துவார்.”

அதி. 37
a 1சா 26:9, 10
b 2சா 17:23; எஸ்தர் 7:10; சங் 7:15
c நீதி 16:8; நீதி 30:8, 9; 1தீ 6:6
d சங் 16:11
e நீதி 10:7
f உபா 15:11; யோபு 31:16, 22; சங் 112:9; நீதி 19:17
g சங் 37:9
h நீதி 11:20
i நீதி 16:9
j சங் 34:19; நீதி 24:16
k சங் 91:11, 12

ஆனால், நீதிமானைக் கடவுள் கைவிட்டதையோ,[a]
அவனுடைய பிள்ளைகள் உணவுக்காகக் கையேந்துவதையோ
இதுவரை நான் பார்த்ததில்லை.[b]
26 அவன் தாராளமாகக் கடன் கொடுக்கிறான்.[c]
அவனுடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் காத்திருக்கிறது.

ס [*சாமெக்*]

27 கெட்டதை விட்டுவிட்டு, நல்லது செய்.[d]
அப்போது, என்றென்றும் நிலைத்திருப்பாய்.
28 ஏனென்றால், யெகோவா நியாயத்தை நேசிக்கிறார்.
அவருக்கு உண்மையாக* இருப்பவர்களைக் கைவிட மாட்டார்.[e]

ע [*ஆயின்*]

அவர்கள் எப்போதும் பாதுகாக்கப்படுவார்கள்.[f]
ஆனால், பொல்லாதவர்களின் பிள்ளைகள் அழிந்துபோவார்கள்.[g]
29 நீதிமான்கள் இந்தப் பூமியைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.[h]
அவர்கள் என்றென்றும் அதில் வாழ்வார்கள்.[i]

פ [*பே*]

30 நீதிமானுடைய வாய் ஞானத்தைப் பொழிகிறது.
அவனுடைய நாவு நியாயத்தைப் பேசுகிறது.[j]
31 அவனுடைய கடவுளின் சட்டம் அவன் இதயத்தில் இருக்கிறது.[k]
அவனுடைய கால்கள் தடுமாறாது.[l]

צ [*சாதே*]

32 நீதிமானைப் பொல்லாதவன் நோட்டமிடுகிறான்.
அவனைத் தீர்த்துக்கட்ட வழிதேடுகிறான்.
33 ஆனால், யெகோவா அவனைப் பொல்லாதவனுடைய கையில்
விட்டுவிட மாட்டார்.[m]
அவனைக் குற்றவாளி என்று நியாயந்தீர்க்க மாட்டார்.[n]

ק [*கோஃப்*]

34 யெகோவாமேல் நம்பிக்கையாக இருந்து, அவருடைய வழியில் நட.
அப்போது, அவர் உன்னை உயர்த்துவார், இந்தப் பூமியை உனக்குச்
சொந்தமாகக் கொடுப்பார்.
பொல்லாதவர்கள் அழிந்துபோவதை[o] நீ பார்ப்பாய்.[p]

ר [*ரேஷ்*]

35 ஈவிரக்கமே இல்லாத அக்கிரமக்காரனை நான் பார்த்தேன்.
சொந்த மண்ணில் செழித்து வளர்ந்திருக்கிற மரம்போல் அவன்
இருந்தான்.[q]
36 ஆனால் திடீரென்று ஒருநாள், அவன் இல்லாமல் போய்விட்டான்.[r]
அவனை எவ்வளவோ தேடினேன், ஆனாலும் கண்டுபிடிக்க
முடியவில்லை.[s]

ש [*ஷீன்*]

37 நீ குற்றமற்றவனை* கவனி.
நேர்மையானவனை எப்போதும் பார்.[t]

37:28 *வே.வா., "அவரிடம் பற்றுமாறாமல்." **37:37** *வே.வா., "உத்தமமாக நடக்கிறவனை."

அதி. 37
a சங் 94:14; மத் 6:33; எபி 13:5
b உபா 24:19; சங் 145:15; நீதி 10:3
c உபா 15:7, 8; சங் 112:5
d சங் 34:14; ஏசா 1:17
e 2சா 22:26
f சங் 97:10; நீதி 2:7, 8
g நீதி 2:22
h உபா 30:20; சங் 37:9; நீதி 2:21; மத் 5:5
i மத் 25:46; வெளி 21:3, 4
j மத் 12:35; எபே 4:29; கொலோ 4:6
k உபா 6:6; சங் 40:8
l சங் 121:3
m 2பே 2:9
n சங் 109:31
o சங் 37:22
p சங் 52:5, 6
q எஸ்தர் 5:11; யோபு 21:7
r யாத் 15:9, 10
s சங் 37:10
t யோபு 1:1

ஏனென்றால், அவனுடைய எதிர்காலம் நிம்மதியாக இருக்கும்.[a]
38 குற்றவாளிகள் எல்லாரும் அழிக்கப்படுவார்கள்.
பொல்லாதவர்களுக்கு எந்த எதிர்காலமும் கிடையாது.[b]

ת [ட்டா]

39 நீதிமான்களை யெகோவா மீட்கிறார்.[c]
இக்கட்டான காலத்தில் அவரே அவர்களுக்குக் கோட்டையாக இருப்பார்.[d]
40 யெகோவா அவர்களுக்கு உதவி செய்வார், அவர்களைக் காப்பாற்றுவார்.[e]
பொல்லாதவர்களிடமிருந்து அவர்களை விடுவித்து, பாதுகாப்பார்.
ஏனென்றால், அவர்கள் அவரிடம் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்.[f]

ஒரு நினைப்பூட்டுதலாக* தாவீது பாடிய சங்கீதம்.

38 யெகோவாவே, என்னைக் கோபத்தோடு கண்டிக்காதீர்கள்.
என்னைக் கடும் கோபத்தோடு திருத்தாதீர்கள்.[g]
2 உங்களுடைய அம்புகள் என் உடம்பில் ஆழமாகப் பாய்ந்திருக்கின்றன.
உங்களுடைய கைகள் என்னை அழுத்துகின்றன.[h]
3 உங்கள் கோபத்தால் என் உடல் முழுவதும் ரணமாக இருக்கிறது.
நான் பாவம் செய்ததால் நிம்மதி இல்லாமல் தவிக்கிறேன்.*[i]
4 என்னுடைய குற்றங்கள் என் தலைக்குமேல் குவிந்திருக்கின்றன.[j]
பாரமான சுமைபோல் என்னை அழுத்துகின்றன.
என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.
5 என்னுடைய முட்டாள்தனத்தால்
என் உடம்பிலுள்ள புண்கள் சீழ்பிடித்து நாற்றமெடுக்கின்றன.
6 வேதனையில் துடிக்கிறேன், மிகவும் நொந்துபோய் இருக்கிறேன்.
நாள் முழுவதும் சோகமாக நடமாடுகிறேன்.
7 எனக்குள் நெருப்பு பற்றியெரிவதுபோல் இருக்கிறது.
என் உடல் முழுவதும் ரணமாக இருக்கிறது.[k]
8 நான் உணர்ச்சியற்றவன்போல் ஆகிவிட்டேன், நொறுங்கிப்போய்விட்டேன்.
வேதனை என் நெஞ்சைப் பிழிவதால் சத்தமாக முனகுகிறேன்.
9 யெகோவாவே, என்னுடைய எல்லா ஆசைகளும் உங்களுக்குத் தெரியும்.
நான் வேதனையில் பெருமூச்சு விடுவதும் உங்களுக்குத் தெரியும்.
10 என்னுடைய நெஞ்சு படபடக்கிறது, என்னுடைய சக்தியெல்லாம் போய்விட்டது.
என்னுடைய கண்கள் ஒளி இழந்துவிட்டன.[l]
11 என்னுடைய புண்களைப் பார்த்து நண்பர்களும் நெருக்கமானவர்களும்
என்னைவிட்டு ஒதுங்கிப் போகிறார்கள்.
உயிர் நண்பர்கள்கூட விலகிப் போகிறார்கள்.

38:மே.கு. *வே.வா., "ஞாபகத்துக்குக் கொண்டுவருவதற்காக." **38:3** *நே.மொ., "என் எலும்புகளில் நிம்மதி இல்லை."

அதி. 37
a யோபு 42:12, 16
b சங் 1:4; நீதி 10:7; 2பே 2:9
c ஏசா 12:2
d சங் 9:9; ஏசா 33:2
e ஏசா 46:4; 1கொ 10:13
f சங் 22:4; தானி 3:17; தானி 6:23

அதி. 38
g எரே 10:24
h சங் 32:4
i சங் 6:2; சங் 41:4; சங் 51:8
j எஸ்றா 9:6; சங் 40:12
k சங் 38:3
l சங் 6:7

12 என்னைத் தீர்த்துக்கட்ட நினைக்கிறவர்கள் எனக்குக் கண்ணிகளை
வைக்கிறார்கள்.
எனக்குத் தீங்கு செய்ய நினைக்கிறவர்கள் எனக்கு எதிராகப்
பேசுகிறார்கள்.[a]
நாள் முழுக்க அவர்கள் வாயிலிருந்து பொய்யும் புரட்டும்தான்
வருகிறது.
13 ஆனால், நான் செவிடனைப் போல எதையும் கேட்காமல்
இருக்கிறேன்.[b]
ஊமையனைப் போல வாய் திறக்காமல் இருக்கிறேன்.[c]
14 காது கேட்காதவனைப் போல நான் ஆகிவிட்டேன்.
எதிர்த்து வாதாட முடியாதவனைப் போல ஆகிவிட்டேன்.
15 யெகோவாவே, உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்.[d]
என் கடவுளாகிய யெகோவாவே, நீங்கள் எனக்குப் பதில்
கொடுத்தீர்கள்.[e]
16 நான் உங்களிடம், "எதிரிகள் என்னைப் பார்த்துக் கைகொட்டிச்
சிரிக்க விடாதீர்கள்.
எனக்கு அடிசறுக்குவதைப் பார்த்து அவர்கள் ஆணவமடைய
விடாதீர்கள்" என்று சொல்லியிருந்தேன்.
17 நான் விழுந்துவிடும் நிலையில் இருந்தேன்.
எப்போதும் வலியில் துடித்துக்கொண்டிருந்தேன்.[f]
18 என் பாவம் என்னை வாட்டி வதைத்தது.[g]
என்னுடைய குற்றத்தை ஒத்துக்கொண்டேன்.[h]
19 ஆனால், என் எதிரிகள் துடிப்பும் வலிமையும் உள்ளவர்களாக
இருக்கிறார்கள்.*
காரணமே இல்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் ஏராளமாகப்
பெருகிவிட்டார்கள்.
20 நான் நல்லது செய்தேன், ஆனால் அவர்கள் எனக்குக் கெட்டதுதான்
செய்தார்கள்.
நான் நல்ல வழியில் போனதால் என்னை எதிர்த்தார்கள்.
21 யெகோவாவே, என்னைக் கைவிட்டு விடாதீர்கள்.
கடவுளே, என்னைவிட்டுத் தூரமாக நிற்காதீர்கள்.[i]
22 யெகோவாவே, நீங்கள்தான் என் மீட்பர்.
சீக்கிரமாக வந்து எனக்கு உதவி செய்யுங்கள்.[j]

இசைக் குழுவின் தலைவனுக்கு; எதித்தூன்;*[k]
தாவீதின் சங்கீதம்.

39 "என் வாயால் பாவம் செய்யாதபடி,[l]
நான் கவனமாக நடந்துகொள்வேன்.
பொல்லாதவன் என் முன்னால் இருக்கும்வரை,
என் வாய்க்குப் பூட்டுப்போட்டுக் காத்துக்கொள்வேன்"[m] என்று
சொன்னேன்.

38:19 * அல்லது, "காரணமே இல்லாமல் நிறைய பேர் எனக்கு எதிரியாகிவிட்டார்கள்."
39:மே.கு. * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 38
a 2சா 16:7; சங் 62:4
b 2சா 16:11
c சங் 39:2, 9
d 2சா 16:12; சங் 123:2
e சங் 138:3
f சங் 77:2
g சங் 51:3
h சங் 32:5
i சங் 22:11; சங் 35:22
j சங் 27:1; சங் 62:2; ஏசா 12:2

அதி. 39
k 1நா 16:41; 1நா 25:1
l நீதி 18:21
m சங் 141:3

2 நான் வாய் திறக்காமல் அமைதியாக இருந்தேன்.[a]
நல்ல விஷயத்தைக்கூட பேசாமல் மவுனமாக இருந்தேன்.
ஆனால், வேதனையில் பயங்கரமாகத் துடித்தேன்.
3 என் இதயம் எனக்குள் புகைந்தது.
நான் யோசிக்க யோசிக்க,* அது நெருப்பாய்ப் பற்றியெரிந்தது.
அப்போது, நான் இப்படிச் சொன்னேன்:
4 "யெகோவாவே, என் முடிவைப் பற்றியும்,
என் வாழ்நாட்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள எனக்கு உதவுங்கள்.[b]
அப்போதுதான், என் வாழ்க்கை எவ்வளவு குறுகியது* என்று
புரிந்துகொள்வேன்.
5 உண்மையில், நீங்கள் என்னுடைய நாட்களைக் குறைத்திருக்கிறீர்கள்.[c]
உங்கள் பார்வையில் என் ஆயுள்காலம் ஒன்றுமே இல்லை.[d]
மனிதன் பாதுகாப்பாக வாழ்வதுபோல் தெரிந்தாலும், அவன் வெறும்
மூச்சுக்காற்றுதான்.[e] (*சேலா*)
6 மனிதனின் வாழ்க்கை நிழல் போலத்தான் இருக்கிறது.
அவன் ஓடி ஓடி உழைப்பதெல்லாம் வீணாகத்தான் போகிறது.
தன் சொத்துகளை யார் அனுபவிப்பார்கள் என்றுகூட அவனுக்குத்
தெரியாது.
ஆனாலும், அவற்றைக் குவித்து வைக்கிறான்.[f]
7 அப்படியிருக்கும்போது, யெகோவாவே, நான் எதற்காக
நம்பிக்கையோடு காத்திருப்பேன்?
நீங்கள்தான் என்னுடைய ஒரே நம்பிக்கை.
8 நான் செய்த எல்லா குற்றங்களிலிருந்தும் என்னை விடுவியுங்கள்.[g]
முட்டாள்கள் என்னை மரியாதையில்லாமல் நடத்துவதற்கு விடாதீர்கள்.
9 நான் அமைதியாக இருந்தேன்.
என்னால் வாய் திறக்கவே முடியவில்லை.[h]
ஏனென்றால், இது உங்களுடைய செயல்.[i]
10 நீங்கள் கொடுத்திருக்கும் தண்டனையை நீக்கிவிடுங்கள்.
உங்கள் கையில் அடி வாங்கி வாங்கி நான் தளர்ந்துபோயிருக்கிறேன்.
11 மனிதன் செய்கிற தவறுக்காக அவனைத் தண்டித்துத் திருத்துகிறீர்கள்.[j]
அவன் சேர்த்து வைக்கிற பொக்கிஷங்களை அந்துப்பூச்சிபோல்
அரித்துவிடுகிறீர்கள்.
மனிதன் வெறும் மூச்சுக்காற்றுதான்.[k] (*சேலா*)
12 யெகோவாவே, என் ஜெபத்தைக் கேளுங்கள்.
உதவிக்காக நான் கெஞ்சுவதைக் கேளுங்கள்.[l]
என் கண்ணீரைப் பார்க்காமல் இருந்துவிடாதீர்கள்.
என் முன்னோர்களைப் போல நானும் உங்கள்முன் ஒரு
அன்னியனாகவும்,[m]
நாடோடியாகவும்* இருக்கிறேன்.[n]

அதி. 39
a சங் 38:13; மத் 27:12; 1பே 2:23
b சங் 90:12
c சங் 90:9; யாக் 4:14
d சங் 90:4
e சங் 62:9; சங் 144:4
f சங் 49:10; பிர 2:18, 19; பிர 4:8; லூ 12:19, 20
g சங் 25:11; மீ 7:19
h யோபு 40:4; சங் 38:13
i 2சா 16:10
j சங் 90:8
k சங் 39:5; சங் 102:11
l சங் 28:1
m லேவி 25:23; 1நா 29:15
n எபி 11:13

39:3 *வே.வா., "பெருமூச்சு விட்டபோது." **39:4** *வே.வா., "நிலையற்றது." **39:12** *வே.வா., "குடியேறியாகவும்."

13 உங்களுடைய கோபப் பார்வையை என்னைவிட்டுத்
திருப்பிவிடுங்கள்.
அப்போதுதான், நான் இந்த உலகத்திலிருந்து
ஒழிந்துபோவதற்கு முன்னால்
கொஞ்சமாவது சந்தோஷப்படுவேன்."

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

40 நான் யெகோவாவுக்காக நம்பிக்கையோடு* காத்திருந்தேன்.
உதவி கேட்டு நான் கதறியதை அவர் காதுகொடுத்து# கேட்டார்.[a]
2 இரைச்சல் கேட்கிற ஆழமான குழியிலிருந்தும்,
சேற்றிலிருந்தும் என்னைத் தூக்கிவிட்டார்.
மாபெரும் கற்பாறைமேல் என்னை நிறுத்தினார்.
என்னைக் காலூன்றி நிற்க வைத்தார்.
3 என்னைப் புதிய பாடல் பாட வைத்தார்.[b]
நம் கடவுளைப் புகழ்ந்து பாட வைத்தார்.
நிறைய பேர் பிரமிப்போடு பார்த்து,
யெகோவாமேல் நம்பிக்கை வைப்பார்கள்.
4 அடங்காதவர்களோடும் போலித்தனமான ஆட்களோடும்* சேராமல்
யெகோவாமேல் நம்பிக்கை வைக்கிறவன் சந்தோஷமானவன்.
5 என் கடவுளாகிய யெகோவாவே,
எங்களுக்காக நீங்கள் செய்திருக்கிற அதிசயங்கள் எத்தனை எத்தனை!
எங்களுக்காக நீங்கள் யோசித்திருக்கிற விஷயங்கள் எத்தனை
எத்தனை![c]
அவை கணக்கில் அடங்காதவை![d]
அவற்றையெல்லாம் நான் விவரித்துச் சொல்ல ஆரம்பித்தால்
முடிக்கவே முடியாது.
கடவுளே, உங்களைப் போன்றவர் வேறு யாருமே இல்லை![e]
6 பலியையும் காணிக்கையையும் நீங்கள் விரும்பவில்லை.[f]
தகன பலிகளையும் பாவப் பரிகார பலிகளையும் நீங்கள்
கேட்கவில்லை.[g]
ஆனால், உங்கள் வார்த்தையைக் கேட்க என்னுடைய காதுகளைத்
திறந்தீர்கள்.[h]
7 அப்போது நான், "இதோ, வந்துவிட்டேன்.
சுருளில் என்னைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது.[i]
8 என் கடவுளே, உங்களுடைய விருப்பத்தை* நிறைவேற்றுவதுதான்
எனக்குச் சந்தோஷம்.#[j]
உங்களுடைய சட்டம் என் இதயத்தின் ஆழத்தில் இருக்கிறது.[k]
9 உங்களுடைய நீதியைப் பற்றிய நல்ல செய்தியை
மாபெரும் சபையில் சொல்கிறேன்.[l]

40:1 *வே.வா., "பொறுமையோடு." #வே.வா., "குனிந்து." **40:4** *வே.வா., "பொய் பேசுகிறவர்களோடும்; பொய் வழியில் போகிறவர்களோடும்." **40:8** *வே.வா., "சித்தத்தை." #வே.வா., "என் விருப்பம்."

அதி. 40
a சங் 34:15
b சங் 33:3; சங் 98:1
c வெளி 15:3
d சங் 139:17, 18
e யாத் 15:11
f 1சா 15:22; சங் 51:16, 17; ஓசி 6:6
g எபி 10:5-9
h ஏசா 50:5
i லூ 24:44
j யோவா 4:34
k சங் 37:31; ரோ 7:22
l சங் 22:22

பாருங்கள், என் உதடுகளை நான் மூடுவதே இல்லை.[a]
யெகோவாவே, இது உங்களுக்கே நன்றாகத் தெரியும்.
10 நான் உங்களுடைய நீதியை என் இதயத்தில் மறைத்து
வைப்பதில்லை.
உங்களுடைய நம்பகத்தன்மையையும் மீட்பையும் பற்றிப்
பேசுகிறேன்.
உங்களுடைய மாறாத அன்பையும் உண்மையையும் பற்றி
மாபெரும் சபையில் மறைக்காமல் சொல்கிறேன்”[b] என்றேன்.
11 யெகோவாவே, எனக்கு இரக்கம் காட்டாமல் இருந்துவிடாதீர்கள்.
உங்களுடைய மாறாத அன்பும் உண்மையும் எப்போதுமே
என்னைப் பாதுகாக்கட்டும்.[c]
12 எண்ண முடியாத அளவுக்கு ஏகப்பட்ட கஷ்டங்கள் என்னைச் சூழ்ந்து
நிற்கின்றன.[d]
வழியே தெரியாத அளவுக்கு என் குற்றங்கள் மலைபோல் குவிந்து
நிற்கின்றன.[e]
அவை என் தலைமுடியைவிட ஏராளமாக இருக்கின்றன.
அதனால், என் இதயம் நொந்துபோயிருக்கிறது.
13 யெகோவாவே, தயவுசெய்து என்னைக் காப்பாற்றுங்கள்.[f]
யெகோவாவே, சீக்கிரமாக என் உதவிக்கு வாருங்கள்.[g]
14 என்னைத் தீர்த்துக்கட்ட வழிதேடுகிற எல்லாரும்
அவமானத்தில் தலைகுனியட்டும்.
நான் கஷ்டப்படுவதைப் பார்த்து சந்தோஷப்படுகிறவர்கள்
வெட்கப்பட்டுப் பின்வாங்கட்டும்.
15 என்னைப் பார்த்துக் கேலி செய்கிறவர்கள்
தங்களுக்கு வரும் அவமானத்தால் அதிர்ச்சி அடையட்டும்.
16 ஆனால், உங்களைத் தேடுகிறவர்கள்,[h]
உங்களை நினைத்து சந்தோஷத்தில் பூரித்துப்போகட்டும்.[i]
நீங்கள் தருகிற மீட்பை விரும்புகிறவர்கள்,
“யெகோவாவுக்கு மகிமை சேரட்டும்!”[j] என்று எப்போதும்
சொல்லட்டும்.
17 நானோ ஆதரவற்ற ஒரு ஏழை.
யெகோவாவே, என்னைக் கவனியுங்கள்.
நீங்கள்தான் எனக்குத் துணை, நீங்கள்தான் என்னைக்
காப்பாற்றுகிறவர்.[k]
என் கடவுளே, தாமதிக்காதீர்கள்.[l]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

41 ஏழைக்கு* கரிசனையோடு உதவுகிறவன் சந்தோஷமானவன்.[m]
ஆபத்து நாளில் யெகோவா அவனைக் காப்பாற்றுவார்.
2 யெகோவா அவனைப் பாதுகாத்து, உயிரோடு வைப்பார்.
இந்தப் பூமியில் அவன் சந்தோஷமானவன் என்று புகழப்படுவான்.[n]

41:1 * வே.வா., “எளியவனுக்கு; உதவி தேவைப்படுகிறவனுக்கு.”

அதி. 40
a எபி 13:15
b எபி 2:12
c சங் 61:6, 7
d சங் 71:20
e சங் 38:4
f சங் 25:17
g சங் 38:22
சங் 70:1-5
h உபா 4:29
i சங் 13:5
j சங் 35:27
k சங் 54:4
ஏசா 50:7
எபி 13:6
l சங் 143:7

அதி. 41
m உபா 15:7, 8
சங் 112:9
நீதி 14:21
நீதி 22:9
n மத் 5:7

கடவுள் ஒருபோதும் எதிரிகளின் கையில் அவனை ஒப்படைக்க*
மாட்டார்.[a]
3 அவன் சுகமில்லாமல் படுத்துக் கிடக்கும்போது யெகோவா அவனைத்
தாங்குவார்.[b]
அவன் வியாதியில் கிடக்கும்போது அவனுடைய படுக்கையை
முழுவதுமாக மாற்றிப்போடுவார்.
4 "யெகோவாவே, எனக்குக் கருணை காட்டுங்கள்.[c]
என்னைக் குணப்படுத்துங்கள்,[d]
நான் உங்களுக்கு விரோதமாகப் பாவம் செய்துவிட்டேன்"[e] என்று
சொன்னேன்.
5 என்னுடைய எதிரிகள் எனக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.
"அவன் எப்போது சாவான்? எப்போது அவனுடைய பெயர்
ஒழிந்துபோகும்?" என்று பேசிக்கொள்கிறார்கள்.
6 அவர்களில் யாராவது என்னைப் பார்க்க வரும்போது
போலித்தனமாகப் பேசுகிறார்கள்.
என்னைப் பற்றித் தவறான செய்திகளைச் சேகரித்துக்கொண்டு,
வெளியே போய், அதைப் பரப்புகிறார்கள்.
7 என்னை வெறுக்கிற எல்லாரும் ஒருவருக்கொருவர் கிசுகிசுக்கிறார்கள்.
எனக்குக் கெடுதல் செய்யத் திட்டம் போடுகிறார்கள்.
8 "அவனுக்குக் கொடிய வியாதி வந்துவிட்டது.*
இப்போது படுக்கையில் கிடக்கிறான், இனி எழுந்திருக்கவே மாட்டான்"
என்று பேசிக்கொள்கிறார்கள்.[f]
9 நான் நம்பிக்கை வைத்திருந்த நெருங்கிய நண்பனே எனக்குத்
துரோகம் செய்துவிட்டான்.[g]
என்னோடு சேர்ந்து சாப்பிட்டவனே எனக்கு எதிரியாகிவிட்டான்.*[h]
10 ஆனால் யெகோவாவே, நீங்கள் எனக்குக் கருணை காட்டி, என்னை
எழுந்திருக்க வையுங்கள்.
அப்போதுதான், என்னால் அவர்களுக்குப் பதிலடி கொடுக்க முடியும்.
11 எதிரிகள் என்னை ஜெயிக்க முடியாமல் போவதைப் பார்க்கும்போது,
நீங்கள் என்மேல் பிரியமாக இருக்கிறீர்கள் என்பதைத்
தெரிந்துகொள்வேன்.[i]
12 நான் உத்தமமாக நடந்துகொள்வதால் நீங்கள் என்னைத்
தாங்குகிறீர்கள்.[j]
நீங்கள் என்னை என்றென்றுமே உங்கள் கண் முன்னால்
வைத்திருப்பீர்கள்.[k]
13 இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவுக்குப் புகழ் சேரட்டும்!
என்றென்றும் அவருக்குப் புகழ் சேரட்டும்![l]
ஆமென், ஆமென்.*

41:2 *வே.வா., "எதிரிகள் தங்கள் இஷ்டப்படி அவனை நடத்துவதற்கு விட்டுவிட." **41:8** *வே.வா., "அவன் பயங்கர ஆபத்தில் இருக்கிறான்." **41:9** *நே.மொ., "எனக்கு எதிராகத் தன் குதிங்காலைத் தூக்கினான்." **41:13** *அதாவது, "அப்படியே ஆகட்டும், அப்படியே ஆகட்டும்."

அதி. 41
a 2பே 2:9
b 2ரா 20:5; சங் 103:3
c சங் 51:1
d சங் 6:2; சங் 147:3
e சங் 32:5; சங் 38:3; நீதி 28:13
f சங் 3:2; சங் 71:10, 11
g 2சா 15:12; யோபு 19:19; சங் 55:12, 13
h மாற் 14:18; யோவா 13:18; யோவா 13:26
i சங் 31:8; எரே 20:13
j சங் 25:21; நீதி 2:7
k சங் 34:15
l 1நா 16:36; 1நா 29:10

பகுதி இரண்டு
(சங்கீதம் 42–72)

இசைக் குழுவின் தலைவனுக்கு;
கோராகுவின்[a] மகன்களுடைய மஸ்கீல்.*

42 ஒரு மான் நீரோடைகளின் தண்ணீருக்காக ஏங்குவது போல,
கடவுளே, நான் உங்களுக்காக ஏங்குகிறேன்.
2 ஒருவன் தண்ணீருக்காகத் தவிப்பது போல நான் உயிருள்ள
கடவுளுக்காகத் தவிக்கிறேன்.*[b]
நான் எப்போது கடவுளுடைய சன்னிதியில் வந்து நிற்பேன்?[c]
3 ராத்திரி பகலாக என்னுடைய கண்ணீர்தான் எனக்கு உணவாக
இருக்கிறது.
"உன்னுடைய கடவுள் எங்கே போனார்?" என்று கேட்டு ஜனங்கள்
என்னை நாள் முழுவதும் நோகடிக்கிறார்கள்.[d]
4 ஒருகாலத்தில், நான் பண்டிகை[e] கொண்டாடுகிற ஜனக்கூட்டத்தோடு
சேர்ந்து,
அவர்கள் முன்னால் சந்தோஷமாகப் பாடிக்கொண்டும், நன்றி
சொல்லிக்கொண்டும்,
கடவுளுடைய ஆலயத்துக்குப் பயபக்தியோடு* நடந்துபோனேனே!
அதையெல்லாம் நினைக்கும்போது என் உள்ளம் உருகுகிறதே!
5 நான் ஏன் இப்படித் தவிக்கிறேன்?[f]
எனக்குள் ஏன் இந்தக் கலக்கம்?
என் நெஞ்சமே, கடவுளுக்காகக் காத்திரு.[g]
ஏனென்றால், என்னுடைய மகத்தான மீட்பரை நான் தொடர்ந்து
புகழ்வேன்.[h]
6 கடவுளே, நான் தவிக்கிறேன்.[i]
அதனால், உங்களை நினைத்துப் பார்க்கிறேன்.[j]
யோர்தான் பிரதேசத்திலும், எர்மோன் சிகரங்களிலும்,
மீசார் மலையிலும்* உங்களை நினைத்துப் பார்க்கிறேன்.
7 உங்கள் அருவிகள் திமுதிமுவென்று கொட்டும்போது,
வெள்ளப்பெருக்கு வெள்ளப்பெருக்கைக் கூப்பிடுகிறது.
பொங்கி வரும் உங்கள் அலைகள் என்னை மூழ்கடிக்கின்றன.[k]
8 பகலில் யெகோவா தன்னுடைய மாறாத அன்பை என்மேல் பொழிவார்.
ராத்திரியில் நான் அவரைப் பற்றிப் பாடுவேன்.
எனக்கு உயிர் தந்த கடவுளாகிய அவரிடம் வேண்டுவேன்.[l]
9 எனக்கு மாபெரும் கற்பாறையாக இருக்கிற கடவுளிடம்,
"ஏன் என்னை மறந்துவிட்டீர்கள்?[m]
எதிரியின் கொடுமை தாங்காமல் நான் ஏன் சோகத்தோடு நடமாட
வேண்டும்?"[n] என்று கேட்பேன்.
10 கொலைவெறியோடு* எதிரிகள் என்னை நோகடிக்கிறார்கள்.

அதி. 42
a 2நா 20:19
b சங் 63:1
c சங் 27:4; சங் 84:2
d சங் 3:2; சங் 42:10; சங் 79:10
e உபா 16:14, 16; 2நா 30:23, 24
f சங் 55:4; மாற் 14:34
g சங் 37:7; புல 3:24; மீ 7:7
h சங் 43:5
i சங் 22:1; யோவா 12:27
j யோனா 2:7
k சங் 88:7
l சங் 27:1
m சங் 13:1
n சங் 38:6; சங் 43:2

42:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **42:2** *வே.வா., "உயிருள்ள கடவுள் மேல் தாகமாக இருக்கிறேன்." **42:4** *வே.வா., "மெதுவாக." **42:6** *வே.வா., "சிறிய மலையிலும்." **42:10** *அல்லது, "என் எலும்புகளை நொறுக்கிவிடுவதுபோல்."

"உன்னுடைய கடவுள் எங்கே போனார்?" என்று கேட்டு நாள் முழுவதும் என்னை நோகடிக்கிறார்கள்.[a]
11 நான் ஏன் இப்படித் தவிக்கிறேன்?
எனக்குள் ஏன் இந்தக் கலக்கம்?
என் நெஞ்சமே, கடவுளுக்காகக் காத்திரு.[b]
ஏனென்றால், என்னுடைய மகத்தான மீட்பரை நான் தொடர்ந்து புகழ்வேன்.[c]

43 கடவுளே, எனக்குத் தீர்ப்பு கொடுங்கள்.[d]
நம்பிக்கைத் துரோகம் செய்கிற தேசத்தோடு எனக்காக வழக்காடுங்கள்.[e]
மோசடியும் அநியாயமும் செய்கிறவனிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
2 ஏனென்றால், நீங்கள்தான் என் கடவுள், என் கோட்டை.[f]
நீங்கள் ஏன் என்னை ஒதுக்கிவிட்டீர்கள்?
எதிரியின் கொடுமை தாங்காமல் நான் ஏன் சோகத்தோடு நடமாட வேண்டும்?[g]
3 உங்களுடைய ஒளியையும் சத்தியத்தையும் அனுப்புங்கள்.[h]
அவை எனக்கு வழி காட்டட்டும்.[i]
உங்களுடைய பரிசுத்த மலைக்கும் மகத்தான கூடாரத்துக்கும்[j]
என்னை வழிநடத்தட்டும்.
4 அப்போது நான் கடவுளுடைய பலிபீடத்துக்கு வருவேன்.[k]
எனக்கு அளவில்லாத ஆனந்தத்தைத் தருகிற என் கடவுளிடம் வருவேன்.
கடவுளே, என் கடவுளே, யாழ் இசைத்து நான் உங்களைப் புகழ்வேன்.[l]
5 நான் ஏன் இப்படித் தவிக்கிறேன்?
எனக்குள் ஏன் இந்தக் கலக்கம்?
என் நெஞ்சமே, கடவுளுக்காகக் காத்திரு.[m]
ஏனென்றால், என்னுடைய மகத்தான மீட்பரை நான் தொடர்ந்து புகழ்வேன்.[n]

இசைக் குழுவின் தலைவனுக்கு; கோராகுவின்[o] மகன்களுடைய பாடல். மஸ்கீல்.*

44 கடவுளே, பல காலத்துக்கு முன்னால் நீங்கள் செய்த அதிசயங்களைப் பற்றி எங்கள் காதுகளாலேயே கேட்டோம்.
எங்கள் முன்னோர்களின் காலத்தில் நீங்கள் செய்த காரியங்களைப் பற்றி அவர்களுடைய வாயாலேயே கேட்டோம்.[p]
2 உங்களுடைய கையால் நீங்கள் மற்ற தேசத்தாரைத் துரத்திவிட்டு,[q]
அங்கே எங்களுடைய முன்னோர்களைக் குடிவைத்தீர்கள்.[r]
மற்ற ஜனங்களை வீழ்த்தி, அங்கிருந்து விரட்டியடித்தீர்கள்.[s]
3 எங்கள் முன்னோர்கள் அந்தத் தேசத்தை வாளால் கைப்பற்றவில்லை.[t]
அவர்கள் தங்களுடைய கைபலத்தால் ஜெயிக்கவில்லை.[u]

44:மே.கு. * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 42
a சங் 3:2; சங் 42:3; சங் 79:10
b சங் 37:7
c சங் 42:5; சங் 43:5

அதி. 43
d சங் 26:1; சங் 35:24
e சங் 35:1; நீதி 22:22, 23
f சங் 28:7; சங் 140:7
g சங் 42:9
h சங் 40:11; நீதி 6:23
i சங் 5:8; சங் 27:11; சங் 143:10
j 1நா 16:1; சங் 78:68, 69
k சங் 84:3
l 2சா 6:5
m சங் 37:7
n சங் 42:5, 11

அதி. 44
o 2நா 20:19
p யாத் 13:14; எண் 21:14; நியா 6:13
q உபா 7:1
r யாத் 15:17; சங் 78:55; சங் 80:8, 9
s யோசு 10:5, 11; சங் 135:10, 11
t உபா 4:38; யோசு 24:12
u 1சா 12:22

நீங்கள் அவர்கள்மேல் பிரியமாக இருந்ததால்,[a]
உங்கள் வலது கையாலும், உங்கள் பலத்தாலும்,[b]
உங்கள் முகத்தின் பிரகாசத்தாலும்தான் ஜெயித்தார்கள்.
4 கடவுளே, நீங்கள்தான் என்னுடைய ராஜா.[c]
யாக்கோபுக்கு முழு வெற்றி* கொடுங்கள்.
5 எங்கள் எதிரிகளை உங்களுடைய பலத்தால் துரத்தியடிப்போம்.[d]
எங்களுக்கு எதிராகக் கிளம்புகிறவர்களை உங்களுடைய பெயரால்
மிதித்துப்போடுவோம்.[e]
6 நான் என்னுடைய வில்லை நம்புவதில்லை.
என்னுடைய வாளினால் என்னைக் காப்பாற்ற முடியாது.[f]
7 எதிரிகளிடமிருந்து எங்களைக் காப்பாற்றியவர் நீங்கள்தான்.[g]
எங்களை வெறுக்கிற ஆட்களைத் தலைகுனிய வைத்தவர் நீங்கள்தான்.
8 கடவுளே, நாள் முழுவதும் நாங்கள் உங்களையே புகழ்வோம்.
உங்களுடைய பெயருக்கு என்றென்றும் நன்றி சொல்வோம். (*சேலா*)
9 ஆனால், இப்போது எங்களை ஒதுக்கித்தள்ளி, தலைகுனிய
வைத்துவிட்டீர்கள்.
எங்கள் படைகளுக்குத் துணையாக வராமல் இருக்கிறீர்கள்.
10 நாங்கள் எதிரியிடம் தோற்றுப்போய் ஓடும்படி செய்கிறீர்கள்.[h]
விரோதிகள் எங்களிடம் இஷ்டத்துக்குக் கொள்ளையடிக்கிறார்கள்.
11 நீங்கள் எங்களைச் செம்மறியாடுகளைப் போல எதிரிகளுக்கு
இரையாக்குகிறீர்கள்.
எங்களை மற்ற தேசங்களுக்குச் சிதறிப்போக வைத்திருக்கிறீர்கள்.[i]
12 உங்களுடைய மக்களை அடிமாட்டு விலைக்கு* விற்கிறீர்கள்.[j]
லாபம் பார்க்காமல் அவர்களை விற்றுவிடுகிறீர்கள்.
13 எங்களைச் சுற்றியிருக்கிற தேசத்தாருக்குமுன்
எங்களைக் கேவலப்படுத்தி, கேலிப்பொருளாக ஆக்குகிறீர்கள்.
14 மற்ற தேசத்தாருடைய ஏளனப் பேச்சுக்கு எங்களை ஆளாக்குகிறீர்கள்.[k]
எங்களைப் பார்த்து மற்றவர்கள் கிண்டலாகத் தலையாட்ட
வைக்கிறீர்கள்.
15 நாள் முழுவதும் நான் அவமானப்படுகிறேன்.
வெட்கத்தில் கூனிக்குறுகுகிறேன்.
16 ஏனென்றால், பழிவாங்குகிற எதிரியின் கேலியும் கிண்டலும்,
ஏச்சும் பேச்சும் காதில் விழுந்துகொண்டே இருக்கிறது.
17 இவ்வளவு நடந்தும் நாங்கள் உங்களை மறக்கவில்லை.
உங்களுடைய ஒப்பந்தத்தை[l] மீறவில்லை.
18 எங்கள் இதயம் உங்களைவிட்டு விலகவில்லை.
எங்கள் காலடிகள் உங்களுடைய பாதையைவிட்டு விலகவில்லை.
19 ஆனால், நரிகள் வாழும் இடத்தில் நீங்கள் எங்களை
நொறுக்கித்தள்ளினீர்கள்.
கும்மிருட்டால் எங்களை மூடினீர்கள்.

அதி. 44
a உபா 7:7, 8
b ஏசா 63:11-13
c சங் 74:12; ஏசா 33:22
d சங் 18:39; பிலி 4:13
e சங் 60:12
f 1சா 17:45; சங் 20:7; சங் 33:16
g யோசு 24:8
h உபா 28:15, 25
i உபா 28:64
j உபா 32:30
k உபா 28:37; 2நா 7:20
l யாத் 34:10

44:4 * வே.வா., "மாபெரும் மீட்பு." **44:12** * வே.வா., "மிகக் குறைந்த விலைக்கு."

20 எங்கள் கடவுளுடைய பெயரை நாங்கள் மறந்துவிட்டால்,
அல்லது எங்கள் கைகளை விரித்து வேறு தெய்வத்திடம் வேண்டினால்,
21 கடவுளுக்கு அது தெரியாமல் போய்விடுமா?
இதயத்தில் புதைந்திருக்கும் ரகசியங்கள்கூட அவருக்குத் தெரியுமே![a]
22 உங்களுக்காக ஒவ்வொரு நாளும் நாங்கள் கொல்லப்படுகிறோம்.
வெட்டப்படுகிற ஆடுகள் போல ஆகிவிட்டோம்.[b]
23 யெகோவாவே, எழுந்திருங்கள். ஏன் தூங்கிக்கொண்டு இருக்கிறீர்கள்?[c]
எழுந்திருங்கள்! எங்களை ஒரேயடியாக ஒதுக்கிவிடாதீர்கள்.[d]
24 ஏன் உங்கள் முகத்தை மறைத்துக்கொள்கிறீர்கள்?
நாங்கள் படுகிற கஷ்டங்களையும் பாடுகளையும் ஏன்
மறந்துவிடுகிறீர்கள்?
25 நாங்கள் மண்ணில் தள்ளப்பட்டிருக்கிறோம்.
தரையோடு தரையாகக் கிடக்கிறோம்.[e]
26 எங்களுக்கு உதவி செய்ய எழுந்து வாருங்கள்![f]
உங்களுடைய மாறாத அன்பினால் எங்களைக் காப்பாற்றுங்கள்.[g]

இசைக் குழுவின் தலைவனுக்கு; “லில்லி மலர்கள்” இசையில்;
கோராகுவின் மகன்களுடைய[h] பாடல். மஸ்கீல்.* நேசப் பாடல்.

45 ஒரு அருமையான விஷயத்தால் என் இதயம் பொங்குகிறது.
நான் பாடும் இந்தப் பாடல் ஒரு ராஜாவைப் பற்றியது.[i]
என் நாவு திறமையாக நகலெடுப்பவரின்*[j] எழுத்தாணி#[k] போல
ஆகட்டும்.
2 நீங்கள்தான் எல்லா ஆண்களையும்விட மிக அழகானவர்.
கனிவான பேச்சு உங்கள் உதடுகளிலிருந்து பொழிகிறது.[l]
அதனால்தான், கடவுள் உங்களை என்றென்றும்
ஆசீர்வதித்திருக்கிறார்.[m]
3 வல்லமையுள்ளவரே,[n] கண்ணியத்தோடும் கம்பீரத்தோடும்[o]
உங்களுடைய வாளை[p] இடுப்பில் கட்டிக்கொள்ளுங்கள்.
4 கம்பீரமாகப் போய் எதிரிகளை வெல்லுங்கள்.[q]
சத்தியத்துக்காகவும் மனத்தாழ்மைக்காகவும் நீதிக்காகவும் போர் செய்ய
குதிரையில் ஏறிப் போங்கள்.[r]
உங்கள் வலது கை பிரமிப்பான காரியங்களைச் செய்யும்.
5 உங்களுடைய அம்புகள் கூர்மையாக இருக்கின்றன.
ஜனங்களை உங்கள்முன் விழ வைக்கின்றன.[s]
ராஜாவின் எதிரிகளுடைய இதயத்தில் பாய்கின்றன.[t]
6 கடவுள்தான் என்றென்றும் உங்களுடைய சிம்மாசனம்.[u]
உங்கள் ராஜ்யத்தின் செங்கோல் நேர்மையான* செங்கோல்.[v]
7 நீங்கள் நீதியை நேசித்தீர்கள்,[w] அக்கிரமத்தை வெறுத்தீர்கள்.[x]
அதனால்தான், உங்கள் கடவுள் மற்ற ராஜாக்களைவிட அதிகமாக
உங்களை ஆனந்தத் தைலத்தால்[y] அபிஷேகம் செய்தார்.[z]

45:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **45:1** *வே.வா., “திறமையான எழுத்தரின்.” #வே.வா., “பேனா.” **45:6** *வே.வா., “நியாயமான.”

அதி. 44
a சங் 139:1, பிர 12:14, எரே 17:10
b ரோ 8:36
c சங் 7:6, சங் 78:65, 66
d யோபு 13:24, சங் 13:1, சங் 88:14
e சங் 119:25
f சங் 33:20
g சங் 130:7

அதி. 45
h 2நா 20:19
i சங் 2:6
j 2சா 23:2, எஸ்றா 7:6
k ஏசா 8:1
l யோவா 7:46
m சங் 72:17
n ஏசா 9:6
o எபி 1:3
p வெளி 1:16, வெளி 19:15
q வெளி 6:2
r வெளி 19:11
s சங் 2:9, 2தெ 1:7, 8
t வெளி 17:14, வெளி 19:19
u சங் 89:29, 36
v ஏசா 11:4, எரே 33:15, எபி 1:8, 9
w எபி 7:26
x மத் 7:23
y சங் 21:6
z ஏசா 61:1, அப் 10:38

அதி. 45
a ஏசா 13:12
b ஏசா 32:1
c சங் 72:17

அதி. 46
d 2நா 20:19
e நீதி 14:26, ஏசா 25:4
f உபா 4:7, சங் 145:18, 19, நாகூ 1:7
g ஏசா 54:10
h சங் 93:4, எரே 5:22

8 வெள்ளைப்போளம்,* அகில், கருவாய்ப்பட்டை ஆகியவற்றின்
வாசனை உங்கள் உடைகளில் வீசுகிறது.
யானைத்தந்தத்தால் அலங்கரிக்கப்பட்ட பிரமாண்டமான
அரண்மனையில் வாசிக்கப்படுகிற
நரம்பிசைக் கருவிகளின் இசை உங்களைச் சந்தோஷத்தால் நிரப்புகிறது.
9 உங்கள் அரசவையில் உள்ள மதிப்புக்குரிய பெண்களில் ராஜாக்களின்
மகள்களும் இருக்கிறார்கள்.
ஓப்பீரின் தங்க[a] நகைகளை அணிந்த பட்டத்து ராணி உங்கள் வலது
பக்கத்தில் நிற்கிறாள்.
10 மகளே, கேள். காதுகொடுத்துக் கவனமாகக் கேள்.
உன் மக்களையும் உன் அப்பாவின் வீட்டையும் மறந்துவிடு.
11 உன்னுடைய அழகில் ராஜா மயங்குவார்.
அவர்தான் உன் எஜமான்.
அவர் முன்னால் தலைவணங்கு.
12 தீரு மகள் அன்பளிப்போடு வருவாள்.
செல்வச்சீமான்கள் உன் தயவைத் தேடி வருவார்கள்.
13 அரண்மனையிலே ராஜாவின் மகள் பேரழகோடு ஜொலிக்கிறாள்.
தங்க வேலைப்பாடுகள் செய்யப்பட்ட உடையில் மின்னுகிறாள்.
14 கலைநயத்தோடு நெய்யப்பட்ட* உடையில் அவள் ராஜாவுக்குமுன்
அழைத்து வரப்படுவாள்.
அவளுக்குப் பின்னால் வரும் தோழிகளான கன்னிகளும் அவர்முன்
அழைத்து வரப்படுவார்கள்.
15 அவர்கள் சந்தோஷ ஆரவாரத்தோடு கூட்டிக்கொண்டு
வரப்படுவார்கள்.
அவர்கள் ராஜாவின் அரண்மனைக்குள் நுழைவார்கள்.
16 உங்கள் முன்னோர்களின் இடத்தில் உங்கள் மகன்கள் இருப்பார்கள்.
அவர்களை அதிபதிகளாக நீங்கள் பூமியெங்கும் நியமிப்பீர்கள்.[b]
17 தலைமுறை தலைமுறைக்கும் நான் உங்கள் பெயரை அறிவிப்பேன்.[c]
அதனால், மக்கள் எல்லாரும் உங்களை என்றென்றும் புகழ்வார்கள்.

இசைக் குழுவின் தலைவனுக்கு;
கோராகுவின் மகன்களுடைய[d] பாடல். அல்மோத்* பாணி.

46 கடவுள்தான் நம் அடைக்கலம், நம் பலம்.[e]
இக்கட்டான காலங்களில் நமக்கு உடனடியாகக் கைகொடுப்பவர்
அவர்தான்.[f]
2 அதனால், நாம் எதற்கும் பயப்பட மாட்டோம்.
பூமி குலுங்கினாலும்,
மலைகள் பெயர்ந்து ஆழ்கடலில் விழுந்தாலும்,[g]
3 அதன் தண்ணீர் சீறிப் பொங்கினாலும்,[h]
அதன் கொந்தளிப்பால் மலைகள் கிடுகிடுவென ஆடினாலும்,
நாம் பயப்பட மாட்டோம். (*சேலா*)

45:8; 46:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **45:14** *அல்லது, “தையல் வேலைப்பாடு செய்யப்பட்ட.”

4 ஓர் ஆறு இருக்கிறது; அதன் கிளைகள் கடவுளுடைய நகரத்துக்குச் சந்தோஷம் தருகின்றன.[a]
உன்னதமான கடவுளுடைய மகத்தான பரிசுத்த கூடாரத்துக்கு மகிழ்ச்சி தருகின்றன.
5 அந்த நகரத்தில் கடவுள் இருக்கிறார்,[b] அதனால் அதை வீழ்த்தவே முடியாது.
விடியற்காலையில் கடவுள் அதன் உதவிக்கு வருவார்.[c]
6 தேசங்கள் கொந்தளித்தன, ராஜ்யங்கள் கவிழ்க்கப்பட்டன.
அவர் முழங்கினார், பூமி உருகியது.[d]
7 பரலோகப் படைகளின் யெகோவா நம்மோடு இருக்கிறார்.[e]
யாக்கோபின் கடவுள் நமக்குப் பாதுகாப்பான* அடைக்கலமாக இருக்கிறார். (*சேலா*)
8 யெகோவாவின் செயல்களை வந்து பாருங்கள்.
இந்தப் பூமியில் அவர் செய்திருக்கிற பிரமிப்பான காரியங்களைப் பாருங்கள்.
9 அவர் பூமி முழுவதும் போர்களுக்கு முடிவுகட்டுகிறார்.[f]
வில்லை உடைத்து, ஈட்டிகளை முறிக்கிறார்.
போர் ரதங்களை* நெருப்பில் சுட்டெரிக்கிறார்.
10 "சரணடைந்துவிடுங்கள்,
நானே கடவுள் என்று தெரிந்துகொள்ளுங்கள்.
தேசங்களின் மத்தியில் நான் உயர்ந்திருப்பேன்.[g]
பூமியில் உயர்ந்திருப்பேன்."[h]
11 பரலோகப் படைகளின் யெகோவா நம்மோடு இருக்கிறார்.[i]
யாக்கோபின் கடவுள் நமக்குப் பாதுகாப்பான அடைக்கலமாக இருக்கிறார்.[j] (*சேலா*)

இசைக் குழுவின் தலைவனுக்கு; கோராகுவின் மகன்களுடைய[k] சங்கீதம்.

47 மக்களே, எல்லாரும் கை தட்டுங்கள்.
சந்தோஷ ஆரவாரத்தோடு கடவுளுக்கு வெற்றி முழக்கம் செய்யுங்கள்.
2 உன்னதமான கடவுளாகிய யெகோவா பயபக்திக்குரியவர்.*[l]
பூமி முழுவதுக்கும் அவர்தான் மகா ராஜா.[m]
3 மக்களை நம்மிடம் அடிபணிய வைக்கிறார்.
தேசங்களை நம் காலடியில் விழ வைக்கிறார்.[n]
4 அவர் நமக்காக நம் சொத்தைத் தேர்ந்தெடுக்கிறார்.[o]
அவர் நேசிக்கிற யாக்கோபுக்குப்[p] பெருமை சேர்க்கும் சொத்து அது. (*சேலா*)
5 சந்தோஷ ஆரவாரத்தோடும், ஊதுகொம்பின்* சத்தத்தோடும்
யெகோவா மேலே போனார்.
6 கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள்,* அவரைப் புகழ்ந்து பாடுங்கள்.

46:7 *வே.வா., "உயர்ந்த." **46:9** *அல்லது, "கேடயங்களை." **47:2** *வே.வா., "பிரமிக்க வைக்கிறவர்." **47:5** *வே.வா., "எக்காளத்தின்." **47:6** *வே.வா., "இசை இசைத்திடுங்கள்."

அதி. 46
a 2நா 6:6
b உபா 23:14; சங் 132:13; ஏசா 12:6
c யாத் 14:24
d யோசு 2:24
e யோசு 1:9; எரே 1:19; ரோ 8:31
f ஏசா 11:9; மீ 4:3
g ஏசா 2:11
h 1நா 29:11
i 2நா 20:17
j சங் 48:3; சங் 125:2

அதி. 47
k 2நா 20:19
l சங் 76:12
m சங் 22:28
n உபா 33:29
o உபா 9:5
p உபா 7:6; மல் 1:2

நம் ராஜாவைப் புகழ்ந்து பாடுங்கள், அவரைப் புகழ்ந்து பாடுங்கள்.
7 ஏனென்றால், பூமி முழுவதுக்கும் கடவுள்தான் ராஜா.[a]
அவரைப் புகழ்ந்து பாடுங்கள், விவேகத்தோடு* நடந்துகொள்ளுங்கள்.
8 கடவுள் எல்லா தேசங்களுக்கும் ராஜாவானார்.[b]
கடவுள் தன்னுடைய பரிசுத்த சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்.
9 மக்களின் தலைவர்கள் ஆபிரகாமின் கடவுளுடைய ஜனங்களோடு கூடிவந்திருக்கிறார்கள்.
ஏனென்றால், இந்தப் பூமியின் ஆட்சியாளர்கள் கடவுளுக்குச் சொந்தமானவர்கள்.*
கடவுள் மிக மிக உயர்ந்தவர்.[c]

பாடல். கோராகுவின் மகன்களுடைய[d] சங்கீதம்.

48 நம் கடவுளுடைய நகரத்திலும் பரிசுத்த மலையிலும்
யெகோவா மகத்தானவராக இருக்கிறார், எல்லா புகழையும் பெறத் தகுதியானவராக இருக்கிறார்.
2 வடகோடியில் சீயோன் மலை அழகாக உயர்ந்து நிற்கிறது.
அது உலகத்துக்கே சந்தோஷம் தருகிறது.[e]
அதுதான் மகா ராஜாவின் நகரம்.[f]
3 அதன் கோட்டைகளில்
கடவுள் தன்னையே பாதுகாப்பான* அடைக்கலமாகக் காட்டியிருக்கிறார்.[g]
4 ராஜாக்கள் ஒன்றுகூடி வந்தார்கள்.
எல்லாரும் அணிவகுத்து வந்தார்கள்.
5 ஆனால், நகரத்தைப் பார்த்ததும் அதிர்ந்துபோனார்கள்.
பயத்தில் தலைதெறிக்க ஓடினார்கள்.
6 அங்கே குலைநடுங்கிப் போனார்கள்.
பிரசவ வேதனைப்படுகிற பெண்ணைப் போல வேதனைப்பட்டார்கள்.
7 நீங்கள் கிழக்குக் காற்றை அனுப்பி தர்ஷீசின் கப்பல்களை உடைத்துப்போடுகிறீர்கள்.
8 நாங்கள் காதால் கேட்டதை இப்போது கண்ணால் பார்த்துவிட்டோம்.
பரலோகப் படைகளின் யெகோவாவுடைய நகரத்திலே,
எங்கள் கடவுளின் நகரத்திலே அதைப் பார்த்துவிட்டோம்.
கடவுள் அந்த நகரத்தை என்றென்றும் உறுதியாக நிலைநிறுத்துவார்.[h] (*சேலா*)
9 கடவுளே, நாங்கள் உங்களுடைய ஆலயத்திலே
உங்களுடைய மாறாத அன்பைப் பற்றி யோசித்துப் பார்க்கிறோம்.[i]
10 கடவுளே, உங்களுடைய பெயரைப் போலவே
உங்களுடைய புகழும் பூமியெங்கும் எட்டுகிறது.[j]
உங்களுடைய வலது கை நீதியால் நிறைந்திருக்கிறது.[k]

அதி. 47
a எரே 10:7; சக 14:9
b 1நா 16:31; சங் 96:10; சங் 97:1; வெளி 19:6
c சங் 97:9

அதி. 48
d 2நா 20:19
e புல 2:15
f சங் 47:8; சங் 135:21; மத் 5:34, 35
g சங் 125:1
h சங் 87:5; ஏசா 2:2; மீ 4:1
i சங் 26:3; சங் 40:10; சங் 63:3
j சங் 113:3
k சங் 17:7; சங் 60:5; சங் 98:2

47:7 *வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதலோடு." **47:9** *நே.மொ., "பூமியின் கேடயங்கள் கடவுளுக்குச் சொந்தம்." **48:3** *வே.வா., "உயர்ந்த."

11 உங்களுடைய நீதித்தீர்ப்புகளால் சீயோன் மலை[a] சந்தோஷப்படட்டும்,
யூதாவின் ஊர்கள்* பூரித்துப்போகட்டும்.[b]
12 சீயோனைச் சுற்றி நடந்து வாருங்கள்.
அதன் கோட்டைகளை[c] எண்ணுங்கள்.
13 அதன் அரண்களைக் கவனித்துப் பாருங்கள்.[d]
அதன் பலமான கோட்டைகளை ஆராய்ந்து பாருங்கள்.
அப்போதுதான், வருங்காலத் தலைமுறைகளுக்கு அதைப் பற்றிச் சொல்ல முடியும்.
14 இந்தக் கடவுள்தான் என்றென்றும் நம் கடவுள்.[e]
எல்லா காலத்துக்கும்* அவரே நம்மை வழிநடத்துவார்.[f]

இசைக் குழுவின் தலைவனுக்கு;
கோராகுவின் மகன்களுடைய[g] சங்கீதம்.

49 மக்களே, எல்லாரும் இதைக் கேளுங்கள்.
உலக ஜனங்களே, எல்லாரும் கவனியுங்கள்.
2 சிறியவர்களே, பெரியவர்களே,
ஏழைகளே, பணக்காரர்களே, எல்லாரும் கேளுங்கள்.
3 என் வாய் ஞானமான வார்த்தைகளைப் பேசும்.
என் இதயம் ஆழமான* விஷயங்களைத் தியானிக்கும்.[h]
4 பழமொழியை நான் காதுகொடுத்துக் கேட்பேன்.
யாழ் இசைத்துக்கொண்டே என் விடுகதையை விளக்குவேன்.
5 கொடிய காலங்களில் நான் எதற்காகப் பயப்பட வேண்டும்?[i]
என்னைக் கவிழ்க்க நினைக்கிறவர்களின் அக்கிரமம் என்னைச் சூழ்ந்துகொள்ளும்போது
நான் ஏன் நடுங்க வேண்டும்?
6 சொத்துகள்மேல் நம்பிக்கை வைக்கிறவர்களோ,[j]
சொத்துகளைக் குவித்து வைத்திருப்பதாகப் பெருமை பேசுகிறவர்களோ,[k]
7 யாராக இருந்தாலும், இன்னொருவனின் உயிரை மீட்கவே முடியாது.
அவனுக்காகக் கடவுளுக்கு மீட்புவிலையைக் கொடுக்கவும் முடியாது.[l]
8 (அவர்களுடைய உயிருக்கான மீட்புவிலை ரொம்பவே பெரிது.*
அதை அவர்களால் கொடுக்கவே முடியாது.)
9 சவக்குழிக்குள் போகாமல் என்றென்றும் வாழும்படி ஒருவனை யாராலும் மீட்க முடியாது.[m]
10 ஞானமுள்ளவர்கள்கூட செத்துப்போவதை அவர்கள் பார்க்கிறார்கள்.
முட்டாள்களும் புத்தி இல்லாதவர்களும் அழிந்துபோகிறார்கள்.[n]
அவர்கள் தங்களுடைய சொத்தை மற்றவர்களுக்குத்தான் விட்டுவிட்டுப் போக வேண்டியிருக்கிறது.[o]
11 ஆனாலும், தங்களுடைய வீடுகள் காலாகாலத்துக்கு இருக்க வேண்டுமென்றும்,

48:11 *நே.மொ., "யூதாவின் மகள்கள்." **48:14** *அல்லது, "நாம் சாகும்வரை." **49:3** *வே.வா., "விவேகமான." **49:8** *வே.வா., "மதிப்புள்ளது; அருமையானது."

அதி. 48
a சங் 78:68
b சங் 97:8
c நெ 12:38, 39
d ஏசா 26:1
e சங் 31:14
f ஏசா 58:11

அதி. 49
g 2நா 20:19
h சங் 143:5
i சங் 27:1
j உபா 8:17, 18; நீதி 18:11
k எரே 9:23; 1தீ 6:17
l நீதி 11:4; மத் 16:26
m சங் 89:48
n பிர 2:16; ரோ 5:12
o சங் 39:6; நீதி 11:4; நீதி 23:4; பிர 2:18; லூ 12:19, 20

தங்களுடைய கூடாரங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்க
வேண்டுமென்றுமே ஆசைப்படுகிறார்கள்.
அதனால், தங்களுடைய நிலபுலன்களுக்குத் தங்களுடைய பெயரை
வைத்துக்கொள்கிறார்கள்.
12 ஆனால், மனிதனுக்கு எவ்வளவுதான் மதிப்பு மரியாதை இருந்தாலும்,
அவனால் நிலைத்திருக்க முடியாது.[a]
அழிந்துபோகிற மிருகங்களைப் போலத்தான் அவனும் இருக்கிறான்.[b]
13 முட்டாள்களுக்கும்,[c] அவர்களுடைய வழியில் போகிறவர்களுக்கும்,
அவர்களுடைய வீண் பேச்சைக் கேட்கிறவர்களுக்கும் அதே
முடிவுதான் வரும். (*சேலா*)
14 வெட்டப்படுவதற்காகக் கொண்டுபோகப்படுகிற செம்மறியாடுகள்போல்
அவர்கள் கல்லறைக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள்.
இனி சாவுதான் அவர்களுடைய மேய்ப்பன்.
நேர்மையானவர்கள் விடியற்காலையில் அவர்களை ஆளுவார்கள்.[d]
அவர்கள் சுவடு தெரியாமல் அழிந்துபோவார்கள்;[e]
இனி மாளிகையில் குடியிருக்காமல் கல்லறையில்தான்[f]
குடியிருப்பார்கள்.[g]
15 ஆனால், கல்லறையின் கோரப் பிடியிலிருந்து கடவுள் என்னை
விடுவிப்பார்.[h]
அவர் என்னைக் கைப்பிடித்துத் தூக்கிவிடுவார். (*சேலா*)
16 ஒருவன் பணக்காரனாவதைப் பார்த்தோ,
அவனுடைய வீடு ஆடம்பரமாகிக்கொண்டே போவதைப் பார்த்தோ
நீ பயப்படாதே.
17 ஏனென்றால், சாகும்போது அவனால் எதையுமே கொண்டுபோக
முடியாது.[i]
அவனுடைய சொத்துப்பத்துகள் எதுவும் அவனோடு போகாது.[j]
18 உயிரோடு இருக்கும்போது அவன் தன்னையே
பாராட்டிக்கொள்கிறான்.[k]
(ஒருவனுக்கு வசதிவாய்ப்புகள் பெருகும்போது ஜனங்கள் அவனைப்
புகழ்வார்கள்.)[l]
19 ஆனால் கடைசியில், தன்னுடைய முன்னோர்களைப் போலவே
அவன் செத்துப்போகிறான்.
அவர்கள் யாரும் இனி வெளிச்சத்தைப் பார்க்கவே மாட்டார்கள்.
20 ஒருவன் இதைப் புரிந்துகொள்ளாவிட்டால்,
அவனுக்கு எவ்வளவுதான் மதிப்பு மரியாதை இருந்தாலும்,[m]
அழிந்துபோகிற மிருகங்களைப் போலத்தான் இருப்பான்.

ஆசாப்பின்[n] சங்கீதம்.

50 தேவாதி தேவனாகிய யெகோவா[o] பேசினார்.
சூரியன் உதிக்கிற திசைமுதல் மறைகிற திசைவரை*
பரந்து விரிந்திருக்கிற
பூமியை அவர் அழைக்கிறார்.

50:1 * வே.வா., “கிழக்கிலிருந்து மேற்குவரை.”

அதி. 49
a சங் 39:5
யாக் 1:11
b சங் 49:20
c லூ 12:19, 20
d மல் 4:3
e சங் 39:11
f யோபு 24:19
g 1சா 2:6
யோபு 7:9
h யோபு 33:28
சங் 16:10
சங் 30:3
சங் 86:13
i யோபு 1:21
பிர 5:15
1தீ 6:17
j ஏசா 10:3
k லூ 12:19
l நீதி 14:20
m சங் 49:12

அதி. 50
n 1நா 25:1
o சங் 95:3

2 அழகே உருவான சீயோனிலிருந்து[a] கடவுள் ஒளிவீசுகிறார்.
3 நம் கடவுள் வருவார், அவர் அமைதியாக இருக்க மாட்டார்.[b]
அவருக்கு முன்னால் நெருப்பு பற்றியெரிகிறது.[c]
அவரைச் சுற்றி பயங்கரமான புயல்காற்று வீசுகிறது.[d]
4 தன்னுடைய மக்களுக்குத் தீர்ப்பு கொடுப்பதற்காக,[e]
அவர் வானத்தையும்* பூமியையும் அழைத்து,[f]
5 "எனக்கு உண்மையாக* நடக்கிறவர்களை ஒன்றுகூட்டுங்கள்.
பலியின் அடிப்படையில் என்னோடு ஒப்பந்தம் செய்கிறவர்களை[g]
ஒன்றுதிரட்டுங்கள்" என்று சொல்கிறார்.
6 வானம் அவருடைய நீதியை அறிவிக்கிறது.
ஏனென்றால், கடவுள்தான் நீதிபதி.[h] (*சேலா*)
7 "என் மக்களே, கேளுங்கள்; நான் பேசுவேன்.
இஸ்ரவேலே, நான் உனக்கு எதிராகச் சாட்சி சொல்வேன்.[i]
நானே கடவுள், நானே உன் கடவுள்.[j]
8 நீ கொடுக்கிற பலிகளைப் பார்த்து நான் உன்னைக் கண்டிக்கவில்லை.
எப்போதும் என் முன்னால் இருக்கிற உன் தகன பலிகளைப் பார்த்தும்
கண்டிக்கவில்லை.[k]
9 உன் வீட்டில் இருக்கிற காளையோ,
உன் தொழுவங்களில் இருக்கிற வெள்ளாடுகளோ எனக்குத் தேவை
இல்லை.[l]
10 காட்டில் இருக்கிற அத்தனை மிருகங்களும் என்னுடையதுதான்.[m]
ஓராயிரம் மலைகளில் திரிகிற விலங்குகளும் என்னுடையதுதான்.
11 மலைகளில் இருக்கிற எல்லா பறவைகளையும் எனக்குத் தெரியும்.[n]
வெட்டவெளியில் கணக்குவழக்கில்லாமல் திரிகிற விலங்குகளும்
என்னுடையதுதான்.
12 எனக்குப் பசித்தால் நான் உன்னிடம் சொல்ல மாட்டேன்.
ஏனென்றால், பூமியும் அதிலுள்ள அனைத்தும் என்னுடையதுதான்.[o]
13 காளைகளின் இறைச்சியை நான் சாப்பிடுவேனா?
வெள்ளாடுகளின் இரத்தத்தை நான் குடிப்பேனா?[p]
14 உன்னுடைய நன்றிகளைக் கடவுளுக்குப் பலியாகச் செலுத்து.[q]
உன் நேர்த்திக்கடன்களை உன்னதமான கடவுளுக்குச் செலுத்து.[r]
15 இக்கட்டான காலத்தில் என்னைக் கூப்பிடு.[s]
நான் உன்னைக் காப்பாற்றுவேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்."[t]
16 ஆனால், பொல்லாதவனைப் பார்த்து கடவுள் இப்படிச் சொல்வார்:
"என்னுடைய விதிமுறைகளை விளக்கிச் சொல்லவோ,[u]
என்னுடைய ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசவோ உனக்கு என்ன உரிமை
இருக்கிறது?[v]
17 என் புத்திமதியை* நீ வெறுக்கிறாயே.
என் வார்த்தைகளை அலட்சியம் செய்கிறாயே.[w]

50:4 *வே.வா., "பரலோகத்தையும்." **50:5** *வே.வா., "பற்றுமாறாமல்." **50:17** *வே.வா., "நான் கண்டித்துத் திருத்துவதை."

அதி. 50
a சங் 48:2; புல 2:15
b ஏசா 65:6
c யாத் 19:18; தானி 7:9, 10; எபி 12:29
d சங் 97:3, 4
e மீ 6:2
f உபா 30:19; உபா 32:1; ஏசா 1:2
g யாத் 24:8
h சங் 75:7
i நெ 9:30; சங் 81:8
j யாத் 20:2
k 1சா 15:22; ஏசா 1:11; எரே 7:22, 23; ஓசி 6:6
l மீ 6:7
m 1நா 29:14; அப் 17:24
n யோபு 38:41
o உபா 10:14; யோபு 41:11; 1கொ 10:26
p மீ 6:6-8
q சங் 69:30, 31; நீதி 21:3; ஓசி 6:6; எபி 13:15
r உபா 23:21; சங் 76:11; பிர 5:4
s 2நா 33:12, 13; சங் 91:15
t சங் 22:21-23; சங் 50:23
u எரே 7:4; மத் 7:22, 23; ரோ 2:21
v உபா 31:20; எபி 8:9
w நெ 9:26; ஏசா 5:24

18 ஒரு திருடனைப் பார்த்தால், நீ அவனுக்கு உடந்தையாகிவிடுகிறாய்.*[a]
மணத்துணைக்குத் துரோகம் செய்கிறவர்களோடு கூடிப் பழகுகிறாய்.
19 உன் வாயால் கெட்ட விஷயங்களைப் பரப்புகிறாய்.
உன் நாவில் பொய்தான் ஒட்டிக்கொண்டிருக்கிறது.[b]
20 நீ உட்கார்ந்துகொண்டு, உன் சொந்த சகோதரனுக்கு எதிராகப் பேசுகிறாய்.[c]
உன் தாயின் வயிற்றில் பிறந்தவனைப் பற்றியே குறைசொல்கிறாய்.
21 நீ இதையெல்லாம் செய்தபோது, நான் அமைதியாக இருந்தேன்.
அதனால், நானும் உன்னைப் போலத்தான் என்று நினைத்துக்கொண்டாய்.
ஆனால், இப்போது நான் உன்னைக் கண்டிப்பேன்.
உனக்கு எதிரான என் வழக்கைச் சொல்வேன்.[d]
22 கடவுளை மறக்கிறவர்களே,[e] தயவுசெய்து இதை யோசித்துப் பாருங்கள்.
இல்லாவிட்டால், நான் உங்களை நார் நாராகக் கிழித்துவிடுவேன்,
உங்களைக் காப்பாற்ற யாரும் இருக்க மாட்டார்கள்.
23 எனக்கு நன்றிப் பலியைச் செலுத்துகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்.[f]
நேர்வழியைவிட்டு விலகாமல் இருக்கிறவனை
நான் மீட்பேன்."[g]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.
தாவீது பத்சேபாளுடன்[h] உறவுகொண்டதைப் பற்றி நாத்தான் தீர்க்கதரிசி அவரிடம் வந்து பேசிய பிறகு பாடியது.

51 கடவுளே, உங்களுடைய மாறாத அன்பின்படி எனக்குக் கருணை காட்டுங்கள்.[i]
உங்களுடைய மகா இரக்கத்தின்படி என் குற்றங்களைத் துடைத்தழியுங்கள்.[j]
2 என் குற்றங்களை முழுமையாகக் கழுவிவிடுங்கள்.[k]
என் பாவத்தை நீக்கி, என்னைச் சுத்தப்படுத்துங்கள்.[l]
3 ஏனென்றால், என் குற்றங்கள் எனக்கு நன்றாகத் தெரியும்.
என் பாவம் எப்போதும் என் கண் முன்னால்* இருக்கிறது.[m]
4 உங்களுக்கு எதிராகவே நான் பாவம் செய்துவிட்டேன்.[n]
நீங்கள் வெறுக்கும் காரியங்களைச் செய்துவிட்டேன்.[o]
அதனால், நீங்கள் சொல்வது நீதியானதுதான்.
உங்கள் தீர்ப்பு நியாயமானதுதான்.[p]
5 நான் குற்றம் குறையோடு பிறந்தேன்.
பாவத்தோடு என் தாயின் வயிற்றில் உருவானேன்.*[q]
6 உள்ளத்தில் உண்மையாக இருப்பவர்கள்மேல் நீங்கள் பிரியமாக இருக்கிறீர்கள்.[r]
அதனால், உண்மையான ஞானத்தை என் உள்ளத்துக்குப் புகட்டுங்கள்.

50:18 * அல்லது, "அவனோடு சேர்ந்துகொள்கிறாய்." **51:3** * வே.வா., "என் மனதில்."
51:5 * வே.வா., "என் தாயின் வயிற்றில் உருவான நொடியிலிருந்தே நான் பாவிதான்."

அதி. 50
a ஏசா 5:22, 23
b எரே 9:5
c லேவி 19:16
d சங் 50:4; பிர 12:14
e சங் 9:17; எரே 2:32; ஓசி 4:6
f 1தெ 5:18; எபி 13:15
g மீ 6:8

அதி. 51
h 2சா 11:3
i எண் 14:18; சங் 25:7; சங் 41:4
j சங் 103:13; நீதி 28:13; ஏசா 43:25; ஏசா 44:22
k ஏசா 1:18; 1கொ 6:11
l எபி 9:13, 14; 1யோ 1:7
m சங் 32:5; சங் 40:12
n ஆதி 39:9; 2சா 12:13
o 2சா 12:9; சங் 38:18
p ரோ 3:4
q யோபு 14:4; ரோ 3:23; ரோ 5:12
r 1சா 16:7; 2ரா 20:3; 1நா 29:17

7 மருவுக்கொத்தால் என் பாவத்தை நீக்குங்கள், அப்போது நான் சுத்தமாவேன்.[a]
என்னைக் கழுவுங்கள், அப்போது நான் பனியைவிட வெண்மையாவேன்.[b]
8 சந்தோஷ சத்தமும் ஆனந்த ஆரவாரமும் என் காதில் கேட்கட்டும்.
அப்போதுதான், நீங்கள் நொறுக்கிப்போட்ட என் எலும்புகள் சந்தோஷத்தில் துள்ளும்.[c]
9 என்னுடைய பாவங்களைப் பார்க்காதபடி உங்கள் முகத்தைத் திருப்பிக்கொள்ளுங்கள்.[d]
என்னுடைய எல்லா குற்றங்களையும் துடைத்தழியுங்கள்.[e]
10 கடவுளே, சுத்தமான இதயத்தை எனக்குள் உருவாக்குங்கள்.[f]
அலைபாயாத* புதிய மனதை[g] எனக்குள் வையுங்கள்.
11 உங்களுடைய சன்னிதியைவிட்டு என்னைத் துரத்திவிடாதீர்கள்.
உங்களுடைய சக்தியை என்னிடமிருந்து எடுத்துவிடாதீர்கள்.
12 உங்கள் மீட்பைப் பார்க்கும் சந்தோஷத்தை மறுபடியும் எனக்குக் கொடுங்கள்.[h]
உங்களுக்குக் கீழ்ப்படியும் ஆசையை எனக்குள் தூண்டுங்கள்.
13 குற்றம் செய்கிறவர்களுக்கு உங்கள் வழிகளை நான் சொல்லிக்கொடுப்பேன்.[i]
பாவிகளான அவர்கள் அப்போது உங்களிடம் திரும்பி வருவார்கள்.
14 கடவுளே, என்னை மீட்கும் கடவுளே,[j]
கொலைப்பழியிலிருந்து* என்னை மீட்டுக்கொள்ளுங்கள்.[k]
அப்போது, என் நாவு உங்கள் நீதியைப் பற்றிச் சந்தோஷமாகச் சொல்லும்.[l]
15 யெகோவாவே, என் உதடுகளைத் திறந்திடுங்கள்.
அப்போது, என் வாய் உங்களைப் புகழும்.[m]
16 நீங்கள் பலியை விரும்புவதில்லை, விரும்பினால் அதைச் செலுத்துவேன்.[n]
தகன பலியிலும் நீங்கள் பிரியப்படுவதில்லை.[o]
17 உடைந்த மனம்தான் கடவுளுக்குப் பிரியமான பலியாக இருக்கிறது.
கடவுளே, உடைந்த உள்ளத்தையும் நொறுங்கிய நெஞ்சத்தையும்
நீங்கள் ஒதுக்கித்தள்ள* மாட்டீர்கள்.[p]
18 உங்களுக்கு இஷ்டமானபடியே* சீயோனுக்கு நன்மை செய்யுங்கள்.
எருசலேமின் மதில்களை எடுத்துக் கட்டுங்கள்.
19 அப்போது, நீதியோடு செலுத்தப்படுகிற தகன பலிகளை
நீங்கள் பிரியத்தோடு ஏற்றுக்கொள்வீர்கள்.
அப்போது, உங்கள் பலிபீடத்தில் காளைகள் செலுத்தப்படும்.[q]

51:10 *வே.வா., "உறுதியான." **51:14** *வே.வா., "இரத்தப்பழியிலிருந்து." **51:17** *வே.வா., "கேவலமாக நினைக்க." **51:18** *வே.வா., "உங்கள் அனுக்கிரகத்தின்படியே."

அதி. 51
a லேவி 14:3, 4; எபி 9:13, 14
b ஏசா 1:18
c சங் 6:2; சங் 38:3; ஏசா 57:15
d சங் 103:12; ஏசா 38:17
e மீ 7:19
f எரே 32:39
g எசே 11:19; எபே 4:23
h சங் 21:1
i அப் 2:38
j சங் 38:22; ஏசா 12:2; வெளி 7:10
k ஆதி 9:6
l நெ 9:33; சங் 35:28; சங் 59:16; தானி 9:7
m சங் 34:1; சங் 109:30; எபி 13:15
n நீதி 21:3
o 1சா 15:22; சங் 40:6; ஓசி 6:6
p 2ரா 22:18, 19; 2நா 33:13; சங் 22:24; சங் 34:18; நீதி 28:13; ஏசா 57:15; லூ 15:22-24; லூ 18:13, 14
q ஓசி 14:2

இசைக் குழுவின் தலைவனுக்கு; மஸ்கீல்.* அகிமெலேக்கின் வீட்டுக்கு தாவீது போயிருந்ததைப் பற்றி சவுலிடம் ஏதோமியனாகிய தோவேக் சொன்ன பிறகு[a] தாவீது பாடிய பாடல்.

52 பலமுள்ளவனே, நீ செய்கிற அக்கிரமங்களைப் பற்றி ஏன்
பெருமையடிக்கிறாய்?[b]
கடவுள் காட்டும் மாறாத அன்பு நாளெல்லாம் நீடிக்கும்[c] என்பது
உனக்குத் தெரியாதா?
2 உன் நாவு கத்திபோல் கூர்மையாக இருக்கிறது.[d]
அது சதித்திட்டம் தீட்டுகிறது, பித்தலாட்டம் செய்கிறது.[e]
3 நல்லதைவிட கெட்டதைத்தான் நீ அதிகமாக விரும்புகிறாய்.
உண்மை பேசுவதைவிட பொய் பேசுவதைத்தான் விரும்புகிறாய்.
(*சேலா*)
4 பொய் நாவு உள்ளவனே,
தீமையான வார்த்தைகளையே நீ பேச விரும்புகிறாய்.
5 அதனால், கடவுள் உன்னை ஒரேயடியாக வீழ்த்துவார்.[f]
உன்னைப் பிடித்து, உன் கூடாரத்திலிருந்து வெளியே இழுத்துப்
போடுவார்.[g]
இந்த உலகத்திலிருந்தே உன்னை ஒழித்துக்கட்டுவார்.[h] (*சேலா*)
6 நீதிமான்கள் அதைப் பார்த்து மலைத்துப்போவார்கள்.[i]
கெட்டவனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்து,[j]
7 "இதோ! கடவுளைக் கோட்டையாக நம்பாமல்,[k]
தன்னுடைய சொத்துப்பத்துகளையும்[l] சதித்திட்டங்களையுமே
கோட்டையாக நம்பியவனுக்கு வந்த கதியைப் பாருங்கள்!"
என்பார்கள்.
8 ஆனால், நான் கடவுளுடைய வீட்டிலே
செழிப்பான ஒலிவ மரத்தைப் போல இருப்பேன்.
கடவுளுடைய மாறாத அன்பை என்றென்றும் நான் நம்புகிறேன்.[m]
9 கடவுளே, நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்கள்.
அதனால், உங்களை என்றென்றும் புகழ்வேன்.[n]
உங்களுக்கு உண்மையாக* இருக்கிறவர்களுக்கு முன்பாக
உங்கள் பெயரில் நான் நம்பிக்கையோடு இருப்பேன்.[o]
ஏனென்றால், அது நல்லது.#

இசைக் குழுவின் தலைவனுக்கு;
மகலாத்* பாணி. மஸ்கீல்.* தாவீதின் பாடல்.

53 முட்டாள்கள் தங்களுடைய இதயத்தில்,
"யெகோவா என்று யாருமே கிடையாது" என்று சொல்கிறார்கள்.[p]
அவர்கள் செய்யும் அக்கிரமங்கள் படுமோசமானவை,
அருவருப்பானவை.
ஒருவன்கூட நல்லது செய்வதில்லை.[q]
2 ஆனால், கடவுள் பரலோகத்திலிருந்து மனிதர்களைப் பார்க்கிறார்.[r]

அதி. 52
a 1சா 22:9
b 1சா 21:7; சங் 94:3, 4
c சங் 103:17
d சங் 57:4; சங் 59:7
e 1சா 22:9, 18; சங் 109:2
f நீதி 12:19; நீதி 19:9
g சங் 37:9
h நீதி 2:22
i சங் 37:34
j சங் 58:10
k எரே 17:5
l சங் 49:6, 7; நீதி 11:28
m சங் 13:5; சங் 147:11
n சங் 50:15
o சங் 27:14; சங் 123:2; நீதி 18:10

அதி. 53
p சங் 10:4; ரோ 1:21
q சங் 14:1-7; ரோ 3:10
r சங் 11:4; சங் 33:13-15; எரே 16:17; எரே 23:24

52:மே.கு.; 53:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **52:9** *வே.வா., "பற்றுமாறாமல்." #வே.வா., "அருமையானது."

யாராவது விவேகமாக* நடக்கிறார்களா, யெகோவாவைத்
தேடுகிறார்களா என்று பார்க்கிறார்.[a]
3 அவர்கள் எல்லாரும் வழிவிலகிப் போயிருக்கிறார்கள்.
எல்லாரும் ஒரேபோல் சீர்கெட்டுப் போயிருக்கிறார்கள்.
நல்லது செய்கிறவர்கள் யாருமே இல்லை.
ஒருவன்கூட இல்லை.[b]
4 தவறு செய்கிற யாருக்குமே புத்தி* இல்லையா?
உணவை விழுங்குவதுபோல் அவர்கள் என் ஜனங்களை
விழுங்குகிறார்கள்.
அவர்கள் யெகோவாவைக் கூப்பிடுவதில்லை.[c]
5 அதனால், பயங்கரமான திகில் அவர்களைப் பிடித்துக்கொள்ளும்.
இதுவரை இல்லாத அளவுக்கு* அவர்கள் திகில் அடைவார்கள்.
உன்னைத் தாக்குகிறவர்களின் எலும்புகளைக் கடவுள் சிதறிப்போகப்
பண்ணுவார்.
யெகோவா அவர்களை ஒதுக்கிவிட்டதால், நீ அவர்களைத்
தலைகுனிய வைப்பாய்.
6 சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு மீட்பு வரட்டும்![d]
சிறைபிடிக்கப்பட்ட தன் ஜனங்களை யெகோவா மறுபடியும்
கூட்டிச்சேர்க்கும்போது,
யாக்கோபு சந்தோஷப்படட்டும், இஸ்ரவேல்
பூரித்துப்போகட்டும்.

இசைக் குழுவின் தலைவனுக்கு; நரம்பிசைக் கருவிகளோடு பாட வேண்டியது. மஸ்கீல்.* சீப் நகரத்தார் சவுலிடம், “எங்கள் ஊரில்தான் தாவீது ஒளிந்திருக்கிறான்” என்று சொன்னபோது[e] தாவீது பாடிய பாடல்.

54 கடவுளே, உங்களுடைய பெயரால் என்னைக் காப்பாற்றுங்கள்.[f]
உங்களுடைய வல்லமையால்* எனக்காக வழக்காடுங்கள்.[g]
2 கடவுளே, என் ஜெபத்தைக் கேளுங்கள்.[h]
என் வாயிலிருந்து வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்.
3 முன்பின் தெரியாதவர்கள் எனக்கு எதிராகக் கிளம்புகிறார்கள்.
ஈவிரக்கம் இல்லாதவர்கள் என் உயிரை எடுக்கப் பார்க்கிறார்கள்.[i]
கடவுளை அவர்கள் கொஞ்சம்கூட மதிப்பதே இல்லை.*[j] (*சேலா*)
4 இதோ! கடவுள் எனக்குத் துணையாக இருக்கிறார்.[k]
என்னை ஆதரிக்கிறவர்களோடு யெகோவா இருக்கிறார்.
5 என் எதிரிகள் செய்யும் அக்கிரமத்தை அவர்கள் தலையிலேயே
விழ வைப்பார்.[l]
கடவுளே, நீங்கள் உண்மையுள்ளவராக இருப்பதால் அவர்களுக்கு
முடிவுகட்டுங்கள்.[m]
6 நான் உங்களுக்கு மனப்பூர்வமாகப் பலி செலுத்துவேன்.[n]

53:2 *வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதலோடு.” **53:4** *வே.வா., “புரிந்துகொள்ளும் திறன்.” **53:5** *அல்லது, “பயமே இல்லாத இடத்தில்.” **54:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **54:1** *வே.வா., “அதிகாரத்தால்.” **54:3** *வே.வா., “கடவுளைத் தங்கள் கண்முன் வைப்பதே இல்லை.”

அதி. 53
a 1நா 28:9; 2நா 15:2; 2நா 19:1, 3; ஏசா 55:6; 1பே 3:12
b பிர 7:20; ரோ 3:12
c யோபு 21:7, 14
d ஏசா 12:6

அதி. 54
e 1சா 23:19; 1சா 26:1
f சங் 20:1; சங் 79:9; நீதி 18:10
g சங் 43:1
h சங் 13:3; சங் 65:2
i சங் 22:16; சங் 59:3
j சங் 36:1
k 1நா 12:18; எபி 13:6
l ரோ 12:19
m சங் 143:12
n சங் 50:14; எபி 13:15

யெகோவாவே, நான் உங்கள் பெயரைப் புகழ்வேன்;
ஏனென்றால், அது நல்லது.*[a]
7 எல்லா இக்கட்டுகளிலிருந்தும் அவர் என்னைக் காப்பாற்றுகிறார்.[b]
அதனால், என் எதிரிகளை வெற்றிப் பெருமிதத்தோடு நான் பார்ப்பேன்.[c]

இசைக் குழுவின் தலைவனுக்கு; நரம்பிசைக் கருவிகளோடு பாட வேண்டியது. மஸ்கீல்.* தாவீதின் பாடல்.

55 கடவுளே, என் ஜெபத்தைக் கேளுங்கள்.[d]
இரக்கத்துக்காக நான் வேண்டுவதை அலட்சியம் செய்யாதீர்கள்.*[e]
2 நான் சொல்வதைக் கவனித்துக் கேட்டு, பதில் கொடுங்கள்.[f]
கவலையால் நான் நிம்மதியில்லாமல் தவிக்கிறேன்.[g]
பித்துப் பிடித்தவன்போல் ஆகிவிட்டேன்.
3 ஏனென்றால், எதிரிகள் கண்டபடி பேசுகிறார்கள்.
பொல்லாதவர்கள் என்னைப் பாடாய்ப் படுத்துகிறார்கள்.
தொல்லைக்குமேல் தொல்லை கொடுக்கிறார்கள்.
கோபத்தில் என்னைப் பயங்கரமாகப் பகைக்கிறார்கள்.[h]
4 வேதனையில் என் நெஞ்சம் துடிக்கிறது.[i]
மரண பயம் என்னை உலுக்கியெடுக்கிறது.[j]
5 பயமும் திகிலும் என்னைப் பிடித்து ஆட்டுகிறது.
நான் நடுநடுங்கிக்கொண்டிருக்கிறேன்.
6 “எனக்கு மட்டும் புறாவைப் போலச் சிறகுகள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
நான் எங்கேயாவது பறந்துபோய் பாதுகாப்பாக வாழ்வேனே!
7 கண்காணாத இடத்துக்குத் தப்பித்துப் போவேனே![k]
வனாந்தரத்தில் போய்த் தங்கியிருப்பேனே![l] (*சேலா*)
8 புயலிலும் சூறாவளியிலும் சிக்காமல்,
பத்திரமான இடத்துக்கு வேகமாய்ப் போவேனே!” என்று புலம்பிக்கொண்டிருக்கிறேன்.
9 யெகோவாவே, அவர்களைக் குழப்புங்கள். அவர்களுடைய திட்டங்களைக் குலைத்துப்போடுங்கள்.[m]
ஏனென்றால், நகரத்தில் வன்முறைகளும் மோதல்களும் நடப்பதை நான் பார்க்கிறேன்.
10 அவர்கள் ராத்திரி பகலாக அதன் மதில்கள்மேல் நடந்துகொண்டிருக்கிறார்கள்.
நகரத்துக்குள் ஒரே பகையும் பிரச்சினையுமாக இருக்கிறது.[n]
11 நகரமே சீரழிந்துவிட்டது.
அதன் பொது சதுக்கத்தில் அடக்குமுறையும் மோசடியும்தான் நடக்கிறது.[o]
12 என்னை நோகடிக்கிறவன் எதிரி அல்ல.[p]
அப்படியிருந்தால் சகித்திருப்பேனே!

அதி. 54
a சங் 7:17; சங் 52:9
b 2சா 4:9; சங் 34:19; சங் 37:39
c சங் 37:34; சங் 59:10

அதி. 55
d 1பே 3:12
e சங் 28:2; சங் 143:7
f சங் 17:1
g ஏசா 38:14
h 2சா 16:5-7
i சங் 69:29
j சங் 18:4; சங் 116:3; ஏசா 38:10
k 2சா 15:14
l 1சா 23:14
m 2சா 15:31; 2சா 17:7
n 2சா 17:1
o சங் 109:2
p சங் 41:9; மத் 26:21; யோவா 13:18

54:6 *வே.வா., “அருமையானது.” **55:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **55:1** *வே.வா., “நான் உதவி கேட்டு ஜெபம் செய்யும்போது மறைந்துகொள்ளாதீர்கள்.”

எனக்கு எதிராகக் கிளம்பியிருக்கிறவன் விரோதி அல்ல;
அப்படியிருந்தால் ஓடி ஒளிந்திருப்பேனே!
13 ஆனால், உண்மையில் என்னை எதிர்க்கிறவன் நீதான்.
நீ எனக்குச் சமமானவன்.[a]
எனக்கு நன்றாகப் பழக்கப்பட்டவன்.[b]
14 நாம் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம்.
மக்கள் எல்லாரோடும் சேர்ந்து கடவுளுடைய ஆலயத்துக்கு நடந்துபோனோம்.
15 எதிரிகள் அழிந்துபோகட்டும்![c] உயிரோடு கல்லறைக்குள் புதைந்துபோகட்டும்!
ஏனென்றால், அவர்களைச் சுற்றியும் அவர்களுக்கு உள்ளேயும் அக்கிரமம்தான் குடிகொண்டிருக்கிறது.
16 ஆனால், நான் கடவுளைக் கூப்பிடுவேன்.
யெகோவா என்னைக் காப்பாற்றுவார்.[d]
17 சாயங்காலத்திலும் காலையிலும் மத்தியானத்திலும்
நான் வேதனையில் குமுறுகிறேன்.[e]
அவர் என் குரலைக் கேட்கிறார்.[f]
18 என்னோடு மோதுகிற ஆட்களிடமிருந்து அவர் என்னைக் காப்பாற்றி, எனக்கு நிம்மதி தருவார்.
ஏனென்றால், ஏராளமானவர்கள் என்னைத் தாக்க வருகிறார்கள்.[g]
19 கடவுள் என் வேண்டுதலைக் கேட்பார்.
காலம்காலமாகச் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பவர்[h] அவர்களுக்குப் பதிலடி கொடுப்பார்.[i] (*சேலா*)
கடவுளுக்குப் பயப்படாத அந்த ஆட்கள் திருந்தவே மாட்டார்கள்.[j]
20 என் நண்பன்* தன்னோடு நெருங்கிப் பழகியவர்களையே தாக்கினான்.[k]
தான் செய்த ஒப்பந்தத்தையே மீறினான்.[l]
21 அவனுடைய வார்த்தைகள் வெண்ணெயைவிட மென்மையாக இருக்கின்றன.[m]
ஆனால், அவனுடைய உள்ளத்தில் பகையும் வெறுப்பும் நிறைந்திருக்கின்றன.
அவனுடைய வார்த்தைகள் எண்ணெயைவிட மென்மையாக இருக்கின்றன.
ஆனால், அவை வாள்போல் தாக்குகின்றன.[n]
22 யெகோவாமேல் உன் பாரத்தைப் போட்டுவிடு.[o]
அவர் உன்னை ஆதரிப்பார்.[p]
நீதிமானை ஒருபோதும் தள்ளாட விடமாட்டார்.[q]
23 கடவுளே, பொல்லாதவர்களை நீங்கள் படுகுழியில் தள்ளுவீர்கள்.[r]
கொலைகாரர்களும் மோசடிக்காரர்களும் தங்கள் வாழ்நாளில் பாதியைக்கூட தாண்ட மாட்டார்கள்.[s]
ஆனால், நான் உங்களையே நம்பியிருப்பேன்.

55:20 *அதாவது, 13, 14 வசனங்களில் குறிப்பிடப்பட்ட முன்னாள் நண்பனைக் குறிக்கிறது.

அதி. 55
a 2சா 15:12, 2சா 16:23
b லூ 22:21, லூ 22:48
c 2சா 17:23, 2சா 18:14, சங் 109:15, மத் 27:3, 5, அப் 1:16, 18
d சங் 91:15
e சங் 119:147, தானி 6:10
f சங் 5:3
g 2நா 32:7, சங் 3:6
h உபா 33:27, சங் 90:2
i சங் 143:12
j சங் 36:1
k 2சா 15:12
l 2சா 5:3, பிர 8:2
m 2சா 16:23
n சங் 28:3, சங் 62:4
o சங் 43:5, 1பே 5:6, 7
p சங் 37:5, சங் 68:19, பிலி 4:6, 7
q சங் 37:23, 24, சங் 62:2, சங் 121:3
r சங் 55:15
s சங் 5:6, நீதி 10:27

இசைக் குழுவின் தலைவனுக்கு; “தூரத்தில் இருக்கிற அமைதிப் புறா” என்ற
இசையில்; மிக்தாம்.* காத் நகரத்தில்[a] பெலிஸ்தியர்கள்
தாவீதைப் பிடித்த சமயத்தில் அவர் பாடிய பாடல்.

56 கடவுளே, எனக்குக் கருணை காட்டுங்கள்; அற்ப மனுஷன்
என்னைத் தாக்குகிறான்.
நாள் முழுவதும் எதிரிகள் என்னோடு சண்டை போடுகிறார்கள்,
என்னை அடக்கி ஒடுக்குகிறார்கள்.
2 நாள் முழுவதும் என் விரோதிகள் என்னைக் கடித்துக் குதறப்
பார்க்கிறார்கள்.
நிறைய பேர் ஆணவத்தோடு என்னை எதிர்த்துச் சண்டை
போடுகிறார்கள்.
3 எனக்குப் பயமாக இருக்கும்போது[b] உங்களைத்தான்
நம்பியிருக்கிறேன்.[c]
4 கடவுளுடைய வார்த்தையை நான் புகழ்கிறேன்.
கடவுள்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; அதனால் பயப்பட
மாட்டேன்.
அற்ப மனுஷனால் என்னை என்ன செய்ய முடியும்?[d]
5 எதிரிகள் நாளெல்லாம் எனக்குத் தொல்லை கொடுக்கிறார்கள்.
எனக்குக் கெடுதல் செய்வதிலேயே குறியாக இருக்கிறார்கள்.[e]
6 என்னைத் தாக்குவதற்குப் பதுங்கியிருக்கிறார்கள்.
நான் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியையும் நோட்டமிடுகிறார்கள்.[f]
என்னைத் தீர்த்துக்கட்டுவதற்குத் துடிக்கிறார்கள்.[g]
7 கடவுளே, அவர்கள் அக்கிரமம் செய்வதால் அவர்களை
ஒதுக்கித்தள்ளுங்கள்.
கோபத்தில் அவர்களைத் தண்டியுங்கள்.[h]
8 என் அலைச்சல்களை நீங்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்.[i]
என் கண்ணீர்த் துளிகளைத் தயவுசெய்து உங்களுடைய தோல் பையில்
சேர்த்து வையுங்கள்.[j]
நீங்கள் அவற்றையெல்லாம் எண்ணி உங்களுடைய புத்தகத்தில்
எழுதி வைத்திருக்கிறீர்களே![k]
9 உதவிக்காக நான் உங்களைக் கூப்பிடும் நாளில், என் எதிரிகள்
பின்வாங்கி ஓடுவார்கள்.[l]
கடவுள் என் பக்கத்தில் இருக்கிறார் என்பதை நான் உறுதியாக
நம்புகிறேன்.[m]
10 கடவுளுடைய வார்த்தையை நான் புகழ்கிறேன்.
யெகோவாவின் வார்த்தையைப் புகழ்கிறேன்.
11 கடவுள்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; அதனால் பயப்பட
மாட்டேன்.[n]
அற்ப மனுஷனால் என்னை என்ன செய்ய முடியும்?[o]
12 கடவுளே, உங்களிடம் நேர்ந்துகொண்டதை நிறைவேற்றுகிற கடமை
எனக்கு இருக்கிறது.[p]
நான் நிச்சயமாக உங்களுக்கு நன்றிப் பலிகளைச் செலுத்துவேன்.[q]

56:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 56
a 1சா 21:10
b 1சா 21:12
c சங் 18:2
d சங் 27:1; சங் 56:10, 11; ரோ 8:31; எபி 13:6
e எரே 18:18
f லூ 20:20
g சங் 59:3; சங் 71:10
h எரே 18:23
i 1சா 27:1
j சங் 39:12
k மல் 3:16
l சங் 18:40
m ரோ 8:31
n சங் 27:1
o சங் 56:4; ஏசா 51:7, 12
p எண் 30:2; பிர 5:4
q சங் 50:23

13 ஏனென்றால், வாழ்வின் ஒளியிலே நான் உங்கள்முன் நடக்கும்படி,[a]
நீங்கள் என்னைச் சாவிலிருந்து காப்பாற்றினீர்கள்.[b]
என் கால்கள் தடுமாறாமல் பார்த்துக்கொண்டீர்கள்.[c]

இசைக் குழுவின் தலைவனுக்கு; "அழித்துவிடாதீர்கள்" என்ற இசையில்; மிக்தாம்.* சவுலிடமிருந்து தப்பித்துப்போய் குகையில் ஒளிந்திருந்தபோது[d] தாவீது பாடிய பாடல்.

57 கடவுளே, கருணை காட்டுங்கள், எனக்குக் கருணை காட்டுங்கள்.
நான் உங்களிடம் தஞ்சம் அடைந்திருக்கிறேன்.[e]
ஆபத்துகள் கடந்துபோகும்வரை* உங்களுடைய சிறகுகளின் நிழலில் தஞ்சம் அடைந்திருக்கிறேன்.[f]
2 நான் உன்னதமான கடவுளைக் கூப்பிடுகிறேன்.
என் கஷ்டங்களுக்கு முடிவுகட்டுகிற உண்மைக் கடவுளைக் கூப்பிடுகிறேன்.
3 அவர் பரலோகத்திலிருந்து உதவி அனுப்பி, என்னைக் காப்பாற்றுவார்.[g]
என்மேல் பாய்கிறவனை அடக்கிப்போடுவார். (*சேலா*)
அவர் எனக்கு மாறாத அன்பையும் உண்மைத்தன்மையையும் காட்டுவார்.[h]
4 சிங்கங்கள் என்னைச் சூழ்ந்திருக்கின்றன.[i]
என்னை விழுங்கப் பார்க்கிறவர்களின் நடுவே நான் விழுந்து கிடக்க வேண்டியிருக்கிறது.
அவர்களுடைய பற்கள் ஈட்டிகளையும் அம்புகளையும் போல இருக்கின்றன.
அவர்களுடைய நாவு கூர்மையான வாள்போல் இருக்கிறது.[j]
5 கடவுளே, உங்களுடைய புகழ் வானத்துக்கும் மேலாக உயரட்டும்.
உங்களுடைய மகிமை பூமியெங்கும் பரவட்டும்.[k]
6 என் கால்களைச் சிக்க வைக்க அவர்கள் வலை விரித்திருக்கிறார்கள்.[l]
நான் வேதனையில் துவண்டுபோயிருக்கிறேன்.[m]
என்னை விழ வைக்க அவர்கள் குழி தோண்டினார்கள்.
ஆனால், அவர்களே அதில் விழுந்தார்கள்.[n] (*சேலா*)
7 கடவுளே, நான் உள்ளத்தில் உறுதியோடு இருக்கிறேன்.[o]
என் உள்ளத்தில் உறுதியோடு இருக்கிறேன்.
நான் இசை இசைத்துப் பாடுவேன்.
8 என் உள்ளமே, விழித்தெழு!
நரம்பிசைக் கருவியே, விழித்தெழு! யாழே, நீயும் விழித்தெழு!
நான் விடியலைத் தட்டி எழுப்புவேன்.[p]
9 யெகோவாவே, மக்கள் நடுவில் உங்களைப் புகழ்வேன்.[q]
தேசங்கள் மத்தியில் உங்களைப் புகழ்ந்து பாடுவேன்.*[r]
10 ஏனென்றால், உங்களுடைய மாறாத அன்பு மகத்தானது.
அது வானத்தைப் போல உயர்ந்தது.[s]
உங்களுடைய உண்மைத்தன்மை ஆகாயத்தையே தொடுகிறது.

57:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **57:1** *வே.வா., "துன்பங்கள் தீரும் வரை." **57:9** *வே.வா., "இசை இசைப்பேன்."

அதி. 56
a யோபு 33:29, 30
b 2கொ 1:10
c சங் 94:18; சங் 116:8

அதி. 57
d 1சா 22:1; 1சா 24:3; சங் 142:மே.கு.
e சங் 18:2
f ரூ 2:12; சங் 17:8
g சங் 144:7; அப் 12:11
h சங் 40:11; சங் 61:7
i சங் 22:13; சங் 35:17
j சங் 52:2; சங் 64:3; நீதி 25:18
k சங் 57:11; சங் 108:5
l சங் 35:7
m சங் 42:6
n 1சா 24:4; நீதி 26:27
o சங் 112:7
p சங் 108:2-5
q சங் 9:11; சங் 145:11, 12
r ரோ 15:9
s சங் 36:5; சங் 103:11

11 கடவுளே, உங்களுடைய புகழ் வானத்துக்கும் மேலாக உயரட்டும்.
உங்களுடைய மகிமை பூமியெங்கும் பரவட்டும்.[a]

இசைக் குழுவின் தலைவனுக்கு;
“அழித்துவிடாதீர்கள்” என்ற இசையில்; தாவீதின் பாடல். மிக்தாம்.*

58 மனிதர்களே, இப்படி அமைதியாக இருந்தால் நீதியைப் பற்றி உங்களால் பேச முடியுமா?[b]
நேர்மையோடு தீர்ப்பு கொடுக்க முடியுமா?[c]
2 அக்கிரமம் செய்வதற்கு நீங்கள் உள்ளத்திலே திட்டம் போடுகிறீர்கள்.[d]
தேசத்திலே வன்முறையைக் கையில் எடுக்கிறீர்கள்.[e]
3 பிறந்ததிலிருந்தே பொல்லாதவர்கள் தவறான வழியில் போகிறார்கள்.
பிறந்த சமயத்திலிருந்தே சீர்கெட்டுப் போயிருக்கிறார்கள், பொய் பேசுகிறார்கள்.
4 அவர்களுடைய விஷம் பாம்புகளின் விஷம்போல் இருக்கிறது.[f]
காதை அடைத்துக்கொள்கிற நாகப்பாம்புபோல் அவர்கள் செவிடர்களாக இருக்கிறார்கள்.
5 பாம்பாட்டிகள் என்னதான் திறமையாக மகுடி ஊதினாலும்,
அவர்களுடைய சத்தம் கேட்காதபடி அது தன் காதை அடைத்துக்கொள்கிறது.
6 கடவுளே, எதிரிகளின் பற்களை உடைத்தெறியுங்கள்!
யெகோவாவே, இந்தச் சிங்கங்களின் தாடைகளை நொறுக்கிப்போடுங்கள்!
7 வேகமாய் ஓடி மறைந்துபோகிற காட்டாறுபோல் அவர்கள் மறைந்துபோகட்டும்.
கடவுள் தன்னுடைய வில்லை வளைத்து அவர்களை அம்புகளால் வீழ்த்தட்டும்.
8 ஊர்ந்து ஊர்ந்து கரைந்துபோகிற நத்தைபோல் அவர்கள் கரைந்துபோகட்டும்.
செத்துப் பிறக்கிற குழந்தைபோல் சூரிய ஒளியைப் பார்க்காமல் போகட்டும்.
9 சுள்ளிக் குச்சிகளின்* நெருப்பினால் உங்களுடைய பானை சூடாவதற்கு முன்பே,
கடவுள் ஒரு புயல்காற்றுபோல் வந்து,
பச்சையான குச்சிகளையும் எரிகிற குச்சிகளையும் அடித்துக்கொண்டுபோவார்.[g]
10 பொல்லாதவன் பழிவாங்கப்பட்டதைப் பார்த்து நீதிமான் சந்தோஷப்படுவான்.[h]
அவனுடைய பாதங்களில் பொல்லாதவனின் இரத்தம் வழிந்தோடும்.[i]
11 அப்போது, “நீதிமான்களுக்குக் கண்டிப்பாகப் பலன் கிடைக்கும்” என்றும்,[j]
“பூமியை நியாயந்தீர்க்கிற கடவுள் ஒருவர் நிச்சயமாகவே இருக்கிறார்”[k] என்றும் மனிதர்கள் சொல்வார்கள்.

58:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **58:9** *வே.வா., “முள் குச்சிகளின்.”

அதி. 57
a சங் 8:1
சங் 57:5
சங் 108:5

அதி. 58
b 2நா 19:6
c சங் 82:2
d பிர 3:16
மீ 3:9
e பிர 5:8
ஏசா 10:1, 2
f சங் 140:3
யாக் 3:8
g நீதி 10:25
எரே 23:19
h சங் 52:5, 6
சங் 64:10
எசே 25:17
வெளி 18:20
i நீதி 21:18
j ஏசா 3:10
k சங் 9:16
சங் 98:9

இசைக் குழுவின் தலைவனுக்கு; "அழித்துவிடாதீர்கள்" என்ற இசையில்; மிக்தாம்.* தாவீதின் வீட்டை நோட்டமிட்டு அவரைக் கொல்வதற்காக சவுல் தன் ஆட்களை அனுப்பியபோது[a] தாவீது பாடிய பாடல்.

59 கடவுளே, எதிரிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.[b]
எனக்கு எதிராகக் கிளம்பியிருக்கிற ஆட்களிடமிருந்து எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்.[c]
2 அக்கிரமம் செய்கிற ஆட்களிடமிருந்தும்,
வன்முறையில் இறங்குகிற ஆட்களிடமிருந்தும்* என்னைக் காப்பாற்றுங்கள்.
3 இதோ! என்னைத் தாக்குவதற்காக அவர்கள் பதுங்கியிருக்கிறார்கள்.[d]
யெகோவாவே, நான் எந்தக் கலகமோ பாவமோ செய்யவில்லை.[e]
ஆனாலும், பலசாலிகள் என்னைத் தாக்குகிறார்கள்.
4 நான் எந்தக் குற்றமும் செய்யாவிட்டாலும், என்னைத் தாக்குவதற்காக ஓடி வருகிறார்கள்.
என் குரலைக் கேட்டு எழுந்திடுங்கள், என்னைப் பாருங்கள்.
5 பரலோகப் படைகளின் கடவுளான யெகோவாவே, நீங்கள்தான் இஸ்ரவேலின் கடவுள்.[f]
எல்லா தேசங்களையும் நியாயந்தீர்ப்பதற்காக எழுந்து வாருங்கள்.
கெட்ட எண்ணத்தோடு துரோகம் செய்கிற யாருக்கும் இரக்கம் காட்டாதீர்கள்.[g] (*சேலா*)
6 ஒவ்வொரு சாயங்கால வேளையிலும் அவர்கள் வருகிறார்கள்.[h]
நாய்கள்போல் ஊளையிட்டுக்கொண்டு,*[i] ஊரைச் சுற்றித் திரிகிறார்கள்.[j]
7 அவர்களுடைய வாயிலிருந்து கெட்ட வார்த்தைகள் எப்படிக் கொட்டுகிறதென்று பாருங்கள்.
அவர்களுடைய உதடுகள் வாள்களைப் போல இருக்கின்றன.[k]
"இதையெல்லாம் யார் கேட்கிறார்கள்?" என்று சொல்லிக்கொள்கிறார்கள்.[l]
8 ஆனால் யெகோவாவே, நீங்கள் அவர்களைப் பார்த்து சிரிப்பீர்கள்.[m]
எல்லா தேசங்களையும் பார்த்து ஏளனம் செய்வீர்கள்.[n]
9 என் பலமாக இருக்கிறவரே, நான் உங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்.[o]
கடவுளே, நீங்கள்தான் எனக்குப் பாதுகாப்பான* அடைக்கலம்.[p]
10 எனக்கு மாறாத அன்பைக் காட்டுகிற கடவுள் என் உதவிக்கு வருவார்.[q]
எதிரிகளை நான் வெற்றிப் பெருமிதத்தோடு பார்க்கும்படி செய்வார்.[r]
11 அவர்களைக் கொன்றுவிடாதீர்கள்; அப்படிச் செய்தால், என் ஜனங்கள் அதை மறந்துவிடுவார்களே.
அதனால், உங்களுடைய பலத்தைப் பயன்படுத்தி அவர்களை அலைய விடுங்கள்.
யெகோவாவே, எங்கள் கேடயமே,[s] அவர்களைத் தோற்கடியுங்கள்.
12 அவர்கள் தங்களுடைய வாயினாலும் தங்களுடைய உதடுகளின் வார்த்தைகளினாலும் பாவம் செய்கிறார்கள்.

59:மே.கு. * சொல் பட்டியலைப் பாருங்கள். **59:2** * வே.வா., "இரத்தவெறி பிடித்தவர்களிடமிருந்தும்." **59:6** * வே.வா., "குரைத்துக்கொண்டு." **59:9** * வே.வா., "உயர்ந்த."

அதி. 59
a 1சா 19:11
b 1சா 19:12; சங் 18:48; சங் 71:4
c சங் 12:5; சங் 91:14
d 1சா 19:1; சங் 10:9; சங் 71:10
e 1சா 24:11; 1சா 26:18; சங் 69:4
f உபா 33:29
g நீதி 2:22
h 1சா 19:11
i சங் 22:16
j சங் 59:14
k சங் 57:4; சங் 64:3
l சங் 10:4, 11; சங் 73:3, 11
m சங் 37:12, 13
n சங் 33:10
o சங் 27:1; சங் 46:1
p சங் 9:9; சங் 62:2
q சங் 6:4
r சங் 54:7
s ஆதி 15:1; உபா 33:29; சங் 3:3

அவர்கள் சபித்துப் பேசுகிறார்கள், பொய் பேசுகிறார்கள்.
அதனால், அவர்களுடைய பெருமையே அவர்களைச் சிக்க வைக்கட்டும்.[a]
13 உங்களுடைய கோபத்தால் அவர்களை ஒழித்துக்கட்டுங்கள்.[b]
அவர்களை ஒரேயடியாக ஒழித்துக்கட்டுங்கள்.
கடவுள்தான் யாக்கோபையும் பூமி முழுவதையும் ஆளுகிறார் என்பதை அவர்களுக்குக் காட்டுங்கள்.[c] (*சேலா*)
14 சாயங்கால வேளையில் அவர்கள் வரட்டும்.
நாய்கள்போல் ஊளையிட்டுக்கொண்டு,* ஊரைச் சுற்றித் திரியட்டும்.[d]
15 உணவுக்காக அலையட்டும்.[e]
திருப்தி அடையாமலும், தங்குவதற்கு இடம் இல்லாமலும் தவிக்கட்டும்.
16 ஆனால், நான் உங்களுடைய பலத்தைப் பற்றிப் புகழ்ந்து பாடுவேன்.[f]
காலையில் உங்களுடைய மாறாத அன்பைப் பற்றிச் சந்தோஷமாகப் பேசுவேன்.
ஏனென்றால், நீங்கள்தான் எனக்குப் பாதுகாப்பான அடைக்கலம்,[g]
இக்கட்டான காலத்தில் நான் ஓடி வருவதற்கான கோட்டை.[h]
17 என் பலமாக இருக்கிறவரே, நான் உங்களையே புகழ்ந்து பாடுவேன்.*[i]
ஏனென்றால், எனக்கு மாறாத அன்பைக் காட்டுகிற கடவுளான நீங்கள்தான் எனக்குப் பாதுகாப்பான அடைக்கலம்.[j]

இசைக் குழுவின் தலைவனுக்கு; "நினைப்பூட்டும் லில்லி மலர்" என்ற இசையில்; மிக்தாம்.* தாவீது பாடியது. போதிப்பதற்குரியது. அராம்-நகராயிம் ஜனங்களோடும் அராம்-சோபா ஜனங்களோடும் தாவீது போர் செய்த சமயத்தில், யோவாப் திரும்பி வந்து ஏதோமியர்களில் 12,000 பேரை உப்புப் பள்ளத்தாக்கில் தோற்கடித்தபோது பாடப்பட்டது.[k]

60 கடவுளே, நீங்கள் எங்களை ஒதுக்கித்தள்ளினீர்கள்; எங்களைச் சிதறடித்தீர்கள்.[l]
எங்கள்மேல் கோபமாக இருந்தீர்கள்; ஆனால், மறுபடியும் எங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்!
2 நீங்கள் பூமியை அதிர வைத்தீர்கள்; அதை இரண்டாகப் பிளந்தீர்கள்.
அதன் விரிசல்களைச் சரிசெய்யுங்கள், அது இடிந்து விழுந்துகொண்டிருக்கிறது.
3 உங்களுடைய மக்களைத் துன்பப்பட வைத்தீர்கள்.
தள்ளாட வைக்கிற திராட்சமதுவை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள்.[m]
4 உங்களுக்குப் பயந்து நடக்கிறவர்களுக்காக ஒரு கம்பத்தை* நாட்டுங்கள்.#
அம்புகளிலிருந்து தப்பிப்பதற்காக அவர்கள் அதனிடம் ஓடி வரட்டும். (*சேலா*)
5 உங்களுக்குப் பிரியமானவர்கள் விடுவிக்கப்படும்படி,

அதி. 59
a சங் 64:8; நீதி 12:13; நீதி 16:18
b சங் 7:9
c 1சா 17:46; சங் 9:16; சங் 83:17, 18
d சங் 59:6
e சங் 109:2, 10
f யோபு 37:23; சங் 21:13; சங் 145:10-12
g 1சா 17:37; சங் 61:3
h நீதி 18:10
i ஏசா 12:2
j சங் 59:10

அதி. 60
k 2சா 8:13; 1நா 18:3
l சங் 60:10
m ஏசா 51:17

59:14 *வே.வா., "குரைத்துக்கொண்டு." **59:17** *வே.வா., "இசை இசைப்பேன்." **60:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **60:4** *வே.வா., "கொடிக் கம்பத்தை." #அல்லது, "நாட்டினீர்கள்."

உங்கள் வலது கையால் எங்களைக் காப்பாற்றி, எங்களுக்குப்
பதில் கொடுங்கள்.[a]
6 பரிசுத்தமான* கடவுள் இப்படிச் சொன்னார்:
"நான் சந்தோஷத்தோடு என் ஜனங்களுக்கு சீகேமைச் சொத்தாகக்
கொடுப்பேன்.[b]
சுக்கோத் பள்ளத்தாக்கைப் பங்காக அளந்து கொடுப்பேன்.[c]
7 கீலேயாத் என்னுடையது, மனாசேயும்[d] என்னுடையது.
எப்பிராயீம் என் தலைக்கவசம்.
யூதா என் அதிகாரக்கோல்.[e]
8 மோவாப் நான் பாதங்களைக் கழுவுகிற பாத்திரம்.[f]
ஏதோமின் மேல் என் செருப்பைத் தூக்கியெறிவேன்.[g]
பெலிஸ்தியாவைத் தோற்கடித்து வெற்றி முழக்கம் செய்வேன்."[h]
9 முற்றுகை போடப்பட்ட* நகரத்துக்கு யார் என்னை
அழைத்துக்கொண்டு போவார்?
ஏதோம்வரை யார் என்னை வழிநடத்துவார்?[i]
10 கடவுளே, நீங்கள்தானே இதைச் செய்வீர்கள்?
ஆனால், எங்களை ஒதுக்கிவிட்டீர்களே!
எங்களுடைய படைகளுக்குத் துணையாக வருவதை
நிறுத்திவிட்டீர்களே![j]
11 இக்கட்டில் தவிக்கும் எங்களுக்கு உதவி செய்யுங்கள்.
ஏனென்றால், மனிதர்கள் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண்.[k]
12 கடவுள் எங்களுக்குப் பலம் கொடுப்பார்.[l]
எங்களுடைய எதிரிகளை அவர் மிதித்துப் போடுவார்.[m]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் பாடல்.
நரம்பிசைக் கருவிகளோடு பாட வேண்டியது.

61

கடவுளே, உதவிக்காக நான் கூப்பிடும்போது கேளுங்கள்.
என் ஜெபத்தைக் கவனித்துக் கேளுங்கள்.[n]
2 என் நெஞ்சம் வேதனையில் தவிக்கும்போது,*[o]
நான் பூமியின் ஒரு முனையில் இருந்தாலும் உங்களைக் கூப்பிடுவேன்.
உயரமான கற்பாறைமேல் என்னைக் கொண்டுபோய் விடுங்கள்.[p]
3 ஏனென்றால், நீங்கள்தான் எனக்கு அடைக்கலம்,
எதிரியிடமிருந்து என்னைப் பாதுகாக்கிற பலமான கோட்டை.[q]
4 நான் என்றென்றும் உங்களுடைய கூடாரத்தில் விருந்தாளியாக
இருப்பேன்.[r]
உங்களுடைய சிறகுகளின் மறைவில் தஞ்சம் அடைவேன்.[s] (*சேலா*)
5 ஏனென்றால் கடவுளே, ஜெபத்தில் நான் நேர்ந்துகொண்டவற்றை
நீங்கள் காதுகொடுத்துக் கேட்டிருக்கிறீர்கள்.
உங்கள் பெயருக்குப் பயந்து நடக்கிறவர்களின் சொத்தை எனக்குக்
கொடுத்திருக்கிறீர்கள்.[t]

60:6 *அல்லது, "பரிசுத்தமான இடத்திலிருந்து." **60:9** *அல்லது, "மதில் சூழ்ந்த."
61:2 *வே.வா., "நொந்துபோகும்போது."

அதி. 60
a சங் 18:35; சங் 21:8; சங் 108:6; சங் 118:15; ஏசா 41:10
b ஆதி 12:6, 7
c யோசு 13:27, 28; சங் 108:7-9
d யோசு 13:29-31
e ஆதி 49:10
f எண் 24:17; 2சா 8:2
g எண் 24:18; 2சா 8:14
h 2சா 8:1
i 2சா 8:14; சங் 108:10-13
j உபா 1:42; உபா 20:4; யோசு 7:12
k சங் 62:9; சங் 118:8; சங் 146:3
l சங் 18:32
m 2சா 10:12; சங் 44:5

அதி. 61
n சங் 5:2; சங் 17:1; சங் 28:2; சங் 55:1
o யோனா 2:2
p சங் 27:5; சங் 40:2
q 1சா 17:45; சங் 18:2; நீதி 18:10
r சங் 23:6; சங் 27:4
s சங் 63:7
t சங் 115:13

6 ராஜாவுக்கு நீண்ட ஆயுளை நீங்கள் கொடுப்பீர்கள்.[a]
அவரைத் தலைமுறை தலைமுறையாக வாழ வைப்பீர்கள்.
7 கடவுளுக்கு முன்னால் அவர் என்றென்றும் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பார்.[b]
உங்களுடைய மாறாத அன்பாலும் உண்மைத்தன்மையாலும் அவரைப் பாதுகாத்திடுங்கள்.[c]
8 அப்போது, நான் என்னுடைய நேர்த்திக்கடன்களைத் தினமும் செலுத்துவேன்.[d]
உங்களுடைய பெயரைக் காலமெல்லாம் புகழ்ந்து பாடுவேன்.*[e]

இசைக் குழுவின் தலைவனுக்கு; எதித்தூன்.* தாவீதின் சங்கீதம்.

62 நான் கடவுளுக்காக அமைதியாய்க் காத்திருக்கிறேன்.
அவர்தான் என்னை மீட்பார்.[f]
2 அவர்தான் என் கற்பாறை, என் மீட்பர், பாதுகாப்பான* அடைக்கலம்.[g]
நான் ஒரேயடியாக அசைத்துத் தள்ளப்பட# மாட்டேன்.[h]
3 ஒருவனைக் கொல்வதற்காக எவ்வளவு காலம்தான் அவனைத் தாக்கிக்கொண்டே இருப்பீர்கள்?[i]
விழும் நிலையிலிருக்கிற சாய்ந்த கற்சுவர் போல நீங்கள் எல்லாரும் ஆபத்தானவர்களாக இருக்கிறீர்கள்.*
4 அவனை உயர்ந்த* நிலையிலிருந்து தள்ளுவதற்காக அவர்கள் ஒன்றுகூடி திட்டம் போடுகிறார்கள்.
பொய் பேசுவதில் சந்தோஷப்படுகிறார்கள்.
தங்கள் வாயால் ஆசீர்வதிக்கிறார்கள், ஆனால் தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள்.[j] (*சேலா*)
5 நான் கடவுளுக்காக அமைதியாய்க் காத்திருக்கிறேன்.[k]
ஏனென்றால், எனக்கு நம்பிக்கை தருகிறவர் அவர்தான்.[l]
6 அவர்தான் என் கற்பாறை, என் மீட்பர், பாதுகாப்பான அடைக்கலம்.
நான் ஒருபோதும் அசைக்கப்பட மாட்டேன்.[m]
7 என் மீட்பும் மகிமையும் கடவுள் கையில்தான் இருக்கின்றன.
கடவுள்தான் என்னுடைய பலமான கற்பாறை, என் அடைக்கலம்.[n]
8 ஜனங்களே, எப்போதும் அவர்மேல் நம்பிக்கை வையுங்கள்.
உங்களுடைய இதயத்தில் இருப்பதையெல்லாம் அவர்முன் ஊற்றிவிடுங்கள்.[o]
கடவுள்தான் நமக்குத் தஞ்சம்.[p] (*சேலா*)
9 மனிதர்கள் எல்லாரும் வெறும் மூச்சுக்காற்றுதான்.
மக்கள் எல்லாரும் மாயைதான்.[q]
அவர்கள் எல்லாரையும் தராசில் நிற்க வைத்தால்,
மூச்சுக்காற்றைவிட லேசாகத்தான் இருப்பார்கள்.[r]
10 அடுத்தவர் பணத்தைப் பறித்து நன்றாக வாழலாம் என்று நினைக்காதீர்கள்.

61:8 *வே.வா., “இசை இசைப்பேன்.” **62:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **62:2** *வே.வா., “உயர்ந்த.” #வே.வா., “தடுமாறி விழ.” **62:3** *அல்லது, “நீங்கள் எல்லாரும் அவனைப் பார்க்கிறீர்கள்.” **62:4** *வே.வா., “கண்ணியமான.”

அதி. 61
a சங் 18:50; சங் 21:1, 4
b 2சா 7:16, 17; சங் 41:12
c சங் 40:11; சங் 143:12; நீதி 20:28
d சங் 65:1; சங் 66:13; பிர 5:4
e சங் 146:2

அதி. 62
f சங் 37:39; சங் 68:19; ஏசா 12:2
g சங் 18:2
h சங் 37:23, 24; 2கொ 4:8, 9
i சங் 38:12
j சங் 5:9; சங் 28:3; சங் 55:21
k சங் 43:5; மீ 7:7
l சங் 62:1, 2; சங் 71:5
m சங் 16:8; நீதி 10:30
n சங் 95:1; ஏசா 26:4
o 1சா 1:15
p நீதி 14:26
q சங் 60:11
r ஏசா 40:15

திருட்டுத் தொழிலில் வீணாக நம்பிக்கை வைக்காதீர்கள்.
உங்கள் செல்வம் பெருகும்போது, அதன் மேலேயே உங்கள்
கவனத்தை* வைக்காதீர்கள்.[a]
11 பலம் கடவுளுடையது.[b]
இதைக் கடவுளே சொன்னார், நான் இரண்டு தடவை கேட்டேன்.
12 யெகோவாவே, மாறாத அன்பும் உங்களுடையதுதான்.[c]
அவரவர் செயலுக்குத் தகுந்தபடி அவரவருக்கு நீங்கள் பலன்
கொடுக்கிறீர்கள்.[d]

யூதாவின் வனாந்தரத்தில் இருந்தபோது[e] தாவீது பாடிய சங்கீதம்.

63 கடவுளே, நீங்கள்தான் என் கடவுள். நான் எப்போதும் உங்களைத்
தேடுகிறேன்.[f]
உங்களுக்காகத் தவிக்கிறேன்.[g]
தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கும் தேசத்திலே,
உங்களுக்காகத் தவித்துத் தவித்துத் துவண்டு விழுகிறேன்.[h]
2 பரிசுத்த இடத்தில் நான் உங்களைப் பார்த்தேன்.
உங்களுடைய பலத்தையும் மகிமையையும் கண்டேன்.[i]
3 உங்களுடைய மாறாத அன்பு உயிரைவிட மேலானது.[j]
அதனால், என் உதடுகள் உங்களை மகிமைப்படுத்தும்.[k]
4 வாழ்நாளெல்லாம் உங்களைப் புகழ்வேன்.
உங்களுடைய பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்வேன்.*
5 அருமையான விருந்தைச் சாப்பிட்டது போல நான் திருப்தியாக
உணர்கிறேன்.
அதனால், சந்தோஷம் பொங்க என் உதடுகளால் உங்களைப்
புகழ்வேன்.[l]
6 படுத்திருக்கும் நேரத்தில் உங்களை நினைத்துப் பார்க்கிறேன்.
நடுராத்திரியில் உங்களைப் பற்றித் தியானித்துப் பார்க்கிறேன்.[m]
7 ஏனென்றால், நீங்கள்தான் எனக்குத் துணை.[n]
உங்களுடைய சிறகுகளின் நிழலில் சந்தோஷத்தோடு உங்களைப்
புகழ்ந்து பாடுவேன்.[o]
8 உங்களை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்.
உங்கள் வலது கை என்னைக் கெட்டியாகப் பிடித்திருக்கிறது.[p]
9 என் உயிரை எடுக்கத் துடிப்பவர்கள்
பூமியின் ஆழத்துக்குள் புதைந்துபோவார்கள்.
10 அவர்கள் வாளுக்குப் பலியாவார்கள்.
நரிகளுக்கு* இரையாவார்கள்.
11 ஆனால், கடவுளை நினைத்து ராஜா சந்தோஷப்படுவார்.
கடவுளுடைய பெயரில் சத்தியம் செய்கிற எல்லாரும்
பூரித்துப்போவார்கள்.*
ஏனென்றால், பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.

62:10 *நே.மொ., "இதயத்தை." **63:4** *வே.வா., "என் கைகளை உயர்த்துவேன்." **63:10** *வே.வா., "குள்ளநரிகளுக்கு." **63:11** *வே.வா., "பெருமையாகப் பேசுவார்கள்."

அதி. 62
a உபா 6:10-12; யோபு 31:24, 28; நீதி 11:4, 28; நீதி 23:4, 5; மத் 6:19, 24; மாற் 8:36; லூ 12:15; 1தீ 6:17; 1யோ 2:16
b யோபு 9:4; நாகூ 1:3; வெளி 19:1
c சங் 36:7; சங் 86:15; மீ 7:18
d யோபு 34:11; நீதி 24:12; ரோ 2:6; 2கொ 5:10; கலா 6:7; 2தீ 4:14; வெளி 20:12, 13; வெளி 22:12

அதி. 63
e 1சா 23:14
f ஏசா 26:9
g சங் 42:2
h சங் 63:மே.கு.; சங் 143:6
i 1நா 16:28; சங் 96:6
j சங் 30:5; சங் 100:5
k சங் 66:16, 17
l சங் 71:23; சங் 135:3
m சங் 119:55, 148
n 1சா 17:37
o சங் 5:11; சங் 57:1; சங் 61:4
p ஏசா 41:10

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

64 கடவுளே, நான் கெஞ்சும்போது கேளுங்கள்.[a]
எதிரியின் மிரட்டலுக்கு முடிவுகட்டி என் உயிரைக் காப்பாற்றுங்கள்.
2 பொல்லாதவர்களின் ரகசியத் திட்டங்களிலிருந்தும்,[b]
அக்கிரமக்காரர்களின் கும்பலிலிருந்தும் எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்.
3 அவர்கள் தங்களுடைய நாவை வாள்போல் கூர்மையாக்குகிறார்கள்.
கொடூரமான வார்த்தைகளை அம்புகள்போல் குறிபார்த்து எறிகிறார்கள்.
4 மறைவான இடங்களிலிருந்து அப்பாவி மனிதனை அந்த அம்புகளால் தாக்குகிறார்கள்.
பயமே இல்லாமல் திடீரென்று அவனைத் தாக்குகிறார்கள்.
5 தங்களுடைய கெட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதில் விடாப்பிடியாக இருக்கிறார்கள்.*
கண்ணிகளை எப்படி மறைத்து வைக்கலாம் என்று கலந்து பேசுகிறார்கள்.
“இவற்றை யாரும் பார்க்க மாட்டார்கள்” என்று சொல்லிக்கொள்கிறார்கள்.[c]
6 தவறுகள் செய்வதற்குப் புதுப்புது வழிகளைத் தேடுகிறார்கள்.
யாருக்கும் தெரியாமல் சாமர்த்தியமான திட்டங்களைத் தீட்டுகிறார்கள்.[d]
ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் இருக்கிற யோசனையைக் கண்டுபிடிப்பது கஷ்டம்.
7 ஆனால், கடவுள் அவர்கள்மேல் அம்பு எறிவார்.[e]
எதிர்பார்க்காத நேரத்தில் அந்த அம்பு அவர்களைத் துளைக்கும்.
8 அவர்களுடைய நாவினாலேயே அவர்கள் சீரழிவார்கள்.[f]
அவர்களைப் பார்க்கிற எல்லாரும் அதிர்ச்சியில் தலையை ஆட்டுவார்கள்.
9 மக்கள் எல்லாரும் பயந்துபோய்,
கடவுள் செய்திருக்கும் காரியங்களை அறிவிப்பார்கள்.
அவருடைய செயல்களைப் பற்றி அவர்கள் நன்றாகப் புரிந்து வைத்திருப்பார்கள்.[g]
10 நீதிமான்கள் யெகோவாவை நினைத்து சந்தோஷப்பட்டு, அவரிடம் தஞ்சம் அடைவார்கள்.[h]
நேர்மையான நெஞ்சமுள்ள எல்லாரும் பூரித்துப்போவார்கள்.*

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம். ஒரு பாடல்.

65 கடவுளே, சீயோனில் உங்களுக்குப் புகழ்மாலை காத்திருக்கிறது.[i]
எங்களுடைய நேர்த்திக்கடன்களை நாங்கள் உங்களுக்குச் செலுத்துவோம்.[j]
2 ஜெபத்தைக் கேட்கிறவரே, எல்லா விதமான மக்களும் உங்களைத் தேடி வருவார்கள்.[k]

அதி. 64
a சங் 55:1
b சங் 56:6; சங் 109:2
c சங் 10:4, 11; சங் 59:7
d சங் 140:5
e சங் 7:11, 12
f நீதி 12:13; நீதி 18:7
g சங் 107:40, 43
h சங் 58:10; சங் 68:2, 3

அதி. 65
i சங் 76:2
j சங் 116:18; பிர 5:4
k சங் 145:18; அப் 10:31; 1யோ 5:14

64:5 * வே.வா., “கெட்டது செய்ய ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்துகிறார்கள்.” 64:10 * வே.வா., “பெருமையாகப் பேசுவார்கள்.”

3 என்னுடைய தவறுகள் என்னைத் திணறடிக்கின்றன.[a]
ஆனால், நீங்கள் எங்களுடைய குற்றங்களை மன்னிக்கிறீர்கள்.[b]
4 உங்களுடைய பிரகாரங்களில் தங்குவதற்காக நீங்கள் யாரைத் தேர்ந்தெடுத்து,
உங்கள் பக்கத்தில் கொண்டுவருகிறீர்களோ அவர் சந்தோஷமானவர்.[c]
நாங்கள் உங்களுடைய வீடாகிய பரிசுத்த ஆலயத்தில்[d] கிடைக்கும் நன்மைகளால் திருப்தியடைவோம்.[e]
5 எங்களை மீட்கும் கடவுளே,
உங்களுடைய நீதியினால் பிரமிப்பான காரியங்களைச் செய்து எங்களுக்குப் பதில் தருவீர்கள்.[f]
பூமியெங்கும் குடியிருக்கிற மக்களுக்கும்,
தொலைதூரக் கடல் பகுதிகளில் இருக்கிற ஜனங்களுக்கும்
நீங்கள்தான் நம்பிக்கையாக இருக்கிறீர்கள்.[g]
6 உங்களுடைய வல்லமையால் மலைகளை உறுதியாக நிலைநிறுத்தினீர்கள்.
பலத்தை உடைபோல் உடுத்தியிருக்கிறீர்கள்.[h]
7 கடல்களின் சீற்றத்தையும், அலைகளின் இரைச்சலையும்,[i]
தேசங்களின் கொந்தளிப்பையும் அடக்குகிறீர்கள்.[j]
8 நீங்கள் செய்கிற அடையாளங்களைப் பார்த்து தொலைதூரத்தில் வாழ்கிறவர்கள் மலைத்துப்போவார்கள்.[k]
கிழக்கிலிருந்து மேற்குவரை* இருக்கிறவர்களை நீங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்ய வைப்பீர்கள்.
9 நீங்கள் பூமியை அக்கறையோடு கவனித்துக்கொள்கிறீர்கள்.
அதைச் செழிப்பாக்குகிறீர்கள், அமோகமாக விளைய வைக்கிறீர்கள்.[l]
உங்கள் ஓடையைப் பெருக்கெடுத்து ஓட வைக்கிறீர்கள்.
மக்களுக்குத் தானியத்தைத் தருகிறீர்கள்.[m]
இந்த விதத்தில்தான் பூமியைப் படைத்திருக்கிறீர்கள்.
10 வயல்களின் சால்களில்* தண்ணீரை நிரப்பி, அவற்றின் வரப்புகளை# சமப்படுத்துகிறீர்கள்.
மழையைப் பொழிந்து மண்ணை மிருதுவாக்கி, அதன் விளைச்சலை ஆசீர்வதிக்கிறீர்கள்.[n]
11 நீங்கள் பொழியும் நன்மைகள் வருஷத்துக்குக் கிரீடம் சூட்டுவதுபோல் இருக்கிறது.
உங்கள் பாதைகள் நிரம்பி வழிகின்றன.[o]
12 வனாந்தரத்தின் மேய்ச்சல் நிலங்களும் நிரம்பி வழிந்தபடி இருக்கின்றன.[p]
மலைகள் சந்தோஷத்தை உடைபோல் உடுத்தியிருக்கின்றன.[q]
13 மேய்ச்சல் நிலங்களில் மந்தைகள் நிறைந்திருக்கின்றன.

65:8 *வே.வா., "சூரியன் உதிக்கிற திசையிலிருந்து மறைகிற திசைவரை." **65:10** *சால்கள் என்பது உழும்போது நிலத்தில் ஏற்படும் பள்ளங்கள். #வே.வா., "உழப்பட்ட நிலத்தை."

அதி. 65
a சங் 40:12; ரோ 7:23, 24; கலா 5:17
b சங் 51:2; ஏசா 1:18; 1யோ 1:7
c சங் 15:1-5; சங் 27:4; சங் 84:1-4; சங் 84:10
d 1சா 3:3; 1நா 16:1
e சங் 36:7, 8
f உபா 10:21; வெளி 15:3
g சங் 22:27
h சங் 93:1
i சங் 89:9; சங் 107:29
j ஏசா 17:12, 13; ஏசா 57:20
k சங் 66:3
l உபா 11:11, 12; அப் 14:17
m சங் 104:14, 15
n சங் 147:7, 8
o ஆதி 27:28; உபா 33:16; மல் 3:10
p ஏசா 35:1
q ஏசா 55:12

பள்ளத்தாக்குகளைத் தானியங்கள் கம்பளம்போல்
போர்த்தியிருக்கின்றன.[a]
அவையெல்லாம் வெற்றி முழக்கம் செய்து, பாட்டுப் பாடுகின்றன.[b]

இசைக் குழுவின் தலைவனுக்கு; ஒரு பாடல். சங்கீதம்.

66 பூமியெங்கும் குடியிருக்கிறவர்களே, கடவுளுக்குமுன் வெற்றி
முழக்கம் செய்யுங்கள்.[c]
2 அவருடைய மகிமையான பெயரைப் புகழ்ந்து பாடுங்கள்.*
அவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்துங்கள்.[d]
3 கடவுளிடம் இப்படிச் சொல்லுங்கள்:
“உங்களுடைய செயல்கள் எவ்வளவு பிரமிப்பானவை![e]
உங்களுடைய மகா வல்லமையைக் கண்டு
எதிரிகள் உங்கள்முன் அடங்கி ஒடுங்கி நிற்பார்கள்.[f]
4 பூமியிலுள்ள எல்லாரும் உங்கள்முன் தலைவணங்குவார்கள்.[g]
உங்களைப் புகழ்ந்து பாடுவார்கள்.
உங்கள் பெயரைப் புகழ்ந்து பாடுவார்கள்.”[h] (*சேலா*)
5 கடவுளுடைய செயல்களை வந்து பாருங்கள்.
மனிதர்களுக்காக அவர் செய்யும் செயல்கள் பிரமிப்பானவை.[i]
6 அவர் ஆழ்கடலை உலர்ந்த தரையாக்கினார்.[j]
ஆற்றைக் கால்நடையாக அவர்கள் கடந்துபோனார்கள்.[k]
அங்கே அவரை நினைத்து நாம் சந்தோஷப்பட்டோம்.[l]
7 அவர் தன்னுடைய வல்லமையால் என்றென்றும் ஆட்சி செய்கிறார்.[m]
அவருடைய கண்கள் தேசங்களை எப்போதும் கவனிக்கின்றன.[n]
வறட்டுப் பிடிவாதமுள்ளவர்கள் தங்களை உயர்த்திக்கொள்ளக்
கூடாது.[o] (*சேலா*)
8 மக்களே, நம்முடைய கடவுளைப் புகழுங்கள்.[p]
அவரைப் புகழ்கிற சத்தம் எங்கும் கேட்கட்டும்.
9 அவர் நம்மை உயிரோடு பாதுகாக்கிறார்.[q]
நம் கால்கள் தடுமாறாதபடி பார்த்துக்கொள்கிறார்.[r]
10 கடவுளே, எங்களை ஆராய்ந்து பார்த்திருக்கிறீர்கள்.[s]
வெள்ளியைப் புடமிடுவது போல எங்களைப் புடமிட்டிருக்கிறீர்கள்.
11 வேடனுடைய வலையில் எங்களைச் சிக்க வைத்தீர்கள்.
பயங்கரமான பாரத்தை எங்கள்மேல் சுமத்தினீர்கள்.
12 அற்ப மனுஷன் எங்களை ஏறி மிதிக்க* விட்டுவிட்டீர்கள்.
நாங்கள் தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்.
பின்பு, நிம்மதியான இடத்துக்கு எங்களைக் கொண்டுவந்தீர்கள்.
13 உங்களுடைய ஆலயத்துக்குத் தகன பலிகளோடு நான் வருவேன்.[t]
என் நேர்த்திக்கடன்களை உங்களுக்குச் செலுத்துவேன்.[u]
14 இக்கட்டில் தவித்தபோது என் உதடுகளால் சொன்னதையும்,
என் வாயினால் வாக்குக் கொடுத்ததையும் நிறைவேற்றுவேன்.[v]

66:2 * வே.வா., “இசை இசைத்திடுங்கள்.” **66:12** * வே.வா., “எங்கள் தலைமேல் ஏறிப் போக.”

அதி. 65
a ஏசா 30:23
b அப் 14:17

அதி. 66
c சங் 98:4
d சங் 72:19; வெளி 4:11
e யாத் 15:16; சங் 76:12; ஏசா 2:19; எரே 10:10
f சங் 81:15
g சங் 22:27; மல் 1:11
h ஏசா 42:10; வெளி 15:4
i சங் 46:8; செப் 2:11
j யாத் 14:21, 22
k யோசு 3:15, 16
l யாத் 15:1
m தானி 4:34; 1தீ 1:17
n சங் 11:4; நீதி 15:3; எபி 4:13
o ஏசா 37:29
p உபா 32:43; ரோ 15:10
q 1சா 25:29
r 1சா 2:9; சங் 121:3
s உபா 8:2
t எண் 15:3
u சங் 56:12; சங் 116:14; பிர 5:4, 5
v எண் 30:2; நியா 11:35

15 கொழுத்த மிருகங்களை உங்களுக்குத் தகன பலியாகக் கொடுப்பேன்.
செம்மறியாட்டுக் கடாக்களை நெருப்பில் பலி செலுத்துவேன்.
காளைகளையும் வெள்ளாட்டுக் கடாக்களையும் கொடுப்பேன். (*சேலா*)
16 கடவுளுக்குப் பயப்படுகிறவர்களே, எல்லாரும் வந்து கேளுங்கள்.
அவர் எனக்குச் செய்ததையெல்லாம் சொல்கிறேன்.[a]
17 என் வாயினால் அவரைக் கூப்பிட்டேன்.
என் நாவினால் அவரை மகிமைப்படுத்தினேன்.
18 என் உள்ளத்தில் ஏதாவது கெட்ட எண்ணம் இருந்திருந்தால்,
என் ஜெபத்தை யெகோவா கேட்டிருக்க மாட்டார்.[b]
19 ஆனால், கடவுள் என் ஜெபத்தைக் கேட்டார்.[c]
என் வேண்டுதலைக் கவனித்துக் கேட்டார்.[d]
20 என் ஜெபத்தைப் புறக்கணிக்காத கடவுளைப் புகழ்கிறேன்.
எனக்கு மாறாத அன்பு காட்டிய* கடவுளைப் புகழ்கிறேன்.

இசைக் குழுவின் தலைவனுக்கு; நரம்பிசைக் கருவிகளோடு பாட வேண்டிய சங்கீதம். ஒரு பாடல்.

67 கடவுள் கருணை காட்டி, நம்மை ஆசீர்வதிப்பார்.
அவர் தன்னுடைய முகத்தை நம்மேல் பிரகாசிக்க வைப்பார்.[e] (*சேலா*)
2 அப்போது, உங்களுடைய வழியைப் பற்றிப் பூமியிலுள்ள எல்லாரும் தெரிந்துகொள்வார்கள்.[f]
நீங்கள் தரும் மீட்பைப் பற்றி எல்லா தேசத்து மக்களும் தெரிந்துகொள்வார்கள்.[g]
3 கடவுளே, மக்கள் உங்களைப் புகழட்டும்.
எல்லா மக்களும் உங்களைப் புகழட்டும்.
4 தேசங்கள் சந்தோஷத்தில் ஆரவாரம் செய்யட்டும்.[h]
ஏனென்றால், நீங்கள் மக்களுக்கு நியாயமான தீர்ப்பைக் கொடுப்பீர்கள்.[i]
எல்லா தேசத்து ஜனங்களுக்கும் வழிகாட்டுவீர்கள். (*சேலா*)
5 கடவுளே, மக்கள் உங்களைப் புகழட்டும்.
எல்லா மக்களும் உங்களைப் புகழட்டும்.
6 பூமி விளைச்சல் தரும்.[j]
கடவுளாகிய நம் கடவுளே நம்மை ஆசீர்வதிப்பார்.[k]
7 கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்.
பூமியெங்கும் உள்ளவர்கள் அவருக்குப் பயப்படுவார்கள்.*[l]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம். ஒரு பாடல்.

68 கடவுள் எழுந்து, தன்னுடைய எதிரிகளைச் சிதறிப்போகச் செய்யட்டும்.
அவரை வெறுக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போகட்டும்.[m]
2 காற்றில் மறைந்துபோகும் புகைபோல் அவர்களை நீங்கள் மறைந்துபோகச் செய்யுங்கள்.

66:20 *வே.வா., “காட்டுவதை விட்டுவிடாத.” **67:7** *வே.வா., “அவருக்கு மதிப்புக் கொடுப்பார்கள்.”

அதி. 66
a சங் 22:24
b யோபு 27:8, 9; நீதி 15:29; நீதி 28:9; ஏசா 1:15; யோவா 9:31
c சங் 34:6; சங் 65:2; சங் 116:1; 1யோ 3:22
d எபி 5:7

அதி. 67
e எண் 6:25; நீதி 16:15
f ரோ 10:18; கொலோ 1:23
g சங் 98:2; ஏசா 49:6; லூ 2:30, 31; அப் 28:28; தீத் 2:11
h ஏசா 42:10
i சங் 9:8; சங் 96:10; சங் 98:9; ரோ 2:5
j லேவி 26:4; சங் 85:12; ஏசா 30:23; எசே 34:27
k ஆதி 17:7
l சங் 22:27; வெளி 15:4

அதி. 68
m எண் 10:35; சங் 21:8

அதி. 68
a நாகூ 1:6
b சங் 32:11
c ஏசா 12:4
d யாத் 6:3
e ஏசா 57:15
f யாத் 22:22-24
உபா 10:17, 18
சங் 10:14
சங் 146:9
g சங் 113:9
h ஏசா 61:1
i உபா 28:15, 23
சங் 107:33, 34
j யாத் 13:21
k சங் 114:1, 4
எபி 12:26
l யாத் 19:18
நியா 5:4, 5
m எண் 10:34
n யாத் 15:20
நியா 5:1
நியா 11:34
1சா 18:6
o எண் 31:25-27
யோசு 10:12, 16
யோசு 12:7
நியா 5:19
p எண் 31:27
1சா 30:23-25

நெருப்புக்கு முன்னால் மெழுகு உருகுவதுபோல்,
கடவுளுக்கு முன்னால் பொல்லாதவர்கள் அழிந்துபோகட்டும்.[a]
3 ஆனால், நீதிமான்கள் சந்தோஷப்படட்டும்.[b]
கடவுளுக்கு முன்னால் பூரிப்படையட்டும்.
ஆனந்தமும் மகிழ்ச்சியும் அடையட்டும்.
4 கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள்; அவருடைய பெயரைப் புகழ்ந்து பாடுங்கள்.*[c]
பாலைநிலத்தின் வழியாக# பயணம் செய்கிறவரைப் புகழ்ந்து பாடுங்கள்.
"யா"△ என்பது அவருடைய பெயர்![d] அவருக்கு முன்னால் சந்தோஷப்படுங்கள்.
5 பரிசுத்த இடத்தில் குடிகொண்டிருக்கிற கடவுள்,[e]
அப்பா இல்லாத பிள்ளைகளுக்கு அப்பாவாக இருக்கிறார்.
விதவைகளுக்குப் பாதுகாவலராக* இருக்கிறார்.[f]
6 தன்னந்தனியாக இருக்கிறவர்களுக்குக் குடியிருக்க வீடு தருகிறார்.[g]
கைதிகளை விடுதலையாக்கி சீரும் சிறப்புமாக வாழ வைக்கிறார்.[h]
ஆனால், வறட்டுப் பிடிவாதமுள்ளவர்கள்* வறண்ட இடத்தில்தான் குடியிருப்பார்கள்.[i]
7 கடவுளே, உங்களுடைய மக்களை நீங்கள் வழிநடத்தியபோது,*[j]
பாலைவனத்தின் வழியாக நீங்கள் நடந்து வந்தபோது, (*சேலா*)
8 பூமி அதிர்ந்தது;[k] உங்கள்முன் வானம் மழையைப் பொழிந்தது.
கடவுளுக்குமுன், இஸ்ரவேலின் கடவுளுக்குமுன், இந்த சீனாய் மலை குலுங்கியது.[l]
9 கடவுளே, நீங்கள் நிறைய மழையைத் தந்தீர்கள்.
களைத்துப்போன மக்களுக்குப் புதுத்தெம்பு கொடுத்தீர்கள்.
10 அவர்கள் உங்களுடைய கூடாரங்களில் தங்கியிருந்தார்கள்.[m]
கடவுளே, உங்களுக்கு நல்ல மனம் இருப்பதால் ஏழைகளுக்குத் தேவையானதைத் தந்தீர்கள்.
11 யெகோவா கட்டளை கொடுக்கிறார்.
நல்ல செய்தியை அறிவிக்கிற பெண்கள் படைபோல் ஏராளமாக இருக்கிறார்கள்.[n]
12 ராஜாக்களும் அவர்களுடைய படைவீரர்களும் ஓடுகிறார்கள்,[o] தப்பி ஓடுகிறார்கள்!
வீட்டிலிருக்கிற பெண்ணுக்கும் சூறையாடப்பட்ட பொருள்களில் பங்கு கிடைக்கிறது.[p]
13 மனிதர்களே, நீங்கள் தீ மூட்டி அதன் பக்கத்தில்* படுத்துக் கிடந்திருந்தாலும்,
வெள்ளிச் சிறகுகளும் சொக்கத்தங்க இறகுகளும் உள்ள புறா
உங்களுக்குக் கிடைக்கும்.

68:4 *வே.வா., "இசை இசைத்திடுங்கள்." #அல்லது, "மேகங்களின் மேல்." △"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **68:5** *நே.மொ., "நீதிபதியாக." **68:6** *வே.வா., "கலகக்காரர்கள்." **68:7** *நே.மொ., "மக்கள்முன் நீங்கள் போனபோது." **68:13** *அல்லது, "ஆட்டுத்தொழுவங்களுக்குப் பக்கத்தில்."

14 சர்வவல்லமையுள்ளவர் ராஜாக்களைச் சிதறிப்போக வைத்தார்.[a]
அப்போது, சால்மோனில் பனிமழை பெய்தது.*
15 பாசான் மலை[b] கடவுளுடைய* மலை.
பாசான் மலை சிகரங்களைக் கொண்ட மலை.
16 சிகரங்களைக் கொண்ட மலைகளே,
குடிகொள்வதற்காகக் கடவுள் தேர்ந்தெடுத்த* மலையை[c] ஏன்
பொறாமையோடு பார்க்கிறீர்கள்?
யெகோவா அங்குதான் என்றென்றும் குடியிருப்பார்.[d]
17 கடவுளுடைய போர் ரதங்கள் பல்லாயிரம், பல்லாயிரம்![e]
யெகோவா சீனாய் மலையிலிருந்து தன்னுடைய பரிசுத்த இடத்துக்கு
வந்திருக்கிறார்.[f]
18 "யா"வே,* நீங்கள் மேலே ஏறிப் போனீர்கள்.[g]
சிறைபிடிக்கப்பட்ட கைதிகளைப் பிடித்துக்கொண்டு போனீர்கள்.
மனிதர்களைப் பரிசுகளாக ஆக்கினீர்கள்.[h]
அவர்கள் நடுவில் தங்கியிருப்பதற்காக, பிடிவாதக்காரர்களைக்கூட
பரிசுகளாக ஆக்கினீர்கள்.[i]
19 ஒவ்வொரு நாளும் நம்முடைய பாரத்தைச் சுமக்கிற யெகோவா
புகழப்படட்டும்.[j]
நமக்கு மீட்பு தரும் உண்மைக் கடவுள் புகழப்படட்டும். (*சேலா*)
20 உண்மைக் கடவுள் நமக்கு மீட்பு தரும் கடவுளாக இருக்கிறார்.[k]
உன்னதப் பேரரசரான யெகோவாதான் சாவிலிருந்து நம்மைத் தப்பிக்க
வைக்கிறார்.[l]
21 கடவுள் தன்னுடைய எதிரிகளின் தலையை நொறுக்குவார்.
தொடர்ந்து கெட்ட வழியில் போகிறவர்களின் மண்டையோட்டைப்
பிளப்பார்.[m]
22 யெகோவா இதைச் சொன்னார்:
"நான் அவர்களை பாசானிலிருந்து[n] திரும்பக் கூட்டிக்கொண்டு
வருவேன்.
கடலின் ஆழத்திலிருந்து கொண்டுவருவேன்.
23 அப்போது, எதிரிகளின் இரத்தம் உன் பாதங்களில் வழிந்தோடும்.[o]
அந்த இரத்தத்தை உன்னுடைய நாய்கள் நக்கும்."
24 கடவுளே, நீங்கள் ஊர்வலம் வருவதை அவர்கள் பார்ப்பார்கள்.
என் கடவுளே, என் ராஜாவே, பரிசுத்த இடத்துக்கு நீங்கள் ஊர்வலமாக
வருவதைப் பார்ப்பார்கள்.[p]
25 பாடகர்கள் எல்லாரும் முன்னால் போகிறார்கள்,
நரம்பிசைக் கருவிகளை வாசிக்கிறவர்கள் எல்லாரும் பின்னால்
போகிறார்கள்.[q]
இளம் பெண்கள் கஞ்சிராவைத் தட்டிக்கொண்டு நடுவில்
போகிறார்கள்.[r]

68:14 * வே.வா., "பெய்ததுபோல் இருந்தது." **68:15** * வே.வா., "கம்பீரமான." **68:16** * வே.வா., "விரும்புகிற." **68:18** * "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 68
a எண் 21:3; யோசு 10:5, 10
b எண் 21:33; உபா 3:8, 10
c 1நா 11:5; சங் 48:2, 3; சங் 132:13
d உபா 12:5, 6; 1ரா 9:3; எபி 12:22
e 2ரா 6:16, 17; மத் 26:53
f யாத் 19:23; உபா 33:2
g 2சா 5:7
h எபே 4:8, 11
i உபா 2:36; உபா 7:22
j சங் 55:22; 1பே 5:6, 7
k ஏசா 12:2; ஏசா 45:17
l உபா 32:39
m சங் 55:23; எசே 18:26
n எண் 21:33
o சங் 58:10
p 1நா 15:25, 28; சங் 24:7
q 1நா 15:16; சங் 87:7; சங் 150:3
r நியா 11:34; 1சா 18:6

26 சபைகளிலே கடவுளைப் புகழுங்கள்.
இஸ்ரவேலின் ஊற்றிலிருந்து தோன்றியவர்களே, யெகோவாவைப் புகழுங்கள்.[a]
27 சின்னஞ்சிறு கோத்திரமாகிய பென்யமீன்[b] அவர்களை அடக்கி ஆளுகிறது.
அங்கே யூதாவின் தலைவர்களும், ஆரவாரம் செய்கிற அவர்களுடைய கூட்டத்தாரும்,
செபுலோனின் தலைவர்களும், நப்தலியின் தலைவர்களும் இருக்கிறார்கள்.
28 நீ பலம் பெறுவாய் என்று கடவுள் உறுதியாகச் சொல்லியிருக்கிறார்.
எங்களுக்காகச் செயல்பட்ட கடவுளே, உங்களுடைய பலத்தைக் காட்டுங்கள்.[c]
29 எருசலேமில் இருக்கிற உங்களுடைய ஆலயத்துக்காக[d]
ராஜாக்கள் உங்களுக்குக் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்.[e]
30 நாணல்களுக்கு நடுவே இருக்கிற காட்டு விலங்குகளையும்,
கூட்டமாக இருக்கிற காளைகளையும்,[f] அவற்றின் கன்றுகளையும் அதட்டுங்கள்.
அப்போது, மக்கள் வெள்ளிக் காசுகளைக் கொண்டுவந்து தலைவணங்குவார்கள்.
ஆனால், போர் செய்ய விரும்புகிறவர்களை நீங்கள் சிதறிப்போக வைப்பீர்கள்.
31 எகிப்திலிருந்து வெண்கலப் பொருள்கள் கொண்டுவரப்படும்.*[g]
கடவுளுக்குக் காணிக்கைகளைக் கொடுப்பதற்காக கூஷ்# தேசத்தார் வேகமாக வருவார்கள்.
32 பூமியிலுள்ள ராஜ்யங்களே, கடவுளைப் போற்றிப் பாடுங்கள்.[h]
யெகோவாவைப் புகழ்ந்து பாடுங்கள்.* (*சேலா*)
33 காலம்காலமாக இருக்கிற வானாதி வானங்களிலே பவனி வருகிறவரைப் புகழ்ந்து பாடுங்கள்.[i]
இதோ! அவர் தன்னுடைய கம்பீரமான குரலில் இடிபோல் முழங்குகிறார்.
34 கடவுள் பலம்படைத்தவர் என்பதை ஒத்துக்கொள்ளுங்கள்.[j]
அவருடைய மகிமை இஸ்ரவேலின் மேல் இருக்கிறது.
அவருடைய பலம் வானத்தில்* இருக்கிறது.
35 பிரமாண்டமான ஆலயத்தில் இருக்கிற கடவுள் பயபக்திக்குரியவர்.*[k]
அவர்தான் இஸ்ரவேலின் கடவுள்.
அவர்தான் மக்களுக்குப் பலத்தையும் சக்தியையும் தருகிறவர்.[l]
கடவுளுக்குப் புகழ் சேரட்டும்!

68:31 * அல்லது, "எகிப்திலிருந்து தூதுவர்கள் வருவார்கள்." # வே.வா., "எத்தியோப்பியா." **68:32** * வே.வா., "இசை இசைத்திடுங்கள்." **68:34** * நே.மொ., "மேகங்களில்." **68:35** * வே.வா., "பிரமிக்க வைக்கிறவர்."

அதி. 68
a சங் 95:6; ஏசா 44:2
b ஆதி 49:27; 1சா 9:21
c சங் 138:8
d 1ரா 6:1; 1நா 16:1; எஸ்றா 5:14
e 1ரா 10:10; 2நா 32:23; சங் 72:10
f எசே 39:18
g ஏசா 45:14; ஏசா 60:5
h உபா 32:43
i சங் 104:3
j சங் 96:7
k சங் 47:2; சங் 66:5
l சங் 29:11; ஏசா 40:29-31

இசைக் குழுவின் தலைவனுக்கு;
“லில்லி மலர்கள்” என்ற இசையில்; தாவீதின் பாடல்.

69 கடவுளே, வெள்ளம் என் கழுத்துவரை வந்துவிட்டது.*
என்னைக் காப்பாற்றுங்கள்.[a]
2 புதைசேற்றுக்குள் நான் அமிழ்ந்துகொண்டிருக்கிறேன், நிற்பதற்குத் தரை இல்லை.[b]
ஆழமான தண்ணீரில் சிக்கித் தவிக்கிறேன்.
வெள்ளம் என்னை அடித்துக்கொண்டு போகிறது.[c]
3 உதவிக்காகக் கத்திக் கத்திக் களைத்துப்போய்விட்டேன்.[d]
என் தொண்டையே வறண்டுவிட்டது.
என் கடவுளுக்காகக் காத்திருந்து காத்திருந்து என் கண்கள் பூத்துப்போய்விட்டன.[e]
4 காரணமில்லாமல் என்னை வெறுக்கிறவர்கள்,[f]
என் தலைமுடியைவிட அதிகமாகிவிட்டார்கள்.
என்னை ஒழித்துக்கட்டப் பார்க்கிற நயவஞ்சகமான எதிரிகள்,
ஏராளமாகப் பெருகிவிட்டார்கள்.
திருடாததைக் கொடுக்கச் சொல்லி நான் கட்டாயப்படுத்தப்பட்டேன்.
5 கடவுளே, என்னுடைய முட்டாள்தனம் உங்களுக்கே தெரியும்.
என் குற்றங்களும் உங்களுக்குத் தெரியாமல் இல்லை.
6 உன்னதப் பேரரசரே, பரலோகப் படைகளின் யெகோவாவே,
உங்களை நம்பியிருக்கிறவர்களுக்கு என்னால் தலைகுனிவு வந்துவிடக் கூடாது.
இஸ்ரவேலின் கடவுளே, உங்களைத் தேடுகிறவர்களுக்கு என்னால் அவமானம் வந்துவிடக் கூடாது.
7 உங்களுக்காகப் பழிப்பேச்சைச் சகிக்கிறேன்.[g]
அவமானம் தாங்க முடியவில்லை.[h]
8 என் சகோதரர்களுக்கு நான் முன்பின் தெரியாதவனைப் போல ஆகிவிட்டேன்.
என் தாயின் வயிற்றில் பிறந்தவர்களுக்கு அன்னியனைப் போல ஆகிவிட்டேன்.[i]
9 உங்களுடைய வீட்டின் மேலுள்ள பக்திவைராக்கியம் எனக்குள் பற்றியெரிகிறது.[j]
உங்களைப் பழித்துப் பேசியவர்களின் பழிப்பேச்சுகளை நான் தாங்கிக்கொண்டேன்.[k]
10 என்னைத் தாழ்த்திக்கொண்டு* விரதம் இருந்தபோது,
பழித்துப் பேசப்பட்டேன்.
11 நான் துக்கத் துணி போட்டுக்கொண்டபோது,
அவர்களுக்குக் கேலிப்பொருளானேன்.
12 நகரவாசலில் உட்கார்ந்திருக்கிறவர்கள் என்னைப் பற்றிப் பேசுகிறார்கள்.
குடிகாரர்கள் என்னைப் பற்றிப் பாடுகிறார்கள்.

69:1 *வே.வா., “வெள்ளத்தில் மூழ்கிவிடும் நிலையில் இருக்கிறேன்.” **69:10** *அல்லது, “நான் அழுதுகொண்டு.”

அதி. 69
a சங் 144:7 புல 3:54 யோனா 2:5
b சங் 40:2
c சங் 32:6 யோனா 2:3
d சங் 22:2
e சங் 119:82 சங் 119:123 ஏசா 38:14
f லூ 23:22 யோவா 15:24, 25
g சங் 22:6 எரே 15:15
h ஏசா 50:6 மத் 26:67 மத் 27:29
i யோபு 19:13 சங் 31:11 யோவா 1:11 யோவா 7:5
j 1ரா 19:10 சங் 119:139 மத் 21:12, 13 மாற் 11:15-17 யோவா 2:13-17
k ரோ 15:3

13 ஆனால் யெகோவாவே, ஏற்ற நேரத்தில் என் ஜெபம் உங்களிடம்
வந்துசேரட்டும்.[a]
கடவுளே, உங்களுடைய அளவுகடந்த அன்பினால்* எனக்குப்
பதில் கொடுங்கள்.
நீங்கள் நம்பகமான மீட்பர் என்பதைக் காட்டுங்கள்.[b]
14 புதைசேற்றிலிருந்து என்னைத் தூக்கிவிடுங்கள்.
புதைந்துபோக என்னை விட்டுவிடாதீர்கள்.
என்னை வெறுக்கிறவர்களிடமிருந்து காப்பாற்றுங்கள்.
ஆழமான தண்ணீரிலிருந்து என்னைத் தூக்கிவிடுங்கள்.[c]
15 பாய்ந்து வருகிற வெள்ளம் என்னை அடித்துக்கொண்டுபோக
விட்டுவிடாதீர்கள்.[d]
ஆழமான தண்ணீர் என்னை அமிழ்த்திவிட விட்டுவிடாதீர்கள்.
சவக்குழி* என்னை மூடிவிட விட்டுவிடாதீர்கள்.[e]
16 யெகோவாவே, எனக்குப் பதில் கொடுங்கள்; நீங்கள் காட்டும்
மாறாத அன்பு அருமையானது.[f]
அளவுகடந்த இரக்கத்தோடு என்னை நோக்கிப் பாருங்கள்.[g]
17 அடியேனிடமிருந்து உங்கள் முகத்தை மறைத்துக்கொள்ளாதீர்கள்.[h]
எனக்குச் சீக்கிரமாகப் பதில் சொல்லுங்கள், நான் இக்கட்டில்
தவிக்கிறேன்.[i]
18 என் பக்கத்தில் வந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
என் எதிரிகளிடமிருந்து என்னை விடுவியுங்கள்.
19 எனக்கு ஏற்பட்ட அவமானமும், தலைகுனிவும், வெட்கக்கேடும்[j]
உங்களுக்கே தெரியும்.
என்னுடைய எதிரிகள் எல்லாரையும் நீங்கள் பார்க்கிறீர்கள்.
20 பழிப்பேச்சைக் கேட்டுக் கேட்டு என் உள்ளம் உடைந்துவிட்டது,
ஆறாத ரணமாகிவிட்டது.*
யாராவது என்மேல் பரிதாபப்படுவார்களா என்று பார்த்தேன்,
யாருமே இல்லை.[k]
யாராவது எனக்கு ஆறுதல் சொல்வார்களா என்று தேடினேன்,
ஒருவருமே இல்லை.[l]
21 உணவுக்குப் பதிலாக எனக்கு விஷத்தை* கொடுத்தார்கள்.[m]
என் தாகத்துக்குக் காடியைத் தந்தார்கள்.[n]
22 அவர்களுடைய விருந்தே* அவர்களுக்குக் கண்ணியாக ஆகட்டும்.
அவர்களுடைய செல்வச் செழிப்பே அவர்களுக்குப் பொறியாக
ஆகட்டும்.[o]
23 பார்க்க முடியாதபடி அவர்களுடைய கண்கள் இருண்டு போகட்டும்.
அவர்களுடைய இடுப்புகள் எந்நேரமும் நடுநடுங்கட்டும்.
24 உங்களுடைய கடும் கோபத்தை அவர்கள்மேல் கொட்டுங்கள்.
உங்களுடைய கோபத் தீ அவர்களை விரட்டிப் பிடிக்கட்டும்.[p]

69:13 *வே.வா., "மாறாத அன்பினால்." **69:15** *வே.வா., "ஆழ்கிணறு." **69:20** *வே.வா., "நம்பிக்கையிழந்த நிலைக்குப் போய்விட்டேன்." **69:21** *வே.வா., "விஷச்செடியை." **69:22** *நே.மொ., "மேஜையே."

அதி. 69
a ஏசா 49:8; எபி 5:7
b சங் 68:20
c சங் 144:7
d சங் 69:2
e சங் 16:10
f சங் 63:3; சங் 109:21
g சங் 25:16
h சங் 27:9; சங் 102:2
i சங் 31:9; சங் 40:13
j சங் 22:6
k சங் 142:4
l யோபு 19:14
m மத் 27:34; மாற் 15:23
n மத் 27:48; மாற் 15:36; லூ 23:36; யோவா 19:29
o ரோ 11:9, 10
p சங் 21:9

25 அவர்களுடைய முகாம்கள் வெறிச்சோடிப் போகட்டும்.
அவர்களுடைய கூடாரங்கள் ஆளில்லாமல் கிடக்கட்டும்.[a]
26 ஏனென்றால், நீங்கள் தாக்கிய ஆளை அவர்கள் துரத்துகிறார்கள்.
நீங்கள் காயப்படுத்திய ஆட்களின் வேதனைகளைப் பற்றி எப்போதும் பேசுகிறார்கள்.
27 குற்றத்துக்குமேல் குற்றத்தை அவர்கள்மீது சுமத்துங்கள்.
உங்களுடைய நீதியில் அவர்களுக்கு எந்தப் பங்கும் கிடைக்காமல் போகட்டும்.
28 வாழ்வின்* புத்தகத்திலிருந்து அவர்களுடைய பெயர் துடைத்தழிக்கப்படட்டும்.[b]
நீதிமான்களின் பட்டியலில் அவர்களுடைய பெயர் சேர்க்கப்படாமல் போகட்டும்.[c]
29 நான் கஷ்டத்திலும் வேதனையிலும் தவிக்கிறேன்.[d]
கடவுளே, உங்களுடைய காப்பாற்றும் வல்லமை என்னைப் பாதுகாக்கட்டும்.
30 கடவுளின் பெயரை நான் புகழ்ந்து பாடுவேன்.
நன்றி சொல்லி அவரை மகிமைப்படுத்துவேன்.
31 காளையைவிட இதைத்தான் யெகோவா அதிகமாக விரும்புவார்.
கொம்புகளும் குளம்புகளும் உள்ள இளம் காளையைவிட இதைத்தான் விரும்புவார்.[e]
32 தாழ்மையானவர்கள்* அதைப் பார்த்து சந்தோஷப்படுவார்கள்.
கடவுளைத் தேடுகிறவர்களே, உங்களுடைய இதயம் புத்துயிர் பெறட்டும்.
33 ஏனென்றால், ஏழைகளுடைய ஜெபத்தை யெகோவா கேட்கிறார்.[f]
சிறைபிடிக்கப்பட்ட தன்னுடைய மக்களை அலட்சியம் செய்ய மாட்டார்.[g]
34 வானமும் பூமியும் அவரைப் புகழட்டும்.[h]
கடல்களும் அவற்றில் நீந்துகிற எல்லா உயிர்களும் அவரைப் புகழட்டும்.
35 ஏனென்றால், சீயோனைக் கடவுள் காப்பாற்றுவார்.[i]
யூதாவின் நகரங்களைத் திரும்பக் கட்டுவார்.
அவர்கள் அங்கே குடியிருந்து, அதை* சொந்தமாக்கிக்கொள்வார்கள்.
36 அவருடைய ஊழியர்களின் வாரிசுகள் அதைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.[j]
அவருடைய பெயரை நேசிக்கிறவர்கள்[k] அதில் குடியிருப்பார்கள்.

இசைக் குழுவின் தலைவனுக்கு;
ஒரு நினைப்பூட்டுதலாக தாவீது பாடிய பாடல்.

70 கடவுளே, என்னைக் காப்பாற்றுங்கள்.
யெகோவாவே, சீக்கிரமாக என் உதவிக்கு வாருங்கள்.[l]
2 என்னைத் தீர்த்துக்கட்ட வழிதேடுகிறவர்கள்

69:28 *வே.வா., “வாழ்கிறவர்களுக்கான.” 69:32 *வே.வா., “சாந்தமானவர்கள்.” 69:35 *அதாவது, “அந்தத் தேசத்தை.”

அதி. 69
a அப் 1:20
b யாத் 32:33
c பிலி 4:3 வெளி 3:5 வெளி 13:8
d சங் 109:22
e சங் 50:13–15 ஓசி 14:2
f சங் 10:17 சங் 102:17 ஏசா 66:2
g சங் 146:7 ஏசா 61:1 லூ 4:18
h சங் 96:11 ஏசா 49:13
i சங் 51:18
j ஏசா 61:9 ஏசா 66:22
k சங் 91:14 யாக் 1:12

அதி. 70
l சங் 40:13–17

அவமானத்தில் தலைகுனியட்டும்.
நான் கஷ்டப்படுவதைப் பார்த்து சந்தோஷப்படுகிறவர்கள்
வெட்கப்பட்டுப் பின்வாங்கட்டும்.
3 என்னைப் பார்த்துக் கேலி செய்கிறவர்கள்
அவமானப்பட்டு ஓடட்டும்.
4 ஆனால், உங்களைத் தேடுகிறவர்கள்
உங்களை நினைத்து சந்தோஷத்தில் பூரித்துப்போகட்டும்.[a]
நீங்கள் தருகிற மீட்பை விரும்புகிறவர்கள்
“கடவுளுக்கு மகிமை சேரட்டும்!” என்று எப்போதும் சொல்லட்டும்.
5 நானோ ஆதரவற்ற ஒரு ஏழை.[b]
கடவுளே, சீக்கிரமாக எனக்கு உதவி செய்யுங்கள்.[c]
நீங்கள்தான் எனக்குத் துணை, நீங்கள்தான் என்னைக் காப்பாற்றுகிறவர்.[d]
யெகோவாவே, தாமதிக்காதீர்கள்.[e]

71 யெகோவாவே, நான் உங்களிடம் தஞ்சம் அடைந்திருக்கிறேன்.
என்னை ஒருபோதும் அவமானப்பட விட்டுவிடாதீர்கள்.[f]
2 உங்களுடைய நீதியால் என்னை விடுவித்துக் காப்பாற்றுங்கள்.
என் ஜெபத்தைக் காதுகொடுத்து* கேட்டு, என்னைக் காப்பாற்றுங்கள்.[g]
3 என்னுடைய கற்பாறைக் கோட்டையாக இருங்கள்.
நான் எப்போதுமே உங்களிடம் ஓடிவருவேன்.
என்னைக் காப்பாற்றுவதற்குக் கட்டளை கொடுங்கள்.
ஏனென்றால், நீங்கள்தான் என்னுடைய மாபெரும் கற்பாறை, என் கோட்டை.[h]
4 கடவுளே, பொல்லாதவர்களின் கையிலிருந்தும்,[i]
அநியாயமாக அடக்கி ஒடுக்குகிறவர்களின் பிடியிலிருந்தும் என்னை விடுவியுங்கள்.
5 உன்னதப் பேரரசரான யெகோவாவே, நீங்கள்தான் என்னுடைய நம்பிக்கை.
சிறுவயதிலிருந்தே உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்.[j]
6 பிறந்ததிலிருந்தே உங்களைத்தான் சார்ந்திருக்கிறேன்.
என் தாயின் வயிற்றிலிருந்து நீங்கள்தான் என்னை எடுத்தீர்கள்.[k]
உங்களை எப்போதும் புகழ்கிறேன்.
7 நிறைய பேர் என்னை அதிசயமாகப் பார்க்கிறார்கள்.
ஆனால், நீங்கள்தான் எனக்குப் பலத்த அடைக்கலம்.
8 நான் உங்களை வாயாரப் புகழ்கிறேன்.[l]
உங்களுடைய மேன்மையைப் பற்றி நாளெல்லாம் பேசுகிறேன்.
9 என்னுடைய வயதான காலத்தில் என்னை ஒதுக்கித்தள்ளாதீர்கள்.[m]
என் உடல் தளர்ந்துபோகும்போது என்னைக் கைவிட்டுவிடாதீர்கள்.[n]
10 எதிரிகள் எனக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.
என்னைக் கொல்லத் துடிப்பவர்கள் ஒன்றுகூடி சதி செய்கிறார்கள்.[o]

71:2 * வே.வா., “குனிந்து.”

அதி. 70
a சங் 5:11; புல 3:25
b சங் 109:22
c சங் 141:1
d சங் 18:2
e சங் 13:3

அதி. 71
f சங் 25:2; சங் 31:1-3; ஏசா 45:17; எரே 17:18
g சங் 34:15
h 2சா 22:2, 3; சங் 18:2; சங் 144:2
i சங் 17:8, 9; சங் 59:1; சங் 140:4; மத் 6:13
j 1சா 17:45; எரே 17:7
k சங் 22:9, 10; சங் 139:16; ஏசா 46:3
l சங் 51:15; எபி 13:15
m சங் 92:14
n சங் 73:26; பிர 12:3
o 2சா 17:1, 2

11 “கடவுள் அவனைக் கைவிட்டுவிட்டார்.
அவனைத் துரத்திப் பிடியுங்கள்.
அவனைக் காப்பாற்ற யாருமே இல்லை” என்று சொல்கிறார்கள்.[a]
12 கடவுளே, என்னைவிட்டுத் தூரமாக இருக்காதீர்கள்.
என் கடவுளே, சீக்கிரமாக என் உதவிக்கு வாருங்கள்.[b]
13 என்னை எதிர்க்கிறவர்கள் அவமானப்பட்டு அழிந்துபோகட்டும்.[c]
எனக்குக் கேடு செய்யத் துடிக்கிறவர்கள்
கேவலப்பட்டும் வெட்கப்பட்டும் போகட்டும்.[d]
14 ஆனால், நான் உங்களுக்காகக் காத்துக்கொண்டே இருப்பேன்.
உங்களுடைய புகழுக்குப் புகழ் சேர்ப்பேன்.
15 உங்களுடைய நீதியான செயல்களும்,[e]
உங்களுடைய மீட்பின் செயல்களும்
எண்ண முடியாத அளவுக்கு ஏராளமாக இருந்தாலும்,[f]
அவற்றைப் பற்றி நாளெல்லாம் சொல்வேன்.
16 உன்னதப் பேரரசரான யெகோவாவே,
நான் போய் உங்களுடைய வல்லமையான செயல்களைப் பற்றிச் சொல்வேன்.
உங்கள் நீதியைப் பற்றிச் சொல்வேன், உங்கள் நீதியைப் பற்றி மட்டுமே சொல்வேன்.
17 கடவுளே, சிறுவயதிலிருந்து நீங்கள்தான் எனக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறீர்கள்.[g]
உங்களுடைய அற்புதமான செயல்களைப் பற்றி இதுவரை சொல்லிக்கொண்டே இருக்கிறேன்.[h]
18 கடவுளே, எனக்கு வயதாகி முடி நரைத்துப்போனால்கூட என்னைக் கைவிட்டுவிடாதீர்கள்.[i]
ஏனென்றால், உங்களுடைய வல்லமையைப் பற்றி அடுத்த தலைமுறைக்குச் சொல்ல விரும்புகிறேன்.
உங்களுடைய பலத்தைப் பற்றி வருங்காலச் சந்ததிக்குச் சொல்லத் துடிக்கிறேன்.[j]
19 கடவுளே, உங்களுடைய நீதி வானளவுக்கு உயர்ந்தது.[k]
நீங்கள் மாபெரும் செயல்களைச் செய்திருக்கிறீர்கள்.
கடவுளே, உங்களுக்கு நிகர் யார்?[l]
20 நீங்கள் எனக்கு நிறைய வேதனைகளையும் கஷ்டங்களையும் அனுமதித்திருந்தாலும்கூட,[m]
இப்போது எனக்குப் புத்துயிர் கொடுங்கள்.
பூமியின் ஆழத்திலிருந்து* என்னைத் தூக்கிவிடுங்கள்.[n]
21 நான் உயர்ந்துகொண்டே போவதற்கு உதவுங்கள்.
என்னைச் சுற்றிலும் இருந்து, ஆறுதல் கொடுங்கள்.
22 அப்போது, உங்களுடைய உண்மைத்தன்மையை நினைத்து,[o]
நரம்பிசைக் கருவிகளால் உங்களைப் புகழ்வேன்.

71:20 * வே.வா., “ஆழமான தண்ணீரிலிருந்து.”

அதி. 71
a சங் 3:2; சங் 42:10; மத் 27:42, 43
b சங் 22:11; சங் 35:22; சங் 38:21, 22
c 2சா 17:23
d சங் 109:29
e சங் 35:28; சங் 40:9
f சங் 40:5
g சங் 71:5
h 2சா 22:1; 1நா 16:4; சங் 9:1
i சங் 37:25; சங் 71:9
j யாத் 13:8; 1நா 29:10, 11; சங் 78:2-4
k சங் 36:6
l யாத் 15:11; சங் 86:8; சங் 89:6; எரே 10:7
m 2சா 12:10, 11
n சங் 40:2; சங் 86:13
o சங் 25:10; சங் 108:4; சங் 146:6

என் கடவுளே, இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளே,
யாழை மீட்டி உங்களைப் புகழ்ந்து பாடுவேன்.*
23 என் உதடுகள் கம்பீரமாகவும் சந்தோஷமாகவும் உங்களைப் புகழ்ந்து பாடும்.[a]
ஏனென்றால், நீங்கள் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறீர்கள்.[b]
24 என் நாவு உங்களுடைய நீதியைப் பற்றி நாள் முழுவதும் பேசும்.[c]
ஏனென்றால், என்னை அழிக்கத் துடிக்கிறவர்கள் அவமானத்தில் தலைகுனிவார்கள்.[d]

சாலொமோனைப் பற்றிய பாடல்.

72 கடவுளே, ராஜாவுக்கு உங்களுடைய நீதித்தீர்ப்புகளைத் தெரிவியுங்கள்.
ராஜாவின் மகனுக்கு உங்களுடைய நீதியை அருளுங்கள்.[e]
2 அவர் உங்களுடைய மக்களுக்காக நீதியோடு வழக்காடட்டும்.
உங்களுடைய எளிய ஜனங்களுக்கு நியாயம் வழங்கட்டும்.[f]
3 மலைகள் ஜனங்களுக்குச் சமாதானம் தரட்டும்.
குன்றுகள் மக்களுக்கு நீதி வழங்கட்டும்.
4 எளியவர்களுக்காக அவர் வழக்காடட்டும்.
ஏழைகளின் பிள்ளைகளைக் காப்பாற்றட்டும்.
மோசடி செய்கிறவனை ஒழிக்கட்டும்.[g]
5 சூரியனும் சந்திரனும் இருக்கும்வரை,
தலைமுறை தலைமுறைக்கும்
அவர்கள் உங்களுக்குப் பயந்து நடப்பார்கள்.[h]
6 வெட்டப்பட்ட புல்வெளிமேல் விழுகிற மழைபோல் அவர் இருப்பார்.
பூமிமேல் பொழிகிற மழைநீர்போல் அவர் இருப்பார்.[i]
7 அவருடைய ஆட்சியில் நீதிமான்கள் செழிப்பார்கள்.[j]
சந்திரன் இருக்கும்வரை மிகுந்த சமாதானம் இருக்கும்.[k]
8 ஒரு கடலிலிருந்து இன்னொரு கடல் வரைக்கும்,
ஆறு* தொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும்
அவருக்குக் குடிமக்கள் இருப்பார்கள்.[l]
9 பாலைவனத்தில் குடியிருப்பவர்கள் அவர் முன்னால் தலைவணங்குவார்கள்.
அவருடைய எதிரிகள் மண்ணைக் கவ்வுவார்கள்.[m]
10 தர்ஷீசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் அவருக்கு அன்பளிப்புகளைக் கொடுப்பார்கள்.[n]
சேபாவின் ராஜாக்களும் சிபாவின் ராஜாக்களும் பரிசுப்பொருள்களைத் தருவார்கள்.[o]
11 எல்லா ராஜாக்களும் அவர் முன்னால் தலைவணங்குவார்கள்.
எல்லா தேசத்து மக்களும் அவருக்குச் சேவை செய்வார்கள்.
12 ஏழைகளின் கூக்குரலைக் கேட்டு அவர் உதவி செய்வார்.
எளியவனுக்கும் ஆதரவற்றவனுக்கும் கைகொடுப்பார்.

அதி. 71
a சங் 63:5; சங் 104:33
b 2சா 4:9; சங் 103:4
c சங் 71:8
d சங் 71:13

அதி. 72
e 1நா 22:11, 12; 1நா 29:19; எரே 23:5
f 1ரா 3:9, 28
g ஏசா 11:4
h சங் 89:36, 37; லூ 1:32, 33; வெளி 11:15
i 2சா 23:3, 4; நீதி 16:15; நீதி 19:12
j ஏசா 61:11
k 1ரா 4:25; 1நா 22:9; ஏசா 2:4; ஏசா 9:6
l யாத் 23:31; 1ரா 4:21; சங் 2:8; சங் 22:27, 28; தானி 2:35; சக 9:10
m சங் 2:9; சங் 110:1
n 1ரா 4:21
o 1ரா 10:1, 2

71:22 * வே.வா., “இசை இசைப்பேன்.” **72:8** * அதாவது, “யூப்ரடிஸ் ஆறு.”

13 ஏழை எளியவர்கள்மேல் பரிதாபப்படுவார்.
ஏழைகளின் உயிரைக் காப்பாற்றுவார்.
14 கொடுங்கோல் ஆட்சியிலிருந்தும் வன்முறையிலிருந்தும் அவர்களை விடுவிப்பார்.*
அவர்களுடைய இரத்தம் அவருடைய கண்களில் அருமையானதாக# இருக்கும்.
15 அவர் பல்லாண்டு வாழட்டும், அவருக்கு சேபா தேசத்து தங்கம் கொடுக்கப்படட்டும்.[a]
அவருக்காக எப்போதும் ஜெபங்கள் ஏறெடுக்கப்படட்டும்.
அவர் நாளெல்லாம் ஆசீர்வதிக்கப்படட்டும்.
16 பூமியில் ஏராளமாகத் தானியம் விளையும்.[b]
மலைகளின் உச்சியில்கூட அது நிரம்பி வழியும்.
அவருடைய விளைச்சல் லீபனோனின் காடுகளைப் போலச் செழிப்பாக இருக்கும்.[c]
பூமியிலுள்ள புல்லைப் போல் நகரங்களிலுள்ள மக்கள் ஏராளமாகப் பெருகுவார்கள்.[d]
17 அவருடைய பெயர் என்றென்றும் நிலைத்திருக்கட்டும்.[e]
சூரியன் இருக்கும்வரை அவருடைய பெயரின் புகழ் ஓங்கட்டும்.
அவர் மூலம் மக்கள் ஆசீர்வாதம் பெறட்டும்.[f]
எல்லா தேசத்தாரும் அவரைச் சந்தோஷமானவர் என்று புகழட்டும்.
18 இஸ்ரவேலின் கடவுளான யெகோவா புகழப்படட்டும்.[g]
அவர் மட்டுமே அற்புதங்களைச் செய்கிறவர்.[h]
19 அவருடைய மகிமையான பெயர் என்றென்றும் புகழப்படட்டும்.[i]
அவருடைய மகிமை பூமி முழுவதையும் நிரப்பட்டும்.[j]
ஆமென், ஆமென்.*
20 ஈசாயின் மகனான[k] தாவீதின் ஜெபங்கள் இத்துடன் முடிவடைகின்றன.

அதி. 72
a 1ரா 10:10
b ஏசா 30:23
c ஏசா 35:1, 2
d 1ரா 4:20
e சங் 45:17; சங் 89:35, 36
f ஆதி 22:18; கலா 3:14
g 1நா 29:10
h யாத் 15:11
i வெளி 5:13
j எண் 14:21; ஆப 2:14
k 1சா 17:58

72:14 *வே.வா., "மீட்பார்." #வே.வா., "மதிப்புள்ளதாக." **72:19** *அதாவது, "அப்படியே ஆகட்டும், அப்படியே ஆகட்டும்."

பகுதி மூன்று
(சங்கீதம் 73–89)

ஆசாப்பின்[a] சங்கீதம்.

73 சுத்தமான இதயமுள்ள இஸ்ரவேலர்களுக்குக் கடவுள் உண்மையிலேயே நல்லவராக இருக்கிறார்.[b]
2 நான்தான் கிட்டத்தட்ட வழிதவறிப் போய்விட்டேன்.
கால் சறுக்கி விழும் நிலைக்குப் போய்விட்டேன்.[c]
3 ஏனென்றால், ஆணவம் பிடித்தவர்களை* பார்த்துப் பொறாமைப்பட்டேன்.
பொல்லாதவர்கள் நிம்மதியாக இருப்பதைப் பார்த்து எரிச்சலடைந்தேன்.[d]

அதி. 73
a 2நா 35:15
b சங் 84:11; மத் 5:8
c சங் 94:18
d யோபு 21:7; எரே 12:1

73:3 *வே.வா., "பெருமையடிக்கிறவர்களை."

4 அவர்களுடைய உடல் ஆரோக்கியமாக இருக்கிறது.*
அவர்கள் எந்த வேதனையும் இல்லாமல் சாகிறார்கள்.[a]
5 மற்றவர்களுக்கு வருகிற எந்தப் பிரச்சினையும் அவர்களுக்கு வருவதில்லை.[b]
மற்றவர்கள் படுகிற எந்தக் கஷ்டத்தையும் அவர்கள் அனுபவிப்பதில்லை.[c]
6 அதனால்தான், ஆணவத்தை ஆபரணம்போல் கழுத்தில் போட்டிருக்கிறார்கள்.[d]
வன்முறையை உடைபோல் உடுத்தியிருக்கிறார்கள்.
7 செல்வச் செழிப்பால்* அவர்களுடைய கண்கள் உப்பியிருக்கின்றன.
மனதில் கோட்டை கட்டியதைவிட சிறப்பாக வாழ்கிறார்கள்.
8 மற்றவர்களைப் பார்த்துக் கிண்டல் செய்கிறார்கள், மோசமாகப் பேசுகிறார்கள்.[e]
அடக்கி ஒடுக்கப்போவதாக ஆணவத்தோடு மிரட்டுகிறார்கள்.[f]
9 ஏதோ வானத்தையே தொட்டுவிட்டதுபோல் பெருமையடிக்கிறார்கள்.
ஊர் உலகமெல்லாம் தங்களைப் பற்றித் தம்பட்டம் அடிக்கிறார்கள்.
10 அதனால் கடவுளுடைய* மக்கள் அவர்கள் பக்கமாகத் திரும்பி,
அவர்களிடம் இருக்கிற ஏராளமான தண்ணீரைக் குடிக்கிறார்கள்.
11 "இதெல்லாம் கடவுளுக்கு எங்கே தெரியப்போகிறது?[g]
உன்னதமான கடவுளால் இதையெல்லாம் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?" என்று கேட்கிறார்கள்.
12 அப்படிப்பட்ட அக்கிரமக்காரர்களுக்கு எல்லாமே சுலபமாகக் கிடைத்துவிடுகிறது.[h]
அவர்கள் சொத்துக்குமேல் சொத்து சேர்த்துக்கொண்டே போகிறார்கள்.[i]
13 அதனால், நான் சுத்தமான இதயத்தோடும்,
கறைபடியாத கைகளோடும் வாழ்ந்தது வீணிலும் வீண்தான்.[j]
14 நாள் முழுவதும் நான் வேதனைப்பட்டேன்.[k]
ஒவ்வொரு நாள் காலையிலும் கண்டிக்கப்பட்டேன்.[l]
15 ஆனால் கடவுளே, நான் இதையெல்லாம் வெளியே சொல்லியிருந்தால்,
உங்களுடைய மக்களுக்குத் துரோகியாக ஆகியிருப்பேன்.
16 நான் அதைப் புரிந்துகொள்ள முயன்றபோது,
வேதனைதான் மிஞ்சியது.
17 கடைசியில், கடவுளுடைய பரிசுத்த ஆலயத்துக்கு வந்தேன்.
அப்போதுதான், அவர்களுக்கு வரப்போகிற முடிவைப் பற்றிப் புரிந்துகொண்டேன்.
18 நிச்சயமாகவே, அவர்களைச் சறுக்கலான தரையில்தான் நீங்கள் நிற்க வைக்கிறீர்கள்.[m]
அவர்களை விழ வைத்து ஒழித்துக்கட்டுகிறீர்கள்.[n]
19 அவர்களுக்குத் திடுதிப்பென்று அழிவு வருகிறது![o]
திடீரென்று கோர முடிவு வருகிறது!

அதி. 73
a பிர 7:15
b யோபு 12:6; யோபு 21:7, 9
c எரே 12:1
d யோபு 21:14, 15
e சங் 53:1
f 1ரா 21:7
g சங் 10:4, 11; சங் 94:3, 7; எசே 8:12; செப் 1:12
h சங் 37:35
i சங் 17:14
j யோபு 34:7, 9; யோபு 35:3
k சங் 34:19
l யோபு 7:17, 18
m சங் 35:6, 7; எரே 23:11, 12
n சங் 37:10, 20; சங் 55:23; நீதி 3:33
o யோபு 21:23; சங் 37:1, 2; ஏசா 30:13

73:4 *வே.வா., "அவர்களுடைய வயிறு பெருத்திருக்கிறது." **73:7** *நே.மொ., "கொழுப்பால்." **73:10** *நே.மொ., "அவருடைய."

20 தூங்கி எழுந்ததும் மறைந்துபோகிற கனவு போல,
யெகோவாவே, நீங்கள் எழுந்ததும் அவர்களை உங்கள் நினைவிலிருந்து மறைந்துபோகச் செய்வீர்கள்.*
21 ஆனால், என் நெஞ்சம் கசந்தது.[a]
உள்ளுக்குள்* பயங்கரமாக வேதனைப்பட்டேன்.
22 நான் அறிவில்லாமல் இருந்துவிட்டேன், எதையும் புரிந்துகொள்ளாமல் இருந்துவிட்டேன்.
உங்கள் முன்னால் புத்தியில்லாத மிருகம்போல் நடந்துகொண்டேன்.
23 ஆனால், இப்போது நான் உங்கள் கூடவே இருக்கிறேன்.
நீங்கள் என் வலது கையைப் பிடித்திருக்கிறீர்கள்.[b]
24 உங்கள் அறிவுரைகளால் எனக்கு வழிகாட்டுகிறீர்கள்.[c]
இனி நான் மேன்மை அடைவதற்கு வழிநடத்துவீர்கள்.[d]
25 பரலோகத்தில் உங்களைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?
இந்தப் பூமியில் உங்களைத் தவிர வேறு எதுவும் எனக்கு வேண்டாம்.[e]
26 என் உடலும் உள்ளமும் தளர்ந்துபோகலாம்.
ஆனால், கடவுள் என்றென்றும் என் இதயத்தின் கற்பாறையாகவும்* என் பங்காகவும் இருக்கிறார்.[f]
27 உங்களைவிட்டுத் தூரமாகப் போகிறவர்கள் அழிந்துபோவார்கள்.
உங்களுக்குத் துரோகம் செய்கிறவர்களுக்கு* நீங்கள் முடிவுகட்டுவீர்கள்.[g]
28 ஆனால், கடவுளிடம் நெருங்கிப் போவதுதான் எனக்கு நல்லது.[h]
உன்னதப் பேரரசரான யெகோவாவிடம் நான் அடைக்கலம் புகுந்துவிட்டேன்.
அவருடைய செயல்கள் எல்லாவற்றையும் மற்றவர்களுக்கு அறிவிப்பேன்.[i]

மஸ்கீல்.* ஆசாப்பின்[j] பாடல்.

74 கடவுளே, ஏன் எங்களை ஒரேயடியாக ஒதுக்கிவிட்டீர்கள்?[k]
நீங்கள் மேய்க்கிற ஆடுகள்மேல் உங்கள் கோபம் ஏன் பற்றியெரிகிறது?[l]
2 ரொம்பக் காலத்துக்கு முன்னால் நீங்கள் சொந்தமாக்கிக்கொண்ட மக்களை நினைத்துப் பாருங்கள்.[m]
நீங்கள் விடுவித்துக் கொண்டுவந்த உங்கள் சொத்தாகிய ஜனங்களையும்,[n]
நீங்கள் குடிகொண்டிருந்த சீயோன் மலையையும் நினைத்துப் பாருங்கள்.[o]
3 நிரந்தரமாக அழிக்கப்பட்ட இடத்தைப் போய்ப் பாருங்கள்.[p]
பரிசுத்த இடத்திலுள்ள எல்லாவற்றையும் எதிரி நாசமாக்கிவிட்டான்.[q]

73:20 * வே.வா., "அவர்களை வெறுத்து ஒதுக்கிவிடுவீர்கள்." **73:21** * நே.மொ., "சிறு நீரகங்களுக்குள்." **73:26** * வே.வா., "இதயத்துக்குப் பலம் தருகிறவராகவும்." **73:27** * வே.வா., "ஒழுக்கக்கேடாக நடந்து உங்களைவிட்டு விலகுகிறவர்களுக்கு." **74:மே.கு.** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 73
a சங் 73:3
b சங் 16:8; சங் 63:8; ஏசா 41:10
c சங் 25:9; சங் 32:8; சங் 37:23; சங் 143:10; நீதி 3:6
d சங் 37:34
e சங் 42:2; சங் 84:2; ஏசா 26:9
f சங் 16:5; புல 3:24
g எண் 15:39; யாக் 4:4
h சங் 65:4; யாக் 4:8
i சங் 118:17

அதி. 74
j 1நா 25:1; 2நா 35:15
k புல 5:20
l உபா 29:19, 20; சங் 100:3
m உபா 9:29
n உபா 4:20; உபா 32:9
o சங் 48:2; சங் 132:13
p தானி 9:17
q சங் 79:1

அதி. 74
a புல 2:7
b 1ரா 6:18, 35
c 2ரா 25:9
ஏசா 64:11
d சங் 13:2
சங் 79:4
e எசே 36:23
f சங் 44:23
ஏசா 64:12
புல 2:3
g யாத் 15:2
ஏசா 33:22
h யாத் 14:21
நெ 9:10, 11
i ஏசா 48:21
j யோசு 3:13
k ஆதி 1:3, 5
சங் 136:7, 8
l அப் 17:26
m ஆதி 8:22

4 உங்கள் விரோதிகள் உங்களுடைய வழிபாட்டு இடத்துக்குள் வந்து
வெற்றி முழக்கம் செய்தார்கள்.[a]
அங்கே தங்களுடைய கொடிகளை அடையாளங்களாக நாட்டினார்கள்.
5 அடர்ந்த காட்டிலுள்ள மரங்களைக் கோடாலியால் வெட்டிக்கொண்டே
போகிற ஆட்களைப் போல அவர்கள் இருந்தார்கள்.
6 அங்கிருந்த செதுக்கு வேலைப்பாடுகள்[b] எல்லாவற்றையும்
கோடாலிகளாலும் கடப்பாரைகளாலும் உடைத்து நொறுக்கினார்கள்.
7 உங்களுடைய ஆலயத்தைத் தீ வைத்துக் கொளுத்தினார்கள்.[c]
உங்களுடைய பெயர் தாங்கிய கூடாரத்தைத் தரைமட்டமாக்கி,
அதன் பரிசுத்தத்தைக் கெடுத்தார்கள்.
8 “கடவுளுடைய வழிபாட்டு இடங்கள் இந்தத் தேசத்தில் எங்கே
இருந்தாலும் அவற்றைக் கொளுத்திவிட வேண்டும்” என்று
அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் உள்ளத்தில்
சொல்லிக்கொண்டார்கள்.
9 நாங்கள் பார்ப்பதற்கு எந்த அடையாளங்களும் இல்லை.
ஒரு தீர்க்கதரிசிகூட மீதியில்லை.
எவ்வளவு காலம் இது நீடிக்கும் என்று தெரிந்தவர்கள்
ஒருவர்கூட இல்லை.
10 கடவுளே, எவ்வளவு காலத்துக்குத்தான் எதிரி உங்களைப்
பழித்துக்கொண்டே இருப்பான்?[d]
உங்களுடைய பெயரை அவன் என்றென்றும்
அவமதித்துக்கொண்டுதான் இருப்பானா?[e]
11 உங்கள் வலது கையை மடியிலிருந்து* எடுத்த பிறகு ஏன் ஒன்றும்
செய்யாமல் இருக்கிறீர்கள்?[f]
உங்கள் கையை நீட்டி அவர்களுக்கு ஒரு முடிவுகட்டுங்கள்.
12 காலம்காலமாகவே கடவுள்தான் என் ராஜாவாக இருக்கிறார்.
அவர்தான் இந்தப் பூமியில் மீட்பைத் தருகிறார்.[g]
13 கடவுளே, உங்களுடைய பலத்தால் கடலைக் கொந்தளிக்க
வைத்தீர்கள்.[h]
கடலில் இருக்கிற ராட்சதப் பிராணிகளின் மண்டையைப் பிளந்தீர்கள்.
14 லிவியாதானின்* தலையை நொறுக்கினீர்கள்.
பாலைவனங்களில் குடியிருக்கிற மக்களுக்கு அதைச் சாப்பிடக்
கொடுத்தீர்கள்.
15 நிலத்தைப் பிளந்து நீரூற்றுகளையும் நீரோடைகளையும் பாய
வைத்தீர்கள்.[i]
வற்றாத நதிகளை வறண்டுபோக வைத்தீர்கள்.[j]
16 பகலும் உங்களுடையது, இரவும் உங்களுடையது.
நீங்கள்தான் வெளிச்சத்தையும்* சூரியனையும் உண்டாக்கினீர்கள்.[k]
17 பூமியின் எல்லைகளையெல்லாம் குறித்தீர்கள்.[l]
கோடைக் காலத்தையும் குளிர் காலத்தையும் ஏற்படுத்தினீர்கள்.[m]

74:11 * வே.வா., “உங்கள் அங்கி மடிப்புகளிலிருந்து.” **74:14** * சொல் பட்டியலைப் பாருங்கள். **74:16** * வே.வா., “ஒளிச்சுடரையும்.”

18 யெகோவாவே, எதிரி எப்படியெல்லாம் உங்களைப் பழித்துப்
பேசினான் என்று நினைத்துப் பாருங்கள்.
முட்டாள் ஜனங்கள் உங்களுடைய பெயரை எப்படி
அவமதிக்கிறார்கள் என்று பாருங்கள்![a]
19 உங்களுடைய காட்டுப் புறாவின் உயிரைக் கொடிய மிருகங்களிடம்
கொடுத்துவிடாதீர்கள்.
கஷ்டத்தில் தவிக்கிற உங்களுடைய மக்களின் உயிரை ஒரேயடியாக
மறந்துவிடாதீர்கள்.
20 நீங்கள் செய்த ஒப்பந்தத்தை நினைத்துப் பாருங்கள்.
பூமியின் இருட்டான இடங்களில் கொடுமைக்காரர்கள்*
நிறைந்திருக்கிறார்கள்.
21 அடக்கி ஒடுக்கப்படுகிறவர்கள் ஏமாற்றத்தோடு திரும்பிப்
போகாதிருக்கட்டும்.[b]
ஏழை எளியவர்கள் உங்களுடைய பெயரைப் புகழட்டும்.[c]
22 கடவுளே, எழுந்து வந்து உங்களுக்காக வழக்காடுங்கள்.
முட்டாள்கள் உங்களை நாள் முழுவதும் எப்படிப் பழித்துப்
பேசுகிறார்கள் என்று நினைத்துப் பாருங்கள்.[d]
23 உங்களுடைய எதிரிகள் பேசுகிற பேச்சை மறந்துவிடாதீர்கள்.
உங்களை எதிர்க்கிறவர்கள் போடுகிற கூச்சல் சத்தம் மேலே
எழும்பிக்கொண்டே இருக்கிறது.

இசைக் குழுவின் தலைவனுக்கு;
“அழித்துவிடாதீர்கள்” என்ற சங்கீத இசையில்; ஆசாப்பின்[e] பாடல்.

75 கடவுளே, உங்களுக்கு நன்றி சொல்கிறோம், நாங்கள் நன்றி
சொல்கிறோம்.
நீங்கள் பக்கத்திலேயே இருக்கிறீர்கள்.*[f]
உங்களுடைய அற்புதமான செயல்களைப் பற்றி ஜனங்கள்
அறிவிக்கிறார்கள்.
2 நீங்கள் எங்களிடம், “குறித்த நேரத்திலே,
நான் நீதியோடு நியாயந்தீர்க்கிறேன்.
3 பூமியும் அதில் குடியிருப்பவர்களும் பயத்தில் ஆடிப்போனபோது,*
நான்தான் பூமியின் தூண்களை உறுதியாக நிற்க வைத்தேன்” என்று
சொல்கிறீர்கள். (*சேலா*)
4 நான் பெருமையடிப்பவனைப் பார்த்து, “பெருமையடிக்காதே” என்று
சொல்கிறேன்.
பொல்லாதவனைப் பார்த்து, “நீ பலசாலி என்று பெருமையடிக்காதே.
5 நீ பெரிய பலசாலி என்று பெருமையடிக்காதே.
ஆணவமாகப் பேசாதே.
6 ஏனென்றால், பெருமையும் புகழும்
கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ தெற்கிலிருந்தோ
வருவதில்லை.

அதி. 74
a ஏசா 52:5
b சங் 12:5
c எஸ்றா 3:11
d சங் 89:50, 51
ஏசா 52:5

அதி. 75
e 2நா 35:15
f ஏசா 30:27

74:20 *வே.வா., “வன்முறை செய்கிறவர்கள்.” **75:1** *நே.மொ., “உங்கள் பெயர் பக்கத்திலேயே இருக்கிறது.” **75:3** *நே.மொ., “கரைந்துபோனபோது.”

7 கடவுள்தான் நீதிபதி.[a]
அவர்தான் ஒருவனைத் தாழ்த்தி இன்னொருவனை உயர்த்துகிறார்.[b]
8 யெகோவாவின் கையில் ஒரு கிண்ணம் இருக்கிறது.[c]
அதிக போதையேற்றும் திராட்சமது* அதில் பொங்கி வழிகிறது.
அவர் அதை முழுவதுமாக ஊற்றுவார்.
அப்போது, பூமியில் இருக்கிற பொல்லாதவர்கள்
அதன் கசடைக்கூட விட்டுவைக்காமல் குடிப்பார்கள்"[d] என்று சொல்கிறேன்.
9 நான் இதை என்றென்றும் அறிவிப்பேன்.
யாக்கோபின் கடவுளைப் புகழ்ந்து பாடுவேன்.*
10 ஏனென்றால், "பொல்லாதவர்களுடைய பலத்தையெல்லாம் நான் ஒழித்துவிடுவேன்.
ஆனால், நீதிமான்களுடைய பலத்தை அதிகரிப்பேன்" என்று அவர் சொல்கிறார்.

இசைக் குழுவின் தலைவனுக்கு; நரம்பிசைக் கருவிகளோடு பாட வேண்டியது. ஆசாப்பின்[e] சங்கீதம். ஒரு பாடல்.

76 யூதாவில் உள்ளவர்கள் கடவுளை அறிந்திருக்கிறார்கள்.[f]
இஸ்ரவேலில் அவருடைய பெயர் பிரபலமாக இருக்கிறது.[g]
2 அவருடைய கூடாரம் சாலேமில்[h] இருக்கிறது.
அவருடைய குடியிருப்பு சீயோனில் இருக்கிறது.[i]
3 தீ பறக்கும் அம்புகளை அவர் அங்கே முறித்துப் போட்டார்.
கேடயத்தையும் வாளையும் போர்க் கருவிகளையும் உடைத்துப் போட்டார்.[j] (*சேலா*)
4 கடவுளே, நீங்கள் பிரகாசமாக ஒளிவீசுகிறீர்கள்.*
காட்டு மிருகங்கள் வாழ்கிற மலைகளைவிட கம்பீரமாக இருக்கிறீர்கள்.
5 நெஞ்சத்தில் துணிச்சல் உள்ளவர்கள் சூறையாடப்பட்டார்கள்.[k]
அவர்கள் செத்துப்போனார்கள்.*
போர்வீரர்களில் ஒருவனால்கூட எதுவும் செய்ய முடியவில்லை.[l]
6 யாக்கோபின் கடவுளே, நீங்கள் அதட்டியபோது,
ரத வீரன் செத்துப்போனான்,* குதிரையும் செத்துப்போனது.[m]
7 நீங்கள் மட்டுமே பயபக்திக்குரியவர்.*[n]
உங்களுடைய கடும் கோபத்தை யாரால் தாக்குப்பிடிக்க முடியும்?[o]
8 பரலோகத்திலிருந்து உங்கள் தீர்ப்பை அறிவித்தீர்கள்.[p]
அப்போது, பூமி பயந்து அடங்கியது.[q]
9 ஏனென்றால், தன்னுடைய தீர்ப்பை நிறைவேற்ற கடவுள் எழுந்து வந்தார்.
பூமியிலிருக்கிற தாழ்மையான* எல்லாரையும் காப்பாற்ற அவர் எழுந்து வந்தார்.[r] (*சேலா*)

அதி. 75
a சங் 50:6; சங் 58:11
b 1சா 2:7; தானி 2:21; தானி 4:17; லூ 1:52
c சங் 11:5, 6
d யோபு 21:19, 20; எரே 25:15, 28; எரே 49:12; வெளி 14:9, 10; வெளி 16:19; வெளி 18:6

அதி. 76
e 2நா 35:15
f சங் 48:1, 3
g 2நா 2:5
h ஆதி 14:18
i சங் 74:2; சங் 132:13; சங் 135:21
j 2நா 32:21; சங் 46:9
k லூ 1:51
l ஏசா 31:8; ஏசா 37:36
m நாகூ 2:13
n சங் 89:7
o எரே 10:10; நாகூ 1:6
p 1ரா 8:49
q 2நா 20:29; சங் 2:4, 5
r சங் 147:6; நீதி 3:34; செப் 2:3

75:8 *வே.வா., "கலப்புத் திராட்சமது." **75:9** *வே.வா., "இசை இசைப்பேன்." **76:4** *வே.வா., "ஒளி உங்களைப் போர்த்தியிருக்கிறது." **76:5** *நே.மொ., "ஆழ்ந்து தூங்கிவிட்டார்கள்." **76:6** *நே.மொ., "ஆழ்ந்து தூங்கிவிட்டான்." **76:7** *வே.வா., "பிரமிக்க வைக்கிறவர்." **76:9** *வே.வா., "சாந்தமான."

10 மனிதர்களுடைய கடும் கோபம் உங்களுக்குப் புகழ் உண்டாக்கும்படி
நீங்கள் செய்வீர்கள்.[a]
அவர்களிடம் எஞ்சியிருக்கிற கொஞ்சநஞ்ச கோபமும்கூட உங்களுக்கு
மகிமை உண்டாக்கும்படி* செய்வீர்கள்.
11 உங்கள் கடவுளாகிய யெகோவாவிடம் நேர்ந்துகொண்டு, அதை
நிறைவேற்றுங்கள்.[b]
அவரைச் சுற்றியிருக்கிற எல்லாரும் பயபக்தியோடு தங்கள்
காணிக்கைகளைக் கொண்டுவரட்டும்.[c]
12 தலைவர்களுடைய கர்வத்தை அவர் அடக்குவார்.
பூமியிலுள்ள ராஜாக்களின் மனதில் பயத்தை ஏற்படுத்துவார்.

இசைக் குழுவின் தலைவனுக்கு; எதித்தூன்.* ஆசாப்பின்[d] சங்கீதம்.

77 நான் கடவுளிடம் கெஞ்சிக் கதறுவேன்.
என் குரலை உயர்த்திக் கடவுளிடம் கெஞ்சிக் கதறுவேன்.
அவர் என் சத்தத்தைக் கேட்பார்.[e]
2 இக்கட்டு நாளில் நான் யெகோவாவைத் தேடுகிறேன்.[f]
ராத்திரியில் என் கைகளை அவர்முன் விரித்தபடியே இருக்கிறேன்.
ஆனாலும், எனக்கு ஆறுதல் கிடைத்த பாடில்லை.
3 கடவுளை நினைக்கிறேன், குமுறி அழுகிறேன்.[g]
குழம்பித் தவிக்கிறேன், துவண்டுபோகிறேன்.[h] (*சேலா*)
4 கடவுளே, நான் தூங்க முடியாதபடி என் கண் இமைகளை நீங்கள்
பிடித்திருக்கிறீர்கள்.
பேச்சே வராத அளவுக்கு நான் கலங்கிப்போயிருக்கிறேன்.
5 பூர்வ நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்.[i]
பழங்காலத்து வருஷங்களை யோசித்துப் பார்க்கிறேன்.
6 ராத்திரி நேரத்தில் என் பாடலை நினைத்துப் பார்க்கிறேன்.[j]
இதயத்தில் ஆழமாக யோசித்துப் பார்க்கிறேன்.[k]
நன்றாக ஆராய்ந்து பார்க்கிறேன்.
7 யெகோவா எங்களை ஒரேயடியாக ஒதுக்கிவிடுவாரா?[l]
இனி கருணை காட்டவே மாட்டாரா?[m]
8 அவருடைய மாறாத அன்பு அடியோடு மறைந்துவிட்டதா?
அவருடைய வாக்குறுதிகள் நிறைவேறுவதை இனி எந்தத்
தலைமுறையுமே பார்க்க முடியாதா?
9 கருணை காட்ட கடவுள் மறந்துவிட்டாரா?[n]
அல்லது, கோபத்தில் இரக்கம் காட்டுவதை விட்டுவிட்டாரா? (*சேலா*)
10 "உன்னதமான கடவுள் எங்களுக்கு உதவி செய்வதை நிறுத்திவிட்டார்,
இதுதான் எனக்கு ரொம்ப வேதனையாக இருக்கிறது"*[o] என்று நான்
புலம்பிக்கொண்டிருக்க வேண்டுமா?
11 "யா"* செய்த செயல்களை நினைத்துப் பார்ப்பேன்.
பூர்வ காலத்தில் நீங்கள் செய்த அதிசயங்களை யோசித்துப் பார்ப்பேன்.

76:10 *வே.வா., "அலங்காரமாக ஆகும்படி." **77:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **77:10** *வே.வா., "என் நெஞ்சைத் துளைக்கிறது." **77:11** *"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 76
a நீதி 16:4; தானி 3:19, 28
b எண் 30:2
c 2நா 32:23; சங் 89:7

அதி. 77
d 2நா 35:15
e சங் 34:6; நீதி 15:29
f சங் 18:6; சங் 50:15
g சங் 42:5
h சங் 143:4
i சங் 143:5; ஏசா 51:9
j சங் 42:8
k சங் 77:12
l சங் 74:1
m சங் 79:5
n ஏசா 49:14; ஏசா 63:15
o சங் 31:22

12 கடவுளே, நீங்கள் செய்த காரியங்களையெல்லாம் தியானித்துப் பார்ப்பேன்.
உங்களுடைய செயல்களைப் பற்றி ஆழமாக யோசிப்பேன்.[a]
13 கடவுளே, உங்களுடைய வழிகள் பரிசுத்தமானவை.
கடவுளே, உங்களைப் போன்ற மகத்தான கடவுள் யார்?[b]
14 நீங்கள்தான் உண்மையான கடவுள், அற்புதமான காரியங்களைச் செய்கிறவர்.[c]
உங்கள் பலத்தை எல்லா மக்களுக்கும் காட்டியிருக்கிறீர்கள்.[d]
15 உங்கள் ஜனங்களான யாக்கோபின் வம்சத்தாரையும் யோசேப்பின் வம்சத்தாரையும்,
உங்களுடைய வல்லமையால் காப்பாற்றியிருக்கிறீர்கள்.[e] (*சேலா*)
16 கடவுளே, தண்ணீர் உங்களைப் பார்த்தது.
தண்ணீர் உங்களைப் பார்த்து உருண்டு புரண்டது.[f]
ஆழமான தண்ணீர் கொந்தளித்தது.
17 மேகங்கள் மழை பொழிந்தன.
மேகமூட்டமான வானம் முழங்கியது.
உங்களுடைய அம்புகள் அங்கும் இங்கும் பறந்தன.[g]
18 உங்களுடைய இடிமுழக்கத்தின் சத்தம்,[h]
ரதங்களுடைய சக்கரங்களின் சத்தத்தைப் போல இருந்தது.
மின்னல்களின் வெளிச்சம் பூமியைப் பிரகாசிக்க வைத்தது.[i]
பூமி அதிர்ந்து, குலுங்கியது.[j]
19 நீங்கள் கடலுக்குள் உங்கள் பாதையைப் போட்டீர்கள்.[k]
திரளான தண்ணீர் வழியாக நடந்து போனீர்கள்.
ஆனால், உங்கள் காலடி தடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போனது.
20 மோசேயின் கையாலும் ஆரோனின் கையாலும்,[l]
உங்களுடைய மக்களை மந்தைபோல் பத்திரமாக அழைத்து வந்தீர்கள்.[m]

மஸ்கீல்.* ஆசாப்பின்[n] பாடல்.

78 மக்களே, என் சட்டத்தை* கேளுங்கள்.
நான் சொல்கிற வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேளுங்கள்.
2 நான் வாய் திறந்து பழமொழி சொல்வேன்.
பூர்வ காலப் புதிர்களை விளக்குவேன்.[o]
3 எங்களுடைய முன்னோர்கள் எங்களுக்குச் சொன்ன விஷயங்களையும்,[p]
அவர்களிடம் நாங்கள் கேட்டுத் தெரிந்துகொண்ட விஷயங்களையும்,
4 அவர்களுடைய வம்சத்தாருக்கு மறைக்காமல் சொல்வோம்.
யெகோவாவின் அருமையான* செயல்களைப் பற்றியும்,
அவருடைய பலத்தைப் பற்றியும்,[q] அவர் செய்த அற்புதங்களைப்[r] பற்றியும்
வருங்காலத் தலைமுறைக்கு விளக்கிச் சொல்வோம்.[s]

78:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **78:1** *வே.வா., "அறிவுரையை." **78:4** *வே.வா., "புகழத்தக்க."

அதி. 77
a 1நா 16:9, சங் 143:5
b யாத் 15:11, சங் 89:8
c சங் 72:18, வெளி 15:3
d யாத் 9:16, ஏசா 52:10, தானி 3:29, தானி 6:26, 27
e யாத் 6:6, உபா 9:29
f யாத் 14:21, யோசு 3:16, சங் 114:1-3
g 2சா 22:15, சங் 144:6
h சங் 29:3
i சங் 97:4
j யாத் 19:18, 2சா 22:8
k நெ 9:10, 11, ஆப 3:15
l ஏசா 63:11, அப் 7:35, 36
m யாத் 13:21, சங் 78:52

அதி. 78
n 1நா 25:1
o நீதி 1:5, 6, மத் 13:34, 35
p யாத் 13:8, சங் 44:1
q ஏசா 63:7
r சங் 98:1
s உபா 4:9, உபா 6:6, 7, உபா 6:21, உபா 11:18, 19, யோசு 4:6, 7

5 யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர் ஒரு நினைப்பூட்டுதலைத் தந்தார்.
இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு சட்டத்தைக் கொடுத்தார்.
அவற்றைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டுமென்று
நம் முன்னோர்களுக்குக் கட்டளை கொடுத்தார்.[a]
6 ஏனென்றால், அடுத்த தலைமுறையைச் சேர்ந்த பிள்ளைகளும்
அவற்றைத் தெரிந்துகொண்டு,[b]
தங்களுடைய பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டுமென்றும்,[c]
7 அந்தப் பிள்ளைகளும் கடவுள்மேல் நம்பிக்கை வைத்து,
கடவுள் செய்த செயல்களை மறக்காமல் இருந்து,[d]
அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து,[e]
8 அவர்களுடைய முன்னோர்களைப் போல ஆகாதிருக்க
வேண்டுமென்றும் நினைத்தார்.
அவர்களுடைய முன்னோர்கள் பிடிவாதக்காரர்களாகவும்
அடங்காதவர்களாகவும் இருந்தார்கள்.[f]
அந்தத் தலைமுறையின் உள்ளம் நிலையாக இருக்கவில்லை.[g]
அந்தத் தலைமுறை கடவுளுக்கு விசுவாசமாக இருக்கவில்லை.
9 எப்பிராயீம் வம்சத்தார் வில்வீரர்களாக இருந்தார்கள்.
ஆனாலும், போரில் பின்வாங்கினார்கள்.
10 கடவுளுடைய ஒப்பந்தத்தை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை.[h]
அவருடைய சட்டத்தின்படி நடக்கவில்லை.[i]
11 அவர் செய்த செயல்களை மறந்துவிட்டார்கள்.[j]
அவர் செய்து காட்டிய அற்புதங்களை நினைக்காமல் போனார்கள்.[k]
12 எகிப்து தேசத்திலே, சோவான் பகுதியிலே,[l]
அவர்களுடைய முன்னோர்களின் கண் முன்னால் அவர்
அதிசயங்களைச் செய்தார்.[m]
13 அவர்கள் நடந்துபோவதற்காகக் கடலை இரண்டாகப் பிளந்தார்.
தண்ணீரை அணை* போல நிற்க வைத்தார்.[n]
14 பகலிலே மேகத்தினால் அவர்களுக்கு வழிகாட்டினார்.
ராத்திரி முழுவதும் நெருப்பின் வெளிச்சத்தினால் அவர்களை
வழிநடத்தினார்.[o]
15 வனாந்தரத்தில் பாறைகளைப் பிளந்தார்.
நீரூற்றுபோல் பொங்கி வந்த தண்ணீரால் அவர்களுடைய தாகத்தைத்
தீர்த்தார்.[p]
16 கற்பாறையிலிருந்து நீரோடைகளைப் புறப்பட வைத்தார்.
தண்ணீரை நதிகள்போல் பாய்ந்தோட வைத்தார்.[q]
17 ஆனால், அவர்கள் அவருக்கு விரோதமாகப் பாவம் செய்துகொண்டே
இருந்தார்கள்.
பாலைவனத்தில் உன்னதமான கடவுளின் பேச்சை மீறிக்கொண்டே
இருந்தார்கள்.[r]
18 தாங்கள் சாப்பிடத் துடித்த உணவைத் தரச்சொல்லிக் கேட்டு,
தங்கள் உள்ளத்தில் கடவுளுக்கே சவால் விட்டார்கள்.*[s]

78:13 * வே.வா., “சுவர்.” **78:18** * நே.மொ., “கடவுளைச் சோதித்தார்கள்.”

அதி. 78
a ஆதி 18:19, உபா 6:6, 7
b சங் 71:17, 18, சங் 102:18
c உபா 4:10
d உபா 4:9, சங் 103:2
e உபா 5:29
f யாத் 32:9, உபா 1:43, உபா 31:27, 2ரா 17:13, 14, எசே 20:18, அப் 7:51
g சங் 81:11, 12, எரே 7:24-26
h உபா 31:16
i 2நா 13:8, 9, நெ 9:26
j உபா 32:18, 2நா 13:12, எரே 2:32
k சங் 106:21, 22
l எண் 13:22
m உபா 4:34, நெ 9:10
n யாத் 14:21, 22, யாத் 15:8
o யாத் 13:21, யாத் 14:20, 24
p யாத் 17:6, எண் 20:11, சங் 105:41, ஏசா 48:21, 1கொ 10:4
q உபா 8:14, 15
r உபா 9:21, 22, சங் 95:8, எபி 3:16
s சங் 106:14

19 கடவுளுக்கு விரோதமாகப் பேசி,
"கடவுளால் இந்த வனாந்தரத்தில் நமக்குப் பந்தி போட முடியுமா?"[a]
என்று கேட்டார்கள்.
20 இதோ! அவர் பாறையை அடித்தார்.
தண்ணீர் பாய்ந்து வந்தது, நீரோடைகள் பெருக்கெடுத்து ஓடின.[b]
ஆனாலும், "அவரால் எங்களுக்கு உணவுகூட தர முடியுமா?
அவருடைய மக்களுக்கு இறைச்சி தர முடியுமா?" என்று கேட்டார்கள்.[c]
21 அதைக் கேட்டு யெகோவாவுக்குப் பயங்கர கோபம் வந்தது.[d]
யாக்கோபுக்கு எதிராக நெருப்பு[e] மூண்டது.
இஸ்ரவேலுக்கு எதிராக அவருடைய கோபம் பற்றியெரிந்தது.[f]
22 ஏனென்றால், கடவுள்மேல் அவர்கள் விசுவாசம் வைக்கவில்லை.[g]
கடவுளால் தங்களைக் காப்பாற்ற முடியும் என்று நம்பவில்லை.
23 அதனால், மேகமூட்டமான வானத்துக்கு அவர் கட்டளை கொடுத்தார்.
வானத்தின் கதவுகளைத் திறந்தார்.
24 அவர்கள் சாப்பிடுவதற்காக மன்னாவை மழைபோல்
பொழிந்துகொண்டே இருந்தார்.
வானத்தின் தானியத்தை அவர்களுக்குத் தந்தார்.[h]
25 பலசாலிகளின்* உணவை மனிதர்கள் சாப்பிட்டார்கள்.[i]
அவர்களை அவர் வயிறார சாப்பிட வைத்தார்.[j]
26 வானத்திலிருந்து கிழக்குக் காற்றை வர வைத்தார்.
அவருடைய சக்தியால் தென்திசைக் காற்றை வீச வைத்தார்.[k]
27 இறைச்சியை மண் போல ஏராளமாகப் பொழிந்தார்.
கடற்கரை மணல்போல் எண்ணற்ற பறவைகளைத் தந்தார்.
28 அவருடைய முகாமின் நடுவில் அவற்றை விழ வைத்தார்.
அவருடைய கூடாரங்களைச் சுற்றிலும் விழ வைத்தார்.
29 வயிறு வெடிக்கும் அளவுக்கு அவர்கள் சாப்பிட்டார்கள்.
அவர்கள் ஆசைப்பட்டதை அவர் கொடுத்தார்.[l]
30 ஆனால், அவர்களுடைய பேராசை அடங்குவதற்கு முன்பே,
அவர்களுடைய வாயில் அந்த இறைச்சி இருந்தபோதே,
31 கடவுளுடைய கடும் கோபம் அவர்கள்மேல் மூண்டது.[m]
அவர்களுடைய பலசாலிகளை அவர் கொன்றுபோட்டார்.[n]
இஸ்ரவேல் வாலிபர்களை வீழ்த்தினார்.
32 இவ்வளவு நடந்தும் அவர்கள் பாவத்துக்குமேல் பாவம் செய்தார்கள்.[o]
அவர் செய்த அற்புதங்களை நம்பாமல் போனார்கள்.[p]
33 அதனால், அவர்களுடைய வாழ்நாளை மூச்சுக்காற்றுபோல் அவர்
மறைய வைத்தார்.[q]
அவர்களுடைய வாழ்நாள் காலத்தைத் திகில் சம்பவங்களால்
திடீரென்று முடிவுக்குக் கொண்டுவந்தார்.
34 ஆனால், கடவுள் இப்படித் தண்டித்த ஒவ்வொரு சமயத்திலும்,
அவர்கள் அவரைத் தேட ஆரம்பித்தார்கள்.[r]

78:25 * வே.வா., "தேவதூதர்களின்."

அதி. 78
a யாத் 16:8
b யாத் 17:6
c யாத் 16:3
d எண் 11:10
e எபி 12:29
f எண் 11:1
g சங் 106:24; எபி 3:10; யூ 5
h யாத் 16:14, 35; யாத் 16:31, 32; எண் 11:7; உபா 8:3; யோவா 6:31; 1கொ 10:2, 3
i சங் 103:20
j யாத் 16:12
k எண் 11:31-34
l எண் 11:19, 20
m எண் 11:10
n எண் 11:34
o எண் 14:2-4; எண் 25:3; 1கொ 10:8-10
p யாத் 16:15; உபா 8:14, 15
q எண் 14:29, 35; உபா 2:14
r எண் 21:7; நியா 4:3

அவரிடம் திரும்பி வந்து, அவரையே நாடினார்கள்.
35 கடவுள்தான் தங்களுடைய கற்பாறை[a] என்பதையும்,
உன்னதமான கடவுள்தான் தங்களை விடுவிக்கிறவர்*[b] என்பதையும்
நினைத்துப் பார்த்தார்கள்.
36 ஆனால், தங்களுடைய வாயினால் அவரை ஏமாற்றப் பார்த்தார்கள்.
தங்களுடைய நாவினால் அவரிடம் பொய் சொன்னார்கள்.
37 அவர்களுடைய இதயம் அவரிடம் பற்றுதலாக இருக்கவில்லை.[c]
அவருடைய ஒப்பந்தத்துக்கு அவர்கள் உண்மையாக
நடந்துகொள்ளவில்லை.[d]
38 இருந்தாலும், அவர் இரக்கம் காட்டினார்.[e]
அவர்களுடைய குற்றத்தை மன்னித்து, அவர்களை அழிக்காமல்
விட்டுவிட்டார்.[f]
அவர்கள்மேல் தன் கோபத்தையெல்லாம் கொட்டாமல்,
நிறைய தடவை அதை அடக்கிக்கொண்டார்.[g]
39 ஏனென்றால், அவர்கள் அற்ப மனுஷர்கள்தான்[h] என்பதையும்,
திரும்பி வராத காற்றுதான்* என்பதையும் நினைத்துப் பார்த்தார்.
40 வனாந்தரத்தில் அவர்கள் எத்தனை தடவை அவருடைய பேச்சை
மீறியிருப்பார்கள்![i]
பாலைவனத்தில் எத்தனை தடவை அவருடைய மனதைப்
புண்படுத்தியிருப்பார்கள்![j]
41 அவர்கள் திரும்பத் திரும்பக் கடவுளைச் சோதித்தார்கள்.[k]
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளைத் துக்கப்படுத்தினார்கள்.*
42 அவருடைய வல்லமையை அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை.
எதிரியிடமிருந்து அவர் தங்களைக் காப்பாற்றிய* நாளையும்
நினைத்துப் பார்க்கவில்லை.[l]
43 அவர் எகிப்தில் அடையாளங்களையும்,[m]
சோவான் பிரதேசத்தில் அற்புதங்களையும் செய்தார்.
44 நைல் நதியின் கால்வாய்களை இரத்தமாக மாற்றினார்.[n]
நீரோடைகளின் தண்ணீரைக் குடிக்க முடியாதபடி செய்தார்.
45 அவர்களை ஒழிக்கும்படி கூட்டங்கூட்டமான கொடிய ஈக்களையும்,*[o]
அவர்களை அழிக்கும்படி தவளைகளையும் வர வைத்தார்.[p]
46 அகோரப் பசிகொண்ட வெட்டுக்கிளிகளுக்கு அவர்களுடைய
பயிர்களை இரையாக்கினார்.
அவர்கள் பாடுபட்டு விளைய வைத்ததை வெட்டுக்கிளிக் கூட்டத்துக்கு
உணவாகக் கொடுத்தார்.[q]
47 அவர்களுடைய திராட்சைக் கொடிகளை ஆலங்கட்டி* மழையால்
அழித்தார்.[r]
அவர்களுடைய காட்டத்தி மரங்களை ஆலங்கட்டிகளால் சாய்த்தார்.

78:35 *வே.வா., "தங்களுக்காகப் பழிவாங்குபவர்." **78:39** *அல்லது, "அவர்களுடைய உயிர்சக்தி போய்விட்டால் திரும்பி வராது." **78:41** *வே.வா., "நோகடித்தார்கள்." **78:42** *நே.மொ., "மீட்டுக்கொண்ட." **78:45** *இவை ஒருவகையான கடிக்கும் ஈக்கள். **78:47** *அதாவது, "பனிக்கட்டி."

அதி. 78
a உபா 32:4
b யாத் 6:6
c சங் 95:10; எபி 3:10
d உபா 31:20; எரே 31:32
e யாத் 34:6; எண் 14:18; நெ 9:31
f எண் 14:19, 20; எரே 30:11; புல 3:22
g நெ 9:27; ஏசா 48:9; எசே 20:9
h சங் 103:14
i எண் 14:11
j ஏசா 63:10; எபே 4:30; எபி 3:16
k எண் 14:22; உபா 6:16; சங் 95:8, 9
l யாத் 14:30
m உபா 4:34; நெ 9:10; சங் 105:27-36
n யாத் 7:19
o யாத் 8:24
p யாத் 8:6
q யாத் 10:14, 15
r யாத் 9:23

48 அவர்களுடைய சுமை சுமக்கும் விலங்குகளை ஆலங்கட்டி மழைக்குப் பலியாக்கினார்.[a]
அவர்களுடைய கால்நடைகளை மின்னல்களால்* தாக்கினார்.
49 பற்றியெரிகிற கோபத்தால் அவர்களைத் தண்டித்தார்.
கடும் கோபத்துக்கும் ஆக்ரோஷத்துக்கும் வேதனைக்கும் அவர்களை ஆளாக்கினார்.
தன்னுடைய தூதர் படைகளை அனுப்பி அவர்களை அழித்தார்.
50 தன்னுடைய கோபத்துக்கு வடிகால் அமைத்தார்.
சாவின் பிடியில் அவர்களைச் சிக்க வைத்தார்.
கொள்ளைநோய்க்கு அவர்களைப் பலியாக்கினார்.
51 கடைசியில், எகிப்தியர்களின் முதல் பிறப்புகள் எல்லாவற்றையும் கொன்றுபோட்டார்.[b]
காமின் கூடாரங்களில் பிறந்த அவர்களுடைய முதல் மகன்களை* அழித்தார்.
52 பின்பு, தன்னுடைய மக்களை மந்தைபோல் அழைத்து வந்தார்.[c]
வனாந்தரத்தில் அவர்களை ஆடுகள்போல் வழிநடத்தி வந்தார்.
53 அவர்களைப் பத்திரமாகக் கூட்டிக்கொண்டு வந்தார்.
அவர்கள் எந்தப் பயமும் இல்லாமல் வந்தார்கள்.[d]
அவர்களுடைய எதிரிகளைக் கடல் மூழ்கடித்தது.[e]
54 அவர் தன்னுடைய பரிசுத்த தேசத்துக்கு அவர்களைக் கொண்டுவந்தார்.[f]
தன்னுடைய வலது கையால் வென்ற[g] இந்த மலைப்பகுதிக்கு அவர்களை அழைத்துவந்தார்.
55 மற்ற தேசத்து மக்களை அவர்கள் முன்னாலிருந்து துரத்தியடித்தார்.[h]
தேசத்தை அளவுநூலால் அளந்து அவர்களுக்குப் பங்குபோட்டுக் கொடுத்தார்.[i]
இஸ்ரவேல் கோத்திரங்களை அவரவர் வீடுகளில் குடியேற்றினார்.[j]
56 ஆனாலும், அவர்கள் உன்னதமான கடவுளுக்கு எதிராகச் சவால் விட்டுக்கொண்டே* இருந்தார்கள்.
அவரை எதிர்த்துக்கொண்டே இருந்தார்கள்.[k]
அவருடைய எச்சரிப்புகளை# காதில் வாங்கவே இல்லை.[l]
57 அவர்களுடைய முன்னோர்களைப் போலவே கடவுளைவிட்டு விலகி, துரோகிகளாக மாறினார்கள்.[m]
உறுதியற்ற வில்லைப் போல அவர்கள் நம்ப முடியாதவர்களாக இருந்தார்கள்.[n]
58 தங்களுடைய ஆராதனை மேடுகளால் அவருடைய கோபத்தைக் கிளறிக்கொண்டே இருந்தார்கள்.[o]
தாங்கள் செதுக்கிய சிலைகளால் அவருக்கு எரிச்சல் மூட்டிக்கொண்டே இருந்தார்கள்.[p]

78:48 *அல்லது, “கடும் காய்ச்சலால்.” **78:51** *வே.வா., “அவர்களுடைய ஆண்மையின் முதல் பலன்களை.” **78:56** *நே.மொ., “கடவுளைச் சோதித்துக்கொண்டே.” #வே.வா., “நினைப்பூட்டுதல்களை.”

அதி. 78
a யாத் 9:25
b யாத் 12:29, சங் 105:36
c சங் 77:20, சங் 105:37
d யாத் 14:20, எபி 11:29
e யாத் 14:27, யாத் 15:10
f யாத் 15:17
g சங் 44:3
h யோசு 24:12, சங் 44:2
i யோசு 13:7
j நெ 9:24, 25
k உபா 31:16, உபா 32:15, நியா 2:11, 2சா 20:1, நெ 9:26
l 2ரா 17:15, எரே 44:23
m உபா 9:7, நியா 3:6
n ஓசி 7:16
o உபா 12:2, நியா 2:2, எசே 20:28
p நியா 2:12, 1சா 7:3

59 அதைப் பார்த்து கடவுள் கொதித்துப்போனார்.[a]
அதனால், இஸ்ரவேலை அடியோடு ஒதுக்கித்தள்ளினார்.
60 கடைசியில், சீலோவிலிருந்த வழிபாட்டுக் கூடாரத்தைக் கைவிட்டார்.[b]
மக்கள் மத்தியில் தான் குடிகொண்டிருந்த அந்தக் கூடாரத்தைவிட்டு
விலகினார்.[c]
61 தன்னுடைய பலத்துக்கும் மேன்மைக்கும் அடையாளமாக இருந்த
ஒப்பந்தப் பெட்டியை
எதிரிகள் கொண்டுபோவதற்கு விட்டுவிட்டார்.[d]
62 தன்னுடைய மக்களை வாளுக்குப் பலியாக்கினார்.[e]
தன்னுடைய சொத்தாக இருந்தவர்கள்மேல் ஆக்ரோஷம் அடைந்தார்.
63 அவருடைய வாலிபர்கள் நெருப்பில் பலியானார்கள்.
அவருடைய கன்னிப் பெண்களுக்குக் கல்யாணப் பாடல்கள்
பாடப்படவில்லை.*
64 அவருடைய குருமார்கள் வாளால் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள்.[f]
விதவைகளாகிவிட்ட அவர்களுடைய மனைவிகள் அழுது
புலம்பவில்லை.[g]
65 அப்போது, தூக்கத்திலிருந்து எழுவதுபோல் யெகோவா எழுந்தார்.[h]
திராட்சமதுவின் போதை தெளிந்து எழுகிற பலசாலிபோல்[i] எழுந்தார்.
66 தன்னுடைய எதிரிகளை விரட்டியடித்தார்.[j]
அவர்களை நிரந்தரமாகத் தலைகுனிய வைத்தார்.
67 யோசேப்பின் கூடாரத்தை ஒதுக்கித்தள்ளினார்.
எப்பிராயீம் கோத்திரத்தைத் தேர்ந்தெடுக்காமல் விட்டுவிட்டார்.
68 அதற்குப் பதிலாக, யூதா கோத்திரத்தைத் தேர்ந்தெடுத்தார்.[k]
அவர் நேசிக்கிற சீயோன் மலையைத் தேர்ந்தெடுத்தார்.[l]
69 அவருடைய ஆலயத்தை என்றென்றும் நிலைத்திருக்கிற வானத்தைப்
போலவும்,[m]
என்றென்றும் இருக்கும்படி தான் நிலைநிறுத்திய பூமியைப் போலவும்
அமைத்தார்.[n]
70 அவருடைய ஊழியரான தாவீதைத் தேர்ந்தெடுத்தார்.[o]
ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவரைக் கொண்டுவந்தார்.[p]
71 பால் கொடுக்கிற செம்மறியாடுகளைக் கவனித்துவந்த அவரை
அழைத்து,
தன்னுடைய மக்களான யாக்கோபுக்கு,
தன்னுடைய சொத்தான இஸ்ரவேலுக்கு, மேய்ப்பராக்கினார்.[q]
72 தாவீது உத்தம இதயத்தோடு அவர்களை மேய்த்தார்.[r]
அவர்களைத் திறமையாக வழிநடத்தினார்.[s]

ஆசாப்பின்[t] சங்கீதம்.

79 கடவுளே, மற்ற தேசத்தார் உங்கள் தேசத்துக்குள் படையெடுத்து
வந்தார்கள்.[u]
உங்களுடைய பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினார்கள்.[v]
எருசலேமை மண்மேடாக ஆக்கினார்கள்.[w]

78:63 * நே.மொ., "அவருடைய கன்னிப் பெண்கள் புகழப்படவில்லை."

அதி. 78
a நியா 2:20
b யோசு 18:1; 1சா 4:11
c எரே 7:13
d 1சா 4:21; 1சா 5:1
e 1சா 4:2, 10
f 1சா 2:33, 34; 1சா 4:11
g 1சா 4:19
h சங் 44:23
i ஏசா 42:13
j 1சா 5:6
k ஆதி 49:10
l சங் 87:2; சங் 132:13; சங் 135:21
m சங் 76:2
n சங் 104:5; சங் 119:90; பிர 1:4
o 1சா 16:12, 13
p 1சா 17:15
q 2சா 6:21; 2சா 7:8
r 2சா 8:15; 1ரா 3:6; 1ரா 9:4; 1ரா 15:5
s 1சா 18:14

அதி. 79
t 1நா 25:1
u யாத் 15:17
v 2ரா 24:12, 13; சங் 74:3, 7; புல 1:10
w 2ரா 25:9, 10; 2நா 36:17-19; எரே 52:13

2 உங்களுடைய ஊழியர்களின் சடலங்களை வானத்துப் பறவைகளுக்கு உணவாக்கினார்கள்.
உங்களுக்கு உண்மையாக* இருந்தவர்களின் உடலைக் காட்டு மிருகங்களுக்கு இரையாக்கினார்கள்.[a]
3 அவர்களுடைய இரத்தத்தை எருசலேம் முழுவதும் தண்ணீர்போல் ஊற்றினார்கள்.
அவர்களை அடக்கம் செய்ய ஒருவனும் இல்லை.[b]
4 அக்கம்பக்கத்து தேசங்களின் பழிப்பேச்சுக்கு நாங்கள் ஆளாகிவிட்டோம்.[c]
சுற்றியிருக்கிற மக்கள் எங்களைக் கேலியும் கிண்டலும் செய்கிறார்கள்.
5 யெகோவாவே, இன்னும் எவ்வளவு காலம் கோபமாக இருப்பீர்கள்? என்றென்றைக்குமா?[d]
இன்னும் எவ்வளவு காலம் உங்களுடைய கோபம் தீயாய்ப் பற்றியெரியும்?[e]
6 உங்களைப் பற்றித் தெரியாத தேசங்களின் மேலும்,
உங்களுடைய பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்ளாத ராஜ்யங்களின் மேலும்
உங்கள் கோபத்தைக் கொட்டுங்கள்.[f]
7 ஏனென்றால், அவர்கள் யாக்கோபின் வம்சத்தாரை அழித்தார்கள்.
அவர்களுடைய தேசத்தைப் பாழாக்கினார்கள்.[g]
8 எங்களுடைய முன்னோர்கள் செய்த குற்றங்களுக்காக எங்களைத் தண்டிக்காதீர்கள்.[h]
நாங்கள் ரொம்பவே துவண்டுபோயிருக்கிறோம்.
எங்களுக்குச் சீக்கிரமாக இரக்கம் காட்டுங்கள்.[i]
9 எங்களை மீட்கும் கடவுளே,[j]
உங்களுடைய மகிமையான பெயரை மனதில் வைத்து எங்களுக்கு உதவுங்கள்.
உங்கள் பெயரை மனதில் வைத்து எங்களைக் காப்பாற்றுங்கள்,
எங்கள் பாவங்களை மன்னியுங்கள்.[k]
10 "அவர்களுடைய கடவுள் எங்கே போய்விட்டார்?" என்று மற்ற தேசத்தார் ஏன் கேட்க வேண்டும்?[l]
உங்கள் ஊழியர்களைக் கொன்றவர்கள்* பழிவாங்கப்பட்டதை எல்லா தேசத்தாரும் தெரிந்துகொள்ளட்டும்!
அது எங்கள் கண் முன்னால் நடக்கட்டும்![m]
11 கைதியின் பெருமூச்சைக் கேளுங்கள்.[n]
மரணத் தீர்ப்பு பெற்றவர்களை உங்களுடைய மகா பலத்தால் காப்பாற்றுங்கள்.*[o]
12 யெகோவாவே, உங்களைக் கேவலமாகப் பேசிய சுற்றுவட்டார மக்களுக்கு,[p]
ஏழு மடங்கு தண்டனை கொடுங்கள்.[q]

79:2 * வே.வா., "பற்றுமாறாமல்." **79:10** * வே.வா., "ஊழியர்களின் இரத்தத்தைச் சிந்தியவர்கள்." **79:11** * அல்லது, "விடுதலை செய்யுங்கள்."

அதி. 79
a எரே 7:33
எரே 15:3
எரே 34:20
b எரே 14:16
எரே 16:4
c உபா 28:37
எசே 36:4
d சங் 74:1
சங் 85:5
ஏசா 64:9
e செப் 1:18
f எரே 10:25
g 2நா 36:20, 21
h நெ 9:34
i சங் 69:17
புல 3:22
j 1நா 16:35
k யோசு 7:9
1சா 12:22
2நா 14:11
சங் 115:1, 2
ஏசா 48:9
எரே 14:7
l யோவே 2:17
m எரே 51:35
எசே 36:23
n யாத் 2:23
ஏசா 42:6, 7
o சங் 102:19, 20
p சங் 74:18
q எரே 12:14

13 அப்போது, உங்கள் ஜனமும், உங்களால் மேய்க்கப்படுகிற
ஆடுகளுமான நாங்கள்,[a]
உங்களுக்கு என்றென்றும் நன்றி சொல்வோம்.
உங்களுடைய புகழைத் தலைமுறை தலைமுறைக்கும்
அறிவிப்போம்.[b]

இசைக் குழுவின் தலைவனுக்கு; “லில்லி மலர்கள்” என்ற இசையில்;
ஒரு நினைப்பூட்டுதல். ஆசாப்பின்[c] சங்கீதம்.

80 இஸ்ரவேலின் மேய்ப்பரே,
யோசேப்பை மந்தைபோல் நடத்துகிறவரே,[d] கேளுங்கள்.
கேருபீன்களுக்கு மேலாக* வீற்றிருக்கிறவரே,[e] ஒளிவீசுங்கள்.
2 எப்பிராயீமுக்கும், பென்யமீனுக்கும், மனாசேக்கும் முன்னால்
உங்கள் வல்லமையைக் காட்டுங்கள்.[f]
எங்களை மீட்க வாருங்கள்.[g]
3 கடவுளே, திரும்பவும் எங்களுக்குக் கருணை காட்டுங்கள்.[h]
உங்கள் முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்க வையுங்கள், அப்போது
நாங்கள் பிழைப்போம்.[i]
4 பரலோகப் படைகளின் கடவுளான யெகோவாவே, இன்னும் எவ்வளவு
காலம் உங்கள் மக்களின் ஜெபத்தை வெறுத்து ஒதுக்குவீர்கள்?[j]
5 கண்ணீரை அவர்களுக்கு உணவாகக் கொடுக்கிறீர்கள்.
கண்ணீரையே குடம் குடமாகக் குடிக்கவும் வைக்கிறீர்கள்.
6 சுற்றுவட்டார மக்கள் எங்களைப் பிடிக்க போட்டாபோட்டி
போடுவதற்கு விடுகிறீர்கள்.
விரோதிகள் எங்களை இஷ்டம்போல் கேலி செய்கிறார்கள்.[k]
7 பரலோகப் படைகளின் கடவுளே, திரும்பவும் எங்களுக்குக் கருணை
காட்டுங்கள்.
உங்கள் முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்க வையுங்கள், அப்போது
நாங்கள் பிழைப்போம்.[l]
8 நீங்கள் எகிப்திலிருந்து ஒரு திராட்சைக் கொடியைக்[m]
கொண்டுவந்தீர்கள்.
மற்ற தேசத்து மக்களைத் துரத்திவிட்டு அதை நட்டு வைத்தீர்கள்.[n]
9 அதற்காக ஒரு இடத்தைத் தயார் செய்தீர்கள்.
அது வேரூன்றி வளர்ந்து, தேசம் முழுக்கப் படர்ந்தது.[o]
10 அதன் நிழல் மலைகளை மூடியது.
அதன் கிளைகள் கடவுளுடைய தேவதாரு மரங்களை மூடின.
11 அதன் கொடிகள் கடல்வரை எட்டின.
அதன் கிளைகள் ஆறுவரை* படர்ந்தன.[p]
12 அந்தத் திராட்சைத் தோட்டத்தின் கற்சுவர்களை ஏன்
இடித்துப்போட்டீர்கள்?[q]
போவோர் வருவோர் எல்லாரும் அதன் பழங்களைப் பறிக்கும்படி ஏன்
செய்தீர்கள்?[r]

80:1 * அல்லது, “நடுவில்.” **80:11** * அதாவது, “யூப்ரடிஸ் ஆறுவரை.”

அதி. 79
a சங் 74:1; சங் 95:7; சங் 100:3
b சங் 145:4; ஏசா 43:21

அதி. 80
c 1நா 25:1
d சங் 77:20; ஏசா 40:11; எரே 31:10; எசே 34:12; 1பே 2:25
e யாத் 25:20, 22; 1சா 4:4
f ஏசா 42:13
g ஏசா 25:9
h சங் 85:4; புல 5:21
i எண் 6:25; சங் 67:1, 2
j சங் 74:1; சங் 85:5; புல 3:44
k சங் 44:13; சங் 79:4
l சங் 80:3, 19
m ஏசா 5:7
n சங் 44:2; சங் 78:55; எரே 2:21
o யாத் 23:28, 30; யோசு 24:12, 13; 1ரா 4:25
p ஆதி 15:18; யாத் 23:31; 1ரா 4:21; சங் 72:8
q ஏசா 5:5
r நாகூ 2:2

13 காட்டுப் பன்றிகள் அதை நாசமாக்குகின்றன.
காட்டு விலங்குகள் அவற்றைத் தின்றுதீர்க்கின்றன.[a]
14 பரலோகப் படைகளின் கடவுளே, தயவுசெய்து எங்களிடம் திரும்புங்கள்.
பரலோகத்திலிருந்து கீழே பாருங்கள்.
இந்தத் திராட்சைக் கொடியைக் கவனித்துக்கொள்ளுங்கள்.[b]
15 உங்கள் வலது கையால் நட்டு வைத்த கொடியை*[c] பாருங்கள்.
உங்களுக்காக நீங்கள் பலப்படுத்திய உங்கள் மகனை#[d] பாருங்கள்.
16 இந்தக் கொடி வெட்டப்பட்டு நெருப்பில் போடப்படுகிறது.[e]
நீங்கள் மிரட்டும்போது அவர்கள் அழிந்துபோகிறார்கள்.
17 உங்களுடைய வலது பக்கத்தில் நிற்கிற மனிதனுக்குக் கைகொடுத்து உதவுங்கள்.
உங்களுக்காக நீங்கள் பலப்படுத்திய மனிதகுமாரனுக்கு ஆதரவு கொடுங்கள்.[f]
18 அப்போது, நாங்கள் உங்களைவிட்டுப் போகவே மாட்டோம்.
எங்கள் உயிரைக் காப்பாற்றுங்கள், அப்போது உங்களுடைய பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்வோம்.
19 பரலோகப் படைகளின் கடவுளான யெகோவாவே, திரும்பவும் எங்களுக்குக் கருணை காட்டுங்கள்.
உங்கள் முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்க வையுங்கள், அப்போது நாங்கள் பிழைப்போம்.[g]

இசைக் குழுவின் தலைவனுக்கு;
கித்தீத்* இசையில்; ஆசாப்பின்[h] பாடல்.

81 நம் பலமாக இருக்கிற கடவுளுக்குமுன் சந்தோஷ ஆரவாரம் செய்யுங்கள்.[i]
யாக்கோபின் கடவுளுக்குமுன் வெற்றி முழக்கம் செய்யுங்கள்.
2 இன்னிசையை ஆரம்பியுங்கள், கஞ்சிராவை எடுத்துத் தட்டுங்கள்.
இனிய ஓசை எழுப்பும் யாழையும் நரம்பிசைக் கருவியையும் வாசியுங்கள்.
3 மாதப் பிறப்பு* நாளில் ஊதுகொம்பை ஊதுங்கள்.[j]
பண்டிகை கொண்டாடப்படுகிற பௌர்ணமி நாளில் ஊதுகொம்பை ஊதுங்கள்.[k]
4 ஏனென்றால், இது இஸ்ரவேலுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவு.
யாக்கோபின் கடவுளால் கொடுக்கப்பட்ட ஆணை.[l]
5 அவர் எகிப்து தேசத்துக்கு விரோதமாகப் போனபோது,[m]
யோசேப்புக்கு அதை ஒரு நினைப்பூட்டுதலாகக் கொடுத்தார்.[n]
அடையாளம் தெரியாத ஒரு குரலை* நான் கேட்டேன்.
6 அது இப்படிச் சொன்னது: “அவனுடைய தோளில் இருந்த சுமையை நான் எடுத்துவிட்டேன்.[o]

80:15 *வே.வா., “தண்டை.” #வே.வா., “கிளையை.” **81:மே.கு.** *சொல் பட்டியலைப் பாருங்கள். **81:3** *வே.வா., “முதலாம் பிறை.” **81:5** *வே.வா., “புரியாத ஒரு பாஷையை.”

அதி. 80
a 2ரா 18:9; 2ரா 24:1; 2ரா 25:1; 2நா 32:1; எரே 39:1
b ஏசா 63:15
c ஏசா 5:7; எரே 2:21
d யாத் 4:22; ஏசா 49:5
e சங் 79:5; எரே 52:12, 13
f சங் 89:20, 21
g சங் 80:7

அதி. 81
h 1நா 25:1
i சங் 28:8
j எண் 29:1
k யாத் 23:16; எண் 10:10
l லேவி 23:23, 24
m யாத் 12:12
n யாத் 12:14
o யாத் 1:13, 14; யாத் 6:6

கூடையைப் பிடித்திருந்த அவனுடைய கைகளுக்கு விடுதலை
கொடுத்துவிட்டேன்.
7 இக்கட்டான சமயத்தில் நீ என்னைக் கூப்பிட்டாய், நான் உன்னைக்
காப்பாற்றினேன்.[a]
இடிமுழக்கம் உண்டாகிற மேகத்திலிருந்து* பதில் சொன்னேன்.[b]
மேரிபாவின்# தண்ணீருக்குப் பக்கத்தில் உன்னைச் சோதித்தேன்.[c]
(*சேலா*)
8 என் ஜனங்களே, கேளுங்கள்.
நான் உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்வேன்.
இஸ்ரவேலே, நான் சொல்வதை நீ கேட்டால் எவ்வளவு நன்றாக
இருக்கும்![d]
9 அப்போது, உன் நடுவே வேறு தெய்வங்களே இருக்காது.
பொய் தெய்வத்துக்கு முன்னால் நீ தலைவணங்க மாட்டாய்.[e]
10 யெகோவாவாகிய நான்தான் உன் கடவுள்.
எகிப்து தேசத்திலிருந்து உன்னைக் கூட்டிக்கொண்டு வந்தவர்
நான்தான்.[f]
உன் வாயை நன்றாகத் திற, நான் அதை நிரப்புவேன்.[g]
11 ஆனால், என் ஜனங்கள் என் பேச்சைக் கேட்கவில்லை.
இஸ்ரவேல் எனக்கு அடங்கி நடக்கவில்லை.[h]
12 அதனால், அவர்களுடைய பிடிவாதமான இதயத்தின்படி நடக்க
அவர்களை விட்டுவிட்டேன்.
அவர்களுக்கு எது சரியென்று பட்டதோ அதைத்தான் செய்தார்கள்.[i]
13 என் ஜனங்கள் என் பேச்சைக் கேட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்![j]
இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் எவ்வளவு அருமையாக
இருக்கும்![k]
14 அப்போது, அவர்களுடைய எதிரிகளை நான் உடனடியாக
அடக்கிவிடுவேன்.
என் கையை நீட்டி அவர்களுடைய விரோதிகளைத் தாக்குவேன்.[l]
15 யெகோவாவை வெறுப்பவர்கள் அவருக்குமுன் அடங்கி ஒடுங்கி
நிற்பார்கள்.
அவர்களுக்கு வரப்போகும் நிலைமை என்றென்றுமே மாறாது.
16 ஆனால், உனக்கு* அவர் உயர்தரமான கோதுமையைச் சாப்பிடக்
கொடுப்பார்.[m]
மலைத் தேனைக் கொடுத்து உன்னைத் திருப்திப்படுத்துவார்."[n]

ஆசாப்பின்[o] சங்கீதம்.

82 கடவுள் தன்னுடைய பரிசுத்த சபையில் நிற்கிறார்.[p]
கடவுள்களின்* நடுவே இப்படித் தீர்ப்பு கொடுக்கிறார்:[q]
2 "இன்னும் எவ்வளவு காலம்தான் அநியாயமாகத் தீர்ப்பு சொல்வீர்கள்?[r]

81:7 *நே.மொ., "மறைவிடத்திலிருந்து." #அர்த்தம், "தகராறு செய்தல்." **81:16** *அதாவது, "கடவுளுடைய மக்களுக்கு." **82:1** *வே.வா., "கடவுளைப் போன்றவர்களின்."

அதி. 81
a யாத் 14:10, 13 சங் 91:15
b யாத் 19:16, 19
c யாத் 17:6, 7
d யாத் 15:26
e யாத் 20:2-5 உபா 6:13, 14
f உபா 5:6
g உபா 32:13, 14
h யாத் 32:1 உபா 32:15
i எரே 7:23, 24 எரே 11:7, 8 மீ 6:16
j உபா 32:29
k உபா 5:29 ஏசா 48:17, 18
l எண் 14:9
m சங் 147:14
n உபா 32:13, 14

அதி. 82
o 1நா 25:1
p 2நா 19:6
q யாத் 18:21, 22 சங் 82:6 யோவா 10:34, 35
r லேவி 19:15 பிர 5:8

எவ்வளவு காலம்தான் பொல்லாதவர்களுக்குப் பாரபட்சம்
காட்டுவீர்கள்?[a] (*சேலா*)
3 எளியவர்களுக்கும் அநாதைகளுக்கும்* நீதி செய்யுங்கள்.[b]
ஆதரவற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் நியாயம் வழங்குங்கள்.[c]
4 ஏழை எளியவர்களைக் காப்பாற்றுங்கள்.
பொல்லாதவர்களின் பிடியிலிருந்து அவர்களை விடுவியுங்கள்."
5 இந்த நீதிபதிகளுக்கு ஒன்றும் தெரியாது, எதுவும் புரியாது.[d]
இவர்கள் எல்லாரும் இருட்டில் நடக்கிறார்கள்.
பூமியின் அஸ்திவாரங்களெல்லாம் அசைக்கப்படுகின்றன.[e]
6 "'நீங்கள் எல்லாரும் கடவுள்கள்,*[f]
நீங்கள் எல்லாரும் உன்னதமான கடவுளின் பிள்ளைகள்.
7 ஆனால், மற்ற மனிதர்களைப் போலவே நீங்களும் இறந்துபோவீர்கள்.[g]
மற்ற தலைவர்களைப் போலவே நீங்களும் செத்துப்போவீர்கள்'[h] என்று
நான் சொன்னேன்."
8 கடவுளே, எல்லா தேசங்களும் உங்களுக்குத்தான் சொந்தம்.
அதனால், எழுந்து வந்து பூமிக்குத் தீர்ப்பு கொடுங்கள்.[i]

ஒரு பாடல். ஆசாப்பின்[j] சங்கீதம்.

83 கடவுளே, மவுனமாக இருக்காதீர்கள்.[k]
அமைதியாக இருக்காதீர்கள்; தேவனே, சும்மாயிருக்காதீர்கள்.
2 பாருங்கள்! உங்களுடைய எதிரிகள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.[l]
உங்களை வெறுக்கிறவர்கள் ஆணவமாக நடக்கிறார்கள்.
3 உங்களுடைய மக்களுக்கு எதிராக ரகசியமாய்த் திட்டம் தீட்டுகிறார்கள்.
நீங்கள் பொக்கிஷமாக நினைக்கிற ஜனங்களுக்கு எதிராகச் சதி
செய்கிறார்கள்.
4 அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து,
"இஸ்ரவேலின் பெயர்கூட யாருடைய ஞாபகத்துக்கும் வராதபடி,
அந்தத் தேசத்தை அடியோடு அழிப்போம், வாருங்கள்"[m] என்று
சொல்கிறார்கள்.
5 அவர்கள் ஒன்றுசேர்ந்து சதி செய்கிறார்கள்.
உங்களுக்கு எதிராகக் கூட்டணி அமைத்திருக்கிறார்கள்.*[n]
6 ஏதோமியர்களும் இஸ்மவேலர்களும்* மோவாபியர்களும்[o]
ஆகாரியர்களும்[p]
7 கேபாலைச் சேர்ந்தவர்களும் அம்மோனியர்களும்[q]
அமலேக்கியர்களும்
பெலிஸ்தியர்களும்[r] தீரு மக்களும்[s] கூட்டணி அமைத்திருக்கிறார்கள்.
8 அசீரியர்களும்[t] அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள்.
லோத்துவின் வம்சத்தாருக்கு*[u] அவர்கள் ஆதரவு கொடுக்கிறார்கள்.
(*சேலா*)

82:3 *வே.வா., "அப்பா இல்லாத பிள்ளைகளுக்கும்." **82:6** *வே.வா., "கடவுளைப் போன்றவர்கள்." **83:5** *வே.வா., "ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்." **83:6** *வே.வா., "ஏதோம் கூடாரத்தாரும் இஸ்மவேல் கூடாரத்தாரும்." **83:8** *அதாவது, 6, 7 வசனங்களில் சொல்லப்பட்டுள்ள மோவாபியர்களும் அம்மோனியர்களும்.

அதி. 82
a உபா 1:16, 17; 2நா 19:7; நீதி 18:5
b உபா 24:17
c எரே 22:3
d மீ 3:1
e சங் 11:3; நீதி 29:4
f யோவா 10:34, 35; 1கொ 8:5
g சங் 49:12
h சங் 146:3, 4
i சங் 96:13

அதி. 83
j 2நா 20:14
k சங் 28:1
l சங் 2:1, 2
m யாத் 1:8-10; 2நா 20:1; எஸ்தர் 3:6
n 2சா 10:6; ஏசா 7:2, 5
o 2நா 20:1, 10
p 1நா 5:10
q எரே 49:2
r யாத் 15:14; சங் 60:8
s ஆமோ 1:9
t 2ரா 17:5
u ஆதி 19:36-38; உபா 2:9

9 அதனால், மீதியானியர்களுக்குச் செய்தது போலவும்,[a] கீசோன் நீரோடைக்கு* பக்கத்திலே
சிசெராவுக்கும் யாபீனுக்கும் செய்தது போலவும்[b] அவர்களுக்குச் செய்யுங்கள்!
10 அவர்கள் எந்தோரில்[c] அழிக்கப்பட்டார்கள்.
நிலத்துக்கு எருவானார்கள்.
11 ஓரேபுக்கும் சேபுக்கும் செய்ததுபோல்[d] அவர்களுடைய அதிபதிகளுக்குச் செய்யுங்கள்.
செபாவுக்கும் சல்முனாவுக்கும் செய்ததுபோல்[e] அவர்களுடைய தலைவர்களுக்குச் செய்யுங்கள்.
12 ஏனென்றால், "கடவுள் குடிகொண்டிருக்கிற தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்வோம்" என்று அவர்கள் சொன்னார்கள்.
13 என் கடவுளே, காற்றில் சுழற்றியடிக்கப்படும் முட்செடி போல அவர்களை ஆக்குங்கள்.[f]
காற்றில் அடித்துக்கொண்டு போகப்படுகிற பதரைப் போல ஆக்குங்கள்.
14 காட்டைக் கொளுத்துகிற தீ போலவும்,
மலைகளைச் சுட்டெரிக்கிற தீ ஜுவாலை போலவும்,[g]
15 அவர்களை உங்களுடைய சூறாவளியால் துரத்திப்பிடியுங்கள்.[h]
உங்களுடைய புயல்காற்றினால் அவர்களை மிரள வையுங்கள்.[i]
16 அவர்களுடைய முகங்களில் அவமானம் படியும்படி செய்யுங்கள்.
யெகோவாவே, அப்போதுதான் அவர்கள் உங்களுடைய பெயரைத் தேடி வருவார்கள்.
17 அவர்கள் என்றென்றும் அவமானப்பட்டு, கதிகலங்கிப்போகட்டும்.
கேவலப்பட்டு, அழிந்துபோகட்டும்.
18 யெகோவா என்ற பெயருள்ள[j] நீங்கள் ஒருவர்தான்,
இந்தப் பூமி முழுவதையும் ஆளுகிற உன்னதமான* கடவுள் என்று மக்கள் புரிந்துகொள்ளட்டும்.[k]

இசைக் குழுவின் தலைவனுக்கு; கித்தீத்* இசையில்;
கோராகுவின் மகன்களுடைய[l] சங்கீதம்.

84 பரலோகப் படைகளின் யெகோவாவே,
உங்களுடைய மகத்தான கூடாரத்தை எவ்வளவாய் நேசிக்கிறேன்![m]
2 யெகோவாவின் பிரகாரங்களுக்குப் போக என் ஜீவன் தவிக்கிறது.
அங்கு போக நான் ஏங்கித் தவிக்கிறேன்.[n]
உயிருள்ள கடவுளுக்குமுன் என் உடலும் உள்ளமும் சந்தோஷ ஆரவாரம் செய்கிறது.
3 பரலோகப் படைகளின் யெகோவாவே, என் ராஜாவே, என் கடவுளே,
உங்களுடைய மகத்தான பலிபீடத்தின் பக்கத்திலே பறவைக்குக்கூட வீடு கிடைக்கிறதே!
தகைவிலான் குருவிக்குக்கூட தன் குஞ்சுகளோடு தங்குவதற்குக் கூடு கிடைக்கிறதே!

83:9 *வே.வா., "காட்டாற்றுப் பள்ளத்தாக்குக்கு." **83:18** *வே.வா., "மிக உயர்ந்த."
84:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 83
a நியா 8:10, 12
b நியா 4:2, 7, 15
c யோசு 17:11
d நியா 7:25
e நியா 8:21
f ஏசா 17:13
g சங் 144:5 நாகூ 1:6
h ஏசா 30:30
i சங் 11:6
j யாத் 6:3 சங் 68:4 ஏசா 42:8 ஏசா 54:5
k சங் 59:13 சங் 92:8 தானி 4:17

அதி. 84
l 2நா 20:19
m சங் 27:4 சங் 43:3 சங் 46:4
n சங் 42:1, 2 சங் 63:1, 2

4 உங்களுடைய வீட்டில் குடியிருப்பவர்கள் சந்தோஷமானவர்கள்.[a]
அவர்கள் எப்போதும் உங்களைப் புகழ்கிறார்கள்.[b] (*சேலா*)
5 உங்களையே பலமென்று நம்புகிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[c]
அவர்களுடைய இதயம் உங்கள் ஆலயத்துக்குப் போகிற
நெடுஞ்சாலைகள்மேல் இருக்கிறது.
6 தண்ணீர் இல்லாத பேக்கா பள்ளத்தாக்கு* வழியாக அவர்கள்
போகும்போது,
நீரூற்றுகள் நிறைந்த இடமாக அதைப் பார்க்கிறார்கள்.
முதல் பருவ மழை அதை ஆசீர்வாதங்களால் நிரப்புகிறது.#
7 அவர்கள் பலத்துக்குமேல் பலம் அடைந்து நடந்துபோவார்கள்.[d]
அவர்கள் ஒவ்வொருவரும் சீயோனிலே கடவுளுக்கு முன்னால் வந்து
நிற்பார்கள்.
8 பரலோகப் படைகளின் கடவுளான யெகோவாவே, என் ஜெபத்தைக்
கேளுங்கள்.
யாக்கோபின் கடவுளே, காதுகொடுத்துக் கேளுங்கள். (*சேலா*)
9 எங்கள் கேடயமே,[e] எங்கள் கடவுளே, பாருங்கள்.*
நீங்கள் அபிஷேகம் செய்தவரின் முகத்தைப் பாருங்கள்.[f]
10 வேறு எந்தவொரு இடத்திலும் ஆயிரம் நாட்கள் இருப்பதைவிட,
உங்கள் பிரகாரங்களில் ஒரேவொரு நாள் இருப்பது மேல்![g]
பொல்லாதவர்களின் கூடாரத்தில் குடியிருப்பதைவிட,
என் கடவுளுடைய ஆலய வாசலில் நிற்பதைத்தான் நான்
விரும்புகிறேன்.
11 ஏனென்றால், கடவுளாகிய யெகோவா ஒரு சூரியன்,[h] ஒரு கேடயம்.[i]
அவரே கருணை காட்டுகிறார், மகிமையும் தருகிறார்.
உத்தமமாக நடக்கிறவர்களுக்கு
யெகோவா ஒரு குறையும் வைக்க மாட்டார்.*[j]
12 பரலோகப் படைகளின் யெகோவாவே,
உங்கள்மேல் நம்பிக்கை வைக்கிறவன் சந்தோஷமானவன்.[k]

இசைக் குழுவின் தலைவனுக்கு;
கோராகுவின் மகன்களுடைய[l] சங்கீதம்.

85 யெகோவாவே, உங்களுடைய தேசத்துக்குக் கருணை
காட்டினீர்கள்.[m]
சிறைபிடிக்கப்பட்டுப் போன யாக்கோபின் வம்சத்தாரை
அழைத்துவந்தீர்கள்.[n]
2 உங்களுடைய மக்கள் செய்த குற்றத்தை மன்னித்தீர்கள்.
அவர்கள் செய்த எல்லா பாவத்தையும் மன்னித்தீர்கள்.[o] (*சேலா*)
3 உங்களுடைய கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டீர்கள்.
உங்களுடைய ஆக்ரோஷத்தை விட்டுவிட்டீர்கள்.[p]

84:6 * வே.வா., "பேக்கா புதர்செடிகள் நிறைந்த பள்ளத்தாக்கு." # அல்லது, "போதிப்பவர் தன்னைப் புகழால் போர்த்திக்கொள்கிறார்." **84:9** * அல்லது, "கடவுளே, எங்கள் கேடயத்தைப் பாருங்கள்." **84:11** * வே.வா., "நல்லது எதையும் கொடுக்காமல் இருக்க மாட்டார்."

அதி. 84
a சங் 23:6, சங் 65:4
b 1நா 25:7, சங் 150:1
c சங் 28:7
d சங் 18:32, ஏசா 40:29-31, ஆப 3:19
e ஆதி 15:1
f 1சா 2:10
g சங் 26:8, சங் 27:4, சங் 43:3, 4
h சங் 27:1, ஏசா 60:19, 20
i உபா 33:29, 2சா 22:3, சங் 144:2
j சங் 34:9, சங் 37:18
k சங் 146:5, எரே 17:7

அதி. 85
l 2நா 20:19
m லேவி 26:42, யோவே 2:18
n எஸ்றா 2:1, எரே 30:18, எசே 39:25
o எரே 50:20, மீ 7:18
p சங் 103:9, ஏசா 12:1

4 எங்களை மீட்கும் கடவுளே, எங்களுக்குத் திரும்பவும் கருணை காட்டுங்கள்.*
எங்கள்மேல் இருக்கிற வெறுப்பை விட்டுவிடுங்கள்.[a]
5 நீங்கள் என்றென்றுமே எங்கள்மேல் கோபமாக இருப்பீர்களா?[b]
உங்கள் கோபம் தலைமுறை தலைமுறைக்கும் தீராதா?
6 உங்கள் ஜனங்களாகிய நாங்கள் உங்களை நினைத்து சந்தோஷப்படும்படி,
எங்களுக்கு மறுபடியும் புத்துயிர் தர மாட்டீர்களா?[c]
7 யெகோவாவே, எங்களுக்கு மாறாத அன்பைக் காட்டுங்கள்.[d]
எங்களுக்கு மீட்பு கொடுங்கள்.
8 உண்மைக் கடவுளான யெகோவா சொல்வதை நான் கேட்பேன்.
உண்மையாக* நடக்கிற தன் மக்களுக்கு அவர் சமாதான வார்த்தைகளைச் சொல்வார்.[e]
ஆனால், அவர்கள் மறுபடியும் மட்டுக்குமீறிய தன்னம்பிக்கையோடு நடந்துகொள்ளாமல் இருக்கட்டும்![f]
9 நம் தேசத்தில் அவருடைய மகிமை தங்கியிருப்பதற்காக,
அவருக்குப் பயந்து நடக்கிறவர்களை அவர் சீக்கிரத்திலேயே மீட்கப்போகிறார்.[g]
10 மாறாத அன்பும் உண்மைத்தன்மையும் ஒன்றையொன்று சந்திக்கும்.
நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தமிடும்.[h]
11 பூமியிலிருந்து உண்மைத்தன்மை துளிர்விடும்.
வானத்திலிருந்து நீதி எட்டிப் பார்க்கும்.[i]
12 ஆம், யெகோவா நன்மையானதை* தருவார்.[j]
நம் தேசம் அமோக விளைச்சலைத் தரும்.[k]
13 அவருக்கு முன்னால் நீதி நடந்து போகும்.[l]
அவர் அடியெடுத்து வைப்பதற்கு அது பாதை அமைத்துக் கொடுக்கும்.

தாவீதின் ஜெபம்.

86 யெகோவாவே, என் ஜெபத்தைக் காதுகொடுத்து* கேளுங்கள், எனக்குப் பதில் சொல்லுங்கள்.
நான் வேதனையிலும் வறுமையிலும் வாடுகிறேன்.[m]
2 நான் உங்களுக்கு உண்மையாக* நடக்கிறேன், அதனால் என் உயிரைக் காத்திடுங்கள்.[n]
உங்களையே நம்பியிருக்கிற உங்கள் ஊழியனைக் காப்பாற்றுங்கள்.
ஏனென்றால், நீங்கள்தான் என் கடவுள்.[o]
3 யெகோவாவே, நாள் முழுவதும் உங்களைக் கூப்பிடுகிறேன்.[p]
எனக்குக் கருணை காட்டுங்கள்.[q]
4 யெகோவாவே, உதவிக்காக உங்களிடம்தான் கெஞ்சுகிறேன்.
உங்களுடைய ஊழியனுக்குச் சந்தோஷம் கொடுங்கள்.
5 யெகோவாவே, நீங்கள் நல்லவர்,[r] மன்னிக்கத் தயாராக இருக்கிறவர்.[s]

85:4 *வே.வா., "எங்களைத் திரும்பவும் கூட்டிச்சேருங்கள்." **85:8; 86:2** *வே.வா., "பற்றுமாறாமல்." **85:12** *வே.வா., "செழிப்பை." **86:1** *வே.வா., "குனிந்து."

அதி. 85
a சங் 80:3, 4
b சங் 74:1; சங் 79:5
c எஸ்றா 3:11; எரே 33:10, 11
d புல 3:22
e ஏசா 57:19
f உபா 8:17, 18; சங் 78:7
g ஏசா 46:13
h சங் 72:3; ஏசா 32:17
i ஏசா 26:9; ஏசா 45:8
j சங் 84:11; யாக் 1:17
k லேவி 26:4; சங் 67:6; ஏசா 25:6; ஏசா 30:23
l சங் 89:14

அதி. 86
m சங் 34:6; ஏசா 66:2
n சங் 37:28
o 2நா 16:9
p சங் 25:5
q சங் 57:1
r சங் 25:8; சங் 145:9; லூ 18:19
s ஏசா 55:7; மீ 7:18

உங்களிடம் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு மாறாத அன்பை
அளவில்லாமல் காட்டுகிறவர்.[a]
6 யெகோவாவே, என் ஜெபத்தைக் கேளுங்கள்.
உதவிக்காக நான் கெஞ்சுவதைக் காதுகொடுத்துக் கேளுங்கள்.[b]
7 இக்கட்டு நாளில் உங்களைக் கூப்பிடுகிறேன்.[c]
ஏனென்றால், நீங்கள் எனக்குப் பதில் தருவீர்கள்.[d]
8 யெகோவாவே, கடவுள்களில் உங்களுக்கு நிகர் யாருமே இல்லை.[e]
உங்களுடைய செயல்களுக்கு ஈடிணையே இல்லை.[f]
9 யெகோவாவே, நீங்கள் உருவாக்கிய எல்லா தேசங்களும்,
உங்கள் முன்னால் வந்து தலைவணங்கும்.[g]
உங்கள் பெயருக்கு மகிமை சேர்க்கும்.[h]
10 ஏனென்றால், நீங்கள் மகத்தானவர், அற்புதங்களைச் செய்கிறவர்.[i]
நீங்கள்தான் கடவுள், நீங்கள் ஒருவர்தான் கடவுள்.[j]
11 யெகோவாவே, உங்களுடைய வழியை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[k]
உங்களுடைய சத்திய பாதையில் நான் நடப்பேன்.[l]
உங்கள் பெயருக்குப் பயந்து நடக்கும்படி என் இதயத்தை
ஒருமுகப்படுத்துங்கள்.*[m]
12 என் கடவுளாகிய யெகோவாவே, முழு இதயத்தோடு உங்களைப்
புகழ்கிறேன்.[n]
உங்களுடைய பெயரை என்றென்றும் மகிமைப்படுத்துவேன்.
13 ஏனென்றால், நீங்கள் எனக்குக் காட்டும் மாறாத அன்பு மகத்தானது.
கல்லறையின் ஆழத்திலிருந்து என் உயிரைக்
காப்பாற்றியிருக்கிறீர்கள்.[o]
14 கடவுளே, அகங்காரம்பிடித்த* ஆட்கள் எனக்கு எதிராகக்
கிளம்பியிருக்கிறார்கள்.[p]
ஈவிரக்கம் இல்லாத கும்பல் என் உயிரைப் பறிக்கப் பார்க்கிறது.
அந்த ஆட்கள் உங்களைத் துளியும் மதிப்பதில்லை.[q]
15 ஆனால் யெகோவாவே, நீங்கள் இரக்கமும் கரிசனையும்*
உள்ள கடவுள்.
நீங்கள் சீக்கிரத்தில் கோபப்படாதவர், மாறாத அன்பையும்
உண்மைத்தன்மையையும் அளவில்லாமல் காட்டுகிறவர்.[r]
16 என்னிடமாகத் திரும்பி, எனக்குக் கருணை காட்டுங்கள்.[s]
உங்களுடைய ஊழியனுக்குப் பலம் கொடுங்கள்.[t]
உங்களுடைய அடிமைப் பெண்ணின் மகனைக் காப்பாற்றுங்கள்.
17 உங்களுடைய நல்மனதுக்கு ஒரு அத்தாட்சியை* எனக்குக் காட்டுங்கள்.
என்னை வெறுக்கிறவர்கள் அதைப் பார்த்து அவமானப்படட்டும்.
ஏனென்றால் யெகோவாவே, நீங்கள்தான் எனக்கு உதவி செய்கிறவர்,
எனக்கு ஆறுதல் தருகிறவர்.

86:11 *வே.வா., "இரண்டுபடாத இதயத்தை எனக்குக் கொடுங்கள்." **86:14** *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. **86:15** *வே.வா., "கனிவும்." **86:17** *வே.வா., "அடையாளத்தை."

அதி. 86
a சங் 130:7
b சங் 17:1
c சங் 18:6
d சங் 116:1
e யாத் 15:11; சங் 96:5; 1கொ 8:5, 6
f உபா 3:24; சங் 104:24
g ஏசா 2:2, 3; சக 14:9; வெளி 7:9, 10
h வெளி 15:4
i சங் 72:18; தானி 6:27
j உபா 6:4; சங் 83:18; ஏசா 44:6; 1கொ 8:4
k சங் 27:11; சங் 119:33; சங் 143:8; ஏசா 54:13
l சங் 43:3
m பிர 12:13; எரே 32:39
n மத் 22:37
o யோபு 33:28; சங் 56:13; சங் 116:8
p 2சா 15:12
q சங் 10:4; சங் 54:3
r யாத் 34:6; நெ 9:17; யோனா 4:2
s சங் 25:16
t சங் 28:7

கோராகுவின் மகன்களுடைய[a] சங்கீதம். ஒரு பாடல்.

87 கடவுளுடைய நகரத்தின் அஸ்திவாரம் பரிசுத்த மலைகளில்
போடப்பட்டிருக்கிறது.[b]
2 யாக்கோபின் கூடாரங்கள் எல்லாவற்றையும்விட
சீயோனின் வாசல்களை யெகோவா அதிகமாக நேசிக்கிறார்.[c]
3 உண்மைக் கடவுளின் நகரமே,
உன்னைப் பற்றி அருமையான விஷயங்கள் சொல்லப்படுகின்றன.[d]
(*சேலா*)
4 என்னைப் பற்றித் தெரிந்தவர்களின்* பட்டியலில்
ராகாபையும்#[e] பாபிலோனையும் சேர்த்துக்கொள்வேன்.
இதோ, பெலிஸ்தியாவையும் தீருவையும் கூஷையும்△
சேர்ந்தவர்களைப் பற்றி,
"இவர்கள் சீயோனில் பிறந்தார்கள்" என்று சொல்லப்படும்.
5 சீயோனைப் பற்றி, "இன்னார் இன்னார் இங்கே பிறந்தார்கள்" என்று
சொல்லப்படும்.
உன்னதமான கடவுள் சீயோனை உறுதியாக நிலைநிறுத்துவார்.
6 மக்களுடைய பெயர்களைப் பதிவு செய்யும்போது,
"இவர்கள் சீயோனில் பிறந்தார்கள்" என்று யெகோவா அறிவிப்பார்.
(*சேலா*)
7 "எல்லா ஆசீர்வாதங்களும் சீயோனிலிருந்துதான் வருகின்றன"*[f] என்று
பாடகர்களும்[g] நடனம்# ஆடுகிறவர்களும்[h] சொல்வார்கள்.

ஒரு பாடல். கோராகுவின் மகன்களுடைய சங்கீதம்.[i]
இசைக் குழுவின் தலைவனுக்கு; மகலாத்* பாணியில் மாறி மாறி
பாட வேண்டியது. எஸ்ராகியனான ஏமானின்[j] மஸ்கீல்.*

88 யெகோவாவே, என்னை மீட்கும் கடவுளே,[k]
பகலில் நான் கதறுகிறேன்.
ராத்திரியிலும் உங்கள்முன் கதறுகிறேன்.[l]
2 என்னுடைய ஜெபம் உங்களிடம் வந்து சேரட்டும்.[m]
நான் உதவி கேட்டுக் கதறுவதைக் காதுகொடுத்து* கேளுங்கள்.[n]
3 வேதனைக்குமேல் வேதனை என் ஜீவனை வாட்டியெடுக்கிறது.[o]
என் உயிர் கல்லறையின் விளிம்புக்கே வந்துவிட்டது.[p]
4 சவக்குழிக்குள் போகிறவர்களின் கணக்கில் நான் ஏற்கெனவே
சேர்க்கப்பட்டுவிட்டேன்.[q]
நாதியில்லாதவனாக* ஆகிவிட்டேன்.[r]
5 இறந்தவர்களைப் போல நான் கைவிடப்பட்டேன்.
கொல்லப்பட்டுக் கல்லறையில் கிடக்கிறவர்களைப் போல
ஆகிவிட்டேன்.

87:4 * வே.வா., "என்னை ஏற்றுக்கொண்டவர்களின்." # அநேகமாக, "எகிப்தையும்." △ வே.வா., "எத்தியோப்பியாவையும்." **87:7** * நே.மொ., "என்னுடைய எல்லா நீரூற்றுகளும் உன்னிடத்தில் இருக்கின்றன." # வே.வா., "வட்டமாக நடனம்." **88:மே.கு.** * சொல் பட்டியலைப் பாருங்கள். **88:2** * வே.வா., "குனிந்து." **88:4** * வே.வா., "பலம் இல்லாதவன்போல்."

அதி. 87
a 2நா 20:19
b சங் 48:1
c சங் 78:68; சங் 132:13
d சங் 48:2; ஏசா 60:14
e சங் 89:10; ஏசா 30:7
f சங் 46:4
g 1நா 15:16
h சங் 150:4

அதி. 88
i 2நா 20:19
j 1ரா 4:30, 31; 1நா 2:6
k சங் 27:9; ஏசா 12:2
l சங் 22:2
m 1ரா 8:30
n சங் 141:1
o சங் 71:20
p ஏசா 38:10
q சங் 143:7
r சங் 31:12

இனியும் உங்கள் நினைவில் அவர்கள் இல்லையே!
இனியும் உங்கள் அரவணைப்பு அவர்களுக்குக் கிடைப்பதில்லையே!
6 நீங்கள் என்னைப் படுகுழிக்குள் தள்ளிவிட்டீர்கள்.
இருட்டான இடத்தில், பெரிய அதலபாதாளத்தில், தள்ளிவிட்டீர்கள்.
7 உங்களுடைய கடும் கோபம் என்னைப் பயங்கரமாக அழுத்துகிறது.[a]
சீறிவருகிற உங்கள் அலைகள் என்மேல் மோதியடிக்கின்றன. (*சேலா*)
8 என் நண்பர்களை என்னைவிட்டுத் தூரமாகத் துரத்திவிட்டீர்கள்.[b]
அவர்கள் என்னை அருவருப்பாகப் பார்க்கும்படி செய்துவிட்டீர்கள்.
நான் வெளியே வர முடியாதபடி அடைபட்டிருக்கிறேன்.
9 சோகத்தில் என் கண்கள் சோர்ந்துவிட்டன.[c]
யெகோவாவே, நாள் முழுவதும் உங்களைக் கூப்பிடுகிறேன்.[d]
என் கைகளை விரித்து உங்களிடம் வேண்டுகிறேன்.
10 இறந்தவர்களுக்காக நீங்கள் அற்புதங்கள் செய்வீர்களா?
செத்துக் கிடக்கிறவர்கள்* எழுந்துவந்து உங்களைப் புகழ முடியுமா?[e] (*சேலா*)
11 கல்லறையில் இருக்கிறவர்கள் உங்களுடைய மாறாத அன்பைப் பற்றிப் பேசுவார்களா?
புதைகுழியில் இருக்கிறவர்கள் உங்களுடைய நம்பகத்தன்மையை* பற்றிச் சொல்வார்களா?
12 இருட்டில் உங்களுடைய அற்புதங்களும்,
மறக்கப்பட்டவர்களின் தேசத்தில் உங்களுடைய நீதியும் தெரியவருமா?[f]
13 ஆனாலும் யெகோவாவே, நான் உதவிக்காக உங்களிடம் கதறுகிறேன்.[g]
ஒவ்வொரு நாள் காலையிலும் உங்கள்முன் ஜெபம் செய்கிறேன்.[h]
14 யெகோவாவே, என்னை ஏன் ஒதுக்கித்தள்ளுகிறீர்கள்?[i]
உங்கள் முகத்தை என்னிடமிருந்து ஏன் மறைத்துக்கொள்கிறீர்கள்?[j]
15 சிறுவயதிலிருந்தே நான் கஷ்டங்களை அனுபவிக்கிறேன்.
இப்போது சாகும் நிலையில் இருக்கிறேன்.[k]
நீங்கள் அனுமதிக்கிற பயங்கர வேதனைகளைச் சகித்து சகித்து எனக்கு மரத்தே போய்விட்டது.
16 சுட்டெரிக்கிற உங்கள் கோபம் என்னை வாட்டியெடுக்கிறது.[l]
நீங்கள் ஏற்படுத்தும் திகில் என்னைக் கொல்கிறது.
17 அவை நாள் முழுவதும் என்னை வெள்ளம்போல் சூழ்ந்திருக்கின்றன.
எல்லா பக்கத்திலிருந்தும்* என்னை அமிழ்த்துகின்றன.
18 என்னுடைய நண்பர்களையும் தோழர்களையும் என்னைவிட்டுத் தூரமாகத் துரத்திவிட்டீர்கள்.[m]
இப்போது இருட்டுதான் எனக்கு நண்பன்.

88:10 * வே.வா., "செத்து செயலிழந்து போனவர்கள்." **88:11** * வே.வா., "உண்மைத் தன்மையை." **88:17** * அல்லது, "ஒரே சமயத்தில்."

அதி. 88
a சங் 90:7; சங் 102:10
b யோபு 19:13, 19; சங் 31:11; சங் 142:4
c யோபு 17:7; சங் 42:3; புல 3:49
d சங் 55:17
e யோபு 14:14; சங் 115:17; ஏசா 38:18
f பிர 2:16; பிர 8:10; பிர 9:5
g சங் 46:1
h சங் 55:17; சங் 119:147
i சங் 43:2
j யோபு 13:24; சங் 13:1
k யோபு 17:1
l சங் 102:10
m யோபு 19:13; சங் 31:11; சங் 38:11; சங் 142:4

மஸ்கீல்.* எஸ்ராகியனான ஏத்தானின்[a] பாடல்.

89 யெகோவா மாறாத அன்பைக் காட்டிய விதங்களைப் பற்றி
என்றென்றும் பாடுவேன்.
உங்களுடைய உண்மைத்தன்மையைப் பற்றித் தலைமுறை
தலைமுறைக்கும் சொல்வேன்.
2 ஏனென்றால், "மாறாத அன்பு என்றென்றும் நிலைத்திருக்கும்.[b]
உங்களுடைய உண்மைத்தன்மையைப் பரலோகத்திலே
உறுதியாக நிலைநாட்டியிருக்கிறீர்கள்" என்று சொன்னேன்.
3 "நான் தேர்ந்தெடுத்த ஒருவனோடு ஒப்பந்தம் செய்திருக்கிறேன்.[c]
என் ஊழியன் தாவீதுக்கு இப்படி ஆணையிட்டுக்
கொடுத்திருக்கிறேன்:[d]
4 'உன் சந்ததியை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்வேன்.[e]
உன் சிம்மாசனத்தைத் தலைமுறை தலைமுறைக்கும்
நிலைநிறுத்துவேன்.'"[f] (*சேலா*)
5 யெகோவாவே, பரலோகம் உங்களுடைய அற்புதமான செயல்களைப்
புகழ்கிறது.
பரிசுத்தமானவர்களின் சபை உங்களுடைய உண்மைத்தன்மையைப்
போற்றுகிறது.
6 பரலோகத்தில் யெகோவாவுக்கு நிகராக இருப்பவர் யார்?[g]
யெகோவாவுடைய மகன்களில்*[h] அவருக்குச் சமமாக இருப்பவர் யார்?
7 பரிசுத்தமானவர்களின் கூட்டம் கடவுளுக்குப் பயபக்தி காட்டுகிறது.[i]
அவரைச் சூழ்ந்திருக்கிற எல்லாருக்கும் அவர் மகத்தானவர்,
பயபக்திக்குரியவர்.[j]
8 பரலோகப் படைகளின் கடவுளான யெகோவாவே,
"யா"வே,* உங்களைப் போலப் பலமுள்ளவர் யார்?[k]
நீங்கள் எப்போதுமே நம்பகமானவராக# நடந்துகொள்கிறீர்கள்.[l]
9 கொந்தளிக்கிற கடலைக் கட்டுப்படுத்துகிறீர்கள்.[m]
பொங்கியெழும் அலைகளை அடக்குகிறீர்கள்.[n]
10 நீங்கள் ராகாபை*[o] வென்றீர்கள், கொன்றீர்கள்.[p]
உங்களுடைய கைபலத்தால் எதிரிகளைச் சிதறிப்போக வைத்தீர்கள்.[q]
11 வானம் உங்களுடையது, பூமியும் உங்களுடையது.[r]
பூமியையும் அதிலிருக்கிற எல்லாவற்றையும்[s] நீங்கள்தான்
உண்டாக்கினீர்கள்.
12 வடக்கையும் தெற்கையும் நீங்கள்தான் படைத்தீர்கள்.
தாபோரும்[t] எர்மோனும்[u] உங்கள் பெயரைச் சந்தோஷமாகப்
புகழ்கின்றன.
13 உங்களுடைய கரம் வலிமையுள்ளது.[v]
உங்களுடைய கை பலமுள்ளது.[w]
உங்களுடைய வலது கை உயர்ந்தோங்கி இருக்கிறது.[x]

அதி. 89
a 1ரா 4:30, 31; 1நா 2:6
b 1நா 16:41; ஏசா 54:10
c 2சா 7:8; 1ரா 8:16; லூ 1:32, 33
d சங் 132:11; எசே 34:23; ஓசி 3:5; யோவா 7:42
e 1நா 17:11; வெளி 22:16
f 2சா 7:12, 13; எபி 1:8
g சங் 40:5; சங் 71:19
h யோபு 38:7
i ஏசா 6:2, 3
j தானி 7:9, 10
k 1சா 2:2; சங் 84:12
l உபா 32:4
m எரே 31:35
n சங் 65:7; சங் 107:29
o ஏசா 30:7
p யாத் 14:26; யாத் 15:4
q யாத் 3:20; உபா 4:34; லூ 1:51
r 1கொ 10:26
s 1நா 29:11; சங் 50:12
t யோசு 19:22, 23
u உபா 3:8; யோசு 12:1
v யாத் 6:6
w யாத் 13:3
x சங் 44:3

89:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **89:6** *வே.வா., "தேவதூதர்களில்." **89:8** *"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். #வே.வா., "உண்மையுள்ளவராக." **89:10** *அநேகமாக, எகிப்து அல்லது பார்வோன்.

14 நீதியும் நியாயமும் உங்களுடைய சிம்மாசனத்தின் அடித்தளமாக
இருக்கின்றன.[a]
மாறாத அன்பும் உண்மைத்தன்மையும் உங்கள் முன்னால் நிற்கின்றன.[b]
15 உங்களை ஆனந்தமாகப் புகழ்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[c]
யெகோவாவே, உங்களுடைய முகத்தின் ஒளியில் அவர்கள்
நடக்கிறார்கள்.
16 அவர்கள் உங்களுடைய பெயரை நினைத்து நாளெல்லாம்
சந்தோஷப்படுகிறார்கள்.
உங்களுடைய நீதியால் உயர்வு அடைந்திருக்கிறார்கள்.
17 ஏனென்றால், நீங்கள்தான் அவர்களுடைய மகிமை,
அவர்களுடைய பலம்.[d]
உங்களுடைய தயவால் எங்களுடைய பலம் கூடுகிறது.[e]
18 யெகோவா எங்களுக்குக் கேடயத்தைத் தந்தார்.
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுள் எங்களுக்கு ராஜாவைக்
கொடுத்தார்.[f]
19 அந்தச் சமயத்திலே, உங்களிடம் உண்மையாக* இருந்தவர்களிடம்
ஒரு தரிசனத்தில் இப்படிச் சொன்னீர்கள்:
“மாவீரன் ஒருவனுக்குப் பலம் கொடுத்தேன்.[g]
மக்கள் நடுவிலிருந்து ஒருவனைத் தேர்ந்தெடுத்து அவனை
உயர்த்தினேன்.[h]
20 என் ஊழியன் தாவீதைக் கண்டேன்.[i]
என்னுடைய பரிசுத்த எண்ணெயால் அவனை அபிஷேகம் செய்தேன்.[j]
21 என் கை அவனைத் தாங்கும்.[k]
என் கரம் அவனைப் பலப்படுத்தும்.
22 எந்த எதிரியும் அவனிடம் கப்பம் கேட்க மாட்டான்.
அநீதியுள்ளவன் எவனும் அவனை அடக்கி ஒடுக்க மாட்டான்.[l]
23 அவனுடைய எதிரிகளை அவன் முன்னால் நொறுக்கிப்போடுவேன்.[m]
அவனை வெறுக்கிறவர்களை வெட்டி வீழ்த்துவேன்.[n]
24 அவனிடம் உண்மையோடு நடந்துகொள்வேன்,
அவனுக்கு மாறாத அன்பைக் காட்டுவேன்.[o]
என் பெயரால் அவனுடைய பலம் கூடும்.
25 அவனுக்குக் கடலின் மேல் அதிகாரம் கொடுப்பேன்.
ஆறுகளின் மேலும் அதிகாரம் கொடுப்பேன்.[p]
26 அவன் என்னிடம், ‘நீங்கள்தான் என் தகப்பன்,
என் கடவுள், என்னை மீட்கும் கற்பாறை’[q] என்று சொல்வான்.
27 அவனை மூத்த மகனாக்குவேன்.[r]
பூமியில் இருக்கிற ராஜாக்களுக்கெல்லாம் மகா ராஜாவாக்குவேன்.[s]
28 மாறாத அன்பை அவனுக்கு என்றென்றும் காட்டுவேன்.[t]
அவனோடு செய்த ஒப்பந்தத்தை முறிக்கவே மாட்டேன்.[u]
29 அவனுடைய சந்ததியை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்வேன்.

89:19 *வே.வா., “பற்றுமாறாமல்.”

அதி. 89
a உபா 32:4; சங் 71:19; வெளி 15:3
b யாத் 34:6; எரே 9:24
c எண் 10:10; சங் 98:6
d சங் 28:7
e 1சா 2:10
f சங் 2:6
g 1சா 18:14
h 2சா 7:8
i அப் 13:22
j 1சா 16:12, 13; அப் 10:38
k சங் 80:17; ஏசா 42:1
l 1நா 17:9
m 2சா 3:1; 2சா 7:9
n சங் 110:1
o 2சா 7:15; 1நா 17:13; அப் 13:34
p 1ரா 4:21; சங் 72:8
q 2சா 22:47; சங் 18:2
r சங் 2:7; எபி 1:5
s 1தீ 6:15; வெளி 1:5; வெளி 19:16
t அப் 13:34
u 2சா 23:5; சங் 89:34

அவனுடைய சிம்மாசனத்தை வானம்போல் என்றுமே நிலைநிற்க
வைப்பேன்.[a]
30 அவனுடைய வாரிசுகள் என் சட்டத்தைக் கடைப்பிடிக்காமல் போனால்,
என் உத்தரவுகளின்படி* நடக்காமல் போனால்,
31 என் சட்டதிட்டங்களை மீறினால்,
என் கட்டளைகளின்படி செய்யாமல் போனால்,
32 எனக்குக் கீழ்ப்படியாததற்காக அவர்களைத் தடியால் அடிப்பேன்.[b]
குற்றம் செய்ததற்காக அவர்களைச் சாட்டையால் விளாசுவேன்.
33 ஆனாலும், நான் அவனுக்கு மாறாத அன்பைக் காட்டாமல் இருக்க
மாட்டேன்.[c]
கொடுத்த வாக்கை நிறைவேற்றாமலும் போக மாட்டேன்.
34 நான் செய்த ஒப்பந்தத்தை மீற மாட்டேன்.[d]
சொன்ன சொல்லை மாற்றவும் மாட்டேன்.[e]
35 ஒரே முறையாக என்னுடைய பரிசுத்தத்தின் மேல் ஆணையிட்டுச்
சொன்னேன்.
தாவீதிடம் பொய் சொல்ல மாட்டேன்.[f]
36 அவனுடைய சந்ததி என்றென்றும் நிலைத்திருக்கும்.[g]
அவனுடைய சிம்மாசனம் சூரியனைப் போல எப்போதும் என்முன்
நிலைத்திருக்கும்.[h]
37 வானத்தில் உண்மையுள்ள சாட்சியாக இருக்கிற சந்திரனைப் போல,
அது என்றென்றும் உறுதியாக நிலைநிறுத்தப்படும்." (*சேலா*)
38 ஆனால், நீங்கள் அபிஷேகம் செய்தவரை நீங்களே வெறுத்து
ஒதுக்கினீர்கள்.[i]
அவன்மேல் பயங்கர கோபம் கொண்டீர்கள்.
39 உங்களுடைய ஊழியனோடு செய்த ஒப்பந்தத்தைப் புறக்கணித்தீர்கள்.
அவனுடைய கிரீடத்தைத் தரையில் எறிந்து அதைக்
கேவலப்படுத்தினீர்கள்.
40 அவனுடைய கற்சுவர்கள் எல்லாவற்றையும் இடித்துப்போட்டீர்கள்.
அவனுடைய மதில்களைத் தரைமட்டமாக்கினீர்கள்.
41 வருவோர் போவோர் எல்லாரும் அவனைச் சூறையாடினார்கள்.
சுற்றுவட்டார ஜனங்கள் அவனைப் பழித்துப் பேசினார்கள்.[j]
42 அவனுடைய எதிரிகளை நீங்கள் ஜெயிக்க வைத்தீர்கள்.[k]
அவனுடைய விரோதிகள் எல்லாரையும் கைகொட்டிச் சிரிக்க
வைத்தீர்கள்.
43 அவனுடைய வாளை உதவாமல் போகும்படி செய்துவிட்டீர்கள்.
போர்க்களத்தில் அவனைத் தோற்றுப்போக வைத்தீர்கள்.
44 அவனுடைய மேன்மைக்கு முடிவுகட்டினீர்கள்.
அவனுடைய சிம்மாசனத்தைக் கவிழ்த்துப்போட்டீர்கள்.
45 அவனுடைய இளமைக் காலத்தைக் குறைத்தீர்கள்.
அவமானத்தால் அவனை மூடினீர்கள். (*சேலா*)

89:30 * வே.வா., "நீதித்தீர்ப்புகளின்படி."

அதி. 89
a ஏசா 9:7; எரே 33:17; எபி 1:8
b 2சா 7:14; 1ரா 11:14, 31
c 2சா 7:15; 1ரா 11:32, 36
d எரே 33:20, 21
e யாக் 1:17
f எண் 23:19; சங் 132:11
g 2சா 7:16, 17; சங் 72:17; ஏசா 11:1; எரே 23:5; யோவா 12:34; வெளி 22:16
h தானி 7:14; லூ 1:32, 33
i 1நா 28:9
j உபா 28:37
k உபா 28:25

46 யெகோவாவே, இன்னும் எவ்வளவு காலம் மறைந்திருப்பீர்கள்?
என்றென்றைக்குமா?[a]
உங்களுடைய ஆக்ரோஷம் நெருப்புபோல் எரிந்துகொண்டே
இருக்குமா?
47 என் வாழ்நாள் எவ்வளவு குறுகியது என்பதை நினைத்துப் பாருங்கள்.[b]
மனிதர்கள் எல்லாரையும் வீணாகவா நீங்கள் படைத்தீர்கள்?
48 எந்த மனிதனாவது சாகாமலேயே உயிரோடு இருக்க முடியுமா?[c]
கல்லறையின் பிடியிலிருந்து தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள
முடியுமா? (*சேலா*)
49 யெகோவாவே, மாறாத அன்பினால் நீங்கள் முன்பு செய்த
செயல்களெல்லாம் எங்கே?
அவற்றைப் பற்றி தாவீதுக்கு உண்மையோடு ஆணையிட்டுக்
கொடுத்ததெல்லாம் எங்கே?[d]
50 யெகோவாவே, உங்களுடைய ஊழியர்கள் எப்படியெல்லாம் பழித்துப்
பேசப்பட்டார்கள்!
எல்லாருடைய பழிப்பேச்சையும் நான் எப்படித் தாங்கிக்கொள்ள
வேண்டியிருக்கிறது!
51 யெகோவாவே, உங்களுடைய எதிரிகள் எப்படியெல்லாம்
கேவலமாகப் பேசினார்கள்!
நீங்கள் அபிஷேகம் செய்தவரின் ஒவ்வொரு செயலையும் எப்படிக்
கேவலமாகப் பேசினார்கள்!
அதையெல்லாம் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.
52 யெகோவாவுக்கு என்றென்றும் புகழ் சேரட்டும்!
ஆமென், ஆமென்.*[e]

அதி. 89
a சங் 13:1
b யோபு 7:7
சங் 39:5
c யோபு 30:23
சங் 49:7, 9
d 2சா 7:12-15
சங் 132:11
ஏசா 55:3
e சங் 41:13
சங் 72:18

89:52 * அதாவது, “அப்படியே ஆகட்டும், அப்படியே ஆகட்டும்.”

பகுதி நான்கு
(சங்கீதம் 90–106)

உண்மைக் கடவுளின் ஊழியரான மோசேயின்[a] ஜெபம்.

90 யெகோவாவே, தலைமுறை தலைமுறைக்கும் நீங்கள்தான் எங்கள்
குடியிருப்பாக* இருக்கிறீர்கள்.[b]
2 மலைகள் தோன்றுவதற்கு முன்பிருந்தே,
பூமியையும் உலகத்தையும் நீங்கள் உருவாக்குவதற்கு* முன்பிருந்தே,[c]
என்றென்றும்# கடவுளாக இருக்கிறவர் நீங்கள்தான்.[d]
3 அற்ப மனுஷனை நீங்கள் மண்ணுக்கே திருப்பி அனுப்புகிறீர்கள்.
“மனிதர்களே, மண்ணுக்குத் திரும்புங்கள்!”[e] என்று சொல்கிறீர்கள்.
4 ஆயிரம் வருஷங்கள் உங்களுடைய பார்வையில் நேற்றைய தினம்
போலவும்,[f]
கடந்துபோன ஜாமம்* போலவும் இருக்கின்றன.

அதி. 90
a உபா 33:1
b உபா 33:27
சங் 91:1
c எரே 10:12
d சங் 93:2
ஏசா 40:28
ஆப 1:12
1தீ 1:17
வெளி 1:8
வெளி 15:3
e ஆதி 3:19
சங் 104:29
சங் 146:3, 4
பிர 3:20
பிர 12:7
f 2பே 3:8

90:1 * அல்லது, “அடைக்கலமாக.” **90:2** * வே.வா., “பிரசவ வேதனையோடு பெற்றெடுப்பதற்கு.” # வே.வா., “நித்திய நித்தியமாக.” **90:4** * ராத்திரியில் நான்கு ஜாமங்கள் உண்டு. ஒவ்வொரு ஜாமமும் சுமார் 4 மணிநேரங்கள் கொண்டவை.

5 அவர்களை நீங்கள் வாரிக்கொண்டு போகிறீர்கள்.[a]
அவர்களுடைய வாழ்நாள் கொஞ்ச நேர தூக்கத்தைப் போல
ஆகிவிடுகிறது.
அவர்கள் காலையில் முளைக்கிற புல்லைப் போல இருக்கிறார்கள்.[b]
6 காலையில் அது பூ பூத்து தளதளவென்று இருக்கிறது.
ஆனால், சாயங்காலத்துக்குள் வாடி வதங்கிவிடுகிறது.[c]
7 உங்களுடைய கோபம் எங்களைச் சுட்டுப்பொசுக்குகிறது.[d]
உங்களுடைய கடும் கோபம் எங்களை நடுநடுங்க வைக்கிறது.
8 எங்கள் குற்றங்களை உங்கள் கண் முன்னால் நிறுத்தியிருக்கிறீர்கள்.[e]
உங்கள் முகத்தின் ஒளி எங்களுடைய ரகசிய பாவங்களை
வெட்டவெளிச்சமாக்குகிறது.[f]
9 உங்களுடைய ஆக்ரோஷத்தால் எங்களுடைய நாட்கள்
குறைந்துவிடுகின்றன.
எங்களுடைய வாழ்நாள் காலம் பெருமூச்சு போலச் சட்டென்று
முடிந்துவிடுகிறது.
10 எங்களுடைய ஆயுள் 70 வருஷம்,
நிறைய தெம்பு* இருந்தால் 80 வருஷம்.[g]
ஆனால், அவை துன்ப துயரங்களால்தான் நிறைந்திருக்கின்றன.
அவை வேகமாக ஓடிவிடுகின்றன, நாங்களும் பறந்துவிடுகிறோம்.[h]
11 உங்களுடைய கோபத்தின் கடுமையை யாரால்
புரிந்துகொள்ள முடியும்?
உங்களுக்குக் காட்ட வேண்டிய பயபக்தியைப் போலவே அது
அளவிட முடியாதது.[i]
12 எங்கள் வாழ்நாட்களை நன்றாகப் பயன்படுத்துவதற்கு*
கற்றுக்கொடுங்கள்.[j]
அப்போதுதான், ஞானமுள்ள இதயத்தை நாங்கள்
பெற்றுக்கொள்வோம்.
13 யெகோவாவே, திரும்பி வாருங்கள்![k] இன்னும் எவ்வளவு
காலத்துக்குத்தான் இந்த நிலைமை?[l]
உங்களுடைய ஊழியர்களைப் பார்த்துப் பரிதாபப்படுங்கள்.[m]
14 காலையிலே உங்களுடைய மாறாத அன்பினால் எங்களைத்
திருப்தியாக்குங்கள்.[n]
அப்போது, எங்கள் வாழ்நாளெல்லாம் சந்தோஷம் பொங்க
ஆரவாரம் செய்வோம்.[o]
15 நீங்கள் எங்களுக்குக் கஷ்டம் கொடுத்த நாட்களுக்கும்,
நாங்கள் பாடுகளை அனுபவித்த வருஷங்களுக்கும்[p] ஈடாக
எங்களைச் சந்தோஷப்படுத்துங்கள்.[q]
16 உங்களுடைய ஊழியர்கள் உங்கள் செயல்களைப் பார்க்கட்டும்.
அவர்களுடைய பிள்ளைகள் உங்களுடைய மேன்மையைப்
பார்க்கட்டும்.[r]

90:10 *வே.வா., "அசாதாரண பலம்." **90:12** *நே.மொ., "வாழ்நாட்களை எண்ணுவதற்கு."

அதி. 90
a யோபு 9:25
b சங் 103:15; 1பே 1:24
c யோபு 14:2
d எண் 17:12, 13; உபா 32:22
e எரே 16:17
f நீதி 24:12; எபி 4:13
g 2சா 19:34, 35
h யோபு 14:10; சங் 78:39; லூ 12:20; யாக் 4:13, 14
i ஏசா 33:14; லூ 12:5
j சங் 39:4
k சங் 6:4
l சங் 89:46
m உபா 32:36; சங் 135:14
n சங் 36:7; சங் 51:1; சங் 63:3; சங் 85:7
o சங் 149:2
p உபா 2:14
q சங் 30:5
r எண் 14:31; யோசு 23:14

17 எங்கள் கடவுளான யெகோவாவே, உங்களுடைய கருணை
எங்கள்மேல் தங்கட்டும்.
நாங்கள் செய்கிறவற்றில் எங்களுக்கு வெற்றி தாருங்கள்.
நாங்கள் செய்கிறவற்றில் தயவுசெய்து எங்களுக்கு வெற்றி தாருங்கள்.[a]

91 உன்னதமான கடவுளுடைய மறைவிடத்தில்* இருக்கிறவன்,[b]
சர்வவல்லமையுள்ளவரின் நிழலில் தங்குவான்.[c]
2 நான் யெகோவாவிடம், "நீங்கள் என் அடைக்கலம், என் கோட்டை,[d]
நான் நம்பியிருக்கிற கடவுள்"[e] என்று சொல்வேன்.
3 அவர் உன்னை வேடனுடைய கண்ணியிலிருந்தும்,
கொடிய கொள்ளைநோயிலிருந்தும் பாதுகாப்பார்.
4 அவர் தன்னுடைய சிறகுகளால் உன்னை மூடுவார்.
அவருடைய இறக்கைகளின் கீழ் நீ அடைக்கலம் புகுவாய்.[f]
அவருடைய உண்மைத்தன்மை[g] உனக்கு ஒரு பெரிய
கேடயமாகவும்,[h]
பாதுகாப்பான மதிலாகவும்* இருக்கும்.
5 ராத்திரியில் வருகிற ஆபத்துகளுக்கும்,[i]
பகலில் பறக்கிற அம்புக்கும்,[j]
6 இருட்டில் பரவுகிற கொள்ளைநோய்க்கும்,
மத்தியானத்தில் பாழாக்குகிற பேரழிவுக்கும் நீ பயப்பட மாட்டாய்.
7 உன் பக்கத்தில் ஆயிரம் பேரும்,
உன் வலது பக்கத்தில் பத்தாயிரம் பேரும் விழுவார்கள்.
ஆனால், உனக்கு ஒன்றுமே ஆகாது.[k]
8 பொல்லாதவர்களுக்குக் கிடைக்கப்போகிற தண்டனையை நீ
வெறுமனே பார்ப்பாய்.
அதை உன் கண்களால் வெறுமனே பார்ப்பாய்.
9 ஏனென்றால், "யெகோவா என் அடைக்கலம்" என்று நீ சொன்னாய்.
உன்னதமான கடவுளை உன் குடியிருப்பாக* ஆக்கிக்கொண்டாய்.[l]
10 உனக்கு எந்த விபரீதமும் நடக்காது.[m]
உன் கூடாரத்தை எந்த ஆபத்தும் நெருங்காது.
11 உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி,[n]
அவர் தன்னுடைய தூதர்களுக்குக்[o] கட்டளை கொடுப்பார்.
12 உன் பாதம் கல்லில் மோதாதபடி,[p]
அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் சுமந்துகொண்டு போவார்கள்.[q]
13 இளம் சிங்கத்தையும் நாகப்பாம்பையும் நீ மிதிப்பாய்.
வளர்ந்த சிங்கத்தையும் பெரிய பாம்பையும் உன் காலடியில்
நசுக்குவாய்.[r]
14 கடவுள் சொன்னது இதுதான்:
"அவன் என்மேல் பாசம் வைத்திருப்பதால், நான் அவனைக்
காப்பாற்றுவேன்.[s]

91:1 * வே.வா., "ரகசிய இடத்தில்." **91:4** * வே.வா., "அரணாகவும்." **91:9** * அல்லது, "கோட்டையாக; தஞ்சமாக."

அதி. 90
a சங் 127:1; நீதி 16:3; ஏசா 26:12; 1கொ 3:7

அதி. 91
b சங் 27:5; சங் 31:20; சங் 32:7
c சங் 57:1
d சங் 18:2; நீதி 18:10
e நீதி 3:5
f யாத் 19:4; உபா 32:11; ரூ 2:12
g சங் 57:3; சங் 86:15
h ஆதி 15:1; சங் 84:11
i சங் 121:4, 6; ஏசா 60:2
j சங் 64:2, 3; ஏசா 54:17
k யாத் 12:13
l சங் 71:3; சங் 90:1
m நீதி 12:21
n யாத் 23:20; எபி 1:7, 14
o 2ரா 6:17; சங் 34:7; மத் 18:10
p சங் 37:24; மத் 4:6; லூ 4:10, 11
q ஏசா 63:9
r லூ 10:19
s சங் 18:2

அவன் என் பெயரைத் தெரிந்து வைத்திருப்பதால், அவனைப் பாதுகாப்பேன்.[a]
15 அவன் என்னைக் கூப்பிடுவான், நான் அவனுக்குப் பதில் கொடுப்பேன்.[b]
இக்கட்டான காலத்தில் அவனோடு இருப்பேன்.[c]
அவனைக் காப்பாற்றி, கௌரவப்படுத்துவேன்.
16 நீண்ட ஆயுளைக் கொடுத்து அவனைத் திருப்தியாக்குவேன்.[d]
என்னுடைய மீட்பை* அவனுக்குக் காட்டுவேன்."[e]

சங்கீதம். ஓய்வுநாளில் பாட வேண்டிய பாடல்.

92 யெகோவாவே, உங்களுக்கு நன்றி சொல்வது நல்லது.[f]
உன்னதமான கடவுளே, உங்கள் பெயரைப் புகழ்ந்து பாடுவது* நல்லது.
2 காலை நேரங்களில் உங்களுடைய மாறாத அன்பைப் பற்றியும்,[g]
ராத்திரி நேரங்களில் உங்களுடைய உண்மைத்தன்மையைப் பற்றியும்,
3 பத்து நரம்புகள் கொண்ட இசைக்கருவியோடும் தம்பூராவோடும்
யாழின் இனிமையான ஓசையோடும் புகழ்ந்து பாடுவது நல்லது.[h]
4 யெகோவாவே, உங்கள் செயல்களால் என்னைப் பூரித்துப்போக வைத்தீர்கள்.
உங்கள் கைகளால் நீங்கள் செய்தவற்றைப் பார்த்து நான் சந்தோஷ ஆரவாரம் செய்கிறேன்.
5 யெகோவாவே, உங்களுடைய செயல்கள் எவ்வளவு அற்புதமானவை![i]
உங்களுடைய யோசனைகள் எவ்வளவு ஆழமானவை![j]
6 புத்தியில்லாத எந்த மனிதனாலும் அவற்றைத் தெரிந்துகொள்ள முடியாது.
முட்டாள்களால் புரிந்துகொள்ள முடியாத விஷயம் இதுதான்:[k]
7 பொல்லாதவர்கள் களைகளை* போல முளைக்கும்போதும்,
அக்கிரமக்காரர்கள் எல்லாரும் செழிக்கும்போதும்,
அவர்கள் அடியோடு அழிக்கப்படுவார்கள் என்பதை உறுதியாகத் தெரிந்துகொள்ளலாம்.[l]
8 யெகோவாவே, நீங்கள்தான் என்றென்றுமே உயர்ந்தவர்.
9 யெகோவாவே, வெற்றிப் பெருமிதத்தோடு உங்கள் எதிரிகளைப் பாருங்கள்!
அவர்கள் கண்டிப்பாக அழிந்துபோவார்கள்!
அக்கிரமக்காரர்கள் எல்லாரும் சிதறடிக்கப்படுவார்கள்.[m]
10 ஆனால், நீங்கள் என் பலத்தைக் காட்டெருதின் பலத்தைப் போலாக்குவீர்கள்.*
நான் என் சருமத்தில் புது# எண்ணெயைப் பூசுவேன்.[n]
11 என்னுடைய எதிரிகளை என் கண்கள் வெற்றிப் பெருமிதத்தோடு பார்க்கும்.[o]

91:16 *வே.வா., "மீட்பின் செயல்களை." **92:1** *வே.வா., "இசை இசைப்பது." **92:7** *வே.வா., "புற்களை." **92:10** *நே.மொ. "நீங்கள் என் கொம்பைக் காட்டெருதின் கொம்பைப் போல உயர்த்துவீர்கள்." #வே.வா., "புத்துணர்ச்சி தரும்."

அதி. 91
a சங் 9:10; நீதி 18:10
b ரோ 10:13; எபி 5:7
c சங் 138:7; ஏசா 43:2
d சங் 21:1, 4; நீதி 3:1, 2
e ஏசா 45:17

அதி. 92
f சங் 50:23
g ஏசா 63:7
h 1நா 15:16; 1நா 25:6; 2நா 29:25
i சங் 40:5; சங் 145:4; பிர 3:11; வெளி 15:3
j யோபு 26:14; ரோ 11:33
k சங் 14:1; 1கொ 2:14
l சங் 37:35, 38; எரே 12:1-3
m உபா 28:7; சங் 68:1
n சங் 23:5
o சங் 37:34

என்னைத் தாக்குகிற அக்கிரமக்காரர்களுக்கு வரும் வீழ்ச்சியைப் பற்றி
என் காதுகள் கேட்கும்.
12 ஆனால், நீதிமான்கள் பேரீச்ச மரம் போலச் செழித்து வளருவார்கள்.
லீபனோனில் இருக்கிற தேவதாரு மரம் போல ஓங்கி வளருவார்கள்.[a]
13 அவர்கள் யெகோவாவின் வீட்டில் நடப்பட்டிருக்கிறார்கள்.
நம் கடவுளுடைய பிரகாரங்களில் செழித்து வளருகிறார்கள்.[b]
14 வயதான* காலத்திலும் அவர்கள் திடமாக இருப்பார்கள்.[c]
துடிப்பாகவும் தெம்பாகவும் இருப்பார்கள்.[d]
15 யெகோவா நேர்மையானவர் என்று அறிவிப்பார்கள்.
அவரே என் கற்பாறை,[e] அவரிடம் அநீதியே கிடையாது.

93 யெகோவா ராஜாவாகிவிட்டார்![f]
மகத்துவத்தை ஆடைபோல் அவர் அணிந்திருக்கிறார்.
பலத்தை உடைபோல் உடுத்தியிருக்கிறார்.
யெகோவா அதை இடுப்புவார் போலக் கட்டியிருக்கிறார்.
பூமி உறுதியாக நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது.
அதை அசைக்கவே முடியாது.
2 கடவுளே, பல காலத்துக்கு முன்பே உங்கள் சிம்மாசனம் உறுதியாக
நிலைநிறுத்தப்பட்டது.[g]
காலம் தோன்றுவதற்கு முன்பிருந்தே நீங்கள் இருக்கிறீர்கள்.[h]
3 ஆறுகள் பொங்கியெழுந்தன,
யெகோவாவே, ஆறுகள் பொங்கியெழுந்தன, சீறிப்பாய்ந்தன.
அவை பொங்கியெழுந்துகொண்டே இருக்கின்றன,
இரைச்சல் போட்டுக்கொண்டே இருக்கின்றன.
4 ஆனால், வெள்ளப்பெருக்கின் முழக்கத்தைவிடவும், மோதியடிக்கும்
கடல் அலைகளைவிடவும்[i]
பலம்படைத்தவராக இருக்கும் யெகோவா பரலோகத்தில் கம்பீரமாக
வீற்றிருக்கிறார்.[j]
5 யெகோவாவே, உங்களுடைய நினைப்பூட்டுதல்கள் மிகவும்
நம்பகமானவை.[k]
உங்களுடைய ஆலயம் என்றென்றும் பரிசுத்தத்தால்
அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.[l]

94 பழிவாங்குகிற கடவுளாகிய யெகோவாவே,[m]
பழிவாங்குகிற கடவுளே, உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கட்டும்!
2 பூமியின் நீதிபதியே, எழுந்து வாருங்கள்.[n]
ஆணவம்பிடித்த ஆட்களுக்குச் சரியான பதிலடி கொடுங்கள்.[o]
3 இன்னும் எவ்வளவு காலத்துக்கு, யெகோவாவே,
இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் பொல்லாதவர்கள் ஆட்டம்
போடுவார்கள்?[p]
4 அவர்கள் ஏதேதோ பிதற்றுகிறார்கள், ஆணவமாகப் பேசுகிறார்கள்.
தவறு செய்கிற எல்லாரும் தங்களைப் பற்றிப் பெருமையடிக்கிறார்கள்.

92:14 * வே.வா., "முடி நரைத்துப்போன."

அதி. 92
a சங் 52:8; ஏசா 61:3; ஏசா 65:22
b சங் 100:4
c சங் 71:18; நீதி 16:31; ஏசா 40:31; ஏசா 46:4
d எரே 17:7, 8
e உபா 32:4

அதி. 93
f சங் 96:10; சங் 97:1; ஏசா 52:7; வெளி 11:17; வெளி 19:6
g சங் 145:13
h சங் 90:2
i சங் 65:7
j சங் 8:1; சங் 76:4
k சங் 19:7; சங் 119:111
l எசே 43:12; 1பே 1:16

அதி. 94
m உபா 32:35; நாகூ 1:2; ரோ 12:19
n ஆதி 18:25; அப் 17:31
o சங் 31:23
p சங் 73:3; சங் 74:10

5 யெகோவாவே, அவர்கள் உங்களுடைய மக்களைக்
கொடுமைப்படுத்துகிறார்கள்.[a]
உங்களுடைய சொத்தாகிய ஜனங்களை அடக்கி ஒடுக்குகிறார்கள்.
6 விதவைகளையும் வேறு தேசத்தைச் சேர்ந்தவர்களையும் கொலை
செய்கிறார்கள்.
அப்பா இல்லாத பிள்ளைகளைச் சாகடிக்கிறார்கள்.
7 "இதையெல்லாம் 'யா'* பார்க்க மாட்டார்.[b]
இதையெல்லாம் யாக்கோபின் கடவுள் கண்டுகொள்ள மாட்டார்"
என்று சொல்லிக்கொள்கிறார்கள்.[c]
8 புத்தியில்லாதவர்களே, இதைப் புரிந்துகொள்ளுங்கள்.
அறிவில்லாதவர்களே, எப்போதுதான் விவேகமாக*
நடந்துகொள்வீர்கள்?[d]
9 காதை உண்டாக்கியவரால் கேட்க முடியாதா?
கண்ணை உண்டாக்கியவரால் பார்க்க முடியாதா?[e]
10 தேசங்களையே கண்டித்துத் திருத்துகிறவரால் உங்களைக் கண்டிக்க
முடியாதா?[f]
மக்களுக்கு அறிவைப் புகட்டுபவர் அவர்தானே![g]
11 மனிதர்களுடைய யோசனைகளெல்லாம் யெகோவாவுக்குத் தெரியும்.
அவை வெறும் மூச்சுக்காற்றுதான் என்பது அவருக்குத் தெரியும்.[h]
12 "யா"வே,* நீங்கள் யாரைத் திருத்துகிறீர்களோ அவர்
சந்தோஷமானவர்.[i]
யாருக்கு உங்களுடைய சட்டத்தைக் கற்றுக்கொடுக்கிறீர்களோ அவர்
சந்தோஷமானவர்.[j]
13 கஷ்ட காலத்திலும் நீங்கள் அவருக்கு நிம்மதி கொடுப்பீர்கள்.
பொல்லாதவர்களுக்குக் குழி தோண்டப்படும்வரை அவருக்கு நிம்மதி
கொடுப்பீர்கள்.[k]
14 யெகோவா தன்னுடைய மக்களைக் கைவிட மாட்டார்.[l]
தன்னுடைய சொத்தை ஒதுக்கித்தள்ள மாட்டார்.[m]
15 மறுபடியும் நீதியான தீர்ப்பு கொடுக்கப்படும்.
நேர்மை நெஞ்சமுள்ள எல்லாரும் அதன்படி நடப்பார்கள்.
16 யார் எனக்காகப் பொல்லாதவர்களை எதிர்த்து நடவடிக்கை
எடுப்பார்கள்?
யார் எனக்காக அக்கிரமக்காரர்களை எதிர்த்து நிற்பார்கள்?
17 யெகோவா மட்டும் எனக்குத் துணையாக இருந்திருக்காவிட்டால்,
நான் சீக்கிரத்திலேயே செத்துப்போயிருப்பேன்.[n]
18 "என் கால் சறுக்குகிறது" என்று நான் சொன்னபோது,
யெகோவாவே, உங்களுடைய மாறாத அன்பு என்னைத் தாங்கிப்
பிடித்துக்கொண்டது.[o]
19 கவலைகள் என்னைத் திணறடித்தபோது,*
நீங்கள் எனக்கு ஆறுதல் தந்து, என் இதயத்துக்கு இதமளித்தீர்கள்.[p]

அதி. 94
a சங் 14:4
b சங் 59:2, 7; எசே 8:12
c சங் 10:4, 11; சங் 73:3, 11; ஏசா 29:15
d நீதி 1:22
e சங் 34:15
f சங் 9:5; ஏசா 10:12
g சங் 25:8; ஏசா 28:26; யோவா 6:45
h 1கொ 3:20
i சங் 119:71; நீதி 3:11; 1கொ 11:32; எபி 12:5, 6
j சங் 19:8
k சங் 55:23; 2பே 2:9
l 1சா 12:22; சங் 37:28; எபி 13:5
m உபா 32:9
n சங் 124:2, 3; 2கொ 1:10
o 1சா 2:9; சங் 37:24; சங் 121:3; புல 3:22
p சங் 86:17; பிலி 4:6, 7

94:7, 12 * "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **94:8** * வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதலோடு." **94:19** * வே.வா., "எனக்குள் பெருகியபோது."

20 ஊழல் செய்கிற அதிகாரிகள்* உங்களோடு சேர முடியுமா?
அவர்கள் சட்டத்தின் பெயரில் பிரச்சினை உண்டாக்குகிறார்கள்.[a]
21 நீதிமானைப் பயங்கரமாகத் தாக்குகிறார்கள்.[b]
நிரபராதிக்கு மரணத் தீர்ப்பு கொடுக்கிறார்கள்.[c]
22 ஆனால், யெகோவா எனக்குப் பாதுகாப்பான* அடைக்கலமாக இருப்பார்.
என் கடவுள் எனக்குத் தஞ்சம் தருகிற கற்பாறையாக இருப்பார்.[d]
23 அவர்களுடைய அக்கிரமத்தையெல்லாம் அவர்கள் தலையிலேயே விழ வைப்பார்.[e]
அவர்களுடைய கெட்ட எண்ணத்தை வைத்தே அவர்களை ஒழித்துக்கட்டுவார்.
நம் கடவுளான யெகோவா அவர்களை ஒழித்துக்கட்டுவார்.[f]

95 வாருங்கள், யெகோவாவுக்கு முன்பாகச் சந்தோஷ ஆரவாரம் செய்வோம்!
நம்மை மீட்கும் கற்பாறைக்கு முன்பாக வெற்றி முழக்கம் செய்வோம்![g]
2 அவருடைய சன்னிதிக்கு வந்து நன்றி சொல்வோம்![h]
அவர்முன் பாடல் பாடி, வெற்றி முழக்கம் செய்வோம்!
3 ஏனென்றால், யெகோவாதான் மகத்தான கடவுள்.
அவர்தான் மற்ற எல்லா தெய்வங்களுக்கும் மேலான மகா ராஜா.[i]
4 பூமியின் ஆழங்கள் அவருடைய கையில் இருக்கின்றன.
மலைகளின் சிகரங்களும் அவருடைய கையில்தான் இருக்கின்றன.[j]
5 அவர் உண்டாக்கிய கடலும் அவருக்குத்தான் சொந்தம்.[k]
நிலத்தையும் அவருடைய கைகள்தான் உண்டாக்கின.[l]
6 வாருங்கள், அவரை வணங்குவோம்; அவர்முன் தலைவணங்குவோம்.
நம்மைப் படைத்த யெகோவாவுக்குமுன் மண்டிபோடுவோம்.[m]
7 ஏனென்றால், அவர்தான் நம் கடவுள்.
நாம் அவருடைய ஜனங்களாகவும்,
அவர் அக்கறையோடு மேய்க்கிற ஆடுகளாகவும் இருக்கிறோம்.[n]
இன்று நீங்கள் அவருடைய பேச்சைக் கேட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்![o]
8 உங்களுடைய முன்னோர்கள் மேரிபாவில்* செய்தது போலவும்,
வனாந்தரத்திலுள்ள மாசாவில்# செய்தது போலவும்,[p]
உங்கள் இதயத்தை இறுகிப்போகச் செய்யாதீர்கள்.[q]
9 அங்கே அவர்கள் என்னைச் சோதித்தார்கள்.[r]
நான் செய்த செயல்களைப் பார்த்திருந்தும், என்னிடமே சவால்விட்டார்கள்.[s]
10 நாற்பது வருஷங்களாக அந்தத் தலைமுறை செய்ததெல்லாம் எனக்கு வெறுப்பாக இருந்தது.
“அவர்களுடைய இதயம் எப்போதும் வழிவிலகிப் போகிறது” என்றும்,

94:20 * வே.வா., “ஆட்சியாளர்கள்; நீதிபதிகள்.” **94:22** * வே.வா., “உயர்ந்த.” **95:8** * அர்த்தம், “தகராறு செய்தல்.” # அர்த்தம், “பரீட்சை பார்த்தல்.”

அதி. 94
a ஏசா 10:1; தானி 6:7; அப் 5:27, 28
b சங் 59:3
c 1ரா 21:13
d சங் 18:2
e நீதி 5:22; 2தெ 1:6
f 1சா 26:9, 10

அதி. 95
g 2சா 22:47
h சங் 50:23; சங் 100:4
i யாத் 18:11; எரே 10:10; 1கொ 8:5, 6
j ஆமோ 4:13; ஆமோ 9:3
k எரே 5:22
l ஆதி 1:9, 10
m சங் 100:3; மத் 4:10; வெளி 14:7
n சங் 23:1; ஏசா 40:11
o எபி 3:7-11; எபி 4:7
p யாத் 17:7
q எபி 3:15
r சங் 78:18; 1கொ 10:9
s எண் 14:22, 23

"அவர்கள் என் வழிகளைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்"
என்றும் சொன்னேன்.
11 "அவர்கள் என்னோடு சேர்ந்து ஓய்வை அனுபவிக்க
மாட்டார்கள்"[a] என்று
கோபத்தோடு ஆணையிட்டுச் சொன்னேன்.

96 யெகோவாவுக்காகப் புதிய பாடல் பாடுங்கள்.[b]
பூமியெங்கும் உள்ளவர்களே, யெகோவாவைப் புகழ்ந்து
பாடுங்கள்![c]
2 யெகோவாவைப் புகழ்ந்து பாடுங்கள்; அவருடைய பெயரைப்
புகழுங்கள்.
அவர் தரும் மீட்பைப் பற்றிய நல்ல செய்தியைத் தினம் தினம்
அறிவியுங்கள்![d]
3 அவருடைய மகிமையைப் பற்றித் தேசங்களுக்குச் சொல்லுங்கள்.
அவருடைய அற்புதமான செயல்களைப் பற்றி எல்லா மக்களுக்கும்
தெரியப்படுத்துங்கள்.[e]
4 யெகோவா மகத்தானவர், எல்லா புகழையும் பெறத் தகுதியானவர்.
மற்ற எல்லா தெய்வங்களையும்விட அதிக பயபக்திக்குரியவர்.
5 மக்கள் வணங்கும் தெய்வங்களெல்லாம் ஒன்றுக்குமே உதவாத
தெய்வங்கள்.[f]
ஆனால், யெகோவாதான் வானத்தைப் படைத்தவர்.[g]
6 மகத்துவமும் மேன்மையும் அவருடைய சன்னிதியில் இருக்கின்றன.[h]
பலமும் அழகும் அவருடைய ஆலயத்தில் இருக்கின்றன.[i]
7 ஜனங்களின் வம்சங்களே, யெகோவாவுக்குச் செலுத்த வேண்டிய
புகழைச் செலுத்துங்கள்.*
யெகோவாவின் மகிமைக்கும் பலத்துக்கும் செலுத்த வேண்டிய
புகழைச் செலுத்துங்கள்.[j]
8 யெகோவாவின் பெயருக்குக் கொடுக்க வேண்டிய மகிமையைக்
கொடுங்கள்.[k]
காணிக்கையோடு அவருடைய பிரகாரங்களுக்கு வாருங்கள்.
9 பரிசுத்த உடையில்* யெகோவாவை வணங்குங்கள்.#
பூமியெங்கும் உள்ளவர்களே, அவர் முன்னால் நடுநடுங்குங்கள்!
10 "யெகோவா ராஜாவாகிவிட்டார்![l]
பூமி உறுதியாக நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது, அதை அசைக்கவே
முடியாது.
மக்களுக்கு அவர் நியாயமாகத் தீர்ப்பு கொடுப்பார்"[m] என்று
தேசங்களுக்குச் சொல்லுங்கள்.
11 வானம் சந்தோஷப்படட்டும், பூமி பூரித்துப்போகட்டும்.
கடலும் அதில் நிறைந்திருப்பவையும் முழக்கம் செய்யட்டும்.[n]
12 வயல்களும் அவற்றிலுள்ள அனைத்தும் ஆனந்தப்படட்டும்.[o]

96:7 *வே.வா., "யெகோவாவுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுங்கள்."
96:9 *நே.மொ., "பரிசுத்த அலங்காரத்தோடு." #அல்லது, "யெகோவா பரிசுத்தத்தில் மகத்தானவராக இருப்பதால் அவரை வணங்குங்கள்."

அதி. 95
a ஆதி 2:3; எண் 14:22, 23; எபி 4:3

அதி. 96
b சங் 33:3; சங் 40:3; சங் 98:1; சங் 149:1; ஏசா 42:10
c 1நா 16:23-25; சங் 66:4
d சங் 40:10; சங் 71:15; ஏசா 52:7
e மத் 28:19; 1பே 2:9; வெளி 14:6
f சங் 97:7; ஏசா 44:10
g 1நா 16:26; 1கொ 8:4
h யாத் 24:9, 10; ஏசா 6:1-3; எசே 1:27, 28; வெளி 4:2, 3
i 1நா 16:27; 1நா 29:11
j 1நா 16:28-33; சங் 29:1
k சங் 29:2; சங் 72:19
l சங் 93:1; சங் 97:1; வெளி 11:15; வெளி 19:6
m சங் 67:4; சங் 98:9
n சங் 98:7
o சங் 65:13

அவற்றோடு சேர்ந்து காட்டு மரங்களெல்லாம் கடவுளுக்குமுன்
சந்தோஷக் குரல் எழுப்பட்டும்.[a]
13 ஏனென்றால், யெகோவா வருகிறார்.*
அவர் பூமிக்குத் தீர்ப்பு கொடுக்க வருகிறார்.
அவர் இந்த உலகத்துக்கு நீதியாகத் தீர்ப்பு கொடுப்பார்.[b]
மக்களுக்கு உண்மைத்தன்மையோடு# தீர்ப்பு கொடுப்பார்.[c]

97 யெகோவா ராஜாவாகிவிட்டார்![d]
பூமி பூரித்துப்போகட்டும்![e]
தீவுகளெல்லாம் சந்தோஷத்தில் துள்ளட்டும்![f]
2 அடர்ந்த கார்மேகங்கள் அவரைச் சூழ்ந்திருக்கின்றன.[g]
நீதியும் நியாயமும் அவருடைய சிம்மாசனத்தின் அடித்தளமாக
இருக்கின்றன.[h]
3 அவருக்கு முன்னால் நெருப்பு போகிறது.[i]
அவருடைய எதிரிகளை எல்லா பக்கத்திலிருந்தும்
சுட்டுப்பொசுக்குகிறது.[j]
4 அவருடைய மின்னல் நிலத்தைப் பிரகாசிக்க வைக்கிறது.
பூமி அதைப் பார்த்து நடுநடுங்குகிறது.[k]
5 இந்த முழு பூமிக்கும் எஜமானாகிய யெகோவாவுக்கு முன்னால்,
மலைகள் மெழுகுபோல் உருகுகின்றன.[l]
6 வானம் அவருடைய நீதியைச் சொல்கிறது.
மக்கள் எல்லாரும் அவருடைய மகிமையைப் பார்க்கிறார்கள்.[m]
7 செதுக்கப்பட்ட சிலைகளை வணங்குகிற எல்லாரும்,
ஒன்றுக்குமே உதவாத தெய்வங்களைப் பற்றிப் பெருமையடிக்கிற
எல்லாரும்[n]
அவமானப்பட்டுப் போகட்டும்.[o]
தெய்வங்களே, நீங்கள் எல்லாரும் அவரை வணங்குங்கள்.*[p]
8 யெகோவாவே, உங்களுடைய நீதித்தீர்ப்புகளைக் கேட்டு,
சீயோன் மகிழ்கிறது.[q]
யூதாவின் நகரங்கள் சந்தோஷப்படுகின்றன.[r]
9 யெகோவாவே, நீங்கள்தான் இந்தப் பூமி முழுவதையும் ஆளுகிற
உன்னதமான கடவுள்.
நீங்கள்தான் மற்ற எல்லா தெய்வங்களையும்விட மிக மிக
உயர்ந்தவர்.[s]
10 யெகோவாவை நேசிக்கிறவர்களே, கெட்ட காரியங்களை
வெறுத்துவிடுங்கள்.[t]
தனக்கு உண்மையாக* இருக்கிறவர்களின் உயிரை அவர் காக்கிறார்.[u]
பொல்லாதவர்களின் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்றுகிறார்.[v]
11 நீதிமான்களுக்காக ஒளி பிரகாசிக்கிறது.[w]
நேர்மையான நெஞ்சமுள்ளவர்களுக்காகச் சந்தோஷம் பிரகாசிக்கிறது.

அதி. 96
a 1நா 16:33
b ஆதி 18:25; சங் 9:8; சங் 98:9; அப் 17:31; 2பே 3:7
c உபா 32:4

அதி. 97
d சங் 96:10; வெளி 11:16, 17; வெளி 19:6
e ஏசா 49:13
f ஏசா 60:9
g யாத் 20:21
h சங் 99:4
i சங் 50:3; தானி 7:9, 10
j நாகூ 1:2, 6; மல் 4:1
k யாத் 19:16, 18; சங் 77:18; சங் 104:32
l நியா 5:5; நாகூ 1:5; ஆப 3:6
m ஆப 2:14
n ஏசா 37:19
o எரே 10:14
p யாத் 12:12; யாத் 18:11
q ஏசா 51:3
r சங் 48:11
s யாத் 18:11; ஏசா 44:8
t சங் 34:14; சங் 101:3; சங் 119:104; ரோ 12:9; எபி 1:9
u சங் 37:28; சங் 145:20
v தானி 3:28; மத் 6:13
w சங் 112:4; நீதி 4:18; ஏசா 30:26; மீ 7:9

96:13 *வே.வா., "வந்துவிட்டார்." #வே.வா., "நம்பகத்தன்மையோடு." **97:7** *வே.வா., "அவருக்குமுன் தலைவணங்குங்கள்." **97:10** *வே.வா., "பற்றுமாறாமல்."

12 நீதிமான்களே, யெகோவாவை வணங்குவதில்* சந்தோஷப்படுங்கள்.
அவருடைய பரிசுத்த பெயருக்கு நன்றி சொல்லுங்கள்.

ஒரு சங்கீதம்.

98 யெகோவாவுக்காகப் புதிய பாடல் பாடுங்கள்.[a]
ஏனென்றால், அவர் அற்புதமான காரியங்களைச் செய்திருக்கிறார்.[b]
அவருடைய பரிசுத்தமான வலது கை மீட்பைத் தந்திருக்கிறது.*[c]
2 யெகோவா, தன் மீட்பைப் பற்றி எல்லாருக்கும்
தெரியப்படுத்தியிருக்கிறார்.[d]
தன் நீதியைப் பற்றித் தேசங்களுக்குச் சொல்லியிருக்கிறார்.[e]
3 மாறாத அன்பையும் உண்மைத்தன்மையையும் காட்டுவதாக
இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் கொடுத்த வாக்குறுதியை
நினைத்துப் பார்த்திருக்கிறார்.[f]
நம் கடவுள் தந்த மீட்பை* பூமியெங்கும் இருக்கிறவர்கள்
பார்த்திருக்கிறார்கள்.[g]
4 பூமியில் இருக்கிறவர்களே, யெகோவாவுக்கு முன்பாக வெற்றி
முழக்கம் செய்யுங்கள்.
சந்தோஷப் பூரிப்போடு ஆரவாரம் செய்யுங்கள், அவரைப் புகழ்ந்து
பாடுங்கள்.*[h]
5 யாழ் இசைத்து யெகோவாவைப் புகழ்ந்து பாடுங்கள்.
யாழின் இசையோடும் இனிமையான பாடலோடும் அவரைப்
புகழுங்கள்.
6 எக்காளங்களை முழங்கி, ஊதுகொம்பை ஊதி,[i]
ராஜாவாகிய யெகோவாவுக்கு முன்பாக வெற்றி முழக்கம் செய்யுங்கள்.
7 கடலும் அதில் நிறைந்திருப்பவையும்,
பூமியும் அதில் குடியிருப்பவர்களும் முழக்கம் செய்யட்டும்.
8 ஆறுகள் கை தட்டி மகிழட்டும்.
மலைகள் ஒன்றுசேர்ந்து கடவுளுக்குமுன் சந்தோஷமாகப் பாடட்டும்.[j]
9 ஏனென்றால், பூமிக்குத் தீர்ப்பு கொடுக்க யெகோவா வருகிறார்.*
அவர் இந்த உலகத்துக்கு நீதியாகத் தீர்ப்பு கொடுப்பார்.[k]
மக்களுக்கு நியாயமாகத் தீர்ப்பு கொடுப்பார்.[l]

99 யெகோவா ராஜாவாகிவிட்டார்,[m] மக்கள் நடுநடுங்கட்டும்.
கேருபீன்களுக்கு மேலாக* அவர் வீற்றிருக்கிறார்,[n] பூமி அதிரட்டும்.
2 யெகோவா சீயோனிலே மகத்தானவராக இருக்கிறார்.
எல்லா மக்களுக்கும் மேலாக அவர் உயர்ந்திருக்கிறார்.[o]
3 கடவுளே, உங்களுடைய மகத்தான பெயரை அவர்கள் புகழட்டும்.[p]
ஏனென்றால், அது பயபக்திக்குரியது, பரிசுத்தமானது.
4 அவர் பலம்படைத்த ராஜா, நியாயத்தை நேசிக்கிறவர்.[q]
கடவுளே, நீங்கள் நேர்மையை நிலைநாட்டியிருக்கிறீர்கள்.

97:12 *வே.வா., "யெகோவாவில்." **98:1** *வே.வா., "அவருக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது." **98:3** *வே.வா., "பெற்ற வெற்றியை." **98:4** *வே.வா., "இசை இசைத்திடுங்கள்." **98:9** *வே.வா., "வந்துவிட்டார்." **99:1** *அல்லது, "நடுவில்."

அதி. 98
a சங் 33:3
சங் 96:1
சங் 149:1
ஏசா 42:10
b யாத் 15:11
சங் 111:2
c யாத் 15:6
ஏசா 52:10
ஏசா 59:16
ஏசா 63:5
d லூ 2:30, 31
e ஏசா 5:16
f லேவி 26:42
லூ 1:54, 55
g ஏசா 49:6
அப் 28:28
ரோ 10:18
h சங் 47:1
சங் 67:4
i எண் 10:10
1நா 15:28
2நா 29:27
j ஏசா 44:23
k சங் 9:8
அப் 17:31
l சங் 67:4
சங் 96:10
ரோ 2:6

அதி. 99
m சங் 93:1
வெளி 11:17
n யாத் 25:22
o சங் 83:18
p சங் 8:1
சங் 148:13
வெளி 15:4
q யோபு 36:6

யாக்கோபின் வம்சத்தாருக்கு நீதியும் நியாயமும் செய்திருக்கிறீர்கள்.[a]
5 நம் கடவுளான யெகோவாவை மகிமைப்படுத்துங்கள்.[b]
அவருடைய கால்மணைக்கு முன்னால் மண்டிபோடுங்கள்.[c]
அவர் பரிசுத்தமானவர்.[d]
6 யெகோவா நியமித்த குருமார்களில் மோசேயும் ஆரோனும்,[e]
அவருடைய பெயரைச் சொல்லி வேண்டிக்கொண்டவர்களில் சாமுவேலும்,[f]
அவரை நோக்கிக் கூப்பிட்டார்கள்.
அவர் அவர்களுக்குப் பதில் கொடுத்தார்.[g]
7 மேகத் தூணிலிருந்து அவர்களிடம் பேசினார்.[h]
அவருடைய நினைப்பூட்டுதல்களையும் கட்டளைகளையும் அவர்கள் கடைப்பிடித்தார்கள்.[i]
8 எங்கள் கடவுளாகிய யெகோவாவே, நீங்கள் அவர்களுக்குப் பதில் கொடுத்தீர்கள்.[j]
நீங்கள் அவர்களை மன்னித்தீர்கள்.[k]
அதேசமயத்தில், அவர்கள் பாவம் செய்தபோது தண்டித்தீர்கள்.[l]
9 நம் கடவுளாகிய யெகோவாவை மகிமைப்படுத்துங்கள்.[m]
அவருடைய பரிசுத்த மலைக்கு முன்னால் தலைவணங்குங்கள்.*[n]
ஏனென்றால், நம் கடவுளான யெகோவா பரிசுத்தமானவர்.[o]

நன்றி தெரிவிக்கும் சங்கீதம்.

100 பூமியெங்கும் உள்ளவர்களே, யெகோவாவுக்கு முன்பாக வெற்றி முழக்கம் செய்யுங்கள்.[p]
2 சந்தோஷமாக யெகோவாவுக்குச் சேவை செய்யுங்கள்.[q]
சந்தோஷ ஆரவாரத்தோடு அவருடைய சன்னிதிக்கு வாருங்கள்.
3 யெகோவாதான் கடவுள் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.[r]
அவர்தான் நம்மைப் படைத்தார், நாம் அவருக்குச் சொந்தமானவர்கள்.*[s]
நாம் அவருடைய மக்கள், அவரால் மேய்க்கப்படுகிற ஆடுகள்.[t]
4 அவருடைய ஆலய வாசல்களுக்குள் வந்து அவருக்கு நன்றி சொல்லுங்கள்.[u]
அவருடைய பிரகாரங்களுக்குள் வந்து அவரைப் புகழுங்கள்.[v]
அவருக்கு நன்றி சொல்லுங்கள்; அவருடைய பெயரைப் புகழுங்கள்.[w]
5 ஏனென்றால், யெகோவா நல்லவர்.[x]
அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
தலைமுறை தலைமுறைக்கும் உண்மையோடு நடந்துகொள்கிறவர்.[y]

தாவீதின் சங்கீதம்.

101 யெகோவாவே, உங்களுடைய மாறாத அன்பையும் நியாயத்தையும் பற்றி நான் பாடுவேன்.
உங்களைப் புகழ்ந்து பாடுவேன்.*

99:9 *வே.வா., “அவரை வணங்குங்கள்.” 100:3 *அல்லது, “நாமே நம்மைப் படைக்கவில்லை.” 101:1 *வே.வா., “இசை இசைப்பேன்.”

அதி. 99
a உபா 10:17, 18; எரே 9:24
b யாத் 15:2
c 1நா 28:2; சங் 132:7
d லேவி 19:2
e யாத் 24:6; எண் 14:19, 20
f 1சா 7:9
g யாத் 15:24, 25; 1சா 15:10
h யாத் 19:9
i யாத் 40:16; 1சா 12:3
j உபா 9:19
k மீ 7:18
l யாத் 34:6, 7
m யாத் 15:2
n சங் 2:6
o 1சா 2:2; ஏசா 6:3

அதி. 100
p சங் 95:1, 2; சங் 98:4
q உபா 12:12; நெ 8:10
r உபா 6:4
s சங் 149:2
t சங் 95:6, 7; எசே 34:31; 1பே 2:25
u சங் 50:23; சங் 66:13; சங் 122:1, 2
v சங் 65:4
w சங் 96:2; எபி 13:15
x சங் 86:5; லூ 18:19
y யாத் 34:6, 7; உபா 7:9; சங் 98:3

2 விவேகமாகவும் குற்றமற்றவனாகவும்* நான் நடந்துகொள்வேன்.
நீங்கள் எப்போது என்னிடம் வருவீர்கள்?
என் வீட்டுக்குள்ளே நான் உத்தம இதயத்தோடு நடந்துகொள்வேன்.[a]
3 வீணான* எதையும் என் கண் முன்னால் வைக்க மாட்டேன்.
நேர்வழியைவிட்டு விலகுகிறவர்களின் செயல்களை நான்
வெறுக்கிறேன்.[b]
கொஞ்சம்கூட ஒட்டாமல் ஒதுங்கியிருப்பேன்.#
4 கோணலான புத்திக்கும்* எனக்கும் ரொம்பவே தூரம்.
கெட்டதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.
5 மற்றவர்களுடைய முதுகுக்குப் பின்னால் பேசுகிறவனுடைய[c]
வாயை அடைப்பேன்.*
கண்களில் ஆணவமும் இதயத்தில் அகம்பாவமும் உள்ள யாரையுமே
நான் பொறுத்துக்கொள்ள மாட்டேன்.
6 இந்த உலகத்தில் உண்மையாக நடக்கிறவர்கள் என்னோடு தங்கும்படி,
அவர்களைக் கருணையோடு பார்ப்பேன்.
குற்றமற்றவனாக* நடப்பவன் எனக்கு ஊழியம் செய்வான்.
7 ஏமாற்றுக்காரர்கள் யாரும் என் வீட்டில் குடியிருக்க முடியாது.
பொய் பேசுகிற யாரும் என் கண் முன்னால் நிற்க முடியாது.
8 யெகோவாவின் நகரத்திலிருந்து அக்கிரமக்காரர்கள் எல்லாரையும்
ஒழிப்பதற்காக,[d]
உலகத்திலுள்ள பொல்லாதவர்களைக் காலைதோறும்
அழிப்பேன்.*

ஒரு ஜெபம். அடக்கி ஒடுக்கப்பட்டு வேதனையில்* தவிக்கும் ஒருவர், தன் கவலைகளை யெகோவாவிடம் கொட்டுகிறார்.[e]

102 யெகோவாவே, என் ஜெபத்தைக் கேளுங்கள்.[f]
உதவிக்காக நான் கதறும் சத்தம் உங்கள் சன்னிதியை
எட்டட்டும்.[g]
2 இக்கட்டான காலத்தில் உங்கள் முகத்தை என்னிடமிருந்து
மறைத்துக்கொள்ளாதீர்கள்.[h]
நான் பேசுவதைக் காதுகொடுத்து* கேளுங்கள்.
நான் கூப்பிடும்போது சீக்கிரமாகப் பதில் கொடுங்கள்.[i]
3 ஏனென்றால், என் நாட்கள் புகை போல மறைந்துபோகின்றன.
என் எலும்புகள் கொள்ளி போல எரிகின்றன.[j]
4 வெயிலில் வாடிப்போன புல் போல என் இதயம் வாடியிருக்கிறது.[k]
சாப்பிடக்கூட மறந்துவிடுகிறேன்.
5 சத்தமாக முனகி முனகியே,[l]
எலும்பும் தோலுமாக ஆகிவிட்டேன்.[m]

101:2 *வே.வா., “உத்தமமாகவும்.” **101:3** *வே.வா., “ஒன்றுக்கும் உதவாத.” #வே.வா., “அவை என்னை ஒட்டிக்கொள்ளாது.” **101:4** *நே.மொ., “இதயத்துக்கும்.” **101:5** *வே.வா., “பேசுகிறவனை ஒழித்துக்கட்டுவேன்.” **101:6** *வே.வா., “உத்தமமாக.” **101:8** *வே.வா., “மவுனமாக்குவேன்.” **102:மே.கு.** *வே.வா., “பலமிழந்து.” **102:2** *வே.வா., “குனிந்து.”

அதி. 101
a 1ரா 9:4; சங் 78:70, 72
b சங் 97:10
c நீதி 20:19
d நீதி 20:8

அதி. 102
e சங் 61:2; சங் 142:2
f சங் 55:1; தானி 9:17
g யாத் 2:23
h சங் 27:9; புல 1:20
i சங் 143:7; ஏசா 65:24
j புல 1:13
k சங் 143:4
l சங் 6:6; சங் 38:8
m யோபு 19:20; நீதி 17:22

6 வனாந்தரத்தில் இருக்கிற கூழைக்கடா பறவையைப் போல
ஆகிவிட்டேன்.
இடிபாடுகளின் நடுவே தங்கும் சின்ன ஆந்தை போல இருக்கிறேன்.
7 தூக்கம் இல்லாமல் படுத்துக்கிடக்கிறேன்.*
கூரைமேல் தனியாக உட்கார்ந்திருக்கிற பறவை போல இருக்கிறேன்.[a]
8 எதிரிகள் நாளெல்லாம் என்னைப் பழித்துப் பேசுகிறார்கள்.[b]
என்னைக் கிண்டல் செய்கிறவர்கள் என் பெயரைச் சொல்லிச்
சபிக்கிறார்கள்.
9 சாம்பலே எனக்கு உணவாகிவிட்டது.[c]
என் பானத்தில் கண்ணீர் கலந்திருக்கிறது.[d]
10 உங்கள் கோபத்தினாலும் ஆக்ரோஷத்தினாலும்,
என்னைத் தூக்கி, தூரமாக எறிந்துவிட்டீர்கள்.
11 என் நாட்கள் மறைந்துபோகிற நிழல் போல இருக்கின்றன.[e]
நான் புல் போல வாடி வதங்குகிறேன்.[f]
12 ஆனால் யெகோவாவே, நீங்கள் என்றென்றும் இருக்கிறீர்கள்.[g]
உங்களுடைய புகழ் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்.[h]
13 நீங்கள் கண்டிப்பாக எழுந்து வந்து சீயோனுக்கு இரக்கம் காட்டுவீர்கள்.[i]
ஏனென்றால், நீங்கள் அவளுக்குக் கருணை காட்ட வேண்டிய நேரம்
வந்துவிட்டது.[j]
நீங்கள் குறித்து வைத்த நேரம் வந்துவிட்டது.[k]
14 உங்களுடைய ஊழியர்கள் அவளுடைய கற்களை நெஞ்சார
நேசிக்கிறார்கள்.[l]
அவளுடைய மண்ணின் மேல்கூட பாசம் வைத்திருக்கிறார்கள்.[m]
15 தேசங்களிலுள்ள ஜனங்களெல்லாம் யெகோவாவுடைய பெயருக்குப்
பயப்படுவார்கள்.
பூமியிலுள்ள ராஜாக்களெல்லாம் அவருடைய மகிமைக்குப்
பயப்படுவார்கள்.[n]
16 ஏனென்றால், சீயோனை யெகோவா திரும்பக் கட்டுவார்.[o]
தன்னுடைய மகிமையை வெளிப்படுத்துவார்.[p]
17 ஏழை எளியவர்களின் ஜெபத்தை அவர் கவனித்துக் கேட்பார்.[q]
அவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் செய்ய மாட்டார்.[r]
18 இனி படைக்கப்படவிருக்கும் ஜனம் “யா”வை* புகழும்படி,
இது வருங்காலச் சந்ததிக்காக எழுதப்பட்டிருக்கிறது.[s]
19 மேலே உள்ள தன் பரிசுத்த இடத்திலிருந்து யெகோவா கீழே
பார்க்கிறார்.[t]
பரலோகத்திலிருந்து இந்தப் பூமியைப் பார்க்கிறார்.
20 கைதிகளின் பெருமூச்சு சத்தத்தைக் கேட்பதற்காகவும்,[u]
மரண தீர்ப்பு பெற்றவர்களை விடுதலை செய்வதற்காகவும்[v]
அப்படிப் பார்க்கிறார்.
21 யெகோவாவுக்குச் சேவை செய்வதற்காக,

102:7 *அல்லது, “மெலிந்துபோய்க் கிடக்கிறேன்.” **102:18** *“யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 102
a சங் 38:11
b சங் 31:11; சங் 74:10; சங் 79:4
c புல 3:15
d சங் 80:5
e சங் 39:5
f யோபு 14:1, 2; சங் 102:4
g சங் 90:2
h யாத் 3:15
i ஏசா 49:15
j ஏசா 60:10
k எஸ்றா 1:1, 2; ஏசா 40:2; தானி 9:2
l நெ 2:3; சங் 137:5
m சங் 79:1
n ஏசா 60:3; சக 8:22
o சங் 147:2; எரே 33:7
p ஏசா 60:1
q தானி 9:20, 21
r சங் 22:24
s சங் 78:4; ரோ 15:4
t 2நா 16:9
u யாத் 3:7; ஏசா 61:1
v 2நா 33:12, 13; சங் 79:11

மக்களும் ராஜ்யங்களும் ஒன்றுகூடி வரும்போது,[a]
22 சீயோனில் யெகோவாவின் பெயர் அறிவிக்கப்படும்.[b]
எருசலேமில் அவருடைய புகழ் பரப்பப்படும்.
23 எனக்கு வயதாவதற்கு முன்பே அவர் என் பலத்தைப் பறித்துவிட்டார்.
என் ஆயுள் காலத்தைக் குறைத்துவிட்டார்.
24 நான் அவரிடம், "என் கடவுளே,
தலைமுறை தலைமுறையாக இருக்கிறவரே,[c]
நடுத்தர வயதிலேயே என் உயிரை எடுத்துவிடாதீர்கள்.
25 பல காலத்துக்கு முன்னால் நீங்கள் பூமிக்கு அஸ்திவாரம் போட்டீர்கள்.
வானத்தை உங்கள் கைகளால் உருவாக்கினீர்கள்.[d]
26 அவை அழிந்துபோனாலும் நீங்கள் நிலைத்திருப்பீர்கள்.
அவையெல்லாம் துணி போல நைந்துபோகும்.
அவற்றை உடை மாற்றுவது போல நீங்கள் மாற்றிவிடுவீர்கள்,
அப்போது அவை இல்லாமல் போய்விடும்.
27 ஆனால், நீங்கள் மாறாதவர், உங்களுடைய ஆயுளுக்கு முடிவே
இல்லை.[e]
28 உங்களுடைய ஊழியர்களின் பிள்ளைகள் பத்திரமாகக்
குடியிருப்பார்கள்.
அவர்களுடைய வாரிசுகள் உங்கள்முன் என்றென்றும்
நிலைத்திருப்பார்கள்"[f] என்று சொன்னேன்.

தாவீதின் பாடல்.

103 என் ஜீவன் யெகோவாவைப் புகழட்டும்.
எனக்குள் இருக்கும் எல்லாமே அவருடைய பரிசுத்த
பெயரைப் புகழட்டும்.
2 என் ஜீவன் யெகோவாவைப் புகழட்டும்.
அவர் செய்த எதையும் மறக்காமல் இருக்கட்டும்.[g]
3 உன் குற்றங்கள் எல்லாவற்றையும் அவர் மன்னிக்கிறார்.[h]
உன்னுடைய நோய்கள் எல்லாவற்றையும் குணமாக்குகிறார்.[i]
4 உன் உயிரைப் படுகுழியிலிருந்து* காப்பாற்றுகிறார்.[j]
தன்னுடைய மாறாத அன்பினாலும் இரக்கத்தினாலும் உனக்குக் கிரீடம்
சூட்டுகிறார்.[k]
5 நீ இளமையோடும் கழுகு போலத் துடிப்போடும் இருக்கும்படி,[l]
வாழ்நாளெல்லாம் உன்னை நன்மைகளால் திருப்திப்படுத்துகிறார்.[m]
6 அடக்கி ஒடுக்கப்படுகிற எல்லாருக்கும்[n]
யெகோவா நீதி வழங்குகிறார்,[o] நியாயம் செய்கிறார்.
7 அவர் மோசேக்குத் தன்னுடைய வழிகளைத் தெரியப்படுத்தினார்.[p]
இஸ்ரவேல் வம்சத்தாருக்குத் தன்னுடைய செயல்களைக் காட்டினார்.[q]
8 யெகோவா இரக்கமும் கரிசனையும்* உள்ளவர்.[r]
அவர் சீக்கிரத்தில் கோபப்படாதவர், மாறாத அன்பை அளவில்லாமல்
காட்டுகிறவர்.[s]

அதி. 102
a ஏசா 11:10
ஏசா 49:22
ஏசா 60:3
b சங் 9:13, 14
சங் 22:22
ஏசா 51:11
c சங் 90:2
ஆப 1:12
வெளி 1:8
d சங் 8:3
ஏசா 48:13
எபி 1:10-12
e யோபு 36:26
மல் 3:6
யாக் 1:17
f ஏசா 66:22

அதி. 103
g உபா 8:2
சங் 105:6
h 2சா 12:13
ஏசா 43:25
i யாத் 15:26
சங் 41:3
சங் 147:3
ஏசா 33:24
யாக் 5:15
வெளி 21:4
j சங் 56:13
k மீ 7:18
l சங் 51:12
ஏசா 40:31
m சங் 23:5
சங் 65:4
n சங் 12:5
நீதி 22:22, 23
யாக் 5:4
o சங் 9:8
p யாத் 24:4
எண் 12:8
q சங் 147:19
r ஏசா 55:7
யாக் 5:11
s யாத் 34:6
யோவே 2:13
யோனா 4:2

103:4 *வே.வா., "கல்லறையிலிருந்து." **103:8** *வே.வா., "கனிவும்."

9 அவர் எப்போதும் குறை கண்டுபிடித்துக்கொண்டே இருக்க மாட்டார்.[a]
என்றென்றும் கோபத்தோடு இருக்க மாட்டார்.[b]
10 நாம் செய்த பாவங்களுக்கு ஏற்றபடி அவர் நம்மை நடத்தவில்லை.[c]
நாம் செய்த குற்றங்களுக்குத் தகுந்தபடி நம்மைத் தண்டிக்கவில்லை.[d]
11 ஏனென்றால், பூமியைவிட வானம் எந்தளவு உயர்ந்திருக்கிறதோ,
அவருக்குப் பயந்து நடக்கிறவர்களிடம் அவர் காட்டுகிற மாறாத
அன்பும் அந்தளவு உயர்ந்திருக்கிறது.[e]
12 கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ,
அவ்வளவு தூரத்துக்கு நம்முடைய குற்றங்களை அவர்
தூக்கியெறிந்திருக்கிறார்.[f]
13 ஒரு அப்பா தன் மகன்களுக்கு இரக்கம் காட்டுவதுபோல்,
யெகோவாவும் தனக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு இரக்கம்
காட்டியிருக்கிறார்.[g]
14 நாம் எப்படி உருவாக்கப்பட்டோம் என்பதை அவர் நன்றாக
அறிந்திருக்கிறார்.[h]
நாம் மண் என்பதை அவர் நினைத்துப் பார்க்கிறார்.[i]
15 அற்ப மனுஷனுடைய நாட்கள் புல்லைப் போல இருக்கின்றன.[j]
வயல்வெளிப் பூவைப் போல அவன் பூக்கிறான்.[k]
16 காற்று அடித்தவுடன் அது காணாமல் போகிறது.
இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறது.
17 ஆனால், யெகோவா காட்டுகிற மாறாத அன்பு
அவருக்குப் பயந்து நடக்கிறவர்கள்மேல் என்றென்றுமே இருக்கும்.[l]
அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகள்மேல் அவருடைய நீதி
தங்கும்.[m]
18 அவருடைய ஒப்பந்தத்தின்படி நடக்கிறவர்களின் மேலும்,[n]
அவருடைய ஆணைகளைக் கவனமாகக் கடைப்பிடிக்கிறவர்களின்
மேலும் அது தங்கும்.
19 யெகோவா தன்னுடைய சிம்மாசனத்தைப் பரலோகத்தில் உறுதியாக
நிலைநிறுத்தியிருக்கிறார்.[o]
ராஜாவாக அவர் எல்லாவற்றையும் ஆளுகிறார்.[p]
20 யெகோவாவின் பலம்படைத்த தூதர்களே,[q]
அவர் சொல்வதைக் கேட்டு, அவருடைய வார்த்தையை
நிறைவேற்றுகிற தூதர்களே,[r]
நீங்கள் எல்லாரும் அவரைப் புகழுங்கள்.
21 யெகோவாவின் படைவீரர்களே,[s]
அவருடைய விருப்பத்தை* நிறைவேற்றுகிற ஊழியர்களே,[t]
அவரைப் புகழுங்கள்.
22 யெகோவாவின் படைப்புகளே, நீங்கள் எல்லாரும் அவரைப்
புகழுங்கள்.
அவர் ஆளுகிற எல்லா இடங்களிலும் அவரைப் புகழுங்கள்.
என் முழு ஜீவனும் யெகோவாவைப் புகழட்டும்.

103:21 * வே.வா., "சித்தத்தை."

அதி. 103
a சங் 30:5
b ஏசா 57:16
c நெ 9:31
d எஸ்றா 9:13 சங் 130:3 ஏசா 55:7
e சங் 103:17 ஏசா 55:9
f லேவி 16:21, 22 ஏசா 43:25 எரே 31:34
g சங் 78:38 ஏசா 49:15 மல் 3:17 யாக் 5:15
h சங் 78:39
i ஆதி 2:7
j சங் 90:5, 6 1பே 1:24
k யோபு 14:1, 2
l லூ 1:50
m யாத் 20:6
n யாத் 19:5 உபா 7:9 சங் 25:10
o 2நா 20:6 ஏசா 66:1
p சங் 47:2 சங் 145:13 தானி 4:25
q தானி 7:10
r 2ரா 19:35 லூ 1:19
s 1ரா 22:19 சங் 148:2 லூ 2:13, 14
t மத் 13:41 எபி 1:7

104 என் ஜீவன் யெகோவாவைப் புகழட்டும்.[a]
என் கடவுளாகிய யெகோவாவே, நீங்கள் மிகவும் மகத்தானவர்.[b]
மகத்துவத்தையும்* மேன்மையையும் ஆடைபோல் அணிந்திருப்பவர்.[c]
2 ஒளியை உடைபோல் நீங்கள் உடுத்தியிருக்கிறீர்கள்.[d]
வானத்தைக் கூடாரத் துணிபோல் விரித்திருக்கிறீர்கள்.[e]
3 அவர் வானத்திலுள்ள தண்ணீர்மேல்
விட்டங்களை வைத்துத் தன் மாடி அறைகளைக் கட்டி,[f]
மேகங்களை ரதமாக்கி,[g]
காற்றின் சிறகுகள்மேல் பயணம் செய்கிறார்.[h]
4 தன்னுடைய தூதர்களை வல்லமையுள்ள சக்திகளாகவும்,
தன்னுடைய ஊழியர்களைத் தீ ஜுவாலைகளாகவும் ஆக்குகிறார்.[i]
5 அவர் இந்தப் பூமிக்குப் பலமான அஸ்திவாரம் போட்டிருக்கிறார்.*[j]
அது ஒருபோதும் அசைக்கப்படாது.#[k]
6 ஆடையினால் போர்த்துவதுபோல் ஆழ்கடல்களினால் நீங்கள் அதைப் போர்த்தினீர்கள்.[l]
மலைகளுக்குமேல் தண்ணீர் நின்றது.
7 உங்கள் அதட்டலைக் கேட்டு தண்ணீர் விலகி ஓடியது.[m]
உங்கள் இடிமுழக்கத்தைக் கேட்டு பயந்து ஓடியது.
8 நீங்கள் ஏற்படுத்திய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தது.
அதனால் மலைகள் உயர்ந்தன,[n] பள்ளத்தாக்குகள் இறங்கின.
9 தண்ணீர் மறுபடியும் இந்தப் பூமியை மூடிவிடாமல் இருப்பதற்காக,
அதற்கு எல்லையைக் குறித்தீர்கள்.[o]
10 அவர் பள்ளத்தாக்குகளில்* நீரூற்றுகளைப் பெருக்கெடுத்து ஓட வைக்கிறார்.
மலைகளுக்கு நடுவே அவற்றைப் பாய்ந்தோட வைக்கிறார்.
11 அவை காட்டு விலங்குகளுக்கெல்லாம் தண்ணீரைக் கொடுக்கின்றன.
காட்டுக் கழுதைகளின் தாகத்தைத் தீர்க்கின்றன.
12 அந்த நீரூற்றுகளின் ஓரமாக நிற்கும் மரங்களில் பறவைகள் தங்குகின்றன.
அடர்ந்த மரக் கிளைகளில் உட்கார்ந்து பாட்டுப் பாடுகின்றன.
13 அவர் தன்னுடைய மாடி அறைகளிலிருந்து மலைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார்.[p]
உங்கள் கைகளின் பலன்களால் பூமி திருப்தியடைகிறது.[q]
14 நிலத்திலிருந்து அவர் உணவை விளையச் செய்கிறார்.
ஆடுமாடுகளுக்காகப் புல்லையும்,
மனிதர்களுக்காகச் செடிகொடிகளையும் முளைக்க வைக்கிறார்.[r]
15 மனிதனுடைய இதயத்தைச் சந்தோஷப்படுத்த திராட்சமதுவையும்,[s]
முகத்தைப் பளபளப்பாக்க எண்ணெயையும்,

104:1 *வே.வா., "கண்ணியத்தையும்." **104:5** *வே.வா., "பூமியை அதன் அஸ்திவாரங்கள்மேல் உறுதியாக நிலைநிறுத்தியிருக்கிறார்." #வே.வா., "அதன் இடத்திலிருந்து பெயர்க்கப்படாது." **104:10** *அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்குகளில்."

அதி. 104
a சங் 103:1
b சங் 86:10
c 1நா 16:27; எசே 1:27, 28; தானி 7:9
d யாக் 1:17; 1யோ 1:5
e ஏசா 40:22
f சங் 18:11; ஆமோ 9:6
g உபா 33:26; ஏசா 19:1
h 2சா 22:11; யோபு 38:1
i எசே 1:13; எபி 1:7, 14
j யோபு 38:4, 6; சங் 24:1, 2
k பிர 1:4
l ஆதி 1:2
m ஆதி 1:9
n நீதி 8:25
o யோபு 38:8-10; சங் 33:7; நீதி 8:29; எரே 5:22
p யோபு 38:37; சங் 147:8; எரே 10:13; ஆமோ 9:6; மத் 5:45
q சங் 65:9; அப் 14:17
r ஆதி 1:29, 30; ஆதி 9:3
s பிர 9:7

இதயத்துக்குத் தெம்பளிக்க உணவையும் தருகிறார்.[a]
16 யெகோவாவின் மரங்கள் தண்ணீரை உறிஞ்சித் திருப்தியடைகின்றன.
அவர் நட்டு வைத்த லீபனோனின் தேவதாரு மரங்கள்
திருப்தியடைகின்றன.
17 அந்த மரங்களில் பறவைகள் கூடு கட்டுகின்றன.
ஆபால் மரங்களில் நாரைகள்[b] தங்குகின்றன.
18 உயரமான மலைகளில் வரையாடுகள் வாழ்கின்றன.[c]
மாபெரும் கற்பாறைகளில் கற்பாறை முயல்கள்* தஞ்சம்
அடைகின்றன.[d]
19 காலங்களைக் குறிப்பதற்கு அவர் சந்திரனைப் படைத்தார்.
சூரியனுக்குத் தான் மறைய வேண்டிய நேரம் நன்றாகத் தெரியும்.[e]
20 நீங்கள் இருளை வர வைக்கிறீர்கள், இரவும் வருகிறது.[f]
அப்போது, காட்டு விலங்குகளெல்லாம் சுற்றித் திரிகின்றன.
21 இரைக்காக இளம் சிங்கங்கள் கர்ஜிக்கின்றன.[g]
கடவுள் தரும் இரையைத் தேடிப்போகின்றன.[h]
22 சூரியன் உதித்ததும்,
தங்கள் குகைகளில் போய்ப் படுத்துக்கொள்கின்றன.
23 மனிதன் வேலைக்குப் போகிறான்.
சாயங்காலம்வரை பாடுபடுகிறான்.
24 யெகோவாவே, உங்களுடைய படைப்புகள்தான் எத்தனை எத்தனை![i]
அவை எல்லாவற்றையும் ஞானமாகப் படைத்திருக்கிறீர்கள்.[j]
பூமி உங்களுடைய படைப்புகளால் நிறைந்திருக்கிறது.
25 பரந்து விரிந்த கடலும் அவற்றில் ஒன்று.
சிறியதும் பெரியதுமான கணக்குவழக்கில்லாத உயிரினங்கள் அதில்
இருக்கின்றன.[k]
26 அதில் கப்பல்கள் போகின்றன.
அதில் துள்ளி விளையாடுவதற்காக நீங்கள் படைத்த லிவியாதானும்*[l]
போகிறது.
27 அவையெல்லாம் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
அந்தந்த நேரத்தில் உணவு தருவீர்களென்று காத்திருக்கின்றன.[m]
28 நீங்கள் கொடுக்கும்போது, அவை வாங்கிக்கொள்கின்றன.[n]
உங்கள் கையைத் திறக்கும்போது, அவை ஏராளமான நன்மைகளைப்
பெற்றுத் திருப்தியடைகின்றன.[o]
29 உங்கள் முகத்தை மறைத்துக்கொள்ளும்போது, அவை கலங்குகின்றன.
அவற்றின் உயிர்சக்தியை எடுத்துவிடும்போது, அவை செத்துப்போய்
மண்ணுக்குத் திரும்புகின்றன.[p]
30 உங்களுடைய சக்தியை அனுப்பும்போது, அவை
படைக்கப்படுகின்றன.[q]
நீங்கள் நிலத்தைப் புதுப்பிக்கிறீர்கள்.

104:18 * இவை கற்பாறைகளுக்கு நடுவே வாழ்கிற ஒருவகையான பெரிய முயல்கள்.
104:26 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 104
a பிர 10:19
b எரே 8:7
c யோபு 39:1
d நீதி 30:26
e ஆதி 1:16; சங் 19:6; எரே 31:35
f ஆதி 1:5; சங் 74:16; ஏசா 45:7
g ஆமோ 3:4
h சங் 147:9
i நெ 9:6
j நீதி 3:19; எரே 10:12
k ஆதி 1:21
l யோபு 41:1
m சங் 136:25; சங் 145:15; சங் 147:9; மத் 6:26
n லூ 12:24
o சங் 107:9; சங் 145:16
p ஆதி 3:19; யோபு 34:14, 15; சங் 146:3, 4; பிர 3:19, 20; பிர 12:7
q யோபு 33:4; அப் 17:28

31 யெகோவாவின் மகிமை என்றென்றும் நிலைத்திருக்கும்.
யெகோவா தன்னுடைய படைப்புகளைப் பார்த்து சந்தோஷப்படுவார்.[a]
32 அவர் பூமியைப் பார்த்தவுடன் அது அதிர்கிறது.
மலைகளைத் தொட்டவுடன் புகை கிளம்புகிறது.[b]
33 வாழ்நாளெல்லாம் நான் யெகோவாவைப் போற்றிப் பாடுவேன்.[c]
உயிருள்ளவரை என் கடவுளைப் புகழ்ந்து பாடுவேன்.*[d]
34 என் யோசனைகள் அவருக்குப் பிரியமாக இருக்கட்டும்.*
நான் யெகோவாவை நினைத்து சந்தோஷப்படுவேன்.
35 பாவிகள் இந்தப் பூமியிலிருந்து மறைந்துபோவார்கள்.
பொல்லாதவர்கள் இனி இருக்க மாட்டார்கள்.[e]
என் ஜீவன் யெகோவாவைப் புகழட்டும். "யா"வைப் புகழுங்கள்!*

105 யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள்,[f] அவருடைய பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்ளுங்கள்.
அவருடைய செயல்களை எல்லாருக்கும் சொல்லுங்கள்![g]
2 அவருக்காகப் பாடல் பாடுங்கள், அவரைப் புகழ்ந்து பாடுங்கள்.*
அவருடைய அதிசயமான செயல்கள் எல்லாவற்றையும் ஆழ்ந்து யோசியுங்கள்.#[h]
3 அவருடைய பரிசுத்த பெயரைப் பற்றிப் பெருமையாகப் பேசுங்கள்.[i]
யெகோவாவை நாடுகிறவர்களின் இதயம் சந்தோஷத்தில் துள்ளட்டும்.[j]
4 யெகோவாவைத் தேடுங்கள்,[k] அவரிடம் பலம் கேட்டு வேண்டுங்கள்.
எப்போதும் அவருடைய முகத்தையே* நாடுங்கள்.
5 அவருடைய ஊழியரான ஆபிரகாமின் சந்ததியே,[l]
யாக்கோபின் வம்சமே, கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனமே,[m]
6 அவர் செய்த அதிசயமான செயல்களையும் அற்புதங்களையும்
அவர் கொடுத்த நீதித்தீர்ப்புகளையும் நினைத்துப் பாருங்கள்.[n]
7 அவர்தான் நம் கடவுளாகிய யெகோவா.[o]
அவருடைய நீதித்தீர்ப்புகள் பூமி முழுவதும் கொடுக்கப்படுகின்றன.[p]
8 அவர் தன்னுடைய ஒப்பந்தத்தை என்றென்றும் நினைத்துப் பார்க்கிறார்.[q]
ஆயிரமாயிரம் தலைமுறைகளுக்குத் தந்த வாக்குறுதியை நினைத்துப் பார்க்கிறார்.[r]
9 ஆபிரகாமோடு செய்த ஒப்பந்தத்தையும்,[s]
ஈசாக்குக்குக் கொடுத்த உறுதிமொழியையும்[t] நினைத்துப் பார்க்கிறார்.
10 அதை யாக்கோபுக்கு ஓர் ஆணையாகவும்,
இஸ்ரவேலுக்கு ஒரு நிரந்தர ஒப்பந்தமாகவும் கொடுத்து உறுதிப்படுத்தினார்.
11 அப்போது, "கானான் தேசத்தை
உனக்குச் சொத்தாகத் தருவேன்"[u] என்று சொன்னார்.

104:33 *வே.வா., "இசை இசைப்பேன்." **104:34** *அல்லது, "அவரைப் பற்றி நான் தியானிப்பதெல்லாம் இன்பம் தருவதாக இருக்கட்டும்." **104:35** *வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **105:2** *வே.வா., "இசை இசைத்திடுங்கள்." #அல்லது, "அறிவியுங்கள்." **105:4** *வே.வா., "சன்னிதியையே."

அதி. 104
a ஆதி 1:31
b யாத் 19:18
c சங் 13:6
d சங் 146:2
e சங் 37:10, 38; நீதி 2:22

அதி. 105
f சங் 136:1
g 1நா 16:8-13; சங் 96:3; சங் 145:11, 12; ஏசா 12:4
h சங் 77:12; சங் 119:27
i எரே 9:24
j சங் 119:2
k ஆமோ 5:4; செப் 2:3
l யாத் 3:6
m யாத் 19:5, 6; ஏசா 41:8
n உபா 7:18, 19
o யாத் 20:2; சங் 100:3
p 1நா 16:14-18; ஏசா 26:9; வெளி 15:4
q நெ 1:5
r உபா 7:9; லூ 1:72, 73
s ஆதி 17:1, 2; ஆதி 22:15-18
t ஆதி 26:3
u ஆதி 12:7; ஆதி 13:14, 15; ஆதி 15:18; ஆதி 26:3; ஆதி 28:13; சங் 78:55

12 அந்தச் சமயத்தில் அவர்கள் கொஞ்சம் பேர்தான் இருந்தார்கள்.[a]
கொஞ்சத்திலும் கொஞ்சம் பேர்தான் இருந்தார்கள்.
அந்தத் தேசத்தில் அவர்கள் அன்னியர்களாக இருந்தார்கள்.[b]
13 தேசம் தேசமாக அவர்கள் அலைந்து திரிந்தார்கள்.
ராஜ்யம் ராஜ்யமாகச் சுற்றித் திரிந்தார்கள்.[c]
14 அவர்களை அடக்கி ஒடுக்க எந்த மனிதனையும் கடவுள் அனுமதிக்கவில்லை.[d]
ஆனால், அவர்களுக்காக ராஜாக்களையே கண்டித்து,[e]
15 "நான் தேர்ந்தெடுத்தவர்கள்மேல்* கை வைக்காதீர்கள்.
என் தீர்க்கதரிசிகளுக்கு எந்தக் கெடுதலும் செய்யாதீர்கள்"[f] என்று சொன்னார்.
16 தேசத்தில் அவர் பஞ்சத்தைக் கொண்டுவந்தார்.[g]
உணவுப் பொருள்கள் கிடைக்காதபடி செய்தார்.*
17 தன்னுடைய மக்களுக்கு முன்னால் ஒரு மனிதரை அனுப்பி வைத்தார்.
அவர்தான் அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு.[h]
18 அவருடைய கால்களில் விலங்கு போடப்பட்டது.[i]
அவருடைய கழுத்தில் இரும்புச் சங்கிலி மாட்டப்பட்டது.
19 யெகோவா தந்த வாக்குறுதி நிறைவேறும்வரை,[j]
அவருடைய வார்த்தைதான் யோசேப்பைப் புடமிட்டது.
20 யோசேப்பை விடுதலை செய்ய ராஜா ஆள் அனுப்பினார்.[k]
மக்களின் தலைவர் அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்தார்.
21 அவரைத் தன் அரண்மனைக்கு அதிகாரியாக்கினார்.
தன்னுடைய எல்லா சொத்துக்கும் அதிபதியாக நியமித்தார்.[l]
22 தன்னுடைய எல்லா அமைச்சர்களின் மேலும் அவருக்கு முழு அதிகாரம் கொடுத்தார்.
தன்னுடைய பெரியோர்களுக்கு ஞானத்தைப் போதிக்க வைத்தார்.[m]
23 பின்பு, இஸ்ரவேல் எகிப்துக்கு வந்தார்.[n]
யாக்கோபு ஓர் அன்னியராக காமின் தேசத்தில் வாழ்ந்தார்.
24 கடவுள் தன்னுடைய மக்களை ஏராளமாகப் பெருக வைத்தார்.[o]
அவர்களுடைய எதிரிகளைவிட பலமுள்ளவர்களாக ஆக்கினார்.[p]
25 பின்பு, அந்த ஆட்கள் மனம் மாறி தன்னுடைய மக்களைப் பகைப்பதற்கும்,
தன்னுடைய ஊழியர்களுக்கு எதிராகச் சதி செய்வதற்கும் விட்டுவிட்டார்.[q]
26 அதன்பின், தன்னுடைய ஊழியரான மோசேயையும்,[r]
தான் தேர்ந்தெடுத்த ஆரோனையும் அனுப்பினார்.[s]
27 அவர்கள் எகிப்தியர்களின் முன்னால் அவருடைய அடையாளங்களைச் செய்தார்கள்.
காமின் தேசத்தில் அவருடைய அற்புதங்களைச் செய்தார்கள்.[t]

105:15 *வே.வா., "அபிஷேகம் செய்தவர்கள்மேல்." 105:16 *நே.மொ., "ரொட்டிக் கோல்களை முறித்துப்போட்டார்." இவை ஒருவேளை ரொட்டிகளை மாட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்ட கோல்களாக இருந்திருக்கலாம்.

அதி. 105
a ஆதி 34:30
b ஆதி 17:8; ஆதி 23:4; 1நா 16:19-22; அப் 7:4, 5
c ஆதி 20:1; ஆதி 46:6
d ஆதி 31:7, 42
e ஆதி 12:17; ஆதி 20:2, 3
f ஆதி 26:9, 11
g ஆதி 41:30, 54; ஆதி 42:5; அப் 7:11
h ஆதி 37:28, 36; ஆதி 45:4, 5; ஆதி 50:20
i ஆதி 39:20
j அப் 7:10
k ஆதி 41:14
l ஆதி 41:39-41; ஆதி 41:48; ஆதி 45:8
m ஆதி 41:33, 38
n ஆதி 46:4, 6
o யாத் 1:7; அப் 7:17
p யாத் 1:8, 9
q யாத் 1:10; அப் 7:18, 19
r யாத் 3:10; யாத் 4:12; யாத் 6:11
s யாத் 4:14; யாத் 7:1
t நெ 9:10; சங் 78:43-51

28 அவர் இருளை அனுப்பினார், தேசமும் இருண்டுபோனது.[a]
அவர்கள் அவருடைய வார்த்தையை மீறவில்லை.
29 கடவுள் அந்தத் தேசத்தின் தண்ணீரையெல்லாம் இரத்தமாக மாற்றினார்.
அதன் மீன்களையெல்லாம் சாகடித்தார்.[b]
30 தேசம் முழுவதும் தவளைகள் குவிந்தன.[c]
ராஜாவின் அறைகளிலும் புகுந்தன.
31 கொடிய ஈக்களும்* கொசுக்களும்,
அவர்களுடைய எல்லா பகுதிகளிலும் படையெடுக்கும்படி
அவர் கட்டளை கொடுத்தார்.[d]
32 மழைக்குப் பதிலாக ஆலங்கட்டிகள்* விழும்படி செய்தார்.
தேசத்தை மின்னல்# தாக்கும்படி செய்தார்.[e]
33 அங்கிருந்த திராட்சைக் கொடிகளையும் அத்தி மரங்களையும்
அழித்தார்.
எல்லா மரங்களையும் முறித்துப்போட்டார்.
34 வெட்டுக்கிளிகளைப் படையெடுத்து வரச் சொன்னார்.
இளம் வெட்டுக்கிளிகளைக் கணக்குவழக்கில்லாமல் வரச் சொன்னார்.[f]
35 தேசத்திலிருந்த எல்லா செடிகொடிகளையும் அவை விழுங்கின.
நிலத்தின் விளைச்சலைத் தின்றுதீர்த்தன.
36 பின்பு, அவர் அந்தத் தேசத்திலிருந்த முதல் பிறப்புகள்
எல்லாவற்றையும் சாகடித்தார்.[g]
அவர்களுடைய முதல் மகன்களை* அழித்தார்.
37 தன்னுடைய மக்களைத் தங்கத்தோடும் வெள்ளியோடும்
புறப்பட வைத்தார்.[h]
அவர்களில் ஒருவர்கூட பலவீனமாக இருக்கவில்லை.
38 இஸ்ரவேலர்களை நினைத்து எகிப்தியர்கள் பயந்து நடுங்கியதால்,[i]
அவர்கள் புறப்பட்டபோது மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.
39 கடவுள் மேகத்தை ஒரு திரைபோல் விரித்து இஸ்ரவேலர்களைப்
பாதுகாத்தார்.[j]
ராத்திரியில் நெருப்பை அனுப்பி வெளிச்சம் தந்தார்.[k]
40 அவர்கள் கேட்டதால் அவர் காடைகளை வர வைத்தார்.[l]
வானத்திலிருந்து உணவு தந்து அவர்களைத் திருப்திப்படுத்தினார்.[m]
41 கற்பாறையைப் பிளந்து தண்ணீரைப் பாய்ந்தோட வைத்தார்.[n]
அது பாலைவனத்தில் ஆறாய் ஓடியது.[o]
42 அவர் தன்னுடைய ஊழியரான ஆபிரகாமுக்குக் கொடுத்த
பரிசுத்தமான வாக்குறுதியை நினைத்துப் பார்த்தார்.[p]
43 அதனால், தன்னுடைய மக்களை மிகுந்த சந்தோஷத்தோடு
புறப்பட வைத்தார்.[q]
தான் தேர்ந்தெடுத்த ஜனங்களைச் சந்தோஷ ஆரவாரத்தோடு
புறப்பட வைத்தார்.

105:31 *இவை ஒருவகையான கடிக்கும் ஈக்கள். **105:32** *அதாவது, “பனிக்கட்டிகள்.” #வே.வா., “தீ ஜுவாலைகள்.” **105:36** *வே.வா., “அவர்களுடைய ஆண்மையின் முதல் பலன்களை.”

அதி. 105
a யாத் 10:22, 23
b யாத் 7:20, 21
c யாத் 8:6
d யாத் 8:17, 24
e யாத் 9:23-26
f யாத் 10:13-15
g யாத் 12:29
h ஆதி 15:13, 14; யாத் 3:22; யாத் 12:35, 36
i யாத் 12:33
j யாத் 14:19, 20
k யாத் 13:21
l சங் 78:27
m யாத் 16:12-15; சங் 78:24
n யாத் 17:6; 1கொ 10:1, 4
o சங் 78:15, 16
p ஆதி 12:7; ஆதி 15:13, 14; யாத் 2:24; உபா 9:5
q எண் 33:3

44 மற்ற ஜனங்களின் தேசங்களை அவர்களுக்குக் கொடுத்தார்.[a]
மற்ற தேசத்தாருடைய உழைப்பின் பலனை அவர்கள்
அனுபவிக்கும்படி செய்தார்.[b]
45 தன்னுடைய கட்டளைகளையும் சட்டங்களையும்
அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும்[c] என்பதற்காகவே அப்படிச்
செய்தார்.
"யா"வைப் புகழுங்கள்!*

106 "யா"வைப் புகழுங்கள்!*
யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள், அவர் நல்லவர்.[d]
அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.[e]
2 யெகோவாவின் வல்லமையான செயல்களை யாரால் முழுமையாக
அறிவிக்க முடியும்?
அவருடைய அருமையான* செயல்கள் எல்லாவற்றையும் யாரால்
அறிவிக்க முடியும்?[f]
3 நியாயமாக நடக்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்.
எப்போதும் சரியானதைச் செய்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[g]
4 யெகோவாவே, உங்கள் மக்களுக்குக் கருணை காட்டும்போது
என்னை நினைத்துப் பாருங்கள்.[h]
என்னைக் கவனித்துக்கொள்ளுங்கள், எனக்கு மீட்பு கொடுங்கள்.
5 அப்போதுதான், உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு[i]
நீங்கள் தருகிற நன்மைகளை நானும் அனுபவிக்க முடியும்.
உங்களுடைய தேசத்தாரோடு சேர்ந்து நானும் சந்தோஷப்பட முடியும்.
உங்களுக்குச் சொத்துபோல் இருக்கிற ஜனங்களோடு சேர்ந்து
பெருமையோடு உங்களைப் புகழ* முடியும்.
6 எங்கள் முன்னோர்களைப் போலவே நாங்களும் பாவம்
செய்துவிட்டோம்.[j]
நாங்கள் தவறு செய்துவிட்டோம், அக்கிரமம் செய்துவிட்டோம்.[k]
7 எகிப்தில் நீங்கள் செய்த அற்புதங்களை எங்களுடைய முன்னோர்கள்
உணரவில்லை.
நீங்கள் காட்டிய அளவுகடந்த அன்பை* நினைத்துப் பார்க்கவில்லை.
அதற்குப் பதிலாக, செங்கடலின் ஓரத்தில் உங்களுக்கு எதிராகப்
பேசினார்கள்.[l]
8 ஆனால், கடவுள் தன்னுடைய பெயரை மனதில் வைத்து அவர்களைக்
காப்பாற்றினார்.[m]
தன்னுடைய வல்லமையைக் காட்டுவதற்காக அவர்களைக்
காப்பாற்றினார்.[n]
9 அவர் செங்கடலை அதட்டினார், அது காய்ந்துபோனது.
பாலைவனத்தின் வழியாகக் கூட்டிக்கொண்டு போவதுபோல்,
ஆழமான கடல் வழியாக அவர்களைக் கூட்டிக்கொண்டு போனார்.[o]

105:45; 106:1 *வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **106:2** *வே.வா., "புகழத்தக்க." **106:5** *வே.வா., "உங்களைப் பற்றிப் பேச." **106:7** *வே.வா., "மாறாத அன்பை."

அதி. 105
a யோசு 11:23, யோசு 21:43, நெ 9:22, சங் 78:55, அப் 13:19
b உபா 6:10, 11, யோசு 5:11, 12
c உபா 4:40

அதி. 106
d லூ 18:19
e 1நா 16:34, எஸ்றா 3:11, சங் 103:17, சங் 107:1
f சங் 40:5
g சங் 15:1, 2, ஏசா 64:5
h நெ 5:19, சங் 51:18, சங் 119:132
i யாத் 19:5
j நெ 9:16, சங் 78:8
k எஸ்றா 9:6, தானி 9:5
l யாத் 14:11, 12
m சங் 143:11, எசே 20:14
n யாத் 9:16, ரோ 9:17
o யாத் 14:21, 22

10 எதிரிகளின் கையிலிருந்து அவர்களைக் காப்பாற்றினார்.[a]
விரோதிகளின் பிடியிலிருந்து விடுவித்தார்.[b]
11 எதிரிகளைத் தண்ணீர் மூழ்கடித்தது.
அவர்களில் ஒருவன்கூட தப்பிக்கவில்லை.[c]
12 அப்போது, கடவுளுடைய ஜனங்கள் அவருடைய வாக்குறுதியில்
நம்பிக்கை வைத்தார்கள்.[d]
அவரைப் புகழ்ந்து பாடினார்கள்.[e]
13 ஆனால், அவர் செய்ததையெல்லாம் சீக்கிரத்தில் மறந்துவிட்டார்கள்.[f]
அவருடைய அறிவுரைக்காக அவர்கள் காத்திருக்கவில்லை.
14 வனாந்தரத்தில் தங்களுடைய சுயநல ஆசைகளுக்கு
இடம்கொடுத்தார்கள்.[g]
பாலைவனத்தில் கடவுளைச் சோதித்தார்கள்.[h]
15 அவர்கள் கேட்டதைக் கடவுள் கொடுத்தார்.
ஆனால் கடைசியில், உடலை உருக்கும் வியாதியால் அவர்களைத்
தாக்கினார்.[i]
16 முகாமில் அவர்கள் மோசேயைப் பார்த்துப் பொறாமைப்பட்டார்கள்.
யெகோவாவுக்குப் பரிசுத்தமானவராக இருந்த[j] ஆரோனைப் பார்த்தும்
பொறாமைப்பட்டார்கள்.[k]
17 அதனால், பூமி பிளந்து தாத்தானை விழுங்கியது.
அபிராமுடன் கூடியிருந்த எல்லாரையும் புதைத்துவிட்டது.[l]
18 அந்தக் கூட்டத்தின் நடுவே நெருப்பு பற்றியெரிந்தது.
பொல்லாதவர்களைத் தீ ஜுவாலை சுட்டுப்பொசுக்கியது.[m]
19 அவர்கள் ஓரேபில் கன்றுக்குட்டி சிலையைச் செய்தார்கள்.
அந்த உலோகச் சிலை முன்னால் தலைவணங்கினார்கள்.[n]
20 அவர்கள் எனக்குக் கொடுக்க வேண்டிய மகிமையை,
வெறும் புல்லைத் தின்கிற காளையின் உருவத்துக்குக் கொடுத்தார்கள்.[o]
21 தங்கள் மீட்பரான கடவுளை மறந்துவிட்டார்கள்.[p]
எகிப்திலே மாபெரும் செயல்களையும்,[q]
22 காமின் தேசத்திலே அதிசயங்களையும்,[r]
செங்கடலிலே பிரமிப்பூட்டும் செயல்களையும் செய்தவரை
மறந்துவிட்டார்கள்.[s]
23 அவர்களை அழிப்பதற்குக் கடவுள் கட்டளை கொடுக்க இருந்தார்.
ஆனால், அவர் தேர்ந்தெடுத்த மோசே அவரிடம் கெஞ்சினார்.
ஆக்ரோஷத்தில் அவர்களை அழித்துவிட வேண்டாமென்று
கெஞ்சினார்.[t]
24 அருமையான தேசத்தை அந்த ஜனங்கள் அற்பமாக நினைத்தார்கள்.[u]
கடவுளுடைய வாக்குறுதியில் அவர்கள் துளிகூட விசுவாசம்
வைக்கவில்லை.[v]
25 தங்கள் கூடாரங்களில் முணுமுணுத்துக்கொண்டே இருந்தார்கள்.[w]
யெகோவாவின் பேச்சை அவர்கள் கேட்கவில்லை.[x]
26 அதனால், வனாந்தரத்தில் அவர்களைச் சாகடிக்கப்போவதாக
அவர் ஆணையிட்டுச் சொன்னார்.[y]

அதி. 106
a யாத் 14:30
b ஏசா 49:26
c யாத் 14:13, 28
d யாத் 14:31
e யாத் 15:1
f யாத் 15:24
யாத் 16:2, 3
யாத் 17:7
g எண் 11:4
உபா 9:22
1கொ 10:6
h யாத் 17:2
சங் 78:18
1கொ 10:9
எபி 3:8, 9
i எண் 11:31, 33
சங் 78:29-31
j லேவி 21:8
எண் 16:5-7
k எண் 16:3
l எண் 16:27, 32
m எண் 16:35
n யாத் 32:4
உபா 9:12
o யாத் 20:4
p உபா 32:18
q உபா 4:34
r சங் 78:51
s யாத் 14:25
t யாத் 32:10, 11
உபா 9:14, 19
u எண் 13:32
உபா 8:7-9
v எண் 14:11
w எண் 14:2
உபா 1:27
x எண் 14:22, 23
y எண் 14:28, 29
எபி 3:11

27 அவர்களுடைய வம்சத்தாரை மற்ற ஜனங்கள்முன்
வீழ்த்தப்போவதாகவும்,
எல்லா தேசங்களுக்கும் அவர்களைச் சிதறடிக்கப்போவதாகவும்
சொன்னார்.[a]
28 அவர்கள் பாகால் பேயோரை வணங்க ஆரம்பித்தார்கள்.[b]
செத்தவர்களுக்கு* படைக்கப்பட்டதைச் சாப்பிட்டார்கள்.
29 கடவுளுக்குப் பிடிக்காததைச் செய்து அவரைக் கோபப்படுத்தினார்கள்.[c]
அதனால், கொள்ளைநோய் அவர்கள் நடுவே பரவியது.[d]
30 ஆனால், பினெகாஸ் எழுந்துபோய் நடவடிக்கை எடுத்தபோது,
அந்தக் கொள்ளைநோய் ஓய்ந்தது.[e]
31 அவர் நீதிமானாகக் கருதப்பட்டார்.
என்றென்றைக்கும், எல்லா தலைமுறைகளுக்கும், அவர் அப்படியே
கருதப்படுவார்.[f]
32 மேரிபாவின்* தண்ணீருக்குப் பக்கத்தில் அவர்கள் கடவுளைக்
கோபப்படுத்தினார்கள்.
அவர்களால் மோசேக்குப் பயங்கர பிரச்சினை வந்தது.[g]
33 அந்த மக்கள் அவருக்கு எரிச்சலூட்டினார்கள்.
அதனால், அவர் ஆத்திரப்பட்டுப் பேசிவிட்டார்.[h]
34 மற்ற தேசத்து மக்களை அழிக்கும்படி யெகோவா கட்டளை
கொடுத்திருந்தும்,[i]
இஸ்ரவேலர்கள் அவர்களை அழிக்காமல் விட்டுவிட்டார்கள்.[j]
35 அதற்குப் பதிலாக, அவர்களோடு நெருக்கமாகப் பழகினார்கள்.[k]
அவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார்கள்.*[l]
36 அவர்களுடைய சிலைகளை வணங்கினார்கள்.[m]
அவை இஸ்ரவேலர்களுக்கு ஒரு கண்ணியாக ஆகிவிட்டன.[n]
37 அவர்கள் தங்களுடைய மகன்களையும் மகள்களையும்
பேய்களுக்குப் பலி கொடுத்தார்கள்.[o]
38 சொந்த மகன்களையும் மகள்களையுமே
கானானியர்களின் தெய்வங்களுக்குப் பலி கொடுத்தார்கள்.[p]
ஒரு பாவமும் அறியாதவர்களின் இரத்தத்தைச் சிந்திக்கொண்டே
இருந்தார்கள்.[q]
இப்படி, தேசத்தையே தீட்டுப்படுத்தினார்கள்.
39 அவர்கள் தங்களுடைய செயல்களால் அசுத்தமானார்கள்.
தங்களுடைய செயல்களால் கடவுளுக்குத் துரோகம் செய்தார்கள்.[r]
40 அதனால், யெகோவாவின் கோபம் அவர்கள்மேல் பற்றியெரிந்தது.
அவருடைய சொத்து போன்ற ஜனங்களை அவர் வெறுக்க
ஆரம்பித்தார்.
41 அவர்களைத் திரும்பத் திரும்ப மற்ற தேசத்து மக்களின் கையில்
கொடுத்தார்.[s]
அவர்களை வெறுத்தவர்கள் அவர்களை ஆளுவதற்கு விட்டுவிட்டார்.[t]

106:28 * இது உயிரற்ற தெய்வங்களையும் குறிக்கலாம். **106:32** * அர்த்தம், "தகராறு செய்தல்." **106:35** * வே.வா., "கற்றுக்கொண்டார்கள்."

அதி. 106
a லேவி 26:33; உபா 4:27
b எண் 25:3; ஓசி 9:10
c எண் 25:6; உபா 32:16
d எண் 25:9; 1கொ 10:8
e எண் 25:7, 8
f எண் 25:11-13
g எண் 20:2, 12; எண் 27:13, 14
h எண் 20:10
i எண் 33:52; உபா 7:1, 2
j யோசு 16:10; யோசு 17:12; நியா 1:21
k யோசு 15:63; நியா 1:33
l ஏசா 2:6
m நியா 2:11, 12; 2ரா 17:12
n யாத் 23:32, 33
o உபா 12:31; 2ரா 16:1, 3; 2ரா 17:17, 18; எரே 7:30, 31; 1கொ 10:20
p எசே 16:20
q 2ரா 21:16
r எரே 3:9
s உபா 32:30; நியா 3:8
t நியா 10:6-8

42 விரோதிகள் அவர்களை அடக்கி ஒடுக்கினார்கள்.
எதிரிகள் அவர்களை ஆட்டிப்படைத்தார்கள்.
43 நிறைய தடவை கடவுள் அவர்களைக் காப்பாற்றினார்.[a]
ஆனாலும், அவர்கள் அவருக்கு அடங்கி நடக்காமல், அவருடைய பேச்சை மீறினார்கள்.[b]
குற்றம் செய்ததால் அவர்கள் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.[c]
44 ஆனால், அவர்கள் பட்ட வேதனையைக் கடவுள் பார்த்தார்.[d]
உதவிக்காக அவர்கள் கதறியதை அவர் கேட்டார்.[e]
45 அவர்களுக்காகத் தன்னுடைய ஒப்பந்தத்தை நினைத்துப் பார்த்தார்.
அவர்கள்மேல் அளவுகடந்த அன்பு* வைத்திருந்ததால் அவர்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டார்.# [f]
46 அவர்களைச் சிறைபிடித்துக்கொண்டு போன ஆட்கள்,
அவர்களைப் பார்த்துப் பரிதாபப்படும்படி செய்தார்.[g]
47 எங்கள் கடவுளாகிய யெகோவாவே, எங்களைக் காப்பாற்றுங்கள்.[h]
மற்ற தேசங்களிலிருந்து எங்களைக் கூட்டிச்சேருங்கள்.[i]
அப்போது, உங்களுடைய பரிசுத்தமான பெயருக்கு நன்றி சொல்வோம்.
சந்தோஷம் பொங்க உங்களைப் புகழ்வோம்.[j]
48 இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவுக்குப் புகழ் சேரட்டும்!
என்றென்றும் அவருக்குப் புகழ் சேரட்டும்![k]
மக்கள் எல்லாரும் “ஆமென்!”* என்று சொல்லட்டும்.
“யா”வைப் புகழுங்கள்!#

106:45 *வே.வா., “மாறாத அன்பு.” #வே.வா., “வருத்தப்பட்டார்.” **106:48** *அதாவது, “அப்படியே ஆகட்டும்!” #வே.வா., “அல்லேலூயா!” “யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 106
a நியா 10:11, 12; 1சா 12:11
b நியா 4:1
c நியா 6:1-5
d நியா 2:18
e நியா 3:9
f யாத் 34:6; உபா 32:36; ஏசா 63:7; புல 3:32; யோவே 2:13
g எஸ்றா 9:9
h சங் 79:9
i எரே 32:37
j 1நா 16:35
k 1நா 29:10; சங் 41:13; லூ 1:68

பகுதி ஐந்து
(சங்கீதம் 107–150)

107 யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள், அவர் நல்லவர்.[a]
அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.[b]
2 இதை யெகோவாவினால் மீட்கப்பட்டவர்கள் சொல்லட்டும்.
அவர்களை எதிரியிடமிருந்து அவர் மீட்டுக்கொண்டார்.[c]
3 மற்ற தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிச்சேர்த்தார்.[d]
கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும்
வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் கூட்டிச்சேர்த்தார்.[e]
4 வெறுமையான வனாந்தரத்தில் அவர்கள் அலைந்து திரிந்தார்கள்.
குடியிருப்பதற்கான நகரத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடினார்கள்.
5 பசியில் வாடினார்கள், தாகத்தில் தவித்தார்கள்.
சோர்வில் சுருண்டு விழும் நிலையில் இருந்தார்கள்.
6 வேதனை தாங்காமல் யெகோவாவிடம் கதறிக்கொண்டே இருந்தார்கள்.[f]

அதி. 107
a லூ 18:19
b 1நா 16:34; சங் 103:17
c ஏசா 35:10; எரே 15:21; மீ 4:10
d சங் 106:47; எரே 29:14
e ஏசா 43:5, 6; எரே 31:8
f ஓசி 5:14, 15

அவர்களை அந்த இக்கட்டான நிலைமையிலிருந்து அவர் காப்பாற்றினார்.[a]
7 சரியான வழியில் அவர்களை நடத்திக்கொண்டு போனார்.[b]
அவர்கள் குடியிருப்பதற்கான நகரத்துக்கு அவர்களைக் கூட்டிக்கொண்டு போனார்.[c]
8 மாறாத அன்பைக் காட்டியதற்காகவும்,
மனிதர்களுக்காக அற்புதங்களைச் செய்ததற்காகவும்[d]
மக்கள் யெகோவாவுக்கு நன்றி சொல்லட்டும்.[e]
9 அவர் தண்ணீரைக் கொடுத்து தாகத்தைத் தீர்த்தார்.
நல்ல நல்ல உணவைக் கொடுத்து பசியைப் போக்கினார்.[f]
10 சிலர் பயங்கர இருட்டில் வாழ்ந்தார்கள்.
விலங்குகள் மாட்டப்பட்டு, கைதிகளாக அவதிப்பட்டார்கள்.
11 ஏனென்றால், கடவுளுடைய வார்த்தையை அவர்கள் மீறினார்கள்.
உன்னதமான கடவுளுடைய அறிவுரையை அவமதித்தார்கள்.[g]
12 அதனால், பாடுகளை அனுபவிக்க வைப்பதன் மூலம்
அவர்களுடைய இதயத்திலிருந்த ஆணவத்தைக் கடவுள் அடக்கினார்.[h]
அவர்கள் தடுமாறி விழுந்தார்கள், அவர்களுக்கு உதவி செய்ய யாருமே இருக்கவில்லை.
13 வேதனையில் தவித்தபோது உதவிக்காக யெகோவாவைக் கூப்பிட்டார்கள்.
அவர்களை அந்த இக்கட்டான நிலைமையிலிருந்து அவர் காப்பாற்றினார்.
14 பயங்கரமான இருட்டிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவந்தார்.
அவர்களுடைய விலங்குகளை உடைத்துப்போட்டார்.[i]
15 மாறாத அன்பைக் காட்டியதற்காகவும்,[j]
மனிதர்களுக்காக அற்புதங்களைச் செய்ததற்காகவும்
மக்கள் யெகோவாவுக்கு நன்றி சொல்லட்டும்.
16 ஏனென்றால், செம்புக் கதவுகளை அவர் நொறுக்கிப்போட்டார்.
இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்துப்போட்டார்.[k]
17 அவர்கள் முட்டாள்தனமாக நடந்துகொண்டார்கள்.[l]
தாங்கள் செய்த குற்றங்களுக்காகவும் அக்கிரமங்களுக்காகவும் கஷ்டத்தை அனுபவித்தார்கள்.[m]
18 அவர்களுக்கு எதையுமே சாப்பிடப் பிடிக்கவில்லை.
அவர்கள் மரண வாசலை நெருங்கினார்கள்.
19 வேதனையில் தவித்தபோது உதவிக்காக யெகோவாவைக் கூப்பிட்டார்கள்.
அவர்களை அந்த இக்கட்டான நிலைமையிலிருந்து அவர் காப்பாற்றினார்.
20 அவர் தன்னுடைய வார்த்தையை அனுப்பி அவர்களைக் குணப்படுத்தினார்.[n]
அவர்கள் விழுந்து கிடந்த குழிகளிலிருந்து அவர்களைத் தூக்கிவிட்டார்.

அதி. 107
a ஏசா 41:17
b ஏசா 30:21
c நெ 11:3
d சங் 40:5
e 1நா 16:8
f சங் 34:10; ஏசா 55:2; லூ 1:53
g சங் 106:43; புல 3:42
h லேவி 26:21
i சங் 68:6; சங் 146:7; ஏசா 49:8, 9; ஏசா 61:1
j புல 3:22
k ஏசா 45:1, 2
l எரே 2:19
m புல 3:39
n சங் 147:3

21 மாறாத அன்பைக் காட்டியதற்காகவும்,
மனிதர்களுக்காக அற்புதங்களைச் செய்ததற்காகவும்
மக்கள் யெகோவாவுக்கு நன்றி சொல்லட்டும்.
22 அவர்கள் நன்றிப் பலிகளைச் செலுத்தட்டும்.[a]
சந்தோஷம் பொங்க அவருடைய செயல்களை அறிவிக்கட்டும்.
23 கப்பலில் பயணம் செய்கிறவர்களும்,
பரந்து விரிந்த கடலில் வியாபாரம் செய்கிறவர்களும்,[b]
24 யெகோவாவின் செயல்களைப் பார்த்திருக்கிறார்கள்.
ஆழ்கடலில் அவர் செய்திருக்கிற அதிசயங்களைப்
பார்த்திருக்கிறார்கள்.[c]
25 அவர் ஒரு வார்த்தை சொன்னதும் எப்படிப் புயல் அடிக்கிறதென்றும்,[d]
கடல் அலைகளை அது எப்படிப் பொங்கியெழ வைக்கிறதென்றும்
பார்த்திருக்கிறார்கள்.
26 அலைகள் அவர்களை மேலே வானத்துக்கும்,
கீழே ஆழ்கடலுக்கும் அலைக்கழிக்கின்றன.
வரப்போகிற ஆபத்தை நினைத்து அவர்கள்
வெலவெலத்துப்போகிறார்கள்.
27 குடிகாரர்கள்போல் தள்ளாடுகிறார்கள், தடுமாறுகிறார்கள்.
அவர்களுடைய திறமை எதுவுமே அவர்களுக்குக்
கைகொடுப்பதில்லை.[e]
28 பின்பு, வேதனை தாங்காமல் யெகோவாவிடம் கதறுகிறார்கள்.[f]
அவர்களை அந்த இக்கட்டான நிலைமையிலிருந்து அவர்
காப்பாற்றுகிறார்.
29 புயல்காற்றை அவர் அடக்குகிறார்.
அப்போது, கடல் அலைகள் அமைதியாகின்றன.[g]
30 எல்லாம் அடங்கியதும் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்.
அவர்கள் போக விரும்பும் துறைமுகத்துக்கு அவர்களைக்
கொண்டுபோய்ச் சேர்க்கிறார்.
31 மாறாத அன்பைக் காட்டியதற்காகவும்,
மனிதர்களுக்காக அற்புதங்களைச் செய்ததற்காகவும்
மக்கள் யெகோவாவுக்கு நன்றி சொல்லட்டும்.[h]
32 மக்களின் சபையில் அவரை மெச்சிப் பேசட்டும்.[i]
பெரியோர்களின் கூட்டத்தில் அவரைப் புகழ்ந்து பேசட்டும்.
33 ஆறுகளை அவர் பாலைவனம் போலாக்குகிறார்.
நீரூற்றுகளை வறண்ட நிலமாக்குகிறார்.[j]
34 வளமான நிலத்தைப் பயனில்லாத உப்பு நிலமாக்குகிறார்.[k]
ஏனென்றால், அங்கே குடியிருக்கிறவர்கள் அக்கிரமம் செய்கிறார்கள்.
35 அவர் பாலைவனத்தை நாணல்கள் நிறைந்த குளமாக மாற்றுகிறார்.
வறண்ட நிலத்தை நீரூற்றுகள் நிறைந்த இடமாக மாற்றுகிறார்.[l]
36 பசியில் வாடுகிறவர்களை அங்கே வாழ வைக்கிறார்.[m]
அவர்கள் குடியிருக்க ஒரு நகரத்தைக் கட்டும்படி செய்கிறார்.[n]

அதி. 107
a லேவி 7:12 சங் 50:14
b 2நா 9:21 எசே 27:9
c ஆதி 1:21 சங் 104:25
d சங் 135:7 எரே 10:13 யோனா 1:4
e யோனா 1: 4, 13
f யோனா 1:14
g சங் 65:7 சங் 89:9 யோனா 1:15
h சங் 105:6
i சங் 111:1
j 1ரா 17:1, 7 ஏசா 42:15 ஆமோ 4:7
k ஆதி 13:10 உபா 29: 22, 23
l 2ரா 3:17 ஏசா 35:7 ஏசா 41:18
m சங் 146:7 லூ 1:53
n சங் 107:7

37 அவர்கள் வயல்களில் விதைக்கிறார்கள், திராட்சைத் தோட்டங்களைப் போடுகிறார்கள்.[a]
அவை அமோக விளைச்சலைத் தருகின்றன.[b]
38 அவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார், அவர்கள் ஏராளமாகப் பெருகுகிறார்கள்.
அவர்களுடைய கால்நடைகளும் குறையாதபடி அவர் பார்த்துக்கொள்கிறார்.[c]
39 ஆனால், திரும்பவும் அவர்களுடைய எண்ணிக்கை குறைகிறது, அவமானம் கூடுகிறது.
ஏனென்றால், அவர்கள் கொடுமையையும் துன்பத்தையும் வேதனையையும் அனுபவிக்கிறார்கள்.
40 செல்வாக்கு உள்ளவர்களுக்கு மிகுந்த அவமானம் வரும்படி செய்கிறார்.
பாதையில்லாத பொட்டல் காடுகளில் அவர்களைத் திரிய வைக்கிறார்.[d]
41 ஆனால், அடக்கி ஒடுக்கப்படும் ஏழைகளைப் பாதுகாக்கிறார்.*[e]
அவர்களுடைய குடும்பங்களை மந்தைபோல் பெருக வைக்கிறார்.
42 நேர்மையானவர்கள் இதைப் பார்த்து சந்தோஷப்படுகிறார்கள்.[f]
ஆனால், அக்கிரமக்காரர்கள் தங்களுடைய வாயை மூடிக்கொள்கிறார்கள்.[g]
43 ஞானமாக நடக்கிற எல்லாரும் இவற்றைக் கவனிப்பார்கள்.[h]
மாறாத அன்பை யெகோவா எப்படியெல்லாம் காட்டினார் என்று நன்றாக யோசித்துப் பார்ப்பார்கள்.[i]

ஒரு பாடல். தாவீதின் சங்கீதம்.

108 கடவுளே, நான் உள்ளத்தில் உறுதியோடு இருக்கிறேன்.
நான் முழு மூச்சோடு இசை இசைத்துப் பாடுவேன்.[j]
2 நரம்பிசைக் கருவியே, விழித்தெழு! யாழே, நீயும் விழித்தெழு![k]
நான் விடியலைத் தட்டி எழுப்புவேன்.
3 யெகோவாவே, மக்கள் நடுவில் உங்களைப் புகழ்வேன்.
தேசங்கள் மத்தியில் உங்களைப் புகழ்ந்து பாடுவேன்.*
4 ஏனென்றால், உங்களுடைய மாறாத அன்பு மகத்தானது.
அது வானத்தைப் போல உயர்ந்தது.[l]
உங்களுடைய உண்மைத்தன்மை ஆகாயத்தையே தொடுகிறது.
5 கடவுளே, உங்களுடைய புகழ் வானத்துக்கும் மேலாக உயரட்டும்.
உங்களுடைய மகிமை பூமியெங்கும் பரவட்டும்.[m]
6 உங்களுக்குப் பிரியமானவர்கள் விடுவிக்கப்படும்படி,
உங்கள் வலது கையால் எங்களைக் காப்பாற்றி, எனக்குப் பதில் கொடுங்கள்.[n]
7 பரிசுத்தமான* கடவுள் இப்படிச் சொன்னார்:
“நான் சந்தோஷத்தோடு என் ஜனங்களுக்கு சீகேமைச்[o] சொத்தாகக் கொடுப்பேன்.

107:41 *வே.வா., “உயரத்தில் தூக்கி வைக்கிறார்.” அதாவது, கைக்கு எட்டாத தூரத்தில் வைக்கிறார். **108:3** *வே.வா., “இசை இசைப்பேன்.” **108:7** *அல்லது, “பரிசுத்தமான இடத்திலிருந்து.”

அதி. 107
a ஏசா 65:21
b அப் 14:17
c உபா 7:13, 14
d யோபு 12:21, 24
e 1சா 2:8
f சங் 58:10
g யாத் 11:7; சங் 63:11
h சங் 64:9; ஓசி 14:9
i சங் 77:12; சங் 143:5; எரே 9:24

அதி. 108
j சங் 57:7-11; சங் 104:33
k சங் 81:2
l சங் 36:5; சங் 103:11
m சங் 8:1; சங் 57:5, 11
n சங் 20:6; சங் 60:5
o யோசு 17:7

சுக்கோத் பள்ளத்தாக்கைப்[a] பங்காக அளந்து கொடுப்பேன்.
8 கீலேயாத்[b] என்னுடையது, மனாசேயும் என்னுடையது.
எப்பிராயீம் என் தலைக்கவசம்.[c]
யூதா என் அதிகாரக்கோல்.[d]
9 மோவாப் நான் பாதங்களைக் கழுவுகிற பாத்திரம்.[e]
ஏதோமின் மேல் என் செருப்பைத் தூக்கியெறிவேன்.[f]
பெலிஸ்தியாவைத் தோற்கடித்து வெற்றி முழக்கம் செய்வேன்."[g]
10 முற்றுகை போடப்பட்ட நகரத்துக்கு யார் என்னை அழைத்துக்கொண்டு போவார்?
ஏதோம்வரை யார் என்னை வழிநடத்துவார்?[h]
11 கடவுளே, நீங்கள்தானே இதைச் செய்வீர்கள்?
ஆனால், எங்களை ஒதுக்கிவிட்டீர்களே!
எங்களுடைய படைகளுக்குத் துணையாக வருவதை நிறுத்திவிட்டீர்களே![i]
12 இக்கட்டில் தவிக்கும் எங்களுக்கு உதவி செய்யுங்கள்.[j]
ஏனென்றால், மனிதர்கள் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண்.[k]
13 கடவுள் எங்களுக்குப் பலம் கொடுப்பார்.[l]
எங்களுடைய எதிரிகளை அவர் மிதித்துப் போடுவார்.[m]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

109

நான் போற்றிப் புகழும் கடவுளே,[n] மவுனமாக இருக்காதீர்கள்.
2 பொல்லாதவர்களும் ஏமாற்றுக்காரர்களும் எனக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.
என்னைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்கிறார்கள்.[o]
3 என்னைச் சுற்றிலும் இருக்கிறவர்கள் என்மேல் வெறுப்பைக் கொட்டுகிறார்கள்.
காரணமே இல்லாமல் என்னைத் தாக்குகிறார்கள்.[p]
4 நான் அன்பு காட்டியதற்குக் கைமாறாக என்னை எதிர்க்கிறார்கள்.[q]
ஆனால், நான் ஜெபம் செய்துகொண்டே இருக்கிறேன்.
5 நான் நல்லது செய்ததற்குக் கைமாறாக எனக்குக் கெடுதல் செய்கிறார்கள்.[r]
என் அன்புக்குக் கைமாறாக வெறுப்பைக் காட்டுகிறார்கள்.[s]
6 அவனை அக்கிரமக்காரனின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்துங்கள்.
அவனை எதிர்க்கிறவன்* அவனுடைய வலது பக்கத்தில் நிற்கட்டும்.
7 குற்றவாளி என்ற தீர்ப்பை அவன் பெறட்டும்.
அவன் செய்கிற ஜெபம்கூட பாவமென்று கருதப்படட்டும்.[t]
8 அவனுடைய வாழ்நாட்கள் குறைந்துபோகட்டும்.[u]
அவனுடைய கண்காணிக்கும் பொறுப்பை வேறொருவன் எடுத்துக்கொள்ளட்டும்.[v]
9 அவனுடைய பிள்ளைகள் அப்பா இல்லாமல் தவிக்கட்டும்.
அவனுடைய மனைவி விதவையாகட்டும்.

109:6 * வே.வா., "அவன்மேல் குற்றம் சுமத்துகிறவன்."

அதி. 108
a ஆதி 33:17 சங் 60:6-8
b யோசு 13:8, 11
c உபா 33:17
d ஆதி 49:10
e 2சா 8:2
f எண் 24:18 2சா 8:14
g 2சா 8:1
h சங் 60:9-12
i உபா 23:14
j சங் 18:6
k சங் 118:8 சங் 146:3, 4
l 1சா 2:4 2சா 22:40 ஏசா 40:29-31
m சங் 44:5

அதி. 109
n சங் 33:1
o 2சா 15:2, 3 சங் 31:18
p 2சா 15:12 2சா 16:5-7 சங் 69:4
q 2சா 13:39
r சங் 35:11, 12 சங் 38:19, 20
s சங் 55:12-14
t ஏசா 1:15 மீ 3:4
u சங் 55:23 மத் 27:5
v அப் 1:16-20

10 அவனுடைய பிள்ளைகள் அலைந்து திரிந்து பிச்சை எடுக்கட்டும்.
பாழாக்கப்பட்ட தங்கள் வீடுகளைவிட்டுப் போய் உணவு தேடட்டும்.
11 அவனுக்குக் கடன் கொடுத்தவன் அவனிடமிருக்கிற எல்லாவற்றையும் பிடுங்கிக்கொள்ளட்டும்.
முன்பின் தெரியாதவர்கள் அவனுடைய சொத்துகளைக் கொள்ளையடிக்கட்டும்.
12 ஒருவனும் அவனுக்கு அன்பு* காட்டாமல் இருக்கட்டும்.
அப்பா இல்லாத அவனுடைய பிள்ளைகளுக்கு யாரும் கருணை காட்டாமல் இருக்கட்டும்.
13 அவனுடைய சந்ததி அழிந்துபோகட்டும்.[a]
ஒரே தலைமுறைக்குள் அவர்களுடைய பெயர் சுவடு தெரியாமல் அழிந்துபோகட்டும்.
14 அவனுடைய முன்னோர்கள் செய்த குற்றங்களை யெகோவா நினைத்துப் பார்க்கட்டும்.[b]
அவனுடைய தாயின் பாவம் துடைத்தழிக்கப்படாமல் இருக்கட்டும்.
15 அவர்கள் செய்ததையெல்லாம் யெகோவா எப்போதும் நினைத்துப் பார்க்கட்டும்.
அவர்களைப் பற்றிய நினைவை இந்த உலகத்திலிருந்து அடியோடு அழித்துப்போடட்டும்.[c]
16 ஏனென்றால், அவன் அன்பு* காட்ட நினைக்கவில்லை.[d]
அதற்குப் பதிலாக, ஒடுக்கப்பட்டவர்களையும் ஏழைகளையும்
உள்ளம் உடைந்தவர்களையும் சாகடிப்பதற்காக[e] அவர்களைத் துரத்திக்கொண்டே இருந்தான்.[f]
17 மற்றவர்களைச் சபிக்க அவன் துடித்தான், அதனால் அவனுக்குச் சாபம்தான் வந்தது.
மற்றவர்களை ஆசீர்வதிக்க அவன் விரும்பவில்லை, அதனால் அவனுக்கு எந்த ஆசீர்வாதமும் கிடைக்கவில்லை.
18 சாபங்களை உடைபோல் உடுத்தியிருந்தான்.
அந்தச் சாபங்கள் தண்ணீர்போல் அவனுக்குள் ஊற்றப்பட்டன.
எண்ணெய்போல் அவனுடைய எலும்புகளுக்குள் ஊற்றப்பட்டன.
19 அவை அவனுடைய உடலைப் போர்த்தியிருக்கும் உடை போலவும்,[g]
அவன் எப்போதுமே கட்டியிருக்கும் இடுப்புவார் போலவும் ஆகட்டும்.
20 என்னை எதிர்க்கிறவனுக்கு யெகோவா தருகிற கூலி இதுதான்.[h]
என்னைப் பற்றி மோசமாகப் பேசுகிறவனுக்குக் கிடைக்கிற பலன் இதுதான்.
21 ஆனால், உன்னதப் பேரரசரான யெகோவாவே,
உங்களுடைய பெயரை மனதில் வைத்து எனக்கு உதவி செய்யுங்கள்.[i]
உங்களுடைய மாறாத அன்பு அருமையானது, அதனால் என்னைக் காப்பாற்றுங்கள்.[j]
22 நான் ஆதரவற்ற ஒரு ஏழை.[k]
என் இதயம் ரணமாகியிருக்கிறது.[l]

109:12, 16 *வே.வா., "மாறாத அன்பு."

அதி. 109
a சங் 37:28
b 2சா 3:28, 29; 2சா 21:1
c சங் 34:16
d யாக் 2:13
e 2சா 16:11; 2சா 17:1, 2; சங் 37:32
f சங் 10:2
g சங் 109:29
h 2சா 17:23
i சங் 25:11; சங் 31:3
j சங் 36:7; சங் 69:16; சங் 86:5
k சங் 40:17
l சங் 102:4

23 மாலைநேர நிழல் போல நான் மறைந்துபோகிறேன்.
வெட்டுக்கிளி போலக் காற்றில் அடித்துக்கொண்டு போகப்படுகிறேன்.
24 சாப்பிடாமல் கிடந்ததால் என் முழங்கால்கள் தள்ளாடுகின்றன.
நான் மெலிந்துவிட்டேன், நாளுக்கு நாள் இளைத்துக்கொண்டே போகிறேன்.
25 அவர்களுடைய பழிப்பேச்சுக்கு ஆளாகிவிட்டேன்.[a]
அவர்கள் என்னைப் பார்க்கும்போது, ஏளனமாகத் தலையை ஆட்டுகிறார்கள்.[b]
26 என் கடவுளாகிய யெகோவாவே, எனக்கு உதவி செய்யுங்கள்.
உங்களுடைய மாறாத அன்பினால் என்னைக் காப்பாற்றுங்கள்.
27 யெகோவாவே, இது உங்கள் செயல் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளட்டும்.
நீங்கள்தான் இதைச் செய்தீர்கள் என்று அவர்கள் புரிந்துகொள்ளட்டும்.
28 அவர்கள் சபித்தாலும், நீங்கள் ஆசீர்வதியுங்கள்.
அவர்கள் எனக்கு எதிராகக் கிளம்பும்போது அவர்களை அவமானப்பட வையுங்கள்.
ஆனால், உங்கள் ஊழியனைச் சந்தோஷப்பட வையுங்கள்.
29 என்னை எதிர்க்கிறவர்களுக்கு அவமானம் மேலாடைபோல் ஆகட்டும்.
வெட்கம் அவர்களுக்கு மேலங்கிபோல் ஆகட்டும்.[c]
30 வாய் ஓயாமல் நான் யெகோவாவைப் புகழ்வேன்.
பல பேருக்கு முன்னால் அவரைப் புகழ்வேன்.[d]
31 ஏனென்றால், ஏழையின் வலது பக்கத்தில் அவர் நிற்பார்.
அவன்மேல் குற்றம் சுமத்துகிறவர்களிடமிருந்து அவனைக் காப்பாற்றுவார்.

தாவீதின் சங்கீதம்.

110 யெகோவா என் எஜமானிடம்,
“நான் உன் எதிரிகளை உனக்குக் கால்மணையாக்கிப் போடும்வரை[e]
என் வலது பக்கத்தில் உட்கார்ந்திரு”[f] என்றார்.
2 யெகோவா சீயோனிலிருந்து உங்கள்* வல்லமையின் செங்கோலை நீட்டி,
“உன் எதிரிகளின் நடுவே ஆட்சி செய்”[g] என்று சொல்வார்.
3 நீங்கள் உங்களுடைய படைபலத்தைத் திரட்டும் நாளில்,*
உங்களுடைய மக்கள் மனப்பூர்வமாகத் தங்களை அர்ப்பணிப்பார்கள்.
பரிசுத்தத்தால் அலங்கரிக்கப்பட்ட வாலிபர்கள்# உங்களிடம் திரண்டு வருவார்கள்.
அவர்கள் விடியற்கால△ பனித்துளி போன்றவர்கள்.
4 “மெல்கிசேதேக்கைப் போலவே[h] நீ என்றென்றும் குருவாக இருக்கிறாய்”[i] என்று

110:2 * வசனம் 1-ல் சொல்லப்பட்ட எஜமானைக் குறிக்கிறது. 110:3 * வே.வா., “உங்கள் படை புறப்படும் நாளில்.” # வே.வா., “இளம் ஆண்கள்.” △ நே.மொ., “விடியற்காலத்தின் கர்ப்பத்தில் பிறக்கும்.”

அதி. 109
a சங் 31:11
b சங் 22:7; மத் 27:39
c சங் 35:26
d சங் 22:22

அதி. 110
e மத் 22:43, 44; மாற் 12:36; லூ 20:42, 43; அப் 2:34, 35; 1கொ 15:25; எபி 1:3, 13; எபி 10:12, 13
f ரோ 8:34; எபே 1:20; எபி 8:1; எபி 12:2
g சங் 2:8, 9; சங் 45:4, 5; மத் 28:18; வெளி 6:2; வெளி 12:5; வெளி 19:11, 15
h ஆதி 14:18; எபி 5:5, 6; எபி 6:19, 20; எபி 7:3, 11
i எபி 7:21, 28

யெகோவா ஆணையிட்டுச் சொல்லியிருக்கிறார்.
அவர் தன்னுடைய மனதை மாற்றிக்கொள்ள மாட்டார்.*
5 யெகோவா உங்கள் வலது பக்கத்தில் இருப்பார்.[a]
அவருடைய கோபத்தின் நாளில் ராஜாக்களை அவர் நொறுக்கிப்போடுவார்.[b]
6 அவர் எல்லா தேசங்களையும் தண்டிப்பார்.[c]
எல்லா இடங்களையும் பிணங்களால் நிரப்புவார்.[d]
மாபெரும் தேசத்தின்* தலைவனை நொறுக்கிப்போடுவார்.
7 வழியில் ஓடுகிற நீரோடையிலிருந்து அவர்* தண்ணீர் குடிப்பார்.
அதன்பின், தலைநிமிர்ந்து நிற்பார்.

111

"யா"வைப் புகழுங்கள்!*[e]

א [*ஆலெஃப்*]

நான் யெகோவாவை முழு இதயத்தோடு புகழ்வேன்.[f]

ב [*பேத்*]

நேர்மையானவர்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.

ג [*கீமெல்*]

2 யெகோவாவின் செயல்கள் மகத்தானவை.[g]

ד [*டாலத்*]

அவற்றின் மேல் பிரியமாக இருக்கிற எல்லாரும் அவற்றை ஆராய்கிறார்கள்.[h]

ה [*ஹே*]

3 அவருடைய செயல்கள் அற்புதமானவை, அதிசயமானவை.

ו [*வா*]

அவருடைய நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்.[i]

ז [*ஸாயின்*]

4 அவருடைய அருமையான செயல்களை எல்லாருடைய நினைவிலும் அவர் நிறுத்துகிறார்.[j]

ח [*ஹேத்*]

யெகோவா கரிசனையும்* இரக்கமும் நிறைந்தவர்.[k]

ט [*டேத்*]

5 தனக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு உணவு கொடுக்கிறார்.[l]

י [*யோத்*]

தன்னுடைய ஒப்பந்தத்தை என்றென்றும் ஞாபகம் வைத்திருக்கிறார்.[m]

כ [*காஃப்*]

6 மற்ற தேசத்து மக்களின் சொத்துகளைத் தன் மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்.[n]

ל [*லாமெத்*]

இப்படி, தன்னுடைய செயல்களின் வல்லமையைத் தன் மக்களுக்குக் காட்டியிருக்கிறார்.

அதி. 110
a சங் 16:8
b சங் 2:2; ரோ 2:5; வெளி 11:18; வெளி 19:19
c சங் 79:6
d எரே 25:31-33

அதி. 111
e சங் 68:4; சங் 113:1; வெளி 19:1
f சங் 9:1
g சங் 98:1; சங் 139:14; வெளி 15:3
h சங் 77:12; சங் 143:5
i சங் 103:17
j உபா 31:19; யோசு 4:5-7
k யாத் 34:6; யாக் 5:11
l சங் 37:25; மத் 6:33
m சங் 89:34; சங் 105:8
n சங் 44:2; சங் 105:44

110:4 *வே.வா., "அவர் வருத்தப்பட மாட்டார்." **110:6** *வே.வா., "முழு பூமிக்கும்." **110:7** *வசனம் 1-ல் சொல்லப்பட்ட எஜமானைக் குறிக்கிறது. **111:1** *வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **111:4** *வே.வா., "கனிவும்."

מ [*மேம்*]

7 அவருடைய கைகளின் செயல்கள் உண்மையானவை, நியாயமானவை.[a]

נ [*நூன்*]

அவருடைய ஆணைகளெல்லாம் நம்பகமானவை.[b]

ס [*சாமெக்*]

8 அவற்றை எப்போதுமே நம்பலாம்; இன்றும் என்றும் நம்பலாம்.

ע [*ஆயின்*]

உண்மையும் நீதியும் அவற்றின் அஸ்திவாரம்.[c]

פ [*பே*]

9 அவர் தன்னுடைய மக்களை மீட்டிருக்கிறார்.[d]

צ [*சாதே*]

தன்னுடைய ஒப்பந்தம் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென்று கட்டளை கொடுத்திருக்கிறார்.

ק [*கோஃப்*]

அவருடைய பெயர் பரிசுத்தமானது, பயபக்திக்குரியது.[e]

ר [*ரேஷ்*]

10 யெகோவாவுக்குப் பயப்படுவதுதான் ஞானத்தைப் பெறுவதற்கான முதல் படி.[f]

ש [*ஸீன்*]

அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கிற எல்லாரும் மிகுந்த விவேகத்தோடு* நடக்கிறார்கள்.[g]

ת [*ட்டா*]

அவருடைய புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.

112

“யா”வைப் புகழுங்கள்!*[h]

א [*ஆலெஃப்*]

யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவன் சந்தோஷமானவன்.[i]

ב [*பேத்*]

அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாக இருக்கிறவன் சந்தோஷமானவன்.[j]

ג [*கீமெல்*]

2 அவனுடைய வாரிசுகள் இந்த உலகத்தில் பலம்படைத்தவர்களாக இருப்பார்கள்.

ד [*டாலத்*]

நேர்மையானவனின் வம்சம்* ஆசீர்வதிக்கப்படும்.[k]

ה [*ஹே*]

3 அவனுடைய வீட்டில் பணமும் பொருளும் குவிந்திருக்கும்.

ו [*வா*]

அவனுடைய நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்.

111:10 *வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதலோடு.” **112:1** *வே.வா., “அல்லேலூயா!” “யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **112:2** *வே.வா., “நேர்மையானவர்களின் தலைமுறை.”

அதி. 111
a உபா 32:4
b சங் 19:8; ஏசா 55:10, 11
c சங் 19:9
d யாத் 15:13; லூ 1:68; வெளி 7:10
e சங் 89:7; ஏசா 6:2, 3; லூ 1:49; வெளி 4:8
f யோபு 28:28; நீதி 1:7; பிர 12:13
g உபா 4:6; யோசு 1:7, 8; 1ரா 2:3; சங் 119:100; 2தீ 3:14, 15

அதி. 112
h யாத் 15:2; வெளி 19:1
i சங் 111:10
j சங் 1:1, 2; சங் 40:8
k சங் 25:12, 13; சங் 37:25, 26

ז [ஸாயின்]

4 நேர்மையான ஆட்களுக்கு, இருட்டில் பிரகாசிக்கும் ஒளியைப் போல அவன் இருக்கிறான்.[a]

ח [ஹேத்]

கரிசனையாகவும்* இரக்கமாகவும்[b] நீதியாகவும் நடந்துகொள்கிறான்.

ט [டேத்]

5 தாராளமாக* கடன் கொடுக்கிறவனுக்கு எந்தக் குறையும் வராது.[c]

י [யோத்]

அவன் எல்லாவற்றையுமே நியாயமாகச் செய்கிறான்.

כ [காஃப்]

6 அவன் அசைக்கப்படவே மாட்டான்.[d]

ל [லாமெத்]

நீதிமான் என்றென்றும் நினைவில் வைக்கப்படுவான்.[e]

מ [மேம்]

7 கெட்ட செய்தியைக் கேட்டு அவன் பயப்பட மாட்டான்.[f]

נ [நூன்]

அவனுடைய உள்ளம் உறுதியாக இருக்கிறது, யெகோவாமேல் நம்பிக்கையாக இருக்கிறது.[g]

ס [சாமெக்]

8 அவனுடைய நெஞ்சம் நிலைதடுமாறாது;* அவன் எதற்கும் பயப்பட மாட்டான்.[h]

ע [ஆயின்]

கடைசியில், எதிரிகளை வெற்றிப் பெருமிதத்தோடு பார்ப்பான்.[i]

פ [பே]

9 அவன் வாரி வழங்கியிருக்கிறான், ஏழைகளுக்குக் கொடுத்திருக்கிறான்.[j]

צ [சாதே]

அவனுடைய நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்.[k]

ק [கோஃப்]

அவனுடைய பலத்தின் மகிமை கூடிக்கொண்டே போகும்.

ר [ரேஷ்]

10 பொல்லாதவன் அதைப் பார்த்து எரிச்சலடைவான்.

ש [ஷீன்]

பற்களை நறநறவென்று கடித்து, கடைசியில் மறைந்துபோவான்.

ת [ட்டா]

பொல்லாதவர்களுடைய ஆசைகள் அழிந்துபோகும்.[l]

113 “யா”வைப் புகழுங்கள்!*
யெகோவாவின் ஊழியர்களே, அவரைப் புகழுங்கள்.
யெகோவாவின் பெயரைப் புகழுங்கள்.

112:4 *வே.வா., “கனிவாகவும்.” **112:5** *வே.வா., “கனிவாக.” **112:8** *வே.வா., “திடமாக இருக்கும்; உறுதியாக இருக்கும்.” **113:1** *வே.வா., “அல்லேலூயா!” “யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 112

a சங் 97:11; 1பே 2:9
b லூ 6:36; எபே 4:32
c உபா 15:7, 8; சங் 41:1; நீதி 19:17; லூ 6:34, 35; அப் 20:35; எபி 13:16
d சங் 15:5; சங் 125:1
e நெ 5:19; நீதி 10:7
f சங் 27:1; நீதி 3:25
g சங் 62:8; ஏசா 26:3
h நீதி 28:1
i சங் 59:10
j உபா 15:11; நீதி 11:24; நீதி 19:17
k உபா 24:12, 13; 2கொ 9:9; எபி 6:10
l நீதி 11:7

2 யெகோவாவின் பெயர் புகழப்படட்டும்.[a]
இன்றும் என்றும் புகழப்படட்டும்.
3 சூரியன் உதிக்கிற திசையிலிருந்து மறைகிற திசைவரை
யெகோவாவின் பெயர் புகழப்படட்டும்.[b]
4 எல்லா தேசங்களுக்கும் மேலாக யெகோவா உயர்ந்திருக்கிறார்.[c]
அவருடைய மகிமை வானங்களுக்கும் மேலாக உயர்ந்திருக்கிறது.[d]
5 நம் கடவுளாகிய யெகோவாவைப் போல யார் இருக்கிறார்கள்?[e]
அவர் உயர்ந்த இடத்தில் குடிகொண்டிருக்கிறார்.*
6 அவர் வானத்தையும் பூமியையும் குனிந்து பார்க்கிறார்.*[f]
7 எளியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்.
ஏழையைச் சாம்பல் குவியலிலிருந்து* உயர்த்துகிறார்.[g]
8 அவனை அதிபதிகளோடு உட்கார வைக்கிறார்.
தன்னுடைய மக்களின் அதிபதிகளோடு உட்கார வைக்கிறார்.
9 குழந்தையில்லாத பெண்ணுக்குக் குழந்தை பாக்கியத்தைத்
தருகிறார்.
வீட்டில் குழந்தைகுட்டிகளோடு அவளைச் சந்தோஷமாக வாழ
வைக்கிறார்.[h]
"யா"வைப் புகழுங்கள்!*

114

இஸ்ரவேலர்கள் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபோது,[i]
யாக்கோபின் வம்சத்தார் வேறு மொழி பேசுகிற
மக்களைவிட்டுப் புறப்பட்டபோது,
2 யூதா, கடவுளுடைய பரிசுத்த இடமாக ஆனது.
இஸ்ரவேல் அவருடைய ராஜ்யமாக ஆனது.[j]
3 கடல் அதைப் பார்த்து விலகி ஓடியது.[k]
யோர்தான் திரும்பி ஓடியது.[l]
4 மலைகள் செம்மறியாட்டுக் கடாக்களைப் போலத் துள்ளின.[m]
குன்றுகள் செம்மறியாட்டுக் குட்டிகளைப் போலத் துள்ளின.
5 கடலே, நீ ஏன் விலகி ஓடினாய்?[n]
யோர்தானே, நீ ஏன் திரும்பிப்போனாய்?[o]
6 மலைகளே, நீங்கள் ஏன் செம்மறியாட்டுக் கடாக்களைப் போலத்
துள்ளினீர்கள்?
குன்றுகளே, நீங்கள் ஏன் செம்மறியாட்டுக் குட்டிகளைப் போலத்
துள்ளினீர்கள்?
7 பூமியே, எஜமானுக்கு முன்னால் நடுநடுங்கு.
யாக்கோபின் கடவுளுக்கு முன்னால் நடுநடுங்கு.[p]
8 பாறையை நாணற்புல் நிறைந்த குளமாக அவர் மாற்றுகிறார்.
கற்பாறையை நீரூற்றுகளாக மாற்றுகிறார்.[q]

113:5 *வே.வா., "வீற்றிருக்கிறார்." **113:6** *வே.வா., "வானத்தையும் பூமியையும் பார்ப்பதற்காகத் தன்னையே தாழ்த்துகிறார்." **113:7** *அல்லது, "குப்பை மேட்டிலிருந்து." **113:9** *வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 113
a 1நா 16:36, 1நா 29:10, சங் 106:48
b சங் 72:19, சங் 86:9, ஏசா 59:19, மல் 1:11
c சங் 97:9, சங் 99:2
d 1ரா 8:27
e யாத் 15:11
f சங் 18:35, சங் 138:6, ஏசா 57:15, ஏசா 66:2
g 1சா 2:7
h 1சா 2:5, ஏசா 54:1

அதி. 114
i யாத் 12:41
j யாத் 6:7, யாத் 19:6, உபா 32:9
k யாத் 14:21
l யோசு 3:16
m யாத் 19:18, நியா 5:4
n யாத் 15:8
o யோசு 4:23
p 1நா 16:29, 30
q யாத் 17:6, எண் 20:11, உபா 8:14, 15, சங் 107:35

அதி. 115
a ஏசா 48:11 யோவா 12:28
b சங் 138:2
c யாத் 32:12 எண் 14:15, 16 உபா 32: 26, 27 சங் 79:10
d சங் 135:15-18 ஏசா 40:19 ஏசா 46:6 எரே 10:3, 4 எரே 10:8, 9 அப் 19:26 1கொ 10:19
e ஆப 2:19
f 1சா 5:3 ஏசா 46:7
g ஆப 2:18
h சங் 97:7
i ஏசா 44:9
j நீதி 3:5
k உபா 33:29 சங் 33:20
l யாத் 28:1
m நீதி 16:20
n சங் 84:11
o ஆதி 12:2
p ஆதி 13:16
q சங் 3:8
r சங் 96:5
s ஏசா 66:1
t ஆதி 1:28 சங் 37:29 ஏசா 45:18 அப் 17:26

115 எங்களுக்கு அல்ல, யெகோவாவே, எங்களுக்கு அல்ல,*
உங்களுடைய பெயருக்கே மகிமை சேரும்படி செய்யுங்கள்.[a]
ஏனென்றால், நீங்கள்தான் மாறாத அன்புள்ளவர், உண்மையுள்ளவர்.[b]
2 "அவர்களுடைய கடவுள் எங்கே போய்விட்டார்?" என்று
மற்ற தேசத்து மக்கள் ஏன் கேட்க வேண்டும்?[c]
3 நம்முடைய கடவுள் பரலோகத்தில் இருக்கிறார்.
எல்லாவற்றையும் தன்னுடைய விருப்பப்படியே செய்கிறார்.
4 அவர்கள் வணங்குகிற சிலைகள் வெறும் வெள்ளியும் தங்கமும்தான்.
மனிதர்களுடைய கைகளால் செய்யப்பட்டவைதான்.[d]
5 அவற்றுக்கு வாய் இருக்கிறது, ஆனால் பேச முடியாது.[e]
கண்கள் இருக்கின்றன, ஆனால் பார்க்க முடியாது.
6 காதுகள் இருக்கின்றன, ஆனால் கேட்க முடியாது.
மூக்கு இருக்கிறது, ஆனால் முகர முடியாது.
7 கைகள் இருக்கின்றன, ஆனால் தொட்டு உணர முடியாது.
கால்கள் இருக்கின்றன, ஆனால் நடக்க முடியாது.[f]
அவற்றின் தொண்டையிலிருந்து எந்தச் சத்தமும் வராது.[g]
8 அவற்றைச் செய்கிற ஆட்களும் அவற்றை நம்புகிற எல்லாரும்[h]
அவற்றைப் போலத்தான் ஆவார்கள்.[i]
9 இஸ்ரவேலர்களே, யெகோவாமேல் நம்பிக்கை வையுங்கள்.[j]
அவரே உங்கள் துணை, அவரே உங்கள் கேடயம்.[k]
10 ஆரோன் வம்சத்தாரே,[l] யெகோவாவை நம்புங்கள்.
அவரே உங்கள் துணை, அவரே உங்கள் கேடயம்.
11 யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவர்களே, யெகோவாவை நம்புங்கள்.[m]
அவரே உங்கள் துணை, அவரே உங்கள் கேடயம்.[n]
12 யெகோவா நம்மை ஞாபகத்தில் வைத்திருக்கிறார், அவர் நம்மை ஆசீர்வதிப்பார்.
இஸ்ரவேல் வம்சத்தாரை அவர் ஆசீர்வதிப்பார்.[o]
ஆரோன் வம்சத்தாரை அவர் ஆசீர்வதிப்பார்.
13 யெகோவா தனக்குப் பயந்து நடக்கிற எல்லாரையும் ஆசீர்வதிப்பார்.
சிறியோர்முதல் பெரியோர்வரை எல்லாரையும் ஆசீர்வதிப்பார்.
14 யெகோவா உங்களைப் பெருக வைப்பார்.
உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் பெருக வைப்பார்.[p]
15 யெகோவா உங்களை ஆசீர்வதிக்கட்டும்.[q]
அவரே வானத்தையும் பூமியையும் படைத்தவர்.[r]
16 வானம்* யெகோவாவுக்குச் சொந்தம்.[s]
ஆனால், இந்தப் பூமியை மனிதர்களுக்குக் கொடுத்திருக்கிறார்.[t]

115:1 *வே.வா., "எங்களுக்குத் தகுதியில்லை, யெகோவாவே, எங்களுக்கு எந்தத் தகுதியுமில்லை." **115:16** *வே.வா., "பரலோகம்."

17 இறந்தவர்கள் "யா"வை* புகழ்வதில்லை.[a]
மவுனமான இடத்துக்கு# இறங்குகிறவர்கள் அவரைப் புகழ்வதில்லை.[b]
18 ஆனால், நாங்கள் இன்றும் என்றும்
"யா"வைப் புகழ்வோம்.
"யா"வைப் புகழுங்கள்!*

116 நான் யெகோவாமேல் அன்பு வைத்திருக்கிறேன்.
ஏனென்றால், அவர் என் குரலைக் கேட்கிறார்,* உதவிக்காக நான் கெஞ்சுவதைக் கேட்கிறார்.[c]
2 நான் சொல்வதைக் காதுகொடுத்து* கேட்கிறார்.[d]
நான் உயிரோடு இருக்கும் காலமெல்லாம் அவரை நோக்கி வேண்டுவேன்.
3 மரணக் கயிறுகள் என்னைச் சுற்றிக்கொண்டன.
கல்லறையின் பிடியில் சிக்கிக்கொண்டேன்.[e]
துன்பத்திலும் துயரத்திலும் மூழ்கிப்போனேன்.[f]
4 அப்போது, நான் யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டினேன்.[g]
"யெகோவாவே, என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று கதறினேன்.
5 யெகோவா கரிசனையுள்ளவர்,* நீதியுள்ளவர்.[h]
நம் கடவுள் இரக்கமுள்ளவர்.[i]
6 அனுபவம் இல்லாதவர்களை யெகோவா காக்கிறார்.[j]
நான் துவண்டுபோனேன், அவர் என்னைக் காப்பாற்றினார்.
7 யெகோவா எனக்கு அன்போடு உதவினார்.
அதனால், நான் மறுபடியும் நிம்மதியாக இருப்பேன்.
8 கடவுளே, நீங்கள் என்னை மரணத்திலிருந்து காப்பாற்றினீர்கள்.
என் கண்கள் கலங்காதபடியும்,
என் கால்கள் தடுமாறாதபடியும் பார்த்துக்கொண்டீர்கள்.[k]
9 இந்த உலகத்தில் நான் தொடர்ந்து யெகோவாவுக்கு முன்பாக நடப்பேன்.
10 நான் விசுவாசம் வைத்தேன், அதனால் பேசினேன்.[l]
நான் பயங்கர கஷ்டத்தில் தவித்தேன்.
11 நான் பதறிப்போய்,
"மனிதர்கள் எல்லாருமே பொய்யர்கள்"[m] என்று சொன்னேன்.
12 யெகோவா எனக்குச் செய்திருக்கிற எல்லா நன்மைகளுக்காகவும்
நான் அவருக்கு என்ன கைமாறு செய்வேன்?
13 மீட்பு* என்ற கிண்ணத்தை எடுத்துக்கொள்வேன்.
யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்வேன்.
14 யெகோவாவிடம் நேர்ந்துகொண்டதையெல்லாம்
அவருடைய மக்கள் எல்லாருக்கும் முன்பாக நிறைவேற்றுவேன்.[n]

115:17 * "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். # வே.வா, "சவக்குழிக்குள்." **115:18** * வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **116:1** * அல்லது, "யெகோவா என் குரலைக் கேட்பதால் எனக்குள் அன்பு பொங்குகிறது." **116:2** * வே.வா., "குனிந்து." **116:5** * வே.வா., "கனிவுள்ளவர்." **116:13** * வே.வா., "மாபெரும் மீட்பு."

அதி. 115
a சங் 6:5
பிர 9:5
b சங் 31:17

அதி. 116
c சங் 18:6
d சங் 34:15
e ஏசா 38:10
f சங் 18:4
சங் 38:6
g சங் 34:6
ரோ 10:13
h உபா 32:4
i யாத் 34:6
நெ 9:17
தானி 9:9
j சங் 19:7
k சங் 56:13
சங் 94:18
l 2கொ 4:13
m ரோ 3:4
n சங் 22:25
யோனா 2:9

15 யெகோவா தனக்கு உண்மையாக* இருப்பவர்களின் மரணத்தை
பெரிய இழப்பாக# நினைக்கிறார்.[a]
16 யெகோவாவே, நான் உங்கள் ஊழியன்.
அதனால் உங்களிடம் கெஞ்சிக் கேட்கிறேன்.
நான் உங்கள் ஊழியன், உங்களுடைய அடிமைப்பெண்ணின் மகன்.
என்னுடைய கட்டுகளிலிருந்து என்னை விடுவித்தீர்கள்.[b]
17 நான் உங்களுக்கு நன்றிப் பலியைச் செலுத்துவேன்.[c]
யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்வேன்.
18 யெகோவாவிடம் நேர்ந்துகொண்டதையெல்லாம்
அவருடைய மக்கள் எல்லாருக்கும் முன்பாக நிறைவேற்றுவேன்.[d]
19 யெகோவாவின் ஆலயப் பிரகாரங்களிலே,[e]
எருசலேமின் நடுவிலே அவற்றை நிறைவேற்றுவேன்.
"யா"வைப் புகழுங்கள்!*[f]

117 தேசங்களே, எல்லாரும் யெகோவாவைப் புகழுங்கள்.[g]
ஜனங்களே, எல்லாரும் அவரை மகிமைப்படுத்துங்கள்.[h]
2 ஏனென்றால், அவர் நமக்குக் காட்டுகிற மாறாத அன்பு மகத்தானது.[i]
யெகோவா என்றென்றும் உண்மையோடு நடந்துகொள்கிறார்.[j]
"யா"வைப் புகழுங்கள்!*[k]

118 யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள், அவர் நல்லவர்.[l]
அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
2 "அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்"
என்று இஸ்ரவேல் மக்கள் சொல்லட்டும்.
3 "அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்"
என்று ஆரோனின் வம்சத்தார் சொல்லட்டும்.
4 "அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்"
என்று யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவர்கள் சொல்லட்டும்.
5 நான் வேதனையில் தவித்தபோது, "யா"வை* நோக்கிக் கூப்பிட்டேன்.
"யா" என் குரலைக் கேட்டு, என்னைப் பாதுகாப்பான# இடத்துக்குக்
கூட்டிக்கொண்டு வந்தார்.[m]
6 யெகோவா என் பக்கத்தில் இருக்கிறார், நான் பயப்பட மாட்டேன்.[n]
மனிதனால் என்னை என்ன செய்ய முடியும்?[o]
7 யெகோவா என் பக்கத்திலேயே எனக்குத் துணையாக இருக்கிறார்.*[p]
என்னை வெறுக்கிறவர்களை நான் வெற்றிப் பெருமிதத்தோடு
பார்ப்பேன்.[q]
8 மனிதர்களை நம்புவதைவிட
யெகோவாவிடம் தஞ்சம் அடைவதே நல்லது.[r]
9 தலைவர்களை நம்புவதைவிட

116:15 *வே.வா., "பற்றுமாறாமல்." #நே.மொ., "மதிப்புள்ளதாக." **116:19; 117:2** *வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **118:5** *"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். #வே.வா., "விசாலமான." **118:7** *அல்லது, "எனக்கு உதவி செய்கிறவர்களோடு இருக்கிறார்."

அதி. 116
a 1சா 25:29, யோபு 1:12, சங் 91:14, சக 2:8, 2பே 2:9
b சங் 107:14
c லேவி 7:12, சங் 50:23
d சங் 22:25, சங் 76:11, சங் 116:14
e சங் 96:8
f வெளி 19:1

அதி. 117
g வெளி 7:9, 10
h ரோ 15:11
i புல 3:22
j சங் 25:10, சங் 91:4, சங் 100:5
k சங் 111:1

அதி. 118
l மத் 19:17
m சங் 18:19
n சங் 27:1
o ஏசா 51:12, ரோ 8:31, எபி 13:6
p மத் 26:52, 53
q சங் 54:7
r சங் 40:4, சங் 146:3, 4, எரே 17:5

யெகோவாவிடம் தஞ்சம் அடைவதே நல்லது.[a]
10 எல்லா தேசத்து மக்களும் என்னைச் சுற்றிவளைத்தார்கள்.
ஆனால், யெகோவாவின் பெயரால் அவர்களை விரட்டியடித்தேன்.[b]
11 அவர்கள் என்னைச் சுற்றிவளைத்தார்கள், தப்பிக்க முடியாதபடி
சுற்றிவளைத்தார்கள்.
ஆனால், யெகோவாவின் பெயரில்
அவர்களை விரட்டியடித்தேன்.
12 தேனீக்கள்போல் அவர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்.
ஆனால், முட்செடியில் பற்றிய நெருப்புபோல் சட்டென்று
அணைந்துபோனார்கள்.
யெகோவாவின் பெயரில்
அவர்களை விரட்டியடித்தேன்.[c]
13 என்னை விழ வைப்பதற்காக பலமாய்த் தள்ளினார்கள்.*
ஆனால், யெகோவா எனக்கு உதவி செய்தார்.
14 "யா"* என் அடைக்கலம், என் பலம்.
அவர் என் மீட்பரானார்.[d]
15 சந்தோஷ சத்தமும் வெற்றி* முழக்கமும்
நீதிமான்களின் கூடாரங்களில் கேட்கிறது.
யெகோவாவின் வலது கை அவருடைய வல்லமையை
வெளிக்காட்டுகிறது.[e]
16 யெகோவாவின் வலது கை உயர்ந்தோங்கியிருக்கிறது.
யெகோவாவின் வலது கை அவருடைய வல்லமையை
வெளிக்காட்டுகிறது.[f]
17 நான் சாக மாட்டேன்.
"யா"வின்* செயல்களை அறிவிப்பதற்காக வாழ்வேன்.[g]
18 "யா"* என்னைக் கடுமையாகக் கண்டித்தார்.[h]
ஆனால், நான் சாகும்படி அவர் விடவில்லை.[i]
19 நீதியின் கதவுகளை எனக்குத் திறந்துவிடுங்கள்,[j]
நான் உள்ளே போய், "யா"வை* புகழ்வேன்.
20 இது யெகோவாவின் கதவு.
நீதிமான்கள் அதன் வழியாகப் போவார்கள்.[k]
21 கடவுளே, நீங்கள் எனக்குப் பதில் தந்து, என் மீட்பராக இருந்தீர்கள்.
அதனால், நான் உங்களைப் புகழ்வேன்.[l]
22 கட்டிடம் கட்டுகிறவர்கள் ஒதுக்கித்தள்ளிய கல்லே
மூலைக்குத் தலைக்கல்லாக ஆனது.[m]
23 இது யெகோவாவின் செயல்.[n]
இது நம்முடைய கண்களுக்கு அருமையாக இருக்கிறது.[o]
24 இது யெகோவா வர வைத்திருக்கும் நாள்.
இந்த நாளில் நாம் சந்தோஷத்தில் பூரித்துப்போவோம்.

118:13 *அல்லது, "தள்ளினீர்கள்." **118:14, 17-19** *"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **118:15** *வே.வா., "மீட்பின்."

அதி. 118
a எசே 29:6, 7
b 2நா 20:15, 17
c 2நா 14:11
d யாத் 15:2; சங் 18:2; ஏசா 12:2
e சங் 89:13; ஏசா 63:12
f யாத் 15:6; ஏசா 40:26
g சங் 6:5; சங் 71:17
h சங் 66:10; சங் 94:12
i சங் 16:10
j ஏசா 26:2; வெளி 22:14
k சங் 24:3, 4
l சங் 116:1
m ஏசா 28:16; லூ 20:17; அப் 4:11; 1கொ 3:11; எபே 2:19, 20; 1பே 2:4-7
n அப் 5:31
o மாற் 12:10, 11

25 யெகோவாவே, தயவுசெய்து எங்களைக் காப்பாற்றுங்கள், உங்களிடம் கெஞ்சிக் கேட்கிறோம்.
யெகோவாவே, தயவுசெய்து எங்களுக்கு வெற்றி கொடுங்கள்!
26 யெகோவாவின் பெயரில் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்.[a]
நாங்கள் யெகோவாவின் ஆலயத்திலிருந்து உங்கள் எல்லாரையும் ஆசீர்வதிக்கிறோம்.
27 யெகோவாதான் கடவுள்.
அவர் நமக்கு வெளிச்சம் தருகிறார்.[b]
கையில் கிளைகளைப் பிடித்துக்கொண்டு பண்டிகை ஊர்வலத்தில் கலந்துகொள்ளுங்கள்.[c]
பலிபீடத்தின் கொம்புகள்வரை[d] போங்கள்.
28 என் கடவுளே, நான் உங்களை மெச்சிப் பேசுவேன்.
நீங்கள்தான் என் கடவுள், நான் உங்களைப் புகழ்வேன்.[e]
29 யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள்,[f] அவர் நல்லவர்.
அவர் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.[g]

א [*ஆலெஃப்*]

119 குற்றமற்றவர்களாக வாழ்கிறவர்கள்* சந்தோஷமானவர்கள்.
யெகோவாவுடைய சட்டத்தின்படி நடக்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[h]
2 அவருடைய நினைப்பூட்டுதல்களின்படி நடக்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[i]
அவரை முழு இதயத்தோடு தேடுகிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[j]
3 அவர்கள் அநீதி செய்வதே இல்லை.
அவர்கள் அவருடைய வழிகளில் நடக்கிறார்கள்.[k]
4 கடவுளே, உங்கள் ஆணைகளைக் கவனமாகக் கடைப்பிடிக்கச் சொல்லியிருக்கிறீர்கள்.[l]
5 நான் எப்போதும் சரியான வழியில் நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்![m]
உங்களுடைய விதிமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் எவ்வளவு அருமையாக இருக்கும்!
6 உங்கள் கட்டளைகளுக்கெல்லாம் நான் கவனம் செலுத்தும்போது,
எனக்கு எந்த அவமானமும் வராது.[n]
7 உங்களுடைய நீதியான தீர்ப்புகளைப் பற்றித் தெரிந்துகொள்ளும்போது,
நேர்மையான உள்ளத்தோடு உங்களைப் புகழ்வேன்.
8 உங்கள் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பேன்.
என்னை ஒருபோதும் கைவிட்டு விடாதீர்கள்.

ב [*பேத்*]

9 இளைஞர்கள் எப்படிச் சுத்தமான வாழ்க்கை வாழ முடியும்?
எப்போதும் உங்கள் வார்த்தையின்படி நடக்க ஜாக்கிரதையாக இருப்பதன் மூலமே.[o]

119:1 *வே.வா., "தங்கள் வழியில் உத்தமமாக நடக்கிறவர்கள்."

அதி. 118
a மத் 21:7-9
மத் 23:39
மாற் 11:7-10
லூ 19:37, 38
b சங் 18:28
1பே 2:9
c லேவி 23:34
சங் 42:4
d யாத் 27:2
e யாத் 15:2
ஏசா 25:1
f சங் 50:23
g எஸ்றா 3:11
சங் 118:1

அதி. 119
h 2ரா 20:3
யாக் 1:25
i சங் 19:7
j 2நா 31:20, 21
k ஏசா 38:3
l உபா 5:33
எரே 7:23
யாக் 2:10
m சங் 51:10
n சங் 119:80
o நீதி 6:20, 22

10 நான் உங்களை முழு இதயத்தோடு தேடுகிறேன்.
நான் உங்களுடைய கட்டளைகளைவிட்டு விலகாதபடி
பார்த்துக்கொள்ளுங்கள்.[a]
11 நான் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்யாதபடி,[b]
உங்கள் வார்த்தையை என் இதயத்தில் பொக்கிஷம்போல்
வைத்திருக்கிறேன்.[c]
12 யெகோவாவே, உங்களுக்குப் புகழ் சேரட்டும்.
உங்கள் விதிமுறைகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.
13 நீங்கள் கொடுத்த எல்லா நீதித்தீர்ப்புகளையும்
என் வாயால் அறிவிக்கிறேன்.
14 விலைமதிப்புள்ள எந்தப் பொருளையும்விட[d]
உங்களுடைய நினைப்பூட்டுதல்கள்தான் எனக்கு அதிக
சந்தோஷத்தைத் தருகின்றன.[e]
15 உங்கள் ஆணைகளைப் பற்றி ஆழமாக யோசித்துப் பார்ப்பேன்.*[f]
உங்கள் வழிகளின் மேல் என் கண்களை வைத்திருப்பேன்.[g]
16 உங்களுடைய சட்டதிட்டங்களை நான் மிகவும் விரும்புகிறேன்.
உங்களுடைய வார்த்தையை மறக்கவே மாட்டேன்.[h]

ג [*கீமெல்*]

17 நான் உயிரோடிருந்து, உங்களுடைய வார்த்தையைக்
கடைப்பிடிக்கும்படி,
உங்கள் ஊழியனுக்கு அன்பாக உதவுங்கள்.[i]
18 உங்கள் சட்டத்திலுள்ள அருமையான விஷயங்களைத் தெளிவாகப்
பார்க்கும்படி
என் கண்களைத் திறந்திடுங்கள்.
19 நான் ஒரு அன்னியனாக வாழ்கிறேன்.[j]
உங்களுடைய கட்டளைகளை எனக்கு மறைக்காதீர்கள்.
20 உங்கள் நீதித்தீர்ப்புகளுக்காக
எப்போதும் ஏங்கித் தவிக்கிறேன்.
21 அகங்காரம்பிடித்த* ஆட்களை நீங்கள் கண்டிக்கிறீர்கள்.
உங்கள் கட்டளைகளைவிட்டு விலகி, சபிக்கப்பட்ட நிலையில்
இருப்பவர்களைக் கண்டிக்கிறீர்கள்.[k]
22 உங்கள் நினைப்பூட்டுதல்களின்படி நான் நடந்திருக்கிறேன்.
அதனால், என்னை ஏளனமாகவும் கேவலமாகவும் நடத்த யாரையும்
விடாதீர்கள்.
23 தலைவர்கள் ஒன்றுகூடி எனக்கு எதிராகப் பேசினால்கூட,
அடியேன் உங்கள் விதிமுறைகளைப் பற்றித்தான் ஆழமாக
யோசிக்கிறேன்.*

119:15 *வே.வா., "படிப்பேன்." **119:21** *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. **119:23** *வே.வா., "படிக்கிறேன்."

அதி. 119
a சங் 25:5
b சங் 19:13; சங் 37:31
c சங் 112:1
d சங் 19:8, 10; சங் 119:72
e எரே 15:16
f சங் 119:93; சங் 119:100
g சங் 25:10
h யாக் 1:23-25
i ஏசா 38:20
j 1நா 29:15
k உபா 28:15

24 உங்கள் நினைப்பூட்டுதல்களை நான் மிகவும் விரும்புகிறேன்.[a]
அவை எனக்கு ஆலோசகர்கள்போல் இருக்கின்றன.[b]

ד [*டாலத்*]

25 நான் மண்ணில் அப்படியே விழுந்து கிடக்கிறேன்.[c]
நீங்கள் வாக்குக் கொடுத்தபடியே என் உயிரைக் காப்பாற்றுங்கள்.[d]
26 என்னுடைய வழிகளைப் பற்றியெல்லாம் உங்களிடம் சொன்னேன், நீங்கள் எனக்கு வழிகாட்டினீர்கள்.
உங்கள் விதிமுறைகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[e]
27 உங்கள் ஆணைகளின் அர்த்தத்தை எனக்குப் புரிய வையுங்கள்.
அப்போது, உங்களுடைய அற்புதமான செயல்களைப் பற்றி ஆழமாக யோசிப்பேன்.*[f]
28 துக்கத்தில் தூக்கம் வராமல் தவிக்கிறேன்.
நீங்கள் வாக்குக் கொடுத்தபடியே என்னைப் பலப்படுத்துங்கள்.
29 போலியான வாழ்க்கை வாழாதபடி எனக்கு உதவுங்கள்.[g]
கருணையோடு உங்கள் சட்டத்தைக் கற்றுக்கொடுங்கள்.
30 உண்மையோடு நடக்க நான் முடிவு செய்திருக்கிறேன்.[h]
உங்களுடைய நீதித்தீர்ப்புகள் சரியானவை என்பதை உணர்ந்திருக்கிறேன்.
31 உங்கள் நினைப்பூட்டுதல்களை உறுதியாகப் பிடித்திருக்கிறேன்.[i]
யெகோவாவே, எனக்கு ஏமாற்றத்தை தந்துவிடாதீர்கள்.*[j]
32 நான் உங்களுடைய கட்டளைகளுக்கு ஆர்வத்தோடு கீழ்ப்படிவேன்.*
ஏனென்றால், அவற்றை நன்றாகப் புரிந்துகொள்வதற்கு என் இதயத்தைத் திறக்கிறீர்கள்.#

ה [*ஹே*]

33 யெகோவாவே, உங்கள் விதிமுறைகளின்படி நடக்க எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[k]
நான் கடைசிவரை அவற்றைக் கடைப்பிடிப்பேன்.[l]
34 எனக்குப் புரிந்துகொள்ளும் திறனைக் கொடுங்கள்.
அப்போது, உங்களுடைய சட்டத்தைக் கடைப்பிடிப்பேன்,
அதற்கு முழு இதயத்தோடு கீழ்ப்படிவேன்.
35 உங்கள் கட்டளைகளின்படி நடக்க எனக்கு வழிகாட்டுங்கள்.[m]
நான் அவற்றில் பிரியமாக இருக்கிறேன்.
36 என் இதயம் என்னுடைய ஆதாயத்தைப் பற்றி யோசிக்காமல்,[n]
உங்கள் நினைப்பூட்டுதல்களைப் பற்றியே யோசிக்கும்படி செய்யுங்கள்.
37 வீணான காரியங்களைப் பார்க்காதபடி என் கண்களைத் திருப்புங்கள்.[o]
நான் உயிர் பிழைக்கும்படி உங்கள் வழியில் நடத்துங்கள்.

119:27 *வே.வா., "படிப்பேன்." **119:31** *வே.வா., "நான் வெட்கப்பட்டுப்போக விட்டுவிடாதீர்கள்." **119:32** *நே.மொ., "கட்டளைகளின் வழியில் ஓடுவேன்." #அல்லது, "ஏனென்றால், என் இதயத்துக்கு நம்பிக்கை தருகிறீர்கள்."

அதி. 119
a சங் 119:14; சங் 119:168
b உபா 17:18-20; சங் 119:105; 2தீ 3:16, 17
c சங் 22:15
d சங் 119:154; சங் 143:11
e சங் 86:11
f சங் 145:5
g சங் 141:4; நீதி 30:8
h யோசு 24:15
i சங் 19:7
j சங் 25:20; சங் 119:80
k ஏசா 48:17; யோவா 6:45; யாக் 1:5
l சங் 119:112
m சங் 23:3
n லூ 12:15; 1தீ 6:10; எபி 13:5
o எண் 15:39; நீதி 4:25; நீதி 23:4, 5

38 உங்கள்மேல் பயபக்தி உண்டாகும்படி,
அடியேனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்.*
39 எந்த அவமானத்தை நினைத்துப் பயப்படுகிறேனோ அதை நீக்கிவிடுங்கள்.
ஏனென்றால், உங்கள் நீதித்தீர்ப்புகள் நல்லவை.[a]
40 உங்களுடைய ஆணைகளுக்காக நான் எவ்வளவு ஏங்குகிறேன் என்று பாருங்கள்.
உங்களுடைய நீதியால் என் உயிரைக் காப்பாற்றுங்கள்.

ו [*வா*]

41 யெகோவாவே, நீங்கள் வாக்குக் கொடுத்தபடியே,
மாறாத அன்பைக் காட்டி,[b] என்னை மீட்டுக்கொள்ளுங்கள்.[c]
42 அப்போது, என்னை நோகடிக்கிறவனுக்குப் பதிலடி கொடுப்பேன்.
ஏனென்றால், உங்கள் வார்த்தையில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.
43 சத்திய வார்த்தையை என் வாயிலிருந்து ஒரேயடியாக எடுத்துவிடாதீர்கள்.
ஏனென்றால், உங்கள் நீதித்தீர்ப்புகளையே நான் நம்பியிருக்கிறேன்.*
44 எப்போதும் உங்களுடைய சட்டத்தைக் கடைப்பிடிப்பேன்.
என்றென்றும் அதன்படி நடப்பேன்.[d]
45 நான் பாதுகாப்பான* இடத்தில் நடந்து திரிவேன்.[e]
ஏனென்றால், உங்களுடைய ஆணைகளை ஆர்வமாகத் தேடுகிறேன்.
46 உங்கள் நினைப்பூட்டுதல்களைப் பற்றி ராஜாக்களுக்கு முன்னால் பேசுவேன்.
அதற்காக வெட்கப்பட மாட்டேன்.[f]
47 உங்களுடைய கட்டளைகளை நான் மிகவும் விரும்புகிறேன்.
அவற்றை நேசிக்கிறேன்.[g]
48 உங்கள் கட்டளைகளை நேசிப்பதால்[h] என் கைகளை உயர்த்தி உங்களிடம் வேண்டுவேன்.
உங்களுடைய விதிமுறைகளைப் பற்றி ஆழமாக யோசிப்பேன்.*[i]

ז [*ஸாயின்*]

49 அடியேனுக்குச் சொன்ன வார்த்தையை* நினைத்துப் பாருங்கள்.
அதன் மூலம் நீங்கள் எனக்கு நம்பிக்கை கொடுக்கிறீர்கள்.#
50 நான் கஷ்டப்படும்போது அதுதான் எனக்கு ஆறுதல் தருகிறது.[j]
உங்கள் வார்த்தை என்னை உயிரோடு காப்பாற்றியிருக்கிறது.
51 அகங்காரம் பிடித்தவர்கள் என்னைப் பயங்கரமாக ஏளனம் செய்கிறார்கள்.
ஆனாலும், நான் உங்கள் சட்டத்தைவிட்டு விலகுவதில்லை.[k]

119:38 *அல்லது, "உங்களுக்குப் பயந்து நடக்கிறவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்." **119:43** *வே.வா., "நீதித்தீர்ப்புகளுக்காகவே நான் காத்திருக்கிறேன்." **119:45** *வே.வா., "விசாலமான." **119:48** *வே.வா., "படிப்பேன்." **119:49** *வே.வா., "கொடுத்த வாக்குறுதியை." #வே.வா., "அதற்காக என்னைக் காத்திருக்க வைத்தீர்கள்."

அதி. 119
a சங் 19:9; சங் 119:75
b சங் 51:1; சங் 90:14
c சங் 119:76
d சங் 119:33
e சங் 118:5
f ரோ 1:16
g யோபு 23:12; சங் 119:174; ரோ 7:22
h சங் 119:127
i சங் 119:23; சங் 119:71
j சங் 94:19; ரோ 15:4
k சங் 119:157

52 யெகோவாவே, பழங்காலத்திலிருந்து நீங்கள் கொடுத்திருக்கிற
நீதித்தீர்ப்புகளை நினைத்துப் பார்க்கிறேன்.[a]
அவை எனக்கு ஆறுதல் தருகின்றன.[b]
53 உங்கள் சட்டத்தைவிட்டு விலகிப்போகிற பொல்லாத ஜனங்களைப்
பார்க்கும்போது,
கோபத்தில் கொதிக்கிறேன்.[c]
54 நான் எங்கே குடியிருந்தாலும்,*
உங்களுடைய விதிமுறைகளைப் பற்றியே பாடுவேன்.
55 யெகோவாவே, உங்களுடைய சட்டத்தைக் கடைப்பிடிப்பதற்காக,
ராத்திரியில் உங்கள் பெயரை நினைத்துப் பார்க்கிறேன்.[d]
56 இதை நான் வழக்கமாகச் செய்துவருகிறேன்.
எப்போதும் உங்கள் ஆணைகளின்படி நடந்திருக்கிறேன்.

ח [*ஹேத்*]

57 யெகோவாதான் என் பங்கு.[e]
உங்கள் வார்த்தையின்படி நடப்பதாக நான் வாக்குக்
கொடுத்திருக்கிறேன்.[f]
58 முழு இதயத்தோடு உங்களிடம் வேண்டுகிறேன்.[g]
நீங்கள் வாக்குக் கொடுத்தபடியே எனக்குக் கருணை காட்டுங்கள்.[h]
59 மறுபடியும் உங்கள் நினைப்பூட்டுதல்களின்படி நடப்பதற்காக
என் வழிகளை நான் ஆராய்ந்து பார்த்திருக்கிறேன்.[i]
60 உங்கள் கட்டளைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படிகிறேன்,[j]
கொஞ்சம்கூட தாமதிப்பதில்லை.
61 பொல்லாதவர்களின் கயிறுகள் என்னை இறுக்குகின்றன.
ஆனாலும், உங்கள் சட்டத்தை நான் மறப்பதில்லை.[k]
62 உங்களுடைய நீதியான தீர்ப்புகளுக்கு நன்றி சொல்ல
நடுராத்திரியில் எழுந்துகொள்கிறேன்.[l]
63 உங்களுக்குப் பயந்து நடக்கிற எல்லாருக்கும் நான் நண்பன்.
உங்கள் ஆணைகளின்படி நடக்கிற எல்லாருக்கும் நான் தோழன்.[m]
64 யெகோவாவே, இந்தப் பூமி உங்களுடைய மாறாத அன்பினால்
நிறைந்திருக்கிறது.[n]
உங்களுடைய விதிமுறைகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.

ט [*டேத்*]

65 யெகோவாவே, உங்கள் வார்த்தையின்படி,
அடியேனுக்கு நல்லது செய்திருக்கிறீர்கள்.
66 எனக்கு நல்ல புத்தியையும் அறிவையும் கொடுங்கள்.[o]
ஏனென்றால், உங்கள் கட்டளைகள்மேல் நான் நம்பிக்கை
வைத்திருக்கிறேன்.
67 முன்பு நான் தவறான வழியில் போய்க்கொண்டிருந்தேன்,*
கஷ்டத்தை அனுபவித்தேன்.

119:54 *வே.வா., "நான் அன்னியனாகக் குடியிருக்கிற வீட்டில்." **119:67** *வே.வா., "தெரியாமல் பாவம் செய்துகொண்டிருந்தேன்."

அதி. 119
a எண் 16:5, உபா 1:35, 36, உபா 4:3
b ரோ 15:4
c சங் 119:158, சங் 139:21, நீதி 28:4
d சங் 63:6, ஏசா 26:9
e சங் 16:5
f யாத் 19:8
g சங் 51:17
h சங் 57:1
i சங் 119:101, எபே 5:15
j 2நா 29:1, 3
k 1சா 26:8, 9, 2நா 29:1, 2
l சங் 42:8
m நீதி 13:20
n சங் 33:5, சங் 104:13
o 1ரா 3:9, சங் 94:10, தானி 2:21, பிலி 1:9

ஆனால், இப்போது உங்களுடைய வார்த்தையின்படி நடக்கிறேன்.[a]
68 நீங்கள் நல்லவர்,[b] உங்கள் செயல்களெல்லாம் நல்லவை.
உங்கள் விதிமுறைகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[c]
69 அகங்காரம் பிடித்தவர்கள் என்னைப் பற்றிப் பொய்களைப் பரப்புகிறார்கள்.
ஆனால், நான் முழு இதயத்தோடு உங்கள் ஆணைகளின்படி நடக்கிறேன்.
70 அவர்களுடைய இதயத்தில் உணர்ச்சியே இல்லை.[d]
ஆனால், நான் உங்களுடைய சட்டத்தை மிகவும் விரும்புகிறேன்.[e]
71 நான் கஷ்டப்பட்டது நல்லதுதான்.[f]
அதனால்தான் உங்கள் விதிமுறைகளைக் கற்றுக்கொள்ள முடிந்தது.
72 ஆயிரக்கணக்கான தங்கக் காசுகளையும் வெள்ளிக் காசுகளையும்விட[g]
நீங்கள் கொடுத்த சட்டம்தான் எனக்கு நல்லது.[h]

י [*யோத்*]

73 உங்கள் கைகள் என்னை உண்டாக்கி, என்னை வடிவமைத்தன.
உங்கள் கட்டளைகளை நான் கற்றுக்கொள்ளும்படி,
புரிந்துகொள்ளும் திறனை எனக்குக் கொடுங்கள்.[i]
74 உங்களுக்குப் பயந்து நடக்கிறவர்கள் என்னைப் பார்த்து சந்தோஷப்படுகிறார்கள்.
ஏனென்றால், உங்களுடைய வார்த்தைமேல் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.*[j]
75 யெகோவாவே, உங்கள் நீதித்தீர்ப்புகள் நியாயமானவை என்பது எனக்குத் தெரியும்.[k]
நீங்கள் உண்மையுள்ளவராக இருப்பதால்தான் என்னைத் தண்டித்தீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.[l]
76 அடியேனுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதியின்படி,
உங்கள் மாறாத அன்பினால்[m] தயவுசெய்து என்னை ஆறுதல்படுத்துங்கள்.
77 என்மேல் இரக்கம் காட்டி, என்னைத் தொடர்ந்து வாழ வையுங்கள்.[n]
ஏனென்றால், உங்களுடைய சட்டத்தை நான் மிகவும் விரும்புகிறேன்.[o]
78 அகங்காரம் பிடித்தவர்கள் அவமானம் அடையட்டும்.
ஏனென்றால், அவர்கள் காரணமே இல்லாமல்* எனக்குக் கெடுதல் செய்கிறார்கள்.
ஆனால், நான் உங்கள் ஆணைகளைப் பற்றி ஆழமாக யோசிப்பேன்.#[p]
79 உங்களுக்குப் பயந்து நடக்கிறவர்களும்,
உங்கள் நினைப்பூட்டுதல்களைப் பற்றித் தெரிந்தவர்களும் என்னிடம் திரும்பி வரட்டும்.

119:74 *வே.வா., "உங்களுடைய வார்த்தைக்காக நான் காத்திருக்கிறேன்." **119:78** *அல்லது, "பொய்களைப் பேசி." #வே.வா., "படிப்பேன்."

அதி. 119
a சங் 119:11
b சங் 86:5; மாற் 10:18
c ஏசா 48:17
d ஏசா 6:10
e சங் 40:8; ரோ 7:22
f 1கொ 11:32; எபி 12:9-11
g சங் 19:7, 10; நீதி 3:13-15
h உபா 17:18, 19
i 1நா 22:12; யோபு 32:8
j சங் 119:147
k சங் 119:160
l உபா 32:4; எபி 12:11
m யாத் 34:6; சங் 86:5
n சங் 51:1; சங் 103:13; சங் 119:116; தானி 9:18; லூ 1:50
o ரோ 7:22
p சங் 119:45

80 குறை சொல்ல முடியாதளவுக்கு என் இதயம் உங்கள்
விதிமுறைகளைக் கடைப்பிடிக்கட்டும்.[a]
அப்போது, எனக்கு எந்த அவமானமும் வராது.[b]

כ [*காஃப்*]

81 நீங்கள் தருகிற மீட்புக்காக ஏங்கித் தவிக்கிறேன்.[c]
ஏனென்றால், உங்களுடைய வார்த்தைமேல் நான் நம்பிக்கை
வைத்திருக்கிறேன்.*
82 “நீங்கள் எப்போது எனக்கு ஆறுதல் தருவீர்கள்?”[d] என்று
கேட்கிறேன்.
உங்கள் வாக்குறுதி நிறைவேறுவதைப் பார்க்க என் கண்கள்
ஏங்குகின்றன.[e]
83 புகையில் காய்ந்துபோன தோல் பையைப் போல நான் இருக்கிறேன்.
ஆனாலும், உங்கள் விதிமுறைகளை நான் மறப்பதில்லை.[f]
84 அடியேன் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் காத்திருக்க
வேண்டும்?
என்னைக் கொடுமைப்படுத்துகிற ஆட்களுக்கு எப்போது தண்டனை
கொடுப்பீர்கள்?[g]
85 அகங்காரம் பிடித்தவர்கள் எனக்குக் குழிபறிக்கிறார்கள்.
அவர்கள் உங்கள் சட்டத்தை மதிப்பதே இல்லை.
86 உங்களுடைய கட்டளைகள் எல்லாமே நம்பகமானவை.
காரணமே இல்லாமல் சிலர் என்னைக் கொடுமைப்படுத்துகிறார்கள்,
எனக்கு உதவுங்கள்![h]
87 அவர்கள் என்னைக் கிட்டத்தட்ட ஒழித்துக்கட்டிவிட்டார்கள்.
ஆனாலும், உங்கள் ஆணைகளைவிட்டு நான் விலகவில்லை.
88 நீங்கள் கொடுத்த நினைப்பூட்டுதல்களை நான் கடைப்பிடிக்கும்படி,
மாறாத அன்பினால் என் உயிரைக் காப்பாற்றுங்கள்.

ל [*லாமெத்*]

89 யெகோவாவே, உங்கள் வார்த்தை வானத்திலே
என்றென்றும் நிலைத்திருக்கும்.[i]
90 நீங்கள் தலைமுறை தலைமுறைக்கும் உண்மையோடு
நடந்துகொள்கிறீர்கள்.[j]
இந்தப் பூமியை உறுதியாக நிலைநிறுத்தினீர்கள், அது
நிலைத்திருக்கிறது.[k]
91 உங்களுடைய நீதித்தீர்ப்புகளின்படி அவை* இன்றுவரை
நிலைத்திருக்கின்றன.
அவையெல்லாம் உங்கள் அடிமைகள்.
92 உங்களுடைய சட்டத்தை நான் விரும்பாமல் இருந்திருந்தால்,
கஷ்டத்தில் அழிந்தே போயிருப்பேன்.[l]
93 உங்கள் ஆணைகளை மறக்கவே மாட்டேன்.

119:81 *வே.வா., “உங்களுடைய வார்த்தைக்காக நான் காத்திருக்கிறேன்.” **119:91** *அதாவது, “அவருடைய படைப்புகள் அனைத்தும்.”

அதி. 119
a 1ரா 8:58
b சங் 119:5, 6; 1யோ 2:28
c மீ 7:7
d சங் 86:17; சங் 102:2
e சங் 69:3
f சங் 119:61; சங் 119:176
g சங் 7:6; வெளி 6:9, 10
h சங் 142:6
i சங் 89:2; சங் 119:152
j உபா 7:9
k சங் 104:5; பிர 1:4
l நீதி 6:23; மத் 4:4

ஏனென்றால், அவற்றின் மூலம் என் உயிரைக்
காப்பாற்றியிருக்கிறீர்கள்.[a]
94 நான் உங்களுக்குச் சொந்தமானவன்; என்னைக் காப்பாற்றுங்கள்.[b]
ஏனென்றால், உங்கள் ஆணைகளை ஆர்வமாகத் தேடியிருக்கிறேன்.[c]
95 பொல்லாதவர்கள் என்னை அழிப்பதற்குக் காத்திருக்கிறார்கள்.
ஆனாலும், உங்கள் நினைப்பூட்டுதல்களுக்கு மிகுந்த கவனம்
செலுத்துகிறேன்.
96 நிறைவான எல்லாவற்றுக்கும் ஒரு எல்லை இருப்பதைப்
பார்த்திருக்கிறேன்.
ஆனால், உங்களுடைய கட்டளைகளுக்கு எல்லையே இல்லை.

מ [*மேம்*]

97 உங்களுடைய சட்டத்தை எவ்வளவாய் நேசிக்கிறேன்![d]
நாளெல்லாம் அதைப் பற்றியே ஆழமாக யோசிக்கிறேன்.*[e]
98 உங்கள் கட்டளைகளை எப்போதும் என் கண் முன்னால்
வைத்திருக்கிறேன்.
அதனால், என்னுடைய எதிரிகளைவிட ஞானமாக
நடந்துகொள்கிறேன்.[f]
99 உங்கள் நினைப்பூட்டுதல்களைப் பற்றி ஆழமாக யோசிக்கிறேன்.*
அதனால், என்னுடைய எல்லா போதகர்களையும்விட விவேகமாக#
நடந்துகொள்கிறேன்.[g]
100 உங்களுடைய ஆணைகளுக்குக் கீழ்ப்படிகிறேன்.
அதனால், பெரியவர்களைவிட புத்தியோடு* நடந்துகொள்கிறேன்.
101 உங்கள் வார்த்தையின்படி நடக்க விரும்புகிறேன்.
அதனால், எந்தக் கெட்ட வழிக்கும் போகாமல் இருக்கிறேன்.[h]
102 நீங்கள் எனக்குப் போதித்திருப்பதால்,
உங்களுடைய நீதித்தீர்ப்புகளைவிட்டு விலகாமல் இருக்கிறேன்.
103 உங்கள் வார்த்தைகள் என் வாய்க்கு எவ்வளவு ருசியாக இருக்கின்றன!
தேனைவிட எவ்வளவு தித்திப்பாக இருக்கின்றன![i]
104 புத்தியோடு* நடப்பதற்கு உங்கள் ஆணைகள் எனக்கு உதவுகின்றன.[j]
அதனால்தான் தவறான பாதை எல்லாவற்றையும் வெறுக்கிறேன்.[k]

נ [*நூன்*]

105 உங்களுடைய வார்த்தை என் கால்களுக்கு விளக்காகவும்,
என் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கிறது.[l]
106 உங்களுடைய நீதியான தீர்ப்புகளின்படி நடப்பதாக நான் உறுதிமொழி
எடுத்திருக்கிறேன்.
அதைக் கண்டிப்பாக நிறைவேற்றுவேன்.
107 நான் கஷ்டத்தில் தவியாய்த் தவிக்கிறேன்.[m]
யெகோவாவே, உங்கள் வார்த்தையின்படியே என் உயிரைக்
காப்பாற்றுங்கள்.[n]

119:97, 99 * வே.வா., “படிக்கிறேன்.” **119:99** # வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதலோடு.” **119:100, 104** * வே.வா., “புரிந்துகொள்ளுதலோடு.”

அதி. 119
a லேவி 18:5; உபா 30:16; யோவா 6:63; ரோ 10:5
b சங் 86:2; ஏசா 41:10
c சங் 119:15
d சங் 40:8
e சங் 1:2
f சங் 19:7; நீதி 2:6; நீதி 10:8
g மத் 11:25; லூ 2:46, 47
h சங் 18:23; சங் 119:59
i சங் 19:7, 10; நீதி 24:13, 14
j சங் 119:100
k சங் 97:10; சங் 101:3; நீதி 8:13; நீதி 13:5; ரோ 12:9
l சங் 43:3; நீதி 6:23; ஏசா 51:4; ரோ 15:4; 2தீ 3:16, 17; 2பே 1:19
m சங் 34:19
n சங் 119:88; சங் 143:11

108 யெகோவாவே, நான் விருப்பப்பட்டு செலுத்தும் புகழ்ச்சிப் பலியைப் பிரியத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.[a]
உங்களுடைய நீதித்தீர்ப்புகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[b]
109 தினமும் என் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கிறேன்.
ஆனாலும், உங்கள் சட்டத்தை நான் மறக்கவில்லை.[c]
110 பொல்லாதவர்கள் எனக்கு வலை விரித்திருக்கிறார்கள்.
ஆனாலும், உங்களுடைய ஆணைகளை நான் மீறவில்லை.[d]
111 உங்கள் நினைப்பூட்டுதல்கள்தான் எனக்கு நிலையான சொத்து.
அவைதான் என் இதயத்துக்குச் சந்தோஷத்தைத் தருகின்றன.[e]
112 எல்லா சமயத்திலும், கடைசிவரையிலும்,
உங்களுடைய விதிமுறைகளின்படி நடக்க உறுதியாக இருக்கிறேன்.

ס [*சாமெக்*]

113 அரை மனதோடு* இருப்பவர்களை வெறுக்கிறேன்.[f]
ஆனால், உங்களுடைய சட்டத்தை நேசிக்கிறேன்.[g]
114 நீங்கள்தான் என் தஞ்சம், என் கேடயம்.[h]
ஏனென்றால், உங்களுடைய வார்த்தைமேல் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.*[i]
115 அக்கிரமக்காரர்களே, என் பக்கத்தில் வராதீர்கள்.[j]
அப்போதுதான், என் கடவுளுடைய கட்டளைகளின்படி என்னால் நடக்க முடியும்.
116 கடவுளே, நீங்கள் வாக்குத் தந்தபடியே எனக்கு ஆதரவு கொடுங்கள்.[k]
அப்போதுதான், நான் தொடர்ந்து உயிர்வாழ்வேன்.
என்னுடைய நம்பிக்கை வீண்போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.[l]
117 எனக்கு ஆதரவாக இருங்கள்; அப்போது, நான் காப்பாற்றப்படுவேன்.[m]
உங்கள் விதிமுறைகள்மேல் எப்போதும் கவனமாக இருப்பேன்.[n]
118 உங்களுடைய விதிமுறைகளை மீறுகிற எல்லாரையும் நீங்கள் ஒதுக்கித்தள்ளுகிறீர்கள்.[o]
ஏனென்றால், அவர்கள் பொய்புரட்டிலும் பித்தலாட்டத்திலும் ஊறிப்போயிருக்கிறார்கள்.
119 உலகத்திலுள்ள பொல்லாதவர்கள் எல்லாரையும் நீங்கள் வெறும் கசடுபோல் தூக்கிவீசுகிறீர்கள்.[p]
அதனால்தான், உங்கள் நினைப்பூட்டுதல்களை நான் நேசிக்கிறேன்.
120 உங்களை நினைக்கும்போது பயத்தில் என் உடல் நடுங்குகிறது.
உங்களுடைய நீதித்தீர்ப்புகளை நினைத்தால் பயமாக இருக்கிறது.

ע [*ஆயின்*]

121 நான் நியாயமாகவும் நீதியாகவும் நடந்திருக்கிறேன்.
என்னைக் கொடுமைப்படுத்துகிற ஆட்களின் கையில் என்னைக் கொடுத்துவிடாதீர்கள்!

119:113 *வே.வா., “இரண்டுபட்ட இதயத்தோடு.” **119:114** *வே.வா., “உங்களுடைய வார்த்தைக்காக நான் காத்திருக்கிறேன்.”

அதி. 119
a சங் 50:23, ஓசி 14:2, எபி 13:15
b உபா 33:10, ஏசா 48:17
c சங் 119:61
d சங் 119:87
e சங் 19:8, சங் 119:129, எரே 15:16
f 1ரா 18:21, வெளி 3:16
g சங் 40:8, சங் 119:97
h சங் 32:7, சங் 91:2
i சங் 130:5
j சங் 26:5
k ஏசா 41:10
l சங் 25:2, ரோ 10:11
m ஏசா 41:13
n யோசு 1:8, சங் 119:48
o 1நா 28:9, சங் 95:10
p நீதி 2:22, நீதி 25:4, 5, எசே 22:18

122 அடியேனுக்கு உதவி செய்வதாக வாக்குக் கொடுங்கள்.
அகங்காரம் பிடித்தவர்கள் என்னைக் கொடுமைப்படுத்தாமல் இருக்கட்டும்.
123 உங்களுடைய மீட்புக்காகவும் நீதியான வாக்குறுதிக்காகவும்
காத்திருந்து காத்திருந்து என் கண்கள் பூத்துப்போய்விட்டன.[a]
124 உங்களுடைய மாறாத அன்பை அடியேனுக்குக் காட்டுங்கள்.[b]
உங்களுடைய விதிமுறைகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[c]
125 நான் உங்கள் ஊழியன்; புரிந்துகொள்ளும் திறனை எனக்குக் கொடுங்கள்.[d]
அப்போது, உங்கள் நினைப்பூட்டுதல்களைத் தெரிந்துகொள்வேன்.
126 யெகோவாவே, அவர்கள் உங்களுடைய சட்டத்தை மீறிவிட்டார்கள்.
நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.[e]
127 அதனால்தான், உங்களுடைய கட்டளைகளை நான் நேசிக்கிறேன்.
தங்கத்தைவிட, சொக்கத்தங்கத்தைவிட,* அவற்றை அதிகமாக நேசிக்கிறேன்.[f]
128 நீங்கள் தருகிற அறிவுரைகள்* ஒவ்வொன்றும் சரியானது என்று நம்புகிறேன்.[g]
தவறான பாதைகள் எல்லாவற்றையும் வெறுக்கிறேன்.[h]

פ [*பே*]

129 உங்கள் நினைப்பூட்டுதல்கள் அருமையானவை.
அதனால்தான் அவற்றைக் கடைப்பிடிக்கிறேன்.
130 உங்கள் வார்த்தைகளின் அர்த்தத்தை நீங்கள் வெளிப்படுத்துவது எங்களுக்கு வெளிச்சத்தைத் தருகிறது.[i]
அனுபவம் இல்லாதவர்களுக்குப் புரிந்துகொள்ளுதலைத் தருகிறது.[j]
131 உங்களுடைய கட்டளைகளுக்காக மிகவும் ஏங்குகிறேன்![k]
அந்த ஏக்கத்தில் வாயைத் திறந்து பெருமூச்சு விடுகிறேன்.
132 என் பக்கமாகத் திரும்பி, எனக்குக் கருணை காட்டுங்கள்.[l]
உங்கள் பெயரை நேசிக்கிறவர்களை நியாயமாக நடத்துவது போல என்னையும் நடத்துங்கள்.[m]
133 உங்கள் வார்த்தையால் என்னைப் பத்திரமாக நடக்க வையுங்கள்.*
கெட்டது எதுவும் என்னை ஆட்டிப்படைக்காமல் இருக்கட்டும்.[n]
134 கொடுமைக்காரர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
நான் உங்கள் ஆணைகளுக்குக் கீழ்ப்படிவேன்.
135 அடியேன்மேல் உங்கள் முகத்தைப் பிரகாசிக்க வையுங்கள்.[o]
உங்கள் விதிமுறைகளை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.
136 மக்கள் உங்களுடைய சட்டத்தின்படி நடக்காததைப் பார்க்கும்போது,
என் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.[p]

צ [*சாதே*]

137 யெகோவாவே, நீங்கள் நீதியுள்ளவர்.[q]

119:127 *வே.வா., "புடமிடப்பட்ட தங்கத்தைவிட." **119:128** *வே.வா., "ஆணைகள்." **119:133** *வே.வா., "என் காலடிகளை உறுதிப்படுத்துங்கள்."

அதி. 119
a சங் 69:3, சங் 119:81, சங் 143:7
b சங் 69:16
c சங் 143:10
d சங் 119:34, 2தீ 2:7, யாக் 1:5
e சங் 9:19, எரே 18:23
f சங் 19:9, 10, சங் 119:72, நீதி 3:13, 14
g சங் 19:8
h சங் 119:104
i சங் 119:105, நீதி 6:23, 2கொ 4:6, 2பே 1:19
j சங் 19:7, நீதி 1:1, 4, 2தீ 3:15
k சங் 42:1, 1பே 2:2
l 1சா 1:10, 11, 2சா 16:11, 12, ஏசா 38:9, 20
m எபி 6:10
n சங் 19:13, ரோ 6:12
o எண் 6:25, சங் 4:6
p எசே 9:4, 2பே 2:7, 8
q உபா 32:4

அதி. 119
a வெளி 16:5, 7
b 2ரா 10:16 சங் 69:9 யோவா 2:17
c சங் 12:6 சங் 119:160
d சங் 119:97
e சங் 22:6, 7
f சங் 36:6
g யாத் 34:6 சங் 119:160 யோவா 17:17
h சங் 119:34
i சங் 5:3 சங் 88:13 மாற் 1:35
j சங் 63:6 லூ 6:12
k சங் 51:1 ஏசா 63:7
l உபா 4:7 சங் 46:1 சங் 145:18
m சங் 19:9 யோவா 17:17

உங்களுடைய நீதித்தீர்ப்புகள் நியாயமானவை.[a]
138 நீங்கள் கொடுக்கிற நினைப்பூட்டுதல்கள் நீதியானவை.
அவை முழுக்க முழுக்க நம்பகமானவை.
139 உங்கள்மேல் இருக்கிற பக்திவைராக்கியம் எனக்குள் பற்றியெரிகிறது.[b]
ஏனென்றால், என் எதிரிகள் உங்கள் வார்த்தைகளை மறந்துவிட்டார்கள்.
140 உங்களுடைய வார்த்தை முழுமையாகப் புடமிடப்பட்டிருக்கிறது.[c]
அடியேன் அதை நேசிக்கிறேன்.[d]
141 நான் அற்பமானவன், யாரும் என்னை மதிப்பதில்லை.[e]
ஆனாலும், உங்கள் ஆணைகளை நான் மறந்துவிடவில்லை.
142 உங்களுடைய நீதி என்றென்றும் நிலைத்திருக்கிறது.[f]
உங்களுடைய சட்டம் உண்மையானது.[g]
143 வேதனையும் கஷ்டமும் எனக்கு வந்தாலும்,
உங்களுடைய கட்டளைகளை மிகவும் விரும்புகிறேன்.
144 உங்கள் நினைப்பூட்டுதல்கள் என்றென்றும் நீதியானவை.
அவற்றைப் புரிந்துகொள்ளும் திறனை எனக்குக் கொடுங்கள்,[h] அப்போது நான் உயிர்வாழ்வேன்.

ק [*கோஃப்*]

145 முழு இதயத்தோடு உங்களிடம் வேண்டுகிறேன். யெகோவாவே, எனக்குப் பதில் கொடுங்கள்.
உங்கள் விதிமுறைகளை நான் பின்பற்றுவேன்.
146 உங்களைக் கூப்பிடுகிறேன்; என்னைக் காப்பாற்றுங்கள்.
உங்கள் நினைப்பூட்டுதல்களுக்கு நான் கீழ்ப்படிவேன்.
147 உங்களிடம் உதவி கேட்டுக் கெஞ்சுவதற்காகப் பொழுது விடிவதற்கு முன்பே எழுந்துகொண்டேன்.[i]
ஏனென்றால், உங்கள் வார்த்தைகள்தான் என் நம்பிக்கை.*
148 உங்களுடைய வார்த்தையைப் பற்றி ஆழமாய் யோசிப்பதற்காக,*
நடுராத்திரியில்கூட விழித்துக்கொள்கிறேன்.[j]
149 உங்களுடைய மாறாத அன்பினால் என் வேண்டுதலைக் கேளுங்கள்.[k]
யெகோவாவே, உங்கள் நியாயத்தின்படி என் உயிரைக் காப்பாற்றுங்கள்.
150 வெட்கக்கேடாக நடக்கிறவர்கள் என்னை நெருங்குகிறார்கள்.
அவர்கள் உங்களுடைய சட்டத்தைவிட்டு ரொம்பத் தூரத்தில் இருக்கிறார்கள்.
151 யெகோவாவே, நீங்கள் என் பக்கத்தில் இருக்கிறீர்கள்.[l]
உங்களுடைய கட்டளைகள் எல்லாமே உண்மையானவை.[m]
152 உங்களுடைய நினைப்பூட்டுதல்களைப் பற்றி ரொம்பக் காலத்துக்கு முன்பே தெரிந்துகொண்டேன்.

119:147 * வே.வா., "உங்கள் வார்த்தைகளுக்காகத்தான் காத்திருக்கிறேன்." **119:148** * வே.வா., "படிப்பதற்காக."

அவற்றை என்றென்றும் நிலைத்திருக்கும்படி ஏற்படுத்தினீர்கள் என்று
தெரிந்துகொண்டேன்.[a]

ר [*ரேஷ்*]

153 நான் படுகிற கஷ்டத்தைப் பாருங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்.[b]
ஏனென்றால், உங்கள் சட்டத்தை நான் மறக்கவில்லை.
154 எனக்காக வழக்காடுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்.[c]
நீங்கள் வாக்குக் கொடுத்தபடியே என் உயிரைக் காப்பாற்றுங்கள்.
155 பொல்லாதவர்களுக்கு மீட்பு தூரமாக இருக்கிறது.
ஏனென்றால், உங்கள் விதிமுறைகளை அவர்கள் தேடவில்லை.[d]
156 யெகோவாவே, உங்களுடைய இரக்கம் மிகப் பெரியது.[e]
உங்களுடைய நியாயத்தின்படி என் உயிரைக் காப்பாற்றுங்கள்.
157 நிறைய பேர் என்னைத் துன்பப்படுத்துகிறார்கள், எதிர்க்கிறார்கள்.[f]
ஆனாலும், உங்கள் நினைப்பூட்டுதல்களைவிட்டு நான் விலகவில்லை.
158 துரோகிகளை நான் அருவருப்பாகப் பார்க்கிறேன்.
ஏனென்றால், அவர்கள் உங்கள் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில்லை.[g]
159 உங்களுடைய ஆணைகளை நான் எந்தளவுக்கு நேசிக்கிறேன் என்று
பாருங்கள்.
யெகோவாவே, உங்களுடைய மாறாத அன்பினால் என் உயிரைக்
காப்பாற்றுங்கள்.[h]
160 சத்தியம்தான் உங்களுடைய வார்த்தையின் சாராம்சம்.[i]
உங்களுடைய நீதியான தீர்ப்புகளெல்லாம் என்றென்றும்
நிலைத்திருக்கின்றன.

ש [*ஸீன்*] அல்லது [*ஷீன்*]

161 காரணமே இல்லாமல் தலைவர்கள் என்னைத் துன்பப்படுத்துகிறார்கள்.[j]
ஆனாலும், உங்கள் வார்த்தைகளை நான் உயர்வாய் மதிக்கிறேன்.[k]
162 உங்களுடைய வார்த்தைகளை நினைத்து சந்தோஷப்படுகிறேன்.[l]
ஏராளமான பொக்கிஷங்களைக் கண்டுபிடித்தவன் போலச்
சந்தோஷப்படுகிறேன்.
163 பொய்யை வெறுக்கிறேன், அதை அருவருக்கிறேன்.[m]
ஆனால், உங்களுடைய சட்டத்தை நேசிக்கிறேன்.[n]
164 உங்களுடைய நீதியான தீர்ப்புகளுக்காக,
தினமும் ஏழு தடவை உங்களைப் புகழ்கிறேன்.
165 உங்களுடைய சட்டத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த
சமாதானம் உண்டு.[o]
எதுவுமே அவர்களைத் தடுமாறி விழ வைக்காது.*
166 யெகோவாவே, நீங்கள் தரும் மீட்புக்காக நம்பிக்கையோடு
காத்திருக்கிறேன்.
உங்கள் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறேன்.
167 உங்கள் நினைப்பூட்டுதல்களின்படி நடக்கிறேன்.
அவற்றை நெஞ்சார நேசிக்கிறேன்.[p]

அதி. 119
a சங் 119:144
பிர 3:14
b சங் 9:13
c 1சா 24:15
சங் 43:1
d 2ரா 17:15, 18
சங் 73:27
நீதி 15:29
e 1நா 21:13
சங் 86:15
ஏசா 55:7
2கொ 1:3
யாக் 5:11
f சங் 25:19
g சங் 139:21
h சங் 119:40, 88
புல 3:22
i 2சா 7:28
சங் 12:6
யோவா 17:17
j சங் 119:23
k 2ரா 22:19
l எரே 15:16
m சங் 101:7
சங் 119:
29, 104
n சங் 1:2
o சங் 1:2, 3
நீதி 3:1, 2
ஏசா 32:17
ஏசா 48:18
p சங் 1:2
சங் 40:8
ரோ 7:22

119:165 * வே.வா., “எதுவுமே அவர்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்காது.”

168 உங்களுடைய ஆணைகளையும் நினைப்பூட்டுதல்களையும்
கடைப்பிடிக்கிறேன்.
நான் செய்கிற எல்லாமே உங்களுக்குத் தெரியும்.[a]

ת [ட்டா]

169 யெகோவாவே, என்னுடைய கூக்குரல் உங்கள் காதுகளை
எட்டட்டும்.[b]
உங்கள் வார்த்தையின்படி, எனக்கு எல்லாவற்றையும் புரிய
வையுங்கள்.[c]
170 கருணை கேட்டு நான் செய்யும் ஜெபம் உங்கள் சன்னிதியை
எட்டட்டும்.
நீங்கள் வாக்குக் கொடுத்தபடியே என்னைக் காப்பாற்றுங்கள்.
171 என் உதடுகள் உங்களை அளவில்லாமல் புகழட்டும்.[d]
ஏனென்றால், உங்களுடைய விதிமுறைகளை எனக்குக்
கற்றுக்கொடுக்கிறீர்கள்.
172 என் நாவு உங்கள் வார்த்தையைப் புகழ்ந்து பாடட்டும்.[e]
ஏனென்றால், உங்களுடைய கட்டளைகள் எல்லாமே நீதியானவை.
173 உங்கள் கை எனக்குத் துணையாக இருக்கட்டும்.[f]
ஏனென்றால், உங்கள் ஆணைகளுக்குக் கீழ்ப்படிகிறேன்.[g]
174 யெகோவாவே, நீங்கள் தருகிற மீட்புக்காக ஏங்குகிறேன்.
உங்களுடைய சட்டத்தை மிகவும் விரும்புகிறேன்.[h]
175 என்னை வாழ வையுங்கள்; அப்போதுதான், நான் உங்களைப் புகழ
முடியும்.[i]
உங்களுடைய நீதித்தீர்ப்புகள் எனக்கு உதவியாக இருக்கட்டும்.
176 காணாமல்போன ஆடுபோல் வழிதவறிப் போய்விட்டேன்.[j]
அடியேனைத் தேடுங்கள்.
ஏனென்றால், உங்கள் கட்டளைகளை நான் மறக்கவில்லை.[k]

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.*

120 வேதனையில் நான் யெகோவாவைக் கூப்பிட்டேன்.[l]
அவர் எனக்குப் பதில் கொடுத்தார்.[m]
2 யெகோவாவே, பொய் பேசுகிற உதடுகளும் ஏமாற்றுகிற நாவும்,
என் உயிரைப் பறித்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
3 ஏமாற்றுகிற நாவே,[n]
கடவுள் உன்னை என்ன செய்வார் தெரியுமா?
உன்னை எப்படித் தண்டிப்பார் தெரியுமா?
4 மாவீரனின் கூர்மையான அம்புகளாலும்,[o]
சட்டென்று தீப்பிடிக்கிற பாலைவன மரத்தின் நெருப்புத்
தணல்களாலும்[p]
அவர் உன்னைத் தாக்குவார்.
5 ஐயோ! நான் மேசேக்கில்[q] அன்னியனாக வாழ்ந்தது போதும்!
கேதாரின்[r] கூடாரங்களுக்கு நடுவே குடியிருந்தது போதும்!

120:மே.கு. * நே.மொ., “ஏறுதலின் பாடல்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 119
a சங் 139:3; நீதி 5:21; நீதி 15:11; எபி 4:13
b சங் 18:6
c 1நா 22:12; நீதி 2:3, 5
d சங் 63:5; சங் 71:17; சங் 145:7
e சங் 40:9
f சங் 60:5
g உபா 30:19; யோசு 24:15, 22
h சங் 1:2
i சங் 9:13, 14; ஏசா 38:19
j சங் 95:7; லூ 15:4; 1பே 2:25
k பிர 12:13

அதி. 120
l சங் 18:6
m சங் 50:15; யோனா 2:1, 2
n நீதி 12:22
o சங் 7:13
p சங் 140:10
q ஆதி 10:2
r எரே 49:28

6 சமாதானத்தை வெறுக்கிறவர்களின் மத்தியிலே
இவ்வளவு காலம் தங்கியிருந்தது போதும்![a]
7 நான் சமாதானத்தையே விரும்புகிறேன்.
ஆனால், நான் என்ன பேசினாலும் அவர்கள் சண்டைக்குத்தான் நிற்கிறார்கள்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

121 நான் என் கண்களை உயர்த்தி மலைகளைப் பார்க்கிறேன்.[b]
எனக்கு எங்கிருந்து உதவி வரும்?
2 யெகோவாவிடமிருந்தே எனக்கு உதவி வரும்.[c]
அவர்தான் வானத்தையும் பூமியையும் படைத்தவர்.
3 உன் கால்கள் சறுக்குவதற்கு அவர் ஒருபோதும் விடமாட்டார்.[d]
உன்னைக் காக்கிறவர் ஒருபோதும் தூக்கக் கலக்கத்தில் இருக்க மாட்டார்.
4 இஸ்ரவேலைக் காக்கிற கடவுள்
ஒருபோதும் தூக்கக் கலக்கத்தில் இருக்க மாட்டார்,
அவர் தூங்கிவிடவும் மாட்டார்.[e]
5 யெகோவா உன்னைக் காக்கிறார்.
யெகோவா உன் வலது பக்கத்தில்[f] உனக்கு நிழலாக இருக்கிறார்.[g]
6 பகலில் சூரியனோ,
ராத்திரியில் சந்திரனோ உன்னைத் தாக்காது.[h]
7 எல்லா ஆபத்திலிருந்தும் யெகோவா உன்னைக் காப்பார்.[i]
உன் உயிரைக் காப்பார்.[j]
8 உன் வழிகளிலெல்லாம்* யெகோவா உன்னைக் காப்பார்.
இன்றும் என்றும் காப்பார்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல். தாவீதின் பாடல்.

122 “யெகோவாவின் ஆலயத்துக்குப் போகலாம், வாருங்கள்” என்று அவர்கள் கூப்பிட்டபோது எனக்கு ரொம்பவே சந்தோஷமாக இருந்தது.[k]
2 எருசலேமே, உன் வாசல்கதவுகளுக்கு உள்ளே
இப்போது நாங்கள் நிற்கிறோம்.[l]
3 ஒன்றிணைக்கப்பட்ட ஒரு நகரமாக
எருசலேம் கட்டப்பட்டிருக்கிறது.[m]
4 இஸ்ரவேல் கோத்திரங்கள் அங்கே ஏறிப்போயிருக்கின்றன.
“யா”வின்* மக்கள் அங்கே ஏறிப்போயிருக்கிறார்கள்.
அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நினைப்பூட்டுதலின்படி,
யெகோவாவின் பெயருக்கு நன்றி சொல்ல அங்கே போயிருக்கிறார்கள்.[n]
5 நீதி வழங்குவதற்காக அங்கே சிம்மாசனங்கள் போடப்பட்டன.[o]
அவை தாவீதின் வம்சத்தாருடைய சிம்மாசனங்கள்.[p]

121:8 *நே.மொ., “நீ போகும்போதும் வரும்போதும்.” **122:4** *“யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 120
a சங் 57:4

அதி. 121
b சங் 125:2
c சங் 46:1, ஏசா 41:13, எரே 20:11, எபி 13:6
d சங் 91:11, 12, நீதி 3:26
e ஏசா 27:3, ஏசா 40:28
f சங் 16:8, சங் 109:31
g சங் 91:1, ஏசா 25:4
h சங் 91:5, 6, ஏசா 49:10, வெளி 7:16
i சங் 91:10, நீதி 12:21
j சங் 97:10, சங் 145:20

அதி. 122
k 2சா 6:15, சங் 27:4, சங் 42:4, சங் 84:10
l 2நா 6:6, சங் 84:7, சங் 100:4
m 2சா 5:9
n யாத் 23:17, உபா 12:5, 6
o உபா 17:8, 9, 2நா 19:8
p 2சா 7:16, 1ரா 10:18, 1நா 29:23

6 எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.[a]
நகரமே, உன்னை நேசிக்கிறவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள்.
7 உன் அரண்களுக்குள் எப்போதும் சமாதானம் இருக்கட்டும்.
உன் கோட்டைகளுக்குள் எப்போதும் பாதுகாப்பு இருக்கட்டும்.
8 "உனக்குள் சமாதானம் இருக்கட்டும்" என்று நான் சொல்வேன்.
என் சகோதரர்களுக்காகவும் நண்பர்களுக்காகவும் அப்படிச் சொல்வேன்.
9 நம் கடவுளாகிய யெகோவாவின் ஆலயம்[b] உன் நடுவே இருப்பதால்,
உனக்கு நல்லது நடக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்வேன்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

123 பரலோக சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பவரே,
என் கண்கள் உங்களை ஏறெடுத்துப் பார்க்கின்றன.[c]
2 வேலைக்காரர்களின் கண்கள் எஜமானின் கையை எதிர்பார்ப்பது போல,
வேலைக்காரியின் கண்கள் எஜமானியின் கையை எதிர்பார்ப்பது போல,
யெகோவாவே, நீங்கள் கருணை காட்டும்வரை,[d]
எங்களுடைய கண்கள் உங்களையே எதிர்பார்த்துக் காத்திருக்கும்.[e]
3 கருணை காட்டுங்கள், யெகோவாவே, எங்களுக்குக் கருணை காட்டுங்கள்.
நாங்கள் உச்சக்கட்ட அவமரியாதைக்கு ஆளாகிவிட்டோம்.[f]
4 திமிர் பிடித்தவர்கள் செய்கிற கேலியும்,
அகம்பாவம் பிடித்தவர்கள் காட்டுகிற அவமரியாதையும்
உச்சக்கட்டத்துக்கே போய்விட்டன.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல். தாவீதின் பாடல்.

124 "யெகோவா மட்டும் நம்மோடு இல்லையென்றால்,"[g]
—இஸ்ரவேலர்களே, எல்லாரும் சொல்லுங்கள்—
2 "யெகோவா மட்டும் நம்மோடு இல்லையென்றால்,[h]
ஆட்கள் நம்மைத் தாக்க வந்தபோது,[i]
3 அவர்களுடைய கோபம் நம்மேல் பற்றியெரிந்தபோது,[j]
நம்மை உயிரோடு விழுங்கியிருப்பார்கள்.[k]
4 தண்ணீர் நம்மை அடித்துக்கொண்டு போயிருக்கும்.
காட்டாறு நம்மேல் புரண்டோடியிருக்கும்.[l]
5 பாய்ந்து வரும் வெள்ளம் நம்மை மூழ்கடித்திருக்கும்.
6 யெகோவாவுக்குப் புகழ் சேரட்டும்.
ஏனென்றால், எதிரிகளின் பற்களுக்கு அவர் நம்மை இரையாக்கவில்லை.
7 வேடனின் கண்ணியிலிருந்து தப்பித்த பறவைபோல் நாம் இருக்கிறோம்.[m]
கண்ணி உடைக்கப்பட்டது, நாம் தப்பித்தோம்.[n]

அதி. 122
a சங் 51:18
b 1நா 29:3; சங் 26:8; சங் 69:9

அதி. 123
c சங் 25:15; சங் 121:1
d புல 3:25; மீ 7:7
e சங் 119:82; சங் 130:6
f நெ 4:4; சங் 44:13

அதி. 124
g சங் 46:7; ரோ 8:31; எபி 13:6
h சங் 54:4; சங் 118:6
i சங் 3:1; சங் 22:16
j சங் 56:1
k சங் 27:2
l சங் 18:4
m 1சா 23:26-28; 2சா 17:21, 22
n சங் 25:15; சங் 91:3

8 யெகோவாவின் பெயரே நமக்குத் துணை.[a]
வானத்தையும் பூமியையும் படைத்தவர் அவரே."

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

125 யெகோவாமேல் நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள்[b]
அசைக்க முடியாத சீயோன் மலைபோல் இருக்கிறார்கள்.
என்றென்றும் நிலைத்திருக்கிற அந்த மலைபோல் இருக்கிறார்கள்.[c]
2 எருசலேமைச் சுற்றிலும் மலைகள் இருப்பது போல,[d]
யெகோவா தன்னுடைய மக்களைச் சுற்றிலும் இருக்கிறார்.[e]
இன்றும் என்றும் அவர்களைப் பாதுகாப்பார்.
3 நீதிமான்களுக்கு ஒதுக்கப்பட்ட தேசத்தில் பொல்லாதவர்களின்
கொடுங்கோல் நிலைக்காது.[f]
இல்லாவிட்டால், நீதிமான்களும் தவறு செய்ய
ஆரம்பித்துவிடுவார்கள்.[g]
4 யெகோவாவே, நல்லவர்களுக்கு நல்லது செய்யுங்கள்.[h]
நேர்மையான நெஞ்சமுள்ளவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.[i]
5 குறுக்கு வழியில் போகிறவர்களை யெகோவா அழித்துவிடுவார்.
பொல்லாதவர்களோடு சேர்த்து அவர்களை அழித்துவிடுவார்.[j]
இஸ்ரவேலுக்குச் சமாதானம் கிடைக்கட்டும்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

126 யெகோவா நம்மை* மறுபடியும் சீயோனுக்குக்
கூட்டிக்கொண்டு வந்தபோது,[k]
ஏதோ கனவு கண்டதுபோல் இருந்தது.
2 அப்போது, நாம் வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்தோம்,
சந்தோஷமாக ஆரவாரம் செய்தோம்.[l]
மற்ற தேசத்து மக்கள் எல்லாரும்,
"யெகோவா இவர்களுக்கு அற்புதமான காரியங்களைச்
செய்திருக்கிறார்!"[m] என்று பேசிக்கொண்டார்கள்.
3 யெகோவா நமக்கு அற்புதமான காரியங்களைச் செய்திருக்கிறார்.[n]
நாம் சந்தோஷத்தில் துள்ளுகிறோம்.
4 யெகோவாவே, நெகேபின்* வறண்ட நீரோடைகளில் நீங்கள்
தண்ணீரை வர வைப்பது போலவே,
சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்களை உங்கள் தேசத்துக்கு மறுபடியும்
வர வையுங்கள்.
5 கண்ணீரோடு விதைக்கிறவர்கள்
சந்தோஷ ஆரவாரத்தோடு அறுப்பார்கள்.
6 பையில் விதைகளை எடுத்துக்கொண்டு போகிறவன்
அழுதுகொண்டே போனாலும்,
கதிர்களை அறுத்துக்கொண்டு வரும்போது,[o]
ஆனந்த ஆரவாரம் செய்துகொண்டுதான் வருவான்.[p]

126:1 *வே.வா., "சிறையிருப்பிலிருந்த நம்மை." **126:4** *வே.வா., "தெற்கில் உள்ள பள்ளத்தாக்குகளின்."

அதி. 124
a நீதி 18:10

அதி. 125
b எரே 17:7
c 1ரா 8:12, 13; சங் 48:2; சங் 132:13, 14
d 1ரா 11:7; அப் 1:12
e சங் 34:7; ஏசா 31:5; சக 2:4, 5
f ஏசா 14:5
g பிர 7:7
h சங் 51:18
i சங் 36:10; சங் 73:1
j 1நா 10:13; சங் 53:5; ஏசா 59:8

அதி. 126
k எஸ்றா 1:2, 3; சங் 85:1
l எஸ்றா 3:11; சங் 106:47; ஏசா 49:13; எரே 31:12
m யோசு 2:9, 10; நெ 6:15, 16
n எஸ்றா 7:27, 28; ஏசா 11:11
o ஏசா 9:3
p சங் 30:5; ஏசா 61:1-3

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல். சாலொமோனின் பாடல்.

127 யெகோவா வீட்டைக் கட்டவில்லையென்றால்,
கட்டுகிறவர்கள் எவ்வளவுதான் பாடுபட்டாலும் அது வீண்.[a]
யெகோவா நகரத்தைக் காக்கவில்லையென்றால்,[b]
காவலாளிகள் என்னதான் கண் விழித்திருந்தாலும் அது வீண்.
2 நீ அதிகாலையிலேயே எழுந்து,
ராத்திரி ரொம்ப நேரம் கண் விழித்திருந்து,
வயிற்றுப் பிழைப்புக்காக எவ்வளவுதான் பாடுபட்டாலும் அது வீண்.
ஏனென்றால், தனக்குப் பிரியமானவர்களின் தேவைகளை அவர் கவனித்துக்கொள்கிறார்.
அவர்களுக்கு நிம்மதியான தூக்கத்தையும் தருகிறார்.[c]
3 இதோ! பிள்ளைகள் யெகோவா தரும் சொத்து.[d]
குழந்தைகள் அவர் தரும் பரிசு.[e]
4 இளமைக் காலத்தில் ஒருவருக்குப் பிறக்கும் மகன்கள்
மாவீரனின் கையிலுள்ள அம்புகள் போல இருக்கிறார்கள்.[f]
5 அவற்றைத் தங்களுடைய அம்புக்கூடுகளில் நிரப்புகிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[g]
அவர்கள் வெட்கப்பட்டுப்போக மாட்டார்கள்.
ஏனென்றால், நகரவாசலில் எதிரிகளோடு அவர்கள் வழக்காடுவார்கள்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

128 யெகோவாவுக்குப் பயந்து நடக்கிற எல்லாரும் சந்தோஷமானவர்கள்.[h]
அவருடைய வழிகளில் நடக்கிற எல்லாரும் சந்தோஷமானவர்கள்.[i]
2 உன் கைகளின் கடின உழைப்பால் கிடைத்த பலனை நீ சாப்பிடுவாய்.
சந்தோஷமாக இருப்பாய், வளமாக வாழ்வாய்.[j]
3 உன் வீட்டில் உன் மனைவி கனிதருகிற திராட்சைக் கொடி போல இருப்பாள்.[k]
உன் மேஜையைச் சுற்றிலும் உன் பிள்ளைகள் ஒலிவமரக் கன்றுகள் போல இருப்பார்கள்.
4 இதோ! இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள்தான்
யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவனுக்குக் கிடைக்கும்.[l]
5 யெகோவா உன்னை சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பார்.
எருசலேம் செழித்தோங்குவதை வாழ்நாளெல்லாம் நீ பார்ப்பாயாக![m]
6 உன் பிள்ளைகளின் பிள்ளைகளை நீ பார்ப்பாயாக!
இஸ்ரவேலுக்குச் சமாதானம் கிடைப்பதாக!

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

129 “என் சிறுவயதிலிருந்தே எதிரிகள் என்னைத் தாக்கிக்கொண்டு இருக்கிறார்கள்”[n]
—இஸ்ரவேலர்களே, எல்லாரும் சொல்லுங்கள்—
2 “என் சிறுவயதிலிருந்தே எதிரிகள் என்னைத் தாக்கிக்கொண்டு இருக்கிறார்கள்.[o]
ஆனாலும், அவர்களால் என்னைத் தோற்கடிக்க முடியவில்லை.[p]

அதி. 127
a நீதி 3:6; நீதி 10:22; நீதி 16:3
b ஏசா 27:3
c சங் 3:5; பிர 5:12
d ஆதி 33:4, 5; ஆதி 48:3, 4; 1சா 2:21
e ஆதி 41:51, 52; லேவி 26:9; யோபு 42:12, 13; சங் 128:3
f நீதி 17:6
g ஆதி 50:23

அதி. 128
h சங் 112:1; எபி 5:7
i சங் 119:1; மீ 6:8
j பிர 5:18; ஏசா 65:22
k யாத் 23:26; சங் 127:3
l சங் 127:4, 5
m சங் 122:6; ஏசா 33:20

அதி. 129
n யாத் 5:6, 9
o புல 1:3
p சங் 118:13; சங் 125:3

3 உழுகிறவர்கள் என் முதுகில் உழுது,[a]
நீளமான பள்ளங்களை உண்டாக்கினார்கள்."
4 ஆனால், யெகோவா நீதியுள்ளவர்.[b]
பொல்லாதவர்களின் கயிறுகளை அவர் அறுத்துவிட்டார்.[c]
5 சீயோனை வெறுக்கிற எல்லாருக்கும் தலைகுனிவு ஏற்படும்.
அவர்கள் அவமானத்தில் பின்வாங்குவார்கள்.[d]
6 அவர்கள் கூரையில் முளைக்கிற புல்லைப் போல ஆவார்கள்.
அது பிடுங்கப்படுவதற்கு முன்பே காய்ந்துபோகும்.
7 அறுக்கிறவனின் கைக்கு ஒரு பிடிகூட கிடைக்காது.
கதிர்க்கட்டுகளைச் சேகரிக்கிறவனின் கைக்கு ஒரு கட்டுகூட சேராது.
8 வருவோர் போவோர் யாருமே,
"யெகோவா உங்களை ஆசீர்வதிக்கட்டும்;
யெகோவாவின் பெயரில் உங்களை ஆசீர்வதிக்கிறோம்" என்று
சொல்ல மாட்டார்கள்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

130 யெகோவாவே, ஆழத்திலிருந்து* உங்களைக் கூப்பிடுகிறேன்.[e]
2 யெகோவாவே, என் குரலைக் கேளுங்கள்.
உதவிக்காக நான் கெஞ்சுவதை உங்கள் காதுகளால் கவனித்துக்
கேளுங்கள்.
3 "யா"வே,* நீங்கள் குற்றங்களைக் கவனிக்க# ஆரம்பித்தால்,
யெகோவாவே, யார் உங்கள் முன்னால் நிற்க முடியும்?[f]
4 நீங்கள் மனதார மன்னிக்கிறீர்கள்.[g]
அதனால் உங்கள்மேல் பயபக்தி உண்டாகிறது.[h]
5 நான் யெகோவாவையே நம்பியிருக்கிறேன், என் ஜீவன் அவரையே
நம்பியிருக்கிறது.
அவருடைய வார்த்தைக்காக நான் காத்திருக்கிறேன்.
6 காவல்காரர்கள் விடியலுக்காகக் காத்திருப்பதைவிட,
ஆம், காவல்காரர்கள் விடியலுக்காகக் காத்திருப்பதைவிட,[i]
அதிக ஆவலோடு நான் யெகோவாவுக்காகக் காத்திருக்கிறேன்.[j]
7 இஸ்ரவேல் யெகோவாவுக்காகக் காத்திருக்கட்டும்.
ஏனென்றால், யெகோவா மாறாத அன்புள்ளவர்.[k]
விடுவிப்பதற்கான வல்லமை அவரிடம் அளவில்லாமல்
இருக்கிறது.
8 இஸ்ரவேலர்களை அவர்களுடைய எல்லா குற்றங்களிலிருந்தும்
அவர் விடுவிப்பார்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல். தாவீதின் பாடல்.

131 யெகோவாவே, என் உள்ளத்தில் கர்வம் இல்லை.
என் கண்களில் ஆணவம் இல்லை.[l]
பெரிய காரியங்களுக்காக நான் ஆசைப்படுவதில்லை.

130:1 *வே.வா., "ஆழ்ந்த வேதனையில்." **130:3** *"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். #வே.வா., "கணக்கு வைக்க."

அதி. 129
a சங் 66:12
ஏசா 51:23
b எஸ்றா 9:15
நெ 9:33
c சங் 124:7
d நெ 4:4
நெ 6:15, 16
எஸ்தர் 6:13
எஸ்தர் 9:5
சங் 137:7
சக 12:3

அதி. 130
e புல 3:55
யோனா 2:1, 2
f சங் 38:4
சங் 103:14
சங் 143:1, 2
ஏசா 55:7
தானி 9:18
ரோ 3:20
தீத் 3:5
g யாத் 34:6, 7
சங் 25:11
h எரே 33:8, 9
i சங் 119:147
j மீ 7:7
k சங் 86:5

அதி. 131
l சங் 78:70
சங் 138:6

என் வரம்புக்கு மிஞ்சிய காரியங்களுக்காகவும் நான்
ஆசைப்படுவதில்லை.[a]
2 ஆனால், பால்மறந்த குழந்தை அம்மாவின் மடியிலே திருப்தியாக
இருப்பது போல,
என்னை நானே தேற்றிக்கொண்டு திருப்தியாகவும் நிம்மதியாகவும்
இருக்கிறேன்.[b]
3 இஸ்ரவேல் மக்கள் இன்றும் என்றும்
யெகோவாவுக்காகக் காத்திருக்கட்டும்.[c]

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

132 யெகோவாவே, தாவீதை நினைத்துப் பாருங்கள்.
அவர் பட்ட கஷ்டங்களையெல்லாம் நினைத்துப் பாருங்கள்.[d]
2 யெகோவாவே, அவர் உங்களுக்குச் செய்த சத்தியத்தை நினைத்துப்
பாருங்கள்.
யாக்கோபின் வல்லமையுள்ள கடவுளே, அவர் உங்களிடம்
நேர்ந்துகொண்டதை நினைத்துப் பாருங்கள்.[e]
3 அவர், “யெகோவாவுக்காக ஒரு இடத்தைக் கண்டுபிடிக்கும்வரை,
யாக்கோபின் வல்லமையுள்ள கடவுள் குடிகொள்வதற்காக
ஒரு அருமையான இடத்தை* கண்டுபிடிக்கும்வரை,[f]
4 என் வீட்டுக்குள்[g] போக மாட்டேன்,
என் படுக்கையில் படுக்க மாட்டேன்,
5 கண்மூடித் தூங்க மாட்டேன்,
கண் இமைகளை மூட மாட்டேன்” என்று சொன்னாரே.
6 எப்பிராத்தாவில்[h] நாங்கள் அதை* பற்றிக் கேள்விப்பட்டோம்.
அதைக் காட்டுப்பகுதியில் கண்டுபிடித்தோம்.[i]
7 வாருங்கள், அவருடைய வீட்டுக்கு* போகலாம்.[j]
அவருடைய கால்மணைக்கு முன்னால் மண்டிபோடலாம்.[k]
8 யெகோவாவே, நீங்கள் குடிகொள்ளும் இடத்துக்கு எழுந்து வாருங்கள்.[l]
உங்கள் பலத்துக்கு அடையாளமாக இருக்கிற ஒப்பந்தப் பெட்டியுடன்
வாருங்கள்.[m]
9 உங்களுடைய குருமார்கள் நீதியை உடையாக உடுத்திக்கொள்ளட்டும்.
உங்களுக்கு உண்மையாக* இருக்கிறவர்கள் சந்தோஷ ஆரவாரம்
செய்யட்டும்.
10 உங்களுடைய ஊழியரான தாவீதுக்கு நீங்கள் வாக்குக்
கொடுத்திருப்பதால்,
நீங்கள் தேர்ந்தெடுத்தவரை* ஒதுக்கிவிடாதீர்கள்.[n]
11 தாவீதுக்குக் கொடுத்த வாக்கை யெகோவா கண்டிப்பாக மீற மாட்டார்.
அவர் தாவீதிடம், “உன்னுடைய சந்ததியில் வரும் ஒருவரை
உன் சிம்மாசனத்தில் உட்கார வைப்பேன்.[o]

அதி. 131
a 1சா 18:23
b 1சா 30:6; சங் 62:1; ஏசா 30:15; புல 3:26
c சங் 130:7; மீ 7:7

அதி. 132
d 1சா 20:1
e 2சா 7:2, 3
f 2சா 7:2; 1ரா 8:17; 1நா 15:3, 12; அப் 7:45, 46
g 2சா 5:11
h 1சா 17:12
i 1சா 7:1; 1நா 13:6
j சங் 43:3
k 1நா 28:2; சங் 5:7
l எண் 10:35; 2சா 6:17
m 2நா 6:41, 42
n 1ரா 15:4; 2ரா 19:34
o 1ரா 8:25; சங் 89:3, 4; சங் 89:20, 36; ஏசா 9:7; எரே 33:20, 21; மத் 9:27; லூ 1:69; அப் 2:30, 31; அப் 13:22, 23

132:3 *வே.வா., “மகத்தான கூடாரத்தை.” **132:6** *அநேகமாக, “ஒப்பந்தப் பெட்டியை.” **132:7** *வே.வா., “மகத்தான கூடாரத்துக்கு.” **132:9** *வே.வா., “பற்றுமாறாமல்.” **132:10** *வே.வா., “அபிஷேகம் செய்தவரை.”

12 உன்னுடைய மகன்கள் என் ஒப்பந்தத்தின்படி நடந்தால்,
நான் கொடுக்கிற நினைப்பூட்டுதல்களின்படி செய்தால்,[a]
அவர்களுடைய மகன்களும்
உன் சிம்மாசனத்தில் என்றென்றும் உட்காருவார்கள்" என்று வாக்குக் கொடுத்திருக்கிறார்.[b]
13 யெகோவா சீயோனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.[c]
அவர் குடிகொள்வதற்காக அதை விரும்பித் தேர்ந்தெடுத்திருக்கிறார்.[d]
14 "இதுவே நான் என்றென்றும் குடிகொள்ளும் இடம்.
நான் இங்கேயே தங்கியிருப்பேன்,[e] இதுதான் என்னுடைய விருப்பம்.
15 நான் இந்த நகரத்தை ஆசீர்வதித்து, ஏராளமான உணவு கிடைக்கும்படி செய்வேன்.
இங்கிருக்கிற ஏழைகளின் பசியைத் தீர்ப்பேன்.[f]
16 இங்குள்ள குருமார்களுக்கு மீட்பின் உடையை உடுத்துவேன்.[g]
எனக்கு உண்மையாக* இருக்கிறவர்கள் இங்கே சந்தோஷ ஆரவாரம் செய்வார்கள்.[h]
17 இங்கே தாவீதின் பலம் கூடும்படி* செய்வேன்.
நான் தேர்ந்தெடுத்தவருக்காக ஒரு விளக்கை ஏற்பாடு செய்தேன்.[i]
18 அவருடைய எதிரிகளை அவமானத்தால் மூடுவேன்.
ஆனால், அவருடைய தலையில் இருக்கிற கிரீடத்தை ஒளிவீசச் செய்வேன்"[j] என்று சொல்லியிருக்கிறார்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல். தாவீதின் பாடல்.

133 சகோதரர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வது
எவ்வளவு அருமையாக இருக்கிறது!
எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது![k]
2 அது ஆரோனின் தலையில் ஊற்றப்பட்டு,
அவருடைய தாடியில் வழிந்து,[l]
அவருடைய அங்கியின் கழுத்துப்பட்டைவரை ஓடிவருகிற
அருமையான எண்ணெயைப் போல இருக்கிறது.[m]
3 அது சீயோன் மலைகளில்[n] இறங்குகிற எர்மோனின்[o] பனிபோல் இருக்கிறது.
அங்கேதான் யெகோவா ஆசீர்வாதத்தைக் கட்டளையிட்டிருக்கிறார்.
ஆம், முடிவில்லாத வாழ்வைத் தருவதாக ஆணையிட்டிருக்கிறார்.

நகரத்துக்கு ஏறிப்போகிறவர்கள் பாடுகிற பாடல்.

134 யெகோவாவின் ஊழியர்களே,
ராத்திரி நேரங்களில் யெகோவாவின் ஆலயத்தில் சேவை செய்கிற ஊழியர்களே,[p]
நீங்கள் எல்லாரும் யெகோவாவைப் புகழுங்கள்.[q]
2 பரிசுத்தத்தோடு* உங்கள் கைகளை உயர்த்தி,[r]
யெகோவாவைப் புகழுங்கள்.

132:16 *வே.வா., "பற்றுமாறாமல்." **132:17** *நே.மொ., "கொம்பு உயர்த்தப்படும்படி." **134:2** *அல்லது, "ஆலயத்தில்."

அதி. 132
a 1நா 29:19
b 2சா 7:12, 16; 1நா 17:11, 12; சங் 89:20, 29
c சங் 48:2, 3; சங் 78:68; எபி 12:22
d சங் 87:2
e சங் 46:5; ஏசா 24:23
f சங் 22:26; சங் 147:12, 14
g சங் 149:4
h சங் 132:8, 9
i 1ரா 11:36; 1ரா 15:4; 2நா 21:7
j சங் 2:6; சங் 72:8; ஏசா 9:6; வெளி 11:15

அதி. 133
k ஆதி 13:8; யோவா 13:35; கொலோ 3:14; எபி 13:1
l யாத் 29:4, 7
m நீதி 27:9
n சங் 125:2
o உபா 3:8, 9; 1நா 5:23

அதி. 134
p 1நா 9:33; 1நா 23:27, 30; லூ 2:37; வெளி 7:15
q வெளி 19:5
r சங் 28:2; சங் 141:2

3 வானத்தையும் பூமியையும் படைத்த யெகோவா
சீயோனிலிருந்து உங்களை ஆசீர்வதிக்கட்டும்.

135

"யா"வைப் புகழுங்கள்!*
யெகோவாவின் பெயரைப் புகழுங்கள்.
யெகோவாவின் ஊழியர்களே,[a]
2 யெகோவாவின் ஆலயத்தில் சேவை செய்கிறவர்களே,
நம் கடவுளுடைய ஆலயப் பிரகாரங்களில் சேவை செய்கிறவர்களே,
அவரைப் புகழுங்கள்.[b]
3 "யா"வைப் புகழுங்கள்;* ஏனென்றால், யெகோவா நல்லவர்.[c]
அவருடைய பெயரைப் புகழ்ந்து பாடுங்கள்;# ஏனென்றால், அது இனிமையானது.
4 "யா"* தனக்காக யாக்கோபைத் தேர்ந்தெடுத்தார்.
இஸ்ரவேலைத் தன்னுடைய விசேஷ சொத்தாகத் தேர்ந்தெடுத்தார்.[d]
5 யெகோவா மகத்தானவர் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.
நம் எஜமான் மற்ற எல்லா தெய்வங்களையும்விட உயர்ந்தவர்.[e]
6 வானத்திலும் பூமியிலும் கடலிலும் ஆழங்களிலும்
யெகோவா தனக்குப் பிரியமான எல்லாவற்றையும் செய்கிறார்.[f]
7 பூமியின் எல்லா இடங்களிலிருந்தும் அவர் மேகங்களை* எழும்ப வைக்கிறார்.
மழையோடு மின்னலை மின்ன வைக்கிறார்.#
காற்றைத் தன்னுடைய கிடங்குகளிலிருந்து வீசச் செய்கிறார்.[g]
8 எகிப்திலிருந்த மனிதர்களிலும் மிருகங்களிலும்
முதல் பிறப்புகளை அவர் கொன்றுபோட்டார்.[h]
9 எகிப்தே, உன் நடுவில் அவர் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தார்.[i]
பார்வோனுக்கும் அவனுடைய எல்லா ஊழியர்களுக்கும் எதிராக அவற்றைச் செய்தார்.[j]
10 அவர் ஏராளமான தேசங்களை வீழ்த்தினார்.[k]
பலம்படைத்த ராஜாக்களைக் கொன்றுபோட்டார்.[l]
11 எமோரியர்களின் ராஜாவான சீகோனையும்[m]
பாசானின் ராஜாவான ஓகையும் கொன்றுபோட்டார்.[n]
கானானிலிருந்த எல்லா ராஜ்யங்களையும் வென்றார்.
12 அவர்களுடைய தேசத்தைத் தன்னுடைய மக்களுக்குக் கொடுத்தார்,
தன்னுடைய மக்களான இஸ்ரவேலர்களுக்குச் சொத்தாகக் கொடுத்தார்.[o]
13 யெகோவாவே, உங்களுடைய பெயர் என்றென்றும் நிலைத்திருக்கிறது.
யெகோவாவே, உங்களுடைய புகழ் தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கிறது.[p]

135:1, 3 *வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **135:3** #வே.வா., "இசை இசைத்திடுங்கள்." **135:4** *"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **135:7** *வே.வா., "நீராவியை." #அல்லது, "மழைக்கு மதகுகளை வைக்கிறார்."

அதி. 135
a சங் 113:1; வெளி 19:5
b சங் 96:8; சங் 116:19
c சங் 119:68; மத் 19:17
d யாத் 19:5; உபா 7:6
e உபா 10:17; சங் 97:9
f சங் 115:3; ஏசா 46:10
g யாத் 14:21; எண் 11:31; எரே 10:13; எரே 51:16; யோனா 1:4
h யாத் 12:12, 29
i யாத் 7:20; யாத் 8:6, 17; யாத் 9:6, 10; யாத் 9:23; யாத் 10:12, 21
j சங் 136:15
k சங் 44:2
l யோசு 12:7, 8
m எண் 21:23, 24
n எண் 21:33-35
o யோசு 11:23
p யாத் 3:15; சங் 102:12

14 யெகோவா தன்னுடைய மக்களுக்காக வழக்காடுவார்.* [a]
தன்னுடைய ஊழியர்கள்மேல் கரிசனை காட்டுவார். [b]
15 மற்ற தேசத்தார் வணங்குகிற சிலைகள் வெறும் வெள்ளியும் தங்கமும்தான்,
மனிதர்களுடைய கைகளால் செய்யப்பட்டவைதான். [c]
16 அவற்றுக்கு வாய் இருக்கிறது, ஆனால் பேச முடியாது. [d]
கண்கள் இருக்கின்றன, ஆனால் பார்க்க முடியாது.
17 காதுகள் இருக்கின்றன, ஆனால் கேட்க முடியாது.
அவற்றின் மூக்கில் சுவாசமே இல்லை. [e]
18 அவற்றைச் செய்கிற ஆட்களும் அவற்றை நம்புகிற எல்லாரும்
அவற்றைப் போலத்தான் ஆவார்கள். [f]
19 இஸ்ரவேல் வம்சத்தாரே, யெகோவாவைப் புகழுங்கள்.
ஆரோன் வம்சத்தாரே, யெகோவாவைப் புகழுங்கள்.
20 லேவி வம்சத்தாரே, யெகோவாவைப் புகழுங்கள். [g]
யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவர்களே, யெகோவாவைப் புகழுங்கள்.
21 யெகோவா சீயோனில் புகழப்படட்டும். [h]
எருசலேமில் குடிகொண்டிருக்கிறவர் புகழப்படட்டும். [i]
"யா"வைப் புகழுங்கள்!* [j]

136 யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள், அவர் நல்லவர். [k]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர். [l]
2 தேவாதி தேவனுக்கு [m] நன்றி சொல்லுங்கள்.
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
3 எஜமான்களுக்கெல்லாம் எஜமானுக்கு நன்றி சொல்லுங்கள்.
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
4 அவர் ஒருவரே மாபெரும் அற்புதங்களைச் செய்கிறார். [n]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர். [o]
5 அவர் தன்னுடைய கைத்திறமையால்* வானத்தைப் படைத்தார். [p]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
6 அவர் தண்ணீருக்குமேல் நிலப்பரப்பை விரித்தார். [q]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
7 அவர் மாபெரும் ஒளிச்சுடர்களைப் படைத்தார். [r]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
8 அவர் பகலில் ஒளிவீச* சூரியனைப் படைத்தார். [s]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
9 அவர் ராத்திரியில் ஒளிதர* நிலவையும் நட்சத்திரங்களையும் படைத்தார். [t]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.

135:14 *வே.வா., "மக்களைப் பாதுகாப்பார்." **135:21** *வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **136:5** *வே.வா., "புத்திக்கூர்மையால்." **136:8** *வே.வா., "பகலை ஆள." **136:9** *வே.வா., "ராத்திரியை ஆள."

அதி. 135
a யாத் 14:31
b உபா 32:36
c சங் 115:4-8, ஏசா 46:6, அப் 17:29, 1கொ 10:19
d ஆப 2:19
e எரே 10:14
f சங் 97:7, ஏசா 44:9
g உபா 10:8
h சங் 48:1, சங் 132:13
i எரே 3:17
j வெளி 19:6

அதி. 136
k லூ 18:19
l 2நா 7:3, 2நா 20:21, சங் 106:1, சங் 107:1
m சங் 97:9, தானி 2:47
n யாத் 15:11, வெளி 15:3
o சங் 103:17
p யோபு 38:36, நீதி 3:19, 20
q ஆதி 1:9, சங் 24:1, 2
r ஆதி 1:14
s ஆதி 1:16, எரே 31:35
t சங் 8:3

10 அவர் எகிப்தியர்களின் முதல் பிறப்புகளைக் கொன்றுபோட்டார்.[a]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
11 அவர் இஸ்ரவேலர்களை அங்கிருந்து விடுதலை செய்தார்.[b]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
12 அவர் தன்னுடைய கைபலத்தாலும்[c] மகா வல்லமையாலும்
அவர்களை விடுவித்தார்.
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
13 அவர் செங்கடலை இரண்டாகப் பிளந்தார்.[d]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
14 அவர் அதன் நடுவில் இஸ்ரவேலர்களை நடந்துபோக வைத்தார்.[e]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
15 அவர் பார்வோனையும் அவனுடைய படையையும் செங்கடலில்
மூழ்கடித்தார்.[f]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
16 அவர் தன்னுடைய மக்களை வனாந்தரத்தின் வழியாக
அழைத்துவந்தார்.[g]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
17 அவர் மாபெரும் ராஜாக்களை வீழ்த்தினார்.[h]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
18 அவர் பலம்படைத்த ராஜாக்களைக் கொன்றுபோட்டார்.
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
19 அவர் எமோரியர்களின் ராஜாவான சீகோனைக்[i]
கொன்றுபோட்டார்.
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
20 அவர் பாசானின் ராஜாவான ஓகைச் சாகடித்தார்.[j]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
21 அவர் அந்த ஜனங்களுடைய தேசத்தைத் தன்னுடைய மக்களுக்குக்
கொடுத்தார்.[k]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
22 அவர் அதைத் தன் ஊழியர்களான இஸ்ரவேலர்களுக்குச் சொத்தாகக்
கொடுத்தார்.
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
23 அவர் துவண்டுபோயிருந்த நம்மை நினைத்துப் பார்த்தார்.[l]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.[m]
24 அவர் நம்மை எதிரிகளிடமிருந்து மறுபடியும் மறுபடியும்
காப்பாற்றினார்.[n]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
25 அவர் எல்லா உயிர்களுக்கும் உணவு தருகிறார்.[o]
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.
26 பரலோகத்தின் கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்.
அவரே என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.

அதி. 136
a யாத் 12:29
b யாத் 12:51
c யாத் 13:14
d யாத் 14:21
e யாத் 14:29
f யாத் 14:27, 28
g யாத் 13:18
யாத் 15:22
h யோசு 12:7, 8
i எண் 21:21-24
j எண் 21:33-35
k எண் 32:33
l உபா 32:36
m நெ 9:32
n நியா 3:9
நியா 6:9
o சங் 145:15
சங் 147:9

137 பாபிலோனின் ஆறுகளுக்குப் பக்கத்தில்[a] நாங்கள் உட்கார்ந்திருந்தோம்.
சீயோனை நினைத்து அழுதோம்.[b]
2 அங்கிருந்த காட்டரசு மரங்களிலே
எங்கள் யாழ்களைத் தொங்கவிட்டோம்.[c]
3 எங்களை அங்கே பிடித்துக்கொண்டு போனவர்கள் எங்களைப் பாட்டுப் பாடச் சொன்னார்கள்.[d]
அவர்களுக்குப் பொழுதுபோக வேண்டும் என்பதற்காக,
“சீயோனைப் பற்றி ஒரு பாட்டுப் பாடுங்கள்” என்று கேலியாகக் கேட்டார்கள்.
4 யெகோவாவின் பாட்டை அன்னிய மண்ணிலே
நாங்கள் எப்படிப் பாட முடியும்?
5 எருசலேமே, நான் உன்னை மறந்துபோனால்,
என் வலது கை தன்னுடைய வேலையை மறந்துபோகட்டும்.*[e]
6 எருசலேமே, நான் உன்னை நினைக்காமல் போனால்,
எனக்கு எத்தனை பெரிய சந்தோஷங்கள் இருந்தாலும்,
உன்னை என் சந்தோஷத்தின் மகுடமாக நினைக்காமல் போனால்,[f]
என் நாக்கு மேல்வாயோடு ஒட்டிக்கொள்ளட்டும்.
7 யெகோவாவே, எருசலேம் வீழ்ச்சியடைந்தபோது ஏதோமியர்கள் சொன்னதை நினைத்துப் பாருங்கள்.
“அதை இடித்துப்போடுங்கள்! தரைமட்டமாக்குங்கள்!”[g] என்று சொன்னார்களே.
8 பாபிலோன் மகளே, சீக்கிரத்தில் அழியப்போகிறவளே,[h]
நீ எங்களுக்குச் செய்த கொடுமையை
உனக்குத் திருப்பிச் செய்கிறவர் சந்தோஷமானவர்.[i]
9 உன்னுடைய பிள்ளைகளைத் தூக்கி,
பாறைகளின் மேல் அடிக்கிறவர் சந்தோஷமானவர்.[j]

தாவீதின் பாடல்.

138 கடவுளே, உங்களை முழு இதயத்தோடு புகழ்வேன்.[k]
மற்ற தெய்வங்களுக்கு முன்னால்
உங்களைப் புகழ்ந்து பாடுவேன்.*
2 உங்களுடைய பரிசுத்த ஆலயத்தை நோக்கித் தலைவணங்குவேன்.[l]
நீங்கள் மாறாத அன்புள்ளவர், உண்மையுள்ளவர்.
அதனால், உங்கள் பெயரைப் புகழ்வேன்.[m]
எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் வார்த்தையையும் பெயரையும் உயர்த்தியிருக்கிறீர்கள்.*
3 நான் உங்களைக் கூப்பிட்டபோது பதில் கொடுத்தீர்கள்.[n]
எனக்குத் தைரியத்தையும் பலத்தையும் தந்தீர்கள்.[o]

137:5 * அல்லது, “என் வலது கை விளங்காமல் போகட்டும்.” **138:1** * அல்லது, “மற்ற தெய்வங்களுக்கு எதிராக உங்களுக்கு இசை இசைப்பேன்.” **138:2** * அல்லது, “உங்கள் பெயருக்கெல்லாம் மேலாக உங்கள் வார்த்தையை உயர்த்தியிருக்கிறீர்கள்.”

அதி. 137
a எரே 51:13, எசே 3:15, தானி 10:4
b தானி 9:2, 3
c ஏசா 24:8
d சங் 123:4
e நெ 2:3, சங் 84:2, சங் 102:13, 14, ஏசா 62:1, எரே 51:50
f சங் 122:1
g எரே 49:7, புல 4:22, எசே 25:12, ஒப 10–13
h ஏசா 47:1, எரே 25:12, எரே 50:2
i எரே 50:29, வெளி 18:6
j ஏசா 13:1, 16

அதி. 138
k சங் 9:1
l 1சா 3:3, 1நா 16:1, சங் 28:2
m யோவா 17:6
n சங் 18:6
o சங் 29:11, ஏசா 12:2, ஏசா 41:10

4 யெகோவாவே, இந்தப் பூமியிலுள்ள எல்லா ராஜாக்களும் உங்களைப்
புகழ்வார்கள்.[a]
ஏனென்றால், உங்களுடைய வாக்குறுதிகளைப் பற்றிக்
கேள்விப்படுவார்கள்.
5 அவர்கள் யெகோவாவின் வழிகளைப் பற்றிப் பாடுவார்கள்.
ஏனென்றால், யெகோவாவின் மகிமையே மகிமை.[b]
6 யெகோவா மிகவும் உயர்ந்தவராக இருந்தாலும்,
தாழ்மையானவர்களைக் கண்ணோக்கிப் பார்க்கிறார்.[c]
ஆனால், தலைக்கனம் உள்ளவர்களைவிட்டுத் தூரமாகவே இருக்கிறார்.[d]
7 கடவுளே, ஆபத்தான பாதையில் நான் நடந்தாலும்,
நீங்கள் என் உயிரைக் காப்பாற்றுவீர்கள்.[e]
கோபத்தில் சீறுகிற என் எதிரிகளுக்கு விரோதமாக உங்கள் கையை
ஓங்குவீர்கள்.
உங்களுடைய வலது கை என்னைக் காப்பாற்றும்.
8 யெகோவா எனக்காக எல்லாவற்றையும் செய்வார்.
யெகோவாவே, நீங்கள் என்றென்றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்.[f]
உங்கள் கைகளால் உருவாக்கியவர்களை* கைவிட்டு விடாதீர்கள்.[g]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் பாடல்.

139 யெகோவாவே, நீங்கள் என்னை ஆராய்ந்து பார்த்திருக்கிறீர்கள்.
என்னைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்.[h]
2 நான் எப்போது உட்காருகிறேன், எப்போது எழுந்திருக்கிறேன் என்று
உங்களுக்குத் தெரியும்.[i]
நீங்கள் தூரத்தில் இருந்தாலும் என் யோசனைகள்கூட உங்களுக்குத்
தெரியும்.[j]
3 நான் பயணம் செய்யும்போதும் படுக்கும்போதும் என்னைக்
கவனிக்கிறீர்கள்.
என் வழிகளையெல்லாம் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்.[k]
4 யெகோவாவே, என் வாயிலிருந்து ஒரு வார்த்தை வருவதற்கு முன்பே,
நான் என்ன சொல்லப்போகிறேன் என்று உங்களுக்கு நன்றாகத்
தெரியும்.[l]
5 எனக்கு முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும், என்னைச் சுற்றிலும் நீங்கள்
இருக்கிறீர்கள்.
உங்கள் கையை என்மேல் வைக்கிறீர்கள்.
6 நீங்கள் என்னை எவ்வளவு நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்!
இதெல்லாம் என் அறிவுக்கு அப்பாற்பட்டது!*
என் புத்திக்கு எட்டாதது![m]
7 உங்களுடைய சக்திக்கு மறைவாக நான் எங்கே தப்பித்துப்
போக முடியும்?
உங்கள் பார்வைக்கு மறைவாக எங்கே ஓடி ஒளிய முடியும்?[n]
8 நான் வானத்துக்கு ஏறினாலும் நீங்கள் அங்கே இருப்பீர்கள்.

அதி. 138
a சங் 102:15
ஏசா 60:3
b 1ரா 8:10, 11
c 1சா 2:8
சங் 113:6-8
ஏசா 57:15
d யாக் 4:6
1பே 5:5
e சங் 71:20
f சங் 103:17
g யோபு 14:15
சங் 71:18

அதி. 139
h 1சா 16:6, 7
1நா 28:9
சங் 17:3
சங் 139:23
எரே 20:12
i ஆதி 16:13
j சங் 94:11
k ஆதி 28:15
2சா 8:14
யோபு 31:4
சங் 121:8
நீதி 5:21
l எபி 4:12
m யோபு 26:14
யோபு 42:3
சங் 40:5
ரோ 11:33
n யோனா 1:3

138:8 *வே.வா., "கைகளின் செயல்களை." **139:6** *வே.வா., "அதை நினைத்தால் எனக்கு மிகவும் பிரமிப்பாக இருக்கிறது."

நான் கல்லறையில் படுக்கை போட்டாலும் நீங்கள் அங்கே
இருப்பீர்கள்.[a]
9 நான் விடியலின் சிறகுகளோடு பறந்துபோய்,
தொலைதூரத்திலுள்ள கடலருகே தங்கினால்கூட,
10 அங்கேயும் உங்கள் கை எனக்கு வழிகாட்டும்.
உங்கள் வலது கை என்னைத் தாங்கிப் பிடிக்கும்.[b]
11 "இருட்டு கண்டிப்பாக என்னை மூடிக்கொள்ளும்!" என்று நான்
சொல்லும்போது,
என்னைச் சூழ்ந்திருக்கிற இருட்டு வெளிச்சமாக மாறும்.
12 இருட்டுகூட உங்களுக்கு இருட்டாக இருக்காது.
இரவுகூட உங்களுக்குப் பகல்போல் பிரகாசமாக இருக்கும்.[c]
உங்களைப் பொறுத்தவரை, இருட்டும் வெளிச்சமும் ஒன்றுதான்.[d]
13 நீங்கள்தான் என் சிறுநீரகங்களை உருவாக்கினீர்கள்.
என் தாயின் கர்ப்பத்தில் என்னைத் திரைபோட்டு மறைத்தீர்கள்.*[e]
14 பிரமிக்க வைக்கும் விதத்தில் என்னை அற்புதமாகப்
படைத்திருக்கிறீர்கள்![f]
அதனால் உங்களைப் புகழ்கிறேன்.
உங்கள் செயல்கள் எல்லாமே அற்புதமானவை.[g]
அது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.
15 நான் மறைவான இடத்தில் உண்டாக்கப்பட்டபோது,
என் தாயின் கர்ப்பத்தில்* உருவாக்கப்பட்டபோது,
என் எலும்புகள் உங்கள் கண்களுக்கு மறைவாக இருக்கவில்லை.[h]
16 நான் கருவாக இருந்தபோதே உங்கள் கண்கள் என்னைப் பார்த்தன.
என்னுடைய உறுப்புகள் எதுவும் உருவாவதற்கு முன்பே,
அவை ஒவ்வொன்றைப் பற்றியும், அவை உருவாகும்
நாட்களைப் பற்றியும்
உங்களுடைய புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது.
17 கடவுளே, உங்களுடைய யோசனைகள் எனக்கு எவ்வளவு
அருமையானவை![i]
அவை கணக்கிலேயே அடங்காதவை![j]
18 நான் அவற்றை எண்ண ஆரம்பித்தால், அவை கடற்கரை மணலைவிட
அதிகமாக இருக்கும்.[k]
நான் கண்விழிக்கும்போதும் உங்களோடுதான் இருக்கிறேன்.*[l]
19 கடவுளே, நீங்கள் பொல்லாதவர்களை வெட்டி வீழ்த்தினால் எவ்வளவு
நன்றாக இருக்கும்![m]
அப்போது, வன்முறைக்காரர்கள்* என்னைவிட்டுப் போய்விடுவார்கள்.
20 அவர்கள் கெட்ட எண்ணத்தோடு உங்களுக்கு எதிராகப் பேசுகிறார்கள்.
அவர்கள் உங்களுடைய எதிரிகள்; உங்கள் பெயரை வீணாகப்
பயன்படுத்துகிறார்கள்.[n]

139:13 *அல்லது, "என்னை நெய்தீர்கள்." 139:15 *நே.மொ., "பூமியின் ஆழத்தில்." 139:18 *அல்லது, "அவற்றை எண்ணிக்கொண்டுதான் இருப்பேன்." 139:19 *வே.வா., "இரத்தப்பழி உள்ளவர்கள்."

அதி. 139
a யோபு 26:6
நீதி 15:11
b சங் 63:8
சங் 73:23
ஏசா 41:13
c தானி 2:22
d எபி 4:13
e சங் 22:9
சங் 71:6
எரே 1:5
f ஆதி 1:26
g சங் 19:1
சங் 104:24
சங் 111:2
வெளி 15:3
h யோபு 10:10, 11
i ஏசா 55:9
j ரோ 11:33
k சங் 40:5
l சங் 63:6
m சங் 5:6
n யாத் 20:7

21 யெகோவாவே, உங்களை வெறுக்கிறவர்களை நான் வெறுக்காமல் இருப்பேனா?[a]
உங்களை எதிர்க்கிறவர்களை நான் அருவருக்காமல் இருப்பேனா?[b]
22 அவர்களை அடியோடு வெறுக்கிறேன்.[c]
அவர்கள் எனக்குப் பரம விரோதிகளாக ஆகிவிட்டார்கள்.
23 கடவுளே, என்னை ஆராய்ந்து பார்த்து, என் இதயத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.[d]
என்னைச் சோதித்துப் பார்த்து, என் மனதிலுள்ள கவலைகளைப் புரிந்துகொள்ளுங்கள்.[e]
24 எனக்குள் தவறான எண்ணம் ஏதாவது இருக்கிறதா என்று பாருங்கள்.[f]
முடிவில்லாத பாதையில் என்னை வழிநடத்துங்கள்.[g]

இசைக் குழுவின் தலைவனுக்கு; தாவீதின் சங்கீதம்.

140 யெகோவாவே, அக்கிரமம் செய்கிற ஆட்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
வன்முறையில் இறங்குகிற ஆட்களிடமிருந்து எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்.[h]
2 அவர்கள் தங்களுடைய உள்ளத்தில் சதி செய்கிறார்கள்.[i]
நாள் முழுவதும் சண்டையைக் கிளப்பிக்கொண்டே இருக்கிறார்கள்.
3 பாம்பின் நாக்கைப் போலத் தங்களுடைய நாக்கைக் கூர்மையாக்குகிறார்கள்.[j]
அவர்களுடைய உதடுகளின் பின்னால் விரியன் பாம்பின் விஷம் இருக்கிறது.[k] (*சேலா*)
4 யெகோவாவே, பொல்லாதவர்களின் கையிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.[l]
வன்முறையில் இறங்குகிற ஆட்களிடமிருந்து எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்.
என்னை விழ வைக்க அவர்கள் திட்டம் போடுகிறார்கள்.
5 பெருமை பிடித்தவர்கள் எனக்குப் பொறி வைக்கிறார்கள்.
கயிறுகளால் என் பாதையில் வலை விரிக்கிறார்கள்.[m]
என்னைப் பிடிக்க கண்ணிகளை வைக்கிறார்கள்.[n] (*சேலா*)
6 நான் யெகோவாவிடம், "நீங்கள்தான் என் கடவுள்.
யெகோவாவே, உதவிக்காக நான் கெஞ்சுவதைக் கேளுங்கள்"[o] என்று வேண்டுகிறேன்.
7 உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, பலம்படைத்த மீட்பரே,
போர் நாளில் என் தலைக்குக் கவசமாக இருக்கிறீர்கள்.[p]
8 யெகோவாவே, பொல்லாதவர்களின் ஆசைகளை நிறைவேற்றாதீர்கள்.
கர்வம் அவர்களுடைய தலைக்கேறாதபடி, அவர்களுடைய சதித்திட்டங்களை முறியடியுங்கள்.[q] (*சேலா*)
9 என்னைச் சுற்றியிருக்கிறவர்கள் என்னைப் பற்றி மோசமாகப் பேசினார்கள்.
அவர்கள் பேசியதெல்லாம் அவர்கள் தலையிலேயே வந்து விடியட்டும்.[r]

அதி. 139
a 2நா 19:2; 2கொ 6:14
b சங் 119:158
c சங் 101:3
d எரே 20:12
e சங் 94:19
f சங் 17:3
g சங் 5:8; சங் 143:8; சங் 143:10

அதி. 140
h சங் 18:48; சங் 59:1
i சங் 64:2, 6
j சங் 52:1, 2; சங் 58:3, 4
k ரோ 3:13; யாக் 3:8
l சங் 17:8; சங் 36:11; சங் 71:4
m சங் 10:9
n எரே 18:22
o சங் 28:2; சங் 55:1
p 1சா 17:37
q 2சா 15:31; சங் 27:12
r சங் 7:16; நீதி 12:13

10 நெருப்புத் தணல்கள் அவர்கள்மேல் விழட்டும்.[a]
அவர்கள் நெருப்பில் வீசப்படட்டும்.
மறுபடியும் எழுந்துவர முடியாதபடி
ஆழ்கிணற்றுக்குள்[b] தள்ளப்படட்டும்.
11 இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவர்கள் இந்தப்
பூமியிலிருந்து அடியோடு அழிந்துபோகட்டும்.[c]
வன்முறைக்காரர்களைத் தீமை துரத்திப்பிடித்து, அழித்துப்போடட்டும்.
12 எளியவர்களுக்காக யெகோவா வழக்காடுவார்.
ஏழைகளுக்கு நியாயம் செய்வார்;[d] இது எனக்கு நன்றாகத் தெரியும்.
13 நீதிமான்கள் நிச்சயமாகவே உங்களுடைய பெயருக்கு நன்றி
சொல்வார்கள்.
நேர்மையானவர்கள் உங்கள் முகத்துக்கு முன்னால்* குடியிருப்பார்கள்.[e]

தாவீதின் சங்கீதம்.

141 யெகோவாவே, உங்களை நோக்கிக் கூப்பிடுகிறேன்.[f]
எனக்கு உதவி செய்ய சீக்கிரமாக வாருங்கள்.[g]
நான் கூப்பிடும்போது காதுகொடுத்துக் கேளுங்கள்.[h]
2 என் ஜெபம் உங்கள் முன்னால் செலுத்தப்படுகிற*
தூபப்பொருள்போல்[i] இருக்கட்டும்.[j]
கைகளை உயர்த்தி நான் வேண்டுவது, மாலைநேர உணவுக்
காணிக்கைபோல் இருக்கட்டும்.[k]
3 யெகோவாவே, என் வாய்க்குக் காவல் போடுங்கள்.
என் உதடுகளின் வாசலுக்குக் காவல் வையுங்கள்.[l]
4 கெட்ட ஆசைகள் என் இதயத்தில் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.[m]
அக்கிரமக்காரர்களோடு சேர்ந்து அக்கிரமம் செய்ய என்னை
விட்டுவிடாதீர்கள்.
அவர்கள் தரும் விருந்தை நான் சாப்பிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
5 நீதிமான் என்னை அடித்தாலும், அது அவருடைய அன்புக்கு*
அடையாளமாகத்தான் இருக்கும்.[n]
அவர் என்னைக் கண்டித்தாலும், அது என் தலைக்குக் குளுமையான
எண்ணெய் போலத்தான் இருக்கும்.[o]
நான் ஒருபோதும் அதை வேண்டாமென்று சொல்ல மாட்டேன்.[p]
அவருக்குக் கஷ்டங்கள் வரும்போதுகூட நான் தொடர்ந்து
அவருக்காக ஜெபம் செய்வேன்.
6 நீதிபதிகள் மலையிலிருந்து தள்ளப்பட்டால்கூட,
மக்கள் என் வார்த்தைகளைக் கேட்பார்கள்; ஏனென்றால், அவை
இனிமையானவை.
7 ஒருவர் நிலத்தை உழும்போது மண்கட்டிகள் உடைந்து சிதறுவதுபோல்,
எங்களுடைய எலும்புகள் கல்லறைக்கு வெளியே சிதறிக் கிடக்கின்றன.
8 ஆனால் உன்னதப் பேரரசராகிய யெகோவாவே,
என் கண்கள் உங்களையே எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றன.[q]

140:13 *வே.வா., “உங்கள் சன்னிதியில்.” **141:2** *வே.வா., “நன்றாகத் தயாரிக்கப்பட்டு உங்கள் முன்னால் செலுத்தப்படுகிற.” **141:5** *வே.வா., “மாறாத அன்புக்கு.”

அதி. 140
a சங் 11:5, 6
b சங் 55:23
c சங் 12:3
d சங் 10:17, 18; சங் 22:24
e சங் 23:6

அதி. 141
f சங் 31:17
g சங் 40:13; சங் 70:5
h சங் 39:12
i யாத் 30:34-36
j லூ 1:9, 10; வெளி 5:8; வெளி 8:3, 4
k யாத் 29:41
l நீதி 13:3; நீதி 21:23; யாக் 1:26
m 1ரா 8:58; சங் 119:36
n 2சா 12:7, 9; நீதி 17:10; கலா 6:1
o நீதி 6:23; யாக் 5:14
p நீதி 9:8; நீதி 19:25; நீதி 25:12
q 2நா 20:12; சங் 25:15

நான் உங்களிடம் தஞ்சம் அடைந்திருக்கிறேன்.
என் உயிரை எடுத்து விடாதீர்கள்.
9 அவர்கள் வைத்திருக்கிற கண்ணியின் பிடியிலும்,
அக்கிரமக்காரர்கள் வைத்திருக்கிற பொறிகளிலும் சிக்காதபடி
என்னைக் காப்பாற்றுங்கள்.
10 பொல்லாதவர்கள் தாங்கள் விரித்த வலைகளிலேயே விழுவார்கள்.[a]
ஆனால், நான் அவற்றில் சிக்காமல் தப்பித்துக்கொள்வேன்.

மஸ்கீல்.* தாவீது குகையில் ஒளிந்திருந்தபோது[b] செய்த ஜெபம்.

142 உதவிக்காக நான் யெகோவாவைக் கூப்பிடுகிறேன்.[c]
கருணைக்காக யெகோவாவிடம் கெஞ்சுகிறேன்.
2 என் கவலைகளை அவர்முன் கொட்டுகிறேன்.
என் வேதனைகளை அவர்முன் சொல்கிறேன்.[d]
3 நான் நொந்துபோயிருக்கும்போது,* அவரிடம் வேண்டுகிறேன்.
என் பாதையை அவர் கவனிக்கிறார்.[e]
நான் போகும் வழியில்
எதிரிகள் கண்ணிகளை வைக்கிறார்கள்.
4 என்னுடைய வலது பக்கத்தைப் பாருங்கள்,
என்மேல் யாருக்குமே அக்கறை இல்லை.[f]
நான் அடைக்கலம் தேடி ஓடுவதற்கு இடமே இல்லை.[g]
என்னைப் பற்றி யாரும் கவலைப்படுவதே இல்லை.
5 யெகோவாவே, உதவிக்காக உங்களைக் கூப்பிடுகிறேன்.
"நீங்கள்தான் எனக்கு அடைக்கலம்,[h]
இந்த உலகத்தில் உங்களை விட்டால் எனக்கு வேறு யாருமே இல்லை"
என்று சொல்கிறேன்.
6 உதவிக்காக நான் கெஞ்சுவதைக் கேளுங்கள்.
நான் ரொம்பவே துவண்டுபோயிருக்கிறேன்.
என்னைத் துன்புறுத்துகிற ஆட்களிடமிருந்து என்னைக்
காப்பாற்றுங்கள்.[i]
அவர்கள் என்னைவிட பலசாலிகளாக இருக்கிறார்கள்.
7 நான் உங்களுடைய பெயரைப் புகழ விரும்புகிறேன்.
அதனால், இந்தச் சிறையிலிருந்து என்னை வெளியே
கொண்டுவாருங்கள்.
நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளட்டும்.
நீங்கள் எனக்கு அன்போடு உதவுகிறீர்களே!

தாவீதின் சங்கீதம்.

143 யெகோவாவே, என் ஜெபத்தைக் கேளுங்கள்.[j]
உதவிக்காக நான் கெஞ்சுவதைக் கேளுங்கள்.
உங்களுடைய உண்மைத்தன்மைக்கும் நீதிக்கும் ஏற்றபடி எனக்குப்
பதில் கொடுங்கள்.

அதி. 141
a எஸ்தர் 7:10; சங் 7:14, 15; சங் 9:15; சங் 57:6

அதி. 142
b 1சா 22:1; 1சா 24:3; எபி 11:32, 38
c சங் 28:2; சங் 141:1
d சங் 18:6; யோனா 2:7; மத் 26:38, 39; மாற் 15:34; எபி 5:7
e சங் 139:3
f சங் 31:11; சங் 69:20
g 1சா 23:11
h நீதி 18:10
i 1சா 20:33; 1சா 23:26; 1சா 25:29

அதி. 143
j சங் 65:2

142:மே.கு. *சொல் பட்டியலைப் பாருங்கள். **142:3** *வே.வா., "பலமிழந்திருக்கும்போது."

2 அடியேனை விசாரணைக் கூண்டில் நிறுத்தாதீர்கள்.
உயிரோடு இருக்கிற யாருமே உங்கள்முன் நீதிமானாக இருக்க முடியாதே.[a]
3 எதிரி என்னைத் துரத்துகிறான்.
என்னை* தரையில் போட்டு நசுக்குகிறான்.
ரொம்பக் காலத்துக்கு முன் இறந்தவர்களைப் போல என்னை இருட்டில் இருக்க வைக்கிறான்.
4 நான் நொந்துபோயிருக்கிறேன்.[b]
என் இதயத்தில் தெம்பே இல்லை.[c]
5 கடந்த காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கிறேன்.
உங்களுடைய செயல்களைப் பற்றியெல்லாம் தியானிக்கிறேன்.[d]
உங்களுடைய கைகளால் நீங்கள் செய்தவற்றைப் பற்றி ஆர்வத்தோடு யோசித்துப் பார்க்கிறேன்.*
6 கைகளை விரித்து உங்களிடம் ஜெபம் செய்கிறேன்.
வறண்ட நிலம் மழைக்காகத் தவிப்பதுபோல்,
நான் உங்களுக்காகத் தவிக்கிறேன்.[e] (*சேலா*)
7 யெகோவாவே, எனக்குச் சீக்கிரம் பதில் கொடுங்கள்.[f]
என் பலமெல்லாம் போய்விட்டது.[g]
உங்கள் முகத்தை என்னிடமிருந்து மறைத்துக்கொள்ளாதீர்கள்.[h]
இல்லாவிட்டால், நான் சவக்குழிக்குள் போகிறவனைப் போல ஆகிவிடுவேன்.[i]
8 காலையில் உங்களுடைய மாறாத அன்பைப் பற்றிக் கேட்க வையுங்கள்.
ஏனென்றால், நான் உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்.
நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காட்டுங்கள்.[j]
ஏனென்றால், நான் உங்களிடம்தான் உதவிக்காகக் கெஞ்சுகிறேன்.
9 யெகோவாவே, எதிரிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்.[k]
10 உங்களுடைய விருப்பப்படி நடக்க* எனக்குக் கற்றுக்கொடுங்கள்.[l]
நீங்கள்தான் என் கடவுள்.
உங்களுடைய அருமையான சக்தி என்னைச் சமமான பாதையில்# வழிநடத்தட்டும்.
11 யெகோவாவே, உங்களுடைய பெயரை மனதில் வைத்து என் உயிரைக் காப்பாற்றுங்கள்.
உங்கள் நீதியின்படி என்னை வேதனையிலிருந்து காப்பாற்றுங்கள்.[m]
12 உங்களுடைய மாறாத அன்பினால் என் எதிரிகளுக்கு முடிவுகட்டுங்கள்.[n]
என்னைக் கொடுமைப்படுத்துகிற எல்லாரையும் ஒழித்துக்கட்டுங்கள்.[o]
ஏனென்றால், நான் உங்களுடைய ஊழியன்.[p]

143:3 *நே.மொ., "என் உயிரை." **143:5** *வே.வா., "படிக்கிறேன்." **143:10** *வே.வா., "சித்தத்தைச் செய்ய." #வே.வா., "நேர்மையானவர்களின் தேசத்தில்."

அதி. 143
a யோபு 9:2; சங் 130:3; பிர 7:20; ரோ 3:20; கலா 2:16; 1யோ 1:10
b சங் 142:3
c சங் 102:4
d சங் 77:5, 6; சங் 77:11, 12; சங் 111:2, 3
e சங் 63:1
f சங் 40:13; சங் 70:5
g சங் 142:3
h சங் 27:9
i சங் 28:1
j சங் 5:8; நீதி 3:6
k சங் 59:1; சங் 61:3, 4; சங் 91:1
l சங் 25:4
m சங் 31:1
n 1சா 25:29; 1சா 26:9, 10
o 1சா 24:12
p சங் 89:20

அதி. 144

தாவீதின் பாடல்.

144 என் கற்பாறையாகிய[a] யெகோவா புகழப்படட்டும்.
போருக்குப் போக அவர் என் கைகளைப் பழக்கப்படுத்துகிறார்.
போர் செய்ய என் விரல்களுக்குப் பயிற்சி தருகிறார்.[b]
2 அவர்தான் எனக்கு மாறாத அன்பு காட்டுகிறவர், என் கோட்டை,
பாதுகாப்பான* அடைக்கலம், என்னைக் காப்பாற்றுகிறவர்,
என் கேடயம், என் தஞ்சம்,[c]
ஜனங்களை எனக்கு அடிபணிய வைக்கிறவர்.[d]
3 யெகோவாவே, அற்ப மனுஷனை நீங்கள் கண்ணெடுத்துப் பார்ப்பதற்கும்,
அவனைக் கவனிப்பதற்கும் அவன் யார்?[e]
4 மனிதன் வெறும் மூச்சுக்காற்று போலத்தான் இருக்கிறான்.[f]
அவனுடைய வாழ்நாள், மறைந்துபோகிற நிழல் போலத்தான் இருக்கிறது.[g]
5 யெகோவாவே, வானத்தை வளைத்து இறங்குங்கள்.[h]
மலைகளைத் தொட்டு அவற்றைப் புகைய வையுங்கள்.[i]
6 மின்னலை அனுப்பி எதிரிகளைச் சிதறிப்போகச் செய்யுங்கள்.[j]
அம்புகளை எறிந்து அவர்களைக் குழப்பிவிடுங்கள்.[k]
7 பரலோகத்திலிருந்து உங்கள் கைகளை நீட்டுங்கள்.
பாய்ந்து வரும் வெள்ளத்திலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
மற்ற தேசத்தாரின் பிடியிலிருந்து என்னை விடுவியுங்கள்.[l]
8 அவர்கள் பொய் பேசுகிறார்கள்.
வலது கையைத் தூக்கிப் பொய் சத்தியம் செய்கிறார்கள்.
9 கடவுளே, நான் உங்களுக்காகப் புதிய பாடலைப் பாடுவேன்.[m]
பத்து நரம்புகள் கொண்ட யாழை மீட்டி உங்களைப் புகழ்ந்து பாடுவேன்.*
10 நீங்கள்தான் ராஜாக்களுக்கு வெற்றி* தருகிறீர்கள்.[n]
நீங்கள்தான் உங்கள் ஊழியனான தாவீதைக் கொடிய வாளிலிருந்து காப்பாற்றுகிறீர்கள்.[o]
11 கடவுளே, மற்ற தேசத்தார் பொய் பேசுகிறார்கள்.
வலது கையைத் தூக்கிப் பொய் சத்தியம் செய்கிறார்கள்.
அவர்களுடைய பிடியிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
12 அப்போது, எங்களுடைய மகன்கள் வேகமாக வளருகிற இளம் செடிபோல் இருப்பார்கள்.
எங்களுடைய மகள்கள் அரண்மனையின் மூலைகளை அலங்கரிக்கும் தூண்கள்போல் இருப்பார்கள்.
13 எங்களுடைய களஞ்சியங்கள் எல்லாவித விளைச்சலினாலும் நிரம்பி வழியும்.
எங்கள் வயல்களிலுள்ள மந்தைகள் ஆயிரங்களாகவும் பல்லாயிரங்களாகவும் பெருகும்.

144:2 *வே.வா., “உயர்ந்த.” **144:9** *வே.வா., “இசை இசைப்பேன்.” **144:10** *வே.வா., “மீட்பு.”

a உபா 32:4
b 2சா 22:35; சங் 18:2, 34
c 2சா 22:2, 3
d சங் 18:47
e சங் 8:4; எபி 2:6
f சங் 39:5
g 1நா 29:15; யோபு 14:1, 2
h சங் 18:9
i யாத் 19:18
j யோபு 36:32
k 2சா 22:15
l 2சா 22:17, 18; சங் 18:16, 17; சங் 54:3
m சங் 33:3; சங் 40:3; சங் 96:1; ஏசா 42:10; வெளி 5:9; வெளி 14:3
n 2சா 5:19; சங் 18:50
o 1சா 17:45, 46; 2சா 21:15, 17

14 எங்களுடைய சினை மாடுகளுக்கு எந்த அசம்பாவிதமோ
கருச்சிதைவோ ஏற்படாது.
எங்களுடைய பொது சதுக்கங்களில் கதறல் சத்தம் கேட்காது.
15 இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெறுகிற ஜனங்கள்
சந்தோஷமானவர்கள்!
யெகோவாவைக் கடவுளாக வணங்குகிற மக்கள்
சந்தோஷமானவர்கள்![a]

கடவுளைப் புகழ்ந்து தாவீது பாடிய பாடல்.

א [*ஆலெஃப்*]

145 என் கடவுளே, என் ராஜாவே,[b] நான் உங்களை
மகிமைப்படுத்துவேன்.
உங்கள் பெயரை என்றென்றும் புகழ்வேன்.[c]

ב [*பேத்*]

2 நாள் முழுவதும் உங்களைப் புகழ்வேன்.[d]
உங்கள் பெயரை என்றென்றும் புகழ்வேன்.[e]

ג [*கீமெல்*]

3 யெகோவா மகத்தானவர், எல்லா புகழையும் பெறத் தகுதியானவர்.[f]
அவருடைய மகத்துவம் ஆராய முடியாதது.*[g]

ד [*டாலத்*]

4 கடவுளே, உங்கள் செயல்களைத் தலைமுறை தலைமுறைக்கும் மக்கள்
புகழ்வார்கள்.
உங்களுடைய வல்லமையான செயல்களைப் பற்றி அவர்கள்
பேசுவார்கள்.[h]

ה [*ஹே*]

5 உங்களுடைய மகத்துவத்தின் சிறப்பையும் மேன்மையையும் பற்றிப்
பேசுவார்கள்.[i]
நான் உங்களுடைய அற்புதமான செயல்களைப் பற்றித் தியானிப்பேன்.

ו [*வா*]

6 நீங்கள் செய்த பிரமிப்பூட்டும் காரியங்களை* பற்றி அவர்கள்
பேசுவார்கள்.
நான் உங்களுடைய மகத்துவத்தைப் பற்றி அறிவிப்பேன்.

ז [*ஸாயின்*]

7 நீங்கள் செய்த ஏராளமான நன்மைகளுக்காக அவர்கள் உங்களை
வாயாரப் புகழ்வார்கள்.[j]
உங்களுடைய நீதியை நினைத்து அவர்கள் சந்தோஷ ஆரவாரம்
செய்வார்கள்.[k]

ח [*ஹேத்*]

8 யெகோவா கரிசனையும்* இரக்கமும் உள்ளவர்,[l]
சீக்கிரத்தில் கோபப்படாதவர், மாறாத அன்பை அளவில்லாமல்
காட்டுகிறவர்.[m]

ט [*டேத்*]

9 யெகோவா எல்லாருக்கும் நல்லது செய்கிறார்.[n]

145:3 *வே.வா., “நம் புத்திக்கு எட்டாதது.” **145:6** *வே.வா., “உங்களுடைய வல்லமையை.” **145:8** *வே.வா., “கனிவும்.”

அதி. 144
a சங் 33:12
சங் 37:9
சங் 37:37
சங் 146:5

அதி. 145
b ஏசா 33:22
வெளி 11:17
c 1நா 29:10
d சங் 119:164
e சங் 146:2
f சங் 150:2
ரோ 1:20
வெளி 15:3
g யோபு 26:14
சங் 139:6
ரோ 11:33
h யாத் 12:26, 27
i சங் 8:1
j 1ரா 8:66
சங் 13:6
சங் 31:19
ஏசா 63:7
எரே 31:12
k சங் 51:14
வெளி 15:3
l 2நா 30:9
எபே 2:4
m யாத் 34:6
நெ 9:17
n சங் 25:8
நாகூ 1:7
மத் 5:44, 45
அப் 14:17
யாக் 1:17

அவருடைய இரக்கம் அவருடைய எல்லா செயல்களிலும் தெரிகிறது.

י [யோத்]

10 யெகோவாவே, உங்களுடைய படைப்புகளெல்லாம் உங்களை
மகிமைப்படுத்தும்.[a]
உங்களுக்கு உண்மையாக* இருக்கிறவர்கள் உங்களைப்
புகழ்வார்கள்.[b]

כ [காஃப்]

11 உங்களுடைய ஆட்சியின் மகிமையை அவர்கள் அறிவிப்பார்கள்.[c]
உங்களுடைய வல்லமையைப் பற்றிப் பேசுவார்கள்.[d]

ל [லாமெத்]

12 உங்களுடைய வல்லமையான செயல்களைப் பற்றி மனிதர்களுக்குச்
சொல்வார்கள்.[e]
உங்களுடைய ஆட்சியின்[f] சிறப்பையும் மேன்மையையும் பற்றி
எல்லாருக்கும் சொல்வார்கள்.

מ [மேம்]

13 உங்களுடைய ஆட்சி என்றென்றும் நிலைத்திருக்கும்.
உங்களுடைய ராஜ்யம் தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும்.[g]

ס [சாமெக்]

14 கீழே விழுகிற எல்லாரையும் யெகோவா தாங்கிப்பிடிக்கிறார்.[h]
துவண்டுபோனவர்களைத் தூக்கி நிறுத்துகிறார்.[i]

ע [ஆயின்]

15 எல்லா ஜீவன்களின் கண்களும் உங்களையே எதிர்பார்த்துக்கொண்டு
இருக்கின்றன.
அந்தந்த சமயத்தில் நீங்கள் அவற்றுக்கு உணவு தருகிறீர்கள்.[j]

פ [பே]

16 நீங்கள் உங்களுடைய கையைத் திறந்து,
எல்லா உயிர்களின் ஆசைகளையும் திருப்திப்படுத்துகிறீர்கள்.[k]

צ [சாதே]

17 யெகோவா எப்போதும் நீதியானதைச் செய்கிறார்.[l]
எப்போதும் உண்மையாக* நடந்துகொள்கிறார்.[m]

ק [கோஃப்]

18 யெகோவா தன்னை நோக்கிக் கூப்பிடுகிற எல்லாருடைய பக்கத்திலும்
இருக்கிறார்.[n]
உண்மையோடு* தன்னை நோக்கிக் கூப்பிடுகிற எல்லாருடைய
பக்கத்திலும் இருக்கிறார்.[o]

ר [ரேஷ்]

19 தனக்குப் பயந்து நடக்கிறவர்களின் ஆசையை அவர்
நிறைவேற்றுகிறார்.[p]
உதவிக்காக அவர்கள் கதறுவதைக் கேட்டு, அவர்களைக்
காப்பாற்றுகிறார்.[q]

ש [ஷீன்]

20 தன்னை நேசிக்கிற எல்லாரையும் யெகோவா காக்கிறார்.[r]
ஆனால், பொல்லாதவர்களை அவர் ஒழித்துக்கட்டுவார்.[s]

145:10, 17 *வே.வா., "பற்றுமாறாமல்." **145:18** *வே.வா., "உண்மை மனதோடு."

அதி. 145
a சங் 19:1
b சங் 30:4; எபி 13:15
c லூ 10:8, 9
d உபா 3:24; 1நா 29:11; வெளி 15:3
e சங் 98:1
f சங் 103:19
g சங் 146:10; 1தீ 1:17
h சங் 37:23, 24; சங் 94:18
i சங் 146:8
j ஆதி 1:30; சங் 136:25
k சங் 104:27, 28; சங் 107:9; சங் 132:14, 15
l ஆதி 18:25; உபா 32:4
m சங் 18:25; வெளி 15:3, 4
n சங் 34:18; யாக் 4:8
o சங் 17:1
p சங் 34:9
q சங் 37:39, 40; சங் 50:15
r சங் 31:23; சங் 97:10
s நீதி 2:22

ת [ட்டா]

21 என் வாய் யெகோவாவைப் புகழும்.[a]
எல்லா உயிர்களும் அவருடைய பரிசுத்த பெயரை என்றென்றும் புகழட்டும்.[b]

146 “யா”வைப் புகழுங்கள்!* [c]
என் ஜீவன் யெகோவாவைப் புகழட்டும்.[d]
2 வாழ்நாளெல்லாம் நான் யெகோவாவைப் புகழ்வேன்.
நான் உயிரோடு இருக்கும்வரை என் கடவுளைப் புகழ்ந்து பாடுவேன்.*
3 அதிகாரிகளை* நம்பாதீர்கள்,
மற்ற மனிதர்களையும் நம்பாதீர்கள்.
அவர்களால் உங்கள் உயிரைக் காப்பாற்ற முடியாது.[e]
4 அவர்களுடைய உயிர்சக்தி* போய்விடுகிறது, அவர்கள் மண்ணுக்குத் திரும்புகிறார்கள்.[f]
அதே நாளில் அவர்களுடைய யோசனைகள் அழிந்துபோகின்றன.[g]
5 யாக்கோபின் கடவுளைத் துணையாகக் கொண்டிருப்பவன் சந்தோஷமானவன்.[h]
தன் கடவுளான யெகோவாமேல் நம்பிக்கையாக இருக்கிறவன் சந்தோஷமானவன்.[i]
6 அவர்தான் வானத்தையும் பூமியையும்
கடலையும் அவற்றிலுள்ள எல்லாவற்றையும் படைத்தார்.[j]
அவர் எப்போதுமே உண்மையோடு நடந்துகொள்கிறார்.[k]
7 மோசடி செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்குகிறார்.
பசியில் வாடுகிறவர்களுக்கு உணவு கொடுக்கிறார்.[l]
கைதிகளை யெகோவா விடுதலை செய்கிறார்.[m]
8 கண் தெரியாதவர்களின் கண்களை யெகோவா திறக்கிறார்.[n]
துவண்டுபோனவர்களை யெகோவா தூக்கி நிறுத்துகிறார்.[o]
நீதிமான்களை யெகோவா நேசிக்கிறார்.
9 தன் மக்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்தாரை யெகோவா பாதுகாக்கிறார்.
அப்பா இல்லாத பிள்ளைகளுக்கும் விதவைகளுக்கும் ஆதரவாக இருக்கிறார்.[p]
ஆனால், பொல்லாதவர்களின் திட்டங்களை முறியடிக்கிறார்.[q]
10 யெகோவா என்றென்றும் ராஜாவாக இருப்பார்.[r]
சீயோனே, உன் கடவுள்தான் தலைமுறை தலைமுறைக்கும் ராஜா.
“யா”வைப் புகழுங்கள்!*

147 “யா”வைப் புகழுங்கள்!*
நம் கடவுளைப் புகழ்ந்து பாடுவது நல்லது.
அவரைப் புகழ்வது எவ்வளவு இனிமையானது! எவ்வளவு பொருத்தமானது![s]

146:1, 10; 147:1 *வே.வா., “அல்லேலூயா!” “யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **146:2** *வே.வா., “இசை இசைப்பேன்.” **146:3** *வே.வா., “உங்கள் தலைவர்களை.” **146:4** *வே.வா., “உயிர்மூச்சு.”

அதி. 145
a சங் 34:1
சங் 51:15
b சங் 117:1
சங் 150:6

அதி. 146
c வெளி 19:6
d சங் 103:1
e சங் 62:9
சங் 118:8, 9
ஏசா 2:22
எரே 17:5
f ஆதி 3:19
சங் 104:29
பிர 3:20
பிர 12:7
g பிர 9:5, 10
ஏசா 38:18
h சங் 46:7
i சங் 71:5
எரே 17:7
j அப் 4:24
வெளி 14:7
k உபா 7:9
l சங் 107:9
சங் 145:16
m சங் 107:14
சங் 142:7
n ஏசா 29:18
ஏசா 35:5
o சங் 145:14
2கொ 7:6
p உபா 10:18
சங் 68:5
q சங் 145:20
r யாத் 15:18
தானி 6:26
வெளி 11:15

அதி. 147
s சங் 135:3

2 யெகோவா எருசலேமைக் கட்டுகிறார்.[a]
இஸ்ரவேலிலிருந்து சிதறிப்போனவர்களைக் கூட்டிச்சேர்க்கிறார்.[b]
3 உள்ளம் உடைந்தவர்களை அவர் குணமாக்குகிறார்.
அவர்களுடைய காயங்களுக்குக் கட்டுப் போடுகிறார்.
4 நட்சத்திரங்களை அவர் எண்ணுகிறார்.
அவை ஒவ்வொன்றையும் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறார்.[c]
5 நம்முடைய எஜமான் மகத்தானவர், மகா வல்லமை உள்ளவர்.[d]
அவருடைய புரிந்துகொள்ளுதலுக்கு எல்லையே இல்லை.[e]
6 தாழ்மையானவர்களை* யெகோவா தூக்கிவிடுகிறார்.[f]
ஆனால், பொல்லாதவர்களைத் தரையில் தள்ளிவிடுகிறார்.
7 யெகோவாவுக்கு நன்றி சொல்லிப் பாடுங்கள்.
யாழ் இசைத்து நம் கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள்.
8 அவர் வானத்தை மேகங்களால் மூடுகிறார்.
பூமிக்கு மழை தருகிறார்.[g]
மலைகள்மேல் புல்லை முளைக்க வைக்கிறார்.[h]
9 விலங்குகளுக்கு இரை தருகிறார்.[i]
பசியில் கத்துகிற அண்டங்காக்கைக் குஞ்சுகளுக்கு உணவு
கொடுக்கிறார்.[j]
10 குதிரைகளின் பலத்தைப் பார்த்து அவர் ஆச்சரியப்படுவதில்லை.[k]
மனிதனுடைய கால்களின் வலிமையைப் பார்த்து அவர்
அசந்துபோவதில்லை.[l]
11 யெகோவா தனக்குப் பயந்து நடக்கிறவர்களைப் பார்த்து
சந்தோஷப்படுகிறார்.[m]
தன்னுடைய மாறாத அன்புக்காகக் காத்திருப்பவர்களைப் பார்த்து
சந்தோஷப்படுகிறார்.[n]
12 எருசலேமே, யெகோவாவை மகிமைப்படுத்து.
சீயோனே, உன் கடவுளைப் புகழ்ந்திடு.
13 உன்னுடைய வாசலின் தாழ்ப்பாள்களை அவர் உறுதியாக்குகிறார்.
உன்னிடம் இருக்கிற உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.
14 உன்னுடைய எல்லைகளுக்குள் சமாதானத்தைப் பொழிகிறார்.[o]
உயர்தரமான கோதுமையால் உன்னைத் திருப்தியாக்குகிறார்.[p]
15 அவர் பூமிக்குக் கட்டளை கொடுக்கிறார்.
அவருடைய வார்த்தை வேகமாக ஓடிவருகிறது.
16 பூமியை வெள்ளைக் கம்பளத்தால் மூடுவதுபோல் பனியால் அவர்
மூடுகிறார்.[q]
சாம்பலைத் தூவுவதுபோல் உறைபனியைத் தூவுகிறார்.[r]
17 ஆலங்கட்டிகளை* ரொட்டித் துணுக்குகள்போல் விழ வைக்கிறார்.[s]
அவர் வர வைக்கும் குளிரை யாரால் தாங்க முடியும்?[t]
18 அவர் கட்டளை கொடுக்கிறார், ஆலங்கட்டிகள் உருகுகின்றன.

147:6 * வே.வா., "சாந்தமானவர்களை." **147:17** * அதாவது, "பனிக்கட்டிகளை."

அதி. 147
a சங் 102:16
b உபா 30:1-3; எசே 36:24
c ஏசா 40:26
d நாகூ 1:3
e ஏசா 40:28; ரோ 11:33
f சங் 37:11
g 1ரா 18:45; எரே 14:22; மத் 5:45
h யோபு 38:25-27; ஏசா 30:23
i சங் 136:25
j யோபு 38:41; லூ 12:24
k ஏசா 31:1; ஓசி 1:7
l 1சா 16:7
m மல் 3:16
n சங் 33:18
o லேவி 26:6; ஏசா 60:17
p உபா 8:7, 8; சங் 132:14, 15
q யோபு 37:6
r யோபு 38:29
s யோசு 10:11
t யோபு 37:10

அவர் தன்னுடைய காற்றை வீச வைக்கிறார்,[a] தண்ணீர்
பாய்ந்தோடுகிறது.
19 யாக்கோபுக்குத் தன்னுடைய வார்த்தையைச் சொல்கிறார்.
இஸ்ரவேலுக்குத் தன்னுடைய விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும்
தெரியப்படுத்துகிறார்.[b]
20 வேறெந்தத் தேசத்தாருக்கும் இதுபோல் அவர் செய்ததில்லை.[c]
அவருடைய நீதித்தீர்ப்புகளைப் பற்றி அவர்களுக்கு எதுவுமே
தெரியாது.
"யா"வைப் புகழுங்கள்!*[d]

148 "யா"வைப் புகழுங்கள்!*
பரலோகத்தில் இருப்பவர்களே, யெகோவாவைப் புகழுங்கள்.[e]
உயரத்தில் இருப்பவர்களே, அவரைப் புகழுங்கள்.
2 தேவதூதர்களே, நீங்கள் எல்லாரும் அவரைப் புகழுங்கள்.[f]
அவருடைய படைகளே, அவரைப் புகழுங்கள்.[g]
3 சூரியனே, சந்திரனே, அவரைப் புகழுங்கள்.
ஒளிவீசும் நட்சத்திரங்களே, அவரைப் புகழுங்கள்.[h]
4 வானாதி வானங்களே, அவரைப் புகழுங்கள்.
மழை மேகங்களே, அவரைப் புகழுங்கள்.
5 அவை யெகோவாவின் பெயரைப் புகழட்டும்.
அவர் கட்டளை கொடுத்தார், அவை படைக்கப்பட்டன.[i]
6 அவற்றை என்றென்றும் அவர் நிலைநிறுத்தியிருக்கிறார்.[j]
என்றும் அழியாத சட்டத்தை அவற்றுக்குக் கொடுத்திருக்கிறார்.[k]
7 பூமியில் இருப்பவர்களே, யெகோவாவைப் புகழுங்கள்.
ராட்சதக் கடல் பிராணிகளே, ஆழ்கடல்களே,
8 மின்னல்களே, ஆலங்கட்டிகளே,* பனித்துளிகளே, அடர்ந்த
மேகங்களே,
அவருடைய கட்டளையை நிறைவேற்றுகிற புயல் காற்றே,[l]
9 மலைகளே, குன்றுகளே,[m]
கனி தரும் மரங்களே, தேவதாரு மரங்களே,[n]
10 காட்டு விலங்குகளே,[o] வீட்டு விலங்குகளே,
ஊரும் பிராணிகளே, சிறகடிக்கும் பறவைகளே,
11 பூமியின் ராஜாக்களே, தேசங்களே,
பூமியின் தலைவர்களே, நீதிபதிகளே,[p]
12 இளம் ஆண்களே, இளம் பெண்களே,
பெரியவர்களே, சிறியவர்களே,
நீங்கள் எல்லாரும் கடவுளைப் புகழுங்கள்.
13 படைப்புகள் அனைத்தும் யெகோவாவின் பெயரைப் புகழட்டும்.
ஏனென்றால், அவருடைய பெயர் எட்ட முடியாதளவுக்கு உயர்ந்தது.[q]
அவருடைய மகத்துவம் வானத்தையும் பூமியையும்விட உயர்ந்தது.[r]

147:20; 148:1 *வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **148:8** *அதாவது, "பனிக்கட்டிகளே."

அதி. 147
a சங் 148:8
b உபா 4:5
c யாத் 19:5, யாத் 31:16, 17, உபா 4:8, 1நா 17:21, ரோ 3:1, 2
d வெளி 19:6

அதி. 148
e சங் 89:5
f சங் 103:20, லூ 2:13
g எரே 32:18, யூ 14
h சங் 19:1
i சங் 33:6
j சங் 89:37
k சங் 119:91, எரே 31:35, 36, எரே 33:25
l யாத் 9:23, சங் 107:25, ஏசா 30:30
m சங் 98:8
n 1நா 16:33, ஏசா 44:23
o ஏசா 43:20
p சங் 2:10, 11
q சங் 8:1, ஏசா 12:4
r 1ரா 8:27, 1நா 29:11

14 அவர் தனக்கு உண்மையாக* இருக்கிற ஜனத்தின் புகழுக்காக,
தனக்கு நெருக்கமாக இருக்கிற இஸ்ரவேலர்களின் புகழுக்காக,
அவர்களுடைய பலத்தைக் கூட்டுவார்.
"யா"வைப் புகழுங்கள்!#

149 "யா"வைப் புகழுங்கள்!#
யெகோவாவுக்காகப் புதிய பாடலைப் பாடுங்கள்.[a]
உண்மையுள்ளவர்களின்* சபையில் அவரைப் புகழுங்கள்.[b]
2 இஸ்ரவேல் தன்னுடைய மகத்தான படைப்பாளரை[c] நினைத்து சந்தோஷப்படட்டும்.
சீயோனின் பிள்ளைகள் தங்கள் ராஜாவை நினைத்து மகிழ்ச்சி அடையட்டும்.
3 அவர்கள் ஆடிப்பாடி அவருடைய பெயரைப் புகழட்டும்.[d]
கஞ்சிராவையும் யாழையும் இசைத்து அவரைப் புகழ்ந்து பாடட்டும்.[e]
4 யெகோவா தன்னுடைய மக்களைப் பார்த்து சந்தோஷப்படுகிறார்.[f]
தாழ்மையானவர்களை* மீட்பினால் அலங்கரிக்கிறார்.[g]
5 உண்மையுள்ளவர்கள்* தங்களுக்குக் கிடைக்கும் மகிமையினால் பூரித்துப்போகட்டும்.
தங்கள் படுக்கைகளில் சந்தோஷ ஆரவாரம் செய்யட்டும்.[h]
6 கடவுளை அவர்கள் வாயாரப் புகழ்ந்து பாடட்டும்.
இரண்டு பக்கமும் கூர்மையான வாளைக் கையில் எடுக்கட்டும்.
7 ஏனென்றால், அவர்கள் மற்ற தேசங்களைப் பழிவாங்க வேண்டும்.
மற்ற ஜனங்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்.
8 அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளால் கட்ட வேண்டும்.
அவர்களுடைய தலைவர்களுக்கு இரும்பு விலங்குகளை மாட்ட வேண்டும்.
9 அவர்களுக்கு எதிராக எழுதப்பட்ட தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும்.[i]
இந்தப் பெருமை கடவுளுக்கு உண்மையாக* இருக்கிற எல்லாருக்கும் கொடுக்கப்படும்.
"யா"வைப் புகழுங்கள்!#

150 "யா"வைப் புகழுங்கள்!#[j]
அவருடைய பரிசுத்த ஆலயத்தில் அவரைப் புகழுங்கள்.[k]
அவருடைய பலத்துக்கு அத்தாட்சியான ஆகாயவிரிவிலே அவரைப் புகழுங்கள்.[l]
2 அவருடைய மகத்தான செயல்களுக்காக அவரைப் புகழுங்கள்.[m]
அவருடைய எல்லையில்லாத மகத்துவத்துக்காக அவரைப் புகழுங்கள்.[n]
3 ஊதுகொம்பை ஊதி அவரைப் புகழுங்கள்.[o]
நரம்பிசைக் கருவியையும் யாழையும் இசைத்து அவரைப் புகழுங்கள்.[p]

அதி. 149
a சங் 33:3, சங் 96:1, ஏசா 42:10, வெளி 5:9
b சங் 22:22
c சங் 100:3, ஏசா 54:5
d நியா 11:34
e யாத் 15:20, சங் 150:4
f சங் 84:11
g சங் 132:16, ஏசா 61:10
h சங் 63:6
i உபா 7:1

அதி. 150
j வெளி 19:6
k சங் 116:19
l சங் 19:1
m சங் 107:15, வெளி 15:3
n உபா 3:24, சங் 145:3
o சங் 81:3
p 1நா 15:28

148:14; 149:9 *வே.வா., "பற்றுமாறாமல்." **148:14; 149:1, 9; 150:1** #வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **149:1** *வே.வா., "பற்றுமாறாதவர்களின்." **149:4** *வே.வா., "சாந்தமானவர்களை." **149:5** *வே.வா., "பற்றுமாறாதவர்கள்."

4 கஞ்சிராவைத் தட்டியும்,[a] நடனமாடியும்* அவரைப் புகழுங்கள்.
யாழை[b] மீட்டியும், புல்லாங்குழலை[c] ஊதியும் அவரைப் புகழுங்கள்.
5 மெல்லிய ஓசை எழுப்பும் ஜால்ராக்களால் அவரைப் புகழுங்கள்.
பேரோசை எழுப்பும் ஜால்ராக்களால் அவரைப் புகழுங்கள்.[d]
6 சுவாசமுள்ள எல்லா உயிர்களுமே “யா”வைப் புகழட்டும்.
“யா”வைப் புகழுங்கள்!*[e]

150:4 *வே.வா., “வட்டமாக நடனமாடியும்.” **150:6** *வே.வா., “அல்லேலூயா!” “யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 150
a யாத் 15:20
b சங் 92:1, 3
சங் 144:9
c 1சா 10:5
d 2சா 6:5
1நா 15:19
1நா 16:5
e வெளி 5:13

நீதிமொழிகள்

முக்கியக் குறிப்புகள்

நீதிமொழிகள்: அர்த்தம், “பொன்மொழிகள்.”

1 நீதிமொழிகள் எழுதப்பட்டதற்கான காரணம் (1-7)
கெட்ட சகவாசத்தால் வரும் ஆபத்துகள் (8-19)
உண்மையான ஞானம் பொது இடங்களில் நின்று அழைக்கிறது (20-33)

2 ஞானத்தின் மதிப்பு (1-22)
புதையல்களைத் தேடுவதுபோல் ஞானத்தைத் தேடு (4)
யோசிக்கும் திறன் பாதுகாப்பு தரும் (11)
ஒழுக்கக்கேடாக நடந்தால் அழிவுதான் வரும் (16-19)

3 ஞானமாக நடந்து, யெகோவாவை நம்பு (1-12)
மதிப்புமிக்க பொருள்களால் யெகோவாவை மகிமைப்படுத்து (9)
ஞானம் சந்தோஷத்தைத் தரும் (13-18)
ஞானம் பாதுகாப்பைத் தரும் (19-26)
மற்றவர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை (27-35)
மற்றவர்களுக்கு நல்லது செய்ய முடிந்தால் செய்ய வேண்டும் (27)

4 அப்பாவின் ஞானமான அறிவுரைகள் (1-27)
எல்லாவற்றையும்விட ஞானத்தைச் சம்பாதி (7)
பொல்லாதவர்களின் பாதைகளை வெறுத்துவிடு (14, 15)
நீதிமான்களின் பாதை அதிகமதிகமாகப் பிரகாசிக்கிறது (18)
“உன் இதயத்தைப் பாதுகாத்துக்கொள்” (23)

5 நடத்தைகெட்ட பெண்ணைப் பற்றிய எச்சரிக்கை (1-14)
உன் மனைவியோடு சந்தோஷமாக இரு (15-23)

6 கடனுக்கு உத்தரவாதம் கொடுப்பதைக் குறித்து ஜாக்கிரதை (1-5)
“சோம்பேறியே, நீ போய் எறும்பைப் பார்” (6-11)
உதவாக்கரையாகவும் அயோக்கியனாகவும் இருப்பவன் (12-15)
யெகோவா வெறுக்கும் ஏழு காரியங்கள் (16-19)
நடத்தைகெட்ட பெண்ணிடமிருந்து உன்னைப் பாதுகாத்துக்கொள் (20-35)

7 கடவுளுடைய கட்டளைகளை ஏற்றுக்கொண்டு வாழ்ந்திடு (1-5)
விவரம் தெரியாத வாலிபன் மயக்கப்படுகிறான் (6-27)
“வெட்டப்படுவதற்காக இழுத்துச் செல்லப்படுகிற மாட்டைப் போல” (22)

8 ஞானம் பேசுகிறது (1-36)
‘நான் படைப்புகளிலேயே முதல் படைப்பு’ (22)
‘கடவுளுக்குப் பக்கத்தில் கைதேர்ந்த கலைஞனாக இருந்தேன்’ (30)
‘மனுஷர்கள்மேல் கொள்ளைப் பிரியம் வைத்திருந்தேன்’ (31)

9 ஞானம் அழைக்கிறது (1-12)
"என்னால் நீ பல்லாண்டு காலம் வாழ்வாய்" (11)
புத்தியில்லாத பெண் கூப்பிடுகிறாள் (13-18)
"திருட்டுத் தண்ணீர் தித்திப்பாக இருக்கும்" (17)

சாலொமோனின் நீதிமொழிகள் (10:1–24:34)

10 ஞானமுள்ள மகன் தன் அப்பாவைச் சந்தோஷப்படுத்துகிறான் (1)
சுறுசுறுப்பான கைகள் செல்வத்தைக் கொண்டுவரும் (4)
அதிகமாகப் பேசுவது பாவத்தில்தான் போய் முடியும் (19)
யெகோவாவின் ஆசீர்வாதம்தான் சொத்து (22)
யெகோவாவுக்குப் பயந்து நடப்பதால் ஆயுள் கூடும் (27)

11 அடக்கமானவர்களிடம் ஞானம் இருக்கும் (2)
கடவுளைவிட்டு விலகியவன் அடுத்தவர்களைச் சீரழிக்கிறான் (9)
"ஆலோசகர்கள் நிறைய பேர் இருந்தால் வெற்றி" (14)
தாராள குணமுள்ளவன் செழிப்பான் (25)
சொத்துப்பத்துகளை நம்புகிறவன் விழுந்துபோவான் (28)

12 கண்டிக்கப்படுவதை வெறுக்கிறவன் புத்தியில்லாதவன் (1)
"யோசிக்காமல் பேசுவது வாள் போலக் குத்தும்" (18)
சமாதானத்துக்காகப் பாடுபடுகிறவர்களுக்குச் சந்தோஷம் (20)
பொய் பேசும் உதடுகளை யெகோவா அருவருக்கிறார் (22)
கவலை ஒருவரின் இதயத்தைப் பாரமாக்கும் (25)

13 ஆலோசனை கேட்கிறவர்கள் ஞானமுள்ளவர்கள் (10)
எதிர்பார்ப்பு தாமதமானால் நெஞ்சம் நொந்துபோகும் (12)
உண்மையுள்ள தூதுவனின் செய்தியால் நன்மைகள் (17)
ஞானமுள்ளவர்களோடு நடக்கிறவன் ஞானமடைவான் (20)
கண்டித்துத் திருத்துவது அன்பின் அடையாளம் (24)

14 இதயத்தின் வேதனை இதயத்துக்குத்தான் தெரியும் (10)
சரியென்று தோன்றுகிற ஒரு வழி மரணத்தைக் கொண்டுவரலாம் (12)
விவரம் தெரியாதவன் எல்லாவற்றையும் நம்பிவிடுகிறான் (15)
பணக்காரனுக்கு ஏகப்பட்ட நண்பர்கள் (20)
அமைதியான உள்ளம் உடலுக்கு ஆரோக்கியம் (30)

15 சாந்தமான பதில் கோபத்தைத் தணிக்கும் (1)
யெகோவாவின் கண்கள் எங்கும் பார்க்கின்றன (3)
நேர்மையானவரின் ஜெபம் கடவுளுக்குப் பிரியமானது (8)
கலந்துபேசாமல் இருந்தால் திட்டங்கள் தோல்வியடையும் (22)
பதில் சொல்வதற்கு முன்பு யோசி (28)

16 யெகோவா உள்நோக்கத்தை ஆராய்கிறார் (2)
நீ செய்வதையெல்லாம் யெகோவாவிடம் ஒப்படைத்துவிடு (3)
சரியான தராசுகள் யெகோவாவிடமிருந்து வந்தவை (11)
அகம்பாவம் வந்தால் அழிவு வரும் (18)
நரைமுடி அழகான கிரீடம் (31)

17 நன்மைக்குப் பதிலாகத் தீமை செய்யாதே (13)
வாக்குவாதம் வெடிப்பதற்கு முன் அங்கிருந்து போய்விடு (14)
உண்மையான நண்பன் எல்லா சமயத்திலும் அன்பு காட்டுகிறான் (17)
"சந்தோஷமான உள்ளம் அருமையான மருந்து" (22)
பகுத்தறிவு உள்ளவன் அமைதியாக இருப்பான் (27)

18 தன்னைத் தனிமைப்படுத்துகிறவன் சுயநலவாதி, ஞானம் இல்லாதவன் (1)
யெகோவாவின் பெயர் ஒரு பலமான கோட்டை (10)
சொத்து பாதுகாப்பு தரும் என்பது வெறும் கற்பனையே (11)
இருதரப்பு வாதத்தையும் கேட்பதுதான் ஞானம் (17)
கூடப்பிறந்தவனைவிட பாசமாக ஒட்டிக்கொள்ளும் நண்பன் (24)

19 விவேகம் ஒருவனுடைய கோபத்தைத் தணிக்கும் (11)
சண்டைக்கார மனைவி ஒழுகுகிற கூரை போன்றவள் (13)
விவேகமுள்ள மனைவி யெகோவா தருகிற சொத்து (14)

நம்பிக்கை இருக்கும்போதே பிள்ளையைக் கண்டித்துத் திருத்து (18)

ஆலோசனையைக் கேட்பதுதான் ஞானம் (20)

20 திராட்சமது கேலி செய்யும் (1)

சோம்பேறி குளிர் காலத்தில் உழ மாட்டான் (4)

மனிதனின் யோசனைகள் ஆழமான தண்ணீர் போன்றவை (5)

அவசரப்பட்டு நேர்ந்துகொள்ளாதே (25)

இளைஞர்களின் அழகு அவர்களுடைய பலம் (29)

21 ராஜாவின் இதயம் யெகோவாவின் கையில் (1)

பலியைவிட நீதி நியாயம் முக்கியம் (3)

கடினமாக உழைத்தால் வெற்றி நிச்சயம் (5)

ஏழையின் கதறலைக் கேட்காவிட்டால் நம் கதறலும் கேட்கப்படாது (13)

யெகோவாவுக்கு எதிரான ஞானம் இல்லை (30)

22 நிறைய சொத்துகளைவிட நல்ல பெயரைச் சம்பாதிப்பது சிறந்தது (1)

சிறுவயது பயிற்சி வாழ்நாளெல்லாம் உதவும் (6)

சோம்பேறி, வெளியே சிங்கம் நிற்பதாகச் சொல்லி பயப்படுகிறான் (13)

தண்டனை முட்டாள்தனத்தை நீக்கும் (15)

திறமையாக வேலை செய்கிறவன் ராஜாக்கள்முன் நிற்பான் (29)

23 விருந்துக்கு அழைக்கப்பட்டால் விவேகம் தேவை (2)

சொத்து சேர்ப்பதில் குறியாக இருக்காதே (4)

சொத்துகள் உன்னைவிட்டுப் பறந்துவிடும் (5)

அளவுக்கு அதிகமாகக் குடிக்கிறவர்களோடு சேராதே (20)

மதுபானம் பாம்புபோல் கடிக்கும் (32)

24 அக்கிரமக்காரர்களைப் பார்த்துப் பொறாமைப்படாதே (1)

வீடு ஞானத்தால் கட்டப்படும் (3)

நீதிமான் விழுந்தாலும் எழுந்து நிற்பான் (16)

பழிக்குப் பழி வாங்காதே (29)

தூங்கிக்கொண்டே இருந்தால் வறுமைதான் வரும் (33, 34)

சாலொமோனின் நீதிமொழிகள், எசேக்கியா ராஜாவின் ஆட்கள் தொகுத்தவை (25:1–29:27)

25 ரகசியங்களை அம்பலப்படுத்தாதே (9)

சரியான சமயத்தில் சொல்லும் வார்த்தை (11)

அடுத்தவன் வீட்டுக்கு அடிக்கடி போகாதே (17)

நெருப்புத் தணலை எதிரியின் தலைமேல் குவிப்பது (21, 22)

நல்ல செய்தி குளிர்ந்த தண்ணீர் போன்றது (25)

26 சோம்பேறிகளைப் பற்றிய விவரிப்பு (13-16)

அடுத்தவர் சண்டையில் தலையிடாதே (17)

விளையாட்டுக்காக ஏமாற்றாதே (18, 19)

விறகு இல்லையென்றால் நெருப்பு இல்லை (20, 21)

இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவனின் வார்த்தைகள் சிலருக்கு ருசியான உணவு (22)

27 நண்பனின் கண்டிப்பு நன்மை தரும் (5, 6)

என் மகனே, என் இதயத்தைச் சந்தோஷப்படுத்து (11)

இரும்பை இரும்பு கூர்மையாக்குகிறது (17)

உன் மந்தையைப் பற்றித் தெரிந்துகொள் (23)

சொத்து என்றென்றும் நிலைக்காது (24)

28 கடவுள் சொல்வதைக் கேட்காதவனின் ஜெபம் அருவருப்பானது (9)

குற்றத்தை ஒத்துக்கொள்கிறவன் இரக்கம் பெறுவான் (13)

தப்பு செய்யாமல், திடீர் பணக்காரனாகிவிட முடியாது (20)

போலியாகப் புகழ்வதைவிட தவறைக் கண்டிப்பது நல்லது (23)

தாராள குணமுள்ளவனுக்கு ஒரு குறையும் வராது (27)

29 பிள்ளையை இஷ்டத்துக்கு விட்டுவிட்டால் அவமானம்தான் வரும் (15)

வழிநடத்துதல் இல்லாவிட்டால் மக்கள் மனம்போன போக்கில் போவார்கள் (18)

கோபக்காரன் சண்டையைக் கிளப்புகிறான் (22)

மனத்தாழ்மையால் மகிமை (23)

மனித பயம் ஒரு கண்ணி (25)

ஆகூரின் வார்த்தைகள் (1-33)

30 வறுமையும் வேண்டாம், அதிக செல்வமும் வேண்டாம் (8)

ஒருபோதும் திருப்தி அடையாதவை (15, 16)

அடையாளத்தை விட்டுச் செல்லாதவை (18, 19)

கணவனுக்குத் துரோகம் செய்கிற பெண் (20)

இயல்பாகவே ஞானமுள்ள உயிரினங்கள் (24)

லேமுவேல் ராஜாவின் வார்த்தைகள் (1-31)
31 திறமைசாலியான மனைவியை யாரால் கண்டுபிடிக்க முடியும்? (10)
சுறுசுறுப்பானவள், கடினமாக உழைப்பவள் (17)
அவளுடைய நாவில் அன்பு (26)
பிள்ளைகளும் கணவனும் அவளைப் புகழ்கிறார்கள் (28)
வசீகரமும் அழகும் வீண் (30)

அதி. 1
a 2சா 12:24
b 1ரா 2:12
c 1ரா 4:29, 32; பிர 12:9
d நீதி 8:11
e எபி 12:11
f 1ரா 3:28
g நீதி 3:11, 12
h நீதி 15:5
i நீதி 2:11; நீதி 3:21; நீதி 8:12
j நீதி 9:9
k 1சா 25:32, 33; நீதி 24:6
l பிர 12:11
m யோபு 28:28; நீதி 9:10
n நீதி 5:12, 13; நீதி 18:2
o உபா 6:6, 7; எபே 6:4; எபி 12:9
p லேவி 19:3; நீதி 31:26; 2தீ 1:5
q நீதி 4:7, 9
r நீதி 3:21, 22
s ஆதி 39:7, 8; உபா 13:6-8

1 தாவீதின் மகனும்[a] இஸ்ரவேலின் ராஜாவுமான[b] சாலொமோனின் நீதிமொழிகள்:[c]
2 இவை ஞானத்தையும்[d] புத்திமதியையும் புகட்டுவதற்கும்,
ஆழமான கருத்துகளைப் புரிய வைப்பதற்கும்,
3 விவேகத்தோடும்* நீதியோடும்[e] நியாயத்தோடும்[f]
நேர்மையோடும் நடப்பதற்குத் தேவையான புத்திமதியைக்[g] கொடுப்பதற்கும்,
4 அனுபவமில்லாதவர்களைச் சாமர்த்தியசாலிகளாக[h] ஆக்குவதற்கும்,
இளைஞர்களுக்கு அறிவையும் யோசிக்கும் திறனையும்[i] தருவதற்கும் எழுதப்பட்டிருக்கின்றன.
5 ஞானமுள்ளவர்கள் காதுகொடுத்துக் கேட்டு, நிறைய அறிவுரைகளை ஏற்றுக்கொள்வார்கள்.[j]
புத்தியுள்ளவர்கள்* திறமையான வழிநடத்துதலை ஏற்றுக்கொள்வார்கள்.[k]
6 நீதிமொழியையும் விடுகதையையும்* அவர்கள் புரிந்துகொள்வார்கள்.
ஞானமுள்ளவர்கள் சொல்லும் வார்த்தைகளையும் புதிர்களையும்[l] புரிந்துகொள்வார்கள்.
7 யெகோவாவுக்குப் பயப்படுவதே* அறிவைப் பெறுவதற்கு முதல் படி.[m]
முட்டாள்கள்தான் ஞானத்தையும் புத்திமதியையும் அலட்சியம் செய்கிறார்கள்.[n]
8 என் மகனே, உன் அப்பா சொல்கிற புத்திமதியைக் கேள்,[o]
உன் அம்மா கொடுக்கிற அறிவுரையை ஒதுக்கித்தள்ளாதே.[p]
9 அவை உன்னுடைய தலைக்கு அலங்காரக் கிரீடம்போல் இருக்கும்,[q]
உன்னுடைய கழுத்துக்கு அழகான நகைபோல் இருக்கும்.[r]
10 என் மகனே, பாவிகள் உனக்கு ஆசை காட்டினாலும் நீ இணங்கிவிடாதே.[s]
11 அவர்கள் உன்னிடம், "எங்களோடு வா,
நாம் பதுங்கியிருந்து தாக்கலாம்.
ஒளிந்திருந்து அப்பாவிகளைத் தீர்த்துக்கட்டலாம்.

1:3 * வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதலோடும்." **1:5** * வே.வா., "புரிந்துகொள்ளுதல் உள்ளவர்கள்." **1:6** * வே.வா., "நீதிக்கதையையும்." **1:7** * வே.வா., "பயபக்தி காட்டுவதே."

12 கல்லறை விழுங்குவதுபோல் அவர்களை உயிரோடு விழுங்கலாம்.
சவக்குழிக்குள் போகிறவர்கள் விழுங்கப்படுவதுபோல் அவர்களை முழுவதுமாக விழுங்கலாம்.
13 அவர்களிடம் இருக்கிற எல்லா பொக்கிஷங்களையும் சுருட்டிக்கொள்ளலாம்.
கொள்ளையடித்த பொருள்களால் நம் வீடுகளை நிரப்பலாம்.
14 நீயும் எங்களோடு சேர்ந்துகொள்,
கொள்ளையடிப்பதைச் சமமாகப் பங்குபோட்டுக்கொள்ளலாம்” என்றெல்லாம் சொன்னால்,
15 என் மகனே, நீ அவர்கள் பின்னால் போகாதே.
அவர்களுடைய வழியில் கால்வைக்காதே.[a]
16 ஏனென்றால், அவர்களுடைய கால்கள் அக்கிரமம் செய்வதற்கு ஓடுகின்றன.
கொலை செய்வதற்கு வேகமாகப் போகின்றன.[b]
17 பறவையைப் பிடிக்க அதன் கண் முன்னாலேயே வலை விரிப்பது வீண்.
18 அதனால்தான், அவர்கள் கொலை செய்வதற்குப் பதுங்கியிருக்கிறார்கள்.
மற்றவர்களுடைய உயிரைப் பறிப்பதற்கு ஒளிந்திருக்கிறார்கள்.
19 குறுக்கு வழியில் லாபம் சம்பாதிக்க விரும்புகிற எல்லாரும் இப்படித்தான் செய்கிறார்கள்.
அது அவர்களுடைய உயிரையே பறித்துவிடும்.[c]
20 உண்மையான ஞானம்[d] வீதியில் நின்று சத்தமாக அழைக்கிறது.[e]
பொது சதுக்கங்களில் நின்று உரத்த குரலில் கூப்பிட்டுக்கொண்டே இருக்கிறது.[f]
21 சந்தடியான தெரு முனைகளில் நின்று முழங்குகிறது.
நகரவாசல்களில் நின்று இப்படிச் சொல்கிறது:[g]
22 “அனுபவமில்லாதவர்களே, இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் அனுபவமில்லாமல் இருக்க ஆசைப்படுவீர்கள்?
கேலி செய்கிறவர்களே, இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் கேலி செய்வதில் சந்தோஷப்படுவீர்கள்?
அறிவில்லாதவர்களே, இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் அறிவை வெறுப்பீர்கள்?[h]
23 நான் கண்டிப்பதைக் கேட்டுத் திருந்துங்கள்.[i]
அப்போது, என் சக்தியை உங்கள்மேல் பொழிவேன்.
என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்.[j]
24 நான் உங்களைக் கூப்பிட்டேன், ஆனால் நீங்கள் வரவே இல்லை.
என் கையை நீட்டினேன், ஆனால் யாரும் கவனிக்கவே இல்லை.[k]
25 என்னுடைய எல்லா ஆலோசனைகளையும் அலட்சியம் செய்தீர்கள்.
நான் கண்டித்தபோது நீங்கள் காதில் வாங்கவே இல்லை.
26 அதனால், உங்களுக்குப் பேரழிவு வரும்போது நான் கைகொட்டிச் சிரிப்பேன்.

அதி. 1
a நீதி 4:14
நீதி 13:20
1கொ 15:33
b நீதி 6:16–18
ரோ 3:15
c நீதி 15:27
d ரோ 16:27
1கொ 1:20
யாக் 3:17
e மத் 10:27
f நீதி 8:1–3
நீதி 9:1, 3, 4
g யோவா 18:20
அப் 20:20
h நீதி 5:12, 13
யோவா 3:20
i சங் 141:5
வெளி 3:19
j ஏசா 54:13
k ஏசா 65:12

எந்த ஆபத்தை நினைத்துப் பயந்து நடுங்குகிறீர்களோ அது
வரும்போது நான் கேலி செய்வேன்.[a]
27 நீங்கள் பயந்து நடுங்குகிற ஆபத்து புயல்போல் வரும்போது,
பேரழிவு சூறாவளிபோல் வரும்போது,
துன்பமும் துயரமும் உங்களைத் தாக்கும்போது,
உங்களைப் பார்த்து சிரிப்பேன்.
28 அப்போது, அவர்கள் என்னைக் கூப்பிட்டுக்கொண்டே இருப்பார்கள்,
ஆனால் நான் பதில் சொல்ல மாட்டேன்.
ஆர்வத்தோடு என்னைத் தேடுவார்கள், ஆனால் என்னைக்
கண்டுபிடிக்க மாட்டார்கள்.[b]
29 ஏனென்றால், அவர்கள் அறிவை வெறுத்தார்கள்.[c]
யெகோவாவுக்குப் பயப்படாமல் இருந்தார்கள்.[d]
30 நான் ஆலோசனை சொன்னபோது அதைக் கேட்கவில்லை.
நான் கண்டித்தபோது அதைக் கொஞ்சம்கூட மதிக்கவில்லை.
31 அதனால், அவர்களுடைய நடத்தைக்குத் தகுந்த கூலியைப்
பெறுவார்கள்.[e]
அவர்களுடைய சதித்திட்டங்களால் வரும் விளைவுகளை
முழுமையாக அனுபவிப்பார்கள்.*
32 அனுபவமில்லாதவர்களின் தாறுமாறான போக்கு அவர்களுடைய
உயிரைப் பறித்துவிடும்.
முட்டாள்களின் அலட்சியப் போக்கு அவர்களை அழித்துவிடும்.
33 ஆனால், நான் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்கிறவன்
பாதுகாப்பாக வாழ்வான்.[f]
ஆபத்தை நினைத்துப் பயப்படாமல் நிம்மதியாக இருப்பான்."[g]

2 என் மகனே, என்னுடைய ஆலோசனைகளை நீ ஏற்றுக்கொண்டால்,
என்னுடைய கட்டளைகளைப் பொக்கிஷம்போல் பாதுகாத்தால்,[h]
2 ஞானத்தைக் காதுகொடுத்துக் கேட்டால்,[i]
பகுத்தறிவை வளர்த்துக்கொள்ள[j] உன் இதயத்தைத் திறந்தால்,
3 புத்தியை* சத்தமாகக் கூப்பிட்டால்,[k]
பகுத்தறிவை உரத்த குரலில் அழைத்தால்,[l]
4 வெள்ளியைத் தேடுவதுபோல் அவற்றை விடாமல் தேடினால்,[m]
புதையல்களைத் தேடுவதுபோல் தொடர்ந்து தேடினால்,[n]
5 அப்போது, யெகோவாவுக்குப் பயப்படுவதன் அர்த்தத்தைப்
புரிந்துகொள்வாய்,[o]
கடவுளைப் பற்றிய அறிவைக் கண்டடைவாய்.[p]
6 ஏனென்றால், யெகோவாவே ஞானத்தைக் கொடுக்கிறார்.[q]
அவருடைய வாய் அறிவையும் பகுத்தறிவையும் பொழிகிறது.
7 நேர்மையானவர்களுக்காக ஞானத்தை* அவர் பொக்கிஷம்போல்
வைத்திருக்கிறார்.
உத்தமமாய் நடப்பவர்களுக்கு அவர் கேடயம்போல் இருக்கிறார்.[r]

1:31 * வே.வா., "தங்களுடைய சதித்திட்டங்களால் திக்குமுக்காடிப்போவார்கள்."
2:3 * வே.வா., "புரிந்துகொள்ளுதலை." **2:7** * அதாவது, "நடைமுறை ஞானத்தை."

அதி. 1
a நியா 10:13, 14
b புல 3:44
c ஓசி 4:6
d நியா 5:8
e எரே 6:19; கலா 6:7
f ஏசா 48:18
g 2ரா 6:15, 16; ஏசா 26:3; 2பே 2:9

அதி. 2
h உபா 6:6, 8
i நீதி 1:5
j எபி 5:14
k 1ரா 3:11, 12; நீதி 9:10; 2தீ 2:7
l பிலி 1:9
m சங் 19:9, 10
n யோபு 28:15–18
o யோபு 28:28; நீதி 8:13; எரே 32:40
p எரே 9:24; 1யோ 5:20
q யாத் 31:2, 3, 5; 1ரா 4:29; 2தீ 3:16, 17; யாக் 3:17
r சங் 41:12; நீதி 28:18

8 அவர் நியாயத்தின் பாதைகளைக் காக்கிறார்.
தனக்கு உண்மையாக* இருப்பவர்களின் வழியைப் பாதுகாப்பார்.[a]
9 இவற்றை நீ செய்தால் நீதி, நியாயம், நேர்மை என்னவென்று புரிந்துகொள்வாய்,
நல்ல வழிகள் எல்லாவற்றையும் தெரிந்துகொள்வாய்.[b]
10 ஞானம் உன் இதயத்தில் குடிபுகுந்து,[c]
அறிவு உன் ஜீவனுக்குச் சந்தோஷம் தரும்போது,[d]
11 யோசிக்கும் திறன் உன்னைக் காக்கும்,[e]
பகுத்தறிவு உன்னைப் பாதுகாக்கும்.
12 அதனால், நீ தவறான பாதையிலிருந்தும்,
தாறுமாறாகப் பேசுகிறவனிடமிருந்தும்,[f]
13 இருண்ட பாதைகளில் போவதற்காக
நேர்வழியைவிட்டு விலகுகிற ஆட்களிடமிருந்தும்,[g]
14 குற்றம் செய்வதில் சந்தோஷப்படுகிற ஆட்களிடமிருந்தும்,
படுமோசமான காரியங்களில் மகிழ்ச்சியடைகிற ஆட்களிடமிருந்தும் பாதுகாக்கப்படுவாய்.
15 அவர்களுடைய பாதைகள் கோணலானவை.
அவர்களுடைய வழிகள் எல்லாமே போலியானவை.
16 நடத்தைகெட்ட பெண்ணிடமிருந்து ஞானம் உன்னைப் பாதுகாக்கும்.
இனிக்க இனிக்கப் பேசுகிற ஒழுக்கங்கெட்ட பெண்ணிடமிருந்து அது உன்னைக் காப்பாற்றும்.[h]
17 அப்படிப்பட்ட பெண், இளமையில் கைப்பிடித்த கணவனை விட்டுவிடுகிறாள்.[i]
கடவுளோடு செய்த ஒப்பந்தத்தை மறந்துவிடுகிறாள்.
18 அவள் வீடு சவக்குழிக்குள் இறங்குகிறது.
அவள் பாதைகள் கல்லறைக்கு* போகின்றன.[j]
19 அவளோடு உறவுகொள்கிற யாரும் உயிரோடு திரும்பி வருவதில்லை.
அவர்கள் யாரும் வாழ்வின் பாதைக்குத் திரும்புவதில்லை.[k]
20 அதனால், நல்லவர்களின் வழியில் நட.
நீதிமான்களின் பாதையைவிட்டு விலகாமல் இரு.[l]
21 நேர்மையானவர்கள் மட்டும்தான் இந்தப் பூமியில் குடியிருப்பார்கள்.
குற்றமற்றவர்கள்* மட்டும்தான் அதில் தங்கியிருப்பார்கள்.[m]
22 ஆனால், பொல்லாதவர்கள் இந்தப் பூமியிலிருந்து அடியோடு அழிக்கப்படுவார்கள்.[n]
துரோகிகள் இந்த உலகத்திலிருந்து வேரோடு பிடுங்கப்படுவார்கள்.[o]

3 என் மகனே, என்னுடைய போதனையை* மறந்துவிடாதே.
என்னுடைய கட்டளைகளுக்கு முழு இதயத்தோடு கீழ்ப்படி.
2 அப்படிச் செய்தால் பல்லாண்டு வாழ்வாய்,
நீண்ட காலத்துக்கு நிம்மதியாக இருப்பாய்.[p]

2:8 *வே.வா., "பற்றுமாறாமல்." 2:18 *வே.வா., "செத்து செயலிழந்து போனவர்களிடம்." 2:21 *வே.வா., "உத்தமமாக நடக்கிறவர்கள்." 3:1 *வே.வா., "சட்டத்தை."

அதி. 2
a சங் 97:10
b பிர 12:13; மீ 6:8; மத் 22:37-40
c சங் 119:111
d அப் 17:11
e பிர 7:12
f நீதி 8:13
g யோவா 3:19
h ஆதி 39:10-12; நீதி 6:23, 24; நீதி 7:4, 5
i ஆதி 2:24; நீதி 5:18
j நீதி 5:3, 5; நீதி 5:20, 23; நீதி 9:16-18; எபே 5:5
k பிர 7:26; வெளி 22:15
l நீதி 13:20
m சங் 37:11, 29
n சங் 104:35; நீதி 10:7; மத் 25:46
o உபா 28:45, 63

அதி. 3
p உபா 5:16

3 மாறாத அன்பையும் உண்மைத்தன்மையையும் விட்டுவிடாதே.[a]
அவற்றை உன் கழுத்தில் கட்டிக்கொள்.
உன் இதயப் பலகையில் எழுதிக்கொள்.[b]
4 அப்போது, கடவுள் பார்வையிலும் மனிதர்கள் பார்வையிலும்,
நீ பிரியமானவனாகவும், மிகுந்த விவேகம் உள்ளவனாகவும்
இருப்பாய்.[c]
5 யெகோவாவை முழு இதயத்தோடு நம்பு.[d]
உன்னுடைய சொந்த புத்தியை நம்பாதே.*[e]
6 எதைச் செய்தாலும் அவரை மனதில் வைத்துச் செய்.[f]
அப்போது, உன் வழியில் இருக்கும் தடைகளையெல்லாம்
அவர் நீக்கிவிடுவார்.[g]
7 நீயே உன்னை ஞானி என்று நினைத்துக்கொள்ளாதே.[h]
யெகோவாவுக்குப் பயந்து நட, தீமையை விட்டு விலகு.
8 அப்போது, உன் உடல் ஆரோக்கியம் அடையும்,
உன் எலும்புகள் புதுத்தெம்பு பெறும்.
9 உன்னுடைய மதிப்புமிக்க பொருள்களையும்,[i]
உன்னுடைய முதல் விளைச்சல்கள் எல்லாவற்றையும்* கொடுத்து
யெகோவாவை மகிமைப்படுத்து.[j]
10 அப்போது, உன் சேமிப்புக் கிடங்குகள் நிறைந்திருக்கும்.[k]
உன் ஆலைகள் புதிய திராட்சமதுவால் நிரம்பி வழியும்.
11 என் மகனே, யெகோவாவின் புத்திமதியை ஒதுக்கித்தள்ளாதே.[l]
அவர் கண்டிக்கும்போது வெறுப்பைக் காட்டாதே.[m]
12 ஏனென்றால், அப்பா தன் செல்ல மகனைக் கண்டிப்பது போல,[n]
யெகோவாவும் தான் நேசிக்கிறவர்களைக் கண்டிக்கிறார்.[o]
13 ஞானத்தைக் கண்டுபிடிப்பவனும்,
பகுத்தறிவைப் பெறுகிறவனும் சந்தோஷமானவன்.[p]
14 ஞானத்தைச் சம்பாதிப்பது வெள்ளியைச் சம்பாதிப்பதைவிட மேலானது.
அது தரும் லாபம் தங்கத்தைவிட மேலானது.[q]
15 அது பவளங்களைவிட* அதிக மதிப்புள்ளது.
நீ ஆசைப்படுகிற எதுவுமே அதற்கு ஈடாகாது.
16 அதன் வலது கையில் நீண்ட ஆயுள் இருக்கிறது.
அதன் இடது கையில் செல்வமும் மகிமையும் இருக்கின்றன.
17 அதன் வழிகள் சந்தோஷத்தைத் தரும்.
அதன் பாதைகளெல்லாம் சமாதானத்தைத் தரும்.[r]
18 அதை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு அது வாழ்வளிக்கிற மரம் போன்றது.
அதை உறுதியாகப் பிடித்துக்கொள்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[s]
19 யெகோவா தன்னுடைய ஞானத்தால் இந்தப் பூமிக்கு அஸ்திவாரம்
போட்டார்.[t]
தன்னுடைய பகுத்தறிவால் வானத்தை உறுதியாக நிலைநிறுத்தினார்.[u]

அதி. 3
a ஓசி 12:6
b உபா 6:6, 8
c 2கொ 8:21
d ஏசா 26:4; எரே 17:7
e நீதி 28:26; எரே 10:23; 1கொ 3:18
f 1சா 23:2, 4; நெ 1:11; பிலி 4:6
g யோசு 1:7; சங் 25:9; யாக் 1:5
h நீதி 26:12; ரோ 12:16
i எண் 31:50; உபா 16:16; லூ 16:9; 1தீ 6:18
j யாத் 23:19
k 2நா 31:10; மல் 3:10
l நீதி 15:32; எபி 12:5, 6
m சங் 94:12
n உபா 8:5; எபி 12:7, 9
o வெளி 3:19
p பிர 7:12
q யோபு 28:15, 18
r பிலி 4:9
s சங் 1:1, 2
t சங் 104:24
u நீதி 8:27; எரே 10:12

3:5 *வே.வா., "சொந்த புத்திமேல் சாயாதே." **3:9** *வே.வா., "உன் வருமானத்தில் கிடைக்கிற மிகச் சிறந்தவற்றையும்." **3:15** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

20 தன்னுடைய அறிவால் ஆழமான தண்ணீரைப் பிளந்தார்,
வானத்து மேகங்களைப் பனி பொழிய வைத்தார்.[a]
21 என் மகனே, இவற்றை* எப்போதும் உன் கண் முன்னால்
வைத்துக்கொள்.
ஞானத்தையும்# யோசிக்கும் திறனையும் பாதுகாத்துக்கொள்.
22 அவை உனக்கு வாழ்வு தரும்.
உன் கழுத்துக்கு அலங்காரமாக இருக்கும்.
23 அப்போது, நீ உன் பாதையில் பாதுகாப்பாக நடப்பாய்.
உன் கால் ஒருபோதும் தடுமாறாது.*[b]
24 நீ பயம் இல்லாமல் படுத்துக்கொள்வாய்.[c]
உன் படுக்கையில் நிம்மதியாகத் தூங்குவாய்.[d]
25 திடீரென வரும் ஆபத்தை நினைத்துப் பயப்பட மாட்டாய்.[e]
பொல்லாதவர்களைத் தாக்கும் புயலைப் பார்த்து நடுங்க மாட்டாய்.[f]
26 ஏனென்றால், யெகோவா உன் நம்பிக்கையாக* இருப்பார்.[g]
உன் கால்கள் வலையில் சிக்கிவிடாமல் காப்பாற்றுவார்.[h]
27 நல்லது செய்ய வேண்டியவர்களுக்கு* நீ அதைச் செய்யாமல்
இருந்துவிடாதே.[i]
அதுவும், உதவி செய்ய சக்தி இருக்கும்போது அதைச் செய்யாமல்
இருந்துவிடாதே.[j]
28 ஒருவன் கேட்பதை உன்னால் உடனே கொடுக்க முடிந்தும்,
“நீ போய்விட்டு வா, நாளைக்குத் தருகிறேன்” என்று சொல்லாதே.
29 உன்னை நம்பி பயமில்லாமல் வாழ்கிற
உன் பக்கத்து வீட்டுக்காரனுக்கு எதிராகச் சதி செய்யாதே.[k]
30 ஒருவன் உனக்கு எந்தக் கெடுதலும் செய்யாதபோது,
காரணமே இல்லாமல் அவனோடு சண்டை போடாதே.[l]
31 வன்முறையில் இறங்குகிறவனைப் பார்த்துப் பொறாமைப்படாதே.[m]
அவன் செய்கிற எதையும் நீ செய்யாதே.
32 ஏமாற்றுக்காரனை யெகோவா அருவருக்கிறார்.[n]
ஆனால், நேர்மையானவனுக்கு நெருங்கிய நண்பராக இருக்கிறார்.[o]
33 பொல்லாதவனின் வீட்டை யெகோவா சபிக்கிறார்.[p]
ஆனால், நீதிமானின் வீட்டை ஆசீர்வதிக்கிறார்.[q]
34 கேலி செய்கிறவர்களை அவர் கேலி செய்கிறார்.[r]
ஆனால், தாழ்மையானவர்களுக்கு* கருணை காட்டுகிறார்.[s]
35 ஞானமுள்ளவர்கள் மரியாதையைச் சம்பாதிப்பார்கள்.
ஆனால், முட்டாள்கள் அவமரியாதையைத்
தேடிக்கொள்கிறார்கள்.*[t]

3:21 *அநேகமாக, முந்தின வசனங்களில் சொல்லப்பட்டுள்ள கடவுளின் குணங்களைக் குறிக்கலாம். #அதாவது, “நடைமுறை ஞானத்தையும்.” **3:23** *வே.வா., “எதன்மேலும் மோதாது.” **3:26** *வே.வா., “நம்பிக்கையின் ஊற்றாக.” **3:27** *வே.வா., “கடமைப்பட்டவர்களுக்கு.” **3:34** *வே.வா., “சாந்தமானவர்களுக்கு.” **3:35** *வே.வா., “அவமரியாதையைப் பெருமையாக நினைக்கிறார்கள்.”

அதி. 3
a யோபு 36:27, யோபு 38:37, எரே 10:13
b ஏசா 26:7
c சங் 3:5, நீதி 6:22
d பிர 5:12
e சங் 27:1
f சங் 73:12, 19
g நீதி 10:29, நீதி 28:1
h சங் 91:14
i யாக் 2:15, 16
j உபா 15:7, 8, நீதி 28:27
k நீதி 6:16, 18
l நீதி 18:6, நீதி 20:3, ரோ 12:18
m சங் 37:1, நீதி 23:17
n நீதி 6:16, 17
o சங் 15:1, 2, சங் 24:3, 4, சங் 25:14
p உபா 28:15, யோசு 7:24, 25, எஸ்தர் 9:24, 25
q யோபு 42:12, 13, சங் 37:25
r நீதி 19:29
s சங் 37:11, சங் 138:6, ஏசா 57:15, யாக் 4:6
t எஸ்தர் 6:11, 12, நீதி 12:8

4 என் மகன்களே, அப்பா சொல்கிற புத்திமதியைக் கேளுங்கள்.[a]
புத்தியை* அடைவதற்குக் கவனம் செலுத்துங்கள்.
2 ஏனென்றால், நான் உங்களுக்கு நல்ல அறிவுரைகளைத் தருவேன்.
என் போதனையை* ஒதுக்கித்தள்ளாதீர்கள்.[b]
3 என் அப்பாவுக்கு நான் நல்ல பிள்ளையாக இருந்தேன்.[c]
என் அம்மாவுக்குச் செல்லப் பிள்ளையாக இருந்தேன்.[d]
4 என் அப்பா எனக்கு இப்படிப் போதித்தார்:
“என் வார்த்தைகளை எப்போதும் உன் இதயத்தில் வைத்துக்கொள்.[e]
என் கட்டளைகளுக்குக் கீழ்ப்படி, அப்போது நீண்ட காலம் வாழ்வாய்.[f]
5 ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும்* சம்பாதி.[g]
நான் சொல்வதை மறந்துவிடாதே, அதை விட்டுவிலகாதே.
6 ஞானத்தை ஒதுக்கித்தள்ளாதே, அது உன்னைப் பாதுகாக்கும்.
அதை நேசி, அது உன்னைக் காத்துக்கொள்ளும்.
7 எல்லாவற்றையும்விட ஞானம்தான் முக்கியம்,[h] அதனால் ஞானத்தைச் சம்பாதி.
எதைச் சம்பாதித்தாலும் புத்தியை* சம்பாதிக்க மறந்துவிடாதே.[i]
8 அதை உயர்வாக மதித்தால், அது உன்னை உயர்த்தும்.[j]
அதை விரும்பி ஏற்றுக்கொண்டால், அது உனக்கு மதிப்புச் சேர்க்கும்.[k]
9 அது உன் தலையில் அலங்காரக் கிரீடத்தைச் சூட்டும்.
அழகிய கிரீடத்தால் உன்னை அலங்கரிக்கும்.”
10 என் மகனே, என் ஆலோசனைகளைக் கேள், அவற்றை ஏற்றுக்கொள்.
அப்போது, நீ பல்லாண்டு காலம் வாழ்வாய்.[l]
11 ஞானமான வழியை நான் உனக்குச் சொல்லிக்கொடுப்பேன்.[m]
நேர்மையான பாதையில் உன்னைக் கூட்டிக்கொண்டு போவேன்.[n]
12 நடக்கும்போது நீ தடுமாற மாட்டாய்.
ஓடினாலும் தடுக்கி விழ மாட்டாய்.
13 புத்திமதிகளை உறுதியாகப் பிடித்துக்கொள், அவற்றை விட்டுவிடாதே.[o]
அவற்றைப் பாதுகாத்துக்கொள், அவை உனக்கு வாழ்வு தரும்.[p]
14 பொல்லாதவர்களின் பாதையில் போகாதே.
அக்கிரமக்காரர்களின் வழியில் நடக்காதே.[q]
15 அதை வெறுத்துவிடு, அந்தப் பக்கமே தலைகாட்டாதே.[r]
அதைவிட்டு விலகு, அங்கிருந்து வந்துவிடு.[s]
16 அக்கிரமம் செய்யாவிட்டால் அவர்களுக்குத் தூக்கமே வராது.
யாருக்காவது குழி பறிக்கும்வரை அவர்களால் தூங்கவே முடியாது.
17 அவர்கள் அக்கிரமத்தின் உணவைச் சாப்பிடுகிறார்கள்.
வன்முறையின் திராட்சமதுவைக் குடிக்கிறார்கள்.
18 ஆனால், நீதிமான்களின் பாதை நடுப்பகல்வரை அதிகமதிகமாகப் பிரகாசிக்கிற
விடியற்கால வெளிச்சம்போல் இருக்கிறது.[t]

4:1, 7 *வே.வா., “புரிந்துகொள்ளுதலை.” **4:2** *வே.வா., “சட்டத்தை.” **4:5** *வே.வா., “புரிந்துகொள்ளுதலையும்.”

அதி. 4
a உபா 6:6, 7; நீதி 19:20; எபே 6:1
b 1நா 28:9
c 1ரா 2:12
d 1ரா 1:16-21
e உபா 4:9
f லேவி 18:5
g நெ 8:3, 8; நீதி 9:10
h பிர 7:12
i நீதி 15:14; மத் 13:23; எபி 5:14
j தானி 1:17, 20
k 1ரா 4:29
l உபா 5:16
m 1ரா 4:29
n ஏசா 26:7
o நீதி 8:10; எபி 2:1; எபி 12:5, 6
p உபா 32:45-47; எபி 12:11
q சங் 1:1; 1கொ 15:33
r ஆமோ 5:15; எபே 5:11
s நீதி 5:3, 8; 1தெ 5:22
t 2சா 23:3, 4; சங் 119:105; 1கொ 13:12; 2கொ 4:6; 2பே 1:19

19 பொல்லாதவர்களின் பாதையோ இருள்போல் இருக்கிறது.
எது தங்களைத் தடுக்கி விழ வைக்கிறது என்றே அவர்களுக்குத் தெரிவதில்லை.
20 என் மகனே, என் வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேள்.
என் ஆலோசனைகளைக் கவனமாகக் கேள்.
21 அவற்றை எப்போதும் உன் கண் முன்னால் வைத்துக்கொள்.
உன் நெஞ்சில் ஆழமாகப் பதிய வைத்துக்கொள்.[a]
22 அவற்றைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவை வாழ்வு தரும்.[b]
அவர்களுடைய முழு உடலுக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.
23 எல்லாவற்றையும்விட முக்கியமாக உன் இதயத்தைப் பாதுகாத்துக்கொள்.[c]
ஏனென்றால், உன் உயிர் அதைச் சார்ந்தே இருக்கிறது.*
24 பொய் புரட்டை நீ தவிர்த்துவிடு.[d]
நேர்மையற்ற பேச்சை உனக்குத் தூரமாக்கிவிடு.
25 உன்னுடைய கண்கள் நேராகப் பார்க்க வேண்டும்.
அங்கும் இங்கும் பார்க்காமல் நேராகவே பார்க்க வேண்டும்.[e]
26 உன் பாதையில் இருக்கிற தடைகளையெல்லாம் எடுத்துப்போடு.*[f]
அப்போது, உன் வழிகளெல்லாம் உறுதியாகும்.
27 வலது பக்கமோ இடது பக்கமோ சாயாதே.[g]
கெட்ட வழியில் கால்வைக்காதே.

5 என் மகனே, நான் சொல்கிற ஞானமான வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேள்.
பகுத்தறிவை நான் போதிக்கும்போது கவனமாகக் கேள்.[h]
2 அப்போது, யோசிக்கும் திறனை நீ பாதுகாத்துக்கொள்வாய்.
உன் உதடுகள் அறிவைக் காத்துக்கொள்ளும்.[i]
3 நடத்தைகெட்ட பெண்ணின் வார்த்தைகள்* தேன்போல் தித்திக்கும்.[j]
அவளுடைய பேச்சு# எண்ணெயைவிட மென்மையாக இருக்கும்.[k]
4 ஆனால், அவளுடைய சகவாசம் முடிவில் எட்டியை* போலக் கசக்கும்.[l]
இரண்டு பக்கமும் கூர்மையாக இருக்கும் வாளைப் போலக் குத்தும்.[m]
5 அவளுடைய கால் சவக்குழிக்குள் இறங்கும்.
அவளுடைய காலடிகள் நேராகக் கல்லறைக்குப் போகும்.
6 வாழ்வின் பாதையைப் பற்றி அவள் யோசிப்பதே இல்லை.
எங்கு போகிறாள் என்றே தெரியாமல் மனம்போன போக்கில் போகிறாள்.
7 என் மகன்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்.
என் வார்த்தைகளைவிட்டு விலகாதீர்கள்.

4:23 * வே.வா., “உயிரின் ஊற்று அதிலிருந்தே புறப்படுகிறது.” **4:26** * அல்லது, “உன் பாதையைப் பற்றிக் கவனமாக யோசி.” **5:3** * நே.மொ., “உதடுகள்.” # நே.மொ., “வாய்.” **5:4** * மூலமொழியில், பாலஸ்தீனாவில் வளரும் ஒரு கசப்பான செடி குறிப்பிடப்பட்டுள்ளது.

அதி. 4
a சங் 40:8, நீதி 2:1
b 1தீ 4:8
c எரே 17:9, மாற் 7:21-23, எபே 6:14
d 1பே 2:1
e மத் 6:22
f எபே 5:15
g உபா 12:32, யோசு 1:7

அதி. 5
h 1ரா 4:29, யாக் 1:19
i நீதி 15:7
j நீதி 7:14-21
k நீதி 9:16, 17
l பிர 7:26
m நீதி 6:32, 33

8 மகனே, அவளைவிட்டு நீ தூரமாக விலகியிரு.
அவளுடைய வீட்டு வாசல் பக்கம்கூட போகாதே.[a]
9 அப்போதுதான், உன் பெயரைக் கெடுத்துக்கொள்ள மாட்டாய்.[b]
வாழ்நாள் முழுவதும் வேதனைப்பட மாட்டாய்.[c]
10 இல்லையென்றால், உன் சொத்துகளை முன்பின் தெரியாதவர்கள் சுரண்டிக்கொள்வார்கள்.[d]
நீ கஷ்டப்பட்டுச் சம்பாதித்ததெல்லாம் அன்னியர்களின் வீட்டுக்குப் போய்விடும்.
11 உன் வாழ்க்கையின் முடிவிலே உன் பலம் குறைந்து,
உன் உடல் உருக்குலையும்போது நீ வேதனையில் முனகுவாய்.[e]
12 அப்போது, "புத்திமதியை வெறுத்தேனே!
கண்டிப்பை என் இதயம் அலட்சியம் செய்ததே!
13 என் போதகர்களின் பேச்சைக் கேட்காமல் போய்விட்டேனே!
எனக்கு உபதேசம் பண்ணினவர்கள் சொன்னதைக் காதில் வாங்காமல் போனேனே!
14 இப்போது என் வாழ்க்கையே நாசமாய்ப் போய்விட்டதே.
முழு சபைக்கும் முன்னால் தலைகுனியும் நிலைமை வந்துவிட்டதே!"[f] என்று புலம்புவாய்.
15 உன் தொட்டியில் இருக்கும் தண்ணீரை மட்டும் குடி.
உன் கிணற்றில் ஊறும் தண்ணீரை மட்டும் குடி.[g]
16 உன் நீரூற்றுகள் ஏன் வெளியே பாய்ந்தோட வேண்டும்?
உன் நீரோடைகள் ஏன் பொது சதுக்கங்களில் வழிந்தோட வேண்டும்?[h]
17 அவை உனக்கு மட்டும்தான் சொந்தம்.
முன்பின் தெரியாதவர்களோடு அவற்றைப் பங்குபோட்டுக்கொள்ளாதே.[i]
18 உன்னுடைய நீரூற்றே உனக்கு ஆசீர்வாதமாக இருக்கட்டும்.
இளவயதில் கைப்பிடித்த உன் மனைவியோடு சந்தோஷமாக இரு.[j]
19 அவள் பாசமான ஒரு பெண் மான், அழகான வரையாடு.[k]
அவளுடைய மார்புகள் எப்போதும் உன்னை மகிழ்விக்கட்டும்.
அவளுடைய அன்பில் நீ எப்போதும் மயங்கியிரு.[l]
20 என் மகனே, நடத்தைகெட்ட பெண்ணிடம் நீ ஏன் மயங்க வேண்டும்?
ஒழுக்கங்கெட்ட பெண்ணின் மார்பை ஏன் தழுவ வேண்டும்?[m]
21 மனிதனுடைய வழிகள் யெகோவாவின் கண்களுக்கு முன்பாக இருக்கின்றன.
அவனுடைய பாதைகளையெல்லாம் அவர் ஆராய்கிறார்.[n]
22 பொல்லாதவன் செய்கிற குற்றங்களே அவனைக் கண்ணிபோல் பிடித்துக்கொள்ளும்.
அவன் செய்கிற பாவங்களே அவனைக் கயிறுபோல் இறுகச் சுற்றிக்கொள்ளும்.[o]
23 அவன் புத்திமதியைக் கேட்காததால் செத்துப்போவான்.
அடிமுட்டாளாக இருப்பதால் வழிதவறிப் போவான்.

அதி. 5
a நீதி 9:14, 15
b நீதி 29:3
c நீதி 6:33-35, நீதி 7:23
d நீதி 31:3, லூ 15:30
e நீதி 7:22, 23
f நீதி 6:27-29
g 1கொ 7:3, எபி 13:4
h நீதி 5:20
i ஆதி 2:24
j உபா 24:5, பிர 9:9
k உன் 2:9
l ஆதி 26:8, ஆதி 29:20, உன் 8:6
m நீதி 22:14
n 2நா 16:9, சங் 11:4, சங் 17:3, எரே 17:10, எபி 4:13
o சங் 7:14-16, கலா 6:7

6 என் மகனே, நீ ஒருவனுடைய கடனுக்குப் பொறுப்பு
ஏற்றுக்கொண்டால்,[a]
முன்பின் தெரியாதவனோடு கைகுலுக்கி ஒப்பந்தம்
செய்துகொண்டால்,[b]
2 உத்தரவாதம் கொடுத்துவிட்டு சிக்கலில் மாட்டிக்கொண்டால்,
வாக்குக் கொடுத்துவிட்டு பிரச்சினையில் சிக்கிக்கொண்டால்,[c]
3 என் மகனே, நான் சொல்வதுபோல் செய்து அதிலிருந்து
தப்பித்துக்கொள்.
நீ அவனிடம் நன்றாக மாட்டிக்கொண்டதால்,
அவசரமாகப் போய், உன்னையே தாழ்த்தி, அவனிடம் கெஞ்சு.[d]
4 அதுவரைக்கும் கண் அசந்துவிடாதே.
உன் கண் இமைகளை மூடவிடாதே.
5 வேட்டைக்காரனின் கையிலிருந்து தப்பிக்கிற கலைமானை* போலவும்,
வேடனின் கையிலிருந்து தப்பிக்கிற பறவையைப் போலவும் நீ
தப்பித்துக்கொள்.
6 சோம்பேறியே, நீ போய் எறும்பைப் பார்.[e]
அது செய்வதையெல்லாம் கவனித்து, ஞானத்தைப் பெற்றுக்கொள்.
7 அதற்குத் தலைவனும் இல்லை, அதிகாரியும் இல்லை,
அரசனும் இல்லை.
8 ஆனாலும், கோடைக் காலத்தில் உணவைச் சேமித்து வைக்கிறது.[f]
அறுவடைக் காலத்தில் உணவுப் பொருள்களைச் சேர்த்து வைக்கிறது.
9 சோம்பேறியே, எவ்வளவு நேரம்தான் படுத்திருப்பாய்?
எப்போதுதான் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பாய்?
10 "இன்னும் கொஞ்ச நேரம் தூங்க வேண்டும்,
இன்னும் கொஞ்ச நேரம் படுத்துக்கொள்ள வேண்டும்,
இன்னும் கொஞ்ச நேரம் கைகளை மடக்கி ஓய்வெடுக்க வேண்டும்"[g]
என்று சொன்னால்,
11 வறுமை கொள்ளைக்காரனைப் போலவும்,
ஏழ்மை ஆயுதமேந்தியவனைப் போலவும் உன்னிடம் வரும்.[h]
12 உதவாக்கரையாகவும் அயோக்கியனாகவும்* இருப்பவன் பொய்
பேசிக்கொண்டு அலைகிறான்.[i]
13 கண்ணால் ஜாடை காட்டுகிறான்,[j] காலைத் தட்டியும், விரல்களை
ஆட்டியும் சைகை காட்டுகிறான்.
14 அவனுடைய உள்ளம் நெறிகெட்டுப்போயிருப்பதால்,
எப்போதும் சதித்திட்டம் தீட்டுகிறான்,[k] சண்டை சச்சரவுகளை
மூட்டிவிடுகிறான்.[l]
15 அதனால், அவனுக்குத் திடீரென்று அழிவு வரும்.
நொடிப்பொழுதில் நொறுக்கப்படுவான், அவனால் மீண்டுவரவே
முடியாது.[m]
16 யெகோவா ஆறு காரியங்களை வெறுக்கிறார்.
சொல்லப்போனால், ஏழு காரியங்களை அருவருக்கிறார்.

6:5 * வே.வா., "நவ்வி மானை." **6:12** * வே.வா., "பொல்லாதவனாகவும்."

அதி. 6
a நீதி 17:18
b நீதி 11:15; நீதி 20:16
c நீதி 18:7
d மத் 5:25
e நீதி 10:26; நீதி 26:13-15
f நீதி 30:24, 25
g நீதி 20:13; நீதி 24:33, 34; பிர 4:5
h நீதி 13:4; நீதி 20:4; நீதி 24:30-34
i நீதி 16:27; யாக் 3:6
j நீதி 10:10; நீதி 16:30
k சங் 36:1, 4; ஏசா 32:7; மீ 2:1
l நீதி 16:28; ரோ 16:17
m சங் 73:12, 18

17 அவை: ஆணவத்தோடு பார்க்கும் கண்கள்,[a] பொய் பேசும் நாவு,[b]
அப்பாவிகளின் இரத்தத்தைச் சிந்தும் கைகள்,[c]
18 சதித்திட்டங்கள் போடுகிற இதயம்,[d] கெட்டதைச் செய்ய வேகமாக
ஓடுகிற கால்கள்,
19 மூச்சுக்கு மூச்சு பொய் சாட்சி சொல்லுதல்,*[e]
சகோதரர்களுக்கு இடையே சண்டை சச்சரவுகளை மூட்டிவிடுதல்.#[f]
20 என் மகனே, உன் அப்பா கொடுக்கிற கட்டளைக்குக் கீழ்ப்படி.
உன் அம்மா கொடுக்கிற அறிவுரையை ஒதுக்கித்தள்ளாதே.[g]
21 அவற்றை எப்போதும் உன் இதயத்தில் பதிய வைத்துக்கொள்.
உன் கழுத்தில் கட்டிக்கொள்.
22 நீ நடக்கும்போது அவை உனக்கு வழிகாட்டும்.
நீ படுக்கும்போது அவை உன்னைக் காவல்காக்கும்.
நீ எழுந்திருக்கும்போது அவை உன்னிடம் பேசும்.
23 கட்டளைதான் விளக்கு.[h]
சட்டம்தான் வெளிச்சம்.[i]
கண்டிப்பும் புத்திமதியும்தான் வாழ்வின் வழி.[j]
24 அவை நடத்தைகெட்ட பெண்ணிடமிருந்தும்,[k]
அவளுடைய வசீகரப் பேச்சிலிருந்தும் உன்னைப் பாதுகாக்கும்.[l]
25 உன் உள்ளத்தில் அவளுடைய அழகை ரசிக்காதே.[m]
அவளுடைய மயக்கும் பார்வையில் மயங்கிவிடாதே.
26 ஏனென்றால், விபச்சாரியிடம் போகிறவன் சாப்பாட்டுக்கே
வழியில்லாமல் திண்டாடுவான்.[n]
நடத்தைகெட்ட மனைவி ஒருவனுடைய அருமையான உயிருக்கே
உலை வைத்துவிடுவாள்.
27 ஒருவன் நெருப்புத்தணலை நெஞ்சோடு வைத்துக்கொண்டால்
அவனுடைய உடை கருகாமல் இருக்குமா?[o]
28 ஒருவன் எரிகிற தணல்மேல் நடந்தால் அவனுடைய பாதங்கள்
வெந்துபோகாமல் இருக்குமா?
29 அடுத்தவனுடைய மனைவியோடு உறவுகொள்பவனுக்கும் இதே
கதிதான்.
அவளைத் தொடுகிற எவனும் தண்டனையிலிருந்து தப்பிக்க
முடியாது.[p]
30 வயிற்றுப் பசிக்காக ஒருவன் திருடினால்,
மக்கள் அவனைக் கேவலமாகப் பேச மாட்டார்கள்.
31 ஆனால் அவன் பிடிபடும்போது, ஏழு மடங்கு திருப்பித்தர
வேண்டியிருக்கும்;
தன் வீட்டில் இருக்கும் விலைமதிப்புள்ள பொருள்களையெல்லாம்
கொடுக்க வேண்டியிருக்கும்.[q]
32 அடுத்தவனுடைய மனைவியோடு உறவுகொள்கிறவன் புத்தி
இல்லாதவன்.
அவன் தனக்கே அழிவைத் தேடிக்கொள்கிறான்.[r]

6:19 * வே.வா., "சொல்பவன்." # வே.வா., "மூட்டிவிடுபவன்."

அதி. 6
a சங் 101:5, நீதி 8:13, நீதி 16:5
b நீதி 12:22, வெளி 21:8
c ஆதி 4:8, 10, எண் 35:31, உபா 27:25
d நீதி 11:20, சக 8:17, மல் 2:16
e யாத் 23:1
f லேவி 19:16, கலா 5:20, 21, யாக் 3:14, 15
g உபா 21:18, 21, எபே 6:1
h சங் 119:105
i ஏசா 51:4
j நீதி 4:13, எபி 12:11
k பிர 7:26
l நீதி 5:3, நீதி 7:4, 5
m மத் 5:28, யாக் 1:14, 15
n நீதி 29:3, லூ 15:16, 30
o கலா 6:7
p 2சா 11:4, 2சா 12:10, 11, நீதி 6:32-35, எபி 13:4
q யாத் 22:1, 4
r நீதி 2:18, 19, நீதி 5:20, 23, மல் 3:5, 1கொ 6:9, 10, எபி 13:4

33 அவனுக்கு வேதனையும்* தலைகுனிவும்தான் மிஞ்சும்.[a]
அவனுக்கு ஏற்படும் அவமானத்தைப் போக்கவே முடியாது.[b]
34 பொறாமையால் அவளுடைய கணவன் கொதித்தெழுவான்.
பழிவாங்கும்போது கொஞ்சம்கூட இரக்கம் காட்ட மாட்டான்.[c]
35 நஷ்ட ஈடாக எதைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.
எவ்வளவு பெரிய அன்பளிப்பைக் கொடுத்தாலும் சமாதானம் ஆக மாட்டான்.

7 என் மகனே, என் ஆலோசனைகளைக் கேள்.
என் கட்டளைகளைப் பொக்கிஷம்போல் பாதுகாத்துக்கொள்.[d]
2 என் கட்டளைகளுக்குக் கீழ்ப்படி, அப்போது வாழ்வாய்.[e]
என் அறிவுரைகளை* கண்மணிபோல் காத்துக்கொள்.
3 அவற்றை உன் விரல்களில் கட்டிக்கொள்.
உன் இதயப் பலகையில் எழுதிக்கொள்.[f]
4 ஞானத்தைப் பார்த்து, "நீ என் சகோதரி" என்று சொல்.
புத்தியை* பார்த்து, "என் சொந்தமே" என்று கூப்பிடு.
5 அப்போதுதான், நடத்தைகெட்ட பெண்ணிடமிருந்தும்,[g] ஒழுக்கங்கெட்ட பெண்ணிடமிருந்தும்,
அவளுடைய தேனொழுகும் பேச்சிலிருந்தும் நீ பாதுகாக்கப்படுவாய்.[h]
6 என் வீட்டு ஜன்னல் வழியாகப் பார்த்தேன்.
அங்கிருந்து கீழே கவனித்தேன்.
7 அங்கே விவரம் தெரியாத* வாலிபர்கள் கூட்டமாக நின்றுகொண்டிருந்தார்கள்.
புத்தியில்லாத ஒரு வாலிபன் அந்தக் கூட்டத்தில் இருந்தான்.[i]
8 அவன் அவளுடைய தெரு முனையின் வழியாகப் போனான்.
அவளுடைய வீடு இருந்த திசையில் நடந்து போனான்.
9 பொழுதுசாயும் சாயங்கால வேளையிலே,[j]
இருட்டும் நேரத்திலே அவன் அங்கே போனான்.
10 அப்போது, ஒரு பெண் அவனைப் பார்க்க வந்தாள்.
அவள் விபச்சாரிபோல்* உடுத்தியிருந்தாள்,[k] தந்திரமான உள்ளத்தோடு வந்தாள்.
11 அவள் வாயாடி, அடங்காதவள்.[l]
தன்னுடைய வீட்டில் தங்கவே மாட்டாள்.
12 ஒருநேரம் தெருவில் இருப்பாள், அடுத்த நேரம் பொது சதுக்கங்களில் இருப்பாள்.
ஒவ்வொரு தெரு முனையிலும் பதுங்கி நிற்பாள்.[m]
13 அவள் அவனைப் பிடித்து முத்தம் கொடுத்தாள்.
பின்பு, வெட்கமே இல்லாமல் அவனிடம்,
14 "நான் சமாதான பலி செலுத்த வேண்டியிருந்தது,[n]
என் நேர்த்திக்கடன்களை இன்று செலுத்திவிட்டேன்.

6:33 * நே.மொ., "காயங்களும்." **7:2** * வே.வா., "சட்டங்களை." **7:4** * வே.வா., "புரிந்துகொள்ளுதலை." **7:7** * வே.வா., "அனுபவம் இல்லாத." **7:10** * வே.வா., "விபச்சாரியின் உடையை."

அதி. 6
a நீதி 5:8, 9
b 1ரா 15:5; 1நா 5:1; மத் 1:6
c ஆதி 39:19, 20

அதி. 7
d நீதி 10:14
e லேவி 18:5; உபா 5:16; ஏசா 55:3; யோவா 12:50
f நீதி 2:10, 11
g நீதி 23:27, 28
h நீதி 2:11, 16; நீதி 5:3; நீதி 6:23, 24
i நீதி 6:32; நீதி 9:16, 17
j யோபு 24:15
k எரே 4:30
l நீதி 9:13–18
m நீதி 23:27, 28
n லேவி 19:5

அதி. 7
a எசே 27:7
b உன் 3:6; உன் 4:14
c நீதி 5:3
d 1கொ 6:18
e நீதி 5:8-11
f நீதி 5:8
g பிர 7:26
h 1கொ 10:8

அதி. 8
i நீதி 1:20, 21
j மத் 10:27
k அப் 20:20

15 அதனால், உன்னைப் பார்க்க வந்தேன்.
உன்னைத்தான் தேடிக்கொண்டிருந்தேன், இப்போது
கண்டுபிடித்துவிட்டேன்!
16 என் மெத்தையில் அருமையான விரிப்பை விரித்து வைத்திருக்கிறேன்,
எகிப்து தேசத்துப் பலவண்ண நாரிழை* விரிப்பைப்[a] போட்டு
வைத்திருக்கிறேன்.
17 என் படுக்கையில் வெள்ளைப்போளத்தையும்* அகிலையும்#
லவங்கத்தையும் தூவி வைத்திருக்கிறேன்.[b]
18 என்னோடு வா, காலைவரை காதல் ரசத்தை நாம் பருகலாம்.
விடியும்வரை உல்லாசமாக இருக்கலாம்.
19 ஏனென்றால், என் புருஷன் வீட்டில் இல்லை.
ரொம்பத் தூரம் பிரயாணம் போயிருக்கிறார்.
20 பை நிறைய பணம் கொண்டுபோயிருக்கிறார்.
பௌர்ணமிவரை திரும்பிவர மாட்டார்" என்று சொன்னாள்.
21 அவள் இனிக்க இனிக்கப் பேசி அவனைத் தன் பக்கம் இழுத்தாள்.[c]
கொஞ்சிக் கொஞ்சிப் பேசி அவனை மயக்கினாள்.
22 உடனே அவன் அவளுக்குப் பின்னால் போனான்.
வெட்டப்படுவதற்காக இழுத்துச் செல்லப்படுகிற மாட்டைப் போலவும்,
தொழுமரத்தில்* தண்டிக்கப்படுவதற்காகக் கொண்டுபோகப்படுகிற
முட்டாளைப் போலவும் போனான்.[d]
23 கடைசியில், ஓர் அம்பு அவனுடைய கல்லீரலைக் குத்திக் கிழிக்கும்.
உயிர் போகுமென்று தெரியாமல் வேகமாகப் போய்க் கண்ணியில்
சிக்கிவிடும் பறவைபோல் ஆகிவிடுவான்.[e]
24 என் மகன்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்.
என் வார்த்தைகளைக் கவனித்துக் கேளுங்கள்.
25 உங்கள் இதயத்தை அவளுடைய வழிகளில் போக விடாதீர்கள்.
அவளுடைய பாதைகளில் மயங்கித் திரியாதீர்கள்.[f]
26 ஏனென்றால், அவள் எத்தனையோ பேரின் சாவுக்குக்
காரணமாகியிருக்கிறாள்.[g]
அவளால் செத்தவர்களின் எண்ணிக்கை ஏராளம்.[h]
27 அவளுடைய வீடு கல்லறைக்குப் போகும் வழி.
அது மரணத்தின் உள்ளறைகளுக்குக் கொண்டுபோகும் பாதை.

8 ஞானம் சத்தமாக அழைக்கிறது, அல்லவா?
பகுத்தறிவு உரத்த குரலில் கூப்பிடுகிறது, அல்லவா?[i]
2 அது சாலையோரமாக உள்ள உயரமான இடங்களிலும்,[j]
சாலை சந்திப்புகளிலும் நின்று அழைக்கிறது.
3 நகரவாசல்களின் பக்கத்திலும் நுழைவாசல்களிலும் நின்று,
சத்தமாக இப்படிக் குரல் கொடுத்துக்கொண்டே இருக்கிறது:[k]
4 "ஜனங்களே, உங்களைத்தான் சத்தமாக அழைக்கிறேன்.
எல்லாரையும் உரத்த குரலில் கூப்பிடுகிறேன்.

7:16 * அதாவது, "லினன்." **7:17** * சொல் பட்டியலைப் பாருங்கள். # இது ஒருவித வாசனைப் பொருள். **7:22** * வே.வா., "விலங்கிடப்பட்டு."

5 அனுபவமில்லாதவர்களே, சாமர்த்தியமாக நடக்கக்
கற்றுக்கொள்ளுங்கள்.[a]
அறிவில்லாதவர்களே, புரிந்துகொள்ளும் இதயத்தைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
6 கேளுங்கள், நான் முக்கியமான விஷயத்தை உங்களுக்குச்
சொல்கிறேன்.
என் உதடுகள் சரியானதையே பேசுகின்றன.
7 என் வாய் உண்மையைத்தான் பேசுகிறது.
என் உதடுகள் கெட்ட விஷயங்களை அருவருக்கின்றன.
8 என் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் எல்லாமே நீதியானவை.
அவை பொய்யும் புரட்டும் இல்லாதவை.
9 அவையெல்லாம் பகுத்தறிவு உள்ளவர்களுக்குச் சட்டென்று புரியும்.
அறிவை அடைந்தவர்களுக்குச் சரியாகத் தோன்றும்.
10 வெள்ளிக்குப் பதிலாக என் புத்திமதியை ஏற்றுக்கொள்ளுங்கள்.
சொக்கத்தங்கத்துக்குப் பதிலாக அறிவைப் பெற்றுக்கொள்ளுங்கள்.[b]
11 ஏனென்றால், ஞானம் பவளங்களைவிட* சிறந்தது.
வேறெந்தப் பொக்கிஷமும் அதற்கு ஈடாகாது.
12 நான்தான் ஞானம், நான் சாமர்த்தியத்தோடு குடியிருக்கிறேன்.
நான் அறிவையும் யோசிக்கும் திறனையும் பெற்றிருக்கிறேன்.[c]
13 கெட்டதை வெறுப்பதே யெகோவாவுக்குப் பயப்படுகிற பயம்.[d]
அகம்பாவத்தையும் ஆணவத்தையும் நான் வெறுக்கிறேன்.[e]
அக்கிரமம் செய்வதும் தாறுமாறாகப் பேசுவதும் எனக்குப் பிடிக்காது.[f]
14 நல்ல ஆலோசனையும் ஞானமும்* என்னிடம் இருக்கின்றன.[g]
புரிந்துகொள்ளும் திறனும்[h] பலமும்[i] எனக்குச் சொந்தமானவை.
15 என்னாலேயே ராஜாக்கள் ஆட்சி செய்துவருகிறார்கள்,
உயர் அதிகாரிகள் நீதியான சட்டங்களைக் கொடுக்கிறார்கள்.[j]
16 என்னாலேயே அதிபதிகள் ஆட்சி செய்துவருகிறார்கள்,
தலைவர்கள் நீதியான தீர்ப்பு சொல்கிறார்கள்.
17 என்னை நேசிக்கிறவர்களை நானும் நேசிக்கிறேன்.
என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்.[k]
18 செல்வமும் மகிமையும் என்னிடம் இருக்கின்றன.
அழியாத சொத்தும்* நீதியும் என்னிடம் இருக்கின்றன.
19 நான் தரும் பலன் தங்கத்தைவிடவும் சொக்கத்தங்கத்தைவிடவும்
மேலானது.
என்னால் கிடைக்கும் பலன் சுத்தமான வெள்ளியைவிட
அருமையானது.[l]
20 நான் நீதியான வழியில் நடக்கிறேன்.
நியாயமான பாதையின் நடுவிலேயே நடக்கிறேன்.
21 என்னை நேசிக்கிறவர்களுக்கு விலைமதிப்புள்ள சொத்துகளைக்
கொடுக்கிறேன்.

8:11 *சொல் பட்டியலைப் பாருங்கள். 8:14 *அதாவது, “நடைமுறை ஞானமும்.”
8:18 *வே.வா., “நெறிமுறைகளும்.”

அதி. 8
a சங் 19:7
b சங் 19:9, 10; சங் 119:72, 127; நீதி 3:13-15
c நீதி 2:11; நீதி 5:1, 2
d சங் 97:10; சங் 101:3; நீதி 16:6; ரோ 12:9
e சங் 101:5; 1பே 5:5
f நீதி 4:24
g நீதி 2:7
h நீதி 4:7
i நீதி 24:5
j சங் 72:1
k நீதி 2:4, 5
l நீதி 3:13, 14

அவர்களுடைய சேமிப்புக் கிடங்குகளை நிரப்புகிறேன்.
22 யெகோவா என்னைத்தான் முதன்முதலில் உருவாக்கினார்.[a]
படைப்புகளிலேயே முதல் படைப்பாக என்னைப் பல காலங்களுக்கு முன்னால் உருவாக்கினார்.[b]
23 ஆரம்பத்திலேயே, பூமி படைக்கப்படுவதற்கு முன்பே,[c]
எண்ணிலடங்காத வருஷங்களுக்கு முன்பே நான் ஏற்படுத்தப்பட்டேன்.[d]
24 ஆழ்கடல்கள் எதுவும் இல்லாத காலத்தில்[e] நான் உண்டாக்கப்பட்டேன்.*
பொங்கி வரும் நீரூற்றுகள் இல்லாத சமயத்தில் உருவாக்கப்பட்டேன்.
25 மலைகள் நிலைநிறுத்தப்படுவதற்கு முன்னால் படைக்கப்பட்டேன்.
குன்றுகள் உண்டாக்கப்படுவதற்கு முன்னால் உயிர்பெற்றேன்.
26 அவர் பூமியையும் அதன் வயல்வெளிகளையும்,
பூமியின் முதல் மண்கட்டிகளையும் உருவாக்குவதற்கு முன்பே நான் உருவாக்கப்பட்டேன்.
27 அவர் வானத்தைப் படைத்தபோது[f] நான் இருந்தேன்.
அவர் நீர்ப்பரப்புக்கு மேலாக அடிவானத்தின் எல்லையைக் குறித்தபோதும்,[g]
28 மேகங்களை வானத்தில் நிலைநிறுத்தியபோதும்,
ஆழத்திலுள்ள ஊற்றுகளை உருவாக்கியபோதும்,
29 அவர் கடலுக்கு எல்லை வகுத்து,
அதைத் தாண்டக் கூடாது என்று அதன் தண்ணீருக்கு உத்தரவு போட்டபோதும்,[h]
பூமிக்கு அஸ்திவாரம் போட்டபோதும்,
30 நான் அவருக்குப் பக்கத்தில் கைதேர்ந்த கலைஞனாக இருந்தேன்.[i]
நித்தமும் நான் அவருக்குச் செல்லப்பிள்ளையாக இருந்தேன்.[j]
அவர்முன் எப்போதும் சந்தோஷமாக இருந்தேன்.[k]
31 மனுஷர்களுக்காக அவர் படைத்த பூமியைப் பார்த்தபோது எனக்குச் சந்தோஷமாக இருந்தது.
நான் மனுஷர்கள்மேல் கொள்ளைப் பிரியம் வைத்திருந்தேன்.
32 என் மகன்களே, இப்போது நான் சொல்வதைக் கேளுங்கள்.
எப்போதும் என் வழியில் நடக்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்.
33 புத்திமதியைக் கேட்டு,[l] ஞானம் அடையுங்கள்.
அதை ஒருபோதும் அலட்சியம் செய்யாதீர்கள்.
34 தினமும் விடியற்காலையில் என் வீட்டு வாசலுக்கு வந்து,*
என் கதவுக்குப் பக்கத்தில் காத்திருந்து,
நான் சொல்வதைக் கேட்பவன் சந்தோஷமானவன்.
35 என்னைக் கண்டடைகிறவன் வாழ்வைக் கண்டடைவான்,[m]
யெகோவாவின் கருணையையும்* பெறுவான்.

8:24 * வே.வா., "பிரசவ வலியோடு பிறப்பிக்கப்பட்டேன்." **8:34** * வே.வா., "தினமும் என் வீட்டு வாசலில் விழித்திருந்து." **8:35** * வே.வா., "அங்கீகாரத்தையும்."

அதி. 8
a யோவா 1:1-3, 14
b கொலோ 1:15-17
c யோவா 8:58; யோவா 17:5
d மீ 5:2
e ஆதி 1:2
f சங் 33:6; எரே 10:12
g ஆதி 1:6, 7; யோபு 26:10
h யோபு 38:8-11; சங் 33:7; சங் 104:6-9; எரே 5:22
i ஆதி 1:26; யோவா 1:1, 3; யோவா 17:5; கொலோ 1:15, 16
j ஏசா 42:1; மத் 3:17
k யோபு 38:7
l நீதி 3:11; நீதி 4:13; எபி 12:7, 9
m நீதி 13:14

36 ஆனால், என்னை உதறித்தள்ளுகிறவன் தனக்குத்தானே கேடு
வரவழைத்துக்கொள்கிறான்.
என்னை வெறுக்கிறவர்கள் மரணத்தை விரும்புகிறார்கள்."[a]

9 உண்மையான ஞானம் தன்னுடைய வீட்டைக் கட்டியிருக்கிறது.
அதற்கு ஏழு தூண்களைச் செய்து வைத்திருக்கிறது.
2 அது இறைச்சியை நன்றாகச் சமைத்து வைத்திருக்கிறது.*
திராட்சமதுவைக் கலந்து வைத்திருக்கிறது.
பந்தியைத் தயார் செய்திருக்கிறது.
3 அது தன் பணிப்பெண்களை அனுப்பி வைத்திருக்கிறது.
அந்தப் பெண்கள் நகரத்தின் உயரமான இடங்களில் நின்றுகொண்டு,[b]
4 "அனுபவமில்லாதவர்களே, இங்கே வாருங்கள்" என்று அறிவிக்கும்படி
செய்திருக்கிறது.
அது புத்தியில்லாதவர்களைப் பார்த்து,
5 "வாருங்கள், நான் தரும் உணவைச் சாப்பிடுங்கள்.
நான் கலந்து வைத்திருக்கும் திராட்சமதுவைக் குடியுங்கள்.
6 நீங்கள் அனுபவமில்லாமல் இருந்தது போதும்![c]
இனி புத்தியின்* பாதையில் முன்னேறிச் செல்லுங்கள்.[d]
அப்போது வாழ்வீர்கள்" என்று சொல்கிறது.
7 கேலி செய்கிறவனைத் திருத்தப் பார்க்கிறவன் அவமானத்தைத்
தேடிக்கொள்கிறான்.[e]
கெட்டவனைக் கண்டிக்கிறவன் தன்னைப் புண்படுத்திக்கொள்வான்.
8 கேலி செய்கிறவனைக் கண்டிக்காதே, அவன் உன்னை வெறுப்பான்.[f]
ஞானமுள்ளவனைக் கண்டி, அவன் உன்னை நேசிப்பான்.[g]
9 ஞானமுள்ளவனுக்கு உபதேசம் பண்ணு, அவன் இன்னும் ஞானமாக
நடப்பான்.[h]
நீதிமானுக்குக் கற்றுக்கொடு, அவன் இன்னும் அறிவாளியாக ஆவான்.
10 யெகோவாவுக்குப் பயப்படுவதுதான் ஞானத்தைப் பெறுவதற்கு
முதல் படி.[i]
மகா பரிசுத்தமானவரைப் பற்றித் தெரிந்துகொள்வதுதான்[j] புத்தியை*
பெறுவதற்கு வழி.
11 என்னால் நீ பல்லாண்டு காலம் வாழ்வாய்.[k]
உன் ஆயுள்காலம் கூட்டப்படும்.
12 நீ ஞானமாக நடந்துகொண்டால் உனக்குத்தான் நல்லது.
ஆனால், நீ கேலி செய்துகொண்டிருந்தால், நீயே அதன் விளைவை
அனுபவிப்பாய்.
13 புத்தியில்லாத பெண் வாயடிக்கிறாள்.[l]
அவளுக்கு அறிவில்லை, எதுவுமே தெரிவதில்லை.
14 நகரத்தின் உயரமான இடத்திலே,
தன் வீட்டு வாசலில் அவள் உட்கார்ந்திருக்கிறாள்.[m]
15 தெருவில் போகிறவர்களைக் கூப்பிடுகிறாள்.

9:2 *நே.மொ., "வெட்டி வைத்திருக்கிறது." 9:6 *வே.வா., "புரிந்துகொள்ளுதலின்."
9:10 *வே.வா., "புரிந்துகொள்ளுதலை."

அதி. 8
a நீதி 5:23

அதி. 9
b நீதி 1:20-22
c சங் 119:130
d நீதி 4:5; நீதி 13:20
e நீதி 15:12
f 1ரா 21:20, 21; 1ரா 22:8; 2நா 25:15, 16; மத் 7:6
g சங் 141:5; நீதி 27:6; நீதி 28:23
h நீதி 1:5; நீதி 15:31; நீதி 17:10; நீதி 25:12
i சங் 111:10
j 1நா 28:9; மத் 11:27; யோவா 17:3
k உபா 6:1, 2; நீதி 8:35; நீதி 10:27
l நீதி 7:10, 11
m நீதி 23:27, 28

நேராகத் தங்கள் வழியில் போகிற அந்த ஆட்களைப் பார்த்து,
16 "அனுபவமில்லாதவர்களே, உள்ளே வாருங்கள்" என்று கூப்பிடுகிறாள்.
புத்தியில்லாதவர்களைப் பார்த்து,[a]
17 "திருட்டுத் தண்ணீர் தித்திப்பாக இருக்கும்.
திருட்டுத்தனமாகச் சாப்பிடுகிற உணவு ருசியாக இருக்கும்"[b] என்று சொல்கிறாள்.
18 ஆனால், அவளுடைய வீடு பிணங்களால்* நிறைந்திருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை.
அவளுடைய விருந்தாளிகள் ஆழமான கல்லறையில் கிடக்கிறார்கள்[c] என்பது அவர்களுக்குப் புரிவதில்லை.

10 சாலொமோனின் நீதிமொழிகள்.[d]
ஞானமுள்ள மகன் தன் அப்பாவைச் சந்தோஷப்படுத்துகிறான்.[e]
ஆனால், புத்தியில்லாத மகன் தன் அம்மாவை வேதனைப்படுத்துகிறான்.
2 அநியாயமாகச் சேர்க்கிற சொத்துகளால் எந்தப் பிரயோஜனமும் கிடைக்காது.
ஆனால், நீதியான செயல்கள்தான் மரணத்திலிருந்து காப்பாற்றும்.[f]
3 யெகோவா நீதிமானைப் பசியில் வாட விடமாட்டார்.[g]
ஆனால், பொல்லாதவனுக்கு அவன் ஆசைப்படுவதைத் தர மாட்டார்.
4 சோம்பலான கைகள் வறுமையை வர வைக்கும்.[h]
ஆனால், கடினமாக உழைக்கும் கைகள் செல்வத்தைக் கொண்டுவரும்.[i]
5 விவேகத்தோடு நடக்கிற மகன் கோடைக் காலத்தில் அறுவடை செய்கிறான்.
ஆனால், வெட்கக்கேடாக நடக்கிற மகன் அறுவடைக் காலத்தில் நன்றாகத் தூங்குகிறான்.[j]
6 நீதிமானின் தலைமேல் ஆசீர்வாதங்கள் பொழிகின்றன.[k]
ஆனால், பொல்லாதவனின் வாய் அவனுடைய வன்முறையான எண்ணங்களை மூடிமறைக்கிறது.
7 நீதிமானைப் பற்றிய நினைவுகள்* ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.[l]
ஆனால், பொல்லாதவனின் பெயர் கெட்டுப்போகும்.[m]
8 இதயத்தில் ஞானம் உள்ளவன் அறிவுரைகளை ஏற்றுக்கொள்வான்.[n]
ஆனால், முட்டாள்தனமாகப் பேசுகிறவன் மிதிபடுவான்.[o]
9 உத்தமமாக நடக்கிறவன் பத்திரமாக நடப்பான்.[p]
ஆனால், குறுக்கு வழியில் போகிறவன் மாட்டிக்கொள்வான்.[q]
10 கள்ளத்தனமாகக் கண் ஜாடை காட்டுகிறவன் மனவேதனையை உண்டாக்குகிறான்.[r]
முட்டாள்தனமாகப் பேசுகிறவன் மிதிபடுவான்.[s]
11 நீதிமானின் வாய் வாழ்வளிக்கும் ஊற்றாக இருக்கிறது.[t]
ஆனால், பொல்லாதவனின் வாய் அவனுடைய வன்முறையான எண்ணங்களை மூடிமறைக்கிறது.[u]

9:18 *வே.வா., "செத்து செயலிழந்து போனவர்களால்." 10:7 *வே.வா., "நீதிமான் எடுத்திருக்கும் நல்ல பெயர்."

அதி. 9
a நீதி 6:32
b நீதி 7:18, 19
c நீதி 2:18, 19; நீதி 7:23, 26; நீதி 23:27, 28

அதி. 10
d நீதி 1:1
e நீதி 13:1; நீதி 27:11
f நீதி 11:4
g சங் 33:18, 19; சங் 37:25; மத் 6:33
h நீதி 20:4; பிர 10:18
i நீதி 12:24; நீதி 13:4; நீதி 21:5
j நீதி 6:6, 9
k யாத் 23:25; நீதி 28:20
l சங் 112:6; பிர 7:1
m சங் 9:5
n உபா 4:6; சங் 19:7; சங் 119:34; சங் 119:100
o நீதி 18:6
p சங் 25:21
q 1தீ 5:24
r நீதி 6:12, 13
s நீதி 18:21
t நீதி 11:30
u மத் 12:35; யாக் 3:5

12 பகை சண்டைகளைத் தூண்டிவிடுகிறது.
ஆனால், அன்பு எல்லா குற்றங்களையும் மூடிவிடுகிறது.[a]
13 பகுத்தறிவோடு நடப்பவனின் உதடுகளில் காணப்படுவது ஞானம்.[b]
ஆனால், புத்தியில்லாதவனின் முதுகுக்கு ஏற்றது பிரம்பு.[c]
14 ஞானமுள்ளவர்கள் அறிவைப் பொக்கிஷம்போல் பாதுகாக்கிறார்கள்.[d]
ஆனால், முட்டாளின் வாய் அழிவைத் தேடித்தருகிறது.[e]
15 பணக்காரனின் சொத்து அவனுக்கு மதில் சூழ்ந்த நகரம்போல் இருக்கிறது.
ஆனால், ஏழைகளின் வறுமை அவர்களை அழிக்கிறது.[f]
16 நீதிமானின் உழைப்பு வாழ்வுக்கு வழிநடத்துகிறது.
ஆனால், பொல்லாதவனின் வருமானம் பாவத்துக்கு வழிநடத்துகிறது.[g]
17 புத்திமதியை ஏற்றுக்கொள்கிறவன் வாழ்வுக்கு வழிகாட்டுகிறான்.*
ஆனால், கண்டிக்கப்படுவதைக் காதில் வாங்காதவன் தவறாக வழிகாட்டுகிறான்.
18 உள்ளத்தில் பகையை மறைத்து வைத்திருப்பவன் பொய் பேசுகிறான்.[h]
வதந்திகளைப் பரப்புகிறவன் முட்டாள்தனமாக நடந்துகொள்கிறான்.
19 அதிகமாகப் பேசுவது பாவத்தில்தான் போய் முடியும்.[i]
ஆனால், தன் உதடுகளை அடக்குகிறவன் விவேகமாக நடந்துகொள்கிறான்.[j]
20 நீதிமானின் நாவு உயர்தரமான வெள்ளியைப் போல இருக்கிறது.[k]
ஆனால், பொல்லாதவனின் இதயம் செல்லாக்காசு போல இருக்கிறது.
21 நீதிமானின் உதடுகள் பலருக்கு ஊட்டமளிக்கின்றன.*[l]
ஆனால், முட்டாள் புத்தியில்லாததால் செத்துப்போகிறான்.[m]
22 யெகோவா தரும் ஆசீர்வாதம்தான் ஒருவருக்குக் கிடைக்கும் சொத்து.*[n]
அதனோடு சேர்த்து அவர் எந்த வேதனையையும்# கொடுக்க மாட்டார்.
23 வெட்கக்கேடாக நடப்பது முட்டாளுக்கு ஒரு விளையாட்டாக இருக்கிறது.
ஆனால், பகுத்தறிவோடு நடப்பவனிடம் ஞானம் இருக்கிறது.[o]
24 பொல்லாதவன் எதை நினைத்துப் பயப்படுகிறானோ அது அவனுக்கு நடக்கும்.
ஆனால், நீதிமானின் ஆசை நிறைவேற்றப்படும்.[p]
25 புயல் அடிக்கும்போது பொல்லாதவன் இல்லாமல் போவான்.[q]
ஆனால், நீதிமான் நிலையான அஸ்திவாரம்போல் இருப்பான்.[r]
26 பற்களுக்குக் காடியும், கண்களுக்குப் புகையும் எப்படி இருக்குமோ,
அப்படித்தான் சோம்பேறியும் தன் முதலாளிக்கு* இருப்பான்.
27 யெகோவாவுக்குப் பயந்து நடப்பவர்களுடைய ஆயுள் கூடும்.[s]
ஆனால், பொல்லாதவனின் வாழ்நாள் குறைக்கப்படும்.[t]
28 நீதிமானின் எதிர்பார்ப்பு சந்தோஷத்தைக் கொடுக்கும்.[u]
ஆனால், பொல்லாதவனின் நம்பிக்கை நாசமாகும்.[v]

10:17 * அல்லது, "வாழ்வின் வழியில் நடக்கிறான்." 10:21 * வே.வா., "வழிகாட்டுகின்றன." 10:22 * வே.வா., "ஒருவரைச் செல்வந்தராக்கும்." # வே.வா., "கவலையையும்; கஷ்டத்தையும்." 10:26 * வே.வா., "தன்னை அனுப்பியவருக்கு."

அதி. 10
a நீதி 17:9; 1கொ 13:4, 7; 1பே 4:8
b ஏசா 50:4
c நீதி 26:3
d நீதி 9:9
e நீதி 13:3; நீதி 18:7
f நீதி 19:7; நீதி 30:8, 9; பிர 7:12
g மத் 7:17
h 1சா 18:17, 21
i பிர 5:2
j சங் 39:1; நீதி 17:27; நீதி 21:23; யாக் 1:19
k நீதி 12:18; நீதி 16:13
l எரே 3:15
m ஓசி 4:6
n உபா 8:17, 18; சங் 37:22; 1தீ 6:6
o நீதி 2:10, 11; நீதி 14:9; நீதி 15:21
p சங் 37:4; 1யோ 5:14
q சங் 37:10
r மத் 7:24, 25
s சங் 91:15, 16
t சங் 55:23
u சங் 16:9; ரோ 12:12
v நீதி 11:7

29 யெகோவாவின் வழி குற்றமற்றவர்களுக்கு ஒரு கோட்டைபோல் இருக்கிறது.[a]
ஆனால், அக்கிரமக்காரர்களுக்கு அது அழிவைக் கொண்டுவருகிறது.[b]
30 நீதிமான் ஒருபோதும் அசைக்கப்பட மாட்டான்.[c]
ஆனால், பொல்லாதவன் இனி பூமியில் இருக்க மாட்டான்.[d]
31 நீதிமானின் வாயிலிருந்து ஞானம் பிறக்கும்.
ஆனால், தாறுமாறாகப் பேசுகிற நாவு அறுத்தெறியப்படும்.
32 நீதிமானின் உதடுகளுக்கு இனிமையாகப் பேசத் தெரியும்.
ஆனால், பொல்லாதவனின் வாய் தாறுமாறாகப் பேசும்.

11 கள்ளத் தராசுகளை யெகோவா அருவருக்கிறார்.
ஆனால், சரியான எடைக்கற்களை அவர் விரும்புகிறார்.[e]
2 அகங்காரம்* வந்தால் அவமானம் பின்னாலேயே வரும்.[f]
ஆனால், அடக்கமானவர்களிடம் ஞானம் இருக்கும்.[g]
3 நேர்மையானவர்களின் உத்தம குணம் அவர்களை வழிநடத்தும்.[h]
ஆனால், துரோகிகளின் குறுக்குபுத்தி அவர்களை அழித்துவிடும்.[i]
4 கடும் கோபத்தின் நாளில் சொத்துப்பத்துகள் உதவாது.[j]
ஆனால், நீதியே மரணத்திலிருந்து காப்பாற்றும்.[k]
5 குற்றமற்றவர்களுடைய நீதி அவர்களுடைய பாதையை நேராக்கும்.
ஆனால், அக்கிரமக்காரர்கள் தங்களுடைய அக்கிரமத்தாலேயே விழுந்துபோவார்கள்.[l]
6 நேர்மையானவர்களுடைய நீதி அவர்களைக் காப்பாற்றும்.[m]
ஆனால், துரோகிகள் தங்களுடைய ஆசைகளிலேயே சிக்கிக்கொள்வார்கள்.[n]
7 பொல்லாதவன் சாகும்போது அவனுடைய எதிர்பார்ப்பு அழிந்துபோகிறது.
தன் பலத்தின் மேல் அவன் வைத்திருக்கிற நம்பிக்கையும் அழிந்துபோகிறது.[o]
8 நீதிமான் இக்கட்டிலிருந்து காப்பாற்றப்படுகிறான்.
ஆனால், பொல்லாதவன் அந்த இக்கட்டில் மாட்டிக்கொள்கிறான்.[p]
9 கடவுளைவிட்டு விலகியவன்* தன் வாயால் அடுத்தவர்களைச் சீரழிக்கிறான்.
ஆனால், நீதிமான்கள் தங்களுடைய அறிவால் தப்பித்துக்கொள்கிறார்கள்.[q]
10 நீதிமான்களுடைய நல்ல குணத்தால் நகரமே சந்தோஷப்படுகிறது.
ஆனால், பொல்லாதவர்கள் அழியும்போது ஒரே கொண்டாட்டமாக இருக்கிறது.[r]
11 நேர்மையானவர்களுடைய ஆசீர்வாதத்தால் நகரம் செழிக்கிறது.[s]
ஆனால், பொல்லாதவர்களுடைய வாயினால் அது சின்னாபின்னமாகிறது.[t]

11:2 *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. 11:9 *வே.வா., "விசுவாசதுரோகி."

அதி. 10
a நீதி 18:10, ஏசா 40:31
b ரோ 2:6-8
c சங் 16:8
d சங் 37:9

அதி. 11
e லேவி 19:36
f நீதி 16:18, லூ 14:8, 9
g மீ 6:8, 1பே 5:5
h சங் 26:1, நீதி 13:6
i நீதி 28:18
j எசே 7:19, மத் 16:26
k ஆதி 7:1
l 2சா 17:23, எஸ்தர் 7:10, நீதி 5:22
m எரே 39:18
n நீதி 1:32
o யாத் 15:9, 10, லூ 12:18-20
p எஸ்தர் 7:9, நீதி 21:18, தானி 6:23, 24
q நீதி 2:10-12
r யாத் 15:20, 21, எஸ்தர் 9:19, 22
s நீதி 14:34
t யாக் 3:6

12 புத்தியில்லாதவன் அடுத்தவர்களை அவமதிக்கிறான்.
ஆனால், பகுத்தறிவு நிறைந்தவன் அமைதியாக இருக்கிறான்.[a]
13 இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவன் ரகசியத்தை அம்பலப்படுத்துகிறான்.[b]
ஆனால், நம்பகமானவன் ரகசியத்தைக் காப்பாற்றுகிறான்.
14 திறமையான வழிநடத்துதல் இல்லையென்றால் மக்கள் திண்டாடுவார்கள்.
ஆனால், ஆலோசகர்கள் நிறைய பேர் இருந்தால் வெற்றி* நிச்சயம்.[c]
15 முன்பின் தெரியாதவனுடைய கடனுக்குப் பொறுப்பு ஏற்கிறவன் கண்டிப்பாக அவதிப்படுவான்.[d]
ஆனால், கைகுலுக்கி ஒப்பந்தம் செய்யாதவன் பாதுகாப்பாக இருப்பான்.
16 கனிவான பெண் நல்ல பெயர் சம்பாதிக்கிறாள்.[e]
ஆனால், ஈவிரக்கமில்லாத ஆட்கள் சொத்துகளை அபகரிக்கிறார்கள்.
17 கருணையுள்ளவன்* தனக்கு நன்மை செய்துகொள்கிறான்.[f]
ஆனால், கொடூரமானவன் தனக்குக் கஷ்டத்தை# தேடிக்கொள்கிறான்.[g]
18 பொல்லாதவன் சம்பாதிக்கிற கூலியால் எந்தப் பலனும் கிடைக்காது.[h]
ஆனால், நீதியை விதைக்கிறவன் நல்ல பலனை அறுப்பான்.[i]
19 நீதியின் பக்கம் உறுதியாக நிற்கிறவன் வாழ்வு அடைவான்.[j]
ஆனால், அக்கிரமம் செய்ய ஓடுகிறவன் மரணம் அடைவான்.
20 கோணலான புத்தி* உள்ளவர்கள் யெகோவாவுக்கு அருவருப்பானவர்கள்.[k]
ஆனால், குற்றமற்ற வழியில் நடக்கிறவர்கள் அவருக்குப் பிரியமானவர்கள்.[l]
21 இது உறுதி: அக்கிரமக்காரன் தண்டனையிலிருந்து தப்பிக்க மாட்டான்.[m]
ஆனால், நீதிமான்களின் பிள்ளைகள் தப்பித்துக்கொள்வார்கள்.
22 புத்தியில்லாமல் நடக்கிற அழகான பெண்,
பன்றியின் மூக்கில் இருக்கிற தங்க மூக்குத்திபோல் இருக்கிறாள்.
23 நீதிமான்களின் விருப்பம் நன்மையைக் கொண்டுவரும்.[n]
ஆனால், பொல்லாதவர்களின் நம்பிக்கை கடும் கோபத்தைக் கொண்டுவரும்.
24 தாராளமாகக் கொடுக்கிறவன்* ஏராளமாகப் பெறுகிறான்.[o]
கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் கஞ்சத்தனம் காட்டுகிறவன் ஏழையாகிறான்.[p]
25 தாராள குணமுள்ளவன் செழிப்பான்.[q]
மற்றவர்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கிறவன் புத்துணர்ச்சி அடைவான்.*[r]
26 தானியத்தைப் பதுக்கி வைக்கிறவனை மக்கள் சபிப்பார்கள்.
ஆனால், அதை விற்கிறவனைப் புகழ்வார்கள்.

11:14 *வே.வா., "மீட்பு." **11:17** *வே.வா., "மாறாத அன்பு காட்டுகிறவன்." #வே.வா., "அவமானத்தை." **11:20** *நே.மொ., "இதயம்." **11:24** *நே.மொ., "வாரி இறைக்கிறவன்." **11:25** *வே.வா., "தாராளமாகத் தண்ணீர் பாய்ச்சுகிறவனுக்குத் தாராளமாகத் தண்ணீர் பாய்ச்சப்படும்."

அதி. 11
a நீதி 17:27; 1பே 2:23
b லேவி 19:16; நீதி 20:19; நீதி 26:22
c நீதி 15:22; நீதி 20:18; நீதி 24:6
d நீதி 6:1, 5; நீதி 20:16
e 1சா 25:39; 1பே 3:3, 4
f லூ 6:38
g யாக் 5:3, 4
h யோபு 27:13, 14
i கலா 6:7, 8
j அப் 10:34, 35; வெளி 2:10
k சங் 18:26; நீதி 3:32
l சங் 51:6; நீதி 15:8
m பிர 8:13; எசே 18:4
n ஏசா 26:9; மத் 5:6
o உபா 15:10; நீதி 19:17; பிர 11:1, 2
p ஆகா 1:6
q அப் 20:35; 2கொ 9:6
r லூ 6:38

27 நல்லது செய்வதில் தீவிரமாக இருக்கிறவன் மற்றவருடைய பிரியத்தை*
சம்பாதிக்கிறான்.[a]
ஆனால், கெட்டது செய்வதில் குறியாக இருக்கிறவனுக்குக்
கெட்டதுதான் நடக்கும்.[b]
28 தன்னுடைய சொத்துப்பத்துகளை நம்புகிறவன் விழுந்துபோவான்.[c]
ஆனால், நீதிமான்கள் இளந்தளிரைப் போலத் தழைப்பார்கள்.[d]
29 தன் குடும்பத்துக்குத் துன்பத்தை* கொண்டுவருகிறவன் காற்றைத்தான்
சொத்தாகப் பெறுவான்.[e]
ஞானமுள்ளவனுக்கு முட்டாள் வேலைக்காரனாக இருப்பான்.
30 நீதிமானின் செயல்கள் வாழ்வளிக்கும் மரத்தைப் போல் இருக்கின்றன.[f]
மற்றவர்களை நல்ல வழிக்குக் கொண்டுவருகிறவன் ஞானமுள்ளவன்.[g]
31 பூமியில் நீதிமானுக்கே கூலி கிடைக்கும் என்றால்,
அக்கிரமக்காரனையும் பாவியையும் பற்றிச் சொல்லவே
வேண்டாம்![h]

12 புத்திமதியை விரும்புகிறவன் அறிவை விரும்புகிறான்.[i]
ஆனால், கண்டிக்கப்படுவதை வெறுக்கிறவன் புத்தியில்லாமல்
நடக்கிறான்.[j]
2 நல்லவன் யெகோவாவின் பிரியத்தை* சம்பாதிக்கிறான்.
ஆனால், சதிகாரனை அவர் கண்டனம் செய்கிறார்.[k]
3 அக்கிரமம் செய்வதன் மூலம் ஒருவனும் தன்னைப்
பாதுகாத்துக்கொள்ள முடியாது.[l]
ஆனால், நீதிமானின் வேர் ஒருபோதும் பிடுங்கப்படாது.
4 திறமைசாலியான மனைவி தன்னுடைய கணவனுக்குக் கிரீடம்போல்
இருக்கிறாள்.[m]
ஆனால், வெட்கக்கேடாக நடக்கிற மனைவி அவனுக்கு எலும்புருக்கி
நோய்போல் இருக்கிறாள்.[n]
5 நீதிமான்களின் யோசனைகள் நியாயமானவை.
ஆனால், பொல்லாதவர்களின் ஆலோசனைகள் ஏமாற்றுபவை.
6 பொல்லாதவர்களுடைய வார்த்தைகள் இரத்தம் சிந்தப்
பதுங்கியிருக்கின்றன.[o]
ஆனால், நேர்மையானவர்களின் வாய் அவர்களைக் காப்பாற்றுகிறது.[p]
7 கெட்டவர்கள் வீழ்த்தப்படும்போது சுவடு தெரியாமல்
போய்விடுவார்கள்.
ஆனால், நீதிமான்களின் வீடு என்றென்றும் நிலைத்திருக்கும்.[q]
8 விவேகத்தோடு பேசுகிறவனை எல்லாரும் புகழ்வார்கள்.[r]
ஆனால், கோணலான புத்தி* உள்ளவனை எல்லாரும் கேவலமாக
நடத்துவார்கள்.[s]
9 சாப்பாட்டுக்கு வழியில்லாமல் வாழ்ந்துகொண்டு வீண்
பெருமையடிக்கிற ஒருவனைவிட,

அதி. 11
a நீதி 12:2
b எஸ்தர் 7:10; சங் 10:2
c யோபு 31:24, 28; சங் 52:5, 7
d சங் 1:2, 3; சங் 52:8
e யோசு 7:15
f நீதி 15:4
g 1கொ 9:20-22; யாக் 5:19, 20
h எசே 18:24; 2தெ 1:6; 1பே 4:18

அதி. 12
i நீதி 4:13
j சங் 32:9
k உபா 25:1; 1ரா 8:31, 32
l சங் 37:10, 38
m நீதி 18:22; நீதி 19:14
n 1ரா 21:25
o 2சா 17:1, 2
p எஸ்தர் 7:3, 4; நீதி 14:3
q நீதி 24:3; மத் 7:24, 25
r ஆதி 41:39; 1சா 16:18
s 1சா 25:14, 17; மத் 27:3, 4

11:27 *கடவுளுடைய பிரியத்தையோ மனிதர்களுடைய பிரியத்தையோ குறிக்கலாம். **11:29** *வே.வா., "அவமானத்தை." **12:2** *வே.வா., "அங்கீகாரத்தை." **12:8** *நே.மொ., "இதயம்."

வீண் பகட்டு இல்லாமல் வாழ்ந்துகொண்டு வேலைக்காரனை
வைத்திருக்கிறவன் மேல்.[a]
10 நீதிமான் தன் வீட்டு விலங்குகளை நன்றாகக் கவனித்துக்கொள்கிறான்.[b]
ஆனால், பொல்லாதவன் காட்டுகிற இரக்கம்கூட கொடூரமாகத்தான்
இருக்கிறது.
11 தன்னுடைய நிலத்தில் பயிரிடுகிறவன் திருப்தியாகச் சாப்பிடுவான்.[c]
ஆனால், வீணான காரியங்களுக்குப் பின்னால் போகிறவன்
புத்தியில்லாதவன்.
12 அக்கிரமக்காரர்கள் கொள்ளையடித்தவற்றைப் பார்த்துப்
பொல்லாதவன் பொறாமைப்படுகிறான்.
ஆனால், நீதிமான் நன்றாக வேரூன்றிய மரத்தைப் போல் கனி
கொடுக்கிறான்.
13 அக்கிரமக்காரன் தன்னுடைய பாவமுள்ள பேச்சினால்
சிக்கிக்கொள்கிறான்.[d]
ஆனால், நீதிமான் வேதனையிலிருந்து தப்பித்துக்கொள்கிறான்.
14 நல்ல வார்த்தைகளைப் பேசுகிறவன் அதன் பலனைப் பார்த்துத்
திருப்தியடைகிறான்.[e]
அவனுடைய கைகளின் உழைப்பு அவனுக்குப் பலன் தரும்.
15 முட்டாள் தன்னுடைய பாதை சரி என்று நினைக்கிறான்.[f]
ஆனால், ஞானமுள்ளவன் ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறான்.[g]
16 முட்டாள் சட்டென்று* எரிச்சலைக் காட்டிவிடுகிறான்.[h]
ஆனால், சாமர்த்தியசாலி அவமரியாதையைப் பெரிதுபடுத்தாமல்
விட்டுவிடுகிறான்.
17 உண்மையாகச் சாட்சி சொல்கிறவன் உள்ளதை உள்ளபடியே
சொல்கிறான்.
ஆனால், பொய் சாட்சி சொல்கிறவன் உண்மைக்கு மாறாகப் பேசுகிறான்.
18 யோசிக்காமல் பேசுவது வாள் போலக் குத்தும்.
ஆனால், ஞானமுள்ளவனின் நாவு காயத்தை ஆற்றும்.[i]
19 உண்மை பேசுகிற உதடுகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.[j]
ஆனால், பொய் பேசுகிற நாவு நொடிப்பொழுதுதான் இருக்கும்.[k]
20 சதித்திட்டம் போடுகிறவர்களின் உள்ளத்தில் இருப்பது கள்ளத்தனம்.
ஆனால், சமாதானத்துக்காகப் பாடுபடுகிறவர்களுக்குக் கிடைப்பது
சந்தோஷம்.[l]
21 நீதிமானுக்கு எந்தக் கெடுதலும் வராது.[m]
ஆனால், பொல்லாதவனின் வாழ்க்கையில் சோகங்கள்
நிறைந்திருக்கும்.[n]
22 பொய் பேசும் உதடுகளை யெகோவா அருவருக்கிறார்.[o]
ஆனால், உண்மையாக நடக்கிறவர்கள்மேல் பிரியமாக இருக்கிறார்.
23 சாமர்த்தியசாலி தன் அறிவைக் காட்டிக்கொள்ளாமல் இருக்கிறான்.
ஆனால், முட்டாள் தன் உள்ளத்திலுள்ள முட்டாள்தனத்தை
உளறிக்கொட்டிவிடுகிறான்.[p]

12:16 * வே.வா., "அதே நாளில்."

அதி. 12
a நீதி 13:7
b ஆதி 33: 12–14
யாத் 23:12
உபா 22:4, 10
உபா 25:4
யோனா 4:11
c நீதி 28:19
எபே 4:28
d 1ரா 2:23, 24
சங் 5:6
பிர 5:6
e நீதி 13:2
நீதி 18:20
f நீதி 3:7
நீதி 26:12
g நீதி 1:5
h நீதி 29:11
i நீதி 16:24
j 1பே 3:10
k நீதி 19:9
அப் 5:3, 5
l மத் 5:9
m சங் 91:9, 10
n நீதி 1:30, 31
ஏசா 48:22
o சங் 5:6
நீதி 6:16, 17
வெளி 21:8
p நீதி 10:19

24 கடினமாக உழைக்கும் கைகள் ஆட்சி செய்யும்.[a]
ஆனால், சோம்பலான கைகள் அடிமை வேலைதான் செய்யும்.[b]
25 கவலை ஒருவருடைய இதயத்தைப் பாரமாக்கும்.*[c]
ஆனால், நல்ல வார்த்தை அதைச் சந்தோஷப்படுத்தும்.[d]
26 நீதிமான் தன்னுடைய மேய்ச்சல் நிலங்களைக் கவனமாகத் தேடுகிறான்.
ஆனால், பொல்லாதவனின் பாதை அவனை வழிதவறிப்போக வைக்கிறது.
27 சோம்பேறி எதையும் வேட்டையாடிப் பிடிப்பது இல்லை.[e]
ஆனால், கடின உழைப்பு ஒருவனுக்கு அருமையான பொக்கிஷமாக இருக்கிறது.
28 நீதியின் பாதை வாழ்வுக்கு வழிநடத்தும்.[f]
அந்தப் பாதையில் மரணம் இல்லை.

13 ஞானமுள்ள மகன் தன்னுடைய அப்பாவின் புத்திமதியை ஏற்றுக்கொள்கிறான்.[g]
ஆனால், கேலி செய்கிறவன் எச்சரிப்பை* காதில் வாங்குவது இல்லை.[h]
2 நல்ல வார்த்தைகளைப் பேசுகிறவன் நல்ல பலனை அனுபவிப்பான்.[i]
ஆனால், துரோகியின் மனம் வன்முறையில் இறங்கவே ஆசைப்படும்.
3 தன் வாய்க்குக் காவல் போடுகிறவன் தன் உயிரைப் பாதுகாக்கிறான்.[j]
ஆனால், தன் வாய்க்குக் காவல் போடாதவன் நாசமாவான்.[k]
4 சோம்பேறிக்கு நிறைய ஆசைகள் இருந்தாலும், ஆசைப்பட்ட எதுவும் அவனுக்குக் கிடைப்பதில்லை.[l]
ஆனால், கடினமாக உழைப்பவனுக்கு எல்லாமே கிடைக்கும்.*[m]
5 நீதிமான் பொய்களை வெறுக்கிறான்.[n]
ஆனால், பொல்லாதவனின் செயல்கள் அவமானத்தையும் தலைகுனிவையும் கொண்டுவருகின்றன.
6 நேர்மையாக நடக்கிறவனை நீதி பாதுகாக்கிறது.[o]
ஆனால், பாவியை அக்கிரமம் அழித்துவிடுகிறது.
7 ஒன்றுமே இல்லாவிட்டாலும் பணக்காரன்போல் காட்டிக்கொள்கிறவன் உண்டு.[p]
ஏராளமாக இருந்தாலும் ஏழைபோல் காட்டிக்கொள்கிறவனும் உண்டு.
8 பணக்காரன் பணம் கொடுத்து தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்கிறான்.[q]
ஆனால், ஏழைக்கு மிரட்டல்கூட வருவதில்லை.[r]
9 நீதிமானின் விளக்கு பிரகாசமாக ஒளிவீசும்.[s]
ஆனால், பொல்லாதவனின் விளக்கு அணைக்கப்படும்.[t]
10 அகங்காரமாக* நடப்பது சண்டையில்தான் கொண்டுபோய் விடும்.[u]
ஆனால், ஆலோசனை கேட்கிறவர்களிடம்# ஞானம் இருக்கும்.[v]

12:25 *வே.வா., "ஒருவருக்கு மனச்சோர்வை ஏற்படுத்தும்." 13:1 *வே.வா., "தான் கண்டிக்கப்படுவதை." 13:4 *நே.மொ., "உழைப்பவன் புஷ்டியாவான்." 13:10 *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. #வே.வா., "ஒன்றுகூடி ஆலோசனை செய்கிறவர்களிடம்."

அதி. 12
a ஆதி 39:4; 1ரா 11:28
b நீதி 19:15
c சங் 38:6; நீதி 13:12; நீதி 15:13
d நீதி 16:24; ஏசா 50:4
e நீதி 26:13-15
f சங் 37:27; நீதி 10:7; ஆப 2:4

அதி. 13
g எபி 12:7, 9
h 1சா 2:22-25; நீதி 9:7
i நீதி 12:14; நீதி 18:20
j சங் 39:1; சங் 141:3; நீதி 21:23
k நீதி 10:19; மத் 12:36
l நீதி 26:13-15
m நீதி 10:4; நீதி 12:24
n சங் 119:163; நீதி 8:13; எபே 4:25
o சங் 25:21
p நீதி 12:9
q எரே 41:8
r எரே 39:10
s சங் 97:11
t நீதி 24:20
u நியா 8:1
v நீதி 11:2; நீதி 24:6; அப் 15:5, 6

11 திடீர்ப் பணக்காரனின் சொத்துகள் கரைந்துபோகும்.[a]
ஆனால், சிறுகச் சிறுகச் சேர்க்கிறவனின் சொத்துகள் பெருகும்.
12 எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்குத் தாமதமானால் நெஞ்சம் நொந்துபோகும்.[b]
ஆனால், ஆசை நிறைவேறும்போது அது வாழ்வளிக்கும் மரம்போல் இருக்கும்.[c]
13 அறிவுரையை அலட்சியம் செய்கிறவன் அதன் விளைவுகளை அனுபவிப்பான்.[d]
ஆனால், கட்டளையை மதித்து நடக்கிறவன் பலன் பெறுவான்.[e]
14 ஞானமுள்ளவனின் போதனை* வாழ்வளிக்கும் ஊற்றுபோல் இருக்கிறது.[f]
மரணத்தின் கண்ணிகளிலிருந்து அது ஒருவனைக் காப்பாற்றுகிறது.
15 மிகுந்த விவேகத்தோடு நடந்துகொண்டால் மற்றவர்களின் பிரியத்தைச் சம்பாதிக்கலாம்.
ஆனால், துரோகிகளின் பாதை கரடுமுரடாக இருக்கிறது.
16 சாமர்த்தியசாலி அறிவோடு நடந்துகொள்கிறான்.[g]
ஆனால், முட்டாள் தன் முட்டாள்தனத்தைக் காட்டிவிடுகிறான்.[h]
17 பொல்லாத தூதுவன் பிரச்சினைகளைக் கொண்டுவருகிறான்.[i]
ஆனால், உண்மையுள்ள தூதுவன் நன்மைகளைக் கொண்டுவருகிறான்.[j]
18 புத்திமதியை ஒதுக்கித்தள்ளுகிறவனுக்கு வறுமையும் அவமானமும்தான் மிஞ்சும்.
ஆனால், கண்டிப்பை ஏற்றுக்கொள்கிறவனுக்கு மதிப்புக் கிடைக்கும்.[k]
19 ஆசை நிறைவேறுவது இதயத்துக்கு இனிதாக இருக்கிறது.[l]
ஆனால், தவறான பாதையைவிட்டு விலகுவது முட்டாளுக்கு வெறுப்பாக இருக்கிறது.[m]
20 ஞானமுள்ளவர்களோடு நடக்கிறவன் ஞானமடைவான்.[n]
ஆனால், முட்டாள்களோடு பழகுகிறவன் நாசமடைவான்.[o]
21 பாவிகளைத் துன்பம் துரத்திக்கொண்டே இருக்கும்.[p]
ஆனால், நீதிமான்களுக்குக் கிடைக்கும் பலன் வளமான வாழ்வு.[q]
22 நல்லவன் தன் பேரப்பிள்ளைகளுக்குச் சொத்துகளை விட்டுச்செல்கிறான்.
ஆனால், பாவியின் சொத்துகள் நீதிமானுக்காகச் சேர்த்து வைக்கப்படும்.[r]
23 ஏழையின் வயல் நன்றாக விளையும்.
ஆனால், அநியாயத்தின் காரணமாக அது* வாரிக்கொண்டு போகப்படலாம்.
24 பிரம்பைக் கையில் எடுக்காதவன்* தன் மகனை வெறுக்கிறான்.[s]
ஆனால், மகனை நேசிக்கிறவன் அவனை அக்கறையோடு# கண்டித்துத் திருத்துகிறான்.[t]

13:14 *வே.வா., “சட்டம்.” **13:23** *வே.வா., “அவன்.” **13:24** *வே.வா., “கண்டித்துத் திருத்தாதவன்; தண்டிக்காதவன்.” #அல்லது, “உடனடியாக.”

அதி. 13
a நீதி 28:8; எரே 17:11
b சங் 143:7
c ஆதி 21:5-7; லூ 2:29, 30
d 2நா 36:15, 16
e சங் 19:8, 11; நீதி 13:18
f நீதி 24:14
g நீதி 14:15
h 1சா 25:25
i 2சா 4:9, 10
j நீதி 25:25
k சங் 141:5; நீதி 15:32; எபி 12:11
l 1ரா 1:47, 48
m ஆமோ 5:10
n அப் 4:13
o ஆதி 34:1, 2
p உபா 28:20
q ரோ 2:9, 10
r உபா 6:10, 11
s 1சா 3:12, 13; 1ரா 1:5, 6; நீதி 29:15
t உபா 6:6, 7; நீதி 19:18; நீதி 22:15; எபே 6:4; எபி 12:6

25 நீதிமான் வயிறார சாப்பிடுகிறான்.[a]
ஆனால், பொல்லாதவனின் வயிறு காய்ந்து கிடக்கிறது.[b]

14 ஞானமுள்ள பெண் தன் குடும்பத்தைக் கட்டிக்காக்கிறாள்.[c]
ஆனால், புத்தியில்லாத பெண் அதைக் குட்டிச்சுவராக்குகிறாள்.
2 நேர்மையாக நடக்கிறவன் யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறான்.
ஆனால், குறுக்கு வழியில் போகிறவன் அவரை அவமதிக்கிறான்.
3 முட்டாளின் வாயிலிருந்து வரும் ஆணவப் பேச்சு பிரம்புபோல் இருக்கும்.
ஆனால், ஞானமுள்ளவர்களின் உதடுகள் அவர்களைப் பாதுகாக்கும்.
4 மாடுகள் இல்லையென்றால் தொழுவம் சுத்தமாக இருக்கும்.
ஆனால், காளையின் பலத்தால் அறுவடை அமோகமாக இருக்கும்.
5 உண்மையான சாட்சி பொய் பேச மாட்டான்.
ஆனால், பொய் சாட்சி மூச்சுக்கு மூச்சு பொய் பேசுவான்.[d]
6 கேலி செய்கிறவன் ஞானத்தை எவ்வளவுதான் தேடினாலும் கண்டுபிடிக்க மாட்டான்.
ஆனால், புரிந்துகொள்ளும் திறன் உள்ளவனுக்கு அறிவு எளிதில் கிடைக்கும்.[e]
7 முட்டாளைவிட்டுத் தூர விலகு.
ஏனென்றால், அவன் எதையும் அறிவோடு பேச மாட்டான்.[f]
8 சாமர்த்தியமாக நடக்கிறவன் தான் போகும் பாதையை ஞானத்தால் புரிந்துகொள்கிறான்.
ஆனால், முட்டாள்கள் தங்களுடைய முட்டாள்தனத்தால் ஏமாந்துபோகிறார்கள்.*[g]
9 முட்டாள்கள் குற்றம் செய்துவிட்டுக் கவலையில்லாமல் சிரிக்கிறார்கள்.[h]
ஆனால், நேர்மையானவர்கள் சமரசமாவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.
10 இதயத்திலுள்ள வேதனை இதயத்துக்குத்தான் தெரியும்.
அதன் சந்தோஷத்தை வேறு யாராலும் புரிந்துகொள்ள முடியாது.
11 பொல்லாதவர்களின் வீடு அழிந்துபோகும்.[i]
ஆனால், நேர்மையானவர்களின் கூடாரம் செழிக்கும்.
12 மனுஷனுக்குச் சரியென்று தோன்றுகிற வழி உண்டு.[j]
ஆனால், அது கடைசியில் மரணத்தில்தான் கொண்டுபோய்விடும்.[k]
13 ஒருவன் வெளியே சிரித்தாலும் உள்ளத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கலாம்.
ஒருவனுடைய சந்தோஷம் துக்கத்தில் போய் முடியலாம்.
14 ஒருவனுடைய உள்ளம் தாறுமாறாகப் போகும்போது அதன் விளைவுகளை அவன் சந்திப்பான்.[l]
ஆனால், நல்லவன் தன்னுடைய செயல்களுக்குத் தகுந்த பலனைப் பெறுவான்.[m]
15 விவரம் தெரியாதவன்* யார் எதைச் சொன்னாலும் நம்பிவிடுகிறான்.

14:8 *அல்லது, "மற்றவர்களை ஏமாற்றுகிறார்கள்." **14:15** *வே.வா., "அனுபவம் இல்லாதவன்."

அதி. 13
a சங் 34:10
சங் 37:25
b ஏசா 65:13

அதி. 14
c நீதி 24:3
நீதி 31:26
d நீதி 6:16, 19
நீதி 19:5
e நீதி 18:15
f நீதி 13:20
g நீதி 14:12
h நீதி 10:23
நீதி 30:20
i நீதி 21:12
j நீதி 30:12
k நீதி 16:25
l நீதி 1:32
m கலா 6:7, 8

ஆனால், சாமர்த்தியமாக நடக்கிறவன் ஒவ்வொரு அடியையும் யோசித்துதான் எடுத்து வைக்கிறான்.[a]

16 ஞானமுள்ளவன் ஜாக்கிரதையாக நடந்து, கெட்ட வழியைவிட்டு விலகுகிறான்.

ஆனால், முட்டாள் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையோடு கண்மூடித்தனமாக* நடந்துகொள்கிறான்.

17 சட்டென்று கோபப்படுகிறவன் முட்டாள்தனமாக நடந்துகொள்கிறான்.[b]

ஆனால், எதையும் யோசித்து செய்கிறவன் வெறுக்கப்படுகிறான்.

18 விவரம் தெரியாதவர்கள்* முட்டாள்தனமாக நடந்துகொள்வார்கள்.

ஆனால், சாமர்த்தியமாக நடக்கிறவர்கள் அறிவு என்ற கிரீடத்தைச் சூடியிருப்பார்கள்.[c]

19 நல்லவர்களுக்கு முன் கெட்டவர்கள் தலைவணங்க வேண்டியிருக்கும்.

நீதிமான்களின் வாசலில் பொல்லாதவர்கள் தலைவணங்குவார்கள்.

20 ஏழையை அக்கம்பக்கத்தார்கூட வெறுக்கிறார்கள்.[d]

ஆனால், பணக்காரனுக்கு ஏகப்பட்ட நண்பர்கள் இருக்கிறார்கள்.[e]

21 அடுத்தவரை அவமதிக்கிறவன் பாவம் செய்கிறான்.

ஆனால், எளியவர்களுக்குக் கரிசனை காட்டுகிறவன் சந்தோஷமானவன்.[f]

22 சதித்திட்டம் போடுகிறவர்கள் வழிதவறிப் போய்விடுவார்கள்.

ஆனால், நல்லது செய்யப் பாடுபடுகிறவர்களுக்கு மாறாத அன்பும் உண்மைத்தன்மையும் காட்டப்படும்.[g]

23 எல்லா விதமான கடின உழைப்பும் நல்ல பலனைத் தரும்.

ஆனால், வெட்டிப் பேச்சு வறுமையைக் கொண்டுவரும்.[h]

24 ஞானமுள்ளவர்களின் கிரீடம் அவர்களுடைய செல்வம்.

ஆனால், முட்டாள்களின் முட்டாள்தனத்தால் விளைவது இன்னுமதிக முட்டாள்தனமே.[i]

25 உண்மையாகச் சாட்சி சொல்கிறவன் உயிர்களைக் காப்பாற்றுகிறான்.

ஆனால், ஏமாற்றுக்காரன் மூச்சுக்கு மூச்சு பொய் சொல்கிறான்.

26 யெகோவாமேல் இருக்கும் பயம் ஒருவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையைத் தரும்.[j]

அது அவனுடைய பிள்ளைகளுக்கு அடைக்கலமாக இருக்கும்.[k]

27 யெகோவாமேல் இருக்கும் பயம் வாழ்வளிக்கும் ஊற்றுபோல் இருக்கிறது.

மரணத்தின் கண்ணிகளிலிருந்து அது ஒருவனைக் காப்பாற்றுகிறது.

28 மக்கள்தொகை உயர்ந்தால் ராஜாவின் மகிமை கூடும்.[l]

மக்கள்தொகை குறைந்தால் அவனுடைய ஆட்சி கவிழும்.

29 பகுத்தறிவு நிறைந்தவன் சட்டெனக் கோபப்பட மாட்டான்.[m]

ஆனால், பொறுமை இல்லாதவன் முட்டாள்தனமாக நடந்துகொள்வான்.[n]

30 அமைதியான உள்ளம் உடலுக்கு ஆரோக்கியம்.*

14:16 * வே.வா., "வெறித்தனமாக." 14:18 * வே.வா., "அனுபவம் இல்லாதவர்கள்."
14:30 * வே.வா., "உயிர்."

அதி. 14
a நெ 6:2, 3; நீதி 27:12
b நீதி 12:16; நீதி 16:32
c நீதி 4:7-9
d நீதி 19:7
e நீதி 19:4
f சங் 41:1; நீதி 19:17; ஏசா 58:7, 8
g யோபு 42:10; சங் 25:10
h நீதி 28:19
i நீதி 27:22
j சங் 34:9; ரோ 8:31
k நீதி 18:10; எரே 15:11
l 1ரா 4:21
m நீதி 17:27; யாக் 1:19
n நீதி 25:28; நீதி 29:11; பிர 7:9

ஆனால், பொறாமை எலும்புருக்கி.[a]
31 எளியவனை ஏமாற்றுகிறவன் அவனைப் படைத்தவரை அவமதிக்கிறான்.[b]
ஆனால், ஏழைக்குக் கரிசனை காட்டுகிறவன் அவருக்கு மகிமை சேர்க்கிறான்.[c]
32 பொல்லாதவன் தன்னுடைய அக்கிரமத்தாலேயே வீழ்ச்சி அடைவான்.
ஆனால், நீதிமான் தன்னுடைய உத்தமத்திலே அடைக்கலம் காண்பான்.[d]
33 புத்தி* உள்ளவரின் இதயத்தில் ஞானம் அமைதியாகக் குடியிருக்கும்.[e]
ஆனால், முட்டாள் தனக்கு ஞானமாகத் தோன்றுவதையெல்லாம் சொல்லிக்கொண்டு திரிகிறான்.
34 நீதி ஒரு தேசத்தின் மதிப்பை உயர்த்தும்.[f]
ஆனால், பாவம் குடிமக்களின் மதிப்பைக் கெடுக்கும்.
35 விவேகமாக நடக்கிற ஊழியன்மேல் ராஜா பிரியமாக இருக்கிறார்.[g]
ஆனால், வெட்கக்கேடாக நடக்கிறவனைப் பார்த்து அவர் கோபத்தில் கொதிக்கிறார்.[h]

15 சாந்தமாகப் பதில் சொல்வது கடும் கோபத்தைத் தணிக்கும்.[i]
ஆனால், கடுகடுப்பாகப் பேசுவது கோபத்தைத் தூண்டும்.[j]
2 ஞானமுள்ளவர்களின் நாவு அறிவோடு பேசுகிறது.*[k]
ஆனால், முட்டாள்களின் வாய் முட்டாள்தனமாகவே பேசுகிறது.
3 யெகோவாவின் கண்கள் எங்கும் பார்க்கின்றன.
நல்லவர்களையும் பார்க்கின்றன, கெட்டவர்களையும் பார்க்கின்றன.[l]
4 சாந்தமான நாவு வாழ்வளிக்கும் மரம்போல் இருக்கிறது.[m]
ஆனால், பொய்புரட்டு மனதை நொறுக்கிவிடுகிறது.
5 முட்டாள் தன் அப்பாவின் புத்திமதியை அலட்சியம் செய்கிறான்.[n]
ஆனால், சாமர்த்தியசாலி கண்டிப்பை ஏற்றுக்கொள்கிறான்.[o]
6 நீதிமானின் வீட்டில் ஏராளமான பொக்கிஷம் இருக்கிறது.
ஆனால், பொல்லாதவனின் வருமானம் அவனுக்குக் கஷ்டத்தைத்தான் கொடுக்கிறது.[p]
7 ஞானியின் உதடுகள் அறிவை வாரி இறைக்கும்.[q]
ஆனால், முட்டாளின் இதயம் அப்படிச் செய்யாது.[r]
8 பொல்லாதவன் கொடுக்கிற பலி யெகோவாவுக்கு அருவருப்பானது.[s]
ஆனால், நேர்மையானவன் செய்கிற ஜெபம் அவருக்குப் பிரியமானது.[t]
9 பொல்லாதவன் போகிற பாதையை யெகோவா அருவருக்கிறார்.[u]
ஆனால், நீதியை நாடுகிறவனை அவர் நேசிக்கிறார்.[v]
10 நேர்வழியைவிட்டு விலகுகிறவனுக்குப் புத்திமதி கசப்பாக இருக்கிறது.*[w]
ஆனால், கண்டிப்பை வெறுக்கிறவன் உயிரை இழப்பான்.[x]
11 யெகோவாவின் கண்கள் கல்லறையையும் புதைகுழியையும்கூட ஊடுருவிப் பார்க்கிறதென்றால்,[y]
மனிதர்களின் இதயத்தைப் பார்க்காமல் இருக்குமா?[z]

14:33 * வே.வா., “புரிந்துகொள்ளுதல்.” 15:2 * வே.வா., “அறிவை நன்றாகப் பயன்படுத்திக்கொள்கிறது.” 15:10 * வே.வா., “கடுமையாகத் தோன்றுகிறது.”

அதி. 14
a ஆதி 37:3, 4; 1சா 18:8, 9
b உபா 24:14, 15; சங் 12:5
c மத் 19:21
d நீதி 2:7; நீதி 10:9
e நீதி 15:28
f உபா 4:6
g 2சா 15:32–34; நீதி 22:29
h 1ரா 2:44, 46

அதி. 15
i நியா 8:2, 3; 1சா 25:32, 33; நீதி 25:15
j 1ரா 12:14, 16
k நீதி 16:23; ஏசா 50:4
l 2நா 16:9; சங் 11:4; எபி 4:13
m நீதி 12:18; நீதி 16:24; நீதி 17:27
n 1சா 2:22–25
o சங் 141:5; நீதி 13:1; எபி 12:11
p யாக் 5:3, 4
q சங் 37:30; மத் 10:27
r மத் 12:34, 35
s ஏசா 1:11
t யாக் 5:16; 1பே 3:12; 1யோ 3:21, 22
u சங் 146:9
v ஏசா 26:7
w 1ரா 18:17, 18
x லேவி 26:21; நீதி 1:32
y சங் 139:8
z எரே 17:10; எபி 4:13

12 கேலி செய்கிறவன் தன்னைக் கண்டிப்பவரை வெறுக்கிறான்.[a]
ஞானமுள்ளவர்களிடம் அவன் ஆலோசனை கேட்க மாட்டான்.[b]
13 உள்ளத்தின் மகிழ்ச்சியால் முகம் மலர்ச்சி அடையும்.
ஆனால், உள்ளத்தின் வேதனையால் மனம் நொந்துபோகும்.[c]
14 புரிந்துகொள்ளும் இதயம் அறிவைத் தேடும்.[d]
ஆனால், முட்டாளின் வாய் முட்டாள்தனத்தை நாடும்.*[e]
15 கஷ்டத்தில் தவிப்பவனுக்கு எல்லா நாளும் திண்டாட்டம்தான்.[f]
ஆனால், இதயத்தில் சந்தோஷமாக இருப்பவனுக்கு* எப்போதும் விருந்துக் கொண்டாட்டம்தான்.[g]
16 ஏராளமான சொத்துகளை வைத்துக்கொண்டு நிம்மதியில்லாமல்* வாழ்வதைவிட,[h]
கொஞ்சத்தை வைத்துக்கொண்டு யெகோவாவுக்குப் பயந்து நடப்பதே மேல்.[i]
17 வெறுப்போடு பரிமாறப்படும் அருமையான இறைச்சியைவிட,*[j]
அன்போடு பரிமாறப்படும் காய்கறியே மேல்.[k]
18 எளிதில் கோபப்படுகிறவன் சண்டையைக் கிளப்புகிறான்.[l]
ஆனால், சீக்கிரத்தில் கோபப்படாதவன் வாக்குவாதத்தைத் தீர்க்கிறான்.[m]
19 சோம்பேறியின் வழி முள்வேலியைப் போல் இருக்கிறது.[n]
ஆனால், நேர்மையானவனின் பாதை சீரான நெடுஞ்சாலையைப் போல் இருக்கிறது.[o]
20 ஞானமுள்ள மகன் தன்னுடைய அப்பாவைச் சந்தோஷப்படுத்துகிறான்.[p]
ஆனால், புத்தியில்லாதவன் தன்னுடைய அம்மாவை அவமதிக்கிறான்.[q]
21 புத்தியில்லாதவன் முட்டாள்தனமாக நடப்பதில் சந்தோஷப்படுகிறான்.[r]
ஆனால், பகுத்தறிவு உள்ளவன் நேரான பாதையில் நடக்கிறான்.[s]
22 கலந்துபேசாமல் இருந்தால் திட்டங்கள் தோல்வியடையும்.
ஆலோசகர்கள் நிறைய பேர் இருந்தால் வெற்றி நிச்சயம்.[t]
23 சரியான பதிலைச் சொல்கிறவனுக்குச் சந்தோஷம் கிடைக்கும்.[u]
சரியான சமயத்தில் சொல்லப்படுகிற வார்த்தை எவ்வளவு அருமையானது![v]
24 வாழ்வின் வழி விவேகமுள்ளவனை முன்னேறிச் செல்ல வைக்கிறது.[w]
அவனைக் கல்லறைக்குப் போகாதபடி காப்பாற்றுகிறது.[x]
25 கர்வமுள்ளவர்களின் வீட்டை யெகோவா தரைமட்டமாக்குவார்.[y]
ஆனால், விதவைப் பெண்ணுடைய நிலத்தின் எல்லையைப் பாதுகாப்பார்.[z]
26 பொல்லாதவன் போடும் சதித்திட்டங்கள் யெகோவாவுக்கு அருவருப்பானவை.[a]
ஆனால், இனிய வார்த்தைகள் அவருக்குப் பிரியமானவை.[b]

15:14 *வே.வா., "மேயும்." **15:15** *வே.வா., "நல்ல இதயம் உள்ளவனுக்கு." **15:16** *வே.வா., "குழப்பமாக." **15:17** *நே.மொ., "கொழுத்த காளையைவிட."

அதி. 15
a நீதி 9:7 யோவா 3:20 யோவா 7:7
b 2நா 18:6, 7
c நீதி 12:25 நீதி 17:22
d சங் 119:97 அப் 17:11
e ஏசா 30:9, 10
f யோபு 3:11
g அப் 16:23-25
h நீதி 15:17
i சங் 37:16
j நீதி 17:1
k சங் 133:1
l நீதி 10:12
m ஆதி 13:8, 9 1சா 25:23, 24 நீதி 25:15 யாக் 1:19
n நீதி 26:13-15
o ஏசா 30:21
p நீதி 27:11
q நீதி 23:22 நீதி 30:17
r நீதி 26:18, 19 பிர 7:4
s நீதி 10:23 எபே 5:15, 16 யாக் 3:13
t நீதி 20:18
u எபே 4:29
v 1சா 25:32, 33 நீதி 25:11
w மத் 7:13, 14
x நீதி 8:35, 36
y லூ 18:14
z சங் 146:9
a நீதி 6:16, 18
b சங் 19:14

27 குறுக்கு வழியில் சம்பாதிப்பவன் தன் குடும்பத்துக்குப் பிரச்சினையை*
கொண்டுவருகிறான்.[a]
ஆனால், லஞ்சத்தை வெறுப்பவன் தொடர்ந்து உயிர்வாழ்வான்.[b]
28 நீதிமானின் இதயம் பதில் சொல்வதற்கு முன்னால் யோசிக்கும்.*[c]
ஆனால், பொல்லாதவனின் வாய் கெட்ட விஷயங்களை
உளறிக்கொட்டும்.
29 யெகோவா பொல்லாதவனைவிட்டுத் தூரமாக இருக்கிறார்.
ஆனால், நீதிமானின் ஜெபத்தைக் காதுகொடுத்துக் கேட்கிறார்.[d]
30 பிரகாசமான கண்கள்* இதயத்தைப் பூரிப்பாக்கும்.
நல்ல செய்தி எலும்புகளுக்கு ஊட்டமளிக்கும்.[e]
31 உயிர்காக்கும் கண்டிப்பைக் கேட்டு நடக்கிறவன்,
ஞானமுள்ளவர்கள் மத்தியில் குடியிருக்கிறான்.[f]
32 புத்திமதியை ஏற்றுக்கொள்ளாதவன் தன் உயிரை
அலட்சியப்படுத்துகிறான்.[g]
ஆனால், கண்டிப்பைக் கேட்டு நடக்கிறவன் புத்தியை*
சம்பாதிக்கிறான்.[h]
33 யெகோவாவுக்குப் பயப்படுவது ஞானமாக நடக்க பயிற்சி அளிக்கும்.[i]
மனத்தாழ்மையாக இருந்தால் மதிப்பு மரியாதை கிடைக்கும்.[j]

16

ஒருவன் தன் இதயத்தில் சில விஷயங்களை யோசித்து*
வைக்கலாம்.
ஆனால், அவன் சொல்கிற பதில்# யெகோவாவிடமிருந்தே வருகிறது.[k]
2 மனிதனுடைய வழிகளெல்லாம் அவனுக்குச் சரியாகத்
தோன்றுகின்றன.[l]
ஆனால், அவனுடைய உள்நோக்கத்தை யெகோவா ஆராய்கிறார்.[m]
3 நீ எதைச் செய்தாலும் அதை யெகோவாவின் கையில்
ஒப்படைத்துவிடு.[n]
அப்போது, உன் திட்டங்கள் வெற்றி பெறும்.
4 யெகோவா எல்லாவற்றையும் தன்னுடைய நோக்கத்தின்படி நடக்க
வைத்திருக்கிறார்,
பொல்லாதவனையும் அழிவு நாளுக்கென்று விட்டு வைத்திருக்கிறார்.[o]
5 இதயத்தில் கர்வமுள்ள எவனையும் யெகோவா அருவருக்கிறார்.[p]
தண்டனையிலிருந்து அவன் தப்பிக்கவே முடியாது.
6 மாறாத அன்பாலும் உண்மைத்தன்மையாலும் குற்றம்
மன்னிக்கப்படும்.[q]
யெகோவாவுக்குப் பயப்படுகிறவன் கெட்டதைவிட்டு விலகுகிறான்.[r]
7 ஒருவனுடைய வழிகள் யெகோவாவுக்குப் பிரியமாக இருந்தால்,
அவனுடைய எதிரிகள்கூட அவனிடம் சமாதானமாவதற்கு அவர்
வழிசெய்வார்.[s]

அதி. 15
a உபா 16:19; 1சா 8:1, 3; நீதி 1:19
b ஏசா 33:15, 16
c நீதி 16:23
d சங் 34:15, 16; சங் 138:6; சங் 145:19; யோவா 9:31
e நீதி 16:24; நீதி 25:25
f நீதி 9:8; நீதி 19:20
g நீதி 5:12, 14; எபி 12:25
h நீதி 13:18; மத் 7:24, 25
i சங் 111:10
j நீதி 18:12; யாக் 4:10

அதி. 16
k எரே 1:9; லூ 12:11, 12
l 1சா 15:13, 14; சங் 36:1, 2; நீதி 21:2; எரே 17:9
m 1சா 16:6, 7; நீதி 24:12
n சங் 37:5; பிலி 4:6, 7
o யாத் 14:4; ரோ 9:21
p நீதி 6:16, 17; நீதி 8:13; நீதி 21:4
q அப் 3:19
r நெ 5:8, 9; 2கொ 7:1
s ஆதி 31:24; யாத் 34:24

15:27 *வே.வா., “அவமானத்தை.” **15:28** *வே.வா., “எப்படிப் பதில் சொல்வதென்று கவனமாகச் சிந்திக்கும்; பேசுவதற்கு முன்னால் யோசிக்கும்.” **15:30** *வே.வா., “ஒருவரின் சந்தோஷப் பார்வை.” **15:32** *வே.வா., “புரிந்துகொள்ளுதலை.” **16:1** *வே.வா., “சில யோசனைகளை அடுக்கி.” #வே.வா., “சரியான பதில்.”

8 அநியாயம் செய்து கைநிறைய சம்பாதிப்பதைவிட,[a]
நியாயமான வழியில் கொஞ்சம் சம்பாதிப்பதே மேல்.[b]
9 எந்த வழியில் போக வேண்டுமென்று ஒருவன் தன் உள்ளத்தில்
திட்டம் போடலாம்.
ஆனால், யெகோவாதான் அவனுடைய காலடிகளுக்கு
வழிகாட்டுகிறார்.[c]
10 ராஜாவின் வாயிலிருந்து கடவுளின் தீர்ப்புதான் வர வேண்டும்.[d]
ராஜா ஒருநாளும் நியாயத்தைப் புரட்டக் கூடாது.[e]
11 சரியான அளவுகோல்களும் தராசுகளும் யெகோவாவிடமிருந்து
வந்தவை.
பையில் இருக்கிற எடைக்கற்களெல்லாம் அவரால் உண்டானவை.[f]
12 அக்கிரமங்களை ராஜாக்கள் அருவருக்கிறார்கள்.[g]
ஏனென்றால், அவர்களுடைய சிம்மாசனம் நீதியால் உறுதியாக
நிலைநிறுத்தப்படுகிறது.[h]
13 நீதியான பேச்சை ராஜாக்கள் விரும்புகிறார்கள்.
நேர்மையாகப் பேசுகிறவர்களை அவர்கள் நேசிக்கிறார்கள்.[i]
14 ராஜாவின் கடும் கோபம் மரணத்தின் தூதுவனைப் போல் இருக்கிறது.[j]
ஆனால், ஞானமுள்ளவன் அதைத் தணிக்கிறான்.*[k]
15 ராஜாவின் முகம் பிரகாசிக்கும்போது, ஒருவருடைய வாழ்க்கை
பிரகாசமாகிறது.
அவர் காட்டுகிற கருணை வசந்த கால மழைமேகம்போல் இருக்கிறது.[l]
16 தங்கத்தைச் சம்பாதிப்பதைவிட ஞானத்தைச் சம்பாதிப்பது
எவ்வளவு மேலானது![m]
வெள்ளியைச் சம்பாதிப்பதைவிட புத்தியை* சம்பாதிப்பது
எவ்வளவு நல்லது![n]
17 நேர்வழியில் நடக்கிறவன் தவறான வழியைத் தவிர்க்கிறான்.
தன் வழியைக் காத்துக்கொள்கிறவன் தன் உயிரைப் பாதுகாக்கிறான்.[o]
18 அகம்பாவம் வந்தால் அழிவு வரும்.
ஆணவம் வந்தால் அடிசறுக்கும்.[p]
19 தலைக்கனம் பிடித்தவர்களோடு சேர்ந்து கொள்ளைப்பொருளைப்
பங்குபோடுவதைவிட,
தாழ்மையானவர்களோடு* சேர்ந்து மனத்தாழ்மையாக இருப்பது
நல்லது.[q]
20 விவேகத்தோடு ஒரு காரியத்தைச் செய்கிறவன் வெற்றி* பெறுவான்.
யெகோவாமேல் நம்பிக்கையாக இருக்கிறவன் சந்தோஷமானவன்.
21 இதயத்தில் ஞானம் உள்ளவன் புத்தி* உள்ளவன் என்று
சொல்லப்படுவான்.[r]
கனிவாக# பேசுகிறவனுக்கு மற்றவர்களைச் சம்மதிக்க வைக்கும்
திறமை இருக்கிறது.[s]

16:14 *வே.வா., "தவிர்க்கிறான்." **16:16** *வே.வா., "புரிந்துகொள்ளுதலை." **16:19** *வே.வா., "சாந்தமானவர்களோடு." **16:20** *நே.மொ., "நன்மை." **16:21** *வே.வா., "புரிந்துகொள்ளுதல்." #வே.வா., "இனிமையாக."

அதி. 16
a சங் 37:16; எரே 17:11
b 1தீ 6:6
c நீதி 16:1; எரே 10:23
d உபா 17:18, 19; 1ரா 3:28
e சங் 72:1, 14
f லேவி 19:36; நீதி 11:1
g நீதி 20:26
h நீதி 29:14; வெளி 19:11
i சங் 101:6
j 1சா 22:17, 18; 1ரா 2:29
k பிர 10:4
l சங் 72:1, 6
m பிர 7:12
n நீதி 4:7
o நீதி 10:9
p நீதி 11:2; தானி 4:30-32
q ஏசா 57:15
r நீதி 4:7
s லூ 4:22; கொலோ 4:6

22 விவேகமுள்ளவர்களுக்கு அவர்களுடைய விவேகமே வாழ்வளிக்கும்
ஊற்றுபோல் இருக்கிறது.
ஆனால், முட்டாள்கள் தங்கள் முட்டாள்தனத்தாலேயே
கண்டிக்கப்படுகிறார்கள்.
23 ஞானமுள்ளவனின் இதயம் அவனை விவேகமாகப் பேச வைக்கிறது.[a]
பக்குவமாகப் பேசி மற்றவர்களைச் சம்மதிக்க வைக்கும் திறமையைக்
கொடுக்கிறது.
24 இனிய வார்த்தைகள் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தேன்போல்
இருக்கின்றன.
மனதுக்கு இனிமையாகவும் எலும்புகளுக்கு அருமருந்தாகவும்
இருக்கின்றன.[b]
25 மனுஷனுக்குச் சரியென்று தோன்றுகிற வழி உண்டு.
ஆனால், அது கடைசியில் மரணத்தில்தான் கொண்டுபோய்விடும்.[c]
26 வயிற்றுப் பசிதான் ஓர் உழைப்பாளியைப் பாடுபட்டு உழைக்கச்
செய்கிறது.
அதுதான்* அவனை வேலை செய்யத் தூண்டுகிறது.[d]
27 உதவாக்கரை மனுஷன் கெட்ட காரியங்களைக் கிளறி எடுக்கிறான்.[e]
அவனுடைய பேச்சு சுட்டுப்பொசுக்கும் நெருப்புபோல் இருக்கிறது.[f]
28 சதிகாரன் பிரிவினைகளை உண்டாக்குகிறான்.[g]
இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவன் உயிர்
நண்பர்களைக்கூட பிரித்துவிடுகிறான்.[h]
29 வன்முறைக்காரன் அடுத்தவனுக்கு ஆசைகாட்டி
அவனைத் தவறான வழிக்குக் கொண்டுபோகிறான்.
30 அவன் கண்ணால் ஜாடை செய்து சதித்திட்டம் தீட்டுகிறான்.
உதடுகளைக் கடித்துக்கொண்டு திட்டத்தை முடிக்கிறான்.
31 நீதியான வழியில் நடப்பவர்களுக்கு[i]
நரைமுடி அழகான* கிரீடம்.[j]
32 பலசாலியைவிட சட்டெனக் கோபப்படாதவனே[k] மேலானவன்.
நகரத்தைக் கைப்பற்றுகிறவனைவிட கோபத்தைக்
கட்டுப்படுத்துகிறவனே மேலானவன்.[l]
33 மடியில் குலுக்கல் போடப்படலாம்.[m]
ஆனால், எல்லா முடிவுகளும் யெகோவாவிடமிருந்தே வருகின்றன.[n]

17 சண்டை நிறைந்த வீட்டில் பெரிய விருந்து சாப்பிடுவதைவிட,[o]
சமாதானம் நிறைந்த* வீட்டில் காய்ந்த ரொட்டியைச்
சாப்பிடுவதே மேல்.[p]
2 விவேகமாக நடக்கும் வேலைக்காரன் வெட்கக்கேடாக நடக்கும்
மகனை* ஆளுவான்.
எஜமானின் மகன்களோடு அவனும் சொத்தில் ஒரு பங்கைப் பெறுவான்.
3 வெள்ளியைப் புடமிடுவது பானை, தங்கத்தைப் புடமிடுவது உலை.[q]
ஆனால், இதயத்தை ஆராய்கிறவர் யெகோவா.[r]

16:26 *நே.மொ., "அவனுடைய வாய்தான்." 16:31 *வே.வா., "மகிமையான." 17:1 *வே.வா., "அமைதியான." 17:2 *அதாவது, "எஜமானின் மகனை."

அதி. 16
a நீதி 22:17, 18; மத் 12:35
b நீதி 4:20-22; நீதி 12:18
c நீதி 14:12; மத் 7:22, 23
d பிர 6:7
e நீதி 6:12, 14
f யாக் 3:6
g யாக் 3:16
h ஆதி 3:1; 1சா 24:9; ரோ 16:17
i சங் 92:12-14
j லேவி 19:32; யோபு 32:7; நீதி 20:29
k நீதி 14:29; யாக் 1:19
l நீதி 25:28
m எண் 26:55; நீதி 18:18
n 1சா 14:41, 42; அப் 1:24, 26

அதி. 17
o நீதி 15:16, 17; நீதி 21:9, 19
p சங் 37:16
q நீதி 27:21
r சங் 26:2; நீதி 21:2; நீதி 24:12

4 புண்படுத்துகிற பேச்சைப் பொல்லாதவன் கவனித்துக் கேட்கிறான்.
தீய பேச்சை ஏமாற்றுக்காரன் காதுகொடுத்துக் கேட்கிறான்.[a]
5 ஏழையைக் கிண்டல் செய்கிறவன் அவனைப் படைத்தவரை அவமதிக்கிறான்.[b]
அடுத்தவன் படும் கஷ்டத்தைப் பார்த்து சந்தோஷப்படுகிறவன் தண்டனைக்குத் தப்ப மாட்டான்.[c]
6 வயதானவர்களுக்குக் கிரீடம் அவர்களுடைய பேரன்கள்.*
மகன்களுக்கு# பெருமை அவர்களுடைய அப்பாக்கள்.△
7 சரியான பேச்சு* முட்டாளுக்குப் பொருந்துவதே இல்லை.[d]
அப்படியிருக்கும்போது, பொய்யான பேச்சு ராஜாவுக்கு# கொஞ்சமாவது பொருந்துமா?[e]
8 அன்பளிப்பு கொடுக்கிறவனுக்கு அது விலைமதிப்புள்ள* கல்லைப் போல இருக்கிறது.[f]
அவன் போகும் இடமெல்லாம் அது அவனுக்கு வெற்றி தேடித்தருகிறது.[g]
9 குற்றத்தை மன்னிக்கிறவன்* அன்பு காட்டுகிறான்.[h]
ஆனால், அதைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பவன் உயிர் நண்பர்களைக்கூட பிரித்துவிடுகிறான்.[i]
10 முட்டாளை நூறு தடவை அடிப்பதைவிட,[j]
புத்தி* உள்ளவனை ஒரு தடவை எச்சரித்தாலே# நன்றாக உறைக்கும்.[k]
11 கெட்டவன் எப்போதும் கலகத்தைத்தான் விரும்புவான்.
ஆனால், அவனைத் தண்டிக்க கொடூரமான தூதுவன் அனுப்பப்படுவான்.[l]
12 அறிவில்லாமல் நடக்கும் முட்டாளிடம் மாட்டிக்கொள்வதைவிட,
குட்டிகளைப் பறிகொடுத்த கரடியிடம் மாட்டிக்கொள்வது எவ்வளவோ மேல்.[m]
13 நன்மை செய்தவனுக்கு யாராவது தீமை செய்தால்,
தீமை அவன் வீட்டைவிட்டு நீங்கவே நீங்காது.[n]
14 சண்டையை ஆரம்பிப்பது அணையைத் திறந்துவிடுவதுபோல் இருக்கிறது.
வாக்குவாதம் வெடிப்பதற்கு முன் அந்த இடத்தைவிட்டுப் போய்விடு.[o]
15 குற்றவாளியை விடுதலை செய்கிறவனும் நிரபராதியைத் தண்டிப்பவனும்[p]
யெகோவாவுக்கு அருவருப்பானவர்கள்.
16 முட்டாளுக்கு ஞானத்தைச் சம்பாதிக்க வழியிருந்து என்ன பிரயோஜனம்?
அதைச் சம்பாதிக்கிற எண்ணம்* அவனுக்கு இல்லையே.[q]

17:6 *வே.வா., “பேரப்பிள்ளைகள்.” #வே.வா., “பிள்ளைகளுக்கு.” △வே.வா., “பெற்றோர்கள்.” **17:7** *வே.வா., “நல்ல பேச்சு.” #வே.வா., “பெரிய மனிதனுக்கு.” **17:8** *வே.வா., “தயவைப் பெற்றுத்தரும்.” **17:9** *நே.மொ., “மூடுகிறவன்.” **17:10** *வே.வா., “புரிந்துகொள்ளுதல்.” #வே.வா., “கண்டித்தாலே.” **17:16** *வே.வா., “புத்தி.”

அதி. 17
a எரே 5:31
b நீதி 14:31
c நீதி 24:17; ஒப 12
d நீதி 26:7
e நீதி 16:10
f ஆதி 32:20; 2சா 16:1
g 1சா 25:18, 35; நீதி 18:16; நீதி 19:6
h நீதி 10:12; 1பே 4:8
i நீதி 16:28
j நீதி 27:22
k சங் 141:5; நீதி 9:8
l 2சா 18:15; 2சா 20:1, 22; 1ரா 2:22, 24
m நீதி 27:3
n 2சா 12:8-10
o ஆதி 13:8, 9; நீதி 25:8; மத் 5:39; ரோ 12:18
p யாத் 23:7; 1ரா 21:13; ஏசா 5:22, 23
q நீதி 1:22; ரோ 1:20, 21

17 உண்மையான நண்பன் எல்லா சமயத்திலும் அன்பு காட்டுகிறான்.[a]
கஷ்ட காலங்களில் உதவுவதற்காகப் பிறந்த சகோதரனாக இருக்கிறான்.[b]
18 அடுத்தவனுடைய கடனுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு,*
அவனுக்காகக் கைகுலுக்கி ஒப்பந்தம் செய்கிறவன் புத்தியில்லாதவன்.[c]
19 வாக்குவாதம் செய்ய விரும்புகிறவன் குற்றம் செய்ய விரும்புகிறான்.[d]
தன் நுழைவாசலை உயரமாகக் கட்டுகிறவன் அழிவைத் தேடிக்கொள்கிறான்.[e]
20 கோணலான புத்தி* உள்ளவன் எதிலும் வெற்றிபெற மாட்டான்.[f]
பொய் புரட்டு பேசுகிறவன் நாசமாவான்.
21 புத்தியில்லாத பிள்ளையைப் பெற்றவன் துக்கப்படுவான்.
அறிவில்லாத பிள்ளையைப் பெற்றவன் சந்தோஷத்தைப் பறிகொடுப்பான்.[g]
22 சந்தோஷமான உள்ளம் அருமையான மருந்து.[h]
ஆனால், உடைந்த உள்ளம் ஒருவருடைய பலத்தை உறிஞ்சிவிடும்.*[i]
23 பொல்லாதவன் ரகசியமாய் லஞ்சம் வாங்கி,
நியாயத்தைப் புரட்டுகிறான்.[j]
24 பகுத்தறிவு உள்ளவன் ஞானத்தைப் பெறுவதிலேயே கண்ணாக இருக்கிறான்.
ஆனால், புத்தி இல்லாதவனின் கண்கள் நாலாபக்கமும் அலைபாய்கின்றன.[k]
25 புத்தியில்லாத மகன் தன் அப்பாவின் மனதைத் துக்கப்படுத்துகிறான்,
தன் அம்மாவின் உள்ளத்தை வேதனைப்படுத்துகிறான்.[l]
26 நீதிமானைத் தண்டிப்பது* நல்லதல்ல.
மதிப்பு மரியாதை உள்ளவர்களை அடிப்பது சரியல்ல.
27 அறிவுள்ளவன் அளவோடு பேசுவான்.[m]
பகுத்தறிவு உள்ளவன் அமைதியாக இருப்பான்.[n]
28 பேசாமல் இருந்தால் முட்டாள்கூட அறிவாளியாகக் கருதப்படுவான்.
வாய் திறக்காமல் இருப்பவன் பகுத்தறிவு உள்ளவனாகக் கருதப்படுவான்.

18 தன்னைத் தனிமைப்படுத்துகிறவன் தன்னுடைய* ஆசைகளையே தீர்த்துக்கொள்ளப் பார்க்கிறான்.
எல்லா ஞானத்தையும்# அவன் ஒதுக்கித்தள்ளுகிறான்.
2 புத்தியில்லாதவன் எதையும் புரிந்துகொள்ள விரும்ப மாட்டான்.
தன்னுடைய உள்ளத்தில் இருப்பதைத்தான் சொல்ல விரும்புவான்.[o]
3 பொல்லாதவன் வரும்போது அவமதிப்பும் வரும்.
அவமரியாதையோடு அவமானமும் வரும்.[p]
4 ஒருவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகள் ஆழமான தண்ணீர்போல் இருக்கின்றன.[q]

அதி. 17
a நீதி 18:24; யோவா 15:13
b ரூ 1:16, 17; 1சா 19:2
c நீதி 11:15; நீதி 22:26, 27
d யாக் 3:16
e 2சா 15:2-4
f சங் 18:26; நீதி 6:14, 15
g 1சா 2:22-25; 1சா 8:1-3; 2சா 15:14
h நீதி 12:25; நீதி 15:13
i நீதி 18:14
j யாத் 23:8
k பிர 2:14
l நீதி 15:20
m நீதி 10:19; யாக் 1:19
n நீதி 15:4; பிர 9:17; யாக் 3:13

அதி. 18
o நீதி 10:19
p நீதி 11:2
q நீதி 10:11

17:18 *வே.வா., "உத்தரவாதம் கொடுத்து." **17:20** *நே.மொ., "இதயம்." **17:22** *வே.வா., "எலும்புகளை உலர்ந்துபோகச் செய்யும்." **17:26** *வே.வா., "நீதிமானுக்கு அபராதம் விதிப்பது." **18:1** *வே.வா., "சுயநல." #அதாவது, "நடைமுறை ஞானத்தையும்."

ஞானத்தின் ஊற்று, பாய்ந்தோடுகிற நீரோடைபோல் இருக்கிறது.
5 பொல்லாதவனுக்குப் பாரபட்சம் காட்டுவது நல்லதல்ல.[a]
நிரபராதிக்கு நியாயம் வழங்காமல் இருப்பது சரியல்ல.[b]
6 முட்டாளின் பேச்சினால் சண்டைகள்தான் வரும்.[c]
அவன் வாயைத் திறந்தால் அடிதான் விழும்.[d]
7 முட்டாள் தன் வாயாலேயே கெட்டுப்போகிறான்.[e]
அவனுடைய பேச்சு அவனுடைய உயிருக்கே உலை வைக்கிறது.
8 இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவனின் வார்த்தைகள்
சிலருக்கு ருசியான உணவு* போல் இருக்கின்றன.[f]
அதை அவர்கள் ஆசை ஆசையாக விழுங்குகிறார்கள்.[g]
9 வேலையில் சோம்பலாக இருக்கிறவன்,
நாசம் உண்டாக்குகிறவனுக்குச் சகோதரனாக* இருக்கிறான்.[h]
10 யெகோவாவின் பெயர் ஒரு பலமான கோட்டை.[i]
நீதிமான் அதற்குள் ஓடி பாதுகாப்பு பெறுவான்.[j]
11 பணக்காரனின் சொத்து அவனுக்கு மதில் சூழ்ந்த நகரம்போல்
இருக்கிறது.
அதை ஒரு கோட்டைச் சுவர்போல் அவன் கற்பனை
செய்துகொள்கிறான்.[k]
12 ஆணவமான இதயம் இருந்தால் அழிவு வரும்.[l]
மனத்தாழ்மை இருந்தால் மகிமை வரும்.[m]
13 ஒரு விஷயத்தை முழுமையாகக் கேட்பதற்குமுன் பதில் சொல்வது
முட்டாள்தனம்.
அது அவமானத்தைத்தான் தேடித்தரும்.[n]
14 மனதில் தைரியம் இருக்கும்போது நோயைத் தாங்கிக்கொள்ளலாம்.[o]
ஆனால், மனம் உடைந்துபோகும்போது யாரால் தாங்கிக்கொள்ள
முடியும்?[p]
15 புத்தி* உள்ளவனின் இதயம் அறிவைச் சம்பாதிக்கும்.[q]
ஞானமுள்ளவனின் காது அறிவைத் தேடும்.
16 அன்பளிப்பு கொடுக்கிறவனுக்குப் பல வாய்ப்புகள் திறக்கின்றன.[r]
பெரிய மனிதர்களைப் பார்த்துப் பேச வாய்ப்புகள் கிடைக்கின்றன.
17 முதலில் வாதாடுகிறவனின் பக்கம்தான் நியாயம் இருப்பதுபோல்
தெரியும்.[s]
ஆனால், எதிர்க்கட்சிக்காரன் வந்து குறுக்கு விசாரணை செய்யும்போது
உண்மை புரியும்.[t]
18 குலுக்கல் போட்டால் சச்சரவுகள் தீரும்,[u]
எதிரும் புதிருமாக இருப்பவர்களின் சண்டைகள் முடிவுக்கு வரும்.
19 மதில் சூழ்ந்த நகரத்தைப் பிடிப்பதைவிட புண்பட்ட சகோதரனை*
சமாதானப்படுத்துவது ரொம்பவே கஷ்டம்.[v]
வாக்குவாதங்கள் கோட்டைத் தாழ்ப்பாள்கள்போல் பலமாக இருக்கும்.[w]

18:8 * வே.வா., "பேராசையோடு விழுங்குகிற உணவு." **18:9** * வே.வா., "நண்பனாக." **18:15** * வே.வா., "புரிந்துகொள்ளுதல்." **18:19** * வே.வா., "நண்பனை."

அதி. 18
a உபா 1:16, 17; நீதி 28:21
b 1ரா 21:9, 10
c நீதி 13:10
d நீதி 19:19
e நீதி 13:3
f லேவி 19:16
g நீதி 26:22
h நீதி 10:4
i 1சா 17:45, 46; சங் 20:1
j சங் 18:2; சங் 91:14
k சங் 49:6, 7; நீதி 11:4; எரே 9:23; லூ 12:19-21
l நீதி 11:2; தானி 5:23, 30; அப் 12:21-23
m நீதி 22:4; 1பே 5:5
n நீதி 25:8
o யோபு 1:21; 2கொ 4:16; 2கொ 12:10
p நீதி 17:22
q 1ரா 3:7-9; நீதி 9:9
r ஆதி 43:11; நீதி 17:8
s 2சா 16:3, 4
t 2சா 19:25-27; நீதி 25:8
u யோசு 14:1, 2; நெ 11:1; நீதி 16:33
v ஆதி 27:41; 2சா 13:22
w 2சா 14:28; அப் 15:37-39

20 ஒருவன் பேசும் வார்த்தைகள் அவனுடைய வயிற்றை நிரப்பும்
உணவுபோல் இருக்கின்றன.[a]
அவற்றின் விளைவுகளை அவன் அனுபவிப்பான்.
21 சாவும் வாழ்வும் நாவின் அதிகாரத்தில் இருக்கின்றன.[b]
நாவை அதிகமாகப் பயன்படுத்த விரும்புகிறவர்கள் அதன்
பின்விளைவுகளை அனுபவிப்பார்கள்.[c]
22 நல்ல மனைவியைத் தேடிக்கொள்கிறவன் நல்ல ஆசீர்வாதத்தைத்
தேடிக்கொள்கிறான்.[d]
யெகோவாவின் பிரியத்தையும்* பெறுகிறான்.[e]
23 ஏழை உதவி கேட்டுக் கெஞ்சுகிறான்.
ஆனால், பணக்காரன் எரிந்துவிழுகிறான்.
24 கூட இருந்தே குழிபறிக்க நினைக்கிற நண்பர்கள் உண்டு.[f]
ஆனால், கூடப்பிறந்தவனைவிட பாசமாக ஒட்டிக்கொள்ளும்
நண்பனும் உண்டு.[g]

19 முட்டாளாக இருந்துகொண்டு பொய் பேசுவதைவிட,
ஏழையாக இருந்துகொண்டு உத்தமமாக நடப்பதே மேல்.[h]
2 ஒருவன் அறிவில்லாமல் இருப்பது நல்லதல்ல.[i]
யோசிக்காமல் நடந்துகொள்கிறவன் பாவம் செய்கிறான்.
3 மனிதனுடைய முட்டாள்தனம் அவன் வழியைத் தாறுமாறாக்குகிறது.
ஆனால், அவனுடைய உள்ளம் யெகோவாவுக்கு எதிராகக்
கொதிப்படைகிறது.
4 பணக்காரனுக்குப் பல நண்பர்கள் கிடைக்கிறார்கள்.
ஆனால், ஏழையை அவனுடைய நண்பன்கூட கைவிட்டுவிடுவான்.[j]
5 பொய் சாட்சி சொல்கிறவன் நிச்சயம் தண்டனை பெறுவான்.[k]
மூச்சுக்கு மூச்சு பொய் சொல்கிறவன் தப்பிக்கவே மாட்டான்.[l]
6 பெரிய மனிதனின்* தயவைத் தேடி பல பேர் வருவார்கள்.
அன்பளிப்புகள் கொடுப்பவனுக்கு எல்லாரும் நண்பர்களாக
இருப்பார்கள்.
7 ஏழையை அவனுடைய சகோதரர்களே வெறுக்கும்போது,[m]
அவனுடைய நண்பர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?[n]
அவன் கெஞ்சிக் கெஞ்சிப் பார்த்தாலும், அவர்கள் யாரும்
கண்டுகொள்வதில்லை.
8 நல்ல புத்தியைச் சம்பாதிப்பவன் தன்னை நேசிக்கிறான்.[o]
பகுத்தறிவைப் பொக்கிஷமாகப் பாதுகாப்பவன் வெற்றி* பெறுவான்.[p]
9 பொய் சாட்சி சொல்கிறவன் நிச்சயம் தண்டனை பெறுவான்.
மூச்சுக்கு மூச்சு பொய் சொல்கிறவன் அழிந்துபோவான்.[q]
10 ஆடம்பரமாக வாழ்வது முட்டாளுக்குப் பொருந்தாதபோது,
இளவரசர்களை ஆட்சி செய்வது வேலைக்காரனுக்குக் கொஞ்சமாவது
பொருந்துமா?[r]

18:22 *வே.வா., “அனுக்கிரகத்தையும்.” **19:6** *வே.வா., “தாராள குணமுள்ளவனின்.” **19:8** *நே.மொ., “நன்மையை.”

அதி. 18
a நீதி 12:14; நீதி 13:2
b மத் 15:18; எபே 4:29; யாக் 3:6, 9
c பிர 10:12
d நீதி 31:10
e நீதி 19:14; பிர 9:9
f 2சா 15:31; மத் 26:49
g 1சா 19:2, 4; நீதி 17:17

அதி. 19
h நீதி 15:16; நீதி 28:6; யாக் 2:5
i ரோ 10:2
j நீதி 14:20
k உபா 19:18, 19
l நீதி 19:9
m நீதி 14:20
n பிர 9:14, 15; யாக் 2:2, 3
o நீதி 15:32
p நீதி 2:2, 5
q நீதி 19:5; வெளி 21:8
r 2சா 3:24; 2சா 3:38, 39; நீதி 30:21, 22; பிர 10:7

11 விவேகம் ஒருவனுடைய கோபத்தைத் தணிக்கும்.[a]
தன் மனதைப் புண்படுத்துகிறவர்களை* மன்னிப்பது
அவனுக்கு அழகு.[b]
12 ராஜாவின் கோபம் சிங்கத்தின் கர்ஜனைபோல் இருக்கிறது.[c]
ஆனால் அவருடைய கருணை, புல்லின் மேலுள்ள பனித்துளிபோல்
இருக்கிறது.
13 புத்தியில்லாத மகன் தன்னுடைய அப்பாவுக்குப் பெரும்
தொல்லையைக் கொண்டுவருகிறான்.[d]
சண்டைக்கார* மனைவி ஒழுகிக்கொண்டே இருக்கிற கூரையைப்
போல் இருக்கிறாள்.[e]
14 வீடும் செல்வமும் அப்பா கொடுக்கிற சொத்து.
ஆனால், விவேகமுள்ள மனைவி யெகோவா தருகிற சொத்து.[f]
15 சோம்பேறி தூங்கிக்கொண்டே இருப்பான்.
மந்தமானவன் பசியில் கிடப்பான்.[g]
16 கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறவன் உயிரைக்
காப்பாற்றிக்கொள்வான்.[h]
தன் வழிகளில் கவனமாக இல்லாதவன் உயிரைத்
தொலைத்துவிடுவான்.[i]
17 ஏழைக்குக் கருணை காட்டுகிறவன் யெகோவாவுக்குக் கடன்
கொடுக்கிறான்.[j]
அவன் கொடுத்ததை அவர் திருப்பிக் கொடுப்பார்.*[k]
18 திருந்துவான் என்ற நம்பிக்கை இருக்கும்போதே உன் மகனைக்
கண்டித்துத் திருத்து.[l]
அவனுடைய சாவுக்கு நீ காரணமாகிவிடாதே.[m]
19 எதற்கெடுத்தாலும் கோபப்படுகிறவன் அதற்கான தண்டனையைப்
பெறுவான்.
அவனைக் காப்பாற்ற நீ முயற்சி செய்தால், திரும்பத் திரும்ப அதைச்
செய்ய வேண்டியிருக்கும்.[n]
20 ஆலோசனையைக் கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்.[o]
அப்போதுதான் எதிர்காலத்தில் ஞானமுள்ளவனாக ஆவாய்.[p]
21 மனிதன் தன் உள்ளத்தில் நிறைய திட்டங்களைப் போடலாம்.
ஆனால், கடைசியில் யெகோவா நினைப்பதுதான்* நடக்கும்.[q]
22 மாறாத அன்பு காட்டுவதுதான் மனிதனுக்கு அழகு.[r]
பொய்யனாக இருப்பதைவிட ஏழையாக இருப்பதே மேல்.
23 யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவன் வாழ்வு பெறுவான்.[s]
அவன் எந்த ஆபத்தும் இல்லாமல் நிம்மதியாகத் தூங்குவான்.[t]
24 சோம்பேறி பாத்திரத்துக்குள் கை விடுவான்,
ஆனால் சாப்பாட்டை வாய்வரை கொண்டுபோகக்கூட
சோம்பல்படுவான்.[u]

19:11 *வே.வா., “தனக்கு எதிரான குற்றத்தை.” **19:13** *வே.வா., “நச்சரிக்கிற.” **19:17** *வே.வா., “அவர் அவனுக்குப் பலன் கொடுப்பார்.” **19:21** *வே.வா., “யெகோவாவின் நோக்கம்தான்; ஆலோசனைதான்.”

அதி. 19
a நீதி 14:29, நீதி 16:32, யாக் 1:19
b ஆதி 50:19-21, மத் 18:21, 22, எபே 4:32
c நீதி 16:14, நீதி 20:2, தானி 2:12
d 2சா 16:21, 22
e நீதி 21:9, 19, நீதி 27:15
f ஆதி 24:14, நீதி 18:22, நீதி 31:10
g நீதி 23:21, நீதி 24:33, 34, 2தெ 3:10
h நீதி 16:17
i நீதி 15:32
j உபா 15:7, 8, சங் 37:25, 26, எபி 13:16
k நீதி 11:24, மத் 5:7, எபி 6:10
l நீதி 13:24, நீதி 22:6, 15
m 1சா 3:12, 13
n 1சா 24:16-18, 1சா 26:21
o நீதி 4:13
p உபா 8:14, 16, எபி 12:7, 11
q ஆதி 11:6, 7, ஆதி 50:19, 20, நீதி 21:30, தானி 4:35, அப் 5:38, 39
r மீ 6:8
s நீதி 14:27, மல் 3:16
t நீதி 12:21
u நீதி 6:9-11, நீதி 15:19, நீதி 24:30, 31, நீதி 26:14, 15

25 கேலி செய்கிறவனை அடி,[a] அப்போதுதான் அனுபவமில்லாதவன்
சாமர்த்தியசாலி ஆவான்.[b]
புத்தி* உள்ளவனைக் கண்டி, அப்போதுதான் அவனுக்கு இன்னும்
அறிவு வளரும்.[c]
26 அப்பாவைக் கொடுமைப்படுத்தி, அம்மாவை விரட்டியடிக்கிற மகன்,
அவமானத்தையும் தலைகுனிவையும் உண்டாக்குகிறான்.[d]
27 என் மகனே, புத்திமதி கேட்பதை நீ விட்டுவிட்டால்,
அறிவு புகட்டுகிற வார்த்தைகளைவிட்டு விலகிவிடுவாய்.
28 உதவாக்கரையான சாட்சி நியாயத்தைக் கேலி செய்கிறான்.[e]
பொல்லாத மனிதன் அக்கிரமத்தை ஆசையோடு விழுங்குகிறான்.[f]
29 கேலி செய்கிறவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு காத்திருக்கிறது.[g]
முட்டாள்களின் முதுகுக்குப் பிரம்படி காத்திருக்கிறது.[h]

20 திராட்சமது கேலி செய்யும்,[i]
மதுபானம் அடாவடித்தனம் பண்ணும்.[j]
அவற்றால் வழிதவறிப் போகிற எவனும் ஞானம் இல்லாதவன்.[k]
2 சிங்கத்தின் கர்ஜனைக்குப் பயப்படுவதுபோல், எல்லாரும் ராஜாவுக்குப்
பயப்படுகிறார்கள்.[l]
அவருடைய கோபத்தைக் கிளறுகிறவன் தன்னுடைய உயிருக்கே
உலை வைக்கிறான்.[m]
3 வாக்குவாதம் செய்யாமல் இருப்பது ஒருவருக்கு மரியாதை.[n]
ஆனால், முட்டாள்கள் சட்டென்று வாக்குவாதத்தில் இறங்குவார்கள்.[o]
4 சோம்பேறி குளிர் காலத்தில் நிலத்தை உழ மாட்டான்.
அதனால் அறுவடைக் காலத்தில் கையேந்தி நிற்பான்.*[p]
5 மனிதனுடைய உள்ளத்தில் இருக்கும் யோசனைகள்* ஆழமான
தண்ணீர்போல் இருக்கின்றன.
ஆனால், பகுத்தறிவு உள்ளவன் அதை மொண்டெடுப்பான்.
6 நிறைய பேர் தாங்கள் விசுவாசமாய் இருப்பதாக*
சொல்லிக்கொள்கிறார்கள்.
ஆனால், விசுவாசமாக இருப்பவனை யாரால் கண்டுபிடிக்க முடியும்?
7 நீதிமான் தன் உத்தமத்தில் நடக்கிறான்.[q]
அவனுக்குப் பிறக்கும் பிள்ளைகள் சந்தோஷமானவர்கள்.[r]
8 தீர்ப்பு சொல்ல ராஜா சிம்மாசனத்தில் உட்காரும்போது,[s]
ஒரே பார்வையில் கெட்டதையெல்லாம் சலித்தெடுத்துவிடுகிறார்.[t]
9 “இப்போது என் இதயம் சுத்தமாக இருக்கிறது,[u]
என்னிடம் பாவமே இல்லை” என்று யாரால் சொல்ல முடியும்?[v]
10 போலி எடைக்கற்களும் போலி படிகளும்*
யெகோவாவுக்கு அருவருப்பானவை.[w]

19:25 *வே.வா., “புரிந்துகொள்ளுதல்.” **20:4** *அல்லது, “அறுவடைக் காலத்தில் அவன் தேடும்போது எதுவும் கிடைக்காது.” **20:5** *வே.வா., “மனிதனுடைய உள்ளெண்ணங்கள்.” **20:6** *வே.வா., “மாறாத அன்பு காட்டுவதாக.” **20:10** *வே.வா., “இரண்டு விதமான எடைக்கற்களும், இரண்டு விதமான அளவைகளும்.”

அதி. 19
a உபா 25:2
b நீதி 15:5
c நீதி 9:9; நீதி 21:11
d யாத் 20:12; லேவி 20:9; நீதி 20:20; நீதி 30:17
e 1ரா 21:9, 10
f நீதி 4:16, 17
g நீதி 9:12
h நீதி 10:13; நீதி 26:3

அதி. 20
i ஆதி 9:20, 21; நீதி 23:29-35
j ஏசா 28:7
k 1கொ 6:10; கலா 5:21; எபே 5:18
l நீதி 19:12; பிர 10:4
m 1ரா 2:22-24
n நீதி 14:29; 2தீ 2:23
o நீதி 18:6; பிர 7:9
p நீதி 6:10, 11; 2தெ 3:10
q யோபு 1:1; லூ 1:5, 6
r சங் 37:25, 26
s 1ரா 7:7
t 1ரா 3:28; சங் 72:1, 4; நீதி 16:12
u யோபு 14:4
v சங் 51:5; பிர 7:20; யாக் 3:2
w நீதி 11:1; ஆமோ 8:5; மீ 6:11

11 சிறுபிள்ளையைக்கூட அவனுடைய செயலை வைத்தே
எடைபோட முடியும்.
அவனுடைய நடத்தை சுத்தமாகவும் சரியாகவும் இருக்கிறதா என்று
தெரிந்துகொள்ள முடியும்.[a]
12 கேட்பதற்குக் காதுகள், பார்ப்பதற்குக் கண்கள்,
இரண்டையுமே யெகோவாதான் உண்டாக்கினார்.[b]
13 தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் வறுமையில் வாடுவாய்.[c]
கண் விழித்திரு, அப்போது வயிறார சாப்பிடுவாய்.[d]
14 பொருளை வாங்குபவன், “அது சரியில்லை, இது சரியில்லை” என்று
சொல்வான்.
ஆனால், பேரம் பேசி வாங்கிச் சென்ற பிறகு அதைப் பற்றிப்
பெருமையடிப்பான்.[e]
15 தங்கம் இருக்கலாம், ஏராளமான பவளமும்* இருக்கலாம்.
ஆனால், அறிவை உதிர்க்கும் உதடுகள்தான் விலைமதிப்புள்ளவை.[f]
16 ஒருவன் முன்பின் தெரியாதவரின் கடனுக்குப் பொறுப்பேற்றிருந்தால்,
அவனுடைய அங்கியை எடுத்துக்கொள்.[g]
அன்னியப் பெண்ணுக்காக* அவன் அப்படிச் செய்திருந்தால்,
அவனிடம் அடமானம் வாங்காமல் விடாதே.[h]
17 ஏமாற்றி சம்பாதித்த பணத்தில் சாப்பிடுகிற சாப்பாடு ருசியாக இருக்கும்.
ஆனால், பிற்பாடு வாய் நிறைய கற்களை அள்ளிப்போட்டதுபோல்
இருக்கும்.[i]
18 கலந்துபேசினால்* திட்டங்கள் வெற்றி பெறும்.[j]
திறமையான வழிநடத்துதலைப் பெற்று போருக்குப் போ.[k]
19 இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவன் ரகசியங்களை
அம்பலப்படுத்துகிறான்.[l]
அதனால், வம்பளப்பதில் ஆர்வமாக இருக்கிறவர்களோடு* சேராதே.
20 அப்பாவையும் அம்மாவையும் சபிக்கிறவனுடைய விளக்கு,
இருள் சூழ்ந்துகொள்ளும் நேரத்தில் அணைக்கப்படும்.[m]
21 ஆரம்பத்தில் பேராசையோடு சம்பாதித்த சொத்து,
கடைசியில் அவனுக்கு ஆசீர்வாதமாக இருக்காது.[n]
22 “பழிக்குப்பழி வாங்குவேன்!” என்று சொல்லாதே.[o]
யெகோவாமேல் நம்பிக்கையாக இரு,[p] அவர் உன்னைக்
காப்பாற்றுவார்.[q]
23 போலி எடைக்கற்களை* யெகோவா அருவருக்கிறார்.
கள்ளத் தராசு நல்லதல்ல.
24 மனிதனின் காலடிகளை யெகோவா வழிநடத்துகிறார்.[r]
இல்லையென்றால், அவன் எப்படித் தன்னுடைய வழியைப்
புரிந்துகொள்வான்?

20:15 *சொல் பட்டியலைப் பாருங்கள். **20:16** *வே.வா., “வேறு தேசத்தைச் சேர்ந்தவருக்காக.” **20:18** *வே.வா., “ஒன்றுகூடி ஆலோசனை செய்தால்.” **20:19** *வே.வா., “பேசி மயக்குகிறவர்களோடு.” **20:23** *வே.வா., “இரண்டு விதமான எடைக்கற்களை.”

அதி. 20
a நீதி 22:15
b யாத் 4:11
c நீதி 10:4
d நீதி 12:11
e லேவி 19:13, நீதி 21:6
f நீதி 3:13-15
g நீதி 11:15
h நீதி 27:13
i நீதி 6:30, 31
j நீதி 15:22
k நீதி 11:14, நீதி 24:6, லூ 14:31, 32
l லேவி 19:16, நீதி 11:13, நீதி 25:9, 23
m யாத் 20:12, லேவி 20:9, நீதி 19:26
n நீதி 28:8, 20, 1தீ 6:9, 10
o உபா 32:35, நீதி 24:29, மத் 5:38, 39, ரோ 12:17, 19, 1தெ 5:15
p சங் 37:34
q சங் 34:7, 1பே 4:19
r சங் 37:23, எரே 10:23

25 “அர்ப்பணிக்கிறேன்!” என்று அவசரப்பட்டு நேர்ந்துகொண்டு பின்னால் யோசிப்பது,
மனிதனுக்கு ஒரு கண்ணியாக இருக்கிறது.[a]
26 ஞானமான ராஜா பொல்லாதவர்களைச் சலித்தெடுத்து,[b]
போரடிக்கும் சக்கரங்களை அவர்கள்மேல் ஏற்றுகிறார்.[c]
27 மனிதன் வெளிவிடுகிற மூச்சுக்காற்று யெகோவாவின் விளக்கு.
அது அவனுடைய அடிமனதில் இருப்பதை வெட்டவெளிச்சமாக்கும்.
28 மாறாத அன்பும் உண்மைத்தன்மையும் ராஜாவைப் பாதுகாக்கும்.[d]
மாறாத அன்பினால் தன்னுடைய சிம்மாசனத்தை அவர் நிலைநிறுத்துகிறார்.[e]
29 இளைஞர்களுடைய அழகு அவர்களுடைய பலம்.[f]
வயதானவர்களுடைய கம்பீரம் அவர்களுடைய நரைமுடி.[g]
30 காயங்களும் தழும்புகளும் கெட்டதை விட்டுவிட உதவும்.[h]
பிரம்படி ஒருவனை அடியோடு திருத்தும்.

21 ராஜாவின் இதயம் யெகோவாவின் கையில் நீரோடைபோல்* இருக்கிறது.
தான் விரும்பும் திசையில் அதை அவர் திருப்பிவிடுகிறார்.[i]
2 மனிதனுடைய வழிகளெல்லாம் அவனுக்குச் சரியாகத் தோன்றுகின்றன.[j]
ஆனால், யெகோவாதான் இதயங்களை* ஆராய்கிறார்.[k]
3 பலி செலுத்துவதைவிட ஒருவன் நீதி நியாயத்தோடு நடப்பதைத்தான்
யெகோவா மிகவும் விரும்புகிறார்.[l]
4 அக்கிரமக்காரர்களின் பாதைக்கு விளக்குபோல் இருக்கிற ஆணவக் கண்களும்,
அகம்பாவ இதயமும் பாவம் நிறைந்தவை.[m]
5 கடினமாக உழைக்கிறவனுடைய திட்டங்கள் நிச்சயம் வெற்றி பெறும்.[n]
ஆனால், எதையும் அவசரப்பட்டுச் செய்கிறவர்களுக்கு வறுமைதான் வரும்.[o]
6 பொய் சொல்லி சம்பாதிக்கிற சொத்து,
மறைந்துபோகும் மூடுபனி போன்றது, ஆபத்தான கண்ணி போன்றது.*[p]
7 பொல்லாதவர்கள் நியாயமாக நடக்க மறுக்கிறார்கள்.
அதனால், அவர்கள் செய்கிற கொடுமைகளே அவர்களை வாரிக்கொண்டு போய்விடும்.[q]
8 குற்றமுள்ளவனின் வழி குறுக்கு வழி.
ஆனால், குற்றமற்றவனின் வழி நேர்வழி.[r]
9 சண்டைக்கார* மனைவியோடு வீட்டுக்குள் குடியிருப்பதைவிட,
கூரைக்கு மேலே ஒரு ஓரமாகத் தங்கியிருப்பதே மேல்.[s]
10 பொல்லாதவன் கெட்டதைச் செய்யத் துடிக்கிறான்.[t]
அடுத்தவனுக்கு அவன் கொஞ்சம்கூட கருணை காட்டுவது இல்லை.[u]

21:1 *வே.வா., “வாய்க்கால்கள்போல்.” 21:2 *வே.வா., “உள்ளெண்ணங்களை.” 21:6 *அல்லது, “சாவை விரும்புகிறவர்களுக்கு மறைந்துபோகும் மூடுபனி போன்றது.” 21:9 *வே.வா., “நச்சரிக்கிற.”

அதி. 20
a லேவி 27:9; எண் 30:2; பிர 5:4, 6; மத் 5:33
b சங் 101:8
c ஏசா 28:27
d சங் 61:6, 7
e சங் 21:7
f பிர 11:9
g லேவி 19:32; நீதி 16:31
h சங் 119:71

அதி. 21
i யாத் 14:4; எஸ்றா 7:27; நெ 2:7, 8; ஏசா 44:28; வெளி 17:17
j சங் 36:1, 2; நீதி 16:2
k 1சா 16:6, 7; நீதி 24:12; எரே 17:10
l 1சா 15:22, 23; ஓசி 6:6; மீ 6:7, 8; மத் 12:7
m சங் 10:4
n நீதி 13:4
o நீதி 14:29
p நீதி 1:19; நீதி 20:21
q சங் 7:14-16
r சங் 37:37; நீதி 16:17; 1பே 1:22
s நீதி 17:1; நீதி 21:19; நீதி 25:24; நீதி 27:15
t ஆதி 6:5; சங் 36:1, 4
u 1சா 25:10, 11

11 கேலி செய்கிறவனைத் தண்டிக்கும்போது அனுபவமில்லாதவனும் ஞானமுள்ளவனாக ஆகிறான்.
ஞானமுள்ளவன் ஒரு விஷயத்தை ஆழமாகப் புரிந்துகொள்ளும்போது* அறிவை அடைகிறான்.# [a]
12 நீதியுள்ள கடவுள் பொல்லாதவனின் வீட்டைக் கவனிக்கிறார்.
பொல்லாதவர்கள் எல்லாரையும் ஒழித்துக்கட்டுகிறார்.[b]
13 ஏழை கதறும்போது ஒருவன் காதுகளை அடைத்துக்கொண்டால்,
அவன் கதறும்போதும் யாருமே கேட்க மாட்டார்கள்.[c]
14 ரகசியமாகக் கொடுக்கப்படுகிற அன்பளிப்பு கோபத்தைத் தணிக்கும்.[d]
மறைவாகக் கொடுக்கப்படுகிற லஞ்சம் ஆக்ரோஷத்தை அடக்கும்.
15 நியாயமாக நடப்பது நீதிமானுக்குச் சந்தோஷம் தருகிறது.[e]
ஆனால், அக்கிரமம் செய்கிறவனுக்கு அது கொடுமையாக இருக்கிறது.
16 விவேகமான வழியைவிட்டு விலகிப்போகிறவன்
செத்துக் கிடப்பவர்களோடு* அமைதியாகக் கிடப்பான்.[f]
17 உல்லாசப் பிரியன் ஏழையாவான்.[g]
திராட்சமதுவையும் எண்ணெயையும் விரும்புகிறவன் பணக்காரனாக மாட்டான்.
18 நீதிமானுக்குப் பொல்லாதவன் மீட்புவிலையாவான்.
நேர்மையானவனுக்குத் துரோகி மீட்புவிலையாவான்.[h]
19 சண்டைக்காரியும்* கோபக்காரியுமான மனைவியோடு குடியிருப்பதைவிட
வனாந்தரத்தில் வாழ்வதே மேல்.[i]
20 ஞானமுள்ளவனின் வீட்டில் அருமையான பொக்கிஷமும் எண்ணெயும் இருக்கும்.[j]
ஆனால், முட்டாள் தன்னிடம் இருப்பதையெல்லாம் வெட்டியாகச் செலவழித்துவிடுவான்.[k]
21 நீதியையும் மாறாத அன்பையும் நாடுகிறவன்
வாழ்வும், நீதியும், மகிமையும் பெறுவான்.[l]
22 ஞானமுள்ளவனால் பலசாலிகளுடைய நகரத்தின் மதிலில்கூட ஏற முடியும்.
அவர்கள் நம்பியிருக்கிற கோட்டையைக்கூட அவனால் தகர்க்க முடியும்.[m]
23 தன் வாயையும் நாவையும் அடக்குகிறவன்
பிரச்சினையில் சிக்காமல் இருப்பான்.[n]
24 அகங்காரத்தோடு* கண்மூடித்தனமாக நடக்கிறவன்,
அகங்காரம்பிடித்த பெருமைக்காரன்[o] என்று சொல்லப்படுகிறான்.

21:11 *வே.வா., “விவேகத்தைச் சம்பாதிக்கும்போது.” #வே.வா., “என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்கிறான்.” **21:16** *வே.வா., “செத்து செயலிழந்து போனவர்களோடு.” **21:19** *வே.வா., “நச்சரிக்கிறவளும்.” **21:24** *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது.

அதி. 21
a நீதி 9:9
நீதி 19:25
b ஆதி 19:29
சங் 37:10, 20
2பே 2:4
2பே 3:5, 6
c உபா 15:9
நீதி 28:27
யாக் 5:4
d நீதி 18:16
e சங் 106:3
f யாக் 1:15
2பே 2:21
g பிர 7:4
லூ 15:13, 14
h எஸ்தர் 7:10
i நீதி 17:1
நீதி 21:9
நீதி 25:24
நீதி 27:15
j நீதி 15:6
பிர 5:19
k லூ 15:13, 14
l நீதி 15:9
நீதி 22:4
மத் 5:6
ரோ 2:6, 7
m பிர 7:19
2கொ 10:4
n சங் 141:3
நீதி 10:19
பிர 10:20
o எண் 14:44
எஸ்தர் 6:4

25 சோம்பேறி எதை நினைத்து ஏங்குகிறானோ அதுவே அவனைக் கொன்றுவிடும்.
ஏனென்றால், அவனுடைய கைகள் வேலை செய்ய மறுக்கின்றன.[a]
26 அவன் நாள் முழுவதும் பேராசையோடு ஏங்குகிறான்.
ஆனால், நீதிமான் கஞ்சத்தனம் காட்டாமல் எல்லாவற்றையும் கொடுக்கிறான்.[b]
27 பொல்லாதவன் கொடுக்கிற பலி அருவருப்பானது என்றால்,[c]
கெட்ட எண்ணத்தோடு* அவன் கொடுக்கிற பலி இன்னும் எந்தளவுக்கு அருவருப்பானது!
28 பொய் சாட்சி சொல்கிறவன் அழிந்துபோவான்.[d]
ஆனால், கவனமாகக் கேட்கிறவன் சரியாகச் சாட்சி சொல்வான்.*
29 பொல்லாதவன் தனக்கு எந்தப் பிரச்சினையுமே இல்லாததுபோல் காட்டிக்கொள்கிறான்.[e]
ஆனால், நேர்மையானவனின் வழிதான் உறுதியான வழி.[f]
30 யெகோவாவுக்கு எதிரான ஞானமும் இல்லை, பகுத்தறிவும் இல்லை, ஆலோசனையும் இல்லை.[g]
31 போருக்காகக் குதிரைகள் தயாராக நிறுத்தி வைக்கப்படும்.[h]
ஆனால், யெகோவாதான் வெற்றி* தருகிறார்.[i]

22 நிறைய சொத்துகளைச் சம்பாதிப்பதைவிட நல்ல பெயரைச் சம்பாதிப்பது சிறந்தது.[j]
தங்கத்தையும் வெள்ளியையும் சம்பாதிப்பதைவிட மரியாதையைச் சம்பாதிப்பது சிறந்தது.
2 பணக்காரனுக்கும் ஏழைக்கும் பொதுவான ஒரு விஷயம் இருக்கிறது.
அவர்கள் இரண்டு பேரையும் யெகோவாதான் படைத்தார்.[k]
3 சாமர்த்தியசாலி ஆபத்தைப் பார்த்து மறைந்துகொள்கிறான்.
ஆனால், அனுபவமில்லாதவன் நேராகப் போய் மாட்டிக்கொண்டு அவதிப்படுகிறான்.*
4 மனத்தாழ்மை காட்டுவதாலும் யெகோவாவுக்குப் பயப்படுவதாலும் கிடைக்கிற பலன்,
செல்வமும் மகிமையும் வாழ்வுமே.[l]
5 குறுக்கு வழியில் போகிறவனின் பாதையிலே முட்களும் கண்ணிகளும் இருக்கின்றன.
ஆனால், தன் உயிரை மதிக்கிறவன் அவற்றிலிருந்து தூரமாக விலகியிருப்பான்.[m]
6 நடக்க வேண்டிய வழியில்* நடக்க பிள்ளையைப் பழக்கு.[n]
வயதானாலும் அவன் அதைவிட்டு விலக மாட்டான்.[o]
7 பணக்காரன் ஏழையை ஆளுகிறான்.
கடன் வாங்கியவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை.[p]
8 அநீதியை விதைக்கிறவன் அழிவை அறுப்பான்.[q]

அதி. 21
a நீதி 6:6-11; நீதி 13:4; நீதி 19:24
b சங் 37:25, 26; சங் 112:9; லூ 6:30
c 1சா 15:22, 23; நீதி 15:8; ஏசா 1:11
d உபா 19:18, 19; நீதி 19:5
e நீதி 28:14; நீதி 29:1
f நீதி 11:5
g எண் 23:7, 8; நீதி 19:21; அப் 5:38, 39
h சங் 20:7; சங் 33:17; ஏசா 31:1
i 2நா 20:15, 17; சங் 68:20; வெளி 7:10

அதி. 22
j பிர 7:1
k அப் 17:26
l சங் 34:9; நீதி 18:12
m நீதி 4:14, 15
n ஆதி 18:19; உபா 6:6, 7; எபே 6:4
o 2தீ 3:14, 15
p 2ரா 4:1; மத் 18:25
q கலா 6:7, 8

21:27 * வே.வா., “வெட்கங்கெட்ட விதமாக நடந்துகொண்டு.” **21:28** * நே.மொ., “என்றென்றும் பேசுவான்.” **21:31** * வே.வா., “மீட்பு.” **22:3** * வே.வா., “அதன் விளைவுகளை அனுபவிக்கிறான்.” **22:6** * வே.வா., “சரியான வழியில்.”

அவனுடைய அராஜகம்* முடிவுக்கு வரும்.[a]
9 தாராள குணமுள்ளவன் ஆசீர்வதிக்கப்படுவான்.
ஏனென்றால், அவன் ஏழைகளோடு தன் உணவைப் பகிர்ந்துகொள்கிறான்.[b]
10 ஏளனம் செய்கிறவனை விரட்டிவிடு.
அப்போது சண்டை நின்றுவிடும்,
சச்சரவுகளும்* பழிப்பேச்சுகளும் முடிவுக்கு வரும்.
11 ஒருவன் சுத்தமான இதயத்தை விரும்பும்போதும் கனிவாகப் பேசும்போதும்,
ராஜாவுக்கு நண்பனாக இருப்பான்.[c]
12 அறிவோடு நடக்கிறவனை யெகோவா கண்ணுக்குக் கண்ணாகப் பார்த்துக்கொள்கிறார்.*
ஆனால், துரோகியின் பேச்சை ஒன்றுமில்லாமல் செய்துவிடுகிறார்.[d]
13 "வெளியே சிங்கம் நிற்கிறது,
நடுத்தெருவில் என்னைக் கடித்துக் குதறிப்போடும்!" என்று சோம்பேறி சொல்கிறான்.[e]
14 நடத்தைகெட்ட பெண்ணின் வாய் ஒரு படுகுழி.[f]
யெகோவாவின் கண்டனத் தீர்ப்புக்கு ஆளானவன் அதில் விழுவான்.
15 பிள்ளையின் நெஞ்சில் முட்டாள்தனம் வேரூன்றியிருக்கும்.[g]
ஆனால், தண்டனையின்* பிரம்பு அதை அவனைவிட்டு நீக்கிவிடும்.[h]
16 ஏழையை ஏமாற்றி சொத்து சேர்க்கிறவனும்,[i]
பணக்காரனுக்கு அன்பளிப்புகள் கொடுக்கிறவனும்
வறுமையின் பிடியில் சிக்குவார்கள்.
17 ஞானமுள்ளவர்கள் சொல்கிற வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்டு,[j]
நான் புகட்டும் அறிவை உன் இதயத்தில் வை.[k]
18 அவை எப்போதும் உன் உதடுகளில் இருக்கும்படி,[l]
அவற்றை உன் இதயத்தில் ஆழமாகப் பதிய வைப்பது சந்தோஷத்தைத் தரும்.[m]
19 நீ யெகோவாமேல் நம்பிக்கை வைப்பதற்காக
இன்று நான் உனக்கு அறிவு புகட்டுகிறேன்.
20 ஆலோசனைகளையும் அறிவுரைகளையும்
நான் உனக்கு ஏற்கெனவே எழுதியிருக்கிறேனே!
21 உன்னை அனுப்பியவருக்குச் சரியான தகவலை நீ கொண்டுபோய்க் கொடுப்பதற்காக
உண்மையான, நம்பகமான வார்த்தைகளை உனக்குப் போதித்திருக்கிறேனே!
22 ஒருவன் ஏழை என்பதால் அவனைக் கொள்ளையடிக்காதே.[n]
நகரவாசலில் எளியவனுக்கு அநியாயம் செய்யாதே.[o]

22:8 *நே.மொ., "கோபாவேசத்தின் கோல்." **22:10** *வே.வா., "வழக்குகளும்." **22:12** *நே.மொ., "யெகோவாவின் கண்கள் அறிவைக் காக்கும்." **22:15** *வே.வா., "கண்டித்துத் திருத்தும்."

அதி. 22
a சங் 125:3
b உபா 15:7, 8; நீதி 11:25; எபி 6:10
c சங் 45:2; நீதி 16:13; மத் 5:8
d அப் 13:8-10
e நீதி 26:13-15
f நீதி 5:3; பிர 7:26
g ஆதி 8:21
h நீதி 13:24; நீதி 19:18
i சங் 12:5; நீதி 14:31
j நீதி 13:20
k நீதி 15:14
l நீதி 15:7
m நீதி 2:10; நீதி 24:14
n நீதி 23:10
o யாத் 23:6; ஆமோ 5:12

23 அவர்களுக்காக யெகோவாவே வாதாடுவார்.[a]
அவர்களை ஏமாற்றுகிறவர்களின் உயிரைப் பறித்துவிடுவார்.
24 கோபக்காரனோடு சகவாசம் வைக்காதே.
எரிந்து விழுகிற சுபாவம் உள்ளவனோடு சேராதே.
25 அப்போதுதான், அவனைப் பார்த்து நீயும் கெட்டுப்போக மாட்டாய்,
ஆபத்தில் சிக்கிக்கொள்ள மாட்டாய்.[b]
26 வேறொருவன் வாங்குகிற கடனுக்கு நீ பொறுப்பேற்காதே.
அதற்காகக் கை குலுக்கி ஒப்பந்தம் செய்யாதே.[c]
27 கடனை அடைக்க உனக்கு வழியில்லை என்றால்,
நீ படுத்திருக்கிற படுக்கைகூட பறிபோய்விடுமே!
28 உன் முன்னோர்கள் பூர்வ காலத்தில் வைத்த
எல்லைக் குறியைத் தள்ளி வைக்காதே.[d]
29 திறமையாக வேலை செய்கிறவனைப் பார்த்திருக்கிறாயா?
அவன் சாதாரண ஆட்கள் முன்னால் அல்ல,
ராஜாக்கள் முன்னால் நிற்பான்.[e]

23 ராஜாவோடு விருந்து சாப்பிட உட்காரும்போது,
சூழ்நிலையை மனதில் வைத்துக் கவனமாக நடந்துகொள்.
2 நீ பயங்கர பசியோடு இருந்தாலும்,
உன் வாயைக் கட்டிக்கொள்.*
3 அவர் கொடுக்கிற ருசியான உணவுகளைச் சாப்பிடத் துடிக்காதே.
அவை உன்னை மோசம்போக்கிவிடும்.
4 சொத்து சேர்ப்பதற்காக உழைத்து உழைத்துக் களைத்துப்போகாதே.[f]
அப்படிச் செய்வதை நிறுத்திவிட்டு புத்தியோடு நடந்துகொள்.*
5 இல்லாமல்போகும் ஒன்றின்மேல் நீ ஏன் கண்ணை வைக்க வேண்டும்?[g]
அது கழுகைப் போல் இறக்கை விரித்து வானத்துக்குப் பறந்துவிடுமே![h]
6 கஞ்சன் தரும் உணவைச் சாப்பிடாதே.
அவன் கொடுக்கிற ருசியான உணவுகளைச் சாப்பிடத் துடிக்காதே.
7 ஏனென்றால், அவன் எல்லாவற்றுக்கும் கணக்குப் பார்ப்பான்.
“நன்றாகச் சாப்பிடு, குடி” என்று வெறும் பேச்சுக்குத்தான் சொல்வான்.
8 நீ அதைச் சாப்பிட்டபின் வாந்தி எடுத்துவிடுவாய்.
நீ பாராட்டிப் பேசியதெல்லாம் வீணாகிவிடும்.
9 முட்டாளின் காதில் விழும்படி எதையும் பேசாதே.[i]
ஏனென்றால், நீ சொல்கிற ஞானமான வார்த்தைகளை அவன் மதிக்க மாட்டான்.[j]
10 பூர்வ காலத்தில் வைக்கப்பட்ட எல்லைக் குறியைத் தள்ளி வைக்காதே.[k]
அப்பா இல்லாத பிள்ளைகளின் நிலத்தை ஆக்கிரமிக்காதே.
11 ஏனென்றால், அவர்களை விடுவிக்கிறவர்* பலம்படைத்தவர்.
அவர்களுக்காக அவரே உன்னோடு வாதாடுவார்.[l]
12 புத்திமதியை உன் இதயத்தில் வை.

அதி. 22
a 1சா 24:12; சங் 12:5
b நீதி 13:20
c நீதி 6:1-3
d உபா 19:14; நீதி 23:10; ஓசி 5:10
e 1சா 16:18, 19; 1ரா 7:13, 14

அதி. 23
f நீதி 28:20; யோவா 6:27; 1தீ 6:9, 10
g 1யோ 2:16, 17
h நீதி 27:24
i நீதி 9:7; நீதி 26:4
j மத் 7:6
k உபா 19:14; நீதி 22:28
l யாத் 22:22, 23; சங் 10:14

23:2 * நே.மொ., “உன் தொண்டையில் கத்தியை வை.” **23:4** * அல்லது, “உன் சொந்த புத்தியை நம்பாதே.” **23:11** * வே.வா., “மீட்கிறவர்.”

அறிவுள்ள வார்த்தைகளை உன் காதில் வாங்கிக்கொள்.
13 பிள்ளையைத் தண்டிக்காமல் இருக்காதே.[a]
நீ பிரம்பால் அடித்தால் அவன் ஒன்றும் செத்துவிட மாட்டான்.
14 நீ அவனைப் பிரம்பால் அடித்தால்தான்
கல்லறைக்குப் போகாதபடி அவனைக் காப்பாற்ற முடியும்.
15 என் மகனே, உன் இதயம் ஞானமுள்ளதாக இருந்தால்,
என் இதயம் சந்தோஷத்தில் பூரிக்கும்.[b]
16 உன் உதடுகள் சரியானதைப் பேசினால்,
என் உள்ளம்* சந்தோஷத்தில் துள்ளும்.
17 உன் இதயம் பாவிகள்மேல் பொறாமைப்படாமல் இருக்கட்டும்.[c]
நாள் முழுவதும் நீ யெகோவாவுக்குப் பயந்து நட.[d]
18 அப்போது உன் எதிர்காலம் நன்றாக இருக்கும்.[e]
உன் நம்பிக்கை வீண்போகாது.
19 என் மகனே, நான் சொல்வதைக் கேட்டு ஞானம் அடைந்து,
உன் இதயத்தைச் சரியான வழியில் நடத்து.
20 அளவுக்கு அதிகமாகத் திராட்சமது குடிக்கிறவர்களோடும்,[f]
அளவுக்கு அதிகமாக இறைச்சி சாப்பிடுகிறவர்களோடும்
சேர்ந்துகொள்ளாதே.[g]
21 ஏனென்றால், குடிகாரர்களும் பெருந்தீனிக்காரர்களும்
ஏழைகளாவார்கள்.[h]
தூக்க மயக்கத்திலேயே இருப்பவர்கள் கந்தல் துணியைத்தான்
உடுத்துவார்கள்.
22 உன்னைப் பெற்ற அப்பாவின் பேச்சைக் கேள்.
உன் அம்மாவுக்கு வயதாகிவிட்டதால் அவளை அலட்சியம்
செய்யாதே.[i]
23 சத்தியத்தை வாங்கு,* அதை ஒருபோதும் விற்காதே.[j]
அதேபோல், ஞானத்தையும் புத்திமதியையும் புத்தியையும்# வாங்கு.[k]
24 நீதிமானைப் பெற்றவன் நிச்சயம் சந்தோஷப்படுவான்.
ஞானமுள்ள மகனைப் பெற்றவன் பூரித்துப்போவான்.
25 உன் அப்பாவும் அம்மாவும் பூரித்துப்போவார்கள்.
உன்னைப் பெற்றெடுத்தவள் சந்தோஷப்படுவாள்.
26 என் மகனே, உன் இதயத்தை எனக்குத் தா.
உன் கண்கள் என் வழிகளை ரசிக்கட்டும்.[l]
27 விபச்சாரி ஓர் ஆழமான படுகுழி.
ஒழுக்கங்கெட்ட பெண் ஒரு குறுகலான கிணறு.[m]
28 திருடனைப் போல் அவள் பதுங்கியிருக்கிறாள்.[n]
நிறைய ஆண்களைத் துரோகம் செய்ய வைக்கிறாள்.
29 யாருக்கு வேதனை? யாருக்குக் கவலை?
யாருக்குச் சண்டை சச்சரவுகள்? யாருக்குப் புலம்பல்கள்?
யாருக்குத் தேவையில்லாத காயங்கள்? யாருக்குச் சிவந்த* கண்கள்?

23:16 *நே.மொ., "சிறுநீரகம்." **23:23** *வே.வா., "சம்பாதி." #வே.வா., "புரிந்துகொள்ளுதலையும்." **23:29** *வே.வா., "மங்கிப்போன."

அதி. 23
a நீதி 13:24, நீதி 19:18, எபே 6:4
b நீதி 27:11, 3யோ 4
c சங் 37:1
d சங் 111:10, 2கொ 7:1
e சங் 37:37, நீதி 24:14
f நீதி 20:1, ஏசா 5:11, ரோ 13:13, 1பே 4:3
g நீதி 28:7, 1கொ 10:31
h உபா 21:20, 21, நீதி 21:17
i யாத் 20:12, யாத் 21:17, மத் 15:5, 6, எபே 6:1
j பிலி 3:7, 8
k நீதி 4:5, நீதி 16:16
l சங் 107:43
m நீதி 22:14
n நீதி 7:10, 12, பிர 7:26

30 மதுவே கதி என்று கிடப்பவர்களுக்குத்தான்.[a]
அதிக போதையேற்றும் மதுவை* நாடிப் போகிறவர்களுக்குத்தான்.
31 திராட்சமதுவின் சிவப்பு நிறத்தைப் பார்க்காதே.
அது கிண்ணத்தில் பளபளக்கும், தொண்டையில் இதமாக இறங்கும்.
32 கடைசியில், பாம்புபோல் கடிக்கும்.
விரியன் பாம்புபோல் விஷத்தைக் கக்கும்.
33 உன் கண்கள் வினோதமான காட்சிகளைப் பார்க்கும்.
உன் இதயம் தாறுமாறாகப் பேசும்.[b]
34 நடுக்கடலில் படுத்திருப்பவனைப் போலவும்,
பாய்மரக் கம்பத்தின் உச்சியில் படுத்திருப்பவனைப் போலவும் நீ இருப்பாய்.
35 “என்னை அடித்தார்கள், ஆனால் எனக்கு உறைக்கவில்லை.
என்னை உதைத்தார்கள், ஆனால் நான் உணரவில்லை.
நான் எப்போது எழுந்திருப்பேன்?[c]
நான் மறுபடியும் குடிக்க வேண்டும்!” என்று நீ சொல்வாய்.

24 அக்கிரமக்காரர்களைப் பார்த்துப் பொறாமைப்படாதே.
அவர்களோடு பழகுவதற்கு ஏங்காதே.[d]
2 ஏனென்றால், அவர்களுடைய உள்ளம் வன்முறையைப் பற்றியே யோசிக்கிறது.
அவர்களுடைய உதடுகள் தீமையைப் பற்றியே பேசுகின்றன.
3 வீடு* ஞானத்தால் கட்டப்படும்.[e]
பகுத்தறிவால் அது நிலைநிறுத்தப்படும்.
4 அறிவால் அதன் அறைகள் நிரப்பப்படும்.
எல்லாவித அருமையான பொக்கிஷங்களும் அவற்றில் குவித்து வைக்கப்படும்.[f]
5 ஞானமுள்ளவன் பலமுள்ளவன்.[g]
ஒருவன் தன் அறிவினால் அதிக பலம் அடைகிறான்.
6 திறமையான வழிநடத்துதல் இருந்தால் நீ போர் செய்ய முடியும்.[h]
ஆலோசகர்கள் நிறைய பேர் இருந்தால் வெற்றி நிச்சயம்.[i]
7 உண்மையான ஞானம் முட்டாளுக்கு எட்டவே எட்டாது.[j]
நகரவாசலில் சொல்வதற்கு அவனிடம் எதுவும் இருக்காது.
8 சதித்திட்டம் தீட்டுகிறவன்
மோசடி மன்னன் என்று அழைக்கப்படுவான்.[k]
9 முட்டாள்தனமான திட்டங்கள்* பாவம் நிறைந்தவை.
கேலி செய்கிறவனை மக்கள் அருவருக்கிறார்கள்.[l]
10 இக்கட்டில்* தவிக்கிற நாளில் நீ சோர்ந்துபோனால்,
உன் பலம் குறைந்துவிடும்.
11 சாகடிப்பதற்காகக் கொண்டுபோகப்படுகிற ஆட்களைக் காப்பாற்று.
கொல்லப்படுவதற்காக இழுத்துச் செல்லப்படுகிறவர்களை விடுவி.[m]

அதி. 23
a நீதி 20:1; எபே 5:18
b ஓசி 4:11
c ஆதி 19:33

அதி. 24
d சங் 26:5; நீதி 1:10
e நீதி 9:1; நீதி 14:1
f 1ரா 10:23; நீதி 15:6
g நீதி 8:14; நீதி 21:22
h நீதி 20:18; லூ 14:31, 32
i நீதி 11:14; நீதி 13:10; நீதி 15:22; அப் 15:5, 6
j நீதி 14:6; 1கொ 2:14
k நீதி 6:12-14
l நீதி 22:10
m சங் 82:4

23:30 *வே.வா., “கலப்புத் திராட்சமதுவை.” **24:3** *வே.வா., “குடும்பம்.” **24:9** *வே.வா., “முட்டாளின் திட்டங்கள்.” **24:10** *வே.வா., “வேதனையில்.”

12 “அதைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது” என்று நீ சொல்லலாம்.
ஆனால், இதயங்களை* ஆராய்கிறவருக்கு உன் இதயத்தில் இருப்பது தெரியாதா?[a]
உன்னைக் கவனித்துக்கொண்டிருப்பவர் எல்லாவற்றையும் தெரிந்துகொள்வாரே.
அவனவன் செயலுக்குத் தகுந்த கூலியை அவர் கொடுப்பாரே.[b]
13 என் மகனே, தேனைச் சாப்பிடு; அது நல்லது.
தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தேன் உன் வாய்க்குத் தித்திப்பாக இருக்கும்.
14 அதேபோல், ஞானம் உனக்கு நல்லது என்பதைத் தெரிந்துகொள்.[c]
அதை நீ தேடிக் கண்டுபிடித்தால், உன் எதிர்காலம் நன்றாக இருக்கும்.
உன் நம்பிக்கை வீண்போகாது.[d]
15 நீதிமானின் வீட்டுக்குப் பக்கத்தில் கெட்ட எண்ணத்தோடு பதுங்கியிருக்காதே.
அவன் குடியிருக்கும் இடத்தை அழிக்காதே.
16 நீதிமான் ஏழு தடவை விழுந்தாலும் மறுபடியும் எழுந்து நிற்பான்.[e]
ஆனால், பொல்லாதவன் பேராபத்தில் சிக்கி விழுந்துபோவது உறுதி.[f]
17 உன் எதிரி விழுந்தால் கைகொட்டிச் சிரிக்காதே.
அவனுக்கு அடிசறுக்கினால் உன் உள்ளத்தில் சந்தோஷப்படாதே.[g]
18 அப்படிச் செய்தால், யெகோவா அதைப் பார்த்து உன்மேல் வருத்தப்படுவார்.
அவன்மேல்* இருந்த கோபம் அவருக்குப் போய்விடும்.[h]
19 அக்கிரமக்காரர்களைப் பார்த்து எரிச்சல் அடையாதே.
பொல்லாதவர்களைப் பார்த்துப் பொறாமைப்படாதே.
20 அக்கிரமம் செய்கிறவனுக்கு எதிர்காலமே இல்லை.[i]
பொல்லாதவனின் விளக்கு அணைக்கப்படும்.[j]
21 என் மகனே, யெகோவாவுக்கும் ராஜாவுக்கும் பயப்படு.[k]
எதிர்ப்பு காட்டுகிறவர்களோடு* சேராதே.[l]
22 அவர்களுக்குத் திடீரென்று அழிவு வரும்.[m]
கடவுளும் ராஜாவும் அவர்களை எப்படித் தண்டிப்பார்கள் என்று யாருக்குத் தெரியும்?[n]
23 இவையும் ஞானமுள்ளவர்கள் கொடுத்த ஆலோசனைகள்:
தீர்ப்பு சொல்லும்போது பாரபட்சம் காட்டுவது நல்லதல்ல.[o]
24 குற்றவாளியைப் பார்த்து, “நீ நிரபராதி” என்று சொல்கிறவனை[p]
ஜனங்கள் சபிப்பார்கள், தேசங்கள் கண்டனம் செய்யும்.
25 ஆனால், அவனைக் கண்டிக்கிறவர்களுக்கு நல்லது நடக்கும்.[q]
அவர்களுக்கு அருமையான ஆசீர்வாதங்கள் வந்து சேரும்.[r]
26 நேர்மையாகப் பதில் சொல்கிறவனுக்கு மக்கள் முத்தம் கொடுப்பார்கள்.*[s]

24:12 *வே.வா., “உள்ளெண்ணங்களை.” 24:18 *அதாவது, “எதிரிமேல்.” 24:21 *வே.வா., “கலகக்காரர்களோடு.” 24:26 *அல்லது, “நேரடியாகப் பதில் சொல்வது முத்தம் கொடுப்பதுபோல் இருக்கிறது.”

அதி. 24
a நீதி 5:21, நீதி 17:3, நீதி 21:2
b சங் 62:12, மத் 16:27, ரோ 2:5, 6
c சங் 19:9, 10, சங் 119:103
d நீதி 23:18
e சங் 34:19, 2கொ 1:10
f 1சா 26:9, 10, எஸ்தர் 7:10
g யோபு 31:29, நீதி 17:5, நீதி 25:21, 22
h எசே 26:2, 3, சக 1:15
i சங் 73:18, 27, நீதி 10:7
j நீதி 13:9
k 1சா 24:6, 7, 1பே 2:17
l 2சா 15:12
m எண் 16:2, 31
n நீதி 20:2
o லேவி 19:15, உபா 1:16, 17, உபா 16:19, 2நா 19:7, 1தீ 5:21
p நீதி 17:15
q லேவி 19:17, 1தீ 5:20
r நீதி 28:23
s நீதி 27:5

27 உன் வெளிவேலையைத் திட்டமிடு, வயலில் செய்ய வேண்டியதைச் செய்துவிடு,
அதன் பிறகு உன் வீட்டை* கட்டு.
28 எந்த ஆதாரமும் இல்லாமல் அடுத்தவனுக்கு எதிராகச் சாட்சி சொல்லாதே.[a]
உன் வாயால் மற்றவர்களை ஏமாற்றாதே.[b]
29 "அவன் எனக்குச் செய்த மாதிரியே நானும் செய்வேன்;
பழிக்குப்பழி வாங்குவேன்" என்று சொல்லாதே.[c]
30 சோம்பேறியின்[d] வயல் வழியாக நான் போனேன்.
புத்தியில்லாதவனின் திராட்சைத் தோட்டம் பக்கமாகப் போனேன்.
31 அங்கே களைகள் மண்டிக் கிடந்தன.
முட்செடிகள் நிலத்தை மூடியிருந்தன,
கற்சுவரும் உடைந்து கிடந்தது.[e]
32 அதைப் பார்த்தபோது எனக்குக் கஷ்டமாகிவிட்டது.
அதையெல்லாம் பார்த்து இந்தப் பாடத்தைக் கற்றுக்கொண்டேன்:
33 "இன்னும் கொஞ்ச நேரம் தூங்க வேண்டும்,
இன்னும் கொஞ்ச நேரம் படுத்துக்கொள்ள வேண்டும்,
இன்னும் கொஞ்ச நேரம் கைகளை மடக்கி ஓய்வெடுக்க வேண்டும்" என்று சொன்னால்,
34 வறுமை கொள்ளைக்காரனைப் போலவும்,
ஏழ்மை ஆயுதமேந்தியவனைப் போலவும் உன்னிடம் வரும்.[f]

25 இவையும் சாலொமோனின் நீதிமொழிகள்;[g] இவற்றை யூதாவின் ராஜாவான எசேக்கியாவின்[h] ஆட்கள் தொகுத்து, நகலெடுத்தார்கள்:
2 எந்த விஷயத்தையும் ரகசியமாக வைப்பது கடவுளுக்கு மகிமை.[i]
எந்த விஷயத்தையும் தீர ஆராய்வது ராஜாவுக்குப் பெருமை.
3 வானத்தின் உயரத்தையும் பூமியின் ஆழத்தையும் தெரிந்துகொள்ள முடியாததுபோல்,
ராஜாவின் உள்ளத்தில் இருப்பதையும் புரிந்துகொள்ள முடியாது.
4 வெள்ளியில் இருக்கிற கசடை எடுத்துப்போடு.
அப்போது, அது சுத்தமான வெள்ளியாகப் பளபளக்கும்.[j]
5 ராஜாவின் முன்னாலிருந்து பொல்லாதவனைத் துரத்திவிடு.
அப்போது, அவருடைய சிம்மாசனம் நீதியால் உறுதியாக நிலைநிறுத்தப்படும்.[k]
6 ராஜாவுக்கு முன்னால் உன்னை உயர்த்தாதே.[l]
முக்கியப் பிரமுகர்களின் நடுவே உட்காராதே.[m]
7 ராஜா உன்னைப் பெரிய மனிதர்கள் முன்னால் அவமானப்படுத்துவதைவிட,
"இங்கே வந்து உட்கார்" என்று அவராகவே சொல்வதுதான் மேல்![n]
8 அவசரப்பட்டு ஒருவன்மேல் வழக்கு போடாதே.
உன்மேல் தப்பு இருப்பதாக அவன் நிரூபித்துவிட்டால் என்ன செய்வாய்?[o]

அதி. 24
a யாத் 20:16
b எபே 4:25
c நீதி 20:22, ரோ 12:17, 19, 1தெ 5:15
d நீதி 6:10, 11
e நீதி 20:4, நீதி 22:13, பிர 10:18
f நீதி 10:4, நீதி 23:21

அதி. 25
g 1ரா 4:29, 32, பிர 12:9
h 2நா 29:1
i உபா 29:29, ரோ 11:33
j நீதி 17:3
k 1ரா 2:44, 46, நீதி 20:28, நீதி 29:14
l நீதி 27:2
m சங் 131:1
n லூ 14:8-10, 1பே 5:5
o நீதி 18:17, மத் 5:25

24:27 * வே.வா., "குடும்பத்தை."

9 அதனால், பிரச்சினையை அவனோடு நேரடியாகப் பேசித்
தீர்த்துக்கொள்.[a]
ஆனால், அவன் உன்னிடம் சொன்ன ரகசியங்களை*
அம்பலப்படுத்தாதே.[b]
10 ஏனென்றால், நீ யாரிடம் ரகசியத்தைச் சொல்கிறாயோ அவனே
உன்னை அவமானப்படுத்திவிடுவான்.
நீ மோசமான விஷயத்தை* பரப்பிய பிறகு அதைத் திரும்பப் பெற
முடியாதே!
11 சரியான சமயத்தில் சொல்லும் வார்த்தை
வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட தங்க ஆப்பிள் பழங்களுக்குச் சமம்.[c]
12 ஒருவர் ஞானமாகக் கண்டிக்கும்போது அதை நீ காதுகொடுத்துக்
கேட்டால்,
அவர் உனக்குத் தங்கக் கம்மல் போலவும் சொக்கத்தங்கத்தில் செய்த
நகை போலவும் இருப்பார்.[d]
13 குளிர்ந்த பனி அறுவடை நாளில் புத்துணர்ச்சி தருவதுபோல்,
உண்மையுள்ள தூதுவனும் தன் எஜமானுக்குப் புத்துணர்ச்சி தருகிறான்.[e]
14 அன்பளிப்பு கொடுப்பதாகப் பெருமையடித்துவிட்டு அதைக்
கொடுக்காமல் இருக்கிறவன்,
மழை தராத மேகங்களையும் காற்றையும் போல இருக்கிறான்.[f]
15 பொறுமையால் அதிகாரியை வெல்லலாம்.
மென்மையான* நாவினால் எலும்பையும் நொறுக்கிவிடலாம்.[g]
16 நீ தேனைக் கண்டால், அதை அளவோடு சாப்பிடு.
அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால் வாந்தி எடுத்துவிடுவாய்.[h]
17 அடுத்தவன் வீட்டுக்கு அடிக்கடி போகாதே.
போனால், அவன் அலுத்துப்போய் உன்னை வெறுக்க
ஆரம்பித்துவிடுவான்.
18 அடுத்தவனுக்கு எதிராகப் பொய் சாட்சி சொல்கிறவன்
தடியையும்* வாளையும் கூர்மையான அம்பையும் போல் இருக்கிறான்.[i]
19 கஷ்ட காலங்களில் பொறுப்பில்லாதவனை* நம்புவது
உடைந்த பல்லையும் நொண்டுகிற காலையும் நம்புவதற்குச் சமம்.
20 சோகத்தில் வாடுகிறவனுக்கு முன்பாகப் பாட்டுப் பாடுகிறவன்,[j]
குளிர் காலத்தில் உடையைக் கழற்றுகிறவன் போலவும்,
சோடா உப்பின் மேல் ஊற்றப்படுகிற காடியைப் போலவும் இருக்கிறான்.
21 உன் எதிரி பசியாக இருந்தால் அவனுக்கு ஏதாவது சாப்பிடக் கொடு.
அவன் தாகமாக இருந்தால் அவனுக்கு ஏதாவது குடிக்கக் கொடு.[k]
22 இப்படிச் செய்யும்போது, நெருப்புத் தணலை அவன் தலைமேல்
குவிப்பாய்.*[l]
யெகோவா உனக்குப் பலன் கொடுப்பார்.

25:9 *வே.வா., "மற்றவர்களுடைய ரகசியங்களை." 25:10 *வே.வா., "வதந்தியை." 25:15 *வே.வா., "சாந்தமான." 25:18 *வே.வா., "தண்டாயுதத்தையும்." 25:19 *வே.வா., "நம்ப முடியாதவனை." அல்லது, "துரோகியை." 25:22 *அதாவது, ஒருவரைச் சாந்தப்படுத்தி, அவருடைய கல்நெஞ்சைக் கரைய வைப்பதைக் குறிக்கிறது.

அதி. 25
a மத் 18:15
b நீதி 11:13
c நீதி 15:23
ஏசா 50:4
d சங் 141:5
நீதி 1:8, 9
நீதி 9:8
e நீதி 13:17
f மத் 5:37
g ஆதி 32:4, 5
நீதி 15:1
h நீதி 25:27
i யாத் 20:16
j சங் 137:3, 4
k யாத் 23:5
2ரா 6:21, 22
நீதி 24:17
மத் 5:44
l ரோ 12:20

23 வடக்கிலிருந்து வீசுகிற காற்று கனமழையை வர வைக்கும்.
வம்பளக்கிற வாய் மற்றவர்களுக்குக் கோபத்தை வர வைக்கும்.[a]
24 சண்டைக்கார* மனைவியோடு வீட்டுக்குள் குடியிருப்பதைவிட,
கூரைக்கு மேலே ஒரு ஓரமாகத் தங்கியிருப்பதே மேல்.[b]
25 தூர தேசத்திலிருந்து வருகிற நல்ல செய்தி,
தாகத்தில் தவிப்பவனுக்குக் கிடைக்கிற குளிர்ந்த தண்ணீரைப் போல் இருக்கிறது.[c]
26 பொல்லாதவனுக்கு இணங்கிப்போகிற நீதிமான்,
கலங்கிய நீரூற்று போலவும் பாழடைந்த கிணறு போலவும் இருக்கிறான்.
27 அளவுக்கு அதிகமாகத் தேன் சாப்பிடுவது நல்லதல்ல.[d]
தனக்குத் தானே புகழ் தேடுவதும் புகழல்ல.[e]
28 கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாத மனிதன்,
மதில் இடிந்த நகரம்போல் இருக்கிறான்.[f]

26 கோடைக் காலத்துக்குப் பனியும், அறுவடைக் காலத்துக்கு மழையும் எப்படிப் பொருந்தாதோ,
அப்படித்தான் முட்டாளுக்கும் மதிப்பு மரியாதை பொருந்தாது.[g]
2 காரணமில்லாமல் பறவை தப்பிக்காது, தகைவிலான் குருவியும் பறந்து போகாது.
அதேபோல், காரணமில்லாமல் எந்தச் சாபமும் வராது.*
3 குதிரைக்குச் சாட்டையும் கழுதைக்குக் கடிவாளமும் தேவை.[h]
அதேபோல், முட்டாளின் முதுகுக்குப் பிரம்படி தேவை.[i]
4 முட்டாளுக்கு அவனுடைய முட்டாள்தனத்தின்படி பதில் சொல்லாதே.
நீ ஏன் அவன் அளவுக்கு இறங்கி வர வேண்டும்?*
5 முட்டாளுக்கு அவனுடைய முட்டாள்தனத்தின்படி பதில் சொல்.
அவன் ஏன் தன்னை ஞானி என்று நினைத்துக்கொள்ள வேண்டும்?[j]
6 முட்டாளை நம்பி ஒரு காரியத்தை ஒப்படைப்பதும்,
தன் காலையே முடமாக்கிக்கொண்டு தனக்கே கேடு செய்துகொள்வதும் ஒன்றுதான்.
7 முட்டாள் சொல்கிற பழமொழியும்[k]
கால் ஊனமானவனின் நொண்டிக் காலும்* ஒன்றுதான்.
8 கவணில் கல்லைக் கட்டுவதும்
முட்டாளைப் புகழ்வதும் ஒன்றுதான்.[l]
9 முட்டாள் சொல்கிற பழமொழியும்
குடிகாரன் கையில் இருக்கிற முட்செடியும் ஒன்றுதான்.
10 முட்டாளையோ முன்பின் தெரியாதவனையோ கூலிக்கு வைக்கிறவனும்,
கண்மூடித்தனமாக அம்பு எறிந்து மற்றவர்களை* காயப்படுத்துகிறவனும் ஒன்றுதான்.

அதி. 25
a சங் 101:5
b நீதி 21:9, 19; நீதி 27:15
c நீதி 15:30; ஏசா 52:7
d நீதி 25:16
e நீதி 27:2; யோவா 5:44; பிலி 2:3
f 1சா 20:33; நீதி 16:32; நீதி 22:24, 25; நீதி 29:11

அதி. 26
g நீதி 30:21, 22; பிர 10:7
h சங் 32:9
i நீதி 27:22
j மத் 21:23-25
k நீதி 17:7
l நீதி 19:10; நீதி 26:1

25:24 *வே.வா., "நச்சரிக்கிற." **26:2** *அல்லது, "காரணமில்லாமல் விடுகிற சாபம் பலிக்காது." **26:4** *வே.வா., "நீ ஏன் அவனுக்குச் சமமாய் ஆக வேண்டும்?" **26:7** *வே.வா., "தள்ளாடுகிற காலும்." **26:10** *வே.வா., "எல்லாரையும்."

11 நாய் தான் கக்கியதையே திரும்பப் போய்த் தின்பதுபோல்,
முட்டாளும் தான் செய்த முட்டாள்தனத்தையே திரும்பவும்
செய்கிறான்.[a]
12 தன்னை ஞானியாக நினைத்துக்கொள்கிறவனைப் பார்த்திருக்கிறாயா?[b]
அவனைவிட முட்டாளுக்கு அதிக நம்பிக்கை உண்டு.
13 "வெளியில் ஒரு இளம் சிங்கம் சுற்றுகிறது,
தெருவில் ஒரு பெரிய சிங்கம் அலைகிறது!" என்று சோம்பேறி
சொல்கிறான்.[c]
14 கீலில்* கதவு ஆடிக்கொண்டே இருப்பதுபோல்,
சோம்பேறியும் கட்டிலில் புரண்டுகொண்டே இருப்பான்.[d]
15 சோம்பேறி பாத்திரத்துக்குள் கை விடுவான்,
ஆனால் சாப்பாட்டை வாய்வரை கொண்டுபோகக்கூட
சோம்பல்படுவான்.[e]
16 புத்திசாலித்தனமாகப் பதில் சொல்கிற ஏழு பேரைவிட,
தானே ஞானி என்று சோம்பேறி நினைத்துக்கொள்கிறான்.
17 வழியிலே யாரோ சண்டை போடுவதைப் பார்த்து ஆவேசப்படுவதும்,*
நாயின் காதுகளைப் பிடிப்பதும் ஒன்றுதான்.[f]
18 தீ பறக்கும் ஆயுதங்களையும் கொடிய* அம்புகளையும் எறிகிற
பைத்தியக்காரனைப் போலத்தான்,
19 அடுத்தவனை ஏமாற்றிவிட்டு, "விளையாட்டுக்காகச் செய்தேன்!" என்று
சொல்கிறவனும் இருக்கிறான்.[g]
20 விறகு இல்லையென்றால் நெருப்பு அணைந்துவிடும்.
இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவன் இல்லையென்றால்
சண்டை சச்சரவுகள் அடங்கிவிடும்.[h]
21 கரியும் விறகும் நெருப்பை மூட்டிவிடுவதுபோல்,
சண்டைக்காரன் வாக்குவாதங்களை மூட்டிவிடுகிறான்.[i]
22 இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவனின் வார்த்தைகள்
சிலருக்கு ருசியான உணவு* போல் இருக்கின்றன.
அதை அவர்கள் ஆசை ஆசையாக விழுங்குகிறார்கள்.[j]
23 உள்ளத்தில் பகையும் உதட்டில் பாசமும் காட்டுகிறவன்
வெள்ளி முலாம் பூசப்பட்ட மண் ஓடுபோல் இருக்கிறான்.[k]
24 ஒருவன் இனிக்க இனிக்கப் பேசி தன் பகையை மூடி மறைக்கிறான்.
ஆனால், உள்ளத்தில் வஞ்சனையை வளர்க்கிறான்.
25 அவன் தேனொழுகப் பேசினாலும் நம்பிவிடாதே.
ஏனென்றால், அருவருப்பான ஏழு விஷயங்கள் அவன் உள்ளத்தில்
இருக்கின்றன.*
26 என்னதான் நயவஞ்சகமாக அவன் தன் பகையை மறைத்தாலும்,
அவனுடைய கெட்ட எண்ணம் சபையில் வெட்டவெளிச்சமாகும்.

26:14 *கீல் என்பது கதவைத் திறந்து மூடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் உலோகப் பட்டை. **26:17** *அல்லது, "தேவையில்லாமல் தலையிடுவதும்." **26:18** *வே.வா., "உயிரைப் பறிக்கும்." **26:22** *வே.வா., "பேராசையோடு விழுங்குகிற உணவு." **26:25** *வே.வா., "ஏனென்றால், அவனுடைய உள்ளம் முழுவதும் அருவருப்பானது."

அதி. 26
a 2பே 2:22
b நீதி 12:15; 1கொ 3:18; 1கொ 8:2
c நீதி 22:13
d நீதி 6:9; நீதி 19:15; நீதி 24:33, 34
e நீதி 19:24
f 1தெ 4:11; 1பே 4:15
g நீதி 15:21
h நீதி 22:10; யாக் 3:6
i நீதி 3:30; நீதி 16:28; நீதி 17:14
j நீதி 18:8
k 2சா 20:9, 10

27 ஒருவன் குழி வெட்டினால் அவனே அந்தக் குழியில் விழுவான்.
ஒருவன் கல்லை உருட்டிவிட்டால் அவன் மேலேயே அது
உருண்டு விழும்.[a]
28 பொய் பேசுகிற நாவு, தான் புண்படுத்தியவர்களை வெறுக்கிறது.
பொய்யாகப் புகழ்கிற வாய், அழிவை உண்டாக்குகிறது.[b]

27

நாளைக்குச் செய்யப்போவதைப் பற்றிப் பெருமையாகப் பேசாதே,
நாளைக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்?[c]
2 உன்னை நீயே புகழாதே, இன்னொருவன் உன்னைப் புகழட்டும்.
உன் உதடுகள் அல்ல, மற்றவர்களுடைய உதடுகளே உன்னை
மெச்சட்டும்.[d]
3 கல்லும் பாரம், மணலும் பாரம்.
ஆனால், முட்டாளினால் ஏற்படும் எரிச்சல் அதைவிட பாரம்.[e]
4 ஆவேசம் கொடூரமானது, கோபம் வெள்ளப்பெருக்குபோல்
பயங்கரமானது.
ஆனால், பொறாமை இதையெல்லாம்விட படுமோசமானது.[f]
5 வெளிப்படையாகக் கண்டிப்பதே மறைத்து வைக்கப்படும் அன்பைவிட
மேலானது.[g]
6 நண்பன் உண்மையுள்ளவனாக இருப்பதால் காயங்களை
ஏற்படுத்துகிறான்.[h]
ஆனால், எதிரி ஏராளமான* முத்தங்களைக் கொடுக்கிறான்.
7 திருப்தியாகச் சாப்பிட்டவனுக்குத் தேன்கூட்டிலிருந்து ஒழுகும்
தேன்கூட கசக்கும்.
ஆனால், பசியில் வாடுகிறவனுக்குக் கசப்பானதுகூட இனிக்கும்.
8 வீட்டைவிட்டு அலைந்து திரிகிற மனிதனும்
கூட்டைவிட்டுப் பறந்து திரிகிற பறவையும் ஒன்றுதான்.
9 அக்கறையோடு ஆலோசனை தருகிறவருடைய இனிய நட்பு,
எண்ணெயையும் தூபப்பொருளையும் போலவே இதயத்துக்குச்
சந்தோஷம் தரும்.[i]
10 உன் நண்பனையோ உன் அப்பாவின் நண்பனையோ அலட்சியம்
செய்யாதே,
ஆபத்து நாளில் உன் சகோதரனுடைய வீட்டுக்குப் போகாதே.
தூரத்தில் இருக்கிற சகோதரனைவிட பக்கத்தில் இருக்கிற
நண்பனே மேல்.[j]
11 என் மகனே, ஞானமாக நடந்து என் இதயத்தைச் சந்தோஷப்படுத்து.[k]
அப்போதுதான், என்னைப் பழித்துப் பேசுகிறவனுக்கு* என்னால்
பதிலடி கொடுக்க முடியும்.[l]
12 சாமர்த்தியசாலி ஆபத்தைப் பார்த்து மறைந்துகொள்கிறான்.[m]
ஆனால், அனுபவமில்லாதவன் நேராகப் போய் மாட்டிக்கொண்டு
அவதிப்படுகிறான்.*

27:6 * அல்லது, “போலியான.” 27:11 * வே.வா., “எனக்குச் சவால் விடுகிறவனுக்கு.”
27:12 * வே.வா., “அதன் விளைவுகளை அனுபவிக்கிறான்.”

அதி. 26
a எஸ்தர் 7:10, சங் 9:15, நீதி 28:10, பிர 10:8
b நீதி 29:5

அதி. 27
c லூ 12:19, 20, யாக் 4:13, 14
d நீதி 25:27, எரே 9:23, 2கொ 10:18
e 1சா 25:25
f ஆதி 37:9-11, நீதி 14:30, அப் 17:5
g லேவி 19:17, மத் 18:15
h 2சா 12:7, 9, சங் 141:5, வெளி 3:19
i 1சா 23:16, நீதி 15:23, நீதி 16:24
j நீதி 17:17, நீதி 18:24
k நீதி 10:1, நீதி 23:15, 2யோ 4
l யோபு 1:8, 9
m நீதி 18:10, ஏசா 26:20, எபி 11:7

13 ஒருவன் முன்பின் தெரியாதவரின் கடனுக்குப் பொறுப்பேற்றிருந்தால்,
அவனுடைய அங்கியை எடுத்துக்கொள்.
அன்னியப் பெண்ணுக்காக* அவன் அப்படிச் செய்திருந்தால்,
அவனிடம் அடமானம் வாங்காமல் விடாதே.[a]
14 ஒருவன் விடியற்காலையிலே சத்தமான குரலில் யாரையாவது
ஆசீர்வதித்தால்,
அது சாபமாகத்தான் கருதப்படும்.
15 சண்டைக்கார* மனைவி மழை நாளில் ஒழுகிக்கொண்டே இருக்கிற
கூரைபோல் இருக்கிறாள்.[b]
16 அவளை அடக்குவதைவிட காற்றை அடக்கிவிடலாம்,
எண்ணெயையும் வலது கையில் பிடித்துக்கொள்ளலாம்.
17 இரும்பை இரும்பு கூர்மையாக்குவது போல,
நண்பனை நண்பன் கூர்மையாக்குகிறான்.[c]
18 அத்தி மரத்தைக் கவனித்துக்கொள்பவன் அதன் பழத்தைச்
சாப்பிடுவான்.[d]
எஜமானைக் கவனித்துக்கொள்பவன் மதிப்பு மரியாதையைச்
சம்பாதிப்பான்.[e]
19 தண்ணீர் ஒருவனின் முகத்தைப் பிரதிபலிப்பதுபோல்,
ஒருவனின் இதயம் இன்னொருவனின் இதயத்தைப் பிரதிபலிக்கிறது.
20 கல்லறையும் புதைகுழியும் ஒருபோதும் திருப்தி அடையாது.[f]
அதேபோல், மனிதனுடைய கண்களும் ஒருபோதும் திருப்தி
அடையாது.
21 வெள்ளியைப் புடமிடுவது பானை, தங்கத்தைப் புடமிடுவது உலை,[g]
அதுபோல் ஒருவனைச் சோதிப்பது புகழ்ச்சி.
22 தானியத்தை உரலில் போட்டு இடித்து நொறுக்குவது போல,
முட்டாளை உலக்கையால் இடித்து நொறுக்கினாலும்,
அவனுடைய முட்டாள்தனம் அவனைவிட்டுப் போகாது.
23 உன் மந்தையின் நிலைமையை நீ நன்றாகத் தெரிந்து வைத்திருக்க
வேண்டும்.
உன் ஆடுகள் ஒவ்வொன்றையும் அக்கறையோடு கவனித்துக்கொள்.*[h]
24 சொத்து என்றென்றும் நிலைக்காது.[i]
கிரீடம் எல்லா தலைமுறைக்கும் நிலைக்காது.
25 பசும்புல் வாடிவிடும், புதிதாகப் புல் முளைக்கும்,
மலைகளிலுள்ள புல்பூண்டுகள் சேகரிக்கப்படும்.
26 செம்மறியாட்டுக் கடாக் குட்டிகள் உனக்கு உடையைத் தரும்.
வெள்ளாட்டுக் கடாக்கள் உனக்கு வயலை வாங்கித் தரும்.
27 வெள்ளாடுகள் உனக்கும் உன் குடும்பத்துக்கும் போதுமான அளவு
பால் கொடுக்கும்.
அதனால் உன் வேலைக்காரிகளும் பிழைப்பார்கள்.

27:13 *வே.வா., “வேறு தேசத்தைச் சேர்ந்தவருக்காக.” **27:15** *வே.வா., “நச்சரிக்கிற.” **27:23** *வே.வா., “கண்ணும் கருத்துமாகக் கவனித்துக்கொள்; உன் ஆடுகளுக்குக் கவனம் செலுத்து.”

அதி. 27
a நீதி 20:16
b நீதி 21:9, 19
c 1சா 23:16; எபி 10:24, 25
d நீதி 13:4
e ஆதி 39:2; நீதி 17:2
f நீதி 30:15, 16
g நீதி 17:3
h கொலோ 3:23
i நீதி 23:4, 5; 1தீ 6:17

அதி. 28
a தானி 3:16, 17 அப் 4:13
b 1ரா 16:8, 15 1ரா 16:22
c தானி 4:27
d நீதி 14:31
e எண் 25:6-8 1சா 15:22, 23 எபே 5:11
f சங் 25:14 மாற் 4:11, 12 யாக் 1:5
g நீதி 16:8 நீதி 19:1
h நீதி 23:20 1கொ 15:33
i உபா 23:19
j நீதி 13:22 நீதி 19:17
k சங் 66:18 நீதி 15:29 ஏசா 1:15
l சங் 7:14-16
m உபா 7:12 சங் 37:11, 18 சங் 84:11
n நீதி 18:11
o மாற் 10:21
p 1ரா 17:1-3 நீதி 29:2
q 1சா 15:13-15
r 2சா 12:13 2நா 33:12, 13 சங் 32:3, 5 சங் 51:1
s யாத் 7:22 நெ 9:29 நீதி 29:1 எரே 16:12, 13

28 யாரும் துரத்தாமலேயே பொல்லாதவர்கள் தலைதெறிக்க ஓடுகிறார்கள்.
ஆனால், நீதிமான்கள் சிங்கத்தைப் போலத் தைரியமாக நிற்கிறார்கள்.[a]
2 மக்கள் கலகம் செய்தால்* ராஜாக்கள் மாறிக்கொண்டே இருப்பார்கள்.[b]
ஆனால், பகுத்தறியும் திறனும் அறிவும் உள்ளவரின் உதவி இருந்தால் ராஜா நீண்ட காலம் நிலைத்திருப்பார்.[c]
3 எளியவனை மோசடி செய்கிற ஏழை,[d]
விளைச்சலையெல்லாம் அடித்துக்கொண்டு போகிற மழைபோல் இருக்கிறான்.
4 சட்டத்தை ஒதுக்கித்தள்ளுகிறவர்கள் பொல்லாதவனைப் புகழ்கிறார்கள்.
ஆனால், சட்டத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள் அவர்களைப் பார்த்துக் கொதிப்படைகிறார்கள்.[e]
5 அக்கிரமக்காரர்களால் நீதி நியாயத்தைப் புரிந்துகொள்ள முடியாது.
ஆனால், யெகோவாவைத் தேடுகிறவர்களால் எல்லாவற்றையும் புரிந்துகொள்ள முடியும்.[f]
6 குறுக்கு வழிகளில் போகிற பணக்காரனைவிட,
உத்தமமாக நடக்கிற ஏழையே மேல்.[g]
7 புத்தியுள்ள* மகன் சட்டத்தைக் கடைப்பிடிக்கிறான்,
ஆனால், பெருந்தீனிக்காரர்களோடு பழகுகிறவன் தன் அப்பாவுக்கு அவமானத்தைக் கொண்டுவருகிறான்.[h]
8 வட்டி வாங்கியும்[i] அநியாயமாக லாபம் சம்பாதித்தும் சேர்க்கப்படுகிற சொத்து,
ஏழைக்கு இரக்கம் காட்டுகிற மனிதனுக்குத்தான் போய்ச் சேரும்.[j]
9 ஒருவன் சட்டத்தைக் கேட்க விரும்பாவிட்டால்,
அவனுடைய ஜெபம் அருவருப்பானதாக இருக்கும்.[k]
10 நேர்மையானவனைக் கெட்ட வழியில் கொண்டுபோகிறவன், தான் வெட்டிய குழியிலேயே விழுவான்.[l]
ஆனால், குற்றமற்றவன் நல்ல பலனைப் பெறுவான்.[m]
11 பணக்காரன் தனக்கு ஞானம் இருப்பதாக நினைத்துக்கொள்கிறான்.[n]
ஆனால் பகுத்தறிவுள்ள ஏழை, அவனைச் சரியாக எடைபோடுகிறான்.[o]
12 நீதிமான்கள் வெற்றி பெற்றால் மகா கொண்டாட்டமாக இருக்கும்.
ஆனால், பொல்லாதவர்கள் ஆட்சிக்கு வந்தால் ஜனங்கள் ஓடி ஒளிந்துகொள்வார்கள்.[p]
13 ஒருவன் தன்னுடைய குற்றங்களை மறைக்கப் பார்த்தால், அவன் நினைத்தது நடக்காது.[q]
ஆனால், குற்றங்களை ஒத்துக்கொண்டு திரும்பவும் செய்யாமல் இருப்பவன் இரக்கம் பெறுவான்.[r]
14 எப்போதும் கவனமாக* நடந்துகொள்கிறவன் சந்தோஷமானவன்.
ஆனால், தன் இதயத்தை இறுகிப்போகச் செய்பவன் ஆபத்தில் சிக்கிக்கொள்வான்.[s]

28:2 *வே.வா., "சட்டவிரோதமாக நடந்தால்." **28:7** *வே.வா., "புரிந்துகொள்ளுதல் உள்ள." **28:14** *வே.வா., "பயத்தோடு."

15 ஆதரவற்ற மக்களை ஆட்சி செய்கிற பொல்லாத ராஜா,
கர்ஜிக்கிற சிங்கத்தைப் போலவும் தாக்க வருகிற கரடியைப் போலவும்
இருக்கிறான்.[a]
16 பகுத்தறிவு இல்லாத தலைவன் தன் அதிகாரத்தைத் தவறாகப்
பயன்படுத்துகிறான்.[b]
ஆனால், அநியாயமாக லாபம் சம்பாதிப்பதை வெறுக்கிறவன் நீண்ட
காலம் வாழ்வான்.[c]
17 கொலைப்பழியை* சுமக்கிறவன் கல்லறைக்குப் போகும்வரை பயந்து
பயந்து ஓடிக்கொண்டிருப்பான்.[d]
அவனுக்கு யாரும் ஆதரவு தர வேண்டாம்.
18 குற்றமற்ற வழியில் நடக்கிறவன் காப்பாற்றப்படுவான்.[e]
ஆனால், குறுக்கு வழிகளில் நடக்கிறவன் திடீரென்று
விழுந்துவிடுவான்.[f]
19 நிலத்தை உழுகிறவனுக்கு உணவுப் பஞ்சமே வராது.
ஆனால், வீணான காரியங்களைச் செய்கிறவனுக்கு
வறுமைதான் வரும்.[g]
20 உண்மையாக நடக்கிறவன் நிறைய ஆசீர்வாதங்களைப் பெறுவான்.[h]
ஆனால், சீக்கிரத்தில் பணக்காரனாக நினைக்கிறவன் குறுக்கு வழியில்
போய்விடுவான்.[i]
21 பாரபட்சம் காட்டுவது நல்லதல்ல.[j]
ஆனால், ஒரு துண்டு ரொட்டிக்காகக்கூட ஒருவன் தவறு
செய்துவிடலாம்.
22 பொறாமைபிடித்தவன்* சொத்து சேர்ப்பதில் வெறியாக இருக்கிறான்.
ஆனால், வறுமை அவனைத் துரத்திப் பிடித்துவிடுமென்று தெரியாமல்
இருக்கிறான்.
23 போலியாகப் புகழ்கிறவனைவிட
வெளிப்படையாகக் கண்டிக்கிறவனைத்தான்[k] ஒருவன் பிற்பாடு
பாராட்டுவான்.[l]
24 அப்பாவிடமும் அம்மாவிடமும் திருடிவிட்டு, “இது ஒன்றும்
தப்பில்லை” என்று சொல்கிறவன்,
நாசம் உண்டாக்குகிறவனுக்குக் கூட்டாளியாக இருக்கிறான்.[m]
25 பேராசைபிடித்தவன்* வாக்குவாதங்களை உண்டாக்குகிறான்.
ஆனால், யெகோவாவை நம்புகிறவன் செழிப்பாக வாழ்வான்.[n]
26 தன்னுடைய இதயத்தையே நம்புகிறவன் முட்டாள்.[o]
ஆனால், ஞானமாக நடக்கிறவன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வான்.[p]
27 ஏழைகளுக்குக் கொடுத்து உதவுகிறவனுக்கு ஒரு குறையும் வராது.[q]
ஆனால், அவர்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறவனுக்கு
நிறைய சாபங்கள் வரும்.
28 பொல்லாதவர்கள் ஆட்சிக்கு வந்தால் ஒருவன் ஒளிந்துகொள்வான்.
ஆனால், அவர்கள் அழிந்துபோனால் நீதிமான்கள் பெருகுவார்கள்.[r]

28:17 * வே.வா., “இரத்தப்பழியை.” **28:22** * வே.வா., “பேராசைபிடித்தவன்.” **28:25** * அல்லது, “அகம்பாவம்பிடித்தவன்.”

அதி. 28
a செப் 3:3; மத் 2:16
b நெ 5:15; ஆமோ 4:1
c ஏசா 33:15, 16
d ஆதி 9:6; 1ரா 21:19; மத் 27:3-5
e சங் 25:21
f சங் 73:12, 18; 1தெ 5:3; வெளி 3:3
g நீதி 23:21; லூ 15:13, 14
h 1சா 18:5; நெ 7:2; சங் 101:6
i 2ரா 5:20-22; எரே 17:11; 1தீ 6:9
j லேவி 19:15; நீதி 18:5; யாக் 2:1
k 2சா 12:7, 9; கலா 2:11
l சங் 141:5; நீதி 27:6
m நீதி 19:26; மாற் 7:10, 11
n 1ரா 3:11-13
o நீதி 3:5; எரே 17:9
p யோபு 28:28
q உபா 15:7, 10; சங் 41:1; நீதி 19:17; எபி 13:16
r எஸ்தர் 8:17

29 பல தடவை கண்டித்த பிறகும் முரட்டுப் பிடிவாதம் பிடிக்கிறவன்,[a]
திடீரென்று நொறுக்கப்படுவான், அவனால் மீண்டுவரவே
முடியாது.[b]
2 நீதிமான்கள் பெருகும்போது ஜனங்கள் சந்தோஷப்படுவார்கள்.
ஆனால், அக்கிரமக்காரன் ஆட்சி செய்யும்போது மக்கள்
வேதனையில் குமுறுவார்கள்.[c]
3 ஞானத்தை விரும்புகிறவன் தன்னுடைய அப்பாவின் மனதைச்
சந்தோஷப்படுத்துகிறான்.[d]
ஆனால், விபச்சாரிகளிடம் போகிறவன் தன் சொத்தை வீணடிக்கிறான்.[e]
4 அரசன் நியாயமாக நடந்தால் தேசம் நிலைநிற்கும்.[f]
ஆனால், லஞ்சம் வாங்க விரும்புகிறவனால் அது சீரழியும்.
5 அடுத்தவனைப் போலியாகப் புகழ்கிறவன்
அவனுடைய கால்களுக்கு வலை விரிக்கிறான்.[g]
6 கெட்டவன் செய்கிற குற்றமே அவனுக்குக் கண்ணியாகிவிடுகிறது.[h]
ஆனால், நீதிமான் சந்தோஷத்தில் ஆரவாரம் செய்கிறான்.[i]
7 ஏழைகளின் சட்டப்பூர்வ உரிமைகள்மேல் நீதிமான் அக்கறை
காட்டுகிறான்.[j]
ஆனால், பொல்லாதவன் அப்படிப்பட்ட அக்கறையைக் காட்டுவதே
இல்லை.[k]
8 பெருமையடிக்கிறவர்கள் கோபத் தீயை ஊருக்குள் கிளறிவிடுகிறார்கள்.[l]
ஆனால், ஞானமாக நடக்கிறவர்கள் அதைத் தணிக்கிறார்கள்.[m]
9 ஞானமுள்ளவன் முட்டாளோடு வழக்காடுவது வீண்.
முட்டாளின் கூச்சலையும் கிண்டலையும்தான் அவன் கேட்க
வேண்டியிருக்கும்.[n]
10 இரத்தவெறி பிடித்தவர்கள் அப்பாவிகளை* வெறுக்கிறார்கள்.[o]
நேர்மையானவர்களின் உயிரைப் பறிக்க அவர்கள் வழி
தேடுகிறார்கள்.#
11 முட்டாள் தன்னுடைய உணர்ச்சிகளையெல்லாம் கொட்டித்
தீர்த்துவிடுகிறான்.[p]
ஆனால், ஞானமுள்ளவன் தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு
அமைதியாக இருக்கிறான்.[q]
12 ஆட்சி செய்கிறவன் பொய்யான விஷயங்களைக் காதுகொடுத்துக்
கேட்டால்,
அவனுடைய ஊழியர்கள் எல்லாரும் பொல்லாதவர்களாக
இருப்பார்கள்.*[r]
13 ஏழைக்கும் அடக்கி ஒடுக்குகிறவனுக்கும் பொதுவான ஒரு விஷயம்
இருக்கிறது.
அவர்கள் இரண்டு பேருடைய கண்களுக்கும் யெகோவாதான்
வெளிச்சம் கொடுக்கிறார்.*

அதி. 29
a யாத் 11:10 2நா 36:11-13
b 1சா 2:22-25 2நா 36:15, 16
c எஸ்தர் 3:13, 15
d நீதி 27:11
e நீதி 5:8-10 நீதி 6:26 லூ 15:13, 14
f 2சா 8:15 சங் 89:14 ஏசா 9:7
g நீதி 26:28 ரோ 16:18
h நீதி 5:22
i சங் 97:11
j சங் 41:1
k எரே 5:28
l யாக் 3:6
m அப் 19:29, 35
n நீதி 26:4
o ஆதி 27:41 1சா 20:31 1யோ 3:11, 12
p நீதி 12:16 நீதி 25:28
q நீதி 14:29
r 1ரா 21:8-11 எரே 38:4, 5

29:10 * வே.வா., “குற்றமற்றவர்களை.” # அல்லது, “நேர்மையானவர்களோ தங்களுடைய உயிரைக் காப்பாற்ற முயற்சி செய்கிறார்கள்.” **29:12** * வே.வா., “ஆகிவிடுவார்கள்.” **29:13** * அதாவது, “யெகோவா அவர்களுக்கு உயிர் கொடுக்கிறார்.”

14 ஒரு ராஜா ஏழைகளுக்கு நீதி வழங்கினால்,[a]
அவருடைய சிம்மாசனம் என்றென்றும் நிலைத்திருக்கும்.[b]
15 பிரம்பும்* கண்டிப்பும் ஞானத்தைப் புகட்டும்.[c]
ஆனால், பிள்ளையை அவனுடைய இஷ்டத்துக்கு விட்டுவிட்டால்
அம்மாவுக்கு அவமானம்தான் வரும்.
16 பொல்லாதவர்கள் பெருகினால் குற்றங்களும் பெருகும்.
ஆனால், அவர்களுடைய வீழ்ச்சியை நீதிமான்கள் பார்ப்பார்கள்.[d]
17 உன் மகனைக் கண்டித்து வளர்த்தால் உனக்கு நிம்மதி கிடைக்கும்.
அவனால் அளவில்லாத சந்தோஷமும் கிடைக்கும்.[e]
18 கடவுளுடைய வழிநடத்துதல்* இல்லாவிட்டால் மக்கள் மனம்போன
போக்கில் போவார்கள்.[f]
ஆனால், கடவுளுடைய சட்டத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள்
சந்தோஷமானவர்கள்.[g]
19 வெறும் வார்த்தைகளால் வேலைக்காரன் திருந்த மாட்டான்.
அவற்றைப் புரிந்துகொண்டாலும் அவன் கீழ்ப்படிய மாட்டான்.[h]
20 அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டுகிறவனைப்
பார்த்திருக்கிறாயா?[i]
அவனைவிட முட்டாளுக்கு அதிக நம்பிக்கை உண்டு.[j]
21 வேலைக்காரனுக்குச் சின்ன வயதிலிருந்தே செல்லம் கொடுத்துவந்தால்,
பிற்பாடு நன்றிகெட்டவனாக ஆகிவிடுவான்.
22 கோபக்காரன்* சண்டையைக் கிளப்புகிறான்.[k]
ஆவேசப்படுகிறவன்# நிறைய குற்றங்களைச் செய்துவிடுகிறான்.[l]
23 மனிதனுடைய தலைக்கனம் அவனைத் தாழ்த்தும்.[m]
ஆனால், மனத்தாழ்மை மகிமையைத் தேடித்தரும்.[n]
24 திருடனுடைய கூட்டாளி தன்னையே வெறுக்கிறான்.
குற்றத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற அறிவிப்பைக் கேட்டும்,
அவன் தெரிவிக்காமல் இருந்துவிடுகிறான்.[o]
25 மனிதனைப் பார்த்து நடுங்குகிறவன் கண்ணியில் மாட்டிக்கொள்கிறான்.[p]
ஆனால், யெகோவாமேல் நம்பிக்கையாக இருக்கிறவன்
பாதுகாக்கப்படுவான்.[q]
26 அரசனைச் சந்தித்து நீதி கேட்க* நிறைய பேர் ஆசைப்படுகிறார்கள்.
ஆனால், யெகோவாதான் ஒருவனுக்கு நியாயம் வழங்குகிறார்.[r]
27 அநியாயம் செய்கிறவனை நீதிமான் அருவருக்கிறான்.[s]
ஆனால், நேர்மையாக நடக்கிறவனைப் பொல்லாதவன்
அருவருக்கிறான்.[t]

30 யாக்கே என்பவரின் மகன் ஆகூர், இத்தியேலுக்கும் ஊகாலுக்கும்
சொன்ன முக்கியமான விஷயங்கள்.
2 மற்ற யாரையும்விட நான்தான் எதுவும் தெரியாதவனாக இருக்கிறேன்.[u]

29:15 *வே.வா., "புத்திமதியும்; தண்டனையும்." **29:18** *வே.வா., "தரிசனம்; வெளிப்படுத்துதல்." **29:22** *வே.வா., "கோபப்படும் சுபாவமுள்ளவன்." #வே.வா., "ஆவேசப்படும் சுபாவமுள்ளவன்." **29:26** *அல்லது, "அரசனின் தயவைப் பெற."

அதி. 29
a சங் 72:1, 2
b நீதி 20:28 நீதி 25:5 ஏசா 9:7
c நீதி 22:6 நீதி 22:15 நீதி 23:13 எபே 6:4
d சங் 37:34 வெளி 18:20
e எபி 12:11
f ஓசி 4:6
g நீதி 19:16 யோவா 13:17 யாக் 1:25
h நீதி 26:3
i பிர 5:2 யாக் 1:19
j நீதி 14:29 நீதி 21:5
k நீதி 15:18
l 1சா 18:8, 9 யாக் 3:16
m எஸ்தர் 6:6, 10 யாக் 4:6
n நீதி 18:12 மத் 18:4 பிலி 2:8, 9
o லேவி 5:1
p மத் 10:28 மத் 26:75
q 2நா 14:11 நீதி 18:10
r சங் 62:12 லூ 18:6, 7
s சங் 119:115 சங் 139:21
t யோவா 7:7 1யோ 3:13

அதி. 30
u யோபு 42:3

மனிதர்களுக்கு இருக்க வேண்டிய புத்தி* எனக்கு இல்லை.
3 நான் ஞானத்தைக் கற்றுக்கொள்ளவில்லை.
மகா பரிசுத்தமானவரைப் பற்றிய அறிவு எனக்கு இல்லை.
4 வானத்துக்கு ஏறி இறங்கியவர் யார்?[a]
காற்றைத் தன் இரண்டு கைகளிலும் பிடித்தவர் யார்?
தண்ணீரைத் தன் உடையில் கட்டிவைத்தவர் யார்?[b]
பூமியின் எல்லைகளையெல்லாம் குறித்தவர் யார்?[c]
அவருடைய பெயர் என்ன? அவருடைய மகனின் பெயர் என்ன?
உனக்குத் தெரியுமா?
5 கடவுளுடைய ஒவ்வொரு வார்த்தையும் புடமிடப்பட்டது.[d]
அவரிடம் தஞ்சம் புகுந்தவர்களுக்கு அவர் ஒரு கேடயம்.[e]
6 அவருடைய வார்த்தைகளோடு ஒன்றையும் சேர்க்காதே.[f]
அப்படிச் சேர்த்தால் அவர் உன்னைக் கண்டிப்பார்.
நீ ஒரு பொய்யன் என்பது நிரூபணமாகும்.
7 கடவுளே, நான் உயிரோடு இருக்கும் காலமெல்லாம்
எனக்காக இரண்டு காரியங்களை நீங்கள் செய்ய வேண்டும்.
8 பொய் புரட்டை என்னைவிட்டுத் தூரமாக நீக்கிவிடுங்கள்.[g]
எனக்கு வறுமையையோ அதிக செல்வத்தையோ கொடுக்காமல்,
தேவையான அளவு உணவு மட்டும் கொடுங்கள்.[h]
9 ஏனென்றால், எல்லா வசதிகளும் கிடைத்த திருப்தியில், “யார் அந்த
யெகோவா?” என்று நான் கேட்டுவிடக் கூடாது.[i]
அதேபோல், வறுமையால் திருடனாக மாறி, உங்களுடைய பெயரைக்
களங்கப்படுத்திவிடக் கூடாது.
10 வேலைக்காரனைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும்
எஜமானிடம் சொல்லாதே.
அப்படிச் சொன்னால், அவன் உன்னைச் சபிப்பான், நீ குற்றவாளியாக
ஆகிவிடுவாய்.[j]
11 அப்பாவைச் சபிக்கிற தலைமுறையும்
அம்மாவைப் பாராட்டாத தலைமுறையும் உண்டு.[k]
12 அசுத்தமானவர்களாக இருந்தாலும்கூட
சுத்தமாக இருப்பதாக நினைத்துக்கொள்கிற தலைமுறையும் உண்டு.[l]
13 கண்களில் அளவுக்கு மீறிய ஆணவமும்[m]
பார்வையில் அளவுக்கு மீறிய அகம்பாவமும் உள்ள
தலைமுறையும் உண்டு.
14 வாள் போன்ற பற்களையும்
வெட்டுக்கத்தி போன்ற தாடைகளையும் கொண்ட
தலைமுறையும் உண்டு.
அது உலகத்திலுள்ள ஏழை எளியவர்களை விழுங்குகிறது.[n]
15 “கொடு! கொடு!” என்று கத்துகிற இரண்டு மகள்கள்
அட்டைப்பூச்சிகளுக்கு உண்டு.

30:2 * வே.வா., “புரிந்துகொள்ளுதல்.”

அதி. 30
a யோவா 3:13
b ஏசா 40:12
c யோபு 38:4
d சங் 12:6
e ஆதி 15:1; 2சா 22:31; சங் 84:11
f உபா 4:2; வெளி 22:18
g நீதி 12:22
h மத் 6:11; 1தீ 6:8
i உபா 6:10-12
j தானி 6:24
k லேவி 20:9; நீதி 19:26; மாற் 7:10, 11
l சங் 36:1, 2; ஏசா 65:5; 1யோ 1:8
m சங் 101:5; நீதி 6:16, 17
n சங் 14:4; நீதி 22:16; ஏசா 32:7

திருப்தியே அடையாத மூன்று காரியங்கள் உண்டு.
“போதும்!” என்று ஒருபோதும் சொல்லாத நான்கு காரியங்கள் உண்டு.
16 அவை: கல்லறை,[a] மலடியின் கர்ப்பப்பை,
தண்ணீர் இல்லாத நிலம்,
“போதும்!” என்று சொல்லாத நெருப்பு.
17 ஒருவன் தன் அப்பாவை ஏளனம் செய்து, அம்மாவின் பேச்சை மதிக்காமல் போனால்,[b]
அவனுடைய கண்களைப் பள்ளத்தாக்கில் திரிகிற அண்டங்காக்கைகள் கொத்தி எடுக்கும்,
இளம் கழுகுகள் அவற்றைத் தின்றுவிடும்.[c]
18 என்னுடைய அறிவுக்கு எட்டாத* மூன்று விஷயங்கள் இருக்கின்றன.
எனக்குப் புரியாத நான்கு விஷயங்கள் இருக்கின்றன.
19 அவை: வானத்தில் பறக்கிற கழுகின் வழி,
பாறையில் ஊர்ந்துபோகிற பாம்பின் வழி,
கடலில் மிதந்துசெல்கிற கப்பலின் வழி,
இளம் பெண்ணோடு பழகுகிற ஆணின் வழி.
20 கணவனுக்குத் துரோகம் செய்கிற பெண்ணின் வழி இதுதான்:
அவள் சாப்பிட்டுவிட்டு, வாயைத் துடைத்துக்கொள்கிறாள்.
பின்பு, “நான் எந்தத் தப்பும் செய்யவில்லை” என்று சொல்கிறாள்.[d]
21 இந்தப் பூமியையே அதிர வைக்கிற மூன்று விஷயங்கள் இருக்கின்றன.
இந்தப் பூமியால் தாங்க முடியாத நான்கு விஷயங்கள் இருக்கின்றன.
22 அவை: ஓர் அடிமை அரசனாக ஆட்சி செய்வது,[e]
ஒரு முட்டாள் வயிறுமுட்ட சாப்பிடுவது,
23 வெறுக்கப்பட்ட* பெண் ஒருவனுக்கு மனைவியாவது,
எஜமானியின் இடத்தை வேலைக்காரி பிடித்துக்கொள்வது.[f]
24 இந்தப் பூமியிலுள்ள மிகச் சிறிய உயிரினங்களில் நான்கு உண்டு.
ஆனால், அவை இயல்பாகவே* ஞானமுள்ளவை.[g]
25 அவை: அற்பமான ஜீவன்களாக இருந்தும்
கோடைக் காலத்தில் உணவைச் சேர்த்து வைக்கிற எறும்புகள்.[h]
26 பலம் இல்லாத ஜீவன்களாக இருந்தும்
பாறைகளில் பொந்துகளை அமைக்கிற கற்பாறை முயல்கள்.*[i]
27 அரசன் இல்லாமலேயே,
அணி அணியாக முன்னேறிப் போகிற வெட்டுக்கிளிகள்.[j]
28 கால்களால் சுவரைப் பற்றிக்கொண்டு,
ராஜாவின் அரண்மனைக்குள் போகிற வீட்டுப் பல்லி.[k]
29 கம்பீரமாய் நடக்கிற மூன்று உண்டு.
வீறுநடை போடுகிற நான்கு உண்டு.
30 அவை: விலங்குகளிலேயே மகா பலம்படைத்ததும்,

30:18 *வே.வா., “நான் பார்த்து அதிசயப்படுகிற.” **30:23** *வே.வா., “நேசிக்கப்படாத.” **30:24** *வே.வா., “மிக மிக.” **30:26** *இவை கற்பாறைகளுக்கு நடுவே வாழ்கிற ஒருவகையான பெரிய முயல்கள்.

அதி. 30
a நீதி 27:20
b நீதி 23:22
c லேவி 20:9; உபா 21:18, 21; நீதி 20:20
d நீதி 7:10, 11
e நீதி 19:10; பிர 10:7; ஏசா 3:4
f ஆதி 16:5
g யோபு 35:11
h நீதி 6:6-8
i லேவி 11:5; சங் 104:18
j யாத் 10:14; யோவே 1:4; யோவே 2:7
k லேவி 11: 29, 30

யாரைக் கண்டும் பயந்து ஓடாததுமான சிங்கம்;[a]
31 வேட்டை நாய்; வெள்ளாட்டுக் கடா;
ராஜாவின் தலைமையில் போகும் படை.
32 உன்னை நீயே முட்டாள்தனமாக உயர்த்தியிருந்தால்,[b]
அல்லது அப்படிச் செய்யத் திட்டம் போட்டிருந்தால்,
உன் கையால் வாயை மூடிக்கொள்.[c]
33 பாலைக் கடைந்தால் வெண்ணெய் வருவது போலவும்,
மூக்கைப் பிசைந்தால் இரத்தம் வருவது போலவும்,
கோபத்தைக் கிளறினால் சண்டைகள் வரும்.[d]

31 லேமுவேல் ராஜாவின் வார்த்தைகள்; அவருடைய அம்மா
அவருக்குச் சொன்ன முக்கியமான அறிவுரைகள்:[e]
2 என் மகனே, என் வயிற்றில் பிறந்தவனே,
என் நேர்த்திக்கடன்களின் பலனாகக் கிடைத்த மகனே,[f]
நான் உனக்கு என்ன சொல்வேன்?
3 உன்னுடைய வீரியத்தைப் பெண்களிடம் வீணடிக்காதே.[g]
ராஜாக்களை அழிவுக்குக் கொண்டுபோகிற வழிகளில் போகாதே.[h]
4 திராட்சமது குடிப்பது ராஜாக்களுக்கு நல்லதல்ல.
லேமுவேலே, அது ராஜாக்களுக்கு நல்லதல்ல.
"மதுபானம் எங்கே?" என்று கேட்பதும் அரசர்களுக்கு அழகல்ல.[i]
5 குடித்தால் அவர்கள் சட்டத்தை மறந்துவிடுவார்கள்,
எளியவர்களின் உரிமைகளைப் பறித்துவிடுவார்கள்.
6 சாகப்போகிறவர்களுக்கு மதுபானத்தைக் கொடுங்கள்.[j]
கடும் வேதனையில் இருப்பவர்களுக்குத் திராட்சமதுவை ஊற்றிக் கொடுங்கள்.[k]
7 அவர்கள் குடித்துவிட்டுத் தங்கள் வறுமையை மறக்கட்டும்;
தங்கள் கவலைகளை நினைக்காமல் இருக்கட்டும்.
8 வாய் பேசாதவர்களுக்காக நீ பேசு.
சாவின் விளிம்பில் இருக்கிறவர்களுடைய உரிமைகளுக்காகப் பாடுபடு.[l]
9 தயங்காமல் பேசு, நீதி வழங்கு.
ஏழை எளியவர்களின் உரிமைகளுக்காகப் பாடுபடு.*[m]

א [*ஆலெஃப்*]

10 திறமைசாலியான* மனைவியை யாரால் கண்டுபிடிக்க முடியும்?[n]
அவளுடைய மதிப்பு பவளங்களைவிட# மிக உயர்ந்தது.

ב [*பேத்*]

11 அவளுடைய கணவன் அவளை நெஞ்சார நம்புகிறான்.
அருமையான எதுவும் அவனுக்குக் கிடைக்காமல் போவதில்லை.

ג [*கீமெல்*]

12 வாழ்நாள் முழுக்க அவள் அவனுக்கு நல்லதையே செய்கிறாள்.
அவனுக்குக் கஷ்டம் கொடுப்பதே இல்லை.

31:9 *வே.வா., "ஏழை எளியவர்களுக்காக வாதாடு." **31:10** *வே.வா., "அருமையான." #சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 30
a எண் 23:24; ஏசா 31:4
b நீதி 26:12
c நீதி 27:2
d நீதி 26:21

அதி. 31
e நீதி 1:8; 2தீ 1:5
f 1சா 1:11, 28
g ஓசி 4:11
h உபா 17:15, 17; 1ரா 11:1–3; நெ 13:26
i பிர 10:17; ஏசா 28:7
j சங் 104:15; மத் 27:34
k எரே 16:7
l சங் 82:4
m உபா 1:16, 17; 2சா 8:15; சங் 72:1, 2; ஏசா 11:4
n ரூ 3:10, 11; நீதி 12:4; நீதி 19:14

ד [*டாலத்*]
13 கம்பளி நூலையும் நாரிழையையும்* அவள் சேகரிக்கிறாள்.
தன் கைகளால் உற்சாகமாக வேலை செய்கிறாள்.[a]

ה [*ஹே*]
14 வியாபாரியின் கப்பல்களைப்[b] போல அவள் இருக்கிறாள்.
வெகு தூரத்திலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டுவருகிறாள்.

ו [*வா*]
15 விடிவதற்கு முன்பே எழுந்துவிடுகிறாள்.
வீட்டில் இருப்பவர்களுக்கு உணவு கொடுக்கிறாள்.
வேலைக்காரிகளுக்கு அவர்களுடைய பங்கைத் தருகிறாள்.[c]

ז [*ஸாயின்*]
16 கவனமாக யோசித்துப் பார்த்த பிறகு ஒரு வயலை வாங்குகிறாள்.
தன் சம்பாத்தியத்தை வைத்து திராட்சைத் தோட்டம் போடுகிறாள்.

ח [*ஹேத்*]
17 கடினமாக உழைக்கத் தன்னைத் தயாராக்குகிறாள்.[d]
தன் கையால் பாடுபட்டு வேலை செய்கிறாள்.

ט [*டேத்*]
18 வியாபாரத்தை லாபகரமாக நடத்துகிறாள்.
ராத்திரியில்கூட அவளுடைய விளக்கு அணைவதில்லை.

י [*யோத்*]
19 நூற்புக் கோலையும் நூற்புக் கதிரையும்* பிடித்து
துணி நெய்கிறாள்.[e]

כ [*காஃப்*]
20 எளியவர்களுக்குக் கைகொடுக்கிறாள்.
ஏழைகளுக்கு வாரி வழங்குகிறாள்.[f]

ל [*லாமெத்*]
21 பனிக்காலத்தில் தன்னுடைய குடும்பத்தாரைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறாள்.
ஏனென்றால், அவர்கள் எல்லாரும் கதகதப்பான* உடைகளைப் போட்டிருக்கிறார்கள்.

מ [*மேம்*]
22 தன் படுக்கை விரிப்புகளை அவளே நெய்கிறாள்.
நாரிழையிலும் ஊதா நிற கம்பளி நூலிலும் நெய்த உடையை உடுத்தியிருக்கிறாள்.

נ [*நூன்*]
23 அவளுடைய கணவன் நகரவாசல்களில் பிரபலமானவன்.[g]
ஊர்ப் பெரியோர்களோடு* சேர்ந்து உட்கார்ந்திருப்பவன்.

ס [*சாமெக்*]
24 அவள் நாரிழையில் உடைகளை* நெய்து விற்கிறாள்.
இடுப்புவார்களை வியாபாரிகளிடம் விற்கிறாள்.

31:13 *அதாவது, "லினனையும்." **31:19** *துணி நெய்ய இவை பயன்படுத்தப் பட்டன. **31:21** *நே.மொ., "இரண்டு." **31:23** *வே.வா., "மூப்பர்களோடு." **31:24** *வே.வா., "உள்ளாடைகளை."

அதி. 31
a 1சா 2:18, 19; தீத் 2:3-5
b 2நா 9:21
c 1தீ 5:9, 10
d ஆதி 24:15, 20
e யாத் 35:25
f 1சா 25:18; நீதி 19:17; 1தீ 2:10; எபி 13:16
g ரூ 4:1; யோபு 29:7, 8

ע [*ஆயின்*]

25 பலத்தையும் அழகையும் ஆடைபோல் அணிந்திருக்கிறாள்.
எதிர்காலத்தை நம்பிக்கையோடு பார்க்கிறாள்.

פ [*பே*]

26 அவளுடைய வாய் ஞானத்தை உதிர்க்கிறது.[a]
அவளுடைய நாவில் அன்பின் சட்டம்* இருக்கிறது.

צ [*சாதே*]

27 வீட்டுக் காரியங்களைக் கண்ணும்கருத்துமாக அவள் கவனித்துக்கொள்கிறாள்.
சோம்பேறித்தனம் என்பதே அவளிடம் கிடையாது.[b]

ק [*கோஃப்*]

28 அவளுடைய பிள்ளைகள் எழுந்து நின்று அவளைப் புகழ்கிறார்கள்.
அவளுடைய கணவனும் எழுந்து நின்று அவளைப் பாராட்டுகிறான்.

ר [*ரேஷ்*]

29 "திறமைசாலியான* பெண்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்,
ஆனால், நீதான் அவர்கள் எல்லாரையும்விட அருமையானவள்!"

ש [*ஷீன்*]

30 வசீகரம் பொய்யானது, அழகும் வீணானது,*[c]
ஆனால், யெகோவாவுக்குப் பயந்து நடக்கிற பெண்தான் புகழப்படுவாள்.[d]

ת [*ட்டா*]

31 அவள் செய்கிற எல்லாவற்றுக்கும் வெகுமதி கொடுங்கள்.[e]
அவற்றைப் பற்றி நகரவாசல்களில் புகழ்ந்து பேசுங்கள்.[f]

31:26 *வே.வா., "அன்பான போதனை; மாறாத அன்பின் சட்டம்." **31:29** *வே.வா., "அருமையான." **31:30** *வே.வா., "சீக்கிரத்தில் மறைந்துபோகலாம்."

அதி. 31

a நியா 13:22, 23; 1சா 25:30, 31; எஸ்தர் 5:8; தீத் 2:3
b நீதி 14:1; 1தீ 5:9, 10; தீத் 2:3-5
c 2ரா 9:30; எஸ்தர் 1:10-12; நீதி 6:25, 26
d ஆதி 24:60; நியா 5:7; 1பே 3:3, 4
e ரூ 3:10, 11
f ரோ 16:1, 2

பிரசங்கி

முக்கியக் குறிப்புகள்

1 எல்லாமே வீண்! (1-11)
- பூமி என்றென்றும் நிலைத்திருக்கிறது (4)
- தொடர்ந்து நடக்கிற இயற்கைச் சுழற்சிகள் (5-7)
- சூரியனுக்குக் கீழே புதியது ஒன்றுமே இல்லை (9)

மனுஷனின் ஞானம் குறைவுபட்டது (12-18)
- காற்றைப் பிடிக்க ஓடுவது (14)

2 சாலொமோன் தான் செய்தவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கிறார் (1-11)

மனுஷ ஞானத்தின் பிரயோஜனம் (12-16)

கடின உழைப்பு வீண் (17-23)

சாப்பிட்டு, குடித்து, சந்தோஷமாக வேலை செய் (24-26)

3 எல்லாவற்றுக்கும் ஒரு நேரம் இருக்கிறது (1-8)

வாழ்க்கையை அனுபவிப்பது கடவுள் தரும் பரிசு (9-15)
- என்றென்றும் வாழும் எண்ணம் மனுஷனின் இதயத்தில் இருக்கிறது (11)

கடவுள் எல்லாருக்கும் நியாயமாகத் தீர்ப்பு வழங்குகிறார் (16, 17)

மனுஷர்களும் சாகிறார்கள், விலங்குகளும் சாகின்றன (18-22)

எல்லா உயிர்களும் மண்ணுக்கே திரும்பும் (20)

4 கொடுமைகள் மரணத்தைவிட மோசமானவை (1-3)
வேலையைப் பற்றிய சமநிலையான கருத்து (4-6)
நண்பனின் அருமை (7-12)
தனியாக இருப்பதைவிட இரண்டு பேராகச் சேர்ந்திருப்பது நல்லது (9)
ராஜாவின் வாழ்க்கை வீணாக இருக்கலாம் (13-16)

5 பயபக்தியோடு கடவுளை வணங்கு (1-7)
அதிகாரிகளை உயர் அதிகாரிகள் கவனிக்கிறார்கள் (8, 9)
சொத்து வீணானது (10-20)
பண ஆசை பிடித்தவர்கள் திருப்தியடையவே மாட்டார்கள் (10)
வேலை செய்கிறவன் நிம்மதியாகத் தூங்குகிறான் (12)

6 சொத்து இருந்தும் அனுபவிக்காமல் இருப்பது (1-6)
இப்போது இருப்பதை அனுபவி (7-12)

7 நல்ல பெயரும் இறந்த நாளும் (1-4)
ஞானமுள்ளவரின் கண்டிப்பு (5-7)
ஒரு செயலின் ஆரம்பத்தைவிட முடிவு நல்லது (8-10)
ஞானத்தால் கிடைக்கும் பயன் (11, 12)
சந்தோஷமான நாட்களும் கஷ்டமான நாட்களும் (13-15)
அளவுக்கு மிஞ்சி போகக்கூடாது (16-22)
பிரசங்கி கவனித்த விஷயங்கள் (23-29)

8 குறைபாடுள்ள மனுஷ ஆட்சியின் கீழ் (1-17)
ராஜாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படி (2-4)
மனுஷன் அடக்கி ஆண்டிருப்பதால் கேடு (9)
உடனடியாகத் தண்டனை கிடைக்காதபோது (11)
சாப்பிட்டு, குடித்து, சந்தோஷமாக இரு (15)

9 எல்லாருக்கும் ஒரே கதிதான் (1-3)
சாவு வருமென்றாலும் வாழ்க்கையை அனுபவி (4-12)
இறந்தவர்களுக்கு எதுவுமே தெரியாது (5)
கல்லறையில் எதுவும் செய்ய முடியாது (10)
எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத சம்பவங்கள் (11)
ஞானம் எல்லா சமயத்திலும் மதிக்கப்படுவதில்லை (13-18)

10 சின்ன முட்டாள்தனத்தால் ஞானம் கெட்டுவிடும் (1)
திறமை இல்லாததால் வரும் ஆபத்துகள் (2-11)
முட்டாளின் வருத்தகரமான நிலைமை (12-15)
ஆட்சி செய்கிறவர்களின் முட்டாள்தனம் (16-20)
நீ பேசியதை ஒரு பறவை சொல்லிவிடலாம் (20)

11 வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள் (1-8)
உன் ரொட்டியைத் தண்ணீரின் மேல் தூக்கிப் போடு (1)
காலையிலிருந்து சாயங்காலம்வரை விதையை விதை (6)
பொறுப்போடு நடந்து இளமையை அனுபவி (9, 10)

12 வயதாவதற்கு முன்பே கடவுளை நினை (1-8)
பிரசங்கியின் முடிவான வார்த்தைகள் (9-14)
ஞானமான வார்த்தைகள் தார்க்கோல்களுக்குச் சமம் (11)
உண்மைக் கடவுளுக்குப் பயந்து நட (13)

---

1 தாவீதின் மகனும் எருசலேமின் ராஜாவுமான[a] பிரசங்கியின்*[b]
வார்த்தைகள்.
2 “வீணிலும் வீண்! வீணிலும் வீண்!
எல்லாமே வீண்!”[c] என்று பிரசங்கி சொல்கிறார்.
3 சூரியனுக்குக் கீழே* மனுஷன் எவ்வளவுதான் பாடுபட்டு வேலை
செய்தாலும்,

அதி. 1
a 1ரா 2:12
2நா 9:30
b 1ரா 8:1, 22
c சங் 39:5
ரோ 8:20

1:1 *நே.மொ., “ஒன்றுகூட்டுகிறவரின்; ஒன்றுதிரட்டுகிறவரின்.” **1:3** *இந்த வார்த்தைகள் பிரசங்கி புத்தகத்தில் 29 தடவை வருகின்றன.

எவ்வளவுதான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் என்ன பிரயோஜனம்?[a]
4 ஒரு தலைமுறை போகிறது, இன்னொரு தலைமுறை வருகிறது.
ஆனால், பூமி என்றென்றும் நிலைத்திருக்கிறது.[b]
5 சூரியன் உதிக்கிறது, பின்பு மறைகிறது.
தான் புறப்பட்ட இடத்துக்கே அது வேகமாகப் போய் மறுபடியும் உதிக்கிறது.[c]
6 காற்று தெற்கே வீசுகிறது, மறுபடியும் சுற்றிவந்து வடக்கே வீசுகிறது.
சுற்றிச் சுற்றி வீசிக்கொண்டே இருக்கிறது, அது நிற்பதே இல்லை.
7 எல்லா ஆறுகளும்* கடலில் போய்க் கலந்தாலும், கடல் நிரம்பி வழிவதில்லை.[d]
உற்பத்தியான இடத்துக்கே ஆறுகள் போகின்றன, அங்கிருந்து மறுபடியும் ஓடிவருகின்றன.[e]
8 எல்லாமே சலிப்பைத்தான் தருகின்றன.
அவற்றையெல்லாம் யாராலும் விளக்க முடியாது.
எவ்வளவுதான் பார்த்தாலும் கண்கள் திருப்தி அடைவதில்லை.
எவ்வளவுதான் கேட்டாலும் காதுகள் திருப்தி அடைவதில்லை.
9 இதுவரை இருந்ததுதான் இனிமேலும் இருக்கும்.
இதுவரை செய்யப்பட்டதுதான் இனிமேலும் செய்யப்படும்.
சூரியனுக்குக் கீழே புதியது ஒன்றுமே இல்லை.[f]
10 "இதோ பாருங்கள், இது புதியது!" என்று சொல்வதற்கு ஏதாவது இருக்கிறதா?
எல்லாமே காலம்காலமாக இருப்பதுதான்.
நாம் பிறப்பதற்கு முன்பிருந்தே இருப்பதுதான்.
11 முற்காலத்தில் வாழ்ந்தவர்களை யாரும் ஞாபகம் வைப்பதில்லை.
பிற்காலத்தில் வருகிறவர்களையும் யாரும் ஞாபகம் வைக்கப்போவதில்லை.
அவர்களுக்குப் பின்பு வரப்போகிறவர்களும் அவர்களை ஞாபகம் வைக்கப்போவதில்லை.[g]

12 பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரவேலர்களின் ராஜாவாக
இருந்திருக்கிறேன்.[h] **13** வானத்தின் கீழே செய்யப்படுகிற எல்லா காரி
யங்களையும் ஞானமாக[i] ஆராய்ந்து பார்ப்பதற்கு நான் முடிவு செய்தேன்.[j]
மனுஷர்கள் மும்முரமாய்ச் செய்வதற்காகக் கடவுள் கொடுத்திருக்கிற விரக்
தியான வேலைகளை நான் ஆராய்ந்து பார்த்தேன்.
14 சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற எல்லாவற்றையும் பார்த்தேன்.
எல்லாமே வீண்தான், காற்றைப் பிடிக்க ஓடுவதற்குச் சமம்தான்.[k]
15 கோணலாக இருப்பதை நேராக்க முடியாது.
இல்லாத ஒன்றை எண்ணி வைக்க முடியாது.

16 "இதுவரை எருசலேமில் வாழ்ந்த எவரையும்விட நான் அதிகமான
ஞானத்தைச் சம்பாதித்துவிட்டேன்.[l] என் இதயத்தில் ஞானமும் அறிவும்
நிரம்பி வழிகிறது"[m] என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். **17** எது
ஞானம், எது பைத்தியக்காரத்தனம், எது முட்டாள்தனம் என்பதைத்

1:7 * வே.வா., "குளிர்கால நீரோடைகளும்; பருவகால நீரோடைகளும்."

அதி. 1
a பிர 2:11; மத் 16:26; யோவா 6:27
b சங் 78:69; சங் 104:5; சங் 119:90
c ஆதி 8:22; சங் 19:6
d யோபு 38:8, 10
e யோபு 36:27, 28; ஏசா 55:10; ஆமோ 5:8
f ஆதி 8:22; பிர 1:4
g பிர 2:16; பிர 9:5; ஏசா 40:6
h 1ரா 11:42; பிர 1:1
i 1ரா 4:29, 30
j பிர 8:16
k சங் 39:5, 6; பிர 2:11, 18; பிர 2:26; லூ 12:15
l பிர 2:9
m 1ரா 3:28; 1ரா 4:29-31; 2நா 1:10-12

தெரிந்துகொள்ள கவனம் செலுத்தினேன்.[a] இதுவும் காற்றைப் பிடிக்க ஓடுவ
தற்குச் சமம்தான்.

18 ஞானம் அதிகமானால் விரக்தியும் அதிகமாகும்.
அறிவு பெருகினால் வேதனையும் பெருகும்.[b]

2

“வா, சந்தோஷமாகப் பொழுது போக்கலாம், அதனால் என்ன பயன்
கிடைக்கிறதென்று பார்க்கலாம்” என்று எனக்கு நானே சொல்லிக்
கொண்டேன். ஆனால், அதுவும் வீண்தான் என்று புரிந்தது.

2 சிரிப்பைப் பற்றி, “அது பைத்தியக்காரத்தனம்!” என்று
சொல்லிக்கொண்டேன்.
சந்தோஷமாகப் பொழுது போக்குவதைப் பற்றி, “அதனால் என்ன
பிரயோஜனம்?” என்று சொல்லிக்கொண்டேன்.

3 திராட்சமது குடிப்பதில் என்ன பயன் என்று தெரிந்துகொள்ள
நினைத்து, அதைக் குடித்துக் குடித்துப் பார்த்தேன்.[c] அதேசமயத்தில், என்
ஞானம் மழுங்கிவிடாதபடியும் பார்த்துக்கொண்டேன். இந்தப் பூமியில்
வாழ்கிற கொஞ்சக் காலத்தில் மனுஷர்கள் என்ன செய்வது சிறந்தது என்ப
தைத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டு, புத்தியில்லாத காரியங்களையும்கூட
செய்து பார்த்தேன். 4 நான் பெரிய பெரிய காரியங்களைச் செய்தேன்.[d]
எனக்காக மாளிகைகளைக் கட்டினேன்.[e] எனக்காகத் திராட்சைத் தோட்டங்
களைப் போட்டேன்.[f] 5 எனக்காகத் தோட்டங்களையும் பூங்காக்களை
யும் அமைத்தேன். எல்லா விதமான பழ மரங்களையும் அவற்றில் நட்டு
வைத்தேன். 6 தோப்பில்* வளர்ந்துவந்த மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச
குளங்களை வெட்டினேன். 7 நிறைய வேலைக்காரர்களையும் வேலைக்
காரிகளையும் வைத்துக்கொண்டேன்.[g] அவர்களில் சிலர் என் வீட்டிலேயே
பிறந்து வளர்ந்தவர்கள். இதுவரை எருசலேமில் யாரிடமும் இல்லாத அள
வுக்கு ஏராளமான ஆடுமாடுகளை வைத்திருந்தேன்.[h] 8 எனக்காக வெள்
ளியையும் தங்கத்தையும் குவித்து வைத்தேன்.[i] ராஜாக்களின் பொக்கிஷங்
களையும் மாகாணங்களின் பொக்கிஷங்களையும் குவித்து வைத்தேன்.[j]
எனக்காக நிறைய பாடகர்களையும் பாடகிகளையும் வைத்துக்கொண்
டேன். ஆண்களுக்கு மிகவும் சந்தோஷம் தருகிற பெண் சகவாசத்தையும்
வைத்துக்கொண்டேன். அதுவும், நிறைய பெண்களோடு சகவாசம் வைத்
துக்கொண்டேன். 9 எருசலேமில் எனக்கு முன்பு வாழ்ந்த எவரையும்விட
அதிக செல்வமும் செல்வாக்கும் பெற்றவனாக ஆனேன்.[k] அதேசமயத்தில்,
ஞானமாகவும் நடந்துகொண்டேன்.

10 ஆசைப்பட்ட எதையுமே நான் விட்டுவைக்கவில்லை,[l] சந்தோஷம்
தரும் எதையுமே நான் அனுபவிக்காமல் இருக்கவில்லை. நான் கடினமாக
உழைத்ததால் என் இதயத்துக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. இது என்
னுடைய கடின உழைப்புக்குக் கிடைத்த பலன்.[m] 11 ஆனால், என் கைக
ளால் செய்த எல்லா வேலைகளையும், அவற்றைச் செய்து முடிக்க நான்
உழைத்த உழைப்பையும்[n] யோசித்துப் பார்த்தபோது, அவை எல்லாமே
வீண்தான், காற்றைப் பிடிக்க ஓடுவதற்குச் சமம்தான்[o] என்பதைப் புரிந்து
கொண்டேன். உண்மையிலேயே பிரயோஜனமான எதுவுமே சூரியனுக்குக்
கீழே இல்லை.[p]

2:6 * வே.வா., “காட்டில்.”

அதி. 1
a பிர 2:2, 3; பிர 2:12; பிர 7:25
b பிர 2:15; பிர 12:12

அதி. 2
c சங் 104:15; பிர 10:19
d 1ரா 9:17-19; 2நா 9:15, 16
e 1ரா 7:1, 8
f 1ரா 4:25; உன் 8:11
g 1சா 8:10, 13; 1ரா 9:22
h 1ரா 4:22, 23
i 1ரா 9:14, 28; 1ரா 10:10; 2நா 1:15
j 1ரா 10:14, 15; 2நா 9:13, 14
k 1ரா 3:13; 1ரா 10:23
l பிர 11:9
m பிர 3:22; பிர 5:18; பிர 9:9
n 1ரா 7:1
o சங் 49:10; பிர 1:14; பிர 2:16; 1தீ 6:7
p பிர 1:3; பிர 2:17

12 பிறகு, நான் ஞானமும் பைத்தியக்காரத்தனமும் முட்டாள்தனமுமான
செயல்கள் எவை என்று யோசித்துப் பார்த்தேன்.[a] (ராஜாவுக்குப் பின்பு வரு
கிறவனால் என்ன செய்ய முடியும்? ஏற்கெனவே செய்யப்பட்டதைத்தானே
செய்ய முடியும்!) **13** இருட்டைவிட வெளிச்சம் எப்படிப் பிரயோஜன
மானதோ அப்படியே முட்டாள்தனத்தைவிட ஞானம் பிரயோஜனமானது[b]
என்று புரிந்துகொண்டேன்.

14 ஞானமுள்ளவன் தெளிவாகப் பார்த்து நடக்கிறான்.[c] முட்டாளோ
இருட்டில் நடக்கிறான்.[d] கடைசியில் அவர்கள் எல்லாருக்கும் ஒரே முடிவு
தான் என்பதையும் புரிந்துகொண்டேன்.[e] **15** அதனால், "முட்டாளுக்கு
நடப்பதுதான் எனக்கும் நடக்கும்"[f] என்று எனக்கு நானே சொல்லிக்
கொண்டேன். அப்படியானால், நான் இவ்வளவு பெரிய ஞானியாகி என்ன
லாபம்? "இதுவும் வீண்தான்" என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.
16 ஞானியோ, முட்டாளோ, யாருமே மக்களுடைய மனதில் நிரந்தரமாக
இருப்பதில்லை.[g] காலப்போக்கில், எல்லாருமே மறக்கப்படுவார்கள். ஞானி
எப்படிச் சாவான்? முட்டாள் எப்படிச் சாகிறானோ அப்படித்தானே.[h]

17 அதனால், எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது.[i] சூரியனுக்குக்
கீழே நடக்கிற எல்லாமே எனக்கு வேதனையைத்தான் தந்தது. அவை
எல்லாமே வீண்தான்,[j] காற்றைப் பிடிக்க ஓடுவதற்குச் சமம்தான்.[k] **18** சூரி
யனுக்குக் கீழே எதையெல்லாம் பாடுபட்டுச் சேர்த்தேனோ அதையெல்லாம்
வெறுத்தேன்,[l] ஏனென்றால் எனக்குப் பின்னால் வருகிறவனுக்குத்தானே
அதையெல்லாம் விட்டுவிட்டுப் போக வேண்டும்![m] **19** அவன் ஞானமுள்
ளவனாக இருப்பானா முட்டாளாக இருப்பானா என்று யாருக்குத் தெரியும்?[n]
எப்படியிருந்தாலும், சூரியனுக்குக் கீழே நான் ஞானத்தோடு பாடுபட்டுச் சம்
பாதித்த எல்லாவற்றையும் அவன்தான் ஆண்டு அனுபவிப்பான். இதுவும்
வீண்தான். **20** அதனால், சூரியனுக்குக் கீழே நான் கஷ்டப்பட்டுச் செய்த
வேலைகளையெல்லாம் நினைத்துத் தவிக்க ஆரம்பித்தேன். **21** ஒருவன்
கடினமாக உழைக்கலாம், ஞானத்தோடும் அறிவோடும் திறமையோடும்
வேலை செய்யலாம். ஆனால், அவன் சேர்த்து வைப்பதையெல்லாம் அதற்
காகக் கொஞ்சமும் பாடுபடாத ஒருவனுக்குத்தானே விட்டுவிட்டுப் போக
வேண்டும்![o] இதுவும் வீண்தான், சோகத்திலும் சோகம்தான்.

22 ஒருவன் சூரியனுக்குக் கீழே பாடுபட்டு வேலை செய்வதாலும், அப்
படி வேலை செய்ய அவனைத் தூண்டுகிற லட்சிய வெறியினாலும் என்ன
லாபம்?[p] **23** அவனுடைய வேலையினால் வாழ்நாளெல்லாம் வேதனை
யும் விரக்தியும்தான் மிஞ்சுகிறது.[q] ராத்திரியில்கூட அவனுடைய இதயத்
தில் அமைதியில்லை.[r] இதுவும் வீண்தான்.

24 சாப்பிட்டு, குடித்து, கடின உழைப்பால் வரும் சந்தோஷத்தை அனு
பவிப்பதைவிட மேலானது எதுவுமே இல்லை.[s] இதுவும் உண்மைக் கடவு
ளுடைய கையிலிருந்துதான் வருகிறது என்பதைப் புரிந்துகொண்டேன்.[t]
25 என்னைவிட நன்றாகச் சாப்பிடுகிறவனும் குடிக்கிறவனும் யார்?[u]

26 உண்மைக் கடவுள் தனக்குப் பிரியமாக நடக்கிறவனுக்கு ஞானத்தை
யும் அறிவையும் சந்தோஷத்தையும் தருகிறார்.[v] ஆனால், அவனுக்குக்
கொடுக்க வேண்டியதையெல்லாம் சேர்த்து வைக்கிற வேலையைப் பாவிக்
குக் கொடுக்கிறார்.[w] இதுவும் வீண்தான், காற்றைப் பிடிக்க ஓடுவதற்குச்
சமம்தான்.

அதி. 2
- *a* பிர 1:17; பிர 7:25
- *b* நீதி 4:7; பிர 7:11, 12
- *c* நீதி 4:25
- *d* நீதி 14:8; நீதி 17:24; யோவா 3:19; 1யோ 2:11
- *e* பிர 3:19, 20; பிர 9:2, 3; பிர 9:11
- *f* சங் 49:10
- *g* யாத் 1:8; பிர 1:11
- *h* பிர 6:8; ரோ 5:12
- *i* 1ரா 19:2, 4; எரே 20:17, 18
- *j* யோபு 7:6; பிர 2:21; ரோ 8:20
- *k* பிர 1:14; பிர 5:16
- *l* பிர 2:4-8
- *m* சங் 39:6; லூ 12:20
- *n* 1ரா 12:6, 8; 2நா 12:1, 9
- *o* பிர 2:18; பிர 5:15, 16
- *p* பிர 1:3; பிர 3:9
- *q* யோபு 14:1, 2; லூ 12:29
- *r* ஆதி 31:40, 41
- *s* உபா 12:18; பிர 3:22; பிர 8:15; அப் 14:17
- *t* பிர 3:12, 13; பிர 5:18, 19
- *u* 1ரா 4:7; 1ரா 4:22, 23; 1ரா 10:4, 5; 1ரா 10:21
- *v* 1சா 18:14; நீதி 3:32, 33; ஏசா 3:10
- *w* உபா 6:10, 11; நீதி 13:22; நீதி 28:8

3 எல்லாவற்றுக்கும் ஒரு நேரம் இருக்கிறது.
இந்த உலகத்தில் நடக்கிற ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரம் இருக்கிறது.
2 பிறப்பதற்கு* ஒரு நேரம் இருக்கிறது, இறப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
நடுவதற்கு ஒரு நேரம் இருக்கிறது, நட்டதைப் பிடுங்குவதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
3 கொல்வதற்கு ஒரு நேரம் இருக்கிறது, குணமாக்குவதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
இடிப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது, கட்டுவதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
4 அழுவதற்கு ஒரு நேரம் இருக்கிறது, சிரிப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
ஒப்பாரி வைப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது, நடனம் ஆடுவதற்கு* ஒரு நேரம் இருக்கிறது.
5 கற்களைத் தூக்கியெறிவதற்கு ஒரு நேரம் இருக்கிறது, அவற்றை எடுத்து வைப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
கட்டித்தழுவுவதற்கு ஒரு நேரம் இருக்கிறது, கட்டித்தழுவாமல் இருப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
6 தேடுவதற்கு ஒரு நேரம் இருக்கிறது, கிடைக்காது என்று விட்டுவிடுவதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
வைத்துக்கொள்வதற்கு ஒரு நேரம் இருக்கிறது, வீசியெறிவதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
7 கிழிப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது,[a] தைப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது.
பேசுவதற்கு ஒரு நேரம் இருக்கிறது,[b] பேசாமல் இருப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது.[c]
8 நேசிப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது, வெறுப்பதற்கு ஒரு நேரம் இருக்கிறது.[d]
போர் செய்வதற்கு ஒரு நேரம் இருக்கிறது, சமாதானம் செய்வதற்கு ஒரு நேரம் இருக்கிறது.

9 ஒருவன் கஷ்டப்பட்டுச் செய்கிற வேலைகளுக்கெல்லாம் என்ன
லாபம் கிடைக்கிறது?[e] 10 மனுஷர்கள் மும்முரமாகச் செய்வதற்கென்று
கடவுள் கொடுத்திருக்கிற வேலைகளைக் கவனித்தேன். 11 கடவுள் எல்
லாவற்றையும் அந்தந்த நேரத்தில் அழகாக* செய்திருக்கிறார்.[f] என்றென்
றும் வாழும் எண்ணத்தையும் மனுஷர்களின் இதயத்தில் வைத்திருக்கிறார்.
இருந்தாலும், ஆரம்பம்முதல் முடிவுவரை உண்மைக் கடவுள் செய்திருக்
கிற எல்லாவற்றையும் மனுஷர்களால் முழுமையாகத் தெரிந்துகொள்ளவே
முடியாது.

12 மனுஷர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருந்து, நல்ல காரியங்க
ளைச் செய்து,[g] 13 சாப்பிட்டு, குடித்து, தங்கள் கடின உழைப்பால் கிடைக்
கிற சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும். இதைவிட மேலானது வேறு
எதுவுமே இல்லை என்று புரிந்துகொண்டேன். இது கடவுள் தரும் பரிசு.[h]

3:2 *வே.வா., "பெற்றெடுப்பதற்கு." 3:4 *நே.மொ., "துள்ளிக் குதிப்பதற்கு." 3:11 *வே.வா., "ஒழுங்காக; பொருத்தமாக; கச்சிதமாக."

அதி. 3
a 2சா 3:31
b 1சா 19:4; 1சா 25:23, 24; எஸ்தர் 4:13, 14; சங் 145:11; நீதி 9:8
c சங் 39:1
d சங் 139:21; ரோ 12:9
e பிர 1:3; பிர 5:15, 16
f ஆதி 1:31; ரோ 1:20
g சங் 37:3; 1தெ 5:15
h பிர 5:18, 19; ஏசா 65:21, 22

14 உண்மைக் கடவுள் செய்வதெல்லாம் என்றென்றும் நிலைத்தி
ருக்கும் என்பதைப் புரிந்துகொண்டேன். அதில் கூட்டுவதற்கோ குறைப்ப
தற்கோ ஒன்றுமில்லை. மக்கள் தனக்குப் பயந்து நடக்க வேண்டும் என்ப
தற்காக உண்மைக் கடவுள் இப்படிச் செய்திருக்கிறார்.[a]

15 இப்போது நடப்பதெல்லாம் ஏற்கெனவே நடந்ததுதான், இனி நடக்
கப்போவதும் ஏற்கெனவே நடந்ததுதான்.[b] ஆனால், நாடித் தேடப்படு
வதை* உண்மைக் கடவுள் தேடுகிறார்.

16 நான் வேறொன்றையும் சூரியனுக்குக் கீழே பார்த்தேன். நியாயம்
இருக்க வேண்டிய இடத்தில் அநியாயமும், நீதி இருக்க வேண்டிய இடத்
தில் அநீதியும் இருக்கிறது.[c] **17** “நீதிமான்களுக்கும் பொல்லாதவர்களுக்
கும் கடவுள் தீர்ப்பு வழங்குவார்.[d] ஏனென்றால், ஒவ்வொரு செயலுக்கும்
நடவடிக்கைக்கும் ஒரு நேரம் இருக்கிறது” என்று எனக்கு நானே சொல்லிக்
கொண்டேன்.

18 உண்மைக் கடவுள் மனுஷர்களைச் சோதித்துப் பார்த்து, அவர்கள்
விலங்குகளைப் போலத்தான் இருக்கிறார்கள் என்பதைப் புரிய வைப்பார்
என்றும் எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். **19** ஏனென்றால், மனு
ஷர்களுக்கும் முடிவு வருகிறது, விலங்குகளுக்கும் முடிவு வருகிறது. எல்லா
உயிர்களின் முடிவும் ஒரே மாதிரிதான் இருக்கிறது.[e] விலங்குகள் சாவது
போலத்தான் மனுஷர்களும் சாகிறார்கள். எல்லா உயிர்களுக்கும் உயிர்
சக்தி ஒன்றுதான்.[f] அதனால், விலங்குகளைவிட மனுஷன் உயர்ந்தவன்
கிடையாது, எல்லாமே வீண்தான். **20** எல்லா உயிர்களும் ஒரே இடத்துக்
குத்தான் போகின்றன.[g] எல்லாம் மண்ணிலிருந்து வந்தன,[h] எல்லாம் மண்
ணுக்கே திரும்புகின்றன.[i] **21** மனுஷர்களின் உயிர்சக்தி மேலே போகி
றதா, விலங்குகளின் உயிர்சக்தி கீழே போகிறதா என்று யாருக்குத்
தெரியும்?[j] **22** வேலையில் சந்தோஷத்தை அனுபவிப்பதைவிட மேலா
னது வேறு எதுவும் இல்லை[k] என்பதை நான் கவனித்தேன். அதுதான் மனு
ஷனுக்குக் கிடைக்கும் பலன். அவன் இறந்த பிறகு என்ன நடக்குமென்று
பார்க்கும் திறனை அவனுக்கு யாரால் கொடுக்க முடியும்?[l]

4 சூரியனுக்குக் கீழே நடக்கிற எல்லா கொடுமைகளையும் நான் மறுபடி
யும் கவனித்தேன். அடக்கி ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைப் பார்த்
தேன்; அவர்களுக்கு ஆறுதல் சொல்ல யாருமே இல்லை.[m] அவர்களை
அடக்கி ஒடுக்கியவர்களுக்கு அதிகாரம் இருந்ததால் அவர்களுக்கு ஆறு
தல் சொல்ல யாருமே இல்லை. **2** உயிரோடு வாழ்ந்துவந்தவர்களைப்
பாராட்டுவதற்குப் பதிலாக ஏற்கெனவே செத்துப்போயிருந்தவர்களைப்
பாராட்டினேன்.[n] **3** இவர்கள் எல்லாரையும்விட இன்னும் பிறக்காதவர்க
ளுடைய நிலைமை எவ்வளவோ மேல்.[o] ஏனென்றால், சூரியனுக்குக் கீழே
நடக்கிற கொடுமைகளை அவர்கள் பார்க்கவில்லை.[p]

4 போட்டி பொறாமையென்று வந்துவிட்டால்[q] மனுஷர்கள் எந்தள
வுக்கு முயற்சி எடுத்து* திறமையாக வேலை செய்கிறார்கள் என்று பார்த்தி
ருக்கிறேன். இதுவும் வீண்தான், காற்றைப் பிடிக்க ஓடுவதற்குச் சமம்தான்.

5 முட்டாள் தன் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்து, தனக்கே
அழிவைத் தேடிக்கொள்கிறான்.[r]

3:15 * அல்லது, “கடந்துபோனதை.” **4:4** * வே.வா., “கடினமாக உழைத்து.”

அதி. 3
a எரே 10:7; வெளி 15:4
b பிர 1:9
c சங் 82:2; சங் 94:16, 21
d பிர 12:14; அப் 17:31; ரோ 2:5, 6
e யோபு 14:10; சங் 39:5; சங் 89:48
f ஆதி 7:22; சங் 104:29; பிர 12:7
g பிர 9:10
h ஆதி 2:7, 19
i ஆதி 3:19; யோபு 10:9
j சங் 146:3, 4; பிர 3:19; பிர 9:10
k உபா 12:7; பிர 5:18
l யோபு 14:21; பிர 6:12

அதி. 4
m சங் 69:20; சங் 142:4
n யோபு 3:17; பிர 2:17
o எரே 20:18
p பிர 1:14
q கலா 5:26
r நீதி 6:10, 11; நீதி 20:4

6 ரொம்பவும் கஷ்டப்பட்டு* வேலை செய்து காற்றைப் பிடிக்க ஓடுவ
தைவிட கொஞ்சம்# ஓய்வெடுப்பது மேல்.[a]

7 சூரியனுக்குக் கீழே நடக்கிற இன்னொரு வீணான காரியத்தையும் கவ
னித்தேன்: **8** ஒருவன் தன்னந்தனியாக இருக்கிறான், அவனுக்கு நண்பனும்
இல்லை, மகனும் இல்லை, சகோதரனும் இல்லை. ஆனாலும், ராத்திரி பக
லாக உழைக்கிறான். எவ்வளவுதான் சொத்து இருந்தாலும் அவனுடைய கண்
கள் திருப்தி அடைவதில்லை.[b] 'நல்லது எதையும் அனுபவிக்காமல் யாருக்
காக இப்படி ஓடி ஓடி உழைக்கிறேன்?'[c] என்று அவன் எப்போதாவது
யோசிக்கிறானா? இதுவும் வீண்தான், வேதனையான வேலைதான்.[d]

9 தனியாக இருப்பதைவிட இரண்டு பேராகச் சேர்ந்திருப்பது நல்லது.[e]
அப்போது, அவர்களுடைய கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும்.
10 ஒருவன் விழுந்தால் இன்னொருவன் தூக்கிவிட முடியும். ஆனால், தனி
யாக இருப்பவன் கீழே விழுந்தால் அவனை யார் தூக்கிவிடுவது?

11 இரண்டு பேர் சேர்ந்து படுத்துக்கொண்டால் கதகதப்பாக இருக்கும்.
தனியாக இருப்பவனால் எப்படிக் கதகதப்பாக இருக்க முடியும்? **12** தனி
யாக இருப்பவனை ஒருவன் சுலபமாக வீழ்த்திவிடலாம். ஆனால், இரண்டு
பேராக இருந்தால் அவனை எதிர்த்து நிற்க முடியும். மூன்று இழைகள்
சேர்ந்த கயிற்றைச் சீக்கிரத்தில் அறுக்க முடியாது.

13 வயதானவராக இருந்தாலும் எச்சரிக்கையைக் கேட்டு நடக்கிற அள
வுக்குக்கூட புத்தி இல்லாத முட்டாள் ராஜாவைவிட,[f] ஏழையாக இருந்
தாலும் ஞானமாக நடக்கிற இளைஞனே மேல்.[g] **14** ஏனென்றால், அந்த
ராஜாவின் ஆட்சியில் அவன்* ஏழையாகப் பிறந்திருந்தாலும்,[h] சிறைச்
சாலையிலிருந்து வெளியே வந்து ராஜாவாக ஆனான்.[i] **15** சூரியனுக்குக்
கீழே நடமாடுகிற எல்லாரையும் பற்றி யோசித்துப் பார்த்தேன். ராஜாவுக்கு
அடுத்தபடியாகச் சிம்மாசனத்தில் உட்காரும் வாரிசைப் பற்றியும் யோசித்
துப் பார்த்தேன். **16** அவனுக்கு ஏகப்பட்ட ஆதரவாளர்கள் இருந்தாலும்,
பிற்பாடு வருகிறவர்களுக்கு அவனைப் பிடிக்காது.[j] இதுவும் வீண்தான், காற்
றைப் பிடிக்க ஓடுவதற்குச் சமம்தான்.

5 உண்மைக் கடவுளின் ஆலயத்துக்குப் போகும்போதெல்லாம் கவன
மாக நடந்துகொள்.[k] முட்டாள்கள் பலி செலுத்துவதுபோல் பலி
செலுத்தப் போவதைவிட,[l] காதுகொடுத்துக் கேட்பதற்காகப்[m] போவது நல்
லது. ஏனென்றால், முட்டாள்கள் தாங்கள் செய்வது தவறு என்றே தெரியா
மல் இருக்கிறார்கள்.

2 உண்மைக் கடவுளுக்கு முன்னால் அவசரப்பட்டு எதையும் பேசி
விடாதே, உள்ளம் பதறி எதையாவது சொல்லிவிடாதே.[n] ஏனென்றால்,
உண்மைக் கடவுள் பரலோகத்தில் இருக்கிறார். ஆனால், நீ பூமியில் இருக்கி
றாய். அதனால், அளவாகப் பேசு.[o] **3** ஏகப்பட்ட யோசனைகளால்* கனவு
வரும்.[p] ஏகப்பட்ட வார்த்தைகளால் முட்டாள்தனமான பேச்சு வரும்.[q] **4** நீ
கடவுளிடம் எதையாவது நேர்ந்துகொண்டால், அதை நிறைவேற்றத் தாமதிக்
காதே.[r] ஏனென்றால், நேர்ந்துகொண்டதை நிறைவேற்றாத முட்டாள்களைக்

4:6 *நே.மொ., "இரண்டு கைப்பிடி அளவு." #நே.மொ., "ஒரு கைப்பிடி அளவு."
4:14 *ஒருவேளை, அந்த ஞானமான இளைஞனைக் குறிக்கலாம். **5:3** *வே.வா.,
"கவலைகளால்."

அதி. 4
a சங் 37:16; நீதி 15:16; நீதி 16:8; நீதி 17:1
b நீதி 27:20; பிர 5:10
c சங் 39:6; லூ 12:18-20
d பிர 2:22, 23
e ஆதி 2:18; நீதி 27:17
f 1ரா 22:8; 2நா 25:15, 16
g நீதி 19:1; நீதி 28:6, 16
h 2சா 7:8; யோபு 5:11
i ஆதி 41:14, 40
j 2சா 20:1

அதி. 5
k சங் 15:1, 2
l 1சா 13:12, 13; 1சா 15:22; நீதி 21:27; ஏசா 1:13; ஓசி 6:6
m உபா 31:12; அப் 17:11
n எண் 30:2; 1சா 14:24
o நீதி 10:19
p மத் 6:25, 34; லூ 12:18-20
q நீதி 10:19; நீதி 15:2
r உபா 23:21; சங் 76:11; மத் 5:33

கடவுளுக்குப் பிடிக்காது.[a] நீ ஏதாவது நேர்ந்துகொண்டால், அதை நிறை
வேற்று.[b] **5** நேர்ந்துகொண்டதை நிறைவேற்றாமல் இருப்பதைவிட நேர்ந்
துகொள்ளாமல் இருப்பதே மேல்.[c] **6** உன் வாயினால் பாவம் செய்யாதபடி
பார்த்துக்கொள்.[d] தெரியாமல் சொல்லிவிட்டதாகத்[e] தேவதூதர் முன்னால்
சொல்லாதே. நீ சொன்னதைக் கேட்டு உண்மைக் கடவுள் ஏன் கோபப்பட்டு,
உன் கைகளின் வேலையை அழிக்க வேண்டும்?[f] **7** ஏகப்பட்ட விஷ
யங்களை யோசிப்பதால் கனவுகள் வருவதுபோல்,[g] ஏகப்பட்ட வார்த்தைக
ளைப் பேசுவதால் வீணான விளைவுகள்தான் ஏற்படும். அதனால், உண்
மைக் கடவுளுக்குப் பயப்படு.[h]

8 ஏழைகள் ஒடுக்கப்படுவதையும் நீதி நியாயம் புரட்டப்படுவதையும்
எங்கேயாவது பார்த்தால் அதிர்ச்சி அடையாதே.[i] அப்படிச் செய்கிற அதி
காரியை அவருடைய உயர் அதிகாரி கவனித்துக்கொண்டுதான் இருக்கி
றார். அவர்கள் இரண்டு பேருக்கு மேலேயும் உயர் அதிகாரிகள் இருக்கி
றார்கள்.

9 நிலத்தின் விளைச்சலில் கிடைக்கிற லாபத்தை அவர்கள் எல்லாரும்
பங்குபோட்டுக்கொள்கிறார்கள். வயலின் விளைச்சலால்தான் ராஜாவும்கூட
சாப்பிடுகிறார்.[j]

10 வெள்ளியை நேசிக்கிறவன் எவ்வளவு வெள்ளி கிடைத்தாலும் திருப்
தியடைய மாட்டான். சொத்துகளை விரும்புகிறவன் எவ்வளவு வருமானம்
வந்தாலும் திருப்தியடைய மாட்டான்.[k] இதுவும் வீண்தான்.[l]

11 சொத்துகள்* சேரச் சேர அதை அனுபவிக்கிற ஆட்களும் அதிகமா
கிறார்கள்.[m] அந்தச் சொத்துகளைக் கண்ணால் பார்ப்பதைத் தவிர அதன்
சொந்தக்காரருக்கு வேறென்ன பிரயோஜனம் இருக்கிறது?[n]

12 வேலை செய்கிறவன் கொஞ்சம் சாப்பிட்டாலும் சரி, நிறைய சாப்
பிட்டாலும் சரி, நிம்மதியாகத் தூங்குவான். ஆனால், ஏராளமாகச் சொத்து
சேர்த்து வைத்திருப்பவன் தூங்க முடியாமல் தவிப்பான்.

13 சூரியனுக்குக் கீழே நடக்கிற ஒரு பெரிய கொடுமையைப் பார்த்தேன்.
சொத்துகளைக் குவித்து வைக்கிறவனுக்கு அந்தச் சொத்துகளாலேயே கேடு
உண்டாகிறது. **14** தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு அந்தச் சொத்துகளெல்
லாம் பறிபோய்விடுகிறது. அவனுக்குப் பிள்ளை பிறக்கும்போது அந்தப்
பிள்ளைக்குக் கொடுக்க எந்தச் சொத்தும் இருப்பதில்லை.[o]

15 ஒருவன் தாயின் வயிற்றிலிருந்து வரும்போது நிர்வாணமாக வரு
வது போலவே, போகும்போதும் நிர்வாணமாகத்தான் போகிறான்.[p] பாடுபட்
டுச் சம்பாதித்த எதையும் அவனால் கொண்டுபோக முடியாது.[q]

16 இதுவும் சோகத்திலும் சோகம்தான். அவன் எப்படி வந்தானோ
அப்படியே போவான். அதனால், காற்றைப் பிடிக்க ஓடி ஓடி உழைப்பதில்
என்ன லாபம்?[r] **17** அதோடு, ஒவ்வொரு நாளும் அவன் இருட்டில்தான்
சாப்பிடுகிறான்; விரக்தியோடும் வியாதியோடும் எரிச்சலோடும்தான் சாப்பி
டுகிறான்.[s]

18 மனுஷன் எதைச் செய்வது நல்லது என்றும் தகுந்தது என்றும் நான்
புரிந்துகொண்டேன்: சாப்பிட்டு, குடித்து, சூரியனுக்குக் கீழே உண்மைக்
கடவுள் கொடுத்திருக்கிற குறுகிய வாழ்நாளில் தன் உழைப்புக்கெல்லாம்

5:11 * வே.வா., “நல்ல பொருள்கள்.”

அதி. 5
a பிர 10:12
b எண் 30:2; சங் 66:13
c உபா 23:22; நீதி 20:25
d நியா 11:35
e லேவி 5:4
f சங் 127:1; ஆகா 1:11
g பிர 5:3
h பிர 12:13
i பிர 3:16
j 1சா 8:11, 12; 1ரா 4:7; 2நா 26:9, 10; உன் 8:11
k பிர 4:8
l மத் 6:24; லூ 12:15; 1தீ 6:10
m 1ரா 4:22, 23
n நீதி 23:4, 5; 1யோ 2:16
o நீதி 23:4, 5; மத் 6:19
p யோபு 1:21
q சங் 49:17; லூ 12:20; 1தீ 6:7
r மத் 16:26; யோவா 6:27
s 1தீ 6:10

சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும்.[a] இதுதான் அவனுக்குக் கிடைக்
கும் பலன்.[b] **19** அதுமட்டுமல்ல, உண்மைக் கடவுள் ஒருவனுக்குச் சொத்
துப்பத்துகளையும்[c] அவற்றை அனுபவிக்கிற திறனையும் கொடுக்கும்போது,
அதைத் தனக்குக் கிடைக்கும் பலனாக அவன் நினைக்க வேண்டும்; தன்
கடின உழைப்பைக் குறித்து சந்தோஷப்பட வேண்டும். இது கடவுள் தரும்
பரிசு.[d] **20** அவனுடைய வாழ்நாள் காலம் எவ்வளவு வேகமாக ஓடுகிறது
என்பதைக்கூட அவன் கவனிப்பதில்லை.* ஏனென்றால், உண்மைக் கடவுள்
அவனுடைய உள்ளத்தை அந்தளவு சந்தோஷத்தால் நிரப்புகிறார்.[e]

6 இன்னொரு சோகமான காரியத்தையும் சூரியனுக்குக் கீழே பார்த்தேன்.
இது மனுஷர்கள் மத்தியில் சர்வ சாதாரணமாக நடக்கிறது: **2** உண்
மைக் கடவுள் ஒருவனுக்குச் செல்வத்தையும் சொத்துசுகத்தையும் பேர்புக
ழையும் கொடுக்கிறார். அவன் ஆசைப்பட்டதெல்லாம் அவனுக்குக்
கிடைக்கிறது. ஆனால், அதையெல்லாம் அவன் அனுபவிக்க முடியாத
படி உண்மைக் கடவுள் செய்துவிடுகிறார். யாரோ ஒருவன்தான் அதை
யெல்லாம் அனுபவிக்கிறான். இதுவும் வீண்தான், கொடுமையிலும் கொடு
மைதான்! **3** ஒரு மனுஷன் நூறு பிள்ளைகளைப் பெற்று, நீண்ட காலம்
வாழ்ந்து, முதுமை அடைந்தாலும், கல்லறைக்குப் போவதற்கு முன்பு தன்
சொத்துகளை அவன் திருப்தியாக அனுபவிப்பதில்லை. செத்துப் பிறக்
கும் குழந்தையே அவனைவிட மேல் என்றுதான் சொல்வேன்.[f] **4** அந்தக்
குழந்தை வீணாகப் பிறக்கிறது, இருட்டோடு இருட்டாக மறைந்துபோகிறது,
பெயர் இல்லாமலேயே புதைந்துபோகிறது. **5** அது சூரியனைப் பார்ப்ப
தும் இல்லை, எதைப் பற்றியும் தெரிந்துகொள்வதும் இல்லை. ஆனாலும்,
அந்த மனுஷனைவிட அது எவ்வளவோ மேல்.[g] **6** ஒருவன் இரண்டாயி
ரம் வருஷம் வாழ்ந்தும் எதையுமே அனுபவிக்கவில்லை என்றால் என்ன
லாபம்? எல்லாரும் ஒரே இடத்துக்குத்தானே போகிறார்கள்?[h]

7 மனுஷன் பாடுபட்டு வேலை செய்வதெல்லாம் வயிற்றை நிரப்புவதற்
காகத்தான்.[i] ஆனால், அவனுடைய ஆசைகள் நிறைவேறுவதே இல்லை.
8 முட்டாளாக இருப்பதைவிட ஞானியாக இருப்பதில் என்ன நன்மை?[j]
வாழ்க்கையை எப்படி ஓட்டுவது என்று ஏழைக்குத் தெரிந்திருந்தும் என்ன
பிரயோஜனம்? **9** ஆசைப்பட்டதை அடைவதற்காக அலைந்து திரிவதை
விட கண் முன்னால் இருப்பதை அனுபவிப்பது நல்லது. இதுவும் வீண்தான்,
காற்றைப் பிடிக்க ஓடுவதற்குச் சமம்தான்.

10 உலகத்தில் இருக்கிற எல்லாவற்றுக்கும் ஏற்கெனவே பெயர் வைக்கப்
பட்டிருக்கிறது. மனுஷன் எப்படிப்பட்டவன் என்பதும் வெளிப்படுத்தப்பட்
டிருக்கிறது. தன்னைவிட சக்தியுள்ள ஒருவரிடம் அவனால் வாக்குவாதம்
செய்ய* முடியாது. **11** எந்தளவுக்கு வார்த்தைகள்* கூடுகிறதோ அந்தள
வுக்கு அவை வீணானவை. அவற்றால் மனுஷனுக்கு என்ன நன்மை?
12 மனுஷனின் வாழ்நாள் வீணானது, நிழல்போல் சீக்கிரம் மறைந்துவிடுகி
றது.[k] அந்தக் குறுகிய காலத்தில் அவன் எப்படி வாழ்ந்தால் நல்லது என்று
யாருக்குத் தெரியும்? அவன் இறந்த பிறகு சூரியனுக்குக் கீழே என்ன நடக்
கும் என்று அவனுக்கு யாரால் சொல்ல முடியும்?

5:20 *வே.வா., "நினைப்பதில்லை." **6:10** *வே.வா., "அவனால் தன் தரப்பில் வாதாட." **6:11** *அல்லது, "பொருள்கள்."

அதி. 5
a 1ரா 4:20
b பிர 2:24; பிர 3:22; ஏசா 65:21, 22
c 1ரா 3:12, 13; யோபு 42:12
d உபா 8:10; பிர 3:12, 13; 1தீ 6:17; யாக் 1:17
e உபா 28:8; சங் 4:7

அதி. 6
f பிர 4:2, 3
g யோபு 3:11, 13; யோபு 14:1
h யோபு 30:23; பிர 3:20; ரோ 5:12
i ஆதி 3:19; நீதி 16:26
j சங் 49:10; பிர 2:15, 16
k 1நா 29:15; யோபு 8:9; யோபு 14:1, 2; சங் 102:11

அதி. 7
a நீதி 10:7
நீதி 22:1
ஏசா 56:5
லூ 10:20
b ஏசா 5:11, 12
c சங் 119:71
லூ 6:21
d 2கொ 7:10
எபி 12:11
e 1சா 25:36
நீதி 21:17
f சங் 141:5
நீதி 15:31
g பிர 2:2
h யாத் 23:8
உபா 16:19
1சா 8:1-3
நீதி 17:23
i நீதி 13:10
யாக் 5:10
1பே 5:5
j நீதி 16:32
யாக் 1:19
k ஆதி 4:5
எஸ்தர் 5:9
நீதி 14:17, 29
நீதி 29:11
l லூ 9:62
m நீதி 10:15
n நீதி 4:5, 6
o நீதி 3:13, 18
நீதி 8:35
நீதி 9:11
p யோபு 9:12
ஏசா 14:27
q யாக் 5:13
r யோபு 2:10
ஏசா 45:7
s நீதி 27:1
பிர 9:11
யாக் 4:13, 14
t சங் 39:5
u ஆதி 4:8
1சா 22:18
v யோபு 21:7
சங் 73:12
w ஏசா 65:5
மத் 6:1
ரோ 10:3
ரோ 14:10
x நீதி 3:7
ரோ 12:3
y நீதி 16:18
z சங் 14:1
நீதி 14:9
a சங் 55:23
நீதி 10:27

7 விலைமதிப்புள்ள எண்ணெயைவிட நல்ல பெயர் சிறந்தது.[a] ஒருவ
ருடைய பிறந்த நாளைவிட இறந்த நாள் நல்லது. **2** விருந்து வீட்டுக்
குப் போவதைவிட துக்க வீட்டுக்குப் போவது நல்லது.[b] ஏனென்றால்,
எல்லாருக்கும் சாவுதான் முடிவு; உயிரோடு இருப்பவர்கள் இதை மனதில்
வைத்துக்கொள்ள வேண்டும். **3** சிரிப்பதைவிட வருத்தமாக இருப்பது நல்
லது.[c] முகம் வாடினால் இதயம் பக்குவப்படும்.[d] **4** ஞானமுள்ளவரின் இத
யம் துக்க வீட்டில் இருக்கும். ஆனால், முட்டாளின் இதயம் விருந்து* வீட்
டில் இருக்கும்.[e]

5 முட்டாள்களின் பாடல்களைக் கேட்பதைவிட ஞானமுள்ளவரின் கண்
டிப்பைக் கேட்பது நல்லது.[f] **6** பானைக்கு அடியில் எரிகிற முட்களின் சத்
தத்தைப் போலத்தான் முட்டாளின் சிரிப்புச் சத்தமும் இருக்கிறது,[g] இதுவும்
வீண்தான். **7** ஒடுக்குதல் ஞானமுள்ளவரைக்கூட பைத்தியக்காரத்தனமாக
நடக்க வைக்கும். லஞ்சம் உள்ளத்தைக் கெடுக்கும்.[h]

8 ஒரு செயலின் ஆரம்பத்தைவிட அதன் முடிவு நல்லது. பெருமையை
விட பொறுமை நல்லது.[i] **9** சட்டென்று கோபப்படாதே;[j] முட்டாள்களின்
நெஞ்சில்தான் கோபம் குடியிருக்கும்.*[k]

10 “இந்தக் காலத்தைவிட அந்தக் காலம் எவ்வளவு நன்றாக இருந்தது!”
என்று சொல்லாதே. அப்படிச் சொல்வது ஞானம் அல்ல.[l]

11 சொத்துசுகத்தோடு ஞானமும் இருந்தால் நல்லது. உயிரோடு இருக்
கிறவர்களுக்கு* ஞானம் பிரயோஜனமாக இருக்கும். **12** ஏனென்றால்,
பணம் பாதுகாப்பு தருவதுபோல்[m] ஞானமும் பாதுகாப்பு தரும்.[n] ஆனால்,
பணத்தைவிட சிறந்தது அறிவும் ஞானமும்தான். ஏனென்றால், அவை ஒரு
வருடைய உயிரையே காப்பாற்றும்.[o]

13 உண்மைக் கடவுளின் செயல்களை யோசித்துப் பாருங்கள். அவர்
கோணலாக்கியதை யாரால் நேராக்க முடியும்?[p] **14** சந்தோஷமான
நாளில், அந்தச் சந்தோஷத்தை அனுபவியுங்கள்.[q] ஆனால் கஷ்டமான
நாளில், அந்த இரண்டு நாட்களையும் கடவுள்தான் அனுமதித்திருக்கிறார்
என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.[r] எதிர்காலத்தில் என்ன நடக்குமென்று
மனுஷர்கள் தெரிந்துகொள்ளாமல்*[s] இருப்பதற்காகத்தான் அவர் அப்படிச்
செய்திருக்கிறார் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

15 வீணான இந்த வாழ்க்கையில்[t] நான் எல்லாவற்றையும் பார்த்துவிட்
டேன். நீதிமானாக இருந்தும் சீக்கிரத்தில் இறந்துபோகிறவனும் உண்டு,[u]
பொல்லாதவனாக இருந்தும் ரொம்பக் காலம் வாழ்கிறவனும் உண்டு.[v]

16 உன்னைப் பெரிய நீதிமானாகவோ[w] பெரிய ஞானியாகவோ[x] காட்
டிக்கொள்ளாதே, உன்னை நீயே ஏன் அழித்துக்கொள்ள வேண்டும்?[y]
17 நீ படுமோசமானவனாகவோ படுமுட்டாளாகவோ நடந்துகொள்
ளாதே.[z] உன் காலத்துக்கு முன்பே நீ ஏன் சாக வேண்டும்?[a] **18** முத
லாவதாகச் சொல்லப்பட்ட ஆலோசனையை* கேட்டு நடந்து, இரண்டாவ
தாகச் சொல்லப்பட்ட ஆலோசனையையும்# விட்டுவிடாமல் இருப்பதுதான்

7:4 *வே.வா., “கொண்டாட்டமான.” **7:9** *அல்லது, “இது முட்டாளின் அடை
யாளம்.” **7:11** *நே.மொ., “சூரியனைப் பார்க்கிறவர்களுக்கு.” **7:14** *வே.வா., “கண்
டுபிடிக்காமல்.” **7:18** *இது 16-வது வசனத்தில் சொல்லப்பட்ட ஆலோசனை
யைக் குறிக்கிறது. #இது 17-வது வசனத்தில் சொல்லப்பட்ட ஆலோசனையைக்
குறிக்கிறது.

மிகவும் நல்லது.[a] கடவுளுக்குப் பயந்து நடக்கிறவன் இந்த இரண்டையுமே
செய்வான்.

19 ஓர் ஊரிலுள்ள பத்துப் பலசாலிகளைவிட ஞானம் ஒரு ஞானியை
அதிக பலசாலியாக ஆக்கும்.[b] **20** பாவமே செய்யாமல் நல்லதே செய்கிற
நீதிமான் இந்தப் பூமியில் ஒருவன்கூட இல்லை.[c]

21 மற்றவர்கள் சொல்கிற ஒவ்வொரு வார்த்தையையும் பெரிதாக எடுத்
துக்கொள்ளாதே.[d] இல்லாவிட்டால், உன் வேலைக்காரன் உன்னைப் பற்றி
மோசமாகப் பேசுவதைக்கூட நீ கேட்க வேண்டியிருக்கும். **22** நீயும்கூட
பல தடவை மற்றவர்களைப் பற்றி மோசமாகப் பேசியிருக்கிறாய் என்பது
உன் உள்ளத்துக்கு நன்றாகத் தெரியுமே.[e]

23 இதையெல்லாம் நான் ஞானத்தோடு சீர்தூக்கிப் பார்த்தேன். "நான்
ஞானி ஆவேன்" என்று சொன்னேன். ஆனால், அது முடியாத காரியமாகி
விட்டது. **24** இதுவரை நடந்திருப்பதெல்லாம் அறிவுக்கு எட்டாதவை, மிக
மிக ஆழமானவை. இதை யாரால்தான் புரிந்துகொள்ள முடியும்?[f]
25 ஞானத்தையும் ஒவ்வொரு விஷயத்துக்குப் பின்னால் இருக்கிற கார
ணங்களையும் பற்றித் தேடிப் பார்ப்பதற்கும் அலசி ஆராய்வதற்கும் நான்
கவனம் செலுத்தினேன். முட்டாள்தனம் எவ்வளவு பொல்லாதது என்பதை
யும், பைத்தியக்காரத்தனம் எவ்வளவு மடத்தனமானது என்பதையும் புரிந்து
கொள்ள முயற்சி செய்தேன்.[g] **26** அப்போது, இதைத் தெரிந்துகொண்
டேன்: ஒழுக்கங்கெட்ட பெண் மரணத்தைவிட கொடூரமானவள். வேடன்
விரிக்கிற வலையைப் போல அவள் இருக்கிறாள்; அவளுடைய இதயம்
மீன்பிடிக்கிற வலையைப் போல இருக்கிறது, அவளுடைய கைகள் கைதிக
ளைக் கட்டிவைக்கும் சங்கிலிகளைப் போல இருக்கின்றன. உண்மைக் கட
வுளுக்குப் பிரியமாக நடக்கிறவன் அவளிடமிருந்து தப்பித்துக்கொள்வான்.[h]
ஆனால், பாவி அவளுடைய வலையில் சிக்கிக்கொள்வான்.[i]

27 "இதோ, இதைத்தான் நான் தெரிந்துகொண்டேன்" என்று பிரசங்கி[j]
சொல்கிறார். "ஒரு முடிவுக்கு வருவதற்காக ஒவ்வொரு விஷயமாய்
ஆராய்ச்சி செய்தேன். **28** அப்படி ஆராய்ச்சி செய்துகொண்டே இருந்தும்,
என்னால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆயிரம் பேரில் ஒருவனை*
பார்த்தேன், ஆனால் ஒருத்தியைக்கூட பார்க்கவில்லை. **29** ஒன்றை மட்
டும் தெரிந்துகொண்டேன்: உண்மைக் கடவுள் மனுஷர்களை நேர்மையான
ஆட்களாகத்தான் படைத்தார்,[k] அவர்கள்தான் நிறைய திட்டங்களைத் தீட்
டியிருக்கிறார்கள்."[l]

8 ஞானமுள்ளவனுக்கு நிகரானவன் யார்? பிரச்சினைக்குத் தீர்வு* தெரிந்
தவன் யார்? ஒருவனுடைய ஞானம் அவனுடைய முகத்தைப் பிரகாச
மாக்கும், அவனுடைய கடுகடுப்பான முகத்தைக்கூட சாந்தமாக்கும்.

2 நான் சொல்வது இதுதான்: "நீ கடவுளுக்குக் கொடுத்திருக்கும் உறுதி
மொழியை[m] மதித்து, ராஜாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படி.[n] **3** அவச
ரப்பட்டு அவர் முன்னாலிருந்து போய்விடாதே.[o] கெட்ட காரியத்தைச்
செய்வதில் பிடிவாதமாக இருக்காதே.[p] அவரால் என்ன வேண்டுமானா
லும் செய்ய முடியும். **4** ராஜா சொன்னால் சொன்னதுதான்.[q] 'ஏன் இப்ப
டிச் செய்கிறீர்கள்?' என்று யாரும் அவரிடம் கேட்க முடியாது."

7:28 *வே.வா., "நேர்மையான ஒருவனை." **8:1** *வே.வா., "ஒரு விஷயத்துக்கு அர்த்தம்."

அதி. 7
a பிலி 4:5
b நீதி 21:22; நீதி 24:5
c 2நா 6:36; சங் 51:5; ரோ 3:23; 1யோ 1:8
d 1சா 24:9
e யாக் 3:2, 8, 9
f சங் 36:6; சங் 139:6; ஏசா 55:9; ரோ 11:33
g பிர 1:17; பிர 2:12
h ஆதி 39:7-9
i நீதி 5:3, 14; நீதி 7:22, 23; நீதி 22:14
j பிர 1:1
k ஆதி 1:26, 31
l ஆதி 3:6; ஆதி 6:12; உபா 32:5

அதி. 8
m 2சா 5:3
n நீதி 24:21, 22; ரோ 13:1; தீத் 3:1; 1பே 2:13
o பிர 10:4
p 1ரா 1:5, 7; நீதி 20:2
q 1ரா 2:24, 25

அதி. 8

5 கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவனுக்கு எந்தக் கெடுதலும் வராது.[a]
சரியான நேரமும் வழிமுறையும்* ஞானமுள்ளவனின் இதயத்துக்குத் தெரி
யும்.[b] **6** மனுஷர்களுக்கு ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. எல்லா
காரியத்துக்குமே ஒரு நேரமும் வழிமுறையும் உண்டு.[c] **7** என்ன நடக்கும்
ஏது நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. அப்படியிருக்கும்போது, அது
எப்படி நடக்கும் என்று யாரால் சொல்ல முடியும்?

8 உயிர்சக்தியை* கட்டுப்படுத்தவோ பிடித்து வைக்கவோ எந்த மனுஷ
னாலும் முடியாது. அதேபோல், சாவு நாளை மாற்றுகிற அதிகாரமும் யாருக்
குமே கிடையாது.[d] போர்வீரனுக்குப் போர்க்களத்தைவிட்டுப் போக எப்படி
அனுமதி கிடைக்காதோ அப்படித்தான் அக்கிரமக்காரர்களையும் அக்கிர
மம் தப்பிக்க விடாது.#

9 இதையெல்லாம் நான் பார்த்தேன். சூரியனுக்குக் கீழே நடக்கிற
எல்லாவற்றையும் கவனித்தேன். இவ்வளவு காலமாக மனுஷனை மனு
ஷன் அடக்கி ஆண்டிருப்பதால் அவனுக்குக் கேடுதான் வந்திருக்கிறது.[e]
10 பரிசுத்த இடத்துக்குப் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்த
பொல்லாதவர்கள் அடக்கம் செய்யப்பட்டதை நான் பார்த்தேன். அவர்கள்
அக்கிரமம் செய்த நகரத்தில் சீக்கிரமாக மறக்கப்பட்டுப்போனார்கள்.[f] இது
வும் வீண்தான்.

11 கெட்ட காரியத்தைச் செய்தவனுக்கு உடனடியாகத் தண்டனை
கிடைக்காததால்,[g] மனுஷர்களின் இதயம் கெட்ட காரியங்களைச் செய்யத்
துணிந்துவிடுகிறது.[h] **12** பாவி ஒருவன் கெட்ட காரியங்களை நூறு தடவை
செய்திருந்தும் ரொம்பக் காலம் வாழலாம். ஆனாலும், உண்மைக் கடவு
ளுக்குப் பயந்து நடக்கிறவர்களுக்குத்தான் எல்லாமே நல்லபடியாக நடக்
கும் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால், அவர்கள் உண்மையிலேயே
கடவுளுக்குப் பயந்து நடக்கிறார்கள்.[i] **13** பொல்லாதவனுக்கு எதுவும் நல்ல
படியாக நடக்காது.[j] நிழல் போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடிக்காது.[k]
ஏனென்றால், அவன் கடவுளுக்குப் பயந்து நடப்பதே இல்லை.

14 இந்தப் பூமியில் வீணான* ஒரு காரியம் நடக்கிறது: நீதிமான்
கள் பொல்லாதவர்களைப் போலவும்,[l] பொல்லாதவர்கள் நீதிமான்களைப்
போலவும் நடத்தப்படுகிறார்கள்.[m] இதுவும் வீண்தான் என்று நான்
சொல்கிறேன்.

15 அதனால், என் சிபாரிசு இதுதான்: சந்தோஷமாக இருங்கள்.[n] சாப்
பிட்டு, குடித்து, சந்தோஷமாக இருப்பதைவிட சிறந்தது சூரியனுக்குக் கீழே
வேறெதுவும் இல்லை. சூரியனுக்குக் கீழே உண்மைக் கடவுள் கொடுத்திருக்
கிற வாழ்நாளில் கடினமாக வேலை செய்யும்போது சந்தோஷமாக இருக்க
வேண்டும்.[o]

16 ஞானத்தைச் சம்பாதிக்கவும் இந்தப் பூமியில் நடக்கிற காரியங்களை
யெல்லாம் பார்க்கவும் நான் கவனம் செலுத்தினேன்.[p] அதற்காக ராத்
திரி பகலாக நான் தூங்காமல் இருந்தேன்.* **17** பிறகு, உண்மைக்
கடவுள் செய்கிற எல்லாவற்றையும் பற்றி யோசித்துப் பார்த்தேன். சூரியனுக்
குக் கீழே நடக்கிற விஷயங்களை மனுஷர்களால் புரிந்துகொள்ள முடியாது

a ரோ 13:5; 1பே 3:13
b 1சா 24:12, 13; 1சா 26:8-10; சங் 37:7
c பிர 3:17
d சங் 89:48
e யாத் 1:13, 14; மீ 7:3
f நீதி 10:7
g சங் 10:4, 6
h 1சா 2:22, 23
i சங் 34:9; சங் 103:13; சங் 112:1; ஏசா 3:10; 2பே 2:9
j சங் 37:10; ஏசா 57:21
k யோபு 24:24
l பிர 7:15
m சங் 37:7; சங் 73:12
n சங் 100:2
o பிர 2:24; பிர 3:12, 13
p பிர 1:13; பிர 7:25

8:5 * வே.வா., "தீர்ப்பும்." **8:8** * வே.வா., "உயிர்மூச்சை; காற்றை." # அல்லது, "அக்கிரமத்தால் காப்பாற்ற முடியாது." **8:14** * வே.வா., "விரக்தியடைய வைக்கும்." **8:16** * அல்லது, "மக்கள் ராத்திரி பகலாகத் தூங்காமல் இருப்பதைப் பார்த்தேன்."

என்பதைத் தெரிந்துகொண்டேன்.[a] என்னதான் முயற்சி செய்தாலும், அவர்
களால் அவற்றைப் புரிந்துகொள்ளவே முடியாது. அவற்றைத் தெரிந்து
கொள்கிற அளவுக்கு ஞானம் இருப்பதாகச் சொல்லிக்கொண்டாலும், அவர்
களால் புரிந்துகொள்ளவே முடியாது.[b]

9 அதனால், இதையெல்லாம் ஆழமாக யோசித்துப் பார்த்து ஒரு
முடிவுக்கு வந்தேன்: நீதிமான்களும் ஞானமுள்ளவர்களும் உண்மைக்
கடவுளுடைய கையில் இருக்கிறார்கள். அவர்களுடைய செயல்களும்
அவருடைய கையில்தான் இருக்கின்றன.[c] தங்களுக்கு முன்பு வாழ்ந்த
வர்கள் காட்டிய அன்பையும் வெறுப்பையும் பற்றி மனுஷர்களுக்குத்
தெரியாது. **2** நீதிமான்களோ பொல்லாதவர்களோ,[d] நல்ல குணமும் பரி
சுத்தமும் உள்ளவர்களோ பரிசுத்தம் இல்லாதவர்களோ, பலி செலுத்துகிறவர்
களோ பலி செலுத்தாதவர்களோ, எல்லாருக்கும் ஒரே கதிதான்.[e] நல்லவனுக்
கும் சரி, பாவிக்கும் சரி, உறுதிமொழி கொடுக்கிறவனுக்கும் சரி, உறுதிமொழி
கொடுக்க யோசிக்கிறவனுக்கும் சரி, ஒரே முடிவுதான். **3** சூரியனுக்குக்
கீழே நடக்கிற இன்னொரு கொடுமை இதுதான்: எல்லாருக்கும் ஒரே கதி[f]
ஏற்படுவதால் மனுஷர்களுடைய இதயம் தீமையால் நிறைந்திருக்கிறது. உயி
ரோடிருக்கிற காலத்தில் அவர்களுடைய இதயத்தில் பைத்தியக்காரத்தனம்
குடியிருக்கிறது. கடைசியில், அவர்கள் செத்துப்போகிறார்கள்.

4 உயிரோடு இருக்கிற எல்லாருக்கும் நம்பிக்கை இருக்கிறது. ஏனென்
றால், செத்த சிங்கத்தைவிட உயிருள்ள நாயே மேல்.[g] **5** உயிரோடு
இருக்கிறவர்களுக்குத் தாங்கள் என்றாவது ஒருநாள் சாக வேண்டியிருக்
கும் என்பது தெரியும்.[h] ஆனால், இறந்தவர்களுக்கு எதுவுமே தெரியாது,[i]
அவர்களுக்கு எந்தப் பலனும் இல்லை. ஏனென்றால், அவர்களைப் பற்றிய
நினைவே யாருக்கும் இல்லை.[j] **6** அவர்கள் காட்டிய அன்பும், வெறுப்பும்,
பொறாமையும் ஏற்கெனவே அழிந்துவிட்டன. சூரியனுக்குக் கீழே நடக்கிற
காரியங்களில் இனி அவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை.[k]

7 நீ போய் சந்தோஷமாகச் சாப்பிட்டு, ஆனந்தமாகத் திராட்சமது
குடி.[l] ஏனென்றால், உன் செயல்கள் உண்மைக் கடவுளுக்குப் பிரியமான
வையாக இருக்கின்றன.[m] **8** எப்போதும் வெள்ளை உடையை* உடுத்திக்
கொள், உன் தலைக்குத் தவறாமல் எண்ணெய் வைத்துக்கொள்.[n] **9** சூரிய
னுக்குக் கீழே கடவுள் உனக்குக் கொடுத்திருக்கிற நிலையில்லாத*
வாழ்நாளெல்லாம், உன் அருமை மனைவியோடு சேர்ந்து வாழ்க்கையைச்
சந்தோஷமாக அனுபவி.[o] உன்னுடைய நிலையில்லாத* வாழ்நாளெல்லாம்
அவளோடு சந்தோஷமாக இரு. ஏனென்றால், உன் வாழ்க்கைக்கும் சூரிய
னுக்குக் கீழே நீ உழைக்கிற உழைப்புக்கும் கிடைக்கிற பலன் இதுதான்.[p]
10 உன் கைகளால் எதைச் செய்தாலும் அதை முழு பலத்தோடு செய்.
ஏனென்றால், நீ போய்ச்சேரும் கல்லறையில்* வேலை செய்யவோ திட்டம்
போடவோ முடியாது; அங்கே அறிவோ ஞானமோ இல்லை.[q]

11 சூரியனுக்குக் கீழே நான் ஒரு விஷயத்தைக் கவனித்தேன். வேக
மாக ஓடுகிறவர்கள் எல்லா சமயத்திலும் முதலில் வருவதில்லை, பலசா
லிகள் எல்லா சமயத்திலும் போரில் ஜெயிப்பதில்லை,[r] ஞானமுள்ளவர்களி

9:8 * இது சந்தோஷத்தை வெளிக்காட்டும் பளிச்சென்ற உடையைக் குறிக்கிறது. **9:9** * வே.வா., “வீணான.” **9:10** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 8
a பிர 3:11; ரோ 11:33
b யோபு 28:12; பிர 7:24; பிர 11:5

அதி. 9
c உபா 33:3; 1சா 2:9; சங் 37:5
d பிர 8:10
e பிர 5:15
f யோபு 3:17–19; பிர 2:15
g ஏசா 38:19
h ஆதி 3:19; ரோ 5:12
i சங் 88:10; சங் 115:17; சங் 146:4; ஏசா 38:18; யோவா 11:11
j யோபு 7:9, 10; பிர 2:16
k பிர 9:10
l உபா 12:7; சங் 104:15; பிர 2:24
m உபா 16:15; அப் 14:17
n தானி 10:2, 3
o நீதி 5:18
p பிர 5:18
q சங் 115:17; சங் 146:3, 4; ஏசா 38:18
r 1சா 17:50; சங் 33:16

டம் எல்லா சமயத்திலும் உணவு இருப்பதில்லை, புத்திசாலிகளிடம் எல்லா
சமயத்திலும் சொத்து குவிந்திருப்பதில்லை,[a] அறிவாளிகளுக்கு எல்லா சம
யத்திலும் வெற்றி கிடைப்பதில்லை.[b] ஏனென்றால், எதிர்பாராத நேரத்
தில் எதிர்பாராத சம்பவங்கள் எல்லாருக்கும் நடக்கின்றன. **12** எந்த நேரத்
தில் என்ன நடக்கும் என்று மனுஷர்களுக்குத் தெரியாது.[c] மீன்கள் கொடிய
வலையில் மாட்டிக்கொள்வது போலவும், பறவைகள் கண்ணியில் சிக்
கிக்கொள்வது போலவும், மனுஷர்கள் திடீரென்று அழிவில் சிக்கிக்கொள்
கிறார்கள்.

13 சூரியனுக்குக் கீழே நான் ஞானத்தைப் பற்றி ஒரு விஷயத்தைத்
தெரிந்துகொண்டேன், அது என் மனதில் ஆழமாகப் பதிந்தது: **14** ஒரு
சின்ன ஊரில் சில ஆட்கள் இருந்தார்கள். பலமுள்ள ஒரு ராஜா படை
யெடுத்து வந்து அதைச் சுற்றிவளைத்தான். அதைப் பிடிப்பதற்காகப்
பெரிய மண்மேடுகளை அமைத்தான். **15** அந்த ஊரில் ஒரு ஏழை இருந்
தான். அவன் ஞானமுள்ளவன். தன்னுடைய ஞானத்தால் அந்த ஊரைக்
காப்பாற்றினான். ஆனால், அந்த ஏழையை எல்லாரும் மறந்துவிட்டார்கள்.[d]
16 அதனால், நான் இப்படி நினைத்துக்கொண்டேன்: 'பலத்தைவிட ஞானம்
சிறந்தது.[e] ஆனாலும், ஏழையின் ஞானத்தை யாரும் மதிப்பதில்லை. அவ
னுடைய வார்த்தைகளை யாரும் காதில் வாங்குவதில்லை.'[f]

17 முட்டாள்களை ஆளுகிறவன் போடுகிற கூச்சலைக் கேட்பதை
விட, ஞானமுள்ளவன் அமைதியாகச் சொல்கிற வார்த்தைகளைக் கேட்
பது நல்லது.

18 போர் ஆயுதங்களைவிட ஞானம் சிறந்தது. ஆனால், ஒரேவொரு
பாவியால் எத்தனையோ நல்ல காரியங்களைக் கெடுத்துப்போட முடியும்.[g]

10 செத்த ஈக்களால் வாசனைத் தைலம் கெட்டுப்போய் நாற்றமெடுக்க
ஆரம்பித்துவிடும். அதேபோல், சின்ன முட்டாள்தனத்தால் ஒருவ
ரின் ஞானமும் மதிப்பு மரியாதையும் கெட்டுவிடும்.[h]

2 ஞானமுள்ளவரின் இதயம் அவரை நேர் வழியில் கொண்டுபோகும்,
ஆனால் முட்டாளின் இதயம் அவனைக் குறுக்கு வழியில் கொண்டுபோ
கும்.[i] **3** முட்டாள் எந்த வழியில் போனாலும் புத்தி இல்லாமல்தான் நடக்
கிறான்.[j] தான் ஒரு முட்டாள் என்பதை எல்லாருக்கும் காட்டிவிடுகிறான்.[k]

4 ராஜா உன்மேல் கோபத்தில் சீறினால், உன்னுடைய இடத்தைவிட்டுப்
போய்விடாதே.[l] சாந்தமாக நடந்துகொண்டால், பெரிய பாவங்களைக்கூட
தடுத்துவிடலாம்.[m]

5 சூரியனுக்குக் கீழே நடக்கிற ஒரு வேதனையான விஷயத்தைக் கவ
னித்தேன். அதிகாரத்தில் இருக்கிறவர்கள் செய்கிற இந்தத் தவறைப்[n]
பார்த்தேன்: **6** முட்டாள்களை அவர்கள் மிகவும் உயர்ந்த நிலையில்
வைக்கிறார்கள், ஆனால் திறமைசாலிகளை* தாழ்ந்த நிலையிலேயே
விட்டுவிடுகிறார்கள்.

7 வேலைக்காரர்கள் குதிரைமேல் உட்கார்ந்து போவதையும், இளவரசர்
கள் வேலைக்காரர்களைப் போல் நடந்துபோவதையும் பார்த்தேன்.[o]

8 குழி வெட்டுகிறவன் அதே குழியில் விழுந்துவிடலாம்.[p] கற்சுவரை
உடைக்கிறவனைப் பாம்பு கொத்திவிடலாம்.

10:6 * நே.மொ., "பணக்காரர்களை."

அதி. 9
a பிர 2:15
b 2சா 17:23
c பிர 8:8; யாக் 4:13, 14
d பிர 9:11
e நீதி 21:22; நீதி 24:5; பிர 7:12, 19; பிர 9:18
f மாற் 6:3; 1கொ 2:8
g யோசு 22:20; 1கொ 5:6; எபி 12:15

அதி. 10
h எண் 20:10, 12; 2சா 12:9-11
i நீதி 14:8; நீதி 17:16
j நீதி 10:23
k நீதி 13:16; நீதி 18:7
l பிர 8:2, 3
m 1சா 25:23, 24; நீதி 25:15
n 1சா 26:21; 1ரா 12:13, 14
o நீதி 30:21-23
p நீதி 26:27

9 கற்களை உடைக்கிறவன் அவற்றால் காயப்படலாம், மரம் வெட்டுகிற
வனுக்கு அதனால் ஆபத்து ஏற்படலாம்.*

10 மழுங்கிப்போன கோடாலியைத் தீட்டாவிட்டால், ரொம்பவும் சிர
மப்பட வேண்டியிருக்கும். ஆனால், ஞானமாக நடந்தால் எல்லாவற்றையும்
நல்லபடியாகச் செய்ய முடியும்.

11 மகுடி ஊதுவதற்கு முன்பே பாம்பாட்டியைப் பாம்பு கடித்துவிட்டால்,
அவன் திறமையான பாம்பாட்டியாக இருந்தும் என்ன பிரயோஜனம்?

12 ஞானமுள்ளவரின் வாயிலிருந்து வருகிற வார்த்தைகள் நல்லது செய்
யும்,[a] ஆனால் முட்டாளின் உதடுகள் அவனை அழித்துவிடும்.[b] **13** முத
லில் அவன் பேசுகிற வார்த்தைகள் முட்டாள்தனமான வார்த்தைகள்;[c]
கடைசியில் அவன் பேசுகிற வார்த்தைகள் விபரீதத்தில் முடிகிற பைத்தி
யக்காரத்தனமான வார்த்தைகள். **14** முட்டாள் ஓயாமல் பேசிக்கொண்டே
இருப்பான்.[d]

அடுத்து என்ன நடக்கும் என்பது ஒரு மனுஷனுக்குத் தெரியாது; அப்
படியானால், அவன் இறந்த பின்பு என்ன நடக்கும் என்பதை அவனுக்கு
யாரால் சொல்ல முடியும்?[e]

15 முட்டாள் கடினமாக உழைத்துக் களைத்துப்போகிறான், ஆனால்
ஊருக்குப் போகும் வழியைக்கூட கண்டுபிடிக்கத் தெரியாமல் திணறுகிறான்.

16 ராஜா சிறுபிள்ளையாக இருந்தால்[f] நாடு எந்தளவுக்குச் சீரழியும்!
அதிகாரிகள் காலையிலேயே விருந்து சாப்பிடுகிறவர்களாக இருந்தால்
நாடு எந்தளவுக்குக் கெட்டுவிடும்! **17** ஆனால், ராஜா அரச குடும்பத்தில்
பிறந்தவராக இருந்தால், நாடு எந்தளவுக்குச் செழிக்கும்! அதிகாரிகள் அள
வுக்குமீறி குடிக்காமல்[g] வேளாவேளைக்குச் சாப்பிட்டுத் தெம்புள்ளவர்க
ளாக இருந்தால் நாடு எந்தளவுக்கு முன்னேறும்!

18 ஒருவன் படுசோம்பேறியாக இருந்தால் அவனுடைய வீட்டுக்கூரை
சாய்ந்து தொங்கும், ஒருவன் கைகளைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்தால்
வீடு ஒழுகும்.[h]

19 உணவு சிரித்து மகிழ்வதற்கு உதவும், திராட்சமது சந்தோஷமாக
வாழ்வதற்கு உதவும்;[i] ஆனால், பணம் எல்லாவற்றுக்குமே உதவும்.[j]

20 உன் உள்ளத்தில்கூட* ராஜாவைச் சபிக்காதே.[k] உன் படுக்கை அறை
யில்கூட பணக்காரனைப் பழிக்காதே. நீ பேசியதை ஒரு பறவை போய் அவ
னிடம் சொல்லிவிடலாம், ஒரு சின்னப் பறவைகூட அதை அப்படியே அவ
னிடம் ஒப்பித்துவிடலாம்.

11

உன் ரொட்டியைத் தண்ணீரின் மேல் தூக்கிப் போடு,[l] நிறைய நாட்
களுக்குப் பிறகு அது மறுபடியும் உனக்குக் கிடைக்கும்.[m] **2** உன்
னிடம் இருப்பதை ஏழு பேருக்குக் கொடு, எட்டுப் பேருக்குக்கூட கொடு.[n]
ஏனென்றால், இந்த உலகத்துக்கு எப்படிப்பட்ட பேராபத்து வருமென்று
உனக்குத் தெரியாதே.

3 மேகங்களில் தண்ணீர் நிறைந்திருந்தால், அது பூமியில் மழையா
கக் கொட்டும். மரம் வடக்கே விழுந்தாலும் தெற்கே விழுந்தாலும், விழுந்த
இடத்தில்தான் கிடக்கும்.

10:9 * அல்லது, “மரம் வெட்டுகிறவன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.” **10:20** * அல்லது, “படுக்கையில்கூட.”

அதி. 10
a 1ரா 10:6, 8; சங் 37:30; லூ 4:22; எபே 4:29
b சங் 64:2, 8; நீதி 10:14, 21; நீதி 14:3
c 1சா 25:10, 11
d நீதி 10:19; நீதி 15:2
e நீதி 27:1; பிர 6:12; யாக் 4:13, 14
f 2நா 13:7; 2நா 36:9
g நீதி 31:4, 5
h நீதி 21:25; நீதி 24:33, 34
i சங் 104:15; பிர 9:7
j பிர 7:12
k யாத் 22:28

அதி. 11
l நீதி 22:9
m உபா 15:10, 11; நீதி 19:17; லூ 14:13, 14; எபி 6:10
n சங் 37:21; லூ 6:38; 2கொ 9:7; 1தீ 6:18

4 காற்றையே பார்த்துக்கொண்டிருக்கிறவன் விதைக்க மாட்டான், மேகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறவன் அறுவடை செய்ய மாட்டான்.[a]

5 கர்ப்பிணியின் வயிற்றிலுள்ள குழந்தையின் எலும்புகளில் உயிர்சக்தி* எப்படிச் செயல்படுகிறது என்று உனக்குத் தெரியாது;[b] அது போலவே, எல்லாவற்றையும் செய்கிற உண்மைக் கடவுள் எப்படிச் செயல்படுகிறார் என்று உனக்குத் தெரியாது.[c]

6 காலையில் விதை விதைக்கத் தொடங்கு, சாயங்காலம்வரை கை ஓயாமல் விதைத்துக்கொண்டே இரு.[d] ஏனென்றால், எது முளைக்கும் என்று உனக்குத் தெரியாது. இதுவா, அதுவா, அல்லது இரண்டுமா என்று உனக்குத் தெரியாது.

7 வெளிச்சம் அருமையானது, கண்கள் சூரியனைப் பார்ப்பது நல்லது. **8** ஒருவன் ஆண்டாண்டு காலம் வாழ்ந்தாலும் ஆனந்தமாக வாழ வேண்டும்.[e] அதேசமயத்தில், இருண்ட காலம் வரும் என்பதையும் அவன் ஞாபகத்தில் வைக்க வேண்டும். இனி வரப்போவதெல்லாம் வீண்தான்.[f]

9 இளைஞனே, இளமைக் காலத்தில் சந்தோஷமாக இரு. வாலிப வயதில் உன் இதயம் சந்தோஷத்தால் நிறைந்திருக்கட்டும். உன் இதயம் சொல்கிற வழிகளில் போ, உன் கண் போகிற போக்கில் போ. ஆனால், அதற்கெல்லாம் நீ உண்மைக் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதை மறந்துவிடாதே.[g] **10** அதனால், பிரச்சினைக்குரிய விஷயங்களை உன் இதயத்திலிருந்து எடுத்துவிடு. தீய காரியங்களை உன் உடலிலிருந்து நீக்கிவிடு. ஏனென்றால், இளமைத் துடிப்பும் இளமைப் பருவமும் சீக்கிரத்தில் மறைந்துவிடும்.*[h]

12 உன்னுடைய மகத்தான படைப்பாளரை இளமைப் பருவத்திலேயே நினை.[i] வேதனையான காலம் வருவதற்கு முன்னால்,[j] “எனக்கு வாழவே பிடிக்கவில்லை” என்று நீ சொல்லும் காலம் வருவதற்கு முன்னால், அவரை நினை. **2** சூரியனும் வெளிச்சமும் சந்திரனும் நட்சத்திரங்களும் இருண்டுபோவதற்கு[k] முன்னால், மழைக்குப் பின்பு* மேகங்கள் திரும்பி வருவதற்கு முன்னால், **3** வீட்டுக் காவலாளிகள் நடுநடுங்கும் நாளுக்கு முன்னால், பலசாலிகள் தளர்ந்துபோவதற்கு முன்னால், பெண்கள் எண்ணிக்கையில் குறைந்துபோய் அரைக்கும் வேலையை நிறுத்திவிடுவதற்கு முன்னால், ஜன்னல் வழியாகப் பார்க்கிற பெண்களுக்கு எல்லாமே இருட்டாகத் தெரிவதற்கு[l] முன்னால், **4** தெருவாசலின் கதவுகள் மூடப்படுவதற்கு முன்னால், மாவு அரைக்கிற கல்லின் சத்தம் குறைந்துவிடுவதற்கு முன்னால், பறவையின் சத்தம்கூட தூக்கத்தைக் கலைப்பதற்கு முன்னால், பாடல் சத்தமெல்லாம்* அடங்குவதற்கு[m] முன்னால், **5** உயரங்கள் பயத்தை ஏற்படுத்துவதற்கு முன்னால், தெருவில் நடப்பது திகிலூட்டுவதற்கு முன்னால், வாதுமை மரம் பூப்பூப்பதற்கு[n] முன்னால், வெட்டுக்கிளி ஊர்ந்து ஊர்ந்து போவதற்கு முன்னால், பசியைத் தூண்டுகிற பழத்தைச் சாப்பிட்டால்கூட பசியெடுக்காமல் போவதற்கு முன்னால், மனுஷன் தன்னுடைய நிரந்தர வீட்டுக்குப் போவதற்கு முன்னால்,[o] துக்கம் அனுசரிக்கிறவர்கள் வீதியில் நடந்துபோவதற்கு முன்னால்,[p] **6** வெள்ளிக்கயிறு

11:5 *கடவுளுடைய சக்தியையும் குறிக்கலாம். **11:10** *வே.வா., “பருவமும் வீணானவை.” **12:2** *அல்லது, “மழையோடு.” **12:4** *நே.மொ., “பாடலின் மகள்களெல்லாம்.”

அதி. 11
a நீதி 20:4
b சங் 139:15
c யோபு 26:14, சங் 40:5, பிர 8:17, ரோ 11:33
d பிர 9:10, 2கொ 9:6, கொலோ 3:23
e பிர 5:18, பிர 8:15
f பிர 12:1
g பிர 3:17, பிர 12:14, ரோ 2:6
h சங் 25:7, 2தீ 2:22

அதி. 12
i சங் 71:17, சங் 148:7, 12, லூ 2:48, 49, 2தீ 3:15
j சங் 90:10
k 1சா 4:15
l ஆதி 48:10
m 2சா 19:34, 35
n நீதி 16:31
o யோபு 30:23, பிர 9:10
p ஆதி 50:7, 10

அறுந்துவிடுவதற்கு முன்னால், தங்கக் கிண்ணம் நொறுங்குவதற்கு முன்
னால், நீரூற்றின் பக்கத்திலே ஜாடி உடைந்துவிடுவதற்கு முன்னால், கிணற்
றின் உருளை* நொறுங்குவதற்கு முன்னால் அவரை நினை. **7** மண்ணிலி
ருந்து வந்த மனிதன் மண்ணுக்கே திரும்புவான்,[a] அவனுடைய உயிர்சக்தி
அதைக் கொடுத்த உண்மைக் கடவுளிடமே திரும்பிவிடும்.[b]

8 “வீணிலும் வீண்!” என்று பிரசங்கி[c] சொல்கிறார். “எல்லாமே வீண்!”[d]

9 பிரசங்கி ஞானமுள்ளவராக இருந்ததோடு, தனக்குத் தெரிந்த விஷ
யங்களை மற்றவர்களுக்குக் கற்பித்துக்கொண்டும் இருந்தார்.[e] நிறைய
பழமொழிகளை*[f] தொகுப்பதற்காக# விஷயங்களை ஆழமாக யோசித்
தார், அவற்றை அலசி ஆராய்ந்தார். **10** இனிமையான வார்த்தைகளைத்
தேடிக் கண்டுபிடிப்பதற்கும்,[g] உண்மையான வார்த்தைகளைத் திருத்தமாக
எழுதுவதற்கும் முயற்சி செய்தார்.

11 ஞானமுள்ளவர்களின் வார்த்தைகள் தார்க்கோல்களுக்கு* சமம்.[h]
அவர்களுடைய பொன்மொழிகள் பசுமரத்தில் பதிந்த ஆணிகளுக்குச்
சமம். அவையெல்லாம் ஒரே மேய்ப்பரிடமிருந்து வந்திருக்கின்றன.
12 என் மகனே, மற்றவர்கள் இவற்றைத் தவிர வேறு ஏதாவது சொன்னால்,
இந்த எச்சரிப்பை மனதில் வை: புத்தகங்கள் எழுதுவதற்கு முடிவே இல்லை.
ஆனால், அதிக படிப்பு உடலுக்குக் களைப்பு.[i]

13 இதுவரை சொன்ன விஷயங்களின் சாராம்சம் என்னவென்றால்,
உண்மைக் கடவுளுக்குப் பயந்து நடந்து,[j] அவருடைய கட்டளைகளைக்
கடைப்பிடிக்க வேண்டும்.[k] இதைவிட முக்கியமான கடமை மனுஷனுக்கு
வேறு இல்லை.[l] **14** மனுஷனின் ஒவ்வொரு செயலையும், அவன் மறை
வாகச் செய்கிற செயல்களையும்கூட, நல்லதா கெட்டதா என்று உண்மைக்
கடவுள் நியாயந்தீர்ப்பார்.[m]

12:6 *வே.வா., “கப்பி.” **12:9** *வே.வா., “நீதிமொழிகளை.” #வே.வா., “வரிசைப் படுத்துவதற்காக.” **12:11** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 12
a ஆதி 3:19; சங் 146:4
b ஆதி 2:7; யோபு 27:3; யோபு 34:14, 15; சங் 104:29; ஏசா 42:5
c 1ரா 8:1
d பிர 1:2, 14
e 1ரா 10:1, 3; 1ரா 10:6, 8
f 1ரா 4:29, 32; நீதி 1:1
g நீதி 16:24; நீதி 25:11
h அப் 2:37; எபி 4:12
i பிர 1:18
j யோபு 28:28; சங் 111:10; நீதி 1:7
k 1யோ 5:3
l உபா 6:1, 2; உபா 10:12
m சங் 62:12; பிர 11:9; மத் 12:36, 37; அப் 17:31; 2கொ 5:10; 1தீ 5:24

சாலொமோனின் உன்னதப்பாட்டு

முக்கியக் குறிப்புகள்

சாலொமோன் ராஜாவின் முகாமில் சூலேமியப் பெண் (1:1–3:5)

1 தலைசிறந்த பாட்டு (1)
இளம் பெண் (2-7)
எருசலேம் மகள்கள் (8)
ராஜா (9-11)
“தங்க ஆபரணங்களால் உன்னை அலங்கரிப்போம்” (11)
இளம் பெண் (12-14)
“வாசனையான வெள்ளைப்போள பையைப் போல் இருக்கிறார் என் காதலன்” (13)
மேய்ப்பன் (15)
“என் அன்பே, நீ எத்தனை அழகானவள்!”
இளம் பெண் (16, 17)
“என் இனிய காதலனே, நீங்கள் அழகானவர்” (16)

2 இளம் பெண் (1)
"வெறும் காட்டு மலர் நான்"
மேய்ப்பன் (2)
'லில்லிப் பூவைப் போல இருக்கிறாள் என் காதலி'
இளம் பெண் (3-14)
'காதல் ஆசையைத் தட்டியெழுப்பக் கூடாது' (7)
மேய்ப்பனின் வார்த்தைகள் (10ஆ-14)
"என் அழகியே, என்னோடு வா" (10ஆ, 13)
இளம் பெண்ணின் சகோதரர்கள் (15)
'குள்ளநரிக் குட்டிகளைப் பிடித்துக்கொடுங்கள்'
இளம் பெண் (16, 17)
"என் காதலன் எனக்குச் சொந்தம், நான் அவருக்குச் சொந்தம்" (16)

3 இளம் பெண் (1-5)
'ராத்திரியில் என் காதலனை நினைத்து ஏங்கினேன்' (1)

எருசலேமில் சூலேமியப் பெண் (3:6–8:4)

3 சீயோன் மகள்கள் (6-11)
சாலொமோனின் ஊர்வலம்

4 மேய்ப்பன் (1-5)
"என் அன்பே, நீ எத்தனை அழகானவள்!" (1)
இளம் பெண் (6)
மேய்ப்பன் (7-16அ)
"என் மணப்பெண்ணே, நீ என் இதயத்தைத் திருடிவிட்டாய்" (9)
இளம் பெண் (16ஆ)

5 மேய்ப்பன் (1அ)
எருசலேம் பெண்கள் (1ஆ)
"காதல் போதையில் மயங்குங்கள்!"
இளம் பெண் (2-8)
கனவைச் சொல்கிறாள்
எருசலேம் மகள்கள் (9)
"மற்ற காதலர்களைவிட உன் காதலன் எந்த விதத்தில் சிறந்தவர்?"
இளம் பெண் (10-16)
"அவர் பத்தாயிரத்தில் ஒருவர்" (10)

6 எருசலேம் மகள்கள் (1)
இளம் பெண் (2, 3)
"நான் என் காதலனுக்குச் சொந்தம். என் காதலன் எனக்குச் சொந்தம்" (3)
ராஜா (4-10)
"நீ திர்சா நகரம் போல அழகில் ஜொலிக்கிறாய்" (4)
பெண்கள் சொல்வது (10)
இளம் பெண் (11, 12)
ராஜா (மற்றவர்களும்) (13அ)
இளம் பெண் (13ஆ)
ராஜா (மற்றவர்களும்) (13இ)

7 ராஜா (1-9அ)
"எவ்வளவு இனிமையானவள் நீ!" (6)
இளம் பெண் (9ஆ-13)
"நான் என் காதலனுக்குச் சொந்தம், என்மேல் அவருக்குக் கொள்ளைப் பிரியம்" (10)

8 இளம் பெண் (1-4)
'நீங்கள் என் சகோதரனாக இருந்திருக்கக் கூடாதா?' (1)

சூலேமியப் பெண் திரும்பி வருகிறாள், அவள் உண்மையானவள் என்பது நிரூபிக்கப்படுகிறது (8:5-14)

8 இளம் பெண்ணின் சகோதரர்கள் (5அ)
"காதலன்மேல் சாய்ந்தபடி வருகிற இவள் யார்?"
இளம் பெண் (5ஆ-7)
"அன்பு, மரணத்தைப் போல் வலிமையானது" (6)
இளம் பெண்ணின் சகோதரர்கள் (8, 9)
"அவள் ஒரு மதிலாக இருந்தால், . . . ஒரு கதவாக இருந்தால், . . ." (9)
இளம் பெண் (10-12)
"நான் மதில்தான்" (10)
மேய்ப்பன் (13)
"நானும் உன் குரல் கேட்க ஏங்குகிறேன்"
இளம் பெண் (14)
'கலைமான் போலத் துள்ளியோடி வாருங்கள்'

1 சாலொமோன் எழுதிய தலைசிறந்த* பாட்டு:[a]
2 “உங்கள் உதடுகளால் என்னை முத்தமிடுங்கள்.
நீங்கள் காட்டும் நேசம் திராட்சமதுவைவிட இன்பமானது.[b]
3 நீங்கள் பூசுகிற எண்ணெயின் வாசனை மணமணக்கிறது.[c]
உங்களுடைய பெயர், இதமாக ஊற்றப்படுகிற நறுமண
எண்ணெய்போல் இருக்கிறது.[d]
அதனால்தான், இளம் பெண்கள் உங்களை நேசிக்கிறார்கள்.
4 ராஜா என்னை அவருடைய உள்ளறைக்குள் கொண்டுவந்துவிட்டார்!
என்னைக் கூட்டிக்கொண்டு போங்கள், நாம் ஓடிப்போய்விடலாம்!
நீங்களும் நானும் ஒன்றுசேர்ந்து சந்தோஷமாக இருக்கலாம்.
நீங்கள் என்மேல் காட்டுகிற பாசத்தையும் நேசத்தையும் பற்றி ஆசை
ஆசையாகப் பேசலாம்.
திராட்சமதுவைவிட தித்திப்பானது உங்கள் காதல்.
இளம் பெண்கள் உங்களை நேசிப்பதில் ஆச்சரியமே இல்லை!
5 எருசலேம் மகள்களே, நான் கறுப்பாக இருந்தாலும் அழகானவள்.
நான் கேதாரின் கூடாரங்களைப்[e] போன்றவள்,
சாலொமோனின் கூடாரத்துணிகளைப்[f] போன்றவள்.
6 நான் கறுப்பாக இருக்கிறேன் என்று பார்க்காதீர்கள்,
வெயில் பட்டதால்தான் நான் கறுத்துவிட்டேன்.
என் அண்ணன்கள் என்மேல் கோபமாக இருந்தார்கள்.
அவர்களுடைய திராட்சைத் தோட்டத்துக்கு என்னைக் காவல்காரியாக
வைத்தார்கள்.
ஆனால், எனக்குச் சொந்தமான திராட்சைத் தோட்டத்தைக்
காவல்காக்க முடியவில்லை.
7 உயிருக்கு உயிரான காதலனே,
கொஞ்சம் சொல்லுங்கள், உங்கள் ஆடுகளை எங்கே மேய்க்கிறீர்கள்?[g]
மத்தியானத்தில் அவற்றை எங்கே ஓய்வெடுக்க வைக்கிறீர்கள்?
துக்கத்தில் முக்காடு போட்ட பெண் போல
நான் ஏன் உங்கள் நண்பர்களின் மந்தைகளுக்கு இடையில் அலைய
வேண்டும்?”
8 “பெண்களில் பேரழகியே, உனக்குத் தெரியவில்லை என்றால்
மந்தைகள் போன பாதையிலேயே போ.
உன் வெள்ளாட்டுக் குட்டிகளை மேய்ப்பர்களின் கூடாரங்களுக்குப்
பக்கத்தில் மேய விடு.”
9 “என் அன்பே, பார்வோனின் ரதங்களில் பூட்டப்பட்ட பெண்
குதிரை நீ![h]
10 ஆபரணங்கள்* சூழ்ந்த உன் கன்னங்கள் அழகோ அழகு!
முத்துமணி மாலை தவழும் உன் கழுத்து கொள்ளை அழகு!
11 வெள்ளி மணிகள் பதிக்கப்பட்ட
தங்க ஆபரணங்களால் உன்னை அலங்கரிப்போம்.”

1:1 *வே.வா., “உன்னத.” 1:10 *அல்லது, “ஜடைகள்.”

அதி. 1
a 1ரா 4:29, 32
b உன் 4:10
c நீதி 27:9
பிர 9:8
உன் 5:5
d பிர 7:1
e சங் 120:5
எசே 27:21
f யாத் 36:14
g உன் 6:3
h 1ரா 10:28
2நா 1:16, 17
உன் 6:4

12 “ராஜா அவருடைய வட்டமான மேஜையில் உட்கார்ந்திருக்கும்போது,
என் வாசனை எண்ணெய்*[a] மணம் பரப்புகிறது.
13 ராத்திரியில் என் மார்புகளுக்கு இடையில் தவழுகிற
வாசனையான வெள்ளைப்போளச்*[b] பையைப் போல் இருக்கிறார்
என் காதலன்.
14 என்-கேதி[c] திராட்சைத் தோட்டங்களில் முளைத்திருக்கிற
மருதாணி கொத்துபோல்[d] மணக்கிறார் என் இனியவர்.”
15 “என் அன்பே, நீ எத்தனை அழகானவள்!
நீ எத்தனை அழகானவள்! உன் கண்கள் புறாக் கண்கள்.”[e]
16 “என் இனிய காதலனே, நீங்கள் அழகானவர், இனிமையானவர்.[f]
பசும் புல்வெளிதான் நமக்குப் பஞ்சு மெத்தை.
17 தேவதாரு மரங்கள்தான் நம் வீட்டின்* சட்டங்கள்.
ஆபால் மரங்கள்தான் நம் வீட்டின் கூரைகள்.”

2 “சமவெளியில்* மலர்ந்த வெறும் காட்டு மலர்# நான்.
பள்ளத்தாக்கில் பூத்த சாதாரண△ பூ[g] நான்.”
2 “முட்செடிகள் நடுவில் விரிந்த லில்லிப் பூவைப் போல
இளம் பெண்கள் நடுவில் இருக்கிறாள் என் காதலி.”
3 “காட்டு மரங்கள் மத்தியில் நிற்கும் ஆப்பிள் மரம்போல்
இளம் ஆண்கள் மத்தியில் இருக்கிறார் என் காதலன்.
அவருடைய நிழலில் உட்கார ஏங்கித் தவிக்கிறேன்.
அவர் தரும் பழங்கள் என் வாயில் தித்திக்கின்றன.
4 விருந்து வீட்டுக்கு அவர் என்னை அழைத்து வந்தார்.
அவருடைய நேசத்தைக் கொடிபோல் என்மேல் பறக்கவிட்டார்.
5 நான் காதல் நோயால் தவிக்கிறேன்.
உலர்ந்த திராட்சை அடைகள் கொடுத்து எனக்குப்
புத்துணர்ச்சியூட்டுங்கள்.[h]
ஆப்பிள் பழங்கள் தந்து எனக்குத் தெம்பூட்டுங்கள்.
6 அவருடைய இடது கை என் தலையின் கீழ் இருக்கட்டும்.
அவருடைய வலது கை என்னை அணைக்கட்டும்.[i]
7 எருசலேம் மகள்களே, கலைமான்கள்மேல் ஆணையிட்டுக்
கொடுங்கள்!
காட்டில் திரியும் பெண் மான்கள்மேல்[j] ஆணையிட்டுக் கொடுங்கள்!
காதல் ஆசை எனக்குள் தானாகவே மலரும்வரை அதை நீங்கள்
தட்டியெழுப்பக் கூடாது.[k]
8 என் காதலனின் சத்தம் கேட்கிறது!
இதோ! அவர் வருகிறார்.
மலைகளில் ஏறி, குன்றுகளில் துள்ளிக்குதித்து வருகிறார்.
9 என் காதலன் ஒரு கலைமான்!* அவர் ஒரு மான்குட்டி![l]

1:12 *நே.மொ., “சடாமாஞ்சி எண்ணெய்.” 1:13 *சொல் பட்டியலைப் பாருங்கள். 1:17 *வே.வா., “மாளிகையின்.” 2:1 *வே.வா., “கடற்கரைச் சமவெளியில்.” #நே.மொ., “குங்குமப்பூ.” △நே.மொ., “லில்லி.” 2:9 *வே.வா., “நவ்வி மான்.”

அதி. 1
a உன் 4:13, 14
b யாத் 30:23, 25; எஸ்தர் 2:12; சங் 45:8; உன் 4:6; உன் 5:13
c யோசு 15:20, 62; 1சா 23:29; 2நா 20:2
d உன் 4:13
e உன் 4:1; உன் 5:2
f உன் 5:10

அதி. 2
g உன் 2:16
h 1சா 30:11, 12
i உன் 8:3
j 2சா 2:18
k உன் 3:5; உன் 8:4
l உன் 2:17; உன் 8:14

இதோ! அங்கே இருக்கிறார், சுவருக்குப் பின்னால் நிற்கிறார்.
ஜன்னல்கள் வழியாக எட்டிப் பார்க்கிறார்.
ஜன்னலின் தட்டி வழியாக உற்றுப் பார்க்கிறார்.
10 என் காதலன் என்னிடம் சொல்கிறார்:
'என் காதலியே, எழுந்து வா.
என் அழகியே, என்னோடு வா.
11 இதோ! மழைக்காலம்* முடிந்துவிட்டது.
அடைமழையும் அடங்கிவிட்டது.
12 ஊரெங்கும் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன.[a]
திராட்சைக் கிளைகளைக் கத்தரிக்கும் காலம் வந்துவிட்டது.[b]
காட்டுப் புறாவின் பாடல் நம் ஊரில் கேட்கிறது.[c]
13 அத்தி மரத்தில் முதல் பழங்கள் பழுக்க ஆரம்பித்துவிட்டன.[d]
திராட்சைக் கொடியில் பூக்கள் பூத்து வாசம் வீசுகின்றன.
என் காதலியே, எழுந்து வா.
என் அழகியே, என்னோடு வா.
14 என் புறாவே, பாறை மறைவிலிருந்து[e] என்னைப் பார்.
செங்குத்தான பாறை இடுக்கிலிருந்து என்னைப் பார்.
உன் அழகிய முகம்[f] பார்க்க ஆசைப்படுகிறேன்,
உன் இனிய குரல் கேட்கத் துடிக்கிறேன்.'"[g]
15 "எங்கள் திராட்சைத் தோட்டங்கள் பூத்துவிட்டன.
குள்ளநரிக் குட்டிகள் அவற்றை நாசமாக்குகின்றன.
அவற்றைப் பிடித்துக்கொடுங்கள்."
16 "என் காதலன் எனக்குச் சொந்தம், நான் அவருக்குச் சொந்தம்.[h]
என்னவர் லில்லிப் பூக்களின் நடுவே ஆடுகளை மேய்க்கிறார்.[i]
17 என் காதலனே, தென்றல் வீசுவதற்குள், நிழல் மறைவதற்குள்
வாருங்கள்.
நம்மைப் பிரித்து நிற்கும் மலைகளில்* துள்ளி வருகிற கலைமான்[j]
போலவும்,
மான்குட்டி போலவும் துள்ளி வாருங்கள்."[k]

3 "ராத்திரியில் என் படுக்கையிலே,
என் அன்புக் காதலனை நினைத்து ஏங்கினேன்.[l]
அவரைப் பார்க்கத் துடித்தேன்.
ஆனால், அவர் அங்கே இல்லை.[m]
2 உடனே எழுந்து, ஊருக்குள் போய்,
வீதிகளிலும் பொது சதுக்கங்களிலும்
என் அன்புக் காதலனைத் தேடிப் பார்க்க நினைத்தேன்.
தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.
3 ஊரில் ரோந்து வந்த காவலாளிகள் என்னைப் பார்த்தார்கள்.[n]
'என் அன்புக் காதலனைப் பார்த்தீர்களா?' என்று கேட்டேன்.

2:11 * வே.வா., "குளிர்காலம்." **2:17** * அல்லது, "பிளவுபட்ட மலைகளில்."

அதி. 2
a உன் 6:11
b ஏசா 18:5; யோவா 15:2
c எரே 8:7
d ஏசா 28:4; நாகூ 3:12
e உன் 5:2; எரே 48:28
f உன் 1:5; உன் 6:10
g உன் 8:13
h உன் 7:10
i உன் 1:7; உன் 2:1; உன் 6:3
j 2சா 2:18
k உன் 2:9; உன் 8:14

அதி. 3
l உன் 1:7
m உன் 5:6
n உன் 5:7

அதி. 3
a உன் 8:2
b உன் 2:7
உன் 8:4
c யாத் 30:23, 24
யாத் 30:34
d 1ரா 9:22
e 1ரா 5:8, 9
f 2சா 12:24
நீதி 4:3

அதி. 4
g எண் 32:1
உபா 3:12
உன் 6:5-7

4 அவர்களைவிட்டுக் கொஞ்சத் தூரம் போனதுமே,
என் அன்புக் காதலனைப் பார்த்தேன்.
அவரை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டேன், விடவே இல்லை.
அவரை என் தாய் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்தேன்.[a]
என்னைப் பெற்றெடுத்தவளின் உள்ளறைக்குள் கூட்டிக்கொண்டு வந்தேன்.
5 எருசலேம் மகள்களே, கலைமான்கள்மேல் ஆணையிட்டுக் கொடுங்கள்!
காட்டில் திரியும் பெண் மான்கள்மேல் ஆணையிட்டுக் கொடுங்கள்!
காதல் ஆசை எனக்குள் தானாகவே மலரும்வரை அதை நீங்கள் தட்டியெழுப்பக் கூடாது."[b]
6 "புகை மண்டலம்போல் வனாந்தரத்திலிருந்து வருவது என்ன?
வெள்ளைப்போள வாசனையோடும், சாம்பிராணி வாசனையோடும்,
வியாபாரிகள் விற்கிற விதவிதமான நறுமணத் தூள்களின் வாசனையோடும் வருவது என்ன?"[c]
7 "இதோ! சாலொமோனின் பல்லக்கு வருகிறது!
அறுபது வீரர்கள் அதைச் சூழ்ந்திருக்கிறார்கள்.
இஸ்ரவேலின் வீராதிவீரர்கள்[d] அவர்கள்.
8 எல்லாரும் வாள் ஏந்திய வீரர்கள்.
எல்லாரும் போர்ப் பயிற்சி பெற்றவர்கள்.
ராத்திரியில் வரும் ஆபத்துகளிலிருந்து காப்பதற்காக
வாளை இடுப்பில் கட்டியிருக்கிறார்கள்."
9 "இது சாலொமோன் ராஜாவின் பல்லக்கு,
லீபனோனின் மரங்களால்[e] தனக்காக அவர் செய்த பல்லக்கு.
10 அதன் கம்பங்களை வெள்ளியிலும்,
அதன் சாய்மானங்களைத் தங்கத்திலும்,
அதன் இருக்கையை ஊதா நிற கம்பளியிலும் அவர் செய்தார்.
எருசலேம் மகள்கள் அன்போடு அதன் உட்புறத்தை அலங்கரித்தார்கள்."
11 "சீயோன் மகள்களே, வெளியே போய்,
சாலொமோன் ராஜாவைப் பாருங்கள்.
அவருடைய கல்யாண நாளில்,
அவருடைய இதயம் சந்தோஷத்தில் பொங்கிய நாளில்,
அவருடைய தாய்[f] செய்துகொடுத்த கிரீடத்தை* அவர் சூடி வருவதைப் பாருங்கள்."

4 "என் அன்பே, நீ எத்தனை அழகானவள்! நீ எத்தனை அழகானவள்!
முகத்திரைக்குப் பின்னால் இருக்கும் உன் கண்கள் புறாக் கண்கள்.
கீலேயாத் மலைகளில்[g] இறங்கிவரும் வெள்ளாட்டு மந்தை உன் கூந்தல்.

3:11 * வே.வா., "மலர்க் கிரீடத்தை; மலர் மாலையை."

2 மயிர் கத்தரித்தபின் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறுகிற செம்மறிக் கூட்டம் உன் பற்கள்.
அவை எல்லாவற்றுக்குமே இரட்டைக் குட்டிகள் இருக்கின்றன.
ஒன்றுகூட குறையாமல் இருக்கின்றன.
3 சிவப்பு நூல் போன்றவை உன் உதடுகள்.
கேட்கக் கேட்கத் திகட்டாதவை உன் வார்த்தைகள்.
முகத்திரைக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் உன் கன்னங்கள் வெடித்த மாதுளம் பழங்கள்.
4 உன் கழுத்து,[a] அடுக்கடுக்காகக் கற்கள் வைக்கப்பட்டு,
ஆயிரம் மாவீரர்களின் வட்டமான கேடயங்களால்[b] அலங்கரிக்கப்பட்டு,
கம்பீரமாக நிற்கும் தாவீதின் கோபுரத்தைப்[c] போன்றது.
5 உன் இரண்டு மார்புகளும் இரண்டு மான்குட்டிகள்,
லில்லிப் பூக்கள் மத்தியில் மேய்கிற கலைமானின்* இரட்டைக் குட்டிகள்."[d]
6 "தென்றல் வீசும் முன்பே, நிழல்கள் மறையும் முன்பே,
வெள்ளைப்போள மலைக்கும் சாம்பிராணி குன்றுக்கும் போவேன்."[e]
7 "என் அன்பே, நீ அழகின் மறு உருவம்.[f]
உன்னிடம் குறையே இல்லை.
8 என் மணப்பெண்ணே, லீபனோனைவிட்டுப் போவோம், வா.
நாம் லீபனோனைவிட்டுப் போவோம், வா.[g]
அமனா,* சேனீர், எர்மோன் மலை[h] உச்சிகளிலிருந்து இறங்கிப் போவோம், வா.
சிங்கங்கள் தங்குகிற இடங்களைவிட்டும்,
சிறுத்தைகள் நடமாடுகிற மலைகளைவிட்டும் புறப்படுவோம், வா.
9 என் சகோதரியே, என் மணப்பெண்ணே, நீ என் இதயத்தைத் திருடிவிட்டாய்.[i]
ஒரே பார்வையில் என் உள்ளத்தைக் கொள்ளையடித்துவிட்டாய்.
உன் அட்டிகைப் பதக்கம் ஒன்றாலேயே என்னைக் கவர்ந்துவிட்டாய்.
10 என் சகோதரியே, என் மணப்பெண்ணே,
நீ பாசத்தைக் காட்டும் அழகே அழகு![j]
நீ காட்டும் நேசம் திராட்சமதுவைவிட இனிமையானது![k]
நீ பூசும் எண்ணெய் நறுமணப் பொருள்களைவிட மணமானது![l]
11 என் மணப்பெண்ணே, உன் இதழ்களில் சுத்தமான தேன் சொட்டுகிறது.[m]
உன் நாவிலிருந்து பாலும் தேனும் சிந்துகிறது.[n]
உன் உடைகளில் லீபனோனின் மணம் வீசுகிறது.
12 என் சகோதரியே, என் மணப்பெண்ணே, வேலியடைக்கப்பட்ட தோட்டம் நீ.
பூட்டி வைக்கப்பட்ட தோட்டம் நீ, மூடி வைக்கப்பட்ட கிணறு நீ.

4:5 *வே.வா., "நவ்வி மானின்." **4:8** *வே.வா., "கிழக்கு லீபனோன் மலைத்தொடர்."

அதி. 4
a உன் 1:10
b 2சா 8:7; 2ரா 11:10
c நெ 3:25; உன் 7:4
d உன் 7:3
e பிர 2:5
f உன் 4:1
g உபா 3:25
h உபா 3:8, 9; சங் 133:3
i நீதி 5:18, 19
j உன் 7:12
k உன் 1:2, 4
l எஸ்தர் 2:12; உன் 1:12
m நீதி 16:24
n உன் 5:1

அதி. 4
a யோவா 12:3
b ஏசா 43:24
c நீதி 7:17
d சங் 45:8
e யாத் 30:23, 24; யாத் 30:34; எசே 27:2, 22
f எரே 18:14

அதி. 5
g உன் 4:16
h உன் 4:13, 14
i உன் 4:11
j உன் 1:2
k உன் 3:1
l லூ 2:8

13 உன் சோலை* மாதுளம்பழங்கள் காய்த்துக் குலுங்குகிற பூஞ்சோலை.
அதுமட்டுமா, ருசியான பழங்கள் என்ன! மருதாணிச் செடிகள் என்ன!
சடாமாஞ்சிச் செடிகள் என்ன!
14 சடாமாஞ்சி,[a] குங்குமப்பூ, வசம்பு,[b] லவங்கம்,[c]
சாம்பிராணி மரங்கள், வெள்ளைப்போள மரங்கள், அகில் மரங்கள்[d]
என எத்தனை, எத்தனை!
அவற்றின் வாசனை[e] ஆளைத் தூக்குகிறது.
15 தோட்டத்தில் ஊற்றெடுக்கும் நீரூற்று நீ; சுத்தமான தண்ணீர்
சுரக்கும் கிணறு நீ.
லீபனோனிலிருந்து ஓடிவரும் நீரோடை[f] நீ.
16 வடதிசைக் காற்றே, விழித்திடு.
தென்திசைக் காற்றே, வந்திடு.
என் தோட்டத்தில் தென்றலாய் வீசிடு.
அதன் வாசனையைப் பரப்பிடு."
"என் காதலன் அவருடைய தோட்டத்துக்கு வந்து,
அதன் ருசியான பழங்களைச் சுவைத்து மகிழட்டும்."

5 "என் சகோதரியே, என் மணப்பெண்ணே,
நான் என் தோட்டத்துக்கு வந்தேன்.[g]
வெள்ளைப்போளத்தையும் நறுமணப் பொருளையும் சேகரித்தேன்.[h]
தேனடையும் தேனும் சாப்பிட்டேன்.
திராட்சமதுவும் பாலும் குடித்தேன்."[i]
"நண்பர்களே, சாப்பிடுங்கள்!
குடியுங்கள்! காதல் போதையில் மயங்குங்கள்!"[j]
2 "என் கண் உறங்குகிறது, ஆனால் இதயம் விழித்திருக்கிறது.[k]
இதோ! என் காதலன் கதவைத் தட்டுகிற சத்தம் கேட்கிறது!"
"என் சகோதரியே, என் அன்பே,
என் புறாவே, என் உத்தமியே, கதவைத் திற.
என் தலை பனியில் நனைந்துவிட்டது,
என் முடி ராத்திரிநேர பனித்துளிகளில் ஈரமாகிவிட்டது."[l]
3 "'என் மேலாடையைக் கழற்றிவிட்டேனே,
மறுபடியும் போட வேண்டுமா?
என் பாதங்களைக் கழுவிவிட்டேனே,
திரும்பவும் அழுக்காக்க வேண்டுமா?'
4 கதவு துவாரத்திலிருந்து என் காதலன் கையை எடுத்துவிட்டார்.
அவரைப் பார்க்க என் இதயம் துடிதுடித்தது.
5 என் காதலனுக்காகக் கதவைத் திறக்க எழுந்தேன்.
அப்போது, என் கைகளில் பூசியிருந்த வெள்ளைப்போள எண்ணெய்
சொட்டியது.
என் விரல்களிலும் தாழ்ப்பாள் பிடிகளிலும் அது வடிந்தது.

4:13 * அல்லது, "சருமம்."

6 என் காதலனுக்காகக் கதவைத் திறந்தேன்.
ஆனால், அவர் அங்கிருந்து போய்விட்டார்.
அவர் போனதும்* என் உயிரே என்னைவிட்டுப் போய்விட்டது.
அவரைத் தேடினேன், கண்டுபிடிக்க முடியவில்லை.[a]
கூப்பிட்டேன், பதிலே வரவில்லை.
7 ஊரில் ரோந்து வந்த காவலாளிகள் என்னைப் பார்த்துவிட்டார்கள்.
என்னை அடித்தார்கள், காயப்படுத்தினார்கள்.
மதில்களின் காவலாளிகள் என் சால்வையை* பிடுங்கிக்கொண்டார்கள்.
8 எருசலேம் மகள்களே, நான் காதல் நோயால் தவிக்கிறேன்.
என் காதலனைக் கண்டால் இதைச் சொல்லுங்கள்.
சொல்வதாக எனக்கு ஆணையிட்டுக் கொடுங்கள்."
9 "பெண்களில் பேரழகியே, எங்களுக்குச் சொல்.
மற்ற காதலர்களைவிட உன் காதலன் எந்த விதத்தில் சிறந்தவர்?
நீ சத்தியம் செய்யச் சொல்லிக் கேட்கிறாயே,
மற்ற காதலர்களைவிட உன் காதலன் எந்த விதத்தில் சிறந்தவர்?"
10 "என் காதலனின் அழகு சொக்க வைக்கும் சிவப்பழகு.
அவர் பத்தாயிரத்தில் ஒருவர்.
11 அவரது தலை சொக்கத்தங்கம் போன்றது.
அவரது முடி அசைந்தாடுகிற பேரீச்ச மரக் கீற்று* போன்றது.
அவரது தலைமுடி அண்டங்காக்கைபோல் கருமையானது.
12 அவரது கண்கள் நீரோடை ஓரமாய் நிற்கிற புறாக்கள் போன்றவை.
அவை பாலில் குளிக்கிற புறாக்கள் போலவும்,
குளக்கரையில்* அமர்ந்திருக்கிற புறாக்கள் போலவும் இருக்கின்றன.
13 அவரது கன்னங்கள் நறுமணச் செடிகளின் பாத்திகள்.[b]
மணம் கமழ்கிற மூலிகைக் குவியல்கள்.
அவரது உதடுகள் லில்லிப் பூக்கள்.
அவரது உதடுகளிலிருந்து வெள்ளைப்போள எண்ணெய்
சொட்டுகிறது.[c]
14 அவரது கைகள் படிகப்பச்சை பதித்த தங்க உருளைகள்.
அவரது வயிறு நீலமணிக்கல் பதித்த பளபளப்பான தந்தம்.
15 அவரது கால்கள் சொக்கத்தங்கப் பீடத்தில் நிற்கிற பளிங்குத் தூண்கள்.
தோற்றத்தில் அவர் லீபனோன், உயரத்தில் தேவதாரு.[d]
16 அவருடைய வாய் தித்திக்கும் தேன்.
அவர் இனிமையின் மொத்த வடிவம்.[e]
எருசலேம் மகள்களே, இவர்தான் என் அன்புக்குரியவர், என் ஆருயிர்
காதலன்."

6 "பெண்களில் பேரழகியே,
உன் காதலன் எங்கே?
எந்தத் திசையில் போனார்?

5:6 *அல்லது, "அவர் பேசியபோது." 5:7 *வே.வா., "முக்காட்டை." 5:11 *அல்லது, "பேரீச்சைக் குலைகள்." 5:12 *அல்லது, "நீரூற்றின் ஓரங்களில்."

அதி. 5
a உன் 3:1, 3
b உன் 6:2
c உன் 1:13
d சங் 92:12
e உன் 2:3

நாங்களும் உன்னோடு சேர்ந்து தேடுகிறோம்.”
2 “என் காதலன் அவருடைய தோட்டத்துக்குப் போயிருக்கிறார்.
நறுமணச் செடிகளின் பாத்திகளுக்குப் போயிருக்கிறார்.
அழகிய தோட்டங்களின் நடுவே ஆடுகளை மேய்க்கப் போயிருக்கிறார்.
லில்லிப் பூக்களைப் பறிக்கப் போயிருக்கிறார்.[a]
3 நான் என் காதலனுக்குச் சொந்தம்.
என் காதலன் எனக்குச் சொந்தம்.[b]
என்னவர் லில்லிப் பூக்களின் நடுவே ஆடுகளை மேய்க்கிறார்.”[c]
4 “என் அன்பே, நீ திர்சா நகரம்*[d] போல அழகில் ஜொலிக்கிறாய்.[e]
எருசலேம் நகரம் போலக் கண்களைக் கவருகிறாய்.[f]
போர்க் கொடிகளைச் சுற்றி நிற்கும் படைகள் போலப் பிரமிக்க வைக்கிறாய்.[g]
5 உன் கண்கள்[h] என்னைச் சுண்டியிழுக்கின்றன.
உன் பார்வையை என்னைவிட்டுத் திருப்பிவிடு.
கீலேயாத் மலைச் சரிவுகளில் இறங்கிவரும் வெள்ளாட்டு மந்தை உன் கூந்தல்.[i]
6 குளிப்பாட்டப்பட்டுக் கரையேறுகிற செம்மறிக் கூட்டம் உன் பற்கள்,
அவை எல்லாவற்றுக்குமே இரட்டைக் குட்டிகள் இருக்கின்றன.
ஒன்றுகூட குறையாமல் இருக்கின்றன.
7 முக்காட்டுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் உன் கன்னங்கள்,
வெடித்த மாதுளம் பழங்கள்.
8 அறுபது ராணிகள் இருந்தாலும்,
எண்பது மறுமனைவிகள் இருந்தாலும்,
ஏராளமான கன்னிப்பெண்கள் இருந்தாலும்,[j]
9 நீ மட்டும்தான் என் புறா,[k] என் உத்தமி.
உன் தாய்க்கு நீ ஒரே மகள்.
உன்னைப் பெற்றவளின் செல்ல மகள்.
இளம் பெண்கள் உன்னைப் பார்க்கிறார்கள், பாராட்டுகிறார்கள்.
ராணிகளும் மறுமனைவிகளும் உன்னைப் புகழ்கிறார்கள்.
10 ‘யார் இவள்? விடியற்கால ஒளிபோல் பிரகாசிக்கிறாளே!
முழு நிலாபோல் அழகாக இருக்கிறாளே!
சூரிய வெளிச்சம்போல் தூய்மையாக இருக்கிறாளே!
போர்க் கொடிகளைச் சுற்றி நிற்கும் படைகள்போல் பிரமிக்க வைக்கிறாளே!’”[l]
11 “பள்ளத்தாக்கில் செடிகொடிகள் துளிர்விட்டிருக்கிறதா,
திராட்சைக் கொடிகள் அரும்பு விட்டிருக்கிறதா,
மாதுளை மரங்கள் பூப் பூத்திருக்கிறதா என்றெல்லாம் பார்க்க
பழமர* தோப்புக்குப்[m] போனேன்.

அதி. 6
a உன் 1:7; உன் 2:16
b உன் 7:10
c உன் 2:16
d 1ரா 14:17; 1ரா 15:33
e உன் 1:9
f சங் 48:2
g உன் 6:10
h உன் 1:15; உன் 4:9; உன் 7:4
i உன் 4:1-3
j 1ரா 11:1
k உன் 2:14
l உன் 6:4
m பிர 2:5

6:4 *வே.வா., “இனிமையான நகரம்.” **6:11** *வே.வா., “கொட்டைப் பருப்புகளைத் தரும் மரங்களின்.”

12 அதையெல்லாம் பார்க்கிற ஆசையில்,
என்னை அறியாமலேயே,
ராஜாவின்* ரதங்களுக்குப் பக்கத்தில் போய்விட்டேன்."
13 "சூலேமியப் பெண்ணே, திரும்பி வா, திரும்பி வா!
நாங்கள் மறுபடியும் உன்னைப் பார்க்க வேண்டும்,
திரும்பி வா, திரும்பி வா!"
"நீங்கள் ஏன் இந்த சூலேமியப் பெண்ணைப் பார்க்க விரும்புகிறீர்கள்?"[a]
"இரண்டு நடனக் குழுக்களின் நடனத்தைப் போல அவள் இருக்கிறாளே!"

7 "தங்கமான பெண்ணே,
காலணி அணிந்த உன் பாதங்கள் எத்தனை அழகு!
உன் இடுப்பு வளைவுகள் கலைஞனின் கைவண்ணத்தில் உருவான ஆபரணங்கள்.
2 வட்ட வடிவ கிண்ணம் உன் தொப்புள்.
திராட்சமது அதில் குறையாமல் இருக்கட்டும்.
லில்லிப் பூக்கள் சூழ்ந்த கோதுமைக் குவியல் உன் வயிறு.
3 உன் இரண்டு மார்புகளும் இரண்டு மான்குட்டிகள்,
கலைமானின்* இரட்டைக் குட்டிகள்.[b]
4 தந்தத்தால் செய்த கோபுரம்[c] உன் கழுத்து.[d]
எஸ்போனிலே,[e] பத்-ரபீம் நகரவாசலின் அருகே உள்ள குளங்கள் உன் கண்கள்.[f]
தமஸ்குவைப் பார்த்தவாறு இருக்கிற லீபனோன் கோபுரம் உன் மூக்கு.
5 கர்மேல் மலைபோல்[g] கம்பீரமாக இருக்கிறது உன் தலை.
ஊதா நிற கம்பளி நூல்போல்[h] இருக்கிறது உன் கூந்தல்.[i]
உன்னுடைய நீளமான கூந்தலின் அழகில் இந்த ராஜா சொக்கிப்போய் நிற்கிறார்.
6 எத்தனை அழகானவள் நீ! எவ்வளவு இனிமையானவள் நீ!
என் ஆசைக் கண்மணியே, அளவில்லாத ஆனந்தம் தருபவள் நீ!
7 நீ உயரமான பேரீச்ச மரம்.
உன் மார்புகள் பேரீச்சக் குலைகள்.[j]
8 'இந்தப் பேரீச்ச மரத்தில் ஏறி குலைகளைப் பறிப்பேன்' என்று சொன்னேன்.
உன் மார்புகள் திராட்சைக் குலைகள்போல் இருக்கட்டும்.
உன் சுவாசம் ஆப்பிள்போல் மணம் வீசட்டும்.
9 உன் வாய் அருமையான திராட்சமதுபோல் ஆகட்டும்."
"என் காதலனின் வாயில் திராட்சமது இதமாக இறங்கட்டும்.
அது என்னவரின் உதடுகளை வருடிக்கொண்டு மென்மையாக இறங்கட்டும்.

6:12 *வே.வா., "உயர்ந்த உள்ளம் கொண்டவர்களின்." **7:3** *வே.வா., "நவ்வி மானின்."

அதி. 6
a உன் 1:6

அதி. 7
b உன் 4:5
c உன் 4:4
d உன் 1:10
e எண் 21:25 யோசு 21: 8, 39
f உன் 4:1
g ஏசா 35:2
h எஸ்தர் 8:15
i உன் 6:5
j உன் 7:3 உன் 8:10

10 நான் என் காதலனுக்குச் சொந்தம்.[a]
என்மேல் அவருக்குக் கொள்ளைப் பிரியம்.
11 என் அன்பே, வாருங்கள்,
நாம் தோப்புகளுக்குப் போவோம்,
மருதாணிச் செடிகளுக்கு[b] நடுவில் தங்குவோம்.
12 விடியற்காலையில் எழுந்து திராட்சைத் தோட்டங்களுக்குப் போவோம்.
திராட்சைக் கொடிகள் துளிர்த்திருக்கின்றனவா,
மொட்டுகள் விரிந்திருக்கின்றனவா,[c]
மாதுளைப் பூக்கள் பூத்திருக்கின்றனவா என்று பார்ப்போம்.[d]
அங்கே என் காதலை உங்கள்மேல் பொழிவேன்.[e]
13 காட்டுச்சூட்டிப் பழங்கள்*[f] மணம் வீசுகின்றன.
நம் வீட்டு வாசலில் ருசியான பழங்களெல்லாம் குவிந்து கிடக்கின்றன.[g]
என் அன்புக் காதலனே, அவற்றை உங்களுக்காக வைத்திருக்கிறேன்.
புதியவற்றையும் உலர்ந்தவற்றையும் உங்களுக்காகச் சேர்த்து வைத்திருக்கிறேன்."

8 "நீங்கள் என் தாயிடம் பால் குடித்த என் சகோதரனாக இருந்திருக்கக் கூடாதா?
இருந்திருந்தால், வீட்டுக்கு வெளியே பார்க்கும்போதுகூட உங்களுக்கு முத்தம் கொடுப்பேனே.[h]
யாரும் என்னைக் கேவலமாகப் பேச மாட்டார்களே.
2 நான் உங்களை அழைத்து வருவேன்.
எனக்குக் கற்றுக்கொடுத்த தாயின் வீட்டுக்குள் அழைத்து வருவேன்.[i]
நறுமணப் பொருள்கள் கலந்த திராட்சமதுவைக் குடிக்கக் கொடுப்பேன்.
மாதுளை பழச்சாறு தருவேன்.
3 அவருடைய இடது கை என் தலையின் கீழ் இருக்கும்.
அவருடைய வலது கை என்னை அணைத்துக்கொள்ளும்.[j]
4 எருசலேம் மகள்களே, எனக்கு ஆணையிட்டுக் கொடுங்கள்.
காதல் ஆசை எனக்குள் தானாகவே மலரும்வரை அதை நீங்கள் தட்டியெழுப்பக் கூடாது."[k]
5 "வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார்?"
காதலன்மேல் சாய்ந்தபடி வருகிற இவள் யார்?
"ஆப்பிள் மரத்தடியில் உங்களை எழுப்பினேன்.
அங்குதான் உங்கள் தாய் பிரசவ வலியில் துடித்தாள்.
கர்ப்ப வேதனைப்பட்டு உங்களைப் பெற்றெடுத்தாள்.
6 உங்கள் இதயத்தில் என்னை முத்திரையாகப் பதியுங்கள்.
உங்கள் கையில் என்னை முத்திரையாகக் குத்துங்கள்.

7:13 * இந்தப் பழங்கள் கருத்தரிக்க உதவியதாக நம்பப்பட்டது.

அதி. 7
a உன் 2:16
உன் 6:3
b உன் 1:14
c உன் 2:13
d உன் 6:11
e உன் 1:2
உன் 4:10
f ஆதி 30:14
g உன் 4:16

அதி. 8
h உன் 1:2
i உன் 3:4
j உன் 2:6
k உன் 2:7
உன் 3:5

அன்பு, மரணத்தைப் போல் வலிமையானது.[a]
இணைபிரியாத * நேசம், கல்லறையைப் போல் விடாப்பிடியானது.
அன்பின் ஜுவாலை கொழுந்துவிட்டு எரிகிற தீ ஜுவாலை, அது
"யா"வின்# ஜுவாலை.[b]
7 பாய்ந்து வரும் வெள்ளம்கூட அன்பின் ஜுவாலையை அணைக்க
முடியாது.[c]
ஓடிவரும் நதிகள்கூட அன்பை அடித்துச் செல்ல முடியாது.[d]
ஒருவன் அன்பை விலைக்கு வாங்க தன் செல்வத்தைக் கொட்டிக்
கொடுத்தாலும்,
அந்தச் செல்வம் அடியோடு ஒதுக்கித்தள்ளப்படும்." *
8 "நமக்கு ஒரு தங்கை இருக்கிறாள்.[e]
அவளுக்கு மார்புகள் இல்லை.
அவளை யாராவது பெண் கேட்டு வரும்போது
நாம் என்ன செய்வோம்?"
9 "அவள் ஒரு மதிலாக இருந்தால்,
அவள்மேல் வெள்ளிக் கொத்தளம் அமைப்போம்.
அவள் ஒரு கதவாக இருந்தால்,
அவள்மேல் தேவதாரு பலகை அடிப்போம்."
10 "நான் மதில்தான்,
என் மார்புகள் கோபுரம்போல் இருக்கின்றன.
என் மனதில் அமைதி குடிகொண்டிருக்கிறது,
என்னவர் அதை அறிந்திருக்கிறார்.
11 பாகால்-ஆமோனில் சாலொமோன் ஒரு திராட்சைத் தோட்டம்
வைத்திருந்தார்.[f]
தோட்டக்காரர்களிடம் அதை ஒப்படைத்தார்.
அதில் விளையும் பழங்களுக்காக அவர்கள் ஒவ்வொருவரும் ஆயிரம்
வெள்ளிக் காசுகள் தருவார்கள்.
12 எனக்கென்று சொந்தமாக ஒரு திராட்சைத் தோட்டம் இருக்கிறது.
சாலொமோன் ராஜாவே, ஆயிரம் வெள்ளிக் காசுகள் உங்களிடமே
இருக்கட்டும்.
இருநூறு வெள்ளிக் காசுகள் அந்தத் தோட்டக்காரர்களிடமே
இருக்கட்டும்."
13 "தோட்டங்களில் தங்கியிருப்பவளே,[g]
உன் குரல் கேட்க நண்பர்கள் காத்திருக்கிறார்கள்.
நானும் உன் குரல் கேட்க ஏங்குகிறேன்."[h]
14 "என் அன்பே, சீக்கிரம் வாருங்கள்.
நறுமணச் செடிகள் மண்டிக்கிடக்கிற மலைகளிலே
துள்ளியோடுகிற கலைமான்* போலவும்,[i]
மான்குட்டி போலவும் துள்ளியோடி வாருங்கள்."

8:6 *வே.வா., "உண்மையான." #"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.
8:7 *அல்லது, "அவன் அடியோடு ஒதுக்கித்தள்ளப்படுவான்." **8:14** *வே.வா., "நவ்வி மான்."

அதி. 8
a யோவா 15:13; எபே 5:25; வெளி 12:11
b உபா 4:24; 1யோ 4:8
c 1கொ 13:8, 13
d ரோ 8:38, 39
e உன் 1:6
f பிர 2:4
g உன் 1:6; உன் 6:11
h உன் 2:14
i உன் 2:9, 17

ஏசாயா

முக்கியக் குறிப்புகள்

1 அப்பாவும் அடங்காத மகன்களும் (1-9)
சம்பிரதாயத்துக்காக வணங்குபவர்களை யெகோவா வெறுக்கிறார் (10-17)
“நம்மிடையே இருக்கிற பிரச்சினையைச் சரிசெய்யலாம்” (18-20)
சீயோன் திரும்பவும் விசுவாசமுள்ள நகரமாக மாறும் (21-31)

2 யெகோவாவின் மலை உயர்த்தப்படும் (1-5)
ஜனங்கள் ஈட்டிகளை அரிவாள்களாக அடிப்பார்கள் (4)
யெகோவாவின் நாளில் தலைக்கனம் பிடித்தவனுக்குத் தலைகுனிவு வரும் (6-22)

3 யூதாவின் தலைவர்கள் ஜனங்களைத் தவறாக வழிநடத்துகிறார்கள் (1-15)
சீயோனில் காதல் வலை வீசுகிற பெண்களுக்குக் கிடைக்கும் தீர்ப்பு (16-26)

4 ஏழு பெண்களுக்கு ஒரு ஆள் (1)
யெகோவா அமோக விளைச்சலைத் தருகிறார் (2-6)

5 யெகோவாவின் திராட்சைத் தோட்டத்தைப் பற்றிய பாட்டு (1-7)
யெகோவாவின் திராட்சைத் தோட்டத்துக்கு வரும் கேடுகள் (8-24)
தன் ஜனங்களுக்கு எதிராக யெகோவாவின் கோபம் பற்றியெரிகிறது (25-30)

6 யெகோவா தன் ஆலயத்தில் இருக்கிற தரிசனக் காட்சி (1-4)
“யெகோவா பரிசுத்தமானவர், பரிசுத்தமானவர், பரிசுத்தமானவர்” (3)
ஏசாயாவின் உதடுகள் சுத்தப்படுத்தப்படுகின்றன (5-7)
ஏசாயாவுக்குப் பொறுப்பு கொடுக்கப்படுகிறது (8-10)
“இதோ நான் இருக்கிறேன்! என்னை அனுப்புங்கள்” (8)
“இன்னும் எவ்வளவு நாட்களுக்கு, யெகோவாவே?” (11-13)

7 ஆகாஸ் ராஜாவுக்குச் செய்தி (1-9)
சேயார்-யாசூபு (3)
இம்மானுவேலின் அடையாளம் (10-17)
விசுவாசமில்லாததால் வரும் விளைவுகள் (18-25)

8 அசீரியா போர் செய்ய வருகிறது (1-8)
மகேர்-சாலால்-அஷ்-பாஸ் (1-4)
பயப்படக் கூடாது—“கடவுள் எங்களோடு இருக்கிறார்!” (9-17)
ஏசாயாவும் அவருடைய பிள்ளைகளும் அடையாளங்கள் (18)
கடவுளுடைய சட்டங்களைத் தேடுங்கள், பேய்களை அல்ல (19-22)

9 கலிலேயா மாகாணத்துக்குப் பெரிய வெளிச்சம் (1-7)
“சமாதானத்தின் அதிபதி” பிறப்பார் (6, 7)
இஸ்ரவேலுக்கு எதிராகக் கடவுளின் கை (8-21)

10 இஸ்ரவேலுக்கு எதிராகக் கடவுளின் கை (1-4)
அசீரியா, கடவுள் பயன்படுத்தும் பிரம்பு (5-11)
அசீரியாவுக்கு வரும் தண்டனை (12-19)
யாக்கோபின் வம்சத்தாரில் மீதியானவர்கள் திரும்பி வருவார்கள் (20-27)
அசீரியாவைக் கடவுள் தண்டிப்பார் (28-34)

11 ஈசாய் என்ற அடிமரத்தினுடைய துளிரின் நீதியான ஆட்சி (1-10)
ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும் (6)
பூமி யெகோவாவைப் பற்றிய அறிவால் நிறைந்திருக்கும் (9)
மீதியுள்ள இஸ்ரவேலர்களைக் கடவுள் திரும்பி வரச் செய்வார் (11-16)

12 நன்றிப் பாடல் (1-6)
“யா யெகோவாவே, நீங்கள்தான் என் பலம்” (2)

13 பாபிலோனுக்கு எதிரான தீர்ப்பு (1-22)
யெகோவாவின் நாள் நெருங்கிவிட்டது! (6)
மேதியர்கள் பாபிலோனைத் தோற்கடிப்பார்கள் (17)
பாபிலோனில் இனி யாருமே குடியிருக்க மாட்டார்கள் (20)

14 இஸ்ரவேலர்கள் தங்கள் தேசத்திலேயே குடியிருப்பார்கள் (1, 2)
பாபிலோன் ராஜாவைப் பற்றிய கேலிப் பேச்சு (3-23)
நட்சத்திரமாக மினுமினுத்தவன் வானத்திலிருந்து விழுவான் (12)

யெகோவா அசீரியர்களை ஒழித்துக்கட்டுவார் (24-27)
பெலிஸ்தியர்களுக்கு எதிரான தீர்ப்பு (28-32)

15 மோவாபுக்கு எதிரான தீர்ப்பு (1-9)

16 மோவாபுக்கு எதிரான தீர்ப்பு தொடர்கிறது (1-14)

17 தமஸ்குவுக்கு எதிரான தீர்ப்பு (1-11)
தேசங்கள் யெகோவாவினால் கண்டிக்கப்படும் (12-14)

18 எத்தியோப்பியாவுக்கு எதிரான தீர்ப்பு (1-7)

19 எகிப்துக்கு எதிரான தீர்ப்பு (1-15)
எகிப்து யெகோவாவைப் பற்றித் தெரிந்துகொள்ளும் (16-25)
எகிப்தில் யெகோவாவுக்கு ஒரு பலிபீடம் (19)

20 எகிப்துக்கும் எத்தியோப்பியாவுக்கும் எதிரான அடையாளம் (1-6)

21 கடல் வனாந்தரத்துக்கு எதிரான தீர்ப்பு (1-10)
காவற்கோபுரத்தில் நின்றுகொண்டு காவல் காக்கிறேன் (8)
"பாபிலோன் விழுந்துவிட்டாள்!" (9)
தூமாவுக்கும் பாலைநிலத்துக்கும் எதிரான தீர்ப்பு (11-17)
"காவல்காரனே, பொழுது விடிய இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது?" (11)

22 தரிசனப் பள்ளத்தாக்குக்கு எதிரான தீர்ப்பு (1-14)
செப்னாவுக்குப் பதிலாக எலியாக்கீம் நியமிக்கப்படுகிறார் (15-25)
அடையாள அர்த்தமுள்ள ஆணி (23-25)

23 தீருவுக்கு எதிரான தீர்ப்பு (1-18)

24 யெகோவா தேசத்தை வெறுமையாக்குவார் (1-23)
யெகோவா சீயோனில் ராஜாவாக இருக்கிறார் (23)

25 கடவுளுடைய ஜனங்களுக்கு அளவில்லாத ஆசீர்வாதங்கள் (1-12)
யெகோவா ஏற்பாடு செய்கிற அருமையான திராட்சமது விருந்து (6)
இனி மரணம் இருக்காது (8)

26 நம்பிக்கை மற்றும் மீட்பு பற்றிய பாடல் (1-21)
யா யெகோவாதான் என்றென்றுமுள்ள கற்பாறை (4)
பூமியில் உள்ள ஜனங்கள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள் (9)
"உங்களுடைய ஜனங்களில் இறந்தவர்கள் உயிர்பெறுவார்கள்" (19)
உள்ளறைகளுக்குப் போய் ஒளிந்துகொள்ளுங்கள் (20)

27 லிவியாதானை யெகோவா கொன்றுபோடுவார் (1)
இஸ்ரவேலைத் திராட்சைத் தோட்டமாக வர்ணிக்கும் பாடல் (2-13)

28 எப்பிராயீமின் குடிவெறியர்களுக்கு ஐயோ கேடு! (1-6)
யூதாவின் குருமார்களும் தீர்க்கதரிசிகளும் தள்ளாடுகிறார்கள் (7-13)
'மரணத்தோடு ஒரு ஒப்பந்தம்' (14-22)
சீயோனில் விலைமதிப்புள்ள மூலைக்கல் (16)
யெகோவாவின் வினோதமான செயல் (21)
யெகோவா ஞானமாகக் கண்டித்துத் திருத்துவதைப் பற்றிய விவரிப்பு (23-29)

29 அரியேல் நகரத்துக்கு ஐயோ கேடு! (1-16)
உதட்டளவில் கடவுளைப் புகழ்கிறவர்கள் கண்டிக்கப்படுகிறார்கள் (13)
கேட்காத காதுகள் கேட்கும், பார்க்காத கண்கள் பார்க்கும் (17-24)

30 எகிப்து செய்யும் உதவி வீணிலும் வீண் (1-7)
தீர்க்கதரிசியின் செய்தியை மக்கள் கேட்பதில்லை (8-14)
நம்பிக்கை வைத்தால் பலம் கிடைக்கும் (15-17)
யெகோவா தன் மக்களுக்குக் கருணை காட்டுகிறார் (18-26)
யெகோவா, மகத்தான போதகர் (20)
"இதுதான் சரியான வழி" (21)
அசீரியாமீது யெகோவா தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவார் (27-33)

31 உண்மையான உதவி, மனிதர்களிடமிருந்து அல்ல கடவுளிடமிருந்துதான் (1-9)
எகிப்தியர்களின் குதிரைகள் சாதாரண மிருகங்கள்தான் (3)

32 ராஜாவும் அதிபதிகளும் நீதியாக ஆட்சி செய்வார்கள் (1-8)
அலட்சியமாக இருக்கிற பெண்கள் எச்சரிக்கப்படுகிறார்கள் (9-14)
கடவுளுடைய சக்தி பொழியப்படும்போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள் (15-20)

33 தண்டனைத் தீர்ப்பும் நீதிமான்களுக்கு நம்பிக்கையும் (1-24)
யெகோவா நம் நீதிபதி, நமக்குச் சட்டம் கொடுப்பவர், நம் ராஜா (22)

“எனக்கு உடம்பு சரியில்லை” என்று யாருமே சொல்ல மாட்டார்கள் (24)

34 தேசங்களை யெகோவா பழிவாங்கப் போகிறார் (1-8)
ஏதோம் பாழாய்ப் போகும் (9-17)

35 பூமி திரும்பவும் பூஞ்சோலையாக மாறும் (1-7)
பார்க்காத கண்கள் பார்க்கும்; கேட்காத காதுகள் கேட்கும் (5)
மீட்கப்பட்டவர்கள் திரும்பி வருவதற்குரிய பரிசுத்தமான வழி (8-10)

36 சனகெரிப் யூதாவைத் தாக்குகிறான் (1-3)
ரப்சாக்கே யெகோவாவைக் கேலி செய்கிறான் (4-22)

37 ஏசாயா மூலம் எசேக்கியா கடவுளிடம் உதவி கேட்கிறார் (1-7)
எருசலேமில் இருப்பவர்களை சனகெரிப் மிரட்டுகிறான் (8-13)
எசேக்கியாவின் ஜெபம் (14-20)
யெகோவா என்ன சொன்னார் என்பதை ஏசாயா தெரிவிக்கிறார் (21-35)
ஒரு தேவதூதர் 1,85,000 அசீரிய வீரர்களைக் கொன்றுபோடுகிறார் (36-38)

38 எசேக்கியா வியாதிப்படுவதும் குணமாவதும் (1-22)
நன்றிப் பாடல் (10-20)

39 பாபிலோனிலிருந்து தூதுவர்கள் வருகிறார்கள் (1-8)

40 கடவுளுடைய ஜனங்களுக்கு ஆறுதல் (1-11)
வனாந்தரத்தில் ஒரு குரல் (3-5)
கடவுளுடைய மகத்துவம் (12-31)
தேசங்கள், வாளியிலிருந்து சிந்தும் ஒரு துளி தண்ணீர் (15)
“உருண்டையான பூமிக்கு மேலே கடவுள் குடியிருக்கிறார்” (22)
எல்லா நட்சத்திரங்களையும் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறார் (26)
கடவுள் சோர்ந்துபோவதில்லை (28)
யெகோவாமேல் நம்பிக்கை வைப்பது புதுத்தெம்பு அளிக்கிறது (29-31)

41 கிழக்கிலிருந்து ஒரு வெற்றிவீரர் (1-7)
இஸ்ரவேல் கடவுளுடைய ஊழியனாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது (8-20)
‘என் நண்பனான ஆபிரகாம்’ (8)
மற்ற தெய்வங்களுக்குச் சவால்விடப்படுகிறது (21-29)

42 கடவுளுடைய ஊழியரும் அவருடைய வேலையும் (1-9)
‘யெகோவா என்பது என் பெயர்’ (8)
யெகோவாவைப் புகழ்ந்து ஒரு புதிய பாடல் (10-17)
இஸ்ரவேலுக்குக் கண்ணும் தெரியவில்லை, காதும் கேட்கவில்லை (18-25)

43 யெகோவா மறுபடியும் தன் ஜனங்களைக் கூட்டிச்சேர்க்கிறார் (1-7)
தெய்வங்கள் விசாரிக்கப்படுகின்றன (8-13)
“நீங்கள் என்னுடைய சாட்சிகளாக இருக்கிறீர்கள்” (10, 12)
பாபிலோனிலிருந்து விடுதலை (14-21)
“வா, நாம் வழக்காடலாம்” (22-28)

44 கடவுள் தேர்ந்தெடுத்த ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள் (1-5)
யெகோவாவைத் தவிர வேறு கடவுள் இல்லை (6-8)
மனிதர்கள் செய்த சிலைகள் பிரயோஜனம் இல்லாதவை (9-20)
யெகோவா, இஸ்ரவேலை விடுவிப்பவர் (21-23)
கோரேஸ் மூலம் மீட்பு (24-28)

45 பாபிலோனைக் கைப்பற்ற கோரேஸ் தேர்ந்தெடுக்கப்படுகிறார் (1-8)
குயவனோடு களிமண் வாக்குவாதம் செய்யக் கூடாது (9-13)
மற்ற தேசங்கள் இஸ்ரவேலைப் பற்றித் தெரிந்துகொள்கின்றன (14-17)
படைப்பதில், உண்மைகளை வெளிப்படுத்துவதில் கடவுள் நம்பகமானவர் (18-25)
ஜனங்கள் குடியிருப்பதற்காகவே பூமி படைக்கப்பட்டிருக்கிறது (18)

46 பாபிலோனியர்களின் சிலைகளும் இஸ்ரவேலர்களின் கடவுளும் (1-13)
எதிர்காலத்தைப் பற்றி யெகோவா முன்கூட்டியே சொல்கிறார் (10)
கிழக்கிலிருந்து ஒரு கழுகு (11)

47 பாபிலோனின் வீழ்ச்சி (1-15)
ஜோதிடர்களின் நிலைமை வெட்டவெளிச்சமாக்கப்படுகிறது (13-15)

48 இஸ்ரவேல் கண்டிக்கப்படுகிறது, புடமிடப்படுகிறது (1-11)
பாபிலோனுக்கு எதிராக யெகோவா நடவடிக்கை எடுக்கப்போகிறார் (12-16அ)

பிரயோஜனமானதைக் கடவுள் கற்றுக்கொடுக்கிறார் (16ஆ-19)
“பாபிலோனைவிட்டு வெளியேறுங்கள்!” (20-22)

49 யெகோவாவின் ஊழியனுக்குக் கொடுக்கப்படுகிற வேலை (1-12)
தேசங்களுக்கெல்லாம் ஒளி (6)
இஸ்ரவேலுக்கு ஆறுதல் (13-26)

50 இஸ்ரவேல் செய்த பாவத்தால் பிரச்சினைகள் வருகின்றன (1-3)
யெகோவாவுக்குக் கீழ்ப்படிகிற ஊழியன் (4-11)
கல்விமானின் நாவும் காதும் (4)

51 ஏதேன் தோட்டத்தைப் போல் சீயோன் மாறுகிறது (1-8)
சீயோனை உருவாக்கியவரிடமிருந்து ஆறுதல் (9-16)
யெகோவாவின் கோபம் என்ற கோப்பை (17-23)

52 விழித்தெழு, சீயோனே! (1-12)
நல்ல செய்தி சொல்பவர்களின் பாதங்கள் அழகாக இருக்கின்றன (7)
சீயோனின் காவல்காரர்கள் ஒன்றுசேர்ந்து குரலெழுப்புகிறார்கள் (8)
யெகோவாவின் பாத்திரங்களைச் சுமக்கிறவர்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டும் (11)
யெகோவாவின் ஊழியர் உயர்த்தப்படுவார் (13-15)
உருக்குலைக்கப்பட்ட தோற்றம் (14)

53 யெகோவாவுடைய ஊழியரின் வேதனை, மரணம், அடக்கம் (1-12)
ஒதுக்கப்படுகிறார், வெறுக்கப்படுகிறார் (3)
வியாதிகளைச் சுமக்கிறார், வலிகளைத் தாங்குகிறார் (4)
‘வெட்டப்படுவதற்காகக் கொண்டுபோகப்படும் ஆட்டைப் போல இருக்கிறார்’ (7)
பலருடைய பாவங்களைச் சுமக்கிறார் (12)

54 குழந்தை பெறாத சீயோனுக்கு ஏராளமான பிள்ளைகள் பிறப்பார்கள் (1-17)
யெகோவா, சீயோனின் கணவர் (5)
சீயோனின் பிள்ளைகள் யெகோவாவினால் கற்பிக்கப்படுவார்கள் (13)
சீயோனுக்கு எதிராக உருவாக்கப்படுகிற எந்த ஆயுதமும் வெற்றி பெறாது (17)

55 இலவசமாகச் சாப்பிடுவதற்கும் குடிப்பதற்குமான அழைப்பு (1-5)
யெகோவாவையும் அவருடைய நம்பகமான வார்த்தையையும் தேடுங்கள் (6-13)
கடவுளுடைய வழிகள் மனிதர்களுடைய வழிகளைவிட உயர்ந்தவை (8, 9)
கடவுளுடைய வார்த்தை நிச்சயம் நிறைவேறும் (10, 11)

56 மற்ற தேசத்தாருக்கும் அண்ணகர்களுக்கும் ஆசீர்வாதங்கள் (1-8)
எல்லாருக்கும் ஒரு ஜெப வீடு (7)
குருட்டுக் காவல்காரர்கள், ஊமை நாய்கள் (9-12)

57 நீதிமான்களும் விசுவாசமாக நடக்கிறவர்களும் அழிந்துபோகிறார்கள் (1, 2)
இஸ்ரவேல் ஆன்மீக விபச்சாரத்தில் ஈடுபடுவது அம்பலமாகிறது (3-13)
எளியவர்களுக்கு ஆறுதல் (14-21)
கெட்டவர்கள் கொந்தளிக்கிற கடலைப் போல இருக்கிறார்கள் (20)
கெட்டவர்களுக்கு நிம்மதியே இருக்காது (21)

58 உண்மையாக விரதமிருப்பதும் போலியாக விரதமிருப்பதும் (1-12)
ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் சந்தோஷம் (13, 14)

59 இஸ்ரவேலர்களின் குற்றங்கள் கடவுளிடமிருந்து அவர்களைப் பிரித்துவிடுகின்றன (1-8)
பாவங்களை ஒத்துக்கொள்கிறார்கள் (9-15அ)
மனம் திருந்தியவர்களுக்காக யெகோவா செயல்படுகிறார் (15ஆ-21)

60 யெகோவாவின் மகிமை சீயோனில் பிரகாசிக்கிறது (1-22)
மாடங்களுக்கு வருகிற புறாக்களைப் போல் ஜனங்கள் வருகிறார்கள் (8)
செம்புக்குப் பதிலாகத் தங்கம் (17)
கொஞ்சம் பேர் ஆயிரம் பேராவார்கள் (22)

61 தேர்ந்தெடுக்கப்பட்டவர் நல்ல செய்தியைச் சொல்வார் (1-11)
‘யெகோவாவின் அனுக்கிரக வருஷம்’ (2)
“நீதியின் பெரிய மரங்கள்” (3)
மற்ற தேசத்து ஜனங்கள் உதவி செய்வார்கள் (5)
“யெகோவாவுக்குச் சேவை செய்கிற குருமார்கள்” (6)

62 சீயோனின் புதிய பெயர் (1-12)

63 தேசங்களை யெகோவா பழிவாங்குகிறார் (1-6)
கடந்த காலங்களில் யெகோவா காட்டிய மாறாத அன்பு (7-14)
மனம் திருந்தியதைத் தெரிவிக்கும் ஜெபம் (15-19)

64 மனம் திருந்தியதைத் தெரிவிக்கும் ஜெபம் தொடர்கிறது (1-12)
யெகோவா "எங்களுடைய குயவர்" (8)

65 சிலை வணக்கத்தாருக்கு எதிராக யெகோவாவின் தீர்ப்பு (1-16)
அதிர்ஷ்ட தெய்வமும் விதி தெய்வமும் (11)
"என் ஊழியர்கள் சாப்பிடுவார்கள்" (13)
புதிய வானமும் புதிய பூமியும் (17-25)
வீடுகளைக் கட்டுவார்கள்; திராட்சைத் தோட்டங்களை அமைப்பார்கள் (21)
கடின உழைப்பு வீண்போகாது (23)

66 உண்மை வணக்கமும் போலி வணக்கமும் (1-6)
தாய் சீயோனும் அவளுடைய பிள்ளைகளும் (7-17)
கடவுளை வணங்க ஜனங்கள் எருசலேமில் கூடிவருகிறார்கள் (18-24)

---

1 உசியா,[a] யோதாம்,[b] ஆகாஸ்,[c] எசேக்கியா[d] ஆகியவர்கள் யூதாவை
ஆட்சி செய்த[e] காலத்தில், ஆமோத்ஸ் என்பவரின் மகனான ஏசாயா*
வாழ்ந்தார். யூதாவையும் எருசலேமையும் பற்றி அவர் பார்த்த தரிசனம்[f]
இதுதான்:

2 பரலோகமே, கேள்! பூமியே, கவனி![g]
யெகோவா சொல்வது இதுதான்:
"பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினேன்.[h]
ஆனால், அவர்கள் எனக்கு அடங்கி நடக்கவில்லை.[i]
3 காளை மாட்டுக்கு அதன் எஜமானைத் தெரியும்.
கழுதைக்கு அதன் எஜமான் வைத்திருக்கிற தீவனத் தொட்டி தெரியும்.
ஆனால், என் ஜனங்களான இஸ்ரவேலர்களுக்கு என்னை*
தெரியவில்லை.[j]
என் சொந்த ஜனங்களே புத்தியில்லாமல்# நடந்துகொள்கிறார்கள்."
4 பாவம் செய்கிற ஜனங்களே! உங்களுக்கு ஐயோ கேடு![k]
நீங்கள் குற்றத்துக்குமேல் குற்றம் செய்கிறீர்கள்.
அக்கிரமக்காரக் கும்பலே! கேடுகெட்ட பிள்ளைகளே!
நீங்கள் யெகோவாவை ஒதுக்கித்தள்ளினீர்கள்.[l]
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளிடம் மரியாதை இல்லாமல்
நடந்துகொண்டீர்கள்.
அவரைவிட்டு விலகிப்போனீர்கள்.
5 ஏன் அவருக்கு அடங்க மறுக்கிறீர்கள், வாங்கிய அடியெல்லாம்
போதாதா?[m]
உங்கள் தலை முழுக்க புண் வந்திருக்கிறது.
இதயம் முழுக்க கோளாறு இருக்கிறது.[n]
6 உள்ளங்கால்முதல் உச்சந்தலைவரை ஒன்றும் சரியில்லை.

1:1 *அர்த்தம், "யெகோவா தரும் மீட்பு." **1:3** *வே.வா., "அவர்களுடைய எஜமானை." #வே.வா., "புரிந்துகொள்ளாமல்."

அதி. 1
a 2நா 26:22; ஏசா 6:1
b 2நா 27:1, 2
c 2நா 28:1
d 2நா 29:1, 2; 2நா 32:20
e மத் 1:9
f 2நா 32:32
g சங் 50:4
h உபா 1:31
i உபா 4:25, 26; எசே 20:8
j ஓசி 4:6
k தானி 9:11
l உபா 31:16; எரே 2:5
m எரே 5:3
n நெ 9:34, 35; தானி 9:8

வெளிக்காயங்களும், உள்காயங்களும், சீழ்வடியும் புண்களுமாக இருக்கிறது.
மருந்து போடாமலும், கட்டுப் போடாமலும், எண்ணெய் பூசாமலும் விட்டிருக்கிறீர்கள்.[a]
7 உங்கள் தேசம் பாழாய்க் கிடக்கிறது.
உங்கள் நகரங்கள் கொளுத்தப்பட்டுக் கிடக்கின்றன.
மற்ற தேசத்து ஜனங்கள் உங்கள் கண் முன்னாலேயே உங்கள் நிலத்தைக் கைப்பற்றுகிறார்கள்.[b]
அதை அழித்து நாசமாக்குகிறார்கள்.[c]
8 சீயோன் மகள், திராட்சைத் தோட்டத்து காவல்காரனுடைய பந்தல் போலவும்,
வெள்ளரித் தோட்டத்தில் உள்ள குடிசை போலவும்,
எதிரிகளால் சூழப்பட்ட நகரத்தைப் போலவும் இருக்கிறாள்.[d]
9 பரலோகப் படைகளின் யெகோவா நம்மில் கொஞ்சம் பேரை மீதியாக வைக்காமல் போயிருந்தால்,
நாம் சோதோமைப் போலவும்,
கொமோராவைப் போலவும் ஆகியிருப்போம்.[e]
10 சோதோமின் ஆட்சியாளர்களே,* யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்.[f]
கொமோராவின் மக்களே, நம் கடவுளுடைய சட்டத்தை# காதுகொடுத்துக் கேளுங்கள்.[g]
11 யெகோவா இப்படிச் சொல்கிறார்: “நீங்கள் எத்தனை பலிகளைக் கொடுத்தாலும் எனக்கு என்ன லாபம்?[h]
உங்களுடைய செம்மறியாட்டுக் கடாக்களின் தகன பலிகளும்,[i] புஷ்டியான மிருகங்களின் கொழுப்பும்[j] எனக்கு வெறுப்பாக இருக்கிறது.
இளம் காளைகள்,[k] செம்மறியாட்டுக் குட்டிகள், வெள்ளாடுகள்[l] ஆகியவற்றின் இரத்தம்[m] எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.
12 நீங்கள் என் ஆலயத்துக்கு வந்து போகிறீர்கள்.[n]
ஆனால், என்னுடைய பிரகாரங்களின் தரை தேய்ந்ததுதான் மிச்சம்.
இப்படி வீணாக வந்துபோகும்படி நான் சொன்னேனா?[o]
13 பிரயோஜனமில்லாத உணவுக் காணிக்கைகளைக் கொண்டுவருவதை நிறுத்துங்கள்.
நீங்கள் தூபம் காட்டுவது எனக்கு அருவருப்பாக இருக்கிறது.[p]
மாதப் பிறப்புகளிலும்*[q] ஓய்வுநாட்களிலும்[r] மாநாடுகளிலும்[s] நீங்கள் செய்வதை என்னால் இனி சகிக்க முடியாது.
என்னை வணங்குவதற்காகக் கூடிவரும்போது நீங்கள் மாயமந்திரத்தில் ஈடுபடுவதை என்னால் இனி பொறுக்க முடியாது.[t]
14 நீங்கள் கொண்டாடுகிற மாதப் பிறப்புகளையும் பண்டிகைகளையும் நான் வெறுக்கிறேன்.

1:10 *வே.வா., “கொடுங்கோலர்களே.” #வே.வா., “அறிவுரையை.” **1:13** *வே.வா., “முதலாம் பிறையிலும்.”

அதி. 1
a லூ 10:34
b 2ரா 18:11
c உபா 28:33, 63
d 2ரா 18:13, 14; ஏசா 8:7, 8
e ஆதி 19:24, 25; உபா 29:22, 23; ரோ 9:29
f ஆதி 13:13; ஏசா 3:8, 9
g உபா 32:32; யூ 7
h 1சா 15:22; நீதி 15:8; ஓசி 6:6; மீ 6:7
i யாத் 29:38
j லேவி 3:14-16
k லேவி 4:18, 21
l லேவி 16:5
m லேவி 17:11
n உபா 16:16
o பிர 5:1; மல் 1:8
p நீதி 21:27; எசே 8:11, 12
q எண் 28:11
r யாத் 31:13
s லேவி 23:2
t லேவி 19:26

அதெல்லாம் எனக்கு எரிச்சலாக இருக்கிறது.
அதைப் பார்த்துப் பார்த்து சலித்துப்போய்விட்டேன்.
15 உங்கள் கைகளில் இரத்தக்கறை படிந்திருக்கிறது.[a]
அதனால், நீங்கள் என்முன் கைகளை விரித்தாலும்
நான் பார்க்க மாட்டேன்.[b]
நீங்கள் எவ்வளவுதான் ஜெபம் செய்தாலும்[c]
நான் கேட்க மாட்டேன்.[d]
16 உங்களைச் சுத்தமாக்குங்கள், உங்களைத் தூய்மையாக்குங்கள்.[e]
என் கண் முன்னாலேயே நீங்கள் அக்கிரமங்கள் செய்தது போதும்.
அதற்கு ஒரு முடிவுகட்டுங்கள்.[f]
17 நல்லது செய்யக் கற்றுக்கொள்ளுங்கள், நியாயத்தைத் தேடுங்கள்.[g]
மற்றவர்களை அடக்கி ஒடுக்குகிறவர்களைத் திருத்துங்கள்.
அப்பா இல்லாத பிள்ளைகளின்* உரிமைகளுக்காக வாதாடுங்கள்.
விதவைகளுக்காக வழக்காடுங்கள்."[h]
18 யெகோவா உங்களிடம், "வாருங்கள், நம்மிடையே இருக்கிற
பிரச்சினையைச் சரிசெய்யலாம்.[i]
உங்களுடைய பாவங்கள் இரத்தம்போல் சிவப்பாக இருந்தாலும்,
பனிபோல் வெண்மையாகும்.[j]
செக்கச்செவேல் என்று இருந்தாலும்,
வெள்ளைவெளேர் என்று ஆகும்.
19 நீங்கள் மனப்பூர்வமாக எனக்குக் கீழ்ப்படிந்து நடந்தால்,
தேசத்தின் நல்ல விளைச்சலை அனுபவிப்பீர்கள்.[k]
20 என் பேச்சைக் கேட்காமல் முரண்டுபிடித்தால்,
வாளால் கொல்லப்படுவீர்கள்.[l]
யெகோவாவாகிய நானே இதைச் சொல்கிறேன்" என்கிறார்.
21 விசுவாசமாக இருந்த நகரமே,[m] இப்படித் துரோகம் செய்துவிட்டாயே![n]
நீ நியாயத்தால் நிறைந்திருந்தாய்.[o]
உன்னிடம் நீதி குடிகொண்டிருந்தது.[p]
ஆனால், இப்போது கொலைகாரர்கள் குடியிருக்கிறார்கள்.[q]
22 உன் வெள்ளி வெறும் கசடாகிவிட்டது.*[r]
உன் மதுபானம்# தண்ணீர் கலந்ததாகிவிட்டது.
23 உன் தலைவர்கள் திருந்தாதவர்கள்; திருடர்களின் கூட்டாளிகள்.[s]
ஒவ்வொருவரும் லஞ்சத்தை எதிர்பார்க்கிறார்கள், ஆதாயத்துக்காக
அலைகிறார்கள்.[t]
அப்பா இல்லாத பிள்ளைகளுக்கு நியாயம் வழங்காமல் இருக்கிறார்கள்.
விதவைகளின் வழக்குகளை விசாரிக்காமல் ஒதுக்குகிறார்கள்.[u]
24 அதனால் இஸ்ரவேலர்களின் வல்லமையுள்ள கடவுளும்,
உண்மையான எஜமானும், பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்வது இதுதான்:

அதி. 1
a மீ 3:2-4
b நீதி 15:29
c மத் 6:7
d நீதி 28:9; ஏசா 59:2; புல 3:44
e எரே 4:14
f ஏசா 55:7
g மீ 6:8
h உபா 10:18; எரே 22:3
i மீ 6:2; யாக் 4:8
j சங் 51:7; ஏசா 44:22; மீ 7:19
k உபா 28:1, 2; யோவே 2:19
l லேவி 26:33; நீதி 29:1
m சங் 48:2
n எரே 2:20
o 2சா 8:15; 1ரா 3:28
p 2நா 19:9, 10
q மீ 3:1-3; லூ 13:34
r எசே 22:18
s ஏசா 3:14; மீ 3:9-11
t யாத் 23:8
u யாத் 22:22; எரே 5:28

1:17 *வே.வா., "அநாதைகளின்." **1:22** *கசடு என்பது உலோகம் புடமிடப்படும்போது நீக்கப்படும் கழிவு. #அதாவது, "கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்ட பீர்."

"என் விரோதிகளை ஒழித்துக்கட்டுவேன்,
எதிரிகளைப் பழிவாங்குவேன்.[a]
25 உன்னைத் தண்டித்துத் திருத்துவேன்.
உன்னைப் புடமிட்டு உன் கசடுகளையெல்லாம் நீக்குவேன்,
நன்றாகச் சுத்தமாக்குவேன்.[b]
26 முன்பு போலவே உனக்காக நியாயாதிபதிகளை நியமிப்பேன்.
ஆரம்பத்தில் இருந்தது போலவே ஆலோசகர்களைத்[c] தருவேன்.
அதன்பின், 'நீதியின் நகரம்' என்றும், 'விசுவாசத்தின் ஊர்' என்றும்
நீ அழைக்கப்படுவாய்.[d]
27 நியாயத்தினால் சீயோன் விடுவிக்கப்படும்.[e]
அங்கே திரும்பி வருகிறவர்கள் நீதியினால் விடுவிக்கப்பட்ட
ஜனங்களாக இருப்பார்கள்.
28 யெகோவாவுக்கு அடங்காதவர்களும் பாவம் செய்கிறவர்களும்
நொறுக்கப்படுவார்கள்.[f]
அவரைவிட்டு விலகுகிறவர்கள் அழிந்துபோவார்கள்.[g]
29 பெரிய மரங்களை விரும்பியவர்கள் அவமானப்பட்டுப் போவார்கள்.[h]
அவர்கள் தேர்ந்தெடுத்த தோட்டங்களை* குறித்து வெட்கப்பட்டுப்
போவார்கள்.[i]
30 இலைகள் உதிர்ந்த பெரிய மரத்தைப் போலவும்,[j]
தண்ணீர் இல்லாத தோட்டத்தைப் போலவும் அவர்கள் ஆவார்கள்.
31 பலசாலி பலமில்லாத* நார்போல் ஆகிவிடுவான்.
அவன் செய்வதெல்லாம் தீப்பொறிபோல் ஆகிவிடும்.
யாராலும் அணைக்க முடியாத நெருப்பு அவனைச் சுட்டெரிக்கும்.
அவன் செய்வதையெல்லாம் அழித்துவிடும்."

2 யூதாவையும் எருசலேமையும் பற்றி ஆமோத்சின் மகனான ஏசாயா
பார்த்த தரிசனத்தின் விவரம்.[k]
2 கடைசி நாட்களில் இப்படி நடக்கும்:
யெகோவாவின் ஆலயம் இருக்கிற மலை எல்லா மலைகளுக்கும்
மேலாக உறுதியாய் நிலைநிறுத்தப்படும்.[l]
எல்லா குன்றுகளுக்கும் மேலாக அது உயர்த்தப்படும்.
எல்லா தேசத்து ஜனங்களும் அங்கு கூட்டம் கூட்டமாக வருவார்கள்.[m]
3 அங்கே வருகிற பலதரப்பட்ட ஜனங்கள் மற்றவர்களைப் பார்த்து,
"வாருங்கள், நாம் யெகோவாவின் மலைக்குப் போகலாம்.
யாக்கோபின் கடவுளுடைய ஆலயத்துக்குப் போகலாம்.[n]
அவர் தன்னுடைய வழிகளை நமக்குக் கற்றுக்கொடுப்பார்.
நாம் அவர் பாதைகளில் நடப்போம்" என்று சொல்வார்கள்.[o]
ஏனென்றால், சீயோனிலிருந்து சட்டமும்,*
எருசலேமிலிருந்து யெகோவாவின் வார்த்தையும் புறப்படும்.[p]

1:29 * அநேகமாக, இந்த மரங்களும் தோட்டங்களும் உருவ வழிபாட்டுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். **1:31** * வே.வா., "நெருப்பு பட்டதும் எரிந்துவிடுகிற." **2:3** * வே.வா., "அறிவுரையும்."

அதி. 1
a எசே 5:13
b எரே 6:29, 30; எரே 9:7; மல் 3:3
c எண் 12:3; 1சா 12:1, 3; ஏசா 32:1; எசே 34:23
d ஏசா 62:1
e எரே 31:11
f எசே 20:38
g 1ரா 9:6, 7
h எசே 6:13
i ஏசா 65:3; ஏசா 66:17
j எரே 17:5, 6

அதி. 2
k ஏசா 1:1
l சக 8:3
m சங் 72:1, 8; சங் 86:9; மீ 4:1-3; ஆகா 2:7; அப் 10:34, 35
n சக 8:23
o ஏசா 54:13
p ஏசா 51:4

4 ஜனங்களுக்கு அவர் தீர்ப்பு கொடுப்பார்.
பலதரப்பட்ட ஜனங்களின் விவகாரங்களைச் சரிசெய்வார்.
அவர்கள் தங்களுடைய வாள்களை மண்வெட்டிகளாக மாற்றுவார்கள்.
ஈட்டிகளை அரிவாள்களாக அடிப்பார்கள்.[a]
ஒரு ஜனத்துக்கு எதிராக இன்னொரு ஜனம் வாள் எடுக்காது.
போர் செய்ய இனி யாரும் கற்றுக்கொள்ள மாட்டார்கள்.[b]
5 யாக்கோபின் வம்சத்தாரே, வாருங்கள்.
யெகோவா காட்டும் வெளிச்சமான பாதையில் நடப்போம்,[c] வாருங்கள்.
6 கடவுளே, நீங்கள் யாக்கோபின் வம்சத்தாராகிய உங்கள் ஜனங்களைக் கைவிட்டுவிட்டீர்கள்.[d]
ஏனென்றால், கிழக்கே இருக்கிறவர்கள் செய்வதையெல்லாம் அவர்கள் செய்கிறார்கள்.
பெலிஸ்தியர்களைப் போல மாயமந்திரம் செய்கிறார்கள்.[e]
அவர்களோடு மற்ற தேசத்தாரின் பிள்ளைகள்தான் நிறைய பேர் இருக்கிறார்கள்.
7 அவர்களுடைய தேசம் வெள்ளியாலும் தங்கத்தாலும் நிறைந்திருக்கிறது.
அவர்களுடைய சொத்துகளுக்கு அளவே இல்லை.
அவர்களுடைய தேசம் குதிரைகளால் நிறைந்திருக்கிறது.
அவர்களுடைய ரதங்களுக்கு அளவே இல்லை.[f]
8 அவர்களுடைய தேசம் ஒன்றுக்கும் உதவாத தெய்வங்களால் நிறைந்திருக்கிறது.[g]
அவர்கள் தங்களுடைய கைகளால் செய்த உருவங்களை வணங்குகிறார்கள்.
தங்களுடைய விரல்களால் செதுக்கிய சிலைகளைக் கும்பிடுகிறார்கள்.
9 அதனால், அவர்களுக்குத் தலைகுனிவுதான் வரும்.
அவர்களை நீங்கள் மன்னிக்கவே மாட்டீர்கள்.
10 யெகோவா மகிமையோடும் மகத்துவத்தோடும் வரும்போது,
பயத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்கும்போது,[h]
பாறைகளுக்குள் மறைந்துகொள்ளுங்கள், குழிகளுக்குள் ஒளிந்துகொள்ளுங்கள்.
11 மனிதனின் ஆணவம் அடக்கப்படும்.
தலைக்கனம் பிடித்தவனுக்குத் தலைகுனிவு வரும்.
அந்த நாளில் யெகோவா மட்டுமே உயர்ந்திருப்பார்.
12 அது பரலோகப் படைகளின் யெகோவாவுடைய நாள்.[i]
அந்த நாள், அகந்தையும் அகம்பாவமும் பிடித்தவர்களுக்கு எதிராகவும்,
உயர்ந்தோர், தாழ்ந்தோர் என அத்தனை பேருக்கு எதிராகவும்,[j]
13 லீபனோனில் உயர்ந்தோங்கி நிற்கும் தேவதாரு மரங்களுக்கு எதிராகவும்,
பாசானின் கருவாலி மரங்களுக்கு எதிராகவும்,
14 உயரமான மலைகளுக்கு எதிராகவும்,
உயர்ந்த குன்றுகளுக்கு எதிராகவும்,

அதி. 2
a சங் 46:9
b சங் 72:7; ஏசா 60:18; மத் 26:52
c ஏசா 60:19, 20
d உபா 31:16, 17
e உபா 18:10
f உபா 17:15, 16
g 2நா 28:1, 2; 2நா 33:1, 7
h யாத் 20:18
i செப் 1:4, 7
j ஏசா 66:16

15 பெரிய கோபுரங்களுக்கு எதிராகவும், கோட்டைச் சுவர்களுக்கு
எதிராகவும்,
16 தர்ஷீசின் கப்பல்களுக்கு[a] எதிராகவும்,
அழகான படகுகளுக்கு எதிராகவும் வரும்.
17 மனிதனின் ஆணவம் அடக்கப்படும்.
தலைக்கனம் பிடித்தவனுக்குத் தலைகுனிவு வரும்.
அந்த நாளில் யெகோவா மட்டுமே உயர்ந்திருப்பார்.
18 ஒன்றுக்கும் உதவாத தெய்வங்கள் அடியோடு அழிந்துபோகும்.[b]
19 யெகோவா மகிமையோடும் மகத்துவத்தோடும் வரும்போது,
பயத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்கும்போது,[c]
உலகத்தைக் கதிகலங்க வைக்கும்போது,
ஜனங்கள் கற்பாறைக் குகைகளிலும், குழிகளிலும்
ஒளிந்துகொள்வார்கள்.[d]
20 அவர்கள் வணங்கிவந்த வெள்ளி, தங்க சிலைகளை அன்று
ஒழித்துக்கட்டுவார்கள்.
எதற்கும் உதவாத அந்தத் தெய்வங்களைத் தூக்கிப் போடுவார்கள்.
மூஞ்சுறுகளும் வவ்வால்களும் தங்குகிற இடங்களில் வீசியெறிவார்கள்.[e]
21 யெகோவா மகிமையோடும் மகத்துவத்தோடும் வரும்போது,
பயத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்கும்போது,
உலகத்தைக் கதிகலங்க வைக்கும்போது,
அவர்கள் பாறைகளின் இடுக்குகளிலும் பொந்துகளிலும்
ஒளிந்துகொள்வார்கள்.
22 மனிதனை நம்புவதை விட்டுவிடுங்கள்.
அவன் வெறும் காற்றைச் சுவாசித்து உயிர்வாழ்கிறான்.*
அவனுக்கு என்ன மதிப்பு இருக்கிறது?

3 உண்மை எஜமானாகிய பரலோகப் படைகளின் யெகோவா,
எருசலேம் ஜனங்களும் யூதா ஜனங்களும் நம்பியிருக்கிற
எல்லாவற்றையும் அழிப்பார்.
அவர்களுக்கு உணவும் தண்ணீரும் கிடைக்காதபடி செய்துவிடுவார்.[f]
2 அவர்கள் நம்பியிருக்கிற பலசாலியையும், போர்வீரனையும்,
நீதிபதியையும், தீர்க்கதரிசியையும்,[g] குறிசொல்கிறவனையும்,
பெரியவரையும்,*
3 ஐம்பது பேருக்குத் தலைவனையும்,[h] முக்கியப் பிரமுகரையும்,
ஆலோசகரையும்,
திறமைவாய்ந்த மந்திரவாதியையும், மாயவித்தை நிபுணரையும்
அழித்துவிடுவார்.[i]
4 சிறுவர்களை அவர்களுடைய தலைவர்களாக்குவார்.
அலைபாயும் மனம் உள்ளவர்கள்* அவர்களை ஆட்சி செய்வார்கள்.
5 ஜனங்கள் ஒருவரை ஒருவர் கொடுமைப்படுத்துவார்கள்.

2:22 *வே.வா., “அவன் வெறும் மூச்சுக்காற்றைப் போல இருக்கிறான்.” **3:2** *வே.வா., “மூப்பரையும்.” **3:4** *வே.வா., “நிலையான புத்தி இல்லாதவர்கள்.”

அதி. 2
a 1ரா 10:22; எசே 27:25
b ஏசா 27:9
c ஏசா 2:10; 2தெ 1:9
d வெளி 6:15
e ஏசா 30:22; ஏசா 31:7

அதி. 3
f லேவி 26:26; உபா 28:49, 51; எரே 37:21; எசே 4:16
g எசே 13:9
h யாத் 18:21
i உபா 18:10, 12; ஏசா 8:19

அடக்கி ஒடுக்குவார்கள்.[a]
சிறுவர்கள் பெரியவர்களைத் தாக்குவார்கள்.
சாதாரண ஆட்கள் மதிப்புக்குரியவர்களை எதிர்த்துப் பேசுவார்கள்.[b]
6 ஒவ்வொருவனும் தன் அப்பாவின் வீட்டிலுள்ள சகோதரனைப் பார்த்து,
“உன்னிடம் சால்வை இருக்கிறது; அதனால் நீ எங்கள் தலைவனாக இரு.
பாழாய்க் கிடக்கிற இந்த இடத்தை ஆட்சி செய்” என்று சொல்வான்.
7 ஆனால் அவன் அதற்குச் சம்மதிக்காமல்,
“என்னால் உங்கள் காயத்துக்குக் கட்டுப் போட முடியாது.
என் வீட்டில் சாப்பாடும் இல்லை, துணிமணியும் இல்லை.
அப்படியிருக்கும்போது, நான் எப்படி ஜனங்களுக்குத் தலைவனாக இருப்பேன்?” என்று சொல்வான்.
8 எருசலேம் அழிந்துவிட்டது.
யூதா நாசமாகிவிட்டது.
ஜனங்கள் யெகோவாவுக்குப் பிடிக்காததையே பேசுகிறார்கள், செய்கிறார்கள்.
அவருடைய மகிமையான கண்களுக்கு முன்னாலேயே அவர் பேச்சை மீறி நடக்கிறார்கள்.[c]
9 அவர்களுடைய முகபாவமே அவர்களைக் காட்டிக்கொடுக்கிறது.
சோதோம் ஜனங்களைப் போலத் தங்கள் பாவங்களை வாய்கூசாமல் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்.[d]
அதை மறைக்கக்கூட நினைப்பதில்லை.
அவர்கள் கதி அவ்வளவுதான்! அவர்களே அவர்களுக்கு அழிவைத் தேடிக்கொள்கிறார்கள்.
10 நீதிமான்கள் சந்தோஷமாக வாழ்வார்கள் என்று அவர்களிடம் சொல்லுங்கள்.
அவர்கள் நல்லது செய்வதால் நல்லதை அனுபவிப்பார்கள்.[e]
11 ஆனால், கெட்டவன் ஆபத்தில் சிக்குவான்.
அவன் என்ன செய்தானோ அதுவே அவனுக்குச் செய்யப்படும்.
கடைசியில் அழிந்துபோவான்.
12 வேலை வாங்குகிறவர்கள் என் ஜனங்களைச் சக்கையாகப் பிழிகிறார்கள்.
பெண்கள் அவர்களை ஆட்சி செய்கிறார்கள்.
என் ஜனங்களே, உங்கள் தலைவர்கள் உங்களை அலைய விடுகிறார்கள்.
வழி தெரியாமல் திண்டாட வைக்கிறார்கள்.[f]
13 யெகோவா அவர்களுக்குத் தீர்ப்பு கொடுக்க வந்துவிட்டார்.
அவர்களுக்குத் தண்டனை கொடுக்கத் தயாராகிவிட்டார்.
14 ஜனங்களின் அதிபதிகளையும் பெரியோர்களையும்* யெகோவா தண்டிப்பார்.
“நீங்கள் திராட்சைத் தோட்டத்தைக் கொளுத்திவிட்டீர்கள்.

3:14 * வே.வா., “மூப்பர்களையும்.”

அதி. 3
a எரே 9:4, 5; மீ 3:2, 3
b லேவி 19:32
c 2நா 33:1, 6; எசே 9:9
d ஆதி 18:20; ஏசா 1:10; யூ 7
e பிர 8:12; செப் 2:3
f எரே 5:31; ஆப 1:4

ஏழைகளிடம் கொள்ளையடித்த பொருள்களை உங்கள் வீட்டில்
பதுக்கி வைத்திருக்கிறீர்கள்.[a]
15 உங்களுக்கு என்ன துணிச்சல் இருந்தால் என் ஜனங்களைப்
பாடுபடுத்துவீர்கள்?
எவ்வளவு தைரியம் இருந்தால் ஏழைகளை ஏறி மிதிப்பீர்கள்?"[b]
என்று உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவா
கேட்கிறார்.
16 யெகோவா சொல்வது இதுதான்: "சீயோனில் உள்ள பெண்கள்
சரியான அகங்காரிகள்.
தலையை நிமிர்த்திக்கொண்டு சுற்றித் திரிகிறார்கள்.
கண்களால் காதல் வலை வீசுகிறார்கள்.
கொலுசு சத்தம் கேட்கும்படி தளுக்கிக் குலுக்கி நடக்கிறார்கள்.
17 யெகோவா அந்தப் பெண்களின் தலையில் புண்கள் வரும்படி
செய்வார்.
அவர்களுடைய தலையை யெகோவா வழுக்கையாக்குவார்.[c]
18 அந்த நாளில் யெகோவா அவர்களுடைய அழகான
வளையல்களையும்,
கூந்தல் ஆபரணங்களையும்,* பிறை வடிவ ஆபரணங்களையும்,[d]
19 தொங்கட்டான்களையும், காப்புகளையும், முக்காடுகளையும்,
20 தலை அணிகலன்களையும், கொலுசுகளையும், மார்க்கச்சைகளையும்,
வாசனைத் தைலக் குப்பிகளையும், தாயத்துகளையும்,*
21 மோதிரங்களையும், மூக்குத்திகளையும்,
22 பட்டாடைகளையும், மேலாடைகளையும், சால்வைகளையும்,
கைப் பைகளையும்,
23 கைக் கண்ணாடிகளையும்,[e] நாரிழை உடைகளையும்,*
தலைப்பாகைகளையும், வலைத்துணிகளையும்
பிடுங்கிப்போடுவார்.
24 அவர்களுடைய பரிமளத் தைலம் வாசனையாக[f] இருக்காது,
நாற்றமாகத்தான் இருக்கும்.
தலையில் கூந்தல் இருக்காது, வழுக்கைதான் இருக்கும்.[g]
இடுப்பில் வார் இருக்காது, கயிறுதான் இருக்கும்.
ஆடம்பரமான உடைக்குப் பதிலாகத் துக்கத் துணியைத்தான்*
அவர்கள் உடுத்துவார்கள்.[h]
அவர்களுக்கு அழகு இருக்காது, சூட்டுத் தழும்புதான் இருக்கும்.
25 ஆண்கள் வெட்டிக் கொல்லப்படுவார்கள்.
வீரர்கள் போர்க்களத்தில் செத்துப்போவார்கள்.[i]
26 சீயோனின் வாசல்கள் அழுது புலம்பும்.[j]
அவள் எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு சோகத்தில்
உட்கார்ந்திருப்பாள்."[k]

3:18 *அதாவது, "ஜடைபில்லைகளையும்." **3:20** *வே.வா., "சங்கு வடிவ ஆபரணங்களையும்." **3:23** *வே.வா., "லினன் உள்ளாடைகளையும்." **3:24** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 3
a ஏசா 1:23
எரே 5:26-28
மீ 2:1, 2
மீ 6:10
b மீ 3:2, 3
c ஏசா 3:24
d நியா 8:26
e யாத் 38:8
f எஸ்தர் 2:12
g மீ 1:16
h புல 2:10
i புல 2:21
j புல 1:4
k புல 2:10

4 அப்போது, ஏழு பெண்கள் ஓர் ஆளைப் பிடித்துக்கொண்டு,[a]
"தயவுசெய்து எங்கள் மானத்தைக் காப்பாற்றுங்கள்.[*][b]
எங்களைக் கல்யாணம் செய்துகொள்ளுங்கள்.[#]
எங்களுக்கு நீங்கள் சாப்பாடும் போட வேண்டாம், துணிமணியும் தர
வேண்டாம்.
அதையெல்லாம் நாங்களே பார்த்துக்கொள்வோம்" என்று
சொல்வார்கள்.

2 இஸ்ரவேலர்களில் உயிர்தப்பியவர்களுக்கு யெகோவா அமோக
விளைச்சலைத் தருவார். நிலத்திலிருந்து கிடைக்கும் பலன் அவர்களுக்குப்
பெருமையும் புகழும் சேர்க்கும்.[c] **3** சீயோனில் மீதியாக இருப்பவர்களும்
எருசலேமில் எஞ்சியிருப்பவர்களும், அதாவது அங்கே வாழ்வதற்காக
யாருடைய பெயரெல்லாம் எழுதப்பட்டிருக்கிறதோ அவர்கள் எல்லாரும்,
பரிசுத்தமானவர்கள் என்று அழைக்கப்படுவார்கள்.[d]

4 யெகோவா சீயோன் ஜனங்களைச் சுத்தமாக்குவார்.[e] கோபத்தோடு
எருசலேம் ஜனங்களைத் தண்டித்து, அவர்கள் இரத்தம் சிந்துவதை முடிவுக்
குக் கொண்டுவருவார்.[f] **5** யெகோவா சீயோன் மலை முழுவதிலும், ஜனங்
கள் மாநாடுகளுக்காகக் கூடிவருகிற இடத்திலும் பகலில் மேகத்தையும்
புகையையும் தோன்ற வைப்பார்; கொழுந்துவிட்டு எரியும் நெருப்பை ராத்தி
ரியில் தோன்ற வைப்பார்.[g] மகிமையான அந்த இடத்தின் மேலெங்கும் பாது
காப்பு இருக்கும். **6** வெயிலுக்கு நிழலாகவும்,[h] புயலிலிருந்தும் மழையிலி
ருந்தும் பாதுகாக்கிற அடைக்கலமாகவும்[i] ஒரு கூடாரம் இருக்கும்.

5 இப்போது என் அன்புக்குரியவரைப் பற்றிப் பாடுவேன்.
என் பாசத்துக்குரியவரையும் அவருடைய திராட்சைத்
தோட்டத்தையும்[j] பற்றிப் பாடுவேன்.
செழிப்பான மலைச் சரிவிலே அவருக்கு ஒரு திராட்சைத் தோட்டம்
இருந்தது.

2 அவர் மண்ணைக் கொத்திவிட்டு, கற்களை எடுத்துப்போட்டார்.
தரமான சிவப்புத் திராட்சைக் கொடியை நட்டார்.
தோட்டத்தின் நடுவில் காவலுக்கு ஒரு கோபுரத்தைக் கட்டினார்.
தோட்டத்தில் திராட்சரச ஆலையை அமைத்தார்.[k]
நல்ல திராட்சைப் பழங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்.
ஆனால், அது மட்ட ரகமான பழங்களையே தந்தது.[l]

3 அதனால் அவர், "எருசலேமிலும் யூதாவிலும் குடியிருக்கிறவர்களே,
தயவுசெய்து எனக்கும் என் திராட்சைத் தோட்டத்துக்கும் உள்ள
வழக்கைக் கேளுங்கள்.[m]

4 என் திராட்சைத் தோட்டத்துக்கு நான் என்ன குறை வைத்தேன்?
எல்லாமே செய்தேனே![n]
ஆனாலும், நான் எதிர்பார்த்த நல்ல பழங்களை அது ஏன் தரவில்லை?
ஏன் மட்ட ரகமான பழங்களையே தந்தது?

4:1 [*] அதாவது, "திருமணம் ஆகாததாலும், பிள்ளைகள் இல்லாததாலும் வரும் அவமானத்தை நீக்குங்கள்." [#] நே.மொ., "உங்களுடைய பெயரால் நாங்கள் அழைக்கப்பட வேண்டும்."

அதி. 4
a ஏசா 3:25
b ஆதி 30:22, 23; லூ 1:24, 25
c ஏசா 30:23; யோவே 3:18; சக 9:17
d யாத் 32:32, 33
e எசே 36:25
f எசே 22:20–22
g யாத் 13:21; எண் 9:15; சக 2:4, 5
h சங் 121:5
i ஏசா 25:4

அதி. 5
j சங் 80:8; ஏசா 5:7; எரே 2:21; லூ 20:9
k மத் 21:33; மாற் 12:1
l ஓசி 10:1
m மீ 6:2
n 2நா 36:15; எசே 24:13

5 இப்போது அதை நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா?
சொல்கிறேன், கொஞ்சம் கேளுங்கள்:
அதன் வேலியை எடுத்துப் போடுவேன்.
அப்போது, தோட்டத்துக்குத் தீ வைக்கப்படும்.[a]
அதன் கற்சுவரை இடித்துப் போடுவேன்.
அப்போது, தோட்டம் மிதித்து நாசமாக்கப்படும்.
6 அதைப் பாழ்நிலமாக்குவேன்.[b]
அங்கே யாரும் கிளைகளை வெட்ட மாட்டார்கள், களைகளை எடுக்க மாட்டார்கள்.
முட்செடிகளும் காட்டுச் செடிகளும்தான் வளர்ந்து நிற்கும்.[c]
அங்கே மழை பொழியக் கூடாது என்று மேகங்களுக்கு நான் கட்டளை கொடுப்பேன்.[d]
7 பரலோகப் படைகளின் யெகோவா நானே. இஸ்ரவேல் ஜனங்கள்தான் என் திராட்சைத் தோட்டம்.[e]
யூதா மக்கள்தான் நான் ஆசையோடு நட்ட திராட்சைக் கொடி.
அவர்கள் நியாயமாக நடப்பார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன்.[f]
ஆனால், அநியாயம்தான் செய்தார்கள்.
நீதியாக நடப்பார்கள் என்று எதிர்பார்த்தேன்.
ஆனால், அநீதிக்கு ஆளானவர்களின் கதறல் சத்தம்தான் கேட்டது"[g] என்று சொல்கிறார்.
8 வீடுகளோடு வீடுகளைச் சேர்த்து,[h]
வயல்களோடு வயல்களைச் சேர்த்து,[i]
மற்றவர்களுக்கு இடம் இல்லாதபடி எல்லா நிலங்களையும் வளைத்துப்போட்டு,
அங்கே குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ கேடு!
9 பரலோகப் படைகளின் யெகோவா இப்படிச் சத்தியம் செய்ததைக் கேட்டேன்:
அழகான, ஆடம்பரமான வீடுகள் நிறைய இருந்தாலும்,
அவற்றுக்குக் கோரமான முடிவு வரும்.
ஒருவரும் குடியிருக்க முடியாதபடி அவை அழிந்துபோகும்.[j]
10 பத்து ஏக்கர் திராட்சைத் தோட்டத்திலிருந்து ஒரு ஜாடி* திராட்சமதுதான் கிடைக்கும்.
ஒரு ஹோமர் அளவு# விதைகளை விதைத்தால் ஒரு எப்பா அளவு△ விளைச்சல்தான் கிடைக்கும்.[k]
11 போதை தலைக்கேறும்வரை குடிக்கிறவர்களுக்கு ஐயோ கேடு!
அவர்கள் விடியற்காலை தொடங்கி இருட்டும்வரை குடித்துக் குடித்து பொழுதைப் போக்குகிறார்கள்.[l]
12 யாழையும், நரம்பிசைக் கருவியையும்,

5:10 * மூலமொழியில், "பாத்." ஒரு பாத் என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். # ஒரு ஹோமர் அளவு என்பது 220 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். △ ஒரு எப்பா அளவு என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 5
a லேவி 26:31, 33 நெ 2:3 சங் 79:1
b உபா 29:22, 23 எரே 25:11 எரே 45:4
c ஏசா 32:13
d உபா 11:16, 17
e சங் 80:8 எரே 12:10
f மீ 6:8
g உபா 15:9
h மீ 2:1, 2
i 1ரா 21:15, 16
j 2நா 36:20, 21 ஏசா 27:10
k உபா 28:15, 17 யோவே 1:17
l லூ 21:34 ரோ 13:13

கஞ்சிராவையும், புல்லாங்குழலையும் வாசித்து,
திராட்சமது குடித்து விருந்து கொண்டாடுகிறார்கள்.
ஆனால், யெகோவாவின் செயல்களை நினைத்துப் பார்ப்பதில்லை.
அவருடைய கைகள் செய்கிறவற்றைக் கவனிப்பதில்லை.
13 என் ஜனங்களுக்கு அறிவு இல்லாததால்,[a]
அவர்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போவார்கள்.
அவர்களில் மதிப்புக்குரியவர்கள் பசியில் வாடுவார்கள்.[b]
பொதுமக்கள் தாகத்தில் தவிப்பார்கள்.
14 அதனால், கல்லறை தன் எல்லையை விரிவாக்கியிருக்கிறது.
வாயைப் பயங்கரமாகப் பிளந்திருக்கிறது.[c]
எருசலேமில் இருக்கிற தலைவர்களும், ஆர்ப்பாட்டம் செய்கிற கும்பல்களும்,
கும்மாளம் போடுகிற ஆட்களும் அதற்குள்தான் போய்ச் சேருவார்கள்.
15 மனிதன் தலைகுனிவான்.
அவன் தாழ்த்தப்படுவான்.
பெருமை பிடித்தவன் வெட்கப்பட்டுப்போவான்.
16 பரலோகப் படைகளின் யெகோவா நியாயமாகத் தீர்ப்பு வழங்குவதில் உயர்ந்தவராக இருப்பார்.
உண்மைக் கடவுளும் பரிசுத்தருமான[d] அவர் தன்னுடைய நீதியால் தன் பரிசுத்தத்தை வெளிக்காட்டுவார்.[e]
17 பாழாய்க் கிடக்கும் தேசத்தில் ஆட்டுக்குட்டிகள் கண்டபடி மேய்ந்து திரியும்.
கொழுத்த மிருகங்கள் ஒருசமயம் மேய்ந்த நிலங்களின் விளைச்சலை வேறு தேசத்து ஜனங்கள்தான் சாப்பிடுவார்கள்.
18 வண்டியை ஒரு மிருகம் இழுத்துச் செல்வதுபோல் பாவத்தைத் தங்களோடு இழுத்துச் செல்கிறவர்களுக்கு ஐயோ கேடு!
பித்தலாட்டம் என்ற கயிற்றினால் பாவம் என்ற வண்டியைக் கட்டி அவர்கள் இழுத்துக்கொண்டு போகிறார்கள்.
19 அவர்கள் கிண்டலாக, “கடவுள் செய்ய நினைப்பதைச் சீக்கிரமாகச் செய்து காட்டட்டும்.
அதை எங்கள் கண் முன்னால் செய்து காட்டட்டும்.
இஸ்ரவேலர்களின் பரிசுத்தமான கடவுள் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றி* காட்டட்டும்.
அவர் என்னதான் செய்கிறார் என்று நாங்களும் தெரிந்துகொள்கிறோம்!” என்று சொல்கிறார்கள்.[f]
20 நல்லதைக் கெட்டது என்றும் கெட்டதை நல்லது என்றும்,
ராத்திரியைப் பகல் என்றும் பகலை ராத்திரி என்றும்,
கசப்பை இனிப்பு என்றும் இனிப்பைக் கசப்பு என்றும் சொல்கிறவர்களுக்கு ஐயோ கேடு![g]
21 தங்களை ஞானிகள் என்று சொல்கிறவர்களுக்கும்,
விவேகிகள் என்று நினைக்கிறவர்களுக்கும் ஐயோ கேடு![h]

அதி. 5
a ஏசா 27:11, எரே 8:7, ஓசி 4:6
b புல 4:9
c உபா 28:63
d ஏசா 6:3, வெளி 4:8
e உபா 32:4
f எரே 5:12, எரே 17:15, எசே 12:22
g நீதி 17:15, மல் 2:17
h நீதி 3:7, ரோ 12:16

5:19 * வே.வா., “தீர்மானத்தை நடத்தி.”

22 திராட்சமதுவைக் குடிப்பதில் வல்லவர்களுக்கும்,
மதுபானங்களைக் கலந்து குடிப்பதில் கில்லாடிகளுக்கும் ஐயோ கேடு![a]
23 லஞ்சம் வாங்கிக்கொண்டு கெட்டவனுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்குகிறவனுக்கும்,[b]
நீதிமானுக்கு நியாயம் வழங்காதவனுக்கும் ஐயோ கேடு![c]
24 வைக்கோல் நெருப்பில் எரிந்துபோவதைப் போலவும்,
காய்ந்த புல் தீயில் பொசுங்கிவிடுவதைப் போலவும்,
அவர்களுடைய வேர்கள் அடியோடு அழிந்துபோகும்.
அவர்களுடைய மொட்டுகள் கருகி உதிர்ந்துபோகும்.
பரலோகப் படைகளின் யெகோவாவுடைய சட்டத்தை* அவர்கள் ஒதுக்கித்தள்ளினார்கள்.
இஸ்ரவேலர்களுடைய பரிசுத்தமான கடவுளின் பேச்சை மதிக்காமல் போனார்கள்.[d]
25 அதனால்தான், யெகோவாவின் கோபம் அவருடைய ஜனங்கள்மேல் பற்றியெரிகிறது.
அவர் தன்னுடைய கையை ஓங்குவார், அவர்களைத் தண்டிப்பார்.[e]
அப்போது மலைகள் அதிரும்.
அவர்களுடைய பிணங்கள் குப்பைபோல் தெருக்களில் குவிந்து கிடக்கும்.[f]
அவர்களுடைய பாவங்களினால் அவருடைய கோபம் தணியாமல் இருக்கிறது.
அவருடைய கை ஓங்கியபடியே இருக்கிறது.
26 தூர தேசத்தாரை[g] அழைப்பதற்காக அவர் ஒரு கொடியை உயர்த்தியிருக்கிறார்.*
பூமியின் எல்லையிலிருந்து அவர்களைப் புறப்பட வைத்திருக்கிறார்.#[h]
இதோ! அவர்கள் வேக வேகமாக வந்துகொண்டிருக்கிறார்கள்.[i]
27 அவர்களில் யாருமே சோர்வாக இல்லை, தடுமாறி விழவும் இல்லை.
யாருமே தூங்கிக்கொண்டு இல்லை, தூக்கக் கலக்கத்திலும் இல்லை.
அவர்களுடைய இடுப்புவார் அவிழ்ந்துபோவதும் இல்லை,
செருப்புவார் அறுந்துபோவதும் இல்லை.
28 அவர்களுடைய அம்புகளெல்லாம் கூர்மையாக மின்னுகின்றன.
அம்புகளை எறிவதற்கு அவர்களுடைய வில்லுகளெல்லாம் தயாராக இருக்கின்றன.
அவர்களுடைய குதிரைகளின் குளம்புகள் கருங்கல்* போல உறுதியாக இருக்கின்றன.
ரதங்களின் சக்கரங்கள் புயல்காற்றைப் போலச் சுழல்கின்றன.[j]
29 அவர்கள் சிங்கத்தைப் போலக் கர்ஜிக்கிறார்கள்.
இளம் சிங்கங்களைப் போல உறுமுகிறார்கள்.[k]
உறுமிக்கொண்டே இரையைக் கவ்விப் பிடித்து இழுத்துச் செல்வார்கள்.

5:24 *வே.வா., "அறிவுரையை." **5:26** *வே.வா., "கொடிக் கம்பத்தை நாட்டியிருக்கிறார்." #நே.மொ., "புறப்பட வைப்பதற்காக விசில் அடித்திருக்கிறார்." **5:28** *நே.மொ., "சிக்கிமுக்கிக் கல்."

அதி. 5
a நீதி 23:20
நீதி 31:4, 5
b உபா 16:19
ஏசா 1:23
மீ 3:11
c 1ரா 21:13
நீதி 17:15
d உபா 31:20
2ரா 17:13, 14
நெ 9:26
ஏசா 1:4
e உபா 31:16, 17
2நா 36:15, 16
புல 2:2
f எரே 16:4
g எரே 52:4
h உபா 28:49, 50
எரே 5:15
i எரே 4:13
j ஆப 1:8
k எரே 50:17

அவர்களிடமிருந்து அதை யாராலும் காப்பாற்ற முடியாது.
30 அந்த நாளில் அவர்கள் பயங்கரமாகச் சத்தமிடுவார்கள்.
கடலின் இரைச்சலைப் போல அந்தச் சத்தம் கேட்கும்.[a]
தேசத்தைப் பார்த்தால், அது சோகத்தில் இருண்டு கிடக்கும்.
சூரியனைக்கூட மேகங்கள் மறைத்து இருட்டாக்கிவிடும்.[b]

6 உசியா ராஜா இறந்துபோன[c] வருஷம் அது. யெகோவா மிகவும்
உயர்ந்த சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன்.[d] அவரு
டைய நீளமான அங்கி ஆலயம் முழுவதும் பரவியிருந்தது. **2** சேராபீன்
கள் அவரைச் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவ
ருக்கும் ஆறு சிறகுகள் இருந்தன. இரண்டு சிறகுகளால் முகத்தையும்
இரண்டு சிறகுகளால் பாதத்தையும் மூடியிருந்தார்கள். மற்ற இரண்டு சிறகுக
ளால் பறந்தார்கள்.

3 அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து,
"பரலோகப் படைகளின் யெகோவா பரிசுத்தமானவர், பரிசுத்தமானவர்,
பரிசுத்தமானவர்.[e]
பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" என்று
சத்தமாகச் சொன்னார்கள்.

4 அந்தச் சத்தத்தில் வாசல்களின் நிலைக்கால்கள் அதிர்ந்தன; ஆலயம்
புகையால் நிரம்பியது.[f]

5 அப்போது நான், "ஐயோ, என் கதி அவ்வளவுதான்!
நான் செத்தவனைப் போல ஆகிவிட்டேன்.
ஏனென்றால், ராஜாவாகிய பரலோகப் படைகளின் யெகோவாவைப்
பார்த்துவிட்டேன்.
அதுமட்டுமல்ல, என் உதடுகள் அசுத்தமாக இருக்கின்றன.[g]
அசுத்தமான உதடுகள் உள்ள ஜனங்களோடு நான் வாழ்கிறேன்"
என்று சொன்னேன்.

6 அப்போது, சேராபீன்களில் ஒருவர் என்னிடம் பறந்து வந்தார்; அவர்
பலிபீடத்திலிருந்து நெருப்புத் தணல்[h] ஒன்றை இடுக்கியில் எடுத்துக்
கொண்டு வந்தார்.[i] **7** அதை என் வாயின் மேல் வைத்து,
"இது உன் உதடுகளைத் தொட்டுவிட்டது.
அதனால் உன் குற்றம் நீங்கிவிட்டது,
உன் பாவம் மன்னிக்கப்பட்டது" என்று சொன்னார்.

8 பின்பு யெகோவா, "நான் யாரை அனுப்புவேன், எங்களுக்காக யார்
போவார்கள்?"[j] என்று சொல்வதைக் கேட்டேன். அதற்கு நான், "இதோ,
நான் இருக்கிறேன்! என்னை அனுப்புங்கள்!"[k] என்று சொன்னேன்.

9 அப்போது அவர், "நீ புறப்பட்டுப் போய் இந்த ஜனங்களிடம்,
'நீங்கள் காதால் கேட்டுக்கொண்டே இருந்தாலும்,
புரிந்துகொள்ள மாட்டீர்கள்.
நீங்கள் கண்ணால் பார்த்துக்கொண்டே இருந்தாலும்,
எதையும் தெரிந்துகொள்ள* மாட்டீர்கள்'[l] என்று சொல்.
10 இந்த ஜனங்கள் கண்களால் பார்க்காமலும்,

அதி. 5
a எரே 6:23
b எரே 4:23

அதி. 6
c 2நா 26:23
d 1ரா 22:19, தானி 7:9
e யாத் 15:11, வெளி 4:8
f வெளி 15:8
g ஏசா 29:13
h எசே 10:2
i வெளி 8:5
j ஆதி 1:26, யோவா 1:1, 2, யோவா 12:41
k சங் 110:3, மத் 4:19, 20
l எரே 5:21, மத் 13:14, 15, லூ 8:9, 10, அப் 28:25-27

6:9 * வே.வா., "எந்த அறிவும் பெற."

காதுகளால் கேட்காமலும்,[a]
இதயத்தால் உணராமலும்,[b]
என்னிடம் திரும்பி வந்து குணமடையாமலும் இருப்பதற்காக
இவர்களுடைய இதயத்தை இறுகிப்போகச் செய்.
இவர்களுடைய காதுகளை மந்தமாக்கு.
இவர்களுடைய கண்களை மூடிவிடு” என்று சொன்னார்.

11 அதற்கு நான், “இன்னும் எவ்வளவு நாட்களுக்கு, யெகோவாவே?” என்று கேட்டேன். அப்போது அவர்,

“நகரங்கள் தரைமட்டமாகி குடிமக்கள் இல்லாமல் போகும் வரைக்கும்,
வீடுகளில் ஆட்கள் இல்லாமல் போகும் வரைக்கும்,
தேசம் அழிந்து பாழாகிப் போகும் வரைக்கும்,[c]
12 யெகோவாவாகிய நான் ஜனங்களைத் தொலைதூரத்துக்குத் துரத்திவிடும் வரைக்கும்,[d]
தேசத்தின் பெரும்பாலான இடங்கள் வெறிச்சோடிக் கிடக்கும் வரைக்கும்” என்று சொன்னார்.

13 அதோடு, “தேசத்தில் பத்திலொரு பாகம் மட்டும் மீதியாக இருக்கும். அதுவும் நெருப்பில் சுட்டெரிக்கப்படும். ஒரு பெரிய மரமோ கருவாலி மரமோ வெட்டிச் சாய்க்கப்பட்ட பின்பு அடிமரம் மட்டும் மீந்திருப்பது போல அது இருக்கும். அதன் அடிமரத்திலிருந்து பரிசுத்தமான ஒரு தளிர்* துளிர்க்கும்” என்று சொன்னார்.

7 உசியாவின் பேரனும் யோதாமின் மகனுமான ஆகாஸ், யூதாவை ஆட்சி செய்துவந்தார்.[e] அப்போது, சீரியாவின் ராஜாவான ரேத்சீனும் இஸ்ரவேலின் ராஜாவும் ரெமலியாவின் மகனுமான பெக்காவும்[f] எருசலேமுக்கு எதிராகப் போர் செய்ய வந்தார்கள். ஆனால், அவர்களால்* அதைக் கைப்பற்ற முடியவில்லை.[g]
2 “எப்பிராயீமோடு* சீரியா கூட்டுச் சேர்ந்துவிட்டது” என்ற செய்தி தாவீதின் வம்சத்தாருக்கு அறிவிக்கப்பட்டது.

ஆகாசும் அவருடைய ஜனங்களும் அதைக் கேட்டபோது, காட்டிலுள்ள மரங்கள் காற்றில் ஆடுவது போல ஆடிப்போனார்கள்.

3 அப்போது யெகோவா ஏசாயாவிடம், “தயவுசெய்து உன் மகன் சேயார்-யாசூபுவை*[h] கூட்டிக்கொண்டு வண்ணார் பகுதிக்குப் போகிற நெடுஞ்சாலைக்குப் போ. அங்கே மேல் குளத்தின் வாய்க்கால் முனையில்[i]
ஆகாஸ் இருப்பான்.
4 நீ அவனிடம், ‘பதட்டப்படாமல் நிதானமாக இருங்கள். சீரியாவின் ராஜாவான ரேத்சீனும் ரெமலியாவின் மகனும்[j] பயங்கர கோபத்தோடு படையெடுத்து வரப்போவதை நினைத்து நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். புகைந்துகொண்டிருக்கும் அந்த இரண்டு கொள்ளிக்கட்டைகளைப் பார்த்துப் பயப்படாதீர்கள்.
5 சீரியர்கள் எப்பிராயீமியர்களோடும் ரெமலியாவின் மகனோடும் சேர்ந்து சதித்திட்டம் தீட்டி,
6 “நாம் போய் யூதாவைத் தாக்கி,* அதைக் கைப்பற்றுவோம்.# தபேயாலின் மகனை அதன் ராஜாவாக்குவோம்” என்று பேசி வைத்திருக்கிறார்கள்.[k]

6:13 *வே.வா., “சந்ததி.” **7:1** *அல்லது, “அவரால்.” **7:2** *அதாவது, “இஸ்ரவேலோடு.” **7:3** *இந்தப் பெயரின் அர்த்தம், “சிலர் மட்டுமே திரும்பி வருவார்கள்.” **7:6** *அல்லது, “பயமுறுத்தி.” #வே.வா., “அதன் மதில்களில் பிளவு உண்டாக்குவோம்.”

அதி. 6
a எரே 6:10; யோவா 3:20
b எசே 3:7
c 2நா 36:20, 21; ஏசா 3:26; ஏசா 24:1
d 2ரா 25:11

அதி. 7
e 2ரா 16:1, 2
f 2ரா 15:37; 2நா 28:6
g 2ரா 16:5
h ஏசா 8:18
i 2ரா 18:17
j 2ரா 15:30; ஏசா 8:6, 7
k 2ரா 16:5

7 ஆனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
“அவர்களுடைய திட்டம் பலிக்காது.
அவர்கள் நினைப்பது நடக்காது.
8 சீரியாவின் தலைநகர் தமஸ்கு.
தமஸ்குவின் தலைவன் ரேத்சீன்.
இன்னும் 65 வருஷத்துக்குள்
எப்பிராயீம் ஒரு தேசமாக இல்லாதபடி அடியோடு அழிந்துவிடும்.[a]
9 எப்பிராயீமின் தலைநகர் சமாரியா.[b]
சமாரியாவின் தலைவன் ரெமலியாவின் மகன்.[c]
உங்களுக்கு உறுதியான விசுவாசம் இல்லாவிட்டால்,
நீங்கள் நிலைத்திருக்க மாட்டீர்கள்”’ என்று சொல்” என்றார்.

10 பின்பு யெகோவா ஆகாசிடம், **11** “உன் கடவுளான யெகோவா
விடம் ஒரு அடையாளத்தைக் கேள்;[d] அது கல்லறையைப் போல் ஆழத்
திலும் இருக்கலாம், வானத்தைப் போல் உயரத்திலும் இருக்கலாம்” என்று
சொன்னார். **12** ஆனால் ஆகாஸ், “நான் கேட்க மாட்டேன். யெகோவா
வைச் சோதித்துப் பார்க்க மாட்டேன்” என்று சொன்னார்.

13 அப்போது ஏசாயா, “தாவீதின் வம்சத்தாரே, தயவுசெய்து கேளுங்
கள். நீங்கள் மனுஷருடைய பொறுமையைச் சோதித்தது போதாதா? கடவு
ளுடைய பொறுமையையும் சோதிக்க வேண்டுமா?[e] **14** உங்களுக்கு ஒரு
அடையாளத்தை யெகோவாவே கொடுப்பார். இதோ! ஒரு இளம் பெண்*
கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்.[f] அவனுக்கு இம்மானுவேல்#
என்று பெயர் வைப்பாள்.[g] **15** அவன் நல்லது கெட்டதைத் தெரிந்து
கொள்ளும் வயதை எட்டுவதற்கு முன்பு வெறும் வெண்ணெயையும்
தேனையும்தான் சாப்பிட்டுக்கொண்டிருப்பான். **16** அவன் அந்த வயதை
எட்டும் முன்பே, நீங்கள் பயந்து நடுங்கிய அந்த இரண்டு ராஜாக்களின்
தேசமும் குடிமக்களே இல்லாமல் வெறுமையாகிவிடும்.[h] **17** ஆகாசே,
உனக்கும் உன் மக்களுக்கும் உன்னுடைய அப்பாவின் குடும்பத்தாருக்கும்
எதிராக யெகோவா அசீரிய ராஜாவை வரச் செய்வார்.[i] எப்பிராயீம் யூதா
வைவிட்டுப் பிரிந்து போனதுமுதல்[j] அந்த நாள்வரை அப்படிப்பட்ட ஒரு
கொடிய காலம் வந்திருக்காது.

18 அந்த நாளில், யெகோவா எகிப்தின் தொலைதூர இடங்களில் ஓடு
கிற நைல் நதியின் ஓடைகளிலிருந்து ஈக்களையும் அசீரியாவிலிருந்து
தேனீக்களையும் வரச் செய்வார்.* **19** அவை செங்குத்தான பள்ளத்தாக்
குகளின்* மேலும் பாறைகளின் மேலும் முட்புதர்களின் மேலும் மேய்ச்சல்
நிலங்களின் மேலும் வந்து உட்காரும்.

20 ஆற்றின்* பகுதியிலிருந்து வாடகைக்கு வாங்கப்பட்ட சவரக்கத்
தியைக் கொண்டு, அதாவது அசீரிய ராஜாவைக் கொண்டு,[k] தலையிலும்
கால்களிலும் உள்ள முடியை யெகோவா சிரைத்துவிடுவார்; தாடியைக்கூட
விட்டுவைக்க மாட்டார்.

7:14 *வே.வா., “கன்னிப் பெண்.” #அர்த்தம், “கடவுள் எங்களோடு இருக்கிறார்.”
7:18 *நே.மொ., “வரச் செய்வதற்காக விசில் அடிப்பார்.” **7:19** *அதாவது, “காட்டாற்
றுப் பள்ளத்தாக்குகளின்.” **7:20** *அதாவது, “யூப்ரடிஸ் ஆற்றின்.”

அதி. 7
a 2ரா 17:6, ஓசி 1:6
b 1ரா 16:23, 24
c 2ரா 15:27
d நியா 6:36, 37, ஏசா 37:30, ஏசா 38:7, 8
e 2நா 36:15, 16
f ஏசா 9:6, யோவா 1:14, 1தீ 3:16
g மத் 1:23, லூ 1:30-35
h 2ரா 15:29, 2ரா 16:8, 9, ஏசா 8:3, 4, ஏசா 17:1
i 2ரா 18:13, 14, 2நா 28:19, 20, ஏசா 36:1
j 1ரா 12:20
k 2ரா 16:7

21 அந்த நாளில் ஒவ்வொருவரிடமும் ஒரு இளம் பசுவும் இரண்டு
ஆடுகளுமே மிஞ்சியிருக்கும். 22 பால் மட்டும் அதிகமாகக் கிடைக்கும்
என்பதால் அவர்கள் வெண்ணெயைச் சாப்பிடுவார்கள். தேசத்தில் மீதியாக
இருக்கிற எல்லாருமே வெறும் வெண்ணெயையும் தேனையும்தான் சாப்பி
டுவார்கள்.

23 அந்த நாளிலே, 1,000 வெள்ளிக் காசுகள் மதிப்புள்ள 1,000 திராட்
சைக் கொடிகள் இருந்த இடத்தில் முட்புதர்களும் களைகளும்தான் இருக்
கும். 24 வில்லுகளோடும் அம்புகளோடும்தான் மனுஷர்கள் அங்கே
போவார்கள். ஏனென்றால், தேசம் முழுக்க முட்புதர்களும் களைகளும்
வளர்ந்து நிற்கும். 25 மண்வெட்டியால் கொத்தி பண்படுத்தப்பட்டிருந்த
மலைகளில் முட்புதர்களும் களைகளும் மண்டிக் கிடக்கும். அதற்குப்
பயந்து நீ அங்கே போக மாட்டாய். அது ஆடுமாடுகள் மேய்ந்து திரிகிற
இடமாக மாறும்" என்று சொன்னார்.

8 யெகோவா என்னிடம், "நீ ஒரு பெரிய பலகையை எடுத்து,[a] அதில்
'மகேர்–சாலால்–அஷ்–பாஸ்'* என்று எழுத்தாணியால்# எழுது. 2 நம்
பிக்கைக்குரிய சாட்சிகளான யெபெரெகியாவின் மகன் சகரியாவும் குரு
வாகிய உரியாவும்[b] இதை எழுத்தில் எழுதி எனக்கு உறுதிப்படுத்தட்டும்"
என்று சொன்னார்.

3 அதன்பின், தீர்க்கதரிசனம் சொல்கிறவளான என் மனைவியோடு
நான் உறவுகொண்டேன். அவள் கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றெடுத்
தாள்.[c] அப்போது யெகோவா என்னிடம், "அவனுக்கு மகேர்–சாலால்–
அஷ்–பாஸ் என்று பெயர் வை. 4 ஏனென்றால், 'அம்மா,' 'அப்பா' என்று
அவன் கூப்பிடுவதற்கு முன்பே அசீரியர்கள் தமஸ்குவின் சொத்துகளையும்
சமாரியாவில் கைப்பற்றிய பொருள்களையும் தங்கள் ராஜாவுக்கு முன்பா
கக் கொண்டுபோவார்கள்"[d] என்று சொன்னார்.

5 யெகோவா திரும்பவும் என்னிடம்,

6 "லேசாக வழிந்தோடுகிற சீலோவாவின்* தண்ணீரை இந்த ஜனங்கள்
ஒதுக்கிவிட்டார்கள்.[e]
ரேத்சீனையும் ரெமலியாவின் மகனையும்[f] சந்தோஷமாக
ஏற்றுக்கொண்டார்கள்.
7 அதனால், இவர்களுக்கு எதிராக அசீரிய ராஜா படைபலத்தோடு
வருவான்.[g]
யெகோவாதான் அவனை வரச் செய்வார்.
வேகமாகப் பாய்ந்து வரும் ஆற்றை* போல அவன் வருவான்.
அதன் எல்லா சிற்றாறுகளிலும் தண்ணீர் பெருக்கெடுக்கும்.
அது எல்லா கரைகளிலும் புரண்டோடும்.
8 அது யூதாவுக்குள் காட்டாறாய்ப் பாயும்.
அதன் கழுத்துவரை எட்டும்,[h] அதை வெள்ளக்காடாக்கும்.
இம்மானுவேலே,*[i]

8:1 *ஒருவேளை இதன் அர்த்தம், "பொருள்களைக் கைப்பற்றுவதற்கு வேகமாக வருதல்." #நே.மொ., "சாதாரண மனிதனுடைய எழுத்தாணியால்." 8:6 *சீலோவா என்பது ஒரு வாய்க்கால். 8:7 *அதாவது, "யூப்ரடிஸ் ஆற்றை." 8:8 *ஏசா 7:14-ஐப் பாருங்கள்.

அதி. 8
a ஏசா 30:8
b 2ரா 16:10
c ஏசா 8:18
d 2ரா 15:29; 2ரா 16:8, 9; 2ரா 17:6; ஏசா 7:16; ஏசா 17:1
e 2ரா 17:16; எரே 17:13
f ஏசா 7:1
g 2ரா 17:5; 2ரா 18:9
h 2நா 28:19, 20; ஏசா 7:17, 20; ஏசா 10:28-32
i ஏசா 7:14; மத் 1:23

அவன் தன்னுடைய சிறகுகளை விரித்து உன் தேசம் முழுவதையும்
மூடுவான்” என்று சொன்னார்.
9 எதிரிகளே, தாக்குங்கள். ஆனால், நீங்கள்தான் படுதோல்வி
அடைவீர்கள்.
தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே, கேளுங்கள்!
போருக்குத் தயாராகுங்கள். ஆனால், நீங்கள்தான் படுதோல்வி
அடைவீர்கள்![a]
போருக்குத் தயாராகுங்கள். ஆனால், நீங்கள்தான் படுதோல்வி
அடைவீர்கள்!
10 நீங்கள் என்னதான் சதி செய்தாலும் அது பலிக்காது.
என்னதான் கூடிப் பேசினாலும் அது நடக்காது.
ஏனென்றால், கடவுள் எங்களோடு இருக்கிறார்!*[b]

11 யெகோவா தன்னுடைய பலமான கையை என்மேல் வைத்து, இந்த
ஜனங்களின் வழியில் போகக் கூடாதென்று எச்சரித்தார். அவர் என்னிடம்,
12 “கூட்டுச் சேரலாம் என்று இந்த ஜனங்கள் சொன்னால் அவர்கள்
சொல்வது போலக் கூட்டுச் சேரக் கூடாது!*
இவர்கள் எதற்குப் பயப்படுகிறார்களோ அதற்குப் பயப்படக் கூடாது.
அதை நினைத்து நடுங்கக் கூடாது.
13 பரலோகப் படைகளின் யெகோவாவுக்கு மட்டுமே பயப்பட வேண்டும்.
அவரை நினைத்துதான் நடுங்க வேண்டும்.[c]
அவர் மட்டும்தான் பரிசுத்தமானவர்[d] என்பதை மனதில் வைக்க
வேண்டும்” என்று சொன்னார்.
14 அவர் புகலிடமாக இருப்பார்.
ஆனால், இஸ்ரவேலின் இரண்டு ராஜ்யங்களுக்கும்
அவர் தடுக்கி விழ வைக்கும் கல்லாகவும்,
மோதி விழ வைக்கும் கற்பாறையாகவும் இருப்பார்.[e]
எருசலேம் குடிமக்களுக்கு
ஒரு கண்ணியாகவும் வலையாகவும் இருப்பார்.
15 அவர்களில் நிறைய பேர் தடுக்கி விழுந்து படுகாயம் அடைவார்கள்.
கண்ணியில் சிக்கிப் பிடிபடுவார்கள்.
16 இதையெல்லாம் சுருளில் எழுதி முடித்தபின் அதைக் கட்டி வை.
என் சீஷர்களுக்கான இந்தச் சட்டத்தை* முத்திரை போடு.

17 யாக்கோபின் வம்சத்தாருக்கு யெகோவா தன்னுடைய முகத்தை
மறைத்திருக்கிறார்;[f] ஆனாலும் நான் அவருக்காக ஆவலோடு காத்திருப்
பேன்,[g] அவர்மேல் நம்பிக்கையாக இருப்பேன்.

18 யெகோவா சீயோன் மலையில் வீற்றிருக்கிறார். பரலோகப் படைக
ளின் யெகோவா என்னையும் எனக்குத் தந்த பிள்ளைகளையும்[h] இஸ்ரவே
லில் அடையாளங்களாகவும்[i] அற்புதங்களாகவும் வைத்திருக்கிறார்.

8:10 *“கடவுள் எங்களோடு இருக்கிறார்” என்பதற்கான எபிரெய வார்த்தை **இம்மானுவேல்.** ஏசா 7:14; 8:8-ஐப் பாருங்கள். **8:12** *நே.மொ., “இந்த ஜனங்கள் சதித்திட்டம் என்று சொல்வதையெல்லாம் நீங்கள் சதித்திட்டம் என்று சொல்லாதீர்கள்!” **8:16** *வே.வா., “அறிவுரையை.”

அதி. 8
a 2நா 32:21
b உபா 20:1; சங் 44:3
c பிர 12:13; மத் 10:28
d லேவி 10:3; லேவி 22:32
e மத் 21:42, 44; லூ 20:17, 18; ரோ 9:31-33; 1கொ 1:23; 1பே 2:7, 8
f உபா 31:16, 17; மீ 3:4
g சங் 33:20
h எபி 2:13
i ஏசா 7:14, 16; ஏசா 8:3, 4

19 அவர்கள் உங்களிடம், “ஆவிகளோடு பேசுகிறவர்களிடம் அல்லது
குறிசொல்கிறவர்களிடம் போய் விசாரியுங்கள், அவர்கள் முணுமுணுப்ப
தையும் கிசுகிசுப்பதையும் கேளுங்கள்” என்று சொல்வார்கள். ஆனால்,
அந்த ஜனங்கள் தங்களுடைய கடவுளிடம்தானே விசாரிக்க வேண்டும்?
உயிரோடு இருக்கிறவர்களுக்காகச் செத்தவர்களிடம் விசாரிப்பது சரியா?[a]
20 அவர்கள் கடவுளுடைய சட்டங்களையும் அவர் எழுதி வைத்திருக்கிற
சான்றுகளையும்தானே ஆராய்ந்து பார்க்க வேண்டும்?

இவற்றின்படி அவர்கள் பேசாவிட்டால், அவர்களுக்கு விடிவு காலமே
வராது.[b] **21** வேதனையோடும் பசியோடும்தான் தேசத்தில் அலைந்து
திரிவார்கள்.[c] பசி தாங்காமல் கோபத்தில் ராஜாவைச் சபிப்பார்கள்.
மேலே பார்த்து கடவுளையும் சபிப்பார்கள். **22** பின்பு பூமியைப் பார்ப்பார்
கள். அங்கு இக்கட்டும் இருட்டுமே இருக்கும். அது இருண்டுபோன
கொடிய காலமாக இருக்கும். எங்குமே வெளிச்சம் இருக்காது, கும்மிருட்டு
தான் இருக்கும்.

9 ஆனால், முன்பு செபுலோன் தேசத்துக்கும் நப்தலி தேசத்துக்கும் வந்த
கொடிய காலத்தைப் போல அது கொடியதாக இருக்காது. அந்தத்
தேசங்கள் அப்போது அற்பமாக நினைக்கப்பட்டன.[d] ஆனால் பிற்காலத்
தில், கடலை ஒட்டிய யோர்தான் பிரதேசத்திலே மற்ற தேசத்தார் குடியிருக்
கிற கலிலேயா மாகாணத்தைக் கடவுள் உயர்த்துவார்.

2 இருட்டில் நடந்த ஜனங்கள்
பெரிய வெளிச்சத்தைப் பார்த்தார்கள்.
நிழல் படிந்த கும்மிருட்டான தேசத்தில் வாழ்கிறவர்கள்மேல்
வெளிச்சம் பிரகாசித்தது.[e]

3 அந்த ஜனங்களை நீங்கள் பெருக வைத்தீர்கள்.
அவர்களைச் சந்தோஷத்தால் நிரப்பியிருக்கிறீர்கள்.
அறுவடைக் காலத்தில் சந்தோஷப்படுவதைப் போலவும்,
கைப்பற்றிய பொருள்களைப் பங்கிடும்போது சந்தோஷப்படுவதைப்
போலவும்,
அவர்கள் உங்களுக்குமுன் சந்தோஷத்தில் துள்ளுகிறார்கள்.

4 ஏனென்றால், மீதியானியர்களின் காலத்தில் செய்தது போல,[f]
அவர்களுக்குச் சுமையாக இருந்த நுகத்தடியையும்,
அவர்களுடைய தோளைப் புண்ணாக்கிய தடியையும்,
அவர்களை வேலை வாங்கியவர்களின் கோலையும் நீங்கள்
உடைத்துப் போட்டீர்கள்.

5 நிலம் அதிரும்படி நடந்து போகிற போர்வீரர்களின்
காலணிகளும்,
இரத்தத்தில் ஊறிப்போன அவர்களுடைய உடைகளும்
நெருப்பில் சுட்டெரிக்கப்படும்.

6 நமக்காக ஒருவர் பிறந்திருக்கிறார்.[g]
நமக்காக ஒரு மகன் கொடுக்கப்பட்டிருக்கிறார்.
ஆட்சி செய்யும் அதிகாரம் அவருடைய தோளின் மேல்
இருக்கும்.[h]

அதி. 8
a லேவி 20:6; உபா 18:10, 11; சங் 146:4; பிர 9:5, 10
b நீதி 4:19
c உபா 28:15, 48

அதி. 9
d 2ரா 15:29
e மத் 4:13-16; லூ 1:78, 79; லூ 2:30-32; யோவா 1:9; யோவா 8:12
f நியா 8:12, 28; ஏசா 10:26, 27
g லூ 1:35; லூ 2:11
h ஆதி 49:10; சங் 2:6; சக 6:13; லூ 22:29; வெளி 19:16

அதி. 9

ஞானமுள்ள ஆலோசகர்,[a] வல்லமையுள்ள கடவுள்,[b]
என்றென்றுமுள்ள* தகப்பன், சமாதானத்தின் அதிபதி என்றெல்லாம் அவர் அழைக்கப்படுவார்.
7 அவருடைய ஆட்சியின் வளர்ச்சிக்கும்
சமாதானத்துக்கும் முடிவே இருக்காது.[c]
அவர் தாவீதின் சிம்மாசனத்தில் உட்காருவார்.[d]
அதுமுதல் என்றென்றும்,
நியாயத்தோடும்[e] நீதியோடும்[f] ஆட்சி செய்து,
அதை* உறுதியாக நிலைநாட்டுவார்.[g]
பரலோகப் படைகளின் யெகோவாவுடைய வைராக்கியம் இதைச் செய்யும்.
8 யாக்கோபுக்கு எதிராக யெகோவா ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.
அது இஸ்ரவேலுக்கு எதிராக வந்திருக்கிறது.[h]
9 ஜனங்கள் எல்லாரும் அதைத் தெரிந்துகொள்வார்கள்.
எப்பிராயீம் ஜனங்களும் சமாரியாவின் குடிமக்களும் அதைத் தெரிந்துகொள்வார்கள்.
அவர்கள் ஆணவத்தோடும் அகங்காரத்தோடும்,
10 "இந்தச் செங்கல் வீடுகள் இடிந்து விழுந்தால் என்ன?
செதுக்கப்பட்ட கற்களால் நாங்கள் கட்டுவோம்.[i]
காட்டத்தி மரங்கள் வெட்டப்பட்டால் என்ன?
தேவதாரு மரங்களை நடுவோம்" என்று சொல்கிறார்கள்.
11 யெகோவா ரேத்சீனின் எதிரிகளை எப்பிராயீமுக்கு எதிராக வரவழைப்பார்.
அவனைத் தீர்த்துக்கட்ட அவர்களைத் தூண்டிவிடுவார்.
12 கிழக்கிலிருந்து சீரியாவையும் மேற்கிலிருந்து பெலிஸ்தியர்களையும் வரச் செய்வார்.[j]
இஸ்ரவேலர்களை அவர்கள் ஒழித்துக்கட்டுவார்கள்.[k]
அவர்களுடைய பாவங்களினால் அவருடைய கோபம் தணியாமல் இருக்கிறது.
அவருடைய கை ஓங்கியபடியே இருக்கிறது.[l]
13 ஏனென்றால், பரலோகப் படைகளின் யெகோவாவை ஜனங்கள் தேடவில்லை.
அவர்களைத் தண்டிக்கிறவரிடம் மனம் திருந்தி வரவில்லை.[m]
14 அதனால், யெகோவா இஸ்ரவேலின் தலையையும் வாலையும்,
துளிரையும் நாணலையும்* ஒரே நாளில் அழித்துவிடுவார்.[n]
15 பெரியவரும் பெருமதிப்பு பெற்றவரும்தான் தலை.
பொய்யாகப் போதிக்கிற தீர்க்கதரிசிதான் வால்.[o]
16 அவர்கள் ஜனங்களைத் தவறாக வழிநடத்துகிறார்கள்.
மக்களும் குழப்பத்தில் தவிக்கிறார்கள்.

9:6 * வே.வா., "நித்திய." **9:7** * அதாவது, "ஆட்சியை." **9:14** * அல்லது, "குருத்தோலையையும் கோரைப்புல்லையும்."

a ஏசா 11:2; மத் 7:28, 29; மத் 12:42
b சங் 45:3; யோவா 1:18
c சங் 72:1, 7; தானி 2:44
d லூ 1:32, 33
e ஏசா 42:1; மத் 12:18
f சங் 45:6; ஏசா 32:1; எரே 23:5; எபி 1:8
g 2சா 7:16, 17; வெளி 11:15
h 2ரா 17:6
i ஆமோ 5:11
j 2நா 28:18
k உபா 31:17
l ஏசா 5:25; ஏசா 10:4
m 2ரா 17:13, 14; ஓசி 7:10; ஆமோ 4:6; ஆமோ 5:6
n 2ரா 17:6; ஓசி 10:15
o உபா 13:1-3

17 தேசத்திலுள்ள வாலிபர்களைப் பார்த்து யெகோவா சந்தோஷப்பட மாட்டார்.
அப்பா இல்லாத பிள்ளைகளிடமும்* விதவைகளிடமும் இரக்கம் காட்ட மாட்டார்.
ஏனென்றால், அவர்கள் எல்லாருமே கடவுளைவிட்டு விலகியவர்கள்,# அக்கிரமக்காரர்கள்.[a]
அவர்கள் ஒவ்வொருவருமே புத்தியில்லாமல் பேசுகிறார்கள்.
அவர்களுடைய பாவங்களினால் அவருடைய கோபம் தணியாமல் இருக்கிறது.
அவருடைய கை ஓங்கியபடியே இருக்கிறது.[b]
18 அவர்கள் செய்கிற அக்கிரமங்கள் தீ போலப் பரவுகிறது.
அந்தத் தீ முதலில் முட்புதர்களையும் களைகளையும் கொளுத்தும்.
பின்பு, காட்டின் அடர்ந்த பகுதிகளைக் கொளுத்தும்.
எல்லாமே புகைக்காடாகும்.
19 பரலோகப் படைகளின் யெகோவாவுடைய கோபத் தீயினால்
தேசம் கொளுத்தப்படும்.
ஜனங்கள் நெருப்புக்குப் பலியாவார்கள்.
ஒருவன் தன்னுடைய சொந்த சகோதரனுக்குக்கூட இரக்கம் காட்ட மாட்டான்.
20 ஒருவன் வலது பக்கத்தில் இருப்பதை அறுத்து சாப்பிடுவான்.
ஆனாலும் பசியாக இருப்பான்.
ஒருவன் இடது பக்கத்தில் இருப்பதைச் சாப்பிடுவான்.
ஆனாலும் திருப்தியடைய மாட்டான்.
ஒவ்வொருவனும் தன்னுடைய கையிலுள்ள சதையையே வெட்டிச் சாப்பிடுவான்.
21 மனாசே எப்பிராயீமைத் தாக்குவான்,
எப்பிராயீம் மனாசேயைத் தாக்குவான்.
ஆனால், இரண்டு பேரும் ஒன்றுசேர்ந்து யூதாவைத் தாக்குவார்கள்.[c]
அவர்களுடைய பாவங்களினால் அவருடைய கோபம் தணியாமல் இருக்கிறது.
அவருடைய கை ஓங்கியபடியே இருக்கிறது.[d]

10 கேடுண்டாக்கும் விதிமுறைகளைக் கொடுக்கிறவர்களுக்கும்,
ஜனங்களை ஒடுக்குகிற சட்டங்களை எழுதிக்கொண்டே இருக்கிறவர்களுக்கும் ஐயோ கேடு![e]
2 அவர்கள் ஏழைகளின் வழக்குகளை விசாரிப்பதில்லை.
எளியவர்களுக்கு நியாயம் வழங்குவதில்லை.[f]
விதவைகளைச் சூறையாடுகிறார்கள்.
அப்பா இல்லாத பிள்ளைகளை* கொள்ளையடிக்கிறார்கள்.[g]
3 தண்டனைத் தீர்ப்பின் நாளில் நீங்கள் என்ன செய்வீர்கள்?[h]
தூர தேசத்திலிருந்து அழிவு வரும்போது என்ன செய்வீர்கள்?[i]

9:17 *வே.வா., “அநாதைகளிடமும்.” #வே.வா., “விசுவாசதுரோகிகள்.” **10:2** *வே.வா., “அநாதைகளை.”

அதி. 9
a உபா 4:25, 26
b ஏசா 5:25
c 2நா 28:6
d ஏசா 5:25

அதி. 10
e லேவி 19:15; உபா 1:16, 17
f ஆமோ 2:7, 8
g உபா 27:19; யாக் 1:27
h ஓசி 9:7
i உபா 28:49, 50

உதவிக்காக யாரிடம் ஓடுவீர்கள்?[a]
உங்களுடைய சொத்தை* எங்கே விட்டுவிட்டுப் போவீர்கள்?
4 கைதிகளோடு கைதிகளாகத் தலைகுனிந்துதான் போவீர்கள்.
அல்லது, பிணங்களோடு பிணங்களாகச் செத்துதான் கிடப்பீர்கள்.
உங்களுடைய பாவங்களினால் அவருடைய கோபம் தணியாமல் இருக்கிறது.
அவருடைய கை ஓங்கியபடியே இருக்கிறது.[b]
5 அவர் உங்களிடம், "இதோ, அசீரியன் வருகிறான்.[c]
என் கோபத்தைக் காட்ட நான் பயன்படுத்தும் பிரம்பு அவன்தான்.
தண்டனை கொடுக்க நான் பயன்படுத்தும் தடி அவன்தான்.[d]
6 என்னைவிட்டு விலகிய* தேசத்துக்கு எதிராகவும்,[e]
என் கோபத்தைக் கிளறிவிட்ட ஜனங்களுக்கு எதிராகவும் நான் அவனை அனுப்புவேன்.
தேசத்தை முழுமையாகச் சூறையாடவும் கைப்பற்றவும் அவனுக்குக் கட்டளை கொடுப்பேன்.
தெருவில் கிடக்கும் சேற்றைப் போல அவர்களை மிதித்துப் போடவும் கட்டளை கொடுப்பேன்.[f]
7 அவனோ வேறு விதமாக நினைக்கிறான்.
வேறு விதமாகத் திட்டம் போடுகிறான்.
எல்லாரையும் ஒழித்துக்கட்ட நினைக்கிறான்.
சில தேசங்களை மட்டுமல்ல, பல தேசங்களை அழிக்கத் திட்டம் போடுகிறான்.
8 அவன் பெருமையாகப் பேசுகிறான்.
'என் அதிபதிகள் எல்லாரும் ராஜாக்கள்தானே?[g]
9 கல்னோ நகரம்[h] கர்கேமிசைப்[i] போன்றதுதானே?
காமாத் நகரம்[j] அர்பாத்தைப்[k] போன்றதுதானே?
சமாரியா நகரம்[l] தமஸ்குவைப்[m] போன்றதுதானே?
10 ஒன்றுக்கும் உதவாத சிலைகளை வணங்கிய ராஜ்யங்களை நான் பிடித்திருக்கிறேனே.
அங்கெல்லாம் இருந்ததைவிடவா எருசலேமிலும் சமாரியாவிலும் சிலைகள் இருக்கின்றன?[n]
11 சமாரியாவையும் அங்கு இருக்கிற ஒன்றுக்கும் உதவாத சிலைகளையும் அழிக்கப்போவது போலவே,
எருசலேமையும் அங்கு இருக்கிற சிலைகளையும் அழிக்க மாட்டேனா?'[o] என்று கேட்கிறான்.

12 யெகோவா சீயோன் மலைக்கும் எருசலேமுக்கும் செய்ய வேண்டிய
தையெல்லாம் செய்த பின்பு, அசீரிய ராஜாவைத் தண்டிப்பார். அவனுடைய
நெஞ்சத்திலுள்ள ஆணவத்துக்கும் அவனுடைய பார்வையிலுள்ள அகம்
பாவத்துக்கும்[p] முடிவுகட்டுவார். 13 ஏனென்றால் அவன்,
'நான் நினைப்பதை என்னுடைய பலத்தால் சாதிப்பேன்.
நான் ஞானி, என்னுடைய ஞானத்தால் இதைச் செய்வேன்.

அதி. 10
a ஓசி 5:13
b ஏசா 5:25; ஏசா 9:12
c ஆதி 10:9, 11
d 2ரா 17:3; ஏசா 8:3, 4; ஏசா 10:24
e 2ரா 17:6
f உபா 28:45, 63; 2ரா 17:22, 23
g 2ரா 18:19, 24
h ஆமோ 6:2
i 2நா 35:20
j 2ரா 17:24
k 2ரா 19:11, 13
l 2ரா 17:5; 2ரா 18:9, 10
m 2ரா 16:8, 9
n 2ரா 19:17, 18
o 2ரா 18:33, 34; 2நா 32:16, 19
p 2ரா 18:19; 2ரா 18:28, 35

10:3 * வே.வா., "மகிமையை." 10:6 * வே.வா., "விசுவாசதுரோகம் செய்த."

தேசங்களின் எல்லைகளை ஒழிப்பேன்.[a]
ஜனங்களுடைய சொத்துகளைக் கைப்பற்றுவேன்.[b]
மாவீரனாக அவர்களைத் தோற்கடிப்பேன்.[c]
14 குருவியின் கூட்டுக்குள் இருப்பதை ஒருவன் சுலபமாகக் கைவிட்டு எடுத்துக்கொள்வது போல,
ஜனங்களின் சொத்துகளை நான் சுலபமாக எடுத்துக்கொள்வேன்.
கூட்டில் விடப்பட்டிருக்கிற முட்டைகளை ஒருவன் வாரிக்கொள்வது போல,
பூமியில் உள்ள தேசங்களையெல்லாம் நான் வாரிக்கொள்வேன்.
சிறகுகளை அடிக்கவோ வாயைத் திறக்கவோ கீச்சென்று கத்தவோ எந்த ஜீவனாலும் முடியாது' என்கிறான்" என்று சொல்கிறார்.
15 வெட்டுகிறவனைவிட கோடாலி தன்னைப் பெரிதாக நினைக்குமா?
அறுக்கிறவனைவிட ரம்பம் தன்னை உயர்வாக நினைக்குமா?
ஒருவன் ஒரு தடியைப்[d] பிடித்து ஆட்டுவதுபோல் அந்தத் தடி அவனைப் பிடித்து ஆட்ட முடியுமா?
ஒருவன் ஒரு கோலைத் தூக்குவதுபோல் அந்தக் கோல் அவனைத் தூக்க முடியுமா?
16 உண்மை எஜமானாகிய பரலோகப் படைகளின் யெகோவா,
அசீரியாவின் பலசாலிகளைப் பலவீனமாக்குவார்.[e]
அதன் மகிமையைத் தீயில் பொசுக்கிவிடுவார்.[f]
17 இஸ்ரவேலுக்கு ஒளியாகவும்[g] பரிசுத்தமான கடவுளாகவும் இருப்பவர்
நெருப்பாகவும் தீப்பிழம்பாகவும் மாறுவார்.[h]
அசீரியாவின் களைகளையும் முட்புதர்களையும் ஒரே நாளில் சுட்டெரித்துவிடுவார்.
18 அவனுடைய அழகான காடுகளையும் பழத் தோட்டங்களையும் அடியோடு அழித்துவிடுவார்.
ஒரு நோயாளி உருக்குலைந்து போவது போல அவன் உருக்குலைந்து போவான்.[i]
19 அவனுடைய காட்டில் கொஞ்சம் மரங்களே மிஞ்சியிருக்கும்.
ஒரு சிறுவனால்கூட அவற்றை எண்ணிவிட முடியும்.
20 அந்த நாளில், இஸ்ரவேலில் மீதியாக இருப்பவர்களும்,
யாக்கோபின் வம்சத்தாரில் உயிர்தப்பியவர்களும்
தங்களைத் தாக்கியவனை இனியும் நம்பியிருக்க மாட்டார்கள்.[j]
யெகோவாவையே நம்பியிருப்பார்கள்.
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளையே உண்மை மனதோடு சார்ந்திருப்பார்கள்.
21 சிலர் மட்டுமே திரும்பி வருவார்கள்.
யாக்கோபின் வம்சத்தாரில் சிலர் மட்டுமே பலம்படைத்த கடவுளிடம் திரும்பி வருவார்கள்.[k]
22 இஸ்ரவேலே, உன் ஜனங்கள் கடற்கரை மணலைப் போல ஏராளமாக இருந்தாலும்,
சிலர் மட்டுமே திரும்பி வருவார்கள்.[l]
உன் ஜனங்களை அழிக்க கடவுள் தீர்மானித்துவிட்டார்.[m]

அதி. 10
a 2ரா 15:29; 2ரா 17:6; 2ரா 18:11; 1நா 5:26
b 2ரா 16:8; 2ரா 18:16
c 2ரா 18:19, 25
d ஏசா 10:5
e 2நா 32:21
f ஏசா 30:30, 31
g சங் 84:11
h ஏசா 9:5; ஏசா 30:27; ஏசா 31:8, 9; நாகூ 1:6
i ஏசா 37:36
j 2நா 28:20, 21; ஓசி 5:13; ஓசி 14:3
k ஏசா 65:9; ஓசி 1:10, 11
l ஏசா 1:9
m ஏசா 28:22

அவருடைய தண்டனையிலிருந்து அவர்கள் தப்பிக்க முடியாது.[a]
23 உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவா
தீர்மானித்தபடியே,
தேசம் முழுவதும் அழிக்கப்படும்.[b]

24 அதனால், உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின்
யெகோவா உங்களிடம், “சீயோனில் குடியிருக்கிற என் ஜனங்களே, அசீரி
யனை நினைத்துப் பயப்படாதீர்கள். எகிப்தியர்கள் செய்ததுபோல்[c] அவன்
உங்களைத் தடியால் அடித்து[d] உங்களுக்கு எதிராகக் கோலை ஓங்கினான்.
25 சீக்கிரத்திலேயே என் தண்டனைத் தீர்ப்பு நிறைவேறி முடியும். என்
கோபம் அவன்மேல் திரும்பும், நான் அவனை அழிப்பேன்.[e] 26 பரலோ
கப் படைகளின் யெகோவா அவனுக்கு எதிராக ஒரு சாட்டையை எடுப்
பார்.[f] ஓரேபின் கற்பாறை பக்கத்தில் மீதியானியர்களை வீழ்த்தியது போல
அவனை வீழ்த்துவார்.[g] எகிப்தியர்களை அழிக்க கடலின் மேல் கோலை
ஓங்கியதுபோல்[h] அவன்மேல் கோலை ஓங்குவார்.

27 உன் தோளின் மேல் அவன் வைத்த சுமையை அந்த நாளில் எடுத்துப்
போடுவேன்.[i]
உன் கழுத்தின் மேல் அவன் வைத்த நுகத்தடியை நீக்கிவிடுவேன்.[j]
எண்ணெயால்* அந்த நுகத்தடியை உடைத்தெறிவேன்”[k] என்று
சொல்கிறார்.

28 அவன் ஆயாத் நகரத்துக்கு[l] வந்திருக்கிறான்.
மிக்ரோனைக் கடந்துவிட்டான்.
மிக்மாஷில்[m] தன்னுடைய பொருள்களை வைத்திருக்கிறான்.
29 அவன் ஆற்றுத்துறையை* தாண்டிவிட்டான்.
ராத்திரியிலே கெபாவில்[n] தங்குகிறான்.
ராமாவிலுள்ள ஜனங்கள் பயந்து நடுங்குகிறார்கள்,
சவுலின் ஊரான கிபியாவிலுள்ள[o] மக்கள் ஓடிவிட்டார்கள்.[p]
30 காலீம் மக்களே, சத்தமாக அலறுங்கள்!
லாயீஷ் மக்களே, கவனியுங்கள்!
ஆனதோத்[q] மக்களே, நீங்களும் கவனியுங்கள்!
31 மத்மேனாவின் மக்கள் ஓட்டம் பிடித்தார்கள்.
கேபிம் குடிமக்கள் பாதுகாப்பைத் தேடிப்போனார்கள்.
32 அவன் இன்று நோபு நகரத்தில்[r] தங்குவான்.
அவன் சீயோன் மகளுடைய மலையையும்,
எருசலேம் குன்றையும் பார்த்துக் கை நீட்டி மிரட்டுகிறான்.
33 இதோ, உண்மை எஜமானாகிய பரலோகப் படைகளின் யெகோவா
கிளைகளை வெட்டுகிறார்.
அவை பயங்கர சத்தத்தோடு கீழே விழுகின்றன.[s]
மிக உயரமான மரங்கள்கூட வெட்டப்படுகின்றன,
உயர்ந்தோங்கி நிற்கும் மரங்கள் சாய்க்கப்படுகின்றன.

10:27 * எரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட எண்ணெயை அல்லது ராஜாக்களை அபிஷேகம் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட எண்ணெயை இது குறிக்கலாம். **10:29** * ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதி.

அதி. 10
a ரோ 9:27, 28
b உபா 28: 45, 63
c யாத் 14:3, 9
d 2ரா 18:13; ஏசா 10:5
e 2ரா 19:35
f 2நா 32:21; ஏசா 30:32; நாகூ 3:7
g நியா 7:25; நியா 8:21; சங் 83:11
h யாத் 14:21, 27
i ஏசா 9:4; நாகூ 1:13
j ஏசா 14:25
k 2ரா 19:35; ஏசா 37:35, 36
l யோசு 7:2
m 1சா 13:2; 1சா 14:31
n யோசு 21: 8, 17; 2நா 16:6
o நியா 20:13
p ஓசி 5:8
q யோசு 21: 8, 18; எரே 1:1
r 1சா 22:18, 19
s 2நா 32:21; ஏசா 37:36

34 காட்டிலுள்ள புதர்ச்செடிகளை அவர் கோடாலியால்
வெட்டிப்போடுகிறார்.
ஒரு மாவீரனால் லீபனோன் அழியும்.

11 ஈசாய்[a] என்ற அடிமரத்திலிருந்து ஒரு துளிர்[b] துளிர்க்கும்.
அதன் வேர்களிலிருந்து ஒரு தளிர்[c] முளைத்து கனி தரும்.
2 யெகோவாவின் சக்தி அவர்மேல்* தங்கியிருக்கும்.[d]
அது அவருக்கு ஞானத்தையும்,[e] புரிந்துகொள்ளும் திறனையும்,
அறிவுரை சொல்லும் ஆற்றலையும், வல்லமையையும்,[f]
அறிவையும், யெகோவாவைப் பற்றிய பயத்தையும் கொடுக்கும்.
3 யெகோவாவுக்குப் பயந்து நடப்பதில் அவர் சந்தோஷப்படுவார்.[g]
கண்ணால் பார்ப்பதை வைத்து தீர்ப்பு சொல்ல மாட்டார்.
காதால் கேட்பதை வைத்து கண்டிக்க மாட்டார்.[h]
4 பூமியிலுள்ள ஏழைகளுக்கு நீதியோடு தீர்ப்பு வழங்குவார்.
தாழ்மையானவர்களின்* சார்பாக ஜனங்களை நியாயமாகக் கண்டிப்பார்.
பூமியைத் தன் வாயின் கோலால் தாக்குவார்.[i]
கெட்டவர்களைத் தன் வாயின் சுவாசத்தால் கொன்றுபோடுவார்.[j]
5 நீதி அவருக்கு இடுப்புவார் போல இருக்கும்.
நம்பகத்தன்மை* அவருக்கு இடுப்புக்கச்சை போல இருக்கும்.[k]
6 அப்போது, ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும்.[l]
வெள்ளாட்டுக் குட்டி சிறுத்தையோடு படுத்துக்கொள்ளும்.
கன்றுக்குட்டியும் சிங்கமும் கொழுத்த காளையும்* ஒன்றாக
இருக்கும்.# [m]
ஒரு சின்னப் பையன் அவற்றை ஓட்டிக்கொண்டு போவான்.
7 பசுவும் கரடியும் சேர்ந்து மேயும்.
அவற்றின் குட்டிகள் ஒன்றாகப் படுத்துக்கொள்ளும்.
சிங்கம் மாட்டைப் போல வைக்கோல் தின்னும்.[n]
8 பால் குடிக்கும் குழந்தை நாகப்பாம்புப் புற்றின் மேல் விளையாடும்.
பால் மறந்த பிள்ளை விஷப் பாம்பின் பொந்தில் தன் கையை விடும்.
9 என்னுடைய பரிசுத்த மலையில் யாருக்கும் எந்த ஆபத்தும் வராது.[o]
எந்தக் கேடும் வராது.[p]
ஏனென்றால், கடல் முழுவதும் தண்ணீரால் நிறைந்திருப்பது போல
பூமி முழுவதும் யெகோவாவைப் பற்றிய அறிவால் நிறைந்திருக்கும்.[q]
10 அந்த நாளில், ஈசாயின் வேராக[r] இருப்பவர் ஜனங்களுக்கு ஒரு
கொடிக் கம்பம் போல நிற்பார்.[s]
பல தேசத்து ஜனங்கள் அவரைத் தேடி* வருவார்கள்.[t]
அவர் தங்கும் இடம் மகிமையால் நிறைந்திருக்கும்.

11 அந்த நாளில், யெகோவா தன்னுடைய ஜனங்களில் மீதியானவர்
களை மீட்டுக்கொள்வதற்காக இரண்டாவது தடவை கைகொடுப்பார். அசீ

11:2 *அதாவது, ஒன்றாம் வசனத்தில் “துளிர்” என்றும் “தளிர்” என்றும் சொல்லப்படுகிறவர். **11:4** *வே.வா., “சாந்தமானவர்களின்.” **11:5** *வே.வா., “உண்மைத்தன்மை.” **11:6** *நே.மொ., “மிருகமும்.” #அல்லது, “கன்றுக்குட்டியும் சிங்கமும் சேர்ந்து மேயும்.” **11:10** *வே.வா., “வழிநடத்துதலுக்காக அவரிடம்.”

அதி. 11
a ரூ 4:17; 1சா 17:58; மத் 1:1, 6; லூ 3:23, 32; அப் 13:22, 23; ரோ 15:12
b சங் 132:11; ஏசா 53:2; வெளி 5:5; வெளி 22:16
c எரே 23:5; எரே 33:15; சக 3:8; சக 6:12
d ஏசா 42:1; யோவா 1:32; அப் 10:38
e லூ 2:52
f ஏசா 9:6
g எபி 5:7
h யோவா 7:24; யோவா 8:16
i சங் 2:9; சங் 110:2; வெளி 19:11, 15
j 2தெ 2:8
k வெளி 3:14
l ஏசா 65:25
m எசே 34:25
n ஓசி 2:18
o ஏசா 2:4; ஏசா 35:9; ஏசா 60:18; மீ 4:4
p ஏசா 51:3; ஏசா 56:7; ஏசா 65:25
q சங் 22:27; ஆப 2:14
r ரோ 15:12; வெளி 22:16
s ஆதி 49:10; ஏசா 49:22; ஏசா 62:10
t அப் 11:18; அப் 28:28

ரியாவிலிருந்தும்,[a] எகிப்திலிருந்தும்,[b] பத்ரோசிலிருந்தும்,[c] கூஷிலிருந்தும்,[d]
ஏலாமிலிருந்தும்,[e] சினேயாரிலிருந்தும்,* காமாத்திலிருந்தும், தீவுகளிலிருந்
தும்[f] அவர்களைத் திரும்பி வரச் செய்வார். **12** எல்லா தேசங்களும் பார்க்
கிற விதமாக ஒரு கொடிக் கம்பத்தை நாட்டி, சிதறிப்போன இஸ்ரவேல்
ஜனங்களைக் கூட்டிச் சேர்ப்பார்;[g] பூமியின் நாலாபக்கத்துக்கும் துரத்தியடிக்
கப்பட்ட யூதா ஜனங்களை ஒன்றுசேர்ப்பார்.[h]

13 எப்பிராயீமுக்கு இருந்த பொறாமை ஒழிந்துபோகும்.[i]
யூதாவைப் பகைக்கிறவர்கள் அழிந்துபோவார்கள்.
இனி எப்பிராயீமுக்கு யூதாமேல் பொறாமை இருக்காது.
யூதாவுக்கு எப்பிராயீம்மேல் பகை இருக்காது.[j]

14 அவர்கள் மேற்கிலுள்ள பெலிஸ்தியர்களின் சரிவான பகுதிகளுக்குப்
பாய்ந்து வருவார்கள்.
கிழக்கிலுள்ள ஜனங்களிடம் இருப்பதையெல்லாம் கைப்பற்றுவார்கள்.
ஏதோமையும் மோவாபையும் தோற்கடிப்பார்கள்.[k]
அம்மோன் ஜனங்களை அடிபணிய வைப்பார்கள்.[l]

15 எகிப்திய கடலின் விரிகுடாவை யெகோவா பிளப்பார்.*[m]
ஆற்றின் மேல்# தன்னுடைய கையை ஓங்குவார்.[n]
அனல் வீசும் தன்னுடைய மூச்சுக்காற்றை அதன் ஏழு
நீரோடைகள்மேலும் வீச வைப்பார்.△
ஜனங்கள் அதைக் கடந்து போவதற்கு⊠ வழிசெய்வார்.

16 மீந்திருக்கும் இஸ்ரவேலர்கள்[o] அசீரியாவைவிட்டு வெளியே
வருவதற்கு ஒரு நெடுஞ்சாலை இருக்கும்.[p]
அது இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி நடந்து போன
நெடுஞ்சாலையைப் போல் இருக்கும்.

12

அந்த நாளில் நீங்கள் ஒவ்வொருவரும்,
“யெகோவாவே, உங்களுக்கு நன்றி!
என்னிடம் நீங்கள் கோபமாக இருந்தாலும்,
உங்கள் கோபம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்தது.
நீங்கள் என்னை ஆறுதல்படுத்தினீர்கள்.[q]

2 இதோ, கடவுள்தான் என் மீட்பர்.[r]
நான் எதற்கும் பயப்படாமல் நம்பிக்கையோடு இருப்பேன்.[s]
யா* யெகோவாதான் என் பலம், என் கோட்டை.
அவர் என் மீட்பரானார்”[t] என்று நிச்சயமாகவே சொல்வீர்கள்.

3 மீட்பின் நீரூற்றுகளிலிருந்து
நீங்கள் சந்தோஷமாகத் தண்ணீரை மொண்டுகொள்வீர்கள்.[u]

4 அந்த நாளில் நீங்கள் இப்படிச் சொல்வீர்கள்:
“யெகோவாவுக்கு நன்றி சொல்லுங்கள், அவருடைய பெயரைச்
சொல்லி வேண்டிக்கொள்ளுங்கள்.

11:11 *அதாவது, “பாபிலோனியாவிலிருந்தும்.” **11:15** *அல்லது, “வற்றச் செய்வார்.” #அதாவது, “யூப்ரடிஸ் ஆற்றின் மேல்.” △அல்லது, “அதை அடித்து ஏழு நீரோடைகளாக ஆக்குவார்.” ⊠நே.மொ., “செருப்புகள் போட்டபடி கடந்து போவதற்கு.” **12:2** *“யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.

அதி. 11
a ஏசா 11:16
b ஏசா 27:13; எரே 44:28; மீ 7:12
c எரே 44:15
d செப் 3:10
e தானி 8:2
f ஏசா 66:19
g எஸ்றா 1:2, 3; ஏசா 49:22; ஏசா 62:10
h சங் 147:2; ஏசா 66:20
i 2நா 30:1, 10; எரே 31:6
j எரே 3:18; எசே 37:16, 19; ஓசி 1:11
k ஏசா 25:10; ஆமோ 9:11, 12; ஒப 18
l எரே 49:2
m யாத் 14:22
n ஆதி 15:18
o எஸ்றா 1:2, 3
p ஏசா 19:23; ஏசா 27:13; ஏசா 35:8; ஏசா 40:3; ஏசா 57:14; எரே 31:21

அதி. 12
q உபா 30:3; சங் 30:5; சங் 85:1; சங் 126:1; ஏசா 40:2; ஏசா 66:13
r ஏசா 45:17
s ஏசா 26:4
t சங் 118:14; ஓசி 1:7
u ஏசா 49:10

அவருடைய செயல்களை எல்லாருக்கும் சொல்லுங்கள்![a]
அவருடைய பெயரே உயர்ந்தது என்று அறிவியுங்கள்.[b]
5 மாபெரும் அதிசயங்களைச் செய்த யெகோவாவைப் புகழ்ந்து பாடுங்கள்.[c]
அவர் செய்த அற்புதங்களைப் பூமியிலுள்ள எல்லாருக்கும் தெரியப்படுத்துங்கள்.
6 சீயோனில் குடியிருக்கிறவர்களே, சந்தோஷமாக முழங்குங்கள்.
உங்கள் நடுவில் இருக்கிற பரிசுத்தமான கடவுள் மகத்தானவர்."

13 பாபிலோனுக்கு எதிரான தீர்ப்பைப்[d] பற்றி ஆமோத்சின் மகனாகிய ஏசாயா[e] பார்த்த தரிசனம்:
2 "மரங்கள் இல்லாத மலைமேல் கொடியை ஏற்றுங்கள்.*[f]
சத்தமாக அவர்களைக் கூப்பிடுங்கள்.
அதிபதிகளுடைய வாசல்கள் வழியாக வரச் சொல்லி சைகை காட்டுங்கள்.
3 நான் நியமித்த ஆட்களுக்குக்[g] கட்டளை கொடுத்திருக்கிறேன்.
என்னுடைய தண்டனையை நிறைவேற்ற என் வீரர்களை அழைத்திருக்கிறேன்.
அவர்கள் பெருமிதத்தோடு வருகிறார்கள்.
4 மலைகளில் ஏராளமான ஆட்கள் திரண்டிருக்கிறார்கள்.
அவர்கள் போடும் சத்தத்தைக் கேளுங்கள்!
பல தேசத்தார் கூடியிருக்கிறார்கள்.[h]
அவர்கள் போடும் கூச்சலைக் கேளுங்கள்!
பரலோகப் படைகளின் யெகோவா போருக்காகப் படையைத் திரட்டுகிறார்.[i]
5 தொலைதூர தேசத்திலிருந்து,[j]
ஆம், தொடுவானத்தின் எல்லையிலிருந்து,
உலகம் முழுவதையும் அழிப்பதற்காக[k] யெகோவா வருகிறார்,
அவருடைய கோபத்தின் ஆயுதங்களும் வருகின்றன.
6 புலம்பி அழுங்கள்! யெகோவாவின் நாள் நெருங்கிவிட்டது!
சர்வவல்லமையுள்ளவர் அழிவைக் கொண்டுவரும் நாள் அது.[l]
7 அப்போது, எல்லாருடைய கையும் தளர்ந்துவிடும்.
எல்லாருடைய இதயமும் பயத்தில் உறைந்துவிடும்.[m]
8 ஜனங்கள் கதிகலங்கிப்போவார்கள்.[n]
பிரசவ வேதனைப்படுகிற பெண்ணைப் போல
வேதனையிலும் வலியிலும் துடிப்பார்கள்.
பயத்தில் அவர்களுடைய முகம் வெளுத்துப்போகும்.
மிரண்டுபோய் ஒருவரை ஒருவர் பார்ப்பார்கள்.
9 இதோ! யெகோவாவின் நாள் வருகிறது.
அவர் தன்னுடைய ஆக்ரோஷத்தையும் ஆவேசத்தையும் கொட்டப்போகும் நாள் அது.

13:2 * வே.வா., "கொடிக் கம்பத்தை நாட்டுங்கள்."

அதி. 12
a 1நா 16:8, சங் 105:1, 2
b யாத் 15:2
c சங் 98:1, சங் 149:3

அதி. 13
d எரே 25:12, எரே 50:1-3, வெளி 18:2
e ஏசா 1:1
f எரே 51:12, எரே 51:27, 28
g ஏசா 45:1
h தானி 5:28
i எரே 50:15
j எரே 50:9, எரே 51:28
k எரே 51:11
l ஏசா 13:18, எரே 50:13
m எரே 50:43
n தானி 5:6

அப்போது, தேசத்திலுள்ள கெட்டவர்கள் அழிக்கப்படுவார்கள்.
தேசத்துக்குக் கோரமான முடிவு வரும்.[a]
10 வானத்தில் நட்சத்திரங்கள் மின்னாது.
நட்சத்திரக் கூட்டங்கள்*[b] ஒளி தராது.
சூரியன் பிரகாசிக்காது.
நிலவு வெளிச்சம் கொடுக்காது.
11 பூமியில் அக்கிரமம் செய்தவர்களைத் தண்டிப்பேன்.[c]
குற்றம் செய்தவர்களுக்குத் தீர்ப்பு கொடுப்பேன்.
அகங்காரம்* பிடித்தவர்களின் பெருமைக்கு முடிவுகட்டுவேன்.[d]
அடக்கி ஒடுக்குகிறவர்களின் ஆணவத்தை அடக்குவேன்.
12 மனுஷனைச் சொக்கத்தங்கத்தைவிட அபூர்வமாக்குவேன்.[e]
மனுஷர்களை ஓப்பீரின் தங்கத்தைவிட[f] அபூர்வமாக்குவேன்.
13 அந்த நாளில், பரலோகப் படைகளின் யெகோவாவாகிய நான்
பயங்கரமான கோபத்தைக் காட்டுவேன்.
நான் வானத்தை அதிர வைப்பேன்.
பூமியை உலுக்குவேன்.[g]
14 அப்போது அவர்கள், துரத்தப்படுகிற கலைமான்கள்* போலவும்,
மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போலவும் ஆவார்கள்.
எல்லாரும்# அவரவர் தேசத்துக்கு ஓடுவார்கள்.
அவரவர் ஜனங்களிடம் திரும்புவார்கள்.[h]
15 சிக்குகிறவர்களோ குத்திக் கொல்லப்படுவார்கள்.
பிடிபடுகிறவர்களோ வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்.[i]
16 அவர்கள்* கண்ணெதிரிலே அவர்களுடைய பிள்ளைகள் கொடூரமாய்
அடித்துக் கொல்லப்படுவார்கள்.[j]
அவர்களுடைய வீடுகள் சூறையாடப்படும்.
அவர்களுடைய மனைவிகள் பலாத்காரம் செய்யப்படுவார்கள்.
17 இதோ, நான் மேதியர்களை அவர்களுக்கு எதிராக வரவழைப்பேன்.[k]
அவர்கள் வெள்ளியைப் பெரிதாக நினைப்பதில்லை.
தங்கத்துக்காக ஆசைப்படுவதில்லை.
18 அவர்கள் வில்லுகளால் வாலிபர்களை நொறுக்குவார்கள்.[l]
பிள்ளைகள்மேல் ஈவிரக்கம் காட்ட மாட்டார்கள்.
குழந்தைகளைக்கூட விட்டுவைக்க மாட்டார்கள்.
19 ராஜ்யங்களிலேயே மிகப் பிரமாண்டமான* பாபிலோன் ராஜ்யம்[m]
அழிக்கப்படும்.
கல்தேயர்களின் மேன்மையும் பெருமையுமான சாம்ராஜ்யம்[n]
ஒழிக்கப்படும்.

அதி. 13
a எரே 50:23, 29
b யோபு 9:9; யோபு 38:31; ஆமோ 5:8
c சங் 137:8; எரே 51:37; வெளி 18:2
d எரே 50:29; தானி 5:22, 23
e எரே 50:30; எரே 51:3, 4
f 1ரா 10:11
g எரே 51:29
h எரே 50:16
i எரே 51:3, 4
j சங் 137:8, 9
k ஏசா 21:2; எரே 50:9; எரே 51:11; தானி 5:30, 31
l எரே 50:14
m ஏசா 47:5; தானி 4:30
n ஏசா 47:1

13:10 *நே.மொ., "கீஸில் நட்சத்திரக் கூட்டங்கள்." ஒருவேளை, ஓரியன் மற்றும் அதைச் சுற்றியுள்ள நட்சத்திரக் கூட்டங்களைக் குறிக்கலாம். **13:11** *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. **13:14** *வே.வா., "நவ்வி மான்கள்." #அதாவது, "பாபிலோனை ஆதரிப்பவர்கள்." **13:16** *அதாவது, "சிக்குகிறவர்கள் அல்லது பிடிபடுகிறவர்கள்." **13:19** *வே.வா., "சிங்காரமான."

கடவுள் அழித்துப்போட்ட சோதோம் கொமோராவைப் போல
அது ஆகும்.[a]
20 அங்கு இனி யாருமே குடியிருக்க மாட்டார்கள்.
தலைமுறை தலைமுறையாக அது வெறுமையாகக் கிடக்கும்.[b]
அரேபியர்கள் யாரும் அங்கே கூடாரம் போட மாட்டார்கள்.
மேய்ப்பர்கள் யாரும் மந்தைகளோடு அங்கே தங்க மாட்டார்கள்.
21 பாலைவன மிருகங்கள் அங்கே படுத்திருக்கும்.
ஆட்கள் குடியிருந்த வீடுகளில் ஆந்தைகள்* குடியிருக்கும்.
நெருப்புக்கோழிகள் அங்கே தங்கியிருக்கும்.[c]
காட்டு ஆடுகள்# துள்ளித் திரியும்.
22 கோபுரங்களில் மிருகங்கள் சத்தமிடும்.
பெரிய மாளிகைகளில் நரிகள் ஊளையிடும்.
பாபிலோனுக்கு நேரம் நெருங்கிவிட்டது; அவளுக்கு இன்னும் அதிக
நாள் இல்லை."[d]

14 யாக்கோபுக்கு யெகோவா இரக்கம் காட்டுவார்.[e] இஸ்ரவேலை மறு
படியும் தேர்ந்தெடுத்து[f] அவர்களுடைய தேசத்திலே குடிவைப்
பார்.*[g] மற்ற தேசத்து ஜனங்கள் யாக்கோபின் வம்சத்தாரோடு சேர்ந்து
கொள்வார்கள்.[h] 2 பின்பு, அவர்களைக் கூட்டிக்கொண்டு போய் அவர்கள்
தேசத்திலேயே விடுவார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் இவர்களை யெகோவா
வின் தேசத்தில் வேலைக்காரர்களாகவும் வேலைக்காரிகளாகவும் வைத்துக்
கொள்வார்கள்.[i] தங்களைச் சிறைபிடித்தவர்களைச் சிறைபிடிப்பார்கள், தங்
களை வேலை வாங்கியவர்களை வேலை வாங்குவார்கள்.
3 வேதனைகளிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும், அடிமைகளாக நீங்கள்
பட்ட பாடுகளிலிருந்தும் யெகோவா உங்களை விடுவிக்கும் நாளில்,[j]
4 பாபிலோன் ராஜாவைப் பற்றி இப்படிக் கேலியாகப் பேசுவீர்கள்:
"மற்றவர்களை மிரட்டி வேலை வாங்கியவன் ஒழிந்துபோனானே!
அடக்கி ஒடுக்கியவன் அழிந்துபோனானே![k]
5 கொடுமைக்காரர்களின் கோலையும், கொடுங்கோலர்களின் தடியையும்
யெகோவா முறித்துவிட்டார்.[l]
6 ஜனங்களை ஆத்திரத்தோடு தாக்கிக்கொண்டே இருந்தவனையும்[m]
தேசங்களை ஆவேசத்தோடு கைப்பற்றி, ஓயாமல்
துன்புறுத்தியவனையும்[n] அவர் அழித்துவிட்டார்.
7 இப்போது முழு பூமியும் தொல்லை இல்லாமல் அமைதியாக
இருக்கிறது.
ஜனங்கள் சந்தோஷத்தில் ஆரவாரம் செய்கிறார்கள்.[o]
8 ஆபால் மரங்களும் லீபனோனின் தேவதாரு மரங்களும்
உன் கதியைப் பார்த்து சிரிக்கின்றன.
'நீ ஒழிந்ததுதான் எங்களுக்குப் பெரிய நிம்மதி,
எங்களை வெட்ட இப்போது யாரும் வருவதில்லை'
என்று சொல்கின்றன.

13:21 *வே.வா., "கழுகு ஆந்தைகள்." #அல்லது, "ஆட்டு உருவப் பேய்கள்."
14:1 *வே.வா., "ஓய்வு தருவார்."

அதி. 13
a ஆதி 19:24, 25; எரே 50:40
b எரே 50:3, 13; எரே 51:29, 37; வெளி 18:21
c வெளி 18:2
d எரே 51:33

அதி. 14
e லேவி 26:42
f சக 1:17
g உபா 30:1-3; ஏசா 66:20; எரே 24:6; எசே 36:24
h ஏசா 56:6, 7; ஏசா 60:3; சக 8:22, 23
i ஏசா 61:5; சக 2:8, 9
j எஸ்றா 3:1; எஸ்றா 9:8; எரே 30:10
k எரே 50:23
l சங் 125:3
m 2நா 36:17; எரே 50:17
n ஆப 1:6; சக 1:15
o சங் 126:2; ஏசா 49:13; எரே 51:48; வெளி 18:20

அதி. 14
a வெளி 18:22
b 2நா 36:17 எரே 51:7 எசே 29:19 தானி 5:18, 19
c ஏசா 47:7 தானி 4:30
d தானி 5:22, 23
e சங் 48:1, 2
f எரே 51:25
g 2ரா 25:21 ஏசா 64:10
h 2ரா 24:12, 14 2ரா 25:11

9 கல்லறைகூட பரபரப்பாக இருக்கிறது.
உன்னை வரவேற்கக் காத்திருக்கிறது.
உன்னைச் சந்திக்க செத்தவர்களைக்கூட* எழுப்புகிறது.
உலகத்தை ஆண்டு செத்துப்போன கொடுங்கோலர்களைத் தட்டி எழுப்புகிறது.
எல்லா தேசத்து ராஜாக்களையும் சிம்மாசனங்களிலிருந்து எழுந்திருக்கச் செய்கிறது.
10 அவர்கள் எல்லாரும் உன்னிடம்,
'நீயும் எங்களைப் போல ஆகிவிட்டாயா?
பலத்தையெல்லாம் இழந்துவிட்டாயா?
11 உன் பெருமை கல்லறைக்குள் புதைந்துவிட்டது.
உன் இசைக் கருவிகளின் சத்தம் சமாதியில் அடங்கிவிட்டது.[a]
புழுக்கள்தான் உன் படுக்கை.
புழுக்கள்தான் உன் போர்வை' என்று சொல்கிறார்கள்.
12 நட்சத்திரமாக மினுமினுத்தவனே, விடியலின் மகனே,
நீ தேசங்களை வீழ்த்தினாயே.[b]
இப்போது நீயே வானத்திலிருந்து விழுந்துவிட்டாயே!
கீழே பூமிக்குத் தள்ளப்பட்டாயே!
13 நீ உன் உள்ளத்தில், 'நான் பரலோகத்துக்கு ஏறிப்போவேன்.[c]
கடவுளுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிம்மாசனத்தை உயர்த்துவேன்.[d]
வடகோடியில் எல்லாரும் கூடிவருகிற மலையில் உட்காருவேன்.[e]
14 நான் மேகங்களுக்கு மேல் ஏறுவேன்.
உன்னதமான கடவுளைப் போல் ஆவேன்' என்று சொல்லிக்கொண்டாய்.
15 ஆனால், நீ கல்லறைக்குள் இறக்கப்படுவாய்.
அதன் அடிமட்டத்துக்குத் தள்ளப்படுவாய்.
16 உன்னைப் பார்க்கிறவர்கள் அதிர்ச்சி அடைவார்கள்.
உன்னை உற்றுப் பார்த்து,
'இவன்தான் உலகத்தையே ஆட்டிப்படைத்தவனா?
இவன்தான் எல்லா ராஜ்யங்களையும் நடுங்க வைத்தவனா?[f]
17 ஊர்களையெல்லாம் அழித்து,
உலகத்தை வனாந்தரம்போல் மாற்றியவன்[g] இவன்தானா?
கைதிகளை விடுதலை செய்யாமல் வைத்துக்கொண்டவன்[h] இவன்தானா?' என்று கேட்பார்கள்.
18 மற்ற தேசத்து ராஜாக்கள் எல்லாரும்
கௌரவமாக அடக்கம் செய்யப்பட்டார்கள்.
எல்லாரும் அவரவர் கல்லறையில் வைக்கப்பட்டார்கள்.
19 ஆனால், நீ அடக்கம் செய்யப்படாமல் தூக்கி எறியப்பட்டிருக்கிறாய்.
அழுகிப்போன துளிர்போல்* வீசப்பட்டிருக்கிறாய்.

14:9 *வே.வா., "செத்து செயலிழந்து போனவர்களைக்கூட." **14:19** *வே.வா., "கிளைபோல்."

வாளால் வெட்டப்பட்டவர்களோடு பிணமாகக் கிடக்கிறாய்.
கால்களின் கீழே மிதிபடுகிறாய்.
கற்கள் நிறைந்த குழிக்குள்ளே வீசப்படுகிறாய்.
20 நீ மற்ற ராஜாக்களைப் போல் அடக்கம் செய்யப்பட மாட்டாய்.
ஏனென்றால், நீயே உன் தேசத்தை அழித்துப்போட்டாய்.
நீயே உன் ஜனங்களைக் கொன்றுபோட்டாய்.
கெட்டவர்களுடைய வம்சம் அடியோடு மறக்கப்படும்.
21 முன்னோர்கள் செய்த பாவங்களுக்காக
அவர்களுடைய மகன்களைக் கொன்றுபோடத் தயாராகுங்கள்.
அப்போதுதான் அவர்கள் எழும்பி உலகத்தைக் கைப்பற்ற மாட்டார்கள்.
பூமியைத் தங்களுடைய நகரங்களால் நிரப்ப மாட்டார்கள்."

22 "நான் அவர்களுக்கு எதிராக எழும்புவேன்"[a] என்று பரலோகப்
படைகளின் யெகோவா சொல்கிறார்.

"நான் பாபிலோனின் பெயரையும், அங்கே மீதியாக இருப்பவர்க
ளையும், அவர்களுடைய வம்சத்தையும், வாரிசையும் அழித்துவிடுவேன்"[b]
என்று யெகோவா சொல்கிறார்.

23 "அதை அடியோடு அழித்துவிடுவேன்.* சேறும் சகதியும் நிறைந்த
இடமாகவும், முள்ளம்பன்றிகளின் குடியிருப்பாகவும் மாற்றிவிடுவேன்"[c]
என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

24 பரலோகப் படைகளின் யெகோவா,
"நான் நினைத்தபடியே நடக்கும்.
நான் முடிவுசெய்தது நிறைவேறியே தீரும்.
25 அசீரியனை என் தேசத்திலிருந்து ஒழித்துக்கட்டுவேன்.
அவனை என் மலையில் மிதித்துப்போடுவேன்.[d]
என் ஜனங்கள்மேல் அவன் சுமத்திய நுகத்தடியை எடுத்துப்போடுவேன்.
அவர்கள்மேல் அவன் வைத்த சுமையை இறக்கிவிடுவேன்"[e] என்று
ஆணையிட்டுச் சொல்லியிருக்கிறார்.
26 முழு உலகத்துக்கும் முடிவு செய்யப்பட்டிருப்பது இதுதான்.
எல்லா தேசங்களுக்கும் எதிராக ஓங்கியிருக்கும் கை இதுதான்.
27 இது பரலோகப் படைகளின் யெகோவா எடுத்திருக்கும் முடிவு.
யாரால் அதை மாற்ற முடியும்?[f]
அவர் கையை ஓங்கியிருக்கிறார்.
யாரால் அதைத் தடுக்க முடியும்?[g]
28 ஆகாஸ் ராஜா இறந்த[h] வருஷத்தில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு இதுதான்:
29 "பெலிஸ்திய ஜனங்களே,
உங்களை அடித்தவனின் தடி முறிந்துவிட்டதற்காகச்
சந்தோஷப்படாதீர்கள்.
ஏனென்றால், அவனுடைய வாரிசு[i] விஷப்பாம்புக்குப் பிறந்த
குட்டிபோல் இருப்பான்.[j]
அவன் மின்னல் வேகத்தில் சீறிப்பாயும் கொடிய பாம்பாக* இருப்பான்.

14:23 *நே.மொ., "அதை அழிவு என்ற துடைப்பத்தால் பெருக்கிவிடுவேன்." **14:29** *வே.வா., "அனல் கக்குகிற பறக்கும் பாம்பாக."

அதி. 14
a ஏசா 43:14; எரே 50:25; எரே 51:56
b எரே 51:62
c ஏசா 13:1, 21; எரே 50:35, 39; வெளி 18:2
d 2நா 32:21, 22; ஏசா 30:31; ஏசா 31:8; ஏசா 37:36, 37
e ஏசா 10:24
f சங் 33:11; நீதி 19:21; நீதி 21:30; ஏசா 46:11
g 2நா 20:5, 6; ஏசா 43:13
h 2ரா 16:20; 2நா 28:27
i 2நா 26:3, 6
j 2ரா 18:1, 8

30 எளியவர்களின் பிள்ளைகள் நன்றாகச் சாப்பிடுவார்கள்.
ஏழைகள் நிம்மதியாகப் படுத்துத் தூங்குவார்கள்.
ஆனால், உங்கள் குடும்பங்களைப் பஞ்சத்தால் சாகடிப்பேன்.
உங்களில் மீதியாக இருப்பவர்களைக் கொன்றுபோடுவேன்.[a]
31 நகரவாசலே, புலம்பி அழு! நகரமே, கதறி அழு!
பெலிஸ்திய ஜனங்களே, நீங்கள் எல்லாரும் பயந்து நடுங்குவீர்கள்.
ஏனென்றால், வடக்கிலிருந்து ஒரு படை புகைபோல் கிளம்பி வருகிறது.
வீரர்கள் யாரும் அணியைவிட்டு விலகாமல் ஒன்றுசேர்ந்து வருகிறார்கள்."
32 தேசத்தின் தூதுவர்களுக்கு அவர்கள் என்ன பதில் சொல்ல வேண்டும்?
யெகோவா சீயோனுக்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறார்[b] என்றும்,
ஒடுக்கப்படுகிற அவருடைய ஜனங்கள் அங்கே பாதுகாப்பாக இருப்பார்கள் என்றும் சொல்ல வேண்டும்.

15 மோவாபுக்கு எதிரான தீர்ப்பு:[c]
மோவாபின் ஆர் நகரம்[d] ஒரே ராத்திரியில் அழிக்கப்படும்.
அதன் சத்தம் அடங்கிவிடும்.
மோவாபின் கீர் நகரம்[e] ஒரே ராத்திரியில் அழிக்கப்படும்.
அதன் சத்தம் அடங்கிவிடும்.
2 கோயிலுக்கும் தீபோன் நகரத்துக்கும்[f] ஜனங்கள் போவார்கள்.*
புலம்பி அழுவதற்காக ஆராதனை மேடுகளுக்கு ஏறிப் போவார்கள்.
நேபோ நகரத்துக்காகவும்[g] மேதேபா ஊருக்காகவும்[h] கதறி அழுவார்கள்.
எல்லாருமே தலையை மொட்டையடித்துக்கொள்வார்கள்,[i] தாடியைச் சிரைத்துக்கொள்வார்கள்.[j]
3 தெருக்களில் துக்கத் துணி* போட்டுக்கொண்டு திரிவார்கள்.
பொது சதுக்கங்களுக்கும் மொட்டைமாடிகளுக்கும் போய் ஒப்பாரி வைப்பார்கள்.
அழுதுகொண்டே இறங்கி வருவார்கள்.[k]
4 எஸ்போன், எலெயாலே நகரங்களில்[l] கதறல் சத்தம் கேட்கும்.
யாகாஸ்[m] வரைக்கும் அந்தச் சத்தம் எட்டும்.
அதைக் கேட்டு மோவாபின் வீரர்கள் அலறுவார்கள்.
பயந்து நடுங்குவார்கள்.
5 மோவாபை நினைத்து என் நெஞ்சம் துடிக்கும்.
அதன் ஜனங்கள் சோவார்[n] வரைக்கும் எக்லாத்து-செலிசியா வரைக்கும் தப்பித்து ஓடுவார்கள்.[o]
கண்ணீரோடு லூகித் நகரத்துக்கு ஏறிப்போவார்கள்.
ஒரோனாயீமுக்குப் போகும் வழியிலே, தேசத்தின் அழிவைப் பார்த்து அலறுவார்கள்.[p]
6 நிம்ரீமின் தண்ணீர் வற்றிப்போகும்.
பசும்புல் கருகிப்போகும்.
புல்பூண்டுகள் எல்லாமே காய்ந்து காணாமல் போகும்.

15:2 *நே.மொ., "அவன் போவான்." 15:3 *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 14
a எரே 47:1; எசே 25:16; யோவே 3:4; ஆமோ 1:6-8; செப் 2:4; சக 9:5
b சங் 48:1-3; சங் 87:1, 2; சங் 132:13, 14

அதி. 15
c எரே 9:25, 26; எசே 25:11
d எண் 21:28; உபா 2:9
e 2ரா 3:24, 25; எரே 48:31
f எரே 48:18
g எரே 48:1
h எண் 21:30; யோசு 13:15-17
i உபா 14:1
j எரே 48:36, 37
k எரே 48:38
l எண் 32:37; ஏசா 16:9
m நியா 11:20
n ஆதி 13:10
o எரே 48:34
p எரே 48:3, 5

7 அதனால் அவர்களுடைய சேமிப்புகளிலும் சொத்துகளிலும் மிச்சம்
இருப்பதை எடுத்துக்கொண்டு போவார்கள்.
காட்டரசு மரங்கள் நிறைந்த பள்ளத்தாக்கை* தாண்டிப் போவார்கள்.
8 மோவாப் தேசமெங்கும் கூக்குரல் கேட்கும்.[a]
எக்லாயிம் வரைக்கும் அலறல் சத்தம் எட்டும்.
பெயெர்-எலீம் வரைக்கும் அது எட்டும்.
9 திமோனின் தண்ணீர் இரத்தமாகும்.
திமோனுக்கு இன்னும் அதிக தண்டனை கொடுப்பேன்:
ஒரு சிங்கத்தை அனுப்புவேன்.
மோவாபில் மீதியாக இருக்கிறவர்களையும் தப்பித்து
ஓடுகிறவர்களையும் அது கடித்துக் குதறும்.[b]

16 தேசத்தின் ஆட்சியாளருக்கு ஒரு செம்மறியாட்டுக் கடாவை
அனுப்புங்கள்.
அதை சாலாவிலிருந்து வனாந்தரம் வழியாக,
சீயோன் மகளுடைய மலைக்கு அனுப்புங்கள்.
2 கூட்டிலிருந்து விரட்டப்பட்ட பறவையைப் போல,[c]
மோவாப் மக்கள் துரத்தப்பட்டு அர்னோன்[d] ஆற்றுத்துறைகளில்*
இருப்பார்கள்.
3 “ஆலோசனை சொல்லுங்கள், தீர்மானத்தை நிறைவேற்றுங்கள்.
நடுப்பகலிலே இரவு போன்ற இருட்டான நிழலைத் தந்து பாதுகாப்பு
கொடுங்கள்.
துரத்தப்பட்டவர்களை ஒளித்துவையுங்கள், அவர்களைக் காட்டிக்
கொடுக்காதீர்கள்.
4 மோவாபே, துரத்தப்பட்ட என் ஜனங்கள் உன்னிடம் தங்கட்டும்.
அவர்களை அழிக்க நினைப்பவனிடமிருந்து அவர்களைக் காப்பாற்று.[e]
ஒடுக்குபவன் ஒழிந்துபோவான்.
அழிவு முடிவுக்கு வரும்.
மற்றவர்களை ஏறி மிதிப்பவன் பூமியிலிருந்து அழிந்துபோவான்.
5 அப்போது, மாறாத அன்பினால் ஒரு சிம்மாசனம் உறுதியாக
நிலைநிறுத்தப்படும்.
அது தாவீதின் கூடாரத்தில் இருக்கும்; அதில் உட்காரும் ராஜா
உண்மையுள்ளவராக இருப்பார்.[f]
அவர் நியாயமாகத் தீர்ப்பு சொல்வார், உடனுக்குடன் நீதி வழங்குவார்.”[g]
6 மோவாப் பெருமைபிடித்து அலைகிறான்.[h]
அவனுடைய ஆணவத்தையும் அகம்பாவத்தையும் ஆவேசத்தையும்[i]
பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.
ஆனால், அவனுடைய பெருமைப் பேச்செல்லாம் வெற்றுப்
பேச்சாகிவிடும்.
7 மோவாப் தனக்கு வரும் அழிவைப் பார்த்து அழுது புலம்புவான்.

15:7 *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்கை.” 16:2 *ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதிகள்.

அதி. 15
a எரே 48:20
b 2ரா 17:25, 26

அதி. 16
c எரே 48:19
d எண் 21:13
e எரே 48:8, 42
f 2சா 7:16, 17
g சங் 45:6
சங் 72:1, 2
ஏசா 9:6, 7
ஏசா 32:1
எரே 23:5
h எரே 48:26, 29
செப் 2:9, 10
i ஆமோ 2:1

அவனுடைய ஜனங்கள் எல்லாருமே அழுது புலம்புவார்கள்.[a]
அடிவாங்கியவர்கள் கீர்-ஆரேசேத் தேசத்தின் உலர்ந்த திராட்சை
அடைகளுக்காக ஏங்கி அழுவார்கள்.[b]
8 எஸ்போனின்[c] திராட்சைத் தோட்டங்கள் காய்ந்துவிட்டன.
சிப்மாவின்[d] திராட்சைக் கொடி பட்டுப்போய்விட்டது.
அதன் கிளைகளில் தொங்கும் சிவப்பு திராட்சைகளை* மற்ற தேசத்து
ஆட்சியாளர்கள் மிதித்துப் போட்டார்கள்.
அதன் கிளைகள் யாசேர்[e] வரையும்,
வனாந்தரம் வரையும் படர்ந்திருந்தன.
அவை கடல்வரை எட்டியிருந்தன.
9 அதனால்தான், யாசேருக்காக அழுவது போல சிப்மாவுக்காக
அழுவேன்.
எஸ்போனே, எலெயாலே, என் கண்ணீரால் உங்களை நனைப்பேன்.[f]
ஏனென்றால், கோடைக் காலத்துப் பழங்களையும் அறுவடையையும்
பார்த்து நீங்கள் அடைந்த சந்தோஷம் முடிவுக்கு வந்தது.*
10 பழத் தோட்டங்களிலிருந்து சந்தோஷமும் மகிழ்ச்சியும் பறிக்கப்பட்டது.
திராட்சைத் தோட்டங்களில் சந்தோஷப் பாடல்களோ ஆரவாரமோ
கேட்கவில்லை.[g]
திராட்சரச ஆலைகளில் திராட்சைகள் மிதிக்கப்படவில்லை.
ஏனென்றால், அவர்களுடைய சந்தோஷ ஆரவாரத்துக்கு நான்
முடிவுகட்டினேன்.[h]
11 அதனால்தான், மோவாபையும் கீர்-ஆரேசேத் நகரத்தையும் நினைத்து
என் உள்ளம் உருகுகிறது.[i]
யாழின் நரம்புகள்போல் துடிக்கிறது.

12 மோவாப் என்னதான் கஷ்டப்பட்டு ஆராதனை மேட்டுக்குப் போய்
வந்தாலும், கோயிலுக்குப் போய் வேண்டிக்கொண்டாலும் அவனால் எதை
யும் சாதிக்க முடியாது.[j]

13 இதுதான் மோவாப் பற்றி முன்பு யெகோவா சொன்ன செய்தி.
14 இப்போது யெகோவா சொல்வது இதுதான்: சரியாக* மூன்றே வருஷத்
தில் மோவாபின் மேன்மை மங்கிவிடும். எங்கு பார்த்தாலும் குழப்பமும்
கலவரமுமாக இருக்கும். கொஞ்சம் பேரே மிஞ்சியிருப்பார்கள், அவர்களும்
அற்பமானவர்களாக இருப்பார்கள்."[k]

17 தமஸ்குவுக்கு எதிரான தீர்ப்பு:[l]
"தமஸ்கு இனி ஒரு நகரமாக இருக்காது.
வெறும் இடிபாடுகளாகக் கிடக்கும்.[m]
2 ஆரோவேரின் நகரங்கள்[n] பாழாய்க் கிடக்கும்.
ஆட்டு மந்தைகள்தான் அங்கு படுத்திருக்கும்.
அவற்றை விரட்டிவிட யாரும் இருக்க மாட்டார்கள்.
3 எப்பிராயீமின் மதில் சூழ்ந்த நகரங்களும் தமஸ்குவின் ராஜ்யமும்,

அதி. 16
a ஏசா 15:2; எரே 48:20
b 2ரா 3:24, 25
c யோசு 13:15, 17
d எண் 32:37, 38; யோசு 13:15, 19
e யோசு 13:24, 25; எரே 48:32
f ஏசா 15:4; எரே 48:34
g எரே 48:33
h செப் 2:9
i ஏசா 15:1; ஏசா 15:5; எரே 48:36
j எரே 48:7, 35
k ஏசா 25:10; எரே 48:46, 47; செப் 2:9

அதி. 17
l எரே 49:23; சக 9:1
m 2ரா 16:8, 9; ஏசா 8:4; ஆமோ 1:5
n எண் 32:34; யோசு 13:15, 16; 2ரா 10:32, 33

16:8 *வே.வா., "அதன் செக்கச்செவேல் என்ற கிளைகளை." **16:9** *அல்லது, "கோடைக் காலத்துப் பழங்களை நீங்கள் அறுத்தபோது போர் முழக்கம் கேட்டது." **16:14** *நே.மொ., "ஒரு கூலியாளின் வருஷங்களின்படி."

இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.[a]
சீரியாவில் மீதியாக இருப்பவர்களின் மேன்மை,
இஸ்ரவேலர்களின் மேன்மையைப் போல மறைந்துவிடும்” என்று
பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.
4 “அந்த நாளில் யாக்கோபின் மகிமை மங்கிவிடும்.
அவனுடைய புஷ்டியான உடல் மெலிந்துவிடும்.
5 ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே[b] பயிர்கள் அறுவடை
செய்யப்பட்ட பின்பும்,
கதிர்கள் சேகரிக்கப்பட்ட பின்பும் கொஞ்சம் கதிர்கள் மட்டுமே
விட்டுவைக்கப்படுவது போல
யாக்கோபின் ஜனங்களில் கொஞ்சம் பேரே விட்டுவைக்கப்படுவார்கள்.
6 உலுக்கப்பட்ட ஒலிவ மரத்தின் உச்சங்கிளையில்
இரண்டு மூன்று பழங்கள் மட்டுமே மிஞ்சியிருப்பது போலவும்,
கனிதரும் கிளைகளில் நாலைந்து பழங்கள் மட்டுமே எஞ்சியிருப்பது
போலவும்,
கொஞ்சம் பேர் மட்டும்தான் மீதியாக இருப்பார்கள்”[c] என்று
இஸ்ரவேலின் கடவுளான யெகோவா சொல்கிறார்.

7 அந்த நாளில், மனிதன் தன்னைப் படைத்தவரை ஏறெடுத்துப் பார்ப்
பான், அவனுடைய கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளையே
நோக்கியிருக்கும். 8 அவன் தன் கைகளால் செய்த பலிபீடங்களையும்,[d]
தன் விரல்களால் செய்த[e] பூஜைக் கம்பங்களையும்* தூபபீடங்களையும்
ஏறெடுத்துப் பார்க்க மாட்டான்.

9 அந்த நாளில், அவனுடைய மதில் சூழ்ந்த நகரங்கள் ஆள் நடமாட்டம்
இல்லாமல்போன காட்டுப் பகுதிபோல் ஆகிவிடும்.[f]
இஸ்ரவேலர்களுக்கு முன்பாக வெட்டிப்போடப்பட்ட கிளைபோல்
ஆகிவிடும்.
அது பொட்டல் காடாகிவிடும்.
10 உன்னை* மீட்கும் கடவுளை நீ மறந்துவிட்டாய்.[g]
உனக்குக் கோட்டை போலவும் கற்பாறை போலவும் இருக்கிறவரை[h]
நினைத்துப் பார்க்கத் தவறிவிட்டாய்.
அதனால் நீ அழகான தோட்டங்களை அமைத்தாலும்,
வேறு தேசத்து# கன்றுகளை நட்டாலும் அவை வளராது.
11 உன் தோட்டத்துக்கு நீ பார்த்துப் பார்த்து வேலி போட்டாலும்,
அதில் விதைத்த விதைகள் காலையிலேயே முளைத்தாலும்,
நீ நோயிலும் தீராத வலியிலும் தவிக்கும் நாளில் அறுவடையே
கிடைக்காது.[i]
12 ஏராளமான ஜனங்கள் போடும் கூச்சலைக் கேள்.
கடலைப் போல் அவர்கள் கொந்தளிக்கிறார்கள்.
தேசத்து ஜனங்களின் இரைச்சலைக் கேள்.
பெருங்கடலின் இரைச்சலைப் போல அது இருக்கிறது.

17:8 *சொல் பட்டியலைப் பாருங்கள். **17:10** *இது எருசலேமைக் குறிக்கிறது. #வே.வா., “பொய் தெய்வத்தின்.”

அதி. 17
a 2ரா 16:8, 9; 2ரா 17:6; ஏசா 7:8; ஏசா 28:1, 2; ஓசி 5:14
b யோசு 15:8, 12; யோசு 18:11, 16
c உபா 4:27; உபா 24:20
d 2நா 31:1
e ஓசி 8:6, 11
f ஓசி 10:14; ஆமோ 3:11
g சங் 50:22; ஓசி 8:14
h உபா 32:4; 2சா 22:32
i உபா 28:30; ஓசி 8:7

அதி. 18
a ஏசா 20:3, 4
எசே 30:4

13 பேரலைகளின் இரைச்சலைப் போல ஜனங்கள் சத்தமிடுவார்கள்.
கடவுள் அவர்களை அதட்டுவார்; அவர்கள் தொலைதூரத்துக்கு ஓடுவார்கள்.
மலையிலே காற்றில் அடித்துச் செல்லப்படும் பதரைப் போல ஆவார்கள்.
புயல்காற்றில் சிக்கிக்கொள்ளும் துரும்பைப் போல ஆவார்கள்.
14 சாயங்காலத்தில் பயந்து நடுங்குவார்கள்.
விடிவதற்குள் இல்லாமல் போவார்கள்.
நம்மைக் கொள்ளையடிப்பவர்களின் கதி இதுதான்.
நம்மைச் சூறையாடுபவர்களுக்கு வரும் நிலைமை இதுதான்.

18 ஆறுகள் ஓடும் பகுதியில் பூச்சிகளின் சிறகொலி கேட்கிற எத்தியோப்பிய தேசத்துக்கு ஐயோ கேடு![a]
2 அது கடல் வழியாகத் தூதுவர்களை அனுப்புகிறது.
அவர்களை நாணற்புல்* படகுகளில் அனுப்பி,
"தூதுவர்களே, வேகமாகப் போங்கள்.
உயரமாகவும் பளபளப்பான சருமத்தோடும் இருக்கிற ஜனங்களிடம் போங்கள்.

b 2நா 12:2, 3
2நா 14:9
2நா 16:8

எல்லாரும் பார்த்துப் பயப்படுகிற ஜனங்களிடம் போங்கள்.[b]
பல தேசங்களை வென்ற பலம்படைத்த ஜனங்களிடம் போங்கள்.
ஆறுகள் அடித்துக்கொண்டு போகிற தேசத்தில் வாழ்கிறவர்களிடம் போங்கள்" என்று சொல்கிறது.
3 தேசத்து ஜனங்களே, பூமியின் குடிமக்களே,
மலைகள்மேல் ஏற்றப்பட்ட கொடியை* போன்ற ஒன்று உங்கள் கண்களுக்குத் தெரியும்.
ஊதுகொம்பின் சத்தம் போன்ற ஒரு சத்தம் உங்கள் காதில் கேட்கும்.
4 யெகோவா என்னிடம்,
"சூரிய வெப்பம் கடுமையாக இருக்கும்போதும்,
உஷ்ணமான அறுவடைக் காலத்தில் பனி மூட்டம் உண்டாகும்போதும்,
நான் அமைதியாக இருந்து, நான் நிலைநாட்டிய இடத்தை* பார்த்துக்கொண்டிருப்பேன்.
5 திராட்சைக் கொடி பூ பூத்து, காய் காய்த்து, பழம் பழுப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பேன்.
ஆனால், அறுவடைக்கு முன்பே அதன் கிளைகளை அரிவாளால் வெட்டிப்போடுவேன்.
அதன் கொடிச் சுருள்களை அறுத்து எறிவேன்.
6 அவையெல்லாம் மலைகளிலுள்ள பறவைகளுக்கும்
நிலத்திலுள்ள மிருகங்களுக்கும் உணவாகும்.
அந்தப் பறவைகள் கோடைக் காலம் முழுவதும் அவற்றைத் தின்னும்.
அந்த மிருகங்கள் அறுவடைக் காலம் முழுவதும் அவற்றைத் தின்னும்.

18:2 *அதாவது, "பாப்பிரஸ் புல்." **18:3** *வே.வா., "நாட்டப்பட்ட கொடிக் கம்பத்தை." **18:4** *அல்லது, "இடத்திலிருந்து."

7 அப்போது, பரலோகப் படைகளின் யெகோவாவுக்கு ஒரு அன்பளிப்பு
கொண்டுவரப்படும்.
அது, உயரமாகவும் பளபளப்பான சருமத்தோடும் இருக்கிற
ஜனங்களின் தேசத்திலிருந்து,
எல்லாரும் பார்த்துப் பயப்படுகிறவர்களின் தேசத்திலிருந்து,
பல தேசங்களை வென்ற பலம்படைத்த தேசத்திலிருந்து,
ஆறுகள் அடித்துக்கொண்டு போகிற தேசத்திலிருந்து,
பரலோகப் படைகளின் யெகோவாவுடைய பெயர் தாங்கிய சீயோன்
மலைக்குக்[a] கொண்டுவரப்படும்" என்று சொன்னார்.

19 எகிப்துக்கு எதிரான தீர்ப்பு:[b]
வேகமாகப் போகும் மேகத்தின் மேல் யெகோவா எகிப்துக்கு
வருகிறார்.
எகிப்திலுள்ள ஒன்றுக்கும் உதவாத தெய்வங்கள் அவர் முன்னால்
நடுநடுங்கும்.[c]
எகிப்து தேசமே கதிகலங்கும்.
2 "எகிப்தியர்களுக்கு விரோதமாக எகிப்தியர்களையே தூண்டிவிடுவேன்.
அவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போடுவார்கள்.
தங்கள் சகோதரர்களோடும் தங்கள் அக்கம்பக்கத்தாரோடும்
மோதுவார்கள்.
நகரத்துக்கு எதிராக நகரமும், ராஜ்யத்துக்கு எதிராக ராஜ்யமும்
போர் செய்யும்.
3 எகிப்து ஜனங்கள் குழம்பிப்போவார்கள்.
நான் அவர்களுடைய திட்டங்களைக் குழப்பிவிடுவேன்.[d]
ஒன்றுக்கும் உதவாத தெய்வங்களிடமும், மாயமந்திரம்
செய்கிறவர்களிடமும்,
ஆவிகளோடு பேசுகிறவர்களிடமும், குறிசொல்கிறவர்களிடமும்[e]
அவர்கள் உதவி தேடிப்போவார்கள்.
4 எகிப்தை ஒரு கொடூரமான அதிகாரியின் கையில் ஒப்படைப்பேன்.
ஒரு கொடுங்கோலன் அதை ஆட்சி செய்வான்"[f] என்று உண்மை
எஜமானாகிய பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.
5 கடல்நீர் காய்ந்துபோகும்,
ஆறு வற்றி வறண்டுபோகும்.[g]
6 ஆறுகளில் நாற்றமடிக்கும்.
எகிப்திலுள்ள நைல் நதிக் கால்வாய்களின் தண்ணீர் குறைந்து
வறண்டுபோகும்.
கோரைப்புற்களும் நாணற்புற்களும் அழுகிப்போகும்.[h]
7 நைல் நதியின் முகத்துவாரப் பகுதியில், கரையோரமாக உள்ள புற்களும்,
நைல் நதியோரமாகப் பயிர் செய்யப்பட்ட எல்லா நிலங்களும்[i]
காய்ந்துபோகும்.[j]
எல்லா பயிர்களும் கருகி காற்றில் அடித்துச் செல்லப்படும்.
8 மீன்பிடிப்பவர்கள் அழுவார்கள்.
நைல் நதியில் தூண்டில் போடுபவர்கள் புலம்புவார்கள்.
அதில் வலை வீசுபவர்கள் குறைந்துகொண்டே போவார்கள்.

அதி. 18
a ஏசா 8:18
ஏசா 24:23

அதி. 19
b எரே 25:17, 19
எசே 29:2
யோவே 3:19
c யாத் 12:12
எரே 43:12
எரே 46:25
எசே 30:13
d ஏசா 19:11, 13
e ஏசா 8:19
அப் 16:16
வெளி 18:23
f ஏசா 20:3, 4
எரே 46:
25, 26
எசே 29:19
g எசே 30:12
சக 10:11
h யாத் 2:3
i உபா 11:10
j எசே 29:10

அதி. 19
a யாத் 9:25, 31
நீதி 7:16
b சங் 78:12
எசே 30:14
c ஏசா 44:25
d ஆதி 41:8
1ரா 4:30
அப் 7:22
e எரே 46:14
எசே 30:13
f யோபு 12:20, 24
ஏசா 19:3
g ஏசா 11:15
h ஏசா 20:3, 4
எரே 25:17, 19
எரே 43:10, 11
எசே 29:6
i எரே 43:4, 7
எரே 44:1

9 சிக்கெடுக்கப்பட்ட நாரிழையிலிருந்து துணிகளைத் தயாரிப்பவர்களும்,[a]
வெள்ளைத் துணிகளை நெய்பவர்களும் அவமானம் அடைவார்கள்.
10 எகிப்தின் நெசவாளிகள் நொந்துபோவார்கள்.
கூலியாட்கள் எல்லாரும் துக்கப்படுவார்கள்.
11 சோவான் நகரத்தின்[b] அதிபதிகள் முட்டாள்களாக இருக்கிறார்கள்.
பார்வோனின் ஆலோசகர்களில் அதிபுத்திசாலிகள்கூட
அர்த்தமில்லாத ஆலோசனைகளையே தருகிறார்கள்.[c]
நீங்கள் எப்படி பார்வோனிடம்,
“நான் அறிவாளிகளின் வம்சத்தில் பிறந்தவன்,
நான் ராஜாக்களின் பரம்பரையில் வந்தவன்” என்று சொல்லலாம்?
12 பார்வோனின் அறிவாளிகள்[d] எங்கே?
பரலோகப் படைகளின் யெகோவா எகிப்துக்கு என்ன
செய்யப்போகிறார் என்று தெரிந்தால் அவர்கள் சொல்லட்டும்.
13 சோவானின் அதிபதிகள் முட்டாள்தனமாக நடந்துவிட்டார்கள்.
நோப்* நகரத்தின்[e] அதிபதிகள் ஏமாந்துவிட்டார்கள்.
எகிப்தின் கோத்திரத் தலைவர்கள் மக்களை மோசம்போக்கினார்கள்.
14 யெகோவா எகிப்தைக் குழம்பிப்போகச் செய்தார்.[f]
அந்த அதிகாரிகள் எகிப்தை எல்லா விஷயங்களிலும்
மோசம்போக்கினார்கள்.
போதையேறக் குடித்துவிட்டு, வாந்தியெடுத்து, அந்த வாந்தியிலேயே
தள்ளாடி விழுகிறவனைப் போல் ஆக்கிவிட்டார்கள்.
15 எகிப்தினால் ஒன்றுமே செய்ய முடியாது.
தலையோ வாலோ, துளிரோ நாணலோ* எதனாலும் எதையும்
செய்ய முடியாது.

16 அந்த நாளில், பரலோகப் படைகளின் யெகோவா எகிப்துக்கு எதிரா
கக் கையை ஓங்குவார்.[g] எகிப்தில் உள்ளவர்கள் அதைப் பார்த்து பெண்க
ளைப் போல் பயந்து நடுங்குவார்கள். **17** யூதா தேசத்தை நினைத்து
எகிப்தியர்கள் பீதி அடைவார்கள். பரலோகப் படைகளின் யெகோவா யூதா
வுக்கு எதிராக எடுத்திருக்கும் தீர்மானத்தைப்[h] பற்றிக் கேட்கும்போதே கதி
கலங்குவார்கள்.

18 அந்த நாளில், எகிப்திலுள்ள ஐந்து நகரங்களில் வாழ்கிறவர்கள்,
கானானின் பாஷையைப் பேசுவார்கள்.[i] அவர்கள் பரலோகப் படைக
ளின் யெகோவாவுக்கு விசுவாசமாய்* இருப்பதாக உறுதிமொழி எடுப்பார்
கள். ஒரு நகரம், “தரைமட்டமாக்கப்படுகிற நகரம்” என்று அழைக்கப்படும்.

19 அந்த நாளில், எகிப்தின் நடுவே யெகோவாவுக்கு ஒரு பலிபீடம்
இருக்கும். அதன் எல்லையில் யெகோவாவுக்கு ஒரு தூண் இருக்கும்.
20 அது எகிப்திலே பரலோகப் படைகளின் யெகோவாவுக்கு ஓர் அடை
யாளமாகவும் சாட்சியாகவும் இருக்கும். அங்கு இருப்பவர்கள் அடக்கி
ஒடுக்கப்படுவதால் யெகோவாவிடம் கதறி அழுவார்கள். அவர்களைக் காப்
பாற்ற அற்புதமான ஒரு மீட்பரை அவர் அனுப்புவார். **21** அந்த நாளில்,
யெகோவா எகிப்தியர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துவார். அவர்கள்

19:13 *வே.வா., “மோப்.” **19:15** *அல்லது, “குருத்தோலையோ கோரைப்புல்லோ.”
19:18 *வே.வா., “பற்றுமாறாமல்.”

யெகோவாவைப் பற்றித் தெரிந்துகொண்டு, அவருக்குப் பலிகளையும்
காணிக்கைகளையும் செலுத்துவார்கள். யெகோவாவிடம் நேர்ந்துகொண்டு
அதை நிறைவேற்றுவார்கள். **22** யெகோவா எகிப்தைத் தண்டிப்பார்,[a]
பின்பு குணப்படுத்துவார். அந்த ஜனங்கள் யெகோவாவிடம் திரும்புவார்
கள். அவர் அவர்களுடைய ஜெபங்களைக் கேட்டு அவர்களைக் குணப்
படுத்துவார்.

23 அந்த நாளில், எகிப்திலிருந்து அசீரியாவரை போகும் ஒரு
நெடுஞ்சாலை இருக்கும்.[b] அசீரியாவில் இருப்பவர்கள் எகிப்துக்கு வருவார்
கள். எகிப்தில் இருப்பவர்கள் அசீரியாவுக்குப் போவார்கள். எகிப்து அசீரி
யாவோடு சேர்ந்து கடவுளை வணங்கும். **24** அந்த நாளில், இஸ்ரவேல்
எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாகச் சேர்ந்துகொண்டு,[c] பூமி
யில் ஓர் ஆசீர்வாதமாக இருக்கும். **25** ஏனென்றால், பரலோகப் படைக
ளின் யெகோவா அவர்களைப் பற்றி, “என் ஜனங்களாகிய எகிப்தியர்களும்,
நான் படைத்த அசீரியர்களும், என் சொத்தாகிய இஸ்ரவேலர்களும்[d] ஆசீர்
வதிக்கப்படட்டும்” என்று சொல்லி ஆசீர்வதித்திருப்பார்.

20 சர்கோன் என்ற அசீரிய ராஜா, தர்தானை* அஸ்தோத்துக்கு[e]
அனுப்பினார். அவன் அதற்கு எதிராகப் போர் செய்து அதைக்
கைப்பற்றினான்.[f] **2** அந்த வருஷத்தில், ஆமோத்சின் மகனான ஏசாயாவி
டம் யெகோவா,[g] “நீ போய், உன் இடுப்பில் கட்டியிருக்கும் துக்கத் துணியை
யும்,* காலில் போட்டிருக்கும் செருப்பையும் கழற்றிவிடு” என்று சொன்னார்.
ஏசாயா அப்படியே செய்தார்; வெற்று உடம்போடும்# வெறுங்காலோடும்
நடமாடிக்கொண்டிருந்தார்.

3 பின்பு யெகோவா, “என் ஊழியனான ஏசாயா மூன்று வருஷங்
களுக்கு வெற்று உடம்போடும் வெறுங்காலோடும் நடமாடிவந்தான். எகிப்
துக்கும் எத்தியோப்பியாவுக்கும் ஒரு எச்சரிக்கையாகவும்[h] அடையாளமாக
வும் இருப்பதற்காக[i] அப்படிச் செய்துவந்தான். **4** அதுபோலவே, அசீரிய
ராஜா எகிப்திலும்[j] எத்தியோப்பியாவிலும் உள்ள சிறுவர்களையும் கிழவர்க
ளையும் வெற்று உடம்போடும் வெறுங்காலோடும் மூடப்படாத பிட்டத்தோ
டும் சிறைபிடித்துக்கொண்டு போவான். அவர்களுடைய நிர்வாணக் கோலம்
எகிப்துக்கு மானக்கேடாக இருக்கும். **5** எத்தியோப்பியாவை மலைபோல்
நம்பியிருந்தவர்களும் எகிப்தைப் பார்த்துப் பெருமைப்பட்டவர்களும் வெட்
கப்பட்டுப்போவார்கள், கதிகலங்கிப்போவார்கள். **6** அந்த நாளில், கடலோ
ரத்தில் குடியிருக்கிறவர்கள், ‘எகிப்து நம்மை அசீரிய ராஜாவிடமிருந்து காப்
பாற்றும் என்று நம்பி அங்கு ஓடிப்போனோமே; இப்போது அதற்கு வந்த
நிலைமையைப் பாருங்கள்! இனி நாம் எப்படித் தப்பிப்போம்?’ என்று பேசிக்
கொள்வார்கள்” என்று சொன்னார்.

21 கடல் வனாந்தரத்துக்கு* எதிரான தீர்ப்பு:[k]
தென் திசையிலிருந்து அடிக்கிற புயல்காற்றைப் போல அழிவு
வருகிறது.
அது வனாந்தரத்திலிருந்து வருகிறது, பயங்கரமான தேசத்திலிருந்து
வருகிறது.[l]

20:1 *வே.வா., “படைத் தளபதியை.” **20:2** *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., “வெறுமனே உள்ளாடைகளோடும்.” **21:1** *அநேகமாக, பூர்வ பாபிலோனியாவைக் குறிக்கலாம்.

அதி. 19
a ஏசா 19:1
எரே 46:13
b ஏசா 11:16
ஏசா 35:8
ஏசா 40:3
c சக 2:11
d உபா 32:9
சங் 115:12
ஏசா 61:9

அதி. 20
e யோசு 13:2, 3
f ஆமோ 1:8
g ஏசா 1:1
h ஏசா 18:1
ஏசா 19:1
i ஏசா 8:18
j ஏசா 19:4

அதி. 21
k ஏசா 13:1, 20
l ஏசா 13:4, 18

2 எனக்குக் காட்டப்பட்ட தரிசனத்தில்,
“துரோகம் செய்பவள் துரோகம் செய்கிறாள்.
அழிப்பவள் அழிக்கிறாள்.
ஏலாமே, புறப்பட்டுப் போ. மேதியாவே, சுற்றிவளை.[a]
அவள் கொடுத்த கஷ்டத்துக்கெல்லாம் முடிவுகட்டப்போகிறேன்”[b]
என்ற கடுமையான செய்தி சொல்லப்பட்டது.
3 அதனால்தான், பிரசவ வேதனைப்படுகிற பெண்ணைப் போல,
நான் ரொம்பவே வேதனைப்படுகிறேன்.[c]
வலியால் துடிக்கிறேன்.
அதைக் கேட்டதால் மனம் பதறுகிறது.
அதைப் பார்த்ததால் குலைநடுங்குகிறது.
4 என் இதயம் படபடக்கிறது; நான் பயத்தில் நடுநடுங்குகிறேன்.
நான் விரும்பிய சாயங்கால நேரம் இப்போது என்னைக் கதிகலங்க
வைக்கிறது.
5 விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்!
சாப்பிடுங்கள், குடியுங்கள்![d]
அதிபதிகளே, எழுந்து கேடயத்துக்கு எண்ணெய் பூசுங்கள்!*
6 ஏனென்றால் யெகோவா என்னிடம்,
“நீ போய் காவலுக்கு ஆளை நிறுத்து. அவன் பார்ப்பதையெல்லாம்
சொல்லச் சொல்” என்றார்.
7 அவன் ரொம்பவே உன்னிப்பாகவும் கவனமாகவும்
பார்த்துக்கொண்டிருந்தான்.
குதிரைகள் பூட்டப்பட்ட போர் ரதங்களும்,
கழுதைகள் பூட்டப்பட்ட போர் ரதங்களும்,
ஒட்டகங்கள் பூட்டப்பட்ட போர் ரதங்களும் வருவதைப் பார்த்தான்.
8 உடனே, சிங்கத்தைப் போலக் கர்ஜித்து,
“யெகோவாவே, நான் ஒவ்வொரு நாளும் காவற்கோபுரத்தில்
நின்றுகொண்டிருக்கிறேன்.
ஒவ்வொரு ராத்திரியும் அங்கே காவல் காக்கிறேன்.[e]
9 இதோ, பாருங்கள்:
குதிரைகள் பூட்டப்பட்ட போர் ரதங்களில் வீரர்கள்
வந்துகொண்டிருக்கிறார்கள்”[f] என்று சொன்னான்.
பின்பு, “அவள் விழுந்துவிட்டாள்! பாபிலோன் விழுந்துவிட்டாள்![g]
அவளுடைய தெய்வங்களின் சிலைகளெல்லாம் உடைந்து
நொறுங்கிவிட்டன!”[h] என்று சொன்னான்.
10 மிதிபட்ட* என் மக்களே,
என்னுடைய களத்துமேட்டில் அடிக்கப்பட்ட கதிர்களே,[i]
இஸ்ரவேலின் கடவுளான பரலோகப் படைகளின் யெகோவா
தெரிவித்ததை நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன்.

அதி. 21
a எரே 51:11, 28; தானி 5:28, 30
b சங் 137:1; ஏசா 14:4, 7; ஏசா 35:10
c ஆப 3:16
d தானி 5:1
e எசே 3:17; ஆப 2:1
f எரே 50:3, 9; எரே 51:27, 28
g ஏசா 13:19; ஏசா 14:4; ஏசா 45:1; எரே 51:8; தானி 5:28, 30; வெளி 14:8; வெளி 18:2
h எரே 50:2; எரே 51: 44, 52
i 1ரா 8:46

21:5 *வே.வா., “கேடயத்தைத் தயார்படுத்துங்கள்.” **21:10** *நே.மொ., “போரடிக்கப்பட்ட.”

11 தூமாவுக்கு* எதிரான தீர்ப்பு:
சேயீரிலிருந்து[a] யாரோ ஒருவன் என்னைக் கூப்பிட்டு,
“காவல்காரனே, பொழுது விடிய இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது?
காவல்காரனே, பொழுது விடிய இன்னும் எவ்வளவு நேரம்
இருக்கிறது?” என்று கேட்டான்.
12 அதற்கு அந்தக் காவல்காரன்,
“இதோ, விடியப்போகிறது. இரவும் வரப்போகிறது.
விசாரிக்க விரும்பினால்,
திரும்பவும் வந்து விசாரிக்கலாம்” என்று சொன்னான்.
13 பாலைநிலத்துக்கு எதிரான தீர்ப்பு:
தேதான்[b] பயணக் கூட்டங்களே,
நீங்கள் ராத்திரியிலே பாலைநிலத்திலுள்ள காட்டில் தங்குவீர்கள்.
14 தீமாவின்[c] குடிமக்களே,
தாகமாய் இருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கொண்டுவாருங்கள்,
தப்பித்து ஓடுகிறவர்களுக்கு உணவு கொண்டுவாருங்கள்.
15 உருவப்பட்ட வாளுக்கும் நாணேற்றப்பட்ட வில்லுக்கும் அவர்கள்
பயந்து ஓடுகிறார்கள்.
போரின் கொடூரத்துக்குப் பயந்து ஓடுகிறார்கள்.

16 யெகோவா என்னிடம், “சரியாக* ஒரே வருஷத்துக்குள் கேதா
ரின்[d] மகிமையெல்லாம் மங்கிவிடும். **17** கேதாரின் வில்வீரர்கள் கொஞ்
சம் பேரே மிஞ்சியிருப்பார்கள். இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவே
இதைச் சொல்லியிருக்கிறார்” என்று சொன்னார்.

22 தரிசனப் பள்ளத்தாக்குக்கு* எதிரான தீர்ப்பு:[e]
உன் ஜனங்கள் எல்லாரும் மொட்டைமாடிக்கு
ஏறியிருக்கிறார்களே, எல்லாருக்கும் என்ன ஆனது?
2 நீ குழப்பம் நிறைந்த நகரமாக இருந்தாய்.
கூச்சலும் கும்மாளமும் போட்டுக்கொண்டிருந்தாய்.
வாளால் வெட்டப்படாமலேயே உன் ஜனங்கள் செத்துப்போனார்கள்.
போர் நடக்காமலேயே அவர்கள் பிணமானார்கள்.[f]
3 உங்களைக் கொடூரமாக ஆட்சி செய்தவர்கள் ஒன்றாகத் தப்பித்து
ஓடினார்கள்.[g]
ஆனாலும், அம்புகளால் தாக்கப்படாமலேயே பிடிபட்டார்கள்.
தொலைதூரத்துக்கு ஓடிப்போனவர்கள்கூட பிடிபட்டார்கள்.
எல்லாரும் கைதிகளாகக் கொண்டுபோகப்பட்டார்கள்.[h]
4 அதனால்தான் நான் இப்படிச் சொன்னேன்: “என்னைக் கொஞ்சம்
தனியாக விடுங்கள்.
என் ஜனங்களுக்கு வரும் அழிவை[i] நினைத்து
நான் கதறி அழ வேண்டும்.[j]
நீங்கள் எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டாம்.

21:11 *தூமா என்பதன் அர்த்தம், “அமைதி”; இது ஏதோமைக் குறிக்கிறது. **21:16** *நே.மொ., “ஒரு கூலியாளின் வருஷங்களின்படி.” **22:1** *அநேகமாக, எருச லேமைக் குறிக்கலாம்.

அதி. 21
a ஆதி 32:3; உபா 2:8; சங் 137:7
b எரே 25:17, 23
c யோபு 6:19; எரே 25:17, 23
d ஆதி 25:13; சங் 120:5; உன் 1:5; ஏசா 42:11; எரே 49:28; எசே 27:21

அதி. 22
e எரே 6:6
f ஏசா 3:1; எரே 38:2; புல 4:9
g 2ரா 25:4, 5
h 2ரா 25:11
i மீ 1:8, 9
j எரே 4:19; எரே 8:18, 19; எரே 9:1

அதி. 22
a மீ 7:4
b 2ரா 25:10 நெ 1:3
c ஆதி 10:22
d 2ரா 16:9
e 1ரா 7:1, 2
f 2ரா 25:9, 10 எரே 52:7
g நெ 3:15
h யோவே 2:17
i ஏசா 5:12 ஏசா 56:12 ஆமோ 6:1, 4 லூ 17:27 யாக் 5:5
j 1கொ 15:32
k லேவி 26:31 ஏசா 1:11 எரே 15:1 எசே 24:13
l 2ரா 18:37 2ரா 19:2

5 ஏனென்றால், உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின்
யெகோவா,
தரிசனப் பள்ளத்தாக்கில் தோல்வியைத் தரப்போகும் நாள் அது.
குழப்பமும் திகிலும் நிறைந்த நாள் அது.[a]
அப்போது மதில் இடிக்கப்படும்.[b]
மலையை நோக்கி சத்தம்* எழும்பும்.
6 ஏலாம்[c] ஜனங்கள் அம்புக்கூடுகளை* எடுத்துக்கொண்டு,
ரதங்களோடும் குதிரைகளோடும் வீரர்களோடும் புறப்படுவார்கள்.
கீர்[d] ஜனங்கள் கேடயத்தைத் தயாராக்குவார்கள்.
7 உன்னுடைய சிறப்பான பள்ளத்தாக்குகள்
போர் ரதங்களால் நிறைந்திருக்கும்.
நகரவாசலில் குதிரைகள் தயாராக நிற்கும்.*
8 யூதாவின் திரை* விலக்கப்படும்.

"அந்த நாளில், வன மாளிகையிலே[e] நீங்கள் சேர்த்து வைத்திருக்கிற
ஆயுதங்கள்மேல் நம்பிக்கை வைப்பீர்கள். **9** 'தாவீதுடைய நகரத்தின்'
மதில்களில் எங்கெல்லாம் விரிசல்கள் இருக்கிறதென்று பார்ப்பீர்கள்.[f] கீழ்
குளத்தில் தண்ணீரைச் சேமித்து வைப்பீர்கள்.[g] **10** எருசலேமில் உள்ள
வீடுகளையெல்லாம் எண்ணிப் பார்ப்பீர்கள். அவற்றில் சில வீடுகளை
இடித்து நகரத்தின் மதிலைப் பலப்படுத்துவீர்கள். **11** பழைய குளத்துத்
தண்ணீருக்கென்று இரண்டு மதில்களுக்கு இடையே ஒரு நீர்த்தேக்கத்தை
அமைப்பீர்கள். ஆனால், ரொம்பக் காலத்துக்கு முன்பே அதை உருவாக்கிய
மகத்தான படைப்பாளரைத் தேட மாட்டீர்கள்.

12 அந்த நாளில், உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின்
யெகோவா,
எல்லாரையும் அழுது புலம்பச் சொல்வார்.[h]
தலையை மொட்டையடித்து, துக்கத் துணியை* உடுத்தவும் சொல்வார்.
13 ஆனால், நீங்கள் கூத்தும் கும்மாளமும் போட்டுக்கொண்டு
இருக்கிறீர்கள்.
ஆடுமாடுகளை அடித்துச் சாப்பிட்டுக்கொண்டும்,
திராட்சமதுவைக் குடித்துக்கொண்டும் இருக்கிறீர்கள்.[i]
'சாப்பிடுவோம், குடிப்போம், நாளைக்குச் சாவோம்'[j]
என்று சொல்கிறீர்கள்."

14 அதனால், பரலோகப் படைகளின் யெகோவா என்னிடம் இந்தச்
செய்தியைச் சொன்னார்: "'நீங்கள் செய்த இந்தக் குற்றத்துக்கு நீங்கள் சாகும்
வரை பரிகாரமே கிடையாது'[k] என்று உன்னதப் பேரரசராகிய பரலோகப்
படைகளின் யெகோவா சொல்கிறார்."

15 உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவா இப்படிச்
சொல்கிறார்: "வீட்டை* நிர்வகிக்கும் அதிகாரியான செப்னாவிடம்[l] போய்,
16 'நீ உனக்காக ஒரு கல்லறையை வெட்டியிருக்கிறாயே, உனக்கு

22:5 *கதறல் சத்தம் அல்லது போர்ச் சத்தம். **22:6** *அம்புக்கூடு என்பது அம்புகளை வைப்பதற்கான சாதனம். **22:7** *வே.வா., "குதிரைவீரர்கள் தயாராக நிற்பார்கள்." **22:8** *வே.வா., "பாதுகாப்பு." **22:12** *சொல் பட்டியலைப் பாருங்கள். **22:15** *வே.வா., "அரண்மனையை."

இங்கு என்ன இருக்கிறது? உனக்கு இங்கே யார் இருக்கிறார்கள்?' என்று
கேள். அவன் ஒரு மலைமேல் தன் கல்லறையை வெட்டிக்கொண்டிருக்கி
றான். **17** 'மனுஷனே, யெகோவாவாகிய நான் உன்னைத் தூக்கி எறிந்து
விடுவேன். **18** உன்னைப் பிடித்து, நன்றாக இறுக்கிக் கட்டி, ஒரு பந்து
போல வெட்டவெளியில் வீசிவிடுவேன். அங்கே நீ செத்துப்போவாய்.
அங்கே உன்னுடைய பகட்டான ரதங்கள் உன் எஜமானின் வீட்டுக்கு
மானக்கேடாக இருக்கும். **19** உன் பதவியிலிருந்து நான் உன்னை இறக்கு
வேன், உன் அதிகாரத்தைப் பறித்துவிடுவேன்.

20 அந்த நாளில், இல்க்கியாவின் மகனும் என் ஊழியனுமான எலியாக்
கீமை[a] அழைப்பேன். **21** உன் அங்கியை அவனுக்குப் போட்டுவிடு
வேன். உன்னுடைய இடுப்புவாரை அவனுக்கு இறுக்கமாகக் கட்டிவிடு
வேன்.[b] உன் அதிகாரத்தை அவன் கையில் கொடுப்பேன். எருசலேம் ஜனங்
களுக்கும் யூதா ஜனங்களுக்கும் அவன் தகப்பனாக இருப்பான்.
22 தாவீதின் வீட்டுச் சாவியை[c] அவனிடம் ஒப்படைப்பேன்.* அவன்
திறந்தால் யாராலும் மூட முடியாது. அவன் மூடினால் யாராலும் திறக்க
முடியாது. **23** ஒரு பலமான சுவரில் அவனை ஆணிபோல் அடித்து
நிறுத்துவேன். சிறிய, பெரிய பாத்திரங்கள் எல்லாவற்றையும் ஆணி தாங்கு
வது போல அவனுடைய பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் அவன்
தாங்குவான். **24** தன் தகப்பனுடைய வீட்டின் மகிமையை அவன் சுமப்
பான். அந்த வீட்டில் ஒரு மகிமையான சிம்மாசனம்போல் இருப்பான்.

25 அந்த நாளில், பலமான சுவரில் அடிக்கப்பட்டிருந்த ஆணியைப்
பிடுங்கி எறிவேன்.[d] அது தூக்கிச் சுமந்த பொருளெல்லாம் விழுந்து
நொறுங்கும். ஏனென்றால், யெகோவாவே இதைச் சொல்லியிருக்கிறார்'
என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்."

23 தீருவுக்கு எதிரான தீர்ப்பு:[e]
தர்ஷீசின் கப்பல்களே,[f] அழுது புலம்புங்கள்.
துறைமுகம் அழிக்கப்பட்டது; அங்கே இனி போக முடியாது.
கித்தீமில்[g] அவர்களுக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது.
2 கடலோரத்தில்* வாழ்கிறவர்களே, அமைதியாக இருங்கள்.
கடல் கடந்து தொழில் செய்கிற சீதோனின்[h] வியாபாரிகள் உங்கள்
தேசத்தைச் செல்வத்தால் நிரப்பியிருக்கிறார்கள்.
3 தீருவே, உனக்கு வருவாயாக இருக்கும் நைல் நதியின் விளைச்சலும்,
சீகோரின்*[i] கரையில் விளையும் தானியமும்
பல தேசங்களுக்குக் கப்பலில் அனுப்பப்பட்டு,
உனக்கு லாபம் தேடித் தருகிறது.[j]
4 சீதோனே, கடலின் கோட்டையே, தலைகுனி.
ஏனென்றால், "எனக்குப் பிரசவ வேதனை வந்ததில்லை,
நான் பிள்ளைகளைப் பெற்றெடுத்தது இல்லை.
ஆண் பிள்ளைகளையோ பெண் பிள்ளைகளையோ வளர்க்கவில்லை"
என்று கடல் சொன்னது.[k]

22:22 *நே.மொ., "அவன் தோளில் மாட்டுவேன்." **23:2** *வே.வா., "தீவில்." **23:3** *சீகோர் என்பது நைல் நதியின் ஒரு கிளை.

அதி. 22
a 2ரா 18:26, 37
b ஆதி 41:41, 42; எஸ்தர் 8:15
c வெளி 3:7
d ஏசா 22:15, 17

அதி. 23
e எரே 25:17, 22; எரே 47:4; எசே 26:3; எசே 27:2; யோவே 3:4; ஆமோ 1:9, 10; சக 9:3, 4
f 2நா 9:21; எசே 27:25
g ஆதி 10:2, 4; எரே 2:10; எசே 27:6
h ஆதி 10:15; எசே 27:8
i எரே 2:18
j எசே 27:32, 33; எசே 28:4
k எரே 47:4

5 எகிப்துக்கு நடந்ததைக்[a] கேள்விப்பட்டபோது ஜனங்கள் எப்படிக் கலங்கினார்களோ,
அப்படியே தீருவுக்கு நடந்ததைக் கேள்விப்படும்போதும் கலங்குவார்கள்.[b]
6 கடல் கடந்து தர்ஷீசுக்குப் போங்கள்!
கடலோரத்தில் வாழ்கிறவர்களே, அழுது புலம்புங்கள்!
7 காலம்காலமாகச் சந்தோஷத்தில் களைகட்டியிருந்த நகரமா இது?
குடியிருப்பதற்காகத் தூர தேசங்களில் கால் பதித்த நகரமா இது?
8 அவள் பலருக்குக் கிரீடம் சூட்டினாளே.
அவளுடைய வியாபாரிகள் அதிபதிகளாக இருந்தார்களே.
அவளுடைய வணிகர்கள் உலகமெங்கும் மதிக்கப்பட்டார்களே.[c]
தீருவுக்கு இப்படி நடக்குமென்று தீர்மானித்தது யார்?
9 பரலோகப் படைகளின் யெகோவாவே இதைத் தீர்மானித்திருக்கிறார்.
அவளுடைய எல்லா சிறப்புகளையும் நினைத்து அவள் அடைகிற பெருமையை அவர் அழித்துவிடுவார்.
இந்த உலகம் தலைமேல் வைத்துக் கொண்டாடிய எல்லாரையும் தலைகுனியச் செய்துவிடுவார்.[d]
10 தர்ஷீசின் மகளே, நைல் நதி கரைபுரண்டு போவது போல நீயும் தேசமெங்கும் போ.
இனி கப்பல் கட்டும் இடமே* இல்லை.[e]
11 யெகோவா கடலின் மேல் கையை ஓங்கியிருக்கிறார்.
ராஜ்யங்களைக் கவிழ்த்திருக்கிறார்.
பெனிக்கேயின் கோட்டைகளை அழிக்க அவர் கட்டளை கொடுத்திருக்கிறார்.[f]
12 அவர், “கன்னிப் பெண்ணாகிய சீதோனே, ஒடுக்கப்பட்டவளே,
இனியும் நீ சந்தோஷப்பட மாட்டாய்.[g]
கடல் கடந்து கித்தீமுக்குப்[h] போ.
அங்கேயும் உனக்கு நிம்மதி கிடைக்காது” என்று சொல்கிறார்.
13 கல்தேயர்களின் தேசத்தைப்[i] பாருங்கள்.
அவர்கள் தீருவை பாலைவன மிருகங்களின் இடமாக மாற்றினார்கள்.
அசீரியர்கள்[j] அல்ல, கல்தேயர்கள்தான் அப்படிச் செய்தார்கள்.
முற்றுகைக் கோபுரங்களை எழுப்பினார்கள்.
அவளுடைய கோட்டைகளை அழித்தார்கள்.[k]
அவளைச் சின்னாபின்னமாக்கினார்கள்.
14 தர்ஷீசின் கப்பல்களே, அழுது புலம்புங்கள்.
நீங்கள் நம்பியிருந்த நகரம் அழிந்ததே.[l]

15 ஒரு ராஜாவின் ஆயுள் காலத்துக்குச் சமமான 70 வருஷங்களுக்கு
தீரு மறக்கப்படுவாள்.[m] அதன் முடிவிலே, இந்தப் பாடலில் வரும் விபச்சா
ரியைப் போல அவள் ஆகிவிடுவாள்:

16 “மறக்கப்பட்ட விபச்சாரியே, யாழை எடுத்துக்கொண்டு நகரத்தைச் சுற்றி வா.

23:10 * அல்லது, “இனி துறைமுகமே.”

அதி. 23
a ஏசா 19:1, 16
b எசே 27:35; எசே 28:19
c எசே 28:2
d தானி 4:37; யாக் 4:6
e ஏசா 23:1; எசே 26:14, 17
f எசே 26:5, 15
g எசே 26:13
h எசே 27:6
i ஏசா 13:19; ஆப 1:6
j ஏசா 10:12; நாகூ 3:18; செப் 2:13
k எசே 26:8, 9
l ஏசா 23:1
m எரே 25:8, 11; எரே 27:3, 6

உன் யாழைத் திறமையாக வாசி.
நிறைய பாடல்களைப் பாடு.
அப்போதுதான், அவர்களுக்கு உன்னைப் பற்றிய நினைவு வரும்."

17 யெகோவா 70 வருஷங்களின் முடிவிலே தீருவிடம் தன்னுடைய கவ
னத்தைத் திருப்புவார். அவள் மறுபடியும் தன்னுடைய தொழிலை ஆரம்பிப்
பாள். உலக ராஜ்யங்கள் எல்லாவற்றோடும் விபச்சாரம் செய்வாள்.
18 ஆனால், அவளுக்குக் கிடைக்கும் லாபமும் கூலியும் சேமித்து வைக்கப்
படாது. அது யெகோவாவுக்குப் பரிசுத்தமானதாக ஆகும்; யெகோவாவின்
ஜனங்களுக்குப் போய்ச் சேரும். அதனால் அவர்கள் வயிறார சாப்பிடுவார்
கள், சிறந்த துணிமணிகளை உடுத்திக்கொள்வார்கள்.[a]

24 யெகோவா தேசத்தை* பாழாக்கி வெறுமையாக்குவார்.[b]
அதை அழிப்பார்;[c] அதன் ஜனங்களைச் சிதறிப்போக வைப்பார்.[d]
2 அப்போது, ஜனத்துக்கும் குருவுக்கும்
வேலைக்காரனுக்கும் எஜமானுக்கும்
வேலைக்காரிக்கும் எஜமானிக்கும்
வாங்குகிறவனுக்கும் விற்கிறவனுக்கும்
கடன் கொடுக்கிறவனுக்கும் கடன் வாங்குகிறவனுக்கும்
வட்டி வாங்குகிறவனுக்கும் வட்டி கொடுக்கிறவனுக்கும்
ஒரே கதிதான் ஏற்படும்.[e]
3 முழு தேசமும் வெறுமையாக்கப்படும்.
தேசம் முழுவதும் சூறையாடப்படும்.[f]
யெகோவாவே இதைச் சொல்லியிருக்கிறார்.
4 தேசம் அழுது புலம்புகிறது;*[g] அது நாசமாகிறது.
விளைநிலம் வறண்டு வீணாய்ப் போகிறது.
உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் தளர்ந்துபோகிறார்கள்.
5 தேசத்தை அதன் ஜனங்கள் அசுத்தமாக்கிவிட்டார்கள்.[h]
சட்டதிட்டங்களை மீறிவிட்டார்கள்.[i]
விதிமுறைகளை மாற்றிவிட்டார்கள்.[j]
நிரந்தர* ஒப்பந்தத்தை முறித்துவிட்டார்கள்.[k]
6 அதனால் தேசம் சாபத்துக்குள்ளாகி, நாசமாகிறது.[l]
அதன் ஜனங்கள் குற்றத்துக்காகத் தண்டிக்கப்படுகிறார்கள்.
மக்கள்தொகை குறைந்துவிட்டது.
ஒருசில ஆண்களே மிஞ்சியிருக்கிறார்கள்.[m]
7 புதிய திராட்சமது அழுது புலம்புகிறது;* திராட்சைக் கொடி
பட்டுப்போகிறது.[n]
சந்தோஷமாக இருந்தவர்கள் வேதனையில் பெருமூச்சு விடுகிறார்கள்.[o]
8 கஞ்சிராவின் சந்தோஷ ஒலி ஓய்ந்துவிட்டது.
குடித்துக் கும்மாளம் போடுகிறவர்களின் கூச்சல் நின்றுவிட்டது.
யாழின் மகிழ்ச்சி ஒலி அடங்கிவிட்டது.[p]

24:1 *வே.வா., "பூமியை." **24:4** *அல்லது, "வறண்டுபோகிறது." **24:5** *வே.வா., "பூர்வகால." **24:7** *அல்லது, "வற்றிப்போகிறது."

அதி. 23
a ஏசா 60:5

அதி. 24
b ஏசா 5:5; எரே 4:6; எசே 6:6
c 2ரா 21:13
d உபா 28:63, 64; நெ 1:8; எரே 9:16
e எசே 7:12, 13
f லேவி 26:31; உபா 29:28
g எரே 4:28; புல 1:4
h லேவி 18:24; எண் 35:33, 34; 2நா 33:9; எரே 3:1; எரே 23:10, 11; புல 4:13
i 2ரா 22:13; தானி 9:5
j மீ 3:11
k யாத் 19:3, 5; யாத் 24:7; எரே 31:32; எரே 34:18–20
l லேவி 26:15, 16
m உபா 4:27; உபா 28:15, 62
n எரே 8:13; யோவே 1:10
o ஏசா 32:12
p எரே 7:34

9 அவர்கள் திராட்சமது குடிக்கிறார்கள்; ஆனால், பாடல் சத்தம் கேட்பதில்லை.
மது அவர்களுக்குக் கசக்கிறது.
10 கைவிடப்பட்ட ஊர் நாசமாகிவிட்டது.[a]
யாரும் நுழையாதபடி எல்லா வீடுகளும் பூட்டப்பட்டிருக்கின்றன.
11 அவர்கள் திராட்சமதுவுக்காகத் தெருக்களில் கூப்பாடு போடுகிறார்கள்.
தேசத்தில் சந்தோஷத்தையே பார்க்க முடிவதில்லை.
அது சோகத்தில் மூழ்கிவிட்டது.[b]
12 நகரம் இடிந்து கிடக்கிறது.
அதன் நுழைவாசல் இடிபாடுகளாகக் கிடக்கிறது.[c]
13 ஒலிவ மரத்தின் பழங்களை உதிர்த்தபின் சில பழங்கள் மீந்திருப்பது போலவும்,
திராட்சை அறுவடைக்குப் பின் சில பழங்கள் விடப்பட்டிருப்பதைப் போலவும்,
மற்ற தேசத்தாரின் நடுவே என் ஜனங்கள் சிலர் மீதியாக இருப்பார்கள்.[d]
14 அவர்கள் தங்களுடைய குரலை உயர்த்தி
சந்தோஷமாக ஆரவாரம் செய்வார்கள்.
மேற்கிலிருந்து* யெகோவாவின் மேன்மையைப் பற்றிப் புகழ்ந்து பேசுவார்கள்.[e]
15 கிழக்குப் பிரதேசத்தில்* யெகோவாவை மகிமைப்படுத்துவார்கள்.[f]
தீவுகளில் அவர்கள் இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவின் பெயரை மகிமைப்படுத்துவார்கள்.[g]
16 பூமியின் எல்லா பக்கங்களிலிருந்தும்,
“நீதியுள்ள கடவுளுக்குப் புகழ்* சேரட்டும்” என்ற துதிப்பாடலை நாம் கேட்கிறோம்.[h]
ஆனால் நான், “நொந்துபோகிறேன், ரொம்பவே நொந்துபோகிறேன்.
என் கதி அவ்வளவுதான்.
துரோகிகள் துரோகம் செய்துவிட்டார்கள்.
துரோகிகள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள்”[i] என்று சொல்கிறேன்.
17 தேசத்தின் குடிமக்களே, உங்களுக்குத் திகிலும், படுகுழியும், கண்ணியும் காத்திருக்கின்றன.[j]
18 திகில் சத்தத்தைக் கேட்டு பயந்து ஓடுகிறவர்கள் படுகுழியில் விழுவார்கள்.
படுகுழியிலிருந்து வெளியே வருகிறவர்கள் கண்ணியில் சிக்குவார்கள்.[k]
ஏனென்றால், வானத்தின் அணை திறக்கப்படும்.
தேசத்தின் அஸ்திவாரம் ஆட்டம்காணும்.
19 தேசத்தின் நிலம் பிளக்கிறது.
தேசம் குலுங்குகிறது.
அது பயங்கரமாய் அதிருகிறது.[l]

24:14 * வே.வா., “கடலிலிருந்து.” **24:15** * வே.வா., “ஒளியின் பிரதேசத்தில்.” **24:16** * வே.வா., “மகிமை.”

அதி. 24
a 2ரா 25:8-10
b புல 5:15
c ஏசா 32:14; எரே 9:11; புல 1:4; புல 2:8, 9
d உபா 24:20; எரே 6:9; எசே 6:8
e ஏசா 40:9; எரே 31:12; எரே 33:10, 11
f ஏசா 43:5
g ஏசா 11:11; ஏசா 60:9
h யாத் 15:11; எஸ்றா 9:15; சங் 145:7; வெளி 15:3
i எரே 9:2, 3
j எரே 8:3; எசே 14:21
k எரே 48:44
l எரே 4:24

20 அது குடிகாரனைப் போல் தள்ளாடுகிறது.
காற்றில் குடிசை அசைவதுபோல் இங்கும் அங்குமாக அசைகிறது.
அதன் அக்கிரமம் சுமைபோல் அதை அழுத்துகிறது.[a]
அது வீழ்ச்சியடையும், இனி எழும்பவே எழும்பாது.
21 அந்த நாளில், பரலோகத்தில் இருக்கும் படைமேலும் பூமியிலுள்ள ராஜாக்கள்மேலும்
யெகோவா தன்னுடைய கவனத்தைத் திருப்புவார்.
22 சிறையில் கைதிகள் கூட்டிச் சேர்க்கப்படுவதுபோல்
அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.
இருட்டான சிறைக்குள் அடைக்கப்படுவார்கள்.
பல நாட்களுக்குப் பிறகு அவர்கள்மேல் கவனம் செலுத்தப்படும்.
23 பரலோகப் படைகளின் யெகோவா சீயோன் மலையிலும்[b] எருசலேமிலும் ராஜாவாகிவிட்டார்.[c]
அவருடைய ஜனங்களின் பெரியோர்கள்* முன்னிலையில் அவர் மகிமையோடு ஆட்சி செய்வார்.[d]
அந்த மகிமைக்கு முன்னால் முழு நிலவுகூட இருட்டாகத் தெரியும்.
பிரகாசமான சூரியன்கூட மங்கலாகத் தெரியும்.[e]

25 யெகோவாவே, நீங்கள்தான் என் கடவுள்.
நான் உங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசுகிறேன், உங்கள் பெயரைப் புகழ்கிறேன்.
நீங்கள் அதிசயங்களைச் செய்திருக்கிறீர்கள்,[f]
பூர்வ காலத்திலிருந்தே செய்ய நினைத்த எல்லாவற்றையும் செய்திருக்கிறீர்கள்.[g]
நீங்கள் உண்மையானவர்,[h] நம்பகமானவர்!
2 வேறு தேசத்து ஜனங்களின் நகரத்தை இடித்துப்போட்டீர்கள்.
மதில் சூழ்ந்த அந்த நகரத்தைக் கற்குவியலாக மாற்றினீர்கள்.
கோட்டையாக இருந்த நகரம் தரைமட்டமானது.
அது ஒருபோதும் கட்டப்படாது.
3 பலம்படைத்த தேசத்தார் நீங்கள் செய்ததைப் பார்த்து உங்களை மகிமைப்படுத்துவார்கள்.
கொடுமை செய்கிற தேசத்தாரின் நகரம் உங்களுக்குப் பயப்படும்.[i]
4 கஷ்டத்தில் தவிக்கும் ஏழை எளியவர்களுக்கு
நீங்கள் கோட்டையாக இருக்கிறீர்கள்.[j]
புயலுக்கு ஒதுங்கும் புகலிடமாகவும்,
வெயிலுக்கு ஒதுங்கும் நிழலாகவும் இருக்கிறீர்கள்.[k]
கொடுங்கோலர்களின் கோபம் ஒரு மதிலைத் தாக்குகிற புயலைப் போலவும்,
5 வறண்ட தேசத்தை வாட்டியெடுக்கிற வெயிலைப் போலவும் இருக்கும்போது,
நீங்கள் அவர்களுடைய ஆவேசத்தை அடக்குகிறீர்கள்.
மேகத்தின் நிழலால் வெயிலைத் தணிப்பது போல,

24:23 * வே.வா., "மூப்பர்கள்."

அதி. 24
a 2ரா 21:16
2நா 36:15, 16
எரே 14:20
b சங் 132:13
ஏசா 12:6
யோவே 3:17
மீ 4:7
சக 2:10
c சங் 97:1
வெளி 11:17
d 1ரா 8:11
e வெளி 21:23

அதி. 25
f சங் 40:5
சங் 98:1
சங் 107:8
சங் 145:1, 4
g சங் 33:11
h உபா 32:4
நெ 9:33
i சங் 46:10
சங் 66:3
எசே 38:23
j சங் 46:1
நாகூ 1:7
செப் 3:12
k சங் 91:1
சங் 121:5-7
ஏசா 49:10

கொடுங்கோலர்களின் ஆட்டம்பாட்டத்தை* அடக்குகிறீர்கள்.
6 பரலோகப் படைகளின் யெகோவா இந்த மலையில்[a] எல்லா ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஏற்பாடு செய்வார்.
பிரமாதமான உணவு வகைகளையும்,[b]
அருமையான திராட்சமதுவையும்,
மஜ்ஜை நிறைந்த ருசியான பதார்த்தங்களையும்,
வடிகட்டிய தரமான திராட்சமதுவையும் பரிமாறுவார்.
7 எல்லா ஜனங்கள்மேலும் இருக்கிற முக்காட்டையும்,
எல்லா தேசத்தாரையும் மூடியிருக்கிற கம்பளியையும் இந்த மலையிலே அவர் நீக்கிப்போடுவார்.
8 மரணத்தை அவர் அடியோடு ஒழித்துக்கட்டுவார்.[c]
உன்னதப் பேரரசராகிய யெகோவா எல்லாருடைய முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்துவிடுவார்.[d]
தன்னுடைய ஜனங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை இந்த உலகத்திலிருந்தே நீக்கிவிடுவார்.
யெகோவாவே இதைச் சொல்லியிருக்கிறார்.
9 அந்த நாளில் அவர்கள்,
"இவர்தான் நம் கடவுள்![e]
இவர்மேல் நம்பிக்கையாக இருக்கிறோம்.[f]
இவர் நம்மை மீட்பார்.[g]
இவர்தான் யெகோவா!
இவர்மேல் நம்பிக்கையாக இருக்கிறோம்.
இவர் நம்மை மீட்கப்போவதால் சந்தோஷத்தில் துள்ளலாம்"[h] என்று சொல்வார்கள்.
10 ஏனென்றால், யெகோவாவின் கை அந்த மலையின் மேல் தங்கும்.[i]
எருக்களத்தில் வைக்கோல் மிதிக்கப்படுவது போல
மோவாப் அதன் இடத்தில் மிதிக்கப்படும்.[j]
11 நீந்துகிறவன் கைகளை ஓங்கி தண்ணீரை அடிப்பது போல
அவர் தன்னுடைய கைகளை ஓங்கி மோவாபை அடிப்பார்.
திறமையாக அடித்து வீழ்த்துவார்.
அதன் ஆணவத்தை அடக்குவார்.[k]
12 உயரமான மதில்கள் சூழ்ந்த நகரத்தை
அவர் கவிழ்த்துப் போடுவார்.
அதைத் தரைமட்டமாக்குவார், மண்ணோடு மண்ணாக்குவார்.

26 அந்த நாளில் யூதா தேசத்திலே[l] இந்தப் பாட்டுப் பாடப்படும்:[m]
"நம்முடைய நகரம் வெல்ல முடியாத நகரம்.[n]
மீட்பை அதற்கு மதிலாகவும் அரணாகவும் அவர் வைத்திருக்கிறார்.[o]
2 நீதியுள்ள ஜனம் வருவதற்காகக் கதவுகளைத் திறந்து வையுங்கள்.[p]
உண்மையோடு நடந்துகொள்ளும் ஜனம் உள்ளே வரட்டும்.

25:5 * வே.வா., "சத்தத்தை."

அதி. 25
a ஏசா 11:9, ஏசா 65:25
b சங் 72:16, சங் 85:11, 12, எரே 31:12
c ஓசி 13:14, 1கொ 15:54, 2தீ 1:10, வெளி 20:14
d ஏசா 35:10, வெளி 7:17, வெளி 21:4
e ஏசா 25:1
f சங் 37:34, சங் 146:5
g மீ 7:7
h சங் 20:5, செப் 3:14, 15
i சங் 132:13, 14, ஏசா 12:6
j ஏசா 15:1, செப் 2:9
k எரே 48:29, யாக் 4:6

அதி. 26
l எரே 33:10, 11
m யாத் 15:1, 2சா 22:1, ஏசா 12:5
n சங் 48:2, 12
o ஏசா 60:18, சக 2:4, 5
p ஏசா 60:11

3 கடவுளே, உங்களை முழுமையாகச் சார்ந்திருக்கிறவர்களை* நீங்கள் பாதுகாப்பீர்கள்.
அவர்களை எப்போதும் சமாதானத்தோடு வாழ வைப்பீர்கள்.[a]
ஏனென்றால், அவர்கள் உங்கள்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.[b]
4 யெகோவாமேல் என்றென்றும் நம்பிக்கை வையுங்கள்.[c]
யா* யெகோவாதான் என்றென்றுமுள்ள கற்பாறை போன்றவர்.[d]
5 ஆணவமும் அகங்காரமும் பிடித்த நகரத்தை அவர் தாழ்த்துகிறார்.
அதைக் கீழே தள்ளுகிறார்.
தரைவரைக்கும் தாழ்த்துகிறார்.
மண்ணோடு மண்ணாக்குகிறார்.
6 ஏழைகளின் கால்களும்,
எளியவர்களின் பாதங்களும் அதை மிதித்துப்போடும்."
7 நீதிமானின் பாதை நேர்மையான பாதை.
நீங்கள் அதை மேடுபள்ளங்கள் இல்லாத சமமான பாதையாக்குவீர்கள்.
ஏனென்றால், நீங்கள் நேர்மையானவர்.
8 யெகோவாவே, உங்கள்மேல் நம்பிக்கை வைத்து
உங்களுடைய நீதியான வழிகளில் நடக்கிறோம்.
உங்கள் பெயரும் உங்களைப் பற்றிய நினைவும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கிறது.*
9 என் உள்ளம் ராத்திரியில் உங்களை நினைத்து ஏங்குகிறது.
உங்களைத் தேடிக்கொண்டே இருக்கிறது.[e]
இந்தப் பூமியை நீங்கள் நியாயந்தீர்க்கும் சமயங்களில்
ஜனங்கள் நீதியைக் கற்றுக்கொள்கிறார்கள்.[f]
10 கெட்டவனுக்குக் கருணை காட்டினாலும்
அவன் நீதியைக் கற்றுக்கொள்ள மாட்டான்.[g]
நேர்மையானவர்கள் வாழ்கிற தேசத்திலும் அவன் அக்கிரமம் செய்வான்.[h]
யெகோவாவின் மகிமையை அவன் உணர மாட்டான்.[i]
11 யெகோவாவே, நீங்கள் எதிரிகளின் மேல் கையை ஓங்கியிருக்கிறீர்கள்; அவர்கள் அதைப் பார்ப்பதில்லை.[j]
உங்களுடைய ஜனங்கள்மேல் நீங்கள் காட்டும் அளவுகடந்த அன்பை அவர்கள் பார்த்து வெட்கப்பட்டுப்போவார்கள்.
உங்களுடைய கோபத் தீ உங்கள் எதிரிகளைப் பொசுக்கிவிடும்.
12 யெகோவாவே, எங்களை நீங்கள் சமாதானமாக வாழ வைப்பீர்கள்.[k]
நாங்கள் எதையுமே சொந்தமாகச் சாதிக்கவில்லை,
நீங்கள்தான் எல்லாவற்றையும் சாதிக்க வைத்தீர்கள்.
13 எங்கள் கடவுளான யெகோவாவே, மற்ற எஜமான்களும் எங்களை ஆட்சி செய்திருக்கிறார்கள்.[l]

26:3 *அல்லது, "கடவுளே, மன உறுதியோடு இருப்பவர்களை." **26:4** *"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **26:8** *அதாவது, "கடவுளையும் அவருடைய பெயரையும் நினைத்துப் பார்க்கவும் அதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தவும் ஆசையாக இருக்கிறோம்."

அதி. 26
a சங் 119:165, ஏசா 54:13, பிலி 4:6, 7
b சங் 9:10, எரே 17:7
c 2நா 20:20, சங் 62:8, நீதி 3:5
d உபா 32:4, 31
e சங் 63:6, சங் 119:62, லூ 6:12
f சங் 9:8, சங் 58:10, 11, சங் 85:11, 13, சங் 96:13, சங் 97:2, ஏசா 61:11
g சங் 106:43
h எரே 2:7, ஓசி 11:7
i சங் 28:5, ஏசா 5:12
j ஏசா 6:9
k ஏசா 57:19, எரே 33:6, 7
l 2நா 12:7, 8

அதி. 26
a 2தீ 2:19
b எரே 51:39
c ஏசா 60:21
d 1ரா 4:21
e சங் 78:34, 35 ஓசி 5:15
f ஏசா 25:8 ஓசி 13:14 மாற் 12:26 யோவா 5: 28, 29 யோவா 11: 24, 25 அப் 24:15 1கொ 15:21 1தெ 4:14 வெளி 20: 12, 13
g ஆதி 3:19
h ஆதி 7:15, 16 யாத் 12:22, 23 நீதி 18:10
i சங் 27:5 சங் 91:4

அதி. 27
j உபா 32:41 எரே 47:6

ஆனால், உங்களுடைய பெயரை மட்டுமே நாங்கள் புகழ்கிறோம்.[a]
14 அவர்கள் செத்துவிட்டார்கள், உயிர்பெற மாட்டார்கள்.
செயலிழந்து கிடக்கிறார்கள், எழுந்திருக்க மாட்டார்கள்.[b]
நீங்கள் அவர்களைத் தண்டித்து அழித்துவிட்டீர்கள்.
அவர்களுடைய பெயர்கூட அழிந்துபோகும்படி செய்துவிட்டீர்கள்.
15 யெகோவாவே, நீங்கள் இந்த ஜனங்களைப் பெருக வைத்தீர்கள்.
இந்த ஜனங்களைப் பெருக வைத்தீர்கள்.
உங்களையே மகிமைப்படுத்தினீர்கள்.[c]
தேசத்தின் எல்லைகளை நாலாபக்கமும் விரிவாக்கினீர்கள்.[d]
16 யெகோவாவே, கஷ்டத்தில் தவிக்கும்போது அவர்கள் உங்களைத் தேடினார்கள்.
அவர்களை நீங்கள் கண்டித்தபோது அமைதியாகவும் உருக்கமாகவும் ஜெபம் செய்தார்கள்.[e]
17 யெகோவாவே, ஒரு கர்ப்பிணி பிரசவ வேதனைப்படுவது போல,
வலியில் கதறுவது போல,
எங்களைக் கதற வைத்துவிட்டீர்கள்.
18 நாங்கள் கர்ப்பமானோம்,
பிரசவ வேதனையில் துடித்தோம்.
ஆனால், வெறும் காற்றைப் பெற்றெடுத்தோம்.
தேசத்தை நிரப்ப எங்களுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை.
எங்களால் தேசத்தைக் காப்பாற்ற முடியவில்லை.
19 கடவுள் இப்படிச் சொல்கிறார்: “உங்களுடைய ஜனங்களில் இறந்தவர்கள் உயிர்பெறுவார்கள்.
என்னுடைய ஜனங்களில் இறந்தவர்கள் எழுந்திருப்பார்கள்.[f]
மண்ணுக்குள் இருப்பவர்களே,[g]
எழுந்து சந்தோஷத்தில் பாடுங்கள்!
உங்களுடைய பனி விடியற்கால* பனியைப் போல இருக்கிறது.
செத்துக் கிடப்பவர்களைப் பூமி உயிரோடு எழுப்பும்.#
20 என் ஜனங்களே, உங்களுடைய உள்ளறைகளுக்குப் போங்கள்.
கதவுகளை அடைத்துக்கொள்ளுங்கள்.[h]
கடவுளுடைய கோபம் தீரும்வரை
கொஞ்ச நேரத்துக்கு ஒளிந்துகொள்ளுங்கள்.[i]
21 இதோ, யெகோவா புறப்பட்டு வருகிறார்.
ஜனங்கள் செய்த குற்றங்களுக்குத் தண்டனை கொடுக்க வருகிறார்.
தேசத்தில் இரத்தம் சிந்தப்பட்டதைத் தேசமே காட்டிக்கொடுக்கும்.
கொல்லப்பட்டவர்களை இனியும் மூடி மறைக்காது.”

27 அந்த நாளில், யெகோவா லிவியாதானை* தாக்குவார்.
அதைக் கூர்மையான, பயங்கரமான வாளால் தாக்குவார்.[j]
வளைந்து நெளிந்து போகும் அந்தப் பாம்பைத் தண்டிப்பார்.
கடலில் வாழும் அந்த ராட்சதப் பிராணியைக் கொன்றுபோடுவார்.

26:19 * அல்லது, “செடிகளின் மேலுள்ள.” # வே.வா., “செத்து செயலிழந்து போனவர்களைப் பூமி பெற்றெடுக்கும்.” **27:1** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

2 அந்த நாளில், அவளை* பார்த்து இப்படிப் பாடுங்கள்:
“திராட்சமதுவை# தரும் திராட்சைத் தோட்டமே![a]
3 யெகோவா இப்படிச் சொல்கிறார்: ‘நான் அவளைப் பாதுகாக்கிறேன்.[b]
தண்ணீர் ஊற்றி ஊற்றி அவளை வளர்க்கிறேன்.[c]
ராப்பகலாக அவளைக் காவல் காக்கிறேன்.
யாரும் அவள்மேல் கை வைக்காதபடி பார்த்துக்கொள்கிறேன்.[d]
4 அவள்மேல் எனக்கு இருந்த கோபம் போய்விட்டது.[e]
முட்செடிகளையும் களைகளையும் அவள் நடுவிலே நடுபவன் யார்?
அவனோடு நான் போர் செய்வேன்.
அவன் நடுவதையெல்லாம் மிதித்துப்போட்டு, கொளுத்திவிடுவேன்.
5 அதனால், என்னோடு அவன் சமாதானமாகட்டும்.
என்னோடு சமாதானம் செய்துகொள்ளட்டும்.
என் கோட்டைக்குள் போய்ப் பாதுகாப்பாக இருக்கட்டும்.’”
6 இனிவரும் நாட்களில் யாக்கோபின் ஜனங்கள் வேர்விட்டு
வளருவார்கள்.
இஸ்ரவேல் ஜனங்கள் பெரிய மரமாகி பூத்துக் குலுங்குவார்கள்.[f]
அவர்களுடைய கனிகளால் தேசம் நிறைந்திருக்கும்.[g]
7 இஸ்ரவேலர்கள் கடுமையாகத் தாக்கப்பட வேண்டுமா?
அவர்கள் வெட்டிச் சாய்க்கப்பட வேண்டுமா?
8 மிரள வைக்கும் சத்தத்தோடு அவர்களிடம் அவர் வழக்காடுவார்,
அவர்களைத் துரத்தியடிப்பார்.
கிழக்கிலிருந்து வீசும் பலமான காற்றைப் போல மோதித்தள்ளுவார்.[h]
9 இப்படி, யாக்கோபின் ஜனங்கள் செய்த குற்றத்துக்குப் பாவப் பரிகாரம்
செய்யப்படும்.[i]
அவர்களுடைய பாவம் நீக்கப்படும்போது கிடைக்கும் பலன் இதுதான்:
பலிபீடத்தின் கற்களையெல்லாம் அவர் நொறுக்கிவிடுவார்.
அவை சுண்ணாம்புக் கற்களைப் போலத் தூள் தூளாகும்.
பூஜைக் கம்பங்களோ* தூபபீடங்களோ விட்டுவைக்கப்படாது.[j]
10 மதில்கள் சூழ்ந்த நகரம் வெறுமையாக்கப்படும்.
மேய்ச்சல் நிலங்கள் கைவிடப்பட்டு, ஆள் நடமாட்டம் இல்லாத
வனாந்தரம்போல் ஆகிவிடும்.[k]
கன்றுக்குட்டிகள் அங்கே மேய்ந்து, அங்கேயே படுத்துக்கொள்ளும்.
அங்குள்ள இலைதழைகளைத் தின்னும்.[l]
11 கிளைகள் காய்ந்துபோகும்போது,
பெண்கள் வந்து அவற்றை ஒடித்துக்கொண்டு போய்,
விறகாகப் பயன்படுத்துவார்கள்.
அந்த ஜனங்களைப் படைத்தவர் அவர்கள்மேல் இரக்கம் காட்ட
மாட்டார்.
அவர்களை உருவாக்கியவர் அவர்களுக்குக் கருணை காட்ட மாட்டார்.[m]

27:2 *இங்கே ஒரு பெண்ணாகவும் திராட்சைத் தோட்டமாகவும் விவரிக்கப்படுவது அநேகமாக இஸ்ரவேல் தேசமாக இருக்கலாம். #நே.மொ., “நுரை பொங்கும் திராட்சமதுவை.” **27:9** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 27
a சங் 80:8, ஏசா 5:1, எரே 2:21
b உபா 33:29
c ஏசா 35:6, ஏசா 41:18, ஏசா 58:11
d சங் 121:4, ஏசா 46:3, 4
e சங் 85:2, 3, ஏசா 12:1
f எசே 39:25, ஓசி 14:5
g ஏசா 60:21, 22, எரே 30:18, 19
h எரே 4:11, எசே 13:13
i ஏசா 4:4, ஏசா 48:10
j மீ 5:13, 14
k ஏசா 6:11, 12, எரே 26:18, புல 2:5, எசே 36:4
l ஏசா 32:14
m 2நா 36:15, 16, எசே 9:9, 10

ஏனென்றால், அவர்கள் புத்தி* இல்லாதவர்கள்.[a]
12 பெருக்கெடுத்து ஓடும் ஆறு* தொடங்கி எகிப்தின் பள்ளத்தாக்
குவரை#[b] சிதறியிருக்கும் இஸ்ரவேல் ஜனங்களே! மரத்திலிருந்து உதிர்த்த
பழங்களை ஒருவன் ஒவ்வொன்றாகச் சேகரிப்பதுபோல், அந்நாளில்
யெகோவா உங்களைக் கூட்டிச்சேர்ப்பார்.[c] 13 அந்த நாளில், ஒரு பெரிய
ஊதுகொம்பு ஊதப்படும்.[d] எகிப்தில் சிதறியிருக்கிறவர்களும்[e] அசீரியாவில்
தினம்தினம் செத்துப்பிழைக்கிறவர்களும்[f] எருசலேமிலுள்ள பரிசுத்தமான
மலைக்கு வந்து யெகோவாவை வணங்குவார்கள்.[g]

28 எப்பிராயீமின் குடிவெறியர்களுடைய பகட்டான கிரீடமே,*[h]
செழிப்பான பள்ளத்தாக்குக்கு மேலே இருக்கிற குடிகாரர்களின்
அலங்காரக் கிரீடமே,
வாடிப்போகிற வெறும் மலர்க் கிரீடமே,
உனக்கு ஐயோ கேடு!

2 யெகோவா மகா சக்திபடைத்த ஒருவரை அனுப்புவார்.
இடியுடன் பெய்யும் ஆலங்கட்டி* மழையைப் போலவும்,
சேதம் உண்டாக்கும் சூறாவளியைப் போலவும்,
வெள்ளப்பெருக்கை உண்டாக்கும் புயல்மழையைப் போலவும்,
அவர் வந்து உன்னைக் கீழே தள்ளிப்போடுவார்.
3 எப்பிராயீமின் குடிவெறியர்களுடைய பகட்டான கிரீடங்களை
தன் காலின்கீழ் மிதித்துப்போடுவார்.[i]
4 செழிப்பான பள்ளத்தாக்கின் மேலே இருக்கிற அலங்காரக் கிரீடம்,
வாடிப்போகிற அந்த மலர்க் கிரீடம்,
கோடைக் காலத்துக்குமுன் முதலாவது பழுக்கிற அத்திப் பழம்போல்
ஆகிவிடும்.
ஒருவர் அதைப் பறித்தவுடன் வாயில் போட்டுவிடுவார்.

5 அந்த நாளில், பரலோகப் படைகளின் யெகோவா தன்னுடைய ஜனங்
களில் மீதியாக இருப்பவர்களுக்கு[j] மகிமையான கிரீடமாகவும் அழகான
மலர்க் கிரீடமாகவும் ஆவார். 6 நீதிபதிகள் நியாயமான தீர்ப்பு வழங்குவ
தற்குப் புத்தி கொடுப்பார். நகரவாசலைத் தாக்கும் எதிரிகளோடு போர் செய்
கிறவர்களுக்குத் தைரியத்தைக் கொடுப்பார்.[k]

7 குருமார்களும் தீர்க்கதரிசிகளும்கூட மதுபானத்தினால் வழிதவறிப்
போகிறார்கள்.
திராட்சமது குடித்துவிட்டுத் தள்ளாடுகிறார்கள்.
தவறான வழியில் போகிறார்கள்.
திராட்சமது அவர்களைக் குழம்பிப்போகச் செய்கிறது.
மதுபானம் அவர்களைத் தள்ளாட வைக்கிறது.
அவர்கள் பார்க்கும் தரிசனம் அவர்களை வழிதவறிப் போகவைக்கிறது.
தீர்ப்பு வழங்குவதில் அவர்கள் தடுமாறுகிறார்கள்.[l]

27:11 *வே.வா., “புரிந்துகொள்ளும் திறன்.” **27:12** *அதாவது, “யூப்ரடிஸ்.” #அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குவரை.” சொல் பட்டியலைப் பாருங்கள். **28:1** *அநேகமாக, தலைநகரமான சமாரியாவைக் குறிக்கலாம். **28:2** *அதாவது, “பனிக்கட்டி.”

அதி. 27
a உபா 32:28; ஏசா 1:3; எரே 4:22; ஓசி 4:6
b எண் 34:2, 5
c உபா 30:3; நெ 1:9; ஏசா 11:11, 12; ஆமோ 9:14
d ஏசா 49:22; ஏசா 62:10
e எரே 43:4, 7; சக 10:10
f 2ரா 17:6; ஏசா 11:16; ஓசி 9:3
g ஏசா 2:3; ஏசா 25:6; ஏசா 52:1; எரே 3:17

அதி. 28
h ஏசா 7:2
i 2ரா 17:6; ஏசா 17:3
j ஏசா 11:16
k சங் 18:34; சங் 68:35
l 2ரா 16:10, 11; எரே 5:31

8 அவர்களுடைய மேஜைகளெல்லாம் வாந்தியால் நிறைந்திருக்கிறது.
சுத்தமான இடமே இல்லை.
9 ஜனங்களே, நீங்கள் என்னிடம்,
“நீ யாருக்கு அறிவு புகட்ட நினைக்கிறாய்?
நாங்கள் என்ன சின்னக் குழந்தைகளா?
யாருக்குப் புரிய வைக்கப் பார்க்கிறாய்?
நாங்கள் என்ன ஒன்றும் தெரியாத பிள்ளைகளா?
10 ‘கட்டளைக்குமேல் கட்டளை, கட்டளைக்குமேல் கட்டளை;
வரிக்கு வரி, வரிக்கு வரி;* [a]
இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம்’ என்று சொல்லிக்கொண்டே
இருக்கிறாயே” என்கிறீர்கள்.

11 அதனால், வேறு பாஷையில் திக்கித்திக்கிப் பேசுபவர்களை
வைத்தே இந்த ஜனங்களிடம் அவர் பேசுவார்.[b] 12 ஒருசமயம் அவர்,
“இதுதான் ஓய்வெடுப்பதற்கான இடம். களைப்பாக இருக்கிறவர்கள் இங்கே
ஓய்வெடுக்கட்டும். இதுதான் புத்துணர்ச்சி தரும் இடம்” என்று சொல்லியும்
இவர்கள் கேட்கவில்லை.[c] 13 அதனால் யெகோவாவின் வார்த்தை இவர்
களுக்கு இப்படி இருக்கும்:

“கட்டளைக்குமேல் கட்டளை, கட்டளைக்குமேல் கட்டளை;
வரிக்கு வரி, வரிக்கு வரி;* [d]
இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம்.”
அதனால், இவர்கள் நடக்கும்போது தடுமாறுவார்கள்.
பின்பக்கமாக விழுவார்கள்.
காயமடைவார்கள், கண்ணியில் சிக்கிப் பிடிபடுவார்கள்.[e]
14 பெருமைபிடித்தவர்களே, எருசலேம் ஜனங்களை ஆட்சி
செய்கிறவர்களே,
யெகோவா சொல்வதைக் கேளுங்கள்.
15 நீங்கள் பெருமையாக,
“மரணத்தோடு நாங்கள் ஒப்பந்தம் பண்ணியிருக்கிறோம்.[f]
கல்லறையோடு ஒப்பந்தம் செய்திருக்கிறோம்.*
வெள்ளம் பெருக்கெடுத்து வந்தாலும்,
எங்கள் பக்கம் வராது.
பொய்தான் எங்களுக்கு அடைக்கலம்.
தந்திரம்தான் எங்களுக்குப் புகலிடம்”[g] என்று சொல்கிறீர்களே.
16 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா இப்படிச் சொல்கிறார்:
“நான் சீயோனில் ஒரு அடிக்கல்லை நாட்டுகிறேன்; அது
சோதிக்கப்பட்ட கல்.[h]
அதுவே உறுதியான அஸ்திவாரத்தில்[i] நாட்டப்பட்ட விலைமதிப்புள்ள
மூலைக்கல்.[j]
விசுவாசம் காட்டுகிறவர்கள் பயப்பட மாட்டார்கள்.[k]

28:10, 13 *வே.வா., “அளவுகோலுக்குமேல் அளவுகோல், அளவுகோலுக்குமேல் அளவுகோல்.” **28:15** *அல்லது, “ஒரு தரிசனத்தைப் பார்த்திருக்கிறோம்.”

அதி. 28
a 2ரா 21:13 ஏசா 28:17 புல 2:8
b உபா 28: 49, 50 எரே 5:15 1கொ 14:21
c சங் 81:10, 11
d ஏசா 28:17
e 2நா 36:15, 16 ஏசா 8:14, 15
f ஏசா 28:18
g ஏசா 30:9, 10
h சங் 118:22
i எபே 2:19, 20
j மத் 21:42 மாற் 12:10 லூ 20:17 அப் 4:11
k ரோ 9:33 ரோ 10:11 1பே 2:4, 6

அதி. 28
a 2ரா 21:13
b எரே 11:20
c ஏசா 28:15
d ஏசா 24:1
e புல 2:15
ஆப 1:5-7
f யோசு 10:8-14
2சா 5:20
1நா 14:10-16
g 2நா 36:15, 16
எரே 20:7
h ஏசா 10:23
ஏசா 24:1
i சங் 30:5
சங் 103:9
மீ 7:18
j யாத் 9:31, 32
எசே 4:9

17 நான் நியாயத்தை அளவுநூலாக ஆக்குவேன்.[a]
நீதியை மட்டப்பலகையாக* ஆக்குவேன்.[b]
பொய் என்கிற அடைக்கலத்தை ஆலங்கட்டி மழை அழிக்கும்.
புகலிடத்தை வெள்ளம் வாரிக்கொண்டு போகும்.
18 மரணத்தோடு நீங்கள் செய்த ஒப்பந்தம் முறிக்கப்படும்.
கல்லறையோடு நீங்கள் செய்த ஒப்பந்தம் ஒழிக்கப்படும்.[c]
வெள்ளம் பெருக்கெடுத்து வரும்போது,
நீங்கள் சின்னாபின்னமாவீர்கள்.
19 வெள்ளம் வரும்போதெல்லாம்,
நீங்கள் அடித்துச் செல்லப்படுவீர்கள்.[d]
அது தினம்தினம் புரண்டு வரும்.
பகலிலும் வரும், ராத்திரியிலும் வரும்.
செய்தியைக் கேட்டு கதிகலங்கும்போதுதான் அவர்களுக்குப் புரியவரும்.*
20 அவர்கள் கால் நீட்டிப் படுக்க கட்டிலின் நீளம் போதாது.
நன்றாகப் போர்த்திப் படுக்க போர்வையின் அகலம் போதாது.
21 யெகோவா வினோதமான செயலைச் செய்யவும்,
அபூர்வமான வேலையை நிறைவேற்றவும்,[e]
பிராசீம் மலையில் செயல்பட்டது போலச் செயல்படுவார்.
கிபியோனின் பக்கத்திலுள்ள பள்ளத்தாக்கில் கொதித்தெழுந்தது போலக் கொதித்தெழுவார்.[f]
22 இப்போது கேலி செய்யாதீர்கள்.[g]
அப்படிச் செய்தால், உங்களைக் கட்டியிருக்கும் கயிறுகள் இன்னும் இறுக்கப்படும்.
தேசம்* முழுவதையும் அழிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.
உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவாவே என்னிடம் இதைச் சொல்லியிருக்கிறார்.[h]
23 நான் சொல்வதை நன்றாகக் கேளுங்கள்.
என் வார்த்தைகளை உன்னிப்பாகக் கவனியுங்கள்.
24 உழுகிறவன் விதை விதைக்காமல் நாள் முழுக்க உழுதுகொண்டே இருப்பானா?
நாள் முழுக்க மண்கட்டிகளை உடைத்து நிலத்தைச் சமமாக்கிக்கொண்டே இருப்பானா?[i]
25 நிலத்தைச் சமமாக்கிய பிறகு,
சீரகத்தையும் கருஞ்சீரகத்தையும் தூவ மாட்டானா?
கோதுமையையும் கம்பையும் பார்லியையும் அதனதன் இடத்தில் விதைக்க மாட்டானா?
மாக்கோதுமையை*[j] வயலின் ஓரங்களில் தூவ மாட்டானா?

28:17 *வே.வா., "தூக்கு நூலாக." **28:19** *அல்லது, "அவர்கள் புரிந்துகொள்ளும்போது கதிகலங்கிப்போவார்கள்." **28:22** *வே.வா., "பூமி." **28:25** *பூர்வ எகிப்தில் பயிரிடப்பட்ட ஒருவகையான தரம்குறைந்த கோதுமை.

26 அவர் அவனுக்குச் சரியான விதத்தில் கற்றுக்கொடுக்கிறார்.*
அவனுடைய கடவுள் அவனுக்குப் போதிக்கிறார்.[a]
27 போரடிக்கும் பலகையால்[b] யாரும் கருஞ்சீரகத்தை நொறுக்க மாட்டார்கள்.
தடியால்தான் தட்டியெடுப்பார்கள்.
வண்டியின் உருளையை ஏற்றி சீரகத்தை நொறுக்க மாட்டார்கள்.
கோலால்தான் தட்டியெடுப்பார்கள்.
28 ரொட்டி செய்வதற்காக ஒருவன் தானியத்தைக் களத்துமேட்டில் நொறுக்குவானா?
நாள் முழுக்க அதை அடித்துக்கொண்டே இருப்பானா?[c]
குதிரை வண்டியை அதன்மேல் ஓட்டி,
அதன் உருளையால் அதை நொறுக்குவானா?[d]
29 இதுவும்கூட பரலோகப் படைகளின் யெகோவாவுடைய செயல்.
அவருடைய யோசனைகள்* அற்புதமானவை.
அவருடைய சாதனைகள் அதிசயமானவை.[e]

29

"அரியேல்* நகரமே, தாவீது வாழ்ந்த அரியேல் நகரமே,[f] உனக்கு ஐயோ கேடு!
நீ வருஷா வருஷம் பண்டிகைகளைக் கொண்டாடுகிறாய்.
ஒன்று விடாமல் எல்லா பண்டிகைகளையும்[g] கொண்டாடுகிறாய்.
2 ஆனாலும், நான் உனக்குக் கஷ்டத்தை வர வைப்பேன்.[h]
உன் மக்கள் புலம்பிக்கொண்டும் அழுதுகொண்டும் இருப்பார்கள்[i]
நீ எனக்கு அரியேல்* போலவே ஆவாய்.[j]
3 உனக்கு எதிராக எல்லா பக்கங்களிலும் முகாம்போடுவேன்.
உன்னைச் சுற்றிவளைத்து கூர்முனைக் கம்பங்களை நாட்டுவேன்.
மண்மேடுகளை எழுப்பி உன்னைத் தாக்குவேன்.[k]
4 அப்போது நீ தாழ்த்தப்படுவாய்.
தரையிலிருந்து பேசுவாய்.
மண் உன்னை மூடியிருப்பதால் உன் குரல் மெதுவாய்க் கேட்கும்.
நீ மண்ணிலிருந்து பேசும்போது,[l]
ஆவிகளோடு பேசுகிறவர்களின் குரல் போல
உன் குரல் முணுமுணு என்று கேட்கும்.
5 உன்னுடைய எதிரிகள் தூசிபோல் ஆகிவிடுவார்கள்.[m]
கொடுங்கோலர்கள் காற்றில் அடித்துச் செல்லப்படும் பதரைப் போல் ஆகிவிடுவார்கள்.[n]
இதெல்லாம் திடீரென்று நொடிப்பொழுதில் நடக்கும்.[o]
6 பரலோகப் படைகளின் யெகோவா உன்னை விடுவிப்பார்.
அப்போது இடிமுழக்கமும், நிலநடுக்கமும், பயங்கரமான சத்தமும்,
புயல்காற்றும், சூறாவளியும், தீப்பிழம்புகளும் உண்டாகும்."[p]

28:26 *வே.வா., "கண்டிக்கிறார்; தண்டிக்கிறார்." **28:29** *வே.வா., "நோக்கங்கள்." **29:1** *ஒருவேளை இதன் அர்த்தம், "கடவுளுடைய பலிபீடத்தில் நெருப்பு எரியும் பகுதி." அநேகமாக எருசலேமைக் குறிக்கலாம். **29:2** *அதாவது, "கடவுளுடைய பலிபீடத்தில் நெருப்பு எரியும் பகுதி."

அதி. 28
a சங் 119:71
b ஏசா 41:15; ஆமோ 1:3
c சங் 103:9; ஏசா 21:10; மீ 7:18
d லேவி 26:44; எரே 10:24
e சங் 40:5; எரே 32:19; ரோ 11:33

அதி. 29
f 2சா 5:7, 9
g உபா 16:16
h உபா 28:53-55
i ஏசா 51:19; புல 1:4
j எரே 15:14; செப் 1:7
k 2ரா 24:11; 2ரா 25:1
l ஏசா 51:23
m ஏசா 13:19; ஏசா 14:22; ஏசா 21:9
n ஏசா 13:11; ஏசா 17:13
o ஏசா 47:9; ஏசா 48:3
p 1சா 2:10; எரே 50:25; நாகூ 1:3

அதி. 29
a எரே 25:12, 14
b ஏசா 10:12 எரே 51:24
c ஏசா 6:9
d ஆப 1:5
e ஏசா 6:10 ரோ 11:8
f எரே 14:14 எரே 27:15
g மீ 3:7
h ஏசா 8:16
i ஏசா 48:1 எரே 5:2
j மத் 15:7-9 மாற் 7:6-8
k ஏசா 28:21 ஆப 1:5
l எரே 8:9 1கொ 1:19

7 அரியேலுக்கு எதிராகப் போர் செய்வதும்,
முற்றுகைக் கோபுர வண்டிகளிலிருந்து தாக்குவதும்,
அவளுக்குக் கஷ்டம் கொடுப்பதும்,
அவளோடு மோதுகிற தேசங்களுக்கு[a] வெறும் கனவுபோல் ஆகிவிடும்.
தூக்கத்தில் பார்க்கும் காட்சிபோல் ஆகிவிடும்.
8 எப்படியென்றால், பசியில் வாடுகிறவன் தான் சாப்பிடுவதுபோல் கனவு கண்டாலும்,
கண் விழிக்கும்போது பசியோடுதான் இருப்பான்.
தாகமாய் இருக்கிறவன் குடிப்பதுபோல் கனவு கண்டாலும்,
கண் விழிக்கும்போது களைப்போடும் தாகத்தோடும்தான் இருப்பான்.
சீயோன் மலைக்கு எதிராகப் போர் செய்கிற தேசங்களுக்கும்
இப்படித்தான் ஆகும்.[b]
9 அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடையுங்கள்.[c]
கண்களை மூடிக்கொண்டு உங்களைக் குருடாக்கிக்கொள்ளுங்கள்.[d]
அவர்கள் போதையில் இருக்கிறார்கள், ஆனால் திராட்சமதுவினால் அல்ல.
அவர்கள் தள்ளாடுகிறார்கள், ஆனால் மதுபானத்தினால் அல்ல.
10 ஏனென்றால், யெகோவா உங்களுக்கு ஆழ்ந்த தூக்கத்தைக் கொடுத்திருக்கிறார்.[e]
உங்கள் கண்களை அவர் மூடிவிட்டார்; தீர்க்கதரிசிகள்தான் உங்கள் கண்கள்.[f]
உங்கள் தலையை அவர் மூடிவிட்டார்; தரிசனங்களைப் பார்க்கிறவர்கள்தான் உங்கள் தலை.[g]

11 தரிசனமெல்லாம் முத்திரை போடப்பட்ட புத்தகத்திலுள்ள வார்த்தை
கள்போல் உங்களுக்கு இருக்கிறது.[h] படிக்கத் தெரிந்த ஒருவனிடம்
அதைக் கொடுத்து, “தயவுசெய்து இதைச் சத்தமாகப் படித்துக்காட்டு” என்று
கேட்டால், “இது முத்திரை போடப்பட்டிருக்கிறது, என்னால் படிக்க முடியாது”
என்று சொல்வான்.
12 படிக்கத் தெரியாத ஒருவனிடம் அதைக் கொடுத்து,
“தயவுசெய்து இதைப் படித்துக்காட்டு” என்று கேட்டால், “எனக்குப் படிக்
கவே தெரியாது” என்று சொல்வான்.

13 யெகோவா இப்படிச் சொல்கிறார்: “இந்த ஜனங்கள் வாயளவில் என்னிடம் வேண்டுகிறார்கள்.
உதட்டளவில் என்னைப் புகழ்கிறார்கள்.[i]
ஆனால், இவர்களுடைய இதயம் என்னைவிட்டுத் தூரமாக இருக்கிறது.
மனுஷர்கள் கற்றுக்கொடுத்த கோட்பாடுகளின்படிதான் என்னை வணங்குகிறார்கள்.[j]
14 அதனால், இந்த ஜனங்கள் அதிர்ச்சியடையும் விதத்தில் மறுபடியும் வினோதமான காரியங்களைச் செய்வேன்;[k]
அது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கும்.
ஞானிகளின் ஞானம் அழிந்துபோகும்.
விவேகிகளின் விவேகம்* மறைந்துபோகும்.”[l]

29:14 * வே.வா., “புரிந்துகொள்ளுதல்.”

15 யெகோவாவிடமிருந்து தங்கள் திட்டங்களை மறைக்கத்
துணிகிறவர்களுக்கு ஐயோ கேடு![a]
அவர்கள், "நம்மை யார் பார்க்கப்போகிறார்கள்?
நாம் செய்வது யாருக்குத் தெரியப்போகிறது?" என்று
சொல்லிக்கொண்டு,
இருட்டான இடத்தில் தங்கள் திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள்.[b]
16 நீங்கள் தாறுமாறாகப் பேசுகிறீர்கள்!
குயவனும் களிமண்ணும் ஒன்றா?[c]
ஒரு களிமண் பாத்திரம் குயவனைப் பற்றி,
"அவர் என்னை உண்டாக்கவில்லை" என்று சொல்ல முடியுமா?[d]
உருவாக்கப்பட்ட பொருள் உருவாக்கியவரைப் பற்றி,
"அவருக்குப் புத்தி* இல்லை" என்று சொல்ல முடியுமா?[e]
17 இன்னும் கொஞ்ச நேரத்தில் லீபனோன் ஒரு பழத் தோட்டமாக மாறும்.[f]
அந்தத் தோட்டம் காடுபோல் அடர்த்தியாகும்.[g]
18 அந்த நாளில், காது கேட்காதவர்களுக்கு அந்தப் புத்தகத்தின்
வார்த்தைகள் கேட்கும்.
பார்வை இல்லாதவர்களின் கண்கள் இருளைவிட்டு நீங்கி பார்வை
அடையும்.[h]
19 தாழ்மையான* ஜனங்கள் யெகோவாவை நினைத்து மிகவும்
சந்தோஷப்படுவார்கள்;
ஏழை ஜனங்கள் இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளை நினைத்து
பூரித்துப்போவார்கள்.[i]
20 ஏனென்றால், கொடூரமாக ஆட்சி செய்பவன் இனி இருக்க மாட்டான்.
பெருமையடிப்பவன் ஒழிந்துபோவான்.
கெட்டது செய்வதில் குறியாக இருக்கிற எல்லாரும்
அழிக்கப்படுவார்கள்.[j]
21 பொய் சொல்லி மற்றவர்களைக் குற்றவாளிகளாக ஆக்குகிறவர்களும்,
நகரவாசலில் தீர்ப்பு சொல்கிறவர்களைத் தங்கள் வலையில் விழ
வைக்கிறவர்களும்,[k]
அர்த்தமில்லாமல் வாதாடி நீதிமானுக்கு நியாயம் வழங்காமல்
இருக்கிறவர்களும் அழிக்கப்படுவார்கள்.[l]

22 ஆபிரகாமை விடுவித்தவரான யெகோவா,[m] யாக்கோபின் வம்சத்
தாருக்குச் சொல்வது இதுதான்:
"யாக்கோபுக்கு இனி அவமானம் வராது.
அவன் முகம் இனி வெளுத்துப்போகாது.*[n]
23 என் கையால் படைக்கப்பட்ட அவனுடைய பிள்ளைகள்
அவனைச் சூழ்ந்திருப்பார்கள்.[o]
அப்போது, அவர்கள் என் பெயரைப் பரிசுத்தப்படுத்துவார்கள்.
யாக்கோபின் பரிசுத்தமான கடவுளைப் பரிசுத்தப்படுத்துவார்கள்.
இஸ்ரவேலின் கடவுளுக்கு முன்னால் பயபக்தியுடன் நிற்பார்கள்.[p]

29:16 *வே.வா., "புரிந்துகொள்ளும் திறன்." 29:19 *வே.வா., "சாந்தமான." 29:22 *அதாவது, "அவமானத்தினாலும் ஏமாற்றத்தினாலும் வெளுத்துப்போகாது."

அதி. 29
a ஏசா 30:1
b எசே 8:12
c ஏசா 64:8
d எரே 18:6
e ரோ 9:20, 21
f ஏசா 35:1; ஏசா 41:19
g ஏசா 32:14, 15
h ஏசா 35:5; ஏசா 42:16
i ஏசா 41:16
j மீ 2:1
k ஆமோ 5:10
l எசே 13:19
m நெ 9:7; மீ 7:20
n யோவே 2:27
o ஏசா 45:11
p ஏசா 8:13; ஓசி 3:5

24 புத்தி கெட்டுப்போனவர்களுக்குப் புத்தி வரும்.*
குறை சொல்கிறவர்கள் போதனையைக் கேட்டு நடப்பார்கள்."

30 யெகோவா இப்படிச் சொல்கிறார்:
"முரட்டுப் பிடிவாதமுள்ள பிள்ளைகளே, உங்களுக்கு ஐயோ கேடு![a]
நீங்கள் பாவத்துக்குமேல் பாவம் செய்கிறீர்கள்.
எனக்குப் பிடிக்காததைத் திட்டம் போட்டுச் செய்கிறீர்கள்.[b]
நான் சொல்லாமலேயே* மற்ற தேசங்களோடு கூட்டுச் சேர்கிறீர்கள்.
2 என்னிடம் கேட்காமலேயே[c] எகிப்துக்குப் போகிறீர்கள்.[d]
பார்வோன் உங்களைக் காப்பாற்றுவான் என்று நினைக்கிறீர்கள்.
எகிப்து உங்களுக்குப் பாதுகாப்பு தரும் என்று நம்புகிறீர்கள்.
3 ஆனால், பார்வோன் காப்பாற்றுவான் என்று நினைப்பவர்களுக்கு அவமானம்தான் வரும்.
எகிப்து பாதுகாப்பு தரும் என்று நம்புகிறவர்களுக்கு வெட்கக்கேடுதான் மிஞ்சும்.[e]
4 ஏனென்றால், அதிபதிகள் சோவானில்[f] இருக்கிறார்கள்.
தூதுவர்கள் ஆனேசுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.
5 எந்த உதவியும் செய்ய முடியாதவர்களை நம்பிப் போனவர்கள் அவமானம் அடைவார்கள்.
அந்த ஜனங்களால் எந்தப் பிரயோஜனமும் பயனும் இருக்காது.
வெட்கமும் மானக்கேடும்தான் மிஞ்சும்."[g]

6 தெற்கிலுள்ள மிருகங்களுக்கு எதிரான தீர்ப்பு:
ஆபத்து நிறைந்த தேசத்தின் வழியாகத் தூதுவர்கள் போகிறார்கள்.
அது கர்ஜிக்கிற சிங்கம் வாழ்கிற தேசம்.
விரியன் பாம்பும், சீறிப் பாய்கிற கொடிய பாம்பும் நிறைந்த தேசம்.
அதன் வழியாக விலைமதிப்புள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு போகிறார்கள்.
கழுதைகளின் மேலும் ஒட்டகங்களின் மேலும் ஏற்றிக்கொண்டு போகிறார்கள்.
ஆனாலும், அந்தப் பொருள்களால் எந்தப் பிரயோஜனமும் கிடைக்காது.
7 ஏனென்றால், எகிப்து செய்யும் உதவி வீணிலும் வீண்.[h]
அதனால்தான், "சும்மா உட்கார்ந்திருக்கும் ராகாப்"[i] என்று அதை நான் அழைத்தேன்.
8 "இப்போது நீ போய் இந்த வார்த்தைகளை எழுது.
இது எதிர்காலத்துக்குப் பிரயோஜனமாக இருக்கும்.
என்றென்றும் ஒரு சாட்சியாக இருக்கும்.[j]
இந்த விஷயங்களை அவர்களுக்கு முன்பாகப் பலகையில் எழுது.
ஒரு புத்தகத்தில் பதிவு செய்.[k]
9 ஏனென்றால், இந்த ஜனங்கள் அடங்காதவர்கள்,[l] பொய்யும் பித்தலாட்டமும் செய்கிற பிள்ளைகள்.[m]
யெகோவாவின் சட்டத்தை* கேட்க மனமில்லாத பிள்ளைகள்.[n]

அதி. 30
a ஏசா 1:2; ஏசா 63:10; ஏசா 65:2
b ஏசா 29:15
c எண் 27:21; 1ரா 22:7
d ஏசா 31:1; எசே 29:6
e எரே 17:5
f ஏசா 19:11; எசே 30:14
g ஏசா 31:3; எரே 2:36
h ஏசா 31:1; எரே 37:7, 8
i சங் 87:4; சங் 89:10
j ரோ 15:4
k ஏசா 8:1; எரே 36:2
l உபா 31:27; ஏசா 1:4; எரே 44:3
m ஏசா 59:3; எரே 9:3
n 2நா 33:10; 2நா 36:15, 16; நெ 9:29; எரே 7:13

29:24 * வே.வா., "புரிந்துகொள்ளும் திறன் கிடைக்கும்." 30:1 * நே.மொ., "என்னுடைய சக்தியால் தூண்டப்படாமலேயே." 30:9 * வே.வா., "அறிவுரையை."

10 தரிசனம் பார்க்கிறவர்களிடம், 'தரிசனங்களைப் பார்க்காதீர்கள்' என்று அவர்கள் சொல்கிறார்கள்.
தீர்க்கதரிசனம் சொல்கிறவர்களிடம், 'நீங்கள் பார்க்கிற நிஜமான தரிசனங்களைச் சொல்லாதீர்கள்.[a]
எங்கள் காதுக்கு இனிமையானதைச் சொல்லுங்கள்; நீங்களாகவே கற்பனை செய்து சொல்லுங்கள்.[b]
11 நேர்வழியில் போகாதீர்கள்; அந்தப் பாதையைவிட்டு விலகுங்கள்.
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளைப் பற்றி எங்களிடம் பேசுவதை நிறுத்துங்கள்'[c] என்று சொல்கிறார்கள்."
12 அதனால், இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுள் இப்படிச் சொல்கிறார்:
"என்னுடைய வார்த்தைகளை நீங்கள் கேட்பதில்லை.[d]
பொய்யையும் பித்தலாட்டத்தையும் நம்புகிறீர்கள்.
அதையே சார்ந்திருக்கிறீர்கள்.[e]
13 அதனால், நீங்கள் செய்கிற இந்தக் குற்றம் உடைந்த மதில்போல் இருக்கும்,
பெயர்ந்து நிற்கும் உயரமான மதிலைப் போல இருக்கும்.
அது திடீரென்று ஒரு நொடிப்பொழுதில் விழுந்து நொறுங்கும்.
14 பெரிய மண் ஜாடி நொறுங்குவது போல அது நொறுங்கும்.
அடுப்பிலிருந்து நெருப்பை அள்ளவோ
தேங்கிக்கிடக்கும்* தண்ணீரை எடுக்கவோ
ஒரு சின்னத் துண்டுகூட மிஞ்சாத அளவுக்குத் தூள்தூளாகிவிடும்."
15 ஏனென்றால், இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளும் உன்னதப் பேரரசருமாகிய யெகோவா சொல்வது இதுதான்:
"நீங்கள் என்னிடம் திரும்பி வந்து அமைதியாக இருந்தால் காப்பாற்றப்படுவீர்கள்.
நீங்கள் பதட்டம் அடையாமல் என்மேல் நம்பிக்கை வைத்தால் பலமாக இருப்பீர்கள்."[f]
ஆனால், அவர் சொல்கிறபடி செய்ய உங்களுக்கு இஷ்டமில்லை.[g]
16 "நாங்கள் குதிரைகளில் ஏறி ஓடிப்போவோம்" என்று சொல்கிறீர்கள்.
நீங்கள் அப்படித்தான் ஓடிப்போவீர்கள்.
"வேகமாகப் பாயும் குதிரைகள்மேல் ஏறிப்போவோம்"[h] என்று சொல்கிறீர்கள்.
உங்களைத் துரத்துகிறவர்கள்தான் வேகமாகப் பாய்ந்து வருவார்கள்.[i]
17 ஒரே ஒருவனைப் பார்த்து ஆயிரம் பேர் நடுங்குவீர்கள்;[j]
ஐந்து பேரைப் பார்த்து நீங்கள் ஓட்டம் பிடிப்பீர்கள்.
கடைசியில், மலை உச்சியிலுள்ள ஒரு கம்பத்தைப் போலவும்,
மேட்டின் மேலுள்ள ஒரு கொடியைப் போலவுமே மிஞ்சியிருப்பீர்கள்.[k]
18 ஆனால், உங்களுக்குக் கருணை காட்ட யெகோவா பொறுமையோடு காத்திருக்கிறார்.[l]
உங்களுக்கு இரக்கம் காட்டுவதற்காக எழுந்திருப்பார்.[m]
ஏனென்றால், யெகோவா நியாயம் வழங்குகிற கடவுள்.[n]

30:14 * அல்லது, "தொட்டியிலிருந்து."

அதி. 30
a 2நா 16:10; 2நா 18:7; எரே 11:21; எரே 26:11
b எரே 23:16, 17; எசே 13:7; மீ 2:11
c ஆமோ 7:13, 16
d ஆமோ 2:4, 5
e எரே 13:25; மீ 3:11
f 1நா 5:20; 2நா 16:8; ஏசா 26:3
g மத் 23:37; அப் 7:51
h ஏசா 31:1, 3
i உபா 28:49, 50; எரே 4:13; புல 4:19; ஆப 1:6, 8
j லேவி 26:36; உபா 32:30
k எசே 12:16
l யாத் 34:6; எசே 36:9, 10
m சங் 102:13; ரோ 9:15
n சங் 99:4; எரே 10:24

அவருக்காக ஆவலோடு காத்திருக்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்.[a]
19 சீயோன் ஜனங்கள் திரும்பவும் எருசலேமில் குடியிருப்பார்கள்.[b] அப்
போது நீ அழ மாட்டாய்.[c] நீ உதவிக்காகக் கதறும்போது அவர் கருணை காட்
டுவார்; உன் குரலைக் கேட்டதுமே பதில் கொடுப்பார்.[d] **20** உங்களுடைய
மகத்தான போதகராகிய யெகோவா வேதனையை உணவாகவும் உபத்திர
வத்தைத் தண்ணீராகவும் தந்தால்கூட[e] இனி உங்களிடமிருந்து மறைந்திருக்க
மாட்டார். உங்களுடைய மகத்தான போதகரை[f] உங்கள் கண்களாலேயே
பார்ப்பீர்கள். **21** ஒருவேளை நீங்கள் நேரான வழியைவிட்டு இடது பக்கமா
கவோ வலது பக்கமாகவோ போனால்,[g] “இதுதான் சரியான வழி,[h] இதிலே
நடங்கள்” என்ற குரல் பின்னாலிருந்து உங்கள் காதுகளில் கேட்கும்.

22 வெள்ளி முலாமும் தங்க முலாமும் பூசிய உங்களுடைய சிலை
களை[i] நீங்கள் நாசமாக்குவீர்கள். தீட்டுப்பட்ட* துணியைத் தூக்கி எறிவது
போல், “ஒழிந்துபோ!” என்று சொல்லி# அவற்றைத் தூக்கி எறிவீர்கள்.[j]
23 அப்போது, நீங்கள் விதைத்த விதைகள் முளைப்பதற்குக் கடவுள்
மழையைக் கொடுப்பார்.[k] நிலத்திலிருந்து சத்தான உணவுப் பொருள்கள்
ஏராளமாக விளையும்.[l] அந்த நாளில், உங்களுடைய ஆடுமாடுகள் பரந்து
விரிந்த மேய்ச்சல் நிலங்களில் மேயும்.[m] **24** நிலத்தை உழுகிற காளைக
ளும் கழுதைகளும், பதர் நீக்கப்பட்ட* சத்தான தீவனத்தை# தின்னும்.
25 கோபுரங்கள் இடிந்து விழுகிற மகா அழிவின் நாளில், உயரமான
எல்லா மலைகளிலும் குன்றுகளிலும் ஆறுகளும் நீரோடைகளும் பாய்ந்
தோடும்.[n] **26** யெகோவா தன்னுடைய ஜனங்களின் காயங்களை* கட்டி,[o]
தான் அடித்ததால் உண்டான படுகாயத்தைக் குணமாக்கும்[p] நாளில், முழு
நிலவின் வெளிச்சம் சூரிய வெளிச்சம் போல ஆகும்; சூரிய வெளிச்சமோ,
ஏழு பகல்களின் வெளிச்சம்போல் ஏழு மடங்காக ஆகும்.[q]

27 இதோ, யெகோவா தூரத்திலிருந்து வருகிறார்.*
பயங்கர கோபத்தோடும் புயல் மேகங்களோடும் வருகிறார்.
அவருடைய உதடுகளில் கோபம் கொப்பளிக்கிறது.
அவருடைய நாக்கு பொசுக்கிவிடும் தீப்பிழம்புபோல் இருக்கிறது.[r]
28 தேசங்களை அழிவின் சல்லடையில் சலிப்பதற்கு,
அவருடைய சக்தி* வருகிறது; கழுத்துவரை எட்டும் வெள்ளத்தைப்
போல் வருகிறது.
அவர் ஜனங்களுடைய தாடைகளில் கடிவாளம் போட்டு,[s] அழிவின்
பாதைக்கு இழுத்துச் செல்வார்.
29 ஆனால் நீங்கள் பாடும் பாடல்,
பண்டிகை கொண்டாடுகிற ராத்திரியில் பாடும் பாடல் போல இருக்கும்.[t]
இஸ்ரவேலின் கற்பாறையாக[u] இருக்கிற யெகோவாவின் மலைக்கு
புல்லாங்குழலை ஊதிக்கொண்டே* நடந்து போகிறவனைப் போல
உங்கள் உள்ளம் சந்தோஷத்தில் பூரிக்கும்.

30:22 *அதாவது, “மாதவிலக்கினால் தீட்டுப்பட்ட.” #அல்லது, “சீ! என்று சொல்லி.” **30:24** *வே.வா., “தூற்றுவாரியால் தூற்றப்பட்ட.” #வே.வா., “சுக்காங்கீரை கலந்த தீவனத்தை.” **30:26** *வே.வா., “முறிவுகளை.” **30:27** *நே.மொ., “யெகோவாவின் பெயர் தூரத்திலிருந்து வருகிறது.” **30:28** *வே.வா., “மூச்சுக்காற்று.” **30:29** *வே.வா., “புல்லாங்குழலின் ஓசையைக் கேட்டுக்கொண்டே.”

அதி. 30
a எரே 17:7
b நெ 11:1, ஏசா 44:28, ஏசா 62:1, எரே 31:6, சக 1:17
c நெ 12:27, ஏசா 61:3
d எரே 29:11, 12
e லேவி 26:26, சங் 80:5
f யோபு 36:22, சங் 32:8, சங் 71:17, சங் 119:102
g உபா 5:32, யோசு 1:7, 8, நீதி 4:27
h சங் 25:8, 9
i யாத் 32:4, உபா 7:5, 25, நியா 17:3, 4
j ஓசி 14:8, சக 13:2
k சங் 65:9, சக 10:1
l ஓசி 2:21, 22
m ஏசா 65:10
n ஏசா 41:18, ஏசா 44:3
o புல 2:13
p எரே 33:6, ஆமோ 9:11
q ஏசா 60:20, வெளி 21:23, வெளி 22:5
r ஏசா 10:17, நாகூ 1:6, செப் 3:8
s 2ரா 19:28, சங் 32:9
t உபா 16:14, சங் 42:4, எரே 33:10, 11
u உபா 32:4, ஏசா 26:4

30 யெகோவா கம்பீரமாக முழங்குவார்.[a]
அவர் கடும் கோபத்தினாலும்,[b] பொசுக்கிவிடும் நெருப்பினாலும்,[c]
கன மழையினாலும்,[d] இடியினாலும், புயலினாலும், ஆலங்கட்டி*
மழையினாலும்[e]
தன்னுடைய கைபலத்தைக் காட்டுவார்.[f]
31 யெகோவாவின் சத்தத்தால் அசீரியா நடுநடுங்கும்.[g]
அதை ஒரு தடியால் அவர் அடிப்பார்.[h]
32 யெகோவா தடியை ஓங்கி அசீரியாவை அடிக்கும் ஒவ்வொரு
சமயத்திலும்,
போரில் அந்த ஜனங்களை வீழ்த்தும்[i] ஒவ்வொரு சமயத்திலும்,
கஞ்சிராவின் ஓசையும் யாழின் இசையும் கேட்கும்.[j]
33 அவர்களுடைய தோப்பேத்*[k] ஏற்கெனவே தயார்
செய்யப்பட்டிருக்கிறது.
அது ராஜாவுக்காகவும் தயார் செய்யப்பட்டிருக்கிறது.[l]
அவர் அதை ஆழமாகவும் அகலமாகவும் ஆக்கியிருக்கிறார்.
அங்கே பெரிய விறகுக் கட்டும், நெருப்பும் இருக்கிறது.
யெகோவாவின் மூச்சுக்காற்று பயங்கரமாகப் பற்றியெரியும் கந்தகத்
தீயைப் போல் வந்து
அதைக் கொளுத்திப்போடும்.

31 குதிரைகளையும், ஏராளமான போர் ரதங்களையும்,
பலமுள்ள போர்க்குதிரைகளையும்* நம்பி,[m]
எகிப்திடம் உதவி கேட்டுப் போகிறவர்களுக்கு ஐயோ கேடு![n]
அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளிடம் உதவி கேட்பதில்லை.
யெகோவாவைத் தேடுவதில்லை.
2 அவர்களைவிட அவர் ஞானமுள்ளவர்.
அவர் அழிவைக் கொண்டுவருவார்.
சொன்ன சொல்லை மாற்ற மாட்டார்.
தப்பு செய்கிறவர்களையும் அவர்களுக்கு உதவுகிறவர்களையும்
தண்டிப்பார்.[o]
3 எகிப்தியர்கள் கடவுள் கிடையாது, அவர்கள் சாதாரண மனிதர்கள்தான்.
அவர்களுடைய குதிரைகளுக்கு எந்த விசேஷ சக்தியும் கிடையாது,[p]
அவை சாதாரண மிருகங்கள்தான்.
யெகோவா அவருடைய கையை ஓங்கும்போது
உதவி செய்கிறவர்கள் வீழ்ச்சி அடைவார்கள்,
உதவி பெறுகிறவர்களும் வீழ்ச்சி அடைவார்கள்.
அவர்கள் எல்லாரும் ஒரே சமயத்தில் அழிந்துபோவார்கள்.
4 யெகோவா என்னிடம்,
“பலமான இளம் சிங்கம் இரையைப் பிடிக்கும்போது,
அதைத் துரத்த மேய்ப்பர்கள் கூட்டமாக வந்தாலும்,

30:30 *அதாவது, “பனிக்கட்டி.” **30:33** *“தோப்பேத்” என்பது நெருப்பு எரியும் இடம். இந்த வசனத்தில் அடையாள அர்த்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. **31:1** *வே.வா., “குதிரை வீரர்களையும்.”

அதி. 30
a சங் 29:3, 4
b நாகூ 1:2
c சங் 18:13
d நியா 5:4
e யோசு 10:11
f யாத் 15:16; சங் 98:1
g ஏசா 37:36
h ஏசா 10:12
i ஏசா 10:24, 26
j யாத் 15:20; நியா 11:34
k 2ரா 23:10; எரே 7:32
l ஏசா 37:37, 38; எசே 32:22

அதி. 31
m உபா 17:15, 16
n ஏசா 30:2
o எசே 29:6, 7
p சங் 33:17; நீதி 21:31

அவர்களுடைய சத்தத்துக்கு அது பயப்படாது.
அவர்கள் போடும் கூச்சலைக் கேட்டு நடுங்காது; அவர்களைப் பார்த்து கர்ஜிக்கும்.
அதேபோல் பரலோகப் படைகளின் யெகோவா, சீயோன் மலைக்காகவும் அதன் குன்றுக்காகவும்
பரலோகத்திலிருந்து இறங்கி வந்து போர் செய்வார்.
5 குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காகப் பறந்து வரும் பறவையைப் போல்,
எருசலேமைக் காப்பாற்றுவதற்காக பரலோகப் படைகளின் யெகோவா வருவார்.[a]
அவளை விடுவித்துக் காப்பாற்றுவார், அழிந்துபோகாதபடி பாதுகாப்பார்” என்று சொன்னார்.

6 “கொஞ்சமும் அடங்காமல் என் பேச்சை மீறி நடந்த இஸ்ரவேல்
ஜனங்களே, என்னிடம் திரும்பி வாருங்கள்.[b] 7 அந்த நாளில், நீங்கள்
செய்த பாவத்தை உணர்வீர்கள்; வெள்ளியிலும் தங்கத்திலும் நீங்கள் உரு
வாக்கிய ஒன்றுக்கும் உதவாத தெய்வங்களை வீசி எறிவீர்கள்.

8 அசீரியர்கள் வாளால் வீழ்த்தப்படுவார்கள், ஆனால் மனுஷனுடைய வாளால் அல்ல.
அவர்கள் வாளுக்குப் பலியாவார்கள், ஆனால் மனுஷனுடைய வாளுக்கு அல்ல.[c]
அவர்கள் வாளைக் கண்டு பயந்து ஓடுவார்கள்.
வாலிபர்கள் கொத்தடிமைகள்போல் ஆவார்கள்.
9 அவர்கள் எதை மலைபோல் நம்பியிருந்தார்களோ அது ஆடிப்போகும்; இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகும்.
கொடிக் கம்பத்தைப் பார்த்து அவர்களுடைய அதிபதிகள் நடுங்கிப்போவார்கள்” என்று யெகோவா சொல்கிறார்.
அவருடைய வெளிச்சம்* சீயோனிலும், அவருடைய சூளை எருசலேமிலும் இருக்கிறது.

32 இதோ, ஒரு ராஜா[d] நீதியாக ஆட்சி செய்வார்.[e]
அதிபதிகளும் நியாயமாக ஆட்சி செய்வார்கள்.
2 அவர்கள் ஒவ்வொருவரும் காற்றுக்கு ஒதுங்கும் இடமாக இருப்பார்கள்.
புயலிலிருந்து பாதுகாக்கும் புகலிடமாக இருப்பார்கள்.
தண்ணீரில்லாத தேசத்தில் பாயும் நீரோடைகளாக இருப்பார்கள்.[f]
சுட்டெரிக்கும் வெயிலில் நிழல் தரும் பெரிய கற்பாறையாக இருப்பார்கள்.
3 பார்வை உள்ளவர்களின் கண்கள் இனி மூடியிருக்காது.
கேட்பவர்களின் காதுகள் இனி அடைக்கப்பட்டிருக்காது.
4 யோசிக்காமல் நடந்துகொள்கிறவர்களின் உள்ளம் இனி உண்மைகளை* பற்றி ஆழமாக யோசிக்கும்.
திக்கித்திக்கிப் பேசும் நாவு இனி தெளிவாகவும் சரளமாகவும் பேசும்.[g]
5 கெட்ட குணமுள்ளவனை* இனி யாரும் தாராள குணமுள்ளவன் என்று அழைக்க மாட்டார்கள்.

அதி. 31
a உபா 32:11, 12; சங் 91:4
b ஏசா 55:7; யோவே 2:12
c 2ரா 19:35; 2நா 32:21; ஏசா 37:36

அதி. 32
d ஆதி 49:10; சங் 2:6; லூ 1:32, 33; யோவா 1:49
e சங் 45:6; சங் 72:1; ஏசா 9:7; ஏசா 11:4, 5; எரே 23:5; சக 9:9; எபி 1:9; வெளி 19:11
f ஏசா 35:6
g ஏசா 35:6

31:9 * வே.வா., “நெருப்பு.” **32:4** * வே.வா., “அறிவை.” **32:5** * வே.வா., “புத்தி இல்லாதவனை.”

நேர்மை இல்லாதவனை இனி யாரும் பெரிய மனிதன் என்று அழைக்க மாட்டார்கள்.
6 ஏனென்றால், புத்தி இல்லாதவன் அர்த்தமில்லாமல் பேசுவான்.
கெட்டது செய்ய உள்ளத்தில் திட்டமிடுவான்.[a]
யெகோவாவைவிட்டு விலகவும்,* அவருக்கு எதிராகப் பொய் பேசவும் விரும்புவான்.
பசியில் வாடுபவனுக்குச் சாப்பிட எதுவும் கொடுக்க மாட்டான்.
தாகத்தில் தவிப்பவனுக்குக் குடிக்க எதுவும் கொடுக்க மாட்டான்.
7 நேர்மை இல்லாதவனின் வழிகள் மோசமானவை.[b]
வெட்கக்கேடாக நடக்கும்படி மற்றவர்களைத் தூண்டுகிறான்.
ஏழை எளியவர்கள் உண்மை பேசினாலும்,
பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவர்கள் வாழ்க்கையை நாசமாக்கப் பார்க்கிறான்.[c]
8 ஆனால், தாராள குணமுள்ளவன் தாராளமாகக் கொடுக்கவே நினைக்கிறான்.
எப்போதுமே மற்றவர்களுக்கு வாரி வழங்குகிறான்.
9 "அலட்சியமாக இருக்கிற பெண்களே, எழுந்து நான் சொல்வதைக் கேளுங்கள்!
கவலையில்லாமல் திரிகிற பெண்களே,[d] நான் சொல்வதைக் கவனியுங்கள்!
10 கவலையில்லாமல் திரிகிற நீங்கள் ஒரு வருஷத்துக்குப் பின்பு கதிகலங்கிப்போவீர்கள்.
ஏனென்றால், அறுவடைக் காலம் முடிந்தாலும் திராட்சைப் பழங்கள் சேகரிக்கப்பட்டிருக்காது.[e]
11 அலட்சியமாக இருக்கிற பெண்களே, பயந்து நடுங்குங்கள்!
கவலையில்லாமல் திரிகிறவர்களே, கலக்கம் அடையுங்கள்!
உங்களுடைய மேலாடையைக் கழற்றிவிட்டு,
துக்கத் துணியை* இடுப்பில் கட்டிக்கொள்ளுங்கள்.[f]
12 செழிப்பான வயல்களுக்கும் திராட்சைத் தோட்டங்களுக்கும் வந்த கதியைப் பாருங்கள்.
நெஞ்சில் அடித்துக்கொண்டு புலம்புங்கள்.
13 இனி என் ஜனங்களின் நிலத்தில் முட்கள்தான் வளரும்.
குதூகலமாக இருந்த நகரத்தையும்
சந்தோஷத்தில் களைகட்டியிருந்த வீடுகளையும் முட்புதர்கள்தான் மூடியிருக்கும்.[g]
14 ஏனென்றால், கோட்டை கைவிடப்பட்டது.
ஜனங்களால் நிறைந்திருந்த நகரம் வெறிச்சோடிப்போனது.[h]
ஓபேலும்[i] காவற்கோபுரமும் நிரந்தரமாகப் பாழாகிப்போனது.
அங்கே காட்டுக் கழுதைகள்தான் சந்தோஷமாகத் திரிகின்றன.
ஆடுமாடுகள்தான் மேய்கின்றன.[j]

32:6 *வே.வா., "விசுவாசதுரோகம் செய்யவும்." **32:11** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 32
a மீ 2:1
b எரே 5:26; மீ 7:3
c 1ரா 21:9, 10
d ஏசா 3:16
e புல 2:12; செப் 1:13
f ஏசா 3:24
g ஏசா 22:2; புல 2:15
h 2ரா 25:9, 10
i 2நா 27:1, 3; நெ 3:26
j ஏசா 27:10

15 கடவுள் தன்னுடைய சக்தியை நம்மேல் பொழியும்வரை[a] இப்படித்தான் இருக்கும்.
அதன்பின் வனாந்தரம் பழத் தோட்டமாக மாறும்.
அந்தத் தோட்டம் காடுபோல் அடர்த்தியாகும்.[b]
16 வனாந்தரத்தில் நியாயம் குடியிருக்கும்.
பழத்தோட்டத்தில் நீதி தங்கியிருக்கும்.[c]
17 உண்மையான நீதியின் விளைவாக சமாதானம் உண்டாகும்.[d]
உண்மையான நீதியின் பலனாக நிம்மதியும் பாதுகாப்பும் என்றென்றும் கிடைக்கும்.[e]
18 என் ஜனங்கள் சமாதானமான சூழலில் வாழ்வார்கள்.
பாதுகாப்பான வீடுகளிலும் நிம்மதியான இடங்களிலும் குடியிருப்பார்கள்.[f]
19 ஆனால், ஆலங்கட்டி* மழை காட்டை அழித்துவிடும்.
நகரத்தைத் தரைமட்டமாக்கும்.
20 தண்ணீர்களின் ஓரமாக விதை விதைக்கிறவர்களும்,
காளையையும் கழுதையையும் வயலில் அவிழ்த்துவிடுகிறவர்களும் சந்தோஷமானவர்கள்."[g]

33 அழிப்பவனே, உனக்கு இன்னும் அழிவு வரவில்லை.[h]
துரோகியே, உனக்கு இன்னும் துரோகம் செய்யப்படவில்லை.
ஆனால், உனக்கு ஐயோ கேடு!
நீ அழித்து முடித்தபின் அழிந்துபோவாய்;[i] துரோகம் செய்து முடித்தபின் துரோகம் செய்யப்படுவாய்.
2 யெகோவாவே, எங்களுக்குக் கருணை காட்டுங்கள்.[j]
நாங்கள் உங்களையே நம்பியிருக்கிறோம்.
ஒவ்வொரு நாள் காலையிலும் எங்களுக்குப் பக்கபலமாக இருங்கள்.[k]
கஷ்ட காலத்தில் எங்களைக் காப்பாற்றுங்கள்.[l]
3 உங்களுடைய கர்ஜனையைக் கேட்டு ஜனங்கள் ஓடிப்போவார்கள்.
நீங்கள் எழும்போது தேசங்கள் சிதறிப்போகும்.[m]
4 வெட்டுக்கிளி கூட்டத்தைப் போல மக்கள் கூட்டம் கைப்பற்றப்பட்ட பொருள்கள்மேல் பாயும்.
அகோரப் பசியுள்ள வெட்டுக்கிளிகள் எதையும் விட்டுவைக்காதது போல ஜனங்கள் அவற்றில் எதையும் விட்டுவைக்க மாட்டார்கள்.
5 யெகோவா மகிமை அடைவார்.
ஏனென்றால், அவர் உயர்ந்த இடத்தில் இருக்கிறார்.
அவர் சீயோனில் நியாயமும் நீதியும் தங்கும்படி செய்வார்.
6 அவர்தான் காலங்களை* நிலைப்படுத்துகிறார்.
அவர் மாபெரும் விதத்தில் மீட்பையும்,[n] ஞானத்தையும், அறிவையும், யெகோவாவுக்குப் பயப்படும் பயத்தையும்[o] தருகிறார்.
இதுதான் அவருடைய பொக்கிஷம்.

32:19 * அதாவது, "பனிக்கட்டி." 33:6 * நே.மொ., "உன் காலங்களை."

அதி. 32
a ஏசா 44:3
b ஏசா 29:17; ஏசா 35:1, 2
c ஏசா 42:1, 4; ஏசா 60:21
d சங் 119:165; ஏசா 55:12
e எசே 37:26; மீ 4:3, 4
f ஏசா 60:18; ஏசா 65:22; எரே 23:6; எசே 34:25; ஓசி 2:18
g ஏசா 30:23, 24

அதி. 33
h 2ரா 18:13; ஏசா 10:5
i ஏசா 10:12; நாகூ 3:7
j சங் 123:2
k சங் 44:3; ஏசா 52:10
l சங் 46:1; நாகூ 1:7
m சங் 46:6; சங் 68:1; ஏசா 17:13
n சங் 27:1
o நீதி 19:23

7 இதோ, அவர்களுடைய* வீரர்கள் வீதியில் அலறுகிறார்கள்.
சமாதானத் தூதுவர்கள் தேம்பி அழுகிறார்கள்.
8 நெடுஞ்சாலைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.
வீதிகளில் யாரும் பயணம் செய்வதில்லை.
அவன்* ஒப்பந்தத்தை மீறினான்.
நகரங்கள்மேல் வெறுப்பைக் காட்டினான்.
மனிதனை அவன் கொஞ்சமும் மதிப்பது இல்லை.[a]
9 தேசம் துக்கப்படுகிறது,* சோகத்தில் வாடுகிறது.
லீபனோன் அவமானப்பட்டு[b] அழிந்துபோகிறது.
சாரோன் பாலைவனம்போல் மாறிவிட்டது.
பாசானிலும் கர்மேலிலும் இலைகள் உதிர்ந்துவிட்டன.[c]
10 யெகோவா இப்படிச் சொல்கிறார்: "இப்போது நான் எழுந்து,
என்னை மேன்மைப்படுத்துவேன்.[d]
என்னை மகிமைப்படுத்துவேன்.
11 நீங்கள் காய்ந்த புல்லைக் கருத்தரித்து வைக்கோலைப் பெற்றெடுக்கிறீர்கள்.
உங்களுடைய புத்தியே உங்களைத் தீ போல எரித்து நாசமாக்கிவிடும்.[e]
12 வெட்டப்பட்ட முட்செடிகளைப் போல் ஜனங்கள் கொளுத்தப்படுவார்கள்.
அவர்கள் எரிக்கப்பட்டு சுண்ணாம்பைப் போல் ஆவார்கள்.[f]
13 தூரத்தில் இருக்கிறவர்களே, நான் செய்யப்போவதைக் கேளுங்கள்!
பக்கத்தில் இருக்கிறவர்களே, என் பலத்தைப் புரிந்துகொள்ளுங்கள்!
14 சீயோனில் இருக்கிற பாவிகள் அரண்டுபோயிருக்கிறார்கள்.[g]
கடவுளைவிட்டு விலகியவர்கள்* நடுநடுங்குகிறார்கள்.
'சுட்டெரிக்கும் நெருப்புக்குப் பக்கத்தில் யாராவது வாழ முடியுமா?[h]
அணையாத தீயின் பக்கத்தில் யாராவது குடியிருக்க முடியுமா?' என்று சொல்கிறார்கள்.
15 எப்போதுமே நீதியாய் நடக்கிறவனும்,[i]
உண்மையைப்[j] பேசுகிறவனும்,
அநியாயமாக லாபம் சம்பாதிக்காதவனும்,
கை நீட்டி லஞ்சம் வாங்காதவனும்,[k]
கொலை செய்வதற்கான ஆலோசனைகளைக் கேட்காமல் காதுகளை அடைத்துக்கொள்கிறவனும்,
கெட்டதைப் பார்க்காமல் கண்களை மூடிக்கொள்கிறவனும்,
16 உயர்ந்த இடங்களில் பாதுகாப்பாக வாழ்வான்.
கற்பாறைக் கோட்டைகளில் பத்திரமாகக் குடியிருப்பான்.
அவனுக்கு எப்போதும் உணவு கிடைக்கும்.
தண்ணீருக்குப் பஞ்சமே இருக்காது."[l]
17 மகிமையான ராஜாவை உன் கண்கள் பார்க்கும்.

33:7 *அநேகமாக, "யூதாவுடைய." 33:8 *அதாவது, "எதிரி." 33:9 *அல்லது, "நிலம் வறண்டுபோகிறது." 33:14 *வே.வா., "விசுவாசதுரோகிகள்."

அதி. 33
a 2ரா 18:19, 20
b ஏசா 37:24
c நாகூ 1:4
d சங் 46:10
e ஏசா 5:24
f ஏசா 9:18
g உபா 28:66, 67
h உபா 32:22; நாகூ 1:6; எபி 12:29
i எசே 18:17
j 1நா 29:17
k யாத் 23:8; உபா 16:19
l 1ரா 19:5, 6; சங் 34:9, 10; ஏசா 65:13

தூரத்தில் இருக்கிற தேசத்தையும் பார்க்கும்.
18 நீ பயந்து நடுங்கிக்கொண்டிருந்த காலத்தைப் பற்றி நினைத்துப் பார்த்து,
"அந்தக் கணக்கன்* எங்கே?
கப்பம் கட்டுகிறவன்[a] எங்கே?
கோபுரங்களைக் கணக்கிடுகிறவன் எங்கே?" என்று சொல்வாய்.
19 அந்தக் கொடூரமான ஜனங்களை,
உனக்குப் புரியவே புரியாத வேறொரு பாஷையைப் பேசுகிற அந்த ஜனங்களை[b]
இனி நீ பார்க்கவே மாட்டாய்.
20 நம்முடைய பண்டிகைகள் கொண்டாடப்படும் நகரமான சீயோனைப் பார்![c]
உன் கண்கள் எருசலேமை அமைதியான இடமாகவும்
நிரந்தரமான கூடாரமாகவும்[d] பார்க்கும்.
அதன் ஆணிகள் ஒருபோதும் பிடுங்கப்படாது.
அதன் கயிறுகள் எதுவும் அறுந்துபோகாது.
21 மகத்தான கடவுளாகிய யெகோவா ஆறுகளைப் போலவும்,
அகலமான கால்வாய்களைப் போலவும் நம்மைச் சூழ்ந்து பாதுகாப்பார்.
துடுப்புக் கப்பல்களோ, பிரமாண்டமான வேறு கப்பல்களோ
நமக்கு எதிராக வருவதற்கு அவர் விட மாட்டார்.
22 யெகோவா நம்முடைய நீதிபதி.[e]
யெகோவா நமக்குச் சட்டம் கொடுப்பவர்.[f]
யெகோவா நம் ராஜா.[g]
அவரே நம்மைக் காப்பாற்றுவார்.[h]
23 எதிரிகளுடைய கப்பல்களின் கயிறுகள் தளர்ந்துபோகும்.
பாய்மரத்தை இழுத்துப் பிடிக்கவோ கப்பற்பாயை விரிக்கவோ முடியாமல்போகும்.
அப்போது, கைப்பற்றப்பட்ட பொருள்கள் எல்லாருக்கும் ஏராளமாகக் கிடைக்கும்.
கால் ஊனமானவர்கள்கூட அவற்றை அள்ளிக்கொண்டு போவார்கள்.[i]
24 "எனக்கு உடம்பு சரியில்லை" என்று யாருமே சொல்ல மாட்டார்கள்.[j]
தேசத்து ஜனங்களுடைய குற்றங்கள் மன்னிக்கப்பட்டிருக்கும்.[k]

34

தேசங்களே, பக்கத்தில் வந்து நான் சொல்வதைக் கேளுங்கள்.
ஜனங்களே, கவனித்துக் கேளுங்கள்.
பூமியும் அதில் உள்ளவையும் கேட்கட்டும்.
உலகமும் அதில் வாழ்கிற அனைத்தும் கேட்கட்டும்.
2 யெகோவா எல்லா தேசங்கள்மேலும் பயங்கர கோபமாக இருக்கிறார்.[l]
அவர்களுடைய எல்லா படைகள்மேலும் கடும் கோபத்தோடு இருக்கிறார்.[m]
அவர்களைக் கொன்றுபோடுவார்.
அவர்களை அடியோடு அழித்துவிடுவார்.[n]

33:18 *வே.வா., "எழுத்தன்."

அதி. 33
a 2ரா 15:19
b உபா 28:49, 50; ஏசா 28:11; எரே 5:15
c உபா 12:5, 6
d சங் 125:1
e ஆதி 18:25; சங் 50:6; சங் 98:9
f லேவி 26:3; யாக் 4:12
g சங் 44:4; சங் 97:1; வெளி 11:15, 17
h ஏசா 12:2; செப் 3:17
i ஏசா 33:4
j உபா 7:15; வெளி 21:4; வெளி 22:1, 2
k எரே 50:20; மீ 7:18, 19

அதி. 34
l எரே 25:15; யோவே 3:12; செப் 3:8; சக 14:3
m ஏசா 30:27; நாகூ 1:2
n வெளி 19:11, 15

3 அவர்களுடைய உடல்கள் சிதறிக்கிடக்கும்.
அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசும்.[a]
அவர்களுடைய இரத்தம் மலைகளில் ஆறாக ஓடும்.[b]
4 வானம் ஒரு சுருளைப் போலச் சுருட்டி வைக்கப்படும்.
திராட்சை இலைகள் காய்ந்து உதிர்வதைப் போலவும்,
அத்திப் பிஞ்சுகள் வெம்பிப்போய் கீழே விழுவதைப் போலவும்,
வானத்தின் படைகள் வீழ்ந்துவிடும்.
அவையெல்லாம் சிதைந்துபோகும்.
5 "ஏனென்றால், வானத்திலே என் வாளில் இரத்தம் சொட்டும்.[c]
அது ஏதோமின் மேலும் நான் அழிக்க நினைத்திருக்கிற ஜனங்களின் மேலும் இறங்கி
என் தீர்ப்பை நிறைவேற்றும்.[d]
6 யெகோவாவாகிய நான் போஸ்றாவில் ஒரு பலியைச் செலுத்தப்போகிறேன்.
ஏதோமில் உயிர்களைக் கொன்று குவிக்கப்போகிறேன்.[e]
அதற்காக யெகோவாவாகிய என்னிடம் ஒரு வாள் இருக்கிறது.
அந்த வாள் முழுவதிலும் இரத்தமும் கொழுப்பும்[f] படியும்.
செம்மறியாட்டுக் கடாக் குட்டியின் இரத்தமும் வெள்ளாடுகளின் இரத்தமும்
செம்மறியாட்டுக் கடாக்களுடைய சிறுநீரகங்களின் மேலுள்ள கொழுப்பும் அதில் படியும்.
7 அவற்றோடு காட்டு எருதுகளும்
புஷ்டியான காளைகளும் இளம் காளைகளும் வெட்டிச் சாய்க்கப்படும்.
தேசத்தில் இரத்த ஆறு ஓடும்.
அதன் மண் கொழுப்பினால் சேறாகிவிடும்."
8 பழிவாங்குவதற்காக யெகோவா ஒரு நாளைத் தீர்மானித்திருக்கிறார்.[g]
சீயோனின் வழக்கைத் தீர்ப்பதற்காக ஒரு வருஷத்தைக் குறித்திருக்கிறார்.[h]
9 அவளுடைய* ஆறுகளில் தண்ணீருக்குப் பதிலாகத் தார் ஓடும்.
அவளுடைய மண் கந்தகமாக மாறும்.
அவளுடைய தேசம் எரிகிற தார்போல் ஆகிவிடும்.
10 ராத்திரியும் பகலும் அது அணையாமல் எரிந்துகொண்டிருக்கும்.
அதன் புகை என்றென்றும் எழும்பிக்கொண்டே இருக்கும்.
எத்தனை தலைமுறை வந்துபோனாலும் அவளுடைய தேசம் பாழாகவே கிடக்கும்.
எத்தனை வருஷங்கள் உருண்டோடினாலும் யாருமே அதைக் கடந்துபோக மாட்டார்கள்.[i]
11 கூழைக்கடா பறவையும் முள்ளம்பன்றியும் அங்கே குடியிருக்கும்.
நெட்டைக்காது ஆந்தைகளும் அண்டங்காக்கைகளும் அங்கே தங்கும்.
கடவுள் அளவுநூலைப் பிடித்து அளந்து, அதை வெறுமையாக்குவார்.

34:9 * அநேகமாக, ஏதோமின் தலைநகரான போஸ்றாவைக் குறிக்கலாம்.

அதி. 34
a எரே 25:33
b எசே 39:4
c உபா 32:41
d சங் 137:7; எரே 49:7, 22
e ஏசா 63:1-3; ஒப 8, 9
f லேவி 3:16
g உபா 32:41; சங் 94:1
h ஏசா 35:4
i மல் 1:4

தூக்குநூலை* பிடித்துப் பார்த்து, அதை அழித்துவிடுவார்.
12 அதன் அதிபதிகள் யாருமே ராஜாவாக மாட்டார்கள்.
இளவரசர்கள் எல்லாருமே ஒழிந்துபோவார்கள்.
13 அதன் மாடமாளிகைகளில் முட்கள் முளைக்கும்.
அதன் கோட்டைகளில் முட்செடிகளும் களைகளும் வளர்ந்து நிற்கும்.
அது நரிகள் குடியிருக்கும் இடமாக மாறும்.[a]
நெருப்புக்கோழிகள் வாழும் இடமாக ஆகும்.
14 பாலைவன மிருகங்களும் ஊளையிடும் மிருகங்களும் அங்கே
ஒன்றையொன்று சந்திக்கும்.
காட்டு ஆடுகள்* ஒன்றையொன்று கூப்பிடும்.
சாக்குருவிகள் அங்கே தங்கி, ஓய்வெடுக்கும்.
15 பறக்கும் பாம்பு தனக்கென ஓர் இடம் அமைத்து அங்கே
முட்டைகள் இடும்.
குட்டிகளைத் தன் நிழலில் வைத்துக்கொள்ளும்.
பருந்துகள் அங்கே ஜோடி ஜோடியாக வந்து சேரும்.
16 யெகோவாவுடைய புத்தகத்திலே தேடிப் பார்த்து சத்தமாக
வாசியுங்கள்.
அவற்றில் ஒன்றும் குறையாது.
எதுவுமே ஜோடியில்லாமல் இருக்காது.
ஏனென்றால், யெகோவாவே இந்தக் கட்டளையைக் கொடுத்திருக்கிறார்.
அவருடைய சக்தியே அவற்றை ஒன்றுசேர்த்திருக்கிறது.
17 அவை ஒவ்வொன்றுக்கும் ஓர் இடத்தை அவர் கொடுத்திருக்கிறார்.
அவருடைய கைகளாலேயே அளந்து கொடுத்திருக்கிறார்.
அங்கே அவை என்றென்றைக்கும் குடியிருக்கும்.
தலைமுறை தலைமுறையாகத் தங்கியிருக்கும்.

35 வனாந்தரமும் வறண்ட நிலமும் பூரிப்படையும்.[b]
பாலைநிலம் பூ பூத்து, களைகட்டும்.[c]
2 அது கண்டிப்பாகப் பூத்துக் குலுங்கும்.[d]
சந்தோஷம் பொங்கப் பாடும்.
எழில் கொஞ்சும் லீபனோனைப் போல் மாறும்.[e]
கர்மேலைப்[f] போலவும் சாரோனைப்[g] போலவும் செழிக்கும்.
நம் கடவுளான யெகோவாவின் மகிமையையும் மேன்மையையும்
அவர்கள் பார்ப்பார்கள்.
3 பலமில்லாத கைகளைப் பலப்படுத்துங்கள்.
தள்ளாடுகிற முழங்கால்களைத் திடப்படுத்துங்கள்.[h]
4 பதற்றத்தில் இருப்பவர்களைப் பார்த்து,
“தைரியமாக இருங்கள், பயப்படாதீர்கள்.
உங்களுடைய எதிரிகளை உங்கள் கடவுள் பழிவாங்க வருகிறார்.
அவர்களைப் பழிதீர்ப்பதற்கு வருகிறார்.[i]
அவர் வந்து உங்களைக் காப்பாற்றுவார்”[j] என்று சொல்லுங்கள்.

34:11 *வே.வா., “தூக்குக்குண்டை.” **34:14** *அல்லது, “ஆட்டு உருவப் பேய்கள்.”

அதி. 34
a மல் 1:3

அதி. 35
b ஏசா 29:17; ஏசா 32:14, 15
c ஏசா 4:2; ஏசா 27:6; ஏசா 35:6; ஏசா 51:3; எசே 36:35
d ஓசி 14:5, 6
e ஏசா 60:13
f எரே 50:19
g ஏசா 65:10
h எபி 12:12
i எரே 51:56
j ஏசா 25:9; செப் 3:16, 17

5 அப்போது, கண் தெரியாதவர்களுக்குக் கண் தெரியும்.[a]
காது கேட்காதவர்களுக்குக் காது கேட்கும்.[b]
6 நடக்க முடியாதவர்கள் மான்போல் துள்ளி ஓடுவார்கள்.[c]
பேச முடியாதவர்கள் சந்தோஷத்தில் பாடுவார்கள்.[d]
வனாந்தரத்தில் தண்ணீர் ஊற்றெடுக்கும்.
பாலைநிலத்தில் ஆறுகள் பாய்ந்தோடும்.
7 வறண்ட நிலம் நாணல் நிறைந்த குளமாக மாறும்.
தண்ணீர் இல்லாத நிலத்தில் நீரூற்றுகள் புறப்படும்.[e]
நரிகள் தங்கிய இடத்தில்[f]
பசும்புல்லும் நாணற்புல்லும் கோரைப்புல்லும் வளரும்.
8 ஒரு நெடுஞ்சாலை இருக்கும்.[g]
அது பரிசுத்தமான வழி என்று அழைக்கப்படும்.
பரிசுத்தமில்லாத யாருமே அதில் நடந்துபோக மாட்டார்கள்.[h]
தகுதியுள்ள மக்கள் மட்டுமே போவார்கள்.
புத்திகெட்ட யாராலும் அந்த வழியில் கால்வைக்க முடியாது.
9 அங்கே சிங்கம் இருக்காது.
கொடிய காட்டு மிருகங்கள் எதுவுமே இருக்காது.
அவை அந்த வழியிலேயே வராது.[i]
மீட்கப்பட்டவர்கள் மட்டுமே அதில் நடப்பார்கள்.[j]
10 யெகோவாவினால் விடுவிக்கப்பட்டவர்கள் சந்தோஷ
ஆரவாரத்தோடு சீயோனுக்குத் திரும்பி வருவார்கள்.[k]
மகிழ்ச்சியின் கிரீடத்தை என்றென்றும் அணிந்திருப்பார்கள்.[l]
எப்போதுமே பூரிப்போடும் ஆனந்தத்தோடும் இருப்பார்கள்.
அவர்களுடைய துக்கமும் துயரமும் பறந்துவிடும்.[m]

36 எசேக்கியா ராஜா ஆட்சி செய்த 14-ஆம் வருஷத்தில், யூதாவிலி
ருந்த மதில் சூழ்ந்த நகரங்கள் எல்லாவற்றின் மேலும் அசீரிய ராஜா
சனகெரிப்[n] படையெடுத்து வந்து அவற்றைக் கைப்பற்றினான்.[o] **2** பின்பு,
அவன் ரப்சாக்கேயை* எருசலேமிலிருந்த எசேக்கியா ராஜாவிடம் அனுப்
பினான்.[p] அவனோடு ஒரு பெரிய படையையும் லாகீசிலிருந்து[q] அனுப்பி
னான். மேல் குளத்தின் வாய்க்கால்[r] பக்கத்தில் போய் அவர்கள் நின்றார்
கள். அது வண்ணார் பகுதிக்குப் பக்கத்திலிருந்த நெடுஞ்சாலையில்
இருந்தது.[s] **3** அப்போது, அரண்மனை நிர்வாகியும் இல்க்கியாவின் மகனு
மான எலியாக்கீம்,[t] செயலாளரான செப்னா,[u] பதிவாளரும் ஆசாப்பின் மக
னுமான யோவா ஆகியவர்கள் அவனிடம் வந்தார்கள்.

4 ரப்சாக்கே அவர்களிடம், “மன்னாதி மன்னரான அசீரிய ராஜா
சொல்லி அனுப்பிய இந்தச் செய்தியைத் தயவுசெய்து எசேக்கியாவிடம்
போய்ச் சொல்லுங்கள்: ‘என்ன தைரியத்தில் நீ இப்படியெல்லாம் செய்கி
றாய்?[v] **5** என்னோடு போர் செய்ய உனக்குச் சாமர்த்தியமும் பலமும்
இருப்பதாகப் பிதற்றுகிறாயே. யாரை நம்பி என்னையே எதிர்க்கத் துணிந்து
விட்டாய்?[w] **6** இதோ! எகிப்தைப்போய் நம்பிக்கொண்டிருக்கிறாயே. அது
ஒடிந்துபோன நாணல். அதன்மேல் யாராவது கை ஊன்றினால், அது அவனு

36:2 *வே.வா., “பானம் பரிமாறுகிறவர்களின் தலைவனை.”

அதி. 35
a சங் 146:8; ஏசா 42:16; மத் 9:28-30
b ஏசா 29:18; எரே 6:10; மாற் 7:32-35; லூ 7:22
c மத் 11:5; அப் 8:7; அப் 14:8-10
d மத் 15:30
e ஏசா 44:3
f எரே 9:11
g எஸ்றா 1:3; ஏசா 11:16; ஏசா 49:11; ஏசா 62:10; எரே 31:21
h ஏசா 52:1
i ஏசா 11:6, 7; ஏசா 65:25; எசே 34:25; ஓசி 2:18
j சங் 107:2, 3; ஏசா 62:12
k உபா 30:4; ஏசா 51:11; எரே 31:11, 12
l எரே 33:10, 11
m ஏசா 30:19; ஏசா 65:19

அதி. 36
n ஏசா 10:5
o 2ரா 18:13; 2நா 32:1; ஏசா 8:7, 8; ஏசா 10:28-32; ஏசா 33:8
p 2நா 32:9
q 2ரா 19:8
r ஏசா 7:3
s 2ரா 18:17, 18
t ஏசா 22:20, 21
u 2ரா 19:2
v 2ரா 18:19-25; 2ரா 19:10
w 2ரா 18:1, 7

டைய கையைக் குத்திக் கிழித்துவிடும். எகிப்தின் ராஜாவான பார்வோனை
நம்பியிருக்கிற எல்லாருக்கும் அதே கதிதான் ஏற்படும்.[a] **7** “எங்கள் கடவு
ளான யெகோவாமேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்” என்று ஒருவேளை
நீ சொல்லலாம். ஆனால், அவருடைய ஆராதனை மேடுகளையும் பலிபீடங்
களையும்தான் நீ அழித்துவிட்டாயே![b] “எருசலேமில் உள்ள பலிபீடத்தின்
முன்னால்தான் நீங்கள் மண்டிபோட வேண்டும்” என்று யூதாவிலும் எருசலே
மிலும் இருப்பவர்களுக்குச் சொல்லியிருக்கிறாயே!’[c] **8** இதோ, என் எஜமா
னாகிய அசீரிய ராஜா உனக்குச் சவால் விடுகிறார்,[d] கேள்: நான் உனக்கு
2,000 குதிரைகளைத் தருகிறேன், அதில் சவாரி செய்வதற்காவது உன்னி
டம் ஆட்கள் இருக்கிறார்களா பார்க்கலாம்! **9** ரதங்களுக்கும் குதிரைவீரர்
களுக்கும் நீ எகிப்திடம் கையேந்தி நிற்கிறாயே, என் எஜமானுக்கு வேலை
செய்கிற ஒரு சாதாரண ஆளுநரையாவது உன்னால் விரட்டியடிக்க முடி
யுமா? **10** யெகோவாவின் உத்தரவு இல்லாமலா நான் இந்த இடத்தை
அழிக்க வந்திருக்கிறேன்? ‘இந்த நகரத்துக்கு எதிராகப் படையெடுத்துப்
போய் அதை அழித்துப்போடு’ என்று யெகோவாதான் என்னிடம் சொன்
னார்” என்றான்.

11 அதற்கு எலியாக்கீமும் செப்னாவும்[e] யோவாவும், “உங்கள் ஊழி
யர்களான எங்களுக்கு அரமேயிக் மொழி* தெரியும். தயவுசெய்து அரமே
யிக் மொழியிலேயே பேசுங்கள்.[f] மதில்மேல் இருக்கிறவர்களுக்குக் கேட்கிற
மாதிரி யூதர்களுடைய மொழியில் பேச வேண்டாம்” என்று ரப்சாக்கேயி
டம்[g] சொன்னார்கள்.[h] **12** அதற்கு ரப்சாக்கே, “உங்களிடமும் உங்கள் எஜ
மானிடமும் மட்டும் பேசுவதற்காகவா ராஜா என்னை அனுப்பி வைத்தார்?
மதில்மேல் உட்கார்ந்திருக்கிற இந்த ஆட்களிடமும் பேசத்தானே அனுப்பி
வைத்தார்? உங்களோடு சேர்ந்து அவர்களும்தானே தங்களுடைய மலத்
தைத் தின்று தங்களுடைய சிறுநீரைக் குடிக்கப்போகிறார்கள்?” என்றான்.

13 பின்பு ரப்சாக்கே நின்றுகொண்டு, யூதர்களுடைய மொழியில்
சத்தமாக,[i] “மன்னாதி மன்னரான அசீரிய ராஜா சொல்லி அனுப்பிய
செய்தியைக் கேளுங்கள்.[j] **14** ராஜாவின் செய்தி இதுதான்: ‘எசேக்கியா
வின் பேச்சைக் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள். அவனால் உங்களைக் காப்
பாற்ற முடியாது.[k] **15** யெகோவாவை நம்பும்படி[l] எசேக்கியா உங்களிடம்
சொல்வான். “யெகோவா நிச்சயம் நம்மைக் காப்பாற்றுவார், இந்த நக
ரத்தை அசீரிய ராஜாவின் கையில் கொடுக்க மாட்டார்” என்று சொல்வான்.
அதையெல்லாம் நம்பாதீர்கள். **16** எசேக்கியாவின் பேச்சைக் கேட்காதீர்
கள். அசீரிய ராஜா இப்படிச் சொல்கிறார்: “என்னோடு சமாதானம் பண்ணிக்
கொண்டு, சரணடைந்து விடுங்கள். அப்போது நீங்கள் ஒவ்வொருவரும்
உங்கள் திராட்சைக் கொடியிலிருந்தே பழங்களைச் சாப்பிடுவீர்கள், உங்
கள் அத்தி மரத்திலிருந்தே பழங்களைச் சாப்பிடுவீர்கள், உங்கள் தண்ணீர்த்
தொட்டியிலிருந்தே தண்ணீரைக் குடிப்பீர்கள். **17** பின்பு நான் வந்து, உங்
கள் தேசத்தைப் போலவே செழிப்பாக இருக்கும் தேசத்துக்கு உங்க
ளைக் கூட்டிக்கொண்டு போவேன்.[m] அது, தானியமும் புதிய திராட்சமது
வும் ரொட்டியும் ஏராளமாகக் கிடைக்கிற தேசம். திராட்சைத் தோட்டங்கள்
நிறைந்த தேசம். **18** ‘யெகோவா நம்மைக் காப்பாற்றுவார்’ என்று எசேக்
கியா சொல்வதை நம்பி ஏமாந்துபோகாதீர்கள். எந்தத் தெய்வமாவது

36:11 * வே.வா., “சீரியர்களின் மொழி.”

அதி. 36
a 2ரா 17:4; ஏசா 30:2, 7; எரே 37:7
b 2ரா 18:1, 4; 2நா 31:1
c உபா 12:11; 2நா 7:12; 2நா 32:12
d 2ரா 18:13
e ஏசா 22:15
f எஸ்றா 4:7; தானி 2:4
g 2ரா 18:17
h 2ரா 18:26, 27
i 2நா 32:18
j 2ரா 18:28-35
k 2நா 32:11, 15; தானி 3:15
l 2ரா 19:22
m 2ரா 17:6; 2ரா 17:22, 23

அசீரிய ராஜாவின் பிடியிலிருந்து தன்னுடைய நகரத்தைக் காப்பாற்றியிருக்கிறதா?[a] **19** காமாத்திலும் அர்பாத்திலும்[b] உள்ள தெய்வங்களால் என்ன செய்ய முடிந்தது? செப்பர்வாயிமில்[c] உள்ள தெய்வங்களாலும் என்ன செய்ய முடிந்தது? அவற்றால் சமாரியாவை என்னிடமிருந்து காப்பாற்ற முடிந்ததா?[d] **20** இதுவரைக்கும் எந்தத் தெய்வத்தால் தன்னுடைய நகரத்தை என் கையிலிருந்து காப்பாற்ற முடிந்திருக்கிறது? அப்படியிருக்கும்போது, யெகோவா மட்டும் எப்படி எருசலேமை என்னிடமிருந்து காப்பாற்றுவார்?"'"[e] என்று கேட்டான்.

21 ஆனால், பதிலுக்கு ஒரு வார்த்தைகூட பேசாமல் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். ஏனென்றால், "நீங்கள் அவனுக்குப் பதில் சொல்லக்கூடாது" என்று ராஜா கட்டளை கொடுத்திருந்தார்.[f] **22** அரண்மனை நிர்வாகியும் இல்க்கியாவின் மகனுமான எலியாக்கீம், செயலாளரான செப்னா,[g] பதிவாளரும் ஆசாப்பின் மகனுமான யோவா ஆகியவர்கள் தங்களுடைய உடைகளைக் கிழித்துக்கொண்டு, எசேக்கியாவிடம் வந்து, ரப்சாக்கே சொன்னதையெல்லாம் சொன்னார்கள்.

37 எசேக்கியா ராஜா அதைக் கேட்டவுடனே தன்னுடைய உடையைக் கிழித்துக்கொண்டார். பின்பு, துக்கத் துணியை* போட்டுக்கொண்டு யெகோவாவின் ஆலயத்துக்குப் போனார்.[h] **2** அதன்பின், அரண்மனை நிர்வாகியான எலியாக்கீமையும் செயலாளரான செப்னாவையும் மூத்த குருமார்களையும் ஆமோத்சின் மகனாகிய ஏசாயா தீர்க்கதரிசியிடம் அனுப்பினார். அவர்கள் துக்கத் துணியைப் போட்டுக்கொண்டு ஏசாயாவிடம்[i] போய், **3** "'இந்த நாள் நமக்கு இக்கட்டான நாள். இன்று நாம் அவமதிக்கப்பட்டோம்,* கேவலப்படுத்தப்பட்டோம். பிரசவ நேரம் நெருங்கியும், பிள்ளை பெற்றெடுக்கச் சக்தியில்லாத பெண்ணைப் போல ஆகிவிட்டோம்.[j] **4** அசீரிய ராஜா தன்னுடைய ஊழியன் ரப்சாக்கேயை அனுப்பி, உயிருள்ள கடவுளைப் பழித்துப் பேசியிருக்கிறான்.[k] அவன் பேசிய பேச்சை உங்கள் கடவுளான யெகோவா கேட்டிருப்பார். அவனுக்கு யெகோவா தக்க தண்டனை தருவார். அதனால், இப்போது தேசத்தில் மீதியிருக்கிற ஜனங்களுக்காக[l] அவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்'[m] என்று எசேக்கியா உங்களிடம் சொல்லச் சொன்னார்" என்றார்கள்.

5 எசேக்கியா ராஜாவின் ஊழியர்கள் இதை ஏசாயாவிடம் சொன்னபோது,[n] **6** ஏசாயா அவர்களிடம், "யெகோவா சொல்வது என்னவென்றால், 'அசீரிய ராஜாவின் ஊழியர்கள்[o] என்னை நிந்தித்துப் பேசியதைக் கேட்டு நீங்கள் பயப்படாதீர்கள்.[p] **7** அவன் மனதில் ஒரு யோசனையை வர வைப்பேன். ஒரு செய்தியைக் கேட்டு தன்னுடைய தேசத்துக்கு அவனைத் திரும்பிப் போக வைப்பேன்.[q] அவனுடைய தேசத்திலேயே அவனை வாளுக்குப் பலியாக்குவேன்.'[r] இதை உங்கள் எஜமானிடம் போய்ச் சொல்லுங்கள்" என்றார்.

8 அசீரிய ராஜா லாகீசிலிருந்து போய்விட்டதை ரப்சாக்கே கேள்விப்பட்டு, அவரிடம் திரும்பிப் போனான். அப்போது, அசீரிய ராஜா லிப்னாவுக்கு எதிராகப் போர் செய்துகொண்டிருந்தான்.[s] **9** அந்தச் சமயத்தில், "எத்தியோப்பிய ராஜாவான திராக்கா உங்களோடு போர் செய்ய வந்திருக்கிறார்" என்று அசீரிய ராஜாவிடம் சொல்லப்பட்டது. அதைக் கேட்டதும் அவன்

37:1 * சொல் பட்டியலைப் பாருங்கள். **37:3** * வே.வா., "கண்டிக்கப்பட்டோம்."

அதி. 36
a 2ரா 19:11, 12; 2நா 32:14; ஏசா 37:11, 12
b எரே 49:23
c 2ரா 17:24
d 2ரா 17:6; 2ரா 17:22, 23; ஏசா 10:11
e 2ரா 19:17, 18; 2நா 32:15; ஏசா 37:23
f 2ரா 18:36, 37; நீதி 9:7
g ஏசா 22:15

அதி. 37
h 2ரா 19:1-4
i 2நா 26:22; ஏசா 1:1
j ஏசா 26:17, 18
k 1சா 17:45; 2ரா 18:28, 35
l 2ரா 17:18
m 2நா 32:20; சங் 50:15; யோவே 2:17
n 2ரா 19:5-7
o 2ரா 18:17
p உபா 20:1
q நீதி 21:1
r 2நா 32:21; ஏசா 37:37, 38
s யோசு 10:29, 30; 2ரா 8:22; 2ரா 19:8-13

மறுபடியும் எசேக்கியாவிடம் தூதுவர்களை அனுப்பினான்.[a] **10** அந்தத்
தூதுவர்களிடம், “நீங்கள் யூதாவின் ராஜா எசேக்கியாவிடம் போய் இப்படிச்
சொல்லுங்கள்: ‘எருசலேமை அசீரிய ராஜாவின் கையில் கொடுக்கப்போ
வதில்லை என்று உன் கடவுள் சொன்னால் அதை நம்பி ஏமாந்துவி
டாதே.[b] **11** இதோ பார்! அசீரிய ராஜாக்கள் மற்ற எல்லா தேசங்களையும்
அடியோடு அழித்துப்போட்டதை நீ கேள்விப்படவில்லையா?[c] நீ மட்
டும் என் கையிலிருந்து தப்பித்துவிடுவாயா? **12** என்னுடைய முன்னோர்
கள் மற்ற தேசங்களை அழித்தபோது அங்கிருந்த தெய்வங்களால் அவற்
றைக் காப்பாற்ற முடிந்ததா?[d] கோசான் ஜனங்களும் ஆரான்[e] ஜனங்களும்
ரேத்சேப் ஜனங்களும் தெல்–ஆசாரில் குடியிருந்த ஏதேன் ஜனங்களும்
எங்கே? **13** காமாத்தின் ராஜாவும் அர்பாத்தின் ராஜாவும் எங்கே? செப்பர்
வாயிம்,[f] ஏனா, ஈவா நகரங்களின் ராஜாக்களெல்லாம் இப்போது எங்கே?’”
என்று கேட்டான்.

14 அசீரிய ராஜா அனுப்பிய கடிதங்களைத் தூதுவர்களிடமிருந்து எசேக்
கியா வாங்கிப் படித்தார். பின்பு, யெகோவாவின் ஆலயத்துக்குப் போய்
அவற்றை* யெகோவாவின் முன்னால் விரித்து வைத்து,[g] **15** யெகோவா
விடம் ஜெபம் செய்து,[h] **16** “பரலோகப் படைகளின் யெகோவாவே,[i] இஸ்ர
வேலின் தேவனே, கேருபீன்களுக்கு மேலே* வீற்றிருப்பவரே, நீங்கள் ஒரு
வர்தான் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களுக்கும் கடவுள். நீங்கள்தான்
வானத்தையும் பூமியையும் படைத்த உண்மைக் கடவுள். **17** யெகோ
வாவே, தயவுசெய்து காதுகொடுத்துக் கேளுங்கள்![j] யெகோவாவே, உங்
கள் கண்களைத் திறந்து பாருங்கள்![k] உயிருள்ள கடவுளாகிய உங்களைப்
பழித்து சனகெரிப் என்னவெல்லாம் எழுதி அனுப்பியிருக்கிறான் என்று
பாருங்கள்.[l] **18** யெகோவாவே, அசீரிய ராஜாக்கள் எல்லா தேசங்களை
யும் அழித்துப்போட்டது உண்மைதான்,[m] அவர்களுடைய சொந்த தேசத்
தையும்கூட அவர்கள் அழித்துப்போட்டார்கள். **19** அங்கிருந்த ஜனங்கள்
வணங்கிய தெய்வங்களையும் நெருப்பில் எரித்துப்போட்டார்கள்.[n] அவை
யெல்லாம் கடவுள் கிடையாதே, மனுஷர்கள் செய்தவைதானே,[o] வெறும்
மரக்கட்டையும் கல்லும்தானே. அதனால்தான் அவர்களால் அவற்றை
அழிக்க முடிந்தது. **20** ஆனால் யெகோவாவே, எங்கள் கடவுளே, நீங்
கள் மட்டும்தான் கடவுள்[p] என்பதைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்க
ளும் புரிந்துகொள்ள வேண்டும். அதனால் யெகோவாவே, எதிரியின் கையி
லிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்” என்று சொன்னார்.

21 பின்பு எசேக்கியாவுக்கு ஆமோத்சின் மகன் ஏசாயா இப்படிச் செய்தி
அனுப்பினார்: “இஸ்ரவேலின் கடவுளான யெகோவா உன்னிடம் சொல்
வது இதுதான்: ‘அசீரிய ராஜா சனகெரிப்பைப் பற்றி நீ என்னிடம் ஜெபம்
செய்ததால்,[q] **22** யெகோவாவாகிய நான் அவனுக்கு எதிராகச் சொல்வது
இதுதான்:

“சீயோன் கன்னிப்பெண் உன்னை ஏளனம் செய்கிறாள், கேலி
செய்கிறாள்.
எருசலேம் மகள் உன்னைப் பார்த்துக் கிண்டலாகத் தலை ஆட்டுகிறாள்.
23 நீ இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளையே பழித்துப் பேசிவிட்டாய்![r]
அவரையே நிந்தித்துவிட்டாய்!

37:14 * நே.மொ., “அதை.” **37:16** * அல்லது, “நடுவில்.”

அதி. 37
a 2ரா 18:17
b 2நா 32:15
c 2ரா 17:5, 6; 2நா 32:13; ஏசா 10:11
d ஏசா 36:19
e ஆதி 11:31
f 2ரா 17:24; ஏசா 36:19
g 2ரா 19:14-19
h 1ரா 8:30; 2நா 6:20; 2நா 20:9; தானி 9:3
i சங் 46:7; ஏசா 8:13
j 2நா 6:40; சங் 65:2
k 2நா 16:9; 1பே 3:12
l ஏசா 37:4
m 2ரா 15:29; 2ரா 16:8, 9; 1நா 5:26
n ஏசா 10:11
o ஏசா 40:19; ஏசா 41:7; எரே 10:3; ஓசி 8:6; அப் 17:29
p உபா 32:31, 39; சங் 83:18; சங் 96:5
q 2ரா 19:20, 21
r 2ரா 19:4, 16

அவரிடமே குரலை உயர்த்திப் பேசினாய்![a]
அவரையே ஆணவமாகப் பார்த்தாய்![b]
24 உன் ஊழியர்களை அனுப்பி யெகோவாவுக்கே சவால் விட்டு,[c]
'ஏராளமான போர் ரதங்களோடு வருவேன்,
மலைகளின் உச்சிக்கே ஏறுவேன்,[d]
லீபனோனின் எல்லைகளுக்குப் போவேன்.
அங்கே உயர்ந்தோங்கி நிற்கும் தேவதாரு மரங்களையும் செழிப்பான ஆபால் மரங்களையும் வெட்டுவேன்.
அங்கே இருக்கும் பெரிய மலைகளுக்கும் அடர்த்தியான காடுகளுக்கும் போவேன்.
25 கிணறுகளைத் தோண்டி, தண்ணீரைக் குடிப்பேன்.
என் பாதம் பட்டதும் எகிப்தின் ஆறுகள்* வறண்டுபோகும்' என்று சொன்னாய்.
26 நடக்க வேண்டியதை நான்தான் வெகு காலத்துக்கு முன்பே முடிவுசெய்தேன், இதை நீ கேள்விப்படவில்லையா?
நான்தான் ஆரம்பக் காலத்திலிருந்தே இதை ஏற்பாடு செய்தேன்.*[e]
இப்போது இதை நிறைவேற்றப்போகிறேன்.[f]
மதில் சூழ்ந்த நகரங்களை நீ மண்மேடுகளாக்குவாய்.[g]
27 அவற்றின் குடிமக்கள் எதுவும் செய்ய முடியாமல்* தவிப்பார்கள்.
கதிகலங்கிப்போவார்கள், அவமானப்படுவார்கள்.
புல்பூண்டுகளைப் போல் வாடிப்போவார்கள்.
கூரையில் முளைத்து, கிழக்குக் காற்றில் பட்டுப்போகும் புல்லைப் போல் ஆவார்கள்.
28 நீ எப்போது உட்காருகிறாய், எப்போது போகிறாய், எப்போது வருகிறாய் என்றெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்.[h]
எனக்கு எதிராக நீ கொதித்தெழுவதும் தெரியும்.[i]
29 என்மேல் இருக்கிற ஆத்திரத்தில்[j] நீ கத்துவதைக் கேட்டேன்.[k]
அதனால் உன் மூக்கில் கொக்கி மாட்டி, உன் வாயில் கடிவாளம் போட்டு,[l]
வந்த வழியிலேயே உன்னைத் திரும்பிப் போக வைப்பேன்."

30 "'எசேக்கியா, உனக்கு நான் தரும் அடையாளம் இதுதான்: இந்த வரு
ஷம் தானாக விளைந்ததை* சாப்பிடுவீர்கள். அடுத்த வருஷம் அதிலிருந்து
முளைக்கிற பயிர்களைச் சாப்பிடுவீர்கள். ஆனால், அதற்கடுத்த வருஷம்
நீங்களே விதைத்து அறுவடை செய்வீர்கள், திராட்சைத் தோட்டங்களை
அமைத்து அவற்றின் பழங்களைச் சாப்பிடுவீர்கள்.[m] **31** யூதா ஜனங்களில்
மீதியிருக்கிற ஆட்கள்[n] மரம்போல் வேரூன்றி நிற்பார்கள், காய்த்துக் குலுங்
குவார்கள். **32** மீதியிருக்கிற ஜனங்கள் எருசலேமிலிருந்தும், உயிர்தப்புகிற
ஆட்கள் சீயோன் மலையிலிருந்தும் புறப்பட்டுப் போவார்கள்.[o] பரலோகப்
படைகளின் யெகோவாவுடைய வைராக்கியம் இதைச் செய்யும்.[p]

37:25 *வே.வா., "நைல் நதியின் கால்வாய்கள்." **37:26** *வே.வா., "உருவாக்கினேன்." **37:27** *வே.வா., "ஆதரவு இல்லாமல்." **37:30** *வே.வா., "சிந்திய தானியங்களிலிருந்து விளைந்ததை."

அதி. 37
a 2ரா 18:30, 35; ஏசா 10:12, 13
b யாத் 15:11; 2ரா 19:22-24; ஏசா 10:20; எசே 39:7
c 2நா 32:17
d ஏசா 10:10, 11
e சங் 33:11; ஏசா 46:10
f ஏசா 55:10, 11
g 2ரா 19:25, 26
h நீதி 5:21; நீதி 15:3; எபி 4:13
i 2ரா 19:27, 28
j சங் 46:6; ஏசா 10:15; ஏசா 37:23
k ஏசா 36:4, 20
l சங் 32:9
m 2ரா 19:29-31
n ஏசா 1:9; ஏசா 10:20, 21
o 2ரா 19:4
p ஏசா 59:17; யோவே 2:18; சக 1:14, 15

33 அசீரிய ராஜாவைப் பற்றி யெகோவா சொல்வது என்னவென்றால்,[a]
“இந்த நகரத்துக்குள் அவன் வர மாட்டான்.[b]
இங்கே ஒரு அம்புகூட எறிய மாட்டான்.
கேடயத்தை எடுத்துக்கொண்டு போர் செய்ய மாட்டான்.
மண்மேடுகள் அமைத்து முற்றுகையிடவும் மாட்டான்.”’[c]
34 யெகோவா சொல்வது என்னவென்றால், ‘வந்த வழியிலேயே அவன்
திரும்பிப் போவான்.
இந்த நகரத்துக்குள் நுழைய மாட்டான்.
35 என்னுடைய பெயருக்காகவும்[d] என்னுடைய ஊழியன் தாவீதுக்காகவும்[e]
இந்த நகரத்தைப் பாதுகாப்பேன்,[f] இதைக் காப்பாற்றுவேன்.’”

36 பின்பு, யெகோவாவின் தூதர் புறப்பட்டுப் போய் அசீரியர்களின்
முகாமில் இருந்த 1,85,000 வீரர்களைக் கொன்றுபோட்டார். ஜனங்கள் விடி
யற்காலையில் எழுந்தபோது, அவர்கள் எல்லாரும் பிணமாகக் கிடப்ப
தைப் பார்த்தார்கள்.[g] **37** அதனால், அசீரிய ராஜாவான சனகெரிப் நினி
வேக்குத்[h] திரும்பிப் போய் அங்கேயே தங்கினான்.[i] **38** ஒருநாள்,
அவனுடைய தெய்வமான நிஸ்ரோக்கின் கோயிலில் அவன் மண்டி
போட்டு வணங்கிக்கொண்டிருந்தான். அப்போது, அவனுடைய மகன்கள்
அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனை வாளால் வெட்டிக் கொன்றுவிட்டு,[j]
அரராத் பகுதிக்குத்[k] தப்பியோடினார்கள். அவனுக்குப் பிறகு அவனுடைய
மகன் எசரத்தோன்[l] ராஜாவானான்.

38 ஒருசமயம், எசேக்கியா வியாதிப்பட்டு சாகும் நிலையில் இருந்
தார்.[m] ஆமோத்சின் மகனான ஏசாயா தீர்க்கதரிசி[n] அவரிடம்
வந்து, “யெகோவா சொல்வது என்னவென்றால், ‘நீ குணமாக மாட்டாய்,
இறந்துபோவாய். அதனால், உன் வீட்டில் இருப்பவர்களிடம் சொல்ல
வேண்டியதையெல்லாம் இப்போதே சொல்லிவிடு’” என்றார்.[o] **2** அதைக்
கேட்டதும் எசேக்கியா சுவர் பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு
யெகோவாவிடம் ஜெபம் செய்ய ஆரம்பித்தார். **3** “யெகோவாவே, நான்
எப்போதும் உங்களுக்கு உண்மையாக நடந்திருக்கிறேன், முழு இதயத்
தோடு கீழ்ப்படிந்திருக்கிறேன்,[p] உங்களுக்குப் பிரியமானதைச் செய்திருக்கி
றேன்; தயவுசெய்து இதையெல்லாம் நினைத்துப் பாருங்கள்.[q] உங்களிடம்
கெஞ்சிக் கேட்கிறேன்” என்று சொல்லிக் கதறி அழுதார்.

4 அப்போது யெகோவா ஏசாயாவிடம், **5** “நீ எசேக்கியாவிடம் திரும்
பிப் போய் இப்படிச் சொல்:[r] ‘உன் மூதாதையாகிய தாவீதின் கடவுளான
யெகோவா சொல்வது என்னவென்றால், “நீ செய்த ஜெபத்தை நான் கேட்
டேன்.[s] நீ கண்ணீர்விட்டு அழுததைப் பார்த்தேன்.[t] அதனால், உன் வாழ்
நாளை இன்னும் 15 வருஷங்களுக்குக் கூட்டுகிறேன்.[u] **6** உன்னையும்
இந்த நகரத்தையும் அசீரிய ராஜாவிடமிருந்து காப்பாற்றுவேன், இந்த நக
ரத்தை எப்போதும் பாதுகாப்பேன்.[v] **7** யெகோவாவாகிய நான் சொன்ன
தைச் செய்வேன். அதற்கு யெகோவாவாகிய நான் தரும் அடையாளம் இது
தான்:[w] **8** ஆகாசின் படிக்கட்டில்* விழும் சூரியனின் நிழல் பத்துப்
படிகள் பின்னால் போகும்படி செய்வேன்”’”[x] என்று சொன்னார். அப்போது,

38:8 *சூரிய கடிகாரத்தைப் போல, நேரத்தைக் கணக்கிடுவதற்காக இந்தப் படிகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

அதி. 37
a ஏசா 10:24
b 2நா 32:22; ஏசா 10:32
c 2ரா 19:32-34
d உபா 32:27; 1சா 12:22; 2ரா 20:6; எசே 36:22
e 1ரா 15:4
f ஏசா 31:5
g 2ரா 19:35-37; 2நா 32:21
h ஆதி 10:8, 11; யோனா 1:2
i 2ரா 19:7, 28
j 2நா 32:21
k ஆதி 8:4
l எஸ்றா 4:1, 2

அதி. 38
m 2நா 32:24
n 2ரா 19:20; ஏசா 1:1
o 2ரா 20:1-3
p 2நா 31:20, 21
q நெ 13:22; சங் 20:1-3; எபி 6:10
r 2ரா 20:4-6
s நீதி 15:29; 1யோ 5:14
t சங் 39:12; சங் 56:8
u உபா 32:39; 1சா 2:6
v 2நா 32:22
w 2ரா 20:8-11
x யோசு 10:12, 13

ஆகாசின் படிக்கட்டில் விழுந்திருந்த நிழல் பத்துப் படிகள் பின்னால் போனது.

9 யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா வியாதிப்பட்டு, குணமான பின்பு எழுதிய வார்த்தைகள் இவைதான்:

10 "நான் வாழ வேண்டிய காலத்திலேயே
கல்லறையின் வாசலுக்குப் போக வேண்டிய நிலைமை வந்ததே.
என் வாழ்நாள் இப்படிக் குறுகிப் போனதே" என்று சொன்னேன்.
11 அதோடு, "'யா'வை* இனி என்னால் பார்க்க முடியாதே, இந்த உலகத்தில் என்னால் 'யா'வைப் பார்க்க முடியாதே.[a]
மனுஷர்களை இனி பார்க்க முடியாதே.
செத்துப்போனவர்களோடு நான் கிடப்பேனே.
12 மேய்ப்பனின் கூடாரம் இன்று இருக்கும், நாளை இருக்காது.
அதுபோல் என் வாழ்க்கையும் ஆகிவிட்டதே.[b]
நெய்த துணியை ஒரு நெசவாளர் தறியிலிருந்து துண்டிப்பது போல
என் வாழ்நாளை அவர் துண்டிக்கிறார்.
காலையிலிருந்து ராத்திரிவரை என்னை முடிவுக்குக் கொண்டுவருகிறார்.[c]
13 விடியும்வரை என் மனதைத் தேற்றிக்கொள்கிறேன்.
சிங்கத்தைப் போல அவர் என் எலும்புகளையெல்லாம் நொறுக்குகிறார்.
காலையிலிருந்து ராத்திரிவரை என்னை முடிவுக்குக் கொண்டுவருகிறார்.[d]
14 ஒரு குருவி* போல நான் கத்துகிறேன்.[e]
புறாவைப் போல முனகிக்கொண்டே இருக்கிறேன்.[f]
உதவிக்காக மேலே பார்த்துப் பார்த்து என் கண்கள் பூத்துப்போனது.[g]
'யெகோவாவே, நான் தாங்க முடியாத வேதனையில் இருக்கிறேன்.
என்னோடு இருந்து எனக்கு உதவுங்கள்' என்று கெஞ்சுகிறேன்.[h]
15 அவருக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்?
அவர் சொன்னபடியே என்னைக் குணமாக்கினார்.
நான் எப்படி வேதனையில் துடித்தேன் என்பதை நினைத்து,
இனி என் வாழ்நாள் முழுவதும் மனத்தாழ்மையோடு* நடப்பேன்.
16 'யெகோவாவே, இவற்றால்* மனுஷன் வாழ்கிறான்.
இவற்றில்தான் என் உயிர்மூச்சு இருக்கிறது.
நீங்கள் என்னைக் குணமாக்கி என் உயிரைக் காப்பாற்றுவீர்கள்.[i]
17 நான் நிம்மதியே இல்லாமல் வேதனையில் தவித்தபோது,
நீங்கள் என்மேல் பாசம் காட்டினீர்கள்.
நான் சாகாதபடி பார்த்துக்கொண்டீர்கள்.[j]
என்னுடைய பாவங்களையெல்லாம் உங்கள் முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்தீர்கள்.[k]
18 கல்லறையில் இருப்பவர்களால் உங்களை மகிமைப்படுத்த முடியாது.[l]

38:11 *"யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **38:14** *அல்லது, "கொக்கு." **38:15** *வே.வா., "பயபக்தியோடு." **38:16** *அதாவது, "கடவுள் சொன்னவற்றாலும் செய்தவற்றாலும்."

அதி. 38
a சங் 6:5, பிர 9:5
b சங் 146:4, பிர 8:8
c யோபு 17:1
d சங் 39:10
e சங் 102:7
f ஏசா 59:11
g சங் 39:7
h சங் 39:12, சங் 119:82, 123
i 1சா 2:6, யோபு 33:28, சங் 71:20
j சங் 30:3, சங் 86:13, யோனா 2:6
k ஏசா 43:25, மீ 7:18
l சங் 30:9

செத்துப்போனவர்களால் உங்களைப் புகழ முடியாது.[a]
குழிக்குள் போகிறவர்களால் உங்கள்மேல் நம்பிக்கை வைக்க
முடியாது.*[b]
19 உயிரோடு இருக்கிறவர்களால் மட்டும்தான் உங்களைப் புகழ முடியும்.
நான் இன்று உங்களைப் புகழ்வது போல அவர்களால் புகழ முடியும்.
ஒரு அப்பாவால் தன்னுடைய மகன்களுக்கு உங்களைப் பற்றி*
கற்றுத்தர முடியும்.[c]
20 யெகோவாவே, என்னைக் காப்பாற்றுங்கள்.
அப்போது, யெகோவாவாகிய உங்கள் ஆலயத்தில் நாங்கள்
எல்லாரும் வாழ்நாளெல்லாம்
நரம்பிசைக் கருவிகளை இசைத்து என் பாடல்களைப் பாடுவோம்' "[d]
என்று சொன்னேன்.

21 பின்பு ஏசாயா, "ஒரு அத்திப்பழ அடையைக் கொண்டுவந்து, எசேக்
கியாவின் கொப்புளத்தின் மேல் வைத்து, பத்து போடுங்கள். அப்போது
அவர் குணமடைவார்"[e] என்று சொன்னார். **22** ஏனென்றால் எசேக்கியா,
"நான் யெகோவாவின் ஆலயத்துக்குப் போவேன் என்பதற்கு என்ன
அடையாளம்?" என்று கேட்டிருந்தார்.[f]

39 எசேக்கியா வியாதிப்பட்டு குணமான விஷயத்தை பாபிலோன்
ராஜாவும் பலாதானின் மகனுமான மெரொதாக்-பலாதான் கேள்
விப்பட்டான். அதனால் கடிதங்களையும் அன்பளிப்பையும் தன்னுடைய
ஆட்களிடம் கொடுத்து அனுப்பினான்.[g] **2** அவர்களை எசேக்கியா சந்
தோஷமாக வரவேற்று தன் பொக்கிஷ அறை[h] முழுவதையும் காட்டினார்.
தங்கம், வெள்ளி, பரிமளத் தைலம், விலைமதிப்புள்ள எண்ணெய் வகை
கள் ஆகியவற்றையும், ஆயுதக்கிடங்கையும், தான் சேர்த்து வைத்திருந்த
மற்ற எல்லாவற்றையும் காட்டினார். தன் அரண்மனையிலும் ராஜ்யத்திலும்
இருந்த ஒன்றைக்கூட அவர் காட்டாமல் இருக்கவில்லை.

3 பின்பு எசேக்கியா ராஜாவிடம் ஏசாயா தீர்க்கதரிசி வந்து, "இந்த ஆட்
கள் என்ன சொன்னார்கள்? எங்கிருந்து வந்தார்கள்?" என்று கேட்டார்.
அதற்கு எசேக்கியா, "ரொம்பத் தூரத்திலிருக்கிற பாபிலோனிலிருந்து வந்தார்
கள்" என்று சொன்னார்.[i] **4** அப்போது ஏசாயா, "உங்கள் அரண்மனையில்
எதைப் பார்த்தார்கள்?" என்று கேட்டார். அதற்கு எசேக்கியா, "என் அரண்
மனையிலிருந்த எல்லாவற்றையும் பார்த்தார்கள். என்னுடைய பொக்கிஷங்
களில் ஒன்றைக்கூட நான் காட்டாமல் இருக்கவில்லை" என்றார்.

5 அப்போது ஏசாயா எசேக்கியாவிடம், "பரலோகப் படைகளின்
யெகோவா சொல்வதைக் கேளுங்கள். **6** யெகோவா சொல்வது இது
தான்:[j] 'இதோ! ஒரு காலம் வரும், அப்போது உன் அரண்மனையில் இருக்
கிற எல்லா பொருள்களும், இதுவரை உன் முன்னோர்கள் சேர்த்து வைத்த
எல்லா பொருள்களும் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும், எதுவுமே
விட்டுவைக்கப்படாது.[k] **7** உனக்குப் பிறக்கப்போகிற மகன்கள் சிலரும்
பிடித்துக்கொண்டு போகப்படுவார்கள். அவர்கள் பாபிலோன் ராஜாவின்
அரண்மனையில் அதிகாரிகளாக இருப்பார்கள்' "[l] என்று சொன்னார்.

38:18 *வே.வா., "நீங்கள் நம்பகமானவர் என்பதை உணர முடியாது." **38:19** *வே.வா., "உங்கள் நம்பகத்தன்மையைப் பற்றி."

அதி. 38
a சங் 6:5; சங் 115:17
b பிர 9:5, 10
c ஆதி 18:19; உபா 4:9; யோசு 4:21-24
d 2ரா 20:5; சங் 30:11, 12; சங் 84:2
e 2ரா 20:7
f 2ரா 20:8

அதி. 39
g 2ரா 20:5; 2ரா 20:12, 13; 2நா 32:23
h 2நா 32:27
i 2ரா 20:14, 15
j 2ரா 20:16-18
k 2ரா 24:11, 13; 2ரா 25:13; 2நா 36:18; தானி 1:1, 2
l 2ரா 24:12; தானி 2:49; தானி 5:29

8 அதற்கு எசேக்கியா, “யெகோவா சொன்னது நியாயம்தான். என்னு
டைய வாழ்நாளிலாவது சமாதானமும் பாதுகாப்பும்* இருக்குமே!” என்றார்.[a]

40 “ஆறுதல் சொல்லுங்கள், என் ஜனங்களுக்கு ஆறுதல்
சொல்லுங்கள்” என்று உங்கள் கடவுள் சொல்கிறார்.[b]
2 “எருசலேம் ஜனங்களின் உள்ளத்தைத் தொடும் விதத்தில்* பேசுங்கள்.
அவர்களுடைய கஷ்ட காலம் முடிந்தது என்று சொல்லுங்கள்.
அவர்கள் செய்த குற்றங்களுக்கான தண்டனை கொடுக்கப்பட்டது.[c]
அவர்கள் செய்த பாவங்களுக்கான கூலியை யெகோவாவின்
கையிலிருந்து முழுமையாக# வாங்கிவிட்டார்கள்.”[d]
3 வனாந்தரத்தில் ஒருவர்,
“யெகோவாவுக்கு வழியைத் தயார்படுத்துங்கள்!*[e]
நம் கடவுளுக்காக பாலைவனத்தில்[f] ஒரு சமமான நெடுஞ்சாலையை
அமையுங்கள்.[g]
4 எல்லா பள்ளத்தாக்குகளையும் உயர்த்துங்கள்.
எல்லா மலைகளையும் குன்றுகளையும் தாழ்த்துங்கள்.
மேடுபள்ளமான நிலத்தைச் சமமாக்குங்கள்.
கரடுமுரடான நிலத்தைச் சமவெளியாக்குங்கள்.[h]
5 யெகோவா தன்னுடைய மகிமையைக் காட்டுவார்.[i]
ஜனங்கள் எல்லாரும் அதைப் பார்ப்பார்கள்.[j]
யெகோவாவே இதைச் சொல்லியிருக்கிறார்” என்று சத்தமாகச்
சொல்கிறார்.
6 கேள்! யாரோ ஒருவர், “அறிவிப்பு செய்!” என்று சொல்கிறார்.
“எதை அறிவிப்பு செய்ய வேண்டும்?” என்று இன்னொருவர் கேட்கிறார்.
“மனுஷர்கள் எல்லாரும் பசும்புல்லைப் போல் இருக்கிறார்கள்.
அவர்கள் காட்டும் விசுவாசம்* புல்வெளிப் பூவைப் போல் இருக்கிறது.[k]
7 யெகோவாவின் மூச்சுக்காற்று பட்டதும்,
பசும்புல் காய்ந்துபோகிறது.
பூ வாடிப்போகிறது.[l]
உண்மையில், ஜனங்கள் பசும்புல்லைப் போலவே இருக்கிறார்கள்.
8 பசும்புல் காய்ந்துபோகிறது.
பூ வாடிப்போகிறது.
நம் கடவுளின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கிறது.”[m]
9 சீயோனுக்காக நல்ல செய்தியைக் கொண்டுவருபவளே,[n]
உயரமான மலைக்குப் போ.
எருசலேமுக்காக நல்ல செய்தியைக் கொண்டுவருபவளே,
உன் குரலை உயர்த்தி சத்தமாகச் சொல்.
பயப்படாமல் தைரியமாகச் சொல்.
“இதோ, உங்கள் கடவுள் வருகிறார்” என்று யூதாவிலுள்ள நகரங்களில்
சொல்.[o]

39:8 *வே.வா., “உண்மையும்.” **40:2** *வே.வா., “இதயத்துக்கு இதமாக.” #வே.வா., “இரண்டு மடங்காக.” **40:3** *வே.வா., “சரிசெய்யுங்கள்.” **40:6** *வே.வா., “மாறாத அன்பு.”

அதி. 39
a 2ரா 20:19

அதி. 40
b ஏசா 49:13; ஏசா 51:3; 2கொ 1:3, 4
c சங் 79:8, 9; எரே 31:34; எரே 33:8
d எரே 16:18; தானி 9:11, 12
e ஏசா 35:8; ஏசா 57:14; மல் 3:1
f மத் 3:1, 3; மாற் 1:2–4; லூ 3:3–6; யோவா 1:23
g ஏசா 11:16
h ஏசா 42:16
i ஏசா 24:15
j ஏசா 49:6; ஏசா 52:10
k யோபு 14:1, 2; சங் 90:5, 6
l சங் 103:15, 16; யாக் 1:11
m ஏசா 46:10; 1பே 1:24, 25
n ஏசா 52:7
o ஏசா 12:2; ஏசா 25:9

10 உன்னதப் பேரரசராகிய யெகோவா பலம்படைத்தவராக வருவார்.
அவருடைய கை அவருக்காக ஆட்சி செய்யும்.[a]
இதோ! அவர் பரிசை எடுத்துக்கொண்டு வருகிறார்.
கொடுக்கப்போகிற கூலியை எடுத்துக்கொண்டு வருகிறார்.[b]
11 ஒரு மேய்ப்பனைப் போல அவர் தன்னுடைய மந்தையைக் கவனித்துக்கொள்வார்.*[c]
ஆட்டுக்குட்டிகளைத் தன்னுடைய கைகளால் வாரிக்கொள்வார்.
அவற்றைத் தன் நெஞ்சில் வைத்து சுமப்பார்.
கறவை# ஆடுகளை மெதுவாக△ நடத்திக்கொண்டு போவார்.[d]
12 கடல் தண்ணீரையெல்லாம் கையால் அள்ளி அளந்தவன் யார்?[e]
வானத்தைக் கையால் முழம்போட்டு அளந்தவன் யார்?
பூமியின் மண்ணைப் படியால் அளந்தவன் யார்?[f]
மலைகளை எடைபோட்டுப் பார்த்தவன் யார்?
குன்றுகளைத் தராசில் நிறுத்தியவன் யார்?
13 யெகோவாவின் சக்தியை அளந்தவன்* யார்?
அவருக்கே ஆலோசனை சொல்ல முடிந்தவன் யார்?[g]
14 அவர் யாரிடம் அறிவுரை கேட்டுப் புரிந்துகொண்டார்?
அவருக்கு நியாயத்தைச் சொல்லிக்கொடுக்கிறவன் யார்?
அவருக்கு அறிவு புகட்டுகிறவன் யார்?
உண்மைகளைப் புரிந்துகொள்ள அவருக்கு உதவுகிறவன்* யார்?[h]
15 இதோ, தேசங்களெல்லாம் வாளியிலிருந்து சிந்தும் ஒரு துளி தண்ணீரைப் போலவும்,
தராசில் படிந்திருக்கும் தூசி போலவும் இருக்கின்றன.[i]
இதோ, அவர் தீவுகளைப் புழுதிபோல் தூக்குகிறார்.
16 பலிபீடத்தில் எரிப்பதற்கு லீபனோனில் இருக்கும் மரங்கள்கூட போதாது.
தகன பலி செலுத்துவதற்கு அங்கிருக்கும் மிருகங்களும் போதாது.
17 தேசங்களெல்லாம் அவருக்கு முன்னால் ஒன்றுமே இல்லை.[j]
அவையெல்லாம் அவருக்கு வீணானவை, வெறுமையானவை.[k]
18 கடவுளை நீங்கள் யாருக்கு ஒப்பிடுவீர்கள்?[l]
யாருடைய சாயலுக்கு ஒப்பிடுவீர்கள்?[m]
19 கைத்தொழிலாளி ஒரு சிலையைச் செய்கிறான்.
ஆசாரி அதற்குத் தங்கத் தகடு அடிக்கிறான்.[n]
வெள்ளிச் சங்கிலிகளைச் செய்கிறான்.
20 சிலையைச் செய்வதற்காக ஒருவன் ஒரு மரத்தைத் தேர்ந்தெடுக்கிறான்.[o]
உளுத்துப்போகாத மரமாகப் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறான்.
விழாமல் நிற்கிற ஒரு சிலையைச் செதுக்குவதற்காக
திறமையான கைத்தொழிலாளியைத் தேடிக் கண்டுபிடிக்கிறான்.[p]
21 உங்களுக்குத் தெரியாதா?

40:11 *வே.வா., “மேய்ப்பார்.” #அதாவது, “குட்டிகளுக்குப் பாலூட்டுகிற.” △வே.வா., “மென்மையாக.” **40:13** *அல்லது, “புரிந்துகொண்டவன்.” **40:14** *வே.வா., “உண்மையான புரிந்துகொள்ளுதலின் வழியை அவருக்குக் காட்டுபவன்.”

அதி. 40
a ஏசா 53:1; யோவா 12:37, 38
b ஏசா 62:11; வெளி 22:12
c ஏசா 49:10; எசே 34:15, 16; 1பே 2:25
d ஆதி 33:13; 1பே 5:2, 3
e நீதி 30:4
f யோபு 38:4, 5
g யோபு 36:22, 23; ரோ 11:34; 1கொ 2:16
h சங் 147:5
i சங் 62:9
j தானி 4:35
k ஏசா 41:11, 12
l யாத் 8:10; சங் 86:8; எரே 10:6, 7
m உபா 4:15, 16; அப் 17:29
n சங் 115:4-8
o ஏசா 44:14, 15
p ஏசா 41:7; ஏசா 46:6, 7; எரே 10:3, 4

நீங்கள் கேள்விப்பட்டது கிடையாதா?
ஆரம்பத்திலிருந்தே யாரும் உங்களுக்குச் சொன்னதில்லையா?
பூமி உண்டான சமயத்திலிருந்தே தெளிவாகத் தெரிவதை நீங்கள்
இன்னும் புரிந்துகொள்ளவில்லையா?[a]
22 உருண்டையான* பூமிக்கு மேலே கடவுள் குடியிருக்கிறார்.[b]
பூமியில் வாழ்கிற மனுஷர்கள் அவருக்கு முன்னால்
வெட்டுக்கிளிகள்போல் இருக்கிறார்கள்.
லேசான வலைத்துணியை விரிப்பதுபோல் அவர் வானத்தை
விரிக்கிறார்.
குடியிருப்பதற்கான கூடாரம்போல் அதை அமைக்கிறார்.[c]
23 உயர் அதிகாரிகளின் அதிகாரத்தை அவர் பறிக்கிறார்.
நீதிபதிகளை* ஒன்றுக்கும் உதவாதவர்களாக ஆக்குகிறார்.
24 அவர்கள் நடப்படுவதற்குள்ளே,
விதைக்கப்படுவதற்குள்ளே,
வேரூன்றுவதற்குள்ளே,
அவர்கள்மேல் ஊதுகிறார்; அவர்கள் பட்டுப்போகிறார்கள்.
பதரைப் போல் காற்றில் அடித்துச் செல்லப்படுகிறார்கள்.[d]
25 "என்னை யாரோடு ஒப்பிடுவீர்கள், யாருக்குச் சமமாக்குவீர்கள்?" என்று
பரிசுத்தமானவர் கேட்கிறார்.
26 "வானத்தை அண்ணாந்து பாருங்கள்.
அங்கே இருக்கும் நட்சத்திரங்களைப் படைத்தது யார்?[e]
அவற்றை ஒவ்வொன்றாக எண்ணி ஒரு படைபோல் கொண்டுவந்து
நிறுத்தியிருக்கிற கடவுள்தான் அவர்.
அவை ஒவ்வொன்றையும் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறார்.[f]
அவருடைய அபாரமான ஆற்றலினாலும் பிரமிக்க வைக்கிற
பலத்தினாலும்,[g]
அவற்றில் ஒன்றுகூட குறையாமல் இருக்கிறது.
27 யாக்கோபே, இஸ்ரவேலே,
'என் வழியை யெகோவா பார்ப்பதில்லை,
அவர் எனக்கு நியாயம் செய்வதில்லை' என்று ஏன் சொல்கிறாய்?[h]
28 உனக்குத் தெரியாதா, நீ கேள்விப்பட்டதில்லையா?
பூமியிலுள்ள எல்லாவற்றையும் படைத்த யெகோவாவே என்றென்றும்
கடவுளாக இருக்கிறார்.[i]
அவர் சோர்ந்துபோவதும் இல்லை, களைத்துப்போவதும் இல்லை.[j]
அவர் புரிந்து வைத்திருக்கிற விஷயங்களை நம்மால்
புரிந்துகொள்ளவே முடியாது.*[k]
29 சோர்ந்துபோகிறவர்களுக்கு அவர் சக்தி கொடுக்கிறார்.
தெம்பு இல்லாதவர்களுக்கு எல்லா பலமும் கொடுக்கிறார்.[l]
30 சிறுவர்கள் சோர்வடைந்து களைத்துப்போகலாம்,
வாலிபர்களும் தடுமாறி விழலாம்,

40:22 *வே.வா., "வட்டமான." **40:23** *வே.வா., "ஆட்சியாளர்களை." **40:28** *வே.வா., "அவருடைய புரிந்துகொள்ளும் திறன் நம் அறிவுக்கு எட்டாதது."

அதி. 40
a சங் 19:1 ரோ 1:20
b ஏசா 66:1
c ஏசா 44:24 எரே 10:12 சக 12:1
d 1ரா 21:20, 21 2ரா 10:10, 11 எரே 22: 24, 30
e சங் 102:25
f சங் 147:4
g சங் 89:13
h ஏசா 49:14 எசே 37:11
i ஆதி 21:33 சங் 90:2 எரே 10:10 1தீ 1:17
j சங் 121:4 ஏசா 27:3
k சங் 139:4, 6 சங் 147:5 ஏசா 55:9 ரோ 11:33 1கொ 2:16
l சங் 29:11 ஏசா 40:26 பிலி 4:13 எபி 11:33, 34

31 ஆனால், யெகோவாவை நம்புகிறவர்கள் புதுத்தெம்பு பெறுவார்கள்.
கழுகுகளைப் போல இறக்கைகளை விரித்து உயரமாகப் பறப்பார்கள்.[a]
ஓடினாலும் களைத்துப்போக மாட்டார்கள்.
நடந்தாலும் சோர்ந்துபோக மாட்டார்கள்.”[b]

41 “தீவுகளே, நான் சொல்வதை அமைதியாகக் கேளுங்கள்.*
தேசங்களே, புது பலத்தோடு என்னிடம் வாருங்கள்.
வந்து உங்கள் வழக்கைச் சொல்லுங்கள்.[c]
என் தீர்ப்பைக் கேட்க வாருங்கள்.
2 கிழக்கிலிருந்து ஒருவரை வர வைப்பது யார்?[d]
நீதியை நிறைவேற்ற அவரைக் கூப்பிடுவது யார்?
தேசங்களை அவர் கையில் கொடுப்பது யார்?
ராஜாக்களை அவர் முன்னால் தோற்கடிப்பது யார்?[e]
அவருடைய வாளுக்கு முன்னால் அவர்களைத் தூசிபோல் ஆக்குவது யார்?
அவருடைய அம்புக்கு முன்னால் அவர்களைப் பறந்துபோகும் பதரைப் போல் ஆக்குவது யார்?
3 எந்தத் தடையும் இல்லாமல் அவர்களை அவர் துரத்திக்கொண்டு போகிறார்.
இதுவரை போகாத வழியில் போகிறார்.
4 இதையெல்லாம் செய்து முடித்தது யார்?
ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு தலைமுறையையும் கூப்பிட்டது யார்?
முதலிலிருந்தே இருப்பவர் யெகோவாவாகிய நான்தான்.[f]
தலைமுறைகள் வந்து போகலாம்; ஆனால், கடைசி வரைக்கும் மாறாமல் இருக்கப்போகிறவர் நான்தான்.”[g]
5 தீவுகள் அதைப் பார்த்து கதிகலங்குகின்றன.
பூமியெங்கும் இருக்கிறவர்கள் நடுநடுங்குகிறார்கள்.
எல்லாரும் ஒன்றாகக் கூடி வருகிறார்கள்.
6 அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து,
“பயப்படாதீர்கள்” என்று சொல்கிறார்கள்.
7 கைத்தொழிலாளி தங்க ஆசாரியை[h] உற்சாகப்படுத்துகிறான்.
தங்கத்தைச் சுத்தியால் அடித்து தட்டையாக்குகிறவனோ,
அதைப் பட்டறைக்கல் மேல் வைத்து வடிவமைக்கிறவனை உற்சாகப்படுத்துகிறான்.
பற்ற வைக்கிற வேலை முடிந்ததும், “அருமையாக இருக்கிறது” என்று சொல்கிறான்.
பின்பு, சிலை விழாமல் இருப்பதற்காக ஆணிகளை வைத்து அடிக்கிறான்.
8 “என் ஊழியனான இஸ்ரவேலே,[i]
நான் தேர்ந்தெடுத்த யாக்கோபே,[j]
என் நண்பனான ஆபிரகாமின் சந்ததியே,[k]

41:1 * வே.வா., “எனக்கு முன்னால் அமைதியாக இருங்கள்.”

அதி. 40
a சங் 103:5
b 1ரா 18:46; சங் 84:7

அதி. 41
c ஏசா 41:21
d ஏசா 44:28; ஏசா 46:11; வெளி 16:12
e ஏசா 45:1
f ஏசா 43:10; ஏசா 44:6; ஏசா 48:12; வெளி 1:8
g ஏசா 46:4; மல் 3:6; யாக் 1:17
h ஏசா 44:12; ஏசா 46:6
i யாத் 19:5, 6; லேவி 25:42
j உபா 7:6; சங் 33:12
k 2நா 20:7; யாக் 2:23

9 பூமியின் எல்லைகளிலிருந்து உன்னை நான் கூட்டிக்கொண்டு வந்தேன்.[a]
ரொம்பத் தூரத்திலிருக்கிற தேசங்களிலிருந்து வர வைத்தேன்.
நான் உன்னிடம், 'நீ என்னுடைய ஊழியன்.[b]
நான் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்; நான் உன்னை வெறுத்து ஒதுக்கவில்லை.[c]
10 பயப்படாதே, நான் உன்னோடு இருக்கிறேன்.[d]
கவலைப்படாதே, நான் உன் கடவுள்.[e]
நான் உன்னைப் பலப்படுத்துவேன், உனக்கு உதவி செய்வேன்.[f]
என்னுடைய நீதியான வலது கையால் உன்னைத் தாங்குவேன்' என்று சொன்னேன்.
11 உன்மேல் எரிச்சலாக இருக்கிறவர்கள் வெட்கப்பட்டும் கேவலப்பட்டும் போவார்கள்.[g]
உன்னோடு சண்டை போடுகிறவர்கள் அடியோடு அழிந்துபோவார்கள்.[h]
12 உன்னை எதிர்க்கிறவர்களை நீ தேடிப் பார்த்தாலும் கண்டுபிடிக்க முடியாது.
உன்னோடு போர் செய்கிறவர்கள் ஒன்றுமில்லாமல் ஆவார்கள், ஒழிந்துபோவார்கள்.[i]
13 ஏனென்றால், யெகோவாவாகிய நான் உன்னுடைய வலது கையைப் பிடித்திருக்கிறேன்.
'பயப்படாதே, நான் உனக்கு உதவி செய்வேன்'[j] என்று சொல்கிறேன்.
14 புழுவைப் போல்* இருக்கிற யாக்கோபே,[k] பயப்படாதே.
இஸ்ரவேலே, நான் உனக்கு உதவி செய்வேன்" என்று உன்னை விடுவிக்கிறவரும்[l] இஸ்ரவேலின் பரிசுத்த கடவுளுமான யெகோவா சொல்கிறார்.
15 "இதோ, போரடிக்கும் புது பலகையாக உன்னை ஆக்கியிருக்கிறேன்.[m]
கூர்மையான பற்களுள்ள போரடிக்கும் பலகையாக ஆக்கியிருக்கிறேன்.
நீ மலைகளை மிதித்து நொறுக்குவாய்.
குன்றுகளைத் தவிடுபொடியாக ஆக்கிவிடுவாய்.
16 உன்னுடைய எதிரிகளைத் தானியம் போலப் புடைப்பாய்.
அவர்கள் பதர் போலப் பறந்துபோவார்கள்.
புயல்காற்று அவர்களைச் சிதறிப்போக வைக்கும்.
அப்போது நீ யெகோவாவை நினைத்து சந்தோஷப்படுவாய்.[n]
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளை நினைத்துப் பெருமைப்படுவாய்."[o]
17 "ஏழை எளியவர்கள் தண்ணீருக்காகத் தேடி அலைகிறார்கள், ஆனால் தண்ணீர் கிடைப்பதில்லை.
அவர்களுடைய நாவு தாகத்தால் வறண்டுபோகிறது.[p]
யெகோவாவாகிய நான் அவர்களுக்கு உதவுவேன்.[q]
இஸ்ரவேலின் கடவுளான நான் அவர்களைக் கைவிட மாட்டேன்.[r]
18 குன்றுகளில் ஆறுகளை ஓட வைப்பேன்.[s]
சமவெளிகளில் நீரூற்றுகளை உண்டாக்குவேன்.[t]

41:14 * அதாவது, "உதவியோ பாதுகாப்போ இல்லாமல்."

அதி. 41
a சங் 107:2, 3
b ஏசா 43:10
c 1சா 12:22 எரே 33:25, 26
d உபா 20:1 சங் 46:1 ரோ 8:31
e ஏசா 60:19, 20
f உபா 33:27 சங் 115:9
g ஏசா 45:24
h ஏசா 40:17 ஏசா 60:12
i ஏசா 54:17
j உபா 33:29
k உபா 7:7
l ஏசா 43:14 ஏசா 47:4
m மீ 4:13
n ஏசா 25:9
o ஏசா 12:6
p உபா 28:48 ஆமோ 8:11
q ஏசா 30:19 ஏசா 55:1
r சங் 94:14 ஏசா 42:16 எபி 13:5
s ஏசா 30:25
t யோவே 3:18

அதி. 41
a சங் 107:35
b ஏசா 32:14, 15
ஏசா 60:21
c ஏசா 51:3
ஏசா 55:13
d எசே 39:28
e ஏசா 42:9
ஏசா 46:9, 10
ஏசா 48:5
f ஏசா 44:6, 7
g எரே 10:5
h ஏசா 44:10
எரே 10:14, 15
i உபா 7:26
உபா 27:15
சங் 115:4, 8
j ஏசா 44:28
ஏசா 45:1
எரே 51:28, 29
k ஏசா 46:11
வெளி 16:12
l மீ 7:10
m ஏசா 43:9
ஏசா 44:7
ஏசா 45:21
n ஆப 2:18, 19

வனாந்தரத்தை நாணற்புல் நிறைந்த குளமாக மாற்றுவேன்.
தண்ணீர் இல்லாத தேசத்தை நீரூற்றுகள் நிறைந்த இடமாக்குவேன்.[a]
19 பாலைவனத்தில் தேவதாரு மரங்களையும்,
வேல மரங்களையும், குழிநாவல் மரங்களையும், எண்ணெய்*
மரங்களையும் நடுவேன்.[b]
பாலைநிலத்தில் ஆபால் மரங்களையும்,
சாம்பல் மரங்களையும், ஊசியிலை மரங்களையும் நடுவேன்.[c]
20 அப்போது, யெகோவாவே அதைச் செய்தார் என்றும்,
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளே அதை உருவாக்கினார் என்றும்,
ஜனங்கள் எல்லாரும் பார்த்துத் தெரிந்துகொள்வார்கள்.
அதைக் கவனித்துப் புரிந்துகொள்வார்கள்."[d]
21 "உங்கள் வழக்கைக் கொண்டுவாருங்கள்" என்று யெகோவா
சொல்கிறார்.
"உங்கள் பக்கம் நியாயம் இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள்" என்று
யாக்கோபின் ராஜா சொல்கிறார்.
22 "சிலைகளே, ஆதாரங்களைக் காட்டுங்கள்; எதிர்காலத்தில்
நடக்கப்போவதைச் சொல்லுங்கள்.
ஆரம்பக் காலத்தில் நடந்த விஷயங்களை எங்களுக்குச் சொல்லுங்கள்.
அதைப் பற்றியும் அதனுடைய விளைவுகளைப் பற்றியும் நாங்கள்
யோசித்துப் பார்த்துத் தெரிந்துகொள்கிறோம்.
இல்லையென்றால், நடக்கப்போவதை எங்களுக்குச் சொல்லுங்கள்.[e]
23 எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று சொல்லுங்கள்.
அப்போதுதான், நீங்கள் எல்லாரும் தெய்வங்கள் என்று நாங்கள்
ஒத்துக்கொள்வோம்.[f]
நாங்கள் பார்த்து ஆச்சரியப்படுகிறபடி
நல்லதையோ கெட்டதையோ செய்து காட்டுங்கள்.[g]
24 நீங்கள் நிஜம் அல்ல, வெறும் கற்பனைதான்.
நீங்கள் எதையும் சாதித்தது கிடையாது.[h]
உங்களை வணங்குகிறவர்கள் அருவருப்பானவர்கள்.[i]
25 நான் வடக்கிலிருந்து ஒருவரைப் புறப்பட வைப்பேன், அவர் வருவார்.[j]
சூரியன் உதிக்கும் திசையிலிருந்து வருகிறவர்[k] என் பெயரை
மகிமைப்படுத்துவார்.
பானைகளைச் செய்கிறவன் ஈரமான களிமண்ணை மிதிப்பதுபோல்,[l]
ஆட்சியாளர்களை* அவர் மிதிப்பார்.
26 இதையெல்லாம் ஆரம்பத்திலிருந்தே யாராவது சொன்னார்களா?
அப்படிச் சொல்லியிருந்தால், 'சரியாகச் சொன்னார்கள்' என்று நாங்கள்
ஒத்துக்கொண்டு இருப்போமே![m]
ஆனால், எந்தத் தெய்வமும் அதைச் சொல்லவில்லையே!
எதையுமே அறிவிக்கவில்லையே!
நீங்கள் யாருமே வாய் திறக்கவில்லையே!"[n]

41:19 *வே.வா., "பைன்." **41:25** *வே.வா., "துணை ஆட்சியாளர்களை."

27 “இதோ, நடக்கப்போவதைப் பாருங்கள்!” என்று சீயோனுக்கு
முதன்முதலில் சொன்னது நான்தான்.[a]
எருசலேமுக்கு நல்ல செய்தி சொல்ல நான் ஒருவரை அனுப்புவேன்.[b]
28 என்னுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்கும் அறிவுரை
சொல்வதற்கும்
யாராவது இருக்கிறார்களா என்று தேடினேன்.
ஆனால், ஒருவர்கூட இல்லை.
29 ஏனென்றால், அவர்கள் எல்லாருமே வெறும் கற்பனைதான்.
மனுஷனுடைய கைவேலைகள் வீணானவை.
அவனுடைய உலோகச் சிலைகள் வெறும் காற்றுதான்,
வெறுமையானவைதான்.[c]

42 இதோ! இவர்தான் என்னுடைய ஊழியர்,[d] இவருக்கு நான்
துணையாக இருக்கிறேன்.
இவரை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்,[e] இவரை நான்
ஏற்றுக்கொள்கிறேன்.*[f]
என்னுடைய சக்தியை இவருக்குத் தந்திருக்கிறேன்.[g]
எல்லா தேசத்து ஜனங்களுக்கும் இவர் நியாயம் செய்வார்.[h]
2 இவர் சத்தம்போட்டுப் பேசவோ, குரலை உயர்த்திப் பேசவோ,
தெருவில் எல்லாரும் கேட்கும்படி கத்திப் பேசவோ மாட்டார்.[i]
3 மிதிபட்ட எந்த நாணலையும் ஒடித்துப்போட மாட்டார்.
மங்கியெரிகிற எந்தத் திரியையும் அணைக்க மாட்டார்.[j]
இவர் உண்மைத்தன்மையோடு* நியாயம் செய்வார்.[k]
4 இந்த உலகத்தில் நியாயத்தை நிலைநாட்டுகிற வரைக்கும் ஓய மாட்டார்,
சோர்ந்துபோக மாட்டார்.[l]
தீவுகளில் இருக்கிற ஜனங்கள் இவருடைய சட்டத்துக்காக*
காத்திருப்பார்கள்.
5 யெகோவாதான் உண்மையான கடவுள்.
வானத்தைப் படைத்தவர் அவர்தான், அதை விரித்தவர் அவர்தான்.[m]
பூமியையும் அதில் உள்ள எல்லாவற்றையும் உண்டாக்கியவர்
அவர்தான்.[n]
எல்லாருக்கும் உயிர்மூச்சு கொடுத்தவரும்,[o] பூமியில் நடமாடுகிற
எல்லாருக்கும் உயிர் கொடுத்தவரும் அவர்தான்.[p]
அவர் இப்படிச் சொல்கிறார்:
6 “யெகோவாவாகிய நான் நீதி செய்கிற கடவுள். அதனால்தான் உன்னை
அழைத்தேன்.
உன் கையைக் கெட்டியாகப் பிடித்திருக்கிறேன்.
நான் உன்னைப் பாதுகாப்பேன்; ஜனங்களுக்கு உன்னை ஒரு
உத்தரவாதமாக* கொடுக்கப்போகிறேன்.[q]
தேசங்களுக்கு ஒளியாக ஆக்கப்போகிறேன்.[r]

42:1 *வே.வா., “அங்கீகரிக்கிறேன்; இவர்மேல் பிரியமாக இருக்கிறேன்.” **42:3** *வே.வா., “நம்பகத்தன்மையோடு.” **42:4** *வே.வா., “அறிவுரைக்காக.” **42:6** *நே.மொ., “ஒப்பந்தமாக.”

அதி. 41
a ஏசா 43:10
b எஸ்றா 1:1, 2; ஏசா 40:9
c சங் 115:4-8; ஏசா 44:9; 1கொ 8:4

அதி. 42
d ஏசா 52:13
e ஏசா 49:7; லூ 9:35
f மத் 3:17; யோவா 6:27; 2பே 1:17
g ஏசா 61:1; மத் 3:16
h மத் 12:15-18
i சக 9:9; மத் 12:16, 19
j மத் 11:28, 29; எபி 2:17
k ஏசா 11:3, 4; மத் 12:20; யோவா 5:30; வெளி 19:11
l ஏசா 9:7; ஏசா 49:8
m ஏசா 40:22, 26
n எரே 10:12
o ஆதி 2:7; அப் 17:24, 25
p யோபு 12:10
q ஏசா 49:8
r ஏசா 49:6; லூ 2:29-32; யோவா 8:12

7 கண் தெரியாதவர்களுடைய கண்களை நீ திறக்க வேண்டும்.[a]
கைதியை இருட்டறையிலிருந்தும்,
இருட்டில் இருக்கிறவர்களைச் சிறையிலிருந்தும் வெளியே கொண்டுவர வேண்டும்.[b]
8 நான் யெகோவா. அதுதான் என்னுடைய பெயர்.
என்னுடைய மகிமையை யாருக்கும் கொடுக்க மாட்டேன்.
என்னுடைய புகழை எந்தச் சிலைக்கும் கொடுக்க மாட்டேன்.[c]
9 நான் ஆரம்பத்தில் சொன்னதெல்லாம் நடந்திருக்கிறது.
இப்போது புதிய விஷயங்களைச் சொல்லப்போகிறேன்.
அதெல்லாம் நடப்பதற்கு முன்பே உங்களிடம் சொல்கிறேன்."[d]
10 யெகோவாவுக்கு ஒரு புதிய பாட்டுப் பாடுங்கள்.[e]
பூமியெங்கும் இருக்கிற எல்லாரும் அவரைப் புகழ்ந்து பாடுங்கள்.[f]
கடலின் நடுவிலும் கடல் பிராணிகளின் மத்தியிலும் பயணம் செய்கிறவர்களே,
தீவுகளே, அவற்றில் குடியிருக்கிறவர்களே, அவரைப் புகழ்ந்து பாடுங்கள்.[g]
11 வனாந்தரங்களும், நகரங்களும்,
கேதாரியர்கள்[h] குடியிருக்கிற கிராமங்களும் சத்தமாகப் பாடட்டும்.[i]
கற்பாறைப் பகுதிகளில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷமாகப் பாடட்டும்.
மலை உச்சியிலிருந்து சத்தமாகப் பாடிப் புகழட்டும்.
12 யெகோவாவுக்கு அவர்கள் மகிமை சேர்க்கட்டும்.
தீவுகளில் அவரைப் பற்றி மெச்சிப் பேசட்டும்.[j]
13 ஒரு பலசாலிபோல் யெகோவா புறப்பட்டுப் போவார்.[k]
ஒரு போர்வீரனைப் போல வைராக்கியமாகக் கிளம்புவார்.[l]
அவர் போர் முழக்கம் செய்வார்.
எதிரிகளைவிட பலமானவர் என்று காட்டுவார்.[m]
14 "நான் ரொம்பக் காலமாகப் பேசாமல் இருந்தேன்.
என்னையே அடக்கிக்கொண்டு அமைதியாக இருந்தேன்.
ஆனால் மூச்சு இரைக்க, மூச்சுத் திணற, முக்கி முனகி
குழந்தையைப் பெற்றெடுக்கிற பெண்ணைப் போல இனி நான் ஆவேன்.
15 மலைகளையும் குன்றுகளையும் நாசமாக்குவேன்.
அவற்றில் இருக்கிற செடிகொடிகளைப் பட்டுப்போக வைப்பேன்.
ஆறுகளையெல்லாம் வறண்ட நிலமாக* மாற்றுவேன்.
நாணல் நிறைந்த குளங்களை வற்றிப்போக வைப்பேன்.[n]
16 கண் தெரியாதவர்களை அவர்கள் இதுவரை போகாத வழியில் கூட்டிக்கொண்டு போவேன்.[o]
அவர்களுக்குப் பழக்கமில்லாத வழியிலே நடக்க வைப்பேன்.[p]
அவர்களுக்கு முன்னால் இருக்கிற இருட்டை வெளிச்சமாக மாற்றுவேன்.[q]

அதி. 42
a ஏசா 35:5
b ஏசா 61:1; 1பே 2:9
c யாத் 34:14
d ஏசா 41:23; ஏசா 43:19; 2பே 1:21
e சங் 96:1; சங் 98:1; வெளி 14:3
f ஏசா 44:23
g ஏசா 51:5
h ஆதி 25:13; ஏசா 60:7
i ஏசா 35:1
j சங் 22:27; ஏசா 24:15; ஏசா 66:19
k ஏசா 59:17
l யாத் 15:3
m 1சா 2:10
n சங் 107:33; ஏசா 44:27; ஏசா 50:2
o ஏசா 29:18; ஏசா 35:5; எரே 31:8
p ஏசா 30:21
q ஏசா 60:1, 20

42:15 * நே.மொ., "தீவுகளாக."

கரடுமுரடான பாதையைச் சமமாக்குவேன்.[a]
அவர்களுக்காக இதையெல்லாம் செய்வேன், அவர்களைக் கைவிட மாட்டேன்.”
17 செதுக்கப்பட்ட சிலைகள்மேல் நம்பிக்கை வைக்கிறவர்களும்
உலோகச் சிலைகளைப் பார்த்து, “எங்கள் கடவுளே” என்று சொல்கிறவர்களும்
ரொம்பவே அவமானப்பட்டு, கேவலப்பட்டுப் போவார்கள்.[b]
18 காது கேட்காதவர்களே, கேளுங்கள்.
கண் தெரியாதவர்களே, பாருங்கள்.[c]
19 என் ஊழியனைப் போலக் குருடர்கள் யாராவது உண்டா?
நான் அனுப்பிய தூதுவனைப் போலச் செவிடர்கள் யாராவது உண்டா?
பலன் பெற்றவனைப் போலவும் யெகோவாவின் ஊழியனைப் போலவும்
கொஞ்சம்கூட கண் தெரியாமல் இருப்பது யார்?[d]
20 உன் கண் திறந்தே இருந்தாலும் நீ எதையும் கவனிப்பதே இல்லை.
உன் காது திறந்தே இருந்தாலும் நீ எதையும் கேட்பதே இல்லை.[e]
21 யெகோவா தன்னுடைய நீதியின் காரணமாக,
தன்னுடைய சட்டத்தை* சிறப்பித்துக் காட்டுவதிலும் மகிமைப்படுத்துவதிலும் சந்தோஷப்பட்டார்.
22 ஆனால், இந்த ஜனங்கள் கொள்ளையடிக்கப்பட்டார்கள், சூறையாடப்பட்டார்கள்.[f]
எல்லாருமே குகையிலும் சிறையிலும் மாட்டிக்கொண்டார்கள்.[g]
காப்பாற்றுவதற்கு யாருமே இல்லை, எல்லாருமே கொள்ளையடிக்கப்பட்டார்கள்.[h]
“திருப்பி அனுப்புங்கள்” என்று சொல்வதற்குக்கூட யாருமே இல்லை.
23 இதைக் கவனித்துக் கேட்கிறவன் யார்?
எதிர்காலத்துக்குப் பிரயோஜனமான விஷயங்களைக் கவனமாகக் கேட்கிறவன் யார்?
24 யாக்கோபைச் சூறையாட அனுமதித்தது யார்?
இஸ்ரவேலைக் கொள்ளையடிக்க அனுமதித்தது யார்?
யெகோவாதானே அனுமதித்தார்? அவர்கள் அவருக்கு எதிராகப் பாவம் செய்தார்கள்.
அவருடைய வழியில் நடக்காமல்போனார்கள்.
அவருடைய சட்டத்துக்கு* கீழ்ப்படியாமல்போனார்கள்.[i]
25 அதனால் அவருடைய கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் கொட்டினார்.
ஆக்ரோஷத்தில் பயங்கரமான போர்களை வர வைத்தார்.[j]
அவர்களிடம் இருந்த எல்லாமே பாழாய்ப் போனது, நெருப்பு எல்லாவற்றையும் பொசுக்கிப்போட்டது.
அப்படியிருந்தும் யாருமே எச்சரிக்கையை மனதில்* வாங்கவில்லை.[k]

42:21 *வே.வா., “அறிவுரையை.” **42:24** *வே.வா., “அறிவுரைக்கு.” **42:25** *நே.மொ., “இதயத்தில்.”

அதி. 42
a ஏசா 40:4
b ஏசா 44:10, 11; ஏசா 45:16
c ஏசா 6:9, 10; ஏசா 43:8
d ஏசா 56:10; எரே 4:22; எசே 12:2
e எசே 33:31
f உபா 28:15, 33; எரே 50:17
g சங் 102:19, 20
h உபா 28:29, 52
i நியா 2:12, 14; 2நா 15:3, 6; சங் 106:41
j உபா 32:22; நாகூ 1:6
k ஏசா 9:13; ஏசா 57:11; எரே 5:3; ஓசி 7:9

அதி. 43
a சங் 100:3
ஏசா 43:15
ஏசா 44:2, 21
b ஏசா 44:23
எரே 50:34
c யாத் 14:29
d யோசு 3:15, 16
2ரா 2:8
e யாத் 19:5, 6
f உபா 7:8
எரே 31:3
g ஏசா 41:10
ஏசா 44:2
எரே 30:10
h உபா 30:1-3
சங் 106:47
ஏசா 66:20
எசே 36:24
மீ 2:12
சக 8:7
i எரே 3:18
j எரே 31:8
k சங் 100:3
ஏசா 29:23
l எரே 33:16
m ஏசா 6:9, 10
ஏசா 42:18, 19
n ஏசா 41:1
o ஏசா 41:21, 22
ஏசா 44:7

43 யாக்கோபே, இஸ்ரவேலே,
உன்னைப் படைத்தவரும் உருவாக்கியவருமான யெகோவா[a]
சொல்வது இதுதான்:
"பயப்படாதே, நான் உன்னை விடுவித்திருக்கிறேன்.[b]
உன் பெயரைச் சொல்லி அழைத்திருக்கிறேன்.
நீ எனக்குச் சொந்தமானவன்.
2 நீ கடலைக் கடந்து போகிறபோது நான் உன்னோடு இருப்பேன்.[c]
ஆற்றைக் கடந்து போகிறபோது அது உன்னை மூழ்கடிக்காது.[d]
நெருப்பில் நடந்தாலும் அது உன்னைச் சுட்டெரிக்காது.
தீ ஜுவாலை உன்மேல் பட்டாலும் அது உன்னைப் பொசுக்காது.
3 ஏனென்றால், நான் உன் கடவுளாகிய யெகோவா, உன் மீட்பர்.
நான் இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுள்.
எகிப்தையும் எத்தியோப்பியாவையும் சிபாவையும் மீட்புவிலையாகக் கொடுத்து
உன்னை மீட்டுக்கொண்டேன்.
4 ஏனென்றால், நீ எனக்குத் தங்கமானவன்.[e]
உன்னைக் கௌரவப்படுத்தினேன்; உன்மேல் அன்பு வைத்தேன்.[f]
அதனால், தேசங்களையும் ஜனங்களையும் மீட்புவிலையாகக் கொடுத்து
உன் உயிரைக் காப்பாற்றுவேன்.
5 பயப்படாதே, நான் உன்னோடு இருக்கிறேன்.[g]
உன்னுடைய சந்ததியை கிழக்கிலிருந்து கொண்டுவருவேன்.
மேற்கிலிருந்து உன்னைக் கூட்டிச்சேர்ப்பேன்.[h]
6 நான் வடக்கைப் பார்த்து, 'அவர்களைத் திருப்பி அனுப்பு!' என்று சொல்வேன்.[i]
தெற்கைப் பார்த்து, 'அவர்களைப் பிடித்து வைக்காதே.
தூரத்தில் இருக்கிற என் மகன்களையும்
பூமியின் எல்லைகளில் இருக்கிற என் மகள்களையும்
கூட்டிக்கொண்டு வா.[j]
7 என்னுடைய மகிமைக்காக நான் படைத்தவர்களை,
என் கையால் உண்டாக்கினவர்களை,[k]
என் பெயரால் அழைக்கப்படுகிற ஜனங்களைக்[l] கூட்டிக்கொண்டு வா' என்று சொல்வேன்.
8 கண் இருந்தும் குருடாகவும்,
காது இருந்தும் செவிடாகவும் இருக்கிற ஜனங்களைக் கூட்டிக்கொண்டு வா.[m]
9 எல்லா தேசங்களும் ஒரு இடத்தில் கூடிவரட்டும்.
எல்லா ஜனங்களும் ஒன்றுகூடட்டும்.[n]
அவர்களில் யாராவது* எதிர்காலத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா?
ஆரம்ப சம்பவங்களை# யாராவது முன்கூட்டியே சொல்ல முடியுமா?[o]

43:9 * அநேகமாக, பொய் தெய்வங்களைக் குறிக்கலாம். # ஒருவேளை, எதிர்காலத்தில் முதலாவதாக நடக்கப்போவதைக் குறிக்கலாம்.

அப்படிச் சொல்வதாக இருந்தால் அது உண்மை என்று நிரூபிக்க சாட்சிகளைக் கூட்டிக்கொண்டு வரட்டும்.
மற்றவர்களும் அதைக் கேட்டு, 'இது உண்மைதான்' என்று சொல்லட்டும்."[a]
10 யெகோவா சொல்வது இதுதான்: "நீங்கள் என்னுடைய சாட்சிகளாக இருக்கிறீர்கள்.[b]
என்னைப் பற்றித் தெரிந்துகொண்டு என்மேல் விசுவாசம்* வைப்பதற்கும்,
நான் மாறாதவர் என்று புரிந்துகொள்வதற்கும்[c]
நான் தேர்ந்தெடுத்திருக்கிற என் ஊழியனே,[d]
நீ என்னுடைய சாட்சியாக இருக்கிறாய்.
எனக்கு முன்பும் சரி எனக்குப் பின்பும் சரி,
எந்தக் கடவுளும் இருந்ததில்லை.[e]
11 நான் யெகோவா,[f] என்னைத் தவிர வேறு மீட்பர் இல்லை."[g]
12 யெகோவா சொல்வது இதுதான்: "பொய் தெய்வங்களை நீங்கள் கும்பிடாமல் இருந்த சமயங்களில் நான் உங்களைக் காப்பாற்றினேன்.[h]
அப்படிக் காப்பாற்றப்போவதாக முன்கூட்டியே சொன்னேன், அதைச் செய்தேன், அதை எல்லாருக்கும் தெரியப்படுத்தினேன்.
நான்தான் கடவுள் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகளாக இருக்கிறீர்கள்.[i]
13 நான் மாறாதவர்.[j]
என் கையிலிருந்து யாராலும் எதையும் பறிக்க முடியாது.[k]
நான் செய்வதை யாராலும் தடுக்க முடியாது."[l]
14 உன்னை விடுவிக்கிறவரும்[m] இஸ்ரவேலின் பரிசுத்த கடவுளுமான யெகோவா[n] சொல்வது இதுதான்:
"உங்களுக்காக நான் பாபிலோனுக்கு ஆட்களை அனுப்பி, அதன் தாழ்ப்பாள்கள் எல்லாவற்றையும் உடைத்துப்போடுவேன்.[o]
கப்பலில் போகிற கல்தேயர்கள் அலறுவார்கள்.[p]
15 நான் யெகோவா, உங்களுடைய பரிசுத்தமான கடவுளும்[q] இஸ்ரவேலை உருவாக்கினவரும்,[r] உங்களுடைய ராஜாவும் நான்தான்."[s]
16 யெகோவா கடலைப் பிளந்தவர்.
கரைபுரண்டு ஓடுகிற ஆற்றை வற்ற வைத்தவர்.
அவற்றைக் கடப்பதற்காக வழியை உண்டாக்கியவர்.[t]
17 போர் ரதங்களையும் குதிரைகளையும் வர வைத்தவர்.[u]
பலம்படைத்த வீரர்களின் படையை வர வைத்தவர்.
அவர் சொல்வது இதுதான்: "அவர்கள் எழுந்திருக்க முடியாதபடி விழுந்துகிடப்பார்கள்.[v]
எரிகிற திரியை அணைப்பதுபோல் அவர்களை நான் அழித்துவிடுவேன்."

43:10 *வே.வா., "நம்பிக்கை."

அதி. 43
a 1ரா 18:24, 25
b அப் 1:8; வெளி 1:5
c ஏசா 41:4
d உபா 4:37
e ஏசா 44:8
f உபா 6:4
g ஏசா 12:2; ஓசி 13:4; 1தீ 2:3; யூ 25
h உபா 32:12
i ஏசா 46:9, 10
j ஏசா 41:4; வெளி 1:8
k உபா 32:39
l ஏசா 14:27; தானி 4:35
m ஏசா 44:6; ஏசா 63:16
n ஏசா 54:5
o ஏசா 45:1, 2
p எரே 50:10
q சங் 89:18
r ஏசா 43:1
s உபா 33:5; சங் 74:12; ஏசா 33:22; வெளி 11:17
t யாத் 14:16; யோசு 3:13
u யாத் 15:4
v எரே 51:39

அதி. 43
a ஏசா 42:9
b ஏசா 11:16 ஏசா 40:3
c ஏசா 41:18
d சங் 33:12 ஏசா 41:8 1பே 2:9
e ஏசா 41:17 எரே 31:9
f ஏசா 60:21
g ஏசா 64:7
h எரே 2:5 ஓசி 7:10 மீ 6:3
i ஏசா 66:3
j லேவி 3:14–16
k ஏசா 1:14, 15
l ஏசா 1:18 எரே 50:20
m சங் 25:7 சங் 79:8, 9 எசே 20:9
n எரே 31:34
o ஏசா 28:7 எரே 5:31

18 “முன்பு நடந்ததை மட்டுமே நினைத்துக்கொண்டு இருக்காதீர்கள்.
அதைப் பற்றி மட்டுமே யோசித்துக்கொண்டு இருக்காதீர்கள்.
19 இப்போது, நான் புதிதாக என்ன செய்யப்போகிறேன் என்று பாருங்கள்.[a]
அதை ஏற்கெனவே செய்ய ஆரம்பித்துவிட்டேன்.
அது உங்களுக்குத் தெரியவில்லையா?
நான் வனாந்தரத்தில் ஒரு வழியை உண்டாக்குவேன்.[b]
பாலைவனத்தில் ஆறுகளை ஓட வைப்பேன்.[c]
20 நான் தேர்ந்தெடுத்த என் ஜனங்கள்[d] குடிப்பதற்காக
வனாந்தரத்தில் தண்ணீரை வர வைப்பேன்.
பாலைவனத்தில் ஆறுகளை ஓட வைப்பேன்.[e]
அதனால் நரிகளும் நெருப்புக்கோழிகளும்,
கொடிய மிருகங்களும்கூட என்னைப் புகழும்.
21 என் ஜனங்களை எனக்காகப் படைத்தேன்.
அவர்கள் என் புகழைப் பரப்ப வேண்டும் என்பதற்காக அவர்களை உருவாக்கினேன்.[f]
22 ஆனால் யாக்கோபே, இஸ்ரவேலே, நீ உதவிக்காக என்னைக் கூப்பிடவில்லை.[g]
ஏனென்றால், என்னை வணங்குவதே உனக்குச் சலிப்பாகிவிட்டது.[h]
23 தகன பலி கொடுப்பதற்காகச் செம்மறியாடுகளை நீ கொண்டுவரவில்லை.
பலிகளைக் கொடுத்து என்னை மகிமைப்படுத்தவில்லை.
எனக்குக் காணிக்கை கொண்டுவரச் சொல்லி உன்னை நான் கட்டாயப்படுத்தவில்லையே.
சாம்பிராணி கொண்டுவரச் சொல்லி உன்னை வற்புறுத்தவில்லையே.[i]
24 எனக்காக நீ பணம் செலவழித்து வாசனையான வசம்பை வாங்கி வரவில்லை.
உன்னுடைய பலிகளின் கொழுப்பைக் கொடுத்து என்னைச் சந்தோஷப்படுத்தவில்லை.[j]
அதற்குப் பதிலாக, நீ பாவத்துக்குமேல் பாவம்தான் செய்திருக்கிறாய்.
அதையெல்லாம் பார்த்து எனக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.[k]
25 நீ செய்த குற்றத்தையெல்லாம் துடைத்து அழிக்கிறவர் நான்தான்;[l]
என்னுடைய பெயருக்காகத்தான் இதைச் செய்கிறேன்.[m]
நீ செய்த பாவத்தையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டிருக்க மாட்டேன்.[n]
26 வா, நாம் ஒருவரோடு ஒருவர் வழக்காடலாம்; எனக்கு ஞாபகப்படுத்து.
உன் பக்கம் நியாயம் இருந்தால் அதை நிரூபித்துக் காட்டு.
27 உன்னுடைய முதல் தகப்பன்* பாவம் செய்துவிட்டான்.
உன் சார்பாகப் பேசுகிறவர்களும்# என் பேச்சை மீறிவிட்டார்கள்.[o]
28 அதனால், ஆலயத்தில் அதிகாரம் செய்துகொண்டு இருக்கிறவர்களை நான் அவமானப்படுத்துவேன்.

43:27 * அதாவது, “ஆதாம்.” # ஒருவேளை, திருச்சட்டத்தைக் கற்றுக்கொடுப்பவர்களைக் குறிக்கலாம்.

மற்றவர்கள் யாக்கோபை அழிப்பதற்கும்
இஸ்ரவேலைக் கேவலமாகப் பேசுவதற்கும் விட்டுவிடுவேன்."[a]

44 "என் ஊழியனான யாக்கோபே, இதைக் கேள்.
நான் தேர்ந்தெடுத்த இஸ்ரவேலே,[b] இதைக் கவனி.
2 யெகோவாவாகிய நான்தான் உன்னைப் படைத்தேன், உன்னை உருவாக்கினேன்.[c]
நீ தாயின் வயிற்றில் இருந்த சமயத்திலிருந்தே உனக்கு உதவி செய்தேன்.
இப்போது நான் சொல்வது இதுதான்:
'என் ஊழியனான யாக்கோபே, பயப்படாதே.[d]
நான் தேர்ந்தெடுத்த யெஷுரனே,*[e] பயப்படாதே.
3 தாகமாக இருக்கிறவனுக்கு* நான் தண்ணீர் கொடுப்பேன்.[f]
வறண்ட நிலத்தில் நீரோடைகளைப் பாய வைப்பேன்.
உன் சந்ததிக்கு என் சக்தியைக் கொடுப்பேன்.[g]
உன் வம்சத்தை ஆசீர்வதிப்பேன்.
4 அவர்கள் பசும்புல்லைப் போலவும்,[h]
நீரோடைகளுக்குப் பக்கத்தில் இருக்கிற காட்டரசு மரங்களைப் போலவும் செழித்து வளருவார்கள்.
5 அவர்களில் ஒருவன், "நான் யெகோவாவுக்குச் சொந்தமானவன்" என்று சொல்வான்.[i]
இன்னொருவன் யாக்கோபின் பெயரைத் தனக்கு வைத்துக்கொள்வான்.
மற்றொருவன், "யெகோவாவுக்குச் சொந்தமானவன்" என்று கையில் எழுதிக்கொள்வான்.
இஸ்ரவேலின் பெயரைத் தனக்கு வைத்துக்கொள்வான்.'
6 பரலோகப் படைகளின் யெகோவாதான் இஸ்ரவேலின் ராஜா.[j]
யெகோவாதான் இஸ்ரவேலை விடுவிக்கிறவர்,[k] அவர் சொல்வது இதுதான்:
'என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை.[l]
முதலும் நானே, கடைசியும் நானே.[m]
7 என்னைப் போல் யாராவது இருக்கிறார்களா?[n]
அப்படி இருந்தால் தைரியமாகச் சொல்லட்டும், நிரூபித்துக் காட்டட்டும்.[o]
எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லட்டும்.
இனி நடக்கப்போகிற எல்லாவற்றையும் சொல்லட்டும்.
பூர்வ காலத்து ஜனங்களைத் தேர்ந்தெடுத்த சமயத்திலிருந்து நான் அப்படித்தானே சொல்லி வந்திருக்கிறேன்.
8 நீங்கள் கதிகலங்க வேண்டாம்.
பயத்தில் உறைந்து போகவும் வேண்டாம்.[p]
நீங்களே என் சாட்சிகள்.[q]
இதை உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் முன்பே சொல்லவில்லையா, அறிவிக்கவில்லையா?

44:2 * இந்தப் பெயரின் அர்த்தம், "நேர்மையானவன்"; இது இஸ்ரவேலின் கௌரவப் பட்டம். **44:3** * வே.வா., "வறண்ட பூமிக்கு."

அதி. 43
a சங் 79:4
சங் 137:3

அதி. 44
b ஆதி 17:1, 7
ஆதி 35:10, 11
ஏசா 41:8
c ஏசா 43:1
ஏசா 44:21
d ஏசா 41:10
எரே 30:10
e உபா 32:15
உபா 33:5, 26
f ஏசா 41:17
g ஏசா 32:14, 15
h ஏசா 61:11
i சக 13:9
j உபா 33:5
ஏசா 33:22
k யாத் 6:6
எரே 50:34
l உபா 4:35, 39
ஏசா 43:10
m ஏசா 41:4
ஏசா 48:12
வெளி 22:13
n ஏசா 46:9
o ஏசா 43:9
ஏசா 45:21
p ஏசா 41:10
q ஏசா 43:10

என்னைத் தவிர வேறு கடவுள் உண்டா?
உங்களைப் பாதுகாக்கும் கற்பாறை வேறு யாரும் இல்லை;[a] எனக்குத் தெரிந்த வரைக்கும் யாருமே இல்லை.'"
9 சிலைகளைச் செதுக்கி வைக்கிறவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள்.
அவர்கள் நேசிக்கிற அந்தச் சிலைகளால் எந்தப் பிரயோஜனமும் இல்லை.[b]
அவர்களுக்குச் சாட்சிகளாக இருக்கிற அந்தச் சிலைகளால் எதையுமே பார்க்கவும் முடியாது, தெரிந்துகொள்ளவும் முடியாது.[c]
அந்தச் சிலைகளைச் செய்கிறவர்கள் அவமானப்பட்டுப் போவார்கள்.[d]
10 எந்த உதவியும் செய்ய முடியாத தெய்வத்தையோ உலோகச் சிலையையோ
யாராவது உண்டாக்குவார்களா?[e]
11 சிலை செய்கிறவர்களின் கூட்டாளிகள் எல்லாரும் அவமானப்பட்டுப் போவார்கள்![f]
உருவங்களைச் செய்கிறவர்கள் சாதாரண மனுஷர்கள்தான்.
அவர்கள் எல்லாரும் கூடிவந்து நிற்கட்டும்.
அவர்கள் நடுநடுங்கிப் போவார்கள், அவமானம் அடைவார்கள்.
12 இரும்பு வேலை செய்கிறவன் இரும்பைத் தணல்மேல் வைத்து நன்றாகச் சூடாக்குகிறான்.
பின்பு சுத்தியலை எடுத்து, தன்னுடைய பலமான கைகளால் அதை ஓங்கி அடித்து,
அதற்கு வடிவம் கொடுக்கிறான்.[g]
அதன்பின் பசியில் களைத்துப்போகிறான்.
தண்ணீர் குடிக்காமல் சோர்ந்துபோகிறான்.
13 மர ஆசாரி அளவுநூலால் மரத்தை அளந்து, சிவப்பு சுண்ணாம்புக்கட்டியால் அதில் உருவத்தை வரைகிறான்.
உளியால் அதைச் செதுக்குகிறான்; வட்டம்போடுகிற கருவியால் வளைவுகளை வரைகிறான்.
ஓர் அழகான சிலையைச் செய்கிறான்.
அதை மனுஷ உருவத்தில் செய்கிறான்.[h]
பின்பு, கோயிலில் நிறுத்தி வைக்கிறான்.[i]
14 தேவதாரு மரங்களை வெட்டுகிற வேலை செய்கிறவன்,
காட்டிலே ஒரு கருவாலி மரத்தைத் தேர்ந்தெடுக்கிறான்.
அதை நன்றாக வளர விடுகிறான்.[j]
அவன் ஒரு புன்னை மரத்தை நடுகிறான், மழை அதை வளர வைக்கிறது.
15 பின்பு, அதை ஒருவன் விறகாகப் பயன்படுத்துகிறான்.
அதிலிருந்து கொஞ்சத்தை எடுத்து நெருப்பு மூட்டி குளிர்காய்கிறான்.
இன்னும் கொஞ்சத்தை எடுத்து ரொட்டி சுடுகிறான்.
பின்பு, அதே மரத்தால் ஒரு தெய்வத்தையும் செய்து கும்பிடுகிறான்.
அதை வைத்து ஒரு சிலையைச் செதுக்கி அதன்முன் தலைவணங்குகிறான்.[k]

அதி. 44
a உபா 32:4; 2சா 22:32
b நியா 10:14; 1ரா 18:26; 1கொ 8:4
c சங் 115:4, 5
d எரே 51:17
e எரே 10:5; அப் 19:26
f 1சா 5:3, 7
g ஏசா 40:19; ஏசா 41:7; ஏசா 46:6
h யாத் 20:4; உபா 4:15, 16; அப் 17:29
i உபா 27:15
j ஏசா 40:20; எரே 10:3
k யாத் 20:4, 5; லேவி 26:1; ஆப 2:18, 19

16 மரத்தில் ஒரு பாதியை எடுத்து அடுப்பு எரிக்கிறான்.
அதில் இறைச்சியைச் சுட்டு திருப்தியாகச் சாப்பிடுகிறான்.
அந்த நெருப்புக்கு முன்னால் உட்கார்ந்து,
“ஆஹா! நெருப்பில் குளிர்காய்வது எவ்வளவு இதமாக இருக்கிறது!” என்று சொல்கிறான்.
17 மரத்தில் இன்னொரு பாதியை எடுத்து ஒரு சிலையைச் செதுக்குகிறான்.
அதன் முன்னால் விழுந்து வணங்குகிறான்.
அந்தச் சிலையைப் பார்த்து,
“நீதான் என் தெய்வம், என்னைக் காப்பாற்று” என்று வேண்டுகிறான்.[a]
18 இப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை, ஒன்றும் புரிவதில்லை.[b]
ஏனென்றால், அவர்களுடைய கண்கள் அடைக்கப்பட்டிருக்கிறது; அவர்களால் பார்க்க முடிவதில்லை.
அவர்களுடைய உள்ளத்தால் எதையும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை.
19 “மரத்தில் ஒரு பாதியை எடுத்து நான் நெருப்பு மூட்டினேன்.
அந்த நெருப்புத் தணலில் ரொட்டியையும் கறியையும் சுட்டு சாப்பிட்டேன்.
அந்த மரத்தில் இன்னொரு பாதியை எடுத்து ஒரு அருவருப்பான சிலையை நான் செய்யலாமா?[c]
ஒரு மரத் துண்டை நான் கும்பிடலாமா?” என்று அவன் யோசிப்பது இல்லை.
அந்தளவுக்குக்கூட அவனுக்கு அறிவோ புத்தியோ* இல்லை.
20 அவன் சாம்பலைத் தின்கிறான்.
ஏமாந்துபோன அவனுடைய உள்ளம் அவனைத் தவறான வழிக்குக் கொண்டுபோகிறது.
அவனால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடிவதில்லை.
“பொய்யும் போலியுமான ஒன்றைக் கையில் வைத்திருக்கிறேனே” என்று அவன் நினைப்பதில்லை.
21 “யாக்கோபே, இஸ்ரவேலே, இதையெல்லாம் யோசித்துப் பார்.
ஏனென்றால், நீ என் ஊழியன்.
நான் உன்னை உருவாக்கினேன், நீ என் ஊழியன்.[d]
இஸ்ரவேலே, நான் உன்னை மறக்க மாட்டேன்.[e]
22 நீ செய்த குற்றங்களையெல்லாம் மேகத்தால் மறைத்துவிடுவேன்.[f]
உன்னுடைய பாவங்களையெல்லாம் இருண்ட மேகத்தால் மூடிவிடுவேன்.
என்னிடம் திரும்பி வா, நான் உன்னை விடுவிப்பேன்.[g]
23 வானமே, சந்தோஷத்தில் பாடு.
ஏனென்றால், யெகோவா சொன்னதைச் செய்துவிட்டார்!
பூமியே, வெற்றி முழக்கம் செய்!
மலைகளே, காடுகளே, அதிலுள்ள மரங்களே,

44:19 * வே.வா., “புரிந்துகொள்ளும் திறனோ.”

அதி. 44
a ஏசா 37:37, 38; ஏசா 45:20; ஏசா 46:7
b எரே 10:8, 14; ரோ 1:21-23
c உபா 27:15
d ஏசா 43:1; ஏசா 44:1
e ஏசா 49:15
f சங் 51:1; சங் 103:12; ஏசா 1:18; ஏசா 43:25; எரே 33:8; அப் 3:19
g ஏசா 1:27; ஏசா 48:20; ஏசா 59:20

மகிழ்ந்து பாடுங்கள்![a]
யாக்கோபை யெகோவா விடுவித்திருக்கிறார்.
இஸ்ரவேலுக்குத் தன்னுடைய மகிமையைக் காட்டுகிறார்."[b]
24 யெகோவா உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கியவர், உன்னை விடுவிக்கிறவர்.[c]
அவர் சொல்வது இதுதான்:
"நான் யெகோவா, எல்லாவற்றையும் நான் படைத்தேன்.
நானாகவே வானத்தை விரித்தேன்.[d]
பூமியையும் உண்டாக்கினேன்.[e]
அப்போது என்னோடு யாராவது இருந்தார்களா?
25 வெட்டியாகப் பேசுபவர்கள்* சொல்லும் அடையாளங்களை நான் பலிக்காமல் போகச் செய்கிறேன்.
குறிசொல்கிறவர்களை முட்டாள்கள் போல ஆக்குகிறேன்.[f]
ஞானிகளைக் குழம்பிப்போக வைக்கிறேன்.
அவர்களுடைய அறிவை முட்டாள்தனமாக ஆக்குகிறேன்.[g]
26 என் ஊழியன் சொல்வதெல்லாம் நடக்கும்படி செய்கிறேன்.
என் தூதுவர்கள் முன்னறிவிக்கிற எல்லாவற்றையும் நிறைவேற்றுகிறேன்.[h]
'எருசலேமில் ஜனங்கள் குடியிருப்பார்கள்'[i] என்றும்,
'யூதாவிலுள்ள நகரங்கள் திரும்பக் கட்டப்படும்,[j]
அங்கே இடிந்து கிடப்பதையெல்லாம் சரிசெய்வேன்'[k] என்றும் சொல்கிறேன்.
27 ஆழமான தண்ணீரைப் பார்த்து, 'வற்றிப்போ' என்றும்,
'உன்னுடைய ஆறுகளையெல்லாம் நான் காய்ந்துபோகச் செய்வேன்'[l] என்றும் சொல்கிறேன்.
28 'கோரேஸ்[m] என் மேய்ப்பன்.
நான் விரும்புவதையெல்லாம் அவன் முழுமையாகச் செய்து முடிப்பான்'[n] என்று சொல்கிறேன்.
எருசலேமைக் குறித்து, 'நீ திரும்பக் கட்டப்படுவாய்' என்றும்,
அதன் ஆலயத்தைக் குறித்து, 'உனக்கு அஸ்திவாரம் போடப்படும்'[o] என்றும் சொல்கிறேன்."

45 யெகோவாவாகிய நான் கோரேசைத்[p] தேர்ந்தெடுத்திருக்கிறேன்.
நான் அவனுடைய வலது கையைப் பிடித்திருக்கிறேன்.[q]
அவனுக்கு முன்பாகத் தேசங்களை அடிபணிய வைப்பேன்.[r]
அவனுக்கு முன்பாக ராஜாக்களை வீழ்த்துவேன்.
அவனுக்கு முன்பாக நகரவாசல்களும் அவற்றின் கதவுகளும்
பூட்டப்படாமல் திறந்திருக்கும்படி செய்வேன்.
அவனிடம் நான் சொல்வது இதுதான்:
2 "நான் உனக்கு முன்னால் போய்,[s]
குன்றுகளைத் தரைமட்டமாக்குவேன்.

44:25 *வே.வா., "பொய்த் தீர்க்கதரிசிகள்."

அதி. 44
a ஏசா 49:13, ஏசா 55:12
b ஏசா 60:21
c ஏசா 44:6
d யோபு 26:7, ஏசா 40:22
e ஏசா 42:5, ஏசா 48:13
f ஓசி 9:7
g 2சா 15:31, ஏசா 29:14
h யோசு 23:14, ஏசா 55:10, 11, சக 1:6
i சங் 147:2
j ஏசா 60:10
k ஏசா 61:4
l ஏசா 42:15, எரே 50:38, வெளி 16:12
m எஸ்றா 1:1, 2, ஏசா 41:25, ஏசா 45:1, ஏசா 46:11, தானி 10:1
n ஏசா 48:14
o 2நா 36:22, 23, எஸ்றா 6:3, ஏசா 45:13

அதி. 45
p எஸ்றா 1:1, 2, ஏசா 44:28
q ஏசா 45:4
r ஏசா 13:17, ஏசா 41:25
s ஏசா 13:4

செம்புக் கதவுகளை நொறுக்கிப்போடுவேன்.
இரும்புத் தாழ்ப்பாள்களை உடைத்துப்போடுவேன்.[a]
3 இருட்டில் மறைத்து வைக்கப்பட்ட பொக்கிஷங்களையும்,
ரகசிய இடங்களில் ஒளித்து வைக்கப்பட்ட பொக்கிஷங்களையும் உனக்குத் தருவேன்.[b]
அப்போது, இஸ்ரவேலின் கடவுளான யெகோவா நான்தான் என்றும்,
உன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறவர் நான்தான்[c] என்றும் நீ புரிந்துகொள்வாய்.
4 என் ஊழியனான யாக்கோபுக்காகவும் நான் தேர்ந்தெடுத்த இஸ்ரவேலுக்காகவும்,
உன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறேன்.
என்னை உனக்குத் தெரியாமல் இருந்தாலும் நான் உனக்குக் கௌரவமான பெயரைக் கொடுக்கிறேன்.
5 நான் யெகோவா, நான் மட்டுமே கடவுள்.
என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை.[d]
என்னை உனக்குத் தெரியாமல் இருந்தாலும் நான் உன்னைப் பலப்படுத்துவேன்.
6 ஏனென்றால், கிழக்கிலிருந்து மேற்குவரை இருக்கிற ஜனங்கள் எல்லாரும்
என்னைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை[e] என்று அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.
நான் யெகோவா, நான் மட்டுமே கடவுள்.[f]
7 வெளிச்சத்தைக் கொடுப்பதும் நான்தான்,[g] இருட்டை உண்டாக்குவதும் நான்தான்.[h]
சமாதானத்தை ஏற்படுத்துவதும் நான்தான்,[i] அழிவைக் கொண்டுவருவதும் நான்தான்.[j]
யெகோவாவாகிய நானே இவை எல்லாவற்றையும் செய்கிறேன்.
8 வானம் பொழியட்டும்.[k]
மேகங்கள் நீதியை மழைபோல் தூவட்டும்.
பூமி அதில் நனைந்து மீட்பு என்ற விதையை முளைப்பிக்கட்டும்.
நீதி என்ற விதையையும் துளிர்க்க வைக்கட்டும்.[l]
இவற்றை உருவாக்கியவர் யெகோவாவாகிய நானே."
9 தன்னைப் படைத்தவரோடு வழக்காடுகிறவனுக்கு* கேடுதான் வரும்.
தரையில் கிடக்கிற மண் ஓடுகளில் ஒன்றைப் போல் அவன் இருக்கிறான்.
களிமண் குயவனைப் பார்த்து,
"நீங்கள் என்ன செய்கிறீர்கள்" என்று கேட்க முடியுமா?[m]
அல்லது ஒரு மண்பாத்திரம், "உங்களுக்குக் கையே இல்லை" என்று சொல்ல முடியுமா?#

45:9 *வே.வா., "தன்னை உருவாக்கியவரோடு வாக்குவாதம் செய்கிறவனுக்கு." #அல்லது, "'நீங்கள் செய்த மண் பாத்திரத்துக்குக் கைப்பிடியே இல்லை' என்று களி மண் சொல்ல முடியுமா?"

அதி. 45
a சங் 107:16
b எரே 50:35, 37
c எஸ்றா 1:1, 2; ஏசா 44:28
d உபா 4:35, 39; உபா 32:39
e 1சா 17:46; சங் 102:15, 16; ஏசா 37:20
f சங் 83:18
g ஆதி 1:3; எரே 31:35
h யாத் 10:21; சங் 104:20
i ஏசா 26:12
j பிர 7:14; ஆமோ 3:6
k எசே 34:26
l ஏசா 61:11
m ஏசா 29:16; எரே 18:6; ரோ 9:20

10 ஒரு அப்பாவைப் பார்த்து, “ஏன் பிள்ளை பெற்றீர்கள்?” என்றோ,
அம்மாவைப் பார்த்து, “ஏன் பெற்றெடுத்தீர்கள்?” என்றோ
கேட்கிறவனுக்குக் கேடுதான் வரும்.
11 இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளும்[a] இஸ்ரவேலை
உருவாக்கியவருமான யெகோவா சொல்வது இதுதான்:
“நடக்கப்போகிற விஷயங்களைப் பற்றி என்னையே கேள்வி
கேட்பாயா?
என் பிள்ளைகளையும்[b] என் கையால் படைத்தவற்றையும் பற்றி
எனக்கே புத்தி சொல்வாயா?
12 நான் பூமியை உருவாக்கி[c] அதில் மனுஷனைப் படைத்தேன்.[d]
என் கையாலேயே வானத்தை விரித்தேன்.[e]
வானத்தின் படைகளுக்கு* நான்தான் கட்டளை கொடுக்கிறேன்.”[f]
13 “நான் நீதியுள்ளவர். அதனால் ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.[g]
அவருடைய வழிகளையெல்லாம் சீரமைப்பேன்.
அவர்தான் என்னுடைய நகரத்தைக் கட்டுவார்.[h]
சிறைபிடிக்கப்பட்ட என் ஜனங்களை பணமோ லஞ்சமோ வாங்காமல்[i]
விடுதலை செய்வார்”[j] என்று பரலோகப் படைகளின் யெகோவா
சொல்கிறார்.
14 யெகோவா சொல்வது இதுதான்:
“எத்தியோப்பிய ஜனங்களுக்கும் உயரமான சபேயர்களுக்கும்
சொந்தமான சரக்குகளும்,* எகிப்தியர்களின் சொத்தும்#
உன் கைக்கு வந்து சேரும், அது உனக்குச் சொந்தமாகும்.
அவர்கள் விலங்குகளை மாட்டிக்கொண்டு உனக்குப் பின்னால் நடந்து
வருவார்கள்.
உன்முன் வந்து தலைவணங்குவார்கள்.[k]
பின்பு உன்னிடம், ‘கடவுள் நிச்சயமாகவே உங்களோடு இருக்கிறார்.[l]
அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை, அவர் மட்டும்தான் கடவுள்’
என்று பயபக்தியோடு சொல்வார்கள்.”
15 இஸ்ரவேலின் கடவுளே, மீட்பரே![m]
உண்மையிலேயே நீங்கள் உங்களை மறைத்துக்கொள்கிறீர்கள்.
16 சிலைகளைச் செய்பவர்கள் எல்லாரும் கேவலப்பட்டுப்
போவார்கள்.
அவர்கள் எல்லாரும் வெட்கப்பட்டு, அவமானப்பட்டுப்
போவார்கள்.[n]
17 ஆனால் இஸ்ரவேலர்களே, யெகோவா உங்களை என்றென்றும்
மீட்பார்.[o]
நீங்கள் ஒருபோதும் அவமானமோ கேவலமோ அடைய மாட்டீர்கள்.[p]
18 யெகோவாதான் உண்மையான கடவுள்; அவரே வானத்தைப்
படைத்தார்.[q] அவரே பூமியை உருவாக்கி, அதை உறுதியாக
நிலைநிறுத்தினார்.[r]

45:12 * அதாவது, “நட்சத்திரங்களுக்கும் வானத்திலுள்ள எல்லாவற்றுக்கும்.” 45:14 * அல்லது, “கூலியாட்களும்.” # அல்லது, “வியாபாரிகளும்.”

அதி. 45
a ஏசா 43:3
b ஓசி 1:10
c ஆதி 1:1; ஏசா 40:28
d ஆதி 1:27
e ஏசா 44:24; எரே 32:17; சக 12:1
f நெ 9:6
g ஏசா 42:6
h 2நா 36:23; எஸ்றா 1:2, 3; ஏசா 44:28
i ஏசா 13:17
j ஏசா 14:16, 17; ஏசா 43:14; ஏசா 49:25
k எஸ்தர் 8:17; ஏசா 14:1, 2; ஏசா 49:23; ஏசா 60:14; ஏசா 61:5
l சக 8:23
m ஏசா 43:11; ஏசா 60:16; தீத் 1:3
n சங் 97:7; ஏசா 44:9
o ஏசா 26:4; ஏசா 51:6
p ஏசா 29:22; ஏசா 54:4; யோவே 2:26; செப் 3:11
q ஏசா 42:5; எரே 10:12
r சங் 78:69; சங் 104:5; சங் 119:90; நீதி 3:19

அவர் அதைக் காரணம் இல்லாமல்* படைக்கவில்லை; ஜனங்கள் குடியிருப்பதற்காகவே படைத்தார்.[a]
அவர் சொல்வது இதுதான்:
“நான் யெகோவா, என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை.
19 நான் மறைவான இடத்திலிருந்தோ இருட்டான இடத்திலிருந்தோ பேசவில்லை.[b]
யாக்கோபின் வாரிசிடம், ‘எந்தப் பலனும் எதிர்பார்க்காமல் என்னை வணங்கு’ என்று நான் சொல்லவில்லை.
நான் யெகோவா, நான் நீதியானதைப் பேசுபவர், உண்மையானதை அறிவிப்பவர்.[c]
20 மற்ற தேசங்களிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களே,
நீங்கள் ஒன்றுகூடுங்கள், திரண்டு வாருங்கள்.[d]
செதுக்கப்பட்ட சிலைகளைச் சுமந்து செல்கிறவர்களுக்கும்,
காப்பாற்ற முடியாத தெய்வங்களிடம் வேண்டுகிறவர்களுக்கும் அறிவே இல்லை.[e]
21 நீங்கள் உங்களுடைய வழக்கைச் சொல்லுங்கள், ஆதாரங்களைக் காட்டுங்கள்.
ஒன்றாகக் கலந்துபேசுங்கள்.
ரொம்பக் காலத்துக்கு முன்பே இதைச் சொன்னது யார்?
பூர்வ காலத்திலிருந்தே இதை அறிவித்தது யார்?
யெகோவாவாகிய நான்தானே?
என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை.
நீதியான கடவுளும் மீட்பரும் நான்தான்;[f] என்னைப் போல வேறு யாரும் இல்லை.[g]
22 பூமியெங்கும் இருப்பவர்களே, என்னிடம் திரும்பி வாருங்கள், அப்போது காப்பற்றப்படுவீர்கள்.[h]
ஏனென்றால் நான்தான் கடவுள், என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை.[i]
23 நான் என்மேல் சத்தியம் செய்திருக்கிறேன்.
என் வாயிலிருந்து வரும் இந்த வார்த்தை நீதியானது,
இது நிறைவேறாமல் போகாது:[j]
எனக்கு முன்னால் எல்லாரும் மண்டிபோடுவார்கள்.
எனக்கு விசுவாசமாய்* இருக்கப்போவதாக எல்லாரும் சத்தியம் செய்வார்கள்.[k]
24 அதோடு இப்படிச் சொல்வார்கள்: ‘யெகோவாதான் உண்மையிலேயே நீதியான கடவுள், பலம்படைத்தவர்.
அவரை எதிர்க்கிற எல்லாரும் அவமானப்பட்டுப் போவார்கள்.
25 யெகோவாமேல் நம்பிக்கை வைத்தது வீண்போகவில்லை என்று இஸ்ரவேல் வம்சத்தைச் சேர்ந்த எல்லாரும் புரிந்துகொள்வார்கள்.[l]
அவரைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள்.’ ”

45:18 * அல்லது, “காலியாக இருப்பதற்கு.” **45:23** * வே.வா., “பற்றுமாறாமல்.”

அதி. 45
a ஆதி 1:28; ஆதி 9:1; சங் 37:29; சங் 115:16
b ஏசா 48:16
c சங் 111:7, 8; சங் 119:137
d ஏசா 66:20; எரே 50:28
e ஏசா 42:17; எரே 50:2
f ஏசா 43:3
g உபா 4:39; ஏசா 44:8; மாற் 12:32
h மீ 7:7
i உபா 4:35
j ஏசா 55:10, 11
k உபா 6:13; ரோ 14:11
l ஏசா 61:9

அதி. 46
a எரே 50:2
எரே 51:44
b ஏசா 45:20
c ஏசா 1:9
d யாத் 19:4
உபா 1:31
ஏசா 44:2
e ஏசா 41:4
f ஏசா 43:13
g யாத் 15:11
h அப் 17:29
i ஏசா 40:19
எரே 10:8, 9
j ஏசா 44:16, 17
தானி 3:1, 5
k எரே 10:5
l 1சா 5:3
m 1ரா 18:26
ஏசா 37:37, 38
யோனா 1:5
n உபா 33:26
o ஏசா 42:9
ஏசா 45:21

46 நேபோ கூனிக்குறுகுகிறது,[a] பேல் அவமானத்தில் தலைகுனிகிறது.
அவற்றின் சிலைகள் மிருகங்கள்மேல் ஏற்றப்படுகின்றன.[b]
களைத்துப்போன மிருகங்கள்மேல் வைக்கப்படுகிற சுமைபோல்
அவை இருக்கின்றன.
2 சிலைகளின் சுமை தாங்காமல் மிருகங்கள் அப்படியே
குனிந்துவிடுகின்றன.
நேபோவாலும் பேலாலும் அவற்றை* காப்பாற்ற முடியாது.
ஏனென்றால், அந்தத் தெய்வங்களே கைப்பற்றப்பட்டுக்
கொண்டுபோகப்படும்.
3 “யாக்கோபின் வம்சத்தாரே, இஸ்ரவேல் ஜனங்களில் மீதியாக
இருப்பவர்களே,[c] கேளுங்கள்.
உங்களைக் கருவிலிருந்தே காப்பாற்றியதும், பிறந்ததிலிருந்தே தூக்கிச்
சுமந்ததும் நான்தான்.[d]
4 உங்களுக்கு வயதானாலும் உங்களைத் தூக்கிச் சுமப்பேன்.[e]
உங்களுடைய தலைமுடி நரைத்துப்போனாலும் உங்களைத்
தாங்குவேன்.
உங்களை எப்போதுமே சுமப்பேன், தாங்குவேன், காப்பாற்றுவேன்.[f]
5 என்னை யாரோடு ஒப்பிடுவீர்கள்? என்னை யாருக்குச்
சமமாக்குவீர்கள்?[g]
யாராவது எனக்கு இணையாக இருக்க முடியுமா?[h]
6 சிலர் ஆசாரிக்குக் கூலி கொடுத்து சிலை செய்யச் சொல்கிறார்கள்.
அதற்காக, பையிலிருந்து தங்கத்தைக் கொட்டுகிறார்கள்.
வெள்ளியைத் தராசில் எடைபோட்டுக் கொடுக்கிறார்கள்.
அதை வைத்து அவன் ஒரு சிலையைச் செய்கிறான்.[i]
அவர்கள் அதன் முன்னால் விழுந்து வணங்குகிறார்கள்.[j]
7 அதைத் தோளின் மேல் சுமந்துகொண்டு போகிறார்கள்.[k]
பின்பு, அதை அதன் இடத்தில் வைக்கிறார்கள்; அது அங்கேயே
நிற்கிறது.
அந்த இடத்தைவிட்டு அது நகருவதே இல்லை.[l]
அவர்கள் அதைப் பார்த்து சத்தமாக வேண்டுகிறார்கள், ஆனால் அது
பதில் கொடுப்பதே இல்லை.
அந்தச் சிலையால் யாரையுமே கஷ்டத்திலிருந்து காப்பாற்ற
முடிவதில்லை.[m]
8 இதை ஞாபகத்தில் வையுங்கள், தைரியமாக இருங்கள்.
என் பேச்சை மீறுகிறவர்களே, இதை நெஞ்சில் வையுங்கள்.
9 பழங்காலத்திலிருந்து நடந்த விஷயங்களை நினைத்துப் பாருங்கள்.
நானே கடவுள், என்னைத் தவிர வேறு யாரும் இல்லை.
நானே கடவுள், என்னைப் போல யாருமே இல்லை.[n]
10 நடக்கப்போகும் விஷயங்களை நான் ஆரம்பத்திலிருந்தே சொல்லி
வருகிறேன்.
அதை ரொம்பக் காலத்துக்கு முன்பிருந்தே சொல்லி வருகிறேன்.[o]

46:2 * அதாவது, “மிருகங்கள் சுமக்கும் சிலைகளை.”

'நான் நினைத்தது* நிச்சயம் நிறைவேறும்.[a]
விரும்புவதையெல்லாம் நான் செய்து முடிப்பேன்'[b] என்று சொல்கிறேன்.
11 கிழக்கிலிருந்து ஒரு கழுகை நான் கூப்பிடுகிறேன்.[c]
நான் நினைத்ததை* நிறைவேற்ற தூர தேசத்திலிருந்து ஒருவரை அழைக்கிறேன்.[d]
நான் சொன்னேன், அதைச் செய்வேன்.
நான் தீர்மானித்தேன், அதை நிறைவேற்றுவேன்.[e]
12 முரட்டுப் பிடிவாதம் பிடிக்கிறவர்களே,*
நீதியின் வழியைவிட்டுத் தூரமாகப் போனவர்களே,
நான் சொல்வதைக் கேளுங்கள்.
13 நான் சீக்கிரத்தில் நீதி வழங்கப்போகிறேன்.
அந்தக் காலம் நெருங்கிவிட்டது;
உங்களை மீட்பதற்கு நான் தாமதிக்க மாட்டேன்.[f]
நான் சீயோனை மீட்பேன், இஸ்ரவேலை மகிமைப்படுத்துவேன்."[g]

47 கன்னிப்பெண்ணாகிய பாபிலோனே,
நீ இறங்கி மண்ணிலே உட்காரு.[h]
கல்தேயர்களின் மகளே!
சிம்மாசனத்திலிருந்து இறங்கி தரையில் உட்காரு.[i]
இனி மக்கள் யாருமே உன்னை ராணிபோல் தலையில் தூக்கிவைத்து ஆட மாட்டார்கள்.
2 திரிகைக் கல்லை எடுத்து மாவு அரை.
உன் முக்காட்டை எடுத்துப்போடு.
உன் மேலாடையைக் கழற்றிவிடு, உன் பாவாடையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு,
ஆறுகளைக் கடந்து போ.
3 உன் ஆபாசத்தை எல்லாரும் பார்ப்பார்கள்.
உன் மானம் போய்விடும்.
நான் உன்னைப் பழிவாங்குவேன்,[j] யாராலும் என்னைத் தடுக்க முடியாது.*
4 "எங்களை மீட்கிறவர் ஒருவர் இருக்கிறார்.
பரலோகப் படைகளின் யெகோவா என்பதுதான் அவருடைய பெயர்.
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுள் அவர்தான்."[k]
5 கல்தேயர்களின் மகளே!
நீ இருட்டில் அமைதியாக உட்கார்ந்திரு.[l]
ராஜ்யங்களுக்கெல்லாம் ராணி என்று இனி யாரும் உன்னை அழைக்க மாட்டார்கள்.[m]
6 என் ஜனங்கள்மேல் நான் பயங்கர கோபமாக இருந்தேன்.[n]
என்னுடைய சொந்த ஜனங்களை அசிங்கப்படுத்தினேன்.[o]
உன் கையில் அவர்களைக் கொடுத்தேன்.[p]

46:10 *வே.வா., "என் நோக்கம்." **46:11** *வே.வா., "என் நோக்கத்தை." **46:12** *வே.வா., "பிடிவாத நெஞ்சம் உள்ளவர்களே." **47:3** *அல்லது, "நான் யாருக்கும் கருணை காட்ட மாட்டேன்."

அதி. 46
a சங் 33:11
b சங் 135:6; ஏசா 55:10, 11
c ஏசா 41:2; ஏசா 45:1
d எஸ்றா 1:1, 2; ஏசா 44:28; ஏசா 48:14
e எண் 23:19; யோபு 23:13
f ஏசா 12:2; ஏசா 51:5; ஏசா 62:11
g ஏசா 44:23; ஏசா 60:21

அதி. 47
h சங் 137:8; எரே 50: 41, 42
i தானி 5:30
j உபா 32: 35, 41; சங் 94:1
k ஏசா 41:14; ஏசா 43:3; ஏசா 44:6
l ஏசா 47:1
m ஏசா 13:19; ஏசா 14:4; வெளி 17:5
n 2நா 36:15, 16; ஏசா 42:24, 25; சக 1:15
o உபா 28:63; எசே 24:21
p எரே 52:14

ஆனால், நீ அவர்களுக்கு இரக்கம் காட்டவே இல்லை.[a]
வயதானவர்கள்மேலும் பாரமான நுகத்தடியை வைத்தாய்.[b]
7 நீ எதையும் யோசித்துப் பார்க்காமல் இப்படியெல்லாம் நடந்துகொண்டாய்.
பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படவே இல்லை.
"என்றென்றைக்கும் நான்தான் ராணியாக இருப்பேன்" என்று சொன்னாய்.[c]
8 சுகபோகத்தை விரும்புகிறவளே,[d]
பாதுகாப்பாக உட்கார்ந்திருப்பவளே,
"என்னைவிட முக்கியமானவர் யாருமே இல்லை.[e]
நான் விதவை ஆக மாட்டேன்.
என் பிள்ளைகளைப் பறிகொடுக்க மாட்டேன்" என்று உள்ளத்தில் சொல்கிறவளே,[f] இதைக் கேள்:
9 நீ மாயமந்திரங்களையும் பயங்கரமான சூனியங்களையும் ஏராளமாகச் செய்வதால்,*[g]
விதவை ஆவாய், பிள்ளைகளையும் பறிகொடுப்பாய்.
இந்த இரண்டும் ஒரே நாளில் திடீரென்று நடக்கும்.[h]
இந்த வேதனைகள் முழு வீச்சில் உன்னைத் தாக்கும்.[i]
10 உன்னுடைய கெட்ட செயல்களில் நீ நம்பிக்கை வைத்தாய்.
"என்னை யாருமே பார்க்க மாட்டார்கள்" என்று சொன்னாய்.
உன்னுடைய ஞானமும் அறிவும்தான் உன்னைக் கெட்ட வழிக்குக் கொண்டுபோயிருக்கிறது.
"என்னைவிட முக்கியமானவர் யாருமே இல்லை" என்று நீ உள்ளத்தில் சொல்லிக்கொள்கிறாய்.
11 ஆனால், உனக்குக் கேடுதான் வரும்.
உன்னுடைய மாயமந்திரங்களால் அதைத் தடுத்து நிறுத்த முடியாது.
உனக்கு வரும் ஆபத்திலிருந்து நீ தப்பிக்க முடியாது.
இதுவரை நீ கேள்விப்படாத அழிவு உன்மேல் திடீரென்று வரும்.[j]
12 இளவயதிலிருந்தே மாயமந்திரங்களையும் சூனியங்களையும் செய்வதில் நீ மும்முரமாய் இருந்திருக்கிறாய்.[k]
இனியும் அதையே செய்.
ஒருவேளை உனக்குப் பலன் கிடைக்கலாம்.
ஒருவேளை நீ ஜனங்களைப் பிரமித்துப்போக வைக்கலாம்.
13 சலித்துப்போகும் அளவுக்கு நீ எத்தனையோ ஆலோசகர்களைத் தேடிப்போனாய்.
வானத்தைக் கும்பிடுகிறவர்களிடமும்,* நட்சத்திரங்களைப் பார்த்துக் கணிக்கிறவர்களிடமும்,[l]
முதலாம் பிறையைப் பார்த்து எதிர்காலத்தைச் சொல்கிறவர்களிடமும் போனாய்.
இப்போது அவர்களே உன்னைக் காப்பாற்றட்டும்.

47:9 * அல்லது, "செய்தாலும்." **47:13** * அல்லது, "வானத்தைக் கட்டம்போட்டுப் பிரிப்பவர்களிடமும்; ஜோதிடர்களிடமும்."

அதி. 47
a 2ரா 25:18-21; சங் 137:8
b உபா 28:49, 50
c தானி 4:30; வெளி 18:7
d வெளி 18:3
e தானி 5:22, 23
f வெளி 18:7
g எசே 21:21; தானி 5:7; வெளி 18:23
h வெளி 18:10
i எரே 51:29
j வெளி 18:10
k தானி 2:2
l தானி 5:7

14 அவர்கள் வெறும் வைக்கோலைப் போல் இருக்கிறார்கள்.
நெருப்பு அவர்களைப் பொசுக்கிவிடும்.
பயங்கரமாக எரியும் அந்த நெருப்பிலிருந்து அவர்கள் தப்பிக்கவே முடியாது.
ஏனென்றால், அது வெறும் கதகதப்பு தரும் தணலும் கிடையாது,
வெறும் குளிர்காய்வதற்கான நெருப்பும் கிடையாது.
15 நீ இளவயதிலிருந்தே யாரோடு சேர்ந்து பாடுபட்டாயோ
அந்த மாயவித்தை நிபுணர்களும் அப்படித்தான் ஆவார்கள்.
அவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய போக்கிலேயே அலைந்து திரிவார்கள்.
உன்னைக் காப்பாற்ற யாருமே இருக்க மாட்டார்கள்.[a]

48 யாக்கோபின் வம்சத்தாரே, இதைக் கேளுங்கள்.
நீங்கள் இஸ்ரவேல் என்ற பெயரில் அழைக்கப்படுகிறீர்கள்.[b]
நீங்கள் யூதாவின் ஊற்றிலிருந்து* வந்தவர்கள்.
நீங்கள் யெகோவாவின் பெயரில் சத்தியம் செய்கிறீர்கள்.[c]
இஸ்ரவேலின் கடவுளை வணங்குகிறீர்கள்.
ஆனாலும், அதையெல்லாம் உண்மையோடும் நீதியோடும் செய்வதில்லை.[d]
2 நீங்கள்* பரிசுத்த நகரத்தைச்[e] சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறீர்கள்.
இஸ்ரவேலின் கடவுளுடைய உதவியைத் தேடுகிறீர்கள்.[f]
பரலோகப் படைகளின் யெகோவா என்பதுதான் அவருடைய பெயர்.
3 அவர் இப்படிச் சொல்கிறார்:
“நடந்து முடிந்த விஷயங்களெல்லாம் ரொம்பக் காலத்திற்கு முன்னாலேயே நான் சொன்னதுதான்.
அதை என் வாயாலேயே சொன்னேன்.
அதை எல்லாருக்கும் தெரியப்படுத்தினேன்.[g]
அதைத் திடீரென்று நடத்திக் காட்டினேன்.[h]
4 நீங்கள் எந்தளவுக்கு முரட்டுப் பிடிவாதம் பிடிப்பவர்கள் என்று எனக்குத் தெரியும்.
உங்கள் கழுத்து இரும்பு போலவும், உங்கள் நெற்றி செம்பு போலவும் கடினமாக இருக்கிறது.[i]
5 அதனால்தான், இந்த விஷயங்களெல்லாம் நடப்பதற்கு முன்பே,
நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன்.
‘எங்களுடைய தெய்வம்தான்* இதைச் செய்தது.
நாங்கள் செதுக்கிய சிலையும் நாங்கள் வார்த்த உலோகச் சிலையும்தான் இதையெல்லாம் சொன்னது’ என்று நீங்கள் சொல்லாமல் இருப்பதற்காகவே இப்படிச் செய்தேன்.
6 இதையெல்லாம் நீங்கள் காதால் கேட்டீர்களே, கண்ணால் பார்த்தீர்களே.
மற்றவர்களிடம் சொல்ல மாட்டீர்களா?[j]

48:1 *அல்லது, “வம்சத்திலிருந்து.” 48:2 *நே.மொ. “அவர்கள்.” 48:5 *வே.வா., “சிலைதான்.”

அதி. 47
a எரே 51:6

அதி. 48
b ஆதி 32:28
c உபா 6:13
d லேவி 19:12; செப் 1:4, 5
e ஏசா 52:1
f எரே 21:1, 2
g ஏசா 42:9
h யோசு 21:45; ஏசா 55:10, 11
i யாத் 32:9; 2ரா 17:13, 14; 2நா 36:15, 16; சங் 78:8; எசே 3:7
j ஏசா 43:10

இன்றுமுதல் புதிய விஷயங்களை உங்களுக்குச் சொல்லப்போகிறேன்.[a]
உங்களுக்கு மறைக்கப்பட்டிருந்த ரகசியங்களைத்
தெரிவிக்கப்போகிறேன்.
7 இதெல்லாம் இப்போதுதான் தோன்றின, ரொம்பக் காலத்துக்கு
முன்பு அல்ல.
அதனால், ‘இதெல்லாம் எங்களுக்கு ஏற்கெனவே தெரியும்’ என்று
உங்களால் சொல்ல முடியாது.
இதெல்லாம் இன்றுவரை நீங்கள் கேள்விப்படாத விஷயங்கள்.
8 உண்மையிலேயே, இதெல்லாம் உங்களுக்குத் தெரியவே தெரியாது.[b]
முன்பு உங்கள் காது அடைக்கப்பட்டிருந்தது.
நீங்கள் எல்லாரும் நம்பிக்கைத் துரோகிகள் என்று எனக்குத் தெரியும்.[c]
பிறந்ததிலிருந்தே அடங்காதவர்கள் என்று பெயரெடுத்திருக்கிறீர்கள்.[d]
9 ஆனாலும், என் பெயரின் புகழுக்காக என்னுடைய கோபத்தை
அடக்கிக்கொள்வேன்.[e]
என்னுடைய மகிமைக்காக என்னையே கட்டுப்படுத்திக்கொள்வேன்.
உங்களை அழிக்காமல் விட்டுவிடுவேன்.[f]
10 நான் உங்களைப் புடமிட்டேன்; ஆனால், வெள்ளியைப் போலப்
புடமிடவில்லை.[g]
வேதனை என்ற நெருப்பில் போட்டு உங்களைச் சோதித்துப்
பார்த்தேன்.* [h]
11 நான் எனக்காகவே, என் பெயருக்காகவே, எல்லாவற்றையும்
செய்கிறேன்.[i]
என் பெயர் கெட்டுப்போக நான் எப்படி அனுமதிப்பேன்?[j]
என்னுடைய மகிமையை யாருக்கும் கொடுக்க மாட்டேன்.
12 நான் அழைத்த யாக்கோபே, இஸ்ரவேலே, நான் சொல்வதைக் கேள்.
நான் மாறாதவர்.[k] முதலும் நானே, கடைசியும் நானே.[l]
13 என் கைதான் பூமிக்கு அஸ்திவாரம் போட்டது.[m]
என் வலது கைதான் வானத்தை விரித்தது.[n]
நான் கட்டளை கொடுத்தால் அவை கீழ்ப்படியும்.
14 நீங்கள் எல்லாரும் ஒன்றாகக் கூடிவந்து கேளுங்கள்.
எந்தத் தெய்வமாவது இதையெல்லாம் சொன்னது உண்டா?
யெகோவாவுக்குப் பிரியமானவன்[o]
அவருக்கு இஷ்டமானபடி பாபிலோனுக்குச் செய்வான்.[p]
அவன் கல்தேயர்களைத் தோற்கடிப்பான்.[q]
15 நானே இதைச் சொன்னேன், நான்தான் அவனைக் கூப்பிட்டேன்.[r]
அவனை அழைத்து வந்தேன், அவனுக்கு வெற்றி தருவேன்.[s]
16 நீங்கள் என்னிடம் வந்து நான் சொல்வதைக் கேளுங்கள்.
தொடக்கத்திலிருந்தே நான் எல்லாவற்றையும் வெளிப்படையாகச்
சொல்லிவிட்டேன்.[t]

48:10 *அல்லது, “வேதனை என்ற நெருப்பில் நீங்கள் இருந்தபோது உங்களைத் தேர்ந்தெடுத்தேன்.”

அதி. 48
a ஏசா 42:9
ஏசா 65:17
b ஏசா 29:10
c எரே 5:11
எரே 9:2
d உபா 9:7
சங் 95:10
e 1சா 12:22
சங் 25:11
சங் 79:9
எரே 14:7
f நெ 9:30, 31
சங் 78:38
g நீதி 17:3
h ஏசா 1:25
எரே 9:7
i ஏசா 48:9
j எசே 20:9
k ஏசா 43:13
ஏசா 46:4
l ஏசா 44:6
வெளி 1:8
வெளி 22:13
m யோபு 38:4
n ஏசா 40:22
ஏசா 42:5
o ஏசா 45:1
p ஏசா 44:28
q ஏசா 13:19
எரே 50:13
r ஏசா 41:2
s ஏசா 45:5
t ஏசா 45:19

அது நடக்க ஆரம்பித்ததிலிருந்தே நான் அங்கே இருந்தேன்."
இப்போது உன்னதப் பேரரசராகிய யெகோவா அவருடைய சக்தியைத் தந்து என்னை அனுப்பியிருக்கிறார்.
17 இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளும், உங்களை விடுவிக்கிறவருமான யெகோவா[a] சொல்வது இதுதான்:
"யெகோவாவாகிய நானே உங்கள் கடவுள்.
உங்களுக்குப் பிரயோஜனமானதை* நான் கற்றுக்கொடுக்கிறேன்.[b]
நீங்கள் நடக்க வேண்டிய வழியில் உங்களை நடத்துகிறேன்.[c]
18 நீங்கள் என்னுடைய கட்டளைகளைக் கேட்டு நடந்தால்[d] எவ்வளவு நன்றாக இருக்கும்!
அப்போது, உங்கள் சமாதானம் ஆற்றைப் போலவும்,[e]
உங்கள் நீதி கடல் அலைகளைப் போலவும் இருக்கும்.[f]
19 உங்களுடைய சந்ததியில் வருகிற எல்லாரும்
கடற்கரை மணலைப் போல ஏராளமாக இருப்பார்கள்.[g]
அவர்களுடைய பெயர் என்முன் நிலைத்திருக்கும், அது ஒருபோதும் அழியாது."
20 பாபிலோனைவிட்டு வெளியேறுங்கள்![h]
கல்தேயர்களைவிட்டு ஓடி வாருங்கள்!
அதைப் பற்றி எல்லாருக்கும் சந்தோஷமாகச் சொல்லுங்கள்![i]
பூமியெங்கும் இருக்கிறவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்![j]
இப்படிச் சொல்லுங்கள்: "யெகோவா அவருடைய ஊழியனான யாக்கோபை விடுவித்திருக்கிறார்.[k]
21 பாலைநிலம் வழியாக அவருடைய ஜனங்களை அழைத்து வந்தபோது அவர்களைத் தாகத்தில் தவிக்க விடாமல்,[l]
அவர்களுக்காக அவர் கற்பாறையைப் பிளந்தார்.
அதிலிருந்து தண்ணீரைப் பாய்ந்து வரச் செய்தார்."[m]
22 "கெட்டவர்களுக்கு நிம்மதியே இருக்காது" என்று யெகோவா சொல்கிறார்.[n]

49 தீவுகளே, நான் சொல்வதைக் கேளுங்கள்.
தொலைதூரத்தில் இருக்கிற தேசங்களே, கவனமாகக் கேளுங்கள்.[o]
நான் பிறப்பதற்கு முன்பே யெகோவா என்னை அழைத்தார்.[p]
நான் தாயின் வயிற்றில் இருந்தபோதே என் பெயரைச் சொன்னார்.
2 என்னுடைய நாவை* கூர்மையான வாளாக்கினார்.
அவருடைய கையின் கீழே# என்னைப் பாதுகாப்பாக வைத்தார்.[q]
பளபளக்கும் அம்புபோல் என்னை ஆக்கினார்.
அவருடைய அம்புக்கூட்டில்△ என்னை மறைத்து வைத்தார்.
3 அவர் என்னிடம், "இஸ்ரவேலே, நீ என் ஊழியன்.[r]
உன் மூலமாக என் மகிமையைக் காட்டுவேன்"[s] என்று சொன்னார்.
4 ஆனால் நான் அவரிடம், "நான் உழைத்தது வீணாகிவிட்டது.

48:17 *வே.வா., "உங்களுடைய நன்மைக்காகவே." **49:2** *நே.மொ., "வாயை." #நே.மொ., "நிழலிலே." △அம்புகளை வைப்பதற்கான சாதனம்.

அதி. 48
a ஏசா 43:14, ஏசா 44:6, ஏசா 54:5
b 1ரா 8:36, சங் 25:8, ஏசா 54:13, மீ 4:2
c சங் 32:8, ஏசா 30:20, 21, ஏசா 49:10
d உபா 5:29, சங் 81:13, 14
e சங் 119:165, ஏசா 32:18, ஏசா 66:12
f ஆமோ 5:23, 24
g ஆதி 22:15, 17, எரே 33:22, ஓசி 1:10
h எரே 50:8, வெளி 18:4
i ஏசா 49:13
j எரே 50:2
k எரே 31:10, 11
l யாத் 15:24, 25, உபா 8:14, 15, ஏசா 43:19
m யாத் 17:5, 6, எண் 20:11
n ஏசா 57:20, 21

அதி. 49
o ஏசா 55:4
p ஏசா 44:2, ஏசா 46:3
q ஏசா 51:16
r ஏசா 43:10
s ஏசா 44:23

என் சக்தியையெல்லாம் செலவழித்தும் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டது.
ஆனாலும், யெகோவா எனக்கு நிச்சயம் நீதி செய்வார்.
என் கடவுள் எனக்குப் பலன் கொடுப்பார்"[a] என்று சொன்னேன்.
5 தாயின் வயிற்றிலேயே என்னைத் தன்னுடைய ஊழியனாக உருவாக்கிய யெகோவா,
இஸ்ரவேலை ஒன்றுதிரட்டவும்,
யாக்கோபைத் தன்னிடம் கூட்டிக்கொண்டு வரவும்[b] என்னைத் தேர்ந்தெடுத்தார்.
யெகோவாவின் கண்களில் நான் மகிமை பெறுவேன்.
என் கடவுள் எனக்குப் பக்கபலமாக இருப்பார்.
6 அவர் என்னிடம், "நீ யாக்கோபின் கோத்திரங்களை எடுத்து நிறுத்தும்படியும்,
இஸ்ரவேலில் உயிர்தப்பியவர்களைக் கூட்டிக்கொண்டு வரும்படியும் உன்னை என் ஊழியனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.
அதுமட்டுமல்ல, பூமியெங்கும் இருக்கிறவர்களை மீட்பதற்காக,[c]
உன்னைத் தேசங்களுக்கெல்லாம் ஒளியாகவும் ஆக்கியிருக்கிறேன்"[d] என்று சொன்னார்.

7 ஜனங்களால் அவமதிக்கப்படுகிறவரும்[e] அருவருக்கப்படுகிறவரும்
ஆட்சியாளர்களுக்குப் பணிவிடை செய்கிறவருமாக இருப்பவரிடம் இஸ்ர
வேலின் பரிசுத்தமான கடவுளும் இஸ்ரவேலை விடுவிக்கிறவருமான
யெகோவா[f] சொல்வது இதுதான்:

"ராஜாக்கள் பார்த்து எழுந்து நிற்பார்கள்.
தலைவர்கள் தலைவணங்குவார்கள்.
ஏனென்றால், இஸ்ரவேலின் பரிசுத்த கடவுளான யெகோவா நம்பகமானவராக இருக்கிறார்.[g]
அவர் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்."[h]
8 யெகோவா இப்படிச் சொல்கிறார்:
"அனுக்கிரகக் காலத்தில் நான் உனக்குப் பதிலளித்தேன்.[i]
மீட்பின் நாளில் உனக்கு உதவி செய்தேன்.[j]
ஜனங்களுக்கு உத்தரவாதமாக* கொடுப்பதற்காக உன்னைப் பாதுகாத்து வந்தேன்.[k]
நீ தேசத்தை மறுபடியும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவும்,
பாழாகிப்போன நிலங்களில் ஜனங்களைத் திரும்ப வாழ வைக்கவும்,[l]
9 சிறையில் இருப்பவர்களிடம், 'வெளியே வாருங்கள்!'[m] என்று சொல்லவும்,
இருட்டில் இருப்பவர்களிடம்,[n] 'வெளிச்சத்துக்கு வாருங்கள்!' என்று சொல்லவும் அப்படிச் செய்தேன்.
வழியோரங்களில் அவர்கள் மேய்வார்கள்.
பாதைகளின்* இரண்டு பக்கங்களிலும் அவர்களுடைய மேய்ச்சல் நிலங்கள் இருக்கும்.

அதி. 49
a ஏசா 40:10
b ஏசா 56:8
c சங் 98:2, ஏசா 11:10, ஏசா 52:10, அப் 13:47
d ஏசா 42:6, மத் 12:18, லூ 2:30, 32
e ஏசா 53:3
f ஏசா 43:14
g உபா 7:9
h ஏசா 42:1
i சங் 69:13
j லூ 1:69, லூ 22:43, 2கொ 6:2, எபி 5:7
k ஏசா 42:6, 7
l ஏசா 54:3
m சங் 102:19, 20
n சங் 112:4, ஏசா 9:2, லூ 1:68, 79

49:8 * வே.வா., "ஒப்பந்தமாக." **49:9** * அல்லது, "குன்றுகளின்."

10 அவர்கள் பசியில் வாட மாட்டார்கள், தாகத்தில் தவிக்க மாட்டார்கள்.[a]
அனல் காற்றோ வெயிலோ அவர்களைத் தாக்காது.[b]
ஏனென்றால், அவர்கள்மேல் இரக்கமுள்ளவர் அவர்களை வழிநடத்துவார்;[c]
நீரூற்றுகள் வழியாக அவர்களைக் கூட்டிக்கொண்டு போவார்.[d]
11 நான் என்னுடைய மலைகளையெல்லாம் பாதைகளாக்குவேன்.
என் நெடுஞ்சாலைகளை உயர்த்துவேன்.[e]
12 இதோ, அவர்கள் தொலைதூரத்திலிருந்து வருகிறார்கள்.[f]
வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வருகிறார்கள்.
சீனீம் தேசத்திலிருந்து வருகிறார்கள்."[g]
13 வானமே, சந்தோஷத்தில் பாடு! பூமியே, பூரித்துப் பாடு![h]
மலைகளே, மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்யுங்கள்![i]
ஏனென்றால், யெகோவா தன்னுடைய ஜனங்களுக்கு ஆறுதல் தந்திருக்கிறார்.[j]
கஷ்டத்தில் தவிக்கிற தன்னுடைய ஜனங்களுக்கு இரக்கம் காட்டியிருக்கிறார்.[k]
14 ஆனால், "யெகோவா என்னைக் கைவிட்டுவிட்டார்,[l]
யெகோவா என்னை மறந்துவிட்டார்"[m] என்று சீயோன் சொல்லிக்கொண்டே இருந்தது.
15 ஒரு தாய் தன் வயிற்றில் சுமந்த பிள்ளைக்குக் கரிசனை காட்டாமல் இருப்பாளா?
பால் குடிக்கும் தன் குழந்தையை மறப்பாளா?
அவள் மறந்தாலும், நான் ஒருபோதும் உன்னை மறக்க மாட்டேன்.[n]
16 இதோ, நான் உன்னை என் உள்ளங்கையில் செதுக்கி வைத்திருக்கிறேன்.
உன் மதில்களை என் கண் முன்னாலேயே வைத்திருக்கிறேன்.
17 உன்னை நாசமாக்கியவர்கள் உன்னைவிட்டு ஓடிப் போவார்கள்.
உன் பிள்ளைகள் வேகமாக வருகிறார்கள்.
18 உன் கண்களை உயர்த்தி சுற்றிலும் பார்.
அவர்கள் எல்லாரும் ஒன்றுகூடுகிறார்கள்.[o]
உன்னிடம் வருகிறார்கள்.
யெகோவா இப்படிச் சொல்கிறார்: "என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,*
கல்யாணப் பெண்ணுக்கு நகைகள் அலங்காரமாக இருப்பது போல
அவர்கள் உனக்கு அலங்காரமாக இருப்பார்கள்.
19 உன்னுடைய ஊர்களெல்லாம் வெறுமையாகவும் பாழாகவும் கிடந்தது.[p]
ஆனால், இனி இடமே இல்லாதளவுக்கு மக்களால் நிறைந்திருக்கும்.[q]
உன்னை விழுங்கியவர்கள்[r] தொலைதூரத்தில் இருப்பார்கள்.[s]
20 நீ பிள்ளைகளை இழந்து தவித்த சமயத்தில் பிறந்தவர்கள் உன்னிடம் வந்து,

---

49:18 *வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 49
a ஏசா 55:1; ஏசா 65:13
b ஏசா 32:2
c எசே 34:23
d சங் 23:1, 2; எரே 31:9; வெளி 7:16, 17
e சங் 107:6, 7; ஏசா 11:16; ஏசா 40:3, 4
f உபா 30:4
g ஏசா 43:5, 6
h ஏசா 42:10
i ஏசா 55:12
j ஏசா 12:1; ஏசா 40:1; ஏசா 66:13
k ஏசா 44:23; ஏசா 61:3; எரே 31:13
l ஏசா 54:7
m புல 5:20
n ஏசா 44:21; எரே 31:20
o ஏசா 43:5, 6; ஏசா 60:4
p ஏசா 51:3
q எரே 30:18, 19
r எரே 51:34
s எரே 30:16

அதி. 49
a ஏசா 54:1, 2
b புல 1:1
c ஏசா 62:4
d ஏசா 43:5; எரே 31:17
e எஸ்றா 1:3; ஏசா 11:10, 12; ஏசா 62:10
f ஏசா 60:4; ஏசா 66:20
g ஏசா 60:10, 16
h ஏசா 60:14
i மீ 7:16, 17
j ஏசா 25:9
k எரே 29:14; எரே 46:27; ஓசி 6:11; யோவே 3:1
l ஏசா 52:2; எரே 29:10; எரே 50:34; சக 9:11
m ஏசா 54:17
n 1தீ 1:1
o ஏசா 41:14; ஏசா 48:20
p ஏசா 60:16
q எசே 39:28

'இந்த இடம் எங்களுக்கு ரொம்ப நெரிசலாக இருக்கிறது.
எங்களுக்குப் பெரிய இடம் வேண்டும்'[a] என்று சொல்வார்கள்.
21 ஆனால் நீ உன் உள்ளத்தில்,
'நான்தான் அன்றைக்கே பிள்ளைகளைப் பறிகொடுத்துவிட்டேனே,
மலடி ஆகிவிட்டேனே,
வேறு தேசத்துக்குக் கைதியாகக் கொண்டுபோகப்பட்டேனே,
தன்னந்தனியாக இருந்தேனே,[b]
அப்படியிருக்கும்போது இந்தப் பிள்ளைகள் எப்படிப் பிறந்தார்கள்?
இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்?[c]
இவர்களை வளர்த்து என்னிடம் அனுப்பியது யார்?'[d] என்று கேட்பாய்."
22 உன்னதப் பேரரசராகிய யெகோவா இப்படிச் சொல்கிறார்:
"இதோ! தேசங்களுக்கு நேராக என் கையை உயர்த்துவேன்.
ஜனங்கள் பார்ப்பதற்காக என் கொடியை ஏற்றுவேன்.*[e]
அப்போது, அவர்கள் உன் மகன்களைக் கையில் தூக்கிக்கொண்டு
வருவார்கள்.
உன் மகள்களைத் தோளில் சுமந்துகொண்டு வருவார்கள்.[f]
23 ராஜாக்கள் உனக்குப் பணிவிடை செய்வார்கள்.[g]
இளவரசிகள் உன்னைக் கவனித்துக்கொள்வார்கள்.
அவர்கள் உனக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுவார்கள்.[h]
உனக்கு அடங்கி நடப்பார்கள்.*[i]
அப்போது, நான் யெகோவா என்று நீ புரிந்துகொள்வாய்.
என்மேல் நம்பிக்கை வைக்கிறவர்கள் அவமானம் அடைய
மாட்டார்கள்."[j]
24 சிறைபிடிக்கப்பட்டவர்களை ஒரு கொடுங்கோலனின் கையிலிருந்து
விடுவிக்க முடியுமா?
பலசாலியின் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற முடியுமா?
25 ஆனால், யெகோவா சொல்வது இதுதான்:
"சிறைபிடிக்கப்பட்டவர்கள் கொடுங்கோலனின் கையிலிருந்து
விடுவிக்கப்படுவார்கள்.[k]
பலசாலியின் பிடியிலிருந்து அவர்கள் காப்பாற்றப்படுவார்கள்.[l]
உன்னை எதிர்க்கிறவர்களை நான் எதிர்ப்பேன்.[m]
உன் பிள்ளைகளை நான் காப்பாற்றுவேன்.
26 உனக்குக் கொடுமை செய்தவர்களின் சதையை அவர்களே தின்னும்படி
செய்வேன்.
தித்திப்பான திராட்சமதுவைக் குடிப்பது போல அவர்களுடைய
இரத்தத்தையே குடிக்கும்படி செய்வேன்.
அப்போது, உங்களை மீட்கிறவரும்,[n] விடுவிக்கிறவரும்,[o]
யாக்கோபின் வல்லமையுள்ள கடவுளுமான[p] யெகோவா
நான்தான் என்று
எல்லா ஜனங்களும் தெரிந்துகொள்வார்கள்."[q]

49:22 * அதாவது, "கொடிக் கம்பத்தை நாட்டுவேன்." **49:23** * நே.மொ., "உன் பாதத்தில் உள்ள தூசியை நக்குவார்கள்."

50 யெகோவா சொல்வது இதுதான்:
“உங்கள் தாயை அனுப்பியபோது நான் விவாகரத்து பத்திரம்[a]
கொடுத்தா அனுப்பினேன்?
ஏதோ கடனை அடைப்பதற்காகவா உங்களை விற்றுப்போட்டேன்?
நீங்கள் பாவம் செய்ததால்தானே உங்கள் தாயை அனுப்பிவிட்டேன்?[b]
நீங்கள் குற்றம் செய்ததால்தானே[c] உங்களை விற்றுப்போட்டேன்?
2 அப்படியிருக்கும்போது, நான் வந்த சமயத்தில் ஏன் இங்கு
யாருமே இல்லை?
நான் கூப்பிட்டபோது ஏன் யாருமே பதில் சொல்லவில்லை?[d]
உங்களை விடுவிக்க முடியாதளவுக்கு என் கை என்ன சின்னதா?
உங்களைக் காப்பாற்றுவதற்கு எனக்குச் சக்தி இல்லையா?[e]
நான் ஒரு வார்த்தை சொன்னால், கடலே வற்றிவிடும்.[f]
ஆறுகள் வறண்ட நிலமாகும்.[g]
அப்போது, மீன்கள் தண்ணீர் இல்லாமல் செத்துப்போகும்.
அவற்றின் உடல் அழுகிவிடும்.
3 நான் வானத்தை இருளால் மூடுகிறேன்.[h]
அதைக் கறுப்புக் கம்பளியால் போர்த்துகிறேன்.”
4 பக்குவமாகப் பேசும் திறமையை* உன்னதப் பேரரசராகிய யெகோவா
எனக்குத் தந்திருக்கிறார்.[i]
சோர்ந்துபோனவர்களிடம் எப்படி ஆறுதலாக# பேசுவது என்று
சொல்லிக்கொடுத்திருக்கிறார்.[j]
தினமும் காலையில் என்னை எழுப்புகிறார்.
ஒரு மாணவனைப் போல நான் கேட்டுக் கற்றுக்கொள்வதற்காக என்
காதுகளைத் தீட்டுகிறார்.[k]
5 உன்னதப் பேரரசராகிய யெகோவா என் காதுகளைத் திறந்திருக்கிறார்.
நான் அவரை எதிர்க்கவில்லை.[l]
வேறு பக்கமாகத் திரும்பிக்கொள்ளவும் இல்லை.[m]
6 என்னை அடித்தவர்களுக்கு என் முதுகைக் காட்டினேன்.
என் தாடியைப் பிடித்து இழுத்தவர்களுக்கு* என் கன்னங்களைக்
காட்டினேன்.
என்னைக் கேவலப்படுத்தி என்மேல் காறித் துப்பியவர்களுக்கு என்
முகத்தை மறைக்கவில்லை.[n]
7 ஆனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா எனக்கு உதவுவார்.[o]
அதனால் நான் கூனிக்குறுக மாட்டேன்.
எனக்கு எந்த அவமானமும் வராது என்று தெரியும்.
அதனால்தான், என் முகத்தைக் கருங்கல்* போலாக்கினேன்.[p]
8 என்னை நீதிமான் என்று அறிவிக்கிறவர் எனக்குத் துணையாக
இருக்கிறார்.
யாரால் என்னைக் குற்றப்படுத்த* முடியும்?[q]

50:4 *வே.வா., “கல்விமானின் நாவை.” #அல்லது, “தெம்பளிக்கும் விதமாக.” **50:6** *வே.வா., “தாடியிலுள்ள முடியைப் பிடுங்கி எடுக்கிறவர்களுக்கு.” **50:7** *நே.மொ., “சிக்கிமுக்கிக் கல்.” **50:8** *வே.வா., “என்னோடு வாதாட.”

அதி. 50
a உபா 24:1
b ஏசா 59:2; எரே 3:1
c 2ரா 17:16, 17
d எரே 35:15
e ஏசா 40:28; ஏசா 59:1
f யாத் 14:21, 29; சங் 106:9; ஏசா 51:10
g சங் 107:33; சங் 114:1, 3; ஏசா 42:15; நாகூ 1:4
h யாத் 10:21
i யாத் 4:11; எரே 1:9
j யோவா 7:15, 46
k மத் 13:54
l சங் 40:6-8
m மத் 26:39; பிலி 2:8
n மத் 26:67; மாற் 14:65; லூ 22:63; யோவா 18:22
o ஏசா 49:8
p எசே 3:8, 9
q ரோ 8:33

வாருங்கள், நாம் நேருக்கு நேர் வாதாடலாம்.
யாருக்கு என்மேல் வழக்கு இருக்கிறது?
அவன் என் முன்னால் வந்து வழக்காடட்டும்.
9 உன்னதப் பேரரசராகிய யெகோவா எனக்கு உதவுவார்.
நான் குற்றவாளி என்று யாரால் தீர்ப்பு கொடுக்க முடியும்?
இதோ! அவர்கள் எல்லாரும் ஒரு துணியைப் போல
அரிக்கப்படுவார்கள்.
அந்துப்பூச்சி அவர்களைத் தின்றுதீர்க்கும்.
10 யெகோவாவுக்குப் பயந்து நடந்து,
அவருடைய ஊழியனின் பேச்சைக் கேட்பவன் யார்?[a]
வெளிச்சமே இல்லாத கும்மிருட்டில் நடப்பவன் யார்?
அவன் தன்னுடைய கடவுளான யெகோவாவின் பெயரில் நம்பிக்கை
வைக்கட்டும்; அவரையே சார்ந்திருக்கட்டும்.
11 “தீ மூட்டுகிறவர்களே,
நெருப்பைக் கிளறிவிடுகிறவர்களே,
நீங்கள் மூட்டிய நெருப்பின் வெளிச்சத்திலேயே நடங்கள்.
அந்தத் தீப்பொறிகளின் நடுவிலேயே நடங்கள்.
நான் உங்களுக்குக் கொடுக்கப்போகிற தண்டனை இதுதான்:
நீங்கள் வலியில் துடிதுடித்தபடி கிடப்பீர்கள்.

51 “யெகோவாவை ஆர்வமாகத் தேடுகிறவர்களே,
நீதிநெறிகளை நாடுகிறவர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்.
நீங்கள் எந்தப் பாறையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டீர்களோ,
எந்தக் கற்சுரங்கத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டீர்களோ அதை
நினைத்துப் பாருங்கள்.
2 உங்கள் தகப்பனான ஆபிரகாமையும்,
உங்களைப் பெற்றெடுத்த சாராளையும்[b] நினைத்துப் பாருங்கள்.
நான் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்தபோது அவனுக்கு வாரிசே இல்லை.[c]
நான் அவனை ஆசீர்வதித்து ஒரு பெரிய தேசமாக்கினேன்.[d]
3 யெகோவா சீயோனை ஆறுதல்படுத்துவார்.[e]
இடிந்துகிடக்கும் அதன் இடங்களையெல்லாம் எடுத்து நிறுத்துவார்.*[f]
அங்கே உள்ள வனாந்தரத்தை ஏதேன் தோட்டம்போல் ஆக்குவார்.[g]
அங்கே இருக்கிற பாலைநிலத்தை யெகோவாவின் தோட்டம்போல்
மாற்றுவார்.[h]
அங்கே சந்தோஷம் களைகட்டும்.
ஜனங்கள் எல்லாரும் நன்றி சொல்லிப் பாடுவார்கள்.[i]
4 என் ஜனங்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்.
என் தேசத்து மக்களே,[j] கவனித்துக் கேளுங்கள்.
நான் ஒரு சட்டத்தைக் கொடுப்பேன்.[k]
என்னுடைய நியாயத்தை வெளிச்சம்போல் மக்கள்மேல் பிரகாசிக்க
வைப்பேன்.[l]

51:3 * நே.மொ., “இடங்களுக்கு ஆறுதலைக் கொண்டுவருவார்.”

அதி. 50
a ஏசா 42:1
ஏசா 53:11

அதி. 51
b ஆதி 21:2
c ஆதி 12:1
ஆதி 15:2
d 1ரா 4:20
e சங் 102:13
ஏசா 66:13
எரே 31:12
f ஏசா 44:26
ஏசா 61:4
g ஆதி 2:8
h ஏசா 35:1
ஏசா 41:18
i எரே 33:10, 11
j யாத் 19:6
உபா 7:6
k ஏசா 2:3
மீ 4:2
l நீதி 6:23

5 நான் சீக்கிரத்தில் நீதி செய்வேன்,[a]
உங்களுக்கு மீட்பு தருவேன்.[b]
என் அதிகாரத்தினால் ஜனங்களுக்குத் தீர்ப்பு வழங்குவேன்.[c]
தீவுகள் என்மேல் நம்பிக்கை வைக்கும்.[d]
நான் நடவடிக்கை எடுப்பதற்காக* அவை காத்திருக்கும்.
6 மேலே இருக்கிற வானத்தைப் பாருங்கள்.
கீழே இருக்கிற பூமியையும் பாருங்கள்.
வானம் புகையைப் போல மறைந்துவிடும்.
பூமி துணியைப் போல இற்றுப்போகும்.
ஜனங்கள் பூச்சிகளைப் போலச் செத்துப்போவார்கள்.
ஆனால், நான் என்றென்றுமே உங்களை மீட்பேன்.[e]
என் நீதி ஒருபோதும் ஒழிந்துபோகாது.[f]
7 என்னுடைய சட்டத்தை* இதயத்தில் வைத்திருக்கிற ஜனங்களே,[g]
நீதியை அறிந்தவர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்.
அற்ப மனுஷர்கள் பழித்துப் பேசுவதைக் கேட்டு பயந்துபோகாதீர்கள்.
அவர்கள் கண்டபடி பேசுவதைக் கேட்டு மிரண்டுபோகாதீர்கள்.
8 பொட்டுப்பூச்சி ஒரு உடையைத் தின்பது போல அவர்களைத் தின்றுவிடும்.
அந்துப்பூச்சி* ஒரு கம்பளியை நாசமாக்குவது போல அவர்களை நாசமாக்கிவிடும்.[h]
ஆனால், என் நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்.
நான் தரும் மீட்பு எல்லா தலைமுறைகளுக்கும் கிடைக்கும்."[i]
9 யெகோவாவின் கரமே,[j] எழும்பு! எழும்பு!
பூர்வ நாட்களிலும், முந்தின தலைமுறைகளிலும் எழும்பியது போலவே எழும்பு!
உன் பலத்தைக் காட்டு!
ராகாபை*[k] துண்டு துண்டாக்கியது நீதானே?
ராட்சதக் கடல் பிராணியைக் குத்திப்போட்டது நீதானே?[l]
10 ஆழமான கடலின் தண்ணீரை வற்ற வைத்தது நீதானே?[m]
மீட்கப்பட்ட ஜனங்களைக் கூட்டிக்கொண்டு போவதற்காக ஆழமான கடலில் பாதை உண்டாக்கியது நீதானே?[n]
11 யெகோவாவினால் விடுவிக்கப்பட்ட ஜனங்கள் திரும்பி வருவார்கள்.[o]
ஆனந்தமாகப் பாடிக்கொண்டே சீயோனுக்கு வருவார்கள்.[p]
என்றென்றும் சந்தோஷமாக இருப்பார்கள்.[q]
ஆட்டமும் பாட்டமும் கொண்டாட்டமுமாக இருப்பார்கள்.
அவர்களுடைய வேதனையும் துக்கமும் காணாமல் போய்விடும்.[r]
12 "நான்தான் உங்களுக்கு ஆறுதல் தருகிறேன்.[s]
அப்படியிருக்கும்போது, அற்ப மனுஷனைப் பார்த்து நீ ஏன் பயப்படுகிறாய்?[t]
அவன் பசும்புல்லைப் போலச் சீக்கிரத்தில் வாடிப்போவானே!

51:5 *வே.வா., "என் பலத்தைப் பார்ப்பதற்காக." **51:7** *வே.வா., "அறிவுரையை." **51:8** *அல்லது, "புழு." **51:9** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 51
a ஏசா 46:13
b ஏசா 12:2; ஏசா 56:1
c 1சா 2:10; ஏசா 2:4
d ஏசா 60:9
e ஏசா 45:17
f சங் 102:25-27; மத் 24:35
g எரே 31:33
h ஏசா 50:9
i ஏசா 45:17; லூ 1:50
j லூ 1:51
k சங் 87:4; சங் 89:10; ஏசா 30:7
l யாத் 15:4; நெ 9:10, 11; சங் 106:22; எசே 29:3
m யாத் 14:21, 22
n சங் 106:9
o எரே 31:11; சக 10:10
p ஏசா 35:10
q ஏசா 61:7
r ஏசா 25:8; ஏசா 65:18, 19
s ஏசா 49:13; ஏசா 66:13
t சங் 118:6; தானி 3:16, 17; மத் 10:28

அதி. 51
a ஏசா 40:22
b ஏசா 44:2
c எஸ்றா 1:2, 3 ஏசா 48:20 ஏசா 52:2
d எரே 31: 35, 36 யோனா 1:4
e ஏசா 47:4
f உபா 33:27 சங் 91:1
g ஏசா 65:17 ஏசா 66:8, 22
h ஏசா 60:14 எரே 31:33 சக 8:8
i ஏசா 52:1 ஏசா 60:1
j எரே 25:15
k எசே 14:21
l புல 1:17
m புல 2:11

13 வானத்தை விரித்து[a] பூமிக்கு அஸ்திவாரம் போட்டவரும்,
உன்னை உருவாக்கினவருமான யெகோவாவை[b] ஏன் மறந்தாய்?
அவரை மறந்ததால் உன்னை அடக்கி ஒடுக்கினவனுடைய*
ஆவேசத்தைப் பார்த்துத் தினம் தினம் நடுங்கினாய்.
அவன் உன்னை அடியோடு அழித்துவிடுவான் என்று நினைத்துப் பயந்தாய்.
இப்போது அவனுடைய ஆவேசம் எங்கே?
14 சங்கிலிகளால் கட்டப்பட்டுக் கிடப்பவன் சீக்கிரத்தில் விடுதலை ஆவான்.[c]
அவன் பசியில் தவிக்க மாட்டான்.
இறந்து, குழிக்குள் போக மாட்டான்.
15 நான் உன் கடவுளாகிய யெகோவா.
நான் கடலைக் கொந்தளிக்க வைக்கிறேன், அலைகளைப் பொங்கியெழ வைக்கிறேன்.[d]
பரலோகப் படைகளின் யெகோவா என்பதுதான் என்னுடைய பெயர்.[e]
16 என் வார்த்தைகளை உன் நாவில் வைப்பேன்.
என் கையின் கீழே* உன்னைப் பாதுகாப்பேன்.[f]
உன்னைப் பயன்படுத்தி வானத்தை விரிப்பேன், பூமிக்கு அஸ்திவாரம் போடுவேன்.[g]
சீயோனிடம், 'நீ என் ஜனம்' என்று சொல்வேன்.[h]
17 விழித்தெழு! விழித்தெழு! எருசலேமே, எழுந்திரு![i]
யெகோவாவின் கோபம் என்ற கோப்பையிலிருந்து நீ குடித்தாய்.
அதில் இருப்பதையெல்லாம் குடித்துவிட்டாய்.
தள்ளாட வைக்கும் அந்தக் கோப்பையிலிருந்து குடித்துத் தீர்த்துவிட்டாய்.[j]
18 உனக்கு வழிகாட்ட உன்னுடைய மகன்களில் யாருமே இல்லை.
உன் கையைப் பிடித்துச் செல்ல நீ வளர்த்த பிள்ளைகளில் யாருமே இல்லை.
19 இரண்டு விதங்களில் உனக்கு அழிவு வந்திருக்கிறது.
நாசமும் சீர்குலைவும் ஒரு பக்கம்; பஞ்சமும் போரும் இன்னொரு பக்கம்.[k]
உன்னைப் பார்த்துப் பரிதாபப்பட ஆளே இல்லை.
உனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை.[l]
20 உன்னுடைய மகன்கள் மயங்கிவிட்டார்கள்.[m]
எல்லா தெரு முனைகளிலும் விழுந்து கிடக்கிறார்கள்.
வலையில் சிக்கிய காட்டு மிருகத்தைப் போலக் கிடக்கிறார்கள்.
யெகோவாவின் கோபத்தையும் தண்டனையையும் முழுமையாக அனுபவிக்கிறார்கள்."
21 திராட்சமதுவைக் குடிக்காமலேயே போதையில் தள்ளாடுகிற பெண்ணே,
தண்டனை அனுபவிக்கிறவளே, தயவுசெய்து இதைக் கேள்.

51:13 * வே.வா., "அடைத்து வைத்தவனுடைய." **51:16** * நே.மொ., "நிழலிலே."

22 உன் எஜமானும், தன்னுடைய ஜனங்களுக்காக வழக்காடுகிற
கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்:
“என்னுடைய கோபம் என்ற கோப்பையை உன் கையிலிருந்து
எடுத்துவிடுவேன்.
தள்ளாட வைக்கும் அந்தக் கோப்பையிலிருந்து[a]
இனி ஒருபோதும் நீ குடிக்க மாட்டாய்.[b]
23 உனக்குக் கொடுமை செய்கிறவர்களின் கையில் அதைக் கொடுப்பேன்.[c]
அவர்கள் உன்னிடம், ‘நீ குப்புற விழு, உன்மேல் ஏறி நடக்க வேண்டும்!’
என்று சொன்னார்கள்.
நீயும் தரையில் குப்புற விழுந்து உன் முதுகைக் காட்டினாய்.
அவர்கள் தெருவில் நடப்பதுபோல் உன் முதுகின் மேல் ஏறி
நடந்தார்கள்.”

52 விழித்தெழு! சீயோனே, விழித்தெழு![d] உன் பலத்தைத் திரட்டு![e]
பரிசுத்த நகரமான எருசலேமே, அழகான உடைகளை
உடுத்திக்கொள்![f]
விருத்தசேதனம் செய்யாதவர்களும் அசுத்தமானவர்களும் இனி
உன்னிடம் வர மாட்டார்கள்.[g]
2 எருசலேமே, நீ எழுந்து, மண்ணை உதறிவிட்டு, சிம்மாசனத்தில்
உட்காரு.
சிறைபிடிக்கப்பட்ட சீயோன் மகளே, உன் கழுத்திலுள்ள கயிறுகளைக்
கழற்றிவிடு.[h]
3 யெகோவா இப்படிச் சொல்கிறார்:
“நீ விலை இல்லாமல் விற்கப்பட்டாய்,[i]
பணம் இல்லாமல் மீட்டுக்கொள்ளப்படுவாய்.”[j]
4 உன்னதப் பேரரசராகிய யெகோவா இப்படிச் சொல்கிறார்:
“என் ஜனங்கள் முதலில் எகிப்துக்குப் போய் அங்கே வேறு தேசத்து
ஜனங்களைப் போல வாழ்ந்தார்கள்.[k]
அதன் பிறகு, அசீரியா காரணமே இல்லாமல் அவர்களைக்
கொடுமைப்படுத்தியது.”
5 “இப்போது இந்த இடத்தில் நான் என்ன செய்வது?” என்று யெகோவா
கேட்கிறார்.
“என் ஜனங்கள் விலை இல்லாமல் பிடித்துக்கொண்டு
போகப்பட்டார்கள்.
அவர்களை ஆளுகிறவர்கள் வெற்றி கிடைத்த பெருமையில்
ஆரவாரம் செய்கிறார்கள்”[l] என்று யெகோவா சொல்கிறார்.
“நாள் முழுவதும் என் பெயர் அவமதிக்கப்படுகிறது.[m]
6 அதனால், என் பெயரை என் ஜனங்கள் தெரிந்துகொள்வார்கள்.[n]
இதையெல்லாம் சொல்லியிருப்பது நான்தான் என்பதை அந்த நாளில்
அவர்கள் உணர்ந்துகொள்வார்கள்.
நானேதான் இதையெல்லாம் சொல்லியிருக்கிறேன்!”
7 நல்ல செய்தி சொல்ல மலைகள்மேல் ஏறி வருகிறவருடைய பாதங்கள்
எவ்வளவு அழகாக இருக்கின்றன![o]

அதி. 51
a ஏசா 51:17
b ஏசா 54:9, ஏசா 62:8
c ஏசா 49:25

அதி. 52
d ஏசா 51:17
e ஆகா 2:4
f ஏசா 61:3
g ஏசா 35:8, ஏசா 60:21, வெளி 21:27
h ஏசா 51:14, ஏசா 61:1
i ஏசா 50:1
j ஏசா 45:13
k ஆதி 46:5-7
l சங் 137:3, எரே 50:17
m சங் 74:10, ரோ 2:24
n எசே 20:44
o ஏசா 40:9, நாகூ 1:15, அப் 8:4, ரோ 10:15, எபே 6:14, 15

“விடிவுகாலம் வரப்போகிறது!
சீக்கிரத்தில் சமாதானம்[a] கிடைக்கப்போகிறது!
கடவுள் மீட்பு தரப்போகிறார்!” என்று அவர் அறிவிக்கிறார்.
சீயோனைப் பார்த்து, “உன் கடவுள் ராஜாவாகிவிட்டார்!”[b] என்று சொல்கிறார்.
8 இதோ, உன் காவல்காரர்கள் குரலெழுப்புவதைக் கேள்!
அவர்கள் ஒன்றுசேர்ந்து சந்தோஷமாகக் குரலெழுப்புகிறார்கள்.
சீயோன் ஜனங்களை யெகோவா மறுபடியும் ஒன்றுசேர்ப்பதை அவர்கள் கண்கூடாகப் பார்ப்பார்கள்.
9 எருசலேமின் இடிபாடுகளே,[c] சந்தோஷம் பொங்கப் பாடுங்கள்.
யெகோவா அவருடைய ஜனங்களுக்கு ஆறுதல் தந்திருக்கிறார்;[d] எருசலேமை விடுவித்திருக்கிறார்.[e]
10 யெகோவா எல்லா தேசங்களுக்கும் முன்பாகத் தன்னுடைய பரிசுத்தமான கையின் பலத்தைக் காட்டியிருக்கிறார்.[f]
நம் கடவுள் தரும் மீட்பைப் பூமியெங்கும் இருக்கிறவர்கள் பார்ப்பார்கள்.[g]
11 புறப்படுங்கள், புறப்படுங்கள், அங்கிருந்து வெளியே வாருங்கள்;[h] அசுத்தமான எதையும் தொடாதீர்கள்![i]
யெகோவாவின் பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே,[j]
அங்கிருந்து கிளம்பி வாருங்கள்;[k] உங்களைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.
12 நீங்கள் பதற வேண்டாம்.
தலைதெறிக்க ஓட வேண்டாம்.
ஏனென்றால், இஸ்ரவேலின் கடவுளான யெகோவா உங்களைப் பாதுகாப்பார்.
உங்களுக்கு முன்னால் போயும் பாதுகாப்பார்,[l] பின்னால் வந்தும் பாதுகாப்பார்.[m]
13 என் ஊழியர்[n] விவேகமாக* நடந்துகொள்வார்.
அவர் உயர்த்தப்படுவார்.
மிகுந்த மேன்மையும் சிறப்பும் அடைவார்.[o]
14 அவருடைய தோற்றம் வேறெந்த மனுஷனுடைய தோற்றத்தையும்விட ரொம்பவே உருக்குலைக்கப்பட்டதையும்,
அவருடைய உருவம் வேறெந்த மனிதனுடைய உருவத்தையும்விட ரொம்பவே கோரமாக்கப்பட்டதையும் பார்த்து,
பலர் அதிர்ச்சி அடைந்தார்கள்.
15 அதுபோல் அவர் பல தேசத்தாரை அதிர்ச்சி அடையச் செய்வார்.[p]
அவருக்கு முன்னால் ராஜாக்கள் வாயடைத்துப் போவார்கள்.[q]
ஏனென்றால், தங்களுக்குச் சொல்லப்படாத சம்பவங்களைப் பார்ப்பார்கள்.
கேள்விப்படாத விஷயங்களைக் கேட்பார்கள்.[r]

52:13 *வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதலோடு.”

அதி. 52
a லூ 2:14; அப் 10:36; எபே 2:17
b சங் 93:1; ஏசா 33:22; மீ 4:7; மத் 24:14; வெளி 11:15, 17
c ஏசா 61:4
d ஏசா 66:13
e ஏசா 44:23
f ஏசா 51:9
g சங் 22:27; ஏசா 49:6
h ஏசா 48:20; எரே 50:8; எரே 51:6; சக 2:6
i லேவி 5:2; எசே 44:23
j லேவி 10:3; எண் 3:6, 8; எஸ்றா 1:7; எஸ்றா 8:30
k 2கொ 6:17; வெளி 18:4
l யாத் 13:21; 1நா 14:15
m ஏசா 58:8
n ஏசா 42:1; ஏசா 61:1; பிலி 2:5-7
o சங் 2:6; சங் 110:1; ஏசா 9:6; மத் 28:18
p சங் 2:2
q சங் 2:10; சங் 72:11
r ரோ 15:20, 21

53 நாங்கள் சொன்ன விஷயத்தைக் கேட்டு அதில்* விசுவாசம் வைத்தது யார்?[a]
யெகோவா யாருக்குத் தன்னுடைய பலத்தை#[b] காட்டியிருக்கிறார்?[c]
2 அவர் துளிர்போல்[d] அவருக்குமுன்* துளிர்ப்பார்; வறண்ட நிலத்திலுள்ள வேர்போல் இருப்பார்.
அவருடைய தோற்றத்தில் கம்பீரமோ ஆடம்பரமோ இல்லை,[e]
நம்மைக் கவரும் அளவுக்கு எந்த விசேஷமும் இல்லை.#
3 வலிகளையும் வியாதிகளையும் அவர் நன்கு புரிந்து வைத்திருந்தார்.
ஆனாலும், ஜனங்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டார்.[f]
ஒருவிதத்தில், அவருடைய முகம் நம்மிடமிருந்து மறைக்கப்பட்டது.*
நாம் அவரை வெறுத்தோம்; அவரைக் கொஞ்சம்கூட மதிக்கவில்லை.[g]
4 உண்மையில், அவர் நம்முடைய வியாதிகளைச் சுமந்தார்.[h]
நம் வலிகளைத் தாங்கினார்.[i]
நாமோ கடவுள்தான் அவருக்குத் தண்டனையையும்,* அடியையும், வேதனையையும் கொடுத்ததாக நினைத்தோம்.
5 ஆனால், நம்முடைய குற்றத்துக்காகத்தான் அவர் குத்தப்பட்டார்.[j]
நம்முடைய பாவங்களுக்காகத்தான் அவர் கொடுமைப்படுத்தப்பட்டார்.[k]
நமக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைப்பதற்காகத்தான் அவர் தண்டனையை ஏற்றுக்கொண்டார்.[l]
அவருடைய காயங்களால்தான் நாம் குணமானோம்.[m]
6 நாம் எல்லாரும் ஆடுகளைப் போல அலைந்து திரிந்தோம்.[n]
நமக்கு இஷ்டமான வழியில் போனோம்.
ஆனால், நம் எல்லாருடைய பாவங்களையும் அவர் சுமக்கும்படி யெகோவா செய்தார்.[o]
7 அவர் ஒடுக்கப்பட்டார்;[p] ஜனங்கள் தன்னைக் கொடுமைப்படுத்த அனுமதித்தார்.[q]
அவர் வாயே திறக்கவில்லை.
வெட்டப்படுவதற்காகக் கொண்டுபோகப்படும் ஆட்டைப் போலவும்,[r]
மயிர் கத்தரிப்பவர்களின் முன்னால் அமைதியாக இருக்கிற செம்மறியாட்டைப் போலவும்,
அவர் வாயே திறக்கவில்லை.[s]
8 அவர் அநியாயமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.*
அவருடைய வம்சத்தின்# விவரங்களைப் பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள்?

53:1 *அல்லது, “நாங்கள் கேட்ட விஷயத்தில்.” #நே.மொ., “கையை.” **53:2** *இங்கே ‘அவருக்கு’ என்பது துளிர்ப்பதைப் பார்க்கும் ஒருவரையோ கடவுளையோ குறிக்கலாம். #வே.வா., “நாம் எதிர்பார்க்கிற விசேஷ தோற்றம் அவருக்கு இல்லை.” **53:3** *அல்லது, “மக்கள் தங்களுடைய முகத்தை அவரிடமிருந்து திருப்பிக்கொண்டார்கள்.” **53:4** *வே.வா., “வியாதியையும்.” **53:8** *நே.மொ., “ஒடுக்கப்பட்டதாலும் தீர்ப்பு பெற்றதாலும் அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார்.” #வே.வா., “வாழ்க்கையின்.”

அதி. 53
a ரோ 10:16
b ஏசா 51:9
c ஏசா 40:5, யோவா 12:37, 38
d ஏசா 11:1, சக 6:12
e ஏசா 52:14, யோவா 1:10, பிலி 2:7
f சங் 22:7, மத் 26:67, 68, யோவா 6:66, 1பே 2:4
g சக 11:13, யோவா 18:39, 40, அப் 3:13, 14, அப் 4:11
h மத் 8:14-17
i லேவி 16:21, 22, 1பே 2:24, 1யோ 2:1, 2
j தானி 9:24, சக 12:10, யோவா 19:34, ரோ 4:25
k மத் 20:28, ரோ 5:6, 19
l கொலோ 1:19, 20
m 1பே 2:24
n 1பே 2:25
o 1பே 3:18
p சங் 22:12, சங் 69:4
q 1பே 2:23
r யோவா 1:29, 1கொ 5:7
s மத் 27:12-14, அப் 8:32, 33

அவர்தான் இந்த உலகத்திலிருந்து ஒழித்துக்கட்டப்பட்டாரே.[a]
என் ஜனங்களுடைய குற்றத்துக்காக அடிக்கப்பட்டாரே.*[b]
9 அவருடைய பேச்சில் சூதுவாதே இல்லை.
அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை.*[c]
ஆனாலும், பொல்லாதவர்கள் நடுவே அவருக்குக் கல்லறை கொடுக்கப்பட்டது.[d]
அவர் இறந்தபோது பணக்காரரோடு இருந்தார்.[e]
10 அவரை வேதனைகளால் நொறுக்க யெகோவா முடிவுசெய்தார்.*
அதனால், அவர் பாடுகள் படுவதற்கு விட்டுவிட்டார்.
கடவுளே, நீங்கள் அவருடைய உயிரைக் குற்றநிவாரண பலியாகக் கொடுத்தால்,[f]
அவர் தன்னுடைய வம்சத்தைப் பார்ப்பார்; காலம்காலமாக வாழ்வார்.[g]
அவர் மூலமாக யெகோவாவின் விருப்பம் நிறைவேறும்.[h]
11 தான் பட்ட பாடுகளுக்கான பலனைப் பார்த்து அவர் மனநிறைவு அடைவார்.
நீதியுள்ளவராகிய என் ஊழியர்[i] தன்னுடைய அறிவினால்,
நிறைய பேர் நீதிமான்களாவதற்கு உதவுவார்.[j]
அவர்களுடைய குற்றங்களை அவரே சுமப்பார்.[k]
12 அவர் தன்னுடைய உயிரையே கொடுப்பார்.[l]
குற்றவாளிகளில் ஒருவராக எண்ணப்படுவார்.[m]
பலருடைய பாவங்களைச் சுமப்பார்.[n]
குற்றவாளிகளுக்காகப் பரிந்து பேசுவார்.[o]
அதனால், பலரோடுகூட அவருக்கும் நான் ஒரு பங்கைக் கொடுப்பேன்.
கைப்பற்றப்பட்டதை அவர் மற்ற வீரர்களோடு பங்குபோடுவார்.

54

“குழந்தை பெறாதவளே, சந்தோஷமாக ஆரவாரம் செய்![p]
பிரசவ வேதனைப்படாதவளே,[q] ஆனந்தமாக ஆர்ப்பரி![r]
ஏனென்றால், கணவனோடு வாழ்கிறவளின் பிள்ளைகளைவிட
கணவனால் கைவிடப்பட்டவளின் பிள்ளைகள் ஏராளமாக இருக்கிறார்கள்”[s] என்று யெகோவா சொல்கிறார்.
2 “உன் கூடாரத்தைப் பெரிதாக்கு.[t]
உன்னுடைய விசாலமான கூடாரத்தின் துணிகளை அகலமாக்கு.
அதன் கயிறுகளைத் தாராளமாக நீளமாக்கு.
கூடார ஆணிகளை உறுதிப்படுத்து.[u]
3 ஏனென்றால், உன்னுடைய எல்லைகள் வலது பக்கமாகவும் இடது பக்கமாகவும் விரிவாகும்.
உன்னுடைய பிள்ளைகள் மற்ற தேசங்களைச் சொந்தமாக்குவார்கள்.
வெறுமையாய்க் கிடக்கிற நகரங்களில் குடியேறுவார்கள்.[v]

53:8 *வே.வா., “அடித்துக் கொல்லப்பட்டாரே.” **53:9** *வே.வா., “வன்முறையில் இறங்கவில்லை.” **53:10** *வே.வா., “அவரை வேதனைகளால் நொறுக்குவது யெகோவாவின் சித்தமாக இருந்தது.”

அதி. 53
a தானி 9:26; மத் 27:50
b சக 13:7; யோவா 11:49, 50; ரோ 5:6; எபி 9:26
c 1பே 2:22
d மத் 27:38
e மத் 27:57-60; மாற் 15:46; யோவா 19:41
f லேவி 16:11; 2கொ 5:21; எபி 7:27
g ஏசா 9:7; 1தீ 6:16
h கொலோ 1:19, 20
i ஏசா 42:1
j ரோ 5:18, 19
k 1பே 2:24
l சங் 22:14; மத் 26:27, 28; எபி 2:14
m மாற் 15:27; லூ 22:37; லூ 23:32, 33
n மத் 20:28; 1தீ 2:5, 6; தீத் 2:13, 14; எபி 9:28
o ரோ 8:34; எபி 7:25; எபி 9:26; 1யோ 2:1, 2

அதி. 54
p ஏசா 62:4
q ஏசா 66:7, 8
r ஏசா 44:23; ஏசா 49:13
s கலா 4:26, 27
t ஏசா 49:20
u ஏசா 33:20
v ஏசா 49:8; எசே 36:35

4 பயப்படாதே,[a] இனி நீ அவமானப்பட மாட்டாய்.[b]
கூனிக்குறுகாதே, இனி நீ ஏமாற்றம் அடைய மாட்டாய்.
இளமையில் உனக்கு ஏற்பட்ட அவமானத்தையும்,
விதவையானதால் ஏற்பட்ட தலைகுனிவையும் இனி நினைத்துப் பார்க்க மாட்டாய்."
5 "ஏனென்றால், உன் மகத்தான படைப்பாளர்[c] உனக்குக் கணவர்* போல இருக்கிறார்.[d]
பரலோகப் படைகளின் யெகோவா என்பதுதான் அவருடைய பெயர்.
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளாகிய அவரே உன்னை விடுவிக்கிறவர்.[e]
அவர் பூமி முழுவதுக்கும் கடவுள் என்று அழைக்கப்படுவார்.[f]
6 கணவனால் ஒதுக்கப்பட்டு வேதனைப்படுகிற மனைவியைப் போலவும்,[g]
இளவயதில் கல்யாணமாகி கைவிடப்பட்டவளைப் போலவும் இருக்கிற உன்னை
யெகோவா தேர்ந்தெடுத்தார்" என்று உன் கடவுள் சொல்கிறார்.
7 "கொஞ்சக் காலத்துக்கு* உன்னை நான் கைவிட்டேன்.
ஆனால், மிகுந்த இரக்கத்தோடு உன்னைத் திரும்பவும் சேர்த்துக்கொள்வேன்.[h]
8 பயங்கரமான கோபத்தினால் என் முகத்தைக் கொஞ்சக் காலத்துக்கு உன்னிடமிருந்து மறைத்துக்கொண்டேன்.[i]
ஆனால், இனி என்றென்றுமே உனக்கு மாறாத அன்பையும் இரக்கத்தையும் காட்டுவேன்"[j] என்று
உன்னை விடுவிக்கிறவரான[k] யெகோவா சொல்கிறார்.
9 "இது நோவாவின் காலத்தை எனக்கு ஞாபகப்படுத்துகிறது.[l]
தண்ணீரால் உலகத்தை அழிக்க மாட்டேன் என்று நான் நோவாவிடம் சத்தியம் செய்து கொடுத்தது[m] போலவே,
உன்மேல் கோபப்படவோ உன்னைத் தண்டிக்கவோ மாட்டேன் என்று இப்போது சத்தியம் செய்து கொடுக்கிறேன்.[n]
10 மலைகள் ஒழிந்துபோகலாம்.
குன்றுகள் அழிந்துபோகலாம்.
ஆனால், உனக்கு நான் காட்டுகிற மாறாத அன்பு ஒழியாது.[o]
சமாதானத்துக்காக நான் செய்திருக்கிற ஒப்பந்தமும் அழியாது"[p] என்று
உன்மேல் இரக்கம் காட்டுகிற யெகோவா[q] சொல்கிறார்.
11 "வேதனையில் வாடியவளே,[r] சூறாவளியில் சிக்கியவளே, ஆறுதல் கிடைக்காமல் தவித்தவளே,[s]
உன் கற்களைக் காரை பூசி உறுதியாக்குவேன்.
நீலமணிக்கற்களால் உன் அஸ்திவாரத்தை அமைப்பேன்.[t]
12 மாணிக்கக் கற்களால் உன் கொத்தளங்களைக் கட்டுவேன்.
ஜொலிக்கிற கற்களால் உன் வாசல் கதவுகளை அமைப்பேன்.
விலை உயர்ந்த ரத்தினங்களால் உன் எல்லைகளைக் குறிப்பேன்.

54:5 * வே.வா., "எஜமான்." **54:7** * வே.வா., "கண்ணிமைக்கும் நேரத்துக்கு."

அதி. 54
a ஏசா 41:10
b ஏசா 61:7
c ஏசா 44:2
d எசே 16:8; ஓசி 2:16
e ஏசா 44:6
f சக 14:9; ரோ 3:29
g ஏசா 49:14; ஏசா 62:4
h உபா 30:1, 3; சங் 30:5; சங் 106:47; ஏசா 27:12; எரே 29:10
i ஏசா 47:6; எசே 39:23
j ஏசா 55:3
k ஏசா 48:17; ஏசா 49:26
l ஆதி 7:23
m ஆதி 8:21
n எரே 31:35, 36; எசே 39:29
o ஏசா 51:6
p ஏசா 55:3
q ஏசா 14:1
r ஏசா 52:2
s புல 1:2, 17
t வெளி 21:19

13 உன் பிள்ளைகள் எல்லாரும் யெகோவாவினால்
கற்பிக்கப்பட்டிருப்பார்கள்.[a]
அவர்கள் மிகுந்த சமாதானத்தோடு இருப்பார்கள்.[b]
14 நீ நீதியில் உறுதியாக நிலைநாட்டப்படுவாய்.[c]
இனி யாரும் உன்னைக் கொடுமைப்படுத்த மாட்டார்கள்.[d]
நீ எதற்குமே பயப்பட மாட்டாய், எதுவுமே உன்னைப் பயமுறுத்தாது.
திகில் உன்னை நெருங்காது.[e]
15 உன்னைத் தாக்க இனிமேல் நான் யாரையும் அனுப்ப மாட்டேன்.
அப்படி யாராவது தாக்க வந்தால்,
அவர்களை நீ தோற்கடிப்பாய்."[f]
16 "கரிநெருப்பை ஊதி ஆயுதத்தை உண்டாக்குகிற கொல்லனைப்
படைத்தது நான்தான்.
அந்த ஆயுதத்தால் மற்றவர்களைக் கொன்றுபோடுகிறவனைப்
படைத்ததும் நான்தான்.[g]
17 அதனால், உன்னைத் தாக்குவதற்காக உருவாக்கப்படுகிற எந்த
ஆயுதமும் ஒன்றுமில்லாமல் போகும்.[h]
உனக்கு எதிரான எல்லா குற்றச்சாட்டுகளையும் நீ முறியடிப்பாய்.
இது யெகோவாவின் ஊழியர்களுக்குக் கிடைக்கும் பெரிய
ஆசீர்வாதம்.*
அவர்களுடைய நீதிக்குக் காரணமானவர் நானே" என்று யெகோவா
சொல்கிறார்.[i]

55 தாகமாக இருப்பவர்களே,[j] வாருங்கள்; வந்து தண்ணீர் குடியுங்கள்![k]
பணம் இல்லாதவர்களே, நீங்களும் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்!
திராட்சமதுவையும் பாலையும்[l] விலையில்லாமல் இலவசமாக
வாங்கிக்கொள்ளுங்கள்.[m]
2 உங்களுடைய பசியைத் தீர்க்காத ஒன்றுக்காக ஏன் பணத்தைச்
செலவழிக்கிறீர்கள்?
திருப்தி தராத ஒன்றுக்காக ஏன் உங்களுடைய சம்பாத்தியத்தை*
வீணாக்குகிறீர்கள்?
நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, நல்ல உணவைச்
சாப்பிடுங்கள்.[n]
அப்போது, உண்மையிலேயே அருமையான உணவைச்
சாப்பிடுவதால் மிகவும் சந்தோஷப்படுவீர்கள்.[o]
3 உங்களுடைய காதை நன்றாகத் தீட்டிக்கொண்டு என்னிடம் வாருங்கள்.[p]
கவனமாகக் கேளுங்கள், அப்போது உயிர் பிழைப்பீர்கள்.
என்றென்றும் நிலைத்திருக்கும் ஓர் ஒப்பந்தத்தை நான் நிச்சயமாகவே
உங்களோடு செய்வேன்.[q]
நான் தாவீதுக்கு வாக்குறுதி கொடுத்தபடியே, உங்கள்மேலும் மாறாத
அன்பைக் காட்டுவேன். என் வாக்குறுதி நம்பகமானது.[r]
4 இதோ, ஜனங்களுக்கு அவரை என்னுடைய சாட்சியாக[s] நான்
ஏற்படுத்தினேன்.

அதி. 54
a எரே 31:34; யோவா 6:45
b சங் 119:165; ஏசா 66:12; எரே 33:6
c ஏசா 1:26; ஏசா 60:21
d ஏசா 52:1
e எரே 23:4; செப் 3:13
f எசே 38:16, 22; சக 2:8; சக 12:3
g ஏசா 10:5
h சங் 2:2, 4; ஏசா 41:12
i எரே 23:6

அதி. 55
j சங் 42:2; சங் 63:1; ஆமோ 8:11; மத் 5:6
k ஏசா 41:17
l யோவே 3:18
m வெளி 21:6; வெளி 22:17
n ஏசா 25:6
o சங் 36:7, 8; சங் 63:5
p யாக் 4:8
q ஏசா 61:8
r 2சா 7:8, 16; 2சா 23:5; சங் 89:28, 29; எரே 33:25, 26; அப் 13:34
s வெளி 1:5; வெளி 3:14

54:17 * வே.வா., "ஆஸ்தி." **55:2** * வே.வா., "கஷ்டப்பட்டு சம்பாதித்த காசை."

ஜனங்களுக்குத் தலைவராகவும்[a] அதிகாரியாகவும்[b] நியமித்தேன்.
5 இதோ, முன்பின் தெரியாத ஜனங்களை நீ* அழைப்பாய்.
உன்னைப் பற்றித் தெரியாத அந்த ஜனங்கள் உன்னிடம்
ஓடிவருவார்கள்.
உன் கடவுளான யெகோவா உனக்குச் செய்வதைப் பார்த்து[c] அவர்கள்
உன்னிடம் ஓடிவருவார்கள்.
ஏனென்றால், இஸ்ரவேலின் பரிசுத்த கடவுள் உன்னை
மேன்மைப்படுத்துவார்.[d]
6 வாய்ப்பு இருக்கும்போதே யெகோவாவைத் தேடுங்கள்.[e]
அவர் உங்களுக்குப் பக்கத்தில் இருக்கும்போதே அவரைக்
கூப்பிடுங்கள்.[f]
7 கெட்டவர்கள் கெட்ட வழிகளையும்,
கெட்ட யோசனைகளையும் விட்டுவிட்டு,
நம் கடவுளான யெகோவாவிடம் திரும்பி வரட்டும்.[g]
அவர் இரக்கம் காட்டி[h] அவர்களைத் தாராளமாக மன்னிப்பார்.[i]
8 "ஏனென்றால், என்னுடைய யோசனைகள் வேறு, உங்களுடைய
யோசனைகள் வேறு.[j]
உங்களுடைய வழிகள் வேறு, என்னுடைய வழிகள் வேறு" என்று
யெகோவா சொல்கிறார்.
9 "பூமியைவிட வானம் எப்படி உயர்ந்திருக்கிறதோ,
அப்படியே உங்களுடைய வழிகளைவிட என்னுடைய வழிகளும்,
உங்களுடைய யோசனைகளைவிட என்னுடைய யோசனைகளும்
உயர்ந்திருக்கின்றன.[k]
10 வானத்திலிருந்து பொழிகிற மழையும் பனியும்
நிலத்தை நனைத்து, பயிர்களை வளர வைத்து,
விதைக்கிறவருக்கு விதையையும் சாப்பிடுகிறவருக்கு உணவையும்
தராமல் திரும்பிப் போவதில்லை.
11 அதுபோலவே, என் வாயிலிருந்து வருகிற வார்த்தையும் இருக்கும்.[l]
அது பலன் தராமல் என்னிடம் திரும்பி வராது.[m]
நான் விரும்புவதை* நிச்சயம் நிறைவேற்றும்.[n]
எதற்காக அதைச் சொன்னேனோ அதைக் கண்டிப்பாகச் செய்து
முடிக்கும்.
12 அதனால், நீங்கள் சந்தோஷமாகப் புறப்படுவீர்கள்.[o]
சமாதானத்தோடு அழைத்து வரப்படுவீர்கள்.[p]
அப்போது, மலைகளும் குன்றுகளும் உங்களைப் பார்த்து
ஆனந்தமாகப் பாடும்.[q]
காட்டிலுள்ள மரங்களெல்லாம் கைதட்டி உங்களை வரவேற்கும்.[r]
13 தேசத்தில் முட்செடிகளுக்குப் பதிலாக ஆபால் மரங்கள் வளரும்.[s]
முட்புதர்களுக்கு* பதிலாக குழிநாவல் மரங்கள் வளரும்.

55:5 *அதாவது, "யாக்கோபு அல்லது இஸ்ரவேல்." 55:11 *வே.வா., "என் சித்தத்தை." 55:13 *நே.மொ., "முள்நிறைந்த காஞ்சொறி செடிகளுக்கு."

அதி. 55
a தானி 9:25; மத் 23:10
b ஆதி 49:10
c சக 8:23
d ஏசா 49:3; ஏசா 60:9
e 1நா 28:9
f சங் 145:18; யாக் 4:8
g எசே 18:21; அப் 3:19
h யாத் 34:6; 2நா 33:12, 13
i எண் 14:18; சங் 103:12, 13; ஏசா 43:25
j சங் 40:5
k சங் 103:11
l எண் 23:19; ஏசா 46:11
m யோசு 23:14; ஏசா 45:23
n சங் 135:6; ஏசா 46:10
o ஏசா 35:10
p ஏசா 54:13; ஏசா 66:12
q ஏசா 42:11
r ஏசா 44:23
s ஏசா 41:19; ஏசா 60:13

இதெல்லாம் யெகோவாவுக்குப் புகழ் சேர்க்கும்.[a]
என்றென்றும் அழியாத அடையாளமாக இருக்கும்."

56 யெகோவா சொல்வது இதுதான்:
"நியாயமாகவும்[b] நீதியாகவும் நடந்துகொள்ளுங்கள்.
நான் சீக்கிரத்தில் உங்களை மீட்கப்போகிறேன்.
நான் நீதியுள்ளவர் என்பதை அப்போது எல்லாரும்
புரிந்துகொள்வார்கள்.[c]
2 இதைச் செய்கிறவர்களும்,
இதை உறுதியாகக் கடைப்பிடிக்கிறவர்களும்,
ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கிறவர்களும், அதன் புனிதத்தைக்
கெடுக்காதவர்களும்,[d]
கெட்ட காரியங்கள் செய்யாதவர்களும் சந்தோஷமானவர்கள்.
3 யெகோவாவின் ஜனங்களோடு சேர்ந்துகொள்கிற மற்ற தேசத்தார்,[e]
'யெகோவா என்னை அவருடைய ஜனங்களிடமிருந்து கண்டிப்பாக
ஒதுக்கிவிடுவார்' என்று சொல்லக் கூடாது.
அண்ணகர்கள்* யாரும், 'நான் ஒரு பட்டமரம்' என்று சொல்லக் கூடாது."

4 யெகோவாவின் கட்டளைப்படி ஓய்வுநாளைக் கடைப்பிடித்து, அவ
ருக்குப் பிரியமானதைச் செய்து, அவருடைய ஒப்பந்தத்தின்படி நடக்கிற
அண்ணகர்களைப் பற்றி அவர் சொல்வது இதுதான்:

5 "என்னுடைய வீட்டில் அவர்களுக்கு ஒரு இடத்தையும்* ஒரு
பெயரையும் கொடுப்பேன்.
குழந்தை பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதத்தைவிட பெரிய
ஆசீர்வாதமாக அது இருக்கும்.
என்றென்றும் அழியாத ஒரு பெயரை
நான் அவர்களுக்குக் கொடுப்பேன்.
6 என் ஜனங்களோடு சேர்ந்துகொள்ள வருகிற மற்ற தேசத்து
ஜனங்களையும் நான் ஏற்றுக்கொள்வேன்.
யெகோவாவுக்குச் சேவை செய்யவும், யெகோவாவின் பெயரை
நேசிக்கவும்,[f]
அவருடைய ஊழியர்களாக இருக்கவும் அவர்கள் வருவார்கள்.
அவர்கள் என்னுடைய ஓய்வுநாளின் புனிதத்தைக் கெடுக்காமல் அதை
அனுசரிப்பார்கள்.
என்னுடைய ஒப்பந்தத்தின்படி நடப்பார்கள்.
7 அவர்களையும் என்னுடைய பரிசுத்த மலைக்குக் கூட்டிக்கொண்டு
வருவேன்.[g]
என்னுடைய ஜெப வீட்டில் அவர்களைச் சந்தோஷமாக இருக்க
வைப்பேன்.
என்னுடைய பலிபீடத்தில் அவர்கள் செலுத்துகிற தகன பலிகளையும்
காணிக்கைகளையும் ஏற்றுக்கொள்வேன்.
ஏனென்றால், என் வீடு எல்லா ஜனங்களுக்குமான ஜெப வீடு என்று
அழைக்கப்படும்."[h]

56:3 * சொல் பட்டியலைப் பாருங்கள். **56:5** * வே.வா., "நினைவுச் சின்னத்தையும்."

அதி. 55
a எரே 33:9

அதி. 56
b மீ 6:8
c ஏசா 46:13; ஏசா 51:5
d ஏசா 58:13, 14
e ஏசா 60:10; சக 8:23
f மல் 1:11
g ஏசா 2:3; மீ 4:2; சக 8:3
h 1ரா 8:29, 43; மத் 21:13; மாற் 11:17; லூ 19:46

8 சிதறிப்போன இஸ்ரவேலர்களைக் கூட்டிச்சேர்க்கிற உன்னதப் பேரரச
ராகிய யெகோவா[a] சொல்வது இதுதான்:

"நான் ஏற்கெனவே கூட்டிச்சேர்த்த ஜனங்களோடு மற்றவர்களையும்
கூட்டிச்சேர்ப்பேன்."[b]

9 வயல்வெளி மிருகங்களே, காட்டு விலங்குகளே,
வந்து சாப்பிடுங்கள்![c]

10 காவல்காரர்கள் சரியான குருடர்கள்;[d] அவர்கள் எதையுமே
கவனிக்கவில்லை.[e]
அவர்கள் குரைக்க முடியாத ஊமை நாய்கள்.[f]
மூச்சு இரைத்துக்கொண்டே படுத்துக் கிடக்கிறார்கள்; எப்போதும்
தூங்கவே விரும்புகிறார்கள்.

11 அவர்கள் அகோரப் பசியுள்ள நாய்கள்.
அவர்கள் திருப்தி அடைவதே இல்லை.
அவர்கள் புத்தி* இல்லாத மேய்ப்பர்கள்.[g]
அவரவருக்கு இஷ்டமான வழியில் போகிறார்கள்.
ஆதாயத்துக்காக அநியாயமாய் நடந்துகொள்கிறார்கள்.

12 அவர்கள் ஒவ்வொருவரும், "வாருங்கள், நாம் திராட்சமது குடிப்போம்.
போதை தலைக்கேறும்வரை குடிப்போம்.[h]
இன்று போலவே நாளைய தினமும் இருக்கும்,
சொல்லப்போனால் இன்னும் நன்றாகவே இருக்கும்!" என்கிறார்கள்.

57

நீதிமான்கள் அழிந்துபோகிறார்கள்.
ஆனால், யாரும் அதைக் கண்டுகொள்வதில்லை.
விசுவாசமாக* நடக்கிறவர்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.#[i]
ஆனாலும், கஷ்டங்களின் காரணமாகவே△
நீதிமான்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்பதை யாரும்
புரிந்துகொள்வதில்லை.

2 நேர்மையானவர்கள் எல்லாரும் தங்கள் படுக்கையில்*
ஓய்வெடுக்கிறார்கள்.
அவர்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்.

3 "ஆனால், சூனியக்காரியின் பிள்ளைகளே,
முறைகேடான உறவினாலும் விபச்சாரத்தினாலும் பிறந்தவர்களே,
நீங்கள் இங்கே வாருங்கள்.

4 யாரைப் பார்த்துக் கேலி செய்கிறீர்கள்?
யாரைப் பார்த்து வாயைத் திறந்து நாக்கை நீட்டுகிறீர்கள்?
நீங்கள் பாவம் செய்கிற பிள்ளைகள்,
ஏமாற்றுப் பேர்வழிகள்.[j]

5 பெரிய மரங்களின் கீழும் அடர்த்தியான மரங்களின் கீழும்[k]
நீங்கள் மோகத் தீயில் பற்றியெரிகிறீர்கள்.[l]

56:11 *வே.வா., "புரிந்துகொள்ளுதல்." **57:1** *வே.வா., "பற்றுமாறாமல்." #அதாவது, "இறந்துபோகிறார்கள்." △அல்லது, "கஷ்டங்களிலிருந்தே." **57:2** *அதாவது, "கல்லறையில்."

அதி. 56
a உபா 30:3; ஏசா 27:12; ஓசி 1:11
b ஏசா 49:22; ஏசா 60:4
c எரே 12:9
d ஏசா 6:10; ஏசா 29:10
e எரே 6:13, 14; எசே 13:16
f எசே 33:6
g மீ 3:6
h ஏசா 5:22; ஏசா 28:7; ஓசி 4:11

அதி. 57
i மீ 7:2
j ஏசா 1:4; ஏசா 30:9
k உபா 12:2; 1ரா 14:22, 23
l ஏசா 1:29

பள்ளத்தாக்குகளிலும்* பாறை இடுக்குகளிலும்
உங்கள் பிள்ளைகளை நரபலி கொடுக்கிறீர்கள்.[a]
6 பள்ளத்தாக்கில் உள்ள வழுவழுப்பான கற்களை ஆசையாக எடுத்து
வைத்துக்கொள்கிறீர்கள்.[b]
அந்தக் கற்கள்தான் உங்கள் கூலி, அவைதான் உங்கள் சொத்து.
அவற்றுக்குத் திராட்சமது காணிக்கையையும் மற்ற
காணிக்கைகளையும் செலுத்துகிறீர்கள்.[c]
அதைப் பார்த்து நான் திருப்தி அடைய* வேண்டுமா?
7 உயர்ந்தோங்கி நிற்கிற மலைமேல் உங்கள் மெத்தையை விரித்தீர்கள்.[d]
அங்கே ஏறிப் போய் பலி செலுத்தினீர்கள்.[e]
8 கதவுக்கும் கதவு நிலைக்கும் பின்னால் ஞாபகச் சின்னத்தை*
வைத்தீர்கள்.
என்னை விட்டுவிட்டீர்கள்; உடைகளைக் கழற்றினீர்கள்.
மேலே போய் உங்கள் மெத்தையைப் பெரிதாக்கினீர்கள்.
அவர்களோடு ஒப்பந்தம் செய்தீர்கள்.
அவர்களோடு படுத்துக்கொள்ள விரும்பினீர்கள்.[f]
ஆணுறுப்பைப் பார்த்துக்கொண்டிருந்தீர்கள்.#
9 நீங்கள் எண்ணெயையும் வாசனைத் தைலத்தையும் எடுத்துக்கொண்டு,
மேலேக்கிடம்* போனீர்கள்.
தொலைதூர தேசங்களுக்குத் தூதுவர்களை அனுப்பினீர்கள்.
இப்படி, கல்லறை வரைக்கும் இறங்கினீர்கள்.
10 உங்களுக்கு இஷ்டமான வழியிலெல்லாம் போய் பாடுபட்டு
உழைத்தீர்கள்.
ஆனால், ‘இதெல்லாம் வீண்!’ என்று சொல்லாமல்,
உங்களுக்குப் புதுத்தெம்பு கிடைத்ததாக நினைத்தீர்கள்.
அதனால்தான் விடாமல் அதையே செய்கிறீர்கள்.
11 யாரைப் பார்த்துப் பயந்து நடுங்கி,
பொய் சொன்னீர்கள்?[g]
நீங்கள் என்னை நினைத்துப் பார்க்கவில்லை.[h]
எதையும் மனதில்* வாங்கவில்லை.[i]
நான் ஒன்றுமே சொல்லாமல் அமைதியாக இருந்தேன் அல்லவா?[j]
அதனால்தான், நீங்கள் எனக்குப் பயப்படவே இல்லை.
12 நீதிமான்கள்போல் காட்டிக்கொண்டு[k] நீங்கள் செய்கிற
அநியாயங்களை[l] நான் அம்பலப்படுத்துவேன்.
அவற்றால் உங்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இருக்காது.[m]
13 நீங்கள் உதவி கேட்டுக் கெஞ்சும்போது,
நீங்கள் வரிசையாக அடுக்கி வைத்திருக்கிற சிலைகள் உங்களைக்
காப்பாற்றாது.[n]

அதி. 57
a 2ரா 16:1, 3; எரே 7:31
b எரே 3:9
c எரே 7:18
d எரே 2:20; எசே 16:16; எசே 23:17
e எசே 20:28
f எசே 16:25, 33; எசே 23:18
g ஏசா 30:9, 10; ஏசா 59:3
h ஏசா 1:3; எரே 2:32; எரே 9:3
i ஏசா 42:24, 25
j சங் 50:21
k ஏசா 58:2
l ஏசா 66:3
m எரே 7:4; மீ 3:4
n நியா 10:14; ஏசா 42:17

57:5 *அதாவது, “காட்டாற்றுப் பள்ளத்தாக்குகளிலும்.” **57:6** *வே.வா., “என் மனதைத் தேற்றிக்கொள்ள.” **57:8** *ஒருவேளை, ஒரு தெய்வத்தின் உருவமாக அல்லது சின்னமாக இருந்திருக்கலாம். #ஒருவேளை உருவ வழிபாட்டைக் குறிக்கலாம். **57:9** *அல்லது, “ராஜாவிடம்.” **57:11** *நே.மொ., “இதயத்தில்.”

காற்று அவற்றை அடித்துக்கொண்டு போகும்.
மூச்சுக்காற்றுகூட அவற்றை ஊதித்தள்ளிவிடும்.
ஆனால், என்னிடம் அடைக்கலம் தேடி வருகிறவர்கள்
தேசத்தையும் என்னுடைய பரிசுத்த மலையையும்
சொந்தமாக்கிக்கொள்வார்கள்.[a]
14 ‘சாலையை அமையுங்கள்! பாதையை உண்டாக்குங்கள்! வழியைத் தயார்படுத்துங்கள்![b]
என் ஜனங்களுடைய வழியில் உள்ள தடைகளையெல்லாம் நீக்குங்கள்’ என்று சொல்லப்படும்.”
15 உயர்ந்தவரும் உன்னதமானவரும், என்றென்றும் வாழ்கிறவரும்,[c]
பரிசுத்தர் என்ற பெயர் உள்ளவருமான கடவுள்[d] சொல்வது இதுதான்:
“நான் மேலே பரிசுத்தமான இடத்தில் குடியிருக்கிறேன்.[e]
ஆனாலும், நெஞ்சம் நொறுங்கியவர்களோடும்
துவண்டுபோனவர்களோடும் இருக்கிறேன்.
எளியவர்களுக்குப் புத்துயிர் அளிக்கிறேன்.
நெஞ்சம் நொறுங்கியவர்களுக்குப் புதுத்தெம்பு கொடுக்கிறேன்.[f]
16 நான் என்றென்றும் எதிர்த்துக்கொண்டே இருக்க மாட்டேன்.
எப்போதுமே கோபமாக இருக்க மாட்டேன்.[g]
அப்படி இருந்தால், மனுஷன் ரொம்பவே சோர்ந்துபோய்விடுவான்.[h]
நான் படைத்த எல்லா உயிர்களுமே சோர்ந்துபோய்விடும்.
17 ஆதாயத்துக்காக அவன் அநியாயமும் பாவமும் செய்ததைப் பார்த்துக் கொதித்துப்போனேன்.[i]
அதனால் அவனைத் தாக்கினேன்; கோபத்தில் என் முகத்தை
அவனிடமிருந்து மறைத்துக்கொண்டேன்.
அவனோ மனம்* போன போக்கில் போய்[j] எனக்குத் துரோகம்
செய்துகொண்டே இருந்தான்.
18 அவன் போகிற போக்கையெல்லாம் பார்த்தேன்.
ஆனாலும் அவனைக் குணப்படுத்துவேன்,[k] வழிநடத்துவேன்.[l]
அவனுக்கும் அவனோடு சேர்ந்து துக்கப்படுகிறவர்களுக்கும்[m]
ஆறுதல் அளிப்பேன்.”[n]
19 “அவனுடைய உதடுகள் என்னைப் புகழும்படி செய்வேன்.
தூரத்தில் இருக்கிறவனையும் பக்கத்தில் இருக்கிறவனையும்
எப்போதுமே சமாதானத்தோடு வாழ வைப்பேன்.[o]
அவனைக் குணப்படுத்துவேன்” என்று யெகோவா சொல்கிறார்.
20 “ஆனால், கெட்டவர்கள் கொந்தளிக்கிற கடலைப் போல
இருக்கிறார்கள்.
அது அடங்காமல் சேற்றையும் சகதியையும்தான்* அடியிலிருந்து
கிளறிவிடுகிறது.
21 கெட்டவர்களுக்கு நிம்மதியே இருக்காது”[p] என்று என் கடவுள்
சொல்கிறார்.

57:17 * நே.மொ., “இதயம்.” **57:20** * வே.வா., “கடற்பாசியையும்தான்.”

அதி. 57
a ஏசா 56:6, 7; ஏசா 66:20; எசே 20:40; யோவே 3:17
b ஏசா 35:8; ஏசா 40:3; ஏசா 62:10
c ஆதி 21:33; சங் 90:2; ஏசா 40:28; 1தீ 1:17
d யாத் 15:11; லூ 1:46, 49
e 1ரா 8:27
f சங் 34:18; சங் 147:3; ஏசா 61:1; ஏசா 66:2
g சங் 103:9; மீ 7:18
h யோபு 34:14, 15
i எரே 6:13; எரே 8:10
j எரே 3:14
k எரே 33:6; ஓசி 14:4
l ஏசா 49:10
m ஏசா 61:2; புல 1:4
n ஏசா 12:1
o ஏசா 48:18; எபே 2:17
p நீதி 13:9; ஏசா 3:11

அதி. 58
a ஏசா 1:2
ஏசா 31:6
ஏசா 59:13
b ஏசா 29:13
எசே 33:32
c ஏசா 1:14, 15
d மல் 3:14
e லேவி 16:29
f எரே 34:15, 16
மீ 3:2-4
g எரே 34:8, 9
h நீதி 28:27
i சங் 41:1
சங் 112:9
நீதி 19:17
நீதி 22:9

58 அவர் என்னிடம், "என் ஜனங்கள் செய்திருக்கிற குற்றங்களையும்,[a]
யாக்கோபின் வம்சத்தார் செய்திருக்கிற பாவங்களையும்,
அவர்கள் எல்லாரும் கேட்கும்படி குரலை உயர்த்தி சொல்; கொஞ்சமும் தயங்காதே.
ஊதுகொம்பைப் போலச் சத்தமாக முழங்கு.
2 ஏதோ என்னுடைய நீதியை எப்போதும் கடைப்பிடிக்கிறவர்களைப் போலவும்,
நியாயமாக நடக்கிறவர்களைப் போலவும்,[b]
அவர்கள் தினமும் என் உதவியைத் தேடுகிறார்கள்.
என் வழிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுவதாகச் சொல்கிறார்கள்.
என்னிடம் நீதியான தீர்ப்புகளைக் கேட்கிறார்கள்.
என்னிடம் நெருங்கி வர விரும்புவதாகச் சொல்கிறார்கள்.[c]
3 'நாங்கள் விரதம் இருக்கும்போது நீங்கள் ஏன் பார்ப்பது இல்லை?[d]
எங்களை வருத்திக்கொள்ளும்போது* ஏன் கவனிப்பது இல்லை?'[e] என்று என்னிடம் கேட்கிறார்கள்.
நீங்கள் விரத நாளில் உங்களுடைய சொந்த வேலைகளைச் செய்கிறீர்களே!
உங்களிடம் வேலை பார்க்கிறவர்களை அடக்கி ஒடுக்குகிறீர்களே![f]
4 அதுமட்டுமல்ல, உங்களுடைய விரதமெல்லாம் சண்டை சச்சரவில்தான் முடிகிறது.
நீங்கள் ஒருவரை ஒருவர் கொடூரமாகத் தாக்குகிறீர்கள்.
இப்படி விரதமிருந்தால் உங்கள் குரலை நான் கேட்க மாட்டேன்.
5 உங்களையே வருத்திக்கொண்டு,
நாணற்புல்லைப் போலத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு,
துக்கத் துணியிலும்* சாம்பலிலும் படுத்துக்கொண்டு
விரதம் இருக்க வேண்டும் என்றா நான் சொன்னேன்?
இதையா யெகோவாவுக்குப் பிரியமான விரத நாள் என்று சொல்கிறீர்கள்?
6 நீங்கள் உண்மையில் எப்படி விரதம் இருக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன்:
அக்கிரமத்தின் விலங்குகளை நீங்கள் கழற்றிப்போட வேண்டும்.
நுகத்தடியின் கயிறுகளை அவிழ்த்துப்போட வேண்டும்.[g]
எல்லா நுகத்தடிகளையும் இரண்டாக உடைத்தெறிய வேண்டும்.
எல்லா அடிமைகளையும் விடுதலை செய்ய வேண்டும்.[h]
7 பசியில் வாடுகிறவர்களோடு உங்கள் உணவைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.[i]
ஏழைகளுக்கும் வீடுவாசல் இல்லாதவர்களுக்கும் உங்கள் வீட்டில் இடம் தர வேண்டும்.

58:3 *விரதம் இருப்பதன் மூலமோ வேறு விதத்தின் மூலமோ தங்களைத் தாங்களே கஷ்டப்படுத்திக்கொள்வதைக் குறிக்கலாம். **58:5** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

வெற்று உடம்போடு இருக்கிறவர்களைப் பார்க்கும்போது உடை தர வேண்டும்.[a]
உங்கள் சகோதரர்களுக்குத் தேவையான உதவி செய்ய வேண்டும்.
8 அப்போது, உங்கள் வெளிச்சம் விடியற்கால வெளிச்சம் போல இருக்கும்.[b]
நீங்கள் சீக்கிரத்தில் குணமாவீர்கள்.
உங்கள் நீதி உங்களுக்கு முன்னால் போகும்.
யெகோவாவின் மகிமை உங்களுக்குப் பின்னால் வந்து உங்களைக் காக்கும்.[c]
9 நீங்கள் கூப்பிடுவீர்கள், யெகோவா பதில் சொல்வார்.
நீங்கள் உதவி கேட்டுக் கதறுவீர்கள்; 'இதோ நான் இருக்கிறேன்!' என்று அவர் சொல்வார்.
எல்லா நுகத்தடிகளையும் நீங்கள் உடைத்தெறிந்துவிட்டு,
மற்றவர்களைப் பார்த்து விரலை நீட்டுவதையும் பழித்துப் பேசுவதையும் விட்டுவிட்டு,[d]
10 நீங்கள் விரும்பிச் சாப்பிடுவதைப் பசியாய் இருக்கிறவர்களுக்குக் கொடுத்து,[e]
கஷ்டப்படுகிறவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தால்,
இருட்டிலும் வெளிச்சம் போல இருப்பீர்கள்,
நடுப்பகல் போலப் பிரகாசிப்பீர்கள்.[f]
11 யெகோவா எப்போதும் உங்களை வழிநடத்துவார்.
வறண்ட தேசத்தில்கூட உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வார்.[g]
உங்களுக்குப் புத்துயிர் தருவார்.
நீங்கள் தாராளமாகத் தண்ணீர் பாய்ச்சப்பட்ட தோட்டத்தைப் போலவும்,[h]
வற்றாத நீரூற்று போலவும் ஆவீர்கள்.
12 இடிந்து கிடக்கிறவற்றை உங்களுக்காகத் திரும்பக் கட்டுவீர்கள்.[i]
தலைமுறை தலைமுறையாகப் பாழாய்க் கிடக்கும் அஸ்திவாரங்களை மறுபடியும் எழுப்புவீர்கள்.[j]
நீங்கள் உடைந்த மதில்களைப் பழுதுபார்க்கிறவர்கள் என்றும்,[k]
குடியிருக்கும்படி சாலைகளைச் சீரமைக்கிறவர்கள் என்றும் அழைக்கப்படுவீர்கள்.
13 என்னுடைய பரிசுத்த நாளான ஓய்வுநாளில் உங்கள் சொந்த வேலைகளைச் செய்யாமல் இருந்தால்,[l]
அதை ஒரு முக்கியமான நாளாகவும், யெகோவாவின் பரிசுத்த நாளாகவும், மிகுந்த சந்தோஷம் தருகிற நாளாகவும் நினைத்தால்,[m]
உங்கள் சொந்த வேலைகளைச் செய்யாமலும் வீண் வார்த்தைகளைப் பேசாமலும் அந்த நாளை மகிமைப்படுத்தினால்,
14 யெகோவாவாகிய என்னை வணங்குவதில்* மிகுந்த சந்தோஷத்தைப் பெறுவீர்கள்.

58:14 *வே.வா., "யெகோவாவாகிய என்னில்."

அதி. 58
a எசே 18:7, 8; யாக் 2:15, 16; 1யோ 3:17
b நீதி 4:18
c யாத் 14:19; ஏசா 52:12
d ஏசா 32:6; ஏசா 59:3
e உபா 15:7, 8
f சங் 37:5, 6
g ஏசா 49:10
h ஏசா 61:11; எரே 31:12
i நெ 2:5; எரே 31:38
j ஏசா 61:4
k நெ 6:1; ஆமோ 9:11, 14
l நெ 13:15; ஏசா 56:2; எரே 17:21
m உபா 5:12-14

நீங்கள் மலைகளையும் குன்றுகளையும் கைப்பற்றும்படி நான் செய்வேன்.[a]
உங்கள் மூதாதையான யாக்கோபுக்குக் கொடுத்த தேசத்தை நீங்கள் அனுபவிக்கும்படி செய்வேன்.[b]
யெகோவாவாகிய நானே இதைச் சொல்கிறேன்" என்றார்.

59 உங்களைக் காப்பாற்ற முடியாதபடி யெகோவாவின் கை என்ன சின்னதா?[c]
நீங்கள் சொல்வதைக் கேட்க முடியாதபடி அவருடைய காது என்ன மந்தமா?[d]
2 நீங்கள் செய்த குற்றங்கள்தானே உங்கள் கடவுளைவிட்டு உங்களைப் பிரித்துவிட்டன?[e]
நீங்கள் செய்த பாவங்களால்தானே அவர் உங்கள் ஜெபங்களைக் கேட்காமல்,
அவருடைய முகத்தை உங்களிடமிருந்து மறைத்துக்கொண்டார்?[f]
3 உங்கள் கைகள் இரத்தத்தால் கறைபட்டிருக்கின்றன.[g]
உங்கள் விரல்கள் குற்றத்தால் தீட்டுப்பட்டிருக்கின்றன.
உங்கள் உதடுகள் பொய் சொல்கின்றன;[h] உங்கள் நாவு அநியாயமாகப் பேசுகிறது.
4 நீதிக்குக் குரல்கொடுக்க யாருமே இல்லை.[i]
நேர்மையாக வழக்காட ஒருவரும் இல்லை.
வீணானதை நம்புகிறார்கள்;[j] பிரயோஜனம் இல்லாததைப் பேசுகிறார்கள்.
கெட்டதை யோசிக்கிறார்கள், அக்கிரமத்தைச் செய்கிறார்கள்.[k]
5 அவர்களுடைய யோசனைகள் விஷப் பாம்பின் முட்டைகளைப் போல் இருக்கின்றன.
அவற்றிலிருந்து விஷப் பாம்பின்* குட்டிகள்தான் வரும்.
அந்த முட்டைகளைச் சாப்பிடுகிறவன் செத்துப்போவான்.
அவர்கள் வெறும் சிலந்தி வலையைத்தான் பின்னுகிறார்கள்.[l]
6 அந்த வலையை அவர்களால் உடையாக உடுத்திக்கொள்ள முடியாது,
போர்வையாகப் போர்த்திக்கொள்ளவும் முடியாது.[m]
அவர்கள் கெட்ட செயல்களைச் செய்கிறார்கள்.
எப்போதும் வன்முறையைக் கையில் எடுக்கிறார்கள்.[n]
7 அவர்களுடைய கால்கள் கெட்டதைச் செய்ய ஓடுகின்றன.
அப்பாவிகளின் இரத்தத்தைச் சிந்த வேகமாகப் போகின்றன.[o]
அவர்கள் எப்போதும் கெட்டதையே யோசிக்கிறார்கள்.
எப்போதுமே மற்றவர்களுக்குக் கெடுதல் செய்கிறார்கள், கஷ்டம் கொடுக்கிறார்கள்.[p]
8 சமாதான வழியில் அவர்கள் கால்வைத்ததே இல்லை.
அவர்களுடைய பாதைகளில் நியாயம் இல்லை.[q]
அவர்களுடைய வழிகள் குறுக்கு வழிகள்.
அந்த வழிகளில் போகிறவர்களுக்குச் சமாதானமே கிடைக்காது.[r]

59:5 * வே.வா., "விரியன் பாம்பின்."

அதி. 58
a உபா 32:13
b சங் 105:10, 11; எரே 3:18

அதி. 59
c எண் 11:23; ஏசா 50:2
d சங் 116:1
e எரே 5:25
f உபா 31:16, 17; உபா 32:20; ஏசா 57:17; எசே 39:23; மீ 3:4
g ஏசா 1:15; எரே 2:34; எசே 7:23
h எரே 7:9, 10; எசே 13:8
i எரே 5:1; எசே 22:30; மீ 7:2
j ஏசா 30:12, 13
k மீ 2:1
l யோபு 8:13, 14
m ஏசா 57:12
n எரே 6:7; மீ 6:12
o எரே 22:17; எசே 9:9; மத் 23:35
p ரோ 3:15-17
q ஏசா 5:7; ஏசா 59:15; எரே 5:1; ஆமோ 6:12; ஆப 1:4
r எரே 8:15

9 அதனால்தான், நியாயம் எங்களைவிட்டுத் தூரமாக இருக்கிறது.
நீதி எங்களை நெருங்குவதே இல்லை.
நாங்கள் ஒளிக்காகக் காத்திருக்கிறோம், ஆனால் இருளைத்தான் பார்க்கிறோம்.
வெளிச்சத்தை எதிர்பார்க்கிறோம், ஆனால் இருட்டில்தான் நடக்கிறோம்.[a]
10 குருடர்களைப் போலத் தடவித் தடவி சுவரைத் தேடுகிறோம்.
பார்வை இல்லாதவர்களைப் போலத் தட்டுத்தடுமாறுகிறோம்.[b]
ராத்திரியில் தடுக்கி விழுவதைப் போலப் பட்டப்பகலிலும் தடுக்கி விழுகிறோம்.
பலசாலிகளின் நடுவே செத்தவர்களைப் போல இருக்கிறோம்.
11 நாங்கள் எல்லாரும் கரடிகளைப் போல உறுமுகிறோம்.
புறாவைப் போலச் சோகமாக முனகுகிறோம்.
நியாயத்துக்காக ஏங்குகிறோம், ஆனால் அது கிடைப்பதே இல்லை.
மீட்புக்காகக் காத்திருக்கிறோம், ஆனால் அது கிடைத்த பாடில்லை.
12 ஏனென்றால், உங்களுக்குமுன் நாங்கள் எத்தனையோ குற்றங்களைச் செய்தோம்.[c]
எங்கள் பாவங்கள் ஒவ்வொன்றும் எங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்கிறது.[d]
எங்கள் குற்றங்களையும் பாவங்களையும்
நாங்கள் நன்கு அறிந்திருக்கிறோம்.[e]
13 நாங்கள் பாவம் செய்து யெகோவாவை விட்டுவிட்டோம்.
எங்கள் கடவுளுக்கே துரோகம் செய்துவிட்டோம்.
கொடுமை செய்யவும் கலகம் செய்யவும் திட்டம் போட்டோம்.[f]
இதயத்தில் சதி செய்து பொய் பேசினோம்.[g]
14 நியாயம் பின்னால் தள்ளப்படுகிறது.[h]
நீதி தூரமாக நிற்கிறது.
உண்மை பொது சதுக்கத்தில் நிலைதடுமாறுகிறது.
நேர்மை அங்கு நுழைய முடிவதில்லை.
15 உண்மை காணாமல்போய்விட்டது.[i]
கெட்ட வழிக்குப் போகாதவர்கள் சூறையாடப்படுகிறார்கள்.
எங்குமே நியாயம் இல்லை.[j]
யெகோவா இதைப் பார்த்துக் கோபப்பட்டார்.
16 நியாயம் செய்ய ஒருவனும் இல்லாததை அவர் பார்த்தார்.
யாருமே தலையிடாததைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.
அதனால் அவருடைய கையாலேயே மீட்பு தந்தார்.*
அவருடைய நீதி அவருக்குத் துணையாக இருந்தது.
17 நீதியை உடல்கவசம் போலப் போட்டுக்கொண்டார்.
மீட்பை* தலைக்கவசமாக அணிந்துகொண்டார்.[k]
பழிவாங்குதலை உடை போல உடுத்திக்கொண்டார்.[l]
வைராக்கியத்தை மேலாடை போல அணிந்துகொண்டார்.

59:16 * வே.வா., “வெற்றி பெற்றார்.” **59:17** * வே.வா., “வெற்றியை.”

அதி. 59
a ஏசா 5:30
b உபா 28:15, 29
c ஏசா 1:5; எசே 5:5, 6
d எரே 14:7; ஓசி 5:5
e எஸ்றா 9:13; நெ 9:33; தானி 9:5
f ஏசா 31:6; ஏசா 32:6; எரே 17:13
g எரே 5:23
h சங் 82:2; ஏசா 5:22, 23; ஆப 1:4
i ஏசா 48:1
j மீ 3:2
k எபே 6:17; 1தெ 5:8
l உபா 32:35; சங் 94:1

18 அவரவர் செயலுக்கு ஏற்ற கூலியை அவர் கொடுப்பார்.[a]
எதிரிகள்மேல் கோபத்தைக் கொட்டுவார்; பகைவர்களைப் பழிதீர்ப்பார்.[b]
தீவுகளுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பார்.
19 மேற்கில் இருக்கிறவர்கள் யெகோவாவின் பெயருக்குப் பயப்படுவார்கள்.
கிழக்கில் இருக்கிறவர்கள் அவருடைய மகிமையைக் கண்டு நடுங்குவார்கள்.
ஏனென்றால், ஆற்றைப் போல யெகோவா வருவார்.
அவருடைய சக்தியால் பாய்ந்து வருகிற ஆற்றைப் போல வேகமாக வருவார்.
20 “விடுவிக்கிறவர்[c] சீயோனுக்கு வருவார்.[d]
குற்றங்களைவிட்டுத் திரும்புகிற யாக்கோபின் சந்ததியிடம் வருவார்”[e] என்று யெகோவா சொல்கிறார்.

21 “இதுதான் நான் அவர்களோடு செய்யும் ஒப்பந்தம்”[f] என்று
யெகோவா சொல்கிறார். “உங்கள் வாயில் நான் அருளும் வார்த்தைகள் இன்
றுமுதல் என்றென்றுமே உங்கள் வாயிலிருந்தும் உங்கள் பிள்ளைகளுடைய
வாயிலிருந்தும் பேரப்பிள்ளைகளுடைய வாயிலிருந்தும் விலகாது; நான்
உங்களுக்குக் கொடுத்திருக்கிற என் சக்தியும் உங்களைவிட்டு விலகாது”
என்று யெகோவா சொல்கிறார்.

60 “பெண்ணே, எழுந்திரு![g] ஒளிவீசு! உன்மேல் ஒளி உதித்துவிட்டது.
யெகோவாவின் மகிமை உன்மேல் பிரகாசிக்கிறது.[h]
2 பூமி இருண்டுபோகும்.
தேசங்கள் கும்மிருட்டில் மூழ்கிவிடும்.
ஆனால், உன்மேல் யெகோவா பிரகாசிப்பார்.
அவருடைய மகிமை உன்மேல் மின்னும்.
3 தேசங்கள் உன்னுடைய வெளிச்சத்திடம் வரும்.[i]
ராஜாக்கள்[j] உன்னுடைய பிரகாசமான ஒளியிடம் வருவார்கள்.[k]
4 கண்களை உயர்த்தி, சுற்றிலும் பார்!
அவர்கள் எல்லாரும் ஒன்றாகக் கூடி, உன்னிடம் வருகிறார்கள்.
உன்னுடைய மகன்கள் தொலைதூரத்திலிருந்து வந்துகொண்டிருக்கிறார்கள்.[l]
உன்னுடைய மகள்களும் இடுப்பில் சுமந்து வரப்படுகிறார்கள்.[m]
5 அப்போது, கடலின் செல்வங்கள் உன்னிடம் கொண்டுவரப்படும்.
தேசங்களின் சொத்துகள் உன்னிடம் வந்து சேரும்.[n]
நீ அதைப் பார்த்து பூரித்துப்போவாய்.[o]
உன் இதயம் சந்தோஷத்தில் பொங்கி வழியும்.
6 ஒட்டகங்கள் கூட்டம் கூட்டமாக உன் தேசத்துக்கு வரும்.
மீதியான், ஏப்பா தேசங்களிலிருந்து[p] இளம் ஆண் ஒட்டகங்கள் வரும்.
சேபா தேசத்திலிருந்து ஜனங்கள் வருவார்கள்.
அவர்கள் தங்கத்தையும் சாம்பிராணியையும் எடுத்துக்கொண்டு வருவார்கள்.
அவர்கள் யெகோவாவின் புகழைப் பரப்புவார்கள்.[q]

அதி. 59
a யோபு 34:11, சங் 62:12, எரே 17:10
b ஏசா 1:24, புல 4:11, எசே 5:13
c ஏசா 48:17
d ஏசா 62:11
e உபா 30:1-3, ரோ 11:26
f ரோ 11:27

அதி. 60
g ஏசா 51:17, ஏசா 52:1
h ஏசா 60:19, 20
i ஏசா 11:10
j ஏசா 49:23
k வெளி 21:23, 24
l ஏசா 49:17, 18, ஏசா 54:1
m ஏசா 49:21, 22
n ஏசா 61:6, ஆகா 2:7, 8
o எரே 33:9
p 1நா 1:32, 33
q மல் 1:11

7 கேதாரின்[a] மந்தைகள் உன்னிடம் கொண்டுவரப்படும்.
நெபாயோத்தின்[b] செம்மறியாட்டுக் கடாக்கள் உனக்குப் பயன்படும்.
என் பலிபீடத்தில் செலுத்தப்படும் அவற்றை நான் ஏற்றுக்கொள்வேன்.[c]
என்னுடைய மகிமையான* வீட்டை அலங்கரிப்பேன்.[d]
8 மேகங்களைப் போலவும் மாடங்களுக்குப் பறந்து வருகிற புறாக்களைப் போலவும்
வருகிற இவர்கள் யார்?
9 தீவுகள் என்மேல் நம்பிக்கை வைக்கும்.[e]
தொலைதூரத்திலிருந்து உன் மகன்களையும்,[f]
வெள்ளியையும் தங்கத்தையும் ஏற்றிக்கொண்டு,
தர்ஷீசின் கப்பல்கள் முன்வரிசையில் வருகின்றன.
உன் கடவுளும் இஸ்ரவேலின் பரிசுத்தருமான யெகோவாவின் பெயருக்குப் புகழ் சேர்க்க வருகின்றன.
அவர் உன்னை மகிமைப்படுத்துவார்.*[g]
10 மற்ற தேசத்து ஜனங்கள் உன் மதில்களைக் கட்டுவார்கள்.
அவர்களுடைய ராஜாக்கள் உனக்குப் பணிவிடை செய்வார்கள்.[h]
நான் கோபத்தில் உன்னைத் தண்டித்தேன்.
ஆனால், இனி பிரியத்தோடு உன்மேல் இரக்கம் காட்டுவேன்.[i]
11 தேசங்களின் சொத்துகள் உன்னிடம் கொண்டுவரப்படுவதற்காக,
உன் வாசல் கதவுகள் எப்போதும் திறந்து வைக்கப்படும்.[j]
அவை ராத்திரி பகலாகப் பூட்டப்படாமல் இருக்கும்.
அந்தச் சொத்துகளை ராஜாக்களே முதலில் எடுத்து வருவார்கள்.[k]
12 உனக்குச் சேவை செய்யாத தேசங்களும் ராஜ்யங்களும் ஒழிந்துபோகும்.
அவை அடியோடு அழிக்கப்படும்.[l]
13 லீபனோனுக்குப் புகழ் சேர்க்கிற ஆபால் மரமும்,
சாம்பல் மரமும், ஊசியிலை மரமும் உன்னிடம் கொண்டுவரப்படும்.[m]
என் ஆலயத்தை அலங்கரிப்பதற்காக அவை எடுத்து வரப்படும்.
என் பாதம் இருக்கிற அந்த இடத்தை மகிமைப்படுத்துவேன்.[n]
14 உன்னைக் கொடுமைப்படுத்திய ஜனங்களின் பிள்ளைகள் உன் முன்னால் வந்து தலைவணங்குவார்கள்.
உன்னை மரியாதை இல்லாமல் நடத்துகிறவர்கள் உன் காலடியில் விழ வேண்டும்.
அவர்கள் உன்னை யெகோவாவின் நகரம் என்றும்,
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளுடைய சீயோன் என்றும் அழைக்க வேண்டும்.[o]
15 வெறுத்து ஒதுக்கப்பட்ட, வெறிச்சோடிப்போன இடமாக இனி நீ இருக்க மாட்டாய்.[p]
நான் உன்னை என்றென்றும் பெருமைப்படுத்துவேன்.
எல்லா தலைமுறைகளும் உன்னைப் பார்த்து சந்தோஷப்படும்படி செய்வேன்.[q]

60:7 * வே.வா., “அழகான.” **60:9** * வே.வா., “அலங்கரிப்பார்.”

அதி. 60
a ஏசா 42:11
b ஆதி 25:13
c யாத் 29:39, 42; ஏசா 56:6, 7
d ஆகா 2:9
e ஏசா 51:5
f ஏசா 60:4; ஏசா 66:20
g சங் 149:4; ஏசா 52:1; ஏசா 55:5
h எஸ்றா 7:27; நெ 2:7, 8; ஏசா 49:23
i உபா 30:3; சங் 30:5; ஏசா 54:7; ஏசா 57:17, 18
j வெளி 21:25, 26
k ஏசா 60:3, 5
l ஏசா 41:11
m ஏசா 35:1, 2; ஏசா 41:19; ஏசா 55:13
n சங் 132:7
o ஏசா 62:12
p 2நா 36:20, 21; ஏசா 49:14; எரே 30:17; புல 1:4
q ஏசா 35:10; ஏசா 61:7; எரே 33:10, 11

அதி. 60
a ஏசா 49:23
ஏசா 61:6
b ஏசா 49:26
c ஏசா 1:26
ஏசா 32:1
d ஏசா 2:4
ஏசா 11:9
ஏசா 54:14
சக 9:8
e ஏசா 26:1
f சங் 36:9
ஏசா 60:1
வெளி 21:23
வெளி 22:5
g சக 2:4, 5
h ஏசா 25:8
ஏசா 30:19
ஏசா 35:10
i சங் 27:1
சங் 84:11
j ஏசா 44:23
k ஏசா 43:6, 7

அதி. 61
l ஏசா 42:1
மத் 3:16
m மத் 11:4, 5
அப் 10:37, 38

16 குழந்தை அதன் தாயிடமிருந்து பால் குடிப்பது போல,
நீ தேசங்களிடமிருந்தும் ராஜாக்களிடமிருந்தும்
தேவையானதையெல்லாம் பெற்றுக்கொள்வாய்.[a]
யெகோவாவாகிய நானே உன்னை மீட்கிறவர் என்றும்,
யாக்கோபின் வல்லமையுள்ள கடவுளே உன்னை விடுவிக்கிறவர்
என்றும் நிச்சயம் புரிந்துகொள்வாய்.[b]
17 செம்புக்குப் பதிலாகத் தங்கத்தையும்,
இரும்புக்குப் பதிலாக வெள்ளியையும்,
மரத்துக்குப் பதிலாகச் செம்பையும்,
கற்களுக்குப் பதிலாக இரும்பையும் நான் கொண்டுவருவேன்.
சமாதானத்தை உன் கண்காணியாகவும்,
நீதியை உன் மேற்பார்வையாளராகவும் நியமிப்பேன்.[c]
18 இனி உன் தேசத்தில் வன்முறைச் சம்பவங்களே நடக்காது.
உன் எல்லைகளில் நாச வேலையையும் அழிவையும் பற்றிய பேச்சே
கேட்காது.[d]
உன் மதில்களை மீட்பு என்றும்,[e] உன் நுழைவாசல்களை புகழ் என்றும்
அழைப்பாய்.
19 பகலில் ஒளிதர இனி உனக்குச் சூரியன் தேவை இல்லை.
ராத்திரியில் வெளிச்சம்தர இனி சந்திரன் தேவை இல்லை.
ஏனென்றால், யெகோவாவே உனக்கு என்றென்றும் ஒளியாக இருப்பார்.[f]
உன் கடவுளே உனக்கு அலங்காரமாக இருப்பார்.[g]
20 உன்னுடைய துக்க நாட்கள் முடிவுக்கு வரும்.[h]
யெகோவாவே உனக்கு என்றென்றும் ஒளியாக இருப்பார்.[i]
அதனால், உன்னுடைய சூரியன் இனி மறையாது.
உன்னுடைய சந்திரனும் தேய்ந்துபோகாது.
21 உன் ஜனங்கள் எல்லாரும் நீதிமான்களாக இருப்பார்கள்.
இந்தத் தேசத்தில் அவர்கள் என்றென்றும் குடியிருப்பார்கள்.
நான் அவர்களை என் கைகளால் நட்டு, துளிர்க்க வைத்தேன்.
என்னுடைய புகழுக்காக*[j] உருவாக்கினேன்.[k]
22 கொஞ்சம் பேர் ஆயிரம் பேராகவும்,
சாதாரண ஜனங்கள் சக்திபடைத்த தேசமாகவும் ஆவார்கள்.
யெகோவாவாகிய நானே சரியான நேரத்தில் இது வேகமாக
நடக்கும்படி செய்வேன்.”

61 உன்னதப் பேரரசராகிய யெகோவாவின் சக்தி என்மேல் இருக்கிறது.[l]
ஏனென்றால், தாழ்மையானவர்களுக்கு* நல்ல செய்தி சொல்ல
யெகோவா என்னைத் தேர்ந்தெடுத்தார்.#[m]
உள்ளம் உடைந்தவர்களைக் குணப்படுத்துவதற்காகவும்,△
சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைக்குமென்று
அறிவிப்பதற்காகவும்,

60:21 *வே.வா., “அழகுக்காக.” **61:1** *வே.வா., “சாந்தமானவர்களுக்கு.” #வே.வா., “அபிஷேகம் செய்தார்.” △வே.வா., “உள்ளம் உடைந்தவர்களுக்குக் காயம் கட்டுவதற்காகவும்.”

கைதிகளின் கண்கள் அகலமாகத் திறக்கப்படும்[a] என்று
சொல்வதற்காகவும்,
2 யெகோவாவின் அனுக்கிரக வருஷத்தைப் பற்றித்
தெரிவிப்பதற்காகவும்,
நம் கடவுள் பழிவாங்கப்போகிற நாளைப்[b] பற்றி அறிவிப்பதற்காகவும்,
துக்கப்படுகிற எல்லாருக்கும் ஆறுதல் சொல்வதற்காகவும்[c] அவர்
என்னை அனுப்பினார்.
3 சீயோனுக்காக வருத்தப்படுகிறவர்களின் கோலத்தை மாற்றுவதற்காக
அவர்களுடைய தலையில் உள்ள சாம்பலை நீக்கி, மலர்க் கிரீடத்தைச்
சூட்டவும்,
சோகத்தைப் போக்கி ஆனந்தத் தைலத்தை ஊற்றவும்,
விரக்தியை நீக்கி புகழின் உடையைக் கொடுக்கவும் என்னை
அனுப்பினார்.
யெகோவா தன்னுடைய மகிமைக்காக* நாட்டிய
நீதியின் பெரிய மரங்கள் என்று அவர்கள் அழைக்கப்படுவார்கள்.[d]
4 பூர்வ காலத்தில் பாழாக்கப்பட்ட இடங்களை அவர்கள்
புதிதாக்குவார்கள்.[e]
இடித்துப் போடப்பட்டதைத் திரும்பக் கட்டுவார்கள்.
தலைமுறை தலைமுறையாகச் சிதைந்து கிடக்கிற நகரங்களை[f]
மறுபடியும் பழைய நிலைமைக்குக் கொண்டுவருவார்கள்.[g]
5 “மற்ற தேசத்து ஜனங்கள்[h] உங்கள் வயல்களிலும் திராட்சைத்
தோட்டங்களிலும் வேலை பார்ப்பார்கள்.[i]
முன்பின் தெரியாதவர்கள் உங்கள் மந்தைகளை மேய்ப்பார்கள்.
6 நீங்களோ யெகோவாவுக்குச் சேவை செய்கிற குருமார்கள் என்றும்,[j]
நம் கடவுளுடைய ஊழியர்கள் என்றும் அழைக்கப்படுவீர்கள்.
தேசங்களின் வளங்களை நீங்கள் அனுபவிப்பீர்கள்.[k]
அவற்றை* பற்றிப் பெருமையாகப் பேசுவீர்கள்.
7 கடவுளுடைய ஜனங்கள் அவமானத்துக்குப் பதிலாக இரண்டு மடங்கு
ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள்.
தலைகுனிந்து நிற்பதற்குப் பதிலாகத் தங்களுக்குக் கிடைத்த பங்கை
நினைத்து சந்தோஷமாகப் பாடுவார்கள்.
ஏனென்றால், தேசத்தில் இரண்டு மடங்கு சொத்தைப் பெறுவார்கள்.[l]
என்றென்றும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.[m]
8 யெகோவாவாகிய நான் நியாயத்தை நேசிக்கிறேன்.[n]
திருட்டையும் அக்கிரமத்தையும் வெறுக்கிறேன்.[o]
அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலியை உண்மையோடு
கொடுப்பேன்.
என்றென்றும் நிலைத்திருக்கிற ஒப்பந்தத்தை அவர்களோடு
செய்வேன்.[p]
9 அவர்களுடைய வம்சத்தில் வருகிறவர்கள் எல்லா தேசங்களின்
மத்தியிலும்,

61:3 * வே.வா., “அழகுக்காக.” 61:6 * வே.வா., “அவற்றின் செல்வங்களை.”

அதி. 61
a லூ 4:17-21
லூ 7:22
அப் 26:17, 18
b ஏசா 34:8
c ஏசா 25:8
மத் 5:4
லூ 6:21
d ஏசா 60:21
e ஏசா 49:8
ஏசா 51:3
f எசே 36:33, 34
g ஏசா 44:26
ஏசா 58:12
h ஏசா 60:10
i ஏசா 14:1, 2
j யாத் 19:6
k ஏசா 23:17, 18
ஏசா 60:5, 7
l சக 9:12
m ஏசா 35:10
n உபா 32:4
சங் 33:5
சங் 37:28
o நீதி 6:16-19
p ஏசா 55:3
எரே 32:40

இனங்களின் மத்தியிலும் புகழ் பெற்றிருப்பார்கள்.[a]
அவர்களைப் பார்க்கிற எல்லாரும்
அவர்கள் யெகோவாவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற வம்சம்[b] என்று புரிந்துகொள்வார்கள்."
10 நான் யெகோவாவை நினைத்து மிகவும் சந்தோஷப்படுவேன்.
என் கடவுளை நினைத்து உள்ளமெல்லாம் பூரித்துப்போவேன்.[c]
ஏனென்றால், மீட்பின் உடையை அவர் எனக்குத் தந்திருக்கிறார்.[d]
நீதியின் சால்வையை எனக்குப் போர்த்தியிருக்கிறார்.
தலைப்பாகை அணியும்*[e] மணமகனைப் போலவும்,
நகைகள் அணியும் மணமகளைப் போலவும் அவர் என்னை அலங்கரித்திருக்கிறார்.
11 பூமி செடிகளை விளைய வைப்பது போலவும்,
தோட்டம் விதைகளை முளைக்கப் பண்ணுவது போலவும்,
உன்னதப் பேரரசராகிய யெகோவா
நீதியையும்[f] புகழையும் எல்லா தேசங்களுக்கு முன்பாகவும் துளிர்க்க வைப்பார்.[g]

62 பிரகாசமான வெளிச்சம்போல் சீயோனில் நீதி ஒளிவீசும்வரை[h]
நான் அமைதியாக* இருக்க மாட்டேன்.[i]
எரிகிற தீப்பந்தம்போல் மீட்பு எருசலேமில் ஒளிவீசும்வரை[j]
நான் சும்மா இருக்க மாட்டேன்.
2 "பெண்ணே, தேசங்கள் உன் நீதியைப் பார்க்கும்.[k]
ராஜாக்கள் உன் மகிமையைப் பார்ப்பார்கள்.[l]
நீ புதிய பெயரால் அழைக்கப்படுவாய்.[m]
யெகோவாவே உனக்கு அந்தப் பெயரை வைப்பார்.
3 யெகோவாவின் கையில் நீ அழகான கிரீடமாக இருப்பாய்.
உன் கடவுளுடைய கையில் ஒரு மணிமகுடமாக இருப்பாய்.
4 இனி நீ கைவிடப்பட்டவள் என்று அழைக்கப்பட மாட்டாய்.[n]
எனக்குப் பிரியமானவள் என்றே அழைக்கப்படுவாய்.[o]
இனி உன் தேசம் பாழான தேசம் என்று அழைக்கப்படாது.[p]
மணமானவள் என்றே அது அழைக்கப்படும்.
ஏனென்றால், யெகோவா உன்மேல் பிரியமாயிருப்பார்.
உன் தேசம் மணமானவளைப் போல இருக்கும்.
5 ஒரு வாலிபன் ஒரு கன்னிப்பெண்ணைக் கல்யாணம் செய்வது போல,
உன் மக்கள் உன்னைக் கல்யாணம் செய்வார்கள்.
மணமகன் தன் மணமகளைப் பார்த்து சந்தோஷப்படுவதைப் போல
உன் கடவுள் உன்னைப் பார்த்து சந்தோஷப்படுவார்.[q]
6 எருசலேமே, உன் மதில்கள்மேல் நான் காவல்காரர்களை நிற்க வைத்திருக்கிறேன்.

61:10 *நே.மொ., "குருமார்களைப் போல் தலைப்பாகை அணியும்." **62:1** *வே.வா., "மவுனமாக."

அதி. 61
a சக 8:13
b ஏசா 65:23
c ஏசா 65:13
d ஏசா 52:1; வெளி 21:2
e யாத் 28:39, 41
f ஏசா 45:8; ஏசா 62:1
g ஏசா 58:11; ஏசா 60:18; ஏசா 62:7

அதி. 62
h ஏசா 1:26
i சங் 102:13; சக 2:12
j ஏசா 51:5
k ஏசா 54:1; ஏசா 60:1
l ஏசா 49:23; ஏசா 60:11
m எரே 33:16
n ஏசா 49:14; ஏசா 54:6
o சங் 149:4; செப் 3:17
p ஏசா 32:14
q ஏசா 65:18, 19; எரே 32:41

அவர்கள் அமைதியாக இல்லாமல் ராத்திரி பகலாக விடாமல் எச்சரிப்பு
கொடுக்க வேண்டும்.
யெகோவாவைப் பற்றி அறிவிக்கிறவர்களே,
ஓய்ந்துபோகாதீர்கள்.
7 அவர் எருசலேமை நிலைநாட்டி, பூமியெங்கும் அதன் புகழைப்
பரப்பும்வரை[a]
அவரிடம் வேண்டிக்கொண்டே இருங்கள்."
8 யெகோவா தன்னுடைய பலமான வலது கையை உயர்த்தி இப்படி
உறுதிமொழி கொடுத்திருக்கிறார்:
"உங்கள் தானியத்தை இனியும் எதிரிகள் சாப்பிடுவதற்கு விட
மாட்டேன்.
நீங்கள் பாடுபட்டுத் தயாரித்த புதிய திராட்சமதுவை இனியும் மற்ற
தேசத்து ஜனங்கள் குடிக்க அனுமதிக்க மாட்டேன்.[b]
9 தானியத்தை அறுவடை செய்கிறவர்கள்தான் அதைச் சாப்பிடுவார்கள்,
அவர்கள் யெகோவாவைப் புகழ்வார்கள்.
திராட்சமதுவைத் தயாரித்தவர்கள்தான் அதை என் பரிசுத்த
பிரகாரங்களில் குடிப்பார்கள்."[c]
10 வாருங்கள், வாசலைத் தாண்டி வாருங்கள்.
ஜனங்களுக்காக வழியைத் தயார்படுத்துங்கள்.[d]
நெடுஞ்சாலையை அமையுங்கள்; அதைப் புதிதாக அமையுங்கள்.
கற்களையெல்லாம் எடுத்துப் போடுங்கள்.[e]
ஜனங்களுக்காகக் கொடியை ஏற்றுங்கள்.*[f]
11 பூமியெங்கும் யெகோவா இதை அறிவித்திருக்கிறார்:
"நீங்கள் சீயோன் மகளிடம், 'இதோ! உனக்கு மீட்பு வருகிறது.[g]
இதோ! அவர் பரிசை எடுத்துக்கொண்டு வருகிறார்.
கொடுக்கப்போகிற கூலியை எடுத்துக்கொண்டு வருகிறார்'[h] என்று
சொல்லுங்கள்."
12 அவர்கள் யெகோவாவினால் மீட்கப்பட்ட பரிசுத்த மக்கள் என்று
அழைக்கப்படுவார்கள்.[i]
அவர்களுடைய நகரம் நாடித் தேடப்பட்ட நகரம் என்றும்,
கைவிடப்படாத நகரம் என்றும் அழைக்கப்படும்.[j]

63 ஏதோமிலிருந்து[k] வருகிறவர் யார்?
கண்ணைப் பறிக்கும் வண்ண* உடையில் போஸ்றாவிலிருந்து[l]
வருகிறவர் யார்?
கம்பீரமான உடை உடுத்திக்கொண்டு,
மகா வல்லமையோடு நடந்து வருகிறவர் யார்?
"நீதிநியாயத்தோடு பேசுகிற நான்தான் அவர்.
மகா வல்லமையோடு காப்பாற்றுகிறவராகிய நான்தான் அவர்."
2 திராட்சரச ஆலையில் திராட்சைகளை மிதிக்கிறவர்களின்
உடைகளைப் போல
உங்கள் உடை ஏன் சிவப்பாக இருக்கிறது?[m]

62:10 *வே.வா., "கொடிக் கம்பத்தை நாட்டுங்கள்." **63:1** *அல்லது, "கருஞ்சிவப்பு."

அதி. 62
a ஏசா 61:11 எரே 33:9 செப் 3:19, 20
b உபா 28:49–51 எரே 5:17
c உபா 14:23 ஏசா 65:21, 22
d ஏசா 40:3 ஏசா 48:20
e ஏசா 57:14
f எஸ்றா 1:1, 3 ஏசா 11:12 ஏசா 49:22
g சக 9:9 மத் 21:4 யோவா 12:15
h ஏசா 40:9, 10 வெளி 22:12
i சங் 107:2, 3
j ஏசா 54:7

அதி. 63
k சங் 137:7 ஏசா 34:5, 6
l ஆமோ 1:12
m யோவே 3:13 வெளி 14:19, 20 வெளி 19:15

அதி. 63
a ஏசா 34:2
b ஏசா 34:8 ஏசா 35:4 ஏசா 61:1, 2
c ஏசா 51:9 ஏசா 52:10 ஏசா 59:16
d எரே 25:15, 16
e சங் 78:12 சங் 105:5
f யாத் 24:7
g யாத் 14:30
h யாத் 3:7
i யாத் 14:19 யாத் 23:20
j உபா 7:8
k யாத் 19:4 உபா 1:31
l உபா 9:7
m அப் 7:51 எபே 4:30
n லேவி 26:14, 17 உபா 28:63
o எரே 21:5

3 “நான் தனியாகத் திராட்சரச ஆலையில் மிதித்தேன்.
யாருமே என்னுடன் இல்லை.
நான் அவர்களைக் கோபத்தோடு மிதித்துப்போட்டேன்.
அவர்களை ஆக்ரோஷத்தோடு மிதித்து நசுக்கினேன்.[a]
என் உடைகளில் அவர்களுடைய இரத்தம் தெறித்தது.
நான் போட்டிருந்த துணியெல்லாம் கறைபட்டது.
4 பழிவாங்குவதற்கு நான் ஒரு நாளைத் தீர்மானித்திருக்கிறேன்.[b]
இந்த ஜனங்கள் மீட்கப்படும் வருஷம் நெருங்கிவிட்டது.
5 நான் தேடிப் பார்த்தேன், உதவி செய்ய யாருமே இல்லை.
ஒருவரும் துணைக்கு வராததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன்.
என் கையே என்னை மீட்டது.*[c]
என் கோபமே எனக்குத் துணை செய்தது.
6 கோபத்தில் மக்களை மிதித்தேன்.
என்னுடைய ஆக்ரோஷம் என்ற மதுவைக் குடிக்க வைத்தேன்.[d]
அவர்களுடைய இரத்தத்தைத் தரையிலே ஓட விட்டேன்.”
7 யெகோவா மாறாத அன்போடு செய்த செயல்களையும்
அவருக்குப் புகழ் சேர்க்கும்படி செய்த செயல்களையும் பற்றி நான் சொல்வேன்.
ஏனென்றால், யெகோவா இரக்கத்தினாலும் அளவுகடந்த அன்பினாலும்*
எங்களுக்காக நிறைய நன்மைகளைச் செய்திருக்கிறார்.[e]
இஸ்ரவேல் ஜனங்களுக்காக யெகோவா நிறைய நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்.
8 “இவர்கள் என்னுடைய ஜனங்கள், என்னுடைய பிள்ளைகள்; இவர்கள் எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டார்கள்”[f] என்று அவர் சொல்லி,
அவர்களுடைய மீட்பரானார்.[g]
9 அவர்கள் வேதனைப்பட்ட சமயத்திலெல்லாம் அவரும் வேதனைப்பட்டார்.[h]
அவருடைய சொந்த தூதுவரையே அனுப்பி அவர்களைக் காப்பாற்றினார்.[i]
அன்போடும் கரிசனையோடும் அவர்களை மீட்டுக்கொண்டார்.[j]
பூர்வ காலம் முழுவதும் அவர்களைத் தூக்கிச் சுமந்தார்.[k]
10 ஆனால் அவர்கள் அவருக்கு அடங்கி நடக்காமல்,[l] அவருடைய சக்தியைத் துக்கப்படுத்தினார்கள்.[m]
அதனால், அவர் அவர்களுடைய எதிரியாக மாறினார்.[n]
அவர்களோடு போர் செய்தார்.[o]
11 அப்போது அவர்கள், அவருடைய ஊழியரான மோசே வாழ்ந்த காலத்தை
நினைத்துப் பார்த்து இப்படிச் சொன்னார்கள்:

63:5 *வே.வா., “எனக்கு வெற்றி தேடித் தந்தது.” **63:7** *வே.வா., “மாறாத அன்பினாலும்.”

“தன்னுடைய மந்தையை மேய்ப்பர்களோடு[a] கடல் வழியாக அழைத்து வந்தவர்[b] எங்கே?
அவருக்குத் தன்னுடைய சக்தியைக் கொடுத்தவர்[c] எங்கே?
12 மோசேயின் வலது கையைத் தன்னுடைய பலத்த கையால் தாங்கிப் பிடித்தவர்[d] எங்கே?
அவர்களுக்கு முன்பாகக் கடலைப் பிளந்து,[e]
என்றென்றும் தன் பெயருக்குப் புகழ் சேர்த்தவர்[f] எங்கே?
13 ஒரு குதிரை வெட்டவெளியில்* தடைகள் இல்லாமல் நடந்துபோவது போல,
ஆழமான கடலின் நடுவே
அவர்களைத் தடைகள் இல்லாமல் நடந்துபோக வைத்தவர் எங்கே?
14 மந்தைகள் சமவெளிக்கு இறங்கிப்போய் அமைதியாக ஓய்வெடுப்பது போல,
அவர்களும் அமைதியை அனுபவிப்பதற்கு யெகோவாவின் சக்தி அவர்களை வழிநடத்தியது.”[g]
உங்கள் பெயருக்கு மகிமை* சேர்ப்பதற்காக
உங்கள் ஜனங்களை இப்படி வழிநடத்தினீர்கள்.[h]
15 பரலோகத்திலிருந்து கீழே பாருங்கள்.
பரிசுத்தமும் மகிமையும்* நிறைந்த உங்களுடைய உயர்ந்த குடியிருப்பிலிருந்து பாருங்கள்.
உங்கள் வைராக்கியமும் வல்லமையும் எங்கே?
உங்கள் அடிமனதிலிருந்து சுரக்கும் கரிசனையும்[i] இரக்கமும்[j] எங்கே?
அவற்றையெல்லாம் ஏன் காட்டாமல் இருக்கிறீர்கள்?
16 நீங்கள்தான் எங்கள் தகப்பன்.[k]
ஆபிரகாமுக்கு எங்களைத் தெரியாவிட்டாலும்,
இஸ்ரவேலுக்கு எங்களை அடையாளம் தெரியாவிட்டாலும்,
யெகோவாவே, நீங்கள்தான் எங்கள் தகப்பன்.
பூர்வ காலத்திலிருந்தே நீங்கள்தான் எங்களை விடுவிக்கிறவராக இருக்கிறீர்கள்.[l]
17 யெகோவாவே, நாங்கள் உங்களுடைய வழியைவிட்டு விலகிப் போக ஏன் விடுகிறீர்கள்?
உங்கள்மேல் பயமே இல்லாதபடி எங்கள் இதயத்தைக் கடினமாக்க ஏன் அனுமதிக்கிறீர்கள்?[m]
உங்கள் ஊழியர்களுக்காக, உங்கள் சொத்தாகிய ஜனத்துக்காக,
மறுபடியும் இரக்கம் காட்டுங்கள்.[n]
18 நீங்கள் கொடுத்த தேசத்தை உங்கள் பரிசுத்த ஜனங்கள் கொஞ்சக் காலம் அனுபவித்தார்கள்.
உங்கள் ஆலயத்தை எதிரிகள் மிதித்துப் போட்டார்கள்.[o]
19 ரொம்பக் காலமாக உங்களால் ஆட்சி செய்யப்படாத ஜனங்களைப் போல நாங்கள் ஆகிவிட்டோம்.

63:13 *வே.வா., “வனாந்தரத்தில்.” **63:14** *வே.வா., “அழகு.” **63:15** *வே.வா., “அழகும்.”

அதி. 63
a சங் 77:20
b யாத் 14:30, ஏசா 51:10
c எண் 11:16, 17
d யாத் 6:1, 6, யாத் 15:16
e யாத் 14:21, 22
f யாத் 9:15, 16, யாத் 14:17, ரோ 9:17
g யோசு 22:4
h 2சா 7:23, நெ 9:10
i எரே 31:20
j உபா 4:31, நெ 9:17
k யாத் 4:22
l ஏசா 41:14
m ஏசா 6:10
n சங் 74:2, சங் 80:14, 15
o 2நா 36:19, ஏசா 64:11, புல 1:10

அதி. 64
a யாத் 34:10

உங்கள் பெயரால் ஒருபோதும் அழைக்கப்படாத ஜனங்களைப் போல
ஆகிவிட்டோம்.

64 நீங்கள் வானத்தைக் கிழித்துக்கொண்டு கீழே இறங்கி வந்து,
மலைகளை அதிர வைத்து,
2 விறகைக் கொழுந்துவிட்டு எரிய வைக்கிற நெருப்பைப் போலவும்,
தண்ணீரைத் தளதளவென்று கொதிக்க வைக்கிற தீயைப் போலவும்
எதிரிகளைத் தாக்கினால்,
நீங்கள் யார் என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.
தேசங்கள் உங்களுக்கு முன்னால் நடுநடுங்கும்.
3 உங்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்கத் தகுதி இல்லாதபோதுகூட
எங்களுக்காக அற்புதங்களைச் செய்தீர்கள்.[a]
கீழே இறங்கி வந்தீர்கள்; அப்போது மலைகள் உங்களுக்கு முன்னால்
நடுநடுங்கின.[b]
4 நம்பிக்கையோடு* காத்திருக்கிறவர்களின் உதவிக்கு வருகிற கடவுள்
நீங்கள் மட்டும்தான்.
உங்களைத் தவிர வேறொரு கடவுள் அப்படிச் செய்ததாக
பழங்காலத்திலிருந்தே யாரும் காதால் கேட்டதும் இல்லை,
கண்களால் கண்டதும் இல்லை.[c]
5 நல்ல காரியங்களைச் சந்தோஷமாகச் செய்கிறவர்களுக்கும்,[d]
உங்களை நினைவில் வைத்து உங்கள் வழிகளில் நடக்கிறவர்களுக்கும்
நீங்கள் துணையாக இருக்கிறீர்கள்.
நாங்கள் பாவம் செய்துகொண்டே இருந்தபோது எங்கள்மேல் ரொம்பக்
கோபப்பட்டீர்கள்.[e]
காலம்காலமாக நாங்கள் திருந்தவே இல்லை.
அப்படியிருக்கும்போது, எங்களை நீங்கள் காப்பாற்ற வேண்டும் என்று
நாங்கள் எதிர்பார்க்க முடியுமா?
6 நாங்கள் எல்லாரும் தீட்டுப்பட்டவர்கள் போல ஆகிவிட்டோம்.
நாங்கள் செய்கிற நீதியான காரியங்களெல்லாம் தீட்டுப்பட்ட*
துணியைப்[f] போல இருக்கிறது.
நாங்கள் எல்லாரும் காய்ந்த இலைகளைப் போல
உதிர்ந்துவிடுவோம்.
நாங்கள் செய்கிற அக்கிரமங்கள் காற்றைப் போல எங்களை
அடித்துக்கொண்டு போய்விடும்.
7 யாருமே உங்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது இல்லை.
உங்களையே உறுதியாகப் பிடித்துக்கொண்டிருக்க யாரும்
விரும்புவதும் இல்லை.
நீங்கள் உங்களுடைய முகத்தை எங்களிடமிருந்து
மறைத்துக்கொண்டீர்கள்.[g]
எங்கள் அக்கிரமங்களே எங்களை வாட்டி வதைக்கும்படி
விட்டுவிட்டீர்கள்.

b ஆப 3:6
c சங் 130:6-8; ஏசா 25:9; மீ 7:7; 1கொ 2:9
d செப் 2:3; அப் 10:34, 35
e ஏசா 1:21; ஏசா 63:10
f லேவி 12:2; லேவி 15:20
g உபா 31:17; ஏசா 57:17

64:4 *வே.வா., “ஆவலோடு; பொறுமையோடு.” **64:6** *அதாவது, “மாதவிலக்கினால் தீட்டுப்பட்ட.”

8 ஆனால் யெகோவாவே, நீங்கள்தான் எங்களுடைய தகப்பன்.[a]
நாங்கள் களிமண்; நீங்கள்தான் எங்களுடைய குயவர்.[b]
நாங்கள் எல்லாரும் உங்கள் கைகளால் உருவானவர்கள்.
9 அதனால் யெகோவாவே, எங்கள்மேல் ரொம்பவும் கோபப்படாதீர்கள்.[c]
எங்கள் அக்கிரமங்களை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்காதீர்கள்.
தயவுசெய்து எங்களைப் பாருங்கள்; நாங்கள் எல்லாரும் உங்களுடைய ஜனங்கள்தானே.
10 உங்களுடைய பரிசுத்தமான நகரங்கள் வனாந்தரம்போல் ஆகிவிட்டன.
சீயோன் வெறும் வனாந்தரத்தைப் போலவும்,
எருசலேம் பொட்டல் காடு போலவும் ஆகிவிட்டது.[d]
11 எங்கள் முன்னோர்கள் உங்களை வழிபட்ட இடமாகிய
பரிசுத்தமும் மகிமையுமான* ஆலயம்
இப்போது தீயில் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறது.[e]
நாங்கள் நெஞ்சார நேசித்ததெல்லாம் நாசமாகிவிட்டது.
12 யெகோவாவே, இதையெல்லாம் பார்த்த பிறகும் ஒன்றும் செய்யாமல் அமைதியாக இருப்பீர்களா?
நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் உதவி செய்ய மாட்டீர்களா?[f]

65 “என்னைப் பற்றி விசாரித்துக் கேட்காதவர்கள் என்னைத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கிறேன்.
என்னைத் தேடாதவர்கள் என்னைக் கண்டுபிடிக்க வழிசெய்திருக்கிறேன்.[g]
என் பெயரைக் கூப்பிடாத தேசத்திடம், ‘நான் இங்கே இருக்கிறேன், நான் இங்கே இருக்கிறேன்’[h] என்று சொல்லியிருக்கிறேன்.
2 பிடிவாதமான ஜனங்களைப்[i] பார்த்து நாளெல்லாம் என் கைகளை நீட்டிக்கொண்டிருக்கிறேன்.
அவர்கள் மனம்போன போக்கில் போய்,[j]
கெட்ட காரியங்களைச் செய்கிறார்கள்.[k]
3 என் கண்ணெதிரே தோட்டங்களில் பலி கொடுத்து,[l]
செங்கற்கள்மேல் தகன பலி செலுத்தி,*
எப்போதும் என் கோபத்தைக் கிளறுகிறார்கள்.[m]
4 அவர்கள் கல்லறைகளின் நடுவே மறைவாக* உட்கார்ந்துகொண்டு,[n]
இரவைக் கழிக்கிறார்கள்.
பன்றிக் கறியைச் சாப்பிடுகிறார்கள்.[o]
அருவருப்பான இறைச்சியின் குழம்பைப் பாத்திரங்களில் வைத்திருக்கிறார்கள்.[p]
5 ஆனாலும் மற்றவர்களைப் பார்த்து, ‘கிட்டே வராதீர்கள், தள்ளிப் போங்கள்,
நாங்கள் உங்களைவிட பரிசுத்தமாக இருக்கிறோம்’* என்று சொல்கிறார்கள்.

64:11 *வே.வா., “அழகுமுள்ள.” 65:3 *வே.வா., “தூபம் காட்டி.” 65:4 *அல்லது, “காவல் குடிசைகளில்.” 65:5 *அல்லது, “எங்கள் பரிசுத்தத்தன்மை உங்களை ஒட்டிக்கொள்ளும்.”

அதி. 64
a ஏசா 63:16
b ஏசா 29:16 ஏசா 45:9 எரே 18:6
c சங் 74:1 சங் 79:5
d சங் 79:1 புல 1:4 புல 5:18 மீ 3:12
e 2நா 36:17, 19 எரே 52:12, 13
f சங் 74:10, 11 சக 1:12

அதி. 65
g ஏசா 55:6, 7
h ரோ 10:20, 21
i உபா 31:27 நெ 9:29 சக 7:11
j ஏசா 59:7, 8 எரே 35:15
k எரே 5:23
l ஏசா 1:29 ஏசா 66:17
m 2ரா 17:16, 17 எரே 32:29
n எண் 19:16
o லேவி 11:7, 8 ஏசா 66:17
p உபா 14:3

இந்த ஜனங்கள் எனக்கு எரிச்சல் மூட்டுகிறார்கள்,*
நாளெல்லாம் என் கோபத்தைப் பற்றியெரிய வைக்கிறார்கள்.
6 இதெல்லாம் எனக்கு முன்னால் எழுதப்பட்டிருக்கிறது.
நான் சும்மா இருக்க மாட்டேன்.
அவர்களைப் பழிவாங்குவேன்.[a]
அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனையை முழுமையாகக் கொடுப்பேன்.
7 அவர்களுடைய பாவங்களுக்காகவும் அவர்களுடைய முன்னோர்களின் பாவங்களுக்காகவும் அவர்களைப் பழிதீர்ப்பேன்”[b] என்று யெகோவா சொல்கிறார்.
“அவர்கள் மலைகளிலும் குன்றுகளிலும் தகன பலிகளைச் செலுத்தி,
என்னை அவமதிக்கிறார்கள்.[c]
அவர்களுக்குச் சரியான கூலியைக் கொடுத்து முடிப்பேன்.”
8 யெகோவா சொல்வது இதுதான்:
“‘திராட்சைக் குலையைத் தூக்கிப் போடாதீர்கள்; அதில் நல்ல பழங்களும் இருக்கின்றன’ என்று ஜனங்கள் சொல்வார்கள்.
ஏனென்றால், அதிலிருந்து புதிய திராட்சமது தயாரிக்க முடியும்.
அதேபோல், நானும் எல்லா மக்களையும் அழிக்க மாட்டேன்.[d]
எனக்கு உண்மையாக இருக்கிற ஊழியர்களைக் காப்பாற்றுவேன்.
9 யாக்கோபிலிருந்து ஒரு வம்சத்தைத் தோன்றச் செய்வேன்.
என் மலைகளைச் சொந்தமாக்கப்போகிறவர்களை யூதாவிலிருந்து வர வைப்பேன்.[e]
நான் தேர்ந்தெடுத்த ஜனங்கள் அதைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.
என் ஊழியர்கள் அங்கே குடியிருப்பார்கள்.[f]
10 சாரோன் சமவெளியை[g] ஆடுகள் மேயும் இடமாக்குவேன்.
ஆகோர் பள்ளத்தாக்கை[h] மாடுகள் சுற்றித் திரியும் இடமாக்குவேன்.
என்னைத் தேடுகிற என் ஜனங்களுக்காக இதைச் செய்வேன்.
11 ஆனால், நீங்கள் யெகோவாவாகிய என்னை விட்டுவிட்டீர்கள்.[i]
என் பரிசுத்த மலையை மறந்துவிட்டீர்கள்.[j]
அதிர்ஷ்ட தெய்வத்துக்காக உணவையும்,
விதி தெய்வத்துக்காகத் திராட்சமதுவையும் படையல் வைக்கிறீர்கள்.
12 அதனால், உங்களை வாளுக்குப் பலியாக்குவேன்.[k]
நீங்கள் கொலை செய்யப்படுவதற்காகக் குனிவீர்கள்.[l]
ஏனென்றால், நான் கூப்பிட்டபோது நீங்கள் பதில் சொல்லவில்லை.
நான் பேசியபோது நீங்கள் கேட்கவில்லை.[m]
நான் வெறுக்கிற காரியங்களைச் செய்துகொண்டே இருந்தீர்கள்.
எனக்குப் பிடிக்காத வழியில் போனீர்கள்.”[n]
13 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா இப்படிச் சொல்கிறார்:
“என் ஊழியர்கள் சாப்பிடுவார்கள், ஆனால் நீங்கள் பசியில் வாடுவீர்கள்.[o]

65:5 * நே.மொ., “என் மூக்கில் ஏறும் புகையாக இருக்கிறார்கள்.”

அதி. 65
a சங் 50:3, 21; எரே 16:18; எசே 11:21
b யாத் 20:4, 5; லேவி 26:39
c 1ரா 22:41, 43; 2ரா 12:3
d எரே 30:11; ஆமோ 9:8
e ஏசா 60:21; எசே 37:21; ஒப 17
f ஏசா 61:7; செப் 3:20
g ஏசா 33:9
h யோசு 7:24; ஓசி 2:15
i ஏசா 1:4
j 2நா 28:24; 2நா 34:25
k லேவி 26:25; எசே 6:13
l எசே 9:6
m 2நா 36:15, 16
n ஏசா 66:3
o சங் 37:19, 25; ஆமோ 8:11

என் ஊழியர்கள் குடிப்பார்கள்,[a] ஆனால் நீங்கள் தாகத்தில் தவிப்பீர்கள்.
என் ஊழியர்கள் சந்தோஷமாக இருப்பார்கள்,[b] ஆனால் நீங்கள் அவமானத்தில் கூனிக்குறுகுவீர்கள்.[c]
14 என் ஊழியர்கள் சந்தோஷம் பொங்கும் இதயத்தோடு ஆரவாரம் செய்வார்கள்.
ஆனால், நீங்கள் வேதனை நிறைந்த இதயத்தோடு அலறுவீர்கள்.
துக்கத்தினால் அழுது புலம்புவீர்கள்.
15 நான் தேர்ந்தெடுத்த ஜனங்கள், உங்களுக்குப்பின் உங்கள் பெயரைச் சாபத்துக்குரிய பெயராகத்தான் பயன்படுத்துவார்கள்.
உன்னதப் பேரரசராகிய யெகோவா உங்கள் ஒவ்வொருவரையும் கொன்றுபோடுவார்.
ஆனால், தன்னுடைய ஊழியர்களை ஒரு புதிய பெயரால் அழைப்பார்.[d]
16 பூமியில் யார் ஆசீர்வாதம் கேட்டாலும்,
சத்தியத்தின்* கடவுள் அவர்களை ஆசீர்வதிப்பார்.
பூமியில் யார் சத்தியம் செய்தாலும்,
சத்தியத்தின்* கடவுள்மீதே சத்தியம் செய்வார்கள்.[e]
என் ஜனங்கள் இனிமேல் என் கண் முன்னால் கஷ்டப்பட மாட்டார்கள்.
இதுவரை பட்ட கஷ்டங்களையெல்லாம் மறந்துவிடுவார்கள்.[f]
17 இதோ பாருங்கள், நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைக்கிறேன்.[g]
முன்பு பட்ட கஷ்டங்கள் இனி யாருடைய மனதுக்கும் வராது.
யாருடைய நெஞ்சத்தையும் வாட்டாது.[h]
18 அதனால், நான் புதிதாகப் படைக்கிறவற்றை என்றென்றும் அனுபவித்து மகிழுங்கள்.
எருசலேமைச் சந்தோஷத்துக்குக் காரணமான நகரமாகவும்,
அவளுடைய மக்களை மகிழ்ச்சிக்குக் காரணமான மக்களாகவும் ஆக்குவேன்.[i]
19 எருசலேமையும் என் மக்களையும் பார்த்து நான் சந்தோஷப்படுவேன், பூரித்துப்போவேன்.[j]
அழுகைச் சத்தமோ அலறல் சத்தமோ இனி அங்கே கேட்காது."[k]
20 "அங்கே இனி எந்தக் குழந்தையும் பிறந்த சில நாட்களிலேயே இறந்துபோகாது.
அற்ப ஆயுசில் யாரும் செத்துப்போக மாட்டார்கள்.
யாராவது நூறு வயதில் இறந்துபோனாலும் சின்ன வயதிலேயே இறந்துபோனதாகத்தான் சொல்வார்கள்.
பாவம் செய்கிறவன் நூறு வயதுள்ளவனாக இருந்தாலும் சபிக்கப்படுவான்.*
21 ஜனங்கள் வீடுகளைக் கட்டி அதில் குடியிருப்பார்கள்.[l]
திராட்சைத் தோட்டங்களை அமைத்து அதன் பழங்களைச் சாப்பிடுவார்கள்.[m]

65:16 *வே.வா., "உண்மையுள்ள." **65:20** *அல்லது, "நூறு வயதை எட்டாதவன் சபிக்கப்பட்டவனாகக் கருதப்படுவான்."

அதி. 65
a ஏசா 49:10
b ஏசா 66:14
c ஏசா 66:5
d ஏசா 62:2; எரே 33:16
e உபா 6:13
f ஏசா 12:1; எரே 31:12; செப் 3:14, 15
g எஸ்றா 5:2; ஏசா 51:16; ஏசா 66:22; 2பே 3:13
h வெளி 21:1, 4
i ஏசா 51:11
j ஏசா 62:4; எரே 32:41
k ஏசா 25:8; எரே 31:12
l எரே 31:4
m ஏசா 62:8; ஆமோ 9:14

22 ஒருவர் கட்டும் வீட்டில் இன்னொருவர் குடியிருக்க மாட்டார்.
ஒருவருடைய தோட்டத்தின் விளைச்சலை இன்னொருவர் சாப்பிட மாட்டார்.
ஏனென்றால், மரத்தின் ஆயுள் காலத்தைப் போல என் ஜனங்களின் ஆயுள் காலமும் இருக்கும்.[a]
நான் தேர்ந்தெடுத்த ஜனங்கள் தங்கள் உழைப்பின் பலனை முழுமையாக அனுபவிப்பார்கள்.
23 அவர்களுடைய கடின உழைப்பு வீண்போகாது.[b]
அவர்கள் பெற்றெடுக்கிற பிள்ளைகள் யாரும் பாடுகளை அனுபவிக்க மாட்டார்கள்.
ஏனென்றால், அவர்களும் அவர்களுடைய வருங்காலத் தலைமுறைகளும்,
யெகோவாவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற ஜனங்களாக இருப்பார்கள்.[c]
24 அவர்கள் கூப்பிடுவதற்கு முன்பே நான் பதில் சொல்வேன்.
அவர்கள் பேசுவதை உடனுக்குடன் கேட்பேன்.
25 ஓநாயும் செம்மறியாட்டுக் குட்டியும் ஒன்றாக மேயும்.
சிங்கம் மாட்டைப் போல வைக்கோலைத் தின்னும்.[d]
பாம்பு வெறும் மண்ணைச் சாப்பிடும்.
என்னுடைய பரிசுத்த மலையில் அவை எந்தத் தீங்கும் செய்யாது, எந்தக் கேடும் செய்யாது"[e] என்று யெகோவா சொல்கிறார்.

66 யெகோவா சொல்வது இதுதான்:
"பரலோகம் என் சிம்மாசனம், பூமி என் கால்மணை.[f]
அப்படியிருக்கும்போது, எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட ஆலயத்தை* கட்டுவீர்கள்?[g]
நான் தங்குவதற்கு எப்படிப்பட்ட இடத்தைத் தருவீர்கள்?"[h]
2 "எல்லாவற்றையும் என் கையால்தான் படைத்தேன்.
நான்தான் உருவாக்கினேன்" என்று யெகோவா சொல்கிறார்.[i]
"ஆனாலும், என் வார்த்தைக்குப் பயந்து நடக்கிற தாழ்மையுள்ள ஆட்களையும்,
மனமுடைந்த ஆட்களையும்தான் நான் கண்ணோக்கிப் பார்ப்பேன்.[j]
3 ஜனங்கள் காளையை வெட்டுவது ஒரு மனுஷனை வெட்டுவது போலவும்,[k]
ஒரு ஆட்டைப் பலி கொடுப்பது ஒரு நாயின் தலையை வெட்டுவது போலவும்,[l]
காணிக்கை கொடுப்பது பன்றியின் இரத்தத்தைக் கொடுப்பது போலவும்,[m]
சாம்பிராணியை எரிப்பது[n] மாயமந்திர வார்த்தைகளால் துதிப்பது* போலவும் இருக்கிறது.[o]
எனக்கு அருவருப்பான காரியங்களை அவர்கள் ஆசையாய்ச் செய்கிறார்கள்.

66:1 * நே.மொ., "வீட்டை." 66:3 * அல்லது, "சாம்பிராணியை எரிப்பது ஒரு சிலையைப் போற்றிப் புகழ்வது."

அதி. 65
a சங் 92:12-14
b லேவி 26:3-5; உபா 28:4
c ஏசா 61:9; ஏசா 66:22
d ஏசா 35:9; ஓசி 2:18
e ஏசா 2:3, 4; ஏசா 11:6-9; மீ 4:2

அதி. 66
f மத் 5:34, 35
g 2நா 6:18; அப் 17:24
h 1நா 28:2; அப் 7:48-50
i ஏசா 40:26
j 2ரா 22:18, 19; லூ 18:14
k ஏசா 1:11
l லேவி 11:27
m உபா 14:8
n லேவி 2:1, 2
o ஏசா 1:13

அவரவர் விருப்பப்படி நடக்கிறார்கள்.
4 அதனால், என் விருப்பப்படி நான் அவர்களைத் தண்டிக்கப்போகிறேன்.[a]
அவர்கள் எதை நினைத்து நடுங்குகிறார்களோ அதையே அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்.
ஏனென்றால், நான் கூப்பிட்டபோது அவர்கள் யாரும் பதில் சொல்லவில்லை.
நான் பேசியபோது யாரும் கேட்கவில்லை.[b]
நான் வெறுக்கிற காரியங்களைச் செய்துகொண்டே இருந்தார்கள்.
எனக்குப் பிடிக்காத வழியில் போனார்கள்."[c]
5 யெகோவாவின் வார்த்தைக்குப் பயப்படுகிறவர்களே, அவர் சொல்வதைக் கேளுங்கள்:
"என் பெயரின் காரணமாக உங்களை வெறுத்து ஒதுக்குகிற உங்கள் சகோதரர்கள், 'யெகோவாவுக்குப் புகழ் சேரட்டும்!' என்று போலித்தனமாகச் சொல்கிறார்கள்.[d]
ஆனால், நான் வந்து உங்களைச் சந்தோஷப்படுத்துவேன்.
அவர்களோ அவமானம் அடைவார்கள்."[e]
6 நகரத்திலும் ஆலயத்திலும் ஒரே கூச்சல் சத்தம் கேட்கிறது.
யெகோவா அவருடைய எதிரிகளைப் பழிதீர்க்கும் சத்தம் அது.
7 சீயோன், பிரசவ நேரத்துக்கு முன்பே குழந்தையைப் பெற்றெடுத்தாள்.[f]
பிரசவ வலி வருவதற்கு முன்பே ஆண் குழந்தையைப் பெற்றாள்.
8 ஒரே நாளில் ஒரு தேசம் உருவாகுமா?
ஒரே நேரத்தில் ஒரு தேசத்து ஜனங்கள் பிறப்பார்களா?
இப்படிப்பட்ட ஒன்று நடந்ததாக யாராவது கேள்விப்பட்டது உண்டா?
இப்படிப்பட்ட ஒன்றை யாராவது பார்த்தது உண்டா?
ஆனால் சீயோன், பிரசவ வலி வந்தவுடனே மகன்களைப் பெற்றெடுத்தாள்.
9 "நான் பிரசவ வலியை வர வைத்துவிட்டு குழந்தை பிறக்காதபடி செய்வேனா?" என்று யெகோவா கேட்கிறார்.
"நான் ஆரம்பித்து வைத்த ஒன்றை முடிக்காமல் இருப்பேனா?" என்று உங்கள் கடவுள் கேட்கிறார்.
10 எருசலேமை நேசிக்கிறவர்களே,[g] அவளோடு சேர்ந்து சந்தோஷப்படுங்கள்,[h] அவளோடு சேர்ந்து ஆனந்தப்படுங்கள்.
அவளுக்காகத் துக்கப்படுகிறவர்களே, அவளோடு சேர்ந்து கொண்டாடி மகிழுங்கள்.
11 ஏனென்றால், குழந்தைக்கு வயிறார பாலூட்டும் தாய் போல எருசலேம் உங்களைக் கவனித்துக்கொள்வாள்.
நீங்கள் திருப்தியும் ஆறுதலும் அடைவீர்கள். அவளுடைய மகிமையைப் பார்த்து மிகவும் சந்தோஷப்படுவீர்கள்.
12 யெகோவா சொல்வது இதுதான்:
"அவளுடைய சமாதானத்தை ஆறுபோல் பெருக்கெடுக்க வைப்பேன்.[i]
தேசங்களின் செல்வங்களை வெள்ளம்போல் அவளிடம் அடித்துவரச் செய்வேன்.[j]

அதி. 66
a உபா 28:15
b எரே 7:13
c 2ரா 21:9; ஏசா 65:3
d ஏசா 5:18, 19; ஏசா 29:13
e ஏசா 65:13, 14; எரே 17:13, 18
f ஏசா 54:1
g சங் 137:6
h ஏசா 44:23
i ஏசா 9:7
j ஏசா 60:3; ஆகா 2:7

அதி. 66
a ஏசா 51:3
b ஏசா 44:28
ஏசா 65:18, 19
c ஏசா 59:18
d உபா 4:24
e சங் 50:3
எரே 25:
32, 33
f 2தெ 1:7, 8
g ஏசா 1:29
ஏசா 65:3
h லேவி 11:7, 8
ஏசா 65:4
i லேவி 11:29
j ஆதி 10:4
k ஆதி 10:6, 13
l ஆதி 10:2
எசே 27:
12, 13
m ஏசா 60:3
மல் 1:11
n உபா 30:1-3
ஏசா 11:16
ஏசா 43:6
ஏசா 60:4, 9

நீங்கள் மடியில் வைத்துப் பாலூட்டப்படுவீர்கள்; இடுப்பில் வைத்துச் சுமக்கப்படுவீர்கள்.
முழங்காலில் வைத்துத் தாலாட்டப்படுவீர்கள்.
13 ஒரு தாய் தன் மகனை ஆறுதல்படுத்துவது போல,
நான் உங்களை எப்போதும் ஆறுதல்படுத்துவேன்.[a]
எருசலேமின் நிலைமையைப் பார்த்து நீங்கள் ஆறுதல் அடைவீர்கள்.[b]
14 நீங்கள் அதைப் பார்த்து உள்ளம் பூரித்துப்போவீர்கள்.
புதிதாக முளைத்த புல்லைப் போல உங்கள் எலும்புகள் புது பலம் பெறும்.
யெகோவாவின் ஊழியர்கள் அவருடைய கைபலத்தைப் புரிந்துகொள்வார்கள்.
எதிரிகளோ அவருடைய கோபத்துக்கு ஆளாவார்கள்."[c]
15 "யெகோவா நெருப்புபோல் வருவார்.[d]
அவருடைய ரதங்கள் புயல்காற்றைப் போல வரும்.[e]
அவர் கடும் கோபத்தோடு பழிவாங்குவார்.
கொழுந்துவிட்டு எரியும் தீயினால் தண்டிப்பார்.[f]
16 மனுஷர்களை நெருப்பினாலும் வாளினாலும்
யெகோவா தண்டிப்பார்.
யெகோவா ஏராளமானவர்களைக் கொன்றுபோடுவார்.

17 புனித* தோட்டங்களுக்கு# போவதற்காகத்[g] தங்களைச் சுத்தப்
படுத்தித் தூய்மையாக்குகிற ஆட்களும், பன்றியையும்[h] எலியையும்[i]
அசுத்தமானவற்றையும் சாப்பிடுகிற ஆட்களும் ஒட்டுமொத்தமாக ஒழிந்து
போவார்கள்" என்று யெகோவா சொல்கிறார். **18** "அவர்கள் என்ன
யோசிக்கிறார்கள் என்றும், என்ன செய்கிறார்கள் என்றும் எனக்குத் தெரியும்.
அதனால், எல்லா தேசங்களையும் மொழிகளையும் சேர்ந்த மக்களை ஒன்
றுதிரட்டுவதற்காக நான் வருகிறேன். அவர்கள் திரண்டு வந்து என் மகிமை
யைப் பார்ப்பார்கள்."

19 "அவர்கள் மத்தியில் நான் ஒரு அடையாளத்தைச் செய்து காட்
டுவேன். உயிர்தப்பியவர்களில் சிலரை வில்வீரர்கள் இருக்கிற தர்ஷீஸ்,[j]
பூல், லூத்[k] தேசங்களுக்கும், தூபால், யாவான்[l] தேசங்களுக்கும், தொலை
தூரத்தில் உள்ள தீவுகளுக்கும் அனுப்புவேன். என்னைப் பற்றிக் கேள்
விப்படாமலும், என் மகிமையைப் பார்க்காமலும் இருக்கிற அந்த ஜனங்
களுக்கு அவர்கள் என் மகிமையைப் பற்றிச் சொல்வார்கள்.[m] **20** பின்பு,
எல்லா தேசங்களிலும் உள்ள உங்கள் சகோதரர்களை என் பரிசுத்த மலை
யாகிய எருசலேமுக்குக் குதிரைகளிலும், ரதங்களிலும், கூண்டு வண்டிகளி
லும், கோவேறு கழுதைகளிலும்,* வேகமாக ஓடும் ஒட்டகங்களிலும் கூட்
டிக்கொண்டு வருவார்கள்.[n] இஸ்ரவேல் மக்கள் சுத்தமான பாத்திரத்தில்
தங்கள் காணிக்கைகளை யெகோவாவின் ஆலயத்துக்குக் கொண்டுவரு
வது போல அவர்கள் உங்கள் சகோதரர்களை யெகோவாவுக்கு அன்பளிப்
பாகக் கொண்டுவருவார்கள்" என்று யெகோவா சொல்கிறார்.

66:17 *நே.மொ., "நடுவில் இருப்பதன் பின்னால் உள்ள." #அதாவது, "சிலை வழிபாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்ட விசேஷ தோட்டங்களுக்கு." **66:20** *இவை பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்தவை.

21 “அவர்களில் சிலரை குருமார்களாகவும் லேவியர்களாகவும் தேர்ந்
தெடுப்பேன்” என்று யெகோவா சொல்கிறார்.
22 “நான் படைக்கிற புதிய வானமும் புதிய பூமியும்[a] எப்படி என் முன்
னால் என்றென்றும் நிலைத்திருக்குமோ அப்படியே உங்கள் வம்சமும் உங்
கள் பெயரும் எப்போதும் நிலைத்திருக்கும்”[b] என்று யெகோவா சொல்கிறார்.

23 “மாதம் தவறாமலும் வாரம் தவறாமலும்*
எல்லாரும் என் முன்னால் வந்து என்னை வணங்குவார்கள்”[c] என்று
யெகோவா சொல்கிறார்.

24 “எனக்கு அடங்கி நடக்காதவர்களின் பிணங்கள் வெளியே கிடப்பதை
அவர்கள் பார்ப்பார்கள்.
அந்தப் பிணங்களின் மேலுள்ள புழுக்கள் சாகாது.
அங்கே எரியும் நெருப்பு அணையாது.[d]
அந்தக் காட்சியைப் பார்த்தாலே எல்லாருக்கும் அருவருப்பாக
இருக்கும்.”

66:23 *நே.மொ., “மாதப் பிறப்பிலிருந்து மாதப்பிறப்பு வரையும் ஓய்வுநாளிலிருந்து ஓய்வுநாள் வரையும்.”

அதி. 66
a ஏசா 65:17, 18; 2பே 3:13; வெளி 21:1
b ஏசா 65:23; எரே 31:35, 36
c சங் 86:9; சக 14:16; மல் 1:11
d ஏசா 34:10; மத் 25:41; மாற் 9:47, 48; 2தெ 1:9

எரேமியா

முக்கியக் குறிப்புகள்

1 தீர்க்கதரிசியாக எரேமியா நியமிக்கப்படுகிறார் (1-10)
- வாதுமை மரத்தைப் பற்றிய தரிசனம் (11, 12)
- கொதிக்கிற பானையைப் பற்றிய தரிசனம் (13-16)
- கொடுக்கப்பட்ட வேலையைச் செய்ய எரேமியா பலப்படுத்தப்படுகிறார் (17-19)

2 இஸ்ரவேலர்கள் யெகோவாவைவிட்டு மற்ற தெய்வங்களிடம் போகிறார்கள் (1-37)
- இஸ்ரவேல் காட்டுத் திராட்சைக் கொடிபோல் இருக்கிறாள் (21)
- அவளுடைய உடைகளில் இரத்தக் கறை இருக்கிறது (34)

3 இஸ்ரவேல் துரோகத்துக்குமேல் துரோகம் செய்கிறாள் (1-5)
- இஸ்ரவேலும் சரி, யூதாவும் சரி, விபச்சாரத்தில் ஈடுபடுகின்றன (6-11)
- மனம் திருந்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றன (12-25)

4 மனம் திருந்துவதால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் (1-4)
- வடக்கிலிருந்து பேரழிவு வரப்போகிறது (5-18)
- வரப்போகும் பேரழிவை நினைத்து எரேமியா படும் வேதனை (19-31)

5 யெகோவா தண்டித்தபோது ஜனங்கள் திருந்தவே இல்லை (1-13)
- அவர்களுக்கு அழிவு வந்தாலும் அடியோடு அழிக்கப்பட மாட்டார்கள் (14-19)
- யெகோவா ஜனங்களைத் தட்டிக்கேட்கிறார் (20-31)

6 எருசலேம் சீக்கிரத்தில் முற்றுகையிடப்படும் (1-9)
- எருசலேமின் மேல் யெகோவாவின் கோபம் (10-21)
  - சமாதானமே இல்லாதபோது “சமாதானம் இருக்கிறது!” என்கிறார்கள் (14)
- வடக்கிலிருந்து வரும் பயங்கரமான தாக்குதல் (22-26)
- வெள்ளியைப் புடமிடுகிறவராக எரேமியா (27-30)

7 யெகோவாவுடைய ஆலயத்தின் மேல் தவறான நம்பிக்கை (1-11)
ஆலயம் சீலோவைப் போல ஆகிவிடும் (12-15)
சம்பிரதாய வணக்க முறையை யெகோவா கண்டிக்கிறார் (16-34)
ஜனங்கள் 'விண்ணரசியை' வணங்குகிறார்கள் (18)
இன்னோம் பள்ளத்தாக்கில் பிள்ளைகள் நரபலி (31)

8 எல்லாரும் போகிற போக்கில் ஜனங்கள் போகிறார்கள் (1-7)
யெகோவாவின் வார்த்தையை வெறுக்கிறவர்களுக்கு ஏது ஞானம்? (8-17)
யூதாவின் நிலைமையைப் பார்த்து எரேமியா புலம்புகிறார் (18-22)
"கீலேயாத்தில் பரிமளத் தைலமே இல்லையா?" (22)

9 எரேமியா அதிக துக்கத்தில் இருக்கிறார் (1-3அ)
யெகோவா யூதாவைத் தட்டிக்கேட்கிறார் (3ஆ-16)
யூதாவைப் பற்றிய புலம்பல் (17-22)
யெகோவாவைப் பற்றிய அறிவு இருப்பதை நினைத்துப் பெருமைப்படுங்கள் (23-26)

10 தேசங்களின் தெய்வங்களும் உயிருள்ள கடவுளும் (1-16)
வரப்போகும் அழிவும் சிறைபிடிக்கப்படுவதும் (17, 18)
எரேமியா வருத்தப்படுகிறார் (19-22)
தீர்க்கதரிசியின் ஜெபம் (23-25)
தன்னுடைய காலடிகளை நடத்தும் அதிகாரம் மனிதனுக்கு இல்லை (23)

11 கடவுளோடு செய்த ஒப்பந்தத்தை யூதா முறித்துவிடுகிறது (1-17)
நகரங்களைப் போலவே தெய்வங்களும் ஏராளமாக இருக்கின்றன (13)
வெட்டப்படுவதற்குக் கொண்டுபோகப்படும் ஆட்டுக்குட்டிபோல் எரேமியா (18-20)
எரேமியாவின் ஊர்க்காரர்களிடமிருந்து எதிர்ப்பு (21-23)

12 எரேமியா முறையிடுகிறார் (1-4)
யெகோவாவின் பதில் (5-17)

13 நாரிழையால் செய்யப்பட்ட இடுப்புவார் பாழாகிப்போகிறது (1-11)
திராட்சமது ஜாடிகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளும் (12-14)
திருந்தாத யூதா ஜனங்கள் சிறைபிடிக்கப்படுவார்கள் (15-27)
"கூஷியன் தன்னுடைய நிறத்தை மாற்றிக்கொள்ள முடியுமா?" (23)

14 வறட்சி, பஞ்சம், வாள் (1-12)
பொய்த் தீர்க்கதரிசிகள் கண்டிக்கப்படுகிறார்கள் (13-18)
ஜனங்கள் செய்த பாவங்களை எரேமியா ஒத்துக்கொள்கிறார் (19-22)

15 யெகோவா தன்னுடைய தண்டனைத் தீர்ப்பை மாற்ற மாட்டார் (1-9)
எரேமியா முறையிடுகிறார் (10)
யெகோவாவின் பதில் (11-14)
எரேமியாவின் ஜெபம் (15-18)
கடவுளுடைய வார்த்தையை ருசித்ததால் கிடைக்கும் சந்தோஷம் (16)
எரேமியாவை யெகோவா பலப்படுத்துகிறார் (19-21)

16 எரேமியா கல்யாணம் செய்யவோ ஒப்பாரி வைக்கவோ விருந்து சாப்பிடவோ கூடாது (1-9)
தண்டனைக்குப் பிறகு ஜனங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பி வருகிறார்கள் (10-21)

17 யூதாவின் பாவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன (1-4)
யெகோவாமேல் நம்பிக்கை வைப்பதால் வரும் ஆசீர்வாதங்கள் (5-8)
நயவஞ்சகமான இதயம் (9-11)
இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய யெகோவாவே (12, 13)
எரேமியாவின் ஜெபம் (14-18)
ஓய்வுநாளைப் புனிதமான நாளாக அனுசரிப்பது (19-27)

18 குயவனின் கையில் இருக்கும் களிமண் (1-12)
இஸ்ரவேலுக்கு யெகோவா முதுகைக் காட்டுகிறார் (13-17)
எரேமியாவுக்கு எதிரான திட்டம்; அவருடைய வேண்டுதல் (18-23)

19 ஒரு மண் ஜாடியை உடைக்கும்படி எரேமியாவிடம் சொல்லப்படுகிறது (1-15)
பிள்ளைகள் பாகாலுக்குப் பலி கொடுக்கப்படுகிறார்கள் (5)

20 பஸ்கூர் எரேமியாவை அடிக்கிறார் (1-6)
எரேமியாவால் யெகோவாவின் செய்தியைச் சொல்லாமல் இருக்க முடிவதில்லை (7-13)
கடவுளுடைய செய்தி எரிகிற நெருப்புபோல் இருக்கிறது (9)

யெகோவா ஒரு மாவீரரைப் போல இருக்கிறார் (11)
எரேமியா முறையிடுகிறார் (14-18)

21 சிதேக்கியா கேட்டுக்கொண்டதை யெகோவா மறுக்கிறார் (1-7)
வாழ்வா சாவா என்பதை ஜனங்கள் தீர்மானிக்க வேண்டும் (8-14)

22 கெட்ட ராஜாக்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பின் செய்திகள் (1-30)
சல்லூமைப் பற்றிய செய்தி (10-12)
யோயாக்கீமைப் பற்றிய செய்தி (13-23)
கோனியாவைப் பற்றிய செய்தி (24-30)

23 நல்ல மேய்ப்பர்களும் கெட்ட மேய்ப்பர்களும் (1-4)
'நீதியான தளிர்' ஆட்சி செய்யும்போது பாதுகாப்பு இருக்கும் (5-8)
பொய்த் தீர்க்கதரிசிகள் கண்டிக்கப்படுகிறார்கள் (9-32)
யெகோவாவுக்கு 'பாரமாக இருக்கிறவர்கள்' (33-40)

24 நல்ல அத்திப்பழங்களும் கெட்ட அத்திப்பழங்களும் (1-10)

25 தேசங்களோடு யெகோவாவுக்கு இருக்கிற வழக்கு (1-38)
ஜனங்கள் 70 வருஷங்களுக்கு பாபிலோன் ராஜாவின் அடிமைகளாக இருப்பார்கள் (11)
கடவுளுடைய கோபம் என்கிற திராட்சமதுக் கிண்ணம் (15)
தேசங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அழியும் (32)
யெகோவாவினால் வெட்டி வீழ்த்தப்பட்டவர்கள் (33)

26 எரேமியாவுக்கு வரும் கொலை மிரட்டல் (1-15)
எரேமியா காப்பாற்றப்படுகிறார் (16-19)
மீகா சொன்ன தீர்க்கதரிசனம் (18)
ஊரியா தீர்க்கதரிசி (20-24)

27 பாபிலோனின் நுகத்தடி (1-11)
பாபிலோன் ராஜாவுக்கு அடிபணியும்படி சிதேக்கியாவிடம் சொல்லப்படுகிறது (12-22)

28 எரேமியாவும் பொய்த் தீர்க்கதரிசியான அனனியாவும் (1-17)

29 பாபிலோன் சிறையிருப்பில் உள்ளவர்களுக்கு எரேமியாவின் கடிதம் (1-23)
இஸ்ரவேலர்கள் 70 வருஷங்களுக்குப் பிறகு திரும்பி வருவார்கள் (10)
செமாயாவுக்கு ஒரு செய்தி (24-32)

30 சொந்த தேசத்துக்குத் திரும்புவதையும் குணமாக்கப்படுவதையும் பற்றிய வாக்குறுதிகள் (1-24)

31 இஸ்ரவேலில் மீதியாக இருப்பவர்கள் தேசத்தில் திரும்பவும் குடியிருப்பார்கள் (1-30)
ராகேல் தன்னுடைய பிள்ளைகளுக்காக அழுகிறாள் (15)
புதிய ஒப்பந்தம் (31-40)

32 எரேமியா ஒரு நிலத்தை வாங்குகிறார் (1-15)
எரேமியாவின் ஜெபம் (16-25)
யெகோவாவின் பதில் (26-44)

33 நகரம் புதுப்பிக்கப்படுவதைப் பற்றிய வாக்குறுதி (1-13)
'நீதியான தளிர்' ஆட்சி செய்யும்போது பாதுகாப்பு இருக்கும் (14-16)
தாவீதோடும் குருமார்களோடும் ஒப்பந்தம் (17-26)
ராத்திரி பகல் பற்றிய ஒப்பந்தம் (20)

34 சிதேக்கியாவுக்குத் தண்டனைத் தீர்ப்பின் செய்தி (1-7)
அடிமைகளை விடுதலை செய்ய வேண்டுமென்ற ஒப்பந்தம் மீறப்படுகிறது (8-22)

35 கீழ்ப்படிந்து நடப்பதில் ரேகாபியர்களின் முன்மாதிரி (1-19)

36 எரேமியா சொல்கிற விஷயங்கள் சுருளில் எழுதப்படுகின்றன (1-7)
சுருளில் எழுதப்பட்டதை பாருக் சத்தமாக வாசிக்கிறார் (8-19)
யோயாக்கீம் சுருளை எரிக்கிறார் (20-26)
அதே விஷயங்கள் ஒரு புதிய சுருளில் எழுதப்படுகின்றன (27-32)

37 கல்தேயர்கள் தற்காலிகமாகப் பின்வாங்கிப் போகிறார்கள் (1-10)
எரேமியா கைது செய்யப்படுகிறார் (11-16)
சிதேக்கியா எரேமியாவைச் சந்திக்கிறார் (17-21)
எரேமியாவுக்கு ரொட்டி கொடுக்கப்படுகிறது (21)

38 எரேமியா கிணற்றுக்குள் போடப்படுகிறார் (1-6)
எரேமியாவை எபெத்மெலேக் காப்பாற்றுகிறார் (7-13)

சரணடையும்படி சிதேக்கியாவிடம் எரேமியா சொல்கிறார் (14-28)

39 எருசலேமின் அழிவு (1-10)
சிதேக்கியா தப்பியோடுகிறார், பிடிக்கப்படுகிறார் (4-7)
எரேமியா பாதுகாக்கப்படுவார் (11-14)
எபெத்மெலேக்கின் உயிர் காப்பாற்றப்படும் (15-18)

40 நேபுசராதான் எரேமியாவை விடுதலை செய்கிறான் (1-6)
தேசத்துக்கு அதிகாரியாக கெதலியா நியமிக்கப்படுகிறார் (7-12)
கெதலியாவுக்கு எதிராகத் திட்டம் (13-16)

41 கெதலியாவை இஸ்மவேல் கொலை செய்கிறான் (1-10)
இஸ்மவேல் யோகனானிடமிருந்து தப்பித்து ஓடுகிறான் (11-18)

42 கடவுளிடம் விசாரிக்கும்படி எரேமியாவிடம் ஜனங்கள் கேட்கிறார்கள் (1-6)
'எகிப்துக்குப் போகக் கூடாது' என்று யெகோவா சொல்கிறார் (7-22)

43 ஜனங்கள் கீழ்ப்படியாமல் எகிப்துக்குப் போகிறார்கள் (1-7)
எகிப்தில் யெகோவாவிடமிருந்து எரேமியாவுக்குக் கிடைக்கும் செய்தி (8-13)

44 யூதர்கள் எகிப்தில் அழிக்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறது (1-14)
கடவுளுடைய எச்சரிப்பை ஜனங்கள் ஒதுக்கித்தள்ளுகிறார்கள் (15-30)
'விண்ணரசியை' வணங்குகிறார்கள் (17-19)

45 பாருக்குக்கு யெகோவாவின் செய்தி (1-5)

46 எகிப்துக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-26)
எகிப்தை நேபுகாத்நேச்சார் கைப்பற்றுவான் (13, 26)
இஸ்ரவேலுக்கு வாக்குறுதிகள் (27, 28)

47 பெலிஸ்தியர்களுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-7)

48 மோவாபுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-47)

49 அம்மோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-6)
ஏதோமுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (7-22)
ஏதோம் தேசமே அடியோடு அழிக்கப்படும் (17, 18)
தமஸ்குவுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (23-27)
கேதாருக்கும் ஆத்சோருக்கும் எதிரான தீர்க்கதரிசனம் (28-33)
ஏலாமுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (34-39)

50 பாபிலோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-46)
பாபிலோனைவிட்டு ஓடிப்போங்கள் (8)
இஸ்ரவேல் திரும்பக் கூட்டிக்கொண்டு வரப்படும் (17-19)
பாபிலோனின் தண்ணீர் வற்றிப்போகும் (38)
பாபிலோனில் இனி யாரும் வாழ மாட்டார்கள் (39, 40)

51 பாபிலோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-64)
பாபிலோன் திடீரென்று மேதியர்களால் கைப்பற்றப்படும் (8-12)
புத்தகம் யூப்ரடிஸ் ஆற்றில் எறியப்படுகிறது (59-64)

52 பாபிலோன் ராஜாவுக்கு எதிராக சிதேக்கியா கலகம் செய்கிறார் (1-3)
எருசலேமை நேபுகாத்நேச்சார் சுற்றிவளைக்கிறான் (4-11)
நகரமும் ஆலயமும் அழிக்கப்படுகின்றன (12-23)
ஜனங்கள் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்படுகிறார்கள் (24-30)
யோயாக்கீன் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுகிறார் (31-34)

அதி. 1
a யோசு 21: 8, 18
b 2ரா 21:19, 20
c 2ரா 22:1, 2
d 2ரா 24:1 2நா 36:4

1 பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் நகரத்தைச்[a] சேர்ந்த குரு
வாகிய இல்க்கியாவின் மகன் எரேமியா* எழுதுவது. **2** ஆமோ
னின்[b] மகனாகிய யோசியா[c] யூதாவை ஆட்சி செய்த 13-ஆம் வருஷத்தில்
யெகோவாவிடமிருந்து எனக்குச் செய்தி கிடைத்தது. **3** யோசியாவின்
மகன் யோயாக்கீம்[d] யூதாவை ஆட்சி செய்த காலத்திலும் அவரிடமிருந்து

1:1 * ஒருவேளை இந்தப் பெயரின் அர்த்தம், "யெகோவா உயர்த்துகிறார்."

எனக்குச் செய்தி கிடைத்தது. யூதாவின் ராஜாவும் யோசியாவின் மகனுமான சிதேக்கியாவின்[a] 11-ஆம் வருஷத்தின் முடிவு வரையிலும், எருசலேம் ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போன ஐந்தாம் மாதம் வரையிலும்[b] அவரிடமிருந்து எனக்குச் செய்தி கிடைத்தது.

4 யெகோவா என்னிடம்,

5 “உன் தாயின் வயிற்றில் உன்னை உருவாக்குவதற்கு முன்பே உன்னைப் பற்றி எனக்குத் தெரியும்.[c]
நீ பிறப்பதற்கு முன்பே ஒரு விசேஷ வேலைக்காக உன்னைத் தேர்ந்தெடுத்தேன்.*[d]
தேசங்களுக்கு உன்னை ஒரு தீர்க்கதரிசியாக நியமித்தேன்” என்று சொன்னார்.

6 ஆனால் நான், “ஐயோ! உன்னதப் பேரரசராகிய யெகோவாவே!
நான் சின்னப் பையன்,[e] எனக்குப் பேசத் தெரியாதே!”[f] என்று சொன்னேன்.

7 அப்போது யெகோவா என்னிடம்,
“நீ சின்னப் பையன் என்று சொல்லாதே.
யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகிறேனோ அவர்களிடமெல்லாம் நீ போக வேண்டும்.
எதையெல்லாம் சொல்லச் சொல்கிறேனோ அதையெல்லாம் நீ அவர்களிடம் சொல்ல வேண்டும்.[g]

8 அவர்களைப் பார்த்துப் பயப்படாதே.[h]
ஏனென்றால், ‘உன்னைக் காப்பாற்றுவதற்காக நான் உன்னோடு இருக்கிறேன்’[i] என்று யெகோவா சொல்கிறார்” என்றார்.

9 பின்பு, யெகோவா தன்னுடைய கையை நீட்டி என் வாயைத் தொட்
டார்.[j] யெகோவா என்னிடம், “என் வார்த்தைகளை உன் வாயில் வைக்கி
றேன்.[k] 10 தேசங்கள்மேலும் ராஜ்யங்கள்மேலும் இன்று உனக்கு அதிகா
ரம் தருகிறேன். பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும்,
நாட்டவும் உனக்கு அதிகாரம் தருகிறேன்”[l] என்றார்.

11 மறுபடியும் யெகோவா என்னிடம், “எரேமியா, நீ என்ன பார்க்கிறாய்?” என்று கேட்டார். அதற்கு நான், “வாதுமை மரத்தின்* கிளையைப் பார்க்கிறேன்” என்று சொன்னேன்.

12 அப்போது யெகோவா, “சரியாகச் சொன்னாய்; என் வார்த்தையை நிறைவேற்றி முடிக்கும்வரை நான் ஓய மாட்டேன்”* என்று சொன்னார்.

13 யெகோவா இரண்டாவது தடவை என்னிடம், “நீ என்ன பார்க்கி
றாய்?” என்று கேட்டார். அதற்கு நான், “கொதிக்கிற பானையைப் பார்க்கி
றேன். அதன் வாய் வடக்கிலிருந்து தெற்குப் பக்கமாகச் சாய்க்கப்பட்டிருக்
கிறது” என்று சொன்னேன். 14 அப்போது யெகோவா என்னிடம்,
“தேசத்தில் இருக்கிற எல்லாருக்கும் எதிராக
வடக்கிலிருந்து அழிவு வரும்.[m]

1:5 * வே.வா., “புனிதப்படுத்தினேன்.” **1:11** * நே.மொ., “விழித்திருக்கும் ஒன்றின்.” **1:12** * நே.மொ., “விழித்திருப்பேன்.” எபிரெயுவில் இதற்கான வார்த்தையும் “வாதுமை மரம்” என்பதற்கான வார்த்தையும் ஒரே மூலவார்த்தையிலிருந்து வந்தவை.

அதி. 1
a 2ரா 24:18, 19
b 2ரா 25:8, 11; எரே 52:12, 15
c நியா 13:5; சங் 139:15, 16
d லூ 1:13, 15
e 1ரா 3:5, 7
f யாத் 4:10
g யாத் 7:1, 2
h எசே 2:6
i யாத் 3:11, 12; எரே 15:20; அப் 18:9, 10
j ஏசா 6:7
k யாத் 4:12, 15; எசே 33:7
l எரே 18:7-10; எரே 24:5, 6
m எரே 6:1; எரே 10:22

15 ஏனென்றால், 'வடக்கு ராஜ்யங்களில் உள்ள எல்லா கோத்திரங்களையும்
நான் அழைத்திருக்கிறேன்' என்று யெகோவா சொல்கிறார்.[a]
'அவர்கள் வருவார்கள்; அவர்களுடைய ராஜாக்கள் எல்லாரும்
எருசலேமின் வாசல்களில் தங்கள் சிம்மாசனத்தை நிறுத்தி
வைப்பார்கள்.[b]
எருசலேமின் எல்லா மதில்களையும்,
யூதாவின் எல்லா நகரங்களையும் தாக்குவார்கள்.[c]
16 என் ஜனங்கள் அக்கிரமங்களைச் செய்வதால் நான் அவர்களுக்குத்
தண்டனைத் தீர்ப்பு கொடுப்பேன்.
அவர்கள் என்னை உதறித்தள்ளிவிட்டு,[d]
பொய் தெய்வங்களுக்குத் தகன பலி செலுத்துகிறார்கள்.*[e]
தங்கள் கைகளால் செய்த சிலைகளை வணங்குகிறார்கள்.'[f]
17 நீ தயாராகிக்கொள்.
எழுந்து நின்று, நான் கட்டளையிடுகிற எல்லாவற்றையும்
அவர்களிடம் சொல்.
அவர்களைப் பார்த்து நடுங்காதே.[g]
அப்படி நடுங்கினால், அவர்களுக்கு முன்பாக நான் உன்னை நடுங்க
வைப்பேன்.
18 யூதாவின் ராஜாக்களையும், அதிகாரிகளையும்,
குருமார்களையும், ஜனங்களையும்[h] நீ சமாளித்து நிற்பதற்காக
இன்று நான் உன்னை மதில் சூழ்ந்த நகரமாகவும்,[i]
இரும்புத் தூணாகவும், செம்புச் சுவராகவும் ஆக்கியிருக்கிறேன்.
19 அவர்கள் உன்னோடு மோதுவார்கள்.
ஆனாலும், ஜெயிக்க மாட்டார்கள்.
ஏனென்றால், 'உன்னைக் காப்பாற்றுவதற்காக நான் உன்னோடு
இருக்கிறேன்'[j] என்று யெகோவா சொல்கிறார்" என்றார்.

2 யெகோவா என்னிடம், 2 "எருசலேமுக்கு நீ அறிவிக்க வேண்டியது
என்னவென்றால், 'யெகோவா சொல்வது இதுதான்:
"இளவயதில் என்மேல் எவ்வளவு பக்தியாக* இருந்தாய்![k]
என்னோடு நிச்சயிக்கப்பட்டிருந்த சமயத்தில் என்மேல் எவ்வளவு
பிரியமாக இருந்தாய்![l]
எதுவும் விதைக்கப்படாத வனாந்தரத்திலே என்னை எப்படிப் பின்பற்றி
வந்தாய்![m]
இதெல்லாம் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.
3 இஸ்ரவேலர்கள் யெகோவாவுக்குப் பரிசுத்தமானவர்களாக,[n]
அவருடைய முதல் விளைச்சலாக இருந்தார்கள்."'
'அவர்களை ஒழித்துக்கட்டப் பார்க்கிறவர்கள் குற்றவாளிகளாக
ஆவார்கள்.
அப்படிப்பட்டவர்கள் அழிந்துபோவார்கள்' என்று யெகோவா
சொல்கிறார்."[o]

1:16 * வே.வா., "தூபம் காட்டுகிறார்கள்." 2:2 * வே.வா., "அன்பாக."

அதி. 1
a எரே 5:15, எரே 6:22, எரே 25:9
b எரே 39:3
c உபா 28:52, எரே 34:22, எரே 44:6
d யோசு 24:20, 2ரா 22:17, 2நா 7:19, 20
e எசே 8:10, 11, ஓசி 11:2
f ஏசா 2:8
g எசே 2:6
h எரே 26:12
i எரே 15:20, எரே 20:11, எசே 3:8, மீ 3:8
j ஆதி 28:15, யாத் 3:12, யோசு 1:5

அதி. 2
k ஓசி 2:15
l யாத் 24:3
m உபா 2:7
n யாத் 19:6, உபா 7:6
o யாத் 17:8, 13

4 யாக்கோபின் வம்சத்தாரே, இஸ்ரவேலின் குடும்பங்களே,
யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள்.
5 யெகோவா சொல்வது இதுதான்:
“உங்களுடைய முன்னோர்கள் என்னிடம் என்ன குறையைப் பார்த்தார்கள்?[a]
ஏன் என்னைவிட்டுத் தூரமாகப் போனார்கள்?
ஏன் ஒன்றுக்கும் உதவாத சிலைகளை வணங்கி[b] ஒன்றுக்கும் உதவாதவர்களாக ஆனார்கள்?[c]
6 ‘எகிப்திலிருந்து விடுதலை செய்து,[d]
ஆள் நடமாட்டமே இல்லாத வனாந்தரத்தின் வழியாகவும்,
பாலைவனங்களும்[e] படுகுழிகளும் வறட்சியும்[f]
கும்மிருட்டும் உள்ள தேசத்தின் வழியாகவும்,
யாருமே குடியிருக்காத பிரதேசத்தின் வழியாகவும்
நம்மைக் கூட்டிக்கொண்டு வந்த யெகோவா எங்கே?’
என்று அவர்கள் கேட்கவில்லை.
7 பழத் தோட்டங்கள் நிறைந்த தேசத்துக்கு நான் உங்களைக் கூட்டிக்கொண்டு வந்தேன்.
அந்தத் தேசத்தின் விளைச்சலையும் வளங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன்.[g]
ஆனால், நீங்கள் அந்தத் தேசத்தைத் தீட்டுப்படுத்தினீர்கள்.
நான் கொடுத்த சொத்தை அருவருப்பானதாக ஆக்கினீர்கள்.[h]
8 ‘யெகோவா எங்கே?’ என்று குருமார்கள் கேட்கவில்லை.[i]
திருச்சட்டத்தைக் கற்றுத்தருகிறவர்களுக்கு என்னைத் தெரியவில்லை.
மேய்ப்பர்கள் என் பேச்சை மீறினார்கள்.[j]
தீர்க்கதரிசிகள் பாகாலின் பெயரில் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.[k]
ஒன்றுக்கும் உதவாத தெய்வங்களைத் தேடிப்போனார்கள்.
9 ‘அதனால் நான் திரும்பவும் உங்களோடு வழக்காடுவேன்,[l]
உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும் வழக்காடுவேன்’
என்று யெகோவா சொல்கிறார்.
10 ‘கித்தீமின்[m] கடலோரப் பகுதிகளுக்கு* போய்ப் பாருங்கள்.
கேதாருக்கு[n] ஆள் அனுப்பி நன்றாக விசாரியுங்கள்.
இதுபோல் ஒன்று நடந்திருக்கிறதா என்று கேட்டுப் பாருங்கள்.
11 எந்தத் தேசத்து ஜனங்களாவது அவர்களுடைய தெய்வத்தை விட்டுவிட்டு தெய்வமே இல்லாதவற்றை வணங்கியிருக்கிறார்களா?
ஆனால், என்னுடைய ஜனங்கள் மகிமையுள்ள என்னை விட்டுவிட்டு ஒன்றுக்கும் உதவாத தெய்வங்களை வணங்குகிறார்கள்.[o]
12 யெகோவா சொல்வது இதுதான்: ‘வானமே, இதைப் பார்த்து ஆச்சரியப்படு.
அதிர்ச்சியில் நடுநடுங்கு.
13 ஏனென்றால், என் ஜனங்கள் இரண்டு தவறுகளைச் செய்துவிட்டார்கள்:

2:10 * வே.வா., “தீவுகளுக்கு.”

அதி. 2
a ஏசா 5:4; மீ 6:3
b உபா 32:21
c சங் 115:4, 8
d யாத் 14:30
e உபா 1:1; உபா 32:9, 10
f உபா 8:14, 15
g எண் 13:26, 27; உபா 6:10, 11; உபா 8:7-9
h லேவி 18:24; எண் 35:33; சங் 78:58; சங் 106:38; எரே 16:18
i 1சா 2:12; புல 4:13
j எசே 34:7, 8
k 1ரா 18:19; எரே 23:13
l எசே 20:35; மீ 6:2
m ஆதி 10:2, 4
n ஆதி 25:13; சங் 120:5; எரே 49:28
o சங் 106:20

அதி. 2
a சங் 36:9
எரே 17:13
வெளி 22:1
b ஏசா 5:29
எரே 4:7
c எரே 46:19
d எரே 43:4, 7
எரே 46:14
எசே 30:18
e 1நா 28:9
2நா 7:19, 20
f ஏசா 30:2
ஏசா 31:1
புல 5:6
எசே 16:26
எசே 17:15
g 2ரா 16:7
ஓசி 5:13
h எரே 4:18
i எரே 5:22
j லேவி 26:13
k 1ரா 14:22, 23
எசே 6:13
l யாத் 34:15
எசே 16:15, 16
m யாத் 15:17
சங் 80:8
ஏசா 5:1
n ஏசா 5:4

வாழ்வு தரும் நீரூற்றாகிய[a] என்னை விட்டுவிட்டார்கள்.
அதோடு, தங்களுக்காகத் தொட்டிகளை வெட்டிக்கொண்டார்கள்.*
அவை தண்ணீர் நிற்காத உடைந்த தொட்டிகள்.’
14 ‘இஸ்ரவேல் ஒரு வேலைக்காரனா அல்லது எஜமானின் வீட்டில் பிறந்த அடிமையா?
அப்புறம் ஏன் கொள்ளையடிக்கப்பட அவன் விடப்பட்டான்?
15 அவனைப் பார்த்து இளம் சிங்கங்கள் கர்ஜித்தன.[b]
சத்தமாக உறுமின.
அவனுடைய தேசத்துக்குக் கோரமான முடிவைக் கொண்டுவந்தன.
அவனுடைய நகரங்கள் கொளுத்தப்பட்டன; அங்கு யாருமே இல்லை.
16 இஸ்ரவேலே, நோப்* மக்களும்[c] தக்பானேஸ் மக்களும்[d] உன் தேசத்தைச் சூறையாடுகிறார்கள்.#
17 உனக்கு இந்த நிலைமை வந்ததற்கு நீதானே காரணம்?
உன் கடவுளாகிய யெகோவா உனக்கு வழி காட்டினாரே.
ஆனால், நீ அவரை விட்டுவிட்டாயே.[e]
18 இப்போது ஏன் எகிப்துக்குப் போகத் துடிக்கிறாய்?[f]
ஏன் சீகோரின்* தண்ணீரைக் குடிக்க ஏங்குகிறாய்?
ஏன் அசீரியாவுக்குப் போக ஆசைப்படுகிறாய்?[g]
ஏன் யூப்ரடிஸ்# ஆற்றின் தண்ணீரைக் குடிக்க விரும்புகிறாய்?
19 உன் அக்கிரமமே உனக்குப் பாடம் புகட்ட வேண்டும்.
நீ செய்த துரோகமே உன்னைக் கண்டிக்க வேண்டும்.
உன் கடவுளாகிய யெகோவாவைவிட்டு விலகினால்
எந்தளவுக்குக் கஷ்டத்தையும் வேதனையையும் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று நீ புரிந்துகொள்ள வேண்டும்.[h]
உனக்கு என்மேல் பயமே இல்லை’[i] என்று உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.
20 ‘எத்தனையோ வருஷங்களுக்கு முன்பே நான் உன் நுகத்தடியை முறித்துப்போட்டேன்.[j]
உன் விலங்குகளை உடைத்துப்போட்டேன்.
ஆனால், “நான் உங்களுக்குச் சேவை செய்ய மாட்டேன்” என்று நீ சொன்னாய்.
உயரமான எல்லா மலைகளின் மேலும், அடர்த்தியான எல்லா மரங்களின் கீழும்[k]
படுத்துக் கிடந்து விபச்சாரம் செய்தாய்.[l]
21 தரமான சிவப்புத் திராட்சைக் கொடியாகத்தானே உன்னை நட்டு வைத்தேன்?[m] நீ முழுக்க முழுக்க நல்ல கொடியாகத்தானே இருந்தாய்?
பிறகு எப்படித் தரம்கெட்ட காட்டுத் திராட்சைக் கொடியாக மாறினாய்?’[n]

2:13 *வே.வா., “குடைந்துகொண்டார்கள்.” ஒருவேளை பாறையில் குடைந்திருக்கலாம். **2:16** *வே.வா., “மோப்.” #நே.மொ., “உன் உச்சந்தலையைத் தின்கிறார்கள்.” **2:18** *இது நைல் நதியின் ஒரு கிளை. #அதாவது, “ஐப்பிராத்து.”

22 ‘நீ என்னதான் நன்றாகத் தேய்த்துக் குளித்தால்கூட* உன் அழுக்கு போகாது.
உன் அக்கிரமங்கள்தான் என் கண்ணுக்குக் கறையாகத் தெரியும்’[a] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.
23 நீ உன்னைக் கறைபடுத்திக்கொள்ளவே இல்லை என்றும்,
பாகால்களை வணங்கவே இல்லை என்றும் எப்படிச் சொல்லலாம்?
பள்ளத்தாக்கில் நீ போன வழியைப் பார்.
நீ என்ன செய்தாய் என்று யோசித்துப் பார்.
அங்கும் இங்கும் கண்மூடித்தனமாக ஓடுகிற
இளம் பெண் ஒட்டகத்தைப் போல நீ இருக்கிறாய்.
24 வனாந்தரத்தில் திரிந்து பழகிய பெண் காட்டுக் கழுதை போல இருக்கிறாய்!
அது காம வேட்கையில் மோப்பம் பிடிக்கும்.
காம வெறியில் இருக்கும்போது அதை யாரால் கட்டுப்படுத்த முடியும்?
ஆண் கழுதை அதைத் தேடி அலைய வேண்டியதே இல்லை.
இணை சேரும் காலத்தில் அதுவே தேடி வரும்.
25 இஸ்ரவேலே, ‘வீணானதைத் தேடிப்போய் உன் பாதத்தைத் தேய விடாதே,
உன் தொண்டையை வறண்டுபோக விடாதே’ என்று நான் சொன்னபோது,
‘என்னால் முடியாது![b] நான் மற்ற தெய்வங்களிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டேன்.[c]
அந்தத் தெய்வங்களைத்தான் கும்பிடுவேன்’[d] என்று நீ சொன்னாய்.
26 கையும் களவுமாகப் பிடிபடுகிற திருடன் அவமானம் அடைவது போல,
இஸ்ரவேல் ஜனங்களும் அவமானம் அடைந்திருக்கிறார்கள்.
ஜனங்கள், ராஜாக்கள், இளவரசர்கள், குருமார்கள்,
தீர்க்கதரிசிகள் என எல்லாருமே அசிங்கப்பட்டுப் போயிருக்கிறார்கள்.[e]
27 அவர்கள் ஒரு மரத்தைப் பார்த்து, ‘நீதான் எங்கள் தகப்பன்’ என்றும்,[f]
ஒரு கல்லைப் பார்த்து, ‘நீதான் எங்கள் தாய்’ என்றும் சொல்கிறார்கள்.
என்னிடம் வருவதற்குப் பதிலாக என்னைவிட்டு விலகிப் போகிறார்கள்.*[g]
ஆனால், ஆபத்துக் காலத்தில் மட்டும்,
‘காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!’[h] என்று கெஞ்சுவார்கள்.
28 உங்களுக்காக நீங்கள் உண்டாக்கிய தெய்வங்கள் எங்கே?[i]
யூதா ஜனங்களே, உங்கள் நகரங்களைப் போல உங்கள் தெய்வங்களும் ஏராளமாகிவிட்டன.[j]
முடிந்தால், ஆபத்துக் காலத்தில் அந்தத் தெய்வங்களே உங்களைக் காப்பாற்றட்டும்.
29 ‘ஏன் என்னோடு வாதாடிக்கொண்டே இருக்கிறீர்கள்?

2:22 *நே.மொ., “நீ சோடா உப்பினாலும் நிறைய சலவைத் தூளினாலும் கழுவினால்கூட.” **2:27** *வே.வா., “எனக்கு முகத்தைக் காட்டுவதற்குப் பதிலாக முதுகைக் காட்டுகிறார்கள்.”

அதி. 2
a எரே 16:17
b எரே 18:12
c ஏசா 2:6; எரே 3:13
d எரே 44:17
e எஸ்றா 9:7
f ஏசா 44:13
g 2நா 29:6; எரே 32:33
h நியா 10:13-15; சங் 78:34; சங் 106:47; ஏசா 26:16; ஓசி 5:15
i உபா 32:37, 38
j எரே 11:13

ஏன் எல்லாரும் என் பேச்சை மீறுகிறீர்கள்?'[a] என்று யெகோவா
கேட்கிறார்.
30 நான் உங்கள் மகன்களைத் தண்டித்தது வீண்.[b]
நான் கண்டித்தும் அவர்கள் திருந்தவே இல்லை.[c]
கொடிய சிங்கத்தைப் போல
உங்கள் வாளே உங்கள் தீர்க்கதரிசிகளைத் தாக்கிக் கொன்றது.[d]
31 இன்றைய தலைமுறையினரே, யெகோவாவின் வார்த்தைகளைச்
சிந்தித்துப் பாருங்கள்.
நான் இஸ்ரவேலுக்கு ஒரு வனாந்தரம்போல் ஆகிவிட்டேனா?
பயங்கரமான இருட்டில் கிடக்கும் தேசம்போல் ஆகிவிட்டேனா?
என் ஜனங்கள் என்னிடம், 'எங்கள் இஷ்டம்போல்
திரிந்துகொண்டிருக்கிறோம்,
உங்களிடம் இனி வரவே மாட்டோம்'[e] என்று ஏன் சொல்கிறார்கள்?
32 ஒரு கன்னிப் பெண் தன் நகைகளை மறப்பாளா?
ஒரு கல்யாணப் பெண் தன் கல்யாண உடையை* மறப்பாளா?
ஆனாலும், என் ஜனங்கள் நாள்கணக்காக என்னை மறந்துவிட்டார்கள்.[f]
33 பெண்ணே,* நீ கள்ளத்தனமாகக் காதலர்களைத் தேடிப்போனாயே!
கெட்ட வழிகளில் போய்ப் பழக்கப்பட்டிருக்கிறாயே![g]
34 ஏழைகளான அப்பாவி ஜனங்களின் இரத்தக் கறை உன் உடைகளில்
இருக்கிறது.[h]
கொள்ளையடித்ததால் அவர்கள் கொல்லப்படவில்லை.
இருந்தாலும், உன் உடைகளிலெல்லாம் அவர்களுடைய இரத்தக்
கறையைப் பார்த்தேன்.[i]
35 ஆனால் நீ, 'அவருக்கு என்மேல் இருந்த கோபம் போய்விட்டது.
நான் நிரபராதி' என்று சொல்லிக்கொள்கிறாய்.
பாவம் செய்யவில்லை என்று நீ சொல்லிக்கொள்வதால்
இப்போது நான் உன்னைத் தண்டிக்கப்போகிறேன்.
36 என்னைவிட்டு ஏன் அங்கும் இங்கும் தாவிக்கொண்டே இருக்கிறாய்?
அதனால் வரும் விபரீதத்தை ஏன் புரிந்துகொள்ளாமல் இருக்கிறாய்?
அசீரியாவை நம்பி நீ அவமானப்பட்டதைப் போல[j]
எகிப்தையும் நம்பி நீ அவமானப்பட்டுப் போவாய்.[k]
37 நீ யார்மேல் நம்பிக்கை வைத்தாயோ அவர்களை யெகோவா
ஒதுக்கித்தள்ளிவிட்டார்.
அவர்களால் உனக்கு உதவி செய்ய முடியாது.
அதனால், நீ தலைமேல் கை வைத்துக்கொண்டுதான் இங்கிருந்து
போவாய்"[l] என்றார்.

3 "ஒரு கணவன் தன்னுடைய மனைவியை அனுப்பிவிட்ட பிறகு, அவள்
போய் இன்னொருவனுடைய மனைவியாகிவிட்டால், அவளை மறுப
டியும் சேர்த்துக்கொள்ள முடியுமா?" என்று ஜனங்கள் கேட்கிறார்கள்.
தேசம் ஏற்கெனவே சீர்கெட்டுத் தறிகெட்டுக் கிடக்கிறது.[m]

2:32 * நே.மொ., "தன் மார்க்கச்சையை." 2:33 * அதாவது, "எருசலேமே."

அதி. 2
a எரே 5:1; எரே 9:2; தானி 9:11
b 2நா 28:20-22; ஏசா 9:13
c ஏசா 1:5; எரே 5:3; செப் 3:2
d 2நா 36:15, 16; நெ 9:26; அப் 7:52
e உபா 32:15
f சங் 106:21; ஏசா 17:10; எரே 18:15; ஓசி 8:14
g 2நா 33:9
h 2ரா 21:16; சங் 106:38; ஏசா 10:1, 2; மத் 23:35
i யாத் 22:2
j 2நா 28:20, 21
k ஏசா 30:3; எரே 37:7
l 2சா 13:19

அதி. 3
m ஏசா 24:5; எரே 2:7

"நீ* நிறைய பேரோடு விபச்சாரம் செய்திருக்கிறாய்,[a]
இப்போது மறுபடியும் என்னிடம் சேர்ந்துகொள்ள முடியுமா?" என்று யெகோவா கேட்கிறார்.
2 "குன்றுகளையெல்லாம் பார்.
எங்குதான் நீ விபச்சாரம் செய்யவில்லை?
வனாந்தரத்தில் உள்ள நாடோடியை* போல
ஆட்களுக்காக வழியோரங்களில் காத்துக் கிடந்தாய்.
நீ விபச்சாரத்தினாலும் அக்கிரமத்தினாலும்
தேசத்தைச் சீரழித்துக்கொண்டே இருக்கிறாய்.[b]
3 அதனால் தேசத்தில் மழை பெய்யவில்லை.[c]
கடைசி பருவ மழைகூட பெய்யவில்லை.
விபச்சாரம் செய்கிற மனைவியைப் போல நீ துணிச்சலாக இருக்கிறாய்.
உனக்குக் கொஞ்சம்கூட வெட்கமே இல்லை.[d]
4 ஆனால் இப்போது என்னிடம்,
'தகப்பனே, சிறு வயதிலிருந்தே நீங்கள்தான் எனக்குத் துணை!'[e] என்று சொல்கிறாய்.
5 'நீங்கள் என்மேல் என்றென்றும் பகை வைத்திருக்கலாமா?
என்மேல் கோபமாகவே இருக்கலாமா?'* என்று கேட்கிறாய்.
ஒருபக்கம் நீ இப்படிக் கேட்டாலும்,
இன்னொரு பக்கம் அக்கிரமத்துக்குமேல் அக்கிரமம் செய்துகொண்டே இருக்கிறாய்."[f]

6 யோசியா ராஜா[g] ஆட்சி செய்த காலத்தில் யெகோவா என்னிடம்,
"'இஸ்ரவேல் எப்படித் துரோகம் செய்துவிட்டாள் என்று பார்த்தாயா? உயர
மான எல்லா மலைகளின் மேலும் அடர்த்தியான எல்லா மரங்களின்
கீழும் அவள் விபச்சாரம் செய்திருக்கிறாள்.[h] 7 இதையெல்லாம் அவள்
செய்திருந்தும் நான் அவளைத் திரும்பத் திரும்பக் கூப்பிட்டேன்;[i] ஆனால்
அவள் வரவில்லை. யூதாவும் துரோகியாகிய அவளுடைய சகோதரியைக்
கவனித்துக்கொண்டே இருந்தாள்.[j] 8 அதை நான் பார்த்தபோது, எனக்
குத் துரோகம்[k] செய்த இஸ்ரவேலுக்கு விவாகரத்துப் பத்திரத்தைக்
கொடுத்து அனுப்பிவிட்டேன்.[l] ஆனால், துரோகியாகிய அவளுடைய
சகோதரி யூதா அதைப் பார்த்துப் பயப்படவில்லை. அவளும் போய் விபச்
சாரம் செய்தாள்.[m] 9 அதை ஒரு குற்றமாகவே அவள் நினைக்கவில்லை.
தேசத்தைச் சீரழித்துக்கொண்டே இருந்தாள். கற்களையும் மரங்களையும்
வணங்கி எனக்குத் துரோகம் செய்தாள்.[n] 10 நடந்ததையெல்லாம் பார்த்த
பின்பும், துரோகியாகிய அவளுடைய சகோதரி யூதா நெஞ்சார என்னிடம்
திரும்பி வரவில்லை; திரும்பி வருவது போல வெறுமனே நாடகமாடினாள்'
என்று யெகோவா சொல்கிறார்" என்றார்.

11 பின்பு யெகோவா என்னிடம், "துரோகம் செய்வதில் யூதாவைவிட
இஸ்ரவேல் ஓரளவு பரவாயில்லை.*[o] 12 நீ போய், வடக்கே உள்ளவர்க
ளிடம் இப்படிச் சொல்:[p]

3:1 *அதாவது, சீயோன் அல்லது எருசலேம். 3:2 *நே.மொ., "அரேபியனை." 3:5 *வே.வா., "வன்மம் வைத்திருக்கலாமா?" 3:11 *வே.வா., "உண்மையற்ற இஸ்ரவேல், துரோகியான யூதாவைவிட தன்னை நீதியுள்ளவளாகக் காட்டியிருக்கிறாள்."

அதி. 3
a எரே 2:20; எசே 16:28, 29
b எசே 16:16; எசே 20:28
c லேவி 26:19; எரே 14:4; ஆமோ 4:7
d எரே 6:15
e எரே 2:2
f மீ 2:1; மீ 7:3
g 2ரா 22:1
h எசே 20:28; ஓசி 4:13
i 2ரா 17:13; 2நா 30:6; ஓசி 14:1
j எசே 16:46; எசே 23:2, 4
k எசே 23:4, 5, 9; ஓசி 2:2; ஓசி 9:15
l உபா 24:1
m 2ரா 17:19; எசே 23:4, 11
n ஏசா 57:5, 6; எரே 2:27
o எசே 16:51; எசே 23:4, 11
p 2ரா 17:6; எரே 23:8

‘“சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பி வா” என்று யெகோவா சொல்கிறார்.’[a]
‘“நான் உண்மையோடு* நடக்கிற கடவுள், அதனால் உன்மேல் கோபப்பட
மாட்டேன்”[b] என்று யெகோவா சொல்கிறார்.’ ‘“நான் என்றென்றும் பகை
வைத்திருக்க மாட்டேன். **13** நீ உன் குற்றத்தை மட்டும் ஒத்துக்கொள்.
ஏனென்றால், உன் கடவுளான யெகோவாவுக்கு நீ அடங்கி நடக்கவில்லை.
அடர்த்தியான மரங்களுக்குக் கீழே பொய் தெய்வங்களை வணங்குவதற்
காக ஓடிஓடிப் போனாய். ஆனால், என்னுடைய பேச்சைக் கேட்கவில்லை”
என்று யெகோவா சொல்கிறார்’” என்றார்.

14 “சீர்கெட்ட பிள்ளைகளே, என்னிடம் திரும்பி வாருங்கள்” என்று
யெகோவா சொல்கிறார். “ஏனென்றால், நான்தான் உங்களுடைய உண்மை
யான எஜமான்.* நகரத்துக்கு ஒருவர், குடும்பத்துக்கு இருவர் என்ற கணக்
கில் உங்களை நான் சீயோனுக்குக் கூட்டிக்கொண்டு வருவேன்.[c] **15** என்
இதயத்துக்குப் பிடித்த மேய்ப்பர்களை உங்களுக்குக் கொடுப்பேன்.[d] அவர்
கள் அறிவாலும் விவேகத்தாலும்* உங்களைப் போஷிப்பார்கள்.
16 அந்த நாட்களில் நீங்கள் தேசத்திலே ஏராளமாகப் பெருகுவீர்கள்”
என்று யெகோவா சொல்கிறார்.[e] “இனியும் நீங்கள் யெகோவாவின் ஒப்பந்
தப் பெட்டியைப் பற்றிப் பேச மாட்டீர்கள். அதை நெஞ்சத்தில் நினைத்
துப் பார்க்க மாட்டீர்கள். அது உங்கள் ஞாபகத்துக்கே வராது. அது இல்
லாததை நினைத்து வருத்தப்பட மாட்டீர்கள். அதைப் போன்ற
இன்னொன்றைச் செய்து வைக்க மாட்டீர்கள். **17** அந்தக் காலத்தில் எரு
சலேமை யெகோவாவின் சிம்மாசனம் என்று அழைப்பீர்கள்.[f] யெகோவா
வின் பெயரைப் புகழ்வதற்காக எல்லா தேசங்களிலிருந்தும் ஜனங்கள் எரு
சலேமுக்கு அழைத்து வரப்படுவார்கள்.[g] அதற்குப் பின்பு, அவர்கள்
தங்களுடைய பொல்லாத இதயத்தின் போக்கிலேயே பிடிவாதமாகப் போக
மாட்டார்கள்.”

18 “அந்த நாட்களில், யூதா ஜனங்களும் இஸ்ரவேல் ஜனங்களுமான
நீங்கள் கைகோர்த்துக்கொண்டு வருவீர்கள்.[h] வடக்கு தேசத்திலிருந்து புறப்
பட்டு, உங்கள் முன்னோர்களுக்கு நான் சொத்தாகக் கொடுத்த தேசத்துக்கு
ஒன்றுசேர்ந்து வருவீர்கள்.[i] **19** உங்களுக்குச் செய்ததையெல்லாம் நான்
யோசித்துப் பார்த்தேன். நான் உங்களை என் மகன்களாக ஏற்றுக்கொண்டு,
தேசங்களிலேயே அழகான தேசத்தையும் அருமையான நாட்டையும்
ஆசையாகக் கொடுத்தேன்.[j] நீங்கள் என்னை ‘அப்பா!’ என்று கூப்பிட்டு,
என்னைவிட்டு விலகாமல் இருப்பீர்கள் என்று நினைத்தேன். **20** ‘ஆனால்
இஸ்ரவேல் ஜனங்களே, கணவனுக்கு மனைவி துரோகம் செய்வதைப்
போல எனக்கு நீங்கள் துரோகம் செய்துவிட்டீர்கள்’[k] என்று யெகோவா
சொல்கிறார்.”

21 குன்றுகளில் சத்தம் கேட்கிறது.
இஸ்ரவேலர்கள் கெஞ்சிக் கதறுகிறார்கள்.
தவறான வழிக்குப் போய்விட்டதையும்,
தங்கள் கடவுளான யெகோவாவை மறந்துவிட்டதையும் நினைத்து
அழுகிறார்கள்.[l]

22 “சீர்கெட்ட பிள்ளைகளே, என்னிடம் திரும்பி வாருங்கள்.

3:12 * வே.வா., “பற்றுமாறாமல்.” **3:14** * அல்லது, “கணவன்.” **3:15** * வே.வா., “ஆழ
மான புரிந்துகொள்ளுதலாலும்.”

அதி. 3
a எரே 4:1
எசே 33:11
ஓசி 14:1
b ஓசி 11:8, 9
c எரே 23:3
d எரே 23:4
எசே 34:23
e ஓசி 1:10
f சங் 87:3
எசே 43:7
g ஏசா 2:2, 3
ஏசா 56:6, 7
ஏசா 60:3
மீ 4:1, 2
சக 2:11
சக 8:22, 23
h எரே 50:4
எசே 37:19
ஓசி 1:11
i 2நா 36:23
எஸ்றா 1:3
ஆமோ 9:15
j எசே 20:6
k ஏசா 48:8
ஓசி 3:1
ஓசி 5:7
l ஏசா 17:10
ஓசி 8:14
ஓசி 13:6

உங்களுடைய சீர்கெட்ட நிலைமையை நான் மாற்றுகிறேன்."[a]
"இதோ, உங்களிடம் வந்துவிட்டோம்.
யெகோவாவே, நீங்கள்தான் எங்கள் கடவுள்.[b]
23 உண்மையாகவே, குன்றுகளிலும் மலைகளிலும் நாங்கள் போட்ட கூச்சலெல்லாம் வீண்.[c]
எங்கள் கடவுளாகிய யெகோவாதான் இஸ்ரவேலின் மீட்பர்.[d]
24 ஆனால், நாங்கள் வணங்கிய வெட்கங்கெட்ட தெய்வம்
எங்கள் முன்னோர்கள் பாடுபட்டு சேர்த்த எல்லாவற்றையும்,
அவர்களுடைய ஆடுகளையும், மாடுகளையும்,
மகன்களையும் மகள்களையும் விழுங்கிவிட்டது.
இதைச் சிறு வயதிலிருந்தே நாங்கள் பார்த்திருக்கிறோம்.[e]
25 எங்களுடைய கடவுளான யெகோவாவுக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டோம்.[f]
நாங்களும் எங்கள் முன்னோர்களும் எங்கள் கடவுளான யெகோவாவுக்குக் கீழ்ப்படியவில்லை.
சிறுவயதிலிருந்தே அவர் பேச்சைக் கேட்கவில்லை.[g]
அதனால், இப்போது அவமானம் எங்கள் படுக்கையாகவும்,
வெட்கக்கேடு எங்கள் போர்வையாகவும் ஆகட்டும்!"

4 யெகோவா சொல்வது இதுதான்:
"இஸ்ரவேலே, நீ அருவருப்பான சிலைகளையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு,
மனம் திருந்தி என்னிடம் வந்தால்,
வேறொரு தேசத்தில் அலைந்து திரிய வேண்டியிருக்காது.[h]
2 'உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை!'* என்று சொல்லி,
உண்மையோடும் நியாயத்தோடும் நீதியோடும் நீ ஆணையிட்டுக் கொடுத்தால்,
தேசங்களில் உள்ள ஜனங்களுக்கு அவர்# மூலமாக ஆசீர்வாதம் கிடைக்கும்.
அவர்கள் அவரைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள்."[i]
3 யூதா ஜனங்களிடமும் எருசலேம் ஜனங்களிடமும் யெகோவா சொல்
வது இதுதான்:
"பண்படுத்தப்படாத நிலத்தைப் பண்படுத்துங்கள்.
முட்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு விதை விதையுங்கள்.[j]
4 யூதாவிலும் எருசலேமிலும் உள்ள ஜனங்களே,
யெகோவாவுக்கு முன்னால் உங்களைத் தூய்மைப்படுத்துங்கள்.*
கெட்ட எண்ணங்களை உள்ளத்திலிருந்து எடுத்துப் போடுங்கள்.[k]
அக்கிரமம் செய்வதை நீங்கள் நிறுத்தாவிட்டால்
என் கோபம் தீயாய்ப் பற்றியெரியும்.[l]
அதை யாராலும் அணைக்க முடியாது."

4:2 *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்." #அதாவது, "யெகோவா." **4:4** *நே.மொ., "யெகோவாவுக்காக விருத்த சேதனம் செய்துகொள்ளுங்கள்."

அதி. 3
a ஓசி 14:1, 4
b எரே 31:18; ஓசி 3:5
c ஏசா 65:7
d ஏசா 12:2
e ஓசி 9:10
f எரே 2:19
g எஸ்றா 9:7; சங் 106:7

அதி. 4
h எரே 3:22; யோவே 2:12, 13
i ஏசா 65:16
j ஓசி 10:12
k எரே 9:25, 26
l புல 4:11

5 யூதாவிலும் எருசலேமிலும் இதை அறிவியுங்கள்.
தேசமெங்கும் முழக்கம் செய்து ஊதுகொம்பை ஊதுங்கள்.[a]
எல்லாரிடமும், "மதில் சூழ்ந்த நகரங்களுக்குத் தப்பியோடலாம்,[b]
எல்லாரும் வாருங்கள்.
6 சீயோனுக்குப் போகும் வழியைக் காட்டுகிற ஒரு கம்பத்தை* நிறுத்துங்கள்.
பாதுகாப்பான இடத்தைத் தேடி ஓடுங்கள், நிற்காதீர்கள்" என்று சத்தமாகச் சொல்லுங்கள்.
ஏனென்றால், பேரழிவு வரப்போகிறது; அதை நான் வடக்கிலிருந்து வர வைப்பேன்.[c]
7 புதருக்குள்ளிருந்து பாய்ந்து வருகிற சிங்கத்தைப் போல எதிரி பாய்ந்து வருவான்.[d]
தேசங்களை அழிக்கிறவன் புறப்பட்டுவிட்டான்.[e]
உங்கள் தேசத்துக்குக் கோரமான முடிவைக் கொண்டுவர அவன் கிளம்பிவிட்டான்.
உங்கள் நகரங்கள் சின்னாபின்னமாகும்; ஒருவன்கூட தப்பிக்க முடியாது.[f]
8 அதனால், துக்கத் துணி* போட்டுக்கொள்ளுங்கள்.[g]
அழுது# புலம்புங்கள்.
யெகோவாவுக்கு நம்மேல் இருக்கிற கோபம் இன்னும் தணியவில்லை.
9 "அந்த நாளில், ராஜா பீதியடைவான்.[h]
இளவரசர்கள் குலைநடுங்குவார்கள்.
குருமார்கள் அரண்டுபோவார்கள், தீர்க்கதரிசிகள் அதிர்ச்சியடைவார்கள்"[i] என்று யெகோவா சொன்னார்.

10 ஆனால் நான், "ஐயோ! உன்னதப் பேரரசராகிய யெகோவாவே,
யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிற ஜனங்களை இப்படி ஏமாற்றிவிட்டீர்
களே![j] நாங்கள் நிம்மதியாக வாழ்வோம் என்று சொன்னீர்களே,[k] ஆனால்
நாங்கள் வாளுக்குப் பலியாகப்போகிறோமே" என்றேன்.

11 யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிற ஜனங்களிடம் அப்போது இப்
படிச் சொல்லப்படும்:

"பாலைவனத்திலுள்ள குன்றுகளிலிருந்து காற்று வீசும்.
அது தானியங்களைப் புடைப்பதற்கோ சுத்தப்படுத்துவதற்கோ உதவுகிற காற்று அல்ல.
என் ஜனங்களைச் சுட்டெரிக்கப்போகிற அனல்காற்று.
12 என்னுடைய ஆணைப்படியே அது அங்கிருந்து பலமாக வீசும்.
இப்போது நான் அவர்களுக்கு எதிராகத் தீர்ப்பு சொல்லப்போகிறேன்.
13 எதிரி மழைமேகங்களைப் போல வருவான்.
அவனுடைய ரதங்கள் புயல்காற்றைப் போல வரும்.[l]
அவனுடைய குதிரைகள் கழுகுகளைவிட வேகமாகப் பாய்ந்து வரும்.[m]
ஐயோ! நம் கதி அவ்வளவுதான்!

4:6 *வே.வா., "கொடிக் கம்பத்தை." **4:8** *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., "நெஞ்சில் அடித்துக்கொண்டு."

அதி. 4
a எரே 6:1
b எரே 35:11
c எரே 1:14; எரே 21:7; எரே 25:9
d 2ரா 24:1; 2ரா 25:1; எரே 5:6; எரே 50:17
e எசே 26:7
f ஏசா 5:9; ஏசா 6:11; எரே 2:15; எரே 9:11
g எரே 6:26
h 2ரா 25:5
i ஏசா 29:9, 10
j எசே 14:9
k எரே 6:13, 14; எரே 14:13; எரே 23:16, 17
l ஏசா 5:26, 28
m உபா 28:49, 50; புல 4:19; ஆப 1:8

14 எருசலேமே, நீ தப்பிக்க வேண்டுமென்றால் உன் உள்ளத்திலுள்ள
அழுக்கைக் கழுவு.[a]
எவ்வளவு காலத்துக்குத்தான் கெட்டதையே
யோசித்துக்கொண்டிருப்பாய்?
15 தாண் நகரத்திலிருந்து ஒரு குரல் செய்தியைச் சொல்கிறது.[b]
எப்பிராயீம் மலைகளிலிருந்து அது அழிவை அறிவிக்கிறது.
16 இதை எல்லா தேசங்களுக்கும் சொல்லுங்கள்.
எருசலேமுக்கு எதிராக அறிவிப்பு செய்யுங்கள்.”
“தொலைதூரத்திலிருந்து வீரர்கள்* வருகிறார்கள்.
அவர்கள் யூதா நகரங்களுக்கு எதிராகப் போர் முழக்கம்
செய்வார்கள்.
17 அவர்கள் எல்லா பக்கத்திலிருந்தும் வந்து, வயல்வெளியைக்
காவல்காக்கிறவர்கள் போல எருசலேமைச் சூழ்ந்துகொள்வார்கள்.[c]
ஏனென்றால், அங்கிருக்கிறவர்கள் எனக்கு அடங்கி நடப்பதே
இல்லை”[d] என்று யெகோவா சொல்கிறார்.
18 “உன்னுடைய கெட்ட வழிகளுக்கும் செயல்களுக்கும் சரியான கூலி
கிடைக்கும்.[e]
உனக்குப் பயங்கரமான தண்டனை கொடுப்பேன்.
ஏனென்றால், எனக்கு அடங்கி நடக்க வேண்டும் என்ற எண்ணமே உன்
உள்ளத்தில் இல்லை!” என்று அவர் சொல்கிறார்.
19 ஐயோ, வேதனை தாங்க முடியவில்லையே, வேதனை தாங்க
முடியவில்லையே!
என் உள்ளம் வலியில் துடிதுடிக்கிறதே!
என் இதயம் படபடக்கிறதே.
என்னால் எப்படி அமைதியாக இருக்க முடியும்?
ஊதுகொம்பின் சத்தமும் போர் முழக்கமும் கேட்கிறதே.[f]
20 அழிவுக்குமேல் அழிவு என்ற செய்திதான் வருகிறது.
தேசம் முழுவதும் நாசமாகிவிட்டது.
திடீரென்று என்னுடைய கூடாரங்கள் பாழாக்கப்படுகின்றன.
ஒரு நொடியில் என் கூடாரத் துணிகள் கிழிக்கப்படுகின்றன.[g]
21 எவ்வளவு காலத்துக்குத்தான் நான் கம்பத்தை* பார்த்துக்கொண்டே
இருப்பேன்?
எவ்வளவு நேரம்தான் ஊதுகொம்பின் சத்தத்தைக் கேட்டுக்கொண்டே
இருப்பேன்?[h]
22 “என் ஜனங்கள் சரியான முட்டாள்கள்![i]
அவர்கள் என்னை மதிப்பதே இல்லை.
அவர்கள் அறிவு இல்லாத பிள்ளைகள், புத்தி* இல்லாதவர்கள்.
கெட்டது செய்வதில் கெட்டிக்காரர்கள்.
ஆனால், நல்லது செய்யத் தெரியாதவர்கள்.”

4:16 *நே.மொ., “கண்காணிப்பவர்கள்.” இவர்கள் நகரத்தை எப்போது தாக்கலாம் என்று கவனித்துக்கொண்டே இருப்பவர்கள். **4:21** *வே.வா., “கொடிக் கம்பத்தை.” **4:22** *வே.வா., “புரிந்துகொள்ளும் திறன்.”

அதி. 4
a ஏசா 1:16
எசே 18:31
b எரே 8:16
c 2ரா 25:1, 2
d ஏசா 63:10
எசே 2:3
e சங் 107:17
f செப் 1:15, 16
g எரே 10:20
h எரே 6:1
i உபா 32:6
எரே 5:21

23 தேசத்தைப் பார்த்தேன்; அது வெறுமையாகவும் பாழாகவும் கிடந்தது.[a]
வானத்தைப் பார்த்தேன்; அது இருண்டு கிடந்தது.[b]
24 மலைகளையும் குன்றுகளையும் பார்த்தேன்.
அவை அதிர்ந்துகொண்டிருந்தன.[c]
25 மனுஷர்கள் யாருமே கண்ணில் படவில்லை.
பறவைகளெல்லாம் பறந்து போய்விட்டன.[d]
26 செழிப்பான தேசம் வனாந்தரமாகிவிட்டது.
அதன் நகரங்கள் இடிந்து கிடக்கின்றன.[e]
இது யெகோவா கொடுத்த தண்டனை.
அவருடைய பயங்கரமான கோபத்தின் விளைவு.
27 யெகோவா சொல்வது இதுதான்: “தேசம் முழுவதும்
பாழாக்கப்பட்டாலும்,[f]
நான் அதை அடியோடு அழிக்க மாட்டேன்.
28 தேசம் சோகத்தில் வாடும்.[g]
வானம் இருண்டுவிடும்.[h]
நானே இதைச் சொன்னேன், சொன்னதைச் செய்யாமல் இருக்க
மாட்டேன்.
நானே இதை முடிவுசெய்தேன், என் முடிவை மாற்றிக்கொள்ள*
மாட்டேன்.[i]
29 குதிரைவீரர்களும் வில்வீரர்களும் வருகிற சத்தம் கேட்கிறது.
நகரத்திலுள்ள எல்லாருமே தலைதெறிக்க ஓடுகிறார்கள்.[j]
புதர்க் காடுகளுக்குள் பதுங்கிக்கொள்கிறார்கள்.
பாறை இடுக்குகளில் ஒளிந்துகொள்கிறார்கள்.[k]
நகரங்கள் எல்லாமே வெறிச்சோடிப் போய்விட்டது.
யாருமே அங்கு குடியிருப்பது இல்லை.”
30 நீ அழிந்துவிட்டாயே; இப்போது என்ன செய்வாய்?
ஆடம்பரமான உடைகளை உடுத்திக்கொண்டும்,
தங்க நகைகளைப் போட்டுக்கொண்டும்,
கண்களுக்கு மை தீட்டிக்கொண்டும் இருந்தாயே!
நீ அலங்காரம் செய்ததெல்லாம் வீணாகிப்போனதே![l]
உன்மேல் மோகம் கொண்டவர்கள் உன்னை
ஒதுக்கித்தள்ளிவிட்டார்களே!
இப்போது உன் உயிரையே எடுக்கத் துடிக்கிறார்களே![m]
31 ஒரு பெண் வலியில் கதறுகிற சத்தம் கேட்கிறது.
முதல் குழந்தையைப் பெற்றெடுக்கிற பெண் அலறுவதுபோல்
சத்தம் கேட்கிறது.
சீயோன் மகள் மூச்சுத் திணறுகிறாள்.
தன் கைகளை விரித்துக்கொண்டு,[n]
“ஐயோ, நான் தீர்ந்தேன்! கொலைவெறியர்களோடு போராடிப் போராடி
ஓய்ந்துபோய்விட்டேன்” என்று சொல்கிறாள்.

4:28 * வே.வா., “நான் மனம் வருந்த.”

அதி. 4
a எரே 9:10
b ஏசா 5:30; யோவே 2:31
c ஏசா 5:25
d செப் 1:3
e உபா 29:22, 23
f லேவி 26:32; 2நா 36:20, 21; ஏசா 6:11; எரே 10:22; எசே 33:28
g ஏசா 24:4; யோவே 1:10
h ஏசா 5:30; யோவே 2:30, 31
i 2ரா 23:26; எசே 24:14
j 2ரா 25:4
k ஏசா 2:19
l எசே 23:22, 26
m புல 1:2
n புல 1:17

5 எருசலேமின் வீதிகளில் போய்த் தேடிப் பாருங்கள்.
நாலாபக்கங்களிலும் சுற்றிப் பாருங்கள்.
பொது சதுக்கங்களில் வலைவீசித் தேடுங்கள்.
நியாயத்தோடும் உண்மையோடும் நடக்கிற யாராவது இருக்கிறார்களா என்று பாருங்கள்.[a]
அப்படி ஒருவரையாவது கண்டுபிடித்தீர்கள் என்றால்,
நான் எருசலேமை மன்னித்துவிடுகிறேன்.
2 "உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை"* என்று சொல்லி அவர்கள் சத்தியம் செய்தாலும்,
பொய் சத்தியம்தான் செய்கிறார்கள்.[b]
3 யெகோவாவே, உங்களுக்கு விசுவாசமாக இருக்கிறவர்களைத்தானே தேடுகிறீர்கள்?[c]
இந்த ஜனங்களை நீங்கள் தண்டித்தீர்கள்; ஆனாலும் அது அவர்களுக்கு உறைக்கவே இல்லை.
அவர்களுடைய தேசத்தை அழித்தீர்கள்; ஆனாலும் அவர்கள் பாடம் கற்றுக்கொள்ளவில்லை.[d]
அவர்கள் தங்களுடைய இதயத்தை* பாறையைவிட கடினமாக்கினார்கள்.[e]
அவர்கள் திருந்தவே இல்லை.[f]
4 அப்போது நான் என்னுடைய மனதில், "இவர்கள் உண்மையிலேயே தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த ஜனங்கள்.
யெகோவாவின் வழிகளையும் சட்டதிட்டங்களையும் பற்றி இவர்களுக்குத் தெரியவில்லை.
அதனால்தான் முட்டாள்தனமாக நடந்துகொள்கிறார்கள்.
5 நான் இவர்களுடைய தலைவர்களிடம் போய்ப் பேசிப் பார்க்கிறேன்.
யெகோவாவின் வழிகளையும் சட்டதிட்டங்களையும்
அவர்களாவது பின்பற்றியிருக்க வேண்டும்.[g]
ஆனால், எல்லாருமே தங்கள் நுகத்தடியை உடைத்துப்போட்டு,
கட்டுகளை அறுத்துப்போட்டார்கள்" என்று சொல்லிக்கொண்டேன்.
6 அதனால்தான், காட்டிலுள்ள சிங்கம் அவர்கள்மேல் பாய்கிறது.
பாலைநிலத்தில் உள்ள ஓநாய் அவர்களைப் பீறிப்போடுகிறது.
அவர்களுடைய நகரவாசல்களில் சிறுத்தை காத்திருக்கிறது.
வெளியே வருகிற எல்லாரையும் கடித்துக் குதறுகிறது.
ஏனென்றால், அவர்கள் பாவத்துக்குமேல் பாவம் செய்திருக்கிறார்கள்.
அவர்களுடைய அக்கிரமங்களுக்கு அளவே இல்லாமல் போய்விட்டது.[h]
7 நான் உன்னை* எப்படி மன்னிப்பேன்?
உன் பிள்ளைகள் என்னை விட்டுவிட்டார்கள்.
தெய்வமே இல்லாதவற்றின் மேல் சத்தியம் செய்கிறார்கள்.[i]
அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் நான் கொடுத்தேன்.

5:2 * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்." **5:3** * நே.மொ., "முகத்தை." **5:7** * அதாவது, "எருசலேமை."

அதி. 5
a எசே 22:29, மீ 7:2
b ஏசா 48:1
c 2நா 16:9
d 2நா 28:20-22, எரே 2:30
e சக 7:11
f சங் 50:17, ஏசா 42:24, 25, எசே 3:7, செப் 3:2
g மீ 3:1
h எஸ்றா 9:6, ஏசா 59:12, எசே 23:19
i யோசு 23:6, 7, எரே 2:11, எரே 12:16, செப் 1:4, 5

ஆனால், அவர்கள் எனக்குத் துரோகம் செய்துகொண்டே
இருக்கிறார்கள்.
விபச்சாரியின் வீட்டுக்குத் திரண்டு போகிறார்கள்.
8 காம வெறிகொண்ட குதிரைகளைப் போல
இன்னொருவனின் மனைவிக்காக அலைகிறார்கள்.[a]
9 “இதையெல்லாம் நான் தட்டிக்கேட்க வேண்டாமா?
இப்படிப்பட்ட ஒரு தேசத்தை நான் தண்டிக்க வேண்டாமா?”[b]
என்று யெகோவா கேட்கிறார்.
10 “எருசலேமின் திராட்சைத் தோட்டத்து மதில்களை இடித்துப்
போடுங்கள்.
ஆனால், எல்லாவற்றையும் அடியோடு அழித்துவிடாதீர்கள்.[c]
திராட்சைக் கொடிகளின் புதிய கிளைகளை முறித்துப் போடுங்கள்.
ஏனென்றால், அவை யெகோவாவுக்குச் சொந்தமானவை அல்ல.
11 இஸ்ரவேல் ஜனங்களும் யூதா ஜனங்களும்
எனக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டார்கள்” என்று யெகோவா
சொல்கிறார்.[d]
12 “அவர்கள் யெகோவாவின் பேச்சை மதிக்காமல்,
‘அவர் ஒன்றும் செய்யப்போவதில்லை.*[e]
நமக்கு எந்த ஆபத்தும் வராது.
போரினாலோ பஞ்சத்தினாலோ நாம் சாக மாட்டோம்’[f] என்று
சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.
13 தீர்க்கதரிசிகளின் இதயத்தில் கடவுளுடைய வார்த்தை இல்லை.
அவர்கள் வெற்று வார்த்தைகளைப் பேசுகிறார்கள்.
அவர்களுடைய வார்த்தைகளைப் போலவே அவர்களும் உதவாமல்
போய்விடுவார்கள்!”
14 பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா சொல்வது இதுதான்:
“இவர்கள் இப்படிச் சொல்வதால்,
நான் உன்* வாயில் வைத்த என் வார்த்தைகளைத் தீ போல
ஆக்குவேன்.[g]
அந்தத் தீ இந்த ஜனங்களைச் சுட்டுப்பொசுக்கும்.
இவர்கள் விறகுபோல் எரிந்துபோவார்கள்.”[h]
15 “இஸ்ரவேல் ஜனங்களே, நான் தொலைதூரத்திலிருந்து ஒரு தேசத்தை
உங்களுக்கு எதிராக வர வைப்பேன்”[i] என்று யெகோவா சொல்கிறார்.
“அது பழங்காலத்தில் உருவான தேசம்.
காலம்காலமாக இருக்கிற தேசம்.
அந்தத் தேசத்து ஜனங்களின் பாஷை உங்களுக்குத் தெரியாது.
அவர்கள் பேசுவது உங்களுக்குப் புரியாது.[j]
16 அவர்களுடைய அம்புக்கூடு,* திறந்த சவக்குழியைப் போன்றது.
அவர்கள் எல்லாருமே போர்வீரர்கள்.

அதி. 5
a எசே 22:11
b லேவி 26:25; எரே 9:9; எரே 44:22; நாகூ 1:2
c லேவி 26:44; எரே 46:28
d ஏசா 48:8; எரே 3:20; ஓசி 5:7; ஓசி 6:7
e 2நா 36:15, 16; ஏசா 28:15
f எரே 23:17
g எரே 1:9
h எரே 23:29
i எரே 1:15; எரே 4:16; எரே 25:9; எசே 7:24; ஆப 1:6
j உபா 28:49, 50

5:12 *அல்லது, “அப்படி ஒருவர் இல்லவே இல்லை.” **5:14** *அதாவது, “எரேமியாவின்.” **5:16** *அம்புகளை வைப்பதற்கான சாதனம்.

17 அவர்கள் உங்களுடைய விளைச்சலையும் உணவையும்
தின்றுதீர்ப்பார்கள்.[a]
உங்கள் மகன்களையும் மகள்களையும் கொன்றுவிடுவார்கள்.
உங்கள் ஆடுகளையும் மாடுகளையும் கைப்பற்றுவார்கள்.
உங்கள் திராட்சைக் கொடிகளையும் அத்தி மரங்களையும்
வெட்டிப்போடுவார்கள்.
நீங்கள் நம்பியிருக்கிற மதில் சூழ்ந்த நகரங்களைத் தாக்கி
நாசமாக்கிவிடுவார்கள்."

18 "அந்தச் சமயத்தில்கூட நான் உங்களை அடியோடு அழித்துவிட
மாட்டேன்"[b] என்று யெகோவா சொல்கிறார். 19 "அவர்கள் உன்னிடம்,
'எங்கள் கடவுளான யெகோவா ஏன் எங்களுக்கு இப்படியெல்லாம் செய்
துவிட்டார்?' என்று கேட்டால், 'நீங்கள் அவரை விட்டுவிட்டு வேறு தெய்
வங்களுக்கு அடிபணிந்ததால், உங்கள் தேசத்திலிருந்து வேறு தேசத்
துக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள ஜனங்களுக்கு அடிபணிந்து நடப்பீர்கள்'[c]
என்று நீ அவர்களிடம் சொல்ல வேண்டும்."

20 யாக்கோபின் வம்சத்தாரிடமும்,
யூதாவில் இருக்கிறவர்களிடமும் இப்படிச் சொல்:
21 "புத்தி இல்லாத முட்டாள் ஜனங்களே, கேளுங்கள்![d]
உங்களுக்குக் கண் இருந்தும் நீங்கள் பார்ப்பது இல்லை.[e]
காது இருந்தும் கேட்பது இல்லை.[f]
22 'உங்களுக்கு என்மேல் பயமே இல்லையா?' என்று யெகோவா
கேட்கிறார்.
'நீங்கள் என் முன்னால் நடுங்க வேண்டாமா?
நான்தானே கடலுக்கு எல்லையாக மணலை வைத்தேன்?
நான்தானே அதற்கு நிரந்தர எல்லைக்கோட்டைக் கிழித்தேன்?
கடலின் அலைகள் புரண்டு வந்தாலும் அந்தக் கோட்டைத் தாண்ட
முடியாது.
அவை இரைச்சல் போட்டாலும் அதைக் கடக்க முடியாது.[g]
23 இந்த ஜனங்கள் பிடிவாதக்காரர்கள், அடங்காதவர்கள்.*
என் வழியை விட்டுவிட்டு அவர்களுக்கு இஷ்டமான வழியில்
போகிறார்கள்.[h]
24 அவர்கள் தங்களுடைய உள்ளத்தில்,
"இப்போது நம் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்து நடக்கலாம்"
என்று சொல்வதே இல்லை.
"அவர்தான் அந்தந்த காலத்தில் மழை பெய்ய வைக்கிறார்,
முதல் பருவ மழையையும் கடைசி பருவ மழையையும் தருகிறார்,
அறுவடை செய்வதற்கு ஏற்ற காலத்தையும் தருகிறார்"[i] என்றெல்லாம்
யோசிப்பதே இல்லை.
25 நீங்கள் குற்றம் செய்ததால்தானே இதெல்லாம் உங்களுக்குக்
கிடைக்காமல் போனது?

5:23 * வே.வா., "இந்த ஜனங்களின் இதயம் பிடிவாதமுள்ளது, அடங்காதது."

அதி. 5
a லேவி 26:16
b எரே 4:27
c உபா 4:27; உபா 28:48; உபா 29:24, 25; 2நா 7:21, 22
d எரே 4:22
e ஏசா 59:10
f ஏசா 6:9; எசே 12:2; மத் 13:13
g யோபு 38:8, 11; சங் 33:7; நீதி 8:29
h சங் 95:10; எரே 11:8
i உபா 11:14

நீங்கள் பாவங்கள் செய்ததால்தானே நல்லதையெல்லாம் அனுபவிக்க முடியாமல் போனது?[a]
26 என் ஜனங்களின் நடுவில் கெட்டவர்கள் இருக்கிறார்கள்.
அவர்கள் பறவைகளைப் பிடிக்கிற வேடர்களைப் போலப் பதுங்கியிருக்கிறார்கள்.
பயங்கரமான கண்ணிகளை வைக்கிறார்கள்.
மனுஷர்களைப் பிடிக்கிறார்கள்.
27 கூண்டு நிறைய பறவைகள் இருப்பது போல,
அவர்களுடைய வீடு நிறைய திருட்டுப்பொருள்கள்* இருக்கின்றன.[b]
இப்படிக் குறுக்கு வழியில்தான் அவர்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் சம்பாதித்திருக்கிறார்கள்.
28 அவர்கள் கொழுத்துப் போயிருக்கிறார்கள்.
கெட்ட காரியங்களைக் கணக்குவழக்கில்லாமல் செய்கிறார்கள்.
அப்பா இல்லாத பிள்ளைகளுக்காகப் பரிந்து பேசாமல்,[c]
சொந்த ஆதாயத்தைத்தான் தேடுகிறார்கள்.
ஏழைகளுக்கு நியாயம் செய்வதில்லை.'"[d]
29 "இதையெல்லாம் நான் தட்டிக்கேட்க வேண்டாமா?
இப்படிப்பட்ட ஒரு தேசத்தை நான் தண்டிக்க வேண்டாமா?" என்று யெகோவா கேட்கிறார்.
30 "அதிர்ச்சி தரும் படுமோசமான காரியம் தேசத்தில் நடந்துவருகிறது:
31 தீர்க்கதரிசிகள் பொய்த் தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள்.[e]
குருமார்கள் தங்களுடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு மற்றவர்களை ஆட்டிப்படைக்கிறார்கள்.
என் ஜனங்களுக்கு இதுதான் பிடித்திருக்கிறது.[f]
ஆனால், முடிவு வரும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?"

6 பென்யமீன் ஜனங்களே, எருசலேமிலிருந்து தப்பித்து ஓடுங்கள்.
தெக்கோவா[g] ஊரில் ஊதுகொம்பை ஊதுங்கள்![h]
பெத்-கேரேமில் தீப்பந்தம் ஏற்றுங்கள்!
ஏனென்றால், வடக்கிலிருந்து பேராபத்தும் பேரழிவும் வந்துகொண்டிருக்கிறது.[i]
2 செல்லமாக வளர்க்கப்பட்ட ஓர் அழகான பெண்ணைப் போல் சீயோன் மகள் இருக்கிறாள்.[j]
3 மேய்ப்பர்கள் தங்களுடைய மந்தைகளோடு வருவார்கள்.
அவளைச் சுற்றிலும் கூடாரம் போட்டுத் தங்குவார்கள்.[k]
அவரவர் மந்தைகளை அங்கே மேய்ப்பார்கள்.[l]
4 "அவளுக்கு எதிராகப் போர் செய்யத் தயாராகுங்கள்!
வாருங்கள், உச்சி வேளையில் அவளைத் தாக்கலாம்!"
"ஐயோ, பொழுது சாய்கிறதே,
இருட்டாகப் போகிறதே!"

5:27 * வே.வா., "மற்றவர்களை ஏமாற்றி சம்பாதித்த பொருள்கள்."

அதி. 5
a உபா 28:23, 24; எரே 3:3
b ஆமோ 8:5; மீ 6:11, 12
c ஏசா 1:23
d சங் 82:2
e எரே 14:14; புல 2:14; எசே 13:6
f ஏசா 30:10; யோவா 3:19

அதி. 6
g 2நா 11:5, 6; ஆமோ 1:1
h எரே 4:5
i எரே 1:14; எரே 10:22
j ஏசா 3:16
k 2ரா 25:1
l எரே 4:16, 17

5 “வாருங்கள், ராத்திரி நேரத்தில் அவளைத் தாக்கலாம்.
அவளுடைய கோட்டைகளைத் தரைமட்டமாக்கலாம்!”[a]
6 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
“மரங்களை வெட்டுங்கள், முற்றுகைக்காக எருசலேமைச் சுற்றிலும்
மண்மேடுகளை எழுப்புங்கள்.[b]
அங்கே நடப்பதெல்லாம் கொடுமைதான்.[c]
எருசலேம் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.
7 நிலத்தடி தொட்டி எப்படித் தண்ணீரைக் குளுமையாகத் தேக்கி
வைக்குமோ
அப்படியே அவள் தன் மனதில் அக்கிரமத்தைத் தேக்கி
வைத்திருக்கிறாள்.
வன்முறையின் சத்தமும் அழிவின் சத்தமும்தான் அங்கே கேட்கிறது.[d]
எங்கு பார்த்தாலும் நோய்! எங்கு பார்த்தாலும் நாசம்!
8 எருசலேமே, எச்சரிக்கையைக் கேள்! இல்லாவிட்டால் அருவருப்போடு
உன்னைவிட்டு விலகிப்போவேன்.[e]
உன் தேசத்தைப் பாழாக்கி, வெறுமையாக்குவேன்.”[f]
9 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
“திராட்சைக் கொடியில் கடைசியாக மிஞ்சியிருக்கிற பழங்களைப்
போல இஸ்ரவேலர்களில் சிலர் மிஞ்சியிருக்கிறார்கள்.
திராட்சைப் பழங்களைக் கூடைகளில் சேகரிப்பது போல நீ மறுபடியும்
அவர்களைச் சேகரிக்க வேண்டும்.”
10 “நான் யாரிடம் பேசுவது? யாரை எச்சரிப்பது?
நான் சொல்வதை யார் கேட்பார்கள்?
அவர்களுடைய காதுகள் அடைக்கப்பட்டிருக்கின்றன; அவர்களால்
எப்படிக் கவனித்துக் கேட்க முடியும்?[g]
யெகோவாவின் வார்த்தையை அவர்கள் கேலி செய்கிறார்கள்.[h]
அதைக் கேட்க அவர்கள் விரும்புவதே இல்லை.
11 அதனால், யெகோவாவைப் போலவே எனக்கும் கோபம்
பற்றிக்கொண்டு வருகிறது.
என்னால் அதை அடக்கவே முடியவில்லை.”[i]
“தெருவில் இருக்கிற பிள்ளைகள்மேலும்,[j]
கூடியிருக்கிற வாலிபர்கள்மேலும் கோபத்தைக் கொட்டு.
கணவர்கள், மனைவிகள், மூத்தவர்கள்,
வயதானவர்கள் எல்லாருமே கைப்பற்றப்படுவார்கள்.[k]
12 அவர்களுடைய வீடுகளையும் தோட்டங்களையும் மனைவிகளையும்
எதிரிகள் அபகரித்துக்கொள்வார்கள்.[l]
தேசத்திலுள்ள எல்லா ஜனங்களையும் நான் தண்டிப்பேன்” என்று
யெகோவா சொல்கிறார்.
13 “சிறியோர்முதல் பெரியோர்வரை எல்லாருமே அநியாயமாக லாபம்
சம்பாதிக்கிறார்கள்.[m]
தீர்க்கதரிசிகள்முதல் குருமார்கள்வரை எல்லாருமே மோசடி
செய்கிறார்கள்.[n]

அதி. 6
a 2நா 36:17, 19; ஆமோ 2:5
b எசே 21:21, 22
c 2ரா 21:16; எசே 7:23
d எசே 7:11; மீ 2:2
e எசே 23:18
f லேவி 26:34; எரே 9:11
g ஏசா 6:10; அப் 7:51
h 2நா 36:15, 16; எரே 20:8
i எரே 20:9
j எரே 18:21
k எசே 9:6
l உபா 28:30; எரே 8:10; புல 5:11; செப் 1:13
m எசே 22:12
n எரே 2:8; எரே 8:10-12; எரே 23:11; மீ 3:5, 11; செப் 3:4

14 சமாதானமே இல்லாதபோது,
'சமாதானம் இருக்கிறது! சமாதானம் இருக்கிறது!'[a] என்று சொல்லி,
என் ஜனங்களுடைய காயங்களை* மேலோட்டமாகக் குணப்படுத்தப் பார்க்கிறார்கள்.
15 அவர்கள் செய்த அருவருப்பான காரியங்களை நினைத்துக் கொஞ்சமாவது வெட்கப்படுகிறார்களா?
இல்லவே இல்லை!
வெட்கம் என்றால் என்னவென்றுகூட அவர்களுக்குத் தெரியாது![b]
அதனால், விழுந்துவிட்டவர்களோடு அவர்களும் விழுவார்கள்.
நான் தண்டிக்கும்போது அவர்கள் தடுக்கி விழுவார்கள்" என்று யெகோவா சொல்கிறார்.
16 "சாலை சந்திப்புகளில் நின்று பாருங்கள்.
உங்கள் முன்னோர்கள் நடந்த பாதைகளை* பற்றி விசாரியுங்கள்.
நல்ல பாதை எதுவென்று கேட்டு அதில் நடங்கள்.[c]
அப்போது, உங்களுக்கு நிம்மதி கிடைக்கும்" என்று யெகோவா சொல்கிறார்.
ஆனால் அவர்கள், "அந்தப் பாதையில் போக மாட்டோம்" என்று சொல்கிறார்கள்.[d]
17 "நான் காவல்காரர்களை நியமித்தேன்.[e]
ஜனங்களிடம் அவர்கள், 'ஊதுகொம்பின் சத்தத்தைக் கவனித்துக் கேளுங்கள்!'[f] என்று சொன்னார்கள்."
ஆனால் ஜனங்கள், "நாங்கள் கேட்க மாட்டோம்" என்று சொன்னார்கள்.[g]
18 "அதனால் அவர்களுக்கு என்ன நடக்கும் என்று சொல்கிறேன்.
தேசங்களே, கேளுங்கள்.
ஜனங்களே, தெரிந்துகொள்ளுங்கள்.
19 பூமியெங்கும் உள்ளவர்களே, கேளுங்கள்!
இந்த ஜனங்கள் என் பேச்சைக் கேட்காமல்
என் சட்டத்தை* அசட்டை பண்ணினார்கள்.
கெட்ட யோசனைகளின்படி நடந்ததால் அவர்களை நான் தண்டிக்கப்போகிறேன்."[h]
20 "நீங்கள் சேபாவிலிருந்து சாம்பிராணியைக் கொண்டுவந்தாலும் சரி,
தூர தேசத்திலிருந்து வசம்பைக் கொண்டுவந்தாலும் சரி, எனக்கு என்ன?
உங்களுடைய தகன பலிகளை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.
நீங்கள் எந்தப் பலியைச் செலுத்தினாலும் நான் சந்தோஷப்பட மாட்டேன்."[i]
21 யெகோவா சொல்வது இதுதான்:
"நான் இந்த ஜனங்களுக்கு முன்பாக முட்டுக்கட்டைகளை வைப்பேன்.
அவர்கள் தடுக்கி விழுவார்கள்.
தகப்பன்களும் சரி, மகன்களும் சரி,

அதி. 6
a எரே 14:13; எரே 23:16, 17; எசே 13:10; 1தெ 5:3
b எரே 3:3
c ஏசா 30:21
d எரே 18:15
e எரே 25:4; எசே 3:17; ஆப 2:1
f ஏசா 58:1
g சக 7:11
h உபா 4:25, 26; தானி 9:12
i ஏசா 1:11; ஏசா 66:3; எரே 7:21; ஆமோ 5:21

6:14 *வே.வா., "முறிவுகளை." **6:16** *நே.மொ., "பழங்காலப் பாதைகளை." **6:19** *வே.வா., "அறிவுரையை."

அக்கம்பக்கத்தில் இருக்கிறவர்களும் சரி, அவர்களுடைய நண்பர்களும் சரி,
எல்லாரும் ஒட்டுமொத்தமாக அழிந்துபோவார்கள்."[a]
22 யெகோவா சொல்வது இதுதான்:
"வடக்கு தேசத்திலிருந்து ஒரு ஜனக்கூட்டம் வருகிறது.
பூமியின் தொலைதூரத்திலிருந்து மாபெரும் தேசம் எழும்பி வருகிறது.[b]
23 அந்த ஜனங்கள் வில்லையும் ஈட்டியையும் எடுத்துக்கொண்டு வருவார்கள்.
அவர்கள் ஈவிரக்கமே இல்லாத கொடூரர்கள்.
அவர்களுடைய சத்தம் கடலின் இரைச்சலைப் போல இருக்கும்.
அவர்கள் குதிரைகளின் மேல் வருவார்கள்.[c]
சீயோன் மகளே, அவர்கள் போர்வீரர்களைப் போல அணிவகுத்து வந்து உன்னைத் தாக்குவார்கள்."
24 அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதிலிருந்து
நம் உடம்பில் தெம்பே இல்லை.[d]
பிரசவ வேதனைப்படுகிற பெண்ணைப் போல
வேதனையில் துடிக்கிறோம்.[e]
25 வயல்வெளிக்குப் போகாதீர்கள்.
சாலையில் நடக்காதீர்கள்.
ஏனென்றால், எதிரி வாளோடு அலைந்துகொண்டிருக்கிறான்.
எந்தப் பக்கம் திரும்பினாலும் ஆபத்துதான்.
26 என் ஜனங்களே, துக்கத் துணி*[f] போட்டுக்கொண்டு சாம்பலில் புரளுங்கள்.
ஒரே மகனைப் பறிகொடுத்தது போல அழுது புலம்புங்கள்.[g]
ஏனென்றால், எதிரி திடீரென்று வந்து நம்மை அழித்துவிடுவான்.[h]
27 "வெள்ளியைப் புடமிடுகிறவனைப் போல நான் உன்னை* ஆக்கியிருக்கிறேன்.
நீ என் ஜனங்களைப் புடமிட வேண்டும்.
அவர்களை முழுமையாகப் பரிசோதிக்க வேண்டும்.
அவர்களுடைய வழிகளை உற்றுக் கவனிக்க வேண்டும்.
28 அவர்கள் எல்லாரும் பயங்கரமான பிடிவாதக்காரர்கள்.[i]
மற்றவர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவர்கள்.[j]
அவர்கள் செம்பையும் இரும்பையும் போல இருக்கிறார்கள்.
எல்லாருமே சீர்கெட்டுப் போயிருக்கிறார்கள்.
29 அவர்களைப் புடமிடுவதற்கு என்னதான் முயற்சி செய்தாலும் புடமிடும் கருவிதான் எரிந்துபோகிறது,*
நெருப்பிலிருந்து ஈயம்தான் வருகிறது.
அவர்களைப் புடமிடுவதே வீண்.[k]
கெட்டவர்களைப் பிரித்தெடுக்கவே முடிவதில்லை.[l]

6:26 *சொல் பட்டியலைப் பாருங்கள். **6:27** *அதாவது, "எரேமியாவை." **6:29** *நே.மொ., "துருத்திகள்தான் எரிந்துபோகின்றன."

அதி. 6
a 2நா 36:17, புல 2:21
b எரே 1:14, எரே 25:9
c ஆப 1:8
d எசே 21:7
e எரே 4:31
f எரே 4:8
g புல 1:2, 16
h எரே 15:8
i ஏசா 30:1, ஏசா 48:4, எரே 5:23
j எரே 9:4
k எரே 9:7, எசே 22:20
l எசே 24:13

30 தள்ளுபடியான* வெள்ளி என்று அவர்கள் அழைக்கப்படுவார்கள்.
ஏனென்றால், யெகோவா அவர்களைத் தள்ளிவிட்டார்."[a]

7 எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து கிடைத்த செய்தி இதுதான்:
2 "யெகோவாவாகிய என்னுடைய ஆலயத்தின் நுழைவாசலில் நின்று
இந்தச் செய்தியை எல்லாருக்கும் சொல்: 'யெகோவாவை வணங்குவதற்காக
இந்த நுழைவாசலைத் தாண்டி வருகிற யூதா ஜனங்களே, யெகோவா இப்
போது சொல்வதைக் கேளுங்கள். **3** இஸ்ரவேலின் கடவுளான பரலோகப்
படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: "கெட்ட வழிகளையும்
செயல்களையும் விட்டுத் திருந்துங்கள். அப்போது, இந்தத் தேசத்திலேயே
நீங்கள் தொடர்ந்து வாழ்வதற்கு நான் அனுமதிப்பேன்.[b] **4** ஏமாற்று வார்த்
தைகளை நம்பி, 'இது யெகோவாவின் ஆலயம்! யெகோவாவின் ஆல
யம்! யெகோவாவின் ஆலயம்!'[c] என்று சொல்லிக்கொண்டு இருக்காதீர்கள்.
5 உண்மையிலேயே கெட்ட வழிகளையும் செயல்களையும் விட்டுத் திருந்
தினால், மற்றவர்களுடைய வழக்குகளில் நியாயத்துக்காக வாதாடினால்,[d]
6 உங்களோடு தங்கியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களையும், அப்பா இல்
லாத பிள்ளைகளையும்,* விதவைகளையும்[e] கொடுமைப்படுத்தாமல் இருந்
தால், அப்பாவிகளைக் கொலை செய்யாமல் இருந்தால், மற்ற தெய்வங்
களை வணங்கி உங்களுக்கே கெடுதலைத் தேடிக்கொள்ளாமல் இருந்தால்,[f]
7 நான் உங்கள் முன்னோர்களுக்குக் கொடுத்த இந்தத் தேசத்திலேயே நீங்
கள் என்றென்றும் வாழ்வதற்கு அனுமதிப்பேன்."'"

8 "ஆனால், மற்றவர்கள் சொல்லும் பொய்களை நீங்கள் நம்பிக்கொண்டு
இருக்கிறீர்கள்;[g] அந்தப் பொய்களால் உங்களுக்கு எந்தப் பிரயோஜன
மும் இல்லை. **9** நீங்கள் திருட்டும்,[h] கொலையும், மணத்துணைக்குத் துரோ
கமும், பொய் சத்தியமும் செய்துகொண்டு,[i] பாகாலுக்குத் தகன பலி செலுத்
திக்கொண்டு,*[j] முன்பின் தெரியாத தெய்வங்களை வணங்கிக்கொண்டு
இருக்கிறீர்கள். **10** நீங்கள் அருவருப்பான இந்த எல்லா காரியங்களையும்
செய்துவிட்டு, என் பெயர் தாங்கிய இந்த ஆலயத்துக்கு வந்து என்முன் நின்
றுகொண்டு, 'நாங்கள் காப்பாற்றப்படுவோம்' என்று சொல்வது நியாயமா?
11 என் பெயர் தாங்கிய இந்த ஆலயம் கொள்ளைக்காரர்களின் குகையைப்
போல உங்களுக்குத் தெரிகிறதோ?[k] உங்களுடைய அட்டூழியங்களை என்
கண்ணாலேயே பார்த்திருக்கிறேன்" என்று யெகோவா சொல்கிறார்.

12 "'நீங்கள் கெட்ட காரியங்களைச் செய்துகொண்டே இருந்தீர்கள்.
நான் மறுபடியும் மறுபடியும் உங்களோடு பேசியும் நீங்கள் கேட்கவில்லை.[l]
உங்களைக் கூப்பிட்டுக்கொண்டே இருந்தேன், ஆனால் நீங்கள் பதில்
சொல்லவே இல்லை.[m] **13** அதனால், என் பெயரின் மகிமைக்காக சீலோ
வில்[n] நான் முதன்முதலில் தேர்ந்தெடுத்த இடத்துக்கு இப்போது போங்
கள்;[o] என் ஜனங்களான இஸ்ரவேலர்களுடைய அக்கிரமத்தின் காரண
மாக[p] நான் அதை என்ன செய்தேன் என்று பாருங்கள்' என்று யெகோவா
சொல்கிறார். **14** 'சீலோவுக்குச் செய்ததைப் போலவே[q] நீங்கள் நம்பியி
ருக்கிற[r] இந்த ஆலயத்துக்கும், அதாவது என் பெயரைத் தாங்கியிருக்
கிற இந்த இடத்துக்கும்,[s] செய்யப்போகிறேன். உங்களுக்கும் உங்கள் முன்
னோர்களுக்கும் நான் கொடுத்த இந்தத் தேசத்தைக்கூட அதேபோல்

6:30 * அதாவது, "வேண்டாத." **7:6** * வே.வா., "அநாதைகளையும்." **7:9** * வே.வா., "தூபம் காட்டிக்கொண்டு."

அதி. 6
a எரே 14:19, புல 5:22

அதி. 7
b எரே 26:13
c மீ 3:11
d எரே 21:12, எரே 22:3
e உபா 24:17, சங் 82:3, சக 7:9, 10, யாக் 1:27
f உபா 8:19
g ஏசா 30:10, எரே 5:31, எரே 14:14
h ஏசா 3:14, மீ 2:2
i எரே 5:2
j எரே 11:13
k மத் 21:13, மாற் 11:17, லூ 19:45, 46
l 2நா 36:15, 16, எரே 25:3, 4
m ஏசா 65:12
n யோசு 18:1
o உபா 12:5, 11
p 1சா 4:11, சங் 78:60, எரே 26:6, 9
q 1சா 4:10, 11, சங் 78:60, எரே 26:4, 6, புல 2:7
r எரே 7:4
s 2ரா 25:8, 9

பாழாக்கப்போகிறேன். **15** உங்கள் சகோதரர்களான எப்பிராயீமியர்களை
நான் ஒதுக்கித்தள்ளியதைப் போலவே உங்கள் எல்லாரையும் என் முன்னா
லிருந்து ஒதுக்கித்தள்ளுவேன்.’[a]

16 நீ இந்த ஜனங்களுக்காக ஜெபம் செய்யக் கூடாது. அவர்களுக்
காக வேண்டிக்கொள்ளவோ கெஞ்சிக் கதறவோ கூடாது.[b] நான் அதைக்
கேட்க மாட்டேன்.[c] **17** யூதா நகரத்திலும் எருசலேமின் வீதிகளிலும்
ஜனங்கள் என்ன செய்கிறார்கள் என்று நீ பார்க்கவில்லையா? **18** விண்
ணரசிக்காக*[d] படையல் அப்பங்களைச் செய்வதற்குப் பிள்ளைகள் விறகு
பொறுக்குகிறார்கள். தகப்பன்கள் நெருப்பு மூட்டுகிறார்கள். மனைவிகள்
மாவு பிசைகிறார்கள். என் கோபத்தைக் கிளறுவதற்காக மற்ற தெய்வங்க
ளுக்குத் திராட்சமதுவைக் காணிக்கையாக ஊற்றுகிறார்கள்.[e] **19** ‘ஆனால்,
இப்படிச் செய்வதால் என்னையா வேதனைப்படுத்துகிறார்கள்?* தங்களுக்
குத்தானே வேதனையையும் அவமானத்தையும் வர வைத்துக்கொள்கி
றார்கள்?’[f] என்று யெகோவா சொல்கிறார். **20** அதனால், ‘இந்த இடத்தின்
மேலும், மனுஷர்கள்மேலும், மிருகங்கள்மேலும், மரங்கள்மேலும், பயிர்
கள்மேலும் என் கோபத் தீ பற்றியெரியும்.[g] அது அணையாமல் எரியும்’[h]
என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

21 இஸ்ரவேலின் கடவுளான பரலோகப் படைகளின் யெகோவா சொல்
வது இதுதான்: ‘போங்கள், இஷ்டம்போல் பலிகளுக்குமேல் பலிகளைச்
செலுத்துங்கள்; அந்தத் தகன பலிகளை நீங்களே சாப்பிட்டுக்கொள்ளுங்
கள்.[i] **22** எகிப்திலிருந்து உங்கள் முன்னோர்களை நான் கூட்டிக்
கொண்டு வந்தபோது தகன பலிகளைப் பற்றியோ மற்ற பலிகளைப்
பற்றியோ நான் எந்தக் கட்டளையும் கொடுக்கவில்லை,[j] அதைப் பற்றி எது
வுமே சொல்லவில்லை. **23** ஆனால், “நீங்கள் எனக்குக் கீழ்ப்படிய வேண்
டும்; அப்போது நான் உங்கள் கடவுளாக இருப்பேன், நீங்கள் என் ஜனங்
களாக இருப்பீர்கள்.[k] என்னுடைய எல்லா கட்டளைகளின்படியும் நீங்கள்
நடக்க வேண்டும். அப்போது, சந்தோஷமாக வாழ்வீர்கள்”[l] என்று மட்டும்
சொன்னேன்.’ **24** அவர்கள் அதைக் காதில் வாங்கவே இல்லை.[m]
அதற்குப் பதிலாக, தங்களுடைய திட்டங்களின்படியே நடந்தார்கள், தங்க
ளுடைய பொல்லாத இதயத்தின் போக்கிலேயே பிடிவாதமாகப் போனார்
கள்.[n] முன்னோக்கிப் போவதற்குப் பதிலாகப் பின்னோக்கியே போனார்கள்.
25 உங்கள் முன்னோர்கள் எகிப்திலிருந்து வந்த நாளிலிருந்து இந்த நாள்
வரை நிலைமை இப்படித்தான் இருந்திருக்கிறது.[o] நான் என்னுடைய ஊழி
யர்களாகிய தீர்க்கதரிசிகள் எல்லாரையும் தினமும் அனுப்பினேன்; திரும்
பத் திரும்ப அனுப்பினேன்.[p] **26** ஆனால், அவர்கள் எதையுமே காதில்
வாங்கவில்லை.[q] முரட்டுப் பிடிவாதம் பிடித்தார்கள். அவர்களுடைய முன்
னோர்களைவிட மோசமாக நடந்துகொண்டார்கள்!

27 நீ இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்களிடம் சொன்னாலும்[r]
அவர்கள் கேட்க மாட்டார்கள். நீ அவர்களைக் கூப்பிட்டாலும் அவர்கள்
பதில் பேச மாட்டார்கள். **28** நீ அவர்களிடம், ‘நீங்கள் உங்களுடைய கட
வுளாகிய யெகோவாவுக்குக் கீழ்ப்படியாமல்போன ஜனங்கள், அவர்

அதி. 7
a 2ரா 17:22, 23
b யாத் 32:9, 10; எரே 11:14
c எரே 15:1
d எரே 44:17
e ஏசா 57:6; எரே 19:13; எசே 20:28
f தானி 9:7
g புல 2:3
h 2ரா 22:17; எரே 17:27
i ஏசா 1:11; எரே 6:20; ஓசி 8:13; ஆமோ 5:21
j 1சா 15:22; ஓசி 6:6
k யாத் 19:5; லேவி 26:3, 12
l உபா 5:29
m யாத் 32:8
n ஓசி 4:16; சக 7:12
o உபா 9:7; 1சா 8:8
p 2ரா 17:13; 2நா 36:15; நெ 9:17, 30; எரே 25:4
q 2நா 33:10; எரே 25:3
r எரே 26:2; எசே 2:7

7:18 * விசுவாசதுரோக இஸ்ரவேலர்கள் வணங்கிய ஒரு பெண் தெய்வத்தின் பட்டப் பெயர்; ஒருவேளை, கருவள தெய்வமாக இருந்திருக்கலாம். **7:19** * வே.வா., “புண்படுத்துகிறார்கள்; கோபப்படுத்துகிறார்கள்.”

கண்டித்தும் திருந்தாமல்போன ஜனங்கள். உங்களில் யாருமே உண்மைத்
தன்மையோடு நடக்கவில்லை. உண்மைத்தன்மை என்ற வார்த்தை உங்கள்
வாயில் வருவதுகூட இல்லை'[a] என்று சொல்.

29 உங்களுடைய நீளமான* தலைமுடியை வெட்டி எறியுங்கள்.
குன்றுகளில் புலம்பல் பாட்டைப் பாடுங்கள். ஏனென்றால், யெகோவா இந்
தத் தலைமுறையை வெறுத்து ஒதுக்கிவிட்டார். நீங்கள் எல்லாரும் அவரு
டைய கோபத்தைக் கிளறிவிட்டீர்கள். **30** 'யூதா ஜனங்கள் நான் வெறுக்
கிற காரியங்களைச் செய்திருக்கிறார்கள்' என்று யெகோவா சொல்கிறார்.
'என்னுடைய பெயர் தாங்கிய ஆலயத்திலே அருவருப்பான சிலைகளை
வைத்து அதைத் தீட்டுப்படுத்தினார்கள்.[b] **31** பென்-இன்னோம்*[c] பள்ளத்
தாக்கில்# இருக்கிற தோப்பேத்தில்△ ஆராதனை மேடுகளைக் கட்டி,
அங்கே அவர்களுடைய மகன்களையும் மகள்களையும் நெருப்பில் சுட்டெ
ரித்தார்கள்.[d] அப்படிச் செய்யும்படி நான் கட்டளை கொடுக்கவே இல்லை.
அந்த யோசனைகூட எனக்கு⊠ வந்ததே இல்லை.'[e]

32 அதனால், யெகோவா சொல்வது இதுதான்: 'நாட்கள் வரும். அப்
போது இந்த இடம் தோப்பேத் என்றோ பென்-இன்னோம் பள்ளத்தாக்கு#
என்றோ அழைக்கப்படாமல், படுகொலையின் பள்ளத்தாக்கு என்றே
அழைக்கப்படும். இறந்தவர்கள் தோப்பேத்தில் புதைக்கப்படுவார்கள்.
புதைப்பதற்கு இடமே இல்லாத அளவுக்கு அங்கே பிணங்கள் குவிந்திருக்
கும்.[f] **33** இந்த ஜனங்களுடைய பிணங்கள் வானத்தில் பறக்கும் பறவை
களுக்கும் பூமியில் நடமாடுகிற மிருகங்களுக்கும் உணவாகும். அவற்றை
விரட்டிவிட யாரும் இருக்க மாட்டார்கள்.[g] **34** யூதாவின் நகரங்களிலும்
எருசலேமின் வீதிகளிலும் கொண்டாட்டமோ குதூகலமோ இனி இருக்காது.
மணமகனுடைய குரலும் மணமகளுடைய குரலும் கேட்காது.[h] ஏனென்றால்,
நான் இந்தத் தேசத்தை அழித்து சின்னாபின்னமாக்குவேன்.'"[i]

8 யெகோவா சொல்வது இதுதான்: "அந்தச் சமயத்தில் யூதாவுடைய
ராஜாக்கள், அதிகாரிகள், குருமார்கள், தீர்க்கதரிசிகள், எருசலேம் ஜனங்
கள் எல்லாருடைய எலும்புகளும் அவர்களுடைய கல்லறைகளிலிருந்து
எடுக்கப்பட்டு, **2** சூரியனுக்கும் சந்திரனுக்கும் நட்சத்திரங்களுக்கும் முன்
பாகப் பரப்பி வைக்கப்படும். இந்த வானத்துப் படைகளைத்தானே அவர்
கள் ஆசை ஆசையாக வணங்கினார்கள்![j] பக்தியோடு கும்பிட்டார்கள்! உத
விக்காகக் கூப்பிட்டார்கள்! அவர்களுடைய எலும்புகள் அள்ளப்படாமலும்
புதைக்கப்படாமலும் அப்படியே விடப்பட்டு, நிலத்தில் எருவாகிவிடும்."[k]

3 "இந்தப் பொல்லாத ஜனங்களில் மிச்சம்மீதி இருப்பவர்களை நான் சித
றிப்போக வைப்பேன். அவர்கள் எங்கே போனாலும் வாழ்வதைவிட சாவ
தையே விரும்புவார்கள்" என்று பரலோகப் படைகளின் யெகோவா
சொல்கிறார்.

4 "நீ அவர்களிடம் இப்படிச் சொல்: 'யெகோவா சொல்வது என்ன
வென்றால்,

7:29 *அதாவது, "அர்ப்பணிக்கப்பட்ட." **7:31** *அர்த்தம், "இன்னோம் மகனின்." **7:31, 32** #சொல் பட்டியலில் "கெஹென்னா" என்ற தலைப்பைப் பாருங்கள். **7:31** △தோப்பேத் என்பது எருசலேமுக்கு வெளியே இருந்த ஓர் இடம். அங்குதான் விசுவாசதுரோக இஸ்ரவேலர்கள் தங்கள் குழந்தைகளை நரபலி கொடுத்தார்கள். ⊠நே.மொ., "என் இதயத்தில்."

அதி. 7
a எரே 5:1; மீ 7:2
b 2ரா 21:1, 4; 2நா 33:1, 4; எரே 23:11; எரே 32:34
c யோசு 15: 8, 12
d உபா 12: 29–31; 2ரா 17:17; 2நா 28:1, 3; 2நா 33:1, 6; எசே 20:31
e லேவி 18:21; லேவி 20:3; எரே 19:5, 6; எரே 32:35
f எரே 19:11; எசே 6:4, 5
g உபா 28:26; சங் 79:2; எரே 16:4
h ஏசா 24:8; எரே 25:10
i லேவி 26:33; ஏசா 1:7; ஏசா 6:11

அதி. 8
j உபா 4:19; 2ரா 17:16; 2ரா 21:1, 3; எரே 19:13; எசே 8:16; செப் 1:4, 5
k எரே 16:4

“விழுந்தவர்கள் எழுந்திருப்பது இல்லையா?
ஒருவர் மனம் மாறினால் மற்றவரும் மனம் மாற மாட்டாரா?
5 ஆனால், இந்த எருசலேம் ஜனங்கள் ஏன் எனக்குத் துரோகம்
செய்துகொண்டே இருக்கிறார்கள்?
அவர்கள் பித்தலாட்டத்தில் ஊறிப்போயிருக்கிறார்கள்.
மனம் மாற மறுக்கிறார்கள்.[a]
6 அவர்கள் பேசுவதையெல்லாம் நான் கவனித்துக் கேட்டேன். அவர்கள்
நியாயமாகப் பேசவில்லை.
அக்கிரமங்கள் செய்ததற்காக ஒருவன்கூட மனம் வருந்தி, ‘இப்படிச்
செய்துவிட்டேனே!’ என்று சொல்லவில்லை.[b]
மற்றவர்கள் போகிற கெட்ட வழிக்கே அவர்களும் திரும்பத் திரும்பப்
போகிறார்கள்; ஒரு குதிரை போர்க்களத்துக்குள் பாய்ந்தோடுவதைப்
போல அவர்களும் அந்த வழிக்கே பாய்ந்தோடுகிறார்கள்.
7 ஒரு சாதாரண நாரைக்குக்கூட இடம்பெயர வேண்டிய காலம் தெரியும்.
காட்டுப் புறாவுக்கும் உழவாரக் குருவிக்கும் புதர்ச் சிட்டுக்கும்கூட*
திரும்பிவர# வேண்டிய காலம் தெரியும்.
ஆனால் என்னுடைய ஜனங்களுக்கு, யெகோவாவாகிய
நான் நியாயத்தீர்ப்பு கொடுக்கப்போகும் காலத்தைப் பற்றித்
தெரியவில்லை.”’[c]
8 ‘“நாங்கள் புத்திசாலிகள், யெகோவாவின் சட்டம்* எங்களுக்கு
நன்றாகத் தெரியும்” என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்?
எழுத்தர்களின்# கள்ள எழுத்தாணி[d] பொய்யை மட்டுமே
எழுதிவந்திருக்கிறது.
9 ஞானிகள் அவமானம் அடைந்திருக்கிறார்கள்;[e] கதிகலங்கிப்
போயிருக்கிறார்கள்.
அவர்கள் நிச்சயம் பிடிபடுவார்கள்.
யெகோவாவின் வார்த்தையை அவர்கள் வெறுத்து ஒதுக்கினார்கள்.
அவர்களுக்குக் கொஞ்சமாவது ஞானம் இருக்கிறதா?
10 நான் அவர்களுடைய மனைவிகளையும் நிலங்களையும்
மற்ற ஆட்களின் கையில் கொடுத்துவிடுவேன்.[f]
சிறியோர்முதல் பெரியோர்வரை எல்லாருமே அநியாயமாக லாபம்
சம்பாதிக்கிறார்கள்.[g]
தீர்க்கதரிசிகள்முதல் குருமார்கள்வரை எல்லாருமே மோசடி
செய்கிறார்கள்.[h]
11 சமாதானமே இல்லாதபோது,
“சமாதானம் இருக்கிறது! சமாதானம் இருக்கிறது!” என்று சொல்லி,[i]
என் ஜனங்களுடைய காயங்களை* மேலோட்டமாகக் குணப்படுத்தப்
பார்க்கிறார்கள்.
12 அவர்கள் செய்த அருவருப்பான காரியங்களை நினைத்துக்
கொஞ்சமாவது வெட்கப்படுகிறார்களா?

8:7 *அல்லது, “கொக்குவுக்கும்கூட.” #வே.வா., “இடம்பெயர.” **8:8** *வே.வா., “அறிவுரை.” #வே.வா., “செயலாளர்களின்.” **8:11** *வே.வா., “முறிவுகளை.”

அதி. 8
a எரே 5:3
b எரே 5:1
c ஏசா 1:3
d ஏசா 8:1
e ஏசா 29:14
f உபா 28:30 செப் 1:13
g ஏசா 56:11 எசே 33:31 மீ 3:11
h எரே 5:31 எரே 6:12-15 எரே 27:9 புல 2:14 எசே 22:28
i எரே 23:16, 17 எசே 13:10

இல்லவே இல்லை!
வெட்கம் என்றால் என்னவென்றுகூட அவர்களுக்குத் தெரியாது![a]
அதனால், விழுந்துவிட்டவர்களோடு அவர்களும் விழுவார்கள்.
நான் தண்டிக்கும்போது அவர்கள் தடுக்கி விழுவார்கள்'[b]
என்று யெகோவா சொல்கிறார்.
13 'நான் அவர்களை ஒட்டுமொத்தமாக அழித்துவிடுவேன்' என்று
யெகோவா சொல்கிறார்.
'திராட்சைக் கொடியில் ஒரு குலைகூட இருக்காது, அத்தி மரத்தில் ஒரு
பழம்கூட மிஞ்சாது. அவற்றின் இலைகளெல்லாம் உதிர்ந்துவிடும்.
நான் அவர்களுக்குக் கொடுத்த எல்லாமே அவர்களுடைய
கையைவிட்டு நழுவிப்போகும்.'"
14 "நாம் ஏன் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறோம்?
நாம் எல்லாரும் சேர்ந்து மதில் சூழ்ந்த நகரங்களுக்குப் போய்,[c]
அங்கே செத்துப்போகலாம்.
நாம்தான் யெகோவாவுக்கு விரோதமாகப் பாவம் செய்துவிட்டோமே!
அதனால், நம் கடவுளாகிய யெகோவா நமக்கு விஷம் கலந்த
தண்ணீரைக் கொடுக்கிறார்.[d]
அவர் நம்மைக் கொல்லப்போகிறார்.
15 சமாதானம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம்; ஆனால், நல்லது
எதுவுமே நடக்கவில்லை.
குணமாகும் காலத்துக்காகக் காத்திருந்தோம்; ஆனால், திகில்தான்
எங்களை ஆட்டிப்படைக்கிறது![e]
16 தாண் நகரத்தில் எதிரிகளின் குதிரைகள் சீறுகிற சத்தம் கேட்கிறது.
வீரியமுள்ள குதிரைகள்* கனைக்கும் சத்தத்தில் தேசமே அதிருகிறது.
அந்த எதிரிகள் வந்து தேசத்தையும் அதில் உள்ள எல்லாவற்றையும்
நாசமாக்குவார்கள்.
நகரத்தையும் அதன் ஜனங்களையும் அழிப்பார்கள்."
17 "நான் உங்கள் நடுவே பாம்புகளை அனுப்பப்போகிறேன்.
அவை மகுடி ஊதினாலும் மயங்காத விஷப் பாம்புகள்.
அவை கண்டிப்பாக உங்களைக் கடிக்கும்" என்று யெகோவா
சொல்கிறார்.
18 என் நெஞ்சு வலிக்கிறது.
என் வேதனை தீரவே தீராது.
19 தூர தேசத்திலிருந்து என் ஜனங்கள்
உதவி கேட்டு அலறுகிறார்கள்.
"யெகோவா சீயோனில் இல்லையா?
அவளுடைய ராஜா அங்கிருந்து போய்விட்டாரா?" என்று
புலம்புகிறார்கள்.
"ஆனால், அவர்கள் ஒன்றுக்கும் உதவாத பொய் தெய்வங்களின்
சிலைகளை வணங்கி
என் கோபத்தை ஏன் கிளறுகிறார்கள்?"

8:16 * வே.வா., "பொலிகுதிரைகள்."

அதி. 8
a எரே 3:3
b எரே 23:12
c எரே 4:5
d எரே 9:15
எரே 23:15
புல 3:19
e எரே 4:10
எரே 14:19

20 “அறுவடை முடிந்துவிட்டது, கோடைக் காலமும் முடிந்துவிட்டது.
ஆனால், நமக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லையே!”
21 என் ஜனங்களுடைய காயங்களைப் பார்த்து என் மனம் பதறுகிறது.[a]
உடல் நடுங்குகிறது.
எனக்கு எல்லாமே வெறுத்துப்போய்விட்டது.
22 கீலேயாத்தில் பரிமளத் தைலமே* இல்லையா?[b]
வைத்தியம் பார்க்க ஒருவர்கூட இல்லையா?[c]
என் ஜனங்கள் ஏன் இன்னும் குணமாகவில்லை?[d]

9 என் தலை தண்ணீர்க் குளமாகவும்,
என் கண்கள் கண்ணீர் ஊற்றாகவும் இருக்கக் கூடாதா?[e]
அப்போது, கொலை செய்யப்பட்ட என் ஜனங்களை நினைத்து
ராத்திரி பகலாகக் கண்ணீர் வடித்துக்கொண்டே இருப்பேனே!
2 வனாந்தரத்தில் எனக்கு ஒரு சத்திரம் இருக்கக் கூடாதா?
அப்போது, நான் என்னுடைய ஜனங்களை விட்டுவிட்டுப் போய்விடுவேனே!
ஏனென்றால், அவர்கள் எல்லாருமே கடவுளுக்குத் துரோகம் செய்கிறார்கள்.[f]
நம்பியவரை ஏமாற்றுகிற கும்பலாக இருக்கிறார்கள்.
3 வில்லிலிருந்து அம்புகள் புறப்படுவது போல அவர்களுடைய வாயிலிருந்து பொய்கள் புறப்படுகின்றன.
தேசத்தில் உண்மையே இல்லை, பொய்களுக்குப் பஞ்சமே இல்லை.[g]
“அவர்கள் பாவத்துக்குமேல் பாவம் செய்கிறார்கள்.
என் பேச்சைக் கேட்பதே இல்லை”[h] என்று யெகோவா சொல்கிறார்.
4 “நீங்கள் எல்லாரும் மற்றவர்களிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுங்கள்.
உங்கள் சகோதரனைக்கூட நம்பாதீர்கள்.
எல்லாருமே நம்பிக்கைத் துரோகம் செய்கிறார்கள்.[i]
மற்றவர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறார்கள்.[j]
5 ஒவ்வொருவனும் அடுத்தவனை ஏமாற்றுகிறான்.
யாருமே உண்மை பேசுவதில்லை.
பொய் பேசுவதற்குத்தான் தங்கள் நாவைப் பழக்கப்படுத்தியிருக்கிறார்கள்.[k]
கெட்டதைச் செய்து செய்தே களைத்துப்போயிருக்கிறார்கள்.
6 நீ மோசடிக்காரர்களின் நடுவே வாழ்ந்துகொண்டிருக்கிறாய்.
அவர்கள் மோசடி செய்வதில் ஊறிப்போயிருப்பதால் என்னைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவதில்லை” என்று யெகோவா சொல்கிறார்.
7 அதனால், பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
“நான் அவர்களைப் புடமிட்டுச் சுத்தமாக்குவேன்.[l]
என் ஜனங்களை நான் வேறு என்னதான் செய்ய முடியும்?

8:22 * வே.வா., “தைல மருந்தே.”

அதி. 8
a எரே 4:19, 20; எரே 14:17
b ஆதி 37:25
c எரே 30:12, 13
d எரே 30:17; எரே 33:4, 6

அதி. 9
e ஏசா 22:4; எரே 13:17
f எரே 5:7; எரே 23:10
g ஏசா 59:3
h எரே 4:22
i எரே 12:6; மீ 7:2, 5
j எரே 6:28; எசே 22:9
k சங் 50:19; மீ 6:12
l ஏசா 1:25; ஏசா 48:10

8 பொய் பேசுகிற அவர்களுடைய நாவுகள் விஷ அம்புகள்.
மற்றவர்களிடம் இனிக்க இனிக்கப் பேசுகிறார்கள்.
ஆனால், கெடுதல் செய்வதற்குத்தான் மனதில் திட்டம் போடுகிறார்கள்."
9 "இதையெல்லாம் நான் தட்டிக்கேட்க வேண்டாமா?
இப்படிப்பட்ட ஒரு தேசத்தை நான் தண்டிக்க வேண்டாமா?"[a]
என்று யெகோவா கேட்கிறார்.
10 "நான் மலைகளைப் பார்த்து அழுது புலம்புவேன்.
வனாந்தரத்தில் உள்ள மேய்ச்சல் நிலங்களுக்காகப் புலம்பல் பாட்டுப் பாடுவேன்.
ஏனென்றால், அவை கொளுத்தப்பட்டுக் கிடக்கின்றன; அங்கே மனுஷ நடமாட்டம் இல்லை.
ஆடுமாடுகளின் சத்தம்கூட கேட்பதில்லை.
பறவைகள் அங்கிருந்து பறந்து போய்விட்டன, மிருகங்களும் ஓடிவிட்டன.[b]
11 நான் எருசலேமைக் கற்குவியலாகவும்,[c] நரிகளின் குகையாகவும் மாற்றுவேன்.[d]
யாருமே குடியிருக்க முடியாதபடி யூதாவின் நகரங்களைப் பாழாக்குவேன்.[e]
12 இதையெல்லாம் புரிந்துகொள்ளும் அளவுக்கு ஞானம் உள்ளவர் யார்?
இதையெல்லாம் ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று யெகோவா யாரிடம் சொன்னார்?
தேசம் ஏன் அழிந்துபோனது? அது ஏன் நெருப்பில் சுட்டெரிக்கப்பட்டது?
அது ஏன் வனாந்தரத்தைப் போலக் காய்ந்து கருகிக் கிடக்கிறது?
ஏன் மனுஷ நடமாட்டமே இல்லாமல் போனது?"

13 யெகோவா சொல்வது இதுதான்: "அவர்கள் என் சட்டத்தை*
கடைப்பிடிக்காமல் அசட்டை செய்தார்கள். என் பேச்சை மீறினார்கள்.
14 தங்கள் இதயத்தின் போக்கிலேயே பிடிவாதமாகப் போனார்கள்.[f] அவர்
களுடைய முன்னோர்கள் கற்றுக்கொடுத்தபடியே பாகாலின் சிலைகளை
வணங்கினார்கள்.[g] 15 அதனால், இஸ்ரவேலின் கடவுளான பரலோகப்
படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: 'இந்த ஜனங்களுக்குச் சாப்
பிட எட்டியையும் குடிக்க விஷத் தண்ணீரையும் கொடுப்பேன்.[h] 16 இவர்
களுக்கோ இவர்களுடைய முன்னோர்களுக்கோ தெரியாத தேசங்களுக்கு
இவர்களைச் சிதறிப்போக வைப்பேன்.[i] வாளை அனுப்பி இவர்களை அடி
யோடு அழிப்பேன்.'[j]

17 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
'புத்தியோடு* நடந்துகொள்ளுங்கள்.
புலம்பல் பாட்டுப் பாடும் பெண்களை வரச் சொல்லுங்கள்.[k]
திறமையான புலம்பல்காரிகளுக்குச் சொல்லி அனுப்புங்கள்.
18 அவர்கள் சீக்கிரமாக வந்து நமக்காக அழுது புலம்பட்டும்.

9:13 * வே.வா., "அறிவுரையை." 9:17 * வே.வா., "புரிந்துகொள்ளுதலோடு."

அதி. 9
a எரே 5:9, 29
b எரே 4:25; செப் 1:3
c சங் 79:1; எரே 26:18
d எரே 10:22
e எரே 4:27; எரே 25:11; எரே 32:43
f எரே 7:24
g நியா 3:7; 1சா 12:10; ஓசி 11:2
h எரே 8:14; எரே 23:15; புல 3:15, 19
i லேவி 26:33; உபா 28:64; சங் 106:27; சக 7:14
j எரே 29:17; எசே 5:2
k 2நா 35:25

அதைக் கேட்டு நம் கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோல்
கொட்டட்டும்.
தாரை தாரையாக வழிந்தோடட்டும்.[a]
19 ஜனங்கள் இப்படிப் புலம்புகிற சத்தம் சீயோனில் கேட்கிறது:[b]
“நம் வாழ்க்கை பாழாய்ப் போய்விட்டதே!
அவமானம் தாங்க முடியவில்லையே!
எதிரிகள் நம் வீடுகளை இடித்துவிட்டார்களே!
தேசத்தைவிட்டே நம்மைத் துரத்திவிட்டார்களே!”[c]
20 பெண்களே, யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள்.
அவருடைய வார்த்தைகளை நம்புங்கள்.
இந்தப் புலம்பல் பாட்டை உங்கள் மகள்களுக்குக் கற்றுக்கொடுங்கள்.
மற்ற பெண்களுக்கும் கற்றுக்கொடுங்கள்.[d]
21 ஏனென்றால், வீதிகளில் விளையாடுகிற பிள்ளைகளைப்
பறித்துக்கொண்டு போவதற்காகவும்,
பொது சதுக்கங்களில் உள்ள வாலிபர்களை வாரிக்கொண்டு
போவதற்காகவும்,
சாவு நம்முடைய ஜன்னல் வழியாக வந்துவிட்டது.
நம்முடைய கோட்டைகளுக்குள் நுழைந்துவிட்டது.’[e]
22 நீ இப்படிச் சொல்: ‘யெகோவா சொல்வது இதுதான்:
“ஜனங்களுடைய பிணங்கள் எருவைப் போல நிலத்தில் கிடக்கும்.
அறுத்துப் போடப்பட்ட கதிர்களைப் போலக் கிடக்கும்.
அவற்றை எடுக்க யாருமே வர மாட்டார்கள்.”’”[f]
23 யெகோவா சொல்வது இதுதான்:
“ஞானி தன்னுடைய ஞானத்தைப் பற்றிப் பெருமையடிக்க வேண்டாம்.[g]
பலசாலி தன்னுடைய பலத்தைப் பற்றிப் பெருமையடிக்க வேண்டாம்.
பணக்காரன் தன்னுடைய சொத்துகளைப் பற்றிப் பெருமையடிக்க
வேண்டாம்.”[h]
24 யெகோவா சொல்வது இதுதான்: “யாராவது பெருமை பேச
விரும்பினால்,
என்னைப் பற்றிய அறிவும் ஆழமான புரிந்துகொள்ளுதலும்
இருப்பதைப் பற்றியே பெருமை பேசட்டும்.[i]
யெகோவாவாகிய நான் மாறாத அன்பையும் நியாயத்தையும்
நீதியையும் காட்டுகிற கடவுள் என்று பெருமையாகச் சொல்லட்டும்.[j]
இவற்றை நான் விரும்புகிறேன்.”[k]

25 யெகோவா சொல்வது இதுதான்: “நாட்கள் வரும்; அப்போது,
உடலில் விருத்தசேதனம் செய்தும் உள்ளத்தில் விருத்தசேதனம் செய்யா
மல் இருக்கிற எல்லாரையும் நான் தண்டிப்பேன்.[l] **26** எகிப்தையும்[m] யூதா
வையும்[n] ஏதோமையும்[o] மோவாபையும்,[p] அம்மோனியர்களையும்[q] நான்
தண்டிப்பேன். நெற்றி ஓரங்களில் முடியை வெட்டிக்கொண்டு வனாந்தரத்
தில் வாழ்கிற ஜனங்களையும் தண்டிப்பேன்.[r] ஏனென்றால், இஸ்ரவேலைச்
சேராத இந்த ஜனங்கள் எல்லாரும் உடலில் விருத்தசேதனம் செய்யாமல்
இருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் உள்ளத்தில் விருத்தசேத
னம் செய்யாமல் இருக்கிறார்கள்.”[s]

அதி. 9
a எரே 6:26; எரே 14:17
b எரே 4:31; எசே 7:16; மீ 1:8, 9
c புல 4:15; மீ 2:10
d ஏசா 29:2; எரே 7:29
e 2நா 36:17; எரே 6:11
f ஏசா 5:25; எரே 16:3, 4
g ஏசா 5:21
h உபா 8:12-14; உபா 8:17, 18
i 1கொ 1:31; 2கொ 10:17
j யாத் 34:6; சங் 89:14
k சங் 99:4; ஓசி 6:6; மீ 6:8; மீ 7:18
l ஆமோ 3:1, 2
m ஏசா 19:1; எசே 29:2
n ஏசா 1:1
o எரே 27:2, 3; எசே 32:29; ஒப 1
p ஏசா 15:1; எரே 48:1
q எரே 49:1; எசே 25:2
r எரே 25:17, 23; எரே 49:32
s லேவி 26:41; எரே 4:4

10 இஸ்ரவேல் ஜனங்களே, உங்களுக்கு எதிராக யெகோவா சொல்
லும் செய்தியைக் கேளுங்கள். 2 யெகோவா சொல்வது இதுதான்:
“மற்ற தேசத்தாரின் பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்ளாதீர்கள்.[a]
அவர்கள் வானத்திலுள்ள அடையாளங்களைப் பார்த்துப்
பயப்படுவதைப் போல
நீங்கள் பயப்படாதீர்கள்.[b]
3 அந்த ஜனங்களுடைய சம்பிரதாயங்கள் வீணானவை.
கைத்தொழிலாளிகள் காட்டிலுள்ள மரத்தை வெட்டுகிறார்கள்.
பின்பு, அதைச் செதுக்கி சிலை செய்கிறார்கள்.[c]
4 வெள்ளியினாலும் தங்கத்தினாலும் அந்தச் சிலையை
அலங்கரிக்கிறார்கள்.[d]
அது விழாமல் இருப்பதற்காக ஆணிகள் வைத்து சுத்தியால்
அடிக்கிறார்கள்.[e]
5 அந்தச் சிலைகள் வெள்ளரித் தோட்டத்தில் உள்ள சோளக்காட்டு
பொம்மை போல இருக்கின்றன; அவற்றால் பேச முடியாது.[f]
அவற்றால் நடக்கவும் முடியாது; யாராவது சுமந்துகொண்டுதான் போக
வேண்டும்.[g]
அவற்றைப் பார்த்துப் பயப்படாதீர்கள்; ஏனென்றால், அவற்றால்
கெட்டது செய்ய முடியாது.
அவற்றால் நல்லது செய்யவும் முடியாது.”[h]
6 யெகோவாவே, உங்களைப் போல யாருமே இல்லை.[i]
நீங்கள் மகத்தானவர்; உங்கள் பெயர் மகத்தானது, மிகுந்த
வல்லமை உள்ளது.
7 தேசங்களுக்கெல்லாம் ராஜாவே,[j] யார்தான் உங்களுக்குப்
பயப்படாமல் இருக்க முடியும்? உங்களுக்குப் பயப்படுவதுதானே
நியாயம்?
உலகமெங்கும் உள்ள தேசங்களில் எத்தனை ஞானிகள் இருந்தாலும்
உங்களைப் போல் யாருமே இல்லை.[k]
8 அவர்கள் எல்லாருமே புத்தியில்லாதவர்கள், முட்டாள்கள்.[l]
மரச் சிலைகளைப் பார்த்து அறிவுரை கேட்பது சுத்த வீண்.[m]
9 தர்ஷீசிலிருந்து வெள்ளித் தகடுகளும்[n] ஊப்பாசிலிருந்து தங்கமும்
வர வைக்கப்படுகின்றன.
அவற்றால் கைத்தொழிலாளிகளும் ஆசாரிகளும் அந்தச்
சிலைகளுக்குத் தகடு அடிக்கிறார்கள்.
ஜனங்கள் அவற்றுக்கு நீல நிறத் துணிகளையும் ஊதா நிறத்
துணிகளையும் போட்டுவிடுகிறார்கள்.
அவை எல்லாமே திறமைசாலிகளின் கைவேலைப்பாடுகள்.
10 ஆனால், யெகோவா மட்டும்தான் உண்மையான கடவுள்.
அவர்தான் உயிருள்ள கடவுள்,[o] என்றென்றுமுள்ள ராஜா.[p]
அவருடைய கோபத்தால் பூமி அதிரும்.[q]
அவருடைய கடும் கோபத்தைத் தேசங்களால் தாங்கிக்கொள்ள
முடியாது.

அதி. 10
a லேவி 18:3, 30; லேவி 20:23; உபா 12:30
b ஏசா 47:13
c ஏசா 40:20; ஏசா 44:14, 15; ஏசா 45:20; ஆப 2:18
d சங் 115:4; ஏசா 40:19
e ஏசா 41:7
f ஆப 2:19
g ஏசா 46:7
h ஏசா 41:23; ஏசா 44:9; 1கொ 8:4
i யாத் 15:11; 2சா 7:22; சங் 86:8
j சங் 22:28
k சங் 89:6; தானி 4:35
l எரே 51:17; ஆப 2:18
m ஏசா 44:19
n 1ரா 10:22
o யோசு 3:10; தானி 6:26
p தானி 4:3; ஆப 1:12; வெளி 15:3
q நாகூ 1:5

11 *அவர்களிடம் நீ இப்படிச் சொல்:
"வானத்தையும் பூமியையும் படைக்காத தெய்வங்கள்
வானத்தின் கீழோ பூமியிலோ இல்லாதபடி ஒழிந்துபோகும்."[a]
12 உண்மையான கடவுள்தான் தன்னுடைய வல்லமையினால் பூமியைப் படைத்தார்.
தன்னுடைய ஞானத்தினால் நிலத்தை உண்டாக்கினார்.[b]
தன்னுடைய புத்தியினால்* வானத்தை விரித்தார்.[c]
13 அவர் குரல் கொடுக்கும்போது
வானத்தில் உள்ள தண்ணீர் கொந்தளிக்கிறது.*[d]
பூமியின் எல்லா இடங்களிலிருந்தும் அவர் மேகங்களை# எழும்ப வைக்கிறார்.[e]
மழையோடு மின்னலை மின்ன வைக்கிறார்.△
காற்றைத் தன்னுடைய கிடங்குகளிலிருந்து வீசச் செய்கிறார்.[f]
14 மனுஷர்கள் எல்லாருமே அறிவும் புத்தியும் இல்லாமல் நடக்கிறார்கள்.
சிலைகளைச் செதுக்கிய ஆசாரிகள் எல்லாருமே வெட்கப்பட்டுப்போவார்கள்.[g]
அவர்கள் வார்த்த சிலைகள் பொய்யானவை.
உயிர்மூச்சே இல்லாதவை.[h]
15 அவை ஒன்றுக்கும் உதவாதவை, கேலிக்குரியவை.[i]
கடவுளுடைய தண்டனைத் தீர்ப்பின் நாளில் அவை அழிந்துபோகும்.
16 யாக்கோபின் கடவுளோ அந்தச் சிலைகளைப் போன்றவர் அல்ல.
அவர்தான் எல்லாவற்றையும் உருவாக்கினார்.
இஸ்ரவேல்தான் அவருடைய விசேஷ சொத்து.[j]
பரலோகப் படைகளின் யெகோவா என்பதுதான் அவருடைய பெயர்.[k]
17 சுற்றிவளைக்கப்பட்ட பெண்ணே,
தரையில் கிடக்கிற உன் சாமான்களை மூட்டைகட்டு.
18 ஏனென்றால், யெகோவா இப்படிச் சொல்கிறார்:
"இதோ, தேசத்தில் இருக்கிற எல்லாரையும் நான் துரத்தியடிப்பேன்.[l]
அவர்களை அவதிப்பட வைப்பேன்."
19 ஐயோ! எனக்குக் காயமாகிவிட்டது!*[m]
என்னுடைய புண் ஆறவே ஆறாது.
நான் இப்படிச் சொன்னேன்: "இது எனக்கு வந்திருக்கிற நோய், இதை நான் சகித்தே தீர வேண்டும்.
20 என்னுடைய கூடாரம் நாசமாக்கப்பட்டது; என் கூடாரக் கயிறுகள் அறுத்தெறியப்பட்டன.[n]
என் பிள்ளைகள் என்னைவிட்டுப் போய்விட்டார்கள்; அவர்கள் இங்கே இல்லை.[o]

10:11 *இந்த வசனம் முதன்முதலாக அரமேயிக் மொழியில் எழுதப்பட்டது. 10:12 *வே.வா., "புரிந்துகொள்ளும் திறனால்." 10:13 *வே.வா., "முழங்குகிறது." #வே.வா., "தண்ணீரை ஆவியாக." △அல்லது, "மழைக்கு மதகுகளை வைக்கிறார்." 10:19 *வே.வா., "எனக்கு முறிவு ஏற்பட்டுவிட்டது."

அதி. 10
a ஏசா 2:18; எரே 51:17, 18; செப் 2:11
b நீதி 3:19; ஏசா 45:18
c சங் 136:3, 5; ஏசா 40:22; எரே 51:15, 16
d யோபு 37:2; யோபு 38:34
e யோபு 36:27; சங் 135:7
f ஆதி 8:1; யாத் 14:21; எண் 11:31; யோனா 1:4
g ஏசா 42:17; ஏசா 44:11
h எரே 51:17; ஆப 2:18, 19
i ஏசா 41:29
j உபா 32:9; சங் 135:4
k ஏசா 47:4
l உபா 28:63; எரே 16:13
m எரே 8:21
n எரே 4:20
o எரே 31:15

என் கூடாரத்தை எடுத்து நிறுத்துவதற்கோ இழுத்துக் கட்டுவதற்கோ யாருமே இல்லை.
21 மேய்ப்பர்கள் புத்தியில்லாமல் நடந்துகொண்டார்கள்.[a]
அவர்கள் யெகோவாவிடம் விசாரிக்கவே இல்லை.[b]
அதனால்தான், விவேகம்* இல்லாமல் நடந்துகொண்டார்கள்.
அவர்களுடைய மந்தைகள் எல்லாமே சிதறிப்போய்விட்டன."[c]
22 கேளுங்கள்! செய்தியைக் கேளுங்கள்!
வடக்கு தேசத்திலிருந்து ஏராளமான வீரர்கள் திமுதிமுவென்று வருகிறார்கள்![d]
யூதாவைப் பாழாக்கி, நரிகளின் குகைபோல் ஆக்குவதற்காகப் படைதிரண்டு வருகிறார்கள்.[e]
23 யெகோவாவே, மனுஷனுக்குத் தன் வழியைத் தீர்மானிக்கும் உரிமை* இல்லை என்றும்,
தன் காலடிகளை நடத்தும் அதிகாரம் இல்லை என்றும் எனக்கு நன்றாகத் தெரியும்.[f]
24 யெகோவாவே, உங்களுக்கு நியாயமாகத் தோன்றுகிற விதத்தில் என்னைத் திருத்துங்கள்.
ஆனால், கோபத்தில்[g] என்னைக் கொன்றுவிடாதீர்கள்.[h]
25 உங்களை அசட்டை செய்கிற தேசங்கள்மேலும்[i]
உங்கள் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்ளாத குடும்பங்கள்மேலும் உங்கள் கோபத்தைக் கொட்டுங்கள்.
ஏனென்றால், அவர்கள் யாக்கோபின் வம்சத்தாரை அழித்தார்கள்.[j]
அவர்களை அடியோடு அழிக்கப் பார்த்தார்கள்.[k]
அவர்களுடைய தேசத்தைப் பாழாக்கினார்கள்.[l]

11 எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து ஒரு செய்தி கிடைத்தது;
அவர், 2 "நான் செய்த ஒப்பந்தத்தின் வார்த்தைகளை ஜனங்கள்
எல்லாரும் கேட்க வேண்டும்.

யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிறவர்களிடம் நீ* இப்படிச் சொல்:
3 'இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது இதுதான்: 4 "இரும்பு
உலை போன்ற[m] எகிப்திலிருந்து நான் உங்கள் முன்னோர்களைக் கூட்டிக்கொண்டு வந்தபோது அவர்களிடம்,[n] 'என் பேச்சைக் கேட்டு நடங்கள், என்னுடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படியுங்கள். அப்போது, நீங்கள் என்னுடைய ஜனங்களாக இருப்பீர்கள், நான் உங்களுடைய கடவுளாக
இருப்பேன்.[o] 5 அதோடு, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தைத்[p] தருவதாக
உங்கள் முன்னோர்களுக்குக் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றுவேன்' என்று சொன்னதை இன்று நிறைவேற்றியிருக்கிறேன். அதனால், என் ஒப்பந்தத்தை மீறுகிற எவனும் சபிக்கப்படுவான்"'[q] என்றார்."

அதற்கு நான், "ஆமென்,* யெகோவாவே" என்று சொன்னேன்.

6 அப்போது யெகோவா என்னிடம், "நீ யூதாவின் நகரங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் இருக்கிற எல்லாரிடமும், 'நீங்கள் கேட்ட இந்த

10:21 * வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதல்." 10:23 * வே.வா., "திறமை." 11:2 * அநேகமாக, "எரேமியா." 11:5 * அதாவது, "அப்படியே ஆகட்டும்."

அதி. 10
a எரே 5:31
b எரே 2:8; எரே 8:9
c எரே 23:1; எசே 34:5, 6
d எரே 1:15; எரே 4:6; எரே 6:22; ஆப 1:6
e எரே 9:11
f சங் 17:5; சங் 37:23; நீதி 16:3; நீதி 20:24
g சங் 6:1; சங் 38:1
h எரே 30:11
i ஏசா 34:2
j எரே 51:34
k ஏசா 10:22
l சங் 79:6, 7; எரே 8:16; புல 2:22

அதி. 11
m யாத் 13:3; உபா 4:20
n யாத் 24:3
o லேவி 26:3, 12
p ஆதி 15:18; யாத் 3:8; லேவி 20:24; உபா 6:3
q உபா 27:26; உபா 28:15

ஒப்பந்தத்தின்படி நடங்கள். **7** உங்கள் முன்னோர்களை எகிப்திலிருந்து
கூட்டிக்கொண்டு வந்த நாளிலிருந்து இன்றுவரை நான் எச்சரிப்பு கொடுத்து
வந்திருக்கிறேன். “என் பேச்சைக் கேட்டு நடங்கள்” என்று திரும்பத்
திரும்பச் சொல்லி வந்திருக்கிறேன்.[a] **8** ஆனால், உங்கள் முன்னோர்கள்
அதைக் காதில் வாங்கவே இல்லை. அவர்கள் ஒவ்வொருவரும் தங்களு
டைய பொல்லாத இதயத்தின் போக்கிலேயே பிடிவாதமாகப் போனார்கள்.[b]
அதனால், நான் கட்டளையிட்டும் அவர்கள் கடைப்பிடிக்காமல்போன
இந்த ஒப்பந்தத்தின் எல்லா வார்த்தைகளும் அவர்களுக்குப் பலிக்கும்படி
செய்தேன்’ என்று அறிவிப்பு செய்” என்றார்.

9 பின்பு யெகோவா என்னிடம், “யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிற
வர்கள் சதி செய்கிறார்கள். **10** அவர்களுடைய முன்னோர்கள் என் பேச்
சைக் கேட்காமல் பல குற்றங்கள் செய்ததைப் போலவே இவர்களும் செய்
கிறார்கள்.[c] பொய் தெய்வங்களைப் பக்தியோடு கும்பிடுகிறார்கள்.[d]
இஸ்ரவேல் ஜனங்களும் யூதா ஜனங்களும் அவர்களுடைய முன்னோர்க
ளோடு நான் செய்த ஒப்பந்தத்தை மீறுகிறார்கள்.[e] **11** அதனால்
யெகோவா இப்படிச் சொல்கிறார்: ‘நான் அவர்களை அழிக்கப்போகிறேன்.[f]
அவர்களால் தப்பிக்கவே முடியாது. உதவிக்காக அவர்கள் என்னைக் கூப்
பிட்டாலும் நான் கேட்க மாட்டேன்.[g] **12** அப்போது, யூதா ஜனங்களும்
எருசலேம் ஜனங்களும் எந்தத் தெய்வங்களுக்குத் தகன பலிகள் செலுத்
தினார்களோ* அந்தத் தெய்வங்களிடம் போய்க் கதறுவார்கள்.[h] ஆனால்,
அந்தத் தெய்வங்களால் அவர்களை அழிவிலிருந்து காப்பாற்றவே முடி
யாது. **13** யூதா ஜனங்களே, உங்கள் நகரங்களைப் போல உங்கள் தெய்
வங்களும் ஏராளமாகிவிட்டன. எருசலேமின் வீதிகளைப் போல உங்கள்
பலிபீடங்களும் ஏராளமாகிவிட்டன. வெட்கங்கெட்ட தெய்வமாகிய பாகா
லுக்குத் தகன பலி செலுத்தவே நீங்கள் அவற்றைக் கட்டினீர்கள்.’[i]

14 நீ* இந்த ஜனங்களுக்காக ஜெபம் செய்யக் கூடாது. அவர்களுக்காக
வேண்டிக்கொள்ளவோ கெஞ்சிக் கதறவோ கூடாது.[j] அழிவு வரும்போது
அவர்கள் உதவிக்காக என்னைக் கூப்பிட்டாலும் நான் கேட்க மாட்டேன்.
15 எனக்குப் பிரியமான ஜனங்களில் இத்தனை பேர் என்னைப்
போலித்தனமாக வணங்கும்போது,
அவர்கள் எந்த உரிமையோடு என் வீட்டில் தங்க முடியும்?
அவர்கள் பலி செலுத்திவிட்டால் அழிவிலிருந்து தப்பித்துவிட
முடியுமா?
அழிவு நாளில் அவர்கள் சந்தோஷப்பட முடியுமா?
16 ஒருகாலத்தில் யெகோவா அவர்களை,
‘பழங்கள் காய்த்துக் குலுங்குகிற அழகான ஒலிவ மரம்’ என்று
அழைத்திருந்தார்.
ஆனால், இப்போது பயங்கரமான சத்தத்தோடு தீ வைத்துவிட்டார்.
எதிரிகள் அந்த மரத்தின் கிளைகளை முறித்துவிட்டார்கள்.

17 இஸ்ரவேல் ஜனங்களையும் யூதா ஜனங்களையும் மரம்போல் நட்டு
வைத்தவரான பரலோகப் படைகளின் யெகோவா[k] அழிவைக் கொண்டுவ
ரப் போவதாகச் சொல்லியிருக்கிறார். ஏனென்றால், அவர்கள் பாவம் செய்

11:12 * வே.வா., “தூபம் காட்டினார்களோ.” **11:14** * அதாவது, “எரேமியா.”

அதி. 11
a எரே 7:13; எரே 25:4; எரே 35:15
b ஏசா 65:2; எரே 7:24, 26; எசே 20:8; சக 7:11, 12
c நியா 2:11, 17; 1சா 8:8; 2ரா 22:17
d 2நா 28:22, 23
e உபா 31:16; 2ரா 17:6, 7; ஓசி 6:7
f 2ரா 22:16; எரே 6:19; எசே 7:5
g ஏசா 1:15; எரே 14:12; எசே 8:18; மீ 3:4
h உபா 32:37, 38; எரே 2:28
i எரே 7:9, 10
j எரே 7:16; எரே 14:11
k ஏசா 5:2; எரே 2:21

திருக்கிறார்கள், பாகாலுக்குத் தகன பலிகளைச் செலுத்தி அவருடைய கோபத்தைக் கிளறியிருக்கிறார்கள்"[a] என்று சொன்னார்.

18 யெகோவாவே, நீங்கள் எனக்கு விஷயத்தைத் தெரிவித்தீர்கள்.
அவர்கள் செய்வதையெல்லாம் எனக்குக் காட்டினீர்கள்.
19 வெட்டப்படுவதற்குக் கொண்டுபோகப்படும் சாதுவான ஆட்டுக்குட்டியைப் போல நான் இருந்தேன்.
அவர்கள் என்னைத் தீர்த்துக்கட்ட சதி செய்து,
"மரத்தைப் பழங்களோடு சேர்த்து வெட்டிப்போடலாம்,
இந்த உலகத்திலிருந்தே அவனை ஒழித்துக்கட்டலாம்,
அவனுடைய பேர்கூட அழிந்துபோகட்டும்" என்று பேசி வைத்திருந்தது எனக்குத் தெரியவில்லை.[b]
20 பரலோகப் படைகளின் யெகோவாவே, நீங்கள் நீதியான தீர்ப்பைக் கொடுக்கிறவர்.
இதயத்தையும் அடிமனதின் யோசனைகளையும்* ஆராய்கிறவர்.#[c]
என்னுடைய வழக்கை உங்களிடமே ஒப்படைத்துவிட்டேன்.
என்னை எதிர்க்கிறவர்களை நீங்கள் பழிவாங்குவதை என் கண்ணாலேயே பார்க்க வையுங்கள்.

21 என்னிடம், "நீ யெகோவாவின் பெயரில் தீர்க்கதரிசனம் சொல்லக்
கூடாது;[d] சொன்னால், எங்கள் கையால் சாவாய்" என்று மிரட்டுகிற ஆன
தோத்[e] ஊர்க்காரர்களுக்கு யெகோவா ஒரு செய்தி சொல்கிறார். 22 பர
லோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: "நான் அவர்களைத்
தண்டிக்கப்போகிறேன். வாலிபர்கள் வாளுக்குப் பலியாவார்கள்.[f] பிள்ளை
கள் பஞ்சத்தினால் சாவார்கள்.[g] 23 ஆனதோத்[h] ஊர்க்காரர்களுக்குத்
தண்டனை கொடுக்கும் வருஷத்தில் நான் அவர்களை அழித்துவிடுவேன்.
அவர்களில் யாருமே தப்பிக்க மாட்டார்கள்."

12 யெகோவாவே, நான் உங்களிடம் முறையிடும்போதும்,
நியாயத்தைப் பற்றி உங்களோடு வழக்காடும்போதும்,
நீங்கள் நீதியுள்ளவர் என்பதை நிரூபிக்கிறீர்கள்.[i]
ஆனாலும், கெட்டவர்கள் ஏன் ஓகோவென்று வாழ்கிறார்கள்?[j]
துரோகிகள் ஏன் நிம்மதியாக இருக்கிறார்கள்?
2 நீங்கள் அவர்களை நட்டு வைத்தீர்கள்.
அவர்கள் நன்றாக வேர்விட்டு வளர்ந்து காய்த்துக் குலுங்குகிறார்கள்.
உங்களிடம் நெருங்கியிருப்பதாக வாயளவில் சொல்கிறார்கள்,
ஆனால், அவர்களுடைய அடிமனது* உங்களைவிட்டுத் தூரமாக இருக்கிறது.[k]
3 யெகோவாவே, நான் எப்படிப்பட்டவன் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்;[l] நீங்கள் என்னைப் பார்க்கிறீர்கள்.
என் இதயத்தைச் சோதித்துப் பார்க்கிறீர்கள்; உங்கள்மேல் எவ்வளவு பக்தி இருக்கிறதென்று பார்க்கிறீர்கள்.[m]

அதி. 11
a எரே 19:5, 15
b எரே 18:18
c 1நா 28:9, எரே 17:10, எரே 20:12
d ஏசா 30:10, ஆமோ 2:12, ஆமோ 7:16
e எரே 1:1
f 2நா 36:17, புல 2:21
g எரே 18:21
h யோசு 21:8, 18

அதி. 12
i ஆதி 18:25
j யோபு 12:6, யோபு 21:7, சங் 73:3, எரே 5:28
k ஏசா 29:13
l சங் 139:1, 2
m 2ரா 20:3, சங் 17:3, எரே 11:20

11:20 *நே.மொ., "சிறுநீரகங்களையும்." வே.வா., "ஆழமான உணர்ச்சிகளையும்." #வே.வா., "சோதித்தறிகிறவர்." 12:2 *நே.மொ., "சிறுநீரகங்கள்." வே.வா., "ஆழமான உணர்ச்சிகள்."

வெட்டப்படுவதற்காகப் பிரித்து வைக்கப்படுகிற ஆடுகளைப் போல
அழிவு நாளுக்காக அந்த ஜனங்களைப் பிரித்து வையுங்கள்.
4 தேசம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு வறண்டு கிடக்க வேண்டும்?
வயல்களின் விளைச்சல் எவ்வளவு காலத்துக்குக் காய்ந்து கிடக்க வேண்டும்?[a]
அங்கே வாழ்கிறவர்கள் அக்கிரமங்கள் செய்ததால்
மிருகங்களும் பறவைகளும்கூட மறைந்துபோய்விட்டன.
ஏனென்றால், “நமக்கு என்ன நடந்தாலும் அவர் பார்க்கப்போவதில்லை” என்று அவர்கள் சொன்னார்கள்.
5 கடவுள் என்னிடம், “நீ மனுஷர்களோடு ஓடும்போதே களைத்துப்போய்விட்டால்
குதிரைகளோடு எப்படி ஓடுவாய்?[b]
சமாதானமான தேசத்தில் நீ மெத்தனமாக வாழ்ந்து பழகிவிட்டால்,
யோர்தானின் புதர்க் காடுகளில் என்ன செய்வாய்?
6 உன் சகோதரர்கள்கூட, உன் அப்பாவின் குடும்பத்தார்கூட, உனக்குத் துரோகம் செய்துவிட்டார்கள்.[c]
அவர்கள் உனக்கு எதிராகக் கூச்சல் போடுகிறார்கள்.
அவர்கள் உன்னிடம் நல்ல விஷயங்களைப் பேசினாலும்
அவர்களை நம்பாதே.
7 நான் என்னுடைய வீட்டையும் என்னுடைய சொத்தையும் கைவிட்டுவிட்டேன்.[d]
என் உயிருக்கு உயிரானவளை அவளுடைய எதிரிகளின் கையில் கொடுத்துவிட்டேன்.[e]
8 என்னுடைய சொத்தாகிய என் ஜனங்கள் காட்டிலுள்ள சிங்கத்தைப் போல ஆகிவிட்டார்கள்.
என்னைப் பார்த்துக் கர்ஜிக்கிறார்கள்.
அதனால், நான் அவர்களை வெறுத்துவிட்டேன்.
9 என்னுடைய சொத்தாகிய என் ஜனங்கள் பிணம் தின்னும் பலவண்ணப் பறவையைப் போல இருக்கிறார்கள்.
பிணம் தின்னும் மற்ற பறவைகள் அவர்களைச் சுற்றிவளைத்து தாக்குகின்றன.[f]
காட்டிலுள்ள மிருகங்களே, நீங்களும் வாருங்கள்.
வந்து சாப்பிடுங்கள்.[g]
10 மேய்ப்பர்கள் பலர் என்னுடைய திராட்சைத் தோட்டத்தை அழித்துவிட்டார்கள்.[h]
எனக்குச் சொந்தமான நிலத்தை மிதித்துப்போட்டார்கள்.[i]
நான் ஆசையாக வைத்திருந்த நிலத்தை வனாந்தரத்தைப் போலப் பாழாக்கிவிட்டார்கள்.
11 அது பொட்டல்காடாகிவிட்டது.
காய்ந்துபோய்விட்டது,* வெறுமையாகிவிட்டது.[j]
முழு தேசமே வெறிச்சோடிவிட்டது.

12:11 * அல்லது, “துக்கப்படுகிறது.”

அதி. 12
a எரே 14:6; எரே 23:10
b எரே 4:13
c எரே 9:4
d யாத் 19:5; ஏசா 47:6; லூ 13:35
e புல 2:1
f 2ரா 24:2; எசே 16:37
g ஏசா 56:9; எரே 7:33
h சங் 80:8; ஏசா 5:1, 7; எரே 6:3
i ஏசா 63:18; எரே 3:19
j எரே 9:11; எரே 10:22

அதி. 12
a ஏசா 42:24, 25
b லேவி 26:33
எரே 15:2
c லேவி 26:16
மீ 6:15
d சங் 79:4
எரே 48:26
எசே 25:3
சக 1:15
சக 2:8
e எரே 48:2
எரே 49:2
f ஏசா 60:12

ஆனால், யாருமே எச்சரிக்கையை மனதில்* வாங்கவில்லை.[a]
12 வனாந்தரத்திலுள்ள எல்லா பாதைகளின்* வழியாகவும்
கொலைகாரர்கள் வந்திருக்கிறார்கள்.
தேசம் முழுவதையும் யெகோவாவின் வாள் பதம் பார்க்கிறது.[b]
யாருக்குமே சமாதானம் இல்லை.
13 கோதுமையை விதைத்தார்கள், ஆனால் முட்களை அறுவடை
செய்கிறார்கள்.[c]
அவர்கள் பாடுபட்டு உழைத்தும் பிரயோஜனமே இல்லை.
யெகோவாவின் கோபம் பற்றியெரிவதால் அவர்களுக்கு விளைச்சலே
கிடைக்காது.
அதைப் பார்த்து வெட்கப்பட்டுப்போவார்கள்" என்று சொன்னார்.

14 யெகோவா சொல்வது இதுதான்: "என் ஜனங்களாகிய இஸ்ரவேலர்
களுக்கு நான் கொடுத்த சொத்தைப் பொல்லாதவர்களாகிய அக்கம்பக்கத்து
தேசத்தார் பறித்துக்கொண்டார்கள்.*[d] அதனால் நான் அவர்களை அவர்க
ளுடைய தேசத்திலிருந்து துரத்தியடிப்பேன்.[e] அவர்கள் மத்தியிலிருந்து
யூதா ஜனங்களைத் துரத்தியடிப்பேன். **15** ஆனால், அவர்களைத் துரத்தி
யடித்த பின்பு மறுபடியும் அவர்கள்மேல் இரக்கம் காட்டுவேன். அவர்கள்
ஒவ்வொருவரையும் அவர்களுடைய தேசத்துக்கே கொண்டுவந்து, அவர்க
ளுடைய சொத்தையே அனுபவிக்க வைப்பேன்."

16 "அவர்கள் பாகாலின் பெயரில் சத்தியம் செய்ய என் ஜனங்களுக்குக்
கற்றுக்கொடுத்தது போலவே, 'உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல்
ஆணை'* என்று சத்தியம் செய்ய அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். என்
ஜனங்களைப் போலவே என் வழியில் நடக்க வேண்டும். அப்படிச் செய்
தால், அவர்களை என் ஜனங்களோடு சீரும் சிறப்புமாக வாழ வைப்பேன்.
17 ஆனால், அவர்களில் யாராவது என் பேச்சைக் கேட்காவிட்டால் அவர்
களையும் துரத்தியடிப்பேன்; துரத்தியடிப்பது மட்டுமல்லாமல் அடியோடு
அழித்தும் போடுவேன்" என்று யெகோவா சொல்கிறார்.[f]

13 யெகோவா என்னிடம், "நீ போய், ஒரு நாரிழை* இடுப்புவாரை
வாங்கி உன் இடுப்பில் கட்டிக்கொள்; ஆனால், அதைத் தண்ணீ
ரில் நனைக்காதே" என்று சொன்னார். **2** யெகோவா சொன்னபடியே
நான் இடுப்புவாரை வாங்கி என் இடுப்பில் கட்டிக்கொண்டேன். **3** பின்பு,
யெகோவா இரண்டாவது தடவையாக என்னிடம் பேசினார். **4** "இப்போது
நீ எழுந்து, நீ கட்டியிருக்கிற இடுப்புவாரை எடுத்துக்கொண்டு யூப்ரடிஸ்*
ஆற்றுக்குப் போ. அங்கே ஒரு பாறை இடுக்கில் அதை மறைத்து வை"
என்று சொன்னார். **5** யெகோவா கட்டளை கொடுத்தபடியே நான் யூப்ர
டிஸ் ஆற்றுக்குப் போய் அதை மறைத்து வைத்தேன்.

6 ஆனால், பல நாட்களுக்குப் பின்பு யெகோவா என்னிடம், "நீ எழுந்து,
யூப்ரடிஸ் ஆற்றுக்குப் போ. நான் மறைத்து வைக்கச் சொன்ன இடுப்புவாரை
அங்கிருந்து எடுத்து வா" என்று சொன்னார். **7** அதனால், நான் யூப்ரடிஸ்

12:11 *நே.மொ., "இதயத்தில்." **12:12** *வே.வா., "தேய்ந்த பாதைகளின்." **12:14** *நே.மொ., "தொடுகிறார்கள்." **12:16** *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்." **13:1** *அதாவது, "லினன்." **13:4** *அதாவது, "ஐப்பிராத்து."

ஆற்றுக்குப் போனேன். நான் மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து அந்த
இடுப்புவாரைத் தோண்டி எடுத்தேன். ஒன்றுக்குமே உதவாத அளவுக்கு
அது பாழாகிப்போயிருந்தது.

8 அப்போது யெகோவா என்னிடம், **9** “யெகோவா சொல்வது இது
தான்: ‘இந்த இடுப்புவாரைப் போலவே நான் யூதாவின் ஆணவத்தையும்
எருசலேமின் மட்டுக்குமீறிய அகம்பாவத்தையும் அழிப்பேன்.[a] **10** இந்
தக் கெட்ட ஜனங்கள் இந்த இடுப்புவாரைப் போலவே ஒன்றுக்கும் உதவா
தவர்களாக ஆவார்கள். ஏனென்றால், அவர்கள் என் பேச்சைக் கேட்பது
இல்லை.[b] தங்கள் இதயத்தின் போக்கிலேயே பிடிவாதமாகப் போகிறார்
கள்.[c] மற்ற தெய்வங்களைத் தேடிப்போய் அவற்றை வணங்குகிறார்கள்.’
11 யெகோவா சொல்வது இதுதான்: ‘இடுப்புவார் எப்படி ஒருவருடைய
இடுப்போடு ஒட்டிக்கொண்டிருக்கிறதோ அதுபோலவே இஸ்ரவேல் ஜனங்
களும் யூதா ஜனங்களும் என்னை ஒட்டிக்கொண்டிருக்கும்படி செய்தேன்.
எனக்குப் புகழும் மகிமையும்[d] அழகும் சேர்க்கிற ஜனங்களாக[e] அவர்கள்
இருப்பதற்காகவே அப்படிச் செய்தேன். ஆனால், அவர்கள் என் பேச்சைக்
கேட்கவில்லை.’[f]

12 நீ அவர்களிடம், ‘இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது
இதுதான்: “எல்லா பெரிய ஜாடிகளிலும் திராட்சமதுவை நிரப்புங்கள்”’ என்று
சொல். அதற்கு அவர்கள், ‘எல்லா பெரிய ஜாடிகளிலும் திராட்சமதுவை
நிரப்ப வேண்டும் என்று எங்களுக்குத் தெரியாதா?’ என்று கேட்பார்கள்.
13 அப்போது நீ அவர்களிடம், ‘யெகோவா சொல்வது இதுதான்: “எருசலே
மில் இருக்கிற ஜனங்கள், குருமார்கள், தீர்க்கதரிசிகள், தாவீதின் சிம்மாசனத்
தில் உட்கார்ந்திருக்கிற ராஜாக்கள் என எல்லாருடைய வயிற்றையுமே நான்
திராட்சமதுவால் நிரப்பி, அவர்களைப் போதையில் தள்ளாட வைப்பேன்.[g]
14 ஒருவர்மேல் ஒருவர் மோதிக்கொள்ளும்படி செய்வேன்; அப்பாவும்
பிள்ளையும்கூட மோதிக்கொள்வார்கள்.[h] நான் அவர்கள்மேல் இரக்கமோ
கரிசனையோ காட்ட மாட்டேன், பரிதாபப்பட மாட்டேன். எந்தக் காரணத்
துக்காகவும் அவர்களை அழிக்காமல் விட மாட்டேன்” என்று யெகோவா
சொல்கிறார்’[i] என்று சொல்.

15 ஜனங்களே, நன்றாகக் கவனித்துக் கேளுங்கள்.
பெருமையோடு நடந்துகொள்ளாதீர்கள். ஏனென்றால், யெகோவா
இதைச் சொல்லியிருக்கிறார்.
16 உங்கள் கடவுளாகிய யெகோவா இருளை வர வைப்பதற்கு முன்பே,
இருட்டும் நேரத்தில் நீங்கள் மலைகளில் தடுமாறி விழுவதற்கு முன்பே,
அவரை மகிமைப்படுத்துங்கள்.
வெளிச்சம் வரும் என்று நீங்கள் காத்திருப்பீர்கள்.
ஆனால், அவர் இருட்டைக் கொண்டுவருவார்.
எல்லாவற்றையும் கும்மிருட்டாக மாற்றிவிடுவார்.[j]
17 நீங்கள் அவருடைய பேச்சைக் கேட்காவிட்டால்,
நான் உங்களுடைய கர்வத்தை நினைத்து மறைவில் அழுவேன்.
யெகோவாவின் ஜனங்கள்*[k] சிறைபிடிக்கப்பட்டுப் போனதை நினைத்து
கதறிக் கதறி அழுவேன்; என் கண்ணீர் ஆறாக ஓடும்.[l]

13:17 * நே.மொ., “மந்தை.”

அதி. 13
a லேவி 26:19
செப் 3:11
b 2நா 36:15, 16
c எரே 6:28
d எரே 33:9
e யாத் 19:5
உபா 26:18
சங் 135:4
f எரே 6:17
g ஏசா 29:9
ஏசா 51:17
எரே 25:27
h எரே 6:21
எசே 5:10
i எசே 7:4
எசே 24:14
j ஏசா 59:9
k சங் 100:3
l எரே 9:1

18 நீங்கள் ராஜாவிடமும் அவருடைய தாயிடமும்*[a] போய்,
‘சிம்மாசனத்தைவிட்டு இறங்கிவிடுங்கள்.
உங்கள் தலையில் இருக்கிற அழகான கிரீடங்கள் கீழே
விழப்போகின்றன’ என்று சொல்லுங்கள்.
19 தெற்கு நகரங்களின் நுழைவாசல்கள் மூடப்பட்டிருக்கின்றன;
அவற்றைத் திறக்க யாருமே இல்லை.
யூதா ஜனங்கள் எல்லாரையுமே எதிரிகள் சிறைபிடித்துக்கொண்டு
போனார்கள்; ஒருவரைக்கூட விட்டுவைக்கவில்லை.[b]
20 வடக்கிலிருந்து வருகிறவர்களை நிமிர்ந்து பாருங்கள்.[c]
உங்களிடம் கொடுக்கப்பட்ட அழகான ஆடுகள் எங்கே?[d]
21 ஆரம்பத்திலிருந்து உங்கள் தோழர்களாக இருந்தவர்களே உங்களைத்
தண்டிக்கும்போது
நீங்கள் என்ன சொல்வீர்கள்?[e]
பிரசவ வேதனையில் துடிக்கிற பெண்ணைப் போலத் துடிக்க
மாட்டீர்களா?[f]
22 ‘எனக்கு ஏன் இப்படியெல்லாம் நடந்தது?’[g] என்று உள்ளத்தில்
யோசிப்பீர்கள்.
நீங்கள் செய்த பயங்கரமான அக்கிரமங்களால்தான் உங்கள் மானம்*
பறிபோனது,[h]
உங்கள் குதிங்காலும் கடுகடுத்தது.
23 கெட்டது செய்வதில் ஊறிப்போனவர்களே,
கூஷியன்* தன்னுடைய நிறத்தையும் சிறுத்தை அதன் புள்ளிகளையும்
மாற்றிக்கொள்ள முடியுமா?[i] முடியாதே!
அப்படித்தான் உங்களாலும் நல்லது செய்ய முடியாது.
24 பாலைவனக் காற்றில் அடித்துச் செல்லப்படும் வைக்கோலைப் போல
நான் உங்களைச் சிதறிப்போக வைப்பேன்.[j]
25 இதுதான் நான் உங்களுக்கு அளந்து கொடுக்கும் கூலி” என்று
யெகோவா சொல்கிறார்.
“ஏனென்றால், நீங்கள் என்னை மறந்துவிட்டீர்கள்.[k] பொய்களை
நம்புகிறீர்கள்.[l]
26 அதனால், நான் உங்களுடைய ஆபாசத்தை எல்லாருக்கும்
காட்டுவேன்.
உங்களுடைய வெட்கக்கேட்டையும்,[m]
27 முறைகேடான உறவையும்,[n] காமவெறியையும்,
மானங்கெட்ட விபச்சாரத்தையும் எல்லாரும் பார்க்கும்படி செய்வேன்.
மலைகளிலும் வயல்வெளிகளிலும்
நீங்கள் செய்த அருவருப்புகளை நான் பார்த்தேன்.[o]
எருசலேமே, உனக்குக் கேடுதான் வரப்போகிறது!
இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் இப்படி அசுத்தமாக
நடப்பாய்?”[p]

13:18 *வே.வா., “ராஜமாதாவிடமும்.” **13:22** *வே.வா., “பாவாடை.” **13:23** *வே.வா., “எத்தியோப்பியன்.”

அதி. 13
a 2ரா 24:12; எரே 22:24, 26
b உபா 28:64
c எரே 6:22
d எசே 34:8
e ஏசா 39:1, 2
f எரே 6:24; மீ 4:9
g எரே 5:19; எரே 16:10, 11
h எசே 16:37
i நீதி 27:22
j லேவி 26:33; உபா 28:64
k எரே 2:32
l உபா 32:37, 38; ஏசா 28:15; எரே 10:14
m புல 1:8; எசே 16:37; எசே 23:29
n எரே 2:20; எசே 16:15
o ஏசா 65:7; எசே 6:13
p எசே 24:13

14 வறட்சிக் காலங்களைப் பற்றி எரேமியாவிடம் யெகோவா சொன்
னது இதுதான்:[a]
2 யூதா அழுது புலம்புகிறது.[b] அதன் நுழைவாசல்கள் பாழடைந்து கிடக்கின்றன.
துக்கத்தில் தரையோடு தரையாக விழுந்து கிடக்கின்றன.
எருசலேம் நகரமே கதறுகிறது.
3 தண்ணீர் எடுத்துவரச் சொல்லி எஜமான்கள் வேலைக்காரர்களை அனுப்புகிறார்கள்.
வேலைக்காரர்களும் தண்ணீர்த் தொட்டிகளுக்குப் போய்ப் பார்க்கிறார்கள்; அங்கே தண்ணீர் இல்லை.
அதனால் காலியான ஜாடிகளை எடுத்துக்கொண்டு
ஏமாற்றத்தோடும் அவமானத்தோடும்
தலையில் முக்காடு போட்டுக்கொண்டு திரும்பி வருகிறார்கள்.
4 விவசாயிகளும் என்ன செய்வதென்றே தெரியாமல் தலையில் முக்காடு போட்டுக்கொள்கிறார்கள்.
ஏனென்றால், தேசத்தில் மழையே இல்லை.[c]
நிலமெல்லாம் வெடித்துக் கிடக்கிறது.
5 எங்குமே புல் இல்லை.
அதனால், பெண் மான்கள்கூட குட்டிகளை விட்டுவிட்டுப் போய்விடுகின்றன.
6 காட்டுக் கழுதைகள் குன்றுகள்மேல் நிற்கின்றன.
நரிகளைப் போல மூச்சிரைக்கின்றன.
சாப்பிடுவதற்குப் புல்பூண்டுகள் இல்லாமல் அவற்றின் கண்கள் இருண்டுவிடுகின்றன.[d]
7 யெகோவாவே, நாங்கள் குற்றவாளிகள் என்பதற்கு எங்கள் குற்றங்களே சாட்சி சொல்கின்றன.
எத்தனையோ தடவை உங்களுக்குத் துரோகம் செய்திருக்கிறோம்.[e]
உங்களுக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறோம்.
ஆனாலும், உங்களுடைய பெயரின் மகிமைக்காக இப்போது எங்களுக்கு உதவி செய்யுங்கள்.[f]
8 இஸ்ரவேலர்களுக்கு நம்பிக்கை தருகிறவரே, ஆபத்துக் காலத்தில் அவர்களை மீட்கிறவரே,[g]
ஏன் அவர்களுடைய தேசத்தில் ஒரு அன்னியரைப் போல இருக்கிறீர்கள்?
ராத்திரி மட்டும் தங்கிவிட்டுப் போகிற பயணியைப் போல ஏன் இருக்கிறீர்கள்?
9 என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்துப் போயிருக்கிற மனுஷனைப் போலவும்,
காப்பாற்ற முடியாத ஒரு வீரனைப் போலவும் ஏன் இருக்கிறீர்கள்?
யெகோவாவே, நீங்கள் எங்களோடு இருக்கிறீர்கள்.[h]
நாங்கள் உங்களுடைய பெயரைத் தாங்கியிருக்கிறோம்.[i]
அதனால், எங்களைக் கைவிட்டுவிடாதீர்கள்.

அதி. 14
a உபா 28:24
b யோவே 1:10
c லேவி 26:20; உபா 28:23
d எரே 12:4; யோவே 1:18
e எஸ்றா 9:6; நெ 9:33; தானி 9:5, 8
f யோசு 7:9; சங் 25:11; சங் 115:1, 2
g சங் 106:8; சங் 106:21; ஏசா 45:15
h யாத் 29:45; உபா 23:14
i தானி 9:19

10 இந்த ஜனங்களைப் பற்றி யெகோவா சொல்வது இதுதான்: “அவர்
கள் மனம்போல் சுற்றித் திரியவே ஆசைப்படுகிறார்கள்.[a] அவர்களுடைய
கால்களை அவர்கள் கட்டுப்படுத்துவதே இல்லை.[b] அதனால், யெகோவா
அவர்களை வெறுக்கிறார்.[c] இப்போது அவர்களுடைய குற்றங்களையெல்
லாம் நினைத்துப் பார்த்து அவர்களைத் தண்டிக்கப்போகிறார்.”[d]

11 பின்பு யெகோவா என்னிடம், “இந்த ஜனங்களுக்கு நல்லது செய்
யச் சொல்லி என்னிடம் கேட்காதே.[e] **12** இவர்கள் விரதமிருந்து ஜெபம்
செய்தாலும் நான் அதைக் கேட்க மாட்டேன்.[f] இவர்கள் தகன பலிகளை
யும் உணவுக் காணிக்கைகளையும் செலுத்தினாலும் நான் ஏற்றுக்கொள்ள
மாட்டேன்.[g] இவர்களை வாளுக்கும் பஞ்சத்துக்கும் கொள்ளைநோய்க்கும்
பலியாக்குவேன்”[h] என்று சொன்னார்.

13 அதற்கு நான், “ஐயோ! உன்னதப் பேரரசராகிய யெகோவாவே! தீர்க்க
தரிசிகள் இந்த ஜனங்களிடம், ‘நீங்கள் வாளால் கொல்லப்படவும் மாட்டீர்கள்,
பஞ்சத்தால் சாகவும் மாட்டீர்கள். கடவுள் உங்களை இந்தத் தேசத்திலேயே
நிம்மதியாக வாழ வைப்பார்’[i] என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே”
என்றேன்.

14 அப்போது யெகோவா என்னிடம், “அந்தத் தீர்க்கதரிசிகள் என் பெய
ரில் பொய்யாகத் தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள்.[j] நான் அவர்களிடம் பேச
வும் இல்லை, அவர்களைப் பேசச் சொல்லவும் இல்லை, அவர்களை அனுப்
பவும் இல்லை.[k] அவர்கள் பார்த்ததாகச் சொல்லும் தரிசனங்களெல்லாம்
பொய். அவர்கள் குறிசொல்கிறபடி எதுவுமே நடக்காது. அவர்களே கதை
களை ஜோடித்து உங்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.[l] **15** அந்தத்
தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாவிட்டாலும் அவர்கள் என் பெயரில் தீர்க்க
தரிசனம் சொல்கிறார்கள். நீங்கள் வாளினாலும் பஞ்சத்தினாலும் சாக மாட்டீர்
கள் என்று சொல்கிறார்கள். ஆனால், அவர்களைப் பற்றி யெகோவாவாகிய
நான் சொல்வது இதுதான்: ‘அந்தத் தீர்க்கதரிசிகள் வாளினாலும் பஞ்சத்தினா
லும் சாவார்கள்.[m] **16** அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்வதைக் கேட்ட மக்
கள் எல்லாரும் வாளுக்கும் பஞ்சத்துக்கும் பலியாகி எருசலேமின் வீதிகளில்
கிடப்பார்கள். அவர்களையும் அவர்களுடைய மனைவிகளையும் பிள்ளைக
ளையும் புதைக்க யாருமே இருக்க மாட்டார்கள்.[n] அவர்களுடைய பாவங்க
ளுக்குத் தகுந்த தண்டனையை நான் கொடுப்பேன்.’[o]

17 நீ அவர்களிடம்,

‘ராத்திரி பகலாக என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டே
இருக்கட்டும்.[p]
ஏனென்றால், என் ஜனங்கள் படுகாயம் அடைந்திருக்கிறார்கள்.
பயங்கரமாக அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறார்கள்.[q]

18 நான் வயல்வெளிக்குப் போய்ப் பார்த்தால்,
வாளினால் வெட்டிக் கொல்லப்பட்டவர்களின் பிணங்கள்தான்
கிடக்கின்றன.[r]
நகரத்துக்குள் வந்தால்,
பஞ்சத்தினால் உண்டான கொடிய வியாதிகளைத்தான் பார்க்கிறேன்.[s]
தீர்க்கதரிசிகளும் குருமார்களும் திக்குத்தெரியாமல்
அலைந்துகொண்டிருக்கிறார்கள்’[t] என்று சொல்” என்றார்.

அதி. 14
a எரே 2:23
b எரே 2:25
c எரே 6:20
d ஓசி 8:13
e எரே 7:16; எரே 11:14
f ஏசா 1:15; ஏசா 58:3; எரே 11:11; எசே 8:18
g ஏசா 1:11
h எரே 9:16; எசே 5:12
i எரே 4:10; எரே 5:31; எரே 6:13, 14; எரே 23:16, 17; எரே 27:8-10; எசே 13:10; மீ 3:11
j எரே 23: 25, 26; எரே 29:21
k எரே 23:21; எரே 27:15
l புல 2:14
m எரே 5:12, 13; எரே 23:15; எசே 12:24; எசே 13:9
n சங் 79:2, 3; எரே 9:22
o எரே 4:18
p எரே 8:18, 21; எரே 9:1
q புல 1:15
r எசே 7:15
s புல 5:10
t உபா 28:36

19 நீங்கள் யூதாவை ஒதுக்கித்தள்ளிவிட்டீர்களா? சீயோனை அடியோடு
வெறுத்துவிட்டீர்களா?[a]
நாங்கள் குணமாக முடியாத அளவுக்கு ஏன் எங்களை
நொறுக்கிவிட்டீர்கள்?[b]
நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம்; ஆனால்,
நல்லது எதுவுமே நடக்கவில்லை.
குணமாகும் காலத்துக்காகக் காத்திருந்தோம்; ஆனால், திகில்தான்
எங்களை ஆட்டிப்படைக்கிறது![c]
20 யெகோவாவே, நாங்கள் அக்கிரமம் செய்ததை ஒத்துக்கொள்கிறோம்.
எங்கள் முன்னோர்களும் அக்கிரமம் செய்தது உண்மைதான்.
நாங்கள் எல்லாருமே உங்களுக்கு விரோதமாகப் பாவம்
செய்திருக்கிறோம்.[d]
21 ஆனாலும் உங்களுடைய பெயரை மனதில் வைத்து, எங்களை
ஒதுக்காமல் இருங்கள்.[e]
உங்களுடைய மகிமையான சிம்மாசனத்தை வெறுத்துவிடாதீர்கள்.
எங்களோடு செய்த ஒப்பந்தத்தை மறந்துவிடாதீர்கள்; அதை
முறித்துவிடாதீர்கள்.[f]
22 வானம் தானாகவே மழையைப் பொழியுமா?
அல்லது, உலகத்திலுள்ள வீணான தெய்வங்களால் மழை தர முடியுமா?
எங்கள் கடவுளான யெகோவாவே, உங்களால் மட்டும்தானே அதைச்
செய்ய முடியும்?[g]
நாங்கள் உங்களைத்தான் நம்பியிருக்கிறோம்.
உங்களால் மட்டும்தான் எல்லாவற்றையும் செய்ய முடியும்.

15 பின்பு யெகோவா என்னிடம், “மோசேயும் சாமுவேலும் என் முன்
னால் வந்து நின்றால்கூட[h] நான் இந்த ஜனங்களுக்கு இரக்கம்
காட்ட மாட்டேன். இவர்களை என் முன்னாலிருந்து துரத்திவிடு. இவர்கள்
போகட்டும். 2 ‘எங்கள் நிலைமை என்ன ஆகும்?’ என்று இவர்கள் கேட்
டால் நீ இவர்களிடம், ‘யெகோவா சொல்வது இதுதான்:

“உங்களில் சிலர் கொள்ளைநோயினால் சாவீர்கள்!
சிலர் வாளால் வெட்டிக் கொல்லப்படுவீர்கள்![i]
சிலர் பஞ்சத்தில் அடிபட்டுச் சாவீர்கள்!
சிலர் சிறைபிடிக்கப்பட்டுப் போவீர்கள்”[j]

என்று சொல்’ என்றார்.

3 யெகோவா சொல்வது இதுதான்: ‘நான்கு விதமான ஆபத்துகளை*
நான் வர வைப்பேன்.[k] அவர்களைக் கொன்றுபோடுவதற்கு வாளையும்,
இழுத்துச் செல்வதற்கு நாய்களையும், கடித்துக் குதறுவதற்கு மிருகங்களை
யும், தின்றுதீர்ப்பதற்குப் பறவைகளையும் வர வைப்பேன்.[l] 4 இந்த
ஜனங்களுக்கு வந்த கோரமான முடிவைப் பார்த்து உலகமே கதிகலங்கும்
படி செய்வேன்.[m] ஏனென்றால், எசேக்கியாவின் மகனாகிய யூதாவின் ராஜா
மனாசே, எருசலேமில் பல அக்கிரமங்களைச் செய்தான்.[n]

15:3 * அல்லது, “நியாயத்தீர்ப்புகளை.”

அதி. 14
a எரே 12:8; புல 5:22
b 2நா 36:15, 16
c எரே 8:15
d எஸ்றா 9:7; தானி 9:5, 8
e எசே 36:22; தானி 9:15
f யாத் 32:13; லேவி 26:41, 42; சங் 106:43–45
g உபா 28:12; ஏசா 30:23; யோவே 2:23

அதி. 15
h யாத் 32:11; 1சா 7:9; சங் 99:6; சங் 106:23
i எசே 5:2
j எசே 12:11
k எசே 14:21
l உபா 28:26; எரே 7:33
m உபா 28:15, 25; எரே 24:9; எசே 23:46
n 2ரா 21:11; 2ரா 23:26; 2ரா 24:3, 4

அதி. 15
a எரே 2:13
b ஏசா 1:4
c செப் 1:4
d உபா 28: 15, 18
எரே 9:21
எசே 24:21
e எரே 5:3
f எரே 44:27
எசே 5:12
g எரே 20:14
h எரே 20:5

5 எருசலேமே, யார் உனக்குக் கரிசனை காட்டுவார்கள்?
யார் உனக்கு அனுதாபம் காட்டுவார்கள்?
யார் உன்னிடம் வந்து நலம் விசாரிப்பார்கள்?'
6 யெகோவா சொல்வது இதுதான்: 'நீ என்னைவிட்டுப் போய்விட்டாய்.[a]
எனக்கு உன் முதுகைக் காட்டிக்கொண்டே இருக்கிறாய்.*[b]
அதனால், உனக்கு எதிராக என் கையை ஓங்கி, உன்னை அழித்துப்போடுவேன்.[c]
உன்மேல் இரக்கம் காட்டிக் காட்டியே சலித்துப்போய்விட்டேன்.
7 தானியங்களைப் புடைப்பது போல நகரவாசலில் நான் அவர்களைப் புடைத்து சிதறிப்போக வைப்பேன்.
பிள்ளைகளை அவர்கள் பறிகொடுக்கும்படி செய்வேன்.[d]
என் ஜனங்களை அழித்துவிடுவேன்.
ஏனென்றால், கெட்ட வழிகளைவிட்டு அவர்கள் திருந்துவதாகவே இல்லை.[e]
8 விதவைகளின் எண்ணிக்கை கடற்கரை மணலைவிட அதிகமாக ஆகும்.
பட்டப்பகலில் நான் கொலைகாரனை அனுப்பி தாய்களையும் வாலிபர்களையும் வெட்டிப்போட வைப்பேன்.
திடீரென்று தேசத்தில் பதற்றத்தையும் பீதியையும் உண்டாக்குவேன்.
9 ஏழு பிள்ளைகளைப் பெற்றவள் துவண்டுபோயிருக்கிறாள்.
மூச்சுவிடுவதற்கே சிரமப்படுகிறாள்.
பகலிலேயே அவளுடைய சூரியன் மறைந்துவிட்டது.
அதனால், அவள் அவமானத்தில் கூனிக்குறுகுகிறாள்.'*
யெகோவா சொல்வது இதுதான்: 'அவர்களில் மிச்சம் மீதி இருப்பவர்களை
எதிரிகளின் வாளுக்குப் பலியாக்குவேன்.'"[f]
10 என் தாயே, ஏன்தான் என்னைப் பெற்றீர்களோ?[g] ஐயோ!
தேசத்திலுள்ள எல்லாரோடும் எனக்கு வழக்கும் வாக்குவாதமும்தான் நடக்கிறது!
நான் கடன் கொடுத்ததும் இல்லை, கடன் வாங்கியதும் இல்லை.
ஆனாலும், எல்லாருமே என்னைச் சபிக்கிறார்கள்.
11 யெகோவா என்னிடம், "நான் நிச்சயமாகவே உனக்குத் துணையாக இருப்பேன்.
ஆபத்து வரும்போது கண்டிப்பாக உன்னைப் பாதுகாப்பேன்.
எதிரிகள் தாக்கும்போது உன்னைக் காப்பாற்றுவேன்.
12 இரும்பை, அதுவும் வடக்கிலிருந்து வந்த இரும்பை, யாராவது துண்டுதுண்டாக்க முடியுமா?
செம்பை யாராவது சுக்குநூறாக்க முடியுமா?
13 தேசமெங்கும் நீங்கள் பாவத்துக்குமேல் பாவம் செய்கிறீர்கள்.
அதனால், உங்களுடைய சொத்துகளையும் செல்வங்களையும் இலவசமாகத் தூக்கிக் கொடுத்துவிடுவேன்.[h]

15:6 * அல்லது, "என்னைவிட்டுப் பின்னால் போய்க்கொண்டே இருக்கிறாய்." 15:9 * அல்லது, "அது அவமானத்தில் கூனிக்குறுகுகிறது."

14 அவற்றை எதிரிகளின் கையில் கொடுத்துவிடுவேன்.
உங்களுக்குத் தெரியாத தேசங்களுக்கு அவை கொண்டுபோகப்படும்.[a]
என் கோபம் தீயாய்ப் பற்றியெரிகிறது.
அது உங்களைப் பொசுக்கப்போகிறது"[b] என்று சொன்னார்.
15 யெகோவாவே, நான் படுகிற பாடு உங்களுக்கே தெரியும்.
என்னை நினைத்துப் பாருங்கள், என் உதவிக்கு வாருங்கள்.
என்னைத் துன்புறுத்துகிறவர்களை எனக்காகப் பழிவாங்குங்கள்.[c]
நீங்கள் இன்னும் பொறுமையாக இருந்தால் நான் செத்தே போய்விடுவேன்.
உங்களுக்காகத்தான் எல்லா பழிப்பேச்சையும் சகித்துக்கொண்டு இருக்கிறேன்.[d]
16 உங்கள் வார்த்தை கிடைத்ததுமே அதை ரசித்து ருசித்தேன்.*[e]
அதனால், சந்தோஷத்தில் திக்குமுக்காடிப்போனேன்.
பரலோகப் படைகளின் கடவுளான யெகோவாவே, நான் உங்கள் பெயரால் அழைக்கப்படுவதை நினைத்து உள்ளம் பூரித்துப்போனேன்.
17 கூத்தும் கும்மாளமும் அடிக்கிறவர்களோடு உட்காராமல் தனியாக உட்காருகிறேன்.[f]
ஏனென்றால், நான் உங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்கிறேன்.
நீங்கள் என்னைக் கோபத்தால்* நிரப்பியிருக்கிறீர்கள்.[g]
18 எனக்கு ஏன் தீராத வலி?
என் காயம் ஏன் ஆறுவதே இல்லை?
நம்பி வருகிறவர்களுக்கு ஏமாற்றம் அளிக்கிற வறண்ட நீரோடை போல
நீங்கள் எனக்கு ஏமாற்றம்தான் அளிப்பீர்களா?
19 யெகோவா சொல்வது இதுதான்:
"நீ உன் எண்ணத்தை மாற்றிக்கொண்டால் நான் உன்னை முந்தின நிலைமைக்குக் கொண்டுவருவேன்.
நீ என் முன்னால் நிற்பாய்.
வீணானவற்றிலிருந்து விலைமதிப்புள்ளதை நீ பிரித்தெடுத்தால்,
என் சார்பில் பேசுகிறவனாக* ஆவாய்.
ஜனங்கள் உன் வழிக்கு வருவார்கள்.
ஆனால், நீ அவர்கள் வழிக்குப் போக மாட்டாய்."
20 யெகோவா சொல்வது இதுதான்: "இந்த ஜனங்களுக்கு முன்னால் நான் உன்னைப் பலமான செம்புச் சுவர் போல ஆக்குவேன்.[h]
அவர்கள் உன்னோடு மோதுவார்கள்.
ஆனாலும், ஜெயிக்க மாட்டார்கள்.[i]
ஏனென்றால், உன்னைக் காப்பாற்றுவதற்காக நான் உன்னோடு இருக்கிறேன்.
21 கெட்டவர்களின் கையிலிருந்து நான் உன்னைக் காப்பாற்றுவேன்.
கொடுமைக்காரர்களின் பிடியிலிருந்து உன்னை விடுவிப்பேன்."

15:16 *வே.வா., "அதைச் சாப்பிட்டேன்." **15:17** *வே.வா., "தண்டனைத்தீர்ப்பின் செய்திகளால்." **15:19** *வே.வா., "என்னுடைய வாய்போல்."

அதி. 15
a லேவி 26:38; எரே 16:13
b உபா 32:22; ஏசா 42:24, 25; எரே 17:4
c எரே 11:20; எரே 12:3; எரே 17:18; எரே 37:15
d சங் 69:7
e எசே 3:1-3; வெளி 10:9, 10
f சங் 1:1
g எரே 20:8
h எரே 1:18; எசே 3:9
i எரே 20:11

16 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “நீ கல்யாணம் செய்து
கொள்ளவோ இந்தத் தேசத்தில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்
ளவோ கூடாது. **3** ஏனென்றால், இந்தத் தேசத்தில் பிறக்கிற பிள்ளைகளை
யும் அவர்களைப் பெற்றெடுக்கிற தாய் தகப்பன்களையும் பற்றி யெகோவா
சொல்வது இதுதான்: **4** ‘அவர்கள் கொடிய நோய்களால் செத்துப்போவார்
கள்.[a] அவர்களுக்காகத் துக்கப்படுவதற்கோ அவர்களை அடக்கம் செய்
வதற்கோ யாரும் இருக்க மாட்டார்கள். அவர்கள் நிலத்தில் எருவாகிவிடு
வார்கள்.[b] சிலர் வாளுக்கும் பஞ்சத்துக்கும் பலியாவார்கள்.[c] அவர்களுடைய
பிணங்களைப் பறவைகளும் மிருகங்களும் தின்றுதீர்க்கும்.’

5 யெகோவா சொல்வது இதுதான்:
‘சாவு வீட்டின் விருந்துக்கு நீ போகாதே.
ஒப்பாரி வைப்பதற்கோ இரங்கல் தெரிவிப்பதற்கோ போகாதே.’[d]
‘ஏனென்றால், இந்த ஜனங்களுக்கு இனி நான் சமாதானத்தைக் கொடுக்க மாட்டேன்.
இனி அவர்கள்மேல் அன்பும் இரக்கமும் காட்ட மாட்டேன்’[e] என்று யெகோவா சொல்கிறார்.

6 ‘இந்தத் தேசத்தில் இருக்கிற சிறியவர்கள், பெரியவர்கள் என எல்லாருமே இறந்துபோவார்கள்.
அவர்கள் அடக்கம் செய்யப்பட மாட்டார்கள்.
அவர்களுக்காக யாரும் அழுது புலம்ப மாட்டார்கள்.
அவர்களுக்காக யாரும் தங்கள் உடலைக் கீறிக்கொள்ளவோ தலையை மொட்டையடிக்கவோ மாட்டார்கள்.*

7 இறந்தவர்களுக்காகத் துக்கப்படுகிறவர்களுக்கு யாரும் ஆறுதல் சொல்லவோ
சாப்பாடு கொடுக்கவோ மாட்டார்கள்.
அப்பாவையோ அம்மாவையோ பறிகொடுத்த சோகத்திலிருந்து மீளுவதற்காக
யாரும் அவர்களுக்குத் திராட்சமது கொடுக்க மாட்டார்கள்.

8 சந்தோஷமாக விருந்து கொண்டாடுகிறவர்களின் வீட்டுக்குப் போகாதே.
அவர்களோடு உட்கார்ந்து சாப்பிடாதே, குடிக்காதே.’

9 இஸ்ரவேலின் கடவுளான பரலோகப் படைகளின் யெகோவா சொல்
வது இதுதான்: ‘உன்னுடைய காலத்திலேயே, உன்னுடைய கண் முன்
னாலேயே, இந்த இடத்தில் எல்லா கொண்டாட்டத்துக்கும் குதூகலத்துக்கும்
முடிவுகட்டுவேன். மணமகனுடைய குரலும் மணமகளுடைய குரலும் கேட்
காமல்போகும்படி செய்வேன்.’[f]

10 நீ இந்த வார்த்தைகளை ஜனங்களிடம் சொல்லும்போது அவர்கள்
உன்னிடம், ‘யெகோவா ஏன் இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுக்
கப்போவதாகச் சொல்கிறார்? எங்கள் கடவுளான யெகோவாவுக்கு விரோத
மாக அப்படியென்ன பாவத்தைச் செய்துவிட்டோம்?’[g] என்று கேட்பார்கள்.
11 அப்போது நீ அவர்களிடம், ‘யெகோவா சொல்வது இதுதான்: “உங்கள்

16:6 * துக்கத்தைக் காட்டுவதற்காக விசுவாசதுரோக இஸ்ரவேலர்கள் கடைப்பிடித்த பொய்மத பழக்கங்கள்.

அதி. 16
a எரே 15:2
b சங் 79:2, 3; ஏசா 5:25; எரே 7:33; எரே 9:22; எரே 36:30
c எசே 5:12
d எசே 24:16, 17
e உபா 31:17; ஏசா 27:11; ஏசா 63:10
f ஏசா 24:7, 8; எரே 7:34; வெளி 18:23
g எரே 5:19

முன்னோர்கள் என்னை விட்டுவிட்டு[a] வேறு தெய்வங்களைத் தேடிப்
போய் பக்தியோடு கும்பிட்டார்கள்.[b] என்னைவிட்டு விலகிப்போனார்கள்.
என் சட்டதிட்டங்களை மீறினார்கள்.[c] **12** நீங்களோ அவர்களைவிட படு
மோசமாக நடந்துகொண்டீர்கள்.[d] என் பேச்சைக் கேட்பதற்குப் பதிலாக
உங்களுடைய பொல்லாத இதயத்தின் பிடிவாதப் போக்கில் போனீர்கள்.[e]
13 அதனால் நான் உங்களை இந்தத் தேசத்திலிருந்து வேறொரு தேசத்துக்
குத் துரத்தியடிப்பேன். உங்களுக்கோ உங்கள் முன்னோர்களுக்கோ தெரி
யாத அந்தத் தேசத்தில்[f] நீங்கள் ராத்திரி பகலாகப் பொய் தெய்வங்களுக்
குத்தான் சேவை செய்ய வேண்டியிருக்கும்.[g] நான் உங்களுக்கு இரக்கம்
காட்டவே மாட்டேன்"' என்று சொல்.

14 'ஆனால், காலம் வருகிறது' என்று யெகோவா சொல்கிறார். 'அது
முதல் ஜனங்கள், "இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்த
உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை!"*[h] என்று சொல்ல மாட்
டார்கள். **15** அதற்குப் பதிலாக, "இஸ்ரவேல் ஜனங்களை வடக்கு தேசத்
திலிருந்தும் அவர்கள் துரத்தப்பட்டிருந்த மற்ற எல்லா தேசங்களிலிருந்தும்
கூட்டிக்கொண்டு வந்த உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை!"*
என்றே சொல்வார்கள். நான் அவர்களுடைய முன்னோர்களுக்குக் கொடுத்த
தேசத்துக்கே மறுபடியும் அவர்களைக் கூட்டிக்கொண்டு வருவேன்.'[i]

16 யெகோவா சொல்வது இதுதான்: 'இதோ, நான் நிறைய மீனவர்களை
வரவழைப்பேன்.
அவர்கள் இஸ்ரவேலர்களை வலைவீசிப் பிடிப்பார்கள்.
அதன் பின்பு, நான் நிறைய வேட்டைக்காரர்களை வரவழைப்பேன்.
அவர்கள் இஸ்ரவேலர்களை எல்லா மலைகளிலும் குன்றுகளிலும்
பாறை இடுக்குகளிலும்
வேட்டையாடிப் பிடிப்பார்கள்.

17 இஸ்ரவேலர்கள் செய்கிற எல்லாவற்றையும் நான்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்.
அவர்கள் என் கண்ணிலிருந்து தப்ப முடியாது.
அவர்களுடைய பாவங்களை என்னிடமிருந்து மறைக்க முடியாது.

18 முதலில், அவர்கள் செய்த பாவத்துக்கும் குற்றத்துக்கும் முழுமையாகத்
தண்டனை கொடுப்பேன்.[j]
ஏனென்றால், உயிரில்லாத அருவருப்பான சிலைகளை வணங்கி என்
தேசத்தை அவர்கள் தீட்டுப்படுத்திவிட்டார்கள்.
நான் சொத்தாகக் கொடுத்த தேசத்தை அந்த அருவருப்புகளால்
நிரப்பியிருக்கிறார்கள்'[k] என்று சொன்னார்."

19 யெகோவாவே, என் பலமே, என் கோட்டையே,
இக்கட்டு நாளில் ஓடி ஒளிந்துகொள்வதற்கான அடைக்கலமே,[l]
பூமியெங்கும் இருக்கிற ஜனங்கள் உங்களிடம் வந்து,
"எங்கள் முன்னோர்கள் ஒன்றுக்கும் உதவாத சிலைகளையும்,
வீணான பொய் தெய்வங்களையுமே வணங்கிவந்தார்கள்"[m]
என்று சொல்வார்கள்.

16:14, 15 * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்."

அதி. 16
- *a* நியா 2:12
- *b* எரே 8:1, 2
- *c* தானி 9:11; ஆமோ 2:4
- *d* எரே 7:26
- *e* நெ 9:29; எரே 6:28
- *f* 2நா 7:20; எரே 15:14; எரே 17:4
- *g* உபா 4:27, 28; உபா 28:36
- *h* யாத் 20:2; எரே 23:7, 8
- *i* உபா 30:1-3; எரே 3:18; எரே 24:6; எரே 30:3; எரே 32:37; ஆமோ 9:14
- *j* ஏசா 40:2
- *k* லேவி 26:30; சங் 106:38
- *l* எரே 17:17
- *m* எரே 10:5, 14

20 மனுஷன் தனக்காகத் தெய்வங்களை உண்டாக்க முடியுமா?
அவன் உண்டாக்குகிறவை உண்மையில் தெய்வங்கள் கிடையாதே![a]
21 “அதனால், அவர்கள் என்னைத் தெரிந்துகொள்ளும்படி செய்வேன்.
இப்போது, என் சக்தியையும் பலத்தையும் அவர்கள்
தெரிந்துகொள்ளும்படி செய்வேன்.
என் பெயர் யெகோவா என்பதை அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.”

17 “யூதாவின் பாவம் இரும்பு எழுத்தாணியால் எழுதப்பட்டிருக்கிறது.
அவர்களுடைய இதயப் பலகையிலும் பலிபீடங்களின்
கொம்புகளிலும்
வைர நுனியால் அது செதுக்கப்பட்டிருக்கிறது.
2 அடர்த்தியான மரங்களின் கீழும், பெரிய குன்றுகளின் மேலும்,
வெட்டவெளியில் இருக்கிற மலைகளின் மேலும்[b]
அவர்கள் வைத்திருந்த பலிபீடங்களையும் பூஜைக் கம்பங்களையும்*[c]
3 அவர்களுடைய பிள்ளைகள்கூட ஞாபகம் வைத்திருக்கிறார்கள்.
யூதா ஜனங்களே, தேசமெங்கும் நீங்கள் பாவம் செய்ததால்
உங்களுடைய ஆராதனை மேடுகளை எதிரிகளின் கையில்
கொடுப்பேன்.[d]
உங்களுடைய எல்லா செல்வங்களையும் கொள்ளைபோக வைப்பேன்.[e]
4 நான் கொடுத்த சொத்து உங்களுடைய கையைவிட்டுப் போவதற்கு
நீங்களே காரணமாவீர்கள்.[f]
முன்பின் தெரியாத தேசத்தில் உங்கள் எதிரிகளுக்கு
அடிமைகளாவீர்கள்.[g]
ஏனென்றால், என் கோபத்தைத் தீ போல நீங்கள்
கிளறிவிட்டிருக்கிறீர்கள்.*[h]
அது எப்போதும் எரிந்துகொண்டே இருக்கும்.”
5 யெகோவா சொல்வது இதுதான்:
“யெகோவாவாகிய என்னை விட்டுவிட்டு
அற்ப மனுஷனையும் மனுஷனுடைய பலத்தையும்[i]
நம்புகிறவன் சபிக்கப்படுவான்.
6 பாலைவனத்தில் நிற்கிற தனி மரம் போல அவன் ஆவான்.
அவன் நல்லதை அனுபவிக்க மாட்டான்.
வனாந்தரத்தின் வறண்ட பகுதிகளிலும்,
யாருமே குடியிருக்க முடியாத உப்புநிலத்திலும்தான்
அவன் குடியிருப்பான்.
7 யெகோவாமேல் விசுவாசம் வைக்கிறவனும்,
யெகோவாமேல் நம்பிக்கை வைக்கிறவனும் ஆசீர்வதிக்கப்படுவான்.[j]
8 வாய்க்கால்களின் ஓரமாக நடப்பட்டு,
தண்ணீர் பக்கமாக வேர்விடும் மரத்தைப் போல அவன் ஆவான்.
வெயில் கொளுத்தினாலும் உஷ்ணத்தை உணர மாட்டான்.

அதி. 16
a சங் 115:4
எரே 2:11
1கொ 8:4

அதி. 17
b ஏசா 1:29
எசே 6:13
c நியா 3:7
2நா 24:18
2நா 33:1, 3
d லேவி 26:30
எசே 6:3
e 2ரா 24:11, 13
எரே 15:13
f புல 5:2
g உபா 28:48
எரே 16:13
h ஏசா 5:25
எரே 15:14
i 2ரா 16:7
ஏசா 30:1, 2
j சங் 34:8
சங் 146:5
ஏசா 26:3

17:2 *சொல் பட்டியலைப் பாருங்கள். **17:4** *அல்லது, “என் கோபத்தால் நீங்கள் தீ போலப் பற்ற வைக்கப்பட்டிருக்கிறீர்கள்.”

எப்போதும் செழிப்பாக* இருப்பான்.[a]
வறட்சிக் காலத்தில்கூட கவலையில் வாட மாட்டான்.
எப்போதும் கனி கொடுத்துக்கொண்டே இருப்பான்.
9 எல்லாவற்றையும்விட மனுஷனுடைய இதயமே நயவஞ்சகமானது;
அது எதையும் செய்யத் துணியும்.*[b]
அதை யாரால் புரிந்துகொள்ள முடியும்?
10 யெகோவாவாகிய நான் இதயத்தை ஆராய்ந்து பார்க்கிறேன்.[c]
அடிமனதின் யோசனைகளை* பரிசோதித்துப் பார்த்து,
அவரவர் வழிகளுக்கும் செயல்களுக்கும் தகுந்தபடி
அவரவருக்குக் கூலி கொடுப்பேன்.[d]
11 ஒரு கவுதாரி தான் போடாத முட்டைகளைச் சேர்த்து வைப்பது போல,
மோசடிக்காரன் மற்றவர்களுடைய சொத்துகளைச் சேர்த்து வைக்கிறான்.[e]
ஆனால், கொஞ்சக் காலம்கூட அவற்றை அவனால் அனுபவிக்க முடியாது.
கடைசியில், அவன் முட்டாளாகத்தான் இருப்பான்."
12 கடவுளுடைய மகிமையான சிம்மாசனம் ஆரம்பத்திலிருந்தே உயர்ந்திருக்கிறது.
அதுவே நம்முடைய ஆலயம்.[f]
13 இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய யெகோவாவே,
உங்களைவிட்டு விலகிப்போகிற* எல்லாரும் அவமானம் அடைவார்கள்.
உங்களுக்குத் துரோகம் செய்கிறவர்களின் பெயர்கள் மண்ணில்தான் எழுதப்படும்.[g]
ஏனென்றால், வாழ்வு தரும் நீரூற்றாகிய யெகோவாவை அவர்கள் விட்டுவிட்டார்கள்.[h]
14 யெகோவாவே, உங்களைத்தான் நான் எப்போதும் புகழ்கிறேன்.
நீங்கள் என்னைக் குணமாக்குங்கள், அப்போது நான் குணமாவேன்.[i]
என்னைக் காப்பாற்றுங்கள், அப்போது நான் பிழைத்துக்கொள்வேன்.
15 சிலர் என்னிடம்,
"யெகோவா சொன்னதெல்லாம் ஏன் இன்னும் நடக்கவில்லை?[j]
தயவுசெய்து அதையெல்லாம் சீக்கிரமாக நடத்திக்காட்டச் சொல்!" என்கிறார்கள்.
16 ஆனாலும், நான் ஒரு மேய்ப்பனாக உங்களைப் பின்பற்றுவதை விட்டுவிட்டு ஓடிப்போகவில்லை.
அழிவு நாள் வர வேண்டுமென்று ஆசைப்படவில்லை.
நான் என்னென்ன பேசினேன் என்று உங்களுக்கே நன்றாகத் தெரியும்.
உங்கள் கண் முன்னால்தானே எல்லாவற்றையும் பேசினேன்!

17:8 * வே.வா., "இலை உதிராமல்." **17:9** * அல்லது, "அதைக் குணப்படுத்தவே முடியாது." **17:10** * நே.மொ., "சிறுநீரகங்களை." வே.வா., "ஆழமான உணர்ச்சிகளை." **17:13** * வே.வா., "விசுவாசதுரோகம் செய்கிற."

அதி. 17
a சங் 1:3; சங் 92:12, 13
b ஆதி 6:5; ஆதி 8:21; நீதி 28:26
c 1சா 16:7; 1நா 28:9; நீதி 17:3; நீதி 21:2
d ரோ 2:6; கலா 6:7; வெளி 2:23; வெளி 22:12
e நீதி 28:20; ஏசா 1:23; யாக் 5:4
f 2நா 2:5; ஏசா 6:1
g சங் 73:27; ஏசா 1:28
h எரே 2:13; வெளி 22:1
i எரே 15:20
j ஏசா 5:19; 2பே 3:4

17 என்னைத் திகிலடைய வைக்காதீர்கள்.
ஆபத்து நாளில் நீங்கள்தான் எனக்கு அடைக்கலம்.
18 என்னைத் துன்புறுத்துகிறவர்களுக்கு அவமானம் வரட்டும்.[a]
ஆனால், எனக்கு அவமானம் வர அனுமதிக்காதீர்கள்.
அவர்கள் திகிலடையட்டும்.
ஆனால், நான் திகிலடைய அனுமதிக்காதீர்கள்.
அவர்களுக்கு எதிராக அழிவு நாளைக் கொண்டுவாருங்கள்.[b]
அவர்களை நொறுக்கிப்போடுங்கள், அடியோடு அழித்துவிடுங்கள்.

19 யெகோவா என்னிடம், “யூதாவின் ராஜாக்கள் வந்துபோகிற முக்
கிய* நுழைவாசலுக்கும் எருசலேமின் மற்ற எல்லா நுழைவாசல்களுக்
கும் நீ போ. அங்கே நின்றுகொண்டு இப்படிச் சொல்:[c] **20** ‘இந்த நுழை
வாசல்கள் வழியாக வந்துபோகிற யூதாவின் ராஜாக்களே, யூதா
ஜனங்களே, எருசலேம் ஜனங்களே, யெகோவாவின் செய்தியைக் கேளுங்
கள். **21** யெகோவா சொல்வது இதுதான்: “ஜாக்கிரதை! ஓய்வுநாளில் நீங்
கள் சரக்குகளைச் சுமந்துகொண்டு போகக் கூடாது, எருசலேமின் நுழை
வாசல்கள் வழியாக உள்ளே கொண்டுவரவும் கூடாது.[d] **22** ஓய்வுநாளில்
உங்கள் வீடுகளிலிருந்து எந்தச் சரக்குகளையும் எடுத்துவரக் கூடாது. நீங்
கள் எந்த வேலையும் செய்யக் கூடாது.[e] ஓய்வுநாளைப் புனிதமான
நாளாக அனுசரிக்க வேண்டும். இந்தக் கட்டளையைத்தான் நான் உங்
கள் முன்னோர்களுக்குக் கொடுத்தேன்.[f] **23** ஆனால், அவர்கள் கீழ்ப்படி
யவில்லை. நான் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் காதில் வாங்கவே
இல்லை. நான் எவ்வளவோ கண்டித்தும் அவர்கள் திருந்தவே இல்லை.”’[g]

24 ‘யெகோவா சொல்வது இதுதான்: “நீங்கள் ஓய்வுநாளில் இந்த நகரத்
தின் நுழைவாசல்கள் வழியாக எந்தச் சரக்குகளையும் கொண்டுவரக்
கூடாது. ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யாமல் அதைப் புனிதமான
நாளாக அனுசரிக்க வேண்டும்.[h] நான் சொல்வதையெல்லாம் நீங்கள் அப்ப
டியே கேட்டு நடந்தால், **25** தாவீதின் சிம்மாசனத்தில்[i] உட்காருகிற ராஜாக்
களும் இளவரசர்களும் இந்த நகரத்தின் நுழைவாசல்கள் வழியாக ரதங்களி
லும் குதிரைகளிலும் வருவார்கள். அவர்களோடு யூதா ஜனங்களும்
எருசலேம் ஜனங்களும் வருவார்கள்.[j] இந்த நகரத்தில் எப்போதுமே ஜனங்
கள் குடியிருப்பார்கள். **26** யூதாவின் நகரங்களிலிருந்தும், எருசலேமின்
சுற்றுப்புறங்களிலிருந்தும், பென்யமீன் தேசத்திலிருந்தும்,[k] தாழ்வான பிர
தேசத்திலிருந்தும்,[l] மலைப்பகுதியிலிருந்தும், நெகேபிலிருந்தும்* ஜனங்கள்
தகன பலிகளையும்[m] நன்றிப் பலிகளையும்[n] மற்ற பலிகளையும்[o] உணவுக்
காணிக்கைகளையும்[p] சாம்பிராணியையும் எடுத்துக்கொண்டு யெகோவா
வின் ஆலயத்துக்கு வருவார்கள்.

27 ஆனால், நீங்கள் என் பேச்சைக் கேட்காமல் ஓய்வுநாளின்
புனிதத்தைக் கெடுத்தீர்கள் என்றால், ஓய்வுநாளின்போது சரக்குகளைச்
சுமந்துகொண்டும் எருசலேமின் நுழைவாசல்கள் வழியாக அவற்றை எடுத்
துக்கொண்டும் வந்தீர்கள் என்றால், அந்த நுழைவாசல்களில் தீ வைப்பேன்.
அந்தத் தீ அணையாமல் எரிந்துகொண்டே இருக்கும். அது எருசலேமின்
கோட்டைகளைச்[q] சாம்பலாக்கிவிடும்”’[r] என்று சொன்னார்.”

17:19 * நே.மொ., “ஜனங்களின்.” **17:26** * வே.வா., “தெற்கிலிருந்தும்.”

அதி. 17
a எரே 15:15, எரே 20:11
b எரே 18:23
c எரே 7:2
d நெ 13:19
e யாத் 20:9, 10; லேவி 23:3
f யாத் 31:13
g ஏசா 48:4; எசே 20:13
h உபா 5:12-14
i சங் 132:11
j எரே 22:4
k எரே 32:44
l எரே 33:13
m லேவி 1:3
n சங் 107:22; சங் 116:17; எரே 33:10, 11
o எஸ்றா 3:3
p லேவி 2:1, 2
q 2ரா 25:9, 10; எரே 39:8
r 2ரா 22:16, 17; புல 4:11

18 எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து ஒரு செய்தி கிடைத்தது;
அவர், **2** “நீ எழுந்து குயவனின் வீட்டுக்குப் போ.[a] அங்கே நான்
உன்னிடம் பேசுவேன்” என்று சொன்னார்.

3 அவர் சொன்னபடியே நான் குயவனின் வீட்டுக்குப் போனேன்.
அங்கே அந்தக் குயவன் களிமண்ணால் ஒரு பானை செய்துகொண்டிருந்
தான். **4** அது சரியான வடிவத்தில் வரவில்லை. அதனால், அந்தக் களி
மண்ணை வைத்து வேறொரு பானையைத் தன் விருப்பப்படி செய்தான்.

5 அப்போது யெகோவா என்னிடம், **6** “‘இஸ்ரவேல் ஜனங்களே, இந்
தக் குயவன் செய்தது போலவே நானும் உங்களுக்குச் செய்ய முடி
யாதா?’ என்று யெகோவா கேட்கிறார். ‘இஸ்ரவேல் ஜனங்களே, குயவனின்
கையில் களிமண் இருப்பது போலவே நீங்கள் என் கையில் இருக்கிறீர்
கள்.[b] **7** ஒரு தேசத்தை அல்லது ராஜ்யத்தைக் கவிழ்க்கப்போவதாகவும்
அழிக்கப்போவதாகவும்[c] நான் சொன்ன பின்பு, **8** அங்குள்ள ஜனங்கள்
கெட்டது செய்வதை விட்டுவிட்டால் நானும் என் மனதை மாற்றிக்கொண்டு
அவர்களை அழிக்காமல் விட்டுவிடுவேன்.[d] **9** ஆனால், ஒரு தேசத்தை
அல்லது ராஜ்யத்தைச் செழித்தோங்க வைப்பேன் என்று நான் சொன்ன
பின்பு, **10** அங்குள்ள ஜனங்கள் நான் வெறுக்கிற காரியங்களைச் செய்து
என் பேச்சைக் கேட்காமல் போய்விட்டால் நானும் என் மனதை மாற்றிக்
கொண்டு அவர்களுக்கு நல்லது செய்யாமல் போய்விடுவேன்.’

11 இப்போது நீ யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிற ஜனங்களிடம்
தயவுசெய்து இப்படிச் சொல்: ‘யெகோவாவின் செய்தி இதுதான்: “நான்
உங்களை அழிக்க நினைத்திருக்கிறேன்; உங்களைத் தண்டிக்கத் திட்டமிட்
டிருக்கிறேன். தயவுசெய்து கெட்ட வழிகளையும் கெட்ட பழக்கவழக்கங்க
ளையும் விட்டுவிட்டுத் திருந்துங்கள்”’”[e] என்று சொன்னார்.

12 ஆனால் அவர்கள், “எங்களால் முடியாது![f] நாங்கள் என்ன நினைக்
கிறோமோ அதைத்தான் செய்வோம். நாங்கள் ஒவ்வொருவரும் எங்க
ளுடைய பொல்லாத இதயத்தின் பிடிவாதப் போக்கில்தான் போவோம்”[g]
என்று சொன்னார்கள்.

13 அதனால் யெகோவா,

“தயவுசெய்து நீங்களே மற்ற தேசங்களுக்குப் போய்க் கேட்டுப்
பாருங்கள்.
இது போல ஒன்று எங்கேயாவது நடந்திருக்கிறதா?
கன்னிப்பெண்ணாகிய இஸ்ரவேல் படுகேவலமான காரியத்தைச்
செய்திருக்கிறாள்.[h]

14 லீபனோனின் மலைகளில் உள்ள பனி எப்போதாவது உருகுமா?
தொலைதூரத்திலிருந்து பாய்ந்து வருகிற குளிர்ந்த தண்ணீர்
எப்போதாவது வற்றிப்போகுமா?

15 ஆனால், என் ஜனங்கள் என்னை மறந்துவிட்டார்கள்.[i]
ஒன்றுக்கும் உதவாத தெய்வங்களுக்குத் தகன பலி செலுத்துகிறார்கள்.*[j]
பூர்வ கால வழியில் போகிறவர்களைத் தடுக்கி விழ வைக்கிறார்கள்.[k]
கரடுமுரடாக இருக்கிற சிறு பாதைகளில் அவர்களைப் போக
வைக்கிறார்கள்.

18:15 * வே.வா., “தூபம் காட்டுகிறார்கள்.”

அதி. 18
a எரே 19:1
b ரோ 9:20, 21
c எரே 1:10; எரே 12:14; எரே 25:9; எரே 45:4
d 1ரா 8:33, 34; சங் 106:45; எரே 7:3; எரே 26:3; எசே 18:21; யோவே 2:13; யோனா 3: 5, 10
e ஏசா 1:16; எசே 18:23
f எரே 2:25
g உபா 29: 19, 20; எரே 7:24
h எரே 2:13
i எரே 2:19; எரே 3:21
j எரே 10:14, 15
k எரே 6:16

அதி. 18
a லேவி 26:33
எசே 6:14
b 1ரா 9:8
எரே 19:8
புல 2:15
மீ 6:16
c உபா 28:37
d உபா 31:17
e எரே 11:19
f சங் 35:7
g 2நா 36:17
h எரே 12:3
i புல 5:3
j சங் 38:12
k எரே 11:19, 20

16 அதனால், அவர்களுடைய தேசத்துக்குக் கோரமான முடிவு வரும்.[a]
என்றென்றைக்கும் அதைப் பார்த்து ஜனங்கள் கேலி செய்வார்கள்.*[b]
அந்த வழியாகப் போகிற எல்லாரும் அதிர்ச்சியில்
தலையாட்டிக்கொண்டு போவார்கள்.[c]
17 கிழக்குக் காற்று எப்படிப் பதரைச் சிதறிப்போக வைக்குமோ
அப்படியே நான் அவர்களை எதிரிகளுக்கு முன்னால் சிதறிப்போக வைப்பேன்.
அழிவு நாளில் நான் அவர்களுக்கு என் முகத்தைக் காட்டாமல்
முதுகைக் காட்டுவேன்"[d] என்று சொல்கிறார்.

18 ஆனால் அவர்கள் ஒருவரிடம் ஒருவர், "வாருங்கள், நாம் திட்டம்
போட்டு எரேமியாவை ஒரு வழி பண்ணலாம்.[e] கடவுளுடைய சட்டத்தைக்
கற்றுக்கொடுக்க நமக்குத்தான் குருமார்கள் இருக்கிறார்களே, ஆலோசனை
சொல்ல ஞானிகள் இருக்கிறார்களே, கடவுளுடைய செய்தியைச் சொல்ல
தீர்க்கதரிசிகள் இருக்கிறார்களே. அதனால் வாருங்கள், எல்லாரும் போய்
எரேமியாவைக் குற்றம்சாட்டிப் பேசலாம்.* அவன் சொல்வதைக் காதில்
வாங்காமல் வந்துவிடலாம்" என்று சொன்னார்கள்.

19 யெகோவாவே, தயவுசெய்து என் ஜெபத்தைக் கேளுங்கள்.
என்னுடைய எதிரிகள் பேசுவதையெல்லாம் கேளுங்கள்.
20 நான் நல்லது செய்தும் அவர்கள் எனக்குக் கெடுதல் செய்ய நினைப்பது நியாயமா?
என்னைக் குழிதோண்டிப் புதைக்கப் பார்க்கிறார்களே.[f]
அவர்கள்மேல் நீங்கள் கோபத்தைக் காட்டாமல் இருப்பதற்கு
நான் எப்படியெல்லாம் அவர்களுக்காகப் பரிந்து பேசினேன் என்று நினைத்துப் பாருங்கள்.
21 இப்போது, தேசத்திலுள்ள ஆண்களைக் கொள்ளைநோயால் கொன்றுபோடுங்கள்.
வாலிபர்களைப் போர்க்களத்தில் வெட்டிச் சாய்த்துவிடுங்கள்.[g]
அவர்களுடைய பிள்ளைகளைப் பஞ்சத்துக்கும்
வாளுக்கும் பலியாக்குங்கள்.[h]
அவர்களுடைய மனைவிகள் கணவனையும் பிள்ளைகளையும் இழந்து தவிக்கட்டும்.[i]
22 அவர்களைத் திடீரென்று தாக்க கொள்ளைக்கூட்டத்தை அனுப்புங்கள்.
அவர்களுடைய வீடுகளில் அலறல் சத்தம் கேட்கட்டும்.
ஏனென்றால், என்னைப் பிடிப்பதற்காகக் குழி தோண்டியிருக்கிறார்கள்.
என்னைச் சிக்க வைப்பதற்காக வலைகளை விரித்திருக்கிறார்கள்.[j]
23 ஆனால் யெகோவாவே,
என்னைத் தீர்த்துக்கட்ட அவர்கள் என்னென்ன சதி செய்கிறார்கள்
என்று உங்களுக்கே தெரியும்.[k]
அவர்களுடைய குற்றத்தை மன்னிக்காதீர்கள்.
அவர்களுடைய பாவங்களை மறந்துவிடாதீர்கள்.

18:16 * நே.மொ., "விசில் அடிப்பார்கள்." **18:18** * வே.வா., "எரேமியாவை வார்த்தைகளால் தாக்கலாம்."

அவர்கள்மேல் உங்கள் கோபத்தைக் காட்டுங்கள்.[a]
அப்போது, அவர்கள் உங்களுக்கு முன்னால் வீழ்ச்சி அடையட்டும்.[b]

19 யெகோவா என்னிடம், "நீ ஒரு குயவனிடம் போய் ஒரு மண்
ஜாடியை வாங்கிக்கொள்.[c] ஜனங்களின் பெரியோர்களையும்* மூத்த
குருமார்களையும் கூட்டிக்கொண்டு, 2 'குயவனின் நுழைவாசலுக்கு' பக்கத்
தில் இருக்கிற பென்-இன்னோம்*[d] பள்ளத்தாக்குக்குப் போய் இந்த வார்த்
தைகளை அறிவி: 3 'யூதாவின் ராஜாக்களே, எருசலேம் ஜனங்களே,
யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள். இஸ்ரவேலின் கடவுளும் பரலோ
கப் படைகளின் கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்:
"நான் சொல்வதைக் கேட்டு எல்லாரும் அதிர்ச்சி அடைவீர்கள்.* நான்
இந்த இடத்தை அழிக்கப்போகிறேன். 4 ஏனென்றால், நீங்கள் என்னை
விட்டுவிட்டு,[e] உங்களுக்கும் உங்களுடைய முன்னோர்களுக்கும் யூதாவின்
ராஜாக்களுக்கும் தெரியாத பொய் தெய்வங்களுக்கு இங்கே பலி செலுத்து
கிறீர்கள். அப்பாவிகளை இங்கே கொன்று குவிக்கிறீர்கள்.[f] இந்த இடத்தை
அடையாளம் தெரியாதபடி மாற்றிவிட்டீர்கள்.[g] 5 இங்கே பாகாலின் ஆரா
தனை மேடுகளைக் கட்டி, பாகாலுக்குத் தகன பலி கொடுப்பதற்காக உங்கள்
பிள்ளைகளை நெருப்பில் சுட்டெரிக்கிறீர்கள்.[h] இதை நான் செய்யச் சொல்
லவே இல்லை. இப்படிச் செய்யும்படி நான் கட்டளை கொடுக்கவே இல்லை.
இந்த யோசனைகூட எனக்கு* வந்ததே இல்லை."'[i]
6 அதனால், யெகோவா சொல்வது இதுதான்: '"நாட்கள் வரும்.
அப்போது இந்த இடம் தோப்பேத் என்றோ பென்-இன்னோம் பள்ளத்
தாக்கு என்றோ அழைக்கப்படாமல், படுகொலையின் பள்ளத்தாக்கு என்றே
அழைக்கப்படும்.[j] 7 யூதா ஜனங்களும் எருசலேம் ஜனங்களும் போடுகிற
திட்டங்களை இங்கே நான் குலைத்துப்போடுவேன். அவர்களைக் கொல்லத்
துடிக்கிற எதிரிகளின் வாளுக்கு அவர்களைப் பலியாக்குவேன். அவர்களு
டைய பிணங்களைப் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் உணவாகக்
கொடுப்பேன்.[k] 8 அதனால், அவர்களுடைய தேசத்துக்குக் கோரமான
முடிவு வரும். அதைப் பார்த்து எல்லாரும் கேலி செய்வார்கள்.* அந்த வழி
யாகப் போகிற ஒவ்வொருவனும் அதிர்ச்சி அடைவான், அதற்குக் கிடைத்த
எல்லா தண்டனையையும் பார்த்துக் கேலி செய்வான்.[l] 9 அவர்களைக்
கொல்லத் துடிக்கிற எதிரிகள் அவர்களைச் சுற்றிவளைப்பார்கள். அப்போது,
அவர்கள் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் ஒருவரை ஒருவர் கொன்று சாப்பி
டுவார்கள். தங்களுடைய மகன்களையும் மகள்களையும்கூட விட்டுவைக்க
மாட்டார்கள்."'[m]
10 பின்பு, நீ கூட்டிக்கொண்டு போனவர்களுடைய கண் எதிரிலேயே
அந்த மண்ஜாடியை உடைத்து நொறுக்கிப்போடு. 11 அதன்பின் அவர்க
ளிடம், 'பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது என்னவென்றால்,
"இப்படித்தான் இந்த ஜனங்களையும் இந்த நகரத்தையும் நான் நொறுக்கிப்
போடுவேன். சுக்குநூறான மண்ஜாடியை ஒட்ட வைக்க முடியுமா? அதே
கதிதான் இவர்களுக்கும் வரும். இறந்தவர்கள் தோப்பேத்தில் புதைக்கப்

19:1 *வே.வா., "மூப்பர்களையும்." 19:2 *அர்த்தம், "இன்னோம் மகனின்." 19:3 *நே.மொ., "கேட்டால் எல்லாருடைய காதுகளும் கூசும்." 19:5 *நே.மொ., "என் இதயத்தில்." 19:8 *நே.மொ., "விசில் அடிப்பார்கள்."

அதி. 18
a எரே 15:15
b சங் 35:4

அதி. 19
c எரே 18:2
d யோசு 15:8, 12; 2நா 28:1, 3; எரே 7:31
e 2ரா 22:16, 17; ஏசா 65:11
f 2ரா 21:16; ஏசா 59:7; எரே 2:34; புல 4:13; மத் 23:34, 35
g 2நா 33:1, 4
h 2நா 28:1, 3; 2நா 33:1, 6; ஏசா 57:5
i லேவி 18:21; எரே 7:31; எரே 32:35
j எரே 7:32
k உபா 28:25, 26; சங் 79:2; எரே 7:33; எரே 16:4
l 1ரா 9:8; எரே 18:16; புல 2:15
m லேவி 26:29; உபா 28:53; புல 2:20; புல 4:10; எசே 5:10

படுவார்கள். புதைப்பதற்கு இடமே இல்லாத அளவுக்கு அங்கே பிணங்கள் குவிந்திருக்கும்"[a] என்று சொல்.'

12 யெகோவா சொல்வது என்னவென்றால், 'இப்படித்தான் இந்த இடத்தையும் இந்த ஜனங்களையும் நான் அழிப்பேன். இந்த நகரத்தை நான் தோப்பேத்தைப் போல ஆக்கிவிடுவேன்.
13 எருசலேம் ஜனங்களுடைய வீடுகளும் யூதாவின் ராஜாக்களுடைய அரண்மனைகளும் இந்த தோப்பேத்தைப்[b] போலவே அசுத்தமாகும். ஏனென்றால், அவற்றின் மொட்டைமாடிகளில் அவர்கள் சூரியனுக்கும் சந்திரனுக்கும் நட்சத்திரங்களுக்கும் பலி செலுத்துகிறார்கள்.[c] பொய் தெய்வங்களுக்குத் திராட்சமதுவைக் காணிக்கையாக ஊற்றுகிறார்கள்'"[d] என்று சொன்னார்.

14 யெகோவா சொன்னபடியே எரேமியா தோப்பேத்துக்குப் போய்த் தீர்க்கதரிசனம் சொன்னார். பின்பு, யெகோவாவின் ஆலயத்துக்கு வந்து அதன் பிரகாரத்தில் நின்றுகொண்டு எல்லா ஜனங்களிடமும்,
15 "இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: 'நீங்கள் எல்லாரும் என் பேச்சைக் கேட்கப் பிடிவாதமாக மறுத்துவிட்டதால்[e] நான் சொன்ன எல்லா தண்டனையையும் இந்த நகரத்துக்கும் நகர்ப்புறத்துக்கும் கொண்டுவரப் போகிறேன்'" என்று சொன்னார்.

20 எரேமியா சொன்ன இந்தத் தீர்க்கதரிசனங்களை இம்மேரின் மகன் பஸ்கூர் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் யெகோவாவின் ஆலயத்தில் குருவாகவும் தலைமை ஆணையராகவும் இருந்தார்.
2 எல்லாவற்றையும் கேட்ட பின்பு அவர் எரேமியாவைத் தடியால் அடிக்கவும், தொழுமரத்தில் மாட்டி வைக்கவும்[f] உத்தரவு போட்டார். அந்தத் தொழுமரம் யெகோவாவின் ஆலயத்தில் 'பென்யமீனின் உயர்ந்த நுழைவாசலுக்கு' பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது.
3 அடுத்த நாள், எரேமியாவை பஸ்கூர் விடுதலை செய்தார். அப்போது எரேமியா அவரிடம்,

"பஸ்கூர் என்ற உன் பெயரை மாகோர்மீசாபீப்*[g] என்று யெகோவா மாற்றிவிட்டார்.
4 ஏனென்றால், 'உன்னையும் உன் நண்பர்களையும் திகிலடைய வைப்பேன்' என்று யெகோவா சொல்கிறார். 'உன்னுடைய கண் எதிரிலேயே அவர்கள் எதிரிகளின் வாளுக்குப் பலியாவார்கள்.[h] யூதா முழுவதையும் நான் பாபிலோன் ராஜாவின் கையில் கொடுப்பேன். அவன் யூதா ஜனங்களை பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போவான், அவர்களை வாளால் வெட்டிச் சாய்ப்பான்.[i]
5 இந்த நகரத்தின் செல்வங்கள், வளங்கள், விலைமதிப்புள்ள பொருள்கள், ராஜாக்களின் பொக்கிஷங்கள் எல்லாவற்றையுமே எதிரிகளின் கையில் கொடுத்துவிடுவேன்.[j] அவர்கள் அவற்றையெல்லாம் கைப்பற்றி பாபிலோனுக்குக் கொண்டுபோவார்கள்.[k]
6 பஸ்கூரே, நீயும் உன் வீட்டில் இருக்கிற எல்லாரும் பாபிலோனுக்குக் கைதிகளாகக் கொண்டுபோகப்படுவீர்கள். நீ அங்கே போய் செத்துப்போவாய். உன்னுடைய எல்லா நண்பர்களோடும் சேர்த்து அங்கே புதைக்கப்படுவாய். ஏனென்றால், நீ அவர்களிடம் பொய்த் தீர்க்கதரிசனங்களைச் சொன்னாய்'"[l] என்றார்.

7 யெகோவாவே, என்னை ஆச்சரியப்படுத்திவிட்டீர்கள்!*
உண்மையிலேயே ஆச்சரியப்படுத்திவிட்டீர்கள்!*
உங்கள் பலத்தால் என்னை ஜெயித்துவிட்டீர்கள்![m]

20:3 * அர்த்தம், "சுற்றிலும் திகில்." **20:7** * வே.வா., "முட்டாளாக்கிவிட்டீர்கள்."

அதி. 19
a எரே 7:32
b சங் 79:1
c எரே 8:1, 2; செப் 1:4, 5
d எரே 7:18; எரே 32:29
e நெ 9:17, 29; சக 7:12

அதி. 20
f 2நா 16:10
g எரே 6:25
h உபா 28:32
i எரே 25:9; எரே 39:9
j 2ரா 20:17; 2ரா 24:11, 13; 2ரா 25:13-15; புல 1:10
k 2நா 36:10; எரே 15:13
l எரே 14:14; எரே 28:15; எரே 29:21
m எசே 3:14; மீ 3:8

கடவுளே, எல்லாரும் என்னைக் கிண்டல் செய்கிறார்கள்.
நாள் முழுவதும் என்னைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கிறார்கள்.[a]
8 நான் எப்போதுமே அவர்களிடம்,
“நகரம் நாசமாகப்போகிறது! அழிவு வரப்போகிறது!” என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.
யெகோவாவே, உங்களுடைய செய்தியைச் சொல்வதால் ஜனங்கள் என்னை நாள் முழுவதும் கிண்டல் செய்துகொண்டே இருக்கிறார்கள்; என்னைக் கண்டபடி பேசுகிறார்கள்.[b]
9 அதனால், “இனி உங்களைப் பற்றிப் பேசவே கூடாது,
உங்களுடைய பெயரைச் சொல்லவே கூடாது”[c] என்று நினைத்தேன்.
ஆனால், உங்களுடைய செய்தியைச் சொல்லாமல் என் நெஞ்சுக்குள் அடைத்து வைத்தபோது,
எரிகிற நெருப்பை என் எலும்புகளுக்குள் அடைத்து வைத்தது போல உணர்ந்தேன்.
அதை அடக்கி அடக்கி சோர்ந்துபோனேன்.
அந்த அவஸ்தையை அதற்குமேல் என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.[d]
10 எனக்கு ஒரே திகிலாக இருந்தது.[e]
ஏனென்றால், ஜனங்கள் என்னைப் பற்றி ஏதேதோ பேசுவது என் காதில் விழுந்தது.
“அவனைக் கண்டிக்கலாம்! எல்லாரும் போய் அவனைக் கண்டிக்கலாம்!” என்றெல்லாம் சொல்லிக்கொண்டார்கள்.
எனக்கு வாழ்த்துச் சொன்னவர்கள்கூட* என்னுடைய வீழ்ச்சிக்காகக் காத்திருந்தார்கள்.[f]
“இவன் ஏதாவது மடத்தனமாகச் செய்யாமலா போய்விடுவான்?
அப்போது இவனை மடக்கிப்பிடித்துப் பழிவாங்கிவிடலாம்” என்று பேசிக்கொண்டார்கள்.
11 ஆனால் யெகோவாவே, மிரள வைக்கும் ஒரு மாவீரரைப் போல நீங்கள் என்னோடு இருந்தீர்கள்.[g]
அதனால்தான், என்னைக் கொடுமைப்படுத்தியவர்கள் சறுக்கி விழுந்தார்கள், தோற்றுப்போனார்கள்.[h]
அவர்கள் ஜெயிக்கவே மாட்டார்கள். வெட்கப்பட்டும் கேவலப்பட்டும்தான் போவார்கள்.
அவர்களுக்கு வரும் அவமானம் காலத்துக்கும் மறக்கப்படாது.[i]
12 ஆனால், பரலோகப் படைகளின் யெகோவாவே, நீங்கள் நீதிமான்களை சோதித்தறிகிறீர்கள்.
இதயத்தையும் அடிமனதின் யோசனைகளையும்* தெரிந்து வைத்திருக்கிறீர்கள்.[j]
என்னுடைய வழக்கை உங்களிடமே ஒப்படைத்துவிட்டேன்.[k]

20:10 *வே.வா., “என்னோடு சமாதானமாக இருப்பதாகக் காட்டிக்கொண்டவர்கள் கூட.” **20:12** *நே.மொ., “சிறுநீரகங்களையும்.” வே.வா., “ஆழமான உணர்ச்சிகளையும்.”

அதி. 20
a சங் 22:7; எரே 15:10, 15
b 2நா 36:16; எரே 6:10
c 1ரா 19:2, 4; யோனா 1:3
d எரே 6:11; ஆமோ 3:8; அப் 4:19, 20
e சங் 31:13
f சங் 38:16
g எரே 1:8; ரோ 8:31
h சங் 27:2; எரே 15:15, 20; எரே 17:18
i சங் 6:10
j எரே 17:10
k எரே 11:20; 1பே 2:23

என்னை எதிர்க்கிறவர்களை நீங்கள் பழிவாங்குவதை என்
கண்ணாலேயே பார்க்க வையுங்கள்.[a]

13 யெகோவாவைப் புகழுங்கள்! யெகோவாவைப் போற்றிப் பாடுங்கள்!
ஏனென்றால், எளியவனை அக்கிரமக்காரர்களின் கையிலிருந்து அவர்
காப்பாற்றிவிட்டார்.

14 என் தாய் என்னைப் பெற்றெடுத்த நாள்
சாபக்கேடான நாளாகட்டும்![b]

15 என் அப்பாவிடம் வந்து,
“உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது!” என்று சொல்லி,
அவரைச் சந்தோஷத்தில் திக்குமுக்காட வைத்தவன் சபிக்கப்படட்டும்!

16 யெகோவா பாவம்பார்க்காமல் அழித்த நகரங்களைப் போல அவன்
ஆகட்டும்!
காலையில் அலறல் சத்தத்தையும் நடுப்பகலில் போர் முழக்கத்தையும்
அவன் கேட்கட்டும்!

17 கருப்பையில் இருக்கும்போதே நான் ஏன் கொல்லப்படவில்லை?
தாயின் வயிற்றிலேயே நான் சமாதி ஆகியிருக்கக் கூடாதா?
என் தாய் என்னைப் பெற்றெடுக்காமலேயே இருந்திருக்கக் கூடாதா?[c]

18 நான் இப்படிப் படாதபாடுபட்டும் கேவலப்பட்டும் சாவதற்காகவா
இந்த உலகத்தில் பிறந்தேன்?[d]

21 யெகோவாவின் செய்தியைக் கேட்டு வருவதற்காக மாசெயா
வின் மகனும் குருவுமாகிய செப்பனியாவையும்,[e] மல்கீயாவின் மக
னாகிய பஸ்கூரையும்[f] எரேமியாவிடம் சிதேக்கியா ராஜா[g] அனுப்பினார்.
2 அவர்கள் எரேமியாவிடம் வந்து, “பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்
சார் எங்களோடு போர் செய்ய வந்திருக்கிறான்.[h] யெகோவா ஒருவேளை
எங்களுக்காக ஒரு அற்புதத்தைச் செய்து அவனை எங்களைவிட்டுத்
திரும்பிப் போக வைக்கலாம்.[i] அப்படி நடக்குமா என்று தயவுசெய்து அவ
ரிடம் விசாரித்துச் சொல்லுங்கள்” என்றார்கள். அப்போது, எரேமியாவுக்கு
யெகோவாவிடமிருந்து செய்தி கிடைத்தது.

3 அதனால் எரேமியா அவர்களிடம், “நீங்கள் சிதேக்கியாவிடம் போய்
இப்படிச் சொல்லுங்கள்: **4** ‘இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்
வது இதுதான்: “உன்னை மதிலுக்கு வெளியே சுற்றிவளைத்திருக்கும் பாபி
லோன் ராஜாவையும்[j] கல்தேயர்களையும் தாக்குவதற்காக நீ கையில் வைத்
திருக்கிற ஆயுதங்களை நான் உனக்கு எதிராகவே திருப்புவேன்.
அவற்றை* இந்த நகரத்தின் நடுவே கொண்டுவருவேன். **5** பயங்கர
கோபத்தோடும் ஆக்ரோஷத்தோடும் என்னுடைய பலத்த கையை ஓங்கி,[k]
உனக்கு எதிராகப் போர் செய்வேன்.[l] **6** இந்த நகரத்தில் இருக்கிற மனுஷர்
களையும் மிருகங்களையும் பயங்கரமான கொள்ளைநோய்க்குப் பலியாக்
குவேன்.[m]

7 அதற்குப் பின்பு, யூதாவின் ராஜாவான சிதேக்கியாவையும் அவ
னுடைய ஊழியர்களையும் இந்த நகரத்து ஜனங்களையும் பாபிலோன்
ராஜாவான நேபுகாத்நேச்சாரின் கையில் கொடுப்பேன்.” யெகோவா
சொல்வது இதுதான்: “கொள்ளைநோய்க்கும் வாளுக்கும் பஞ்சத்துக்கும்

21:4 *வே.வா., “அவர்களை.”

அதி. 20
a சங் 59:10; எரே 17:18
b யோபு 3:3; எரே 15:10
c யோபு 10:18
d யோபு 3:20

அதி. 21
e எரே 29:25; எரே 37:3; எரே 52:24, 27
f எரே 38:1
g 2ரா 24:18; 1நா 3:15; 2நா 36:9, 10
h 2ரா 25:1; எரே 32:28; எரே 39:1
i 1சா 7:10; 2நா 14:11; ஏசா 37:36, 37
j எரே 32:5
k ஏசா 5:25
l ஏசா 63:10; புல 2:5
m உபா 28:21, 22; எசே 7:15

தப்பியவர்களை, அவர்களைக் கொல்லத் துடிக்கிற எதிரிகளின் கையில்
கொடுப்பேன்.[a] பாபிலோன் ராஜா அவர்கள் எல்லாரையும் வாளால் வெட்
டிச் சாய்ப்பான். அவர்கள்மேல் இரக்கமோ கரிசனையோ காட்ட மாட்டான்,
பரிதாபப்பட மாட்டான்.”’[b]

8 இந்த ஜனங்களிடம் நீ இப்படிச் சொல்: ‘யெகோவா சொல்வது இது
தான்: “வாழ்வின் வழியையும் சாவின் வழியையும் நான் உங்கள்முன்
வைக்கிறேன். **9** இந்த நகரத்தைச் சுற்றிவளைத்திருக்கிற கல்தேயர்களிடம்
போய் சரணடைகிற எல்லாரும் உயிர் பிழைத்துக்கொள்வார்கள். ஆனால்,
நகரத்திலேயே இருக்கிறவர்கள் வாளுக்கும் பஞ்சத்துக்கும் கொள்ளை
நோய்க்கும் பலியாவார்கள்.”’[c]

10 ‘யெகோவா சொல்வது இதுதான்: “இந்த நகரத்தை நான் காப்பாற்ற
மாட்டேன், இதை அழித்தே தீருவேன்.[d] இதை பாபிலோன் ராஜாவின்
கையில்[e] கொடுத்துவிடுவேன்.[f] அவன் இதைத் தீ வைத்துக் கொளுத்தி
விடுவான்.”

11 யூதாவின் ராஜாவுடைய குடும்பத்தாரே, யெகோவாவின் செய்தியைக்
கேளுங்கள். **12** தாவீதின் வம்சத்தாரே, யெகோவா சொல்வது இதுதான்:

“ஒவ்வொரு நாளும் நியாயமாக நடந்துகொள்ளுங்கள்.
மோசடிக்காரர்களின் கையிலிருந்து அப்பாவிகளைக் காப்பாற்றுங்கள்.[g]
நீங்கள் கெட்ட காரியங்களைச் செய்துகொண்டே இருந்தால்[h]
என் கோபம் தீயாய்ப் பற்றியெரியும்.[i]
அதை யாராலும் அணைக்க முடியாது.”’

13 யெகோவா சொல்வது இதுதான்: ‘பள்ளத்தாக்கில் குடியிருக்கிறவர்களே,
சமவெளியில் இருக்கிற மலைப்பாறைமேல் வாழ்கிறவர்களே, நான்
உங்களோடு போர் செய்வேன்.
ஆனால் நீங்கள், “நமக்கு எதிராக யார் வரப்போகிறார்கள்?
நம் ஊர்களை யார் கைப்பற்றப்போகிறார்கள்?” என்று சொல்கிறீர்கள்.

14 நான் உங்களைத் தண்டிப்பேன்.
உங்களுடைய செயல்களுக்குத் தகுந்த கூலி கொடுப்பேன்’[j] என்று
யெகோவா சொல்கிறார்.
‘நான் உங்கள் காட்டுக்குத் தீ வைப்பேன்.
சுற்றியுள்ள எல்லாமே பொசுங்கிப்போகும்’[k] என்று சொன்னார்.”

22 யெகோவா சொல்வது இதுதான்: “நீ யூதாவின் ராஜாவுடைய அரண்
மனைக்குப் போய் இந்தச் செய்தியைச் சொல்: **2** ‘தாவீதின் சிம்மா
சனத்தில் உட்கார்ந்திருக்கிற யூதா ராஜாவே, நீங்களும் இந்த நுழைவாசல்கள்
வழியாக வருகிற உங்கள் ஊழியர்களும் ஜனங்களும் யெகோவாவின் செய்
தியைக் கேளுங்கள். **3** யெகோவா சொல்வது இதுதான்: “நியாயத்தோடும்
நீதியோடும் நடந்துகொள்ளுங்கள். மோசடிக்காரர்களின் கையிலிருந்து அப்
பாவிகளைக் காப்பாற்றுங்கள். உங்களோடு வாழ்கிற மற்ற தேசத்து ஜனங்
கள் யாரையும் மோசமாக நடத்தாதீர்கள்.[l] அப்பா இல்லாத பிள்ளைகளுக்
கும்* விதவைகளுக்கும் கெடுதல் செய்யாதீர்கள். அப்பாவிகளைக்
கொலை செய்யாதீர்கள்.[m] **4** நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேட்டு நடந்

22:3 * வே.வா., “அநாதைகளுக்கும்.”

அதி. 21
a 2ரா 25:6, 7; எரே 37:17; எரே 39:5-7; எரே 52:9-11; எசே 17:20
b உபா 28: 49, 50; 2நா 36:17
c எரே 27:12, 13; எரே 38:2, 17
d எரே 44:11
e எரே 38:3
f 2நா 36:17, 19; எரே 17:27; எரே 34:2; எரே 37:10; எரே 39:8
g ஏசா 1:17; எரே 22:3; எசே 22:29; மீ 2:2
h எரே 7:5-7
i உபா 32:22; ஏசா 1:31; எரே 7:20
j எரே 5:9; எரே 9:9
k 2நா 36:17, 19; எரே 52:12, 13

அதி. 22
l லேவி 19:15; ஏசா 1:17; எசே 22:7; மீ 2:2
m 2ரா 24:3, 4; எரே 7:6, 7

அதி. 22
a 1ரா 2:12
b எரே 17: 24, 25
c எரே 39:8 மீ 3:12
d ஏசா 6:11 எரே 7:34
e எசே 9:1
f எரே 21:14
g உபா 29: 24-26 1ரா 9:8, 9 புல 2:15
h 2ரா 22:16, 17
i 2ரா 23:29, 30
j 1நா 3:15 2நா 36:1
k 2ரா 23:34 2நா 36:4
l லேவி 19:13 மீ 3:9, 10

தால், தாவீதின் சிம்மாசனத்தில்[a] உட்காரும் ராஜாக்கள் இந்த அரண்மனை
வாசல்கள் வழியாக ரதங்களிலும் குதிரைகளிலும் வருவார்கள்.[b] அவர்க
ளோடு அவர்களுடைய ஊழியர்களும் ஜனங்களும் வருவார்கள்."'
5 'ஆனால், நீங்கள் இந்த வார்த்தைகளின்படி நடக்காவிட்டால் இந்த
அரண்மனை இடிந்து பாழாகிப்போகும் என்று என்மேல் ஆணையாகச்
சொல்கிறேன்'[c] என யெகோவா சொல்கிறார்.
6 யூதாவின் ராஜாவுடைய அரண்மனையைப் பற்றி யெகோவா சொல்
வது இதுதான்:

'நீ எனக்கு கீலேயாத்தைப் போலவும்,
லீபனோன் மலை உச்சியைப் போலவும் இருக்கிறாய்.
ஆனால், நான் உன்னை ஒரு வனாந்தரமாக மாற்றிவிடுவேன்.
உன்னுடைய நகரங்கள் எதிலுமே ஜனங்கள் குடியிருக்க மாட்டார்கள்.[d]
7 உன்னை அழிப்பதற்காக நான் எதிரிகளை வர வைப்பேன்.
அவர்கள் ஒவ்வொருவரும் ஆயுதங்களோடு வருவார்கள்.[e]
உன்னுடைய அருமையான தேவதாரு மரங்களை வெட்டிச்
சாய்ப்பார்கள்.
அவற்றை நெருப்பில் போடுவார்கள்.[f]

8 இந்த நகரத்தின் வழியாகப் போகிற மற்ற ஜனங்கள், "இவ்வளவு பெரிய
நகரத்தை யெகோவா ஏன் இப்படி அழித்துவிட்டார்?"[g] என்று ஒருவரை ஒரு
வர் கேட்டுக்கொள்வார்கள். 9 "அவர்கள் தங்களுடைய கடவுளான
யெகோவாவுடன் செய்த ஒப்பந்தத்தை மீறி, மற்ற தெய்வங்களைக் கும்பிட்
டதால்தான் அவர் அழித்துவிட்டார்"[h] என்று சொல்லிக்கொள்வார்கள்."'

10 இறந்தவனுக்காக அழாதீர்கள்.
அவனை நினைத்துத் துக்கப்படாதீர்கள்.
ஆனால், சிறைபிடிக்கப்பட்டுப் போகிறவனுக்காகக் கதறி அழுங்கள்.
ஏனென்றால், அவன் இனி தன்னுடைய தாய்நாட்டுக்குத் திரும்பவே
மாட்டான்.

11 யோசியாவின் மகனும் யோசியாவுக்கு[i] அடுத்ததாக யூதாவை
ஆட்சி செய்த ராஜாவுமான சல்லூம்*[j] இங்கிருந்து சிறைபிடிக்கப்பட்டுப்
போனார். அவரைப் பற்றி யெகோவா சொல்வது இதுதான்: 'அவன் இங்கே
திரும்பி வர மாட்டான். 12 சிறைபிடிக்கப்பட்டுப் போன தேசத்திலேயே
செத்துப்போவான். இனி இந்தத் தேசத்தைப் பார்க்கவே மாட்டான்.'[k]

13 கூலியாட்களுக்குக் கூலி கொடுக்காமல்,[l]
அவர்களை ஏமாற்றி வேலை வாங்கி,
தன்னுடைய அரண்மனையையும் மாடி அறைகளையும்
அநியாயமாகக் கட்டுகிறவனுக்குக் கேடுதான் வரும்.
14 'நான் ஒரு பெரிய மாளிகையைக் கட்டுவேன்.
அதற்கு நிறைய ஜன்னல்களை வைப்பேன்.
மாடியில் பெரிய பெரிய அறைகளைக் கட்டுவேன்.
சுவர்களில் தேவதாரு மரப்பலகைகளை அடித்து,
சிவப்பு நிறம் பூசுவேன்' என்று அவன் சொல்லிக்கொள்கிறான்.

22:11 *யோவாகாஸ் என்றும் அழைக்கப்படுகிறார்.

15 மற்ற யாரையும்விட நீதான் தேவதாரு மரத்தை அதிகமாகப்
பயன்படுத்தியிருக்கிறாய் என்பதற்காக
நீ எப்போதுமே ராஜாவாக இருப்பாய் என்று நினைக்கிறாயோ?
உன் தகப்பனும் வயிறார சாப்பிட்டான், குடித்தான்.
ஆனால், நியாயத்தோடும் நீதியோடும் நடந்துகொண்டான்.[a]
அதனால், சந்தோஷமாக வாழ்ந்தான்.
16 ஏழை எளியவர்களுக்காக வாதாடினான்.
அதனால், அவனுக்கு எல்லாமே நல்லபடியாக நடந்தது.
'அவன் என்னைப் பற்றி எவ்வளவு நன்றாகத் தெரிந்து
வைத்திருந்தான்!' என்று யெகோவா சொல்கிறார்.
17 'ஆனால், நீ அநியாயமாக லாபம் சம்பாதிக்கவும்,
அப்பாவிகளைக் கொன்று குவிக்கவுமே ஆசைப்படுகிறாய்.
மோசடி செய்வதிலும் பணம் பறிப்பதிலுமே குறியாக இருக்கிறாய்.'
18 அதனால், யூதாவின் ராஜாவும் யோசியாவின் மகனுமாகிய யோயாக்
கீமைப்[b] பற்றி யெகோவா சொல்வது இதுதான்:
'யோயாக்கீம் சாகும்போது யாருமே ஒருவரை ஒருவர் பார்த்து,
"ஐயோ, என் சகோதரனே! ஐயோ, என் சகோதரியே!
ஐயோ, என் எஜமானே! ஐயோ, அவருடைய மகிமை போய்விட்டதே!"
என்றெல்லாம் சொல்லி ஒப்பாரி வைக்க மாட்டார்கள்.
19 செத்துப்போன கழுதை எப்படி இழுத்துக்கொண்டு போகப்பட்டு
எருசலேமின் நுழைவாசல்களுக்கு வெளியே[c] தூக்கி வீசப்படுமோ
அப்படியே அவனும் தூக்கி வீசப்படுவான்.'[d]
20 நீ லீபனோனுக்கு ஏறிப்போய்க் கதறி அழு.
பாசானில் ஒப்பாரி வை.
அபாரீமில்[e] ஓலமிடு.
உன் ஆசைக் காதலர்கள் எல்லாரும் அழிந்துபோனார்களே.[f]
21 நீ கவலையில்லாமல் வாழ்ந்தபோது நான் உன்னிடம் பேசினேன்.
ஆனால், 'உங்கள் பேச்சைக் கேட்க மாட்டேன்'[g] என்று நீ சொன்னாய்.
சிறு வயதிலிருந்தே இப்படித்தான் நடந்திருக்கிறாய்.
என் பேச்சை மதிக்கவே இல்லை.[h]
22 உன் மேய்ப்பர்கள் எல்லாரையும் காற்று துரத்தியடிக்கும்.[i]
உன் ஆசைக் காதலர்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போவார்கள்.
உனக்கு வந்த கதியை நினைத்து நீ கூனிக்குறுகுவாய்.
23 லீபனோனில்[j] குடியிருக்கிறவளே,
தேவதாரு மரங்களுக்கு[k] நடுவே வாழ்கிறவளே,
வேதனை வரும்போது நீ கதறி அழுவாய்!
பிரசவ வலியில் துடிக்கிற பெண்ணைப் போலத் துடிதுடிப்பாய்![l]
24 யெகோவா சொல்வது இதுதான்: 'யோயாக்கீமின்[m] மகனும் யூதா
வின் ராஜாவுமான கோனியாவே,*[n] நீ என் வலது கையில் ஒரு முத்திரை
மோதிரமாக இருந்தாலும் நான் உன்னைக் கழற்றி எறிவேன்! இதை என்

22:24 *யோயாக்கீன் என்றும் எகொனியா என்றும்கூட அழைக்கப்படுகிறார்.

அதி. 22
a 2ரா 22:1, 2; 2ரா 23:23, 25
b 2ரா 23:34; 2நா 36:4
c 2நா 36:5, 6
d எரே 36:30
e உபா 32:49
f 2ரா 24:7
g எரே 2:31; எரே 6:16
h உபா 9:7; நியா 2:11
i எரே 23:1; எசே 34:2
j எரே 22:6
k ஏசா 2:12, 13
l எரே 4:31; எரே 6:24
m 2ரா 23:34
n 2ரா 24:6; எரே 22:28; எரே 37:1; மத் 1:11

உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்.* 25 உன்னைக் கொல்லத் துடிக்
கிறவர்களின் கையில் உன்னைக் கொடுத்துவிடுவேன். நீ பயந்து நடுங்கு
கிற பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சாரின் கையிலும் கல்தேயர்களின்
கையிலும் உன்னைக் கொடுத்துவிடுவேன்.[a] 26 உன்னையும் உன்னைப்
பெற்றெடுத்தவளையும் வேறொரு தேசத்துக்குத் துரத்தியடிப்பேன். நீங்கள்
அங்கேயே செத்துவிடுவீர்கள். 27 நீங்கள் திரும்பிவரத் துடிக்கிற தேசத்
துக்குத் திரும்பிவரவே மாட்டீர்கள்.[b]

28 இந்த மனுஷனாகிய கோனியா உடைத்தெறியப்பட்ட ஒரு பானையா?
யாருக்குமே தேவைப்படாத ஒரு பாத்திரமா?
அவனும் அவன் சந்ததியும் ஏன் துரத்தப்படுகிறார்கள்?
முன்பின் தெரியாத தேசத்துக்குள் ஏன் தள்ளப்படுகிறார்கள்?'[c]

29 பூமியே,* பூமியே, பூமியே, யெகோவாவின் செய்தியைக் கேள்.

30 யெகோவா சொல்வது இதுதான்:
'இவனுக்கு வாரிசே இல்லை என்றும்,
வாழ்க்கையில் இவன் வெற்றி பெறவே மாட்டான் என்றும் எழுதுங்கள்.
ஏனென்றால், இவனுடைய பிள்ளைகள் யாருமே தாவீதின்
சிம்மாசனத்தில் உட்கார மாட்டார்கள்.
அவர்கள் யாருமே இனி யூதாவை ஆட்சி செய்ய மாட்டார்கள்.'"[d]

23 "என் மேய்ச்சல் நிலத்திலுள்ள ஆடுகளை அழித்துக்கொண்டும்
விரட்டியடித்துக்கொண்டும் இருக்கிற மேய்ப்பர்களுக்குக் கேடு
தான் வரும்" என்று யெகோவா சொல்கிறார்.[e]

2 அவருடைய ஜனங்களை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு எதிராக இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது இதுதான்: "நீங்கள் என் ஆடு
களை அக்கறையாகப் பார்த்துக்கொள்ளவில்லை. அவற்றை விரட்டியடித்
துக்கொண்டே இருந்தீர்கள். அவற்றைச் சிதறி ஓட வைத்தீர்கள்."[f]

"நீங்கள் செய்த அக்கிரமங்களுக்காக நான் உங்களைத் தண்டிக்கப்
போகிறேன்" என்று யெகோவா சொல்கிறார்.

3 "எங்கெல்லாம் என் ஆடுகளைச் சிதறிப்போக வைத்தேனோ[g] அங்கி
ருந்தெல்லாம் அவற்றைக் கூட்டிக்கொண்டு வருவேன். அவற்றின் மேய்ச்
சல் நிலத்துக்கே மறுபடியும் கொண்டுவருவேன்.[h] அவை ஏராளமாகப் பெரு
கும்.[i] 4 அவற்றை அக்கறையாகப் பார்த்துக்கொள்கிற மேய்ப்பர்களை
நியமிப்பேன்.[j] என் ஆடுகள் பயமோ திகிலோ இல்லாமல் நிம்மதியாக இருக்
கும். அவற்றில் ஒன்றுகூட காணாமல் போகாது" என்று யெகோவா
சொல்கிறார்.

5 யெகோவா சொல்வது இதுதான்: "காலம் வருகிறது. அப்போது, தாவீ
தின் வம்சத்தில் ஒரு நீதியான தளிரை* துளிர்க்க வைப்பேன்.[k] அவர்
விவேகத்தோடும்# நியாயத்தோடும் நீதியோடும் ஜனங்களை ஆட்சி செய்
வார்.[l] 6 அவருடைய நாட்களில் யூதா ஜனங்கள் விடுவிக்கப்படுவார்
கள்,[m] இஸ்ரவேல் ஜனங்கள் பாதுகாப்பாக வாழ்வார்கள்.[n] 'யெகோவா நம்
நீதிக்குக் காரணமானவர்'[o] என்ற பெயரால் அவர் அழைக்கப்படுவார்."

22:24 *வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சய
மாகச் சொல்கிறேன்." **22:29** *வே.வா., "தேசமே." **23:5** *வே.வா., "வாரிசை."
#வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதலோடும்."

அதி. 22
a 2ரா 24:12, 15; 2நா 36:9, 10; எரே 24:1; எரே 29:1, 2
b எரே 52:31–34
c 1நா 3:17, 18
d 2நா 36:9, 10; எரே 36:30; மத் 1:12

அதி. 23
e எரே 10:21; எரே 50:6; எசே 34:2
f எசே 34:5
g ஏசா 11:11; ஏசா 35:10; எரே 29:14; எரே 31:8
h எரே 50:19; எசே 34:14; மீ 2:12
i உபா 30:3, 5; ஆமோ 9:14; சக 10:8
j எரே 3:15; யோவா 21:15; அப் 20:28
k ஏசா 11:1; ஏசா 53:2; எரே 33:15, 16; சக 3:8; மத் 2:23
l ஏசா 9:7; ஏசா 11:3, 4; ஏசா 32:1; லூ 1:32, 33
m சக 10:6
n உபா 33:28; எரே 32:37; சக 14:11
o ஏசா 54:17

7 “ஆனால், காலம் வருகிறது” என்று யெகோவா சொல்கிறார். “அதுமு
தல் ஜனங்கள், ‘இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்த
உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை!’* [a] என்று சொல்ல மாட்
டார்கள். 8 அதற்குப் பதிலாக, ‘இஸ்ரவேல் வம்சத்தாரை வடக்கு தேசத்
திலிருந்தும் அவர்கள் துரத்தப்பட்டிருந்த மற்ற எல்லா தேசங்களிலிருந்தும்
கூட்டிக்கொண்டு வந்த உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை!’*
என்றே சொல்வார்கள். அவர்களுடைய சொந்த தேசத்திலேயே அவர்கள்
வாழ்வார்கள்.” [b]

9 தீர்க்கதரிசிகளுக்கு நான் சொல்வது இதுதான்:
என் இதயம் நொறுங்கிவிட்டது.
என் எலும்புகளெல்லாம் நடுங்குகின்றன.
யெகோவாவின் பரிசுத்தமான வார்த்தைகளைக் கேட்டபோது,
குடிபோதையில் இருக்கிறவனைப் போல நான் ஆகிவிட்டேன்.
திராட்சமதுவைக் குடித்துத் தள்ளாடுகிறவனைப் போல
ஆகிவிட்டேன்.
10 கடவுளுக்குத் துரோகம் செய்கிறவர்கள்தான் தேசத்தில்
நிறைந்திருக்கிறார்கள். [c]
சாபத்தினால் தேசமே சோகமாக இருக்கிறது. [d]
வனாந்தரத்திலுள்ள மேய்ச்சல் நிலங்கள் காய்ந்துவிட்டன. [e]
ஜனங்கள் படுமோசமான வழியில் போகிறார்கள்.
அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்.
11 “தீர்க்கதரிசிகளும் சரி, குருமார்களும் சரி, துரோகம் செய்கிறார்கள்.* [f]
என் வீட்டிலேயே அக்கிரமம் செய்கிறார்கள்” [g] என்று யெகோவா
சொல்கிறார்.
12 “அதனால், அவர்களுடைய பாதை இருட்டாகவும் வழுக்கலாகவும்
இருக்கும். [h]
அவர்கள் கீழே தள்ளப்படுவார்கள்.
தண்டனைத் தீர்ப்பின் வருஷத்திலே
நான் அவர்களை அழிப்பேன்” என்று யெகோவா சொல்கிறார்.
13 “சமாரியாவின் [i] தீர்க்கதரிசிகள் அருவருப்பான காரியங்கள்
செய்வதைப் பார்த்திருக்கிறேன்.
அவர்கள் பாகாலின் பெயரில் தீர்க்கதரிசனங்கள் சொல்கிறார்கள்.
என் ஜனங்களான இஸ்ரவேலர்களைக் கெட்ட வழிக்குக்
கொண்டுபோகிறார்கள்.
14 எருசலேமின் தீர்க்கதரிசிகள் படுமோசமான காரியங்கள் செய்வதைப்
பார்த்திருக்கிறேன்.
அவர்கள் முறைகேடான உறவு வைத்திருக்கிறார்கள்; [j] பொய்
பேசிக்கொண்டு திரிகிறார்கள். [k]
மற்றவர்களை அக்கிரமம் செய்யத் தூண்டிவிடுகிறார்கள்.
கெட்ட வழிகளைவிட்டுத் திருந்தாமல் இருக்கிறார்கள்.

23:7, 8 * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்.” **23:11** * வே.வா., “தீட்டுப்பட்டிருக்கிறார்கள்.”

அதி. 23
a எரே 16:14, 15
b ஏசா 43:5; எசே 34:13; செப் 3:20
c எரே 3:8, 9; எரே 5:7; எரே 13:27; எசே 22:11
d ஏசா 24:4; யோவே 1:10
e எரே 12:4
f ஏசா 28:7; எரே 5:31; எரே 6:13; எசே 22:25; செப் 3:4
g 2நா 33:1, 5; 2நா 36:14; எரே 7:11; எசே 8:10, 11; எசே 23:39
h எரே 13:16
i எசே 16:46
j எரே 29:21, 23
k எரே 23:26

என்னைப் பொறுத்தவரை அவர்கள் எல்லாரும்
சோதோம்,[a] கொமோரா[b] ஜனங்களைப் போல இருக்கிறார்கள்."
15 அதனால், பரலோகப் படைகளின் யெகோவா அந்தத் தீர்க்கதரிசிக
ளுக்கு எதிராகச் சொல்வது இதுதான்:
"இந்த ஜனங்களுக்குச் சாப்பிட எட்டியையும்,
குடிக்க விஷத் தண்ணீரையும் கொடுப்பேன்.[c]
ஏனென்றால், எருசலேமின் தீர்க்கதரிசிகளுடைய பேச்சைக் கேட்டு
தேசமே என்னைவிட்டு விலகுகிறது."*
16 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
"அந்தத் தீர்க்கதரிசிகள் உங்களுக்குச் சொல்லும் தீர்க்கதரிசனங்களைக் கேட்காதீர்கள்.[d]
அவர்கள் உங்களை ஏமாற்றுகிறார்கள்.*
யெகோவாவின் செய்தியைச் சொல்லாமல்[e]
சொந்தமாகக் கதை கட்டுகிறார்கள்.[f]
17 என்னை மதிக்காதவர்களிடம்,
'"நீங்கள் நிம்மதியாக வாழ்வீர்கள்"[g] என்று யெகோவா சொல்கிறார்' எனத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்.
தங்கள் இதயத்தின் பிடிவாதப் போக்கிலேயே போகிறவர்களிடம்,
'உங்களுக்கு எந்தக் கெடுதலும் வராது'[h] என்று சொல்கிறார்கள்.
18 அவர்களில் யார் யெகோவாவின் நண்பராக இருந்து,
அவருடைய வார்த்தையைக் கேட்டுப் புரிந்துகொண்டார்கள்?
அவர்களில் யார் அவர் பேசுவதைக் கவனித்துக் கேட்டார்கள்?
19 இதோ! யெகோவாவின் கோபம் புயல்காற்றாய் வீசும்.
கெட்டவர்களின் தலைமேல் அது சூறாவளியாகச் சுழற்றியடிக்கும்.[i]
20 நினைத்ததைச் செய்து முடிக்கும்வரை
யெகோவாவின் கோபம் தணியாது.
கடைசி நாட்களில் இதை நன்றாகப் புரிந்துகொள்வீர்கள்.
21 நான் அந்தத் தீர்க்கதரிசிகளை அனுப்பவில்லை, அவர்களாகவே முந்திக்கொண்டு போனார்கள்.
நான் அவர்களிடம் பேசவில்லை, அவர்களாகவே தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.[j]
22 அவர்கள் என் நண்பர்களாக இருந்திருந்தால்
என் ஜனங்களுக்கு என்னுடைய வார்த்தைகளைச் சொல்லியிருப்பார்கள்.
கெட்ட வழியையும் அக்கிரமங்களையும் விட்டுத் திருந்த அவர்களுக்கு உதவியிருப்பார்கள்."[k]
23 "நான் பக்கத்தில் இருப்பதை மட்டும் பார்க்கிற கடவுளா? தூரத்தில் இருப்பதையும் பார்க்கிற கடவுள் இல்லையா?" என்று யெகோவா கேட்கிறார்.

23:15 *வே.வா., "விசுவாசதுரோகம் செய்கிறது." **23:16** *வே.வா., "உங்களுக்குப் பொய் நம்பிக்கை தருகிறார்கள்."

அதி. 23
a ஏசா 3:9
b ஆதி 18:20, உபா 32:32, ஏசா 1:10, யூ 7
c எரே 8:14, எரே 9:15
d எரே 27:9, எரே 29:8
e எரே 14:14, எசே 13:3, எசே 22:28
f புல 2:14
g எரே 4:10, எரே 6:13, 14, எரே 8:11, எசே 13:10
h மீ 3:11
i எரே 25:32, எரே 30: 23, 24
j எரே 14:14, எரே 27:15, எரே 29:8, 9
k எரே 25:4, 5

24 “என் கண்ணில் படாதபடி மனுஷன் எங்காவது ஒளிந்துகொள்ள
முடியுமா?”[a] என்று யெகோவா கேட்கிறார்.
“வானத்திலும் பூமியிலும் இருக்கிற எதுவுமே என் பார்வைக்குத்
தப்பாதே”[b] என்று யெகோவா சொல்கிறார்.

25 “என் பெயரில் பொய்த் தீர்க்கதரிசனம் சொல்கிறவர்கள், ‘எனக்கு ஒரு
கனவு வந்தது! எனக்கு ஒரு கனவு வந்தது!’[c] என்று சொல்வதைக் கேட்டேன்.
26 எவ்வளவு காலம்தான் இந்தத் தீர்க்கதரிசிகள் இப்படிப் பொய்த் தீர்க்க
தரிசனம் சொல்லிக்கொண்டு இருப்பார்கள்? இவர்கள் தங்களுக்குத் தோன்
றியதையெல்லாம் சொல்லி ஜனங்களை ஏமாற்றுகிறார்கள்.[d] 27 என் ஜனங்
களுடைய முன்னோர்கள் பாகாலை[e] வணங்கி என் பெயரை மறந்துவிட்டது
போல இவர்களும் என் பெயரை மறந்துவிட வேண்டும் என்பதற்காக இந்
தத் தீர்க்கதரிசிகள் தங்களுடைய கனவுகளைப் பற்றி இவர்களிடம் சொல்
லிக்கொண்டு இருக்கிறார்கள். 28 கனவு கண்ட தீர்க்கதரிசிகள் அந்தக்
கனவைச் சொல்லட்டும். ஆனால், என்னுடைய செய்தியைப் பெற்றவர்கள்
அதை உண்மையோடு சொல்லட்டும்.”

“வைக்கோலும் தானியமும் ஒன்றா?” என்று யெகோவா கேட்கிறார்.

29 “என்னுடைய வார்த்தை நெருப்பு போலவும்,[f] பாறையை உடைக்கிற
சம்மட்டி போலவும்[g] இருக்கிறது, அல்லவா?” என்று யெகோவா கேட்கிறார்.

30 “மற்றவர்களிடம் என் வார்த்தைகளை மாற்றிப் பேசுகிற*[h] தீர்க்கதரி
சிகளை நான் தண்டிப்பேன்” என்று யெகோவா சொல்கிறார்.

31 “‘கடவுள் சொல்கிறார்!’[i] என்று தாங்களாகவே சொல்லிக்கொள்கிற
தீர்க்கதரிசிகளை நான் தண்டிப்பேன்” என்று யெகோவா சொல்கிறார்.

32 “கனவு கண்டதாகக் கதையடித்து, பெருமையடித்து என் ஜனங்
களை ஏமாற்றுகிற தீர்க்கதரிசிகளை[j] நான் தண்டிப்பேன்” என்று யெகோவா
சொல்கிறார்.

“ஆனால், நான் அவர்களை அனுப்பவோ அவர்களுக்குக் கட்டளை
கொடுக்கவோ இல்லை. அதனால், அவர்கள் இந்த ஜனங்களுக்கு எந்த
விதத்திலும் நல்லது செய்ய மாட்டார்கள்”[k] என்று யெகோவா சொல்கிறார்.

33 “இந்த ஜனங்களிலோ தீர்க்கதரிசிகளிலோ குருமார்களிலோ ஒருவன்
உன்னிடம், ‘யெகோவாவின் செய்தி பாரமாக இருக்கிறது!’* என்று
சொன்னால், ‘“நீங்கள் எல்லாரும்தான் அவருக்குப் பாரமாக இருக்கிறீர்
கள்! நான் உங்களை ஒதுக்கித்தள்ளுவேன்”[l] என்று யெகோவா சொல்
கிறார்’ எனச் சொல்ல வேண்டும். 34 இந்த ஜனங்களிலோ தீர்க்கதரிசிக
ளிலோ குருமார்களிலோ ஒருவன், ‘யெகோவாவின் செய்திதான் பாரமாக
இருக்கிறது’ என்று சொன்னால் நான் அவனையும் அவன் குடும்பத்தாரை
யும் தண்டிப்பேன். 35 நீங்கள் உங்களுடைய சகோதரனிடமும் மற்றவர்க
ளிடமும், ‘யெகோவா என்ன சொல்கிறார்? யெகோவாவின் செய்தி என்ன?’
என்று கேட்கிறீர்கள். 36 அதேசமயத்தில், யெகோவாவின் செய்தி பார
மாக இருக்கிறதென்று சொல்கிறீர்கள். இனிமேல் அப்படிச் சொல்லாதீர்கள்.

23:30 *வே.வா., “மற்றவர்களிடமிருந்து என் வார்த்தைகளைத் திருடுகிற.” 23:33 *வே.வா., “யெகோவாவின் பாரம் என்ன?” “பாரம்” என்பதற்கான எபிரெய வார்த்தைக்கு இரட்டை அர்த்தம் உண்டு; அது பாரமான ஏதோவொன்றையோ கடவுளுடைய கடுமையான நியாயத்தீர்ப்பு செய்தியையோ குறிக்கலாம்.

அதி. 23
a ஆதி 16:7, 13; நீதி 15:3; ஆமோ 9:2; எபி 4:13
b சங் 139:7
c உபா 18:20; எரே 27:9; எரே 29:21, 23
d எரே 14:14
e நியா 3:7; 2ரா 21:1, 3
f எரே 5:14
g எபி 4:12
h உபா 18:20; எரே 14:15; எசே 13:2, 3
i எசே 13:7
j செப் 3:4
k எரே 7:8; புல 2:14
l எரே 12:7

உங்களுடைய வார்த்தைகள்தான் பாரமாக இருக்கின்றன. ஏனென்றால்,
நம்முடைய கடவுளும் உயிருள்ள கடவுளும் பரலோகப் படைகளின் கடவு
ளுமான யெகோவா சொன்ன வார்த்தைகளை நீங்கள்தான் மாற்றிப் பேசு
கிறீர்கள்.

37 நீ தீர்க்கதரிசியிடம், 'யெகோவா உன்னிடம் என்ன சொன்னார்?
யெகோவாவின் செய்தி என்ன?' என்று கேட்டுவிட்டு, **38** '"யெகோவா
வின் செய்தி பாரமாக இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டு இருந்தால்,
யெகோவா உனக்குச் சொல்லும் செய்தி இதுதான்: "'யெகோவாவின்
செய்தி பாரமாக இருக்கிறது!' என்று நீ சொல்லக் கூடாதென நான் சொல்லி
யும், நீ 'யெகோவாவின் செய்தி பாரமாக இருக்கிறது!' என்று சொல்வ
தால், **39** நான் உன்னை என் முன்னாலிருந்து தூக்கியெறிந்துவிடுவேன்.
உனக்கும் உன் முன்னோர்களுக்கும் நான் கொடுத்த நகரத்தை அழித்துவிடு
வேன். **40** நீ என்றென்றைக்கும் வெட்கப்பட்டுக் கூனிக்குறுகிப் போவாய்.
உனக்கு வரும் அவமானம் ஒருநாளும் மறக்கப்படாது"[a] என்று சொல்ல
வேண்டும்.'"

24 பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவாகிய
யோயாக்கீமின்[b] மகன் எகொனியாவையும்,*[c] யூதாவின் அதிகாரி
களையும், கைத்தொழிலாளிகளையும், கொல்லர்களையும்# எருசலேமிலி
ருந்து பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு[d] போன பின்பு யெகோவா
எனக்கு ஒரு காட்சியைக் காட்டினார். இரண்டு அத்திப் பழக் கூடைகள்
யெகோவாவின் ஆலயத்துக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தன. **2** ஒரு
கூடையில் நல்ல அத்திப் பழங்கள் இருந்தன. அவை முதன்முதலாகப்
பழுத்த அத்திப் பழங்களைப் போல மிகவும் நன்றாக இருந்தன. இன்னொரு
கூடையில் கெட்டுப்போன அத்திப் பழங்கள் இருந்தன. அவை சாப்பிடவே
முடியாதளவுக்கு மிகவும் கெட்டுப்போயிருந்தன.

3 யெகோவா என்னிடம், "எரேமியா, நீ என்ன பார்க்கிறாய்?" என்று
கேட்டார். அதற்கு நான், "அத்திப் பழங்களைப் பார்க்கிறேன். ஒரு கூடை
யில் மிகவும் நல்ல அத்திப் பழங்கள் இருக்கின்றன. ஆனால் இன்னொரு
கூடையில் சாப்பிடவே முடியாதளவுக்கு மிகவும் கெட்டுப்போன அத்திப்
பழங்கள் இருக்கின்றன"[e] என்று சொன்னேன்.

4 அப்போது யெகோவா என்னிடம், **5** "இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவா சொல்வது இதுதான்: 'யூதாவிலிருந்து கல்தேயர்களின் தேசத்
துக்குப் பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்கள் இந்த நல்ல அத்திப் பழங்க
ளைப் போல இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நல்லது செய்வேன்.
6 அவர்களுக்கு நல்லது செய்வதிலேயே கண்ணாக இருப்பேன். அவர்
களை மறுபடியும் இந்தத் தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு வருவேன்.[f] அவர்
களைக் கட்டி எழுப்புவேன், கவிழ்த்துப் போட மாட்டேன். அவர்களை
நட்டு வளர்ப்பேன், பிடுங்கி எறிய மாட்டேன்.[g] **7** யெகோவாவாகிய என்
னைப் புரிந்துகொள்ளும் இதயத்தை நான் அவர்களுக்குத் தருவேன்.[h]
அவர்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வருவார்கள்.[i] அவர்கள்
என்னுடைய ஜனங்களாக இருப்பார்கள், நான் அவர்களுடைய கடவுளாக
இருப்பேன்.[j]

24:1 *யோயாக்கீன் என்றும் கோனியா என்றும்கூட அழைக்கப்படுகிறார்.
#அல்லது, "கோட்டைக் கொத்தளங்கள் கட்டுகிறவர்களையும்."

அதி. 23
a எரே 24:9
எரே 42:18
புல 5:20
தானி 9:16

அதி. 24
b 2ரா 24:6
1நா 3:16
c எரே 22:24
d 2ரா 24:15, 16
எரே 29:1, 2
e எரே 24:8
f எஸ்றா 1:3
எரே 12:15
எரே 25:11
எரே 29:10
எசே 36:24
g எரே 1:10
எரே 30:18
எரே 32:41
h உபா 30:6
எரே 31:33
எசே 11:19
i எரே 29:13
j எரே 30:22
எரே 32:38
சக 8:8

8 சாப்பிடவே முடியாதளவுக்கு மிகவும் கெட்டுப்போன அத்திப் பழங்க
ளைப்[a] பற்றி யெகோவா சொல்வது இதுதான்: "யூதாவின் ராஜாவான
சிதேக்கியாவும்,[b] அவனுடைய அதிகாரிகளும், எருசலேமின் அழிவில் தப்
பித்தவர்களும், அதாவது இந்தத் தேசத்திலும் எகிப்திலும்[c] வாழ்கிறவர்க
ளும், கெட்டுப்போன அத்திப் பழங்களைப் போல இருக்கிறார்கள்.
9 அவர்களுக்கு நான் கொண்டுவரப்போகும் கோரமான முடிவைப் பார்த்து
உலகமே கதிகலங்கிப்போகும்.[d] நான் அவர்களைத் துரத்தியடிக்கிற இடங்க
ளிலெல்லாம்[e] ஜனங்கள் அவர்களைக் கேலியும் கிண்டலும் செய்வார்கள்.
அவர்களைப் பழித்தும் சபித்தும் பேசுவார்கள்.[f] **10** அவர்களுக்கு எதி
ராக நான் போரையும்[g] பஞ்சத்தையும் கொள்ளைநோயையும்[h] வர வைப்
பேன். அவர்களுக்கும் அவர்களுடைய முன்னோர்களுக்கும் நான் கொடுத்த
தேசத்திலிருந்து அவர்களை ஒழித்துக்கட்டுவேன்"' என்று சொன்னார்."

25 யோசியாவின் மகன் யோயாக்கீம் யூதாவை ஆட்சி செய்த
நான்காம் வருஷத்தில்,[i] அதாவது நேபுகாத்நேச்சார் பாபிலோனை
ஆட்சி செய்த முதலாம் வருஷத்தில், யூதா ஜனங்களைப் பற்றி எரேமியா
வுக்கு ஒரு செய்தி கிடைத்தது. **2** யூதாவிலும் எருசலேமிலும் இருந்த
எல்லா ஜனங்களையும் பற்றி* எரேமியா தீர்க்கதரிசி சொன்னது இதுதான்:
3 "ஆமோனின் மகன் யோசியா யூதாவை ஆட்சி செய்த 13-ஆம் வரு
ஷத்திலிருந்து[j] இந்த 23 வருஷங்களாக யெகோவா என்னிடம் பல செய்தி
களைச் சொன்னார். அவற்றை நான் உங்களிடம் திரும்பத் திரும்பச் சொன்
னேன், ஆனால் நீங்கள் கேட்கவே இல்லை.[k] **4** யெகோவா தன்னுடைய
ஊழியர்களான தீர்க்கதரிசிகள் எல்லாரையும் உங்களிடம் திரும்பத் திரும்ப
அனுப்பினார். ஆனால், அவர்கள் சொன்னதை நீங்கள் காதில் வாங்கவே
இல்லை.[l] **5** அவர்கள் உங்களிடம், 'தயவுசெய்து உங்களுடைய கெட்ட
வழிகளையும் செயல்களையும் விட்டுத் திருந்துங்கள்.[m] அப்போதுதான்,
உங்களுக்கும் உங்கள் முன்னோர்களுக்கும் யெகோவா கொடுத்த தேசத்
தில் நீண்ட காலம் வாழ்வீர்கள். **6** மற்ற தெய்வங்களைத் தேடிப்போய்
வணங்காதீர்கள்; உங்கள் கைகளால் செய்த சிலைகளைக் கும்பிட்டு அவ
ருடைய கோபத்தைக் கிளறாதீர்கள். அப்படிச் செய்தால் அவர் உங்களைத்
தண்டிப்பார்' என்று சொன்னார்கள்.
7 இப்போது யெகோவா சொல்வது இதுதான்: 'நீங்கள் என் பேச்சைக்
கேட்காமல் உங்கள் கைகளால் செய்த சிலைகளை வணங்கி என் கோபத்
தைக் கிளறினீர்கள். அதனால், உங்களுக்கு நீங்களே அழிவைத் தேடிக்
கொண்டீர்கள்.'[n]
8 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: '"நீங்கள் என்
பேச்சைக் கேட்காததால், **9** வடக்கிலிருக்கிற எல்லா ஜனங்களையும்[o] என்
ஊழியனான பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சாரையும்[p] வர வைத்து, இந்தத்
தேசத்தையும் இந்த ஜனங்களையும் சுற்றுப்புற தேசங்களில் இருக்கிறவர்க
ளையும் அழித்துவிடுவேன்."[q] யெகோவா சொல்வது இதுதான்: "நான் அவர்
களுக்குக் கோரமான முடிவைக் கொண்டுவருவேன். அதைப் பார்க்கிற எல்
லாரும் கேலி செய்வார்கள்.* **10** அங்கே கொண்டாட்டமோ குதூகலமோ
இனி இருக்காது.[r] மணமகனுடைய குரலும் மணமகளுடைய குரலும் மாவு
அரைக்கும் சத்தமும் கேட்காது.[s] விளக்கும் எரியாது. **11** இந்தத் தேசம்

25:2 * வே.வா., "எல்லா ஜனங்களிடமும்." **25:9** * நே.மொ., "விசில் அடிப்பார்கள்."

அதி. 24
a எரே 29:17
b 2ரா 25:6, 7
எசே 12:12, 13
c எரே 44:1
எரே 46:13
d எரே 15:4
எரே 34:17
e உபா 28:64
எரே 29:18
f எரே 26:4, 6
எரே 29:22
g லேவி 26:33
எரே 9:16
h உபா 28:59
எரே 15:2
எசே 7:15

அதி. 25
i 2ரா 24:1
எரே 36:1
எரே 46:2
தானி 1:1
j எரே 1:2
k எரே 7:13
எரே 13:10
l எரே 29:19
m 2ரா 17:13
ஏசா 55:7
எரே 18:11
எரே 35:15
எசே 18:30
எசே 33:11
n உபா 32:21
நெ 9:26
o லேவி 26:25
ஏசா 5:26
எரே 1:15
p எரே 27:6
எரே 43:10
q உபா 28:
49, 50
எரே 5:15
எசே 7:24
எசே 26:7
எசே 29:19
ஆப 1:6
r ஏசா 24:7
எசே 26:13
s எரே 7:34

சின்னாபின்னமாகும். அதற்குக் கோரமான முடிவு வரும். இவர்கள் எல்லா
ரும் 70 வருஷங்கள் பாபிலோன் ராஜாவுக்குச் சேவை செய்வார்கள்."'[a]
12 யெகோவா சொல்வது இதுதான்: 'அந்த 70 வருஷங்கள் முடிந்த
பின்பு,[b] பாபிலோன் ராஜாவும் அவனுடைய ஜனங்களும் செய்த குற்றத்
துக்குத் தண்டனை கொடுப்பேன்.[c] கல்தேயர்களுடைய தேசத்தை அழித்து
விடுவேன். அது என்றென்றைக்கும் பாழாய்க் கிடக்கும்.[d] **13** அதற்கு எதி
ராக நான் சொன்ன எல்லாவற்றையும் நடத்திக் காட்டுவேன். எல்லா
தேசத்தாருக்கு எதிராகவும் எரேமியா இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்
கிற ஒவ்வொரு தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றுவேன். **14** பல தேசங்க
ளும் பெரிய பெரிய ராஜாக்களும்[e] அவர்களை அடிமைப்படுத்துவார்கள்.[f]
அவர்களுடைய செயல்களுக்கு ஏற்ற கூலியை நான் கொடுப்பேன்.'"[g]
15 இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா என்னிடம், "என் கையில்
இருக்கிற கோபம் என்கிற திராட்சமதுக் கிண்ணத்தை வாங்கிக்கொள்.
நான் உன்னை அனுப்பும் தேசங்களில் இருக்கிற ஜனங்களுக்கு அதைக்
குடிக்கக் கொடு. **16** அவர்கள் அதைக் குடித்துத் தள்ளாடி, பைத்தியக்கா
ரர்களைப் போல நடந்துகொள்வார்கள். ஏனென்றால், அவர்களை வாளால்
தாக்க நான் எதிரியை அனுப்புவேன்"[h] என்று சொன்னார்.
17 அதனால், நான் யெகோவாவின் கையிலிருந்து கிண்ணத்தை
வாங்கி, யெகோவா என்னை அனுப்பிய எல்லா தேசங்களுக்கும்
அதைக் குடிக்கக் கொடுத்தேன்.[i] **18** முதலில் எருசலேமுக்கும் யூதா நக
ரங்களுக்கும்[j] அவற்றின் ராஜாக்களுக்கும் அதிகாரிகளுக்கும் அதைக்
குடிக்கக் கொடுத்தேன். பார்க்கிறவர்கள் பழித்தும் சபித்தும் பேசுமளவுக்கு
அவர்களுக்கும் அவர்களுடைய நகரங்களுக்கும் கோரமான அழிவு வரு
வதற்காக அப்படிச் செய்தேன்.[k] இன்று அப்படிப்பட்ட அழிவுதான் வந்தி
ருக்கிறது. **19** பின்பு எகிப்தின் ராஜாவான பார்வோனுக்கும், அவனுடைய
ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும், எல்லா ஜனங்களுக்கும்,[l] **20** எகிப்
தில் இருக்கிற மற்ற தேசத்தாருக்கும் அதைக் குடிக்கக் கொடுத்தேன்.
ஊத்ஸ் தேசத்தின் ராஜாக்கள் எல்லாருக்கும், பெலிஸ்திய தேசத்தின் ராஜாக்
கள் எல்லாருக்கும்,[m] அதாவது அஸ்கலோனின் ராஜாவுக்கும்,[n] காசாவின்
ராஜாவுக்கும், எக்ரோனின் ராஜாவுக்கும், அஸ்தோத்தில் மீதியாக இருக்கிற
வர்களின் ராஜாவுக்கும், **21** பின்பு ஏதோமுக்கும்,[o] மோவாபுக்கும்,[p] அம்
மோனியர்களுக்கும்,[q] **22** தீருவின் ராஜாக்கள் எல்லாருக்கும், சீதோ
னின் ராஜாக்கள் எல்லாருக்கும்,[r] கடலிலுள்ள தீவின் ராஜாக்களுக்கும்,
23 தேதானுக்கும்,[s] தீமாவுக்கும், பூசுக்கும், நெற்றி ஓரங்களில் முடியை
வெட்டிக் கொண்டவர்களுக்கும்,[t] **24** அரேபியர்களின் ராஜாக்கள் எல்லா
ருக்கும்,[u] வனாந்தரத்தில் குடியிருக்கிற பலதரப்பட்ட ஜனங்களின் ராஜாக்
களுக்கும், **25** சிம்ரியின் ராஜாக்கள் எல்லாருக்கும், ஏலாமின் ராஜாக்கள்
எல்லாருக்கும்,[v] மேதியர்களின் ராஜாக்கள் எல்லாருக்கும்,[w] **26** வடக்கே
பக்கத்திலும் தூரத்திலும் இருக்கிற ராஜாக்கள் எல்லாருக்கும் அடுத்த
டுத்து அதைக் குடிக்கக் கொடுத்தேன். உலகத்தில் இருக்கிற மற்ற எல்லா
ராஜ்யங்களுக்கும் கொடுத்தேன். அவர்கள் குடித்த பின்பு சேசாக்கு* ராஜா[x]
அதைக் குடிப்பான்.

25:26 *இது பாபேல் (பாபிலோன்) என்பதன் இன்னொரு பெயர் என்று கருதப்படுகிறது.

அதி. 25
a 2நா 36:20, 21; தானி 9:2; சக 1:12; சக 7:5
b உபா 30:3; எஸ்றா 1:1, 2; எரே 29:10
c ஏசா 47:1; எரே 51:1; தானி 5:26, 30
d ஏசா 13:1, 19; ஏசா 14:4, 23
e எரே 50:9; எரே 51:27
f ஏசா 14:2; ஆப 2:8
g சங் 137:8; எரே 50:29; எரே 51:6, 24; வெளி 18:6
h எரே 51:7; புல 4:21; எசே 23:32-34; நாகூ 3:7, 11
i எரே 1:10
j ஏசா 51:17
k எரே 24:9
l எரே 46:2
m எரே 47:1
n எரே 47:5
o எரே 49:17; புல 4:21
p எரே 48:1
q எரே 49:1
r எரே 27:2, 3; எரே 47:4
s எரே 49:8
t எரே 9:25, 26; எரே 49:32
u எரே 49:31, 32
v எரே 49:34
w எரே 51:11
x எரே 51:41

27 “நீ அவர்களிடம், ‘இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின்
கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: “போதை ஏறுமளவுக்குக்
குடியுங்கள், வாந்தியெடுங்கள், கீழே விழுங்கள், எழுந்திருக்க முடியாதபடி
கிடங்கள்.[a] ஏனென்றால், உங்களை வாளால் தாக்க நான் எதிரியை அனுப்
புவேன்”’ என்று சொல். **28** அவர்கள் உன்னிடமிருந்து கிண்ணத்தை வாங்
கிக் குடிக்க மறுத்தால் நீ அவர்களிடம் இப்படிச் சொல்ல வேண்டும்:
‘பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: “நீங்கள் குடித்தே
தீர வேண்டும்! **29** என் பெயர் தாங்கிய நகரத்தையே நான் முதலில் தண்
டிக்கப்போகிறேன்[b] என்றால் உங்களைத் தண்டிக்காமல் விடுவேனா?”’[c]

‘நான் உங்களைத் தண்டிக்காமல் விட மாட்டேன். உலகத்தில் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் எதிராக நான் ஒரு வாளை அனுப்புவேன்’ என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

30 நீ அவர்களிடம் இந்த எல்லா தீர்க்கதரிசனங்களையும் தெரிவித்து விட்டு இப்படிச் சொல்:

‘யெகோவா பரலோகத்திலிருந்து சிங்கம்போல் கர்ஜிப்பார்.
அவருடைய பரிசுத்தமான இடத்திலிருந்து முழங்குவார்.
பூமியில் அவர் தங்குகிற இடத்துக்கு எதிராகச் சத்தமாகக் கர்ஜிப்பார்.
திராட்சரச ஆலையில் மிதிக்கிறவர்களைப் போலச் சத்தமிடுவார்.
உலகத்தில் இருக்கிற எல்லா ஜனங்களையும் வீழ்த்திவிட்டு வெற்றிப் பாடலைப் பாடுவார்.’

31 யெகோவா சொல்வது இதுதான்:
‘ஒரு சத்தம் பூமியெங்கும் எதிரொலிக்கும்.
தேசங்களோடு யெகோவாவுக்கு ஒரு வழக்கு இருக்கிறது.
எல்லா மனுஷர்களுக்கும் அவரே தீர்ப்பு சொல்வார்.[d]
கெட்டவர்களை வாளுக்குப் பலியாக்குவார்.’

32 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
‘இதோ, தேசங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அழியும்.[e]
பூமியின் தொலைதூரத்திலிருந்து ஒரு பெரிய புயல்காற்று புறப்பட்டு வரும்.[f]

33 அன்று யெகோவாவினால் வெட்டி வீழ்த்தப்பட்டவர்கள் பூமியின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைவரை கிடப்பார்கள். அவர்களுக்காக யாரும் அழுது புலம்ப மாட்டார்கள். அவர்கள் அள்ளப்படாமலும், அடக்கம் செய்யப்படாமலும், அப்படியே நிலத்தில் எருவாகிப்போவார்கள்.’

34 மேய்ப்பர்களே, ஓலமிட்டு அழுங்கள்!
மந்தையிலுள்ள பிரபலமானவர்களே, மண்ணில் புரளுங்கள்!
நீங்கள் வெட்டிச் சாய்க்கப்படுவதற்கும் சிதறிப்போவதற்கும் நேரம் வந்துவிட்டது!
கீழே விழுந்து நொறுங்கும் விலைமதிப்புள்ள ஜாடியைப் போல நீங்கள் ஆகிவிடுவீர்கள்!

35 ஓடி ஒளிய மேய்ப்பர்களுக்கு இடமே இருக்காது.
மந்தையிலுள்ள பிரபலமானவர்களால் தப்பிக்கவே முடியாது.

36 மேய்ப்பர்களின் அலறலைக் கேளுங்கள்.
மந்தையிலுள்ள பிரபலமானவர்களின் கதறலைக் கேளுங்கள்.

அதி. 25
a ஏசா 63:6
ஆப 2:16
b 1ரா 9:7
எரே 7:12, 14
தானி 9:18
ஓசி 12:2
மீ 6:2
c எரே 49:12
ஒப 16
d யோவே 3:2
e ஏசா 34:2, 3
எரே 25:17
f செப் 3:8

அதி. 25
a ஓசி 5:14

அதி. 26
b 2ரா 23:34
2நா 36:4
எரே 25:1
எரே 35:1
எரே 36:1
c ஏசா 55:7
எரே 18:7, 8
எரே 36:3
எசே 18:27
d 2ரா 17:13, 14
எரே 7:12-14
எரே 25:3
e சங் 78:60
f எரே 24:9
g எரே 26:2
h எரே 36:10
i எரே 18:19, 20
j எரே 38:4

யெகோவா அவர்களுடைய மேய்ச்சல் நிலங்களைப் பாழாக்குகிறார்.
37 அவர்கள் நிம்மதியாக வாழ்ந்த இடங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.
ஏனென்றால், யெகோவாவின் கோபம் அவர்கள்மேல் பற்றியெரிந்தது.
38 அவர் இளம் சிங்கத்தைப் போலக் குகையிலிருந்து சீறிக்கொண்டு
வந்தார்.[a]
கொடூரமான வாளினாலும்
அவருடைய பயங்கரமான கோபத்தினாலும்
தேசத்துக்குக் கோரமான முடிவு வந்துவிட்டது."

26 யூதாவின் ராஜாவாகிய யோசியாவின் மகன் யோயாக்கீம் ஆட்சி
செய்ய ஆரம்பித்தபோது[b] யெகோவாவிடமிருந்து இந்தச் செய்தி
வந்தது: **2** "யெகோவா சொல்வது இதுதான்: 'நீ யெகோவாவின் ஆலயப்
பிரகாரத்துக்குப் போய் நின்றுகொண்டு, யெகோவாவை வணங்குவதற்காக
யூதாவின் நகரங்களிலிருந்து ஆலயத்துக்கு வருகிற எல்லா ஜனங்களிடமும்
பேசு. நான் உன்னைச் சொல்லச் சொல்கிற எல்லாவற்றையும் அவர்களி
டம் சொல். அதில் ஒரு வார்த்தையைக்கூட விட்டுவிடாதே. **3** அவர்கள்
ஒருவேளை அதைக் கேட்டு தங்களுடைய கெட்ட வழிகளையும் அக்கிர
மங்களையும் விட்டுத் திருந்தலாம். அப்போது, நான் என் மனதை மாற்றிக்
கொண்டு அவர்களை அழிக்காமல் விட்டுவிடுவேன்.[c] **4** நீ அவர்களிடம்,
"யெகோவா சொல்வது இதுதான்: 'நான் உங்களுக்குக் கொடுத்த சட்டத்தை*
நீங்கள் கடைப்பிடிக்காமல் போனால், **5** நான் திரும்பத் திரும்ப அனுப்பிய
என் ஊழியர்களான தீர்க்கதரிசிகளின் பேச்சை இதுவரை கேட்காததுபோல்
இனியும் கேட்காமல் போனால்,[d] **6** நான் இந்த ஆலயத்தை சீலோவைப்[e]
போல் பாழாக்கிவிடுவேன். பூமியெங்கும் இருக்கிற ஜனங்கள் இந்த நகரத்
தைப் பார்த்து சபிக்கும்படி செய்வேன்'[f] என்று சொல்ல வேண்டும்."'"

7 யெகோவாவின் ஆலயத்தில் எரேமியா சொன்ன இந்த வார்த்தை
களை குருமார்களும் தீர்க்கதரிசிகளும் ஜனங்களும் கேட்டுக்கொண்டிருந்
தார்கள்.[g] **8** யெகோவா சொல்லச் சொன்ன எல்லாவற்றையும் எரேமியா
சொல்லி முடித்த பின்பு அந்தக் குருமார்களும் தீர்க்கதரிசிகளும் ஜனங்க
ளும் அவரைப் பிடித்து, "உன்னைத் தீர்த்துக்கட்டப் போகிறோம். **9** 'இந்த
ஆலயம் சீலோவைப் போலப் பாழாக்கப்படும்' என்றும், 'இந்த நகரம்
யாருமே குடியிருக்க முடியாதளவுக்கு நாசமாக்கப்படும்' என்றும் யெகோவா
வின் பெயரில் நீ ஏன் சொன்னாய்?" என்று மிரட்டினார்கள். அப்போது,
யெகோவாவின் ஆலயத்தில் இருந்த எல்லா ஜனங்களும் எரேமியாவைச்
சூழ்ந்துகொண்டார்கள்.

10 யூதாவின் அதிகாரிகள் எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்ட
போது, ராஜாவின் அரண்மனையிலிருந்து யெகோவாவின் ஆலயத்துக்கு
வந்தார்கள். பின்பு, யெகோவாவுடைய ஆலயத்தின் புதிய நுழைவாச
லில் உட்கார்ந்தார்கள்.[h] **11** அவர்களிடமும் ஜனங்களிடமும் அங்கிருந்த
குருமார்களும் தீர்க்கதரிசிகளும் இப்படிச் சொன்னார்கள்: "இவனுக்கு மரண
தண்டனை கொடுப்பதுதான் சரி.[i] நீங்களே உங்கள் காதால் கேட்டது போல,
இந்த நகரம் நாசமாக்கப்படும் என்று இவன் சொல்லிக்கொண்டு இருக்கி
றான்."[j]

26:4 * வே.வா., "அறிவுரையை."

12 அப்போது எரேமியா அந்த அதிகாரிகளையும் ஜனங்களையும்
பார்த்து, “இந்த ஆலயத்துக்கும் இந்த நகரத்துக்கும் எதிராகத் தீர்க்கதரிசனம்
சொல்ல யெகோவாதான் என்னை அனுப்பினார். அவர் சொல்லச் சொன்
னதைத்தான் உங்களிடம் சொன்னேன்.[a] **13** அதனால், உங்களுடைய
கெட்ட வழிகளையும் செயல்களையும் விட்டுத் திருந்துங்கள். உங்கள் கடவு
ளாகிய யெகோவாவின் பேச்சைக் கேளுங்கள். அப்போது, யெகோவா தன்
னுடைய மனதை மாற்றிக்கொண்டு, உங்களுக்குக் கொடுக்கப்போவதாகச்
சொன்ன தண்டனையைக் கொடுக்காமல் விட்டுவிடுவார்.[b] **14** இப்போது
நான் உங்கள் கையில் இருக்கிறேன். உங்கள் இஷ்டப்படி என்னை என்ன
வேண்டுமானாலும் செய்யுங்கள். **15** ஆனால், ஒன்றை மட்டும் மறந்து
விடாதீர்கள். நீங்கள் என்னைக் கொன்றுவிட்டால், ஒரு அப்பாவியைக்
கொன்ற பழியை உங்கள்மேலும் இந்த நகரத்தின் மேலும் இந்த ஜனங்கள்
மேலும் சுமத்திக்கொள்வீர்கள். ஏனென்றால், இந்த வார்த்தைகளைச் சொல்
லச் சொல்லி என்னை அனுப்பியது உண்மையில் யெகோவாதான்” என்றார்.

16 அப்போது அதிகாரிகளும் எல்லா ஜனங்களும், அந்தக் குருமார்க
ளையும் தீர்க்கதரிசிகளையும் பார்த்து, “இவன் நம்முடைய கடவுளாகிய
யெகோவாவின் பெயரில்தான் பேசியிருக்கிறான். அதனால், இவனுக்கு
மரண தண்டனை கொடுப்பது சரியல்ல” என்றார்கள்.

17 அதோடு, ஊர்ப் பெரியோர்கள் சிலர் எழுந்து, சபையாகக் கூடிவந்த
எல்லா ஜனங்களையும் பார்த்து இப்படிச் சொன்னார்கள்: **18** “எசேக்கியா
ராஜா[c] யூதாவை ஆட்சி செய்த காலத்தில் மொரேசாவைச் சேர்ந்த மீகா[d]
என்பவர் தீர்க்கதரிசனம் சொல்லிவந்தார். அவர் யூதா ஜனங்களிடம், ‘பர
லோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:

“வயலைப் போல சீயோன் உழப்படும்.
எருசலேம் மண்மேடாகும்.[e]
ஆலயம் இருக்கிற மலை அடர்ந்த காடாகும்”’[f]

என்று சொன்னார்.

19 அதைக் கேட்டபோது யூதாவின் ராஜா எசேக்கியாவும் யூதா
ஜனங்களும் அவரைக் கொன்றுவிட்டார்களா? இல்லையே. அதற்குப் பதி
லாக, எசேக்கியா யெகோவாவுக்குப் பயந்து யெகோவாவின் கருணைக்
காகக் கெஞ்சினாரே. அதனால், யெகோவாவும் தன்னுடைய மனதை
மாற்றிக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்கப்போவதாகச் சொன்ன தண்
டனையைக் கொடுக்காமல் விட்டுவிட்டாரே.[g] ஆனால், இப்போது நமக்கு
நாமே பேரழிவைக் கொண்டுவரப் பார்க்கிறோம்.

20 கீரியாத்-யெயாரீமைச்[h] சேர்ந்த செமாயாவின் மகன் ஊரியாவும்
யெகோவாவின் பெயரில் தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டு இருந்தார்.
அவரும் எரேமியாவைப் போலவே இந்த நகரத்துக்கும் இந்தத் தேசத்
துக்கும் அழிவு வருமென்று சொல்லிவந்தார். **21** யோயாக்கீம் ராஜாவும்[i]
அவருடைய மாவீரர்களும் அதிகாரிகளும் அதைக் கேட்டார்கள். அத
னால், ஊரியாவைக் கொலை செய்ய ராஜா முடிவுசெய்தார்.[j] அதைக்
கேள்விப்பட்ட ஊரியா பயந்துபோய் எகிப்துக்குத் தப்பியோடினார்.
22 அப்போது யோயாக்கீம் ராஜா, அக்போரின் மகனாகிய எல்நாத்தானை
யும்[k] இன்னும் சில ஆட்களையும் எகிப்துக்கு அனுப்பினான். **23** அவர்
கள் எகிப்துக்குப் போய் ஊரியாவைப் பிடித்து யோயாக்கீம் ராஜாவிடம்

அதி. 26
a எரே 1:17
b எரே 7:3; எரே 36:3; எசே 18:32; யோனா 3:9
c 2நா 29:1
d மீ 1:1
e சங் 79:1; எரே 9:11
f மீ 3:12
g 2நா 32:26
h யோசு 15:20, 60; யோசு 18:11, 14; 1சா 7:2
i 2ரா 23:34; 2நா 36:5
j 2நா 16:10
k எரே 36:11, 12

கொண்டுவந்தார்கள். ராஜா அவரை வாளால் வெட்டி,[a] அவருடைய உட
லைப் பொது ஜனங்களுடைய கல்லறையிலே தூக்கி வீசினான்."
24 ஆனால், சாப்பானின் மகனாகிய[b] அகிக்காம்[c] எரேமியாவுக்கு ஆத
ரவாக இருந்ததால், எரேமியா ஜனங்களுடைய கையில் சாகாமல் தப்பித்
துக்கொண்டார்.[d]

27

27 யூதாவின் ராஜாவாகிய யோசியாவின் மகன் யோயாக்கீம்* ஆட்சி
செய்ய ஆரம்பித்தபோது எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து
இந்தச் செய்தி கிடைத்தது: **2** "யெகோவா என்னிடம் சொன்னது இதுதான்:
'நீ வார்களையும் நுகத்தடிகளையும் செய்து உன் கழுத்தில் மாட்டிக்கொள்.
3 பின்பு ஏதோமின் ராஜாவுக்கும்,[e] மோவாபின் ராஜாவுக்கும்,[f] அம்மோ
னியர்களின் ராஜாவுக்கும்,[g] தீருவின் ராஜாவுக்கும்,[h] சீதோனின் ராஜாவுக்
கும்[i] அவற்றைக் கொடுத்தனுப்பு. யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவைப்
பார்ப்பதற்காக எருசலேமுக்கு வந்திருக்கும் தூதுவர்களின் கையில் அவற்
றைக் கொடுத்தனுப்பு. **4** அப்போது அவர்களிடம் இப்படிச் சொல்:
"இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்லும் இந்த வார்த்தைகளை உங்கள் எஜமான்களிடம் நீங்
கள் சொல்ல வேண்டும். **5** 'நான்தான் இந்தப் பூமியையும் மனுஷர்களை
யும் பூமியில் நடமாடுகிற மிருகங்களையும் என்னுடைய மகா வல்லமையி
னாலும் பலத்தினாலும் படைத்தேன். எனக்கு விருப்பமானவனுக்கு
அவற்றைக் கொடுக்கிறேன்.[j] **6** இப்போது என் ஊழியனும் பாபிலோன்
ராஜாவுமான நேபுகாத்நேச்சாரின் கையில் எல்லா தேசங்களையும் கொடுத்
திருக்கிறேன்.[k] காட்டு மிருகங்களைக்கூட அவனுக்கு அடிபணிய வைத்தி
ருக்கிறேன். **7** எல்லா தேசத்தாரும் அவனுக்கும் அவனுடைய பிள்ளைக
ளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் பணிவிடை செய்வார்கள். ஆனால்,
பிற்பாடு அவனுடைய தேசமே கைப்பற்றப்படும்.[l] பல தேசத்தாரும் பெரிய
பெரிய ராஜாக்களும் அவனை அடிமைப்படுத்துவார்கள்.'[m]
8 யெகோவா சொல்வது இதுதான்: 'பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சா
ரின் நுகத்தடியின்கீழ் வந்து அவனுக்கு அடிபணிய மறுக்கிற தேசத்தை
அல்லது ராஜ்யத்தை நான் அவனுடைய கையாலேயே அடியோடு அழிக்
கும்வரை அதை வாளினாலும்[n] பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும்
தண்டிப்பேன்.'
9 'அதனால், தீர்க்கதரிசிகளும் குறிசொல்கிறவர்களும் கனவு காண்கிற
வர்களும் மந்திரவாதிகளும் சூனியக்காரர்களும் உங்களிடம், "நீங்கள் பாபி
லோன் ராஜாவுக்குச் சேவை செய்ய மாட்டீர்கள்" என்று சொல்வதை நம்பா
தீர்கள். **10** அவர்கள் பொய்த் தீர்க்கதரிசனங்களைச் சொல்கிறார்கள்.
அவர்கள் சொல்வதைக் கேட்டால் நீங்கள் எல்லாரும் தூர தேசத்துக்குக்
கொண்டுபோகப்படுவீர்கள். நான் உங்களைச் சிதறிப்போகப் பண்ணுவேன்.
நீங்கள் அழிந்துபோவீர்கள்.
11 ஆனால், பாபிலோன் ராஜாவின் நுகத்தடியின்கீழ் வந்து அவனுக்கு
அடிபணிகிற தேசத்தாரை நான் அவர்களுடைய தேசத்திலேயே விட்டு
வைப்பேன். அவர்கள் அங்கேயே பயிர்செய்து அங்கேயே வாழ்வார்கள்'
என்று யெகோவா சொல்கிறார்."'"

27:1 * பழமையான சில கையெழுத்துப் பிரதிகளின்படி, "சிதேக்கியா."

அதி. 26
a எரே 2:30
b 2ரா 22:10
c 2ரா 22:12, 13; எரே 39:13, 14; எரே 40:5
d 1ரா 18:4

அதி. 27
e எசே 25:12, 13; ஒப 1
f எரே 48:1; எசே 25:8, 9
g எரே 49:1, 2; எசே 25:2
h ஏசா 23:1; எரே 47:4; எசே 26:3
i ஏசா 23:4; எசே 28:21; யோவே 3:4
j தானி 4:17
k எரே 25:9; எரே 28:14; எரே 43:10; தானி 2:37, 38
l சங் 137:8; எரே 50:14, 27; தானி 5:26, 30
m எரே 25:12, 14; எரே 51:11
n எசே 26:7, 8

12 யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவிடமும்[a] நான் அதே செய்
தியைச் சொன்னேன். அவரிடம், “பாபிலோன் ராஜாவின் நுகத்தடியின்கீழ்
வந்து அவருக்கும் அவருடைய ஜனங்களுக்கும் அடிபணிந்து நடங்கள்.
அப்போது நீங்கள் உயிர்பிழைப்பீர்கள்.[b] **13** பாபிலோன் ராஜாவுக்குச்
சேவை செய்யாத தேசத்தாரை வாளினாலும்[c] பஞ்சத்தினாலும்[d] கொள்ளை
நோயினாலும்[e] தாக்கப்போவதாக யெகோவா சொல்லியிருக்கிறாரே. நீங்க
ளும் உங்கள் ஜனங்களும் ஏன் அவர் கையில் சாக வேண்டும்? **14** ‘நீங்
கள் பாபிலோன் ராஜாவுக்குச் சேவை செய்ய மாட்டீர்கள்’[f] என்று சொல்கிற
தீர்க்கதரிசிகளின் பேச்சைக் கேட்காதீர்கள். ஏனென்றால், அவர்கள் பொய்த்
தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள்.[g]

15 யெகோவா சொல்வது இதுதான்: ‘நான் அவர்களை அனுப்பவில்லை.
அவர்களாகவே என் பெயரில் பொய்த் தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள்.
அவர்கள் சொல்வதை நீங்கள் கேட்டால் நான் உங்களைச் சிதறிப்போகப்
பண்ணுவேன். நீங்களும் உங்கள் தீர்க்கதரிசிகளும் அழிந்துபோவீர்கள்’[h]
என்றேன்.”

16 குருமார்களிடமும் எல்லா ஜனங்களிடமும் இப்படிச் சொன்னேன்:
“யெகோவா சொல்வது இதுதான்: ‘“இதோ, யெகோவாவின் ஆலயத்திலி
ருந்து பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்ட பாத்திரங்கள் சீக்கிரத்தி
லேயே திரும்பக் கொண்டுவரப்படும்”[i] என்று சொல்கிற தீர்க்கதரிசிகளின்
பேச்சைக் கேட்காதீர்கள். அவர்கள் பொய்த் தீர்க்கதரிசனம் சொல்கிறார்
கள்.[j] **17** அவர்கள் சொல்வதை நம்பாதீர்கள். பாபிலோன் ராஜாவுக்குச்
சேவை செய்யுங்கள். அப்போது உயிர்பிழைப்பீர்கள்.[k] இந்த நகரம் ஏன்
அழிய வேண்டும்? **18** அவர்கள் உண்மையிலேயே யெகோவாவின்
வார்த்தைகளைச் சொல்லும் தீர்க்கதரிசிகளாக இருந்தால், யெகோவாவின்
ஆலயத்திலும் யூதாவின் ராஜாவுடைய அரண்மனையிலும் எருசலேமிலும்
இருக்கிற மீதி பாத்திரங்களை பாபிலோன் ராஜா கொண்டுபோகாதபடி பர
லோகப் படைகளின் யெகோவாவிடம் கெஞ்சிக் கேட்கட்டும்.’

19 இந்த நகரத்தில் மீதியிருக்கிற பாத்திரங்களையும், தூண்களையும்,[l]
‘செம்புக் கடல்’ தொட்டியையும்,* [m] தள்ளுவண்டிகளையும்[n] குறித்து பர
லோகப் படைகளின் யெகோவா ஒரு செய்தி சொல்கிறார். **20** யூதா
வின் ராஜாவாகிய யோயாக்கீமின் மகன் எகொனியாவையும், யூதா மற்றும்
எருசலேமின் பிரமுகர்களையும் நேபுகாத்நேச்சார் ராஜா எருசலேமிலிருந்து
பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போனபோது அவற்றை எடுத்
துச் செல்லவில்லை.[o] **21** இப்போது யெகோவாவின் ஆலயத்திலும் யூதா
வின் ராஜாவுடைய அரண்மனையிலும் எருசலேமிலும் இருக்கிற மீதி பாத்
திரங்களைக் குறித்து இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின்
கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: **22** ‘“அவை பாபிலோனுக்
குக் கொண்டுபோகப்படும்.[p] நான் நடவடிக்கை எடுக்கும் நாள்வரை அவை
அங்கேயே இருக்கும். பின்பு, நான் அவற்றை மறுபடியும் இந்த இடத்துக்கே
கொண்டுவருவேன்”[q] என்று யெகோவா சொல்கிறார்.’”

28

அதே வருஷத்தில், அதாவது சிதேக்கியா ராஜா[r] யூதாவை ஆட்சி
செய்த நான்காம் வருஷம் ஐந்தாம் மாதத்தில், கிபியோனைச்[s]
சேர்ந்த ஆசூரின் மகனாகிய அனனியா தீர்க்கதரிசி யெகோவாவின் ஆல

27:19 * அதாவது, “ஆலயத்தின் தண்ணீர்த் தொட்டியையும்.”

அதி. 27
a 2ரா 24:17
1நா 3:15
எரே 37:1
b எரே 38:2, 20
c 2ரா 25:7
d 2ரா 25:3
e எரே 21:9
எசே 14:21
f எரே 28:1, 2
எரே 28:11
எரே 37:19
g எரே 14:14
எரே 23:21
எரே 28:15
எரே 29:8, 9
எசே 13:6
h எரே 20:6
எரே 29:21
எசே 13:3
i 2ரா 24:11, 13
2நா 36:7
எரே 28:1–3
தானி 1:1, 2
j எரே 14:13
k எரே 27:11
எரே 38:17
l 1ரா 7:15
2ரா 25:17
2நா 4:11, 12
எரே 52:21
m 1ரா 7:23
n 1ரா 7:27
2ரா 25:16
2நா 4:11, 14
o 2ரா 24:14, 15
2நா 36:10
எரே 24:1
தானி 1:2, 3
p 2ரா 25:13, 14
2நா 36:18
எரே 52:17, 18
தானி 5:3
q எஸ்றா 1:7
எஸ்றா 5:14

அதி. 28
r 2ரா 24:17
2நா 36:10
s யோசு 11:19
2சா 21:2

யத்துக்கு வந்தான். அங்கே குருமார்களுக்கும் எல்லா ஜனங்களுக்கும் முன்
னால் என்னிடம் இப்படிச் சொன்னான்: 2 "இஸ்ரவேலின் கடவுளும் பர
லோகப் படைகளின் கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்:
'பாபிலோன் ராஜாவின் நுகத்தடியை நான் உடைத்துப்போடுவேன்.[a]
3 பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் யெகோவாவின் ஆலயத்திலிருந்து
கொண்டுபோன எல்லா பாத்திரங்களையும் இரண்டே வருஷத்தில் மறுப
டியும் இங்கே கொண்டுவருவேன்.'"[b] 4 "யெகோவா சொல்வது இதுதான்:
'யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின்[c] மகன் எகொனியாவையும்[d] யூதா
விலிருந்து பாபிலோனுக்குச்[e] சிறைபிடிக்கப்பட்டுப் போன மற்ற எல்லா
ஜனங்களையும் நான் மறுபடியும் இங்கே கொண்டுவருவேன். பாபிலோன்
ராஜாவின் நுகத்தடியை உடைத்துப்போடுவேன்.'"

5 அப்போது எரேமியா தீர்க்கதரிசி, யெகோவாவின் ஆலயத்தில் நின்
றுகொண்டிருந்த குருமார்களுக்கும் ஜனங்களுக்கும் முன்னால் அன
னியா தீர்க்கதரிசியிடம், 6 "ஆமென்!* யெகோவா இதைச் செய்யட்டும்!
யெகோவா நீ சொன்ன தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றட்டும்! யெகோவா
வின் ஆலயத்திலிருந்து பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்ட பாத்திரங்
களையும் அங்கே சிறைபிடிக்கப்பட்டுப் போன ஜனங்களையும் அவர்
மறுபடியும் இங்கே கொண்டுவரட்டும்! 7 ஆனால், இப்போது நான் உனக்
கும் இந்த எல்லா ஜனங்களுக்கும் முன்னால் சொல்லப்போகிற செய்தியைத்
தயவுசெய்து கேள். 8 எனக்கும் உனக்கும் முன்னால் வாழ்ந்த தீர்க்கதரிசி
கள், பல தேசங்களையும் பெரிய ராஜ்யங்களையும் பற்றித் தீர்க்கதரிசனம்
சொன்னபோது, போரும் பேராபத்தும் கொள்ளைநோயும் வருமென்று
தான் சொன்னார்கள். 9 அப்படியிருக்கும்போது, சமாதானம் வருமென்று
ஒரு தீர்க்கதரிசி சொன்னால், அவர் சொன்னபடி நடக்க வேண்டும். அப்
போதுதான், அவர் உண்மையிலேயே யெகோவாவினால் அனுப்பப்பட்ட
தீர்க்கதரிசி என்பது தெரியவரும்" என்றார்.

10 அதைக் கேட்டதும் அனனியா தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின்
கழுத்திலிருந்த நுகத்தடியை எடுத்து உடைத்துப்போட்டான்.[f] 11 பின்பு
எல்லா ஜனங்களுக்கும் முன்பாக, "யெகோவா சொல்வது இதுதான்: 'இதே
போல், இரண்டே வருஷத்தில் பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சா
ரின் நுகத்தடியை எல்லா தேசத்தாருடைய கழுத்திலிருந்தும் நான் எடுத்து
உடைத்துப்போடுவேன்'"[g] என்று சொன்னான். அப்போது, எரேமியா தீர்க்க
தரிசி அங்கிருந்து கிளம்பிப் போனார்.

12 அனனியா தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த
நுகத்தடியை எடுத்து உடைத்துப்போட்ட சம்பவத்துக்குப் பின்பு யெகோவா
எரேமியாவிடம் இப்படிச் சொன்னார்: 13 "நீ அனனியாவிடம் போய்,
'யெகோவா சொல்வது இதுதான்: "நீ மர நுகத்தடிகளை உடைத்தாய்.[h]
ஆனால், அவற்றுக்குப் பதிலாக இரும்பு நுகத்தடிகளை உண்டாக்கு
வாய்." 14 இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்வது இதுதான்: "பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சா
ருக்கு அடிபணியும்படி இந்த எல்லா தேசத்தார்மேலும் நான் இரும்பு நுகத்
தடியை வைப்பேன். அவர்கள் அவனுக்கு அடிபணிய வேண்டும்.[i] காட்டு

28:6 * அதாவது, "அப்படியே ஆகட்டும்!"

அதி. 28
a எரே 27:4, 8
b 2ரா 24:11, 13; எரே 27:16; தானி 1:2
c 2ரா 23:36; 2ரா 24:6
d 2ரா 24:8; 2ரா 25:27; எரே 37:1
e 2ரா 24:12, 14; எரே 24:1
f எரே 27:2
g எரே 28:4
h எரே 27:2
i உபா 28:48; எரே 5:19

மிருகங்களைக்கூட நான் அவனுக்கு அடிபணிய வைப்பேன்"'[a] என்று
சொல்ல வேண்டும்."

15 பின்பு எரேமியா தீர்க்கதரிசி அனனியா தீர்க்கதரிசியிடம்,[b] "அனனி
யாவே, தயவுசெய்து கேள்! யெகோவா உன்னை அனுப்பவில்லை. நீ பொய்
பேசி இந்த ஜனங்களை ஏமாற்றியிருக்கிறாய்.[c] **16** அதனால் யெகோவா
சொல்வது இதுதான்: 'நான் உன்னை இந்த உலகத்திலிருந்தே ஒழித்துக்கட்டு
வேன். யெகோவாவுக்குக் கீழ்ப்படியாமல் போக நீ ஜனங்களைத் தூண்டிய
தால் இந்த வருஷமே செத்துப்போவாய்'"[d] என்று சொன்னார்.

17 அதன்படியே, அனனியா தீர்க்கதரிசி அந்த வருஷம் ஏழாம் மாதம்
இறந்துபோனான்.

29 நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போயி
ருந்த பெரியோர்களுக்கும்* குருமார்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்
கும் ஜனங்கள் எல்லாருக்கும் எரேமியா தீர்க்கதரிசி எருசலேமிலிருந்து
ஒரு கடிதம் எழுதினார். **2** எகொனியா ராஜாவும்,[e] அவருடைய தாயும்,*[f]
அரண்மனை அதிகாரிகளும், யூதா மற்றும் எருசலேமின் தலைவர்களும்,
கைத்தொழிலாளிகளும், கொல்லர்களும்# சிறைபிடிக்கப்பட்டுப் போன
பின்பு[g] **3** எரேமியா அந்தக் கடிதத்தை சாப்பானின் மகன்[h] எலாசாவிட
மும் இல்க்கியாவின் மகன் கெமரியாவிடமும் கொடுத்தனுப்பினார். ஏனென்
றால், சிதேக்கியா ராஜா[i] இவர்கள் இரண்டு பேரையும் பாபிலோன் ராஜா
வான நேபுகாத்நேச்சாரிடம் போகச் சொல்லியிருந்தார். அந்தக் கடிதத்தில்
எரேமியா எழுதியது இதுதான்:

4 "இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா, தான் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குக் கைதிகளாக அனுப்
பிய எல்லா ஜனங்களுக்கும் இப்படிச் சொல்கிறார்: **5** 'வீடுகளைக் கட்டி
அதில் குடியிருங்கள். தோட்டங்களை அமைத்து அதன் விளைச்சலைச்
சாப்பிடுங்கள். **6** கல்யாணம் செய்துகொண்டு பிள்ளைகளைப் பெற்றுக்
கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் கல்யாணம் செய்து வையுங்கள்.
அவர்களும் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளட்டும். அங்கே ஏராளமாகப்
பெருகுங்கள், எண்ணிக்கையில் குறைந்துவிடாதீர்கள். **7** நான் உங்களை
அனுப்பியிருக்கிற நகரத்தில் சமாதானமாக இருங்கள்.* அந்த நகரத்துக்காக
யெகோவாவிடம் ஜெபம் செய்யுங்கள். ஏனென்றால், நகரம் சமாதானமாக
இருந்தால் நீங்களும் சமாதானமாக இருப்பீர்கள்.[j] **8** இஸ்ரவேலின் கட
வுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான யெகோவா சொல்வது இது
தான்: "உங்களோடு இருக்கிற தீர்க்கதரிசிகளையும் குறிசொல்கிறவர்களை
யும் நம்பி ஏமாந்துபோகாதீர்கள்.[k] கனவு கண்டதாக அவர்கள் சொல்லும்
கதைகளைக் கேட்காதீர்கள். **9** யெகோவா சொல்வது இதுதான்: 'அவர்கள்
என் பெயரில் பொய்த் தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள். நான் அவர்களை
அனுப்பவில்லை.'"'"[l]

10 "யெகோவா சொல்வது இதுதான்: 'நீங்கள் பாபிலோனில் 70 வருஷம்
இருந்த பின்பு, நான் வாக்குக் கொடுத்தபடியே மறுபடியும் உங்களுடைய
தேசத்துக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு வருவேன்.'[m]

29:1 *வே.வா., "மூப்பர்களுக்கும்." **29:2** *வே.வா., "ராஜமாதாவும்." #அல்லது,
"கோட்டைக் கொத்தளங்கள் கட்டுகிறவர்களும்." **29:7** *வே.வா., "சமாதானத்தை
நாடுங்கள்."

அதி. 28
a எரே 27:6
தானி 2:37, 38
b எரே 28:1
c எரே 14:14
எரே 23:21
எரே 27:15
எசே 13:3
d உபா 13:5
உபா 18:20
எரே 29:32

அதி. 29
e 2ரா 24:8
எரே 22:24
f எரே 22:26
g 2ரா 24:15, 16
எரே 24:1
h 2ரா 22:8
எரே 26:24
எரே 39:13, 14
எசே 8:11
i 2ரா 24:18
j 1தீ 2:1, 2
k எரே 14:14
எரே 27:14
l எரே 23:21
எரே 28:15
m உபா 30:3
2நா 36:20, 21
எஸ்றா 1:1-3
எஸ்றா 2:1
எரே 24:6
தானி 9:2
சக 1:12

11 யெகோவா சொல்வது இதுதான்: 'நீங்கள் அழிந்துபோக வேண்டும்
என்றல்ல, நிம்மதியாக வாழ வேண்டும் என்றுதான் நான் நினைக்கிறேன்.[a]
உங்களுக்கு நல்ல எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கவே
ஆசைப்படுகிறேன்.[b] **12** நீங்கள் என்னைக் கூப்பிடுவீர்கள். என்னிடம்
வந்து வேண்டிக்கொள்வீர்கள். நான் அதைக் கேட்பேன்.'[c]

13 'நீங்கள் என்னை முழு இதயத்தோடு[d] நாடித் தேடுவீர்கள்; அதனால்,
என்னைக் கண்டடைவீர்கள்.[e] **14** என்னைக் கண்டடைய நான் உங்க
ளுக்கு உதவுவேன்'[f] என்று யெகோவா சொல்கிறார். 'சிறைபிடிக்கப்பட்
டுப் போனவர்களை நான் கூட்டிச்சேர்ப்பேன்.[g] உங்களைத் துரத்தியடித்த
எல்லா தேசங்களிலிருந்தும் எல்லா இடங்களிலிருந்தும் உங்களைக் கூட்டிக்
கொண்டு வருவேன்.[h] மறுபடியும் உங்கள் தேசத்துக்கே கூட்டிக்கொண்டு
வருவேன்' என்று யெகோவா சொல்கிறார்.

15 ஆனால் நீங்கள், 'யெகோவா எங்களுக்காக பாபிலோனில் தீர்க்கத
ரிசிகளைத் தந்திருக்கிறார்' என்று சொல்கிறீர்கள்.

16 தாவீதின் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாவுக்கும்,[i] இந்த நக
ரத்தில் வாழ்கிற எல்லா ஜனங்களுக்கும், அதாவது உங்களோடுகூட
சிறைபிடிக்கப்படாத உங்கள் சகோதரர்களுக்கும், யெகோவா சொல்வது
இதுதான்: **17** 'பரலோகப் படைகளின் யெகோவா இப்படிச் சொல்கிறார்:
"நான் அவர்களுக்கு எதிராக வாளையும் பஞ்சத்தையும் கொள்ளைநோயை
யும் அனுப்புகிறேன்.[j] சாப்பிடவே முடியாதளவுக்கு அழுகிப்போன* அத்
திப் பழங்களைப் போல அவர்களை ஆக்குவேன்."'[k]

18 'நான் அவர்களை வாளினாலும்[l] பஞ்சத்தினாலும் கொள்ளைநோயி
னாலும் தாக்குவேன். அவர்களுக்கு வரும் கோரமான முடிவைப் பார்த்து
உலகமே அதிர்ச்சி அடையும்,[m] கதிகலங்கிப்போகும். நான் அவர்களைத்
துரத்தியடிக்கிற தேசங்களில் இருக்கிறவர்கள் அவர்களைப் பழித்தும் சபித்
தும் பேசுவார்கள்.[n] அவர்களைப் பார்த்துக் கேலி செய்வார்கள்.*[o]
19 இதற்கெல்லாம் காரணம், நான் என் ஊழியர்களான தீர்க்கதரிசிகளைத்
திரும்பத் திரும்ப அனுப்பியும் அவர்கள் என் பேச்சைக் கேட்காததுதான்'[p]
என்று யெகோவா சொல்கிறார்.

'நீங்களும் என் பேச்சைக் கேட்கவில்லை'[q] என்று யெகோவா
சொல்கிறார்.

20 எருசலேமிலிருந்து பாபிலோனுக்குக் கைதிகளாக யெகோவா
அனுப்பிய ஜனங்களே, அவருடைய செய்தியைக் கேளுங்கள். **21** அவ
ருடைய பெயரில் பொய்த் தீர்க்கதரிசனங்கள் சொல்கிற கொலாயாவின்
மகன் ஆகாபைப் பற்றியும் மாசெயாவின் மகன் சிதேக்கியாவைப் பற்றியும்
இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான யெகோவா
சொல்வது இதுதான்:[r] 'நான் அவர்களை பாபிலோன் ராஜா நேபுகாத்
நேச்சாரின் கையில் கொடுப்பேன். அவன் அவர்களை உங்கள் கண்க
ளுக்கு முன்பாகவே கொலை செய்வான். **22** பாபிலோனுக்குச் சிறைபிடிக்
கப்பட்டுப் போன யூதா ஜனங்கள் எல்லாரும் அவர்களுக்கு நடந்ததைச்
சொல்லி மற்றவர்களைச் சபிப்பார்கள். அதாவது, "பாபிலோன் ராஜாவி
னால் சுட்டெரிக்கப்பட்ட சிதேக்கியாவைப் போலவும் ஆகாபைப் போல
வும் யெகோவா உன்னை அழிக்கட்டும்!" என்று சொல்லி சபிப்பார்கள்.

அதி. 29
a செப் 3:15
b எரே 31:17
c தானி 9:3
d உபா 4:29, உபா 30:1-4, 1ரா 8:47, 48, எரே 24:7
e லேவி 26:40
f ஏசா 55:6
g சங் 126:1, ஓசி 6:11, ஆமோ 9:14, செப் 3:20
h ஏசா 49:25, எரே 30:3, எசே 39:28
i எரே 28:1
j எரே 24:10
k எரே 24:2, 8
l லேவி 26:33
m உபா 28:25, எரே 34:17
n எரே 24:9
o 1ரா 9:8, 2நா 29:8, எரே 25:9, புல 2:15
p எரே 7:13
q எரே 6:19
r எரே 14:14, எரே 29:8, புல 2:14

29:17 * அல்லது, "வெடித்துப்போன." **29:18** * நே.மொ., "விசில் அடிப்பார்கள்."

23 அவர்கள் இரண்டு பேரும் இஸ்ரவேலில் மிகவும் கேவலமாக நடந்து
கொண்டார்கள்.[a] மற்றவர்களுடைய மனைவிகளோடு முறைகேடான உறவு
வைத்துக்கொண்டு, நான் சொல்லாத விஷயங்களை என் பெயரில் பொய்
யாகச் சொன்னார்கள்.[b]

"அது எனக்கு நன்றாகத் தெரியும், அதற்கு நானே சாட்சி"[c] என்று
யெகோவா சொல்கிறார்.'"

24 "நெகெலாமைச் சேர்ந்த செமாயாவிடம்[d] நீ இப்படிச் சொல்:
25 'இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்வது இதுதான்: "எருசலேமில் இருக்கிற எல்லா ஜனங்க
ளுக்கும், குருவாகிய மாசெயாவின் மகன் செப்பனியாவுக்கும்,[e] மற்ற
எல்லா குருமார்களுக்கும் உன் பெயரில் நீ இப்படிக் கடிதம் எழுதி அனுப்பி
னாய்: **26** 'யோய்தாவுக்குப் பதிலாக செப்பனியாவாகிய உங்களைக் குரு
வாக யெகோவா தேர்ந்தெடுத்திருக்கிறார். யெகோவாவின் ஆலயத்தை
மேற்பார்வை செய்வதற்கும் தீர்க்கதரிசியைப் போலப் பைத்தியக்காரத்தன
மாக நடந்துகொள்கிறவர்களைப் பிடித்து தொழுமரங்களில் மாட்டி[f] வைப்ப
தற்கும் அவர் உங்களை நியமித்திருக்கிறார். **27** அப்படியிருக்கும்போது,
தீர்க்கதரிசி போல[g] ஜனங்களிடம் நடந்துகொள்கிற ஆனதோத்[h] ஊர்க்கார
னாகிய எரேமியாவை ஏன் கண்டிக்காமல் விட்டிருக்கிறீர்கள்? **28** அவன்
பாபிலோனிலிருந்த எங்களுக்கே கடிதம் எழுதி, "நீங்கள் விடுதலையா
வதற்கு இன்னும் ரொம்பக் காலம் எடுக்கும். அதனால் வீடுகளைக் கட்டி
அதில் குடியிருங்கள். தோட்டங்களை அமைத்து அதன் விளைச்சலைச்
சாப்பிடுங்கள்,[i]—" என்று சொன்னான்.'"''

29 தீர்க்கதரிசியாகிய எரேமியாவுக்குமுன் குருவாகிய செப்பனியா[j] அந்
தக் கடிதத்தைப் படித்தபோது, **30** யெகோவா எரேமியாவிடம் இப்படிச்
சொன்னார்: **31** "சிறைபிடிக்கப்பட்ட எல்லா ஜனங்களுக்கும் இந்தச் செய்
தியை அனுப்பு: 'நெகெலாமைச் சேர்ந்த செமாயாவைப் பற்றி யெகோவா
சொல்வது இதுதான்: "செமாயாவை நான் அனுப்பவில்லை. அவனா
கவே உங்களிடம் தீர்க்கதரிசனம் சொன்னான். பொய்கள் சொல்லி உங்
களை ஏமாற்ற நினைத்தான்.[k] **32** அதனால் யெகோவா சொல்வது இது
தான்: 'நெகெலாமைச் சேர்ந்த செமாயாவையும் அவன் சந்ததியையும்
நான் தண்டிப்பேன். அவர்களில் ஒருவன்கூட என்னுடைய ஜனங்களோடு
சேர்ந்து தப்பிக்க மாட்டான். என் ஜனங்களுக்கு நான் கொடுக்கும் ஆசீர்வா
தங்களை அவன் பார்க்க மாட்டான். ஏனென்றால், யெகோவாவாகிய எனக்
குக் கீழ்ப்படியாமல் போகும்படி அவன் ஜனங்களைத் தூண்டியிருக்கிறான்'
என்று யெகோவா சொல்கிறார்."''

30 எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து கிடைத்த செய்தி இது
தான்: **2** "இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இப்படிச் சொல்
கிறார்: 'நான் உன்னிடம் சொல்கிற எல்லா வார்த்தைகளையும் ஒரு புத்த
கத்தில் எழுது. **3** "காலம் வரப்போகிறது" என்று யெகோவா சொல்கிறார்.
"அப்போது, இஸ்ரவேலிலிருந்தும் யூதாவிலிருந்தும் சிறைபிடிக்கப்பட்டுப்
போன என் ஜனங்களை நான் கூட்டிச்சேர்ப்பேன்.[l] அவர்களுடைய முன்
னோர்களுக்கு நான் கொடுத்த தேசத்துக்கே அவர்களைக் கூட்டிக்கொண்டு
வருவேன். அவர்கள் மறுபடியும் அங்கே குடியிருப்பார்கள்"[m] என்று
யெகோவா சொல்கிறார்.'"

அதி. 29
a எரே 23:14
b எரே 7:9, 10; எரே 27:15
c எரே 16:17; எரே 23:24
d எரே 29:31, 32
e 2ரா 25:18, 21; எரே 21:1, 2; எரே 37:3; எரே 52:24, 27
f எரே 20:2
g எரே 43:2
h எரே 1:1
i எரே 29:5
j 2ரா 25:18, 21
k எரே 14:14; எரே 28:15, 16; எசே 13:8, 9

அதி. 30
l உபா 30:3; எசே 39:25
m எஸ்றா 2:1; எரே 29:14; எரே 32:44; எசே 20:42; ஆமோ 9:14

அதி. 30
a எரே 4:31
மீ 4:9
b யோவே 2:11
செப் 1:14
c எசே 34:23
எசே 37:24
ஓசி 3:5
d ஏசா 41:13
e ஏசா 49:25
எரே 3:18
f எரே 33:16
எசே 34:25
ஓசி 2:18
மீ 4:4
g எரே 50:29
எரே 51:24
h லேவி 26:44
நெ 9:31
புல 3:22
ஆமோ 9:8
i யாத் 34:6, 7
எரே 46:
27, 28
j 2நா 36:15, 16
ஏசா 6:10
எரே 8:21, 22

4 இஸ்ரவேல் ஜனங்களிடமும் யூதா ஜனங்களிடமும் யெகோவா
சொன்ன வார்த்தைகள் இவை.

5 யெகோவா சொல்வது இதுதான்:
"அலறல் சத்தம் கேட்கிறது.
எங்கு பார்த்தாலும் திகில்! சமாதானமே இல்லை.
6 ஒரு ஆண் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க முடியுமா என்று
தயவுசெய்து கேட்டுப் பாருங்கள்.
அப்படியிருக்கும்போது, பலசாலியான ஆண்கள் ஏன் இடுப்பைப்
பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள்?
பிரசவ வேதனைப்படுகிற பெண்ணைப் போல ஏன் துடிக்கிறார்கள்?[a]
ஏன் எல்லாருடைய முகமும் வெளுத்துப்போயிருக்கிறது?
7 ஐயோ! அந்த நாள் பயங்கரமான நாள்![b]
அதுபோல் ஒரு நாள் வந்ததே கிடையாது!
அது யாக்கோபுக்கு வேதனையான நாள்.
ஆனாலும், அந்த வேதனையிலிருந்து அவன் விடுவிக்கப்படுவான்."

8 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: "அந்த
நாளில் நான் அவர்கள் கழுத்திலுள்ள நுகத்தடியை உடைத்துப்போடு
வேன். அவர்களுடைய வார்களை இரண்டாக அறுத்துவிடுவேன். முன்பின்
தெரியாதவர்கள்* இனி அவர்களை அடிமையாக்க மாட்டார்கள். 9 அவர்
களுடைய கடவுளான யெகோவாவுக்கும், அவர் கொடுக்கப்போகும் ராஜா
வான தாவீதுக்கும் அவர்கள் சேவை செய்வார்கள்."[c]

10 யெகோவா சொல்வது இதுதான்: "என் ஊழியனாகிய யாக்கோபே,
பயப்படாதே.
இஸ்ரவேலே, திகிலடையாதே.[d]
தூர தேசத்திலிருந்து உன்னை விடுதலை செய்வேன்.
நீ சிறைபிடிக்கப்பட்டுப் போன தேசத்திலிருந்து உன் சந்ததியைக்
காப்பாற்றுவேன்.[e]
யாக்கோபு திரும்பி வருவான்; தொல்லை இல்லாமல் சமாதானமாக
வாழ்வான்.
அவனைப் பயமுறுத்த யாரும் இருக்க மாட்டார்கள்."[f]
11 யெகோவா சொல்வது இதுதான்: "உன்னைக் காப்பாற்றுவதற்காக நான்
உன்னோடு இருக்கிறேன்.
உன்னை எந்தத் தேசங்களுக்கெல்லாம் சிதறிப்போக வைத்தேனோ
அந்தத் தேசங்களையெல்லாம் அழித்துவிடுவேன்.[g]
ஆனால், உன்னை அழிக்க மாட்டேன்.[h]
அதேசமயம், உன்னைத் தண்டிக்காமலும் விட மாட்டேன்.[i]
உன்னைச் சரியான* அளவுக்குக் கண்டித்துத் திருத்துவேன்."
12 யெகோவா சொல்வது இதுதான்:
"உன் காயத்துக்கு மருந்தே இல்லை.[j]
உன்னுடைய புண் ஆறவே ஆறாது.

30:8 * வே.வா., "வேறு தேசத்தார்." **30:11** * வே.வா., "நியாயமான."

13 உனக்காகப் பரிந்து பேச யாரும் இல்லை.
உன்னுடைய புண்ணுக்கு மருந்தே இல்லை.
உன்னைக் குணப்படுத்த வழியே இல்லை.
14 உன் ஆசைக் காதலர்கள் உன்னை மறந்துவிட்டார்கள்.[a]
இப்போதெல்லாம் அவர்கள் உன்னைத் தேடி வருவதில்லை.
ஏனென்றால், எதிரியைத் தாக்குவது போல நான் உன்னைத் தாக்கிவிட்டேன்.[b]
கொடூரக்காரன் தண்டிப்பது போல உன்னைத் தண்டித்துவிட்டேன்.
ஏனென்றால், நீ பெரிய பாவங்களையும் நிறைய குற்றங்களையும் செய்திருக்கிறாய்.[c]
15 நீ காயப்பட்டதற்காக ஏன் கூச்சல்போடுகிறாய்?
உன் வலி தீரவே தீராது!
நீ பெரிய பாவங்களையும் நிறைய குற்றங்களையும் செய்திருக்கிறாய்.[d]
அதனால்தான், உன்னை இப்படித் தண்டித்திருக்கிறேன்.
16 ஆனாலும், உன்னை அழிக்க நினைக்கிறவர்கள் அழிந்துபோவார்கள்.[e]
உன்னுடைய எதிரிகள் எல்லாரும் சிறைபிடிக்கப்பட்டுப் போவார்கள்.[f]
உன்னைச் சூறையாடுகிறவர்கள் சூறையாடப்படுவார்கள்.
உன்னைக் கொள்ளையடிக்கிற எல்லாரையும் கொள்ளைக்காரர்களின் கையில் கொடுப்பேன்."[g]
17 "அவர்கள் உன்னை ஒதுக்கப்பட்ட நகரம் என்று சொன்னாலும்,
'கேட்பாரற்ற சீயோன்'[h] என்று அழைத்தாலும்,
நான் உன்னைச் சுகப்படுத்துவேன்; உன் காயங்களைக் குணப்படுத்துவேன்"[i] என்று யெகோவா சொல்கிறார்.
18 யெகோவா சொல்வது இதுதான்:
"சிறைபிடிக்கப்பட்டுப் போன யாக்கோபின் சந்ததியை நான் கூட்டிச்சேர்ப்பேன்.[j]
அவர்களுக்கு இரக்கம் காட்டுவேன்.
அவர்களுடைய நகரம் மறுபடியும் மலைமேல் கட்டப்படும்.[k]
அவர்களுடைய கோட்டை அதற்குரிய இடத்தில் அமைக்கப்படும்.
19 அவர்கள் நன்றி சொல்வார்கள், சந்தோஷமாக வாய்விட்டுச் சிரிப்பார்கள்.[l]
அவர்களை ஏராளமாகப் பெருகப் பண்ணுவேன்,
அவர்கள் குறையவே மாட்டார்கள்.[m]
அவர்களை மாபெரும் ஜனமாக்குவேன்.*
அவர்களை யாரும் அற்பமாகப் பார்க்க மாட்டார்கள்.[n]
20 அவர்கள் பழைய நிலைமைக்குத் திரும்புவார்கள்.
என் முன்னால் பலம்படைத்த ஜனமாக இருப்பார்கள்.[o]
அவர்களை அடக்கி ஒடுக்குகிற எல்லாரையும் நான் தண்டிப்பேன்.[p]
21 அவர்களுடைய தலைவர் அவர்களில் ஒருவராக இருப்பார்.
அவர்களுடைய ராஜா அவர்கள் மத்தியிலிருந்தே தோன்றுவார்.

30:19 * அல்லது, "அவர்களைப் பெருமைப்படுத்துவேன்."

அதி. 30
a புல 1:2, 19
b புல 2:5
c எரே 5:6
d 2நா 36:14
e ஏசா 41:11; எரே 25:12
f எரே 51:29, 56; மீ 5:9
g சக 2:8, 9
h புல 2:15
i சங் 102:13; எரே 33:6, 7
j சங் 85:1; எரே 24:6; எரே 29:10
k மீ 4:8
l எஸ்றா 3:12; நெ 8:17; ஏசா 35:10
m உபா 30:5; ஏசா 27:6; சக 10:8
n ஏசா 60:22; மீ 4:7
o ஏசா 1:26
p ஏசா 49:26; எரே 50:18

அவரை என் பக்கத்தில் வர வைப்பேன்; அவரும் வருவார்."
"மற்றபடி என் பக்கத்தில் வர யாருக்குத் துணிச்சல் வரும்?" என்று
யெகோவா கேட்கிறார்.
22 "நீங்கள் என் ஜனங்களாக இருப்பீர்கள்,[a] நான் உங்கள் கடவுளாக
இருப்பேன்."[b]
23 இதோ! யெகோவாவின் கோபம் புயல்காற்றாய் வீசும்.[c]
கெட்டவர்களின் தலைமேல் அது படுபயங்கரமான சூறாவளியாகச்
சுழற்றியடிக்கும்.
24 நினைத்ததைச் செய்து முடிக்கும்வரை
யெகோவாவின் கடும் கோபம் தணியாது.[d]
கடைசி நாட்களில் இதைப் புரிந்துகொள்வீர்கள்.[e]

31 "அந்தச் சமயத்தில் இஸ்ரவேலின் எல்லா குடும்பங்களுக்கும் நான்
கடவுளாக இருப்பேன். அவர்கள் என் ஜனங்களாக இருப்பார்கள்"[f]
என்று யெகோவா சொல்கிறார்.
2 யெகோவா சொல்வது இதுதான்:
"வாளுக்குத் தப்பியவர்கள் வனாந்தரத்தில் கடவுளுடைய
கருணையைப் பெற்றார்கள்.
இஸ்ரவேலர்கள் நிம்மதியான இடத்துக்குப்
போய்க்கொண்டிருந்தார்கள்."
3 யெகோவா தொலைதூரத்திலிருந்து வந்து என்முன் தோன்றி,
"நான் எப்போதுமே உன்மேல் அன்பு காட்டியிருக்கிறேன்.
என்றுமே மாறாத அன்பினால் உன்னை என் பக்கம்
இழுத்திருக்கிறேன்.[g]
4 நான் மறுபடியும் உன்னைக் கட்டி எழுப்புவேன், நீயும் கட்டி
எழுப்பப்படுவாய்.[h]
கன்னிப்பெண்ணாகிய இஸ்ரவேலே, நீ மறுபடியும் கஞ்சிராவை
எடுத்துக்கொண்டு
சந்தோஷமாக* நடனம் ஆடுவாய்.[i]
5 நீ மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சைத் தோட்டங்களைப்
போடுவாய்.[j]
தோட்டம் போடுகிறவர்கள்தான் அவற்றின் பழங்களை
அனுபவிப்பார்கள்.[k]
6 காலம் வரும்; அப்போது, எப்பிராயீம் மலைப்பகுதியில் இருக்கிற
காவல்காரர்கள் சத்தமாக,
'எல்லாரும் எழுந்து, சீயோனுக்குப் புறப்படுங்கள்!
நம் கடவுளாகிய யெகோவாவிடம் போகலாம்'[l] என்று சொல்வார்கள்"
என்றார்.
7 யெகோவா சொல்வது இதுதான்:
"யாக்கோபைப் பார்த்து சந்தோஷமாகப் பாடுங்கள்.
நீங்கள் எல்லா தேசங்களுக்கும் மேலாக இருப்பதை நினைத்துக்
கம்பீரமாக முழங்குங்கள்.[m]

31:4 *வே.வா., "சிரித்து மகிழ்கிறவர்களோடு."

அதி. 30
a ஓசி 2:23
b எரே 31:1; எசே 11:20; எசே 36:28
c எரே 25:32
d எரே 4:28
e எரே 23:20

அதி. 31
f லேவி 26:12; எரே 30:22; எரே 31:33
g உபா 7:8
h எரே 33:7; ஆமோ 9:11
i எரே 30:18, 19
j ஆமோ 9:14; மீ 4:4
k உபா 30:9; ஏசா 65:21, 22
l ஏசா 2:3; எரே 50:4, 5
m உபா 32:43; ஏசா 44:23

அதை எல்லாருக்கும் அறிவியுங்கள். கடவுளைப் புகழுங்கள்.
‘யெகோவாவே, இஸ்ரவேலர்களில் மீதியாக இருக்கும் உங்கள்
ஜனங்களைக் காப்பாற்றுங்கள்’[a] என்று கெஞ்சுங்கள்.
8 நான் அவர்களை வடக்கு தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டு
வருவேன்.[b]
பூமியின் தொலைதூர இடங்களிலிருந்து கூட்டிச்சேர்ப்பேன்.[c]
அவர்களில், கண் தெரியாதவர்களும் கைகால் ஊனமானவர்களும்[d]
கர்ப்பிணிகளும் பிரசவ வலியில் இருக்கிற பெண்களும் இருப்பார்கள்.
அவர்கள் எல்லாரும் ஒரு பெரிய சபையாக இங்கே திரும்பி
வருவார்கள்.[e]
9 அவர்கள் அழுதுகொண்டே வருவார்கள்.[f]
என்னுடைய கருணைக்காகக் கெஞ்சுவார்கள்; நான் அவர்களை
வழிநடத்துவேன்.
ஓடைகளின்* பக்கமாக அவர்களைக் கூட்டிக்கொண்டு வருவேன்.[g]
அவர்கள் தடுக்கி விழாதபடி சமமான பாதையில் கூட்டிக்கொண்டு
வருவேன்.
ஏனென்றால், நான் இஸ்ரவேலின் தகப்பன். எப்பிராயீம் என்னுடைய
மூத்த மகன்.”[h]
10 தேசங்களே, யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள்.
தொலைதூரத்தில் இருக்கிற தீவுகளில் இதை அறிவியுங்கள்:[i]
“இஸ்ரவேலர்களைச் சிதறிப்போக வைத்தவர் அவர்களை மறுபடியும்
கூட்டிச்சேர்ப்பார்.
மேய்ப்பன் மந்தையைக் கவனிப்பதுபோல் அவர்களைக்
கவனித்துக்கொள்வார்.[j]
11 யெகோவா யாக்கோபை விடுவிப்பார்.[k]
அவனைவிட பலசாலியின் கையிலிருந்து அவனைக் காப்பாற்றுவார்.*[l]
12 அவர்கள் சீயோன் மலைக்கு வந்து சந்தோஷமாகப் பாடுவார்கள்.[m]
யெகோவா தானியத்தையும் புதிய திராட்சமதுவையும்[n]
எண்ணெயையும்
ஆட்டுக்குட்டிகளையும் கன்றுக்குட்டிகளையும்[o] அவர்களுக்குக்
கொடுப்பார்.
அவர் வாரிவழங்கும் நன்மைகளால்* அவர்களுடைய முகம்
சந்தோஷத்தில் களைகட்டும்.
தாராளமாகத் தண்ணீர் பாய்ச்சப்பட்ட தோட்டத்தைப் போல[p]
அவர்கள் ஆவார்கள்.
அவர்கள் இனி ஒருநாளும் சோர்ந்துபோக மாட்டார்கள்.[q]
13 அந்தச் சமயத்தில் கன்னிப் பெண்கள் சந்தோஷமாக நடனம்
ஆடுவார்கள்.
வாலிபர்களும் வயதானவர்களும்கூட நடனம் ஆடுவார்கள்.[r]
சோகத்தில் வாடுகிறவர்களை நான் சந்தோஷத்தில் துள்ள வைப்பேன்.[s]

31:9 *வே.வா., “காட்டாற்றுப் பள்ளத்தாக்குகளின்.” **31:11** *வே.வா., “மீட்பார்.” **31:12** *வே.வா., “அவருடைய நல்மனதால்.”

அதி. 31
a ஏசா 1:9; எரே 23:3; யோவே 2:32
b ஏசா 43:6; எரே 3:12
c உபா 30:4; எசே 20:34; எசே 34:12
d ஏசா 35:6; ஏசா 42:16
e எஸ்றா 2:1, 64
f எரே 50:4
g ஏசா 35:7; ஏசா 49:10
h ஆதி 48:14; யாத் 4:22
i ஏசா 11:11; ஏசா 42:10
j ஏசா 40:11; எசே 34:11-13; மீ 2:12
k ஏசா 44:23; ஏசா 48:20
l ஏசா 49:25
m எஸ்றா 3:13; சங் 126:1; ஏசா 51:11
n யோவே 3:18
o ஏசா 65:10
p ஏசா 58:11
q ஏசா 35:10
r சக 8:4
s எஸ்றா 3:12

அவர்களுடைய துக்கத்தைப் போக்கி, அவர்களுக்கு ஆறுதலும்
ஆனந்தமும் தருவேன்.[a]
14 குருமார்களுக்கு வயிறார உணவு கொடுப்பேன்.
நான் வாரிவழங்கும் நன்மைகளால் ஜனங்கள் திருப்தி அடைவார்கள்”[b]
என்று யெகோவா சொல்கிறார்.
15 “யெகோவா சொல்வது இதுதான்:
‘ராமாவில் புலம்பல் சத்தமும் பயங்கரமான அழுகை சத்தமும்
கேட்கிறது.[c]
ராகேல் தன்னுடைய மகன்களுக்காக அழுதுகொண்டிருக்கிறாள்.[d]
அவளுடைய மனம் ஆறுதல் அடையவே இல்லை.
ஏனென்றால், அவளுடைய மகன்கள் அவளோடு இல்லை.’”[e]
16 யெகோவா சொல்வது இதுதான்:
“‘நீ கதறி அழாதே, கண்ணீர் விடாதே.
நீ செய்த எல்லாவற்றுக்கும் நான் பலன் கொடுப்பேன்.
உன் மகன்கள் எதிரிகளின் தேசத்திலிருந்து திரும்பி வருவார்கள்’[f]
என்று யெகோவா சொல்கிறார்.
17 ‘உனக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது.[g]
‘உன் மகன்கள் சொந்த தேசத்துக்கே திரும்பி வருவார்கள்’[h] என்று
யெகோவா சொல்கிறார்.”
18 “எப்பிராயீம் புலம்புவதை என் காதால் கேட்டேன்.
அவன் என்னிடம், ‘பழக்குவிக்கப்படாத கன்றைப் போல நான்
இருந்தேன்.
நீங்கள் என்னைத் திருத்தினீர்கள், நான் பாடம் கற்றுக்கொண்டேன்.
என்னைத் திரும்பவும் உங்கள் வழிக்கே கொண்டுவாருங்கள், நானும்
வந்துவிடுகிறேன்.
ஏனென்றால், யெகோவாவாகிய நீங்கள்தான் என் கடவுள்.
19 நான் திருந்தினேன், செய்த தவறுகளை நினைத்து வருத்தப்பட்டேன்.[i]
என் குற்றத்தை நீங்கள் புரிய வைத்தபோது வேதனையில் என்
தொடையிலே அடித்துக்கொண்டேன்.
இளவயதில் நான் செய்ததையெல்லாம் நினைத்து
அவமானத்தில் கூனிக்குறுகினேன்’[j] என்று சொன்னான்.”
20 யெகோவா சொல்வது இதுதான்:
“எப்பிராயீம் என் அருமை மகன்தானே? என் செல்லப்
பிள்ளைதானே?[k]
நான் பல தடவை அவனுக்கு எதிராகப் பேசினாலும் அவனை
எப்போதும் நினைத்துப் பார்க்கிறேன்.
அவனுக்காக என் உள்ளம்* உருகுகிறது.[l]
அவனுக்குக் கண்டிப்பாக இரக்கம் காட்டுவேன்.[m]
21 இஸ்ரவேல் கன்னிப் பெண்ணே, உன் நகரங்களுக்குத் திரும்பி வா.
சாலையில் மைல்கல்களையும்,[n]

31:20 * நே.மொ., “குடல்கள்.”

அதி. 31
a ஏசா 51:3; ஏசா 65:19
b உபா 30:9; ஏசா 63:7
c யோசு 18:21, 25; எரே 40:1
d புல 1:16
e மத் 2:16-18
f எஸ்றா 1:5; எரே 23:3; எசே 11:17; ஓசி 1:11
g எரே 29:11
h எரே 46:27
i உபா 30:1-3
j எஸ்றா 9:6
k எரே 31:9; ஓசி 14:4
l ஓசி 11:8
m உபா 32:36; மீ 7:18
n ஏசா 62:10

திசைகாட்டும் கல்தூண்களையும் உனக்காக நாட்டி வை.
நீ போக வேண்டிய நெடுஞ்சாலையின் மேல் கவனம் வை.[a]
22 துரோகம் செய்கிற மகளே, நீ எத்தனை காலத்துக்குத்தான் உன் மனதை அலைய விடுவாய்?
யெகோவா பூமியில் புதிதாக ஒன்றைச் செய்திருக்கிறார்:
மனைவி தன் கணவனை* தேடி ஓடோடி வருவாள்."

23 இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா இப்படிச் சொல்கிறார்: "சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்களை
நான் திரும்பவும் யூதாவுக்கும் அதன் நகரங்களுக்கும் கூட்டிக்கொண்டு
வரும்போது அவர்கள், 'நீதி குடியிருக்கும் பரிசுத்த மலையே,[b] யெகோவா
உன்னை ஆசீர்வதிப்பார்' என்று மறுபடியும் சொல்வார்கள். 24 அங்கே
யூதா ஜனங்களும், அதன் நகரவாசிகளும், விவசாயிகளும், மேய்ப்பர்களும்
ஒற்றுமையாகக் குடியிருப்பார்கள்.[c] 25 களைத்துப்போனவர்களுக்கு நான்
புத்துணர்ச்சி கொடுப்பேன். பசியில் சோர்ந்துபோன எல்லாருக்கும் தெம்ப
ளிப்பேன்."[d]

26 உடனே நான் கண் விழித்துப் பார்த்தேன். நான் சுகமாகத் தூங்கிவிட்
டிருந்தேன்.

27 யெகோவா சொல்வது இதுதான்: "இதோ, காலம் வருகிறது. அப்
போது, இஸ்ரவேலிலும் யூதாவிலும் இருக்கிற மனுஷர்களையும் மிருகங்க
ளையும் நான் பெருகப் பண்ணுவேன்."[e]

28 யெகோவா சொல்வது இதுதான்: "அவர்களை எப்போது பிடுங்கலாம்,
இடிக்கலாம், கவிழ்க்கலாம், அழிக்கலாம், நாசமாக்கலாம்[f] என்று நான் பார்த்
துக்கொண்டு இருந்தது போலவே அவர்களை எப்போது கட்டலாம், நாட்ட
லாம்[g] என்று பார்த்துக்கொண்டு இருப்பேன். 29 அந்த நாட்களில் அவர்
கள் யாரும், 'தகப்பன்கள் புளிப்பான திராட்சைகளைச் சாப்பிட்டார்கள்;
ஆனால் பிள்ளைகளின் பற்கள் கூசின'[h] என்று சொல்ல மாட்டார்கள்.
30 யார் புளிப்பான திராட்சைகளைச் சாப்பிடுகிறார்களோ அவர்களுடைய
பற்கள்தான் கூசும். ஒவ்வொருவரும் அவரவர் செய்த பாவத்துக்காகவே
சாவார்கள்."

31 யெகோவா சொல்வது இதுதான்: "இதோ, காலம் வருகிறது. அப்
போது, இஸ்ரவேல் ஜனங்களோடும் யூதா ஜனங்களோடும் நான் ஒரு புதிய
ஒப்பந்தம் செய்வேன்.[i] 32 ஆனால், அவர்களுடைய முன்னோர்களை
நான் எகிப்திலிருந்து கைப்பிடித்து நடத்திக்கொண்டு வந்தபோது செய்த
ஒப்பந்தத்தைப் போல அது இருக்காது.[j] 'நான் அவர்களுடைய உண்மை
யான எஜமானாக* இருந்தும் அந்த ஒப்பந்தத்தை அவர்கள் மீறினார்கள்'[k]
என்று யெகோவா சொல்கிறார்."

33 "அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் ஜனங்களோடு செய்
யப்போகிற ஒப்பந்தம் இதுதான். நான் அவர்களுடைய உள்ளத்தில்*
என் சட்டங்களை வைப்பேன்.[l] அவர்களுடைய இதயத்தில் அவற்றை எழு
துவேன்.[m] நான் அவர்களுடைய கடவுளாக இருப்பேன், அவர்கள் என்னு
டைய ஜனங்களாக இருப்பார்கள்"[n] என்று யெகோவா சொல்கிறார்.

31:22 * நே.மொ., "ஒரு பெண் ஒரு ஆணை." **31:32** * அல்லது, "கணவராக." **31:33** * வே.வா., "அவர்களுக்குள்ளே."

அதி. 31
a ஏசா 35:8
b ஏசா 1:26; சக 8:3
c எரே 33:12; எசே 36:10, 11
d சங் 107:9
e உபா 30:9; எசே 36:9; ஓசி 2:23
f எரே 44:27; எரே 45:4
g சங் 102:16; சங் 147:2; எரே 24:6
h எசே 18:2-4
i மத் 26:27, 28; லூ 22:20; 1கொ 11:25; எபி 8:8-12
j யாத் 19:5
k எசே 16:59
l எசே 11:19
m எபி 10:16
n எரே 24:7; எரே 30:22

34 “அதுமுதல் அவர்கள் யாரும் தங்களுடைய சகோதரனிடமோ மற்
றவர்களிடமோ, ‘யெகோவாவைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்!’[a] என்று
சொல்ல மாட்டார்கள். ஏனென்றால், சிறியோர்முதல் பெரியோர்வரை எல்
லாரும் என்னைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பார்கள்.[b] நான் அவர்களு
டைய குற்றத்தை மன்னிப்பேன். அவர்களுடைய பாவத்தை இனியும்
நினைத்துப் பார்க்க மாட்டேன்”[c] என்று யெகோவா சொல்கிறார்.

35 யெகோவா சொல்வது இதுதான்.
பகலில் வெளிச்சம் தர சூரியனைப் படைத்து,
ராத்திரியில் வெளிச்சம் தர நிலவுக்கும் நட்சத்திரங்களுக்கும்
சட்டங்களைக் கொடுத்து,
கடலைக் கொந்தளிக்கவும், அலைகளைப் பொங்கியெழவும்
வைக்கிறவராகிய
பரலோகப் படைகளின் யெகோவா என்ற பெயருள்ளவர்[d] சொல்வது
இதுதான்:

36 “‘இந்த விதிமுறைகள் எப்படி ஒருநாளும் ஒழிந்துபோகாதோ
அப்படியே, இஸ்ரவேல் வம்சமும் என் முன்னால் ஒரு தேசமாக
இல்லாதபடி ஒருநாளும் ஒழிந்துபோகாது’[e] என்று யெகோவா
சொல்கிறார்.”

37 யெகோவா சொல்வது இதுதான்: “‘மேலே இருக்கிற வானத்தை
அளக்கவோ, கீழே இருக்கிற பூமியின் அஸ்திவாரத்தைக் கண்டுபிடிக்
கவோ ஒருவனால் எப்படி முடியாதோ அப்படித்தான் இஸ்ரவேல் வம்
சத்தார் செய்த குற்றங்களுக்காக என்னால் அவர்களை ஒட்டுமொத்தமாக
ஒதுக்கித்தள்ள முடியாது’ என்று யெகோவா சொல்கிறார்.”[f]

38 யெகோவா சொல்வது இதுதான்: “இதோ, காலம் வருகிறது. அப்
போது, இந்த நகரம் அனானெயேல் கோபுரம்முதல்[g] ‘மூலை நுழைவா
சல்’வரை[h] யெகோவாவுக்காகக் கட்டப்படும்.[i] **39** அதன் எல்லை[j] காரேப்
குன்றுவரை நேராகப் போய், கோவாத்தின் திசையில் திரும்பும். **40** பிணங்
களும் சாம்பலும்* நிறைந்த பள்ளத்தாக்கும், கீதரோன் பள்ளத்தாக்கு[k] வரை
யிலான எல்லா நிலங்களும், அதாவது கிழக்கே இருக்கிற ‘குதிரை நுழைவா
சலின்’[l] மூலைவரை இருக்கிற எல்லா நிலங்களும், யெகோவாவுக்குப்
பரிசுத்தமாக இருக்கும்.[m] அது இனி ஒருபோதும் பிடுங்கப்படாது, இடிக்கப்
படாது.”

32

சிதேக்கியா ராஜா யூதாவை ஆட்சி செய்த 10-ஆம் வருஷம், அதா
வது நேபுகாத்நேச்சாருடைய ஆட்சியின் 18-ஆம் வருஷம்,[n] எரே
மியாவுக்கு யெகோவாவிடமிருந்து ஒரு செய்தி கிடைத்தது. **2** அப்போது,
பாபிலோன் ராஜாவின் படைகள் எருசலேமைச் சுற்றிவளைத்திருந்தன. யூதா
வின் ராஜாவுடைய அரண்மனையில் இருந்த ‘காவலர் முற்றத்தில்’[o] எரே
மியா தீர்க்கதரிசி காவல் வைக்கப்பட்டிருந்தார். **3** அவரை அங்கே வைக்
கும்படி கட்டளையிடுவதற்கு முன்பு[p] சிதேக்கியா ராஜா எரேமியாவிடம், “நீ
எப்படி யெகோவாவின் பெயரில் இதுபோல் தீர்க்கதரிசனம் சொல்லலாம்?
‘இந்த நகரம் பாபிலோன் ராஜாவின் கையில் கொடுக்கப்படும், அந்த
ராஜா இதைக் கைப்பற்றுவான்’[q] என்றும், **4** ‘யூதாவின் ராஜா சிதேக்கியா

31:40 * வே.வா., “பலிகளின் கொழுப்பு கலந்த சாம்பலும்.”

அதி. 31
a ஏசா 54:13; யோவா 17:3
b ஏசா 11:9; ஆப 2:14
c எரே 33:8; எரே 50:20; மத் 26:27, 28; எபி 8:10-12; எபி 9:15; எபி 10:17
d ஏசா 51:15
e ஏசா 54:10; எரே 33:20, 21
f எரே 30:11
g நெ 3:1; சக 14:10
h 2நா 26:9
i நெ 12:27; ஏசா 44:28; எரே 30:18
j சக 1:16
k 2சா 15:23; 2ரா 23:6; யோவா 18:1
l நெ 3:28
m யோவே 3:17

அதி. 32
n எரே 25:1
o நெ 3:25; எரே 33:1; எரே 38:28
p எரே 37:18, 21
q எரே 34:2, 3; எரே 37:8, 17

கல்தேயர்களிடமிருந்து தப்பிக்க மாட்டான். அவன் கண்டிப்பாக பாபிலோன்
ராஜாவின் கையில் கொடுக்கப்படுவான். அவன் அந்த ராஜாவை நேருக்கு
நேர் சந்திக்க வேண்டியிருக்கும்'[a] என்றும், **5** 'அந்த ராஜா அவனை பாபி
லோனுக்குக் கொண்டுபோவான். நான் நடவடிக்கை எடுக்கும்வரை
சிதேக்கியா அங்கேயே இருப்பான். நீங்கள் கல்தேயர்களோடு போர் செய்
துகொண்டே இருந்தாலும் வெற்றி பெற மாட்டீர்கள்' என்றும் யெகோவா
சொல்வதாக நீ எப்படிச் சொல்லலாம்?"[b] என்று கேட்டிருந்தார்.

6 அதற்கு எரேமியா இப்படிச் சொன்னார்: "யெகோவா என்னிடம்,
7 'உன் பெரியப்பா* சல்லூமின் மகனாகிய அனாமெயேல் உன்னிடம்
வந்து, "ஆனதோத்தில்[c] இருக்கிற என் நிலத்தை நீ வாங்கிக்கொள். அதை
மீட்கும் உரிமை உனக்குத்தான் முதலில் இருக்கிறது"[d] என்று சொல்வான்'
என்றார்."

8 யெகோவா சொன்னபடியே என் பெரியப்பா மகனாகிய அனாமெ
யேல் 'காவலர் முற்றத்தில்' இருந்த என்னிடம் வந்து, "பென்யமீன் தேசத்
திலே ஆனதோத் ஊரில் இருக்கிற என் நிலத்தைத் தயவுசெய்து வாங்கிக்
கொள். அதை வாங்குவதற்கும் மீட்பதற்கும் உனக்குத்தான் உரிமை
இருக்கிறது. நீயே அதை வாங்கிக்கொள்" என்று சொன்னார். யெகோவா
வின் விருப்பப்படிதான் இது நடக்கிறது என்று உடனடியாகப் புரிந்து
கொண்டேன்.

9 அதனால், ஆனதோத்தில் இருந்த அந்த நிலத்தை என் பெரி
யப்பாவின் மகனாகிய அனாமெயேலிடமிருந்து வாங்கிக்கொண்டேன். பதி
னேழு சேக்கல் வெள்ளியை* நான் அவரிடம் எடைபோட்டுக் கொடுத்
தேன்.[e] **10** அதற்கான பத்திரத்தை[f] எழுதி முத்திரை போட்டேன். அதில்
கையெழுத்து போடுவதற்குச் சாட்சிகளைக் கூப்பிட்டேன்.[g] வெள்ளியைத்
தராசில் நிறுத்தி எடை போட்டேன். **11** சட்டப்படியும் விதிமுறைப்படியும்
முத்திரை போடப்பட்ட கிரயப் பத்திரத்தையும் முத்திரை போடப்படாத
பத்திரத்தையும் எடுத்து, **12** மாசெயாயின் மகனாகிய நேரியாவின்[h] மகன்
பாருக்கிடம்[i] கொடுத்தேன். என் பெரியப்பா மகன் அனாமெயேலுக்கு
முன்பாகவும், கிரயப் பத்திரத்தில் கையெழுத்திட்ட சாட்சிகளுக்கு முன்பாக
வும், 'காவலர் முற்றத்தில்'[j] உட்கார்ந்திருந்த எல்லா யூதர்களுக்கு முன்பாக
வும் அதைக் கொடுத்தேன்.

13 பின்பு அவர்களுக்கு முன்பாக பாருக்கிடம், **14** "இஸ்ரவேலின் கட
வுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான யெகோவா சொல்வது இது
தான்: 'முத்திரை போடப்பட்ட கிரயப் பத்திரத்தையும் முத்திரை போடப்ப
டாத பத்திரத்தையும் நீ எடுத்து ஒரு மண்ஜாடியில் போட்டு வை. அவை
ரொம்பக் காலத்துக்கு அந்த ஜாடியிலேயே இருக்க வேண்டும்.'
15 ஏனென்றால், 'இந்தத் தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சைத்
தோட்டங்களும் மறுபடியும் விலைக்கு வாங்கப்படும்'[k] என்று இஸ்ரவேலின்
கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான யெகோவா சொல்கிறார்"
என்றேன்.

16 நேரியாவின் மகன் பாருக்கிடம் கிரயப் பத்திரத்தைக் கொடுத்த
பின்பு நான் யெகோவாவிடம் ஜெபம் செய்து, **17** "உன்னதப் பேரரசராகிய

அதி. 32
a 2ரா 25:6, 7; எரே 38:17, 18; எரே 39:5; எசே 12:13
b எரே 21:4; எசே 17:15
c யோசு 21:8, 18; எரே 1:1
d லேவி 25:23, 24
e ஆதி 23:16
f எரே 32:44
g ரூ 4:9
h எரே 51:59
i எரே 36:4; எரே 36:26
j எரே 33:1
k ஆமோ 9:14; சக 3:10

32:7 * அல்லது, "சித்தப்பா." **32:9** * நே.மொ., "ஏழு சேக்கலையும் பத்து வெள்ளியை
யும்." ஒரு சேக்கல் என்பது 11.4 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

யெகோவாவே, நீங்கள்தான் மகா வல்லமையினாலும் பலத்தினாலும் இந்த
வானத்தையும் பூமியையும் படைத்தீர்கள்.[a] உங்களால் செய்ய முடியாத
அதிசயம் எதுவுமே இல்லை. **18** ஆயிரமாயிரம் பேருக்கு மாறாத அன்பு
காட்டுகிறீர்கள். தகப்பன்களுடைய குற்றங்களுக்காகப் பிள்ளைகளைத் தண்
டிக்கிறீர்கள்.[b] நீங்கள்தான் மகிமையும் வல்லமையும் உள்ள உண்மையான
கடவுள். பரலோகப் படைகளின் யெகோவா என்பது உங்களுடைய பெயர்.
19 உங்கள் யோசனைகள்* ஆச்சரியமானவை, உங்கள் செயல்கள் அற்பு
தமானவை.[c] மனுஷனுடைய எல்லா வழிகளையும் நீங்கள் கவனிக்கிறீர்
கள்.[d] அவரவர் போகிற வழிக்கும் செய்கிற செயலுக்கும் ஏற்றபடி அவ
ரவருக்குக் கூலி கொடுக்கிறீர்கள்.[e] **20** எகிப்து தேசத்தில் நீங்கள் செய்த
அற்புதங்களையும் அதிசயங்களையும் பற்றி இன்றுவரை உலகம் பேசுகி
றது. நீங்கள் இஸ்ரவேலில் உங்களுடைய பெயருக்குப் புகழ் சேர்த்திருக்கி
றீர்கள். இன்றுவரை மற்ற எல்லா ஜனங்களின் மத்தியிலும் உங்கள் புகழைப்
பரப்பியிருக்கிறீர்கள்.[f] **21** நீங்கள் அடையாளங்களினாலும் அற்புதங்களி
னாலும் கைபலத்தினாலும் மகா வல்லமையினாலும் பயங்கரமான செயல்
களினாலும் உங்கள் ஜனங்களான இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து கூட்
டிக்கொண்டு வந்தீர்கள்.[g]

22 அவர்களுடைய முன்னோர்களுக்கு வாக்குக் கொடுத்தபடியே,[h]
பாலும் தேனும் ஓடுகிற இந்தத் தேசத்தை அவர்களுக்குக் கொடுத்தீர்கள்.[i]
23 அவர்களும் வந்து இந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொண்டார்கள்.
ஆனால், உங்கள் பேச்சைக் கேட்காமலும் உங்கள் சட்டதிட்டங்களை மதிக்
காமலும் போனார்கள். நீங்கள் கொடுத்த எந்தக் கட்டளைக்குமே அவர்கள்
கீழ்ப்படியவில்லை. அதனால்தான் இந்த எல்லா தண்டனைகளையும் அவர்
களுக்குக் கொடுத்தீர்கள்.[j] **24** இதோ, இந்த நகரத்தைப் பிடிப்பதற்காக எதி
ரிகள் சுற்றிலும் மண்மேடுகளை எழுப்பியிருக்கிறார்கள்.[k] ஜனங்கள்
வாளுக்கும்[l] பஞ்சத்துக்கும் கொள்ளைநோய்க்கும்[m] பலியாவார்கள். நகரத்
தைத் தாக்குகிற கல்தேயர்கள் நிச்சயமாகவே அதை அழிப்பார்கள். நீங்கள்
சொன்ன எல்லாமே நடந்துவிட்டது. அதை நீங்களே பார்க்கிறீர்கள்.
25 ஆனால், உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, இந்த நகரம் நிச்சய
மாகவே கல்தேயர்களின் கைக்குப் போய்ச் சேரும் என்று தெரிந்திருந்தும்,
‘சாட்சிகளுக்கு முன்பாக நிலத்தைப் பணம் கொடுத்து வாங்கு’ என்று நீங்
கள் ஏன் என்னிடம் சொன்னீர்கள்?” என்றேன்.

26 உடனே யெகோவா எரேமியாவிடம், **27** “எல்லா மனுஷர்களுக்
கும் கடவுளாக இருக்கிற யெகோவா நான்தான். என்னால் செய்ய முடியாத
அதிசயம் ஏதாவது இருக்கிறதா? **28** யெகோவா சொல்வது இதுதான்:
‘நான் இந்த நகரத்தை கல்தேயர்களின் கையிலும் பாபிலோன் ராஜா நேபு
காத்நேச்சாரின் கையிலும் கொடுப்பேன். அவன் இதைக் கைப்பற்றுவான்.[n]
29 இந்த நகரத்துக்கு எதிராகப் போர் செய்கிற கல்தேயர்கள் உள்ளே வந்து
முழு நகரத்தையும் கொளுத்திவிடுவார்கள். இங்கே இருக்கிற எல்லா வீடு
களும் சாம்பலாகும்.[o] ஏனென்றால், அவற்றின் மொட்டைமாடிகளில்தான்
ஜனங்கள் பாகாலுக்குப் பலிகளையும், மற்ற தெய்வங்களுக்குத் திராட்சமது
காணிக்கையையும் செலுத்தி என் கோபத்தைக் கிளறினார்கள்.’[p]

32:19 * வே.வா., “நோக்கங்கள்.”

அதி. 32
a ஏசா 40:26; வெளி 4:11
b யாத் 34:6, 7; எண் 14:18
c ஏசா 28:29
d நீதி 15:3; எபி 4:13
e பிர 12:14; எரே 17:10; ரோ 2:6
f யாத் 7:3, 5; யாத் 9:15, 16; உபா 4:34; 2சா 7:23; ஏசா 63:12
g யாத் 6:1, 6; யாத் 15:16; உபா 26:8
h ஆதி 13:14, 15; ஆதி 26:3
i யாத் 3:8
j உபா 28:15; யோசு 23:16
k உபா 28:52; 2ரா 25:1; எரே 33:4; எசே 4:1, 2
l லேவி 26:31, 33
m எரே 14:12; எரே 15:2
n 2ரா 25:4; எரே 20:5
o 2ரா 25:9, 10; 2நா 36:17, 19; புல 4:11
p எரே 7:18; எரே 19:13; எரே 44:25

30 யெகோவா சொல்வது இதுதான்: ‘இஸ்ரவேல் ஜனங்களும்
யூதா ஜனங்களும் நான் வெறுக்கிற காரியங்களைத்தான் இளவயதிலி
ருந்தே செய்து வந்திருக்கிறார்கள்.[a] இஸ்ரவேல் ஜனங்கள் அருவருப்பான
காரியங்களைச் செய்து என் கோபத்தைக் கிளறிக்கொண்டே இருக்கிறார்
கள். **31** இந்த நகரத்தை அவர்கள் கட்டிய நாளிலிருந்தே இது என்
கோபத்தையும் ஆக்ரோஷத்தையும்தான் தூண்டியிருக்கிறது.[b] அதனால்,
இது என் கண் முன்னால் இருக்கவே கூடாது.[c] **32** இஸ்ரவேலிலும் யூதா
விலும் இருக்கிற ஜனங்கள் செய்த அக்கிரமங்களுக்காக நான் இந்த
நகரத்தை அழிப்பேன். இஸ்ரவேல் ஜனங்களும் யூதா ஜனங்களும் அவர்க
ளுடைய ராஜாக்களும்[d] அதிகாரிகளும்[e] குருமார்களும் தீர்க்கதரிசிகளும்[f]
என்னைக் கோபப்படுத்தியதால் இதை நாசமாக்குவேன். **33** அவர்கள்
என்னிடம் வருவதற்குப் பதிலாக என்னைவிட்டு விலகிப் போய்க்
கொண்டே இருந்தார்கள்.*[g] மறுபடியும் மறுபடியும் அவர்களுக்குப் பாடம்
கற்றுக்கொடுக்க# முயற்சி செய்தேன்; ஆனால், யாருமே திருந்தவில்லை.[h]
34 என் பெயர் தாங்கிய ஆலயத்திலே அருவருப்பான சிலைகளை
வைத்து அதைத் தீட்டுப்படுத்தினார்கள்.[i] **35** அது போதாதென்று, பென்-
இன்னோம்* பள்ளத்தாக்கில்#[j] பாகாலின் ஆராதனை மேடுகளைக் கட்டி,
அங்கே மோளேகு தெய்வத்துக்கு அவர்களுடைய மகன்களையும் மகள்க
ளையும் நெருப்பில் பலி கொடுத்தார்கள்.△[k] இப்படிப்பட்ட அருவருப்பான
பாவச் செயலைச் செய்யும்படி நான் யூதாவுக்குக் கட்டளை கொடுக்கவே
இல்லை.[l] இந்த யோசனைகூட எனக்கு⊠ வந்ததே இல்லை.’

36 இந்த நகரம் பாபிலோன் ராஜாவின் கையில் கொடுக்கப்படும்
என்றும், வாளினாலும் பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும் அழிந்து
போகும் என்றும் நீங்கள் எல்லாரும் சொல்லி வருகிறீர்களே, இந்த நகரத்து
ஜனங்களைப் பற்றி இஸ்ரவேலின் கடவுளான யெகோவா இப்போது சொல்
வது இதுதான்: **37** ‘மிகுந்த கோபத்தோடும் ஆக்ரோஷத்தோடும் நான்
அவர்களை எங்கெல்லாம் துரத்தியடித்தேனோ அங்கிருந்தெல்லாம் அவர்
களை மறுபடியும் கூட்டிச்சேர்ப்பேன்.[m] திரும்பவும் இந்த இடத்துக்கே கூட்
டிக்கொண்டு வந்து பாதுகாப்பாக வாழ வைப்பேன்.[n] **38** அவர்கள் என்
னுடைய ஜனங்களாக இருப்பார்கள், நான் அவர்களுடைய கடவுளாக
இருப்பேன்.[o] **39** எனக்கு எப்போதும் பயந்து நடக்கும்படி அவர்களுக்கு
ஒரே இதயத்தைக் கொடுத்து,[p] அவர்களை ஒரே வழியில் நடக்க வைப்
பேன். அவர்களுடைய நல்லதுக்காகவும் அவர்களுடைய பிள்ளைகளு
டைய நல்லதுக்காகவும் அப்படிச் செய்வேன்.[q] **40** அவர்களுக்கு நல்லது
செய்வதை நிறுத்தவே மாட்டேன்[r] என்று அவர்களோடு ஒப்பந்தம் செய்
வேன். அந்த ஒப்பந்தம் என்றென்றும் நிலைத்திருக்கும்.[s] அவர்கள் என்
னைவிட்டு விலகாமல் இருப்பதற்காக எனக்குப் பயப்படுகிற இதயத்தை
அவர்களுக்குக் கொடுப்பேன்.[t] **41** ஆசையோடு அவர்களுக்கு ஆசீர்
வாதங்களைத் தருவேன்.[u] முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் அவர்

32:33 *வே.வா., “எனக்கு முகத்தைக் காட்டுவதற்குப் பதிலாக முதுகைக் காட்டிக் கொண்டே இருந்தார்கள்.” #வே.வா., “அவர்களுக்குப் புத்தி சொல்லி, அவர்களைக் கண்டித்துத் திருத்த.” **32:35** *அர்த்தம், “இன்னோம் மகனின்.” #சொல் பட்டியலில் “கெஹென்னா” என்ற தலைப்பைப் பாருங்கள். △நே.மொ., “நெருப்பைக் கடக்க வைத்தார்கள்.” ⊠நே.மொ., “என் இதயத்தில்.”

அதி. 32
a உபா 9:7; 2ரா 17:9
b 1ரா 11:7; 2ரா 21:1, 4
c 2ரா 23:27; 2ரா 24:3, 4
d 1ரா 11:9, 10; 2ரா 23:26; 1நா 10:13
e எசே 22:6
f மீ 3:5, 11
g 2நா 29:6; எரே 2:27
h எரே 25:3; எரே 35:15
i 2ரா 21:1, 4; எரே 23:11; எசே 8:5, 6
j யோசு 15: 8, 12
k 2நா 28:1, 3; 2நா 33:1, 6; எரே 7:31
l லேவி 18:21; உபா 18:10, 12
m உபா 30:3; எரே 29:14; எசே 37:21
n எரே 23:3, 6; எரே 33:16; எசே 34:25
o எரே 31:33; மீ 4:5
p எசே 11:19
q உபா 5:29
r எசே 39:29
s ஏசா 55:3; ஏசா 61:8
t எசே 36:26
u ஏசா 65:19; செப் 3:17

களை இந்தத் தேசத்திலே நிரந்தரமாகக் குடியிருக்க வைப்பேன்’”[a] என்று
சொன்னார்.

42 “யெகோவா சொல்வது இதுதான்: ‘இந்த ஜனங்களுக்கு நான் இந்த
எல்லா தண்டனைகளையும் வரச் செய்தது போலவே, அவர்களுக்கு வாக்
குறுதி தருகிற எல்லா நன்மைகளையும்கூட வரச் செய்வேன்.[b] **43** “இந்தத்
தேசம் கல்தேயர்களின் கைக்குப் போய்விட்டது. மனுஷர்களும் மிருகங்
களும் இல்லாத பொட்டல் காடாகிவிட்டது” என்று நீங்கள் சொன்னாலும்,
இங்கே திரும்பவும் நிலங்கள் வாங்கப்படும்.’[c]

44 ‘பென்யமீன் தேசத்திலும்[d] எருசலேமின் சுற்றுவட்டாரத்திலும் யூதா
வின் நகரங்களிலும்[e] மலைப்பகுதியிலுள்ள நகரங்களிலும் தாழ்வான பிர
தேசத்திலுள்ள நகரங்களிலும்[f] தெற்கே உள்ள நகரங்களிலும் நிலங்கள்
பணம் கொடுத்து வாங்கப்படும், பத்திரங்கள் எழுதப்பட்டு முத்திரை
போடப்படும், சாட்சிகள் வரவழைக்கப்படுவார்கள். ஏனென்றால், சிறைபி
டிக்கப்பட்டுப் போனவர்களை நான் மறுபடியும் கூட்டிக்கொண்டு வரு
வேன்’[g] என்று யெகோவா சொல்கிறார்.”

33 எரேமியா ‘காவலர் முற்றத்திலே’[h] வைக்கப்பட்டிருந்தபோது
யெகோவா இரண்டாவது தடவையாக அவரிடம் பேசினார். அவர்
எரேமியாவிடம், **2** “பூமியைப் படைத்து, அதை வடிவமைத்து, உறுதியாக
நிலைநிறுத்திய யெகோவா நான்தான். யெகோவா என்பது என் பெயர்.
யெகோவாவாகிய நான் சொல்வது இதுதான்: **3** ‘என்னைக் கூப்பிடு. நான்
உனக்குப் பதில் சொல்வேன். உனக்கு இதுவரை தெரியாததும் புரியாதது
மான முக்கியமான விஷயங்களைச் சொல்வேன்’”[i] என்றார்.

4 “இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சில செய்திகளைச் சொல்
கிறார். மண்மேடுகளை எழுப்பி வாளால் தாக்குகிற எதிரிகளிடமிருந்து[j]
இந்த நகரத்தைப் பாதுகாப்பதற்காக இடிக்கப்பட்டிருக்கிற வீடுகளைப் பற்றி
யும், யூதாவின் ராஜாவுடைய அரண்மனைகளைப் பற்றியும், **5** கல்தேயர்
களை எதிர்த்துப் போர் செய்ய வருகிற ஜனங்களைப் பற்றியும், தன்னுடைய
கடும் கோபத்துக்குப் பலியானவர்களின் பிணங்கள் கிடக்கிற இடங்களைப்
பற்றியும், அவர்கள் செய்த அக்கிரமங்களால் தான் வெறுத்து ஒதுக்கிய
நகரத்தைப் பற்றியும் இப்போது இப்படிச் சொல்கிறார்: **6** ‘இந்த நகரத்தை
மறுபடியும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவேன். இந்த ஜனங்களைக்
குணப்படுத்துவேன்.[k] இவர்களுக்கு ஆரோக்கியம் தருவேன். மிகுந்த சமா
தானத்தையும் பாதுகாப்பையும்* அருளுவேன்.[l] **7** யூதாவிலிருந்தும் இஸ்
ரவேலிலிருந்தும் சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்களை மறுபடியும் கூட்டிக்
கொண்டு வருவேன்.[m] ஆரம்பத்தில் அவர்களை ஆசீர்வதித்தது போலவே
மறுபடியும் ஆசீர்வதிப்பேன்.[n] **8** எனக்கு எதிராக அவர்கள் செய்த எல்லா
பாவங்களையும் குற்றங்களையும் மன்னித்து அவர்களைத் தூய்மையாக்கு
வேன்.[o] **9** எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அவர்களுடைய நகரம் எனக்
குப் புகழும் பெருமையும் சந்தோஷமும் மகிமையும் சேர்க்கிற நகரமாக
ஆகும்.[p] நான் அந்த நகரத்துக்குச் சமாதானத்தையும் மற்ற எல்லா ஆசீர்
வாதங்களையும்*[q] தருவதைக் கேள்விப்பட்டு எல்லா ஜனங்களும் பயந்து
நடுங்குவார்கள்.’”[r]

33:6 * வே.வா., “உண்மையையும்.” **33:9** * வே.வா., “நன்மைகளையும்.”

அதி. 32
a ஏசா 58:11, எரே 24:6, ஆமோ 9:15
b எரே 31:28, சக 8:14, 15
c எசே 37:14
d எரே 32: 10, 25
e எரே 31:23
f எரே 17:26, எரே 33:13
g சங் 126:1

அதி. 33
h நெ 3:25, எரே 32:2, எரே 37:21, எரே 38:28
i ஏசா 48:6
j உபா 28:52, எரே 32:24
k ஏசா 30:26, எரே 30:17
l ஏசா 54:13
m உபா 30:3, எரே 30:3
n எரே 24:6
o சங் 85:2, ஏசா 40:2, ஏசா 43:25, எரே 31:34, மீ 7:18, சக 13:1
p ஏசா 62:3, 7
q நெ 6:15, 16
r மீ 7:17

10 “யெகோவா சொல்வது இதுதான்: ‘மனுஷர்களோ மிருகங்களோ
நடமாட முடியாதளவுக்குப் பாழாகிவிட்டதாக நீங்கள் சொல்கிற யூதாவின்
நகரங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் **11** ஜனங்கள் சந்தோஷமாக
ஆடிப்பாடுகிற சத்தம்[a] மறுபடியும் கேட்கும். மணமகனுடைய குரலும் மண
மகளுடைய குரலும் கேட்கும். அதோடு, “பரலோகப் படைகளின் யெகோ
வாவுக்கு நன்றி சொல்லுங்கள், யெகோவா நல்லவர்,[b] அவர் என்றென்
றும் மாறாத அன்பைக் காட்டுகிறவர்!”[c] என்று எல்லாரும் சொல்கிற சத்தம்
கேட்கும்.’

“யெகோவா சொல்வது இதுதான்: ‘அவர்கள் யெகோவாவின் ஆலயத்
துக்கு நன்றிப் பலிகளைக் கொண்டுவருவார்கள்.[d] ஏனென்றால், சிறைபிடிக்
கப்பட்டுப் போனவர்களை நான் இங்கே கூட்டிக்கொண்டு வந்து பழைய
படி நன்றாக வாழ வைப்பேன்.’ ”

12 “பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: ‘மனு
ஷர்களோ மிருகங்களோ நடமாட முடியாதளவுக்குப் பாழாகிப்போன இந்
தத் தேசத்திலும் இதன் எல்லா நகரங்களிலும் மறுபடியும் மேய்ச்சல் நிலங்
கள் உண்டாகும். மேய்ப்பர்கள் தங்களுடைய மந்தைகளை அங்கே மேய்ப்
பார்கள்.’[e]

13 யெகோவா சொல்வது இதுதான்: ‘மலைப்பகுதியின் நகரங்களிலும்,
தாழ்வான பிரதேசத்தின் நகரங்களிலும், தெற்கே உள்ள நகரங்களிலும்,
பென்யமீன் தேசத்திலும், எருசலேமின் சுற்றுவட்டாரத்திலும்,[f] யூதாவின் நக
ரங்களிலும்[g] மேய்ப்பர்கள் மறுபடியும் தங்களுடைய ஆடுகளை எண்ணு
வார்கள்.’ ”

14 “யெகோவா சொல்வது இதுதான்: ‘இதோ, காலம் வருகிறது. அப்
போது, இஸ்ரவேல் ஜனங்களுக்கும் யூதா ஜனங்களுக்கும் நான் கொடுக்கப்
போவதாகச் சொன்ன எல்லா ஆசீர்வாதங்களையும் கொடுப்பேன்.[h]
15 அந்தச் சமயத்தில், தாவீதின் வம்சத்தில் ஒரு நீதியான தளிரை*
துளிர்க்க வைப்பேன்.[i] அவர் நியாயத்தோடும் நீதியோடும் ஜனங்களை
ஆட்சி செய்வார்.[j] **16** அந்தச் சமயத்தில், யூதா காப்பாற்றப்படும்,[k] எருச
லேம் பாதுகாப்பாக இருக்கும்.[l] ‘யெகோவா நம் நீதிக்குக் காரணமானவர்’[m]
என்ற பெயரால் அது அழைக்கப்படும்.”

17 “யெகோவா சொல்வது இதுதான்: ‘இஸ்ரவேலை ஆட்சி செய்வதற்கு
தாவீதின் வம்சத்தில் ராஜாக்கள் யாரும் இல்லாமல் போக மாட்டார்கள்.[n]
18 எனக்குத் தகன பலிகளையும் உணவுக் காணிக்கைகளையும் மற்ற பலி
களையும் செலுத்துவதற்கு லேவியின் வம்சத்தில் குருமார்கள் யாரும் இல்
லாமல் போக மாட்டார்கள்.’ ”

19 மறுபடியும் யெகோவா எரேமியாவிடம் இப்படிச் சொன்னார்:
20 “யெகோவா சொல்வது இதுதான்: ‘ராத்திரியும் பகலும் அதனதன் நேரத்
தில் வருவதற்காக நான் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்களை எப்படி மாற்ற
முடியாதோ,[o] **21** அப்படியே தாவீதின் வாரிசை ராஜாவாக்குவதற்கு[p]
நான் செய்த ஒப்பந்தத்தையும், என் குருமார்களாகிய லேவியர்களோடு[q]
நான் செய்த ஒப்பந்தத்தையும் மாற்ற முடியாது.[r] **22** வானத்தின் நட்சத்தி
ரங்களை எப்படி எண்ண முடியாதோ, கடற்கரை மணலை எப்படி அளக்க
முடியாதோ, அப்படியே என் ஊழியனாகிய தாவீதின் வம்சத்தையும் எனக்

33:15 * வே.வா., “வாரிசை.”

அதி. 33
a எரே 31:12
b சக 9:17
c 2நா 5:13; எஸ்றா 3:11; சங் 106:1; ஏசா 12:4; மீ 7:18
d லேவி 7:12; சங் 107:22
e ஏசா 65:10; எரே 32:43
f எரே 17:26
g எரே 32:44
h எரே 29:10
i ஏசா 53:2; சக 6:12; வெளி 22:16
j ஏசா 11:1, 4; எரே 23:5; எபி 1:9
k ஏசா 45:17
l எசே 28:26
m எரே 23:6
n 2சா 7:16, 17; 1ரா 2:4; சங் 89:20, 29; ஏசா 9:7; லூ 1:32, 33
o ஆதி 1:16; ஏசா 54:10; எரே 31:35-37
p ஏசா 9:6; லூ 1:32, 33
q உபா 21:5
r 2சா 7:16, 17; 2சா 23:5; சங் 89:34, 35; சங் 132:11; ஏசா 55:3

குச் சேவை செய்கிற லேவியர்களின் வம்சத்தையும் எண்ண முடியாதளவுக்
குப் பெருகப் பண்ணுவேன்.'"
23 மறுபடியும் யெகோவா எரேமியாவிடம் இப்படிச் சொன்னார்:
24 "'யெகோவா தான் தேர்ந்தெடுத்த இரண்டு குடும்பங்களையும் ஒதுக்
கித்தள்ளிவிடுவார்' என்று சிலர் சொல்கிறார்களே, நீ கவனிக்கவில்லையா?
அவர்கள் என்னுடைய ஜனங்களை மரியாதை இல்லாமல் நடத்துகிறார்கள்,
ஒரு தேசமாகவே மதிப்பதில்லை.
25 யெகோவா சொல்வது இதுதான்: 'பகலுக்கும் ராத்திரிக்கும்,[a] வானத்
துக்கும் பூமிக்கும் நான் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்கள் ஒருபோதும் மாறா
தது போலவே,[b] **26** யாக்கோபின் வம்சத்தையும் என் ஊழியனாகிய தாவீ
தின் வம்சத்தையும் ஒதுக்கித்தள்ள மாட்டேன் என்ற வாக்குறுதியும்
ஒருபோதும் மாறாது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்களின் வம்
சத்தை ஆட்சி செய்ய தாவீதின் வம்சத்தில் ராஜாக்கள் இல்லாமல் போக
மாட்டார்கள். ஏனென்றால், சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்களை நான் மறு
படியும் கூட்டிச்சேர்ப்பேன்,[c] அவர்கள்மேல் இரக்கம் காட்டுவேன்.'"[d]

34 பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சாரும், அவனுடைய எல்லா படை
வீரர்களும், அவனுடைய ஆட்சியின் கீழ் இருந்த எல்லா தேசங்க
ளும், எல்லா ஜனங்களும் எருசலேமுக்கு எதிராகவும் அதன் நகரங்களுக்கு
எதிராகவும் போர் செய்துகொண்டிருந்த சமயத்தில் எரேமியாவுக்கு யெகோ
வாவிடமிருந்து கிடைத்த செய்தி இதுதான்:[e]
2 "இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது இதுதான்: 'நீ யூதா
வின் ராஜாவாகிய சிதேக்கியாவிடம்[f] போய் இப்படிச் சொல்: "யெகோவா
ஒரு செய்தியைச் சொல்லச் சொல்லியிருக்கிறார். 'இதோ, நான் இந்த
நகரத்தை பாபிலோன் ராஜாவின் கையில் கொடுக்கப்போகிறேன். அவன்
அதைத் தீ வைத்துக் கொளுத்திவிடுவான்.[g] **3** நீ கண்டிப்பாக அவனு
டைய கையில் பிடித்துக் கொடுக்கப்படுவாய். உன்னால் தப்பிக்கவே முடி
யாது.[h] நீ அவனை நேருக்குநேர் பார்ப்பாய். அவனும் உன்னிடம் நேருக்
குநேர் பேசுவான். நீ பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படுவாய்'[i] என்று
அவர் சொல்லியிருக்கிறார். **4** ஆனாலும், யூதாவின் ராஜாவாகிய சிதேக்
கியாவே, யெகோவாவின் செய்தியைக் கேள்: 'உன்னைப் பற்றி யெகோவா
இப்படிச் சொல்கிறார்: "நீ வாளால் சாக மாட்டாய். **5** உனக்கு இயற்கை
யான மரணம்தான் வரும்.[j] உனக்கு முன்பு வாழ்ந்த ராஜாக்கள் இறந்தபோது
வாசனைப் பொருள்கள் எரிக்கப்பட்டதைப் போலவே உனக்கும் எரிக்கப்ப
டும். அப்போது ஜனங்கள், 'ஐயோ, எங்கள் ராஜாவே!' என்று அழுது புலம்
புவார்கள். 'இதை நானே சொல்லியிருக்கிறேன்' என்று யெகோவா சொல்
கிறார்."'"'"
6 எரேமியா தீர்க்கதரிசி எருசலேமுக்குப் போய் யூதாவின் ராஜாவாகிய
சிதேக்கியாவிடம் இந்த எல்லா விஷயங்களையும் சொன்னார். **7** அப்
போது, பாபிலோன் ராஜாவின் படைவீரர்கள் எருசலேமுக்கு எதிராகவும்,
யூதாவின் மதில் சூழ்ந்த நகரங்களில் மீதியிருந்த[k] இரண்டே நகரங்க
ளான லாகீஸ்[l] மற்றும் அசெக்காவுக்கு[m] எதிராகவும் போர் செய்துகொண்
டிருந்தார்கள்.
8 எருசலேம் ஜனங்கள் எல்லாரும் அவரவர் அடிமைகளை விடுதலை
செய்ய வேண்டுமென்று சிதேக்கியா ராஜா ஒப்பந்தம் செய்த பின்பு,

அதி. 33
a ஆதி 1:16
b சங் 104:19; எரே 31:35, 36
c எஸ்றா 2:1, 70
d ஏசா 14:1; எரே 31:20

அதி. 34
e 2ரா 25:1; எரே 32:2; எரே 39:1; எரே 52:4
f 2நா 36:11; எரே 37:1
g எரே 21:10; எரே 32:28, 29; எரே 39:8
h எரே 37:17; எரே 39:5
i 2ரா 25:6, 7; எசே 12:13
j எசே 17:16
k எரே 4:5
l மீ 1:13
m யோசு 15:20, 35

எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து ஒரு செய்தி கிடைத்தது.[a] **9** எரு
சலேம் ஜனங்கள் தங்களுடைய எபிரெய அடிமைகளை விடுதலை செய்ய
வேண்டும் என்றும், யாருமே யூத ஆண்களையோ பெண்களையோ
அடிமைகளாக வைத்திருக்கக் கூடாது என்றும் சிதேக்கியா சொல்லியிருந்
தார். **10** எல்லா அதிகாரிகளும் ஜனங்களும் அவருக்குக் கீழ்ப்படிந்தார்
கள். ஆண் அடிமைகளையும் பெண் அடிமைகளையும் விடுதலை செய்து
அனுப்பிவிட வேண்டும் என்ற ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு, அந்த அடி
மைகளை அனுப்பினார்கள். **11** ஆனால் கொஞ்சக் காலம் கழித்து, அதே
ஆண் அடிமைகளையும் பெண் அடிமைகளையும் மறுபடியும் கூட்டிக்
கொண்டு வந்து அடிமைப்படுத்தினார்கள். **12** அதனால், யெகோவா எரே
மியாவிடம் மறுபடியும் பேசினார். யெகோவா அவரிடம்,

13 “இஸ்ரவேலின் கடவுளான யெகோவா சொல்வது இதுதான்: ‘எகிப்
தில் அடிமைகளாக இருந்த[b] உங்கள் முன்னோர்களை நான் கூட்டிக்
கொண்டு வந்தபோது அவர்களோடு ஒரு ஒப்பந்தம் செய்தேன்.[c] அவர்க
ளிடம், **14** “ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலும், உங்களிடம்
விற்கப்பட்ட உங்கள் சகோதரர்களாகிய எபிரெயர்களை நீங்கள் விடுதலை
செய்ய வேண்டும். உங்களிடம் ஆறு வருஷங்களாக வேலை செய்த அடி
மைகளை அனுப்பிவிட வேண்டும்”[d] என்று சொன்னேன். உங்கள் முன்
னோர்கள் நான் சொன்னதைக் காதில் வாங்கவே இல்லை. **15** ஆனால்
நீங்கள், சமீபத்தில் மனம் திருந்தி, அடிமைப்பட்டிருந்த சகோதரர்களை
விடுதலை செய்து எனக்குப் பிரியமாக நடந்துகொண்டீர்கள். என் பெயர்
தாங்கிய ஆலயத்தில் என்முன் ஒப்பந்தம் செய்தீர்கள். **16** உங்களுடைய
ஆண் அடிமைகளும் பெண் அடிமைகளும் விரும்பியபடியே அவர்களை
அனுப்பி வைத்தீர்கள். ஆனால் மறுபடியும் மனம் மாறி, அவர்களைக் கூட்
டிக்கொண்டு வந்து அடிமைப்படுத்தி, என் பெயரின் பரிசுத்தத்தைக் கெடுத்
தீர்கள்.’[e]

17 அதனால் யெகோவா சொல்வது இதுதான்: ‘நான் சொன்னபடி நீங்
கள் உங்களுடைய சகோதரர்களுக்கு விடுதலை கொடுக்கவில்லை.[f] அத
னால், வாளினாலும் கொள்ளைநோயினாலும் பஞ்சத்தினாலும்[g] உங்களைத்
தாக்கி இந்த உலகத்திலிருந்தே உங்களுக்கு விடுதலை கொடுக்கப்போகி
றேன்.’ யெகோவா சொல்வது இதுதான்: ‘உங்களுக்கு வந்த கோர முடி
வைப் பார்த்து உலகமே கதிகலங்கும்.[h] **18** கன்றுக்குட்டியை இரண்டாக
வெட்டி, அதன் நடுவே நடந்துபோய், என்முன் ஒப்பந்தம் செய்துவிட்டு,[i]
பின்பு அதை மீறிய **19** யூதாவின் அதிகாரிகள், எருசலேமின் அதிகாரி
கள், அரண்மனை அதிகாரிகள், குருமார்கள், ஜனங்கள் ஆகிய எல்லாருக்
கும் வரப்போகிற கதி இதுதான்: **20** அவர்களைக் கொல்லத் துடிக்கிற எதி
ரிகளின் கையில் நான் அவர்களைக் கொடுத்துவிடுவேன். வானத்திலுள்ள
பறவைகளும் பூமியிலுள்ள மிருகங்களும் அவர்களுடைய பிணங்களைத்
தின்றுதீர்க்கும்.[j] **21** அவர்களைக் கொல்லத் துடிக்கிற எதிரிகளின் கையி
லும்[k] பின்வாங்கிப் போகிற பாபிலோன் ராஜாவின் படைவீரர்களுடைய
கையிலும் நான் சிதேக்கியா ராஜாவையும் அவனுடைய அதிகாரிகளையும்
கொடுத்துவிடுவேன்.’[l]

22 யெகோவா சொல்வது இதுதான்: ‘பின்வாங்கிப் போகிறவர்களுக்கு
நான் கட்டளை கொடுப்பேன். அவர்கள் மறுபடியும் வந்து போர் செய்து

அதி. 34
a யாத் 21:2
b யாத் 13:3
c யாத் 24:7
d யாத் 21:2 லேவி 25:10 லேவி 25: 39-42 உபா 15:12
e லேவி 19:12
f யாத் 21:2 லேவி 25:10
g 2ரா 25:3 எரே 21:7
h எரே 15:2, 4 எரே 29:18
i ஆதி 15: 10, 17
j உபா 28:26 சங் 79:2 எரே 16:4
k எரே 37:5
l 2ரா 25:6, 7 புல 4:20

இந்த நகரத்தைக் கைப்பற்றி, அதைத் தீ வைத்துக் கொளுத்துவார்கள்.[a]
யூதாவின் நகரங்களை நான் பாழாக்குவேன். அங்கே இனி யாரும் குடியி
ருக்க மாட்டார்கள்'"[b] என்று சொன்னார்.

35 யோசியாவின் மகனாகிய யோயாக்கீம் யூதாவை ஆட்சி செய்த
காலத்தில்[c] எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து ஒரு செய்தி
கிடைத்தது; அவர், **2** "நீ போய் ரேகாபியர்களிடம்[d] பேசி அவர்களை
யெகோவாவின் ஆலயத்தில் இருக்கிற ஒரு சாப்பாட்டு அறைக்குக் கூட்
டிக்கொண்டு வா. அவர்களுக்குத் திராட்சமதுவைக் குடிக்கக் கொடு" என்று
சொன்னார்.

3 அதனால் நான் அபசினியாவின் மகனாகிய எரேமியாவின் மகன் யசி
னியாவையும், அவனுடைய சகோதரர்களையும், அவனுடைய எல்லா மகன்
களையும், மற்ற எல்லா ரேகாபியர்களையும் **4** யெகோவாவின் ஆலயத்
துக்குக் கூட்டிக்கொண்டு வந்தேன். அவர்களை உண்மைக் கடவுளின்
ஊழியராகிய இக்தாலியாவின் மகன் ஆனானின் மகன்களுடைய சாப்பாட்டு
அறைக்குக் கூட்டிக்கொண்டு வந்தேன். அது அதிகாரிகளின் சாப்பாட்டு
அறைக்குப் பக்கத்திலும், வாயிற்காவலரான சல்லூமின் மகன் மாசெயாவின்
சாப்பாட்டு அறைக்கு மேலேயும் இருந்தது. **5** பின்பு, நான் திராட்சமது
நிறைந்த கோப்பைகளையும் கிண்ணங்களையும் ரேகாபிய ஆண்களுக்கு
முன்பாக வைத்து, "திராட்சமது குடியுங்கள்" என்று சொன்னேன்.

6 ஆனால் அவர்கள், "நாங்கள் திராட்சமது குடிக்க மாட்டோம். ஏனென்
றால், எங்கள் மூதாதையான ரேகாபின் மகன் யோனதாப்[e] எங்களிடம், 'நீங்க
ளும் உங்கள் பிள்ளைகளும் திராட்சமது குடிக்கவே கூடாது. **7** வீடுகளைக்
கட்டக் கூடாது, விதை விதைக்கக் கூடாது, திராட்சைத் தோட்டம் அமைக்கக்
கூடாது, அதை வாங்கவும் கூடாது. எப்போதும் கூடாரங்களில்தான் தங்க
வேண்டும். அப்போதுதான், நீங்கள் குடியேறிய வேறு தேசத்தில் நீண்ட
காலம் வாழ்வீர்கள்' என்று கட்டளை கொடுத்திருக்கிறார். **8** எங்கள் மூதா
தையான ரேகாபின் மகன் யோனதாப் கொடுத்த கட்டளைக்கு நாங்கள் எப்
போதும் கீழ்ப்படிகிறோம். அவர் சொன்னபடியே நாங்களும் எங்கள் மனை
விகளும் பிள்ளைகளும் திராட்சமது குடிப்பதில்லை. **9** குடியிருப்பதற்காக
நாங்கள் வீடுகளைக் கட்டுவதில்லை. எங்களுக்குத் திராட்சைத் தோட்டங்
களோ வயல்களோ விதைகளோ இல்லை. **10** நாங்கள் கூடாரங்களில்
வாழ்ந்துவருகிறோம். எங்கள் மூதாதையான யோனதாப் கொடுத்த எல்லா
கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்துவருகிறோம். **11** பாபிலோன் ராஜாவாகிய
நேபுகாத்நேச்சார் யூதாவுக்கு எதிராக வந்தபோது[f] நாங்கள், 'கல்தேயர்களி
டமிருந்தும் சீரியர்களிடமிருந்தும் தப்பிக்க எருசலேமுக்குப் போய்விடலாம்'
என்று பேசிக்கொண்டோம். அதன்படியே, இப்போது எருசலேமில் வாழ்ந்து
வருகிறோம்" என்று சொன்னார்கள்.

12 அப்போது யெகோவா எரேமியாவிடம் இப்படிச் சொன்னார்:
13 "இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்வது இதுதான்: 'நீ யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிற
ஜனங்களிடம் போய் இப்படிச் சொல்: "நீங்கள் என் பேச்சைக் கேட்டு நடக்க
வேண்டும் என்று நான் திரும்பத் திரும்பச் சொன்னேன், இல்லையா?"[g]
என்று யெகோவா கேட்கிறார். **14** "திராட்சமது குடிக்கக் கூடாதென்று
ரேகாபின் மகன் யோனதாப் தன்னுடைய வம்சத்தாருக்குக் கட்டளை

அதி. 34
a 2ரா 25:9, 10; எரே 32:29; எரே 39:8
b லேவி 26:33; எரே 44:2

அதி. 35
c 2ரா 23:34; 2நா 36:5; தானி 1:1
d 2ரா 10:15; 1நா 2:55
e 2ரா 10:15
f 2நா 36:5, 6; தானி 1:1
g எரே 32:33

கொடுத்திருந்தார். அவர்களும் இன்றுவரை அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்
படிந்து திராட்சமது குடிக்காமல் இருக்கிறார்கள். அவர்களுடைய மூதாதை
யின் பேச்சுக்கு எப்போதும் மதிப்புக் கொடுக்கிறார்கள்.[a] ஆனால், நீங்கள்
என் பேச்சை மதிப்பதே இல்லை. நான் திரும்பத் திரும்பச் சொன்னாலும்
நீங்கள் கேட்பதே இல்லை.[b] **15** என் ஊழியர்களான தீர்க்கதரிசிகள் எல்
லாரையும் நான் திரும்பத் திரும்ப உங்களிடம் அனுப்பி,[c] 'தயவுசெய்து நீங்
கள் எல்லாரும் கெட்ட வழிகளைவிட்டுத் திருந்துங்கள்.[d] நல்ல வழியில்
நடங்கள். மற்ற தெய்வங்களைத் தேடிப்போய் வணங்காதீர்கள். அப்போது
தான், உங்களுக்கும் உங்கள் முன்னோர்களுக்கும் நான் கொடுத்த தேசத்
தில் தொடர்ந்து வாழ்வீர்கள்'[e] என்று சொன்னேன். ஆனால், நீங்கள்
அதைக் காதிலேயே வாங்கிக்கொள்ளவில்லை. **16** ரேகாபின் மகனாகிய
யோனதாபின் வம்சத்தார் அவர்களுடைய மூதாதையின் கட்டளைக்குக்
கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்.[f] ஆனால், இந்த ஜனங்கள் என் பேச்சைக் கேட்
பதே இல்லை."'"

17 "அதனால், 'நான் எச்சரித்தபடியே யூதாவுக்கும் எருசலேமுக்கும்
எல்லா தண்டனைகளையும் கொடுப்பேன்.[g] ஏனென்றால், நான் எவ்வ
ளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. நான் அவர்களைக் கூப்பிட்
டுக்கொண்டே இருந்தேன், ஆனால் அவர்கள் பதில் பேசவே இல்லை'
என்று பரலோகப் படைகளின் கடவுளும் இஸ்ரவேலின் கடவுளுமாகிய
யெகோவா சொல்கிறார்."[h]

18 பின்பு எரேமியா ரேகாபியர்களிடம், "இஸ்ரவேலின் கடவுளும் பர
லோகப் படைகளின் கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: 'நீங்
கள் உங்களுடைய மூதாதையான யோனதாப் கொடுத்த கட்டளைக்குக்
கீழ்ப்படிந்து நடக்கிறீர்கள். அவர் சொன்னதையெல்லாம் ஒன்றுவிடாமல்
அப்படியே செய்துவருகிறீர்கள். **19** அதனால், "என் சன்னிதியில் சேவை
செய்வதற்கு ரேகாபின் மகனாகிய யோனதாபின் வம்சம் எப்போதுமே
இருக்கும்" என்று இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவு
ளுமான யெகோவா சொல்கிறார்'" என்று சொன்னார்.

36 யோசியாவின் மகனாகிய யோயாக்கீம் யூதாவை ஆட்சி செய்த
நான்காவது வருஷத்தில்[i] எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து
ஒரு செய்தி கிடைத்தது; அவர், **2** "நீ ஒரு சுருளை எடுத்து, நான் இஸ்ர
வேலுக்கும் யூதாவுக்கும்[j] எல்லா தேசங்களுக்கும்[k] எதிராகச் சொன்னதை
யெல்லாம் எழுது. யோசியாவின் காலத்தில் நான் உன்னிடம் முதன்முதலா
கப் பேசிய நாளிலிருந்து இந்த நாள்வரை[l] சொன்னதையெல்லாம் எழுது.
3 நான் கொடுக்க நினைத்திருக்கிற தண்டனைகளைப் பற்றியெல்லாம் யூதா
ஜனங்கள் தெரிந்துகொள்ளும்போது அவர்கள் ஒருவேளை கெட்ட வழிக
ளைவிட்டுத் திருந்தலாம். அப்போது, நான் அவர்களுடைய குற்றத்தையும்
பாவத்தையும் மன்னிப்பேன்"[m] என்று சொன்னார்.

4 உடனே எரேமியா, நேரியாவின் மகனாகிய பாருக்கைக் கூப்பிட்டு[n]
யெகோவா சொன்ன எல்லா விஷயங்களையும் சொன்னார். அவர் சொல்
லச் சொல்ல பாருக் அதையெல்லாம் ஒரு சுருளில் எழுதினார்.[o] **5** பின்பு
எரேமியா பாருக்கிடம், "நான் யெகோவாவின் ஆலயத்துக்குள் போக முடி
யாதபடி தடை செய்யப்பட்டிருக்கிறேன். **6** அதனால், நீதான் ஆலயத்துக்
குள் போக வேண்டும். நான் சொல்லச் சொல்ல நீ எழுதிய யெகோவாவின்

அதி. 35
a எரே 35:8
b 2நா 36:15, 16; நெ 9:26, 30; எரே 25:3
c எரே 7:24, 25
d ஏசா 1:16; எரே 25:5; எசே 18:30; ஓசி 14:1
e எரே 7:5-7
f எரே 35:8
g உபா 28:15; உபா 29:26, 27; யோசு 23:15, 16; 2ரா 23:27
h ஏசா 65:12; ஏசா 66:4; எரே 7:13, 14

அதி. 36
i 2ரா 23:36; எரே 25:1
j எரே 4:16; எரே 32:30
k எரே 1:5; எரே 25:9
l எரே 1:1, 2; எரே 25:3
m ஏசா 55:7; எசே 33:11; மீ 7:18
n எரே 32:12; எரே 45:2-5
o எரே 45:1

அதி. 36

வார்த்தைகள் எல்லாவற்றையும் அங்கே சத்தமாக வாசிக்க வேண்டும்.
விரத நாளிலே யெகோவாவின் ஆலயத்தில் கூடியிருக்கிற ஜனங்களுக்கு
முன்பாக அதை வாசிக்க வேண்டும். பல நகரங்களிலிருந்து வந்திருக்கிற
யூதா ஜனங்கள் எல்லாரும் அதைக் கேட்பார்கள். **7** அதன்பின், அவர்கள்
ஒருவேளை யெகோவாவின் கருணைக்காகக் கெஞ்சலாம். கெட்ட வழிக
ளைவிட்டுத் திருந்தலாம். ஏனென்றால், இந்த ஜனங்களைப் பயங்கர
கோபத்தோடும் ஆக்ரோஷத்தோடும் தண்டிக்கப்போவதாக யெகோவா
சொல்லியிருக்கிறார்” என்று சொன்னார்.

8 தீர்க்கதரிசியான எரேமியா சொன்னதையெல்லாம் நேரியாவின் மகனா
கிய பாருக் செய்தார். யெகோவாவின் ஆலயத்துக்குள் போய் யெகோவா
வின் வார்த்தைகளை அந்தச் சுருளிலிருந்து* சத்தமாக வாசித்தார்.[a]

9 யோசியாவின் மகனாகிய யோயாக்கீம் யூதாவை ஆட்சி செய்த ஐந்
தாம் வருஷம்,[b] ஒன்பதாம் மாதத்தில், எருசலேம் ஜனங்களும் யூதா
வின் நகரங்களிலிருந்து எருசலேமுக்கு வந்திருந்தவர்களும் யெகோவா
வுக்குமுன் விரதமிருக்க வேண்டுமென்று அறிவிப்பு செய்யப்பட்டது.[c]
10 பின்பு, பாருக் அந்தச் சுருளிலிருந்த எரேமியாவின் வார்த்தைகளை
யெகோவாவின் ஆலயத்தில் சத்தமாக வாசித்தார். நகலெடுப்பவராகிய*
சாப்பானின் மகன்[d] கெமரியாவுடைய[e] சாப்பாட்டு அறையிலே எல்லா
ஜனங்களுக்கு முன்பாகவும் அதை வாசித்தார். அந்த அறை யெகோவா
வுடைய ஆலயத்தின் புதிய நுழைவாசலுக்குப் பக்கத்திலுள்ள மேல் பிரகா
ரத்தில் இருந்தது.[f]

11 சுருளிலிருந்து வாசிக்கப்பட்ட யெகோவாவின் வார்த்தைகளையெல்
லாம் சாப்பானின் மகனாகிய கெமரியாவின் மகன் மிகாயா கேட்டவு
டன், **12** ராஜாவின் அரண்மனையில் இருந்த செயலாளரின் அறைக்
குப் போனார். அங்கே, செயலாளரான எலிஷாமா,[g] செமாயாவின் மகன்
தெலாயா, அக்போரின்[h] மகன் எல்நாத்தான்,[i] சாப்பானின் மகன் கெமரியா,
அனனியாவின் மகன் சிதேக்கியா ஆகிய அதிகாரிகளும் மற்ற எல்லா
அதிகாரிகளும்* உட்கார்ந்திருந்தார்கள். **13** ஜனங்களுக்கு முன்பாகச் சுரு
ளிலிருந்து பாருக் வாசித்த எல்லாவற்றையும் மிகாயா அவர்களிடம்
சொன்னார்.

14 அந்த அதிகாரிகள் அதைக் கேட்டபோது, கூஷியின் கொள்ளுப்
பேரனும் செலேமியாவின் பேரனும் நெத்தனியாவுடைய மகனுமாகிய
யெகுதியை பாருக்கிடம் அனுப்பி, “ஜனங்களுக்கு முன்பாக நீ வாசித்த அந்
தச் சுருளை எடுத்துக்கொண்டு வா” என்று சொல்லச் சொன்னார்கள். அதன்
படியே, நேரியாவின் மகனாகிய பாருக் அந்தச் சுருளை எடுத்துக்கொண்டு
அவர்களிடம் போனார். **15** அவர்கள் அவரிடம், “தயவுசெய்து இங்கே
உட்கார்ந்து, சுருளில் இருப்பதைச் சத்தமாக வாசித்துக் காட்டு” என்றார்கள்.
பாருக்கும் அதை அவர்களுக்கு வாசித்துக் காட்டினார்.

16 அதைக் கேட்டவுடன் அவர்கள் மிரண்டுபோய் ஒருவரை ஒருவர்
பார்த்தார்கள்; பின்பு பாருக்கிடம், “இந்த விஷயங்களையெல்லாம் நாங்கள்
கண்டிப்பாக ராஜாவிடம் சொல்ல வேண்டும்” என்றார்கள். **17** அதோடு,
“நீ எப்படி இதையெல்லாம் எழுதினாய் என்று தயவுசெய்து சொல்.

a எரே 7:1, 2
b 2ரா 23:36
c 2நா 20:2, 3; எஸ்தர் 4:15, 16
d 2ரா 22:8; 2நா 34:20, 21; எரே 26:24; எரே 39:13, 14; எசே 8:11
e எரே 36:25
f எரே 26:10
g எரே 36:20
h 2ரா 22:14; எரே 26:22
i எரே 36:25

36:8 *வே.வா., “புத்தகத்திலிருந்து.” **36:10** *வே.வா., “எழுத்தராகிய.” **36:12** *அதாவது, “அரண்மனை அதிகாரிகளும்.”

எரேமியா சொல்லித்தான் எழுதினாயா?" என்று கேட்டார்கள். **18** அதற்கு
பாருக், "ஆமாம், எரேமியா சொல்லச் சொல்லத்தான் எல்லாவற்றையும் இந்
தச் சுருளில் மையினால் எழுதினேன்" என்று சொன்னார். **19** அப்போது
அந்த அதிகாரிகள், "நீயும் எரேமியாவும் போய் ஒளிந்துகொள்ளுங்கள். நீங்
கள் எங்கே இருக்கிறீர்கள் என்று யாருக்கும் சொல்ல வேண்டாம்"[a] என்
றார்கள்.

20 பின்பு, அவர்கள் அரண்மனை முற்றத்துக்குப் போனார்கள். செயலா
ளரான எலிஷாமாவின் அறையிலே அந்தச் சுருளை வைத்துவிட்டு ராஜா
விடம் போய் அந்தச் சுருளைப் பற்றிச் சொன்னார்கள்.

21 உடனே, ராஜா அந்தச் சுருளை எடுத்துவரச் சொல்லி யெகுதியை[b]
அனுப்பினார். யெகுதி செயலாளரான எலிஷாமாவின் அறைக்குப் போய்
அதை எடுத்துவந்தார். பின்பு, ராஜாவுக்கு முன்பாகவும் அவருக்குப் பக்
கத்தில் நின்றுகொண்டிருந்த எல்லா அதிகாரிகளுக்கு முன்பாகவும் அதை
வாசிக்க ஆரம்பித்தார். **22** அது ஒன்பதாம் மாதம்.* ராஜா குளிர் கால
மாளிகையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். குளிர்காய்வதற்கான நெருப்பு
அவர் முன்னால் எரிந்துகொண்டிருந்தது. **23** யெகுதி அந்தச் சுருளிலி
ருந்து மூன்று, நான்கு பத்திகளை வாசித்ததும் ராஜா அந்தப் பகுதியை செய
லாளரின் கத்தியால் வெட்டி நெருப்பில் தூக்கி வீசினார். யெகுதி வாசிக்க
வாசிக்க ராஜா இப்படியே அந்தச் சுருளை வெட்டிப் போட்டுக்கொண்டே
இருந்தார். கடைசியில் மொத்த சுருளும் எரிந்துபோனது. **24** சுருளிலி
ருந்த வார்த்தைகளைக் கேட்டு ராஜாவோ அவருடைய ஊழியர்களோ
தங்கள் உடையைக் கிழிக்கவில்லை. யாரும் பயப்படவே இல்லை.
25 சுருளை எரிக்க வேண்டாமென்று எல்நாத்தானும்[c] தெலாயாவும்[d] கெம
ரியாவும்[e] ராஜாவிடம் கெஞ்சிக் கேட்டும் ராஜா மசியவில்லை. **26** அதற்
குப் பதிலாக, தீர்க்கதரிசியாகிய எரேமியாவையும் செயலாளராகிய பாருக்
கையும் கைது செய்யச் சொல்லி தன்னுடைய மகன் யெர்மெயேலிடமும்,
அசரியேலின் மகன் செராயாவிடமும், அப்தெயேலின் மகன் செலேமியா
விடமும் கட்டளை கொடுத்தார். ஆனால், அவர்களிடம் சிக்கிக்கொள்ளாத
படி எரேமியாவையும் பாருக்கையும் யெகோவா பாதுகாத்தார்.[f]

27 எரேமியா சொல்லச் சொல்ல பாருக் எழுதிய சுருளை[g] ராஜா
நெருப்பில் எரித்த பின்பு யெகோவா எரேமியாவிடம், **28** "நீ இன்னொரு
சுருளை எடுத்து, யூதாவின் ராஜா யோயாக்கீம் எரித்துப்போட்ட சுரு
ளில்[h] எழுதிய அதே வார்த்தைகளை மறுபடியும் எழுது. **29** யூதாவின்
ராஜா யோயாக்கீமிடம் இப்படிச் சொல்: 'யெகோவா சொல்வது இது
தான்: "நீ சுருளை நெருப்பில் எரித்தாயே! பாபிலோன் ராஜா கண்டிப்
பாக வந்து இந்தத் தேசத்தையும் இங்கிருக்கிற மனுஷர்களையும் மிருகங்க
ளையும் ஒழித்துக்கட்டுவார்[i] என்று இந்தத் தீர்க்கதரிசி எப்படி எழுதலாம்
என்று கேட்டாயே! **30** அதனால், யூதாவின் ராஜா யோயாக்கீமுக்கு எதி
ராக யெகோவா சொல்வது இதுதான்: 'அவனுடைய வம்சத்தில் யாரும்
தாவீதின் சிம்மாசனத்தில்[j] உட்கார மாட்டார்கள். அவனுடைய பிணம்
ராத்திரி பகலாக வெயிலிலும் குளிரிலும் கிடக்கும்.[k] **31** நான் அவனையும்
அவனுடைய வம்சத்தையும் அவனுடைய ஊழியர்களையும் அழிப்பேன்.

36:22 * அதாவது, "நவம்பர் மாத பிற்பகுதியும் டிசம்பர் மாத முற்பகுதியும்." இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

அதி. 36
a எரே 36:26
b எரே 36:14
c 2ரா 24:8
d எரே 36:12
e எரே 36:10
f எரே 1:19
g எரே 36:2
h எரே 36:23
i எரே 25:8, 9
j 2ரா 24:6, 8; 2ரா 24:15; 2நா 36:9, 10; எரே 22:24, 30
k எரே 22:18, 19

அவர்கள் என்னுடைய பேச்சைக் கேட்காததால்[a] நான் எச்சரித்தபடியே
அவர்களுக்கும் எருசலேம் ஜனங்களுக்கும் யூதா ஜனங்களுக்கும் எல்லா
தண்டனைகளையும் கொடுப்பேன்'"'"[b] என்று சொன்னார்.
32 பிறகு, எரேமியா இன்னொரு சுருளை எடுத்து நேரியாவின் மகனும்,
செயலாளருமான பாருக்கிடம் கொடுத்தார்.[c] யூதாவின் ராஜா யோயாக்கீம்
எரித்த சுருளில்[d] இருந்த எல்லா வார்த்தைகளையும் எரேமியா சொல்லச்
சொல்ல பாருக் எழுதினார். அதுபோன்ற இன்னும் பல வார்த்தைகளும்
சேர்க்கப்பட்டன.

37 யோசியாவின் மகனாகிய சிதேக்கியா,[e] யோயாக்கீமின் மகனாகிய
கோனியாவுக்கு*[f] பதிலாக ஆட்சி செய்ய ஆரம்பித்தார். ஏனென்
றால், பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சார் அவரை யூதாவின் ராஜா
வாக நியமித்திருந்தான்.[g] **2** ஆனால், சிதேக்கியாவும் அவருடைய ஊழி
யர்களும் அவருடைய ஜனங்களும் எரேமியா தீர்க்கதரிசி மூலமாக
யெகோவா சொன்ன வார்த்தைகளைக் கேட்கவில்லை.
3 சிதேக்கியா ராஜா, செலேமியாவின் மகன் யெகூகாலையும்[h] குருவா
கிய மாசெயாவின் மகன் செப்பனியாவையும்[i] எரேமியா தீர்க்கதரிசியி
டம் அனுப்பி, "தயவுசெய்து எங்களுக்காக யெகோவா தேவனிடம்
ஜெபம் செய்யுங்கள்" என்று சொல்லச் சொன்னார். **4** அந்தச் சமயத்தில்
எரேமியா சிறையில் அடைக்கப்படவில்லை.[j] அதனால், ஜனங்கள் மத்தி
யில் சுதந்திரமாக நடமாடிக்கொண்டு இருந்தார். **5** எருசலேமைச் சுற்றிவ
ளைத்திருந்த கல்தேயர்கள் திடீரென்று பின்வாங்கிப் போனார்கள்.[k]
ஏனென்றால், பார்வோனின் படை எகிப்திலிருந்து புறப்பட்டு[l] வந்துகொண்
டிருந்ததைக் கேள்விப்பட்டார்கள். **6** அப்போது, எரேமியா தீர்க்கதரிசியி
டம் யெகோவா இப்படிச் சொன்னார்: **7** "இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவா சொல்வது இதுதான்: 'என்னிடம் விசாரித்து வரும்படி உன்னை
அனுப்பிய யூதாவின் ராஜாவிடம் நீ இதைத்தான் சொல்ல வேண்டும்:
"இதோ, உனக்கு உதவி செய்வதற்காக வந்துகொண்டிருக்கிற பார்வோனின்
படை அதன் தேசமாகிய எகிப்துக்கே திரும்பிப் போக வேண்டியிருக்கும்.[m]
8 ஆனால், கல்தேயர்கள் மறுபடியும் வந்து இந்த நகரத்தைக் கைப்பற்றி
இதைத் தீ வைத்துக் கொளுத்துவார்கள்."[n] **9** யெகோவா சொல்வது இது
தான்: "கல்தேயர்கள் மறுபடியும் இந்தப் பக்கம் வரவே மாட்டார்கள் என்று
நினைத்து உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ளாதீர்கள். ஏனென்றால்,
அவர்கள் கண்டிப்பாக வருவார்கள். **10** உங்களோடு போர் செய்கிற கல்
தேயர்களின் படையை நீங்கள் ஒட்டுமொத்தமாக வெட்டிப்போட்டால்கூட,
சிலர் வெட்டுக்காயத்தோடு தப்பிப்பார்கள். அவர்கள் தங்களுடைய கூடா
ரங்களிலிருந்து எழுந்துவந்து இந்த நகரத்தைத் தீ வைத்துக் கொளுத்துவார்
கள்."'"[o]
11 பார்வோனின் படை வருவதைக் கேள்விப்பட்டு கல்தேயர்களின்
படை பின்வாங்கிப்போன[p] பின்பு, **12** எரேமியா தன்னுடைய ஜனங்களி
டமிருந்து தனக்குக் கிடைக்க வேண்டிய சொத்தைப் பெற்றுக்கொள்வதற்
காக எருசலேமிலிருந்து பென்யமீன் தேசத்துக்குப்[q] புறப்பட்டுப் போனார்.
13 ஆனால் அவர் 'பென்யமீன் நுழைவாசலை' அடைந்ததும், அனனியா
வின் மகனாகிய செலேமியாவின் மகனும் காவலர்களின் அதிகாரியுமான

37:1 * யோயாக்கீன் என்றும் எகொனியா என்றும்கூட அழைக்கப்படுகிறார்.

அதி. 36
a 2நா 36:15, 16
b உபா 28:15; எரே 19:15
c எரே 36:2, 4
d எரே 36:23

அதி. 37
e 2ரா 24:17-19; 1நா 3:15
f 2ரா 24:12; எரே 22:24
g 2நா 36:10-12
h எரே 38:1, 4
i 2ரா 25:18, 21; எரே 21:1, 2; எரே 29:25
j எரே 37:15
k எரே 34:21
l எசே 17:15
m எரே 17:5; புல 4:17; எசே 17:17
n எரே 32:29; எரே 34:22; எரே 39:8
o எரே 21:4
p எரே 34:21
q எரே 1:1

யெரியா என்பவன் தீர்க்கதரிசியாகிய எரேமியாவைப் பிடித்து, "நீ கல்தே
யர்களோடு சேர்ந்துகொள்ளப் பார்க்கிறாய்!" என்றான். **14** ஆனால் எரே
மியா, "இல்லவே இல்லை! நான் கல்தேயர்களோடு சேர்ந்துகொள்ளப்
போவதில்லை!" என்றார். ஆனாலும் அவன் அதை நம்பாமல் எரேமியா
வைக் கைது செய்து அதிகாரிகளிடம் கொண்டுபோனான். **15** அந்த அதி
காரிகள் பயங்கர கோபத்தோடு எரேமியாவை[a] அடித்து, செயலாளரான
யெகோனத்தானின் வீட்டில் அடைத்து வைத்தார்கள்.[b] ஏனென்றால், அந்த
வீடு ஒரு சிறையாக மாற்றப்பட்டிருந்தது. **16** அங்கிருந்த நிலத்தடி இருட்
டறை ஒன்றில் எரேமியா பல நாட்களுக்கு அடைத்து வைக்கப்பட்டார்.

17 அப்போது, சிதேக்கியா ராஜா ஆட்களை அனுப்பி எரேமி
யாவைத் தன்னுடைய அரண்மனைக்கு வர வைத்து, ரகசியமாக விசாரித்
தார்.[c] அவர் எரேமியாவிடம், "யெகோவா ஏதாவது செய்தி சொல்லியிருக்
கிறாரா?" என்று கேட்டார். அதற்கு எரேமியா, "சொல்லியிருக்கிறார்! நீங்கள்
பாபிலோன் ராஜாவின் கையில் கொடுக்கப்படுவீர்கள்"[d] என்றார்.

18 பின்பு சிதேக்கியா ராஜாவிடம் எரேமியா, "நான் உங்களுக்கும் உங்
கள் ஊழியர்களுக்கும் இந்த ஜனங்களுக்கும் எதிராக அப்படியென்ன
பாவம் செய்துவிட்டேன்? ஏன் என்னைச் சிறையில் அடைத்து வைத்திருக்
கிறீர்கள்? **19** 'பாபிலோன் ராஜா உங்களுக்கு எதிராகவும் இந்தத் தேசத்
துக்கு எதிராகவும் வர மாட்டார்' என்று உங்களிடம் சொன்ன தீர்க்கதரிசி
கள் இப்போது எங்கே போனார்கள்?[e] **20** ராஜாவே, என் எஜமானே,
தயவுசெய்து கேளுங்கள். தயவுசெய்து எனக்கு ஒரு உதவி செய்யுங்கள்.
செயலாளராகிய யெகோனத்தானின் வீட்டுக்கு[f] மறுபடியும் என்னை அனுப்
பிவிடாதீர்கள்; அங்கு போனால் நான் செத்தே போய்விடுவேன்"[g] என்று
சொன்னார். **21** அதனால், எரேமியாவை 'காவலர் முற்றத்தில்'[h]
அடைத்து வைக்கும்படி சிதேக்கியா ராஜா கட்டளை கொடுத்தார். நகரத்
தில் ரொட்டி கிடைக்கும்வரை[i] ரொட்டி சுடுகிறவர்களின் தெருவிலிருந்து[j]
தினமும் எரேமியாவுக்கு ஒரு வட்டமான ரொட்டி கொடுக்கப்பட்டது. அவர்
'காவலர் முற்றத்திலேயே' வைக்கப்பட்டிருந்தார்.

38 ஜனங்களிடம் எரேமியா சொன்னதையெல்லாம் மாத்தானின்
மகன் செப்பத்தியாவும், பஸ்கூரின்[k] மகன் கெதலியாவும், செலே
மியாவின் மகன் யூகாலும்,[l] மல்கீயாவின் மகன் பஸ்கூரும் கேட்டார்கள்.
2 அதாவது, ஜனங்களிடம் எரேமியா, "யெகோவா சொல்வது இதுதான்:
'கல்தேயர்களிடம் சரணடைகிறவர்கள் உயிர் பிழைத்துக்கொள்வார்கள்.[m]
ஆனால், இந்த நகரத்திலேயே இருக்கிற எல்லாரும் வாளினாலும் பஞ்சத்
தினாலும் கொள்ளைநோயினாலும்[n] சாவார்கள்.' **3** யெகோவா சொல்வது
இதுதான்: 'இந்த நகரம் நிச்சயமாகவே பாபிலோன் ராஜாவுடைய கையில்
கொடுக்கப்படும். அவனுடைய படை இதைக் கைப்பற்றும்'"[o] என்று சொன்
னதை அந்த நான்கு அதிகாரிகளும் கேட்டார்கள்.

4 உடனே, அந்த அதிகாரிகள் ராஜாவிடம் போய், "இந்த மனு
ஷனைத் தயவுசெய்து கொன்றுவிடுங்கள்.[p] இந்த நகரத்தில் மீதியிருக்கிற
போர்வீரர்களிடமும் ஜனங்களிடமும் இவன் இப்படியெல்லாம் பேசி அவர்
களைப் பயந்து நடுங்க வைக்கிறான். ஜனங்கள் நல்லபடியாக வாழ வேண்
டுமென்று நினைக்காமல் அவர்கள் அழிந்துபோக வேண்டுமென்று நினைக்
கிறான்" என்று சொன்னார்கள். **5** அதற்கு ராஜா, "அவன் உங்கள் கையில்

அதி. 37

a எரே 26:11; எரே 38:4
b எரே 20:2; எபி 11:32, 36
c எரே 38:14
d எரே 21:7; எரே 24:8; எரே 34:21; எசே 12:12, 13
e எரே 14:13; எரே 23:16, 17; எரே 27:14; எரே 28:1, 2; புல 2:14
f எரே 37:15
g எரே 26:15; எரே 38:8, 9
h நெ 3:25; எரே 32:2; எரே 33:1; எரே 38: 13, 28
i 2ரா 25:3; எரே 38:9
j 1ரா 17:6

அதி. 38

k எரே 37:3
l எரே 21:1, 2
m எரே 21:8-10
n எரே 27:13; எரே 29:18; எசே 7:15
o 2ரா 25:1, 2; 2நா 36:17
p எரே 26:11

அதி. 38
a எரே 33:1
எரே 37:21
எரே 38:28
b எரே 39:16
c எரே 37:13
d எரே 52:6
e 2ரா 20:13
f எரே 37:21
g எரே 21:9
எரே 27:12

இருக்கிறான்! ராஜாவால் உங்களைத் தடுத்து நிறுத்தவா முடியும்?" என்று சொன்னார்.

6 அதனால் அவர்கள் எரேமியாவைப் பிடித்து, ராஜாவின் மகனாகிய மல்கீயாவின் கிணற்றுக்குள் கயிறுகளினால் இறக்கினார்கள். அந்தக் கிணறு 'காவலர் முற்றத்தில்'[a] இருந்தது. அதில் தண்ணீரே இல்லை, வெறும் சேறுதான் இருந்தது. எரேமியா அதில் மூழ்க ஆரம்பித்தார்.

7 எரேமியா கிணற்றுக்குள் போடப்பட்ட செய்தியை அரண்மனை அதிகாரியான* எபெத்மெலேக்[b] என்ற எத்தியோப்பியர் கேள்விப்பட்டார். 'பென்யமீன் நுழைவாசலில்'[c] ராஜா உட்கார்ந்துகொண்டிருந்ததால், **8** எபெத்மெலேக் அங்கே போய் ராஜாவைப் பார்த்து, **9** "என் எஜமானாகிய ராஜாவே, இந்த ஆட்கள் படுபாவிகள்! எரேமியா தீர்க்கதரிசியைக் கிணற்றில் தள்ளிவிட்டார்கள்! அவர் அங்கே பட்டினியினால் செத்துப்போவாரே! நகரத்தில்கூட உணவு இல்லையே!"[d] என்றார்.

10 அப்போது ராஜா, "நீ இங்கிருந்து 30 ஆட்களைக் கூட்டிக்கொண்டு போ. எரேமியா தீர்க்கதரிசி செத்துப்போவதற்குள் கிணற்றிலிருந்து அவரை வெளியே தூக்கிவிடு" என்றார். **11** அதனால் எபெத்மெலேக் ஆட்களைக் கூட்டிக்கொண்டு ராஜாவின் அரண்மனைக்குப் போனார். அங்கே பொக்கிஷ அறைக்குக் கீழே போய்,[e] அங்கிருந்த கிழிந்த துணிகளையும் பழைய துணிகளையும் எடுத்து வந்து, கிணற்றிலிருந்த எரேமியாவிடம் கயிறுகளினால் இறக்கினார். **12** பின்பு எத்தியோப்பியரான எபெத்மெலேக் எரேமியாவிடம், "கயிறுகள் உங்கள் தோலை அறுக்காதபடி இந்தத் துணிகளைத் தயவுசெய்து உங்களுடைய அக்குள்களில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். எரேமியா அப்படியே செய்தார். **13** கிணற்றிலிருந்த எரேமியாவை அவர்கள் கயிறுகளால் வெளியே தூக்கிவிட்டார்கள். பின்பு, எரேமியா 'காவலர் முற்றத்தில்'[f] வைக்கப்பட்டார்.

14 சிதேக்கியா ராஜா எரேமியா தீர்க்கதரிசியிடம் ஆட்களை அனுப்பி, யெகோவாவின் ஆலயத்திலுள்ள மூன்றாவது வாசலுக்கு வரச் சொன்னார். எரேமியா வந்ததும், "நான் உன்னிடம் ஒரு விஷயத்தைக் கேட்க வேண்டும். எதையும் மறைக்காமல் உண்மையைச் சொல்" என்றார். **15** அதற்கு எரேமியா, "நான் உண்மையைச் சொன்னால் நீங்கள் என்னைக் கண்டிப்பாகக் கொன்றுவிடுவீர்கள். நான் உங்களுக்கு ஆலோசனை சொன்னாலும் கேட்க மாட்டீர்கள்" என்றார். **16** உடனே ராஜா எரேமியாவிடம், "நமக்கு உயிர் கொடுத்திருக்கிற உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணையாகச் சொல்கிறேன்,* நான் உன்னைக் கொல்ல மாட்டேன். உன்னைக் கொல்லத் துடிக்கிறவர்களுடைய கையிலும் உன்னைக் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லி ரகசியமாகச் சத்தியம் செய்தார்.

17 அப்போது எரேமியா சிதேக்கியாவிடம், "பரலோகப் படைகளின் கடவுளும் இஸ்ரவேலின் கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: 'நீ பாபிலோன் ராஜாவுடைய அதிகாரிகளிடம் சரணடைந்தால் உயிர்பிழைப்பாய். இந்த நகரமும் தீ வைத்துக் கொளுத்தப்படாது. நீயும் உன் குடும்பத்தாரும் தப்பித்துக்கொள்வீர்கள்.[g] **18** ஆனால், அந்த அதிகாரிகளிடம்

38:7 * நே.மொ., "அண்ணகரான." சொல் பட்டியலைப் பாருங்கள். **38:16** * வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

நீ சரணடையாவிட்டால் இந்த நகரம் கல்தேயர்களிடம் கொடுக்கப்படும். நக
ரத்தை அவர்கள் தீ வைத்துக் கொளுத்துவார்கள்.[a] அவர்களுடைய கையி
லிருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது’ ”[b] என்று சொன்னார்.

19 அதற்கு சிதேக்கியா ராஜா, “கல்தேயர்களோடு சேர்ந்துகொண்ட
யூதர்களிடம் நான் சிக்கினால் அவர்கள் என்னைக் கொடூரமாக நடத்துவார்
களே! அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது” என்றார். **20** ஆனால்
எரேமியா அவரிடம், “நீங்கள் அவர்களிடம் சிக்க மாட்டீர்கள். யெகோவா
என் மூலமாகச் சொல்வதைத் தயவுசெய்து கேட்டு நடங்கள். அப்போது
தான் உங்களுக்கு ஒன்றும் ஆகாது, நீங்கள் உயிர்பிழைப்பீர்கள். **21** நீங்
கள் சரணடைய மறுத்துவிட்டால் என்ன நடக்குமென்று யெகோவா என்னி
டம் சொல்லியிருக்கிறார். **22** யூதாவின் ராஜாவுடைய அரண்மனையில்
மிஞ்சியிருக்கிற எல்லா பெண்களும் பாபிலோன் ராஜாவுடைய அதிகாரிக
ளிடம் கொண்டுபோகப்படுவார்கள்.[c] அவர்கள் உங்களைப் பார்த்து,

‘நீங்கள் நம்பிய ஆட்களே உங்களை ஏமாற்றிவிட்டார்களே! உங்களை
வீழ்த்திவிட்டார்களே![d]
உங்களுடைய காலைச் சேற்றில் சிக்க வைத்துவிட்டு,
அவர்கள் மட்டும் தப்பித்துவிட்டார்களே!’ என்று சொல்வார்கள்.

23 உங்கள் மனைவிகளும் மகன்களும் கல்தேயர்களிடம் கொண்டுபோகப்
படுவார்கள். அந்தக் கல்தேயர்களுடைய கையிலிருந்து உங்களால் தப்பிக்க
முடியாது. பாபிலோன் ராஜா உங்களைப் பிடித்துக்கொண்டு போவான்.[e]
நீங்கள் செய்த குற்றத்தினால் இந்த நகரம் தீ வைத்துக் கொளுத்தப்படும்”[f]
என்று சொன்னார்.

24 அப்போது சிதேக்கியா எரேமியாவிடம், “இந்த விஷயங்களை யாரி
டமும் சொல்லாதே. சொன்னால், உன் உயிருக்கே ஆபத்து! **25** நான்
உன்னிடம் பேசியதைப் பற்றி என்னுடைய அதிகாரிகள் கேள்விப்பட்டால்
உடனே உன்னிடம் வந்து, ‘ராஜாவிடம் என்ன சொன்னாய்? தயவுசெய்து
சொல். எங்களிடம் எதையும் மறைக்காதே. நாங்கள் உன்னைக் கொல்ல
மாட்டோம்.[g] ராஜா உன்னிடம் என்ன சொன்னார்?’ என்றெல்லாம் கேட்
பார்கள். **26** அப்போது நீ அவர்களிடம், ‘என்னை மறுபடியும் யெகோனத்
தானின் வீட்டுக்கு அனுப்பி சாகடிக்க வேண்டாம் என்றுதான் ராஜாவிடம்
கேட்டுக்கொண்டிருந்தேன்’[h] என்று சொல்” என்றார்.

27 பிற்பாடு, எல்லா அதிகாரிகளும் எரேமியாவிடம் வந்து விசாரித்தார்
கள். எரேமியாவும் ராஜா சொல்லச் சொன்னதை அப்படியே சொன்னார்.
அந்த அதிகாரிகள் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் போய்விட்டார்கள்.
ஏனென்றால், எரேமியாவும் ராஜாவும் பேசியதை அவர்கள் யாரும் கேட்க
வில்லை. **28** எருசலேம் கைப்பற்றப்படும் நாள்வரை எரேமியா ‘காவலர்
முற்றத்திலேயே’[i] இருந்தார். எருசலேம் பிடிக்கப்பட்டபோது அவர் அங்கு
தான் இருந்தார்.[j]

39 சிதேக்கியா ராஜா யூதாவை ஆட்சி செய்த ஒன்பதாம் வருஷம்,
10-ஆம் மாதம், பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சார் தன்னு
டைய படைகளோடு வந்து எருசலேமைச் சுற்றிவளைத்தான்.[k]

2 சிதேக்கியா ஆட்சி செய்த 11-ஆம் வருஷம், நான்காம் மாதம், ஒன்
பதாம் தேதியில் அவர்கள் நகரத்தின் மதிலை உடைத்தார்கள்.[l] **3** பின்பு,

அதி. 38

a 2ரா 25:8, 9
b 2ரா 25:6; எரே 39:5
c எரே 39:3
d புல 1:2
e 2ரா 25:7
f எரே 52:8, 13
g எரே 38:4
h எரே 37:15
i எரே 15:20; எரே 32:2; எரே 33:1; எரே 37:21; எரே 39:13, 14
j 2ரா 25:8, 9; 2நா 36:17

அதி. 39

k 2ரா 25:1, 2; எரே 52:4, 5; எசே 24:1, 2
l 2ரா 25:3, 4; எரே 52:6, 7; எசே 33:21

பாபிலோன் ராஜாவுடைய அதிகாரிகளான நெர்கல்-சரேத்சேர் என்ற சம்
கார், நேபோ-சர்சேகிம் என்ற ரப்சாரிஸ்,* நெர்கல்-சரேத்சேர் என்ற ரப்மாக்#
ஆகியவர்களும் மற்ற அதிகாரிகளும் உள்ளே போய் 'நடு நுழைவாசலில்'[a]
உட்கார்ந்தார்கள்.

4 யூதாவின் ராஜா சிதேக்கியாவும் எல்லா வீரர்களும் அவர்களைப்
பார்த்தபோது தப்பித்து ஓடினார்கள்.[b] ராத்திரியில் ராஜாவின் தோட்டத்து
வழியாகப் போய், இரண்டு மதில்களுக்கு இடையிலிருந்த நுழைவாசலைத்
தாண்டி, அரபா[c] வழியாகத் தப்பித்து ஓடினார்கள். **5** ஆனால், கல்தேயர்
களின் வீரர்கள் அவர்களைத் துரத்திக்கொண்டு போய், எரிகோவின் பாலை
நிலத்திலே சிதேக்கியாவைப் பிடித்தார்கள்.[d] அவரை காமாத்திலிருந்த[e]
ரிப்லாவுக்குக் கொண்டுபோய் பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சா
ரின் முன்னால் நிறுத்தினார்கள்.[f] ராஜா அவருக்குத் தண்டனை விதித்தான்.
6 அதோடு, ஆட்களை வைத்து சிதேக்கியாவின் கண் முன்பாகவே அவ
ருடைய மகன்களை வெட்டிப்போட்டான். யூதாவின் முக்கியப் பிரமுகர்கள்
எல்லாரையும்கூட வெட்டிக் கொன்றான்.[g] **7** பின்பு சிதேக்கியாவின் கண்
களைக் குருடாக்கி, அவருக்குச் செம்பு விலங்குகளை மாட்டி, பாபிலோனுக்
குக் கொண்டுபோனான்.[h]

8 அதன்பின், ராஜாவின் அரண்மனையையும் ஜனங்களுடைய வீடுக
ளையும் கல்தேயர்கள் தீ வைத்துக் கொளுத்தினார்கள்,[i] எருசலேமின் மதில்
களை இடித்துப்போட்டார்கள்.[j] **9** நகரத்தில் மிச்சமிருந்த ஜனங்களையும்,
பாபிலோன் ராஜாவிடம் சரணடைந்தவர்களையும், யூதாவிலிருந்த மற்ற
ஜனங்களையும் காவலாளிகளின் தலைவனாகிய நேபுசராதான்[k] பாபிலோ
னுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போனான்.

10 ஆனால், பரம ஏழைகள் சிலரை மட்டும் அவன் யூதா தேசத்தில்
விட்டுவிட்டான். அவர்களுக்குத் திராட்சைத் தோட்டங்களையும் வயல்
களையும் கொடுத்து வேலை செய்ய வைத்தான்.*[l]

11 பின்பு, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் காவலாளிகளின்
தலைவனாகிய நேபுசராதானிடம், **12** "நீ எரேமியாவைக் கூட்டிக்கொண்டு
போய் நன்றாகக் கவனித்துக்கொள். அவரை ஒன்றும் பண்ணிவிடாதே.
அவர் கேட்பதையெல்லாம் கொடு"[m] என்றான்.

13 காவலாளிகளின் தலைவனாகிய நேபுசராதான், நேபுசஸ்பான் என்ற
ரப்சாரிஸ்,* நெர்கல்-சரேத்சேர் என்ற ரப்மாக்# ஆகியவர்களும் பாபிலோன்
ராஜாவுடைய முக்கிய அதிகாரிகளும் ஆட்களை அனுப்பி, **14** எரேமி
யாவை 'காவலர் முற்றத்திலிருந்து'[n] வெளியே கொண்டுவந்தார்கள். பின்பு,
அவரை சாப்பானின்[o] மகனாகிய அகிக்காமின்[p] மகன் கெதலியாவிடம்[q]
ஒப்படைத்து, அவருடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகச் சொன்
னார்கள். அதன்பின், எரேமியா ஜனங்கள் மத்தியில் வாழ்ந்துவந்தார்.

15 'காவலர் முற்றத்தில்'[r] எரேமியா அடைக்கப்பட்டிருந்தபோது
யெகோவா அவரிடம், **16** "நீ போய் எத்தியோப்பியனாகிய எபெத்மெ
லேக்கிடம்[s] இப்படிச் சொல்: 'இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைக
ளின் கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: "நான் சொன்னபடியே

39:3 * அல்லது, "நெர்கல்-சரேத்சேர், சம்கார்-நேபோ, சர்சேகிம், ரப்சாரிஸ்." **39:3, 13** # அதாவது, "தலைமை மந்திரவாதி (ஜோதிடர்)." **39:10** * அல்லது, "கட்டாய வேலை வாங்கினான்." **39:13** * வே.வா., "அரண்மனையின் முக்கிய அதிகாரி."

அதி. 39
a எரே 1:15
b உபா 28:25
c 2ரா 25:4-7; எரே 52:7-11
d எரே 32:4; எரே 38:18
e 2ரா 17:24
f 2ரா 23:31, 33
g எரே 21:7; எரே 34:18-20
h எசே 12:13
i ஏசா 5:9; எரே 38:18
j 2ரா 25:9-11; 2நா 36:17, 19; நெ 1:3; எரே 52:13-15
k 2ரா 25:20; எரே 40:1; எரே 52:12
l 2ரா 25:12; எரே 52:16
m எரே 40:2, 4
n எரே 38:28
o 2ரா 22:8
p 2நா 34:20, 21; எரே 26:24
q 2ரா 25:22; எரே 40:5; எரே 41:2
r எரே 32:2; எரே 37:21
s எரே 38:7

இந்த நகரத்துக்குச் செய்யப்போகிறேன். இதை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக அழிக்கப்போகிறேன். இது நிறைவேறுவதை நீ உன் கண்களால் பார்ப்பாய்."'

17 யெகோவா சொல்வது இதுதான்: 'அந்த நாளில் நான் உன்னைக் காப்பாற்றுவேன். நீ யாரைக் கண்டு பயப்படுகிறாயோ அவர்கள் கையில் உன்னைக் கொடுக்க மாட்டேன்.'

18 யெகோவா சொல்வது இதுதான்: 'நான் கண்டிப்பாக உன்னைப் பாதுகாப்பேன். நீ என்மேல் நம்பிக்கை வைத்ததால்[a] வாளுக்குப் பலியாக மாட்டாய். நான் உன் உயிரைக் காப்பாற்றுவேன்'"[b] என்று சொன்னார்.

40 காவலாளிகளின் தலைவனாகிய நேபுசராதான்[c] எரேமியாவை ராமாவிலிருந்து[d] விடுதலை செய்து அனுப்பிய பின்பு எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து ஒரு செய்தி கிடைத்தது. நேபுசராதான் எரேமியாவுக்குக் கைவிலங்குகள் மாட்டி அங்கே கொண்டுபோயிருந்தான். பாபிலோனுக்குக் கொண்டுபோகும்படி பிடித்து வைக்கப்பட்ட எருசலேம் ஜனங்களோடும் யூதா ஜனங்களோடும் எரேமியா இருந்தார்.
2 அப்போது, காவலாளிகளின் தலைவன் எரேமியாவைத் தனியாகக் கூப்பிட்டு, "இந்த நகரத்துக்கு வந்திருக்கிற அழிவைப் பற்றி உன் கடவுளாகிய யெகோவா முன்பே சொல்லியிருந்தார். **3** யெகோவா அதை அப்படியே நடத்திக் காட்டியிருக்கிறார். ஏனென்றால், நீங்கள் எல்லாரும் யெகோவாவுக்கு எதிராகப் பாவம் செய்தீர்கள், அவருடைய பேச்சைக் கேட்கவில்லை. அதனால்தான் உங்களுக்கு இந்தக் கதி வந்திருக்கிறது.[e] **4** இப்போது நான் உன்னுடைய கைவிலங்குகளைக் கழற்றி உன்னை விடுதலை செய்கிறேன். என்னோடு பாபிலோனுக்கு வர உனக்கு விருப்பம் இருந்தால் நீ வரலாம். உன்னை நான் கவனித்துக்கொள்கிறேன். உனக்கு அங்கே வர விருப்பம் இல்லையென்றால் வர வேண்டாம். இந்தத் தேசத்தில் எங்கு போக விரும்பினாலும் நீ போகலாம்"[f] என்று சொன்னான்.

5 எரேமியா போகாமல் தயங்கிக்கொண்டே இருந்தபோது காவலாளிகளின் தலைவனாகிய நேபுசராதான் அவரிடம், "நீ சாப்பானின்[g] மகனாகிய அகிக்காமின்[h] மகன் கெதலியாவிடம்[i] போய், அவரோடு இருக்கிற ஜனங்களுடன் தங்கு. ஏனென்றால், அவரை யூதாவின் நகரங்களுக்கு அதிகாரியாக பாபிலோன் ராஜா நியமித்திருக்கிறார். அங்கே போக விருப்பம் இல்லையென்றால் நீ வேறு எங்கு வேண்டுமானாலும் போகலாம்" என்று சொன்னான்.

பின்பு, அவருக்கு உணவும் அன்பளிப்பும் கொடுத்து அனுப்பி வைத்தான். **6** எரேமியா மிஸ்பாவிலிருந்த[j] அகிக்காமின் மகன் கெதலியாவிடம் போனார். அங்கே இருந்த ஜனங்களோடு தங்கினார்.

7 பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படாமல் தேசத்திலேயே விடப்பட்ட[k] பரம ஏழைகளான ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் அதிகாரியாக அகிக்காமின் மகன் கெதலியாவை பாபிலோன் ராஜா நியமித்திருந்த செய்தியைத் தேசத்திலிருந்த எல்லா படைத் தலைவர்களும் அவர்களோடு இருந்த ஆட்களும் கேள்விப்பட்டார்கள். **8** அவர்கள் எல்லாரும், அதாவது நெத்தனியாவின் மகன் இஸ்மவேல்,[l] கரேயாவின் மகன்களான யோகனான்[m] மற்றும் யோனத்தான், தன்கூமேத்தின் மகன் செராயா, நெத்தோபாத்தியனான ஏப்பாயின் மகன்கள், மாகாத்தியன் ஒருவனுடைய மகன் யெசனியா[n] ஆகியவர்களும் அவர்களுடைய ஆட்களும், மிஸ்பா

அதி. 39
a சங் 37:39, 40; எரே 17:7
b எரே 45:2, 5

அதி. 40
c எரே 39:9; எரே 52:12, 13
d யோசு 18:21, 25
e எரே 50:7
f எரே 39:11, 12
g 2ரா 22:8
h 2ரா 22:12, 13; எரே 26:24
i 2ரா 25:22; எரே 39:13, 14; எரே 41:2
j நியா 20:1; 1ரா 15:22
k 2ரா 25:22; எரே 39:10
l 2ரா 25:25
m எரே 41:11, 16; எரே 43:2
n எரே 42:1, 2

விலிருந்த[a] கெதலியாவிடம் வந்தார்கள். **9** சாப்பானின் மகனாகிய அகிக்
காமின் மகன் கெதலியா, அவர்களிடமும் அவர்களுடைய ஆட்களிடமும்
உறுதிமொழி கொடுத்து, “கல்தேயர்களுக்குச் சேவை செய்யப் பயப்படா
தீர்கள். இந்தத் தேசத்திலேயே இருந்து, பாபிலோன் ராஜாவுக்குச் சேவை
செய்யுங்கள். அப்போது எந்தக் கஷ்டமும் இல்லாமல் வாழ்வீர்கள்.[b]
10 நான் மிஸ்பாவிலேயே தங்கி, இங்கே வருகிற கல்தேயர்களிடம் உங்
கள் சார்பாகப் பேசுகிறேன். ஆனால், நீங்கள் போய் திராட்சமதுவையும்
கோடைக் காலத்துப் பழங்களையும் எண்ணெயையும் பாத்திரங்களில்
சேமித்து வைத்து, நீங்கள் சொந்தமாக்கிக்கொண்ட நகரங்களில் குடியிருங்
கள்”[c] என்றார்.

11 பாபிலோன் ராஜா யூதாவில் சில ஜனங்களை விட்டுவைத்திருக்கி
றார் என்றும், அவர்களுக்கு அதிகாரியாக சாப்பானின் மகனாகிய அகிக்கா
மின் மகன் கெதலியாவை நியமித்திருக்கிறார் என்றும் மோவாபிலும் அம்
மோனிலும் ஏதோமிலும் மற்ற இடங்களிலும் இருந்த எல்லா யூதர்களும்
கேள்விப்பட்டார்கள். **12** அதனால், தாங்கள் சிதறிப்போயிருந்த அந்த
எல்லா இடங்களிலிருந்தும் யூதாவுக்குத் திரும்பிவர ஆரம்பித்தார்கள்.
அவர்கள் மிஸ்பாவிலிருந்த கெதலியாவிடம் வந்து சேர்ந்தார்கள். பின்பு,
திராட்சமதுவையும் கோடைக் கால பழங்களையும் ஏராளமாகச் சேமித்து
வைத்தார்கள்.

13 கரேயாவின் மகன் யோகனானும் தேசமெங்கும் இருந்த படைத்
தலைவர்களும் மிஸ்பாவிலிருந்த கெதலியாவிடம் வந்து, **14** “அம்மோனி
யர்களின்[d] ராஜாவான பாலிஸ் உங்களைக் கொலை செய்வதற்காக
நெத்தனியாவின் மகன் இஸ்மவேலை அனுப்பியிருப்பது உங்களுக்குத்
தெரியாதா?”[e] என்று கேட்டார்கள். ஆனால், அவர்கள் சொன்னதை அகிக்
காமின் மகன் கெதலியா நம்பவில்லை.

15 அப்போது, கரேயாவின் மகன் யோகனான் மிஸ்பாவிலிருந்த கெத
லியாவிடம் ரகசியமாக வந்து, “நான் போய் நெத்தனியாவின் மகன் இஸ்ம
வேலை யாருக்கும் தெரியாமல் கொலை செய்துவிடுகிறேன். அவன்
கையில் நீங்கள் ஏன் சாக வேண்டும்? உங்களிடம் வந்திருக்கிற யூதா ஜனங்
கள் ஏன் சிதறிப்போக வேண்டும்? மிச்சமிருக்கிற யூதா மக்கள் ஏன் அழிந்து
போக வேண்டும்?” என்றார். **16** ஆனால், அகிக்காமின் மகன் கெதலியா[f]
கரேயாவின் மகன் யோகனானிடம், “வேண்டாம், அப்படிச் செய்யாதே! நீ
இஸ்மவேலைப் பற்றிப் பொய் சொல்கிறாய்” என்று சொன்னார்.

41 எலிஷாமாவின் பேரனும் நெத்தனியாவின் மகனுமான இஸ்ம
வேல்[g] ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன், ராஜாவின் முக்கிய அதிகா
ரிகளில் ஒருவன். ஏழாம் மாதத்தில் அவன் மிஸ்பாவில்[h] இருக்கிற அகிக்
காமின் மகனான கெதலியாவிடம் பத்து ஆட்களைக் கூட்டிக்கொண்டு
வந்தான். பின்பு, மிஸ்பாவில் அவர்கள் எல்லாரும் சாப்பிட்டுக்கொண்டி
ருந்தார்கள். **2** அப்போது, நெத்தனியாவின் மகன் இஸ்மவேலும் அவனு
டைய பத்து ஆட்களும் திடீரென்று எழுந்து, யூதாவின் அதிகாரியாக
பாபிலோன் ராஜா நியமித்திருந்த சாப்பானின் மகனான அகிக்காமின் மகன்
கெதலியாவை வாளால் வெட்டிப்போட்டார்கள். **3** கெதலியாவோடு மிஸ்
பாவில் இருந்த யூதர்களையும் அங்கிருந்த கல்தேய படைவீர்களையும்கூட
இஸ்மவேல் வெட்டிப்போட்டான்.

அதி. 40
a 2ரா 25:23
b 2ரா 25:24; எரே 27:11
c எரே 39:10
d எரே 41:10
e எரே 41:2
f 2ரா 25:22

அதி. 41
g 2ரா 25:23; எரே 40:14
h 2ரா 25:25

4 கெதலியா கொல்லப்பட்ட விஷயம் மற்றவர்களுக்குத் தெரியவருவ
தற்கு முன்பு, இரண்டாம் நாளில், **5** சீகேமிலிருந்தும்[a] சீலோவிலிருந்தும்[b]
சமாரியாவிலிருந்தும்[c] 80 ஆட்கள் யெகோவாவின் ஆலயத்துக்கு உணவுக்
காணிக்கைகளையும் சாம்பிராணியையும் எடுத்துக்கொண்டு வந்தார்கள்.[d]
அவர்கள் தங்களுடைய தாடியைச் சிரைத்திருந்தார்கள், உடையைக் கிழித்
திருந்தார்கள், உடலைக் கீறியிருந்தார்கள்.[e] **6** அவர்களைச் சந்திப்பதற்காக
நெத்தனியாவின் மகனான இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து அழுதுகொண்டே
போனான். அவர்களைப் பார்த்ததும், "அகிக்காமின் மகனான கெதலியாவி
டம் வாருங்கள்" என்று சொல்லி அவர்களைக் கூட்டிக்கொண்டு போனான்.
7 ஆனால், நகரத்துக்குள் வந்தவுடன் அவனும் அவனுடைய ஆட்களும்
அவர்களைக் கொன்று கிணற்றில் வீசினார்கள்.

8 அவர்களில் பத்துப் பேரை மட்டும் கொல்லாமல் விட்டுவிட்டார்கள்.
ஏனென்றால் அவர்கள் இஸ்மவேலிடம், "எங்களைக் கொன்றுவிடாதீர்கள்.
நாங்கள் கோதுமையையும் பார்லியையும் எண்ணெயையும் தேனையும்
நிலத்தடியில் ஏராளமாக வைத்திருக்கிறோம்" என்றார்கள். **9** கொல்லப்
பட்டவர்களின் உடல்களையெல்லாம் இஸ்மவேல் ஒரு பெரிய கிணற்றில்
குவித்தான். அது இஸ்ரவேலின் ராஜாவான பாஷாவிடமிருந்து[f] தப்பிப்ப
தற்காக ஆசா ராஜா வெட்டிய கிணறு.

10 மிஸ்பாவில்[g] மீதியாக இருந்த ஜனங்களையெல்லாம் இஸ்மவேல்
சிறைபிடித்துக்கொண்டு போனான். காவலாளிகளின் தலைவனான நேபுச
ராதான், அகிக்காமின் மகனான கெதலியாவின்[h] பொறுப்பில் விட்டிருந்த
ராஜாவின் மகள்களையும் மற்ற ஜனங்களையும் சிறைபிடித்துக்கொண்டு
அம்மோனியர்களின்[i] தேசத்துக்குப் புறப்பட்டான்.

11 நெத்தனியாவின் மகனான இஸ்மவேல் செய்த கொடுமையை கரே
யாவின் மகனான யோகனானும்[j] அவரோடு இருந்த படைத் தலைவர்
கள் எல்லாரும் கேள்விப்பட்டபோது, **12** எல்லா ஆட்களையும் கூட்
டிக்கொண்டு நெத்தனியாவின் மகனான இஸ்மவேலோடு போர் செய்யக்
கிளம்பினார்கள். கிபியோனில் உள்ள பெரிய நீர்தேக்கத்துக்கு* பக்கத்தில்
அவர்கள் அவனைக் கண்டுபிடித்தார்கள்.

13 இஸ்மவேலின் பிடியில் இருந்த எல்லாரும், கரேயாவின்
மகனான யோகனானையும் அவரோடு இருந்த படைத் தலைவர்களை
யும் பார்த்தபோது ரொம்பவே சந்தோஷப்பட்டார்கள். **14** உடனே, அவர்
கள் கரேயாவின் மகனான யோகனானிடம் போய்ச் சேர்ந்துகொண்டார்கள்.
15 ஆனால், நெத்தனியாவின் மகனான இஸ்மவேலும் அவனுடைய ஆட்
களில் எட்டுப் பேரும் யோகனானிடமிருந்து தப்பித்து அம்மோனியர்களின்
தேசத்துக்கு ஓடினார்கள்.

16 இஸ்மவேல் கெதலியாவைக்[k] கொன்றபின் மிஸ்பாவிலிருந்து[l] சிறை
பிடித்துக்கொண்டு போயிருந்த ஜனங்களை யோகனானும் அவரோடு
இருந்த எல்லா படைத் தலைவர்களும் கிபியோனிலிருந்து திரும்பக் கூட்
டிக்கொண்டு வந்தார்கள். ஆண்களையும் போர்வீரர்களையும் பெண்களை
யும் பிள்ளைகளையும் அரண்மனை அதிகாரிகளையும் கூட்டிக்கொண்டு
வந்தார்கள். **17** அவர்கள் எகிப்துக்குப் போக முடிவு செய்து,[m] பெத்லகே
முக்குப்[n] பக்கத்திலே கிம்காம் என்ற இடத்திலிருந்த ஒரு சத்திரத்தில் தங்கி

41:12 * அல்லது, "பெரிய குளத்துக்கு"

அதி. 41
a 1ரா 12:1
b யோசு 18:1
c 1ரா 16:23, 24
d லேவி 2:1
e லேவி 19:27, 28; உபா 14:1
f 1ரா 15:22; 2நா 16:6
g எரே 40:12
h எரே 40:7
i எரே 40:14
j எரே 40:13; எரே 43:2
k எரே 41:2
l எரே 40:6
m 2ரா 25:26; எரே 42:14; எரே 43:7
n ஆதி 35:19

னார்கள். ஏனென்றால், அவர்கள் கல்தேயர்களை நினைத்துப் பயந்தார்கள்.
18 பாபிலோன் ராஜா அதிகாரியாக நியமித்திருந்த அகிக்காமின் மகன்
கெதலியாவை நெத்தனியாவின் மகன் இஸ்மவேல் கொலை செய்திருந்த
தால்தான்[a] அப்படி கல்தேயர்களை நினைத்துப் பயந்தார்கள்.

42 பின்பு எல்லா படைத் தலைவர்களும், கரேயாவின் மகன் யோக
னானும்,[b] ஓசாயாவின் மகன் யெசனியாவும், சிறியோர்முதல் பெரி
யோர்வரை எல்லா ஜனங்களும் எரேமியா தீர்க்கதரிசியிடம் வந்து,
2 "தயவுசெய்து எங்களுக்கு ஒரு உதவி செய்யுங்கள். நாங்கள் கொஞ்
சம் பேர்தான் மிச்சமிருக்கிறோம்,[c] அதை நீங்களே பார்க்கிறீர்கள். அதனால்,
உங்கள் கடவுளாகிய யெகோவாவிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்
கள். **3** நாங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் என்ன செய்ய
வேண்டுமென்றும் உங்கள் கடவுளாகிய யெகோவா எங்களுக்குச் சொல்லட்
டும்" என்றார்கள்.

4 அதற்கு எரேமியா தீர்க்கதரிசி, "சரி, நீங்கள் கேட்டுக்கொண்டப
டியே உங்கள் கடவுளாகிய யெகோவாவிடம் நான் வேண்டிக்கொள்கி
றேன். யெகோவா உங்களிடம் சொல்லச் சொல்கிற எல்லாவற்றையும் ஒரு
வார்த்தை விடாமல் சொல்கிறேன்" என்றார்.

5 அப்போது அவர்கள் எரேமியாவிடம், "உங்கள் கடவுளாகிய
யெகோவா உங்கள் மூலமாகச் சொல்வதை நாங்கள் அப்படியே செய்யா
விட்டால் அவர் எங்களைத் தண்டிக்கட்டும். இதற்கு யெகோவாவே உண்
மையான சாட்சி, அவரே நம்பகமான சாட்சி. **6** எங்கள் கடவுளாகிய
யெகோவாவிடம் வேண்டிக்கொள்ளும்படி நாங்கள் உங்களைக் கேட்டுக்
கொண்டோம். அதனால், எங்களுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, எங்கள்
கடவுளாகிய யெகோவா சொல்கிறபடியே செய்வோம். அவருடைய பேச்
சுக்குக் கீழ்ப்படிந்தால்தான் எங்களால் சந்தோஷமாக வாழ முடியும்" என்று
சொன்னார்கள்.

7 பத்து நாட்கள் கழித்து எரேமியாவுக்கு யெகோவாவிடமிருந்து செய்தி
கிடைத்தது. **8** அதனால் அவர் கரேயாவின் மகன் யோகனானையும்,
அவரோடு இருந்த படைத் தலைவர்களையும், சிறியோர்முதல் பெரியோர்
வரை எல்லா ஜனங்களையும் வரச் சொன்னார்.[d] **9** அவர்களிடம், "உங்க
ளுக்காக இஸ்ரவேலின் கடவுளான யெகோவாவிடம் வேண்டிக்கொள்ளும்
படி என்னிடம் கேட்டுக்கொண்டீர்களே. அவர் சொல்வது இதுதான்:
10 'நீங்கள் இந்தத் தேசத்திலேயே இருந்தால் நான் உங்களைக் கட்டி
எழுப்புவேன், கவிழ்க்க மாட்டேன். உங்களை நட்டு வளர்ப்பேன், பிடுங்கி
யெறிய மாட்டேன். உங்களுக்குக் கொடுத்த தண்டனையை நினைத்து வருத்
தப்படுவேன்.[e] **11** நீங்கள் பாபிலோன் ராஜாவை நினைத்து இனி பயப்ப
டாதீர்கள்.'[f]

யெகோவா சொல்வது இதுதான்: 'அவனைப் பார்த்து நடுங்காதீர்கள்.
ஏனென்றால், அவனுடைய கையிலிருந்து உங்களை விடுவிப்பதற்கும்
உங்களைக் காப்பாற்றுவதற்கும் நான் உங்களோடு இருக்கிறேன். **12** நான்
உங்களுக்கு இரக்கம் காட்டுவேன்,[g] அவனும் உங்களுக்கு இரக்கம் காட்டி
உங்கள் தேசத்துக்கே உங்களை அனுப்பி வைப்பான்.

13 ஆனால், நம் கடவுளாகிய யெகோவாவின் பேச்சைக் கேட்காமல்,
"நாங்கள் இந்தத் தேசத்தில் இருக்க மாட்டோம்!" என்றும், **14** "எகிப்து

அதி. 41
a எரே 41:2

அதி. 42
b எரே 40:13, 14
c உபா 28:62
d எரே 41:16
e உபா 32:36; எரே 18:7, 8; மீ 7:18
f எரே 41:17, 18
g யாத் 34:6

தேசத்துக்குப் போய்விடுவோம்.[a] அங்குதான் போர் இருக்காது, ஊது
கொம்பின் சத்தம் கேட்காது, பசி பட்டினி இருக்காது. அதனால் அங்குதான்
வாழ்வோம்” என்றும் சொன்னால், **15** யூதாவில் மிஞ்சியிருக்கிறவர்களே,
யெகோவா சொல்வதைக் கேளுங்கள். இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப்
படைகளின் கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: “எகிப்துக்குப்
போயே தீர வேண்டும் என்று நீங்கள் சொல்லிக்கொண்டு, அங்கே போய்*
வாழ்ந்தால், **16** இப்போது எதற்குப் பயப்படுகிறீர்களோ அதே வாளும்
பஞ்சமும் எகிப்து தேசத்துக்கே வந்து உங்களைத் தாக்கும். நீங்கள் அங்
கேயே செத்துப்போவீர்கள்.[b] **17** எகிப்துக்குப் போயே தீர வேண்டும்
என்று விடாப்பிடியாக இருக்கிற எல்லாரும் வாளுக்கும் பஞ்சத்துக்கும்
கொள்ளைநோய்க்கும் பலியாவார்கள். நான் கொடுக்கப்போகிற தண்டனை
யிலிருந்து ஒருவர்கூட தப்பிக்க முடியாது.” ’

18 இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்வது இதுதான்: ‘நீங்கள் எகிப்துக்குப் போனால், எருச
லேம் ஜனங்கள்மேல் நான் பயங்கர கோபத்தைக் காட்டியது போலவே
உங்கள் மேலும் காட்டுவேன்.[c] உங்களுக்கு வரும் கோர முடிவைப் பார்த்து
எல்லாரும் கதிகலங்கிப்போவார்கள். அவர்கள் உங்களைப் பழித்தும் சபித்
தும் பேசுவார்கள்.[d] நீங்கள் மறுபடியும் இந்தத் தேசத்தைப் பார்க்கவே மாட்
டீர்கள்.’

19 யூதாவில் மிஞ்சியிருக்கிறவர்களே, நீங்கள் எகிப்துக்குப் போகக் கூடா
தென்று யெகோவா சொல்லியிருக்கிறார். இன்று நான் கொடுக்கும் எச்ச
ரிப்பை நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள்: **20** நீங்கள் கடவுளுடைய
பேச்சை மீறினால் உயிரையே இழந்துவிடுவீர்கள். நீங்கள் என்னிடம், ‘எங்
கள் கடவுளான யெகோவாவிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
எங்கள் கடவுளான யெகோவா சொல்வதையெல்லாம் சொல்லுங்கள். நாங்
கள் அப்படியே செய்கிறோம்’[e] என்றெல்லாம் சொல்லி, உங்கள் கடவுளான
யெகோவாவிடம் என்னை விசாரிக்கச் சொன்னீர்களே. **21** அவர் சொன்ன
தைத்தான் நான் இன்று உங்களிடம் சொன்னேன். ஆனால் நம் கடவு
ளான யெகோவாவுக்கு நீங்கள் கீழ்ப்படிய மாட்டீர்கள். அவர் என் மூலமா
கச் சொன்ன எதையுமே செய்ய மாட்டீர்கள்.[f] **22** அதனால், எங்கே போய்
வாழ நினைக்கிறீர்களோ அங்கேயே வாளுக்கும் பஞ்சத்துக்கும் கொள்ளை
நோய்க்கும் நீங்கள் பலியாகப்போவது உறுதி”[g] என்று சொன்னார்.

43 யெகோவா சொல்லச் சொன்ன எல்லாவற்றையும் எரேமியா ஒன்
றுவிடாமல் ஜனங்களிடம் சொன்னார். அவர்களுடைய கடவுளான
யெகோவா சொன்ன எல்லா விஷயங்களையும் அவர் சொல்லி முடித்த
பின்பு, **2** ஓசாயாவின் மகன் அசரியாவும், கரேயாவின் மகன் யோக
னானும்,[h] அகங்காரம்பிடித்த* மற்ற எல்லாரும் எரேமியாவிடம் வந்து, “நீ
பொய் சொல்கிறாய்! எகிப்துக்குப் போக வேண்டாம் என்று எங்கள் கட
வுளான யெகோவா சொல்லியிருக்கவே மாட்டார். **3** நேரியாவின் மகன்
பாருக்[i] சொல்லித்தான் நீ இப்படிப் பேசுகிறாய்! அவனுடைய ஆசையே,
நாங்கள் கல்தேயர்களிடம் சிக்க வேண்டும், அவர்கள் எங்களை பாபிலோ

42:15 * வே.வா., “கொஞ்சக் காலத்துக்கு அங்கே போய்.” **43:2** * இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது.

அதி. 42
a எரே 43:4, 7
b உபா 28:45; எரே 44:12-14; எரே 44:27, 28
c 2ரா 25:8-10; 2நா 34:24, 25; 2நா 36:16, 17; புல 2:4
d எரே 29:18
e எரே 42:1, 2
f 2நா 24:19; நெ 9:26; சக 7:11
g எரே 43:10, 11

அதி. 43
h எரே 41:16; எரே 42:1-3
i எரே 36:4; எரே 45:1

னுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போக வேண்டும், அல்லது இங்கேயே சாக
டிக்க வேண்டும் என்பதுதான்”[a] என்று சொன்னார்கள்.

4 அதனால், கரேயாவின் மகன் யோகனானும் படைத் தலைவர்க
ளும் ஜனங்களும் யெகோவா சொன்னபடி யூதா தேசத்தில் தங்கவில்லை.
5 அதற்குப் பதிலாக, கரேயாவின் மகன் யோகனானும் படைத் தலைவர்
களும், சிதறிப்போயிருந்த தேசங்களிலிருந்து யூதாவுக்குத் திரும்பி வந்து
வாழ்ந்துகொண்டிருந்த ஜனங்களைக் கூட்டிக்கொண்டு போனார்கள்.[b]
6 சாப்பானின்[c] மகனாகிய கெதலியாவிடம்[d] காவலாளிகளின் தலைவ
னான நேபுசராதான்[e] விட்டுச்சென்ற ஆண்களையும், பெண்களையும், பிள்
ளைகளையும், ராஜாவின் மகள்களையும், அவர்களோடுகூட தீர்க்கதரிசியா
கிய எரேமியாவையும், நேரியாவின் மகன் பாருக்கையும் கூட்டிக்கொண்டு
போனார்கள். 7 அவர்கள் யெகோவாவின் பேச்சைக் கேட்காமல் எகிப்து
தேசத்திலிருந்த தக்பானேஸ்[f] நகரத்துக்குப் போனார்கள்.

8 தக்பானேஸ் நகரத்தில் யெகோவா எரேமியாவிடம், 9 “யூத ஆண்க
ளின் கண்களுக்கு முன்பாக நீ பெரிய கற்களை எடுத்து, தக்பானேசில்
பார்வோனின் அரண்மனை வாசலிலே அடுக்கி வைக்கப்பட்டிருக்கிற செங்
கற்களுக்குள் அவற்றை மறைத்து வைத்துக் காரை பூசிவிடு. 10 பின்பு
அவர்களிடம் இப்படிச் சொல்: ‘இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைக
ளின் கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: “என் ஊழியனும் பாபி
லோனின் ராஜாவுமான நேபுகாத்நேச்சாரை நான் வர வைப்பேன்.[g] நான்
மறைத்து வைத்திருக்கிற இந்தக் கற்களுக்கு மேல் அவனுடைய சிம்மா
சனத்தை நிறுத்துவேன். அவன் தன்னுடைய ராஜ கூடாரத்தை அவற்றின்
மேல் விரிப்பான்.[h] 11 அவன் வந்து எகிப்து தேசத்தைத் தாக்குவான்.[i]
உங்களில் சிலர் கொள்ளைநோயினால் சாவீர்கள். சிலர் சிறைபிடிக்கப்பட்
டுப் போவீர்கள். சிலர் வாளால் வெட்டிக் கொல்லப்படுவீர்கள்.[j] 12 எகிப்
தில் இருக்கிற கோயில்களுக்கு நான் தீ வைப்பேன்.[k] அவன் அவற்றை
எரித்து, அங்கிருக்கிற சிலைகளைக் கைப்பற்றிக்கொண்டு போய்விடு
வான். ஒரு மேய்ப்பன் எப்படிச் சர்வ சாதாரணமாகத் தன் சால்வையைப்
போர்த்திக்கொண்டு போவானோ அப்படியே அவன் சர்வ சாதாரணமாக
எகிப்து தேசத்தைப் போர்த்திக்கொண்டு, பத்திரமாக* கிளம்பிப் போவான்.
13 எகிப்தில் இருக்கிற பெத்-ஷிமேஸ்* தூண்களை உடைத்துப்போடு
வான். அங்கிருக்கிற கோயில்களைத் தீ வைத்துக் கொளுத்துவான்”’” என்று
சொன்னார்.

44 எகிப்து[l] தேசத்தைச் சேர்ந்த மிக்தோலிலும்,[m] தக்பானேசிலும்,[n]
நோப்பிலும்,*[o] பத்ரோசிலும்[p] வாழ்ந்துகொண்டிருந்த எல்லா யூதர்
களிடமும் அறிவிக்கச் சொல்லி எரேமியாவுக்கு ஒரு செய்தி கிடைத்தது;
அவர் அவர்களிடம், 2 “இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின்
கடவுளுமான யெகோவா சொல்வது இதுதான்: ‘எருசலேமையும் யூதாவின்
நகரங்களையும் நான் எப்படி அழித்திருக்கிறேன் என்று நீங்களே பார்த்தி
ருக்கிறீர்கள்.[q] இன்று அவை பாழாய்க் கிடக்கின்றன. அங்கே
மனுஷ நடமாட்டமே இல்லை.[r] 3 ஏனென்றால், உங்களுக்கோ உங்கள்

43:12 * நே.மொ., “சமாதானத்தோடு.” **43:13** * வே.வா., “சூரியனின் கோயில்.” அதாவது, ஹெலியோபாலிஸ். **44:1** * வே.வா., “மோப்பிலும்.”

அதி. 43
a எரே 38:4, 6
b எரே 40:11, 12
c 2ரா 22:8; 2நா 34:20, 21; எரே 26:24
d 2ரா 25:22
e எரே 39:10
f எரே 2:14, 16; எரே 44:1; எசே 30:4, 18
g எரே 25:9; எரே 27:6; எசே 29:19, 20
h தானி 2:21; தானி 5:18
i எரே 25:17, 19; எரே 46:13; எசே 29:19; எசே 30:4, 18
j எரே 44:13; எசே 5:12
k எரே 46:25

அதி. 44
l எரே 43:4, 7
m எசே 29:10; எசே 30:6
n எசே 30:18
o எரே 46:14; எசே 30:16
p எசே 29:14; எசே 30:14
q 2ரா 25:9, 10; எரே 39:8
r புல 1:1

முன்னோர்களுக்கோ தெரியாத தெய்வங்களைத் தேடிப்போய்,[a] அவற்
றைக் கும்பிட்டு, அவற்றுக்குப் பலிகள் செலுத்தி, என் கோபத்தைக் கிளறி
னீர்கள்.[b] **4** நான் என்னுடைய ஊழியர்களான தீர்க்கதரிசிகள் எல்லாரை
யும் திரும்பத் திரும்ப உங்களிடம் அனுப்பி, “நான் வெறுக்கிற இந்த
அருவருப்பான காரியத்தைத் தயவுசெய்து செய்யாதீர்கள்”[c] என்று சொன்
னேன். **5** ஆனால், நீங்கள் காதில் வாங்கவே இல்லை. மற்ற தெய்வங்க
ளுக்குப் பலி செலுத்துவதை நிறுத்தவில்லை. அந்தப் பாவத்தைவிட்டு
விலகவில்லை.[d] **6** அதனால், நான் கோபத்தோடும் ஆக்ரோஷத்தோடும்
யூதாவின் நகரங்களையும் எருசலேமின் வீதிகளையும் கொளுத்தினேன்.
இன்று அவை பாழாய்க் கிடக்கின்றன.’[e]

7 இப்போது, பரலோகப் படைகளின் கடவுளும் இஸ்ரவேலின் கடவுளு
மான யெகோவா சொல்வது இதுதான்: ‘ஏன் உங்களுக்கே பேரழிவைத்
தேடிக்கொள்கிறீர்கள்? ஒருவர்விடாமல் எல்லா ஆண்களும் பெண்களும்
பிள்ளைகளும் கைக்குழந்தைகளும் யூதாவிலிருந்து ஒட்டுமொத்தமாக
அழிந்துபோக வேண்டுமா? **8** நீங்கள் குடியிருக்கிற எகிப்து தேசத்தின்
தெய்வங்களுக்கு உங்கள் கைகளால் பலிகள் செலுத்தி ஏன் என்னுடைய
கோபத்தைக் கிளறுகிறீர்கள்? நீங்கள் அழிந்துபோவீர்கள். உலகமே உங்க
ளைப் பழித்தும் சபித்தும் பேசும்.[f] **9** யூதா தேசத்திலும் எருசலேமின் வீதி
களிலும் உங்களுடைய முன்னோர்களும் யூதாவின் ராஜாக்களும்[g] அவர்
களுடைய மனைவிகளும் செய்த அக்கிரமங்களையும்,[h] நீங்களும்
உங்களுடைய மனைவிகளும் செய்த அக்கிரமங்களையும்[i] மறந்துவிட்டீர்
களா? **10** இன்றுவரை நீங்கள் மனம் வருந்தவில்லை. எனக்குப் பயப்பட
வில்லை.[j] உங்களுக்கும் உங்கள் முன்னோர்களுக்கும் நான் கொடுத்த சட்ட
திட்டங்களுக்குக் கீழ்ப்படியவில்லை.’[k]

11 அதனால், இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளு
மான யெகோவா சொல்வது இதுதான்: ‘யூதாவை ஒட்டுமொத்தமாக
அழிக்க நான் முடிவு செய்துவிட்டேன். **12** விடாப்பிடியாக எகிப்துக்குப்
போய் வாழ்ந்துகொண்டிருக்கிற யூதா ஜனங்கள் என் கையில் சிக்குவார்
கள். எகிப்து தேசத்தில் அவர்கள் எல்லாரும் அழிந்துபோவார்கள்.
வாளுக்கும் பஞ்சத்துக்கும் பலியாவார்கள். சிறியோர்முதல் பெரியோர்
வரை எல்லாரும் வாளினாலும் பஞ்சத்தினாலும் சாவார்கள்.[l] அவர்களுக்
குக் கோரமான முடிவு வரும். அதைப் பார்த்து எல்லாரும் பழித்தும் சபித்
தும் பேசுவார்கள்.[m] **13** எருசலேமில் இருந்தவர்களை நான் வாளினாலும்
பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும்[n] தண்டித்தது போலவே எகிப்
தில் வாழ்கிறவர்களையும் தண்டிப்பேன். **14** எகிப்துக்குப் போய் வாழ்ந்து
கொண்டிருக்கிற யூதா ஜனங்கள் தப்பிக்க மாட்டார்கள். யூதா தேசத்துக்குத்
திரும்பி வரவே மாட்டார்கள். திரும்பி வந்து வாழ ஏங்குவார்கள். ஆனால்,
ஒருசிலரைத் தவிர வேறு யாரும் திரும்பி வர மாட்டார்கள்’” என்று
சொன்னார்.

15 அப்போது, பெரிய கூட்டமாகக் கூடியிருந்த மனைவிகளும்,
பொய் தெய்வங்களுக்கு அவர்கள் பலி செலுத்தி வந்ததை அறிந்தி
ருந்த அவர்களுடைய கணவர்களும், எகிப்திலுள்ள[o] பத்ரோசில்[p] வாழ்ந்து
வந்த எல்லா ஜனங்களும் எரேமியாவைப் பார்த்து, **16** “யெகோவாவின்
பெயரில் நீங்கள் சொன்னதையெல்லாம் நாங்கள் கேட்க மாட்டோம்.

அதி. 44
a உபா 13:6-9
உபா 32:17
எரே 19:4
b எரே 11:17
c 2நா 36:15, 16
ஏசா 65:2
எரே 7:24-26
எரே 35:15
d எரே 19:13
e ஏசா 6:11
எரே 39:8
f 1ரா 9:7
எரே 24:9
எரே 42:18
g 2ரா 21:19, 20
2ரா 24:8, 9
h 1ரா 11:1-3
i எரே 44:19
j எரே 36:
22-24
k உபா 6:1, 2
l எசே 30:13
m எரே 42:17, 18
n எரே 21:9
எரே 42:22
எரே 43:11
o எரே 43:4, 7
p எரே 44:1

அதி. 44
a எரே 7:18
b எரே 11:13; எசே 16: 24, 25
c 1ரா 9:8, 9; புல 2:15; எசே 33:29
d 2நா 36:15, 16; தானி 9:11
e எரே 7:18; எரே 44:15, 17
f எசே 20:39

17 நாங்கள் நேர்ந்துகொண்டபடி விண்ணரசிக்கு*[a] திராட்சமது காணிக்கை
யையும் மற்ற காணிக்கைகளையும் செலுத்தியே தீருவோம். நாங்களும் எங்
கள் முன்னோர்களும், ராஜாக்களும், அதிகாரிகளும் யூதாவின் நகரங்களி
லும் எருசலேமின் வீதிகளிலும் அதைத்தான் செய்துவந்தோம். அப்போது,
வயிறார சாப்பிட்டு வசதியாக வாழ்ந்தோம். கெட்டது எதுவும் எங்களுக்கு
நடக்கவில்லை. **18** விண்ணரசிக்கு* திராட்சமது காணிக்கையையும் மற்ற
காணிக்கைகளையும் செலுத்துவதை எப்போது நிறுத்தினோமோ அப்போ
திலிருந்தே எங்களுக்கு எல்லா கஷ்டமும் வர ஆரம்பித்துவிட்டது. நாங்
கள் வாளுக்கும் பஞ்சத்துக்கும் பலியானோம்" என்று சொன்னார்கள்.

19 பின்பு அந்தப் பெண்கள், "நாங்கள் என்ன எங்களுடைய கண
வரிடம் கேட்காமலா விண்ணரசிக்கு திராட்சமது காணிக்கையையும் மற்ற
காணிக்கைகளையும் செலுத்தினோம்? எங்கள் கணவருடைய சம்மதத்
தோடுதானே விண்ணரசியின் உருவத்தில் அப்பங்கள் செய்து அவளுக்குப்
படைத்தோம்?" என்று கேட்டார்கள்.

20 அப்போது, எரேமியா தன்னோடு பேசிக்கொண்டிருந்த அந்தக்
கணவர்களிடமும் மனைவிகளிடமும் மற்ற ஜனங்களிடமும் இப்படிச்
சொன்னார்: **21** "நீங்களும், உங்கள் முன்னோர்களும், ராஜாக்களும், அதி
காரிகளும், மற்ற ஜனங்களும் யூதாவின் நகரங்களிலும் எருசலேமின் வீதி
களிலும் பலிகள் செலுத்தியதை[b] யெகோவா மறக்கவில்லை, அவர் அதை
நினைத்துப் பார்த்தார். **22** நீங்கள் செய்த அக்கிரமங்களையும் அருவருப்
புகளையும் பொறுத்துக்கொள்ள முடியாமல் கடைசியில் யெகோவா உங்
கள் தேசத்தைப் பாழாக்கினார். அதற்குக் கோரமான முடிவு வந்தது. அங்கு
மனுஷ நடமாட்டம் இல்லாமல் போனதைப் பார்த்த எல்லாரும் பழித்துப்
பேசினார்கள். இன்று உங்கள் நிலைமை இப்படித்தான் இருக்கிறது.[c]
23 நீங்கள் யெகோவாவின் பேச்சைக் கேட்காமலும் அவருடைய சட்டதிட்
டங்களுக்குக் கீழ்ப்படியாமலும் அவருடைய எச்சரிப்புகளை* காதில் வாங்
காமலும் யெகோவாவுக்கு விரோதமாகப் பாவம் செய்தீர்கள், பொய் தெய்
வத்துக்குப் பலிகள் செலுத்தினீர்கள். அதனால்தான், இன்று உங்களுக்கு
இந்தக் கதி"[d] என்று சொன்னார்.

24 பின்பு எரேமியா அந்த எல்லா ஜனங்களிடமும் பெண்களிடமும்,
"எகிப்தில் வாழ்கிற யூதா ஜனங்களே, யெகோவாவின் செய்தியைக் கேளுங்
கள். **25** இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்வது இதுதான்: 'நீங்களும் உங்கள் மனைவிகளும்
கொடுத்த வாக்கைக் காப்பாற்றிவிட்டீர்கள். "நாங்கள் நேர்ந்துகொண்டபடி
விண்ணரசிக்குத் திராட்சமது காணிக்கையையும் மற்ற காணிக்கைகளையும்
செலுத்தியே தீருவோம்"[e] என்று சொன்னீர்கள். பெண்களே, உங்களுடைய
நேர்த்திக்கடனைக் கண்டிப்பாகச் செலுத்தத்தான் போகிறீர்கள்!'

26 எகிப்து தேசத்தில் வாழ்கிற யூதா ஜனங்களே, யெகோவாவின் செய்
தியைக் கேளுங்கள்: 'யெகோவா சொல்வது இதுதான்: "என்னுடைய மகத்
தான பெயரின் மேல் சத்தியமாகச் சொல்கிறேன்! எகிப்து தேசத்தில் இருக்
கிற யூதா ஜனங்கள்[f] யாருமே இனி, 'உன்னதப் பேரரசராகிய உயிருள்ள

44:17, 18 *விசுவாசதுரோக இஸ்ரவேலர்கள் வணங்கிய ஒரு பெண் தெய்வத்தின் பட்டப்பெயர்; ஒருவேளை கருவள தெய்வமாக இருந்திருக்கலாம். **44:23** *வே.வா., "நினைப்பூட்டுதல்களை."

கடவுளான யெகோவாமேல் ஆணை!'*[a] என்று சொல்லி சத்தியம் செய்ய
மாட்டார்கள். **27** அவர்களுக்கு நான் நல்லது செய்யப்போவதில்லை.
அவர்களை எப்போது தண்டிக்கலாம் என்றுதான் பார்த்துக்கொண்டிருக்கி
றேன்.[b] எகிப்து தேசத்திலிருக்கிற யூதா ஜனங்கள் எல்லாரும் வாளுக்
கும் பஞ்சத்துக்கும் பலியாகி, அடியோடு அழிந்துபோவார்கள்.[c] **28** ஒரு
சிலர் மட்டும்தான் வாளுக்குத் தப்பி யூதா தேசத்துக்குத் திரும்பி வருவார்
கள். எகிப்து தேசத்தில் குடியிருக்கப் போன யூதா ஜனங்கள்[d] எல்லாரும்,
நான் சொன்னது உண்மையா அவர்கள் சொன்னது உண்மையா என்று அப்
போது தெரிந்துகொள்வார்கள்!"'" என்று சொன்னார்.

29 "யெகோவா சொல்வது இதுதான்: 'இந்த இடத்தில் நான் உங்க
ளைத் தண்டிக்கப்போவதற்கு அடையாளமாக ஒன்றைச் செய்யப்போகி
றேன். அதைப் பார்க்கும்போது, உங்களை அழிக்கப்போவதாக நான்
சொன்ன வார்த்தைகள் கண்டிப்பாக நிறைவேறும் என்று தெரிந்துகொள்வீர்
கள். **30** யெகோவா சொல்வது இதுதான்: "யூதாவின் ராஜாவான சிதேக்கி
யாவைக் கொலைவெறிபிடித்த அவனுடைய எதிரியான பாபிலோன் ராஜா
நேபுகாத்நேச்சாரின் கையில் நான் கொடுத்தது போலவே, எகிப்தின்
ராஜாவான பார்வோன் ஒப்பிராவையும் கொலைவெறிபிடித்த எதிரிகளின்
கையில் கொடுத்துவிடுவேன்."'"[e]

45 யூதாவை யோசியாவின் மகனான யோயாக்கீம் ஆட்சி
செய்த நான்காவது வருஷத்தில்,[f] எரேமியா தீர்க்கதரிசி சொல்லச்
சொல்ல[g] நேரியாவின் மகனான பாருக்[h] ஒரு புத்தகத்தில் எல்லாவற்றை
யும் எழுதினார். அப்போது பாருக்கிடம் எரேமியா,

2 "பாருக்கே, இஸ்ரவேலின் கடவுளான யெகோவா உனக்குச் சொல்வது
இதுதான்: **3** 'நீ புலம்பிக்கொண்டே, "ஐயோ, யெகோவா எனக்கு வேத
னைக்குமேல் வேதனை கொடுத்துவிட்டார். குமுறிக் குமுறியே நான் களைத்
துப்போய்விட்டேன். எனக்கு நிம்மதியே இல்லை" என்று சொன்னாய்.'

4 அதனால், கடவுள் உனக்குச் சொல்லும் செய்தி இதுதான்: 'யெகோவா
சொல்வது என்னவென்றால், "இதோ, இந்த முழு தேசத்திலும் நான் கட்டி
யதை இடிக்கப்போகிறேன், நான் நட்டு வைத்ததைப் பிடுங்கி எறியப்போ
கிறேன்.[i] **5** நீயோ உனக்காகப் பெரிய காரியங்களைத் தேடிக்கொண்டிருக்
கிறாய்.* அவற்றைத் தேடுவதை நிறுத்து!"'

'ஏனென்றால், நான் எல்லா உயிர்களையும் அழிக்கப்போகிறேன்.[j]
ஆனால், நீ எங்கே போனாலும் நான் உன்னுடைய உயிரைக் காப்பாற்று
வேன்'[k] என்று யெகோவா சொல்கிறார்" என்றார்.

46 தேசங்களுக்கு[l] நடக்கப்போவதைப் பற்றி எரேமியா தீர்க்கதரி
சியிடம் யெகோவா சொன்ன செய்தி இது. **2** யோசியாவின் மக
னான யோயாக்கீம் யூதாவை ஆட்சி செய்த நான்காம் வருஷத்தில்,[m] யூப்
ரடிஸ்* ஆற்றங்கரையில் இருந்த கர்கேமிசில் பாபிலோன் ராஜாவான
நேபுகாத்நேச்சாரிடம் எகிப்தின் ராஜாவான பார்வோன் நேகோ[n] தோற்றுப்
போனான். அவனுடைய படையைப் பற்றியும் அவனுடைய தேசமான
எகிப்தைப்[o] பற்றியும் கடவுள் சொன்னது இதுதான்:

44:26 *வே.வா., "யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்." **45:5** *வே.வா., "எதிர்பார்க்கிறாய்." **46:2** *அதாவது, "ஐப்பிராத்து."

அதி. 44
a ஏசா 48:1, 2; எரே 5:2
b எரே 1:10
c எரே 44:12
d லேவி 26:44; ஏசா 27:13; எரே 44:14
e 2ரா 25:7; எரே 34:21; எரே 39:5

அதி. 45
f எரே 25:1; எரே 36:1
g எரே 36:4, 32
h எரே 32:12; எரே 43:3
i ஏசா 5:5; எரே 1:1, 10
j ஏசா 66:16; எரே 25:17, 26; செப் 3:8
k எரே 21:9; எரே 39:18; எரே 43:6

அதி. 46
l எரே 1:10
m 2ரா 23:36; எரே 25:1; எரே 36:1
n 2நா 35:20
o எரே 25:15, 19; எசே 29:2; எசே 32:2

3 “சிறிய கேடயங்களையும் பெரிய கேடயங்களையும்
எடுத்துக்கொள்ளுங்கள்.
போருக்குக் கிளம்புங்கள்.
4 குதிரை வீரர்களே, குதிரைகளைத் தயார்படுத்தி அதன்மேல்
ஏறிக்கொள்ளுங்கள்.
தலைக்கவசங்களை அணிந்துகொள்ளுங்கள்.
ஈட்டிகளைத் தீட்டிப் பளபளப்பாக்குங்கள்.
உடல்கவசத்தைப் போட்டுக்கொள்ளுங்கள்.
5 யெகோவா சொல்வது இதுதான்: ‘அந்த வீரர்கள் ஏன்
மிரண்டுபோயிருக்கிறார்கள்?
அவர்கள் தோற்றுவிட்டார்கள், பின்வாங்கிப் போகிறார்கள்.
அவர்கள் திரும்பிப் பார்க்காமல் தலைதெறிக்க ஓடுகிறார்கள்.
எங்கு பார்த்தாலும் ஒரே திகில்.
6 வேகமாக ஓடுகிறவர்களால் ஓட முடிவதில்லை.
போர்வீரர்களால் தப்பிக்க முடிவதில்லை.
வடக்கிலே, யூப்ரடிஸ் ஆற்றங்கரையிலே,
அவர்கள் தடுக்கி விழுந்து கிடக்கிறார்கள்.’[a]
7 நைல் நதியைப் போலப் பாய்ந்து வருகிறவன் யார்?
கரைபுரண்டு ஓடுகிற ஆறுகளைப் போல வருகிறவன் யார்?
8 எகிப்துதான் நைல் நதியைப்[b] போலவும்
கரைபுரண்டு ஓடுகிற ஆறுகளைப் போலவும் வருகிறான்.
‘நான் பாய்ந்து போய் இந்தப் பூமியை மூழ்கடித்துவிடுவேன்.
நகரத்தையும் அதிலிருக்கிற ஜனங்களையும் அழித்துவிடுவேன்’
என்று சொல்கிறான்.
9 குதிரைகளே, சீறிப் பாயுங்கள்!
ரதங்களே, கண்மண் தெரியாமல் ஓடுங்கள்!
கேடயம்[c] பிடிக்கிற கூஷ் வீரர்களே, பூத் வீரர்களே,
வில்லை[d] வளைக்கிற லூதீம்[e] வீரர்களே,
எல்லாரும் புறப்பட்டுப் போங்கள்.

10 அந்த நாள் உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் கடவு
ளான யெகோவாவுடைய நாள். அவருடைய எதிரிகளை அவர் பழிதீர்க்
கும் நாள். யூப்ரடிஸ்[f] ஆற்றங்கரையில் இருக்கிற வடக்கு தேசத்தில்,
உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவா பலி கொடுக்கப்
போகிறார்.* அவருடைய வாள் உயிர்களைப் பறித்து, திருப்தியாகும்வரை
இரத்தத்தைக் குடிக்கப்போகிறது.

11 கன்னிப்பெண்ணாகிய எகிப்தே,
கீலேயாத்துக்குப் போய் பரிமளத் தைலத்தை[g] வாங்கி வா.
குணமாவதற்காக நீ என்ன செய்தாலும் அது வீண்தான்.
நீ குணமாகவே மாட்டாய்.[h]
12 உனக்கு வந்த அவமானத்தைத் தேசங்கள்[i] கேள்விப்பட்டன.
உன்னுடைய கதறல் தேசமெங்கும் கேட்கிறது.

46:10 * வே.வா., “ஆட்களைக் கொன்று குவிக்கப்போகிறார்.”

அதி. 46
a 2ரா 24:7
b எசே 29:3; எசே 32:2
c எசே 27:2, 10
d ஏசா 66:19
e ஆதி 10:6, 13; எசே 30:4, 5
f 2ரா 24:7
g ஆதி 37:25; எரே 8:22
h எசே 30:21
i எசே 32:9

வீரனும் வீரனும் மோதிக்கொள்கிறார்கள்.
இரண்டு பேருமே கீழே விழுகிறார்கள்."

13 எகிப்து தேசத்தைத் தாக்குவதற்காக பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்
சார் வரப்போவதைப் பற்றி எரேமியா தீர்க்கதரிசியிடம் யெகோவா சொன்
னது இதுதான்:[a]

14 "எகிப்திலும் மிக்தோலிலும்[b] அறிவியுங்கள்.
நோப்பிலும்* தக்பானேசிலும்[c] அறிவியுங்கள்.
இப்படிச் சொல்லுங்கள்: 'உங்களைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் வாள் தாக்கும்.
எதிர்த்துப் போராட தயாராக நில்லுங்கள்.'
15 உங்களுடைய வீரர்கள் ஏன் வீழ்ந்துபோனார்கள்?
யெகோவா அவர்களைக் கீழே தள்ளிவிட்டதால்
அவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை.
16 அவர்களில் ஏராளமானவர்கள் தடுமாறி விழுகிறார்கள்.
ஒருவரை ஒருவர் பார்த்து,
"எழுந்திருங்கள்! கொடூரமான வாளுக்குத் தப்ப
நம்முடைய தேசத்துக்கே போகலாம்,
நம்முடைய ஜனங்களிடமே போகலாம்" என்று சொல்கிறார்கள்.'
17 அங்கே அந்த வீரர்கள்,
'எகிப்தின் ராஜா பார்வோன் வாய்ப்பை நழுவ விட்டுவிட்டு,
வீணாகப் பெருமை பேசுகிறான்'[d] என்று சொல்கிறார்கள்.
18 பரலோகப் படைகளின் யெகோவா என்ற பெயருள்ள ராஜா இப்படிச் சொல்கிறார்:
'என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்.*
மலைகளுக்கு நடுவே நிற்கும் தாபோர்[e] மலையைப் போலவும்,
கடலோரத்தில் நிற்கும் கர்மேல்[f] மலையைப் போலவும் கம்பீரமாக அவர்# வருவார்.
19 எகிப்தில் வாழ்கிறவர்களே,
சிறைபிடிக்கப்பட்டுப் போவதற்காக மூட்டை கட்டுங்கள்.
நோப்புக்கு* கோரமான முடிவு வரப்போகிறது.
அது தீ வைத்துக் கொளுத்தப்படும்.#
மனுஷ நடமாட்டமே இல்லாமல் போகும்.[g]
20 எகிப்து அழகான இளம் பசுவைப் போல இருக்கிறாள்.
ஆனால், பயங்கரமான கொசுக்கள் வடக்கிலிருந்து வந்து அவளைக் கடிக்கும்.
21 அவளுடைய கூலிப் படையினர்கூட கொழுத்த கன்றுக்குட்டிகளைப் போன்றவர்கள்.
அவர்களும் ஓட்டம் பிடித்தார்கள்.

46:14 *வே.வா., "மோப்பிலும்." **46:18** *வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." #அதாவது, "எகிப்தை ஜெயிக்கப்போகிறவர்." **46:19** *வே.வா., "மோப்புக்கு." #அல்லது, "பொட்டல் காடாகும்."

அதி. 46
a எரே 43:10; எசே 29:19; எசே 30:10
b எரே 44:1; எசே 29:10; எசே 30:6
c எரே 43:4, 7; எசே 30:18
d எசே 29:3
e யோசு 19:17, 22; நியா 4:6; சங் 89:12
f 1ரா 18:42
g எசே 32:15

தைரியமாக எதிர்த்து நிற்கவில்லை.[a]
அவர்களுடைய அழிவு நாள் வந்துவிட்டது.
தண்டனைத் தீர்ப்பின் நேரம் வந்துவிட்டது.'
22 'தப்பித்து ஓடுகிற பாம்பைப் போல அவள் சீறுகிறாள்.
ஏனென்றால், மரம் வெட்டுகிறவர்களைப் போல எதிரிகள் வருகிறார்கள்.
கோடாலிகளோடு அவள்மேல் பாய்கிறார்கள்.
23 அவளுடைய காடு என்னதான் அடர்த்தியாகத் தெரிந்தாலும் அதை
வெட்டிப்போடுவார்கள்.
ஏனென்றால், அவர்கள் வெட்டுக்கிளிகளைவிட அதிகமானவர்கள்,
எண்ணவே முடியாதவர்கள்' என்று யெகோவா சொல்கிறார்.
24 'எகிப்து ஜனங்கள் வெட்கப்பட்டுப் போவார்கள்.
வடக்கிலுள்ள ஜனங்களின் கையில் கொடுக்கப்படுவார்கள்.'[b]

25 இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்வது இதுதான்: 'இப்போது நான் நோ*[c] நகரத்திலுள்ள
ஆமோனையும்,[d] எகிப்தையும், அவளுடைய தெய்வங்களையும்,[e] அவளு
டைய ராஜாக்களையும் அழிப்பேன். பார்வோனையும் அவனை நம்புகிற
எல்லாரையும் தண்டிப்பேன்.'[f]

26 யெகோவா சொல்வது இதுதான்: 'அவர்களைக் கொல்லத் துடிக்கிற
பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சாரிடமும்[g] அவனுடைய ஊழியர்க
ளிடமும் நான் அவர்களைக் கொடுப்பேன். ஆனால், அதற்குப் பிறகு எகிப்
திலே பழையபடி ஜனங்கள் குடியிருப்பார்கள்.[h]

27 என் ஊழியனான யாக்கோபே, நீ பயப்படாதே.
இஸ்ரவேலே, திகிலடையாதே.[i]
தூர தேசத்திலிருந்து உன்னை விடுதலை செய்வேன்.
அடிமைப்பட்டிருக்கிற தேசத்திலிருந்து உன் சந்ததியைக்
கூட்டிக்கொண்டு வருவேன்.[j]
யாக்கோபு திரும்பி வந்து தொல்லை இல்லாமல் நிம்மதியாக வாழ்வான்.
அவனைப் பயமுறுத்த யாரும் இருக்க மாட்டார்கள்.'[k]
28 யெகோவா சொல்வது இதுதான்: 'என் ஊழியனான யாக்கோபே,
பயப்படாதே.
நான் உன்னோடு இருக்கிறேன்.
உன்னை எந்தத் தேசங்களுக்கெல்லாம் சிதறிப்போக வைத்தேனோ
அந்தத் தேசங்களையெல்லாம் அழித்துவிடுவேன்.[l]
ஆனால், உன்னை அழிக்க மாட்டேன்.[m]
அதேசமயம், உன்னைத் தண்டிக்காமலும் விட மாட்டேன்.
உன்னைச் சரியான* அளவுக்குக் கண்டித்துத் திருத்துவேன்.'"[n]

47 காசாவை பார்வோன் தாக்குவதற்கு முன்பு, பெலிஸ்தியர்களைப்[o]
பற்றி எரேமியா தீர்க்கதரிசியிடம் யெகோவா சொன்ன செய்தி.
2 யெகோவா சொல்வது இதுதான்:
"இதோ, வடக்கிலிருந்து தண்ணீர் பாய்ந்து வருகிறது.
அது வெள்ளமாகப் பெருக்கெடுத்து வருகிறது.

46:25 * அதாவது, "தீப்ஸ்." **46:28** * வே.வா., "நியாயமான."

அதி. 46
a எரே 46:5, 15
b எசே 30:10
c எசே 30:14
d நாகூ 3:8
e யாத் 12:12; ஏசா 19:1; எரே 43:12, 13
f எரே 17:5; எரே 42:14
g எரே 43:10, 11; எசே 32:11
h எசே 29:13, 14
i ஏசா 41:13; ஏசா 43:1, 2; ஏசா 44:2
j ஏசா 11:11; எரே 50:19; எசே 39:27; ஆமோ 9:14; செப் 3:20
k எரே 23:3, 6; எரே 30:10, 11
l எரே 25:9
m எரே 5:10; ஆமோ 9:8
n எரே 10:24

அதி. 47
o எரே 25:17, 20; எசே 25:15, 16; ஆமோ 1:6; செப் 2:4; சக 9:5, 6

தேசத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும்
நகரத்தையும் அதில் வாழ்கிறவர்களையும் அது மூழ்கடிக்கும்.
ஆட்கள் அலறுவார்கள்.
ஜனங்கள் ஒப்பாரி வைப்பார்கள்.
3 வீரியமுள்ள குதிரைகள்* ஓடிவருகிற சத்தத்தையும்
போர் ரதங்கள் பாய்ந்து வருகிற சத்தத்தையும்
அதன் சக்கரங்கள் உருளுகிற சத்தத்தையும் கேட்டு
தகப்பன்கள் பீதி அடைவார்கள்.
பிள்ளைகளைக்கூட அம்போவென்று விட்டுவிட்டு ஓடுவார்கள்.
4 ஏனென்றால், பெலிஸ்தியர்கள்[a] எல்லாருமே அழியப்போகிற நாள் வருகிறது.
தீருவுக்கும்[b] சீதோனுக்கும்[c] போய் உதவி செய்கிறவர்களும் ஒழிந்துபோவார்கள்.
கப்தோர்* தீவிலிருந்து[d] வந்தவர்களான பெலிஸ்தியர்களில் மீதியானவர்களை
யெகோவா அழிக்கப்போகிறார்.
5 காசாவுக்குத் துக்கமும் அவமானமும் வரும்.*
அஸ்கலோன் அடங்கி ஒடுங்கிவிட்டது.[e]
அவற்றின் சமவெளியில் மிஞ்சியிருக்கிறவர்களே,
இன்னும் எவ்வளவு காலம்தான் உங்கள் உடலைக் கீறிக் கிழித்துக்கொண்டு இருப்பீர்கள்?[f]
6 யெகோவாவின் வாளே![g]
நீ எப்போதுதான் அடங்குவாய்?
உன்னுடைய உறைக்குள் திரும்பிப் போ.
அங்கே அமைதியாக ஓய்வெடு.
7 அது எப்படி அடங்கும்?
யெகோவாதானே அதற்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்!
அஸ்கலோனையும் கடற்கரைப் பகுதியையும் அழிப்பதற்காக[h]
அவர்தானே அதை அனுப்பியிருக்கிறார்?"

48 இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான யெகோவா மோவாபைப்[i] பற்றிச் சொல்வது இதுதான்:
"நேபோவின்[j] கதி அவ்வளவுதான்! அவள் அழிந்துவிட்டாள்!
கீரியாத்தாயீமுக்கு[k] அவமானம்! அவள் கைப்பற்றப்பட்டாள்!
பாதுகாப்பான கோட்டைக்கு அவமானம்! அது இடிக்கப்பட்டது![l]
2 இனி யாரும் மோவாபைப் புகழ மாட்டார்கள்.
அவளைக் கவிழ்ப்பதற்காக எதிரிகள் எஸ்போனில்[m] திட்டம் தீட்டியிருக்கிறார்கள்:
'அந்தத் தேசத்துக்கு ஒரு முடிவுகட்டலாம், வாருங்கள்' என்று சொல்கிறார்கள்.

47:3 * வே.வா., "பொலிகுதிரைகள்." **47:4** * அதாவது, "கிரேத்தா." **47:5** * நே.மொ., "காசா மொட்டையடிக்கப்படும்."

அதி. 47
a எரே 25:17, 20; ஆமோ 1:8; செப் 2:5
b எசே 26:2; ஆமோ 1:9, 10
c ஏசா 23:1, 4; எரே 25:17, 22; எரே 27:2, 3; எசே 28:21; யோவே 3:4
d ஆதி 10:13, 14; உபா 2:23
e செப் 2:4
f உபா 14:1; எரே 16:6
g உபா 32:41
h எசே 25:16

அதி. 48
i ஆதி 19:36, 37; ஏசா 15:1
j எண் 32:37, 38
k யோசு 13:15, 19; எசே 25:9
l ஏசா 15:2
m எண் 32:37; ஏசா 16:8

மத்மேனே, நீயும் அமைதியாகிவிடு!
ஏனென்றால், வாள் உன்னைக் குறிவைத்திருக்கிறது.
3 ஒரோனாயீமுக்குப்[a] பேரழிவு வந்துவிட்டது!
அதனால், அங்கே அலறல் சத்தம் கேட்கிறது.
4 மோவாப் நொறுக்கப்பட்டாள்.
அவளுடைய சிறுபிள்ளைகள் கதறுகிறார்கள்.
5 அவர்கள் அழுதுகொண்டே லூகித்துக்கு ஏறிப்போகிறார்கள்.
ஒரோனாயீமிலிருந்து இறங்கி வரும்போது, அழிவைக் கண்டு அழுகிறவர்களின் சத்தத்தைக் கேட்கிறார்கள்.[b]
6 உங்கள் உயிருக்கு ஆபத்து! தப்பித்து ஓடுங்கள்!
வனாந்தரத்திலுள்ள ஆபால் மரத்தைப் போல ஆகிவிடுங்கள்.
7 உன்னுடைய சாதனைகளையும் சொத்துகளையும் நீ நம்பியிருக்கிறாய்.
அதனால், நீயும் கைப்பற்றப்படுவாய்.
கேமோஷ்[c] தெய்வம் சிறைபிடிக்கப்படும்.
அதன் பூசாரிகளும் அதிகாரிகளும்கூட சிறைபிடிக்கப்படுவார்கள்.
8 எதிரி எல்லா நகரத்தையும் அழிப்பான்.
எந்த நகரமும் தப்பாது.[d]
பள்ளத்தாக்கு அழிந்துபோகும்.
சமவெளி சின்னாபின்னமாகும்.
யெகோவா சொன்னபடியே எல்லாம் நடக்கும்.
9 மோவாபின் நகரங்களுக்குக் கோரமான முடிவு வரும்.
அங்கு இனி மனுஷ நடமாட்டமே இருக்காது.[e]
நகரங்கள் அழியும்போது ஜனங்கள் தப்பித்து ஓடுவார்கள்.
அதனால், மோவாபின் ஜனங்களுக்குத் திசைகாட்ட கல்தூணை வையுங்கள்.
10 யெகோவா கொடுத்த வேலையை ஏனோதானோவென்று செய்கிறவன் சபிக்கப்படுவான்!
இரத்தம் சிந்துவதற்காக வாளை எடுக்காதவனும் சபிக்கப்படுவான்!
11 இளவயதிலிருந்தே மோவாபியர்கள் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள்.
கசடு படிந்துவிட்ட தெளிந்த திராட்சமதுவைப் போல இருக்கிறார்கள்.
அவர்கள் ஒரு ஜாடியிலிருந்து இன்னொரு ஜாடிக்கு மாற்றப்பட்டதே இல்லை.
அவர்கள் சிறைபிடிக்கப்பட்டதே இல்லை.
அதனால்தான் ருசி கூடாமலும்,
வாசனை மாறாமலும் இருக்கிறார்கள்.

12 யெகோவா சொல்வது இதுதான்: 'காலம் வருகிறது. அப்போது, அவர்களைக் கவிழ்ப்பதற்காக நான் ஆட்களை அனுப்புவேன். அந்த ஆட்கள் அவர்களைக் கவிழ்ப்பார்கள். ஜாடிகளில் இருப்பதையெல்லாம் கீழே கொட்டுவார்கள். பின்பு, அந்தப் பெரிய ஜாடிகளை உடைத்து நொறுக்குவார்கள்.
13 இஸ்ரவேலர்கள் தாங்கள் நம்பியிருந்த பெத்தேலை நினைத்து எப்படி வெட்கப்படுகிறார்களோ அப்படியே மோவாபியர்கள் கேமோஷை நினைத்து வெட்கப்படுவார்கள்.[f]

அதி. 48
a ஏசா 15:5; எரே 48:34
b ஏசா 15:5
c எண் 21:29; 1ரா 11:7
d எசே 25:9
e செப் 2:9
f 1ரா 12:28, 29; ஓசி 10:15; ஆமோ 5:5

14 “நாங்கள் மாவீரர்கள்! நாங்கள் போருக்குத் தயார்!”[a] என்று
சொல்கிறீர்களே, உங்களுக்கு என்ன துணிச்சல்!’
15 பரலோகப் படைகளின் யெகோவா என்ற பெயருள்ள ராஜா சொல்வது
இதுதான்:[b]
‘மோவாப் அழிக்கப்பட்டாள்.
அவளுடைய நகரங்கள் கைப்பற்றப்பட்டன.[c]
அவளுடைய திறமையான வாலிபர்கள் வெட்டிச்
சாய்க்கப்பட்டார்கள்.’[d]
16 மோவாபியர்கள் அழியப்போகிற நாள் பக்கத்தில் வந்துவிட்டது.
அவர்களுடைய வீழ்ச்சி நெருங்கிவிட்டது.[e]
17 அவர்களைச் சுற்றியிருக்கிற ஜனங்களே,
அவர்களுடைய பேரையும் புகழையும் பற்றித் தெரிந்தவர்களே,
அவர்களுக்காக அனுதாபப்படுங்கள்.
‘பலமான செங்கோல் முறிந்துபோனதே! அழகான கோல்
உடைக்கப்பட்டதே!’ என்று சொல்லுங்கள்.
18 தீபோனில்[f] வாழ்கிறவர்களே,
கௌரவமான இடத்தைவிட்டு இறங்குங்கள்.
தாகத்தோடு* கீழே உட்காருங்கள்.
மோவாபை அழிக்க எதிரி வந்துவிட்டான்.
அவளுடைய கோட்டைகளை அவன் தரைமட்டமாக்குவான்.[g]
19 ஆரோவேர்[h] ஜனங்களே, தெரு ஓரமாக நின்று பாருங்கள்.
தப்பிவருகிற ஆண்களிடமும் பெண்களிடமும், ‘என்ன நடந்தது?’ என்று
கேளுங்கள்.
20 மோவாபுக்கு ஒரே அவமானம்! எங்கு பார்த்தாலும் திகில்!
ஓலமிடுங்கள்! ஒப்பாரி வையுங்கள்!
மோவாப் அழிந்துவிட்டாள் என்று அர்னோனில்[i] அறிவியுங்கள்.

21 சமவெளிக்குத்[j] தண்டனைத் தீர்ப்பு கிடைத்துவிட்டது. ஓலோன்,
யாகாஸ்,[k] மேபாகாத்,[l] **22** தீபோன்,[m] நேபோ,[n] பெத்-திப்லாத்தாயீம்,
23 கீரியாத்தாயீம்,[o] பெத்-கமூல், பெத்-மெயோன்,[p] **24** கீரியோத்,[q]
போஸ்றா நகரங்களுக்கும், பக்கத்திலும் தூரத்திலும் இருக்கிற மோவாப் நக
ரங்கள் எல்லாவற்றுக்கும் தண்டனைத் தீர்ப்பு கிடைத்துவிட்டது.

25 ‘மோவாபின் கொம்பு ஒடிக்கப்பட்டது!
அவனுடைய கை முறிக்கப்பட்டது!’ என்று யெகோவா சொல்கிறார்.
26 ‘மோவாப் யெகோவாவுக்கு எதிராகப் பெருமையடிக்கிறான்.[r]
அதனால் போதை ஏறுமளவுக்கு அவனைக் குடிக்க வையுங்கள்.[s]
அவன் வாந்தி எடுத்து அதிலேயே புரளட்டும்.
எல்லாரும் அவனைப் பார்த்துக் கேலி செய்யட்டும்.
27 நீ இஸ்ரவேலைக் கேலி செய்யவில்லையா?[t]
அவன் என்ன திருட்டுக் கும்பலைச் சேர்ந்தவனா?
ஏன் அவனைப் பார்த்துக் கிண்டலடித்து, தலையை ஆட்டுகிறாய்?

48:18 * அல்லது, “வறண்ட நிலத்தில்.”

அதி. 48
a ஏசா 16:6
b சங் 24:8
c எரே 48:8
d ஏசா 34:2
e எசே 25:11
f எண் 21:30 யோசு 13: 15, 17 ஏசா 15:2
g எரே 48:8
h எண் 32:34 உபா 2:36
i எண் 21:13 யோசு 13:8, 9
j செப் 2:9
k எண் 21:23 ஏசா 15:4
l யோசு 13: 15, 18
m எண் 32:34
n எண் 32:3, 4
o எண் 32:37 எரே 48:1
p எண் 32: 37, 38 யோசு 13: 15, 17 எசே 25:9
q ஆமோ 2:2
r எரே 48:42
s எரே 25:15, 16
t புல 2:15 செப் 2:8

28 மோவாப் ஜனங்களே, நகரங்களை விட்டுவிட்டுப் பாறைகளுக்கு நடுவில் போய் வாழுங்கள்.
பள்ளத்தாக்கின் பாறை இடுக்குகளில் கூடு கட்டுகிற புறாவைப் போல் வாழுங்கள்.'"
29 "மோவாப் பெருமைபிடித்து அலைகிறான்.
அவனுடைய கர்வத்தையும், ஆணவத்தையும், அகம்பாவத்தையும், அகங்காரத்தையும்[a] பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம்."
30 "யெகோவா சொல்வது இதுதான்: 'அவனுடைய கோபவெறியைப் பற்றி எனக்குத் தெரியும்.
ஆனால் அவனுடைய பெருமைப் பேச்செல்லாம் வெற்றுப் பேச்சாகிவிடும்.
அவர்கள் ஒன்றுமே செய்ய மாட்டார்கள்.
31 மோவாபைப் பார்த்து நான் ஒப்பாரி வைப்பேன்.
மோவாப் நகரங்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கதறி அழுவேன்.
கீர்-ஆரேஸ்[b] ஜனங்களுக்காகப் புலம்புவேன்.
32 சிப்மாவின்[c] திராட்சைக் கொடியே,
யாசேருக்காக[d] அழுததைவிட உனக்காக அதிகமாய் அழுவேன்.
உன்னுடைய கிளைகள் கடலைக் கடந்திருக்கின்றன.
கடல் வரையும் யாசேர் வரையும் எட்டியிருக்கின்றன.
உன்னுடைய கோடைக் காலப் பழங்களையும் திராட்சைப் பழங்களையும்
நாசமாக்க எதிரி வந்துவிட்டான்.[e]
33 மோவாப் தேசத்திலும்[f] அதன் பழத் தோட்டங்களிலும்
இனி சந்தோஷமோ கொண்டாட்டமோ இருக்காது.
ஆலைகளில் இனி திராட்சமது வழிந்தோடாது.
யாரும் சந்தோஷமாகப் பாடிக்கொண்டு திராட்சைப் பழங்களை மிதிக்க மாட்டார்கள்.
அங்கே அலறல் சத்தம்தான் கேட்கும்.'"[g]
34 "'எஸ்போனில்[h] ஜனங்கள் கதறுகிற சத்தம்
எலெயாலே[i] வரைக்கும், யாகாஸ்[j] வரைக்கும் கேட்கும்.
சோவாரின் கதறல் ஒரோனாயீம்[k] வரையும் எக்லாத்து-செலிசியா வரையும் கேட்கும்.
நிம்ரீமின் தண்ணீர்கூட வற்றிப்போகும்.[l]
35 ஆராதனை மேடுகளுக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்து,
தன்னுடைய தெய்வத்துக்குப் பலிகள் செலுத்துகிற எவனும்
இனி மோவாபில் இருக்க மாட்டான்' என்று யெகோவா சொல்கிறார்.
36 'அதனால்தான் மோவாபையும் கீர்-ஆரேஸ் ஜனங்களையும் நினைத்து
என் உள்ளம் புல்லாங்குழல் போலச் சோக கீதம் பாடுகிறது.[m]
மோவாப் சேர்த்து வைத்திருக்கிற சொத்துகள் அழிந்துபோகும்.
37 எல்லாரும் தலையை மொட்டையடித்துக்கொள்வார்கள்.[n]
தாடியைச் சிரைத்துக்கொள்வார்கள்.

அதி. 48
a ஏசா 16:6; ஏசா 25:10, 11; செப் 2:9, 10
b 2ரா 3:24, 25; ஏசா 16:7
c எண் 32:37, 38; யோசு 13:15, 19
d எண் 21:32; எண் 32:34, 35; யோசு 21:8, 39
e ஏசா 16:8, 9; எரே 48:8
f எரே 25:10
g ஏசா 16:10
h எண் 21:25; யோசு 13:15, 17
i எண் 32:37; ஏசா 16:9
j எண் 21:23
k எரே 48:2, 3
l ஏசா 15:4-6
m ஏசா 16:11
n எரே 16:6

கைகளைக் கீறிக்கொள்வார்கள்.[a]
இடுப்பில் துக்கத் துணியை* கட்டிக்கொள்வார்கள்.'"[b]
38 'மோவாபில் இருக்கிற வீடுகளின் மொட்டைமாடிகளிலும்,
பொது சதுக்கங்களிலும் ஒரே ஒப்பாரிச் சத்தம்!
வேண்டாத ஜாடியை நொறுக்குவது போல
நான் மோவாபை நொறுக்கிவிட்டேன்' என்று யெகோவா சொல்கிறார்.
39 'மோவாப் எப்படி நடுங்குகிறாள்! எப்படி ஓலமிடுகிறாள்!
அவமானத்தோடு எப்படி ஓட்டம்பிடித்திருக்கிறாள்!
எல்லாரும் அவளைப் பார்த்துக் கேலி செய்கிறார்கள்.
சுற்றியிருக்கிற எல்லாரும் அவளுடைய நிலைமையைப் பார்த்துக் கதிகலங்குகிறார்கள்.'"
40 "யெகோவா சொல்வது இதுதான்:
'இதோ, கீழே பாய்ந்து வரும் கழுகைப் போல,[c]
ஒருவன் மோவாபைப் பிடிப்பதற்காகச் சிறகுகளை விரித்துக்கொண்டு வருவான்.[d]
41 அவளுடைய ஊர்கள் கைப்பற்றப்படும்.
அவளுடைய கோட்டைகள் பிடிக்கப்படும்.
குழந்தையைப் பெற்றெடுக்கிற பெண்ணின் நெஞ்சம் துடிப்பது போல
அந்த நாளில் மோவாபின் வீரர்களுடைய நெஞ்சம் துடிக்கும்.'"
42 "'மோவாப் யெகோவாவுக்கு எதிராகப் பெருமையடித்தான்.[e]
அதனால், இருந்த இடம் தெரியாதபடி அழிக்கப்படுவான்.[f]
43 மோவாப் ஜனங்களே, திகிலும் படுகுழியும் கண்ணியும்தான்
உங்கள் முன்னால் இருக்கிறது' என்று யெகோவா சொல்கிறார்.
44 'திகிலுக்குப் பயந்து ஓடுகிறவர்கள் படுகுழியில் விழுவார்கள்.
படுகுழியிலிருந்து வெளியே வருகிறவர்கள் கண்ணியில் சிக்குவார்கள்.'
'ஏனென்றால், நான் மோவாபைத் தண்டிக்கப்போகிற வருஷம் வந்துவிட்டது' என்று யெகோவா சொல்கிறார்.
45 'தப்பித்து ஓடுகிறவர்கள் எதுவும் செய்ய முடியாமல் எஸ்போனின் நிழலில் நிற்கிறார்கள்.
எஸ்போனிலிருந்து நெருப்பு வரும்.
சீகோனிலிருந்து[g] தீ ஜுவாலை வரும்.
அது மோவாபின் நெற்றியைச் சுட்டெரிக்கும்.
வெறிபிடித்த வீரர்களின் மண்டையோட்டைப் பொசுக்கும்.'[h]
46 'மோவாபே, உன் கதி அவ்வளவுதான்!
கேமோஷை[i] வணங்கிய ஜனங்கள் ஒழிந்துபோனார்கள்.
உன்னுடைய மகன்கள் கைதிகளாகக் கொண்டுபோகப்பட்டார்கள்.
உன்னுடைய மகள்களும் சிறைபிடிக்கப்பட்டார்கள்.[j]
47 ஆனால் கடைசி நாட்களில், மோவாபிலிருந்து பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்களை நான் கூட்டிச்சேர்ப்பேன்.
மோவாபுக்குச் சொல்லப்படும் தண்டனைத் தீர்ப்பு இத்துடன் முடிகிறது'[k] என்று யெகோவா சொல்கிறார்."

48:37 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 48
a லேவி 19:28
b ஆதி 37:34; ஏசா 15:2, 3
c புல 4:19; ஆப 1:8
d எரே 49:22
e எரே 48:29
f எரே 30:11
g எண் 21:26, 28
h எண் 24:17; ஆமோ 2:2
i எண் 21:29; 1ரா 11:7
j எரே 48:7
k எசே 25:11

49 அம்மோனியர்களைப்[a] பற்றி யெகோவா சொல்வது இதுதான்:
“இஸ்ரவேலுக்கு மகன்கள் இல்லையோ?
அவனுக்கு வாரிசு இல்லையோ?
பிறகு ஏன் காத்[b] நகரத்தை மல்காம்[c] கைப்பற்ற வேண்டும்?
மல்காமைக் கும்பிடுகிறவர்கள் ஏன் இஸ்ரவேலின் நகரங்களில்
குடியிருக்க வேண்டும்?”
2 “யெகோவா சொல்வது இதுதான்: ‘இதோ, காலம் வருகிறது.
அப்போது, அம்மோனியர்களுடைய[d] நகரமான ரப்பாவில்[e] போர்
முழக்கம் கேட்கும்படி செய்வேன்.
அவள் வெறும் மண்மேடாக ஆவாள்.
அவளுடைய சிற்றூர்கள்* தீ வைத்துக் கொளுத்தப்படும்.’
யெகோவா சொல்வது இதுதான்: ‘இஸ்ரவேலைக் கைப்பற்றியவர்களை
இஸ்ரவேல் கைப்பற்றும்.’[f]
3 ‘எஸ்போனே, அழுது புலம்பு! ஆயி அழிக்கப்பட்டாள்!
ரப்பாவின் சிற்றூர்களே, அலறுங்கள்!
துக்கத் துணியை* போட்டுக்கொள்ளுங்கள்!
ஒப்பாரி வையுங்கள்; தொழுவங்களில்# அலைந்து திரியுங்கள்.
ஏனென்றால், மல்காம் தெய்வம் சிறைபிடிக்கப்படும்.
அதன் பூசாரிகளும் அதிகாரிகளும்கூட சிறைபிடிக்கப்படுவார்கள்.[g]
4 துரோகம் செய்கிற மகளே, உன்னுடைய பள்ளத்தாக்குகளைப் பற்றியும்
தண்ணீர் பாய்ந்தோடுகிற சமவெளியைப் பற்றியும் ஏன்
பெருமையடிக்கிறாய்?
உன்னுடைய சொத்துகள்மேல் நீ நம்பிக்கை வைத்திருக்கிறாய்.
“என்னோடு மோதுவதற்கு யார் வரப்போகிறார்கள்?” என்று
சொல்லிக்கொள்கிறாய்.’”
5 “உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது
இதுதான்:
‘நான் உனக்கு எதிராகப் பயங்கரமான அழிவைக் கொண்டுவரப்
போகிறேன்.
சுற்றியுள்ள ஜனங்கள் உன்னைத் தாக்குவார்கள்.
உன்னுடைய ஜனங்கள் நாலாபக்கமும் சிதறி ஓடுவார்கள்.
அவர்களை ஒன்றுசேர்க்க யாரும் இருக்க மாட்டார்கள்.’”
6 “‘ஆனால், சிறைபிடிக்கப்பட்டுப் போன அம்மோனியர்களை நான்
பிற்பாடு கூட்டிச்சேர்ப்பேன்’ என்று யெகோவா சொல்கிறார்.”
7 ஏதோமைப் பற்றி பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது
இதுதான்:
“தேமானில்[h] ஞானம் இல்லாமல் போய்விட்டதா?
புத்திசாலிகளால்* நல்ல ஆலோசனை தர முடியவில்லையா?
அவர்களுடைய புத்தி# கெட்டுப்போய்விட்டதா?

அதி. 49
a ஆதி 19:36, 38; உபா 2:19; 2நா 20:1
b ஆமோ 1:13
c 1ரா 11:5; செப் 1:4, 5
d எசே 21:19, 20
e உபா 3:11; யோசு 13:24, 25; எசே 25:5; ஆமோ 1:14
f ஏசா 14:2; எரே 50:19; செப் 2:9
g ஆமோ 1:13, 15
h ஆதி 36:10, 11; எசே 25:13; ஆமோ 1:12; ஒப 8

49:2 * வே.வா, “அவளைச் சுற்றியுள்ள ஊர்கள்.” **49:3** * சொல் பட்டியலைப் பாருங்கள். # இவை கற்சுவர்களால் கட்டப்பட்ட நிரந்தரத் தொழுவங்களைக் குறிக்கின்றன. **49:7** * வே.வா., “புரிந்துகொள்ளும் திறன் உள்ளவர்களால்.” # வே.வா., “ஞானம்.”

8 தேதான்[a] ஜனங்களே, தப்பித்து ஓடுங்கள்! முதுகைக் காட்டி ஓடுங்கள்!
தாழ்வான பகுதிகளுக்குப் போய்ப் பதுங்கி வாழுங்கள்.
ஏனென்றால், நான் ஏசாவைத் தண்டிக்கும் நேரம் வருகிறது.
அப்போது நான் அவனை அழிப்பேன்.
9 திராட்சைக் குலைகளை அறுக்க வருகிறவர்கள்
கொஞ்சத்தை விட்டுவைப்பார்கள், இல்லையா?
ராத்திரியில் வருகிற திருடர்கள்
தங்களுக்குப் போதுமானதை மட்டும் எடுத்துக்கொள்வார்கள்,
இல்லையா?[b]
10 ஆனால், நான் ஏசாவுக்குச் சொந்தமான எல்லாவற்றையுமே
எடுத்துவிடுவேன்.
அவனால் எங்குமே ஒளிந்துகொள்ள முடியாதபடி
அவனுடைய மறைவிடங்களை வெட்டவெளிச்சமாக்குவேன்.
அவனுடைய பிள்ளைகளையும் சகோதரர்களையும் அக்கம்பக்கத்து
ஜனங்களையும் கொன்றுபோடுவேன்.[c]
அவன் அடியோடு அழிந்துபோவான்.[d]
11 அப்பா இல்லாத பிள்ளைகளை என்னிடம் விட்டுவிடு.
நான் அவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவேன்.
உன்னுடைய விதவைகள் என்மேல் நம்பிக்கை வைப்பார்கள்."

12 யெகோவா சொல்வது இதுதான்: "என்னுடைய கோபக் கிண்ணத்தி
லிருந்து குடிக்க வேண்டுமென்ற தீர்ப்பைப் பெறாதவர்களே அதைக் குடிக்க
வேண்டும் என்றால், நீ அதைக் குடிக்காமல் தப்பிக்க முடியுமா? முடியாது.
தண்டனையை நீ முழுமையாக அனுபவித்தே தீர வேண்டும்."[e]

13 "யெகோவா சொல்வது இதுதான்: 'என்மேல் ஆணையாகச் சொல்கி
றேன், போஸ்றாவுக்கு வரும் கோரமான முடிவைப்[f] பார்க்கிறவர்கள் அவ
ளைப் பழித்தும் சபித்தும் பேசுவார்கள். அவளுடைய எல்லா நகரங்களும்
அடியோடு அழிந்துபோகும்."[g]

14 யெகோவாவிடமிருந்து எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது.
எல்லா தேசங்களுக்கும் அதைச் சொல்ல ஒரு தூதுவர்
அனுப்பப்பட்டிருக்கிறார்.
அவர் எல்லாரிடமும், "ஒன்றுதிரண்டு வாருங்கள்.
அவளோடு போர் செய்யப் புறப்படுங்கள்"[h] என்று சொல்கிறார்.
15 "நான் உன்னைத் தேசங்களிலேயே அற்பமான தேசமாக்கினேன்.
எல்லாராலும் வெறுக்கப்படுகிற தேசமாக்கினேன்.[i]
16 பாறைகளின் நடுவே பாதுகாப்பாகக் குடியிருக்கிறவளே,
மிகவும் உயரமான குன்றின் மேல் உட்கார்ந்திருக்கிறவளே,
நீ எல்லாரையும் பயமுறுத்தி, அகங்காரமாக* நடந்து
மோசம்போனாயே!
கழுகைப் போல உயரத்திலே நீ கூடு கட்டினாலும்

49:16 * இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது.

அதி. 49
a ஏசா 21:13 எரே 25:17, 23
b ஒப 5
c ஒப 6, 9
d மல் 1:3, 4
e எரே 25:27, 28 புல 4:21 ஒப 16
f ஏசா 34:6 ஏசா 63:1 எரே 49:22 ஆமோ 1:12
g ஒப 18 மல் 1:3
h ஒப 1
i ஒப 2-4

அங்கிருந்து நான் உன்னைக் கீழே தள்ளுவேன்” என்று யெகோவா
சொல்கிறார்.

17 “ஏதோமுக்கு வரும் கோரமான முடிவைப்[a] பார்க்கிறவர்கள் கதிக
லங்கிப்போவார்கள். அவளுக்கு வரும் எல்லா தண்டனைகளையும்
பார்த்துக் கேலி செய்வார்கள்.* 18 சோதோமும் கொமோராவும் அவற்
றைச் சுற்றியிருந்த ஊர்களும்[b] அழிந்தது போலவே ஏதோமும் அழிந்து
போவாள். அங்கே யாரும் குடியிருக்க மாட்டார்கள். மனுஷ நடமாட்டமே
இருக்காது”[c] என்று யெகோவா சொல்கிறார்.

19 “யோர்தானை ஒட்டியுள்ள புதர்க் காடுகளிலிருந்து பாய்ந்து வரு
கிற சிங்கத்தைப் போல[d] ஒருவன் பாய்ந்து வந்து பாதுகாப்பான மேய்ச்
சல் நிலங்களைத் தாக்குவான். ஆனால், நான் அவனை* ஒரே நொடி
யில் அவளைவிட்டு ஓட வைப்பேன். தேர்ந்தெடுக்கப்பட்டவனின் கையில்
அவளைக் கொடுப்பேன். என்னைப் போல யார் இருக்கிறார்கள்? எனக்கே
சவால்விட யாரால் முடியும்? எந்த மேய்ப்பனால் என்முன் நிற்க முடியும்?[e]
20 அதனால் ஜனங்களே, ஏதோமுக்கு எதிராக யெகோவா எடுத்திருக்
கிற முடிவைப் பற்றியும், தேமானின்[f] ஜனங்களுக்கு எதிராக அவர் யோசித்
திருக்கிற விஷயத்தைப் பற்றியும் கேளுங்கள்:

மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகள் கண்டிப்பாக இழுத்துச்
செல்லப்படும்.
அவற்றின் தொழுவங்களை அவர் வெறுமையாக்குவார்;[g] ஏனென்றால்,
அவர்கள் பாவம் செய்தார்கள்.
21 அவர்கள் விழும் சத்தத்தில் பூமி அதிருகிறது.
அலறல் சத்தம் கேட்கிறது!
செங்கடல்[h] வரைக்கும் சத்தம் கேட்கிறது.
22 மேலே பறக்கும் கழுகு கீழே பாய்ந்து வருவது போல,
அவர் போஸ்றாவைப் பிடிப்பதற்காகச் சிறகுகளை விரித்துக்கொண்டு
வருவார்.[i]
குழந்தையைப் பெற்றெடுக்கிற பெண்ணின் நெஞ்சம் துடிப்பது போல
அந்த நாளில் ஏதோமின் வீரர்களுடைய நெஞ்சம் துடிக்கும்.”
23 தமஸ்குவுக்கு[j] எதிரான தண்டனைத் தீர்ப்பு:
“காமாத்,[k] அர்பாத் ஜனங்கள் அவமானப்பட்டுப் போயிருக்கிறார்கள்.
ஏனென்றால், அவர்களுக்கு ஒரு கெட்ட செய்தி வந்திருக்கிறது.
அவர்கள் பயத்தில் நடுங்குகிறார்கள்.
அமைதியில்லாமல் கொந்தளிக்கிற கடலைப் போல இருக்கிறார்கள்.
24 தமஸ்குவின் தைரியமெல்லாம் போய்விட்டது.
அவள் தப்பித்து ஓடப் பார்க்கிறாள், ஆனால் பயத்தில்
உறைந்துபோகிறாள்.
குழந்தையைப் பெற்றெடுக்கிற பெண்ணைப் போல
வலியிலும் வேதனையிலும் துடிக்கிறாள்.
25 சந்தோஷக் களையோடும் புகழோடும் இருந்தவளைவிட்டு
ஜனங்கள் ஏன் இன்னும் தப்பித்து ஓடவில்லை?

49:17 * நே.மொ., “விசில் அடிப்பார்கள்.” **49:19** * ஒருவேளை, “ஏதோமை.”

அதி. 49
a எரே 49:13
b ஆதி 19:24, 25
c ஏசா 34:6, 10
d எரே 4:7
e சங் 76:7; எரே 50:44-46; நாகூ 1:6
f ஒப 9
g மல் 1:4
h 1ரா 9:26
i எரே 4:13; எரே 48:40; எரே 49:13
j ஏசா 17:1; ஆமோ 1:3
k எண் 13:21; 2ரா 17:24; சக 9:1, 2

26 அந்த நாளில் அவளுடைய வாலிபர்கள் பொது சதுக்கங்களில் விழுந்து கிடப்பார்கள்.
எல்லா வீரர்களும் அழிந்துபோவார்கள்" என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.
27 "நான் தமஸ்குவின் மதிலுக்குத் தீ வைக்கப்போகிறேன்.
அது பெனாதாத்தில்[a] இருக்கிற கோட்டைகளைச் சாம்பலாக்கிவிடும்."

28 பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் கைப்பற்றிய கேதாரையும்[b]
ஆத்சோரின் ராஜ்யங்களையும் பற்றி யெகோவா சொல்வது இதுதான்:
"கேதாருக்கு எதிராகப் புறப்பட்டுப் போங்கள்.
கிழக்கில் வாழ்கிற ஜனங்களைக் கொன்றுபோடுங்கள்.
29 அவர்களுடைய கூடாரங்களையும் மந்தைகளையும்
கூடாரத் துணிகளையும் மற்ற எல்லா பொருள்களையும்
ஒட்டகங்களையும் எடுத்துக்கொண்டு போங்கள்.
'எந்தப் பக்கம் திரும்பினாலும் பயங்கரமாக இருக்கிறது!' என்று ஜனங்கள் அலறுவார்கள்."
30 யெகோவா சொல்வது இதுதான்: "தொலைதூரத்துக்குத் தப்பியோடுங்கள்.
ஆத்சோர் ஜனங்களே, தாழ்வான பகுதிகளுக்குப் போய்ப் பதுங்கி வாழுங்கள்.
ஏனென்றால், பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் உங்களுக்கு எதிராகச் சதி செய்திருக்கிறான்.
உங்களைத் தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டியிருக்கிறான்."
31 யெகோவா சொல்வது இதுதான்: "கதவுகளோ தாழ்ப்பாள்களோ இல்லாமல்,
சமாதானத்தோடும் பாதுகாப்போடும் வாழ்கிற ஜனத்துக்கு எதிராகப் புறப்பட்டுப் போங்கள்.
அவர்கள் தனியாக வாழ்கிறார்கள்.
32 அவர்களுடைய ஒட்டகங்கள் கைப்பற்றப்படும்.
அவர்களுடைய ஏராளமான கால்நடைகள் சூறையாடப்படும்.
அவர்களை எல்லா திசைகளிலும் சிதறி ஓட வைப்பேன்.
நெற்றி ஓரங்களில் முடியை வெட்டிக்கொள்கிற அந்த ஜனத்துக்கு[c]
எல்லா பக்கத்திலிருந்தும் ஆபத்தை வர வைப்பேன்" என்று யெகோவா சொல்கிறார்.
33 ஆத்சோர் பிரதேசம் நரிகள் தங்கும் இடமாக மாறும்.
அது ஒட்டுமொத்தமாகப் பாழாகிப்போகும்.
அங்கே யாரும் குடியிருக்க மாட்டார்கள்.
மனுஷ நடமாட்டமே இருக்காது."

34 சிதேக்கியா ராஜா யூதாவை ஆட்சி செய்ய ஆரம்பித்தபோது[d]
ஏலாமைப்[e] பற்றி எரேமியா தீர்க்கதரிசியிடம் யெகோவா சொன்னது இது
தான்: 35 "பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: 'ஏலா
மின் பலத்துக்கு அடையாளமாக இருக்கிற வில்லை நான் முறிக்கப்போகி
றேன்.[f] 36 வானத்தின் நான்கு மூலைகளிலிருந்தும் நான்கு காற்றுகள்

அதி. 49
a ஆமோ 1:4
b ஆதி 25:13 ஏசா 42:11 ஏசா 60:7 எசே 27:21
c எரே 9:25, 26 எரே 25: 17, 23
d 2ரா 24:18
e ஆதி 10:22 ஏசா 21:2 எரே 25:17, 25 எசே 32:24 தானி 8:2 அப் 2:8, 9
f ஏசா 22:6

அதி. 49
a எரே 25:17, 25

அதி. 50
b ஏசா 13:1
c எரே 51:8; வெளி 14:8
d ஏசா 46:1; எரே 51:44
e ஏசா 13:17; எரே 51:11, 48
f ஏசா 11:12; எரே 3:18; ஓசி 1:11
g எரே 31:8, 9
h ஓசி 3:5
i ஏசா 35:10
j எரே 31:31
k ஏசா 53:6
l எரே 10:21; எரே 23:2; எசே 34:2, 6
m சங் 79:6, 7

ஏலாமின் மேல் அடிக்கும்படி செய்வேன். ஜனங்கள் நாலாபக்கமும் அடித்
துச் செல்லப்படுவார்கள். அவர்கள் சிதறி ஓடாத தேசமே இருக்காது.'"

37 யெகோவா சொல்வது இதுதான்: "கொலைவெறி பிடித்த எதிரி
களுக்கு முன்னால் ஏலாமியர்களை நான் நடுங்க வைப்பேன். பயங்கர
கோபத்தோடு அவர்களைத் தண்டிப்பேன். வாளை அனுப்பி அவர்களை
அடியோடு அழிப்பேன்."

38 "என்னுடைய சிம்மாசனத்தை ஏலாமில் நிறுத்துவேன்.[a] அதன் ராஜா
வையும் அதிகாரிகளையும் அழிப்பேன்" என்று யெகோவா சொல்கிறார்.

39 "ஆனால் கடைசி நாட்களில், ஏலாமிலிருந்து சிறைபிடிக்கப்பட்டுப்
போனவர்களை நான் கூட்டிச்சேர்ப்பேன்" என்று யெகோவா சொல்கிறார்.

50 கல்தேயர்களின் தேசமான பாபிலோனைப்[b] பற்றி எரேமியா தீர்க்
கதரிசியின் மூலம் யெகோவா சொன்னது இதுதான்:

2 "இதை எல்லா தேசங்களிலும் சொல்லுங்கள்!
கொடியை* ஏற்றி, அறிவிப்பு செய்யுங்கள்!
எதையும் மறைக்காதீர்கள்!
இப்படிச் சொல்லுங்கள்: 'பாபிலோன் கைப்பற்றப்பட்டது![c]
பேல் அவமானம் அடைந்துவிட்டது![d]
மெரொதாக்கைத் திகில் கவ்விக்கொண்டது!
பாபிலோனின் சிலைகளுக்கு அவமானம் வந்துவிட்டது!
அவளுடைய அருவருப்பான# உருவச்சிலைகள்
மிரண்டுபோய்விட்டன!'

3 அவளைத் தாக்க வடக்கிலிருந்து ஒரு ஜனம் வந்தது.[e]
அவளுடைய தேசத்துக்குக் கோரமான முடிவைக் கொண்டுவந்தது.
அங்கு மனுஷ நடமாட்டமே இல்லாமல்போனது.
மனுஷர்களும் ஓடிப்போய்விட்டார்கள், மிருகங்களும்
ஓடிப்போய்விட்டன.
தேசமே வெறிச்சோடிப்போனது."

4 யெகோவா சொல்வது இதுதான்: "அந்தக் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்
களும் யூதா ஜனங்களும் ஒன்றாக வருவார்கள்.[f] அவர்கள் அழுது
கொண்டே நடந்து வருவார்கள்.[g] ஒன்றாகச் சேர்ந்து அவர்களுடைய கடவு
ளான யெகோவாவைத் தேடுவார்கள்.[h] **5** சீயோனுக்குப் போகும்
வழியைக்[i] கேட்பார்கள். அந்தத் திசையைப் பார்த்தபடி ஒருவரிடம் ஒரு
வர், 'வாருங்கள், என்றுமே மறக்கப்படாத ஒரு நிரந்தர ஒப்பந்தத்தை நாம்
யெகோவாவுடன் செய்து அவரோடு சேர்ந்துகொள்ளலாம்'[j] என்று சொல்
வார்கள். **6** என்னுடைய ஜனங்கள் காணாமல்போன மந்தையைப்[k] போல
ஆகிவிட்டார்கள். அவர்களுடைய மேய்ப்பர்களே அவர்களை மலைகளி
லும் குன்றுகளிலும் அலைய வைத்துவிட்டார்கள்.[l] அவர்களுடைய தொழு
வத்தையே அவர்கள் மறந்துவிட்டார்கள். **7** அவர்களைக் கண்டுபிடிக்கிற
எல்லாரும் அவர்களை ஒழித்துக்கட்டப் பார்க்கிறார்கள்.[m] அவர்களுடைய

50:2 *வே.வா., "கொடிக் கம்பத்தை." #இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.

எதிரிகள், 'எங்கள்மேல் குற்றம் இல்லை. இவர்கள்தான் யெகோவாவுக்குப் பிடிக்காததைச் செய்தார்கள். இவர்களுடைய முன்னோர்கள் நம்பியிருந்த நீதியுள்ள கடவுளான யெகோவாவுக்கு எதிராகப் பாவம் செய்தார்கள்' என்று சொல்கிறார்கள்."

8 "பாபிலோனைவிட்டு ஓடிப்போங்கள்.
கல்தேயர்களின் தேசத்தைவிட்டு வெளியேறுங்கள்.[a]
மந்தையில் முதலாவதாகப் போகிற கடாக்களைப் போலப் போங்கள்.
9 ஏனென்றால், வடக்கிலிருந்து மாபெரும் தேசங்களை[b] ஒரு பெரிய கூட்டமாக வர வைப்பேன்.
பாபிலோனுக்கு எதிராக அந்தக் கூட்டத்தை வர வைப்பேன்.
அது போர் செய்ய அணிவகுத்து வரும்.
பாபிலோனைக் கைப்பற்றும்.
அதன் அம்புகள் போர்வீரனுடைய அம்புகளைப் போலப் பாய்ந்து,
பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்து பறித்துவிடும்.[c]
அவற்றின் குறி தப்பாது.
10 எதிரிகள் கல்தேயாவைச் சூறையாடுவார்கள்.[d]
போதும் போதும் என்கிற அளவுக்கு அதைக் கொள்ளையடிப்பார்கள்"[e] என்று யெகோவா சொல்கிறார்.
11 "ஏனென்றால், என்னுடைய ஜனங்களை நீங்கள் கொள்ளையடித்தபோது[f]
சந்தோஷத்தில் மிதந்தீர்கள்.[g]
புல்வெளியிலுள்ள இளம் பசுவைப் போலத் துள்ளிக் குதித்தீர்கள்.
வீரியமுள்ள குதிரைகள்* போலக் கனைத்தீர்கள்.
12 உங்களுடைய தாய்க்கு அவமானம் வந்துவிட்டது.[h]
உங்களைப் பெற்றெடுத்தவள் ஏமாற்றம் அடைந்துவிட்டாள்.
தேசங்களிலேயே அற்பமான தேசமாகிவிட்டாள்.
தண்ணீர் இல்லாத பொட்டல் காடாகவும் பாலைவனமாகவும் ஆகிவிட்டாள்.[i]
13 யெகோவாவின் கோபத்தினால் அவள் அடியோடு அழிந்துபோவாள்.[j]
மனுஷ நடமாட்டமே இல்லாமல் போவாள்.[k]
அந்த வழியாகப் போகிறவர்கள் அவளைப் பார்த்து அதிர்ச்சி அடைவார்கள்.
பாபிலோனுக்குக் கிடைத்த எல்லா தண்டனைகளையும் பார்த்துக் கேலி செய்வார்கள்.*[l]
14 வில்லை வளைக்கிற வீரர்களே,
எல்லா பக்கத்திலிருந்தும் அணிவகுத்து வந்து பாபிலோனைத் தாக்குங்கள்.
சரமாரியாக அம்பு விடுங்கள்.[m]
ஏனென்றால், அவள் யெகோவாவுக்கு எதிராகப் பாவம் செய்திருக்கிறாள்.[n]
15 எல்லா பக்கத்திலிருந்தும் போர் முழக்கம் செய்யுங்கள்.

50:11 * வே.வா., "பொலிகுதிரைகள்." 50:13 * நே.மொ., "விசில் அடிப்பார்கள்."

அதி. 50
a ஏசா 48:20 எரே 51:6, 45 சக 2:7 2கொ 6:17 வெளி 18:2, 4
b ஏசா 21:2 எரே 51:11, 27, 28, 48 தானி 5:28, 30
c ஏசா 13:17, 18
d எரே 25:12 எரே 27:6, 7
e வெளி 17:16
f ஏசா 14:4-6 ஏசா 47:6 எரே 30:16
g புல 1:21
h ஏசா 47:8
i ஏசா 13:20, 21
j சக 1:15
k எரே 25:12
l எரே 51:37
m ஏசா 13:18 எரே 51:11
n எரே 51: 35, 36

அவள் சரணடைந்துவிட்டாள்.
அவளுடைய தூண்கள் விழுந்துவிட்டன; அவளுடைய மதில்கள் இடிந்துவிட்டன.[a]
ஏனென்றால், யெகோவா அவளைப் பழிவாங்கிவிட்டார்.[b]
நீங்களும் பழி தீர்த்துக்கொள்ளுங்கள்.
அவள் செய்ததையே அவளுக்குத் திருப்பிச் செய்யுங்கள்.[c]
16 பாபிலோனில் விதை விதைக்கிறவர்களையும்
அறுவடை செய்கிறவர்களையும் வெட்டிச் சாய்த்துவிடுங்கள்.[d]
கொடூரமான வாளுக்குப் பயந்து எல்லாரும் அவரவர் தேசத்துக்கே ஓடிப் போவார்கள்.[e]
அவரவர் ஜனங்களிடமே திரும்பிப்போவார்கள்.

17 “இஸ்ரவேல் ஜனங்கள் சிதறிப்போன ஆடுகளைப் போல இருக்
கிறார்கள்.[f] சிங்கங்கள் அவர்களைத் துரத்தின.[g] முதலில் அசீரிய ராஜா
அவர்களைத் தாக்கினான்.[h] அதன்பின், பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்
சார் அவர்களுடைய எலும்புகளை நொறுக்கினான்.[i] **18** அதனால், இஸ்ர
வேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான யெகோவா
சொல்வது இதுதான்: ‘அசீரிய ராஜாவைத் தண்டித்தது போலவே[j] பாபி
லோன் ராஜாவையும் அவன் தேசத்தையும் நான் தண்டிப்பேன். **19** இஸ்ர
வேலை அவனுடைய மேய்ச்சல் நிலத்துக்கே கூட்டிக்கொண்டு வருவேன்.[k]
அவன் கர்மேலிலும் பாசானிலும்[l] எப்பிராயீம் மலைப்பகுதியிலும்[m] கீலே
யாத் மலைப்பகுதியிலும்[n] மேய்ந்து திருப்தியடைவான்.’”

20 யெகோவா சொல்வது இதுதான்: “அந்தக் காலத்தில்,
இஸ்ரவேலிடம் குற்றம் இருக்கிறதா என்று நான் தேடிப் பார்ப்பேன்.
ஆனால், அவனிடம் குற்றமே இருக்காது.
யூதாவிடம் எந்தப் பாவமும் இருக்காது.
நான் உயிரோடு விட்டுவைத்திருக்கிற ஜனங்களை மன்னிப்பேன்.”[o]
21 யெகோவா சொல்வது இதுதான்: “மெரதாயீம் தேசத்துக்கும் பேகோடு[p] ஜனங்களுக்கும் எதிராகப் போ.
அவர்களைப் படுகொலை செய்; அடியோடு அழித்துவிடு.
நான் சொன்னதையெல்லாம் செய்.
22 தேசத்தில் போர் நடக்கிற சத்தம் கேட்கிறது.
பேரழிவின் சத்தம் கேட்கிறது.
23 எல்லா தேசங்களையும் அடித்து நொறுக்கிய சம்மட்டி உடைத்தெறியப்பட்டது![q]
பாபிலோனுக்கு வந்த கோரமான முடிவைப் பார்த்து உலகமே கதிகலங்கிப்போனது![r]
24 பாபிலோனே, உனக்குப் பொறி வைத்தேன்.
உனக்கே தெரியாமல் நீ மாட்டிக்கொண்டாய்.
நீ யெகோவாவையே எதிர்த்தாய்.
அதனால் பிடிபட்டாய்.[s]
25 யெகோவா தன்னுடைய களஞ்சியத்தைத் திறந்து,
தன்னுடைய கோபத்தின் ஆயுதங்களை எடுத்திருக்கிறார்.[t]

அதி. 50
a எரே 51:58
b எரே 51:6, 11
c சங் 137:8 வெளி 18:6
d எரே 51:23
e ஏசா 13:14 எரே 51:9
f எரே 23:1 எரே 50:6 எசே 34:5
g எரே 2:15
h 2ரா 17:6 ஏசா 8:7
i 2ரா 25:1 2நா 36:17 எரே 4:7
j 2ரா 19:35 ஏசா 14:25 செப் 2:13
k ஏசா 11:16 ஏசா 65:10 எரே 23:3 எரே 33:7 எசே 34:14 மீ 2:12
l மீ 7:14
m எரே 31:6
n ஒப 19
o ஏசா 44:22 எரே 31:34 மீ 7:19
p எசே 23:22, 23
q ஏசா 14:5, 6 எரே 51:20
r எரே 51:41 வெளி 18:15, 16
s எரே 51:31 தானி 5:30 வெளி 18:8
t ஏசா 13:5 எரே 51:11

உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவா
கல்தேயர்களின் தேசத்தைத் தண்டிக்கப்போகிறார்.
26 தொலைதூர இடங்களிலிருந்து வந்து அவளைத் தாக்குங்கள்.[a]
அவளுடைய களஞ்சியங்களைத் திறங்கள்.[b]
தானியங்களைக் குவிப்பது போல அவளுடைய பொருள்களைக் குவித்து வையுங்கள்.
அவளை அடியோடு அழித்துவிடுங்கள்.[c]
அவளுடைய ஜனங்களில் ஒருவரைக்கூட விட்டுவைக்காதீர்கள்.
27 அவளுடைய இளம் காளைகளைக் கொன்றுபோடுங்கள்.[d]
வெட்டப்படும் இடத்துக்கு அவற்றை அனுப்புங்கள்.
அவற்றுக்கான தண்டனைத் தீர்ப்பு நாளும் நேரமும் வந்துவிட்டது.
அவற்றின் கதி அவ்வளவுதான்!
28 தப்பித்து ஓடுகிறவர்களின் சத்தம் கேட்கிறது.
அவர்கள் பாபிலோன் தேசத்திலிருந்து தப்பித்துப் போகிறார்கள்.
யெகோவா தேவன் தன்னுடைய ஆலயத்துக்காகப் பழிவாங்கியதைப்[e] பற்றி
சீயோனில் அறிவிப்பதற்குப் போகிறார்கள்.
29 வில்வீரர்களைக்[f] கூப்பிடுங்கள்.
பாபிலோனைத் தாக்கச் சொல்லுங்கள்.
அவளைச் சுற்றிவளையுங்கள்; யாரையும் தப்ப விடாதீர்கள்.
அவளுக்குச் சரியான கூலி கொடுங்கள்.[g]
அவள் செய்ததையே அவளுக்குத் திருப்பிச் செய்யுங்கள்.[h]
ஏனென்றால், அவள் யெகோவாவுக்கு எதிராக அகங்காரத்தோடு நடந்துகொண்டாள்.
இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளுக்குமுன் பெருமையடித்தாள்.[i]
30 அந்த நாளில், அவளுடைய வாலிபர்கள்[j] பொது சதுக்கங்களில் விழுந்து கிடப்பார்கள்.
எல்லா வீரர்களும் அழிந்துபோவார்கள்” என்று யெகோவா சொல்கிறார்.
31 “திமிர் பிடித்தவளே,[k] நான் உன்னைத் தண்டிக்கப்போகிறேன்”[l] என்று உன்னதப் பேரரசராகிய பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.
“நான் உன்னுடைய கணக்கைத் தீர்க்கப்போகிற நாளும் நேரமும் வரப்போகிறது.
32 திமிர் பிடித்தவளே, நீ தடுமாறி விழுவாய்.
உன்னைத் தூக்கிவிட யாரும் இருக்க மாட்டார்கள்.[m]
உன்னுடைய நகரங்களுக்கு நான் தீ வைப்பேன்.
உன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் அது பொசுக்கிவிடும்.”
33 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
“இஸ்ரவேல் ஜனங்களும் யூதா ஜனங்களும் ஒடுக்கப்படுகிறார்கள்.
அவர்களைப் பிடித்துக்கொண்டு போன எல்லாரும்[n]
அவர்களை விடுதலை செய்யாமல் வைத்திருக்கிறார்கள்.[o]

அதி. 50
a எரே 51:27
b எரே 50:10
c ஏசா 14:22, 23
d ஏசா 34:6, 7 எசே 39:18
e சங் 94:1 எரே 51:11
f எரே 50:14
g சங் 137:8 எரே 51:56
h புல 3:64 வெளி 18:6
i ஏசா 14:13
j ஏசா 13:17, 18
k ஏசா 14:13 தானி 4:30
l எரே 51:25
m எரே 51:26
n ஏசா 47:6
o ஏசா 14:17

34 ஆனால், அவர்களை விடுவிப்பவர்[a] பலமுள்ளவர்.
பரலோகப் படைகளின் யெகோவா என்பதுதான் அவருடைய பெயர்.[b]
அவர்களுக்காக அவர் கண்டிப்பாக வழக்காடுவார்.[c]
அவர்களுடைய தேசத்தில் நிம்மதியாக வாழ வைப்பார்.[d]
ஆனால், பாபிலோனின் ஜனங்களுடைய நிம்மதியைப் பறித்துவிடுவார்."[e]
35 "கல்தேயர்களை ஒரு வாள் தாக்கும்" என்று யெகோவா சொல்கிறார்.
"பாபிலோனின் அதிகாரிகளையும் ஞானிகளையும் குடிமக்களையும் அது கொன்றுபோடும்.[f]
36 வெட்டிப் பேச்சு பேசுகிறவர்களை* ஒரு வாள் தாக்கும்; அவர்கள் முட்டாள்தனமாக நடந்துகொள்வார்கள்.
பாபிலோனின் வீரர்களை ஒரு வாள் தாக்கும்; அவர்கள் மிரண்டுபோவார்கள்.[g]
37 அவர்களுடைய குதிரைகளையும் போர் ரதங்களையும்,
அவள் நடுவில் வாழ்கிற மற்ற தேசத்தாரையும் ஒரு வாள் தாக்கும்.
அவர்கள் பெண்களைப் போல ஆகிவிடுவார்கள்.[h]
அவளுடைய பொக்கிஷங்களை ஒரு வாள் தாக்கும்; அவை கைப்பற்றப்படும்.[i]
38 அவளுடைய தண்ணீர் பாழாகிப்போகும்; அது வற்றிப்போகும்.[j]
ஏனென்றால், அவளுடைய தேசத்தில் எங்கு பார்த்தாலும் சிலைகள்தான் இருக்கின்றன.[k]
அவற்றைக் கும்பிடுகிறவர்கள் பயங்கரமான தரிசனங்களைப் பார்த்து பைத்தியக்காரர்கள் போல நடந்துகொள்கிறார்கள்.
39 பாலைவன மிருகங்கள், ஊளையிடுகிற மிருகங்களோடு வாழும்.
பாபிலோனில் நெருப்புக்கோழிகள் தங்கும்.[l]
இனி ஒருபோதும் மனுஷர்கள் அங்கே குடியிருக்க மாட்டார்கள்.
எத்தனை தலைமுறை வந்தாலும் ஒருவரும் அங்கே வாழ மாட்டார்கள்."[m]

40 "சோதோமையும் கொமோராவையும்[n] அவற்றைச் சுற்றியிருந்த ஊர்
களையும்[o] நான் அழித்தது போலவே பாபிலோனையும் அழிப்பேன்.
அங்கே இனி யாரும் குடியிருக்க மாட்டார்கள். மனுஷ நடமாட்டமே இருக்
காது"[p] என்று யெகோவா சொல்கிறார்.

41 இதோ, வடக்கிலிருந்து ஒரு ஜனம் வருகிறது.
மாபெரும் தேசமும் பலம்படைத்த ராஜாக்களும்[q]
பூமியின் தொலைதூர இடங்களிலிருந்து வருகிறார்கள்.[r]
42 அவர்கள் வில்லினாலும் ஈட்டியினாலும் தாக்குகிறார்கள்.[s]
அவர்கள் ஈவிரக்கமே இல்லாதவர்கள், கொடூரமானவர்கள்.[t]
குதிரைகளில் அவர்கள் பாய்ந்து வருகிற சத்தம்,
கடல் கொந்தளிக்கிற சத்தத்தைப் போல இருக்கிறது.[u]
பாபிலோன் மகளே, உனக்கு எதிராக அவர்கள் ஒன்றாக அணிவகுத்து வருகிறார்கள்.[v]

50:36 * வே.வா., "போலித் தீர்க்கதரிசிகளை."

அதி. 50
a ஏசா 41:14; வெளி 18:8
b ஏசா 47:4
c புல 3:59
d ஏசா 14:3, 4
e எரே 51:24
f ஏசா 47:13; எரே 51:57; தானி 5:7
g எரே 51:30
h ஏசா 13:8
i ஏசா 45:3
j ஏசா 44:27; எரே 51: 36, 37; வெளி 16:12
k ஏசா 46:1; எரே 51: 44, 52; தானி 5:1, 4
l ஏசா 13:20, 21; எரே 51:37; வெளி 18:2
m எரே 25:12; எரே 51: 43, 64
n ஏசா 13:19
o ஆதி 19: 24, 25; யூ 7
p எரே 51:26
q ஏசா 45:1; எரே 51:11; எரே 51:27, 28
r ஏசா 13:5, 17
s எரே 50:9
t சங் 137:8; ஏசா 13:17, 18
u எரே 51:42
v எரே 51:27

43 அவர்கள் வரும் செய்தி பாபிலோன் ராஜாவின் காதுக்கு எட்டிவிட்டது.[a]
அவனுடைய கைகள் வெடவெடக்கின்றன.[b]
அவன் பயத்தில் நடுங்குகிறான்.
பிரசவ வலியில் துடிக்கிற பெண்ணைப் போலத் துடிக்கிறான்.

44 "யோர்தானை ஒட்டியுள்ள புதர்க் காடுகளிலிருந்து பாய்ந்து வரு
கிற சிங்கத்தைப் போல ஒருவன் பாய்ந்து வந்து பாதுகாப்பான மேய்ச்
சல் நிலங்களைத் தாக்குவான். ஆனால், நான் அவர்களை ஒரே நொடி
யில் அவளைவிட்டு ஓட வைப்பேன். தேர்ந்தெடுக்கப்பட்டவனின் கையில்
அவளைக் கொடுப்பேன்.[c] என்னைப் போல யார் இருக்கிறார்கள்? எனக்கே
சவால்விட யாரால் முடியும்? எந்த மேய்ப்பனால் என்முன் நிற்க முடியும்?[d]
45 அதனால் ஜனங்களே, பாபிலோனுக்கு எதிராக யெகோவா எடுத்தி
ருக்கிற முடிவைப்[e] பற்றியும், கல்தேயர்களின் தேசத்துக்கு எதிராக அவர்
யோசித்திருக்கிற விஷயத்தைப் பற்றியும் கேளுங்கள்:

மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகள் கண்டிப்பாக இழுத்துச் செல்லப்படும்.
அவற்றின் தொழுவங்களை அவர் வெறுமையாக்குவார்;[f] ஏனென்றால்,
அவர்கள் பாவம் செய்தார்கள்.
46 பாபிலோன் கைப்பற்றப்படுகிற சத்தத்தில் பூமி அதிரும்.
தேசங்களில் அலறல் சத்தம் கேட்கும்!"[g]

51

யெகோவா சொல்வது இதுதான்:
"இதோ, பாபிலோனுக்கும்[h] லெப்-கீமாய்* ஜனங்களுக்கும் எதிராக
ஒரு சூறாவளியை நான் வீச வைப்பேன்.
2 அழிவு நாளில் நாலாபக்கத்திலிருந்தும் பாபிலோனைத் தாக்க நான்
எதிரிகளை அனுப்புவேன்.[i]
தானியத்தைப் புடைப்பது போல அவர்கள் அவளைப் புடைப்பார்கள்.
அப்போது, ஜனங்கள் எல்லாரும் பதரைப் போலச் சிதறிப்போவார்கள்;
தேசம் வெறுமையாகும்.
3 வில்வீரர்கள் வில்லை வளைக்க வேண்டாம்.
யாரும் உடல்கவசத்தைப் போட்டுக்கொண்டு நிற்க வேண்டாம்.
அவளுடைய வாலிபர்கள்மேல் இரக்கம் காட்டாதீர்கள்.[j]
அவளுடைய படைகளை மொத்தமாக அழித்துவிடுங்கள்.
4 கல்தேயர்களின் தேசத்தில் அவர்கள் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்.
குத்திப்போடப்பட்டவர்கள் அவளுடைய தெருக்களில் கிடப்பார்கள்.[k]
5 ஏனென்றால், இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுளைப் பொறுத்தவரை,
அவர்களுடைய தேசம்* குற்றங்களால் நிறைந்திருக்கிறது.
அதோடு, பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா
இஸ்ரவேலையும் யூதாவையும் கைவிடவில்லை. அவர்கள்
விதவைகளைப் போல ஆகவில்லை.[l]
6 பாபிலோனைவிட்டுத் தப்பித்து ஓடுங்கள்.
உங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடுங்கள்.[m]

51:1 *இது கல்தேயாவின் இன்னொரு பெயர் என்று கருதப்படுகிறது. **51:5** *அதாவது, "கல்தேயர்களுடைய தேசம்."

அதி. 50
a எரே 51:31
b தானி 5:6
c ஏசா 41:25
d எரே 49:19-21
e எரே 51:11
f ஏசா 13:1, 20; எரே 51:43
g வெளி 18:9

அதி. 51
h எரே 50:9
i எரே 50:14, 29
j ஏசா 13:17, 18; எரே 50:30
k ஏசா 13:15
l சங் 94:14; ஏசா 44:21; எரே 46:28; சக 2:12
m எரே 50:8; சக 2:7; வெளி 18:4

அவள் செய்த குற்றத்துக்காக நீங்கள் அழிந்துபோகாதீர்கள்.
ஏனென்றால், இது யெகோவா பழிவாங்கும் நேரம்.
அவள் செய்ததற்குச் சரியான கூலியை அவர் கொடுக்கிறார்.[a]
7 பாபிலோன் யெகோவாவின் கையில் ஒரு தங்கக் கிண்ணத்தைப் போல இருந்தாள்.
பூமியிலுள்ள எல்லாரும் போதையேறக் குடிக்கும்படி அவள் செய்தாள்.
அவளுடைய திராட்சமதுவை எல்லா தேசத்து ஜனங்களும் போதையேறக் குடித்தார்கள்.[b]
அதனால்தான் பைத்தியக்காரத்தனமாக நடக்கிறார்கள்.[c]
8 பாபிலோன் திடீரென்று விழுந்து நொறுங்கினாள்.[d]
அவளுக்காக அழுது புலம்புங்கள்![e]
அவளுடைய வலியைக் குறைப்பதற்காக பரிமளத் தைலத்தை வாங்கி வாருங்கள்.
அவள் ஒருவேளை குணமாகலாம்."
9 "பாபிலோனைக் குணப்படுத்த நினைத்தோம், ஆனால் முடியவில்லை.
அவளை விட்டுவிட்டு அவரவர் ஊருக்குத் திரும்பிப் போகலாம், வாருங்கள்.[f]
ஏனென்றால், அவளுடைய குற்றங்கள் வானத்தை எட்டிவிட்டன.
மேகங்களைத் தொட்டுவிட்டன.[g]
10 யெகோவா நமக்காக நியாயம் செய்திருக்கிறார்.[h]
வாருங்கள், நாம் சீயோனுக்குப் போய், நம் கடவுளான யெகோவா செய்ததை எல்லாருக்கும் சொல்லலாம்."[i]
11 "அம்புகளைத்[j] தீட்டிப் பளபளப்பாக்குங்கள்; வட்டமான கேடயங்களை எடுத்துக்கொள்ளுங்கள்.*
யெகோவா பாபிலோனை அழிக்க நினைத்திருக்கிறார்.
அதனால், மேதியர்களின் ராஜாக்களை யெகோவா தூண்டியிருக்கிறார்.[k]
அவருடைய ஆலயத்துக்காக அவர் பழிவாங்கப்போகிறார்.
12 பாபிலோனின் மதில்களுக்கு எதிராகக் கொடியை[l] ஏற்றுங்கள்.*
பாதுகாப்பைக் கூட்டுங்கள்; காவலர்களை நிறுத்துங்கள்.
பதுங்கியிருந்து தாக்குவதற்கு ஆட்களைத் தயாராக்குங்கள்.
ஏனென்றால், யெகோவா அவளுக்கு எதிராகப் போர்த்தந்திரம் செய்திருக்கிறார்.
பாபிலோனின் ஜனங்களை என்ன செய்யப்போவதாகச் சொன்னாரோ அதைச் செய்வார்."[m]
13 "ஏராளமான தண்ணீரின் மேல் உட்கார்ந்திருக்கிறவளே,[n]
சொத்துகளைக் குவித்து வைத்திருக்கிறவளே,[o]
நீ கொள்ளை லாபம் சம்பாதித்தது போதும்! உனக்கு முடிவு வந்துவிட்டது![p]
14 பரலோகப் படைகளின் யெகோவா உன்னிடம்,

அதி. 51
a எரே 25:12, 14; எரே 50:15
b வெளி 17:1, 2; வெளி 18:3
c எரே 25:15, 16
d ஏசா 21:9; ஏசா 47:9; வெளி 14:8
e வெளி 18:2, 9
f ஏசா 13:14
g வெளி 18:4, 5
h மீ 7:9
i எரே 50:28
j எரே 50:14
k ஏசா 13:17; ஏசா 45:1
l ஏசா 13:2
m வெளி 17:17
n வெளி 17: 1, 15
o ஏசா 45:3; எரே 50:37
p ஆப 2:9; வெளி 18: 11, 12; வெளி 18:19

51:11 *அல்லது, "அம்புகளை அம்புக்கூடுகளில் நிரப்புங்கள்." **51:12** *வே.வா., "கொடிக் கம்பத்தை நாட்டுங்கள்."

'வெட்டுக்கிளிகளைப் போல ஏராளமான ஆட்கள் உன்மேல்
படையெடுத்து வரும்படி செய்வேன்.
அவர்கள் உன்னைத் தோற்கடித்து, வெற்றி முழக்கம் செய்வார்கள்'[a]
என்று தன்மீதே ஆணையிட்டுச் சொல்கிறார்.
15 அவர்தான் தன்னுடைய வல்லமையினால் பூமியைப் படைத்தார்.
தன்னுடைய ஞானத்தினால் நிலத்தை உண்டாக்கினார்.[b]
தன்னுடைய புத்தியினால்* வானத்தை விரித்தார்.[c]
16 அவர் குரல் கொடுக்கும்போது
வானத்தில் உள்ள தண்ணீர் கொந்தளிக்கிறது.*
பூமியின் எல்லா இடங்களிலிருந்தும் அவர் மேகங்களை# எழும்ப
வைக்கிறார்.
மழையோடு மின்னலை மின்ன வைக்கிறார்.△
காற்றைத் தன்னுடைய கிடங்குகளிலிருந்து வீசச் செய்கிறார்.[d]
17 மனுஷர்கள் எல்லாருமே அறிவும் புத்தியும் இல்லாமல் நடக்கிறார்கள்.
சிலைகளைச் செதுக்கிய ஆசாரிகள் எல்லாருமே வெட்கப்பட்டுப்
போவார்கள்.[e]
அவர்கள் வார்த்த சிலைகள் பொய்யானவை.
உயிர்மூச்சு இல்லாதவை.[f]
18 அவை ஒன்றுக்கும் உதவாதவை,[g] கேலிக்குரியவை.
கடவுளுடைய தண்டனைத் தீர்ப்பின் நாளில் அவை அழிந்துபோகும்.
19 யாக்கோபின் கடவுளோ அந்தச் சிலைகளைப் போன்றவர் அல்ல.
அவர்தான் எல்லாவற்றையும் உருவாக்கினார்.
அவருடைய விசேஷ சொத்தாகிய ஜனத்தை உருவாக்கியவரும்
அவர்தான்.[h]
பரலோகப் படைகளின் யெகோவா என்பதுதான் அவருடைய பெயர்."[i]
20 "நீதான் என் கையில் இருக்கிற தடி; நீதான் என்னுடைய போர் ஆயுதம்.
உன்னை வைத்து நான் தேசங்களை நொறுக்குவேன்.
உன்னை வைத்து ராஜ்யங்களை அழிப்பேன்.
21 உன்னை வைத்து குதிரைகளையும் குதிரைவீரர்களையும்
நொறுக்குவேன்.
உன்னை வைத்து போர் ரதங்களையும் ரதவீரர்களையும்
நொறுக்குவேன்.
22 உன்னை வைத்து ஆண்களையும் பெண்களையும் நொறுக்குவேன்.
உன்னை வைத்து வயதானவர்களையும் சிறுவர்களையும்
நொறுக்குவேன்.
உன்னை வைத்து வாலிபப் பையன்களையும் வாலிபப் பெண்களையும்
நொறுக்குவேன்.
23 உன்னை வைத்து மேய்ப்பர்களையும் மந்தைகளையும் நொறுக்குவேன்.
உன்னை வைத்து உழவர்களையும் ஏர்மாடுகளையும் நொறுக்குவேன்.

51:15 *வே.வா., "புரிந்துகொள்ளும் திறனால்." **51:16** *வே.வா., "முழங்குகிறது." #வே.வா., "தண்ணீரை ஆவியாக." △அல்லது, "மழைக்கு மதகுகளை வைக்கிறார்."

அதி. 51
a எரே 50:15
b சங் 93:1
சங் 104:24
c சங் 136:5
நீதி 3:19
ஏசா 40:22
எரே 10:12-16
d சங் 135:7
e ஏசா 44:11
f ஆப 2:19
g ஏசா 41:29
எரே 14:22
h உபா 32:9
i ஏசா 47:4

உன்னை வைத்து ஆளுநர்களையும் துணை அதிகாரிகளையும்
நொறுக்குவேன்.
24 பாபிலோனையும் கல்தேயர்கள் எல்லாரையும் நான் பழிதீர்ப்பேன்.
சீயோனில் உங்களுடைய கண் முன்னால் அவர்கள் செய்த எல்லா
அக்கிரமத்துக்கும்
கூலி கொடுப்பேன்”[a] என்று யெகோவா சொல்கிறார்.
25 “அழிவு உண்டாக்குகிற மலையே, நான் உன்னைத் தண்டிப்பேன்”[b]
என்று யெகோவா சொல்கிறார்.
“முழு உலகத்தையும் அழிக்கிறவளே,[c]
என்னுடைய கையால் உன்னைப் பாறைகளிலிருந்து கீழே
உருட்டிவிடுவேன்.
தீயில் கொளுத்திவிடுவேன்.”
26 “உன்னிடமிருந்து மூலைக் கல்லையோ அஸ்திவாரக் கல்லையோ
யாரும் எடுக்க மாட்டார்கள்.
ஏனென்றால், நீ என்றென்றும் பாழாய்க் கிடப்பாய்”[d] என்று யெகோவா
சொல்கிறார்.
27 “தேசத்தில் கொடியை* ஏற்றுங்கள்.[e]
ஜனங்களின் நடுவே ஊதுகொம்பை ஊதுங்கள்.
அவளைத் தாக்குவதற்கு ஜனங்களைத் தயாராக்குங்கள்.
அரராத்,[f] மின்னி, அஸ்கினாஸ்[g] ராஜ்யங்களைக் கூப்பிடுங்கள்.
படைக்கு ஆள்சேர்க்க படை அதிகாரிக்குக் கட்டளை கொடுங்கள்.
குதிரைகளை இளம் வெட்டுக்கிளிகளைப் போல வரச் செய்யுங்கள்.
28 மேதியாவின் ராஜாக்களையும்,[h] ஆளுநர்களையும், துணை
அதிகாரிகளையும்,
அவர்கள் ஆட்சி செய்கிற எல்லா தேசங்களையும்
அவளோடு போர் செய்யத் தயாராகச் சொல்லுங்கள்.
29 பூமி அதிர்ந்து நடுநடுங்கும்.
யெகோவா பாபிலோனை என்ன செய்ய நினைத்தாரோ அதைச்
செய்வார்.
அதற்குக் கோரமான முடிவைக் கொண்டுவருவார்; அங்கே யாரும்
குடியிருக்க மாட்டார்கள்.[i]
30 பாபிலோனின் வீரர்கள் போர் செய்வதை நிறுத்திவிட்டு,
அவர்களுடைய கோட்டைகளில் உட்கார்ந்திருக்கிறார்கள்.
அவர்களுடைய பலமெல்லாம் போய்விட்டது.[j]
அவர்கள் பெண்களைப் போல ஆகிவிட்டார்கள்.[k]
பாபிலோனின் வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.
அவளுடைய தாழ்ப்பாள்கள் உடைக்கப்பட்டன.[l]
31 ஒரு அஞ்சல்காரன் இன்னொரு அஞ்சல்காரனிடமும்,
ஒரு தூதுவன் இன்னொரு தூதுவனிடமும் ஓடுகிறான்.
நகரம் எல்லா பக்கத்திலிருந்தும் கைப்பற்றப்பட்டது[m] என்றும்,

51:27 * வே.வா., “கொடிக் கம்பத்தை.”

அதி. 51
a சங் 137:8
b எரே 50:31
c எரே 25:9
d எரே 50:13, 40; வெளி 18:21
e ஏசா 13:2; எரே 51:12
f ஆதி 8:4
g ஆதி 10:2, 3; எரே 50:41
h ஏசா 13:17; தானி 5:30, 31
i ஏசா 13:13, 19; எரே 50:13; எரே 50:39, 40
j ஏசா 13:7
k எரே 50:37
l சங் 107:16; ஏசா 45:2
m ஏசா 47:11; எரே 50:24, 43

32 ஆற்றுத்துறைகள்* கைப்பற்றப்பட்டன[a] என்றும்,
நாணற்புல்# படகுகள் கொளுத்தப்பட்டன என்றும்,
வீரர்கள் பயந்து நடுங்குகிறார்கள் என்றும்
பாபிலோன் ராஜாவுக்கு அறிவிப்பதற்காக அவர்கள் ஓடுகிறார்கள்."

33 இஸ்ரவேலின் கடவுளும் பரலோகப் படைகளின் கடவுளுமான
யெகோவா சொல்வது இதுதான்:

"பாபிலோன் மகள் ஒரு களத்துமேட்டைப் போல இருக்கிறாள்.
அவளை நன்றாக மிதிப்பதற்கு இதுதான் சமயம்.
ரொம்பச் சீக்கிரத்தில் அவளுடைய அறுவடைக் காலம் வந்துவிடும்."

34 "பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சார் என்னை விழுங்கிவிட்டான்.[b]
என்னைக் குழப்பத்தில் தவிக்க வைத்துவிட்டான்.
என்னை ஒரு காலியான பாத்திரத்தைப் போல ஆக்கிவிட்டான்.
ஒரு பெரிய பாம்பு விழுங்குவது போல அவன் என்னை
விழுங்கிவிட்டான்.[c]
என்னிடமிருந்த நல்ல பொருள்களால் தன்னுடைய வயிற்றை
நிரப்பிவிட்டான்.
என்னைக் கழுவி ஊற்றிவிட்டான்.

35 'என்னையும் என் உடலையும் கொடுமைப்படுத்திய பழியை
பாபிலோன் சுமக்கட்டும்' என்று சீயோன் சொல்கிறாள்.[d]
'என்னுடைய இரத்தத்தைச் சிந்திய பழியை கல்தேயர்கள் சுமக்கட்டும்'
என்று எருசலேம் சொல்கிறாள்."

36 அதனால் யெகோவா சொல்வது இதுதான்:
"இதோ, நான் உனக்காக வழக்காடுகிறேன்.[e]
நான் உனக்காகப் பழிவாங்குவேன்.[f]
அவளுடைய கடலையும் கிணறுகளையும் வற்றிப்போக வைப்பேன்.[g]

37 பாபிலோன் வெறும் கற்குவியலாகும்.[h]
அது நரிகள் தங்கும் இடமாகும்.[i]
அதற்குக் கோரமான முடிவு வரும்; அதைப் பார்த்து எல்லாரும் கேலி
செய்வார்கள்.*
அங்கு மனுஷ நடமாட்டமே இல்லாமல் போகும்.[j]

38 எல்லாரும் இளம் சிங்கங்களைப் போல ஒன்றாகக் கர்ஜிப்பார்கள்.
சிங்கக் குட்டிகளைப் போல உறுமுவார்கள்."

39 "அவர்கள் குஷியாக இருக்கும்போது நான் அவர்களுக்கு விருந்து
வைப்பேன்.
அவர்களைக் குடிக்க வைத்து போதையில் மிதக்க வைப்பேன்.[k]
அவர்கள் ஒரேயடியாகத் தூங்கிவிடுவார்கள்.
எழுந்திருக்கவே மாட்டார்கள்"[l] என்று யெகோவா சொல்கிறார்.

40 "செம்மறியாட்டுக் குட்டிகளையும், செம்மறியாட்டுக் கடாக்களையும்,
வெள்ளாட்டுக் கடாக்களையும் போல
அவர்களை நான் வெட்டுவதற்குக் கொண்டுபோவேன்."

51:32 * ஜனங்கள் ஆற்றைக் கடக்கும் ஆழமில்லாத பகுதிகள். # அதாவது, "பாப்பிரஸ் புல்." **51:37** * நே.மொ., "விசில் அடிப்பார்கள்."

அதி. 51
a ஏசா 44:27; எரே 50:38; வெளி 16:12
b 2நா 36:17, 18; எரே 50:17
c எரே 51:44
d சங் 137:8; எரே 50:29
e எரே 50:34
f உபா 32:35
g ஏசா 44:27; எரே 50:38
h எரே 25:12; எரே 50:15
i ஏசா 13:19, 22
j எரே 50: 13, 39
k தானி 5:1, 4
l எரே 25:17, 27; எரே 51:57

41 “சேசாக்கு* கைப்பற்றப்பட்டதே![a]
உலகமே புகழ்ந்த நகரம் பிடிக்கப்பட்டதே![b]
பாபிலோனுக்கு வந்த கோரமான முடிவைப் பார்த்து எல்லாரும் கதிகலங்குகிறார்களே!
42 கடல் பொங்கிவந்து பாபிலோனை மூழ்கடித்தது.
அதன் அலைகள் திரண்டு வந்து அவளை மூடிவிட்டன.
43 அவளுடைய நகரங்களுக்குக் கோரமான முடிவு வந்தது.
அவை தண்ணீர் இல்லாத பொட்டல் காடாகவும் பாலைவனமாகவும் ஆகிவிட்டன.
அங்கு யாரும் குடியிருக்க மாட்டார்கள். அங்கு மனுஷ நடமாட்டமே இருக்காது.[c]
44 பாபிலோனின் பேல்[d] தெய்வத்தை நான் தண்டிப்பேன்.
அவன் விழுங்கியதை அவனையே கக்க வைப்பேன்.[e]
மற்ற தேசங்களிலிருந்து இனி யாரும் அவனிடம் திரண்டுவர மாட்டார்கள்.
பாபிலோனின் மதில் விழுந்துவிடும்.[f]
45 என் ஜனங்களே, அவளைவிட்டு வெளியே வாருங்கள்![g]
யெகோவாவின் கோபம் பற்றியெரிகிறது![h] தப்பித்து ஓடுங்கள்![i]
46 தேசத்துக்கு வரப்போகிற செய்தியைக் கேட்டுப் பயந்து நடுங்காதீர்கள்.
ஒரு வருஷத்தில் அந்தச் செய்தி வரும்.
அடுத்த வருஷத்தில் இன்னொரு செய்தி வரும்.
தேசத்தில் வன்முறை நடப்பதையும், ஆட்சியாளர்கள் மோதிக்கொள்வதையும் பற்றிய செய்தியே அது.
47 இதோ, காலம் வருகிறது.
அப்போது, பாபிலோனின் சிலைகளை அழிப்பேன்.
அவளுடைய தேசத்துக்கு அவமானம் வரும்.
அவளுடைய ஜனங்கள் அங்கேயே வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்.[j]
48 அவளை அழிப்பவர்கள் வடக்கிலிருந்து வருவார்கள்.[k]
பாபிலோனின் அழிவைப் பார்த்து
வானமும் பூமியும் அவற்றில் உள்ளவையும் சந்தோஷமாகப் பாடும்”[l] என்று யெகோவா சொல்கிறார்.
49 “பாபிலோன் இஸ்ரவேலர்களை வெட்டி வீழ்த்தியதோடு நிற்கவில்லை,[m]
உலகத்திலுள்ள எல்லா ஜனங்களையுமே தன்னுடைய தேசத்தில் வெட்டி வீழ்த்தினாள்.
50 வாளுக்குத் தப்பியவர்களே, நிற்காமல் ஓடுங்கள்![n]
தூர தேசத்திலிருந்து யெகோவாவை நினைத்துப் பாருங்கள்.
எருசலேமைப் பற்றியும் யோசித்துப் பாருங்கள்.”[o]
51 “எங்களுக்கு அவமானமாக இருக்கிறது; எங்களைப் பழித்துப் பேசுகிறார்கள்.
எங்களால் தலைநிமிரவே முடியவில்லை.

51:41 *இது பாபேல் (பாபிலோன்) என்பதன் இன்னொரு பெயர் என்று கருதப்படுகிறது.

அதி. 51
a எரே 25:17, 26
b ஏசா 13:19; எரே 49:25; தானி 4:30
c ஏசா 13:1, 20; எரே 50:39
d ஏசா 46:1; எரே 50:2
e 2நா 36:7; எஸ்றா 1:7; எரே 51:34; தானி 1:1, 2
f எரே 51:58
g ஏசா 48:20; வெளி 18:4
h ஏசா 13:13
i எரே 51:6; சக 2:7
j ஏசா 13:15; தானி 5:30
k எரே 50:3; எரே 50:41
l ஏசா 44:23; ஏசா 48:20; ஏசா 49:13; வெளி 18:20
m எரே 50:17; எரே 51:24
n எரே 50:8; வெளி 18:4
o எஸ்றா 1:3; சங் 137:5

மற்ற தேசத்து ஜனங்கள்* யெகோவாவின் ஆலயத்துக்கு வந்து அதன் பரிசுத்தமான இடங்களை அழித்துவிட்டார்கள்.”[a]
52 யெகோவா சொல்வது இதுதான்: “இதோ, காலம் வருகிறது.
அப்போது, அவளுடைய சிலைகளை அழிப்பேன்.
அவளுடைய தேசமெங்கும் குத்தப்பட்டுக் கிடக்கிறவர்கள் முனகுவார்கள்.”[b]
53 “பாபிலோன் வானம்வரை ஏறிப்போனாலும்,[c]
அவளுடைய உயரமான கோட்டைகளைப் பலப்படுத்தினாலும்,
அவளை அழிப்பதற்கு நான் ஆட்களை அனுப்புவேன்”[d] என்று யெகோவா சொல்கிறார்.
54 “கேளுங்கள்! பாபிலோனில் அலறல் சத்தம் கேட்கிறது![e]
கல்தேயர்களின் தேசத்தில் பேரழிவின் சத்தம் கேட்கிறது![f]
55 யெகோவா பாபிலோனை அழிக்கிறார்.
அவளுடைய சத்தமான குரலை அவர் அடக்கிவிடுவார்.
அவளுடைய எதிரிகள் போடுகிற சத்தம் கடல் அலைகளின் சத்தத்தைப் போல இருக்கும்.
அவர்களுடைய குரல் எல்லாருக்கும் கேட்கும்.
56 ஏனென்றால், அழிக்கிறவன் பாபிலோனுக்கு எதிராக வருவான்.[g]
அவளுடைய வீரர்களைப் பிடித்துக்கொண்டு போவான்.[h]
அவர்களுடைய வில்லை உடைப்பான்.
ஏனென்றால், யெகோவா பழிதீர்க்கும் கடவுள்.[i]
அவர் கண்டிப்பாகப் பழிவாங்குவார்.[j]
57 நான் அவளுடைய அதிகாரிகளையும் துணை அதிகாரிகளையும் ஞானிகளையும் ஆளுநர்களையும் போர்வீரர்களையும்
போதை ஏறுமளவுக்குக் குடிக்க வைப்பேன்.[k]
அவர்கள் ஒரேயடியாகத் தூங்கிவிடுவார்கள்.
எழுந்திருக்கவே மாட்டார்கள்”[l] என்று ராஜா சொல்கிறார்.
பரலோகப் படைகளின் யெகோவா என்பதுதான் அவருடைய பெயர்.
58 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
“பாபிலோனின் மதில் எவ்வளவு அகலமாக இருந்தாலும் அது தரைமட்டமாக்கப்படும்.[m]
அவளுடைய நுழைவாசல்கள் எவ்வளவு உயரமாக இருந்தாலும் அது சுட்டெரிக்கப்படும்.
ஜனங்களின் உழைப்பெல்லாம் வீணாகிப்போகும்.
தேசங்கள் படும் பாடுகளெல்லாம் நெருப்புக்குத்தான் பலியாகும்.”[n]

59 சிதேக்கியா யூதாவை ஆட்சி செய்த நான்காவது வருஷத்தில்தான்
மாசெயாவின் மகனான நேரியாவின்[o] மகன் செராயாவுக்கு எரேமியா
தீர்க்கதரிசி இந்தக் கட்டளையைக் கொடுத்தார். அப்போது, செராயா சிதேக்
கியாவுடன் சேர்ந்து பாபிலோனுக்குப் போயிருந்தார். ராஜாவின் அலுவல்க
ளைக் கவனித்துக்கொள்ளும் அதிகாரியாக செராயா இருந்தார். 60 பாபி
லோனுக்கு வரவிருந்த தண்டனைகளைப் பற்றிய இந்த எல்லா

51:51 * வே.வா., “முன்பின் தெரியாதவர்கள்.”

அதி. 51
a சங் 79:1
புல 1:10
b ஏசா 13:15
c ஏசா 14:13
தானி 4:30
d எரே 50:10
e ஏசா 13:6
f எரே 50:22, 23
g ஏசா 21:2
h எரே 50:36
i உபா 32:35
சங் 94:1
ஏசா 34:8
எரே 50:29
வெளி 18:5
j சங் 137:8
k எரே 25:27
l எரே 51:39
m எரே 50:15
எரே 51:44
n ஆப 2:13
o எரே 32:12
எரே 36:4
எரே 45:1

வார்த்தைகளையும் எரேமியா ஒரு புத்தகத்தில் எழுதினார். **61** பின்பு
எரேமியா செராயாவிடம், “நீங்கள் போய் பாபிலோனைப் பார்க்கும்போது
இந்த எல்லா வார்த்தைகளையும் சத்தமாக வாசிக்க வேண்டும். **62** அதன்
பின், ‘யெகோவாவே, இந்த நகரம் அழிக்கப்பட்டு மனுஷர்களோ மிரு
கங்களோ இல்லாதபடி காலமெல்லாம் பாழாய்க் கிடக்கும்[a] என்று நீங்கள்
சொல்லியிருக்கிறீர்களே’ என்று சொல்ல வேண்டும். **63** இந்தப் புத்தகத்தி
லிருந்து வாசித்து முடித்த பின்பு, அதனோடு ஒரு கல்லைக் கட்டி, யூப்ர
டிஸ்* ஆற்றின் நடுவே எறிந்துவிட வேண்டும். **64** பின்பு, ‘இப்படித்தான்
பாபிலோன் மூழ்கிப்போகும். அவள் மறுபடியும் தலைதூக்க மாட்டாள்.[b]
ஏனென்றால் கடவுள் அவளைத் தண்டிக்கப்போகிறார். அவளுடைய ஜனங்
கள் களைத்துப்போவார்கள்’[c] என்று சொல்ல வேண்டும்” என்றார்.

எரேமியாவின் வார்த்தைகள் இத்துடன் முடிகின்றன.

52 சிதேக்கியா[d] ராஜாவானபோது அவருக்கு 21 வயது. அவர் எரு
சலேமில் 11 வருஷங்கள் ஆட்சி செய்தார். அவருடைய
அம்மா பெயர் அமுத்தாள்.[e] அவள் லிப்னாவைச் சேர்ந்த எரேமியாவின்
மகள். **2** யோயாக்கீமைப் போலவே சிதேக்கியாவும் யெகோவா வெறுக்
கிற காரியங்களையே செய்துவந்தார்.[f] **3** எருசலேமிலும் யூதாவிலும் இப்
படிப்பட்ட காரியங்கள் நடந்து வந்ததால் யெகோவாவின் கோபம் பற்றி
யெரிந்தது. கடைசியில் அவர்களைத் தன்னுடைய கண் முன்னாலிருந்தே
ஒதுக்கித்தள்ளிவிட்டார்.[g] பாபிலோன் ராஜாவுக்கு எதிராக சிதேக்கியா கல
கம் செய்தார்.[h] **4** அதனால், சிதேக்கியா ஆட்சி செய்த ஒன்பதாம்
வருஷம் 10-ஆம் மாதம் 10-ஆம் தேதியில், பாபிலோன் ராஜாவான நேபு
காத்நேச்சார் தன்னுடைய படை முழுவதையும் திரட்டிக்கொண்டு எருசலே
முடன் போர் செய்ய வந்தான். அவர்கள் நகரத்துக்கு எதிராக முகாம்
போட்டு, சுற்றிலும் முற்றுகைச் சுவர் எழுப்பினார்கள்.[i] **5** சிதேக்கியா
ராஜா ஆட்சி செய்த 11-ஆம் வருஷம்வரை முற்றுகை நீடித்தது.

6 நான்காம் மாதம் ஒன்பதாம் தேதியில்,[j] நகரத்தில் பஞ்சம் மிகக் கடுமை
யாக இருந்தது. குடிமக்களுக்குக் கொஞ்சம்கூட உணவு கிடைக்கவில்லை.[k]
7 கடைசியில், நகரத்தின் மதில் உடைக்கப்பட்டது. கல்தேயர்கள் நகரத்தைச்
சுற்றிவளைத்துக் கொண்டிருந்தார்கள். எல்லா வீரர்களும் ராஜாவின் தோட்
டத்துக்குப் பக்கத்தில் இரண்டு மதில்களுக்கு இடையிலிருந்த நுழைவா
சல் வழியாக ராத்திரியில் நகரத்திலிருந்து தப்பித்துப் போனார்கள். அவர்கள்
அரபா வழியாகத் தப்பித்து ஓடினார்கள்.[l] **8** ஆனால், கல்தேய வீரர்கள்
சிதேக்கியாவைத் துரத்திக்கொண்டுபோய்,[m] எரிகோ பாலைநிலத்தில் பிடித்
தார்கள். அவருடைய வீரர்கள் எல்லாரும் அவரைவிட்டு சிதறி ஓடினார்கள்.
9 கல்தேய வீரர்கள் ராஜாவைப் பிடித்து, காமாத்திலுள்ள ரிப்லாவில் இருந்த
பாபிலோன் ராஜாவிடம் கொண்டுபோனார்கள். ராஜா அவனுக்குத் தண்ட
னைத் தீர்ப்பு வழங்கினான். **10** சிதேக்கியாவின் கண் முன்னாலேயே அவ
ருடைய மகன்களை பாபிலோன் ராஜா படுகொலை செய்தான். யூதா
வின் அதிகாரிகள் எல்லாரையும்கூட ரிப்லாவில் படுகொலை செய்தான்.
11 பின்பு பாபிலோன் ராஜா, சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி,[n] அவ
ருக்குச் செம்பு விலங்குகளை மாட்டி, அவரை பாபிலோனுக்குக் கொண்டு
போய், அவர் சாகும்வரை காவலிலேயே வைத்திருந்தான்.

51:63 * அதாவது, “ஐப்பிராத்து.”

அதி. 51
a ஏசா 13:1, 20; ஏசா 14:23; எரே 50:3, 39; எரே 51:29, 37
b வெளி 18:21
c எரே 51:58

அதி. 52
d 2ரா 24:17-20; 2நா 36:11, 12
e 2ரா 23:31
f 2ரா 24:1; 2நா 36:5
g லேவி 26:33; உபா 31:16, 17
h 2நா 36:11, 13; எசே 17:15
i உபா 28:52; 2ரா 25:1, 2; ஏசா 29:3; எரே 39:1; எசே 4:1, 2; எசே 21:21, 22
j எரே 39:2
k உபா 28:53-57; 2ரா 25:3-7; ஏசா 3:1; எசே 4:16
l எரே 39:4-7
m எரே 24:8; எரே 34:21; எரே 37:17; எரே 38:18
n எசே 12:13

12 ஐந்தாம் மாதம் பத்தாம் தேதியில், அதாவது பாபிலோன் ராஜா
நேபுகாத்நேச்சார் ஆட்சி செய்த 19-ஆம் வருஷத்தில், நேபுசராதான்
எருசலேமுக்குள் வந்தான்.[a] இவன் காவலாளிகளின் தலைவன், பாபி
லோன் ராஜாவின் சேவகன். **13** யெகோவாவின் ஆலயத்தையும் ராஜா
வின் அரண்மனையையும் எருசலேமிலிருந்த எல்லா வீடுகளையும் அவன்
தீ வைத்துக் கொளுத்தினான்.[b] பெரிய மனிதர்களுடைய வீடுகளைக்கூட
ஒன்றுவிடாமல் எரித்துப்போட்டான். **14** காவலாளிகளின் தலைவனோடு
இருந்த கல்தேய வீரர்கள் எல்லாரும் சேர்ந்து எருசலேமைச் சுற்றியிருந்த
மதில்களை இடித்துப்போட்டார்கள்.[c]

15 காவலாளிகளின் தலைவன் நேபுசராதான், நகரத்தில் மிச்சமிருந்த
பாமர மக்களையும் மற்ற ஜனங்களையும் சிறைபிடித்துக்கொண்டு போனான்.
அதோடு, பாபிலோன் ராஜாவிடம் சரணடைந்தவர்களையும், திறமையான
கைத்தொழிலாளிகளையும் கொண்டுபோனான்.[d] **16** ஆனால், காவலாளிக
ளின் தலைவன் நேபுசராதான் திராட்சைத் தோட்டங்களிலும் வயல்களிலும்
கட்டாய வேலை செய்வதற்காக பரம ஏழைகள் சிலரை அங்கேயே விட்டு
விட்டுப் போனான்.[e]

17 கல்தேயர்கள் யெகோவாவின் ஆலயத்திலிருந்த செம்புத் தூண்களை
யும்[f] யெகோவாவின் ஆலயத்திலிருந்த தள்ளுவண்டிகளையும்[g] 'செம்புக்
கடல்' தொட்டியையும்[h] உடைத்து, அவற்றின் செம்பையெல்லாம் பாபிலோ
னுக்குக் கொண்டுபோனார்கள்.[i] **18** அதோடு சட்டிகள், சாம்பல் அள்ளும்
கரண்டிகள், திரி வெட்டும் கருவிகள், கிண்ணங்கள்,[j] கோப்பைகள்[k] ஆகிய
வற்றையும், ஆலயத்தில் பயன்படுத்தப்பட்ட எல்லா செம்புப் பாத்திரங்களை
யும் எடுத்துக்கொண்டு போனார்கள். **19** சொக்கத்தங்கத்திலும் வெள்ளியி
லும்[l] செய்யப்பட்ட தொட்டிகளையும்,[m] தணல் அள்ளும் கரண்டிகளையும்,
கிண்ணங்களையும், சட்டிகளையும், குத்துவிளக்குகளையும்,[n] கோப்பைக
ளையும், காணிக்கைகளுக்கான கிண்ணங்களையும் காவலாளிகளின் தலை
வன் கொண்டுபோனான். **20** யெகோவாவின் ஆலயத்தில் சாலொமோன்
செய்துவைத்த இரண்டு தூண்கள், 'செம்புக் கடல்' தொட்டியின் கீழிருந்த 12
செம்புக் காளைகள்,[o] தள்ளுவண்டிகள் ஆகியவற்றின் செம்பு எடைபோட
முடியாதளவுக்கு மிக அதிகமாக இருந்தது.

21 ஒவ்வொரு தூணின் உயரமும் 18 முழம்.* ஒவ்வொரு தூணையும்
அளவுநூல் கொண்டு அளந்தபோது அதன் சுற்றளவு 12 முழம் இருந்தது.[p]
அதன் தடிமன் நான்கு விரலளவு இருந்தது. உள்ளே வெற்றிடமாக இருந்
தது. **22** அதன் மேலிருந்த கும்பம் செம்பினால் செய்யப்பட்டிருந்தது.
ஒரு கும்பத்தின் உயரம் ஐந்து முழம்.[q] கும்பத்தைச் சுற்றியிருந்த வலைப்
பின்னலும் மாதுளம்பழ வடிவங்களும் செம்பினால் செய்யப்பட்டிருந்தன.
மற்றொரு தூணும் இதேபோல் இருந்தது, மாதுளம்பழ வடிவங்களும் இதே
போல் இருந்தன. **23** கும்பத்தைச் சுற்றிலும் 96 மாதுளம்பழ வடிவங்
கள் இருந்தன. மொத்தம், 100 மாதுளம்பழ வடிவங்கள் வலைப்பின்னலைச்
சுற்றி இருந்தன.[r]

24 முதன்மை குரு செராயாவையும்,[s] இரண்டாம் குரு செப்பனியா
வையும்,[t] காவலாளிகள்[u] மூன்று பேரையும் நேபுசராதான் பிடித்துக்
கொண்டு போனான். **25** போர்வீரர்களுக்குத் தலைவரான அரண்மனை

52:21 * ஒரு முழம் என்பது 44.5 செ.மீ. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 52
a 2ரா 25:8-10
b 1ரா 9:8
2நா 36:17, 19
சங் 74:8
சங் 79:1
எரே 26:18
புல 2:7
எசே 24:21
c எரே 39:8
d 2ரா 25:11, 12
எரே 39:9, 10
e 2ரா 25:22
f 1ரா 7:15, 21
g 1ரா 7:27
h 1ரா 7:23
2நா 4:11-15
i 2ரா 25:13-16
எரே 27:19, 22
j 1ரா 7:45
k 2நா 4:19, 22
l 2நா 24:14
2நா 36:18
m 1ரா 7:50
n 1ரா 7:48, 49
o 1ரா 7:23, 25
p 1ரா 7:15-20
q 2நா 3:15
r 2நா 3:16
2நா 4:13
s 1நா 6:14
எஸ்றா 7:1
t எரே 21:1, 2
எரே 29:25
u 2ரா 25:18-21

அதிகாரி ஒருவரையும், நகரத்தில் இருந்த ராஜாவின் நெருங்கிய நண்பர்
கள் ஏழு பேரையும், போருக்கு ஆட்களைத் திரட்டுகிற படைத் தளபதியின்
செயலாளரையும், நகரத்தில் மிச்சமிருந்த பாமர மக்களில் 60 ஆண்களை
யும் பிடித்துக்கொண்டு போனான். **26** காவலாளிகளின் தலைவன் நேபுச
ராதான் இவர்களைப் பிடித்து ரிப்லாவில் இருந்த பாபிலோன் ராஜாவிடம்
கொண்டுபோனான். **27** காமாத் பகுதியிலிருந்த ரிப்லாவில்[a] பாபிலோன்
ராஜா இவர்களை வெட்டிக் கொன்றான். இப்படி, யூதா ஜனங்கள் தங்களு
டைய தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள்.[b]

28 நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துக்கொண்டு போனவர்களின் விவரம்
இதுதான்: நேபுகாத்நேச்சார் ஆட்சி செய்த ஏழாம் வருஷத்தில் 3,023 யூதர்
கள் சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள்.[c]

29 நேபுகாத்நேச்சார் ஆட்சி செய்த 18-ஆம் வருஷத்தில்,[d] எருசலேமி
லிருந்து 832 பேர் சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள்.

30 நேபுகாத்நேச்சார் ஆட்சி செய்த 23-ஆம் வருஷத்தில், காவலாளிக
ளின் தலைவனான நேபுசராதான் 745 யூதர்களை சிறைபிடித்துக்கொண்டு
போனான்.[e]

மொத்தம், 4,600 பேர் சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள்.

31 ஏவில்-மெரொதாக் என்பவன் பாபிலோனின் ராஜாவான வருஷத்
தில் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறையிலிருந்து விடுதலை
செய்தான்.[f] அது, யோயாக்கீன் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப்
போன 37-ஆம் வருஷம்,[g] 12-ஆம் மாதம், 25-ஆம் நாள். **32** யோயாக்
கீனிடம் ஏவில்-மெரொதாக் அன்பாகப் பேசினான். பாபிலோனில் தன்
னோடு இருந்த மற்ற ராஜாக்களைவிட அவருக்கு உயர்ந்த ஸ்தானத்தைக்
கொடுத்தான். **33** அதன்பின், யோயாக்கீன் கைதி உடையைப் போட்
டுக்கொள்ளவில்லை; வாழ்நாள் முழுக்க ராஜாவுடன் சேர்ந்து சாப்பிட்டார்.
34 பாபிலோன் ராஜாவின் கட்டளைப்படியே, யோயாக்கீன் உயிரோடு
இருந்த நாளெல்லாம் அவருக்கு உணவுப் பொருள்கள் கொடுக்கப்பட்டன.
அவர் சாகும்வரை தினமும் அவை அவருக்குக் கொடுக்கப்பட்டன.

அதி. 52
a 2ரா 25:6, எரே 52:10
b லேவி 18:25, லேவி 26:33, உபா 28:36, ஏசா 24:3, எரே 25:9
c 2ரா 24:12, 14
d எரே 32:1
e எரே 6:9
f 2ரா 25:27-30
g 2ரா 24:8, எரே 24:1, எரே 37:1, மத் 1:11

புலம்பல்

முக்கியக் குறிப்புகள்

1 எருசலேம் ஒரு விதவையாகச் சித்தரிக்கப்படுகிறாள்
- அவள் தன்னந்தனியாக உட்கார்ந்திருக்கிறாள் (1)
- சீயோனின் மகா பெரிய பாவம் (8, 9)
- சீயோனைக் கடவுள் கைவிட்டுவிட்டார் (12-15)
- சீயோனுக்கு ஆறுதல் சொல்ல யாருமில்லை (17)

2 எருசலேமின் மேல் யெகோவாவின் கோபம்
- அவளுக்கு இரக்கம் காட்டப்படவில்லை (2)
- யெகோவா அவளுக்கு ஓர் எதிரியைப் போல ஆகிவிட்டார் (5)
- சீயோனுக்காகக் கண்ணீர் விடப்படுகிறது (11-13)
- ஒருசமயம் அழகாக இருந்த நகரத்தை வழியில் போகிறவர்கள் கேலி செய்கிறார்கள் (15)

சீயோனின் அழிவைப் பார்த்து எதிரிகள் சந்தோஷப்படுகிறார்கள் (17)

3 எரேமியா தன்னுடைய உணர்ச்சிகளையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறார்

“உங்களுக்காகப் பொறுமையோடு காத்திருப்பேன்” (21)

ஒவ்வொரு நாள் காலையிலும் கடவுளின் இரக்கம் புதுப்புது விதங்களில் (22, 23)

கடவுள் தன்னை நம்புகிறவர்களுக்கு நல்லவராக இருக்கிறார் (25)

சிறு வயதிலேயே பாரமான சுமைகளைச் சுமப்பது நல்லது (27)

ஜெபங்கள் வந்து சேராதபடி கடவுள் மேகத்தால் தடுத்துவிட்டார் (43, 44)

4 எருசலேம் சுற்றிவளைக்கப்பட்டதால் வந்த மோசமான பாதிப்புகள்

பஞ்சம் வருகிறது (4, 5, 9)

தாய்கள் தங்கள் குழந்தைகளை வேக வைத்துத் தின்கிறார்கள் (10)

யெகோவா தன்னுடைய கோபத்தைக் கொட்டித் தீர்த்திருக்கிறார் (11)

5 திரும்பவும் நல்ல வாழ்க்கை தரும்படி ஜனங்கள் ஜெபம் செய்கிறார்கள்

“எங்களுக்கு வந்த கதியை நினைத்துப் பாருங்கள்” (1)

“எங்கள் கதி அவ்வளவுதான்! நாங்கள் பாவம் செய்துவிட்டோம்” (16)

“யெகோவாவே, மறுபடியும் எங்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள்” (21)

“பழையபடி எங்களை நன்றாக வாழ வையுங்கள்” (21)

א [*ஆலெஃப்*]*

1 ஐயோ! ஜனசந்தடி உள்ள நகரமாக இருந்தவள்[a] இப்போது
தன்னந்தனியாக உட்கார்ந்திருக்கிறாளே!
ஏராளமான குடிமக்களோடு இருந்தவள்[b] இப்போது விதவை போல
ஆகிவிட்டாளே!
மாகாணங்களின் ராணியாக இருந்தவள் இப்போது அடிமைப்
பெண்ணாக ஆகிவிட்டாளே![c]

ב [*பேத்*]

2 ராத்திரியில் அவள் கதறிக் கதறி அழுகிறாள்.[d] அவளுடைய
கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடுகிறது.
ஆறுதல் சொல்ல அவளுடைய காதலர்கள் யாருமே இல்லை.[e]
அவளுடைய நண்பர்களே அவளுக்குத் துரோகம் செய்து,[f]
அவளுடைய எதிரிகளாக மாறிவிட்டார்கள்.

ג [*கீமெல்*]

3 யூதா சிறைபிடிக்கப்பட்டு கொண்டுபோகப்பட்டாள்;[g] அங்கே
கொடுமைகளை அனுபவிக்கிறாள்.[h]
அவள் மற்ற தேசத்து ஜனங்களோடுதான் வாழ வேண்டும்;[i] அவளுக்கு
நிம்மதியே கிடையாது.
அவள் கஷ்டத்தில் தவித்துக்கொண்டிருந்த சமயம் பார்த்து எதிரிகள்
அவளைப் பிடித்துவிட்டார்கள்.

1:1 *முதல் நான்கு அதிகாரங்கள் ஒப்பாரி வைத்துப் பாடப்பட்ட பாட்டுகள். எபிரெய எழுத்துக்களின் வரிசைப்படியே இவை 22 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த பகுதியின் மேலே அந்தந்த எபிரெய எழுத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அதி. 1
a சங் 122:3, 4
b 1ரா 4:20
c உபா 28:15, 48; 2ரா 25:11, 12
d புல 1:16
e எரே 4:30; எசே 16:37
f எரே 30:14
g லேவி 26:33; 2ரா 24:14, 15; 2ரா 25:21; எரே 39:9; எரே 52:27
h எரே 17:4
i உபா 28:64

ד [*டாலத்*]

4 சீயோனுக்குப் போகிற சாலைகள் புலம்புகின்றன; ஏனென்றால்,
பண்டிகைக்கு யாரும் வரவில்லை.[a]
அவளுடைய நுழைவாசல்கள் இடிக்கப்பட்டுக் கிடக்கின்றன;[b]
அவளுடைய குருமார்கள் பெருமூச்சுவிடுகிறார்கள்.
அவளுடைய கன்னிப்பெண்கள்* அழுது புலம்புகிறார்கள்; அவள்
தீராத வேதனையில் துடிக்கிறாள்.

ה [*ஹே*]

5 அவளுடைய எதிரிகள் இப்போது அவளுடைய எஜமான்களாக
இருக்கிறார்கள்; அவளுடைய விரோதிகளுக்கு இப்போது
கவலையே இல்லை.[c]
அவள் பாவத்துக்குமேல் பாவம் செய்ததால் யெகோவா அவளைச்
சோகத்தில் தள்ளிவிட்டார்.[d]
அவளுடைய பிள்ளைகளை எதிரிகள் பிடித்துக்கொண்டு போனார்கள்.[e]

ו [*வா*]

6 சீயோன் மகளுடைய மகிமையெல்லாம் மங்கிவிட்டது.[f]
அவளுடைய அதிகாரிகள், புல் இல்லாமல் தவிக்கிற மான்களைப்
போல இருக்கிறார்கள்.
அவர்களைத் துரத்துகிறவர்களுக்கு முன்பாகச் சக்தியே இல்லாமல்
நடந்து போகிறார்கள்.

ז [*ஸாயின்*]

7 எருசலேம் வீடுவாசலை இழந்து கஷ்டப்படும்போது,
ஒருகாலத்தில் தான் அனுபவித்த அருமையான
காரியங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கிறாள்.[g]
அவளுடைய ஜனங்கள் எதிரிகளின் கையில் சிக்கியபோது யாரும்
உதவிக்கு வரவில்லை.[h]
அவள் அழிந்துபோனதைப் பார்த்து எதிரிகள் கைகொட்டிச்
சிரித்தார்கள்.[i]

ח [*ஹேத்*]

8 எருசலேம் மகா பெரிய பாவம் செய்தாள்.[j]
அதனால்தான், எல்லாராலும் அருவருக்கப்படுகிறாள்.
அவளை உயர்வாக மதித்தவர்கள் இப்போது அவளைக் கேவலமாக
நடத்துகிறார்கள்.
ஏனென்றால், அவளுடைய நிர்வாணத்தை அவர்கள் பார்த்தார்கள்.[k]
அவள் குமுறிக்கொண்டு,[l] அவமானத்தில் திரும்பிக்கொள்கிறாள்.

ט [*டேத்*]

9 அவளுடைய பாவாடை தீட்டுப்பட்டிருக்கிறது.
அவளுடைய எதிர்காலத்தைப் பற்றி அவள் யோசிக்கவே இல்லை.[m]
அவளுக்குப் பயங்கரமான அழிவு வந்தது; அவளுக்கு ஆறுதல்
சொல்ல யாருமே இல்லை.
யெகோவாவே, நான் படுகிற வேதனையைப் பாருங்கள். என்னுடைய
எதிரி ஜெயித்துவிட்டதாகப் பெருமையடிக்கிறான்.[n]

1:4 * வே.வா., "இளம் பெண்கள்."

அதி. 1
a ஆமோ 8:10
b ஏசா 3:26
c சக 1:15
d 2நா 36:15, 16; நெ 9:33; தானி 9:7, 16
e எரே 39:9; எரே 52:30
f எசே 24:21
g 1ரா 10:27
h எரே 52:4
i சங் 137:7; புல 2:16
j ஏசா 1:4; ஏசா 59:2; எசே 22:4
k எரே 13:22; எசே 23:29
l எரே 4:31
m எரே 8:7
n எரே 50:29

י [*யோத்*]

10 அவளுடைய எல்லா பொக்கிஷங்களின் மேலும் எதிரி கை
வைத்துவிட்டான்.[a]
எந்த ஜனங்கள் உங்கள் சபைக்குள் வரக் கூடாது என்று கட்டளை
கொடுத்தீர்களோ
அந்த ஜனங்களே அவளுடைய ஆலயத்துக்குள் வருவதை அவள்
பார்த்தாள்![b]

כ [*காஃப்*]

11 அவளுடைய மக்கள் எல்லாரும் பெருமூச்சு விடுகிறார்கள்.
உயிர்வாழ வேண்டும் என்பதற்காக உணவைத் தேடி அலைகிறார்கள்.[c]
கொஞ்சம் உணவுக்காகக் கையில் இருக்கிற மதிப்புள்ள பொருள்களைக்
கொடுத்துவிட்டார்கள்.
யெகோவாவே, நான் எதற்கும் லாயக்கில்லாத பெண்ணாகிவிட்டதைப்
பாருங்கள்.

ל [*லாமெத்*]

12 சாலையில் போகிறவர்களே, இது உங்களுக்கு ஒரு பெரிய
விஷயமாகவே தெரியவில்லையா?
என்னைக் கொஞ்சம் பாருங்கள்!
எனக்கு வந்த வேதனையைவிட பயங்கரமான வேதனை
வேறு ஏதாவது இருக்கிறதா?
யெகோவாதான் அவருடைய கடும் கோபத்தின் நாளில் என்னை
இப்படித் தண்டித்துவிட்டார்.[d]

מ [*மேம்*]

13 மேலிருந்து அவர் என்னுடைய எலும்புகளுக்குள் நெருப்பை
அனுப்பி,[e] எல்லாவற்றையும் அடக்கி ஒடுக்கிவிட்டார்.
என் கால்களைச் சிக்க வைக்க வலையை விரித்தார்; என்னைத்
திரும்பிப் போக வைத்துவிட்டார்.
கைவிடப்பட்டவளைப் போல என்னை ஆக்கிவிட்டார்.
நாளெல்லாம் நான் சுகமில்லாமல் கிடக்கிறேன்.

נ [*நூன்*]

14 அவர் தன்னுடைய கையால் என்னுடைய குற்றங்களையெல்லாம் கட்டி
ஒரு நுகத்தடியைப் போல என் கழுத்தின் மேல் வைத்தார்; என்
தெம்பெல்லாம் போய்விட்டது.
என்னால் எதிர்க்க முடியாதவர்களின் கையில் யெகோவா என்னைக்
கொடுத்துவிட்டார்.[f]

ס [*சாமெக்*]

15 என்னுடைய பலசாலிகள் எல்லாரையும் யெகோவா தூக்கி
வீசிவிட்டார்.[g]
என்னுடைய வாலிபர்களை நொறுக்க ஒரு படையை வர வைத்தார்.[h]
கன்னிப்பெண்ணாகிய யூதாவைத் திராட்சரச ஆலையில் யெகோவா
மிதித்துப்போட்டார்.[i]

ע [*ஆயின்*]

16 இதையெல்லாம் நினைத்து நான் கதறுகிறேன்;[j] என்னுடைய
கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடுகிறது.

அதி. 1
a எரே 52:17, 19
தானி 1:1, 2
b 2நா 36:17, 18
சங் 74:7
எரே 52:13
c எரே 38:9
எரே 52:6
புல 2:12
புல 4:4
d எரே 21:7
e சங் 102:3
f லேவி 26:37
எசே 11:9
g 2ரா 24:14, 15
h 2நா 36:17
i வெளி 14:19
வெளி 19:15
j எரே 31:15

எனக்கு ஆறுதல் சொல்லவோ புதுத்தெம்பு தரவோ யாரும் இல்லை,
எல்லாரும் தூரமாகப் போய்விட்டார்கள்.
எதிரி ஜெயித்துவிட்டதால் என் மகன்களுடைய வாழ்க்கையே
பாழாய்ப் போய்விட்டது.

פ [*பே*]

17 சீயோன் தன்னுடைய கைகளை விரித்திருக்கிறாள்;[a] அவளுக்கு
ஆறுதல் சொல்ல யாருமே இல்லை.
யாக்கோபைத் தாக்கச் சொல்லி அவனைச் சுற்றியுள்ள எல்லா
எதிரிகளுக்கும் யெகோவா கட்டளை கொடுத்திருக்கிறார்.[b]
அந்த எதிரிகளுக்கு எருசலேமைப் பார்த்தாலே அருவருப்பாக
இருக்கிறது.[c]

צ [*சாதே*]

18 யெகோவா நீதியுள்ளவர்.[d] நான்தான் அவருடைய கட்டளைகளுக்குக்
கீழ்ப்படியாமல் போனேன்.[e]
ஜனங்களே, கேளுங்கள்; என்னுடைய வேதனையைப் பாருங்கள்.
என்னுடைய கன்னிப்பெண்களும்* வாலிபர்களும்
சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள்.[f]

ק [*கோஃப்*]

19 நான் என்னுடைய காதலர்களைக் கூப்பிட்டேன்; ஆனால், அவர்கள்
எனக்குத் துரோகம் செய்துவிட்டார்கள்.[g]
நகரத்திலே என்னுடைய குருமார்களும் பெரியோர்களும்*
உயிர்வாழ்வதற்காக உணவு தேடி அலைந்தார்கள்.
ஆனால் ஒன்றும் கிடைக்காமல் செத்துப்போனார்கள்.[h]

ר [*ரேஷ்*]

20 யெகோவாவே, நான் தவிக்கிற தவிப்பைப் பாருங்கள்.
என் குடல் துடிக்கிறது. துக்கம் என் நெஞ்சத்தைப் பிழிகிறது.
நான் உங்களுக்குக் கொஞ்சமும் கீழ்ப்படியாமல் போய்விட்டேனே![i]
வெளியே வாள் எல்லாரையும் வெட்டிச் சாய்க்கிறது;[j] வீட்டுக்குள்ளும்
சாவுதான் விழுகிறது.

ש [*ஷீன்*]

21 ஜனங்கள் என்னுடைய பெருமூச்சைக் கேட்டார்கள்; எனக்கு ஆறுதல்
சொல்ல யாருமே இல்லை.
எனக்கு வந்த அழிவைப் பற்றி எல்லா எதிரிகளும் கேள்விப்பட்டார்கள்.
நீங்கள் என்னைத் தண்டித்ததைப் பார்த்து அவர்கள்
சந்தோஷப்படுகிறார்கள்.[k]
ஆனால், நீங்கள் சொன்ன நாள் வரும்போது[l] அவர்களும் என்னைப்
போல ஆகிவிடுவார்கள்.[m]

ת [*ட்டா*]

22 என்னுடைய குற்றங்களுக்காக நீங்கள் என்னைக் கடுமையாகத்
தண்டித்தது போலவே,
அவர்கள் செய்த அக்கிரமங்களுக்காக அவர்களையும் கடுமையாகத்
தண்டியுங்கள்.[n]

அதி. 1
a எரே 4:31
b உபா 28:49; 2ரா 24:1, 2; 2ரா 25:1
c புல 1:8
d நெ 9:33; தானி 9:7
e 1சா 12:14, 15
f உபா 28:32
g எரே 30:14
h 2ரா 25:3; எரே 38:9
i சங் 107:11; ஏசா 1:2; ஏசா 63:10
j உபா 32:25; எரே 15:2
k எசே 25:6, 7; ஒப 12
l ஏசா 13:19; எரே 25:12-14; யோவே 3:19
m சங் 137:8, 9; ஏசா 51:22, 23
n எரே 51:35

1:18 * வே.வா., "இளம் பெண்களும்." **1:19** * வே.வா., "மூப்பர்களும்."

நான் பெருமூச்சு விட்டுக்கொண்டே இருக்கிறேன். என் நெஞ்சு வலிக்கிறது.

א [*ஆலெஃப்*]

2 ஐயோ! யெகோவாவின் கோபம் சீயோன் மகளை மேகம்போல் மூடிவிட்டதே!
இஸ்ரவேலின் மகிமையை அவர் வானத்திலிருந்து மண்ணுக்குத் தள்ளிவிட்டார்.[a]
தன்னுடைய கோபத்தின் நாளில் தன்னுடைய கால்மணையை[b] அவர் நினைத்துப் பார்க்கவில்லை.

ב [*பேத்*]

2 யாக்கோபு குடியிருந்த இடங்களையெல்லாம் யெகோவா கரிசனை இல்லாமல் அழித்துவிட்டார்.
யூதா மகளின் கோட்டைகளைக் கோபத்தோடு இடித்துப்போட்டார்.[c]
அவளைத் தரைமட்டமாக்கி, அவளுடைய தேசத்துக்கும் தலைவர்களுக்கும்[d] அவமானத்தை வர வைத்துவிட்டார்.[e]

ג [*கீமெல்*]

3 கோபத் தீயினால் இஸ்ரவேலின் அதிகாரத்தையெல்லாம் அழித்துவிட்டார்.
எதிரி வந்தபோது இஸ்ரவேலுக்குக் கைகொடுத்து உதவாமல் போய்விட்டார்.[f]
அவருடைய கோபம் யாக்கோபின் மேல் நெருப்பாய்ப் பற்றியெரிந்தது.
அவனைச் சுற்றியிருந்த எல்லாவற்றையும் அது சுட்டெரித்தது.[g]

ד [*டாலத்*]

4 எதிரியைப் போலத் தாக்குவதற்காக அவர் வில்லை வளைத்து, வலது கையைத் தயாராக வைத்தார்.[h]
கண்களுக்கு அருமையான எல்லாரையும் கொன்றுபோட்டார்.[i]
சீயோன் மகளுடைய கூடாரத்துக்குள்[j] கோபத்தைத் தீ போலக் கொட்டினார்.[k]

ה [*ஹே*]

5 யெகோவா எதிரியைப் போல ஆகிவிட்டார்.[l]
இஸ்ரவேலை அழித்துவிட்டார்.
அவளுடைய எல்லா கோபுரங்களையும் தரைமட்டமாக்கிவிட்டார்.
அவளுடைய எல்லா கோட்டைகளையும் நாசமாக்கிவிட்டார்.
யூதாவைப் பயங்கரமாக அழுது புலம்ப வைத்துவிட்டார்.

ו [*வா*]

6 தோட்டத்தில் இருக்கிற பந்தலைப் போலத் தன்னுடைய கூடாரத்தைப் பிரித்தெறிந்தார்.[m]
தன்னுடைய பண்டிகைக்கு முடிவுகட்டினார்.[n]
பண்டிகையையும் ஓய்வுநாளையும் சீயோன் மறந்துபோகும்படி யெகோவா செய்துவிட்டார்.
பயங்கர கோபத்தினால் ராஜாக்களையும் குருமார்களையும் வெறுத்து ஒதுக்கிவிட்டார்.[o]

அதி. 2
a புல 2:15
b 1நா 28:2; சங் 132:7; ஏசா 60:13
c உபா 28:52; மீ 5:11
d ஏசா 39:7; ஏசா 43:28
e எசே 21:26, 27
f சங் 74:10, 11
g உபா 32:22; ஏசா 42:25; எரே 7:20
h உபா 28:63; ஏசா 63:10; எரே 21:5
i 2ரா 25:21
j எரே 10:20
k எரே 4:4
l எரே 30:14
m 2ரா 25:8, 9; 2நா 36:19; ஏசா 63:18; ஏசா 64:11
n புல 1:4
o எரே 52:24, 27

ז [*ஸாயின்*]

7 யெகோவா தன்னுடைய பலிபீடத்தை ஒதுக்கித்தள்ளினார்.
தன்னுடைய ஆலயத்தை நிராகரித்தார்.[a]
சீயோனின் கோட்டைச் சுவர்களை எதிரிகளின் கையில்
கொடுத்துவிட்டார்.[b]
பண்டிகை நாளின் ஆரவாரத்தைப் போல யெகோவாவின் ஆலயத்தில்
அவர்களுடைய ஆரவாரம் கேட்கிறது.[c]

ח [*ஹேத்*]

8 சீயோன் மகளுடைய மதிலை இடித்துப்போட[d] யெகோவா தீர்மானம்
செய்துவிட்டார்.
அளவுநூலை எடுத்து அளந்துவிட்டார்.[e]
அழிவைக் கொண்டுவர அவர் தயங்கவில்லை.
அரணையும் மதிலையும் அழுது புலம்ப வைத்தார்.
அவற்றின் பலமெல்லாம் போய்விட்டது.

ט [*டேத்*]

9 அவளுடைய வாசல் கதவுகள் மண்ணில் புதைந்துவிட்டன.[f]
அவளுடைய தாழ்ப்பாள்களை அவர் உடைத்தெறிந்தார்.
அவளுடைய ராஜாக்களும் அதிகாரிகளும் வேறு தேசத்து
ஜனங்களோடு இருக்கிறார்கள்.[g]
சட்டத்தை* யாரும் கடைப்பிடிப்பது இல்லை; அவளுடைய
தீர்க்கதரிசிகளுக்குக்கூட யெகோவாவிடமிருந்து எந்தத் தரிசனமும்
கிடைப்பதில்லை.[h]

י [*யோத்*]

10 சீயோன் மகளின் பெரியோர்கள்* ஒன்றும் பேசாமல் தரையில்
உட்கார்ந்திருக்கிறார்கள்.[i]
தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொள்கிறார்கள்; துக்கத்
துணியை# உடுத்தியிருக்கிறார்கள்.[j]
எருசலேமின் கன்னிப்பெண்கள் தலைகுனிந்து நிற்கிறார்கள்.

כ [*காஃப்*]

11 அழுது அழுது என் கண்கள் வீங்கிவிட்டன.[k]
என் குடல் துடிக்கிறது.
என்னுடைய ஈரல் உருகி தரையில் ஓடுகிறது.
என் ஜனங்கள் அழிந்துபோனார்களே![l]
பிள்ளைகளும் குழந்தைகளும் நகரத்தின் பொது சதுக்கங்களில்
சுருண்டு விழுகிறார்களே![m]

ל [*லாமெத்*]

12 படுகாயம் அடைந்தவர்களைப் போல அவர்கள் மயக்கத்தில்
கிடக்கிறார்கள்.
"சாப்பிடுவதற்கும் குடிப்பதற்கும் ஒன்றுமே இல்லையா?"[n] என்று
முனகிக்கொண்டே
தங்களுடைய தாயின் மடியில் உயிரை விடுகிறார்கள்.

2:9 *வே.வா., "அறிவுரையை." **2:10** *வே.வா., "மூப்பர்கள்." #சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 2
a லேவி 26:31; எரே 26:6; எரே 52:12, 13; எசே 24:21; மீ 3:12
b 2நா 36:19
c சங் 74:4
d 2ரா 25:10; எரே 39:8
e 2ரா 21:13; ஏசா 28:17
f நெ 1:3; எரே 14:2
g உபா 28:15, 36; 2ரா 24:15; 2ரா 25:7; புல 4:20; எசே 12:13; தானி 1:3, 6
h சங் 74:9; எரே 23:16; எசே 7:26
i ஏசா 3:26
j எரே 6:26; எசே 7:18
k புல 3:48
l எரே 14:17
m எரே 11:22; புல 2:19; புல 4:4
n உபா 28:49, 51; 2ரா 25:3; ஏசா 3:1; எரே 18:21

מ [*மேம்*]

13 எருசலேம் மகளே, நான் உனக்கு எதை ஆதாரமாகக் காட்டுவேன்?
உன்னை எதனோடு ஒப்பிடுவேன்?
கன்னிப்பெண்ணாகிய சீயோனே, நான் உன்னை எதனோடு ஒப்பிட்டு
ஆறுதல் சொல்வேன்?
உன்னுடைய காயம் கடலைப் போலப் பெரிதாக இருக்கிறதே.[a] யாரால்
உன்னைக் குணமாக்க முடியும்?[b]

נ [*நூன்*]

14 உன்னுடைய தீர்க்கதரிசிகள் பார்த்த தரிசனங்கள் பொய்யானவை,
அர்த்தமற்றவை.[c]
அவர்கள் உன்னுடைய குற்றத்தைச் சுட்டிக்காட்டவில்லை; நீ
சிறைபிடிக்கப்பட்டுப் போவதைத் தடுக்கவில்லை.[d]
பொய்த் தரிசனங்களைச் சொல்லிச் சொல்லியே உன்னை
ஏமாற்றினார்கள்.[e]

ס [*சாமெக்*]

15 வழியில் போகிறவர்கள் உன்னைப் பார்த்துக் கைகொட்டிச்
சிரிக்கிறார்கள்.[f]
எருசலேம் மகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டு,* [g] தலையாட்டி,
"இந்த நகரத்தையா 'அழகே உருவான நகரம்,
உலகத்துக்கே சந்தோஷம் தருகிற நகரம்' என்றெல்லாம்
புகழ்ந்தார்கள்?"[h] என்று சொல்கிறார்கள்.

פ [*பே*]*

16 உன்னைப் பார்த்து எதிரிகள் கிண்டல் செய்து விசில் அடிக்கிறார்கள்.
பற்களைக் கடித்துக்கொண்டு, "நாம் அவளை விழுங்கிவிட்டோம்.[i]
இந்த நாளுக்காகத்தான் காத்திருந்தோம்.[j] அது வந்துவிட்டது!
நம் கண்ணாலேயே பார்த்துவிட்டோம்!"[k] என்று சொல்கிறார்கள்.

ע [*ஆயின்*]

17 யெகோவா தான் நினைத்ததைச் செய்துவிட்டார்.[l]
ரொம்பக் காலத்துக்கு முன்னால் சொன்னதை[m] நிறைவேற்றிவிட்டார்.[n]
கரிசனை காட்டாமல் அழித்துவிட்டார்.[o]
உன்னைப் பார்த்து எதிரி சந்தோஷப்படும்படி செய்துவிட்டார்.
உன் விரோதிகளுக்கு அதிக பலம் தந்துவிட்டார்.

צ [*சாதே*]

18 சீயோன் மகளின் மதிலே, ஜனங்கள் யெகோவாவிடம் கதறுகிறார்கள்.
ராத்திரி பகலாகக் கண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடட்டும்.
நீ ஓய்வெடுக்காதே; உன் கண்களுக்கு ஓய்வே கொடுக்காதே.

ק [*கோஃப்*]

19 எழுந்திரு! ராத்திரியிலே, முதல் ஜாமத்திலே, கதறி அழு!
யெகோவாவுக்கு முன்னால் உன் இதயத்தைத் தண்ணீர்போல்
ஊற்றிவிடு.

2:15 *நே.மொ., "ஆச்சரியத்தில் விசில் அடித்து." **2:16** *எபிரெய அகரவரிசையில் "பே" என்று எழுத்து "ஆயின்" என்ற எழுத்துக்கு அடுத்ததாக வரும் என்றாலும், இங்கே அதற்கு முன்னதாக வருகிறது.

அதி. 2
a எரே 14:17, தானி 9:12
b எரே 30:12
c எரே 2:8, எரே 27:14, எசே 13:2, 3
d எரே 23:14
e எரே 23:32, எரே 27:9, மீ 3:5, செப் 3:4
f எசே 25:2, 6
g 1ரா 9:8, எரே 25:9
h சங் 48:2, எசே 16:14
i எரே 51:34
j மீ 4:11
k ஒப 13
l எரே 18:11, மீ 2:3
m லேவி 26:14, 17, உபா 28:15
n 2ரா 23:27
o எசே 5:11

பஞ்சத்தின் கொடுமையால் தெரு முனைகளில் சுருண்டு விழுகிற[a] உன் பிள்ளைகளுக்காக
அவரிடம் உயிர்ப்பிச்சை கேட்டுக் கெஞ்சு.

ר [*ரேஷ்*]

20 யெகோவாவே, உங்களிடம் கடுமையான தண்டனை பெற்றவளைப் பாருங்கள்.
பெண்கள் தாங்கள் பெற்றெடுத்த குழந்தைகளையே சாப்பிட வேண்டுமா?[b]
குருமார்களும் தீர்க்கதரிசிகளும் யெகோவாவின் ஆலயத்தில் கொல்லப்பட வேண்டுமா?[c]

ש [*ஷீன்*]

21 சிறுவர்களும் பெரியவர்களும் தெருக்களில் செத்துக் கிடக்கிறார்கள்.[d]
என்னுடைய வாலிபப் பெண்களும்* வாலிபப் பையன்களும் வாளால் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள்.[e]
உங்களுடைய கோபத்தின் நாளில் அவர்களைக் கொன்றுவிட்டீர்கள்.
கரிசனை காட்டாமல் அவர்களை வெட்டிப்போட்டீர்கள்.[f]

ת [*ட்டா*]

22 பண்டிகைக்காக[g] ஜனங்களை வரவழைப்பது போல,
எல்லா திசைகளிலிருந்தும் நீங்கள் திகிலை வரவழைத்திருக்கிறீர்கள்.
யெகோவாவுடைய கோபத்தின் நாளில் யாருமே தப்பிக்கவில்லை, யாருமே பிழைக்கவில்லை.[h]
நான் பெற்றெடுத்து வளர்த்தவர்களை எதிரி கொன்றுபோட்டான்.[i]

א [*ஆலெஃப்*]

3 கடவுளுடைய கடும் கோபத்தின் பிரம்பினால் அடி வாங்கி வேதனைப்படுகிறவன் நான்.
2 அவர் என்னை விரட்டிவிட்டார்; வெளிச்சத்தில் நடக்க வைக்காமல் இருட்டில் நடக்க வைக்கிறார்.[j]
3 நாள் முழுக்க என்னை அடித்துக்கொண்டே இருக்கிறார்.[k]

ב [*பேத்*]

4 என்னுடைய சதையையும் தோலையும் சிதைத்துவிட்டார்.
என் எலும்புகளை உடைத்துவிட்டார்.
5 என்னை வளைத்துப் பிடித்தார்; கசப்பான விஷத்தையும் கஷ்டத்தையும் எல்லா பக்கத்திலிருந்தும் கொடுத்தார்.[l]
6 ரொம்பக் காலத்துக்குமுன் இறந்தவர்களைப் போலவே என்னையும் இருட்டான இடத்தில் தள்ளிவிட்டார்.

ג [*கீமெல்*]

7 என்னால் தப்பிக்கவே முடியாதபடி சுற்றிலும் சுவர் எழுப்பினார்.
கனமான செம்பு விலங்குகளை என் கால்களில் மாட்டினார்.[m]
8 உதவிக்காக நான் கெஞ்சிக் கதறுவதை அவர் கேட்கவே இல்லை.[n]
9 என்னுடைய பாதைகளைக் கற்களால் அடைத்தார்.
என்னுடைய வழிகளைத் தாறுமாறாக்கினார்.[o]

2:21 * வே.வா., “கன்னிப் பெண்களும்.”

அதி. 2
- a ஏசா 51:20; புல 4:9; எசே 5:16
- b லேவி 26:29; உபா 28:53; எரே 19:9; புல 4:10; எசே 5:10
- c எசே 9:6, 7
- d உபா 28:49, 50; 2நா 36:17
- e எரே 9:21; எரே 18:21
- f எரே 13:14; எரே 21:7; புல 3:43; எசே 5:11; எசே 9:6
- g உபா 16:16
- h செப் 1:18
- i உபா 28:18

அதி. 3
- j உபா 28:15, 29; எரே 13:16
- k ஏசா 63:10
- l எரே 8:14; எரே 9:15; புல 3:19
- m எரே 39:7
- n சங் 80:4; சங் 102:2; ஏசா 1:15; மீ 3:4
- o ஏசா 63:17

ד [*டாலத்*]
10 பதுங்கியிருந்து தாக்கும் கரடியையும் சிங்கத்தையும் போல என்னைத் தாக்குவதற்குக் காத்திருந்தார்.[a]
11 வழியிலிருந்து என்னை இழுத்துக்கொண்டு போய் நார்நாராகக் கிழித்தார்.*
என்னைச் சின்னாபின்னமாக்கினார்.[b]
12 வில்லை வளைத்து, என்னைக் குறிவைத்தார்.

ה [*ஹே*]
13 தன் அம்புக்கூட்டில் உள்ள அம்புகளால் என் சிறுநீரகங்களைக் குத்திக் கிழித்தார்.
14 எல்லா ஜனங்களும் என்னைக் கேலி செய்கிறார்கள்; நாளெல்லாம் என்னைக் கிண்டல் செய்து பாட்டுப் பாடுகிறார்கள்.
15 கசப்பானவற்றால் அவர் என்னை நிரப்பியிருக்கிறார்; எட்டியைக் கொடுத்து திணறடித்திருக்கிறார்.[c]

ו [*வா*]
16 கற்களால் என் பற்களை அவர் உடைக்கிறார்.
என்னைச் சாம்பலில் புரள வைக்கிறார்.[d]
17 என்னுடைய நிம்மதியைப் பறித்துவிட்டீர்கள்; சந்தோஷத்தையே* நான் மறந்துவிட்டேன்.
18 அதனால் நான், "என்னுடைய மகிமை போய்விட்டது; யெகோவாமேல் நான் வைத்திருந்த நம்பிக்கையும் போய்விட்டது" என்று சொல்கிறேன்.

ז [*ஸாயின்*]
19 என் கஷ்டங்களை நினைத்துப் பாருங்கள். நான் வீடுவாசல் இல்லாமல் தவிக்கிறேன்,[e] எட்டியையும் கசப்பான விஷத்தையும் விழுங்குகிறேன்.[f]
20 நீங்கள் கண்டிப்பாக என்னை நினைத்துப் பார்ப்பீர்கள், இறங்கி வந்து எனக்கு உதவுவீர்கள்.[g]
21 இதை ஞாபகத்தில் வைத்து, உங்களுக்காகப் பொறுமையோடு காத்திருப்பேன்.[h]

ח [*ஹேத்*]
22 யெகோவாவுடைய மாறாத அன்பினால்தான் நாம் இன்னும் அழிந்துபோகவில்லை.[i]
அவருடைய இரக்கத்துக்கு முடிவே இல்லை.[j]
23 ஒவ்வொரு நாள் காலையிலும் அவர் புதுப்புது விதங்களில் இரக்கம் காட்டுகிறார்.[k] கடவுளே, நீங்கள் எப்போதுமே நம்பகமானவர்.[l]
24 "யெகோவாதான் என்னுடைய பங்கு.[m] அதனால், நான் அவருக்காகப் பொறுமையோடு காத்திருப்பேன்"[n] என்று சொன்னேன்.

ט [*டேத்*]
25 யெகோவா தன்னை நம்புகிறவர்களுக்கும்[o] தன்னைத் தேடுகிறவர்களுக்கும்[p] நல்லவராக இருக்கிறார்.

3:11 *அல்லது, "பேச்சுமூச்சில்லாமல் கிடக்க வைத்தார்." **3:17** *வே.வா., "நல்லதையே."

அதி. 3
a யோபு 38:39, 40; ஓசி 5:14; ஆமோ 5:18, 19
b எரே 6:8; எரே 32:43
c எரே 9:15; எரே 23:15
d சங் 102:9; எரே 6:26
e நெ 9:32; சங் 137:1
f எரே 9:15; புல 3:5
g சங் 113:5-7
h சங் 130:6-8; மீ 7:7
i எஸ்றா 9:8
j நெ 9:31; எரே 30:11; மீ 7:18
k சங் 30:5
l உபா 32:4; சங் 36:5
m சங் 16:5; சங் 73:26; சங் 142:5
n சங் 130:6-8
o சங் 25:3; சங் 130:5; ஏசா 25:9; ஏசா 30:18; மீ 7:7
p 1நா 28:9; ஏசா 26:9; செப் 2:3

அதி. 3
a சங் 37:7 சங் 116:6
b சங் 119:71
c சங் 39:8, 9 புல 3:39
d எசே 16:63
e யோவே 2:12-14
f எரே 3:12 எரே 31:37 எரே 32:40 மீ 7:18
g சங் 30:5 சங் 103:9, 11 ஏசா 54:7 எரே 31:20
h ஏசா 55:7 எசே 33:11 2பே 3:9
i சங் 102:19, 20
j சங் 12:5 நீதி 17:15
k சங் 103:10 மீ 7:9
l ஆகா 1:5
m உபா 4:30 ஏசா 55:7 யோவே 2:13
n உபா 4:29 2நா 7:14 2நா 34:27
o நெ 9:26
p 2ரா 24:3, 4 தானி 9:5, 12
q நீதி 15:8
r உபா 4:26 புல 2:2 எசே 9:10

26 யெகோவா தருகிற மீட்புக்காக அமைதியாய்* காத்திருப்பது நல்லது.[a]
27 சிறு வயதிலேயே பாரமான சுமைகளைச் சுமப்பது* ஒருவனுக்கு
நல்லது.[b]

י [*யோத்*]

28 கடவுள் அவன்மேல் அந்தச் சுமைகளைச் சுமத்தும்போது அவன்
தனியாக உட்கார்ந்து, அமைதியாக இருக்கட்டும்.[c]
29 அவன் குப்புற விழுந்து, தன்னுடைய வாயை மண்ணுக்குள்
புதைத்துக்கொள்ளட்டும்;[d] அவனுக்கு விடிவுகாலம் வரலாம்.[e]
30 அடிக்கிறவனுக்கு அவன் தன்னுடைய கன்னத்தைக் காட்டட்டும்;
எவ்வளவு அவமானம் வந்தாலும் தாங்கிக்கொள்ளட்டும்.

כ [*காஃப்*]

31 யெகோவா நம்மை ஒரேயடியாக ஒதுக்கித்தள்ள மாட்டார்.[f]
32 அவர் நமக்கு வேதனை தந்திருந்தாலும் அளவுகடந்த அன்போடு*
இரக்கம் காட்டுவார்.[g]
33 ஏனென்றால், மனுஷர்களை வேதனையால் வாட்ட வேண்டும் என்று
அவர் நினைப்பதே இல்லை.[h]

ל [*லாமெத்*]

34 உலகத்திலுள்ள கைதிகளைக் காலடியில் போட்டு மிதிப்பவர்களையும்,[i]
35 உன்னதமான கடவுளுக்குமுன் நியாயம் வழங்காமல்
இருப்பவர்களையும்,[j]
36 வழக்கில் யாரையாவது ஏமாற்றுகிறவர்களையும்
யெகோவா பொறுத்துக்கொள்ளவே மாட்டார்.

מ [*மேம்*]

37 யெகோவா கட்டளை கொடுக்காமல் ஒருவரால் எதையாவது சொல்லி
அதை நிறைவேற்ற முடியுமா?
38 உன்னதமான கடவுளுடைய வாயிலிருந்து
நல்லதும் கெட்டதும் சேர்ந்து வராது.
39 செய்த பாவத்துக்குத் தண்டனை* அனுபவிக்கிறவன் அதைப் பற்றி
ஏன் புலம்ப வேண்டும்?[k]

נ [*நூன்*]

40 நாம் நம்முடைய வழிகளை நன்றாகச் சோதித்துப் பார்த்து[l]
யெகோவாவிடம் திரும்பிவிடலாம்.[m]
41 முழு இதயத்தோடு நம்முடைய கைகளை உயர்த்தி, பரலோகத்தில்
உள்ள கடவுளிடம்,[n]
42 "நாங்கள் குற்றம் செய்துவிட்டோம்; கீழ்ப்படியாமல் போய்விட்டோம்;[o]
நீங்கள் எங்களை மன்னிக்கவில்லை.[p]

ס [*சாமெக்*]

43 எங்கள் மேலுள்ள கோபத்தினால் உங்களிடம் வரவிடாமல்
தடுத்துவிட்டீர்கள்.[q]
எங்களைத் துரத்திப் பிடித்து, கரிசனை இல்லாமல் கொன்றுவிட்டீர்கள்.[r]

3:26 *வே.வா., "பொறுமையாய்." **3:27** *வே.வா., "கஷ்டங்களை அனுபவிப்பது."
3:32 *வே.வா., "மாறாத அன்போடு." **3:39** *வே.வா., "பாவத்தின் விளைவுகளை."

44 எங்கள் ஜெபங்கள் உங்களிடம் வந்து சேராதபடி மேகத்தால் அவற்றைத் தடுத்துவிட்டீர்கள்.[a]
45 ஜனங்கள் மத்தியில் எங்களைக் குப்பைக்கூளம் போல அசிங்கமாக்கிவிட்டீர்கள்" என்று வேண்டிக்கொள்ளலாம்.

פ [*பே*]*

46 எங்களுடைய எதிரிகள் எல்லாரும் எங்களைக் கிண்டல் செய்கிறார்கள்.[b]
47 எங்கள்முன் இருப்பதெல்லாம் திகிலும் படுகுழியும்தான்;[c] நாங்கள் சீரழிந்தும் சிதைந்தும் போய்விட்டோம்.[d]
48 என் ஜனங்களுடைய அழிவைப் பார்த்து என் கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் வழிந்தோடுகிறது.[e]

ע [*ஆயின்*]

49 ஓய்வே இல்லாமல் எந்நேரமும் கண்ணீர் விடுகிறேன்.[f]
50 யெகோவா பரலோகத்திலிருந்து எங்களைப் பார்க்கும்வரை[g] அழுதுகொண்டே இருப்பேன்.
51 என் நகரத்தின் மகள்களுடைய நிலைமையைப் பார்த்து இரத்தக் கண்ணீர் வடிக்கிறேன்.[h]

צ [*சாதே*]

52 ஒரு பறவையை வேட்டையாடுவது போல எதிரிகள் காரணமே இல்லாமல் என்னை வேட்டையாடினார்கள்.
53 என்னைக் குழியில் தள்ளி, என் மூச்சை அடக்கிவிட்டார்கள். என்மேல் கற்களை வீசிக்கொண்டே இருந்தார்கள்.
54 தண்ணீர் என் தலைக்கு மேல் புரண்டது; "அவ்வளவுதான், நான் தொலைந்தேன்!" என்று சொன்னேன்.

ק [*கோஃப்*]

55 யெகோவாவே, ஆழமான குழியிலிருந்து நான் உங்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டேன்.[i]
56 காப்பாற்றும்படி நான் கெஞ்சிக் கதறுவதைக் கேளுங்கள்; உங்கள் காதை அடைத்துக்கொள்ளாதீர்கள்.
57 நான் உங்களைக் கூப்பிட்ட நாளில் என் பக்கத்தில் வந்தீர்கள். "பயப்படாதே" என்று சொன்னீர்கள்.

ר [*ரேஷ்*]

58 யெகோவாவே, நீங்கள் எனக்காக வழக்காடினீர்கள். என் உயிரை மீட்டீர்கள்.[j]
59 யெகோவாவே, எனக்குச் செய்யப்பட்ட அநியாயத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். தயவுசெய்து எனக்கு நியாயம் செய்யுங்கள்.[k]
60 என்னுடைய எதிரிகள் எப்படியெல்லாம் சதித்திட்டம் தீட்டி என்னைப் பழிவாங்குகிறார்கள் என்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்.

ש [*ஸீன்*] அல்லது [*ஷீன்*]

61 யெகோவாவே, அவர்கள் எனக்கு எதிராகத் திட்டங்கள் தீட்டுவதையும் என்னைப் பழித்துப் பேசுவதையும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.[l]

3:46 *எபிரெய அகரவரிசையில் "பே" என்று எழுத்து "ஆயின்" என்ற எழுத்துக்கு அடுத்ததாக வரும் என்றாலும், இங்கே அதற்கு முன்னதாக வருகிறது.

அதி. 3
a சங் 80:4; நீதி 15:29; நீதி 28:9; ஏசா 1:15; மீ 3:4; சக 7:13
b புல 2:16
c உபா 28:66, 67
d ஏசா 51:19; எரே 4:6
e எரே 9:1
f எரே 14:17; புல 1:16
g சங் 80:14; சங் 102:19-21; ஏசா 63:15
h எரே 11:22
i சங் 130:1; யோனா 2:1, 2
j எரே 50:34
k எரே 51:36, 37
l சங் 74:18

62 நாள் முழுக்க அவர்கள் எனக்கு எதிராக முணுமுணுப்பதைக்
கேட்டிருக்கிறீர்கள்.
63 அவர்களைப் பாருங்கள்; உட்கார்ந்தாலும் நின்றாலும் என்னைக் கேலி
செய்து பாட்டுப் பாடிக்கொண்டே இருக்கிறார்கள்.

ת [*டா*]

64 யெகோவாவே, அவர்களுக்கு நீங்கள் சரியான கூலி கொடுப்பீர்கள்!
65 சுரணைகெட்ட இதயத்தை ஒரு சாபமாக அவர்களுக்குக் கொடுப்பீர்கள்.
66 யெகோவாவே, நீங்கள் அவர்களைக் கோபத்தோடு துரத்திக்கொண்டு
போய், பூமியிலிருந்தே ஒழித்துக்கட்டுவீர்கள்.

א [*ஆலெஃப்*]

4 ஐயோ! பளபளப்பான சொக்கத்தங்கம் இப்படி மங்கிப்போனதே![a]
பரிசுத்த இடத்தின் கற்கள்[b] தெரு முனைகளில் இப்படிச் சிதறிக்
கிடக்கிறதே![c]

ב [*பேத்*]

2 சொக்கத்தங்கம் போன்ற சீயோனின் மகன்கள்
குயவனின் கைவேலைப்பாடான மண்ஜாடிகளைப் போல
ஆகிவிட்டார்களே!

ג [*கீமெல்*]

3 நரிகள்கூட குட்டிகளுக்குப் பால் கொடுக்கும்.
ஆனால், என் மகளாக இருக்கும் மக்கள் வனாந்தரத்திலுள்ள
நெருப்புக்கோழிகள்[d] போலக் கொடூரமாக நடந்துகொள்கிறார்கள்.[e]

ד [*டாலத்*]

4 பால் குடிக்கும் குழந்தையின் நாக்கு வறண்டுபோய் மேல்வாயோடு
ஒட்டிக்கொள்கிறது.
பிள்ளைகள் உணவுக்காகக் கெஞ்சுகிறார்கள்,[f] ஆனால் யாரும் எதுவும்
கொடுப்பதில்லை.[g]

ה [*ஹே*]

5 விதவிதமான உணவு சாப்பிட்டவர்கள் பஞ்சத்தில் அடிபட்டு
தெருக்களில் கிடக்கிறார்கள்.[h]
விலை உயர்ந்த துணிமணிகளை உடுத்தி வளர்ந்தவர்கள்[i]
குப்பைமேட்டில் கிடக்கிறார்கள்.

ו [*வா*]

6 உதவி செய்ய யாரும் இல்லாமல் ஒரே நொடியில் அழிக்கப்பட்ட
சோதோமைவிட[j]
என் ஜனங்கள் பெரிய தண்டனையை அனுபவித்துவிட்டார்கள்.[k]

ז [*ஸாயின்*]

7 அவர்களுடைய நசரேயர்கள்[l] பனியைவிட தூய்மையாகவும்
பாலைவிட வெண்மையாகவும் இருந்தார்கள்.
பவளங்களைவிட சிவப்பாக இருந்தார்கள்; நீலமணிக்கற்களைப்
போலப் பளபளப்பாக இருந்தார்கள்.

ח [*ஹேத்*]

8 ஆனால், இப்போது கரியைவிட கறுப்பாகிவிட்டார்கள்.
தெருக்களில் யாருக்கும் அவர்களை அடையாளம் தெரியவில்லை.

அதி. 4
a 1ரா 6:22
b 1ரா 5:17; 1ரா 7:9-12
c எரே 52:12, 13
d யோபு 39:14-16
e லேவி 26:29; உபா 28:53-57; எரே 19:9; புல 4:10
f புல 1:11; புல 2:11, 12
g எரே 52:6
h ஆமோ 6:4, 7
i எரே 6:2, 26
j எசே 16:48
k ஆதி 19:24, 25; தானி 9:12
l எண் 6:2

அவர்களுடைய தோல் எலும்புகளோடு ஒட்டிக்கொண்டது,[a] காய்ந்த மரத்தைப் போல ஆகிவிட்டது.

ט [டேத்]

9 பஞ்சத்தில் செத்தவர்களைவிட வாளால் செத்தவர்களே மேல்.[b]
வாளைப் போலப் பசி அவர்களைக் கொன்றுபோட்டது.

י [யோத்]

10 என் ஜனங்களுக்கு அழிவு வந்தபோது
பாசமான தாய்கள்கூட தங்களுடைய குழந்தைகளை வேக வைத்துத் தின்றார்கள்.[c]

כ [காஃப்]

11 யெகோவாவின் கோபம் தீ போலப் பற்றியெரிந்தது.
அவர் தன்னுடைய கோபத்தையெல்லாம் கொட்டித் தீர்த்தார்.[d]
சீயோனில் நெருப்பு மூட்டினார்; அது அவளுடைய அஸ்திவாரங்களைப் பொசுக்கியது.[e]

ל [லாமெத்]

12 எதிரிகள் எருசலேமின் நுழைவாசலுக்குள் புகுந்துவிட்டார்கள்.[f]
உலகத்திலுள்ள எந்த ராஜாவும் ஜனமும் இதை எதிர்பார்க்கவே இல்லை.

מ [மேம்]

13 தீர்க்கதரிசிகளும் குருமார்களும் செய்த பாவங்களால்தான் இந்தக் கதி![g]
அவர்கள் நீதிமான்களின் இரத்தத்தை அங்கே சிந்தினார்கள்.[h]

נ [நூன்]

14 தீர்க்கதரிசிகளும் குருமார்களும் குருடர்களைப் போலத் தெருக்களில் அலைந்து திரிந்தார்கள்.[i]
அவர்களுடைய துணிகளில் இரத்தக் கறை படிந்திருக்கிறது.[j]
யாரும் அந்தத் துணிகளைத் தொடுவதற்குத் துணிவதில்லை.

ס [சாமெக்]

15 அவர்கள் வீடுவாசலைப் பறிகொடுத்துவிட்டு அலைகிறார்கள்.
ஜனங்கள் அவர்களைப் பார்த்து, "பக்கத்தில் வராதீர்கள்! நீங்கள் தீட்டுப்பட்டவர்கள்!" என்று கத்துகிறார்கள்.
"போய்விடுங்கள்! போய்விடுங்கள்! எங்களைத் தொடாதீர்கள்!" என்று அலறுகிறார்கள்.
மற்ற தேசத்து ஜனங்களும், "அவர்கள் நம்மோடு வாழக் கூடாது" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்கிறார்கள்.[k]

פ [பே]*

16 அதோடு, "அவர்களை யெகோவா துரத்திவிட்டார்.[l]
அவர்கள்மேல் இனி கருணை காட்ட மாட்டார்.
இனி யாரும் இந்தக் குருமார்களையும் பெரியோர்களையும்# மதிக்க மாட்டார்கள்"[m] என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

ע [ஆயின்]

17 உதவி கிடைக்குமென்று எதிர்பார்த்து எதிர்பார்த்து எங்கள் கண்கள் பூத்துப்போயின.[n]

4:16 *எபிரெய அகரவரிசையில் "பே" என்று எழுத்து "ஆயின்" என்ற எழுத்துக்கு அடுத்ததாக வரும் என்றாலும், இங்கே அதற்கு முன்னதாக வருகிறது. #வே.வா., "மூப்பர்களையும்."

அதி. 4
a சங் 102:5
b எரே 29:17; எரே 38:2
c லேவி 26:29; உபா 28:54-57; புல 2:20; புல 4:3
d எரே 6:11; எரே 7:20; எசே 22:31
e உபா 32:22; 2ரா 25:9, 10
f உபா 29:24; 1ரா 9:8
g எரே 5:31; எரே 14:14; மீ 3:11; செப் 3:4
h எரே 26:8; மத் 23:31; அப் 7:52
i உபா 28:28; செப் 1:17
j ஏசா 1:15; எரே 2:34
k உபா 28:25, 65
l லேவி 26:33; உபா 28:64; எரே 24:9
m 2ரா 25:18, 21; புல 5:12; எசே 9:6
n புல 1:19

எங்களைக் காப்பாற்ற முடியாத தேசத்துக்காகக் காத்திருந்து
காத்திருந்து சோர்ந்துபோனோம்.[a]

צ [*சாதே*]

18 எதிரிகள் எங்களை வேட்டையாடுகிறார்கள்;[b] அதனால், பொது
சதுக்கங்களில் எங்களால் நடந்துபோக முடியவில்லை.
இனி எங்கள் கதி அவ்வளவுதான்! எங்களுக்கு அழிவு
நெருங்கிவிட்டது! எங்களுடைய காலம் முடிந்துவிட்டது!

ק [*கோஃப்*]

19 எதிரிகள் கழுகுகளைவிட வேகமாக எங்கள்மேல் பாய்ந்தார்கள்.[c]
மலைகளில் எங்களைத் துரத்தினார்கள்; வனாந்தரத்தில் பதுங்கியிருந்து
தாக்கினார்கள்.

ר [*ரேஷ்*]

20 யெகோவாவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை[d] அவர்கள்
பிடித்துவிட்டார்கள்; எங்களுக்கு உயிர்மூச்சாக இருந்தவரைப்
படுகுழியில் விழ வைத்தார்கள்.[e]
“மற்ற தேசத்தாரின் நடுவே அவருடைய நிழலில் வாழ்வோம்” என்று
நாங்கள் நம்பியிருந்தோமே!

ש [*ஸீன்*]

21 ஊத்ஸ் தேசத்தில் வாழ்கிற ஏதோம் மகளே, சந்தோஷமாக
ஆடிப் பாடு![f]
உன்னிடமும் கிண்ணம் கொடுக்கப்படும்;[g] நீ போதை ஏறுமளவுக்குக்
குடித்து, ஆபாசமாகக் கிடப்பாய்.[h]

ת [*ட்டா*]

22 சீயோன் மகளே, உன்னுடைய தண்டனை முடிந்துவிட்டது.
அவர் மறுபடியும் உன்னைச் சிறைபிடிக்கப்பட்டுப் போவதற்கு
விடமாட்டார்.[i]
ஆனால் ஏதோம் மகளே, அவர் உன்னுடைய அக்கிரமங்களைக்
கணக்கெடுப்பார்.
உன்னுடைய பாவங்களை அம்பலமாக்குவார்.[j]

5 யெகோவாவே, எங்களுக்கு வந்த கதியை நினைத்துப் பாருங்கள்.
எங்களுக்கு வந்த அவமானத்தைக் கொஞ்சம் பாருங்கள்.[k]
2 எங்களுடைய சொத்து அன்னியர்களின் கைக்குப் போய்விட்டது.
எங்களுடைய வீடுகளை வேறு தேசத்து ஜனங்கள்
எடுத்துக்கொண்டார்கள்.[l]
3 நாங்கள் அப்பா இல்லாத பிள்ளைகளைப் போல ஆகிவிட்டோம்;
எங்களுடைய அம்மா விதவைபோல் ஆகிவிட்டாள்.[m]
4 குடிக்கிற தண்ணீரைக்கூட விலை கொடுத்துதான் வாங்குகிறோம்;[n] காசு
கொடுத்தால்தான் விறகு கிடைக்கிறது.
5 எங்களைத் துரத்துகிறவர்கள் எங்கள் பக்கத்தில் வந்துவிட்டார்கள்;
எப்போது வேண்டுமானாலும் எங்கள் கழுத்தைப்
பிடித்துவிடுவார்கள்.
எங்களுக்கு ஓய்வே இல்லை, நாங்கள் களைத்துப்போய்விட்டோம்.[o]

அதி. 4
a எரே 37:7; எசே 29:6
b 2ரா 25:5; புல 3:52
c உபா 28:49, 50; ஏசா 5:26; எரே 4:13; ஆப 1:8
d எரே 37:1
e 2ரா 25:5, 6; எரே 39:5
f சங் 137:7; ஒப 12
g எரே 25:17, 20; ஒப 16
h எரே 49:10, 12
i லேவி 26:44; ஏசா 52:1; ஏசா 60:18
j ஏசா 34:5; எசே 25:13; எசே 35:15; ஆமோ 1:11; ஒப 13

அதி. 5
k சங் 79:4; புல 2:15
l உபா 28:30; சங் 79:1; எரே 6:12; செப் 1:13
m யாத் 22:24; எரே 18:21
n உபா 28:15, 48; ஏசா 3:1; எசே 4:11, 16
o உபா 28:65

6 எகிப்திடமும்[a] அசீரியாவிடமும்[b] உணவுக்காகக் கையேந்தி
நிற்கிறோம்.
7 எங்களுடைய முன்னோர்கள் இப்போது உயிரோடு இல்லாவிட்டாலும்
அவர்கள் செய்த பாவத்துக்காக நாங்கள் கஷ்டப்படுகிறோம்.
8 இப்போது எங்களுடைய வேலைக்காரர்கள் எங்களை அடக்கி
ஆளுகிறார்கள். அவர்களுடைய கையிலிருந்து எங்களைக்
காப்பாற்ற யாரும் இல்லை.
9 வனாந்தரத்தில் ஆட்கள் வாள்களோடு நிற்பதால் உயிரையே பணயம்
வைத்துதான் உணவைப் பெறுகிறோம்.[c]
10 பசிக்கொடுமையால் எங்கள் உடம்பெல்லாம் அடுப்புபோல்
சுடுகிறது.[d]
11 சீயோனில் இருக்கிற கல்யாணமான பெண்களையும் யூதாவின்
நகரங்களில் இருக்கிற கல்யாணமாகாத பெண்களையும் அவர்கள்
கெடுத்துவிட்டார்கள்.[e]
12 அதிகாரிகளுடைய கையைக் கட்டி அவர்களைத் தொங்கவிட்டார்கள்;[f]
பெரியோர்களை* மரியாதை இல்லாமல் நடத்தினார்கள்.[g]
13 வாலிபர்கள் மாவு அரைக்கும் கல்லை* தூக்கிக்கொண்டு போகிறார்கள்;
சிறுவர்கள் விறகுக் கட்டுகளைச் சுமக்க முடியாமல் தடுமாறி
விழுகிறார்கள்.
14 நகரவாசலில் பெரியோர்கள் யாரும் இல்லை.[h] வாலிபர்கள் இசைக்
கருவிகளை வாசிப்பது இல்லை.[i]
15 எங்கள் உள்ளத்திலிருந்த சந்தோஷமெல்லாம் போய்விட்டது.
ஆடிப்பாடிக்கொண்டிருந்த நாங்கள் இப்போது அழுது
புலம்புகிறோம்.[j]
16 எங்கள் தலையிலுள்ள கிரீடம் கீழே விழுந்துவிட்டது. எங்கள் கதி
அவ்வளவுதான்! நாங்கள் பாவம் செய்துவிட்டோம்.
17 அதை நினைக்கும்போது நெஞ்சு வலிக்கிறது.[k]
கண்கள் இருண்டுபோகின்றன.[l]
18 சீயோன் மலை பாழாய்க் கிடக்கிறதே![m] அங்கே குள்ளநரிகள் சுற்றித்
திரிகின்றனவே!
19 யெகோவாவே, நீங்கள் என்றென்றும் சிம்மாசனத்தில்
உட்கார்ந்திருக்கிறீர்கள்.
உங்கள் சிம்மாசனம் தலைமுறை தலைமுறையாக நிலைத்திருக்கும்.[n]
20 நீங்கள் ஏன் எங்களை இவ்வளவு காலமாகக் கைவிட்டீர்கள்? எங்களை
அடியோடு மறந்துவிடுவீர்களா?[o]
21 யெகோவாவே, மறுபடியும் எங்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.
நாங்கள் உங்களிடமே திரும்பி வந்துவிடுகிறோம்.[p]
பழையபடி எங்களை நன்றாக வாழ வையுங்கள்.[q]
22 இப்போது எங்களை ஒரேயடியாக ஒதுக்கித்தள்ளிவிட்டீர்களே!
எங்கள்மேல் இன்னமும் பயங்கர கோபத்தோடு இருக்கிறீர்களே![r]

5:12 * வே.வா., "மூப்பர்களை." 5:13 * வே.வா., "திரிகைக் கல்லை."

அதி. 5
a ஏசா 30:2; எரே 44:12; எசே 17:17, 18
b 2நா 28:16; எரே 2:18, 36
c எசே 4:10
d 2ரா 25:3; புல 4:8
e உபா 28:30
f எரே 39:6
g ஏசா 47:6; எரே 6:11; புல 4:16
h யோசு 20:4
i எரே 25:10
j ஆமோ 8:10
k புல 1:22
l உபா 28:65
m எரே 26:18
n சங் 102:12; சங் 145:13; சங் 146:10
o சங் 79:5; எரே 14:19
p உபா 4:30; சங் 80:3; சங் 85:4; எரே 31:18
q எரே 33:13
r உபா 28:15

எசேக்கியேல்

முக்கியக் குறிப்புகள்

1 பாபிலோனில் கடவுள் தந்த தரிசனங்களை எசேக்கியேல் பார்க்கிறார் (1-3)
யெகோவாவின் பரலோக ரதத்தைப் பற்றிய தரிசனம் (4-28)
சூறாவளி, மேகம், தீ (4)
நான்கு ஜீவன்கள் (5-14)
நான்கு சக்கரங்கள் (15-21)
பிரகாசமான பனிக்கட்டி போல ஒரு தளம் (22-24)
யெகோவாவின் சிம்மாசனம் (25-28)

2 எசேக்கியேல் தீர்க்கதரிசியாக அனுப்பப்படுகிறார் (1-10)
"அவர்கள் கேட்டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி" (5)
புலம்பல் பாடல்கள் எழுதப்பட்ட ஒரு சுருள் காட்டப்படுகிறது (9, 10)

3 கடவுள் கொடுத்த சுருளை எசேக்கியேல் சாப்பிடுகிறார் (1-15)
எசேக்கியேல் காவல்காரனாக நியமிக்கப்படுகிறார் (16-27)
எச்சரிக்காவிட்டால் ஒருவனின் சாவுக்குப் பொறுப்பாளி ஆகிவிடுவார் (18-21)

4 எருசலேமின் முற்றுகை சித்தரித்துக் காட்டப்படுகிறது (1-17)
ஜனங்களின் குற்றத்தை 390 நாட்களுக்கும் 40 நாட்களுக்கும் சுமக்கிறார் (4-7)

5 எருசலேமின் அழிவு சித்தரித்துக் காட்டப்படுகிறது (1-17)
தீர்க்கதரிசி சிரைத்துக்கொண்ட முடி மூன்று பங்காகப் பிரிக்கப்படுகிறது (1-4)
மற்ற தேசங்களைவிட எருசலேம் படுமோசமாக இருக்கிறது (7-9)
கலகக்காரர்கள் மூன்று விதங்களில் தண்டிக்கப்படுகிறார்கள் (12)

6 இஸ்ரவேலின் மலைகளுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-14)
அருவருப்பான சிலைகளுக்கு வரும் அவமானம் (4-6)
"அப்போது நான் யெகோவா என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்" (7)

7 அழிவு வந்துவிட்டது (1-27)
இதுவரை வராத ஆபத்து (5)
பணம் வீதிகளில் வீசியெறியப்படும் (19)
ஆலயம் தீட்டுப்படுத்தப்படும் (22)

8 எசேக்கியேல் ஒரு தரிசனத்தில் எருசலேமுக்குக் கொண்டுபோகப்படுகிறார் (1-4)
ஆலயத்தில் அருவருப்பான காரியங்களைப் பார்க்கிறார் (5-18)
பெண்கள் தம்மூஸ் தெய்வத்துக்காக அழுதுகொண்டிருக்கிறார்கள் (14)
ஆண்கள் சூரியனைக் கும்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள் (16)

9 ஜனங்களைக் கொன்றுபோடுகிற ஆறு பேரும், மைப் பெட்டியை வைத்திருப்பவரும் (1-11)
தண்டனைத் தீர்ப்பு ஆலயத்தில் ஆரம்பமாகிறது (6)

10 சக்கரங்களுக்கு நடுவிலிருந்து நெருப்புத் தணல் எடுக்கப்படுகிறது (1-8)
கேருபீன்களையும் சக்கரங்களையும் பற்றிய விவரிப்பு (9-17)
கடவுளுடைய மகிமை ஆலயத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகிறது (18-22)

11 கெட்டது செய்யத் திட்டமிடுகிற தலைவர்கள் கண்டனம் செய்யப்படுகிறார்கள் (1-13)
நகரம் ஒரு பானைக்கு ஒப்பிடப்படுகிறது (3-12)
ஜனங்கள் மறுபடியும் சொந்த தேசத்துக்குத் திரும்புவது பற்றிய வாக்குறுதி (14-21)
'புதிய மனதை' கொடுப்பேன் (19)
கடவுளுடைய மகிமை எருசலேமைவிட்டு எழும்புகிறது (22, 23)
தரிசனத்தில் எசேக்கியேல் மறுபடியும் கல்தேயாவுக்கு வருகிறார் (24, 25)

12 சிறைபிடிக்கப்படுவதைப் பற்றிய விவரிப்பு (1-20)
அதற்காக மூட்டைமுடிச்சுகளைக் கட்டிவைக்கிறார் (1-7)
ஜனங்களின் தலைவன் இருட்டில் புறப்பட்டுப் போவான் (8-16)
கவலையோடு உணவும் திகிலோடு தண்ணீரும் சாப்பிடுவார்கள் (17-20)
ஏமாற்றுப் பேச்சு முடிவுக்கு வரும் (21-28)
'நான் சொல்கிற வார்த்தை கொஞ்சம்கூட தாமதிக்காது' (28)

13 பொய்த் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-16)
வெள்ளையடிக்கப்பட்ட சுவர் இடிந்து விழும் (10-12)
பொய்த் தீர்க்கதரிசனம் சொல்கிற பெண்களுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (17-23)

14 சிலைகளை வணங்குகிறவர்கள் கண்டனம் செய்யப்படுகிறார்கள் (1-11)
எருசலேம் தண்டனைத் தீர்ப்பிலிருந்து தப்பிக்க முடியாது (12-23)
நீதிமான்களான நோவா, தானியேல், யோபு (14, 20)

15 எருசலேம், ஒன்றுக்கும் உதவாத ஒரு திராட்சைக் கொடி (1-8)

16 எருசலேம்மீது கடவுளுக்கு இருக்கிற அன்பு (1-63)
தூக்கி எறியப்பட்ட பிள்ளையைப் போல் இருந்தாள் (1-7)
கடவுள் அவளை அலங்கரித்து அவளோடு திருமண ஒப்பந்தம் செய்கிறார் (8-14)
ஆனால், கடவுளுக்குத் துரோகம் செய்துவிடுகிறாள் (15-34)
விபச்சாரம் செய்ததால் தண்டிக்கப்படுகிறாள் (35-43)
சமாரியாவோடும் சோதோமோடும் ஒப்பிடப்படுகிறாள் (44-58)
கடவுள் தான் செய்த ஒப்பந்தத்தை நினைத்துப் பார்க்கிறார் (59-63)

17 இரண்டு கழுகுகளையும் திராட்சைக் கொடியையும் பற்றிய புதிர் (1-21)
ஒரு கிளையின் கொழுந்து கம்பீரமான தேவதாரு மரமாக வளரும் (22-24)

18 அவரவருடைய பாவத்துக்கு அவரவர்தான் பொறுப்பு (1-32)
பாவம் செய்கிற எவனும் செத்துப்போவான் (4)
தகப்பன் செய்த பாவத்துக்காக மகன் தண்டிக்கப்பட மாட்டான் (19, 20)
கெட்டவன் சாக வேண்டுமெனக் கடவுள் ஆசைப்படுவதில்லை (23)
மனம் திருந்தினால் வாழ்வு கிடைக்கும் (27, 28)

19 இஸ்ரவேலின் தலைவர்களைப் பற்றிய புலம்பல் பாட்டு (1-14)

20 இஸ்ரவேலர்கள் அடங்காமல் போனதைப் பற்றிய சரித்திரம் (1-32)
இஸ்ரவேலர்கள் தங்கள் தேசத்துக்குத் திரும்புவதைப் பற்றிய வாக்குறுதி (33-44)
தென்திசைக்கு எதிரான தீர்க்கதரிசனம் (45-49)

21 கடவுளுடைய தண்டனைத் தீர்ப்பின் வாள் உருவப்படுகிறது (1-17)
பாபிலோனின் ராஜா எருசலேமைத் தாக்குவான் (18-24)
இஸ்ரவேலின் பொல்லாத தலைவன் நீக்கப்படுவான் (25-27)
“உன் கிரீடத்தை எடுத்துவிடு” (26)
“உரிமைக்காரர் வரும்வரை” (27)
அம்மோனியர்களுக்கு எதிரான வாள் (28-32)

22 எருசலேம், கொலைக்குற்றத்தைச் சுமக்கிற நகரம் (1-16)
இஸ்ரவேலர்கள் ஒன்றுக்கும் உதவாத கசடுபோல் இருக்கிறார்கள் (17-22)
இஸ்ரவேலின் தலைவர்களும் ஜனங்களும் கண்டிக்கப்படுகிறார்கள் (23-31)

23 விபச்சாரம் செய்துவந்த இரண்டு சகோதரிகள் (1-49)
அகோலாள் அசீரியாவோடு விபச்சாரம் செய்கிறாள் (5-10)
அகோலிபாள் பாபிலோனோடும் எகிப்தோடும் விபச்சாரம் செய்கிறாள் (11-35)
இரண்டு சகோதரிகளுக்கும் தண்டனை (36-49)

24 எருசலேம் களிம்பு படிந்த ஒரு பானையைப் போல் இருக்கிறது (1-14)
எசேக்கியேலுடைய மனைவியின் மரணமும், அடையாள அர்த்தமும் (15-27)

25 அம்மோனியர்களுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-7)
மோவாபியர்களுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (8-11)
ஏதோமியர்களுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (12-14)
பெலிஸ்தியர்களுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (15-17)

26 தீருவுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-21)
‘மீன்வலைகளைக் காய வைக்கும் இடமாக மாறும்’ (5, 14)
அதன் கற்களும் மண்ணும் கடலில் போடப்படும் (12)

27 மூழ்கிக்கொண்டிருக்கும் தீருவின் கப்பலுக்காகப் பாடப்படும் புலம்பல் (1-36)

28 தீரு ராஜாவுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-10)
“நான் ஒரு கடவுள்” (2, 9)
தீரு ராஜாவுக்காகப் புலம்பல் பாட்டு (11-19)
‘நீ ஏதேனில் இருந்தாய்’ (13)
“பாதுகாக்கும் கேருபீனாக நான் உன்னை நியமித்தேன்” (14)
“கெட்ட வழியில் நடக்க ஆரம்பித்தாய்” (15)
சீதோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (20-24)
இஸ்ரவேலர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்புவார்கள் (25, 26)

29 பார்வோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-16)
எகிப்து தேசம் பாபிலோனுக்குக் கூலியாகக் கொடுக்கப்படும் (17-21)

30 எகிப்துக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-19)
நேபுகாத்நேச்சாரின் தாக்குதல் முன்னறிவிக்கப்படுகிறது (10)
பார்வோன் பலம் இழக்கிறான் (20-26)

31 எகிப்தின் வீழ்ச்சி, உயரமான தேவதாரு மரம் (1-18)

32 பார்வோனையும் எகிப்தையும் பற்றிய புலம்பல் பாட்டு (1-16)
விருத்தசேதனம் செய்யப்படாத ஆட்களோடு எகிப்தின் அடக்கம் (17-32)

33 காவல்காரனுடைய பொறுப்புகள் (1-20)
எருசலேமின் அழிவைப் பற்றிய செய்தி (21, 22)
பாழாக்கப்பட்ட நகரத்தில் இருக்கிற ஜனங்களுக்குச் செய்தி (23-29)
செய்தியை ஜனங்கள் கேட்டும் அதன்படி செய்வதில்லை (30-33)
‘காதல் பாட்டுப் பாடுகிறவன்போல்’ எசேக்கியேல் ஜனங்களுக்குத் தெரிகிறார் (32)
“அவர்கள் நடுவில் ஒரு தீர்க்கதரிசி இருந்தார்” (33)

34 இஸ்ரவேலின் மேய்ப்பர்களுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-10)
யெகோவாவுக்குத் தன்னுடைய ஆடுகள்மேல் இருக்கிற அக்கறை (11-31)
“என் ஊழியனாகிய தாவீது” அவர்களை மேய்ப்பான் (23)
“சமாதான ஒப்பந்தம்” (25)

35 சேயீர் மலைப்பகுதிக்கு எதிரான தீர்க்கதரிசனம் (1-15)

36 இஸ்ரவேலின் மலைகளைப் பற்றிய தீர்க்கதரிசனம் (1-15)
இஸ்ரவேலர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்புவார்கள் (16-38)
“என்னுடைய மகத்தான பெயரை நான் பரிசுத்தப்படுத்துவேன்” (23)
“ஏதேன் தோட்டத்தைப் போல” (35)

37 காய்ந்துபோன எலும்புகள் கிடக்கிற பள்ளத்தாக்கைப் பற்றிய தரிசனம் (1-14)
இரண்டு கோல்கள் இணைக்கப்படுகிறது (15-28)
ஒரு ராஜாவின் கீழ் ஒரே தேசமாக இருப்பார்கள் (22)
என்றென்றும் நிலைத்திருக்கிற சமாதான ஒப்பந்தம் (26)

38 இஸ்ரவேலர்களின் மேல் கோகுவின் தாக்குதல் (1-16)
கோகுவுக்கு எதிராக யெகோவாவின் கோபம் (17-23)
‘நான் யெகோவா என்று தேசத்தார் தெரிந்துகொள்வார்கள்’ (23)

39 கோகுவுக்கும் அவனுடைய படைகளுக்கும் வரும் அழிவு (1-10)
ஆமோன்-கோகுவின் பள்ளத்தாக்கில் அவர்கள் புதைக்கப்படுவார்கள் (11-20)
இஸ்ரவேலர்கள் தங்கள் தேசத்தில் திரும்பவும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் (21-29)
அவர்கள்மேல் கடவுளுடைய சக்தி பொழியப்படும் (29)

40 ஒரு தரிசனத்தில் எசேக்கியேல் இஸ்ரவேலுக்குக் கொண்டுபோகப்படுகிறார் (1, 2)
தரிசனத்தில் அவர் ஓர் ஆலயத்தைப் பார்க்கிறார் (3, 4)
பிரகாரங்களும் நுழைவாசல்களும் (5-47)
வெளிப்புற கிழக்கு நுழைவாசல் (6-16)
வெளிப்பிரகாரம்; மற்ற வாசல்கள் (17-26)
உட்பிரகாரமும் வாசல்களும் (27-37)
ஆலய வேலைகளுக்கான அறைகள் (38-46)
பலிபீடம் (47)
ஆலயத்தின் நுழைவு மண்டபம் (48, 49)

41 ஆலயத்தின் பரிசுத்த அறை (1-4)
ஆலயத்தின் சுவரும் பக்கவாட்டு அறைகளும் (5-11)
மேற்கிலுள்ள கட்டிடம் (12)
கட்டிடங்கள் அளக்கப்படுகின்றன (13-15அ)
பரிசுத்த அறையின் உட்புறம் (15ஆ-26)

42 சாப்பாட்டு அறைகள் உள்ள கட்டிடம் (1-14)
ஆலயத்தின் நான்கு பக்கங்களும் அளக்கப்படுகின்றன (15-20)

43 ஆலயம் யெகோவாவின் மகிமையால் நிரம்பியிருக்கிறது (1-12)
பலிபீடம் (13-27)

44 கிழக்கைப் பார்த்த வாசல் மூடப்பட்டிருக்க வேண்டும் (1-3)
வேறு தேசத்து ஜனங்களுக்கான கட்டுப்பாடுகள் (4-9)
லேவியர்களுக்கும் குருமார்களுக்குமான கட்டுப்பாடுகள் (10-31)

45 பரிசுத்த காணிக்கையும் நகரமும் (1-6)
தலைவரின் பங்கு (7, 8)
தலைவர்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் (9-12)
ஜனங்களுடைய காணிக்கைகளும் தலைவரும் (13-25)

46 வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொடுக்க வேண்டிய பலிகள், காணிக்கைகள் (1-15)
தலைவரின் நிலம் மகன்களுக்கு நிரந்தர சொத்தாகக் கிடைக்கும் (16-18)
பலிகளையும் காணிக்கைகளையும் வேக வைக்க வேண்டிய இடங்கள் (19-24)

47 ஆலயத்திலிருந்து தண்ணீர் வழிந்தோடுகிறது (1-12)
தண்ணீரின் ஆழம் படிப்படியாக அதிகரிக்கிறது (2-5)
சவக் கடலின் தண்ணீர் நல்ல தண்ணீராக மாறுகிறது (8-10)
சதுப்பு நிலங்கள் நல்ல நிலங்களாக மாறுவதில்லை (11)
உணவாகவும் மருந்தாகவும் பயன்படும் மரங்கள் (12)
தேசத்தின் எல்லைகள் (13-23)

48 தேசங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன (1-29)
நகரத்தின் 12 நுழைவாசல்கள் (30-35)
நகரத்திற்கு "யெகோவா அங்கே இருக்கிறார்" என்ற பெயர் வைக்கப்படுகிறது (35)

1 அது முப்பதாம் வருஷம்,* நான்காம் மாதம், ஐந்தாம் நாள். சிறையி
ருப்பிலிருந்த ஜனங்களோடு நானும் கேபார் ஆற்றுக்குப்[a] பக்கத்தில்
இருந்தேன்.[b] அப்போது வானம் திறந்தது. கடவுள் எனக்கு ஒரு தரிசனத்
தைக் காட்டினார். **2** யோயாக்கீன் ராஜா[c] சிறையிருப்பிலிருந்த ஐந்தாம்
வருஷம் அது. அந்த ஐந்தாம் நாளில், **3** ஆலய குருவாகிய பூஸியின் மக
னான எசேக்கியேல்* என்ற எனக்கு யெகோவாவிடமிருந்து செய்தி கிடைத்
தது. அப்போது நான் கல்தேயர்களின்[d] தேசத்திலுள்ள கேபார் ஆற்றுக்குப்
பக்கத்தில் இருந்தேன். அங்கே யெகோவாவின் சக்தியால் நிரப்பப்பட்
டேன்.#[e]

4 நான் பார்த்துக்கொண்டிருந்தபோது, வடக்கிலிருந்து சூறாவளி வீசி
யது.[f] ஒரு பெரிய மேகம் தெரிந்தது. அதிலிருந்து தீப்பிழம்புகள்* தெறித்
தன.[g] அதைச் சுற்றிலும் ஒரே வெளிச்சமாக இருந்தது. தீயின் நடுவில்
வெள்ளியும் தங்கமும் கலந்த பளபளப்பான உலோகத்தைப் போன்ற ஏதோ
வொன்று தெரிந்தது.[h] **5** அதற்கு நடுவில் மனுஷனைப் போன்ற நான்கு
ஜீவன்கள்[i] தெரிந்தன. **6** ஒவ்வொரு ஜீவனுக்கும் நான்கு முகங்களும்
நான்கு சிறகுகளும்[j] இருந்தன. **7** அவற்றின் பாதங்கள் நெட்டுக்குத்தாக
இருந்தன. அவற்றின் உள்ளங்கால்கள் கன்றுக்குட்டியின் குளம்புகளைப்
போல இருந்தன. பளபளப்பாக்கப்பட்ட செம்பைப் போல அவை பிரகாசித்

1:1 *எசேக்கியேலின் வயதைக் குறிக்கலாம். **1:3** *அர்த்தம், "கடவுள் பலப்படுத்து கிறார்." #நே.மொ., "யெகோவாவின் கை அவர்மேல் வந்தது." **1:4** *வே.வா., "மின்னல்கள்."

அதி. 1
a எசே 3:15
b 2ரா 24:12, 14
c 2நா 36:9, 10
d எரே 22:25
e எசே 3:14
f 1ரா 19:11
g யாத் 19:18; சங் 97:2, 3
h எசே 8:2
i எசே 10:9, 15; வெளி 4:6
j ஏசா 6:2; எசே 10:20, 21; வெளி 4:8

தன.[a] **8** அவற்றின் நான்கு சிறகுகளுக்குக் கீழேயும் மனுஷ கைகள்
இருந்தன. அந்த நான்கு ஜீவன்களுக்கு முகங்களும் சிறகுகளும் இருந்தன.
9 அவற்றின் சிறகுகள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருந்தன. அந்த
ஜீவன்கள் ஒவ்வொன்றும் திரும்பாமல் நேராகப் போயின.[b]

10 ஒவ்வொரு ஜீவனுக்கும் முன்பக்கத்தில் மனுஷ முகமும், வலது பக்
கத்தில் சிங்க[c] முகமும், இடது பக்கத்தில் காளை[d] முகமும், பின்பக்கத்தில்
கழுகு[e] முகமும் இருந்தது.[f] **11** இப்படித்தான் அவற்றின் முகச்சாயல்
இருந்தது. அவற்றின் சிறகுகள் மேல்நோக்கி விரிந்திருந்தன. இரண்டு சிறகு
கள் ஒன்றையொன்று தொட்டபடியும், மற்ற இரண்டு சிறகுகள் அவற்றின்
உடலை மூடியபடியும் இருந்தன.[g]

12 கடவுளுடைய சக்தி எங்கெல்லாம் போகத் தூண்டியதோ அங்கெல்
லாம் அவை நேராகப் போயின.[h] அப்படிப் போகும்போது அவை திரும்
பவில்லை. **13** அந்த நான்கு ஜீவன்களும் பார்ப்பதற்கு எரிகிற நெருப்புத்
தணலைப் போல இருந்தன. பிரகாசமாக எரியும் தீப்பந்தங்களைப் போன்ற
ஏதோவொன்று அவற்றுக்கு இடையே முன்னும் பின்னுமாகப் போய்க்
கொண்டிருந்தது. நெருப்பிலிருந்து மின்னல் வெட்டியது.[i] **14** அந்த ஜீவன்
கள் அங்குமிங்கும் போனபோது மின்னல் அடிப்பது போலத் தெரிந்தது.

15 நான் அதைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, நான்கு முகங்களுள்ள
அந்த ஒவ்வொரு ஜீவனுக்குப் பக்கத்திலும் ஒரு சக்கரம் தரையில் தெரிந்
தது.[j] **16** அந்தச் சக்கரங்கள் படிகப்பச்சைக் கல் போல ஜொலித்தன.
நான்கு சக்கரங்களும் பார்ப்பதற்கு ஒரேபோல் இருந்தன. அவை ஒவ்
வொன்றும், ஒரு சக்கரத்துக்குள் இன்னொரு சக்கரத்தை வைத்தது போல
இருந்தன.* **17** திரும்பாமலேயே நான்கு திசைகளிலும் போக அவற்
றால் முடிந்தது. **18** அந்தச் சக்கரங்களின் உயரத்தைப் பார்த்தபோது பிர
மிப்பாக இருந்தது. அவற்றின் வட்டத்தைச் சுற்றிலும் கண்கள் இருந்தன.[k]
19 அந்த ஜீவன்கள் போனபோது அந்தச் சக்கரங்களும் சேர்ந்து போயின.
அந்த ஜீவன்கள் தரையிலிருந்து மேலே எழும்பியபோது அந்தச் சக்கரங்க
ளும் மேலே எழும்பின.[l] **20** கடவுளுடைய சக்தி எங்கே போகத் தூண்
டியதோ அங்கே போயின. அந்தச் சக்தி எங்கெல்லாம் போனதோ அங்
கெல்லாம் போயின. அந்த ஜீவன்களோடு சேர்ந்து சக்கரங்களும் மேலே
எழும்பின. ஏனென்றால், அந்த ஜீவன்களைத் தூண்டிய சக்தி இந்தச் சக்க
ரங்களிலும் இருந்தது. **21** அந்த ஜீவன்கள் போனபோது இந்தச் சக்கரங்
களும் போயின. அவை நின்றபோது இவையும் நின்றன. அவை தரையி
லிருந்து எழும்பியபோது சக்கரங்களும் அவற்றோடு சேர்ந்து மேலே
எழும்பின. ஏனென்றால், அந்த ஜீவன்களைத் தூண்டிய சக்தி இந்தச் சக்க
ரங்களிலும் இருந்தது.

22 அந்த ஜீவன்களின் தலைகளுக்கு மேலாக ஒரு தளம் பரந்து விரிந்
திருந்தது. அது கண்களைப் பறிக்கும் பிரகாசமான பனிக்கட்டி போல அந்த
ஜீவன்களின் தலைகளுக்கு மேலாக மின்னியது.[m] **23** அந்தத் தளத்துக்
குக் கீழே அவற்றின் சிறகுகள் ஒன்றுக்கொன்று எதிராக விரிந்திருந்தன.*
ஒவ்வொரு ஜீவனுக்கும், உடலின் ஒரு பக்கத்தை மூடிக்கொள்ள இரண்டு

அதி. 1
a தானி 10:5, 6
b எசே 10:11, 15
c 2சா 17:10; நீதி 28:1
d நீதி 14:4
e யோபு 39:27, 29
f எசே 10:14, 15; வெளி 4:7
g ஏசா 6:2
h சங் 103:20; எபி 1:7, 14
i தானி 7:9, 10
j எசே 10:9-13; வெளி 4:7
k நீதி 15:3; சக 4:10
l எசே 10:15-17
m எசே 10:1

1:16 *ஒருவேளை, ஒரு சக்கரத்தின் அச்சில் இன்னொரு சக்கரம் செங்கோணத்தில் வைக்கப்பட்டிருந்ததைக் குறிக்கலாம். **1:23** *அல்லது, “சிறகுகள் நேராக நீட்டிக்கொண்டிருந்தன.”

சிறகுகளும் இன்னொரு பக்கத்தை மூடிக்கொள்ள இரண்டு சிறகுகளும்
இருந்தன. **24** அந்த ஜீவன்கள் அங்குமிங்கும் போனபோது அவற்றின்
சிறகுகளுடைய சத்தம் வெள்ளப்பெருக்கின் சத்தத்தைப் போலவும், சர்வ
வல்லமையுள்ளவரின் சத்தத்தைப் போலவும்,[a] ஒரு போர்ப் படையின் சத்
தத்தைப் போலவும் இருந்தது. அவை ஒரு இடத்தில் நின்றபோது சிறகுக
ளைக் கீழே தொங்கவிட்டன.

25 அவற்றின் தலைகளுக்கு மேலே இருந்த தளத்தின் மேலிருந்து ஒரு
குரல் கேட்டது. (அவை ஒரு இடத்தில் நின்றபோது சிறகுகளைக் கீழே
தொங்கவிட்டன.) **26** அவற்றின் தலைகளுக்கு மேலே இருந்த தளத்தின்
மேல் நீலமணிக் கல்லைப் போல[b] ஒன்று தெரிந்தது. அது பார்ப்பதற்குச்
சிம்மாசனத்தைப் போல இருந்தது.[c] மனுஷ சாயலில் ஒருவர் அந்தச் சிம்
மாசனத்தில் உட்கார்ந்திருந்தார்.[d] **27** அவருடைய இடுப்புபோல் தெரிந்த
பாகம் வெள்ளியும் தங்கமும் கலந்த உலோகத்தைப் போல, அதாவது
நெருப்பு போல, பிரகாசித்தது.[e] அதற்கு மேலாகவும் அப்படித்தான் பிரகா
சித்தது. அவருடைய இடுப்புபோல் தெரிந்த பாகத்துக்குக் கீழாக
நெருப்பு போலத் தெரிந்தது.[f] அவரைச் சுற்றிலும் ஒரே வெளிச்சமாக இருந்
தது. **28** அவரைச் சுற்றியிருந்த பிரகாசமான வெளிச்சம், மழை பெய்யும்
நாளில் மேகத்திலே தோன்றுகிற வானவில்லைப் போல இருந்தது.[g]
அது யெகோவாவின் மகிமையைப் போல இருந்தது.[h] அதைப் பார்த்தவு
டன் நான் சாஷ்டாங்கமாக விழுந்தேன். அப்போது, ஒருவர் பேசும் சத்தம்
கேட்டது.

2 அவர் என்னிடம், “மனிதகுமாரனே,* எழுந்து நில். நான் உன்னிடம்
பேச வேண்டும்”[i] என்று சொன்னார். **2** அப்போது அவருடைய சக்தி
எனக்குள் வந்து என்னை எழுந்து நிற்க வைத்தது.[j] அவர் பேசுவதை நான்
கேட்டேன்.

3 அவர் என்னிடம், “மனிதகுமாரனே, நான் உன்னை இஸ்ரவேல் ஜனங்
களிடம் அனுப்புகிறேன்.[k] எனக்கு அடங்காத ஜனங்களிடம்[l] உன்னை
அனுப்புகிறேன். அவர்களும் அவர்களுடைய முன்னோர்களும் இன்று
வரை எனக்கு எதிராகப் பாவம் செய்திருக்கிறார்கள்.[m] **4** கொஞ்சம்கூட
அடங்காத, முரட்டுப் பிடிவாதமுள்ள ஜனங்களிடம்[n] நான் உன்னை அனுப்
புகிறேன். நீ அவர்களிடம், ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா இதைச்
சொல்கிறார்’ என்று சொல். **5** அவர்கள் கேட்டாலும் சரி, கேட்காவிட்டா
லும் சரி, அவர்கள் நடுவே ஒரு தீர்க்கதரிசி இருந்தார் என்று நிச்சயம் தெரிந்
துகொள்வார்கள்.[o] அவர்கள் அடங்காத ஜனங்கள்.[p]

6 மனிதகுமாரனே, நீ அவர்களைப் பார்த்து நடுங்காதே.[q] அவர்கள்
சொல்வதையெல்லாம் கேட்டுப் பயப்படாதே. நீ முட்களுக்கும் தேள்க
ளுக்கும் நடுவில் வாழ்ந்தாலும்*[r] அவர்களுடைய மிரட்டலுக்குப் பயப்ப
டாதே.[s] அவர்களுடைய முகத்தைப் பார்த்துத் திகிலடையாதே.[t] அவர்கள்
அடங்காத ஜனங்கள். **7** அவர்கள் கேட்கிறார்களோ இல்லையோ நீ என்
னுடைய செய்தியை அவர்களிடம் சொல்ல வேண்டும். அவர்கள் அடங்
காத ஜனங்கள்.[u]

2:1 *இந்த வார்த்தை எசேக்கியேல் புத்தகத்தில் 93 தடவை வருகிறது. **2:6**
*அல்லது, “ஜனங்கள் முரட்டுப் பிடிவாதம் பிடித்தாலும் உன்னை முள்போல் குத்தி
னாலும்.”

அதி. 1
a சங் 29:3; எசே 43:2; வெளி 14:2
b யாத் 24:10; சங் 96:6; எசே 10:1
c 1ரா 22:19; சங் 99:1; ஏசா 6:1; வெளி 4:2
d தானி 7:9
e எசே 8:2
f உபா 4:24; சங் 104:1, 2
g வெளி 4:3
h யாத் 24:16, 17; எசே 8:4

அதி. 2
i தானி 10:11
j எசே 3:24
k 2நா 36:15; எசே 33:7
l ஏசா 1:4; எரே 16:12
m உபா 9:24; சங் 78:8; எரே 3:25; அப் 7:51
n எசே 3:7
o எசே 3:11; எசே 33:4, 15; எசே 33:33; யோவா 15:22; அப் 20:26
p எசே 12:2
q 2ரா 1:15; லூ 12:4
r மீ 7:4
s ஏசா 51:7
t எரே 1:8; எசே 3:9
u எரே 1:17

8 மனிதகுமாரனே, நான் சொல்வதைக் கவனமாகக் கேள். எனக்கு
அடங்காத இந்த ஜனங்களைப் போல நீயும் அடங்காமல் போய்விடாதே.
இப்போது உன் வாயைத் திறந்து, நான் கொடுப்பதைச் சாப்பிடு"[a] என்று
சொன்னார்.

9 அப்போது, ஒரு கை என் முன்னால்[b] ஒரு சுருளை[c] நீட்டியது.
அதில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. **10** அவர் என் முன்னால் அதை விரித்
தபோது, அதன் உள்ளேயும் வெளியேயும்[d] புலம்பல் பாடல்களும்,* துக்க
மும் வேதனையுமான செய்திகளும் எழுதப்பட்டிருந்ததைப்[e] பார்த்தேன்.

3 பின்பு அவர் என்னிடம், "மனிதகுமாரனே, உன் முன்னால் இருக்கிற
இந்தச் சுருளைச் சாப்பிட்டுவிட்டு, இஸ்ரவேல் ஜனங்களிடம் போய்ப்
பேசு"[f] என்று சொன்னார்.

2 அதனால் நான் என் வாயைத் திறந்தேன். அப்போது, அவர் அந்தச்
சுருளைச் சாப்பிடக் கொடுத்தார். **3** பின்பு என்னிடம், "மனிதகுமாரனே,
நான் கொடுக்கிற இந்தச் சுருளைச் சாப்பிட்டு உன் வயிற்றை நிரப்பு" என்
றார். நானும் அதைச் சாப்பிட ஆரம்பித்தேன். அது என் வாய்க்குத் தேன்
போல் இனிப்பாக இருந்தது.[g]

4 அப்போது அவர் என்னிடம், "மனிதகுமாரனே, இஸ்ரவேல் ஜனங்க
ளிடம் போய் என்னுடைய வார்த்தைகளைச் சொல். **5** புரியாத அல்லது
தெரியாத பாஷையைப் பேசுகிற ஜனங்களிடம் நான் உன்னை அனுப்ப
வில்லை, இஸ்ரவேல் ஜனங்களிடம்தான் அனுப்புகிறேன். **6** உனக்குப் புரி
யாத அல்லது தெரியாத பாஷையைப் பேசுகிற மற்ற தேசத்து ஜனங்களி
டம் நான் உன்னை அனுப்பவில்லை. அப்படிப்பட்ட ஆட்களிடம்
அனுப்பினால்கூட அவர்கள் நீ சொல்வதைக் கேட்பார்கள்.[h] **7** ஆனால்,
இஸ்ரவேல் ஜனங்கள் நீ சொல்வதைக் கேட்க மாட்டார்கள். ஏனென்றால்,
நான் சொல்வதைக் கேட்க அவர்களுக்கு இஷ்டம் இல்லை.[i] இஸ்ரவேல்
ஜனங்கள் எல்லாருமே வீம்பும் பிடிவாதமும் பிடித்தவர்கள்.[j] **8** நான் உன்
னுடைய முகத்தை அவர்களுடைய முகத்தைப் போலவும் உன்னுடைய
நெற்றியை அவர்களுடைய நெற்றியைப் போலவும் கடினமாக்குவேன்.[k]
9 நான் உன்னுடைய நெற்றியை வைரம் போலக் கடினமாக்கியிருக்கிறேன்;
கருங்கல்லைவிட* உறுதியாக்கியிருக்கிறேன்.[l] நீ அவர்களை நினைத்துப்
பயப்படாதே, அவர்களுடைய முகத்தைப் பார்த்துத் திகிலடையாதே.[m]
அவர்கள் அடங்காத ஜனங்கள்" என்று சொன்னார்.

10 பின்பு அவர் என்னிடம், "மனிதகுமாரனே, நான் உன்னிடம் சொல்
வதையெல்லாம் நன்றாகக் கேட்டு உன் நெஞ்சில் பதிய வைத்துக்கொள்.
11 சிறைபிடிக்கப்பட்ட உன் ஜனங்களிடம்[n] போய்ப் பேசு. அவர்கள் கேட்
டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி,[o] 'உன்னதப் பேரரசராகிய யெகோவா
இதைச் சொல்கிறார்' என்று சொல்" என்றார்.

12 பின்பு, கடவுளுடைய சக்தி என்னைத் தூக்கிக்கொண்டு போனது.*[p]
அப்போது, இடியோசை போலப் பெரிய சத்தம் கேட்டது. "யெகோவா
வின் சன்னிதியில் அவருடைய மகிமைக்குப் புகழ் உண்டாகட்டும்" என்ற
குரலும் கேட்டது. **13** நான்கு ஜீவன்களுடைய சிறகுகள் ஒன்றோடொன்று

2:10 * வே.வா., "ஒப்பாரிகளும்." **3:9** * நே.மொ., "சிக்கிமுக்கிக் கல்லைவிட." **3:12** * அல்லது, "தேவதூதர் என்னைத் தூக்கிக்கொண்டு போனார்."

அதி. 2
a எரே 15:16; வெளி 10:9, 10
b எரே 1:9
c எசே 3:1
d வெளி 5:1
e எசே 19:1

அதி. 3
f வெளி 10:9, 10
g சங் 119:103; எரே 15:16; வெளி 10:9, 10
h யோனா 3:4, 5; மத் 11:21
i லூ 10:16
j யாத் 34:9; எரே 3:3; எரே 5:3
k எரே 1:18, 19; எரே 15:20; மீ 3:8
l ஏசா 50:7
m எரே 17:18
n 2ரா 24:12, 14
o எசே 2:5
p எசே 8:3

உரசிக்கொள்கிற சத்தமும்,[a] அவற்றுக்குப் பக்கத்தில் இருந்த சக்கரங்களின்
சத்தமும்,[b] இடியோசை போன்ற சத்தமும் கேட்டது. **14** அதன்பின், கடவு
ளுடைய சக்தி என்னைத் தூக்கிக்கொண்டு போனது. அப்போது, நான் விரக்
தியோடும் பயங்கர கோபத்தோடும் இருந்தேன். பின்பு, யெகோவாவின்
சக்தியால் முழுமையாக நிரப்பப்பட்டேன்.* **15** கேபார் ஆற்றுக்குப்[c] பக்
கத்தில் தெல்-ஆபீப் என்ற இடத்திலிருந்த சிறைபிடிக்கப்பட்ட ஜனங்க
ளிடம் நான் போனேன். அவர்கள் குடியிருந்த இடத்தில் தங்கினேன். ஏழு
நாட்களுக்கு ஏதோ பிரமைபிடித்தவன்போல் இருந்தேன்.[d]

16 ஏழு நாட்களுக்குப் பின்பு யெகோவா என்னிடம்,

17 "மனிதகுமாரனே, இஸ்ரவேல் ஜனங்களுக்கு நான் உன்னைக் காவல்
காரனாக நியமித்திருக்கிறேன்.[e] என்னிடமிருந்து எச்சரிப்பு செய்தியைக்
கேட்டதும் நீ அதை அவர்களிடம் சொல்ல வேண்டும்.[f] **18** பொல்லாத
வன் ஒருவன் கண்டிப்பாகச் சாவான் என்று நான் சொல்லும்போது, கெட்ட
வழியைவிட்டு அவன் திருந்தி உயிர் பிழைக்கும்படி நீ அவனை எச்சரிக்க
வேண்டும்.[g] நீ அவனை எச்சரிக்காவிட்டால், அவன் செய்த குற்றத்துக்காக
அவன் செத்தாலும்[h] அவனுடைய சாவுக்கு உன்னைத்தான் பொறுப்பாளி
ஆக்குவேன்.*[i] **19** நீ பொல்லாதவனை எச்சரித்தும், அவன் தன்னுடைய
அக்கிரமத்தையும் கெட்ட வழியையும்விட்டுத் திருந்தவில்லை என்றால்,
அவன் செய்த குற்றத்துக்காக அவன் சாவான். ஆனால், உன்னுடைய
உயிரை நீ காப்பாற்றிக்கொள்வாய்.[j] **20** நீதிமான் ஒருவன் நீதியாக நடப்
பதை விட்டுவிட்டு கெட்டது செய்தால் நான் அவனுக்கு முன்னால்
தடைக்கல்லை வைப்பேன், அவன் செத்துப்போவான்.[k] நீ அவனை எச்ச
ரிக்காவிட்டால், அவன் செய்த பாவத்துக்காக அவன் செத்துப்போவான்.
அவன் செய்த நீதியான காரியங்களை நான் நினைத்துப் பார்க்க மாட்
டேன். ஆனால், அவனுடைய சாவுக்கு உன்னைத்தான் பொறுப்பாளி
ஆக்குவேன்.[l] **21** பாவம் செய்யக் கூடாதென்று நீதிமானை நீ எச்சரித்த
பின்பு அவன் பாவம் செய்யாமல் இருந்தால், கண்டிப்பாக அவன் உயிர்
தப்புவான்.[m] நீ அவனை எச்சரித்ததால் நீயும் உன் உயிரைக் காப்பாற்றிக்
கொள்வாய்" என்று சொன்னார்.

22 அங்கே யெகோவாவின் சக்தியால் நான் நிரப்பப்பட்டேன்.* அவர்
என்னிடம், "நீ எழுந்து சமவெளிக்குப் போ. அங்கே நான் உன்னிடம் பேசு
வேன்" என்றார். **23** அதனால் நான் எழுந்து சமவெளிக்குப் போனேன்.
கேபார் ஆற்றுக்குப்[n] பக்கத்தில் பார்த்தது போல இங்கேயும் யெகோவா
வின் மகிமையைப் பார்த்தேன்.[o] உடனே சாஷ்டாங்கமாக விழுந்தேன்.
24 அப்போது கடவுளுடைய சக்தி எனக்குள் வந்து என்னை எழுந்து நிற்க
வைத்தது.[p] பின்பு அவர் என்னிடம்,

"நீ உன்னுடைய வீட்டுக்குள் போய்க் கதவை அடைத்துக்கொள்.
25 மனிதகுமாரனே, நீ அவர்களிடம் போக முடியாதபடி அவர்கள் உன்
னைக் கயிறுகளால் கட்டுவார்கள். **26** நான் உன்னுடைய நாவை மேல்வா
யோடு ஒட்டிக்கொள்ள வைப்பேன். நீ அவர்களைக் கண்டிக்காதபடி
உன்னை மவுனமாக்குவேன். ஏனென்றால், அவர்கள் அடங்காத ஜனங்கள்.

3:14 * நே.மொ., "யெகோவாவின் கை என்மேல் பலமாக இருந்தது." **3:18** * நே.மொ., "அவனுடைய இரத்தத்தை உன்னிடம் கேட்பேன்." **3:22** * நே.மொ., "யெகோவா வின் கை என்மேல் வந்தது."

அதி. 3

a எசே 1:24
b எசே 10:16
c எசே 1:3
d எரே 23:9
e ஏசா 21:8, ஏசா 62:6, எரே 6:17
f ஏசா 58:1, எசே 33:7
g அப் 2:40, 1தீ 4:16
h எசே 33:4
i எசே 33:8
j எசே 33:9, அப் 18:6, அப் 20:26
k எசே 18:24, 26, எசே 33:12, 18
l லேவி 19:17, எசே 33:6, எபி 13:17
m நீதி 17:10, எசே 33:14, 15, யாக் 5:19, 20
n எசே 1:1
o எசே 1:27, 28
p எசே 2:2, தானி 10:19

27 ஆனால், நான் உன்னோடு பேசும்போது உன் வாயைத் திறப்பேன்.
நீ அவர்களிடம்,[a] ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா இதைச் சொல்
கிறார்’ என்று சொல்ல வேண்டும். கேட்கிறவர்கள் கேட்கட்டும்.[b] கேட்கா
தவர்கள் கேட்காமல் போகட்டும். அவர்கள் அடங்காத ஜனங்கள்”[c] என்று
சொன்னார்.

4 பின்பு அவர் என்னிடம், “மனிதகுமாரனே, செங்கல் ஒன்றை எடுத்து
உன் முன்னால் வை. அதன்மேல் எருசலேம் நகரத்தின் படத்தைச்
செதுக்கு. **2** முற்றுகையிடுவது போல[d] அதைச் சுற்றிலும் முற்றுகைச் சுவ
ரைக் கட்டி,[e] மண்மேடுகளை எழுப்பு.[f] முகாம்களை அமைத்து, மதில்
இடிக்கும் இயந்திரங்களைச் சுற்றிலும் நிறுத்து.[g] **3** ஒரு இரும்புத் தகட்டை
எடுத்து, அதை இரும்பு மதிலைப் போல உனக்கும் நகரத்துக்கும் இடையில்
வை. அந்த நகரத்துக்கு நேராக உன் முகத்தை வைத்துக்கொண்டு, அதை
முற்றுகையிடு. நீ இப்படி அதை முற்றுகையிடுவது இஸ்ரவேல் ஜனங்க
ளுக்கு ஒரு அடையாளமாக இருக்கும்.[h]

4 அதன்பின் நீ இடது பக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டு, இஸ்
ரவேல் ஜனங்களின் குற்றத்தைச் சுமக்க வேண்டும்.[i] நீ இடது பக்கமாகத்
திரும்பிப் படுத்திருக்கும் நாளெல்லாம் அவர்களுடைய குற்றத்தைச் சுமப்
பாய். **5** இஸ்ரவேல் ஜனங்கள் குற்றம் செய்த வருஷங்களின் கணக்
குப்படி 390 நாட்களை உன்மேல் சுமத்துவேன்.[j] நீ அவர்களுடைய குற்றத்
தைச் சுமக்க வேண்டும். **6** அந்த நாட்கள் முடியும்வரை நீ அதைச் சுமக்க
வேண்டும்.

அதன்பின் மறுபடியும் நீ படுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தடவை
வலது பக்கமாகத் திரும்பிப் படுத்து, யூதா ஜனங்களின் குற்றத்தை 40 நாட்
களுக்குச் சுமக்க வேண்டும்.[k] ஒரு நாளுக்கு ஒரு வருஷம் என்ற கணக்கில்
இந்த நாட்களை உனக்குச் சொல்லியிருக்கிறேன். **7** முற்றுகையிடப்பட்ட
எருசலேமுக்கு எதிராக முகத்தைத் திருப்பி,[l] உன் அங்கியின் கையைச்
சுருட்டிக்கொண்டு, அந்த நகரத்துக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் சொல்.

8 நான் உன்னைக் கயிறுகளால் கட்டப்போகிறேன். முற்றுகை நாட்
கள் முடியும்வரை உன்னால் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்
குத் திரும்பிப் படுக்க முடியாது.

9 நீ கோதுமையையும், பார்லியையும், மொச்சையையும், பருப்புகளை
யும், தினையையும், மாக்கோதுமையையும்* எடுத்து ஒரு பாத்திரத்தில்
வைத்து உனக்காக ரொட்டி சுட்டுக்கொள். நீ இடது பக்கமாகத் திரும்பிப்
படுத்திருக்கும் 390 நாட்களும் அதைச் சாப்பிட வேண்டும்.[m] **10** தினமும்
20 சேக்கல்* எடையுள்ள உணவை அளந்து சாப்பிட வேண்டும். அதுவும்
குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே சாப்பிட வேண்டும்.

11 தண்ணீரையும் அரை லிட்டர்* அளவுக்குத்தான் குடிக்க வேண்டும்.
அதுவும் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே குடிக்க வேண்டும்.

12 வட்டமான பார்லி ரொட்டியைச் சாப்பிடுவது போல நீ அந்த ரொட்டி
யைச் சாப்பிட வேண்டும். காய்ந்த மனுஷ மலத்தை எரிபொருளாகப் பயன்
படுத்தி, அவர்களுடைய கண்களுக்கு முன்பாக அந்த ரொட்டியைச் சுட்டு

அதி. 3
a எசே 24:27; எசே 33:22
b மத் 11:15
c ஏசா 30:9

அதி. 4
d 2ரா 24:11; எரே 39:1
e 2ரா 25:1
f எரே 6:6; எரே 32:24
g எசே 21:22
h எசே 12:6; எசே 24:24
i 2ரா 17:21
j எண் 14:34; 1ரா 12:19, 20
k 2ரா 23:27
l எரே 52:4
m எசே 4:5

4:9 *பூர்வ எகிப்தில் பயிரிடப்பட்ட ஒருவகையான தரம்குறைந்த கோதுமை. **4:10** *சுமார் 230 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **4:11** *நே.மொ., “ஒரு ஹின் அளவில் ஆறிலொரு பங்கு.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

சாப்பிட வேண்டும்” என்று சொன்னார். **13** அதோடு, “இப்படித்தான் இஸ்ர
வேலர்களும் நான் அவர்களைத் துரத்தியடிக்கிற தேசங்களில் அசுத்தமான
ரொட்டியைச் சாப்பிடுவார்கள்”[a] என்று யெகோவா சொன்னார்.

14 அப்போது நான், “உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, இதை மட்
டும் செய்யச் சொல்லாதீர்கள்! சிறு வயதிலிருந்தே நான் தீட்டுப்பட்ட உண
வைச் சாப்பிட்டதில்லை. தானாகச் செத்துப்போன மிருகத்தையோ, இன்
னொரு மிருகத்தால் கடித்துக் குதறிப்போடப்பட்ட மிருகத்தையோ நான்
சாப்பிட்டதில்லை.[b] அசுத்தமான எந்த இறைச்சியும் என் வாய்க்குள் போன
தில்லை”[c] என்று சொன்னேன்.

15 அதற்கு அவர், “சரி, காய்ந்த மனுஷ மலத்துக்குப் பதிலாக மாட்டு
சாணத்தின் வறட்டிகளை எரித்து நீ ரொட்டி சுடு” என்றார். **16** பின்பு, “மனி
தகுமாரனே, எருசலேமில் நான் பஞ்சத்தைக் கொண்டுவரப்போகிறேன்.*[d]
ஜனங்கள் பயங்கர கவலையோடு உணவை அளந்து அளந்து சாப்பிடுவார்
கள்.[e] திகிலோடு தண்ணீரை அளந்து அளந்து குடிப்பார்கள்.[f] **17** கடைசி
யில், சாப்பாடும் தண்ணீரும் கிடைக்காமல் ஒருவரை ஒருவர் வெறித்துப்
பார்ப்பார்கள். அவர்களுடைய குற்றத்தினாலேயே அவர்கள் அழிந்துபோ
வார்கள்” என்றார்.

5 அதன்பின் அவர், “மனிதகுமாரனே, கூர்மையான ஒரு வாளை நீ எடுத்
துக்கொள்ள வேண்டும். ஒரு சவரக்கத்தியைப் போல அதை வைத்து
உன்னுடைய தலைமுடியையும் தாடியையும் சிரைக்க வேண்டும். பின்பு,
அந்த முடியைத் தராசில் எடைபோட்டு மூன்று பங்காகப் பிரிக்க வேண்டும்.
2 அதில் ஒரு பங்கை எடுத்து முற்றுகை நாட்களின் முடிவில் நகரத்துக்
குள் சுட்டெரிக்க வேண்டும்.[g] இன்னொரு பங்கை எடுத்து நகரத்தைச் சுற்றி
லும் வாளால் வெட்டிப்போட வேண்டும்.[h] கடைசி பங்கை எடுத்து காற்றில்
பறக்கவிட வேண்டும். அவற்றுக்குப் பின்னால் நான் ஒரு வாளை அனுப்
புவேன்.[i]

3 அந்தக் கடைசி பங்கிலிருந்து கொஞ்சத்தை எடுத்து உன்னுடைய
அங்கியின் ஓரங்களில் முடிந்துகொள். **4** இன்னும் கொஞ்சத்தை எடுத்து
நெருப்பில் போட்டு எரித்துவிடு. அந்த நெருப்பு இஸ்ரவேல் ஜனங்கள் எல்
லார் மேலேயும் பற்றியெரியும்.[j]

5 உன்னதப் பேரரசராகிய யெகோவா இப்படிச் சொல்கிறார்: ‘இது
எருசலேமைக் குறிக்கிறது. மற்ற ஜனங்களின் நடுவிலும் தேசங்களின் நடு
விலும் நான் எருசலேமை வைத்தேன். **6** ஆனால், அவள் என்னுடைய
நீதித்தீர்ப்புகளையும் சட்டதிட்டங்களையும் மீறினாள். சுற்றியுள்ள ஜனங்க
ளையும் தேசங்களையும்விட மோசமாக நடந்துகொண்டாள்.[k] என்னுடைய
நீதித்தீர்ப்புகளை ஒதுக்கித்தள்ளி, என்னுடைய சட்டதிட்டங்களின்படி நடக்
காமல்போனாள்.’

7 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘சுற்றியுள்ள
எல்லா தேசங்களையும்விட நீ அதிக அட்டூழியம் செய்தாய். என்னுடைய
சட்டதிட்டங்களையும் நீதித்தீர்ப்புகளையும் ஒதுக்கிவிட்டு அந்தத் தேசங்க
ளின் நீதித்தீர்ப்புகளைப் பின்பற்றினாய்.[l] **8** அதனால், உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்வது இதுதான்: “நகரமே, நான் உன் எதிரியாக

4:16 * நே.மொ., “ரொட்டிக் கோல்களை முறித்துப்போடுவேன்.” இவை ஒருவேளை ரொட்டிகளை மாட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்ட கோல்களாக இருந்திருக்கலாம்.

அதி. 4
a ஓசி 9:3
b யாத் 22:31; லேவி 7:24; லேவி 11:40
c உபா 14:3; ஏசா 65:4; ஏசா 66:17
d லேவி 26:26; ஏசா 3:1; எசே 5:16
e 2ரா 25:3; எரே 37:21; புல 1:11; புல 4:9; புல 5:9, 10
f எசே 12:18

அதி. 5
g எரே 9:21; எசே 4:8
h எரே 15:2
i லேவி 26:33; எசே 5:12
j எரே 4:4
k எசே 16:46, 47
l 2ரா 21:9, 11; எரே 2:11

வருவேன்.[a] எல்லா தேசங்களுக்கு முன்பாகவும் உன்னைத் தண்டிப்பேன்.[b]
9 நீ அருவருப்பான காரியங்களைச் செய்ததால் நான் உனக்கு ஒன்
றைச் செய்யப்போகிறேன். அப்படிப்பட்ட ஒன்றை நான் இதுவரை செய்த
தும் இல்லை, இனிமேல் செய்யப்போவதும் இல்லை.[c]

10 பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளையும் பிள்ளைகள் தங்களு
டைய பெற்றோரையும் கொன்று சாப்பிடுவார்கள்.[d] நான் உங்களைத் தண்
டித்து, மிச்சமிருக்கிற எல்லாரையும் நாலாபக்கமும் சிதறிப்போகச் செய்
வேன்.”’[e]

11 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘என் உயிர்
மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* அருவருப்பான சிலைகளாலும் அரு
வருப்பான பழக்கவழக்கங்களாலும் நீ என்னுடைய ஆலயத்தைத் தீட்டுப்
படுத்தியதால்[f] நான் உன்னை ஒதுக்கித்தள்ளுவேன். உன்னைப் பார்த்துப்
பரிதாபப்பட மாட்டேன். உன்மேல் கொஞ்சம்கூட கரிசனை காட்ட மாட்
டேன்.[g] **12** உன்னுடைய ஜனங்களில் மூன்றிலொரு பங்கினர் கொள்ளை
நோயினால் அல்லது பஞ்சத்தினால் சாவார்கள். மூன்றிலொரு பங்கினர்
உன்னைச் சுற்றிலும் வாளுக்குப் பலியாவார்கள்.[h] மிச்சமிருக்கிற மூன்றி
லொரு பங்கினரை நான் எல்லா திசைகளிலும் சிதறிப்போகப் பண்ணு
வேன். அவர்களுக்குப் பின்னால் ஒரு வாளை அனுப்புவேன்.[i] **13** அப்
போதுதான் என் கோபம் அடங்கும். என்னுடைய ஆக்ரோஷம் தணிந்து,
நான் நிம்மதி அடைவேன்.[j] நான் அவர்கள்மேல் என் கோபத்தைக் கொட்
டித் தீர்த்த பின்பு, யெகோவாவாகிய நான் முழு பக்தியை*[k] எதிர்பார்க்கிற
கடவுளாக இருப்பதால்தான் இதையெல்லாம் சொன்னேன் என்று தெரிந்து
கொள்வார்கள்.

14 நான் உன்னைப் பாழாக்கி, சுற்றியுள்ள ஜனங்களும் அந்தப் பக்கமா
கப் போகிற எல்லாரும் உன்னைப் பழித்துப் பேசும்படி செய்வேன்.[l]
15 நான் கோபத்தோடும் ஆக்ரோஷத்தோடும் உன்னைப் பயங்கரமாகத்
தண்டிக்கும்போது, உனக்கு வந்த கோரமான முடிவைப் பார்த்து சுற்றியுள்ள
ஜனங்கள் உன்னைப் பழித்துப் பேசுவார்கள். உன்னைக் கிண்டல் செய்வார்
கள்.[m] உன்னுடைய கெட்ட உதாரணம் அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக
இருக்கும். யெகோவாவாகிய நானே இதைச் சொல்கிறேன்.

16 உன்னைப் பாழாக்குவதற்காக, பஞ்சத்தின் கொடிய அம்புகளை உன்
மேல் எறிவேன். அந்த அம்புகள் உன்னை அழிக்கும்.[n] நான் பஞ்சத்தைத்
தீவிரமாக்கி, உனக்கு உணவே கிடைக்காதபடி செய்துவிடுவேன்.[o] **17** பஞ்
சத்தையும் கொடிய மிருகங்களையும் உனக்கு எதிராக அனுப்புவேன்.[p]
அவை உன் பிள்ளைகளைக் கொன்றுபோடும். எங்கு பார்த்தாலும் ஜனங்
கள் கொள்ளைநோய்க்குப் பலியாவார்கள், கொலை செய்யப்பட்டுக் கிடப்
பார்கள். உனக்கு எதிராக நான் ஒரு வாளை அனுப்புவேன்.[q] யெகோவா
வாகிய நானே இதைச் சொல்கிறேன்’” என்றார்.

6 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “மனிதகுமாரனே, இஸ்ரவேலின்
மலைகளுக்கு நேராக உன்னுடைய முகத்தைத் திருப்பிக்கொண்டு,
அவற்றுக்கு எதிராக இப்படித் தீர்க்கதரிசனம் சொல்: **3** ‘இஸ்ரவேலின்
மலைகளே, உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்லும் செய்தியைக்

5:11 * வே.வா., “நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமா
கச் சொல்கிறேன்.” **5:13** * வே.வா., “என்னை மட்டுமே வணங்க வேண்டுமென்று.”

அதி. 5
a எரே 21:5; எசே 15:7
b உபா 29:22, 24; 1ரா 9:8; புல 2:15
c புல 4:6; தானி 9:12
d லேவி 26:29; எரே 19:9; புல 4:10
e லேவி 26:33; உபா 28:64
f லேவி 20:3; 2ரா 21:1, 7; 2நா 36:14; எரே 32:34
g புல 2:21; எசே 7:4
h எரே 14:12; எரே 15:2; எரே 21:9
i லேவி 26:33; எரே 9:16; எரே 42:16
j எசே 16:42
k யாத் 20:3, 5; யாத் 34:14; உபா 6:15
l உபா 28:37; 1ரா 9:7; நெ 2:17
m சங் 79:4; எரே 24:9; புல 2:15; புல 3:61, 62
n உபா 32:23
o லேவி 26:26; எசே 4:16
p லேவி 26:22; உபா 32:24; எசே 14:21; எசே 33:27
q எசே 21:3

கேளுங்கள். உன்னதப் பேரரசராகிய யெகோவா மலைகளுக்கும் குன்றுக
ளுக்கும் ஓடைகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் சொல்வது இதுதான்:
“இதோ, நான் உங்களுக்கு எதிராக ஒரு வாளை அனுப்புவேன். உங்களு
டைய ஆராதனை மேடுகளை அழிப்பேன். **4** உங்கள் பலிபீடங்கள் இடிக்
கப்படும், உங்களுடைய தூபபீடங்கள் உடைக்கப்படும்.[a] கொல்லப்பட்ட
ஜனங்களுடைய பிணங்களை உங்களுடைய அருவருப்பான* சிலைக
ளுக்குமுன் வீசியெறிவேன்.[b] **5** இஸ்ரவேலர்களின் பிணங்களை அவர்க
ளுடைய அருவருப்பான சிலைகளுக்குமுன் தூக்கி வீசுவேன். உங்கள்
பலிபீடங்களைச் சுற்றி உங்களுடைய எலும்புகளைச் சிதறடிப்பேன்.[c]
6 உங்களுடைய எல்லா நகரங்களும் ஆராதனை மேடுகளும் சின்னாபின்
னமாகும்.[d] உங்களுடைய பலிபீடங்கள் இடித்து நொறுக்கப்படும். உங்களு
டைய அருவருப்பான சிலைகள் நாசமாகும். உங்களுடைய தூபபீடங்கள்
உடைக்கப்படும். உங்கள் கைகளால் செய்த எல்லாமே அழிந்துபோகும்.
7 ஜனங்கள் உங்கள் நடுவே வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்.[e] அப்போது,
நான் யெகோவா என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.[f]

8 ஆனால், கொஞ்சம் பேரை நான் விட்டுவைப்பேன். சிலர் வாளுக்
குத் தப்பி மற்ற தேசங்களுக்குச் சிதறிப்போவார்கள்.[g] **9** தப்பிக்கிறவர்கள்
தாங்கள் பிடித்துச் செல்லப்பட்ட தேசங்களில் என்னை நினைத்துப் பார்ப்
பார்கள்.[h] அவர்கள் எனக்குத் துரோகம் செய்தபோதும்* அருவருப்பான
சிலைகளை ஆசையோடு வணங்கியபோதும்[i] என் நெஞ்சம் எந்தளவுக்கு
வேதனைப்பட்டிருக்கும் என்று புரிந்துகொள்வார்கள்.[j] தாங்கள் செய்த
எல்லா அக்கிரமங்களையும் அருவருப்புகளையும் நினைத்து வெட்கப்படு
வார்கள், தங்களையே வெறுப்பார்கள்.[k] **10** அப்போது, நான் யெகோவா
என்றும், இந்தத் தண்டனைகளைப் பற்றி நான் அவர்களை எச்சரித்தது
பொய் அல்ல என்றும் அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.”’[l]

11 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘உன்
னுடைய கைகளை அடித்து, காலைத் தரையில் ஓங்கித் தட்டி, இஸ்ரவேல்
ஜனங்கள் செய்த எல்லா அக்கிரமங்களுக்காகவும் அருவருப்புகளுக்காக
வும் அழுது புலம்பு. அவர்கள் வாளினாலும் பஞ்சத்தினாலும் கொள்ளை
நோயினாலும் சாவார்கள்.[m] **12** தூரத்தில் இருக்கிறவர்கள் கொள்ளைநோ
யினால் சாவார்கள், பக்கத்தில் இருக்கிறவர்கள் வாளால் சாவார்கள்.
இவற்றிலிருந்து தப்பிக்கிறவர்கள் பஞ்சத்துக்குப் பலியாவார்கள். நான்
அவர்கள்மேல் என் கோபத்தைக் கொட்டித் தீர்ப்பேன்.[n] **13** கொல்லப்பட்
டவர்களுடைய பிணங்கள் அவர்களுடைய அருவருப்பான சிலைகளுக்கு
முன்பாகக் கிடக்கும். பலிபீடங்களைச் சுற்றிலும், உயர்ந்த குன்றுகளிலும்,
மலை உச்சிகளிலும், அடர்த்தியான மரங்களின் கீழும், பெரிய மரங்களின்
கீழும், அருவருப்பான சிலைகளைப் பிரியப்படுத்துவதற்காக வாசனை
யுள்ள பலிகளை[o] அவர்கள் செலுத்திய மற்ற எல்லா இடங்களிலும் பிணங்
கள் கிடக்கும்.[p] அதைப் பார்க்கும்போது நான் யெகோவா என்று
தெரிந்துகொள்வார்கள்.[q] **14** நான் அவர்களைத் தண்டித்து அவர்களு
டைய தேசத்தைப் பாழாக்குவேன். அவர்கள் குடியிருக்கிற எல்லா இடங்க

6:4 *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடைய
தாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **6:9**
*வே.வா., “ஒழுக்கக்கேடாக நடந்து என்னைவிட்டு விலகியபோதும்.”

அதி. 6
a ஏசா 27:9
b லேவி 26:30
c எரே 8:1, 2
d எரே 2:15; எரே 32:29; எசே 16:39; மீ 3:12
e எரே 14:18
f எசே 7:4
g எரே 30:10; எரே 44:28; எசே 14:22
h உபா 30:1, 2; சங் 137:1
i எண் 15:39
j சங் 78:40, 41; ஏசா 63:10
k எசே 20:43; எசே 36:31
l எசே 33:29; தானி 9:12; சக 1:6
m எரே 15:2; எரே 16:4; எசே 5:12
n எசே 5:13
o எசே 20:28
p எரே 8:2
q எசே 12:15

ளும் திப்லாவுக்குப் பக்கத்தில் இருக்கிற வனாந்தரத்தைவிட வெறுமையாக ஆகிவிடும். அப்போது, நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்'" என்று சொன்னார்.

7 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** "மனிதகுமாரனே, உன்னதப் பேரரசராகிய யெகோவா இஸ்ரவேல் தேசத்துக்குச் சொல்வது இதுதான்: 'அழிவு வந்துவிட்டது! தேசத்தின் நாலாபக்கத்துக்கும் அழிவு வந்துவிட்டது! **3** இப்போதே உனக்கு அழிவு வந்துவிட்டது! நான் என்னுடைய கோபத்தை உன்மேல் கொட்டுவேன். உன்னுடைய நடத்தைக்கு ஏற்றபடி உனக்குத் தீர்ப்பு கொடுப்பேன். நீ செய்த அருவருப்பான காரியங்களுக்காக உன்னைத் தண்டிப்பேன். **4** உன்னைப் பார்த்து நான் பரிதாபப்பட மாட்டேன். உன்மேல் கரிசனை காட்ட மாட்டேன்.[a] நீ செய்த பாவங்களுக்குத் தக்க தண்டனை கொடுப்பேன். உன்னுடைய அருவருப்பான செயல்களின் விளைவுகளை நீ அனுபவிப்பாய்.[b] அப்போது, நான் யெகோவா என்று தெரிந்துகொள்வாய்.'[c]

5 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'இதோ, ஆபத்து வருகிறது! இதுவரை வராத ஆபத்து வருகிறது![d] **6** அழிவு வருகிறது! அந்த அழிவு வந்தே தீரும்! அது திடீரென்று உன்மேல் வரும். இதோ, அது வருகிறது! **7** தேசத்தில் குடியிருக்கிறவனே, உனக்கு வேளை* வந்துவிட்டது. அந்த நாளும் நேரமும் நெருங்கிவிட்டது.[e] மலைகளிலே சந்தோஷ சத்தம் கேட்பதற்குப் பதிலாக அலறல் சத்தம்தான் கேட்கிறது.

8 இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் என்னுடைய கோபத்தை உன்மேல் கொட்டுவேன்.[f] அதை முழுமையாகக் கொட்டித் தீர்ப்பேன்.[g] உன்னுடைய நடத்தைக்கு ஏற்றபடி உனக்குத் தீர்ப்பு கொடுப்பேன். நீ செய்த அருவருப்பான காரியங்களுக்காக உன்னைத் தண்டிப்பேன். **9** உன்னைப் பார்த்து நான் பரிதாபப்பட மாட்டேன். உன்மேல் கரிசனை காட்ட மாட்டேன்.[h] நீ செய்த பாவங்களுக்குத் தக்க தண்டனை கொடுப்பேன். உன்னுடைய அருவருப்பான செயல்களின் விளைவுகளை நீ அனுபவிப்பாய். அப்போது, யெகோவாவாகிய நான்தான் உன்னைத் தண்டிக்கிறேன் என்று தெரிந்துகொள்வாய்.[i]

10 இதோ, அந்த நாள் வருகிறது![j] இதோ, அது வந்துகொண்டிருக்கிறது! உனக்கு வேளை* வந்துவிட்டது. பிரம்பு தயாராக இருக்கிறது. எதிரியின் அகங்காரம்# அதிகமாகிவிட்டது. **11** நீ அக்கிரமம் செய்ததால், அந்தப் பிரம்பு உன்னை அடித்து நொறுக்கியிருக்கிறது.*[k] யாருமே தப்பிக்க முடியாது. எந்த ஆட்களினாலும் செல்வத்தினாலும் செல்வாக்கினாலும் அவர்களைக் காப்பாற்ற முடியாது. **12** அந்த நேரமும் நாளும் கண்டிப்பாக வரும். நிலத்தை வாங்குகிறவர்கள் சந்தோஷப்பட வேண்டாம், விற்கிறவர்களும் அழுது புலம்ப வேண்டாம்; ஏனென்றால், எல்லா ஜனங்கள்மேலும் என்னுடைய கோபம் பற்றியெரியும்.*[l] **13** விற்கிறவர்கள் உயிர்தப்பினாலும்

7:7, 10 *அல்லது, "மலர்மாலை." **7:10** #இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. **7:11** *வே.வா., "அக்கிரமத்தைத் தண்டிக்கும் பிரம்பாக வன்முறை உருவெடுத்திருக்கிறது." **7:12** *அதாவது, "நிலம் வாங்குகிறவர்களுக்கும் பிரயோஜனம் இருக்காது, விற்கிறவர்களுக்கும் பிரயோஜனம் இருக்காது; ஏனென்றால், எல்லாருமே அழிந்துவிடுவார்கள்."

அதி. 7
a எசே 5:11
b எரே 16:18, எசே 16:43
c எசே 6:13
d 2ரா 21:12, தானி 9:12
e செப் 1:14
f 2நா 34:21
g எரே 7:20, எசே 5:13
h எரே 13:14
i ஏசா 66:6, எசே 33:29
j செப் 1:14
k ஏசா 59:6, எரே 6:7, மீ 6:12
l செப் 1:18

விற்ற நிலத்துக்குத் திரும்ப மாட்டார்கள். யாருமே திரும்ப மாட்டார்கள்.
ஏனென்றால், தரிசனம் மொத்த ஜனத்துக்கும் எதிரானது. கெட்டது செய்வ
தால்* யாருமே தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள மாட்டார்கள்.

14 எக்காளம் ஊதப்பட்டிருக்கிறது.[a] எல்லாரும் தயாராக இருக்கிறார்
கள். ஆனால், யாரும் போருக்குப் போகாமல் இருக்கிறார்கள். ஏனென்றால்,
மொத்த ஜனத்தின் மேலும் என் கோபம் பற்றியெரிகிறது.[b] **15** வெளியே
வாள் வெட்டிச் சாய்க்கிறது.[c] உள்ளே கொள்ளைநோயும் பஞ்சமும் உயி
ரைப் பறிக்கிறது. வயலில் இருக்கிற எல்லாரும் வாளுக்குப் பலியாவார்
கள். நகரத்தில் இருக்கிறவர்கள் பஞ்சத்துக்கும் கொள்ளைநோய்க்கும் பலி
யாவார்கள்.[d] **16** அவர்களில் உயிர்தப்பிக்கிறவர்கள் மலைகளுக்குப்
போவார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய குற்றத்தை நினைத்துப் பள்
ளத்தாக்குகளில் உள்ள புறாக்களைப் போல முனகுவார்கள்.[e] **17** அவர்க
ளுடைய கைகள் தளர்ந்துவிடும், முழங்கால்களில் நீர் வழிந்தோடும்.*[f]
18 அவர்கள் துக்கத் துணி* போட்டிருக்கிறார்கள்.[g] பயத்தில் நடுநடுங்
குகிறார்கள். எல்லாரும் அவமானப்பட்டுப் போவார்கள், தங்களுடைய
தலையை மொட்டை அடித்துக்கொள்வார்கள்.[h]

19 அவர்கள் தங்களுடைய வெள்ளியை வீதிகளில் வீசிவிடுவார்கள்.
தங்கத்தைக் கண்டாலே அவர்களுக்கு வெறுப்பாக இருக்கும். யெகோவா
வுடைய கடும் கோபத்தின் நாளில் அவர்களுடைய வெள்ளியோ தங்கமோ
அவர்களைக் காப்பாற்றாது.[i] அவை அவர்களைத் திருப்திப்படுத்தாது,
அவர்களுடைய வயிற்றையும் நிரப்பாது. அவை அவர்களைப் பாவக்குழி
யில்தான் தள்ளியிருக்கின்றன. **20** அவர்கள் தங்களுடைய ஆபரணங்க
ளின் அழகைப் பார்த்துப் பெருமைப்பட்டார்கள். அவற்றை* வைத்து
அருவருப்பான சிலைகளைச் செய்தார்கள்.[j] அதனால், அவற்றையே அவர்
களுக்கு அருவருப்பானதாக ஆக்குவேன். **21** அவற்றை* மற்ற தேசத்தா
ரின் கையிலும் கொள்ளையடிக்கிறவர்களின் கையிலும் கொடுத்துவிடு
வேன். அவர்கள் அவற்றைத் தீட்டுப்படுத்துவார்கள்.

22 நான் அவர்களிடமிருந்து என் முகத்தைத் திருப்பிக்கொள்வேன்.[k]
என்னுடைய மறைவான இடத்தை* அவர்கள்# தீட்டுப்படுத்துவார்கள். திரு
டர்கள் அங்கே நுழைந்து அதன் பரிசுத்தத்தைக் கெடுப்பார்கள்.[l]

23 நீ சங்கிலியை* தயார் செய்.[m] அநியாயமான தீர்ப்புகளால் தேச
மெங்கும் ஜனங்கள் சாகிறார்கள்.[n] நகரமெங்கும் ஒரே வன்முறை.[o]
24 ஜனங்களிலேயே மிகக் கொடூரமான ஜனங்களை நான் அவர்களுக்கு
எதிராக வர வைப்பேன்.[p] அந்த ஜனங்கள் அவர்களுடைய வீடுகளைப்
பறித்துக்கொள்வார்கள்.[q] பலம்படைத்தவர்களின் பெருமைக்கு நான் முடிவு
கட்டுவேன். அவர்களுடைய பரிசுத்தமான இடங்கள் தீட்டுப்படுத்தப்ப
டும்.[r] **25** வேதனையில் தவிக்கும்போது அவர்கள் சமாதானத்தைத் தேடு

7:13 *அல்லது, "செய்வதன் மூலம்." **7:17** *அதாவது, "பயத்தில் சிறுநீர் கழித்துவிடுவார்கள்." **7:18** *சொல் பட்டியலைப் பாருங்கள். **7:20** *அதாவது, "வெள்ளியாலும் தங்கத்தாலும் செய்யப்பட்ட ஆபரணங்களை." **7:21** *அதாவது, "சிலைகள் செய்ய அவர்கள் பயன்படுத்திய வெள்ளியையும் தங்கத்தையும்." **7:22** *அநேகமாக, "யெகோவாவுடைய ஆலயத்தின் மகா பரிசுத்தமான அறையை." #அதாவது, "எதிரிகள்." **7:23** *அதாவது, "சிறைக்கைதிகளுக்கான சங்கிலியை."

அதி. 7
a எரே 4:5
b எரே 7:20; எரே 12:12
c லேவி 26:25
d எரே 14:18; எசே 5:12
e ஏசா 59:11
f எசே 21:7
g ஏசா 3:24
h ஏசா 22:12
i நீதி 11:4; செப் 1:18
j 2ரா 21:1, 7; எரே 7:30
k எரே 18:17
l 2நா 36:19; புல 1:10
m எரே 39:6, 7; புல 3:7
n 2ரா 21:16; 2ரா 24:3, 4; எரே 2:34; எசே 9:9
o ஏசா 59:6; மீ 2:2
p உபா 28:48-51; எசே 21:31; ஆப 1:6
q எரே 6:12; புல 5:2
r எசே 21:2

வார்கள், ஆனாலும் அது கிடைக்காது.[a] **26** அழிவுக்குமேல் அழிவு வரும். செய்திக்குமேல் செய்தி வரும். தரிசனத்துக்காக ஜனங்கள் தீர்க்கதரிசியைத் தேடிப்போவார்கள்.[b] ஆனாலும், குருமார்கள் போதிக்க* மாட்டார்கள், பெரியோர்கள்# ஆலோசனை சொல்ல மாட்டார்கள்.[c] **27** ராஜா அழுது புலம்புவார்.[d] அதிகாரி மிகவும் பதற்றமாக இருப்பார். தேசத்து ஜனங்களுடைய கைகள் பயத்தில் நடுங்கும். அவர்களுடைய நடத்தைக்கு ஏற்றபடியே நான் அவர்களை நடத்துவேன். அவர்கள் மற்றவர்களை நியாயந்தீர்க்கிறபடியே நான் அவர்களை நியாயந்தீர்ப்பேன். அப்போது, நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.’”[e]

8 ஆறாம் வருஷம்,* ஆறாம் மாதம், ஐந்தாம் நாள் நான் என்னுடைய வீட்டில் உட்கார்ந்திருந்தேன். யூதாவின் பெரியோர்கள்# என்முன் வந்து உட்கார்ந்திருந்தார்கள். அப்போது, உன்னதப் பேரரசராகிய யெகோவாவின் சக்தியால் நான் நிரப்பப்பட்டேன்.△ **2** நான் பார்த்துக்கொண்டிருந்தபோது, நெருப்புபோல் ஒருவர் தெரிந்தார். அவருடைய இடுப்புபோல் தெரிந்த பாகத்துக்குக் கீழாக நெருப்பு எரிந்துகொண்டிருந்தது.[f] அவருடைய இடுப்புபோல் தெரிந்த பாகத்துக்கு மேலாக, வெள்ளியும் தங்கமும் கலந்த உலோகத்தைப் போலப் பிரகாசமாக இருந்தது.[g] **3** கைபோல் தெரிந்த ஒன்றை அவர் நீட்டி, என்னுடைய தலைமுடியைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கினார். கடவுள் காட்டிய தரிசனத்தில் ஒரு சக்தி என்னை வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தூக்கிக்கொண்டு போய், எருசலேம் ஆலயத்தில் வடதிசைக்கு எதிராக இருந்த உள்வாசலில் விட்டது.[h] அங்கே கடவுளுக்கு எரிச்சல் மூட்டுகிற சிலை வைக்கப்பட்டிருந்தது.[i] **4** இஸ்ரவேலின் கடவுளுடைய மகிமை அங்கே தெரிந்தது.[j] நான் சமவெளியில் பார்த்த மகிமையைப் போலவே அது இருந்தது.[k]

5 அப்போது அவர் என்னிடம், “மனிதகுமாரனே, தயவுசெய்து வடக்கே பார்” என்று சொன்னார். நானும் வடக்கே பார்த்தேன். கடவுளுக்கு எரிச்சல் மூட்டுகிற அந்தச் சிலை பலிபீடத்தின் வடக்கிலுள்ள நுழைவாசலில் இருந்தது. **6** அப்போது அவர், “மனிதகுமாரனே, இஸ்ரவேல் ஜனங்கள் எப்படிப்பட்ட மோசமான காரியங்களை அங்கே செய்கிறார்கள் என்று பார்த்தாயா?[l] நான் என்னுடைய ஆலயத்தைவிட்டுத் தூரமாகப் போகுமளவுக்கு அருவருப்பான காரியங்களை அவர்கள் செய்கிறார்கள்.[m] ஆனால், இதைவிட அருவருப்பான காரியங்களை நீ பார்க்கப்போகிறாய்” என்று சொன்னார்.

7 பின்பு, ஆலயப் பிரகார வாசலுக்கு என்னைக் கொண்டுபோனார். அங்கே இருந்த சுவரில் நான் ஒரு ஓட்டையைப் பார்த்தேன். **8** அப்போது அவர், “மனிதகுமாரனே, தயவுசெய்து அந்த ஓட்டையைப் பெரிதாக்கு” என்றார். நான் அதைப் பெரிதாக்கியபோது, ஒரு நுழைவாசல் தெரிந்தது. **9** அவர் என்னிடம், “உள்ளே போய், அவர்கள் செய்கிற அக்கிரமங்களையும் அருவருப்பான காரியங்களையும் பார்” என்று சொன்னார். **10** நானும் உள்ளே போய்ப் பார்த்தேன். ஊரும் பிராணிகளின் உருவங்களும்,

7:26 * வே.வா., “சட்டத்தைக் கற்றுக்கொடுக்க.” **7:26; 8:1** # வே.வா., “மூப்பர்கள்.” **8:1** * அதாவது, “எசேக்கியேல் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போன ஆறாவது வருஷம்.” △ நே.மொ., “யெகோவாவின் கை என்னைப் பற்றிக்கொண்டது.”

அதி. 7
a ஏசா 57:21, எரே 8:15
b எரே 21:1, 2, எரே 37:17
c சங் 74:9, புல 2:9, எசே 20:3
d எரே 52:10
e எசே 6:13

அதி. 8
f தானி 7:9
g எசே 1:4, 27
h எரே 20:2, எசே 9:2
i உபா 32:16
j யாத் 40:34
k எசே 1:27, 28
l 2நா 36:14
m எரே 26:4, 6

அருவருப்பான மிருகங்களின்[a] உருவங்களும், இஸ்ரவேல் ஜனங்களுடைய
எல்லா அருவருப்பான* சிலைகளும்[b] சுவரெங்கும் செதுக்கப்பட்டிருந்தன.
11 இஸ்ரவேல் ஜனங்களின் பெரியோர்களில் 70 பேர் அவற்றுக்குமுன் நின்
றுகொண்டிருந்தார்கள். சாப்பானின்[c] மகனான யசினியாவும் அங்கு இருந்
தான். ஒவ்வொருவரும் ஒரு தூபக்கரண்டியைப் பிடித்துக்கொண்டிருந்தார்
கள். தூபத்தின் புகை மேலே எழும்பிக்கொண்டிருந்தது.[d] **12** அப்போது
அவர், "மனிதகுமாரனே, இஸ்ரவேல் ஜனங்களின் பெரியோர்கள் ஒவ்வொரு
வரும் சிலைகளை வைத்திருக்கிற இருட்டான உள்ளறைகளில் என்ன செய்
கிறார்கள் என்று பார்த்தாயா? 'யெகோவா நம்மைப் பார்ப்பதில்லை.
யெகோவா இந்தத் தேசத்தைக் கைவிட்டுவிட்டார்'[e] என்று அவர்கள் சொல்
லிக்கொள்கிறார்கள்" என்றார்.

13 பின்பு என்னிடம், "அவர்கள் இதைவிட மிகவும் அருவருப்பான
காரியங்கள் செய்வதை நீ பார்க்கப்போகிறாய்" என்று சொன்னார்.
14 யெகோவாவுடைய ஆலயத்தின் வடக்கு நுழைவாசலுக்கு அவர் என்
னைக் கொண்டுபோனார். அங்கே பெண்கள் உட்கார்ந்து தம்மூஸ் தெய்வத்
துக்காக அழுதுகொண்டிருந்தார்கள்.

15 அப்போது அவர், "மனிதகுமாரனே, இதைப் பார்த்தாயா? ஆனால்,
இதைவிட அதிக அருவருப்பான காரியங்களை நீ பார்க்கப்போகிறாய்"[f]
என்றார். **16** பின்பு, யெகோவாவுடைய ஆலயத்தின் உட்பிரகாரத்துக்கு
என்னைக் கொண்டுபோனார்.[g] யெகோவாவுடைய ஆலய வாசலிலே,
நுழைவு மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் இடையில் கிட்டத்தட்ட 25
ஆண்கள் இருந்தார்கள். யெகோவாவுடைய ஆலயத்தின் பக்கம் முதுகைத்
திருப்பிக்கொண்டு, கிழக்கே பார்த்து சூரியனைக் கும்பிட்டுக்கொண்டு
இருந்தார்கள்.[h]

17 அப்போது அவர், "மனிதகுமாரனே, இதைப் பார்த்தாயா? யூதா
ஜனங்கள் இந்த அருவருப்பான காரியங்களைச் செய்து, தேசத்தை வன்mு
றையால் நிரப்பி,[i] என் கோபத்தைக் கிளறுவது சின்ன விஷயமா? இதோ,
என் மூக்குக்கு நேராகவே கிளையை* நீட்டுகிறார்கள். **18** அதனால், நான்
கோபத்தில் கொதித்தெழுவேன். அவர்களைப் பார்த்துப் பரிதாபப்பட மாட்
டேன். அவர்கள்மேல் கரிசனை காட்ட மாட்டேன்.[j] அவர்கள் எவ்வளவு
தான் சத்தமாக அழுதாலும் நான் கேட்க மாட்டேன்"[k] என்று சொன்னார்.

9 பின்பு என் காதுகள் கேட்க அவர் மிகவும் சத்தமாக, "இந்த நகரத்துக்
குத் தண்டனை கொடுக்கப்போகிறவர்கள் பயங்கரமான* ஆயுதத்தை
எடுத்துக்கொண்டு வரட்டும்!" என்று சொன்னார்.

2 அப்போது, வடக்கே பார்த்தபடி இருந்த உயர்ந்த நுழைவாசலின்[l]
திசையிலிருந்து ஆறு பேர் வருவதைப் பார்த்தேன். அடித்து நொறுக்கு
வதற்கான ஆயுதம் அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் இருந்
தது. அவர்களோடு இருந்த இன்னொருவர் நாரிழை* உடையை உடுத்தியி
ருந்தார். செயலாளருடைய# மைப் பெட்டியை△ இடுப்பில் வைத்திருந்தார்.

8:10 *இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **8:17** *அநேகமாக, "உருவ வழிபாட்டில் பயன்படுத்தப்பட்ட ஒரு கிளையை." **9:1** *வே.வா., "அழிப்பதற்கான." **9:2** *அதாவது, "லினன்." #வே.வா., "எழுத்தருடைய." △எழுதுகோல்களும் மையும் வைக்கப்பட்டிருந்த சின்ன டப்பி.

அதி. 8
a லேவி 11:10
b யாத் 20:4, 5
c 2ரா 22:3, 4; 2ரா 25:22; எரே 26:24
d எசே 16:17, 18
e ஏசா 29:15; எசே 9:9
f 2நா 36:14
g 2நா 4:9
h உபா 4:19; 2ரா 17:16; எரே 8:1, 2
i 2ரா 21:16; எரே 19:4; எசே 9:9
j எசே 5:11; எசே 7:9
k ஏசா 1:15; மீ 3:4

அதி. 9
l எரே 20:2; எசே 8:3

அவர்கள் எல்லாரும் செம்புப் பலிபீடத்துக்குப்[a] பக்கத்தில் வந்து நின்
றார்கள்.
3 அப்போது, இஸ்ரவேலின் கடவுளுடைய மகிமை[b] கேருபீன்களுக்கு
மேலே இருந்து எழும்பி ஆலயத்தின் வாசல் கதவுக்கு வந்தது.[c] பின்பு,
நாரிழை உடையைப் போட்டுக்கொண்டு இடுப்பில் மைப் பெட்டியை
வைத்திருந்தவரைக் கடவுள் கூப்பிட்டார். 4 அவரிடம், “எருசலேம் நகர
மெங்கும் போ. அங்கே நடக்கிற எல்லா அருவருப்புகளையும்[d] பார்த்
துப் பெருமூச்சுவிட்டுக் குமுறுகிற[e] ஆட்களின் நெற்றியில் அடையாளம்
போடு” என்று யெகோவா சொன்னார்.
5 பின்பு, என் காதுகளில் விழும்படி மற்ற ஆறு பேரிடம், “அவ
ருக்குப் பின்னால் நகரமெங்கும் போய், ஜனங்களைக் கொன்றுபோடுங்கள்.
அவர்களைப் பார்த்துப் பரிதாபப்படாதீர்கள்; அவர்கள்மேல் கரிசனை காட்
டாதீர்கள்.[f] 6 வயதானவர்கள், வாலிபர்கள், கன்னிப் பெண்கள், பிள்ளை
கள், பெண்கள் என எல்லாரையும் கொன்றுபோடுங்கள்.[g] ஆனால், நெற்றி
யில் அடையாளம் இருக்கிற யார்மேலும் கை வைக்காதீர்கள்.[h] என்னுடைய
ஆலயத்திலிருந்து ஆரம்பியுங்கள்”[i] என்று சொன்னார். அதனால், ஆலயத்
துக்குமுன் நின்றுகொண்டிருந்த பெரியோர்களை* அவர்கள் முதலில்
கொன்றுபோட்டார்கள்.[j] 7 பின்பு கடவுள் அவர்களிடம், “ஆலயத்தைத்
தீட்டுப்படுத்தி, அதன் பிரகாரங்களில் பிணங்களைக் குவியுங்கள்.[k] புறப்பட்
டுப் போங்கள்!” என்று சொன்னார். அவர்களும் போய், நகரத்தில் இருந்த
ஜனங்களைக் கொன்றுபோட்டார்கள்.
8 என்னைத் தவிர எல்லாரையும் அவர்கள் கொன்றுபோட்டார்கள்.
அதனால் நான் சாஷ்டாங்கமாக விழுந்து, “ஐயோ, உன்னதப் பேரரசராகிய
யெகோவாவே! நீங்கள் எருசலேமின் மேல் உங்களுடைய கோபத்தைக்
கொட்டும்போது, இஸ்ரவேலில் மீதியாயிருக்கிற எல்லாரையும் அழித்து
விடுவீர்களா?”[l] என்று கேட்டேன்.
9 அதற்கு அவர், “இஸ்ரவேல் ஜனங்களும் யூதா வம்சத்தாரும்
மகா பெரிய அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள்.[m] தேசமெங்கும் இரத்
தம் ஓடுகிறது,[n] எல்லா இடங்களிலும் ஊழல் நடக்கிறது.[o] அவர்கள் எல்
லாரும், ‘யெகோவா இந்தத் தேசத்தைக் கைவிட்டுவிட்டார், யெகோவா நம்
மைப் பார்ப்பதில்லை’[p] என்று சொல்லிக்கொள்கிறார்கள். 10 அவர்களைப்
பார்த்து நான் பரிதாபப்பட மாட்டேன். அவர்கள்மேல் கரிசனை காட்ட
மாட்டேன்.[q] அவர்கள் செய்த குற்றங்களுக்கான விளைவுகளை அவர்களே
அனுபவிக்கும்படி செய்வேன்” என்று சொன்னார்.
11 பின்பு, நாரிழை உடையைப் போட்டுக்கொண்டு இடுப்பில் மைப்
பெட்டியை வைத்திருந்தவர் திரும்பி வருவதைப் பார்த்தேன். அவர், “நீங்
கள் சொன்னபடியே செய்து முடித்துவிட்டேன்” என்றார்.

10 நான் பார்த்துக்கொண்டிருந்தபோது, கேருபீன்களுடைய தலைக
ளுக்கு மேலே இருந்த தளத்தின் மேல் நீலமணிக் கல்லைப்
போல ஒன்று தெரிந்தது. அது பார்ப்பதற்குச் சிம்மாசனத்தைப் போல இருந்
தது.[r] 2 அப்போது கடவுள் நாரிழை* உடை போட்டிருந்தவரிடம்,[s] “சக்க
ரங்களுக்கு நடுவிலும்[t] கேருபீன்களுக்குக் கீழாகவும் போய், அவர்களுக்கு

9:6 * வே.வா., “மூப்பர்களை.” 10:2 * அதாவது, “லினன்.”

அதி. 9
a 2நா 4:1
b எசே 3:23; எசே 8:3, 4; எசே 11:22
c எசே 10:4
d எசே 5:11
e சங் 119:53; 2பே 2:7, 8
f யாத் 32:26, 27; எசே 7:4
g 2நா 36:17
h யாத் 12:23; யோசு 2:17–19; வெளி 9:4
i 2ரா 25:18, 21; எரே 25:29
j எசே 8:11
k புல 2:21
l ஆதி 18:23; எசே 11:13
m 2நா 36:14; ஏசா 1:4
n 2ரா 21:16; எரே 2:34; மத் 23:30
o எசே 22:29
p ஏசா 29:15; எசே 8:12
q எசே 5:11; எசே 7:4

அதி. 10
r ஏசா 6:1; எசே 1:22, 26; வெளி 4:2, 3
s எசே 9:2
t எசே 1:16

இடையிலுள்ள நெருப்புத் தணலை[a] இரண்டு கைகளிலும் எடுத்து நகரத்
தின் மேல் வீசு”[b] என்று சொன்னார். அதன்படியே, அவர் அங்கு போவதை
நான் பார்த்தேன்.

3 அவர் போனபோது கேருபீன்கள் ஆலயத்தின் வலது பக்கத்தில்
நின்றுகொண்டிருந்தார்கள். அதன் உட்பிரகாரத்தை மேகம் மூடியது.
4 யெகோவாவின் மகிமை[c] கேருபீன்களுக்கு மேலே இருந்து எழும்பி,
ஆலயத்தின் வாசல் கதவுக்கு வந்தது. ஆலயம் கொஞ்சம் கொஞ்சமாக
மேகத்தால் நிரம்பியது.[d] பிரகாரம் முழுவதும் யெகோவாவின் மகிமையால்
பிரகாசித்தது. **5** கேருபீன்களுடைய சிறகுகளின் சத்தம் வெளிப்பிரகாரம்
வரை கேட்டது. சர்வவல்லமையுள்ள கடவுளின் பேச்சு சத்தத்தைப் போல
அது இருந்தது.[e]

6 பின்பு கடவுள் நாரிழை உடை போட்டிருந்தவரிடம், “சக்கரங்களுக்கு
நடுவே போய், கேருபீன்களுக்கு இடையில் இருக்கிற நெருப்புத் தணலை
எடு” என்று சொன்னார். உடனே, அவர் போய் சக்கரத்துக்குப் பக்கத்
தில் நின்றார். **7** அப்போது, கேருபீன்களில் ஒருவர் கையை நீட்டி, கேரு
பீன்களுக்கு இடையில் இருந்த நெருப்புத் தணலில்[f] கொஞ்சத்தை எடுத்து,
நாரிழை உடை போட்டிருந்தவருடைய[g] இரண்டு கைகளிலும் வைத்தார்.
அவரும் அதை எடுத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். **8** கேரு
பீன்களுடைய சிறகுகளுக்குக் கீழே மனுஷ கைகளைப் போன்ற கைகள்
இருந்தன.[h]

9 நான் பார்த்துக்கொண்டிருந்தபோது, கேருபீன்களுக்குப் பக்கத்தில்
நான்கு சக்கரங்கள் தெரிந்தன. ஒவ்வொரு கேருபீனுக்குப் பக்கத்திலும் ஒவ்
வொரு சக்கரம் இருந்தது. அந்தச் சக்கரங்கள் படிகப்பச்சைக் கல் போல
ஜொலித்தன.[i] **10** நான்கு சக்கரங்களும் பார்ப்பதற்கு ஒரேபோல் இருந்
தன. அவை ஒவ்வொன்றும், ஒரு சக்கரத்துக்குள் இன்னொரு சக்கரத்தை
வைத்தது போல இருந்தன. **11** அவை திரும்பாமலேயே எல்லா திசை
களிலும் போயின. கேருபீன்களுடைய முகத்தின்* திசையிலேயே அவை
திரும்பாமல் போயின. **12** கேருபீன்களுடைய உடல் முழுவதும், அவர்க
ளுடைய முதுகுகளும், கைகளும், சிறகுகளும், சக்கரங்களும் கண்களால்
நிறைந்திருந்தன. அந்த நான்கு பேருடைய சக்கரங்களுமே சுற்றிலும் கண்
களால் நிறைந்திருந்தன.[j] **13** அந்தச் சக்கரங்களிடம் ஒரு குரல், “சக்கரங்
களே!” என்று கூப்பிடுவதைக் கேட்டேன்.

14 ஒவ்வொருவருக்கும்* நான்கு முகங்கள் இருந்தன. முதலாவது
முகம் கேருபீனின் முகமாகவும், இரண்டாவது முகம் மனுஷ முகமாகவும்,
மூன்றாவது முகம் சிங்க முகமாகவும், நான்காவது முகம் கழுகு முகமாக
வும் இருந்தது.[k]

15 கேபார் ஆற்றுக்குப்[l] பக்கத்தில் நான் பார்த்த அதே ஜீவன்கள்
தான் அந்தக் கேருபீன்கள். அவர்கள் எழுந்து போகும்போது, **16** அவர்
களோடு அந்தச் சக்கரங்களும் போயின. கேருபீன்கள் தங்களுடைய
சிறகுகளை உயர்த்தி பூமியிலிருந்து மேலே எழும்பியபோது அந்தச் சக்க
ரங்களும் வேறு பக்கம் திரும்பாமல் கூடவே எழும்பின.[m] **17** அவர்கள்
நின்றபோது அவையும் நின்றன. அவர்கள் எழுந்து போனபோது அவை

10:11 * நே.மொ., “அந்தத் தலையின்.” **10:14** * அதாவது, “கேருபீன்கள் ஒவ்வொரு
வருக்கும்.”

அதி. 10
a எசே 1:13
b 2ரா 25:8, 9
c எசே 1:27, 28; எசே 9:3
d யாத் 40:35; 2நா 5:13; எசே 43:5
e சங் 29:3, 4; எசே 1:24; யோவா 12:28, 29
f எசே 1:13
g எசே 9:2
h எசே 1:8
i எசே 1:15-18
j வெளி 4:6, 8
k எசே 1:6, 10; வெளி 4:7
l எசே 1:3
m எசே 1:19-21

யும் எழுந்து போயின. ஏனென்றால், அந்த ஜீவன்களைத் தூண்டிய சக்தி
அந்தச் சக்கரங்களிலும் இருந்தது.

18 பின்பு, யெகோவாவின் மகிமை[a] ஆலயத்தின் வாசல் கதவைவிட்டுப்
புறப்பட்டுப் போய் கேருபீன்களுக்கு மேலாக நின்றது.[b] **19** நான் பார்த்
துக்கொண்டிருந்தபோது, அந்தக் கேருபீன்கள் சிறகுகளை உயர்த்தி பூமியி
லிருந்து மேலே எழும்பினார்கள். கூடவே அந்தச் சக்கரங்களும் எழும்பின.
அவர்கள் யெகோவாவுடைய ஆலயத்தின் கிழக்கு நுழைவாசலில் நின்றார்
கள். இஸ்ரவேலின் கடவுளுடைய மகிமை அவர்கள்மேல் இருந்தது.[c]

20 கேபார் ஆற்றுக்குப்[d] பக்கத்தில் இஸ்ரவேலின் கடவுளுடைய சிம்மா
சனத்துக்குக் கீழே நான் பார்த்த அதே ஜீவன்கள்தான் அவர்கள். அதனால்
அவர்கள் கேருபீன்கள் என்று தெரிந்துகொண்டேன். **21** அந்த நான்கு
பேருக்கும் நான்கு முகங்களும், நான்கு சிறகுகளும், அந்தச் சிறகுகளுக்குக்
கீழே மனுஷ கைகளைப் போன்ற கைகளும் இருந்தன.[e] **22** அவர்களு
டைய முகங்கள், கேபார் ஆற்றுக்குப் பக்கத்தில் நான் பார்த்த முகங்களைப்
போலவே இருந்தன.[f] அவர்கள் ஒவ்வொருவரும் திரும்பாமல் நேராகப்
போனார்கள்.[g]

11 கடவுளுடைய சக்தி* அங்கிருந்து என்னைத் தூக்கிக்கொண்டு
போய் யெகோவாவுடைய ஆலயத்தின் கிழக்கு நுழைவாசலில்
விட்டது.[h] அங்கே மக்களின் தலைவர்களான 25 பேரைப் பார்த்தேன்.
அவர்கள் நடுவே ஆசூரின் மகன் யசினியாவும் பெனாயாவின் மகன்
பெலத்தியாவும் இருந்தார்கள்.[i] **2** அப்போது கடவுள் என்னிடம், "மனிதகு
மாரனே, இந்த ஆட்கள் அக்கிரமம் செய்யத் திட்டம் போடுகிறார்கள். இந்த
நகரத்தில் இருக்கிறவர்களுக்குக் கெட்ட ஆலோசனை கொடுக்கிறார்கள்.
3 'வீடுகளைக் கட்டுவதற்கு இதுதான் நேரம்.[j] இந்த நகரம் ஒரு பானை,[k]
நாம் அதிலுள்ள* இறைச்சி' என்று சொல்கிறார்கள்.

4 அதனால், அவர்களுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் சொல். மனிதகுமா
ரனே, தீர்க்கதரிசனம் சொல்"[l] என்றார்.

5 அப்போது யெகோவாவின் சக்தியால் நான் நிரப்பப்பட்டேன்.[m] அவர்
என்னிடம், "நீ இப்படிச் சொல்: 'யெகோவா சொல்வது இதுதான்: "இஸ்ர
வேல் ஜனங்களே, நீங்கள் சொன்னது சரிதான். நீங்கள் என்ன நினைக்கிறீர்
கள் என்று எனக்குத் தெரியும். **6** நீங்கள் இந்த நகரத்தில் நிறைய பேரைச்
சாகடித்திருக்கிறீர்கள். எல்லா வீதிகளிலும் ஆட்களைக் கொன்று குவித்தி
ருக்கிறீர்கள்"'"[n] என்று சொன்னார். **7** "அதனால், உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்வது இதுதான்: 'நீங்கள் நகரத்தில் குவித்திருக்கிற பிணங்
கள்தான் இறைச்சி, இந்த நகரம்தான் பானை.[o] ஆனால், நீங்கள் அதிலி
ருந்து வெளியே எடுக்கப்படுவீர்கள்.'"

8 "'நீங்கள் எந்த வாளை நினைத்துப் பயப்பட்டீர்களோ[p] அதே வாளை
உங்களுக்கு எதிராக அனுப்புவேன்' என்று உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்கிறார். **9** 'உங்களை நகரத்திலிருந்து வெளியே கொண்
டுவந்து, மற்ற தேசத்து ஜனங்களின் கையில் கொடுத்து, தண்டிப்பேன்.[q]
10 நீங்கள் வாளால் வெட்டிச் சாய்க்கப்படுவீர்கள்.[r] இஸ்ரவேலின் எல்
லையில் நான் உங்களைத் தண்டிப்பேன்.[s] நான் யெகோவா என்று நீங்கள்

11:1 * அல்லது, "தேவதூதர்." **11:3** * வே.வா., "அதில் பத்திரமாக இருக்கிற."

அதி. 10
a எசே 1:27, 28
b எசே 9:3; எசே 10:4
c எசே 11:22
d எசே 1:1, 22
e எசே 1:8
f எசே 1:10
g எசே 1:12; எசே 10:11

அதி. 11
h எசே 10:19
i ஏசா 1:23; எசே 22:27
j எசே 12:27
k எசே 24:3
l எசே 3:17; எசே 20:46; எசே 21:2
m 2பே 1:21
n எசே 7:23; எசே 22:3, 4
o எசே 24:6
p எரே 38:19
q எரே 39:6, 7; எரே 52: 24-27
r 2ரா 25:18-21; 2நா 36:17
s 2ரா 14:25; எரே 52:27

தெரிந்துகொள்வீர்கள்.[a] **11** அப்போது இந்த நகரம் உங்களுக்கு ஒரு
பானையாக இருக்காது, நீங்கள் அதிலுள்ள இறைச்சியாக இருக்க மாட்டீர்
கள். இஸ்ரவேலின் எல்லையில் நான் உங்களைத் தண்டிப்பேன். **12** அப்
போது, நான் யெகோவா என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். நீங்கள்
என்னுடைய விதிமுறைகளின்படி நடக்கவில்லை. என்னுடைய நீதித்தீர்ப்பு
களைக் கடைப்பிடிக்காமல்,[b] சுற்றியுள்ள தேசங்களுடைய நீதித்தீர்ப்புக
ளைக் கடைப்பிடித்தீர்கள்.'"[c]

13 நான் இந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொன்னவுடனே, பெனாயாவின்
மகன் பெலத்தியா இறந்துபோனான். அதனால் நான் சாஷ்டாங்கமாக
விழுந்து, "ஐயோ, உன்னதப் பேரரசராகிய யெகோவாவே, இஸ்ரவேலில்
மீதியாக இருக்கிறவர்களை நீங்கள் அழிக்கப்போகிறீர்களா?"[d] என்று கத
றினேன்.

14 அப்போது யெகோவா மறுபடியும் என்னிடம், **15** "மனிதகுமா
ரனே, எருசலேம் ஜனங்கள் இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரிடமும், மீட்
கும் உரிமையுள்ள உன்னுடைய சகோதரர்களிடமும், 'யெகோவாவைவிட்
டுத் தூரமாகப் போய்விடுங்கள். தேசம் எங்களுடையது, எங்களுக்குத்தான்
சொத்தாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்கிறார்கள். **16** அத
னால் நீ இப்படிச் சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது
இதுதான்: "நான் அவர்களைத் தூர தேசங்களுக்குச் சிதறிப்போக வைத்
தாலும்[e] கொஞ்சக் காலத்துக்கு அங்கே நான் அவர்களுடைய ஆலயமாக
இருப்பேன்."'[f]

17 "அதனால், நீ இப்படிச் சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: "நீங்கள் சிதறிப்போன தேசங்களிலிருந்து நான் உங்
களை மறுபடியும் கூட்டிச் சேர்ப்பேன். உங்களுக்கு இஸ்ரவேல் தேசத்தைக்
கொடுப்பேன்.[g] **18** நீங்கள் திரும்பி வந்து, அருவருப்பான எல்லா சிலை
களையும் அருவருப்பான எல்லா பழக்கவழக்கங்களையும் ஒழித்துக்கட்டு
வீர்கள்.[h] **19** நான் உங்களுக்கு ஒரே இதயத்தையும்[i] புதிய மனதையும்*
கொடுப்பேன்.[j] கல் போன்ற இதயத்தை எடுத்துவிட்டு,[k] மென்மையான
இதயத்தை# உங்களுக்குக் கொடுப்பேன்.[l] **20** அப்போது, நீங்கள் என்னு
டைய சட்டதிட்டங்களையும் நீதித்தீர்ப்புகளையும் கடைப்பிடிப்பீர்கள். நீங்
கள் என்னுடைய ஜனங்களாக இருப்பீர்கள், நான் உங்களுடைய கடவுளாக
இருப்பேன்."'

21 '"ஆனால், அருவருப்பான சிலைகளையும் அருவருப்பான பழக்க
வழக்கங்களையும் விடுவதற்கு மனமில்லாதவர்கள் அதன் விளைவுகளைச்
சந்தித்தே தீர வேண்டும்" என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
கிறார்.'"

22 கேருபீன்கள் தங்களுடைய சிறகுகளை விரித்து எழுந்தபோது, சக்க
ரங்களும் அவர்களோடு எழுந்தன.[m] இஸ்ரவேலின் கடவுளுடைய மகிமை
அவர்களுக்கு மேலாக இருந்தது.[n] **23** பின்பு, யெகோவாவின் மகிமை[o]
நகரத்தைவிட்டு எழும்பி, நகரத்தின் கிழக்கே இருந்த மலைமேல் போய்
நின்றது.[p] **24** கடவுளுடைய சக்தியால் நான் பார்த்த தரிசனத்தில், அவரு
டைய சக்தி* என்னைத் தூக்கிக்கொண்டு போய் கல்தேயாவில் சிறையி

11:19 *வே.வா., "புது சக்தியையும்." #அதாவது, "கடவுளுடைய அறிவுரைகளைக் கேட்டு நடக்கிற இதயத்தை." **11:24** *அல்லது, "தேவதூதர்."

அதி. 11
a எசே 6:13
b எஸ்றா 9:7; நெ 9:34
c உபா 12:29-31; 2நா 28:1, 3; சங் 106:34-36
d எசே 9:8
e 2ரா 24:14, 15; எரே 24:5
f லேவி 26:44
g ஏசா 11:11, 12; எரே 30:10, 11; எசே 34:13, 14; ஆமோ 9:14, 15
h எசே 37:23
i எரே 24:7; எரே 31:33; எரே 32:39
j சங் 51:10; எசே 36:31
k சக 7:12
l எசே 36:26
m எசே 1:19
n எசே 10:18, 19
o எசே 9:3; எசே 10:4
p சக 14:4

ருப்பிலிருந்த ஜனங்களிடம் விட்டது. பின்பு, நான் பார்த்துக்கொண்டிருந்த
தரிசனம் முடிவுக்கு வந்தது. **25** யெகோவா எனக்குக் காட்டிய எல்லாவற்
றையும் சிறையிருப்பிலிருந்த ஜனங்களிடம் சொன்னேன்.

12 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “மனிதகுமாரனே, நீ அடங்
காத ஜனங்களின் நடுவில் வாழ்ந்துகொண்டிருக்கிறாய். பார்ப்ப
தற்குக் கண்கள் இருந்தும் அவர்கள் பார்ப்பதில்லை, கேட்பதற்குக் காதுகள்
இருந்தும் அவர்கள் கேட்பதில்லை.[a] ஏனென்றால், அவர்கள் அடங்காத
ஜனங்கள்.[b] **3** மனிதகுமாரனே, நீ சிறைபிடிக்கப்பட்டுப் போவது போல
உன் மூட்டைமுடிச்சுகளைக் கட்டி வை. பின்பு, பகலில் எல்லாரும் பார்த்துக்
கொண்டிருக்கும்போது நீ சிறைபிடிக்கப்பட்டுப் போவது போல போ. அவர்
கள் கண் முன்னாலேயே உன்னுடைய வீட்டைவிட்டு இன்னொரு இடத்
துக்குப் போ. அவர்கள் அடங்காத ஜனங்களாக இருந்தாலும் நீ செய்வதை
ஒருவேளை கவனிக்கலாம். **4** நீ கட்டி வைத்த மூட்டைமுடிச்சுகளைப்
பகல் நேரத்தில் அவர்களுடைய கண் முன்னாலேயே வெளியில் எடுத்து
வை. பின்பு, சிறைபிடிக்கப்பட்டுப் போவது போல சாயங்காலத்தில் அவர்
களுடைய கண் முன்னாலேயே புறப்பட்டுப் போ.[c]

5 அவர்களுடைய கண் முன்னாலேயே சுவரில் ஓட்டை போடு. அதன்
வழியாக உன்னுடைய மூட்டைமுடிச்சுகளை வெளியே கொண்டுபோ.[d]
6 அவர்களுடைய கண் முன்னாலேயே உன்னுடைய மூட்டைமுடிச்சுக
ளைத் தோளில் வைத்துக்கொண்டு, இருட்டில் நடந்து போ. தரையைப்
பார்க்க முடியாதபடி உன் முகத்தை மூடிக்கொள். ஏனென்றால், இஸ்ரவேல்
ஜனங்களுக்கு நான் உன்னை ஒரு அடையாளமாக ஆக்குகிறேன்”[e] என்று
சொன்னார்.

7 அவர் சொன்னபடியே நான் செய்தேன். சிறைபிடிக்கப்பட்டுப் போவது
போலப் பகலிலே என்னுடைய மூட்டைமுடிச்சுகளை வெளியில் எடுத்து
வைத்தேன். சாயங்காலத்தில் என் கையால் சுவரில் ஓட்டை போட்டேன்.
இருட்டியதும் மூட்டைமுடிச்சுகளை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு
அவர்களுடைய கண் முன்னாலேயே புறப்பட்டுப் போனேன்.

8 காலையில் மறுபடியும் யெகோவா என்னிடம், **9** “மனிதகுமாரனே,
அடங்காத ஜனங்களாகிய இஸ்ரவேலர்கள் உன்னிடம், ‘என்ன செய்கிறாய்’
என்று கேட்டார்கள்தானே? **10** அதனால் நீ அவர்களிடம், ‘உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “எருசலேமின் தலைவ
னுக்கும்[f] அந்த நகரத்தில் இருக்கிற இஸ்ரவேல் ஜனங்களுக்கும் கிடைக்கப்
போகிற தண்டனையைப் பற்றிய அறிவிப்புதான் இது” என்று சொல்.’

11 அதோடு நீ அவர்களிடம், ‘நான் ஒரு அடையாளமாக இருக்கிறேன்.[g]
நான் செய்தது போலவே அவர்களுக்கு நடக்கும். அவர்கள் சிறைபிடிக்
கப்பட்டுப் போவார்கள்.[h] **12** அவர்களுடைய தலைவன் மூட்டைமுடிச்சுக
ளைத் தோளில் வைத்துக்கொண்டு இருட்டில் புறப்பட்டுப் போவான். சுவ
ரில் ஓட்டை போட்டு அதன் வழியாகத் தன்னுடைய மூட்டைமுடிச்சுகளை
எடுத்துக்கொண்டு போவான்.[i] தரையைப் பார்க்க முடியாதபடி தன்னுடைய
முகத்தை மூடிக்கொள்வான்’ என்று சொல். **13** நான் அவன்மேல் என்
வலையை விரிப்பேன். அவன் அதில் சிக்கிக்கொள்வான்.[j] நான் அவனை
கல்தேயர்களின் தேசமாகிய பாபிலோனுக்கு அனுப்புவேன். ஆனால்,
அவன் அதைப் பார்க்க முடியாது. அங்கே அவன் செத்துப்போவான்.[k]

அதி. 12
a ஏசா 6:9, 10; எரே 5:21; ரோ 11:8
b எசே 2:3, 5
c 2நா 36:20; எரே 52:10, 11
d 2ரா 25:4
e ஏசா 8:18; எசே 4:3; எசே 24:24
f எரே 21:7; எசே 21:25
g எசே 24:24
h எரே 52:15
i 2ரா 25:4; எரே 39:4
j எரே 52:9; எசே 17:20, 21
k 2ரா 25:6, 7; எரே 34:3; எரே 52:11; எசே 17:16

14 அவனுக்கு உதவியாக அவனைச் சுற்றியிருக்கிற எல்லாரையும் அவ
னுடைய படைவீரர்களையும் நான் எல்லா திசையிலும் சிதறிப்போக வைப்
பேன்.[a] வாளை உருவி அவர்களைத் துரத்துவேன்.[b] **15** நான் அவர்களை
மற்ற தேசங்களுக்குச் சிதறிப்போகப் பண்ணும்போது நான் யெகோவா
என்று தெரிந்துகொள்வார்கள். **16** சிதறிப்போகிற எல்லா தேசங்களிலும்
தங்களுடைய அருவருப்பான பழக்கவழக்கங்களைப் பற்றிச் சொல்லும்படி,
அவர்களில் சிலரை வாளிலிருந்தும் பஞ்சத்திலிருந்தும் கொள்ளைநோயிலி
ருந்தும் தப்பிக்கப் பண்ணுவேன். அப்போது, நான் யெகோவா என்று அவர்
கள் தெரிந்துகொள்வார்கள்” என்று சொன்னார்.

17 யெகோவா மறுபடியும் என்னிடம், **18** “மனிதகுமாரனே, நீ நடுக்கத்
தோடு உணவு சாப்பிடு. கவலையோடும் பதட்டத்தோடும் தண்ணீர் குடி.[c]
19 தேசத்திலுள்ள ஜனங்களிடம், ‘இஸ்ரவேல் தேசத்தில் இருக்கிற எருச
லேம் ஜனங்களைப் பற்றி உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது
இதுதான்: “அவர்கள் கவலையோடு உணவு சாப்பிடுவார்கள், திகிலோடு
தண்ணீர் குடிப்பார்கள். தேசத்தில் வாழ்கிறவர்களுடைய வன்முறையால்[d]
தேசம் அடியோடு அழிந்துபோகும்.[e] **20** ஜனங்கள் வாழ்கிற நகரங்கள்
நாசமாகும். தேசம் பாழாகிப்போகும்.[f] அப்போது, நான் யெகோவா என்று
நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்”’”[g] என்று சொன்னார்.

21 யெகோவா மறுபடியும் என்னிடம், **22** “மனிதகுமாரனே, ‘காலம்
தான் போய்க்கொண்டே இருக்கிறது, எந்தத் தரிசனமும் நிறைவேறின
பாடில்லை’[h] என்ற பேச்சு இஸ்ரவேலர்கள் மத்தியில் இருக்கிறதே.
23 நீ அவர்களிடம், ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: “இனி இஸ்ரவேலில் யாரும் அந்த வார்த்தைகளைச் சொல்லிக்கொண்
டிருக்க மாட்டார்கள். அந்த வார்த்தைகளுக்கு நான் ஒரு முடிவுகட்டுவேன்”’
என்று சொல். அதோடு, ‘காலம் நெருங்கிவிட்டது.[i] எல்லா தரிசனங்களும்
நிறைவேறும்’ என்று சொல். **24** ஏனென்றால், இனி இஸ்ரவேல் ஜனங்க
ளில் யாரும் போலித் தரிசனங்களைச் சொல்ல மாட்டார்கள், குறிசொல்லி
ஏமாற்ற மாட்டார்கள்.[j] **25** ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது
இதுதான்: “யெகோவாவாகிய நான் என் செய்தியைச் சொல்வேன். என்னு
டைய வார்த்தை ஒவ்வொன்றும் இனி எந்தத் தாமதமும் இல்லாமல் நிறை
வேறும்.[k] அடங்காத ஜனங்களே, உங்களுடைய காலத்திலேயே[l] நான் என்
செய்தியைச் சொல்லி அதை நடத்தியும் காட்டுவேன்”’” என்றார்.

26 யெகோவா மறுபடியும் என்னிடம், **27** “மனிதகுமாரனே, இஸ்ர
வேலர்கள் தங்களுக்குள், ‘இவன் பார்க்கிற தரிசனம் நம்முடைய நாளில் நடக்
கவே நடக்காது. எப்போதோ நடக்கப்போவதை இப்போது சொல்லிக்கொண்
டிருக்கிறான்’[m] என்கிறார்கள். **28** அதனால் நீ அவர்களிடம், ‘உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “‘நான் சொல்கிற ஒவ்வொரு
வார்த்தையும் நிறைவேறும், கொஞ்சம்கூட தாமதிக்காது’ என்று உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்கிறார்”’ என்று சொல்” என்றார்.

13 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “மனிதகுமாரனே, இஸ்ர
வேல் தீர்க்கதரிசிகளுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் சொல்.[n] சொந்த
மாகக் கற்பனை செய்து தீர்க்கதரிசனங்கள் சொல்கிறவர்களிடம்[o] இப்படிச்
சொல்: ‘யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள். **3** உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்வது இதுதான்: “எந்தத் தரிசனத்தையும் பார்க்காமல்

அதி. 12
a 2ரா 25:5
b லேவி 26:33, எரே 42:15, 16
c லேவி 26:26
d சங் 107:33, 34, எரே 6:7
e ஏசா 6:11, சக 7:14
f ஏசா 64:10, எரே 25:9
g எசே 6:13
h ஏசா 5:19, ஆமோ 6:3, 2பே 3:3, 4
i யோவே 2:1, செப் 1:14
j எரே 14:14, புல 2:14, எசே 13:23
k புல 2:17, சக 1:6
l எரே 16:9, ஆப 1:5
m ஏசா 5:19, ஏசா 28:15, 2பே 3:3, 4

அதி. 13
n மீ 3:5, செப் 3:4
o எரே 14:14, எரே 23:16

சொந்தமாகக் கதை கட்டுகிற முட்டாள் தீர்க்கதரிசிகளுக்குக் கேடுதான்
வரும்.[a] **4** இஸ்ரவேலர்களே, உங்களுடைய தீர்க்கதரிசிகள் இடிபாடுக
ளின் நடுவே இருக்கிற குள்ளநரிகளைப் போல ஆகிவிட்டார்கள்.
5 யெகோவாவின் நாளில்[b] நடக்கும் போரில் உங்கள் தேசத்தைப் பாது
காப்பதற்காக அதன் கற்சுவர்களின் விரிசல்களை நீங்கள் போய்ப் பழுது
பார்க்க மாட்டீர்கள்."[c] **6** "அவர்கள் போலித் தரிசனங்களைப் பார்த்து
பொய்த் தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள். யெகோவா அவர்களை அனுப்பா
விட்டாலும், 'இதுதான் யெகோவாவின் செய்தி' என்று சொல்கிறார்கள்.
தாங்கள் சொன்னது நிறைவேறுவதற்காகக் காத்துக்கொண்டும் இருக்கிறார்
கள்.[d] **7** நான் எந்தச் செய்தியும் சொல்லாதபோது, 'இதுதான் யெகோவா
வின் செய்தி' என்று சொல்கிறீர்களே, நீங்கள் சொல்வதெல்லாம் பொய்த்
தீர்க்கதரிசனம், நீங்கள் பார்ப்பதெல்லாம் போலித் தரிசனம்."'

8 "'அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
"'நீங்கள் பொய்களைச் சொன்னதாலும் போலித் தரிசனங்களைப் பார்த்த
தாலும் நான் உங்கள் எதிரியாகிவிட்டேன்' என்று உன்னதப் பேரரசராகிய
யெகோவா[e] சொல்கிறார்." **9** போலித் தரிசனங்களைப் பார்த்துப் பொய்த்
தீர்க்கதரிசனங்களைச் சொல்கிற தீர்க்கதரிசிகளை நான் தண்டிப்பேன்.[f]
எனக்குப் பிரியமான ஜனங்களோடு அவர்கள் இருக்க மாட்டார்கள். இஸ்
ரவேல் ஜனங்களுடைய பதிவேட்டில் அவர்களுடைய பெயர் இருக்காது.
அவர்கள் இஸ்ரவேல் தேசத்துக்குத் திரும்பிவர மாட்டார்கள். அப்போது,
நான்தான் உன்னதப் பேரரசராகிய யெகோவா என்று நீங்கள் தெரிந்து
கொள்வீர்கள்.[g] **10** சமாதானம் இல்லாதபோதும் "சமாதானம் இருக்கிறது"
என்று சொல்லி என் ஜனங்களை அவர்கள் ஏமாற்றியதால்தான் அவர்
களுக்கு இந்தக் கதி ஏற்படும்.[h] அவர்கள் உறுதியில்லாத தடுப்புச்சுவரைக்
கட்டி, அதற்கு மேற்பூச்சாக வெள்ளையடிக்கிறார்கள்.'*[i]

11 அந்தச் சுவர் இடிந்து விழும் என்று அதற்கு வெள்ளையடிக்கிற
ஆட்களிடம் சொல். கன மழையும் ஆலங்கட்டி* மழையும் பயங்கரமான
சூறாவளியும் அதைத் தரைமட்டமாக்கும்.[j] **12** அது விழும்போது, 'நீங்கள்
பூசிய பூச்சு எங்கே?'[k] என்று மற்றவர்கள் கேட்பார்கள்.

13 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'என்னு
டைய கடும் கோபத்தினால் பயங்கரமான சூறாவளியை வீச வைத்து,
கன மழையைப் பெய்ய வைத்து, ஆலங்கட்டிகளை விழ வைத்து, அந்
தச் சுவரை நாசமாக்குவேன். **14** நீங்கள் வெள்ளையடித்த அந்தச் சுவரை
நான் நொறுக்கித் தள்ளுவேன். அதன் அஸ்திவாரங்கள் வெளியே தெரி
யும். நகரம் அழியும்போது நீங்களும் அழிந்துபோவீர்கள். அப்போது, நான்
யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்.'

15 'அந்தச் சுவரின் மேலேயும் அதற்கு வெள்ளையடித்த ஆட்களின்
மேலேயும் நான் என்னுடைய கோபத்தைக் கொட்டித் தீர்க்கும்போது உங்
களிடம் இப்படிச் சொல்வேன்: "இனி சுவரும் இல்லை, அதற்கு வெள்
ளையடித்த ஆட்களும் இல்லை.[l] **16** எருசலேமில் தீர்க்கதரிசனம் சொல்
கிற இஸ்ரவேல் தீர்க்கதரிசிகள் இல்லாமல் போய்விட்டார்கள். சமாதானம்

13:10 *உறுதியில்லாத சுவரைக் கட்டிவிட்டு, உறுதியான சுவர் போலக் காட்டுவதற்
காக அதற்கு வெள்ளையடிப்பதைக் குறிக்கிறது. **13:11** *அதாவது, "பனிக்கட்டி."

அதி. 13
a எரே 23:32
b ஏசா 2:12; யோவே 1:15
c எசே 22:30
d எரே 29:31, 32
e எசே 22:28
f எரே 14:14; எரே 28:15, 16; எரே 29:8, 9
g எசே 6:13; எசே 11:10
h எரே 6:13, 14
i ஏசா 30:10; எசே 22:28
j ஏசா 27:8
k எரே 37:19
l ஏசா 30:12, 13

இல்லாதபோது சமாதானம் இருப்பதாகத் தரிசனம் பார்க்கிற அந்த ஆட்
கள் ஒழிந்துவிட்டார்கள்"'[a] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார்.

17 மனிதகுமாரனே, சொந்தமாகக் கற்பனை செய்து தீர்க்கதரிசனங்க
ளைச் சொல்கிற பெண்களுக்கு நேராக உன் முகத்தை வைத்துக்கொண்டு,
அவர்களுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் சொல். **18** அவர்களிடம், 'உன்ன
தப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "ஆட்களின் உயிர்களை
வேட்டையாடுவதற்காகக் கைப்பட்டைகளையும்* அவரவர் உயரத்துக்குப்
பொருத்தமான முக்காடுகளையும் செய்கிற பெண்களுக்குக் கேடுதான்
வரும். என்னுடைய ஜனங்களின் உயிரை வேட்டையாடிவிட்டு உங்களு
டைய உயிரை மட்டும் காப்பாற்றிக்கொள்ள நினைக்கிறீர்களோ? **19** கைய
ளவு பார்லிக்காகவும் கொஞ்சம் ரொட்டித் துண்டுகளுக்காகவும் என்னுடைய
ஜனங்களின் நடுவே என் பெயரைக் களங்கப்படுத்துவீர்களோ?[b] நீங்கள்
சொல்கிற பொய்களை நம்பி ஏமாறுகிற என்னுடைய ஜனங்களிடம் பொய்க்
குமேல் பொய் சொல்லி, சாகக் கூடாதவர்களைச் சாகடித்து, சாக வேண்டிய
வர்களை உயிரோடு விட்டுவிடுவீர்களோ?"'[c] என்று கேள்.

20 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'பெண்
களே, பறவைகளை வேட்டையாடுவது போல ஆட்களின் உயிர்களை வேட்
டையாட நீங்கள் பயன்படுத்தும் கைப்பட்டைகளை உங்கள் கைகளிலிருந்து
பிடுங்கி எறிவேன். பறவைகளைப் போல நீங்கள் வேட்டையாடுகிற ஆட்
களை நான் விடுதலை செய்வேன். **21** உங்களுடைய முக்காடுகளைப்
பிடுங்கி எறிந்து, என்னுடைய ஜனங்களை உங்கள் கையிலிருந்து காப்பாற்
றுவேன். இனியும் அவர்களை நீங்கள் வேட்டையாடிப் பிடிக்க முடியாது.
அப்போது, நான் யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்.[d] **22** நீதிமான்
களுக்கு நான் வேதனை தராதபோதிலும், நீங்கள் பொய்களைச் சொல்லி[e]
அவர்களுக்கு மனவேதனை உண்டாக்கினீர்கள். பொல்லாதவர்கள் தங்களு
டைய கெட்ட வழியைவிட்டுத் திருந்தி, உயிர் பிழைக்காதபடிக்கு[f] நீங்கள்
அவர்களுக்கு உடந்தையாக இருந்தீர்கள்.[g] **23** பெண்களே, நீங்கள் இனி
போலித் தரிசனங்களைப் பார்க்க மாட்டீர்கள், குறிசொல்ல மாட்டீர்கள்.[h]
என்னுடைய ஜனங்களை உங்கள் கையிலிருந்து நான் காப்பாற்றுவேன்.
அப்போது, நான் யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்.'"

14 இஸ்ரவேலின் பெரியோர்களில்* சிலர் வந்து என் முன்னால் உட்
கார்ந்தார்கள்.[i] **2** அப்போது யெகோவா என்னிடம், **3** "மனிதகு
மாரனே, இந்த ஆட்கள் அருவருப்பான* சிலைகளை விடாப்பிடியாக
வணங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஜனங்களைப் பாவக்குழியில் விழ
வைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் என்னிடம் வந்து விசாரிக்கும்போது
நான் ஏன் பதில் சொல்ல வேண்டும்?[j] **4** அதனால் நீ அவர்களிடம்,
'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "அருவருப்பான
சிலைகளை விடாப்பிடியாக வணங்கிக்கொண்டும், ஜனங்களைப் பாவக்

13:18 *அதாவது, "முழங்கைகளிலோ மணிக்கட்டுகளிலோ கட்டுவதற்கான மந்திரப் பட்டைகளையும்." **14:1** *வே.வா., "மூப்பர்களில்." **14:3** *இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.

அதி. 13
a எரே 6:13, 14; எரே 28:1-4
b மீ 3:11
c எரே 23:14
d எசே 6:13
e எரே 27:14
f எரே 23:16, 17
g எரே 23:14
h உபா 18:10, 14; எரே 27:9; மீ 3:6

அதி. 14
i எசே 33:30, 31
j 2ரா 3:13; ஏசா 1:15; எரே 11:11

குழியில் விழ வைத்துக்கொண்டும் இருக்கிற ஒரு இஸ்ரவேலன் என்னு
டைய தீர்க்கதரிசியிடம் வந்து விசாரித்தால், யெகோவாவாகிய நான் அவ
னுக்குச் சரியான பதிலைக் கொடுப்பேன். அவனுடைய அருவருப்பான
சிலைகள் எந்தளவு அதிகமாக இருக்கிறதோ அந்தளவு அதிகமாக அவ
னுக்குத் தண்டனை கொடுப்பேன். **5** இஸ்ரவேல் ஜனங்களைப் பயந்து
நடுங்க வைப்பேன். ஏனென்றால், அவர்கள் எல்லாரும் என்னை விட்டு
விட்டு அருவருப்பான சிலைகளைக் கும்பிடுகிறார்கள்"'[a] என்று சொல்.

6 நீ இஸ்ரவேல் ஜனங்களிடம், 'உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: "உங்களுடைய அருவருப்பான சிலைகளை விட்டு
விட்டுத் திரும்பி வாருங்கள். உங்களுடைய அருவருப்பான பழக்கவழக்
கங்களை விட்டொழியுங்கள்.[b] **7** என்னைவிட்டு விலகி அருவருப்பான
சிலைகளை விடாப்பிடியாக வணங்கிக்கொண்டும், ஜனங்களைப் பாவக்
குழியில் விழ வைத்துக்கொண்டும் இருக்கிற இஸ்ரவேலனோ இஸ்ரவே
லில் குடியிருக்கிற வேறு ஒருவனோ என்னுடைய தீர்க்கதரிசியிடம் வந்து
விசாரித்தால்,[c] யெகோவாவாகிய நானே அவனுக்குப் பதில் கொடுப்
பேன். **8** நான் அவனுக்கு எதிராகத் திரும்பி, அவனைக் கேலிப்பொருளா
கவும் மற்றவர்களை எச்சரிக்கும் அடையாளமாகவும் ஆக்குவேன். என்னு
டைய ஜனங்களிலிருந்து அவனை ஒழித்துக்கட்டுவேன்.[d] அப்போது, நான்
யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்"' என்று சொல்.

9 'ஆனால், அந்தத் தீர்க்கதரிசி ஏமாற்றப்பட்டு ஒரு பதில் தந்தால்,
அந்தத் தீர்க்கதரிசியை ஏமாற்றியது யெகோவாவாகிய நான்தான்.[e] நான்
அவனைப் பிடித்து, என் ஜனங்களாகிய இஸ்ரவேலர்களின் நடுவிலிருந்து
ஒழித்துக்கட்டுவேன். **10** விசாரித்தவனும் சரி, தீர்க்கதரிசியும் சரி, குற்றத்
துக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டும். இரண்டு பேருமே அதன்
விளைவுகளைச் சந்திக்க வேண்டும். **11** அப்போதுதான், இஸ்ரவேல்
ஜனங்கள் என்னைவிட்டு விலகிப்போகவோ, தவறுகள் செய்து தங்களைத்
தீட்டுப்படுத்தவோ மாட்டார்கள். அவர்கள் என்னுடைய ஜனங்களாக இருப்
பார்கள், நான் அவர்களுடைய கடவுளாக இருப்பேன்'[f] என்று உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்கிறார்" என்றார்.

12 யெகோவா மறுபடியும் என்னிடம், **13** "மனிதகுமாரனே, ஒரு
தேசம் எனக்கு விரோதமாகப் பாவமும் துரோகமும் செய்தால் நான்
அதைத் தண்டிப்பேன். அங்கிருக்கிற உணவுப் பொருள்களை நாசமாக்
குவேன்.*[g] பஞ்சத்தை வர வைத்து[h] மனுஷர்களையும் மிருகங்களையும்
ஒட்டுமொத்தமாக அழித்துவிடுவேன்"[i] என்று சொன்னார். **14** "'நோவா,[j]
தானியேல்,[k] யோபு[l] ஆகிய மூன்று பேரும் அங்கே இருந்தால்கூட தங்க
ளுடைய நீதியினால் தங்களை மட்டும்தான் காப்பாற்றிக்கொள்ள முடியும்'[m]
என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்."

15 "'ஒருவேளை நான் கொடிய காட்டு மிருகங்களை அனுப்பினால்,
அவை தேசத்தில் இருக்கிற எல்லாரையும் கொன்றுபோட்டு, மனுஷ நடமாட்
டமே இல்லாத அளவுக்கு அதைப் பாழாக்கிவிடும்.[n] **16** அங்கே அந்த
மூன்று பேர் இருந்தால்கூட தங்களுடைய மகன்களையோ மகள்களையோ
காப்பாற்ற முடியாது; தங்களை மட்டும்தான் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

14:13 * நே.மொ., "ரொட்டிக் கோல்களை முறித்துப்போடுவேன்." இவை ஒருவேளை ரொட்டிகளை மாட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்ட கோல்களாக இருந்திருக்கலாம்.

அதி. 14
a எரே 2:5
b ஏசா 55:7
c எரே 21:1, 2; எசே 33:31
d லேவி 20:2, 3
e 1ரா 22:21, 22; எரே 4:10; 2தெ 2:10, 11
f எரே 24:7; எசே 11:19, 20
g லேவி 26:26
h ஏசா 3:1; எரே 15:2
i எரே 7:20
j ஆதி 6:8, 9; எபி 11:7
k தானி 10:11
l யோபு 1:8; யோபு 42:8
m நீதி 11:4; எரே 15:1; 2பே 2:9
n லேவி 26:22; எரே 15:3

தேசம் பாழாகிப்போகும். இதை என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கி
றேன்'* என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்."
17 "'ஒருவேளை தேசத்துக்கு எதிராக நான் ஒரு வாளை அனுப்பி,[a]
"வாளே, தேசமெங்கும் போ" என்று சொன்னால், அது அங்கிருக்கிற மனு
ஷர்களையும் மிருகங்களையும் கொன்றுவிடும்.[b] 18 அங்கே அந்த
மூன்று பேர் இருந்தால்கூட தங்களுடைய மகன்களையோ மகள்களையோ
காப்பாற்ற முடியாது; தங்களை மட்டும்தான் காப்பாற்றிக்கொள்ள முடியும்.
இதை என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்'* என்று உன்னதப் பேர
ரசராகிய யெகோவா சொல்கிறார்."
19 "'ஒருவேளை தேசத்தின் மேல் நான் என்னுடைய கோபத்தைக்
கொட்டி, கொள்ளைநோயை வர வைத்தால்,[c] அது அங்கிருக்கிற மனு
ஷர்களையும் மிருகங்களையும் கணக்குவழக்கில்லாமல் கொன்று குவிக்
கும். 20 அங்கே நோவாவும்[d] தானியேலும்[e] யோபுவும்[f] இருந்தால்கூட
தங்களுடைய மகன்களையோ மகள்களையோ காப்பாற்ற முடியாது; தங்க
ளுடைய நீதியினால் தங்களை மட்டும்தான் காப்பாற்றிக்கொள்ள முடியும்.[g]
இதை என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்'* என்று உன்னதப் பேர
ரசராகிய யெகோவா சொல்கிறார்."
21 "உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'எருச
லேமில் இருக்கிற மனுஷர்களையும் மிருகங்களையும் கொன்றுபோடுவ
தற்காக[h] வாள், பஞ்சம், கொடிய காட்டு மிருகம், கொள்ளைநோய்[i] ஆகிய
நான்கு தண்டனைகளை[j] நான் கொடுக்கும்போது இப்படித்தான் நடக்கும்.
22 ஆனாலும், அங்கிருக்கிற ஆண்களிலும் பெண்களிலும் சிலர் உயிர்
தப்பி, வெளியே கொண்டுவரப்படுவார்கள்.[k] அவர்கள் உங்களிடம் வரு
வார்கள். அவர்களுடைய நடத்தையையும் செயல்களையும் நீங்கள் பார்க்
கும்போது, நான் எருசலேமைத் தண்டித்ததும் அழித்ததும் நியாயம்தான்
என்று புரிந்துகொண்டு உங்கள் மனதைத் தேற்றிக்கொள்வீர்கள்.'"
23 "'அவர்களுடைய நடத்தையையும் செயல்களையும் பார்க்கும்போது,
காரணம் இல்லாமல் நான் அவர்களைத் தண்டிக்கவில்லை என்று புரிந்து
கொண்டு உங்கள் மனதைத் தேற்றிக்கொள்வீர்கள்'[l] என்று உன்னதப் பேர
ரசராகிய யெகோவா சொல்கிறார்."

15 யெகோவா மறுபடியும் என்னிடம், 2 "மனிதகுமாரனே, காட்டி
லுள்ள திராட்சைக் கொடியின் தண்டு மற்ற மரங்களையோ கிளைக
ளையோ விட எந்த விதத்திலாவது மேலானதா? 3 அதை வைத்து ஏதா
வது பொருள் செய்ய முடியுமா? பாத்திரங்களைத் தொங்கவிடும் மர
ஆணியையாவது செய்ய முடியுமா? 4 அது நெருப்பில்தானே போடப்
படும்? நெருப்பில் போட்டவுடனே அதன் இரண்டு முனைகளும் பொசுங்கி
விடும், நடுப்பகுதியும் கருகிவிடும். அதன் பிறகு அது எந்த வேலைக்காவது
உதவுமா? 5 நெருப்பில் போடப்படுவதற்கு முன்பே அது ஒன்றுக்கும் பிர
யோஜனமில்லாமல் இருந்தது. அப்படியிருக்கும்போது, நெருப்பில் பொசுங்
கிப்போன பிறகு எப்படிப் பிரயோஜனமாக இருக்கும்?" என்று கேட்டார்.
6 "அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:

14:16, 18, 20 *வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 14
a லேவி 26:25 எரே 25:9 எசே 21:3
b செப் 1:3
c உபா 28:21, 22
d ஆதி 7:1
e தானி 10:11
f யோபு 1:8 யோபு 42:8
g எசே 18:20 செப் 2:3
h எரே 32:43
i எசே 5:17 எசே 33:27
j எரே 15:2
k உபா 4:31 2நா 36:20 எசே 6:8 மீ 5:7
l நெ 9:33 எரே 22:8, 9 எசே 9:9 தானி 9:7

‘காட்டில் இருக்கிற திராட்சைக் கொடியின் தண்டு நெருப்பில் பொசுங்
கும்படி நான் செய்தது போலவே எருசலேம் ஜனங்களுக்கும் செய்வேன்.[a]
7 நான் அவர்களுக்கு எதிராக இருக்கிறேன். அவர்கள் நெருப்பிலிருந்து
தப்பித்தார்கள், ஆனால் இன்னொரு நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும்.
நான் அவர்களை எதிர்க்கும்போது, நான் யெகோவா என்று நீங்கள் தெரிந்து
கொள்வீர்கள்.’”[b]

8 “‘அவர்கள் எனக்குத் துரோகம் செய்ததால்[c] அவர்களுடைய தேசத்
தைப் பாழாக்குவேன்’[d] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
கிறார்.”

16 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “மனிதகுமாரனே, எருச
லேமுக்கு அவளுடைய அருவருப்பான பழக்கவழக்கங்களைச்[e]
சுட்டிக்காட்டு. **3** அவளிடம், ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
வது இதுதான்: “எருசலேமே, நீ கானான் தேசத்தில் பிறந்தாய். உன் அப்பா
ஒரு எமோரியன்,[f] உன் அம்மா ஒரு ஏத்தியள்.[g] **4** நீ பிறந்தபோது யாரும்
உன்னுடைய தொப்புள்கொடியை அறுக்கவில்லை, உன்னைத் தண்ணீரால்
கழுவி சுத்தப்படுத்தவில்லை, உன் உடம்பில் உப்பு தேய்க்கவில்லை, உன்
னைத் துணியால் சுற்றவில்லை. **5** இதில் ஒன்றைக்கூட யாரும் உனக்குச்
செய்யவில்லை, அந்தளவுக்குக்கூட உன்மேல் பரிதாபப்படவில்லை.
யாருமே உனக்குக் கரிசனை காட்டவில்லை. நீ வெட்டவெளியில் தூக்கி எறி
யப்பட்டாய். ஏனென்றால், பிறந்த நாளிலேயே நீ வெறுக்கப்பட்டாய்.

6 நான் அந்தப் பக்கமாக வந்தபோது, நீ கால்களை உதைத்துக்கொண்டு
உன்னுடைய இரத்தத்திலேயே கிடப்பதைப் பார்த்தேன். அப்போது, ‘நீ வாழ
வேண்டும்!’ என்று சொன்னேன். உன்னுடைய இரத்தத்திலேயே கிடந்த உன்
னிடம், ‘நீ வாழ வேண்டும்!’ என்று சொன்னேன். **7** வயலில் முளைக்கிற
பயிர்களைப் போல நான் உன்னை ஏராளமாக்கினேன். நீ வளர்ந்து ஆளாகி,
அருமையான நகைகளைப் போட்டுக்கொண்டாய். உன் மார்பகங்களும்
தலைமுடியும் வளர்ந்தன. ஆனாலும் நீ துணி எதுவும் போடாமல் நிர்வா
ணமாகவே இருந்தாய்”’ என்று சொல்.

8 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘நான் அந்
தப் பக்கமாக வந்தபோது, உன்னைப் பார்த்தேன். நீ காதலிக்கும் பருவத்தில்
இருந்ததைக் கவனித்தேன். அதனால், என்னுடைய உடையை உன்மேல்
விரித்து[h] உன்னுடைய நிர்வாணத்தை மூடினேன். உனக்கு உறுதிமொழி
கொடுத்து, உன்னோடு ஒப்பந்தம் செய்தேன். நீ என்னுடையவளாக ஆனாய்.
9 நான் உன்னைத் தண்ணீரால் குளிப்பாட்டி, உன் மேலிருந்த இரத்தத்தைக்
கழுவி, உனக்கு எண்ணெய் பூசினேன்.[i] **10** தையல்* வேலைப்பாடு செய்த
உடையை உனக்கு உடுத்திவிட்டேன். அருமையான தோல்# செருப்புக
ளைக் கால்களில் மாட்டிவிட்டேன். உயர்தரமான நாரிழை△ துணியால் உன்
னைப் போர்த்தினேன். விலை உயர்ந்த துணிமணிகளை உனக்குப் போட்டு
விட்டேன். **11** உனக்கு நகைகளைப் போட்டு அலங்காரம் செய்தேன்.
உன் கைகளில் வளையல்களையும் கழுத்தில் சங்கிலியையும் போட்டுவிட்
டேன். **12** உன் மூக்கில் மூக்குத்தியையும் காதுகளுக்குக் கம்மல்களையும்

16:10 *வே.வா., “எம்பிராய்டரி.” #வே.வா., “கடல்நாய்த் தோல்.” △அதாவது, “லினன்.”

அதி. 15
a சங் 80:14-16
ஏசா 5:24
எரே 7:20
எசே 20:47
b எசே 6:7
எசே 7:4
c 2நா 36:14
d ஏசா 6:11
எரே 25:11
எசே 6:14

அதி. 16
e எசே 8:10
எசே 20:4
f யோசு 10:5
1ரா 21:25, 26
2ரா 21:11
g 1நா 1:13, 14
h ரூ 3:9
i சங் 23:5

போட்டுவிட்டேன். உன் தலையில் அழகான கிரீடத்தை வைத்தேன். **13** நீ
தங்கத்திலும் வெள்ளியிலும் நகைகளைப் போட்டுக்கொண்டாய். தையல்
வேலைப்பாடு செய்த விலை உயர்ந்த நாரிழை உடையை உடுத்திக்கொண்
டாய். உயர்தரமான மாவிலும், தேனிலும், எண்ணெயிலும் செய்யப்பட்ட
ரொட்டியைச் சாப்பிட்டாய். நீ பேரழகியாக ஆனாய்.[a] ஒரு ராணியாகும் தகு
தியைப் பெற்றாய்'" என்று சொன்னார்.

14 "உன்னுடைய அழகைப் பற்றி உலகமே புகழ்ந்து பேச ஆரம்பித்
தது.[b] என்னுடைய மகிமையை உனக்குக் கொடுத்ததால் நீ அழகே உரு
வானவளாக இருந்தாய்'[c] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
கிறார்."

15 "'ஆனால் நீ உன்னுடைய அழகையே நம்பினாய்.[d] உனக்கு இருந்த
புகழைப் பயன்படுத்தி ஒரு விபச்சாரியாக ஆனாய்.[e] போவோர் வரு
வோர் எல்லாருடனும் உல்லாசமாக இருந்தாய்.[f] உன்னையே அவர்களுக்
குக் கொடுத்தாய். **16** உன்னுடைய வண்ணவண்ண உடைகளைக் கொண்
டுபோய், ஆராதனை மேடுகளை அலங்கரித்து, அங்கே விபச்சாரம்
செய்தாய்.[g] இதெல்லாம் நடக்கவே கூடாது; ஒருபோதும் நடக்கக் கூடாது.
17 நான் கொடுத்த அழகான தங்க நகைகளையும் வெள்ளி நகைகளையும்
கூட நீ எடுத்து ஆண் உருவங்களைச் செய்து அவற்றோடு விபச்சாரம் பண்
ணினாய்.[h] **18** தையல் வேலைப்பாடு செய்த உன்னுடைய உடைகளை
அந்த உருவங்களுக்குப் போட்டுவிட்டாய். என்னுடைய எண்ணெயையும்
தூபப்பொருளையும் அவற்றுக்குக் கொடுத்தாய்.[i] **19** உயர்தரமான மாவி
லும் எண்ணெயிலும் தேனிலும் செய்யப்பட்ட ரொட்டியை நான் உனக்
குக் கொடுத்தேனே. அதைக்கூட வாசனையுள்ள உணவுக் காணிக்கையாக
அந்த உருவங்களுக்குப் படைத்தாய்.[j] இதையெல்லாம் நீ மறுக்க முடியாது'
என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்."

20 "'நீ எனக்குப் பெற்ற மகன்களையும் மகள்களையும்[k] அந்த உருவங்
களுக்கு நரபலி கொடுத்தாய்.[l] நீ செய்கிற விபச்சாரத்துக்கு அளவே இல்லா
மல் போய்விட்டது! **21** என்னுடைய மகன்களை நீ வெட்டிப்போட்டாய்;
அவர்களை நெருப்பில் பலி கொடுத்தாய்.*[m] **22** அருவருப்பான பழக்க
வழக்கங்களிலும் விபச்சாரத்திலும் நீ மூழ்கியிருந்தபோது, குழந்தைப்பருவத்
தில் உன் கால்களை உதைத்துக்கொண்டு உன்னுடைய இரத்தத்திலேயே எப்
படி நிர்வாணமாகக் கிடந்தாய் என்று நீ மறந்துவிட்டாய். **23** எல்லா
அக்கிரமங்களையும் செய்த உனக்குக் கேடுதான் வரும், கேடுதான் வரும்'[n]
என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார். **24** பொது சதுக்கங்
களில் நீ பொய் தெய்வங்களுக்குப் பலிபீடங்களையும்* ஆராதனை மேடு
களையும் கட்டினாய். **25** ஒவ்வொரு தெருவிலும் இருக்கிற முக்கியமான
இடங்களில் அந்த ஆராதனை மேடுகளைக் கட்டினாய். போவோர் வரு
வோர் எல்லாருக்கும் உன்னையே கொடுத்து உன்னுடைய அழகை அரு
வருப்பானதாக ஆக்கினாய்.[o] விபச்சாரத்துக்குமேல் விபச்சாரம் செய்தாய்.[p]
26 பக்கத்துத் தேசத்தில் இருக்கிற காமவெறி பிடித்த எகிப்தியர்களோடு
நீ உல்லாசமாக இருந்தாய்.[q] விபச்சாரத்துக்குமேல் விபச்சாரம் செய்து என்
கோபத்தைக் கிளறினாய். **27** இப்போது நான் உன்னைத் தண்டித்து, உன்

16:21 *நே.மொ., "நெருப்பைக் கடக்க வைத்தாய்." **16:24** *வே.வா., "மண்மேடுக
ளையும்."

அதி. 16
a சங் 48:2
b 1ரா 4:21
c 1ரா 10:1; சங் 50:2; புல 2:15
d எரே 7:4; மீ 3:11
e 1ரா 11:5, 7; சங் 106:35, 36; ஏசா 57:7, 8; எரே 2:20; யாக் 4:4
f எரே 3:13
g 1ரா 14:22, 23; 2நா 21:5, 11
h ஏசா 57:7, 8
i எசே 8:10, 11
j 2ரா 22:16, 17
k யாத் 13:2
l சங் 106:37, 38
m லேவி 18:21; லேவி 20:2; 2ரா 16:1, 3; 2நா 33:1, 6; எரே 7:31; எசே 20:26
n எரே 13:27; செப் 3:1
o எரே 2:23, 24
p எரே 3:2
q ஏசா 30:2, 3; எரே 2:36

னுடைய உணவுப் பொருள்களைப் பறித்துவிடுவேன்.[a] உன்னை வெறுக்கிற
பெலிஸ்தியப் பெண்களின் கையில் உன்னைக் கொடுத்துவிடுவேன்.[b] நீ
செய்கிற அசிங்கத்தைப் பார்த்து அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.[c]

28 ஏற்கெனவே செய்த விபச்சாரத்தில் நீ திருப்தி அடையாமல் அசீரி
யர்களோடும் விபச்சாரம் செய்தாய்.[d] அதற்குப் பின்பும் நீ திருப்தி அடை
யவில்லை. **29** அதனால் வியாபாரிகளின் தேசத்திலும்* கல்தேயர்களோ
டும் விபச்சாரம் செய்தாய்.[e] அதற்குப் பின்பும் நீ திருப்தி அடையவில்லை.
30 வெட்கங்கெட்ட விபச்சாரியைப் போல நீ இதையெல்லாம் செய்த
போது உன் இதயம் எவ்வளவு மோசமான நிலையில் இருந்தது!'*[f] என்று
உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார். **31** 'ஒவ்வொரு தெரு
விலும் இருக்கிற முக்கியமான இடங்களில் பலிபீடங்களையும், பொது சதுக்
கங்களில் ஆராதனை மேடுகளையும் கட்டியபோது நீ ஒரு விபச்சாரியைப்
போல நடந்துகொள்ளவில்லை. ஏனென்றால், நீ அதற்குக் கூலி வாங்க
வில்லை. **32** கணவனுக்குப் பதிலாக வேறு ஆண்களோடு உறவுகொள்கிற
நடத்தைகெட்ட மனைவி நீ![g] **33** பொதுவாக, விபச்சாரிகள் கூலி வாங்
குவார்கள்.[h] ஆனால், காமப்பசியைத் தீர்த்துக்கொள்ள வருகிறவர்களுக்குக்
கூலி கொடுக்கிற விபச்சாரி நீ மட்டும்தான்.[i] நீதான் சுற்றியிருக்கிற எல்லாருக்
கும் கூலி கொடுத்து, விபச்சாரத்துக்குக் கூப்பிடுகிறாய்.[j] **34** நீ மற்ற விபச்
சாரிகளுக்கு நேர்மாறாக இருக்கிறாய். நீ செய்வது போல யாரும் விபச்சா
ரம் செய்வதில்லை! நீதான் மற்றவர்களுக்குக் கூலி கொடுக்கிறாய், அவர்கள்
உனக்குக் கூலி கொடுப்பதில்லை. உன்னுடைய வழி நேர்மாறானது.'

35 அதனால் விபச்சாரியே,[k] யெகோவாவின் செய்தியைக் கேள்.
36 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'நீ மானமே
இல்லாமல் உன்னுடைய காதலர்களோடு விபச்சாரம் செய்து காமப்பசியைத்
தீர்த்துக்கொண்டாய். அருவருப்பான சிலைகளுக்கு[l] உன்னுடைய மகன்க
ளின் இரத்தத்தைப் பலிகொடுத்தாய்.[m] **37** அதனால், உன்னோடு உல்லா
சமாக இருந்த எல்லாரையும், நீ காதலித்த எல்லாரையும், நீ வெறுத்த
எல்லாரையும் உனக்கு எதிராக நான் ஒன்றுகூட்டுவேன். அவர்களை எல்லா
பக்கத்திலிருந்தும் வர வைத்து உன்னுடைய நிர்வாணத்தைக் காட்டுவேன்.
நீ முழு நிர்வாணமாக இருப்பதை அவர்கள் பார்ப்பார்கள்.[n]

38 கணவனுக்குத் துரோகம் செய்கிற பெண்களுக்கும்,[o] கொலை செய்
கிற பெண்களுக்கும் கிடைக்க வேண்டிய தண்டனையை நான் உனக்குக்
கொடுப்பேன்.[p] கோபத்தோடும் எரிச்சலோடும் உன்னைக் கொன்றுபோடு
வேன்.[q] **39** உன்னை அவர்களுடைய கையில் கொடுப்பேன். அவர்கள்
உன்னுடைய பலிபீடங்களை உடைப்பார்கள், உன்னுடைய ஆராதனை
மேடுகளை இடித்துத் தள்ளுவார்கள்.[r] உன்னுடைய உடைகளை உருவி,[s]
உன்னுடைய அழகான நகைகளைப் பிடுங்கி,[t] உன்னை நிர்வாணமாக விட்
டுவிடுவார்கள். **40** ஒரு கும்பலை வர வைப்பார்கள்.[u] அவர்கள் உன்மேல்
கல்லெறிவார்கள்,[v] உன்னை வாளால் வெட்டிப்போடுவார்கள்.[w] **41** உன்
னுடைய வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்துவார்கள்.[x] பெண்கள் பலரு
டைய கண் முன்னாலேயே உன்னைத் தண்டிப்பார்கள். நான் உன்னுடைய
விபச்சாரத்துக்கு ஒரு முடிவுகட்டுவேன்.[y] அதற்குப் பிறகு நீ யாருக்கும்

அதி. 16
a உபா 28:48
b சங் 106:41
c எரே 2:11, 12
d 2ரா 16:7
e எசே 23:14, 16
f எரே 3:3
g எரே 3:1, 20
h ஆதி 38:16
i ஏசா 57:9
j 2நா 16:2, 3
k ஏசா 1:21; எரே 3:6
l 2ரா 21:11
m சங் 106:37, 38
n எரே 13:22; புல 1:8
o ஆதி 38:24; லேவி 20:10; உபா 22:22
p ஆதி 9:6; யாத் 21:12
q சங் 79:2, 3; எசே 23:25
r ஏசா 27:9; எசே 16:24
s எரே 4:30
t ஏசா 3:18-23; எசே 23:26
u எசே 23:46, 47; ஆப 1:6
v உபா 22:20, 21
w 2நா 36:17; எரே 25:9
x 2ரா 25:8, 9
y எசே 23:27

16:29 *நே.மொ., "கானான் தேசத்திலும்." **16:30** *அல்லது, "நான் எந்தளவுக்குக் கோபத்தில் கொதித்துப்போனேன்!"

கூலி கொடுக்க முடியாது. **42** இப்படி, என்னுடைய ஆக்ரோஷம் அடங்கும்வரை உன்னைத் தண்டிப்பேன்.[a] அதன்பின், கோபத்தை விட்டுவிட்டு[b] அமைதியாகிவிடுவேன்.’

43 ‘குழந்தைப்பருவத்தில் நீ இருந்த நிலைமையை நினைத்துப் பார்க்காமல்[c] இதையெல்லாம் செய்து என் கோபத்தைக் கிளறியதால் அதன் விளைவுகளை நீ அனுபவிக்கும்படி செய்வேன். அதற்குப் பிறகு நீ வெட்கங்கெட்டு நடக்க மாட்டாய், அருவருப்பான காரியங்களைச் செய்ய மாட்டாய்’ என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

44 ‘பழமொழிகளைச் சொல்கிறவர்கள் உன்னைப் பார்த்து, “தாயைப் போல மகள்!”[d] என்ற பழமொழியைச் சொல்வார்கள். **45** கணவனையும் பிள்ளைகளையும் வெறுத்த தாய்க்குப் பிறந்தவள் நீ. கணவனையும் பிள்ளைகளையும் வெறுத்த பெண்களுடைய சகோதரி நீ. உன்னுடைய அம்மா ஒரு ஏத்தியள், உன்னுடைய அப்பா ஒரு எமோரியன்.’”[e]

46 “‘உன்னுடைய அக்காதான் சமாரியா.[f] அவள் தன்னுடைய மகள்களோடு* உனக்கு வடக்கே வாழ்கிறாள்.[g] உன்னுடைய தங்கையான சோதோம் தன்னுடைய மகள்களோடு[h] உனக்குத் தெற்கே வாழ்கிறாள்.[i] **47** நீ அவர்களுடைய வழிகளில் போய், அவர்களைப் போலவே அருவருப்பான காரியங்களைச் செய்தாய். கொஞ்சக் காலத்தில் அவர்களைவிட படுமோசமாக நடந்துகொள்ள ஆரம்பித்தாய்.[j] **48** நீயும் உன்னுடைய மகள்களும் செய்தது போல உன்னுடைய தங்கை சோதோமும் அவளுடைய மகள்களும் செய்யவில்லை என்று என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்’* என உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார். **49** உன் தங்கை சோதோம் செய்த குற்றம் இதுதான்: அவளும் அவளுடைய மகள்களும்[k] பெருமைபிடித்து[l] அலைந்தார்கள். நன்றாகச் சாப்பிட்டு,[m] எதற்கும் கவலைப்படாமல் நிம்மதியாக வாழ்ந்தார்கள்.[n] ஆனால், ஏழை எளிய ஜனங்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை.[o] **50** ஆணவத்தோடு[p] என் கண் முன்னாலேயே அருவருப்பான காரியங்களைச் செய்தார்கள்.[q] அதனால், அவர்களை நான் அழித்தேன்.[r]

51 நீ செய்த பாவங்களில் பாதி அளவுகூட சமாரியா[s] செய்யவில்லை. உன் சகோதரிகளைவிட அதிகமாக நீ அருவருப்பான காரியங்களைச் செய்தாய். நீ செய்திருக்கிற எல்லா அருவருப்புகளையும் பார்க்கும்போது அவர்கள்கூட உன்னைவிட நீதியுள்ளவர்களாகத் தெரிகிறார்கள்.[t] **52** உன்னுடைய சகோதரிகள் செய்ததை நீ நியாயப்படுத்திக் காட்டியதால் இப்போது நீ அவமானப்பட வேண்டும். அவர்களைவிட அதிகமாக நீ அருவருப்பான காரியங்களைச் செய்ததால் அவர்களே உன்னைவிட நீதியுள்ளவர்களாகத் தெரிகிறார்கள். உன் சகோதரிகளை நீதியுள்ளவர்கள்போல் காட்டுவதற்காக நீ வெட்கப்படு, அவமானப்படு.’

53 ‘சிறைபிடிக்கப்பட்டுப் போன சோதோமையும் அவளுடைய மகள்களையும், சமாரியாவையும் அவளுடைய மகள்களையும் நான் கூட்டிச்சேர்ப்பேன்; சிறைபிடிக்கப்பட்டுப் போன உன்னுடைய ஜனங்களையும் அவர்களோடு கூட்டிச்சேர்ப்பேன்.[u] **54** அப்போது, நீ அவமானம் அடைவாய். அவர்களுக்கு ஆறுதல் தந்ததற்காக நீ அவமானப்படுவாய். **55** உன்

16:46 * அநேகமாக, “சிற்றூர்களோடு.” **16:48** * வே.வா., “நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.”

அதி. 16

a எசே 5:13
b ஏசா 40:2
c எரே 2:32
d 1ரா 21:25, 26; 2ரா 21:2, 9; சங் 106:35, 36
e உபா 20:17; யோசு 10:5; 2ரா 21:11; எசே 16:3
f எசே 23:33
g எரே 3:8
h ஆதி 19:24, 25
i ஆதி 18:20; ஏசா 3:9; எரே 23:14
j 2ரா 21:2, 9; எசே 5:5, 6
k யூ 7
l நீதி 16:5
m ஆதி 13:10
n நீதி 1:32
o நீதி 21:13
p நீதி 16:18
q ஆதி 13:13; ஆதி 18:20; ஆதி 19:4, 5
r ஆதி 19:24, 25; புல 4:6; 2பே 2:6
s 2ரா 21:13; எரே 23:13; எசே 23:33
t எரே 3:11
u சங் 126:1

னுடைய சகோதரிகளான சோதோமும் சமாரியாவும் அவர்களுடைய மகள்
களும் பழைய நிலைமைக்குத் திரும்புவார்கள். நீயும் உன்னுடைய
மகள்களும்கூட பழைய நிலைமைக்குத் திரும்புவீர்கள்.[a] **56** நீ பெருமை
யோடு வாழ்ந்த சமயத்தில் உன் தங்கையான சோதோமின் பெயரை
வாயால் உச்சரிப்பதைக்கூட கேவலமாக நினைத்தாய். **57** உன்னுடைய
அக்கிரமம் வெளிச்சத்துக்கு வருவதற்குமுன் நீ அப்படித்தான் அவளைக்
கேவலமாக நினைத்தாய்.[b] ஆனால், இப்போது சீரியாவின் மகள்களும் அவ
ளைச் சுற்றியிருக்கிறவர்களும் பெலிஸ்தியர்களின் மகள்களும்[c] உன்
னைப் பழித்துப் பேசுகிறார்கள். உன்னைச் சுற்றியிருக்கிற எல்லாரும் உன்
னைக் கேவலமாகப் பேசுகிறார்கள். **58** வெட்கக்கேடான, அருவருப்பான
காரியங்களைச் செய்ததற்கான விளைவுகளை நீ அனுபவிப்பாய்' என்று
யெகோவா சொல்கிறார்."

59 "உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'நீ செய்
தது போலவே நானும் உனக்குச் செய்வேன்.[d] ஏனென்றால், என் உறுதிமொ
ழியை மதிக்காமல், என் ஒப்பந்தத்தை மீறினாய்.[e] **60** ஆனாலும், உன்னு
டைய சிறுவயதில் நான் உன்னோடு செய்த ஒப்பந்தத்தை நான் நினைத்துப்
பார்ப்பேன். உன்னோடு நிரந்தரமான ஒப்பந்தத்தைச் செய்வேன்.[f] **61** உன்
னுடைய அக்கா தங்கை எல்லாரையும் நீ வரவேற்கும்போது உன்னுடைய
நடத்தையை நினைத்துக் கூனிக்குறுகுவாய்.[g] அவர்களை உன்னுடைய
மகள்களாக நான் கொடுப்பேன், ஆனால் எந்தவொரு ஒப்பந்தத்தின் அடிப்
படையிலும் கொடுக்க மாட்டேன்.'

62 'உன்னோடு செய்த ஒப்பந்தத்தை நான் உறுதிப்படுத்துவேன். அப்
போது, நான் யெகோவா என்று நீ தெரிந்துகொள்வாய். **63** நீ செய்ததை
யெல்லாம் நான் மன்னிப்பேன்.*[h] அப்போது, நீ உன் நடத்தையை நினைத்
துக் கூனிக்குறுகுவாய்.[i] அவமானத்தில் உனக்குப் பேச்சுகூட வராது' என்று
உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்."

17 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** "மனிதகுமாரனே, இஸ்ர
வேல் ஜனங்களைப் பற்றி ஒரு உவமையைப் புதிர் போலச் சொல்.[j]
3 நீ அவர்களிடம், 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: "பெரிய இறக்கைகளும் நீளமான வண்ண வண்ண சிறகுகளும் உள்ள
மிகப் பெரிய கழுகு[k] லீபனோனுக்குப்[l] பறந்து வந்து, தேவதாரு மர உச்சி
யில் இருக்கிற நுனிக்கிளையைப் பிடித்துக்கொண்டது.[m] **4** அதன் தளி
ரைக் கிள்ளியெடுத்து, வியாபாரிகளின் தேசத்துக்கு* கொண்டுபோய் வியா
பாரிகளின் நகரத்தில் நட்டு வைத்தது.[n] **5** பின்பு, அந்தத் தேசத்திலிருந்த
விதைகளில் ஒன்றை எடுத்து[o] வளமான நிலத்தில் விதைத்தது. ஆற்றோர
மரத்தை* போல வளருவதற்காக நிறைய தண்ணீர் உள்ள இடத்தில் அதை
விதைத்தது. **6** அது துளிர்த்து, அதன் பாத்திக்குள்ளேயே தாழ்வாகப்
படர்ந்தது.[p] அதன் வேர் நிலத்துக்குக் கீழே சென்றது. அது கிளைகள்விட்டு,
ஒரு திராட்சைக் கொடியாக ஆனது.[q]

7 பின்பு, பெரிய இறக்கைகளும் சிறகுகளும் உள்ள[r] இன்னொரு
பெரிய கழுகு வந்தது.[s] அப்போது அந்தத் திராட்சைக் கொடி அதன்

அதி. 16
a எசே 36:11
b எசே 21:24
c 2நா 28:18
d ஏசா 3:11; கலா 6:7
e உபா 29:12; எரே 22:8, 9
f எரே 32:40; எரே 50:4, 5
g எசே 20:43
h சங் 103:12; மீ 7:18, 19
i எஸ்றா 9:6; எசே 36:31

அதி. 17
j ஓசி 12:10
k உபா 28:49, 50; எரே 4:13; புல 4:19
l எரே 22:23
m 2ரா 24:12; 2நா 36:9, 10; எரே 24:1
n 2ரா 24:15
o 2ரா 24:17; எரே 37:1
p எசே 17:13, 14
q 2நா 36:11
r எரே 37:5, 7
s எசே 17:15

16:63 *நே.மொ., "செய்ததற்கெல்லாம் பாவப் பரிகாரம் செய்வேன்." **17:4** *நே.மொ., "கானான் தேசத்துக்கு." **17:5** *அதாவது, "வில்லோ மரத்தை." இது நீள மான கிளைகளும் இலைகளும் உள்ள ஒரு மரம்.

பாத்தியைவிட்டு, அந்தக் கழுகின் பக்கமாக ஆசையோடு வேர்விட ஆரம்பித்தது. அந்தக் கழுகு தனக்குத் தண்ணீர் பாய்ச்சும் என்று நினைத்து அதன் பக்கமாகக் கிளைகள்விட்டுப் படர்ந்தது.[a] **8** ஆனால், ஆற்றோரமாக உள்ள நல்ல நிலத்தில்தான் அது ஏற்கெனவே விதைக்கப்பட்டிருந்தது; கிளைகள்விட்டு, கனிகள் தந்து, பெரிய திராட்சைக் கொடியாய் வளருவதற்காக அங்கு விதைக்கப்பட்டிருந்தது"[b] என்று சொல்.'

9 நீ அவர்களிடம், 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "அந்தத் திராட்சைக் கொடி செழிப்பாக வளருமா? ஒருவன் அதன் வேர்களைப் பிடுங்கிப்போட மாட்டானா?[c] அப்போது அதன் பழங்கள் அழுகி, அதன் துளிர்கள் பட்டுப்போகாதா?[d] அந்தக் கொடி அடியோடு காய்ந்துபோகப் போவதால் அதை வேரோடு பிடுங்குவதற்குப் பலமும் தேவையில்லை, நிறைய ஆட்களும் தேவையில்லை. **10** அதைப் பிடுங்கி இன்னொரு இடத்தில் நட்டு வைத்தாலும் அது வளருமா? கிழக்குக் காற்று அடிக்கும்போது அது காய்ந்து கருகிப் போகாதா? துளிர்விட்ட பாத்திக்குள்ளேயே அது கண்டிப்பாகப் பட்டுப்போகும்"' என்று சொல்" என்றார்.

11 யெகோவா மறுபடியும் என்னிடம் இப்படிச் சொன்னார்: **12** "எனக்கு அடங்காத இந்த ஜனங்களிடம், 'இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று உங்களுக்குப் புரிகிறதா?' என்று கேள். பின்பு அவர்களிடம், 'பாபிலோன் ராஜா எருசலேமுக்கு வந்து அதன் ராஜாவையும் அதிகாரிகளையும் பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போனான்.[e] **13** அதன்பின், ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒருவனோடு[f] ஒப்பந்தம் செய்து, அவனிடம் உறுதிமொழி வாங்கிக்கொண்டான்.[g] அங்கிருந்த முக்கியமான ஆட்களையும் சிறைபிடித்துக்கொண்டு போனான்.[h] **14** ஏனென்றால், அந்த ராஜ்யம் மறுபடியும் உயர்ந்துவிடாதபடி அதை அடக்கிவிட வேண்டும் என்றும், தன்னுடைய ஒப்பந்தத்தை மீறினால் அதை அழித்துவிட வேண்டும் என்றும் நினைத்தான்.[i] **15** ஆனால் ராஜா* கடைசியில் அவனுடைய# ஒப்பந்தத்தை மீறினான்.[j] குதிரைகளையும்[k] பெரிய படையையும் தனக்குக் கொடுத்து உதவும்படி கேட்டு எகிப்துக்கு ஆட்களை அனுப்பினான்.[l] அவனுடைய திட்டம் கைகூடுமா? இப்படியெல்லாம் செய்கிறவன் தண்டனையிலிருந்து தப்புவானா? ஒப்பந்தத்தை மீறுகிறவன் உயிர்தப்புவானா?'[m] என்று கேள்.

16 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* அவனுக்கு# ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்த ராஜாவின்△ தேசமான பாபிலோனில் அவன் சாவான். அந்த ராஜாவுக்குக் கொடுத்த உறுதிமொழியை அவன் மதிக்காமல், ஒப்பந்தத்தை மீறினான்.[n] **17** அவனுடைய ஜனங்களைக் கொன்று குவிப்பதற்காக பாபிலோனின் வீரர்கள் முற்றுகைச் சுவர்களையும் மண்மேடுகளையும் எழுப்புவார்கள். அப்போது, பார்வோனுடைய மாபெரும் படைகளால் அவனுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது.[o] **18** அவன் அந்த உறுதிமொழியை மதிக்காமல், ஒப்பந்தத்தை மீறினான். கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் இதையெல்லாம் செய்தான். அதனால், தப்பிக்கவே மாட்டான்."'

17:15 *அதாவது, "சிதேக்கியா." #அதாவது, "நேபுகாத்நேச்சாருடைய." **17:16** *வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." #அதாவது, "சிதேக்கியாவுக்கு." △அதாவது, "நேபுகாத்நேச்சாரின்."

அதி. 17

a 2ரா 24:20; 2நா 36:11, 13

b எரே 37:1

c எரே 21:7

d 2ரா 25:7

e 2ரா 24:12, 14; ஏசா 39:7; எரே 22:24, 25; எரே 52:31, 32

f 2ரா 24:17; எரே 37:1

g 2நா 36:11, 13

h 2ரா 24:15; எரே 24:1

i எரே 27:12; எரே 38:17

j 2ரா 24:20; 2நா 36:11, 13

k உபா 17:16

l எரே 37:5

m எரே 32:3, 4

n எரே 34:2, 3; எரே 52:11

o எரே 37:7, 8; புல 4:17; எசே 29:6

19 ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “என்
உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* எனக்குக் கொடுத்த உறுதிமொ
ழியையும்[a] என்னோடு செய்த ஒப்பந்தத்தையும் மீறியதற்கான விளைவு
களை அவன் அனுபவிக்கும்படி செய்வேன். **20** அவன்மேல் என்
வலையை விரிப்பேன். அவன் அதில் சிக்கிக்கொள்வான்.[b] அவனை பாபி
லோனுக்குக் கொண்டுபோய் அவனோடு வழக்காடுவேன். ஏனென்றால்,
அவன் எனக்குத் துரோகம் செய்தான்.[c] **21** அவனோடு தப்பித்து ஓடுகிற
படைவீரர்கள் எல்லாரும் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள். மிச்சமிருக்கிறவர்
கள் நாலாபக்கமும் சிதறி ஓடுவார்கள்.[d] அப்போது, யெகோவாவாகிய நான்
தான் இதைச் சொன்னேன் என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.”’[e]

22 ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “உயரமான
தேவதாரு மர உச்சியிலுள்ள[f] கிளையின் கொழுந்தைக் கிள்ளி,[g] மாபெரும்
மலைமேல் நட்டு வைப்பேன்.[h] **23** இஸ்ரவேலில் இருக்கிற உயரமான
மலைமேல் அதை நட்டு வைப்பேன். அது கிளைகள்விட்டு, கனிகள் தந்து,
கம்பீரமான தேவதாரு மரமாக வளரும். அதன்கீழ் எல்லா விதமான பற
வைகளும் வாழும். அதனுடைய நிழலில் அவை தங்கியிருக்கும். **24** அப்
போது, யெகோவாவாகிய நான்தான் உயரமான மரத்தைத் தாழ்த்தி,
தாழ்வான மரத்தை உயர்த்தினேன்[i] என்றும், பசுமையான மரத்தைப் பட்டுப்
போக வைத்து, பட்டுப்போன மரத்தைப் பசுமையாக்கினேன்[j] என்றும் காட்
டிலுள்ள மரங்களெல்லாம் தெரிந்துகொள்ளும். இதை யெகோவாவாகிய
நானே சொன்னேன், நானே செய்து முடித்தேன்.”’”

18 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “‘தகப்பன்கள் புளிப்பான
திராட்சைகளைச் சாப்பிட்டார்கள்; ஆனால், பிள்ளைகளின் பற்கள்
கூசுகின்றன’[k] என்ற பழமொழியை இஸ்ரவேல் தேசத்தில் நீங்கள் சொல்லிக்
கொண்டிருக்கிறீர்களே, அதற்கு என்ன அர்த்தம்?

3 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘என் உயிர்
மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* இஸ்ரவேலில் இனி இந்தப் பழமொ
ழியை நீங்கள் சொல்ல மாட்டீர்கள். **4** எல்லா உயிர்களும்* எனக்குத்தான்
சொந்தம். தகப்பனுடைய உயிரும் சரி, மகனுடைய உயிரும் சரி, எனக்குத்
தான் சொந்தம். பாவம் செய்கிற எவனும் செத்துப்போவான்.

5 ‘நியாயமாகவும் நேர்மையாகவும் நடக்கிற ஒரு நீதிமானை எடுத்துக்
கொள்ளலாம். **6** அவன் மலைகள்மேல்[l] சிலைகளுக்குப் படைக்கப்பட்ட
தைச் சாப்பிடாமலும், இஸ்ரவேல் ஜனங்களுடைய அருவருப்பான* சிலை
களை வணங்காமலும், அடுத்தவருடைய மனைவியோடு முறைகேடான
உறவு வைக்காமலும்,[m] மாதவிலக்கு ஏற்பட்ட ஒரு பெண்ணோடு உடலு
றவு கொள்ளாமலும் இருக்கிறான்.[n] **7** அவன் யாரையும் மோசமாக நடத்
தாமல் இருக்கிறான்,[o] கடன் வாங்கியவனுக்கு அடமானத்தைத் திருப்பிக்
கொடுக்கிறான்.[p] மற்றவர்களுடைய பொருள்களைத் திருடாமல்,[q] இல்லா
தவர்களுக்குத் தன்னுடைய உணவையும்[r] உடையையும் கொடுக்கிறான்.[s]

17:19; 18:3 *வே.வா., “நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **18:4** *சொல் பட்டியலில் “நெஃபெஷ், சைக்கீ” என்ற தலைப்பைப் பாருங்கள். **18:6** *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.

அதி. 17
a உபா 5:11
b எசே 12:13
c எசே 20:36
d எசே 12:14
e எசே 6:13
f ஏசா 11:1; எரே 23:5
g ஏசா 53:2
h சங் 2:6
i ஏசா 9:6; எசே 21:26, 27; தானி 4:17; ஆமோ 9:11
j 1சா 2:7, 8; லூ 1:52

அதி. 18
k எரே 31:29, 30
l உபா 12:2; எரே 3:6
m லேவி 20:10
n லேவி 18:19; லேவி 20:18
o நீதி 14:21
p உபா 24:12, 13
q லேவி 6:2, 4
r உபா 15:11
s ஏசா 58:6, 7; யாக் 2:15, 16

8 அநியாய வட்டி வாங்காமலும் மற்றவர்களைச் சுரண்டிப் பிழைக்காம
லும்[a] அநீதி செய்யாமலும்[b] இருக்கிறான். மற்றவர்களுடைய வழக்குகளை
நியாயத்தோடு தீர்த்து வைக்கிறான்.[c] **9** எப்போதுமே என்னுடைய சட்ட
திட்டங்களையும் நீதித்தீர்ப்புகளையும் உண்மையோடு கடைப்பிடிக்கிறான்.
அப்படிப்பட்டவன்தான் நீதிமான். அவன் கண்டிப்பாக உயிர்வாழ்வான்'[d]
என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

10 'ஆனால் அவனுடைய மகன் இதில் எந்தக் குற்றத்தையாவது
செய்கிறவனாக, ஒருவேளை திருடுகிறவனாக[e] அல்லது கொலை செய்கிற
வனாக[f] இருக்கலாம். **11** (தகப்பன் இதில் எதையுமே செய்யாவிட்டா
லும்) அவனுடைய மகன் மலைகள்மேல் சிலைகளுக்குப் படைக்கப்பட்ட
தைச் சாப்பிடுகிறவனாகவும், அடுத்தவரின் மனைவியோடு முறைகேடான
உறவு வைக்கிறவனாகவும், **12** ஏழை எளியவர்களை மோசமாக நடத்துகி
றவனாகவும்,[g] மற்றவர்களுடைய பொருள்களைத் திருடுகிறவனாகவும்,
அடமானமாக வாங்கியதைத் திருப்பிக் கொடுக்காதவனாகவும், அருவருப்
பான சிலைகளை வணங்குகிறவனாகவும்,[h] அருவருப்பான காரியங்களைச்
செய்கிறவனாகவும்,[i] **13** மற்றவர்களைச் சுரண்டிப் பிழைக்கிறவனாகவும்,
வட்டி வாங்குகிறவனாகவும் இருக்கலாம்.[j] அப்படிப்பட்ட மகன் தொடர்ந்து
உயிர்வாழ முடியாது. இந்த எல்லா அருவருப்புகளையும் செய்ததால்
அவன் கொல்லப்படுவான். அவனுடைய சாவுக்கு அவனே காரணமாக
இருப்பான்.

14 'ஆனால் தகப்பன் செய்கிற பாவங்களையெல்லாம் ஒரு மகன் பார்த்
தும் அந்தப் பாவங்களைச் செய்யாமல் இருக்கலாம். **15** அவன் மலை
கள்மேல் சிலைகளுக்குப் படைக்கப்பட்டதைச் சாப்பிடாமலும், இஸ்ரவேல்
ஜனங்களுடைய அருவருப்பான சிலைகளை வணங்காமலும், அடுத்தவ
ருடைய மனைவியோடு முறைகேடான உறவு வைக்காமலும் இருக்கலாம்.
16 அவன் யாரையும் மோசமாக நடத்தாமல் அடமானமாக வாங்கியதைத்
திருப்பிக் கொடுக்கிறவனாக இருக்கலாம். மற்றவர்களுடைய பொருள்க
ளைத் திருடாமல், இல்லாதவர்களுக்குத் தன்னுடைய உணவையும் உடை
யையும் கொடுக்கிறவனாகவும் இருக்கலாம். **17** ஏழைகளை அடக்கி
ஒடுக்காதவனாகவும், அநியாய வட்டி வாங்காதவனாகவும், மற்றவர்களைச்
சுரண்டிப் பிழைக்காதவனாகவும் இருக்கலாம். என்னுடைய நீதித்தீர்ப்புக
ளையும் சட்டதிட்டங்களையும் கடைப்பிடிக்கிறவனாக இருக்கலாம். அப்ப
டிப்பட்டவன் தன்னுடைய தகப்பன் செய்த பாவத்துக்காகச் சாக மாட்டான்.
அவன் கண்டிப்பாக உயிர்வாழ்வான். **18** ஆனால், அவனுடைய தகப்பன்
மோசடி செய்கிறவனாகவும், தன்னுடைய சகோதரனிடமிருந்து திருடுகிறவ
னாகவும், தன்னுடைய ஜனங்களின் நடுவில் கெட்டதைச் செய்கிறவனாக
வும் இருந்தால், அவன் செய்த பாவத்துக்காக அவன் கண்டிப்பாகச் செத்
துப்போவான்.

19 ஆனால் நீங்கள், "தகப்பன் செய்த பாவத்துக்காக ஏன் மகன் தண்
டிக்கப்படுவதில்லை?" என்று கேட்பீர்கள். மகன் நியாயமாகவும் நீதியாகவும்
நடந்து, என்னுடைய சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதால் அவன் கண்
டிப்பாக உயிர்வாழ்வான்.[k] **20** பாவம் செய்கிறவன்தான் சாவான்.[l] தகப்
பன் செய்த குற்றத்துக்காக மகன் தண்டிக்கப்பட மாட்டான், மகன் செய்த
குற்றத்துக்காகத் தகப்பன் தண்டிக்கப்பட மாட்டான். அவரவர் செய்கிற நீதி

அதி. 18
a யாத் 22:25 சங் 15:5 லூ 6:34, 35
b லேவி 19:35
c லேவி 19:15 லேவி 25:14 உபா 1:16
d லேவி 18:5
e லேவி 19:13
f ஆதி 9:6 யாத் 21:12
g உபா 15:7, 8
h லேவி 26:30
i 2ரா 21:11
j எசே 22:12
k உபா 16:20 ரோ 10:5
l உபா 24:16 எரே 31:30 எசே 18:4

யான காரியங்களுக்கு அவரவருக்குத்தான் ஆசீர்வாதம் கிடைக்கும். அவ
ரவர் செய்கிற கெட்ட காரியங்களுக்கு அவரவருக்குத்தான் தண்டனை
கிடைக்கும்.[a]

21 பொல்லாதவன் ஒருவன் எல்லா பாவங்களையும் விட்டுவிட்டு, என்
னுடைய சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து, நியாயமாகவும் நீதியாகவும்
நடக்க ஆரம்பித்தால் அவன் கண்டிப்பாக உயிர்வாழ்வான். அவன் சாக
மாட்டான்.[b] 22 முன்பு செய்த எந்தக் குற்றத்துக்காகவும் அவன் தண்டிக்
கப்பட மாட்டான்.[c] இப்போது நீதியானதைச் செய்வதால் அவன்
தொடர்ந்து உயிர்வாழ்வான்.'[d]

23 'பொல்லாதவன் சாக வேண்டும் என்றா நான் ஆசைப்படுகிறேன்?[e]
அவன் கெட்ட வழிகளைவிட்டுத் திருந்தி உயிர்வாழ வேண்டும் என்று
தானே ஆசைப்படுகிறேன்?'[f] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார்.

24 நீதிமான் ஒருவன் நீதியாக நடப்பதை விட்டுவிட்டு கெட்டது செய்
தால், அதாவது பொல்லாதவன் செய்கிற எல்லா அருவருப்பான காரியங்
களையும் செய்தால், தொடர்ந்து உயிர்வாழ முடியுமா? அவன் செய்த எந்த
நீதியான காரியத்தையும் நான் நினைத்துப் பார்க்க மாட்டேன்.[g] அவன்
துரோகம் செய்ததாலும் பாவம் செய்ததாலும் செத்துப்போவான்.[h]

25 ஆனால் நீங்கள், "யெகோவா செய்வது அநியாயம்"[i] என்று சொல்
வீர்கள். இஸ்ரவேல் ஜனங்களே, தயவுசெய்து கேளுங்கள். நான் செய்வதா
அநியாயம்?[j] நீங்கள் செய்வதுதானே அநியாயம்?[k]

26 நீதிமான் ஒருவன் நீதியாக நடப்பதை விட்டுவிட்டு கெட்டது செய்து
செத்துப்போனால், அவன் செய்த கெட்ட காரியத்துக்காகத்தான் அவன்
செத்துப்போவான்.

27 பொல்லாதவன் ஒருவன் கெட்டது செய்வதை விட்டுவிட்டு நியாய
மாகவும் நீதியாகவும் நடக்க ஆரம்பித்தால், அவன் தன்னுடைய உயிரைக்
காப்பாற்றிக்கொள்வான்.[l] 28 குற்றத்தை உணர்ந்து, எல்லா பாவங்களை
யும் விட்டுத் திருந்தினால், அவன் கண்டிப்பாக உயிர்வாழ்வான். அவன்
சாக மாட்டான்.

29 ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள், "யெகோவா செய்வது அநியா
யம்" என்று சொல்வார்கள். இஸ்ரவேல் ஜனங்களே, நான் செய்வதா அநி
யாயம்?[m] நீங்கள் செய்வதுதானே அநியாயம்?'

30 'இஸ்ரவேல் ஜனங்களே, அவரவருடைய செயலுக்கு ஏற்றபடி
அவரவருக்கு நான் தீர்ப்பு கொடுப்பேன்'[n] என்று உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்கிறார். 'திருந்துங்கள்! எல்லா குற்றங்களையும் விட்
டுத் திருந்துங்கள்! அப்போதுதான், குற்றப் பழியைச் சுமக்கவோ படுகுழி
யில் விழவோ மாட்டீர்கள். 31 எல்லா பாவங்களையும் அடியோடு விட்டு
விடுங்கள்.[o] உங்கள் இதயத்தையும் மனதையும் புதிதாக்குங்கள்.[p] இஸ்ர
வேல் ஜனங்களே, நீங்கள் ஏன் சாக வேண்டும்?'[q]

32 'யாரும் சாக வேண்டும் என்று நான் ஆசைப்படுவதே இல்லை.*[r]
அதனால் திருந்தி வாழுங்கள்'[s] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார்" என்றார்.

18:32 * வே.வா., "யாருடைய சாவிலும் நான் சந்தோஷப்படுவதில்லை."

அதி. 18
a ஏசா 3:10, 11; கலா 6:7
b ஏசா 55:7; எசே 3:21; எசே 33:12, 19; அப் 3:19
c 2நா 33:12, 13; சங் 25:7; ஏசா 43:25
d எசே 33:16
e புல 3:33; எசே 33:11; 1தீ 2:3, 4; 2பே 3:9
f மீ 7:18
g எசே 33:12, 18; எபி 10:38; 2யோ 8
h நீதி 21:16; எசே 3:20
i யோபு 35:2; நீதி 19:3; எசே 33:17, 20
j உபா 32:4
k ஏசா 55:9; எரே 2:17
l ஏசா 55:7; 1தீ 4:16
m ஆதி 18:25; சங் 145:17; ஏசா 40:14
n யோபு 34:11; ரோ 2:6
o சங் 34:14; ஏசா 1:16
p சங் 51:10; எரே 32:39; எசே 11:19; எபே 4:23, 24
q உபா 30:15; நீதி 8:36; அப் 13:46
r எரே 29:11; புல 3:33; எசே 33:11; லூ 15:10; 2பே 3:9
s உபா 30:16

19 “இஸ்ரவேலின் தலைவர்களைப் பற்றி நீ இந்தப் புலம்பல் பாட்
டைப் பாடு:
2 ‘உன்னுடைய தாய் எப்படிப்பட்டவள்? அவள் சிங்கங்களோடு
சிங்கமாக இருந்த ஒரு பெண் சிங்கம்.
பலமுள்ள இளம் சிங்கங்களோடு அவள் படுத்திருந்தாள்.
அங்கே தன்னுடைய குட்டிகளை வளர்த்தாள்.
3 அவள் வளர்த்த ஒரு குட்டி பலமுள்ள இளம் சிங்கமானான்.[a]
இரையைக் கடித்துக் குதறப் பழகிக்கொண்டான்.
மனுஷர்களைக்கூட பீறிப்போட்டான்.
4 தேசங்கள் அவனைப் பற்றிக் கேள்விப்பட்டன; அவனைப் படுகுழியில்
விழ வைத்துப் பிடித்தன.
கொக்கிகள் மாட்டி அவனை எகிப்துக்கு இழுத்துச் சென்றன.[b]
5 அவன் திரும்பி வருவான் என்று அவள் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்;
கடைசியில், தன்னுடைய எதிர்பார்ப்பு வீண் என்பதைப்
புரிந்துகொண்டாள்.
அதன்பின், இன்னொரு குட்டிக்குப் பயிற்சி கொடுத்து அவனைப்
பலமுள்ள இளம் சிங்கமாக்கினாள்.
6 அவனும் மற்ற சிங்கங்களோடு நடந்து திரிந்து பலமுள்ள இளம்
சிங்கமானான்.
இரையைக் கடித்துக் குதறப் பழகிக்கொண்டான்; மனுஷர்களைக்கூட
பீறிப்போட்டான்.[c]
7 அவர்களுடைய கோட்டைகளில் சுற்றித் திரிந்து, அவர்களுடைய
நகரங்களைச் சின்னாபின்னமாக்கினான்.
பாழாக்கப்பட்ட தேசமெங்கும் அவனுடைய கர்ஜனை கேட்டது.[d]
8 அவனை வலைவீசிப் பிடிப்பதற்காகச் சுற்றுப்புற தேசத்தார் வந்தார்கள்.
அவர்கள் தோண்டிய படுகுழியில் அவன் விழுந்தான்.
9 அவனுக்குக் கொக்கிகள் மாட்டி, அவனைக் கூண்டில் அடைத்து,
பாபிலோன் ராஜாவிடம் கொண்டுபோனார்கள்.
அவனுடைய கர்ஜனை இனி இஸ்ரவேலின் மலைகளில் கேட்காதபடி
அவனை அடைத்து வைத்தார்கள்.
10 உன்னுடைய தாய் தண்ணீரின் ஓரமாக நடப்பட்ட திராட்சைக் கொடி
போல* இருந்தாள்.[e]
நிறைய தண்ணீர் கிடைத்ததால் நிறைய கிளைகளோடும் கனிகளோடும்
செழிப்பாக இருந்தாள்.
11 அவளுடைய கிளைகள் ராஜாக்களின் செங்கோலாக ஆகுமளவுக்கு
உறுதியாயின.
அவள் மற்ற மரங்களைவிட உயரமாக வளர்ந்தாள்.
உயரமாகவும் அடர்த்தியாகவும் வளர்ந்ததால் எல்லா
இடங்களிலிருந்தும் அவளைப் பார்க்க முடிந்தது.
12 ஆனாலும், கடவுளுடைய கடும் கோபத்தினால் அவள் வேரோடு
பிடுங்கி எறியப்பட்டாள்.[f]

19:10 * நே.மொ., “உன் இரத்தத்திலே திராட்சைக் கொடி போல.”

அதி. 19
a 2நா 36:1
b 2ரா 23:31-34; 2நா 36:4; எரே 22:11, 12
c எரே 22:17
d நீதி 28:15
e சங் 80:8; ஏசா 5:7
f ஏசா 5:5; எசே 15:6

அவளுடைய கனிகள் கிழக்குக் காற்றில் கருகிப்போயின.
அவளுடைய உறுதியான கிளைகள் முறிக்கப்பட்டு, காய்ந்துபோயின.[a]
அவை நெருப்பில் எரிந்துபோயின.[b]
13 இப்போது அவள் வனாந்தரத்தில் நடப்பட்டிருக்கிறாள்.
தண்ணீர் இல்லாத வறண்ட தேசத்தில் இருக்கிறாள்.[c]
14 அவளுடைய கிளைகளில் பற்றிக்கொண்ட நெருப்பு அவளுடைய துளிர்களையும் கனிகளையும் சுட்டெரித்தது.
அவளுடைய உறுதியான கிளைகள் எதுவுமே மிஞ்சவில்லை; ஆட்சி செய்ய செங்கோல் எதுவுமே இல்லை.[d]

'இதுதான் புலம்பல் பாட்டு. இதுதான் புலம்பல் பாட்டாக இருக்கும்.'"

20 ஏழாம் வருஷம், ஐந்தாம் மாதம், பத்தாம் நாளில் இஸ்ரவேலின்
பெரியோர்கள்* சிலர் யெகோவாவிடம் விசாரிப்பதற்காக என்முன்
வந்து உட்கார்ந்தார்கள். **2** அப்போது யெகோவா என்னிடம், **3** "மனி
தகுமாரனே, இஸ்ரவேலின் பெரியோர்களிடம் இப்படிச் சொல்: 'உன்ன
தப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "நீங்கள் என்னிடம் விசா
ரிக்கவா வந்திருக்கிறீர்கள்? 'என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,*
நான் உங்களுக்குப் பதில் சொல்ல மாட்டேன்'[e] என்று உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்கிறார்."'

4 அவர்களுக்குத் தீர்ப்பு சொல்ல நீ தயாரா? மனிதகுமாரனே, அவர்க
ளுக்குத் தீர்ப்பு சொல்ல நீ தயாரா? அவர்களுடைய முன்னோர்கள் செய்த
அருவருப்பான காரியங்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்து.[f]
5 நீ அவர்களிடம் இப்படிச் சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: "நான் இஸ்ரவேலைத் தேர்ந்தெடுத்த நாளில்,[g] யாக்
கோபின் பிள்ளைகளுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தேன். எகிப்து தேசத்தில்
நான் யார் என்று அவர்களுக்குக் காட்டினேன்.[h] 'நான் உங்கள் கடவுளா
கிய யெகோவா' என்று சொல்லி, அவர்களுக்கு அந்த வாக்குறுதி
கொடுத்தேன். **6** நான் அவர்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்து
பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் வாழ வைப்பதாக அந்த நாளில் வாக்கு
றுதி கொடுத்தேன்.[i] அது தேசங்களிலேயே மிக அழகான* தேசம், நானே
தேர்ந்தெடுத்த# தேசம். **7** நான் அவர்களிடம், 'நீங்கள் எல்லாரும் உங்
கள் கண் முன்னால் இருக்கிற அருவருப்பான சிலைகளைத் தூக்கியெறிய
வேண்டும். எகிப்திலுள்ள அருவருப்பான* தெய்வங்களை வணங்கி உங்
களைத் தீட்டுப்படுத்தக் கூடாது.[j] நான் உங்கள் கடவுளாகிய யெகோவா'[k]
என்று சொன்னேன்.

8 ஆனால், அவர்கள் எனக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். என் பேச்
சைக் கேட்கவே இல்லை. அவர்களுடைய கண் முன்னால் இருந்த அரு
வருப்பான சிலைகளைத் தூக்கியெறியவில்லை. எகிப்திலுள்ள அருவருப்
பான தெய்வங்களை விட்டுவிடவில்லை.[l] அதனால், எகிப்து தேசத்தில்

20:1 *வே.வா., "மூப்பர்கள்." **20:3** *வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." **20:6** *வே.வா., "சிங்காரமான." #வே.வா., "பார்த்து வைத்த." **20:7** *இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.

அதி. 19
a 2ரா 23:34; 2ரா 24:6; 2ரா 25:5-7
b உபா 32:22; எசே 15:4
c உபா 28:48; எரே 17:5, 6; எரே 52:27
d எசே 17:16, 18

அதி. 20
e ஏசா 1:12, 15; எசே 14:3
f எசே 16:51; எசே 22:2; லூ 11:47
g உபா 7:6
h யாத் 4:31; யாத் 6:7, 8
i யாத் 3:8
j லேவி 18:3; உபா 29:16, 17; யோசு 24:14
k லேவி 20:7
l யாத் 32:4

நான் அவர்கள்மேல் என் கோபத்தையும் ஆக்ரோஷத்தையும் கொட்டித்
தீர்ப்பேன் என்று சொன்னேன். **9** ஆனால், அவர்களோடு இருந்த மற்ற
ஜனங்கள் மத்தியில் என்னுடைய பெயர் கெட்டுவிடக் கூடாது என்று
நினைத்தேன்.[a] அதனால், அந்த ஜனங்களுடைய கண் முன்னால் இஸ்ர
வேலர்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்து, நான் யார் என்பதைக்
காட்டினேன்.[b] **10** அவர்களை எகிப்திலிருந்து வனாந்தரத்துக்குக் கூட்டிக்
கொண்டு வந்தேன்.[c]

11 அதன்பின், என்னுடைய சட்டதிட்டங்களையும் நீதித்தீர்ப்புகளையும்
கொடுத்தேன்.[d] அவற்றின்படி நடந்து அவர்கள் வாழ்வு பெற வேண்டும்
என்பதற்காக அவற்றைக் கொடுத்தேன்.[e] **12** எனக்கும் அவர்களுக்கும்
இடையில் ஒரு அடையாளமாக[f] இருப்பதற்காக ஓய்வுநாளையும் கொடுத்
தேன்.[g] யெகோவாவாகிய நான்தான் அவர்களைப் புனிதப்படுத்தும்
கடவுள் என்று அவர்கள் தெரிந்துகொள்வதற்காக அப்படிச் செய்தேன்.

13 ஆனால், இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் இருந்தபோது எனக்குக்
கீழ்ப்படியாமல் போனார்கள்.[h] என்னுடைய சட்டதிட்டங்களின்படி நடக்க
வில்லை. என்னுடைய நீதித்தீர்ப்புகளை ஒதுக்கித்தள்ளினார்கள். அவற்றை
மனுஷன் கடைப்பிடித்தால் வாழ்வு பெறுவானே. ஆனால், அவர்கள்
அதையெல்லாம் கடைப்பிடிக்கவில்லை. என்னுடைய ஓய்வுநாளைக் கொஞ்
சம்கூட மதிக்காமல் அதன் புனிதத்தைக் கெடுத்தார்கள். அதனால் வனாந்
தரத்தில் அவர்கள்மேல் என் கோபத்தைக் கொட்டி அவர்களை அழிக்கப்
போவதாகச் சொன்னேன்.[i] **14** ஆனால், மற்ற ஜனங்கள் மத்தியில்
என்னுடைய பெயர் கெட்டுவிடக் கூடாது என்று நினைத்து, அந்த ஜனங்க
ளுடைய கண் முன்னால் நான் இஸ்ரவேலர்களைக் கூட்டிக்கொண்டு வந்
தேன்.[j] **15** இருந்தாலும், நான் கொடுத்த வாக்குறுதிப்படி தேசங்களி
லேயே மிக அழகான* தேசமாகிய பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்கு[k]
அவர்களைக் கூட்டிக்கொண்டு போக மாட்டேன் என்று அவர்கள்
வனாந்தரத்தில் இருந்தபோது ஆணையிட்டுச் சொன்னேன்.[l] **16** ஏனென்
றால், அவர்கள் என்னுடைய நீதித்தீர்ப்புகளை ஒதுக்கித்தள்ளினார்கள், என்
னுடைய சட்டதிட்டங்களின்படி நடக்கவில்லை, என்னுடைய ஓய்வுநாளின்
புனிதத்தைக் கெடுத்தார்கள், அவர்களுடைய அருவருப்பான சிலைகளைத்
தான் ஆசையோடு வணங்கினார்கள்.[m]

17 ஆனாலும், நான் பரிதாபப்பட்டு அவர்களை அழிக்காமல் விட்
டுவிட்டேன். வனாந்தரத்தில் அவர்களை ஒரேயடியாக ஒழித்துக்கட்டாமல்
விட்டுவிட்டேன். **18** அங்கே அவர்களுடைய மகன்களிடம்,[n] 'உங்கள்
முன்னோர்கள் போன வழியில் போகாதீர்கள்,[o] அவர்களுடைய நீதித்தீர்ப்பு
களைக் கடைப்பிடிக்காதீர்கள், அவர்களுடைய அருவருப்பான சிலைகளை
வணங்கி உங்களைத் தீட்டுப்படுத்தாதீர்கள். **19** நான் உங்கள் கடவுளா
கிய யெகோவா. என்னுடைய சட்டதிட்டங்களின்படி நடங்கள், என்னுடைய
நீதித்தீர்ப்புகளை எப்போதும் கடைப்பிடியுங்கள்.[p] **20** என்னுடைய ஓய்வு
நாளைப் புனிதப்படுத்துங்கள்.[q] நான் உங்கள் கடவுளாகிய யெகோவா என்
பதை நீங்கள் தெரிந்துகொள்வதற்காக அது எனக்கும் உங்களுக்கும் இடை
யில் ஒரு அடையாளமாக இருக்கும்'[r] என்று சொன்னேன்.

20:15 * வே.வா., "சிங்காரமான."

அதி. 20

a எண் 14:13-16; உபா 9:27, 28; 1சா 12:22
b யாத் 32:11, 12; யோசு 2:9, 10; யோசு 9:3, 9; 1சா 4:7, 8
c யாத் 13:17, 18; யாத் 15:22
d உபா 4:8
e உபா 8:3; உபா 30:16
f யாத் 31:13; யாத் 35:2
g யாத் 20:8-10; லேவி 23:3, 24; லேவி 25:4, 11
h யாத் 32:8; எண் 14:22, 23
i எண் 14:11, 12
j யோசு 7:9; எசே 36:22
k எண் 13:26, 27
l எண் 14:30; சங் 95:11; சங் 106:26, 27
m யாத் 32:1, 4; எண் 25:1, 2; அப் 7:42
n எண் 14:33
o சங் 78:8
p உபா 4:1
q எரே 17:22
r யாத் 31:13

21 ஆனால், அந்த மகன்களும் எனக்குக் கீழ்ப்படியாமல் போனார்
கள்.[a] என்னுடைய சட்டதிட்டங்களின்படி நடக்கவில்லை. என்னுடைய
நீதித்தீர்ப்புகளைப் பின்பற்றவில்லை. அவற்றை மனுஷன் கடைப்பிடித்தால்
வாழ்வு பெறுவானே. ஆனால், அவர்கள் அதையெல்லாம் ஒதுக்கித்தள்ளி
னார்கள். என்னுடைய ஓய்வுநாளின் புனிதத்தைக் கெடுத்தார்கள். அதனால்,
வனாந்தரத்தில் நான் அவர்கள்மேல் என் கோபத்தையும் ஆக்ரோஷத்தை
யும் கொட்டித் தீர்ப்பேன்[b] என்று சொன்னேன். **22** ஆனால், மற்ற ஜனங்
கள் மத்தியில் என்னுடைய பெயர் கெட்டுவிடக் கூடாது[c] என்பதற்காக
என் கோபத்தை அடக்கிக்கொண்டு,[d] அந்த ஜனங்களுடைய கண் முன்
னால் அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தேன். **23** அவர்கள் வனாந்தரத்
தில் இருந்தபோது, மற்ற ஜனங்களுக்குள்ளும் தேசங்களுக்குள்ளும் அவர்
களைச் சிதறிப்போகச் செய்வேன் என்று சொன்னேன்.[e] **24** ஏனென்றால்,
அவர்கள் என்னுடைய நீதித்தீர்ப்புகளின்படி நடக்கவில்லை, என்னுடைய
சட்டதிட்டங்களை ஒதுக்கித்தள்ளினார்கள்,[f] என்னுடைய ஓய்வுநாளின் புனி
தத்தைக் கெடுத்தார்கள், அவர்களுடைய முன்னோர்களின் அருவருப்பான
சிலைகளைத்தான் ஆசையோடு வணங்கினார்கள்.[g] **25** இப்படி, நன்மை
தராத விதிமுறைகளையும் வாழ்வு தராத நீதித்தீர்ப்புகளையும் கடைப்
பிடிப்பதற்கு நான் அவர்களை விட்டுவிட்டேன்.[h] **26** அவர்கள் தங்களு
டைய மூத்த பிள்ளைகளை நெருப்பில் பலி கொடுத்து,*[i] அந்தப் பலியி
னாலேயே தங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்ளும்படி விட்டுவிட்டேன்.
நான் யெகோவா என்று காட்டுவதற்காகவும், அவர்களை அழிப்பதற்காக
வும்தான் அப்படி விட்டுவிட்டேன்."'

27 அதனால் மனிதகுமாரனே, நீ இஸ்ரவேல் ஜனங்களிடம் இப்படிச்
சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "உங்களு
டைய முன்னோர்கள் இப்படித்தான் எனக்குத் துரோகம் செய்து, என்னை
நிந்தித்தார்கள். **28** நான் அவர்களுக்குக் கொடுப்பதாக வாக்குறுதி தந்த
தேசத்துக்கு அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தேன்.[j] ஆனால், உயரமான
குன்றுகளையும் அடர்த்தியான மரங்களையும்[k] பார்த்தவுடன் அவர்கள்
அருவருப்பான காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்த ஆரம்பித்து
விட்டார்கள். அங்கே வாசனையுள்ள பலிகளையும் திராட்சமது காணிக்கை
யையும் அவர்கள் செலுத்தினார்கள். **29** அதனால் நான் அவர்களிடம்,
'எதற்காக இந்த ஆராதனை மேடுகளுக்குப் போகிறீர்கள்? (அவை இன்
றுவரை ஆராதனை மேடுகள் என்றுதான் அழைக்கப்படுகின்றன)'[l] என்று
கேட்டேன்."'

30 இப்போது இஸ்ரவேல் ஜனங்களிடம் நீ இப்படிச் சொல்: 'உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "நீங்களும் உங்களுடைய
முன்னோர்களைப் போலவே அருவருப்பான சிலைகளை வணங்கி, எனக்
குத் துரோகம் செய்து,[m] உங்களையே தீட்டுப்படுத்துகிறீர்கள். **31** இன்று
வரை உங்களுடைய அருவருப்பான சிலைகளுக்குப் பலிகளைச் செலுத்தி,
உங்கள் மகன்களை நெருப்பில் பலி கொடுத்து,*[n] உங்களையே தீட்டுப்
படுத்துகிறீர்கள். அதேசமயத்தில் என்னிடம் வந்து விசாரிக்கிறீர்கள். இஸ்ர
வேல் ஜனங்களே, நான் உங்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமோ?[o]

அதி. 20
a எண் 25:1, உபா 9:23
b ஏசா 63:10
c சங் 25:11, சங் 79:9, எரே 14:7, தானி 9:19
d சங் 78:38
e லேவி 26:33, சங் 106:26, 27
f லேவி 26:15, 16
g எரே 2:7
h சங் 81:12
i லேவி 18:21, எரே 7:31
j யோசு 23:5
k உபா 12:2
l எசே 16:24, 25
m நியா 2:19, 2நா 21:13, எரே 13:26, 27
n உபா 18:10, 12, சங் 106:36-38, எரே 7:31
o ஏசா 1:15

20:26, 31 * நே.மொ., "நெருப்பைக் கடக்க வைத்து."

‘என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* நான் உங்களுக்குப்
பதில் சொல்ல மாட்டேன்’[a] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
கிறார். **32** ‘நீங்கள் எதை மனதில் வைத்துக்கொண்டு, “மரத்தையும் கல்லை
யும் வணங்குகிற[b] மற்ற தேசங்களையும் ஜனங்களையும் போல நாம் இருக்
கலாம்” என்று சொல்கிறீர்களோ அது நடக்கவே நடக்காது.’”

33 ‘என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* நான் கைபலத்
தோடும் மகா வல்லமையோடும் பற்றியெரிகிற கோபத்தோடும்[c] உங்
களை ஆட்சி செய்வேன்’ என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார். **34** நான் கைபலத்தோடும் மகா வல்லமையோடும் பற்றியெ
ரிகிற கோபத்தோடும்[d] உங்களைச் சிதறிப்போக வைத்த எல்லா தேசங்களி
லிருந்தும் எல்லா ஜனங்கள் மத்தியிலிருந்தும் உங்களைக் கூட்டிக்கொண்டு
வருவேன். **35** ஜனங்களுடைய வனாந்தரத்துக்கு உங்களைக் கூட்டிக்
கொண்டு வந்து நேருக்கு நேராக உங்களோடு வழக்காடுவேன்.[e]

36 ‘எகிப்தின் வனாந்தரத்தில் உங்களுடைய முன்னோர்களோடு வழக்
காடியது போல உங்களோடும் வழக்காடுவேன்’ என்று உன்னதப் பேரரச
ராகிய யெகோவா சொல்கிறார். **37** ‘மேய்ப்பனுடைய கோலின்கீழ் உங்க
ளைப் போக வைப்பேன்.[f] ஒப்பந்தத்தின் கட்டுப்பாட்டுக்குள்* உங்களைக்
கொண்டுவருவேன். **38** ஆனால், எனக்கு அடங்கி நடக்காதவர்களை
உங்கள் மத்தியிலிருந்து விலக்கிவிடுவேன்.[g] அவர்கள் குடியிருக்கிற வேறு
தேசத்திலிருந்து அவர்களை நான் கூட்டிக்கொண்டு வந்தாலும் அவர்கள்
இஸ்ரவேல் தேசத்துக்குள் நுழைய மாட்டார்கள்.[h] அப்போது, நான்
யெகோவா என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.’

39 இஸ்ரவேல் ஜனங்களே, உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
வது இதுதான்: ‘எல்லாரும் போங்கள், போய் உங்களுடைய அருவருப்
பான சிலைகளை வணங்குங்கள்![i] அதன் பின்பு, நீங்கள் என்னதான் என்
பேச்சைக் கேட்காமல் போனாலும், உங்களுடைய அருவருப்பான சிலைக
ளாலும் பலிகளாலும் என்னுடைய பெயரின் பரிசுத்தத்தைக் கெடுக்க முடி
யாது.’[j]

40 ‘இஸ்ரவேலில் இருக்கிற உயரமான மலையாகிய என்னுடைய
பரிசுத்த மலையில்[k] இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் என்னை வணங்கு
வார்கள்’[l] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார். ‘அங்கே
உங்களைப் பார்த்து நான் சந்தோஷப்படுவேன். பரிசுத்த காணிக்கைகளை
யும் முதல் விளைச்சலையும் நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று எதிர்
பார்ப்பேன்.[m] **41** மற்ற ஜனங்கள் மத்தியிலிருந்தும் மற்ற தேசங்களிலிருந்
தும் நான் உங்களைக் கூட்டிச்சேர்க்கும்போது[n] நீங்கள் செலுத்தும்
வாசனையுள்ள பலிகளைப் பார்த்து நான் சந்தோஷப்படுவேன். நான் உங்
களுடைய பரிசுத்தமான கடவுள் என்று மற்ற எல்லா ஜனங்களுக்கும் காட்
டுவேன்.’[o]

42 ‘உங்கள் முன்னோர்களுக்குக் கொடுப்பதாக நான் வாக்குறுதி தந்த
இஸ்ரவேல் தேசத்துக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு வரும்போது[p] நான்
யெகோவா என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.[q] **43** முன்பு நீங்கள் எப்
படியெல்லாம் நடந்துகொண்டீர்கள் என்பதையும், என்னென்ன அக்கிர

20:31, 33 *வே.வா., “நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்.” **20:37** *நே.மொ., “கட்டுக்குள்.”

அதி. 20
a சக 7:13
b எரே 44:17
c எரே 21:5 எசே 8:18
d ஏசா 27:13 எசே 34:16
e எரே 2:9
f லேவி 27:32 எசே 34:17
g எசே 34: 20, 21
h எசே 13:9
i நியா 10:14 சங் 81:12
j ஏசா 1:13 எசே 23:39
k ஏசா 2:2, 3 ஏசா 66:20
l ஏசா 56:7 சக 8:22
m மல் 3:4
n ஏசா 11:11 எரே 23:3
o ஏசா 5:16 எசே 38:23
p எசே 11:17
q எசே 36:23

மங்கள் செய்து உங்களைத் தீட்டுப்படுத்தினீர்கள் என்பதையும் நினைத்துப்
பார்ப்பீர்கள்.[a] நீங்கள் செய்த எல்லா கெட்ட காரியங்களையும் நினைத்து
உங்களையே அருவருப்பீர்கள்.[b] **44** இஸ்ரவேல் ஜனங்களே, நான் உங்க
ளுடைய பாவத்துக்கும் அக்கிரமத்துக்கும் ஏற்றபடி உங்களை நடத்தாமல்
என் பெயருக்காக[c] உங்களை இரக்கத்தோடு நடத்தும்போது நான்
யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்' என்று உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்கிறார்" என்றார்.

45 யெகோவா மறுபடியும் என்னிடம், **46** "மனிதகுமாரனே, தென்
திசைக்கு நேராக உன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, அதற்கு எதிராக
வும் அங்கே இருக்கிற காட்டுப்பகுதிக்கு எதிராகவும் தீர்க்கதரிசனம்
சொல். **47** தெற்கில் இருக்கிற காட்டுப்பகுதியைப் பார்த்து இப்படிச் சொல்:
'யெகோவாவின் செய்தியைக் கேள். உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: "இதோ, நான் உன்மேல் தீ வைக்கப் போகிறேன்.[d]
அது பச்சையான எல்லா மரங்களையும் பட்டுப்போன எல்லா மரங்களை
யும் ஒன்றுவிடாமல் பொசுக்கிவிடும். அந்தத் தீயை அணைக்க முடியாது.[e]
தெற்கிலிருந்து வடக்குவரை எல்லாருடைய முகங்களையும்* அது சுட்
டெரிக்கும். **48** யெகோவாவாகிய நான்தான் தீ வைத்தேன் என்று எல்லா
மனுஷர்களும் தெரிந்துகொள்வார்கள். அந்தத் தீயை யாராலும் அணைக்க
முடியாது"'"[f] என்றார்.

49 அப்போது நான், "ஐயோ, உன்னதப் பேரரசராகிய யெகோவாவே!
இந்த ஜனங்களிடம் நான் பேசினாலே, 'இவன் வெறும் புதிராகத்தான்
பேசிக்கொண்டிருக்கிறான்!' என்று சொல்கிறார்கள்" என்றேன்.

21 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** "மனிதகுமாரனே, எருசலே
முக்கு நேராக உன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, பரிசுத்த இடங்
களுக்கு எதிராக ஒரு அறிவிப்பு செய். இஸ்ரவேல் தேசத்துக்கு எதிராகத்
தீர்க்கதரிசனம் சொல். **3** இஸ்ரவேல் தேசத்திடம் இப்படிச் சொல்:
'யெகோவா சொல்வது இதுதான்: "நான் உன்னுடைய எதிரியாக வருவேன்.
என்னுடைய வாளை உறையிலிருந்து உருவி[g] உன்னில் இருக்கிற நீதி
மான்களையும் பொல்லாதவர்களையும் கொன்றுபோடுவேன். **4** தெற்கிலி
ருந்து வடக்குவரை இருக்கிற எல்லா மனுஷர்களுக்கும் எதிராக என்னுடைய
வாளை உருவுவேன். ஏனென்றால், உன்னில் இருக்கிற நீதிமான்களையும்
பொல்லாதவர்களையும் நான் கொல்லப்போகிறேன். **5** அப்போது, வாளை
உறையிலிருந்து உருவியது யெகோவாவாகிய நான்தான் என்று எல்லா
ஜனங்களும் தெரிந்துகொள்வார்கள். என்னுடைய வாள் மறுபடியும் அதன்
உறைக்குத் திரும்பாது."'[h]

6 மனிதகுமாரனே, நீ நடுக்கத்தோடு பெருமூச்சு விடு. அவர்களுக்
குமுன் வேதனையோடு பெருமூச்சுவிடு.[i] **7** 'ஏன் பெருமூச்சு விடுகிறாய்?'
என்று அவர்கள் கேட்டால், 'ஒரு செய்தி வந்திருப்பதால்தான்' என்று
சொல். ஏனென்றால், அது கண்டிப்பாக வரும். அதைக் கேட்டு
எல்லாரும் கதிகலங்கிப்போவார்கள். அவர்களுடைய கைகள் தளர்ந்துவி
டும். அவர்களுடைய மனம் சோர்ந்துபோகும். அவர்களுடைய முழங்கால்
களில் நீர் வழிந்தோடும்.*[j] 'இதோ, அந்தச் செய்தி கண்டிப்பாக வரும், அது

20:47 *வே.வா., "எல்லா நிலங்களையும்." **21:7** *அதாவது, "பயத்தில் அவர்கள் சிறுநீர் கழித்துவிடுவார்கள்."

அதி. 20
a லேவி 26:40; எசே 6:9; எசே 16:61
b எரே 31:18
c சங் 79:9; எசே 36:22, 23
d உபா 32:22; எரே 21:14
e ஏசா 66:24
f 2நா 7:20; புல 2:17

அதி. 21
g லேவி 26:33
h எரே 23:20
i ஏசா 22:4; எரே 4:19; எசே 9:8
j எசே 7:15-17

வராமல் போகாது' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்"
என்றார்.
8 யெகோவா மறுபடியும் என்னிடம், **9** "மனிதகுமாரனே, நீ இப்படித்
தீர்க்கதரிசனம் சொல்: 'யெகோவா சொல்வது இதுதான்: "இதோ, ஒரு
வாள்! கூர்மையாக்கப்பட்ட வாள்![a] பளபளப்பாக்கப்பட்ட வாள்! **10** ஏராள
மானவர்களைக் கொன்று குவிப்பதற்காக அது கூர்மையாக்கப்பட்டது. மின்
னலைப் போல மின்னுவதற்காகப் பளபளப்பாக்கப்பட்டது"'" என்று
சொன்னார்.
அப்போது ஜனங்கள், "நாம் சந்தோஷப்பட வேண்டாமா?" என்று கேட்
டார்கள்.
ஆனால் கடவுள், "'எந்த மரங்களையும் விட்டுவைக்காத என்னுடைய
வாள் என்னுடைய மகனுடைய செங்கோலை மட்டும் விட்டுவைக்குமா?'[b]
என்று கேட்டார்.
11 பளபளப்பாக்குவதற்கும் வெட்டுவதற்கும் அது கையில் கொடுக்கப்
பட்டது. தண்டனை தருகிறவனுடைய கையில் கொடுப்பதற்காக அது கூர்
மையாக்கப்பட்டது, பளபளப்பாக்கப்பட்டது.[c]
12 'மனிதகுமாரனே, நீ கதறி அழு.[d] ஏனென்றால், அந்த வாள் என்
ஜனங்களுக்கு எதிராக வந்துவிட்டது. அது இஸ்ரவேலின் தலைவர்கள் எல்
லாருக்கும் எதிராக வந்திருக்கிறது.[e] அவர்களும் என்னுடைய ஜனங்களும்
அந்த வாளுக்குப் பலியாவார்கள். அதனால், வேதனையில் உன்
தொடையிலே அடித்துக்கொள். **13** அது பரிசோதனை செய்யப்பட்டிருக்
கிறது.[f] அந்த வாள் செங்கோலை ஒதுக்கித்தள்ளினால் என்னவாகும்? செங்
கோல் இல்லாமல் போய்விடும்'[g] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார்.
14 'மனிதகுமாரனே, நீ தீர்க்கதரிசனம் சொல். உன் கைகளைத் தட்டி,
மூன்று தடவை 'இதோ, ஒரு வாள்!' என்று சொல். எல்லாரையும் வெட்டி
வீழ்த்தும் வாள் அது. அவர்களைச் சுற்றியிருக்கிற எல்லாரையும் கொன்று
குவிக்கும் வாள் அது.[h] **15** அவர்கள் பயத்தில் குலைநடுங்குவார்கள்.[i]
நிறைய பேர் நகரவாசல்களில் விழுவார்கள். நான் எல்லாரையும் வாளால்
வெட்டிச் சாய்ப்பேன். அது மின்னலைப் போல மின்னும் வாள்! படு
கொலை செய்வதற்காகத் தீட்டப்பட்ட வாள்! **16** வாளே, வலது பக்கமாக
ஓங்கி வெட்டு! இடது பக்கமாகவும் ஓங்கி வெட்டு! திரும்புகிற பக்கமெல்
லாம் வெட்டித்தள்ளு! **17** நானும் கைதட்டி, என் கோபத்தைத் தீர்த்துக்
கொள்வேன்.[j] யெகோவாவாகிய நானே இதைச் சொல்கிறேன்" என்றார்.
18 யெகோவா மறுபடியும் என்னிடம், **19** "மனிதகுமாரனே, நீ ஒரு
வழியை வரைந்து காட்டு. அது ஒரு தேசத்திலிருந்து புறப்பட வேண்டும்.
ஒரு இடத்துக்கு வந்தவுடன் அது இரண்டு வழிகளாகப் பிரிந்து
இரண்டு நகரங்களுக்குப் போக வேண்டும். வாளோடு வருகிற பாபிலோன்
ராஜா அதில் எந்த வழியில் போவதென்று முடிவுசெய்ய வேண்டும். அது
இரண்டாகப் பிரிகிற இடத்தில், திசைகாட்டும் கம்பத்தை நீ நிறுத்த வேண்
டும். **20** ஒரு வழி அம்மோனியர்களின் நகரமான ரப்பாவுக்குப்[k] போக
வேண்டும். இன்னொரு வழி யூதாவிலுள்ள மதில் சூழ்ந்த எருசலேமுக்குப்[l]
போக வேண்டும். **21** பாபிலோன் ராஜா அந்த இரண்டு வழிகளும் பிரி
கிற இடத்தில் நின்று குறிபார்ப்பான். தன்னுடைய அம்புகளைக் குலுக்கிப்

அதி. 21
a ஏசா 66:16
எரே 12:12
ஆமோ 9:4
b ஆதி 49:10
2சா 7:12, 14
c எரே 25:9
எரே 51:20
d எசே 9:8
மீ 1:8
e எசே 19:1
f எரே 6:27
g 2ரா 25:7
எசே 19:14
எசே 21:26
h 2ரா 25:1, 2
i எசே 21:7
j ஏசா 1:24
எசே 5:13
எசே 16:42
k எரே 49:2
எசே 25:5
ஆமோ 1:14
l 2சா 5:9
2நா 26:9
2நா 32:2, 5
2நா 33:1, 14

போட்டு, தன்னுடைய சிலைகளிடம்* விசாரிப்பான். கல்லீரலை வைத்துக்
குறிபார்ப்பான். **22** அப்போது, எருசலேமுக்குப் போக வேண்டும் என்று
அவனுடைய வலது கையில் குறி கிடைக்கும். மதில் இடிக்கும் இயந்திரங்க
ளைக் கொண்டுபோய் நிறுத்தும்படியும், தாக்குதலை ஆரம்பிக்க கட்டளை
கொடுக்கும்படியும், போர் முழக்கம் செய்யும்படியும், இயந்திரங்களால்
நுழைவாசல்களை இடிக்கும்படியும், சுற்றிலும் மண்மேடுகளை எழுப்பும்
படியும், முற்றுகைச் சுவரைக் கட்டும்படியும்[a] அவனுக்குக் குறி கிடைக்
கும். **23** ஆனால், இதெல்லாம் பொய் என்று அவர்களுக்கு* உறுதிமொழி
கொடுத்தவர்கள்# நினைப்பார்கள்.[b] இருந்தாலும், அவர்கள் செய்த குற்றங்
கள் பாபிலோன் ராஜாவின் நினைவுக்கு வரும், அவன் அவர்களைப் பிடித்
துக்கொண்டு போவான்.[c]

24 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘உங்கள்
குற்றங்கள் அம்பலமாகிவிட்டன, நீங்கள் செய்த எல்லா பாவங்களும் வெட்
டவெளிச்சத்துக்கு வந்துவிட்டன. உங்களுடைய குற்றங்களை நீங்களே
நினைவுக்குக் கொண்டுவந்துவிட்டீர்கள். அதனால், இப்போது பலவந்தமா
கப் பிடித்துக்கொண்டு போகப்படுவீர்கள்.’

25 இஸ்ரவேலின் பொல்லாத தலைவனே,[d] படுகாயம் அடைந்தவனே,
நீ இறுதி தண்டனையைப் பெறப்போகும் நாள் வந்துவிட்டது. **26** உன்ன
தப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘உன்னுடைய தலைப்பா
கையைக் கழற்று! உன் கிரீடத்தை எடுத்துவிடு![e] எல்லாம் மாறப்போகிறது.[f]
உயர்ந்தவனை* தாழ்த்து,[g] தாழ்ந்தவனை# உயர்த்து.[h] **27** நான் ஆட்சி
யைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன். உரிமைக்காரர் வரும்
வரை அது யாருடைய கைக்கும் போகாது.[i] நான் அவருக்குத்தான் அதைக்
கொடுப்பேன்.’[j]

28 மனிதகுமாரனே, நீ இப்படித் தீர்க்கதரிசனம் சொல்: ‘அம்மோனியர்
களைப் பற்றியும் அவர்களுடைய பழிப்பேச்சுகளைப் பற்றியும் உன்னதப்
பேரரசராகிய யெகோவா இதைச் சொல்கிறார். இதோ ஒரு வாள் உருவப்
பட்டிருக்கிறது! கொன்று குவிப்பதற்காக அது உருவப்பட்டிருக்கிறது.
வெட்டி வீழ்த்தவும் மின்னலைப் போல் மின்னவும் அது தீட்டப்பட்டிருக்
கிறது. **29** குறிசொல்கிறவர்கள் உன்னைப் பற்றிப் பொய்யாகக் குறிசொன்
னார்கள், தீர்க்கதரிசிகள் உன்னைப் பற்றிப் பொய்த் தரிசனங்களைப்
பார்த்தார்கள். ஆனாலும், நீ பொல்லாதவர்களுடைய பிணங்களோடு சேர்த்
துக் குவிக்கப்படுவாய். அவர்களுக்கு இறுதி தண்டனை கிடைக்கும்
நாள் வந்துவிட்டது. **30** வாளை மறுபடியும் உறையில் போடு. நீ பிறந்த
தேசமாகிய உன் சொந்த தேசத்தில் நான் உன்னை நியாயந்தீர்ப்பேன்.
31 என்னுடைய கோபத்தை உன்மேல் கொட்டுவேன். அது நெருப்பு
போல உன்னைச் சுட்டெரிக்கும். அழிப்பதில் சாமர்த்தியமுள்ள கொடூரக்கா
ரர்களின் கையில் உன்னைக் கொடுப்பேன்.[k] **32** நீ நெருப்புக்குப்
பலியாவாய்.[l] உன் இரத்தம் உன் தேசத்தில் சிந்திக் கிடக்கும். இனி நீ
நினைக்கப்பட மாட்டாய். யெகோவாவாகிய நானே இதைச் சொல்கிறேன்’”
என்றார்.

21:21 *வே.வா., “குலதெய்வச் சிலைகளிடம்.” **21:23** *அநேகமாக, “பாபிலோனியர்
களுக்கு.” #அதாவது, “எருசலேம் ஜனங்கள்.” **21:26** *வே.வா., “உயர்ந்ததை.”
#வே.வா., “தாழ்ந்ததை.”

அதி. 21
a எரே 32:24, எரே 52:4
b 2நா 36:11, 13; எசே 17:13
c 2ரா 25:6, 7
d 2நா 36:11, 13; எரே 24:8; எரே 52:1, 2; எசே 17:19
e 2ரா 25:5-7; எரே 52:8, 11; எசே 12:12, 13
f எசே 21:13
g தானி 4:37; லூ 21:24
h சங் 75:7; தானி 4:17
i ஆதி 49:10; சங் 89:3, 4; சங் 110:1; ஏசா 9:6; ஏசா 11:10; லூ 1:32, 33; வெளி 5:5
j சங் 2:6, 8; தானி 7:13, 14; லூ 22:29
k எசே 25:5
l எரே 49:2, 3

22 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “மனிதகுமாரனே, கொலைப்
பழியை* சுமக்கிற நகரத்துக்குத்[a] தீர்ப்பு சொல்ல நீ தயாரா? அவள்
செய்த எல்லா அருவருப்புகளையும் சுட்டிக்காட்ட நீ தயாரா?[b] **3** நீ அவ
ளிடம் இப்படிச் சொல்: ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: “சொந்த ஜனங்களையே கொலை செய்கிற நகரமே,[c] உன்னுடைய
நேரம் நெருங்கிவிட்டது.[d] நீ அருவருப்பான* சிலைகளைச் செய்து உன்
னைத் தீட்டுப்படுத்துகிறாய்.[e] **4** நீ கொலைப்பழியைச் சுமக்கிறாய்,[f] உன்
னுடைய அருவருப்பான சிலைகளால் தீட்டுப்பட்டிருக்கிறாய்.[g] உன்னு
டைய முடிவை நீயே வேகமாக வர வைத்துவிட்டாய். உன்னுடைய காலம்
முடியப்போகிறது. அதனால், உன்னைப் பார்த்து எல்லா தேசத்தாரும்
பழித்துப் பேசும்படி செய்வேன். அவர்கள் உன்னைக் கேலி செய்வார்கள்.[h]
5 கெட்ட பெயர் எடுத்தவளே, கலவரத்துக்குப் பேர்போனவளே, பக்கத்தில்
இருக்கிறவர்களும் தூரத்தில் இருக்கிறவர்களும் உன்னைக் கிண்டல் செய்
வார்கள்.[i] **6** இதோ, உன் நடுவில் இருக்கிற இஸ்ரவேலின் தலைவர்கள்
எல்லாரும் தங்களுடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஜனங்களைக்
கொலை செய்கிறார்கள்.[j] **7** ஜனங்கள் யாரும் தங்களுடைய அம்மா அப்
பாவை மதிப்பதில்லை.[k] அவர்களோடு குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்
களை மோசடி செய்கிறார்கள். அப்பா இல்லாத பிள்ளைகளையும்* வித
வைகளையும் மோசமாக நடத்துகிறார்கள்.”’”[l]

8 “‘என்னுடைய பரிசுத்தமான இடங்களை நீ மதிக்கவில்லை, என்னு
டைய ஓய்வுநாட்களின் புனிதத்தைக் கெடுத்தாய்.[m] **9** உயிரைப் பறிக்கும்
எண்ணத்தோடு மற்றவர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும்
பேசுகிறவர்கள்[n] உன் நடுவில் இருக்கிறார்கள். மலைகள்மேல் பலிகளைச்
சாப்பிடுகிறவர்களும், ஆபாசமாக நடக்கிறவர்களும்,[o] **10** அப்பாவின்
மனைவியோடு உடலுறவுகொள்கிறவர்களும்,[p] மாதவிலக்கினால் தீட்டாக
இருக்கும் பெண்ணைப் பலாத்காரம் செய்கிறவர்களும்,[q] **11** அடுத்தவ
ருடைய மனைவியிடம் படுகேவலமாக நடக்கிறவர்களும்,[r] மருமகளையே
கெடுத்து தீட்டுப்படுத்துகிறவர்களும்,[s] சொந்த அப்பாவுக்குப் பிறந்தவ
ளையே* கற்பழிக்கிறவர்களும்,[t] **12** கொலை செய்வதற்காகக் கூலி வாங்
குகிறவர்களும் உன் நடுவில் இருக்கிறார்கள்.[u] நீ அநியாய வட்டி வாங்குகி
றாய்.[v] அடுத்தவர்களுடைய பணத்தைப் பறிக்கிறாய்.[w] என்னை அடியோடு
மறந்துவிட்டாய்’ என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

13 ‘நீ கொள்ளை லாபம் சம்பாதிப்பதையும் கொலை செய்வதையும்
பார்த்தாலே எனக்கு அருவருப்பாக இருக்கிறது. **14** நான் உன்னைத் தண்
டிக்கும்போது நீ தைரியமாகவும் துணிச்சலாகவும் இருக்க முடியுமா? யெகோ
வாவாகிய நானே இதைச் சொல்கிறேன். நான் கண்டிப்பாக உன்னைத் தண்
டிப்பேன்.[x] **15** உன் ஜனங்களை மற்ற தேசங்களுக்குச் சிதறிப்போக
வைப்பேன்.[y] உன்னுடைய அசுத்தத்துக்கு முடிவுகட்டுவேன்.[z] **16** மற்ற
ஜனங்களுக்குமுன் நீ அவமானப்படுவாய். அப்போது, நான் யெகோவா
என்று தெரிந்துகொள்வாய்’”[a] என்று சொன்னார்.

22:2 *வே.வா., “இரத்தப்பழியை.” **22:3** *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **22:7** *வே.வா., “அநாதைகளையும்.” **22:11** *வே.வா., “தங்கள் சகோதரியையே.”

அதி. 22
a 2ரா 21:16, எரே 2:34, மத் 23:37
b எசே 16:51
c எசே 24:6
d எசே 12:25
e 2ரா 21:11
f ஆதி 9:6
g லேவி 26:30, எசே 23:37
h உபா 28:37, 1ரா 9:7, சங் 80:6, எசே 23:32, தானி 9:16
i சங் 79:4
j ஏசா 1:23, மீ 3:1-3, செப் 3:3
k உபா 27:16
l யாத் 22:21, 22, சங் 82:3, ஏசா 1:17
m லேவி 19:30
n யாத் 23:1, லேவி 19:16
o எரே 13:27
p லேவி 18:7, லேவி 20:11
q லேவி 18:19, லேவி 20:18
r லேவி 18:20, லேவி 20:10, எரே 5:8
s லேவி 18:15
t லேவி 20:17
u யாத் 23:8, உபா 27:25, ஏசா 1:23
v உபா 23:19
w யாத் 22:25, லேவி 6:4, 5
x எசே 21:7
y உபா 4:27, உபா 28:25
z ஏசா 1:25, எசே 23:27
a எசே 6:13

17 பின்பு, யெகோவா மறுபடியும் என்னிடம், **18** “மனிதகுமாரனே,
இஸ்ரவேல் ஜனங்கள் ஒன்றுக்கும் உதவாத கசடு போல இருக்கிறார்கள்.
அவர்கள் எல்லாரும் உலையில் இருக்கிற செம்பையும் தகரத்தையும் இரும்
பையும் ஈயத்தையும் போல இருக்கிறார்கள். வெள்ளியின் கசடு போல
ஆகிவிட்டார்கள்.[a]

19 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
‘நீங்கள் ஒன்றுக்கும் உதவாத கசடு[b] போல ஆகிவிட்டதால் உங்களை
எருசலேமுக்குள் கொண்டுவரப் போகிறேன். **20** வெள்ளியையும் செம்
பையும் இரும்பையும் ஈயத்தையும் தகரத்தையும் பற்றியெரிகிற உலையில்
எப்படி ஒன்றாகப் போட்டு, ஊதி, உருக்குவார்களோ அப்படியே நான் பற்றி
யெரிகிற என்னுடைய கோபத்தினால் உங்களை ஒன்றாகக் கொண்டுவந்து,
ஊதி, உருக்குவேன்.[c] **21** நான் உங்களை ஒன்றுகூட்டி, என்னுடைய ஆக்
ரோஷத் தீயை உங்கள்மேல் ஊதுவேன்.[d] நீங்கள் நகரத்தில் உருக்கப்படு
வீர்கள்.[e] **22** வெள்ளி எப்படி உலையில் உருக்கப்படுகிறதோ அப்படியே
நீங்கள் நகரத்தில் உருக்கப்படுவீர்கள். அப்போது, யெகோவாவாகிய நான்
தான் உங்கள்மேல் கோபத்தைக் கொட்டினேன் என்று தெரிந்துகொள்வீர்
கள்’” என்றார்.

23 யெகோவா மறுபடியும் என்னிடம், **24** “மனிதகுமாரனே, நீ அவ
ளைப் பார்த்து இப்படிச் சொல்: ‘கோபத்தின் நாளில் நீ சுத்தம் செய்யப்பட
மாட்டாய், உன்மேல் மழை பெய்யாது. **25** உன்னுடைய தீர்க்கதரிசிகள்
சதி செய்கிறார்கள்.[f] இரையைக் கடித்துக் குதறுகிற கர்ஜிக்கும் சிங்கங்க
ளைப் போல இருக்கிறார்கள்.[g] அவர்கள் ஜனங்களைக் கொன்றுபோடுகி
றார்கள். சொத்துகளையும் விலை உயர்ந்த பொருள்களையும் பிடுங்கிக்
கொள்கிறார்கள். நிறைய பெண்களை விதவைகளாக ஆக்குகிறார்கள்.
26 உன்னுடைய குருமார்கள் என் சட்டத்தை மீறுகிறார்கள்.[h] என்னுடைய
பரிசுத்தமான இடங்களைத் தீட்டுப்படுத்துகிறார்கள்.[i] பரிசுத்தமான காரியங்
களுக்கும் சாதாரணமான காரியங்களுக்கும் அவர்கள் வித்தியாசம் பார்ப்
பதில்லை.[j] சுத்தம் எது, அசுத்தம் எது என்று சொல்லிக்கொடுப்பதில்லை.[k]
என்னுடைய ஓய்வுநாட்களைக் கடைப்பிடிப்பதில்லை. அவர்களால் என்
னுடைய பெயர் கெட்டுப்போகிறது. **27** உன்னுடைய அதிகாரிகள் இரை
யைக் கடித்துக் குதறுகிற ஓநாய்களைப் போல இருக்கிறார்கள். அநியாய
மாய் லாபம் சம்பாதிப்பதற்காக ஜனங்களைத் தாக்கி, கொலை செய்கி
றார்கள்.[l] **28** உன்னுடைய தீர்க்கதரிசிகள் தங்களுடைய அக்கிரமங்க
ளைப் பூசிமெழுகுகிறார்கள். போலித் தரிசனங்களைப் பார்க்கிறார்கள்,
பொய்யாகக் குறிசொல்கிறார்கள்.[m] யெகோவாவாகிய நான் எதையும்
சொல்லாதபோது, “உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்”
என்று சொல்கிறார்கள். **29** உன்னுடைய ஜனங்கள் மோசடி செய்கிறார்கள்,
திருடுகிறார்கள்,[n] ஏழை எளியவர்களை மோசமாக நடத்துகிறார்கள், அவர்
களோடு குடியிருக்கிற மற்ற தேசத்து ஜனங்களுக்கு நியாயம் செய்யாமல்
அவர்களை ஏமாற்றுகிறார்கள்.’

30 ‘நான் தேசத்தை அழித்துவிடாதபடி[o] அவர்களில் யாராவது மதி
லைப் பழுதுபார்த்து அல்லது அதன் பிளவுக்குப் பக்கத்தில் காவலுக்கு
நின்று அதைப் பாதுகாப்பார்களா என்று பார்த்தேன். ஆனால், ஒருவர்கூட
இல்லை. **31** அதனால், என் கோபத்தை அவர்கள்மேல் கொட்டுவேன்.

அதி. 22
- a நீதி 17:3; எரே 6:28-30
- b சங் 119:119; நீதி 25:4
- c எசே 21:31
- d உபா 4:24; சங் 21:9; எரே 21:12
- e சங் 68:2
- f எரே 5:31; எரே 6:13, 14
- g மீ 3:5
- h எரே 2:8; புல 4:13; மீ 3:11
- i லேவி 20:3; லேவி 22:2
- j லேவி 10:10
- k லேவி 11:46, 47
- l மீ 3:1-3; செப் 3:3
- m ஏசா 30:10; எரே 23:25; புல 2:14; எசே 13:9, 10
- n ஏசா 1:23; ஏசா 3:14; எரே 21:12; மீ 2:2
- o யாத் 32:11; சங் 106:23

என்னுடைய ஆக்ரோஷத் தீயினால் அவர்களை அழிப்பேன். அவர்கள்
செய்த குற்றங்களுக்கான விளைவுகளை அவர்களே அனுபவிக்கும்படி
செய்வேன்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்."

23 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** "மனிதகுமாரனே, ஒரு
தாய்க்கு இரண்டு மகள்கள் இருந்தார்கள்.[a] **3** அவர்கள் இரண்டு
பேரும் எகிப்தில் விபச்சாரிகளாக இருந்தார்கள்.[b] பருவ வயதிலிருந்தே
விபச்சாரம் செய்துவந்தார்கள். தங்கள் கற்பை விற்று ஆண்களோடு உல்லா
சமாக இருந்தார்கள். **4** பெரியவளின் பெயர் அகோலாள்.* சின்னவளின்
பெயர் அகோலிபாள்.# அவர்கள் என்னுடையவர்களாக இருந்தார்கள்.
மகன்களையும் மகள்களையும் பெற்றெடுத்தார்கள். அகோலாள் என்பவள்
தான் சமாரியா,[c] அகோலிபாள் என்பவள்தான் எருசலேம்.

5 அகோலாள் என்னுடையவளாக இருந்தபோது விபச்சாரம் செய்ய
ஆரம்பித்தாள்.[d] அவளுடைய ஆசைக் காதலர்களான அசீரியர்களை[e]
மோகத்தோடு தேடிப்போனாள்.[f] **6** அவர்கள் நீல உடை உடுத்திய ஆளு
நர்களாகவும் துணை அதிகாரிகளாகவும் இருந்தார்கள். குதிரைகளில் வந்த
அழகான இளம் வீரர்களாக இருந்தார்கள். **7** அசீரியாவின் தலைசிறந்த
ஆண்மகன்களோடு அவள் விபச்சாரம் செய்துகொண்டே இருந்தாள்.
ஆட்களை மோகத்தோடு தேடிப்போய், அவர்களுடைய அருவருப்பான*
சிலைகளை வணங்கி தன்னைத் தீட்டுப்படுத்தினாள்.[g] **8** எகிப்தில் செய்த
விபச்சாரத்தை அவள் விடவில்லை. அவளுடைய பருவ வயதில் எகிப்தி
யர்கள் அவளோடு உல்லாசமாக இருந்து தங்கள் காமப்பசியைத் தீர்த்துக்
கொண்டார்கள்.[h] **9** அதனால், அவள் மோகத்தோடு தேடிப்போன அவ
ளுடைய ஆசைக் காதலர்களான அசீரியர்களின் கையிலேயே நான்
அவளைக் கொடுத்துவிட்டேன்.[i] **10** அவர்கள் அவளை நிர்வாணமாக்கி,[j]
அவளுடைய மகன்களையும் மகள்களையும் பிடித்துக்கொண்டு போனார்
கள்.[k] நடத்தைகெட்டவள் என்ற பெயரெடுத்திருந்த அவளைத் தண்டித்து,
வாளால் வெட்டிப்போட்டார்கள்.

11 அவளுடைய தங்கை அகோலிபாள் அதைப் பார்த்த பின்பு
இன்னும் கேவலமாக நடந்துகொள்ள ஆரம்பித்தாள். விபச்சாரம் செய்வ
தில் அவளுடைய அக்காவையே மிஞ்சிவிட்டாள்.[l] **12** அசீரியர்களை
மோகத்தோடு தேடிப்போனாள்.[m] அவர்கள் கம்பீரமாக உடை உடுத்திய
ஆளுநர்களாகவும் துணை அதிகாரிகளாகவும் இருந்தார்கள். குதிரைகளில்
வந்த அழகான இளம் வீரர்களாக இருந்தார்கள். **13** அவள் தன்னைத் தீட்
டுப்படுத்திக்கொண்டாள். அக்காவும் தங்கையும் ஒரே போல நடந்து
கொண்டார்கள்.[n] **14** ஆனால், தங்கை விபச்சாரத்துக்குமேல் விபச்சாரம்
செய்துவந்தாள். சுவரில் செதுக்கப்பட்ட ஆண்களின் உருவங்களைப்
பார்த்தாள். அவை சிவப்பு நிறம் பூசப்பட்ட கல்தேயர்களின் உருவங்கள்.
15 அந்த உருவங்களுக்கு இடுப்புவாரும், நீளமாகத் தொங்குகிற தலைப்
பாகையும் இருந்தன. பார்ப்பதற்கு வீரர்களைப் போலவும், கல்தேயர்களின்
தேசத்தில் பிறந்த பாபிலோனியர்களைப் போலவும் தெரிந்தன. **16** அவள்

23:4 *அர்த்தம், "அவளுடைய கூடாரம்." #அர்த்தம், "என் கூடாரம் அவளிடம் இருக்கிறது." **23:7** *இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப் படுகிறது.

அதி. 23
a எரே 3:6, 7
b லேவி 17:7; உபா 29:16, 17; யோசு 24:14; எசே 20:8
c 1ரா 16:23, 24
d 1ரா 14:16; 1ரா 21:25, 26
e 2ரா 15:19; 2ரா 17:3; ஓசி 5:13; ஓசி 7:11
f ஓசி 2:5
g ஓசி 5:3
h யாத் 32:1, 4; 1ரா 12:28, 29; 2ரா 10:29
i 2ரா 15:29; 1நா 5:26
j ஓசி 2:10
k 2ரா 17:6; 2ரா 18:11
l எரே 3:6-8; எசே 16:46, 47
m 2ரா 16:7
n 2ரா 17:19

அவற்றைப் பார்த்ததுமே காமத் தீயில் பற்றியெரிய ஆரம்பித்தாள். உடனே,
கல்தேயாவுக்குத் தூது அனுப்பினாள்.[a] **17** அதனால், பாபிலோனியர்கள்
அவளுடைய படுக்கைக்கு வந்து, தங்கள் காமப்பசியைத் தீர்த்துக்கொள்ள
ஆரம்பித்தார்கள். அவர்கள் அவளைத் தீட்டுப்படுத்திய பின்பு அவள்
அருவருப்போடு அவர்களைவிட்டு விலகினாள்.

18 அவள் மட்டுக்குமீறிய துணிச்சலோடு விபச்சாரம் செய்துகொண்
டும் ஆபாசமாக நடந்துகொண்டும் இருந்தாள்.[b] அதனால், நான் அருவ
ருப்போடு அவளுடைய அக்காவைவிட்டு விலகியது போலவே அவ
ளைவிட்டும் விலகினேன்.[c] **19** அவள் விபச்சாரத்துக்குமேல் விபச்சாரம்
செய்துவந்தாள்.[d] பருவ வயதில் எகிப்து தேசத்தில் செய்த விபச்சாரத்தை
ஏக்கத்தோடு நினைத்துப் பார்த்தாள்.[e] **20** தன் காதலர்களை மோகத்
தோடு தேடிப்போனாள். கழுதையையும் குதிரையையும் போலக் காம
வெறி பிடித்து அலைகிற ஆண்களுடைய வைப்பாட்டிகளைப் போல
நடந்துகொண்டாள். **21** பருவ வயதில் எகிப்திய ஆண்களோடு வாழ்ந்த
உல்லாச வாழ்க்கைக்காக ஏங்கினாள்.[f] மறுபடியும் அவர்களோடு ஆபாச
மாக நடக்கத் துடித்தாள்.[g]

22 அதனால் அகோலிபாளே, உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: 'நீ அருவருப்போடு விட்டுவிலகிய உன் காதலர்களை
நான் தூண்டிவிடுவேன்.[h] அவர்கள் உனக்கு எதிராக எல்லா பக்கத்திலிருந்
தும் வரும்படி செய்வேன்.[i] **23** பேகோடு,[j] சோவா, கோவா என்ற இடங்
களைச் சேர்ந்தவர்களையும் பாபிலோனியர்களையும்[k] கல்தேயர்களையும்[l]
அசீரியர்களையும் உனக்கு எதிராக வர வைப்பேன். அவர்கள் எல்லா
ரும் குதிரைகளில் வரும் அழகான இளம் போர்வீரர்கள். ஆளுநர்களாக
வும் துணை அதிகாரிகளாகவும் முக்கிய ஆலோசகர்களாகவும் இருப்
பார்கள். **24** அவர்கள் ஏராளமான போர் ரதங்களோடும் படைகளோடும்
பெரிய கேடயங்களோடும் சிறிய கேடயங்களோடும்* தலைக்கவசங்களோ
டும் வந்து உன்னைத் தாக்குவார்கள். உன்னைச் சுற்றிவளைப்பார்கள். உன்
னைத் தண்டிக்க நான் அவர்களுக்கு அதிகாரம் தருவேன். அவர்கள் தங்
களுக்கு இஷ்டமானபடி உனக்குத் தண்டனை கொடுப்பார்கள்.[m] **25** நான்
உன்மேல் என் கோபத்தைக் கொட்டித்தீர்ப்பேன். அவர்களும் உன்மேல்
இருக்கிற ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வார்கள். உன்னுடைய மூக்கையும்
காதுகளையும் அவர்கள் அறுத்துவிடுவார்கள். உன்னில் மிச்சமிருக்கிறவர்
களை வாளால் வெட்டிச் சாய்ப்பார்கள். உன்னுடைய மகன்களையும் மகள்
களையும் பிடித்துக்கொண்டு போவார்கள். மிச்சமிருக்கிறவர்கள் நெருப்
புக்குப் பலியாவார்கள்.[n] **26** அவர்கள் உன்னுடைய உடைகளையும்,[o]
அழகான நகைகளையும் பிடுங்கிக்கொள்வார்கள்.[p] **27** எகிப்து தேசத்தில்
ஆரம்பமான[q] உன்னுடைய வெட்கங்கெட்ட விபச்சாரத்துக்கு நான் முடிவு
கட்டுவேன்.[r] நீ இனி எகிப்தியர்களை ஏறெடுத்துப் பார்க்க மாட்டாய்.
எகிப்தை நினைத்துக்கூடப் பார்க்க மாட்டாய்.'

28 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'நீ யாரை
வெறுக்கிறாயோ, யாரைவிட்டு அருவருப்போடு விலகினாயோ, அவர்க
ளுடைய கையிலேயே உன்னைக் கொடுக்கப்போகிறேன்.[s] **29** அவர்கள்
உன்னை வெறுப்பார்கள். நீ கஷ்டப்பட்டு சம்பாதித்த எல்லாவற்றையும்

23:24 *இந்தச் சிறிய கேடயங்களைப் பொதுவாக வில்வீரர்கள் வைத்திருந்தார்கள்.

அதி. 23
a எசே 16:29
b எரே 3:2; எசே 16:36, 37
c சங் 106:39, 40; எரே 6:8; எரே 12:8
d எசே 16:25
e எசே 20:7
f யோசு 24:14
g எசே 23:3
h எசே 16:37; ஆப 1:6
i எரே 6:22; எரே 12:9
j எரே 50:21
k எசே 21:19
l 2ரா 24:2
m எரே 39:5
n எசே 15:7; எசே 20:47
o எரே 13:22; வெளி 17:16
p ஏசா 3:18-23; எரே 4:30; எசே 16:39
q எசே 23:3
r ஏசா 27:9; எசே 16:41; எசே 22:15
s எரே 21:7

பிடுங்கிக்கொண்டு,[a] உன்னை நிர்வாணமாக்கிவிட்டுப் போவார்கள். அப்
போது, உன்னுடைய வெட்கக்கேடும் ஆபாசமும் மானங்கெட்ட நடத்
தையும் விபச்சாரமும் வெளிச்சத்துக்கு வரும்.[b] **30** நீ ஒரு விபச்சாரியைப்
போலத் தேசங்களின் பின்னால் அலைந்தாய்.[c] அவர்களுடைய அருவருப்
பான சிலைகளை வணங்கி உன்னைத் தீட்டுப்படுத்தினாய்.[d] அதனால்தான்,
உனக்கு இந்தக் கதி வரும். **31** உன்னுடைய அக்காவைப் போலவே நீ
நடந்துகொண்டாய்.[e] அதனால், அவளுடைய கிண்ணத்தை உன் கையில்
கொடுப்பேன்.'[f]

32 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:

'நீ உன் அக்காவுடைய பெரிய கிண்ணத்திலிருந்து குடித்து,[g]
கேலி கிண்டலுக்கு ஆளாவாய்; அந்தக் கிண்ணம் அவற்றால்
நிறைந்திருக்கிறது.[h]

33 உன் அக்காவான சமாரியாவின் கிண்ணம்
கோரமான முடிவையும் சீரழிவையும் கொண்டுவருகிற கிண்ணம்.
நீ அதைக் குடித்துப் போதையில் தள்ளாடுவாய், சோகத்தில் வாடுவாய்.

34 ஒரு சொட்டு விடாமல் குடித்துவிட்டு,[i] அந்த மண் கிண்ணத்தை
மெல்லுவாய்.
அதன்பின், உன் மார்பகங்களை அறுத்தெறிவாய்.*
"இதை நானே சொல்கிறேன்" என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார்.'

35 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'நீ என்னை மறந்துவிட்டு, என்னை ஒதுக்கிவிட்டு,[j] ஆபாசமாக நடந்தாய்;
விபச்சாரம் செய்தாய். அதன் விளைவுகளை நீ அனுபவித்தே தீருவாய்'"
என்றார்.

36 பின்பு யெகோவா என்னிடம், "மனிதகுமாரனே, நீ அகோலாளுக்
கும் அகோலிபாளுக்கும்[k] தீர்ப்பு சொல்வாயா? அவர்களுடைய அருவ
ருப்பான பழக்கவழக்கங்களை அவர்களுடைய முகத்துக்கு நேராகச் சொல்
வாயா? **37** அவர்கள் எனக்குத் துரோகம் செய்துவிட்டார்கள்.[l] அவர்க
ளுடைய கையில் இரத்தக்கறை படிந்திருக்கிறது. அவர்கள் அருவருப்பான
சிலைகளை வணங்கி எனக்குத் துரோகம் செய்தது மட்டுமல்லாமல், எனக்
குப் பெற்றெடுத்த பிள்ளைகளை நெருப்பில் பலி கொடுத்து,* அந்தச்
சிலைகளுக்கு இரையாக்கினார்கள்.[m] **38** அதுமட்டுமல்ல, அந்த நாளில்
என்னுடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினார்கள், என்னுடைய ஓய்வு
நாட்களின் புனிதத்தைக் கெடுத்தார்கள். **39** அருவருப்பான சிலைகளுக்
குத் தங்கள் பிள்ளைகளை நரபலி கொடுத்த[n] அதே நாளில் என்னுடைய
ஆலயத்துக்கு வந்து அதைத் தீட்டுப்படுத்தினார்கள்.[o] என்னுடைய வீட்டுக்
குள்ளேயே வந்து அதைத் தீட்டுப்படுத்தினார்கள். **40** அதோடு, தூரத்திலி
ருந்த ஆட்களை வரச் சொல்லி தூது அனுப்பினார்கள்.[p] அகோலிபாளே,
அந்த ஆட்கள் வந்துகொண்டிருந்த சமயத்தில் நீ நன்றாகக் குளித்து, உன்
கண்களுக்கு மை தீட்டி, நகைகளால் உன்னை அலங்காரம் செய்துகொண்
டாய்.[q] **41** நீ ஆடம்பரமான கட்டிலில் உட்கார்ந்தாய்.[r] உன்முன் ஒரு

23:34 * நே.மொ., "பிய்த்தெறிவாய்." **23:37** * நே.மொ., "நெருப்பைக் கடக்க வைத்து."

அதி. 23
a உபா 28:49, 51
b எசே 16:36, 37; எசே 16:39
c எரே 2:18
d சங் 106:35, 36; எசே 6:9; எசே 23:7
e எரே 3:8; எசே 16:46, 47
f 2ரா 21:13; எரே 25:15; தானி 9:12
g ஏசா 51:17
h உபா 28:37; 1ரா 9:7; புல 2:15
i சங் 75:8
j 1ரா 14:9; நெ 9:26; ஏசா 17:10; எரே 2:32; எரே 13:25
k எசே 23:4
l ஓசி 1:2; யாக் 4:4
m லேவி 18:21; 2ரா 17:17, 18; எசே 16:36
n எரே 7:31
o லேவி 20:3
p ஏசா 57:9
q எரே 4:30
r ஏசா 57:7

மேஜையைப் போட்டு,[a] அதில் என்னுடைய தூபப்பொருளையும்[b] எண்
ணெயையும் வைத்துக்கொண்டாய்.[c] **42** கூத்தும் கும்மாளமும் அடிக்கிற
ஒரு கும்பலின் சத்தம் அங்கே கேட்டது. வனாந்தரத்திலிருந்து வரவழைக்
கப்பட்ட குடிகாரர்களும் அந்தக் கும்பலில் இருந்தார்கள். அந்த ஆட்கள்
இந்த இரண்டு பெண்களுடைய கைகளிலும் காப்புகளைப் போட்டுவிட்டார்
கள், அவர்களுடைய தலைகளில் அழகான கிரீடங்களை வைத்தார்கள்.

43 விபச்சாரம் செய்து* களைத்துப்போனவளைப் பற்றி நான், 'இவள்
விபச்சாரம் செய்வதை விடவே மாட்டாள்' என்று சொன்னேன். **44** விபச்
சாரியிடம் போவதைப் போல அவர்கள் அவளிடம் போய்க்கொண்டே
இருந்தார்கள். மானங்கெட்ட பெண்களான அகோலாளிடமும் அகோலிபா
ளிடமும் இப்படித்தான் அவர்கள் போய்க்கொண்டே இருந்தார்கள்.
45 ஆனால், விபச்சாரம் செய்ததற்காகவும்*[d] கொலை செய்ததற்காகவும்[e]
நீதிமான்கள் அவர்களுக்குத் தண்டனை கொடுப்பார்கள். அவர்கள் விபச்
சாரிகள்,# கொலைகாரிகள்.[f]

46 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'உங்
களுக்குக் கோரமான முடிவைக் கொண்டுவருவதற்காகவும் உங்களைச்
சூறையாடுவதற்காகவும் ஒரு படை வரவழைக்கப்படும்.[g] **47** அந்தப்
படைவீரர்கள் உங்கள்மேல் கல்லெறிந்து,[h] உங்களை வாளால் வெட்டிப்
போடுவார்கள். உங்களுடைய மகன்களையும் மகள்களையும் கொன்று,[i]
உங்களுடைய வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்துவார்கள்.[j] **48** இந்தத்
தேசத்தில் உங்களுடைய வெட்கங்கெட்ட நடத்தைக்கு நான் முடிவுகட்டு
வேன். எல்லா பெண்களுக்கும் அது ஒரு பாடமாக இருக்கும். உங்களைப்
போல ஆபாசமாக நடந்துகொள்ளக் கூடாது என்று அவர்கள் தெரிந்து
கொள்வார்கள்.[k] **49** ஆபாசமான நடத்தைக்கும் அருவருப்பான சிலை
களை வணங்கிய பாவத்துக்கும் தகுந்த தண்டனையை அந்தப் படை
வீரர்கள் உங்களுக்குக் கொடுப்பார்கள். அப்போது, நான் உன்னதப்
பேரரசராகிய யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்'"[l] என்றார்.

24 ஒன்பதாம் வருஷம், பத்தாம் மாதம், பத்தாம் நாளில் யெகோவா
மறுபடியும் என்னிடம், **2** "மனிதகுமாரனே, பாபிலோன் ராஜா
எருசலேமைத் தாக்க ஆரம்பித்த இந்த நாளையும் தேதியையும் குறித்து
வைத்துக்கொள்.[m] **3** எனக்கு அடங்கி நடக்காத ஜனங்களைப் பற்றிய
இந்த உவமையை* நீ சொல்:

'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:

"பானையை எடுத்து அடுப்பில் வையுங்கள். அதில் தண்ணீரை
ஊற்றுங்கள்.[n]

4 அதில் நல்ல நல்ல இறைச்சித் துண்டுகளைப் போடுங்கள்.[o]
தொடையையும், தோள் பகுதியையும், நல்ல நல்ல எலும்புகளையும்
போடுங்கள்.

5 அதற்காக மந்தையில் இருக்கிற மிகச் சிறந்த செம்மறியாட்டைத்
தேர்ந்தெடுங்கள்.[p]

23:43 *வே.வா., "கணவனுக்குத் துரோகம் செய்து." **23:45** *வே.வா., "கணவனுக்குத்
துரோகம் செய்ததற்காகவும்." #வே.வா., "கணவனுக்குத் துரோகம் செய்கிறவர்கள்."
24:3 *வே.வா., "உருவகக்கதையை."

அதி. 23
a ஏசா 65:11
b எசே 8:10, 11
c எசே 16:17, 18
d லேவி 20:10
e ஆதி 9:6; எசே 16:38
f 2ரா 24:3, 4; சங் 106:38; எசே 23:37
g எரே 15:4; எரே 25:9; எசே 16:40
h லேவி 20:2
i 2நா 36:17
j 2ரா 25:9, 10; எரே 39:8
k 2பே 2:6
l எசே 6:13

அதி. 24
m 2ரா 25:1; எரே 39:1; எரே 52:4
n எசே 11:3
o எசே 11:7
p எரே 39:6

பானையின் கீழே விறகுக் கட்டைகளை அடுக்கி வையுங்கள்.
இறைச்சித் துண்டுகளையும் எலும்புகளையும் பானையில் வேக வையுங்கள்.”’
6 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
‘இரத்தம் சிந்துகிற நகரத்துக்கு அழிவு வரப்போகிறது![a]
அந்த நகரம் களிம்பு* படிந்த ஒரு செம்புப் பானை. அதன் களிம்பு நீக்கப்படவில்லை.
அதிலுள்ள இறைச்சித் துண்டுகளை ஒவ்வொன்றாக வெளியே எடுங்கள்.[b]
அவற்றுக்காகக் குலுக்கல் போடாதீர்கள்.
7 அவள்* சிந்திய இரத்தம் அவள் நடுவிலேயே இருக்கிறது.[c]
அதைத் தரையில் ஊற்றி மண்ணினால் மூடாமல்[d]
வெட்டவெளியில் இருக்கிற வெறுமையான பாறைமேல் ஊற்றினாள்.
8 என்னுடைய கோபத்தைக் காட்டுவதற்கும் அவளைப் பழிவாங்குவதற்கும்,
அவள் சிந்திய இரத்தத்தை வெட்டவெளியில் இருக்கிற வெறுமையான பாறைமேல் நான் விட்டுவிட்டேன்.
அது மூடி மறைக்கப்படாமல் இருப்பதற்காக அப்படிச் செய்தேன்.’[e]
9 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
‘இரத்தம் சிந்திய நகரத்துக்கு[f] அழிவு வரப்போகிறது!
நான் விறகுகளை உயரமாகக் குவித்து வைப்பேன்.
10 நீங்கள் விறகுகளை அடுக்கி வைத்து அதற்குத் தீ மூட்டுங்கள்.
இறைச்சியை நன்றாக வேக வைத்து, அந்தத் தண்ணீரை வெளியே ஊற்றுங்கள்.
எலும்புகள் கருகிப்போகட்டும்.
11 காலியான அந்தச் செம்புப் பானையைத் தணல்மேல் வைத்துச் சூடாக்குங்கள்.
அதிலுள்ள அசுத்தமெல்லாம் உருகி,[g] அதன் களிம்பு போவதற்காக
அது சிவப்பாகும்வரை நன்றாகச் சூடாக்குங்கள்.
12 ஆனால், அதிலிருக்கும் விடாப்பிடியான களிம்பு போகவே போகாது.[h]
சலிப்பும் அலுப்பும்தான் மிஞ்சும்.
அதனால், களிம்பு படிந்த அந்தப் பானையை எடுத்து நெருப்புக்குள் தூக்கிப்போடுங்கள்.’

13 ‘உன்னுடைய வெட்கங்கெட்ட நடத்தையால் நீ அசுத்தமானாய்.[i]
உன்னைச் சுத்தப்படுத்த நான் முயற்சி செய்தேன். ஆனால், நீ சுத்தம் ஆக
வில்லை. எனக்கு உன்மேல் இருக்கிற கோபம் தீரும்வரை நீ சுத்தம் ஆகப்
போவதில்லை.[j] 14 யெகோவாவாகிய நானே இதைச் சொல்கிறேன். இது
நடக்கும். நான் தயங்காமலும் வருத்தப்படாமலும் பாவம்பார்க்காமலும்
உன்மேல் நடவடிக்கை எடுப்பேன்.[k] நீ செய்கிற அக்கிரமங்களுக்குத் தகுந்த

24:6 *பித்தளை, செம்பு பாத்திரங்களில் ஏற்படும் பச்சை நிறமுடைய நச்சுத்தன்மையுள்ள படிவு. 24:7 *அதாவது, “அந்த நகரம்.”

அதி. 24
a 2ரா 21:16, மீ 7:2, மத் 23:35
b எசே 11:7, 9
c எரே 2:34
d லேவி 17:13, உபா 12:16
e 2ரா 24:3, 4
f மத் 23:37
g எரே 21:10, எரே 32:29, எசே 22:15
h எரே 5:3, எரே 6:29
i 2நா 36:14, எசே 22:9
j எசே 5:12, 13, எசே 8:18
k எரே 13:14, எசே 5:11

தண்டனை உனக்குக் கொடுக்கப்படும்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்" என்றார்.

15 யெகோவா மறுபடியும் என்னிடம், **16** "மனிதகுமாரனே, உனக்குப் பிரியமானவளை நான் தண்டிக்கப்போகிறேன். நீ திடீரென்று அவளைப் பறிகொடுப்பாய்.[a] ஆனால், அவளுக்காக அழுது* புலம்பாதே. கண்ணீர் விடாதே. **17** அவளுக்காகத் துக்கம் அனுசரிக்காதே. மனதிலேயே குமுறிக்கொண்டிரு.[b] தலைப்பாகையையும்[c] செருப்புகளையும் போட்டுக் கொள்.[d] உன் மீசையை மூடிக்கொள்ளாதே.[e] மற்றவர்கள் கொண்டுவரும் உணவைச் சாப்பிடாதே"[f] என்றார்.

18 காலையில் நான் ஜனங்களிடம் பேசினேன். சாயங்காலத்தில் என் மனைவி இறந்துவிட்டாள். எனக்குக் கட்டளை கொடுக்கப்பட்டபடியே மறுநாள் காலையில் செய்தேன். **19** அப்போது ஜனங்கள் என்னிடம், "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? இதற்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார்கள். **20** அதற்கு நான், "யெகோவா என்னிடம் இப்படிச் சொன்னார்: **21** 'இஸ்ரவேல் ஜனங்களிடம் நீ இப்படிச் சொல்: "உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'நீங்கள் என்னுடைய ஆலயத்தைப் பார்த்து மிகவும் பெருமைப்படுகிறீர்கள். அதன்மேல் கொள்ளைப் பிரியம் வைத்திருக்கிறீர்கள். ஆனால், நான் அதைத் தீட்டுப்படுத்தப்போகிறேன்.[g] உங்கள் தேசத்தில் நீங்கள் விட்டுவிட்டு வந்த உங்கள் பிள்ளைகள் வாளால் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்.[h] **22** அப்போது, எசேக்கியேல் செய்ததையே நீங்களும் செய்ய வேண்டியிருக்கும். உங்கள் மீசையை மூடிக் கொள்ள மாட்டீர்கள். மற்றவர்கள் கொண்டுவரும் உணவைச் சாப்பிட மாட்டீர்கள்.[i] **23** தலைப்பாகையையும் செருப்புகளையும் போட்டிருப்பீர்கள். அழுது புலம்ப மாட்டீர்கள். ஆனால், உங்களுடைய குற்றங்களால் உங்கள் வாழ்க்கையைச் சீரழித்துக்கொண்டு வாடி வதங்குவீர்கள்.[j] ஒருவரை ஒருவர் பார்த்து மனதுக்குள் குமுறுவீர்கள். **24** எசேக்கியேல் உங்களுக்கு ஒரு அடையாளமாக இருக்கிறார்.[k] அவர் செய்தது போலவே நீங்களும் செய்வீர்கள். நான் சொன்னது நடக்கும்போது, நான் உன்னதப் பேரரசராகிய யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்'"'" என்றேன்.

25 "மனிதகுமாரனே, இந்த ஜனங்கள் அவர்களுடைய அழகான கோட்டையின் மேல் கொள்ளைப் பிரியம் வைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்து சந்தோஷப்படுகிறார்கள். ஆனால், நான் அதை அழித்துவிடுவேன். அவர்களுடைய பிள்ளைகளையும் அழித்துவிடுவேன்.[l] **26** அந்த அழிவில் தப்பிக்கிற ஒருவன் உனக்கு அந்தச் செய்தியைச் சொல்வான்.[m] **27** அவனிடம் நீ வாயைத் திறந்து பேசுவாய். அதற்குமேலும் அமைதியாக இருக்க மாட்டாய்.[n] நீ அவர்களுக்கு ஒரு அடையாளமாக இருப்பாய். நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்."

25 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** "மனிதகுமாரனே, அம்மோனியர்களுக்கு[o] நேராக உன் முகத்தை வைத்துக்கொண்டு அவர்களுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் சொல்.[p] **3** அவர்களைப் பற்றி இப்படிச் சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள். உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "என்னுடைய

24:16 * வே.வா., "நெஞ்சில் அடித்துக்கொண்டு."

அதி. 24
a எசே 24:18, 21
b எரே 16:5
c லேவி 10:6
d 2சா 15:30
e மீ 3:7
f எரே 16:7
g சங் 74:7; சங் 79:1; எரே 7:14; புல 1:10; புல 2:7; எசே 9:7
h 2நா 36:17; எரே 6:11
i எசே 24:17
j லேவி 26:39; எசே 33:10
k ஏசா 8:18; ஏசா 20:3; எசே 4:3
l உபா 28:32; எரே 11:22
m எசே 33:21
n எசே 3:26; எசே 33:22

அதி. 25
o ஆதி 19:36, 38
p எரே 49:1; ஆமோ 1:13; செப் 2:9

ஆலயம் தீட்டுப்படுத்தப்பட்ட சமயத்திலும், இஸ்ரவேல் தேசம் பாழாகிப்
போன சமயத்திலும், யூதா ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போன சமயத்தி
லும் நீங்கள் ஏளனம் செய்தீர்கள். **4** அதனால், உங்களைக் கிழக்கத்திய
ஜனங்களின் கையில் கொடுக்கப்போகிறேன். அவர்கள் உங்களுக்கு
நடுவே தங்களுடைய முகாம்களையும் கூடாரங்களையும் போடுவார்கள்.
உங்களுடைய தேசத்தின் விளைச்சலைச் சாப்பிட்டு, உங்களுடைய மந்தை
யின் பாலைக் குடிப்பார்கள். **5** நான் ரப்பாவை[a] ஒட்டகங்கள் மேய்கிற
நிலமாகவும், அம்மோனியர்களின் தேசத்தை மந்தைகள் படுத்துக்கொள்
கிற இடமாகவும் மாற்றுவேன். அப்போது, நான் யெகோவா என்று நீங்கள்
தெரிந்துகொள்வீர்கள்"'" என்றார்.

6 "உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'இஸ்ர
வேல் தேசத்தின் கதியைப் பார்த்து நீங்கள் கைகொட்டிச் சிரித்தீர்கள்,[b] சந்
தோஷத்தில் குதித்தீர்கள், கேலியும் கிண்டலும் செய்தீர்கள்.[c] **7** அதனால்
நான் உங்களைத் தண்டித்து, சூறையாடப்பட்ட பொருள்களைப் போல
மற்ற தேசங்களின் கையில் கொடுப்பேன். ஜனங்களின் மத்தியிலும் தேசங்
களின் நடுவிலும் இல்லாதபடி உங்களை அழிப்பேன்.[d] உங்களை ஒரேய
டியாக ஒழித்துக்கட்டுவேன். அப்போது, நான் யெகோவா என்று தெரிந்து
கொள்வீர்கள்.'

8 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: '"யூதா
ஜனங்கள் மற்ற எல்லா ஜனங்களையும் போலத்தான் இருக்கிறார்கள்" என்று
மோவாபும்[e] சேயீரும்[f] சொல்கின்றன. **9** அதனால், மோவாபின் எல்லை
களில் இருக்கிற நகரங்களை எதிரிகள் தாக்கும்படி செய்வேன். தேசத்
துக்கு அழகு சேர்க்கும் பெத்-யெசிமோத்தையும், பாகால்-மெயோனையும்,
கீரியாத்தாயீமையும்கூட[g] அவர்கள் தாக்கும்படி செய்வேன். **10** அம்மோ
னியர்களைப் பற்றிய நினைவையே அழிப்பதற்காக[h] அவர்களை எப்படிக்
கிழக்கத்திய ஜனங்களின் கையில் கொடுத்தேனோ[i] அப்படியே மோவா
பியர்களையும் கொடுத்துவிடுவேன். **11** மோவாபை நான் தண்டிப்பேன்.[j]
அப்போது, நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.'

12 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'ஏதோம்
மிகப் பெரிய குற்றம் செய்திருக்கிறது. அது யூதா ஜனங்களைப் பழிவாங்கி
யிருக்கிறது.[k] **13** அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது
இதுதான்: "நான் ஏதோமைத் தண்டித்து, மனுஷர்களோ மிருகங்களோ இல்
லாதபடி அதை வெறிச்சோடிப்போக வைப்பேன்.[l] தேமானிலிருந்து தேதான்
வரை இருக்கிற எல்லாரும் வாளால் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்.[m]
14 'என்னுடைய ஜனங்களான இஸ்ரவேலர்களின் கையால் நான் ஏதோ
மைப் பழிவாங்குவேன்.[n] அவர்கள் மூலமாக என்னுடைய கோபத்தை
யும் ஆக்ரோஷத்தையும் காட்டுவேன். ஏதோம் ஜனங்களை நான் பழிதீர்ப்
பேன்'[o] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்."'

15 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'தீராத
பகையினால் பெலிஸ்தியர்கள் என்னுடைய ஜனங்களைப் பழிவாங்கவும்
அழிக்கவும் சதி செய்தார்கள்.[p] **16** அதனால், உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்வது இதுதான்: "நான் பெலிஸ்தியர்களைத் தண்டிப்பேன்.[q]
கிரேத்தியர்களை அழிப்பேன்.[r] கடலோரத்தில் மீதியாக இருக்கிறவர்களை
ஒழித்துக்கட்டுவேன்.[s] **17** அவர்களைக் கடும் கோபத்தோடு தண்டித்து,

அதி. 25
a 2சா 12:26 எசே 21:20
b புல 2:15
c செப் 2:8
d எரே 49:2 ஆமோ 1:14
e ஏசா 15:1 எரே 48:1 ஆமோ 2:1
f உபா 2:4
g எண் 32: 37, 38 யோசு 13: 15, 19
h எசே 21: 28, 32
i எசே 25:4
j எரே 48:1
k 2நா 28:17 சங் 137:7 புல 4:22 ஆமோ 1:11 ஒப 10
l மல் 1:4
m எரே 49:7, 8
n ஏசா 11:14 ஏசா 63:1
o நாகூ 1:2
p 2நா 28:18 ஏசா 9:11, 12 ஏசா 14:29 எரே 47:1 யோவே 3: 4-6 ஆமோ 1:6
q எரே 25:17, 20 செப் 2:4
r செப் 2:5
s எரே 47:4

பயங்கரமாகப் பழிவாங்குவேன். அவர்களை நான் பழிதீர்க்கும்போது, நான்
யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.”’”

26 பதினோராம் வருஷம், முதலாம் நாளில் யெகோவா என்னிடம்
இப்படிச் சொன்னார்: **2** “மனிதகுமாரனே, எருசலேம் அழிந்த
போது தீரு ஏளனமாக,[a] ‘ஜனங்களின் நுழைவாசல் இடிக்கப்பட்டிருக்கிறது![b]
இனி எல்லாமே எனக்கு வந்து சேரும். அவள் பாழாகிவிட்டதால் நான்
பணக்காரியாக ஆகிவிடுவேன்’ என்று சொன்னாள். **3** அதனால், உன்ன
தப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘தீரு நகரமே, நான் உன்
னுடைய எதிரியாக வருவேன். திரண்டு வருகிற கடல் அலைகளைப் போல
உனக்கு எதிராகப் பல தேசங்களைத் திரண்டு வர வைப்பேன். **4** அவர்
கள் உன்னுடைய மதில்களை உடைத்துப்போடுவார்கள். உன் கோபுரங்
களை இடித்துப்போடுவார்கள்.[c] நான் உன்னுடைய மண்ணையெல்லாம்
சுரண்டி எடுத்துவிடுவேன். எதுவுமே இல்லாத வெறுமையான பாறையாக
உன்னை ஆக்கிவிடுவேன். **5** கடலின் நடுவில் வெறும் மீன்வலைகளைக்
காய வைக்கும் இடமாக நீ ஆவாய்.’[d]

‘இதை நானே சொல்கிறேன்’ என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார். ‘மற்ற தேசங்கள் உன்னைச் சூறையாடுவார்கள். **6** உன்னு
டைய சிற்றூர்களில் வாழ்கிறவர்கள் வாளால் வெட்டிக் கொல்லப்படுவார்கள்.
அப்போது, நான் யெகோவா என்று எல்லாரும் தெரிந்துகொள்வார்கள்.’

7 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘நான் தீரு
வுக்கு எதிராக பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சாரை வடக்கிலிருந்து
வர வைப்பேன்.[e] ராஜாதி ராஜாவாகிய[f] அவன் குதிரைகளோடும்[g] குதிரை
வீரர்களோடும் ரதங்களோடும்[h] ஏராளமான போர்வீரர்களோடும் வருவான்.
8 உன்னுடைய சிற்றூர்களில் இருக்கிறவர்களை அவன் வாளால் வெட்டிப்
போடுவான். உனக்கு எதிராக முற்றுகைச் சுவரை எழுப்பி, உன்னைச்
சுற்றிலும் மண்மேடுகளை அமைப்பான். உனக்கு எதிராகக் கேடயங்க
ளைச் சுவர்போல் நிறுத்துவான். **9** இயந்திரத்தால் உன்னுடைய மதில்
களை இடித்துச் சுக்குநூறாக்குவான். கடப்பாரைகளால் உன்னுடைய கோபு
ரங்களை உடைத்துப்போடுவான். **10** அவன் ஏராளமான குதிரைகளோடு
வந்து, உன்னைப் புழுதியால் மூடுவான். உன்னுடைய நகரவாசல்களுக்
குள் நுழையும்போது அவனுடைய குதிரைப்படையும் ரதங்களின் சக்கரங்
களும் எழுப்புகிற சத்தத்தில் உன் மதில்களே அதிரும். மதில்கள் இடிந்து
கிடக்கிற நகரத்துக்குள் பாய்ந்து வருகிற ஆட்களைப் போல அவன் வரு
வான். **11** அவனுடைய குதிரைகளின் குளம்புகள் உன்னுடைய எல்லா
வீதிகளையும் மிதிக்கும்.[i] அவன் உன்னுடைய ஜனங்களை வாளால் கொன்
றுபோடுவான். உன்னுடைய மாபெரும் தூண்களைத் தரைமட்டமாக்கு
வான். **12** அவனுடைய வீரர்கள் உன்னுடைய சொத்துகளைக் கொள்ளை
யடிப்பார்கள், உன்னுடைய சரக்குகளைச் சூறையாடுவார்கள்,[j] உன்னுடைய
சுவர்களையும் அருமையான வீடுகளையும் இடித்துப்போடுவார்கள். பின்பு,
உன்னுடைய கற்களையும் மரங்களையும் மண்ணையும் கடலில் போட்டு
விடுவார்கள்.’

13 ‘நான் உன்னுடைய பாடல்களின் சத்தத்துக்கு முடிவுகட்டுவேன். இனி
உன்னுடைய யாழின் இசை கேட்காது.[k] **14** நீ எதுவுமே இல்லாத வெறு
மையான பாறையாகவும், மீன்வலைகளைக் காய வைக்கும் இடமாகவும்

அதி. 26
a யோவே 3:4-6; ஆமோ 1:9
b புல 1:1
c ஏசா 23:11; ஆமோ 1:10; சக 9:4
d எசே 27:32
e எரே 25:9; எசே 29:18
f தானி 2:37
g ஆப 1:8
h எரே 4:13
i ஏசா 5:28; ஆப 1:8
j எசே 27:32, 33; எசே 28:5, 18; சக 9:3
k ஏசா 23:16

ஆவாய்.[a] நீ மறுபடியும் கட்டப்படவே மாட்டாய். யெகோவாவாகிய நானே
இதைச் சொல்லியிருக்கிறேன்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார்.

15 தீருவிடம் உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'நீ வீழ்ச்சியடைகிற சத்தத்தையும், உன்னுடைய ஜனங்கள் வாளால் வெட்
டப்படுகிற சத்தத்தையும், உயிர்போகும் நிலையில் இருக்கிறவர்கள் முனகு
கிற சத்தத்தையும் கேட்கும்போது தீவுகள் நடுநடுங்காதா?[b] 16 கடலின்
தலைவர்கள் எல்லாரும் குலைநடுங்கிப்போவார்கள். தங்களுடைய சிம்மா
சனத்தைவிட்டு இறங்கி, தங்களுடைய அங்கிகளையும் தையல்*
வேலைப்பாடு செய்த உடைகளையும் கழற்றிவிடுவார்கள். நடுநடுங்கிக்
கொண்டே தரையில் உட்கார்ந்து, அதிர்ச்சியோடு உன்னைப் பார்ப்பார்கள்.[c]
17 உனக்காக இந்தப் புலம்பல் பாட்டைப் பாடுவார்கள்:[d]

"கடல் கடந்து வந்தவர்கள் குடியேறிய நகரமே, புகழ்பெற்ற நகரமே,
இப்படி அழிந்துபோனாயே![e]
நீயும் உன் ஜனங்களும் கடலில் செல்வாக்கோடு* இருந்தீர்களே.[f]
உலகமே உங்களைப் பார்த்து கதிகலங்கியதே.
18 நீ வீழ்ச்சி அடையும் நாளில் தீவுகள் நடுநடுங்கும்!
நீ அழியும்போது கடலின் தீவுகள் கலங்கும்!"'[g]

19 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'குடியிருக்
கப்படாத நகரங்களைப் போல நான் உன்னைப் பாழாக்கி, பொங்கியெழும்
தண்ணீரிலும் பெருவெள்ளத்திலும் மூழ்கடிப்பேன்.[h] 20 எல்லாரையும்
போல உன்னையும் சவக்குழியில் இறக்குவேன். காலம்காலமாகவே எல்
லாரும் போய்ச் சேருகிற கல்லறைக்கு உன்னை அனுப்புவேன். பல கால
மாகப் பாழாய்க் கிடக்கிற இடங்களைப் போலவே உன்னையும் பாழாக்கு
வேன். சவக்குழியில் இறங்குகிறவர்களோடு சேர்த்து உன்னையும் நிலத்தின்
அடிமட்டத்துக்கு இறக்கி அங்கேயே தங்க வைப்பேன்.[i] உன்னை மனுஷ
நடமாட்டமே இல்லாத இடமாக்குவேன். பின்பு, உயிர்வாழ்கிறவர்களின் உல
கத்தை மேன்மைப்படுத்துவேன்.*

21 'நான் உன்மேல் பயங்கரமான அழிவைக் கொண்டுவருவேன். நீ இல்
லாமல் போவாய்.[j] அவர்கள் உன்னைத் தேடுவார்கள், ஆனால் ஒரு
போதும் கண்டுபிடிக்க மாட்டார்கள்' என்று உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்கிறார்."

27 யெகோவா மறுபடியும் என்னிடம், 2 "மனிதகுமாரனே, தீருவைப்
பார்த்து நீ இந்தப் புலம்பல் பாட்டைப் பாடு:[k]
3 'கடலின் நுழைவாசலில் குடியிருக்கிறவளே,
பல தீவுகளோடு வியாபாரம் செய்கிறவளே,
உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
"தீருவே, நீ அழகே உருவானவள் என்று சொல்லிக்கொண்டாய்.[l]
4 உன் எல்லைகள் கடலுக்கு நடுவில் இருக்கின்றன.
உன்னைக் கட்டியவர்கள் உன்னைப் பேரழகோடு கட்டினார்கள்.

26:16 *வே.வா., "எம்பிராய்டரி." **26:17** *வே.வா., "பலத்தோடு." **26:20** *வே.வா., "அலங்கரிப்பேன்."

அதி. 26
a எசே 26:4, 5
b எசே 27:28
c எசே 27:35; எசே 32:10
d எசே 27:32
e ஆமோ 1:9, 10
f எசே 28:2
g ஏசா 23:5
h எசே 27:34
i எசே 28:8
j எசே 27:36

அதி. 27
k எசே 26:17
l ஏசா 23:9; எசே 28:2, 12

5 கப்பல் கட்டுவது போல செனீரின்[a] ஆபால் மரங்களால் உனக்குப்
பலகைகளைச் செய்தார்கள்.
லீபனோனின் தேவதாரு மரத்தால் உனக்குப் பாய்மரத்தைச்
செய்தார்கள்.
6 பாசானின் கருவாலி மரங்களை வைத்து உனக்குத் துடுப்புகள்
செய்தார்கள்.
யானைத்தந்தம் பதிக்கப்பட்ட ஊசியிலை மரத்தை கித்தீம்[b]
தீவுகளிலிருந்து கொண்டுவந்து உன்னுடைய முன்பகுதியைச்
செய்தார்கள்.
7 எகிப்தின் பலவண்ண நாரிழை* துணியால் உனக்குக் கப்பற்பாயைச்
செய்தார்கள்.
எலிஷா[c] தீவுகளின் நீல நிற நூலினாலும் ஊதா நிற கம்பளியினாலும்
உன்னுடைய தளத்துக்குக் கூரை அமைத்தார்கள்.
8 சீதோன் ஜனங்களும் அர்வாத்[d] ஜனங்களும் உனக்காகத் துடுப்புப்
போட்டார்கள்.
தீருவே, திறமைசாலிகளான உன்னுடைய ஜனங்கள்தான் உனக்குக்
கப்பலோட்டிகளாக இருந்தார்கள்.[e]
9 அனுபவமும் திறமையும் உள்ள ஆட்கள் கேபாலிலிருந்து[f] வந்து
உன்னுடைய விரிசல்களை அடைத்தார்கள்.[g]
கடலில் போன எல்லா கப்பல்களும் வியாபாரத்துக்காக
உன்னிடம் வந்தன.
எல்லா கப்பலோட்டிகளும் பண்டமாற்றத்துக்காக உன்னைத்
தேடிவந்தார்கள்.
10 பெர்சியர்களும் லூத்தியர்களும் பூத்தியர்களும்[h] உன்னுடைய
படைவீரர்களாக இருந்தார்கள்.
கேடயங்களையும் தலைக்கவசங்களையும் தொங்கவிட்டு உன்னை
மேன்மைப்படுத்தினார்கள்.
11 உன் படையிலிருந்த அர்வாத் வீரர்கள் உன் மதில்கள்மேல் காவலுக்கு
நின்றார்கள்.
வீரதீரமுள்ள ஆட்கள் உன்னுடைய கோபுரங்களைக் காவல்
காத்தார்கள்.
உன்னுடைய மதில்களைச் சுற்றிலும் வட்டமான கேடயங்களைத்
தொங்கவிட்டு
உன்னுடைய அழகுக்கு அழகு சேர்த்தார்கள்.

12 உன்னிடம் ஏராளமான செல்வம்[i] இருந்ததால் தர்ஷீஸ்[j] உன்
னோடு வியாபாரம் செய்தது. வெள்ளியையும் இரும்பையும் தகரத்தையும்
ஈயத்தையும் கொடுத்து உன்னுடைய சரக்குகளை வாங்கியது.[k] **13** யாவா
னும் தூபாலும்[l] மேசேக்கும்[m] உன்னோடு வியாபாரம் செய்தன. அடிமைக
ளையும் செம்புப் பொருள்களையும் கொடுத்து உன்னிடமிருந்து சரக்கு
களை வாங்கின.[n] **14** தொகர்மா[o] வம்சத்தார் குதிரைகளையும் கோவேறு
கழுதைகளையும்* கொடுத்து உன்னோடு பண்டமாற்றம் செய்தார்கள்.

27:7 * அதாவது, “லினன்.” **27:14** * இவை பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்தவை.

அதி. 27
a உபா 3:8, 9; 1நா 5:23
b ஆதி 10:2, 4
c ஆதி 10:2, 4
d ஆதி 10:15, 18
e 1ரா 9:27
f யோசு 13:2, 5
g எசே 27:27
h ஆதி 10:6; எரே 46:9
i 2நா 9:21
j ஆதி 10:2, 4; யோனா 1:3
k எரே 10:9
l ஏசா 66:19
m ஆதி 10:2
n யோவே 3:6
o ஆதி 10:2, 3; எசே 38:6

15 தேதான்[a] ஜனங்கள் உன்னோடு வியாபாரம் செய்தார்கள். நீ நிறைய
தீவுகளில் ஆட்களை வேலைக்கு வைத்து வியாபாரம் செய்தாய். அவர்கள்
உனக்கு யானைத்தந்தங்களையும்[b] கருங்காலி மரங்களையும் அன்பளிப்
பாகக் கொடுத்தார்கள்.* **16** உன்னிடம் ஏராளமான சரக்குகள் இருந்ததால்
ஏதோம் உன்னோடு வியாபாரம் செய்தது. நீலபச்சைக் கல்லையும், ஊதா
நிற கம்பளி நூலையும், பல நிறங்களில் தையல்* வேலைப்பாடு செய்த
உடைகளையும், உயர்தரமான துணிகளையும், பவளங்களையும், மாணிக்
கங்களையும் கொடுத்து உன்னுடைய பொருள்களை வாங்கியது.

17 யூதாவும் இஸ்ரவேலும்கூட உன்னோடு வியாபாரம் செய்தன. மின்
னித்[c] நகரத்தின் கோதுமையையும், தரமான உணவுப் பொருள்களையும்,
தேனையும்,[d] எண்ணெயையும், பரிமளத் தைலத்தையும்[e] கொடுத்து உன்
னோடு பண்டமாற்றம் செய்தன.[f]

18 உன்னிடம் ஏராளமான பொருள்களும் செல்வமும் இருந்ததால்
தமஸ்கு[g] உன்னோடு வியாபாரம் செய்து, கெல்போனின் திராட்சமது
வையும் சேகாரின்* கம்பளியையும் பண்டமாற்றம் செய்தது. **19** ஊசா
லைச் சேர்ந்த வேதானும் யாவானும் உன்னுடைய சரக்குகளை வாங்கிக்
கொண்டு உறுதியான இரும்பையும், கருவாய்ப்பட்டையையும்,*
வசம்பையும் கொடுத்தன. **20** சவாரி செய்வதற்காக மிருகங்கள்மேல்
போடப்படும் துணிகளை தேதான்[h] ஜனங்கள் உன்னிடம் விற்றார்கள்.
21 அரேபியர்களையும் கேதாரின்[i] தலைவர்கள் எல்லாரையும் வைத்து நீ
வியாபாரம் செய்தாய். அவர்கள் செம்மறியாட்டுக் கடாக்களையும் செம்ம
றியாட்டுக் கடாக் குட்டிகளையும் வெள்ளாடுகளையும் வியாபாரம் செய்கி
றவர்கள்.[j] **22** சேபாவையும் ராமாகுவையும்[k] சேர்ந்த வியாபாரிகள், மிக
வும் தரமான வாசனைத் தைலங்களையும், விலைமதிப்புள்ள கற்களையும்,
தங்கத்தையும் கொடுத்து உன்னுடைய சரக்குகளை வாங்கினார்கள்.[l]
23 ஆரான்,[m] கன்னே, ஏதேன்[n] ஊர்களைச் சேர்ந்த ஆட்களும், சேபாவை
யும்[o] அஷூரையும்[p] கில்மாத்தையும் சேர்ந்த வியாபாரிகளும் உன்னோடு
வியாபாரம் செய்தார்கள். **24** அழகான உடைகளையும், பல நிறங்களில்
தையல் வேலைப்பாடு செய்த நீல நிற சால்வைகளையும், பலவண்ண தரை
விரிப்புகளையும் கயிறுகளால் நன்றாகக் கட்டி உன்னுடைய சந்தையில் விற்
றார்கள்.

25 தர்ஷீசின் கப்பல்கள்[q] உனக்காகச் சரக்குகளைச் சுமந்து போவதும்
சுமந்து வருவதுமாக இருந்தன.
அதனால், நடுக்கடலில் நீ சொத்துகளால் நிரம்பி வழிந்தாய்.*
26 உனக்காகத் துடுப்புப் போட்டவர்கள் உன்னை ஆழ்கடலுக்குக்
கொண்டுபோனார்கள்.
கிழக்குக் காற்று உன்னை நடுக்கடலில் உடைத்துப்போட்டது.
27 நீ வீழ்ச்சி அடையும் நாளில் உன்னோடு சேர்ந்து உன்னுடைய
சொத்துகளும், சரக்குகளும், பொருள்களும் நடுக்கடலில்
மூழ்கிவிடும்.

27:15 *வே.வா., “கப்பமாகக் கட்டினார்கள்.” **27:16** *வே.வா., “எம்பிராய்டரி.” **27:18** *வே.வா., “செம்பழுப்பு நிற.” **27:19** *இது லவங்கப்பட்டை மர வகையைச் சேர்ந்தது. **27:25** *அல்லது, “பிரகாசித்தாய்.”

அதி. 27
a ஆதி 10:7
b 1ரா 10:22
c நியா 11:12, 33
d ஆதி 43:11
e எரே 8:22
f 1ரா 5:9; எஸ்றா 3:7; அப் 12:20
g ஏசா 7:8
h ஆதி 25:3
i ஆதி 25:13
j 2நா 17:11; ஏசா 60:7
k ஆதி 10:7
l 1ரா 10:1, 2; ஏசா 60:6
m ஆதி 11:31
n 2ரா 19:12; ஆமோ 1:5
o ஆதி 25:3; யோபு 6:19
p ஆதி 10:22
q 1ரா 10:22; ஏசா 23:14

உன்னுடைய கப்பலோட்டிகளும், உன்னுடைய விரிசல்களை
அடைக்கிறவர்களும், உன்னோடு வியாபாரம் செய்கிறவர்களும்,[a]
போர்வீரர்களும்[b]
எல்லாருமே மொத்தமாக உன்னோடு சேர்ந்து மூழ்கிவிடுவார்கள்.[c]
28 உன்னுடைய கப்பலோட்டிகள் அலறும் சத்தத்தில் கடலோரப்
பகுதிகளே அதிரும்.
29 துடுப்புப் போடுகிறவர்கள், கப்பலோட்டிகள் என எல்லாரும்
கப்பல்களிலிருந்து இறங்கி கரையில் நிற்பார்கள்.
30 அவர்கள் உன்னுடைய கதியைப் பார்த்துக் கதறிக் கதறி அழுவார்கள்.[d]
தலைகளில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்டு, சாம்பலில்
புரளுவார்கள்.
31 மொட்டையடித்துக்கொண்டு, துக்கத் துணியை*
உடுத்திக்கொள்வார்கள்.
தாங்க முடியாத வேதனையில் ஓலமிட்டு அழுவார்கள்.
32 ஒப்பாரி வைத்து, இந்தப் புலம்பல் பாட்டைப் பாடுவார்கள்:
'நடுக்கடலில் சமாதியாகிவிட்ட தீருவைப் போல ஒரு நகரம் உண்டா?[e]
33 கடல் வழியாகச் சரக்குகளை அனுப்பி எத்தனையோ பேரை நீ
சந்தோஷப்படுத்தினாயே![f]
நீ குவித்த சொத்துகளாலும் சரக்குகளாலும் உலக ராஜாக்கள் பெரும்
பணக்காரர்களாக ஆனார்களே![g]
34 ஆனால், இப்போது நடுக்கடலில் நீ நாசமாகிவிட்டாயே! ஆழ்கடலில்
அமிழ்ந்துபோனாயே![h]
உன்னுடைய சரக்குகளெல்லாம் உன்னோடு மூழ்கிவிட்டதே!
உன்னுடைய ஜனங்கள் எல்லாரும் உன்னோடு சேர்ந்து
மூழ்கிவிட்டார்களே![i]
35 தீவுகளில் இருக்கிற எல்லாரும் அதிர்ச்சியோடு உன்னைப்
பார்ப்பார்கள்.[j]
அவர்களுடைய ராஜாக்கள் கதிகலங்கிப்போவார்கள்.[k] அவர்களுடைய
முகம் பயத்தில் வெளுத்துப்போகும்.
36 உன் கதியைப் பார்த்து மற்ற தேசங்களைச் சேர்ந்த வியாபாரிகள் கேலி
செய்வார்கள்.*
உனக்குத் திடீரென்று பயங்கரமான முடிவு வரும்.
நீ அடியோடு அழிந்துபோவாய்'"'"[l] என்று சொன்னார்.

28 யெகோவா மறுபடியும் என்னிடம், 2 "மனிதகுமாரனே, தீருவின்
தலைவனைப் பார்த்து இப்படிச் சொல்: 'உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்வது இதுதான்:

"உன் இதயத்தில் பெருமை வந்துவிட்டதால்[m] உன்னை ஒரு கடவுள்
என்று சொல்லிக்கொண்டிருக்கிறாய்.
கடல் நடுவே கடவுளின் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பதாகப்
பெருமையடிக்கிறாய்.[n]

27:31 * சொல் பட்டியலைப் பாருங்கள். 27:36 * நே.மொ., "விசில் அடிப்பார்கள்."

அதி. 27
a எசே 27:8, 9
b எசே 27:10, 11
c எசே 26:14
d ஏசா 23:1
எசே 26:17
e எசே 26:5
f எசே 27:14, 16
g சக 9:3
h எசே 26:19
i எசே 27:27
j எசே 26:15
k எசே 28:17
l சங் 37:10

அதி. 28
m எசே 28:5
n எசே 27:4

நீ என்னதான் உன்னைக் கடவுளாக நினைத்தாலும்,
நீ சாதாரண மனுஷன்தான், கடவுள் கிடையாது.
3 நீ தானியேலைவிட அறிவாளி என்று நினைக்கிறாய்.[a]
உனக்குத் தெரியாத ரகசியங்களே இல்லை என்று நினைக்கிறாய்.
4 உன்னுடைய ஞானத்தினாலும் புத்தியினாலும்* நீ சொத்துகளைச் சேர்த்தாய்.
தங்கத்தையும் வெள்ளியையும் பொக்கிஷ அறைகளில் குவித்து வைத்தாய்.[b]
5 திறமையாக வியாபாரம் செய்து கொள்ளை லாபம் சம்பாதித்தாய்.[c]
செல்வம் வந்ததும் உன் இதயத்தில் செருக்கும் வந்துவிட்டது."'
6 'அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
"நீ உன் உள்ளத்தில் உன்னை ஒரு கடவுளாக நினைப்பதால்,
7 மிகவும் கொடூரமான ஜனங்களை உனக்கு எதிராக வர வைப்பேன்.[d]
அவர்கள் வாளை உருவி, உன் ஞானத்தினால் நீ சேர்த்த எல்லா அழகான பொருள்களையும் அழிப்பார்கள்.
உன்னுடைய சிறப்பையும் மேன்மையையும் குலைத்துப்போடுவார்கள்.[e]
8 உன்னைச் சவக்குழியில் இறக்குவார்கள்.
நடுக்கடலில் உனக்குக் கோரமான முடிவுகட்டுவார்கள்.[f]
9 அப்போதுகூட, உன்னை அழிக்கிறவர்களைப் பார்த்து,
'நான் ஒரு கடவுள்' என்று சொல்வாயா?
உன்னைக் களங்கப்படுத்துகிறவர்களின் கையில் சிக்கும்போது நீ ஒரு கடவுளாகவா இருப்பாய்?
வெறும் மனுஷனாகத்தானே இருப்பாய்."'
10 'விருத்தசேதனம் செய்யப்படாத ஆட்களைப் போல நீ வேறு தேசத்து ஜனங்களின் கையில் சாவாய்.
இதை நானே சொல்கிறேன்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்" என்றார்.

11 யெகோவா மறுபடியும் என்னிடம், 12 "மனிதகுமாரனே, தீருவின்
ராஜாவைப் பார்த்து இந்தப் புலம்பல் பாட்டைப் பாடு: 'உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்வது இதுதான்:

"நீ எந்தக் குறையும் இல்லாதவனாக இருந்தாய்.
ஞானம் நிறைந்தவனாகவும்[g] அழகே உருவானவனாகவும் இருந்தாய்.[h]
13 நீ கடவுளுடைய தோட்டமான ஏதேனில் இருந்தாய்.
மாணிக்கம், புஷ்பராகம், சூரியகாந்தக் கல், படிகப்பச்சை,
கோமேதகம், பச்சைக் கல், நீலமணிக் கல், நீலபச்சைக் கல்,[i]
மரகதம் ஆகிய ரத்தினக்கற்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தாய்.
அந்தக் கற்கள் பதிக்கப்பட்ட தங்க நகைகளைப் போட்டிருந்தாய்.
உன்னைப் படைத்த நாளில் அவற்றை நான் தயாராக வைத்திருந்தேன்.
14 பாதுகாக்கும் கேருபீனாக நான் உன்னைத் தேர்ந்தெடுத்து நியமித்தேன்.

28:4 * வே.வா., "பகுத்தறிவினாலும்."

அதி. 28
a தானி 2:48
b சக 9:3
c ஏசா 23:1, 3; எசே 27:12
d எசே 30:10, 11
e ஏசா 23:9
f எசே 27:26
g எசே 28:3
h எசே 27:3
i எசே 27:16

நீ கடவுளுடைய பரிசுத்த மலையில் இருந்தாய்.[a]
எரிகிற கற்களின் நடுவில் நடந்தாய்.
15 நீ படைக்கப்பட்ட நாளிலிருந்து நல்ல வழியில்தான் நடந்தாய்.
ஆனால், பிற்பாடு கெட்ட வழியில் நடக்க ஆரம்பித்தாய்.[b]
16 நீ வியாபாரம் செய்வதில் மூழ்கிப்போனதால்[c]
உன் நடுவே வன்முறை பெருகியது. நீ பாவம் செய்ய ஆரம்பித்தாய்.[d]
நீ தீட்டுப்பட்டதால் உன்னைக் கடவுளுடைய மலையிலிருந்தும்
எரிகிற கற்களின் நடுவிலிருந்தும் துரத்தியடிப்பேன்.
பாதுகாக்கும் கேருபீனே, நான் உன்னை அழித்துவிடுவேன்.[e]
17 அழகினால் உன் இதயத்தில் பெருமை வந்துவிட்டது.[f]
உன்னையே நீ உயர்வாக நினைத்ததால்[g] உன் ஞானத்தைக் கெடுத்துக்கொண்டாய்.
நான் உன்னைத் தரையில் தள்ளுவேன்.[h]
ராஜாக்களுக்கு முன்னால் உன்னை வேடிக்கைப் பொருளாக்குவேன்.
18 நீ செய்த நேர்மையற்ற வியாபாரத்தினாலும் பெரிய குற்றத்தினாலும்
உன்னுடைய பரிசுத்தமான இடங்களைத் தீட்டுப்படுத்தினாய்.
அதனால், உன் நடுவில் தீயைக் கொளுத்துவேன். அது உன்னைப் பொசுக்கிவிடும்.[i]
உன்னைப் பார்க்கிற எல்லாருடைய கண் முன்னாலும் நான் உன்னை இந்தப் பூமியின் மேல் சாம்பலாக்குவேன்.
19 உன்னைப் பற்றித் தெரிந்த ஜனங்கள் அதிர்ச்சியோடு உன்னைப் பார்ப்பார்கள்.[j]
உனக்குத் திடீரென்று பயங்கரமான முடிவு வரும்.
நீ அடியோடு அழிந்துபோவாய்"'"[k] என்றார்.

20 யெகோவா மறுபடியும் என்னிடம், 21 "மனிதகுமாரனே, சீதோ
னுக்கு[l] நேராக உன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, அவளுக்கு எதிராக இப்
படித் தீர்க்கதரிசனம் சொல்: 22 'உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்:

"சீதோனே, நான் உன்னுடைய எதிரியாக வந்து, உன் நடுவே மகிமை அடைவேன்.
நான் உன்னைத் தண்டித்து, நான் பரிசுத்தமான கடவுள் என்று காட்டும்போது
நான் யெகோவா என்று ஜனங்கள் தெரிந்துகொள்வார்கள்.
23 உனக்கு எதிராகக் கொள்ளைநோயை அனுப்புவேன். உன்னுடைய வீதிகளில் இரத்தம் ஓடும்.
எல்லா பக்கத்திலிருந்தும் வாள் பாய்ந்து வந்து உன் ஜனங்களை வெட்டிச் சாய்க்கும்.
அப்போது, நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.[m]

24 அதன்பின், இஸ்ரவேல் ஜனங்களை முள்ளாய்க் குத்தி நோகடிக்கிற
வர்களும்,[n] கேவலமாக நடத்துகிறவர்களும் சுற்றுவட்டாரத்தில் எங்குமே
இருக்க மாட்டார்கள். அப்போது, நான் உன்னதப் பேரரசராகிய யெகோவா
என்று எல்லாரும் தெரிந்துகொள்வார்கள்."'

அதி. 28
a ஏசா 14:13
b யோவே 3:4; ஆமோ 1:9
c 1ரா 10:11; 2நா 9:21; எசே 27:12
d யோவே 3:6
e ஏசா 23:9; எரே 25:17, 22; எரே 47:4; யோவே 3:8
f எசே 27:3
g ஏசா 14:14
h ஏசா 14:15
i ஆமோ 1:9, 10
j எசே 27:35
k எசே 27:36
l ஏசா 23:4; எரே 25:17, 22; எசே 32:30
m எசே 26:6
n எண் 33:55; யோசு 23:12, 13

25 ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “மற்ற
தேசங்களுக்குச் சிதறிப்போன இஸ்ரவேலர்களை நான் மறுபடியும் ஒன்று
சேர்க்கும்போது,[a] நான் பரிசுத்தமான கடவுள் என்று எல்லா ஜனங்க
ளும் புரிந்துகொள்வார்கள்.[b] என்னுடைய ஊழியனாகிய யாக்கோபுக்கு
நான் கொடுத்த தேசத்தில்[c] என் ஜனங்கள் குடியிருப்பார்கள்.[d] **26** அவர்
களைக் கேவலமாக நடத்துகிற சுற்றுவட்டார ஜனங்கள் எல்லாரையும் நான்
தண்டித்த பின்பு,[e] அவர்கள் அங்கே பாதுகாப்பாக வாழ்வார்கள்.[f] வீடுக
ளைக் கட்டி, திராட்சைத் தோட்டங்களை அமைத்து,[g] பயமில்லாமல் வாழ்
வார்கள். அப்போது, நான் அவர்களுடைய கடவுளான யெகோவா என்று
தெரிந்துகொள்வார்கள்”’” என்றார்.

29 பத்தாம் வருஷம், பத்தாம் மாதம், 12-ஆம் நாளில், யெகோவா
என்னிடம், **2** “மனிதகுமாரனே, எகிப்தின் ராஜாவான பார்வோ
னுக்கு நேராக உன் முகத்தை வைத்துக்கொண்டு அவனுக்கும் எகிப்துக்
கும் எதிராக இப்படித் தீர்க்கதரிசனம் சொல்:[h] **3** ‘உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்வது இதுதான்:

“எகிப்தின் ராஜாவான பார்வோனே,[i]
ராட்சதக் கடல் பிராணி போல நைல் நதியின் ஓடைகளில்
படுத்திருக்கிறவனே,[j]
‘நைல் நதி எனக்குத்தான் சொந்தம்,
அதை எனக்காக நான் உண்டாக்கினேன்’ என்று சொல்கிறவனே,[k]
நான் உன்னுடைய எதிரியாக வருவேன்.
4 நான் உன் வாயில் கொக்கிகளை மாட்டுவேன்.
உன்னுடைய நைல் நதியின் மீன்களை உன் செதில்களில்
ஒட்டிக்கொள்ள வைப்பேன்.
உன்னையும் உன் செதில்களில் ஒட்டியிருக்கிற எல்லா மீன்களையும்
நைல் நதியிலிருந்து வெளியே எடுப்பேன்.
5 உன்னையும் உன்னுடைய நைல் நதியின் மீன்கள் எல்லாவற்றையும்
நான் பாலைவனத்தில் போட்டுவிடுவேன்.
நீ வெட்டவெளியில் விழுந்து சிதறிப்போவாய். யாரும் உன்னை
வாரியெடுக்கவோ புதைக்கவோ மாட்டார்கள்.[l]
உன்னைக் காட்டு மிருகங்களுக்கும் வானத்துப் பறவைகளுக்கும்
இரையாகக் கொடுப்பேன்.[m]
6 அப்போது, நான் யெகோவா என்று எகிப்து ஜனங்கள் எல்லாரும்
தெரிந்துகொள்வார்கள்.
அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்த ஆதரவு வெறும்
வைக்கோலைப் போலத்தான் இருந்தது.[n]
7 அவர்கள் உன் கையைப் பிடித்தபோது நீ நொறுங்கிப்போனாய்.
அவர்கள் உன்மேல் சாய்ந்தபோது நீ ஒடிந்துபோனாய்.
நீ ஒடிந்துபோனபோது அவர்களுடைய தோளைக் கிழித்தாய்.
அவர்களுடைய கால்களைத் தள்ளாட வைத்தாய்.”[o]

8 ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “நான்
உனக்கு எதிராக ஒரு வாளை அனுப்பி,[p] உன்னுடைய மக்களையும் மிரு

அதி. 28
a உபா 30:3; ஏசா 11:12; எரே 30:18; ஓசி 1:11
b ஏசா 5:16
c ஆதி 28:13
d எரே 23:8
e எரே 30:16
f ஏசா 32:18; எரே 23:6; ஓசி 2:18
g ஏசா 65:21, 22; எரே 31:5; ஆமோ 9:14

அதி. 29
h எரே 25:17, 19; எரே 43:10, 11; எசே 31:2
i எரே 46:25; எசே 31:18
j எசே 32:2
k எசே 29:9
l எரே 25:33
m எசே 32:4
n ஏசா 36:6; எரே 37:5-7; எசே 17:17
o எரே 17:5
p எரே 46:14; எசே 30:4; எசே 32:12

கங்களையும் வெட்டிப்போடுவேன். **9** ‘நைல் நதி எனக்குத்தான் சொந்தம், அதை நான்தான் உண்டாக்கினேன்’ என்று நீ சொன்னதால்,[a] எகிப்து தேசத்தை நான் பாழாக்கி வெறுமையாக்குவேன்.[b] அப்போது, நான் யெகோவா என்று எல்லாரும் தெரிந்துகொள்வார்கள். **10** நான் உனக்கும் உன்னுடைய நைல் நதிக்கும் எதிரியாக இருக்கிறேன். மிக்தோலிலிருந்து[c] எத்தியோப்பியாவின் எல்லையிலுள்ள செவெனே[d] நகரம்வரை நான் எகிப்து தேசத்தைப் பாழாக்கி, வெறுமையாக்குவேன். அதைப் பொட்டல் காடாக்குவேன்.[e] **11** அங்கே மனுஷர்களின் நடமாட்டமோ மிருகங்களின் நடமாட்டமோ இருக்காது.[f] அது 40 வருஷங்களுக்கு வெறிச்சோடிக் கிடக்கும். **12** தேசங்களிலேயே மிகவும் பாழான தேசமாக எகிப்து இருக்கும். நகரங்களிலேயே மிகவும் பாழான நகரங்களாக அதன் நகரங்கள் இருக்கும். 40 வருஷங்களுக்கு இப்படித்தான் இருக்கும்.[g] நான் எகிப்தியர்களை மற்ற தேசங்களுக்கும் ஜனங்களுக்கும் நடுவில் சிதறிப்போகப் பண்ணுவேன்.”[h]

13 ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “மற்ற தேசங்களுக்கு நான் துரத்தியடித்த எகிப்தியர்களை 40 வருஷங்களுக்குப் பின்பு மறுபடியும் கூட்டிச்சேர்ப்பேன்.[i] **14** சிறைபிடிக்கப்பட்டுப் போன எகிப்தியர்களை அவர்களுடைய சொந்த இடமான பத்ரோசுக்குக்[j] கொண்டுவருவேன். அங்கே அவர்கள் அற்பமான ராஜ்யமாக ஆவார்கள். **15** எகிப்து மற்ற எல்லா ராஜ்யங்களையும்விட தாழ்ந்த நிலையில் இருக்கும். இனி மற்ற தேசங்களை அடக்கி ஆள முடியாதளவுக்கு அதை நான் மிகச் சிறிய தேசமாக்குவேன்.[k] **16** இஸ்ரவேல் ஜனங்கள் இனி ஒருபோதும் அதன்மேல் நம்பிக்கை வைக்க மாட்டார்கள்.[l] உதவிக்காக எகிப்தியர்களைத் தேடிப்போனது எவ்வளவு பெரிய தப்பு என்று புரிந்துகொள்வார்கள். அப்போது, நான் உன்னதப் பேரரசராகிய யெகோவா என்று எல்லாரும் தெரிந்துகொள்வார்கள்”’” என்றார்.

17 27-ஆம் வருஷம், முதல் மாதம், முதல் நாளில் யெகோவா என்னிடம், **18** “மனிதகுமாரனே, பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சார்[m] தீருவை எதிர்த்துப் போர் செய்வதற்காகத் தன்னுடைய படைவீரர்களைக் கடுமையாக வேலை வாங்கினான்.[n] அதனால், அவர்கள் எல்லாருடைய தலையும் வழுக்கையானது, எல்லாருடைய தோள்பட்டையின் தோலும் உரிந்துபோனது. ஆனால்கூட, தீருவுக்கு எதிராகப் போர் செய்ததற்கான கூலி அவனுக்கோ அவனுடைய படைவீரர்களுக்கோ கிடைக்கவில்லை.

19 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘நான் எகிப்து தேசத்தை பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சாருக்குக் கொடுக்கப்போகிறேன்.[o] அதன் சொத்துகளை அவன் வாரிக்கொண்டுபோவான். அங்கு இருப்பதையெல்லாம் சூறையாடுவான். அவனுடைய படைவீரர்களுக்கு அது கூலியாகக் கிடைக்கும்.’

20 ‘அவன் கஷ்டப்பட்டு தீருவுக்கு எதிராகப் போர் செய்ததால் நான் எகிப்து தேசத்தை அவனுக்குக் கூலியாகக் கொடுப்பேன். அவனும் அவன் ஆட்களும் எனக்காகப் போர் செய்தார்களே’[p] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

அதி. 29

a எசே 29:3
b எரே 43:11-13
c எரே 44:1
d எசே 30:6, 7
e எசே 30:12
f எசே 31:12; எசே 32:13
g எரே 46:19
h எசே 30:23
i எரே 46:25, 26
j ஆதி 10:13, 14; எசே 30:14
k எசே 30:13; எசே 32:2
l ஏசா 30:2; ஏசா 36:4, 6; எரே 2:18; எரே 37:5-7
m எரே 25:9; எரே 27:3, 6
n எசே 26:7
o எரே 43:10, 12
p எசே 30:9, 10

21 அந்த நாளில், இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பலம்படைத்த ஒரு
வரை நான் அனுப்புவேன்.*[a] அவர்கள் நடுவே பேசுவதற்கு நான் உனக்கு
வாய்ப்புத் தருவேன். அப்போது, நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்து
கொள்வார்கள்” என்றார்.

30 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “மனிதகுமாரனே, நீ இப்
படித் தீர்க்கதரிசனம் சொல்: ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்:

“ஜனங்களே, ‘ஐயோ, அந்த நாள் வருகிறதே!’ என்று கதறுங்கள்.
3 ஏனென்றால், யெகோவாவின் நாள் நெருங்கிவிட்டது! அது பக்கத்தில் வந்துவிட்டது![b]
அது கார்மேகங்கள் சூழ்ந்துகொள்ளப்போகும் நாள்;[c] தேசங்களுக்குத் தீர்ப்பு கிடைக்கப்போகும் நாள்.[d]
4 ஒரு வாள் எகிப்துக்கு எதிராக வரும்.
அங்குள்ள ஜனங்கள் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்.
அப்போது, எத்தியோப்பியா கதிகலங்கிப்போகும்.
எகிப்து சூறையாடப்படும், அதன் அஸ்திவாரங்கள் அழிக்கப்படும்.[e]
5 எத்தியோப்பியர்களும்,[f] பூத்தியர்களும்,[g] லூத்தியர்களும்,
மற்ற தேசத்தாரும், கூபியர்களும், ஒப்பந்தம் செய்திருக்கிற ஜனங்களும்*
வாளால் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்.”’
6 யெகோவா சொல்வது இதுதான்:
‘எகிப்துக்கு உதவி செய்கிறவர்களும் வீழ்த்தப்படுவார்கள்.
எகிப்தின் அதிகாரத் திமிர் அடங்கும்.’[h]

‘மிக்தோலிலிருந்து[i] செவெனே[j] நகரம் வரைக்கும் அவர்கள் வாளால்
வெட்டிச் சாய்க்கப்படுவார்கள்’ என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார். **7** ‘அவர்களுடைய தேசம் மற்ற எந்தத் தேசத்தையும்விட
அதிகமாகப் பாழாக்கப்படும். அவர்களுடைய நகரங்கள் மற்ற எந்த நகரங்
களையும்விட அதிகமாக நாசமாக்கப்படும்.[k] **8** நான் எகிப்துக்குத் தீ
வைத்து, அதன் கூட்டாளிகள் எல்லாரையும் அழிக்கும்போது நான்
யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள். **9** அந்த நாளில், மட்
டுக்குமீறிய தன்னம்பிக்கையோடு இருக்கிற எத்தியோப்பியாவை நடுங்க
வைப்பதற்காக நான் தூதுவர்களைக் கப்பல்களில் அனுப்புவேன். எகிப்து
அழிந்த செய்தியைக் கேட்டு அவர்கள் பீதியடைவார்கள். அழிவு நாள்
கண்டிப்பாக வரும்.’

10 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘பாபி
லோன் ராஜாவான நேபுகாத்நேச்சாரை வர வைத்து எகிப்தியர்களின்
கூட்டத்தை நான் அழிப்பேன்.[l] **11** மிகவும் கொடூரமான ஜனங்கள்[m]
என்று பெயரெடுத்த அந்த ராஜாவையும் அவனுடைய படைவீரர்களை
யும் கொண்டுவந்து எகிப்தை அழிப்பேன். அவர்கள் வாளை உருவி எகிப்

29:21 *நே.மொ., “ஒரு கொம்பை முளைக்கப் பண்ணுவேன்.” வே.வா., “இஸ்ரவேல் வம்சத்தாருக்குப் பலத்தைக் கொடுப்பேன்.” **30:5** *ஒருவேளை, “எகிப்தியர்களோடு கூட்டுச்சேர்ந்த இஸ்ரவேலர்களும்.”

அதி. 29
a 1சா 2:10; லூ 1:70

அதி. 30
b ஒப 15
c எசே 32:7
d சங் 110:6
e எசே 32:11, 12
f செப் 2:12
g நாகூ 3:8, 9
h எசே 30:18
i எரே 44:1
j எசே 29:10
k எரே 46:19; எசே 29:12; எசே 32:18
l எசே 29:19; எசே 32:11
m ஆப 1:6

தில் இருக்கிற எல்லாரையும் வெட்டிச் சாய்ப்பார்கள்.[a] **12** நைல் நதியின்[b]
கால்வாய்களை நான் வறண்டுபோக வைப்பேன். அந்தத் தேசத்தைக் கெட்
டவர்களிடம் விற்றுவிடுவேன். மற்ற தேசத்து ஜனங்கள் வந்து அதையும்
அதில் இருக்கிற எல்லாவற்றையும் பாழாக்கும்படி செய்வேன்.[c] யெகோவா
வாகிய நானே இதைச் சொல்கிறேன்.'

13 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'எகிப்
திலுள்ள அருவருப்பான* சிலைகளையும் நோப்#[d] நகரத்திலுள்ள ஒன்
றுக்கும் உதவாத தெய்வங்களையும் நான் அழிப்பேன். எகிப்து தேசத்தை
ஆட்சி செய்ய இனி எந்த எகிப்தியனும் இருக்க மாட்டான். நான் தேசத்தில்
பீதியைக் கிளப்புவேன்.[e] **14** பத்ரோசைப்[f] பாழாக்குவேன், சோவானுக்
குத் தீ வைப்பேன், நோ*[g] நகரத்தைத் தண்டிப்பேன். **15** எகிப்தின்
கோட்டையாகிய சின் நகரத்தின் மேல் என் கோபத்தைக் கொட்டுவேன்.
நோ நகரத்தில் இருக்கிறவர்களை அழிப்பேன். **16** எகிப்துக்குத் தீ வைப்
பேன். சின் நகரம் நடுநடுங்கும். நோ நகரம் இடிக்கப்படும். நோப்# நகரம்
பட்டப்பகலில் தாக்கப்படும். **17** ஓன்* நகரத்தையும் பிபேசெத் நகரத்தை
யும் சேர்ந்த வாலிபர்கள் வாளுக்குப் பலியாவார்கள். அந்த நகரத்து ஜனங்
கள் சிறைபிடிக்கப்பட்டுப் போவார்கள். **18** எகிப்தின் நுகத்தடிகளை தக்பா
னேசில் நான் உடைக்கும்போது அங்கே பகல் இருட்டாகிவிடும்.[h] எகிப்தின்
அதிகாரத் திமிர் அடங்கிவிடும்.[i] மேகங்கள் அதை மூடும். அதன் சிற்றூர்
களில் இருக்கிறவர்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போவார்கள்.[j] **19** நான் எகிப்
தைத் தண்டிக்கும்போது, நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்
வார்கள்'" என்றார்.

20 11-ஆம் வருஷம், முதலாவது மாதம், ஏழாவது நாளில் யெகோவா
என்னிடம், **21** "மனிதகுமாரனே, எகிப்தின் ராஜாவான பார்வோனின்
கையை நான் முறித்துவிட்டேன். அது குணமாவதற்காகவும், வாளை எடுக்
கும் அளவுக்குப் பலம் அடைவதற்காகவும் யாருமே அதற்குக் கட்டுப்
போட மாட்டார்கள்" என்றார்.

22 "உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'எகிப்
தின் ராஜாவான பார்வோனுக்கு விரோதமாக நான் வருவேன்.[k] நல்ல
நிலையிலுள்ள கையையும், ஏற்கெனவே முறிக்கப்பட்ட கையையும் நான்
முறிப்பேன்.[l] அவனுடைய கையிலுள்ள வாளை கீழே விழ வைப்பேன்.[m]
23 பின்பு, எகிப்தியர்களை மற்ற தேசங்களின் நடுவிலும் மற்ற ஜனங்களின்
நடுவிலும் சிதறிப்போக வைப்பேன்.[n] **24** பாபிலோன் ராஜாவின் கைக
ளைப் பலப்படுத்தி,*[o] என்னுடைய வாளை அவன் கையில் கொடுப்பேன்.[p]
பின்பு, பார்வோனின் கைகளை முறிப்பேன். அப்போது, சாகிறவன் முன
குவது போல அவன் பாபிலோன் ராஜாவுக்குமுன் சத்தமாக முனகு
வான். **25** பாபிலோன் ராஜாவின் கைகளை நான் பலப்படுத்துவேன்.
ஆனால், பார்வோனின் கைகள் உடைந்து தொங்கும். பாபிலோன் ராஜா
வின் கையில் என் வாளைக் கொடுத்து எகிப்து தேசத்தை அழிக்கும்
போது[q] நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.

30:13 *இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **30:13, 16** #வே.வா., "மோப்." **30:14** *அதாவது, "தீப்ஸ்." **30:17** *அதாவது, "ஹெலியோபாலிஸ்." **30:24** *வே.வா., "அதிகாரத்தைக் கூட்டி."

அதி. 30
a எசே 29:5
b எசே 29:3
c எசே 31:12
d எரே 43:12; எரே 46:14
e எரே 46:5
f ஆதி 10:13, 14; எரே 44:1
g எரே 46:25
h எசே 30:8
i எரே 46:20; எசே 31:18
j எரே 46:19
k எரே 46:25; எசே 29:3
l 2ரா 24:7; எரே 46:2
m எரே 46:21
n எசே 29:12
o எரே 27:6
p எசே 32:11, 12
q எசே 29:19, 20

26 நான் எகிப்தியர்களை மற்ற தேசங்களின் நடுவிலும் மற்ற ஜனங்களின்
நடுவிலும் சிதறிப்போக வைப்பேன்.[a] அப்போது, நான் யெகோவா என்று
அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.'"

31 11-ஆம் வருஷம், மூன்றாம் மாதம், முதலாம் நாளில் யெகோவா
மறுபடியும் என்னிடம், 2 "மனிதகுமாரனே, எகிப்தின் ராஜாவான
பார்வோனிடமும் அவனுடைய ஜனக்கூட்டத்திடமும் இப்படிச் சொல்:[b]

'உன்னுடைய சிறப்பை எதனோடு ஒப்பிடுவது?
3 நீ அசீரியனைப் போலவும் லீபனோனின் தேவதாரு மரத்தைப்
போலவும் இருந்தாய்.
அழகான கிளைகளுடன், அடர்த்தியாக வளர்ந்து நிழல் தந்தாய்.
மேகங்களைத் தொடுமளவுக்கு உயரமாக நின்றாய்.
4 ஏராளமான தண்ணீர் பாய்ந்ததால் நீ உயரமாகவும் அடர்த்தியாகவும்
வளர்ந்தாய்.
நீ நடப்பட்ட இடத்தைச் சுற்றிலும் நீரோடைகள் இருந்தன.
அவற்றின் வாய்க்கால்கள் காட்டிலுள்ள எல்லா மரங்களுக்கும் தண்ணீர்
பாய்ச்சின.
5 காட்டிலுள்ள எல்லா மரங்களையும்விட நீ மிக உயரமாக வளர்ந்தாய்.
நிறைய தண்ணீர் கிடைத்ததால் நிறைய கிளைகள் விட்டாய்.
உன் கிளைகள் நீளமாக வளர்ந்தன.
6 வானத்தில் பறக்கிற எல்லா பறவைகளும் உன் கிளைகளில் கூடுகட்டின.
காட்டில் திரிகிற எல்லா மிருகங்களும் உன்னுடைய கிளைகளின் கீழே
குட்டி போட்டன.
பெரிய தேசங்கள்கூட உன் நிழலில் தங்கின.
7 நீ நீளமாகக் கிளைகள்விட்டு, அழகாக வளர்ந்து, கம்பீரமாக நின்றாய்.
ஏராளமான தண்ணீருக்குள் ஆழமாக வேர்விட்டாய்.
8 கடவுளுடைய தோட்டத்திலுள்ள[c] வேறெந்தத் தேவதாரு மரமும்
உனக்குச் சமமாக முடியாது.
எந்த ஆபால் மரத்துக்கும் உன்னைப் போலக் கொப்புகள் கிடையாது.
எந்த அர்மோன் மரத்துக்கும் உன்னைப் போலக் கிளைகள் கிடையாது.
கடவுளுடைய தோட்டத்திலுள்ள வேறெந்த மரத்துக்கும் உன்னைப்
போன்ற அழகு கிடையாது.
9 நான் உன்னை அழகாகவும் அடர்த்தியாகவும் வளர வைத்தேன்.
உண்மைக் கடவுளுடைய தோட்டமான ஏதேனில் இருக்கிற மற்ற
எல்லா மரங்களும் உன்னைப் பார்த்துப் பொறாமைப்பட்டன.'

10 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'நீ மேகத்தையே தொடுமளவுக்கு மிக உயரமாக வளர்ந்தாய். உன்னுடைய
உயரத்தால் உன் இதயம் கர்வம் அடைந்தது. 11 அதனால், பலம்படைத்த
ராஜாவின் கையில் நான் உன்னைக் கொடுப்பேன்.[d] அவன் கண்டிப்பாக
உன்னைத் தண்டிப்பான். நீ அக்கிரமம் செய்ததால் நான் உன்னை ஒதுக்கித்
தள்ளுவேன். 12 மிகவும் கொடூரமான தேசத்தார் உன்னை வெட்டி, மலை
களின் மேல் போட்டுவிடுவார்கள். உன்னுடைய இலைகள் எல்லா பள்ளத்
தாக்குகளிலும் சிதறிக் கிடக்கும். உன்னுடைய கிளைகள் உடைந்து எல்லா
ஓடைகளிலும் விழும்.[e] உன்னுடைய நிழலில் இருந்த எல்லா ஜனக்கூட்

அதி. 30
a எசே 29:12

அதி. 31
b எரே 46:2; எசே 29:2
c ஆதி 2:8; எசே 28:12, 13
d எசே 30:10, 11; ஆப 1:6
e எசே 32:5, 6

அதி. 31
a எசே 29:5
எசே 32:4
b எசே 31:9
c எசே 32:18, 20
d எசே 30:6
எசே 32:31
e எசே 31:9
எசே 32:19

அதி. 32
f ஏசா 51:9, 10
எசே 29:3

டங்களும் அங்கிருந்து போய்விடுவார்கள்.
13 விழுந்து கிடக்கிற உன்னுடைய மரத்தின் மேல் எல்லா பறவைகளும் தங்கும். உன்னுடைய கிளைகளின் மேல் எல்லா காட்டு மிருகங்களும் தங்கும்.[a]
14 தண்ணீருக்குப் பக்கத்தில் இருக்கிற எந்த மரமும் இனி இவ்வளவு உயரமாக வளர்ந்து மேகத்தைத் தொடக் கூடாது என்பதற்காகவே உனக்கு இப்படி நடக்கும். நன்றாகத் தண்ணீர் பாய்ச்சப்படுகிற எந்த மரமும் இனி மேகத்தைத் தொடும் அளவுக்கு உயரமாக வளரக் கூடாது. எல்லா மரங்களுமே வெட்டப்பட்டு, சவக்குழிக்குப் போகிற மனுஷர்களோடு சேர்ந்து மண்ணுக்குக் கீழே போகும்.'

15 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'நீ மண்ணுக்குக் கீழே* போகும் நாளில், நான் ஜனங்களை அழுது புலம்ப வைப்பேன். ஆழத்தில் ஓடும் தண்ணீரை அடைத்துவிடுவேன். அதன் ஓடைகளில் பாய்ந்து வரும் தண்ணீரைத் தடுத்துவிடுவேன். லீபனோனை இருண்டுபோக வைப்பேன். காட்டு மரங்கள் எல்லாமே வாடிப்போகும்.
16 சவக்குழிக்குப் போகிற மனுஷர்களோடு சேர்ந்து உன்னை நான் மண்ணுக்குக் கீழே* போக வைப்பேன். நீ விழும் சத்தத்தைக் கேட்டு தேசங்கள் நடுநடுங்கும். நன்றாகத் தண்ணீர் பாய்ச்சப்பட்ட மரங்களான ஏதேனின் எல்லா மரங்களும்,[b] லீபனோனின் மிக அருமையான மரங்களும் மண்ணுக்குக் கீழே ஆறுதல் அடையும்.
17 உன்னோடு சேர்ந்து அவையும் மண்ணுக்குக் கீழே* போய், வாளுக்குப் பலியானவர்களோடு கிடக்கும்.[c] உன்னுடைய நிழலில் தங்கியிருந்த உன் ஆதரவாளர்களும் அங்குதான் கிடப்பார்கள்.'[d]

18 'மகிமையிலும் மேன்மையிலும் உனக்குச் சமமாக வேறெந்த மரம் ஏதேனில் இருந்தது?[e] ஆனால்கூட, ஏதேனின் மரங்களோடு சேர்ந்து நீயும் மண்ணுக்குக் கீழே போவாய். விருத்தசேதனம் செய்யப்படாத ஜனங்களின் நடுவிலே, வாளுக்குப் பலியான ஆட்களோடு நீயும் கிடப்பாய். பார்வோனுக்கும் அவனுடைய கூட்டத்துக்கும் நடக்கப்போவது இதுதான்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்" என்றார்.

32 12-ஆம் வருஷம், 12-ஆம் மாதம், முதல் நாளில் யெகோவா மறுபடியும் என்னிடம்,
2 "மனிதகுமாரனே, எகிப்தின் ராஜாவான பார்வோனைப் பற்றி இந்தப் புலம்பல் பாட்டைப் பாடு:

'நீ தேசங்களின் நடுவில் பலமான இளம் சிங்கத்தைப் போல இருந்தாய்.
ஆனால், அடக்கி ஒடுக்கப்பட்டாய்.
ராட்சதக் கடல் பிராணியைப் போல[f] உன் ஆறுகளில் துடிப்போடு திரிந்தாய்.
கால்களால் சேற்றைக் கிளறி, ஆறுகளை அசுத்தமாக்கினாய்.'

3 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'மற்ற தேசத்து ஜனங்களைக் கூட்டமாக வர வைப்பேன்.
அவர்களைக் கொண்டு உன்மேல் என்னுடைய வலையை வீசுவேன்.
அவர்கள் உன்னை என்னுடைய வலையில் பிடித்துத் தூக்குவார்கள்.
4 நான் உன்னை நிலத்தில் போட்டுவிடுவேன்.
வெட்டவெளியில் எறிந்துவிடுவேன்.

31:15–17 *வே.வா., "கல்லறைக்கு." சொல் பட்டியலைப் பாருங்கள்.

வானத்துப் பறவைகள் உன்மேல் வந்து உட்காரும்படி செய்வேன்.
பூமியெங்கும் இருக்கிற காட்டு மிருகங்களுக்கு உன்னை இரையாக்குவேன்.[a]
5 உன்னுடைய சதையை மலைகள்மேல் வீசிவிடுவேன்.
உன்னுடைய உடலில் மிச்சம் மீதியிருக்கிறவற்றைக் கொண்டு
பள்ளத்தாக்குகளை நிரப்புவேன்.[b]
6 உன்னிடமிருந்து பீறிக்கொண்டு வருகிற இரத்தத்தால் நான் தேசத்தை மூழ்கடிப்பேன்.
உன் இரத்தம் உயரமான மலைகளை எட்டும்.
அது நீரோடைகளை நிரப்பும்.'
7 'நான் உன்னை அழிக்கும்போது வானத்தை மூடிவிடுவேன்.
நட்சத்திரங்களை இருண்டுபோக வைப்பேன்.
சூரியனை மேகங்களால் மறைப்பேன்.
நிலவு வெளிச்சம் தராது.[c]
8 வானத்தில் இருக்கிற விளக்குகளையெல்லாம் அணைத்துவிடுவேன்.
உன் தேசத்தைக் கும்மிருட்டாக்குவேன்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.
9 'உன்னுடைய ஜனங்கள் முன்பின் தெரியாத தேசங்களுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போகும்படி செய்வேன்.[d]
அப்போது, பல தேசத்து ஜனங்களின் நெஞ்சத்தைக் கலங்க வைப்பேன்.
10 அவர்களை அதிர்ச்சியடைய வைப்பேன்.
அவர்களுடைய ராஜாக்களுக்குமுன் உன்னைத் தாக்குவதற்காக என் வாளைச் சுழற்றுவேன்.
அப்போது, அந்த ராஜாக்கள் பயத்தில் மிரண்டுபோவார்கள்.
நீ வெட்டி வீழ்த்தப்படும் நாளில்
அவர்கள் எல்லாரும் உயிருக்குப் பயந்து நடுங்கிக்கொண்டே இருப்பார்கள்.'
11 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'பாபிலோன் ராஜாவின் வாள் உனக்கு எதிராக வரும்.[e]
12 பலம்படைத்த வீரர்களின் வாளால் உன்னுடைய ஜனக்கூட்டத்தை வெட்டிச் சாய்ப்பேன்.
அந்த வீரர்கள் மிகவும் கொடூரமானவர்கள் என்று பெயரெடுத்தவர்கள்.[f]
அவர்கள் எகிப்தின் தலைக்கனத்துக்கு முடிவுகட்டி, அவளுடைய ஜனக்கூட்டத்தை அடியோடு அழிப்பார்கள்.[g]
13 பாய்ந்தோடுகிற தண்ணீரின் ஓரமாக மேயும் அவளுடைய மந்தையையெல்லாம் நான் அழிப்பேன்.[h]
இனி எந்த மனுஷனின் காலோ மிருகத்தின் காலோ அந்தத் தண்ணீரைக் கலக்காது.'[i]
14 'அப்போது நான் அந்தத் தண்ணீரைத் தெளிய வைத்து,
ஆறுகளை எண்ணெய் போல ஓட வைப்பேன்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

அதி. 32
a எசே 29:5
b எசே 31:12
c ஏசா 13:1, 10
d எசே 29:12; எசே 30:26
e எரே 43:10, 11; எரே 46:25, 26; எசே 30:24
f எசே 30:10, 11; ஆப 1:6
g எசே 29:19
h எசே 30:12
i எசே 29:8, 11

அதி. 32
a சங் 107: 33, 34
எசே 29:12
b எசே 30:26
c எசே 29:8
d ஏசா 37:36
சக 10:11
e ஆதி 10:22
எரே 49: 34, 35

15 ‘நான் எகிப்திலுள்ள எல்லாவற்றையும் பாழாக்கி, அதைப் பொட்டல்
காடாக்குவேன்.[a]
அங்கு குடியிருக்கிற எல்லாரையும் அழிப்பேன்.
அப்போது, நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.[b]
16 இது ஒரு புலம்பல் பாட்டு. ஜனங்கள் கண்டிப்பாக இதைப் பாடுவார்கள்.
மற்ற தேசத்துப் பெண்களும் இதைப் பாடுவார்கள்.
எகிப்து தேசத்தையும் அதன் ஜனக்கூட்டத்தையும் பற்றி அவர்கள்
இப்படிப் புலம்பிப் பாடுவார்கள்’ என்று உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்கிறார்” என்றார்.

17 12-ஆம் வருஷம், மாதத்தின்* 15-ஆம் நாளில் யெகோவா என்னி
டம், **18** “மனிதகுமாரனே, எகிப்தின் ஜனக்கூட்டத்துக்காக நீ ஒப்பாரி
வை. சவக்குழிக்குப் போகிறவர்களோடு சேர்ந்து அவளும்* பலம்படைத்த
தேசங்களின் ஜனங்களும் மண்ணுக்குக் கீழே போவார்கள் என்று அறி
விப்பு செய்.

19 ‘உன்னைப் போல அழகி யாரும் இல்லை என்று நினைக்கிறாயோ?
நீ மண்ணுக்குள் போய், விருத்தசேதனம் செய்யப்படாத ஆட்களோடு கிட!’
20 ‘எகிப்தியர்கள்* வாளால் வெட்டப்பட்டவர்களோடு கிடப்பார்கள்.[c]
எகிப்து# வாளுக்குப் பலியாக்கப்பட்டாள். அவளையும் அவளுடைய கூட்
டத்தையும் இழுத்துக்கொண்டு போங்கள்.

21 கல்லறையின் ஆழத்திலே, பலம்படைத்த போர்வீரர்கள் பார்வோ
னோடும் அவனுக்கு உதவி செய்தவர்களோடும் பேசுவார்கள். அவர்கள்
கண்டிப்பாக மண்ணுக்குள் போவார்கள். வாளால் வெட்டப்பட்டுக் கிடக்
கிற விருத்தசேதனம் செய்யப்படாத ஆட்களோடு கிடப்பார்கள். **22** அசீ
ரியா அவளுடைய ஜனங்களோடு அங்கே இருக்கிறாள். அவர்களுடைய
ராஜாவை* சுற்றி அவர்களுடைய கல்லறைகள் இருக்கின்றன. அவர்கள்
எல்லாருமே வாளால் வெட்டிச் சாய்க்கப்பட்டவர்கள்.[d] **23** அவளுடைய
கல்லறைகள் ஆழத்தில் இருக்கின்றன. அவளுடைய ஜனக்கூட்டம் அவளு
டைய கல்லறையைச் சுற்றிலும் இருக்கிறது. உலகத்தில் இருக்கிறவர்களை
அவர்கள் பயமுறுத்தி வந்ததால் வாளால் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள்.

24 ஏலாமும்[e] அங்கே இருக்கிறாள். அவளுடைய ஜனக்கூட்டம் அவ
ளுடைய கல்லறையைச் சுற்றிலும் இருக்கிறது. உலகத்தில் இருந்தவர்க
ளைப் பயமுறுத்தி வந்ததால் அவர்கள் எல்லாரும் வாளால் வெட்டிச் சாய்க்
கப்பட்டார்கள். அவர்கள் விருத்தசேதனம் செய்யப்படாமல் மண்ணுக்குக்
கீழே போனார்கள். சவக்குழியில் இறங்குகிறவர்களோடு சேர்ந்து அவர்க
ளும் அவமானம் அடைவார்கள். **25** வெட்டப்பட்டுக் கிடக்கிறவர்களின்
நடுவில் அவளுக்கு* ஒரு படுக்கையைப் போட்டிருக்கிறார்கள். அவளு
டைய ஜனக்கூட்டம் அவளுடைய கல்லறைகளைச் சுற்றிலும் இருக்
கிறது. அவர்கள் எல்லாரும் விருத்தசேதனம் செய்யப்படாதவர்கள், உலகத்
தில் இருந்தவர்களைப் பயமுறுத்தி வந்ததால் வாளினால் வெட்டிச்
சாய்க்கப்பட்டவர்கள். சவக்குழியில் இறங்குகிறவர்களோடு சேர்ந்து

32:17 * ஒருவேளை, “12-ஆம் மாதத்தின்.” வசனம் 1-ஐப் பாருங்கள். **32:18** * அதாவது, “எகிப்து தேசமும்.” **32:20** * நே.மொ., “அவர்கள்.” # நே.மொ., “அவள்.” **32:22** * நே.மொ., “அவனை.” **32:25** * அதாவது, “ஏலாம் தேசத்துக்கு.”

அவர்களும் அவமானம் அடைவார்கள். அவளும் வெட்டப்பட்டவர்க
ளோடு கிடக்கிறாள்.

26 அங்குதான் மேசேக்கும் தூபாலும்[a] அவர்களுடைய ஜனக்கூட்ட
மும் இருக்கின்றன. அவனை* சுற்றி அவர்களுடைய# கல்லறைகள் இருக்
கின்றன. அவர்கள் எல்லாரும் விருத்தசேதனம் செய்யப்படாதவர்கள், உல
கத்தில் இருந்தவர்களைப் பயமுறுத்தி வந்ததால் வாளால் குத்திக்
கொல்லப்பட்டவர்கள். **27** விருத்தசேதனம் செய்யப்படாத பலசாலி வீரர்
களோடு அவர்களும் கிடக்க மாட்டார்களா? போர் ஆயுதங்களுடன்
கல்லறையில் இறங்கிய அந்த வீரர்களோடு அவர்களும் இறங்க மாட்டார்
களா? அவர்களுடைய வாள்கள் அவர்களுடைய தலைகளின் கீழ்
வைக்கப்படும்.* அவர்கள் செய்த பாவங்களுக்கான தண்டனை அவர்க
ளுடைய எலும்புகளின் மேல் சுமத்தப்படும். ஏனென்றால், பலசாலிகளான
இந்த வீரர்கள் உலகத்தில் இருந்தவர்களைப் பயமுறுத்திக்கொண்டு இருந்
தார்கள். **28** நீ* விருத்தசேதனம் செய்யப்படாதவர்களோடு நொறுக்கப்
பட்டு, வாளால் வெட்டிச் சாய்க்கப்பட்டவர்களோடு கிடப்பாய்.

29 ஏதோமும்[b] அங்கே இருக்கிறாள். அவளுடைய ராஜாக்களும் தலை
வர்களும் பலம்படைத்தவர்களாக இருந்தும்கூட வாளால் வெட்டப்பட்டவர்
களோடு கிடத்தப்பட்டார்கள். அவர்களும்கூட விருத்தசேதனம் செய்யப்ப
டாதவர்களோடும்[c] சவக்குழியில் இறங்குகிறவர்களோடும் கிடப்பார்கள்.

30 வடதிசை தலைவர்கள் எல்லாரும், சீதோனியர்கள்[d] எல்லாரும்
அங்கே இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய அதிகாரத்தினால் எல்லா
ரையும் பயமுறுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது கேவலப்பட்
டுப்போய், வாளால் வெட்டப்பட்டவர்களோடு மண்ணுக்குள் போயிருக்கி
றார்கள். அவர்கள் விருத்தசேதனம் செய்யப்படாத நிலையில், வாளுக்குப்
பலியானவர்களோடு கிடப்பார்கள். சவக்குழியில் இறங்குகிறவர்களோடு
சேர்ந்து அவர்களும் அவமானம் அடைவார்கள்.

31 பார்வோன் இதையெல்லாம் பார்ப்பான். தன்னுடைய ஜனக்கூட்டத்
தின் கதியைப் பார்த்து ஆறுதல் அடைவான்.[e] பார்வோனும் அவனுடைய
எல்லா படைவீரர்களும் வாளுக்குப் பலியாவார்கள்' என்று உன்னதப் பேர
ரசராகிய யெகோவா சொல்கிறார்.

32 'பார்வோனும் அவனுடைய ஜனக்கூட்டமும் உலகத்தில் இருந்தவர்
களைப் பயமுறுத்தி வந்ததால், விருத்தசேதனம் செய்யப்படாமல் வாளால்
வெட்டிச் சாய்க்கப்பட்ட ஆட்களோடு கிடத்தப்படுவார்கள்' என்று உன்ன
தப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்" என்றார்.

33

யெகோவா மறுபடியும் என்னிடம், **2** "மனிதகுமாரனே, உன்னு
டைய ஜனங்களிடம் இப்படிச் சொல்:[f]

'ஒரு தேசத்தைத் தாக்க நான் எதிரிகளை அனுப்புவதாக வைத்துக்
கொள்ளலாம்.[g] அந்தத் தேசத்து ஜனங்கள் எல்லாரும் சேர்ந்து தங்களுக்
காக ஒரு காவல்காரனை நியமிக்கலாம். **3** அவன் எதிரிகள் வருவதைப்
பார்த்ததும், ஊதுகொம்பை ஊதி, ஜனங்களை எச்சரிக்கலாம்.[h] **4** ஆனால்,

---

32:26 *ஒருவேளை, "மேசேக் மற்றும் தூபாலின் ராஜாவை." #நே.மொ., "அவளு
டைய." **32:27** *ஒருவேளை, ராணுவ மரியாதைக்காகப் போர்வீரர்களை வாளோடு
அடக்கம் செய்வதைக் குறிக்கலாம். **32:28** *ஒருவேளை, "பார்வோன் அல்லது
எகிப்து."

அதி. 32
a ஆதி 10:2 எசே 38:2
b ஆதி 25:30 ஏசா 34:5 எசே 25:12, 13 ஆமோ 1:11 ஒப 1 மல் 1:4
c எரே 9:25, 26
d ஆதி 10:15 எசே 28:21
e எசே 31:16

அதி. 33
f எசே 3:11
g லேவி 26:25 எசே 6:3 எசே 21:9
h எரே 4:5 ஓசி 8:1

ஒருவன் அந்த ஊதுகொம்பின் சத்தத்தைக் கேட்டும் எச்சரிப்பை
அசட்டை செய்தால்[a] எதிரிகள் வந்து அவனைக் கொன்றுபோடுவார்கள்.
அப்போது, அவனுடைய சாவுக்கு* அவன்தான் காரணமாக இருப்பான்.[b]
5 அவன் ஊதுகொம்பின் சத்தத்தைக் கேட்டும் எச்சரிப்பை அசட்டை செய்
ததால் அவனுடைய சாவுக்கு அவன்தான் காரணமாக இருப்பான். அவன்
எச்சரிப்பைக் கேட்டு நடந்திருந்தால் தன்னுடைய உயிரைக் காப்பாற்றியி
ருப்பான்.

6 ஆனால், காவல்காரன் எதிரிகள் வருவதைப் பார்த்தும் ஊதுகொம்பை
ஊதி ஜனங்களை எச்சரிக்காமல் இருக்கலாம்.[c] அப்போது, எதிரிகள் வந்து
யாரையாவது கொன்றுபோட்டால், கொல்லப்பட்டவன் தன்னுடைய குற்றத்
துக்காகச் செத்தாலும், அவனுடைய சாவுக்கு நான் காவல்காரனைத்தான்
பொறுப்பாளி ஆக்குவேன்.'[d]

7 மனிதகுமாரனே, இஸ்ரவேல் ஜனங்களுக்கு நான் உன்னைக் காவல்கா
ரனாக நியமித்திருக்கிறேன். என்னிடமிருந்து எச்சரிப்பு செய்தியைக் கேட்ட
தும் நீ அதை அவர்களிடம் சொல்ல வேண்டும்.[e] **8** பொல்லாதவன் ஒரு
வன் கண்டிப்பாகச் சாவான்[f] என்று நான் சொல்லும்போது, கெட்ட
வழியைவிட்டு அவன் திருந்துவதற்காக நீ அவனை எச்சரிக்க வேண்
டும். நீ அவனை எச்சரிக்காவிட்டால், அவன் செய்த குற்றத்துக்காக அவன்
செத்தாலும்[g] அவனுடைய சாவுக்கு உன்னைத்தான் பொறுப்பாளி ஆக்கு
வேன். **9** நீ பொல்லாதவனை எச்சரித்தும், அவன் கெட்ட வழியைவிட்டுத்
திருந்தவில்லை என்றால், அவன் செய்த குற்றத்துக்காக அவன் சாவான்.[h]
ஆனால், உன்னுடைய உயிரை நீ காப்பாற்றிக்கொள்வாய்.[i]

10 மனிதகுமாரனே, நீ இஸ்ரவேல் ஜனங்களிடம் இப்படிச் சொல்: '"எங்
கள் குற்றங்களும் பாவங்களும் பெரிய பாரமாக இருப்பதால் நாங்கள் வாடி
வதங்குகிறோமே,[j] நாங்கள் எப்படி உயிர்பிழைக்க முடியும்?"[k] என்று நீங்கள்
கேட்கிறீர்கள். **11** உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
"என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* பொல்லாதவன் சாக வேண்
டும் என்று நான் ஆசைப்படுவதே இல்லை.#[l] அவன் கெட்ட வழிகளைவிட்
டுத் திருந்தி[m] உயிர்வாழ வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்.[n] அத
னால் இஸ்ரவேல் ஜனங்களே, திருந்தி வாழுங்கள். கெட்ட வழிகளைவிட்டுத்
திருந்தி வாழுங்கள்.[o] நீங்கள் ஏன் சாக வேண்டும்?"'[p]

12 மனிதகுமாரனே, உன்னுடைய ஜனங்களிடம் இப்படிச் சொல்: 'நீதி
மான் ஒருவன் கெட்டது செய்ய ஆரம்பித்தால் அவன் அதுவரை செய்த
நீதியான காரியங்கள் அவனைக் காப்பாற்றாது.[q] அதேபோல், பொல்லா
தவன் ஒருவன் கெட்ட வழியைவிட்டுத் திருந்தினால், அவன் அது
வரை செய்திருந்த கெட்ட காரியங்களுக்காகச் சாக மாட்டான்.[r] நீதிமான்
பாவம் செய்தால், அவன் அதுவரை செய்திருந்த நீதியான காரியங்களுக்கா
கத் தொடர்ந்து உயிர்வாழ மாட்டான்.[s] **13** நீதிமான் ஒருவனிடம், "நீ கண்
டிப்பாக உயிர்வாழ்வாய்" என்று நான் சொல்லும்போது, அவன் செய்த நீதி
யான காரியங்கள் அவனைக் காப்பாற்றும் என்று நினைத்து அவன்
கெட்டது* செய்ய ஆரம்பித்தால்,[t] அவன் செய்த எந்த நீதியான

33:4 *வே.வா., "இரத்தப்பழிக்கு." **33:11** *வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." #வே.வா., "கெட்டவனுடைய சாவில் நான் சந்தோஷப்படுவதில்லை." **33:13** *வே.வா., "அநியாயம்."

அதி. 33
a எரே 6:17, சக 1:4
b எசே 3:19, அப் 18:6
c ஏசா 56:10
d எசே 3:18
e ஏசா 21:8, எரே 1:17, எசே 3:17
f ஏசா 3:11, எசே 18:4
g நீதி 11:21
h நீதி 15:10
i எசே 3:19, அப் 18:6
j லேவி 26:39, ஏசா 64:6, எசே 24:23
k எசே 37:11
l எசே 18:23, 1தீ 2:3, 4
m ஏசா 31:6, லூ 15:10
n சங் 130:7, 8
o ஏசா 55:7, எரே 3:22, எரே 25:5, அப் 3:19
p எசே 18:31, 2பே 3:9
q எசே 3:20, எசே 18:24
r 1ரா 8:48, 50, எசே 18:21
s எசே 18:26
t 2பே 2:20

காரியத்தையும் நான் நினைத்துப் பார்க்க மாட்டேன். அவனுடைய குற்றத்
துக்காக அவன் செத்துப்போவான்.[a]
14 பொல்லாதவன் ஒருவனிடம், “நீ கண்டிப்பாகச் சாவாய்” என்று நான்
சொல்லும்போது, அவன் பாவம் செய்வதை விட்டுவிட்டு நியாயமாகவும்
நீதியாகவும் நடக்க ஆரம்பிக்கலாம்.[b] **15** அடமானமாக வாங்கியதையும்
கொள்ளையடித்ததையும் திருப்பிக் கொடுக்கலாம்.[c] கெட்ட காரியம் எதை
யும் செய்யாமல், வாழ்வளிக்கிற சட்டதிட்டங்களின்படி நடக்கலாம். அப்
போது, அவன் கண்டிப்பாக உயிர்வாழ்வான்.[d] அவன் சாக மாட்டான்.
16 முன்பு செய்த எந்தப் பாவத்துக்காகவும் அவன் தண்டிக்கப்பட மாட்
டான்.[e] நியாயமாகவும் நீதியாகவும் நடப்பதால் அவன் கண்டிப்பாக உயிர்
வாழ்வான்.’[f]
17 ஆனால் உன்னுடைய ஜனங்கள், ‘யெகோவா செய்வது அநியாயம்’
என்று சொல்கிறார்கள். உண்மையில், அவர்கள் செய்வதுதான் அநியாயம்.
18 நீதிமான் ஒருவன் நீதியான வழியை விட்டுவிட்டு கெட்டது செய்
தால் அவன் சாக வேண்டும்.[g] **19** ஆனால் பொல்லாதவன் ஒருவன் கெட்
டது செய்வதை விட்டுவிட்டு நியாயமாகவும் நீதியாகவும் நடக்க ஆரம்பித்
தால், அவன் தொடர்ந்து உயிர்வாழ்வான்.[h]
20 ஆனால் நீங்கள், ‘யெகோவா செய்வது அநியாயம்’[i] என்று சொல்கி
றீர்கள். இஸ்ரவேல் ஜனங்களே, அவரவருடைய செயலுக்கு ஏற்றபடி அவ
ரவருக்கு நான் தீர்ப்பு கொடுப்பேன்” என்றார்.
21 நாங்கள் சிறையிருப்பிலிருந்த 12-ஆம் வருஷம், 10-ஆம் மாதம்,
ஐந்தாம் நாளில், எருசலேமிலிருந்து ஒருவன் தப்பித்து வந்து,[j] “நகரம் அழிந்
துவிட்டது!”[k] என்று என்னிடம் சொன்னான்.
22 அவன் வருவதற்கு முந்தின நாள் சாயங்காலம், நான் யெகோவா
வின் சக்தியால் நிரப்பப்பட்டேன்.* காலையில் அவன் என்னிடம் வருவ
தற்கு முன்பு அவர் என் வாயைத் திறந்திருந்தார். அதனால், நான் மவுன
மாக இல்லாமல் வாய் திறந்து பேசினேன்.[l]
23 அப்போது யெகோவா என்னிடம், **24** “மனிதகுமாரனே, பாழாக்கப்
பட்ட நகரத்தில் இருக்கிற ஜனங்கள்,[m] ‘ஆபிரகாம் ஒரே ஆளாக இந்தத்
தேசத்தைச் சொந்தமாக்கிக்கொண்டார்.[n] நாம் இத்தனை பேர் இருக்கிறோம்.
கண்டிப்பாக இந்தத் தேசம் நமக்குத்தான் சொந்தம்’ என்று இஸ்ரவேல்
தேசத்தைப் பற்றிச் சொல்கிறார்கள்.
25 அதனால் நீ அவர்களிடம், ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: “நீங்கள் இறைச்சியை இரத்தத்தோடு சாப்பிடுகிறீர்
கள்,[o] அருவருப்பான* சிலைகளைக் கும்பிடுகிறீர்கள், கொலைக்குமேல்
கொலை செய்கிறீர்கள்.[p] இத்தனையும் செய்துவிட்டு தேசத்தைச் சொந்
தம் கொண்டாடுகிறீர்களோ? **26** நீங்கள் உங்களுடைய வாளை நம்புகிறீர்
கள்,[q] அருவருப்பான காரியங்களைச் செய்கிறீர்கள், அடுத்தவருடைய
மனைவியோடு முறைகேடான உறவு வைக்கிறீர்கள்.[r] இத்தனையும் செய்து
விட்டு தேசத்தைச் சொந்தம் கொண்டாடுகிறீர்களோ?”’[s] என்று கேள்.

33:22 *நே.மொ., “யெகோவாவின் கை என்மேல் வந்தது.” **33:25** *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.

அதி. 33
a எசே 18:4
b ஏசா 55:7, எசே 18:21, மீ 6:8
c யாத் 22:26, லேவி 6:2, 4, எசே 22:29
d லேவி 18:5, எசே 18:27
e ஏசா 1:18
f எசே 20:11
g எபி 10:38, 2பே 2:20
h எசே 18:27
i எசே 18: 25, 29
j எசே 24: 25-27
k 2ரா 25:4, 2நா 36:17, எரே 39:2
l எசே 3:26
m எரே 39:10, எசே 36:4
n ஆதி 12:7
o ஆதி 9:4, லேவி 17:12
p எசே 22:6
q செப் 3:3
r எரே 5:8
s உபா 4:26, யோசு 23:15

27 நீ அவர்களிடம், 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: "என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* பாழாக்கப்பட்ட நக
ரத்தில் இருக்கிற ஜனங்கள் வாளுக்குப் பலியாவார்கள். வெட்டவெளியில்
இருக்கிறவர்களை நான் காட்டு மிருகங்களுக்கு இரையாக்குவேன். கோட்
டைகளிலும் குகைகளிலும் இருக்கிறவர்கள் கொள்ளைநோயினால் சாவார்
கள்.[a] **28** நான் முழு தேசத்தையும் பாழாக்கி, வெறும் பொட்டல் காடாக்கு
வேன்.[b] அதன் ஆணவம் அடக்கப்படும். இஸ்ரவேலின் மலைகள் மனுஷ
நடமாட்டமே இல்லாமல் வெறிச்சோடிப்போகும்.[c] **29** ஜனங்கள் செய்த
அருவருப்பான காரியங்களுக்காக[d] நான் முழு தேசத்தையும் பாழாக்கி,
வெறும் பொட்டல் காடாக்கும்போது,[e] நான் யெகோவா என்று அவர்கள்
தெரிந்துகொள்வார்கள்"' என்று சொல்.

30 மனிதகுமாரனே, உன்னுடைய ஜனங்கள் சுவர்களுக்குப் பக்கத்திலும்
வீட்டு வாசல்களிலும் நின்றுகொண்டு உன்னைப் பற்றிப் பேசுகிறார்கள்.[f]
அவர்கள் ஒருவரிடம் ஒருவர், 'யெகோவா என்ன செய்தி சொல்கிறாரென்று
கேட்கலாம், வாருங்கள்' என்கிறார்கள். **31** அவர்கள் வழக்கம்போல் உன்
முன் திரண்டு வந்து உட்காருவார்கள். நீ சொல்லும் வார்த்தைகளைக் கேட்
பார்கள், ஆனால் அதன்படி செய்ய மாட்டார்கள்.[g] அவர்களுடைய வாய்
உன்னைப் புகழ்ந்துதள்ளும், ஆனால் அவர்களுடைய நெஞ்சம் அநியாய
மாக லாபம் சம்பாதிக்கத்தான் துடிக்கும். **32** இதோ! நரம்பிசைக் கரு
வியை இனிமையாக வாசித்து, அழகான குரலில் காதல் பாட்டுப் பாடுகிற
வனைப் போல நீ அவர்களுக்குத் தெரிகிறாய். அவர்கள் நீ சொல்வதைக்
காதால் கேட்பார்கள், ஆனால் யாரும் அதன்படி செய்ய மாட்டார்கள்.
33 நீ சொல்வது கண்டிப்பாக நடக்கும். அது நடக்கும்போது அவர்கள் நடு
வில் ஒரு தீர்க்கதரிசி இருந்தார் என்று தெரிந்துகொள்வார்கள்"[h] என்றார்.

34 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** "மனிதகுமாரனே, இஸ்ர
வேலின் மேய்ப்பர்களுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் சொல். அவர்
களிடம் இந்தச் செய்தியைச் சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: "இஸ்ரவேலின் மேய்ப்பர்களுக்குக் கேடுதான் வரும்![i]
அவர்கள் தங்களையே மேய்த்துக்கொண்டு இருக்கிறார்கள்! ஆனால்,
மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்க வேண்டாமா?[j] **3** நீங்கள் கொழுப்பான
தைச் சாப்பிடுகிறீர்கள், ஆட்டுமயிரை உடுத்துகிறீர்கள், புஷ்டியான மிருகத்
தைத் தேடிப்பிடித்து வெட்டுகிறீர்கள்.[k] ஆனால், உங்கள் மந்தையை மேய்ப்
பதில்லை.[l] **4** துவண்டுபோனதை நீங்கள் தெம்பாக்கவில்லை, நோய்
பிடித்ததைக் குணமாக்கவில்லை, காயப்பட்டதுக்குக் கட்டு போடவில்லை,
வழிமாறிப்போனதைக் கண்டுபிடித்துக் கொண்டுவரவில்லை, தொலைந்து
போனதைத் தேடிப்போகவில்லை.[m] அதற்குப் பதிலாக, கொடூரமாகவும்
காட்டுத்தனமாகவும் அவற்றை அடக்கி ஆண்டீர்கள்.[n] **5** மேய்ப்பன் இல்
லாததால் அவை சிதறிப்போயின.[o] அவை நாலாபக்கமும் சிதறிப்போய்க்
காட்டு மிருகங்களுக்கு இரையாகிவிட்டன. **6** என்னுடைய ஆடுகள்
எல்லா மலைகளிலும் உயரமான எல்லா குன்றுகளிலும் அலைந்து திரிந்தன.
அவை பூமியின் எல்லா பக்கத்திலும் சிதறிப்போயின. அவற்றைத் தேடிக்
கண்டுபிடிக்க யாரும் போகவில்லை.

33:27 * வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சய
மாகச் சொல்கிறேன்."

அதி. 33
a எரே 42:22; எசே 5:12
b 2நா 36:20, 21; ஏசா 6:11; எரே 44:2
c எசே 6:3
d 2ரா 17:9; 2நா 36:14
e எரே 9:11; எரே 25:11
f எரே 18:18
g ஏசா 29:13; எரே 44:16, 17
h எசே 2:5

அதி. 34
i எரே 23:1; மீ 3:1, 11; செப் 3:3; சக 11:17; மத் 23:13
j ஏசா 40:11; யோவா 21:15
k 2ரா 21:16; எரே 22:17; மீ 3:3; சக 11:4, 5
l ஏசா 56:11
m லூ 15:4
n எரே 22:13
o எரே 23:2; எரே 50:6; மத் 9:36

7 அதனால் மேய்ப்பர்களே, யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள்:
8 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "என் உயிர்
மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* மேய்ப்பன் இல்லாததால் என்னுடைய
ஆடுகள் காட்டு மிருகங்களுக்கு இரையாகிவிட்டன. என் மேய்ப்பர்கள்
என் ஆடுகளைத் தேடிப்போகவில்லை, என் ஆடுகளை மேய்ப்பதற்குப்
பதிலாகத் தங்களையே மேய்த்துக்கொண்டு இருந்தார்கள்."' **9** அதனால்
மேய்ப்பர்களே, யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள்: **10** 'உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "நான் மேய்ப்பர்களுக்கு
விரோதமாக வருவேன். என்னுடைய ஆடுகளுக்காக அவர்களைத் தண்
டிப்பேன். அதன்பின் அவர்கள் என்னுடைய ஆடுகளை மேய்ப்பதற்கு விட
மாட்டேன்.[a] அவர்கள் தங்களைத் தாங்களே மேய்க்க மாட்டார்கள். அவர்
களுடைய வாயிலிருந்து என்னுடைய ஆடுகளைக் காப்பாற்றுவேன். இனி
என் ஆடுகள் அவர்களுக்கு இரையாகாது.'"

11 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "இதோ,
நானே போய் என்னுடைய ஆடுகளைத் தேடிக் கண்டுபிடிப்பேன்.
நானே அவற்றைக் கவனித்துக்கொள்வேன்.[b] **12** சிதறிப்போன ஆடுக
ளைக் கண்டுபிடித்து கவனித்துக்கொள்கிற மேய்ப்பனைப் போல நான்
என்னுடைய ஆடுகளைக் கவனித்துக்கொள்வேன்.[c] கார்மேகமும் கும்மி
ருட்டும் சூழ்ந்துகொண்ட நாளில்[d] சிதறிப்போன என் ஆடுகளை எல்லா
இடங்களிலிருந்தும் காப்பாற்றிக் கொண்டுவருவேன். **13** எல்லா தேசங்க
ளின் நடுவிலிருந்தும் ஜனங்களின் நடுவிலிருந்தும் அவற்றைக் கூட்டிக்
கொண்டு வருவேன். அவற்றின் தேசமான இஸ்ரவேலுக்குக் கொண்டுவந்து
மலைகளிலும் ஓடைகளின் கரைகளிலும் ஜனங்கள் குடியிருக்கிற பகுதிகளி
லும் மேய்ப்பேன்.[e] **14** பச்சைப்பசேல் என்றிருக்கும் நிலத்தில் அவற்றை
மேய்ப்பேன். இஸ்ரவேலின் உயரமான மலைகளில் அவை மேயும்.[f] நல்ல
மேய்ச்சல் நிலத்தில் அவை படுத்துக்கொள்ளும்.[g] இஸ்ரவேலின் மலைக
ளில் இருக்கிற அருமையான புல்வெளிகளில் அவை மேயும்."

15 "நானே என்னுடைய ஆடுகளை மேய்ப்பேன்.[h] நானே அவற்றைச்
சுகமாகப் படுத்துக்கொள்ள வைப்பேன்"[i] என்று உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்கிறார். **16** "தொலைந்துபோனதை நான் தேடிப்போ
வேன்,[j] வழிமாறிப்போனதைக் கண்டுபிடித்துக் கொண்டுவருவேன், காயப்
பட்டதுக்குக் கட்டு போடுவேன், துவண்டுபோனதைத் தெம்பாக்குவேன்.
ஆனால், கொழுத்ததையும் புஷ்டியானதையும் வெட்டிப்போடுவேன். அவற்
றுக்குச் சரியான தண்டனை கொடுப்பேன்."

17 'என்னுடைய ஆடுகளே, உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
வது இதுதான்: "ஒரு செம்மறியாட்டுக்கும் இன்னொரு செம்மறியாட்டுக்கும்
இடையே, செம்மறியாட்டுக் கடாக்களுக்கும் வெள்ளாட்டுக் கடாக்களுக்
கும் இடையே நான் தீர்ப்பு கொடுப்பேன்.[k] **18** நீங்கள் மேய்ச்சல் நிலத்தில்
மிகச் செழிப்பாக வளர்ந்திருக்கிற புல்லையெல்லாம் மேய்ந்தது போதாதா?
மற்ற புல்லையெல்லாம் மிதித்துப்போட வேண்டுமா? தெளிந்த தண்ணீரைக்
குடித்துவிட்டு மிச்சமிருக்கிற தண்ணீரை எதற்காகக் காலால் கலக்கிவிட்டீர்
கள்? **19** நீங்கள் மிதித்துப்போட்ட புல்வெளியில் இப்போது என்னுடைய

34:8 * வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமா
கச் சொல்கிறேன்."

அதி. 34
a எரே 52:24-27
b 1சா 17:34, 35; சங் 80:1; ஏசா 56:8
c ஏசா 40:11
d யோவே 2:1, 2; செப் 1:14, 15
e எரே 23:3; எசே 11:17; ஆமோ 9:14; மீ 7:14
f ஏசா 25:6; ஏசா 30:23; எரே 31:12
g எரே 33:12
h எரே 3:15
i செப் 3:13
j மீ 4:6; மத் 15:24; லூ 15:4
k சக 10:3

ஆடுகள் மேய வேண்டுமா? நீங்கள் காலால் கலக்கிவிட்ட தண்ணீரை என்
னுடைய ஆடுகள் குடிக்க வேண்டுமா?”

20 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா அவர்களிடம் சொல்
வது இதுதான்: “இதோ, நான் கொழுத்த ஆடுகளுக்கும் நோஞ்சான்
ஆடுகளுக்கும் இடையே தீர்ப்பு கொடுப்பேன். **21** உங்களுடைய பக்க
வாட்டினாலும் தோளினாலும் மற்ற ஆடுகளைத் தள்ளினீர்கள். நோய் பிடித்
தவற்றை உங்களுடைய கொம்புகளால் முட்டித்தள்ளி, தொலைதூர இடங்
களுக்குச் சிதறிப்போக வைத்தீர்கள். **22** நான் என்னுடைய ஆடுகளைக்
காப்பாற்றுவேன். அவர்கள் இனி யாருக்கும் இரையாக மாட்டார்கள்.[a] ஆடு
களுக்கு இடையே நான் தீர்ப்பு கொடுப்பேன். **23** அவர்களை மேய்க்க
ஒரு மேய்ப்பனை அனுப்புவேன்.[b] என் ஊழியனாகிய தாவீதுதான் அந்த
மேய்ப்பன்.[c] அவன் அவர்களை மேய்ப்பான். அவனே அவர்களை
மேய்த்து அவர்களுடைய மேய்ப்பனாக இருப்பான்.[d] **24** யெகோவா
வாகிய நான் அவர்களுடைய கடவுளாக இருப்பேன்.[e] என் ஊழியனாகிய
தாவீது அவர்களுடைய தலைவனாக இருப்பான்.[f] யெகோவாவாகிய
நானே இதைச் சொல்கிறேன்.

25 நான் அவர்களோடு சமாதான ஒப்பந்தம் செய்வேன்.[g] மூர்க்கமான
காட்டு மிருகங்களைத் தேசத்திலிருந்து ஒழித்துக்கட்டுவேன்.[h] அப்போது,
அவர்கள் வனாந்தரத்தில் பத்திரமாகத் தங்குவார்கள், காடுகளில் நிம்மதியா
கப் படுத்துக்கொள்வார்கள்.[i] **26** அவர்களும் என் மலையைச் சுற்றியுள்ள
இடமும் ஒரு ஆசீர்வாதமாக இருக்கும்படி செய்வேன்.[j] பருவ காலத்
தில் மழை பெய்ய வைப்பேன். ஆசீர்வாதங்களை மழை போலக் கொட்
டுவேன்.[k] **27** காட்டிலுள்ள மரங்கள் கனி கொடுக்கும். நிலம் விளைச்சல்
தரும்.[l] தேசத்தில் அவர்கள் பத்திரமாகக் குடியிருப்பார்கள். அவர்களு
டைய கழுத்திலுள்ள நுகத்தடிகளை நான் உடைத்து, அவர்களை அடிமைப்
படுத்திய ஆட்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றும்போது நான்
யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.[m] **28** இனி மற்ற
தேசங்களுக்கு அவர்கள் இரையாக மாட்டார்கள். காட்டு மிருகங்கள் அவர்
களைக் கடித்துக் குதறாது. அவர்கள் பத்திரமாகக் குடியிருப்பார்கள். அவர்
களைப் பயமுறுத்த யாரும் இருக்க மாட்டார்கள்.[n]

29 புகழ்பெற்ற ஒரு தோட்டத்தை நான் அவர்களுக்காகக் கொடுப்பேன்.
அவர்கள் இனி பஞ்சத்தால் சாக மாட்டார்கள்.[o] மற்ற தேசங்களால் அவமா
னப்பட மாட்டார்கள்.[p] **30** ‘அப்போது, யெகோவாவாகிய நான் அவர்களு
டைய கடவுளாக அவர்களோடு இருக்கிறேன் என்றும், இஸ்ரவேல் ஜனங்
களாகிய அவர்கள் என்னுடைய ஜனங்களாக இருக்கிறார்கள் என்றும்
தெரிந்துகொள்வார்கள்’[q] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
கிறார்.”’

31 ‘என் ஆடுகளே,[r] நான் அக்கறையோடு மேய்க்கிற என்னுடைய
ஆடுகளே, நீங்கள் சாதாரண மனுஷர்கள். நான் உங்கள் கடவுள்’ என்று
உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.”

35 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “மனிதகுமாரனே, சேயீர்[s]
மலைப்பகுதிக்கு நேராக உன் முகத்தை வைத்துக்கொண்டு
அதற்கு எதிராக இப்படித் தீர்க்கதரிசனம் சொல்:[t] **3** ‘உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்வது இதுதான்: “சேயீர் மலைப்பகுதியே, நான்

அதி. 34
a ஏசா 40:11; எரே 23:3
b யோவா 10:11; எபி 13:20; 1பே 5:4; வெளி 7:17
c ஏசா 11:1; எரே 30:9
d எசே 37:24; ஓசி 3:5
e யாத் 29:45; எரே 31:1
f சங் 2:6; ஏசா 9:6; எரே 23:5; மீ 5:2; லூ 1:32; அப் 5:31
g எசே 37:26
h லேவி 26:6; ஏசா 11:6-9; ஏசா 35:9; ஏசா 65:25; ஓசி 2:18
i எரே 23:6; எரே 33:16
j ஏசா 56:7; எசே 20:40; மீ 4:1
k ஆதி 12:2, 3; உபா 28:12; சக 8:13
l லேவி 26:4; சங் 85:12; ஏசா 35:2; எசே 36:30
m லேவி 26:13
n எரே 30:10; எரே 46:27
o எசே 36:29
p எசே 36:15
q எசே 37:27
r சங் 78:52; சங் 100:3; ஏசா 40:11

அதி. 35
s ஆதி 32:3; உபா 2:5
t எரே 49:8; புல 4:22; எசே 25:8, 9; ஒப 1

உன்னுடைய எதிரியாக வருவேன். உன்னைத் தண்டித்து, உன்னை வெறும்
பொட்டல் காடாக்குவேன்.[a] **4** உன்னுடைய நகரங்களை நாசமாக்குவேன்.
நீ வெறும் பொட்டல் காடாக ஆவாய்.[b] அப்போது, நான் யெகோவா என்று
தெரிந்துகொள்வாய். **5** நீ பல காலமாக இஸ்ரவேலர்கள்மேல் பகையைக்
காட்டிவருகிறாய்.[c] அவர்களுக்கு இறுதி தண்டனை கிடைத்த நாளிலே,[d]
அதாவது அழிவு நாளிலே, அவர்களை எதிரிகளிடம் பிடித்துக் கொடுத்து
வாளுக்குப் பலியாக்கினாய்."'

6 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: 'என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* இரத்தம் சிந்தப்படு
வதற்காக நான் உன்னைத் தயாராக்குவேன், சீக்கிரத்தில் உன் இரத்தம்
சிந்தப்படும்.[e] நீ இரத்தத்தை வெறுத்ததால் சீக்கிரத்தில் உன் இரத்தமே சிந்
தப்படும்.[f] **7** சேயீர் மலைப்பகுதியே, நான் உன்னைப் பொட்டல் காடாக்கு
வேன்.[g] உன் இடத்துக்கு வந்து போகிற எல்லாரையும் கொன்றுபோடுவேன்.
8 உன்னுடைய மலைகளைப் பிணங்களால் நிரப்புவேன். வாளால் வெட்
டப்பட்டவர்கள் உன்னுடைய குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் ஓடை
களிலும் கிடப்பார்கள். **9** நான் உன்னை அடியோடு அழித்துவிடுவேன்.
உன்னுடைய நகரங்களில் இனி யாரும் குடியிருக்க மாட்டார்கள்.[h] அப்
போது, நான் யெகோவா என்று நீ தெரிந்துகொள்வாய்.'

10 'இந்த இரண்டு தேசங்களும் எனக்குச் சொந்தமாகும், இரண்டை
யுமே நாங்கள் கைப்பற்றுவோம்'[i] என்று நீ சொன்னாய். யெகோவா அங்கே
இருந்தும் நீ அப்படிச் சொன்னாய். **11** அதனால், உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்வது இதுதான்: 'என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கி
றேன்,* நீ அவர்கள்மேல் பொறாமைப்பட்டு எந்தளவுக்கு வெறுப்பை
யும் கோபத்தையும் காட்டினாயோ அந்தளவுக்கு நான் உனக்குப் பதிலடி
கொடுப்பேன்.[j] உன்னைத் தண்டிக்கும்போது, நான் யார் என்று அவர்களுக்
குக் காட்டுவேன். **12** நீ இஸ்ரவேலின் மலைகளுக்கு எதிராகத் திமிரோடு
பேசினாய். "அவை பாழாக்கப்பட்டன, நமக்கு இரையாகக் கொடுக்கப்
பட்டன" என்று சொன்னாய். இதையெல்லாம் யெகோவாவாகிய நான்
கேட்டேன் என்று அப்போது நீ தெரிந்துகொள்வாய். **13** நீ எனக்கு எதி
ராக ஆணவத்தோடு வாய்மூடாமல் பேசிக்கொண்டே இருந்தாய்.[k] அதை
யெல்லாம் நான் கேட்டேன்.'

14 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'நான்
உன்னை அழித்துப் பாழாக்கும்போது உலகமே சந்தோஷப்படும். **15** இஸ்
ரவேலர்களுடைய தேசம் பாழாக்கப்பட்டபோது நீ சந்தோஷப்பட்டாயே.
அதற்குத் தகுந்த பதிலடியை நான் கொடுப்பேன்.[l] சேயீர் மலைப்பகுதியே,
நீ பாழாகிப்போவாய். ஏதோம் முழுவதும் அழிந்து நாசமாகும்.[m] அப்போது,
நான் யெகோவா என்று எல்லாரும் தெரிந்துகொள்வார்கள்'" என்றார்.

36 "மனிதகுமாரனே, இஸ்ரவேலின் மலைகளைப் பற்றி இப்படித் தீர்க்க
தரிசனம் சொல்: 'இஸ்ரவேலின் மலைகளே, யெகோவாவின் செய்தி
யைக் கேளுங்கள். **2** உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: "எதிரி உங்களைப் பார்த்து, 'காலம்காலமாக இருக்கிற குன்றுகள்கூட
எங்களுக்குச் சொந்தமாகிவிட்டன' என்று ஏளனமாகச் சொல்கிறான்."'[n]

35:6, 11 * வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்ச
யமாகச் சொல்கிறேன்."

அதி. 35
a எசே 25:12, 13
b யோவே 3:19; மல் 1:3
c ஆதி 27:41; ஆமோ 1:11
d சங் 137:7; ஒப 10
e ஒப 15
f எசே 25:14
g எசே 25:13
h எரே 49:17, 18; எசே 25:13; மல் 1:4
i எசே 36:5; ஒப 13
j ஆமோ 1:11
k ஒப 3
l புல 4:21; ஒப 12, 15
m ஏசா 34:5; எசே 25:12, 13; எசே 36:5

அதி. 36
n எரே 49:1; எசே 35:10

அதி. 36
a உபா 28:37
1ரா 9:7
புல 2:15
தானி 9:16
b எரே 25:9
c சங் 79:4
எசே 34:28
d செப் 3:8
e ஒப 12
f எசே 25:12, 13
எசே 35:10, 11
ஆமோ 1:11
g சங் 74:10
சங் 123:4
h எரே 25:9
எரே 49:17
i ஏசா 44:23
ஏசா 51:3
எசே 36:30
j ஏசா 51:3
எரே 30:18, 19
ஆமோ 9:14
k சக 8:4
l எரே 31:27
m ஏசா 54:7
எரே 30:18
n ஆகா 2:9
o ஓசி 2:20
யோவே 3:17
p எரே 32:44
ஒப 17
q ஏசா 65:23

3 அதனால் நீ இப்படித் தீர்க்கதரிசனம் சொல்: 'உன்னதப் பேரரசராகிய
யெகோவா சொல்வது இதுதான்: "மற்ற தேசங்களைச் சேர்ந்தவர்கள் உங்க
ளைச் சொந்தமாக்கிக்கொள்ள நினைத்து, உங்களைப் பாழாக்கி, எல்லா பக்
கத்திலிருந்தும் தாக்கினார்கள். உங்களுக்கு எதிராக இல்லாததையும்
பொல்லாததையும் பேசினார்கள்.[a] **4** அதனால் இஸ்ரவேலின் மலைகளே,
உன்னதப் பேரரசராகிய யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள்! உன்ன
தப் பேரரசராகிய யெகோவா மலைகளுக்கும், குன்றுகளுக்கும், ஓடைகளுக்
கும், பள்ளத்தாக்குகளுக்கும், சுற்றியுள்ள தேசங்களால் சூறையாடப்பட்டு,
வெறுமையாக்கப்பட்டு,[b] கேலி செய்யப்பட்ட நகரங்களுக்கும் ஒரு செய்தி
யைச் சொல்கிறார்.[c] **5** உன்னதப் பேரரசராகிய யெகோவா அவற்றுக்குச்
சொல்வது இதுதான்: 'மற்ற தேசங்களுக்கும் ஏதோம் முழுவதுக்கும் எதிராக
நான் பயங்கர கோபத்தோடு* தீர்ப்பு சொல்வேன்.[d] ஏனென்றால், என்
னுடைய தேசத்தைச் சூறையாடவும் அதன் மேய்ச்சல் நிலங்களைக் கைப்
பற்றவும் அவர்கள் துடித்தார்கள். மிகுந்த ஏளனத்தோடும், தலைகால் புரி
யாத சந்தோஷத்தோடும்[e] என்னுடைய தேசத்தைச் சொந்தம் கொண்டாடி
னார்கள்.'"'[f]

6 அதனால், இஸ்ரவேல் தேசத்தைப் பற்றி நீ தீர்க்கதரிசனம் சொல்.
அதன் மலைகளுக்கும் குன்றுகளுக்கும் ஓடைகளுக்கும் பள்ளத்தாக்குக
ளுக்கும் இப்படிச் சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
வது இதுதான்: "தேசங்கள் உங்களை அவமானப்படுத்திவிட்டன. அதனால்,
நான் பயங்கர கோபத்தோடும் ஆக்ரோஷத்தோடும் அந்த ஜனங்களுக்குத்
தீர்ப்பு சொல்வேன்."'[g]

7 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'சுற்றியி
ருக்கிற தேசங்கள் உங்களை அவமானப்படுத்தியதால் அவை அவமானப்
படுத்தப்படும்[h] என்று என்மேல் ஆணையாகச் சொல்கிறேன். **8** ஆனால்
இஸ்ரவேலின் மலைகளே, நீங்கள் என்னுடைய ஜனங்களான இஸ்ரவேலர்
களுக்காகக் கிளைகள்விட்டு, கனி தருவீர்கள்.[i] ஏனென்றால், அவர்கள்
சீக்கிரத்தில் திரும்பி வருவார்கள். **9** நான் உங்களோடு இருக்கிறேன். உங்
களுக்குத் துணையாக இருப்பேன். நீங்கள் பயிர் செய்யப்படுவீர்கள், விதைக்
கப்படுவீர்கள். **10** உங்கள் ஜனங்களாகிய இஸ்ரவேல் ஜனங்கள் எல்லா
ரையும் நான் பெருகப் பண்ணுவேன். பாழாக்கப்பட்ட நகரங்கள் திரும்பக்
கட்டப்படும்.[j] அங்கே ஜனங்கள் குடியிருப்பார்கள்.[k] **11** உங்கள் ஜனங்க
ளைப் பெருக வைப்பேன். மிருகங்களையும் ஏராளமாக்குவேன்.[l] பழைய
படி ஜனங்களை உங்கள் நடுவில் குடியிருக்க வைப்பேன்.[m] முன்பை
விட அதிகமாக உங்களைச் செழித்தோங்க வைப்பேன்.[n] அப்போது, நான்
யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்.[o] **12** என் ஜனங்களாகிய இஸ்ர
வேலர்களை உங்கள் நடுவில் நடமாட வைப்பேன். அவர்கள் உங்களைச்
சொந்தமாக்கிக்கொள்வார்கள்.[p] நீங்கள் அவர்களுடைய சொத்தாவீர்கள்.
இனி ஒருபோதும் அவர்களுடைய பிள்ளைகளைப் பறிக்க மாட்டீர்கள்.'"[q]

13 "உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'அவர்கள்
உங்களிடம், "உங்கள் தேசம் ஜனங்களைக் கொன்று, பிள்ளைகளைப் பறிக்
கிற தேசம்" என்று சொல்வதால், **14** இனியும் நீங்கள் ஜனங்களைக் கொல்
லவோ பிள்ளைகளைப் பறிக்கவோ மாட்டீர்கள்' என்று உன்னதப்

36:5 * நே.மொ., "என் வைராக்கியத் தீயினால்."

பேரரசராகிய யெகோவா சொல்கிறார். **15** ‘இனி மற்ற தேசங்கள் உங்க
ளைக் கேவலமாகப் பேசுவதற்கோ கிண்டல் செய்வதற்கோ நான் விட மாட்
டேன்.[a] நீங்கள் இனி உங்கள் ஜனங்களைத் தடுக்கி விழவைக்க மாட்டீர்கள்’
என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்” என்றார்.

16 யெகோவா மறுபடியும் என்னிடம் இப்படிச் சொன்னார்: **17** “மனித
குமாரனே, இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய தேசத்தில் குடியிருந்த
போது கெட்ட வழியில் போய்க் கெட்ட காரியங்களைச் செய்து தேசத்தைத்
தீட்டுப்படுத்தினார்கள்.[b] அதனால், மாதவிலக்கு ஏற்பட்ட பெண்ணைப்
போல என்முன் அசுத்தமாக இருந்தார்கள்.[c] **18** அவர்கள் நிறைய
கொலைகள் செய்து, அருவருப்பான* சிலைகளை வணங்கி[d] தேசத்தைத்
தீட்டுப்படுத்தியதால் அவர்கள்மேல் என் கோபத்தைக் கொட்டினேன்.[e]
19 அவர்களை மற்ற தேசங்களின் நடுவிலும் ஜனங்களின் நடுவிலும் சித
றிப்போக வைத்தேன்.[f] அவர்கள் கெட்ட வழியில் போய் கெட்ட காரியங்
களைச் செய்ததற்காகச் சரியான தண்டனை கொடுத்தேன். **20** ஆனால்,
அவர்கள் சிதறிப்போன தேசங்களில் இருந்த ஜனங்கள் அவர்களைப்
பார்த்து, ‘இவர்கள் யெகோவாவின் ஜனங்களாம்! அவரே அவருடைய
தேசத்தைவிட்டு இவர்களைத் துரத்திவிட்டார்!’ என்று சொல்லி என்னுடைய
பரிசுத்தமான பெயரைக் களங்கப்படுத்தினார்கள்.[g] **21** இஸ்ரவேல் ஜனங்
கள் எங்கெல்லாம் சிதறிப்போனார்களோ அங்கெல்லாம் என்னுடைய
பெயரைக் கெடுத்தார்கள். ஆனால், நான் என்னுடைய பரிசுத்தமான பெயர்
மேல் அக்கறை காட்டுவேன்.”[h]

22 “அதனால், இஸ்ரவேல் ஜனங்களிடம் நீ இப்படிச் சொல்: ‘உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “இஸ்ரவேல் ஜனங்களே, நீங்
கள் சிதறிப்போன தேசங்களில் என்னுடைய பரிசுத்தமான பெயரைக்
கெடுத்தீர்களே. அந்தப் பெயருக்காகத்தான் நடவடிக்கை எடுக்கிறேனே
தவிர, உங்களுக்காக அல்ல.”’[i] **23** உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: ‘மற்ற ஜனங்களின் நடுவில் நீங்கள் கெடுத்த என்
னுடைய மகத்தான பெயரை நான் பரிசுத்தப்படுத்துவேன்.[j] நான் பரிசுத்த
மானவர் என்று உங்கள் மூலமாகக் காட்டுவேன். அதைப் பார்க்கும்
போது, நான் யெகோவா என்று அந்த ஜனங்கள் தெரிந்துகொள்வார்கள்.[k]
24 நீங்கள் சிதறிப்போன எல்லா தேசங்களிலிருந்தும் உங்களைக் கூட்
டிச்சேர்த்து, மறுபடியும் உங்கள் தேசத்துக்கே கொண்டுவருவேன்.[l]
25 உங்கள்மேல் சுத்தமான தண்ணீரைத் தெளிப்பேன். அப்போது நீங்கள்
சுத்தமாவீர்கள்.[m] அசுத்தமான பழக்கங்களினாலும் அருவருப்பான சிலைக
ளினாலும்[n] தீட்டுப்பட்டிருந்த உங்களை நான் முழுமையாகச் சுத்தமாக்கு
வேன்.[o] **26** நான் உங்களுக்குப் புதிய இதயத்தையும்[p] புதிய மனதை
யும் கொடுப்பேன்.[q] கல் போன்ற இதயத்தை[r] எடுத்துவிட்டு, மென்மையான
இதயத்தை* உங்களுக்குக் கொடுப்பேன். **27** என்னுடைய சக்தியை உங்
களுக்குக் கொடுத்து என்னுடைய விதிமுறைகளின்படி நடக்க வைப்பேன்.[s]
நீங்கள் என்னுடைய நீதித்தீர்ப்புகளைக் கடைப்பிடிப்பீர்கள். **28** உங்களு
டைய முன்னோர்களுக்கு நான் கொடுத்த தேசத்தில் குடியிருப்பீர்கள். நீங்

36:18 *இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.
36:26 *அதாவது, “கடவுளுடைய அறிவுரைகளைக் கேட்டு நடக்கிற இதயத்தை.”

அதி. 36
a ஏசா 54:4, ஏசா 60:14, மீ 7:8, செப் 2:8, செப் 3:19
b சங் 106:38, ஏசா 24:5, எரே 2:7, எரே 16:18
c லேவி 12:2, ஏசா 64:6
d எசே 23:37
e ஏசா 42:24, 25
f லேவி 26:38, எசே 22:15
g ஏசா 52:5, ரோ 2:24
h சங் 74:18, ஏசா 48:9, எசே 20:9
i சங் 106:7, 8
j ஏசா 5:16, எசே 20:41
k சங் 102:13-15
l உபா 30:3, ஏசா 43:5, எரே 23:3, எசே 34:13, ஓசி 1:11
m எண் 19:13, சங் 51:7
n எசே 6:4
o ஏசா 4:4, எரே 33:8
p எரே 32:39
q சங் 51:10, எசே 11:19, 20
r சக 7:12
s எரே 31:33

கள் என்னுடைய ஜனங்களாக இருப்பீர்கள், நான் உங்களுடைய கடவுளாக
இருப்பேன்.'[a]

29 'உங்களுடைய எல்லா அசுத்தத்திலிருந்தும் நான் உங்களை விடு
தலை செய்வேன். உங்களுக்காக ஏராளமான தானியத்தை விளைய வைப்
பேன். உங்கள் தேசத்தைப் பஞ்சத்தால் வாட்டியெடுக்க மாட்டேன்.[b]
30 மரங்களைக் காய்த்துக் குலுங்க வைப்பேன், வயல்களை அமோகமாக
விளைய வைப்பேன். நீங்கள் இனி ஒருபோதும் மற்ற ஜனங்களின் நடுவிலே
பஞ்சத்தால் வாடி அவமானப்பட மாட்டீர்கள்.[c] **31** நீங்கள் முன்பு செய்த
கெட்ட காரியங்களையெல்லாம் நினைத்துப் பார்ப்பீர்கள். நீங்கள் செய்த
குற்றங்களையும் அருவருப்பான காரியங்களையும் நினைத்து உங்களையே
அருவருப்பீர்கள்.'[d] **32** உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: 'இஸ்ரவேல் ஜனங்களே, நான் இதையெல்லாம் உங்களுக்காகச் செய்
யப்போகிறேன் என்று நினைக்காதீர்கள்.[e] நீங்கள் மோசமான காரியங்களைச்
செய்ததற்காக வெட்கப்படுங்கள், தலைகுனியுங்கள்.'

33 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'உங்
களுடைய குற்றங்களிலிருந்து நான் உங்களைச் சுத்தப்படுத்தும் நாளிலே,
ஜனங்களை மறுபடியும் நகரங்களில் குடியிருக்க வைப்பேன்.[f] பாழாக்கப்
பட்ட இடங்கள் திரும்பவும் கட்டப்படும்படி செய்வேன்.[g] **34** வருவோர்
போவோரெல்லாம் பார்க்கும்படி பாழாய்க் கிடந்த தேசத்தில் மறுபடியும்
பயிர் செய்யப்படும். **35** அப்போது ஜனங்கள், "பாழாக்கப்பட்ட தேசம்
ஏதேன் தோட்டத்தைப்[h] போல ஆகிவிட்டது. தரைமட்டமாகக் கிடந்த நக
ரங்கள் இப்போது கோட்டைகளாக நிற்கின்றன. பாழாக்கப்பட்டு வெறிச்சோ
டிப்போன நகரங்களில் இப்போது ஜனங்கள் குடியிருக்கிறார்கள்"[i] என்று
சொல்வார்கள். **36** தரைமட்டமானதை யெகோவாவாகிய நானே கட்டி
எழுப்பினேன் என்றும், பாழாக்கப்பட்ட நிலத்தை நானே பயிர்நிலமாக மாற்
றினேன் என்றும் உங்களைச் சுற்றியுள்ள மற்ற தேசங்கள் தெரிந்துகொள்
ளும். யெகோவாவாகிய நானே இதைச் சொன்னேன், நானே இதைச் செய்
தேன்.'[j]

37 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'தங்களை
மந்தைகள்போல் பெருக வைக்கும்படி இஸ்ரவேல் ஜனங்கள் என்னிடம்
கேட்பதற்கு நான் அனுமதிப்பேன். **38** பின்பு, பாழாக்கப்பட்ட நகரங்க
ளிலே ஜனங்களை மந்தைகள்போல் பெருக வைப்பேன். பரிசுத்தமானவர்க
ளின் கூட்டத்தைப் போலவும், பண்டிகை காலத்தில்[k] எருசலேமில் கூடுகிற
கூட்டத்தை* போலவும் அவர்கள் ஏராளமாக இருப்பார்கள்.[l] அப்போது,
நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.'"

37 நான் யெகோவாவின் சக்தியால் நிரப்பப்பட்டேன்.* யெகோவா
தன்னுடைய சக்தியால் என்னைத் தூக்கிக்கொண்டு போய் சமவெ
ளியின் நடுவில் விட்டார்.[m] அந்தச் சமவெளி முழுவதும் எலும்புகளா
கக் கிடந்தன. **2** அவர் என்னை அந்த எலும்புகளைச் சுற்றி நடக்க வைத்
தார். மிகவும் காய்ந்துபோன எலும்புகள்[n] அங்கே ஏராளமாகக் கிடப்பதைப்
பார்த்தேன். **3** அப்போது அவர் என்னிடம், "மனிதகுமாரனே, இந்த எலும்
புகளுக்கு உயிர் வருமா?" என்று கேட்டார். அதற்கு நான், "உன்னதப்

36:38 * அல்லது, "எருசலேமில் பலிக்காகக் கொண்டுவரப்பட்ட ஆட்டுமந்தைகளை."
37:1 * நே.மொ., "யெகோவாவின் கை என்மேல் வந்தது."

அதி. 36
a எரே 30:22; எசே 37:25, 27
b எசே 34:29
c எசே 34:27
d எஸ்றா 9:6; நெ 9:26; எரே 31:18; எசே 6:9
e உபா 9:5; தானி 9:19
f சக 8:8
g ஏசா 58:12; எரே 33:10, 11; ஆமோ 9:14
h ஆதி 2:8
i ஏசா 51:3
j எசே 28:26; எசே 37:14
k யாத் 23:17
l எரே 30:18, 19

அதி. 37
m வெளி 21:10
n எசே 37:11

பேரரசராகிய யெகோவாவே, அது உங்களுக்குத்தானே தெரியும்”[a] என்று
சொன்னேன். **4** அப்போது அவர், “இந்த எலும்புகளைப் பற்றித் தீர்க்கதரி
சனம் சொல். அவற்றைப் பார்த்து இப்படிச் சொல்: ‘காய்ந்துபோன எலும்பு
களே, யெகோவாவின் செய்தியைக் கேளுங்கள்:

5 எலும்புகளிடம் உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: “உங்களுக்குள் மூச்சுக்காற்று வரும்படி நான் செய்வேன். அப்போது,
நீங்கள் உயிர் அடைவீர்கள்.[b] **6** தசைநாண்களாலும் சதைகளாலும் உங்
களை மூடுவேன். உங்களைத் தோலால் போர்த்தி, உங்களுக்குள் மூச்
சுக்காற்றை வர வைப்பேன். நீங்கள் உயிர் அடைவீர்கள். அப்போது, நான்
யெகோவா என்று தெரிந்துகொள்வீர்கள்”’” என்றார்.

7 அவர் கட்டளை கொடுத்தபடியே நான் தீர்க்கதரிசனம் சொன்னேன்.
உடனே, எலும்புகள் ஒன்றோடு ஒன்று உரசிக்கொள்ளும் சத்தம் கேட்டது.
அவை ஒன்றோடு ஒன்று இணைந்தன. **8** பின்பு, தசைநாண்களும் சதைக
ளும் அவற்றை மூடின. தோல் அவற்றைப் போர்த்தியது. ஆனாலும்,
அவை மூச்சுக்காற்று இல்லாமல் கிடந்தன.

9 அப்போது அவர் என்னிடம், “மனிதகுமாரனே, நீ காற்றைப் பார்த்துத்
தீர்க்கதரிசனம் சொல். அதைப் பார்த்து இப்படிச் சொல்: ‘உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்வது இதுதான்: “காற்றே, கொல்லப்பட்ட இந்த ஜனங்
கள் உயிர் பெறுவதற்காக நீ நான்கு திசைகளிலிருந்தும் அவர்கள்மேல்
வீசு”’” என்றார்.

10 அவர் கட்டளை கொடுத்தபடியே நான் தீர்க்கதரிசனம் சொன்னேன்.
அப்போது, அவர்களுக்குள் மூச்சுக்காற்று வந்தது. அவர்கள் உயிர் பெற்று,
ஒரு மாபெரும் படை போல எழுந்து நின்றார்கள்.[c]

11 அப்போது அவர், “மனிதகுமாரனே, இந்த எலும்புகள் இஸ்ரவேல்
ஜனங்கள் எல்லாரையும் குறிக்கின்றன.[d] அவர்கள், ‘எங்களுடைய எலும்பு
கள் காய்ந்துவிட்டன, எங்களுக்கு நம்பிக்கையே போய்விட்டது,[e] நாங்கள்
ஒரேயடியாக ஒதுக்கித்தள்ளப்பட்டோம்’ என்று சொல்கிறார்கள்.
12 அதனால் நீ அவர்களிடம் இப்படித் தீர்க்கதரிசனம் சொல்: ‘உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “நான் உங்களுடைய கல்ல
றைகளைத் திறந்து,[f] அங்கிருந்து உங்களை எழுப்புவேன். என் ஜனங்களே,
உங்களை இஸ்ரவேல் தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு வருவேன்.[g]
13 என் ஜனங்களே, நான் உங்களுடைய கல்லறைகளைத் திறந்து, அங்கி
ருந்து உங்களை எழுப்பும்போது நான் யெகோவா என்று தெரிந்துகொள்
வீர்கள்.”’[h] **14** யெகோவா சொல்வது இதுதான்: ‘என்னுடைய சக்தியை
உங்களுக்குக் கொடுப்பேன். நீங்கள் உயிர் பெறுவீர்கள்.[i] உங்கள் தேசத்தி
லேயே உங்களைக் குடிவைப்பேன். அப்போது, யெகோவாவாகிய நானே
இதைச் சொன்னேன், நானே இதைச் செய்தேன் என்று தெரிந்துகொள்வீர்
கள்’” என்றார்.

15 யெகோவா மறுபடியும் என்னிடம், **16** “மனிதகுமாரனே, நீ ஒரு
கோலை எடுத்து அதில், ‘யூதாவுக்கும் அவனோடு இருக்கிற* இஸ்ரவேல்
ஜனங்களுக்கும்’[j] என்று எழுது. பின்பு இன்னொரு கோலை எடுத்து அதில்,
‘எப்பிராயீமைக் குறிக்கும் யோசேப்பின் கோலுக்கும், அவனோடு இருக்

37:16 * வே.வா., “அவனுடைய கூட்டாளிகளாக இருக்கிற.”

அதி. 37
a உபா 32:39
1சா 2:6
b ஆதி 2:7
எசே 37:14
c வெளி 11:11
d எசே 36:10
e ஏசா 49:14
f ஏசா 66:14
g எசே 11:17
ஆமோ 9:14
h சங் 126:2
i ஏசா 32:14, 15
எசே 36:27
j 2நா 15:9
2நா 30:11

கிற* இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருக்கும்'[a] என்று எழுது. **17** அதன்பின்,
இரண்டு கோலும் ஒரே கோலாக ஆகும்படி அவற்றைச் சேர்த்துப்
பிடி.[b] **18** 'இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று சொல்ல மாட்டீர்களா?'
என்று உன்னுடைய ஜனங்கள் கேட்டால், **19** நீ அவர்களிடம், 'உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: "நான் எப்பிராயீமின்
கையில் இருக்கிற கோலை, அதாவது யோசேப்பையும் அவரோடு இருக்
கிற இஸ்ரவேல் கோத்திரங்களையும் குறிக்கிற கோலை எடுத்து யூதாவின்
கோலோடு இணைப்பேன். அவற்றை ஒரே கோலாக்குவேன்.[c] அவை என்
கையில் ஒரே கோலாக இருக்கும்"' என்று சொல். **20** நீ எழுதிய கோல்
களை அவர்கள் பார்க்கும்படி உன் கையில் வைத்திரு.

21 பின்பு அவர்களிடம், 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது
இதுதான்: "இஸ்ரவேலர்களை அவர்கள் சிதறிப்போன தேசங்களிலிருந்து
கூட்டிக்கொண்டு வருவேன். நாலாபக்கத்திலிருந்தும் அவர்களைக் கூட்
டிச்சேர்த்து அவர்களுடைய தேசத்துக்குக் கொண்டுவருவேன்.[d] **22** இஸ்ர
வேலின் மலைகளில் அவர்களை ஒரே தேசமாக்குவேன்.[e] ஒரே ராஜா
அவர்களை ஆட்சி செய்வார்.[f] அவர்கள் இனி இரண்டு தேசங்களாக
இருக்க மாட்டார்கள். இரண்டு ராஜ்யங்களாகப் பிரிந்திருக்க மாட்டார்கள்.[g]
23 இனியும் அருவருப்பான* சிலைகளை வணங்கியோ, அருவருப்பான
காரியங்களைச் செய்தோ, குற்றங்கள் செய்தோ தங்களைத் தீட்டுப்படுத்த
மாட்டார்கள்.[h] அவர்கள் எனக்கு உண்மையாக இல்லாமல் எத்தனையோ
பாவங்கள் செய்திருந்தாலும் அதிலிருந்தெல்லாம் அவர்களை விடுவித்து
சுத்தப்படுத்துவேன். அவர்கள் என்னுடைய ஜனங்களாக இருப்பார்கள்,
நான் அவர்களுடைய கடவுளாக இருப்பேன்.[i]

24 என் ஊழியனாகிய தாவீது அவர்களுடைய ராஜாவாக இருப்பான்.[j]
அவர்கள் எல்லாருக்கும் ஒரே மேய்ப்பன்தான் இருப்பான்.[k] அவர்கள்
என்னுடைய நீதித்தீர்ப்புகளின்படி நடப்பார்கள், என்னுடைய சட்டதிட்டங்க
ளைக் கவனமாகக் கடைப்பிடிப்பார்கள்.[l] **25** என் ஊழியனாகிய யாக்கோ
புக்கு நான் கொடுத்த தேசத்திலே, உங்களுடைய முன்னோர்கள் வாழ்ந்த
அந்தத் தேசத்திலே,[m] அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் பிள்
ளைகளின் பிள்ளைகளும் என்றென்றும் வாழ்வார்கள்.[n] என் ஊழியனாகிய
தாவீது என்றென்றும் அவர்களுடைய தலைவனாக இருப்பான்.[o]

26 நான் அவர்களோடு சமாதான ஒப்பந்தம் செய்வேன்.[p] அது
என்றென்றும் நிலைத்திருக்கும். நான் அவர்களை நிலைநாட்டி, ஏராளமா
கப் பெருக வைப்பேன்.[q] என்னுடைய ஆலயத்தை அவர்களுக்கு நடுவில்
என்றென்றும் நிறுத்துவேன். **27** நான் அவர்களோடு தங்குவேன்.* நான்
அவர்களுடைய கடவுளாக இருப்பேன், அவர்கள் என்னுடைய ஜனங்க
ளாக இருப்பார்கள்.[r] **28** என்னுடைய ஆலயம் இஸ்ரவேலர்களின் நடு
வில் என்றென்றும் இருக்கும்போது, யெகோவாவாகிய நான் அவர்களைப்
புனிதப்படுத்துகிறேன் என்பதை எல்லா ஜனங்களும் தெரிந்துகொள்வார்
கள்"'[s] என்று சொல்" என்றார்.

அதி. 37
a 1ரா 11:31, 1ரா 12:20
b ஏசா 11:13, எரே 3:18
c எரே 50:4, சக 10:6
d உபா 30:3, ஏசா 11:12, எரே 16:14, 15, ஆமோ 9:14
e எரே 3:18, ஓசி 1:11
f ஆதி 49:10, சங் 2:6, ஏசா 9:6, எரே 23:5, லூ 1:32
g எசே 37:19, சக 10:6
h ஏசா 2:18, எசே 11:18, ஓசி 14:8, சக 13:2
i எரே 31:33, எசே 36:28
j எரே 23:5, எரே 30:9, ஓசி 3:5, லூ 1:32
k யோவா 10:16, 1பே 5:4
l உபா 30:8-10, எரே 32:39, எசே 36:27
m எரே 30:3
n ஏசா 60:21, யோவே 3:20, ஆமோ 9:15
o எசே 34:24, லூ 1:32
p எசே 34:25
q எரே 30:19, சக 8:5
r லேவி 26:12, எசே 11:19, 20, எசே 43:7, ஓசி 2:23, வெளி 21:3
s எசே 36:23

37:16 *வே.வா., "அவனுடைய கூட்டாளிகளாக இருக்கிற." **37:23** *இதற்கான எபிரெய வார்த்தை "சாணம்" என்ற வார்த்தையோடு தொடர்புடையதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. **37:27** *நே.மொ., "என் கூடாரம் அவர்களோடு இருக்கும்."

38 யெகோவா மறுபடியும் என்னிடம், **2** “மனிதகுமாரனே, மேசேக்
மற்றும் தூபாலின்[a] முக்கியத் தலைவனாகிய மாகோகு தேசத்தின்
கோகுவுக்கு நேராக[b] உன் முகத்தை வைத்துக்கொண்டு, அவனுக்கு எதிராக
இப்படித் தீர்க்கதரிசனம் சொல்:[c] **3** ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: “மேசேக் மற்றும் தூபாலின் முக்கியத் தலைவனாகிய
கோகுவே, நான் உன்னுடைய எதிரியாக வருவேன். **4** நான் உன்னை
எதிர்த்திசையில் திருப்பி, உன் வாயில் கொக்கிகளை மாட்டி,[d] உன்னுடைய
எல்லா படைகளோடும் குதிரைகளோடும் குதிரைவீரர்களோடும் வெளியே
வர வைப்பேன்.[e] உன் வீரர்கள் எல்லாரும் கம்பீரமாக உடை உடுத்திக்
கொண்டு, பெரிய கேடயங்களோடும் சிறிய கேடயங்களோடும் திரண்டு
வருவார்கள். அவர்கள் எல்லாருமே வாள் ஏந்திய வீரர்கள். **5** பெர்சியர்
கள், எத்தியோப்பியர்கள், பூத்தியர்கள்[f] எல்லாரும் சிறிய கேடயங்க
ளோடும் தலைக்கவசங்களோடும் அவர்களுடன் இருக்கிறார்கள். **6** உன்
னோடு கோமரும் கோமருடைய எல்லா படைவீரர்களும், வடகோடியில்
இருக்கிற தொகர்மா[g] வம்சத்தாரும் அவர்களுடைய எல்லா படைவீரர்க
ளும் ஒரு பெரிய கூட்டமாகத் திரண்டிருக்கிறார்கள்.[h]

7 நீ தயாராக இரு. உன்னோடு திரண்டிருக்கிற எல்லா படைகளையும்
தயார்படுத்து. நீதான் அந்தப் படைகளின் தலைவனாக இருப்பாய்.

8 பல நாட்களுக்குப் பிறகு நான் உன்மேல் கவனத்தைத் திருப்புவேன்.*
கடைசி வருஷங்களிலே, வாளின் பயங்கர தாக்குதலிலிருந்து மீண்ட
ஜனங்களுடைய தேசத்தை நீ தாக்குவாய். அந்த ஜனங்கள், வெகு கால
மாகப் பாழாய்க் கிடந்த இஸ்ரவேலின் மலைகளுக்கு மறுபடியும் கொண்டு
வரப்பட்டவர்கள். அவர்கள் மற்ற தேசங்களின் நடுவிலிருந்து கூட்டிச் சேர்க்
கப்பட்டு, பாதுகாப்பாகக் குடியிருக்கிறவர்கள்.[i] **9** நீ ஒரு புயலைப்
போல அவர்களுக்கு எதிராக வருவாய். நீயும் உன்னுடைய எல்லா படைவீ
ரர்களும் ஏராளமான ஆட்களும் அவர்களுடைய தேசத்தை மேகம் போல
மூடுவீர்கள்.”’

10 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘அந்த
நாளில் உன்னுடைய உள்ளத்தில் சில யோசனைகள் வரும். நீ ஒரு
சதித்திட்டம் தீட்டி, **11** “மதில்கள் இல்லாத ஊர்களின்* தேசத்துக்கு எதி
ராக நான் படைதிரண்டு போவேன்.[j] அங்கே தொல்லை இல்லாமல் பாது
காப்பாக வாழ்கிற ஜனங்களுக்கு விரோதமாகப் போர் செய்வேன். அவர்
கள் எல்லாருமே மதில்களோ கதவுகளோ தாழ்ப்பாள்களோ இல்லாத
ஊர்களில் வாழ்கிறவர்கள்” என்று சொல்வாய். **12** ஒருகாலத்தில் பாழாய்க்
கிடந்த அவர்களுடைய இடங்களைத் தாக்கவும் அங்கிருக்கிற எல்லாவற்
றையும் கைப்பற்றவும் நீ நினைப்பாய்.[k] அவர்கள் மற்ற தேசங்களிலிருந்து
கூட்டிச் சேர்க்கப்பட்டவர்கள்.[l] நிறைய சொத்துப்பத்துகளைச் சேர்த்து வைக்
கிறவர்கள்.[m] பூமியின் நடுப்பகுதியில் குடியிருக்கிறவர்கள்.

13 தர்ஷீசின்[n] வியாபாரிகளான சேபாவும்[o] தேதானும்[p] அவர்க
ளுடைய எல்லா போர்வீரர்களும்* உன்னைப் பார்த்து, “எல்லாவற்றையும்
சூறையாடிக்கொண்டு போவதற்காக அந்தத் தேசத்தைத் தாக்குகிறாயா?
வெள்ளியையும் தங்கத்தையும் சொத்துப்பத்துகளையும் இஷ்டம்போல்

38:8 *வே.வா., “உன்னை வர வைப்பேன்.” **38:11** *வே.வா., “கிராமங்களின்.”
38:13 *வே.வா., “இளம் சிங்கங்களும்.”

அதி. 38
a ஏசா 66:19
எசே 27:13
எசே 32:26
b எசே 38:15
c எசே 39:1
d 2ரா 19:20, 28
எசே 29:3, 4
எசே 39:2
e எசே 38:15
f 1நா 1:8
g ஆதி 10:2, 3
எசே 27:14
h எசே 39:2
i எரே 23:5, 6
எசே 28:25, 26
எசே 34:25
j யாத் 15:9
k எரே 33:12
l சக 10:8
m ஏசா 60:5
ஏசா 61:6
n எசே 27:25
o எசே 27:22
p எசே 27:15

வாரிக்கொண்டு போவதற்காக உன்னுடைய படைகளைத் திரட்டியிருக்கி
றாயா?" என்று கேட்பார்கள்.

14 அதனால் மனிதகுமாரனே, நீ கோகுவிடம் இந்தத் தீர்க்கதரிச
னத்தைச் சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
"அந்த நாளில், என்னுடைய ஜனங்களான இஸ்ரவேலர்கள் பாதுகாப்பாக
வாழ்வதை நீ நிச்சயம் கவனிப்பாய்.[a] **15** வடகோடியில் இருக்கிற உன்னு
டைய இடத்திலிருந்து நிறைய ஆட்களோடு நீ வருவாய்.[b] அவர்கள்
எல்லாருமே மாபெரும் படையாகவும் பெரிய கூட்டமாகவும் குதிரைக
ளின் மேல் வருவார்கள்.[c] **16** தேசத்தை மூடுகிற மேகம் போல நீ என்னு
டைய ஜனங்களான இஸ்ரவேலர்களுக்கு எதிராக வருவாய். கடைசி நாட்
களில் நான் உன்னை என்னுடைய தேசத்துக்கு எதிராக வர வைப்பேன்.[d]
கோகுவே, மற்ற ஜனங்களுக்குமுன் நான் பரிசுத்தமானவர் என்று உன் மூல
மாகக் காட்டுவேன். அப்போது, நான் யார் என்று அவர்கள் தெரிந்துகொள்
வார்கள்."'[e]

17 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'உன்னைப்
பற்றித்தானே என் ஊழியர்களான இஸ்ரவேல் தீர்க்கதரிசிகளின் மூலம் பல
காலத்துக்கு முன்னாலேயே சொன்னேன்? நீ இஸ்ரவேலர்களுக்கு எதிராக
வருவாய் என்று அவர்களும் பல வருஷங்களாகத் தீர்க்கதரிசனம் சொன்
னார்களே.'

18 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'இஸ்
ரவேல் தேசத்தை கோகு தாக்கப்போகிற அந்த நாளில் என்னுடைய
கோபம் நெருப்பாகப் பற்றியெரியும்.[f] **19** நான் பயங்கர கோபத்தோடும்
ஆக்ரோஷத்தோடும் தீர்ப்பு சொல்வேன். அந்த நாளில், இஸ்ரவேல் தேசத்
தில் பெரிய நிலநடுக்கம் ஏற்படும். **20** எனக்கு முன்னால் கடல் மீன்களும்,
வானத்துப் பறவைகளும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும் நடு
நடுங்கும். உலகத்திலுள்ள எல்லா மனுஷர்களும் நடுங்குவார்கள். மலைகள்
தரைமட்டமாகும்.[g] செங்குத்தான பாறைகள் சரிந்து விழும். எல்லா சுவர்க
ளும் இடிந்து விழும்.'

21 'என்னுடைய எல்லா மலைகளிலும் கோகுவுக்கு எதிராக ஒரு
வாளை வர வைப்பேன்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்
கிறார். 'வீரர்கள் தங்கள் படையிலுள்ள வீரர்களையே வாளால் வெட்டுவார்
கள்.[h] **22** நான் அவனுக்கும் அவனுடைய படைவீரர்களுக்கும் எதிராகக்
கொள்ளைநோயையும் சாவையும் வர வைத்து அவர்களைத் தண்டிப்
பேன்.[i] நான் அவன்மேலும் அவனுடைய படைகளின்மேலும் அவனுடைய
பெரிய கூட்டத்தின்மேலும்[j] பலத்த மழையையும் ஆலங்கட்டி* மழையை
யும்[k] நெருப்பையும்[l] கந்தகத்தையும் கொட்டுவேன்.[m] **23** எல்லா தேசங்க
ளுக்கு முன்பாகவும் நான் என்னை மகிமைப்படுத்துவேன். நான் பரிசுத்த
மானவர் என்று நிரூபிப்பேன். நான் யார் என்று காட்டுவேன். அப்போது,
நான் யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள்'" என்றார்.

39 அவர் என்னிடம், "மனிதகுமாரனே, கோகுவுக்கு எதிராக[n] நீ இப்ப
டித் தீர்க்கதரிசனம் சொல்: 'உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: "மேசேக் மற்றும் தூபாலின்[o] முக்கியத் தலைவனாகிய

38:22 * அதாவது, "பனிக்கட்டி."

அதி. 38
a எசே 38:8
b எசே 39:2
c செப் 3:8
d யோவே 3:2
e யாத் 14:4; 2ரா 19:17-19; சங் 83:17, 18; எசே 39:21
f யோவே 3:16; நாகூ 1:2; சக 2:8
g நாகூ 1:5
h 2நா 20:23; ஆகா 2:22; சக 14:13
i சக 14:12
j எரே 25:31
k யாத் 9:22; யோசு 10:11
l ஏசா 30:30
m ஆதி 19:24

அதி. 39
n எசே 38:2
o எசே 27:13; எசே 32:26

கோகுவே, நான் உன்னுடைய எதிரியாக வருவேன். **2** நான் உன்னை
எதிர்த்திசையில் திருப்பி, வடகோடியிலிருந்து இஸ்ரவேலின் மலைகளுக்கு
இழுத்து வருவேன்.[a] **3** உன்னுடைய இடது கையில் இருக்கிற வில்லைத்
தட்டிவிட்டு, உன்னுடைய வலது கையில் இருக்கிற அம்புகளைக் கீழே விழ
வைப்பேன். **4** நீயும் உன்னுடைய எல்லா படைகளும் உன்னோடு இருக்
கிற ஆட்களும் இஸ்ரவேலின் மலைகள்மேல் விழுவீர்கள்.[b] பிணம் தின்
னும் எல்லா விதமான பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் உன்னை
இரையாக்குவேன்.”’[c]

5 ‘நீ வெட்டவெளியில் விழுவாய்.[d] இதை நானே சொல்கிறேன்’ என்று
உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

6 ‘மாகோகுவுக்கும் தீவுகளில் பாதுகாப்பாகக் குடியிருக்கிறவர்களுக்
கும் எதிராக நான் நெருப்பை அனுப்புவேன்.[e] அப்போது, நான் யெகோவா
என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள். **7** என்னுடைய ஜனங்களான
இஸ்ரவேலர்களின் நடுவில் என் பரிசுத்த பெயரை மகிமைப்படுத்துவேன்.
என்னுடைய பரிசுத்தமான பெயரைக் கெடுக்க இனி யாரையும் விட
மாட்டேன். நான் யெகோவா என்றும் இஸ்ரவேலின் பரிசுத்தமான கடவுள்[f]
என்றும் எல்லா தேசத்தாரும் தெரிந்துகொள்வார்கள்.’[g]

8 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘இது நடக்
கும், நடந்தே தீரும். இந்த நாளைப் பற்றித்தான் நான் சொன்னேன்.
9 இஸ்ரவேலின் நகரங்களில் வாழ்கிறவர்கள் சிறிய கேடயங்கள், பெரிய
கேடயங்கள், வில்லுகள், அம்புகள், தடிகள்,* ஈட்டிகள் என எல்லா ஆயு
தங்களையும் கொண்டுபோய் நெருப்பில் போடுவார்கள். ஏழு வருஷங்க
ளுக்கு அவற்றை விறகாகப் பயன்படுத்துவார்கள்.[h] **10** அவர்கள் காட்டுக்
குப் போய் விறகுகளைப் பொறுக்க வேண்டியிருக்காது. ஏனென்றால், அந்த
ஆயுதங்களையே விறகுகளாகப் பயன்படுத்துவார்கள்.’

‘அவர்கள் தங்களைச் சூறையாடியவர்களைச் சூறையாடுவார்கள். தங்க
ளைக் கொள்ளையடித்தவர்களைக் கொள்ளையடிப்பார்கள்’ என்று உன்ன
தப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

11 ‘அந்த நாளிலே, கோகுவைப்[i] புதைக்க இஸ்ரவேலில் நான்
ஒரு இடத்தைத் தருவேன். அது கடலுக்குக் கிழக்கே பயணம் செய்கிறவர்
களின் பள்ளத்தாக்கில் இருக்கும். பயணம் செய்கிறவர்களின் வழியை
அது அடைக்கும். அங்கேதான் கோகுவையும் அவனுடைய எல்லா கூட்
டத்தையும் புதைப்பார்கள். அதை ஆமோன்-கோகுவின் பள்ளத்தாக்கு*[j]
என்று அழைப்பார்கள். **12** இஸ்ரவேல் ஜனங்கள் அவர்களைப் புதைத்து
தேசத்தைச் சுத்தப்படுத்துவதற்கு ஏழு மாதங்கள் ஆகும்.[k] **13** புதைக்கிற
வேலையைத் தேசத்திலுள்ள எல்லாருமே செய்வார்கள். அதனால், நான்
என்னை மகிமைப்படுத்தும் அந்த நாளில் அவர்களுடைய புகழ் பரவும்’[l]
என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

14 ‘தேசத்தில் வேறு எங்கெல்லாம் பிணங்கள் கிடக்கின்றன என்று
தேடிப் பார்த்துப் புதைப்பதற்காக ஆட்கள் அனுப்பப்படுவார்கள். அவர்கள்
விடாமல் ஏழு மாதங்களுக்குத் தேடிப் பார்த்துத் தேசத்தைச் சுத்தப்படுத்

அதி. 39
a எசே 38:4, 15
b எசே 38:21
c வெளி 19: 17, 18
d எரே 25:33
e எசே 38:22
f ஏசா 6:3
g எசே 38:16
h சங் 46:9
i எசே 38:2
j எசே 39:15
k உபா 21: 22, 23
l எசே 38:16

39:9 *அல்லது, “குத்துக்கோல்கள்.” இவை கூர்மையான நுனியுடைய ஆயுதங்கள்.
39:11 *வே.வா., “கோகு கூட்டத்தின் பள்ளத்தாக்கு.”

துவார்கள். **15** தேசமெங்கும் போய்த் தேடுகிறவர்கள் ஒரு மனுஷ எலும்
பைப் பார்த்தால் அதற்குப் பக்கத்தில் ஒரு அடையாளத்தை வைப்பார்கள்.
அதன்பின், புதைக்கும் வேலை செய்கிறவர்கள் அதை எடுத்து ஆமோன்–
கோகுவின் பள்ளத்தாக்கில் புதைப்பார்கள்.[a] **16** அங்கே ஆமோனா*
என்ற நகரமும் இருக்கும். இப்படி, அவர்கள் தேசத்தைச் சுத்தமாக்கு
வார்கள்.'[b]

17 மனிதகுமாரனே, உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இது
தான்: 'நீ எல்லா விதமான பறவைகளிடமும் காட்டு மிருகங்களிடமும் இப்
படிச் சொல்: "எல்லாரும் ஒன்றுதிரண்டு வாருங்கள். இஸ்ரவேலின் மலைக
ளில் நிறைய உயிர்களைப் பலி கொடுத்து, உங்களுக்காக ஒரு பெரிய
விருந்தை ஏற்பாடு செய்திருக்கிறேன்.[c] அந்த விருந்துக்காகக் கூடிவா
ருங்கள். சதையைத் தின்று இரத்தத்தைக் குடியுங்கள்.[d] **18** நீங்கள் பலம்
படைத்தவர்களின் சதையைத் தின்று, உலகத் தலைவர்களின் இரத்தத்தைக்
குடிப்பீர்கள். அவர்கள் எல்லாரும் பாசானில் இருக்கிற கொழுத்த செம்ம
றியாட்டுக் கடாக்களையும் செம்மறியாட்டுக் குட்டிகளையும் வெள்ளாடுக
ளையும் காளைகளையும் போன்றவர்கள். **19** நான் உங்களுக்காகத் தயார்
செய்திருக்கும் விருந்தில் நீங்கள் வயிறுமுட்ட கொழுப்பைச் சாப்பிடுவீர்
கள், வெறி ஏறுமளவுக்கு இரத்தத்தைக் குடிப்பீர்கள்."'

20 'என்னுடைய மேஜையில் குதிரைகளையும் குதிரை வீரர்களையும்
பெரிய பலசாலிகளையும் எல்லா போர்வீரர்களையும் தின்று திருப்தியாவீர்
கள்'[e] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

21 எல்லா ஜனங்களுக்கும் என்னுடைய மகிமையைக் காட்டுவேன்.
நான் எப்படித் தண்டனை கொடுத்தேன் என்றும், என் வல்லமையை எப்ப
டிக் காட்டினேன் என்றும் எல்லா ஜனங்களும் பார்ப்பார்கள்.[f] **22** அந்த
நாள்முதல், இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய கடவுளான யெகோவா
நான்தான் என்று தெரிந்துகொள்வார்கள். **23** இஸ்ரவேல் ஜனங்கள் குற்
றங்கள் செய்து எனக்கு உண்மையில்லாமல் நடந்துகொண்டதால்தான்
சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள் என்று மற்ற ஜனங்கள் தெரிந்துகொள்
வார்கள்.[g] இஸ்ரவேலர்கள் அப்படிச் செய்ததால்தான் என் முகத்தை
அவர்களிடமிருந்து மறைத்துக்கொண்டேன்.[h] அவர்களை எதிரிகளின்
கையில் பிடித்துக் கொடுத்து,[i] எல்லாரையும் வாளுக்குப் பலியாக்கினேன்.
24 அவர்கள் அசுத்தமான காரியங்களையும் குற்றங்களையும் செய்ததால்
தான் தகுந்த தண்டனை கொடுத்தேன். என் முகத்தை அவர்களிடமிருந்து
மறைத்தேன்.'

25 அதனால், உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'சிறைபிடிக்கப்பட்டுப் போன யாக்கோபின் பிள்ளைகளை நான் விடுதலை
செய்வேன்.[j] இஸ்ரவேல் ஜனங்கள் எல்லார்மேலும் இரக்கம் காட்டுவேன்.[k]
என்னுடைய பரிசுத்த பெயரை வைராக்கியத்தோடு கட்டிக்காப்பேன்.[l]
26 எனக்கு உண்மையில்லாமல் நடந்ததால் அவமானப்பட்டுப்போன அந்த
ஜனங்கள்[m] மறுபடியும் தங்களுடைய தேசத்தில் பாதுகாப்பாகக் குடியிருப்
பார்கள். அவர்களைப் பயமுறுத்த யாரும் இருக்க மாட்டார்கள்.[n] **27** மற்ற
ஜனங்களின் நடுவிலிருந்தும் எதிரிகளுடைய தேசங்களிலிருந்தும் நான்

39:16 * அர்த்தம், "கூட்டங்கள்."

அதி. 39
a எசே 39:11
b எசே 39:12
c ஏசா 34:6-8; எரே 46:10; செப் 1:7
d வெளி 19:17, 18
e எசே 38:4-6; ஆகா 2:22; வெளி 19:17, 18
f யாத் 7:4; யாத் 14:4; ஏசா 37:20; எசே 38:16; மல் 1:11
g 2நா 7:21, 22
h உபா 31:18; ஏசா 59:2
i லேவி 26:24, 25; உபா 32:30; சங் 106:40, 41
j எரே 30:3; எசே 34:13
k ஓசி 1:11; சக 1:16
l எசே 36:21
m தானி 9:16
n லேவி 26:5, 6

அவர்களைக் கூட்டிக்கொண்டு வரும்போது,[a] நான் பரிசுத்தமானவர் என்று
எல்லா தேசத்தாருடைய கண்களுக்கு முன்பாகவும் காட்டுவேன்.’[b]

28 ‘அவர்களை மற்ற தேசத்தார் சிறைபிடித்துக்கொண்டு போகும்படி
செய்யும்போதும், ஒருவர் விடாமல் எல்லாரையும் அவர்களுடைய தேசத்
துக்கே திரும்பக் கூட்டிக்கொண்டு வரும்போதும்[c] நான் அவர்களுடைய கட
வுளான யெகோவா என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள். **29** அதன்
பின், என்னுடைய முகத்தை அவர்களிடமிருந்து மறைக்க மாட்டேன்.[d] இஸ்
ரவேல் ஜனங்களின் மேல் என் சக்தியைப் பொழிவேன்’[e] என்று உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்கிறார்” என்றார்.

40 நாங்கள் சிறையிருப்பிலிருந்த 25-ஆம் வருஷம்,[f] அதாவது எருச
லேம் நகரம் அழிக்கப்பட்ட பின் 14-ஆம் வருஷம், முதல் மாதம்,
10-ஆம் நாளில்,[g] நான் யெகோவாவின் சக்தியால் நிரப்பப்பட்டேன்.*
அவர் என்னை நகரத்துக்குக் கொண்டுபோனார்.[h] **2** தரிசனங்கள் மூல
மாக அவர் என்னை இஸ்ரவேல் தேசத்துக்குக் கொண்டுபோய் மிகவும் உய
ரமான ஒரு மலைமேல் நிற்க வைத்தார்.[i] அங்கே தெற்குப் பக்கமாக நகரம்
போன்ற ஒன்று இருந்தது.

3 அவர் என்னை அங்கே கொண்டுபோனபோது, ஒரு மனுஷரைப்
பார்த்தேன். அவருடைய உடல் செம்பினால் செய்யப்பட்டதைப் போல
இருந்தது.[j] அவருடைய கையில் ஒரு நாரிழைக் கயிறும் ஒரு அளவுகோ
லும்* இருந்தன.[k] அவர் நுழைவாசலில் நின்றுகொண்டிருந்தார். **4** அவர்
என்னிடம், “மனிதகுமாரனே, உற்றுப் பார், கவனமாகக் கேள், நான் காட்டு
கிற எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனி. அதற்காகத்தான் உன்னை
இங்கே கொண்டுவந்திருக்கிறேன். நீ பார்க்கிற எல்லாவற்றையும் இஸ்ர
வேல் ஜனங்களிடம் சொல்”[l] என்றார்.

5 ஆலயத்தைச் சுற்றி ஒரு மதிலைப் பார்த்தேன். அந்த மனுஷனுடைய
கையில் ஆறு முழ நீளத்தில் ஒரு அளவுகோல் இருந்தது. (ஒவ்வொரு
முழமும் நம்முடைய கை முழத்தைவிட நான்கு விரலளவு அதிகமானது).*
அவர் அந்த மதிலை அளந்தார். அதன் அகலம் ஒரு அளவுகோலாகவும்
அதன் உயரம் ஒரு அளவுகோலாகவும் இருந்தது.

6 பின்பு, அவர் கிழக்கு நுழைவாசலுக்கு[m] வந்து அதன் படிக்கட்டுகளில்
ஏறினார். வாசலறையை அவர் அளந்தபோது அதன் அகலம் ஒரு அளவு
கோலாக இருந்தது. அடுத்த வாசலறையின் அகலமும் ஒரு அளவுகோலாக
இருந்தது. **7** காவல் அறைகள் ஒவ்வொன்றும் ஒரு அளவுகோல் நீளமா
கவும் ஒரு அளவுகோல் அகலமாகவும் இருந்தன. ஒரு காவல் அறைக்கும்
இன்னொரு காவல் அறைக்கும் ஐந்து முழ இடைவெளி இருந்தது.[n] உள்
பக்க நுழைவு மண்டபத்தின் பக்கத்திலுள்ள வாசலறை ஒரு அளவுகோலாக
இருந்தது.

8 உள்பக்க நுழைவு மண்டபத்தை அவர் அளந்தார். அது ஒரு அளவு
கோலாக இருந்தது. **9** பின்பு, நுழைவு மண்டபத்தை அளந்தார். அது
எட்டு முழமாக இருந்தது. அதன் சதுரத் தூண்களை அளந்தார். அவை

40:1 *நே.மொ., “யெகோவாவின் கை என்மேல் வந்தது.” **40:3** *இணைப்பு
B14-ஐப் பாருங்கள். **40:5** *இது பெரிய முழத்தைக் குறிக்கிறது. இணைப்பு B14-ஐப்
பாருங்கள்.

அதி. 39
a எரே 30:10; ஆமோ 9:14; செப் 3:20
b ஏசா 5:16; எசே 36:23
c உபா 30:4
d ஏசா 45:17; ஏசா 54:8; எரே 29:14
e ஏசா 32:14, 15; யோவே 2:28

அதி. 40
f 2ரா 24:15, 16
g 2ரா 25:8-10; எசே 33:21
h எசே 8:3
i ஏசா 2:2
j எசே 1:5, 7; தானி 10:5, 6
k எசே 47:3; சக 2:1, 2; வெளி 11:1; வெளி 21:15
l எசே 43:10
m எசே 40:10; எசே 43:1, 4; எசே 46:1, 2
n 1ரா 9:26, 27

அதி. 40
a எசே 40: 20, 21
b 1ரா 6:4 எசே 41:26
c 1ரா 6:35
d 1நா 28:12
e எசே 41: 20, 26

இரண்டு முழமாக இருந்தன. நுழைவு மண்டபம் உள்பக்கத்தைப் பார்த்தபடி
இருந்தது.
10 கிழக்கு வாசலின் இரண்டு பக்கங்களிலும் மும்மூன்று காவல் அறை
கள் இருந்தன. அவை ஒரே அளவில் இருந்தன. இரண்டு பக்கங்களில்
இருந்த சதுரத் தூண்களும் ஒரே அளவில் இருந்தன.
11 பின்பு அவர் நுழைவாசலின் அகலத்தை அளந்தார். அது 10 முழ
மாக இருந்தது. வாசலின் நீளம் 13 முழமாக இருந்தது.
12 இரண்டு பக்கங்களிலும் இருந்த காவல் அறைகளுக்கு முன்னால்
கூண்டுபோல் ஒரு பகுதி இருந்தது. அது ஒரு முழமாக இருந்தது. இரண்டு
பக்கங்களிலும் இருந்த காவல் அறைகள் ஒவ்வொன்றும் ஆறு முழமாக
இருந்தது.
13 பின்பு, வாசலின் அகலத்தை அளந்தார். அது, ஒரு காவல்
அறையின் கூரையிலிருந்து* இன்னொரு காவல் அறையின் கூரைவரை
யாக 25 முழ அகலமாக இருந்தது. ஒரு நுழைவாசல் இன்னொரு நுழைவா
சலைப் பார்த்தபடி இருந்தது.[a] **14** பின்பு, அவர் சதுரத் தூண்களை அளந்
தார். அவை 60 முழ உயரமாக இருந்தன. பிரகாரத்தைச் சுற்றிலும் இருந்த
வாசல்களின் சதுரத் தூண்களையும் அளந்தார். **15** நுழைவாசலின் முன்
பக்கத்திலிருந்து உள்பக்க நுழைவு மண்டபத்தின் முன்பக்கம்வரை 50 முழ
மாக இருந்தது.
16 காவல் அறைகளிலும், வாசல்களின் இரண்டு பக்கங்களிலும்
இருந்த சதுரத் தூண்களிலும் குறுகலான சட்டங்களுள்ள ஜன்னல்கள்
இருந்தன.[b] நுழைவு மண்டபங்களுடைய உட்புறத்தின் இரண்டு பக்கங்களி
லும் ஜன்னல்கள் இருந்தன. சதுரத் தூண்களில் பேரீச்ச மரத்தின் உருவங்
கள் இருந்தன.[c]
17 பின்பு, அவர் என்னை வெளிப்பிரகாரத்துக்குக் கூட்டிக்கொண்டு
போனார். அங்கே சாப்பாட்டு அறைகள் இருந்தன.[d] பிரகாரத்தைச் சுற்றி
லும் ஒரு தளம் இருந்தது. அந்தத் தளத்தில் 30 சாப்பாட்டு அறைகள்
இருந்தன. **18** வாசல்களின் இரண்டு பக்கங்களிலும் இருந்த தளத்தின்
நீளம் அந்த வாசல்களின் நீளத்தைப் போலவே இருந்தது. இதுதான் தாழ்
வான தளம்.
19 பின்பு, கீழ்வாசலின் முன்பக்கத்திலிருந்து உட்பிரகாரத்தின் வாசல்
வரை இருந்த சுற்றளவை அவர் அளந்தார். அது கிழக்கிலும் வடக்கிலும்
100 முழமாக இருந்தது.
20 வெளிப்பிரகாரத்தில் வடக்கே பார்த்தபடி ஒரு வாசல் இருந்தது.
அவர் அதன் நீளத்தையும் அகலத்தையும் அளந்தார். **21** அதன் இரண்டு
பக்கங்களிலும் மும்மூன்று காவல் அறைகள் இருந்தன. அதன் சதுரத்
தூண்களும் நுழைவு மண்டபமும் முதல் வாசலின் அளவுப்படியே இருந்
தன. அது 50 முழ நீளமும் 25 முழ அகலமுமாக இருந்தது. **22** அதன்
ஜன்னல்களும், நுழைவு மண்டபமும், பேரீச்ச மர உருவங்களும்[e] கிழக்கு
வாசலில் இருந்த அளவுப்படியே இருந்தன. ஜனங்கள் ஏறிப்போவதற்காக
அதற்கு ஏழு படிக்கட்டுகள் இருந்தன. அவற்றுக்கு முன்னால் நுழைவு மண்
டபம் இருந்தது.

40:13 * ஒருவேளை, “காவல் அறையின் சுவருடைய மேல்பாகத்திலிருந்து.”

23 உட்பிரகாரத்திலே வடக்கு வாசலுக்கு எதிரில் ஒரு வாசலும், கிழக்கு
வாசலுக்கு எதிரில் இன்னொரு வாசலும் இருந்தன. ஒரு வாசலிலிருந்து இன்
னொரு வாசல்வரை அவர் அளந்தார். அது 100 முழமாக இருந்தது.

24 பின்பு, அவர் என்னைத் தெற்குப் பக்கமாகக் கொண்டுபோனார்.
தெற்கில் நான் ஒரு வாசலைப் பார்த்தேன்.[a] அதன் சதுரத் தூண்களையும்,
நுழைவு மண்டபத்தையும் அவர் அளந்தார். அவை மற்றவற்றின் அளவுப்
படியே இருந்தன. **25** அதன் இரண்டு பக்கங்களிலும், அதன் நுழைவு
மண்டபத்திலும் இருந்த ஜன்னல்கள் மற்ற ஜன்னல்களைப் போலவே இருந்
தன. அது 50 முழ நீளமும் 25 முழ அகலமுமாக இருந்தது. **26** அதற்கு
ஏழு படிக்கட்டுகள் இருந்தன.[b] அவற்றுக்கு முன்னால் நுழைவு மண்டபம்
இருந்தது. அதன் இரண்டு பக்கங்களிலும் ஒவ்வொரு சதுரத் தூண் இருந்
தது. அந்தத் தூண்களில் பேரீச்ச மர உருவங்கள் இருந்தன.

27 உட்பிரகாரத்தில் தெற்கைப் பார்த்தபடி ஒரு வாசல் இருந்தது. தெற்
குப் பக்கமாக ஒரு வாசலிலிருந்து இன்னொரு வாசல்வரை அவர் அளந்
தார். அது 100 முழமாக இருந்தது. **28** பின்பு, அவர் என்னைத் தெற்கு
வாசல் வழியாக உட்பிரகாரத்துக்குக் கொண்டுவந்தார். தெற்கு வாசலை
அவர் அளந்தபோது அது மற்ற வாசல்களின் அளவுப்படியே இருந்தது.
29 அதன் காவல் அறைகளும், சதுரத் தூண்களும், நுழைவு மண்டப
மும் மற்றவற்றின் அளவுப்படியே இருந்தன. அதன் இரண்டு பக்கங்களி
லும் அதன் நுழைவு மண்டபத்திலும் ஜன்னல்கள் இருந்தன. அது 50 முழ
நீளமும் 25 முழ அகலமுமாக இருந்தது.[c] **30** உட்பிரகார வாசல்கள் எல்
லாவற்றுக்குமே நுழைவு மண்டபங்கள் இருந்தன. அவை 25 முழ நீளமும்
5 முழ அகலமுமாக இருந்தன. **31** அதன் நுழைவு மண்டபம் வெளிப்பிர
காரத்தைப் பார்த்தபடி இருந்தது. அதன் சதுரத் தூண்களில் பேரீச்ச மர உரு
வங்கள் இருந்தன.[d] அதற்கு எட்டுப் படிக்கட்டுகள் இருந்தன.[e]

32 அவர் என்னைக் கிழக்கிலிருந்து உட்பிரகாரத்துக்குக் கொண்டுபோ
னார். அந்த வாசலை அவர் அளந்தபோது அது மற்ற வாசல்களின்
அளவுப்படியே இருந்தது. **33** அதன் காவல் அறைகளும், சதுரத் தூண்க
ளும், நுழைவு மண்டபமும் மற்றவற்றின் அளவுப்படியே இருந்தன. அதன்
இரண்டு பக்கங்களிலும் அதன் நுழைவு மண்டபத்திலும் ஜன்னல்கள் இருந்
தன. அது 50 முழ நீளமும் 25 முழ அகலமுமாக இருந்தது. **34** அதன்
நுழைவு மண்டபம் வெளிப்பிரகாரத்தைப் பார்த்தபடி இருந்தது. அதன்
இரண்டு பக்கங்களிலும் இருந்த சதுரத் தூண்களில் பேரீச்ச மர உருவங்கள்
இருந்தன. அதற்கு எட்டுப் படிக்கட்டுகள் இருந்தன.

35 பின்பு, அவர் என்னை வடக்கு வாசலுக்குக் கொண்டுபோய்[f] அதை
அளந்தார். அது மற்ற வாசல்களின் அளவுப்படியே இருந்தது. **36** அதன்
காவல் அறைகளும், சதுரத் தூண்களும், நுழைவு மண்டபமும் மற்றவற்றின்
அளவுப்படியே இருந்தன. அதன் இரண்டு பக்கங்களிலும் அதன் நுழைவு
மண்டபத்திலும் ஜன்னல்கள் இருந்தன. அது 50 முழ நீளமும் 25 முழ
அகலமுமாக இருந்தது. **37** அதன் சதுரத் தூண்கள் வெளிப்பிரகாரத்தைப்
பார்த்தபடி இருந்தன. அதன் இரண்டு பக்கங்களிலும் இருந்த சதுரத் தூண்
களில் பேரீச்ச மர உருவங்கள் இருந்தன. அதற்கு எட்டுப் படிக்கட்டுகள்
இருந்தன.

அதி. 40
a எசே 46:9
b எசே 40: 20, 22
c எசே 40: 20, 21
d எசே 40:16
e எசே 40: 32, 34
எசே 40: 35, 37
f எசே 44:4

38 வாசல்களின் சதுரத் தூண்களுக்குப் பக்கத்தில் ஒரு சாப்பாட்டு
அறை இருந்தது. அதற்கு ஒரு நுழைவாசல் இருந்தது. தகன பலிகள் அந்த
அறையில்தான் கழுவப்பட்டன.[a]

39 தகன பலிகளும்[b] பாவப் பரிகாரப் பலிகளும்[c] குற்றநிவாரண பலி
களும்[d] செலுத்துவதற்காக நுழைவு மண்டபத்தின் இரண்டு பக்கங்களிலும்
இரண்டிரண்டு மேஜைகள் இருந்தன. **40** வடக்கு வாசலுக்கு வெளியே,
படிக்கட்டுகளின் இரண்டு பக்கங்களிலும் இரண்டிரண்டு மேஜைகள் இருந்
தன. நுழைவு மண்டபத்தின் இன்னொரு பக்கத்திலும் இரண்டு மேஜைகள்
இருந்தன. **41** வாசலின் ஒவ்வொரு பக்கத்திலும் நான்கு மேஜைகள் என
மொத்தம் எட்டு மேஜைகள் இருந்தன. பலிக்கான மிருகங்கள் அவற்
றின் மேல் வெட்டப்பட்டன. **42** தகன பலிக்கான நான்கு மேஜைகள் கல்
லினால் செய்யப்பட்டிருந்தன. அவை ஒன்றரை முழ நீளமாகவும், ஒன்றரை
முழ அகலமாகவும், ஒரு முழ உயரமாகவும் இருந்தன. தகன பலிகளுக்
காகவும் மற்ற பலிகளுக்காகவும் கொண்டுவரப்பட்ட மிருகங்களை வெட்
டுவதற்கு அவற்றின் மேல் கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. **43** உள்பக்க
சுவர்களைச் சுற்றிலும் நான்கு விரலளவு அகலமுள்ள அலமாரிகள் வைக்
கப்பட்டிருந்தன. காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பலிகளின் இறைச்சி
மேஜைகளின் மேல் வைக்கப்பட்டது.

44 உள்வாசலுக்கு வெளியே பாடகர்களுக்கான சாப்பாட்டு அறைகள்
இருந்தன.[e] அவை உட்பிரகாரத்தின் வடக்கு வாசலுக்குப் பக்கத்தில்
தெற்கே பார்த்தபடி இருந்தன. இன்னொரு சாப்பாட்டு அறை கிழக்கு வாச
லுக்குப் பக்கத்தில் வடக்கே பார்த்தபடி இருந்தது.

45 அவர் என்னிடம், “தெற்கே பார்த்தபடி இருக்கிற சாப்பாட்டு அறை
ஆலய வேலைகளைச் செய்யும் குருமார்களுடையது.[f] **46** வடக்கே பார்த்
தபடி இருக்கிற சாப்பாட்டு அறை பலிபீட வேலைகளைச் செய்யும் குருமார்
களுடையது.[g] அவர்கள் சாதோக்கின் வம்சத்தார்;[h] யெகோவாவின் சன்னி
தியில் சேவை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட லேவியர்கள்”[i] என்றார்.

47 பின்பு, அவர் உட்பிரகாரத்தை அளந்தார். அது சதுரமாக இருந்தது.
அதன் நீளம் 100 முழமாகவும் அகலம் 100 முழமாகவும் இருந்தது. பலி
பீடம் ஆலயத்தின் முன்னால் இருந்தது.

48 பின்பு, அவர் என்னை நுழைவு மண்டபத்துக்குக்[j] கொண்டுபோனார்.
அங்கே வலது பக்கத்தில் இருந்த தூணையும் இடது பக்கத்தில் இருந்த
தூணையும் அளந்தார். ஒவ்வொரு தூணின் அகலமும் ஒரு பக்கத்தில்
ஐந்து முழமாகவும் இன்னொரு பக்கத்தில் மூன்று முழமாகவும் இருந்தது.

49 நுழைவு மண்டபத்தின் நீளம் 20 முழமாகவும் அகலம் 11* முழமாக
வும் இருந்தது. ஜனங்கள் ஏறிப்போவதற்காக அதற்குப் படிக்கட்டுகள் இருந்
தன. அதன் வலது சுவருக்குப் பக்கத்தில் ஒரு தூணும் இடது சுவருக்குப்
பக்கத்தில் ஒரு தூணும் இருந்தது.[k]

41 பின்பு, அவர் என்னை ஆலயத்தின் பரிசுத்த அறைக்குக் கொண்
டுபோய், அதன் சதுரத் தூண்களை அளந்தார். வலது பக்க
தூணின் அகலம் ஆறு முழமாகவும் இடது பக்க தூணின் அகலம் ஆறு
முழமாகவும் இருந்தன. **2** நுழைவாசலின் அகலம் 10 முழமாக இருந்தது.

40:49 * அல்லது, “12.”

அதி. 40
a லேவி 8:21
b லேவி 1:3, 6; லேவி 8:20; எசே 43:18
c லேவி 4:3, 4
d லேவி 5:6; லேவி 7:1; எசே 42:13; எசே 44:29
e 1நா 6:31, 32
f எண் 3:6-8; 1நா 9:22, 23; சங் 134:1
g லேவி 6:12, 13; எண் 18:5; 2நா 13:10, 11
h 1ரா 2:35; எசே 43:19
i எண் 16:39, 40; எசே 44:15, 16
j 1ரா 6:3; 2நா 3:4
k 1ரா 7:21

நுழைவாசலின் வலது பக்கத்தில் இருந்த சுவர் ஐந்து முழமாகவும் இடது
பக்கத்தில் இருந்த சுவர் ஐந்து முழமாகவும் இருந்தன. பரிசுத்த அறையின்
நீளத்தை அவர் அளந்தார். அது 40 முழமாக இருந்தது. அதன் அகலம்
20 முழமாக இருந்தது.

3 பின்பு, அவர் உள்ளே* போய் அதன் நுழைவாசலின் சதுரத் தூணை
அளந்தார். அதன் தடிமன் இரண்டு முழமாக இருந்தது. நுழைவாசலின்
அகலம் ஆறு முழமாக இருந்தது. நுழைவாசலின் இரண்டு பக்கங்களிலும்
இருந்த சுவர்கள் ஏழு முழமாக இருந்தன. **4** அடுத்ததாக, பரிசுத்த அறை
யைப் பார்த்தபடி இருந்த அறையை அவர் அளந்தார். அதன் நீளம் 20 முழ
மாகவும் அகலம் 20 முழமாகவும் இருந்தது.[a] அவர் என்னிடம், “இதுதான்
மகா பரிசுத்த அறை”[b] என்று சொன்னார்.

5 பின்பு, ஆலயத்தின் சுவரை அவர் அளந்தார். அதன் தடிமன் ஆறு
முழமாக இருந்தது. ஆலயத்தைச் சுற்றிலும் இருந்த பக்கவாட்டு அறைக
ளின் அகலம் நான்கு முழமாக இருந்தது.[c] **6** அந்தப் பக்கவாட்டு அறை
கள் மூன்று அடுக்குகளாக இருந்தன. ஒவ்வொரு அடுக்கிலும் 30 அறைகள்
இருந்தன. ஆலயத்தின் சுவரைச் சுற்றிலும் இருந்த விளிம்புகள்* அந்தப்
பக்கவாட்டு அறைகளின் சட்டங்களைத் தாங்கிப் பிடித்தன. அந்தச் சட்டங்
கள் ஆலயத்தின் சுவரைத் துளைத்துக்கொண்டு போகவில்லை.[d] **7** மேல்
அடுக்குகளுக்குச் சுழன்று போகும் ஒரு வழி* ஆலயத்தின் இரண்டு பக்
கங்களிலும் இருந்தது. அது மேலே போகப்போக அகலமாகிக்கொண்டே
போனது.[e] ஒருவரால் கீழ் அடுக்கிலிருந்து நடு அடுக்கின் வழியாக மேல்
அடுக்குக்குப் போக முடிந்தது. கீழ் அடுக்கைவிட நடு அடுக்கும், நடு
அடுக்கைவிட மேல் அடுக்கும் அகலமாக இருந்தது.

8 ஆலயத்தைச் சுற்றிலும் உயரமான தளமேடை இருந்ததைப் பார்த்
தேன். பக்கவாட்டு அறைகளின் அஸ்திவாரங்கள் கீழிருந்து மேல்வரை
ஆறு முழத்துக்கு இருந்தன, அதாவது நீளமான ஓர் அளவுகோலின் உய
ரத்துக்கு இருந்தன. **9** பக்கவாட்டு அறைகளின் வெளிப்புற சுவரின் அக
லம் ஐந்து முழமாக இருந்தது. பக்கவாட்டு அறைகளுக்குப் பக்கத்தில் ஒரு
காலியான இடம்* இருந்தது. அது ஆலயத்தின் பாகமாக இருந்தது.

10 ஆலயத்துக்கும் சாப்பாட்டு அறைகளுக்கும்[f] இடையில் ஒரு திறந்
தவெளிப் பகுதி இருந்தது. இரண்டு பக்கங்களிலும் அதன் அகலம் 20 முழ
மாக இருந்தது. **11** பக்கவாட்டு அறைகளுக்கும் வடக்கிலிருந்த காலி
யான இடத்துக்கும் இடையில் ஒரு நுழைவாசல் இருந்தது. இன்னொரு
நுழைவாசல் தெற்கில் இருந்தது. காலியான இடத்தின் அகலம் சுற்றிலும்
ஐந்து முழமாக இருந்தது.

12 திறந்தவெளிப் பகுதியைப் பார்த்தபடி மேற்கில் ஒரு கட்டிடம் இருந்
தது. அதன் அகலம் 70 முழமாகவும் நீளம் 90 முழமாகவும் இருந்தது. அத
னுடைய சுவரின் தடிமன் சுற்றிலும் ஐந்து முழமாக இருந்தது.

13 அவர் ஆலயத்தை அளந்தார். அதன் நீளம் 100 முழமாக இருந்
தது. அவர் திறந்தவெளிப் பகுதியையும், கட்டிடத்தையும்,* அதன் சுவர்க

41:3 *அதாவது, “மகா பரிசுத்த அறைக்குள்ளே.” **41:6** *வே.வா., “திட்டுகள்.” **41:7** *அநேகமாக, “ஒரு சுழல் படிக்கட்டு.” **41:9** *அநேகமாக, “ஆலயத்தைச் சுற்றிலும் இருந்த ஒரு குறுகலான நடைபாதை.” **41:13** *அதாவது, “ஆலயத்தின் மேற்கில் இருந்த கட்டிடத்தையும்.”

அதி. 41
a 1ரா 6:20; 2நா 3:8
b யாத் 26:33
c 1ரா 6:5
d 1ரா 6:6, 10
e 1ரா 6:8
f 1நா 28:12

ளையும் சேர்த்து அளந்தபோது, அது 100 முழ நீளத்தில் இருந்தது.
14 கிழக்கே பார்த்தபடி இருந்த ஆலயத்தின் முன்பக்கத்தையும் திறந்த
வெளிப் பகுதியையும் சேர்த்து அளந்தபோது அது 100 முழ அகலத்தில்
இருந்தது.

15 திறந்தவெளிப் பகுதியைப் பார்த்தபடி இருந்த கட்டிடத்தின் பின்பக்
கத்தையும் அதன் இரண்டு பக்கங்களிலும் இருந்த நடைக்கூடங்களையும்
அவர் சேர்த்து அளந்தார். அது 100 முழமாக இருந்தது.

பின்பு பரிசுத்த அறையையும், மகா பரிசுத்த அறையையும்,[a] பிரகாரத்
தின் நுழைவு மண்டபங்களையும், **16** அந்த மூன்று பகுதிகளில் இருந்த
நடைக்கூடங்களையும், வாசலறைகளையும், குறுகலான ஜன்னல்களையும்[b]
அவர் அளந்தார். வாசலறைக்குப் பக்கத்தில் தரையிலிருந்து ஜன்னல்கள்
வரை மரச்சட்டங்கள் இருந்தன.[c] ஜன்னல்களில் சட்டங்கள் அடிக்கப்பட்டி
ருந்தன. **17** நுழைவாசலின் மேல்பகுதியையும், ஆலயத்தின் உட்புறத்
தையும், அதன் வெளிப்புறத்தையும், சுற்றிலும் இருந்த சுவரையும்
அவர் அளந்தார். **18** அங்கே கேருபீன்களுடைய உருவங்களும் பேரீச்ச
மர உருவங்களும் செதுக்கப்பட்டிருந்தன.[d] இரண்டிரண்டு கேருபீன்களுக்கு
நடுவே ஒரு பேரீச்ச மரம் இருந்தது. ஒவ்வொரு கேருபீனுக்கும் இரண்டு
முகங்கள் இருந்தன. **19** மனுஷ முகம் பேரீச்ச மரத்துக்கு இந்தப் பக்கமும்
சிங்க முகம் பேரீச்ச மரத்துக்கு அந்தப் பக்கமும் பார்த்தபடி இருந்தன.[e]
ஆலயம் முழுவதும் அந்த உருவங்கள் இப்படித்தான் செதுக்கப்பட்டிருந்
தன. **20** தரையிலிருந்து நுழைவாசலின் மேல்பக்கம்வரை ஆலயத்தின்
சுவரில் கேருபீன்களின் உருவமும் பேரீச்ச மரங்களின் உருவமும் செதுக்
கப்பட்டிருந்தன.

21 ஆலயத்தின் கதவு நிலைகள்* சதுரமாக இருந்தன.[f] பரிசுத்த இடத்
துக்கு# முன்னால் **22** மரத்தாலான ஒரு பலிபீடம் இருந்தது.[g] அதன் உய
ரம் மூன்று முழமாகவும் நீளம் இரண்டு முழமாகவும் இருந்தது. அதற்கு
மூலைச்சட்டங்கள் இருந்தன. அதன் அடிப்புறமும் சுற்றுப்புறமும் மரத்தால்
செய்யப்பட்டிருந்தன. அவர் என்னிடம், "இதுதான் யெகோவாவுக்கு முன்
னால் இருக்கும் மேஜை"[h] என்று சொன்னார்.

23 பரிசுத்த அறைக்கும் பரிசுத்த இடத்துக்கும்* இரண்டு கதவுகள் இருந்
தன.[i] **24** அவை ஒவ்வொன்றும், உள்பக்கமாகவும் வெளிப்பக்கமாகவும்
திறந்து மூடும் இரட்டைக் கதவுகளாக இருந்தன. **25** சுவர்களில் இருந்தது
போலவே ஆலயத்தின் கதவுகளிலும் கேருபீன்களின் உருவமும் பேரீச்ச
மரங்களின் உருவங்களும் செதுக்கப்பட்டிருந்தன.[j] வெளியே, நுழைவு மண்
டபத்துக்கு முன்னால் ஒரு மரக்கூரை இருந்தது. **26** குறுகலான சட்டங்க
ளுள்ள ஜன்னல்களும்[k] பேரீச்ச மர உருவங்களும் நுழைவு மண்டபத்தின்
இருபக்க சுவர்களிலும், பக்கவாட்டு அறைகளின் சுவர்களிலும், கூரைகளி
லும் இருந்தன.

42 அதன்பின், அவர் என்னை வடக்கிலிருந்த வெளிப்பிரகாரத்துக்குக்
கொண்டுபோனார்.[l] அங்கிருந்து, திறந்தவெளிப் பகுதிக்குப் பக்கத்
திலும் அதை ஒட்டியிருந்த கட்டிடத்தின்[m] வடக்கிலும் இருந்த சாப்
பாட்டு அறைகளுக்கு என்னைக் கொண்டுபோனார்.[n] **2** அவற்றின்

41:21 *அநேகமாக, "பரிசுத்த அறையின் நுழைவாசல்." #அநேகமாக, "மகா பரி
சுத்த அறைக்கு." **41:23** *அநேகமாக, "மகா பரிசுத்த அறைக்கும்."

அதி. 41
a 2நா 3:8; எசே 41:4
b 1ரா 6:4
c 1ரா 6:15; 2நா 3:5
d 1ரா 6:29; 1ரா 7:36; 2நா 3:7; எசே 40:16
e எசே 1:5, 10; வெளி 4:7
f 1ரா 6:33
g யாத் 30:1; 1ரா 7:48; வெளி 8:3
h எசே 44:16; மல் 1:7
i 1ரா 6:31-35
j எசே 41:17, 18
k எசே 40:16

அதி. 42
l எசே 40:2
m எசே 41:12, 15
n எசே 42:13

வடக்கு நுழைவாசல் 100 முழ* நீளத்திலும் 50 முழ அகலத்திலும் இருந்
தது. **3** அவை உட்பிரகாரத்தில் 20 முழ அகலத்தில் இருந்த காலியான
பகுதிக்கும் வெளிப்பிரகாரத்தின் தளத்துக்கும் இடையில் இருந்தன.[a] அவற்
றின் நடைக்கூடங்கள் ஒன்றையொன்று பார்த்தபடி இருந்தன. அவை
மூன்று அடுக்குகளிலும் இருந்தன. **4** சாப்பாட்டு அறைகளுக்கு முன்
னால் உட்புற நடைபாதை ஒன்று இருந்தது.[b] அதன் அகலம் 10 முழமாக
இருந்தது, நீளம் 100 முழமாக இருந்தது.* அவற்றின் நுழைவாசல்கள் வடக்
குப் பக்கமாக இருந்தன. **5** நடு அடுக்கிலும் கீழ் அடுக்கிலும் இருந்த சாப்
பாட்டு அறைகளைவிட மேல் அடுக்கிலிருந்த சாப்பாட்டு அறைகள்
சின்னதாக இருந்தன. ஏனென்றால், நடைக்கூடங்கள் அதிக இடத்தை
எடுத்துக்கொண்டன. **6** அவை மூன்று அடுக்குகளாக இருந்தன. ஆனால்,
பிரகாரங்களில் இருந்தது போல அங்கே தூண்கள் இல்லை. அதனால்தான்
கீழ் அடுக்கையும் நடு அடுக்கையும்விட மேல் அடுக்கின் அறைகள் சின்
னதாக இருந்தன.

7 வெளிப்பிரகாரத்தை ஒட்டிய சாப்பாட்டு அறைகளுக்குப் பக்கத்தில்,
அதாவது மற்ற சாப்பாட்டு அறைகளுக்கு எதிரில், ஒரு கற்சுவர் இருந்தது.
அதன் நீளம் 50 முழமாக இருந்தது. **8** வெளிப்பிரகாரத்தை ஒட்டிய சாப்
பாட்டு அறைகளின் மொத்த நீளம் 50 முழமாக இருந்தது. ஆனால், ஆல
யத்தின் பக்கமாக இருந்த சாப்பாட்டு அறைகளின் மொத்த நீளம் 100 முழ
மாக இருந்தது. **9** சாப்பாட்டு அறைகளுக்குக் கிழக்குப் பக்கத்தில் ஒரு
நுழைவாசல் இருந்தது. அது வெளிப்பிரகாரத்திலிருந்து சாப்பாட்டு அறை
களுக்குப் போவதற்கான வாசலாக இருந்தது.

10 கிழக்கே, காலியான இடத்துக்கும் கட்டிடத்துக்கும் பக்கத்தில் இருந்த
பிரகாரத்தின் கற்சுவருக்கு உள்ளேயும் சாப்பாட்டு அறைகள் இருந்தன.[c]
11 அவற்றுக்குமுன், வடக்கிலிருந்த சாப்பாட்டு அறைகளுக்கு இருந்தது
போலவே ஒரு நடைபாதை இருந்தது.[d] அவை ஒரே நீளத்திலும் அகலத்
திலும் இருந்தன. அவற்றின் வாசல்களும் கட்டமைப்பும் ஒரேபோல் இருந்
தன. அவற்றின் நுழைவாசல்கள், **12** தெற்கில் இருந்த சாப்பாட்டு அறை
களின் நுழைவாசல்களைப் போலவே இருந்தன. நடைபாதை தொடங்கிய
இடத்தில், கிழக்கிலிருந்த கற்சுவருக்கு முன்னால் ஒரு நுழைவாசல்
இருந்தது.[e]

13 அவர் என்னிடம், “வடக்கிலும் தெற்கிலும் இருக்கிற திறந்த
வெளிப் பகுதிகளுக்குப் பக்கத்திலுள்ள சாப்பாட்டு அறைகள்[f] பரிசுத்தமா
னவை. அங்கேதான் யெகோவாவின் சன்னிதியில் வேலை செய்கிற குரு
மார்கள் மகா பரிசுத்த பலிகளைச் சாப்பிட வேண்டும்.[g] அங்கேதான் மகா
பரிசுத்தமான பலிகளையும், உணவுக் காணிக்கைகளையும், பாவப் பரிகா
ரப் பலிகளையும், குற்ற நிவாரண பலிகளையும் அவர்கள் வைக்க வேண்
டும். ஏனென்றால், அந்த இடம் பரிசுத்தமான இடம்.[h] **14** பரிசுத்த இடத்
துக்குள் போகிற குருமார்கள் பரிசுத்த சேவைக்கான உடைகளைக் கழற்றி
வைத்த பின்புதான் வெளிப்பிரகாரத்துக்கு வர வேண்டும்.[i] ஏனென்றால்,

---

42:2 *இது பெரிய முழத்தைக் குறிக்கிறது. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **42:4** *கிரேக்க செப்டுவஜன்ட் பிரதியின்படி, “நீளம் 100 முழமாக இருந்தது.” எபிரெயப் பிரதியின்படி, “ஒரு முழ பாதை இருந்தது.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 42
a எசே 41:10
b எசே 42:10, 11
c எசே 41:12; எசே 42:1
d எசே 42:4
e எசே 42:9
f எசே 42:1
g லேவி 6:14, 16; லேவி 7:1, 6; லேவி 10:12, 13; லேவி 24:8, 9; எண் 18:10; எசே 40:46
h லேவி 2:3; எண் 18:9; நெ 13:5
i யாத் 28:40; யாத் 29:8, 9; லேவி 8:13; எசே 44:19

அந்த உடைகள் பரிசுத்தமானவை. ஜனங்கள் இருக்கும் பிரகாரத்துக்கு
வரும்போது குருமார்கள் வேறு உடைகளைப் போட்டுக்கொள்ள வேண்
டும்” என்றார்.

15 ஆலயத்துக்கு உள்ளே இருந்த பகுதிகளை அவர் அளந்து முடித்த
பின்பு கிழக்கு நுழைவாசல் வழியாக என்னை வெளியே கூட்டிக்கொண்டு
வந்து,[a] அந்த முழு வளாகத்தையும் அளந்தார்.

16 அளவுகோலினால்* அவர் கிழக்குப் பக்கத்தை அளந்தார். அது
ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கம்வரை 500 அளவுகோல் நீளமாக
இருந்தது.

17 அவர் வடக்குப் பக்கத்தை அளந்தபோது, அது 500 அளவுகோல்
நீளமாக இருந்தது.

18 அவர் தெற்குப் பக்கத்தை அளந்தபோது, அது 500 அளவுகோல்
நீளமாக இருந்தது.

19 பின்பு, மேற்குப் பக்கத்துக்குப் போய் அதை அளந்தார். அது
500 அளவுகோல் நீளமாக இருந்தது.

20 இப்படி, வளாகத்தின் நான்கு பக்கங்களையும் அளந்தார். பரிசுத்
தமான இடத்தையும் பொது உபயோகத்துக்கான இடத்தையும் பிரிப்பதற்
காக[b] அதைச் சுற்றிலும் ஒரு சுவர் இருந்தது.[c] அதன் நீளம் 500 அளவு
கோலாகவும் அகலம் 500 அளவுகோலாகவும் இருந்தது.[d]

43 பின்பு, கிழக்கே பார்த்தபடி இருந்த நுழைவாசலுக்கு அவர் என்
னைக் கொண்டுபோனார்.[e] **2** அப்போது, இஸ்ரவேலின் கடவு
ளுடைய மகிமை கிழக்கிலிருந்து வருவதைப் பார்த்தேன்.[f] அவருடைய சத்
தம் வெள்ளப்பெருக்கின் சத்தத்தைப் போல இருந்தது.[g] அவருடைய
மகிமையால் பூமியே பிரகாசித்தது.[h] **3** நகரத்தைப் பாழாக்க நான்* வந்த
போது# நான் பார்த்த தரிசனத்தைப் போலவே அது இருந்தது. கேபார் ஆற்
றுக்குப்[i] பக்கத்தில் நான் பார்த்ததைப் போலவே அது இருந்தது. உடனே
சாஷ்டாங்கமாக விழுந்தேன்.

4 அப்போது, கிழக்கே பார்த்தபடி இருந்த நுழைவாசலின் வழியாக
யெகோவாவின் மகிமை ஆலயத்துக்குள் வந்தது.[j] **5** ஒரு சக்தி*
என்னை மேலே எழுப்பி, உட்பிரகாரத்துக்குக் கொண்டுபோனது. ஆலயம்
முழுவதும் யெகோவாவின் மகிமையால் நிறைந்திருந்ததை நான் பார்த்
தேன்.[k] **6** பின்பு, ஆலயத்திலிருந்து ஒரு மனுஷர் என்னிடம் பேசுவதைக்
கேட்டேன். அவர் எனக்குப் பக்கத்தில் வந்து நின்றார்.[l] **7** அவர்
என்னிடம்,

“மனிதகுமாரனே, இது என்னுடைய சிம்மாசனம் இருக்கிற இடம்.[m] இது
நான் கால் வைக்கிற இடம்.[n] இங்குதான் இஸ்ரவேலர்களோடு என்றென்
றும் நான் தங்குவேன்.[o] இஸ்ரவேல் ஜனங்களும் அவர்களுடைய ராஜாக்
களும் இனி எனக்குத் துரோகம் செய்து மற்ற தெய்வங்களையோ இறந்து
போன அவர்களுடைய ராஜாக்களுடைய உடல்களையோ* வணங்கி,

42:16 *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **43:3** *அல்லது, “அவர்.” #அநேகமாக, “அதன் அழிவைப் பற்றிச் சொல்ல வந்தபோது.” **43:5** *அல்லது, “தேவதூதர்.” **43:7** *ஒருவேளை, “சிலைகளையோ.”

அதி. 42
a எசே 40:6
b லேவி 10:10, எசே 44:23, 2கொ 6:17
c எசே 40:5
d எசே 45:1, 2

அதி. 43
e எசே 40:6, எசே 42:15, எசே 44:1
f எசே 9:3, எசே 11:23
g எசே 1:24, யோவா 12:28, 29
h ஏசா 6:3, எசே 10:4
i எசே 1:3, 4, எசே 3:23
j எசே 10:19, எசே 44:1, 2
k யாத் 40:34, 1ரா 8:10, எசே 44:4
l எசே 40:3
m ஏசா 6:1, எரே 3:17, எசே 1:26
n 1நா 28:2
o யாத் 29:45, சங் 68:16, சங் 132:14, யோவே 3:17

என்னுடைய பரிசுத்தமான பெயரைக் கெடுக்க மாட்டார்கள்.[a] **8** முன்பு, எனக்கும் அவர்களுக்கும் நடுவில் ஒரு சுவர் மட்டும் இருக்கும்படி என்னுடைய ஆலயத்தின் வாசலுக்குப் பக்கத்திலேயே அவர்களுடைய ஆலயத்தின் வாசலையும், என்னுடைய ஆலயத்தின் கதவு நிலைகளுக்குப் பக்கத்திலேயே அவர்களுடைய ஆலயத்தின் கதவு நிலைகளையும் வைத்தார்கள்.[b] எல்லா அருவருப்பான காரியங்களையும் செய்து என்னுடைய பரிசுத்தமான பெயரைக் கெடுத்தார்கள். அதனால் நான் கோபத்தில் அவர்களை அழித்தேன்.[c] **9** இப்போது, எனக்குத் துரோகம் செய்வதை அவர்கள் விட்டுவிடட்டும். அவர்களுடைய ராஜாக்களுடைய உடல்களை என் முன்னாலிருந்து தூரமாக வீசியெறியட்டும். அப்போது, நான் அவர்களோடு என்றென்றும் இருப்பேன்.[d]

10 மனிதகுமாரனே, இஸ்ரவேல் ஜனங்கள் தாங்கள் செய்த குற்றங்களை நினைத்து வெட்கப்பட வேண்டும்.[e] அதனால், நீ பார்த்த ஆலயத்தைப் பற்றி அவர்களிடம் விளக்கிச் சொல்.[f] அதன் வடிவமைப்பை அவர்கள் ஆராய்ந்து பார்க்கட்டும். **11** அவர்கள் செய்த அக்கிரமத்தையெல்லாம் நினைத்து அவர்கள் வெட்கப்பட்டால், ஆலயத்தின் வரைபடத்தை அவர்களுடைய கண் முன்னால் வரைந்து காட்டு. அதன் எல்லா பகுதிகளையும், உள்ளே போகிற வாசல்களையும், வெளியே போகிற வாசல்களையும், நுணுக்கமான மற்ற விவரங்களையும் வரைந்து காட்டு.[g] ஆலயம் சம்பந்தப்பட்ட எல்லா சட்டதிட்டங்களையும் அவர்களுக்கு எடுத்துச் சொல். அப்போதுதான், அவர்கள் அதன் கட்டமைப்பைப் பற்றி விவரமாகத் தெரிந்துகொள்வார்கள், அதற்குரிய சட்டதிட்டங்களின்படி செய்வார்கள்.[h] **12** ஆலயத்தைப் பற்றிய சட்டம் இதுதான்: மலை உச்சியில் இருக்கிற மொத்த இடமும் மகா பரிசுத்தமான இடமாக இருக்கும்.[i] இதுதான் ஆலயத்தைப் பற்றிய சட்டம்.

13 முழங்களின் கணக்குப்படி பலிபீடத்தின் அளவுகள் இவைதான்.[j] (ஒவ்வொரு முழமும் நம்முடைய கை முழத்தைவிட நான்கு விரலளவு அதிகமானது).* தரையிலுள்ள அதன் முதல் அடுக்கின் உயரம் ஒரு முழம், அதன் அகலம் ஒரு முழம். இந்த அடுக்கைச் சுற்றிலும் ஒரு சாண்# அகலத்தில் ஒரு மேல்பகுதி இருக்கிறது. இதுதான் பலிபீடத்தின் முதல் அடுக்கு. **14** இரண்டாம் அடுக்கின் உயரம் இரண்டு முழம். அது மூன்றாம் அடுக்கைவிட ஒரு முழத்துக்கு வெளியே நீட்டிக்கொண்டிருக்கிறது. மூன்றாம் அடுக்கின் உயரம் நான்கு முழம். அது நான்காம் அடுக்கைவிட ஒரு முழத்துக்கு வெளியே நீட்டிக்கொண்டிருக்கிறது. **15** நான்காம் அடுக்குதான் நெருப்பு எரியும் பகுதி. அதன் உயரம் நான்கு முழம். அதன் முனைகளில் நான்கு கொம்புகள் இருக்கின்றன.[k] **16** நெருப்பு எரியும் பகுதி சதுரமானது. அதன் நீளம் 12 முழம், அகலம் 12 முழம்.[l] **17** நான்கு பக்கங்களிலும் உள்ள அதன் விளிம்பின் நீளம் 14 முழம், அகலம் 14 முழம். அதைச் சுற்றிலும் அரை முழத்துக்கு ஒரு மேல்பகுதி இருக்கிறது. அடியிலுள்ள முதல் அடுக்கு, எல்லா பக்கத்திலும் ஒரு முழத்துக்கு இருக்கிறது.

அதன் படிக்கட்டுகள் கிழக்கே பார்த்தபடி இருக்கின்றன" என்றார்.

43:13 *இது பெரிய முழத்தைக் குறிக்கிறது. இணைப்பு B14-ஐப் பாருங்கள். #இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 43
a எசே 39:7 சக 13:2
b எசே 8:3
c தானி 9:12
d எசே 37:23 எசே 37:26 2கொ 6:16
e எசே 16:63
f எசே 40:4
g எசே 44:5
h எசே 11:19, 20 எசே 36:27
i சங் 93:5 எசே 40:2 எசே 42:20
j யாத் 27:1 2நா 4:1
k யாத் 27:2 வெளி 9:13
l யாத் 38:1 2நா 4:1

18 பின்பு அவர் என்னிடம், “மனிதகுமாரனே, உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்வது இதுதான்: ‘பலிபீடத்தைச் செய்த பின்பு, அதன்
மேல் தகன பலிகளைச் செலுத்தும்போதும் இரத்தத்தைத் தெளிக்கும்போ
தும் இந்த அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும்.’[a]

19 ‘நீ ஒரு இளம் காளையைப் பாவப் பரிகாரப் பலியாகக் கொடுக்க
வேண்டும்.[b] அதை என்னுடைய சன்னிதியில் சேவை செய்கிற சாதோக்
கின் வம்சத்தைச் சேர்ந்த லேவியர்களான குருமார்களிடம் கொடுக்க வேண்
டும்’[c] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார். **20** ‘அதன்
இரத்தத்தில் கொஞ்சத்தை எடுத்து பலிபீடத்தின் நான்கு கொம்புகளின்
மீதும், விளிம்பின் நான்கு மூலைகளிலும், சுற்றிலும் உள்ள மேல்பகுதி
யின் மீதும் பூசு. அதைப் பாவத்திலிருந்து தூய்மைப்படுத்தவும், அதற்கா
கப் பாவப் பரிகாரம் பண்ணவும் இப்படிச் செய்.[d] **21** பின்பு, பாவப் பரிகா
ரப் பலியாகிய இளம் காளையை எரிப்பதற்காக, ஆலயத்தின் பரிசுத்தமான
இடத்துக்கு வெளியே ஒதுக்கப்பட்டிருக்கிற இடத்துக்கு அதைக் கொண்
டுபோ.[e] **22** இரண்டாம் நாளில், குறையில்லாத ஒரு வெள்ளாட்டுக் கடா
வைப் பாவப் பரிகாரப் பலியாகக் கொடு. குருமார்கள் இளம் காளையைச்
செலுத்தி பலிபீடத்தைப் பாவத்திலிருந்து தூய்மைப்படுத்தியது போலவே
இதையும் செலுத்தி பலிபீடத்தைத் தூய்மைப்படுத்துவார்கள்.’

23 ‘பலிபீடம் பாவத்திலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட பின்பு, நீ குறை
யில்லாத ஒரு இளம் காளையையும் குறையில்லாத ஒரு செம்மறியாட்டுக்
கடாவையும் கொடு. **24** அவற்றை யெகோவாவுக்குக் கொடு. குருமார்
கள் அவற்றின் மேல் உப்பைத் தூவி,[f] யெகோவாவுக்குத் தகன பலியா
கச் செலுத்துவார்கள். **25** தினம்தினம் செலுத்தப்படுகிற பாவப் பரிகாரப்
பலிக்காக, நீ ஒரு வெள்ளாட்டையும் இளம் காளையையும் செம்மறியாட்
டுக் கடாவையும் ஏழு நாட்களுக்குக் கொடுக்க வேண்டும்.[g] அவை எந்தக்
குறையும் இல்லாதவையாக இருக்க வேண்டும். **26** குருமார்கள் ஏழு நாட்
களுக்குப் பலிபீடத்துக்காகப் பாவப் பரிகாரம் செய்து, அதைத் தூய்மைப்
படுத்தி, அதை அர்ப்பணம் செய்ய வேண்டும். **27** ஏழு நாட்களுக்குப்
பின்பு, எட்டாம் நாளிலும்[h] அதற்குப் பின்பும், குருமார்கள் உங்களுடைய*
தகன பலிகளையும் சமாதான பலிகளையும் பலிபீடத்தில் செலுத்துவார்
கள். அப்போது, நான் உங்களைப் பிரியத்தோடு ஏற்றுக்கொள்வேன்’[i] என்று
உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்” என்றார்.

44 கிழக்கே பார்த்தபடி இருந்த ஆலயத்தின் வெளிப்பிரகார வாச
லுக்கு அவர் என்னை மறுபடியும் கொண்டுவந்தார்.[j] அதன்
நுழைவாசல் மூடப்பட்டிருந்தது.[k] **2** அப்போது யெகோவா என்னிடம்,
“அந்த நுழைவாசல் எப்போதும் மூடப்பட்டிருக்க வேண்டும். அதைத் திறக்
கக் கூடாது. எந்த மனுஷனும் அந்த நுழைவாசல் வழியாக வரக் கூடாது.
ஏனென்றால், இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா அதன் வழியாக வந்
திருக்கிறார்.[l] அதனால் அது மூடப்பட்டே இருக்க வேண்டும். **3** ஆனா
லும், தலைவராக இருக்கிறவர் யெகோவாவுக்கு முன்னால் உணவு சாப்பி
டுவதற்காக அங்கே வந்து உட்காருவார்.[m] அவர் தலைவராக இருப்பதால்
நுழைவு மண்டபத்தின் வழியாக வந்துபோவார்”[n] என்றார்.

43:27 * அதாவது, “ஜனங்களுடைய.”

அதி. 43
a யாத் 40:29, லேவி 1:5, லேவி 8:18-21, எசே 45:19
b யாத் 29:10, லேவி 8:14
c எசே 40:46, எசே 44:15, எசே 48:11
d யாத் 29:36, 37, லேவி 8:15, எபி 9:23
e யாத் 29:14, லேவி 8:17, எபி 13:11
f லேவி 2:13
g யாத் 29:35
h லேவி 9:1
i எசே 20:40

அதி. 44
j எசே 43:1
k எசே 46:1
l எசே 43:2
m உபா 12:5, 7
n எசே 46:2

4 பின்பு, அவர் என்னை வடக்கு நுழைவாசல் வழியாக ஆலயத்தின்
முன்பகுதிக்குக் கொண்டுவந்தார். யெகோவாவின் ஆலயம் யெகோவா
வின் மகிமையால் நிரம்பியிருந்ததை நான் பார்த்தேன்.[a] அதனால் அப்
படியே சாஷ்டாங்கமாக விழுந்தேன்.[b] **5** அப்போது, யெகோவா என்னி
டம் இப்படிச் சொன்னார்: “மனிதகுமாரனே, யெகோவாவின் ஆலயத்தைப்
பற்றிய எல்லா சட்டதிட்டங்களையும் நான் சொல்லும்போது நீ நன்றா
கக் கேள், உன்னிப்பாகக் கவனி. ஆலயத்துக்கு உள்ளே போகிற வழிகளை
யும் பரிசுத்தமான இடத்திலிருந்து வெளியே வருகிற வழிகளையும் பற்றி
நான் சொல்வதைக் கவனித்துக் கேள்.[c] **6** எனக்கு அடங்கி நடக்காத இஸ்
ரவேல் ஜனங்களிடம் இப்படிச் சொல்: ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்வது இதுதான்: “இஸ்ரவேல் ஜனங்களே, நீங்கள் செய்கிற அருவருப்
பான காரியங்களுக்கு அளவே இல்லாமல் போய்விட்டது! **7** உடலிலும்
உள்ளத்திலும் விருத்தசேதனம் செய்யாத மற்ற தேசத்து ஜனங்களை என்
னுடைய ஆலயத்துக்குள் கூட்டிக்கொண்டு வருகிறீர்கள். அவர்கள் அதைத்
தீட்டுப்படுத்துகிறார்கள். நீங்கள் எனக்கு உணவையும் கொழுப்பையும் இரத்
தத்தையும் செலுத்துகிறீர்கள். அதேசமயத்தில், அருவருப்பான காரியங்க
ளைச் செய்து என்னுடைய ஒப்பந்தத்தை மீறுகிறீர்கள். **8** எனக்குப் பரிசுத்
தமாக இருக்கிறவற்றை நீங்கள் அலட்சியப்படுத்துகிறீர்கள்.[d] என்னுடைய
ஆலய வேலைகளை மற்றவர்களுக்குக் கொடுக்கிறீர்கள்.”’

9 ‘உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “உடலிலும்
உள்ளத்திலும் விருத்தசேதனம் செய்யாத மற்ற தேசத்து ஜனங்கள் யாரும்
என்னுடைய ஆலயத்துக்குள் வரக் கூடாது.”’

10 ‘இஸ்ரவேலர்கள் என்னைவிட்டு விலகி அருவருப்பான* சிலை
களை வணங்க ஆரம்பித்தபோது லேவியர்களும் என்னைவிட்டு விலகி
னார்கள்.[e] அந்தக் குற்றத்துக்கான விளைவுகளை அவர்கள் அனுபவிப்
பார்கள். **11** அதன்பின், என்னுடைய ஆலயத்தில் சேவை செய்வார்கள்.
ஆலய நுழைவாசல்களைக் கண்காணித்து,[f] ஆலய வேலைகளைச் செய்
வார்கள். தகன பலிகளுக்காகவும் மற்ற பலிகளுக்காகவும் ஜனங்கள்
கொண்டுவருகிற மிருகங்களை அவர்கள் வெட்டுவார்கள். ஜனங்கள்முன்
நின்று அவர்களுக்குச் சேவை செய்வார்கள். **12** முன்பு இஸ்ரவேல் ஜனங்
களின் அருவருப்பான சிலைகளுக்குமுன் நின்று அவர்களுக்குச் சேவை
செய்து அவர்களைப் பாவக்குழியில் விழ வைத்ததால்,[g] அந்தக் குற்றத்துக்
கான விளைவுகளை அவர்கள் சந்திப்பார்கள். இதை என்மேல் ஆணையா
கச் சொல்கிறேன்’ என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.
13 ‘அவர்கள் என்னுடைய சன்னிதியில் குருமார்களாகச் சேவை செய்ய
மாட்டார்கள். பரிசுத்தமான அல்லது மகா பரிசுத்தமான எதையும் நெருங்க
மாட்டார்கள். அவர்கள் செய்த அருவருப்பான காரியங்களுக்காக அவமா
னம் அடைவார்கள். **14** ஆனாலும், ஆலயத்தைக் கவனித்துக்கொள்ளும்
பொறுப்பை அவர்களுக்குக் கொடுப்பேன். ஆலய வேலைகளை அவர்
கள் மேற்பார்வை செய்வார்கள். அங்கு செய்ய வேண்டிய எல்லாவற்றை
யும் செய்வார்கள்.’[h]

அதி. 44
a ஏசா 6:1-3; எசே 10:4
b எசே 1:27, 28; எசே 3:23
c எசே 40:4
d லேவி 22:2; எண் 18:2, 3
e 2ரா 23:8, 9; 2நா 29:1, 5; நெ 9:34; எரே 23:11; எசே 8:5
f 1நா 26:1
g ஏசா 9:16; மல் 2:8
h எண் 18:2, 4

44:10 * இதற்கான எபிரெய வார்த்தை “சாணம்” என்ற வார்த்தையோடு தொடர்புடை
யதாக இருக்கலாம். வெறுப்பைக் காட்டுவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.

15 ‘இஸ்ரவேலர்கள் என்னைவிட்டு விலகிப்போன சமயத்தில்[a] சாதோக்
கின் வம்சத்தைச் சேர்ந்த லேவியர்களான குருமார்கள்[b] என்னுடைய
ஆலய வேலைகளைக் கவனித்துக்கொண்டார்கள். அவர்கள்தான் என்
னுடைய சன்னிதியில் தொடர்ந்து சேவை செய்வார்கள். எனக்கு முன்னால்
நின்று கொழுப்பையும்[c] இரத்தத்தையும் செலுத்துவார்கள்’[d] என்று உன்ன
தப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார். 16 ‘அவர்கள்தான் என்னு
டைய ஆலயத்துக்குள் வந்து, என்னுடைய பலிபீடத்தில் எனக்குச் சேவை
செய்வார்கள்.[e] எனக்குச் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்
வார்கள்.[f]

17 உட்பிரகாரத்தின் நுழைவாசல்களுக்கு வந்ததும் அவர்கள்
நாரிழை* அங்கிகளைப் போட்டுக்கொள்ள வேண்டும்.[g] உட்பிரகாரத்தின்
நுழைவாசல்களிலோ அதற்கு உள்ளேயோ சேவை செய்யும்போது அவர்
கள் கம்பளி உடைகளைப் போட்டுக்கொள்ளக் கூடாது. 18 நாரிழையால்
செய்த தலைப்பாகையையும், நாரிழையால் செய்த நீளமான கால்சட்டைக
ளையும் போட்டுக்கொள்ள வேண்டும்.[h] வியர்க்க வைக்கும் எந்தத் துணி
யையும் அவர்கள் போட்டுக்கொள்ளக் கூடாது. 19 ஜனங்கள் இருக்கும்
வெளிப்பிரகாரத்துக்கு அவர்கள் போகும்போது, பரிசுத்த சேவைக்கான
உடைகளைக் கழற்றிவிட வேண்டும்.[i] பரிசுத்தமான சாப்பாட்டு அறைக
ளில் அவற்றை வைத்துவிட்டு,[j] வேறு உடைகளைப் போட்டுக்கொள்ள
வேண்டும். மற்ற ஜனங்கள் எதேச்சையாக அந்த உடைகளினால் பரிசுத்த
மாகிவிடாதபடிக்கு அப்படிச் செய்ய வேண்டும். 20 குருமார்கள் தங்களு
டைய தலைமுடியை நீளமாக வளர்க்காமல், அதை வெட்டிவிட வேண்டும்.
ஆனால், தலையை மொட்டையடிக்கக் கூடாது.[k] 21 அவர்கள் திராட்ச
மதுவைக் குடித்துவிட்டு உட்பிரகாரத்துக்குள் வரக் கூடாது.[l] 22 விதவைப்
பெண்ணையோ விவாகரத்தான பெண்ணையோ அவர்கள் கல்யாணம்
செய்துகொள்ளக் கூடாது.[m] ஆனால், இஸ்ரவேல் ஜனங்களிலுள்ள ஒரு கன்
னிப் பெண்ணையோ, குருமார்களில் ஒருவருக்கு மனைவியாக இருந்த வித
வையையோ கல்யாணம் செய்துகொள்ளலாம்.’[n]

23 ‘பரிசுத்தமான காரியங்களுக்கும் சாதாரணமான காரியங்களுக்கும்
உள்ள வித்தியாசத்தை அவர்கள் என் ஜனங்களுக்குக் கற்றுத்தர வேண்டும்.
சுத்தம் எது, அசுத்தம் எது என்று சொல்லிக்கொடுக்க வேண்டும்.[o]
24 வழக்குகளில் நடுவர்களாக இருக்க வேண்டும்.[p] என்னுடைய நீதித்தீர்ப்
புகளின்படி தீர்ப்பு சொல்ல வேண்டும்.[q] என்னுடைய பண்டிகைகள் சம்பந்
தப்பட்ட எல்லா சட்டதிட்டங்களையும் கடைப்பிடித்து,[r] என்னுடைய
ஓய்வுநாட்களைப் புனிதப்படுத்த வேண்டும். 25 இறந்தவர்களுடைய உட
லுக்குப் பக்கத்தில் அவர்கள் போகக் கூடாது. அப்படிப் போனால் அவர்
கள் தீட்டுப்படுவார்கள். ஆனாலும் அவர்களுடைய அப்பா, அம்மா, மகன்,
மகள், சகோதரன், அல்லது கல்யாணமாகாத சகோதரி இறந்துவிட்டால்
அவர்களுக்காகத் தங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்ளலாம்.[s] 26 அவர்
கள் தூய்மைப்படுத்தப்பட்டு ஏழு நாட்களுக்குப் பின்புதான் பழையபடி
ஆலயத்தில் சேவை செய்ய வேண்டும். 27 ஆலய சேவைக்காக உட்பிர
காரத்தில் உள்ள பரிசுத்தமான இடத்துக்குப் போகும் நாளிலே அவர்கள்

44:17 * அதாவது, “லினன்.”

அதி. 44
- a எசே 48:9, 11
- b 1ரா 2:35; எசே 40:46
- c லேவி 3: 14-16
- d லேவி 17:6
- e எசே 41: 21, 22
- f எண் 18:7
- g யாத் 28: 39, 42; யாத் 39: 27, 28; லேவி 16:4
- h யாத் 28: 40, 42
- i லேவி 6:10; எசே 42:14
- j எசே 42:13
- k லேவி 21:1, 5; உபா 14:1
- l லேவி 10:9
- m லேவி 21:7
- n லேவி 21: 10, 14
- o மல் 2:7
- p உபா 17:9
- q 1நா 23:3, 4; 2நா 19:8
- r லேவி 23:2
- s லேவி 21:1-3

தங்களுக்காகப் பாவப் பரிகாரப் பலியைச் செலுத்த வேண்டும்’[a] என்று உன்
னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.

28 ‘நான்தான் அவர்களுடைய சொத்து.[b] இஸ்ரவேலில் அவர்களுக்கு
வேறெந்தச் சொத்தும் நீங்கள் கொடுக்கக் கூடாது. ஏனென்றால், நான்தான்
அவர்களுடைய சொத்து. **29** உணவுக் காணிக்கையையும்,[c] பாவப் பரிகா
ரப் பலியையும், குற்ற நிவாரண பலியையும் அவர்கள் சாப்பிட வேண்டும்.[d]
இஸ்ரவேலில் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்படுகிற எல்லாமே அவர்க
ளுக்குச் சொந்தமாகும்.[e] **30** முதல் விளைச்சலில் மிகச் சிறந்ததும், நீங்
கள் காணிக்கையாகக் கொடுக்கிற எல்லா பொருள்களும் குருமார்களுக்குத்
தான் போய்ச் சேரும்.[f] உங்களுடைய முதல் விளைச்சலின் முதல் மாவை*
குருமார்களுக்குக் கொடுக்க வேண்டும்.[g] அதனால், உங்கள் குடும்பத்தா
ருக்கு ஆசீர்வாதம் கிடைக்கும்.[h] **31** தானாகச் செத்துப்போன அல்லது
இன்னொரு மிருகத்தால் கடித்துக் குதறிப்போடப்பட்ட எந்தப் பறவையை
யும் மிருகத்தையும் குருமார்கள் சாப்பிடக் கூடாது.’”[i]

45 “‘நீங்கள் தேசத்தை சொத்தாகப் பங்குபோட்டுக் கொடுக்கும்போது[j]
அதில் ஒரு பரிசுத்தமான பங்கை யெகோவாவுக்குக் காணிக்கை
யாகக் கொடுக்க வேண்டும்.[k] அதன் நீளம் 25,000 முழமாகவும்,* அதன்
அகலம் 10,000 முழமாகவும் இருக்க வேண்டும்.[l] அந்த மொத்த பகுதியும்
பரிசுத்தமானதாக இருக்கும். **2** அந்தப் பகுதியில் ஆலயத்துக்காக சதுர
மான ஒரு நிலம் இருக்க வேண்டும். அது 500 முழ அகலத்திலும் 500 முழ
நீளத்திலும் இருக்க வேண்டும்.[m] அதன் எல்லா பக்கங்களிலும் 50 முழத்
துக்கு மேய்ச்சல் நிலங்கள் இருக்க வேண்டும்.[n] **3** அந்தப் பகுதியிலிருந்து
25,000 முழ நீளத்திலும் 10,000 முழ அகலத்திலும் ஒரு பகுதியை அளக்க
வேண்டும். அதற்குள் மகா பரிசுத்தமான ஆலயம் இருக்கும். **4** அந்தப்
பகுதி, யெகோவாவின் சன்னிதியில் சேவை செய்கிற குருமார்களுக்கான
பரிசுத்த பங்காக இருக்கும்.[o] அங்கே அவர்களுடைய வீடுகளும் ஆலயத்
துக்கான பரிசுத்த இடமும் இருக்கும்.

5 ஆலயத்தில் சேவை செய்கிற லேவியர்களுக்கு 25,000 முழ நீளத்தி
லும் 10,000 முழ அகலத்திலும் ஒரு பங்கு இருக்கும்.[p] 20 சாப்பாட்டு அறை
கள்[q] அவர்களுக்குச் சொந்தமாகக் கொடுக்கப்படும்.

6 நகரத்தின் சொத்தாக 25,000 முழ நீளத்திலும் (அதாவது, பரிசுத்த
காணிக்கையின் அதே நீளத்திலும்) 5,000 முழ அகலத்திலும் ஒரு பகு
தியை நீங்கள் ஒதுக்க வேண்டும்.[r] அது இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருக்
கும் சொந்தமாக இருக்கும்.

7 பரிசுத்த காணிக்கையின் இரண்டு பக்கங்களிலும், நகரத்துக்கு ஒதுக்
கப்பட்ட பகுதியின் இரண்டு பக்கங்களிலும் தலைவருக்காக நிலம் கொடுக்
கப்படும். அது பரிசுத்த காணிக்கைக்கும் நகரத்தின் சொத்துக்கும் பக்கத்தில்
இருக்கும். அது மேற்கிலும் கிழக்கிலுமாக இருக்கும். மேற்கு எல்லையிலி
ருந்து கிழக்கு எல்லைவரை அதன் நீளம் ஒரு கோத்திரத்துக்குக் கிடைக்கிற
பங்கின் நீளத்தைப் போலவே இருக்கும்.[s] **8** இஸ்ரவேலில் இந்தப் பகுதி
தான் தலைவருடைய சொத்தாக இருக்கும். என்னுடைய ஜனங்களை அவர்

44:30 * நே.மொ., “கொரகொரப்பான மாவை.” **45:1** * இது பெரிய முழத்தைக் குறிக்கிறது. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 44
a லேவி 4:3
b எண் 18:20; உபா 18:1; யோசு 13:14; எசே 45:4
c லேவி 2:3
d லேவி 6:17, 18; லேவி 7:1, 6; 1கொ 9:13
e லேவி 27:21; எண் 18:14
f யாத் 23:19; எண் 18:8, 12; எண் 18:26, 27; உபா 18:4
g எண் 15:20; நெ 10:35–37
h நீதி 3:9, 10; மல் 3:10
i யாத் 22:31; லேவி 22:3, 8

அதி. 45
j யோசு 14:1, 2; எசே 47:21, 22
k எசே 48:20
l எசே 48:8, 9
m எசே 42:20
n யோசு 21:1, 2
o எசே 40:46; எசே 48:10, 11
p எசே 48:13
q எசே 40:17
r எசே 48:15
s எசே 48:21

அதி. 45
a ஏசா 32:1
ஏசா 60:17
எரே 22:17
எரே 23:5
எசே 22:27
எசே 46:18
மீ 3:1-3
b யோசு 11:23
c எரே 22:3
மீ 6:8
சக 8:16
d மீ 2:2
e லேவி 19:36
நீதி 11:1
ஆமோ 8:5
மீ 6:10, 11
f யாத் 30:13
g லேவி 1:4
லேவி 6:30
எபி 9:22
h லேவி 2:1
i லேவி 1:10
j லேவி 3:1
k யாத் 30:14
l ஏசா 66:23
m உபா 16:16
2நா 8:12, 13
2நா 31:3
n 1நா 16:2
2நா 30:24
o 1ரா 8:64
p 2நா 35:7
q லேவி 16:16

களுடைய தலைவர்கள் இனியும் மோசமாக நடத்த மாட்டார்கள்.[a] அவர்
கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவரவர் கோத்திரங்களின்படி தேசத்தைப்
பங்குபோட்டுக் கொடுப்பார்கள்.'[b]

9 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'இஸ்ர
வேலின் தலைவர்களே, நீங்கள் செய்யும் அக்கிரமத்துக்கு அளவே இல்லா
மல் போய்விட்டது!'

'ஜனங்களை அடக்கி ஒடுக்குவதையும் கொடூரமாகத் தாக்குவதையும்
விட்டுவிட்டு, நீதியையும் நியாயத்தையும் செய்யுங்கள்.[c] என் ஜனங்களு
டைய சொத்துகளைப் பறிப்பதை நிறுத்துங்கள்'[d] என்று உன்னதப் பேரரசரா
கிய யெகோவா சொல்கிறார். **10** 'அளப்பதற்காக நீங்கள் பயன்படுத்துகிற
தராசும், எப்பா அளவும்,* பாத் அளவும்* துல்லியமாக இருக்க வேண்டும்.[e]
11 எப்பா அளவுக்கும் பாத் அளவுக்கும் திட்டவட்டமான அளவு இருக்க
வேண்டும். ஒரு பாத் அளவு என்பது ஒரு ஹோமர் அளவில்* பத்திலொரு
பாகம். ஒரு எப்பா அளவு என்பது ஒரு ஹோமர் அளவில் பத்திலொரு
பாகம். ஹோமரின்படியே அளவுகளை நிர்ணயிக்க வேண்டும். **12** ஒரு
சேக்கல்*[f] என்பது 20 கேரா.* 20 சேக்கலும் 25 சேக்கலும் 15 சேக்கலும்
சேர்ந்தது ஒரு மேனா.'#

13 'நீங்கள் கொடுக்க வேண்டிய காணிக்கைகள் இவை: ஒவ்வொரு
ஹோமர் கோதுமையிலும் எப்பாவில் ஆறிலொரு பாகத்தையும், ஒவ்வொரு
ஹோமர் பார்லியிலும் எப்பாவில் ஆறிலொரு பாகத்தையும் கொடுக்க
வேண்டும். **14** பாத் அளவின்படி எண்ணெயை அளந்து கொடுக்க வேண்
டும். ஒரு பாத் அளவு என்பது ஒரு கோர் அளவில்* பத்திலொரு
பாகம். பத்து பாத் அளவுகள் ஒரு ஹோமர். அதாவது, பத்து பாத் அள
வுகள் சேர்ந்தது ஒரு ஹோமர். **15** இஸ்ரவேலின் மந்தைகளிலிருந்து 200
ஆடுகளுக்கு ஒரு ஆடு என்ற கணக்கில் செம்மறியாடுகளைக் கொடுக்க
வேண்டும். ஜனங்களுடைய பாவப் பரிகாரத்துக்காக[g] இந்தக் காணிக்கை
களை உணவுக் காணிக்கையாகவும்,[h] தகன பலியாகவும்,[i] சமாதான பலி
யாகவும்[j] கொடுக்க வேண்டும்' என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார்.

16 'தேசத்தில் இருக்கிற எல்லா ஜனங்களும் இந்தக் காணிக்கைகளை[k]
இஸ்ரவேலின் தலைவருக்குக் கொடுக்க வேண்டும். **17** இஸ்ரவேலர்கள்
மாதப் பிறப்புகளிலும்,* ஓய்வுநாட்களிலும்,[l] மற்ற எல்லா பண்டிகைகளிலும்
செலுத்த வேண்டிய[m] தகன பலிகளுக்கும்[n] உணவுக் காணிக்கைகளுக்கும்[o]
திராட்சமது காணிக்கைக்கும் தலைவர்தான் பொறுப்பு.[p] இஸ்ரவேல் ஜனங்க
ளுக்குப் பாவப் பரிகாரம் செய்வதற்காக அவர்தான் பாவப் பரிகாரப் பலிக
ளையும், உணவுக் காணிக்கைகளையும், தகன பலிகளையும், சமாதான பலி
களையும் செலுத்த வேண்டும்.'

18 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'முதல்
மாதத்தின் முதல் நாளில், நீ குறையில்லாத ஒரு இளம் காளையைக் கொண்
டுவந்து, ஆலயத்தைப் பாவத்திலிருந்து சுத்திகரிக்க வேண்டும்.[q] **19** அப்
போது, குருவானவர் பாவப் பரிகாரப் பலியின் இரத்தத்தில் கொஞ்சத்தை

45:10-12, 14 *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **45:12** #வே.வா., "மினா." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **45:17** *வே.வா., "முதலாம் பிறையிலும்."

எடுத்து ஆலயத்தின் கதவு நிலையிலும்,[a] பலிபீட விளிம்பின் நான்கு
மூலைகளிலும், உட்பிரகார நுழைவாசலின் கதவு நிலையிலும் பூசுவார்.
20 தவறுதலாகவோ தெரியாத்தனமாகவோ பாவம் செய்கிறவர்களுக்காக[b]
மாதத்தின் ஏழாம் நாளில் நீ இதைத்தான் செய்ய வேண்டும். ஆலயத்தைப்
பாவத்திலிருந்து சுத்திகரிக்க வேண்டும்.[c]

21 முதல் மாதம், 14-ஆம் நாளில் நீங்கள் பஸ்கா பண்டிகையைக்
கொண்டாட வேண்டும்.[d] ஏழு நாட்களுக்குப் புளிப்பில்லாத ரொட்டிக
ளைச் சாப்பிட வேண்டும்.[e] **22** அந்த நாளில் உங்கள் தலைவர் தனக்கா
கவும் தேசத்திலுள்ள எல்லா ஜனங்களுக்காகவும் ஒரு இளம் காளையைப்
பாவப் பரிகாரப் பலியாகக் கொடுக்க வேண்டும்.[f] **23** பண்டிகையின்
ஏழு நாட்களிலும்[g] யெகோவாவுக்குத் தகன பலியாகத் தினமும் ஏழு இளம்
காளைகளையும் ஏழு செம்மறியாட்டுக் கடாக்களையும் கொடுக்க வேண்
டும். அவை குறையில்லாதவையாக இருக்க வேண்டும். அதோடு, தினமும்
ஒரு வெள்ளாட்டுக் கடாவைப் பாவப் பரிகாரப் பலியாக அவர் கொடுக்க
வேண்டும். **24** ஒவ்வொரு இளம் காளையோடும் ஒவ்வொரு வெள்ளாட்
டுக் கடாவோடும் ஒரு எப்பா அளவு* மாவை உணவுக் காணிக்கையாகக்
கொடுக்க வேண்டும். அந்த மாவோடு மூன்றரை லிட்டர்# எண்ணெயை
யும் கொடுக்க வேண்டும்.

25 அதே பாவப் பரிகாரப் பலியையும் தகன பலியையும் உணவுக்
காணிக்கையையும் எண்ணெயையும் ஏழாம் மாதம், 15-ஆம் நாளில்
தொடங்கும் பண்டிகையின் ஏழு நாட்களிலும் அவர் கொடுக்க வேண்
டும்.’”[h]

46 “உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: ‘கிழக்கே
பார்த்தபடி இருக்கிற உட்பிரகார நுழைவாசல்[i] வாரத்தில் ஆறு
நாட்களுக்கு[j] மூடப்பட்டிருக்க வேண்டும்.[k] ஆனால், ஓய்வுநாளிலும் மாதப்
பிறப்பு* நாளிலும் அது திறக்கப்பட வேண்டும். **2** தலைவர் வெளியிலி
ருந்து வந்து, நுழைவு மண்டபத்தின் வழியாகப் போய்,[l] கதவு நிலைக்குப்
பக்கத்தில் நிற்பார். அவருடைய தகன பலியையும் சமாதான பலிகளையும்
குருமார்கள் செலுத்துவார்கள். வாசலறையில் அவர் கடவுளை வணங்கி
விட்டு வெளியே போவார். ஆனால், நுழைவாசல் சாயங்காலம்வரை மூடப்
படக் கூடாது. **3** ஓய்வுநாட்களிலும் மாதப் பிறப்பு நாட்களிலும்[m]
தேசத்திலுள்ள ஜனங்கள்கூட அந்த நுழைவாசலில் யெகோவாவை வணங்
குவார்கள்.

4 தலைவர் ஓய்வுநாளிலே, குறையில்லாத ஆறு செம்மறியாட்டுக் கடாக்
குட்டிகளையும் ஒரு செம்மறியாட்டுக் கடாவையும் யெகோவாவுக்குத்
தகன பலியாகக் கொடுக்க வேண்டும்.[n] **5** அந்தச் செம்மறியாட்டுக் கடா
வோடு சேர்த்து ஒரு எப்பா அளவு* மாவை உணவுக் காணிக்கையாகக்
கொடுக்க வேண்டும். செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளோடு சேர்த்து அவ
ரால் முடிந்த உணவுக் காணிக்கையைக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு
எப்பா அளவு மாவுக்கும் மூன்றரை லிட்டர்# எண்ணெயைக் கொடுக்க
வேண்டும்.[o] **6** மாதப் பிறப்பு நாளில் குறையில்லாத ஒரு இளம் காளையை

45:24; 46:5 *அதாவது, “சுமார் 10 கிலோ.” **45:24; 46:5** #நே.மொ., “ஒரு ஹின் அளவு.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **46:1** *வே.வா., “முதலாம் பிறை.”

அதி. 45
a எசே 41:21
b லேவி 4:27, 28
c லேவி 16:20
d லேவி 23:5
e யாத் 12:18
f லேவி 4:13, 14
g லேவி 23:8
h லேவி 23:34 உபா 16:13 2நா 7:8 சக 14:16

அதி. 46
i எசே 40:32
j யாத் 20:9
k எசே 44:1, 2
l எசே 44:3
m சங் 81:3 ஏசா 66:23
n எண் 28:9, 10 எசே 45:17
o எசே 46:11

அதி. 46
a எண் 28:11-15
b எசே 46:2
c யாத் 23:14 உபா 16:16
d எசே 40:20
e எசே 40:24
f எசே 45: 21, 24 எசே 46:6, 7
g லேவி 1:3
h எசே 45:17
i எசே 46:1, 2
j யாத் 29:38 எண் 28:3, 5

யும், ஆறு செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளையும், ஒரு செம்மறியாட்டுக்
கடாவையும் கொடுக்க வேண்டும். அவற்றுக்கு எந்தக் குறையும் இருக்கக்
கூடாது.[a] 7 அந்த இளம் காளைக்காக ஒரு எப்பா அளவு மாவையும், அந்
தச் செம்மறியாட்டுக் கடாவுக்காக ஒரு எப்பா அளவு மாவையும், செம்மறி
யாட்டுக் கடாக் குட்டிகளுக்காக அவரால் முடிந்ததையும் உணவுக் காணிக்
கையாகக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு எப்பா அளவு மாவுக்கும்
மூன்றரை லிட்டர் எண்ணெயைக் கொடுக்க வேண்டும்.

8 நுழைவு மண்டபத்தின் வழியாகத்தான் தலைவர் உள்ளே வர
வேண்டும், அதன் வழியாகத்தான் வெளியேயும் போக வேண்டும்.[b]
9 பண்டிகை நாட்களில்[c] யெகோவாவை வணங்குவதற்காக வருகிற
ஜனங்கள் வடக்கு நுழைவாசல்[d] வழியாக வந்தால் தெற்கு நுழைவாசல்[e]
வழியாக வெளியே போக வேண்டும், தெற்கு நுழைவாசல் வழியாக
வந்தால் வடக்கு நுழைவாசல் வழியாக வெளியே போக வேண்டும். வந்த
வாசல் வழியாக யாரும் திரும்பிப் போகக் கூடாது. எதிர் வாசல் வழியா
கத்தான் போக வேண்டும். 10 ஜனங்கள் உள்ளே வரும்போது அவர்களு
டைய தலைவரும் உள்ளே வர வேண்டும், அவர்கள் வெளியே போகும்
போது அவரும் வெளியே போக வேண்டும். 11 பண்டிகை நாட்களிலும்
பண்டிகைக் காலங்களிலும், இளம் காளையோடு சேர்த்து ஒரு எப்பா
அளவு மாவையும், செம்மறியாட்டுக் கடாவோடு சேர்த்து ஒரு எப்பா
அளவு மாவையும், செம்மறியாட்டுக் கடாக் குட்டிகளோடு சேர்த்து அவ
ரால் முடிந்ததையும் உணவுக் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும். ஒவ்
வொரு எப்பா அளவு மாவுக்கும் மூன்றரை லிட்டர் எண்ணெயைக்
கொடுக்க வேண்டும்.[f]

12 தலைவர் அவராகவே விருப்பப்பட்டு தகன பலியையோ[g] சமாதான
பலிகளையோ யெகோவாவுக்குக் கொடுக்க வந்தால், கிழக்கே பார்த்தபடி
இருக்கிற நுழைவாசல் அவருக்காகத் திறக்கப்பட வேண்டும். ஓய்வுநாளில்
கொடுப்பதைப் போலவே அந்த நாளிலும் அவர் தகன பலியையும் சமா
தான பலிகளையும் கொடுப்பார்.[h] அவர் வெளியே போனதும் நுழைவாசல்
மூடப்பட வேண்டும்.[i]

13 யெகோவாவுக்குத் தகன பலியாக, குறையில்லாத ஒருவயது செம்ம
றியாட்டுக் கடாக் குட்டி தினமும் கொடுக்கப்பட வேண்டும்.[j] ஒவ்வொரு
நாள் காலையிலும் அது கொடுக்கப்பட வேண்டும். 14 அதோடு சேர்த்து,
உணவுக் காணிக்கையாக, ஒரு எப்பா அளவிலே ஆறில் ஒரு பங்கு*
மாவு ஒவ்வொரு நாள் காலையிலும் கொடுக்கப்பட வேண்டும். தவறாமல்
யெகோவாவுக்குச் செலுத்தும் உணவுக் காணிக்கையாகிய நைசான மாவின்
மேல் தெளிப்பதற்காக ஒன்றேகால் லிட்டர்# எண்ணெயும் கொடுக்கப்பட
வேண்டும். இது நிரந்தரச் சட்டம். 15 தினமும் செலுத்தப்படுகிற* தகன
பலியாக, செம்மறியாட்டுக் கடாக் குட்டியும் உணவுக் காணிக்கையும் எண்
ணெயும் காலை வேளைகளில் கொடுக்கப்பட வேண்டும்.'

16 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: 'தலை
வர் தன்னுடைய மகன்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நிலத்தைக்

46:14 * அதாவது, "சுமார் ஒன்றரை கிலோ." # நே.மொ., "ஒரு ஹின் அளவில் மூன்றிலொரு பங்கு." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **46:15** * வே.வா., "வழக்கமான."

கொடுத்தால் அது அவருடைய மகன்களின் நிலமாக ஆகும். அவர்களுக்
குக் கிடைத்த பரம்பரைச் சொத்தாக அது இருக்கும். **17** தன்னுடைய
வேலைக்காரர்களில் ஒருவனுக்கு ஒரு நிலத்தை அவர் கொடுத்தால், விடு
தலை வருஷம்வரை அது அவனுக்குச் சொந்தமானதாக இருக்கும்.[a] பின்பு,
அது அந்தத் தலைவருக்கே வந்து சேரும். அவருடைய மகன்களுக்கு
மட்டும்தான் நிலம் நிரந்தர சொத்தாகக் கிடைக்கும். **18** ஜனங்களுடைய
சொத்தை அவர் அபகரிக்கக் கூடாது. அவருக்குச் சொந்தமான நிலங்களை
மட்டும்தான் அவருடைய மகன்களுக்குக் கொடுக்க வேண்டும். மற்ற ஜனங்
களுடைய நிலங்களைப் பறித்துக்கொண்டு அவர்களை அங்கிருந்து விரட்
டிவிடக் கூடாது.'"

19 பின்பு, அவர் என்னை நுழைவாசலுக்குப் பக்கத்தில்,[b] வடக்கே பார்த்
தபடி இருக்கிற குருமார்களின் பரிசுத்தமான சாப்பாட்டு அறைகளுக்குப்
போகிற வழியாகக் கொண்டுபோனார்.[c] அங்கே மேற்குப் பக்கமாக பின்பு
றத்தில் நான் ஒரு இடத்தைப் பார்த்தேன். **20** அவர் என்னிடம், "இங்கு
தான் குருமார்கள் குற்ற நிவாரண பலிகளையும் பாவப் பரிகாரப் பலிகளை
யும் உணவுக் காணிக்கைகளையும் வேக வைக்க வேண்டும்.[d] ஜனங்களை
எதேச்சையாகப் பரிசுத்தமாக்கிவிடாதபடிக்கு, அவர்கள் எதையும் வெளிப்
பிரகாரத்துக்குக் கொண்டுபோகக் கூடாது"[e] என்றார்.

21 பின்பு, அவர் என்னை வெளிப்பிரகாரத்தின் நான்கு மூலைகள் வழி
யாகவும் கொண்டுபோனார். வெளிப்பிரகாரத்தின் ஒவ்வொரு மூலையிலும்
ஒரு சிறிய பிரகாரம் இருந்ததைப் பார்த்தேன். **22** அவற்றின் நீளம்
40 முழம்,* அகலம் 30 முழம். அந்த நான்கு பிரகாரங்களுமே ஒரே
அளவில் இருந்தன. **23** அந்த நான்கு பிரகாரங்களுக்கு உள்ளேயும் திட்டு
கள்* சுற்றிவர இருந்தன. அவற்றின் கீழே, பலிகளை வேக வைக்கும் அடுப்
புகள் அமைக்கப்பட்டிருந்தன. **24** அவர் என்னிடம், "ஆலயத்தில் சேவை
செய்கிறவர்கள் இங்குதான் ஜனங்களுடைய பலிகளை வேக வைப்பார்கள்"[f]
என்றார்.

47

பின்பு, அவர் என்னை மறுபடியும் ஆலயத்தின் வாசலுக்குக்
கொண்டுவந்தார்.[g] ஆலயத்தின் முன்பகுதி கிழக்கே பார்த்தபடி
இருந்தது. அங்கே வாசலறையின் கீழிருந்து தண்ணீர் புறப்பட்டு கிழக்கு
நோக்கி ஓடுவதை நான் பார்த்தேன்.[h] அது ஆலயத்தின் வலது பக்கமாக,
அதாவது பலிபீடத்தின் தெற்குப் பக்கமாக, ஓடியது.

2 பின்பு, அவர் என்னை வடக்கு நுழைவாசல்[i] வழியாக வெளியே
கொண்டுபோனார். அங்கிருந்து, கிழக்கே பார்த்தபடி இருந்த வெளிவாசலுக்
குக் கொண்டுபோனார்.[j] அங்கே வலது பக்கத்தில் தண்ணீர் லேசாக ஓடுவ
தைப் பார்த்தேன்.

3 அவர் ஒரு அளவுகோலுடன்[k] கிழக்குப் பக்கமாகப் போய்,
1,000 முழத்தை* அளந்து, அங்கே தண்ணீரைக் கடந்துபோகும்படி என்னி
டம் சொன்னார். அப்போது, தண்ணீர் என்னுடைய கணுக்கால் அளவுக்கு
இருந்தது.

4 பின்பு இன்னொரு 1,000 முழத்தை அளந்து, தண்ணீரைக் கடந்து

46:22; 47:3 *இது பெரிய முழத்தைக் குறிக்கிறது. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.
46:23 *வே.வா., "வரிசையாக அடுக்கி வைக்கப்பட்ட கற்கள்."

அதி. 46
a லேவி 25:10
b எசே 42:9
c எசே 42:1
d லேவி 2:4, 5
e எசே 44:19
f 2நா 35:13

அதி. 47
g எசே 41:2
h சக 13:1
சக 14:8
வெளி 22:1
i எசே 40:20
j எசே 40:6
எசே 44:1, 2
k எசே 40:3
வெளி 21:15

அதி. 47
a வெளி 22:1, 2
b உபா 4:47, 49
c சக 14:8
d யோசு 15: 20, 62 2நா 20:2
e எண் 34:2, 6
f உபா 29: 22, 23 சங் 107: 33, 34 எரே 17:6
g எசே 47:1
h வெளி 22:1, 2
i ஆதி 48:5 1நா 5:1 எசே 48:5
j ஆதி 26:3 ஆதி 28:13

போகும்படி என்னிடம் சொன்னார். அப்போது, தண்ணீர் என்னுடைய
முழங்கால் அளவுக்கு இருந்தது.
பின்பு இன்னொரு 1,000 முழத்தை அளந்து, தண்ணீரைக் கடந்துபோகும்
படி என்னிடம் சொன்னார். அப்போது, தண்ணீர் என்னுடைய இடுப்பு அள
வுக்கு இருந்தது.
5 பின்பு, இன்னொரு 1,000 முழத்தை அளந்தார். என்னால் கடந்துபோக
முடியாதளவுக்கு அது ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது. நீந்திப் போகிற
அளவுக்கு அது ஆழமாக இருந்தது. ஒருவராலுமே நடந்துபோக முடியாத
ளவுக்கு இருந்தது.
6 அவர் என்னிடம், “மனிதகுமாரனே, இதைப் பார்த்தாயா?” என்று
கேட்டார்.
பின்பு, என்னை மறுபடியும் ஆற்றங்கரைக்குக் கூட்டிக்கொண்டு வந்
தார். **7** நான் ஆற்றங்கரைக்குத் திரும்பி வந்தபோது, இரண்டு பக்கங்களி
லும் ஏராளமான மரங்கள் இருப்பதைப் பார்த்தேன்.[a] **8** அவர் என்னிடம்,
“இந்த ஆறு கிழக்குப் பிரதேசத்தின் திசையில் பாய்ந்தோடி, அரபா*[b] வழி
யாகப் போய், கடலில்# கலக்கும்.[c] அப்போது, கடல் தண்ணீர் நல்ல தண்
ணீராக ஆகும். **9** இந்த ஆறு எங்கெல்லாம் பாய்ந்தோடுகிறதோ அங்
கெல்லாம் ஏராளமான உயிரினங்களால் உயிர்வாழ முடியும். இந்த ஆறு
பாய்ந்தோடுகிற இடங்களில் மீன்கள் கணக்குவழக்கில்லாமல் பெருகும்.
கடல் தண்ணீர் நல்ல தண்ணீராக ஆகும். இந்த ஆறு எங்கே பாய்ந்தோடி
னாலும் அங்கே இருக்கிறவையெல்லாம் உயிர் பிழைக்கும்.
10 என்-கேதி[d] தொடங்கி என்-எக்லாயிம் வரைக்கும் மீனவர்கள் அந்
தக் கரையில் நிற்பார்கள். மீன் வலைகளைக் காயவைக்கும் இடம் அங்கே
இருக்கும். பெருங்கடலில்*[e] இருப்பதைப் போல அங்கும் வகை வகை
யான மீன்கள் ஏராளமாக இருக்கும்.
11 அதை ஒட்டியிருக்கிற சதுப்பு நிலங்கள் நல்ல நிலங்களாக மாறாமல்
உப்பு நிலங்களாகவே இருக்கும்.[f]
12 இந்த ஆற்றின் இரண்டு கரைகளிலும் விதவிதமான மரங்கள்
வளர்ந்து கனிகளைக் கொடுக்கும். அவற்றின் இலைகள் உதிராது. அவை
கனி கொடுக்காமல் போகாது. ஒவ்வொரு மாதமும் புதிய கனிகளைக்
கொடுக்கும். ஏனென்றால், அவற்றுக்குக் கிடைக்கும் தண்ணீர் ஆலயத்திலி
ருந்து பாய்ந்து வரும்.[g] அவற்றின் கனிகள் உணவாகவும், அவற்றின் இலை
கள் மருந்தாகவும் பயன்படும்”[h] என்றார்.
13 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்: “இஸ்ர
வேலின் 12 கோத்திரங்களுக்கு இந்தத் தேசத்தைத்தான் நீங்கள் பங்கு
போட்டுக் கொடுக்க வேண்டும். யோசேப்புக்கு இரண்டு பங்கு கொடுக்க
வேண்டும்.[i] **14** நீங்கள் இந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்வீர்கள்.
எல்லாருக்கும் இதில் சமமான பங்கு கிடைக்கும். இந்தத் தேசத்தைத்
தான் உங்களுடைய முன்னோர்களுக்குத் தருவதாக நான் வாக்குறுதி
கொடுத்திருந்தேன்.[j] இப்போது இது உங்களுக்குச் சொத்தாகக் கொடுக்கப்
படுகிறது.

47:8 * வே.வா., “பாலைநிலம்.” # அதாவது, “சவக் கடலில்.” **47:10** * அதாவது, “மத்தியதரைக் கடலில்.”

15 தேசத்தின் வடக்கு எல்லை பெருங்கடல் தொடங்கி எத்லோன்[a]
வழியாக சேதாத்,[b] **16** காமாத்,[c] பேரொத்தா[d] ஆகிய இடங்களுக்கும்,
தமஸ்குவுக்கும் காமாத்துக்கும் இடையிலுள்ள சிப்ராயிமுக்கும், ஆப்ரா
னின்[e] எல்லையில் உள்ள ஆத்சார்-அத்தீகோனுக்கும் போகிறது. **17** அது
கடல் தொடங்கி தமஸ்குவின் எல்லையில் உள்ள ஆத்சார்-ஏனான்[f] வரைக்
கும், வடக்கிலே காமாத்தின்[g] எல்லை வரைக்கும் போகிறது. இதுதான்
வடக்கு எல்லை.

18 அதன் கிழக்கு எல்லை ஆப்ரானுக்கும் தமஸ்குவுக்கும் இடையில்
போகிறது. கீலேயாத்துக்கும்[h] இஸ்ரவேல் தேசத்துக்கும் இடையில் யோர்
தான் நெடுகப் போகிறது. நீங்கள் எல்லையிலிருந்து* கிழக்குக் கடல்வரை#
அளக்க வேண்டும். இதுதான் கிழக்கு எல்லை.

19 அதன் தெற்கு எல்லை தாமார் தொடங்கி மேரிபாத்-காதேசின்[i] தண்
ணீர் வரைக்கும், பின்பு பள்ளத்தாக்கு* வரைக்கும், அங்கிருந்து பெருங்க
டல்[j] வரைக்கும் போகிறது. இதுதான் தெற்கு எல்லை.

20 அதன் மேற்குப் பகுதியில் பெருங்கடல் இருக்கிறது. தெற்கு எல்லை
யிலிருந்து லெபோ-காமாத்துக்கு*[k] எதிரில் உள்ள பகுதி வரையாக அதன்
எல்லை போகிறது. இதுதான் மேற்கு எல்லை.”

21 “நீங்கள் இந்தத் தேசத்தை இஸ்ரவேலின் 12 கோத்திரங்களுக்குள்
பங்குபோட்டுக்கொள்ள வேண்டும். **22** உங்களுக்கும், உங்கள் நடுவில்
குடியேறி பிள்ளைகளைப் பெற்றுக்கொண்ட மற்ற தேசத்து ஜனங்களுக்
கும் இந்தத் தேசத்தைச் சொத்தாகப் பங்கிட வேண்டும். அவர்களை
இஸ்ரவேலின் குடிமக்களைப் போலவே ஏற்றுக்கொள்ள வேண்டும். இஸ்ர
வேலின் கோத்திரங்கள் மத்தியில் உங்களுக்குப் பங்கு கிடைக்கும்போது
அவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டும். **23** அவர்கள் எந்தக் கோத்தி
ரத்துக்குச் சொந்தமான இடத்தில் குடியிருக்கிறார்களோ அந்த இடத்தி
லேயே அவர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டும்” என்று உன்னதப் பேர
ரசராகிய யெகோவா சொல்கிறார்.

48 “இஸ்ரவேல் கோத்திரங்களின் பெயர்களும், வடக்கு எல்லை
தொடங்கி அவற்றுக்குக் கிடைக்கும் பங்கின் எல்லைகளும் இவை
தான்: தாணின் வடக்கு எல்லை[l] எத்லோன் வழியாக லெபோ-காமாத்துக்
கும்,*[m] ஆத்சார்-ஏனானுக்கும் போகிறது. வடக்கே தமஸ்குவின் எல்
லையோரமாக காமாத்வரை[n] போகிறது. அது கிழக்கிலிருந்து மேற்குவரை
போகிறது. **2** தாணின் எல்லைக்குக் கீழே ஆசேரின் எல்லை[o] கிழக்கி
லிருந்து மேற்குவரை போகிறது. **3** ஆசேரின் எல்லைக்குக் கீழே நப்தலி
யின் எல்லை[p] கிழக்கிலிருந்து மேற்குவரை போகிறது. **4** நப்தலியின் எல்
லைக்குக் கீழே மனாசேயின் எல்லை[q] கிழக்கிலிருந்து மேற்குவரை
போகிறது. **5** மனாசேயின் எல்லைக்குக் கீழே எப்பிராயீமின் எல்லை[r]
கிழக்கிலிருந்து மேற்குவரை போகிறது. **6** எப்பிராயீமின் எல்லைக்குக்
கீழே ரூபனின் எல்லை[s] கிழக்கிலிருந்து மேற்குவரை போகிறது. **7** ரூப
னின் எல்லைக்குக் கீழே யூதாவின் எல்லை[t] கிழக்கிலிருந்து மேற்குவரை

அதி. 47
a எசே 48:1
b எண் 34:2, 8
c எண் 13:21
d 2சா 8:8
e எசே 47:18
f எண் 34:2, 9
g எசே 48:1
h எண் 32:1
i உபா 32:51
j எசே 48:28
k எண் 34:2, 8

அதி. 48
l யோசு 19:40
m எண் 34:2, 8
n எசே 47:15-17
o யோசு 19:24
p யோசு 19:32
q யோசு 13:29
r யோசு 17:17, 18
s யோசு 18:7
t யோசு 15:1 யோசு 19:9

47:18 *அதாவது, “வடக்கு எல்லையிலிருந்து.” #அதாவது, “சவக் கடல்வரை.” **47:19** *அதாவது, “எகிப்தின் காட்டாற்றுப் பள்ளத்தாக்கு.” **47:20** *வே.வா., “காமாத்தின் நுழைவாசலுக்கு.” **48:1** *வே.வா., “காமாத்தின் நுழைவாசலுக்கும்.”

போகிறது. **8** கிழக்கிலிருந்து மேற்குவரை போகிற யூதாவின் எல்லைக்
குக் கீழே, 25,000 முழ* அகலத்தில் ஒரு பகுதியை நீங்கள் கடவுளுக்குக்
காணிக்கையாக அர்ப்பணிக்க வேண்டும்.[a] கிழக்கிலிருந்து மேற்குவரை
அதன் நீளம் மற்ற கோத்திரங்களின் நீளத்தின்படியே இருக்க வேண்டும்.
அதன் நடுவில் ஆலயம் இருக்கும்.

9 நீங்கள் யெகோவாவுக்குக் காணிக்கையாக அர்ப்பணிக்கிற பகுதி
யின் நீளம் 25,000 முழமாகவும் அதன் அகலம் 10,000 முழமாகவும் இருக்க
வேண்டும். **10** இந்தப் பகுதிதான் குருமார்களுக்கான பரிசுத்த காணிக்கை
யாக இருக்கும்.[b] வடக்கில் அது 25,000 முழமாகவும், மேற்கில் 10,000 முழ
மாகவும், கிழக்கில் 10,000 முழமாகவும், தெற்கில் 25,000 முழமாகவும் இருக்
கும். அதன் நடுவில் யெகோவாவின் ஆலயம் இருக்கும். **11** சாதோக்கின்
வம்சத்தைச்[c] சேர்ந்த புனிதமாக்கப்பட்ட குருமார்களுக்கு அந்தப் பரி
சுத்த காணிக்கை கொடுக்கப்படும். ஏனென்றால், இஸ்ரவேலர்களும் லேவி
யர்களும் என்னைவிட்டு விலகிப் போனபோது[d] அவர்கள் என்னைவிட்டு
விலகிப்போகாமல் எனக்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்தார்
கள். **12** மகா பரிசுத்தமானதாக அர்ப்பணிக்கப்படுகிற நிலத்தில் லேவி
யர்களின் எல்லைக்குக் கீழே அந்தக் குருமார்களுக்கு ஒரு பகுதி கொடுக்
கப்படும்.

13 குருமார்களின் பகுதிக்கு மேலே 25,000 முழ நீளத்திலும் 10,000 முழ
அகலத்திலும் லேவியர்களுக்கு ஒரு பகுதி கொடுக்கப்படும். (அதன்
மொத்த நீளம் 25,000 முழம், அகலம் 10,000 முழம்.) **14** மிகச் சிறந்த இந்த
நிலத்தில் எந்தப் பகுதியையும் அவர்கள் விற்கவோ, மாற்றவோ, யாருக்கா
வது கொடுக்கவோ கூடாது. ஏனென்றால், அது யெகோவாவுக்குப் பரிசுத்
தமானது.

15 25,000 முழத்தில் இருக்கிற எல்லைக்குப் பக்கத்திலே 5,000 முழ அக
லத்தில் மீந்திருக்கும் பகுதி நகரத்தின் பொது உபயோகத்துக்காக ஒதுக்கப்
படும்.[e] அங்கே வீடுகளும் மேய்ச்சல் நிலங்களும் இருக்கும். அந்தப் பகு
தியின் நடுவில் நகரம் இருக்கும்.[f] **16** நகரத்தின் அளவுகள் இவைதான்:
அதன் வடக்கு எல்லை 4,500 முழமாகவும், தெற்கு எல்லை 4,500 முழமா
கவும், கிழக்கு எல்லை 4,500 முழமாகவும், மேற்கு எல்லை 4,500 முழமாக
வும் இருக்கும். **17** நகரத்தின் மேய்ச்சல் நிலங்கள் வடக்கில் 250 முழமா
கவும், தெற்கில் 250 முழமாகவும், கிழக்கில் 250 முழமாகவும், மேற்கில் 250
முழமாகவும் இருக்கும்.

18 மிச்சமிருக்கிற பகுதியின் நீளம் பரிசுத்த காணிக்கையின் நிலத்
தைப் போலவே[g] கிழக்கில் 10,000 முழமாகவும் மேற்கில் 10,000 முழமாக
வும் இருக்கும். அது பரிசுத்த காணிக்கையின் அளவில் இருக்கும். அதில்
விளைவதை நகரத்துக்காகச் சேவை செய்கிறவர்கள் சாப்பிடுவார்கள்.
19 நகரத்துக்காகச் சேவை செய்கிறவர்கள் இஸ்ரவேலின் எல்லா கோத்தி
ரங்களையும் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் அதில் பயிர் செய்
வார்கள்.[h]

20 மொத்த நிலமும் 25,000 முழத்தில் சதுரமாக இருக்கும். நகரத்துக்குச்
சொந்தமான பகுதியோடு சேர்த்து அதைப் பரிசுத்த காணிக்கையாக அர்ப்
பணிக்க வேண்டும்.

48:8 * இது பெரிய முழத்தைக் குறிக்கிறது. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 48
a எசே 45:1
b எண் 35:2; எசே 45:3, 4
c எசே 40:46; எசே 44:15
d எரே 23:11; எசே 22:26
e எசே 45:6
f எசே 48:35
g எசே 45:1
h எசே 45:6

21 பரிசுத்த காணிக்கையின் இரண்டு பக்கங்களிலும், நகரத்துக்குச்
சொந்தமான பகுதியின் இரண்டு பக்கங்களிலும் மீந்திருக்கிற பகுதி தலை
வருக்குச் சொந்தமானதாக இருக்கும்.[a] பரிசுத்த காணிக்கையின் கிழக்கிலும்
மேற்கிலும் இருக்கிற 25,000 முழ எல்லைகளுக்குப் பக்கத்தில் அது இருக்
கும். அதை ஒட்டியிருக்கிற கோத்திரங்களின் பகுதிகளைப் போலவே அது
இருக்கும். அது தலைவருக்காகக் கொடுக்கப்படும். பரிசுத்த காணிக்கையும்
ஆலயமும் அதன் நடுவில் இருக்கும்.

22 லேவியர்களின் பகுதியும் நகரத்துக்குச் சொந்தமான பகுதியும் தலை
வருடைய பகுதிக்கு இடையில் இருக்கும். தலைவருடைய பகுதி யூதாவின்
எல்லைக்கும்[b] பென்யமீனின் எல்லைக்கும் நடுவில் இருக்கும்.

23 மற்ற கோத்திரங்களின் எல்லைகள் இவைதான்: பென்யமீனின்
எல்லை கிழக்கிலிருந்து மேற்குவரை போகிறது.[c] **24** பென்யமீனின் எல்
லைக்குக் கீழே சிமியோனின் எல்லை[d] கிழக்கிலிருந்து மேற்குவரை போகி
றது. **25** சிமியோனின் எல்லைக்குக் கீழே இசக்காரின் எல்லை[e] கிழக்கிலி
ருந்து மேற்குவரை போகிறது. **26** இசக்காரின் எல்லைக்குக் கீழே
செபுலோனின் எல்லை[f] கிழக்கிலிருந்து மேற்குவரை போகிறது.[g] **27** செபு
லோனின் எல்லைக்குக் கீழே காத்தின் எல்லை[h] கிழக்கிலிருந்து மேற்குவரை
போகிறது. **28** காத்தின் எல்லையை ஒட்டிய தெற்கு எல்லை தாமாரிலி
ருந்து[i] மேரிபாத்-காதேசின்[j] தண்ணீர் வரையும், அங்கிருந்து பள்ளத்
தாக்கு*[k] வரையும், பெருங்கடல்# வரையும் போகிறது.

29 இந்தத் தேசத்தைத்தான் நீங்கள் இஸ்ரவேலின் கோத்திரங்களுக்குச்
சொத்தாகப் பங்குபோட்டுக் கொடுக்க வேண்டும்.[l] இவைதான் அவர்க
ளுக்குக் கிடைக்கும் பங்குகள்”[m] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா
சொல்கிறார்.

30 “நகரத்திலிருந்து வெளியே போவதற்கான வாசல்கள் இவைதான்: நக
ரத்தின் வடக்குப் பக்கத்தின் அளவு 4,500 முழமாக இருக்கும்.[n]

31 நகரத்தின் நுழைவாசல்களுக்கு இஸ்ரவேல் கோத்திரங்களின் பெயர்
கள் வைக்கப்படும். வடக்கில் ரூபனின் நுழைவாசல், யூதாவின் நுழைவாசல்,
லேவியின் நுழைவாசல் என மூன்று நுழைவாசல்கள் இருக்கும்.

32 நகரத்துடைய கிழக்குப் பக்கத்தின் நீளம் 4,500 முழமாக இருக்கும்.
அங்கே யோசேப்பின் நுழைவாசல், பென்யமீனின் நுழைவாசல், தாணின்
நுழைவாசல் என மூன்று நுழைவாசல்கள் இருக்கும்.

33 நகரத்துடைய தெற்குப் பக்கத்தின் நீளம் 4,500 முழமாக இருக்கும்.
அங்கே சிமியோனின் நுழைவாசல், இசக்காரின் நுழைவாசல், செபுலோ
னின் நுழைவாசல் என மூன்று நுழைவாசல்கள் இருக்கும்.

34 நகரத்துடைய மேற்குப் பக்கத்தின் நீளம் 4,500 முழமாக இருக்கும்.
அங்கே காத்தின் நுழைவாசல், ஆசேரின் நுழைவாசல், நப்தலியின் நுழை
வாசல் என மூன்று நுழைவாசல்கள் இருக்கும்.

35 நகரத்தின் சுற்றளவு 18,000 முழமாக இருக்கும். அந்த நாள்முதல்
அந்த நகரம், ‘யெகோவா அங்கே இருக்கிறார்’*[o] என்ற பெயரால் அழைக்
கப்படும்.”

48:28 *அதாவது, “எகிப்தின் காட்டாற்றுப் பள்ளத்தாக்கு.” #அதாவது, “மத்திய தரைக் கடல்.” **48:35** *வே.வா., “யெகோவா-ஷம்மா.”

அதி. 48
a எசே 45:7
b எசே 48:8
c யோசு 18:11
d யோசு 19:1
e யோசு 19:17
f யோசு 19:10
g ஆதி 49:13
h யோசு 18:7
i எசே 47:19
j எண் 20:13
k ஆதி 15:18
l எண் 34:2
m எசே 47:13
n எசே 48:16
o எரே 3:17
யோவே 3:21
சக 2:10

தானியேல்

முக்கியக் குறிப்புகள்

1 பாபிலோனியர்களால் எருசலேம் சுற்றிவளைக்கப்படுகிறது (1, 2)
சிறைபிடிக்கப்பட்ட அரச குடும்பத்து இளைஞர்களுக்கு விசேஷப் பயிற்சி (3-5)
நான்கு எபிரெயர்களுக்கு விசுவாசப் பரீட்சை (6-21)

2 நேபுகாத்நேச்சார் ராஜாவின் மனதைக் குழப்பிய கனவு (1-4)
ராஜாவின் கனவை எந்த ஞானியாலும் சொல்ல முடியவில்லை (5-13)
உதவிக்காக தானியேல் கடவுளிடம் ஜெபம் செய்கிறார் (14-18)
ரகசியத்தை வெளிப்படுத்தியதற்காக தானியேல் கடவுளைப் புகழ்கிறார் (19-23)
ராஜாவுக்கு தானியேல் கனவைச் சொல்கிறார் (24-35)
கனவின் அர்த்தம் விளக்கப்படுகிறது (36-45)
சிலையை ராஜ்யம் என்ற கல் நொறுக்குகிறது (44, 45)
தானியேலை ராஜா கௌரவிக்கிறான் (46-49)

3 நேபுகாத்நேச்சார் செய்த தங்கச் சிலை (1-7)
சிலையை வணங்கக் கட்டளை போடப்படுகிறது (4-6)
கீழ்ப்படியாமல் போன மூன்று எபிரெயர்கள்மேல் குற்றச்சாட்டு (8-18)
'உங்களுடைய தெய்வங்களைக் கும்பிடப்போவதில்லை' (18)
எரிகிற நெருப்புச் சூளையில் வீசப்படுகிறார்கள் (19-23)
நெருப்பிலிருந்து அற்புதமாகக் காப்பாற்றப்படுகிறார்கள் (24-27)
எபிரெயர்களின் கடவுளை ராஜா புகழ்கிறான் (28-30)

4 கடவுளின் ராஜ்யம் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று நேபுகாத்நேச்சார் ராஜா ஒப்புக்கொள்கிறான் (1-3)
ஒரு மரத்தைப் பற்றி ராஜா கண்ட கனவு (4-18)
மரம் வெட்டப்படுகிறது, ஏழு காலங்கள் உருண்டோடுகிறது (16)
கடவுள்தான் மனிதர்களுடைய ராஜா (17)
தானியேல் கனவை விளக்குகிறார் (19-27)
ராஜாவின் வாழ்க்கையில் தரிசனத்தின் முதல் நிறைவேற்றம் (28-36)
ஏழு காலங்களுக்கு ராஜா பைத்தியக்காரனைப் போல் இருக்கிறான் (32, 33)
பரலோகத்தின் கடவுளை ராஜா போற்றிப் புகழ்கிறான் (37)

5 பெல்ஷாத்சார் ராஜாவின் விருந்து (1-4)
சுவரில் எழுதப்பட்ட வார்த்தைகள் (5-12)
வார்த்தைகளை விளக்கும்படி தானியேலிடம் கேட்கப்படுகிறது (13-25)
விளக்கம்: பாபிலோன் வீழ்ச்சியடையும் (26-31)

6 தானியேலுக்கு எதிராக பெர்சிய அதிகாரிகளின் சதித்திட்டம் (1-9)
தானியேல் எப்போதும்போல் ஜெபம் செய்கிறார் (10-15)
தானியேல் சிங்கக் குகையில் போடப்படுகிறார் (16-24)
தானியேலின் கடவுளை தரியு ராஜா புகழ்கிறான் (25-28)

7 நான்கு மிருகங்களைப் பற்றிய தரிசனம் (1-8)
பெருமை பேசுகிற சிறிய கொம்பு முளைக்கிறது (8)
யுகம் யுகமாக வாழ்கிறவர்முன் நீதிமன்றம் கூடுகிறது (9-14)
மனிதகுமாரனுக்கு அரசாட்சி கொடுக்கப்படுகிறது (13, 14)
தரிசனத்தின் அர்த்தம் தானியேலுக்கு விளக்கப்படுகிறது (15-28)
நான்கு மிருகங்கள் நான்கு ராஜாக்களைக் குறிக்கின்றன (17)
பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைப் பெறுவார்கள் (18)
பத்துக் கொம்புகள், அதாவது பத்து ராஜாக்கள், தோன்றுவார்கள் (24)

8 செம்மறியாட்டுக் கடாவையும் வெள்ளாட்டுக் கடாவையும் பற்றிய தரிசனம் (1-14)
சிறிய கொம்பு தன்னை உயர்த்துகிறது (9-12)
2,300 மாலையும் காலையும் (14)
தரிசனத்தின் அர்த்தத்தை காபிரியேல் விளக்குகிறார் (15-27)
செம்மறியாட்டுக் கடாவையும் வெள்ளாட்டுக் கடாவையும் பற்றி விளக்கப்படுகிறது (20, 21)
கொடூரமான ராஜா தோன்றுகிறான் (23-25)

9 ஜனங்களுடைய பாவங்களை ஒத்துக்கொண்டு தானியேல் செய்கிற ஜெபம் (1-19)

- எருசலேம் 70 வருஷங்களுக்குப் பாழாய்க் கிடக்கும் (2)

தானியேலிடம் காபிரியேல் வருகிறார் (20-23)

70 வாரங்களைப் பற்றிய தீர்க்கதரிசனம் (24-27)

- 69 வாரங்களுக்குப் பின்பு மேசியா தோன்றுவார் (25)
- மேசியா கொல்லப்படுவார் (26)
- நகரமும் பரிசுத்த இடமும் அழிக்கப்படும் (26)

10 கடவுளிடமிருந்து வந்த தூதுவர் தானியேலைச் சந்திக்கிறார் (1-21)

- அந்தத் தேவதூதருக்கு மிகாவேல் உதவுகிறார் (13)

11 பெர்சிய ராஜாக்களும், கிரேக்க ராஜாக்களும் (1-4)

தென்திசை ராஜாக்களும், வடதிசை ராஜாக்களும் (5-45)

- வசூலிப்பவன் ஒருவன் அனுப்பப்படுகிறான் (20)
- ஒப்பந்தத்தின் தலைவர் கொல்லப்படுகிறார் (22)
- கோட்டைகளின் தெய்வம் மகிமைப்படுத்தப்படுகிறது (38)
- தென்திசை ராஜா வடதிசை ராஜாவோடு சண்டைக்கு நிற்கிறான் (40)
- கிழக்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் கலங்க வைக்கும் அறிக்கைகள் வருகின்றன (44)

12 ‘முடிவு காலமும்’ அதற்குப் பின்பும் (1-13)

- மிகாவேல் செயலில் இறங்குவார் (1)
- விவேகமுள்ளவர்கள் ஒளியைப் போல் பிரகாசிப்பார்கள் (3)
- உண்மையான அறிவு பெருகும் (4)
- முடிவு நாளில் தன் பங்கைப் பெற தானியேல் எழுந்திருப்பார் (13)

---

1 யூதாவின் ராஜா யோயாக்கீம்[a] ஆட்சி செய்த மூன்றாம் வருஷத்தில்,
பாபிலோனின் ராஜா நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து அதைச்
சுற்றிவளைத்தான்.[b] **2** உண்மைக் கடவுளான யெகோவா, யூதாவின் ராஜா
யோயாக்கீமை நேபுகாத்நேச்சாரின் கையில் கொடுத்துவிட்டார்.[c] அதோடு,
ஆலயத்திலிருந்த பாத்திரங்கள் சிலவற்றை அவன் எடுத்துக்கொண்டு
போவதற்கும் விட்டுவிட்டார். அவன் அந்தப் பாத்திரங்களை சினேயார்*[d]
தேசத்திலிருந்த தன் தெய்வத்தின் கோயிலுக்கு எடுத்துக்கொண்டு போய்,
அதன் பொக்கிஷ அறையில் வைத்தான்.[e]
3 பின்பு இஸ்ரவேல் ஜனங்களிலும், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களி
லும், உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிலும் சிலரைக் கொண்டுவரும்படி[f]
அரண்மனையின் முக்கிய அதிகாரியான அஸ்பேனாசுக்கு ராஜா உத்தரவு
போட்டான். **4** அவர்கள் எந்தக் குறையும் இல்லாத இளைஞர்களாக,*
பார்ப்பதற்கு அழகானவர்களாக, ஞானமும் அறிவும் பகுத்தறிவும் உள்ளவர்
களாக,[g] அரண்மனையில் சேவை செய்வதற்கான திறமை பெற்றவர்களாக
இருக்க வேண்டும் என்று சொன்னான். கல்தேயர்களின் மொழியில் பேசவும்
எழுதவும் அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும் என்றும் சொன்னான்.
5 அதோடு, தான் சாப்பிடுகிற அதே உணவையும் தான் குடிக்கிற அதே
திராட்சமதுவையும் அவர்களுக்குத் தினமும் கொடுக்கும்படி கட்டளை
கொடுத்தான். மூன்று வருஷங்கள் பயிற்சி* கொடுத்த பின்பு அரண்மனை
யில் அவர்களுக்குப் பொறுப்புகளைத் தர வேண்டும் என்றும் சொன்னான்.

1:2 * அதாவது, “பாபிலோனியா.” **1:4** * நே.மொ., “பிள்ளைகளாக.” **1:5** * அல்லது, “சத்துள்ள உணவு.”

அதி. 1

a 2நா 36:4; எரே 22:18, 19; எரே 36:30

b உபா 28:49, 50; 2ரா 24:1; 2நா 36:5, 6

c ஏசா 42:24

d ஆதி 10:9, 10

e 2நா 36:7; எஸ்றா 1:7

f 2ரா 20:16, 18

g தானி 1:17, 20; தானி 5:11, 12

அதி. 1
6 அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களில், யூதா கோத்திரத்தைச்
சேர்ந்த தானியேல்,*[a] அனனியா,# மீஷாவேல்,△ அசரியா⊠[b] ஆகிய நான்கு
பேரும் இருந்தார்கள். 7 அரண்மனையின் தலைமை அதிகாரி அவர்க
ளுக்குப் புதிய பெயர்களை* வைத்தான். தானியேலுக்கு பெல்தெஷாத்
சார்[c] என்றும், அனனியாவுக்கு சாத்ராக் என்றும், மீஷாவேலுக்கு மேஷாக்
என்றும், அசரியாவுக்கு ஆபேத்நேகோ[d] என்றும் பெயர் வைத்தான்.

8 ராஜாவுடைய உணவினாலும் திராட்சமதுவினாலும் தன்னைத் தீட்டுப்
படுத்திக்கொள்ளக் கூடாது என்று தானியேல் தன் இதயத்தில் தீர்மான
மாக இருந்தார். அதனால், அவற்றைச் சாப்பிட்டுத் தன்னைத் தீட்டுப்
படுத்திக்கொள்ளாமல் இருக்க தலைமை அதிகாரியிடம் அனுமதி கேட்
டார். 9 தானியேலுக்குக் கருணையும் இரக்கமும் காட்டும்படி தலைமை
அதிகாரியின் மனதை உண்மைக் கடவுள் தூண்டினார்.[e] 10 தானியேலி
டம் அந்தத் தலைமை அதிகாரி, "என் எஜமானாகிய ராஜாவை நினைத்தால்
எனக்குப் பயமாக இருக்கிறது. அவர்தான் உங்களுக்கு இந்த உணவையும்
திராட்சமதுவையும் கொடுக்கச் சொல்லியிருக்கிறார். உங்கள் வயதிலுள்ள
மற்ற இளைஞர்களுக்கு* பக்கத்தில் நீங்கள் நோஞ்சான்போல் தெரிந்தால்
அவர் என் தலையை வெட்டிவிடுவாரே" என்றான். 11 அதனால் தானி
யேல், தன்னையும் அனனியாவையும் மீஷாவேலையும் அசரியாவையும்
கவனித்துக்கொள்வதற்கு அந்த அதிகாரி நியமித்திருந்த பாதுகாவலனிடம்
போய், 12 "தயவுசெய்து பத்து நாட்களுக்கு உங்கள் ஊழியர்களாகிய
எங்களுக்கு வெறும் காய்கறிகளையும்* தண்ணீரையும் மட்டும் கொடுத்துப்
பாருங்கள். 13 பத்து நாட்கள் கழித்து, ராஜாவுடைய உணவைச் சாப்பிடும்
இளைஞர்களின்* தோற்றத்தோடு எங்கள் தோற்றத்தை ஒப்பிட்டுப் பாருங்
கள். பின்பு, உங்கள் ஊழியர்களின் விஷயத்தில் என்ன செய்யலாமென்று
முடிவெடுங்கள்" என்றார்.

14 அந்தப் பாதுகாவலன் அதற்குச் சம்மதித்து, பத்து நாட்களுக்கு அவர்
கள் கேட்ட உணவையே கொடுத்தான். 15 பத்து நாட்கள் கழித்து அவன்
பார்த்தபோது, ராஜாவுடைய உணவைச் சாப்பிட்ட எல்லா இளைஞர்களை
யும்விட* இவர்கள் களையாகவும் ஆரோக்கியமாகவும்# இருந்தார்கள்.
16 அதனால், அந்தப் பாதுகாவலன் அவர்களுக்கு ராஜாவுடைய உணவை
யும் திராட்சமதுவையும் கொடுப்பதற்குப் பதிலாக வெறும் காய்கறிகளை*
கொடுத்துவந்தான். 17 எல்லா விதமான எழுத்துக்களிலும் உண்மைக்
கடவுள் அந்த நான்கு இளைஞர்களுக்கு* ஞானத்தையும் அறிவையும்
ஆழமான புரிந்துகொள்ளுதலையும் தந்தார். விசேஷமாக தானியேலுக்கு,
எல்லா விதமான தரிசனங்களையும் கனவுகளையும் புரிந்துகொள்கிற திற
னைக் கொடுத்தார்.[f]

18 அந்த இளைஞர்கள் நேபுகாத்நேச்சார் ராஜாவிடம் போக வேண்டிய
நாள் வந்தபோது,[g] தலைமை அதிகாரி அவர்களைக் கூட்டிக்கொண்டு

a தானி 2:48; தானி 5:13, 29
b தானி 2:17, 18
c தானி 4:8; தானி 5:12
d தானி 2:49; தானி 3:12, 28
e 1ரா 8:49, 50; சங் 106:44, 46
f தானி 1:20; தானி 4:9; தானி 5:11, 12
g தானி 1:5

1:6 * அர்த்தம், "கடவுளே என் நீதிபதி." # அர்த்தம், "யெகோவா கருணை காட்டியி ருக்கிறார்." △ ஒருவேளை இதன் அர்த்தம், "கடவுளைப் போன்றவர் யார்?" ⊠ அர்த் தம், "யெகோவா உதவியிருக்கிறார்." **1:7** * அதாவது, "பாபிலோனியப் பெயர்களை." **1:10, 17** * நே.மொ., "பிள்ளைகளுக்கு." **1:12** * வே.வா., "சைவ உணவையும்." **1:13** * நே.மொ., "பிள்ளைகளின்." **1:15** * நே.மொ., "பிள்ளைகளையும்விட." # நே.மொ., "புஷ்டியாகவும்." **1:16** * வே.வா., "சைவ உணவை."

போனான். **19** அவர்களிடம் ராஜா பேசிப் பார்த்தபோது, தானியேலும்
அனனியாவும் மீஷாவேலும் அசரியாவும்[a] மற்ற எல்லா இளைஞர்களையும்
விட சிறந்தவர்களாக இருந்ததைக் கண்டான். அதனால், அரண்மனையில்
சேவை செய்ய அவர்களை நியமித்தான். **20** ஞானமும் புத்தியும்*
தேவைப்படுகிற எந்தவொரு விஷயத்தைப் பற்றி ராஜா கேட்டபோதும்
அவர்கள் சிறப்பாகப் பதில் சொன்னார்கள். தன்னுடைய சாம்ராஜ்யத்திலி
ருந்த மந்திரவாதிகள், மாயவித்தைக்காரர்கள்[b] எல்லாரையும்விட அவர்
கள் பத்து மடங்கு சிறந்தவர்களாக இருந்ததை ராஜா தெரிந்துகொண்டான்.
21 கோரேஸ் ராஜா ஆட்சி செய்த முதலாம் வருஷம்வரை தானியேல்
அங்கே இருந்தார்.[c]

2 நேபுகாத்நேச்சார் தன்னுடைய ஆட்சியின் இரண்டாம் வருஷத்தில் பல
கனவுகளைப் பார்த்ததால் மிகவும் குழம்பிப்போனான்.[d] அவனுக்குத்
தூக்கம்கூட வரவில்லை. **2** அந்தக் கனவுகளைப் பற்றிக் கேட்பதற்காக, மந்
திரவாதிகளையும் மாயவித்தைக்காரர்களையும் சூனியக்காரர்களையும்
ஜோதிடர்களையும்* வரவழைக்கும்படி உத்தரவு கொடுத்தான். அவர்கள்
எல்லாரும் ராஜாவுக்கு முன்னால் வந்து நின்றார்கள்.[e] **3** அப்போது ராஜா
அவர்களிடம், "நான் ஒரு கனவைப் பார்த்து ரொம்பவே குழம்பிப்போய்
இருக்கிறேன். அதன் அர்த்தத்தை நான் தெரிந்துகொள்ள வேண்டும்" என்
றான். **4** அதற்கு அந்த ஜோதிடர்கள் அரமேயிக் மொழியில்,*[f] "ராஜாவே,
நீங்கள் நீடூழி வாழ்க! என்ன கனவைப் பார்த்தீர்கள் என்று உங்கள் ஊழியர்க
ளுக்குச் சொல்லுங்கள், அப்போது அதன் அர்த்தத்தைச் சொல்கிறோம்" என்
றார்கள்.

5 அதற்கு ராஜா அந்த ஜோதிடர்களிடம், "நான் பார்த்த கனவையும்
அதன் அர்த்தத்தையும் நீங்கள்தான் சொல்ல வேண்டும்; இல்லாவிட்டால்,
உங்களைக் கண்டந்துண்டமாக வெட்டிவிடுவேன், உங்கள் வீடுகளைப்
பொதுக் கழிப்பிடமாக* மாற்றிவிடுவேன். இதுதான் என் முடிவு. **6** கன
வையும் அதன் அர்த்தத்தையும் நீங்கள் சொன்னால், அன்பளிப்புகளையும்
வெகுமானத்தையும் கொடுத்து, உங்களை மிகவும் கௌரவிப்பேன்.[g] அத
னால், கனவையும் அதன் அர்த்தத்தையும் இப்போது சொல்லுங்கள்"
என்றான்.

7 அவர்கள் இரண்டாவது தடவையும், "ராஜாவே, அந்தக் கனவை உங்
கள் ஊழியர்களுக்குச் சொல்லுங்கள், அப்போது அதன் அர்த்தத்தைச்
சொல்கிறோம்" என்றார்கள்.

8 அதற்கு ராஜா, "நான் முடிவாகச் சொன்னதை நன்றாகத் தெரிந்தி
ருந்தும் நீங்கள் வேண்டுமென்றே இழுத்தடிக்கிறீர்கள். **9** சூழ்நிலை மாறும்
வரை ஏதாவது பொய்யும் புரட்டும் சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம்
என்று திட்டம் போட்டு வந்திருக்கிறீர்கள். நான் பார்த்த கனவைச் சொல்லா
விட்டால் நீங்கள் யாருமே தண்டனையிலிருந்து தப்ப முடியாது. அதனால்
கனவை முதலில் சொல்லுங்கள், அப்போதுதான் அதன் அர்த்தத்தையும்
உங்களால் சொல்ல முடியும் என்று நம்புவேன்" என்றான்.

10 அதற்கு அந்த ஜோதிடர்கள், "ராஜா கேட்கும் விஷயத்தை இந்த

1:20 *வே.வா., "புரிந்துகொள்ளுதலும்." **2:2** *அதாவது, "கல்தேயர்களையும்." **2:4** *தானி 2:4ஆ முதல் 7:28 வரையான வசனங்கள் முதன்முதலாக அரமேயிக் மொழியில் எழுதப்பட்டன. **2:5** *அல்லது, "குப்பைமேடாக; சாணம் கொட்டும் இடமாக."

அதி. 1
a தானி 1:3, 6
b தானி 2:2; தானி 4:7; தானி 5:8
c தானி 6:28; தானி 10:1

அதி. 2
d தானி 4:4, 5
e தானி 4:6, 7; தானி 5:7, 8
f 2ரா 18:26; எஸ்றா 4:7; ஏசா 36:11
g தானி 2:48; தானி 5:16, 29

உலகத்திலுள்ள எந்த மனிதனாலும் சொல்ல முடியாது. எந்த மகா
ராஜாவும் ஆளுநரும் இப்படியொரு விஷயத்தை ஒரு மந்திரவாதியி
டமோ மாயவித்தைக்காரனிடமோ ஜோதிடரிடமோ இதுவரை கேட்ட
தில்லை. **11** ராஜாவே, மிகவும் கஷ்டமான ஒன்றை நீங்கள் கேட்கிறீர்கள்.
தெய்வங்களைத் தவிர வேறு யாராலும் அதற்குப் பதில் சொல்ல முடியாது.
ஆனால், அதைச் சொல்வதற்கு அந்தத் தெய்வங்கள் இங்கு இல்லையே"
என்றார்கள்.

12 அதைக் கேட்டதும் ராஜாவுக்குக் கோபம் தலைக்கேறியது. பாபி
லோனில் இருந்த ஞானிகள் எல்லாரையும் கொல்லும்படி தன் ஆட்க
ளுக்கு ஆணையிட்டான்.[a] **13** அவர்கள் ராஜாவின் ஆணைப்படி எல்லா
ஞானிகளையும் கொலை செய்யத் தேடிப்போனார்கள். அவர்கள் தானியே
லையும் அவருடைய நண்பர்களையும்கூட தேடிப்போனார்கள்.

14 ராஜாவுடைய மெய்க்காவலர்களின் தலைவனான ஆரியோகு பாபி
லோனில் இருந்த ஞானிகளைக் கொலை செய்யப் புறப்பட்டுப் போன
போது தானியேல் அவனிடம் விவேகமாகவும் ஜாக்கிரதையாகவும் பேசி
னார். **15** "ராஜா ஏன் இப்படியொரு பயங்கரமான கட்டளையைப்
போட்டிருக்கிறார்?" என்று அவனிடம் கேட்டார். அப்போது, ஆரியோகு
விஷயத்தைச் சொன்னான்.[b] **16** அதனால் தானியேல் ராஜாவிடம் போய்,
கனவை விளக்குவதற்கு அவகாசம் கேட்டார்.

17 அதன்பின் வீட்டுக்குப் போய், தன் நண்பர்களான அனனியா,
மீஷாவேல், அசரியா ஆகியவர்களிடம் விஷயத்தைச் சொன்னார்.
18 அதோடு, "பரலோகத்தின் கடவுள் நம்மேல் இரக்கம் காட்டி அந்தக்
கனவின் ரகசியத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று ஜெபம் செய்யுங்கள்.
அப்போதுதான், பாபிலோனில் உள்ள மற்ற ஞானிகளோடு சேர்ந்து நாமும்
அழிந்துபோக மாட்டோம்" என்றார்.

19 இரவில் ஒரு தரிசனத்தின் மூலம் தானியேலுக்கு அந்த ரகசியம்
வெளிப்படுத்தப்பட்டது.[c] உடனே அவர் பரலோகத்தின் கடவுளைப்
புகழ்ந்து, **20** இப்படிச் சொன்னார்:

"கடவுளுடைய பெயர் என்றென்றும் புகழப்படட்டும்,
ஞானமும் வல்லமையும் உள்ளவர் அவர்தான்.[d]
21 காலங்களையும் வேளைகளையும் மாற்றுபவர்[e] அவர்தான்.
ராஜாக்களை நீக்குபவரும் நியமிப்பவரும் அவர்தான்.[f]
ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு* அறிவையும்
தருகிறவர் அவர்தான்.[g]
22 ஆழமான விஷயங்களையும் மறைவான விஷயங்களையும் அவர்
வெளிப்படுத்துகிறார்.[h]
இருளில் இருப்பவற்றை அவர் தெரிந்து வைத்திருக்கிறார்.[i]
அவரிடம் ஒளி குடிகொண்டிருக்கிறது.[j]
23 என் முன்னோர்களின் கடவுளே, நன்றி சொல்லி உங்களைப்
புகழ்கிறேன்.
நீங்கள் எனக்கு ஞானத்தையும் பலத்தையும் தந்திருக்கிறீர்கள்.
நாங்கள் கேட்டுக்கொண்டதை எனக்கு வெளிப்படுத்தினீர்கள்.

2:21 * வே.வா., "பகுத்தறிவு உள்ளவர்களுக்கு."

அதி. 2
a தானி 2:24
b தானி 2:9
c தானி 2:28
d 1நா 29:11, யோபு 12:13, சங் 147:5, எரே 32:17-19
e அப் 1:7
f 1சா 2:7, 8, சங் 75:7, எரே 27:5, தானி 4:17
g நீதி 2:6, பிர 2:26, யாக் 1:5
h எரே 33:3, 1கொ 2:10
i சங் 139:12, எபி 4:13
j சங் 36:9, சங் 112:4

ராஜாவின் மனதைக் குழப்புகிற விஷயத்தை எங்களுக்குத்
தெரியப்படுத்தினீர்கள்."[a]

24 பின்பு தானியேல், பாபிலோனில் உள்ள ஞானிகளைக் கொல்வதற்கு
ராஜா நியமித்திருந்த ஆரியோகுவிடம்[b] போய், "பாபிலோனில் உள்ள
எந்த ஞானியையும் கொலை செய்யாதீர்கள். என்னை ராஜாவிடம் கூட்டிக்
கொண்டு போங்கள், அவருடைய கனவை நான் விளக்குகிறேன்" என்றார்.

25 ஆரியோகு உடனடியாக தானியேலை ராஜாவிடம் கூட்டிக்கொண்டு
போய், "இவன் யூதாவிலிருந்து பிடித்துவரப்பட்டவர்களில் ஒருவன்.[c] இவ
னால் ராஜாவின் கனவை விளக்க முடியும்" என்றான். **26** அப்போது
ராஜா, பெல்தெஷாத்சார்[d] என்று அழைக்கப்பட்ட தானியேலிடம், "நான்
பார்த்த கனவையும் அதன் அர்த்தத்தையும் உண்மையிலேயே உன்னால்
சொல்ல முடியுமா?"[e] என்று கேட்டான். **27** அதற்கு தானியேல், "ராஜா
கேட்கும் ரகசியத்தை எந்த ஞானியாலும் மாயவித்தைக்காரனாலும் மந்தி
ரவாதியாலும் ஜோதிடராலும் சொல்ல முடியாது.[f] **28** ஆனால், ரகசியங்
களை வெளிப்படுத்துகிற ஒரு கடவுள் பரலோகத்தில் இருக்கிறார்.[g] கடைசி
நாட்களில் என்ன நடக்குமென்று அவர் நேபுகாத்நேச்சார் ராஜாவுக்குத்
தெரியப்படுத்தியிருக்கிறார். நீங்கள் படுத்திருந்தபோது பார்த்த கனவும் தரி
சனங்களும் இதுதான்:

29 ராஜாவே, நீங்கள் படுத்திருந்தபோது எதிர்காலத்தில் நடக்கப்போவ
தைப் பற்றிக் கனவு கண்டீர்கள்.* ரகசியங்களை வெளிப்படுத்துகிற கடவுள்,
இனி நடக்கப்போகும் சம்பவங்களை உங்களுக்குக் காட்டியிருக்கிறார்.
30 மற்ற எல்லாரையும்விட நான் ஏதோ பெரிய ஞானி என்பதால் எனக்கு
அவர் அந்த ரகசியத்தை வெளிப்படுத்தவில்லை. உங்கள் உள்ளத்தில் வந்த
யோசனைகளின் அர்த்தத்தை உங்களுக்குத் தெரிவிப்பதற்குத்தான் அதை
வெளிப்படுத்தினார்.[h]

31 ராஜாவே, நீங்கள் ஒரு பிரமாண்டமான சிலையைப் பார்த்தீர்கள்.
அந்த மாபெரும் சிலை கண்ணைப் பறிக்கும் பிரகாசத்தோடு உங்கள்
முன்னால் நின்றுகொண்டிருந்தது. அது பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்
தது. **32** அந்தச் சிலையின் தலை சொக்கத்தங்கத்தாலும்,[i] மார்பும் கைக
ளும் வெள்ளியாலும்,[j] வயிறும் தொடைகளும் செம்பாலும்,[k] **33** கால்கள்
இரும்பாலும்,[l] பாதங்கள் பாதி இரும்பாலும் பாதி களிமண்ணாலும் செய்யப்
பட்டிருந்தது.[m] **34** நீங்கள் அதைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, மனிதக்
கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து வந்தது. அது அந்தச் சிலை
யின் இரும்பும் களிமண்ணும் கலந்த பாதங்களில் மோதி, அவற்றைச் சுக்
குநூறாக்கியது.[n] **35** அப்போது, இரும்பும் களிமண்ணும் செம்பும் வெள்
ளியும் தங்கமும் ஒட்டுமொத்தமாக நொறுங்கி, கோடைக் காலத்தில்
களத்துமேட்டிலிருந்து பறந்துபோகும் பதரைப் போலப் பறந்துபோயின.
இருந்த இடமே தெரியாதபடி அவை காற்றில் அடித்துச் செல்லப்பட்டன.
ஆனால், சிலையை மோதிய அந்தக் கல் ஒரு பெரிய மலையாகி, முழு பூமி
யையும் நிரப்பியது.

36 இதுதான் அந்தக் கனவு. அதன் அர்த்தத்தை இப்போது நாங்
கள் ராஜாவுக்குச் சொல்கிறோம். **37** ராஜாதி ராஜாவாகிய உங்களுக்குப்

2:29 * நே.மொ., "பற்றிய எண்ணங்கள் உங்களுக்கு வந்தன."

அதி. 2
a தானி 1:17; தானி 2:28
b தானி 2:12, 14
c தானி 1:3, 6
d தானி 1:7
e ஆதி 41:15
f தானி 2:10, 11
g ஆதி 40:8; தானி 1:17
h தானி 2:47
i தானி 2:37, 38; தானி 7:4
j தானி 5:28; தானி 7:5; தானி 8:3, 20
k தானி 2:39; தானி 7:6; தானி 8:5, 21
l தானி 7:7, 19
m தானி 2:40-42
n தானி 2:44, 45

பரலோகத்தின் கடவுள் ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் பலத்தையும் மகி
மையையும் கொடுத்திருக்கிறார்.[a] **38** எல்லா இடங்களிலும் வாழ்கிற மனி
தர்களையும் காட்டில் திரிகிற மிருகங்களையும் வானத்தில் பறக்கிற
பறவைகளையும் உங்கள் கையில் ஒப்படைத்து, அவை எல்லாவற்றுக்கும்
உங்களை அரசராக்கியிருக்கிறார்.[b] அதனால், தங்கத்தாலான அந்தத் தலை
நீங்கள்தான்.[c]

39 ஆனால், உங்களுக்குப் பின்பு உங்கள் ராஜ்யத்தைவிட பலம்
குறைந்த இன்னொரு ராஜ்யம் வரும்.[d] அதன்பின், செம்பு போன்ற மூன்
றாம் ராஜ்யம் தோன்றும், அது பூமி முழுவதையுமே ஆளும்.[e]

40 நான்காம் ராஜ்யம் இரும்புபோல் உறுதியாக இருக்கும்.[f] இரும்பு
எப்படி எல்லாவற்றையும் நொறுக்கிச் சுக்குநூறாக்குமோ, அப்படியே அது
அவற்றையெல்லாம் நொறுக்கிச் சுக்குநூறாக்கிவிடும்.[g]

41 சிலையின் பாதங்களும் கால்விரல்களும் பாதி குயவனின் களிமண்
ணும் பாதி இரும்புமாக இருந்ததை நீங்கள் பார்த்ததுபோல், அந்த ராஜ்யம்
பிரிந்திருக்கும். ஆனால், ஈரமான களிமண்ணோடு இரும்பு கலந்திருந்த
தால் இரும்பின் உறுதி ஓரளவு அதற்கு இருக்கும். **42** கால்விரல்கள் பாதி
இரும்பும் பாதி களிமண்ணுமாக இருந்ததுபோல் அந்த ராஜ்யம் கொஞ்சம்
உறுதியானதாகவும் கொஞ்சம் உறுதியற்றதாகவும் இருக்கும். **43** ஈரமான
களிமண்ணோடு இரும்பு கலந்திருந்ததை நீங்கள் பார்த்ததுபோல், ஜனங்க
ளோடு அவர்கள்* கலந்திருப்பார்கள். ஆனால், இரும்பு எப்படி களிமண்
ணோடு ஒட்டாதோ, அப்படியே அவர்களும் ஒருவரோடு ஒருவர் ஒட்டா
மல் இருப்பார்கள்.

44 அந்த ராஜாக்களின் காலத்தில், பரலோகத்தின் கடவுள் ஒரு ராஜ்
யத்தை* ஏற்படுத்துவார்.[h] அந்த ராஜ்யம் ஒருபோதும் அழியாது.[i] அது எந்த
ஜனத்தின் கையிலும் கொடுக்கப்படாது.[j] அது மற்ற எல்லா ராஜ்யங்களையும்
நொறுக்கி, அடியோடு அழித்துவிட்டு,[k] அது மட்டும் என்றென்றும் நிலைத்தி
ருக்கும்.[l] **45** மனிதக் கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் மலையிலிருந்து
பெயர்ந்து வந்து இரும்பையும் செம்பையும் களிமண்ணையும் வெள்ளியை
யும் தங்கத்தையும் நொறுக்கியதைப் பார்த்தீர்களே,[m] அந்தக் கல்தான் அந்த
ராஜ்யம். எதிர்காலத்தில் நடக்கப்போவதை மகத்தான கடவுள் ராஜாவுக்
குத் தெரியப்படுத்தியிருக்கிறார்.[n] அந்தக் கனவு நிச்சயமாக நடக்கும், அதன்
அர்த்தத்தை முழுமையாக நம்பலாம்” என்றார்.

46 நேபுகாத்நேச்சார் ராஜா உடனே தானியேலின் முன்னால் சாஷ்
டாங்கமாக விழுந்து மரியாதை செலுத்தினான். அதோடு, அவருக்குப்
பரிசு கொடுக்கும்படியும் அவருக்காகத் தூபம் காட்டும்படியும் ஆணை
யிட்டான். **47** பின்பு தானியேலிடம், “உண்மையில் நீயும் உன் ஆட்களும்
வணங்குகிற கடவுள்தான் தேவாதி தேவன், ராஜாக்களுக்கெல்லாம் ராஜா,*
ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறவர். அதனால்தான் இந்த ரகசி
யத்தை உன்னால் வெளிப்படுத்த முடிந்தது” என்றான்.[o] **48** பின்பு,
ராஜா தானியேலுக்கு விலைமதிப்புள்ள பல அன்பளிப்புகளைக் கொடுத்
தான். அதோடு, அவருக்கு உயர்ந்த அந்தஸ்தைத் தந்து, பாபிலோன் மாகா
ணத்துக்கே அதிபதியாகவும்[p] பாபிலோனில் உள்ள ஞானிகளுக்கெல்லாம்

2:43 *இரும்புக்கு அடையாளமாக இருப்பவர்களைக் குறிப்பதாகத் தெரிகிறது. **2:44** *அதாவது, “அரசாங்கத்தை.” **2:47** *நே.மொ., “எஜமான்.”

அதி. 2
a எரே 28:14; தானி 5:18
b எரே 27:5-7
c தானி 2:32; தானி 4:20-22
d ஏசா 45:1; எரே 51:28, 29; தானி 5:28
e தானி 7:6; தானி 8:5, 21; தானி 11:3
f தானி 2:33; தானி 7:19, 23
g தானி 7:7
h ஆதி 49:10; சங் 2:6; மத் 6:10; லூ 22:29; யோவா 18:36; வெளி 11:15; வெளி 20:6
i 2சா 7:13; ஏசா 9:7; தானி 7:13, 14
j தானி 4:17; தானி 7:27
k சங் 2:7-9; சங் 110:5, 6; வெளி 19:15
l தானி 4:34; லூ 1:31-33
m தானி 2:34, 35
n ஆதி 41:28; தானி 2:28
o ஆதி 41:39; தானி 1:17; தானி 2:28; தானி 4:9
p தானி 2:6; தானி 5:16, 29

தலைமை அதிகாரியாகவும் நியமித்தான். **49** அதுமட்டுமல்ல, தானியேலு
டைய வேண்டுகோளின்படி சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவுக்கு[a]
பாபிலோன் மாகாணத்தை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொடுத்தான். தானி
யேலோ அரசவையில் பணியாற்றினார்.

3 நேபுகாத்நேச்சார் ராஜா ஒரு தங்கச் சிலை செய்து, பாபிலோன் மாகா
ணத்திலுள்ள தூரா சமவெளியில் நிறுத்தினான். அதன் உயரம் சுமார்
88 அடி,* அகலம் சுமார் 9 அடி.# **2** அந்தச் சிலையின் திறப்பு விழாவுக்கு
அதிபதிகள், மந்திரிகள், ஆளுநர்கள், ஆலோசகர்கள், பொக்கிஷ அறை
அதிகாரிகள், நீதிபதிகள், நடுவர்கள் ஆகியவர்களையும் மாகாணங்களின்
நிர்வாகிகள் எல்லாரையும் கூடிவரச் சொல்லி செய்தி அனுப்பினான்.

3 அதன்படியே, அதிபதிகளும் மந்திரிகளும் ஆளுநர்களும் ஆலோச
கர்களும் பொக்கிஷ அறை அதிகாரிகளும் நீதிபதிகளும் நடுவர்களும்
மாகாணங்களின் நிர்வாகிகள் எல்லாரும் நேபுகாத்நேச்சார் ராஜா நிறுத்திய
சிலையின் திறப்பு விழாவுக்கு ஒன்றுகூடி வந்து, அதன் முன்னால் நின்றார்
கள். **4** அப்போது ராஜாவின் அறிவிப்பாளர் மிகவும் சத்தமாக, “எல்லா
இனங்களையும் தேசங்களையும் மொழிகளையும் சேர்ந்தவர்களே, ராஜா
கட்டளையிடுவது என்னவென்றால், **5** ஊதுகொம்பும் நாதசுரமும் கின்
னரமும் யாழும் சுரமண்டலமும் பைங்குழலும் மற்ற இசைக் கருவிகளும்
வாசிக்கப்படும்போது, நீங்கள் எல்லாரும் நேபுகாத்நேச்சார் ராஜா நிறுத்தியி
ருக்கிற இந்தத் தங்கச் சிலையின் முன்பாக விழுந்து வணங்க வேண்டும்.
6 யாராவது அப்படி விழுந்து வணங்கவில்லை என்றால், எரிகிற நெருப்
புச் சூளையில் அப்போதே வீசப்படுவார்” என்று அறிவித்தார்.[b] **7** அத
னால், ஊதுகொம்பும் நாதசுரமும் கின்னரமும் யாழும் சுரமண்டலமும் மற்ற
இசைக் கருவிகளும் வாசிக்கப்பட்டபோது எல்லா இனங்களையும் தேசங்
களையும் மொழிகளையும் சேர்ந்தவர்கள் நேபுகாத்நேச்சார் ராஜா நிறுத்திய
தங்கச் சிலைக்கு முன்னால் விழுந்து அதை வணங்கினார்கள்.

8 பின்பு, கல்தேயர்களில் சிலர் ராஜாவிடம் வந்து அந்த யூதர்கள்
மேல் குற்றம்சாட்டினார்கள்.* **9** அவர்கள் நேபுகாத்நேச்சார் ராஜாவிடம்,
“ராஜாவே, நீங்கள் நீடூழி வாழ்க! **10** ஊதுகொம்பும் நாதசுரமும் கின்னர
மும் யாழும் சுரமண்டலமும் பைங்குழலும் மற்ற இசைக் கருவிகளும் வாசிக்
கப்படும்போது, எல்லாரும் தங்கச் சிலையின் முன்பாக விழுந்து அதை
வணங்க வேண்டுமென்று நீங்கள் கட்டளை கொடுத்தீர்கள். **11** யாராவது
அப்படி விழுந்து வணங்கவில்லை என்றால், எரிகிற நெருப்புச் சூளையில்
அவரை வீச வேண்டுமென்றும் சொன்னீர்கள்.[c] **12** ஆனால், பாபிலோன்
மாகாணத்தை நிர்வகிக்க ராஜா நியமித்த யூதர்களான சாத்ராக்கும் மேஷாக்
கும் ஆபேத்நேகோவும்[d] ராஜாவைக் கொஞ்சம்கூட மதிக்கவில்லை. அவர்
கள் உங்கள் தெய்வங்களைக் கும்பிடுவது இல்லை, நீங்கள் நிறுத்திய தங்கச்
சிலையைக்கூட வணங்கவில்லை” என்றார்கள்.

13 அதைக் கேட்டதும் நேபுகாத்நேச்சார் ஆவேசமடைந்து, சாத்ராக்
கையும் மேஷாக்கையும் ஆபேத்நேகோவையும் தன் முன்னால் கொண்டு
வந்து நிறுத்தும்படி ஆணையிட்டான். அதன்படியே, அவர்கள் ராஜாவுக்கு

3:1 *நே.மொ., “60 முழம்.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். #நே.மொ., “6 முழம்.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **3:8** *வே.வா., “யூதர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் பேசினார்கள்.”

அதி. 2
a தானி 1:7

அதி. 3
b எரே 29:22
c தானி 3:4-6
d தானி 1:7
தானி 2:49

அதி. 3
a ஏசா 46:1
எரே 50:2
தானி 2:47
b யாத் 5:2
2நா 32:15
ஏசா 36:4, 20
c 1சா 17:37
சங் 27:1
ஏசா 12:2
தானி 6:27
d யாத் 20:5
அப் 5:29
e தானி 2:47

முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். **14** நேபுகாத்நேச்சார் அவர்
களிடம், “சாத்ராக்! மேஷாக்! ஆபேத்நேகோ! நீங்கள் என் தெய்வங்க
ளைக்[a] கும்பிடாததும், நான் நிறுத்திய தங்கச் சிலையை வணங்காததும்
உண்மைதானா? **15** ஊதுகொம்பும் நாதசுரமும் கின்னரமும் யாழும் சுர
மண்டலமும் பைங்குழலும் மற்ற இசைக் கருவிகளும் வாசிக்கப்படும்
போது, நான் நிறுத்திய சிலைக்குமுன் நீங்கள் விழுந்து வணங்கினால்
நல்லது. இல்லையென்றால், எரிகிற நெருப்புச் சூளையில் அப்போதே வீசப்
படுவீர்கள். எந்தத் தெய்வம் உங்களை என் கையிலிருந்து காப்பாற்றப்போ
கிறதென்று பார்க்கிறேன்!”[b] என்றான்.

16 அதற்கு சாத்ராக்கும் மேஷாக்கும் ஆபேத்நேகோவும், “நேபுகாத்
நேச்சார் ராஜாவே, இந்த விஷயத்தைப் பற்றி நாங்கள் உங்களிடம் பேச
வேண்டியதே இல்லை. **17** எரிகிற நெருப்புச் சூளையில் நீங்கள் எங்
களை வீசினாலும், நாங்கள் வணங்குகிற கடவுளால் அந்தச் சூளையிலிருந்
தும் உங்கள் கையிலிருந்தும் எங்களைக் காப்பாற்ற முடியும்.[c] **18** அப்படி
அவர் எங்களைக் காப்பாற்றாவிட்டாலும், ராஜாவே, நாங்கள் உங்களு
டைய தெய்வங்களைக் கும்பிடப்போவதும் இல்லை, நீங்கள் நிறுத்திய தங்
கச் சிலையை வணங்கப்போவதும் இல்லை[d] என்று தெரிவித்துக்கொள்கி
றோம்” என்றார்கள்.

19 உடனே நேபுகாத்நேச்சாருக்கு சாத்ராக், மேஷாக், ஆபேத்நே
கோமீது ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. அவனுடைய முகமே* மாறி
யது. வழக்கத்தைவிட ஏழு மடங்கு அதிகமாகச் சூளையைச் சூடாக்கும்படி
ஆணையிட்டான். **20** சாத்ராக்கையும் மேஷாக்கையும் ஆபேத்நேகோ
வையும் கட்டி, எரிகிற நெருப்புச் சூளையில் வீசும்படி பலசாலிகளான படை
வீரர்கள் சிலருக்குக் கட்டளை கொடுத்தான்.

21 அந்த மூன்று பேரும் அவர்கள் போட்டிருந்த மேலங்கிகளோடும்
உள்ளங்கிகளோடும் குல்லாக்களோடும் மற்ற எல்லா உடைகளோடும் கட்
டப்பட்டு, எரிகிற நெருப்புச் சூளையில் வீசப்பட்டார்கள். **22** ராஜாவின்
கடுமையான கட்டளைப்படி சூளை பயங்கரமாகச் சூடாக்கப்பட்டதால்,
அவர்களை நெருப்பில் போடுவதற்குப் போனவர்களே அந்த நெருப்பின்
ஜுவாலையில் பொசுங்கிப்போனார்கள். **23** சாத்ராக், மேஷாக், ஆபேத்
நேகோ மூன்று பேரும், கட்டப்பட்ட நிலையில் அந்தச் சூளைக்குள் விழுந்
தார்கள்.

24 பின்பு, நேபுகாத்நேச்சார் ராஜா பயத்தில் சட்டென்று எழுந்து தன்
உயர் அதிகாரிகளிடம், “நாம் மூன்று பேரைத்தானே கட்டி நெருப்புக்குள்
போட்டோம்?” என்று கேட்டான். அவர்கள், “ஆமாம், ராஜாவே” என்றார்
கள். **25** அதற்கு அவன், “அங்கே பாருங்கள்! எந்தக் கட்டுகளும் இல்லா
மல் நான்கு பேர் நெருப்புக்குள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அவர்
களுக்கு ஒன்றுமே ஆகவில்லை. நான்காவது ஆள் பார்ப்பதற்குத்
தெய்வமகன்களில் ஒருவரைப் போல இருக்கிறார்” என்றான்.

26 அதன்பின், எரிகிற நெருப்புச் சூளையின் வாசலுக்குப் பக்கத்தில்
போய், “உன்னதமான கடவுளின்[e] ஊழியர்களான சாத்ராக்கே, மேஷாக்கே,
ஆபேத்நேகோவே, வெளியே வாருங்கள்!” என்றான். உடனே அந்த மூன்று
பேரும் நெருப்புக்குள்ளிருந்து வெளியே வந்தார்கள். **27** அவர்களுக்கு

3:19 * வே.வா., “அபிப்பிராயமே.”

எந்தத் தீக்காயமும் ஏற்படவில்லை.[a] அவர்களுடைய தலையிலுள்ள ஒரு முடிகூட கருகவில்லை. அவர்கள் போட்டிருந்த உடைகளுக்கும் ஒன்றுமே ஆகவில்லை. அவர்களிடம் நெருப்பு வாடைகூட வீசவில்லை. இதையெல்லாம் அங்கு கூடியிருந்த அதிபதிகளும் மந்திரிகளும் ஆளுநர்களும் உயர் அதிகாரிகளும்[b] பார்த்தார்கள்.

28 அப்போது நேபுகாத்நேச்சார், “சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் கடவுளுக்குப் புகழ் சேரட்டும்![c] அவர் தன்னுடைய தூதனை அனுப்பி தன் ஊழியர்களைக் காப்பாற்றினார். ஏனென்றால், அவர்கள் தங்களுடைய கடவுள்மேல் நம்பிக்கை வைத்து, ராஜாவின் கட்டளையை மீறினார்கள். வேறு தெய்வத்தைச் சேவிப்பதற்கோ வணங்குவதற்கோ பதிலாகச் சாகவும் தயாராய் இருந்தார்கள்.[d]
29 அதனால் இப்போது நான் ஆணையிடுவது என்னவென்றால், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் கடவுளுக்கு எதிராக யார் என்ன பேசினாலும் சரி, அவனுடைய இனமும் தேசமும் மொழியும் எதுவாக இருந்தாலும் சரி, அவன் கண்டந்துண்டமாக வெட்டப்படுவான். அவனுடைய வீடு பொதுக் கழிப்பிடமாக* மாற்றப்படும். ஏனென்றால், இதுபோல் அற்புதமாகக் காப்பாற்றும் கடவுள் வேறு யாருமே இல்லை”[e] என்றான்.

30 பின்பு சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவுக்கு பாபிலோன் மாகாணத்தில் உயர்ந்த அந்தஸ்தை* ராஜா கொடுத்தான்.[f]

4 “பூமியெங்கும் உள்ள எல்லா இனத்தினருக்கும் தேசத்தினருக்கும் மொழியினருக்கும் நேபுகாத்நேச்சார் ராஜா எழுதுவது: உங்களுக்கு வாழ்த்துக்கள்!
2 உன்னதமான கடவுள் என் வாழ்க்கையில் செய்த அதிசயங்களையும் அற்புதங்களையும் பற்றி உங்களுக்குச் சொல்வதில் சந்தோஷப்படுகிறேன்.
3 அவர் செய்யும் அதிசயங்களும் அற்புதங்களும் எவ்வளவு பிரமிப்பாக இருக்கின்றன! அவருடைய ராஜ்யம் என்றென்றும் நிலைத்திருக்கும், அவருடைய அரசாட்சி தலைமுறை தலைமுறையாக நீடித்திருக்கும்.[g]

4 நேபுகாத்நேச்சாராகிய நான் எந்தக் கவலையும் இல்லாமல் செல்வச் செழிப்போடு என் அரண்மனையில் வாழ்ந்துவந்தேன்.
5 ஒருநாள் நான் படுத்திருந்தபோது, ஒரு பயங்கரமான கனவைப் பார்த்தேன். அதில் வந்த காட்சிகளையும் தரிசனங்களையும் பார்த்து அரண்டுபோனேன்.[h]
6 அந்தக் கனவின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்வதற்காக, பாபிலோனில் உள்ள எல்லா ஞானிகளையும் என் முன்னால் கொண்டுவந்து நிறுத்தும்படி ஆணையிட்டேன்.[i]

7 அதன்படியே, மந்திரவாதிகளும் மாயவித்தைக்காரர்களும் ஜோதிடர்களும்*[j] குறிசொல்கிறவர்களும் வந்தார்கள். நான் பார்த்த கனவை அவர்களிடம் சொன்னேன், ஆனால் அவர்களால் அதை விளக்க முடியவில்லை.[k]
8 கடைசியில், என் தெய்வத்தின்[l] பெயர் கொண்ட பெல்தெஷாத்சார்[m] என்ற தானியேல் வந்தார். பரிசுத்தமான தெய்வங்களின் சக்தியைப் பெற்ற அவரிடம்[n] அந்தக் கனவைப் பற்றிச் சொன்னேன். நான் அவரிடம்,

9 ‘மந்திரவாதிகளின் தலைவனான பெல்தெஷாத்சாரே,[o] பரிசுத்தமான தெய்வங்களின் சக்தியை நீ பெற்றிருப்பது[p] எனக்கு நன்றாகத் தெரியும்.

3:29 *அல்லது, “குப்பைமேடாக; சாணம் கொட்டும் இடமாக.” **3:30** *நே.மொ., “சிறப்பான வாழ்வை.” **4:7** *அதாவது, “கல்தேயர்களும்.”

அதி. 3
a எபி 11:33, 34
b தானி 3:2
c தானி 2:47; தானி 4:34
d தானி 3:15
e தானி 4:35; தானி 6:26, 27
f தானி 2:49

அதி. 4
g சங் 10:16; சங் 90:2; எரே 10:10
h தானி 2:1
i தானி 2:2
j ஏசா 47:13
k தானி 2:10, 11
l ஏசா 46:1; எரே 50:2
m தானி 1:7
n தானி 4:18; தானி 5:11, 12
o தானி 1:20; தானி 2:48
p ஆதி 41:38; தானி 6:3

உன்னால் சொல்ல முடியாத ரகசியம் எதுவுமே இல்லை.[a] அதனால், கன
வில் நான் பார்த்த தரிசனங்களையும் அதன் அர்த்தத்தையும் நீதான்
எனக்கு விளக்க வேண்டும்.

10 நான் படுத்திருந்தபோது பார்த்த தரிசனத்தில், பூமியின் நடுவில்
ஒரு மரம்[b] உயர்ந்தோங்கி நின்றது.[c] **11** அது பிரமாண்டமாக வளர்ந்து,
பலம் அடைந்தது. அதன் உச்சி வானத்தையே தொட்டது. பூமியின் எல்லா
மூலைகளிலிருந்தும் அதைப் பார்க்க முடிந்தது. **12** அதன் இலைகள்
அழகாக இருந்தன, அதில் பழங்கள் காய்த்துக் குலுங்கின, எல்லா உயிரி
னங்களுக்கும் அதிலிருந்து உணவு கிடைத்தது. அதன் நிழலில் காட்டு மிரு
கங்களும், அதன் கிளைகளில் வானத்துப் பறவைகளும் தங்கின. எல்லா
உயிரினங்களும் அதன் பழங்களைச் சாப்பிட்டன.

13 நான் அந்தத் தரிசனத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, பரிசுத்த
தூதுவர்* ஒருவர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார்.[d] **14** அவர் உரத்த
குரலில், "இந்த மரத்தை வெட்டிச்சாயுங்கள்,[e] கிளைகளை முறித்துப்போடுங்
கள், இலைகளை உதிர்த்துவிடுங்கள், பழங்களைச் சிதறடியுங்கள்! அதன்
நிழலில் தங்கியிருக்கிற மிருகங்கள் ஓடிப்போகட்டும், அதன் கிளைகளில்
தங்கியிருக்கிற பறவைகள் பறந்துபோகட்டும். **15** ஆனால், அடிமரத்தை
யும் அதன் வேர்களையும் புல்வெளியிலேயே விட்டுவையுங்கள். இரும்பி
லும் செம்பிலும் அதற்குக் காப்புகளைப் போடுங்கள். வானத்திலிருந்து பெய்
யும் பனியில் அது நனையட்டும். பூமியிலுள்ள புல்பூண்டுகளின் நடுவில்
அது மிருகங்களோடு இருக்கட்டும்.[f] **16** மனித இதயம் நீக்கப்பட்டு, மிருக
இதயம் அதற்குக் கொடுக்கப்படும். இப்படியே, ஏழு காலங்கள்[g] உருண்டோ
டட்டும்.[h] **17** இது தூதுவர்களின்*[i] உத்தரவு, பரிசுத்தவான்களின் வேண்டு
கோள். உன்னதமான கடவுள்தான் மனிதர்களுடைய ராஜ்யத்துக்கெல்லாம்
ராஜா[j] என்றும், தனக்கு விருப்பமானவனிடம் ஆட்சியைக் கொடுக்கிறார்
என்றும், மிக அற்பமான# மனிதனைக்கூட அரசனாக்குகிறார் என்றும் உயி
ரோடுள்ள எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

18 இதுதான் நேபுகாத்நேச்சார் ராஜாவாகிய நான் பார்த்த கனவு. பெல்
தெஷாத்சாரே, இப்போது இதன் அர்த்தத்தைச் சொல். என் சாம்ராஜ்யத்தி
லுள்ள எந்த ஞானியாலும் அதைச் சொல்ல முடியவில்லை.[k] உன்னால் மட்
டும்தான் முடியும், ஏனென்றால் பரிசுத்தமான தெய்வங்களின் சக்தியை நீ
பெற்றிருக்கிறாய்' என்று சொன்னேன்.

19 அதைக் கேட்டதும் பெல்தெஷாத்சார்[l] என்ற தானியேல் திடுக்கிட்
டுப்போனார். ஏதேதோ யோசனைகளால் பயந்துபோனார்.

அப்போது ராஜா, 'பெல்தெஷாத்சாரே, கனவையும் அதன் அர்த்தத்தை
யும் நினைத்துப் பயப்படாதே' என்றான்.

அதற்கு பெல்தெஷாத்சார், 'என் எஜமானே, அந்தக் கனவு உங்களை
வெறுக்கிறவர்களுக்கே பலிக்கட்டும், அதன் அர்த்தம் உங்கள் எதிரிகளி
டமே நிறைவேறட்டும்.

20 நீங்கள் பார்த்த மரம் பிரமாண்டமாக வளர்ந்து, பலம் அடைந்தது.
அதன் உச்சி வானத்தையே தொட்டது. பூமியின் எல்லா இடங்களிலிருந்தும்

4:13 * நே.மொ., "காவலர்." **4:17** * நே.மொ., "காவலர்களின்." # வே.வா., "மனத்தாழ்
மையான."

அதி. 4
a தானி 1:17, 20
b தானி 4:26
c தானி 4:20-22
d தானி 4:23-26
e தானி 4:31; தானி 5:18, 20
f தானி 4:32, 33
g லூ 21:24
h தானி 4:32
i தானி 4:13
j தானி 4:34
k ஏசா 47:13; தானி 2:27; தானி 5:8, 15
l தானி 1:7

அதைப் பார்க்க முடிந்தது.[a] **21** அதில் அழகான இலைகளும் ஏராள
மான பழங்களும் இருந்தன. அது எல்லா உயிரினங்களுக்கும் உணவளித்
தது. அதன் நிழலில் காட்டு மிருகங்களும், அதன் கிளைகளில் வானத்துப்
பறவைகளும் தங்கின.[b] **22** அந்த மரம் நீங்கள்தான் ராஜாவே. நீங்கள்
உயர்ந்தோங்கி வளர்ந்து, பலம் அடைந்திருக்கிறீர்கள். உங்கள் மேன்மை
வானத்தைத் தொட்டிருக்கிறது,[c] உங்கள் ஆட்சி பூமியெங்கும் பரந்துவிரிந்
திருக்கிறது.[d]

23 ராஜாவே, பரிசுத்த தூதுவர்*[e] ஒருவர் பரலோகத்திலிருந்து இறங்கி
வந்ததை நீங்கள் பார்த்தீர்கள். அவர், "இந்த மரத்தை வெட்டி நாசமாக்
குங்கள். ஆனால், அடிமரத்தையும் அதன் வேர்களையும் புல்வெளியி
லேயே விட்டுவையுங்கள். இரும்பிலும் செம்பிலும் அதற்குக் காப்புகளைப்
போடுங்கள். வானத்திலிருந்து பெய்யும் பனியில் அது நனையட்டும். காட்டு
வெளியில் உள்ள மிருகங்கள் மத்தியிலே அது கிடக்கட்டும். இப்படியே
ஏழு காலங்கள் உருண்டோடட்டும்"[f] என்றார். **24** ராஜாவே, அதன் அர்த்
தத்தை இப்போது விளக்குகிறேன். என் எஜமானாகிய ராஜாவுக்கு இப்படி
நடக்க வேண்டுமென்பது உன்னதமான கடவுளின் தீர்ப்பு. **25** நீங்கள் மனி
தர்களிடமிருந்து துரத்தப்பட்டு, காட்டு மிருகங்களோடு வாழ்வீர்கள். மாடு
களைப் போலப் புல்லை மேய்வீர்கள். வானத்திலிருந்து பெய்யும் பனியில்
நனைவீர்கள்.[g] இப்படியே, ஏழு காலங்கள் உருண்டோடும்.[h] கடைசியில்,
உன்னதமான கடவுள்தான் மனிதர்களுடைய ராஜ்யத்துக்கெல்லாம் ராஜா
என்றும், தனக்கு விருப்பமானவனிடம் ஆட்சியைக் கொடுக்கிறார்[i] என்றும்
புரிந்துகொள்வீர்கள்.

26 அடிமரத்தையும் அதன் வேர்களையும் விட்டுவைக்கும்படி[j] சொல்
லப்பட்டதன் அர்த்தம் என்னவென்றால், பரலோகத்திலுள்ள கடவுள்தான்
ராஜா* என்பதை நீங்கள் உணர்ந்த பின்பு ராஜ்யத்தைத் திரும்பப் பெற்
றுக்கொள்வீர்கள். **27** அதனால் ராஜாவே, என் அறிவுரையைக் கொஞ்
சம் கேளுங்கள். உங்கள் பாவங்களை விட்டுவிட்டு நன்மை செய்யுங்கள்,
அக்கிரமங்களை விட்டுவிட்டு ஏழைகளுக்கு இரக்கம் காட்டுங்கள். அப்
போது ஒருவேளை, நீங்கள் சீரும் சிறப்புமாகத் தொடர்ந்து வாழ முடியும்'[k]
என்றார்."

28 இதெல்லாமே நேபுகாத்நேச்சார் ராஜாவின் வாழ்க்கையில் நடந்தது.

29 பன்னிரண்டு மாதங்களுக்குப் பின்பு, பாபிலோனில் உள்ள தன்
அரண்மனையின் மொட்டைமாடியில் ராஜா நடந்துகொண்டிருந்தான்.
30 அப்போது அவன், "என்னுடைய ராஜ மாளிகைக்காகவும்* என்னுடைய
பேர்புகழுக்காகவும் என் சொந்த சக்தியினாலும் பலத்தினாலும் நானே கட்
டியது அல்லவா இந்த மகா பாபிலோன்!" என்று சொல்லிக்கொண்டான்.

31 அவன் அதைச் சொல்லி முடிப்பதற்குள் பரலோகத்திலிருந்து ஒரு
குரல், "நேபுகாத்நேச்சார் ராஜாவே, உனக்குச் சொல்லப்படும் தீர்ப்பைக்
கேள்: 'உன் ராஜ்யம் உன்னிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது.[l] **32** மனிதர்
களிடமிருந்து நீ துரத்தப்படுவாய். காட்டு மிருகங்களோடு வாழ்வாய். மாடு
களைப் போலப் புல்லை மேய்வாய். இப்படியே, ஏழு காலங்கள்
உருண்டோடும். கடைசியில், உன்னதமான கடவுள்தான் மனிதர்களுடைய

4:23 *நே.மொ., "காவலர்." **4:26** *நே.மொ., "பரலோகம்தான் ஆட்சி செய்கிறது."
4:30 *வே.வா., "ராஜ்யத்தின் தலைநகரமாக இருப்பதற்காகவும்."

அதி. 4
a தானி 4:10, 11
b தானி 4:12
c ஏசா 14:13, 14
d தானி 2:37, 38
e தானி 4:13; தானி 8:13
f தானி 4:13-16; லூ 21:24
g தானி 4:31-33
h தானி 4:16; லூ 21:24; வெளி 12:6, 14
i 1சா 2:7, 8; யோபு 34:24; எரே 27:5; எசே 21:26, 27; தானி 2:21; தானி 7:13, 14; லூ 1:32, 33
j தானி 4:15
k 1ரா 21:29; யோவே 2:14; யோனா 3:8-10
l தானி 4:25; அப் 12:22, 23

ராஜ்யத்துக்கெல்லாம் ராஜா என்றும், தனக்கு விருப்பமானவனிடம் ஆட்சியைக் கொடுக்கிறார்[a] என்றும் புரிந்துகொள்வாய்'" என்று சொன்னது.

33 அந்த நொடியே இந்த வார்த்தைகள் நேபுகாத்நேச்சாரின் வாழ்க்கையில் நிறைவேறத் தொடங்கின. அவன் மனிதர்களிடமிருந்து துரத்தப்பட்டான், மாடுகளைப் போலப் புல்லை மேய்ந்தான். அவனுடைய உடல் வானத்திலிருந்து பெய்கிற பனியில் நனைந்தது. அவனுடைய தலைமுடி கழுகுகளின் இறக்கைகளைப் போல் நீளமாக வளர்ந்தது, அவனுடைய நகங்கள் பறவைகளின் நகங்களைப் போல் மாறின.[b]

34 "அந்தக் காலம் முடிந்த பின்பு,[c] நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தை அண்ணாந்து பார்த்தேன்; என் புத்தி தெளிந்தது. உன்னதமான கடவுளைப் போற்றிப் புகழ்ந்தேன், என்றென்றும் வாழ்கிறவரை மகிமைப்படுத்தினேன். ஏனென்றால், அவருடைய அரசாட்சியே என்றென்றும் நிலைத்திருக்கும், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நீடித்திருக்கும்.[d] **35** அவருக்கு முன்னால் பூமியின் குடிமக்கள் அற்பமானவர்கள். வானத்தின் படைகளுக்கும் பூமியின் குடிமக்களுக்கும் அவர் தன்னுடைய விருப்பப்படியே* செய்கிறார். ஒருவராலும் அவரை# தடுக்கவோ,[e] 'என்ன செய்கிறீர்கள்?' என்று கேள்வி கேட்கவோ முடியாது.[f]

36 அப்போது, என் புத்தி தெளிந்தது. என் ஆட்சியும் அந்தஸ்தும் பேரும் புகழும் சீரும் சிறப்பும் எனக்குத் திரும்பக் கிடைத்தன.[g] என்னுடைய உயர் அதிகாரிகளும் முக்கியப் பிரமுகர்களும் என்னைத் தேடி வந்தார்கள். நான் மறுபடியும் ஆட்சிக்கு வந்தேன். முன்பைவிட அதிக மேன்மை அடைந்தேன்.

37 இப்போது, நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் போற்றிப் புகழ்ந்து, அவரை மகிமைப்படுத்துகிறேன்.[h] ஏனென்றால், அவருடைய செயல்களெல்லாம் சரியானவை, அவருடைய வழிகளெல்லாம் நியாயமானவை.[i] தலைக்கனம் பிடித்தவர்களை அவர் தலைகுனிய வைக்கிறார்."[j]

5 பெல்ஷாத்சார் ராஜா[k] முக்கியப் பிரமுகர்கள் ஆயிரம் பேரை அழைத்து ஒரு பெரிய விருந்து வைத்தான். அப்போது, அவர்களுக்கு முன்னால் உட்கார்ந்து திராட்சமது குடித்தான்.[l] **2** அவனுக்குப் போதை ஏறியபோது, எருசலேம் ஆலயத்திலிருந்து அவனுடைய தகப்பன் நேபுகாத்நேச்சார் கொண்டுவந்த தங்க, வெள்ளி கோப்பைகளை[m] எடுத்துவரும்படி ஆணையிட்டான். அவனும் அவனுடைய மனைவிகளும் மறுமனைவிகளும் முக்கியப் பிரமுகர்களும் திராட்சமது குடிப்பதற்காக அவற்றை எடுத்துவரச் சொன்னான். **3** அதன்படியே, எருசலேம் ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தங்கக் கோப்பைகளை அவனுடைய ஆட்கள் எடுத்து வந்தார்கள். ராஜாவும் அவனுடைய மனைவிகளும் மறுமனைவிகளும் முக்கியப் பிரமுகர்களும் அந்தக் கோப்பைகளில் குடித்தார்கள். **4** திராட்சமதுவைக் குடித்துக்கொண்டே தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, மரம், கல் ஆகியவற்றால் செய்யப்பட்ட தெய்வங்களைப் புகழ்ந்தார்கள்.

5 அப்போது திடீரென்று, மனித கைவிரல்கள் தோன்றி, குத்துவிளக்கின் எதிரில் இருந்த சாந்து பூசப்பட்ட அரண்மனைச் சுவரில் எதையோ

4:35 * வே.வா., "சித்தத்தின்படியே." # வே.வா., "அவருடைய கையை."

அதி. 4
a தானி 4:17
b தானி 4:25
c தானி 4:16
d சங் 10:16; தானி 4:3
e யோபு 34:24; ஏசா 43:13
f ஏசா 45:9
g தானி 4:26
h தானி 4:2, 3
i உபா 32:4; சங் 33:5
j யாத் 18:10, 11; யாக் 4:6

அதி. 5
k தானி 7:1; தானி 8:1
l ஏசா 21:5; எரே 51:39
m 2ரா 25:15; 2நா 36:18; எஸ்றா 1:7; எரே 52:19; தானி 1:1, 2

எழுத ஆரம்பித்தன. சுவரில் எழுதிய அந்தக் கையை ராஜா பார்த்தவு
டன், **6** அவனுடைய முகம் வெளுத்துப்போனது,* மனதை திகில் கவ்வி
யது, இடுப்பு கிடுகிடுவென்று ஆடியது,[a] முழங்கால்கள் ஒன்றோடொன்று
மோதிக்கொண்டன.

7 உடனே, மாயவித்தைக்காரர்களையும் ஜோதிடர்களையும்*[b] குறி
சொல்கிறவர்களையும் கூட்டிக்கொண்டு வரும்படி அவனுடைய ஆட்க
ளைப் பார்த்துக் கத்தினான். பின்பு, பாபிலோனில் உள்ள ஞானிகளிடம்,
“யார் இந்த எழுத்துக்களை வாசித்து இதன் அர்த்தத்தைச் சொல்கிறானோ
அவனுக்கு ஊதா நிற# உடை உடுத்தி, தங்கச் சங்கிலியைப் போட்டு
விட்டு,[c] என் ராஜ்யத்தில் மூன்றாம் அதிபராக்குவேன்”[d] என்றான்.

8 அங்கு வந்த ராஜாவின் ஞானிகள் எல்லாரும் அந்த எழுத்துக்களைப்
பார்த்தார்கள். ஆனால், அவற்றை வாசிக்கவோ விளக்கவோ அவர்களால்
முடியவில்லை.[e] **9** அதனால் பெல்ஷாத்சார் ராஜாவுக்குக் குலைநடுங்கி
யது, முகம் வெளுத்துப்போனது. அவனுடைய முக்கியப் பிரமுகர்களும்
என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிப்போனார்கள்.[f]

10 ராஜாவும் முக்கியப் பிரமுகர்களும் பேசிக்கொண்டது ராணியின்*
காதில் விழுந்தது. உடனே அவள் விருந்து மண்டபத்துக்கு வந்து, “ராஜா
நீடூழி வாழ்க! ஏன் உங்கள் முகமெல்லாம் இப்படி வெளுத்துப்போயிருக்கி
றது? நீங்கள் பயப்பட வேண்டியதே இல்லை. **11** பரிசுத்தமான தெய்வங்
களின் சக்தியைப் பெற்ற ஒருவர்* உங்கள் ராஜ்யத்தில் இருக்கிறார். அவ
ருக்கு அபாரமான அறிவும் ஆழமான புரிந்துகொள்ளுதலும் தெய்வீக
ஞானமும் இருப்பது உங்கள் தகப்பனாகிய நேபுகாத்நேச்சார் ராஜாவின்
காலத்திலேயே தெரியவந்தது.[g] அதனால், உங்கள் தகப்பன் அவரை
எல்லா மந்திரவாதிகளுக்கும் மாயவித்தைக்காரர்களுக்கும் ஜோதிடர்களுக்
கும்[h] குறிசொல்கிறவர்களுக்கும் தலைவராக்கினார். **12** அவர்தான் தானி
யேலுக்கு பெல்தெஷாத்சார்[i] என்று பெயர் வைத்தார். கனவுகளை விளக்
குவதற்கும், விடுகதைகளை விடுவிப்பதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும்
தேவையான விசேஷ திறமையும், அறிவும், ஆழமான புரிந்துகொள்ளுத
லும் அவருக்கு இருந்தது.[j] இப்போதே அந்த தானியேலை வரச் சொல்லுங்
கள், அவர் உங்களுக்கு விளக்கம் தருவார்” என்றாள்.

13 அதன்படியே, ராஜாவிடம் தானியேல் அழைத்து வரப்பட்டார். அப்
போது ராஜா தானியேலிடம், “ராஜாவாகிய என் தகப்பன் யூதாவிலிருந்து
சிறைபிடித்து வந்த தானியேல் நீதானா?[k] **14** உன்னிடம் பரிசுத்தமான
தெய்வங்களின் சக்தி இருக்கிறதென்றும்,[l] உனக்கு அபார அறிவும் ஆழ
மான புரிந்துகொள்ளுதலும் விசேஷ ஞானமும் இருக்கிறதென்றும் கேள்விப்
பட்டேன்.[m] **15** இந்த எழுத்துக்களை வாசித்து விளக்குவதற்கு ஞானிகளை
யும் மாயவித்தைக்காரர்களையும் நான் வரச் சொன்னேன். ஆனால்,
யாராலுமே அதை விளக்க முடியவில்லை.[n] **16** உன்னால் விளக்கங்க
ளைச் சொல்லவும்[o] சிக்கல்களைத் தீர்க்கவும் முடியும் என்று கேள்விப்

5:6 *வே.வா., “தோற்றம் மாறியது.” **5:7** *அதாவது, “கல்தேயர்களையும்.” #ஊதா நிறம் செல்வச்செழிப்போடும், கௌரவத்தோடும், ராஜ கம்பீரத்தோடும் சம்பந்தப்பட்டதாக இருந்தது. **5:10** *அநேகமாக, “ராஜாவுடைய தாயின்.” **5:11** *வே.வா., “ஒரு திறமைசாலி.”

அதி. 5
a ஏசா 21:2, 3
b தானி 2:2; தானி 4:6
c ஆதி 41:39, 42; எஸ்தர் 8:15
d தானி 2:6, 48
e தானி 2:27; தானி 4:7
f ஏசா 13:1, 7
g தானி 4:8, 9
h தானி 2:47, 48
i தானி 1:7; தானி 4:8
j தானி 1:17, 20; தானி 6:3
k 2ரா 24:11, 14; தானி 1:3, 6; தானி 2:25
l தானி 4:9
m தானி 1:17, 20
n ஏசா 47:12, 13; தானி 2:10, 11; தானி 5:8
o தானி 2:28

பட்டேன். இப்போது நீ இந்த எழுத்துக்களை வாசித்து இதன் அர்த்தத்தைச்
சொன்னால், உனக்கு ஊதா நிற* உடை உடுத்தி, தங்கச் சங்கிலியைப் போட்
டுவிட்டு, என் ராஜ்யத்தில் மூன்றாம் அதிபராக்குவேன்” என்றான்.[a]

17 அதற்கு தானியேல், “ராஜாவே, பரிசுகள் உங்களிடமே இருக்கட்டும்.
இல்லையென்றால், வேறு யாருக்காவது கொடுங்கள். எப்படியிருந்தாலும்,
நான் இந்த எழுத்துக்களை உங்களுக்கு வாசித்துக் காட்டி விளக்குகிறேன்.
18 ராஜாவே, உன்னதமான கடவுள் உங்கள் தகப்பனாகிய நேபுகாத்நேச்சா
ருக்கு ராஜ்யத்தையும் மேன்மையையும் மதிப்பையும் சிறப்பையும் கொடுத்
தார்.[b] **19** எல்லா இனங்களையும் தேசங்களையும் மொழிகளையும் சேர்ந்
தவர்கள் அவரைப் பார்த்துப் பயந்து நடுங்குமளவுக்குக் கடவுள் அவரை
உயர்ந்த இடத்தில் வைத்தார்.[c] உங்கள் தகப்பன் தன்னுடைய இஷ்டப்படி
யாரை வேண்டுமானாலும் கொன்றுபோடுவார், யாரை வேண்டுமானாலும்
வாழ வைப்பார், யாரை வேண்டுமானாலும் உயர்த்துவார், யாரை வேண்டு
மானாலும் தாழ்த்துவார்.[d] **20** ஆனால் ஒரு கட்டத்தில் அவருடைய உள்
ளத்தில் பெருமை வந்துவிட்டது, அவருடைய மனம் இறுகிப்போனது.
அதனால் அகங்காரத்தோடு* நடந்துகொண்டார்.[e] உடனே சிம்மாசனத்தி
லிருந்து இறக்கப்பட்டார், தன்னுடைய மதிப்பை இழந்தார். **21** மனிதர்களி
டமிருந்து துரத்தப்பட்டார். மிருக இதயம் அவருக்குக் கொடுக்கப்பட்
டது. அவர் காட்டுக் கழுதைகளோடு வாழ்ந்தார், மாடுகளைப் போல்
புல்லை மேய்ந்தார். அவருடைய உடல் வானத்திலிருந்து பெய்த பனியில்
நனைந்தது. கடைசியில், உன்னதமான கடவுள்தான் மனிதர்களுடைய ராஜ்
யத்துக்கெல்லாம் ராஜா என்றும், தனக்கு விருப்பமானவரிடம் ஆட்சியைக்
கொடுக்கிறார்[f] என்றும் புரிந்துகொண்டார்.

22 அவருடைய மகனாகிய பெல்ஷாத்சார் ராஜாவே, இதெல்லாம் தெரிந்
தும்கூட நீங்கள் மனத்தாழ்மையோடு நடந்துகொள்ளாமல், **23** பரலோகத்
தின் எஜமானுக்கு மேலாக உங்களை உயர்த்தினீர்கள்.[g] அவருடைய ஆல
யத்தின் பாத்திரங்களை எடுத்துவரச் சொன்னீர்கள்.[h] பின்பு, நீங்களும்
உங்கள் மனைவிகளும் மறுமனைவிகளும் முக்கியப் பிரமுகர்களும் ஆல
யத்தின் கோப்பைகளில் திராட்சமது குடித்தீர்கள். அதுமட்டுமல்லாமல், எதை
யும் பார்க்கவோ கேட்கவோ தெரிந்துகொள்ளவோ முடியாத வெள்ளி,
தங்கம், செம்பு, இரும்பு, மரம், கல் ஆகியவற்றால் செய்யப்பட்ட தெய்வங்
களைப் புகழ்ந்தீர்கள்.[i] ஆனால், உங்கள் உயிருக்கும் உங்களுடைய
எல்லா செயல்களுக்கும் அதிகாரியான கடவுளை[j] மகிமைப்படுத்தவில்லை.
24 அதனால் அவர் ஒரு கையை அனுப்பி, சுவரில் எழுத வைத்தார்.[k]
25 அந்தக் கை எழுதிய வார்த்தைகள் இவைதான்: மெனே, மெனே, தெக்
கேல், பார்சின்.

26 மெனே என்றால், உங்களுடைய ராஜ்யத்தின் நாட்களைக் கடவுள்
எண்ணி, அதை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார்[l] என்று அர்த்தம்.

27 தெக்கேல் என்றால், நீங்கள் தராசில் நிறுத்தப்பட்டு, குறையுள்ளவ
ராகக் காணப்பட்டீர்கள் என்று அர்த்தம்.

அதி. 5
a தானி 2:6; தானி 5:7
b தானி 2:37, 38
c எரே 25:9; தானி 3:4, 5; தானி 4:22
d தானி 2:12; தானி 3:6, 29
e ஏசா 14:13, 14; தானி 4:30
f தானி 4:31-35
g எரே 50:29
h தானி 5:2, 3
i சங் 115:4-7; ஏசா 46:6, 7
j சங் 104:29
k தானி 5:5
l ஏசா 13:11; எரே 25:12; எரே 27:6, 7; எரே 50:1, 2; எரே 51:11

5:16 *ஊதா நிறம் செல்வச்செழிப்போடும், கௌரவத்தோடும், ராஜ கம்பீரத்தோடும் சம்பந்தப்பட்டதாக இருந்தது. **5:20** *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது.

28 பெரேஸ் என்றால், உங்கள் ராஜ்யம் பிரிக்கப்பட்டு மேதியர்களுக்
கும் பெர்சியர்களுக்கும் கொடுக்கப்பட்டது[a] என்று அர்த்தம்" என்றார்.

29 உடனே, தானியேலுக்கு ஊதா நிற உடையை உடுத்திவிட்டு, தங்கச்
சங்கிலியைப் போட்டுவிடும்படி பெல்ஷாத்சார் கட்டளை கொடுத்தான்.
பின்பு, அவனுடைய ராஜ்யத்தில் தானியேல் மூன்றாம் அதிபராவார் என்ற
அறிவிப்பு செய்யப்பட்டது.[b]

30 அன்றைக்கு ராத்திரியே, கல்தேயனான பெல்ஷாத்சார் ராஜா கொல்
லப்பட்டான்.[c] **31** அதன்பின், மேதியனாகிய தரியு[d] ஆட்சிக்கு வந்தான்.
அப்போது, அவனுக்குச் சுமார் 62 வயது.

6 தரியு தன்னுடைய சாம்ராஜ்யமெங்கும்[e] 120 அதிபதிகளை நிய
மித்தான். **2** ராஜாவுக்கு எந்த நஷ்டமும் வராதபடி அந்த அதிபதிக
ளுடைய[f] வேலைகளை மேற்பார்வை செய்ய மூன்று உயர் அதிகாரி
களை நியமித்தான். அந்த மூன்று பேரில் தானியேலும்[g] ஒருவர். **3** மற்ற
உயர் அதிகாரிகளையும் அதிபதிகளையும்விட தானியேல் சிறந்தவராக
இருந்தார். அவர் மகா புத்திசாலியாக[h] இருந்ததால் சாம்ராஜ்யத்திலேயே
மிக உயர்ந்த பதவியை அவருக்குக் கொடுக்க ராஜா நினைத்தான்.

4 ஆனால் அந்த உயர் அதிகாரிகளும் அதிபதிகளும், அரசு விவகா
ரங்களில் தானியேலிடம் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க முடியுமா என்று
பார்த்துக்கொண்டிருந்தார்கள். தானியேல் நம்பகமானவராகவும் பொறுப்பா
னவராகவும் ஊழல் செய்யாதவராகவும் இருந்ததால் அவரிடம் எந்தக் குற்
றத்தையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. **5** அப்போது அந்த
ஆட்கள், "இந்த தானியேலிடம் எந்தக் குற்றத்தையும் நம்மால் கண்டுபிடிக்க
முடியாது, அவனுடைய கடவுளை வணங்கும் விஷயத்தில்*[i] ஏதாவது குற்
றம் கண்டுபிடித்தால்தான் உண்டு" என்று பேசிக்கொண்டார்கள்.

6 பின்பு, அந்த உயர் அதிகாரிகளும் அதிபதிகளும் ராஜாவிடம் கும்ப
லாகப் போய், "தரியு ராஜாவே, நீங்கள் நீடூழி வாழ்க! **7** ஒரு அரச கட்
டளை பிறப்பிக்கப்பட வேண்டுமென்று அரசு அதிகாரிகள், மந்திரிகள், அதி
பதிகள், அமைச்சர்கள், ஆளுநர்கள் ஆகிய நாங்கள் எல்லாரும் கலந்து
பேசியிருக்கிறோம். 30 நாட்களுக்கு ராஜாவைத் தவிர எந்தவொரு தெய்
வத்திடமோ மனிதனிடமோ யாரும் வேண்டிக்கொள்ளக் கூடாது என்றும்,
மீறுகிற எவனையும் சிங்கக் குகையில்* வீச வேண்டும் என்றும் ஒரு
தடையுத்தரவு போடப்பட வேண்டும்.[j] **8** ராஜாவே, நீங்கள் அந்தக் கட்ட
ளையைப் பிறப்பித்து, அதில் கையெழுத்துப் போடுங்கள்.[k] அப்போதுதான்
அதை யாராலும் மாற்ற முடியாது. மேதிய பெர்சியர்களின் சட்டத்தை யாரா
லும் ரத்து செய்ய முடியாதே"[l] என்றார்கள்.

9 அவர்கள் சொன்னபடியே ராஜா அந்தத் தடையுத்தரவில் கையெழுத்
துப் போட்டான்.

10 அந்த விஷயத்தை தானியேல் கேள்விப்பட்டதுமே, தன் வீட்டுக்குப்
போனார். அந்த வீட்டின் மாடியறை ஜன்னல்கள் எருசலேமை நோக்கித்
திறந்திருந்தன.[m] அங்கே போய், எப்போதும் போல மண்டிபோட்டு, ஜெபம்
செய்து, தன் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார். தினமும் மூன்று தடவை

6:5 *நே.மொ., "அவனுடைய கடவுளின் சட்டங்களைப் பின்பற்றும் விஷயத்தில்."
6:7 *அதாவது, "பாதாள குகையில்."

அதி. 5
a எஸ்றா 1:1, 2; ஏசா 21:2; ஏசா 45:1; எரே 50:9; தானி 6:28; தானி 9:1
b தானி 5:7, 16
c ஏசா 21:9; எரே 51:8, 31; எரே 51:39, 57
d தானி 6:1; தானி 9:1

அதி. 6
e எஸ்தர் 1:1; தானி 9:1
f எஸ்றா 8:36; எஸ்தர் 8:9; தானி 3:2
g தானி 2:48; தானி 5:29
h தானி 1:17, 20; தானி 5:12
i எஸ்தர் 3:8
j தானி 3:6
k எஸ்தர் 3:12; எஸ்தர் 8:10
l எஸ்தர் 1:19; எஸ்தர் 8:8
m 1ரா 8:44, 45

அதி. 6
a எஸ்தர் 8:8
தானி 6:7, 8
b தானி 1:3, 6
தானி 2:25
தானி 5:13
c எஸ்தர் 3:8
தானி 6:10
d எஸ்தர் 8:8
தானி 6:8
e தானி 6:7
எபி 11:32, 33
f 1சா 17:37
எபி 11:32, 33
g சங் 34:7
சங் 118:5
தானி 3:28

இப்படி ஜெபம் செய்வது அவருடைய வழக்கமாக இருந்தது. **11** அவர்
ஜெபம் செய்துகொண்டிருந்த சமயத்தில் அந்த ஆட்கள் அங்கே திடுதிப்
பென்று நுழைந்தார்கள். தானியேல் தன் கடவுளிடம் உதவி கேட்டு உருக்க
மாக வேண்டிக்கொண்டு இருப்பதைப் பார்த்தார்கள்.

12 அவர்கள் ராஜாவிடம் போய் அந்தத் தடையுத்தரவை ஞாபகப்
படுத்தி, “ராஜாவே, 30 நாட்களுக்கு உங்களைத் தவிர வேறெந்த தெய்வத்தி
டமோ மனிதனிடமோ வேண்டிக்கொள்கிற எவனையும் சிங்கக் குகையில்
வீச வேண்டும் என்ற தடையுத்தரவில் நீங்கள் கையெழுத்துப் போட்டீர்கள்
தானே?” என்று கேட்டார்கள். அதற்கு ராஜா, “ஆமாம், அதில் எந்த மாற்
றமும் இல்லை. மேதிய பெர்சியர்களின் சட்டத்தை யாராலும் ரத்து செய்ய
முடியாது”[a] என்றான். **13** உடனே அவர்கள், “ராஜாவே, யூதாவிலிருந்து
பிடித்துவரப்பட்ட அந்த தானியேல்[b] உங்களையும் நீங்கள் கையெழுத்
துப் போட்ட தடையுத்தரவையும் மதிக்கவே இல்லை. அவர் தினமும் மூன்று
தடவை தன்னுடைய கடவுளிடம் வேண்டுகிறார்”[c] என்றார்கள். **14** அதைக்
கேட்டதும் ராஜா மிகவும் வேதனைப்பட்டு, தானியேலை எப்படியாவது காப்
பாற்ற வேண்டுமென்று நினைத்தான். அதற்காக, சாயங்காலம்வரை முயற்சி
செய்துகொண்டிருந்தான். **15** பின்பு அந்த ஆட்கள் கும்பலாக ராஜாவி
டம் போய், “மேதிய பெர்சியர்களின் சட்டப்படி, ராஜா கையெழுத்துப் போடு
கிற எந்தவொரு கட்டளையையும் தடையுத்தரவையும் மாற்ற முடியாது[d] என்
பதை ராஜா மறந்துவிட வேண்டாம்” என்றார்கள்.

16 அப்போது ராஜா, தானியேலைக் கொண்டுவந்து சிங்கக் குகையில்
போடும்படி[e] தன் ஆட்களுக்கு ஆணையிட்டான். அவர்களும் அப்படியே
செய்தார்கள். தானியேலிடம் ராஜா, “நீ இடைவிடாமல் வணங்குகிற உன்
கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்” என்றான். **17** பின்பு, அந்தக் குகை
யின் வாசல்மேல் ஒரு கல் கொண்டுவந்து வைக்கப்பட்டது. தானியேலுக்
குக் கொடுக்கப்பட்ட தண்டனையை யாராலும் மாற்ற முடியாது என்பதற்கு
அடையாளமாக, ராஜா தன்னுடைய முத்திரை மோதிரத்தாலும் தன்னுடைய
முக்கியப் பிரமுகர்களின் முத்திரை மோதிரத்தாலும் அந்தக் கல்லின் மேல்
முத்திரை போட்டான்.

18 பின்பு, ராஜா அரண்மனைக்குத் திரும்பினான். அந்த ராத்திரி அவன்
எதுவும் சாப்பிடவில்லை. எந்தப் பொழுதுபோக்கும் வேண்டாமென்று சொல்
லிவிட்டான்.* ராத்திரி முழுக்க அவனுக்குத் தூக்கம் வரவில்லை.
19 பொழுது விடிந்ததுமே அவன் எழுந்து, வேகவேகமாகச் சிங்கக் குகைக்
குப் போனான். **20** அதன் பக்கத்தில் போய் சோகமான குரலில், “தானி
யேலே, உயிருள்ள கடவுளின் ஊழியனே, நீ இடைவிடாமல் வணங்குகிற
உன் கடவுள் சிங்கங்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றினாரா?” என்று கேட்
டான். **21** உடனே தானியேல், “ராஜாவே, நீங்கள் நீடூழி வாழ்க! **22** என்
கடவுள் அவருடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயை அடைத்த
தால்[f] அவை என்னை ஒன்றுமே செய்யவில்லை.[g] நான் எந்தக் குற்றமும்
செய்யவில்லை என்பது அவருக்குத் தெரியும். ராஜாவே, உங்களுக்கும் நான்
எந்தக் கெடுதலும் செய்ததில்லை” என்றார்.

6:18 *அல்லது, “எந்த இசைக் கலைஞரும் ராஜாவுக்குமுன் கொண்டுவரப்பட
வில்லை.”

23 தானியேலின் குரலைக் கேட்டதும் ராஜாவுக்குச் சந்தோஷம் தாங்க
முடியவில்லை. தானியேலை அந்தக் குகையிலிருந்து வெளியே தூக்கி
விடும்படி கட்டளை கொடுத்தான். அதன்படியே, தானியேல் தூக்கிவிடப்
பட்டார். தன்னுடைய கடவுள்மேல் நம்பிக்கை வைத்ததால் எந்தக் காயமும்
இல்லாமல் தப்பினார்.[a]

24 பின்பு, தானியேலைக் குற்றம்சாட்டியவர்களை* இழுத்துக்கொண்டு
வரும்படி ராஜா உத்தரவு போட்டான். அவர்களும் அவர்களுடைய மனை
விமக்களும் அந்தச் சிங்கக் குகையில் வீசப்பட்டார்கள். அவர்கள் அந்தக்
குகையின் தரையில் போய் விழுவதற்கு முன்பாகவே சிங்கங்கள் ஒரே
பாய்ச்சலாகப் பாய்ந்து அவர்களுடைய எலும்புகளையெல்லாம் நொறுக்கிப்
போட்டன.[b]

25 தரியு ராஜா பூமியெங்கும் இருந்த எல்லா இனத்தினருக்கும் தேசத்தி
னருக்கும் மொழியினருக்கும்[c] ஒரு கடிதத்தை அனுப்பினான். அதில்,
“உங்களுக்கு வாழ்த்துக்கள்! **26** என்னுடைய சாம்ராஜ்யமெங்கும் உள்ள
ஜனங்கள் தானியேலின் கடவுளுக்குப் பயந்து நடுங்க வேண்டும் என்று
நான் உத்தரவு கொடுக்கிறேன்.[d] அவர்தான் உயிருள்ள கடவுள், அவர்தான்
என்றென்றும் வாழ்கிறவர். அவருடைய ராஜ்யம் ஒருபோதும் அழியாது,
அவருடைய அரசாட்சி* என்றென்றும் நிலைத்திருக்கும்.[e] **27** அவர் காப்
பாற்றுகிறவர்,[f] மீட்கிறவர், பரலோகத்திலும் பூமியிலும் அதிசயங்களையும்
அற்புதங்களையும் செய்கிறவர்.[g] அவர்தான் தானியேலைச் சிங்கங்களிட
மிருந்து காப்பாற்றினார்!” என்று எழுதினான்.

28 தரியுவின்[h] ஆட்சிக்காலத்திலும் பெர்சியராகிய கோரேசின்[i] ஆட்சிக்
காலத்திலும் தானியேல் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்.

7 அது பாபிலோனின் ராஜா பெல்ஷாத்சார்[j] ஆட்சி செய்த முதலாம்
வருஷம். ஒருநாள் ராத்திரி தானியேல் படுத்திருந்தபோது கனவையும்
தரிசனங்களையும் பார்த்தார்.[k] பார்த்ததையெல்லாம் அவர் விவரமாக எழுதி
வைத்தார்.[l] **2** தானியேல் இப்படிச் சொன்னார்:

“ராத்திரி நான் பார்த்த தரிசனத்தில், நான்கு திசைகளிலிருந்தும் காற்று
அடித்து ஒரு பெரிய கடலைக் கொந்தளிக்க வைத்தது.[m] **3** அப்போது,
வித்தியாசமான உருவங்களில் நான்கு பெரிய மிருகங்கள்[n] அந்தக் கடலி
லிருந்து எழும்பி வந்தன.

4 முதலாவது மிருகம் சிங்கத்தைப் போலிருந்தது.[o] அதற்கு கழுகின் சிற
குகள் இருந்தன.[p] அதன் சிறகுகள் பிடுங்கப்பட்டதைப் பார்த்தேன். அது
தரையிலிருந்து தூக்கப்பட்டு மனிதனைப் போல் இரண்டு கால்களில் நிற்க
வைக்கப்பட்டது. அதற்கு மனித இதயம் கொடுக்கப்பட்டது.

5 அதன் பின்பு, கரடியைப் போன்ற இன்னொரு மிருகத்தைப் பார்த்
தேன்.[q] அது ஒரு பக்கமாகச் சாய்ந்து நின்று, மூன்று விலா எலும்புகளைத்
தன்னுடைய பற்களில் கவ்விக்கொண்டிருந்தது. ‘எழுந்து, இஷ்டம்போல்
இறைச்சி சாப்பிடு’[r] என்று அதற்குச் சொல்லப்பட்டது.

6 அதற்குப் பின்பு, சிறுத்தையைப் போன்ற இன்னொரு மிருகத்தைப்
பார்த்தேன்.[s] அதனுடைய முதுகில் பறவையின் சிறகுகளைப் போன்ற

6:24 *வே.வா., “தானியேலைப் பற்றி அபாண்டமாகப் பேசியவர்களை.” **6:26** *வே.வா., “உன்னத அரசாட்சி.”

அதி. 6
a சங் 37:40 நீதி 18:10 தானி 3:26, 27
b எஸ்தர் 7:10
c எஸ்தர் 8:9 தானி 4:1
d தானி 3:29
e தானி 4:34
f தானி 3:28
g எரே 32:20 தானி 4:3
h தானி 5:31 தானி 6:1, 2
i 2நா 36:22, 23 எஸ்றா 1:1, 2 ஏசா 44:28

அதி. 7
j தானி 5:1, 30
k தானி 2:19 தானி 8:1
l ஏசா 30:8 ஆப 2:2 வெளி 1:11
m ஏசா 57:20 வெளி 17:15
n தானி 7:17
o தானி 2:37, 38
p உபா 28:49, 50 எரே 48:40 புல 4:19 ஆப 1:8
q தானி 2:39 தானி 5:28 தானி 8:3, 20
r ஏசா 13:17, 18 தானி 11:2
s தானி 2:39 தானி 8:5 தானி 11:3

நான்கு சிறகுகள் இருந்தன. அந்த மிருகத்துக்கு நான்கு தலைகளும் இருந்
தன.[a] ஆட்சி செய்யும் அதிகாரம் அதற்குக் கொடுக்கப்பட்டது.

7 அதற்குப் பின்பு அந்தத் தரிசனத்தில், நான்காவது மிருகத்தைப் பார்த்
தேன். அதனுடைய உருவம் பயங்கரமாகவும் திகிலூட்டுவதாகவும் இருந்தது.
அது அபார பலம் உள்ளதாக இருந்தது. அதற்குப் பெரிய இரும்புப் பற்கள்
இருந்தன. அது எல்லாவற்றையும் நொறுக்கி, விழுங்கியது; மீதியானதைக்
கால்களால் மிதித்துப்போட்டது.[b] முந்தின மூன்று மிருகங்களிலிருந்து அது
வித்தியாசமாக இருந்தது. அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தன. **8** அந்
தக் கொம்புகளை நான் கவனித்துக்கொண்டே இருந்தபோது, அவற்றுக்கு
இடையில் இன்னொரு சிறிய கொம்பு முளைத்தது.[c] அப்போது, முந்தின
கொம்புகளில் மூன்று கொம்புகள் பிடுங்கப்பட்டன. புதிய கொம்புக்கு மனி
தக் கண்களைப் போன்ற கண்களும், பெருமை பேசுகிற வாயும் இருந்தன.[d]

9 அதற்குப் பின்பு, சிம்மாசனங்கள் வைக்கப்பட்டன. யுகம் யுகமாக வாழ்
கிறவர்[e] தன் சிம்மாசனத்தில் உட்கார்ந்தார்.[f] அவருடைய உடை பனிபோல்
வெண்மையாக இருந்தது,[g] அவருடைய தலைமுடி பஞ்சுபோல் வெள்ளை
யாக இருந்தது. அவருடைய சிம்மாசனம் தீக்கொழுந்துகளாகவும் அதன் சக்
கரங்கள் எரிகிற நெருப்பாகவும் இருந்தன.[h] **10** ஒரு நெருப்பு ஓடை அவ
ருடைய சிம்மாசனத்திலிருந்து புறப்பட்டு ஓடியது.[i] ஆயிரமாயிரம் பேர்
அவருக்குச் சேவை செய்தார்கள், கோடானுகோடி* பேர் அவருக்கு முன்
னால் நின்றார்கள்.[j] நீதிமன்றம்[k] கூடியது, புத்தகங்கள் திறக்கப்பட்டன.

11 பின்பு, அந்தக் கொம்பு பெருமையான வார்த்தைகளைப் பேசும் சத்
தத்தை நான் கேட்டேன்.[l] அதனால் நான் கவனித்துக்கொண்டே இருந்
தேன். பின்பு, அந்த மிருகம் கொல்லப்பட்டது. அதன் உடல் சிதைக்கப்
பட்டு நெருப்பில் சுட்டெரிக்கப்பட்டது. **12** மற்ற மிருகங்களிடமிருந்து[m]
அரசாட்சி பறிக்கப்பட்டது. ஆனால், அவற்றின் ஆயுள் ஒரு குறிப்பிட்ட
காலம்வரை நீட்டிக்கப்பட்டது.

13 அதற்குப் பின்பு, ராத்திரியில் நான் பார்த்த அந்தத் தரிசனத்தில், மனி
தகுமாரனைப்[n] போன்ற ஒருவர் வானத்தின் மேகங்களோடு வந்தார். யுகம்
யுகமாக வாழ்கிறவரின்[o] முன்னால் வர அனுமதி அளிக்கப்பட்டு, அவருக்
குப் பக்கத்தில் கொண்டுபோகப்பட்டார். **14** எல்லா இனத்தினரும் தேசத்
தினரும் மொழியினரும் இவருக்குச் சேவை செய்வதற்காக,[p] அரசாட்சி
யும்[q] மேன்மையும்[r] ராஜ்யமும் இவருக்கே கொடுக்கப்பட்டன. இவருடைய
அரசாட்சி என்றென்றும் நிலைத்திருக்கும், இவருடைய ராஜ்யம் அழிக்கப்
படாது.[s]

15 தானியேலாகிய நான் அந்தத் தரிசனங்களைப் பார்த்துப் பயந்துபோ
னேன்.[t] அவற்றை நினைத்து மிகவும் வேதனை அடைந்தேன். **16** அங்கு
நின்றவர்களில் ஒருவரிடம் போய் அவற்றின் உண்மையான அர்த்தத்தைக்
கேட்டேன். அவர் எல்லாவற்றையும் எனக்கு விளக்கினார்.

17 ‘அந்த நான்கு பெரிய மிருகங்கள்,[u] பூமியில் எழும்பப்போகும்
நான்கு ராஜாக்களைக் குறிக்கின்றன.[v] **18** ஆனால், மகா உன்னதமான
வருடைய பரிசுத்தவான்கள்தான்[w] ராஜ்யத்தைப் பெறுவார்கள்.[x] என்றென்
றைக்கும், சதா காலத்துக்கும், அவர்கள் அதைச் சொந்தமாக்கிக்கொள்வார்
கள்’[y] என்று சொன்னார்.

7:10 * நே.மொ., “பத்தாயிரம் தடவை பத்தாயிரம்.”

அதி. 7
a தானி 8:8; தானி 11:4
b தானி 2:40; தானி 7:19
c தானி 7:24
d தானி 7:20; வெளி 13:5
e சங் 90:2; தானி 7:13, 22; ஆப 1:12
f ஏசா 6:1, 2; வெளி 4:2, 3
g சங் 104:1, 2
h உபா 9:3; எபி 12:29
i சங் 50:3; சங் 97:3
j உபா 33:2; 1ரா 22:19; சங் 68:17; எபி 12:22; யூ 14; வெளி 5:11
k 1சா 2:10; சங் 50:6
l தானி 7:8, 25
m தானி 7:3
n மத் 24:30; லூ 21:27; யோவா 3:13; அப் 7:56; வெளி 14:14
o சங் 90:2; தானி 7:9, 22; ஆப 1:12
p ஆதி 49:10
q சங் 2:6; சங் 110:1, 2; மத் 28:18; 1கொ 15:25; எபே 1:22; வெளி 3:21
r பிலி 2:9-11
s சங் 45:6; ஏசா 9:6, 7; தானி 2:44; லூ 1:32, 33; வெளி 11:15
t தானி 8:27
u தானி 7:3
v தானி 2:39, 40
w தானி 7:25, 27
x மத் 19:28; 2தீ 2:12; வெளி 3:21; வெளி 5:9, 10
y தானி 7:21, 22; லூ 22:29

19 பின்பு, மற்ற எல்லா மிருகங்களிலிருந்தும் வித்தியாசமாக இருந்த அந்த நான்காவது மிருகத்தைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்பினேன். அது இரும்புப் பற்களோடும் செம்பு நகங்களோடும் பார்ப்பதற்கு படுபயங்கரமாக இருந்தது. அது எல்லாவற்றையும் நொறுக்கி, விழுங்கியது; மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்
டது.[a] **20** அதன் தலையில் 10 கொம்புகள்[b] இருந்தன. பின்பு, புதிதாக ஒரு கொம்பு முளைத்தது. அப்போது, முந்தின கொம்புகளில் 3 கொம்புகள் விழுந்தன.[c] அந்தப் புதிய கொம்புக்குக் கண்களும் பெருமை பேசுகிற வாயும் இருந்தன. அது மற்ற கொம்புகளைவிட பெரியதாக இருந்தது.

21 அதற்குப் பின்பு, அந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடு தொடர்ந்து போர் செய்து அவர்களை ஜெயித்துவந்தது.[d] **22** கடைசியில், யுகம் யுகமாக வாழ்கிறவர்[e] வந்தார். மகா உன்னதமானவரான அவர் தன்னுடைய பரிசுத்தவான்களின் சார்பாக நியாயத்தீர்ப்பு வழங்கினார்.[f] அந்தப் பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச் சொந்தமாக்கிக்கொள்வதற்கு நேரம் வந்தது.[g]

23 அவர் என்னிடம், 'நான்காவது மிருகம், இந்தப் பூமியில் எழும்பப்போகிற நான்காவது ராஜ்யத்தைக் குறிக்கிறது. அது மற்ற எல்லா ராஜ்யங்களிலிருந்தும் வித்தியாசமாக இருக்கும். அது பூமியிலுள்ள எல்லாவற்றையும் மிதித்து, நொறுக்கி, விழுங்கிவிடும்.[h] **24** அந்த 10 கொம்புகள், அந்த ராஜ்யத்தில் எழும்பப்போகிற 10 ராஜாக்களைக் குறிக்கின்றன. அவர்களுக்குப் பின்பு இன்னொரு ராஜா தோன்றுவான். முன்பிருந்த ராஜாக்களிலிருந்து அவன் வித்தியாசமாக இருப்பான். அந்த ராஜாக்களில் 3 பேரை அவன் தோற்கடிப்பான்.[i] **25** அவன் உன்னதமானவருக்கு எதிராகப் பேசுவான்.[j] மகா உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்கு எப்போதும் தொல்லை கொடுப்பான். காலங்களையும் சட்டத்தையும் மாற்ற நினைப்பான். அந்தப் பரிசுத்தவான்கள் ஒரு காலத்துக்கும், இரண்டு காலங்களுக்கும், அரைக் காலத்துக்கும்*[k] அவனுடைய கையில் கொடுக்கப்படுவார்கள்.
26 ஆனால், நீதிமன்றம் கூடும். அவனுடைய அரசாட்சி பறிக்கப்படும். அவன் ஒரேயடியாக ஒழித்துக்கட்டப்படுவான்.[l]

27 உலகெங்கும் இருக்கிற ராஜ்யங்களும் அவற்றின் அரசாட்சியும் மேன்மையும் மகா உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்படும்.[m] அவர்களுடைய ராஜ்யம் என்றென்றும் நிலைத்திருக்கும்.[n] எல்லா ராஜ்யங்களைச் சேர்ந்த ஜனங்களும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து சேவை செய்வார்கள்' என்றார்.

28 நான் பார்த்த தரிசனத்தின் முடிவு இதுதான். தானியேலாகிய நான் இதையெல்லாம் நினைத்துக் கதிகலங்கிப்போனேன். என் முகம் வெளுத்துப்போனது.* ஆனாலும், எல்லாவற்றையும் என் உள்ளத்திலேயே வைத்துக்கொண்டேன்."

8

தானியேலாகிய எனக்கு அந்தத் தரிசனம் கிடைத்த[o] பின்பு, பெல்ஷாத்சார் ராஜா[p] ஆட்சி செய்த மூன்றாம் வருஷத்தில் இன்னொரு தரிசனம்
கிடைத்தது. **2** நான் ஏலாம் மாகாணத்திலுள்ள[q] சூசான்*[r] கோட்டையில்# இருந்தேன். ஊலாய் ஆற்றின்△ பக்கத்தில் அந்தத் தரிசனத்தைப் பார்த்தேன்.

7:25 * அதாவது, "மொத்தம் மூன்றரை காலங்களுக்கு." **7:28** * வே.வா., "தோற்றம் மாறியது." **8:2** * வே.வா., "சூசா." # வே.வா., "அரண்மனையில்." △ இது கால்வாயாகவும் இருக்கலாம்.

அதி. 7
a தானி 2:40; தானி 7:7
b தானி 7:24
c தானி 7:8
d தானி 8:23, 24; தானி 12:7; வெளி 13:7
e சங் 90:2; தானி 7:9, 13; ஆப 1:12
f தானி 7:18, 27
g மத் 19:28; லூ 22:29; வெளி 1:6; வெளி 3:21; வெளி 5:9, 10; வெளி 20:4
h தானி 2:40; தானி 7:7
i தானி 7:20
j தானி 7:8
k தானி 12:7; வெளி 13:5-7
l தானி 7:10, 11
m தானி 7:22; மத் 19:28; லூ 22:29; வெளி 20:4
n வெளி 11:15

அதி. 8
o தானி 7:1, 15
p தானி 5:1, 30
q ஆதி 10:22; ஏசா 11:11; ஏசா 21:2
r நெ 1:1; எஸ்தர் 2:8

3 நான் நிமிர்ந்து பார்த்தபோது, அந்த ஆற்றுக்கு முன்னால் ஒரு செம்
மறியாட்டுக் கடா[a] நின்றுகொண்டிருந்தது. அதற்கு நீளமான இரண்டு கொம்
புகள் இருந்தன.[b] ஒரு கொம்பு மற்றொன்றைவிட நீளமாக இருந்தது. அது
பிற்பாடு முளைத்த கொம்பு.[c] **4** அந்தச் செம்மறியாட்டுக் கடா மேற்கிலும்
வடக்கிலும் தெற்கிலும் பாய்ந்து போனதைப் பார்த்தேன். எந்தக் காட்டு மிரு
கத்தாலும் அதன் முன்னால் நிற்க முடியவில்லை. அதனுடைய தாக்குதலிலி
ருந்து காப்பாற்றும் சக்தி யாருக்குமே இருக்கவில்லை.[d] அது தன் இஷ்டம்
போல் நடந்துகொண்டது, தற்பெருமையோடு திரிந்தது.

5 அதற்குப் பின்பு, மேற்கிலிருந்து ஒரு வெள்ளாட்டுக் கடா[e] வந்தது.
தரையில் கால் படாமலேயே பூமியெங்கும் அது போனது. அதன் கண்க
ளுக்கு இடையில் எடுப்பான ஒரு கொம்பு இருந்தது.[f] **6** அது ஆற்றின்
முன்னால் நின்றுகொண்டிருந்த இரண்டு கொம்புகளுள்ள செம்மறியாட்டுக்
கடாவுக்கு நேராக ஆக்ரோஷமாய்ப் பாய்ந்து வந்தது.

7 அது செம்மறியாட்டுக் கடாவின் பக்கத்தில் போய், கடும் வெறுப்
போடு அதை முட்டி, அதன் இரண்டு கொம்புகளையும் முறித்துப்போட்டது.
அதன்முன் நிற்க செம்மறியாட்டுக் கடாவுக்குப் பலமே இருக்கவில்லை.
அது செம்மறியாட்டுக் கடாவைத் தரையில் தள்ளி, மிதித்துப்போட்டது.
அதனுடைய தாக்குதலிலிருந்து செம்மறியாட்டுக் கடாவைக் காப்பாற்ற
யாருமே இருக்கவில்லை.

8 அந்த வெள்ளாட்டுக் கடா தன்னையே அளவுக்கதிகமாக உயர்த்திக்
கொண்டது. ஆனால், அது பலம் அடைந்தவுடனேயே அதனுடைய பெரிய
கொம்பு முறிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, எடுப்பான நான்கு கொம்புகள்
பூமியின் நான்கு திசைகளுக்கு* நேராக முளைத்தன.[g]

9 அவற்றில் ஒரு கொம்பிலிருந்து இன்னொரு கொம்பு முளைத்தது.
அது சிறியதாக இருந்தது. அது தெற்குக்கு நேராகவும் கிழக்குக்கு நேரா
கவும் சிங்கார* தேசத்துக்கு நேராகவும் பலத்தைக் காட்டியது.[h] **10** அது
வானத்தின் படையை எட்டுமளவுக்கு உயர்ந்தது. அந்தப் படையில் கொஞ்
சத்தையும் நட்சத்திரங்கள் சிலவற்றையும் பூமிக்குத் தள்ளி அவற்றை மிதித்
துப்போட்டது. **11** அந்தப் படையின் அதிபதியையே எதிர்க்கும் அள
வுக்கு அது தன்னை உயர்த்தியது. வழக்கமான* பலியை அவரிடமிருந்து
நீக்கியது. அவருடைய பரிசுத்த இடத்தை நாசமாக்கியது.[i] **12** அத்துமீறல்
காரணமாக, படையும் வழக்கமான* பலியும் அதனிடம் கொடுக்கப்பட்டன.
அது சத்தியத்தைத் தரையில் தள்ளிக்கொண்டே இருந்தது. தன் இஷ்டப்படி
நடந்து, வெற்றி பெற்றது.

13 பின்பு, ஒரு பரிசுத்தவான் பேசுவதைக் கேட்டேன். அவரிடம் இன்
னொரு பரிசுத்தவான், "வழக்கமான* பலியைப் பற்றியும், நாசமுண்டாக்குகிற
அத்துமீறலைப் பற்றியும் இந்தத் தரிசனத்தில் காட்டப்பட்ட சம்பவங்கள் இன்
னும் எவ்வளவு காலத்துக்குத் தொடரும்?[j] பரிசுத்த இடமும் படையும் எவ்
வளவு காலத்துக்கு மிதிக்கப்படும்?" என்று கேட்டார். **14** அப்போது அவர்
என்னிடம், "அவை 2,300 மாலையும் காலையும் தொடரும். அதன்பின், பரி
சுத்த இடம் பழையபடி நல்ல நிலையை அடையும்" என்றார்.

8:8 *நே.மொ., "வானத்தின் நான்கு காற்றுகளுக்கு." **8:9** *வே.வா., "அழகான."
8:11–13 *வே.வா., "தினமும் செலுத்தப்படுகிற."

அதி. 8
a ஏசா 13:17; எரே 51:11; தானி 7:5; தானி 8:20
b எஸ்தர் 1:1, 3
c ஏசா 44:28
d ஏசா 45:1; எரே 51:12; தானி 5:30, 31
e தானி 2:39; தானி 7:6; தானி 8:21
f தானி 11:3
g தானி 8:22; தானி 11:4
h சங் 48:2; தானி 11: 16, 45
i தானி 11:31; தானி 12:11
j தானி 12:11

15 தானியேலாகிய நான் அந்தத் தரிசனத்தைப் பார்த்து, அதன் அர்த்
தத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்துகொண்டிருந்தேன். அப்போது
திடீரென்று, மனிதனைப் போன்ற ஒருவர் என் முன்னால் நிற்பதைப் பார்த்
தேன். **16** பின்பு, ஊலாய் ஆற்றின்[a] நடுவிலிருந்து ஒரு மனிதக் குரல்
கேட்டது. அது, "காபிரியேலே,[b] இவன் பார்த்ததை இவனுக்குப் புரிய
வை"[c] என்றது. **17** அவர் உடனே, நான் நின்றுகொண்டிருந்த இடத்துக்கு
வந்தார். அவர் வந்ததும் நான் நடுநடுங்கிப்போய் சாஷ்டாங்கமாக விழுந்
தேன். அவர் என்னிடம், "மனிதகுமாரனே, இந்தத் தரிசனம் முடிவு காலத்
தைப் பற்றியது என்பதைப் புரிந்துகொள்" என்றார்.[d] **18** அவர் என்னிடம்
பேசிக்கொண்டு இருந்தபோதே, கீழே விழுந்த நிலையில் நான் நன்றாகத்
தூங்கிவிட்டேன். அவர் என்னைத் தொட்டு எழுப்பி, முன்பு நின்ற அதே
இடத்தில் நிற்க வைத்தார்.[e] **19** பின்பு என்னிடம், "குறிக்கப்பட்ட முடிவு
காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களைத்தான் நீ பார்த்தாய். அதனால்,
கடவுளுடைய கோபக் காலத்தின் கடைசிக் கட்டத்தில் நடக்கப்போகிற
வற்றை[f] உனக்குச் சொல்கிறேன்.

20 நீ பார்த்த இரண்டு கொம்புகளுள்ள செம்மறியாட்டுக் கடா மேதிய
பெர்சிய[g] ராஜாக்களைக் குறிக்கிறது. **21** ரோமம் நிறைந்த வெள்ளாட்டுக்
கடா கிரேக்கு தேசத்து ராஜாவைக் குறிக்கிறது.[h] அதன் கண்களுக்கு
இடையில் இருந்த பெரிய கொம்பு அதன் முதல் ராஜாவைக் குறிக்
கிறது.[i] **22** ஒரு கொம்பு முறிக்கப்பட்டு அதற்குப் பதிலாக நான்கு கொம்பு
கள் முளைத்ததன்[j] அர்த்தம் என்னவென்றால், அவருடைய சாம்ராஜ்யத்தி
லிருந்து நான்கு ராஜ்யங்கள் எழும்பும், ஆனால் அவருக்கிருந்த வல்லமை
அவற்றுக்கு இருக்காது.

23 அவர்களுடைய அரசாட்சியின் கடைசிக் காலத்தில், அத்துமீறி
நடக்கிறவர்களுடைய குற்றங்கள் உச்சத்தை எட்டும்போது, தெளிவில்
லாத வார்த்தைகளைக்கூட புரிந்துகொள்ளும் ஒரு ராஜா* தோன்றுவான்.
அவன் பார்ப்பதற்குக் கொடூரமாக இருப்பான். **24** அவனுடைய அதிகா
ரம் கூடிக்கொண்டே போகும், ஆனால் சொந்த பலத்தால் அந்த அதிகா
ரத்தைப் பெற மாட்டான். அவன் பயங்கரமான சீரழிவை உண்டாக்குவான்,
எல்லாவற்றிலும் வெற்றி அடைவான், சாமர்த்தியமாக நடந்துகொள்வான்.
பலவான்களுக்கும் பரிசுத்தவான்களுக்கும் சீரழிவைக் கொண்டுவருவான்.[k]
25 மிகத் தந்திரமாக ஏமாற்றி வெற்றி பெறுவான். இதயத்தில் பெருமை
கொள்வான். அமைதியான ஒரு காலகட்டத்தில்* பலரை அழித்துப்போடு
வான். அதிபதிகளுக்கெல்லாம் அதிபதியையே எதிர்த்து நிற்பான். ஆனால்,
மனிதனுடைய கை படாமலேயே அவன் முறிக்கப்படுவான்.

26 மாலையையும் காலையையும் பற்றிய தரிசனத்தில் சொல்லப்பட்ட
விஷயம் உண்மை. ஆனால், அந்தத் தரிசனத்தை நீ ரகசியமாக வைத்துக்
கொள்ள வேண்டும். ஏனென்றால், அது பல நாட்களுக்குப் பின்பு நடக்கப்
போகிறது"[l] என்றார்.

27 தானியேலாகிய நான் களைத்துப்போய் சில நாட்களுக்குச் சுக
மில்லாமல் ஆகிவிட்டேன்.[m] பின்பு, எழுந்து ராஜாவின் வேலைகளைக்
கவனிக்க ஆரம்பித்தேன்.[n] ஆனாலும், அந்தத் தரிசனத்தைப் பார்த்ததால்

8:23 *வே.வா., "சாமர்த்தியமாகச் சூழ்ச்சி செய்யும் ஒரு ராஜா." **8:25** *அல்லது, "முன்னெச்சரிக்கை தராமல்."

அதி. 8
a தானி 8:2
b லூ 1:19, 26
c தானி 9:21, 22
d தானி 10:14
தானி 12:4, 9
e தானி 10:9, 10
f தானி 11:27
g தானி 7:5
தானி 8:3
தானி 11:2
h தானி 7:6
i தானி 8:5
தானி 11:3
j தானி 8:8
தானி 11:4
k தானி 7:25
தானி 8:10
l தானி 10:14
m தானி 7:28
தானி 10:16
n தானி 2:48, 49

பிரமை பிடித்தவன்போல் இருந்தேன். யாராலும் அந்தத் தரிசனத்தைப்
புரிந்துகொள்ள முடியவில்லை.[a]

9 மேதியர்களின் சந்ததியில் வந்த அகாஸ்வேருவின் மகன் தரியு,[b] கல்
தேயர்களுடைய ராஜ்யத்துக்கு ராஜாவாக நியமிக்கப்பட்டான்.[c] அவன்
ஆட்சி செய்த முதலாம் வருஷத்தில், **2** தானியேலாகிய நான் புத்தகங்
களை* படித்துக்கொண்டிருந்தேன். அப்போது, எருசலேம் 70 வருஷங்க
ளுக்குப் பாழாய்க் கிடக்கும்[d] என்று எரேமியா தீர்க்கதரிசி மூலம் யெகோவா
சொல்லியிருந்ததைப் புரிந்துகொண்டேன்.[e] **3** அதனால் துக்கத் துணியை*
உடுத்தி, என்மேல் சாம்பலைப் போட்டுக்கொண்டு, விரதமிருந்தேன்.[f] உண்
மைக் கடவுளாகிய யெகோவாவின் உதவியைக் கேட்டுக் கெஞ்சினேன்.
4 என் கடவுளாகிய யெகோவாவிடம் ஜெபம் செய்து, என் ஜனங்களுடைய
பாவங்களை ஒத்துக்கொண்டேன். அந்த ஜெபத்தில்,

"உண்மைக் கடவுளாகிய யெகோவாவே, அதிசயமும் அற்புதமுமான
வரே, உங்கள்மேல் அன்புவைத்து உங்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிற
வர்களிடம் மாறாத அன்பைக் காட்டுபவரே,[g] ஒப்பந்தத்தைக் காப்பவரே,[h]
5 நாங்கள் பாவங்களும் குற்றங்களும் செய்தோம். உங்கள் பேச்சை மீறி
அக்கிரமம் பண்ணினோம்,[i] உங்களுடைய கட்டளைகளையும் நீதித்தீர்ப்புக
ளையும் விட்டு விலகினோம். **6** எங்கள் ராஜாக்களிடமும் தலைவர்களிட
மும் முன்னோர்களிடமும் எல்லா ஜனங்களிடமும் உங்கள் சார்பில் பேசிய
உங்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்காமல் போனோம்.[j]
7 யெகோவாவே, உங்களிடம் நீதி குடியிருக்கிறது. ஆனால், எங்களிடம்
இன்றுவரை அவமானம்தான் தங்கியிருக்கிறது. யூதாவையும் எருசலேமை
யும் சேர்ந்த இஸ்ரவேலர்களான நாங்கள் எல்லாரும் உங்களுக்குத் துரோ
கம் செய்ததால் சுற்றுப்புற தேசங்களுக்கும் தூர தேசங்களுக்கும் எங்க
ளைத் துரத்தியடித்தீர்கள்.[k]

8 யெகோவாவே, உங்களுக்கு விரோதமாகப் பாவம் செய்ததால் எங்க
ளுக்கும் எங்கள் ராஜாக்களுக்கும் தலைவர்களுக்கும் முன்னோர்களுக்கும்
அவமானம்தான் மிஞ்சியிருக்கிறது. **9** எங்கள் கடவுளாகிய யெகோ
வாவே, நீங்கள் இரக்கமுள்ளவர், மன்னிக்கிறவர்.[l] நாங்கள்தான் உங்களுக்
குக் கீழ்ப்படியாமல் போய்விட்டோம்.[m] **10** எங்கள் கடவுளாகிய யெகோ
வாவே, உங்களுடைய ஊழியர்களாகிய தீர்க்கதரிசிகளின் மூலம் நீங்கள்
கொடுத்த சட்டங்களை நாங்கள் பின்பற்றவில்லை, உங்கள் பேச்சைக் கேட்
கவில்லை.[n] **11** இஸ்ரவேலர்களாகிய நாங்கள் எல்லாரும் உங்களுடைய
திருச்சட்டத்தை மீறினோம், நீங்கள் சொன்னதைக் கேட்காமல் உங்களை
விட்டு விலகினோம். உங்களுக்கு விரோதமாகப் பாவம் செய்ததால், உங்
கள் ஊழியரான மோசேயின் திருச்சட்டத்தில் எழுதப்பட்டிருக்கிற சாபத்தை
எங்கள்மேல் பலிக்கச் செய்தீர்கள்.[o] **12** எங்களுக்கும் எங்கள் ஆட்சி
யாளர்களுக்கும்* எதிராக நீங்கள் சொன்ன வார்த்தைகளை நிறைவேற்றி,[p]
எங்கள்மேல் மாபெரும் அழிவைக் கொண்டுவந்தீர்கள். எருசலேமுக்கு நடந்
ததுபோல் இதுவரை பூமியில் வேறெங்குமே நடந்ததில்லை.[q] **13** மோசே
யின் திருச்சட்டத்தில் எழுதப்பட்ட எல்லா தண்டனைகளும் எங்களுக்குக்
கிடைத்தன.[r] அப்படியிருந்தும் எங்கள் கடவுளாகிய யெகோவாவே, உங்கள்

9:2 *அதாவது, "பரிசுத்த புத்தகங்களை." **9:3** *சொல் பட்டியலைப் பாருங்கள்.
9:12 *நே.மொ., "எங்களுக்குத் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளுக்கும்."

அதி. 8
a தானி 8:17

அதி. 9
b தானி 6:28; தானி 11:1
c தானி 5:30, 31
d 2நா 36:20, 21; எரே 25:11; எரே 29:10; சக 1:12; சக 7:5
e எஸ்றா 1:1, 2; சங் 79:1; ஏசா 64:10; புல 1:1
f எஸ்றா 8:21
g யாத் 34:6
h உபா 5:9, 10; நெ 1:5
i எஸ்றா 9:6, 7; நெ 9:26, 33; சங் 106:6; புல 3:42
j 2நா 36:15, 16; எரே 7:13
k லேவி 26:33; உபா 28:41; 2ரா 17:6; ஏசா 11:11
l யாத் 34:6, 7; நெ 9:17; சங் 86:5
m நெ 9:26
n 2ரா 17:13, 14
o உபா 28:15; உபா 31:17
p புல 2:17
q எரே 39:8
r லேவி 26:16, 17; உபா 28:15; புல 1:1

கருணைக்காக நாங்கள் கெஞ்சவில்லை, தப்பு செய்வதை நிறுத்தவில்லை,[a]
நீங்கள் எவ்வளவு நம்பகமானவர் என்பதைப் புரிந்துகொள்ளவில்லை.

14 அதனால் யெகோவாவே, நீங்கள் கவனித்துக்கொண்டே இருந்து,
எங்கள்மேல் அழிவைக் கொண்டுவந்தீர்கள். எங்கள் கடவுளாகிய யெகோ
வாவே, நீங்கள் எல்லாவற்றையும் நீதியோடு செய்திருக்கிறீர்கள். நாங்கள்
தான் உங்களுடைய பேச்சைக் கேட்கவில்லை.[b]

15 எங்கள் கடவுளாகிய யெகோவாவே, உங்களுடைய கைபலத்தால்
உங்கள் ஜனங்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்து[c] இந்த நாள்வ
ரையிலும் உங்கள் பெயருக்குப் புகழ் சேர்த்திருக்கிறீர்கள்.[d] ஆனால், நாங்
கள் உங்களுக்கு எதிராகப் பாவமும் அக்கிரமமும் செய்தோம். **16** உங்
கள் ஜனங்களாகிய நாங்கள் செய்த பாவங்களினாலும் எங்கள்
முன்னோர்கள் செய்த தவறுகளினாலும் சுற்றியுள்ளவர்கள் எருசலேம் நக
ரத்தையும் எங்களையும் பழித்துப் பேசுகிறார்கள்.[e] யெகோவாவே, நீங்கள்
எப்போதும் நீதியாக நடந்துகொள்பவர்.[f] அதனால், இப்போதும் பரிசுத்த
மலையாகிய எருசலேம் நகரத்தின் மேலுள்ள கடும் கோபத்தைத் தயவு
செய்து விட்டுவிடுங்கள். **17** எங்கள் கடவுளே, அடியேன் கெஞ்சிக் கேட்
கிறேன், என் ஜெபத்தைக் கேளுங்கள். யெகோவாவே, பாழாய்க் கிடக்கும்[g]
உங்களுடைய பரிசுத்த இடத்தின் மேல் ஆசீர்வாதத்தைப் பொழியுங்கள்.[h]
உங்கள் மகிமைக்காக இதைச் செய்யுங்கள். **18** என் கடவுளே, காதுகொ
டுத்துக் கேளுங்கள். உங்களுடைய கண்களைத் திறந்து எங்களுடைய பரி
தாப நிலையையும், உங்கள் பெயர் தாங்கிய நகரத்தையும் பாருங்கள். எங்
கள் செயல்கள் நீதியானவை என்பதால் அல்ல, நீங்கள் மகா இரக்கமானவர்
என்பதால் உங்களிடம் கெஞ்சுகிறோம்.[i] **19** யெகோவாவே, கேளுங்கள்.
யெகோவாவே, எங்களை மன்னியுங்கள்.[j] யெகோவாவே, எங்களைக் கண்
ணோக்கிப் பார்த்து எங்களுக்கு உதவுங்கள். என் கடவுளே, உங்கள் நக
ரமும் உங்கள் ஜனங்களும் உங்களுடைய பெயரைத் தாங்கியிருப்பதால்
அந்தப் பெயரின் மகிமைக்காக நீங்கள் தாமதிக்காமல் உதவி செய்யுங்
கள்”[k] என்றேன்.

20 நான் இப்படி ஜெபம் செய்து, நானும் என் ஜனங்களாகிய இஸ்ரவேலர்
களும் செய்த பாவங்களை ஒத்துக்கொண்டும், பரிசுத்த மலைக்குக்[l] கருணை
காட்டும்படி என் கடவுளாகிய யெகோவாவிடம் வேண்டிக்கொண்டும் இருந்
தேன். **21** இப்படி ஜெபம் செய்துகொண்டு இருந்தபோதே, நான் முன்பு தரி
சனத்தில் பார்த்த காபிரியேல்[m] என்னிடம் வந்தார். அது மாலைநேர
காணிக்கை செலுத்தும் சமயம். நான் சக்தியே இல்லாமல் மிகவும் களைப்
பாக இருந்தேன். **22** அப்போது, காபிரியேல், எல்லாவற்றையும் எனக்குப்
புரிய வைத்தார். அவர் என்னிடம்,

“தானியேலே, உனக்கு எல்லா விவரங்களையும் ஆழமாகப் புரிய
வைப்பதற்காக நான் வந்திருக்கிறேன். **23** கடவுளுக்கு நீ மிகவும் பிரியமா
னவன்.*[n] அதனால், நீ அவரிடம் வேண்டிக்கொள்ள ஆரம்பித்தவுடனே
எனக்கு ஒரு செய்தி கிடைத்தது. அதைச் சொல்ல வந்திருக்கிறேன். நான்
சொல்லப்போவதைக் கவனமாகக் கேட்டு, தரிசனத்தைப் புரிந்துகொள்.

24 உன் ஜனங்களுக்காகவும் பரிசுத்த நகரத்துக்காகவும்[o] 70 வாரங்

9:23 * வே.வா., “அருமையானவன்.”

அதி. 9
[a] ஏசா 9:13; எரே 5:3
[b] நெ 9:33
[c] யாத் 6:1
[d] யாத் 9:16; நெ 9:10; சங் 106:7, 8
[e] லேவி 26: 38, 39; 1ரா 9:7-9; சங் 79:1, 4; எரே 24:9
[f] சங் 89:14; ஏசா 26:9
[g] ஏசா 64:10, 11; புல 5:18
[h] எண் 6:23, 25
[i] சங் 102:13; ஏசா 54:7, 8; எரே 14:7
[j] 1ரா 8:30
[k] சங் 79:8, 9; ஏசா 63:18, 19; எரே 14:9
[l] சங் 87:1, 2; சக 8:3
[m] தானி 8:1; தானி 8:16; லூ 1:19
[n] தானி 10: 11, 19
[o] நெ 11:1; ஏசா 52:1

களை* கடவுள் குறித்திருக்கிறார். அத்துமீறலை முடிவுக்குக் கொண்டுவர
வும், பாவங்களை ஒழித்துக்கட்டவும்,[a] தவறுகளுக்குப் பரிகாரம் செய்யவும்,[b]
நீதியை என்றென்றுமாக நிலைநாட்டவும்,[c] தரிசனத்துக்கும் தீர்க்கதரிசனத்துக்
கும்# முத்திரை போடவும்,[d] பரிசுத்தத்திலும் பரிசுத்தமானதை△ அபிஷேகம்
செய்யவும் அந்த 70 வாரங்களைக் கடவுள் குறித்திருக்கிறார். **25** எருசலே
மைப் புதுப்பித்துக் கட்டுவதற்குக்[e] கட்டளை கொடுக்கப்படுகிற சமயத்திலி
ருந்து 7 வாரங்களும் 62 வாரங்களும்[f] கழித்து தலைவராகிய[g] மேசியா*[h]
தோன்றுவார். எருசலேம் பொது சதுக்கத்தோடும் அகழியோடும்# புதுப்பித்
துக் கட்டப்படும். ஆனால், அது நெருக்கடியான காலங்களில் நடக்கும்.

26 அந்த 62 வாரங்களுக்குப் பின்பு, மேசியா தனக்கென்று எதுவும் இல்
லாமல் கொல்லப்படுவார்.[i]

ஒரு படைத் தலைவரும் அவருடைய வீரர்களும் வந்து நகரத்தையும்
பரிசுத்த இடத்தையும் அழிப்பார்கள்.[j] வெள்ளத்தால் அதற்கு முடிவு வரும்,
அந்த முடிவு வரும்வரை போர் நடக்கும். நாசம் செய்ய கடவுள் தீர்மானித்
திருக்கிறார்.[k]

27 பலருக்காக அவர்* ஒரு வாரத்துக்கு ஒப்பந்தத்தை நீடிக்கச் செய்
வார். அந்த வாரத்தின் பாதியில், பலிகளுக்கும் காணிக்கைகளுக்கும் முடிவு
கட்டுவார்.[l]

பாழாக்கும் ஒருவன் அருவருப்பானவற்றின் சிறகுமேல் வருவான்.[m]
பாழாய்க் கிடப்பது அடியோடு அழிக்கப்படும்வரை, கடவுள் தீர்மானித்தது
நிறைவேறும்” என்று சொன்னார்.

10

பெர்சிய ராஜா கோரேஸ்[n] ஆட்சி செய்த மூன்றாம் வருஷத்தில்,
ஒரு பெரிய போரைப் பற்றிய செய்தி பெல்தெஷாத்சார்[o] என்று
அழைக்கப்பட்ட தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அந்தச் செய்தி
உண்மையானது. அதை தானியேல் புரிந்துகொண்டார்; அவர் பார்த்த விஷ
யங்கள் அவருக்குப் புரிய வைக்கப்பட்டன.

2 அந்த நாட்களில், தானியேலாகிய நான் மூன்று வாரங்களாகத் துக்
கம் அனுசரித்துவந்தேன்.[p] **3** ருசியான உணவு எதையும் சாப்பிட
வில்லை. இறைச்சியோ திராட்சமதுவோ என் வாயில் படவில்லை. மூன்று
வாரங்களாக நான் எண்ணெய் பூசிக்கொள்ளவும் இல்லை. **4** முதலாம்
மாதம் 24-ஆம் நாளில், பெரிய ஆறாகிய டைகிரீசின்*[q] கரையில் இருந்
தேன். **5** நான் நிமிர்ந்து பார்த்தபோது, நாரிழை* உடையில் ஒரு மனிதர்
தெரிந்தார்.[r] அவர் ஊப்பாஸ் ஊரின் தங்கத்தால் செய்யப்பட்ட வாரை
இடுப்பில் கட்டியிருந்தார். **6** அவருடைய உடல் படிகப்பச்சைபோல்[s] பிர
காசித்தது, அவருடைய முகம் மின்னலைப் போல் மின்னியது, அவரு
டைய கண்கள் தீப்பந்தங்களைப் போல் தகதகத்தன, அவருடைய கைகளும்
பாதங்களும் பளபளப்பாக்கப்பட்ட செம்பைப் போல் பளிச்சிட்டன,[t] அவரு
டைய குரலோசை ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப் போல் இருந்தது.

9:24 *அதாவது, “வார வருஷங்களை.” ஒரு வாரத்திற்கு ஏழு வருஷங்கள் என்ற கணக்கில் மொத்தம் 490 வருஷங்கள். #நே.மொ., “தீர்க்கதரிசிக்கும்.” △வே.வா., “மகா பரிசுத்தமான அறையை.” **9:25** *வே.வா., “அபிஷேகம் செய்யப்பட்டவர்.” #அகழி என்பது நகரத்தின் மதிலைச் சுற்றிப் பாதுகாப்புக்காக ஆழமாய் வெட்டப்பட்டு நீர் நிரப்பப்பட்ட அமைப்பு. **9:27** *அநேகமாக, “மேசியா.” **10:4** *எபிரெயுவில், “இதெக்கேலின்.” **10:5** *அதாவது, “லினன்.”

அதி. 9
a லூ 1:76, 77; எபி 9:26
b ரோ 3:25; 1யோ 2:1, 2; 1யோ 4:10
c ஏசா 53:11; ரோ 1:16, 17
d 2கொ 1:19, 20
e நெ 2:5, 11; நெ 6:15
f லூ 3:1, 2
g ஏசா 55:4; மத் 23:10; யோவா 1:45, 49
h சங் 2:2; யோவா 1:41
i ஏசா 53:8, 12; மத் 26:2; மாற் 9:12; லூ 24:26; 1கொ 15:3
j மத் 24:15; லூ 19:43, 44; லூ 21:20
k லூ 21:22, 24
l எபி 9:11, 12; எபி 10:8-10
m மாற் 13:14; லூ 21:20

அதி. 10
n எஸ்றா 1:1, 2; ஏசா 45:1; தானி 1:21; தானி 6:28
o தானி 1:7; தானி 4:8
p தானி 9:3
q ஆதி 2:14
r வெளி 19:14
s எசே 1:16
t எசே 1:5, 7

7 தானியேலாகிய நான் மட்டும்தான் அந்தத் தரிசனத்தைப் பார்த்தேன்,[a]
என்னுடன் இருந்தவர்கள் அதைப் பார்க்கவில்லை. ஆனாலும் அவர்கள்
பயத்தில் நடுநடுங்கிப்போய் அங்கிருந்து ஓடி ஒளிந்துகொண்டார்கள்.

8 நான் மட்டும் தன்னந்தனியாக இருந்தேன். பிரமிப்பூட்டும் அந்தத் தரி
சனத்தைப் பார்த்தவுடன், என் பலமெல்லாம் போய்விட்டது. கொஞ்சம்கூட
தெம்பு இல்லாமல் துவண்டுபோனேன்.[b] **9** பின்பு, அந்த மனிதர் பேசும்
சத்தம் கேட்டது. அதைக் கேட்டுக்கொண்டிருந்த சமயத்திலேயே குப்புற
படுத்தபடி நன்றாகத் தூங்கிவிட்டேன்.[c] **10** அப்போது, ஒரு கை என்
னைத் தொட்டு எழுப்பியது.[d] நான் என் கைகளையும் முழங்கால்களையும்
தரையில் ஊன்றி எழுந்தேன். **11** அவர் என்னிடம்,

"தானியேலே, கடவுளுக்கு மிகவும் பிரியமானவனே,*[e] உன்னிடம் பேசு
வதற்காகத்தான் நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். எழுந்து நின்று, நான்
சொல்லப்போவதைக் கவனமாகக் கேள்" என்றார்.

அப்போது, நான் நடுங்கிக்கொண்டே எழுந்து நின்றேன்.

12 அவர் என்னிடம், "தானியேலே, பயப்படாதே.[f] எல்லாவற்றையும்
புரிந்துகொள்ளவும் கடவுளுக்குமுன் உன்னைத் தாழ்த்தவும் நீ தீர்மானித்த
நாள்முதல் கடவுள் உன் ஜெபத்தைக் கேட்டிருக்கிறார். அதனால்தான் இப்
போது நான் வந்திருக்கிறேன்.[g] **13** ஆனால், பெர்சிய சாம்ராஜ்யத்தின்
அதிபதி[h] 21 நாட்களாக என்னை எதிர்த்து நின்றான். அப்போது, பெரிய
அதிபதிகளில் ஒருவரான* மிகாவேல்#[i] என் உதவிக்கு வந்தார். நான் பெர்
சிய ராஜாக்களின் பக்கத்தில் இருந்தேன். **14** கடைசி நாட்களில் உன்னு
டைய ஜனங்களுக்கு என்ன நடக்குமென்று[j] உனக்குப் புரிய வைப்பதற்காக
நான் வந்திருக்கிறேன். நீ பார்த்த தரிசனம் நிறைவேற இன்னும் பல நாட்
கள் ஆகும்"[k] என்றார்.

15 அவர் அந்த வார்த்தைகளைச் சொன்னபோது நான் வாயடைத்துப்
போய், தரையைப் பார்த்தபடி நின்றேன். **16** பின்பு, மனிதனைப் போலி
ருந்த ஒருவர் என் உதடுகளைத் தொட்டார்.[l] உடனே நான் வாயைத் திறந்து,
என் முன்னால் நின்றவரிடம், "எஜமானே, தரிசனத்தைப் பார்த்து நடுநடுங்
கிப் போயிருக்கிறேன். எனக்குச் சக்தியே இல்லை.[m] **17** அப்படியிருக்கும்
போது, அடியேன் எப்படி எஜமானிடம் பேசுவேன்?[n] என் தெம்பெல்லாம்
போய்விட்டதே, மூச்சும் அடைக்கிறதே"[o] என்றேன்.

18 மனிதனைப் போலிருந்தவர் மறுபடியும் என்னைத் தொட்டுப் பலப்
படுத்தினார்.[p] **19** பின்பு என்னிடம், "கடவுளுக்கு மிகவும் பிரியமான
வனே,*[q] பயப்படாதே.[r] எதற்கும் கவலைப்படாதே.[s] தைரியமாக இரு,
நம்பிக்கையோடு இரு" என்றார். இப்படி அவர் சொல்லிக்கொண்டு இருந்த
போது நான் பலமடைந்து, "என் எஜமானே, என்னைப் பலப்படுத்திவிட்டீர்
கள், இப்போது பேசுங்கள்" என்றேன்.

20 அப்போது அவர், "நான் எதற்காக உன்னிடம் வந்திருக்கிறேன் தெரி
யுமா? நான் திரும்பிப் போய் பெர்சிய அதிபதியோடு[t] போர் செய்ய வேண்
டும். நான் புறப்படும்போது, கிரேக்கு தேசத்து அதிபதி வருவான்.
21 ஆனாலும், சத்திய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களை நான்

10:11, 19 *வே.வா., "அருமையானவனே." **10:13** *வே.வா., "முதன்மை அதிபதியா
கிய." #அர்த்தம், "கடவுளைப் போன்றவர் யார்?"

அதி. 10
a 2ரா 6:17; அப் 9:7
b தானி 7:28; தானி 8:27
c தானி 8:18
d எரே 1:9; வெளி 1:17
e தானி 9:23; தானி 10:19
f வெளி 1:17
g தானி 9:23
h எபே 6:12
i தானி 10:21; தானி 12:1; யூ 9; வெளி 12:7, 8
j தானி 2:28
k தானி 8:17, 26; தானி 12:4
l ஏசா 6:7; எரே 1:9
m தானி 10:8
n நியா 6:22
o ஏசா 6:5
p தானி 10:10
q தானி 9:22, 23; தானி 10:11
r வெளி 1:17
s நியா 6:23
t தானி 10:13

உனக்குச் சொல்கிறேன். எனக்கு உறுதுணையாக இருப்பது உன் அதிபதி
யாகிய மிகாவேல்[a] மட்டும்தான்” என்றார்.

11 அதோடு அவர், “மேதியனான தரியு ஆட்சி செய்த முதலாம்
வருஷத்தில்,[b] நான் அவனுக்குத் துணையாக* இருந்து அவ
னைப் பலப்படுத்தினேன். **2** இப்போது நான் உனக்குச் சொல்லப்போகிற
விஷயங்கள் நிஜமானவை.

பெர்சியாவை ஆட்சி செய்ய இன்னும் மூன்று ராஜாக்கள் வரப்போ
கிறார்கள். நான்காவதாக வருபவன் மற்ற எல்லாரையும்விட அதிக சொத்
துகளைக் குவிப்பான். சொத்துகளால் அவன் வலிமை அடையும்போது,
கிரேக்கு தேசத்துக்கு[c] எதிராக எல்லாரையும் தூண்டிவிடுவான்.

3 பின்பு பலம்படைத்த ஒரு ராஜா தோன்றி, இன்னும் பெரிய சாம்ராஜ்
யத்தை ஆட்சி செய்வான்.[d] அவன் தன்னுடைய இஷ்டப்படியெல்லாம்
நடந்துகொள்வான். **4** அவன் புகழின் உச்சத்தில் இருக்கும்போது, அவனு
டைய சாம்ராஜ்யம் பிளவுபட்டு, பூமியின் நான்கு திசைகளிலும் பிரியும்.[e]
ஆனாலும், அது அவனுடைய வம்சத்தாருக்குப் போய்ச் சேராது, முன்பு
போல் பெரியதாகவும் இருக்காது. அவனுடைய சாம்ராஜ்யம் பறிக்கப்பட்டு
மற்றவர்களின் கைக்குப் போய்விடும்.

5 பின்பு, அவனுடைய படைத் தளபதிகளில் ஒருவனின், அதாவது
தென்திசை ராஜாவின், அதிகாரம் கூடும். ஆனால் இன்னொருவன் இந்தத்
தென்திசை ராஜாவை வீழ்த்தி, இவனைவிட அதிகாரம் பெற்று, இன்னும்
பெரிய சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்வான்.

6 சில வருஷங்களுக்குப் பின்பு அவர்கள் கூட்டுச் சேர்வார்கள். தென்
திசை ராஜாவின் மகள் வடதிசை ராஜாவிடம் வந்து ஓர் ஒப்பந்தம் செய்
வாள். ஆனால், அவளால் தன்னுடைய அதிகாரத்தைத் தக்கவைத்துக்
கொள்ள முடியாது. ராஜாவும் வீழ்ச்சியடைந்து, தன் அதிகாரத்தை
இழப்பான். அவளும் அவளைக் கூட்டிக்கொண்டு வருகிறவர்களும் அவளு
டைய அப்பாவும் அவளுக்கு அப்போது அதிகாரம் கொடுக்கிறவனும் மற்ற
வர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள். **7** அவளுடைய குடும்பத்தாரில் ஒரு
வன், அவனுடைய* ஸ்தானத்துக்கு வருவான். வடதிசை ராஜாவின்
கோட்டைக்கும் படைக்கும் எதிராக அவன் வந்து, தாக்குதல் நடத்தி, வெற்றி
பெறுவான். **8** அவர்களுடைய தெய்வங்களையும், உலோகச் சிலைகளை
யும், விலைமதிப்புள்ள வெள்ளிச் சாமான்களையும், தங்கச் சாமான்களையும்,
எகிப்துக்குக் கொண்டுபோவான். ஜனங்களையும் பிடித்துக்கொண்டு
போவான். சில வருஷங்களுக்கு வடதிசை ராஜாவிடமிருந்து ஒதுங்கியே
இருப்பான். **9** ஆனால், வடதிசை ராஜா தென்திசை ராஜாவுடைய ராஜ்யத்
துக்கு விரோதமாக வருவான். ஆனாலும், தன்னுடைய சொந்த தேசத்துக்கே
திரும்பிப் போய்விடுவான்.

10 அவனுடைய* மகன்கள் ஒரு மாபெரும் படையைத் திரட்டி போருக்
குத் தயாராவார்கள். அவன்# கண்டிப்பாக வெள்ளம்போல் தேசத்துக்குள்
பாய்ந்து வருவான். ஆனால், தன் கோட்டைக்குத் திரும்பிப்போவான். அப்
படிப் போகும்போது வழியெல்லாம் போர் செய்துகொண்டே போவான்.

11:1 *வே.வா., “கோட்டையாக.” **11:7** *அநேகமாக, “தென்திசை ராஜாவுடைய.”
11:10 *அநேகமாக, “வடதிசை ராஜாவுடைய.” #அதாவது, “அவர்களில் ஒருவன்.”

அதி. 10
a தானி 10:13
தானி 12:1
யூ 9
வெளி 12:7, 8

அதி. 11
b தானி 5:30, 31
தானி 9:1

c தானி 8:21

d தானி 8:5, 21

e தானி 7:6
தானி 8:8, 22

11 தென்திசை ராஜா கடும் கோபத்தோடு புறப்பட்டுப் போய் வட
திசை ராஜாவோடு போர் செய்வான். இவன் ஒரு பெரிய கூட்டத்தைத்
திரட்டுவான், ஆனால் இவனுடைய கூட்டம் அவனுடைய கையில் கொடுக்
கப்படும். **12** அந்தக் கூட்டம் நீக்கப்படும். அவனுடைய இதயம் கர்வ
மடையும். அவன் ஆயிரக்கணக்கான ஆட்களை வீழ்த்துவான். ஆனால்,
தன்னுடைய பலத்த அதிகாரத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த
மாட்டான்.

13 வடதிசை ராஜா திரும்பிப்போய், முதலில் திரட்டியதைவிட பெரிய
படையைத் திரட்டுவான். காலங்களின் முடிவில், அதாவது சில வருஷங்
களுக்குப் பின்பு, ஒரு பெரும் படையுடனும் நிறைய ஆயுதங்களுடனும்
நிச்சயம் வருவான். **14** அந்தக் காலங்களில், தென்திசை ராஜாவைப் பலர்
எதிர்ப்பார்கள்.

உன் ஜனங்களுக்குள் இருக்கிற வன்முறையாளர்கள்* ஒரு தரிசனத்தை
நிறைவேற்ற முயற்சி செய்வார்கள்; ஆனால் தோல்வி அடைவார்கள்.

15 வடதிசை ராஜா வந்து, மதில் சூழ்ந்த நகரத்தைச் சுற்றிலும் மண்மேடு
அமைத்து, அதைக் கைப்பற்றுவான். தென்திசை ராஜாவின் படைகளாலும்
அவனுடைய மாவீரர்களாலும் எதிர்த்து நிற்க முடியாது. போராட அவர்க
ளுக்குப் பலமே இருக்காது. **16** அவனுக்கு* விரோதமாக வருபவன் தன்
இஷ்டப்படி செய்வான், ஒருவராலும் அவனுக்கு முன்னால் நிற்க முடியாது.
சிங்கார# தேசத்தில்[a] அவன் நிற்பான், அடியோடு அழிக்கும் அதிகாரம்
அவன் கையில் இருக்கும். **17** தன் ராஜ்யத்தின் படைகள் எல்லாவற்றை
யும் திரட்டிவரத் தீர்மானமாக இருப்பான். அவன் ஓர் ஒப்பந்தம் செய்
வான். நினைத்ததைச் செய்து முடிப்பான். மகளின் வாழ்க்கையை நாசமாக்க
அவன் அனுமதிக்கப்படுவான். ஆனால் அவள் அவனுடைய பக்கம்
நிற்க மாட்டாள், அவனுக்கு விசுவாசமாக இருக்க மாட்டாள். **18** அவன்
கடலோரப் பகுதிகள் பக்கமாகத் திரும்பி, பல பகுதிகளைக் கைப்பற்று
வான். ஒரு படைத் தளபதி அவனுடைய திமிரை ஒரேயடியாக அடக்கிவி
டுவான். அந்தத் திமிரினாலேயே அவன் அழிந்துபோகும்படி செய்வான்.
19 பின்பு, தன்னுடைய தேசத்தின் கோட்டைகள் பக்கமாகத் திரும்புவான்.
அங்கு தடுமாறி விழுந்து, இருந்த இடம் தெரியாமல் போவான்.

20 அவன் ஸ்தானத்துக்கு இன்னொருவன் வருவான். சீரும் சிறப்பும்
பெற்ற ராஜ்யமெங்கும் வசூலிப்பவனை* அவன் அனுப்புவான். யாருடைய
கோபத்தினாலோ போரினாலோ சாகாமல் தானாகவே சில நாட்களில் செத்
துப்போவான்.

21 அவமதிக்கப்பட்ட* ஒருவன் அவன் ஸ்தானத்துக்கு வருவான். அவ
னுக்கு ராஜ அந்தஸ்து கொடுக்கப்படாது. அமைதியான ஒரு காலகட்
டத்தில்# வந்து, அவன் சாதுரியமாக△ ராஜ்யத்தைப் பறித்துக்கொள்வான்.
22 வெள்ளமாகப் பாய்ந்து வரும் படைகளை அவன் முறியடித்து அழித்
துவிடுவான். ஒப்பந்தத்தின்[b] தலைவரும்[c] கொல்லப்படுவார். **23** அவ
னோடு அவர்கள் கூட்டணி சேருவதால் அவன் தந்திரமாக நடந்து, ஒரு

அதி. 11
a சங் 48:2 தானி 8:9 தானி 11: 41, 45
b ஆதி 15:18 அப் 3:25
c தானி 9:25 யோவா 1: 45, 49

11:14 *வே.வா., “திருடர்களின் மகன்கள்.” **11:16** *அநேகமாக, “தென்திசை ராஜா
வுக்கு.” #வே.வா., “அழகான.” **11:20** *ஒருவேளை, வரிவசூலிப்பவனைக் குறிக்க
லாம். வே.வா., “வேலை வாங்குபவனை.” **11:21** *வே.வா., “கேடுகெட்ட.”
#அல்லது, “முன்னெச்சரிக்கை தராமல்.” △வே.வா., “தந்திரமாக.”

அதி. 11
a தானி 12:9

சிறிய கூட்டத்தின் மூலம் வலிமை அடைவான். **24** அமைதியான ஒரு காலகட்டத்தில்* அவன் மாகாணத்தின் மிகச் செழுமையான பகுதிகளுக்கு வந்து, அவனுடைய முன்னோர்கள் யாருமே செய்யாததைச் செய்வான். கைப்பற்றிய பொருள்களையும் சூறையாடிய பொருள்களையும் சொத்துகளையும் ஜனங்களுக்குப் பங்குபோட்டுக் கொடுப்பான். மதில் சூழ்ந்த நகரங்களுக்கு எதிராகச் சதித்திட்டங்கள் தீட்டுவான், ஆனால் இது கொஞ்சக் காலத்துக்குத்தான் நடக்கும்.

b ஆதி 10:4
எண் 24:24
ஏசா 23:1
எரே 2:10
எசே 27:6

25 அவன் தன் பலத்தையெல்லாம் ஒன்றுதிரட்டி ஒரு பெரும் படையைக் கொண்டு தென்திசை ராஜாவை முறியடிக்கத் தீர்மானமாக இருப்பான். தென்திசை ராஜாவும் பலம்படைத்த மாபெரும் படையைத் திரட்டி அவனோடு போர் செய்யத் தயாராவான். அவனுக்கு* எதிராகச் சதித்திட்டங்கள் தீட்டப்படும் என்பதால் அவன் முறியடிக்கப்படுவான். **26** அவனுடைய அரண்மனை உப்பைச் சாப்பிடுபவர்களே அவனை வீழ்த்திவிடுவார்கள்.

அவனுடைய படை சிதறடிக்கப்படும், வீரர்கள் பலர் வெட்டி வீழ்த்தப்படுவார்கள்.

c தானி 11:28

27 இந்த இரண்டு ராஜாக்களும் தீமை செய்ய நினைப்பார்கள். ஒரே மேஜையில் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் பொய் பேசுவார்கள். ஆனால் அவர்களுடைய திட்டங்கள் எதுவும் வெற்றி பெறாது, ஏனென்றால் கடவுள் குறித்திருக்கிற காலத்தில்தான் முடிவு வரும்.[a]

28 அவன்* ஏராளமான பொருள்களோடு தன் தேசத்துக்குத் திரும்பிப்போவான். அவனுடைய இதயம் பரிசுத்த ஒப்பந்தத்துக்கு எதிராக இருக்கும். தான் நினைத்ததைச் செய்துவிட்டு, தன் தேசத்துக்குத் திரும்பிப் போவான்.

d தானி 8:11

29 குறிக்கப்பட்ட காலத்தில் அவன் தென்திசைக்கு விரோதமாகத் திரும்பி வருவான். ஆனால், முன்பு நடந்ததுபோல் இந்தத் தடவை நடக்காது. **30** ஏனென்றால், கித்தீமின்[b] கப்பல்கள் அவனுக்கு எதிராக வந்து, அவனைத் தாழ்த்தும்.

e தானி 8:12

அவன் திரும்பிப்போய் பரிசுத்த ஒப்பந்தத்துக்கு எதிராகக் கடும் கோபத்தைக் காட்டி,* நினைத்ததைச் செய்து முடிப்பான்.[c] அவன் திரும்பிப்போய் பரிசுத்த ஒப்பந்தத்தைக் கைவிடுகிறவர்கள்மேல் கவனத்தைத் திருப்புவான். **31** படைகள் அவனிடமிருந்து புறப்பட்டு வந்து, பரிசுத்த இடத்தையும் கோட்டையையும் தீட்டுப்படுத்தி,[d] வழக்கமான* பலியை[e] நீக்கிவிடும்.

f தானி 12:11
மத் 24:15
மாற் 13:14
லூ 21:20

அதோடு, பாழாக்கும் அருவருப்பை அவை ஏற்படுத்தும்.[f]

32 ஒப்பந்தத்துக்கு எதிராக நடந்துகொள்கிறவர்களிடம் அவன் இனிமையாக* பேசி, கடவுளைவிட்டு விலக# அவர்களைத் தூண்டுவான். ஆனால், கடவுளைத் தெரிந்திருக்கிற ஜனங்கள் உறுதியோடு இருந்து, வெற்றி பெறுவார்கள். **33** ஜனங்களில் விவேகமுள்ளவர்கள்,*[g] விஷயங்களை நிறைய

11:24 * அல்லது, “முன்னெச்சரிக்கை தராமல்.” **11:25** * அநேகமாக, “வடதிசை ராஜாவுக்கு.” **11:28** * அநேகமாக, “வடதிசை ராஜா.” **11:30** * வே.வா., “பரிசுத்த ஒப்பந்தத்தைக் கண்டனம் செய்து.” **11:31** * வே.வா., “தினமும் செலுத்தப்படுகிற.” **11:32** * வே.வா., “போலியாக.” # வே.வா., “விசுவாசதுரோகம் செய்ய.” **11:33** * வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதல் உள்ளவர்கள்.”

g தானி 12:10

பேருக்குப் புரிய வைப்பார்கள். ஆனால் அவர்கள் சில நாட்களுக்கு
வாளினாலும், நெருப்பினாலும், சிறைவாசத்தினாலும், கொள்ளையினாலும்
விழ வைக்கப்படுவார்கள். **34** அவர்கள் விழ வைக்கப்படும்போது அவர்
களுக்கு ஓரளவு உதவி கிடைக்கும். பலர் இனிமையாக* பேசி அவர்க
ளோடு சேர்ந்துகொள்வார்கள். **35** விவேகமுள்ளவர்களில்* சிலர் முடிவு
காலம்வரை புடமிடப்பட்டு, சுத்தமாக்கப்பட்டு, தூய்மையாக்கப்படுவதற்
காக அப்படி விழ வைக்கப்படுவார்கள்.[a] ஏனென்றால், அது குறிக்கப்பட்ட
காலத்தில்தான் நடக்கும்.

36 ராஜா தன் இஷ்டப்படி நடந்துகொள்வான், தன்னைத்தானே மேன்
மைப்படுத்திக்கொள்வான், எல்லா தெய்வங்களுக்கும் மேலாகத் தன்னை
உயர்த்துவான். தேவாதி தேவனுக்கு[b] எதிராகப் பயங்கரமான விஷயங்க
ளைப் பேசுவான். கண்டனத்தீர்ப்பு நிறைவேறும்வரை அவன் நினைத்தது
கைகூடும். ஏனென்றால், தீர்மானிக்கப்பட்டது நிறைவேற வேண்டும்.
37 அவன் தன்னுடைய முன்னோர்களின் கடவுளுக்கு மதிப்புக் காட்ட
மாட்டான். பெண்களின் விருப்பத்தையோ வேறெந்த தெய்வத்தையோ
மதிக்காமல், எல்லாருக்கும் மேலாகத் தன்னையே உயர்த்திக்கொள்வான்.
38 ஆனால்* கோட்டைகளின் தெய்வத்தை மகிமைப்படுத்துவான். தன்னு
டைய முன்னோர்கள் வணங்காத ஒரு தெய்வத்தை தங்கத்தாலும்,
வெள்ளியாலும், விலைமதிப்புள்ள கற்களாலும், மதிப்புள்ள பொருள்களா
லும் மகிமைப்படுத்துவான். **39** பொய் தெய்வத்தின் துணையோடு பலத்த
கோட்டைகளுக்கு எதிராகத் திறமையாய்ச் செயல்படுவான். தன்னை மதிக்
கிறவர்களை* மிகவும் கௌரவிப்பான், நிறைய பேரை ஆளும் அதிகா
ரத்தை அவர்களுக்குக் கொடுப்பான். நிலத்தை விலைக்குப் பங்குபோட்டுத்
தருவான்.

40 முடிவு காலத்தில் தென்திசை ராஜா வடதிசை ராஜாவோடு சண்
டைக்கு நிற்பான். வடதிசை ராஜாவும் தென்திசை ராஜாவைத் தாக்குவதற்கு
ரதங்களோடும் குதிரைவீரர்களோடும் பல கப்பல்களோடும் வேகமாக வரு
வான்; தேசங்களுக்குள் வெள்ளம்போல் பாய்ந்து எல்லாவற்றையும் நாசமாக்
குவான். **41** அவன் சிங்கார* தேசத்துக்குள்ளும் நுழைவான்.[c] பல தேசங்
கள் வீழ்ச்சியடையும். ஆனால், ஏதோமும் மோவாபும் அம்மோனியர்களின்
முக்கியப் பகுதியும் அவனுடைய கையிலிருந்து தப்பும். **42** தொடர்ந்து
அவன் தேசங்களைத் தாக்கிக்கொண்டே இருப்பான். எகிப்து தேசமும்
அவன் கைக்குத் தப்பாது. **43** எகிப்தின் புதையல்களான தங்கத்தையும்
வெள்ளியையும் அருமையான பொருள்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள்
கொண்டுவருவான். லீபியா தேசத்தாரும் எத்தியோப்பியர்களும் அவன்
காலடியில் கிடப்பார்கள்.*

44 ஆனால், கிழக்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் வருகிற அறிக்கைக
ளைக் கேட்டு அவன் கலக்கமடைவான். பலரை அழிக்கவும் ஒழித்துக்கட்
டவும் மிகுந்த ஆவேசத்தோடு புறப்பட்டுப் போவான். **45** பெருங்கட
லுக்கும் சிங்காரமான* பரிசுத்த மலைக்கும் இடையில் தன்னுடைய ராஜ

11:34 *வே.வா., “போலியாக.” **11:35** *வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதல் உள்ளவர்களில்.” **11:38** *வே.வா., “தன் ஸ்தானத்தில்.” **11:39** *அல்லது, “தான் மதிப்பவர்களை.” **11:41, 45** *வே.வா., “அழகான.” **11:43** *வே.வா., “அவனைப் பின்பற்றுவார்கள்.”

அதி. 11
a தானி 12:10
b உபா 10:17; சங் 136:1, 2
c சங் 48:2; தானி 8:9; தானி 11: 16, 45

கூடாரங்களைப் போடுவான்.[a] உதவிக்கு யாருமே இல்லாமல் தன் முடி
வைச் சந்திப்பான்" என்றார்.

12 அதோடு அவர், "அந்தக் காலத்தில், உன் ஜனங்களுக்குத் துணை
யாக நிற்கிற மகா அதிபதியாகிய[b] மிகாவேல்*[c] செயலில் இறங்
குவார்.# பூமியில் முதன்முதலாக ஒரு தேசம் உருவானதுமுதல் அதுவரை
வந்திருக்காத மிக வேதனையான காலம் வரும். அப்போது, உன் ஜனங்க
ளில் யாருடைய பெயரெல்லாம் கடவுளுடைய புத்தகத்தில் எழுதப்பட்டிருக்
கிறதோ[d] அவர்கள் எல்லாரும் தப்பிப்பார்கள்.[e] **2** மண்ணுக்குள் தூங்கிக்
கொண்டிருக்கும் பலர் எழுந்திருப்பார்கள். அவர்களில் சிலர் முடிவில்லாத
வாழ்வைப் பெறுவார்கள். மற்றவர்கள் பழிப்பேச்சுக்கு ஆளாவார்கள், என்
றென்றுமாக அவமதிக்கப்படுவார்கள்.

3 விவேகமுள்ளவர்கள்* வானத்தின் ஒளியைப் போல் பிரகாசிப்பார்
கள். பலரை நீதியின் வழிக்குக் கொண்டுவருகிறவர்கள் நட்சத்திரங்களைப்
போல் என்றென்றும் ஜொலிப்பார்கள்.

4 தானியேலே, முடிவு காலம்வரை நீ இந்த வார்த்தைகளை ரகசியமாக
வைத்து, இந்தப் புத்தகத்துக்கு முத்திரை போடு.[f] அப்போது இதைப் பலர்
அலசி ஆராய்வார்கள், உண்மையான அறிவும் பெருகும்"[g] என்றார்.

5 பின்பு தானியேலாகிய நான், ஆற்றுக்குப் பக்கத்தில் இன்னும் இரண்டு
பேர் நிற்பதைப் பார்த்தேன். ஒருவர் ஆற்றுக்கு இந்தப் பக்கத்திலும் இன்
னொருவர் அந்தப் பக்கத்திலும் நின்றுகொண்டிருந்தார்கள்.[h] **6** நாரிழை*
உடை போட்டுக்கொண்டு[i] ஆற்றின் மேல் நின்றுகொண்டிருந்தவரிடம்
மற்றவர், "இந்த ஆச்சரியமான காரியங்கள் முடிவுக்கு வர எவ்வளவு
காலம் ஆகும்?" என்று கேட்டார். **7** அப்போது, நாரிழை உடை போட்டுக்
கொண்டு ஆற்றின் மேல் நின்றுகொண்டிருந்தவர் பேசுவதைக் கேட்டேன்.
அவர் தன் வலது கையையும் இடது கையையும் வானத்துக்கு நேராக
உயர்த்தி, என்றென்றும் வாழ்கிறவர்மேல்[j] சத்தியம் செய்து, "குறிக்கப்பட்ட
ஒரு காலமும், இரண்டு காலங்களும், அரைக் காலமும்* ஆகும். பரிசுத்த
ஜனங்களின் பலம் அடக்கப்பட்டதுமே[k] இவையெல்லாம் முடிவுக்கு வரும்"
என்று சொன்னார்.

8 நான் அதைக் கேட்டேன், ஆனால் புரிந்துகொள்ள முடியவில்லை.[l]
அதனால், "எஜமானே, இவற்றின் முடிவில் என்ன நடக்கும்?" என்று
கேட்டேன்.

9 அதற்கு அவர், "தானியேலே, நீ போகலாம். ஏனென்றால், இந்த வார்த்
தைகள் முடிவு காலம்வரை ரகசியமாக வைக்கப்பட்டு, முத்திரை போடப்
பட்டிருக்கும்.[m] **10** பலர் தங்களைச் சுத்தமாக்கிக்கொண்டு, தூய்மைப்
படுத்திக்கொண்டு, புடமிடப்பட்டவர்களாய் ஆவார்கள்.[n] கெட்டவர்கள்
கெட்டதையே செய்வார்கள், அவர்களில் ஒருவரும் புரிந்துகொள்ள மாட்
டார்கள். ஆனால், விவேகம்* உள்ளவர்கள் புரிந்துகொள்வார்கள்.[o]

12:1 *அர்த்தம், "கடவுளைப் போன்றவர் யார்?" #நே.மொ., "எழுந்து நிற்பார்." எபிரெய மொழியில், ராஜ அதிகாரம் செலுத்துவதைக் குறிக்கலாம். **12:3** *வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதல் உள்ளவர்கள்." **12:6** *அதாவது, "லினன்." **12:7** *அதாவது, "மொத்தம் மூன்றரை காலங்கள்." **12:10** *வே.வா., "ஆழமான புரிந்துகொள்ளுதல்."

அதி. 11
a சங் 48:2; தானி 8:9; தானி 11:16, 41

அதி. 12
b தானி 10:21
c தானி 10:13; யூ 9; வெளி 12:7, 8
d மல் 3:16; லூ 10:20; வெளி 3:5
e ஏசா 26:20; யோவே 2:31, 32; மத் 24:21, 22; வெளி 7:13, 14
f தானி 8:17, 26; தானி 12:9
g ஏசா 11:9
h தானி 10:4
i தானி 10:5, 6
j தானி 4:34; வெளி 4:9; வெளி 10:6
k தானி 8:24
l லூ 18:34; அப் 1:7; 1பே 1:10, 11
m தானி 8:17, 26; தானி 10:14; தானி 12:4
n தானி 11:35
o சங் 111:10; தானி 11:33; தானி 12:3

11 வழக்கமான* பலி[a] நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பானது[b] ஏற்
படுத்தப்பட்ட பின்பு 1,290 நாட்கள் கடந்து போகும்.
12 1,335 நாட்கள்வரை காத்திருக்கிறவர்கள்* சந்தோஷமானவர்கள்.
13 நீ முடிவுவரை சகித்திரு. அதன்பின் ஓய்வெடுப்பாய். ஆனால், முடிவு
நாளில் உன் பங்கை* பெறுவதற்காக எழுந்திருப்பாய்"[c] என்றார்.

12:11 *வே.வா., "தினமும் செலுத்தப்படுகிற." **12:12** *வே.வா., "ஆவலோடு காத்திருக்கிறவர்கள்." **12:13** *வே.வா., "உனக்கு ஒதுக்கப்படும் நிலத்தை."

அதி. 12
a தானி 8:11
b தானி 11:31, மாற் 13:14
c யோவா 11:24, அப் 17:31, அப் 24:15, வெளி 20:12

ஓசியா

முக்கியக் குறிப்புகள்

1 ஓசியாவின் மனைவியும் அவளுக்குப் பிறந்த பிள்ளைகளும் (1-9)
- யெஸ்ரயேல் (4), லோருகாமா (6), லோகம்மீ (9)

விடுதலைக்கான நம்பிக்கையும் ஜனங்களின் ஒற்றுமையும் (10, 11)

2 துரோகம் செய்த இஸ்ரவேலர்களுக்குத் தண்டனை (1-13)

யெகோவாவைக் கணவராக ஏற்றுக்கொண்டு அவரிடம் திரும்பி வருகிறார்கள் (14-23)
- '"என் கணவனே!" என்று என்னைக் கூப்பிடுவாய்' (16)

3 துரோகம் செய்த தன் மனைவியை ஓசியா கூட்டிக்கொண்டு வருகிறார் (1-3)

இஸ்ரவேலர்கள் யெகோவாவிடம் திரும்பி வருவார்கள் (4, 5)

4 இஸ்ரவேலுக்கு எதிராக யெகோவாவின் வழக்கு (1-8)
- ஜனங்கள் மத்தியில் கடவுளைப் பற்றிய அறிவு இல்லை (1)

இஸ்ரவேலர்களின் உருவ வழிபாடும் ஒழுக்கக்கேடும் (9-19)
- விபச்சாரப் புத்தியால் வழிதவறிப் போகிறார்கள் (12)

5 எப்பிராயீமுக்கும் யூதாவுக்கும் தீர்ப்பு கொடுக்கப்படுகிறது (1-15)

6 யெகோவாவிடம் திரும்பிவர அழைப்பு (1-3)

ஜனங்களுடைய மாறாத அன்பு சீக்கிரத்தில் மறைந்துபோகிறது (4-6)
- பலிகள் கொடுப்பதைவிட விசுவாசமாக இருப்பதே சிறந்தது (6)

ஜனங்கள் கேவலமாக நடந்துகொள்கிறார்கள் (7-11)

7 எப்பிராயீமின் குற்றம் (1-16)
- கடவுள் விரித்த வலையிலிருந்து அவர்கள் தப்ப மாட்டார்கள் (12)

8 சிலை வழிபாட்டின் விளைவுகளை அறுவடை செய்கிறார்கள் (1-14)
- காற்றை விதைத்து புயல்காற்றை அறுவடை செய்கிறார்கள் (7)
- இஸ்ரவேல் தன்னைப் படைத்தவரை மறந்துவிட்டான் (14)

9 பாவம் செய்வதால் எப்பிராயீமைக் கடவுள் ஒதுக்கிவிடுகிறார் (1-17)
- அருவருப்பான தெய்வத்துக்கு ஜனங்கள் தங்களை அர்ப்பணிக்கிறார்கள் (10)

10 தரங்கெட்ட பழங்களைக் கொடுக்கும் திராட்சைக் கொடியான இஸ்ரவேல் அழிக்கப்படும் (1-15)
- விதைப்பும் அறுப்பும் (12, 13)

11 சிறுவயதிலிருந்தே இஸ்ரவேலிடம் யெகோவா காட்டிய அன்பு (1-12)
- "எகிப்திலிருந்து என் மகனைக் கூட்டிக்கொண்டு வந்தேன்" (1)

12 எப்பிராயீம் யெகோவாவிடம் திரும்பிவர வேண்டும் (1-14)
- யாக்கோபு கடவுளோடு போராடினார் (3)
- கடவுளுடைய கருணைக்காக அழுது கெஞ்சினார் (4)

13 எப்பிராயீம் யெகோவாவை மறந்து
சிலைகளை வணங்குகிறான் (1-16)
“மரணமே, உன் கொடுக்குகள் எங்கே?” (14)

14 யெகோவாவிடம் திரும்பிவர
வேண்டுகோள் (1-3)

யெகோவாவுக்குப் புகழ்
செலுத்தப்படுகிறது (2)
துரோகம் செய்த இஸ்ரவேல்
குணமாக்கப்படுகிறான் (4-9)

அதி. 1

1 யூதாவின் ராஜாக்களான[a] உசியா,[b] யோதாம்,[c] ஆகாஸ்,[d] எசேக்
கியா[e] ஆகியவர்களின் காலத்திலும் இஸ்ரவேலின் ராஜாவும் யோவா
சின்[f] மகனுமாகிய யெரொபெயாமின்[g] காலத்திலும் பெயேரியின் மகன்
ஓசியாவுக்கு* யெகோவாவிடமிருந்து செய்தி கிடைத்தது. **2** ஓசியா மூல
மாக யெகோவா தன்னுடைய செய்தியைச் சொல்ல ஆரம்பித்தபோது
யெகோவா ஓசியாவிடம், “விபச்சாரம் செய்யப்போகிற ஒரு பெண்ணை நீ
கல்யாணம் செய்து, விபச்சாரத்தால் அவளுக்குப் பிறக்கும் பிள்ளைக
ளுக்குத் தகப்பனாக இரு. அப்படிப்பட்ட விபச்சாரத்தைச் செய்துதான் இந்
தத் தேசம் யெகோவாவைவிட்டு முழுமையாக விலகிப்போயிருக்கிறது”[h]
என்று சொன்னார்.

3 அதனால், ஓசியா போய் திப்லாயிமின் மகளான கோமரைக் கல்
யாணம் செய்தார். அவள் கர்ப்பமாகி அவருக்கு ஒரு மகனைப் பெற்றெ
டுத்தாள்.

4 பின்பு யெகோவா, “யெஸ்ரயேலில் சிந்தப்பட்ட இரத்தத்துக்காக இன்
னும் கொஞ்சக் காலத்தில் நான் யெகூவின் வம்சத்தாரைத் தண்டித்து,[i]
இஸ்ரவேலுடைய அரசாட்சிக்கு முடிவுகட்டப்போகிறேன்.[j] அதனால், உன்
மகனுக்கு யெஸ்ரயேல்* என்று பெயர் வை. **5** அந்த நாளில், நான் யெஸ்
ரயேல் பள்ளத்தாக்கில் இஸ்ரவேலின் வில்லை ஒடிப்பேன்” என்று
சொன்னார்.

6 கோமர் மறுபடியும் கர்ப்பமாகி ஒரு மகளைப் பெற்றெடுத்தாள். அப்
போது கடவுள் ஓசியாவிடம், “குழந்தைக்கு லோருகாமா* என்று பெயர் வை.
ஏனென்றால், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இனியும் நான் இரக்கம் காட்ட
மாட்டேன்,[k] அவர்களைக் கண்டிப்பாகத் துரத்தியடிப்பேன்.[l] **7** ஆனால்,
யூதா ஜனங்களுக்கு நான் இரக்கம் காட்டுவேன்.[m] அவர்களுடைய கடவு
ளாகிய நான் அவர்களைக் காப்பாற்றுவேன்.[n] வில்லினாலோ வாளினாலோ
போரினாலோ குதிரைகளினாலோ குதிரைவீரர்களினாலோ அல்ல, யெகோ
வாவாகிய நானே அவர்களைக் காப்பாற்றுவேன்”[o] என்று சொன்னார்.

8 லோருகாமா தாய்ப்பால் மறந்த பின்பு, கோமர் மறுபடியும் கர்ப்
பமாகி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். **9** அப்போது கடவுள், “அவனுக்கு
லோகம்மீ* என்று பெயர் வை. ஏனென்றால், நீங்கள் என்னுடைய ஜனங்க
ளும் அல்ல, நான் உங்களுடைய கடவுளும் அல்ல” என்றார்.

1:1 *ஓசியா என்ற பெயரின் இன்னொரு வடிவம் ஓசாயா. அதன் அர்த்தம், “‘யா’ காப்பாற்றினார்.” ‘யா’ என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **1:4** *அர்த்தம், “கடவுள் விதை விதைப்பார்.” **1:6** *அர்த்தம், “இரக்கம் காட்டப்படவில்லை.” **1:9** *அர்த்தம், “என்னுடைய ஜனங்கள் அல்ல.”

a ஏசா 1:1; மீ 1:1
b 2நா 26:1, 3, 4
c 2ரா 15:32-34
d 2ரா 16:1-3
e 2ரா 18:1-3
f 2ரா 13:10, 11
g 2ரா 14:23, 24; ஆமோ 1:1
h உபா 31:16; ஓசி 3:1
i 2ரா 10:29-31
j 2ரா 15:8, 10
k ஓசி 2:23
l 2ரா 17:6; 2ரா 17:22, 23
m ஓசி 11:12
n 2ரா 19:34, 35
o ஏசா 37:36

10 அதோடு, "அளக்கவோ எண்ணவோ முடியாத கடற்கரை மணலைப்
போல இஸ்ரவேல் ஜனங்கள் ஏராளமாக இருப்பார்கள்.[a] 'நீங்கள் என்னு
டைய ஜனங்கள் அல்ல'[b] என்று எந்த இடத்தில் சொல்லப்பட்டதோ அதே
இடத்தில், 'நீங்கள் உயிருள்ள கடவுளின் பிள்ளைகள்'[c] என்று சொல்லப்
படும். **11** யூதா ஜனங்களும் இஸ்ரவேல் ஜனங்களும் ஒற்றுமையாகக் கூடி
வந்து,[d] ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து, தேசத்தைவிட்டு வெளியே
போவார்கள், அந்த நாள் யெஸ்ரயேலுக்கு விசேஷ நாளாக இருக்கும்."[e]

2 "'என் ஜனங்களே!'*[f] என்று உன் சகோதரர்களிடம் சொல்,
'இரக்கம் காட்டப்பட்ட பெண்களே!'#[g] என்று உன்
சகோதரிகளிடம் சொல்.

2 உன் தாய்மேல் குற்றம்சுமத்து, அவளைக் குற்றம்சாட்டு.
அவள் என் மனைவியும் அல்ல,[h] நான் அவளுடைய கணவனும் அல்ல.
அவள் விபச்சாரம் செய்வதை விட்டுவிட வேண்டும்,
துரோகம் செய்வதை நிறுத்திவிட வேண்டும்.

3 இல்லாவிட்டால், அவளைப் பிறந்த மேனியாக்கி
அசிங்கப்படுத்துவேன்.
அவளைப் பாலைவனம் போலாக்குவேன்,
தண்ணீரில்லாத தேசமாக்குவேன்,
தாகத்தால் சாகடிப்பேன்.

4 அவளுடைய மகன்களுக்கு இரக்கம் காட்ட மாட்டேன்,
அவர்கள் விபச்சாரத்தால் பிறந்தவர்கள்.

5 அவர்களுடைய தாய் விபச்சாரம் செய்தாள்.[i]
அவர்களை வயிற்றில் சுமந்தவள் வெட்கங்கெட்டு நடந்தாள்.[j]
'என் ஆசைக் காதலர்களின் பின்னால் போவேன்,[k]
அவர்கள்தான் உணவும் தண்ணீரும் கொடுக்கிறார்கள்,
கம்பளி உடையும் நாரிழை* உடையும் எண்ணெயும் பானமும்
தருகிறார்கள்' என்று அவள் சொன்னாள்.

6 அதனால் அவள் போகும் பாதையை முள்ளால் அடைப்பேன்.
அவளுக்கு எதிரில் கற்சுவரை எழுப்புவேன்.
வழி கண்டுபிடிக்க முடியாமல் அவள் திணறுவாள்.

7 ஆசைக் காதலர்களின் பின்னால் ஓடுவாள், ஆனால் அவர்களை
அடைய முடியாது.[l]
அவர்களைத் தேடிப் பார்ப்பாள், கண்டுபிடிக்க முடியாது.
உடனே, 'என் கணவரிடமே* திரும்பிப் போகிறேன்,[m]
அவரோடு வாழ்ந்தபோது நன்றாக இருந்தேனே' என்பாள்.[n]

8 அவளுக்குத் தானியத்தையும் புதிய திராட்சமதுவையும்
எண்ணெயையும் தந்தேன்.
வெள்ளியையும் தங்கத்தையும் அள்ளிக் கொடுத்தேன்.
இதை உணராமல் பாகாலின் வணக்கத்துக்கு அவற்றைப்
பயன்படுத்தினாள்.[o]

2:1 * ஓசி 1:9-ன் அடிக்குறிப்பைப் பாருங்கள். # ஓசி 1:6-ன் அடிக்குறிப்பைப் பாருங்கள். **2:5** * அதாவது, "லினன்." **2:7** * வே.வா., "முதல் கணவரிடமே."

அதி. 1
a ஆதி 13:16; ஆதி 22:17
b 1பே 2:10
c ரோ 9:25, 26; 2கொ 6:18
d எஸ்றா 3:1; ஏசா 11:12; எரே 3:18; எசே 37:19; மீ 2:12
e ஓசி 2:22

அதி. 2
f எரே 31:33; எசே 36:28; சக 13:9
g ஓசி 2:23
h எரே 3:8
i எசே 23:4, 5; ஓசி 3:1
j எஸ்றா 9:6; தானி 9:7; ஓசி 9:10
k எசே 23:7, 8; ஓசி 8:9
l ஏசா 31:1; ஓசி 5:13
m எரே 31:18; எசே 23:4; ஓசி 5:15
n உபா 32:12–14; நெ 9:25
o உபா 32:28; ஏசா 1:3; ஓசி 8:4

9 ‘இனி எதையும் கொடுக்க மாட்டேன்.
என் தானியத்தை அதன் அறுவடைக் காலத்திலும்,
என்னுடைய புதிய திராட்சமதுவை அதன் பருவகாலத்திலும்
எடுத்துக்கொள்வேன்.[a]
அவள் உடலை மறைக்க நான் கொடுத்த கம்பளி, நாரிழை
உடைகளைப் பிடுங்கிக்கொள்வேன்.
10 அவளுடைய ஆசைக் காதலர்களின் கண் முன்னால் அவளை
நிர்வாணமாக்குவேன்.
என் கையிலிருந்து யாராலும் அவளைக் காப்பாற்ற முடியாது.[b]
11 அவளுடைய எல்லா கொண்டாட்டத்துக்கும் முடிவுகட்டுவேன்.
பண்டிகைகளையும்,[c] மாதப் பிறப்புகளையும்,* ஓய்வுநாட்களையும்,
விழாக்களையும் ஒழித்துக்கட்டுவேன்.
12 அவளுடைய திராட்சைக் கொடிகளையும் அத்தி மரங்களையும்
பாழாக்குவேன்.
“இவை என் ஆசைக் காதலர்கள் கொடுத்த கூலி” என்று சொன்னாள்.
அவற்றைக் காடாக மாற்றிவிடுவேன்.
காட்டு மிருகங்கள் அவற்றைத் தின்றுதீர்க்கும்.
13 திருவிழா நாட்களில் பாகால் சிலைகளுக்கு அவள் பலிகள்
செலுத்தினாள்.[d]
வளையங்களையும் நகைகளையும் போட்டுக்கொண்டு ஆசைக்
காதலர்கள் பின்னால் ஓடினாள்.
ஆனால் என்னை மறந்துவிட்டாள்.[e]
இதற்கெல்லாம் அவள் பதில் சொல்ல வேண்டும்’ என்று யெகோவா
சொல்கிறார்.
14 ‘அவளுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்வேன்.
வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போவேன்.
பக்குவமாகப் பேசி அவளுடைய இதயத்தை வெல்வேன்.
15 பின்பு, அவளுடைய திராட்சைத் தோட்டங்களைத் திரும்பக்
கொடுப்பேன்.[f]
ஆகோர் பள்ளத்தாக்கை[g] நம்பிக்கையின் வாசலாக்குவேன்.
இளவயதில் என்னிடம் பேசியதுபோல் அவள் அங்கே பேசுவாள்.
எகிப்திலிருந்து வந்த நாளில் பதிலளித்ததுபோல் பதிலளிப்பாள்.[h]
16 அந்த நாளிலிருந்து, “என் கணவனே!” என்று என்னைக் கூப்பிடுவாள்.
“என் தலைவனே!”* என்று கூப்பிட மாட்டாள்’ என யெகோவா
சொல்கிறார்.
17 ‘பாகாலின் பெயர்களை அவள் வாயால் உச்சரிக்காதபடி
செய்துவிடுவேன்.[i]
அவற்றை அவள் நினைவிலிருந்து நீக்கிவிடுவேன்.[j]
18 அந்த நாளில், என் ஜனங்களுக்காகக் காட்டு மிருகங்களோடும்,[k]
வானத்துப் பறவைகளோடும், ஊரும் பிராணிகளோடும் ஒரு ஒப்பந்தம்
செய்வேன்.[l]

அதி. 2
a ஏசா 17:11
b சங் 50:22; ஓசி 5:14
c ஆமோ 5:21; ஆமோ 8:10
d நியா 3:7; 1ரா 16:30-32; 2ரா 10:28; ஓசி 11:2
e ஏசா 17:10
f உபா 30:5; ஏசா 65:21; எரே 32:15; எசே 28: 25, 26; ஆமோ 9:14
g யோசு 7: 24-26; ஏசா 65:10
h யாத் 15:1
i யாத் 23:13; யோசு 23:6, 7
j சக 13:2
k எசே 34:25
l ஏசா 11:6-8

2:11 * வே.வா., “முதலாம் பிறையையும்.” 2:16 * வே.வா., “என் பாகாலே!”

தேசத்திலிருந்து வில்லையும் வாளையும் போரையும்
ஒழித்துக்கட்டுவேன்.[a]
அவர்களைப் பாதுகாப்பாகப் படுத்துக்கொள்ள* செய்வேன்.[b]
19 உன்னுடன் நிரந்தரமான திருமண ஒப்பந்தம் செய்துகொள்வேன்.
நீதிநியாயத்தோடும் மாறாத அன்போடும் இரக்கத்தோடும்[c]
உன்னுடன் திருமண நிச்சயம் செய்துகொள்வேன்.
20 உண்மையோடு உன்னுடன் திருமண நிச்சயம் செய்துகொள்வேன்.
அப்போது, கண்டிப்பாக யெகோவாவாகிய என்னைப்
புரிந்துகொள்வாய்.'[d]
21 யெகோவா சொல்வது இதுதான்:
'அந்த நாளில் நான் வானத்தின் கோரிக்கையை
நிறைவேற்றுவேன்.
வானமோ பூமியின் கோரிக்கையை நிறைவேற்றும்.[e]
22 பூமியோ தானியம், புதிய திராட்சமது, எண்ணெய் ஆகியவற்றின்
கோரிக்கையை நிறைவேற்றும்.
இவையோ யெஸ்ரயேலின்*[f] கோரிக்கையை நிறைவேற்றும்.
23 நான் எனக்காக அவளைப் பூமியில் விதை போல விதைப்பேன்.[g]
இரக்கம் காட்டப்படாத* அவளுக்கு இரக்கம் காட்டுவேன்.
என்னுடைய ஜனங்களாக இல்லாதவர்களிடம்,# "நீங்கள் என்
ஜனங்கள்" என்று சொல்வேன்.[h]
அவர்கள், "நீங்கள் எங்களுடைய கடவுள்"[i] என்று சொல்வார்கள்'"
என்றார்.

3 பின்பு யெகோவா என்னிடம், "இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற தெய்வங்
களை வணங்கி,[j] உலர்ந்த திராட்சை அடைகளை* விரும்புகிறார்கள்.
ஆனாலும், யெகோவாவாகிய நான் அவர்கள்மேல் அன்பு காட்டுகிறேன்.[k]
அதைப் போல நீயும், உனக்குத் துரோகம் செய்து இன்னொருவனின்
ஆசைநாயகியாக மாறிவிட்ட பெண்ணை மறுபடியும் கூட்டிக்கொண்டு
வந்து அவளிடம் அன்பு காட்டு"[l] என்றார்.

2 அதனால், நான் 15 வெள்ளிக் காசுகளையும் ஒன்றரை ஹோமர்
அளவு* பார்லியையும் விலையாகக் கொடுத்து அவளைக் கூட்டிக்கொண்டு
வந்தேன். 3 பின்பு அவளிடம், "நீ பல நாட்களுக்கு எனக்குச் சொந்தமா
னவளாக இருப்பாய். நீ விபச்சாரம் செய்யக் கூடாது, வேறு யாரோடும் உற
வுகொள்ளக் கூடாது. நானும் உன்னோடு உறவுகொள்ள மாட்டேன்" என்று
சொன்னேன்.

4 ஏனென்றால், இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் வெகு காலத்துக்கு
ராஜாவோ தலைவரோ இருக்க மாட்டார்;[m] பலியோ, பூஜைத் தூணோ,
ஏபோத்தோ,[n] குலதெய்வச் சிலைகளோ[o] இருக்காது. 5 அதன்பின் அவர்
கள் திரும்பி வந்து, தங்கள் கடவுளான யெகோவாவையும் தங்கள் ராஜா

2:18 *வே.வா., "வாழ." **2:22** *அர்த்தம், "கடவுள் விதை விதைப்பார்." **2:23** *ஓசி 1:6-ன் அடிக்குறிப்பைப் பாருங்கள். #ஓசி 1:9-ன் அடிக்குறிப்பைப் பாருங்கள். **3:1** *இவை பொய் வணக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்ட அடைகள். **3:2** *ஒரு ஹோமர் என்பது 220 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 2
a ஏசா 2:4; எசே 39:9; சக 9:10
b லேவி 26:5, 6; எரே 23:6; மீ 4:3, 4
c மீ 7:18
d ஏசா 54:13; எரே 24:7; எரே 31:34
e உபா 28:12; சக 8:12
f ஓசி 1:11
g எரே 31:27
h ஓசி 2:1; ரோ 9:25, 26; 1பே 2:10
i ஓசி 1:10

அதி. 3
j நியா 10:13; எரே 3:20
k உபா 7:6-8; 2ரா 13:23; சங் 106:44, 45
l ஓசி 1:2, 3
m 2ரா 17:6; 2ரா 18:9, 10
n நியா 8:27
o நியா 17:5; 1சா 19:15, 16

வான தாவீதையும் தேடுவார்கள்.[a] கடைசி நாட்களில் அவர்கள் யெகோவா
வின் ஆசீர்வாதத்தை* பெற அவரிடம் நடுக்கத்துடன் வருவார்கள்.[b]

4 இஸ்ரவேல் ஜனங்களே, யெகோவா சொல்வதைக் கேளுங்கள்.
தேசத்து ஜனங்களோடு யெகோவா வழக்காடப் போகிறார்.[c]
ஜனங்கள் மத்தியில் நேர்மையும் இல்லை, விசுவாசமும்* இல்லை,[d]
கடவுளைப் பற்றிய அறிவும் இல்லை.
2 அவர்கள் பொய் சத்தியம் செய்கிறார்கள், உண்மையைப் புரட்டுகிறார்கள்,[e] உயிர்களைப் பறிக்கிறார்கள்,[f]
திருடுகிறார்கள், மணத்துணைக்குத் துரோகம் செய்கிறார்கள்,[g]
கொலைக்குமேல் கொலை செய்கிறார்கள்.[h]
3 அதனால், தேசம் துக்கத்தில் மூழ்கிப்போகும்.[i]
ஜனங்கள் எல்லாரும் அழிந்துபோவார்கள்.
காட்டு மிருகங்களும், வானத்துப் பறவைகளும்,
கடல்மீன்களும்கூட அழிந்துபோகும்.
4 "ஆனாலும், உங்களை யாரும் தட்டிக்கேட்காமலும் கண்டிக்காமலும் இருக்கட்டும்.[j]
ஏனென்றால், நீங்கள் குருவானவரையே தட்டிக்கேட்பவர்கள்போல் இருக்கிறீர்கள்.[k]
5 இருட்டில் தடுமாறி விழுவதுபோல் பட்டப்பகலில் நீங்கள் விழுவீர்கள்.
தீர்க்கதரிசியும் உங்களோடு சேர்ந்து விழுவான்.
உங்களுடைய தாயின் மூச்சை நான் அடக்கிவிடுவேன்.
6 என் ஜனங்கள் என்னைப் பற்றிய அறிவைப் பெறாததால் அவர்களுடைய மூச்சு அடக்கப்படும்.*
நீங்கள் என்னைப் பற்றிய அறிவை ஒதுக்கித்தள்ளினீர்கள்.[l]
அதனால், எனக்குக் குருமார்களாகச் சேவை செய்யாதபடி நானும் உங்களை ஒதுக்கித்தள்ளுவேன்.
என்னுடைய சட்டத்தை# நீங்கள் மறந்தீர்கள்.[m]
அதனால், நானும் உங்களுடைய மகன்களை மறந்துவிடுவேன்.
7 என் ஜனங்கள் பெருகப்பெருக அவர்களுடைய பாவமும் பெருகியது.[n]
அவர்களுடைய புகழ்ச்சியை இகழ்ச்சியாக மாற்றிவிடுவேன்.*
8 என் ஜனங்கள் செய்கிற பாவத்தால் குருமார்கள் கொழுத்துப்போகிறார்கள்.
என் ஜனங்களுடைய குற்றங்களைப் பார்க்க ஏங்குகிறார்கள்.
9 ஜனங்களுக்கும் குருமார்களுக்கும் ஒரே கதிதான் காத்திருக்கிறது.
அவர்களுடைய அக்கிரமங்களுக்காக அவர்களைத் தண்டிப்பேன்.
கெட்டது செய்கிறவர்களுக்குக் கெட்டதையே வர வைப்பேன்.[o]
10 அவர்கள் சாப்பிடுவார்கள், ஆனால் திருப்தியடைய மாட்டார்கள்.[p]

அதி. 3
a எரே 30:9; எரே 50:4; எசே 34:23, 24; எசே 37:24, 25; ஆமோ 9:11; லூ 1:31-33
b உபா 4:30

அதி. 4
c மீ 6:2
d மீ 7:2
e ஓசி 11:12
f 1ரா 21:18, 19
g எசே 23:37
h ஓசி 1:4; ஓசி 6:8, 9
i ஆமோ 8:7, 8
j ஆமோ 5:10, 13
k உபா 17:12
l எரே 2:8
m 2ரா 17:15, 16
n எஸ்றா 9:6, 7
o ஆமோ 3:1, 2
p லேவி 26:26; மீ 6:14

3:5 *வே.வா., "யெகோவா தரும் நன்மைகளை." **4:1** *வே.வா., "மாறாத அன்பும்." **4:6** *வே.வா., "என் ஜனங்கள் அழிக்கப்படுவார்கள்." #வே.வா., "அறிவுரையை." **4:7** *அல்லது, "நான் தந்த புகழ்ச்சியை ஒதுக்கிவிட்டு இகழ்ச்சியைத் தேடிக்கொண்டார்கள்."

ஒழுக்கக்கேடாக நடப்பார்கள், ஆனால் பிள்ளைகளைப் பெற
மாட்டார்கள்.[a]
ஏனென்றால், அவர்கள் யெகோவாவாகிய என்னை
மதிக்கவே இல்லை.
11 விபச்சாரமும், பழைய திராட்சமதுவும், புதிய திராட்சமதுவும்
சரியானதைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைக் கெடுக்கும்.[b]
12 என் ஜனங்கள் மரச் சிலைகளிடம் ஆலோசனை கேட்கிறார்கள்.
அவர்களுடைய கோல்* சொல்கிறபடி செய்கிறார்கள்.
விபச்சாரப் புத்தியால் வழிதவறி நடக்கிறார்கள்.
விபச்சாரம் செய்து தங்கள் கடவுளைவிட்டு விலகுகிறார்கள்.
13 மலைகளின் மேல் பலி செலுத்துகிறார்கள்.[c]
குன்றுகளின் மேலும், கருவாலி மரங்களின் கீழும்,
எல்லா பெரிய மரங்களின் கீழும்* தூபம் காட்டுகிறார்கள்.[d]
ஏனென்றால், அவை நல்ல நிழல் தருகின்றன.
அதனால்தான், உங்கள் மகள்கள் விபச்சாரம் செய்கிறார்கள்.
உங்கள் மருமகள்களும் கணவனுக்குத் துரோகம் செய்கிறார்கள்.
14 விபச்சாரம் செய்கிற உங்கள் மகள்களையும்,
கணவனுக்குத் துரோகம் செய்கிற உங்கள் மருமகள்களையும்
தண்டிக்க மாட்டேன்.
ஏனென்றால், ஆண்கள் விலைமகள்களோடு போகிறார்கள்.
கோயில் விபச்சாரிகளோடு சேர்ந்து பலி கொடுக்கிறார்கள்.
புத்தி* இல்லாத இந்த ஜனங்கள்[e] அழிந்துபோவார்கள்.
15 இஸ்ரவேல் விபச்சாரம் செய்தாலும்,[f]
யூதாவே, நீ குற்றம் செய்யக் கூடாது.[g]
நீ கில்காலுக்கோ[h] பெத்-ஆவேனுக்கோ[i] வராதே,
‘உயிருள்ள கடவுளாகிய யெகோவாமேல் ஆணை!’* என்று
சொல்லாதே.[j]
16 முரட்டுக்காளையைப் போல் இஸ்ரவேல் பிடிவாதம் பிடிக்கிறது.[k]
ஆட்டுக்குட்டியைப் புல்வெளியில் மேய்ப்பதுபோல் இஸ்ரவேலை
யெகோவா இனி மேய்ப்பாரோ?
17 எப்பிராயீம், சிலைகளின் பக்கம் சேர்ந்துகொண்டான்.[l]
அவனை விட்டுவிடு!
18 மதுவை* ஊற்றி ஊற்றிக் குடிக்கிறான்.
பின்பு, மாதுவிடம் மயங்குகிறான்.
அவனுடைய தலைவர்களும் தறிகெட்டு நடக்கவே
விரும்புகிறார்கள்.[m]
19 காற்று அதன் சிறகுகளில் அவனை வாரிக்கொண்டு போகும்.
அவனுடைய பலிகளை நினைத்து அவன் வெட்கப்படுவான்.”

4:12 * அதாவது, “மந்திரக்கோல்.” **4:13** * எபிரெயுவில், “லிப்னே மரங்களின் கீழும் எல்லா பெரிய மரங்களின் கீழும்.” **4:14** * வே.வா., “புரிந்துகொள்ளும் திறன்.” **4:15** * வே.வா., “யெகோவா உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயம்.” **4:18** * வே.வா., “கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்ட பீரை.”

அதி. 4
a ஓசி 9:11, 12
b நீதி 20:1; நீதி 23:31, 33; ஏசா 28:7
c எரே 3:6
d 2ரா 17:10-12; எரே 2:20; எசே 20:28
e எரே 4:22
f எசே 23:4, 5
g 2ரா 17:18
h ஓசி 9:15; ஓசி 12:11; ஆமோ 4:4
i ஓசி 5:8; ஓசி 10:5
j ஏசா 48:1; எரே 5:2; எசே 20:39
k சங் 78:8; சங் 81:11, 12; சக 7:11, 12
l ஓசி 11:2; ஓசி 13:1, 2
m மீ 7:3

அதி. 5
a ஓசி 4:9
b நியா 4:6 எரே 46:18
c எசே 23:4, 5 ஓசி 4:17, 18
d ஓசி 4:12 ஆமோ 2:7
e ஏசா 9:9, 10 ஓசி 7:10
f 2ரா 17:19, 20 எசே 23: 30, 31 ஆமோ 2:4, 5
g ஏசா 1:15 மீ 3:4
h ஏசா 48:8 எரே 3:20
i ஏசா 10:29
j ஓசி 8:1
k ஓசி 4:15 ஓசி 10:5
l ஏசா 28:1-3 ஓசி 9:13
m உபா 19:14
n 1ரா 20:1

5 “குருமார்களே! கேளுங்கள்.[a]
இஸ்ரவேல் ஜனங்களே! கவனியுங்கள்.
ராஜாவின் குடும்பத்தாரே! கவனித்துக் கேளுங்கள்.
உங்களுக்குத் தீர்ப்பு கொடுக்கப்படுகிறது.
ஏனென்றால், நீங்கள் மிஸ்பாவில் வைக்கப்பட்ட கண்ணியாக இருக்கிறீர்கள்.
தாபோர்மீது[b] விரிக்கப்பட்ட வலையாக இருக்கிறீர்கள்.
2 அக்கிரமக்காரர்கள் கொலை செய்வதில் தீவிரமாய் இறங்கிவிட்டார்கள்.
அவர்கள் எல்லாரையும் நான் எச்சரிக்கிறேன்.*
3 எப்பிராயீமைப் பற்றி எனக்குத் தெரியும்.
இஸ்ரவேல் என்னிடமிருந்து மறைந்துகொள்ள முடியாது.
எப்பிராயீமே! நீ விபச்சாரம் செய்தாய்.
இஸ்ரவேல் தன்னையே கெடுத்துக்கொண்டான்.[c]
4 கடவுளிடம் திரும்பிவர முடியாதளவுக்கு அவர்கள் அக்கிரமம் செய்கிறார்கள்.
அவர்களுக்கு விபச்சாரப் புத்தி இருக்கிறது.[d]
யெகோவாவை அவர்கள் மதிப்பதே இல்லை.
5 இஸ்ரவேலின் கர்வம் அவன் முகத்திரையைக் கிழித்தது.[e]
இஸ்ரவேலும் எப்பிராயீமும் பாவத்தில் விழுந்தார்கள்.
யூதாவும் அவர்களோடு சேர்ந்து விழுந்தான்.[f]
6 அவர்கள் ஆடுமாடுகளோடு யெகோவாவைத் தேடிப்போனார்கள்.
ஆனால், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.
அவர்களைவிட்டு அவர் போய்விட்டார்.[g]
7 அவர்கள் யெகோவாவுக்குத் துரோகம் செய்தார்கள்.[h]
முறைகேடாகப் பிள்ளைகளைப் பெற்றார்கள்.
அவர்களும் அவர்களுடைய நிலங்களும் ஒரு மாதத்துக்குள் அழிக்கப்படும்.
8 கிபியாவில் ஊதுகொம்பையும், ராமாவில்[i] எக்காளத்தையும் ஊதுங்கள்![j]
பெத்-ஆவேனில்[k] போர் முழக்கம் செய்யுங்கள்.
பென்யமீனே, உன்னைப் பின்தொடருகிறோம்.
9 எப்பிராயீமே! தண்டனை நாளில் உனக்குக் கோரமான முடிவு வரும்.[l]
இஸ்ரவேலின் கோத்திரங்களுக்குக் கண்டிப்பாக நடக்கப்போவதைச் சொல்லிவிட்டேன்.
10 யூதாவின் அதிகாரிகள் எல்லைக் குறியைத் தள்ளிவைக்கிற ஆட்களைப் போல இருக்கிறார்கள்.[m]
தண்ணீரைக் கொட்டுவதுபோல் என் கடும் கோபத்தை அவர்கள்மேல் கொட்டுவேன்.
11 எப்பிராயீம் அடக்கி ஒடுக்கப்படுகிறான், நியாயத்தீர்ப்பினால் நொறுக்கப்படுகிறான்.
அவன் எதிரியின் பின்னால் போவதிலேயே குறியாக இருந்தானே![n]

5:2 * வே.வா., “கண்டிப்பேன்.”

12 அதனால், கரையான் அரிப்பதுபோல் எப்பிராயீமை நான்
அரித்துவிட்டேன்.
யூதாவை அழுகிப்போகும்படி செய்தேன்.
13 எப்பிராயீம் தனக்கு வந்த நோயைப் பார்த்தான்.
யூதா தன் புண்ணைப் பார்த்தான்.
எப்பிராயீம் அசீரியாவிடம் போனான்;[a] ஒரு பெரிய ராஜாவிடம்*
ஆள் அனுப்பினான்.
அந்த ராஜாவால் அவனைக் குணப்படுத்த முடியவில்லை.
புண்ணைச் சரிசெய்யவும் முடியவில்லை.
14 இளம் சிங்கத்தைப் போல எப்பிராயீமின் மேல் நான் பாய்வேன்.
பலமான சிங்கத்தைப் போல யூதா ஜனங்களின் மேல் பாய்வேன்.
அவர்களைக் கடித்துக் குதறுவேன்.[b]
அவர்களை இழுத்துக்கொண்டு போவேன்,
யாராலும் அவர்களைக் காப்பாற்ற முடியாது.[c]
15 பின்பு, அவர்களை விட்டுவிட்டு என்னுடைய இடத்துக்குத்
திரும்பிவிடுவேன்.
குற்றத்துக்கான தண்டனையை அவர்கள் அனுபவிப்பார்கள்.
அப்போது, என் கருணைக்காக ஏங்குவார்கள்.[d]
வேதனையில் தவிக்கும் சமயத்தில் என்னைத் தேடுவார்கள்.”[e]

6 “வாருங்கள், யெகோவாவிடம் திரும்பிப் போகலாம்.
அவர் சிங்கம்போல் நம்மைக் கடித்துக் குதறியிருந்தாலும்[f] நம்மைக்
குணமாக்குவார்.
அவர் நம்மைத் தாக்கியிருந்தாலும் நம்முடைய காயங்களுக்குக்
கட்டுப்போடுவார்.
2 இரண்டு நாட்களுக்குப் பின்பு புத்துயிர் தருவார்.
மூன்றாம் நாளில் நம்மைத் தூக்கி நிறுத்துவார்.
நாம் அவர்முன் வாழ்வோம்.
3 யெகோவாவை நாம் தெரிந்துகொள்வோம்,
அவரைத் தெரிந்துகொள்ள ஊக்கமாக முயற்சி செய்வோம்.
பொழுது விடிவது எப்படி உறுதியோ அப்படியே அவர் நம்மிடம்
வருவது உறுதி.
பருவ மழையைப் போல் அவர் நம்மிடம் வருவார்,
நிலத்தை நனைக்கும் வசந்த கால மழைபோல் வருவார்.”
4 “எப்பிராயீமே, நான் உன்னை என்ன செய்வேன்?
யூதாவே, நான் உன்னை என்ன செய்வேன்?
உங்களுடைய மாறாத அன்பு காலைநேர மேகங்களைப்
போலவும்
பனித்துளிகளைப் போலவும் சீக்கிரத்தில் மறைந்துபோகிறதே!
5 அதனால், தீர்க்கதரிசிகளை அனுப்பி உங்களை வீழ்த்துவேன்.[g]
என் வார்த்தைகளால் உங்களைக் கொல்வேன்.[h]

5:13 * அதாவது, “யாரேப் ராஜாவிடம்.”

அதி. 5
a ஓசி 8:9
ஓசி 12:1
b சங் 50:22
c ஆமோ 2:14
d லேவி 26:
38, 40
e உபா 4:29, 30
உபா 30:10

அதி. 6
f ஓசி 5:14
g ஏசா 58:1
எரே 1:9, 10
எசே 3:8, 9
h எரே 23:29

உங்களுக்கு வரும் தண்டனைகள் வெளிச்சம் போலத் தெளிவாகத் தெரியும்.[a]
6 நீங்கள் எனக்குப் பலிகள் கொடுக்க வேண்டும் என்றல்ல,
எனக்கு விசுவாசமாக இருக்க* வேண்டும் என்றுதான் விரும்புகிறேன்.
நீங்கள் எனக்குத் தகன பலிகள் தர வேண்டும் என்றல்ல,
என்னை நன்றாகத் தெரிந்துகொள்ள# வேண்டும் என்றுதான் விரும்புகிறேன்.[b]
7 நீங்களோ அற்ப மனுஷர்களைப் போல ஒப்பந்தத்தை மீறினீர்கள்.[c]
உங்கள் தேசத்திலே எனக்குத் துரோகம் செய்தீர்கள்.
8 கீலேயாத் பொல்லாதவர்களின் ஊர்.[d]
அது இரத்தக்கறையால் நிறைந்திருக்கிறது.[e]
9 குருமார்கள் கொள்ளைக்கூட்டத்தார் போல இருக்கிறார்கள்.
சீகேமின்[f] சாலையில் காத்திருந்து கொலை செய்கிறார்கள்.
கேவலமாக நடந்துகொள்கிறார்கள்.
10 இஸ்ரவேல் ஜனங்கள் செய்கிற படுமோசமான காரியத்தை நான் பார்த்தேன்.
எப்பிராயீம் விபச்சாரம் செய்கிறான்.[g]
இஸ்ரவேல் தன்னையே கெடுத்துக்கொண்டான்.[h]
11 யூதாவே, உனக்கு ஓர் அறுவடைக் காலம் காத்திருக்கிறது.
சிறைபிடிக்கப்பட்டுப் போன உன்னை மறுபடியும் கூட்டிக்கொண்டு வருவேன்."[i]

7 "இஸ்ரவேலை நான் குணப்படுத்த நினைக்கும்போதெல்லாம்
எப்பிராயீமின் குற்றமும்,[j]
சமாரியாவின் அக்கிரமமும் அப்பட்டமாகத் தெரிகிறது.[k]
அந்த ஜனங்கள் பித்தலாட்டம் செய்கிறார்கள்.[l]
வீடுகளில் திருடுகிறார்கள், வீதிகளில் கொள்ளையடிக்கிறார்கள்.[m]
2 இதையெல்லாம் நான் மறக்க மாட்டேன் என்பதை அவர்கள் புரிந்துகொள்வதில்லை.[n]
அவர்களுடைய அக்கிரமங்களே அவர்களை வளைத்துக்கொண்டன.
அவையெல்லாம் என்முன் வெட்டவெளிச்சமாக இருக்கின்றன.
3 அவர்கள் அட்டூழியங்கள் செய்து அரசனைச் சந்தோஷப்படுத்துகிறார்கள்.
மோசடிகள் செய்து அதிகாரிகளை மயக்குகிறார்கள்.
4 அவர்கள் எல்லாரும் ரொட்டி சுடுகிறவனின் அடுப்பைப் போல் இருக்கிறார்கள்.
பிசைந்த மாவு புளிக்கும்வரை அடுப்பின் நெருப்பை அவன் கிளறிவிட்டுக்கொண்டே இருக்கத் தேவை இல்லை; ஏனென்றால், அதன் நெருப்பு பற்றியெரிந்துகொண்டிருக்கும்.
அதேபோல் அவர்களும் கெட்ட ஆசையில் பற்றியெரிந்து கடவுளுக்குத் துரோகம் செய்கிறார்கள்.

6:6 * வே.வா., "மாறாத அன்பு காட்ட; இரக்கம் காட்ட." # வே.வா., "என்னைப் பற்றிய அறிவைப் பெற."

அதி. 6
a செப் 3:5
b 1சா 15:22; நீதி 21:3; ஏசா 1:11; மீ 6:6-8; மத் 9:13; மத் 12:7
c 2ரா 17:15; ஏசா 24:5; ஓசி 8:1
d ஓசி 12:11
e மீ 7:2
f 1ரா 12:25
g 2ரா 17:6, 7; எரே 3:6
h எசே 23:4, 5
i உபா 30:3; எரே 29:14; ஆமோ 9:14

அதி. 7
j ஏசா 28:1
k ஆமோ 8:14; மீ 1:5
l மீ 7:3
m ஓசி 6:9
n உபா 32:29; ஏசா 1:3; ஆமோ 8:7

5 நம் ராஜாவின் விழாவில் அமைச்சர்கள் குடித்து வாந்தியெடுத்தார்கள்.
குடிவெறியில்[a] ஆத்திரமடைந்தார்கள்.
ராஜாவும் கிண்டல் செய்கிறவர்களோடு சேர்ந்துகொண்டான்.
6 அவர்களுடைய இதயம் எரிந்துகொண்டிருக்கும் அடுப்பைப் போல் இருக்கிறது.*
ரொட்டி சுடுகிறவன் ராத்திரியெல்லாம் தூங்குகிறான்.
காலையில் அவனுடைய அடுப்பு கொழுந்துவிட்டு எரிகிறது.
7 எல்லாருமே அடுப்பைப் போல அனல் கக்குகிறார்கள்.
தங்களுடைய அதிகாரிகளை* பொசுக்குகிறார்கள்.
அவர்களுடைய ராஜாக்கள் எல்லாரும் வீழ்ச்சியடைந்தார்கள்.[b]
அவர்களில் யாருமே உதவிக்காக என்னைக் கூப்பிடுவதில்லை.[c]
8 எப்பிராயீம் மற்ற தேசத்தாரோடு ஒன்றுக்குள் ஒன்றாகக் கலந்துவிட்டான்.[d]
திருப்பிப் போடாத* ரொட்டியைப் போல அவன் இருக்கிறான்.
9 முன்பின் தெரியாதவர்கள் அவனுடைய அதிகாரத்தை அடக்கிவிட்டார்கள்.[e]
ஆனால், அவனுக்கு அது தெரியவில்லை.
அவனுடைய முடியெல்லாம் நரைத்துவிட்டது.
ஆனால், அவன் அதைக் கவனிக்கவில்லை.
10 இஸ்ரவேலின் கர்வம் அவன் முகத்திரையைக் கிழித்தது.[f]
ஆனாலும், தன் கடவுளான யெகோவாவிடம் அவன் திரும்பவில்லை.[g]
அவரிடம் உதவி கேட்கவும் இல்லை.
11 சுலபமாக ஏமாந்துவிடும் புறாவைப் போல எப்பிராயீம் ஜனங்கள் புத்தியில்லாமல் இருக்கிறார்கள்.[h]
அவர்கள் உதவிக்காக எகிப்தைக் கூப்பிடுகிறார்கள்,[i] அசீரியாவிடம் ஓடுகிறார்கள்.[j]
12 எங்கே போனாலும் அவர்கள்மேல் என் வலையை விரிப்பேன்.
வானத்துப் பறவைகளைப் போல அவர்களைக் கீழே விழ வைப்பேன்.
எச்சரித்தபடியே அவர்களைத் தண்டிப்பேன்.[k]
13 என்னைவிட்டு விலகிப்போனதால், அவர்களுக்குக் கேடுதான் வரும்!
என் வார்த்தையை மீறிவிட்டதால் அவர்களுக்கு அழிவுதான்!
அவர்களை விடுவிக்கத் தயாராக இருந்தேன், ஆனால் என்னைப் பற்றிப் பொய் பேசித் திரிந்தார்கள்.[l]
14 படுக்கையில் கிடந்து ஓலமிட்டார்கள்.
ஆனாலும், உதவிக்காக என்னிடம் இதயப்பூர்வமாகக் கெஞ்சவில்லை.[m]
தானியத்துக்காகவும் தித்திப்பான திராட்சமதுவுக்காகவும் தங்கள் உடலை அடித்து அடித்துக் கிழித்துக்கொண்டார்கள்.
என்னைவிட்டு விலகிப்போனார்கள்.

7:6 *அல்லது, "சதித்திட்டங்கள் தீட்டும்போது அவர்களுடைய இதயம் அடுப்பைப் போல இருக்கிறது." **7:7** *வே.வா., "நீதிபதிகளை." **7:8** *வே.வா., "அரை வேக்காடான."

அதி. 7
a ஏசா 5:11; ஏசா 28:1
b 2ரா 15:8, 10; 2ரா 15:14
c ஏசா 9:13
d சங் 106:34-36; எசே 23:4, 5
e 2ரா 13:3; 2ரா 15:19
f ஓசி 5:5
g நெ 9:35; ஏசா 9:13; ஆமோ 4:6; சக 1:4
h ஏசா 1:3
i 2ரா 17:4; ஏசா 31:1
j 2ரா 15:19; எசே 23:4, 5
k உபா 28:15; 2ரா 17:13
l ஏசா 59:13
m சங் 78:37; ஏசா 29:13

15 அவர்களுக்குப் புத்திசொன்னேன்,* அவர்களுடைய கைகளைப்
பலப்படுத்தினேன்.
ஆனாலும், எனக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுகிறார்கள்.
16 அவர்கள் தங்கள் வழியை மாற்றிக்கொண்டார்கள், ஆனாலும் உயர்ந்த
இடத்துக்கு* வரவில்லை.
உறுதியற்ற வில்லைப் போல் அவர்கள் நம்ப முடியாதவர்களாக
இருந்தார்கள்.[a]
எதிர்த்துப் பேசுகிற அவர்களுடைய அதிகாரிகள் வாளுக்குப்
பலியாவார்கள்.
எகிப்து தேசத்தில் அவர்கள் கேலி கிண்டலுக்கு ஆளாவார்கள்.”[b]

8 “ஊதுகொம்பை ஊதுங்கள்![c]
ஒருவன் கழுகைப் போல யெகோவாவின் ஜனங்களுக்கு* எதிராக
வருகிறான்.[d]
அவர்கள் என்னுடைய ஒப்பந்தத்தை மீறிவிட்டார்கள்,[e] என்னுடைய
சட்டத்தை அவமதித்துவிட்டார்கள்.[f]
2 ‘எங்கள் கடவுளே, இஸ்ரவேலர்களாகிய எங்களுக்கு உங்களைத்
தெரியும்’ என்று சத்தமாகச் சொல்கிறார்கள்.[g]
3 இஸ்ரவேலர்கள் நல்லதை ஒதுக்கிவிட்டார்கள்.[h]
எதிரி அவர்களைத் துரத்தட்டும்.
4 அவர்களே ராஜாக்களைத் தேர்ந்தெடுத்தார்கள், என்னிடம் சம்மதம்
கேட்கவில்லை.
அவர்களே அதிபதிகளை நியமித்தார்கள், என்னிடம் அனுமதி
வாங்கவில்லை.
வெள்ளியாலும் தங்கத்தாலும் சிலைகளைச் செய்தார்கள்.[i]
தங்களுக்கே அழிவைத் தேடிக்கொண்டார்கள்.[j]
5 சமாரியாவே, உன் கன்றுக்குட்டி சிலையை ஒதுக்கித்தள்ளினேன்.[k]
உன்மேல் எனக்குக் கோபம் பற்றிக்கொண்டு வருகிறது.[l]
எவ்வளவு காலத்துக்குத்தான் திருந்தாமல் இருப்பாய்?
6 அது இஸ்ரவேலில் தோன்றியது.
கைத்தொழிலாளி அதைச் செய்தான், அது கடவுள் கிடையாது.
சமாரியாவின் கன்றுக்குட்டி சிலை சுக்குநூறாக்கப்படும்.
7 அவர்கள் காற்றை விதைக்கிறார்கள்,
புயல்காற்றை அறுவடை செய்வார்கள்.[m]
பயிர்களில் தானியம் இல்லை.[n]
தானியம் இருந்தாலும் மாவு கிடைப்பதில்லை.
மாவு கிடைத்தாலும் முன்பின் தெரியாதவர்கள்
பிடுங்கிக்கொள்வார்கள்.[o]
8 இஸ்ரவேலர்கள் வீழ்த்தப்படுவார்கள்.[p]

அதி. 7
a சங் 78:57
b எசே 36:19, 20; ஓசி 9:3

அதி. 8
c ஓசி 5:8
d உபா 28:49, 50
e ஓசி 6:7
f 2ரா 17:15
g ஏசா 48:1; மீ 3:11
h சங் 50:17
i 1ரா 12:26, 28; ஓசி 13:2
j 1ரா 13:34
k ஓசி 10:5, 6
l உபா 32:21, 22; 2ரா 17:18
m நீதி 22:8
n ஏசா 17:11
o உபா 28:15, 33
p 2ரா 15:29; 2ரா 18:11; எரே 50:17

7:15 *வே.வா., “அவர்களைக் கண்டித்துத் திருத்தினேன்.” **7:16** *அதாவது, ”எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்து நிற்கும் வணக்கத்துக்கு.” **8:1** *வே.வா., “ஆலயத்துக்கு.”

வேண்டாத பாத்திரத்தைப் போல மற்ற தேசத்தாரின் நடுவில்
கிடப்பார்கள்.[a]
9 தன் இஷ்டத்துக்குச் சுற்றித் திரியும் காட்டுக் கழுதையைப் போல
அவர்கள் அசீரியாவிடம் போனார்கள்.[b]
எப்பிராயீம் விபச்சாரிகளுக்குக் கூலி கொடுத்தான்.[c]
10 அவர்களை மற்ற தேசங்களிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தான்.
ஆனால், நான் அவர்களைச் சுற்றிவளைப்பேன்.
ராஜாவும் அதிகாரிகளும் சுமத்துகிற சுமை தாங்காமல் அவர்கள்
கஷ்டப்படுவார்கள்.[d]
11 எப்பிராயீம் பாவம் செய்வதற்காகவே நிறைய பலிபீடங்களைக்
கட்டினான்.[e]
அவைதான் அவன் பாவம் செய்வதற்குக் காரணமாயின.[f]
12 நான் அவனுக்காக நிறைய சட்டங்களை* எழுதினேன்.
அவற்றை அவன் மதிக்கவே இல்லை.[g]
13 அவர்கள் எனக்குப் பலிகளைக் கொடுக்கிறார்கள்; அவற்றின்
இறைச்சியைச் சாப்பிடுகிறார்கள்.
யெகோவாவாகிய எனக்கு அந்தப் பலிகளில் கொஞ்சமும் பிரியம்
இல்லை.[h]
அவர்களுடைய குற்றத்தை நான் கண்டும்காணாமல் விடமாட்டேன்.
அவர்களுடைய பாவங்களுக்காகத் தண்டனை கொடுப்பேன்.[i]
அவர்கள் எகிப்துக்குத் திரும்பினார்கள்.*[j]
14 இஸ்ரவேல் தன்னைப் படைத்தவரை மறந்து,[k] கோயில்களைக்
கட்டினான்.[l]
யூதா, மதில் சூழ்ந்த பல நகரங்களைக் கட்டினான்.[m]
அந்த நகரங்களுக்குள் நான் நெருப்பை அனுப்புவேன்.
அது எல்லா கோட்டைகளையும் பொசுக்கிவிடும்."[n]

9 "இஸ்ரவேலே, நீ சந்தோஷப்படாதே![o]
மற்ற ஜனங்களைப் போல மகிழ்ச்சியாக இருக்காதே.
ஏனென்றால், நீ விபச்சாரம் செய்து* உன் கடவுளைவிட்டு
விலகிப்போனாய்.[p]
களத்துமேடுகளில் செய்த விபச்சாரத்துக்கு ஆசையோடு கூலி
வாங்கினாய்.[q]
2 களத்துமேடும் திராட்சரச ஆலையும் உன் வயிற்றை நிரப்பாது.
புதிய திராட்சமதுவும் உனக்குக் கிடைக்காது.[r]
3 யெகோவாவின் தேசத்தில் இனி நீ வாழ மாட்டாய்.[s]
எப்பிராயீமே, நீ எகிப்துக்குத் திரும்புவாய்.
அசீரியாவில் அசுத்தமானவற்றைச் சாப்பிடுவாய்.[t]
4 இனி யெகோவாவுக்குத் திராட்சமதுவைப் பானபலியாகக் கொடுக்க
மாட்டாய்.[u]
உன்னுடைய பலிகளை அவர் விரும்ப மாட்டார்.[v]

8:12 *வே.வா., "அறிவுரைகளை." **8:13** *அல்லது, "திரும்பிப் போவார்கள்." **9:1** *வே.வா., "ஒழுக்கங்கெட்டு நடந்து."

அதி. 8
a லேவி 26:33
b 2ரா 15:19, எசே 23:4, 5, ஓசி 5:13, ஓசி 12:1
c எசே 23:9
d 2ரா 14:26, 1நா 5:26
e ஏசா 10:10, 11
f ஓசி 12:11
g 2ரா 17:15, நெ 9:26
h ஏசா 1:11, ஆமோ 5:22
i ஓசி 9:9, ஆமோ 8:7
j ஓசி 7:16, ஓசி 9:3
k உபா 32:18
l 1ரா 12:25, 31
m 2நா 26:9, 10
n 2ரா 18:13, 2நா 36:17, 19, எரே 17:27, எரே 34:7

அதி. 9
o ஓசி 10:5
p எசே 23:4, 5, ஓசி 4:12
q ஓசி 2:12, மீ 1:7
r ஓசி 2:8, 9, ஆமோ 5:11
s லேவி 20:22, உபா 28: 63, 64, யோசு 23: 15, 16, 1ரா 9:6, 7
t 2ரா 17:6
u எண் 15:5, எண் 28:14, யோவே 1:13
v ஏசா 1:11

அவை சாவு வீட்டு சாப்பாட்டைப் போல இருக்கின்றன.
அவற்றைச் சாப்பிடுகிற எல்லாரும் தங்களைத்
தீட்டுப்படுத்திக்கொள்வார்கள்.
உன் சாப்பாடு உன்னோடு இருக்கட்டும்.
அது யெகோவாவின் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படாது.
5 விருந்து நாளில் நீ என்ன செய்வாய்?
யெகோவாவின் பண்டிகை நாளில் என்ன செய்வாய்?
6 அழிவைப் பார்த்து நீ தப்பியோடுவாய்.[a]
எகிப்து உன்னை வாரிக்கொள்ளும்,[b] மோப் உன்னைப் புதைத்துவிடும்.[c]
விலைமதிப்புள்ள வெள்ளி இருந்த இடத்தில் முட்செடிகள் முளைக்கும்.
உன் கூடாரங்கள் முட்புதராகிவிடும்.
7 விசாரணை நாட்கள் வரும்.[d]
தண்டனைத் தீர்ப்பின் நாட்களும் வரும்.
இஸ்ரவேலுக்கு இது தெரியும்.
உன் தீர்க்கதரிசி முட்டாளாவான், தெய்வ வாக்கு சொல்கிறவன்
பைத்தியமாவான்.
உன் குற்றங்களுக்குக் கணக்கில்லை, அதனால் உன்மேல்
காட்டப்படுகிற வெறுப்புக்கு அளவில்லை."
8 எப்பிராயீமின் காவல்காரன்[e] என் கடவுள் பக்கம் இருந்தான்.[f]
ஆனால், இப்போது அவனுடைய தீர்க்கதரிசிகளின்
செயல்களெல்லாம்[g] வேடனின் கண்ணிகள்போல் இருக்கிறது.
அவனுடைய கடவுளின் ஆலயத்தில் பகை தங்கியிருக்கிறது.
9 கிபியாவில் நடந்தது போல இஸ்ரவேலர்கள் மிகவும் சீர்கெட்டு
நடக்கிறார்கள்.[h]
அவர்களுடைய அக்கிரமத்தைக் கடவுள் நினைத்துப் பார்ப்பார்,
பாவங்களுக்காகத் தண்டிப்பார்.[i]
10 "வனாந்தரத்தில் திராட்சைப் பழங்களைக் கண்டுபிடிப்பதுபோல்
இஸ்ரவேலை நான் கண்டுபிடித்தேன்.[j]
உன் முன்னோர்கள் முதலில் பழுத்த அத்திப் பழங்களைப் போல்
இருந்தார்கள்.
ஆனால், அவர்கள் பாகால் பேயோரிடம்[k] போய்விட்டார்கள்.
வெட்கங்கெட்ட தெய்வத்துக்குத் தங்களை அர்ப்பணித்தார்கள்.[l]
தாங்கள் நேசித்த சிலையைப் போல் அருவருப்பானவர்களாக
ஆனார்கள்.
11 எப்பிராயீமின் பெருமையெல்லாம் பறவையைப் போலப்
பறந்துபோனது.
அவர்கள் யாரும் குழந்தையைப் பெற்றெடுப்பது இல்லை, கர்ப்பமாக
இருப்பது இல்லை, கருத்தரிப்பதுகூட இல்லை.[m]
12 அவர்கள் பிள்ளைகளை வளர்த்தாலும்,
ஒரு பிள்ளைகூட வளர்ந்து ஆளாவதற்கு விடமாட்டேன்.[n]
நான் அவர்களைவிட்டு விலகும்போது அவர்களுக்குக்
கேடுதான் வரும்![o]

அதி. 9
a ஓசி 7:13
b ஓசி 7:16; ஓசி 8:13
c எரே 2:14, 16
d ஏசா 10:3
e ஏசா 21:6, 8; எரே 6:17; எசே 33:7
f 1ரா 17:1; 2ரா 2:14
g 1ரா 18:19
h நியா 19:22; நியா 20:4-6; ஓசி 10:9
i ஓசி 8:13
j எரே 2:2
k எண் 25:1-3; உபா 4:3; சங் 106:28
l 1ரா 16:31; எரே 11:13
m உபா 28:15, 18
n உபா 28:32; உபா 32:25
o உபா 31:17; 2ரா 17:18

13 மேய்ச்சல் நிலத்தில் நடப்பட்ட எப்பிராயீம் எனக்கு தீருவைப் போல
இருந்தான்.[a]
கொலை செய்யப்படுவதற்காகத் தன் மகன்களை வெளியே
கொண்டுபோய் விடுவான்."
14 யெகோவாவே, அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக்
கொடுக்காமல் இருந்துவிடாதீர்கள்.
கரு தங்காத கர்ப்பப்பையையும் பால் சுரக்காத மார்பகங்களையும்
கொடுங்கள்.
15 "கில்காலில் எல்லா கெட்ட காரியங்களையும் அவர்கள் செய்தார்கள்;[b]
அங்கே நான் அவர்களை வெறுத்தேன்.
அவர்களுடைய அக்கிரமங்களுக்குத் தண்டனையாக அவர்களை என்
வீட்டிலிருந்து துரத்திவிடுவேன்.[c]
இனி அவர்களிடம் அன்புகாட்ட மாட்டேன்.[d]
அவர்களுடைய தலைவர்கள் எல்லாரும் பிடிவாதக்காரர்கள்.
16 எப்பிராயீம் வெட்டப்படுவான்.[e]
அவனுடைய வேர் காய்ந்துபோகும், பழங்கள் எதுவும் தர மாட்டான்.
அவனுக்குப் பிள்ளைகள் பிறந்தாலும், அவனுடைய செல்லப்
பிள்ளைகளைக் கொன்றுவிடுவேன்."
17 அவர்கள் கீழ்ப்படியாமல் போனார்கள்.[f]
அவர்களை என் கடவுள் ஒதுக்கிவிடுவார்.
அவர்கள் மற்ற தேசங்களில் நாடோடிகளாகத் திரிவார்கள்.[g]

10 "இஸ்ரவேலர்கள், தரங்கெட்ட* பழங்களைக் கொடுக்கும்
திராட்சைக் கொடி போன்றவர்கள்.[h]
அவர்களுடைய பழங்கள் பெருகப்பெருக அவர்களுடைய
பலிபீடங்களும் பெருகுகின்றன.[i]
அவர்களுடைய விளைச்சல் கூடக்கூட அவர்களுடைய பூஜைத்
தூண்களின் ஆடம்பரமும் கூடுகிறது.[j]
2 அவர்கள் வெளிவேஷம் போடுகிறார்கள்.*
இப்போது கையும் களவுமாகப் பிடிபடுவார்கள்.
ஒருவர் வந்து அவர்களுடைய பலிபீடங்களை உடைப்பார், பூஜைத்
தூண்களை நொறுக்குவார்.
3 ஆனால் அவர்கள், 'நாம் யெகோவாவுக்குப் பயந்து நடக்கவில்லை,
அதனால் நமக்கு ராஜா இல்லை.[k]
அப்படியே ராஜா இருந்தாலும் நமக்கு என்ன பிரயோஜனம்?'
என்பார்கள்.
4 அவர்கள் வெற்றுப் பேச்சு பேசி, பொய் சத்தியம் செய்து,[l] ஒப்பந்தம்
பண்ணுகிறார்கள்.
வயலின் சால்களில்* முளைக்கும் விஷச்செடிகள்போல்
அவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு வரும்.[m]

10:1 *அல்லது, "படர்ந்து வளர்ந்து." **10:2** *வே.வா., "அவர்களுடைய உள்ளம் போலித்தனமானது." **10:4** *சால்கள் என்பது உழும்போது நிலத்தில் ஏற்படும் பள்ளங்கள்.

அதி. 9
a எசே 28:12
b ஓசி 4:15; ஓசி 12:11; ஆமோ 5:5
c லேவி 26:27, 33; 2ரா 17:18; ஆமோ 5:27
d உபா 29:19, 20
e ஏசா 7:8
f 2ரா 17:14, 15; சக 1:4
g உபா 28:64; ஆமோ 9:9

அதி. 10
h ஏசா 5:3, 4
i ஓசி 8:11; ஓசி 12:11
j ஓசி 8:4
k ஓசி 3:4; ஓசி 13:11
l 2ரா 17:4
m ஆமோ 5:7; ஆமோ 6:12

அதி. 10

a 1ரா 12:28, 29
ஓசி 4:15
ஓசி 8:5
ஆமோ 3:14

b 2ரா 17:3
ஓசி 5:13

c மீ 6:16

d 2ரா 17:4

e ஓசி 4:15

f 1ரா 12:28-30
மீ 1:5

g ஆமோ 7:9

h 2ரா 23:15

i லூ 23:30
வெளி 6:16

j நியா 20:4-6
ஓசி 9:9

k 2ரா 17:6

l உபா 32:2
ஏசா 45:8

m ஏசா 55:6
ஆமோ 5:4

n எரே 4:3, 4

o நீதி 22:8
ஓசி 8:7
கலா 6:7

5 பெத்-ஆவேனிலுள்ள கன்றுக்குட்டி சிலை கைப்பற்றப்பட்டுக் கொண்டுபோகப்படும்.[a]
சமாரியர்கள் அதை நினைத்துப் பயப்படுவார்கள்.
அந்தச் சிலையின் மகிமையைப் பார்த்து சந்தோஷப்பட்ட ஜனங்கள் துக்கப்படுவார்கள்.
பொய் தெய்வ பூசாரிகளும் புலம்புவார்கள்.
6 அசீரியாவின் மகா ராஜாவுக்கு அது பரிசாகக் கொண்டுபோகப்படும்.[b]
எப்பிராயீம் அவமானப்படுத்தப்படுவான்.
ஆலோசனை கேட்டதற்காக இஸ்ரவேல் வெட்கமடைவான்.[c]
7 தண்ணீரில் ஒடித்துப் போடப்பட்ட கிளைபோல் சமாரியா காணாமல் போகும்.
அதன் ராஜாவும் இல்லாமல்போவான்.[d]
8 இஸ்ரவேலர்கள் பெத்-ஆவேனில் கோயில்களைக் கட்டி[e] பாவம் செய்தார்கள்;[f] அவை அழிக்கப்படும்.[g]
அவர்களுடைய பலிபீடங்களில் முட்செடிகள் வளரும்.[h]
ஜனங்கள் மலைகளைப் பார்த்து, 'எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்!' என்பார்கள்.
குன்றுகளைப் பார்த்து, 'எங்களை மூடிக்கொள்ளுங்கள்!' என்பார்கள்.[i]
9 இஸ்ரவேலே, நீ கிபியாவின் காலத்திலிருந்தே பாவம் செய்கிறாய்.[j]
விடாப்பிடியாகப் பாவம் செய்துவருகிறாய்.
கிபியாவில் இருந்த கெட்டவர்கள் போரில் முழுமையாக அழிக்கப்படவில்லை.
10 எனக்கு இஷ்டமான சமயத்தில் அவர்களைத் தண்டிப்பேன்.
அவர்களுக்கு எதிராக மற்ற தேசத்து ஜனங்கள் திரண்டு வருவார்கள்.
இஸ்ரவேல்மீது இரண்டு குற்றங்கள் சுமத்தப்படும்.*
11 நன்றாகப் பழக்கப்பட்டு ஆசையோடு போரடிக்கிற இளம் பசுவைப் போல எப்பிராயீம் இருந்தான்.
அதனால், அவனுடைய அழகான கழுத்தில் நான் நுகத்தடியைச் சுமத்தவில்லை.
ஆனால், இப்போது வேறொருவன் அவனை ஓட்டிக்கொண்டு போக* வைப்பேன்.[k]
யூதா நிலத்தை உழுவான்; யாக்கோபு வேறொருவனுக்காக நிலத்தைச் சமன்படுத்துவான்.
12 யெகோவா உங்களுக்கு நீதியைக் கற்றுக்கொடுக்க வருவார்.[l]
இதுவே அவரைத் தேடுவதற்கான காலம்.[m]
காலம் இருக்கும்போதே நீதியை விதையுங்கள், மாறாத அன்பை அறுவடை செய்யுங்கள்.
பண்படுத்தப்படாத நிலத்தை உழுது பண்படுத்துங்கள்.[n]
13 நீங்கள் அக்கிரமத்தை விதைத்தீர்கள்,
அநீதியை அறுவடை செய்தீர்கள்,[o]

10:10 *அதாவது, "நுகத்தைச் சுமப்பதுபோல் இஸ்ரவேலர்கள் தங்களுடைய தண்டனையைச் சுமப்பார்கள்." **10:11** *வே.வா., "அவன்மேல் நுகத்தைச் சுமத்த."

பொய்யின் விளைச்சலை அனுபவித்தீர்கள்.
ஏனென்றால், உங்களுடைய சொந்த வழியில் போனீர்கள்.
ஏராளமான போர் வீரர்களை நம்பினீர்கள்.
14 உங்களுக்கு எதிராகப் போர்க்குரல் கேட்கும்.
உங்களுடைய மதில் சூழ்ந்த நகரங்களெல்லாம் அழிக்கப்படும்.[a]
பெத்-ஆர்பேலை சல்மான் அழித்தது போல அவை அழிக்கப்படும்.
அப்போது, பிள்ளைகளோடு அம்மாக்களும் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டார்களே.
15 பெத்தேலே, நீ பயங்கரமான அக்கிரமங்களைச் செய்ததால் உனக்கும் அப்படியே நடக்கும்.[b]
பொழுது விடியும்போது இஸ்ரவேலின் ராஜா ஒழியப்போவது உறுதி."[c]

11 "இஸ்ரவேல் சிறுவனாய் இருந்தபோது அவனை நேசித்தேன்.[d]
எகிப்திலிருந்து என் மகனைக் கூட்டிக்கொண்டு வந்தேன்.[e]
2 அவனை அவர்கள்* கூப்பிட்டுக்கொண்டே இருந்தார்கள்.
ஆனால், அவன் அவர்களைவிட்டு விலகிக்கொண்டே போனான்.[f]
பாகால் சிலைகளுக்குப் பலிக்குமேல் பலி செலுத்தினான்.[g]
உருவச் சிலைகளுக்குத் தூபம் காட்டினான்.[h]
3 ஆனால், எப்பிராயீமைக் கைப்பிடித்து நடக்கப் பழக்கியதும்,[i] அவர்களைக் கையில் ஏந்தியதும் நான்தான்.[j]
அவர்களைக் குணமாக்கியது நான்தான், அதை அவர்கள் உணரவில்லை.
4 அன்பெனும் கட்டுகளால் கட்டி, பாசமெனும் கயிறுகளால் அவர்களை இழுத்துக்கொண்டிருந்தேன்.[k]
அவர்களுடைய கழுத்தின் மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப்போட்டேன்.
அவர்களுக்குப் பாசமாக உணவு ஊட்டினேன்.
5 அவர்கள் எகிப்துக்குத் திரும்பிப் போக மாட்டார்கள்; அசீரியாதான் அவர்களை ஆட்சி செய்யும்.[l]
ஏனென்றால், என்னிடம் திரும்பி வர அவர்கள் மறுத்துவிட்டார்கள்.[m]
6 அவர்கள் சதித்திட்டங்களைத் தீட்டியதால், அவர்களுடைய நகரங்களுக்குள் ஒரு வாள் சுழன்று பாயும்.[n]
அவர்களுடைய நகரவாசல்களின் தாழ்ப்பாள்களை நொறுக்கி, அவர்களை வெட்டி வீழ்த்தும்.[o]
7 என் ஜனங்கள் எனக்குத் துரோகம் செய்வதிலேயே குறியாக இருக்கிறார்கள்.[p]
அவர்களை உயர்ந்த இடத்துக்கு* அழைத்தாலும், ஒருவரும் வருவதில்லை.
8 எப்பிராயீமே, உன்னை நான் எப்படிக் கைவிடுவேன்?[q]
இஸ்ரவேலே, உன்னை எப்படி வேறொருவனின் கையில் கொடுப்பேன்?

11:2 *அதாவது, "இஸ்ரவேலுக்குப் போதிப்பதற்காக அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளும் மற்றவர்களும்." 11:7 *அதாவது, "எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்து நிற்கும் வணக்கத்துக்கு."

அதி. 10
a 2ரா 18:9, 10
b ஆமோ 7:9
c 2ரா 18:9, 10

அதி. 11
d உபா 7:8
e யாத் 4:22; மத் 2:14, 15
f ஏசா 30:9-11
g நியா 2:13; நியா 3:7; 1ரா 16:30-32; 1ரா 18:19; 2ரா 17:13, 16; ஓசி 2:13
h 1ரா 12:32, 33; ஓசி 13:1, 2
i உபா 8:2
j உபா 1:31; உபா 33:27; ஏசா 46:3
k ஏசா 63:9
l 2ரா 17:3
m 2ரா 17:13, 14; ஆமோ 4:6
n லேவி 26:31
o ஏசா 31:1
p சங் 78:57, 58; எரே 3:6
q ஓசி 6:4

அத்மாவுக்குச் செய்தது போல உனக்கு எப்படிச் செய்வேன்?
உன்னை எப்படி செபோயீமைப் போலாக்குவேன்?[a]
ஆனாலும், என் மனதை* மாற்றிக்கொண்டேன்.
எனக்குள் கரிசனை பொங்குகிறது.[b]
9 நான் என் கோபத்தைக் கொட்ட மாட்டேன்.
எப்பிராயீமைத் திரும்பவும் அழிக்க மாட்டேன்.[c]
நான் மனிதன் அல்ல, கடவுள்.
நான் உன் நடுவில் இருக்கிற பரிசுத்தமான கடவுள்.
நான் உனக்கு எதிராகச் சீறிக்கொண்டு வர மாட்டேன்.
10 யெகோவாவுக்குப் பின்னால் அவர்கள் நடந்து வருவார்கள்; அவர் சிங்கத்தைப் போலக் கர்ஜிப்பார்.[d]
அவர் கர்ஜிக்கும்போது அவருடைய பிள்ளைகள் மேற்கிலிருந்து நடுக்கத்தோடு வருவார்கள்.[e]
11 அவர்கள் எகிப்திலிருந்து பறவையைப் போல நடுங்கிக்கொண்டு வருவார்கள்.
அசீரியாவிலிருந்து புறாவைப் போலப் பயத்தோடு வருவார்கள்.[f]
அவர்களுடைய வீட்டிலேயே அவர்களைக் குடியிருக்க வைப்பேன்”[g] என்று யெகோவா சொல்கிறார்.
12 “எப்பிராயீம் என்னிடம் பொய்களையே பேசுகிறான்.
நான் எங்கே திரும்பினாலும் இஸ்ரவேலின் ஏமாற்று வேலைகளைத்தான் பார்க்கிறேன்.[h]
ஆனால், யூதா இன்னமும் கடவுளோடு நடக்கிறான்.
மகா பரிசுத்தமான கடவுளுக்கு விசுவாசமாக இருக்கிறான்.”[i]

12

“எப்பிராயீம் காற்றை நம்புகிறான்.
கிழக்கிலிருந்து அடிக்கும் காற்றைப் பிடிக்க நாள் முழுக்க ஓடுகிறான்.
அவனுடைய பொய்யும் வன்முறையும் பெருகிவிட்டன.
அவன் அசீரியாவோடு ஒப்பந்தம் செய்கிறான்,[j] எகிப்துக்கு எண்ணெயைக் கொண்டுபோகிறான்.[k]
2 யூதாவோடு யெகோவா வழக்காடுவார்.[l]
கெட்ட வழியில் போனதற்காக யாக்கோபைத் தண்டிப்பார்.
கெட்ட காரியங்கள் செய்ததற்காக அவனைப் பழிவாங்குவார்.[m]
3 தாயின் வயிற்றில் அவன் தன்னுடைய சகோதரனின் குதிங்காலைப் பிடித்தான்.[n]
தன்னுடைய பலத்தால் கடவுளோடு போராடினான்.[o]
4 ஒரு தேவதூதனோடு தொடர்ந்து போராடி ஜெயித்தான்.
கருணை காட்டும்படி அழுது கெஞ்சினான்.”[p]
பெத்தேலில் கடவுள் அவனைப் பார்த்தார், அங்கே அவர் நம்மோடு பேசினார்.[q]
5 அவர் பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா.[r]

11:8 * நே.மொ., “இதயத்தை.”

அதி. 11
a ஆதி 10:19; உபா 29:22, 23
b உபா 32:36; எரே 31:20
c எரே 30:11
d யோவே 3:16
e சக 8:7
f ஏசா 11:11, 12; ஏசா 60:8, 9; சக 10:10
g எரே 23:6; எசே 28:25, 26; எசே 37:21; ஆமோ 9:14
h மீ 6:12
i 2ரா 18:1, 6; 2நா 29:1, 2; ஓசி 4:15

அதி. 12
j 2ரா 15:19; ஓசி 8:9
k 2ரா 17:4
l 2ரா 17:19; எரே 2:35; ஓசி 4:1; மீ 6:2
m ஏசா 3:11
n ஆதி 25:26
o ஆதி 32:28
p ஆதி 32:24-26
q ஆதி 28:13, 19
r ஆதி 28:16; ஆதி 32:30

யெகோவா என்ற பெயரிலேயே அவரை எல்லாரும் நினைத்துப் பார்ப்பார்கள்.[a]
6 “அதனால் உங்கள் கடவுளிடம் திரும்புங்கள்.[b]
விசுவாசமாக இருங்கள்,* நியாயத்தைக் கடைப்பிடியுங்கள்.[c]
எப்போதும் உங்கள் கடவுளை நம்புங்கள்.
7 வியாபாரி கள்ளத் தராசு வைத்திருக்கிறான்.
அவன் ஏமாற்றவே விரும்புகிறான்.[d]
8 எப்பிராயீம், ‘நான் பணக்காரனாகிவிட்டேன்;[e]
சொத்துகளைச் சேர்த்துவிட்டேன்.[f]
என் உழைப்பில் எந்தக் குற்றமோ பாவமோ கண்டுபிடிக்க முடியாது’ என்று சொல்லிக்கொண்டே இருக்கிறான்.
9 நீங்கள் எகிப்தில் இருந்த நாள்முதல் யெகோவாவாகிய நான்தான் உங்கள் கடவுள்.[g]
குறிக்கப்பட்ட* காலத்தில் உங்களைக் கூடாரங்களில் தங்க வைத்தேன்.
திரும்பவும் கூடாரங்களில் தங்க வைப்பேன்.
10 நான் தீர்க்கதரிசிகளிடம் பேசினேன்.[h]
நிறைய தரிசனங்களை அவர்களுக்குக் காட்டினேன்.
அவர்கள் மூலம் உவமைகளால் பேசினேன்.
11 கீலேயாத்தில் பொய்யும் புரட்டுமே* மலிந்து கிடக்கிறது.[i]
கில்காலில் ஜனங்கள் காளைகளைப் பலி கொடுத்தார்கள்.[j]
வயலின் சால்களில்# கிடக்கும் கற்கள்போல் அவர்களுடைய பலிபீடங்கள் இருக்கின்றன.[k]
12 யாக்கோபு அராமுக்கு* ஓடிப்போனான்.[l]
ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்ய இஸ்ரவேல்[m] அங்கே வேலை செய்தான்.[n]
அவளுக்காக ஆடுகளை மேய்த்தான்.[o]
13 ஒரு தீர்க்கதரிசி மூலம் இஸ்ரவேலை எகிப்திலிருந்து யெகோவா கூட்டிக்கொண்டு வந்தார்.[p]
அவர் மூலம் அவனைப் பாதுகாத்தார்.[q]
14 எப்பிராயீம் கடவுளுக்குக் கடும் கோபம் மூட்டினான்.[r]
அவன்மேல் கொலைப்பழி* இருக்கிறது.
அவனுடைய எஜமானின் பெயருக்கு அவன் களங்கம் ஏற்படுத்தியதால் அவர் பழிவாங்குவார்.”[s]

13

“எப்பிராயீம் பேசியபோது, ஜனங்கள் நடுங்கினார்கள்.
இஸ்ரவேலில் அவன் முக்கியமானவனாக இருந்தான்.[t]
ஆனால், பாகாலை வணங்கியதால் இறந்துபோனான்.[u]
2 எப்பிராயீமின் குடிமக்கள் பாவத்துக்குமேல் பாவம் செய்கிறார்கள்.
வெள்ளிச் சிலைகளை உண்டாக்குகிறார்கள்;[v] பார்த்துப் பார்த்து அவற்றைச் செதுக்குகிறார்கள்.

12:6 *வே.வா., “மாறாத அன்பைக் காட்டுங்கள்.” **12:9** *அல்லது, “பண்டிகை.” **12:11** *வே.வா., “மாயமந்திரமுமே.” #சால்கள் என்பது உழும்போது நிலத்தில் ஏற்படும் பள்ளங்கள். **12:12** *அதாவது, “சீரியாவுக்கு.” **12:14** *வே.வா., “இரத்தப்பழி.”

அதி. 12
a யாத் 3:15
b ஏசா 31:6 ஓசி 14:1 யோவே 2:12, 13
c உபா 16:20 மீ 6:8
d ஆமோ 8:5, 6 மீ 2:1, 2
e வெளி 3:17
f உபா 8:17-19
g யாத் 20:2 ஓசி 13:4
h 1ரா 17:1 2ரா 17:13 ஆமோ 7:14, 15
i ஓசி 6:8
j ஓசி 9:15 ஆமோ 4:4
k 2ரா 17:9, 10 ஓசி 8:11 ஓசி 10:1
l ஆதி 28:5 உபா 26:5
m ஆதி 32:28
n ஆதி 29:18
o ஆதி 31:38
p யாத் 12:50, 51 சங் 77:20
q யோசு 24:17 1சா 12:8
r 2ரா 17:9-11 எசே 23:4, 5
s உபா 28:37

அதி. 13
t யோசு 17:17
u 2ரா 17:16 ஓசி 11:2
v ஓசி 2:8

அவை வெறும் கைத்தொழிலாளிகளின் வேலைப்பாடுகள்.
‘பலி கொடுக்கிறவர்களே, கன்றுக்குட்டிகளை முத்தமிடுங்கள்’[a]
என்று சொல்கிறார்கள்.
3 அதனால், அவர்கள் காலைநேர மேகங்களைப் போலவும்,
சீக்கிரத்தில் மறைந்துபோகிற பனித்துளிகளைப் போலவும்,
களத்துமேட்டிலிருந்து சுழல்காற்றில் அடித்துச் செல்லப்படும் பதரைப்
போலவும்,
புகைக்கூண்டிலிருந்து வெளியேறும் புகையைப் போலவும்
ஆகிவிடுவார்கள்.
4 நீங்கள் எகிப்தில் இருந்த காலத்திலிருந்து யெகோவாவாகிய நான்தான்
உங்கள் கடவுள்.[b]
என்னைத் தவிர வேறு கடவுளை உங்களுக்குத் தெரியாது.
என்னைத் தவிர வேறு மீட்பர் இல்லை.[c]
5 வறண்ட வனாந்தரத்திலே உங்களைப் பராமரித்தேன்.[d]
6 நீங்கள் மேய்ச்சல் நிலங்களில் மேய்ந்து திருப்தியானீர்கள்.[e]
திருப்தியானதும் உங்கள் இதயத்தில் கர்வம் வந்துவிட்டது.
அதனால் என்னை மறந்துபோனீர்கள்.[f]
7 நான் உங்களுக்கு இளம் சிங்கம்போல் ஆவேன்.[g]
வழியில் பதுங்கியிருக்கும் சிறுத்தைபோல் இருப்பேன்.
8 குட்டிகளைப் பறிகொடுத்த கரடிபோல் பாய்ந்து வந்து,
உங்கள் நெஞ்சைக் கிழிப்பேன்.
சிங்கத்தைப் போல உங்களை விழுங்குவேன்.
ஒரு காட்டு மிருகம் உங்களைக் கடித்துக் குதறும்.
9 இஸ்ரவேலே, அது உன்னை அழிக்கும்.
ஏனென்றால், உனக்குத் துணையாய் இருந்தவரைவிட்டு விலகினாய்.
10 உன்னுடைய எல்லா நகரங்களையும் காப்பாற்றுகிற ராஜா எங்கே?[h]
உன் தலைவர்கள்* எங்கே?
‘எனக்கு ராஜா வேண்டும், தலைவர்கள் வேண்டும்’ என்று கேட்டாயே.[i]
11 கோபத்தோடு உனக்கு ஒரு ராஜாவைக் கொடுத்தேன்.[j]
இப்போது, கடும் கோபத்தோடு அவனை நீக்கிவிடுவேன்.[k]
12 எப்பிராயீமின் குற்றம் சுருட்டி* வைக்கப்பட்டிருக்கிறது.
அவனுடைய பாவம் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.
13 அவன் பிரசவ வேதனைப்படுவான்.
அவன் அறிவில்லாத பிள்ளை.
பிறக்க வேண்டிய நேரம் வந்தும், அவன் வெளியே வர
விரும்புவதில்லை.
14 கல்லறையின் பிடியிலிருந்து அவனை விடுவிப்பேன்.
சாவிலிருந்து அவனை மீட்பேன்.[l]
மரணமே, உன் கொடுக்குகள் எங்கே?[m]
கல்லறையே, உன் நாச வேலைகள் எங்கே?[n]
ஆனாலும், நான் கரிசனை காட்ட மாட்டேன்.

13:10 * நே.மொ., “நீதிபதிகள்.” 13:12 * வே.வா., “சேமித்து.”

அதி. 13
a 1ரா 12:26, 28; 1ரா 19:18
b யாத் 20:2; ஓசி 12:9
c ஏசா 43:11; ஏசா 45:21, 22
d உபா 2:7; உபா 32:9, 10
e நெ 9:25
f உபா 6:10-12; உபா 8:12-14; உபா 32:15, 18; ஏசா 17:10
g ஓசி 5:14
h 1சா 8:19, 20
i 1சா 8:4, 5
j 1சா 8:7; 1சா 12:13
k 1சா 12:25; 2ரா 17:4; எரே 52:11
l ஏசா 25:8; ஏசா 26:19
m 1கொ 15:55
n வெளி 20:13, 14

15 நாணலின் நடுவில் அவன் செழித்து வளருவான்.
ஆனாலும், கிழக்கிலிருந்து யெகோவா காற்றை அனுப்புவார்.
அது வனாந்தரத்திலிருந்து வரும், அவனுடைய கிணறுகளையும்
நீரூற்றுகளையும் வற்றிப்போகச் செய்யும்.
அவன் சேர்த்து வைத்திருக்கிற சொத்துகளெல்லாம் சூறையாடப்படும்.[a]
16 கடவுளுக்கு அடங்கி நடக்காததால்[b] சமாரியாமேல் குற்றம்
சுமத்தப்படும்.[c]
ஜனங்கள் பட்டயத்தால் சாவார்கள்.[d]
பிள்ளைகள் கொடூரமாக அடித்துக் கொல்லப்படுவார்கள்.
கர்ப்பிணிகளின் வயிறு கிழிக்கப்படும்."

14 "இஸ்ரவேலே, உன் கடவுளாகிய யெகோவாவிடம் திரும்பி வா.[e]
நீ பாவத்தில் விழுந்தாயே.
2 யெகோவாவிடம் திரும்பி வா. அவரிடம்,
'எங்களுடைய பாவங்களை மன்னியுங்கள்,[f] எங்களிடமிருந்து
நல்லதை ஏற்றுக்கொள்ளுங்கள்.
அப்போது, இளம் காளைகளைச் செலுத்துவதுபோல் எங்கள்
உதடுகளால் உங்களுக்குப் புகழைச் செலுத்துவோம்.[g]
3 அசீரியா எங்களைக் காப்பாற்றாது.[h]
இனி நாங்கள் குதிரைகளில் ஏற மாட்டோம்.[i]
நாங்கள் உண்டாக்கியவற்றைப் பார்த்து, "எங்கள் கடவுளே!" என்று
சொல்ல மாட்டோம்.
ஏனென்றால், அப்பா இல்லாத பிள்ளைக்கு இரக்கம் காட்டுபவர்
நீங்கள்தான்'[j] என்று சொல்.
4 அவனை நான் குணமாக்குவேன்; அவன் இனி துரோகம் செய்ய
மாட்டான்.[k]
அவனை மனப்பூர்வமாக நேசிப்பேன்.[l]
அவன்மேல் கோபப்பட மாட்டேன்.[m]
5 நான் இஸ்ரவேலுக்குப் பனித்துளிபோல் இருப்பேன்.
அவன் லில்லி பூவைப் போல் பூத்துக் குலுங்குவான்.
லீபனோனின் மரங்களைப் போல் வேரூன்றி நிற்பான்.
6 அவனுடைய கிளைகள் விரிந்திருக்கும்.
அவன் ஒலிவ மரத்தைப் போல் கம்பீரமாக நிற்பான்.
லீபனோனைப் போல் மணம் வீசுவான்.
7 அவன் மறுபடியும் என் நிழலில் தங்குவான்.
தானியத்தைப் பயிர் செய்வான், திராட்சைக் கொடிபோல்
அரும்பு விடுவான்.[n]
லீபனோனின் திராட்சமதுபோல் அவனுடைய புகழ் பரவும்.
8 'எனக்கும் உருவச் சிலைகளுக்கும் இனி என்ன சம்பந்தம்?'
என்று எப்பிராயீம் சொல்வான்.[o]
நான் அவனுடைய ஜெபங்களுக்குப் பதில் கொடுப்பேன், அவனைப்
பாதுகாப்பேன்.[p]

அதி. 13
a 2ரா 17:20
b எரே 20:21
c 2ரா 17:18 ஆமோ 3: 9, 10
d ஏசா 7:8

அதி. 14
e 2நா 30:6 ஏசா 55:6, 7 ஓசி 12:6 யோவே 2: 12, 13
f மீ 7:18
g எபி 13:15
h ஓசி 5:13
i ஏசா 31:1
j உபா 10:17, 18
k சங் 103:3 ஏசா 57:18
l செப் 3:17
m ஏசா 12:1
n சக 8:12
o ஓசி 14:3
p எரே 31:18

அதி. 14
a உபா 32:4

பச்சைப்பசேலென்று நிற்கும் ஆபால் மரத்தைப் போல் இருப்பேன்.
என்னிடமிருந்து அவன் பழங்களைப் பறிப்பான்."
9 ஞானமுள்ளவன் யார்? அவன் இந்த விஷயங்களைப் புரிந்துகொள்ளட்டும்.
விவேகமுள்ளவன் யார்? அவன் இவற்றைத் தெரிந்துகொள்ளட்டும்.
ஏனென்றால், யெகோவாவின் வழிகள் நேர்மையானவை.[a]
அந்த வழிகளில் நீதிமான்கள் நடப்பார்கள்,
ஆனால், குற்றவாளிகள் தடுக்கி விழுவார்கள்.

யோவேல்

முக்கியக் குறிப்புகள்

1 வெட்டுக்கிளிகள் ஏற்படுத்தும் பயங்கரமான நாசம் (1-14)
‘யெகோவாவின் நாள் சீக்கிரத்தில் வரப்போகிறது' (15-20)
தீர்க்கதரிசி யெகோவாவிடம் வேண்டுகிறார் (19, 20)

2 யெகோவாவின் நாளும் அவருடைய மாபெரும் படையும் (1-11)
யெகோவாவிடம் திரும்பிவர அழைப்பு (12-17)
‘உங்கள் உள்ளத்தைக் கிழியுங்கள்' (13)
யெகோவா தன் ஜனங்களுக்குப் பதிலளிக்கிறார் (18-32)
"என் சக்தியைப் பொழிவேன்" (28)
வானத்திலும் பூமியிலும் அதிசயங்கள் (30)
யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்கிறவர்கள் மீட்புப் பெறுவார்கள் (32)

3 எல்லா தேசத்து ஜனங்களுக்கும் யெகோவா கொடுக்கிற தண்டனைத் தீர்ப்பு (1-17)
யோசபாத்தின் பள்ளத்தாக்கு (2, 12)
தீர்ப்பு கொடுக்கப்படும் பள்ளத்தாக்கு (14)
இஸ்ரவேல் ஜனங்களுக்கு யெகோவா கோட்டைபோல் இருக்கிறார் (16)
யெகோவா தன் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார் (18-21)

அதி. 1
a யோவே 2:2

1 பெத்துயேலின் மகனாகிய யோவேல்* என்பவருக்கு யெகோவாவிடமிருந்து கிடைத்த செய்தி இதுதான்:
2 "பெரியோர்களே,* இதைக் கேளுங்கள்!
தேசத்து ஜனங்களே,# கவனியுங்கள்.
உங்கள் வாழ்நாளில் இப்படியொரு காரியம் நடந்திருக்குமா?
உங்கள் முன்னோர்கள் காலத்திலாவது நடந்திருக்குமா?[a]
3 உங்கள் பிள்ளைகளிடம் இதைப் பற்றிச் சொல்லுங்கள்.
அவர்கள் அவர்களுடைய பிள்ளைகளிடம் சொல்லட்டும்.
அந்தப் பிள்ளைகள் அடுத்த தலைமுறையிடம் சொல்லட்டும்.

1:1 * அர்த்தம், "யெகோவாவே கடவுள்." **1:2** * வே.வா., "மூப்பர்களே." # வே.வா., "பூமியில் வாழ்கிறவர்களே."

4 முதல் வகையான வெட்டுக்கிளிகள்* விட்டுவைத்ததை இரண்டாவது வகையான# வெட்டுக்கிளிகள் தின்றன.[a]
இரண்டாவது வகையான வெட்டுக்கிளிகள் விட்டுவைத்ததை மூன்றாவது வகையான△ வெட்டுக்கிளிகள் தின்றன.
மூன்றாவது வகையான வெட்டுக்கிளிகள் விட்டுவைத்ததை நான்காவது வகையான⊠ வெட்டுக்கிளிகள் தின்றன.[b]
5 குடிகாரர்களே,[c] எழுந்து அழுங்கள்!
திராட்சமது குடிப்பவர்களே, ஒப்பாரி வையுங்கள்!
இனி உங்களுக்குத் தித்திப்பான திராட்சமது கிடைக்காது.[d]
6 பலம்படைத்த வெட்டுக்கிளிக் கூட்டம் என்னுடைய தேசத்துக்கு வந்தது.[e]
அதன் பற்கள் சிங்கத்தின் பற்கள்,[f] அதன் தாடைகள் சிங்கத்தின் தாடைகள்.
7 என்னுடைய திராட்சைக் கொடியை அது நாசமாக்கியது, அத்தி மரத்தை மொட்டையாக்கியது.
அவற்றின் பட்டைகளை மொத்தமாக உரித்துப் போட்டது.
கிளைகளையும் விட்டுவைக்கவில்லை.
8 மணமகனை இழந்து தவிக்கும் கன்னிப்பெண் போல நீங்கள் புலம்புங்கள்.
அவள் துக்கத் துணி* போட்டுக்கொண்டு கதறுவது போல நீங்கள் கதறுங்கள்.
9 யாருமே யெகோவாவின் ஆலயத்துக்கு உணவையும் திராட்சமதுவையும் காணிக்கையாகக்[g] கொண்டுவருவதில்லை.
யெகோவாவுக்குச் சேவை செய்யும் குருமார்கள் அழுது புலம்புகிறார்கள்.
10 வயல்வெளிகள் பாழாய்க் கிடக்கின்றன, நிலங்கள் சோகத்தில் வாடுகின்றன.[h]
தானியம் நாசமாக்கப்பட்டது, புதிய திராட்சமது தீர்ந்துவிட்டது, எண்ணெயும் காலியாகிவிட்டது.[i]
11 விவசாயிகள் குழம்பித் தவிக்கிறார்கள், திராட்சைத் தோட்டக்காரர்கள் ஓலமிட்டு அழுகிறார்கள்.
கோதுமையும் பார்லியும் எங்குமே இல்லை.
வயலின் விளைச்சல் எல்லாமே அழிந்துபோனது.
12 திராட்சைக் கொடி வாடிப்போய்விட்டது.
அத்தி மரம் பட்டுப்போய்விட்டது.
மாதுளை, ஆப்பிள், பேரீச்ச மரங்களும் மற்ற எல்லா மரங்களும் காய்ந்துவிட்டன.[j]
சந்தோஷத்தில் துள்ளிய ஜனங்கள் அவமானப்பட்டு நிற்கிறார்கள்.
13 குருமார்களே! துக்கத் துணியைப் போட்டுக்கொள்ளுங்கள், நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுங்கள்.

1:4 *நே.மொ., “கபளீகரம் செய்யும் வெட்டுக்கிளிகள்.” #நே.மொ., “கூட்டம் கூட்டமான.” △நே.மொ., “சிறகில்லாத.” ⊠நே.மொ., “அகோரப் பசிகொண்ட.” **1:8** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 1
a யாத் 10:14, 15
b யோவே 2:25
c ஏசா 28:1 ஆமோ 6:6
d உபா 28:39
e யோவே 2:2
f வெளி 9:7, 8
g யாத் 29:40 லேவி 2:1
h லேவி 26:20
i உபா 28: 39, 40
j லேவி 26:20

பலிபீடத்தில் சேவை செய்கிறவர்களே![a] ஒப்பாரி வையுங்கள்.
என் கடவுளின் ஊழியர்களே! ராத்திரி முழுவதும் துக்கத் துணியை உடுத்தியிருங்கள்.
ஏனென்றால், யாருமே கடவுளுடைய ஆலயத்துக்கு உணவையும் திராட்சமதுவையும் காணிக்கையாகக்[b] கொண்டுவருவதில்லை.
14 விரத நாளை அறிவியுங்கள், விசேஷ மாநாட்டுக்கு அழைப்பு கொடுங்கள்.[c]
பெரியோர்களை வரச் சொல்லுங்கள், தேசத்து ஜனங்களையும் கூப்பிடுங்கள்.
அவர்கள் யெகோவாவின் ஆலயத்துக்கு வரட்டும்,[d] உதவி கேட்டு யெகோவாவிடம் கெஞ்சட்டும்.
15 ஐயோ ஆபத்து! யெகோவாவின் நாள் வரப்போகிறது.
அந்த நாள் சீக்கிரத்தில் வரப்போகிறது.[e]
சர்வவல்லமையுள்ளவர் அந்த நாளில் அழிவைக் கொண்டுவரப்போகிறார்.
16 நம்முடைய கண் முன்னாலிருந்து உணவும்,
நம் கடவுளுடைய ஆலயத்திலிருந்து சந்தோஷமும் காணாமல் போய்விட்டதுதானே?
17 மண்கட்டிகளுக்குக் கீழே* விதைகள்# காய்ந்து கிடக்கின்றன.
சேமிப்புக் கிடங்குகள் காலியாகக் கிடக்கின்றன.
தானியம் இல்லாததால் களஞ்சியங்கள் இடிக்கப்பட்டுக் கிடக்கின்றன.
18 வீட்டு விலங்குகள் முனகுகின்றன.
மேய்ச்சல் நிலம் இல்லாததால் மாடுகள் குழப்பத்தில் திரிகின்றன.
ஆட்டு மந்தைகளும் தண்டனை அனுபவிக்கின்றன.
19 யெகோவாவே, உங்களிடம் நான் வேண்டுகிறேன்.[f]
வனாந்தரத்தின் மேய்ச்சல் நிலங்கள் நெருப்புக்கு இரையாகிவிட்டன.
மரங்களெல்லாம் தீயில் தீய்ந்துவிட்டன.
20 நீரோடைகள் வற்றிப்போய்விட்டன.
வனாந்தரத்தின் மேய்ச்சல் நிலங்கள் நெருப்புக்கு இரையாகிவிட்டன.
அதனால், காட்டு விலங்குகள்கூட உங்கள் உதவிக்காக ஏங்குகின்றன.”

2 “சீயோனில் ஊதுகொம்பை ஊதுங்கள்![g]
என் பரிசுத்த மலையில் போர் முழக்கம் செய்யுங்கள்.
தேசத்து ஜனங்கள்* எல்லாரும் நடுங்கட்டும்.
யெகோவாவின் நாள் வருகிறது![h] அது நெருங்கிவிட்டது!
2 அந்த நாள் வெளிச்சமே இல்லாத நாள்.[i]
கார்மேகமும் கும்மிருட்டும் சூழ்ந்துகொள்ளும் நாள்.[j]
மலைமேல் படரும் விடியற்கால வெளிச்சத்தைப் போல மங்கலாக இருக்கும் நாள்.
பலம்படைத்த வெட்டுக்கிளிகளின்* கூட்டம் வருகிறது.[k]

அதி. 1
a யாத் 30:19, 20
b யாத் 29:40
லேவி 2:1
c யோவே 2:15
d 2நா 20:3, 13
e யோவே 2:1
செப் 1:7, 14
செப் 2:2
2பே 3:10
வெளி 6: 16, 17
f மீ 7:7
ஆப 3:18

அதி. 2
g எசே 33:2, 3
ஆமோ 3:6
h செப் 1:14, 16
மல் 4:1
i ஆமோ 5: 18, 20
j செப் 1:15
k யோவே 1:6

1:17 *வே.வா., “மண்வாரிகளில் மண்ணை வாரிப் பார்க்கும்போது.” #அல்லது, “உலர்ந்த அத்திப்பழங்கள்.” **2:1** *வே.வா., “பூமியில் வாழ்கிறவர்கள்.” **2:2** *நே.மொ., “ஒரு ஜனத்தின்.”

அதைப் போன்ற ஒரு கூட்டம் இதற்குமுன் வந்ததில்லை,
இனிமேலும் வரப்போவதில்லை.
எத்தனை தலைமுறை வந்தாலும் வரப்போவதில்லை.
3 அதன் முன்னால் இருப்பதையெல்லாம் நெருப்பு பொசுக்கும்.
அதன் பின்னால் இருப்பதையெல்லாம் தீ ஜுவாலை எரிக்கும்.[a]
அது வருவதற்குமுன் தேசமெல்லாம் ஏதேன் தோட்டம்[b] போல
இருக்கும்.
வந்த பின்போ பொட்டல் காடாக மாறிவிடும்.
எதுவுமே தப்பாது.
4 அவை பார்ப்பதற்குக் குதிரைகள்போல் இருக்கும்.
போர்க்குதிரைகள்போல் ஓடும்.[c]
5 அவை மலைகள்மேல் துள்ளிவருகிற சத்தம் ரதங்களின் சத்தம்
போலவும்,[d]
வைக்கோல் பற்றியெரிகிற சத்தம் போலவும்,
போருக்கு அணிவகுத்துச் செல்கிற வீரர்களின் சத்தம் போலவும்
இருக்கும்.[e]
6 அவற்றால் ஜனங்கள் கதிகலங்கிப்போவார்கள்.
எல்லாருடைய முகமும் வெளுத்துப்போகும்.
7 அவை படைவீரர்கள் போலப் பாயும்.
ராணுவ வீரர்கள் போல மதிலைத் தாண்டும்.
ஒவ்வொன்றும் அதனதன் வரிசையில் போகும்.
பாதை மாறாமல் போகும்.
8 ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளாமல் போகும்.
ஒவ்வொன்றும் முன்னேறிக்கொண்டே போகும்.
அவற்றில் சில, ஆயுதங்களுக்குப் பலியாகும்.
ஆனாலும், மற்றவை தளராமல் செல்லும்.
9 அவை நகரத்துக்குள் பாயும், மதில்மேல் ஓடும்.
வீடுகள்மேல் ஏறும், திருடனைப் போல ஜன்னல்கள் வழியாக
நுழையும்.
10 அவற்றைப் பார்த்து தேசம் நடுங்கும், வானம் அதிரும்,
சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும்,[f]
நட்சத்திரங்கள் ஒளி இழந்துவிடும்.
11 யெகோவாவின் படை மாபெரும் படை,[g] அதன் முன்னால் அவர்
முழங்குவார்.[h]
அவர் சொன்னதை நிறைவேற்றுகிறவர் பலம்படைத்தவர்.
யெகோவாவின் மகா நாள் படுபயங்கரமானது.[i]
யாரால் அதைத் தாங்கிக்கொள்ள முடியும்?”[j]
12 யெகோவா இப்படிச் சொல்கிறார்: “இப்போதாவது முழு இதயத்தோடு
என்னிடம் திரும்பி வாருங்கள்,[k]
விரதமிருங்கள்,[l] கதறி அழுங்கள்.
13 உங்கள் உடையைக் கிழிக்காமல்[m] உள்ளத்தைக் கிழியுங்கள்.[n]
உங்கள் கடவுளாகிய யெகோவாவிடம் திரும்புங்கள்.

அதி. 2
a யோவே 1:19
b ஆதி 2:8
c வெளி 9:7
d வெளி 9:9
e நீதி 30:27
f யோவே 2:31 மத் 24:29 லூ 21:25 வெளி 9:2
g யோவே 2:2
h யோவே 2:25
i எரே 30:7 ஆமோ 5:18 செப் 1:15
j வெளி 6: 16, 17
k எரே 4:1 ஓசி 12:6 ஓசி 14:1, 2
l 1சா 7:6 2நா 20:3
m 2சா 1:11, 12
n 2ரா 22:18, 19 சங் 51:17 ஏசா 57:15

அதி. 2
a ஏசா 48:9
b யாத் 34:6 எண் 14:18 நெ 9:17 சங் 106:44, 45 மீ 7:18, 19
c 2நா 30:8, 9 எரே 18:7, 8 செப் 2:2, 3
d யோவே 1:14
e யாத் 19:10
f உபா 31:12 2நா 20:3, 13
g 2நா 8:12
h உபா 32:26, 27 சங் 79:9, 10 மீ 7:10
i உபா 32:36 ஏசா 60:10 புல 3:22 ஓசி 11:8
j ஏசா 62:8, 9 ஆமோ 9:13 மல் 3:10
k எசே 34:29 எசே 36:15

அப்போது, அவர் தன்னுடைய முடிவை மாற்றிக்கொண்டு உங்களைத் தண்டிக்காமல் விட்டுவிடுவார்.*
ஏனென்றால், அவர் கரிசனையும்# இரக்கமும் நிறைந்தவர், சீக்கிரத்தில் கோபப்படாதவர்,[a] மாறாத அன்பை அளவில்லாமல் காட்டுபவர்.[b]
14 ஒருவேளை அவர் தன்னுடைய மனதை மாற்றிக்கொண்டு,*[c]
உங்களுக்கு ஆசீர்வாதங்களைத் தரலாம்.
பின்பு, உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நீங்கள் உணவையும் திராட்சமதுவையும் காணிக்கையாகக் கொண்டுவரலாம்.
15 சீயோனில் ஊதுகொம்பை ஊதுங்கள்!
விரத நாளை அறிவியுங்கள், விசேஷ மாநாட்டுக்கு[d] அழைப்பு கொடுங்கள்.
16 ஜனங்களை ஒன்றுகூட்டுங்கள்; சபையைப் புனிதப்படுத்துங்கள்.[e]
பெரியோர்களை அழையுங்கள்; பிள்ளைகளையும் பால் குடிக்கிற குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு வாருங்கள்.[f]
மணமகன் உள்ளறையிலிருந்து புறப்பட்டு வரட்டும், மணமகளும் தன் அறையிலிருந்து வெளியே வரட்டும்.
17 யெகோவாவின் ஊழியர்களான குருமார்கள், ஆலய வாசலுக்கும் பலிபீடத்துக்கும் நடுவில் நிற்கட்டும்.[g]
அழுதுகொண்டே இப்படிச் சொல்லட்டும்:
'யெகோவாவே, உங்கள் ஜனங்கள்மேல் தயவுசெய்து இரக்கம் காட்டுங்கள்.
அவர்கள் உங்களுடைய சொத்து, மற்றவர்கள் பார்த்து சிரிக்குமளவுக்கு விட்டுவிடாதீர்கள்.
மற்ற தேசங்கள் அவர்களை அடக்கி ஆள அனுமதிக்காதீர்கள்.
"அவர்களுடைய கடவுள் எங்கே போய்விட்டார்?"[h] என்று யாரும் கேட்டுவிடக் கூடாதே.'
18 யெகோவா அவருடைய தேசத்துக்கு உதவி செய்ய வைராக்கியமாக இருப்பார்.
அவருடைய ஜனங்கள்மேல் கரிசனை காட்டுவார்.[i]
19 யெகோவா அவருடைய ஜனங்களிடம் இப்படிச் சொல்வார்:
'நான் தானியத்தையும் புதிய திராட்சமதுவையும் எண்ணெயையும் தருவேன்.
அதைச் சாப்பிட்டுத் திருப்தியாக இருப்பீர்கள்.[j]
மற்றவர்கள் உங்களைப் பழித்துப் பேசுவதற்கு இனி நான் விடமாட்டேன்.[k]
20 வடதிசைப் படையை உங்களைவிட்டுத் தூரமாக விரட்டியடிப்பேன்.
வறண்ட வனாந்தரத்துக்கு அதைத் துரத்துவேன்.
அதன் முன்னணியைக் கிழக்குக் கடல்* பக்கமாகத் துரத்துவேன்.
அதன் பின்னணியை மேற்குக் கடல்# பக்கமாகத் துரத்துவேன்.

2:13 * வே.வா., "உங்களுக்குத் தண்டனை கொடுக்க நினைத்ததைக் குறித்து மனம் வருந்துவார்." # வே.வா., "கனிவும்." **2:14** * வே.வா., "அவர் மனம் வருந்தி." **2:20** * அதாவது, "சவக் கடல்." # அதாவது, "மத்தியதரைக் கடல்."

அதனிடமிருந்து கெட்ட வாடை வீசும்.
துர்நாற்றம் வீசிக்கொண்டே இருக்கும்.[a]
ஏனென்றால், கடவுள் பெரிய காரியங்களைச் செய்வார்.'
21 தேசமே, பயப்படாதே!
யெகோவா பெரிய காரியங்களைச் செய்யப்போவதால் சந்தோஷப்படு.
22 காட்டு மிருகங்களே, கவலைப்பட வேண்டாம்!
வனாந்தரத்தின் மேய்ச்சல் நிலங்கள் பச்சைப்பசேலென்று மாறும்.[b]
மரங்கள் காய்த்துக் குலுங்கும்.[c]
அத்தி மரமும் திராட்சைக் கொடியும் அமோக விளைச்சல் தரும்.[d]
23 சீயோன் ஜனங்களே, சந்தோஷப்படுங்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவாவை நினைத்து ஆனந்தப்படுங்கள்.[e]
அவர் பயிர்களுக்குத் தேவையான முதல் பருவ மழையைத் தருவார்.
நன்றாக மழை பெய்யும்படி செய்வார்.
முன்பு போலவே முதல் பருவ மழையையும் கடைசி பருவ மழையையும் தருவார்.[f]
24 களத்துமேடுகளில் தானியம் நிரம்பி வழியும்.
ஆலைகளில் புதிய திராட்சமதுவும் எண்ணெயும் வழிந்தோடும்.[g]
25 முன்பு என்னுடைய பெரிய வெட்டுக்கிளிப் படையை அனுப்பினேன்.[h]
நான்கு வகையான வெட்டுக்கிளிகள்* வந்து எல்லாவற்றையும் தின்றுதீர்த்தன.
அத்தனை வருஷங்களாக ஏற்பட்ட நஷ்டத்தை நான் ஈடுகட்டுவேன்.
26 நீங்கள் திருப்தியாகச் சாப்பிடுவீர்கள்.[i]
உங்களுக்காக அற்புதங்கள் செய்த உங்கள் கடவுளாகிய யெகோவாவின் பெயரைப் புகழ்வீர்கள்.[j]
என்னுடைய ஜனங்கள் இனி ஒருபோதும் அவமானப்படுத்தப்பட மாட்டார்கள்.[k]
27 நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறேன்[l] என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.
நான்தான் உங்கள் கடவுளாகிய யெகோவா,[m] வேறு யாரும் இல்லை.
என்னுடைய ஜனங்கள் இனி ஒருபோதும் அவமானப்படுத்தப்பட மாட்டார்கள்.
28 அதற்குப் பின்பு, பலதரப்பட்ட ஜனங்கள்மேல் என் சக்தியைப் பொழிவேன்.[n]
உங்களுடைய மகன்களும் மகள்களும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்.
உங்கள் முதியவர்கள் கனவுகளைக் காண்பார்கள்.
உங்கள் இளைஞர்கள் தரிசனங்களைப் பார்ப்பார்கள்.[o]
29 அந்த நாட்களில், எனக்கு ஊழியம் செய்கிற ஆண்கள்மேலும் பெண்கள்மேலும்
என் சக்தியைப் பொழிவேன்.

2:25 *நே.மொ., “கூட்டம்கூட்டமான வெட்டுக்கிளிகளும், சிறகில்லாத வெட்டுக்கிளிகளும், அகோரப் பசிகொண்ட வெட்டுக்கிளிகளும், கபளீகரம் செய்யும் வெட்டுக்கிளிகளும்.”

அதி. 2
a ஏசா 34:2, 3
b ஏசா 30:23; ஏசா 51:3
c எசே 34:27
d ஆமோ 9:14; சக 8:12
e ஏசா 12:6; சக 10:7
f லேவி 26:4; உபா 11:14
g லேவி 26:10; ஆமோ 9:13; மல் 3:10
h யோவே 1:4
i லேவி 26:5
j உபா 26:10, 11
k செப் 3:11
l சங் 46:5
m லேவி 26: 11, 12; எசே 37: 26, 27
n ஏசா 32:15; ஏசா 44:3; எசே 39:29
o அப் 2:16-18

30 வானத்திலும் பூமியிலும் அதிசயங்களைச் செய்து காட்டுவேன்.
எங்கு பார்த்தாலும் இரத்தமாகவும், நெருப்பாகவும், புகைக் காடாகவும் இருக்கும்.[a]
31 யெகோவாவின் படுபயங்கரமான மகா நாள்[b] வருவதற்குமுன்
சூரியன் இருண்டுவிடும், சந்திரன் இரத்த நிறமாகிவிடும்.[c]
32 யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்கிற ஒவ்வொருவரும் மீட்புப் பெறுவார்கள்.[d]
அவர்கள் யெகோவா சொன்னபடியே சீயோன் மலையிலும் எருசலேமிலும் இருப்பார்கள்.[e]
அவர்கள் யெகோவாவினால் அழைக்கப்பட்டவர்கள்."

3 "அந்த நாட்களில், சிறைபிடிக்கப்பட்டுப் போன என் ஜனங்களுக்கு விடுதலை தருவேன்.
அவர்களை யூதாவுக்கும் எருசலேமுக்கும் மறுபடியும் கூட்டிக்கொண்டு வருவேன்.[f]
2 அப்போது, எல்லா தேசத்து ஜனங்களையும் ஒன்றுகூட்டுவேன்.
யோசபாத்தின்* பள்ளத்தாக்குக்குக் கொண்டுவருவேன்.
அங்கே அவர்களுக்குத் தீர்ப்பு கொடுப்பேன்.[g]
என் சொத்தாகிய இஸ்ரவேல் ஜனங்களுக்காக அவர்களைத் தண்டிப்பேன்.
ஏனென்றால், என் ஜனங்களை மற்ற தேசங்களுக்குத் துரத்தியடித்தார்கள்.
என் தேசத்தைத் தங்களுக்குள் பங்குபோட்டுக்கொண்டார்கள்.[h]
3 என் ஜனங்களுக்காகக் குலுக்கல் போட்டார்கள்.[i]
விபச்சாரிக்குக் கூலி கொடுப்பதற்காகச் சிறுவனை விற்றார்கள்.
திராட்சமதுவை வாங்கிக் குடிப்பதற்காகச் சிறுமியை விற்றார்கள்.
4 தீரு, சீதோன், பெலிஸ்தியா பகுதிகளில் வாழ்கிறவர்களே,
என்ன துணிச்சல் இருந்தால் என்னிடம் இப்படி நடந்துகொள்வீர்கள்?
என்னைப் பழிவாங்க நினைக்கிறீர்களோ?
நீங்கள் என்னைப் பழிவாங்க நினைத்தால்,
நான் சீக்கிரமாகவும் வேகமாகவும் வந்து உங்களைப் பழிவாங்குவேன்.[j]
5 என்னுடைய வெள்ளியையும் தங்கத்தையும் நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள்.[k]
என்னுடைய விலைமதிப்புள்ள பொருள்களை உங்கள் கோயில்களுக்குக் கொண்டுபோனீர்கள்.
6 யூதா ஜனங்களையும் எருசலேம் ஜனங்களையும் கிரேக்கர்களிடம் விற்றீர்கள்.[l]
தேசத்தைவிட்டு ரொம்பத் தூரத்துக்குத் துரத்தியடித்தீர்கள்.
7 நீங்கள் விற்றுப்போட்ட இடத்திலிருந்து அவர்களை வரவழைப்பேன்.[m]
என்னைப் பழிவாங்க நினைத்த உங்களை நான் பழிவாங்குவேன்.

3:2 * இந்தப் பெயரின் அர்த்தம், "யெகோவாவே நீதிபதி."

அதி. 2
a அப் 2:19, 20
b செப் 1:14, 15; மல் 4:5
c மத் 24:29; மாற் 13:24, 25; லூ 21:25; வெளி 6:12
d அப் 2:21; ரோ 10:13
e ஒப 17

அதி. 3
f உபா 30:3; எரே 30:3; எசே 39:28; ஆமோ 9:14; செப் 3:20
g எசே 38:22; யோவே 3:12; செப் 3:8; சக 14:3; வெளி 16:14, 16
h எசே 35:10, 11; செப் 2:8, 9
i ஒப 11
j ஏசா 23:12; எரே 47:4; எசே 25:15-17; ஆமோ 1:9, 10; சக 9:1, 2
k 2நா 21:16, 17
l உபா 28:32; எசே 27:8, 13
m ஏசா 11:11, 12; ஏசா 43:5, 6; ஏசா 49:12; எரே 23:7, 8; எசே 34:12

8 உங்கள் மகன்களையும் மகள்களையும் யூதா ஜனங்களிடம்
விற்றுவிடுவேன்.[a]
அவர்கள் உங்கள் பிள்ளைகளைத் தொலைதூரத்திலுள்ள சேபா
தேசத்தாரிடம் விற்றுவிடுவார்கள்.
யெகோவாவாகிய நான் இதைச் சொல்கிறேன்.
9 எல்லா தேசங்களிலும் இதை அறிவியுங்கள்:[b]
'போருக்குத் தயாராகுங்கள்!* மாவீரர்களே, கிளம்புங்கள்!
படைகளே, ஒன்றாக அணிவகுத்து வாருங்கள்![c]
10 மண்வெட்டிகளை வாள்களாகவும், அரிவாள்களை ஈட்டிகளாகவும்
மாற்றுங்கள்.
பலவீனமானவன், "நான் பலசாலி" என்று சொல்லட்டும்.
11 அக்கம்பக்கத்திலுள்ள தேசங்களே, ஒன்றுகூடி வந்து[d] உதவுங்கள்!' "
யெகோவாவே, உங்கள் மாவீரர்களை அங்கே அனுப்புங்கள்.
12 "தேசங்களே, யோசபாத்தின் பள்ளத்தாக்குக்குச் சீக்கிரமாக வாருங்கள்.
நான் அங்கே உட்கார்ந்து, சுற்றியுள்ள எல்லா தேசங்களுக்கும் தீர்ப்பு
கொடுப்பேன்.[e]
13 பயிர் முற்றிவிட்டது, அரிவாளை எடுத்து அறுங்கள்.
ஆலையில் திராட்சைப் பழம் கொட்டிக்கிடக்கிறது, வந்து மிதியுங்கள்.[f]
திராட்சரசத் தொட்டிகள் நிரம்பி வழிகின்றன; ஏனென்றால், தேசங்களின்
அக்கிரமங்கள் பெருகிவிட்டன.
14 யெகோவா தீர்ப்பு கொடுக்கப்போகும் பள்ளத்தாக்கில் ஜனங்கள்
கூட்டம் கூட்டமாகக் கூடியிருக்கிறார்கள்.
அவருடைய நாள் நெருங்கிவிட்டது.[g]
15 அப்போது, சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும்.
நட்சத்திரங்கள் ஒளி இழந்துவிடும்.
16 சீயோனிலிருந்து யெகோவா கர்ஜிப்பார்.
எருசலேமிலிருந்து சத்தமிடுவார்.
வானமும் பூமியும் அதிரும்.
யெகோவா தன்னுடைய ஜனங்களுக்கு அடைக்கலமாக இருப்பார்.[h]
இஸ்ரவேல் ஜனங்களைக் கோட்டைபோல் பாதுகாப்பார்.
17 உங்கள் கடவுளாகிய யெகோவா நானே என்பதை அப்போது
தெரிந்துகொள்வீர்கள்.
பரிசுத்த மலையாகிய சீயோனில் நான் குடியிருக்கிறேன்.[i]
எருசலேம் பரிசுத்த இடமாக மாறும்.[j]
அன்னியர்கள் இனி அங்கு கால்வைக்க மாட்டார்கள்.[k]
18 அந்த நாளில் மலைகளிலிருந்து தித்திப்பான திராட்சமது சொட்டும்.[l]
குன்றுகளில் பால் வழிந்தோடும்.
யூதாவின் ஓடைகளில் தண்ணீர் பெருக்கெடுக்கும்.
யெகோவாவின் வீட்டிலிருந்து நீரூற்று புறப்படும்.[m]
சித்தீம்* பள்ளத்தாக்கில்# அது பாய்ந்தோடும்.

3:9 *நே.மொ., "போரைப் புனிதப்படுத்துங்கள்." **3:18** *அர்த்தம், "வேல மரங்கள்." #அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கில்."

அதி. 3
a ஒப 19, 20
b ஏசா 34:1, 2
c எசே 38:7
d எசே 38:9; செப் 3:8; வெளி 16:14
e சங் 76:8, 9; யோவே 3:2
f ஏசா 63:3; வெளி 14:18-20
g ஏசா 34:2; செப் 1:14
h சங் 50:15
i சக 8:3
j ஏசா 4:3
k ஏசா 60:18; நாகூ 1:15; சக 14:21
l ஆமோ 9:13; சக 9:17
m எசே 47:1; வெளி 22:1

அதி. 3
a ஏசா 19:1
b எரே 49:17
c எசே 25:12, 13
d ஆமோ 1:11 ஒப 10
e சங் 48:8 ஏசா 33:20 ஏசா 60:15 ஆமோ 9:15
f ஏசா 4:4 எசே 36:25 மீ 7:18, 19
g ஏசா 24:23 மீ 4:7

19 எகிப்து பாழ்நிலமாகும்.[a]
ஏதோம் வெறுமையான வனாந்தரமாகும்.[b]
ஏனென்றால், அவை யூதாவிலுள்ள ஜனங்களுக்குக் கொடுமை செய்தன.[c]
அப்பாவிகளைக் கொன்று குவித்தன.[d]
20 ஆனால், யூதாவில் ஜனங்கள் என்றென்றும் குடியிருப்பார்கள்.
எருசலேமில் தலைமுறை தலைமுறையாக வாழ்வார்கள்.[e]
21 அவர்கள்மேல் இருக்கும் கொலைப்பழியை* நான் நீக்குவேன்.[f]
யெகோவா சீயோனில் குடியிருப்பார்."[g]

3:21 * வே.வா., "இரத்தப்பழியை."

ஆமோஸ்

முக்கியக் குறிப்புகள்

1 யெகோவாவிடமிருந்து ஆமோசுக்கு ஒரு செய்தி கிடைக்கிறது (1, 2)
திரும்பத் திரும்பக் குற்றம் செய்த தேசங்களுக்குக் கிடைக்கும் தீர்ப்பு (3–15)
சீரியா (3–5), பெலிஸ்தியா (6–8), தீரு (9, 10), ஏதோம் (11, 12), அம்மோன் (13–15)

2 திரும்பத் திரும்பக் குற்றம் செய்த தேசங்களுக்குக் கிடைக்கும் தீர்ப்பு (1–16)
மோவாப் (1–3), யூதா (4, 5), இஸ்ரவேல் (6–16)

3 கடவுளுடைய தீர்ப்புகளைப் பற்றிய அறிவிப்பு (1–8)
கடவுள் ரகசியமான விஷயங்களைச் சொல்கிறார் (7)
சமாரியாவுக்கு எதிரான செய்தி (9–15)

4 பாசானின் பசுக்களுக்கு எதிரான செய்தி (1–3)
இஸ்ரவேலின் பொய் வணக்கத்தை யெகோவா ஏளனம் செய்கிறார் (4, 5)
தண்டனை கிடைத்தும் இஸ்ரவேல் திருந்துவதில்லை (6–13)
"உங்கள் கடவுளைச் சந்திக்கத் தயாராகுங்கள்!" (12)
'கடவுள் தன் மனதில் நினைப்பதை மனிதனிடம் சொல்கிறார்' (13)

5 கன்னிப் பெண்ணாகிய இஸ்ரவேல் விழுந்துவிட்டாள் (1–3)
கடவுளைத் தேடுங்கள், என்றென்றும் வாழுங்கள் (4–17)
கெட்டதை வெறுத்து நல்லதை நேசியுங்கள் (15)
யெகோவாவின் நாள், இருண்ட நாள் (18–27)
இஸ்ரவேலின் பலிகள் ஒதுக்கித்தள்ளப்படுகின்றன (22)

6 மெத்தனமாக வாழ்கிறவர்களுக்குக் கேடு! (1–14)
யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட கட்டில்கள்; திராட்சமதுக் கிண்ணங்கள் (4, 6)

7 இஸ்ரவேலின் முடிவு நெருங்கிவிட்டதைக் காட்டும் தரிசனங்கள் (1–9)
வெட்டுக்கிளிகள் (1–3), நெருப்பு (4–6), தூக்குநூல் (7–9)
தீர்க்கதரிசனம் சொல்வதை நிறுத்தும்படி ஆமோசிடம் சொல்லப்படுகிறது (10–17)

8 கோடைக் காலத்துப் பழங்கள் உள்ள ஒரு கூடை பற்றிய தரிசனம் (1–3)
அடக்கி ஒடுக்குகிறவர்களுக்குத் தீர்ப்பு (4–14)
கடவுளுடைய வார்த்தை கிடைக்காத பஞ்சம் (11)

9 கடவுளுடைய தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது (1–10)
தாவீதின் கூடாரம் எடுத்து நிறுத்தப்படும் (11–15)

1 தெக்கோவா ஊரில்[a] இருந்த ஒரு மேய்ப்பர்தான் ஆமோஸ்.* அவர்
வாழ்ந்த காலத்தில் யூதாவை உசியா ராஜாவும்,[b] இஸ்ரவேலை யோவா
சின்[c] மகன் யெரொபெயாமும்[d] ஆட்சி செய்துவந்தார்கள். அந்தச் சம
யத்தில், இஸ்ரவேலைப் பற்றிய ஒரு தரிசனத்தை ஆமோஸ் பார்த்தார். நில
நடுக்கம்[e] வருவதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இது நடந்தது.
2 ஆமோஸ் இப்படிச் சொன்னார்:

“சீயோனிலிருந்து யெகோவா சிங்கம்போல் கர்ஜிப்பார்.
எருசலேமிலிருந்து சத்தமாகக் குரல் கொடுப்பார்.
அப்போது, மேய்ச்சல் நிலங்கள் வறண்டுபோகும்.
கர்மேல் மலை உச்சியில் இருக்கிற புல்பூண்டுகளெல்லாம்
காய்ந்துபோகும்.”[f]

3 “யெகோவா சொல்வது இதுதான்:
‘“தமஸ்கு நகரம் திரும்பத் திரும்பக் குற்றம்* செய்ததால் என் தீர்ப்பை
மாற்றிக்கொள்ளவே மாட்டேன்.
அவர்கள் இரும்புக் கருவிகளால் கீலேயாத்தைப் போரடித்தார்கள்.#[g]
4 அதனால், அசகேல்[h] ராஜாவின் வீட்டுக்குத் தீ வைக்கப்போகிறேன்.
அது பெனாதாத்தில் இருக்கிற கோட்டைகளைச் சாம்பலாக்கிவிடும்.[i]
5 தமஸ்குவின் தாழ்ப்பாள்களை உடைக்கப்போகிறேன்.[j]
பிக்காத்-ஆவேனில் இருக்கிற ஜனங்களை அழிக்கப்போகிறேன்.
பெத்-ஏதேனின் ராஜாவைக் கொல்லப்போகிறேன்.
சீரியா தேசத்து ஜனங்கள் கீர் தேசத்துக்குச் சிறைபிடிக்கப்பட்டுப்
போவார்கள்”[k] என்று யெகோவா சொல்கிறார்.’
6 யெகோவா சொல்வது இதுதான்:
‘“காசா நகரம் திரும்பத் திரும்பக் குற்றம் செய்ததால்[l] என் தீர்ப்பை
மாற்றிக்கொள்ளவே மாட்டேன்.
சிறைபிடித்த[m] எல்லா ஜனங்களையும் அது ஏதோமிடம் ஒப்படைத்தது.
7 அதனால், காசாவின் மதிலுக்குத் தீ வைக்கப்போகிறேன்.[n]
அது அவளுடைய கோட்டைகளைச் சாம்பலாக்கிவிடும்.
8 அஸ்தோத்தில் இருக்கிற ஜனங்களை அழிக்கப்போகிறேன்.[o]
அஸ்கலோனின் ராஜாவைக் கொல்லப்போகிறேன்.[p]
எக்ரோனுக்கு எதிராக என்னுடைய கையை ஓங்கப்போகிறேன்.[q]
மீதியிருக்கும் பெலிஸ்தியர்கள் ஒழிந்துபோவார்கள்”[r] என்று உன்னதப்
பேரரசராகிய யெகோவா சொல்கிறார்.’
9 யெகோவா சொல்வது இதுதான்:
‘தீரு நகரம் திரும்பத் திரும்பக் குற்றம் செய்ததால்[s] என் தீர்ப்பை
மாற்றிக்கொள்ளவே மாட்டேன்.
சிறைபிடித்த எல்லா ஜனங்களையும் அது ஏதோமிடம் ஒப்படைத்தது.
சகோதரர்களோடு செய்த ஒப்பந்தத்தை மறந்துவிட்டது.[t]
10 அதனால், தீருவின் மதிலுக்குத் தீ வைக்கப்போகிறேன்.
அது அவளுடைய கோட்டைகளைச் சாம்பலாக்கிவிடும்.’[u]

1:1 * அர்த்தம், “சுமையாக இருப்பது” அல்லது “சுமையைச் சுமப்பது.” **1:3** * நே.மொ., “மூன்று, நான்கு குற்றங்கள்.” # வே.வா., “பாடாய்ப் படுத்தினார்கள்.”

அதி. 1
a 2நா 11:5, 6
b 2நா 26:1, 3, 4; ஏசா 1:1
c 2ரா 13:10, 11
d 2ரா 14:23, 24; ஓசி 1:1; ஆமோ 7:10
e சக 14:5
f ஏசா 33:9; நாகூ 1:4
g 2ரா 8:12; 2ரா 10:32, 33; 2ரா 13:7
h 1ரா 19:15
i எரே 49:27
j ஏசா 7:8; ஏசா 8:4; ஏசா 17:1
k 2ரா 16:9
l எசே 25:15
m 2நா 21:16, 17; 2நா 28:18; யோவே 3:4, 6
n எரே 25:17, 20; எரே 47:1; சக 9:5
o ஏசா 20:1
p எரே 47:5
q செப் 2:4
r ஏசா 14:29; எரே 47:4; எசே 25:16, 17; செப் 2:5; சக 9:6
s எசே 26:2
t யோவே 3:4, 6
u எசே 26:12

11 யெகோவா இப்படிச் சொல்கிறார்:
‘ஏதோம் திரும்பத் திரும்பக் குற்றம் செய்ததால்[a] என் தீர்ப்பை
மாற்றிக்கொள்ளவே மாட்டேன்.
வாளை எடுத்துக்கொண்டு சொந்த சகோதரனையே அவன்
துரத்தினான்.[b]
இரக்கம் காட்ட மறுத்துவிட்டான்.
இன்னமும் வெறித்தனமாகத் தாக்கிக்கொண்டே இருக்கிறான்.
பயங்கர கோபத்தைக் காட்டிக்கொண்டே இருக்கிறான்.[c]
12 அதனால், தேமானுக்குத்[d] தீ வைக்கப்போகிறேன்.
அது போஸ்றாவின் கோட்டைகளைச் சாம்பலாக்கிவிடும்.’[e]
13 யெகோவா சொல்வது இதுதான்:
‘“அம்மோனியர்கள் திரும்பத் திரும்பக் குற்றம் செய்ததால்[f] என்
தீர்ப்பை மாற்றிக்கொள்ளவே மாட்டேன்.
அவர்களுடைய நாட்டின் எல்லையை விரிவாக்குவதற்காக[g]
கீலேயாத்தில் இருக்கிற கர்ப்பிணிகளின் வயிற்றைக் கிழித்தார்கள்.
14 அதனால், ரப்பாவின் மதிலுக்குத் தீ வைக்கப்போகிறேன்.[h]
அது அவளுடைய கோட்டைகளைச் சாம்பலாக்கிவிடும்.
அந்த நாளில் போர் முழக்கம் கேட்கும்.
அந்த நாளில் சூறாவளி வீசும்.
15 அவர்களுடைய ராஜாவும் அதிகாரிகளும் சிறைபிடிக்கப்பட்டுப்
போவார்கள்”[i] என்று யெகோவா சொல்கிறார்.’”

2 “யெகோவா சொல்வது இதுதான்:
‘“மோவாப் திரும்பத் திரும்பக் குற்றம்* செய்ததால்[j] என் தீர்ப்பை
மாற்றிக்கொள்ளவே மாட்டேன்.
சுண்ணாம்புக்காக அவன் ஏதோம் ராஜாவின் எலும்புகளைச்
சுட்டெரித்தான்.
2 அதனால், மோவாபுக்குத் தீ வைக்கப்போகிறேன்,
கீரியோத்தின் கோட்டைகள் சாம்பலாகும்.[k]
பயங்கர கூச்சலும் போர் முழக்கமும் ஊதுகொம்பின் சத்தமும் கேட்கும்.
அப்போது, மோவாப் அழிந்துபோவான்.[l]
3 அவனுடைய தலைவனுக்கு* நான் முடிவுகட்டுவேன்.
தலைவனோடு சேர்த்து எல்லா அதிகாரிகளையும் கொல்வேன்”[m]
என்று யெகோவா சொல்கிறார்.’
4 யெகோவா சொல்வது இதுதான்:
‘யூதா திரும்பத் திரும்பக் குற்றம் செய்ததால்[n] என் தீர்ப்பை
மாற்றிக்கொள்ளவே மாட்டேன்.
யூதா ஜனங்கள் யெகோவாவின் சட்டத்தை* ஒதுக்கித்தள்ளினார்கள்.
அவருடைய விதிமுறைகளை அசட்டை செய்தார்கள்.[o]
முன்னோர்கள் நம்பிய அதே பொய்களை நம்பி வழிவிலகிப்
போனார்கள்.[p]

அதி. 1
a யோவே 3:19
b எசே 25:12
c 2நா 28:17; ஒப 10
d ஆதி 36:10, 11; ஒப 9
e ஏசா 34:5, 6; எரே 49:13
f எசே 25:3; செப் 2:8
g நியா 11:12, 13; எரே 49:1
h எரே 49:2; எசே 25:5
i எரே 27:2, 3; எரே 49:3

அதி. 2
j எரே 48:29, 30; எசே 25:8, 9; செப் 2:8
k எரே 48:21, 24
l ஏசா 15:1
m ஏசா 16:14; எரே 48:7
n 2ரா 17:19; எரே 2:13
o லேவி 26:14-16; 2நா 36:14
p எரே 9:14

2:1 *நே.மொ., “மூன்று, நான்கு குற்றங்கள்.” **2:3** *நே.மொ., “நீதிபதிக்கு.” **2:4** *வே.வா., “அறிவுரையை.”

5 அதனால், நான் யூதாவுக்குத் தீ வைக்கப்போகிறேன்.
எருசலேமின் கோட்டைகள் சாம்பலாகும்.'[a]
6 யெகோவா சொல்வது இதுதான்:
'இஸ்ரவேல் திரும்பத் திரும்பக் குற்றம் செய்ததால்[b] என் தீர்ப்பை மாற்றிக்கொள்ளவே மாட்டேன்.
இஸ்ரவேல் ஜனங்கள் வெள்ளிக்காக நீதிமான்களை விற்கிறார்கள்.
ஒரு ஜோடி செருப்புக்காக ஏழைகளை விற்கிறார்கள்.[c]
7 எளிமையான ஜனங்களைக் கீழே தள்ளி மிதிக்கிறார்கள்.[d]
தாழ்மையான* ஜனங்களை ஒதுக்கித்தள்ளுகிறார்கள்.[e]
அப்பாவும் மகனும் ஒரே பெண்ணோடு உறவுகொள்கிறார்கள்.
என்னுடைய பரிசுத்த பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துகிறார்கள்.
8 ஜனங்களிடமிருந்து அடமானமாக வாங்கிய உடைகளைப்[f] பலிபீடங்களுக்குப்[g] பக்கத்தில் விரித்து உட்காருகிறார்கள்.
அபராதப் பணத்தில் திராட்சமது வாங்கி தங்கள் கோயில்களில் குடிக்கிறார்கள்.'
9 'இஸ்ரவேலர்களே, நான்தான் உங்கள் கண்ணெதிரில் எமோரியனை ஒழித்துக்கட்டினேன்.[h]
தேவதாரு மரம்போல் உயரமாகவும், கருவாலி மரம்போல் பலமாகவும் இருந்தவனை வீழ்த்தினேன்.
மேலே இருந்த அவனுடைய பழங்களைப் பாழாக்கினேன்,
கீழே இருந்த அவனுடைய வேர்களை நாசமாக்கினேன்.[i]
10 அவனுடைய தேசத்தை உங்களுக்குச் சொந்தமாகக் கொடுத்தேன்.
அதற்காக உங்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தேன்.[j]
வனாந்தரத்தில் 40 வருஷங்களாக வழிநடத்தினேன்.[k]
11 உங்கள் மகன்களில் சிலரைத் தீர்க்கதரிசிகளாகத் தேர்ந்தெடுத்தேன்.[l]
உங்கள் வாலிபர்களில் சிலரை நசரேயர்களாக நியமித்தேன்.[m]
என் ஜனங்களே, இதெல்லாம் உண்மைதானே?' என்று யெகோவா கேட்கிறார்.
12 'ஆனால், நீங்கள் நசரேயர்களுக்குத் திராட்சமது கொடுத்துவந்தீர்கள்.[n]
தீர்க்கதரிசிகளிடம், "நீங்கள் தீர்க்கதரிசனம் சொல்லக் கூடாது" என்று கட்டளை போட்டீர்கள்.[o]
13 அதனால், நிறைய கதிர்க்கட்டுகளைச் சுமக்கிற வண்டி அதன் சக்கரத்தின் கீழே இருக்கிற எல்லாவற்றையும் நொறுக்கிவிடுவது போல,
நான் உங்களை உங்கள் இடத்திலேயே நொறுக்கிவிடுவேன்.
14 வேகமாக ஓடுகிறவனுக்கு ஒளிந்துகொள்ள இடம் இருக்காது.[p]
பலசாலிக்குப் பலம் இருக்காது.
படைவீரன் ஒருவனாலும் உயிர்தப்ப முடியாது.
15 வில்வீரனால் எதிர்த்து நிற்க முடியாது.
வேகமாக ஓடுகிறவனால் தப்பிக்க முடியாது.
குதிரைவீரனால் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

2:7 * வே.வா., "சாந்தமான."

அதி. 2
a 1சா 12:15; 1நா 28:9; 2நா 36:17, 19; எரே 17:27; எரே 37:8; எரே 52:12-14; ஓசி 8:14
b உபா 28:45; 2ரா 17:6, 7; எசே 23:4, 5; ஓசி 4:1, 2
c ஆமோ 5:11; ஆமோ 8:4-6
d ஆமோ 4:1
e ஏசா 10:1, 2; ஆமோ 5:12
f யாத் 22:26; உபா 24:12
g ஓசி 8:11; ஓசி 10:1
h எண் 21:23-25; யோசு 24:8; சங் 135:10, 11
i உபா 2:31-33
j யாத் 12:51
k எண் 14:34; உபா 2:7
l 1சா 3:20; 1ரா 17:1; 1ரா 19:19
m எண் 6:2; நியா 13:5
n எண் 6:3, 4
o ஏசா 30:10, 11; ஆமோ 7:12, 13
p ஆமோ 9:1

16 வீரர்களில் மகா தைரியசாலிகள்கூட
அந்த நாளில் வெற்று உடம்போடு ஓடுவார்கள்'[a] என்று யெகோவா சொல்கிறார்."

3 "இஸ்ரவேல் தேசமே, உன்னைப் பற்றி யெகோவா சொல்வதைக் கேள்.
எகிப்திலிருந்து உன்னைக் கூட்டிக்கொண்டு வந்தவர் சொல்லும் வார்த்
தைகளைக் கேள்:

2 'பூமியிலுள்ள தேசங்களிலேயே உன்னை மட்டும்தான் நான் தேர்ந்தெடுத்தேன்.[b]
அதனால், நீ செய்த குற்றங்களுக்காக உன்னைக் கண்டிப்பாகத் தண்டிப்பேன்.[c]
3 முன்கூட்டியே பேசி வைத்துக்கொள்ளாமல் இரண்டு பேரால் சேர்ந்து நடக்க முடியுமா?
4 இரை இல்லாதபோது காட்டிலுள்ள சிங்கம் கர்ஜிக்குமா?
இரை சிக்காதபோது இளம் சிங்கம் குகையிலிருந்து உறுமுமா?
5 வேடன் வலை விரிக்காமலேயே பறவை சிக்குமா? *
எதுவும் விழாமலேயே வலை தானாக எகிறுமா?
6 ஊதுகொம்பை ஊதும்போது ஜனங்கள் நடுங்காமல் இருப்பார்களா?
யெகோவா தலையிடாமலேயே நகரத்துக்கு அழிவு வருமா?
7 உன்னதப் பேரரசராகிய யெகோவா எந்தவொரு ரகசியமான விஷயத்தையும்
அவருடைய தீர்க்கதரிசிகளிடம் சொல்லாமல் செய்ய மாட்டார்.[d]
8 சிங்கம் கர்ஜிக்கிறது![e] யார்தான் பயந்து நடுங்காமல் இருப்பார்கள்?
உன்னதப் பேரரசராகிய யெகோவா பேசுகிறார்! யார்தான் தீர்க்கதரிசனம் சொல்லாமல் இருப்பார்கள்?'[f]
9 யெகோவா சொல்வது இதுதான்: 'அஸ்தோத்தின் கோட்டைகளில் இதை அறிவியுங்கள்.
எகிப்தின் கோட்டைகளில் இதைச் சொல்லுங்கள்:
"சமாரியாவின் மலைகளுக்கு எதிராக ஒன்றுகூடுங்கள்.[g]
அங்கே இருக்கும் குழப்பத்தைப் பாருங்கள்.
அங்கே நடக்கும் மோசடியைக் கவனியுங்கள்.[h]
10 பொருள்களைக் கொள்ளையடித்து கோட்டைகளில் குவித்து வைக்கிறார்கள்.
அவர்களுக்கு நல்லது செய்யத் தெரியாது."'
11 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'உன் தேசத்தை எதிரி ஒருவன் சுற்றிவளைப்பான்.[i]
உன் பலத்தை அடக்குவான்.
உன்னுடைய கோட்டைகளைக் கொள்ளையடிப்பான்.'[j]
12 யெகோவா சொல்வது இதுதான்:
'ஒரு ஆடு சிங்கத்தின் வாயில் சிக்கிவிட்டால், அதனுடைய ஒரு காலோ காதோதான் மேய்ப்பனுக்கு மிஞ்சும்.

3:5 * அல்லது, "இரையில்லாத வலையில் பறவை சிக்குமா?"

அதி. 2
a உபா 28:25

அதி. 3
b யாத் 19:5; உபா 7:6; சங் 147:19, 20
c தானி 9:11, 12; ஓசி 12:2; ஆமோ 4:12
d ஆதி 6:13; ஆதி 18:17; சங் 25:14; ஏசா 42:9; தானி 9:22; வெளி 1:1
e ஆமோ 1:2
f எரே 20:9; ஆமோ 7:14, 15; அப் 4:19, 20
g 2ரா 17:22, 23
h ஓசி 7:1; ஆமோ 4:1
i 2ரா 17:6
j ஓசி 11:6; ஆமோ 6:8

அதேபோல், இஸ்ரவேல் ஜனங்களில் கொஞ்சம் பேர்தான்
மிஞ்சுவார்கள்.
சமாரியாவில் சொகுசு கட்டில்களிலும் பஞ்சு மெத்தைகளிலும்
உட்கார்ந்திருப்பவர்கள் தப்பிக்க மாட்டார்கள்.’[a]
13 பரலோகப் படைகளின் கடவுளும் உன்னதப் பேரரசருமாகிய
யெகோவா சொல்வது இதுதான்: ‘கேளுங்கள், யாக்கோபின்
வம்சத்தாருக்கு எச்சரிக்கை கொடுங்கள்.
14 இஸ்ரவேலர்களை அவர்களுடைய குற்றங்களுக்காகத் தண்டிப்பேன்.[b]
பெத்தேலிலுள்ள பலிபீடங்களை அழிப்பேன்.[c]
பலிபீடங்களில் இருக்கும் கொம்புகளை உடைத்துப் போடுவேன்.’[d]
15 ‘குளிர் கால வீடுகளையும் கோடைக் கால வீடுகளையும் இடித்துத்
தள்ளுவேன்.
யானைத்தந்தம் பதிக்கப்பட்ட வீடுகள் தரைமட்டமாகும்.[e]
பெரிய* மாளிகைகள் மண்மேடுகளாகும்’[f] என்று யெகோவா
சொல்கிறார்.”

4 “சமாரியா மலையில் குடியிருக்கும் பெண்களே,[g] கேளுங்கள்.
பாசான் பிரதேசத்தின் மாடுகள்போல் நீங்கள் இருக்கிறீர்கள்.
ஏழைகளை ஏமாற்றுகிறீர்கள், எளியவர்களைக்
கொடுமைப்படுத்துகிறீர்கள்.[h]
‘குடிக்க மது கொண்டுவா’ என்று உங்கள் கணவரிடம்* சொல்கிறீர்கள்.
2 உன்னதப் பேரரசராகிய யெகோவா தன்னுடைய பரிசுத்தத்தின் மேல்
சத்தியம் செய்து இப்படிச் சொல்லியிருக்கிறார்:
‘“ஒரு காலம் வரப்போகிறது. அப்போது, கறிக்கடைக் கொக்கிகளால்
நீங்கள் இழுத்துச் செல்லப்படுவீர்கள்.
உங்களில் மீதியாக இருப்பவர்கள் தூண்டில் கொக்கிகளால் பிடித்துச்
செல்லப்படுவீர்கள்.
3 மதிலில் உள்ள பிளவுகள் வழியாய் நேராக வெளியே போவீர்கள்.
ஹார்மனுக்கு* துரத்தப்படுவீர்கள்” என்று யெகோவா சொல்கிறார்.’
4 ‘பெத்தேலுக்கு வாருங்கள், அக்கிரமம் செய்யுங்கள்![i]
கில்காலுக்கு வாருங்கள், அக்கிரமத்துக்குமேல் அக்கிரமம்
செய்யுங்கள்![j]
காலையில் உங்கள் பலிகளைச் செலுத்துங்கள்.[k]
மூன்றாம் நாளில் பத்திலொரு பாகத்தைக் கொண்டுவாருங்கள்.[l]
5 உங்கள் நன்றியைக் காட்ட புளித்த ரொட்டியைத் தகன பலியாகச்
செலுத்துங்கள்![m]
நீங்களாகவே விருப்பப்பட்டுக் கொடுக்கும் காணிக்கைகளை ஊருக்கே
விளம்பரம் பண்ணுங்கள்!
இஸ்ரவேல் ஜனங்களே, இதைச் செய்யத்தானே விரும்புகிறீர்கள்?’
என்கிறார் உன்னதப் பேரரசராகிய யெகோவா.

3:15 *அல்லது, “நிறைய.” **4:1** *வே.வா., “எஜமானிடம்.” **4:3** *இந்த வார்த்தைக்கான அர்த்தம் சரியாகத் தெரியவில்லை.

அதி. 3
a ஏசா 8:4; ஆமோ 6:4
b ஓசி 4:9
c 1ரா 12:32, 33; ஓசி 13:2
d 2ரா 23:15, 16; 2நா 31:1; 2நா 34:1, 7; ஓசி 10:2; மீ 1:6
e 1ரா 22:39
f ஆமோ 6:11

அதி. 4
g ஆமோ 6:1
h ஓசி 4:1, 2; மீ 2:2
i 1ரா 12:28, 29; ஓசி 4:13; ஆமோ 3:14
j ஓசி 4:15; ஓசி 9:15; ஆமோ 5:5
k ஓசி 8:11, 13
l உபா 14:28
m லேவி 7:12

6 எல்லா ஊர்களிலும் உங்களைப் பட்டினி போட்டேன்.
எல்லா வீடுகளிலும் பஞ்சத்தைக் கொண்டுவந்தேன்.[a]
ஆனாலும், நீங்கள் திருந்தி என்னிடம் வரவில்லை'[b] என்கிறார் யெகோவா.
7 'அறுவடைக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே மழையை நிறுத்தினேன்.[c]
ஒரு ஊரில் மழை பெய்ய வைத்தேன், இன்னொரு ஊரில் மழை பெய்யாதபடி செய்தேன்.
ஒரு வயல் மழையில் நனைந்தது.
இன்னொரு வயல் மழையில்லாமல் காய்ந்துபோனது.
8 நீங்கள் தண்ணீரைத் தேடி[d] இரண்டு, மூன்று ஊர்களிலிருந்து இன்னொரு ஊருக்குத் தள்ளாடிக்கொண்டே போனீர்கள்.
ஆனாலும், உங்கள் தாகம் தீரவில்லை.
அந்த நிலையிலும் நீங்கள் திருந்தி என்னிடம் வரவில்லை'[e] என்கிறார் யெகோவா.
9 'அனல் காற்றாலும் நோயாலும் உங்கள் பயிர்களை நாசமாக்கினேன்.[f]
நீங்களோ தோப்புகளையும் திராட்சைத் தோட்டங்களையும் அதிகரித்தீர்கள்.
ஆனால், உங்கள் அத்தி மரங்களையும் ஒலிவ மரங்களையும் வெட்டுக்கிளிகள் மொட்டையாக்கின.[g]
அந்த நிலையிலும் நீங்கள் திருந்தி என்னிடம் வரவில்லை'[h] என்கிறார் யெகோவா.
10 'எகிப்தில் வர வைத்தது போன்ற கொள்ளைநோயை உங்களுக்கு வர வைத்தேன்.[i]
உங்கள் வாலிபர்களை வாளால் கொன்றேன்,[j] உங்கள் குதிரைகளை ஒழித்தேன்.[k]
உங்கள் கூடாரங்களில் பிண நாற்றம் வீசும்படி செய்தேன்.[l]
ஆனாலும், நீங்கள் திருந்தி என்னிடம் வரவில்லை' என்கிறார் யெகோவா.
11 'உங்கள் தேசத்தை வீழ்த்தினேன்.
சோதோம் கொமோராவை அழித்ததுபோல் அழித்தேன்.[m]
நீங்கள் நெருப்பிலிருந்து எடுக்கப்படும் கொள்ளிக்கட்டை போல இருந்தீர்கள்.
ஆனாலும், நீங்கள் திருந்தி என்னிடம் வரவில்லை'[n] என்கிறார் யெகோவா.
12 இஸ்ரவேலர்களே, உங்களை மறுபடியும் தண்டிக்கப்போகிறேன்.
இதை நான் கண்டிப்பாகச் செய்யப்போகிறேன்.
அதனால், உங்கள் கடவுளைச் சந்திக்கத் தயாராகுங்கள்!
13 மலைகளை உருவாக்கியவர்[o] அவர்தான், காற்றை உண்டாக்கியவர்[p] அவர்தான்.
தன்னுடைய மனதில் நினைப்பதையெல்லாம் மனிதனிடம் சொல்பவர் அவர்தான்.
விடியற்கால வெளிச்சத்தை இருளாக மாற்றுபவர்[q] அவர்தான்.

அதி. 4
a லேவி 26:26, உபா 28:38, உபா 32:24, 1ரா 18:2, 2ரா 4:38
b எரே 3:6, 7
c உபா 28:23, 24
d 1ரா 18:5
e ஓசி 7:10
f உபா 28:22
g உபா 28:40, 42
h ஏசா 42:24
i யாத் 9:3, உபா 28:27, 60
j லேவி 26:23, 25, 2ரா 8:12
k 2ரா 13:7
l உபா 28:26
m ஆதி 19:24, 25
n ஓசி 7:10
o ஏசா 40:12
p எரே 10:13
q யாத் 10:22, ஏசா 5:30, ஆமோ 8:9

பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பவர்[a] அவர்தான்.
பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா என்பதுதான்
அவருடைய பெயர்."

5 "இஸ்ரவேல் ஜனங்களே, உங்களுக்காக நான் புலம்பல் பாட்டுப் பாடு
கிறேன், கேளுங்கள்:
2 'கன்னிப் பெண்ணாகிய இஸ்ரவேல் விழுந்துவிட்டாள்.
அவளால் மறுபடியும் எழுந்திருக்க முடியாது.
அவளுடைய தேசத்திலேயே அவள் விழுந்து கிடக்கிறாள்.
அவளைத் தூக்கிவிட யாருமே இல்லை.'
3 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'இஸ்ரவேல் ஜனங்களுக்கு இதுதான் நடக்கப்போகிறது.
ஆயிரம் பேர் போருக்குப் போவார்கள், ஆனால் நூறு பேர்தான்
மிஞ்சுவார்கள்;
நூறு பேர் போருக்குப் போவார்கள், ஆனால் பத்துப் பேர்தான்
மிஞ்சுவார்கள்.'[b]
4 இஸ்ரவேல் ஜனங்களுக்கு யெகோவா சொல்வது இதுதான்:
'என்னைத் தேடுங்கள், என்றென்றும் வாழுங்கள்.[c]
5 பெத்தேலைத் தேடிப்போகாதீர்கள்.[d]
கில்காலிலும் பெயெர்-செபாவிலும் கால்வைக்காதீர்கள்.[e]
ஏனென்றால், கில்கால் ஜனங்கள் நிச்சயமாகச் சிறைபிடிக்கப்பட்டுப்
போவார்கள்.[f]
பெத்தேல் ஒன்றுமில்லாமல் போய்விடும்.*
6 யெகோவாவாகிய என்னைத் தேடுங்கள், என்றென்றும் வாழுங்கள்.[g]
இல்லாவிட்டால், யோசேப்பின் வம்சத்தார்மேல் நான் நெருப்பாக
மூளுவேன்.
நெருப்பை அணைக்க யாரும் இருக்க மாட்டார்கள், பெத்தேல்
பொசுங்கிவிடும்.
7 நீங்கள் அநியாயமாகத் தீர்ப்பு சொல்லி, ஜனங்களின் வாழ்க்கையை
எட்டிபோல் கசப்பாக்குகிறீர்கள்.*
நீங்கள் நீதியை ஒதுக்கித்தள்ளுகிறீர்கள்.[h]
8 கிமா நட்சத்திரக் கூட்டத்தையும்* கீஸில் நட்சத்திரக் கூட்டத்தையும்#
உருவாக்கியவர்[i] நான்தான்.
கும்மிருட்டைப் பகலாக மாற்றுபவர் நான்தான்.
பகலை இரவாக மாற்றுபவர்[j] நான்தான்.
கடல்நீரை அள்ளி எடுப்பவர் நான்தான்.
பூமிமேல் அதைப் பொழிய வைப்பவர்[k] நான்தான்.
யெகோவா என்பது என்னுடைய பெயர்.

5:5 *அல்லது, "தீய சக்திகளின் இடமாக மாறிவிடும்." **5:7** *நே.மொ., "நீங்கள் நியாயத்தை எட்டியாக ஆக்குகிறீர்கள்." **5:8** *இது ரிஷப நட்சத்திரக் கூட்டத்தில் இருக்கும் கார்த்திகை நட்சத்திரங்களைக் குறிக்கலாம். #இது ஓரியன் நட்சத்திரக் கூட்டத்தைக் குறிக்கலாம்.

அதி. 4
a மீ 1:3

அதி. 5
b உபா 4:27; உபா 28:62
c 2நா 15:2; ஏசா 55:3, 6
d 1ரா 12:28, 29; ஆமோ 3:14
e ஓசி 4:15; ஆமோ 4:4; ஆமோ 8:14
f 2ரா 17:6; ஓசி 9:15
g எசே 33:11
h ஆமோ 6:12
i யோபு 9:9; யோபு 38:31-33
j யாத் 10:21, 22
k யோபு 36:27, 28; பிர 1:7

அதி. 5
a 1ரா 18:17 1ரா 22:8
b மீ 2:2
c ஏசா 9:9, 10
d உபா 28:30
e ஏசா 10:1, 2 ஆமோ 2:6, 7
f மீ 2:3
g லேவி 18:5 உபா 30: 19, 20
h ஏசா 1:16, 17 மீ 6:8
i 2நா 15:2 மீ 3:11
j சங் 34:14 சங் 97:10 ரோ 12:9
k 2நா 19:6 ஆமோ 5:24
l எரே 31:7 சக 10:6
m ஓசி 9:2
n ஏசா 5:18, 19

9 நான் பலசாலிமேல் திடீரென்று பாய்ந்து அவனை அழிக்கிறேன்.
கோட்டைகளை நாசமாக்குகிறேன்.
10 நகரவாசலில் உங்களைக் கண்டிக்கிற நீதிபதிகளை நீங்கள் பகைக்கிறீர்கள்.
உண்மை பேசுகிறவர்களை வெறுக்கிறீர்கள்.[a]
11 ஏழைகளிடமிருந்து வாடகை* வாங்குகிறீர்கள்.
தானியத்தை வரியாக வசூலிக்கிறீர்கள்.[b]
அதனால், செதுக்கிய கற்களால் கட்டிய வீடுகளில் இனி குடியிருக்க மாட்டீர்கள்.[c]
உங்கள் அருமையான திராட்சைத் தோட்டங்களிலிருந்து கிடைக்கிற மதுவை இனி குடிக்க மாட்டீர்கள்.[d]
12 நீங்கள் கணக்குவழக்கில்லாத குற்றங்கள் செய்திருப்பது எனக்குத் தெரியும்.
படுபயங்கரமான பாவங்கள் செய்திருப்பதும் எனக்குத் தெரியும்.
நீதிமான்களை ஒடுக்குகிறீர்கள், லஞ்சம் வாங்குகிறீர்கள்.
நகரவாசலில் உட்கார்ந்துகொண்டு ஏழைகளின் உரிமைகளைப் பறிக்கிறீர்கள்.[e]
13 துன்ப காலம் வரப்போகிறது.[f]
அப்போது, விவேகம்* உள்ளவர்கள் அமைதியாக இருப்பார்கள்.
14 நீங்கள் என்றென்றும் வாழ வேண்டுமென்றால்,[g]
கெட்டதைத் தேடாமல் நல்லதைத் தேடுங்கள்.[h]
அப்போது, நீங்கள் சொல்வது போலவே பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா உங்களோடு இருப்பார்.[i]
15 கெட்டதை வெறுத்துவிடுங்கள், நல்லதை நேசியுங்கள்.[j]
நகரவாசலில் நீதி வழங்குங்கள்.[k]
அப்போது யோசேப்பின் வம்சத்தாரில் மீதியாக இருப்பவர்கள் இரக்கம் பெறுவார்கள்.[l]
பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்.’

16 அதனால் யெகோவா, பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா, சொல்வது இதுதான்:
‘பொது சதுக்கங்களில் நீங்கள் கதறி அழுவீர்கள்.
வீதிகளில் “ஐயோ, ஐயோ!” என்று அலறுவீர்கள்.
புலம்புவதற்காக விவசாயிகளைக் கூப்பிடுவீர்கள்.
ஒப்பாரி வைப்பதற்காகக் கூலிக்கு ஆட்களை அழைப்பீர்கள்.’
17 ‘திராட்சைத் தோட்டங்களில் கதறல் சத்தம் கேட்கும்.[m]
ஏனென்றால், நான் வந்து உங்களைத் தண்டிப்பேன்’ என்று யெகோவா சொல்கிறார்.
18 ‘யெகோவாவின் நாளுக்காக ஏங்குபவர்களே, உங்கள் கதி அவ்வளவுதான்![n]

5:11 * வே.வா., “நில வரி.” **5:13** * வே.வா., “ஆழமான புரிந்துகொள்ளுதல்.”

யெகோவாவின் நாளில் உங்களுக்கு என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள்?[a]
அந்த நாள் இருட்டாக இருக்கும், வெளிச்சமாக இருக்காது.[b]
19 ஒருவன் சிங்கத்திடமிருந்து தப்பியோடி, கரடியின் முன்னால் மாட்டிக்கொள்வது போலவும்,
வீட்டுக்குப் போய் சுவர்மேல் கையை ஊன்றும்போது பாம்பு அவனைக் கடிப்பது போலவும்
உங்கள் நிலைமை இருக்கும்.
20 யெகோவாவின் நாள் வெளிச்சமாக இல்லாமல் இருட்டாக இருக்கும்.
பிரகாசமான நாளாக இல்லாமல் இருண்ட நாளாக இருக்கும்.
21 உங்கள் பண்டிகைகள் எனக்கு வெறுப்பாக இருக்கின்றன, அவற்றை அருவருக்கிறேன்.[c]
உங்களுடைய திருவிழாக்களில் எழும்புகிற வாசனை எனக்குப் பிடிக்கவில்லை.
22 நீங்கள் தகன பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினால்கூட அவற்றை ஒதுக்கித்தள்ளுவேன்.
அவற்றை நான் ஏற்றுக்கொள்ளவே மாட்டேன்.[d]
சமாதான பலியாக நீங்கள் செலுத்தும் கொழுத்த மிருகங்களைப் பார்க்கக்கூட மாட்டேன்.[e]
23 கூச்சல் போட்டுப் பாடுவதை நிறுத்துங்கள்.
உங்களுடைய நரம்பிசைக் கருவிகளின் இசையை நான் கேட்கப்போவதில்லை.[f]
24 உங்கள் தேசத்தில் நியாயம் தண்ணீராகப் பெருக்கெடுக்க வேண்டும்.[g]
நீதி வற்றாத நதியாக ஓட வேண்டும்.
25 இஸ்ரவேல் ஜனங்களே, நீங்கள் 40 வருஷங்கள் வனாந்தரத்தில் அலைந்தீர்களே.
அப்போது பலிகளையும் காணிக்கைகளையும் எனக்குச் செலுத்தினீர்களா என்ன?[h]
26 இப்போது உங்கள் ராஜாவான சக்குத்தையும் கைவனையும்* வேறு இடத்துக்குச் சுமந்துகொண்டு போவீர்கள்.
நீங்கள் உண்டாக்கிய உங்களுடைய நட்சத்திர தெய்வச் சிலைகளைச் சுமந்துகொண்டு போவீர்கள்.
27 தமஸ்குவையும் தாண்டி நீங்கள் சிறைப்பட்டுப் போகும்படி செய்வேன்'[i] என்று பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா என்ற பெயருள்ளவர்[j] சொல்கிறார்."

6 "சீயோனில் தன்னம்பிக்கையோடு* திரிகிறவர்களே,
சமாரியா மலையில் கவலையில்லாமல் வாழ்கிறவர்களே,[k]
பிரபலமான தேசத்தில் உள்ள பெரும் புள்ளிகளே,
உங்களை இஸ்ரவேல் ஜனங்கள் தேடி வருகிறார்கள். ஆனால், உங்களுக்குக் கேடுதான் வரும்!

5:26 * இந்த இரண்டு தெய்வங்களும் சனிக் கிரகத்தைக் குறிக்கலாம். **6:1** * வே.வா., "மெத்தனமாக."

அதி. 5
a ஆமோ 4:12
b செப் 1:14, 15
c நீதி 15:8
d சங் 50:8; ஏசா 66:3; ஓசி 6:6
e ஏசா 1:11
f ஆமோ 6:5; ஆமோ 8:10
g மீ 6:8
h அப் 7:42, 43
i 2ரா 15:29; 2ரா 17:6
j ஆமோ 4:13

அதி. 6
k ஆமோ 3:13, 15

2 கல்னே ஊருக்குப் போய்ப் பாருங்கள்.
அங்கிருந்து காமாத் மாநகருக்குப் போங்கள்.[a]
பின்பு, பெலிஸ்தியர்களின் காத் நகருக்குப் போங்கள்.
உங்கள் ராஜ்யங்களைவிட* அவை சிறந்தவையோ?
உங்கள் பிரதேசங்களைவிட அவை பெரியவையோ?
3 நீங்கள் அழிவு நாளைப் பற்றிய நினைப்பே இல்லாமல் இருக்கிறீர்கள்.[b]
வன்முறைக்கு இடம் கொடுக்கிறீர்கள்.[c]
4 யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட கட்டில்களில் படுக்கிறீர்கள்,[d] பஞ்சு மெத்தைகளில் சொகுசாகக் கிடக்கிறீர்கள்.[e]
செம்மறியாட்டுக் கடாக்களைச் சாப்பிடுகிறீர்கள், கொழுத்த கன்றுகளைத் தின்கிறீர்கள்.[f]
5 யாழை*[g] வாசித்துக்கொண்டு இஷ்டத்துக்குப் பாடல்களை எழுதுகிறீர்கள்.
தாவீதைப் போல் புது இசைக் கருவிகளை உருவாக்குகிறீர்கள்.[h]
6 பெரிய கிண்ணங்களில் திராட்சமது குடிக்கிறீர்கள்.[i]
விலை உயர்ந்த எண்ணெயைப் பூசிக்கொள்கிறீர்கள்.
ஆனால், யோசேப்புக்கு வரப்போகும் ஆபத்தைப் பற்றிக் கவலையில்லாமல் இருக்கிறீர்கள்.[j]
7 அதனால், நீங்கள்தான் முதலில் சிறைபிடிக்கப்பட்டுப் போவீர்கள்.[k]
பஞ்சு மெத்தையில் சொகுசாகக் கிடப்பவர்களின் கும்மாளம் அடக்கப்படும்.
8 'உன்னதப் பேரரசராகிய யெகோவா தன்மீதே சத்தியம் செய்திருக்கிறார்'[l] என்று பரலோகப் படைகளின் கடவுளான யெகோவா சொல்கிறார்.
'"யாக்கோபின் கர்வம் எனக்கு அருவருப்பாக இருக்கிறது.[m]
அவனுடைய கோட்டைகளை நான் வெறுக்கிறேன்.[n]
நகரத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் எதிரிகளிடம் கொடுத்துவிடுவேன்.[o]

9 ஒரு வீட்டில் பத்து ஆண்கள் மிஞ்சலாம், ஆனால் அவர்களும் செத்
துப்போவார்கள். 10 அவர்களுடைய உடல்களை ஒவ்வொன்றாகத் தூக்
கிக்கொண்டுபோய் எரிப்பதற்காகச் சொந்தக்காரன்* ஒருவன் வருவான்.
அவன் அந்த உடல்களை# வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோவான்.
பின்பு, உள்ளறைகளில் யாராவது இருந்தால் அவரிடம், 'வேறு யாராவது
உன்னோடு இருக்கிறார்களா?' என்று கேட்பான். 'யாரும் இல்லை' என்று
அவர் சொல்வார். பின்பு இவன், 'அமைதியாக இரு! யெகோவாவின் பெய
ரைச் சொல்வதற்கு இது நேரமில்லை' என்று சொல்வான்."
11 யெகோவா கட்டளை கொடுத்திருக்கிறார்.[p]
பெரிய வீடுகள் தூள்தூளாகும்.
சிறிய வீடுகள் சுக்குநூறாகும்.[q]

6:2 * அநேகமாக, "யூதா மற்றும் இஸ்ரவேல் ராஜ்யங்களைவிட." **6:5** * வே.வா., "நரம்பிசைக் கருவியை." **6:10** * நே.மொ., "அப்பாவின் சகோதரன்." # நே.மொ., "எலும்புகளை."

அதி. 6
a எண் 34:2, 8; 2ரா 14:28
b ஏசா 56:12
c ஆமோ 5:12
d 1ரா 22:39
e ஆமோ 3:12
f ஏசா 22:13
g ஏசா 5:12
h 2நா 7:6; 2நா 29:25, 26
i ஏசா 5:11
j 2ரா 15:29; 2ரா 17:6
k உபா 28:41; ஆமோ 5:5
l ஆமோ 4:2
m எசே 33:28; ஓசி 5:5
n புல 2:5
o மீ 1:6
p ஏசா 10:5, 6
q ஆமோ 3:15

12 செங்குத்தான பாறையில் குதிரைகள் ஓடுமா?
அங்கே எவனாவது மாடுகளை வைத்து உழுவானா?
நீங்களோ நீதி நியாயத்தைப் புரட்டி,*
ஜனங்களின் வாழ்க்கையை எட்டிபோல் கசப்பாக்கினீர்கள்.[a]
13 நீங்கள் வீணான காரியங்களில் சந்தோஷப்படுகிறீர்கள்.
"எங்களுடைய பலத்தால்தானே இவ்வளவு அதிகாரம்
கிடைத்திருக்கிறது?" என்கிறீர்கள்.[b]
14 இஸ்ரவேல் ஜனங்களே, மற்ற தேசத்தாரை உங்களுக்கு எதிராக
வரவழைப்பேன்.[c]
லெபோ-காமாத்*[d] தொடங்கி அரபா பள்ளத்தாக்கு# வரைக்கும்
அவர்கள் உங்களை அடக்கி ஒடுக்குவார்கள்' என்று பரலோகப்
படைகளின் கடவுளான யெகோவா சொல்கிறார்."

7 உன்னதப் பேரரசராகிய யெகோவா எனக்குக் காட்டிய காட்சி இது
தான்: ராஜாவுக்கென்று புற்கள் அறுக்கப்பட்ட பின்பு, கடைசிப் பருவத்
தின்* பயிர்கள் முளைக்க ஆரம்பித்தபோது கடவுள் வெட்டுக்கிளிக் கூட்
டத்தை அனுப்பினார். 2 தேசத்தின் பயிர்களை அந்த வெட்டுக்கிளிக்
கூட்டம் தின்றுதீர்த்தது. நான் அதைப் பார்த்ததும், "உன்னதப் பேரரசராகிய
யெகோவாவே, தயவுசெய்து மன்னித்துவிடுங்கள்.[e] யாக்கோபு பலவீனமாக
இருக்கிறானே, அவன் எப்படிப் பிழைப்பான்?"[f] என்றேன்.

3 அதனால், யெகோவா தன்னுடைய முடிவை மாற்றிக்கொண்டார்.*[g]
பின்பு யெகோவா என்னிடம், "இது நடக்காதபடி பார்த்துக்கொள்கிறேன்"
என்றார்.

4 உன்னதப் பேரரசராகிய யெகோவா எனக்குக் காட்டிய காட்சி
இதுதான்: உன்னதப் பேரரசராகிய யெகோவா தண்டனை கொடுப்பதற்காக
நெருப்பை வரச் செய்தார். அது ஆழமான கடலை வற்றிப்போக வைத்தது,
நிலத்தின் ஒரு பகுதியைச் சுட்டெரித்தது. 5 அப்போது நான், "உன்னதப்
பேரரசராகிய யெகோவாவே, தயவுசெய்து இது நடக்காதபடி தடுத்து நிறுத்
துங்கள்.[h] யாக்கோபு பலவீனமாக இருக்கிறானே, அவன் எப்படிப் பிழைப்
பான்?"[i] என்றேன்.

6 அதனால், யெகோவா தன்னுடைய முடிவை மாற்றிக்கொண்டார்.*[j]
பின்பு யெகோவா என்னிடம், "இதுவும் நடக்காதபடி பார்த்துக்கொள்கி
றேன்" என்றார்.

7 அவர் எனக்குக் காட்டிய காட்சி இதுதான்: தூக்குநூலால்* சரி
பார்த்துக் கட்டப்பட்ட ஒரு மதில்மேல் யெகோவா நின்றுகொண்டிருந்தார்.
அவர் கையில் ஒரு தூக்குநூல் இருந்தது. 8 பின்பு யெகோவா என்னிடம்,
"ஆமோஸ், நீ என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு நான், "ஒரு தூக்
குநூலைப் பார்க்கிறேன்" என்றேன். பின்பு யெகோவா, "என் ஜனங்களாகிய
இஸ்ரவேலர்களின் நடுவில் நான் தூக்குநூலைத் தொங்கவிடுகிறேன். அவர்
களை இனி மன்னிக்க மாட்டேன்.[k] 9 ஈசாக்கின் ஆராதனை மேடுகள்[l]
பாழாக்கப்படும், இஸ்ரவேலின் வழிபாட்டு இடங்கள் நாசமாக்கப்படும்,[m]

6:12 *நே.மொ., "விஷச்செடியாக மாற்றி." 6:14 *வே.வா., "காமாத்தின் நுழைவாசல்." #அதாவது, "காட்டாற்றுப் பள்ளத்தாக்கு." சொல் பட்டியலைப் பாருங்கள். 7:1 *அதாவது, "ஜனவரி, பிப்ரவரி மாதங்களின்." 7:3, 6 *வே.வா., "மனம் வருந்தினார்." 7:7 *வே.வா., "தூக்குக்குண்டினால்."

அதி. 6
a 1ரா 21:13; ஏசா 59:13; ஓசி 10:4; ஆமோ 5:7
b உபா 8:17, 18; சங் 75:5
c உபா 28:49, 50; 2ரா 15:29; 2ரா 17:6; ஏசா 7:20; ஏசா 8:4; ஏசா 10:5, 6; ஓசி 10:6
d எண் 34:2, 8

அதி. 7
e எரே 14:7; தானி 9:19
f ஏசா 37:4
g உபா 32:36; சங் 106:44, 45; ஓசி 11:8
h யாத் 32:11
i ஏசா 1:9; ஆமோ 7:2
j யாத் 32:14
k ஆமோ 8:2
l 1ரா 12:25, 31; 1ரா 13:33
m ஓசி 10:8; ஆமோ 5:5; ஆமோ 8:14

யெரொபெயாமின் குடும்பத்தாரை அழிக்க நான் வாளோடு வருவேன்”[a]
என்றார்.

10 பெத்தேலின் ஆலய குருவான அமத்சியா,[b] இஸ்ரவேலின் ராஜா
வாகிய யெரொபெயாமுக்கு[c] இந்தச் செய்தியை அனுப்பினார்: “ஆமோஸ்
இஸ்ரவேலின் நடுவில் இருந்துகொண்டே உங்களுக்கு எதிராகச் சதித்திட்
டம் தீட்டிக்கொண்டிருக்கிறான்.[d] அவன் சொல்வதை ஜனங்களால் பொறுத்
துக்கொள்ள முடியவில்லை.[e] **11** ஏனென்றால், ராஜாவாகிய நீங்கள்
வாளால் சாகப்போகிறீர்கள் என்றும், ஜனங்கள் கண்டிப்பாகச் சிறைபிடிக்கப்
பட்டுப் போவார்கள் என்றும் அவன் சொல்கிறான்.”[f]

12 பின்பு அமத்சியா ஆமோசிடம், “தரிசனக்காரனே, யூதாவுக்கு ஓடிப்
போ. அங்கே உன் பிழைப்பைப் பார்த்துக்கொள், உன் தீர்க்கதரிசனத்தை
அங்கே போய்ச் சொல்.[g] **13** பெத்தேலில் நீ இனி தீர்க்கதரிசனம் சொல்
லக் கூடாது.[h] இது ராஜாவின் கோயிலும்[i] அரச மாளிகையும் இருக்கிற
இடம்” என்றார்.

14 அதற்கு ஆமோஸ், “நான் தீர்க்கதரிசியும் இல்லை, தீர்க்கதரிசியின்
மகனும் இல்லை. சாதாரண மேய்ப்பன்,[j] காட்டத்தி மரத் தோப்பில் வேலை
செய்தவன்.* **15** மந்தைகளின் பின்னால் போய்க்கொண்டிருந்த என்னை
யெகோவா அழைத்தார். பின்பு யெகோவா என்னிடம், ‘நீ போய் என் ஜனங்
களாகிய இஸ்ரவேலர்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்’ என்றார்.[k] **16** அத
னால், யெகோவா சொல்வதை இப்போது கேள்: ‘இஸ்ரவேலுக்கு எதிராகத்
தீர்க்கதரிசனம் சொல்லாதே[l] என்றும், ஈசாக்கின் வம்சத்தாருக்கு எதிராக ஒன்
றும் பேசாதே[m] என்றும் நீ சொல்கிறாய். **17** அதனால், யெகோவா சொல்
வது இதுதான்: “இந்த நகரத்தில் உன் மனைவி விபச்சாரியாவாள், உன் மகன்
களும் மகள்களும் வாளால் சாவார்கள். உன் தேசம் அளவுநூலால்
அளக்கப்பட்டு பங்கிடப்படும், நீ வேறொரு தேசத்தில் சாவாய். இஸ்ரவேலர்
கள் நிச்சயம் சிறைபிடிக்கப்பட்டுப் போவார்கள்”’”[n] என்றார்.

8 உன்னதப் பேரரசராகிய யெகோவா, கோடைக் காலத்துப் பழங்கள்
உள்ள கூடை ஒன்றை எனக்குக் காட்டினார். **2** பின்பு அவர்,
“ஆமோஸ், நீ என்ன பார்க்கிறாய்?” என்று கேட்டார். அதற்கு நான்,
“கோடைக் காலத்துப் பழங்கள் உள்ள ஒரு கூடையைப் பார்க்கிறேன்”
என்றேன். அப்போது யெகோவா, “என் ஜனங்களாகிய இஸ்ரவேலர்க
ளுக்கு முடிவு வந்துவிட்டது. இனி நான் அவர்களை மன்னிக்க மாட்டேன்.[o]
3 ‘அந்த நாளிலே, ஆலயத்தில் பாட்டு சத்தத்துக்குப் பதிலாகப் புலம்பல் சத்
தம் கேட்கும்’[p] என்று உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்கிறார். ‘எங்கு
பார்த்தாலும் பிணங்கள் கிடக்கும்[q]—உஷ், அமைதி!’

4 ஏழைகளை மிதிப்பவர்களே,
தாழ்மையானவர்களை* அழிப்பவர்களே,[r]
5 நீங்கள், ‘மாதப் பிறப்பு* பண்டிகை எப்போது முடியும்?[s] பயிர்களை
விற்க வேண்டுமே,
ஓய்வுநாள்[t] எப்போது முடியும்? தானியங்களை விற்பனை செய்ய
வேண்டுமே,
அளவைக் குறைத்து, விலையை ஏற்றிவிடலாம்,

7:14 * வே.வா., “காட்டத்திப் பழங்களைக் குத்திவிட்டவன்.” **8:4** * வே.வா., “சாந்தமா
னவர்களை.” **8:5** * வே.வா., “முதலாம் பிறை.”

அதி. 7
a 2ரா 15:8, 10; ஓசி 13:16
b 1ரா 12:32
c 2ரா 14:23
d எரே 26:8, 9; ஆமோ 1:1
e எரே 18:18
f ஆமோ 5:5; ஆமோ 6:7
g ஏசா 30:10
h ஆமோ 2:12
i 1ரா 12:29, 32; 1ரா 13:1
j ஆமோ 1:1
k எரே 1:7; எசே 2:3; 2பே 1:21
l எரே 11:21; ஆமோ 7:13
m மீ 2:6
n லேவி 26:33; 2ரா 17:6

அதி. 8
o ஆமோ 4:12; ஆமோ 7:8
p ஓசி 10:5; ஆமோ 5:23
q ஆமோ 6:9, 10
r ஆமோ 2:6, 7
s எண் 10:10
t யாத் 20:8

கள்ளத் தராசை வைத்து ஏமாற்றலாம்,[a]
6 வெள்ளியைக் கொடுத்து எளியவனை வாங்கலாம்,
ஒரு ஜோடி செருப்பைக் கொடுத்து ஏழையை வாங்கலாம்,[b]
மட்டமான தானியங்களை ஜனங்கள் தலையில் கட்டலாம்' என்றெல்லாம் திட்டமிடுகிறீர்கள்.
இப்போது இதைக் கொஞ்சம் கேளுங்கள்.
7 யாக்கோபின் மகிமையாக* இருக்கும் யெகோவா,[c] தன்மீதே சத்தியம் செய்து இப்படிச் சொல்லியிருக்கிறார்:
'நான் அவர்களுடைய அக்கிரமங்களைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டேன்.[d]
8 தேசம்* நடுநடுங்கும்.
அதில் குடியிருக்கும் எல்லாரும் புலம்புவார்கள்.[e]
அது எகிப்தின் நைல் நதிபோல் கொந்தளித்து,
அதே நைல் நதிபோல் அடங்கிவிடும்.'[f]
9 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'அந்த நாளிலே, நடுப்பகலில் சூரியனை மறையச் செய்வேன்.
பட்டப்பகலில் தேசத்தை இருட்டாக்குவேன்.[g]
10 உங்களுடைய கொண்டாட்டத்தைத் துக்கமாக மாற்றுவேன்.[h]
உங்கள் பாடல்களைப் புலம்பல்களாக மாற்றுவேன்.
எல்லாருடைய இடுப்பிலும் துக்கத் துணி* கட்டுவேன், எல்லாருடைய தலைகளையும் மொட்டையாக்குவேன்.
ஒரே மகனைப் பறிகொடுத்தவர்கள் கதறுவது போல எல்லாரையும் கதற வைப்பேன்.
அந்த நாளின் முடிவு படுசோகமாக இருக்கும்.'
11 உன்னதப் பேரரசராகிய யெகோவா சொல்வது இதுதான்:
'ஒரு காலம் வரப்போகிறது, அப்போது தேசத்தில் பஞ்சத்தைக் கொண்டுவருவேன்.
அது உணவு கிடைக்காத பஞ்சமோ தண்ணீர் கிடைக்காத பஞ்சமோ இல்லை.
அது யெகோவாவின் வார்த்தை கிடைக்காத பஞ்சம்.[i]
12 அப்போது, அவர்கள் ஒரு கடலிலிருந்து இன்னொரு கடலுக்குத் தள்ளாடிக்கொண்டு போவார்கள்.
வடக்கிலிருந்து கிழக்குக்குத் தடுமாறிக்கொண்டு போவார்கள்.
யெகோவாவின் வார்த்தையைத் தேடி அலைவார்கள், ஆனால் கண்டுபிடிக்க மாட்டார்கள்.
13 அந்த நாளில், அழகான கன்னிப் பெண்களும் இளம் ஆண்களும்
தாகத்தால் சுருண்டு விழுவார்கள்.
14 அவர்கள் சமாரியாவின் பொய்க் கடவுள்கள்மேல்* சத்தியம் செய்கிறார்கள்.[j]

8:7 *வே.வா., "பெருமையாக." 8:8 *வே.வா., "பூமி." 8:10 *சொல் பட்டியலைப் பாருங்கள். 8:14 *நே.மொ., "பாவத்தின் மேல்." அதாவது, "பாவத்துக்குக் காரணமான சிலைகள்மேல்."

அதி. 8
a லேவி 19:35, 36; ஓசி 12:7; மீ 6:10, 11
b லேவி 25:39; ஆமோ 2:6
c உபா 33:26; சங் 68:34
d ஓசி 8:13
e ஓசி 4:3
f ஆமோ 9:5
g மீ 3:6
h ஓசி 2:11
i சங் 74:9; எசே 7:26; மத் 4:4
j ஓசி 8:5; ஓசி 10:5

“தாண் நகரமே,[a] உன் கடவுள்மேல் சத்தியம்!” என்றும்,
“பெயெர்-செபாவின்[b] பாதைமேல் சத்தியம்!” என்றும் சொல்கிறார்கள்.
அவர்கள் விழுவார்கள், எழுந்திருக்கவே மாட்டார்கள்.’ ”[c]

9 பலிபீடத்துக்கு மேலாக யெகோவா நிற்பதைப் பார்த்தேன்.[d] அப்போது
அவர், “தூண்களின் மேல்பகுதியை உடைத்துப்போடு, அவற்றின் அஸ்
திவாரம் ஆட்டம் காணட்டும். தூண்களின் தலைப்பகுதியைத் தகர்த்துப்
போடு. ஜனங்களில் மீதியாக இருப்பவர்களை நான் வாளால் கொல்வேன்.
யாராலும் தப்பித்து ஓட முடியாது, தப்பிக்க நினைப்பவர்கள் மாட்டிக்கொள்
வார்கள்.[e]

2 அவர்கள் பாதாளம்வரை* குழிதோண்டிப் பதுங்கிக்கொண்டாலும்,
அவர்களை மேலே இழுத்து வருவேன்.
அவர்கள் வானம்வரை ஏறிப் போனாலும்,
அவர்களைக் கீழே இழுத்து வருவேன்.
3 அவர்கள் கர்மேல் மலைமேல் ஒளிந்துகொண்டாலும்,
அங்கே அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பேன்.[f]
அவர்கள் என் கண்களிலிருந்து தப்பிக்க கடலுக்கு அடியில்
மறைந்துகொண்டாலும்,
அவர்களைக் கடிக்கும்படி பாம்புக்குக் கட்டளை கொடுப்பேன்.
4 எதிரிகள் அவர்களைப் பிடித்துக்கொண்டு போனாலும்,
அவர்களைக் கொல்லும்படி வாளுக்குக் கட்டளை கொடுப்பேன்.[g]
அவர்களை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக அழிப்பதிலேயே குறியாக
இருப்பேன்.[h]
5 உன்னதப் பேரரசரான பரலோகப் படைகளின் யெகோவா தேசத்தின்
மேல்* கை வைப்பார்.
அப்போது அது அதிரும்,[i] ஜனங்களெல்லாம் புலம்புவார்கள்.[j]
அது எகிப்தின் நைல் நதிபோல் கொந்தளித்து,
அதே நைல் நதிபோல் அடங்கிவிடும்.[k]
6 ‘பரலோகம்வரை படிக்கட்டுகளைக் கட்டுபவரும்,
வானம் என்ற கூரையைப் பூமிமேல் விரிப்பவரும்,
கடல்நீரை அள்ளி எடுப்பவரும்,
பூமிமேல் அதைப் பொழிய வைப்பவரும்[l]
யெகோவா என்ற பெயர் உள்ளவர்தான்.’[m]
7 யெகோவா சொல்வது இதுதான்: ‘இஸ்ரவேல் ஜனங்களே, நீங்கள்
எனக்கு கூஷ் வம்சத்தாரைப் போலத்தானே இருக்கிறீர்கள்?
உங்களை நான் எகிப்து தேசத்திலிருந்து விடுதலை
செய்யவில்லையா?[n]
பெலிஸ்தியர்களை கிரேத்தாவிலிருந்தும்,[o] சீரியர்களை கீரிலிருந்தும்
கூட்டிக்கொண்டு வரவில்லையா?[p]
8 யெகோவா சொல்வது இதுதான்: ‘யெகோவாவாகிய நான் உன்னதப்
பேரரசர். பாவம் நிறைந்த ராஜ்யத்தை என் கண்கள் பார்க்கின்றன.

9:2 * வே.வா., “கல்லறைவரை.” சொல் பட்டியலைப் பாருங்கள். **9:5** * வே.வா., “பூமி யின் மேல்.”

அதி. 8
a 1ரா 12:28-30
b ஆமோ 5:5
c 2ரா 18:11; ஓசி 13:16

அதி. 9
d ஏசா 6:1; எசே 1:27, 28
e ஆமோ 2:14
f எரே 23:24
g லேவி 26:33
h உபா 28:63, 65
i மீ 1:4
j ஓசி 4:3
k ஆமோ 8:8
l யோபு 36:27, 28; சங் 135:7
m யாத் 3:15; ஆமோ 4:13; ஆமோ 5:8
n யாத் 12:51
o எரே 47:4
p 2ரா 16:9

அதை இந்தப் பூமியிலிருந்து அழித்துவிடுவேன்.[a]
ஆனால், யாக்கோபின் வம்சத்தாரை அடியோடு அழிக்க
மாட்டேன்.[b]
9 இதோ! நான் கட்டளை கொடுக்கிறேன்.
எல்லா தேசத்தார் மத்தியிலும் இருக்கிற இஸ்ரவேலர்களை
உலுக்குவேன்.[c]
சல்லடையால் சலிப்பதுபோல் அவர்களைச் சலிப்பேன்.
அப்போது, எல்லா கற்களும் பிடிபடும்.*
10 பாவம் செய்கிற என் ஜனங்கள், “அழிவு எங்களுக்கு வராது, எங்கள்
பக்கத்தில்கூட வராது” என்று சொல்கிறார்கள்.
ஆனால், அவர்கள் எல்லாரும் வாளால் சாவார்கள்.’
11 ‘விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை அந்த நாளிலே எடுத்து
நிறுத்துவேன்.[d]
கூடாரத்தின் கிழிசல்களைத் தைப்பேன்.*
சேதமானவற்றைச் சரிசெய்வேன்.
பூர்வ காலத்தில் இருந்ததைப் போலவே திரும்பக் கட்டுவேன்.[e]
12 ஏதோமில் மிச்சம் இருப்பதெல்லாம் அப்போது அவர்களுடைய
சொத்தாகும்.[f]
என்னுடைய பெயரால் அழைக்கப்படுகிற எல்லா தேசங்களும்
அவர்களுக்குச் சொந்தமாகும்.’
இவற்றைச் செய்கிற யெகோவாவே இதைச் சொல்கிறார்.
13 யெகோவா சொல்வது இதுதான்: ‘காலம் வரப்போகிறது.
அப்போது, அமோகமான விளைச்சலை அறுவடை செய்வதற்குள்
உழுவதற்கான நேரமே வந்துவிடும்.
ஏராளமான திராட்சைப் பழங்களைப் பிழிந்து முடிப்பதற்குள்
விதைப்பதற்கான நேரமே வந்துவிடும்.[g]
மலைகளிலிருந்து தித்திப்பான திராட்சமது சொட்டும்.[h]
எல்லா குன்றுகளிலும் அது வழிந்தோடும்.[i]
14 சிறைபிடிக்கப்பட்டுப் போன என் ஜனங்களாகிய இஸ்ரவேலர்களைத்
திரும்பவும் கூட்டிக்கொண்டு வருவேன்.[j]
இடிந்து கிடக்கும் நகரங்களை அவர்கள் மறுபடியும் கட்டி அவற்றில்
குடியிருப்பார்கள்.[k]
திராட்சைத் தோட்டங்களை அமைத்து, அவற்றிலிருந்து கிடைக்கும்
திராட்சமதுவைக் குடிப்பார்கள்.[l]
பழத் தோட்டங்களை அமைத்து அவற்றின் பழங்களைச்
சாப்பிடுவார்கள்.’[m]
15 ‘அவர்களுடைய சொந்த தேசத்திலேயே அவர்களை நடுவேன்.
இனி யாரும் அவர்களை அங்கிருந்து பிடுங்கிப்போட மாட்டார்கள்.
நான் கொடுத்த தேசத்திலேயே அவர்கள் குடியிருப்பார்கள்’[n] என்று
யெகோவா சொல்கிறார்.”

9:9 *வே.வா., “ஒரு கல்கூட கீழே விழாது.” **9:11** *வே.வா., “ஓட்டைகளை அடைப்பேன்.”

அதி. 9
a 1ரா 13:34; 2ரா 18:11
b எரே 30:11
c லேவி 26:33; உபா 28:64
d ஏசா 9:6, 7; ஏசா 16:5; எரே 23:5; எசே 37:24, 25; சக 12:8; லூ 1:31-33
e 2சா 7:11; அப் 15:16-18
f எண் 24:18; ஏசா 11:14; ஒப 18, 19
g லேவி 26:5; ஓசி 2:22
h யோவே 3:18
i ஏசா 35:1; ஏசா 55:12
j எஸ்றா 3:1; எரே 30:3; எசே 39:25
k ஏசா 61:4; எசே 36:33
l ஏசா 65:21, 22; எசே 28:25, 26
m ஏசா 62:8, 9; மீ 4:4
n ஏசா 60:21; எசே 34:27, 28; எசே 37:25

ஒபதியா

முக்கியக் குறிப்புகள்

அகங்காரம் பிடித்த ஏதோம் கீழே தள்ளப்படும் (1-9)

யாக்கோபின் வம்சத்தாருக்கு ஏதோம் செய்த கொடுமை (10-14)

யெகோவா எல்லா தேசங்களையும் தண்டிக்கப்போகும் நாள் (15, 16)

யாக்கோபின் வம்சத்தார் திரும்பவும் தேசத்தைச் சொந்தமாக்குகிறார்கள் (17-21)

- ஏதோமை யாக்கோபின் வம்சத்தார் கொளுத்திவிடுவார்கள் (18)
- அரசாட்சி யெகோவாவுக்குச் சொந்தமாகும் (21)

1 ஒபதியா* பார்த்த தரிசனம்.
ஏதோமைப்[a] பற்றி உன்னதப் பேரரசராகிய யெகோவா சொன்னதை ஒபதியா இப்படி விவரித்தார்:
“யெகோவாவிடமிருந்து நமக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது.
எல்லா தேசங்களுக்கும் அதைச் சொல்ல ஒரு தூதுவர் அனுப்பப்பட்டிருக்கிறார்.
‘தயாராகுங்கள், ஏதோமுக்கு எதிராகப் போர் செய்யப் புறப்படுவோம்!’[b] என்று அந்தத் தூதுவர் அறிவிக்கிறார்.”
2 கடவுள் இப்படிச் சொல்கிறார்: “உன்னைத் தேசங்களிலேயே அற்பமான தேசமாக்கினேன்.
நீ அடியோடு வெறுக்கப்படுகிறாய்.[c]
3 பாறைகளின் நடுவே பாதுகாப்பாகக் குடியிருப்பவனே,
உயரமான குன்றின் மேல் வாழ்கிறவனே,
‘யாராலும் என்னைக் கீழே தள்ள முடியாது’ என்று உள்ளத்தில் சொல்கிறவனே,
நீ அகங்காரமாக* நடந்து மோசம்போனாயே![d]
4 நீ கழுகைப் போல் உயரத்தில் தங்கினாலும்,*
நட்சத்திரங்களின் நடுவில் கூடு கட்டினாலும்,
அங்கிருந்து உன்னைக் கீழே தள்ளுவேன்.” யெகோவாவே இதைச் சொல்கிறார்.
5 “ராத்திரியில் வருகிற திருடர்கள் என்ன செய்வார்கள்?
தங்களுக்குப் போதுமானதை மட்டும் எடுத்துக்கொண்டு மிச்சத்தை விட்டுவிடுவார்கள்தானே?
திராட்சைக் குலைகளை அறுக்க வருகிறவர்கள் என்ன செய்வார்கள்?
கொஞ்சத்தை விட்டுவைப்பார்கள், இல்லையா?
ஆனால், நீ மிச்சம் மீதியில்லாமல் அடியோடு அழிக்கப்படுவாய்!*[e]

a ஏசா 21:11 எசே 25:12-14 யோவே 3:19 ஆமோ 1:11, 12
b எரே 49:14-16
c எரே 49:8
d மல் 1:4
e உபா 24:21 எரே 49:9, 10

1 * அர்த்தம், “யெகோவாவின் ஊழியர்.” **3** * இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. **4** * அல்லது, “பறந்தாலும்.” **5** * அல்லது, “அவர்கள் எந்தளவுக்கு அழித்துவிடுவார்கள்!”

6 ஏசாவே, உன்னை வலைவீசித் தேடினார்கள்!
உன் புதையல்களைக் கொள்ளையடிக்கத் துடித்தார்கள்!
7 எல்லைவரை உன்னைத் துரத்தினார்கள்.
உன் கூட்டாளிகள் எல்லாரும் உன்னை ஏமாற்றினார்கள்.
உன்னோடு சமாதானமாக இருந்தவர்கள் உன்னை வீழ்த்தினார்கள்.
உன்னோடு சேர்ந்து சாப்பிடுகிறவர்கள் உனக்கு வலை விரிப்பார்கள்.
ஆனால், நீ அதை உணர மாட்டாய்.
8 அந்த நாளில், ஏதோமில் உள்ள ஞானிகளையும்,[a]
ஏசாவின் மலைப்பகுதியில் உள்ள அறிவாளிகளையும்*
நான் அழிக்காமல் விடமாட்டேன்” என்று யெகோவா சொல்கிறார்.
9 “ஏசாவின் மலைப்பகுதியில் இருக்கிற எல்லாரும் படுகொலை செய்யப்படுவார்கள்.[b]
தேமானே,[c] உன் வீரர்கள் அப்போது கதிகலங்குவார்கள்.[d]
10 உன் சகோதரனான யாக்கோபுக்கு நீ கொடுமை செய்தாய்.[e]
அதனால், நீ பெருத்த அவமானம் அடைவாய்.[f]
அடியோடு அழிந்துபோவாய்.[g]
11 அவனுடைய வீரர்களை அன்னியர்கள் பிடித்துக்கொண்டு போனார்கள்.[h]
எருசலேமுக்குள் மற்ற தேசத்து ஜனங்கள் புகுந்தார்கள், அதைப் பங்கிட குலுக்கல் போட்டார்கள்.[i]
இதையெல்லாம் நீ பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்தாய்.
எதிரிகளைப் போலவே நீயும் நடந்துகொண்டாய்.
12 உன் சகோதரனுக்குக் கஷ்டம் வந்தபோது நீ ஏன் கைகொட்டிச் சிரித்தாய்?[j]
யூதா ஜனங்களுக்கு அழிவு வந்தபோது நீ ஏன் சந்தோஷத்தில் துள்ளினாய்?[k]
அவர்கள் வேதனையில் அவதிப்பட்டபோது நீ ஏன் அகம்பாவமாகப் பேசினாய்?
13 அழிவு நாளில் என் ஜனங்களுடைய நகரவாசலுக்குள் ஏன் போனாய்?[l]
அழிவு நாளில் அவர்கள் சின்னாபின்னமானதைப் பார்த்து ஏன் உள்ளுக்குள் சிரித்தாய்?
அழிவு நாளில் அவர்களுடைய சொத்துகளை ஏன் சுருட்டிக்கொண்டாய்?[m]
14 தப்பித்து ஓடியவர்களை வெட்டி வீழ்த்த ஏன் சாலை சந்திப்புகளில் காத்திருந்தாய்?[n]
மீதியிருந்தவர்களை இக்கட்டு நாளில் ஏன் எதிரிகளிடம் பிடித்துக் கொடுத்தாய்?
நீ இப்படியெல்லாம் செய்திருக்கக் கூடாது.[o]
15 யெகோவா எல்லா தேசங்களையும் தண்டிக்கப்போகும் நாள் வந்துவிட்டது.[p]
நீ செய்த தீமை உனக்கே திருப்பிச் செய்யப்படும்.[q]
மற்றவர்களுக்கு நீ செய்த கெடுதல் உன் தலையிலேயே வந்து விடியும்.

---

8 * வே.வா., “பகுத்தறிவு உள்ளவர்களையும்.”

a எரே 49:7
b ஏசா 34:5, 6
c ஆதி 36:10, 11; எசே 25:13; ஆமோ 1:12
d எரே 49:22
e ஆதி 27:41, 42; எண் 20:20, 21; சங் 83:4-6; சங் 137:7; யோவே 3:19; ஆமோ 1:11
f எரே 49:13
g மல் 1:3, 4
h 2ரா 24:10, 16; எரே 52:28
i யோவே 3:3
j மீ 4:11
k புல 4:21
l சக 1:15
m சங் 137:7; எசே 25:12
n ஆமோ 1:11
o எரே 30:7
p எரே 9:25, 26; எரே 25:32; யோவே 3:12, 14; மீ 5:15
q எசே 35:15

16 என்னுடைய பரிசுத்த மலையில் நீ மதுவைக் குடித்தாய்.
அதேபோல், எல்லா தேசத்தாரும் என்னுடைய கோபம் என்ற மதுவைக் குடிப்பார்கள்.[a]
அதை மடமடவென்று குடிப்பார்கள்.
பின்பு, இருந்த இடம் தெரியாமல் போய்விடுவார்கள்.
17 ஆனால், தப்பிக்கிறவர்கள் சீயோன் மலையில் இருப்பார்கள்.[b]
சீயோன் மலை பரிசுத்தமாக இருக்கும்.[c]
யாக்கோபின் வம்சத்தார் தங்களுக்குச் சேர வேண்டியதைக் கைப்பற்றுவார்கள்.[d]
18 யாக்கோபின் வம்சத்தார் நெருப்பு போலவும்,
யோசேப்பின் வம்சத்தார் தீப்பிழம்பு போலவும் இருப்பார்கள்.
ஆனால், ஏசாவின் வம்சத்தார் வைக்கோலைப் போல இருப்பார்கள்.
இவர்களை யோசேப்பின் வம்சத்தார் கொளுத்திவிடுவார்கள்.
ஏசாவின் வம்சத்தாரில் ஒருவரும் தப்பிக்க மாட்டார்கள்.[e]
யெகோவாவே இதைச் சொல்லியிருக்கிறார்.
19 அவர்கள் நெகேபையும் ஏசாவின் மலைப்பகுதியையும்,[f]
சேப்பெல்லாவையும் பெலிஸ்தியர்களின் தேசத்தையும்,[g]
எப்பிராயீமின் நிலத்தையும் சமாரியாவின் நிலத்தையும்[h] சொந்தமாக்கிக்கொள்வார்கள்.
கீலேயாத்தை பென்யமீன் சொந்தமாக்கிக்கொள்வான்.
20 இந்த அரணிலிருந்து சிறைபிடிக்கப்பட்டுப் போன இஸ்ரவேல் ஜனங்களுக்கு[i] கானானியர்களின் தேசம் சொந்தமாகும்.
சாறிபாத்[j] வரையுள்ள பகுதி அவர்கள் கைக்கு வந்து சேரும்.
எருசலேமிலிருந்து செப்பாராத்துக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்கள் நெகேபின் நகரங்களைக் கைப்பற்றுவார்கள்.[k]
21 ஏசாவின் மலைப்பகுதிக்குத் தீர்ப்பு கொடுப்பதற்காக[l]
மீட்பவர்கள் சீயோன் மலைக்குப் போவார்கள்.
அப்போது, அரசாட்சி யெகோவாவுக்குச் சொந்தமாகும்"[m] என்று அவர் சொல்கிறார்.

a எரே 25:17; எரே 49:12
b யோவே 2:32
c ஏசா 4:3; சக 8:3
d ஏசா 14:2; ஆமோ 9:11, 12
e எரே 49:17, 18; எசே 35:15
f ஆமோ 9:11, 12
g ஏசா 11:14; ஆமோ 1:8
h 2ரா 17:24; எரே 31:5, 6
i சங் 122:6, 7
j 1ரா 17:9
k எரே 13:19; எரே 33:13
l சங் 149:6, 7; எசே 35:11
m சங் 22:28; சக 14:9

யோனா

முக்கியக் குறிப்புகள்

1 யோனா யெகோவாவின் பேச்சைக் கேட்காமல் ஓடிப்போகப் பார்க்கிறார் (1-3)
யெகோவா கடும் புயல் வீசும்படி செய்கிறார் (4-6)
ஆபத்துக்கு யோனாதான் காரணம் (7-13)
கொந்தளிக்கும் கடலில் யோனா வீசப்படுகிறார் (14-16)
ஒரு பெரிய மீன் யோனாவை விழுங்குகிறது (17)

2 மீனின் வயிற்றிலிருந்து யோனா ஜெபம் செய்கிறார் (1-9)

யோனாவை மீன் கரையில் கக்கிப்போடுகிறது (10)

3 கடவுளுடைய பேச்சுக்குக் கீழ்ப்படிந்து யோனா நினிவேக்குப் போகிறார் (1-4)
யோனா சொல்வதைக் கேட்டு நினிவே ஜனங்கள் திருந்துகிறார்கள் (5-9)
கடவுள் நினிவே ஜனங்களை அழிக்காமல் விட்டுவிடுகிறார் (10)

4 கோபத்தில் யோனா சாக நினைக்கிறார் (1-3)
இரக்கம் காட்ட யோனாவுக்கு யெகோவா கற்றுக்கொடுக்கிறார் (4-11)
"நீ இந்தளவுக்குக் கோபப்படுவது நியாயமா?" (4)
சுரைக்காய்க் கொடியை வைத்து யோனாவுக்கு யெகோவா பாடம் கற்பிக்கிறார் (6-10)

1 அமித்தாயின் மகன் யோனாவுக்கு*[a] யெகோவாவிடமிருந்து ஒரு
செய்தி கிடைத்தது. 2 அவர் யோனாவிடம், "நினிவே மாநகரத்துக்
குப் புறப்பட்டுப் போ.[b] அங்கிருக்கிற ஜனங்கள் செய்கிற அக்கிரமத்துக்கு
அளவே இல்லாமல் போய்விட்டது. அதனால், அவர்களுக்குக் கிடைக்கப்
போகிற தண்டனையைப் பற்றி அறிவிப்பு செய்" என்று சொன்னார்.

3 ஆனால் யோனா, யெகோவாவின் பேச்சைக் கேட்காமல் தர்ஷீசுக்கு
ஓடிப்போக நினைத்து, யோப்பா துறைமுகத்துக்குப் போனார். அங்கே தர்
ஷீசுக்குப் போகும் கப்பல் தயாராக இருந்தது. உடனே, பணம் கட்டிவிட்டு
அதில் ஏறினார். இப்படி, யெகோவாவின் பேச்சைக் கேட்காமல் தர்ஷீசுக்
குக் கிளம்பினார்.

4 ஆனால், யெகோவா கடும் புயல் வீசும்படி செய்தார். கடல் பயங்கரமா
கக் கொந்தளித்தது. கப்பல் உடைந்துபோகும் நிலையில் இருந்தது.
5 கப்பலோட்டிகள் பயத்தில் நடுநடுங்கி, உதவிக்காக அவரவர் தெய்வத்
தைக் கூப்பிட்டார்கள். அதன்பின், கப்பலின் எடையைக் குறைப்பதற்காக
அதிலிருந்த பொருள்களைக் கடலில் தூக்கியெறிய ஆரம்பித்தார்கள்.[c]
ஆனால் யோனா, கப்பலின் அடித்தளத்துக்குப் போய்ப் படுத்துக்கொண்டு
நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார். 6 கப்பல் தலைவன் அவரிடம் வந்து,
"ஏன் இப்படித் தூங்கிக்கொண்டிருக்கிறாய்? எழுந்திரு. நீயும் உன் கடவு
ளிடம் வேண்டிக்கொள். உண்மைக் கடவுள் ஒருவேளை நம்மேல் இரக்கம்
காட்டி நம் உயிரைக் காப்பாற்றலாம்"[d] என்று சொன்னார்.

7 பிறகு கப்பலோட்டிகள், "நமக்கு ஏன் இப்படியொரு ஆபத்து வந்திருக்
கிறது? இதற்கு யார் காரணம் என்று தெரிந்துகொள்ள குலுக்கல் போட்டுப்[e]
பார்க்கலாம்" என்று பேசிக்கொண்டார்கள். குலுக்கலில் யோனாவின் பெயர்
விழுந்தது.[f] 8 உடனே அவர்கள் யோனாவிடம், "தயவுசெய்து சொல்,
நமக்கு ஏன் இப்படியொரு ஆபத்து வந்திருக்கிறது? இதற்கு யார் காரணம்?
நீ என்ன வேலை செய்கிறாய்? எங்கிருந்து வருகிறாய்? உன் தேசம் எது?
இனம் எது?" என்று கேட்டார்கள்.

9 அதற்கு யோனா, "நான் ஒரு எபிரெயன். பரலோகத்தின் கடவுளாகிய
யெகோவாவை வணங்குபவன். இந்தக் கடலையும் நிலத்தையும் படைத்த
வர் அவர்தான்" என்று சொன்னார்.

1:1 *யோனா என்ற பெயரின் அர்த்தம், "புறா."

அதி. 1
a 2ரா 14:25; லூ 11:29, 30
b மத் 12:41
c அப் 27:18, 38
d யோனா 3:9
e நீதி 16:33; நீதி 18:18
f யோசு 7:14, 18; 1சா 14:42, 43

10 அதோடு, யெகோவாவின் பேச்சைக் கேட்காமல் ஓடி வந்திருப்பதா
கவும் யோனா சொன்னார். அதைக் கேட்டபோது அவர்கள் இன்னும்
பயந்துபோய், “எவ்வளவு பெரிய தப்பு பண்ணிவிட்டாய்!” என்றார்கள்.
11 கடல் கொந்தளிப்பது அதிகமாகிக்கொண்டே போனதால் அவர்கள்
யோனாவிடம், “கடல் அலைகள் அடங்குவதற்கு நாங்கள் உன்னை என்ன
செய்வது?” என்று கேட்டார்கள். 12 அதற்கு அவர், “என்னைத் தூக்கிக்
கடலில் வீசிவிடுங்கள். அப்போது, கடல் அலைகள் அடங்கிவிடும். என்
னால்தான் நீங்கள் இந்தப் பயங்கரமான புயலில் சிக்கித் தவிக்கிறீர்கள்”
என்று சொன்னார். 13 இருந்தாலும், அந்த ஆட்கள் எப்படியாவது கப்ப
லைக் கரைசேர்க்கப் போராடினார்கள். ஆனால், முடியவில்லை. கடல் இன்
னும் பயங்கரமாகக் கொந்தளித்தது.

14 அப்போது அவர்கள், “யெகோவாவே, இந்த மனுஷனுடைய உயி
ருக்காக எங்கள் உயிரை எடுத்துவிடாதீர்கள். ஒரு அப்பாவியைக்
கொன்றதாக எங்கள்மேல் பழிசுமத்திவிடாதீர்கள். யெகோவாவே, உங்
கள் விருப்பப்படிதானே எல்லாம் நடந்திருக்கிறது” என்று யெகோவாவிடம்
கெஞ்சினார்கள். 15 பின்பு, யோனாவைத் தூக்கிக் கடலில் வீசினார்கள்.
உடனே, கடல் அமைதியாகிவிட்டது. 16 அதைப் பார்த்ததும் யெகோவா
மேல் அவர்களுக்கு ரொம்பவே பயம் வந்தது.[a] அதனால், யெகோவாவுக்
குப் பலி செலுத்தி, அவரிடம் நேர்ந்துகொண்டார்கள்.

17 அதன்பின் யெகோவா ஒரு பெரிய மீனை அனுப்பி, யோனாவை
விழுங்கும்படி செய்தார். யோனா மூன்று நாட்களுக்கு ராத்திரி பகலாக
அந்த மீனின் வயிற்றுக்குள் இருந்தார்.[b]

2 மீனின் வயிற்றில் இருந்தபோது யோனா தன் கடவுளாகிய யெகோவா
விடம் ஜெபம் செய்தார்.[c] 2 அவரிடம்,

“யெகோவாவே, இக்கட்டான சமயத்தில் உங்களைக் கூப்பிட்டேன்,
எனக்குப் பதில் தந்தீர்கள்.[d]
கல்லறையின் ஆழத்திலிருந்து* உதவிக்காகக் கதறினேன்,[e]
என் குரலைக் கேட்டீர்கள்.
3 நடுக்கடலில் என்னைத் தூக்கியெறிந்தீர்கள், ஆழத்துக்குள் வீசினீர்கள்.
தண்ணீர் புரண்டுவந்து என்னைப் புரட்டிப்போட்டது.[f]
பெரிய அலைகள் என்னைச் சுழற்றியடித்தன.[g]
4 அப்போது நான், ‘உங்கள் கண் முன்னாலிருந்து என்னை
விரட்டிவிட்டீர்களே!
இனி உங்களுடைய பரிசுத்த ஆலயத்தை எப்படிப் பார்ப்பேன்?’
என்று கேட்டேன்.
5 கடல்தண்ணீர் என்னை அமிழ்த்தியது, நான் மூச்சுத் திணறினேன்.[h]
ஆழத்தில் மூழ்கிக்கொண்டே போனேன்.
கடற்பாசிகள் என் தலையைச் சுற்றிக்கொண்டன.
6 கடலின்* அடிமட்டத்துக்கே போய்விட்டேன்.
பூமியின் தாழ்ப்பாள்கள் என்முன் என்றென்றைக்கும்
அடைத்துக்கொண்டன.

2:2 * நே.மொ., “வயிற்றிலிருந்து.” **2:6** * நே.மொ., “மலைகளின்.”

அதி. 1
a தானி 6:26, 27
b மத் 12:39, 40
மத் 16:4
லூ 11:29, 30

அதி. 2
c சங் 91:14, 15
மத் 12:40
d சங் 120:1
e சங் 130:1, 2
f சங் 69:1
g சங் 42:7
h சங் 69:1

ஆனாலும் என் கடவுளாகிய யெகோவாவே, என் உயிரைச்
சவக்குழியிலிருந்து காப்பாற்றினீர்கள்.[a]
7 யெகோவாவே, என் உயிர் ஊசலாடியபோது உங்களைத்தான்
நினைத்தேன்.[b]
உங்களுடைய பரிசுத்த ஆலயத்திலிருந்து என் ஜெபத்தைக்
கேட்டீர்கள்.[c]
8 ஒன்றுக்கும் உதவாத சிலைகளை வணங்குகிறவர்கள், தங்களுக்கு
மாறாத அன்பைக் காட்டிய உங்களை மறந்துவிட்டார்கள்.*
9 ஆனால் நான் உங்களுக்கு நன்றி சொல்வேன்,
பலி செலுத்துவேன்.
உங்களிடம் நேர்ந்துகொண்டதை நிறைவேற்றுவேன்.[d]
யெகோவாவே, நீங்கள்தான் மீட்பர்"[e] என்றார்.

10 பின்பு, யெகோவா அந்த மீனுக்குக் கட்டளை கொடுத்தார். அது
யோனாவைக் கரையில் கக்கிப்போட்டது.

3 அதன்பின், யெகோவா இரண்டாவது தடவையாக யோனாவிடம்,[f]
2 "நினிவே மாநகரத்துக்குப்[g] புறப்பட்டுப் போ. நான் சொல்கிற செய்
தியை அங்கே இருக்கிற ஜனங்களுக்குச் சொல்" என்றார்.

3 யோனாவும் யெகோவாவின் பேச்சுக்குக் கீழ்ப்படிந்து[h] நினிவேக்குப்[i]
போனார். அது மிகப் பெரிய நகரம், அதைச் சுற்றிவருவதற்கு மூன்று நாள்
ஆகும். 4 யோனா அங்கே போய் ஒருநாள் முழுவதும் நடந்தபடி,*
"இன்னும் நாற்பதே நாளில் நினிவே அழிக்கப்படும்" என்று எல்லாருக்கும்
சொன்னார்.

5 அதைக் கேட்டதும் நினிவே ஜனங்கள் கடவுள்மேல் விசுவாசம் வைத்
தார்கள்.[j] சிறியோர்முதல் பெரியோர்வரை எல்லாரும் விரதமிருக்க முடிவு
செய்து, துக்கத் துணியை* போட்டுக்கொண்டார்கள். 6 இந்த விஷயம்
ராஜாவின் காதுக்கு எட்டியது. உடனே, அவர் சிம்மாசனத்திலிருந்து எழுந்து,
ராஜ உடையைக் கழற்றிவிட்டு, துக்கத் துணியைப் போட்டுக்கொண்டார்.
பின்பு, சாம்பலில் உட்கார்ந்தார். 7 அதுமட்டுமல்ல, நினிவே நகரமெங்கும்
ஆட்களை அனுப்பி,

"ராஜாவும் அவருடைய மந்திரிகளும் கட்டளையிடுவது என்னவென்
றால், மனிதர்களும் சரி, மிருகங்களும் சரி எதையுமே சாப்பிடக் கூடாது.
யாரும் ஆடுமாடுகளுக்குத் தீனி போடக் கூடாது. பச்சைத்தண்ணீர்கூட
யார் பல்லிலும் படக் கூடாது. 8 எல்லாரும் துக்கத் துணியைப் போட்டுக்
கொள்ள வேண்டும்; மிருகங்களுக்கும் துக்கத் துணியைப் போர்த்த வேண்
டும். எல்லாரும் கடவுளிடம் உருக்கமாக வேண்டிக்கொள்ள வேண்டும்.
வன்முறையையும் மோசமான வழிகளையும் விட்டுவிட வேண்டும். 9 அப்
போது, கடவுள் ஒருவேளை அவருடைய முடிவை மாற்றிக்கொள்ளலாம்.*
அவருடைய கோபத்தை விட்டுவிட்டு, நமக்கு உயிர்ப்பிச்சை தரலாம்"
என்று அறிவிப்பு செய்தார்.

2:8 *அல்லது, "நம்பிக்கைத் துரோகம் செய்கிறார்கள்." **3:4** *அல்லது, "நடந்த பின்பு." **3:5** *சொல் பட்டியலைப் பாருங்கள். **3:9** *வே.வா., "அவர் செய்ய நினைத்ததைப் பற்றி மனம் வருந்தலாம்."

அதி. 2
a சங் 16:10; சங் 30:3; ஏசா 38:17; அப் 2:31
b சங் 142:2, 3; சங் 143:4, 5
c சங் 18:6
d சங் 50:14
e சங் 3:8; ஏசா 12:2

அதி. 3
f யோனா 1:1, 2
g ஆதி 10:8, 11; நாகூ 1:1; செப் 2:13
h யோனா 2:9
i ஆதி 10:8, 11
j யாத் 9:20; மத் 12:41; லூ 11:32

10 உடனே ஜனங்கள் தங்களுடைய மோசமான வழிகளைவிட்டுத்
திருந்தினார்கள்;[a] அதை உண்மைக் கடவுள் பார்த்தார். அதனால், தன்
னுடைய முடிவை மாற்றிக்கொண்டு* அவர்களை அழிக்காமல் விட்டு
விட்டார்.[b]

4 ஆனால், அது யோனாவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவருக்
குக் கோபம் கோபமாக வந்தது. **2** அதனால் யெகோவாவிடம்,
"யெகோவாவே, இப்படி நடக்கும் என்று என்னுடைய தேசத்தில் இருந்த
போதே எனக்குத் தெரியும். அதனால்தான் தர்ஷீசுக்கு[c] ஓடிப்போகப் பார்த்
தேன். நீங்கள் கரிசனை உள்ளவர்,* எல்லாருக்கும் இரக்கம் காட்டுவீர்கள்,
சீக்கிரத்தில் கோபப்பட மாட்டீர்கள், மாறாத அன்பை அளவில்லாமல் காட்
டுவீர்கள்,[d] யாரையாவது அழிக்க நினைத்தாலும் மனதை மாற்றிக்கொள்வீர்
கள்; இதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்" என்று சொன்னார்.
3 அதோடு, "யெகோவாவே, தயவுசெய்து என்னைக் கொன்றுவிடுங்கள்.
நான் வாழ்வதைவிட சாவதே மேல்"[e] என்று சொன்னார்.

4 அதற்கு யெகோவா, "நீ இந்தளவுக்குக் கோபப்படுவது நியாயமா?"
என்று கேட்டார்.

5 பின்பு, யோனா நினிவேயைவிட்டு வெளியே வந்தார். அந்த நகரத்
துக்கு என்ன நடக்கும் என்று பார்ப்பதற்காக கிழக்கே ஒரு பந்தல் போட்டு,
அதன்கீழ் உட்கார்ந்தார்.[f] **6** யோனாவுக்கு நிழல் கொடுப்பதற்காகவும்,
அவருடைய சோகத்தைத் தீர்ப்பதற்காகவும் யெகோவா ஒரு சுரைக்காய்க்
கொடியை* வளர வைத்தார். அதைப் பார்த்து யோனா ரொம்பவே சந்தோ
ஷப்பட்டார்.

7 ஆனால் அடுத்த நாள் விடியற்காலையில், கடவுள் ஒரு புழுவை வர
வைத்தார். அது அந்தச் சுரைக்காய்க் கொடியை அரித்துத் தின்றதால்,
கொடி பட்டுப்போனது. **8** வெயில் ஏற ஆரம்பித்தபோது கிழக்கிலிருந்து
அனல் காற்றைக் கடவுள் வீச வைத்தார். மண்டையைப் பிளக்கும் வெயி
லில் யோனாவுக்கு மயக்கமே வந்துவிடும்போல் இருந்தது. "என்னைக்
கொன்றுவிடுங்கள்! நான் வாழ்வதைவிட சாவதே மேல்"[g] என்று புலம்பிக்
கொண்டே இருந்தார்.

9 அப்போது யோனாவிடம் கடவுள், "ஒரு சுரைக்காய்க் கொடிக்காக நீ
இந்தளவுக்குக் கோபப்படுவது நியாயமா?"[h] என்று கேட்டார்.

அதற்கு யோனா, "ஆமாம், நியாயம்தான்; செத்துவிடலாம் என்கிற
அளவுக்குக் கோபம் கோபமாக வருகிறது" என்று சொன்னார்.
10 ஆனால் யெகோவா அவரிடம், "அந்தச் சுரைக்காய்க் கொடிக்காக நீ
பாடுபடவும் இல்லை, அதை வளர வைக்கவும் இல்லை. அது ஒரே ராத்தி
ரியில் வளர்ந்து, ஒரே ராத்திரியில் பட்டுப்போனது. சாதாரண ஒரு கொடிக்
காக நீ இப்படி வருத்தப்படுகிறாயே, **11** நல்லது கெட்டது தெரியாத*
1,20,000-க்கும் அதிகமான மனுஷர்களும் கணக்குவழக்கில்லாத மிருகங்
களும் வாழ்கிற நினிவே மாநகரத்துக்காக[i] நான் வருத்தப்படாமல் இருப்
பேனா?"[j] என்றார்.

அதி. 3
a லூ 11:32
b எரே 18:7, 8; எசே 18:21-23; யோனா 4:2

அதி. 4
c யோனா 1:3
d யாத் 34:6; சங் 78:38; சங் 86:5; சங் 145:8
e எண் 11:11, 15; 1ரா 19:2, 4; யோபு 6:8, 9
f யோனா 3:4
g யோனா 4:3
h யோனா 4:4
i யோனா 3:3
j சங் 36:6; சங் 145:9

3:10 *வே.வா., "அவர் செய்ய நினைத்ததைப் பற்றி மனம் வருந்தி." **4:2** *வே.வா., "உங்களுக்கு ரொம்பவும் இளகின மனசு." **4:6** *அல்லது, "ஆமணக்கு செடியை." **4:11** *வே.வா., "வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத."

மீகா

முக்கியக் குறிப்புகள்

1 சமாரியாவுக்கும் யூதாவுக்கும் எதிரான தண்டனைத் தீர்ப்பு (1-16)
- ஜனங்களுடைய பாவங்களும் குற்றங்களும்தான் பிரச்சினைகளுக்குக் காரணம் (5)

2 மற்றவர்களை அடக்கி ஒடுக்குகிறவர்களுக்குக் கேடு! (1-11)
- இஸ்ரவேலர்கள் திரும்பவும் ஒன்றுசேர்க்கப்படுகிறார்கள் (12, 13)
  - தேசத்தில் ஜனங்கள் கலகலப்பாக இருப்பார்கள் (12)

3 தலைவர்களும் தீர்க்கதரிசிகளும் கண்டிக்கப்படுகிறார்கள் (1-12)
- யெகோவாவின் சக்தியால் மீகா பலம் பெறுகிறார் (8)
- குருமார்கள் பணத்துக்காகப் போதிக்கிறார்கள் (11)
- எருசலேம் மண்மேடாகும் (12)

4 யெகோவாவின் ஆலயம் இருக்கிற மலை உயர்த்தப்படும் (1-5)
- வாள்கள் மண்வெட்டிகளாக மாற்றப்படும் (3)
- ‘நாம் நம்முடைய கடவுளாகிய யெகோவாவின் வழியில் நடப்போம்’ (5)
- சீயோன் தேசம் திரும்பவும் பலப்படுத்தப்படும் (6-13)

5 ஒரு ராஜாவின் பெருமை பூமியெங்கும் எட்டும் (1-6)
- அந்த ராஜா பெத்லகேமிலிருந்து வருவார் (2)
- மீதியிருக்கும் ஜனங்கள் பனித்துளி போலவும், சிங்கத்தைப் போலவும் இருப்பார்கள் (7-9)
- தேசம் சுத்தமாக்கப்படும் (10-15)

6 இஸ்ரவேலோடு யெகோவாவுக்கு இருக்கும் வழக்கு (1-5)
- யெகோவா என்ன கேட்கிறார்? (6-8)
  - நியாயம், உண்மைத்தன்மை, அடக்கம் (8)
- இஸ்ரவேல் செய்த குற்றமும் அதற்கான தண்டனையும் (9-16)

7 இஸ்ரவேலில் நடக்கிற கெட்ட காரியங்கள் (1-6)
- ஒருவருக்கு அவருடைய குடும்பத்தாரே எதிரிகள் (6)
- ‘நான் பொறுமையோடு காத்திருப்பேன்’ (7)
- கடவுளுடைய ஜனங்களுக்கு நியாயம் கிடைக்கிறது (8-13)
- மீகா ஜெபம் செய்கிறார், கடவுளைப் புகழ்கிறார் (14-20)
  - யெகோவா கொடுக்கும் பதில் (15-17)
  - ‘யெகோவாவைப் போன்ற கடவுள் யாரும் இல்லை’ (18)

1 யோதாம்,[a] ஆகாஸ்,[b] எசேக்கியா[c] ஆகிய ராஜாக்கள்[d] யூதாவை
ஆட்சி செய்த காலத்தில், மொரேசாவைச் சேர்ந்த மீகாவுக்கு* சமா
ரியாவையும் எருசலேமையும் பற்றி யெகோவாவிடமிருந்து ஒரு செய்தி
கிடைத்தது.[e] அதில் அவர்,

2 “ஜனங்களே, கேளுங்கள்!
பூமியே, அதில் உள்ளவையே, கவனித்துக் கேளுங்கள்!
உன்னதப் பேரரசராகிய யெகோவா உங்களுக்கு எதிராகச் சாட்சி
சொல்வதைக்[f] கேளுங்கள்!
பரிசுத்த ஆலயத்தில் இருக்கிற யெகோவா சொல்வதைக்
கவனியுங்கள்!

1:1 *மீகா என்பது மிகாவேல் அல்லது மிகாயா என்பதன் சுருக்கம். இதன் அர்த்தம், “யெகோவாவைப் போன்றவர் யார்?”

அதி. 1
- a 2ரா 15:32-34; 2நா 27:1, 2
- b 2ரா 16:1, 2
- c 2ரா 18:1-3; 2நா 29:1, 2
- d ஏசா 1:1; ஓசி 1:1
- e எரே 26:18
- f சங் 50:7

3 இதோ! யெகோவா தன்னுடைய இடத்திலிருந்து வருகிறார்.
அவர் கீழே வந்து, பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார்.
4 நெருப்பு பட்ட மெழுகு போலவும்,
செங்குத்தான பாறையிலிருந்து கொட்டும் தண்ணீர் போலவும்,
அவருடைய காலடியில் மலைகள் உருகியோடும்,[a]
பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும்.
5 எல்லாவற்றுக்கும் காரணம் யாக்கோபு செய்த குற்றங்கள்தான்,
இஸ்ரவேல் ஜனங்கள்* செய்த பாவங்கள்தான்.[b]
யாக்கோபின் குற்றங்களுக்கு யார் பொறுப்பு?
சமாரியா ஜனங்கள்தானே?[c]
யூதாவில் இருக்கிற ஆராதனை மேடுகளுக்கு யார் பொறுப்பு?[d]
எருசலேம் ஜனங்கள்தானே?
6 நான் சமாரியாவைக் கல்லும் மண்ணும் கிடக்கிற இடமாகவும்,
திராட்சைக் கொடிகளை நடுகிற இடமாகவும் ஆக்குவேன்.
அவளுடைய கற்களைப் பள்ளத்தாக்கில் உருட்டிவிட்டு,
அவளுடைய அஸ்திவாரங்கள் வெளியே தெரியும்படி செய்வேன்.
7 அவள் வணங்குகிற சிலைகளைச் சுக்குநூறாக்குவேன்.[e]
அவள் கும்பிடுகிற உருவங்களை உடைத்தெறிவேன்.
தன் உடலை விற்று அவள் வாங்கிக்கொண்ட எல்லாவற்றையும்
எரித்துவிடுவேன்.[f]
விபச்சாரத்துக்குக் கூலியாக அவள் பெற்றுக்கொண்ட எல்லாமே
மறுபடியும் விபச்சாரிகளுக்குக் கூலியாகக் கொடுக்கப்படும்" என்று
சொன்னார்.
8 இதனால், நான் சத்தமாக அழுது புலம்புவேன்.[g]
காலில் செருப்பு இல்லாமலும் உடம்பில் துணி இல்லாமலும் நடப்பேன்.[h]
நரியைப் போல ஊளையிடுவேன்.
நெருப்புக்கோழியைப் போல அலறுவேன்.
9 அவளுடைய காயம் ஆறாது.[i]
அது யூதா வரைக்கும் பரவியிருக்கிறது.[j]
அழிவு என் ஜனங்களுடைய நுழைவாசலுக்கு வந்துவிட்டது,
எருசலேமை எட்டிவிட்டது.[k]
10 "காத் நகரத்தில் இதை அறிவிப்பு செய்யாதீர்கள்.
ஒரு சொட்டு கண்ணீர்கூட விடாதீர்கள்.
பெத்-அப்ராவின் மண்ணில் புரளுங்கள்.
11 சாப்பீர் ஜனங்களே, வெற்று உடம்போடும் வெட்கத்தோடும்
புறப்பட்டுப் போங்கள்.
சாயனான் ஜனங்கள் வெளியில் தலைகாட்டாமல் இருக்கிறார்கள்.
பெத்-ஏசேலில் ஒப்பாரிச் சத்தம் கேட்கும்; இனி அங்கே உங்களுக்கு
உதவி கிடைக்காது.
12 நல்லது வருமென்று மாரோத் ஜனங்கள் காத்திருந்தார்கள்.

1:5 * வே.வா., "வீட்டார்."

அதி. 1
a நியா 5:5
சங் 97:5
b 2ரா 17:7, 8
c ஓசி 7:1
d 2ரா 16:2, 4
e லேவி 26:30
ஓசி 8:6
f ஓசி 2:5
ஓசி 9:1
g எரே 4:19
h ஏசா 20:2
i ஏசா 1:5, 6
எரே 15:18
j 2ரா 18:13
ஏசா 8:7, 8
k 2நா 32:2
மீ 1:12

ஆனால், எருசலேமின் நுழைவாசலுக்கு யெகோவாவிடமிருந்து
கெடுதல்தான் வந்திருக்கிறது.
13 லாகீஸ் ஜனங்களே,[a] குதிரைகளை ரதத்தில் பூட்டுங்கள்.
சீயோன் மகள் பாவம் செய்ய ஆரம்பித்தது உங்களால்தான்.
இஸ்ரவேலர்கள் பல குற்றங்கள் செய்தது உங்கள் ஊரில்தான்.[b]
14 அதனால், மொரேசா-காத்துக்கு அன்பளிப்புகள் கொடுத்து
வழியனுப்புவீர்கள்.
இஸ்ரவேலின் ராஜாக்கள் அக்சீப்பின்[c] வீடுகளை நம்பி
ஏமாந்துபோனார்கள்.
15 மரேஷா[d] ஜனங்களே, ஒரு வெற்றிவீரரை நான் உங்களிடம்
அனுப்புவேன்.[e]
இஸ்ரவேலின் மகிமையாக இருக்கிறவர் அதுல்லாம் நகரம்வரை[f]
வருவார்.*
16 உங்கள் அருமைப் பிள்ளைகள் சிறைபிடிக்கப்பட்டுப் போனார்களே![g]
அந்தத் துக்கத்தில் உங்கள் தலைமுடியைச் சிரைத்துக்கொள்ளுங்கள்.
உங்கள் தலையைக் கழுகின் தலையைப் போல மொட்டை
அடித்துக்கொள்ளுங்கள்."

2 "சூழ்ச்சி செய்கிறவர்களுக்குக் கேடுதான் வரும்.
அவர்கள் படுக்கையில் படுத்துக்கொண்டே சதித்திட்டம்
போடுகிறார்கள்.
விடிந்ததும் அதைச் செய்து முடிக்கிறார்கள்.
நினைத்ததைச் செய்யும் சாமர்த்தியம் அவர்களுக்கு இருக்கிறது.[h]
2 வயல்கள்மேல் கண்வைத்து, அவற்றைப் பிடுங்கிக்கொள்கிறார்கள்.[i]
வீடுகள்மேல் ஆசைவைத்து, அவற்றை அபகரிக்கிறார்கள்.
அடுத்தவரின் வீட்டைப் பறிக்கிறார்கள்.[j]
இன்னொருவரின் சொத்தைச் சூறையாடுகிறார்கள்.
3 அதனால், யெகோவா சொல்வது இதுதான்:
'நான் இந்த ஜனங்களை அழிக்க முடிவு செய்திருக்கிறேன்,[k]
ஒருவராலும் தப்பிக்க முடியாது.[l]
இனி யாரும் ஆணவத்தோடு நடந்துகொள்ள மாட்டார்கள்,[m]
ஏனென்றால் அழிவு காலம் வந்துவிட்டது.[n]
4 அந்த நாளில், மற்றவர்கள் உங்களுக்காகப் புலம்பல் பாட்டுப்
பாடுவார்கள்.
உங்கள் கதியைப் பார்த்து ஒப்பாரி வைத்து அழுவார்கள்.[o]
"ஐயோ, நாம் அடியோடு அழிந்துபோனோமே![p]
அவர் நம்முடைய ஜனத்தின் சொத்தை மற்றவர்கள் கையில்
கொடுத்துவிட்டாரே! அதை நம்மிடமிருந்து பறித்துவிட்டாரே![q]
அவரை வணங்காத ஆட்களிடம் நம் வயல்களைக்
கொடுத்துவிட்டாரே!" என்று சொல்வார்கள்.
5 நிலத்தைப் பங்குபோட்டுக் கொடுப்பதற்கு யெகோவாவின் சபையில்
யாரும் இருக்க மாட்டார்கள்.

1:15 * நே.மொ., "இஸ்ரவேலின் மகிமை அதுல்லாம் நகரம்வரை வரும்."

அதி. 1
a யோசு 15:20, 39; 2ரா 18:14
b 1ரா 14:16; 2ரா 16:2, 3; எரே 3:8
c யோசு 15:20, 44
d 2நா 11:5, 8
e ஏசா 7:17
f நெ 11:25, 30
g உபா 28:41; 2ரா 17:6; ஏசா 39:7

அதி. 2
h 1ரா 21:7
i யாத் 20:17; 1ரா 21:2; ஏசா 5:8
j எரே 22:17; எசே 22:12, 29
k எரே 18:11
l ஆமோ 2:14
m ஏசா 2:11
n ஆமோ 5:13
o எரே 9:10; புல 1:1
p ஏசா 6:11; எரே 25:9; செப் 1:2
q 2ரா 17:23

அதி. 2
a சங் 106:38, 39
b எரே 9:19
எரே 10:18
c 1ரா 22:6, 8
ஏசா 9:15, 16
எரே 6:13, 14
எசே 13:2, 3
d ஏசா 11:11
எரே 23:3
எரே 31:7, 8
மீ 4:6
e எசே 34:11
f எசே 36:38
சக 8:22
g ஏசா 62:10
h ஏசா 49:10
ஏசா 52:12

நூல்பிடித்து அளப்பதற்கு ஆளே இருக்க மாட்டார்கள்.
6 “பிரசங்கிப்பதை நிறுத்துங்கள்!” என்று அவர்கள் சொல்கிறார்கள்.
“இந்த விஷயங்களைச் சொல்லிக்கொண்டு திரியக் கூடாது,
எங்களுக்கு எந்த அவமானமும் வராது!” என்று சொல்கிறார்கள்.
7 யாக்கோபின் வம்சத்தாரே,
“யெகோவாவுக்கு* பொறுமை இல்லாமல் போய்விட்டதா?
அவர் உண்மையிலேயே இப்படியெல்லாம் செய்யப்போகிறாரா?”
என்று கேட்கிறீர்களே!
நேர்மையாக நடப்பவர்களுக்கு என் வார்த்தைகளால் நன்மை
கிடைக்காமல் போகுமா?
8 சமீப காலமாக, என் ஜனங்களே எனக்கு எதிரியாகிவிட்டார்கள்.
போரை முடித்துவிட்டுப் பயமில்லாமல் திரும்பி வருகிறவர்களை
நீங்கள் தாக்குகிறீர்கள்.
அவர்களுடைய அழகான மேலாடையை*
பிடுங்கிக்கொள்கிறீர்கள்.
9 பெண்களை அவர்களுடைய வசதியான வீடுகளிலிருந்து
விரட்டுகிறீர்கள்.
அவர்களுடைய பிள்ளைகளிடமிருந்து என்னுடைய ஆசீர்வாதங்களை
ஒரேயடியாகப் பறித்துவிடுகிறீர்கள்.
10 எழுந்து போங்கள், இது ஓய்வெடுப்பதற்கான* இடம் இல்லை.
இங்கே அசுத்தமான காரியங்கள் நடக்கின்றன;[a] அதனால்,
பயங்கரமான அழிவு வரப்போகிறது.[b]
11 ஒருவன் வீணான வழியிலும் ஏமாற்று வழியிலும் போய்,
“திராட்சமதுவையும் மதுபானங்களையும் பற்றி உங்களுக்குப்
பிரசங்கிக்கிறேன்” என்று ஜனங்களிடம் பொய் சொன்னால்,
அவன் இந்த ஜனங்களின் சந்தோஷத்துக்காக மட்டும்
பிரசங்கிக்கிறவனாக இருப்பான்![c]
12 யாக்கோபே, உங்கள் எல்லாரையும் நான் கண்டிப்பாகக்
கூட்டிச்சேர்ப்பேன்.
மீதியிருக்கும் இஸ்ரவேலர்களை நிச்சயம் ஒன்றுசேர்ப்பேன்.[d]
தொழுவத்தில் உள்ள மந்தையைப் போல அவர்களை ஒரே
கூட்டமாக்குவேன்.
மேய்ச்சல் நிலத்தில் உள்ள ஆடுகளைப் போல அவர்கள்
இருப்பார்கள்.[e]
ஏராளமான ஜனங்களால் தேசமே கலகலப்பாக இருக்கும்.’[f]
13 தடைகளைத் தகர்க்கிறவர் அவர்களுக்கு முன்னால் போவார்.
அவர்கள் தடைகளைத் தகர்த்துவிட்டு வாசல் வழியாக வெளியே
போவார்கள்.[g]
அவர்களுடைய ராஜா அவர்களுக்கு முன்னால் போவார்.
யெகோவா அவர்கள் எல்லாரையும் தலைமைதாங்கி நடத்துவார்.”[h]

2:7 *நே.மொ., “யெகோவாவின் சக்திக்கு.” **2:8** *அல்லது, “மேலாடைக்கு மேல் இருக்கிற அணிகலனை.” **2:10** *வே.வா., “நிம்மதியாகக் குடியிருப்பதற்கான.”

3 பின்பு நான், "யாக்கோபின் தலைவர்களே, தயவுசெய்து கேளுங்கள்,
இஸ்ரவேலின் அதிகாரிகளே, கவனியுங்கள்.[a]
உங்களுக்கு நீதிநியாயம் தெரிய வேண்டாமா?
2 நீங்கள் நல்லதை வெறுக்கிறீர்கள்,[b] கெட்டதை விரும்புகிறீர்கள்.[c]
என் ஜனங்களுடைய தோலை உரிக்கிறீர்கள், அவர்களுடைய
எலும்புகளிலிருந்து சதையைப் பிய்த்தெடுக்கிறீர்கள்.[d]
3 பிய்த்தெடுத்த சதையைச் சாப்பிடவும் செய்கிறீர்கள்.[e]
என் ஜனங்களின் தோலைக் கிழித்தெடுக்கிறீர்கள்.
அவர்களுடைய எலும்புகளை உடைத்து நொறுக்குகிறீர்கள்.[f]
பானையில் வேகிற இறைச்சித் துண்டுகளைப் போல்
ஆக்குகிறீர்கள்.
4 அந்த நாளில், நீங்கள் உதவிக்காக யெகோவாவைக் கூப்பிடுவீர்கள்.
ஆனால், அவர் பதில் சொல்ல மாட்டார்.
உங்களிடமிருந்து தன்னுடைய முகத்தை மறைத்துக்கொள்வார்.[g]
ஏனென்றால், நீங்கள் அக்கிரமம் செய்கிறீர்கள்.[h]
5 தீர்க்கதரிசிகள் யெகோவாவின் ஜனங்களைக் கெட்ட வழிக்குக்
கொண்டுபோகிறார்கள்.[i]
யாராவது சாப்பாடு கொடுக்கும்போது,*[j] 'நன்றாக இருப்பீர்கள்!'
என்று வாழ்த்துகிறார்கள்.[k]
ஆனால் யாராவது சாப்பாடு கொடுக்காதபோது, 'நாசமாய்ப்
போவீர்கள்!' என்று சபிக்கிறார்கள்.
6 அவர்களிடம் கடவுள், 'உங்களுக்கு இரவு நேரம் வரும்,[l] நீங்கள் எந்தத்
தரிசனமும் பார்க்க மாட்டீர்கள்.[m]
கும்மிருட்டில்தான் கிடப்பீர்கள், குறிசொல்ல மாட்டீர்கள்.
தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையில் சூரியன் மறைந்துவிடும்.
பகல் இரவாகிவிடும்.[n]
7 தரிசனம் பார்க்கிறவர்கள் அவமானம் அடைவார்கள்.[o]
குறிசொல்கிறவர்கள் ஏமாற்றம் அடைவார்கள்.
கடவுளிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்காததால்
அவர்கள் எல்லாரும் அவமானத்தில் தங்கள் வாயை*
மூடிக்கொள்வார்கள்' என்று சொல்கிறார்" என்றேன்.
8 யாக்கோபுக்கு அவன் குற்றத்தையும், இஸ்ரவேலுக்கு அவன்
பாவத்தையும் புரிய வைக்க,
யெகோவாவின் சக்தி என்னைப் பலத்தினாலும்*
நீதியினாலும் தைரியத்தினாலும் நிரப்பியிருக்கிறது.
9 யாக்கோபின் வம்சத் தலைவர்களே, தயவுசெய்து கேளுங்கள்.
இஸ்ரவேலின் அதிகாரிகளே, கவனியுங்கள்.[p]
நீங்கள் நீதிநியாயத்தை வெறுக்கிறீர்கள், நேரானதைக்
கோணலாக்குகிறீர்கள்.[q]

3:5 * நே.மொ., "தங்கள் பற்களால் கடிக்கும்போது." **3:7** * நே.மொ., "மீசையை." **3:8** * வே.வா., "வல்லமையினாலும்."

அதி. 3
a மீ 3:9
b 1ரா 22:8; ஆமோ 5:10
c 2நா 19:2
d எசே 22:27; ஆமோ 8:4; செப் 3:3
e எசே 34:2, 3
f ஏசா 3:15
g புல 3:44
h உபா 31:17, 18; ஏசா 1:15; ஏசா 3:11
i ஏசா 9:15, 16; ஏசா 56:10
j எசே 13:19; எசே 34:2
k எரே 23:16, 17; எசே 13:10
l எரே 13:16
m சங் 74:9; எசே 13:23
n ஏசா 59:9, 10; ஆமோ 8:9
o ஏசா 29:10
p மீ 3:1
q உபா 27:19; எரே 5:28

10 சீயோனை இரத்தத்தாலும், எருசலேமை அக்கிரமத்தாலும்
நிரப்புகிறீர்கள்.[a]
11 எருசலேமின் தலைவர்கள் லஞ்சம் வாங்கிக்கொண்டு தீர்ப்பு
சொல்கிறார்கள்.[b]
அவளுடைய குருமார்கள் பணத்துக்காகப் போதிக்கிறார்கள்.[c]
அவளுடைய தீர்க்கதரிசிகள் காசுக்காக* குறிசொல்கிறார்கள்.[d]
ஆனாலும், யெகோவாமேல் நம்பிக்கை இருப்பதுபோல்
காட்டிக்கொள்கிறார்கள்.
“யெகோவா எங்களோடு இருக்கிறார்,[e]
எங்களுக்கு எந்த ஆபத்தும் வராது”[f] என்று சொல்லிக்கொள்கிறார்கள்.
12 அதனால், வயலைப் போல சீயோன் உழப்படும்.
எருசலேம் மண்மேடாகும்.[g]
ஆலயம் இருக்கிற மலை அடர்ந்த காடாகும்.[h]
உங்களால்தான் இந்த நிலைமை வரும்.

4 கடைசி நாட்களில் இப்படி நடக்கும்:
யெகோவாவின் ஆலயம் இருக்கிற மலை[i] எல்லா மலைகளுக்கும்
மேலாக உறுதியாய் நிலைநிறுத்தப்படும்.
எல்லா குன்றுகளுக்கும் மேலாக அது உயர்த்தப்படும்.
பலதரப்பட்ட ஜனங்கள் அங்கு கூட்டம் கூட்டமாக வருவார்கள்.[j]
2 பல தேசங்களிலிருந்து வருகிற ஜனங்கள் மற்றவர்களைப் பார்த்து,
“வாருங்கள், நாம் யெகோவாவின் மலைக்குப் போகலாம்.
யாக்கோபின் கடவுளுடைய ஆலயத்துக்குப் போகலாம்.[k]
அவர் தன்னுடைய வழிகளை நமக்குக் கற்றுக்கொடுப்பார்.
நாம் அவர் பாதைகளில் நடப்போம்” என்று சொல்வார்கள்.
ஏனென்றால், சீயோனிலிருந்து சட்டமும்,*
எருசலேமிலிருந்து யெகோவாவின் வார்த்தையும் புறப்படும்.
3 பலதரப்பட்ட ஜனங்களுக்கு அவர் தீர்ப்பு கொடுப்பார்.[l]
தூரத்தில் இருக்கிற பெரிய ஜனக்கூட்டங்களின் விவகாரங்களைச்
சரிசெய்வார்.
அவர்கள் தங்களுடைய வாள்களை மண்வெட்டிகளாக மாற்றுவார்கள்.
ஈட்டிகளை அரிவாள்களாக அடிப்பார்கள்.[m]
ஒரு ஜனத்துக்கு எதிராக இன்னொரு ஜனம் வாள் எடுக்காது.
போர் செய்ய இனி யாரும் கற்றுக்கொள்ள மாட்டார்கள்.[n]
4 ஒவ்வொருவரும் தங்கள் திராட்சைக் கொடியின் கீழும் அத்தி மரத்தின்
கீழும் உட்கார்ந்திருப்பார்கள்.*[o]
அவர்களைப் பயமுறுத்த யாரும் இருக்க மாட்டார்கள்.[p]
பரலோகப் படைகளின் யெகோவா இதைச் சொல்லியிருக்கிறார்.
5 எல்லா ஜனங்களும் அவரவர் தெய்வத்தின் வழியில்* நடப்பார்கள்.

3:11 *வே.வா., “வெள்ளிக்காக.” **4:2** *வே.வா., “அறிவுரையும்.” **4:4** *வே.வா., “குடியிருப்பார்கள்.” **4:5** *நே.மொ., “பெயரில்.”

அதி. 3
a எரே 22:13
b ஏசா 1:23; ஏசா 5:20, 23; எசே 22:12
c எரே 6:13
d ஏசா 56:10, 11
e ஏசா 48:1, 2; எரே 7:4
f ஆமோ 9:10
g சங் 79:1
h எரே 26:18

அதி. 4
i ஏசா 11:9; சக 8:3
j சங் 86:9; ஏசா 2:2-4; ஏசா 60:3; வெளி 15:4
k எரே 31:6; சக 8:20, 21
l 1சா 2:10; சங் 96:13; ஏசா 51:4, 5
m ஓசி 2:18; சக 9:10
n சங் 72:7; ஏசா 9:7; ஏசா 60:18
o சக 3:10
p ஏசா 54:14; எசே 34:25; எசே 39:25, 26

ஆனால் நாம் நம்முடைய கடவுளாகிய யெகோவாவின் வழியில்*
என்றென்றும் நடப்போம்.[a]
6 யெகோவா சொல்வது இதுதான்:
“நொண்டி நொண்டி நடந்தவர்களை அந்த நாளில் ஒன்றுகூட்டுவேன்.
துரத்தப்பட்டவர்களை ஒன்றுசேர்ப்பேன்.[b]
நான் தண்டித்த ஜனங்களை மறுபடியும் கூட்டிக்கொண்டு வருவேன்.
7 நொண்டி நொண்டி நடந்தவர்களை மிச்சம் வைப்பேன்.[c]
தூரமாய்த் துரத்தப்பட்டவர்களைப் பலம்படைத்த தேசமாக்குவேன்.[d]
சீயோன் மலையில் யெகோவா அவர்களை ஆட்சி செய்வார்.
அன்றுமுதல் என்றென்றும் அவர் ராஜாவாக இருப்பார்.
8 மந்தைகளைக் காக்கும் கோபுரமே,
சீயோன்[e] மகளுடைய மலையே,
ஆரம்பத்திலிருந்த ஆட்சி உன் கைக்கு வந்துசேரும்.[f]
அது எருசலேம் மகளிடமே திரும்பும்.[g]
9 இப்போது ஏன் கூச்சல் போடுகிறாய்?
உன்னை ஆள ராஜா இல்லையா?
அல்லது உனக்கு ஆலோசனை சொல்பவன் அழிந்துவிட்டானா?
அதனால்தான் பிரசவ வலியில் துடிக்கிறவளைப் போலத்
துடிக்கிறாயா?[h]
10 சீயோன் மகளே, புழுவாய்த் துடி.
பிரசவ வேதனைப்படுகிறவளைப் போல் வலியில் கதறு.
இனி நீ உன் நகரத்தை விட்டுவிட்டு காட்டில் போய்க் குடியிருப்பாய்.
பாபிலோன்வரை போவாய்.[i]
அங்கே காப்பாற்றப்படுவாய்.[j]
அங்கு எதிரிகளின் கையிலிருந்து யெகோவா உன்னை மீட்பார்.[k]
11 பல தேசங்களைச் சேர்ந்தவர்கள் உனக்கு விரோதமாக
ஒன்றுகூடுவார்கள்.
உன்னைப் பார்த்து, ‘சீயோன் சீரழிந்து போகட்டும்,
அவளுக்கு வரும் கதியை நாம் கண்குளிரப் பார்க்கலாம்’
என்று சொல்வார்கள்.
12 ஆனால், யெகோவா என்ன யோசிக்கிறார் என்று அவர்களுக்குத்
தெரிவதில்லை.
அவர் என்ன செய்யத் தீர்மானித்திருக்கிறார் என்று* அவர்களுக்குப்
புரிவதில்லை.
புதிதாக அறுக்கப்பட்ட கதிர்கள் போல அவர்களைக் களத்துமேட்டில்
சேர்க்கப்போகிறார்.
13 சீயோனின் மகளே, எழுந்து போய்க் கதிர்களைப் போரடி.[l]
உன் தலையிலுள்ள கொம்புகளை நான் இரும்பாக்குவேன்.
உன் காலிலுள்ள குளம்புகளைச் செம்பாக்குவேன்.
ஜனங்கள் பலரை நீ மிதித்து நொறுக்குவாய்.[m]

4:5 * நே.மொ., “பெயரில்.” **4:12** * வே.வா., “அவருடைய நோக்கம்.”

அதி. 4
a சக 10:12
b சங் 147:2; ஏசா 56:8; எசே 34:12, 16; எசே 37:21; செப் 3:19
c ஏசா 10:21; மீ 2:12; மீ 7:18
d ஏசா 60:22
e 2சா 5:7
f ஒப 21
g சக 9:9
h எரே 30:6
i 2ரா 20:18; 2நா 36:17, 20
j ஏசா 45:13; சக 2:7
k சங் 107:2, 3; ஏசா 48:20; எரே 15:21
l ஏசா 41:15
m சக 9:13

அவர்கள் அநியாயமாகச் சம்பாதித்ததை யெகோவாவுக்கு
அர்ப்பணிப்பாய்.
அவர்களுடைய சொத்துகளைப் பூமியின் சொந்தக்காரரிடம்
ஒப்படைப்பாய்."[a]

5 "முற்றுகை போடப்பட்ட நகரத்தின் ஜனங்களே,
உங்கள் உடலைக் கிழித்துக்கொள்கிறீர்கள்.
எதிரிகள் நம்மைச் சுற்றிவளைத்துவிட்டார்கள்.[b]
ஒரு தடியால் இஸ்ரவேலுடைய நீதிபதியின் கன்னத்தில்
அடிக்கிறார்கள்.[c]
2 எப்பிராத்தா என்று அழைக்கப்படும் பெத்லகேமே,[d]
நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே* மிகவும் சிறியதாய்
இருக்கிறாய்.
ஆனாலும், இஸ்ரவேலை ஆளப்போகிற ராஜா உன்னிடமிருந்து
வருவார்.[e]
அவர் எண்ணிலடங்காத வருஷங்களுக்கு முன்பிருந்தே,
எத்தனையோ காலங்களுக்கு முன்பிருந்தே வாழ்ந்துவருகிறார்.
3 பிள்ளை பெறப்போகிறவள் பிள்ளையைப் பெற்றெடுக்கும்வரை
கடவுள் தன்னுடைய ஜனங்களைக் கைவிட்டுவிடுவார்.
ராஜாவின் சகோதரர்களில் மீதியாக இருப்பவர்கள் இஸ்ரவேலர்களிடம்
திரும்புவார்கள்.
4 ராஜா எழுந்து, யெகோவா தரும் பலத்தோடு மந்தையை மேய்ப்பார்.[f]
தன் கடவுளாகிய யெகோவாவின் மேன்மையான பெயரால் மந்தையை
மேய்ப்பார்.
அப்போது, மந்தை பாதுகாப்பாக இருக்கும்.[g]
அவருடைய பெருமை பூமியெங்கும் எட்டும்.[h]
5 அவர் சமாதானத்தைக் கொண்டுவருவார்.[i]
அசீரியர்கள் படையெடுத்து வந்து நம் கோட்டைகளைத் தாக்கினாலும்,[j]
அவர்களுக்கு எதிராக நாம் ஏழு மேய்ப்பர்களை, சொல்லப்போனால்
எட்டுத் தலைவர்களை, ஏற்படுத்துவோம்.
6 இவர்கள் அசீரியாவை வாளால் தண்டிப்பார்கள்.[k]
நிம்ரோதுடைய தேசத்தின்[l] எல்லைகளைத் தாக்குவார்கள்.
அசீரியர்களிடமிருந்து நம் ராஜா நம்மைப் பாதுகாப்பார்.[m]
அவர்கள் படையெடுத்து வந்து நம் தேசத்தை நாசமாக்கினாலும் அவர்
நம்மைக் காப்பாற்றுவார்.
7 மீதியிருக்கும் யாக்கோபின் வம்சத்தார் பல தேசத்து ஜனங்களின்
மத்தியில் வாழ்வார்கள்.
அவர்கள் யெகோவா பொழியும் பனித்துளி போல இருப்பார்கள்.
புல்பூண்டின் மேல் பெய்யும் மழைபோல் இருப்பார்கள்.
பனியோ மழையோ எந்த மனிதனையும் சார்ந்திருப்பதில்லை,
யாருக்காகவும் காத்திருப்பதில்லை.

5:2 * வே.வா., "குடும்பங்களுக்குள்ளே."

அதி. 4
a யோசு 6:18, 19; ஏசா 23:17, 18

அதி. 5
b உபா 28:52
c மத் 26:67; யோவா 18:22; யோவா 19:3
d ஆதி 35:19; லூ 2:4
e ஆதி 49:10; 1நா 5:2; ஏசா 9:6; மத் 2:4-6; லூ 1:32, 33; லூ 2:11; யோவா 7:42
f எசே 34:23; எசே 37:24
g எரே 23:5, 6
h சக 9:9, 10
i ஏசா 9:6
j ஏசா 8:7
k ஏசா 33:1
l ஆதி 10:9-11
m ஏசா 14:25

8 மீதியிருக்கும் யாக்கோபின் வம்சத்தார் மற்ற ஜனங்களின் நடுவில் இருப்பார்கள்.
பல தேசத்தார் மத்தியில் வாழ்வார்கள்.
காட்டு மிருகங்களின் நடுவில் வாழும் சிங்கத்தைப் போல இருப்பார்கள்.
ஆட்டு மந்தைகளுக்குள் நுழையும் இளம் சிங்கத்தைப் போல இருப்பார்கள்.
அது பாய்ந்து வந்து கடித்துக் குதறும்.
அப்போது, யாராலும் மந்தைகளைக் காப்பாற்ற முடியாது.
9 உன் எதிரிகளுக்கு எதிராக உன் கை ஓங்கும்.
உன்னைப் பகைக்கிற எல்லாரும் அழிந்துபோவார்கள்."
10 யெகோவா சொல்வது இதுதான்:
"அந்த நாளில், உங்களுடைய குதிரைகளையும் ரதங்களையும் அழிப்பேன்.
11 உங்கள் நகரங்களை நாசமாக்குவேன்.
எல்லா கோட்டைகளையும் தரைமட்டமாக்குவேன்.
12 நீங்கள் செய்கிற பில்லிசூனியங்களுக்கு முடிவுகட்டுவேன்.
உங்களுடைய மந்திரவாதிகளை ஒட்டுமொத்தமாக ஒழித்துக்கட்டுவேன்.[a]
13 நீங்கள் வைத்திருக்கிற சிலைகளையும் தூண்களையும் உடைத்தெறிவேன்.
உங்கள் கைகளால் செய்தவற்றை இனி நீங்கள் வணங்க மாட்டீர்கள்.[b]
14 உங்களுடைய பூஜைக் கம்பங்களை* பிடுங்கி எறிவேன்.[c]
உங்கள் நகரங்களை அழிப்பேன்.
15 என் பேச்சைக் கேட்காத மற்ற தேசத்து ஜனங்களைத் தண்டிப்பேன்.
கோபத்தோடும் ஆக்ரோஷத்தோடும் பழிவாங்குவேன்."

6 யெகோவா பேசுவதைத் தயவுசெய்து கேளுங்கள்.
எழுந்து போய், மலைகளிடம் உங்கள் வழக்கைச் சொல்லுங்கள்.
குன்றுகளும் அதைக் கேட்கட்டும்.[d]
2 மலைகளே, யெகோவாவின் வழக்கைக் கேளுங்கள்.
பூமியின் உறுதியான அஸ்திவாரங்களே, நீங்களும் கவனியுங்கள்.[e]
யெகோவாவுக்கு அவருடைய ஜனங்களோடு ஒரு வழக்கு இருக்கிறது.
இஸ்ரவேலர்களோடு அவர் வாதாடப்போகிறார்:[f]
3 "என் ஜனங்களே, நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்?
எந்த விதத்தில் உங்களுக்குச் சலிப்பு உண்டாக்கினேன்?[g]
ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள்.
4 நான்தான் உங்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தேன்.[h]
நீங்கள் அடிமைப்பட்டிருந்த தேசத்திலிருந்து உங்களை விடுவித்தேன்.[i]
மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் உங்கள்முன் அனுப்பினேன்.[j]

5:14 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 5
a ஏசா 2:6, ஏசா 8:19
b ஏசா 2:8, எசே 36:25, ஓசி 14:3, சக 13:2
c ஏசா 27:9

அதி. 6
d ஏசா 5:3
e சங் 50:1, 4, ஏசா 1:2
f ஏசா 43:26, எரே 2:35, ஓசி 4:1
g எரே 2:5
h யாத் 12:51, உபா 4:20
i உபா 7:8
j யாத் 15:20

5 என் ஜனங்களே, மோவாபின் ராஜா பாலாக் போட்ட திட்டத்தைத்[a]
தயவுசெய்து நினைத்துப் பாருங்கள்.
அவனுக்கு பெயோரின் மகன் பிலேயாம் சொன்ன பதிலை[b]
யோசித்துப் பாருங்கள்.
சித்தீமிலிருந்து[c] கில்கால்வரை[d] நடந்ததையெல்லாம் சிந்தித்துப்
பாருங்கள்.
யெகோவா செய்ததெல்லாம் நீதியானது என்பதை அப்போது
புரிந்துகொள்வீர்கள்."
6 யெகோவாவுக்காக நான் எதைக் கொண்டுவருவேன்?
பரலோகத்தின் கடவுளை வணங்க எதை எடுத்துவருவேன்?
தகன பலிகளைக் கொண்டுவர வேண்டுமா?
ஒருவயதுள்ள கன்றுக்குட்டிகளை எடுத்துவர வேண்டுமா?[e]
7 ஆயிரக்கணக்கான செம்மறியாட்டுக் கடாக்களைப் பார்த்து யெகோவா
சந்தோஷப்படுவாரா?
ஆறுகளாய் ஓடும் எண்ணெயை விரும்புவாரா?[f]
நான் செய்த தவறுக்காக என்னுடைய மூத்த மகனைத் தர வேண்டுமா?
நான் செய்த பாவத்துக்காக என் பிள்ளையைக் கொடுக்க வேண்டுமா?[g]
8 மனுஷனே, நல்லது எதுவென்று அவர் உனக்குச் சொல்லியிருக்கிறார்.
யெகோவா உன்னிடம் என்ன கேட்கிறார்?[*]
நியாயத்தைக் கடைப்பிடித்து,[h] உண்மைத்தன்மையை[#] நெஞ்சார
நேசித்து,[i]
அடக்கத்தோடு[j] உன் கடவுளுடைய வழியில்[△] நடக்க வேண்டும்
என்றுதானே கேட்கிறார்![k]
9 யெகோவாவின் குரல் நகரத்தை நோக்கிக் கூப்பிடுகிறது.
ஞானம்[*] உள்ளவர்கள் அவருடைய[#] பெயருக்குப் பயந்து நடப்பார்கள்.
பிரம்படியின் சத்தத்தைக் கேளுங்கள், அதைக் கொடுக்கச்
சொன்னவருக்குக் கவனம் செலுத்துங்கள்.[l]
10 அநியாயமாகச் சம்பாதித்த பொருள்கள் அக்கிரமக்காரனின் வீட்டில்
இன்னும் இருக்கிறதா?
அருவருப்பான போலி எடைக்கற்கள் அங்கு பதுக்கி
வைக்கப்பட்டிருக்கிறதா?
11 கள்ளத்தராசுகளை வைத்துக்கொண்டு நான் நல்லவனாக இருக்க
முடியுமா?
போலி எடைக்கற்களை வைத்துக்கொண்டு நேர்மையானவனாக
இருக்க முடியுமா?[m]
12 நகரத்திலுள்ள பணக்காரர்கள் எதற்கெடுத்தாலும் வன்முறையில்
இறங்குகிறார்கள்.
அங்கு குடியிருக்கிறவர்கள் பொய் பேசுகிறார்கள்.[n]
அவர்கள் வாயிலிருந்து உண்மையே வருவதில்லை.[o]

6:8 [*]வே.வா., "எதிர்பார்க்கிறார்." [#]வே.வா., "பற்றுமாறாத குணத்தை; மாறாத அன்பை." [△]நே.மொ., "உன் கடவுளுடன்." **6:9** [*]அதாவது, "நடைமுறை ஞானம்." [#]நே.மொ., "உங்களுடைய."

அதி. 6
a எண் 22:5, 6
b எண் 23:7, 8; எண் 24:10; வெளி 2:14
c எண் 25:1; எண் 33: 48, 49
d யோசு 4:19
e 1சா 15:22; சங் 51:16, 17; ஏசா 1:11
f சங் 50:8-15
g 2ரா 3:26, 27; எசே 16:20
h நீதி 21:3; ஏசா 1:17; எரே 22:3; எசே 45:9; ஓசி 12:6
i நீதி 3:3; ஓசி 6:6; சக 7:9
j நீதி 8:13
k உபா 10:12, 13
l ஏசா 9:13
m உபா 25:13; நீதி 11:1; ஓசி 12:7
n ஏசா 59:3; மீ 7:2
o எரே 9:3

13 “அதனால் நான் உங்களை அடித்துக் காயப்படுத்துவேன்.[a]
பாவம் செய்ததால் நீங்கள் பாழாய்ப் போவீர்கள்.
14 நீங்கள் சாப்பிடுவீர்கள், ஆனால் திருப்தியடைய மாட்டீர்கள்.
உங்கள் வயிறு காலியாகவே இருக்கும்.[b]
உங்களுடைய பொருள்களைப் பத்திரமான இடத்துக்குக் கொண்டுபோகப் பார்ப்பீர்கள், ஆனால் முடியாது.
அப்படியே கொண்டுபோனாலும் நான் அவற்றை எதிரிகளின் கையில் கொடுத்துவிடுவேன்.
15 விதை விதைப்பீர்கள், ஆனால் அறுவடை செய்ய மாட்டீர்கள்.
ஒலிவப் பழங்களைப் பிழிவீர்கள், ஆனால் அதன் எண்ணெயைப் பயன்படுத்த மாட்டீர்கள்.
தித்திப்பான திராட்சமதுவைத் தயாரிப்பீர்கள், ஆனால் அதைக் குடிக்க மாட்டீர்கள்.[c]
16 நீங்கள் உம்ரியின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறீர்கள்,
ஆகாப் வீட்டாருடைய பழக்கவழக்கங்களைப் பின்பற்றுகிறீர்கள்.[d]
அவர்களுடைய ஆலோசனைப்படி நடக்கிறீர்கள்.
அதனால், உங்களுக்குக் கோரமான முடிவைக் கொண்டுவருவேன்.
மற்ற ஜனங்கள் உங்களைக் கேவலமாகப் பார்ப்பார்கள்.*[e]
உங்களைக் கேலி கிண்டல் செய்வார்கள்.”[f]

7 என் நிலைமை ரொம்பப் பரிதாபமாக இருக்கிறது.
கோடைக் காலத்துப் பழங்களின் அறுவடை முடிந்தது.
திராட்சை அறுவடையும் முடிந்துவிட்டது.
ஆனால், சாப்பிட எனக்கு ஒரு திராட்சைக் கொத்துகூட இல்லை.
எனக்குப் பிடித்த ருசியான அத்திப் பழமும் இல்லை.
2 விசுவாசமாக* நடக்கிறவன் உலகத்தில் இல்லாமல் போய்விட்டான்.
நேர்மையானவன் ஒருவன்கூட இல்லை.[g]
பதுங்கியிருந்து கொலை செய்யத்தான் எல்லாரும் காத்திருக்கிறார்கள்.[h]
ஒவ்வொருவனும் தன் சகோதரனைப் பிடிப்பதற்கு வலை விரிக்கிறான்.
3 கெட்ட காரியங்கள் செய்வதில் அவர்கள் கெட்டிக்காரர்கள்.[i]
தலைவர்கள் தாங்கள் நினைத்ததைச் சாதிக்க மற்றவர்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள்.
நீதிபதிகள் லஞ்சம் வாங்குகிறார்கள்.[j]
அதிகாரிகள் தங்களுடைய விருப்பங்களைச் சொல்கிறார்கள்.[k]
அவர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து திட்டம் தீட்டுகிறார்கள்.
4 அவர்களில் நல்லவன்கூட முள்ளைப் போல இருக்கிறான்.
அவர்களில் மிக நேர்மையானவன்கூட முள்வேலியைவிட மோசமாக இருக்கிறான்.
உன் காவல்காரர்கள் அறிவிப்பு செய்த தண்டனைத் தீர்ப்பின் நாள் வரும்.[l]
அப்போது, அவர்கள் கதிகலங்குவார்கள்.[m]

6:16 * நே.மொ., “உங்களைப் பார்த்து விசில் அடிப்பார்கள்.” **7:2** * வே.வா., “பற்றுமாறாமல்.”

அதி. 6
a ஏசா 1:5
b லேவி 26:26; எசே 4:16; ஓசி 4:10
c உபா 28:38; எரே 12:13; யோவே 1:10; ஆமோ 5:11
d 1ரா 16:25, 30; 2ரா 16:2, 3; 2ரா 21:1, 3
e எரே 19:8
f சங் 44:13; எரே 51:51; புல 5:1; தானி 9:16

அதி. 7
g ஏசா 57:1
h ஏசா 59:7
i எரே 3:5; எரே 4:22; எசே 22:6
j ஏசா 1:23; மீ 3:11
k 1ரா 21:5, 6
l ஏசா 10:3; எசே 12:23; ஓசி 9:7
m ஏசா 22:5

5 உன் கூட்டாளிமேல் நம்பிக்கை வைக்காதே.
உன்னுடைய நெருங்கிய நண்பனை நம்பாதே.[a]
உன் மடியில் படுத்திருப்பவளிடம் ஜாக்கிரதையாகப் பேசு.
6 மகன் அப்பாவை அவமதிக்கிறான்.
மகள் அம்மாவை எதிர்க்கிறாள்.[b]
மருமகள் மாமியாரோடு மோதுகிறாள்.[c]
ஒருவருக்கு அவருடைய குடும்பத்தாரே எதிரிகளாக இருக்கிறார்கள்.[d]
7 ஆனால், நான் யெகோவாவுக்காக எப்போதும்
எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன்.[e]
என்னை மீட்கும் கடவுளுக்காகப் பொறுமையோடு காத்திருப்பேன்.[f]
என் கடவுள் என் வேண்டுதலைக் கேட்பார்.[g]
8 என்னை எதிர்ப்பவளே! என் நிலையைப் பார்த்து சந்தோஷப்படாதே.
நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்.
நான் இருட்டில் இருந்தாலும் யெகோவா எனக்கு வெளிச்சமாக
இருப்பார்.
9 நான் யெகோவாவுக்கு விரோதமாகப் பாவம் செய்துவிட்டேன்.[h]
அவர் எனக்காக வழக்காடி நியாயம் வழங்குவார்.
அதுவரை அவருடைய கோபத்தைத் தாங்கிக்கொள்வேன்.
அவர் என்னை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவார்.
நான் அவருடைய நீதியைப் பார்ப்பேன்.
10 என்னை எதிர்ப்பவளும் அதைப் பார்ப்பாள்.
"உன் கடவுளான யெகோவா எங்கே?"[i] என்று அவள் கேட்டாளே,
இப்போது வெட்கத்தில் தலைகுனிவாள்.
அவளுக்கு வரும் கதியை நான் பார்ப்பேன்.
தெருவில் உள்ள சேற்றைப் போல அவள் மிதிக்கப்படுவாள்.
11 உன்னுடைய கற்சுவர்களைக் கட்டும் நாள் வரும்.
அந்த நாளில் உன் எல்லை விரிவாக்கப்படும்.*
12 அந்த நாளில் அவர்கள் உங்களிடம் வருவார்கள்.
அசீரியாவிலிருந்தும் எகிப்தின் நகரங்களிலிருந்தும் வருவார்கள்.
எகிப்திலிருந்து யூப்ரடிஸ்* ஆறு வரைக்கும் வருவார்கள்.
ஒரு கடலிலிருந்து இன்னொரு கடலுக்கும் ஒரு மலையிலிருந்து
இன்னொரு மலைக்கும் வருவார்கள்.[j]
13 தேசத்தின் குடிமக்கள் குற்றங்கள் செய்தார்கள்.
அதனால் தேசம் பாழாகும்.
14 உங்கள் மந்தையாகிய ஜனங்களை உங்களுடைய கோலால்
மேயுங்கள், அவர்கள் உங்களுடைய சொத்து.[k]
அவர்கள் தன்னந்தனியாகக் காட்டில் குடியிருந்தார்கள், பழமரத்
தோப்பின் நடுவில் வாழ்ந்தார்கள்.
பூர்வ காலங்களைப் போலவே அவர்கள் பாசானிலும் கீலேயாத்திலும்
மேயட்டும்.[l]

7:11 * அல்லது, "அந்த நாளில் கட்டளை தொலைதூரத்தில் இருக்கும்." **7:12** * அதாவது, "ஐப்பிராத்து."

அதி. 7
a எரே 9:4
b எசே 22:7
c லூ 12:53
d எரே 12:6; மத் 10:35, 36
e சங் 123:2; ஏசா 8:17
f சங் 25:5; சங் 62:1; புல 3:26
g சங் 40:1; ஏசா 12:2; ஏசா 25:9
h புல 1:18
i சங் 79:10; சங் 115:2; யோவே 2:17
j ஏசா 11:16; ஏசா 27:13; ஓசி 11:11
k ஏசா 40:11
l எரே 50:19; எசே 34:23

15 “அவர்களை எகிப்து தேசத்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தபோது
நான் அதிசயங்களைச் செய்தேன்.
அதுபோலவே இப்போதும் செய்து காட்டுவேன்.[a]
16 பலம்படைத்த தேசத்தார்கூட அதைப் பார்த்துக் கூனிக்குறுகுவார்கள்.[b]
தங்கள் கையால் வாயை மூடிக்கொள்வார்கள்.
அவர்களுடைய காதுகள் செவிடாகும்.
17 பாம்பைப் போல அவர்கள் மண்ணை நக்குவார்கள்.[c]
ஊரும் பிராணிகளைப் போல மிரண்டுபோய் மறைவிடங்களிலிருந்து
வெளியே வருவார்கள்.
கடவுளாகிய யெகோவாவுக்கு முன்னால் நடுங்கியபடி நிற்பார்கள்.
அவரைப் பார்த்துப் பயப்படுவார்கள்.”[d]
18 உங்களைப் போன்ற கடவுள் யாரும் இல்லை.
உங்களுடைய ஜனங்களில் மீதியாக இருப்பவர்களின்[e] குற்றத்தையும்
பாவத்தையும் நீங்கள் மன்னிக்கிறீர்கள்.[f]
நீங்கள் என்றென்றைக்கும் கோபமாக இருக்க மாட்டீர்கள்.
ஏனென்றால், மாறாத அன்பு காட்டுவதில் பிரியப்படுகிறீர்கள்.[g]
19 அவர் மறுபடியும் நமக்கு இரக்கம் காட்டுவார்;[h] நம் அக்கிரமங்களை
ஒழித்துக்கட்டுவார்.
நம்முடைய எல்லா பாவங்களையும் ஆழ்கடலுக்குள்
போட்டுவிடுவார்.[i]
20 யாக்கோபுக்கு அவர் உண்மையாக இருப்பார்.
ஆபிரகாமுக்கு மாறாத அன்பு காட்டுவார்.
நம் முன்னோர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக்
காப்பாற்றுவார்.[j]

அதி. 7
a சங் 78:12
ஏசா 63:11
எரே 23:7, 8
b சங் 126:2
ஏசா 26:11
ஏசா 66:18
c ஏசா 49:23
d எரே 33:9
e எரே 23:3
யோவே 2:32
f யாத் 34:6, 7
ஏசா 1:18
ஏசா 44:22
எரே 50:20
தானி 9:9
g சங் 103:9
ஏசா 57:16
புல 3:22
h உபா 30:3
சங் 103:8, 13
ஓசி 2:19
i சங் 103:12
ஏசா 55:7
எரே 31:34
j ஆதி 22:17
சங் 105:8-11
லூ 1:72, 73
அப் 3:25, 26

நாகூம்

முக்கியக் குறிப்புகள்

1 யெகோவா தன்னுடைய எதிரிகளைப் பழிதீர்க்கிறார் (1-7)
- கடவுள் தன்னை மட்டுமே வணங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் (2)
- யெகோவா தன்னிடம் அடைக்கலம் தேடி வருகிறவர்களை அக்கறையாகக் கவனித்துக்கொள்கிறார் (7)

நினிவே ஒட்டுமொத்தமாக அழிக்கப்படும் (8-14)
- அழிவு மறுபடியும் வராது (9)

யூதாவுக்கு நல்ல செய்தி அறிவிக்கப்படுகிறது (15)

2 நினிவே அழிக்கப்படும் (1-13)
- “ஆறுகளின் மதகுகள் திறக்கப்படும்” (6)

3 “இரத்தக்கறை படிந்த நகரமே, உனக்கு ஐயோ கேடு!” (1-19)
- நினிவேக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கான காரணங்கள் (1-7)
- நோ-அம்மோனைப் போல் நினிவே அழிக்கப்படும் (8-12)
- நினிவேயின் அழிவைத் தடுக்க முடியாது (13-19)

1 நினிவே நகரத்துக்கு எதிரான தீர்ப்பைப்[a] பற்றி எல்கோசைச் சேர்ந்த
நாகூம்* பார்த்த தரிசனத்தின் புத்தகம்:

2 யெகோவா தன்னை மட்டுமே வணங்க வேண்டுமென்று எதிர்பார்க்கும்
கடவுள்;[b] தப்பு செய்கிறவர்களைப் பழிவாங்கும் கடவுள்.
யெகோவா பழிவாங்குகிறவர், கோபத்தில் கொதித்தெழுகிறவர்.[c]
யெகோவா தன்னுடைய பகைவர்களைப் பழிதீர்க்கிறவர்.
எதிரிகள்மேல் கொட்டுவதற்காகக் கோபத்தைச் சேர்த்து வைக்கிறவர்.
3 யெகோவா சீக்கிரத்தில் கோபப்படாதவர்,[d] மகா வல்லமை உள்ளவர்.[e]
கொடுக்க வேண்டிய தண்டனையைக் கொடுக்கத் தவறாதவர்.[f]
யெகோவா வரும்போது அழிவு உண்டாக்குகிற சுழல்காற்றும்
புயல்காற்றும் வீசும்.
மேகங்கள் அவருடைய காலடி தூசிபோல் ஆகும்.[g]
4 அவர் கடலை அதட்டி,[h] அதை வற்றச் செய்கிறார்.
ஆறுகளையெல்லாம் வறண்டுபோக வைக்கிறார்.[i]
பாசானும் கர்மேலும் காய்ந்துபோகின்றன.[j]
லீபனோனின் பூக்கள் வாடிப்போகின்றன.
5 அவருடைய கோபத்தால் மலைகள் அதிர்கின்றன.
குன்றுகள் உருகுகின்றன.[k]
அவருக்கு முன்னால் பூமி குலுங்கும்.
அவர் உலகத்தையும் அதில் குடியிருக்கிறவர்களையும் உலுக்குவார்.[l]
6 அவருடைய கடும் கோபத்துக்கு முன்னால் யாரால் நிற்க முடியும்?[m]
அவர் பயங்கர கோபத்தைக் காட்டும்போது யாரால் தாங்க முடியும்?[n]
அவர் கோபத்தை நெருப்பாகக் கொட்டுவார்.
அப்போது, பாறைகள் நொறுங்கித் தூள்தூளாகும்.
7 யெகோவா நல்லவர்.[o] இக்கட்டு நாளில் அவர் கோட்டையைப் போல
இருக்கிறார்.[p]
அவரிடம் அடைக்கலம் தேடி வருகிறவர்களை அக்கறையாகக்
கவனித்துக்கொள்கிறார்.[q]
8 ஆனால், நினிவே நகரத்தைப் பெரிய வெள்ளத்தால் அடியோடு
அழித்துவிடுவார்.
அவருடைய எதிரிகளை இருள் துரத்தும்.
9 யெகோவாவுக்கு எதிராக நீங்கள் என்ன திட்டம் தீட்டுவீர்கள்?
அவர் ஒட்டுமொத்தமாக அழிக்கப்போகிறார்.
அழிவு* மறுபடியும் வராது.[r]
10 பின்னிக் கிடக்கிற முட்புதர்களைப் போல நினிவே ஜனங்கள்
இருக்கிறார்கள்.
போதை ஏறுமளவுக்கு மது* குடித்தவர்களைப் போல இருக்கிறார்கள்.
ஆனால், வைக்கோலைப் போலப் பொசுங்கிவிடுவார்கள்.
11 யெகோவாவுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுகிறவன் உன்னிடமிருந்து
வருவான்.

1:1 *அர்த்தம், “ஆறுதல் தருபவர்.” **1:9** *வே.வா., “இக்கட்டு; வேதனை.” **1:10** *அதாவது, “கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்ட பீர்.”

அதி. 1
a ஏசா 10:12, நாகூ 3:7, செப் 2:13
b யாத் 20:5
c உபா 32:35, 41, ஏசா 59:18
d எண் 14:18
e யோபு 9:4
f யாத் 34:6, 7
g யோபு 38:1
h யோபு 38:11, சங் 104:6, 7, சங் 107:29
i யோசு 3:16
j ஏசா 33:9, ஆமோ 1:2
k 2சா 22:8, சங் 68:7, 8
l சங் 97:4, 5, ஏசா 24:1
m எரே 10:10
n உபா 32:22
o சங் 136:1, மத் 19:17
p சங் 46:1, சங் 91:2, நீதி 18:10, ஏசா 25:4
q சங் 1:6
r ஏசா 10:24, 25

ஒன்றுக்கும் உதவாத அறிவுரையைத் தருவான்.
12 யெகோவா சொல்வது இதுதான்:
“அசீரியர்களின்* படையில் ஏராளமான வீரர்கள் இருக்கிறார்கள்,
அவர்கள் மகா பலசாலிகள்.
ஆனாலும் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள், ஒழிந்துபோவார்கள்.#
யூதாவே, நான் உனக்குக் கஷ்டம் கொடுத்தேன்; இனி அப்படிச் செய்ய
மாட்டேன்.
13 அசீரியன்* உன் கழுத்தில் வைத்திருக்கும் நுகத்தடியை
உடைத்துப்போடுவேன்.[a]
உன்னைக் கட்டியிருக்கும் கயிறுகளை அறுத்தெறிவேன்.
14 அசீரியாவே, யெகோவாவின் தீர்ப்பைக் கேள்:
‘இனி உன் பெயர் நிலைக்காது.
உன் கோயில்களில் இருக்கிற செதுக்கப்பட்ட சிலைகளையும் உலோகச்
சிலைகளையும் உடைப்பேன்.
உனக்குக் கல்லறையை வெட்டுவேன், ஏனென்றால் நீ
வெறுக்கத்தக்கவன்.’
15 நல்ல செய்தி சொல்கிறவர் மலைகள்மேல் ஏறி வருகிறார்.
சமாதானம் கிடைக்கப்போகிறது என்று அறிவிக்கிறார்.[b]
யூதாவே, பண்டிகைகளைக் கொண்டாடு;[c] உன் நேர்த்திக்கடன்களைச்
செலுத்து.
வீணானவன் இனி உன் வழியில் வர மாட்டான்.
அவன் அடியோடு அழிக்கப்படுவான்.”

2 உன்னை* துரத்துகிறவன் உன்னைத் தாக்க வந்திருக்கிறான்.[d]
உன்னுடைய கோட்டைகளைப் பாதுகாத்துக்கொள்.
வழியெல்லாம் காவலர்களை நிறுத்து.
போருக்குத் தயாராகு, பலத்தையெல்லாம் ஒன்றுதிரட்டு.
2 யாக்கோபை யெகோவா திரும்பவும் பெருமைப்படுத்துவார்.
இஸ்ரவேலை மறுபடியும் மகிமைப்படுத்துவார்.
சூறையாடுகிறவர்கள் அவர்களைச் சூறையாடினார்களே.[e]
அவர்களுடைய திராட்சைக் கொடிகளை நாசமாக்கினார்களே.
3 உன்னைத் துரத்துகிறவனுடைய* வீரர்களின் கேடயங்கள் சிவப்பாக
இருக்கின்றன.
அவனுடைய மாவீரர்கள் கருஞ்சிவப்பு உடை போட்டிருக்கிறார்கள்.
அவன் போருக்குத் தயாராகும் நாளில்
அவனுடைய போர் ரதங்களின் இரும்புத் தகடுகள் நெருப்புபோல்
தகதகக்கின்றன.
வீரர்கள் ஈட்டிகளைச் சுழற்றுகிறார்கள்.
4 போர் ரதங்கள் வீதிகளில் வெறித்தனமாக ஓடுகின்றன.
பொது சதுக்கங்களில் அங்குமிங்கும் பாய்ந்து போகின்றன.

1:12 *நே.மொ., “அவர்களின்.” #அல்லது, “அதன்பின் அவர் கடந்துபோவார்.” **1:13** *நே.மொ., “அவன்.” **2:1** *அதாவது, “நினிவே ஜனங்களை.” **2:3** *அல்லது, “கடவுளுடைய.”

அதி. 1
a ஏசா 14:25
b ஏசா 52:7
ரோ 10:15
c உபா 16:16

அதி. 2
d எரே 25:9
e 2ரா 17:6

அதி. 2
a ஆதி 10:8, 11
b செப் 2:13
c செப் 2:15
d எரே 2:14, 15 எரே 50:17
e ஏசா 10:12
f சங் 46:9 ஏசா 37:24
g 2ரா 18:17

அவை தீப்பந்தங்களைப் போலப் பிரகாசிக்கின்றன, மின்னலைப் போலப் பளிச்சிடுகின்றன.
5 ராஜா தன்னுடைய படை அதிகாரிகளைக் கூப்பிடுவார்.
அவர்கள் விழுந்தடித்துக்கொண்டு வருவார்கள்.
மதில் பக்கமாய் அவசரமாக ஓடுவார்கள்.
பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வார்கள்.
6 ஆறுகளின் மதகுகள் திறக்கப்படும்.
அரண்மனையும் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.
7 தீர்ப்பு இதுதான்: அவள்* வெறுமையாக்கப்படுவாள், வேறு தேசத்துக்குப் பிடித்துக்கொண்டு போகப்படுவாள்.
அவளுடைய அடிமைப் பெண்கள் புலம்புவார்கள்.
புறாவைப் போல முனகுவார்கள், நெஞ்சில் அடித்துக்கொள்வார்கள்.
8 இத்தனை காலமாக நினிவே[a] ஒரு குளத்தைப் போல் இருந்தாள்.
ஆனால் இப்போது எல்லாரும் அவளைவிட்டு ஓடிப்போகிறார்கள்.
“நில்லுங்கள்! நில்லுங்கள்!” என்ற சத்தம் கேட்கிறது.
ஆனால், யாரும் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை.[b]
9 வெள்ளியைச் சூறையாடுங்கள், தங்கத்தைக் கைப்பற்றுங்கள்!
அங்கே புதையல்கள் கொட்டிக்கிடக்கின்றன.
விலை உயர்ந்த பொருள்களும் குவிந்துகிடக்கின்றன.
10 நகரம் வெறுமையாக்கப்பட்டது, பாழாக்கப்பட்டது, நாசமாக்கப்பட்டது![c]
பயத்தில் ஜனங்களுடைய இதயம் படபடக்கிறது,
கால் நடுநடுங்குகிறது, இடுப்பு கிடுகிடுவென ஆடுகிறது.
எல்லாருடைய முகமும் வெளுத்துப்போகிறது.
11 சிங்கங்களின் குகை எங்கே?[d] இளம் சிங்கங்கள் இரை தின்ற இடம் எங்கே?
சிங்கம் தன் குட்டிகளோடு சுற்றிவந்த இடம் எங்கே?
அவை பயமில்லாமல் திரிந்த இடம் எங்கே?
12 ஆண் சிங்கம் இரையைக் கடித்துக் குதறி தன் குட்டிகளுக்குப் போட்டது.
மிருகங்களைக் கொன்று பெண் சிங்கங்களுக்குக் கொடுத்தது.
தன் குகைகளை இரையால் நிரப்பியது.
பீறிப்போட்ட மிருகங்களை அங்கே குவித்து வைத்தது.
13 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
“நான் உன்னைத் தண்டிப்பேன்.[e]
உன்னுடைய போர் ரதங்களை எரித்துப் புகைக்காடாக்குவேன்.[f]
உன் இளம் சிங்கங்கள் வாளுக்குப் பலியாகும்.
நீ எங்குமே வேட்டையாட முடியாதபடி செய்துவிடுவேன்.
உன் தூதுவர்களின் சத்தம் இனி கேட்காது.”[g]

3 இரத்தக்கறை படிந்த நகரமே, உனக்கு ஐயோ கேடு!
நீ திருட்டிலும் பொய் புரட்டிலும் ஊறிப்போயிருக்கிறாய்!
ஓயாமல் சூறையாடுகிறாய்!

2:7 * அதாவது, “நினிவே.”

2 சவுக்கின் சத்தம் கேட்கிறது, சக்கரங்களின் ஓசை ஒலிக்கிறது.
குதிரை வேகமாக ஓடிவருகிறது, ரதம் மின்னலாகப் பாய்ந்து வருகிறது.
3 வீரர்கள் குதிரைமேல் ஏறி வருகிறார்கள்.
அவர்களுடைய வாள்கள் தகதகக்கின்றன, ஈட்டிகள் பளபளக்கின்றன.
ஏராளமானவர்கள் வெட்டிச் சாய்க்கப்படுகிறார்கள்.
அவர்களுடைய உடல்கள் குவியல் குவியலாகக் கிடக்கின்றன.
திரும்பிய பக்கமெல்லாம் கணக்குவழக்கில்லாத சடலங்கள்.
அவற்றின் மேல் வீரர்கள் தடுக்கி விழுகிறார்கள்.
4 எல்லாவற்றுக்கும் அந்த விலைமகளின் விபச்சாரம்தான் காரணம்.
அவள் கவர்ச்சியும் வசீகரமும் உள்ள சூனியக்காரி.
பல தேசத்தாரை விபச்சார வலையில் சிக்க வைக்கிறாள்.
பல இனத்தாரை சூனியங்களால் வசியப்படுத்துகிறாள்.
5 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
“நான் உன்னை* தண்டிப்பேன்.[a]
உன்னுடைய ஆபாசத்தை எல்லாருக்கும் காட்டுவேன்.
மற்ற தேசத்தார் உன்னுடைய நிர்வாணக் கோலத்தையும்,
மற்ற ராஜ்யங்கள் உன்னுடைய கேவலமான நிலைமையையும்
பார்க்கும்படி செய்வேன்.
6 குப்பையைத் தூக்கி உன்மேல் வீசுவேன்.
எல்லாரும் உன்னை வெறுக்கும்படி செய்வேன்.
உன்னை வேடிக்கைப் பொருளாக்குவேன்.[b]
7 உன்னைப் பார்க்கிற எல்லாரும்,
‘நினிவே அழிந்துவிட்டது!
அவளுக்காகப் பரிதாபப்பட ஒருவரும் இல்லை’ என்று சொல்லி
ஓடிப்போவார்கள்.[c]
உனக்கு ஆறுதல் சொல்ல நான் எங்கே போய் ஆள் தேடுவேன்?
8 நைல் நதிக்கரைகளில்[d] இருந்த நோ-அம்மோனைவிட*[e] நீ
மேலானவளோ?
தண்ணீர் அவளைச் சூழ்ந்திருந்தது.
கடல்தான் அவளுடைய சொத்து; அதுதான் அவளுடைய
கோட்டைச் சுவர்.
9 எத்தியோப்பியாவும் எகிப்தும் அவளுக்கு மிகப் பெரிய பலமாக
இருந்தன.
பூத்[f] ஜனங்களும் லீபியா ஜனங்களும் அவளுக்கு* உறுதுணையாக
இருந்தார்கள்.[g]
10 ஆனாலும், அவள் சிறைபிடிக்கப்பட்டுப் போனாள்.
வேறு தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டாள்.[h]
அவளுடைய பிள்ளைகள் எல்லா தெரு முனைகளிலும் கொடூரமாக
அடித்துக் கொல்லப்பட்டார்கள்.
அவளுடைய முக்கியப் பிரமுகர்கள்மேல் குலுக்கல் போடப்பட்டது.

அதி. 3
a நாகூ 2:13
b செப் 2:15
c நாகூ 2:8
d ஏசா 19:6
e எரே 46:25, எசே 30:14
f ஆதி 10:6
g 2நா 16:8, எரே 46:8, 9
h ஏசா 20:4

3:5 * அதாவது, “நினிவே நகரத்தை.” **3:8** * அதாவது, “தீப்ஸ் நகரத்தைவிட.” **3:9** * நே.மொ., “உனக்கு.”

பெரிய ஆட்களுக்கு விலங்கு மாட்டப்பட்டது.
11 நீயும் போதையேற குடிப்பாய்.[a]
ஓடி ஒளிந்துகொள்வாய்.
எதிரியிடமே பாதுகாப்பு தேடுவாய்.
12 உன்னுடைய எல்லா கோட்டைகளும், முதலில் பழுத்த பழங்கள் உள்ள அத்தி மரங்களைப் போல இருக்கின்றன.
அவற்றை உலுக்கும்போது, விழுங்குகிறவர்களின் வாயில் பழங்கள் விழுகின்றன.
13 உன்னுடைய படைவீரர்கள் பெண்களைப் போலப் பலவீனமாக இருக்கிறார்கள்.
எதிரிகள் நுழைவதற்கு வசதியாக உன்னுடைய வாசல் கதவுகள் திறந்து போடப்படும்.
அவற்றின் தாழ்ப்பாள்கள் தீயில் சுட்டெரிக்கப்படும்.
14 முற்றுகைக் காலத்துக்காகத் தண்ணீரைச் சேமித்து வை.[b]
கோட்டைகளைப் பலப்படுத்து.
சேற்றிலே கால்வைத்து களிமண்ணை மிதி.
செங்கற்களைச் செய்.
15 அங்கேயும் நெருப்பு உன்னைப் பொசுக்கும்.
வாள் உன்னை வெட்டி வீழ்த்தும்.[c]
இளம் வெட்டுக்கிளிகள் பயிர்களை நாசமாக்குவதுபோல் அது உன்னை நாசமாக்கும்.[d]
இளம் வெட்டுக்கிளிகள் போல அதிகமாகப் பெருகு!
வெட்டுக்கிளிக் கூட்டத்தைப் போல ஏராளமாகப் பெருகு!
16 உன் வியாபாரிகள் வானத்து நட்சத்திரங்களைவிட அதிகமாக இருக்கிறார்கள்.
இளம் வெட்டுக்கிளி தன் தோலை உரித்துவிட்டுப் பறந்துபோகும்.
17 உன் காவலர்கள் அந்த வெட்டுக்கிளி போல இருக்கிறார்கள்.
உன் அதிகாரிகள் வெட்டுக்கிளிப் பட்டாளத்தைப் போல இருக்கிறார்கள்.
குளிர்ச்சியான நாளில் அவை கற்சுவர்களின் இடுக்குகளில் பதுங்கிக்கொள்ளும்.
ஆனால், வெயில் அடிக்கும்போது பறந்துபோகும்.
அவை போகும் இடம் யாருக்கும் தெரியாது.
18 அசீரிய ராஜாவே, உன் மேய்ப்பர்கள் தூக்கக் கலக்கத்தில் இருக்கிறார்கள்.
உன்னுடைய பிரமுகர்கள் வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்கிறார்கள்.
உன் ஜனங்கள் மலைகளில் சிதறிப்போயிருக்கிறார்கள்.
அவர்களைக் கூட்டிச்சேர்க்க ஆளே இல்லை.[e]
19 பேரழிவிலிருந்து நீ மீண்டுவரவே மாட்டாய்.
உன் காயம் ஆறவே ஆறாது.
உன் கதியைக் கேள்விப்படுகிற எல்லாரும் கைகொட்டிச் சிரிப்பார்கள்.[f]
ஏனென்றால், உன்னுடைய கொடூரமான பிடியில் சிக்காதவர்கள் யாருமே இல்லை."[g]

அதி. 3
a சங் 75:8; எரே 25:15
b 2நா 32:3, 4
c செப் 2:13
d யாத் 10:14, 15
e நாகூ 2:8
f செப் 2:15
g ஏசா 10:5, 6; ஏசா 37:18

ஆபகூக்

முக்கியச் குறிப்புகள்

1 தீர்க்கதரிசி உதவிக்காகக் கதறுகிறார் (1-4)
- ‘யெகோவாவே, எவ்வளவு காலத்துக்குத்தான் நான் கேட்பேன்?’ (2)
- “கொடுமைகள் நடப்பதை ஏன் பொறுத்துக்கொள்கிறீர்கள்?” (3)

கல்தேயர்கள் மூலம் கடவுள் தண்டனை கொடுக்கிறார் (5-11)

யெகோவாவிடம் தீர்க்கதரிசி கெஞ்சுகிறார் (12-17)
- ‘என் கடவுளே, உங்களுக்குச் சாவு என்பதே இல்லை’ (12)
- “மிகவும் பரிசுத்தமான உங்களுடைய கண்கள் தீமையைப் பார்த்து ரசிக்காதே!” (13)

2 “அவர் என்ன செய்தி சொல்லப்போகிறார் என்பதைக் கேட்க ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன்” (1)

தீர்க்கதரிசிக்கு யெகோவா கொடுக்கும் பதில் (2-20)
- ‘தரிசனத்துக்காகக் காத்திரு’ (3)
- உண்மையாக இருப்பதன் மூலம் நீதிமான் வாழ்வு பெறுவான் (4)
- கல்தேயர்களுக்கு வரும் ஐந்து கேடுகள் (6-20)
  - பூமி யெகோவாவைப் பற்றிய அறிவால் நிறைந்திருக்கும் (14)

3 யெகோவா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்க்கதரிசி ஜெபம் செய்கிறார் (1-19)
- கடவுள் தான் தேர்ந்தெடுத்த ஜனங்களைக் காப்பாற்றுவார் (13)
- கஷ்டத்தின் மத்தியிலும் யெகோவாவை நினைத்துப் பூரிப்படைய வேண்டும் (17, 18)

1 ஒரு தரிசனத்தில் ஆபகூக்* தீர்க்கதரிசிக்குக் கிடைத்த செய்தி இதுதான்:
2 அவர் கடவுளிடம், “யெகோவாவே, நான் எவ்வளவு காலத்துக்குத்தான்
உதவிக்காகக் கதறுவேன், நீங்கள் ஏன் கேட்காமல் இருக்கிறீர்கள்?[a]
வன்முறையிலிருந்து காப்பாற்றும்படி எவ்வளவு காலத்துக்குத்தான்
கேட்பேன், ஏன் கண்டுகொள்ளாமல்* இருக்கிறீர்கள்?[b]
3 என்னை ஏன் அக்கிரமங்களைப் பார்க்க வைக்கிறீர்கள்?
கொடுமைகள் நடப்பதை ஏன் பொறுத்துக்கொள்கிறீர்கள்?
நாச வேலைகளும் வன்முறைகளும் ஏன் என்னுடைய கண்
முன்னாலேயே நடக்கின்றன?
எங்கு பார்த்தாலும் ஏன் சண்டையும் சச்சரவுமாக இருக்கிறது?
4 சட்டத்தை யாரும் மதிப்பதே இல்லை.
எங்குமே நியாயம் இல்லை.
நீதிமானைக் கெட்டவன் ஆட்டிப்படைக்கிறான்.
அதனால்தான், நீதி புரட்டப்படுகிறது”[c] என்று சொன்னார்.
5 “ஜனங்களே, சுற்றியுள்ள தேசங்களைக் கூர்ந்து கவனியுங்கள்!
ஏனென்றால், உங்களுடைய காலத்தில் ஒரு சம்பவம் நடக்கப்போகிறது.
அதைப் பற்றிச் சொன்னால்கூட நீங்கள் நம்ப மாட்டீர்கள்.

அதி. 1
a சங் 13:1
b சங் 22:1; சங் 74:10; வெளி 6:10
c யோபு 12:6; சங் 12:8; பிர 8:11; ஏசா 1:21; அப் 7:52, 53

1:1 *ஒருவேளை இதன் அர்த்தம், “இறுக்கமாகக் கட்டிப்பிடித்தல்.” **1:2** *வே.வா., “காப்பாற்றாமல்.”

ஆனாலும், அதை ஆச்சரியத்தோடு பாருங்கள்; பார்த்து அதிர்ச்சி அடையுங்கள்.[a]
6 நான் கல்தேயர்களை வரவழைப்பேன்.[b]
அவர்கள் ஈவிரக்கம் இல்லாதவர்கள், கண்மூடித்தனமாகத் தாக்குபவர்கள்.
பெரிய பெரிய தேசங்கள்மேல் படையெடுப்பவர்கள்.
தங்களுக்குச் சொந்தமில்லாத இடங்களைக் கைப்பற்றுபவர்கள்.[c]
7 அவர்கள் கொடூரமானவர்கள், பயங்கரமானவர்கள்.
அவர்களே தங்களுக்குச் சட்டத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள்,
அவர்களே அதிகாரத்தை ஏற்படுத்திக்கொள்கிறார்கள்.*[d]
8 அவர்களுடைய குதிரைகள் சிறுத்தையைவிட வேகமாக ஓடும்.
ராத்திரியில் திரிகிற ஓநாய்களைவிட மூர்க்கமாக இருக்கும்.[e]
அவர்களுடைய போர்க்குதிரைகள் துள்ளிக் குதித்து ஓடும்.
அவை வெகு தூரத்திலிருந்து வரும்.
இரையைப் பார்த்ததும் அதன்மேல் பாய்கிற கழுகு போல வேகமாகப் பாயும்.[f]
9 அவர்கள் எல்லாவற்றையும் நொறுக்கிப்போட படைதிரண்டு வருவார்கள்.[g]
சுட்டெரிக்கும் கிழக்குக் காற்றைப் போல வேகமாக வருவார்கள்.[h]
மணலை அள்ளுவது போல ஜனங்களை அள்ளிக்கொண்டு போவார்கள்.
10 ராஜாக்களை அவர்கள் கிண்டல் செய்வார்கள்.
உயர் அதிகாரிகளை ஏளனம் பண்ணுவார்கள்.[i]
கோட்டைகளைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பார்கள்.[j]
மண்மேடுகளை எழுப்பி அந்தக் கோட்டைகளைக் கைப்பற்றுவார்கள்.
11 காற்றைப் போல வேகமாகத் தேசத்தைக் கடந்து போவார்கள்.
ஆனால், தங்கள் தெய்வம்தான் தங்களுக்குப் பலம் தந்ததாகச் சொல்வார்கள்.*[k]
அதனால், குற்றவாளிகளாக ஆவார்கள்."[l]
12 யெகோவாவே, நீங்கள் என்றென்றும் இருப்பவர்.[m]
என் கடவுளே, பரிசுத்தமான கடவுளே, உங்களுக்குச் சாவு என்பதே இல்லை.*[n]
யெகோவாவே, எங்களுக்குத் தண்டனைத் தீர்ப்பைக் கொடுக்கத்தான் அவர்களை நியமித்தீர்கள்.
கற்பாறை போன்றவரே,[o] எங்களைத் தண்டிப்பதற்குத்தான்# அவர்களை வரவழைத்தீர்கள்.[p]
13 மிகவும் பரிசுத்தமான உங்களுடைய கண்கள் தீமையைப் பார்த்து ரசிக்காதே!
அக்கிரமங்களை உங்களால் சகிக்க முடியாதே![q]

அதி. 1
a ஏசா 28:21; ஏசா 29:14; புல 4:11, 12; அப் 13:40, 41
b எரே 22:7; எரே 46:2
c உபா 28:49-51; எரே 5:15-17; எரே 6:22, 23; எசே 23:22, 23
d எரே 39:5-7; தானி 5:18, 19
e எரே 5:6
f எரே 4:13; புல 4:19; எசே 17:3
g எரே 25:9
h ஏசா 27:8; எசே 17:10
i 2ரா 24:12
j எரே 32:24; எரே 52:7
k தானி 5:1, 4
l ஏசா 47:5, 6; எரே 51:24; சக 1:15
m சங் 90:2; சங் 93:2; வெளி 1:8
n 1தீ 1:17; வெளி 15:3
o உபா 32:4
p எரே 30:11
q சங் 5:4, 5

1:7 *வே.வா., "தங்களை உயர்த்திக்கொள்கிறார்கள்." **1:11** *அல்லது, "அவர்களுடைய பலம்தான் அவர்களுக்குத் தெய்வம்." **1:12** *அல்லது, "நாங்கள் சாகப் போவதே இல்லை." #வே.வா., "கண்டிப்பதற்குத்தான்."

அப்படியிருந்தும், நயவஞ்சகர்களை ஏன் பொறுத்துக்கொள்கிறீர்கள்?[a]
நீதிமானைக் கெட்டவன் ஆட்டிப்படைப்பதைப் பார்த்து ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?[b]
14 கடல்மீன்களைப் போலவும் ஆதரவில்லாத* கடல் பிராணிகளைப் போலவும்
மனிதர்கள் நடத்தப்படுவதற்கு ஏன் விடுகிறீர்கள்?
15 அவர்கள் எல்லாரையும் எதிரி* தூண்டிலில் பிடிக்கிறான்.
மீன்பிடிக்கும் வலையால் இழுக்கிறான்.
அதில் வாரிக்கொள்கிறான்.
அதனால், சந்தோஷத்தில் துள்ளுகிறான்.[c]
16 தன்னுடைய வலைகளுக்கு அவன் பலிகளைச் செலுத்துகிறான்.
அவற்றுக்குத் தூபம் காட்டுகிறான்.
ஏனென்றால், அவற்றால்தான் அவனுக்குச் செல்வம் குவிந்தது,*
அருமையான உணவும் கிடைத்தது.
17 அப்படியானால், அவன் தன் வலையை விரித்துக்கொண்டே இருப்பானா?*
கரிசனை இல்லாமல் ஜனங்களைக் கொன்று குவித்துக்கொண்டே இருப்பானா?[d]

2 நான் ஒரு காவலாளியைப் போல நின்றுகொண்டிருப்பேன்.[e]
அரண்மேல்* ஏறி நிற்பேன்.
என் மூலம் அவர் என்ன செய்தி சொல்லப்போகிறார் என்பதைக் கேட்க ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன்.
அவர் என்னைக் கண்டிக்கும்போது என்ன பதில் சொல்லலாம் என்று யோசித்துக்கொண்டிருப்பேன்.
2 யெகோவா என்னிடம் இப்படிச் சொன்னார்:
“இந்தத் தரிசனத்தை எழுதி வை, பலகைகளில் தெளிவாகச் செதுக்கி வை.[f]
அப்போதுதான், அதைச் சரளமாக வாசித்துக் காட்ட முடியும்.[g]
3 நிறைவேற வேண்டிய காலத்தில் தரிசனம் நிறைவேறும்.
அது வேகமாய் வந்துகொண்டிருக்கிறது; அது வராமல் போகாது.*
ரொம்ப நாட்கள் ஆவதுபோல் தெரிந்தாலும் அதற்காகக் காத்திரு.#[h]
தரிசனம் நிச்சயம் நிறைவேறும்.
அது கொஞ்சம்கூடத் தாமதிக்காது!
4 உண்மையாக இருப்பதன் மூலம்* நீதிமான் வாழ்வு பெறுவான்.[i]
ஆனால், தலைக்கனம் பிடித்தவனைப் பார்.
அவனுடைய மனதில் நேர்மையே இல்லை.
5 திராட்சமதுவும் ஏமாற்றுவதால்,

1:14 *வே.வா., “அதிகாரி இல்லாத.” **1:15** *அதாவது, “கல்தேயன்.” **1:16** *நே.மொ., “கொழுமையான பங்கு கிடைத்தது.” **1:17** *அல்லது, “வாளை உருவிக்கொண்டே இருப்பானா?” **2:1** *வே.வா., “மண்மேட்டின் மேல்.” **2:3** *வே.வா., “பொய்த்துப்போகாது.” #வே.வா., “அது தாமதித்தாலும் அதற்காக ஆவலோடு எதிர்பார்த்திரு.” **2:4** *அல்லது, “விசுவாசத்தினால்; நம்பிக்கையினால்.”

அதி. 1
a எரே 12:1
b சங் 35:21, 22
c எரே 50:11
d 2நா 36:17; நாகூ 3:7

அதி. 2
e ஏசா 21:8; மீ 7:7
f யாத் 17:14
g உபா 31:9, 11
h மீ 7:7
i யோவா 3:36; ரோ 1:17; கலா 3:11; எபி 10:38

அதி. 2
a ஏசா 14:16, 17
b ஏசா 14:4
c எரே 51:11
d 2நா 36:17 சங் 137:8
e ஏசா 13:19 எரே 27:6, 7 சக 2:7-9
f ஏசா 14:20
g எரே 51:58
h சங் 72:19 ஏசா 11:9 சக 14:9

அவன்* தன்னுடைய லட்சியத்தை அடையவே மாட்டான்.
கல்லறையைப் போலப் பேராசையோடும்,
மரணத்தைப் போலத் திருப்தி அடையாமலும் இருக்கிறான்.
தேசங்களைச் சளைக்காமல் கைப்பற்றுகிறான்.
ஜனங்கள் எல்லாரையும் வளைத்துப் பிடிக்கிறான்.[a]
6 அவர்கள் எல்லாரும் அவனைக் கேலி செய்து நக்கலாகவும் குத்தலாகவும் பேசுவார்கள்.[b]
அவனைப் பார்த்து இப்படிச் சொல்வார்கள்:
'மற்றவர்களுக்குச் சொந்தமானதைப் பிடுங்கிக்கொள்பவனே, உனக்குக் கேடுதான் வரும்!
இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் இப்படிச் செய்வாய்?
உன் கடனை அதிகமாக்கிக்கொண்டே இருக்கிறாயே!
7 உனக்குக் கடன் கொடுத்தவர்கள் திடீரென்று உன்மேல் பாய்வார்கள்.
அவர்கள் விழித்துக்கொண்டு, உன்னைப் பயங்கரமாக உலுக்கியெடுப்பார்கள்.
உன்னைச் சூறையாடுவார்கள்.[c]
8 மற்ற தேசங்களையெல்லாம் நீ சூறையாடினாயே.
ஜனங்களின் இரத்தத்தைச் சிந்தினாயே.
பூமியில் நாச வேலைகளைச் செய்தாயே.
நகரங்களையும் அங்குள்ள ஜனங்களையும் பாழாக்கினாயே.[d]
இப்போது, மீதியிருக்கிற ஜனங்கள் உன்னைச் சூறையாடுவார்கள்.[e]
9 குடும்பத்துக்காக* குறுக்கு வழியில் சம்பாதிக்கிறவனே, உனக்குக் கேடுதான் வரும்!
அழிவின் பிடியிலிருந்து நீ தப்பிக்க நினைக்கிறாய்.
அதற்காக உயரமான இடத்தில் தங்குவதற்குத் திட்டமிடுகிறாய்.
10 சதித்திட்டங்கள் தீட்டுவதால் உன் குடும்பத்துக்கு அவமானத்தைத் தேடிக்கொள்கிறாய்.
ஜனங்களைக் கொன்று குவிப்பதால் உனக்கு எதிராகவே நீ பாவம் செய்கிறாய்.[f]
11 அதனால், சுவரிலுள்ள கல் உனக்கு எதிராகக் கூச்சல்போடும்.
கூரையிலுள்ள மரச்சட்டம் அதை எதிரொலிக்கும்.
12 ஜனங்களின் இரத்தத்தைச் சிந்தி நகரத்தைக் கட்டுகிறவனுக்கும்,
அநீதியினால் ஒரு ஊரை உருவாக்குகிறவனுக்கும் கேடுதான் வரும்!
13 ஜனங்களின் உழைப்பெல்லாம் நெருப்புக்குப் பலியாகிறது.
தேசங்கள் படும் பாடுகளெல்லாம் வீணாகிறது.
இப்படி நடக்கும்படி செய்பவர் பரலோகப் படைகளின் யெகோவாதான்.[g]
14 கடல் முழுவதும் தண்ணீரால் நிறைந்திருப்பது போல
பூமி முழுவதும் யெகோவாவின் மகிமையைப் பற்றிய அறிவால் நிறைந்திருக்கும்.[h]

2:5 * நே.மொ., "அகம்பாவம் பிடித்தவன்." 2:9 * வே.வா., "வம்சத்துக்காக."

15 ஆத்திரத்தோடும் கோபத்தோடும் நண்பர்களுக்கு மதுபானம் கொடுப்பவனே,
உனக்குக் கேடுதான் வரும்!
போதையேறும் அளவுக்கு நீ அவர்களைக் குடிக்க வைக்கிறாய்.
அவர்களுடைய நிர்வாணத்தைப் பார்ப்பதற்காகவே இப்படிச் செய்கிறாய்!
16 நீ பேரும் புகழும் அடைவதற்குப் பதிலாகப் பெருத்த அவமானம் அடைவாய்.
நீயும் நன்றாகக் குடி! விருத்தசேதனம் செய்யப்படாத உன் கோலத்தை எல்லாருக்கும் காட்டு!*
யெகோவாவின் வலது கையிலிருக்கும் கோப்பை உன்னிடம் வரும்.[a]
அப்போது, உன் புகழை இழந்து கேவலப்பட்டுப்போவாய்.
17 நீ ஜனங்களின் இரத்தத்தைச் சிந்தினாய்.
பூமியில் கொடுமைகள் செய்தாய்.
நகரங்களையும் ஜனங்களையும் நாசமாக்கினாய்.
லீபனோனுக்குக் கொடுமை செய்தாய், அது போல நீயும் கொடுமை செய்யப்படுவாய்.
மிருகங்களை அழித்தாய், அது போல நீயும் அழிக்கப்படுவாய்.[b]
18 சிலையைச் செதுக்குகிறவனுக்கு அதனால் என்ன பிரயோஜனம்?
அவன் கையால்தானே அதைச் செதுக்கினான்?
உலோகச் சிலையையும் பொய்யைப் போதிக்கிற சிலையையும்
அவன் நம்பினாலும் அவற்றால் என்ன பிரயோஜனம்?
அவை ஒன்றுக்கும் உதவாத ஊமைத் தெய்வங்கள்தானே?[c]
19 ஒரு மரத்துண்டைப் பார்த்து, "கடவுளே, கண்திறக்க மாட்டாயா?" என்று கேட்கிறவனுக்கும்,
பேச முடியாத கல்லைப் பார்த்து, "இறைவா, கண் திறந்து எங்களுக்கு நல்ல வழி காட்டு" என்று சொல்கிறவனுக்கும் கேடுதான் வரும்!
அவை தங்கத்தாலும் வெள்ளியாலும் முலாம் பூசப்பட்டிருக்கின்றன.[d]
அவற்றுக்கு உயிர்மூச்சே இல்லை.[e]
20 ஆனால், யெகோவா தன்னுடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்.[f]
பூமியெல்லாம் அவருக்கு முன்னால் அமைதியாக இருக்கட்டும்.'"[g]

3 ஆபகூக் தீர்க்கதரிசி கடவுளிடம் பாடிய புலம்பல் பாட்டு:
2 "யெகோவாவே, இதுவரை நீங்கள் செய்திருக்கிற காரியங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.
யெகோவாவே, அவற்றை நினைத்தால் பிரமிப்பாக இருக்கிறது.
சரியான சமயத்தில்* மறுபடியும் அவற்றைச் செய்யுங்கள்.
சரியான சமயத்தில்* அவற்றை எல்லாருக்கும் தெரியப்படுத்துங்கள்.
உங்களுடைய கோபத்தைக் காட்டும்போது,# எங்களுக்கு இரக்கம் காட்ட மறந்துவிடாதீர்கள்.[h]
3 கடவுள் தேமானிலிருந்து வந்தார்.

2:16 *அல்லது, "குடித்துவிட்டுத் தள்ளாடு." 3:2 *அல்லது, "எங்களுடைய காலத்தில்." #வே.வா., "நீங்கள் கலவரத்தை வெடிக்கச் செய்யும்போது."

அதி. 2
a சங் 75:8
ஏசா 51:22, 23
எரே 25:28
எரே 51:57
b சங் 137:8
எரே 50:28
எரே 51:24
c ஏசா 42:17
ஏசா 44:19, 20
ஏசா 45:20
d ஏசா 40:19
ஏசா 46:6
e எரே 51:17
f ஏசா 6:1
g சங் 76:8
சங் 115:3
சக 2:13

அதி. 3
h புல 3:32

அதி. 3
a உபா 33:2
நியா 5:4
சங் 68:7, 8
b யாத் 19:16
c யாத் 13:21
d எண் 14:11, 12
எண் 16:46
எண் 25:1, 9
e ஏசா 13:13
ஆகா 2:21
f யாத் 14:25
யாத் 23:27
g சங் 114:1, 4
நாகூ 1:5
h யாத் 15:14, 15
எண் 22:3, 4
i சங் 114:1, 3
ஏசா 50:2
நாகூ 1:4
j உபா 33:26
k சங் 68:17
l யாத் 19:18
சங் 114:1, 4
m சங் 77:16
n யோசு 10:12
o சங் 77:17, 18

பரிசுத்தமான கடவுள் பாரான் மலையிலிருந்து வந்தார்.[a] (*சேலா*)*
வானம் அவருடைய மகிமையால் நிறைந்தது.[b]
பூமி அவருடைய புகழால் நிரம்பியது.
4 அவர் ஒளிபோல் பிரகாசமாக இருந்தார்.[c]
அவருடைய பலம் அவர் கையில் மறைந்திருந்தது.
அங்கிருந்து இரண்டு ஒளிக்கதிர்கள் புறப்பட்டன.
5 கொள்ளைநோய் அவருக்கு முன்னால் போனது.[d]
கடும் காய்ச்சல் அவருடைய காலடிகளுக்குப் பின்னால் போனது.
6 அவர் அசையாமல் நின்று பூமியை அதிர வைத்தார்,[e]
ஒரு பார்வை பார்த்து தேசங்களை நடுநடுங்கச் செய்தார்.[f]
காலம்காலமாக இருந்த மலைகள் நொறுங்கின.
பழங்கால குன்றுகளும் தரைமட்டமாயின.[g]
பூர்வ காலத்திலிருந்து அவர் செய்துவரும் செயல்களே இவை.
7 கூஷானின் கூடாரங்களைத் திகில் கவ்வியது.
மீதியான் தேசத்தின் கூடாரத் துணிகள் படபடத்தன.[h]
8 யெகோவாவே, ஆறுகள்மீதா உங்களுக்கு ஆக்ரோஷம்?
நதிகள்மீதா உங்களுக்கு ஆவேசம்?
கடல்மீதா உங்களுக்குக் கடும் கோபம்?[i]
உங்கள் குதிரைகளில் ஏறி வந்தீர்களே.[j]
உங்களுடைய ரதங்கள் வெற்றி* பெற்றனவே.[k]
9 நீங்கள் வில்லைக் கையில் ஏந்திக்கொண்டிருக்கிறீர்கள்.
உறுதிமொழியின்படியே, கம்புகள்* தாக்குவதற்குத் தயாராக இருக்கின்றன. (*சேலா*)
நீங்கள் பூமியைப் பிளந்து ஆறுகளை உண்டாக்குகிறீர்கள்.
10 மலைகள் உங்களைப் பார்த்து வேதனையில் துடிதுடித்தன.[l]
மழைநீர் வெள்ளமாக அடித்துக்கொண்டு போனது.
ஆழத்திலுள்ள தண்ணீர் பெரும் இரைச்சல் போட்டது.[m]
அது மேல்நோக்கிப் பீச்சியடித்தது.
11 சூரியனும் சந்திரனும் வானத்தில் அசையாமல் நின்றன.[n]
உங்களுடைய அம்புகள் ஒளியைப் போல வேகமாகப் பாய்ந்தன.[o]
உங்களுடைய ஈட்டி மின்னலைப் போல மின்னியது.
12 நீங்கள் கடும் கோபத்தோடு பூமியில் நடந்துபோனீர்கள்.
ஆக்ரோஷத்தோடு தேசங்களை மிதித்துப் போட்டீர்கள்.
13 உங்கள் ஜனத்தைக் காப்பாற்றுவதற்கு, நீங்கள் தேர்ந்தெடுத்த* ஜனத்தைக் காப்பாற்றுவதற்கு, புறப்பட்டுப்போனீர்கள்.
பொல்லாதவனுடைய வீட்டுத் தலைவனை நொறுக்கினீர்கள்.
அந்த வீடு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. (*சேலா*)
14 பாவப்பட்டவனைப் பதுங்கியிருந்து தாக்குவதில் அவனுடைய போர்வீரர்களுக்கு ஒரே கொண்டாட்டம்!

3:3 * சொல் பட்டியலைப் பாருங்கள். **3:8** * வே.வா., “மீட்பு.” **3:9** * அல்லது, “அம்புகள்.” **3:13** * வே.வா., “அபிஷேகம் செய்த.”

என்னைத் துரத்தியடிக்க* அவர்கள் புயல் வேகத்தில் வந்தார்கள்.
ஆனால், நீங்கள் அவர்களுடைய ஆயுதங்களை வைத்தே அவர்களுடைய தலையைப் பிளந்தீர்கள்.
15 கடலில் உங்கள் குதிரைகளை ஓட்டிக்கொண்டு போனீர்கள்.
கொந்தளிக்கும் தண்ணீர்மேல் சவாரி செய்தீர்கள்.
16 செய்தியைக் கேட்டு நான் குலைநடுங்கினேன்.
என் உதடுகள் துடிதுடித்தன.
என் எலும்புகள் உளுத்துப்போயின.[a]
கால்கள் கிடுகிடுவென்று ஆடின.
ஆனாலும், அழிவு* நாளுக்காக நான் பொறுமையோடு# காத்திருக்கிறேன்.[b]
ஏனென்றால், எங்களைத் தாக்குபவர்களுக்கு எதிராக அது வருகிறது.
17 அத்தி மரம் பூத்துக் குலுங்காமல் போகலாம்.
திராட்சைக் கொடியில் பழங்கள் இல்லாமல் போகலாம்.
ஒலிவ மரம் காய்க்காமல் போகலாம்.
வயல்களில் பயிர்கள் விளையாமல் போகலாம்.
பட்டியில் ஆடுகள் காணாமல் போகலாம்.
தொழுவத்தில் மாடுகள் இல்லாமல் போகலாம்.
18 ஆனாலும், நான் யெகோவாவை நினைத்து சந்தோஷத்தில் துள்ளுவேன்.
என்னை மீட்கும் கடவுளை நினைத்து பூரித்துப்போவேன்.[c]
19 உன்னதப் பேரரசராகிய யெகோவாவே என் பலம்.[d]
அவர் என்னை மான்களைப் போலத் துள்ளி ஓட வைப்பார்.
உயரமான இடங்களில் என்னை நடக்க வைப்பார்.”[e]

இசைக் குழுவின் தலைவனுக்கு;
என்னுடைய நரம்பிசைக் கருவிகளை வைத்துப் பாடுவதற்கு.

3:14 *வே.வா., “சிதறடிக்க.” **3:16** *வே.வா., “இக்கட்டு.” #வே.வா., “அமைதியாக.”

அதி. 3
a சங் 119:120 எரே 23:9 தானி 8:27
b சங் 42:5 ஏசா 26:20 புல 3:26
c யாத் 15:2 1சா 2:1 சங் 18:2 சங் 27:1 ஏசா 61:10
d ஏசா 12:2 பிலி 4:13
e 2சா 22:34

செப்பனியா

முக்கியக் குறிப்புகள்

1 யெகோவா தண்டனைத் தீர்ப்பு வழங்கும் நாள் பக்கத்தில் வந்துவிட்டது (1-18)
- யெகோவாவின் மகா நாள் மிகவும் வேகமாக வந்துகொண்டிருக்கிறது (14)
- வெள்ளியோ தங்கமோ ஜனங்களைக் காப்பாற்றாது (18)

2 யெகோவாவுடைய கோபத்தின் நாள் வருவதற்கு முன்பே அவரைத் தேடுங்கள் (1-3)
- நீதிநெறிகளைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள் (3)
- “நீங்கள் அநேகமாக பாதுகாக்கப்படலாம்” (3)

சுற்றியிருக்கும் தேசங்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு (4-15)

3 எருசலேம் ஒரு கலகக்கார நகரம், தீட்டுப்பட்ட நகரம் (1-7)

ஜனங்களுக்கு வரும் தண்டனைத் தீர்ப்பும், அவர்கள் திரும்பவும் கூட்டிச்சேர்க்கப்படுவதும் (8-20)

ஜனங்களின் பாஷை சுத்தமான பாஷையாக மாறும் (9)

தாழ்மையான, பணிவான ஜனங்கள் காப்பாற்றப்படுவார்கள் (12)

யெகோவா சீயோனை நினைத்துப் பூரித்துப்போவார் (17)

---

1 யூதாவின் ராஜாவாகிய ஆமோனின்[a] மகன் யோசியாவின் காலத்
தில்,[b] எசேக்கியாவின் எள்ளுப்பேரனும் அமரியாவின் கொள்ளுப்
பேரனும் கெதலியாவின் பேரனும் கூஷியின் மகனுமாகிய செப்பனியா
வுக்கு* யெகோவாவிடமிருந்து கிடைத்த செய்தி இதுதான்:

2 “நான் பூமியில் இருக்கிற எல்லாவற்றையும் அடியோடு
அழித்துவிடுவேன்” என்று யெகோவா சொல்கிறார்.[c]

3 “மனுஷர்களையும் மிருகங்களையும் கொல்வேன்.
வானத்தில் பறக்கும் பறவைகளையும் கடலில் நீந்துகிற மீன்களையும்
அழிப்பேன்.[d]
பொல்லாதவர்களையும் அவர்களுடைய பாவங்களுக்குக் காரணமான
எல்லாவற்றையும்*[e] ஒழிப்பேன்.
மனுஷர்களைப் பூமியிலிருந்து அழித்துவிடுவேன்” என்று யெகோவா
சொல்கிறார்.

4 “நான் யூதாவுக்கு எதிராக என் கையை நீட்டுவேன்.
எருசலேமில் குடியிருக்கிறவர்கள்மேல் என் கையை ஓங்குவேன்.
பாகாலைச் சுவடு தெரியாமல் அழித்துவிடுவேன்.[f]
பொய் தெய்வ பூசாரிகளின் பெயர்களையும் போலி குருமார்களின்
பெயர்களையும் ஒழித்துவிடுவேன்.[g]

5 மொட்டைமாடிக்குப் போய் சூரியனையும் சந்திரனையும்
நட்சத்திரங்களையும் கும்பிடுகிறவர்களையும்,[h]
யெகோவாவை மட்டும் வணங்குவதாக அவரிடம் வாக்குக்
கொடுத்துவிட்டு,[i]
மல்காமிடமும் அதேபோல் வாக்குக் கொடுக்கிறவர்களையும் நான்
அழிப்பேன்.[j]

6 யெகோவாவைவிட்டு விலகிப்போகிறவர்களை[k] ஒழித்துக்கட்டுவேன்.
யெகோவாவைத் தேடாமலும் அவரை விசாரிக்காமலும்
இருக்கிறவர்களை[l] அழித்துவிடுவேன்.”

7 உன்னதப் பேரரசராகிய யெகோவாவுக்கு முன்னால் அமைதியாக
இருங்கள்; யெகோவாவின் நாள் பக்கத்தில் வந்துவிட்டது.[m]

1:1 *செப்பனியா என்ற பெயரின் அர்த்தம், “யெகோவா மறைத்து வைத்திருக்கிறார் (பொக்கிஷமாக வைத்திருக்கிறார்).” **1:3** *அநேகமாக, “சிலை வழிபாட்டோடு சம்பந்தப்பட்ட பொருள்கள் அல்லது செயல்கள் எல்லாவற்றையும்.”

அதி. 1
a 2ரா 21:18-20
b 2ரா 22:1, 2; எரே 1:2
c 2ரா 22:16; ஏசா 6:11; எரே 6:8
d எரே 4:25
e எசே 14:3
f எண் 25:3; நியா 2:11, 13; 2நா 28:1, 2; எரே 11:17
g 2ரா 23:5
h 2நா 33:1, 3; எரே 19:13
i ஏசா 48:1
j யோசு 23:6, 7; 1ரா 11:33; எரே 49:1
k ஏசா 1:4; எரே 2:13
l ஏசா 43:22
m யோவே 2:1; 2பே 3:10

யெகோவா ஒரு பலியை ஏற்பாடு செய்திருக்கிறார்;
அழைக்கப்பட்டவர்களை அவர் தயார்படுத்தியிருக்கிறார்.*
8 “யெகோவாவாகிய நான் பலி கொடுக்கும் நாளில் அதிபதிகளைத் தண்டிப்பேன்.
ராஜாவின் மகன்களையும்[a] மற்ற தேசத்தாரைப் போல உடை உடுத்துகிறவர்களையும் தண்டிப்பேன்.
9 அந்த நாளில் மேடைமேல்* ஏறுகிற எல்லாரையும் தண்டிப்பேன்.
எஜமானின் வீட்டை வன்முறைச் செயல்களாலும் மோசடி வேலைகளாலும் நிரப்புகிறவர்களைத் தண்டிப்பேன்.”
10 யெகோவா இப்படிச் சொல்கிறார்:
“அந்த நாளில், ‘மீன் நுழைவாசலில்’[b] கதறல் சத்தம் கேட்கும்.
நகரத்தின் புதிய பகுதியில்[c] ஒப்பாரிச் சத்தம் கேட்கும்.
மலைகளில் பயங்கர சத்தம் கேட்கும்.
11 வியாபாரிகள் எல்லாரும் ஒழிந்துவிட்டார்கள்.
வெள்ளியை எடை போடுகிற எல்லாரும் அழிந்துவிட்டார்கள்.
அதனால் மக்தேஷ்* ஜனங்களே, அழுது புலம்புங்கள்.
12 அந்தச் சமயத்தில் நான் விளக்குகளை ஏந்திக்கொண்டு எருசலேமெங்கும் தேடிப் பார்ப்பேன்.
அலட்சியமாக இருப்பவர்களை* கண்டுபிடித்துத் தண்டிப்பேன்.
அவர்கள் தங்களுடைய உள்ளத்தில்,
‘யெகோவா நல்லதும் செய்ய மாட்டார், கெட்டதும் செய்ய மாட்டார்’ என்று சொல்லிக்கொள்கிறார்கள்.[d]
13 அவர்களுடைய சொத்துகள் சூறையாடப்படும், அவர்களுடைய வீடுகள் பாழாக்கப்படும்.[e]
வீடுகளைக் கட்டுவார்கள், ஆனால் அவற்றில் குடியிருக்க மாட்டார்கள்.
திராட்சைத் தோட்டங்களை அமைப்பார்கள், ஆனால் அவற்றிலிருந்து கிடைக்கும் திராட்சமதுவைக் குடிக்க மாட்டார்கள்.[f]
14 யெகோவாவின் மகா நாள் நெருங்கிவிட்டது![g]
அது மிகவும் வேகமாக வந்துகொண்டிருக்கிறது, பக்கத்தில் வந்துவிட்டது![h]
யெகோவாவின் நாளில் பயங்கரமான சத்தம் கேட்கும்.[i]
அப்போது, போர்வீரன்கூட அலறுவான்.[j]
15 அது கடவுளுடைய கடும் கோபத்தின் நாள்.[k]
இக்கட்டும் வேதனையுமான நாள்.[l]
புயல்காற்றும் பேரழிவும் தாக்கும் நாள்.
அது மங்கலான நாள், இருண்ட நாள்.[m]
கார்மேகமும் கும்மிருட்டும் சூழ்ந்துகொள்ளும் நாள்.[n]
16 ஊதுகொம்பின் சத்தமும் போர் முழக்கமும் கேட்கும் நாள்.[o]

1:7 *வே.வா., “புனிதப்படுத்தியிருக்கிறார்.” 1:9 *ஒருவேளை, “சிம்மாசனத்தின் மேடைமேல்.” 1:11 *அநேகமாக, “‘மீன் நுழைவாசலுக்கு’ பக்கத்திலுள்ள எருசலேமின் ஒரு பகுதி.” 1:12 *வே.வா., “திராட்சை ரசத் தொட்டியின் அடியிலுள்ள வண்டல் போன்றவர்களை.”

அதி. 1
a 2ரா 25:7; எரே 39:6
b 2நா 33:1, 14; நெ 3:3; நெ 12:38, 39
c 2நா 34:22
d சங் 10:13; சங் 14:1
e ஏசா 6:11
f உபா 28:30; எரே 5:17
g யோவே 2:1
h ஆப 2:3
i ஏசா 66:6
j ஏசா 33:7; யோவே 1:15
k வெளி 6:17
l எரே 30:7
m ஆமோ 5:18, 20; அப் 2:20
n யோவே 2:2
o எரே 4:19

மதில் சூழ்ந்த நகரங்களும் உயர்ந்த மூலைக்கோபுரங்களும்
தாக்கப்படும் நாள்.[a]
17 நான் மனிதர்களுக்கு மன வேதனையை உண்டாக்குவேன்.
கண் தெரியாதவர்களைப் போல அவர்கள் தட்டுத்தடுமாறி
நடப்பார்கள்.[b]
ஏனென்றால், அவர்கள் யெகோவாவுக்கு எதிராகப் பாவம்
செய்தார்கள்.[c]
அவர்களுடைய இரத்தம் மண்ணைப் போலக் கொட்டப்படும்.
அவர்களுடைய சதை* சாணம் போலக் கிடக்கும்.[d]
18 யெகோவாவுடைய கடும் கோபத்தின் நாளில் அவர்களுடைய
வெள்ளியோ தங்கமோ அவர்களைக் காப்பாற்றாது.[e]
அவருடைய வைராக்கியம் தீ போல முழு பூமியையும்
பொசுக்கிவிடும்.[f]
பூமியின் குடிமக்கள் எல்லாரையும் அவர் பூண்டோடு
அழித்துவிடுவார்; அந்த அழிவு படுபயங்கரமாக இருக்கும்."[g]

2 வெட்கங்கெட்ட தேசத்தாரே,[h]
ஒன்றுகூடி வாருங்கள், எல்லாரும் திரண்டு வாருங்கள்.[i]
2 தண்டனைத் தீர்ப்பு நிறைவேறுவதற்கு முன்பே,
பதரைப் போல அந்த நாள் பறந்துபோவதற்கு முன்பே,
யெகோவாவின் கோபம் உங்கள்மேல் கொட்டப்படுவதற்கு முன்பே,[j]
யெகோவாவுடைய கோபத்தின் நாள் உங்களுக்கு எதிராக
வருவதற்கு முன்பே,
3 பூமியில் குடியிருக்கிற மனத்தாழ்மையுள்ள* ஜனங்களே,
யெகோவாவுடைய நீதியான சட்டங்களைப் பின்பற்றுகிறவர்களே,
யெகோவாவைத் தேடுங்கள்,[k] நீதிநெறிகளைத் தேடுங்கள்,
மனத்தாழ்மையைத் தேடுங்கள்.
அப்போது, அவருடைய கோபத்தின் நாளிலே நீங்கள் அநேகமாக#
பாதுகாக்கப்படலாம்.[l]
4 காசா நகரம் வெறிச்சோடிப் போகும்.
அஸ்கலோன் நகரம் பாழாக்கப்படும்.[m]
அஸ்தோத் ஜனங்கள் பட்டப்பகலில் விரட்டப்படுவார்கள்.
எக்ரோன் ஜனங்கள் அடியோடு அழிக்கப்படுவார்கள்.[n]
5 "கடலோரத்தில் வாழும் கிரேத்தியர்களே, உங்களுக்குக்
கேடுதான் வரும்![o]
யெகோவா உங்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு கொடுத்துவிட்டார்.
பெலிஸ்தியர்களின் தேசமான கானானே, உன்னை அழிப்பேன்.
உன் குடிமக்கள் யாரையும் விட்டுவைக்க மாட்டேன்.
6 கடலோரப் பகுதி மேய்ச்சல் நிலமாக மாறும்.
அங்கே மேய்ப்பர்களுக்குக் கிணறுகளும் ஆடுகளுக்குத்
தொழுவங்களும்* இருக்கும்.

1:17 *நே.மொ., "குடல்." 2:3 *வே.வா., "சாந்தமான." #வே.வா., "ஒருவேளை."
2:6 *இவை கற்சுவர்களால் கட்டப்பட்ட நிரந்தரத் தொழுவங்களைக் குறிக்கின்றன.

அதி. 1
a ஏசா 2:12, 15
b உபா 28:28, 29; ஏசா 59:9, 10
c ஏசா 24:5; தானி 9:5, 8
d சங் 79:2, 3; எரே 9:22; எரே 16:4
e நீதி 11:4; ஏசா 2:20; எசே 7:19
f உபா 32:22; எரே 7:20
g எரே 4:27

அதி. 2
h ஏசா 1:4; எரே 6:15
i யோவே 1:14; யோவே 2:15, 16
j 2ரா 23:26; 2நா 36:16, 17; எரே 23:20; புல 4:11
k ஏசா 55:6; ஆமோ 5:6
l ஆதி 7:13, 16; ஏசா 26:20; யோவே 2:12, 14; ஆமோ 5:15
m எரே 47:5
n எரே 25:17, 20; ஆமோ 1:6-8; சக 9:5, 6
o எசே 25:16, 17

7 மீதியிருக்கும் யூதா ஜனங்களுக்கு அது சொந்தமாகிவிடும்.[a]
அங்கே அவர்கள் வயிறார சாப்பிடுவார்கள்.
சாயங்காலத்தில் அஸ்கலோனின் வீடுகளில் சொகுசாகப்
படுத்துக்கொள்வார்கள்.
அவர்களுடைய கடவுளான யெகோவா அவர்களை அக்கறையோடு
பார்த்துக்கொள்வார்.
சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்களைத் திரும்பக் கூட்டிக்கொண்டு
வருவார்."[b]
8 "மோவாபின் பழிப்பேச்சுகளையும்[c] அம்மோனின் அவமரியாதையான
பேச்சுகளையும்[d] நான் கேட்டேன்.
என் ஜனங்களைக் கேவலப்படுத்தி, அவர்களுடைய தேசத்தைக்
கைப்பற்றப்போவதாக அவர்கள் பெருமையடித்தார்கள்"[e] என்று
கடவுள் சொல்கிறார்.
9 இஸ்ரவேலின் கடவுளாகிய பரலோகப் படைகளின் யெகோவா
சொல்வது இதுதான்:
"என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்,* மோவாப் தேசம்
சோதோமைப் போல ஆகிவிடும்.[f]
அம்மோனியர்களின் தேசம் கொமோராவைப் போல ஆகிவிடும்.[g]
அது முள்காடாகவும் உப்புநிலமாகவும் மாறும், என்றென்றும் பாழாய்க்
கிடக்கும்.[h]
என் ஜனங்களில் மீதியானவர்கள் அந்தத் தேசங்களைச்
சூறையாடுவார்கள்.
என் தேசத்தில் மீதியிருக்கிறவர்கள் அவற்றைக் கைப்பற்றுவார்கள்.
10 அவர்களுடைய அகங்காரத்துக்குக் கிடைக்கும் தண்டனை இதுதான்.[i]
பரலோகப் படைகளின் யெகோவாவுடைய ஜனங்களுக்கு எதிராக
அவர்கள் பெருமையடித்தார்களே, கேவலமாகப் பேசினார்களே.
11 யெகோவாவாகிய நான் அவர்களைப் பயந்து நடுங்க வைப்பேன்.
அவர்களுடைய தெய்வங்களெல்லாம் ஒன்றுமில்லாமல்* போகும்படி
செய்துவிடுவேன்.
தீவுகளில் குடியிருக்கிற எல்லாரும் என்னை வணங்குவார்கள்.[j]
ஒவ்வொரு தேசத்தாரும் எனக்கு அடிபணிவார்கள்.
12 எத்தியோப்பியர்களே, நீங்களும் என் வாளால் வெட்டி
வீழ்த்தப்படுவீர்கள்."[k]
13 அவர் வடக்கிலிருக்கும் அசீரியாவுக்கு நேராகத் தன் கையை ஓங்கி,
அதை அழிப்பார்.
நினிவேயைப் பாழாக்கி அதைப் பாலைவனம் போலாக்குவார்.[l]
14 அங்கே மந்தைகள் படுத்துக்கொள்ளும், எல்லாவித காட்டு
மிருகங்களும் தங்கும்.
இடிந்துபோன தூண்களுக்கு நடுவே கூழைக்கடா பறவையும்
முள்ளம்பன்றியும் இரவைக் கழிக்கும்.

2:9 *வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்." **2:11** *வே.வா., "தளர்ந்து."

அதி. 2
a ஏசா 11:11, எரே 31:7, ஆகா 1:12
b சங் 126:1, எரே 23:3, எசே 39:25, ஆமோ 9:14, மீ 2:12, மீ 4:10, செப் 3:20
c எரே 48:26, 27, எசே 25:8, 9
d எரே 49:1, எசே 25:3
e சங் 83:2, 4
f எசே 25:11, ஆமோ 2:1, 2
g ஆதி 19:24, 25
h ஆமோ 1:13-15, யூ 7
i ஏசா 16:6, எரே 48:29
j சங் 22:27, மல் 1:11
k ஏசா 43:3, எசே 30:4, 5
l நாகூ 3:7

ஜன்னல் வழியாகச் சத்தம்* கேட்கும்.
நுழைவாசல் இடிபாடுகளாகக் கிடக்கும்.
தேவதாரு மரப்பலகைகளை அவர் நாசமாக்குவார்.
15 எந்தக் கவலையும் இல்லாமல் பெருமையடித்துவந்த நகரம் அது.
‘என்னைப் போல ஒரு நகரம் உலகத்திலேயே இல்லை’ என்று அது
சொல்லிக்கொண்டிருந்தது.
ஆனால், அதற்குக் கோரமான முடிவு வரும்.
அது காட்டு மிருகங்கள் தங்கும் இடமாக மாறும்!
அவ்வழியாகப் போகிறவர்கள் அதைப் பார்த்துக் கை காட்டி* கேலி
செய்வார்கள்.”# [a]

3 கலகக்கார நகரமே, தீட்டுப்பட்ட நகரமே, அடக்கி ஒடுக்குகிற நகரமே,
உனக்குக் கேடுதான் வரும்![b]
2 நீ எதையும் காதில் வாங்கவில்லை,[c] கண்டிக்கப்பட்டும் திருந்தவில்லை.[d]
யெகோவாமேல் நம்பிக்கை வைக்கவில்லை;[e] உன் கடவுளிடம்
நெருங்கி வரவில்லை.[f]
3 உன்னுடைய அதிபதிகள் கர்ஜிக்கிற சிங்கங்கள்.[g]
உன்னுடைய நீதிபதிகள் ராத்திரியில் நடமாடும் ஓநாய்கள்.
ஒரு எலும்பைக்கூட மிச்சம் வைக்காமல் விடியும்வரை சாப்பிடுகிற
ஓநாய்கள்.
4 உன் தீர்க்கதரிசிகள் திமிர் பிடித்தவர்கள், துரோகிகள்.[h]
உன் குருமார்கள் பரிசுத்தமானதைக் கெடுப்பவர்கள்;[i]
சட்டத்தை மீறுகிறவர்கள்.[j]
5 ஆனால், உன் நடுவே இருக்கிற யெகோவா நீதியுள்ளவர்,[k] எந்தத்
தவறும் செய்யாதவர்.
அவர் ஒவ்வொரு நாள் காலையிலும் தன்னுடைய நீதித்தீர்ப்புகளைச்
சொல்கிறார்.[l]
பொழுது எப்படித் தவறாமல் விடிகிறதோ அப்படியே அவரும்
தவறாமல் தீர்ப்புகளைச் சொல்கிறார்.
ஆனால், அநீதிமானுக்குச் சூடுசுரணையே இல்லை.[m]
6 “நான் தேசங்களை அழித்தேன்; அவற்றின் மூலைக்கோபுரங்கள்
வெறுமையாகிவிட்டன.
வீதிகளைப் பாழாக்கினேன்; அவை வெறிச்சோடிப் போய்விட்டன.
நகரங்களை நாசமாக்கினேன்; அவை ஆளே இல்லாத
இடங்களாகிவிட்டன.[n]
7 நீ குடியிருக்கும் இடம் அழியக் கூடாதென்று நினைத்தேன்.
அதனால், ‘நீ எனக்குப் பயப்பட வேண்டும், என் புத்திமதியைக்
கேட்டுத் திருந்த வேண்டும்’[o] என்று சொன்னேன்.
ஆனால், நீ அக்கிரமத்துக்குமேல் அக்கிரமம் செய்வதிலேயே குறியாக
இருந்தாய்.[p]
நீ செய்த எல்லாவற்றுக்கும் தண்டனை கொடுக்காமல் விட மாட்டேன்.

2:14 *பறவை, மிருகம், அல்லது காற்றின் சத்தமாக இருக்கலாம். **2:15** *வே.வா., “அசைத்து.” #நே.மொ., “விசில் அடிப்பார்கள்.”

அதி. 2
a நாகூ 3:1, 19

அதி. 3
b ஏசா 5:7
எரே 6:6
c எரே 22:21
எரே 32:23
d சங் 50:17
ஏசா 1:5
எரே 5:3
e சங் 78:22
எரே 17:5
f ஏசா 29:13
g ஏசா 1:23
எசே 22:27
h புல 2:14
i எரே 23:11
j எசே 22:25, 26
மீ 3:9
k உபா 32:4
l எரே 21:12
m எரே 3:3
எரே 8:12
செப் 2:1
n லேவி 18:28
o ஏசா 5:3, 4
ஏசா 63:8
எரே 7:5-7
எரே 25:5, 6
2பே 3:9
p மீ 2:1

8 யெகோவா இப்படிச் சொல்கிறார்: 'நான் எல்லாவற்றையும் சூறையாடுவதற்காக* வரப்போகும் நாள்வரை
எனக்காகப் பொறுமையோடு காத்திரு.[a]
தேசங்களையும் ராஜ்யங்களையும் ஒன்றுகூட்டி,
என் ஆக்ரோஷத்தையும் கடும் கோபத்தையும் அவர்கள்மேல் கொட்டுவதற்கு நான் முடிவு செய்திருக்கிறேன்.#[b]
என் வைராக்கியம் தீ போல முழு பூமியையும் பொசுக்கிவிடும்.[c]
9 நான் ஜனங்களின் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாற்றுவேன்.
அப்போது, எல்லாரும் யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்வார்கள்.
தோளோடு தோள் சேர்ந்து அவருக்குச் சேவை செய்வார்கள்.'*[d]
10 என் ஜனங்கள் எத்தியோப்பியாவின் ஆறுகளுக்கு அப்பாலிருந்து என்னிடம் வேண்டுவார்கள்.
துரத்தியடிக்கப்பட்ட என் ஜனங்கள் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவருவார்கள்.[e]
11 எனக்கு எதிராகக் குற்றங்கள் செய்த நகரமே!
அந்தக் குற்றங்களுக்காக அந்த நாளில் நீ அவமானம் அடைய மாட்டாய்.[f]
ஏனென்றால், பெருமை பேசித் திரிந்தவர்களை உன் நடுவிலிருந்து நீக்கிவிடுவேன்.
என் பரிசுத்த மலையில் இனி ஒருபோதும் நீ அகம்பாவமாக நடக்க மாட்டாய்.[g]
12 தாழ்மையான, பணிவான ஜனங்களை மட்டும் உன் நடுவே வாழ வைப்பேன்.[h]
அவர்கள் யெகோவாவின் பெயரில் தஞ்சம் அடைவார்கள்.
13 இஸ்ரவேலில் மீதியாக இருப்பவர்கள்[i] எந்த அநியாயமும் செய்ய மாட்டார்கள்.[j]
அவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்; அவர்களுடைய பேச்சில் சூதுவாது இருக்காது.
அவர்கள் நன்றாகச் சாப்பிட்டு, நிம்மதியாகத் தூங்குவார்கள்;
யாரும் அவர்களைப் பயமுறுத்த மாட்டார்கள்."[k]
14 சீயோன் மகளே, சந்தோஷமாகப் பாடு!
இஸ்ரவேலே, வெற்றி முழக்கம் செய்![l]
எருசலேம் மகளே, இதயம் பொங்க சந்தோஷப்படு![m]
15 உனக்கு எதிரான தீர்ப்புகளை யெகோவா ரத்து செய்தார்.[n]
விரோதிகளை உன்னைவிட்டு விலக்கினார்.[o]
இஸ்ரவேலின் ராஜாவான யெகோவா உன் நடுவே இருக்கிறார்.[p]
ஆபத்தை நினைத்து இனி நீ பயப்பட மாட்டாய்.[q]

3:8 * அல்லது, "நான் ஒரு சாட்சியாக." # வே.வா., "கொட்டுவதே என் நீதித்தீர்ப்பு."
3:9 * வே.வா., "ஒற்றுமையாக அவரை வணங்குவார்கள்."

அதி. 3
a சங் 37:34; சங் 130:7; ஏசா 30:18
b ஏசா 34:2; யோவே 3:2; வெளி 16:14; வெளி 19:19
c எசே 36:5
d சக 8:23
e ஏசா 60:4
f ஏசா 45:17; ஏசா 54:4
g ஏசா 11:9
h ஏசா 57:15; ஏசா 61:1
i ஏசா 10:22; மீ 4:7
j ஏசா 60:21
k எரே 30:10; எசே 34:28; எசே 39:25, 26; ஓசி 2:18; மீ 4:4
l எஸ்றா 3:11; ஏசா 12:5, 6; சக 2:10
m மீ 4:8
n ஏசா 40:2; சக 8:13
o மீ 7:10; சக 2:8, 9
p எசே 48:35
q ஆமோ 9:15; சக 14:11

அதி. 3
a எரே 46:28
b ஏசா 12:6
c உபா 30:9 சங் 147:11 ஏசா 62:3 ஏசா 65:19 எரே 32:41
d புல 1:4 புல 2:6
e புல 5:1
f ஏசா 60:14 சக 14:3
g மீ 4:6, 7
h ஏசா 11:11, 12 ஏசா 27:12 எசே 28:25 எசே 34: 15, 16 ஆமோ 9:14
i ஏசா 60:15
j ஏசா 61:7 எரே 30:10 எரே 33:7, 9 எசே 39: 25, 27

16 அந்த நாளில் எருசலேமிடம் இப்படிச் சொல்லப்படும்:
“சீயோனே, பயப்படாதே.[a]
மனம் தளர்ந்துவிடாதே.*
17 உன் கடவுளான யெகோவா உன் நடுவே இருக்கிறார்.[b]
சக்திபடைத்த அவர் உன்னைக் காப்பாற்றுவார்.
உன்னை நினைத்துப் பூரித்துப்போவார்.[c]
உன்மேல் கொள்ளை அன்பு காட்டுவார்.*
உன்னை நினைத்து சந்தோஷமாக முழங்குவார்.
18 உன் பண்டிகைகளுக்கு வர முடியாததை நினைத்துத் துக்கப்படுகிறவர்களை நான் கூட்டிச்சேர்ப்பேன்.[d]
அவர்கள் வெட்கக்கேடான நிலையில் இருந்ததால்தான் உன் பண்டிகைகளுக்கு வர முடியாமல்போனது.[e]
19 உன்னைக் கொடுமைப்படுத்துகிற எல்லாரையும் அந்த நாளில் தண்டிப்பேன்.[f]
நொண்டி நொண்டி நடப்பவர்களைக் காப்பாற்றுவேன்.[g]
சிதறடிக்கப்பட்டவர்களை ஒன்றுசேர்ப்பேன்.[h]
அவர்களுக்குப் பேரும் புகழும் கிடைக்கும்படி செய்வேன்.
தலைகுனிந்து நின்ற இடங்களில் அவர்களைத் தலைநிமிர்ந்து நிற்க வைப்பேன்.
20 அப்போது, உன் ஜனங்களை நான் கூட்டிக்கொண்டு வருவேன்.
அவர்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்ப்பேன்.
சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்களை உன் கண்ணெதிரே கூட்டிக்கொண்டு வருவேன்.
பூமியின் எல்லா தேசங்களிலும் உனக்குப் பேரும் புகழும் கிடைக்கும்படி செய்வேன்”[i] என்று யெகோவா சொல்கிறார்.[j]

3:16 *நே.மொ., “கைகளைத் தளரவிடாதே.” **3:17** *வே.வா., “உன்மேல் அன்பு காட்டுவதில் மனநிறைவு அடைவார்.”

ஆகாய்

முக்கியக் குறிப்புகள்

1 ஆலயத்தைத் திரும்பக் கட்டாததால் ஜனங்கள் கண்டிக்கப்படுகிறார்கள் (1-11)

“நீங்கள் மட்டும் ஆடம்பரமான வீடுகளில் குடியிருப்பது சரியா?” (4)

“உங்கள் வழிகளைப் பற்றி நன்றாக யோசித்துப் பாருங்கள்” (5)

நிறைய விதைக்கிறார்கள், ஆனால் கொஞ்சமாகத்தான் அறுக்கிறார்கள் (6)

ஜனங்கள் யெகோவா சொன்னதைக் கேட்டு நடக்கிறார்கள் (12-15)

2 இரண்டாவது ஆலயம் மகிமையால் நிரப்பப்படும் (1-9)

எல்லா தேசங்களும் உலுக்கப்படும் (7)

தேசங்களின் செல்வங்கள் ஆலயத்துக்குள் வந்து சேரும் (7)

ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் (10-19)

பரிசுத்தமான ஒன்றின்மேல் படுகிற எதுவும் பரிசுத்தமாகிவிடாது (10-14)

செருபாபேலுக்குக் கடவுளுடைய செய்தி (20-23)

“உன்னை முத்திரை மோதிரம் போலாக்குவேன்” (23)

---

1 தரியு ராஜா ஆட்சி செய்த இரண்டாம் வருஷம், ஆறாம் மாதம், முத
லாம் நாள் ஆகாய்* தீர்க்கதரிசிக்கு[a] யெகோவா ஒரு செய்தியைச்
சொன்னார். அதை சலாத்தியேலின் மகனாகிய யூதாவின் ஆளுநர் செருபா
பேலுக்கும்,[b] யோசதாக்கின் மகனாகிய தலைமைக் குரு யோசுவாவுக்கும்
சொல்லச் சொன்னார். அந்தச் செய்தி இதுதான்:

2 "“‘யெகோவாவின் ஆலயத்தைக் கட்ட* இன்னும் நேரம் வரவில்லை”
என்று இந்த ஜனங்கள் சொல்கிறார்கள்’[c] எனப் பரலோகப் படைகளின்
யெகோவா சொல்கிறார்.”

3 மறுபடியும் ஆகாய் தீர்க்கதரிசியின் மூலம் யெகோவா இப்படிச் சொன்
னார்:[d] **4** “என்னுடைய வீடு இடிந்து கிடக்கும்போது நீங்கள் மட்டும் ஆடம்
பரமான* வீடுகளில் குடியிருப்பது சரியா?[e] **5** பரலோகப் படைகளின்
யெகோவா சொல்வது இதுதான்: ‘உங்கள் வழிகளைப் பற்றி நன்றாக யோசித்
துப் பாருங்கள். **6** நீங்கள் நிறைய விதைக்கிறீர்கள், ஆனால் கொஞ்சமாகத்
தான் அறுக்கிறீர்கள்.[f] சாப்பிடுகிறீர்கள், ஆனால் பசியோடுதான் இருக்கிறீர்
கள். குடிக்கிறீர்கள், ஆனால் தாகத்தோடுதான் இருக்கிறீர்கள். உடுத்து
கிறீர்கள், ஆனால் குளிரில் நடுங்கிக்கொண்டுதான் இருக்கிறீர்கள். செய்த
வேலைக்குக் கூலி வாங்குகிறீர்கள், ஆனால் ஓட்டைகள் நிறைந்த பையில்
தான் அதைப் போடுகிறீர்கள்.’”

7 “‘உங்கள் வழிகளைப் பற்றி நன்றாக யோசித்துப் பாருங்கள்’ என்று பர
லோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

8 ‘மலைகளுக்குப் போய், மரங்களை வெட்டிக்கொண்டு வந்து,[g] என்னு
டைய ஆலயத்தைக் கட்டுங்கள்.[h] அந்த ஆலயத்தைப் பார்த்து நான்
சந்தோஷப்படுவேன், அது எனக்குப் புகழ் சேர்க்கும்’[i] என்று யெகோவா
சொல்கிறார்.”

9 “பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: ‘நீங்கள்
நிறைய விளைச்சலை எதிர்பார்த்தீர்கள், ஆனால் கொஞ்சம்தான் கிடைத்தது.
கிடைத்ததை உங்கள் வீட்டுக்குக் கொண்டுவந்தீர்கள், ஆனால் நான் அதை
ஊதித்தள்ளினேன்.[j] உங்களுக்கு ஏன் இந்தக் கதி என்று தெரியுமா? இடிந்து
கிடக்கும் என் வீட்டைக் கவனிக்காமல் உங்கள் வீட்டை மட்டும் ஓடி ஓடி
கவனித்துக்கொள்கிறீர்களே.[k] **10** அதனால்தான் வானம் பனியைப் பொழி
யவில்லை, பூமி விளைச்சலைத் தரவில்லை. **11** நான் பூமியிலும் மலைக
ளிலும் பஞ்சத்தை வர வைத்தேன். தானியத்துக்கும் எண்ணெய்க்கும் புதிய
திராட்சமதுவுக்கும் நிலத்தில் விளையும் எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்
படும்படி செய்தேன். மனுஷர்களையும் மிருகங்களையும் தவிக்க வைத்
தேன். உங்கள் உழைப்பெல்லாம் வீணாகிப்போகும்படி செய்தேன்.’”

1:1 * அர்த்தம், “பண்டிகை நாளில் பிறந்தவர்.” **1:2** * வே.வா., “திரும்பக் கட்ட.” **1:4** * வே.வா., “மரவேலைப்பாடுகள் செய்யப்பட்ட.”

அதி. 1
a எஸ்றா 5:1
b எஸ்றா 3:2; எஸ்றா 5:2
c எஸ்றா 4:4, 23
d எஸ்றா 6:14
e எரே 52:12, 13
f உபா 28:22
g எஸ்றா 3:7
h எஸ்றா 5:2; எஸ்றா 6:15; சக 1:16
i ஏசா 60:13
j மல் 2:2
k ஆகா 1:4

12 அதன்பின், சலாத்தியேலின்[a] மகன் செருபாபேலும்,[b] யோசதாக்கின்[c]
மகனும் தலைமைக் குருவுமான யோசுவாவும், எல்லா ஜனங்களும் தங்
கள் கடவுளான யெகோவா சொன்னதைக் கேட்டு நடந்தார்கள். யெகோவா
அனுப்பிய ஆகாய் தீர்க்கதரிசி சொன்னதையும் கேட்டு, யெகோவாவுக்குப்
பயந்து நடக்க ஆரம்பித்தார்கள்.

13 அப்போது, யெகோவாவின் தூதுவரான ஆகாய் யெகோவாவின்
கட்டளைப்படியே ஜனங்களிடம் போய், "'நான் உங்களோடு இருக்கிறேன்'[d]
என்று யெகோவா சொல்கிறார்" என அறிவித்தார்.

14 சலாத்தியேலின் மகனும் யூதாவின் ஆளுநருமான செருபாபேலின்[e]
மனதையும், யோசதாக்கின் மகனும் தலைமைக் குருவுமான யோசுவாவின்[f]
மனதையும், ஜனங்கள் எல்லாருடைய மனதையும் யெகோவா தூண்டி
னார்.[g] உடனே அவர்கள், தங்களுடைய கடவுளான பரலோகப் படைகளின்
யெகோவாவுடைய ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தார்கள்.[h] **15** அந்த
வேலை, தரியு ராஜா ஆட்சி செய்த இரண்டாம் வருஷம், ஆறாம் மாதம்,
24-ஆம் நாளில் ஆரம்பித்தது.[i]

2 ஏழாம் மாதம், 21-ஆம் நாளில் ஆகாய் தீர்க்கதரிசியிடம்[j] யெகோவா
இப்படிச் சொன்னார்: **2** "நீ தயவுசெய்து சலாத்தியேலின் மகனாகிய
யூதாவின் ஆளுநர் செருபாபேலிடமும்,[k] யோசதாக்கின்[l] மகனாகிய தலை
மைக் குரு யோசுவாவிடமும்,[m] மற்ற ஜனங்களிடமும் போய், **3** 'முன்பி
ருந்த ஆலயத்தின் மகிமையைப் பார்த்தவர்கள் யாராவது இங்கு இருக்கிறீர்
களா?[n] இப்போது இந்த ஆலயம் எப்படி இருக்கிறது? முன்பிருந்த ஆல
யத்தோடு ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லையென்று நினைக்கிறீர்
களா?'[o] என்று கேள்.

4 'செருபாபேலே, இப்போது நீ தைரியமாக இரு. யோசதாக்கின் மகனும்
தலைமைக் குருவுமான யோசுவாவே, தைரியமாக இரு' என்று யெகோவா
சொல்கிறார்.

'தேசத்து ஜனங்களே, தைரியமாக வேலையில் இறங்குங்கள்'[p] என்று
யெகோவா சொல்கிறார்.

'நான் உங்களோடு இருக்கிறேன்'[q] என்று பரலோகப் படைகளின்
யெகோவா சொல்கிறார். **5** 'நீங்கள் எகிப்திலிருந்து வந்தபோது நான்
கொடுத்த வாக்குறுதியை[r] மறந்துவிடாதீர்கள். என்னுடைய சக்தி இப்போதும்
உங்களோடு இருக்கிறது.*[s] பயப்படாமல் இருங்கள்.'"[t]

6 "'சீக்கிரத்தில் நான் வானத்தையும் பூமியையும் கடலையும் நிலத்
தையும் இன்னொரு தடவை உலுக்குவேன்' என்று பரலோகப் படைகளின்
யெகோவா சொல்கிறார்.[u]

7 'எல்லா தேசங்களையும் நான் உலுக்குவேன். அப்போது, எல்லா
தேசங்களின் செல்வங்களும்* இந்த ஆலயத்துக்குள் வந்து சேரும்.[v] இந்த
ஆலயத்தை நான் மகிமையால் நிரப்புவேன்'[w] என்று பரலோகப் படைக
ளின் யெகோவா சொல்கிறார்.

8 'வெள்ளியும் என்னுடையது, தங்கமும் என்னுடையது' என்று பரலோ
கப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

2:5 * அல்லது, "என் சக்தி உங்களோடு தங்கியிருந்தபோது நான் கொடுத்த வாக்குறுதியை மறந்துவிடாதீர்கள்." **2:7** * வே.வா., "அருமையான பொக்கிஷங்களும்."

அதி. 1
a 1நா 3:17-19; லூ 3:23, 27
b மத் 1:12
c 1நா 6:15
d 2நா 15:2; ஏசா 8:10; ரோ 8:31
e எஸ்றா 1:8; எஸ்றா 5:14
f சக 3:1; சக 6:11-13
g எஸ்றா 1:1, 5
h எஸ்றா 5:2; சக 6:15
i எஸ்றா 4:24; ஆகா 1:1; சக 1:1

அதி. 2
j எஸ்றா 5:1; எஸ்றா 6:14
k 1நா 3:17-19; எஸ்றா 1:8; சக 4:9
l 1நா 6:15
m சக 3:8; சக 6:11
n 1ரா 6:1; எஸ்றா 3:12
o சக 4:10
p சக 8:9
q யாத் 3:12; ஏசா 43:2; ரோ 8:31
r யாத் 29:45; யாத் 34:10
s சக 4:6
t ஏசா 41:10; சக 8:13
u எபி 12:26, 27
v ஏசா 2:2; ஏசா 60:5, 11
w யாத் 40:35; 1ரா 8:11; ஏசா 66:12

9 ‘இந்த ஆலயத்தின் மகிமை முன்பிருந்த ஆலயத்தின் மகிமை
யைவிட அதிகமாக இருக்கும்’[a] என்று பரலோகப் படைகளின் யெகோவா
சொல்கிறார்.

‘இந்த இடத்தில் நான் சமாதானத்தைப் பொழிவேன்’[b] என்று பரலோகப்
படைகளின் யெகோவா சொல்கிறார்.

10 தரியு ஆட்சி செய்த இரண்டாம் வருஷம், ஒன்பதாம் மாதம்,
24-ஆம் நாளில் ஆகாய் தீர்க்கதரிசிக்கு யெகோவா ஒரு செய்தியைச்
சொன்னார்.[c] **11** “பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது என்ன
வென்றால், ‘நீ குருமார்களிடம் போய் தயவுசெய்து திருச்சட்டத்தைப் பற்றிக்
கேள்.[d] **12** அவர்களைப் பார்த்து, “ஒருவன் பரிசுத்தமான இறைச்சியைத்
தன் உடையின் மடிப்பில் எடுத்துக்கொண்டு போகும்போது ரொட்டி, கூழ்,
திராட்சமது, எண்ணெய், அல்லது வேறெதாவது உணவுப் பொருளின் மேல்
அவனுடைய உடை பட்டால் அந்த உணவுப் பொருள் பரிசுத்தமாகுமா?”
என்று கேள்’” என்றார்.

அதன்படியே அவர் கேட்டபோது, “அது பரிசுத்தமாகாது!” என்று குரு
மார்கள் சொன்னார்கள்.

13 பின்பு ஆகாய் அவர்களிடம், “பிணத்தை* தொட்டுத் தீட்டுப்பட்ட
ஒருவன், அந்த உணவுப் பொருள்களில் ஒன்றைத் தொட்டால் அது தீட்டுப்
படுமா?”[e] என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், “ஆமாம், தீட்டுப்படும்” என்று சொன்னார்கள்.

14 அதற்கு ஆகாய் அவர்களிடம் இப்படிச் சொன்னார்: “‘இந்த ஜனங்
களும் அப்படித்தான் தீட்டுப்பட்டிருக்கிறார்கள், இவர்களுடைய தேசமும்
தீட்டுப்பட்டிருக்கிறது. இவர்கள் செய்யும் எல்லா வேலைகளும் தீட்டுப்பட்
டிருக்கின்றன, இவர்கள் எனக்குக் கொடுப்பது எல்லாமே தீட்டுப்பட்டவை
தான்’ என்று யெகோவா சொல்கிறார்.

15 ‘தயவுசெய்து இன்றுமுதல் இதை நன்றாக யோசித்துப் பாருங்கள்:
யெகோவாவின் ஆலயம் கட்டப்படுவதற்குமுன் நிலைமை எப்படி இருந்
தது?[f] **16** குவித்து வைக்கப்பட்டிருந்த தானியத்திலிருந்து 20 படி எடுத்
துக்கொள்ளலாம் என்று நினைத்து வந்தவருக்கு வெறும் 10 படிதான்
கிடைத்தது. திராட்சரசத் தொட்டியிலிருந்து 50 ஜாடி மதுவை மொண்டு
கொள்ளலாம் என்று நினைத்து வந்தவருக்கு வெறும் 20 ஜாடிதான் கிடைத்
தது.[g] **17** உங்கள் உழைப்பின் பலனையெல்லாம் வெப்பக் காற்றினால்
கருக வைத்தேன், நோயினால் தாக்கினேன்,[h] ஆலங்கட்டி* மழையினால்
நாசமாக்கினேன். அப்போதுகூட உங்களில் யாருமே என்னிடம் திரும்பி
வரவில்லை’ என்று யெகோவா சொல்கிறார்.

18 ‘யெகோவாவின் ஆலயத்துக்கு அஸ்திவாரம் போடப்பட்ட இந்த
ஒன்பதாம் மாதம், 24-ஆம் நாள்முதல் நடக்கப்போகிற விஷயங்களைத்
தயவுசெய்து நன்றாக யோசித்துப் பாருங்கள்.[i] **19** இதையெல்லாம் நன்
றாக யோசித்துப் பாருங்கள்: தானியக் கிடங்கில் இதுவரை தானியம் இருந்
திருக்கிறதா?[j] திராட்சைக் கொடியும் அத்தி மரமும் மாதுளை மரமும்
ஒலிவ மரமும் இதுவரை காய்த்திருக்கிறதா? ஆனால், இன்றுமுதல் நான்
உங்களை ஆசீர்வதிக்கப்போகிறேன்.’”[k]

2:13 * சொல் பட்டியலில் “நெஃபெஷ், சைக்கீ” என்ற தலைப்பைப் பாருங்கள். **2:17** * அதாவது, “பனிக்கட்டி.”

அதி. 2
a ஏசா 60:13
b சங் 85:8; ஏசா 2:4; ஏசா 60:17, 18; சக 8:12
c ஆகா 1:1
d மல் 2:7
e லேவி 7:21; எண் 5:2, 3; எண் 9:6; எண் 19:11; எண் 31:19
f எஸ்றா 3:10; சக 4:9
g ஆகா 1:6; சக 8:10
h உபா 28:22
i எஸ்றா 5:2; சக 8:9
j ஆகா 1:6
k நீதி 3:9, 10; சக 8:12

20 அந்த மாதம், 24-ஆம் நாளில் இரண்டாவது தடவையாக ஆகாயி
டம் யெகோவா இப்படிச் சொன்னார்:[a] **21** "'நான் வானத்தையும் பூமியை
யும் உலுக்குவேன்.[b] **22** ராஜ்யங்களின் சிம்மாசனங்களைக் கவிழ்ப்பேன்,
எல்லா தேசத்து ராஜ்யங்களின் பலத்தையும் அழிப்பேன்.[c] ரதங்களை
யும் ரதவீரர்களையும், குதிரைகளையும் குதிரைவீரர்களையும் வீழ்த்துவேன்.
அவர்கள் ஒருவரை ஒருவர் வாளால் வெட்டிக்கொண்டு சாவார்கள்'[d] என்று
யூதாவின் ஆளுநர் செருபாபேலிடம் போய்ச் சொல்."
23 "'சலாத்தியேலின் மகனும் என்னுடைய ஊழியனுமான செருபா
பேலே,[e] அந்த நாளில் என்னுடைய வேலைக்காக உன்னைப் பயன்படுத்
துவேன்' என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.
'உன்னை முத்திரை மோதிரம் போலாக்குவேன்' என்று யெகோவா சொல்
கிறார். 'ஏனென்றால், உன்னைத்தான் நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்' என்று
பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்."

அதி. 2
a ஆகா 2:10
b ஆகா 2:6, எபி 12:26, 27
c ஏசா 60:12, தானி 2:44, செப் 3:8
d நியா 7:22
e எஸ்றா 3:8, மத் 1:12

சகரியா

முக்கியக் குறிப்புகள்

1 யெகோவாவிடம் திரும்பி வருவதற்கான அழைப்பு (1-6)
- 'என்னிடம் திரும்பி வாருங்கள், அப்போது நானும் உங்களிடம் திரும்பி வருவேன்' (3)

தரிசனம் 1: குழிநாவல் மரங்களுக்கு இடையில் குதிரைவீரர்கள் (7-17)
- "யெகோவாவாகிய நான் மறுபடியும் சீயோனை ஆறுதல்படுத்துவேன்" (17)

தரிசனம் 2: நான்கு கொம்புகளும் நான்கு கைத்தொழிலாளிகளும் (18-21)

2 தரிசனம் 3: அளவுநூலைக் கையில் பிடித்திருக்கிற ஒருவர் (1-13)
- எருசலேம் அளக்கப்பட வேண்டும் (2)
- யெகோவா 'நெருப்பு மதில்போல் சூழ்ந்திருக்கிறார்' (5)
- கடவுளின் கண்மணியைத் தொடுகிறவன் (8)
- பல தேசத்து ஜனங்கள் யெகோவாவிடம் வருவார்கள் (11)

3 தரிசனம் 4: தலைமைக் குருவின் உடை மாற்றப்படுகிறது (1-10)
- தலைமைக் குருவாகிய யோசுவாவை சாத்தான் எதிர்க்கிறான் (1)
- "தளிர் என்றழைக்கப்படும் என் ஊழியனை நான் அழைத்து வருகிறேன்" (8)

4 தரிசனம் 5: ஒரு குத்துவிளக்கும் இரண்டு ஒலிவ மரங்களும் (1-14)
- 'மனித சக்தியால் அல்ல, என்னுடைய சக்தியால்தான் எல்லாமே நடக்கும்' (6)
- சிறியளவில் ஆரம்பிக்கப்பட்ட வேலையை அற்பமாக நினைக்கக் கூடாது (10)

5 தரிசனம் 6: பறக்கும் சுருள் (1-4)

தரிசனம் 7: அளப்பதற்கான ஒரு பாத்திரம் (5-11)
- அக்கிரமக்காரி என்று அழைக்கப்பட்ட ஒரு பெண் பாத்திரத்திற்குள் இருக்கிறாள் (8)
- அந்தப் பாத்திரம் சினேயார் தேசத்துக்குக் கொண்டுபோகப்படுகிறது (9-11)

6 தரிசனம் 8: நான்கு ரதங்கள் (1-8)

தளிர் என்ற பெயருடையவர் ராஜாவாகவும் குருவாகவும் சேவை செய்வார் (9-15)

7 போலியாக விரதம் இருப்பவர்களை யெகோவா கண்டிக்கிறார் (1-14)
- 'நீங்கள் எனக்காகவா சாப்பிடாமல் புலம்பி அழுதீர்கள்?' (5)
- "நீதிநியாயத்தோடு தீர்ப்பு கொடுங்கள், ஒருவருக்கொருவர் மாறாத அன்பையும் இரக்கத்தையும் காட்டுங்கள்" (9)

8 யெகோவா சீயோனுக்குச் சமாதானத்தையும் சத்தியத்தையும் தருகிறார் (1-23)
- எருசலேம், "சத்திய நகரம்" (3)

"நீங்கள் ஒருவரோடு ஒருவர் உண்மை பேச வேண்டும்" (16)
விரதம் இருந்த நாட்கள் பண்டிகை நாட்களாக மாறும் (18, 19)
"யெகோவாவை மனதார தேடிப் போகலாம்" (21)
பத்துப் பேர் ஒரு யூதனுடைய உடையை இறுக்கமாகப் பிடித்துக்கொள்கிறார்கள் (23)

9 சுற்றியுள்ள தேசங்களுக்கு எதிராகக் கடவுளுடைய தீர்ப்பு (1–8)
சீயோனின் ராஜா வருகிறார் (9, 10)
தாழ்மையுள்ள ராஜா கழுதையின் மேல் ஏறிவருகிறார் (9)
யெகோவாவுடைய ஜனங்கள் விடுவிக்கப்படுவார்கள் (11–17)

10 மழைக்காக யெகோவாவிடம் கேளுங்கள், பொய் தெய்வங்களிடம் கேட்காதீர்கள் (1, 2)
யெகோவா தன்னுடைய ஜனங்களை ஒன்றுசேர்ப்பார் (3–12)
யூதா வம்சத்தாரிடமிருந்து மிக முக்கியமானவர் வருகிறார் (3, 4)

11 கடவுளுடைய உண்மை மேய்ப்பனை ஒதுக்கித்தள்ளுபவர்களுக்கு வரும் விளைவுகள் (1–17)
"வெட்டுவதற்காகவே வைக்கப்பட்டுள்ள ஆடுகளை நீ மேய்க்க வேண்டும்" (4)
இனிமை, ஒற்றுமை என்ற இரண்டு கோல்கள் (7)
மேய்ப்பனின் கூலி: 30 வெள்ளிக் காசுகள் (12)
அந்தக் காசுகள் பொக்கிஷ அறையில் தூக்கியெறியப்படுகின்றன (13)

12 யூதாவையும் எருசலேமையும் யெகோவா பாதுகாப்பார் (1–9)
எருசலேம், "ஒரு பாறாங்கல்" (3)
குத்தப்பட்டவருக்காக ஜனங்கள் அழுது புலம்புகிறார்கள் (10–14)

13 சிலைகளும் பொய்த் தீர்க்கதரிசிகளும் ஒழிக்கப்படுகிறார்கள் (1–6)
பொய்த் தீர்க்கதரிசிகள் வெட்கப்பட்டுப்போவார்கள் (4–6)
மேய்ப்பன் தாக்கப்படுவான் (7–9)
மூன்றாவது பங்கு புடமிடப்படும் (9)

14 உண்மை வணக்கத்துக்குக் கிடைக்கும் முழு வெற்றி (1–21)
ஒலிவ மலை இரண்டாகப் பிளக்கும் (4)
ஜனங்கள் யெகோவாவை மட்டும்தான் வணங்குவார்கள், அவருடைய பெயரை மட்டும்தான் புகழ்வார்கள் (9)
எருசலேமை எதிர்க்கிறவர்களுக்கு வரும் பயங்கரமான நோய் (12–15)
கூடாரப் பண்டிகை கொண்டாடப்படுகிறது (16–19)
எல்லா சமையல் பாத்திரங்களும் யெகோவாவுக்குப் பரிசுத்தமாக இருக்கும் (20, 21)

---

1 தரியு ஆட்சி செய்த இரண்டாம் வருஷம், எட்டாம் மாதம்[a]
அது. அப்போது, இத்தோவின் பேரனும் பெரகியாவின் மகனுமாகிய
சகரியா* தீர்க்கதரிசிக்கு[b] யெகோவாவிடமிருந்து இந்தச் செய்தி கிடைத்தது:
2 "யெகோவாவாகிய நான் உங்கள் தகப்பன்கள்மேல் பயங்கர கோபமாயி
ருந்தேன்.[c]

3 நீ ஜனங்களிடம் போய், 'பரலோகப் படைகளின் யெகோவா சொல்
வது இதுதான்: "'என்னிடம் திரும்பி வாருங்கள்' என்று பரலோகப் படைக
ளின் யெகோவா சொல்கிறார். 'அப்போது நானும் உங்களிடம் திரும்பி
வருவேன்'[d] என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்"'
என்று சொல்.

4 'உங்கள் தகப்பன்களைப் போல இருக்காதீர்கள். அன்றைக்கு இருந்த
தீர்க்கதரிசிகள் அவர்களிடம், "'தயவுசெய்து உங்களுடைய மோசமான வழிக

அதி. 1
a எஸ்றா 4:24; ஆகா 1:1; ஆகா 2:10
b எஸ்றா 5:1
c 2ரா 22:16, 17; எரே 44:5, 6
d எசே 33:11; மீ 7:18, 19; மல் 3:7

1:1 * அர்த்தம், "யெகோவா நினைத்துப் பார்த்திருக்கிறார்."

ளையும் மோசமான செயல்களையும் விட்டுவிட்டு என்னிடம் திரும்புங்கள்'[a]
என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்" என்றார்கள்.'
'ஆனால் அவர்கள் என் பேச்சைக் கேட்கவில்லை, என் வார்த்தையை
மதிக்கவும் இல்லை'[b] என்று யெகோவா சொல்கிறார்.
5 'இப்போது உங்கள் தகப்பன்களோ அந்தத் தீர்க்கதரிசிகளோ
உயிரோடு இல்லை. **6** ஆனாலும், நான் கொடுத்த கட்டளைகளையும்
சட்டங்களையும் மீறினால் என்ன நடக்கும் என்று என்னுடைய ஊழியக்கா
ரர்களாகிய தீர்க்கதரிசிகளின் மூலம் நான் எச்சரித்தபடியே உங்கள் தகப்
பன்களுக்கு நடந்ததுதானே?[c] அதனால், அவர்கள் என்னிடம் திரும்பி வந்
தார்கள். 'நாங்கள் கெட்ட வழியில் போனோம், மோசமான காரியங்களைச்
செய்தோம்; அதனால் பரலோகப் படைகளின் யெகோவா, தான் சொன்ன
படியே எங்களைத் தண்டித்தார்'[d] என்றார்கள்."
7 தரியு ஆட்சி செய்த இரண்டாம் வருஷம்,[e] 11-ஆம் மாதமாகிய
சேபாத்* மாதம், 24-ஆம் தேதி, இத்தோவின் பேரனும் பெரகியாவின் மக
னுமாகிய சகரியா தீர்க்கதரிசிக்கு யெகோவாவிடமிருந்து ஒரு செய்தி
கிடைத்தது. **8** அதைப் பற்றி சகரியா சொன்னது இதுதான்: "நான் ராத்தி
ரியில் ஒரு தரிசனத்தைப் பார்த்தேன். அதில், சிவப்புக் குதிரையின் மேல்
ஒருவர் சவாரி செய்துகொண்டிருந்தார். அவர் பள்ளத்தாக்கில் இருந்த
குழிநாவல் மரங்களுக்கு இடையில் வந்து நின்றார். அவருக்குப் பின்னால்
சிவப்புநிறக் குதிரைகளும் பழுப்புநிறக் குதிரைகளும் வெள்ளைநிறக் குதி
ரைகளும் நின்றுகொண்டிருந்தன."
9 உடனே நான், என்னோடு பேசிக்கொண்டிருந்த தேவதூதரிடம், "என்
எஜமானே, இந்தக் குதிரைகள்மேல் இருப்பவர்கள் யார்?" என்று கேட்டேன்.
அதற்கு அவர், "இவர்கள் யாரென்று உனக்குக் காட்டுகிறேன்" என்றார்.
10 பின்பு, குழிநாவல் மரங்களுக்கு இடையில் நின்றுகொண்டிருந்தவர்,
"பூமி முழுவதும் சுற்றி வருவதற்காக யெகோவா அனுப்பியவர்கள்தான்
இவர்கள்" என்றார். **11** அப்போது குதிரைகள்மேல் இருந்தவர்கள், குழிநா
வல் மரங்களுக்கு இடையில் நின்றுகொண்டிருந்த யெகோவாவின் தூதரி
டம், "நாங்கள் பூமியைச் சுற்றி வந்தோம்; பூமி முழுவதும் எந்தத் தொந்தர
வும் இல்லாமல் அமைதியாக இருக்கிறது"[f] என்று சொன்னார்கள்.
12 உடனே யெகோவாவின் தூதர், "பரலோகப் படைகளின் யெகோ
வாவே, எருசலேமின் மேலும் யூதா நகரங்களின் மேலும் இந்த 70 வருஷங்
களாக நீங்கள் பயங்கர கோபத்தோடு இருந்தீர்கள்.[g] இனியும் எத்தனை
நாளைக்குத்தான் இரக்கம் காட்டாமல் இருப்பீர்கள்?"[h] என்றார்.
13 அதற்கு யெகோவா, என்னோடு பேசிக்கொண்டிருந்த அந்தத் தேவ
தூதருக்கு அன்பாகவும் ஆறுதலாகவும் பதில் சொன்னார். **14** பின்பு,
என்னோடு பேசிக்கொண்டிருந்த அந்தத் தேவதூதர் என்னிடம், "நீ இதைச்
சத்தமாக அறிவிப்பு செய்: 'பரலோகப் படைகளின் யெகோவா சொல்
வது என்னவென்றால், "எருசலேமுக்கும் சீயோனுக்கும் உதவி செய்ய
நான் மிகுந்த வைராக்கியமாக இருக்கிறேன்.[i] **15** ஆனால், அலட்சியமாக
இருக்கும் தேசங்கள்மேல் பயங்கர கோபமாக இருக்கிறேன்.[j] ஏனென்றால்,

அதி. 1
a எஸ்றா 9:6, 7; ஏசா 1:16; ஏசா 55:7; ஓசி 14:1
b 2நா 36:15, 16; எரே 11:7, 8
c 2நா 36:17; தானி 9:11, 12
d உபா 28:20, 45; எரே 23:20
e எஸ்றா 4:24
f சக 1:15
g 2நா 36:20, 21; எரே 25:11, 12; தானி 9:2; சக 7:5
h சங் 74:10; சங் 102:13
i யோவே 2:18; சக 8:2
j எரே 48:11; சக 1:11

1:7 * இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

நான் கொஞ்சமாகத் தண்டிக்க நினைத்த[a] என்னுடைய ஜனங்களை அவர்
கள் ரொம்பவே கொடுமைப்படுத்தினார்கள்."'[b]

16 அதனால், யெகோவா சொல்வது இதுதான்: '"நான் எருசலேமுக்கு
மறுபடியும் இரக்கம் காட்டுவேன்,[c] என்னுடைய ஆலயம் அங்கே மறுபடி
யும் எழுப்பப்படும்.[d] எருசலேம் அளவுநூலால் அளக்கப்பட்டு மீண்டும் கட்
டப்படும்"[e] என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.'

17 'பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: "என்
னுடைய நகரங்கள் மறுபடியும் நல்ல காரியங்களால் நிரம்பி வழியும்;
யெகோவாவாகிய நான் மறுபடியும் சீயோனை ஆறுதல்படுத்துவேன்,[f] எரு
சலேமைத் திரும்பவும் தேர்ந்தெடுப்பேன்"'[g] என்று இன்னும் ஒரு தடவை
சத்தமாக அறிவிப்பு செய்" என்றார்.

18 பின்பு நான் தலைநிமிர்ந்து பார்த்தபோது, நான்கு கொம்புகள்
தெரிந்தன.[h] **19** என்னோடு பேசிக்கொண்டிருந்த தேவதூதரிடம், "இதெல்
லாம் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர், "இந்தக் கொம்புகள் யூதா
வையும்[i] இஸ்ரவேலையும்[j] எருசலேமையும்[k] சிதறடித்த கொம்புகள்" என்று
சொன்னார்.

20 பின்பு, யெகோவா எனக்கு நான்கு கைத்தொழிலாளிகளைக் காட்
டினார். **21** அப்போது நான், "இவர்கள் என்ன செய்வதற்காக வருகிறார்
கள்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "யூதாவுக்கு எதிராகத் தங்கள் கொம்புகளை உயர்த்திய
தேசங்களின் கொம்புகளைப் பயமுறுத்தவும் வீழ்த்தவும் வருகிறார்கள்; அந்
தக் கொம்புகள், யூதாவில் யாருமே தலைநிமிர முடியாதபடி எல்லாரையும்
சிதறடித்த கொம்புகள்" என்றார்.

2 நான் தலைநிமிர்ந்து பார்த்தபோது, அளவுநூலைக் கையில் பிடித்தி
ருந்த ஒருவர் தெரிந்தார்.[l] **2** நான் அவரிடம், "நீங்கள் எங்கே போகி
றீர்கள்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "எருசலேமின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து
பார்க்கப் போகிறேன்"[m] என்றார்.

3 பின்பு, என்னோடு பேசிக்கொண்டிருந்த தேவதூதர் புறப்பட்டுப்
போனார். அப்போது, அவரைச் சந்திக்க வேறொரு தேவதூதர் வந்தார்.
4 இந்தத் தேவதூதர் அவரிடம், "நீ ஓடிப்போய் அந்த வாலிபனிடம் இப்ப
டிச் சொல்: '"எருசலேமில் ஜனங்களும் ஆடுமாடுகளும் ஏராளமாகப் பெரு
கப்போவதால்,[n] அது மதில்கள் இல்லாத ஊர்போல் இருக்கும். **5** ஆனால்,
நான் ஒரு நெருப்பு மதில்போல் எருசலேமைச் சூழ்ந்திருப்பேன்.[o] அது என்
மகிமையால் நிறைந்திருக்கும்"[p] என்று யெகோவா சொல்கிறார்.'"

6 "வாருங்கள்! வாருங்கள்! வட தேசத்திலிருந்து ஓடி வாருங்கள்"[q]
என்று யெகோவா சொல்கிறார்.

"ஏனென்றால், நான்கு திசைகளுக்கும் நான் உங்களைத் துரத்தியடித்
தேன்"[r] என்று யெகோவா சொல்கிறார்.

7 "சீயோன் ஜனங்களே, வாருங்கள்! பாபிலோன் நகரத்தில் குடியிருக்கி
றவர்களே, அங்கிருந்து தப்பித்து வாருங்கள்![s] **8** கடவுள் தன்னுடைய
பெயருக்கு மகிமை சேர்த்த பின்பு, உங்களைச் சூறையாடிய தேசங்களிடம்[t]
என்னை அனுப்பினார். பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது

அதி. 1
a ஏசா 54:8
b சங் 137:7
ஏசா 47:6
எரே 51:35
c ஏசா 12:1
எரே 33:14
சக 8:3
d எஸ்றா 6:14, 15
ஏசா 44:28
ஆகா 1:14
e எரே 31:38, 39
எசே 40:2, 3
சக 2:1, 2
f ஏசா 51:3
g சங் 132:13
சக 2:12
சக 3:2
h சக 1:21
i 2ரா 24:12, 14
j 2ரா 15:29
2ரா 17:6
2ரா 18:11
எரே 50:17
k 2ரா 25:11
2நா 36:17, 19

அதி. 2
l சக 1:16
m எரே 31:38, 39
n ஏசா 33:20
ஏசா 44:26
எரே 30:18
எரே 31:24
எரே 33:10, 11
எசே 36:10
சக 8:4, 5
o சங் 125:2
ஏசா 26:1
p ஏசா 12:6
ஏசா 60:19, 20
ஆகா 2:9
q ஏசா 11:12, 16
r உபா 28:64
எசே 5:12
s ஏசா 48:20
ஏசா 52:2
எரே 50:8
மீ 4:10
t 2ரா 24:2
மீ 4:11

இதுதான்: ‘உங்களைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறான்.[a]
9 இப்போது நான் அந்தத் தேசங்களுக்கு எதிராக என் கையை ஓங்கு
வேன். அவர்களுடைய அடிமைகளே அவர்களைச் சூறையாடுவார்கள்.’[b]
அப்போது, பரலோகப் படைகளின் யெகோவாதான் என்னை அனுப்பினார்
என்பதை நீங்கள் நிச்சயம் தெரிந்துகொள்வீர்கள்.

10 சீயோன் மகளே, சந்தோஷத்தில் ஆரவாரம் செய்![c] நான் வந்து[d]
உன்னோடு தங்குவேன்”[e] என்று யெகோவா சொல்கிறார். **11** “அந்த
நாளில் பல தேசத்து ஜனங்கள் யெகோவாவாகிய என்னிடம் வருவார்கள்;[f]
அவர்கள் என்னுடைய ஜனங்களாக இருப்பார்கள். சீயோன் ஜனங்களே,
நான் உங்களோடு குடியிருப்பேன்” என்றும் அவர் சொல்கிறார். பரலோகப்
படைகளின் யெகோவாதான் உங்களிடம் என்னை அனுப்பினார் என்பதை
அப்போது நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். **12** பரிசுத்தமான தேசத்
தில் யெகோவா யூதாவைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்வார். அவர் எரு
சலேமை மறுபடியும் தேர்ந்தெடுப்பார்.[g] **13** மனிதர்களே, எல்லாரும்
யெகோவாவுக்கு முன்னால் அமைதியாக இருங்கள்! ஏனென்றால், அவர்
தன்னுடைய பரிசுத்த இடத்திலிருந்து நடவடிக்கை எடுக்கிறார்.

3 யெகோவாவின் தூதருக்கு முன்னால் தலைமைக் குருவாகிய
யோசுவா[h] நின்றுகொண்டிருந்ததை அவர் எனக்குக் காட்டினார். யோசு
வாவை எதிர்ப்பதற்காக அவருடைய வலது பக்கத்தில் சாத்தான் நின்று
கொண்டிருந்தான்.[i] **2** பின்பு யெகோவாவின் தூதர் சாத்தானிடம், “சாத்
தானே, யெகோவா உன்னைக் கண்டிக்கட்டும்![j] எருசலேமைத் தேர்ந்தெடுத்த
யெகோவா[k] உன்னைக் கண்டிக்கட்டும்! இந்த மனுஷன், எரிகிற நெருப்பிலி
ருந்து எடுக்கப்பட்ட கொள்ளிக்கட்டை போல இருக்கிறான்” என்று
சொன்னார்.

3 யோசுவா அழுக்கான உடையைப் போட்டுக்கொண்டு கடவுளுடைய
தூதருக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தார். **4** அந்தத் தூதர் தனக்கு
முன்னால் நின்றிருந்தவர்களிடம், “அவனுடைய அழுக்கான உடையைக்
கழற்றுங்கள்” என்று சொன்னார். பின்பு யோசுவாவைப் பார்த்து, “உன்னு
டைய குற்றங்களை உன்னைவிட்டு நீக்கிவிட்டேன், நீ போட்டுக்கொள்வ
தற்கு விசேஷ உடைகளைத் தருவேன்”[l] என்றார்.

5 அப்போது நான், “சுத்தமான தலைப்பாகையை அவருக்குப் போட்டு
விடுங்கள்”[m] என்று சொன்னேன். உடனே அவர்கள், சுத்தமான தலைப்பா
கையையும் விசேஷ உடைகளையும் அவருக்குப் போட்டுவிட்டார்கள்;
யெகோவாவின் தூதர் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தார். **6** பின்பு
யெகோவாவின் தூதர் யோசுவாவிடம், **7** “‘நான் காட்டும் வழியில் நடந்து,
நான் கொடுத்த பொறுப்புகளைச் செய்தால், என்னுடைய ஜனங்களுக்கு
நீ நீதிபதியாக இருப்பாய்,[n] என்னுடைய வீட்டை* கவனித்துக்கொள்வாய்.
இங்கு நிற்பவர்களைப் போலவே எப்போது வேண்டுமானாலும் என் முன்
னிலையில் வருகிற பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வாய்’ என்று பரலோகப்
படைகளின் யெகோவா சொல்கிறார்.

8 ‘தலைமைக் குருவாகிய யோசுவாவே, நீயும் உனக்கு முன்பாக உட்
காருகிற உன் நண்பர்களும் நான் சொல்வதைத் தயவுசெய்து கேளுங்கள்.

3:7 * நே.மொ., “பிரகாரங்களை.”

அதி. 2
a உபா 32:9, 10; சங் 105:14, 15; 2தெ 1:6
b ஏசா 14:2
c ஏசா 35:10
d ஏசா 40:9, 10
e லேவி 26:11, 12; ஏசா 12:6
f சங் 22:27; ஏசா 2:2, 3; சக 8:22, 23
g 2நா 6:6; சக 1:17

அதி. 3
h எஸ்றா 5:2; ஆகா 1:14; சக 6:11
i யோபு 1:6
j யூ 9
k 2நா 6:6; சக 2:12
l யாத் 28:2
m யாத் 29:6
n மல் 2:7

எதிர்கால சம்பவங்களுக்கு நீங்கள் ஒரு அடையாளமாக இருக்கிறீர்கள்.
இதோ, தளிர்[a] என்றழைக்கப்படும் என் ஊழியனை நான் அழைத்து வரு
கிறேன்.[b] **9** யோசுவாவுக்கு முன்னால் நான் வைத்துள்ள கல்லைப் பாருங்
கள்! அதன்மேல் ஏழு கண்கள் இருக்கின்றன. நான் உளியால் அதில் செதுக்
குகிறேன். இந்தத் தேசத்தின் குற்றங்களை ஒரே நாளில் நீக்கிவிடுவேன்'[c]
என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

10 'அந்த நாளில், நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் திராட்சைக் கொடி
யின் கீழும் அத்தி மரத்தின் கீழும் உட்கார்ந்து பேசுவதற்காக அக்கம்பக்கத்
தாரைக் கூப்பிடுவீர்கள்'[d] என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்
கிறார்" என்றார்.

4 என்னோடு பேசிக்கொண்டிருந்த தேவதூதர் திரும்ப வந்து, தூங்கும்
ஒருவரை எழுப்புவது போல என்னை எழுப்பினார். **2** பின்பு என்னி
டம், "நீ என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு நான், "முழுக்க முழுக்க தங்கத்தால் செய்யப்பட்ட ஒரு குத்து
விளக்கைப்[e] பார்க்கிறேன். அதன்மேல் ஒரு கிண்ணம் இருக்கிறது. அதோடு,
ஏழு குழாய்கள் கொண்ட ஏழு அகல் விளக்குகள்[f] இருக்கின்றன. **3** அந்
தக் கிண்ணத்துக்கு வலது பக்கத்தில் ஒரு ஒலிவ மரம், இடது பக்கத்தில் ஒரு
ஒலிவ மரம் என இரண்டு மரங்கள் இருக்கின்றன"[g] என்று சொன்னேன்.

4 பின்பு நான் அந்தத் தேவதூதரிடம், "என் எஜமானே, இவற்றின்
அர்த்தம் என்ன?" என்று கேட்டேன். **5** அதற்கு அவர், "இவற்றின் அர்த்
தம் உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "தெரியாது, என் எஜமானே!" என்றேன்.

6 அப்போது அவர், "செருபாபேலுக்கு யெகோவா சொல்லும் செய்தி
இதுதான்: '"படை பலத்தாலும் அல்ல, மனித சக்தியாலும் அல்ல,[h] என்னு
டைய சக்தியால்தான் எல்லாமே நடக்கும்"[i] என்று பரலோகப் படைக
ளின் யெகோவா சொல்கிறார். **7** மாபெரும் மலையே, செருபாபேலுக்கு[j]
முன்னால் நீ தரைமட்டமாவாய்.[k] ஆலயத்தின் மேல்கல்லை அவர் கொண்
டுவருவார். எல்லாரும் அதைப் பார்த்து, "எவ்வளவு அழகாக இருக்
கிறது! எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று சத்தமாகச் சொல்வார்கள்'
என்றார்."

8 மறுபடியும் யெகோவாவிடமிருந்து எனக்கு இந்தச் செய்தி கிடைத்
தது: **9** "செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திவாரம்
போட்டன,[l] அந்தக் கைகளே இதைக் கட்டி முடிக்கும்.[m] அப்போது, பர
லோகப் படைகளின் யெகோவா என்னை உங்களிடம் அனுப்பினார் என்
பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். **10** சிறியளவில் ஆரம்பிக்கப்
பட்ட வேலையை ஏன் அற்பமாக நினைக்க வேண்டும்?[n] செருபாபேலின்
கையில் இருக்கும் தூக்குநூலை* பார்த்து ஜனங்கள் நிச்சயம் சந்தோஷப்ப
டுவார்கள். ஏழு கண்களும் அதைப் பார்க்கும்; அவை, பூமியெங்கும் சுற்
றிப் பார்க்கிற யெகோவாவின் கண்கள்."[o]

11 பின்பு நான், "குத்துவிளக்குக்கு வலது பக்கத்தில் ஒரு ஒலிவ மரமும்
இடது பக்கத்தில் ஒரு ஒலிவ மரமும் இருக்கிறதே,[p] இவற்றின் அர்த்தம்
என்ன?" என்று கேட்டேன். **12** அதன்பின் இரண்டாவது தடவை நான்

4:10 * வே.வா., "தூக்குக்குண்டை."

அதி. 3
a ஏசா 11:1; ஏசா 53:2, 11; எரே 23:5; எரே 33:15; சக 6:12
b ஏசா 42:1; ஏசா 52:13
c எரே 50:20
d 1ரா 4:25; ஓசி 2:18; மீ 4:4

அதி. 4
e யாத் 25:31; 1ரா 7:48, 49
f யாத் 25:37
g சக 4:11, 14; வெளி 11:3, 4
h 1சா 17:45; ஓசி 1:7
i நியா 6:34; நியா 15:14
j எஸ்றா 3:2; ஆகா 1:1
k ஏசா 40:4
l எஸ்றா 3:8, 10; எஸ்றா 5:14, 16
m எஸ்றா 6:14; சக 6:12
n எஸ்றா 3:12; ஆகா 2:3
o 2நா 16:9; நீதி 15:3; எரே 16:17; வெளி 5:6
p சக 4:2, 3

அதி. 4
a ஆகா 2:4
வெளி 11:3, 4

அதி. 5
b யாத் 20:15

c யாத் 20:7
லேவி 19:12

அவரிடம், “இரண்டு தங்கக் குழாய்கள் வழியாகத் தங்க நிற எண்ணெயை
ஊற்றுகிற இந்த இரண்டு ஒலிவ மரக் கிளைகளுக்கு* என்ன அர்த்தம்?”
என்று கேட்டேன்.

13 அதற்கு அந்தத் தேவதூதர், “இவற்றின் அர்த்தம் உனக்குத் தெரி
யாதா?” என்று கேட்டார்.

அப்போது நான், “தெரியாது, என் எஜமானே!” என்றேன்.

14 அதற்கு அவர், “இவை, அபிஷேகம் செய்யப்பட்ட இரண்டு பேரைக்
குறிக்கின்றன; அவர்கள் முழு பூமிக்கும் எஜமானாக இருக்கிறவருக்குப் பக்
கத்தில் நின்றுகொண்டிருப்பவர்கள்”[a] என்றார்.

5 நான் மறுபடியும் நிமிர்ந்து பார்த்தபோது, பறக்கும் சுருள் ஒன்று தெரிந்
தது. **2** அவர் என்னிடம், “நீ என்ன பார்க்கிறாய்?” என்று கேட்டார்.

அதற்கு நான், “பறக்கும் சுருள் ஒன்றைப் பார்க்கிறேன்; அதன் நீளம்
30 அடி,* அகலம் 15 அடி”# என்றேன்.

3 அப்போது அவர், “இது பூமியெங்கும் வரப்போகிற சாபத்தைக் குறிக்
கிறது. ஏனென்றால், இந்தச் சுருளின் ஒருபக்கத்தில் எழுதப்பட்டுள்ளபடி,
திருடுகிற யாருமே[b] தண்டிக்கப்படவில்லை. இதன் மறுபக்கத்தில் எழுதப்
பட்டுள்ளபடி, பொய் சத்தியம் செய்யும் யாருமே[c] தண்டிக்கப்படவில்லை.
4 அதனால் பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: ‘நான்
இந்தச் சாபத்தை அனுப்பியிருக்கிறேன். இது, திருடனுடைய வீட்டுக்குள்
ளும் என்னுடைய பெயரில் பொய் சத்தியம் செய்பவனுடைய வீட்டுக்குள்
ளும் போய்த் தங்கும். மரச்சட்டங்கள், கற்கள் என எதையும் விட்டுவைக்
காமல் அந்த வீட்டையே எரித்துவிடும்’” என்று சொன்னார்.

5 பின்பு, என்னுடன் பேசிக்கொண்டிருந்த தேவதூதர் கொஞ்சம் முன்
னால் வந்து, “தயவுசெய்து நிமிர்ந்து பார், வெளியே வருவது என்னவென்று
தெரிகிறதா?” என்றார்.

6 அப்போது நான், “இது என்ன?” என்று கேட்டேன்.

அதற்கு அவர், “அளப்பதற்கான ஒரு பாத்திரம்* வெளியே வருகிறது”
என்று சொன்னார். அதோடு, “பூமியெங்கும் உள்ள கெட்டவர்கள் இப்படித்
தான் தெரிகிறார்கள்” என்றார். **7** அப்போது, ஈயத்தால் செய்யப்பட்ட வட்
டமான மூடி திறக்கப்படுவதைப் பார்த்தேன். அந்தப் பாத்திரத்துக்குள் ஒரு
பெண் உட்கார்ந்திருந்தாள். **8** அப்போது அவர் என்னிடம், “இவள்தான்
அக்கிரமக்காரி!” என்றார். பின்பு, அவளைப் பாத்திரத்துக்குள்ளே தள்ளி, கன
மான அந்த மூடியால் மூடினார்.

9 அதன்பின் நான் நிமிர்ந்து பார்த்தபோது, இரண்டு பெண்கள் காற்றில்
பறந்து வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய சிறகுகள் நாரையின் சிற
குகள் போல இருந்தன. அவர்கள் அந்தப் பாத்திரத்தை வானத்துக்கும் பூமிக்
கும் நடுவே தூக்கிக்கொண்டு போனார்கள். **10** என்னிடம் பேசிக்கொண்
டிருந்த தேவதூதரிடம், “அந்தப் பாத்திரத்தை அவர்கள் எங்கே கொண்டு
போகிறார்கள்?” என்று கேட்டேன்.

11 அதற்கு அவர், “அவளுக்கு ஒரு வீட்டைக் கட்டுவதற்காக

4:12 *அதாவது, “பழங்கள் நிறைந்த கிளைகளுக்கு.” **5:2** *நே.மொ., “20 முழம்.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். #நே.மொ., “10 முழம்.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **5:6** *நே.மொ., “எப்பா.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

சினேயார்* தேசத்துக்குக்[a] கொண்டுபோகிறார்கள். கட்டி முடித்ததும், அங்
கேயே அவளைக் குடிவைப்பார்கள்; அதுதான் அவள் இருக்க வேண்டிய
இடம்” என்று சொன்னார்.

6 பின்பு நான் மறுபடியும் தலைநிமிர்ந்து பார்த்தேன். அப்போது, செம்
பினாலான இரண்டு மலைகளுக்கு இடையிலிருந்து நான்கு ரதங்கள்
வந்துகொண்டிருந்தன. **2** முதலாம் ரதத்தில் சிவப்புக் குதிரைகளும், இரண்
டாம் ரதத்தில் கறுப்புக் குதிரைகளும்[b] பூட்டப்பட்டிருந்தன. **3** மூன்றாம்
ரதத்தில் வெள்ளைக் குதிரைகளும், நான்காம் ரதத்தில் புள்ளிகள் உள்ள
கலப்புநிறக் குதிரைகளும்[c] பூட்டப்பட்டிருந்தன.

4 என்னோடு பேசிக்கொண்டிருந்த தேவதூதரிடம், “என் எஜமானே,
இவையெல்லாம் என்ன?” என்று கேட்டேன்.

5 அதற்கு அந்தத் தேவதூதர், “முழு பூமிக்கும் எஜமானாக இருக்கிறவரி
டமிருந்து கட்டளை பெற்றுக்கொண்டு பரலோகத்திலிருந்து புறப்படுகிற[d]
நான்கு ஜீவன்களே*[e] இவை. **6** கறுப்புக் குதிரைகள் பூட்டப்பட்ட ரதம்
வட தேசத்துக்குப் போகிறது.[f] வெள்ளைக் குதிரைகள் மேற்கிலுள்ள தேசத்
துக்கு* போகின்றன. புள்ளிகள் உள்ள குதிரைகள் தென் தேசத்துக்குப்
போகின்றன. **7** அந்தக் கலப்புநிறக் குதிரைகள் பூமியில் சுற்றித்திரியத்
துடித்தன” என்று சொன்னார். பின்பு அவர் அந்தக் குதிரைகளிடம், “போய்
பூமியில் சுற்றித்திரியுங்கள்” என்று சொன்னார். உடனே அவை பூமியில் சுற்
றித்திரிய ஆரம்பித்தன.

8 அதன்பின் அவர் என்னைக் கூப்பிட்டு, “அங்கே பார், வட தேசத்துக்
குப் போன குதிரைகள் அந்தத் தேசத்தின் மேல் யெகோவாவுக்கு இருந்த
கோபத்தைத் தணித்துவிட்டன” என்று சொன்னார்.

9 மறுபடியும் எனக்கு யெகோவாவிடமிருந்து இந்தச் செய்தி கிடைத்
தது: **10** “சிறையிருப்பிலுள்ள ஜனங்களிடமிருந்து எல்தாயும் தொபையா
வும் யெதாயாவும் கொண்டுவரும் நன்கொடையில் கொஞ்சத்தை நீ வாங்
கிக்கொள். பாபிலோனிலிருந்து வரும் இவர்களோடு சேர்ந்து அன்றைக்கே
செப்பனியாவின் மகன் யோசியாவின் வீட்டுக்குப் போ. **11** பின்பு, வெள்
ளியையும் தங்கத்தையும் எடுத்து ஒரு கிரீடம் செய்து, தலைமைக் குரு
வும் யோசதாக்கின் மகனுமான யோசுவாவின் தலையில் வை.[g] **12** பின்பு
அவரிடம்,

‘பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது என்னவென்றால்,
“இதோ, தளிர் என்ற பெயருடைய ஒருவர் இருக்கிறார்.[h] அவர் தன்னு
டைய இடத்திலிருந்து துளிர்ப்பார். அவர் யெகோவாவின் ஆலயத்தைக்
கட்டுவார்.[i] **13** யெகோவாவின் ஆலயத்தைக் கட்டப்போவது அவர்
தான், மேன்மை அடையப்போவதும் அவர்தான். அவர் தன்னுடைய சிம்
மாசனத்தில் உட்கார்ந்துகொண்டு ராஜாவாகவும் குருவாகவும் சேவை
செய்வார்.[j] அந்த இரண்டு பொறுப்புகளையும் ஒருங்கிணைந்து* செய்வார்.
14 ஏலேம், தொபையா, யெதாயா[k] ஆகியவர்களின் நினைவாகவும் செப்ப
னியாவின் மகன் ஏணுடைய நினைவாகவும் இந்த மகா கிரீடம் யெகோவா

5:11 *அதாவது, “பாபிலோனியா.” **6:5** *தேவதூதர்கள் கொண்ட நான்கு படை
களைக் குறிக்கலாம். **6:6** *வே.வா., “கடல் தாண்டி.” **6:13** *வே.வா., “சமாதானம்
உண்டாகும்படி.”

அதி. 5
a ஆதி 10:8, 10
ஆதி 11:1, 2
தானி 1:2

அதி. 6
b சக 6:6
c சக 6:7
d 2நா 18:18
யோபு 1:6
தானி 7:10
லூ 1:19
எபி 1:7, 14
e சங் 104:4
f சக 2:6, 7
g ஆகா 1:1
சக 3:3, 5
h ஏசா 11:1
சக 3:8
i சக 8:9
j எபி 3:1
எபி 4:14
எபி 8:1
k சக 6:10

வின் ஆலயத்தில் இருக்கும். **15** பலர் தூர இடங்களிலிருந்து வந்து
யெகோவாவின் ஆலயத்தைக் கட்டுவார்கள்." அப்போது, பரலோகப் படை
களின் யெகோவாவே என்னை அனுப்பினார் என்பதை நீங்கள் தெரிந்து
கொள்ள வேண்டும். உங்கள் கடவுளான யெகோவா சொல்வதைக் கேட்டு
நடந்தால் அதைத் தெரிந்துகொள்வீர்கள்'* என்று சொல்" என்றார்.

7 தரியு ராஜா ஆட்சி செய்த நான்காம் வருஷம், ஒன்பதாம் மாதமாகிய
கிஸ்லே* மாதம், நான்காம் நாள் சகரியாவுக்கு யெகோவாவிடமிருந்து
செய்தி கிடைத்தது.[a] **2** பெத்தேல் நகரத்தில் இருந்தவர்கள், யெகோவா
வின் கருணையைக் கேட்டுக் கெஞ்சுவதற்காக சரேத்சேரையும் ரெகெம்–
மெலேகையும் அவருடைய ஆட்களையும் அனுப்பினார்கள். **3** அவர்க
ளைப் பரலோகப் படைகளின் யெகோவாவுடைய ஆலயத்தில் சேவை
செய்கிற குருமார்களிடமும் தீர்க்கதரிசிகளிடமும் அனுப்பி, "இத்தனை வரு
ஷங்களாக நாங்கள்* செய்தது போல இந்த வருஷமும் ஐந்தாம் மாதத்தில்[b]
சாப்பிடாமல் அழுது புலம்ப வேண்டுமா?" என்று கேட்கச் சொன்னார்கள்.

4 பரலோகப் படைகளின் யெகோவாவிடமிருந்து மறுபடியும் எனக்குச்
செய்தி கிடைத்தது; அவர் என்னிடம், **5** "தேசத்திலுள்ள எல்லா ஜனங்களி
டமும் குருமார்களிடமும் இப்படிக் கேள்: '70 வருஷங்களாக[c] ஐந்தாம் மாத
மும் ஏழாம் மாதமும்[d] நீங்கள் சாப்பிடாமல், புலம்பி அழுதீர்களே, எனக்
காகவா அப்படிச் செய்தீர்கள்? **6** நீங்கள் சாப்பிட்டபோதும் எனக்காகவா
சாப்பிட்டீர்கள்? குடித்தபோதும் எனக்காகவா குடித்தீர்கள்? எல்லாவற்றை
யும் உங்களுக்காகத்தானே செய்தீர்கள்? **7** நீங்கள் எருசலேமிலும் அதைச்
சுற்றியுள்ள நகரங்களிலும் நிம்மதியாகக் குடியிருந்தபோதும் நெகேபிலும்
சேப்பெல்லாவிலும் குடியிருந்தபோதும் தீர்க்கதரிசிகள் மூலம் யெகோவா
சொன்ன விஷயங்களுக்குக்[e] கீழ்ப்படிய வேண்டாமா?'" என்றார்.

8 யெகோவாவிடமிருந்து மறுபடியும் சகரியாவுக்குச் செய்தி கிடைத்தது;
அவர், **9** "பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: 'நீதி
நியாயத்தோடு தீர்ப்பு கொடுங்கள்,[f] ஒருவருக்கொருவர் மாறாத அன்பை
யும்[g] இரக்கத்தையும் காட்டுங்கள். **10** விதவைகளையும் அப்பா இல்லாத
பிள்ளைகளையும்* ஏமாற்றாதீர்கள்.[h] மற்ற தேசத்து ஜனங்களையும் ஏழைக
ளையும் மோசடி செய்யாதீர்கள்;[i] யாருக்கும் கெடுதல் செய்யத் திட்டம் தீட்
டாதீர்கள்.'[j] **11** ஆனால், அவர்கள் அதையெல்லாம் கேட்கவே இல்லை.[k]
முரட்டுப் பிடிவாதத்தோடு நடந்துகொண்டார்கள்.[l] காதை அடைத்துக்
கொண்டார்கள்.[m] **12** தங்களுடைய இதயத்தை வைரம்போல்* கடினமாக்
கினார்கள்.[n] பரலோகப் படைகளின் யெகோவா தன்னுடைய சக்தியால் தீர்க்
கதரிசிகள் மூலம் சொன்ன வார்த்தைகளுக்கும் சட்டத்துக்கும்# அவர்கள்
கீழ்ப்படியவில்லை.[o] அதனால், பரலோகப் படைகளின் யெகோவா பயங்கர
கோபத்தோடு அவர்களைத் தண்டித்தார்"[p] என்றார்.

13 "பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: 'நான்*
கூப்பிட்டபோது அவர்கள் கேட்காததுபோல்[q] அவர்கள் கூப்பிட்டபோது
நானும் கேட்கவில்லை.[r] **14** அதனால் நான் ஒரு புயல்காற்றை அனுப்பி,

அதி. 7
a எஸ்றா 6:14; சக 1:1
b 2ரா 25:8-10; எரே 52:12-14
c எரே 25:11; சக 1:12
d எரே 41:1, 2
e 2நா 36:15
f நீதி 21:3; எரே 21:12
g நீதி 16:6; ஓசி 10:12; மீ 6:8
h யாத் 22:22; உபா 24:17; ஏசா 1:17
i யாத் 23:9; நீதி 22:22; மல் 3:5
j சக 8:17
k 2நா 33:10; எரே 6:10
l நெ 9:29
m 2ரா 17:13, 14; ஏசா 6:10; எரே 25:7
n எசே 3:7
o நெ 9:30; அப் 7:51
p 2நா 36:15, 16; எரே 21:5
q ஏசா 50:2
r ஏசா 1:15; புல 3:44

6:15 *வே.வா., "அது நிறைவேறும்." **7:1** *இணைப்பு B15-ஐப் பாருங்கள். **7:3** *நே.மொ., "நான்." **7:10** *வே.வா., "அநாதைகளையும்." **7:12** *அல்லது, "ஒரு கடினமான கல்போல்." #வே.வா., "அறிவுரைக்கும்." **7:13** *நே.மொ., "அவர்."

முன்பின் தெரியாத தேசங்களுக்கெல்லாம் அவர்களைச் சிதறிப்போக
வைத்தேன்.[a] அவர்களுடைய தேசம், யாரும் வந்து போக முடியாதள
வுக்குப் பாழாய்ப்போனது.[b] அவர்களால் அந்த அழகான தேசம் கோரமாக
ஆகிவிட்டது.'"

8 பரலோகப் படைகளின் யெகோவாவிடமிருந்து மறுபடியும் கிடைத்த
செய்தி இதுதான்: 2 "'சீயோனுக்கு உதவி செய்ய நான் மிகுந்த
வைராக்கியமாக இருப்பேன்.[c] அந்த வைராக்கியத்தினால், அவளுடைய
எதிரிகள்மேல் என் கோபத்தைக் கொட்டுவேன்' என்று பரலோகப் படைக
ளின் யெகோவா சொல்கிறார்."

3 "'நான் சீயோனுக்குத் திரும்புவேன்.[d] எருசலேமில் குடியிருப்பேன்.[e]
அப்போது எருசலேம் நகரம் "சத்திய நகரம்"*[f] என்றும், பரலோகப் படை
களின் யெகோவாவுடைய மலை "பரிசுத்த மலை"[g] என்றும் அழைக்கப்ப
டும்' என யெகோவா சொல்கிறார்."

4 "பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: 'மறுபடியும்
எருசலேமின் பொது சதுக்கங்களில், கைத்தடி வைத்திருக்கிற வயதான
ஆண்களும் பெண்களும் உட்கார்ந்திருப்பார்கள்.[h] 5 நகரத்தின் பொது
சதுக்கங்களில் நிறைய பிள்ளைகள் விளையாடிக்கொண்டு இருப்பார்கள்.'"[i]

6 "பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: 'இப்ப
டியெல்லாம் நடப்பது ரொம்பக் கஷ்டமென்று இந்த ஜனங்களில் மீதி
யாக இருப்பவர்கள் ஒருவேளை நினைப்பார்கள். ஆனால், இவற்றை நடத்
திக்காட்டுவது எனக்குக் கஷ்டமா என்ன?' என்று பரலோகப் படைகளின்
யெகோவா கேட்கிறார்."

7 "பரலோகப் படைகளின் யெகோவா இப்படிச் சொல்கிறார்: 'கிழக்
கிலும் மேற்கிலும் உள்ள தேசங்களிலிருந்து என்னுடைய ஜனங்களை நான்
விடுதலை செய்வேன்.[j] 8 அவர்களை அங்கிருந்து கூட்டிக்கொண்டு வரு
வேன். அவர்கள் எருசலேமில் குடியிருப்பார்கள்.[k] அவர்கள் என்னுடைய
ஜனங்களாக இருப்பார்கள். நான் அவர்களுக்கு உண்மையுள்ள* கடவுளா
கவும் நீதியுள்ள கடவுளாகவும் இருப்பேன்.'"[l]

9 "பரலோகப் படைகளின் யெகோவா இப்படிச் சொல்கிறார்: 'பரலோகப்
படைகளின் யெகோவாவுடைய ஆலயத்தைக் கட்டும் வேலையைத் தைரி
யமாகச் செய்யுங்கள்.[m] இந்த வார்த்தைகளை, ஆலயத்துக்கு அஸ்திவாரம்
போடப்பட்ட நாளிலிருந்தே தீர்க்கதரிசிகள் மூலமாக நீங்கள் கேட்டுவரு
கிறீர்கள்.[n] 10 அதற்குமுன் மனுஷனுக்கோ மிருகத்துக்கோ கூலி கொடுக்
கப்படவில்லை.[o] யாரும் எங்கும் நிம்மதியாகப் போய்வர எதிரி விட
வில்லை. ஏனென்றால், எல்லா ஜனங்களும் ஒருவரோடு ஒருவர்
மோதிக்கொள்ளும்படி நான் செய்தேன்.'

11 இப்போது, பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
'மீதியிருக்கும் இந்த ஜனங்களை முன்பு நடத்தியது போல இனி நடத்த
மாட்டேன்.[p] 12 சமாதான விதை விதைக்கப்படும், திராட்சைக் கொடி
பழங்களைக் கொடுக்கும், பூமி விளைச்சலைத் தரும்,[q] வானம் பனியைப்
பொழியும். மீதியிருக்கும் இந்த ஜனங்கள் இவை எல்லாவற்றையும் அனு
பவிக்கும்படி செய்வேன்.[r] 13 யூதா ஜனங்களே, இஸ்ரவேல் ஜனங்களே,

8:3 * வே.வா., "விசுவாச நகரம்." 8:8 * வே.வா., "நம்பகமான."

அதி. 7
a உபா 28:64 எரே 5:15
b லேவி 26:22, 33 2நா 36:20, 21

அதி. 8
c யோவே 2:18 சக 1:14
d சக 1:16
e ஏசா 12:6 யோவே 3:17 சக 2:11 சக 8:8
f ஏசா 1:26 ஏசா 60:14 எரே 33:16
g ஏசா 2:2 ஏசா 11:9 ஏசா 66:20 எரே 31:23
h ஏசா 65:20 எரே 30:10
i எரே 30:19 எரே 31:4, 27 சக 2:4
j சங் 107:2, 3
k எரே 3:17 யோவே 3:20 ஆமோ 9:14
l லேவி 26:12 எரே 30:22 எசே 11:20
m ஏசா 35:4 ஆகா 2:4
n எஸ்றா 5:1
o ஆகா 1:6
p ஆகா 2:19
q லேவி 26:4 உபா 28:4 ஏசா 30:23
r ஏசா 35:10 ஏசா 61:7

மற்ற தேசத்து ஜனங்கள்முன் நீங்கள் சபிக்கப்பட்ட ஜனமாக இருந்தீர்கள்.[a]
ஆனால், நான் உங்களைக் காப்பாற்றுவேன். இனி நீங்கள் ஒரு ஆசீர்வாத
மாக இருப்பீர்கள்.[b] அதனால், பயப்படாதீர்கள்.[c] தைரியமாக வேலை செய்
யுங்கள்.'[d]

14 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: '"உங்கள்
முன்னோர்கள் என்னைப் பயங்கரமாகக் கோபப்படுத்தியதால் உங்களைத்
தண்டிக்க முடிவுசெய்தேன், அதை நினைத்து நான் வருத்தப்படவில்லை"[e]
என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார். **15** "ஆனால் இப்
போது எருசலேமுக்கும் யூதா ஜனங்களுக்கும் நல்லது செய்ய நான் முடிவு
செய்திருக்கிறேன்.[f] அதனால், பயப்படாதீர்கள்."'[g]

16 'நான் உங்களுக்குத் தரும் கட்டளைகள் இவைதான்: நீங்கள் ஒருவ
ரோடு ஒருவர் உண்மை பேச வேண்டும்.[h] உண்மையையும் சமாதானத்தை
யும் கட்டிக்காக்கும் விதமாக நகரவாசல்களில் தீர்ப்பு கொடுக்க வேண்டும்.[i]
17 மற்றவர்களுக்குக் கெடுதல் செய்யத் திட்டம் தீட்டக் கூடாது.[j] பொய்
சத்தியம் செய்யக் கூடாது.[k] இதையெல்லாம் நான் வெறுக்கிறேன்'[l] என்று
யெகோவா சொல்கிறார்."

18 மறுபடியும் பரலோகப் படைகளின் யெகோவாவிடமிருந்து எனக்கு
இந்தச் செய்தி கிடைத்தது: **19** "பரலோகப் படைகளின் யெகோவா சொல்
வது இதுதான்: 'யூதா ஜனங்களே, நான்காம் மாதத்திலும்,[m] ஐந்தாம் மாதத்
திலும்,[n] ஏழாம் மாதத்திலும்,[o] பத்தாம் மாதத்திலும்[p] நீங்கள் விரதம் இருந்த
நாட்கள் சந்தோஷம் பொங்குகிற பண்டிகை நாட்களாக மாறும்.[q] அதனால்
உண்மையையும் சமாதானத்தையும் நேசியுங்கள்.'

20 பரலோகப் படைகளின் யெகோவா இப்படிச் சொல்கிறார்: 'பல
இனங்களையும் நகரங்களையும் சேர்ந்த ஜனங்கள் நிச்சயம் வருவார்கள்.
21 ஒரு நகரத்தைச் சேர்ந்தவர்கள் இன்னொரு நகரத்தைச் சேர்ந்தவர்களி
டம் போய், "பரலோகப் படைகளின் யெகோவாவை மனதார தேடிப்போக
லாம், வாருங்கள். யெகோவாவிடம் கருணை கேட்டுக் கெஞ்சலாம், வாருங்
கள். நாங்கள் கண்டிப்பாகப் போகிறோம்"[r] என்று சொல்வார்கள். **22** பல
இனங்களையும் பலம்படைத்த தேசங்களையும் சேர்ந்தவர்கள், பரலோகப்
படைகளின் யெகோவாவைத் தேடவும் யெகோவாவிடம் கருணை கேட்டுக்
கெஞ்சவும் எருசலேமுக்கு வருவார்கள்.'[s]

23 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: 'அந்த
நாட்களில், மற்ற தேசங்களைச் சேர்ந்த எல்லா பாஷைக்காரர்களிலும் பத்
துப் பேர்[t] ஒரு யூதனுடைய உடையை* இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு,
"கடவுள் உங்களோடு இருப்பதாகக் கேள்விப்பட்டோம்.[u] அதனால், நாங்க
ளும் உங்களோடு வருகிறோம்"[v] என்று சொல்வார்கள்.'"

9 ஓர் அறிவிப்பு:
"யெகோவாவின் கண்கள் எல்லா மனிதர்களையும் பார்க்கின்றன.[w]
அவருடைய பார்வை இஸ்ரவேல் கோத்திரங்கள் எல்லாவற்றின்
மேலும் இருக்கிறது.
அதனால், ஆதிராக் தேசத்துக்கு எதிராகவும்
தமஸ்குவுக்கு எதிராகவும் யெகோவா தீர்ப்பு சொல்லியிருக்கிறார்.[x]

8:23 * வே.வா., "உடையின் ஓரத்தை."

அதி. 8
a உபா 28:37; எரே 42:18
b ஆதி 22:18; ஏசா 19:24, 25
c ஏசா 41:10
d ஏசா 35:4
e எரே 4:28; எசே 24:14
f எரே 31:28; எரே 32:42
g ஏசா 43:1; செப் 3:16
h லேவி 19:11; நீதி 12:19; எபே 4:25
i சக 7:9
j சக 7:10
k சக 5:4
l நீதி 6:16-19
m எரே 52:6, 7
n எரே 52:12-14
o 2ரா 25:25; சக 7:5
p எரே 52:4
q ஏசா 35:10; எரே 31:12
r எரே 50:4, 5
s சங் 22:27; ஏசா 2:2, 3; ஏசா 11:10; ஏசா 55:5; ஏசா 60:3; ஓசி 1:10; மீ 4:2; ஆகா 2:7
t சக 2:11; வெளி 7:9; வெளி 14:6
u ஏசா 45:14
v யாத் 12:37, 38

அதி. 9
w எபி 4:13; 1பே 3:12
x எரே 49:27; ஆமோ 1:3

2 அவளுடைய* எல்லையில் இருக்கும் காமாத்துக்கு எதிராகவும்[a]
ரொம்பவே ஞானமாக நடந்துகொள்கிற[b] தீருவுக்கும்[c] சீதோனுக்கும்[d]
எதிராகவும் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்.
3 தீரு தனக்காக ஒரு அரணைக் கட்டினாள்.
வெள்ளியை மண்போல் குவித்து வைத்தாள்.
தங்கத்தை வீதிகளில் கிடக்கும் குப்பைபோல் சேர்த்து வைத்தாள்.[e]
4 அவளுடைய சொத்துகளை யெகோவா அழித்துவிடுவார்.
அவளுடைய படையைக் கடலுக்குள் தள்ளிவிடுவார்.*[f]
அவள் நெருப்பால் சுட்டெரிக்கப்படுவாள்.[g]
5 அதைப் பார்த்து அஸ்கலோன் பயந்து நடுங்கும்.
காசா வேதனையில் துடிக்கும்.
தீருவின் மேல் வைத்த நம்பிக்கை வீண்போனதால் எக்ரோனும்
துக்கப்படும்.
காசாவின் ராஜா அழிந்துபோவான்.
அஸ்கலோனில் யாருமே குடியிருக்க மாட்டார்கள்.[h]
6 அஸ்தோத்தில் கலப்பின ஜனங்கள்தான் வாழ்வார்கள்.
பெலிஸ்தியர்களின் ஆணவத்தை நான் ஒழித்துக்கட்டுவேன்.[i]
7 இரத்தத்தோடு அவர்கள் சாப்பிடும் இறைச்சியை அவர்கள்
வாயிலிருந்து எடுத்துப்போடுவேன்.
அவர்கள் மென்றுகொண்டிருக்கும் அருவருப்பான உணவை
எடுத்துப்போடுவேன்.
அவர்களில் மீதியாக இருப்பவர்கள் கடவுளுடைய ஜனங்களாவார்கள்.
அவர்கள் யூதாவின்[j] கோத்திரத் தலைவர்கள்போல் ஆவார்கள்.
எக்ரோன் ஜனங்கள் எபூசியர்களைப் போல் ஆவார்கள்.[k]
8 நான் என் வீட்டுக்கு முன்னால் கூடாரம்போட்டு அதைக் காவல்
காப்பேன்.[l]
யாரும் வந்துபோக விட மாட்டேன்.
அடக்கி ஒடுக்குகிற யாரும் இனி அங்கே கால்வைக்க மாட்டார்கள்.[m]
அதை* என் கண்களால் பார்த்திருக்கிறேன்.
9 சீயோன் மகளே, சந்தோஷத்தில் துள்ளு!
எருசலேம் மகளே, வெற்றி முழக்கம் செய்!
இதோ, உன் ராஜா உன்னிடம் வருகிறார்![n]
அவர் நீதியுள்ளவர்; மீட்பு தருகிறவர்.*
அவர் தாழ்மையுள்ளவர்;[o] அவர் கழுதையின் மேல் ஏறிவருகிறார்.
ஆம், கழுதைக்குட்டியின் மேல்# ஏறிவருகிறார்.[p]
10 எப்பிராயீமிடமிருந்து போர் ரதத்தைப் பறித்துக்கொள்வேன்.
எருசலேமிடமிருந்து குதிரையைப் பிடுங்கிக்கொள்வேன்.

9:2 *ஒருவேளை, "ஆதிராக் தேசத்துடைய" அல்லது "தமஸ்குவுடைய." 9:4 *அல்லது, "கடலில் வீழ்த்துவார்." 9:8 *அநேகமாக, அவருடைய ஜனங்கள் பட்ட வேதனையைக் குறிக்கலாம். 9:9 *வே.வா., "வெற்றி பெற்றவர்; காப்பாற்றப்பட்டவர்." #நே.மொ., "பெட்டைக் கழுதைக்குப் பிறந்த ஆண்குட்டியின் மேல்."

அதி. 9
a எரே 49:23
b எசே 28:2, 3
c ஏசா 23:1; ஆமோ 1:9, 10
d எசே 28:21; யோவே 3:4
e எசே 27:32, 33
f எசே 26:17; எசே 27:26
g எசே 28:18
h செப் 2:4
i ஆமோ 1:8
j ஏசா 60:14
k 2சா 5:6, 7; 1ரா 9:20, 21
l சங் 125:2
m ஏசா 54:14
n சங் 2:6; ஏசா 32:1; எரே 23:5; லூ 19:37, 38; யோவா 1:49
o மத் 11:29
p 1ரா 1:33, 34; மத் 21:5, 7; யோவா 12:14, 15

வில்லை எடுத்துக்கொள்வேன்.
அவர் தேசங்களுக்குச் சமாதானத்தை அறிவிப்பார்.[a]
ஒரு கடலிலிருந்து இன்னொரு கடல் வரைக்கும்,
ஆறு* தொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் ஆட்சி செய்வார்.[b]
11 பெண்ணே, உன்னுடைய கைதிகளைத் தண்ணீரில்லாத படுகுழியிலிருந்து விடுவிப்பேன்.[c]
உன்னுடைய ஒப்பந்தத்தின் இரத்தத்தால் உன்னைக் காப்பாற்றுவேன்.
12 நம்பிக்கையோடு இருக்கும் கைதிகளே, கோட்டைக்குத் திரும்பி வாருங்கள்.[d]
இன்று நான் உன்னிடம்,
'பெண்ணே, உனக்கு இரண்டு மடங்கு ஆசீர்வாதத்தைக் கொடுப்பேன்.[e]
13 யூதாவை என் வில்லாக வளைப்பேன்.
எப்பிராயீமை அம்பாக எறிவேன்.
சீயோனே, கிரேக்கு தேசத்து ஜனங்களுக்கு எதிராக
உன் ஜனங்களை நான் எழுப்புவேன்.
உன்னைப் படைவீரரின் வாளைப் போலாக்குவேன்' என்று சொல்கிறேன்.
14 யெகோவா அவர்களோடு இருப்பது தெளிவாகத் தெரியும்.
அவருடைய அம்பு மின்னலாகப் பாயும்.
உன்னதப் பேரரசராகிய யெகோவா ஊதுகொம்பை ஊதுவார்.[f]
தெற்கிலிருந்து வீசும் புயல்காற்றைப் போலப் புறப்பட்டுப் போவார்.
15 பரலோகப் படைகளின் யெகோவா அவர்களைப் பாதுகாப்பார்.
கவண்கற்களால் தாக்கும் எதிரிகளை அவர்கள் தோற்கடிப்பார்கள்.[g]
திராட்சமது குடித்ததுபோல் சந்தோஷத்தில் மிதப்பார்கள்.
கிண்ணம் நிறைந்திருப்பது போல அவர்கள் நெஞ்சம் நிறைந்திருக்கும்.
பலிபீடத்தின் மூலைகள்[h] நிரம்பி வழிவது போல அவர்கள் இதயம் நிரம்பி வழியும்.
16 அவர்களுடைய கடவுளாகிய யெகோவா அந்த நாளில் அவர்களைக் காப்பாற்றுவார்.
மேய்ப்பன் மந்தையைக் காப்பது போல அவர்களைக் காப்பார்.[i]
கிரீடத்தில் ரத்தினங்கள் ஜொலிப்பது போல அவருடைய தேசத்தில் அவர்கள் ஜொலிப்பார்கள்.[j]
17 அவருக்குத்தான் எவ்வளவு நல்ல மனது![k]
அவருடைய மகிமையே மகிமை!*
தானியம் வாலிபனைப் பலமாக்கும்.
புதிய திராட்சமது கன்னிப் பெண்ணைப் பொலிவாக்கும்."[l]

10 "வசந்த கால மழைக்காக யெகோவாவிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.
மழைமேகத்தை உருவாக்குபவர் யெகோவாதான்.

9:10 * அதாவது, "யூப்ரடிஸ் ஆறு." 9:17 * வே.வா., "அழகே அழகு!"

அதி. 9
a ஏசா 9:7
b யாத் 23:31; சங் 2:8; சங் 72:8
c ஏசா 49:9
d ஏசா 61:1; எரே 31:17
e ஏசா 61:7
f யோசு 6:5
g மீ 5:9; சக 10:5; சக 12:6
h யாத் 27:2; லேவி 4:7
i எசே 34:22
j ஏசா 62:3; செப் 3:20
k சங் 25:8; சங் 31:19; ஏசா 63:7
l ஏசா 62:8; யோவே 3:18; ஆமோ 9:13

மழை தருபவர் அவர்தான்.[a]
எல்லாருடைய வயலிலும் விளைச்சலைக் கொடுப்பவர் அவர்தான்.
2 குலதெய்வங்கள்* பொய்# பேசுகின்றன.
குறிசொல்கிறவர்கள் போலி தரிசனத்தைப் பார்க்கிறார்கள்.
ஒன்றுக்கும் உதவாத கனவுகளைப் பற்றிப் பேசுகிறார்கள்.
வீண் வார்த்தைகளால் ஆறுதல் சொல்கிறார்கள்.
அதனால், ஜனங்கள் ஆடுகளைப் போல அலைந்து திரிவார்கள்.
மேய்ப்பன் இல்லாமல் தவிப்பார்கள்.
3 மேய்ப்பர்கள்மேல் நான் பயங்கர கோபமாக இருக்கிறேன்.
அடக்கி ஒடுக்கும் தலைவர்களைத் தண்டிப்பேன்.
பரலோகப் படைகளின் யெகோவா, தன் மந்தையான யூதா ஜனங்களிடம் கவனத்தைத் திருப்பியிருக்கிறார்.[b]
அவர்களைக் கம்பீரமான போர்க் குதிரையைப் போல ஆக்கியிருக்கிறார்.
4 அவரிடமிருந்து மிக முக்கியமானவர் வருகிறார்.
அவரிடமிருந்து துணை அதிபர் வருகிறார்.
அவரிடமிருந்து போர் வில் வருகிறது.
அவரிடமிருந்தே எல்லா கண்காணிகளும்* ஒன்றாக வருகிறார்கள்.
5 போர் செய்யும் வீரர்களைப் போல,
தெருக்களில் உள்ள சேற்றை அவர்கள் மிதிப்பார்கள்.
யெகோவா அவர்களுக்குப் பக்கத் துணையாக இருப்பதால் அவர்கள் போர் செய்வார்கள்.[c]
குதிரைமேல் வருகிறவர்கள் அவமானம் அடைவார்கள்.[d]
6 நான் யூதா ஜனங்களை உயர்ந்த இடத்தில் வைப்பேன்.
யோசேப்பின் வம்சத்தாரைக் காப்பாற்றுவேன்.[e]
அவர்களுக்கு இரக்கம் காட்டுவேன்.[f]
அவர்களைப் பழைய நிலைமைக்குக் கொண்டுவருவேன்.
முன்பு அவர்களை ஒதுக்கியிருந்தேன்; ஆனால், அந்த அடையாளமே தெரியாதளவுக்கு அவர்களை ஆசீர்வதிப்பேன்.[g]
அவர்களுடைய கடவுளாகிய யெகோவா நானே. அவர்களுக்கு நான் பதில் சொல்வேன்.
7 எப்பிராயீமைச் சேர்ந்தவர்கள் மாவீரர்கள்போல் ஆவார்கள்.
திராட்சமது குடித்ததுபோல் சந்தோஷமாக இருப்பார்கள்.[h]
அவர்களுடைய மகன்களும் அதைப் பார்த்து சந்தோஷம் அடைவார்கள்.
யெகோவாவை நினைத்து உள்ளம் பூரித்துப்போவார்கள்.[i]
8 'நான்* அவர்களை ஒன்றாகக் கூடிவரச் செய்வேன்.
அவர்களை விடுவிப்பேன்;[j] அவர்கள் பெருகுவார்கள்.
தொடர்ந்து பெருகிக்கொண்டே இருப்பார்கள்.

10:2 *வே.வா., "குலதெய்வச் சிலைகள்." #வே.வா., "மாய வார்த்தைகளை." **10:4** *வே.வா., "வேலை வாங்குகிற எல்லாரும்." **10:8** *நே.மொ., "நான் விசில் அடித்து."

அதி. 10
a உபா 11:14; எரே 14:22; எரே 51:16; எசே 34:26; யோவே 2:23
b எசே 34:16, 17
c உபா 20:1
d ஆகா 2:22
e எரே 3:18; எசே 37:16, 19; ஓசி 1:10, 11
f எரே 31:9, 20
g எரே 30:18
h சக 9:15
i ஏசா 66:14; செப் 3:14
j ஏசா 44:22; ஏசா 51:11

9 அவர்களை எல்லா இடங்களிலும் விதைகள்போல் வாரி
இறைப்பேன்.
ஆனாலும், தூர தேசங்களிலிருந்து அவர்கள் என்னை நினைத்துப்
பார்ப்பார்கள்.
அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் புத்துயிர் பெற்று திரும்பி
வருவார்கள்.
10 எகிப்திலிருந்து அவர்களைத் திரும்பவும் கூட்டிக்கொண்டு வருவேன்.
அசீரியாவிலிருந்து அவர்களை அழைத்து வருவேன்.[a]
கீலேயாத்துக்கும் லீபனோனுக்கும் அவர்களைக் கொண்டுவருவேன்.[b]
அவர்களுக்கு இடமே போதாது.[c]
11 நான் கடலைப் பிளந்து அதைக் கடந்து போவேன்.
அதன் அலைகளை அடிப்பேன்.[d]
நைல் நதியை வற்றச் செய்வேன்.
அசீரியாவின் கர்வத்தை அடக்குவேன்.
எகிப்தின் கொடுங்கோல் ஆட்சியை நீக்குவேன்.[e]
12 யெகோவாவாகிய என்னால் அவர்கள் மேன்மை அடைவார்கள்.[f]
அவர்கள் என்னுடைய பெயருக்குப் புகழ் சேர்க்கும் விதத்தில்
வாழ்வார்கள்'[g] என்று யெகோவா சொல்கிறார்."

11 "லீபனோனே, உன் கதவுகளைத் திற!
உன் தேவதாரு மரங்களை நெருப்பு எரிக்கட்டும்.
2 ஆபால் மரங்களே, அழுது புலம்புங்கள்! தேவதாரு மரங்களெல்லாம்
அழிந்துவிட்டதே!
உயர்ந்தோங்கி நின்ற மரங்களெல்லாம் வெட்டிச் சாய்க்கப்பட்டதே!
பாசானின் கருவாலி மரங்களே, அழுது புலம்புங்கள்!
அடர்ந்த காடு பாழாய்ப்போனதே!
3 மேய்ப்பர்களின் கதறலைக் கேளுங்கள்.
அவர்களுடைய வளமான மேய்ச்சல் நிலங்களெல்லாம்
நாசமாக்கப்பட்டதே!
இளம் சிங்கங்களின் கர்ஜனையைக் கேளுங்கள்.
யோர்தானை ஒட்டியுள்ள அடர்ந்த புதர்க் காடுகளெல்லாம்
பாழாக்கப்பட்டதே!

4 என் கடவுளாகிய யெகோவா இப்படிச் சொல்கிறார்: 'வெட்டுவதற்
காகவே வைக்கப்பட்டுள்ள ஆடுகளை நீ மேய்க்க வேண்டும்.[h] 5 அந்த
ஆடுகளை விலைக்கு வாங்குகிறவர்கள் அவற்றை வெட்டினாலும்,[i] குற்ற
வாளிகள் ஆவதில்லை. அவற்றை விற்பவர்கள்,[j] "நான் பணக்காரன் ஆகப்
போகிறேன். இதற்கு யெகோவாவுக்கு நன்றி சொல்கிறேன்!" என்கிறார்கள்.
மேய்ப்பர்களுக்கு அந்த ஆடுகள்மேல் கரிசனையே இல்லை.'[k]

6 யெகோவா இப்படிச் சொல்கிறார்: 'இந்தத் தேசத்து ஜனங்களுக்கு
இனி நான் கரிசனை காட்ட மாட்டேன். ஒவ்வொருவனும் அடுத்தவனின்
கையிலும் அரசனின் கையிலும் சிக்கித் தவிக்கும்படி செய்வேன். அவர்கள்
தேசத்தை அழிப்பார்கள். அவர்களிடமிருந்து நான் யாரையும் காப்பாற்ற
மாட்டேன்.' "

அதி. 10
a ஏசா 11:11
b எரே 50:19; மீ 7:14
c ஏசா 49:19, 20; ஏசா 54:1, 2
d ஏசா 11:15
e ஏசா 19:1; எசே 30:13
f ஏசா 41:10; ஏசா 45:24
g மீ 4:5

அதி. 11
h எசே 34:8
i எசே 22:25
j நெ 5:8
k எசே 34:2, 4

7 வெட்டுவதற்காக வைக்கப்பட்டுள்ள ஆடுகளே, நான் உங்களை
மேய்க்க ஆரம்பித்தேன்.[a] அவதிப்படுகிற ஆடுகளே, உங்களுக்காகத்தான்
அதைச் செய்தேன். அதனால், நான் இரண்டு கோல்களை எடுத்தேன். ஒரு
கோலுக்கு இனிமை என்றும், மற்றொரு கோலுக்கு ஒற்றுமை என்றும் பெயர்
வைத்தேன்.[b] பின்பு, மந்தையை மேய்க்க ஆரம்பித்தேன். **8** ஒரு மாதத்தில்
மூன்று மேய்ப்பர்களை வேலையிலிருந்து நீக்கினேன். ஏனென்றால், அதற்கு
மேல் அவர்களைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை, அவர்களும்
என்னை வெறுத்தார்கள். **9** அதனால் நான், “இனி உங்களை மேய்க்க மாட்
டேன். சாகிறவர்கள் சாகட்டும், அழிகிறவர்கள் அழியட்டும். மிச்சமிருப்பவர்
கள் ஒருவரை ஒருவர் கொன்றுபோடட்டும்” என்று சொன்னேன். **10** பின்பு,
எல்லா ஜனங்களோடும் நான் செய்திருந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்
காக, இனிமை என்ற என் கோலை[c] எடுத்து முறித்தேன். **11** அன்றைக்கு
அந்த ஒப்பந்தம் முறிக்கப்பட்டது. அவதிப்பட்ட ஆடுகள் என்னைக் கவ
னித்துக்கொண்டிருந்தன. அது யெகோவாவின் செய்தி என்பதைப் புரிந்து
கொண்டன.

12 பின்பு நான், “நீங்கள் விரும்பினால் எனக்குக் கூலி கொடுங்கள்;
இல்லையென்றால், வேண்டாம்” என்று சொன்னேன். அப்போது, அவர்கள்
எனக்கு 30 வெள்ளிக் காசுகளைக் கூலியாகக் கொடுத்தார்கள்.[d]

13 அப்போது யெகோவா என்னிடம், “அவர்களுக்கு என்மேல் எவ்வ
ளவு மதிப்பு![e] அதைப் பொக்கிஷ அறையில் தூக்கியெறி!” என்று சொன்
னார். அதனால், நான் அந்த 30 வெள்ளிக் காசுகளை எடுத்து யெகோவா
வின் ஆலயத்திலிருந்த பொக்கிஷ அறையில் எறிந்துவிட்டேன்.[f]

14 பின்பு, யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இருக்கிற சகோதர பந்தத்
தைத் துண்டிப்பதற்காக[g] ஒற்றுமை என்ற இரண்டாவது கோலை[h] எடுத்து
முறித்தேன்.

15 யெகோவா என்னிடம், “எதற்குமே லாயக்கில்லாத ஒரு மேய்ப்பனின்[i]
ஆயுதங்களை எடு. **16** இந்தத் தேசத்தை மேய்க்க ஒரு மேய்ப்பனை நான்
அனுமதிப்பேன். சாகக்கிடக்கிற ஆடுகளை அவன் காப்பாற்ற மாட்டான்.[j]
ஆட்டுக்குட்டிகளைத் தேடிப்போக மாட்டான். காயப்பட்ட ஆடுகளுக்குக்
கட்டுப்போட மாட்டான்.[k] ஆரோக்கியமான ஆடுகளுக்கு உணவு கொடுக்க
மாட்டான். அதற்குப் பதிலாக, கொழுத்த ஆடுகளின் இறைச்சியை விழுங்கு
வான்.[l] ஆடுகளின் காலில் உள்ள குளம்புகளைப் பிய்த்தெடுப்பான்.[m]

17 மந்தையைத் தவிக்கவிடும் உதவாக்கரை மேய்ப்பனுக்குக்[n]
  கேடுதான் வரும்![o]
அவனுடைய கையும் வலது கண்ணும் ஒரு வாளால் தாக்கப்படும்.
அவனுடைய கை விளங்காமல் போய்விடும்.
அவனுடைய கண் குருடாகிவிடும்” என்றார்.

12 ஓர் அறிவிப்பு:
யெகோவா வானத்தை விரித்தவர்.[p]
பூமிக்கு அஸ்திவாரம் போட்டவர்.[q]
மனிதனுக்கு உயிர் கொடுத்தவர்.
அவர் சொல்வது என்னவென்றால், “இஸ்ரவேலுக்கு யெகோவா
  சொல்லும் செய்தி இதுதான்.

அதி. 11
a சக 11:4
b சக 11:10, 14
c சக 11:7
d மத் 26:14, 15; மத் 27:9; மாற் 14:10, 11
e யாத் 21:32
f மத் 27:5, 6; அப் 1:18
g 1ரா 12:19, 20; எசே 37:16
h சக 11:7
i எசே 34:2, 4
j எரே 23:2; எசே 34:6; மத் 9:36
k எசே 34:21
l ஆதி 31:38
m எசே 34:3, 10
n யோவா 10:12
o எரே 23:1; மத் 23:13

அதி. 12
p யோபு 26:7; ஏசா 42:5
q சங் 102:25; ஏசா 45:18

அதி. 12

a சக 14:14
b செப் 3:19
c சக 14:2, 3
d ஏசா 41:10; யோவே 3:16; சக 12:8
e ஏசா 41:15
f மீ 4:13; சக 9:15
g சக 2:4
h எரே 23:6; யோவே 3:16; சக 2:5; சக 9:15
i யாத் 14:19; யாத் 23:20
j ஏசா 54:17; ஆகா 2:22
k யோவா 19: 34, 37; யோவா 20:27; வெளி 1:7
l 2ரா 23:29; 2நா 35:22
m 2சா 5:13, 14; லூ 3:23, 31
n யாத் 6:16
o யாத் 6:17; 1நா 23:10

2 நான் எருசலேமை ஒரு மது கிண்ணத்தைப் போலாக்குவேன்; சுற்றி
யிருக்கும் எல்லா ஜனங்களையும் அது தள்ளாட வைக்கும். யூதாவும்
எருசலேமும் எதிரிகளால் சுற்றிவளைக்கப்படும்.[a] **3** அந்த நாளில், எருச
லேம் நகரம் எல்லா ஜனங்களுக்கும் ஒரு பாறாங்கல்லைப் போல இருக்கும்
படி செய்வேன். அதைத் தூக்குகிறவர்கள் கண்டிப்பாகப் படுகாயம் அடை
வார்கள்.[b] எல்லா தேசங்களும் எருசலேமுக்கு எதிராகத் திரண்டுவரும்.”[c]
4 யெகோவா சொல்வது இதுதான்: “அந்த நாளில், நான் எல்லா குதிரைக
ளையும் மிரள வைப்பேன். அவற்றின் மேல் சவாரி செய்பவர்களைப்
பைத்தியமாக்குவேன். யூதா ஜனங்களின் மேல் என் கண்களைப் பதிய
வைப்பேன். ஆனால், மற்ற ஜனங்களின் குதிரைகளையெல்லாம் குருடாக்
குவேன். **5** யூதாவின் கோத்திரத் தலைவர்கள், ‘நமக்கு எருசலேம் ஜனங்
கள்தான் பலம்; ஏனென்றால், அவர்களுடைய கடவுளான பரலோகப்
படைகளின் யெகோவா அவர்களோடு இருக்கிறார்’[d] என்று தங்கள் உள்
ளத்தில் சொல்லிக்கொள்வார்கள். **6** அவர்கள் அந்த நாளில், மரங்களைக்
கொளுத்துகிற காட்டுத் தீ போலவும், வைக்கோல் கட்டுகளைப் பற்ற வைக்
கிற தீப்பந்தம் போலவும் ஆகும்படி செய்வேன்.[e] வலது பக்கத்திலும் இடது
பக்கத்திலும் இருக்கிற எல்லா ஜனங்களையும் அவர்கள் சாம்பலாக்கிவிடு
வார்கள்.[f] எருசலேம் ஜனங்கள் தங்களுடைய சொந்த ஊரான எருசலேமி
லேயே மறுபடியும் குடியேறுவார்கள்.[g]

7 முதலில் யூதாவின் கூடாரங்களை யெகோவா பாதுகாப்பார். அப்
போது யூதா, தாவீதின் வம்சத்தாரையும் எருசலேம் ஜனங்களையும்
போலவே அழகாகும்.* **8** அந்த நாளில், எருசலேம் ஜனங்களை
யெகோவா மதில்போல் பாதுகாப்பார்.[h] அந்த நாளில், தடுமாறி விழுபவன்*
தாவீதைப் போல ஆவான். தாவீதின் வம்சத்தார் கடவுளைப் போல, அதா
வது அவர்கள்முன் போகிற யெகோவாவின் தூதரைப்[i] போல ஆவார்கள்.
9 அந்த நாளில், எருசலேமுக்கு எதிராக வரும் எல்லா தேசங்களையும் நான்
நிச்சயம் அழித்துவிடுவேன்.[j]

10 கருணை மற்றும் மன்றாடுதலின் சக்தியை நான் தாவீதின் வம்
சத்தார்மேலும் எருசலேம் ஜனங்கள்மேலும் பொழிவேன். அப்போது அவர்
கள், யாரைக் குத்தினார்களோ அவரைப் பார்ப்பார்கள்.[k] ஒரே மகனுக்
காக அழுது புலம்புவது போல அவருக்காக அழுது புலம்புவார்கள்.
மூத்த மகனை இழந்து துக்கப்படுவது போல அவருக்காகத் துக்கப்படுவார்
கள். **11** அந்த நாளில், மெகிதோ சமவெளியிலுள்ள ஆதாத்ரிம்மோனில்
கேட்ட ஒப்பாரிச் சத்தத்தைப் போல[l] எருசலேமில் பயங்கரமான ஒப்பாரிச்
சத்தம் கேட்கும். **12** தேசத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாக
ஒப்பாரி வைக்கும். தாவீதின் குடும்பத்தார் தனியாகவும், அவருடைய குடும்
பத்துப் பெண்கள் தனியாகவும், நாத்தான்[m] குடும்பத்தார் தனியாகவும், அவ
ருடைய குடும்பத்துப் பெண்கள் தனியாகவும், **13** லேவி குடும்பத்தார்[n]
தனியாகவும், அவருடைய குடும்பத்துப் பெண்கள் தனியாகவும், சீமேயி
குடும்பத்தார்[o] தனியாகவும், அவருடைய குடும்பத்துப் பெண்கள் தனியாக
வும், **14** மீதியிருக்கிற குடும்பங்கள் தனித்தனியாகவும், அந்தக் குடும்பங்
களின் பெண்கள் தனித்தனியாகவும் ஒப்பாரி வைப்பார்கள்.”

12:7 *வே.வா., “மேன்மை அடையும்.” **12:8** *வே.வா., “ரொம்பவும் பலவீனமா
னவன்.”

13 “அந்த நாளில், தாவீதின் வம்சத்தாரிடமும் எருசலேம் ஜனங்களிட
மும் உள்ள பாவத்தையும் தீட்டையும் நீக்குவதற்காக ஒரு கிணறு
வெட்டப்படும்.”[a]

2 பரலோகப் படைகளின் யெகோவா இப்படிச் சொல்கிறார்: “அந்த
நாளில் தெய்வச் சிலைகளின் பெயர்கள்கூட தேசத்தில் இல்லாதபடி செய்
துவிடுவேன்.[b] அவற்றை யாரும் நினைத்துக்கூடப் பார்க்காதபடி செய்துவி
டுவேன். தேசத்தில் இருக்கிற தீர்க்கதரிசிகளையும் தீய* சக்தியையும் ஒழித்
துக்கட்டுவேன்.[c]
3 அதன் பிறகும் ஒருவன் தீர்க்கதரிசனம் சொன்னால்,
அவனுடைய அப்பாவும் அம்மாவும், ‘யெகோவாவின் பெயரைச் சொல்
லிக்கொண்டு பொய் பேசியதால் இனி நீ உயிரோடு இருக்க மாட்டாய்’
என்று சொல்வார்கள். அவன் தீர்க்கதரிசனம் சொன்னதால், அவனுடைய
அப்பாவும் அம்மாவுமே அவனைக் குத்திக் கொல்வார்கள்.[d]

4 அந்த நாளில், தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவரும் தாங்கள் சொன்ன தரிச
னத்தால் வெட்கமடைவார்கள். அவர்கள் ரோமத்தாலான அங்கியை* போட்
டுக்கொண்டு[e] மற்றவர்களை ஏமாற்ற மாட்டார்கள்.
5 அவர்கள், ‘நான் ஒரு
தீர்க்கதரிசி இல்லை. வயலில் வேலை செய்கிறவன். சிறுவனாக இருந்தபோது
ஒருவர் என்னை அடிமையாக விலைக்கு வாங்கிவிட்டார்’ என்று சொல்வார்
கள்.
6 ‘உன் உடம்பில்* ஏன் இத்தனை காயங்கள்?’ என்று ஒருவன் கேட்
டால், ‘என்னுடைய நண்பர்களின்# வீட்டில் இருந்தபோது ஏற்பட்டது’ என்று
சொல்வார்கள்.”

7 பரலோகப் படைகளின் யெகோவா இப்படிச் சொல்கிறார்:
“வாளே, என் மேய்ப்பனைத்[f] தாக்குவதற்காக எழும்பு!
என் நண்பனை வீழ்த்துவதற்காகப் புறப்படு!
மேய்ப்பனை வெட்டு,[g] ஆடுகள் சிதறி ஓடட்டும்.[h]
அற்பமானவர்களுக்கு எதிராக நான் என் கையை ஓங்குவேன்.”
8 யெகோவா சொல்வது இதுதான்:
“எல்லா தேசத்திலும், மூன்றில் இரண்டு பங்கு ஆட்கள் வெட்டிச்
சாய்க்கப்படுவார்கள்.
ஒரு பங்கு ஆட்கள் விட்டுவைக்கப்படுவார்கள்.
9 அந்த ஒரு பங்கு ஆட்களையும்
வெள்ளியைப் புடமிடுவது போல நெருப்பில் புடமிடுவேன்.
தங்கத்தைச் சோதித்துப் பார்ப்பது போலச் சோதித்துப் பார்ப்பேன்.[i]
அவர்கள் என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவார்கள்.
அவர்களுக்கு நான் பதில் கொடுப்பேன்.
‘இவர்கள் என்னுடைய ஜனங்கள்’[j] என்று நான் சொல்வேன்.
‘யெகோவா எங்களுடைய கடவுள்’ என்று அவர்கள் சொல்வார்கள்.”

14 “இதோ, யெகோவாவின் நாள் வருகிறது! அப்போது, உன்னிடம்*
கைப்பற்றப்பட்ட பொருள்கள் உனக்கு முன்னாலேயே பங்கு
போடப்படும்.
2 எருசலேமுடன் போர் செய்ய நான் எல்லா தேசங்களை

13:2 *வே.வா., “அசுத்தமான.” **13:4** *அதாவது, “தீர்க்கதரிசியின் அங்கியை.” **13:6** *நே.மொ., “உன் கைகளுக்கு இடையில்.” அதாவது, “மார்பில் அல்லது முதுகில்.” #வே.வா., “என்னை நேசிப்பவர்களின்.” **14:1** *அதாவது, வசனம் 2-ல் குறிப்பிடப்படும் நகரம்.

அதி. 13
a எசே 36:25, 29
b யாத் 23:13
c உபா 13:5
d உபா 13:6-9; உபா 18:20
e 2ரா 1:8; மத் 3:4
f எசே 34:23; மீ 5:4; யோவா 10:11; எபி 13:20
g ஏசா 53:8; தானி 9:26; அப் 3:18
h மத் 26:31; மத் 26:55, 56; மாற் 14:27, 50; யோவா 16:32
i மல் 3:2, 3
j எரே 30:22

யும் ஒன்றுகூட்டுவேன். அந்த நகரம் கைப்பற்றப்படும், வீடுகள் சூறையாடப்
படும், பெண்கள் கற்பழிக்கப்படுவார்கள். நகர ஜனங்களில் பாதிப் பேர்
சிறைபிடிக்கப்பட்டுப் போவார்கள். மீதிப் பேர் நகரத்திலேயே விடப்படு
வார்கள்.

3 யெகோவா புறப்பட்டுப் போய், முன்பு எதிரிகளோடு போர் செய்தது
போலவே[a] அந்தத் தேசங்களோடு போர் செய்வார்.[b] **4** அந்த நாளில், எரு
சலேமுக்குக் கிழக்கிலுள்ள ஒலிவ மலைமேல் அவர் நிற்பார்.[c] அது கிழக்கி
லிருந்து மேற்குவரை இரண்டாகப் பிளக்கும். அதன் நடுவே மிகப் பெரிய
பள்ளத்தாக்கு உண்டாகும். மலையின் ஒருபாதி வடக்கே நகர்ந்து போகும்,
மறுபாதி தெற்கே நகர்ந்து போகும். **5** ஆத்சேல்வரை நீண்டிருக்கும் என்னு
டைய மலைகளின் பள்ளத்தாக்குக்கு நீங்கள் தப்பித்து ஓடுவீர்கள். யூதாவின்
ராஜாவான உசியாவின் காலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின்போது[d] தப்பித்து
ஓடியது போலவே ஓடுவீர்கள். அப்போது, என் கடவுளான யெகோவா வரு
வார், பரிசுத்தவான்கள் எல்லாரும் அவரோடு வருவார்கள்.[e]

6 அந்த நாளில், பிரகாசமான ஒளியே இருக்காது;[f] எல்லாம் உறைந்து
போகும்.* **7** அந்த நாள் அசாதாரணமான நாள், அது யெகோவாவின்
நாள் என்று அழைக்கப்படும்.[g] அப்போது, பகலுக்கும் இரவுக்கும் வித்தியா
சமே இருக்காது. சாயங்காலத்திலும் வெளிச்சமாக இருக்கும். **8** அந்த
நாளில், வாழ்வு தரும் தண்ணீர்[h] எருசலேமிலிருந்து புறப்பட்டு வரும்.[i]
அதில் ஒருபாதி கிழக்குக் கடலிலும்,*[j] மறுபாதி மேற்குக் கடலிலும்#[k]
போய்க் கலக்கும். அது கோடைக் காலத்திலும் சரி, குளிர் காலத்திலும் சரி,
ஓடிக்கொண்டே இருக்கும். **9** முழு பூமிக்கும் யெகோவா ராஜாவாக இருப்
பார்.[l] அந்த நாளில், எல்லாரும் யெகோவாவை மட்டும்தான் வணங்குவார்
கள்,[m] அவருடைய பெயரை மட்டும்தான் புகழ்வார்கள்.[n]

10 கெபாமுதல்[o] எருசலேமுக்குத் தெற்கே உள்ள ரிம்மோன்வரை[p]
முழு தேசமும் அரபா[q] பள்ளத்தாக்கைப் போலாகும். ஆனால் எருசலேம்
மேன்மை அடைந்து, அதன் இடத்திலேயே மறுபடியும் குடிமக்களால்
நிறைந்திருக்கும்.[r] 'பென்யமீன் நுழைவாசல்'[s] தொடங்கி 'முதல் நுழைவா
சல்' வரையும், அங்கிருந்து 'மூலை நுழைவாசல்' வரையும், அனானெயேல்
கோபுரம்[t] தொடங்கி ராஜாவின் திராட்சரச ஆலைகள் வரையும் ஜனங்
கள் நிறைந்திருப்பார்கள். **11** ஜனங்கள் அங்கே குடியிருப்பார்கள். இனி
அவர்கள் சாபத்துக்கு ஆளாகி அழிந்துபோக மாட்டார்கள்;[u] எருசலேமில்
பாதுகாப்பாக வாழ்வார்கள்.[v]

12 எருசலேமை எதிர்த்துப் போர் செய்கிற எல்லாரையும் யெகோவா
பயங்கரமான நோயால் தண்டிப்பார்.[w] அவர்கள் நின்றுகொண்டிருக்கும்
போதே அவர்களுடைய சதை அழுகும், அவர்களுடைய கண்கள் இமைக
ளுக்குள்ளேயே அழுகிப்போகும், அவர்களுடைய நாவுகள் வாய்க்குள்
ளேயே அழுகிவிடும்.

13 அந்த நாளில், யெகோவா அவர்கள் நடுவே பெரிய குழப்பத்தை
உண்டாக்குவார். ஒவ்வொருவனும் அடுத்தவன்மேல் கை வைப்பான்.
அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்குவார்கள்.[x] **14** எருசலேமில் நடக்கும்
போரில் யூதாவும் கலந்துகொள்ளும். சுற்றியுள்ள தேசங்கள் குவித்து

அதி. 14
a யாத் 15:3; 2நா 20:15
b எசே 38:23; யோவே 3:2, 14; வெளி 16:14
c லூ 19:29; அப் 1:12
d ஆமோ 1:1
e உபா 33:2; யோவே 3:11; யூ 14
f ஏசா 13:9, 10; ஆமோ 5:18
g யோவே 2:31; 1தெ 5:2; 2பே 3:10
h வெளி 21:6; வெளி 22:17
i எரே 17:13; எசே 47:1; யோவே 3:18; வெளி 22:1
j உபா 3:17
k யோசு 1:4
l சங் 97:1; வெளி 19:6
m உபா 6:4
n ஏசா 42:8; ஏசா 44:6
o 1ரா 15:22
p 1நா 4:24, 32
q உபா 1:7
r எரே 30:18
s எரே 37:13
t நெ 3:1; எரே 31:38
u ஏசா 60:18; எரே 31:40
v எரே 23:6; எரே 33:16
w 2ரா 19:34, 35; யோவே 3:2
x நியா 7:22; எசே 38:21

14:6 *அதாவது, "குளிரில் உறைந்துபோவது போலச் செயலற்றுப்போகும்." **14:8** *அதாவது, "சவக் கடலிலும்." #அதாவது, "மத்தியதரைக் கடலிலும்."

வைத்திருக்கிற தங்கமும் வெள்ளியும் துணிமணிகளும் கணக்குவழக்கில்லா
மல் வாரிக்கொள்ளப்படும்.[a]
15 போர் செய்ய வருகிறவர்களைத் தாக்கும் அதேபோன்ற நோய்,
அந்த முகாம்களில் உள்ள குதிரைகள், கழுதைகள், கோவேறு கழுதைகள்,*
ஒட்டகங்கள், ஆடுமாடுகள் ஆகியவற்றையும் தாக்கும்.
16 எருசலேமுக்கு எதிராக வருகிற தேசங்களில் மீதியாக இருப்பவர்கள்
ராஜாவாகிய பரலோகப் படைகளின் யெகோவாவை வணங்குவதற்கும்,[b]
கூடாரப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கும்[c] வருஷா வருஷம் வருவார்
கள்.[d] **17** ஆனால், ராஜாவாகிய பரலோகப் படைகளின் யெகோவாவை
வணங்குவதற்கு எந்தத் தேசத்தாராவது எருசலேமுக்கு வராமல் போனால்,
அவர்களுடைய தேசத்தில் மழை பெய்யாது.[e] **18** எகிப்து தேசத்தார்
வராமல் போனால் அவர்களுடைய தேசத்திலும் மழை பெய்யாது.
கூடாரப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு வராத தேசங்களைப் பயங்கர
மான நோயால் தண்டிப்பதுபோல் அவர்களையும் யெகோவா தண்டிப்பார்.
19 எகிப்தின் பாவத்துக்கும், கூடாரப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு
வராத தேசங்களின் பாவத்துக்கும் கிடைக்கப்போகிற தண்டனை இதுதான்.
20 அந்த நாளில், 'யெகோவா பரிசுத்தமே உருவானவர்'*[f] என்ற
வார்த்தைகள் குதிரைகளின் கழுத்திலுள்ள மணிகளில் எழுதப்பட்டிருக்
கும். யெகோவாவின் ஆலயத்திலுள்ள சமையல் பாத்திரங்கள்,[g] பலிபீடத்
துக்கு முன்னால் உள்ள கிண்ணங்களைப்[h] போல இருக்கும். **21** எருசலே
மிலும் யூதாவிலும் உள்ள சமையல் பாத்திரங்கள் எல்லாமே பரிசுத்தமாக
இருக்கும். அவை, பரலோகப் படைகளின் கடவுளான யெகோவாவுக்குச்
சொந்தமாக இருக்கும். பலி செலுத்த வருகிற எல்லாரும் அந்தப் பாத்திரங்
கள் சிலவற்றில் இறைச்சியை வேக வைப்பார்கள். அந்த நாளில், பரலோ
கப் படைகளின் யெகோவாவுடைய ஆலயத்தில் கானானியன்* ஒருவனும்
இருக்க மாட்டான்."[i]

14:15 *இவை பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்தவை. **14:20** *நே.மொ., "பரிசுத்தம் யெகோவாவுடையது." **14:21** *அல்லது, "வியாபாரி."

அதி. 14
a 2நா 14:13; 2நா 20:25; சக 2:8, 9
b சங் 86:9
c லேவி 23:34; நெ 8:14, 15
d ஏசா 66:23
e ஏசா 60:12
f யாத் 28:36; யாத் 39:30
g 1சா 2:13, 14
h யாத் 25:29; எண் 4:7
i எசே 44:9

மல்கியா

முக்கியக் குறிப்புகள்

1 யெகோவா தன்னுடைய ஜனங்களை நேசிக்கிறார் (1-5)
குருமார்கள் குறையுள்ள மிருகங்களைப் பலி கொடுக்கிறார்கள் (6-14)
எல்லா தேசங்களிலும் கடவுளுடைய பெயர் புகழ் பெற்றிருக்கும் (11)
2 குருமார்கள் ஜனங்களுக்குக் கற்றுத் தருவதில்லை (1-9)
குருமார்கள் கடவுளைப் பற்றிக் கற்றுக்கொடுக்க வேண்டும் (7)
ஜனங்கள் நியாயமில்லாமல் விவாகரத்து செய்கிறார்கள் (10-17)
"'விவாகரத்தை நான் வெறுக்கிறேன்' என்று யெகோவா சொல்கிறார்" (16)
3 உண்மையான எஜமான் தன்னுடைய ஆலயத்தைச் சுத்தப்படுத்த வருகிறார் (1-5)

ஒப்பந்தத்தின் தூதுவர் (1)
யெகோவாவிடம் திரும்பி வரும்படி ஜனங்களிடம் சொல்லப்படுகிறது (6-12)
யெகோவா மாறாதவர் (6)
“என்னிடம் திரும்பி வாருங்கள், அப்போது நானும் உங்களிடம் திரும்பி வருவேன்” (7)
‘பத்திலொரு பாகம் முழுவதையும் கொண்டுவாருங்கள்; அப்போது யெகோவா அளவில்லாத ஆசீர்வாதங்களைக் கொட்டுவார்’ (10)
நீதிமானும் கெட்டவனும் (13-18)
ஒரு நினைவுப் புத்தகம் கடவுளுக்குமுன் எழுதப்படுகிறது (16)
நீதிமானுக்கும் கெட்டவனுக்கும் உள்ள வித்தியாசம் (18)
4 யெகோவாவுடைய நாளுக்குமுன் எலியாவின் வருகை (1-6)
“நீதியின் சூரியன் பிரகாசிக்கும்” (2)

---

1 ஓர் அறிவிப்பு:
மல்கியா* மூலம் இஸ்ரவேலர்களுக்கு யெகோவா சொன்ன செய்தி
இதுதான்:
2 “நான் உங்களை நேசித்தேன்”[a] என்று யெகோவா சொல்கிறார்.
ஆனால் நீங்கள், “எந்த விதத்தில் எங்களை நேசித்தீர்கள்?” என்று கேட்
கிறீர்கள்.
அதற்கு யெகோவா, “யாக்கோபின் அண்ணன்தானே ஏசா?[b] ஆனால்,
நான் யாக்கோபை நேசித்தேன், ஏசாவை வெறுத்தேன்.[c] **3** அவனுடைய
மலைகளைப் பாழாக்கினேன்.[d] அவனுக்குச் சொந்தமான இடத்தைக்
காட்டு நரிகளுக்குக் கொடுத்துவிட்டேன்”[e] என்று சொல்கிறார்.
4 “‘நாங்கள் துரத்தியடிக்கப்பட்டாலும் திரும்பி வருவோம், இடிந்து கிடக்
கிற எங்கள் நகரங்களைக் கட்டுவோம்’ என்று ஏதோம் ஜனங்கள் சொல்கி
றார்கள். ஆனால், பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்:
‘அவர்கள் கட்டுவார்கள், ஆனால் நான் இடித்துப் போடுவேன். ஏதோம்
தேசம் “அக்கிரமக்காரர்களின் தேசம்” என்றும், அதன் ஜனங்கள் “யெகோ
வாவிடமிருந்து நிரந்தரமான கண்டனத் தீர்ப்பைப் பெற்ற ஜனங்கள்”[f]
என்றும் அழைக்கப்படுவார்கள். **5** நீங்கள் அதைக் கண்கூடாகப் பார்ப்பீர்
கள். “இஸ்ரவேல் தேசமெங்கும் யெகோவாவின் புகழ் பரவட்டும்” என்று
சொல்வீர்கள்.’”
6 “பரலோகப் படைகளின் யெகோவாவுடைய பெயரை அவமதிக்கிற
குருமார்களே,[g] ‘மகன் தன்னுடைய தகப்பனுக்கு மதிப்புக் கொடுக்கிறான்,[h]
வேலைக்காரன் தன்னுடைய எஜமானுக்கு மதிப்புக் கொடுக்கிறான். நான்
தகப்பன்[i] என்றால், எனக்குக் கொடுக்கப்பட வேண்டிய மதிப்பு எங்கே?[j]
நான் எஜமான்* என்றால், எனக்குக் காட்டப்பட வேண்டிய மரியாதை#
எங்கே?’ என்று அவர் கேட்கிறார்.
‘ஆனால் நீங்கள், “உங்களுடைய பெயரை நாங்கள் எப்படி அவமதிக்கி
றோம்?” என்று கேட்கிறீர்கள்.’

அதி. 1
a உபா 10:15
b ஆதி 25: 25, 26
c ரோ 9:12
d எரே 49:20 யோவே 3:19
e ஏசா 34:10, 13
f ஏசா 34:5 ஒப 18
g எசே 22:26
h யாத் 20:12
i யாத் 4:22
j ஏசா 1:2

1:1 * அர்த்தம், “என் தூதுவர்.” **1:6** * வே.வா., “பெரிய எஜமான்.” # வே.வா., “பயம்.”

7 ‘என் பலிபீடத்தில் தீட்டான பலியைச் செலுத்தி என்னை அவமதிக்கி
றீர்கள்.’
‘ஆனால் நீங்கள் என்னிடம், “நாங்கள் எப்படித் தீட்டான பலியைச்
செலுத்தி உங்களை அவமதிக்கிறோம்?” என்று கேட்கிறீர்கள்.’
‘“யெகோவாவின் மேஜையெல்லாம்[a] ஒரு மேஜையா?” என்று கேவலமா
கப் பேசுகிறீர்களே. **8** அதோடு, பலி செலுத்துவதற்காகக் குருடான மிரு
கத்தைக் கொண்டுவந்து, “இது ஒன்றும் மோசமானது இல்லை” என்று
சொல்கிறீர்கள். அதேபோல், நொண்டியான மிருகத்தையோ நோயுள்ள மிரு
கத்தையோ கொண்டுவந்து, “இது ஒன்றும் மோசமானது இல்லை”[b] என்று
சொல்கிறீர்கள்.’”
“இதையெல்லாம் தயவுசெய்து உங்கள் ஆளுநரிடம் கொடுத்துப்
பாருங்கள். அவர் உங்களைப் பார்த்து சந்தோஷப்படுவாரா? உங்களுக்
குக் கருணை காட்டுவாரா?” என்று பரலோகப் படைகளின் யெகோவா
கேட்கிறார்.
9 “இப்போது தயவுசெய்து நமக்குக் கருணை காட்டும்படி கடவுளி
டம் கெஞ்சிக் கேளுங்கள். இப்படிப்பட்ட காணிக்கைகளைக் கடவுளுக்குச்
செலுத்துகிறீர்களே, அவர் உங்களில் யாருக்காவது கருணை காட்டுவாரா?”
என்று பரலோகப் படைகளின் யெகோவா கேட்கிறார்.
10 “நீங்கள் ஆதாயம் இல்லாமல் கதவுகளை மூடுவீர்களா?*[c] என்
பலிபீடத்தில் தீ மூட்டுவதற்குக்கூட காசு வாங்குவீர்களே![d] உங்களைக்
கண்டாலே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. நீங்கள் கொடுக்கிற காணிக்கை
கள் எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை”[e] என்று பரலோகப் படைகளின்
யெகோவா சொல்கிறார்.
11 “சூரியன் உதிக்கும் திசையிலிருந்து அது மறையும் திசைவரைக்கும்
உள்ள எல்லா தேசங்களிலும் என் பெயர் புகழ் பெற்றிருக்கும்.[f] எல்லா
இடங்களிலும் எனக்குத் தகன பலிகள் செலுத்தப்படும். என் பெயரில் பரி
சுத்தமான காணிக்கைகள் அர்ப்பணிக்கப்படும். ஏனென்றால், எல்லா தேசங்
களிலும் என் பெயர் புகழ் பெற்றிருக்கும்”[g] என்று பரலோகப் படைகளின்
யெகோவா சொல்கிறார்.
12 “ஆனால் நீங்கள், ‘யெகோவாவின் மேஜை அசுத்தமாக இருக்
கிறது. அதன்மேல் இருக்கிற காணிக்கையெல்லாம் ஒரு காணிக்கையா?’
என்று கேவலமாகப் பேசி[h] அதை* களங்கப்படுத்துகிறீர்கள்.[i] **13** அது
மட்டுமல்ல, ‘ச்சே! சலித்துப்போய்விட்டது!’ என்று சொல்லி அதை ஏளனம்
செய்கிறீர்கள்” எனப் பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார். “திரு
டியதையும், நொண்டியானதையும், நோய் பிடித்ததையும் எனக்குக் காணிக்
கையாகக் கொண்டுவருகிறீர்களே! அதை நான் உங்கள் கையிலிருந்து
வாங்க வேண்டுமோ?”[j] என்று யெகோவா கேட்கிறார்.
14 “எந்தக் குறையுமில்லாத மிருகத்தை வைத்துக்கொண்டு, குறையுள்ள
மிருகத்தை யெகோவாவுக்கு நேர்த்திக்கடனாகச் செலுத்துகிற தந்திரக்காரன்
சபிக்கப்படுவான். ஏனென்றால், நான் மகா ராஜா.[k] எல்லா தேசத்தாரும் என்
பெயருக்கு மதிப்பு மரியாதை காட்டுவார்கள்”[l] என்று பரலோகப் படைக
ளின் யெகோவா சொல்கிறார்.

1:10 * அநேகமாக, ஆலயத்தின் கதவுகளை மூடும் பொறுப்பை அர்த்தப்படுத்தலாம்.
1:12 * அல்லது, “என்னை.”

அதி. 1
a எசே 41:21, 22; 1கொ 10:21
b லேவி 22:20, 22; உபா 15:21
c 2நா 23:4
d எரே 6:13; மீ 3:11
e ஏசா 1:11; எரே 6:20
f சங் 113:3; ஏசா 45:6; ஏசா 59:19
g சங் 22:27; செப் 3:9; மத் 28:19; வெளி 15:4
h மல் 1:7
i எசே 22:26
j லேவி 22:20, 22; உபா 15:21; உபா 17:1
k சங் 47:2; எரே 10:10
l வெளி 15:4

அதி. 2
a மல் 1:6
b லேவி 26: 14–17 உபா 28:15
c ஆகா 1:11
d யோவே 1:17
e யாத் 40:12, 15 எண் 3:6 எண் 18:23 எசே 44: 15, 16
f 2நா 17:8, 9
g யாத் 32:26
h உபா 24:8 2நா 15:3 நெ 8:7, 8 எசே 44: 23, 24
i லூ 11:52
j நெ 13:29
k லேவி 19:15 உபா 1:17 உபா 16:19
l மல் 1:6 1கொ 8:6
m நெ 5:8
n லேவி 20:26
o உபா 7:1, 3 நியா 3:5, 6 1ரா 11:1, 2 நெ 13:23

2 “குருமார்களே, உங்களுக்குக் கொடுக்கப்படும் கட்டளையைக் கேளுங்
கள்.[a] **2** நீங்கள் என் பேச்சைக் கேட்க வேண்டும். என் பெயரை மகி
மைப்படுத்த கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், உங்கள்மேல்
சாபத்தைக் கொண்டுவருவேன்.[b] உங்களுடைய ஆசீர்வாதங்களைச் சாப
மாக மாற்றுவேன்.[c] சொல்லப்போனால், நீங்கள் என் வார்த்தைகளை மதிக்
காமல் இருப்பதால் உங்கள் ஆசீர்வாதங்களை ஏற்கெனவே சாபமாக மாற்றி
விட்டேன்” என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

3 “உங்கள் பாவத்துக்குத் தண்டனையாக, நீங்கள் விதைத்த விதையைப்
பாழாக்குவேன்.[d] உங்களுடைய பண்டிகைக் கால பலிகளின் சாணத்தை*
உங்கள் முகத்திலேயே வீசியடிப்பேன். நீங்களும் சாணத்தோடு சேர்த்து#
தூக்கிவீசப்படுவீர்கள். **4** லேவியோடு நான் செய்த ஒப்பந்தம் நிலைக்க
வேண்டும்[e] என்பதற்காகத்தான் இந்தக் கட்டளையை உங்களுக்குக்
கொடுத்தேன் என்பதை அப்போது புரிந்துகொள்வீர்கள்” என்று பரலோகப்
படைகளின் யெகோவா சொல்கிறார்.

5 “நான் அவனோடு செய்த ஒப்பந்தம் அவனுக்கு வாழ்வையும் சமாதா
னத்தையும் தந்தது, என்மேல் பயபக்தியை ஏற்படுத்தியது. அவன் எனக்குப்
பயந்து நடந்தான், என் பெயருக்கு மதிப்பு மரியாதை காட்டினான். **6** உண்
மையான சட்டத்தை* அவன் போதித்தான்.[f] அவன் பேச்சில் எந்த அநி
யாயமும் இருக்கவில்லை. சமாதானத்தோடும் நேர்மையோடும் என்னுடன்
நடந்தான்.[g] நிறைய பேரைக் கெட்ட வழியிலிருந்து திருத்தி நல்ல வழிக்குக்
கொண்டுவந்தான். **7** குருவானவர் கடவுளைப் பற்றிக் கற்றுக்கொடுக்க
வேண்டும்.# சட்டத்தை* கேட்டுத் தெரிந்துகொள்வதற்காக ஜனங்கள் அவ
ரைத் தேடி வர வேண்டும்.[h] ஏனென்றால், அவரே பரலோகப் படைகளின்
யெகோவாவுடைய சார்பில் பேசுபவர்.

8 ஆனால், நீங்கள் கடவுளுடைய வழியைவிட்டு விலகினீர்கள். பலரை
அவருடைய சட்டத்துக்கு எதிராக* பாவம் செய்ய வைத்தீர்கள்.[i] லேவி
யுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மீறினீர்கள்”[j] என்று பரலோகப் படைக
ளின் யெகோவா சொல்கிறார். **9** “நீங்கள் என் வழிகளில் நடக்கவில்லை.
என்னுடைய சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதில் பாரபட்சம் காட்டினீர்கள்.[k]
அதனால், எல்லா ஜனங்களும் உங்களைக் கேவலமாகவும் கீழ்த்தரமாகவும்
பார்க்கும்படி செய்வேன்.”

10 “நம் எல்லாருக்கும் தகப்பன் ஒருவர்தானே? நம் எல்லாரையும் ஒரே
கடவுள்தானே படைத்திருக்கிறார்? அப்படியென்றால், நாம் ஏன் ஒருவருக்
கொருவர் துரோகம் செய்ய வேண்டும்?[l] முன்னோர்களோடு செய்யப்பட்ட
ஒப்பந்தத்தை ஏன் அவமதிக்க வேண்டும்?[m] **11** யூதா ஜனங்கள் துரோ
கம் செய்தார்கள். இஸ்ரவேல் ஜனங்களும் எருசலேம் ஜனங்களும்
அருவருப்பானதைச் செய்தார்கள். யூதா ஜனங்கள், யெகோவா விரும்பு
கிற பரிசுத்தத்தை* தீட்டுப்படுத்தி,[n] பொய் தெய்வத்தை வணங்கும் பெண்
களைக் கல்யாணம் செய்தார்கள்.[o] **12** அப்படிச் செய்கிறவர்கள் யாராக

2:3 * அதாவது, “பண்டிகைகளின்போது செலுத்தப்படுகிற மிருகங்களின் சாணத்தை.” # அதாவது, “பலி செலுத்தப்படும் மிருகங்களின் சாணம் வீசப்பட்ட இடத்தில்.” **2:6, 7** * வே.வா., “அறிவுரையை.” **2:7** # நே.மொ., “குருவானவரின் உதடுகள் அறிவைக் காக்க வேண்டும்.” **2:8** * அல்லது, “உங்கள் அறிவுரையால்.” **2:11** * அல்லது, “ஆலயத்தை.”

இருந்தாலும் சரி, பரலோகப் படைகளின் யெகோவாவுக்கு அவர்கள் என்ன
காணிக்கை கொடுத்தாலும் சரி, அவர்களை யாக்கோபின் கூடாரங்களிலி
ருந்து யெகோவா அழித்துவிடுவார்."[a]

13 "நீங்கள் இன்னொரு பாவத்தையும் செய்கிறீர்கள். அந்தப் பாவத்தி
னால் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீர் யெகோவாவின் பலிபீடத்தில்
வழிந்தோடுகிறது, அங்கே அவர்களுடைய கதறலும் பெருமூச்சும் கேட்கி
றது. அதனால், கடவுள் இனிமேலும் உங்கள் காணிக்கைகளை ஏற்றுக்
கொள்ள மாட்டார், உங்கள் கைகளிலிருந்து எதையும் பிரியத்தோடு வாங்
கிக்கொள்ள மாட்டார்.[b] **14** 'ஏன் அப்படி?' என்று நீங்கள் கேட்கிறீர்கள்.
ஏனென்றால், இளவயதில் கைப்பிடித்த மனைவிக்கு நீங்கள் செய்த துரோ
கத்துக்கு யெகோவாவே சாட்சியாக இருக்கிறார். முறைப்படி ஒப்பந்தம்
பண்ணி கைப்பிடித்த மனைவியாக இருந்தும் அவளுக்குத் துரோகம் செய்
தீர்களே.[c] **15** ஆனால், உங்களில் சிலர் துரோகம் செய்யவில்லை. அவர்
கள் கடவுளுடைய சக்தி காட்டிய வழியில் தொடர்ந்து நடந்தார்கள்.
அவர்கள் எதை விரும்பினார்கள்? கடவுளுக்குப் பிரியமான பிள்ளைகள்
தங்களுக்கு வேண்டுமென்று விரும்பினார்கள். அதனால் நீங்களும் ஜாக்கி
ரதையாக இருந்து, நல்ல எண்ணத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். இளவய
தில் நீங்கள் கைப்பிடித்த மனைவிக்குத் துரோகம் செய்யாதீர்கள்.
16 ஏனென்றால், விவாகரத்தை நான் வெறுக்கிறேன்"[d] என்று இஸ்ரவேலின்
கடவுளான யெகோவா சொல்கிறார். "வன்முறையில் ஈடுபடுகிறவனையும்
நான் வெறுக்கிறேன்" என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்
கிறார். "அதனால் நீங்கள் ஜாக்கிரதையாக இருந்து, நல்ல எண்ணத்தை
வளர்த்துக்கொள்ளுங்கள். துரோகம் செய்யாதீர்கள்.[e]

17 உங்கள் பேச்சினால் யெகோவாவுக்கு எரிச்சல் உண்டாக்குகிறீர்கள்.[f]
ஆனால், 'எங்கள் பேச்சினாலா? அது எப்படி?' என்று கேட்கிறீர்கள்.
'யெகோவா கெட்டவர்களை நல்லவர்களாகப் பார்க்கிறார், அவர்கள்மேல்
பிரியமாக இருக்கிறார்' என்று சொல்கிறீர்களே.[g] அல்லது, 'நீதியுள்ள கடவுள்
எங்கே?' என்று கேட்கிறீர்களே."

3 "இதோ, நான் என்னுடைய தூதுவரை அனுப்புகிறேன். அவர் எனக்கு
முன்னால் போய் என் வழியைத் தயார்படுத்துவார்.[h] நீங்கள் ஆர்வத்
தோடு தேடுகிற உண்மையான எஜமான் திடீரென்று தன்னுடைய ஆலயத்
துக்கு வருவார்.[i] நீங்கள் ஆசையோடு எதிர்பார்க்கிற ஒப்பந்தத்தின் தூதுவ
ரும் வருவார். அவர் நிச்சயமாக வருவார்" என்று பரலோகப் படைகளின்
யெகோவா சொல்கிறார்.

2 "ஆனால், அவர் வரப்போகிற நாளை யாரால் தாக்குப்பிடிக்க முடி
யும்? அவருக்குமுன் யாரால் நிற்க முடியும்? அவர் புடமிடுகிறவரின்
நெருப்பு போலவும், சலவைக்காரரின் சலவைக்கட்டி போலவும் இருப்பாரே.[j]
3 அவர் புடமிடுகிறவரைப் போலவும், வெள்ளியைச் சுத்தப்படுத்துகிறவ
ரைப் போலவும் உட்காருவார்.[k] லேவியின் மகன்களை அவர் சுத்தப்படுத்
துவார். தங்கத்தையும் வெள்ளியையும் புடமிடுவது போல அவர்களைப்
புடமிடுவார். அதனால், அவர்கள் யெகோவாவுக்கு நீதியோடு காணிக்கை
செலுத்தும் ஜனங்களாக ஆவார்கள். **4** அப்போது யூதாவின் காணிக்கை
யும் எருசலேமின் காணிக்கையும், முன்னோர்களின் காலத்தில் செலுத்தப்

அதி. 2
a 1சா 15:22
b நீதி 21:27
c நீதி 5:18-20; மத் 19:4-6
d ஆதி 2:24; மத் 5:32; மத் 19:8, 9; மாற் 10:5-9
e மல் 2:10
f ஏசா 1:14, 15
g எசே 18:29

அதி. 3
h மத் 3:1-3; மத் 11:7, 10; மாற் 1:2-4; லூ 1:76; யோவா 1:6, 23; யோவா 3:28
i சங் 11:4
j ஏசா 1:25
k சங் 66:10; நீதி 25:4; சக 13:9

அதி. 3
a 2நா 7:1
b உபா 18:10, 12
c யாத் 20:7
d நீதி 14:31; யாக் 5:4
e உபா 24:17; ஏசா 1:17; யாக் 1:27
f யாத் 23:9; சக 7:10
g ஏசா 43:10; ஏசா 46:4; யாக் 1:17
h உபா 9:7; அப் 7:51
i எரே 3:12; சக 1:3; யாக் 4:8
j லேவி 27:30; உபா 14:28; 2நா 31:11; நெ 12:44; நெ 13:10
k லேவி 26:10; உபா 28:12; 2நா 31:10; நீதி 3:9, 10
l உபா 11:14; சக 8:12

பட்ட காணிக்கைகளைப் போலவே யெகோவாவுக்கு மிகவும் பிரியமான
தாக இருக்கும்.[a]

5 நியாயத்தீர்ப்பு கொடுப்பதற்காக நான் உங்களிடம் வருவேன். எனக்
குப் பயந்து நடக்காத சூனியக்காரர்களுக்கும்,[b] மணத்துணைக்குத் துரோ
கம் செய்கிறவர்களுக்கும், பொய் சத்தியம் செய்கிறவர்களுக்கும்,[c] கூலி
யாட்களை ஏமாற்றுகிறவர்களுக்கும்,[d] விதவைகளையும் அப்பா இல்லாத
பிள்ளைகளையும்* அடக்கி ஒடுக்குகிறவர்களுக்கும்,[e] வேறு தேசத்து
ஜனங்களுக்கு உதவி செய்யாதவர்களுக்கும்#[f] எதிராகச் சாட்சி சொல்ல
நான் வேகமாக வருவேன்” என்று பரலோகப் படைகளின் யெகோவா
சொல்கிறார்.

6 “நான் யெகோவா; நான் மாறுவதில்லை.*[g] நீங்கள் யாக்கோபின்
பிள்ளைகள்; அதனால்தான், உங்களை அழிக்காமல் இன்னும் விட்டுவைத்
திருக்கிறேன். **7** உங்களுடைய முன்னோர்களின் காலத்திலிருந்தே நீங்
கள் என்னுடைய விதிமுறைகளை மீறியிருக்கிறீர்கள்.[h] என்னிடம் திரும்பி
வாருங்கள், அப்போது நானும் உங்களிடம் திரும்பி வருவேன்”[i] என்று பர
லோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

ஆனால், “நாங்கள் எப்படி உங்களிடம் திரும்பி வருவது?” என்று நீங்
கள் கேட்கிறீர்கள்.

8 “ஒரு சாதாரண மனுஷன் கடவுளிடம் திருட* முடியுமா? ஆனால், நீங்
கள் என்னிடம் திருடுகிறீர்கள்.”

ஆனால், “நாங்கள் எப்படி உங்களிடம் திருடுகிறோம்?” என்று நீங்கள்
கேட்கிறீர்கள்.

“பத்திலொரு பாகத்தையும்# காணிக்கைகளையும் எனக்குக் கொடுக்
காமல் வைத்துக்கொள்கிறீர்களே! **9** உங்களை நான் சபித்துவிட்டேன்.*
ஏனென்றால், என்னிடம் திருடுகிறீர்கள். சொல்லப்போனால், உங்களுடைய
மொத்த தேசமே என்னிடம் திருடுகிறது. **10** என்னுடைய ஆலயத்தில் எப்
போதும் உணவு இருப்பதற்காக, நீங்கள் கொடுக்க வேண்டிய பத்தி
லொரு பாகம்* முழுவதையும் அங்குள்ள சேமிப்பு அறைக்குக் கொண்டுவா
ருங்கள்.[j] அப்போது, நான் வானத்தின் கதவுகளைத் திறந்து அளவில்லாத#
ஆசீர்வாதங்களை உங்கள்மேல் பொழிகிறேனா△ இல்லையா என்று தயவு
செய்து என்னைச் சோதித்துப் பாருங்கள்”[k] என்று பரலோகப் படைகளின்
யெகோவா சொல்கிறார்.

11 “நாசமாக்குகிறதை* நான் அதட்டுவேன். இனி உங்கள் தேசத்தின்
விளைச்சலை அது நாசமாக்காது; உங்கள் திராட்சைத் தோட்டமும் கனிதரா
மல் போகாது”[l] என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

12 “மற்ற எல்லா தேசத்தாரும் உங்களைச் சந்தோஷமானவர்கள் என்று

3:5 *வே.வா., “அநாதைகளையும்.” #வே.வா., “வேறு தேசத்து ஜனங்களுடைய உரிமைகளைப் பறிக்கிறவர்களுக்கும்.” **3:6** *வே.வா., “நான் மாறவில்லை.” **3:8** *இதற்கான எபிரெய வார்த்தை, ஒருவருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருப்பதையும் குறிக்கும். #வே.வா., “தசமபாகத்தையும்.” **3:9** *அல்லது, “நீங்கள் என்னைச் சபிக்கிறீர்கள்.” **3:10** *வே.வா., “தசமபாகம்.” #வே.வா., “போதும் போதும் என்கிற அளவுக்கு.” △வே.வா., “கொட்டுகிறேனா.” **3:11** *அநேகமாக, பயிர்களை நாசமாக்கும் பூச்சிகளின் கூட்டத்தைக் குறிக்கலாம்.

சொல்வார்கள்.[a] நீங்கள் சந்தோஷம் தரும் தேசத்தாராக இருப்பீர்கள்”
என்று பரலோகப் படைகளின் யெகோவா சொல்கிறார்.

13 “கொஞ்சம்கூட உண்மை இல்லாத வார்த்தைகளை நீங்கள் எனக்கு
எதிராகப் பேசினீர்கள்” என்று யெகோவா சொல்கிறார்.

ஆனால், “உங்களுக்கு எதிராக அப்படியென்ன பேசினோம்?” என்று நீங்
கள் கேட்கிறீர்கள்.[b]

14 “‘கடவுளுக்குச் சேவை செய்வதால் என்ன பிரயோஜனம்?’ என்று
கேட்கிறீர்கள்.[c] அதோடு, ‘பரலோகப் படைகளின் யெகோவா கொடுத்த
பொறுப்புகளைச் செய்ததாலும் அவருக்குமுன் மனம் வருந்தி நடந்ததாலும்
என்ன பலனைக் கண்டோம்? **15** அகங்காரம்* பிடித்தவர்கள்தான் சந்
தோஷமாக இருக்கிறார்கள். அக்கிரமம் செய்கிறவர்கள்தான் சீரும் சிறப்பு
மாக வாழ்கிறார்கள். அவர்கள் துணிச்சலோடு கடவுளைச் சோதித்துப் பார்த்
தாலும் தப்பித்துக்கொள்கிறார்கள்’[d] என்று சொல்கிறீர்கள்.”

16 அப்போது, யெகோவாவுக்குப் பயந்தவர்கள் ஒருவரோடு ஒருவர்
பேசிக்கொண்டார்கள். யெகோவா அதைக் கவனித்துக் கேட்டார். யெகோ
வாவுக்குப் பயந்து நடந்து, அவருடைய பெயரை எப்போதும் நினைக்கிறவர்
களுக்காக*[e] ஒரு நினைவுப் புத்தகம் அவருக்குமுன் எழுதப்பட்டது.[f]

17 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: “அவர்
களை என்னுடைய விசேஷ சொத்தாக்குவேன்.[g] அந்த நாளில் அவர்கள்
எனக்குச் சொந்தமாவார்கள்.[h] கீழ்ப்படிந்து நடக்கிற ஒரு மகனுக்கு அப்பா
கரிசனை காட்டுவது போல நான் அவர்களுக்குக் கரிசனை காட்டுவேன்.[i]
18 அப்போது, நீதிமானுக்கும் கெட்டவனுக்கும், கடவுளுக்குச் சேவை
செய்கிறவனுக்கும் செய்யாதவனுக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் மறு
படியும் பார்ப்பீர்கள்.”[j]

4 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: “சூளைபோல்
எரியும் நாள் வருகிறது.[k] அந்த நாளில், அகங்காரம்* பிடித்தவர்களும்
அக்கிரமம் செய்கிறவர்களும் வைக்கோலைப் போலப் பொசுங்கிவிடுவார்
கள். அது அவர்களை மொத்தமாக அழித்துவிடும். அவர்களுடைய வேரை
யும் விட்டுவைக்காது, கிளையையும் விட்டுவைக்காது. **2** ஆனால், நீங்
கள் என்னுடைய பெயரை மகிமைப்படுத்துவதால், உங்கள்மேல் நீதியின்
சூரியன் பிரகாசிக்கும். அதன் கதிர்கள் உங்களைக் குணமாக்கும். நீங்கள்
கொழுத்த கன்றுகளைப் போலத் துள்ளிக் குதிப்பீர்கள்.”

3 பரலோகப் படைகளின் யெகோவா சொல்வது இதுதான்: “நான் நடவ
டிக்கை எடுக்கும் நாளில், கெட்டவர்கள் உங்களுடைய காலடியில் கிடக்கிற
தூசிபோல் இருப்பார்கள். நீங்கள் அவர்களை மிதித்துப்போடுவீர்கள்.

4 என் ஊழியனான மோசே மூலம் நான் கொடுத்த திருச்சட்டத்தை
நினைத்துப் பாருங்கள். இஸ்ரவேலர்கள் எல்லாரும் கடைப்பிடிப்பதற்காக
நான் ஓரேபிலே கொடுத்த விதிமுறைகளையும் நீதித்தீர்ப்புகளையும் ஞாப
கப்படுத்திப் பாருங்கள்.[l]

3:15; 4:1 *இதற்கான எபிரெய வார்த்தை அசட்டுத் துணிச்சலோடு நடப்பதையும், வரம்பு மீறுவதையும், பொறுப்பில் உள்ளவர்களை அநாவசியமாக முந்திக்கொள்வதையும் குறிக்கிறது. **3:16** *வே.வா., “தியானிக்கிறவர்களுக்காக.” அல்லது, “அவருடைய பெயரை உயர்வாக மதிக்கிறவர்களுக்காக.”

அதி. 3

a ஏசா 61:9
b மல் 1:6
c யோபு 21:14, 15; சங் 73:13, 14; ஏசா 58:3; செப் 1:12
d எரே 12:1
e ஏசா 26:8
f சங் 56:8; சங் 69:28
g ஏசா 62:3; 1பே 2:9
h எரே 31:33
i சங் 103:13
j சங் 58:10, 11

அதி. 4

k செப் 2:2; 2பே 3:7
l உபா 4:5

அதி. 4
a யோவே 2:31
அப் 2:20
2பே 3:10
b மத் 11:13, 14
மாற் 9:11, 12
c லூ 1:17

5 யெகோவாவின் படுபயங்கரமான மகா நாள்[a] வருவதற்குமுன் நான்
எலியா தீர்க்கதரிசியை[b] உங்களிடம் அனுப்புகிறேன். **6** நான் வந்து உல
கத்தை ஒட்டுமொத்தமாக அழித்துவிடாதபடி, அப்பாக்களின் உள்ளத்தைத்
திருத்தி பிள்ளைகளின் உள்ளத்தைப் போல அவன் மாற்றுவான்.*[c] பிள்
ளைகளின் உள்ளத்தைத் திருத்தி அப்பாக்களின் உள்ளத்தைப் போல மாற்று
வான்."#

4:6 *வே.வா., "அப்பாக்களின் உள்ளத்தைப் பிள்ளைகளிடம் திருப்புவான்." #வே.வா., "பிள்ளைகளின் உள்ளத்தை அப்பாக்களிடம் திருப்புவான்."

(எபிரெய-அரமேயிக் வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு முடிவடைகிறது, அடுத்து வருவது கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு)

மத்தேயு

எழுதியது

முக்கியக் குறிப்புகள்

1 இயேசுவின் வம்சாவளி (1-17)
இயேசுவின் பிறப்பு (18-25)

2 ஜோதிடர்கள் வருகிறார்கள் (1-12)
எகிப்துக்குத் தப்பியோடுதல் (13-15)
ஆண் பிள்ளைகளை ஏரோது கொல்கிறான் (16-18)
நாசரேத்துக்குத் திரும்புதல் (19-23)

3 யோவான் ஸ்நானகர் பிரசங்கிக்கிறார் (1-12)
இயேசுவின் ஞானஸ்நானம் (13-17)

4 இயேசுவைப் பிசாசு சோதிக்கிறான் (1-11)
இயேசு கலிலேயாவில் பிரசங்கிக்க ஆரம்பிக்கிறார் (12-17)
முதலில் அழைக்கப்பட்ட சீஷர்கள் (18-22)
இயேசு பிரசங்கிக்கிறார், கற்பிக்கிறார், குணமாக்குகிறார் (23-25)

5 மலைப் பிரசங்கம் (1-48)
மலைமேல் இயேசு கற்பிக்க ஆரம்பிக்கிறார் (1, 2)
ஒன்பது சந்தோஷங்கள் (3-12)
உப்பும் ஒளியும் (13-16)
திருச்சட்டத்தை இயேசு நிறைவேற்றுவார் (17-20)
கோபப்படுவது (21-26), முறைகேடாக உறவுகொள்வது (27-30), விவாகரத்து செய்வது (31, 32), சத்தியம் செய்வது (33-37), பழிக்குப் பழி வாங்குவது (38-42), எதிரிகளிடம் அன்பு காட்டுவது (43-48) சம்பந்தமான அறிவுரைகள்

6 மலைப் பிரசங்கம் (1-34)
நீதியான செயல்களைக் காட்டிக்கொள்ளக் கூடாது (1-4)
ஜெபம் செய்ய வேண்டிய விதம் (5-15)
மாதிரி ஜெபம் (9-13)
விரதம் இருப்பது (16-18)
பூமியிலும் பரலோகத்திலும் பொக்கிஷங்கள் (19-24)
கவலைப்படுவதை நிறுத்துங்கள் (25-34)
கடவுளுடைய அரசாங்கத்துக்கு முதலிடம் (33)

7 மலைப் பிரசங்கம் (1-27)
நியாயந்தீர்ப்பதை நிறுத்துங்கள் (1-6)
கேட்டுக்கொண்டே, தேடிக்கொண்டே, தட்டிக்கொண்டே இருங்கள் (7-11)
பொன் விதி (12)
இடுக்கமான வாசல் (13, 14)
அவர்களுடைய கனிகளால் தெரிந்துகொள்வீர்கள் (15-23)
பாறைமேல் கட்டப்பட்ட வீடு, மணல்மேல் கட்டப்பட்ட வீடு (24-27)
இயேசு கற்றுக்கொடுத்ததைக் கேட்டு மக்கள் அசந்துபோனார்கள் (28, 29)

8 தொழுநோயாளி குணமாக்கப்படுகிறான் (1-4)
படை அதிகாரியின் விசுவாசம் (5-13)
கப்பர்நகூமில் நிறைய பேரை இயேசு குணமாக்குகிறார் (14-17)
இயேசுவைப் பின்பற்றுவது எப்படி (18-22)
புயல்காற்றை இயேசு அடக்குகிறார் (23-27)
இயேசு பன்றிகளுக்குள் பேய்களை அனுப்புகிறார் (28-34)

9 பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவனைக் குணமாக்குகிறார் (1-8)
மத்தேயுவை இயேசு அழைக்கிறார் (9-13)
விரதத்தைப் பற்றிய கேள்வி (14-17)
யவீருவின் மகள்; இயேசுவின் மேலங்கியை ஒரு பெண் தொடுகிறாள் (18-26)
கண் தெரியாதவர்களையும் பேச முடியாதவர்களையும் குணமாக்குகிறார் (27-34)
அறுவடை அதிகம், வேலையாட்களோ குறைவு (35-38)

10 இயேசுவின் 12 அப்போஸ்தலர்கள் (1-4)
ஊழியம் சம்பந்தமான அறிவுரைகள் (5-15)
சீஷர்கள் துன்புறுத்தப்படுவார்கள் (16-25)
கடவுளுக்குப் பயப்படுங்கள், மனிதர்களுக்கு அல்ல (26-31)
சமாதானம் அல்ல, பிரிவினை (32-39)
இயேசுவின் சீஷர்களை ஏற்றுக்கொள்வது (40-42)

11 யோவான் ஸ்நானகர் புகழப்படுகிறார் (1-15)
மனம் திருந்தாத தலைமுறை கண்டனம் செய்யப்படுகிறது (16-24)

தாழ்மையானவர்களுக்குத் தயவு காட்டியதற்காக இயேசு தன் தகப்பனைப் புகழ்கிறார் (25-27)

இயேசுவின் நுகத்தடி புத்துணர்ச்சி தருகிறது (28-30)

12 இயேசு, 'ஓய்வுநாளுக்கு எஜமான்' (1-8)

சூம்பிய கையுடையவன் குணமாகிறான் (9-14)

கடவுளுடைய அன்பு ஊழியர் (15-21)

கடவுளுடைய சக்தியால் பேய்கள் விரட்டப்படுகின்றன (22-30)

மன்னிக்கப்படாத பாவம் (31, 32)

ஒரு மரம் எப்படிப்பட்டது என்பதை அதன் கனி காட்டும் (33-37)

யோனாவின் அடையாளம் (38-42)

பேய் திரும்பிவரும்போது (43-45)

இயேசுவின் அம்மாவும் சகோதரர்களும் (46-50)

13 பரலோக அரசாங்கத்தைப் பற்றிய உவமைகள் (1-52)

- விதைப்பவர் (1-9)
- இயேசு உவமைகளைப் பயன்படுத்தியதற்கான காரணம் (10-17)
- விதைப்பவரைப் பற்றிய உவமையின் அர்த்தம் (18-23)
- கோதுமைப் பயிர்களும் களைகளும் (24-30)
- கடுகு விதையும் புளித்த மாவும் (31-33)
- உவமைகளைப் பயன்படுத்தியது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் (34, 35)
- கோதுமைப் பயிர்கள், களைகள் பற்றிய உவமையின் விளக்கம் (36-43)
- புதைத்து வைக்கப்பட்ட பொக்கிஷமும் அருமையான முத்தும் (44-46)
- இழுவலை (47-50)
- புதிய பொக்கிஷங்களும் பழைய பொக்கிஷங்களும் (51, 52)

சொந்த ஊர்க்காரர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை (53-58)

14 யோவானின் தலை வெட்டப்படுகிறது (1-12)

5,000 பேருக்கு இயேசு உணவு கொடுக்கிறார் (13-21)

தண்ணீர்மேல் நடக்கிறார் (22-33)

கெனேசரேத்தில் மக்களைக் குணமாக்குகிறார் (34-36)

15 மனித பாரம்பரியங்களை அம்பலப்படுத்துகிறார் (1-9)

இதயத்திலிருந்து வருவது தீட்டுப்படுத்துகிறது (10-20)

பெனிக்கேயப் பெண்ணின் விசுவாசம் (21-28)

இயேசு பலவித நோய்களைக் குணமாக்குகிறார் (29-31)

4,000 பேருக்கு உணவு கொடுக்கிறார் (32-39)

16 ஓர் அடையாளம் கேட்கப்படுகிறது (1-4)

பரிசேயர்கள் சதுசேயர்களின் புளித்த மாவு (5-12)

பரலோக அரசாங்கத்தின் சாவிகள் (13-20)

- பாறைமேல் சபை கட்டப்படுகிறது (18)

தன் மரணத்தைப் பற்றி இயேசு முன்னறிவிக்கிறார் (21-23)

உண்மையான சீஷர்கள் செய்ய வேண்டியது (24-28)

17 இயேசுவின் தோற்றம் மாறுகிறது (1-13)

கடுகளவு விசுவாசம் (14-21)

இயேசு தன் மரணத்தைப் பற்றி மறுபடியும் சொல்கிறார் (22, 23)

மீன் வாயிலிருந்து எடுக்கப்பட்ட காசு வரியாகக் கொடுக்கப்படுகிறது (24-27)

18 பரலோக அரசாங்கத்தில் மிக உயர்ந்தவர் (1-6)

பாவம் செய்யத் தூண்டுகிறவர்கள் (7-11)

வழிதவறிப் போன ஆட்டைப் பற்றிய உவமை (12-14)

சகோதரரை நல்ல வழிக்குக் கொண்டுவருவது எப்படி (15-20)

மன்னிக்காத அடிமையைப் பற்றிய உவமை (21-35)

19 திருமணமும் விவாகரத்தும் (1-9)

திருமணம் செய்யாமல் இருக்கும் வரம் (10-12)

சின்னப் பிள்ளைகளை இயேசு ஆசீர்வதிக்கிறார் (13-15)

பணக்காரனாக இருந்த இளம் மனிதனின் கேள்வி (16-24)

பரலோக அரசாங்கத்துக்காகத் தியாகங்கள் (25-30)

20 திராட்சைத் தோட்டத்துக் கூலியாட்களும் ஒரே கூலியும் (1-16)

தன் மரணத்தைப் பற்றி இயேசு மறுபடியும் சொல்கிறார் (17-19)

பரலோக அரசாங்கத்தில் முக்கிய இடம் வேண்டுமென்று கேட்கிறார்கள் (20-28)

- இயேசு பலருக்காக மீட்புவிலை கொடுப்பார் (28)

பார்வையில்லாத இருவர் பார்வை பெறுகிறார்கள் (29-34)

21 இயேசுவின் வெற்றி பவனி (1-11)

ஆலயத்தை இயேசு சுத்தப்படுத்துகிறார் (12-17)

அத்தி மரத்தைச் சபிக்கிறார் (18-22)
இயேசுவின் அதிகாரத்தைப் பற்றிக் கேள்வி (23-27)
இரண்டு மகன்களைப் பற்றிய உவமை (28-32)
கொலைவெறி பிடித்த தோட்டக்காரர்களைப் பற்றிய உவமை (33-46)
மூலைக்குத் தலைக்கல் ஒதுக்கித்தள்ளப்படுகிறது (42)

22 திருமண விருந்தைப் பற்றிய உவமை (1-14)
கடவுளும் அரசனும் (15-22)
உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி (23-33)
மிக முக்கியமான இரண்டு கட்டளைகள் (34-40)
கிறிஸ்து தாவீதின் மகனா? (41-46)

23 வேத அறிஞர்களையும் பரிசேயர்களையும் போல் இருக்காதீர்கள் (1-12)
வேத அறிஞர்களுக்கும் பரிசேயர்களுக்கும் கேடுதான் வரும் (13-36)
எருசலேமைப் பார்த்து இயேசு புலம்புகிறார் (37-39)

24 கிறிஸ்துவின் பிரசன்னத்தின் அடையாளம் (1-51)
போர்கள், பஞ்சங்கள், நிலநடுக்கங்கள் (7)
நல்ல செய்தி பிரசங்கிக்கப்படும் (14)
மிகுந்த உபத்திரவம் (21, 22)
மனிதகுமாரனின் அடையாளம் (30)
அத்தி மரம் (32-34)
நோவாவின் நாட்களைப் போல் (37-39)
விழிப்பாக இருங்கள் (42-44)
உண்மையுள்ள அடிமையும் பொல்லாத அடிமையும் (45-51)

25 கிறிஸ்துவின் பிரசன்னத்தின் அடையாளம் (1-46)
10 கன்னிப்பெண்கள் பற்றிய உவமை (1-13)
தாலந்துகள் பற்றிய உவமை (14-30)
செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் (31-46)

26 இயேசுவைக் கொல்ல குருமார்களின் திட்டம் (1-5)
இயேசுவின் தலைமேல் வாசனை எண்ணெய் ஊற்றப்படுகிறது (6-13)
கடைசி பஸ்காவும் காட்டிக்கொடுக்கப்படுவதும் (14-25)
எஜமானின் இரவு விருந்து ஆரம்பித்து வைக்கப்படுகிறது (26-30)
தன்னைத் தெரியாதென்று பேதுரு சொல்லிவிடுவாரென இயேசு முன்னறிவிக்கிறார் (31-35)
கெத்செமனேயில் இயேசு ஜெபம் செய்கிறார் (36-46)
இயேசு கைது செய்யப்படுகிறார் (47-56)
நியாயசங்கத்தில் விசாரணை (57-68)
இயேசுவைத் தெரியாதென்று பேதுரு சொல்கிறார் (69-75)

27 பிலாத்துவிடம் இயேசு ஒப்படைக்கப்படுகிறார் (1, 2)
யூதாஸ் தூக்குப்போட்டுக்கொள்கிறான் (3-10)
பிலாத்து முன்னால் இயேசு (11-26)
எல்லாரும் கேலி செய்கிறார்கள் (27-31)
கொல்கொதாவில் மரக் கம்பத்தில் அறையப்படுகிறார் (32-44)
இயேசுவின் மரணம் (45-56)
அடக்கம் செய்யப்படுகிறார் (57-61)
கல்லறைக்குக் காவல் (62-66)

28 இயேசு உயிரோடு எழுப்பப்படுகிறார் (1-10)
பொய் சொல்ல படைவீரர்களுக்கு லஞ்சம் (11-15)
சீஷராக்கும் பொறுப்பு (16-20)

---

1 ஆபிரகாமின் மகனாகிய[a] தாவீதின் மகன்[b] இயேசு கிறிஸ்துவின்* சரித்திரத்தை# பற்றிய புத்தகம்:

2 ஆபிரகாமின் மகன் ஈசாக்கு;[c]
ஈசாக்கின் மகன் யாக்கோபு;[d]
யாக்கோபின் மகன்கள் யூதாவும்,[e] யூதாவின் சகோதரர்களும்;

1:1 *வே.வா., "மேசியாவின்; அபிஷேகம் செய்யப்பட்டவரின்." #வே.வா., "வம்சாவளியை."

அதி. 1
a ஆதி 22:18
b 1நா 17:11
மத் 9:27
லூ 1:32, 33
c ஆதி 21:3
d ஆதி 25:26
1நா 1:34
e ஆதி 29:35

3 யூதாவுக்கும் தாமாருக்கும் பிறந்த மகன்கள் பாரேஸ், சேராகு;[a]
பாரேசின் மகன் எஸ்ரோன்;[b]
எஸ்ரோனின் மகன் ராம்;[c]
4 ராமின் மகன் அம்மினதாப்;
அம்மினதாபின் மகன் நகசோன்;[d]
நகசோனின் மகன் சல்மோன்;
5 சல்மோனுக்கும் ராகாபுக்கும்[e] பிறந்த மகன் போவாஸ்;
போவாசுக்கும் ரூத்துக்கும்[f] பிறந்த மகன் ஓபேத்;
ஓபேத்தின் மகன் ஈசாய்;[g]
6 ஈசாயின் மகன் ராஜாவாகிய தாவீது;[h]
தாவீதுக்கும் உரியாவின் மனைவிக்கும் பிறந்த மகன் சாலொமோன்;[i]
7 சாலொமோனின் மகன் ரெகொபெயாம்;[j]
ரெகொபெயாமின் மகன் அபியா;
அபியாவின் மகன் ஆசா;[k]
8 ஆசாவின் மகன் யோசபாத்;[l]
யோசபாத்தின் மகன் யோராம்;[m]
யோராமின் மகன் உசியா;
9 உசியாவின் மகன் யோதாம்;[n]
யோதாமின் மகன் ஆகாஸ்;[o]
ஆகாசின் மகன் எசேக்கியா;[p]
10 எசேக்கியாவின் மகன் மனாசே;[q]
மனாசேயின் மகன் ஆமோன்;[r]
ஆமோனின் மகன் யோசியா;[s]
11 யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போன காலத்தில்,[t]
யோசியாவுக்குப்[u] பிறந்த மகன்கள் எகொனியாவும்,[v]
எகொனியாவின் சகோதரர்களும்;
12 பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போன பின்பு,
எகொனியாவுக்குப் பிறந்த மகன் சலாத்தியேல்;
சலாத்தியேலின் மகன் செருபாபேல்;[w]
13 செருபாபேலின் மகன் அபியூத்;
அபியூத்தின் மகன் எலியாக்கீம்;
எலியாக்கீமின் மகன் ஆசோர்;
14 ஆசோரின் மகன் சாதோக்;
சாதோக்கின் மகன் ஆகீம்;
ஆகீமின் மகன் எலியூத்;
15 எலியூத்தின் மகன் எலெயாசார்;
எலெயாசாரின் மகன் மாத்தான்;
மாத்தானின் மகன் யாக்கோபு;
16 யாக்கோபின் மகன் யோசேப்பு; இந்த யோசேப்புதான் மரியாளின்
கணவர்; இந்த மரியாளுக்குத்தான் இயேசு பிறந்தார்.[x] இவர் கிறிஸ்து
என்று அழைக்கப்படுகிறார்.[y]

அதி. 1
a ஆதி 38:29, 30
b ரூ 4:18-22
c 1நா 2:9
d 1நா 2:10, 11
e யோசு 2:1
f ரூ 4:13
g 1நா 2:12
h 1நா 2:13, 15
i 2சா 12:24 1நா 3:5
j 1ரா 11:43
k 1நா 3:10-19 2நா 14:1
l 1ரா 15:24
m 2நா 21:1
n 2ரா 15:32
o 2ரா 15:38
p 2ரா 18:1
q 2ரா 20:21
r 2நா 33:20
s 2ரா 21:24
t 2ரா 24:12, 15 2நா 36:9, 10
u 2ரா 23:34
v 1நா 3:15, 16
w எஸ்றா 3:2 நெ 12:1
x மத் 13:55 மாற் 6:3
y லூ 3:23-38

17 இப்படி, ஆபிரகாம்முதல் தாவீதுவரை 14 தலைமுறைகள்; தாவீது
முதல் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போன யூதர்கள்வரை 14
தலைமுறைகள்; பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போன யூதர்கள்
முதல் கிறிஸ்துவரை 14 தலைமுறைகள்.

18 இயேசு கிறிஸ்து பிறந்த விவரம் இதுதான்: அவருடைய அம்மா மரி
யாள் யோசேப்புக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தாள்; அவர்களுக்குக் கல்யா
ணம் ஆவதற்கு முன்பே, கடவுளுடைய சக்தியின் மூலம் மரியாள் கர்ப்ப
மானாள்.[a] **19** ஆனால், அவளுடைய கணவரான யோசேப்பு நீதிமானாக
இருந்ததால், எல்லார் முன்னாலும் அவளை அவமானப்படுத்த விரும்ப
வில்லை; அதனால், அவளை ரகசியமாக விவாகரத்து* செய்ய நினைத்தார்.[b]
20 இந்த விஷயங்களைப் பற்றி யோசித்த பின்பு அவர் தூங்கிவிட்டார்; அப்
போது யெகோவாவின்* தூதர் அவருடைய கனவில் வந்து, “யோசேப்பே,
தாவீதின் மகனே, உன் மனைவி மரியாளை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வர
பயப்படாதே; கடவுளுடைய சக்தியின் மூலம்தான் அவள் கர்ப்பமாகியிருக்
கிறாள்.[c] **21** அவளுக்கு ஒரு மகன் பிறப்பார்; அவருக்கு இயேசு* என்று
நீ பெயர் வைக்க வேண்டும்;[d] ஏனென்றால், அவர் தன்னுடைய மக்க
ளைப் பாவத்திலிருந்து மீட்பார்”[e] என்று சொன்னார். **22** யெகோவா* தன்
னுடைய தீர்க்கதரிசியின் மூலம் சொன்னது நிறைவேற வேண்டும் என்பதற்
காகவே இதெல்லாம் நடந்தது. **23** “இதோ! ஒரு கன்னிப்பெண் கர்ப்பமாகி
ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்; அவனுக்கு இம்மானுவேல் என்று பெயர்
வைப்பார்கள்”[f] என்று அவர் சொல்லியிருந்தார். இம்மானுவேல் என்றால்,
“கடவுள் நம்மோடு* இருக்கிறார்”[g] என்று அர்த்தம்.

24 யோசேப்பு தூங்கியெழுந்த பின்பு, யெகோவாவின்* தூதர் சொன்ன
படி தன்னுடைய மனைவியை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்தார்.
25 ஆனால், அவளுக்கு ஒரு மகன் பிறக்கும்வரை[h] அவளோடு அவர் உற
வுகொள்ளவில்லை; அந்த மகனுக்கு இயேசு என்று பெயர் வைத்தார்.[i]

2 ஏரோது* ராஜாவின் காலத்தில்,[j] யூதேயாவிலுள்ள பெத்லகேமில்[k]
இயேசு பிறந்தார்; அதன் பின்பு, கிழக்கிலிருந்து ஜோதிடர்கள் எருசலே
முக்கு வந்து, **2** “யூதர்களுடைய ராஜா[l] எங்கே பிறந்திருக்கிறார்? நாங்கள்
கிழக்கிலே இருந்தபோது அவருடைய நட்சத்திரத்தைப் பார்த்தோம்; அத
னால், அவர் முன்னால் தலைவணங்க வந்தோம்” என்று சொன்னார்கள்.
3 இதைக் கேட்டு, ஏரோது ராஜாவும் எருசலேமிலிருந்த எல்லா மக்களும்
கலக்கம் அடைந்தார்கள். **4** அதனால், ஏரோது முதன்மை குருமார்களை
யும் வேத அறிஞர்களையும் ஒன்றுகூட்டி, கிறிஸ்து* எங்கே பிறப்பார் என்று
அவர்களிடம் விசாரித்தான். **5** அதற்கு அவர்கள், “யூதேயாவிலுள்ள
பெத்லகேமில்[m] பிறப்பார்; ஏனென்றால், தீர்க்கதரிசி மூலம் இப்படி எழுதப்
பட்டிருக்கிறது: **6** ‘யூதா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் ஆளு

1:19 *யூதர்களின் சம்பிரதாயப்படி, திருமணம் நிச்சயம் செய்யப்பட்டதை முறிப்பதற்கு விவாகரத்து செய்ய வேண்டியிருந்தது. **1:20** *கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் கடவுளுடைய பெயரான யெகோவா 237 தடவை வருகிறது. அதில் இந்த வசனத்தில்தான் முதல் தடவை வருகிறது. இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:21** *எபிரெயுவில், யெஷுவா அல்லது யோசுவா; இதன் அர்த்தம், “யெகோவாவே மீட்பு.” **1:22, 24** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:23** *வே.வா., “எங்களோடு.” **2:1** *சொல் பட்டியலைப் பாருங்கள். **2:4** *வே.வா., “மேசியா; அபிஷேகம் செய்யப்பட்டவர்.”

அதி. 1
a லூ 1:35
b உபா 24:1
c லூ 1:35
d மத் 1:25 லூ 1:31
e லூ 2:30 யோவா 1:29 அப் 4:12 அப் 5:31 எபே 1:7 எபி 7:25 1பே 2:24
f ஏசா 7:14
g ஏசா 8:8, 10
h லூ 2:7
i லூ 2:21

அதி. 2
j லூ 1:5
k மீ 5:2 லூ 2:4
l மத் 27:37
m யோவா 7:42

அதி. 2
a 2சா 5:2 மீ 5:2
நர்களுடைய பார்வையில் நீ அற்பமான நகரமே கிடையாது; ஏனென்றால்,
என் மக்களான இஸ்ரவேலர்களை ஆளப்போகும்* தலைவர்[a] உன்னிடமி
ருந்து வருவார்'" என்று சொன்னார்கள்.

7 பின்பு ஜோதிடர்களை ஏரோது ரகசியமாகக் கூப்பிட்டு, அந்த நட்சத்தி
ரத்தை முதன்முதலில் எப்போது பார்த்தார்கள் என்பதை நன்றாக விசாரித்து
உறுதிசெய்துகொண்டான்; **8** அதன் பின்பு அவர்களிடம், "நீங்கள் போய்
அந்தப் பிள்ளையைக் கவனமாகத் தேடிப்பாருங்கள், கண்டுபிடித்ததும் என்
னிடம் வந்து சொல்லுங்கள்; நானும் போய் அந்தப் பிள்ளையின் முன்னால்
b மத் 2:2
தலைவணங்குகிறேன்" என்று சொல்லி, அவர்களை பெத்லகேமுக்கு அனுப்
பினான். **9** ராஜா சொன்னதைக் கேட்டு அவர்கள் புறப்பட்டுப் போனார்
கள்; இதோ! கிழக்கில்[b] இருந்தபோது அவர்கள் பார்த்த நட்சத்திரம் அவர்
களுக்கு முன்னால் போய், அந்தப் பிள்ளை இருந்த இடத்துக்குமேல் வந்து
நின்றது. **10** அந்த நட்சத்திரத்தைப் பார்த்தபோது அவர்கள் ரொம்பவே சந்
தோஷப்பட்டார்கள். **11** அவர்கள் அந்த வீட்டுக்குள் போனபோது, அந்
c மத் 2:22
தப் பிள்ளை தன் அம்மா மரியாளிடம் இருந்ததைப் பார்த்து, அதன்
முன்னால் மண்டிபோட்டு தலைவணங்கினார்கள். பின்பு, தங்கள் பொக்கி
ஷப் பெட்டிகளிலிருந்து தங்கத்தையும் சாம்பிராணியையும் வெள்ளைப்போ
ளத்தையும்* எடுத்து அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். **12** ஆனால், ஏரோ
துவிடம் திரும்பிப்போக வேண்டாம் என்று கடவுள் அவர்களைக் கனவில்
d மத் 1:20 மத் 2:19
எச்சரித்ததால்[c] வேறொரு வழியாகத் தங்களுடைய நாட்டுக்குத் திரும்பிப்
போனார்கள்.

13 அவர்கள் திரும்பிப்போன பின்பு யெகோவாவின்* தூதர் யோசேப்
பின் கனவில் வந்து,[d] "எழுந்திரு, பிள்ளையையும் அதன் அம்மாவையும்
கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போ; நான் சொல்லும்வரை அங்
கேயே இரு. ஏனென்றால், பிள்ளையைக் கொல்வதற்காக ஏரோது அதைத்
தேடப்போகிறான்" என்று சொன்னார். **14** அதனால் யோசேப்பு எழுந்து,
e ஓசி 11:1
பிள்ளையையும் அதன் அம்மாவையும் கூட்டிக்கொண்டு ராத்திரியோடு
ராத்திரியாக எகிப்துக்குப் புறப்பட்டுப் போனார். **15** ஏரோது சாகும்வரை
அங்கேயே இருந்தார்; "எகிப்திலிருந்து என் மகனைக் கூட்டிக்கொண்டு வந்
தேன்"[e] என்று தீர்க்கதரிசி மூலம் யெகோவா* சொன்னது நிறைவேறும்ப
டியே அப்படி நடந்தது.

16 ஜோதிடர்கள் தன்னைத் தந்திரமாக ஏமாற்றிவிட்டார்கள் என்பது
f மத் 2:7
தெரிந்ததும் ஏரோது பயங்கரமாகக் கோபப்பட்டான்; அதனால், ஜோதிடர்க
ளிடம் நன்றாக விசாரித்து உறுதிசெய்த காலத்தை[f] வைத்து அந்தப் பிள்ளை
யின் வயதைக் கணக்கிட்டான்; பின்பு, ஆட்களை அனுப்பி, பெத்லகேமிலும்
அதைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் இருந்த இரண்டு வயதும் அதற்
குட்பட்ட வயதுமுள்ள எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றுபோட்
டான். **17** எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் சொல்லப்பட்ட இந்த விஷயம்
g ஆதி 35:19
அப்போது நிறைவேறியது: **18** "ராமாவில் அழுகை சத்தமும் பயங்கர
புலம்பல் சத்தமும் கேட்டது; ராகேல்[g] தன்னுடைய பிள்ளைகளுக்காக அழு
துகொண்டிருந்தாள்; யாராலும் அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை;
ஏனென்றால், அவளுடைய பிள்ளைகள் அவளோடு இல்லை."[h]

2:6 * நே.மொ., "மேய்க்கப்போகும்." **2:11** * சொல் பட்டியலைப் பாருங்கள். **2:13,**
h எரே 31:15
15 * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

19 ஏரோது இறந்த பின்பு, யெகோவாவின்* தூதர் எகிப்திலிருந்த
யோசேப்புக்குக் கனவில்[a] தோன்றி, **20** “நீ எழுந்து பிள்ளையையும் அதன்
அம்மாவையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; இந்தப் பிள்
ளையைக் கொல்லப் பார்த்தவர்கள் இறந்துவிட்டார்கள்” என்று சொன்னார்.
21 அதனால், அவர் எழுந்து பிள்ளையையும் அதன் அம்மாவையும் கூட்
டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்குப் போனார். **22** ஆனால், ஏரோதுவுக்
குப் பதிலாக அவனுடைய மகன் அர்கெலாயு யூதேயாவில் ஆட்சி செய்கி
றான் என்பதைக் கேள்விப்பட்டு, அங்கே போக பயந்தார். அதோடு, கடவுள்
அவரைக் கனவில் எச்சரித்ததால்[b] கலிலேயா பகுதிக்குப்[c] போய், **23** நாச
ரேத் என்ற ஊரில் குடியேறினார்.[d] “அவர்* நாசரேத்தூரார்#[e] என அழைக்
கப்படுவார்” என்று தீர்க்கதரிசிகளின் மூலம் சொல்லப்பட்டது நிறைவேறும்ப
டியே அப்படி நடந்தது.

3 அந்தக் காலத்தில், யோவான்[f] ஸ்நானகர்* யூதேயாவின் வனாந்தரத்
துக்கு வந்து, **2** “மனம் திருந்துங்கள், பரலோக அரசாங்கம் நெருங்கி
வந்துவிட்டது”[g] என்று பிரசங்கித்துக்கொண்டிருந்தார்.[h] **3** இவரைப் பற்
றித்தான் ஏசாயா தீர்க்கதரிசி[i] இப்படிச் சொல்லியிருந்தார்: “‘யெகோவா
வுக்கு* வழியைத் தயார்படுத்துங்கள், அவருக்காகப் பாதைகளைச் சமப்ப
டுத்துங்கள்’ என்று வனாந்தரத்தில் ஒருவர் சத்தமாகச் சொல்வதைக்
கேளுங்கள்!”[j] **4** யோவான் ஒட்டக ரோமத்தால் செய்யப்பட்ட உடை
யைப் போட்டிருந்தார், தோல் வாரை இடுப்பில் கட்டியிருந்தார்;[k] வெட்டுக்
கிளிகளையும் காட்டுத் தேனையும் சாப்பிட்டுவந்தார்.[l] **5** எருசலேமிலிருந்
தும் யூதேயா முழுவதிலிருந்தும் யோர்தான் ஆற்றைச் சுற்றியிருந்த எல்லா
பகுதிகளிலிருந்தும் மக்கள் அவரிடம் போனார்கள்.[m] **6** தாங்கள் செய்த
பாவங்களை வெளிப்படையாக ஒத்துக்கொண்டு, யோர்தான் ஆற்றில் அவ
ரிடம் ஞானஸ்நானம்* பெற்றார்கள்.[n]

7 ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட அந்த இடத்துக்கு நிறைய பரிசேயர்
களும் சதுசேயர்களும்[o] வருவதைப் பார்த்தவுடனே யோவான் அவர்களி
டம், “விரியன் பாம்புக் குட்டிகளே,[p] கடவுளுடைய கோபத்தின் நாளில்[q] தப்
பித்து ஓடச் சொல்லி உங்களை எச்சரித்தது யார்? **8** நீங்கள் மனம்
திருந்திவிட்டீர்கள் என்பதைச் செயலில் காட்டுங்கள்.* **9** ‘ஆபிரகாம் எங்
கள் தகப்பன்’ என்று மனதுக்குள் பெருமையாகச் சொல்லிக்கொள்ளாதீர்
கள்;[r] கடவுள் நினைத்தால் இந்தக் கற்களிலிருந்துகூட ஆபிரகாமுக்குப்
பிள்ளைகளை உண்டாக்க முடியுமென்று நான் உங்களுக்குச் சொல்கி
றேன். **10** மரங்களின் வேருக்குப் பக்கத்தில் ஏற்கெனவே கோடாலி இருக்
கிறது; நல்ல பழங்களைத் தராத எல்லா மரங்களும் வெட்டப்பட்டு நெருப்
பில் போடப்படும்.[s] **11** நீங்கள் மனம் திருந்தியதால் நான் உங்களுக்குத்
தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்;[t] ஆனால், எனக்குப் பின்பு
வரப்போகிறவர் என்னைவிட வல்லவர்; அவருடைய செருப்புகளைக் கழற்
றுவதற்குக்கூட எனக்குத் தகுதியில்லை.[u] அவர் கடவுளுடைய சக்தியாலும்

2:19; 3:3 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:23** *அதாவது, “கிறிஸ்து.” #அநேகமாக, “தளிர்” என்பதற்கான எபிரெய வார்த்தையிலிருந்து வந்திருக்கலாம். **3:1** *ஸ்நானகர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர். **3:6** *அதாவது, “முழுக்கு ஞானஸ்நானம்.” **3:8** *நே.மொ., “மனம் திருந்தியதற்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்.”

அதி. 2
a மத் 1:20
b மத் 2:12
c மாற் 1:9; லூ 2:39
d யோவா 1:45
e ஏசா 11:1; ஏசா 53:2; எரே 23:5; சக 3:8

அதி. 3
f யோவா 1:6
g மத் 4:17
h மாற் 1:3, 4; லூ 3:3-6
i மாற் 1:2; யோவா 1:23
j ஏசா 40:3
k 2ரா 1:8
l மாற் 1:6
m மாற் 1:5
n மாற் 1:9
o மாற் 12:18; லூ 7:30
p மத் 12:34
q மத் 23:33; லூ 3:7-9; லூ 21:23
r யோவா 8:33, 39
s மத் 7:19; லூ 13:6-9
t அப் 19:4
u யோவா 1:15, 27

நெருப்பாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.[a] **12** அவர் தன்
னுடைய கையில் தூற்றுவாரியை* வைத்திருக்கிறார்; தன்னுடைய களத்து
மேடு முழுவதையும் சுத்தப்படுத்தி, கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்
பார்; பதரையோ அணைக்க முடியாத நெருப்பில் சுட்டெரிப்பார்"[b] என்று
சொன்னார்.

13 பின்பு, யோவானிடம் ஞானஸ்நானம் பெறுவதற்காக இயேசு கலிலே
யாவிலிருந்து யோர்தான் ஆற்றுக்கு வந்தார்.[c] **14** ஆனால் யோவான்,
"ஞானஸ்நானம் பெறுவதற்கு நான்தான் உங்களிடம் வர வேண்டும், நீங்
கள் என்னிடம் வரலாமா?" என்று சொல்லி அவரைத் தடுக்கப் பார்த்தார்.
15 அதற்கு இயேசு, "என்னைத் தடுக்காதே; இதன் மூலம்தான், நீதியான எல்
லாவற்றையும் நம்மால் செய்ய முடியும்" என்று சொன்னார். அதன் பின்பு,
யோவான் அவரைத் தடுக்கவில்லை. **16** இயேசு ஞானஸ்நானம் பெற்று
தண்ணீருக்குள்ளிருந்து வெளியே வந்தவுடன், வானம் திறக்கப்பட்டது;[d]
கடவுளுடைய சக்தி புறாவைப் போல் அவர்மேல் இறங்குவதை[e] யோவான்
பார்த்தார். **17** அப்போது, "இவர் என் அன்பு மகன்,[f] நான் இவரை ஏற்றுக்
கொள்கிறேன்"*[g] என்று வானத்திலிருந்து ஒரு குரல்[h] கேட்டது.

4 பின்பு, கடவுளுடைய சக்தி இயேசுவை வனாந்தரத்துக்கு வழிநடத்தி
யது; அங்கே பிசாசு அவரைச் சோதித்தான்.[i] **2** அவர் 40 நாட்கள்
இரவும் பகலும் விரதம் இருந்த பின்பு, அவருக்குப் பசியெடுத்தது. **3** அப்
போது, அந்தச் சோதனைக்காரன்[j] அவரிடம் வந்து, "நீ கடவுளுடைய
மகனாக இருந்தால், இந்தக் கற்களை ரொட்டிகளாகும்படி சொல்" என்றான்.
4 அதற்கு இயேசு, "'உணவால்* மட்டுமல்ல, யெகோவாவின்# வாயிலி
ருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையாலும் மனுஷன் உயிர்வாழ்வான்' என
எழுதப்பட்டிருக்கிறதே"[k] என்று சொன்னார்.

5 பின்பு, பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்துக்குக்[l] கொண்டுபோய்,
ஆலயத்தின் உயரமான இடத்தில்* அவரை நிற்க வைத்து,[m] **6** "நீ கடவு
ளுடைய மகனாக இருந்தால், கீழே குதி; 'அவர் உன்னைக் குறித்து தன்னு
டைய தூதர்களுக்குக் கட்டளை கொடுப்பார். உன் பாதம் கல்லில் மோதா
தபடி அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் சுமந்துகொண்டு போவார்கள்'
என எழுதப்பட்டிருக்கிறதே"[n] என்று சொன்னான். **7** அதற்கு இயேசு,
"'உன் கடவுளாகிய யெகோவாவை# சோதித்துப் பார்க்கக் கூடாது' எனவும்
எழுதப்பட்டிருக்கிறதே"[o] என்று சொன்னார்.

8 மறுபடியும் பிசாசு அவரை மிக மிக உயரமான ஒரு மலைக்குக்
கொண்டுபோய், இந்த உலகத்தில் இருக்கிற எல்லா ராஜ்யங்களையும் அவற்
றின் மகிமையையும் அவருக்குக் காட்டி,[p] **9** "நீ ஒரேவொரு தடவை என்
முன் விழுந்து என்னை வணங்கினால், இவை எல்லாவற்றையும் உனக்குத்
தருவேன்" என்று சொன்னான். **10** அதற்கு இயேசு, "அப்பாலே போ
சாத்தானே! 'உன் கடவுளாகிய யெகோவாவை# மட்டுமே வணங்க
வேண்டும்,[q] அவர் ஒருவருக்குத்தான் பரிசுத்த சேவை செய்ய வேண்டும்'[r]
என எழுதப்பட்டிருக்கிறதே" என்று சொன்னார். **11** அப்போது, பிசாசு

3:12 * தானியத்தைப் பதரிலிருந்து பிரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் நீண்ட கைப்பிடி யுள்ள ஒரு கருவி. **3:17** * வே.வா., "அங்கீகரிக்கிறேன்; இவர்மேல் பிரியமாக இருக்கிறேன்." **4:4** * நே.மொ., "ரொட்டியால்." **4:4, 7, 10** # இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:5** * வே.வா., "ஆலயத்தின் கொத்தளத்தில்; ஆலயத்தின் மதில்மேல்."

அதி. 3

a மாற் 1:7, 8; லூ 3:16, 17; யோவா 1:33; அப் 2:1, 4; 1கொ 12:13
b மல் 4:1
c மாற் 1:9
d லூ 3:21
e ஏசா 11:2; மாற் 1:10, 11; லூ 4:18; யோவா 1:32
f சங் 2:7; லூ 9:35
g ஏசா 42:1; மத் 17:5; லூ 3:22
h யோவா 12:28

அதி. 4

i மாற் 1:12, 13; லூ 4:1-4; எபி 4:15
j 1தெ 3:5
k உபா 8:3; லூ 4:4; யோவா 4:34
l நெ 11:1; ஏசா 52:1
m லூ 4:9-12
n சங் 91:11, 12
o உபா 6:16; லூ 4:12; 1கொ 10:9
p லூ 4:5-8
q வெளி 22:9
r உபா 6:13; உபா 10:20; லூ 4:8

அவரைவிட்டுப் போனான்;[a] பின்பு, தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணி
விடை* செய்ய[b] ஆரம்பித்தார்கள்.

12 யோவான் கைது செய்யப்பட்டதை[c] இயேசு கேள்விப்பட்டு, கலி
லேயாவுக்குப் புறப்பட்டுப் போனார்.[d] **13** அதன் பின்பு, நாசரேத்தை
விட்டு கப்பர்நகூமுக்குப் போய்[e] அங்கே குடியிருந்தார்; அது செபுலோன்,
நப்தலி பகுதிகளில் இருக்கிற கடலோர நகரம். **14** “செபுலோன் தேசமே,
நப்தலி தேசமே! கடலுக்குப் போகும் வழியில் இருக்கிற இடங்களே! யோர்
தானுக்கு மேற்கே இருக்கிற பகுதிகளே! மற்ற தேசத்தார் குடியிருக்கிற கலி
லேயாவே! **15** இருட்டில் இருந்த ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைப் பார்த்
தார்கள், மரணத்தின் நிழல் படிந்த பகுதியில் வாழ்கிறவர்கள்மேல்
வெளிச்சம்[f] பிரகாசித்தது”[g] என்று **16** ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம்
சொல்லப்பட்டது நிறைவேறும்படியே அப்படி நடந்தது. **17** அந்தச் சமயத்
திலிருந்து இயேசு, “மனம் திருந்துங்கள், பரலோக அரசாங்கம் நெருங்கி வந்
துவிட்டது”[h] என்று பிரசங்கிக்க ஆரம்பித்தார்.

18 கலிலேயா கடலோரமாக அவர் நடந்துபோனபோது, பேதுரு
என்ற சீமோனையும்[i] அவருடைய சகோதரன் அந்திரேயாவையும் பார்த்
தார். அவர்கள் இரண்டு பேரும் கடலில் வலை வீசிக்கொண்டிருந்தார்
கள். ஏனென்றால், அவர்கள் மீனவர்கள்.[j] **19** இயேசு அவர்களிடம், “என்
பின்னால் வாருங்கள், உங்களை மனுஷர்களைப் பிடிப்பவர்களாக ஆக்கு
வேன்”[k] என்று சொன்னார். **20** அவர்கள் உடனடியாக வலைகளை விட்
டுவிட்டு அவர் பின்னால் போனார்கள்.[l] **21** அங்கிருந்து அவர் போன
போது, சகோதரர்களாக இருந்த இன்னும் இரண்டு பேரைப் பார்த்தார்.
அவர்கள்தான் செபெதேயுவின் மகன்களான யாக்கோபும் யோவானும்.[m]
அவர்கள் தங்களுடைய அப்பாவோடு படகில் வலைகளைப் பழுதுபார்த்
துக்கொண்டிருந்தார்கள்; அவர்களையும் அவர் கூப்பிட்டார்.[n] **22** அவர்
கள் உடனடியாகப் படகையும் தங்களுடைய அப்பாவையும் விட்டுவிட்டு
அவர் பின்னால் போனார்கள்.

23 பின்பு அவர் கலிலேயா முழுவதும் போய்,[o] அங்கிருந்த ஜெபக்கூ
டங்களில் கற்பித்தார்;[p] கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிய நல்ல
செய்தியைப் பிரசங்கித்தார்; அதோடு, மக்களுக்கு இருந்த எல்லா விதமான
நோய்களையும் உடல் பலவீனங்களையும் குணமாக்கினார்.[q] **24** அவ
ரைப் பற்றிய பேச்சு சீரியா முழுவதும் பரவியது; பலவிதமான வியாதிகளா
லும் வலிகளாலும் அவதிப்பட்டுக்கொண்டிருந்த நோயாளிகளையும்,[r] பேய்
பிடித்தவர்களையும்,[s] காக்காய்வலிப்பால் கஷ்டப்பட்டவர்களையும்,[t] பக்க
வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் மக்கள் அவரிடம் கொண்டுவந்தார்
கள், அவர்களை அவர் குணமாக்கினார். **25** அதனால், கலிலேயா,
தெக்கப்போலி,* எருசலேம், யூதேயா ஆகிய இடங்களிலிருந்தும் யோர்
தானுக்குக் கிழக்கிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, அவருக்குப்
பின்னால் போனார்கள்.

5 அவர் மக்கள் கூட்டத்தைப் பார்த்தபோது, மலைமேல் ஏறினார்; அவர்
உட்கார்ந்த பின்பு, சீஷர்கள் அவரிடம் வந்தார்கள். **2** அப்போது,
அவர் கற்பிக்க ஆரம்பித்தார்; அவர்களிடம்,

4:11 * வே.வா., “உதவிகள்.” **4:25** * வே.வா., “பத்து நகரங்களின் பகுதி.”

அதி. 4
a லூ 4:13 யாக் 4:7
b லூ 22:43 எபி 1:7, 14
c மாற் 6:17, 18 லூ 3:19, 20
d மாற் 1:14 லூ 4:14
e லூ 4:31
f யோவா 1:9
g ஏசா 9:1, 2
h மத் 10:7 மாற் 1:14, 15
i யோவா 1:42
j மாற் 1:16-18
k லூ 5:10, 11
l மாற் 10:28 லூ 18:28
m மத் 10:2 மத் 27:55, 56 மாற் 3:17 மாற் 10:35 யோவா 21:2
n மாற் 1:19, 20
o மத் 9:35 மாற் 1:39 மாற் 6:6
p லூ 4:16 அப் 13:13, 14
q லூ 9:11 அப் 10:37, 38
r மாற் 6:55
s மாற் 1:32 அப் 5:16
t மத் 17:15

3 “ஆன்மீக விஷயங்களில் ஆர்வப்பசியோடு இருக்கிறவர்கள்* சந்
தோஷமானவர்கள்,[a] ஏனென்றால் பரலோக அரசாங்கம் அவர்களுடையது.
4 துக்கப்படுகிறவர்கள் சந்தோஷமானவர்கள், ஏனென்றால் அவர்
களுக்கு ஆறுதல் கிடைக்கும்.[b]
5 சாந்தமாக*[c] இருப்பவர்கள் சந்தோஷமானவர்கள், ஏனென்றால் பூமி
அவர்களுக்குச் சொந்தமாகும்.#[d]
6 நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள்[e] சந்தோஷமானவர்கள்; ஏனென்
றால் அவர்களுக்கு நீதி கிடைக்கும்.[f]
7 இரக்கம் காட்டுகிறவர்கள்[g] சந்தோஷமானவர்கள், ஏனென்றால் அவர்
களுக்கு இரக்கம் கிடைக்கும்.
8 சுத்தமான இதயமுள்ளவர்கள்[h] சந்தோஷமானவர்கள்; ஏனென்றால்
அவர்கள் கடவுளைப் பார்ப்பார்கள்.
9 சமாதானம் பண்ணுகிறவர்கள்[i] சந்தோஷமானவர்கள், ஏனென்றால்
அவர்கள் கடவுளுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள்.
10 நீதியாக நடப்பதால் துன்புறுத்தப்படுகிறவர்கள்[j] சந்தோஷமானவர்
கள், ஏனென்றால் பரலோக அரசாங்கம் அவர்களுடையது.
11 நீங்கள் என் சீஷர்கள் என்பதற்காக மக்கள் உங்களைப் பற்றிக் கேவ
லமாகப் பேசும்போதும்,[k] இல்லாததையும் பொல்லாததையும் சொல்லும்போ
தும்,[l] உங்களைத் துன்புறுத்தும்போதும்[m] சந்தோஷப்படுங்கள். 12 மகிழ்ச்
சியில் துள்ளிக் குதியுங்கள்,[n] ஏனென்றால் பரலோகத்தில் உங்களுக்கு மிகப்
பெரிய பலன் கிடைக்கும்;[o] உங்களுக்கு முன்பிருந்த தீர்க்கதரிசிகளை அவர்
கள் அப்படித்தான் துன்புறுத்தினார்கள்.[p]
13 நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கிறீர்கள்;[q] உப்பு அதன் சுவையை
இழந்தால், அதற்கு எப்படி மறுபடியும் சுவை சேர்க்க முடியும்? வெளியே
கொட்டப்பட்டு,[r] மனுஷர்களால் மிதிக்கப்படுவதற்கே தவிர வேறு எதற்கும்
அது உதவாது.
14 நீங்கள் உலகத்துக்கு ஒளியாக இருக்கிறீர்கள்.[s] மலைமேல் இருக்கிற
நகரம் மறைந்திருக்க முடியாது. 15 மக்கள் விளக்கைக் கொளுத்தி
அதைக் கூடையால் மூடி வைக்க மாட்டார்கள், விளக்குத்தண்டின் மேல்
தான் வைப்பார்கள்; அப்போது, வீட்டிலிருக்கிற எல்லாருக்கும் அது
வெளிச்சம் தரும்.[t] 16 அதுபோலவே, உங்கள் ஒளியை மனுஷர்களுக்கு
முன்னால் பிரகாசிக்கச் செய்யுங்கள்;[u] அப்போது, அவர்கள் உங்களுடைய
நல்ல செயல்களைப் பார்த்து,[v] பரலோகத்தில் இருக்கிற உங்கள் தகப்பனை
மகிமைப்படுத்துவார்கள்.[w]
17 திருச்சட்டத்தையோ தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளையோ அழிக்க
வந்தேன் என்று நினைக்காதீர்கள்; அழிக்க அல்ல, அதையெல்லாம் நிறை
வேற்றவே வந்தேன்.[x] 18 உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன்,
வானமும் பூமியும் அழிந்துபோனாலும் திருச்சட்டத்தில் இருக்கிற ஒரு
சின்ன எழுத்துகூட அழிந்துபோகாது, சொல்லப்போனால் ஒரு எழுத்தின்
சின்ன கோடுகூட அழிந்துபோகாது; அதில் எழுதப்பட்டிருக்கிற எல்லாமே

5:3 * வே.வா., “தங்களுடைய ஆன்மீகத் தேவையை உணர்ந்தவர்கள்; கடவுளுடைய சக்திக்காகப் பிச்சை கேட்கிறவர்கள்.” **5:5** * வே.வா., “தாழ்மையாக.” # வே.வா., “பூமியை அவர்கள் ஆஸ்தியாகப் பெறுவார்கள்.”

அதி. 5
a லூ 6:20
b ஏசா 61:2, 3; மத் 11:28
c 1தீ 6:11; தீத் 3:2
d சங் 37:11
e ஏசா 55:1; லூ 6:21
f யோவா 6:35
g மத் 6:14; மத் 18:33; யாக் 2:13
h சங் 24:3, 4; சங் 73:1
i ரோ 12:18; எபி 12:14; யாக் 3:18
j மாற் 10:29, 30; 1பே 3:14
k மத் 10:22
l லூ 6:22, 23; யாக் 1:2; 1பே 4:14
m யோவா 15:20
n அப் 5:41; ரோ 5:3
o எபி 11:6
p 2நா 36:16; அப் 7:52; எபி 11:32, 37
q மாற் 9:50
r லூ 14:34, 35
s யோவா 8:12; யோவா 12:36; பிலி 2:15
t மாற் 4:21; லூ 11:33
u எபே 5:8; பிலி 2:15
v எபே 5:9
w யோவா 15:8; 1பே 2:9, 12
x லூ 4:21

நிறைவேறும்.[a] **19** அதனால், திருச்சட்டத்திலுள்ள ஒரு சின்ன கட்டளை
யைக்கூட ஒருவன் மீறினால், அதுவும் அப்படி மீறும்படி மற்றவர்களுக்கும்
கற்றுக்கொடுத்தால் அவன் பரலோக அரசாங்கத்துக்குத் தகுதி பெற மாட்
டான்.* ஆனால், அதிலுள்ள கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவற்றை
மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கிறவன் பரலோக அரசாங்கத்துக்குத்
தகுதி பெறுவான்.# **20** நான் உங்களுக்குச் சொல்கிறேன்: வேத அறிஞர்க
ளையும் பரிசேயர்களையும்விட நீங்கள் அதிக நீதியுள்ளவர்களாக இல்லை
யென்றால்,[b] ஒருபோதும் பரலோக அரசாங்கத்துக்குத் தகுதி பெற மாட்
டீர்கள்.[c]

21 ‘கொலை செய்யக் கூடாது,[d] கொலை செய்கிற எவனும் நீதிமன்றத்
தில் பதில் சொல்ல வேண்டியிருக்கும்’ என்று அந்தக் காலத்து மக்களுக்
குச் சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.[e] **22** ஆனால் நான்
உங்களுக்குச் சொல்கிறேன், தன்னுடைய சகோதரன்மேல்* கடும் கோபமா
கவே[f] இருக்கிறவன் நீதிமன்றத்தில் பதில் சொல்ல வேண்டியிருக்கும்; கேவ
லமான வார்த்தைகளால் தன் சகோதரனை அவமதிக்கிறவன் உச்ச நீதிமன்
றத்தில் பதில் சொல்ல வேண்டியிருக்கும்; ‘கேடுகெட்ட முட்டாளே!’ என்று
சொல்கிறவனோ கொழுந்துவிட்டு எரிகிற கெஹென்னாவுக்குள்#[g] தள்ளப்
பட வேண்டியிருக்கும்.

23 அதனால், பலிபீடத்தில் காணிக்கை செலுத்த நீங்கள் வந்திருக்கும்
போது[h] உங்கள் சகோதரனுக்கு உங்கள்மேல் ஏதோ மனவருத்தம் இருப்பது
ஞாபகத்துக்கு வந்தால், **24** அங்கேயே அந்தப் பலிபீடத்துக்கு முன்னால்
உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முதலில் அவனோடு சமா
தானமாகுங்கள்; பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.[i]

25 உங்கள்மேல் ஒருவன் வழக்கு போட்டால், நீதிமன்றத்துக்குப் போகும்
வழியிலேயே அவனோடு சீக்கிரமாகச் சமரசம் செய்துகொள்ளுங்கள்; இல்
லையென்றால், அவன் உங்களை நீதிபதியிடம் ஒப்படைப்பான், நீதிபதி
உங்களைக் காவலாளியிடம் ஒப்படைப்பார், பின்பு நீங்கள் சிறையில் தள்
ளப்படுவீர்கள்.[j] **26** உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள்
அங்கிருந்து வரும்போது சல்லிக்காசுகூட* உங்கள் கையில் மிஞ்சாது.

27 ‘மணத்துணைக்குத் துரோகம் செய்யக் கூடாது’[k] என்று சொல்லப்
பட்டதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். **28** ஆனால் நான் உங்களுக்
குச் சொல்கிறேன், ஒரு பெண்ணைக் காம உணர்வோடு பார்த்துக்கொண்டே
இருப்பவன்[l] அவளோடு ஏற்கெனவே தன் இதயத்தில் முறைகேடான உறவு
கொண்டுவிடுகிறான்.*[m] **29** உன் வலது கண் உன்னைப் பாவம் செய்ய
வைத்தால், அதைப் பிடுங்கி எறிந்துவிடு.[n] உன் முழு உடலும் கெஹென்
னாவுக்குள்# வீசப்படுவதைவிட உன் உறுப்புகளில் ஒன்றை இழப்பதே
மேல்.[o] **30** உன் வலது கை உன்னைப் பாவம் செய்ய வைத்தால், அதை

5:19 *நே.மொ., “பரலோக அரசாங்கத்தைப் பொறுத்தவரை ‘சிறியவன்’ என்று அழைக்கப்படுவான்.” #நே.மொ., “பரலோக அரசாங்கத்தைப் பொறுத்தவரை ‘உயர்ந்தவன்’ என்று அழைக்கப்படுவான்.” **5:22** *அதாவது, “சக வணக்கத்தார் மேல்.” **5:22, 29** #சொல் பட்டியலைப் பாருங்கள். **5:26** *நே.மொ., “கடைசி குவாட்ரன்கூட.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **5:28** *சொல் பட்டியலில் “மணத்துணைக்குத் துரோகம்; முறைகேடான உறவு” என்ற தலைப்பைப் பாருங்கள்.

அதி. 5
a ஏசா 40:8; லூ 16:17
b மத் 15:7-9; மத் 23:23; லூ 11:42
c மத் 18:3; யோவா 3:5
d ஆதி 9:6; யாத் 20:13; உபா 5:17
e லேவி 24:17; உபா 17:8, 9
f கொலோ 3:8; யாக் 1:19
g மத் 10:28; லூ 12:5; 1யோ 3:15
h உபா 16:16
i 1யோ 4:20
j லூ 12:58, 59
k யாத் 20:14; உபா 5:18; லூ 18:20; ரோ 13:9
l 2சா 11:2; யோபு 31:1
m மாற் 7:20-22
n லூ 11:34
o மத் 18:9; மாற் 9:47

வெட்டி எறிந்துவிடு.[a] உன் முழு உடலும் கெஹென்னாவுக்குள்* தள்ளப்
படுவதைவிட உன் உறுப்புகளில் ஒன்றை இழப்பதே மேல்.[b]

31 ‘தன் மனைவியை விவாகரத்து செய்கிறவன் விவாகரத்துப் பத்தி
ரத்தை அவளுக்குக் கொடுக்க வேண்டும்’ என்று உங்களுக்குச் சொல்லப்
பட்டது.[c] **32** ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், பாலியல் முறை
கேட்டை* தவிர வேறெந்தக் காரணத்துக்காகவும் தன் மனைவியை
விவாகரத்து செய்கிறவன், வேறொருவனோடு முறைகேடான உறவு
கொள்ள அவளுக்குச் சந்தர்ப்பம் அளித்துவிடுகிறான்; அப்படி விவாகரத்து
செய்யப்பட்ட பெண்ணைக் கல்யாணம் செய்கிறவன் அவளோடு முறைகே
டான உறவுகொள்கிறான்.[d]

33 அதோடு, ‘நீ சத்தியம் செய்தால் அதை நிறைவேற்றாமல் இருக்கக்
கூடாது;[e] யெகோவாவிடம்* நேர்ந்துகொண்டதை நீ செலுத்த வேண்டும்’[f]
என்று அந்தக் காலத்து மக்களுக்குச் சொல்லப்பட்டதை நீங்கள் கேள்விப்
பட்டிருக்கிறீர்கள். **34** ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள்
சத்தியமே செய்ய வேண்டாம்;[g] பரலோகத்தின் மீது சத்தியம் செய்ய வேண்
டாம், ஏனென்றால் அது கடவுளுடைய சிம்மாசனம்; **35** பூமியின் மீதும்
சத்தியம் செய்ய வேண்டாம், ஏனென்றால் அது அவருடைய கால்மணை;[h]
எருசலேமின் மீதும் சத்தியம் செய்ய வேண்டாம், ஏனென்றால் அது மகா
ராஜாவின் நகரம்.[i] **36** உங்கள் தலையின் மீதும் சத்தியம் செய்ய வேண்
டாம், ஏனென்றால் உங்கள் தலையில் இருக்கிற ஒரு முடியைக்கூட உங்க
ளால் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ முடியாது. **37** நீங்கள் ‘ஆம்’
என்று சொல்வது ‘ஆம்’ என்றே இருக்கட்டும், ‘இல்லை’ என்று சொல்
வது ‘இல்லை’ என்றே இருக்கட்டும்.[j] இதற்கு மிஞ்சி சொல்லப்படும் எதுவும்
பொல்லாதவனிடமிருந்தே[k] வருகிறது.

38 ‘கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்’ என்று சொல்லப்பட்டதை நீங்கள்
கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.[l] **39** ஆனால் நான் சொல்கிறேன், அக்கிரமக்
காரனோடு சண்டைக்கு நிற்காதீர்கள்; யாராவது உங்களை வலது கன்னத்
தில் அறைந்தால், அவனுக்கு இன்னொரு கன்னத்தையும் காட்டுங்கள்.[m]
40 ஒருவன் உங்கள்மேல் வழக்கு போட்டு உங்கள் உள்ளங்கியை எடுத்
துக்கொள்ள விரும்பினால், உங்கள் மேலங்கியையும் அவனுக்குக் கொடுத்
துவிடுங்கள்.[n] **41** அதிகாரத்தில் இருக்கிற ஒருவர் ஏதோவொரு வேலைக்
காக ஒரு மைல்* தூரம் வரச் சொல்லி உங்களைக் கட்டாயப்படுத்தினால்,
அவருடன் இரண்டு மைல் தூரம் போங்கள். **42** உங்களிடம் கேட்கிறவ
ருக்குக் கொடுங்கள்; கடன் வாங்க* வருகிறவரைப்[o] பார்த்து முகத்தைத்
திருப்பிக்கொள்ளாதீர்கள்.

43 ‘மற்றவர்கள்மேல்* அன்பு காட்ட வேண்டும், ஆனால் எதிரியை
வெறுக்க வேண்டும்’ என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.[p]
44 ஆனால் நான் சொல்கிறேன், உங்கள் எதிரிகளிடம் தொடர்ந்து அன்பு
காட்டுங்கள்,[q] உங்களைத் துன்புறுத்துகிறவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபம்
செய்யுங்கள்.[r] **45** இப்படிச் செய்யும்போது, உங்களுடைய பரலோகத்

5:30, 32 *சொல் பட்டியலைப் பாருங்கள். **5:33** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.
5:41 *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **5:42** *அதாவது, “வட்டியில்லாமல் கடன்
வாங்க.” **5:43** *வே.வா., “சக மனிதர்மேல்.”

அதி. 5
a கொலோ 3:5
b மத் 18:8
c உபா 24:1, மத் 19:3, 8, மாற் 10:2, 4
d மத் 19:9, மாற் 10:11, 12, லூ 16:18, ரோ 7:3
e லேவி 19:12
f எண் 30:2, உபா 23:21, பிர 5:4
g யாக் 5:12
h ஏசா 66:1
i சங் 48:2
j யாக் 5:12
k யோவா 8:44
l யாத் 21:24, 25, லேவி 24:20, உபா 19:21
m நீதி 24:29, ஏசா 50:6, லூ 6:29, ரோ 12:17, 1பே 2:23
n 1கொ 6:7
o லேவி 25:36, உபா 23:19
p லேவி 19:18, மாற் 12:31
q நீதி 25:21, ரோ 12:20
r லூ 6:27, 28, அப் 7:60, ரோ 12:14

தகப்பனுக்குப் பிள்ளைகளாக[a] இருப்பீர்கள். ஏனென்றால், அவர் நல்ல
வர்களுக்கும் கெட்டவர்களுக்கும் சூரியனை உதிக்க வைக்கிறார்; நீதிமான்க
ளுக்கும் அநீதிமான்களுக்கும் மழையைப் பெய்ய வைக்கிறார்.[b] **46** உங்
கள்மேல் அன்பு காட்டுகிறவர்களிடம் மட்டுமே நீங்கள் அன்பு காட்டினால்,
என்ன பிரயோஜனம்?[c] வரி வசூலிப்பவர்களும் அப்படித்தானே செய்கிறார்
கள்? **47** உங்கள் சகோதரர்களுக்கு மட்டுமே வாழ்த்துச் சொன்னால்,
அதில் என்ன விசேஷம்? உலக மக்களும் அப்படித்தானே செய்கிறார்
கள்? **48** அதனால், உங்கள் பரலோகத் தகப்பன் பரிபூரணராக இருப்பது
போலவே நீங்களும் பரிபூரணராக இருக்க வேண்டும்”[d] என்றார்.

6 பின்பு அவர், “மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக[e] அவர்
கள் முன்னால் நீதியான செயல்களைச் செய்யாதீர்கள். அப்படிச் செய்
தால், உங்கள் பரலோகத் தகப்பனிடமிருந்து உங்களுக்கு எந்தப் பலனும்
கிடைக்காது. **2** அதனால், நீங்கள் தானதர்மம்* செய்யும்போது வெளி
வேஷக்காரர்களைப் போலத் தம்பட்டம் அடிக்காதீர்கள்.# மற்றவர்கள்
தங்களைப் புகழ வேண்டும் என்பதற்காக ஜெபக்கூடங்களிலும் தெருக்களி
லும் அவர்கள் தம்பட்டம் அடிக்கிறார்கள். உண்மையாகவே உங்களுக்குச்
சொல்கிறேன், மனுஷர்களிடமிருந்து கிடைக்கிற புகழைத் தவிர வேறெந்
தப் பலனும் அவர்களுக்குக் கிடைக்காது. **3** நீங்களோ தானதர்மம் செய்
யும்போது, உங்கள் வலது கை செய்வது உங்கள் இடது கைக்குக்கூட தெரி
யாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். **4** இப்படி, மற்றவர்களுக்குத் தெரியாத
விதத்தில் நீங்கள் தானதர்மம் செய்யும்போது, எல்லாவற்றையும்* பார்க்கிற
உங்கள் தகப்பன் உங்களுக்குப் பலன் கொடுப்பார்.[f]

5 நீங்கள் ஜெபம் செய்யும்போது வெளிவேஷக்காரர்களைப் போல்[g]
இருக்கக் கூடாது; ஏனென்றால், மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்
காக[h] அவர்கள் ஜெபக்கூடங்களிலும் முக்கியமான தெருக்களின் முனை
களிலும் நின்று ஜெபம் செய்ய விரும்புகிறார்கள். உண்மையாகவே உங்
களுக்குச் சொல்கிறேன், மனுஷர்களிடமிருந்து கிடைக்கிற புகழைத் தவிர
வேறெந்தப் பலனும் அவர்களுக்குக் கிடைக்காது. **6** நீங்களோ ஜெபம்
செய்யும்போது உங்கள் உள்ளறைக்குள் போய்க் கதவை மூடிக்கொண்டு,
யாராலும் பார்க்க முடியாத உங்கள் தகப்பனிடம் ஜெபம் செய்யுங்கள்.[i] அப்
போது, எல்லாவற்றையும்* பார்க்கிற உங்கள் தகப்பன் உங்களுக்குப்
பலன் கொடுப்பார். **7** நீங்கள் ஜெபம் செய்யும்போது உலகத்தாரைப்
போலச் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லாதீர்கள்; நிறைய வார்த்
தைகளைச் சொல்லி ஜெபம் செய்தால் கடவுள் கேட்பார் என்று அவர்கள்
நினைக்கிறார்கள். **8** அவர்களைப் போல் இருக்காதீர்கள்; நீங்கள் கேட்ப
தற்கு முன்பே உங்களுக்கு என்னென்ன தேவை என்பது உங்கள் பரலோ
கத் தகப்பனுக்குத் தெரியும்.[j]

9 அதனால், நீங்கள் இப்படி ஜெபம் செய்யுங்கள்:[k]

‘பரலோகத்தில் இருக்கிற எங்கள் தகப்பனே, உங்களுடைய பெயர்[l]
பரிசுத்தப்பட வேண்டும்.[m] **10** உங்களுடைய அரசாங்கம் வர வேண்டும்.[n]
உங்களுடைய விருப்பம்*[o] பரலோகத்தில் நிறைவேறுவதுபோல் பூமியி
லும் நிறைவேற வேண்டும்.[p] **11** இன்றைக்குத் தேவையான உணவை

6:2 * சொல் பட்டியலைப் பாருங்கள். # நே.மொ., “உங்களுக்கு முன்னால் எக்காளம் ஊதாதீர்கள்.” **6:4, 6** * வே.வா., “மறைவில்.” **6:10** * வே.வா., “சித்தம்.”

அதி. 5
a எபே 5:1
b லூ 6:35 அப் 14:17
c லூ 6:32, 33
d லேவி 19:2 உபா 18:13 லூ 6:36 1பே 1:16

அதி. 6
e மத் 23:5
f நீதி 19:17 மத் 10:42
g லூ 18:11
h மத் 6:16 மத் 23:5
i லூ 6:12
j லூ 12:30
k லூ 11:2-4
l யாத் 6:3 சங் 83:18
m எசே 36:23
n தானி 2:44 மத் 6:33 வெளி 11:15
o மத் 26:42 1தீ 2:4 வெளி 4:11
p சங் 37:10 லூ 23:43 அப் 24:15

எங்களுக்குக் கொடுங்கள்;[a] **12** எங்கள் கடனாளிகளை* நாங்கள் மன்னித்
ததுபோல் எங்கள் கடன்களை# எங்களுக்கு மன்னியுங்கள்.[b] **13** சோத
னைக்கு இணங்கிவிடாமல் இருக்க எங்களுக்கு உதவி செய்யுங்கள்,*[c]
பொல்லாதவனிடமிருந்து[d] எங்களைக் காப்பாற்றுங்கள்.'

14 மற்றவர்களுடைய குற்றங்களை நீங்கள் மன்னித்தால், உங்கள் பர
லோகத் தகப்பனும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்.[e] **15** மற்றவர்களு
டைய குற்றங்களை நீங்கள் மன்னிக்காவிட்டால், உங்கள் தகப்பனும் உங்
கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.[f]

16 நீங்கள் விரதம் இருக்கும்போது,[g] வெளிவேஷக்காரர்களைப் போல்
முகத்தைச் சோகமாக வைத்துக்கொள்ளாதீர்கள்; தாங்கள் விரதம் இருப்பது
மற்றவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களுடைய
முகத்தை அவலட்சணமாக வைத்துக்கொள்கிறார்கள்.*[h] உண்மையாகவே
உங்களுக்குச் சொல்கிறேன், மனுஷர்களிடமிருந்து கிடைக்கிற புகழைத்
தவிர வேறெந்தப் பலனும் அவர்களுக்குக் கிடைக்காது. **17** நீங்களோ
விரதம் இருக்கும்போது உங்கள் தலைக்கு எண்ணெய் தேய்த்து, முகத்தைக்
கழுவுங்கள்; **18** அப்போது, நீங்கள் விரதம் இருப்பது மனுஷர்களுக்
குத் தெரியாது, ஆனால் எல்லாவற்றையும்* பார்க்கிற உங்கள் தகப்பனுக்
குத் தெரியும். அதனால், எல்லாவற்றையும் பார்க்கிற உங்கள் தகப்பன் உங்
களுக்குப் பலன் கொடுப்பார்.

19 பூமியில் உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதை
நிறுத்துங்கள்.[i] ஏனென்றால், இங்கே பூச்சியும்* துருவும் அவற்றை அழித்து
விடும்; திருடர்களும் திருடிக்கொண்டு போய்விடுவார்கள். **20** அதனால்,
பரலோகத்தில் உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்;[j]
அங்கே பூச்சியோ துருவோ அவற்றை அழிக்காது;[k] திருடர்களும் திருடிக்
கொண்டு போக மாட்டார்கள். **21** உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கி
றதோ அங்கேதான் உங்கள் இதயமும் இருக்கும்.

22 கண்தான் உடலுக்கு விளக்கு.[l] உங்கள் கண் ஒரே விஷயத்தின்
மேல் கவனமாக* இருந்தால், உங்கள் முழு உடலும் பிரகாசமாக இருக்கும்;
23 ஆனால், உங்கள் கண் எல்லாவற்றையும் பொறாமையோடு பார்த்துக்
கொண்டிருந்தால்,*[m] உங்கள் முழு உடலும் இருளாக இருக்கும். உங்களுக்
குள் இருக்கும் ஒளி உண்மையில் இருளாக இருந்தால், அது எப்பேர்ப்பட்ட
இருளாக இருக்கும்!

24 யாராலும் இரண்டு எஜமான்களுக்கு அடிமையாக இருக்க முடியாது;
ஏனென்றால், அவன் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அன்பு காட்டுவான்;[n]
அல்லது ஒருவரிடம் ஒட்டிக்கொண்டு மற்றவரை அலட்சியம் செய்வான்.
நீங்கள் ஒரே நேரத்தில் கடவுளுக்கும் செல்வத்துக்கும் அடிமையாக இருக்க
முடியாது.[o]

25 அதனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், எதைச் சாப்பிடுவது,

6:12 *வே.வா., "எங்களுக்கு எதிராகப் பாவம் செய்தவர்களை." #வே.வா., "பாவங்களை." **6:13** *நே.மொ., "எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதீர்கள்." **6:16** *வே.வா., "தங்கள் தோற்றத்தை அசட்டை செய்கிறார்கள்." **6:18** *வே.வா., "மறைவில்." **6:19** *நே.மொ., "அந்துப்பூச்சியும்." **6:22** *வே.வா., "கண் தெளிவாக." நே.மொ., "கண் எளிமையாக." **6:23** *நே.மொ., "உங்கள் கண் கெட்டதாக இருந்தால்."

அதி. 6

a சங் 37:25, நீதி 30:8, மத் 6:34, 1தீ 6:8
b மத் 18:21, மாற் 11:25
c மத் 26:41, 1கொ 10:13, வெளி 3:10
d யோவா 17:15, 1யோ 5:19
e எபே 4:32, கொலோ 3:13
f மத் 18:35, யாக் 2:13
g அப் 13:2, 3, அப் 14:23
h ஏசா 58:5, லூ 18:11, 12
i மத் 13:22, லூ 12:20, யாக் 5:3
j மத் 19:21, மாற் 10:21, லூ 12:33, 34, லூ 18:22
k 1பே 1:3, 4
l நீதி 4:25, லூ 11:34, எபே 1:18
m மத் 20:15
n யாக் 4:4
o மத் 13:22, லூ 16:13

எதைக் குடிப்பது என்று உங்கள் உயிருக்காகவும், எதை உடுத்திக்கொள்வது
என்று உங்கள் உடலுக்காகவும் கவலைப்படுவதை நிறுத்துங்கள்.[a] உண
வைவிட உயிரும் உடையைவிட உடலும் அதிக முக்கியம், இல்லையா?[b]
26 வானத்துப் பறவைகளைக் கூர்ந்து கவனியுங்கள்;[c] அவை விதைப்பதும்
இல்லை, அறுவடை செய்வதும் இல்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைப்
பதும் இல்லை; ஆனாலும், உங்கள் பரலோகத் தகப்பன் அவற்றுக்கு
உணவு கொடுக்கிறார். அவற்றைவிட நீங்கள் அதிக மதிப்புள்ளவர்கள், இல்
லையா? **27** கவலைப்படுவதால் உங்களில் யாராவது தன்னுடைய வாழ்
நாளில் ஒரு நொடியை* கூட்ட முடியுமா?[d] **28** உடைக்காகவும் ஏன் கவ
லைப்படுகிறீர்கள்? காட்டுப் பூக்கள் வளருவதைக் கவனித்துப் பாருங்கள்;*
அவை உழைப்பதும் இல்லை, நூல் நூற்பதும் இல்லை; **29** ஆனால் நான்
உங்களுக்குச் சொல்கிறேன், செல்வச்சீமானாக இருந்த சாலொமோன்கூட[e]
இந்தப் பூக்களில் ஒன்றைப் போல் உடுத்தியதில்லை. **30** விசுவாசத்தில்
குறைவுபட்டவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு இல்லாமல்போகும்*
காட்டுச் செடிகளுக்கே இவ்வளவு அழகான உடையைக் கடவுள் கொடுத்
திருக்கிறார் என்றால், உங்களுக்குக் கொடுக்க மாட்டாரா? **31** அதனால்,
'எதைச் சாப்பிடுவோம்?' 'எதைக் குடிப்போம்?' 'எதை உடுத்துவோம்?'
என்று ஒருபோதும் கவலைப்படாதீர்கள்.[f] **32** இவற்றையெல்லாம் பெறுவ
தற்கு உலகத்தார்தான் அலைந்து திரிகிறார்கள். இவையெல்லாம் உங்க
ளுக்குத் தேவை என்று உங்கள் பரலோகத் தகப்பனுக்குத் தெரியும்.

33 அதனால், எப்போதுமே கடவுளுடைய அரசாங்கத்துக்கும் அவ
ருடைய நீதிநெறிகளுக்கும்* முதலிடம் கொடுங்கள்; அப்போது, இவற்றை
யெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்.[g] **34** நாளைக்காக ஒரு
போதும் கவலைப்படாதீர்கள்.[h] நாளைக்கு நாளைய கவலைகள் இருக்கும்.
அந்தந்த நாளுக்கு அதனதன் பாடுகள் போதும்"* என்றார்.

7 பின்பு அவர், "மற்றவர்களை நியாயந்தீர்ப்பதை நிறுத்துங்கள்,[i] அப்போ
துதான் நீங்கள் நியாயந்தீர்க்கப்பட மாட்டீர்கள். **2** மற்றவர்களை நீங்
கள் எப்படி நியாயந்தீர்க்கிறீர்களோ அப்படித்தான் நீங்களும் நியாயந்தீர்க்
கப்படுவீர்கள்;[j] எந்த அளவையால் மற்றவர்களுக்கு அளக்கிறீர்களோ, அதே
அளவையால்தான் அவர்களும் உங்களுக்கு அளப்பார்கள்.*[k] **3** உங்
கள் கண்ணில் இருக்கிற மரக்கட்டையை* கவனிக்காமல் உங்கள் சகோ
தரன் கண்ணில் இருக்கிற தூசியை ஏன் பார்க்கிறீர்கள்?[l] **4** உங்கள் கண்
ணில் மரக்கட்டை இருக்கும்போது நீங்கள் எப்படி உங்கள் சகோதரனிடம்,
'உன் கண்ணில் இருக்கிற தூசியை எடுக்கட்டுமா' என்று கேட்க முடியும்?
5 வெளிவேஷக்காரர்களே! முதலில் உங்கள் கண்ணில் இருக்கிற மரக்
கட்டையை எடுத்துப்போடுங்கள், அப்போதுதான் உங்கள் சகோதரன் கண்
ணில் இருக்கிற தூசியை எப்படி எடுப்பது என்று உங்களுக்குத் தெளிவாகத்
தெரியும்.

6:27 *நே.மொ., "முழத்தை." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **6:28** *வே.வா., "காட்டுப் பூக்களிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ளுங்கள்." **6:30** *நே.மொ., "அடுப்பில் போடப்படும்." **6:33** *சொல் பட்டியலில் "நீதி" என்ற தலைப்பைப் பாருங்கள். **6:34** *வே.வா., "அந்தந்த நாளின் பாடுகளே ஏராளம்." **7:2** *அதாவது, "மற்றவர்களை நீங்கள் எப்படி நடத்துகிறீர்களோ அப்படித்தான் அவர்களும் உங்களை நடத்துவார்கள்." **7:3** *நே.மொ., "உத்திரத்தை."

அதி. 6
a சங் 55:22, பிலி 4:6, 1தீ 6:8, எபி 13:5, 1பே 5:6, 7
b லூ 12:22-28
c யோபு 38:41, சங் 147:9, மத் 10:29
d சங் 39:5
e 1ரா 10:4, 5
f லூ 10:41, லூ 12:29-31
g சங் 37:25
h யாத் 16:4, 19

அதி. 7
i லூ 6:37, ரோ 2:1, ரோ 14:13
j மத் 18:33, 34, யாக் 2:13
k மாற் 4:24, லூ 6:38, கலா 6:7
l லூ 6:41, 42

6 பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடுக்காதீர்கள்; உங்களிடமுள்ள
முத்துக்களைப் பன்றிகளுக்கு முன்னால் போடாதீர்கள்;[a] அவை தங்கள்
கால்களால் அவற்றை மிதித்துப்போட்டு, திரும்பிவந்து உங்களைக் குதறி
விடும்.

7 கேட்டுக்கொண்டே இருங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்
படும்;[b] தேடிக்கொண்டே இருங்கள், அப்போது கண்டுபிடிப்பீர்கள்; தட்டிக்
கொண்டே இருங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்படும்.[c] **8** ஏனென்
றால், கேட்கிற ஒவ்வொருவனும் பெற்றுக்கொள்கிறான்,[d] தேடுகிற ஒவ்வொ
ருவனும் கண்டுபிடிக்கிறான், தட்டுகிற ஒவ்வொருவனுக்கும் திறக்கப்படும்.
9 உங்களில் யாராவது தன் மகன் ரொட்டியைக் கேட்டால் அவனுக்குக்
கல்லைக் கொடுப்பாரா? **10** மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா?
11 பொல்லாதவர்களான நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பரிசுக
ளைக் கொடுக்கத் தெரிந்திருக்கும்போது, உங்கள் பரலோகத் தகப்பன் தன்
னிடம் கேட்கிறவர்களுக்கு[e] நன்மையானவற்றை இன்னும் எந்தளவுக்குக்
கொடுப்பார்![f]

12 அதனால், மற்றவர்கள் உங்களுக்கு எதையெல்லாம் செய்ய வேண்
டுமென்று விரும்புகிறீர்களோ, அதையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச்
செய்ய வேண்டும்;[g] சொல்லப்போனால், திருச்சட்டத்தின் சாராம்சமும் தீர்க்
கதரிசனப் புத்தகங்களின் சாராம்சமும் இதுதான்.[h]

13 இடுக்கமான வாசல் வழியாகப் போங்கள்;[i] ஏனென்றால், அழிவுக்
குப் போகிற வாசல் அகலமானது, அதன் பாதை விசாலமானது; நிறைய
பேர் அதன் வழியாகப் போகிறார்கள். **14** ஆனால், முடிவில்லாத வாழ்
வுக்குப் போகிற வாசல் இடுக்கமானது, அதன் பாதை குறுகலானது; சிலர்
தான் அதைக் கண்டுபிடிக்கிறார்கள்.[j]

15 போலித் தீர்க்கதரிசிகளைக்[k] குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.
அவர்கள் செம்மறியாட்டுத் தோலைப் போர்த்திக்கொண்டு வருவார்கள்;[l]
ஆனால், உண்மையில் அவர்கள் பசிவெறிபிடித்த ஓநாய்கள்.[m] **16** அவர்
களுடைய கனிகளை* வைத்து அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று
தெரிந்துகொள்வீர்கள். முட்செடியிலிருந்து திராட்சைகளையும், முட்புதரிலி
ருந்து அத்திகளையும் பறிக்க முடியுமா?[n] **17** நல்ல மரமெல்லாம் நல்ல
கனியைக் கொடுக்கும், கெட்ட மரமெல்லாம் கெட்ட கனியைக் கொடுக்
கும்.[o] **18** நல்ல மரம் கெட்ட கனியைக் கொடுக்க முடியாது, கெட்ட மரம்
நல்ல கனியைக் கொடுக்க முடியாது.[p] **19** நல்ல கனி கொடுக்காத மர
மெல்லாம் வெட்டப்பட்டு, நெருப்பில் போடப்படும்.[q] **20** இப்படி, அவர்க
ளுடைய கனிகளை வைத்து அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்
துகொள்வீர்கள்.[r]

21 என்னைப் பார்த்து, ‘கர்த்தாவே, கர்த்தாவே’* என்று சொல்கிற எல்லா
ரும் பரலோக அரசாங்கத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள், என் பர
லோகத் தகப்பனுடைய விருப்பத்தின்படி# செய்கிறவர்கள்தான் அதில்
அனுமதிக்கப்படுவார்கள்.[s] **22** அந்த நாளில் நிறைய பேர் என்னிடம், ‘கர்த்
தாவே, கர்த்தாவே,[t] உங்கள் பெயரில் தீர்க்கதரிசனம் சொன்னோமே, உங்
கள் பெயரில் பேய்களைத் துரத்தினோமே, உங்கள் பெயரில் எத்தனையோ

அதி. 7
a நீதி 9:7; மத் 10:14
b மாற் 11:24; யாக் 1:5; 1யோ 5:14
c லூ 11:9-13
d யோவா 14:13; 1யோ 3:22
e லூ 11:13
f யாக் 1:17
g லூ 6:31
h ரோ 13:10; கலா 5:14
i லூ 13:24
j அப் 14:22; 1பே 4:18
k மத் 24:11; 2பே 2:1; 1யோ 4:1
l லூ 6:26
m அப் 20:29, 30
n லூ 6:44
o மத் 12:33
p லூ 6:43
q மத் 3:10; லூ 13:6, 9
r மத் 12:33
s ரோ 2:13; யாக் 1:22; 1யோ 2:17; 1யோ 5:3
t லூ 6:46

7:16 *அதாவது, “செயல்களை.” **7:21** *வே.வா., “எஜமானே, எஜமானே.” #வே.வா., “சித்தத்தின்படி.”

அற்புதங்களைச் செய்தோமே'[a] என்று சொல்வார்கள்; **23** ஆனால் நான்
அவர்களைப் பார்த்து, 'நீங்கள் யாரென்றே எனக்குத் தெரியாது! அக்கிரமக்
காரர்களே, என்னைவிட்டுப் போய்விடுங்கள்'[b] என்று சொல்வேன்.

24 நான் சொன்ன இந்த விஷயங்களைக் கேட்டு, இவற்றின்படி நடக்கிற
வன் பாறைமேல் தன் வீட்டைக் கட்டிய புத்தியுள்ள* மனுஷனைப் போல்
இருக்கிறான்.[c] **25** கனமழை பெய்து, வெள்ளம் வந்து, பயங்கர காற்றடித்து,
அந்த வீட்டின் மேல் மோதியபோதும், அது இடிந்து விழவில்லை. ஏனென்
றால், அது பாறைமேல் அஸ்திவாரம் போடப்பட்டிருந்தது. **26** அதேசம
யம், நான் சொன்ன இந்த விஷயங்களைக் கேட்டும் அவற்றின்படி நடக்கா
தவன் மணல்மேல் தன் வீட்டைக் கட்டிய புத்தியில்லாத மனுஷனைப் போல்
இருக்கிறான்.[d] **27** கனமழை பெய்து, வெள்ளம் வந்து, பயங்கர காற்றடித்து,
அந்த வீட்டைத் தாக்கியபோது,[e] அது இடிந்து தரைமட்டமானது" என்று
சொன்னார்.

28 இயேசு இந்த விஷயங்களைச் சொல்லி முடித்தபோது, அவர் கற்
பித்த விதத்தைப் பார்த்து மக்கள் அசந்துபோனார்கள்.[f] **29** ஏனென்றால்,
அவர்களுடைய வேத அறிஞர்களைப் போல் கற்பிக்காமல், கடவுளிடமி
ருந்து அதிகாரம் பெற்றவராக அவர் கற்பித்தார்.[g]

8 மலையிலிருந்து அவர் கீழே இறங்கி வந்ததும், மக்கள் கூட்டம் கூட்
டமாக அவர் பின்னால் போனார்கள். **2** அப்போது, தொழுநோயாளி
ஒருவன் வந்து அவர் முன்னால் தலைவணங்கி, "ஐயா, உங்களுக்கு விருப்
பம் இருந்தால், என்னைச் சுத்தமாக்க முடியும்"[h] என்று சொன்னான். **3** அப்
போது, அவர் தன்னுடைய கையை நீட்டி அவனைத் தொட்டு, "எனக்கு
விருப்பம் இருக்கிறது, நீ சுத்தமாகு"[i] என்று சொன்னார். உடனே தொழு
நோய் நீங்கி அவன் சுத்தமானான்.[j] **4** பின்பு இயேசு, "இதைப் பற்றி யாரிட
மும் சொல்லாதே;[k] ஆனால் குருமாரிடம் போய் உன்னைக் காட்டி,[l] மோசே
கட்டளையிட்ட காணிக்கையைக் கொடு;[m] நீ குணமானதற்கு அத்தாட்சியாக
அது அவர்களுக்கு இருக்கும்" என்று சொன்னார்.

5 அவர் கப்பர்நகூமுக்குள் போனபோது, படை அதிகாரி ஒருவர் அவ
ரிடம் வந்து, **6** "ஐயா, என் வேலைக்காரன் பக்கவாதத்தால் ரொம்ப அவ
திப்படுகிறான், வீட்டில் படுத்த படுக்கையாகக் கிடக்கிறான்" என்று சொல்லிக்
கெஞ்சினார்.[n] **7** அப்போது இயேசு, "நான் அங்கே வரும்போது அவ
னைக் குணப்படுத்துகிறேன்" என்று சொன்னார். **8** அதற்கு அந்தப் படை
அதிகாரி, "ஐயா, நீங்கள் என் வீட்டுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு எனக்கு
எந்தத் தகுதியும் இல்லை; அதனால், நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள்,
என் வேலைக்காரன் குணமாகிவிடுவான். **9** நான் அதிகாரம் உள்ளவர்க
ளின் கீழ் வேலை செய்தாலும், என் அதிகாரத்துக்குக் கீழும் படைவீரர்கள்
இருக்கிறார்கள்; நான் அவர்களில் ஒருவனிடம் 'போ!' என்றால் போகிறான்,
இன்னொருவனிடம் 'வா!' என்றால் வருகிறான்; என் அடிமையிடம் 'இதைச்
செய்!' என்றால் செய்கிறான்" என்றார். **10** அதைக் கேட்டு இயேசு ஆச்ச
ரியப்பட்டு, தன் பின்னால் வந்தவர்களிடம், "உண்மையிலேயே உங்களுக்குச்
சொல்கிறேன், இஸ்ரவேலர்களில் ஒருவரிடம்கூட இப்பேர்ப்பட்ட விசுவா
சத்தை நான் பார்த்ததில்லை.[o] **11** நான் உங்களுக்குச் சொல்கிறேன், கிழக்
கிலிருந்தும் மேற்கிலிருந்தும் நிறைய பேர் வந்து, பரலோக அரசாங்கத்தில்

7:24 * வே.வா., "விவேகமுள்ள."

அதி. 7
a எரே 14:14
எரே 27:15
b லூ 13:25-27
c லூ 6:47-49
யாக் 1:25
d யாக் 1:23, 24
e 1கொ 3:13
f மாற் 1:22
லூ 4:32
g யோவா 7:46

அதி. 8
h மாற் 1:40-44
லூ 5:12-14
i மாற் 1:41
லூ 5:13
j ஏசா 53:4
k மத் 9:30
மத் 12:15, 16
மாற் 7:35, 36
l லேவி 14:2
லூ 17:14
m லேவி 14:3, 4
லேவி 14:
19, 20
n லூ 7:1-9
o மத் 15:28
லூ 7:9

ஆபிரகாமுடனும் ஈசாக்குடனும் யாக்கோபுடனும் விருந்து சாப்பிட உட்
காருவார்கள்.[a] **12** பரலோக அரசாங்கத்தின் பிள்ளைகளோ வெளியே
இருட்டில் தள்ளப்படுவார்கள். அங்கே அவர்கள் அழுது அங்கலாய்ப்பார்
கள்"*[b] என்று சொன்னார். **13** பின்பு, இயேசு அந்தப் படை அதிகாரியி
டம், "நீ போகலாம். உன் விசுவாசத்தின்படியே நடக்கட்டும்"[c] என்று சொன்
னார். அந்த நொடியே அவருடைய வேலைக்காரன் குணமானான்.[d]

14 பேதுருவின் வீட்டுக்கு இயேசு வந்தபோது, பேதுருவின் மாமியார்[e]
காய்ச்சலில் படுத்திருந்ததைப் பார்த்தார்.[f] **15** அவர் அவளுடைய
கையைத் தொட்டவுடன்[g] காய்ச்சல் போய்விட்டது, அவள் எழுந்து அவருக்
குப் பணிவிடை செய்ய ஆரம்பித்தாள். **16** சாயங்கால நேரமானபோது,
பேய் பிடித்த நிறைய பேரை மக்கள் அவரிடம் கொண்டுவந்தார்கள்; அவர்
ஒரு வார்த்தை சொன்னதும், அந்தப் பேய்கள்* அவர்களைவிட்டு ஓடிவிட்
டன; எல்லா நோயாளிகளையும் அவர் குணமாக்கினார். **17** "அவர் நம்
முடைய வியாதிகளைத் தாங்கிக்கொண்டு, நம் நோய்களைச் சுமந்தார்"[h]
என்று ஏசாயா தீர்க்கதரிசி மூலம் சொல்லப்பட்டது நிறைவேறும்படியே அப்
படி நடந்தது.

18 மக்கள் கூட்டம் தன்னைச் சூழ்ந்துகொண்டதை இயேசு பார்த்த
போது, படகை அக்கரைக்கு[i] ஓட்டச்சொல்லி சீஷர்களுக்குக் கட்டளை
கொடுத்தார். **19** அப்போது, வேத அறிஞன் ஒருவன் அவரிடம் வந்து,
"போதகரே, நீங்கள் எங்கே போனாலும் நான் உங்கள் பின்னால் வரு
வேன்"[j] என்று சொன்னான். **20** அதற்கு இயேசு அவனிடம், "குள்ளநரிக
ளுக்குக் குழிகளும் பறவைகளுக்குக் கூடுகளும் இருக்கின்றன, ஆனால்
மனிதகுமாரனுக்குத் தலைசாய்க்க இடமில்லை"[k] என்று சொன்னார்.
21 பின்பு மற்றொரு சீஷன் அவரிடம், "எஜமானே, முதலில் நான் போய்
என்னுடைய அப்பாவை அடக்கம் செய்துவிட்டு வருகிறேன், எனக்கு
அனுமதி கொடுங்கள்"[l] என்று கேட்டான். **22** அதற்கு இயேசு அவனிடம்,
"இறந்தவர்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யட்டும்; நீ என்னைத்
தொடர்ந்து பின்பற்றி வா"[m] என்று சொன்னார்.

23 பின்பு, அவர் ஒரு படகில் ஏறியபோது சீஷர்களும் அவரோடு ஏறி
னார்கள்.[n] **24** அப்போது, கடலில் பயங்கர புயல்காற்று வீசியது; பெரிய
அலைகள் அடித்ததால் படகு தண்ணீரால் நிரம்ப ஆரம்பித்தது; அவரோ
தூங்கிக்கொண்டிருந்தார்.[o] **25** சீஷர்கள் வந்து அவரை எழுப்பி, "எஜ
மானே, காப்பாற்றுங்கள், நாம் சாகப்போகிறோம்!" என்று சொன்னார்கள்.
26 ஆனால் அவர், "விசுவாசத்தில் குறைவுபடுகிறவர்களே, ஏன் இப்படிப்
பயப்படுகிறீர்கள்?"[p] என்று கேட்டார். பின்பு எழுந்து, காற்றையும் கடலை
யும் அதட்டினார்; அப்போது, மிகுந்த அமைதி உண்டானது.[q] **27** அவர்
கள் பிரமித்துப்போய், "இவர் உண்மையில் யார்? காற்றும் கடலும்கூட இவ
ருக்கு அடங்கிவிடுகின்றனவே!" என்று சொன்னார்கள்.

28 அக்கரையில் இருக்கிற கதரேனர்* பகுதிக்கு அவர் வந்தபோது,
பேய் பிடித்த இரண்டு பேர் கல்லறைகளின் நடுவிலிருந்து அவருக்கு எதிரே
வந்தார்கள்;[r] அவர்கள் பயங்கர வெறித்தனமாக நடந்துகொண்டதால், அந்த

8:12 *நே.மொ., "பற்களை நறநறவென்று கடிப்பார்கள்." இது கோபத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் செயல். **8:16** *அதாவது, "கெட்ட தேவதூதர்கள்." **8:28** *மாற் 5:1-லும் லூ 8:26-லும் "கெரசேனர்."

அதி. 8
a லூ 13:29
b லூ 13:28
c மத் 9:29, மத் 15:28, மாற் 9:23
d லூ 7:10
e 1கொ 9:5
f மாற் 1:29-34, லூ 4:38-41
g மாற் 5:41, அப் 3:7
h ஏசா 53:4
i மாற் 4:35, லூ 8:22
j லூ 9:57
k லூ 9:58, 2கொ 8:9
l லூ 9:59
m லூ 9:60
n மாற் 4:36
o மாற் 4:37-41, லூ 8:23-25
p மத் 14:31, மாற் 4:40
q சங் 89:9, சங் 107:29, லூ 8:25
r மாற் 5:1-3, லூ 8:26, 27

வழியில் போவதற்கு யாருக்குமே தைரியம் வரவில்லை. **29** அவர்கள்
இரண்டு பேரும் அவரைப் பார்த்து, “கடவுளுடைய மகனே, உங்களுக்கும்
எங்களுக்கும் என்ன சம்பந்தம்?[a] நேரம் வருவதற்கு முன்பே எங்களைப்
பாடுபடுத்த வந்துவிட்டீர்களா?”[b] என்று கத்தினார்கள். **30** அங்கிருந்து
வெகு தூரத்தில் ஏராளமான பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தன.[c]
31 அதனால் அந்தப் பேய்கள் அவரிடம், “நீங்கள் எங்களை விரட்ட
நினைத்தால், அந்தப் பன்றிகளுக்குள் எங்களை அனுப்பிவிடுங்கள்”[d] என்று
கெஞ்ச ஆரம்பித்தன. **32** அப்போது அவர், “போங்கள்!” என்று சொன்
னார். உடனே அவை வெளியேறி அந்தப் பன்றிகளுக்குள் புகுந்துகொண்
டன; அப்போது, அந்தப் பன்றிகளெல்லாம் ஓட்டமாக ஓடி செங்குத்தான
பாறையிலிருந்து கடலுக்குள் குதித்துச் செத்துப்போயின. **33** பன்றிகளை
மேய்த்துக்கொண்டிருந்த ஆட்கள் நகரத்துக்குள் ஓடிப்போய், பேய் பிடித்த
ஆட்களைப் பற்றியும் நடந்த எல்லா விஷயங்களைப் பற்றியும் சொன்
னார்கள். **34** அப்போது, நகரத்திலிருந்த எல்லாரும் இயேசுவைச் சந்திக்கப்
புறப்பட்டார்கள்; அவரைச் சந்தித்ததும், தங்கள் பகுதியைவிட்டுப் போகச்
சொல்லி அவரிடம் கெஞ்சிக் கேட்டார்கள்.[e]

9 அதனால் அவர் படகில் ஏறி, கடலைக் கடந்து தன்னுடைய சொந்த
ஊருக்குப் போனார்.[f] **2** அப்போது சிலர், பக்கவாதத்தால் பாதிக்கப்
பட்ட ஒருவனைப் படுக்கையோடு அவரிடம் தூக்கிக்கொண்டு வந்தார்கள்.
இயேசு அவர்களுடைய விசுவாசத்தைப் பார்த்து, பக்கவாதத்தால் பாதிக்கப்
பட்டவனிடம், “மகனே, தைரியமாயிரு; உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு
விட்டன”[g] என்று சொன்னார். **3** அங்கே இருந்த வேத அறிஞர்கள் சிலர்,
“இவன் தெய்வ நிந்தனை செய்கிறான்” என்று தங்களுக்குத் தாங்களே சொல்
லிக்கொண்டார்கள். **4** இயேசு அவர்களுடைய எண்ணங்களைப் புரிந்து
கொண்டு, “உங்கள் இதயத்தில் ஏன் பொல்லாத காரியங்களை யோசித்துக்
கொண்டிருக்கிறீர்கள்?[h] **5** ‘உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன’
என்று சொல்வது சுலபமா, அல்லது ‘எழுந்து நட’ என்று சொல்வது சுலபமா?[i]
6 ஆனாலும், பூமியில் பாவங்களை மன்னிக்கிற அதிகாரம்
மனிதகுமாரனுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்வதற்
காக—” என்று சொல்லிவிட்டு, பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவனிடம்,
“எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போ”[j] என்று
சொன்னார். **7** அவனும் எழுந்து தன்னுடைய வீட்டுக்குப் போனான்.
8 இதைப் பார்த்ததும் அங்கிருந்த மக்கள் பயந்துபோனார்கள்; இப்படிப்
பட்ட அதிகாரத்தை மனிதர்களுக்குக் கொடுத்த கடவுளை அவர்கள் மகி
மைப்படுத்தினார்கள்.

9 அதன் பின்பு, இயேசு அங்கிருந்து போய்க்கொண்டிருந்தபோது வரி
வசூலிக்கும் அலுவலகத்தில் மத்தேயு என்ற ஒருவர் உட்கார்ந்திருப்பதைப்
பார்த்தார்; அவரிடம், “என்னைப் பின்பற்றி வா” என்று சொன்னார்; உடனே
மத்தேயு எழுந்து அவரைப் பின்பற்றிப் போனார்.[k] **10** பின்பு, அவரு
டைய வீட்டில் இயேசு சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது வரி வசூலிப்பவர்
கள் பலரும், பாவிகள் பலரும் அங்கே வந்து அவரோடும் அவருடைய
சீஷர்களோடும் சேர்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள்.[l] **11** இதைப் பார்த்த
பரிசேயர்கள் அவருடைய சீஷர்களிடம், “உங்கள் போதகர் ஏன் வரி வசூ
லிப்பவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து சாப்பிடுகிறார்?”[m] என்று கேட்

அதி. 8
a லூ 4:34, 41
b மாற் 1:24; மாற் 5:7-10; லூ 8:28; யாக் 2:19
c மாற் 5:11-17
d உபா 14:8; லூ 8:31-34
e லூ 8:35-37

அதி. 9
f மத் 4:13; மாற் 2:1
g மாற் 2:3-12; லூ 5:18-26
h யோவா 2:24, 25
i மாற் 2:9
j மாற் 2:10, 11; லூ 5:24; யோவா 5:8
k மாற் 2:14; லூ 5:27, 28
l மாற் 2:15-17; லூ 5:29-32
m லூ 7:39; லூ 15:2; லூ 19:7

டார்கள். **12** அது அவருடைய காதில் விழுந்தபோது, “ஆரோக்கியமாக
இருக்கிறவர்களுக்கு மருத்துவர் தேவையில்லை, நோயாளிகளுக்குத்தான்
தேவை.[a] **13** அதனால், ‘பலியை அல்ல, இரக்கத்தைத்தான் நான் விரும்
புகிறேன்’[b] என்று சொல்லப்பட்டதன் அர்த்தத்தை நீங்கள் போய்க் கற்றுக்
கொள்ளுங்கள். நீதிமான்களை அல்ல, பாவிகளைத்தான் நான் அழைக்க
வந்தேன்” என்று சொன்னார்.

14 பின்பு, யோவானுடைய சீஷர்கள் அவரிடம் வந்து, “நாங்களும்
பரிசேயர்களும் தவறாமல் விரதம் இருக்கிறோம்; ஆனால், உங்களுடைய
சீஷர்கள் ஏன் விரதம் இருப்பதில்லை?”[c] என்று கேட்டார்கள். **15** அதற்கு
இயேசு, “மணமகன்[d] தங்களோடு இருக்கும்வரை அவருடைய நண்பர்கள்
துக்கப்பட வேண்டிய அவசியம் இல்லைதானே? ஆனால், மணமகன் அவர்
களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் வரும்,[e] அப்போது அவர்
கள் துக்கப்பட்டு விரதம் இருப்பார்கள். **16** புதிய துணியைப் பழைய
உடையில் வைத்து யாருமே ஒட்டுப்போட மாட்டார்கள். ஏனென்றால்,
புதிய துணி சுருங்கும்போது, பழைய உடையின் கிழிசல் இன்னும் பெரிதா
கிவிடும்.[f] **17** அதேபோல், பழைய தோல் பைகளில் யாருமே புதிய திராட்
சமதுவை ஊற்றி வைக்க மாட்டார்கள்; அப்படி ஊற்றி வைத்தால், அந்தப்
பைகள் வெடித்துவிடும்; அப்போது திராட்சமதுவும் கொட்டிவிடும், பைக
ளும் நாசமாகிவிடும். அதனால்தான், புதிய திராட்சமதுவைப் புதிய தோல்
பைகளில் ஊற்றி வைப்பார்கள்; அப்போது இரண்டுமே வீணாகாமல் இருக்
கும்” என்று சொன்னார்.

18 அவர் இந்த விஷயங்களை அவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்த
போது, ஒரு தலைவர் அவர் முன்னால் வந்து மண்டிபோட்டு,* “இந்நேரத்
துக்குள் என் மகள் செத்துப்போயிருப்பாள்; ஆனால், நீங்கள் வந்து
அவள்மேல் உங்கள் கையை வைத்தால், அவளுக்கு மறுபடியும் உயிர் வந்
துவிடும்”[g] என்று சொன்னார்.

19 அதனால், இயேசு எழுந்து அவர் பின்னால் போனார்; அவருடைய
சீஷர்களும் கூடவே போனார்கள். **20** அப்போது, 12 வருஷங்களாக இரத்
தப்போக்கினால்[h] அவதிப்பட்டுக்கொண்டிருந்த ஒரு பெண், **21** “அவரு
டைய மேலங்கியைத் தொட்டாலே நான் குணமாகிவிடுவேன்” என்று
தனக்குள் சொல்லிக்கொண்டே, அவருக்குப் பின்னால் போய் அவரு
டைய மேலங்கியின் ஓரத்தைத் தொட்டாள்.[i] **22** இயேசு அவளைத் திரும்
பிப் பார்த்து, “மகளே, தைரியமாயிரு! உன் விசுவாசம் உன்னைக் குணமாக்
கியிருக்கிறது”[j] என்று சொன்னார். அந்த நொடியே அந்தப் பெண்
குணமானாள்.[k]

23 பின்பு, அந்தத் தலைவருடைய வீட்டுக்கு இயேசு வந்தார்; அங்கே
குழல் ஊதுகிறவர்களையும் சத்தமாக அழுதுகொண்டிருந்த கூட்டத்தாரை
யும் பார்த்து,[l] **24** “இங்கிருந்து போய்விடுங்கள்; சிறுமி சாகவில்லை, அவள்
தூங்கிக்கொண்டிருக்கிறாள்”[m] என்று சொன்னார். அவர்களோ அவரைப்
பார்த்து ஏளனமாகச் சிரிக்க ஆரம்பித்தார்கள். **25** கூட்டத்தாரை வெளியே
அனுப்பியவுடன், அவர் உள்ளே போய் அந்தச் சிறுமியின் கையைப் பிடித்
தார்,[n] அப்போது அவள் எழுந்துகொண்டாள்.[o] **26** இதைப் பற்றிய பேச்சு
அந்தப் பகுதியெங்கும் பரவியது.

9:18 * வே.வா., “தலைவணங்கி.”

அதி. 9
a லூ 5:31
b நீதி 21:3; ஓசி 6:6; மத் 12:7
c மாற் 2:18-20; லூ 5:33-35
d மத் 22:2
e மத் 26:2
f மாற் 2:21, 22; லூ 5:36-39
g மாற் 5:22-24; லூ 8:41, 42; யோவா 11:25
h லேவி 15:25
i மாற் 5:25-34; மாற் 6:56; லூ 8:43-48
j மாற் 10:52; லூ 7:50; லூ 17:19; லூ 18:42
k யோவா 4:53
l மாற் 5:38-43; லூ 8:52-56
m யோவா 11:11
n மாற் 9:27
o லூ 8:55

27 இயேசு அங்கிருந்து புறப்பட்டு வந்துகொண்டிருந்தபோது, கண் தெரியாத இரண்டு பேர்,[a] “தாவீதின் மகனே, எங்களுக்கு இரக்கம் காட்டுங்கள்” என்று கத்திக்கொண்டே அவர் பின்னால் போனார்கள். **28** அவர் வீட்டுக்குள் போன பின்பு, கண் தெரியாத அந்த ஆட்கள் அவரிடம் வந்தார்கள்; இயேசு அவர்களிடம், “என்னால் உங்களுக்குப் பார்வை கொடுக்க முடியுமென்று நம்புகிறீர்களா?”[b] என்று கேட்டார். அதற்கு அவர்கள், “ஆமாம், எஜமானே” என்று சொன்னார்கள். **29** அப்போது அவர்களுடைய கண்களைத் தொட்டு,[c] “உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்கு நடக்கட்டும்” என்று சொன்னார். **30** உடனே அவர்களுக்குப் பார்வை கிடைத்தது. இயேசு அவர்களிடம், “இந்த விஷயம் யாருக்கும் தெரியாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்”[d] என்று கண்டிப்புடன் சொன்னார். **31** ஆனால் அவர்கள் வெளியே போய், அந்தப் பகுதியிலிருந்த எல்லாருக்கும் அவரைப் பற்றிச் சொன்னார்கள்.

32 அவர்கள் புறப்பட்டுப் போனபோது, பேய் பிடித்து ஊமையாகிவிட்ட ஒரு மனிதனை மக்கள் அவரிடம் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.[e] **33** அவர் அந்தப் பேயை விரட்டியதும் அவன் பேச ஆரம்பித்தான்.[f] மக்கள் எல்லாரும் அதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு, “இந்த மாதிரி ஒன்றை இஸ்ரவேலில் நாங்கள் இதுவரை பார்த்ததே இல்லை”[g] என்று சொன்னார்கள். **34** ஆனால் பரிசேயர்கள், “பேய்களுடைய தலைவனின் உதவியால்தான் இவன் பேய்களை விரட்டுகிறான்”[h] என்று சொன்னார்கள்.

35 இயேசு எல்லா நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் போய், அங்கிருந்த ஜெபக்கூடங்களில் கற்பித்தார், கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிய நல்ல செய்தியைப் பிரசங்கித்தார், எல்லா விதமான நோய்களையும் எல்லா விதமான உடல் பலவீனங்களையும் குணமாக்கினார்.[i] **36** மக்கள் கூட்டத்தைப் பார்த்தபோது அவருடைய மனம் உருகியது;[j] ஏனென்றால், மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல்[k] அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டும்* புறக்கணிக்கப்பட்டும் இருந்தார்கள். **37** அவர் தன்னுடைய சீஷர்களிடம், “அறுவடை அதிகமாக இருக்கிறது, ஆனால் வேலையாட்கள் குறைவாக இருக்கிறார்கள்.[l] **38** அதனால், அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பச் சொல்லி அறுவடையின் எஜமானிடம் கெஞ்சிக் கேளுங்கள்”[m] என்று சொன்னார்.

10 பின்பு, அவர் தன்னுடைய 12 சீஷர்களையும் கூப்பிட்டு, பேய்களை விரட்டுவதற்கும்[n] எல்லா விதமான நோய்களையும் எல்லா விதமான உடல் பலவீனங்களையும் குணமாக்குவதற்கும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

2 அந்த 12 அப்போஸ்தலர்களின் பெயர்கள் இவைதான்:[o] பேதுரு என்ற சீமோன்,[p] இவருடைய சகோதரர் அந்திரேயா;[q] செபெதேயுவின் மகன் யாக்கோபு, இவருடைய சகோதரர் யோவான்;[r] **3** பிலிப்பு, பர்த்தொலொமேயு,[s] தோமா;[t] வரி வசூலிப்பவரான மத்தேயு;[u] அல்பேயுவின் மகன் யாக்கோபு, ததேயு; **4** பக்திவைராக்கியமுள்ள* சீமோன், இயேசுவைப் பிற்பாடு காட்டிக்கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத்து.[v]

5 அந்த 12 பேருக்கும் இயேசு இந்த அறிவுரைகளைக் கொடுத்து

9:36 * நே.மொ., “தோலுரிக்கப்பட்டும்.” **10:4** * நே.மொ., “கெனனீயனாகிய.”

அதி. 9

- *a* மத் 20:30
- *b* அப் 14:9, 10
- *c* மத் 20:34
- *d* ஏசா 42:2; மத் 12:15, 16; மாற் 1:44, 45; மாற் 7:35, 36
- *e* மத் 12:22; லூ 11:14
- *f* மத் 15:31
- *g* மாற் 2:12
- *h* மத் 12:24; மாற் 3:22; லூ 11:15
- *i* மத் 4:23
- *j* மத் 14:14; எபி 4:15
- *k* எண் 27:16, 17; 1ரா 22:17; எசே 34:5; மாற் 6:34
- *l* லூ 10:2; யோவா 4:35
- *m* ரோ 10:14

அதி. 10

- *n* மாற் 3:14, 15; மாற் 6:7; லூ 9:1, 2
- *o* மாற் 3:16-19; லூ 6:13-16; அப் 1:13
- *p* யோவா 1:42; அப் 15:14
- *q* மாற் 1:16; யோவா 1:40
- *r* மத் 4:21
- *s* யோவா 1:45
- *t* யோவா 11:16; யோவா 20:27
- *u* மாற் 2:14; லூ 5:27
- *v* மத் 26:47; யோவா 13:18

அனுப்பினார்:[a] "மற்ற தேசத்தாரின் பகுதிக்குள் போகாதீர்கள்; சமாரியர்களு
டைய எந்த நகரத்துக்குள்ளும் நுழையாதீர்கள்.[b] **6** வழிதவறிப்போன ஆடு
களைப் போல் இருக்கிற இஸ்ரவேல் தேசத்தாரிடமே போங்கள்.[c] **7** அப்
படிப் போகும்போது, 'பரலோக அரசாங்கம் நெருங்கி வந்துவிட்டது' என்று
பிரசங்கியுங்கள்.[d] **8** நோயாளிகளைக் குணப்படுத்துங்கள்,[e] இறந்தவர்
களை உயிரோடு எழுப்புங்கள், தொழுநோயாளிகளைச் சுத்தமாக்குங்கள்,
பேய்களை விரட்டுங்கள். இலவசமாகப் பெற்றீர்கள், இலவசமாகக் கொடுங்
கள். **9** தங்கம், வெள்ளி, அல்லது செம்புக் காசுகளை உங்களோடு*
கொண்டுபோகாதீர்கள்.[f] **10** பயணத்துக்காக உணவுப் பையையோ,
இரண்டு உடைகளையோ,* செருப்புகளையோ, தடியையோ[g] வாங்கிக்
கொண்டு போகாதீர்கள். ஏனென்றால், வேலை செய்கிறவன் தன் உணவைப்
பெறத் தகுதியுள்ளவனாக இருக்கிறான்.[h]

11 நீங்கள் எந்த நகரத்துக்குப் போனாலும், எந்தக் கிராமத்துக்குப்
போனாலும், தகுதியுள்ளவர் யார் என்று தேடிக் கண்டுபிடியுங்கள்; அங்கி
ருந்து புறப்படும்வரை அவருடனேயே தங்கியிருங்கள்.[i] **12** ஒரு வீட்டுக்
குள் போகும்போது, அங்கிருப்பவர்களுக்கு வாழ்த்துச் சொல்லுங்கள்.
13 அந்த வீட்டில் இருப்பவர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தால், நீங்கள்
வாழ்த்துச் சொன்னபடி அவர்களுக்குச் சமாதானம் கிடைக்கட்டும்;[j] தகுதி
யில்லாதவர்களாக இருந்தால், அந்தச் சமாதானம் உங்களிடமே திரும்
பட்டும். **14** யாராவது உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அல்லது உங்
களுடைய வார்த்தைகளைக் கேட்காவிட்டால், அந்த வீட்டையோ நகரத்
தையோ விட்டுப் புறப்படும்போது உங்களுடைய பாதங்களில் படிந்த
தூசியை உதறிப்போடுங்கள்.[k] **15** உண்மையாகவே உங்களுக்குச் சொல்
கிறேன், நியாயத்தீர்ப்பு நாளில் சோதோம் கொமோரா[l] நகரங்களுக்குக்
கிடைக்கும் தண்டனையைவிட அந்த நகரத்துக்குக் கிடைக்கும் தண்டனை
பயங்கரமாக இருக்கும்.

16 இதோ! ஓநாய்கள் நடுவில் ஆடுகளை அனுப்புவதுபோல்
உங்களை அனுப்புகிறேன்; அதனால், பாம்புகளைப் போல் ஜாக்கிரதையா
கவும் புறாக்களைப் போல் கள்ளம்கபடம் இல்லாமலும் நடந்துகொள்ளுங்
கள்.[m] **17** எச்சரிக்கையாக இருங்கள்; ஏனென்றால், மனுஷர்கள் உங்
களை உள்ளூர் நீதிமன்றங்களுக்குக் கொண்டுபோய் நிறுத்துவார்கள்;[n]
தங்களுடைய ஜெபக்கூடங்களில்[o] உங்களை முள்சாட்டையால் அடிப்பார்
கள்.[p] **18** அதுமட்டுமல்ல, நீங்கள் என்னுடைய சீஷர்களாக இருப்பதால்,
உங்களை ஆளுநர்களுக்கும் ராஜாக்களுக்கும் முன்னால் நிறுத்துவார்கள்,[q]
அப்போது நீங்கள் அவர்களுக்கும் மற்ற தேசத்து மக்களுக்கும் சாட்சி
கொடுக்க முடியும்.[r] **19** ஆனாலும், அவர்கள் உங்களை அதிகாரிகள்
முன் நிறுத்தும்போது, எப்படிப் பேசுவது என்றோ என்ன பேசுவது என்றோ
கவலைப்படாதீர்கள். நீங்கள் என்ன பேச வேண்டுமோ அது அந்த நேரத்
தில் உங்களுக்கு அருளப்படும்.[s] **20** அப்போது நீங்களாகவே பேச மாட்
டீர்கள், உங்கள் பரலோகத் தகப்பனுடைய சக்தி உங்களைப் பேச வைக்
கும்.[t] **21** சகோதரனின் சாவுக்குச் சகோதரனும், பிள்ளையின் சாவுக்கு
அப்பாவும் காரணமாக இருப்பார்கள். பெற்றோருக்கு எதிராகப் பிள்ளைகள்

10:9 *நே.மொ., "உங்களுடைய இடுப்புவாரில் இருக்கிற பணப் பைகளில்." **10:10** *வே.வா., "கூடுதல் உடையையோ."

அதி. 10
a மாற் 6:7; லூ 9:1, 2
b 2ரா 17:24
c ஏசா 53:6; எசே 34:6; அப் 13:45, 46
d மத் 4:17; லூ 10:9
e லூ 9:2
f மாற் 6:8, 9
g லூ 9:3
h லூ 10:7; 1கொ 9:7, 14
i மாற் 6:10; லூ 9:4
j லூ 10:5
k மாற் 6:11; லூ 9:5; லூ 10:6, 11; அப் 13:50, 51
l ஆதி 19:4, 5; 2பே 2:6; யூ 7
m பிலி 2:14, 15
n மத் 24:9
o மத் 23:34; மாற் 13:9; லூ 21:12, 13
p அப் 5:40; 2கொ 11:24
q அப் 4:8; அப் 24:10; அப் 25:23; அப் 26:25; அப் 27:23, 24
r மத் 24:14
s மாற் 13:11; லூ 12:11, 12; லூ 21:14, 15
t யோவா 14:26

எழும்பி, அவர்களுடைய சாவுக்குக் காரணமாவார்கள்.[a] **22** நீங்கள் என்
சீஷர்களாக இருப்பதால் எல்லா மக்களும் உங்களை வெறுப்பார்கள்;[b]
ஆனால், முடிவுவரை சகித்திருப்பவர்தான் மீட்புப் பெறுவார்.[c] **23** அவர்
கள் உங்களை ஒரு நகரத்தில் துன்புறுத்தினால், வேறொரு நகரத்துக்குத் தப்
பித்து ஓடுங்கள்;[d] உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், மனிதகுமா
ரன் வருவதற்குள் இஸ்ரவேலில் உள்ள எல்லா நகரங்களிலும் பிரசங்கித்து
முடித்திருக்கவே மாட்டீர்கள்.

24 மாணவன் தன்னுடைய குருவைவிட பெரியவன் அல்ல, அடிமை
தன்னுடைய எஜமானைவிட பெரியவன் அல்ல.[e] **25** மாணவன் தன் குரு
வைப் போலவும், அடிமை தன் எஜமானைப் போலவும்[f] ஆனாலே
போதும். வீட்டு எஜமானையே பெயல்செபூப்*[g] என்று மக்கள் சொல்லியி
ருக்கும்போது, அவருடைய வீட்டில் இருப்பவர்களை அப்படிச் சொல்வது
இன்னும் நிச்சயம்தானே? **26** அதனால், அவர்களைப் பார்த்துப் பயப்ப
டாதீர்கள்; மூடிமறைக்கப்படுகிற எதுவும் வெளியில் தெரியாமல் போகாது,
ரகசியமாக வைக்கப்படுகிற எதுவும் வெட்டவெளிச்சமாகாமல் போகாது.[h]
27 நான் உங்களுக்கு இருட்டில் சொல்வதை நீங்கள் வெளிச்சத்தில் சொல்
லுங்கள்; காதோடு காதாகச் சொல்வதை வீட்டு மாடிகளிலிருந்து பிரசங்கி
யுங்கள்.[i] **28** உங்கள் உடலைக் கொல்ல முடிந்தாலும் உங்கள் உயிரைக்
கொல்ல* முடியாத ஆட்களுக்குப் பயப்படாதீர்கள்.[j] உயிர், உடல் இரண்
டையுமே கெஹென்னாவில்# அழிக்க முடிந்தவருக்கே பயப்படுங்கள்.[k]
29 குறைந்த மதிப்புள்ள ஒரு காசுக்கு* இரண்டு சிட்டுக்குருவிகளை விற்
கிறார்கள்தானே? ஆனால், அவற்றில் ஒன்றுகூட உங்கள் பரலோகத்
தகப்பனுக்குத் தெரியாமல் தரையில் விழுவதில்லை.[l] **30** உங்கள் தலையி
லுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. **31** அதனால், பயப்படாதீர்
கள்; சிட்டுக்குருவிகளைவிட நீங்கள் மதிப்புள்ளவர்கள்.[m]

32 மனுஷர்களுக்கு முன்னால் என்னை ஏற்றுக்கொள்கிறவனை[n] என் பர
லோகத் தகப்பனுக்கு முன்னால் நானும் ஏற்றுக்கொள்வேன்.[o] **33** ஆனால்,
மனுஷர்களுக்கு முன்னால் என்னை ஒதுக்கித்தள்ளுகிறவனை என் பரலோ
கத் தகப்பனுக்கு முன்னால் நானும் ஒதுக்கித்தள்ளுவேன்.[p] **34** பூமியில்
சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்காதீர்கள்; சமாதானத்தை
அல்ல, பிரிவினையையே உண்டாக்க* வந்தேன்.[q] **35** அப்பாவுக்கு விரோ
தமாக மகனையும், அம்மாவுக்கு விரோதமாக மகளையும், மாமியாருக்கு
விரோதமாக மருமகளையும் பிரிக்க வந்தேன்.[r] **36** சொல்லப்போனால்,
ஒருவருக்கு அவருடைய குடும்பத்தாரே எதிரிகளாக இருப்பார்கள்.
37 என்மேல் காட்டும் பாசத்தைவிட தன் அப்பாவிடமோ அம்மாவிடமோ
அதிக பாசம் காட்டுகிறவன் எனக்குச் சீஷனாக இருக்க முடியாது; என்மேல்
காட்டும் பாசத்தைவிட தன் மகனிடமோ மகளிடமோ அதிக பாசம் காட்
டுகிறவன் எனக்குச் சீஷனாக இருக்க முடியாது.[s] **38** தன்னுடைய சித்திர
வதைக் கம்பத்தை# சுமந்துகொண்டு என்னைப் பின்பற்றி வராத எவனும்
எனக்குச் சீஷனாக இருக்க முடியாது.[t] **39** தன்னுடைய உயிரைக் காப்பாற்

10:25 *பேய்களின் தலைவனான சாத்தானைக் குறிக்கும் பெயர். **10:28** *அதா
வது, “மறுபடியும் வாழ்வதற்கான நம்பிக்கையை அழிக்க.” **10:28, 38** #சொல் பட்
டியலைப் பாருங்கள். **10:29** *நே.மொ., “அசாரியன் காசுக்கு.” இணைப்பு B14-ஐப்
பாருங்கள். **10:34** *நே.மொ., “வாளையே அனுப்ப.”

அதி. 10
a மீ 7:6; மத் 10:36
b மத் 24:9; லூ 21:17; யோவா 15:21
c மத் 24:13; லூ 21:19; வெளி 2:10
d மத் 23:34; அப் 8:1
e யோவா 15:20
f 1பே 2:21
g மத் 12:24; மாற் 3:22; லூ 11:15; யோவா 8:48
h மாற் 4:22; லூ 8:17
i லூ 12:3
j நீதி 29:25; வெளி 2:10
k லூ 12:4, 5; எபி 10:31
l லூ 12:6, 7
m மத் 6:26
n ரோ 10:9
o லூ 12:8, 9; வெளி 3:5
p மாற் 8:38; லூ 9:26; 2தீ 2:12
q லூ 12:51-53
r மீ 7:6
s மத் 19:29; லூ 14:26
t மத் 16:24, 25; மாற் 8:34, 35; லூ 9:23; லூ 14:27

றிக்கொள்ள முயற்சி செய்கிறவன் அதை இழந்துபோவான்; ஆனால், எனக்
காகத் தன் உயிரை இழப்பவன் அதைக் காப்பாற்றிக்கொள்வான்.[a]
40 உங்களை ஏற்றுக்கொள்கிறவன் என்னையும் ஏற்றுக்கொள்கிறான்,
என்னை ஏற்றுக்கொள்கிறவன் என்னை அனுப்பியவரையும் ஏற்றுக்கொள்
கிறான்.[b] **41** ஒருவர் தீர்க்கதரிசியாக இருப்பதால் அவரை ஏற்றுக்கொள்கி
றவன், தீர்க்கதரிசி பெறுகிற அதே பலனைப் பெறுவான்;[c] ஒருவர் நீதிமா
னாக இருப்பதால் அவரை ஏற்றுக்கொள்கிறவன், நீதிமான் பெறுகிற அதே
பலனைப் பெறுவான். **42** உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன்,
தாழ்மையானவர்களான இவர்களில் ஒருவர் என்னுடைய சீஷராக இருப்
பதால், இவருக்கு ஒரு குவளை குளிர்ந்த தண்ணீர் கொடுக்கிறவனும்கூட
கண்டிப்பாகத் தன்னுடைய பலனைப் பெறுவான்."[d]

11 இயேசு தன்னுடைய 12 சீஷர்களுக்கு அறிவுரைகளைக் கொடுத்து
முடித்த பின்பு, சுற்றியுள்ள நகரங்களில்[e] கற்பிப்பதற்கும் பிரசங்கிப்
பதற்கும் அங்கிருந்து புறப்பட்டுப் போனார்.
2 கிறிஸ்து செய்ததையெல்லாம் சிறையிலிருந்த யோவான்[f] கேள்விப்
பட்டார்; அதனால், தன்னுடைய சீஷர்களை அவரிடம் அனுப்பி,[g] **3** "வர
வேண்டியவர் நீங்கள்தானா அல்லது வேறொருவரையும் நாங்கள் எதிர்
பார்க்க வேண்டுமா?"[h] என்று கேட்டார். **4** அதற்கு இயேசு அந்தச்
சீஷர்களிடம், "நீங்கள் கேட்பதையும் பார்ப்பதையும் யோவானிடம் போய்ச்
சொல்லுங்கள்:[i] **5** பார்வை இல்லாதவர்கள் பார்க்கிறார்கள்,[j] நடக்க முடி
யாதவர்கள் நடக்கிறார்கள், தொழுநோயாளிகள் சுத்தமாகிறார்கள்,[k] காது
கேட்காதவர்கள் கேட்கிறார்கள், இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்படுகிறார்
கள், ஏழைகளுக்கு நல்ல செய்தி[l] சொல்லப்படுகிறது; **6** எந்தச் சந்தேகத்
துக்கும் இடம் கொடுக்காமல் என்னை நம்புகிறவன்*[m] சந்தோஷமானவன்"
என்று சொன்னார்.
7 அவர்கள் திரும்பிப் போன பின்பு, இயேசு அந்தக் கூட்டத்தாரிடம்
யோவானைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்; அவர்களிடம், "எதைப் பார்க்க
வனாந்தரத்துக்குப் போனீர்கள்?[n] காற்றில் அசைந்தாடும் நாணலையா?[o]
8 இல்லையென்றால், வேறு எதைப் பார்க்கப் போனீர்கள்? விலை
உயர்ந்த உடை உடுத்திய மனுஷனையா? விலை உயர்ந்த உடை உடுத்திய
வர்கள் ராஜாக்களுடைய அரண்மனைகளில்தானே இருக்கிறார்கள்! **9** இல்
லையென்றால், வேறு எதற்காகப் போனீர்கள்? ஒரு தீர்க்கதரிசியைப்
பார்ப்பதற்காகவா? ஆம், நான் உங்களுக்குச் சொல்கிறேன், ஒரு தீர்க்கதரிசி
யைவிட மேலானவரைப் பார்க்கவே போனீர்கள்.[p] **10** 'இதோ! நான் என்
னுடைய தூதுவரை உனக்கு முன்னால் அனுப்புகிறேன், அவர் உனக்கு
முன்னால் போய் உன் பாதையைத் தயார்படுத்துவார்!'[q] என்று இவரைப் பற்
றித்தான் எழுதப்பட்டிருக்கிறது. **11** உண்மையாகவே உங்களுக்குச் சொல்
கிறேன், மனுஷராகப் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகரைவிட* உயர்ந்த
வர் யாரும் இல்லை; ஆனால், பரலோக அரசாங்கத்தில் தாழ்ந்தவராக
இருக்கிறவர் அவரைவிட உயர்ந்தவராக இருக்கிறார்.[r] **12** யோவான் ஸ்நா
னகரின் காலத்திலிருந்து இன்றுவரை, பரலோக அரசாங்கமே மக்கள் தீவிர
மாக அடைய முயலுகிற லட்சியமாக இருக்கிறது; அப்படித் தீவிரமாக

11:6 *வே.வா., "என்னை முன்னிட்டு தடுமாற்றம் அடையாதவன்." **11:11** *ஸ்நான
கர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்.

அதி. 10
a லூ 17:33; யோவா 12:25
b மத் 25:40; லூ 10:16; யோவா 12:44; யோவா 13:20
c 1ரா 17:9, 10; 1ரா 17:20–23; 2ரா 4:8; 2ரா 4:13–17
d மத் 25:40; மாற் 9:41; எபி 6:10

அதி. 11
e மத் 4:23; மத் 19:1; லூ 9:6
f மத் 14:3; மாற் 6:17
g லூ 7:18–23
h மத் 3:11; யோவா 1:15
i லூ 7:22
j ஏசா 35:5, 6; ஏசா 61:1
k மத் 8:3
l மத் 4:23
m மாற் 6:3; லூ 7:23; 1கொ 1:23; 1பே 2:7, 8
n மத் 3:1, 5
o லூ 7:24–28
p லூ 1:67, 76
q மல் 3:1; மத் 3:3; மாற் 1:2; லூ 1:17; யோவா 3:28
r லூ 7:28; யோவா 3:3

அடைய முயலுகிறவர்கள் அதை அடைகிறார்கள்.*[a] **13** ஏனென்றால், தீர்க்கதரிசனப் புத்தகங்களும் சரி, திருச்சட்டமும் சரி, யோவானின் காலம் வரை தீர்க்கதரிசனங்களை அறிவித்தன.[b] **14** ‘வரவேண்டிய எலியா’[c] அவர்தான் என்பதை ஏற்றுக்கொள்ள மனமிருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். **15** காதுள்ளவன் கவனித்துக் கேட்கட்டும்.

16 இந்தத் தலைமுறையை நான் யாருக்கு ஒப்பிடுவேன்?[d] சந்தையில் உட்கார்ந்திருக்கிற பிள்ளைகளுக்கு ஒப்பிடுவேன்; அவர்கள் தங்களோடு விளையாடுகிற பிள்ளைகளைப் பார்த்து, **17** ‘உங்களுக்காகக் குழல் ஊதினோம், ஆனால் நீங்கள் நடனம் ஆடவில்லை; புலம்பி அழுதோம், ஆனால் நீங்கள் நெஞ்சில் அடித்துக்கொண்டு அழவில்லை’ என்று சொல்கிறார்கள். **18** அதேபோல், யோவான் சாப்பிடவும் இல்லை, குடிக்கவும் இல்லை; ஆனாலும், அவருக்கு ‘பேய் பிடித்திருக்கிறது’ என்று மக்கள் சொல்கிறார்கள்; **19** மனிதகுமாரனோ சாப்பிடுகிறார், குடிக்கிறார்;[e] இருந்தாலும் மக்கள் அவரை, ‘பெருந்தீனிக்காரன், குடிகாரன், வரி வசூலிப்பவர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன்’[f] என்று சொல்கிறார்கள். ஆனால், ஒருவர் செய்கிற நீதியான செயல்கள்* அவர் ஞானமுள்ளவர் என்பதை நிரூபிக்கும்”[g] என்றார்.

20 அவர் எந்த நகரங்களில் பெரும்பாலான அற்புதங்களைச் செய்திருந்தாரோ அந்த நகரங்களில் இருந்தவர்கள் திருந்தவில்லை, அதனால் அவர்களை அவர் கண்டித்து, **21** “கோராசினே, உனக்குக் கேடுதான் வரும்! பெத்சாயிதாவே, உனக்குக் கேடுதான் வரும்! உங்களுடைய நகரங்களில் செய்யப்பட்ட அற்புதங்கள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்தால், அங்கிருக்கிறவர்கள் எப்போதோ துக்கத் துணியை* உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, மனம் திருந்தியிருப்பார்கள்.[h] **22** அதனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன், நியாயத்தீர்ப்பு நாளில் தீருவுக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையைவிட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை பயங்கரமாக இருக்கும்.[i] **23** கப்பர்நகூமே,[j] நீ வானம்வரை உயர்த்தப்படுவாய் என்றா நினைக்கிறாய்? நீ கல்லறைவரை தாழ்த்தப்படுவாய்;[k] உன்னுடைய நகரத்தில் செய்யப்பட்ட அற்புதங்கள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால், அந்த நகரம் இன்றுவரை இருந்திருக்கும். **24** அதனால், நியாயத்தீர்ப்பு நாளில், சோதோம் நகரத்துக்குக் கிடைக்கும் தண்டனையைவிட உனக்குக் கிடைக்கும் தண்டனை பயங்கரமாக இருக்கும் என்று நான் உனக்குச் சொல்கிறேன்”[l] என்றார்.

25 பின்பு இயேசு, “தகப்பனே, பரலோகத்துக்கும் பூமிக்கும் எஜமானே, எல்லார் முன்னாலும் நான் உங்களைப் புகழ்கிறேன்; ஏனென்றால், இந்த விஷயங்களை நீங்கள் ஞானிகளுக்கும் அறிவாளிகளுக்கும் மறைத்து, சிறுபிள்ளைகளுக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர்கள்.[m] **26** தகப்பனே, அப்படிச் செய்வதுதான் உங்களுடைய விருப்பமாக இருந்தது” என்று சொன்னார். **27** பின்பு அவர், “என் தகப்பன் எல்லாவற்றையும் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்;[n] தகப்பனைத் தவிர வேறு யாருக்கும் மகனை முழுமையாகத் தெரியாது;[o] மகனுக்கும், மகன் யாருக்கு அவரை வெளிப்படுத்த விரும்புகிறாரோ அவருக்கும் தவிர வேறு யாருக்கும் தகப்பனை முழுமையாகத்

11:12 * நே.மொ., “கைப்பற்றுகிறார்கள்.” **11:19** * வே.வா., “நீதியான செயல்களால் கிடைக்கிற பலன்கள்.” **11:21** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 11
- *a* லூ 13:24
- *b* லூ 16:16
- *c* மல் 4:5; மத் 17:10-13
- *d* லூ 7:31-35
- *e* மத் 9:10; மாற் 2:15; யோவா 2:2
- *f* லூ 5:30; லூ 15:2; லூ 19:7
- *g* லூ 7:34, 35
- *h* யோனா 3:5, 6; லூ 10:13
- *i* லூ 10:14
- *j* லூ 4:31
- *k* லூ 10:15
- *l* மத் 10:15; லூ 10:12
- *m* ஏசா 29:14; மத் 13:15; லூ 10:21; 1கொ 1:27
- *n* யோவா 3:35
- *o* யோவா 1:18

தெரியாது.[a] **28** உழைத்துக் களைத்துப்போனவர்களே, பாரமான சுமை
யைச் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான்
உங்களுக்குப் புத்துணர்ச்சி கொடுப்பேன். **29** நான் சாந்தமும் மனத்தாழ்
மையுமாக இருக்கிறேன்;[b] அதனால் என் நுகத்தடியை* உங்கள் தோள்
மேல் ஏற்றுக்கொண்டு என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்; அப்போது,
உங்களுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும். **30** ஏனென்றால், என்னுடைய
நுகத்தடி மென்மையாகவும்* என்னுடைய சுமை லேசாகவும் இருக்கிறது"
என்று சொன்னார்.

12 ஓய்வுநாளில் இயேசு தன்னுடைய சீஷர்களோடு வயல்
வழியாக நடந்துபோனார். அப்போது, அவருடைய சீஷர்களுக்குப்
பசியெடுத்தது, அதனால் கதிர்களைப் பறித்து சாப்பிட ஆரம்பித்தார்கள்.[c]
2 பரிசேயர்கள் அதைப் பார்த்ததும், "ஓய்வுநாளில் செய்யக்கூடாத காரி
யத்தை உன்னுடைய சீஷர்கள் செய்கிறார்கள்!"[d] என்று அவரிடம் சொன்
னார்கள். **3** அதற்கு அவர், "தாவீதுக்கும் அவருடைய ஆட்களுக்கும் பசி
யெடுத்தபோது, அவர் என்ன செய்தார் என்று நீங்கள் வாசிக்கவில்லையா?[e]
4 அவர் கடவுளுடைய வீட்டுக்குள்* போய், குருமார்களைத் தவிர வேறு
யாருமே சாப்பிடக்கூடாத படையல் ரொட்டிகளை[f] தன் ஆட்களோடு
சேர்ந்து சாப்பிட்டாரே?[g] **5** அதுமட்டுமல்ல, ஆலயத்தில் இருக்கிற குரு
மார்கள் ஓய்வுநாட்களில் வேலை செய்தாலும் குற்றமற்றவர்களாகவே இருக்
கிறார்கள் என்பதைப் பற்றித் திருச்சட்டத்தில் நீங்கள் வாசிக்கவில்லையா?[h]
6 ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், ஆலயத்தைவிட மேலானவர்
இங்கே இருக்கிறார்.[i] **7** 'பலியை அல்ல,[j] இரக்கத்தையே நான் விரும்புகி
றேன்'[k] என்பதன் அர்த்தத்தை நீங்கள் புரிந்திருந்தால், குற்றமற்றவர்களைக்
கண்டனம் செய்திருக்க மாட்டீர்கள். **8** ஏனென்றால், மனிதகுமாரன் ஓய்வு
நாளுக்கு எஜமானாக இருக்கிறார்"[l] என்று சொன்னார்.

9 பின்பு, அவர் அங்கிருந்து புறப்பட்டு அவர்களுடைய ஜெபக்கூ
டத்துக்குள் போனார். **10** சூம்பிய* கையுடைய ஒருவன்[m] அங்கே இருந்
தான். அங்கிருந்தவர்கள் அவர்மேல் குற்றம் சுமத்த வேண்டுமென்ற எண்
ணத்தோடு, "ஓய்வுநாளில் குணமாக்குவது சரியா?" என்று கேட்டார்கள்.[n]
11 அதற்கு அவர், "உங்களில் யாருக்காவது ஒரு ஆடு இருந்து, அது ஓய்
வுநாளில் ஒரு குழிக்குள் விழுந்துவிட்டால், அதை வெளியே தூக்கிவிடா
மல் இருப்பீர்களா?[o] **12** அப்படியானால், ஆட்டைவிட மனுஷன் எவ்வ
ளவு மதிப்புள்ளவன்! அதனால், ஓய்வுநாளில் நல்ல காரியத்தைச்
செய்வது சரிதான்" என்று சொன்னார். **13** பின்பு, சூம்பிய கையுடையவ
னைப் பார்த்து, "உன் கையை நீட்டு" என்று சொன்னார். அவன் நீட்டினான்,
அந்தக் கை குணமாகி, அவனுடைய இன்னொரு கையைப் போல் ஆனது.
14 ஆனால், அந்தப் பரிசேயர்கள் வெளியே போய், அவரைக் கொலை
செய்ய சதித்திட்டம் போட்டார்கள். **15** இயேசு இதைத் தெரிந்துகொண்டு
அந்த இடத்தைவிட்டுப் போனார். நிறைய பேர் அவர் பின்னால் போனார்
கள்,[p] அவர்கள் எல்லாரையும் அவர் குணமாக்கினார். **16** ஆனால்,
தன்னைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாதென்று கண்டிப்புடன்

11:29 * சொல் பட்டியலைப் பாருங்கள். **11:30** * வே.வா., "சுமப்பதற்கு எளிதாகவும்." **12:4** * அதாவது, "வழிபாட்டுக் கூடாரத்துக்குள்." **12:10** * வே.வா., "பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட."

அதி. 11
a லூ 10:22; யோவா 10:15; 1யோ 5:20
b சக 9:9

அதி. 12
c யாத் 12:16; உபா 23:25; மாற் 2:23-28; லூ 6:1-5
d யாத் 20:10; யாத் 31:15; உபா 5:14
e 1சா 21:1-6
f யாத் 25:30; யாத் 40: 22, 23
g லேவி 24:5-9
h எண் 28:9; யோவா 7:22
i லூ 11:31, 32
j ஓசி 6:6; மீ 6:6, 8; மத் 9:13
k மத் 23:23
l மாற் 2:27, 28; லூ 6:5
m மாற் 3:1-6; லூ 6:6-11
n லூ 14:3; யோவா 9:16
o யாத் 23:4; உபா 22:4; லூ 14:5
p மாற் 3:7

அவர்களுக்குக் கட்டளையிட்டார்.[a] **17** ஏசாயா தீர்க்கதரிசி மூலம் சொல்
லப்பட்ட இந்த வார்த்தைகள் நிறைவேறும்படியே அப்படி நடந்தது:

18 “இதோ! இவர்தான் நான் தேர்ந்தெடுத்திருக்கிற என்னுடைய
அன்பு ஊழியர்,[b] இவரை நான் ஏற்றுக்கொள்கிறேன்.*[c] என்னுடைய சக்
தியை இவருக்குத் தருவேன்.[d] எது நியாயம் என்பதை எல்லா தேசத்து மக்
களுக்கும் இவர் தெளிவாகக் காட்டுவார். **19** இவர் வாக்குவாதம் செய்ய
மாட்டார்,[e] குரலை உயர்த்திப் பேச மாட்டார்; முக்கியத் தெருக்களில் இவ
ருடைய குரலை யாரும் கேட்க மாட்டார்கள். **20** நியாயத்தை நிலைநாட்
டும்வரை, நசுங்கிய எந்த நாணலையும் இவர் ஒடிக்க மாட்டார்; மங்கியெ
ரிகிற எந்தத் திரியையும் அணைக்க மாட்டார்.[f] **21** உண்மையில், எல்லா
மக்களும் இவருடைய பெயரில் நம்பிக்கையோடு இருப்பார்கள்.”[g]

22 பின்பு, பேய் பிடித்த ஒருவனை அவரிடம் கொண்டுவந்தார்கள்; அவ
னால் பார்க்கவோ பேசவோ முடியவில்லை; அவனை அவர் குணமாக்கி
யவுடன் அவனால் பார்க்கவும் பேசவும் முடிந்தது. **23** அப்போது மக்கள்
எல்லாரும் பிரமித்துப்போய், “ஒருவேளை இவர்தான் தாவீதின் மகனோ?”
என்று பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். **24** அதைக் கேட்ட பரிசேயர்
கள், “பேய்களுடைய தலைவனான பெயல்செபூப்* உதவியால்தான் இவன்
பேய்களை விரட்டுகிறான்”[h] என்று சொன்னார்கள். **25** அவர்களுடைய
யோசனைகளை அவர் தெரிந்துகொண்டு, “ஒரு ராஜ்யத்துக்குள் பிரிவினை
கள் இருந்தால் அந்த ராஜ்யம் நிலைக்காது. ஒரு ஊருக்குள் அல்லது வீட்
டுக்குள் பிரிவினைகள் இருந்தால் அதுவும் நிலைக்காது. **26** அதேபோல்,
சாத்தானைச் சாத்தானே விரட்டினால், அவன் தனக்கு விரோதமாகவே
பிரிவினைகள் உண்டாக்குகிறான் என்று அர்த்தம்; அப்படியானால், அவனு
டைய ராஜ்யம் எப்படி நிலைக்கும்? **27** நான் பெயல்செபூப் உதவியால்
பேய்களை விரட்டுகிறேன் என்றால், உங்களுடைய சீஷர்கள்* யாருடைய
உதவியால் அவற்றை விரட்டுகிறார்கள்? அதனால், உங்களுடைய சீஷர்
களே நீங்கள் சொல்வது தவறு என்று நிரூபிக்கிறார்கள். **28** நான் கடவு
ளுடைய சக்தியால்தான் பேய்களை விரட்டுகிறேன் என்றால், கடவு
ளுடைய அரசாங்கம் வந்துவிட்டதை நீங்கள் கவனிக்கவில்லை என்றுதான்
அர்த்தம்.[i] **29** ஒரு பலசாலியை முதலில் கட்டிப்போடவில்லை என்றால்,
ஒருவன் எப்படி அவனுடைய வீட்டுக்குள் புகுந்து பொருள்களைக் கொள்
ளையடிக்க முடியும்? அவனைக் கட்டிப்போட்ட பின்புதான் வீட்டைக்
கொள்ளையடிக்க முடியும். **30** என் பக்கம் இல்லாதவன் எனக்கு விரோ
தமாக இருக்கிறான், என்னோடு சேர்ந்து மக்களைக் கூட்டிச்சேர்க்காதவன்
அவர்களைச் சிதறிப்போக வைக்கிறான்.[j]

31 அதனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன், எல்லா விதமான பாவ
மும் நிந்தனையும் மனுஷர்களுக்கு மன்னிக்கப்படும்; ஆனால், கடவு
ளுடைய சக்திக்கு விரோதமான நிந்தனை மன்னிக்கப்படாது.[k] **32** உதார
ணமாக, மனிதகுமாரனுக்கு விரோதமாக யாராவது ஒரு வார்த்தை பேசி
னால், அது அவனுக்கு மன்னிக்கப்படும்;[l] ஆனால், கடவுளுடைய சக்திக்கு
விரோதமாக யாராவது பேசினால், அது அவனுக்கு மன்னிக்கப்படாது; இந்
தக் காலத்திலும்* சரி, இனிவரும் காலத்திலும் சரி, மன்னிக்கப்படாது.[m]

12:18 *வே.வா., “அங்கீகரிக்கிறேன்; இவர்மேல் பிரியமாக இருக்கிறேன்.” **12:24** *சாத்தானைக் குறிக்கும் பெயர். **12:27** *நே.மொ., “மகன்கள்.” **12:32** *வே.வா., “சகாப்தத்திலும்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 12

a மத் 8:3, 4; மாற் 3:11, 12; மாற் 7:35, 36

b அப் 3:13

c மத் 3:17; மத் 17:5

d ஏசா 61:1; மாற் 1:10

e 2தீ 2:24

f மத் 11:28

g ஏசா 11:10; ஏசா 42:1-4; அப் 4:12

h மாற் 3:22-27; லூ 11:15-23

i லூ 11:20

j மாற் 9:40; லூ 9:50; லூ 11:23

k மாற் 3:28, 29; அப் 7:51; எபி 6:4, 6

l 1தீ 1:13

m லூ 12:10; எபி 10:26

33 நீங்கள் நல்ல மரமாக இருந்தால் நல்ல கனியைக் கொடுப்பீர்கள்;
கெட்ட மரமாக இருந்தால் கெட்ட கனியைக் கொடுப்பீர்கள்; ஒரு மரம் எப்
படிப்பட்டது என்பதை அதன் கனியை வைத்தே தெரிந்துகொள்ளலாம்.[a]
34 விரியன் பாம்புக் குட்டிகளே,[b] பொல்லாதவர்களான உங்களால் எப்
படி நல்ல விஷயங்களைப் பேச முடியும்? இதயத்தில் நிறைந்திருப்பதையே
வாய் பேசுகிறது.[c] **35** நல்ல மனுஷன் தன் இதயத்தில் நிறைந்திருக்கிற
நல்ல விஷயங்களையே பேசுகிறான்; கெட்ட மனுஷனோ தன் இதயத்தில்
நிறைந்திருக்கிற கெட்ட விஷயங்களையே பேசுகிறான்.[d] **36** நான் உங்க
ளுக்குச் சொல்கிறேன், மனுஷர்கள் தாங்கள் பேசுகிற ஒவ்வொரு வீணான
வார்த்தைக்கும் நியாயத்தீர்ப்பு நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும்;[e]
37 ஏனென்றால், உங்களுடைய வார்த்தைகளை வைத்தே நீங்கள் நீதி
மான்களா குற்றவாளிகளா என்பதைக் கடவுள் நியாயந்தீர்ப்பார்" என்று
சொன்னார்.

38 அதற்கு வேத அறிஞர்களிலும் பரிசேயர்களிலும் சிலர், "போதகரே,
எங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காட்டுங்கள்"[f] என்று சொன்னார்கள்.
39 அப்போது அவர், "விசுவாசதுரோகம் செய்கிற பொல்லாத தலைமு
றையினர் ஒரு அடையாளத்தை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்;
ஆனால், யோனா தீர்க்கதரிசியின் அடையாளத்தைத் தவிர வேறெந்த
அடையாளமும் அவர்களுக்குக் கொடுக்கப்படாது.[g] **40** ராத்திரி பகலாக
மூன்று நாட்களுக்கு யோனா ஒரு பெரிய மீனின் வயிற்றுக்குள் இருந்தது
போலவே[h] மனிதகுமாரனும் ராத்திரி பகலாக மூன்று நாட்களுக்குக் கல்ல
றைக்குள் இருப்பார்.[i] **41** நியாயத்தீர்ப்பின்போது நினிவே மக்கள் இந்தத்
தலைமுறையினரோடு எழுந்துவந்து இவர்களைக் கண்டனம் செய்வார்
கள்; ஏனென்றால், யோனா பிரசங்கித்த விஷயங்களைக் கேட்டு அவர்கள்
மனம் திருந்தினார்கள்.[j] ஆனால் இதோ! யோனாவைவிட பெரியவர் ஒரு
வர் இங்கே இருக்கிறார்.[k] **42** நியாயத்தீர்ப்பின்போது தென்தேசத்து ராணி
இந்தத் தலைமுறையினரோடு எழுந்துவந்து இவர்களைக் கண்டனம் செய்
வாள்; ஏனென்றால், அவள் சாலொமோனின் ஞானத்தைக் கேட்க பூமியின்
தொலைதூரப் பகுதியிலிருந்து வந்தாள்;[l] ஆனால், இதோ! சாலொமோனை
விட பெரியவர் ஒருவர் இங்கே இருக்கிறார்.[m]

43 ஒரு பேய் ஒரு மனுஷனைவிட்டுப் போகும்போது, ஓய்வெடுக்க
இடம் தேடி வறண்ட இடங்கள் வழியாக அலைந்து திரிகிறது; ஆனால்
எந்த இடமும் கிடைக்காமல்,[n] **44** 'நான் விட்டுவந்த என் வீட்டுக்கே திரும்
பிப் போவேன்' என்று சொல்கிறது; அது திரும்பிப் போகும்போது அந்த
வீடு காலியாகவும் நன்றாகப் பெருக்கி அலங்கரிக்கப்பட்டும் இருப்பதைப்
பார்க்கிறது. **45** பின்பு, மறுபடியும் போய், தன்னைவிடப் பொல்லாத ஏழு
பேய்களைக் கூட்டிக்கொண்டு வருகிறது. அந்தப் பேய்கள் உள்ளே புகுந்து
அங்கேயே குடியிருக்கின்றன; அந்த மனுஷனுடைய நிலைமை முதலில்
இருந்ததைவிட இன்னும் மோசமாகிறது.[o] இப்படித்தான், இந்தப் பொல்லாத
தலைமுறையினருக்கும் நடக்கும்" என்று சொன்னார்.

46 கூட்டத்தாரிடம் அவர் இதையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்த
போது, அவருடைய அம்மாவும் சகோதரர்களும்[p] அவரோடு பேசுவதற்காக
வெளியே நின்றுகொண்டிருந்தார்கள்.[q] **47** அப்போது ஒருவர் அவரிடம்,
"உங்கள் அம்மாவும் உங்கள் சகோதரர்களும் உங்களோடு பேசுவதற்
காக வெளியே நின்றுகொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னார். **48** இயேசு

அதி. 12
a மத் 7:17, லூ 6:43
b மத் 3:7, மத் 23:33
c மத் 15:11
d லூ 6:45, யாக் 3:6
e பிர 12:14, ரோ 14:12
f மத் 16:1
g மத் 16:4, லூ 11:29-32
h யோனா 1:17
i மத் 16:21, மத் 17:23, மத் 27:63, லூ 24:46
j யோனா 3:5
k லூ 11:30
l 1ரா 10:1, 2நா 9:1
m மத் 12:6, லூ 11:31
n லூ 11:24-26
o எபி 6:4, 6, 2பே 2:20
p மத் 13:55, யோவா 2:12, அப் 1:14, 1கொ 9:5, கலா 1:19
q மாற் 3:31-35

அவரைப் பார்த்து, “யார் என்னுடைய அம்மா, யார் என்னுடைய சகோதரர்
கள்?” என்று கேட்டார்; **49** பின்பு தன்னுடைய சீஷர்கள் பக்கமாகக்
கையை நீட்டி, “இதோ! என் அம்மாவும் சகோதரர்களும் இவர்கள்தான்![a]
50 என்னுடைய பரலோகத் தகப்பனுடைய விருப்பத்தின்படி* நடக்கிறவர்
தான் என் சகோதரர், என் சகோதரி, என் அம்மா”[b] என்று சொன்னார்.

13 அதே நாளில் இயேசு வீட்டைவிட்டு வெளியே போய்க் கட
லோரமாக உட்கார்ந்திருந்தார். **2** மக்கள் கூட்டம் கூட்டமாக
அங்கே திரண்டு வந்ததால், அவர் ஒரு படகில் ஏறி உட்கார்ந்தார்; அந்த
மக்கள் எல்லாரும் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தார்கள்.[c] **3** அப்
போது, உவமைகள் மூலம் அவர்களுக்கு நிறைய விஷயங்களைச் சொன்
னார்.[d] “இதோ! விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் போனான்.[e] **4** அவன்
தூவிய சில விதைகள் பாதையோரத்தில் விழுந்தன, பறவைகள் வந்து
அவற்றைக் கொத்தித் தின்றன.[f] **5** வேறு சில விதைகள் மண் அதிகமாக
இல்லாத பாறை நிலத்தில் விழுந்தன; அவை உடனே முளைத்தபோதிலும்,
மண் ஆழமாக இல்லாததால் வேர்பிடிக்கவில்லை.[g] **6** அதனால், வெயில்
வந்தபோது அவை வாடி வதங்கி காய்ந்துபோயின. **7** இன்னும் சில விதை
கள் முட்செடிகள் இருக்கிற நிலத்தில் விழுந்தன; அந்த முட்செடிகள் பெரி
தாக வளர்ந்து அவற்றை நெருக்கிப்போட்டன.[h] **8** மற்ற விதைகளோ நல்ல
நிலத்தில் விழுந்து, விளைச்சல் தர ஆரம்பித்தன; அவற்றில் சில 100 மடங்
காகவும், வேறு சில 60 மடங்காகவும், இன்னும் சில 30 மடங்காகவும் பலன்
தந்தன.[i] **9** காதுள்ளவன் கவனித்துக் கேட்கட்டும்”[j] என்று சொன்னார்.

10 சீஷர்கள் அவரிடம் வந்து, “ஏன் அவர்களிடம் உவமைகளால்
பேசுகிறீர்கள்?” என்று கேட்டார்கள்.[k] **11** அதற்கு அவர், “பரலோக அர
சாங்கத்தைப் பற்றிய பரிசுத்த ரகசியங்களைப் புரிந்துகொள்ளும் பாக்கியம்
உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது,[l] ஆனால் அவர்களுக்குக் கொடுக்
கப்படவில்லை. **12** இருக்கிறவனுக்கு அதிகமாகக் கொடுக்கப்படும்,
அவன் ஏராளமாகப் பெற்றுக்கொள்வான்; ஆனால், இல்லாதவனிடமிருந்து
இருப்பதும் எடுத்துக்கொள்ளப்படும்.[m] **13** அவர்கள் பார்த்தும் பார்க்கா
தவர்களாகவும், கேட்டும் கேட்காதவர்களாகவும், புரிந்துகொள்ளாதவர்களா
கவும் இருக்கிறார்கள்.[n] அதனால்தான், நான் அவர்களிடம் உவமைகளின்
மூலம் பேசுகிறேன். **14** ஏசாயா சொன்ன இந்தத் தீர்க்கதரிசனம் அவர்க
ளிடம் நிறைவேறுகிறது: ‘காதால் கேட்டாலும் ஒருபோதும் புரிந்துகொள்ள
மாட்டீர்கள்; கண்ணால் பார்த்தாலும் ஒருபோதும் உணர்ந்துகொள்ள மாட்
டீர்கள்.[o] **15** இந்த ஜனங்கள் கண்களால் பார்க்காமலும் காதுகளால் கேட்
காமலும் இதயத்தால் உணராமலும் என்னிடம் திரும்பி வராமலும் நான்
அவர்களைக் குணப்படுத்தாமலும் இருக்கும்படி, அவர்களுடைய இதயம்
இறுகிப்போயிருக்கிறது; இவர்கள் தங்கள் காதால் மந்தமாய்க் கேட்கிறார்
கள், தங்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள்.’[p]

16 ஆனால், உங்களுடைய கண்கள் பார்ப்பதாலும் உங்களுடைய காது
கள் கேட்பதாலும் நீங்கள் சந்தோஷமானவர்கள்.[q] **17** உண்மையாகவே
உங்களுக்குச் சொல்கிறேன், நிறைய தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்
கள் பார்க்கிறவற்றைப் பார்க்க ஆசைப்பட்டும் பார்க்கவில்லை;[r] நீங்கள்
கேட்கிறவற்றைக் கேட்க ஆசைப்பட்டும் கேட்கவில்லை.

12:50 * வே.வா., “சித்தத்தின்படி.”

அதி. 12
a யோவா 20:17, எபி 2:11
b மாற் 3:35, லூ 8:21

அதி. 13
c மாற் 4:1
d மத் 13:34
e மாற் 4:3-9, லூ 8:4-8
f மத் 13:19
g மத் 13:20, 21
h மத் 13:22, மாற் 4:18, 19, லூ 8:14
i மத் 13:23, மாற் 4:8, லூ 8:8
j மத் 11:15
k மாற் 4:10, 11, லூ 8:9, 10
l 1கொ 2:9, 10, எபே 1:9-12, கொலோ 1:26, 27
m மத் 25:29, மாற் 4:25, லூ 8:18
n ஏசா 6:10, மாற் 4:12
o யோவா 12:40, ரோ 11:8, 2கொ 3:14
p ஏசா 6:9, 10, மாற் 4:12, அப் 28:26, 27
q லூ 10:23, 24
r யோவா 8:56, எபே 3:5, 1பே 1:10

18 இப்போது, விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் அர்த்தத்தைக்
கவனித்துக் கேளுங்கள்.[a] **19** பாதையோர நிலத்தைப் போல் இருப்ப
வர் பரலோக அரசாங்கத்தைப் பற்றிய செய்தியைக் கேட்டும் அதனுடைய
அர்த்தத்தைப் புரிந்துகொள்வதில்லை; பொல்லாதவன்[b] வந்து அவரு
டைய இதயத்தில் விதைக்கப்பட்டதைக் கொத்திக்கொண்டு போய்விடுகி
றான்.[c] **20** பாறை நிலத்தைப் போல் இருப்பவர் அந்தச் செய்தியைக்
கேட்டு, அதை உடனே சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்.[d] **21** ஆனால்,
அது அவருக்குள் வேர்விடுவதில்லை; அதனால், அவர் கொஞ்சக் காலத்
துக்கு மட்டுமே நிலைத்திருக்கிறார்; அந்தச் செய்தியின் காரணமாக உபத்
திரவமோ துன்புறுத்தலோ வந்தவுடன் விசுவாசத்தை விட்டுவிடுகிறார்.
22 முட்செடிகள் இருக்கிற நிலத்தைப் போல் இருப்பவர் அந்தச் செய்தி
யைக் கேட்கிறார், ஆனால் இந்த உலகத்தின்* கவலையும்[e] செல்வத்தின்
வஞ்சக சக்தியும் அந்தச் செய்தியை நெருக்கிப் போடுவதால் அது பலன்
கொடுப்பதில்லை.[f] **23** நல்ல நிலத்தைப் போல் இருப்பவரோ அந்தச்
செய்தியைக் கேட்டு அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு பலன் தருகிறார்;
அவர் 100 மடங்காகவும், இன்னொருவர் 60 மடங்காகவும், வேறொருவர்
30 மடங்காகவும் பலன் தருகிறார்கள்”[g] என்று சொன்னார்.

24 பின்பு, அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்:
“பரலோக அரசாங்கம், நல்ல விதையைத் தன் வயலில் விதைத்த ஒரு
மனுஷரைப் போல் இருக்கிறதென்று சொல்லலாம். **25** ஆட்கள் தூங்கிக்
கொண்டிருந்தபோது, அவருடைய எதிரி வந்து கோதுமைப் பயிர்களுக்கு
இடையே களைகளை விதைத்துவிட்டுப் போய்விட்டான். **26** பயிர்கள்
வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் வளர்ந்திருந்தன. **27** அதனால்,
அந்த மனுஷருடைய வேலைக்காரர்கள் அவரிடம் வந்து, ‘எஜமானே,
நீங்கள் வயலில் நல்ல விதையைத்தானே விதைத்தீர்கள்? அப்படியிருக்கும்
போது, களைகள் எப்படி வளர்ந்தன?’ என்று கேட்டார்கள். **28** ‘இது எதிரி
யின் வேலை’[h] என்று அவர் சொன்னார். அதற்கு அவர்கள், ‘நாங்கள்
போய் அவற்றைப் பிடுங்கிப் போடலாமா?’ என்று கேட்டார்கள். **29** அப்
போது அவர், ‘வேண்டாம், அப்படிச் செய்யாதீர்கள்; களைகளைப்
பிடுங்கும்போது தெரியாமல் கோதுமைப் பயிர்களையும் பிடுங்கிவிடுவீர்
கள். **30** அதனால் அறுவடைவரை இரண்டும் சேர்ந்தே வளரட்டும்; அறு
வடைக் காலம் வந்ததும் அறுவடை செய்கிறவர்களிடம், “முதலில் களைக
ளைப் பிடுங்கி அவற்றை எரித்துப்போடுவதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்,
அதன் பின்பு கோதுமையை என்னுடைய களஞ்சியத்தில் சேர்த்து வையுங்
கள்”[i] என்று சொல்வேன்’ என்றார்.”

31 பின்பு, அவர் மற்றொரு உவமையை அவர்களிடம் சொன்னார்; “பர
லோக அரசாங்கம் கடுகு விதையைப் போல் இருக்கிறது; ஒருவன் அதை
எடுத்து தன்னுடைய வயலில் விதைத்தான்.[j] **32** அது எல்லா விதைகளை
யும்விட மிகச் சிறிய விதை; ஆனால், அது வளர்ந்த பின்பு எல்லா செடிக
ளையும்விட பெரிதாகி, வானத்துப் பறவைகள் வந்து அதன் கிளைகளில்
தங்கும் அளவுக்கு ஒரு மரமாகிறது” என்றார்.

33 பின்பு, அவர் வேறொரு உவமையையும் அவர்களுக்குச் சொன்
னார்; “பரலோக அரசாங்கம் புளித்த மாவைப் போல் இருக்கிறது;

அதி. 13
a மாற் 4:14
லூ 8:11
b 1பே 5:8
c மாற் 4:15
லூ 8:12
d மாற் 4:16, 17
லூ 8:13
e லூ 12:22
f மத் 6:21
மாற் 4:18, 19
மாற் 10:23
லூ 8:14
1தீ 6:9
2தீ 4:10
g மாற் 4:20
லூ 8:15
h மத் 13:38, 39
i வெளி 14:15
j மாற் 4:30-32
லூ 13:18, 19

13:22 * வே.வா., “சகாப்தத்தின்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

ஒரு பெண் அதை மூன்று பெரிய படி* மாவில் கலந்து வைத்தாள்; அந்த
மாவு முழுவதும் புளித்துப்போனது"[a] என்றார்.

34 திரண்டு வந்திருந்த மக்களிடம் உவமைகள் மூலமாகவே இவை
எல்லாவற்றையும் இயேசு சொன்னார். சொல்லப்போனால், உவமைகளைப்
பயன்படுத்தாமல் அவர்களிடம் அவர் பேசியதே இல்லை;[b] 35 "நான்
வாய் திறந்து உவமைகளாகவே பேசுவேன்; ஆரம்பத்திலிருந்து* மறைத்து
வைக்கப்பட்டுள்ள விஷயங்களை நான் அறிவிப்பேன்" என்று தீர்க்கதரிசி
யின் மூலம் சொல்லப்பட்டது[c] நிறைவேறும்படியே அப்படி நடந்தது.

36 பின்பு, அந்தக் கூட்டத்தாரை அவர் அனுப்பிவிட்டு வீட்டுக்குள்
போனார். அப்போது, சீஷர்கள் அவரிடம் வந்து, "வயலில் விதைக்கப்பட்ட
களைகளைப் பற்றிய உவமையை எங்களுக்கு விளக்குங்கள்" என்று கேட்
டார்கள். 37 அதற்கு அவர், "நல்ல விதையை விதைக்கிறவர், மனிதகுமா
ரன்; 38 வயல், இந்த உலகம்;[d] நல்ல விதை, கடவுளுடைய அரசாங்கத்தின்
மகன்கள்; களைகளோ, பொல்லாதவனின் மகன்கள்;[e] 39 அவற்றை
விதைத்த எதிரி, பிசாசு; அறுவடை, இந்தச் சகாப்தத்தின் கடைசிக் கட்டம்;*
அறுவடை செய்கிறவர்கள், தேவதூதர்கள். 40 அதனால், களைகளெல்
லாம் ஒன்றுசேர்க்கப்பட்டு நெருப்பில் போடப்படுவதுபோல் இந்தச் சகாப்
தத்தின் கடைசிக் கட்டத்திலும்* நடக்கும்.[f] 41 மனிதகுமாரன் தன்னுடைய
தூதர்களை அனுப்புவார்; மற்றவர்களைப் பாவம் செய்ய வைக்கிற எல்
லாரையும்* அக்கிரமம் செய்கிற எல்லாரையும் அவருடைய அரசாங்கத்தி
லிருந்து அவர்கள் பிரித்தெடுத்து, 42 கொழுந்துவிட்டு எரியும் சூளையில்
வீசிவிடுவார்கள்.[g] அங்கே அவர்கள் அழுது அங்கலாய்ப்பார்கள்.*
43 அந்தச் சமயத்தில், நீதிமான்கள் தங்களுடைய தகப்பனின் அரசாங்கத்
தில் சூரியனைப் போல் பிரகாசிப்பார்கள்.[h] காதுள்ளவன் கவனித்துக்
கேட்கட்டும்.

44 பரலோக அரசாங்கம் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்ட பொக்கிஷத்
தைப் போல் இருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டுபிடித்து, மறுபடியும்
அங்கே மறைத்து வைக்கிறான்; பின்பு சந்தோஷத்தோடு போய், தன்னிடம்
இருந்த எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தை வாங்குகிறான்.[i]

45 பரலோக அரசாங்கம் அருமையான முத்துக்களைத் தேடிப் பயணம்
செய்கிற வியாபாரியைப் போல் இருக்கிறது. 46 விலை உயர்ந்த ஒரு முத்
தைக் கண்டுபிடித்ததும், அவன் போய்த் தன்னிடம் இருந்த எல்லாவற்றை
யும் உடனடியாக விற்று அதை வாங்கிக்கொண்டான்.[j]

47 அதோடு, பரலோக அரசாங்கம், கடலில் வீசப்பட்டு எல்லா வகை
யான மீன்களையும் வாரிக்கொள்கிற இழுவலையைப் போல் இருக்கிறது.
48 வலை நிறைந்ததும் மீனவர்கள் அதைக் கடற்கரைக்கு இழுத்துக்கொண்
டுவந்து, அங்கே உட்கார்ந்து நல்ல மீன்களைக்[k] கூடைகளில் சேகரிப்பார்கள்,
ஆகாதவற்றையோ[l] தூக்கியெறிவார்கள். 49 அப்படியே இந்தச் சகாப்தத்
தின் கடைசிக் கட்டத்திலும்* நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டுப் போய்

13:33 *நே.மொ., "மூன்று சியா அளவு." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **13:35** *அல்லது, "உலகம் உண்டானதுமுதல்." **13:39, 40, 49** *சொல் பட்டியலைப் பாருங்கள். **13:41** *நே.மொ., "தடுக்கி விழவைக்கிற எல்லாவற்றையும்." **13:42** *நே.மொ., "பற்களை நறநறவென்று கடிப்பார்கள்." இது கோபத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் செயல்.

அதி. 13
a லூ 13:21
b மாற் 4:33, 34
c சங் 78:2
d மத் 24:14; ரோ 10:18; கொலோ 1:6
e யோவா 8:44
f மத் 13:30
g மத் 13:30
h நியா 5:31
i பிலி 3:7
j பிலி 3:8
k லேவி 11:9
l லேவி 11:12

நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைத் தனியாகப் பிரித்து,
50 கொழுந்துவிட்டு எரியும் சூளையில் அவர்களை வீசிவிடுவார்கள்.
அங்கே அவர்கள் அழுது அங்கலாய்ப்பார்கள்"* என்று சொன்னார்.

51 பின்பு, "இவை எல்லாவற்றின் அர்த்தத்தையும் நீங்கள் புரிந்துகொண்
டீர்களா?" என்று கேட்டார். அவர்கள், "புரிந்துகொண்டோம்" என்று சொன்
னார்கள். **52** அதற்கு அவர், "அப்படியானால் பரலோக அரசாங்கத்தைப்
பற்றிக் கற்றுக்கொண்டு* அதை மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கிற ஒவ்
வொருவரும், தன்னுடைய பொக்கிஷத்திலிருந்து புதியவற்றையும் பழைய
வற்றையும் வெளியே எடுக்கிற வீட்டு எஜமானைப் போல் இருக்கிறார்கள்"
என்று சொன்னார்.

53 இயேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்த பின்பு அந்த
இடத்தைவிட்டுப் போனார். **54** தன்னுடைய சொந்த ஊருக்கு[a] வந்த
பின்பு அங்கிருந்த ஜெபக்கூடத்தில் மக்களுக்குக் கற்பிக்க ஆரம்பித்தார்;
அப்போது அவர்கள் பிரமித்துப்போய், "இவனுக்கு எங்கிருந்து இவ்வளவு
ஞானம் வந்தது? இவனால் எப்படி இந்த அற்புதங்களைச் செய்ய முடிகி
றது?[b] **55** இவன் தச்சனுடைய மகன்தானே?[c] இவனுடைய அம்மா மரி
யாள்தானே? இவனுடைய சகோதரர்கள் யாக்கோபு, யோசே, சீமோன்,
யூதாஸ்தானே?[d] **56** இவனுடைய சகோதரிகளும் நம்முடைய ஊரில்
தானே இருக்கிறார்கள்? அப்படியிருக்கும்போது, இதெல்லாம் இவனுக்கு
எப்படி வந்தது?"[e] என்று சொல்லி, **57** அவர்மேல் விசுவாசம் வைக்க
மறுத்தார்கள்.[f] இயேசு அவர்களிடம், "ஒரு தீர்க்கதரிசிக்கு அவருடைய ஊரி
லும் வீட்டிலும் தவிர மற்ற எல்லா இடங்களிலும் மதிப்புக் கிடைக்கிறது"
என்று சொன்னார்.[g] **58** அவர்கள் விசுவாசம் வைக்காததால், அங்கே
நிறைய அற்புதங்களை அவர் செய்யவில்லை.

14 அந்தச் சமயத்தில், இயேசுவைப் பற்றிய செய்தியை மாகாண அதி
பதி ஏரோது* கேள்விப்பட்டான்.[h] **2** அவன் தன்னுடைய வேலை
யாட்களிடம், "இவர் யோவான் ஸ்நானகர்தான்.* இவர் உயிரோடு எழுப்பப்
பட்டிருக்கிறார், அதனால்தான் இவரால் அற்புதங்களைச் செய்ய
முடிகிறது"[i] என்று சொன்னான். **3** ஏரோது தன்னுடைய சகோதரன் பிலிப்
புவின் மனைவி ஏரோதியாளைப் பிரியப்படுத்துவதற்காக யோவானைப்
பிடித்து சங்கிலியால் கட்டி சிறையில் அடைத்திருந்தான்.[j] **4** ஏனென்றால்
யோவான் அவனிடம், "நீங்கள் அவளை வைத்திருப்பது சரியல்ல"[k]
என்று நிறைய தடவை சொல்லியிருந்தார்; **5** அதனால் ஏரோது அவரைக்
கொல்ல நினைத்தான், ஆனால் மக்கள் அவரை ஒரு தீர்க்கதரிசி என்று நம்
பியதால் அவர்களுக்குப் பயந்தான்.[l] **6** ஏரோதுவின் பிறந்தநாள்[m] கொண்
டாட்டத்தில், ஏரோதியாளின் மகள் அங்கிருந்த விருந்தாளிகள் முன்னால்
நடனம் ஆடினாள்; அதைப் பார்த்து ஏரோது மனம் குளிர்ந்துபோனான்.[n]
7 அதனால், அவள் என்ன கேட்டாலும் தருவதாக ஆணையிட்டுக் கொடுத்
தான். **8** அப்போது அவள் தன்னுடைய அம்மா தூண்டிவிட்டபடியே,
"யோவான் ஸ்நானகனின் தலையை ஒரு தட்டில் வைத்து எனக்குக்

அதி. 13
a மத் 2:23
b மாற் 6:1-6
c லூ 4:22; யோவா 6:42
d மத் 12:46; யோவா 2:12; அப் 1:14; 1கொ 9:5; கலா 1:19
e யோவா 7:15
f 1பே 2:7, 8
g மாற் 6:4; லூ 4:24; யோவா 4:44

அதி. 14
h மாற் 6:14; லூ 9:7-9; அப் 4:27
i மத் 16:13, 14; மாற் 6:16
j மாற் 6:17, 18; லூ 3:19, 20
k லேவி 18:16; லேவி 20:21
l மாற் 6:20; லூ 1:67, 76
m ஆதி 40:20-22
n மாற் 6:21-29

13:50 *நே.மொ., "பற்களை நறநறவென்று கடிப்பார்கள்." இது கோபத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் செயல். **13:52** *வே.வா., "கற்பிக்கப்பட்டு." **14:1** *அதாவது, "ஏரோது அந்திப்பா." சொல் பட்டியலைப் பாருங்கள். **14:2** *ஸ்நானகர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்.

கொடுங்கள்" என்று சொன்னாள்.[a] **9** அதைக் கேட்டு ராஜா துக்கம
டைந்தான்; ஆனாலும், விருந்தாளிகள் முன்னால் ஆணையிட்டுக் கொடுத்
திருந்ததால் அவள் விருப்பத்தை நிறைவேற்றச் சொல்லி உத்தரவிட்டான்.
10 உடனே ஆள் அனுப்பி, சிறையிலிருந்த யோவானின் தலையை வெட்
டச் செய்தான். **11** அவருடைய தலை ஒரு தட்டில் வைக்கப்பட்டு அந்தப்
பெண்ணிடம் கொடுக்கப்பட்டது; அவள் அதைத் தன் அம்மாவிடம் கொண்
டுபோய்க் கொடுத்தாள். **12** யோவானுடைய சீஷர்கள் வந்து அவருடைய
உடலை எடுத்துக்கொண்டுபோய் அடக்கம் செய்தார்கள்; பின்பு, இயேசு
விடம் வந்து விஷயத்தைச் சொன்னார்கள். **13** இயேசு இதைக் கேட்டதும்,
கொஞ்ச நேரம் தனியாக இருப்பதற்காகப் படகில் ஏறி, ஒதுக்குப்புறமான ஓர்
இடத்துக்குப் போனார்; ஆனால் மக்கள் இதைக் கேள்விப்பட்டு, தங்கள் நக
ரங்களிலிருந்து நடந்தே அவரிடம் போனார்கள்.[b]

14 அவர் அங்கே போய் இறங்கியபோது ஏராளமான மக்கள் திரண்டு
வந்திருந்ததைப் பார்த்து, மனம் உருகி,[c] அங்கிருந்த நோயாளிகளைக் குண
மாக்கினார்.[d] **15** சாயங்காலம் ஆனபோது சீஷர்கள் அவரிடம் வந்து,
"இது ஒதுக்குப்புறமான இடம், ரொம்ப நேரமும் ஆகிவிட்டது. அதனால்
இந்த மக்களை அனுப்பிவிடுங்கள். கிராமங்களுக்குப் போய் இவர்கள் ஏதா
வது வாங்கிச் சாப்பிடட்டும்"[e] என்று சொன்னார்கள். **16** அதற்கு இயேசு,
"இவர்கள் போக வேண்டியதில்லை; நீங்களே இவர்களுக்கு ஏதாவது சாப்
பிடக் கொடுங்கள்" என்று சொன்னார். **17** அதற்கு அவர்கள், "ஐந்து
ரொட்டிகளையும் இரண்டு மீன்களையும் தவிர எங்களிடம் வேறொன்றும்
இல்லை" என்று சொன்னார்கள். **18** அப்போது அவர், "அவற்றை என்னி
டம் கொண்டுவாருங்கள்" என்று சொன்னார். **19** அதன் பின்பு, புல்தரை
யில் உட்காரும்படி கூட்டத்தாரிடம் சொல்லிவிட்டு அந்த ஐந்து ரொட்டிக
ளையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தைப் பார்த்து, ஜெபம்
செய்தார்.*[f] பின்பு, ரொட்டிகளைப் பிட்டு சீஷர்களிடம் கொடுத்தார், அவர்
கள் அதைக் கூட்டத்தாருக்குக் கொடுத்தார்கள். **20** எல்லாரும் திருப்தியா
கச் சாப்பிட்டார்கள்; மீதியிருந்த ரொட்டித் துண்டுகளை 12 கூடைகள்
நிறைய அவர்கள் சேகரித்தார்கள்.[g] **21** இத்தனைக்கும், பெண்களையும்
சின்னப் பிள்ளைகளையும் தவிர, சுமார் 5,000 ஆண்கள் சாப்பிட்டிருந்தார்
கள்.[h] **22** பின்பு, கூட்டத்தாரை அவர் அனுப்ப ஆரம்பித்தார்; அதோடு,
உடனடியாகப் படகில் ஏறி தனக்கு முன்பே அக்கரைக்குப் போகும்படி
சீஷர்களை அனுப்பினார்.[i]

23 கூட்டத்தாரை அனுப்பிய பின்பு, ஜெபம் செய்வதற்காகத் தனியே
ஒரு மலைக்கு அவர் போனார்.[j] பொழுது சாய்ந்தபோது அவர் அங்கே
தனியாக இருந்தார். **24** இதற்குள், படகு கரையிலிருந்து ரொம்பத் தூரம்*
போயிருந்தது. எதிர்க்காற்று வீசியதால் அது அலைகளினால் அலைக்கழிக்
கப்பட்டது; **25** நான்காம் ஜாமத்தில்,* அவர்களை நோக்கி அவர் கடல்
மேல் நடந்து வந்தார். **26** அவர் கடல்மேல் நடந்து வருவதை சீஷர்கள்
பார்த்தபோது கலக்கமடைந்தார்கள்; "ஏதோ மாய உருவம்!" என்று சொல்லி
அலறினார்கள். **27** உடனே இயேசு அவர்களிடம், "தைரியமாக இருங்கள்,

---

14:19 *நே.மொ., "அவற்றை ஆசீர்வதித்தார்." **14:24** *நே.மொ., "பல ஸ்டேடியா." ஒரு ஸ்டேடியம் என்பது 185 மீ. **14:25** *அதாவது, "அதிகாலை சுமார் 3 மணியிலிருந்து சுமார் 6 மணிக்கு இடைப்பட்ட சமயத்தில்."

அதி. 14
a மாற் 6:25
b மாற் 6:31-33 லூ 9:10
c மத் 9:36 மத் 15:32 மாற் 1:41 மாற் 6:34 லூ 7:13 எபி 2:17 எபி 5:2
d லூ 9:11
e மாற் 6:35-44 லூ 9:12-17 யோவா 6:5-13
f மத் 15:36 மாற் 6:41 லூ 9:16
g 2ரா 4:42-44 மாற் 6:42, 43 மாற் 8:8 லூ 9:17 யோவா 6:12, 13
h மாற் 6:44 லூ 9:14 யோவா 6:10
i மாற் 6:45-52 யோவா 6:16-21
j மாற் 6:46 லூ 6:12 லூ 9:18

நான்தான்; பயப்படாதீர்கள்” என்று சொன்னார்.[a] **28** அப்போது பேதுரு
அவரிடம், “எஜமானே, நீங்களா? அப்படியானால், நானும் தண்ணீர்மேல்
நடந்து உங்களிடம் வருவதற்குக் கட்டளையிடுங்கள்” என்று சொன்னார்.
29 அதற்கு அவர், “வா!” என்று சொன்னார். பேதுருவும் படகிலிருந்து இறங்
கித் தண்ணீர்மேல் நடந்து இயேசுவை நோக்கிப் போனார். **30** ஆனால்,
புயல்காற்றைப் பார்த்ததும் பயந்துபோய்த் தண்ணீரில் மூழ்க ஆரம்பித்
தார்; அப்போது, “எஜமானே, என்னைக் காப்பாற்றுங்கள்!” என்று அலறினார்.
31 உடனே இயேசு தன் கையை நீட்டி அவரைப் பிடித்துக்கொண்டு, “விசு
வாசத்தில் குறைவுபட்டவனே, ஏன் சந்தேகப்பட்டாய்?”[b] என்று கேட்டார்.
32 அவர்கள் படகில் ஏறிய பிறகு புயல்காற்று அடங்கியது. **33** படகில்
இருந்தவர்கள் அவர் முன்னால் தலைவணங்கி, “நீங்கள் உண்மையிலேயே
கடவுளுடைய மகன்தான்” என்று சொன்னார்கள். **34** பின்பு, அவர்கள் கட
லைக் கடந்து, கெனேசரேத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.[c]

35 அந்தப் பகுதியிலிருந்த ஆட்கள் அவரை அடையாளம் கண்டு
கொண்டதும், சுற்றுவட்டாரத்தில் இருந்த எல்லா இடங்களுக்கும் செய்தி
அனுப்பினார்கள். அதனால், நோயாளிகள் எல்லாரையும் மக்கள் அவரிடம்
கூட்டிக்கொண்டு வந்தார்கள். **36** அவருடைய மேலங்கியின் ஓரத்தையா
வது தொட அனுமதிக்கும்படி அவரிடம் கெஞ்சிக் கேட்டார்கள்.[d] அப்படித்
தொட்ட அத்தனை பேரும் முழுமையாகக் குணமானார்கள்.

15 பின்பு, எருசலேமிலிருந்து பரிசேயர்களும் வேத அறிஞர்களும்
இயேசுவிடம் வந்து,[e] **2** “உன்னுடைய சீஷர்கள் ஏன் முன்னோர்
களின் பாரம்பரியத்தை மீறுகிறார்கள்? சாப்பிடுவதற்கு முன்னால் அவர்கள்
கை கழுவுவதில்லையே”*[f] என்று சொன்னார்கள்.

3 அதற்கு அவர், “உங்களுடைய பாரம்பரியத்தால் ஏன் கடவுளுடைய
கட்டளையை மீறுகிறீர்கள்?[g] **4** உதாரணமாக, ‘உங்கள் அப்பாவுக்கும்
அம்மாவுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும்’[h] என்றும், ‘அப்பாவையோ
அம்மாவையோ கேவலமாகப் பேசுகிற* எவனும் கொல்லப்பட வேண்
டும்’[i] என்றும் கடவுள் சொன்னார். **5** ஆனால், ‘ஒருவன் தன் அப்பா
விடமோ அம்மாவிடமோ, “என்னிடம் இருப்பதையெல்லாம் ஏற்கெனவே
கடவுளுக்கு அர்ப்பணித்துவிட்டேன், அதனால் உங்களுக்கு என்னால்
உதவி செய்ய முடியாது”[j] என்று சொல்லிவிட்டால், **6** அதன்பின் அவன்
தன்னுடைய அப்பாவுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியதே இல்லை’
என்று நீங்கள் சொல்கிறீர்கள். இப்படி, உங்களுடைய பாரம்பரியத்தால்
கடவுளுடைய வார்த்தையை மதிப்பற்றதாக்கிவிடுகிறீர்கள்.[k] **7** வெளிவே
ஷக்காரர்களே, உங்களைப் பற்றி ஏசாயா சரியாகத்தான் இப்படித் தீர்க்க
தரிசனம் சொல்லியிருக்கிறார்:[l] **8** ‘இந்த ஜனங்கள் என்னை உதட்டளவில்
புகழ்கிறார்கள். ஆனால், இவர்களுடைய இதயம் என்னைவிட்டுத் தூரமாக
இருக்கிறது. **9** இவர்கள் என்னை வணங்குவது வீண், ஏனென்றால் மனு
ஷர்களுடைய கோட்பாடுகளைத்தான் இவர்கள் கற்றுக்கொடுக்கிறார்கள்’”[m]
என்று சொன்னார். **10** பின்பு, கூட்டத்தாரைத் தன் பக்கத்தில் வரச் சொல்லி,
“நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்
ளுங்கள்.[n] **11** ஒரு மனுஷனுடைய வாய்க்குள் போகிற எதுவும் அவனைத்

15:2 *யூத பாரம்பரியத்தின்படி தூய்மைச் சடங்கு செய்யாததைக் குறிக்கிறது. **15:4** *வே.வா., “சபித்துப் பேசுகிற.”

அதி. 14
a மாற் 6:50; யோவா 6:20
b மத் 6:30; மத் 8:26; மத் 28:16, 17; யாக் 1:6
c மாற் 6:53-56
d மத் 9:20, 21; மாற் 3:10; லூ 6:19

அதி. 15
e மாற் 7:1, 2
f லூ 11:38; யோவா 2:6
g மத் 15:9; மாற் 7:8-13; கொலோ 2:8
h யாத் 20:12; உபா 5:16; எபே 6:2
i யாத் 21:17; லேவி 20:9
j மாற் 7:11, 12
k மாற் 7:13
l மாற் 7:6
m ஏசா 29:13; மாற் 7:7
n மாற் 7:14

தீட்டுப்படுத்தாது; அவனுடைய வாயிலிருந்து வெளியே வருவதுதான் அவ
னைத் தீட்டுப்படுத்தும்”[a] என்று சொன்னார்.

12 பின்பு சீஷர்கள் அவரிடம் வந்து, “நீங்கள் சொன்னதைக் கேட்டு பரி
சேயர்கள் கோபமாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?”[b]
என்று கேட்டார்கள். **13** அதற்கு அவர், “என் பரலோகத் தகப்பன்
நடாத எந்தச் செடியும் வேரோடு பிடுங்கப்படும். **14** அவர்களை விடுங்
கள். அவர்கள் குருட்டு வழிகாட்டிகள். குருடனுக்குக் குருடன் வழிகாட்டி
னால் இரண்டு பேருமே குழியில்தான் விழுவார்கள்”[c] என்று சொன்னார்.
15 அப்போது பேதுரு அவரிடம், “அந்த உவமையை எங்களுக்குக் கொஞ்
சம் விளக்கிச் சொல்லுங்கள்” என்று கேட்டார். **16** அதற்கு அவர், “நீங்க
ளுமா இன்னும் புரிந்துகொள்ளவில்லை?[d] **17** ஒருவனுடைய வாய்க்குள்
போகிற எல்லாமே வயிற்றுக்குள் போய் பின்பு கழிப்பிடத்துக்குப் போய்
விடுகிறது என்பது உங்களுக்குத் தெரியாதா? **18** ஆனால், வாயிலிருந்து
வருவதெல்லாம் இதயத்திலிருந்து வருகின்றன; அவைதான் ஒரு மனுஷ
னைத் தீட்டுப்படுத்துகின்றன.[e] **19** உதாரணமாக, பொல்லாத யோசனை
கள்,[f] கொலை, மணத்துணைக்குத் துரோகம், பாலியல் முறைகேடு,* திருட்டு,
பொய் சாட்சி, நிந்தனை என எல்லா தீமைகளும் இதயத்திலிருந்தே வருகின்
றன. **20** இவைதான் ஒரு மனுஷனைத் தீட்டுப்படுத்துகின்றன; கை கழுவா
மல்* சாப்பிடுவது அவனைத் தீட்டுப்படுத்தாது” என்று சொன்னார்.

21 பின்பு, இயேசு அங்கிருந்து புறப்பட்டு தீரு, சீதோன் பகுதிக்குப்
போனார்.[g] **22** அந்தப் பகுதியைச் சேர்ந்த பெனிக்கேயப் பெண் ஒருத்தி
அவரிடம் வந்து, “எஜமானே, தாவீதின் மகனே, எனக்கு இரக்கம் காட்டுங்
கள்; என்னுடைய மகளைப் பேய் பிடித்து ஆட்டுகிறது”[h] என்று கதறினாள்.
23 ஆனால், இயேசு அவளிடம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அத
னால், அவருடைய சீஷர்கள் அவரிடம் வந்து, “இவள் நம் பின்னால்
கதறிக்கொண்டே வருகிறாள், இவளை அனுப்பிவிடுங்கள்” என்று கேட்
டுக்கொண்டார்கள். **24** அதற்கு அவர், “கடவுள் என்னை எல்லா மக்களி
டமும் அனுப்பவில்லை, வழிதவறிப்போன ஆடுகளைப் போல் இருக்
கிற இஸ்ரவேல் மக்களிடம்தான் அனுப்பியிருக்கிறார்”[i] என்று சொன்னார்.
25 அப்போது, அந்தப் பெண் அவர் முன்னால் மண்டிபோட்டு,* “ஐயா,
எனக்கு உதவி செய்யுங்கள்!” என்று கேட்டாள். **26** அதற்கு அவர், “பிள்
ளைகளின் ரொட்டியை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது சரியல்ல”
என்று சொன்னார். **27** அவளோ, “உண்மைதான், ஐயா; ஆனால், எஜமா
னுடைய மேஜையிலிருந்து விழுகிற துணுக்குகளை நாய்க்குட்டிகள் சாப்பி
டுமே”[j] என்று சொன்னாள். **28** அப்போது இயேசு, “பெண்ணே, உனக்கு
எவ்வளவு விசுவாசம்! நீ விரும்புகிறபடியே நடக்கட்டும்” என்று சொன்னார்.
அந்த நொடியே அவளுடைய மகள் குணமானாள்.

29 இயேசு அங்கிருந்து புறப்பட்டு கலிலேயா கடலுக்குப் பக்கத்தில் வந்
தார்;[k] பின்பு, ஒரு மலைமேல் ஏறி அங்கே உட்கார்ந்தார். **30** அப்போது,
மக்கள் கூட்டம் கூட்டமாக அவரிடம் வந்தார்கள்; நடக்க முடியாதவர்களை
யும் கைகால் ஊனமானவர்களையும் பார்வை இல்லாதவர்களையும் பேச
முடியாதவர்களையும் இன்னும் பல நோயாளிகளையும் அவருடைய கால

15:19 * சொல் பட்டியலைப் பாருங்கள். **15:20** * யூத பாரம்பரியத்தின்படி தூய்மைச் சடங்கு செய்யாததைக் குறிக்கிறது. **15:25** * வே.வா., “தலைவணங்கி.”

அதி. 15

a மாற் 7:15
எபே 4:29
யாக் 3:6

b மாற் 7:17

c மத் 23:15, 16
லூ 6:39

d மாற் 7:18-23

e மாற் 7:20

f ஆதி 8:21
எரே 17:9

g மாற் 7:24

h மாற் 7:25-30

i ஏசா 53:6
மத் 10:5, 6
அப் 3:26
அப் 13:46
ரோ 15:8

j மாற் 7:28

k மாற் 7:31

டியில் கொண்டுவந்து விட்டார்கள்; அவர்களை அவர் குணமாக்கினார்.[a] **31** பேச முடியாதவர்கள் பேசுவதையும், கைகால் ஊனமானவர்கள் குணமானதையும், நடக்க முடியாதவர்கள் நடப்பதையும், பார்க்க முடியாதவர்கள் பார்ப்பதையும் கூட்டத்தார் கண்டு பிரமித்துப்போய், இஸ்ரவேலின் கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.[b]

32 பின்பு, இயேசு தன்னுடைய சீஷர்களைக் கூப்பிட்டு, “இந்த மக்களைப் பார்க்கும்போது என் மனம் உருகுகிறது;[c] இவர்கள் மூன்று நாட்களாக என்னோடு இருக்கிறார்கள், சாப்பிடுவதற்கும் இவர்களிடம் ஒன்றும் இல்லை. இவர்களைப் பட்டினியாக அனுப்ப எனக்கு விருப்பமில்லை; அப்படி அனுப்பினால் அவர்கள் ஒருவேளை வழியிலேயே மயங்கி விழுந்துவிடலாம்”[d] என்று சொன்னார். **33** அதற்கு சீஷர்கள், “ஒதுக்குப்புறமான இந்த இடத்தில் இத்தனை பேருக்குத் தேவையான ரொட்டிகளை எங்கிருந்து வாங்க முடியும்?”[e] என்று கேட்டார்கள். **34** அப்போது இயேசு, “உங்களிடம் எத்தனை ரொட்டிகள் இருக்கின்றன?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “ஏழு ரொட்டிகளும் சில சிறிய மீன்களும் இருக்கின்றன” என்று சொன்னார்கள். **35** அப்போது, தரையில் உட்காரும்படி கூட்டத்தாரிடம் அவர் சொன்னார்; **36** பின்பு, அந்த ஏழு ரொட்டிகளையும் மீன்களையும் எடுத்து, கடவுளுக்கு நன்றி சொல்லி, அவற்றைப் பிட்டு, சீஷர்களிடம் கொடுத்தார். சீஷர்கள் கூட்டத்தாருக்குக் கொடுத்தார்கள்.[f] **37** அவர்கள் எல்லாரும் திருப்தியாகச் சாப்பிட்டார்கள்; அதன் பின்பு, மீதியான ரொட்டித் துண்டுகளை ஏழு பெரிய கூடைகள் நிறைய சேகரித்தார்கள்.[g] **38** இத்தனைக்கும், பெண்களையும் சின்னப் பிள்ளைகளையும் தவிர, 4,000 ஆண்கள் சாப்பிட்டிருந்தார்கள். **39** கடைசியில், அவர் கூட்டத்தாரை அனுப்பிவிட்டு மக்தலா என்ற பகுதிக்குப் படகில் ஏறிப்போனார்.[h]

16 பரிசேயர்களும் சதுசேயர்களும் அவரைச் சோதிப்பதற்காக அவரிடம் வந்து, வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைக் காட்டச் சொல்லிக் கேட்டார்கள்.[i] **2** அதற்கு அவர், “சாயங்கால நேரத்தில், ‘வானம் சிவந்திருக்கிறது, அதனால் வானிலை நன்றாக இருக்கும்’ என்று சொல்கிறீர்கள்; **3** காலை நேரத்தில், ‘வானம் சிவந்து மேகமூட்டமாக இருக்கிறது, இன்றைக்குக் காற்றுடன்கூடிய மழை வரும்’ என்று சொல்கிறீர்கள். வானத்தைப் பார்த்து வானிலை எப்படி இருக்குமென்று உங்களால் சொல்ல முடிகிறது, ஆனால் காலங்களின் அடையாளங்களைப் பார்த்து உங்களால் அர்த்தம் சொல்ல முடியவில்லை. **4** விசுவாசதுரோகம் செய்கிற பொல்லாத தலைமுறையினர் ஒரு அடையாளத்தைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள்; ஆனால், யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறெந்த அடையாளமும் அவர்களுக்குக் கொடுக்கப்படாது”[j] என்று சொன்னார். அதன் பின்பு, அவர்களைவிட்டு விலகிப்போனார்.

5 சீஷர்கள் அக்கரைக்குப் போனார்கள், ஆனால் ரொட்டிகளை எடுத்துக்கொண்டுபோக மறந்துவிட்டார்கள்.[k] **6** இயேசு அவர்களிடம், “பரிசேயர்கள் சதுசேயர்களுடைய புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருங்கள்”[l] என்று சொன்னார். **7** அப்போது அவர்கள், “நாம் ரொட்டியை எடுக்காமல் வந்துவிட்டோமே” என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். **8** இயேசு இதைத் தெரிந்துகொண்டு, “விசுவாசத்தில் குறைவுபடுகிறவர்களே, ரொட்டியைக் கொண்டுவராததைப் பற்றி ஏன்

அதி. 15
a ஏசா 35:5; மத் 19:2; மாற் 3:10
b மத் 9:33
c மத் 14:14; மாற் 6:34
d மாற் 8:1-9
e 2ரா 4:42-44
f மத் 14:19
g மாற் 8:8, 9
h மாற் 8:10

அதி. 16
i மத் 12:38; மாற் 8:11; லூ 11:16
j யோனா 1:17; மத் 12:39; மாற் 8:12; லூ 11:29
k மாற் 8:13-21
l மாற் 8:15; லூ 12:1

பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? **9** இன்னுமா உங்களுக்குப் புரியவில்லை?
ஐந்து ரொட்டிகளை 5,000 ஆண்களுக்குக் கொடுத்தபோது மீதியானதை எத்
தனை கூடைகளில் சேகரித்தீர்கள் என்பது உங்களுக்கு ஞாபகம் இல்
லையா?[a] **10** ஏழு ரொட்டிகளை 4,000 ஆண்களுக்குக் கொடுத்தபோது
மீதியானதை எத்தனை பெரிய கூடைகளில் சேகரித்தீர்கள் என்பதும் உங்க
ளுக்கு ஞாபகம் இல்லையா?[b] **11** நான் ரொட்டிகளைப் பற்றிப் பேச
வில்லை என்பது ஏன் உங்களுக்குப் புரியவில்லை? பரிசேயர்கள் சதுசேயர்
களுடைய புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்”[c] என்று
சொன்னார். **12** ரொட்டி செய்யப் பயன்படுத்தப்படும் புளித்த மாவைக்
குறித்து அல்ல, ஆனால் பரிசேயர்கள் சதுசேயர்களுடைய போதனையைக்
குறித்துதான் எச்சரிக்கையாக இருக்கும்படி அவர் சொன்னார் என்பதை அப்
போது அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

13 பிலிப்புச் செசரியாவில் இருக்கிற பகுதிகளுக்கு இயேசு வந்தபோது,
“மனிதகுமாரனை யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?”[d] என்று சீஷர்களிடம்
கேட்டார். **14** அதற்கு அவர்கள், “சிலர் யோவான் ஸ்நானகர்* என்றும்,[e]
வேறு சிலர் எலியா என்றும்,[f] இன்னும் சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரி
சிகளில் ஒருவர் என்றும் சொல்கிறார்கள்” என்றார்கள். **15** “ஆனால், நீங்
கள் என்னை யாரென்று சொல்கிறீர்கள்?” என்று அவர் கேட்டார்.
16 அதற்கு சீமோன் பேதுரு, “நீங்கள் கிறிஸ்து,[g] உயிருள்ள கடவுளுடைய
மகன்”[h] என்று சொன்னார். **17** அப்போது இயேசு, “யோனாவின் மக
னான சீமோனே, நீ சந்தோஷமானவன். ஏனென்றால், இதை உனக்கு
எந்த மனுஷனும்* வெளிப்படுத்தவில்லை, என் பரலோகத் தகப்பன்தான்
வெளிப்படுத்தியிருக்கிறார்.[i] **18** நான் உனக்குச் சொல்கிறேன், நீ பேதுரு;[j]
நான் என்னுடைய சபையை இந்தக் கற்பாறைமேல்[k] கட்டுவேன்; கல்லறை
யின் வாசல்களால் அதை ஜெயிக்க முடியாது. **19** பரலோக அரசாங்கத்
தின் சாவிகளை நான் உனக்குத் தருவேன்; பூமியில் நீ பூட்டுவதெல்லாம்
பரலோகத்தில் ஏற்கெனவே பூட்டப்பட்டிருக்கும், பூமியில் நீ திறப்பதெல்
லாம் பரலோகத்தில் ஏற்கெனவே திறக்கப்பட்டிருக்கும்”* என்று சொன்னார்.
20 பின்பு, தான் கிறிஸ்து என்பதை யாரிடமும் சொல்ல வேண்டாமென்று
சீஷர்களுக்குக் கண்டிப்புடன் சொன்னார்.[l]

21 அன்றுமுதல் இயேசு தன்னுடைய சீஷர்களிடம், தான் எருசலேமுக்
குப் போய் பெரியோர்களாலும்* முதன்மை குருமார்களாலும் வேத அறி
ஞர்களாலும் பல பாடுகள் பட்டு, கொலை செய்யப்பட வேண்டும், பின்பு
மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பப்பட வேண்டும்[m] என்பதை விளக்கிச்
சொல்ல ஆரம்பித்தார். **22** அப்போது பேதுரு அவரைத் தனியாகக் கூட்
டிக்கொண்டுபோய், “எஜமானே, இந்தக் கஷ்டங்கள் உங்களுக்கு வேண்
டாம்! இதெல்லாம் உங்களுக்கு நடக்கவே நடக்காது” என்று அதட்டலா
கச் சொன்னார்.[n] **23** ஆனால் இயேசு திரும்பிக்கொண்டு, “என் பின்னால்
போ, சாத்தானே!* நீ எனக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறாய்; நீ கடவு

16:14 *ஸ்நானகர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர். **16:17** *நே.மொ., “சதையும் இரத்தமும்.” **16:19** *வே.வா., “பூமியில் நீ கட்டுவதெல்லாம் பரலோகத்தில் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கும், பூமியில் நீ கட்டவிழ்ப்பதெல்லாம் பரலோகத்தில் ஏற்கெனவே கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.” **16:21** *வே.வா., “மூப்பர்களாலும்.” **16:23** *“சாத்தான்” என்ற வார்த்தையின் அர்த்தம் “எதிர்ப்பவன்.” இந்த அர்த்தத்தில்தான் பேதுருவைச் சாத்தான் என்று இயேசு சொன்னதாகத் தெரிகிறது.

அதி. 16
a மத் 14:17
b மத் 15:34
c லூ 12:1
d மாற் 8:27-29, லூ 9:18-20
e மத் 14:1, 2
f யோவா 1:25, 26
g மாற் 8:29, லூ 9:20, யோவா 1:40, 41, யோவா 4:25, யோவா 11:27
h சங் 2:7, மத் 14:33, அப் 9:20, 22, எபி 1:2, 1யோ 4:15
i மத் 11:27
j யோவா 1:42
k ரோ 9:33, 1கொ 3:11, 1கொ 10:4, எபே 2:20, 1பே 2:6-8
l மாற் 8:29, 30, லூ 9:20, 21
m சங் 16:10, ஏசா 53:12, மத் 17:22, 23, மத் 20:18, 19, மாற் 8:31, லூ 9:22, லூ 24:46, 1கொ 15:3, 4
n மாற் 8:32

ளைப் போல் யோசிக்காமல் மனுஷர்களைப் போல் யோசிக்கிறாய்” என்று
பேதுருவிடம் சொன்னார்.[a]

24 பின்பு இயேசு தன்னுடைய சீஷர்களிடம், “யாராவது என்னைப் பின்
பற்றிவர விரும்பினால், அவர் தன்னையே துறந்து, தன் சித்திரவதைக் கம்
பத்தை* சுமந்துகொண்டு தொடர்ந்து என் பின்னால் வர வேண்டும்.[b]
25 தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நினைக்கிறவன் அதை
இழந்துபோவான்; ஆனால், எனக்காகத் தன் உயிரை இழப்பவன் அதைக்
காப்பாற்றிக்கொள்வான்.[c] **26** சொல்லப்போனால், ஒருவர் இந்த உலகத்
தில் இருக்கிற எல்லாவற்றையும் சம்பாதித்தாலும் தன் உயிரை இழந்துவிட்
டால் என்ன பிரயோஜனம்?[d] உயிருக்கு ஈடாக ஒருவரால் எதைக் கொடுக்க
முடியும்?[e] **27** மனிதகுமாரன் தன்னுடைய தகப்பனின்* மகிமையில் தன்
னுடைய தூதர்களோடு வருவார்; அப்போது, அவரவருடைய நடத்தைக்கு
ஏற்றபடி அவரவருக்குப் பலன் கொடுப்பார்.[f] **28** உண்மையாகவே உங்க
ளுக்குச் சொல்கிறேன், இங்கே நிற்கிறவர்களில் சிலர், மனிதகுமாரன் ராஜ
அதிகாரத்தில் வருவதைப் பார்ப்பதற்கு முன்னால் சாகவே மாட்டார்கள்”[g]
என்று சொன்னார்.

17 ஆறு நாட்களுக்குப் பின்பு, பேதுருவையும் யாக்கோபையும் யாக்
கோபின் சகோதரன் யோவானையும் மட்டும் கூட்டிக்கொண்டு உய
ரமான ஒரு மலைக்கு இயேசு போனார்.[h] **2** அங்கே அவர்கள் முன்னால்
அவருடைய தோற்றம் மாறியது; அவருடைய முகம் சூரியனைப் போல் பிர
காசித்தது, அவருடைய மேலங்கி ஒளியைப் போல் பளிச்சிட்டது.*[i]
3 அப்போது, மோசேயும் எலியாவும் தோன்றி அவரோடு பேசிக்கொண்டி
ருந்ததை அவர்கள் பார்த்தார்கள். **4** உடனே பேதுரு, “எஜமானே, இங்கே
இருப்பது எங்கள் பாக்கியம். நீங்கள் விரும்பினால், உங்களுக்கு ஒன்
றும், மோசேக்கு ஒன்றும், எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களைப்
போடுகிறேன்” என்று இயேசுவிடம் சொன்னார். **5** அவர் பேசிக்கொண்
டிருந்தபோதே பிரகாசமான ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது; அப்
போது, “இவர் என் அன்பு மகன்; நான் இவரை ஏற்றுக்கொள்கிறேன்;*[j]
இவர் சொல்வதைக் கேளுங்கள்”[k] என்று அந்த மேகத்திலிருந்து ஒரு குரல்
ஒலித்தது. **6** இதைக் கேட்டதும் சீஷர்கள் மிகவும் பயந்துபோய் சாஷ்டாங்
கமாக விழுந்தார்கள். **7** இயேசு அவர்கள் பக்கத்தில் வந்து, அவர்களைத்
தொட்டு, “எழுந்திருங்கள், பயப்படாதீர்கள்” என்று சொன்னார். **8** அவர்கள்
நிமிர்ந்து பார்த்தபோது, இயேசுவைத் தவிர வேறு யாரையும் காணவில்லை.
9 மலையிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தபோது இயேசு அவர்களிடம்,
“நீங்கள் பார்த்த இந்தத் தரிசனத்தை மனிதகுமாரன் உயிர்த்தெழுப்பப்படும்
வரை யாரிடமும் சொல்லக் கூடாது” என்று கட்டளையிட்டார்.[l]

10 அப்போது சீஷர்கள் அவரிடம், “அப்படியானால், எலியா முத
லில் வர வேண்டும் என்று வேத அறிஞர்கள் ஏன் சொல்கிறார்கள்?”[m] என்று
கேட்டார்கள். **11** அதற்கு அவர், “எலியா வந்து எல்லாவற்றையும் சரிப்
படுத்துவார்[n] என்பது உண்மைதான். **12** இருந்தாலும், நான் உங்களுக்
குச் சொல்கிறேன், எலியா ஏற்கெனவே வந்துவிட்டார்; ஆனால், அவரை

அதி. 16
a மாற் 8:33
b மத் 10:38, மாற் 8:34, லூ 9:23, லூ 14:27
c மாற் 8:35, லூ 9:24, லூ 17:33, யோவா 12:25, வெளி 12:11
d மாற் 8:36, லூ 9:25
e சங் 49:8
f சங் 62:12, நீதி 24:12, லூ 9:26, ரோ 2:6, 1பே 1:17
g மத் 17:2, மாற் 9:1, லூ 9:27

அதி. 17
h மாற் 9:2-8, லூ 9:28-36
i வெளி 1:13, 16
j சங் 2:7, ஏசா 42:1, மத் 3:17, 2பே 1:17, 18
k உபா 18:15, மாற் 9:7, லூ 9:35, அப் 3:22, 23, எபி 2:3
l மத் 16:20, மாற் 9:9
m மாற் 9:11
n ஏசா 40:3, மல் 4:5, 6, மத் 11:13, 14, மாற் 9:12, லூ 1:17

16:24 *சொல் பட்டியலைப் பாருங்கள். **16:27** *வே.வா., “தகப்பனிடமிருந்து பெற்ற.” **17:2** *வே.வா., “வெண்மையாக ஆனது.” **17:5** *வே.வா., “அங்கீகரிக்கிறேன்; இவர்மேல் பிரியமாக இருக்கிறேன்.”

அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளாமல் தங்களுடைய இஷ்டப்படி
யெல்லாம் நடத்தினார்கள்.[a] இப்படித்தான் மனிதகுமாரனும் அவர்கள்
கையில் பாடுகளை அனுபவிப்பார்"[b] என்று சொன்னார். **13** யோவான்
ஸ்நானகரை* பற்றித்தான் அவர் சொல்கிறார் என்பதைச் சீஷர்கள் அப்
போது புரிந்துகொண்டார்கள்.

14 கூட்டத்தாரை[c] நோக்கி அவர்கள் போனபோது, ஒருவன் அவர் முன்
னால் வந்து மண்டிபோட்டு, **15** "ஐயா, என் மகனுக்கு இரக்கம் காட்டுங்கள்;
அவன் காக்காய்வலிப்பினால் அவதிப்படுகிறான்; அவனுடைய நிலைமை
மோசமாக இருக்கிறது; அடிக்கடி தண்ணீரிலும் நெருப்பிலும் விழுந்து
விடுகிறான்;[d] **16** நான் அவனை உங்கள் சீஷர்களிடம் கூட்டிக்கொண்டு
வந்தேன், ஆனால் அவர்களால் குணமாக்க முடியவில்லை" என்று சொன்
னான். **17** அப்போது இயேசு, "விசுவாசமில்லாத சீர்கெட்ட தலைமு
றையே,[e] நான் இன்னும் எத்தனை காலம்தான் உங்களோடு இருக்க வேண்
டுமோ? எத்தனை காலம்தான் உங்களைச் சகித்துக்கொள்ள வேண்டுமோ?"
என்று சொல்லிவிட்டு, "அவனை என்னிடம் கொண்டுவாருங்கள்" என்றார்.
18 பின்பு, அந்தப் பையனைப் பிடித்திருந்த பேயை இயேசு அதட்டினார்,
அது அவனைவிட்டுப் போனது, அந்த நொடியே அவன் குணமானான்.[f]
19 அதன் பின்பு சீஷர்கள் இயேசுவிடம் தனியாக வந்து, "எங்களால் ஏன்
அந்தப் பேயை விரட்ட முடியவில்லை?" என்று கேட்டார்கள். **20** அதற்கு
அவர், "உங்கள் விசுவாசம் குறைவாக இருப்பதுதான் அதற்குக் காரணம்;
உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், உங்களுக்குக் கடுகளவு விசு
வாசம் இருந்தால்கூட இந்த மலையைப் பார்த்து, 'இங்கிருந்து பெயர்ந்து
அங்கே போ' என்று சொன்னால், அது பெயர்ந்துபோகும்; உங்களால் முடி
யாத காரியம் ஒன்றுமே இருக்காது"[g] என்று சொன்னார். **21** *—

22 அவர்கள் கலிலேயாவில் கூடியிருந்தபோது இயேசு அவர்களிடம்,
"மனிதகுமாரன் காட்டிக்கொடுக்கப்பட்டு, மக்களுடைய கையில் ஒப்படைக்
கப்படுவார்.[h] **23** அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள், ஆனால்
மூன்றாம் நாளில் அவர் உயிரோடு எழுப்பப்படுவார்"[i] என்று சொன்னார்.
அதைக் கேட்டு அவர்கள் மிகவும் துக்கப்பட்டார்கள்.

24 அவர்கள் கப்பர்நகூமுக்கு வந்துசேர்ந்ததும், இரண்டு திராக்மா*
வரியை வசூலிப்பவர்கள் பேதுருவிடம் வந்து, "உங்கள் போதகர் இரண்டு
திராக்மா வரி கட்டுகிறாரா?"[j] என்று கேட்டார்கள். **25** அதற்கு அவர்,
"ஆமாம்" என்று சொன்னார். ஆனாலும், வீட்டுக்குள் போனபோது அவர்
பேசுவதற்கு முன்பே இயேசு அவரிடம், "சீமோனே, நீ என்ன நினைக்கி
றாய்? இந்த உலகத்தில் இருக்கிற ராஜாக்கள் சுங்கவரியை அல்லது தலை
வரியை* யாரிடம் வசூலிக்கிறார்கள்? அவர்களுடைய மகன்களிடமா, மற்ற
வர்களிடமா?" என்று கேட்டார். **26** அதற்கு பேதுரு, "மற்றவர்களிடம்"
என்று சொன்னார்; அப்போது இயேசு, "அப்படியானால், மகன்கள் வரி கட்ட
வேண்டியதில்லையே. **27** ஆனால், அவர்கள் நம்மேல் குற்றம் சொல்
லாமல் இருப்பதற்காக,[k] நீ கடலுக்குப் போய்த் தூண்டில் போட்டு, முதலில்
சிக்கும் மீனை எடுத்து அதன் வாயைத் திறந்து பார்; அதில் ஒரு வெள்ளிக்

17:13 *ஸ்நானகர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர். **17:21** *இணைப்பு A3-ஐப் பாருங்கள். **17:24** *நே.மொ., "இரட்டை திராக்மா." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **17:25** *தனி நபர்மீது விதிக்கப்பட்ட வரி.

அதி. 17
a மாற் 9:13
b மத் 16:21, லூ 23:24, 25
c லூ 9:37
d மாற் 9:17-29, லூ 9:38-42
e உபா 32:5, 20
f மத் 8:13, மத் 9:22, மத் 15:28, யோவா 4:51, 52
g மத் 21:21, மாற் 11:23, லூ 17:6
h மத் 20:18, லூ 9:44, 45
i மத் 16:21, மாற் 9:31
j யாத் 30:13, 14
k 1கொ 10:32, 2கொ 6:3

காசு* இருக்கும். அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடம்
கொடுத்துவிடு” என்று சொன்னார்.

18 அந்த நேரத்தில் சீஷர்கள் இயேசுவின் பக்கம் வந்து, “பரலோக
அரசாங்கத்தில் உண்மையில் யார் மிக உயர்ந்தவராக இருப்பார்?”[a]
என்று கேட்டார்கள். **2** அப்போது அவர் ஒரு சின்னப் பிள்ளையைக் கூப்
பிட்டு அவர்கள் நடுவில் நிறுத்தி, **3** “உண்மையாகவே உங்களுக்குச்
சொல்கிறேன், நீங்கள் உங்களை மாற்றிக்கொண்டு* சின்னப் பிள்ளைகளைப்
போல் ஆகாவிட்டால்,[b] ஒருபோதும் பரலோக அரசாங்கத்துக்குள் அனும
திக்கப்பட மாட்டீர்கள்.[c] **4** இந்தச் சின்னப் பிள்ளையைப் போல் தாழ்மை
யாக நடந்துகொள்கிறவர்தான் பரலோக அரசாங்கத்தில் மிக உயர்ந்தவராக
இருப்பார்.[d] **5** இப்படிப்பட்ட ஒரு சின்னப் பிள்ளையை எனக்காக* ஏற்றுக்
கொள்கிறவர் என்னையும் ஏற்றுக்கொள்கிறார். **6** ஆனால், என்மேல் விசு
வாசம் வைக்கிற இந்தச் சிறியவர்களில் ஒருவரை யாராவது பாவம் செய்ய
வைத்தால், மாவு அரைக்கும் ஒரு பெரிய கல்லை* அவனுடைய கழுத்தில்
கட்டி, ஆழமான கடலில் தள்ளிவிடுவதே அவனுக்கு நல்லது.[e]

7 மக்களைப் பாவம் செய்யத் தூண்டுகிற இந்த உலகத்துக்குக் கேடு
தான் வரும்! மற்றவர்களைப் பாவம் செய்யத் தூண்டுகிற ஆட்கள் கண்
டிப்பாக இருப்பார்கள்;* ஆனால், அவர்களுக்குக் கேடுதான் வரும்! **8** உன்
கையோ காலோ உன்னைப் பாவம் செய்ய வைத்தால், அதை வெட்டி
எறிந்துவிடு;[f] என்றுமே அணையாத நெருப்புக்குள் இரண்டு கைகளுடனோ
இரண்டு கால்களுடனோ நீ வீசப்படுவதைவிட, ஊனமாகவோ முடமாகவோ
வாழ்வை* பெறுவது நல்லது.[g] **9** உன் கண் உன்னைப் பாவம் செய்ய வைத்
தால், அதைப் பிடுங்கி எறிந்துவிடு; கொழுந்துவிட்டு எரிகிற கெஹென்னா
வுக்குள்* இரண்டு கண்களோடு நீ வீசப்படுவதைவிட ஒற்றைக் கண்ணோடு
வாழ்வைப் பெறுவது நல்லது.[h] **10** இந்தச் சிறியவர்களில் ஒருவரைக்கூட
கேவலமாக நினைக்காதபடி கவனமாக இருங்கள்; ஏனென்றால், அவர்களு
டைய தேவதூதர்கள் என் பரலோகத் தகப்பனின் முகத்துக்கு முன்னால் எப்
போதும் இருக்கிறார்கள்[i] என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். **11** *—

12 நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒருவனிடம் 100 ஆடுகள்
இருந்து, அவற்றில் ஒன்று வழிதவறிப் போனால்,[j] அவன் மற்ற 99 ஆடுக
ளையும் மலைகளில் விட்டுவிட்டு, வழிதவறி அலைகிற ஆட்டைத் தேடிப்
போவான், இல்லையா?[k] **13** அவன் அதைக் கண்டுபிடித்துவிட்டால், வழி
தவறிப் போகாத மற்ற 99 ஆடுகளைவிட அந்த ஒரு ஆட்டை நினைத்தே
அதிக சந்தோஷப்படுவான் என்று நான் உங்களுக்கு நிச்சயமாகவே சொல்
கிறேன். **14** அதுபோலவே, இந்தச் சிறியவர்களில் ஒருவர்கூட அழிந்து
போவதை என்* பரலோகத் தகப்பன் விரும்புவதில்லை.[l]

15 உங்கள் சகோதரர் ஒரு பாவம் செய்துவிட்டால், அவரிடம்

17:27 *நே.மொ., “ஸ்தாத்தேர்.” இது டெட்ரா-திராக்மா என்று கருதப்படுகிறது. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **18:3** *நே.மொ., “உங்கள் வழியைவிட்டு முழுமையாகத் திரும்பி.” **18:5** *வே.வா., “என் பெயரில்.” **18:6** *வே.வா., “கழுதையை வைத்து இழுக்கப்படும் திரிகைக் கல்லை.” **18:7** *வே.வா., “மக்களைப் பாவம் செய்ய வைக்கிற காரியங்கள் கண்டிப்பாக வரும்.” **18:8** *அதாவது, “முடிவில்லாத வாழ்வை.” **18:9** *சொல் பட்டியலைப் பாருங்கள். **18:11** *இணைப்பு A3-ஐப் பாருங்கள். **18:14** *அல்லது, “உங்கள்.”

அதி. 18
a மாற் 9:33-37; லூ 9:46-48; லூ 22:24
b மத் 19:14; 1பே 2:2
c லூ 18:17
d நீதி 15:33; மத் 20:26; மத் 23:12; லூ 9:48; லூ 14:11; லூ 22:26; யாக் 4:10; 1பே 5:5
e மாற் 9:42; லூ 17:1, 2
f கொலோ 3:5
g மத் 25:41; மாற் 9:43-48
h மத் 5:22; மத் 5:29; மாற் 9:47; ரோ 8:13
i லூ 1:19; எபி 1:7, 14
j 1பே 2:25
k லூ 15:3-7
l 2பே 3:9

தனியாகப் போய் அவர் செய்த தவறை எடுத்துச் சொல்லுங்கள்;[a] நீங்
கள் சொல்வதை அவர் காதுகொடுத்துக் கேட்டால், நீங்கள் அவரை
நல்ல வழிக்குக் கொண்டுவந்திருப்பீர்கள்.[b] **16** நீங்கள் சொல்வதை அவர்
கேட்கவில்லை என்றால், ஒருவரையோ இருவரையோ உங்களோடு கூட்
டிக்கொண்டு போய்ப் பேசுங்கள். ஏனென்றால், இரண்டு அல்லது மூன்று
சாட்சிகளின் வாக்குமூலம் எல்லா விஷயங்களையும் உறுதிசெய்யும்.[c]
17 அவர்கள் சொல்வதையும் அவர் கேட்கவில்லை என்றால், சபைக்
குத் தெரியப்படுத்துங்கள். சபை சொல்வதையும் அவர் கேட்கவில்லை என்
றால், அவர் உங்களுக்கு மற்ற தேசத்தாரைப் போலவும்[d] வரி வசூலிப்பவ
ரைப் போலவும் இருக்கட்டும்.[e]

18 உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் பூமியில் பூட்
டுவதெல்லாம் பரலோகத்தில் ஏற்கெனவே பூட்டப்பட்டிருக்கும், நீங்கள்
பூமியில் திறப்பதெல்லாம் பரலோகத்தில் ஏற்கெனவே திறக்கப்பட்டிருக்
கும்.* **19** மறுபடியும் உங்களுக்குச் சொல்கிறேன், இந்தப் பூமியிலே உங்
களில் இரண்டு பேர் முக்கியமான எந்தவொரு விஷயத்தைப் பற்றியும்
ஒருமனதாக வேண்டிக்கொண்டால், என் பரலோகத் தகப்பன் அதை நிறை
வேற்றுவார்.[f] **20** ஏனென்றால், இரண்டு அல்லது மூன்று பேர் எங்கெல்
லாம் என் பெயரில் ஒன்றுகூடுகிறார்களோ[g] அங்கெல்லாம் நான் அவர்கள்
நடுவில் இருப்பேன்” என்று சொன்னார்.

21 அப்போது பேதுரு அவரிடம் வந்து, “எஜமானே, எனக்கு விரோத
மாக என் சகோதரன் பாவம் செய்தால் நான் எத்தனை தடவை அவனை
மன்னிக்க வேண்டும்? ஏழு தடவையா?” என்று கேட்டார். **22** அதற்கு
இயேசு, “ஏழு தடவை அல்ல, 77 தடவை என்று நான் உனக்குச் சொல்
கிறேன்.[h]

23 அதனால்தான் பரலோக அரசாங்கம், அடிமைகளிடம் கடனை வசூ
லிக்க நினைத்த ஒரு ராஜாவைப் போல் இருக்கிறது. **24** அந்த ராஜா
அவர்களிடம் கடனை வசூலிக்க ஆரம்பித்தபோது, 10,000 தாலந்து* கடன்
பட்டிருந்த ஒருவனை அவரிடம் கொண்டுவந்தார்கள். **25** அதைத் திருப்
பிக் கொடுக்க முடியாத நிலையில் அவன் இருந்ததால், அவனையும்
அவனுடைய மனைவியையும் பிள்ளைகளையும் அவனிடமிருந்த எல்லா
வற்றையும் விற்று கடனை அடைக்க வேண்டுமென்று[i] அந்த ராஜா கட்ட
ளையிட்டார். **26** அப்போது அந்த அடிமை அவருடைய காலில் விழுந்து,
‘கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள், எல்லாவற்றையும் உங்களுக்குத்
திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்’ என்று சொல்லிக் கெஞ்சினான்.
27 அதைப் பார்த்தபோது ராஜாவின் மனம் உருகியது; அதனால் அவனை
விடுதலை செய்து, அவனுடைய கடன்களையெல்லாம் ரத்து செய்துவிட்
டார்.[j] **28** ஆனால் அந்த அடிமை வெளியே போய், தனக்கு 100 தினா
ரியு* கடன்பட்டிருந்த சக அடிமை ஒருவனைத் தேடிக் கண்டுபிடித்து,
‘எனக்குக் கொடுக்க வேண்டிய கடனையெல்லாம் திருப்பிக் கொடு’ என்று
சொல்லி, அவனைப் பிடித்து, கழுத்தை நெரிக்க ஆரம்பித்தான்.

18:18 *வே.வா., “பூமியில் நீங்கள் கட்டுவதெல்லாம் பரலோகத்தில் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கும், பூமியில் நீங்கள் கட்டவிழ்ப்பதெல்லாம் பரலோகத்தில் ஏற்கெனவே கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.” **18:24** *10,000 தாலந்து வெள்ளி என்பது 6,00,00,000 தினாரியு. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **18:28** *இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 18
a லேவி 19:17, நீதி 25:8, 9, லூ 17:3
b யாக் 5:20
c உபா 19:15, 2கொ 13:1, 1தீ 5:19
d யோவா 18:28, அப் 10:28, அப் 11:2, 3
e ரோ 16:17, 1கொ 5:11
f மாற் 11:24, யோவா 14:13, யோவா 16:23, 24, 1யோ 3:22, 1யோ 5:14
g 1கொ 5:4, 5
h மத் 6:12, மாற் 11:25, லூ 17:4, எபே 4:32, கொலோ 3:13
i யாத் 21:7, லேவி 25:39, 2ரா 4:1, நெ 5:8
j 1யோ 1:9

29 அப்போது அந்தச் சக அடிமை அவனுடைய காலில் விழுந்து, ‘கொஞ்
சம் பொறுத்துக்கொள்ளுங்கள், நான் உங்களுக்குத் திருப்பிக் கொடுத்து
விடுகிறேன்’ என்று சொல்லிக் கெஞ்ச ஆரம்பித்தான். **30** ஆனால், அவன்
அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அங்கிருந்து புறப்பட்டுப் போய், கடனைத்
திருப்பிக் கொடுக்கும்வரை அந்த அடிமையைச் சிறையில் அடைக்கச் செய்
தான். **31** நடந்ததையெல்லாம் பார்த்து அவனுடைய சக அடிமைகள் மிக
வும் வேதனைப்பட்டார்கள்; பின்பு, ராஜாவிடம் போய் நடந்ததையெல்லாம்
சொன்னார்கள். **32** அப்போது, அந்த ராஜா அவனை வரவழைத்து, ‘பொல்
லாத அடிமையே, நீ என்னிடம் கெஞ்சிக் கேட்டபோது உன் கடனையெல்
லாம் ரத்து செய்தேன். **33** நான் உனக்கு இரக்கம் காட்டியதைப் போல்
நீயும் உன்னுடைய சக அடிமைக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டாமா?’[a]
என்று கேட்டார். **34** அவருக்கு அவன்மேல் பயங்கர கோபம் வந்ததால்,
எல்லா கடனையும் அடைக்கும்வரை அவனைச் சிறைக்காவலர்களிடம் ஒப்
படைத்தார். **35** அப்படியே, நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் சகோதரரை
உள்ளப்பூர்வமாக மன்னிக்காவிட்டால்[b] என் பரலோகத் தகப்பனும் உங்
களை மன்னிக்க மாட்டார்”[c] என்று சொன்னார்.

19 இயேசு இந்த விஷயங்களைச் சொல்லி முடித்த பின்பு கலிலேயா
விலிருந்து புறப்பட்டு, யோர்தானைக் கடந்து யூதேயாவின் எல்
லைப் பகுதிகளுக்குப் போனார்.[d] **2** மக்கள் கூட்டம் கூட்டமாக அவரைப்
பின்தொடர்ந்து போனார்கள், அங்கே அவர்களை அவர் குணமாக்கினார்.
3 அவரைச் சோதிப்பதற்காக பரிசேயர்கள் அவரிடம் வந்து, “ஒருவன்
தன்னுடைய மனைவியை எந்தக் காரணத்துக்கு வேண்டுமானாலும் விவாக
ரத்து செய்வது சரியா?”[e] என்று கேட்டார்கள். **4** அதற்கு அவர்,
“கடவுள் ஆரம்பத்தில் மனுஷர்களைப் படைத்தபோது அவர்களை ஆணா
கவும் பெண்ணாகவும் படைத்தார்[f] என்பதை நீங்கள் வாசிக்கவில்லையா?
5 ‘இதன் காரணமாக, மனிதன் தன்னுடைய அப்பாவையும் அம்மாவையும்
விட்டுத் தன் மனைவியோடு சேர்ந்திருப்பான்;* அவர்கள் இரண்டு பேரும்
ஒரே உடலாக# இருப்பார்கள்’[g] என்று அவர் சொன்னதையும் நீங்கள்
வாசிக்கவில்லையா? **6** அதன்படி, அவர்கள் இரண்டு பேராக இல்லாமல்,
ஒரே உடலாக இருப்பார்கள். அதனால், கடவுள் இணைத்து வைத்ததை*
எந்த மனிதனும் பிரிக்காமல் இருக்கட்டும்”[h] என்று சொன்னார். **7** “அப்படி
யானால், விவாகரத்துப் பத்திரத்தைக் கொடுத்து மனைவியை விவாகரத்து
செய்யலாம் என மோசே ஏன் சொன்னார்?”[i] என்று அவர்கள் கேட்டார்கள்.
8 அதற்கு அவர், “உங்களுடைய இதயம் இறுகிப்போயிருந்த காரணத்
தால்தான் உங்கள் மனைவியை விவாகரத்து செய்ய அவர் அனுமதித்தார்.[j]
ஆனால், ஆரம்பத்திலிருந்து அப்படி இல்லை.[k] **9** நான் உங்களுக்குச்
சொல்கிறேன், பாலியல் முறைகேட்டை* தவிர வேறெந்தக் காரணத்துக்காக
வும் தன் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு வேறொரு பெண்ணைத்
திருமணம் செய்துகொள்கிறவன் முறைகேடான உறவுகொள்கிறான்”#[l] என்று
சொன்னார்.

அதி. 18
a ஏசா 55:7
மத் 6:12
மத் 7:12
யாக் 2:13
b மத் 6:14
மாற் 11:25
லூ 17:3
எபே 4:32
c ரோ 2:6

அதி. 19
d மாற் 10:1
e உபா 24:1
மாற் 10:2-12
f ஆதி 1:27
ஆதி 5:2
g ஆதி 2:24
எபே 5:31
h மாற் 10:9
1கொ 7:11
i உபா 24:1
மத் 5:31
j மாற் 10:5
k ஆதி 2:24
l மல் 2:14
மத் 5:32
மாற் 10:11, 12
லூ 16:18
ரோ 7:3
1கொ 7:10
எபி 13:4

19:5 *இதற்கான மூல வார்த்தை, பசைபோல் இறுக ஒட்டிக்கொண்டிருப்பதை அர்த்தப்படுத்துகிறது. #நே.மொ., “சதையாக.” **19:6** *நே.மொ., “நுகத்தடியில் பிணைத்ததை.” **19:9** *சொல் பட்டியலைப் பாருங்கள். #சொல் பட்டியலில் “மணத்துணைக்குத் துரோகம்; முறைகேடான உறவு” என்ற தலைப்பைப் பாருங்கள்.

10 சீஷர்கள் அவரிடம், “திருமண பந்தம் இப்படித்தான் இருக்க வேண்
டுமென்றால், திருமணம் செய்யாமல் இருப்பதே நல்லது” என்று சொன்னார்
கள். **11** அதற்கு அவர், “வரம்* பெற்றவர்களைத் தவிர வேறு யாராலும்
இந்த வார்த்தைகளின்படி நடக்க# முடியாது.[a] **12** சிலர் பிறவிக் குறை
பாட்டினால் திருமணம் செய்ய முடியாத நிலையில்* இருக்கிறார்கள்; வேறு
சிலர் மனுஷர்களால் அந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்; இன்
னும் சிலர் பரலோக அரசாங்கத்துக்காகத் தங்களையே அர்ப்பணித்து, திரு
மணம் செய்துகொள்ளாமல் இருக்கிறார்கள்.# அப்படி இருக்க முடிந்தவர்
கள் அப்படி இருக்கட்டும்”[b] என்று சொன்னார்.

13 சின்னப் பிள்ளைகள்மேல் கைகளை வைத்து ஜெபம் செய்வதற்காக
அவர்களை மக்கள் அவரிடம் கொண்டுவந்தார்கள்; அந்த மக்களைச் சீஷர்
கள் திட்டினார்கள்.[c] **14** ஆனால் இயேசு தன் சீஷர்களிடம், “சின்னப் பிள்
ளைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதீர்கள்; இப்படிப்
பட்டவர்களுக்கே பரலோக அரசாங்கம் சொந்தமாகும்”[d] என்று சொன்னார்.
15 அதன் பின்பு, அந்தச் சின்னப் பிள்ளைகள்மேல் கைகளை வைத்து
ஆசீர்வதித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டுப் போனார்.

16 அப்போது ஒருவன் அவரிடம் வந்து, “போதகரே, முடிவில்லாத வாழ்
வைப் பெற என்ன நல்ல காரியங்களை நான் செய்ய வேண்டும்?”[e] என்று
கேட்டான். **17** அதற்கு அவர், “நல்ல காரியங்களைப் பற்றி என்னிடம் ஏன்
கேட்கிறாய்? நல்லவர்* ஒருவர்தான் இருக்கிறார்.[f] ஆனால், முடிவில்லாத
வாழ்வைப் பெற நீ விரும்பினால், கட்டளைகளைத் தொடர்ந்து கடைப்பிடி”[g]
என்று சொன்னார். **18** “எந்தக் கட்டளைகளை?” என்று அவன் கேட்டான்.
இயேசு அவனிடம், “கொலை செய்யக் கூடாது,[h] மணத்துணைக்குத் துரோ
கம் செய்யக் கூடாது,[i] திருடக் கூடாது,[j] பொய் சாட்சி சொல்லக் கூடாது;[k]
19 உங்கள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும்;[l]
உங்கள்மேல் நீங்கள் அன்பு காட்டுவது போல மற்றவர்கள்மேலும்* அன்பு
காட்ட வேண்டும்[m] என்ற கட்டளைகளே” என்று சொன்னார். **20** அப்
போது அந்த வாலிபன், “இவை எல்லாவற்றையும் நான் கடைப்பிடித்து வரு
கிறேன்; என்னிடம் இன்னும் என்ன குறை இருக்கிறது?” என்று கேட்
டான். **21** அதற்கு இயேசு, “நீ குறையில்லாதவனாக இருக்க விரும்பினால்,
போய் உன் சொத்துகளையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு,
என்னைப் பின்பற்றி வா;[n] அப்போது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம்
சேரும்”[o] என்று சொன்னார். **22** இதைக் கேட்டு அந்த வாலிபன் துக்கத்
தோடு திரும்பிப் போனான்; ஏனென்றால், அவனிடம் நிறைய சொத்துகள்
இருந்தன.[p] **23** இயேசு தன் சீஷர்களிடம், “உண்மையாகவே உங்களுக்குச்
சொல்கிறேன், பணக்காரர்கள் பரலோக அரசாங்கத்துக்குள் நுழைவது கஷ்
டம்.[q] **24** மறுபடியும் உங்களுக்குச் சொல்கிறேன், கடவுளுடைய அரசாங்
கத்துக்குள் ஒரு பணக்காரன் நுழைவதைவிட ஊசியின் காதுக்குள் ஒரு ஒட்
டகம் நுழைவது சுலபம்”[r] என்றார்.

19:11 *அதாவது, “திருமணம் செய்யாமல் இருக்கும் வரம்.” #வே.வா., “வார்த்தை களை ஏற்றுக்கொள்ள.” **19:12** *நே.மொ., “அண்ணகர்களாக.” சொல் பட்டியலைப் பாருங்கள். #நே.மொ., “அண்ணகர்களாக்கிக்கொள்கிறார்கள்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **19:17** *அதாவது, “நல்ல காரியங்கள் எவை என்பதைத் தீர்மானிக்கிற வர்.” **19:19** *வே.வா., “சக மனிதர்மேலும்.”

அதி. 19
a 1கொ 7:7
b 1கொ 7:32, 38; 1கொ 9:5
c மாற் 10:13-16; லூ 18:15-17
d மத் 18:3; மாற் 10:14; லூ 18:16
e மாற் 10:17-22; லூ 18:18-23
f மாற் 10:18
g லேவி 18:5; லூ 10:25-28
h யாத் 20:13; உபா 5:17
i யாத் 20:14; உபா 5:18
j யாத் 20:15; உபா 5:19
k யாத் 20:16; உபா 5:20
l யாத் 20:12; உபா 5:16
m லேவி 19:18; மத் 22:39; மாற் 12:31; லூ 10:27; ரோ 13:9
n லூ 12:33; லூ 18:22; பிலி 3:7
o மத் 6:20
p லூ 18:23
q மாற் 10:23; லூ 18:24; 1தீ 6:10
r மாற் 10:25; லூ 18:25

25 அவருடைய சீஷர்கள் இதைக் கேட்டு மிகவும் ஆச்சரியத்தோடு,
“அப்படியானால், யார்தான் மீட்புப் பெற முடியும்?”[a] என்று கேட்டார்கள்.
26 இயேசு நேராக அவர்களுடைய முகத்தைப் பார்த்து, “மனுஷர்களால்
இது முடியாது, ஆனால் கடவுளால் எல்லாமே செய்ய முடியும்”[b] என்று
சொன்னார்.

27 அப்போது பேதுரு அவரிடம், “இதோ! நாங்கள் எல்லாவற்றையும்
விட்டுவிட்டு உங்களைப் பின்பற்றி வந்திருக்கிறோமே, எங்களுக்கு என்ன
கிடைக்கும்?”[c] என்று கேட்டார். **28** அதற்கு இயேசு, “உண்மையாகவே
உங்களுக்குச் சொல்கிறேன், எல்லாம் புதிதாக்கப்படுகிற காலத்தில்,* மனித
குமாரன் தன்னுடைய மகிமையான சிம்மாசனத்தில் உட்காரும்போது, என்
னைப் பின்பற்றியிருக்கிற நீங்களும் 12 சிம்மாசனங்களில் உட்கார்ந்து
இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் நியாயந்தீர்ப்பீர்கள்.[d] **29** என் பெய
ருக்காக வீடுகளையோ சகோதரர்களையோ சகோதரிகளையோ அப்பா
வையோ அம்மாவையோ பிள்ளைகளையோ நிலங்களையோ தியாகம்
செய்கிற எல்லாருக்கும் அதைவிட நூறு மடங்கு அதிகமாகக் கிடைக்கும்,
முடிவில்லாத வாழ்வும் கிடைக்கும்.[e]

30 ஆனால், முந்தினவர்கள் பலர் பிந்தினவர்களாகவும், பிந்தினவர்கள்
முந்தினவர்களாகவும் ஆவார்கள்.”[f]

20 “ஏனென்றால், பரலோக அரசாங்கம் திராட்சைத் தோட்டத்துச்
சொந்தக்காரர் ஒருவரைப் போல் இருக்கிறது; தன் திராட்சைத்
தோட்டத்தில் வேலை செய்வதற்குக் கூலியாட்களை அமர்த்த அவர்
விடியற்காலையில் எழுந்துபோனார்.[g] **2** ஒரு நாளுக்கு ஒரு தினாரியு*
கூலி கொடுப்பதாகச் சொல்லி, தன் திராட்சைத் தோட்டத்துக்குக் கூலி
யாட்களை அனுப்பினார். **3** சுமார் மூன்றாம் மணிநேரத்தில்* அவர் மறுப
டியும் வெளியே போனபோது, சந்தையில் வேறு சிலர் வேலையில்லாமல்
நிற்பதைப் பார்த்தார். **4** அவர்களிடம், ‘நீங்களும் என் திராட்சைத் தோட்
டத்துக்குப் போங்கள், உங்களுக்கு நியாயமான கூலி கொடுக்கிறேன்’
என்று சொன்னார். **5** அதன்படியே அவர்கள் போனார்கள். பின்பு, மறுபடி
யும் சுமார் ஆறாம் மணிநேரத்திலும்* ஒன்பதாம் மணிநேரத்திலும்# அவர்
வெளியே போய் இதேபோல் செய்தார். **6** கடைசியாக, சுமார் 11-ஆம்
மணிநேரத்தில்* அவர் வெளியே போய், இன்னும் சிலர் நிற்பதைப் பார்த்
தார். அவர்களிடம், ‘வேலை செய்யாமல் ஏன் நாள் முழுவதும் இங்கே நின்
றுகொண்டிருக்கிறீர்கள்?’ என்று கேட்டார். **7** அதற்கு அவர்கள், ‘யாருமே
எங்களுக்கு வேலை தரவில்லை’ என்று சொன்னார்கள். அப்போது அவர்,
‘நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்’ என்று சொன்னார்.

8 சாயங்காலம் ஆனபோது திராட்சைத் தோட்டத்துச் சொந்தக்காரர்
தன்னிடம் வேலை பார்க்கிற மேற்பார்வையாளனிடம், ‘கூலியாட்களை
அழைத்து, பிந்தி வந்தவர்கள் தொடங்கி முந்தி வந்தவர்கள்வரை எல்லாருக்
கும் கூலி கொடு’[h] என்று சொன்னார். **9** அப்போது, 11-ஆம் மணிநேரத்
தில் வேலைக்கு வந்த ஒவ்வொருவருக்கும் ஒரு தினாரியு கிடைத்தது.

அதி. 19
a மாற் 10:26, 27; லூ 18:26, 27
b யோபு 42:2
c மாற் 10:28; லூ 5:11; லூ 18:28; பிலி 3:8
d தானி 7:14; மத் 20:21; லூ 22:28-30; 1கொ 6:2; வெளி 20:4
e மாற் 10:29, 30; லூ 18:29, 30; எபி 10:34
f மத் 20:16; மாற் 10:31; லூ 13:30

அதி. 20
g மத் 21:33
h லேவி 19:13; உபா 24:14, 15

19:28 * நே.மொ., “புதிய படைப்பில்.” **20:2** * இணைப்பு B14-ஐப் பாருங்கள். **20:3** * அதாவது, “காலை சுமார் 9 மணிக்கு.” **20:5** * அதாவது, “மதியம் சுமார் 12 மணிக்கும்.” # அதாவது, “பிற்பகல் சுமார் 3 மணிக்கும்.” **20:6** * அதாவது, “மாலை சுமார் 5 மணிக்கு.”

10 அதனால், முந்தி வந்தவர்கள் தங்களுக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று
நினைத்தார்கள்; ஆனால், அவர்களுக்கும் ஒரு தினாரியுதான் கிடைத்தது.
11 அதை வாங்கியபோது தோட்டத்துச் சொந்தக்காரருக்கு எதிராக முறு
முறுக்க ஆரம்பித்து, **12** 'பிந்தி வந்தவர்கள் ஒரு மணிநேரம்தான் வேலை
செய்தார்கள்; ஆனால் நாங்கள் கொளுத்தும் வெயிலில் நாள் முழுவதும்
கஷ்டப்பட்டு வேலை செய்தோம்; இருந்தாலும், அவர்களுக்கும் எங்களுக்
கும் ஒரே கூலியைக் கொடுக்கிறீர்களே!' என்றார்கள். **13** அவரோ அவர்க
ளில் ஒருவனிடம், 'நான் உனக்கு எந்த அநியாயமும் செய்யவில்லை. ஒரு
தினாரியுவுக்குத்தானே வேலை செய்ய நீ ஒத்துக்கொண்டாய்?[a] **14** உன்னு
டைய கூலியை வாங்கிக்கொண்டு போ. உனக்குக் கொடுத்தது போலவே
பிந்தி வந்தவர்களுக்கும் கொடுப்பது என்னுடைய விருப்பம். **15** என்
பணத்தை என் விருப்பப்படி கொடுக்க எனக்கு உரிமை இல்லையா? நான்
பெருந்தன்மையோடு கொடுப்பதைப் பார்த்து நீ பொறாமைப்படுகிறாயா?'* [b]
என்று கேட்டார். **16** இப்படி, பிந்தினவர்கள் முந்தினவர்களாகவும், முந்தின
வர்கள் பிந்தினவர்களாகவும் ஆவார்கள்"[c] என்று சொன்னார்.

17 இயேசு எருசலேமுக்குப் போகும் வழியில் 12 சீஷர்களைத் தனியா
கக் கூப்பிட்டு,[d] **18** "நாம் எருசலேமுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம்;
மனிதகுமாரன் முதன்மை குருமார்களிடமும் வேத அறிஞர்களிடமும் ஒப்
படைக்கப்படுவார், அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதித்து,[e]
19 மற்ற தேசத்தாரிடம் அவரை ஒப்படைத்துவிடுவார்கள்; அவர்கள் அவ
ரைக் கேலி செய்து, முள்சாட்டையால் அடித்து, மரக் கம்பத்தில் அறைந்து
கொலை செய்வார்கள்.[f] ஆனால், மூன்றாம் நாளில் அவர் உயிரோடு எழுப்
பப்படுவார்"[g] என்று சொன்னார்.

20 பின்பு, செபெதேயுவின் மனைவி தன் மகன்களோடு[h] வந்து,
ஒரு உதவி கேட்பதற்காக அவர் முன்னால் மண்டிபோட்டு தலைவணங்கி
னாள்.[i] **21** அவர் அவளிடம், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்
டார். அதற்கு அவள், "நீங்கள் ராஜாவாகும்போது, என்னுடைய மகன்க
ளில் ஒருவனை உங்களுடைய வலது பக்கத்திலும் இன்னொருவனை இடது
பக்கத்திலும் உட்கார வைப்பதாக வாக்குக் கொடுங்கள்"[j] என்று கேட்டாள்.
22 அப்போது இயேசு அவளுடைய மகன்களிடம், "நீங்கள் என்ன கேட்கி
றீர்கள் என்றே உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப்போகும் கிண்
ணத்தில் உங்களால் குடிக்க முடியுமா?"[k] என்று கேட்டார். அதற்கு
அவர்கள், "முடியும்" என்று சொன்னார்கள். **23** அப்போது அவர், "உண்
மைதான், நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள்;[l] ஆனால், என்
னுடைய வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் உங்களை உட்கார வைக்க
எனக்கு அதிகாரம் இல்லை. என் தகப்பன் யாரைத் தேர்ந்தெடுக்கிறாரோ
அவர்கள்தான் அங்கே உட்கார முடியும்"[m] என்று சொன்னார்.

24 நடந்ததைக் கேள்விப்பட்ட மற்ற பத்துப் பேரும் அந்த இரண்டு
சகோதரர்கள்மேல் கோபப்பட்டார்கள்.[n] **25** இயேசுவோ சீஷர்களைத் தன்
னிடம் கூப்பிட்டு, "மற்ற தேசத்து ஆட்சியாளர்கள் மக்களை அடக்கி
ஆளுவதும், உயர் அதிகாரிகள் அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துவதும்
உங்களுக்குத் தெரியும்.[o] **26** ஆனால், நீங்கள் அப்படி இருக்கக் கூடாது.[p]

20:15 * நே.மொ., "நான் நல்லவனாக இருப்பதால் உன் கண் பொல்லாததாக இருக்கிறதா?"

அதி. 20
a மத் 20:2
b மத் 6:23
c மத் 19:30; மாற் 10:31; லூ 13:30
d மாற் 10:32; லூ 18:31
e மத் 16:21; மாற் 10:33, 34; லூ 9:22; லூ 18:32, 33
f மத் 27:31; யோவா 19:1
g மத் 17:22, 23; மத் 28:6; அப் 10:40; 1கொ 15:4
h மத் 4:21; மத் 27:55, 56
i மாற் 10:35-40
j மத் 19:28
k மத் 26:39; மாற் 10:38; மாற் 14:36; யோவா 18:11
l அப் 12:2; ரோ 8:17; 2கொ 1:7; வெளி 1:9
m மாற் 10:39, 40
n மாற் 10:41-45; லூ 22:24
o மாற் 10:42
p 2கொ 1:24; 1பே 5:3

உங்களில் உயர்ந்தவனாக இருக்க விரும்புகிறவன் உங்களுக்குச் சேவை
செய்கிறவனாக இருக்க வேண்டும்.[a] 27 உங்களில் முதலாவதாக இருக்க
விரும்புகிறவன் உங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும்.[b] 28 அப்ப
டியே, மனிதகுமாரனும் மற்றவர்களுடைய சேவையைப் பெறுவதற்கு வரா
மல், மற்றவர்களுக்குச் சேவை செய்வதற்கும்[c] பலருடைய உயிருக்கு ஈடா
கத் தன்னுடைய உயிரை மீட்புவிலையாகக் கொடுப்பதற்குமே வந்தார்"[d]
என்று சொன்னார்.

29 அவர்கள் எரிகோவைவிட்டுப் போய்க்கொண்டிருந்தபோது, மக்கள்
கூட்டமாக அவருக்குப் பின்னால் போனார்கள். 30 அப்போது, பார்வை
யில்லாத இரண்டு பேர் பாதையோரம் உட்கார்ந்திருந்தார்கள். இயேசு
அந்த வழியாகப் போகிறார் என்பதைக் கேள்விப்பட்டு, "எஜமானே, தாவீ
தின் மகனே, எங்களுக்கு இரக்கம் காட்டுங்கள்!" என்று சத்தமாகச் சொன்
னார்கள்.[e] 31 ஆனால், கூட்டத்தார் அவர்களை அமைதியாக இருக்கச்
சொல்லி அதட்டினார்கள்; இருந்தாலும், "எஜமானே, தாவீதின் மகனே, எங்
களுக்கு இரக்கம் காட்டுங்கள்!" என்று இன்னும் சத்தமாகச் சொன்னார்கள்.
32 அதனால் இயேசு நின்று, அவர்களைக் கூப்பிட்டு, "உங்களுக்காக நான்
என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். 33 அதற்கு அவர்கள், "எஜ
மானே, தயவுசெய்து எங்களுக்குக் கண்பார்வை கொடுங்கள்" என்று சொன்
னார்கள். 34 இயேசு மனம் உருகி, அவர்களுடைய கண்களைத் தொட்
டார்;[f] உடனே அவர்கள் பார்வை பெற்று, அவரைப் பின்பற்றிப்
போனார்கள்.

21 அவர்கள் எருசலேமை நெருங்கியபோது, ஒலிவ மலையில் இருக்
கிற பெத்பகே கிராமத்துக்குப் பக்கத்தில் வந்தார்கள். அப்போது
இயேசு தன்னுடைய சீஷர்கள் இரண்டு பேரை அனுப்பி,[g] 2 "அதோ!
அங்கே தெரிகிற அந்தக் கிராமத்துக்குப் போங்கள்; அங்கே போனவுடன்,
ஒரு கழுதையும் அதன் குட்டியும் கட்டி வைக்கப்பட்டிருப்பதைப் பார்ப்
பீர்கள்; அவற்றை அவிழ்த்து என்னிடம் கொண்டுவாருங்கள். 3 யாராவது
உங்களிடம் ஏதாவது கேட்டால், 'அவை எஜமானுக்கு வேண்டும்' என்று
சொல்லுங்கள். உடனே அவற்றை அவர் அனுப்பிவிடுவார்" என்று
சொன்னார்.

4 "'இதோ! உன் ராஜா உன்னிடம் வருகிறார்;[h] அவர் சாந்தகுணமுள்ள
வர்;[i] கழுதைமேல் ஏறி வருகிறார், ஆம், சுமை சுமக்கும் கழுதையின் குட்டி
மேல் ஏறி வருகிறார்'[j] என சீயோன் மகளுக்குச் சொல்லுங்கள்" என்று
5 தீர்க்கதரிசி மூலம் சொல்லப்பட்டது நிறைவேறும்படியே அப்படி நடந்தது.

6 சீஷர்கள் புறப்பட்டுப் போய் இயேசு தங்களிடம் சொன்னபடியே செய்
தார்கள்.[k] 7 கழுதையையும் அதன் குட்டியையும் அவர்கள் கொண்டுவந்து
அவற்றின்மேல் தங்கள் மேலங்கிகளைப் போட்டார்கள், அவர் ஏறி உட்
கார்ந்தார்.[l] 8 பெரும்பாலான மக்கள் தங்களுடைய மேலங்கிகளை வழி
யில் விரித்தார்கள்;[m] வேறு சிலர் ஓலைகளை வெட்டி பாதையில் பரப்பினார்
கள். 9 அவருக்கு முன்னும் பின்னும் போய்க்கொண்டிருந்த கூட்டத்தார்,
"கடவுளே, தாவீதின் மகனைக் காத்தருளுங்கள்!*[n] யெகோவாவின்# பெய
ரில் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்![o] பரலோகத்தில் இருக்கிறவரே, இவ
ரைக் காத்தருளுங்கள்!"[p] என்று ஆரவாரம் செய்துகொண்டே இருந்தார்கள்.

21:9 * கிரேக்கில், "ஓசன்னா." # இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 20
a மத் 18:4, மத் 23:11, மாற் 10:43, 44, லூ 22:26
b மாற் 9:35
c லூ 22:27, யோவா 13:14, பிலி 2:7
d ஏசா 53:11, மாற் 10:45, 1தீ 2:5, 6, தீத் 2:13, 14, எபி 9:28
e மத் 9:27, மாற் 10:46-52, லூ 18:35-43
f மத் 9:29

அதி. 21
g மாற் 11:1-3, லூ 19:28-31
h ஏசா 62:11, யோவா 12:15
i மத் 11:29
j சக 9:9
k மாற் 11:4-6, லூ 19:32-35
l 1ரா 1:38, 40, மாற் 11:7-11, யோவா 12:14, 15
m லூ 19:36-38
n மத் 9:27, மத் 21:15
o சங் 118:25, 26, யோவா 12:13
p மாற் 11:9, 10

10 அவர் எருசலேமுக்குள் போனபோது, நகரத்திலிருந்த எல்லாரும் பர
பரப்பாகி, “இவர் யார்?” என்று கேட்டார்கள். **11** அதற்கு அந்தக் கூட்டத்
தார், “இவர்தான் முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசியான இயேசு![a] கலிலேயா
வில் உள்ள நாசரேத்தைச் சேர்ந்தவர்” என்று சொன்னார்கள்.

12 பின்பு இயேசு ஆலயத்துக்குள் போய், அங்கே விற்றுக்கொண்டும்
வாங்கிக்கொண்டும் இருந்த எல்லாரையும் வெளியே துரத்தினார்; காசு
மாற்றுபவர்களின் மேஜைகளையும் புறா விற்பவர்களின் இருக்கைகளை
யும் கவிழ்த்துப்போட்டார்.[b] **13** பின்பு அவர்களிடம், “‘என் வீடு ஜெப
வீடு என்று அழைக்கப்படும்’ என எழுதப்பட்டிருக்கிறது.[c] ஆனால் நீங்கள்
அதைக் கொள்ளைக்காரர்களின் குகையாக்குகிறீர்கள்”[d] என்று சொன்னார்.
14 அதன் பின்பு, ஆலயத்திலிருந்த அவரிடம் பார்வை இல்லாதவர்களும்
கால் ஊனமானவர்களும் வந்தார்கள், அவர்களை அவர் குணமாக்கினார்.

15 அவர் அற்புதமான செயல்கள் செய்வதை முதன்மை குருமார்களும்
வேத அறிஞர்களும் பார்த்தார்கள்; அதோடு, “கடவுளே, தாவீதின் மகனைக்
காத்தருளுங்கள்!”[e] என்று ஆலயத்தில் சிறுவர்கள் ஆரவாரம் செய்வதை
யும் பார்த்தார்கள்; அதனால் கோபமடைந்து,[f] **16** அவரிடம், “இவர்கள்
சொல்வதைக் கேட்கிறாயா?” என்றார்கள். அதற்கு இயேசு, “கேட்கிறேன்.
‘பிள்ளைகளின் வாயினாலும் குழந்தைகளின் வாயினாலும் உங்களுக்குப்
புகழ் உண்டாகும்படி செய்தீர்கள்’ என்ற வார்த்தைகளை நீங்கள் வாசித்ததே
இல்லையா?”[g] என்று அவர்களிடம் கேட்டார். **17** பின்பு, அவர்களை
விட்டு விலகி, அந்த நகரத்திலிருந்து புறப்பட்டு பெத்தானியாவுக்குப் போய்
அன்று ராத்திரி அங்கே தங்கினார்.[h]

18 விடியற்காலையில் நகரத்துக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தபோது
அவருக்குப் பசி எடுத்தது.[i] **19** பாதையோரமாக இருந்த ஓர் அத்தி மரத்
தைப் பார்த்து, அதன் பக்கத்தில் அவர் போனார். ஆனால், அதில்
இலைகள் மட்டும்தான் இருந்தன, ஒரு கனிகூட இல்லை.[j] அதனால்
அந்த மரத்தைப் பார்த்து, “இனி ஒருபோதும் நீ கனிகொடுக்க மாட்டாய்”
என்று சொன்னார்.[k] உடனே அந்த அத்தி மரம் பட்டுப்போனது. **20** அவ
ருடைய சீஷர்கள் இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, “எப்படி இந்த அத்தி
மரம் உடனே பட்டுப்போனது?”[l] என்று கேட்டார்கள். **21** அதற்கு இயேசு,
“உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் சந்தேகப்படாமல்
விசுவாசத்தோடு இருந்தால், நான் இந்த அத்தி மரத்துக்குச் செய்ததை நீங்
களும் செய்வீர்கள்; அதுமட்டுமல்ல, நீங்கள் இந்த மலையைப் பார்த்து, ‘இங்
கிருந்து பெயர்ந்து போய்க் கடலில் விழு’ என்று சொன்னாலும் அது அப்ப
டியே நடக்கும்.[m] **22** விசுவாசத்தோடு ஜெபம் செய்தால், நீங்கள் கேட்கிற
எல்லாமே உங்களுக்குக் கிடைக்கும்”[n] என்று சொன்னார்.

23 அவர் ஆலயத்துக்குள் போய் அங்கே கற்பித்துக்கொண்டிருந்தார்;
அப்போது, முதன்மை குருமார்களும் பெரியோர்களும்* அவரிடம் வந்து,
“எந்த அதிகாரத்தால் நீ இதையெல்லாம் செய்கிறாய்? உனக்கு இந்த அதி
காரத்தைக் கொடுத்தது யார்?” என்று கேட்டார்கள்.[o] **24** அதற்கு இயேசு,
“நானும் உங்களிடம் ஒன்றைக் கேட்கிறேன். நீங்கள் பதில் சொன்னால்,
எந்த அதிகாரத்தால் இதையெல்லாம் செய்கிறேன் என்று நானும் உங்களுக்
குச் சொல்கிறேன். **25** ஞானஸ்நானம் கொடுக்கிற அதிகாரத்தை யோவா

21:23 * வே.வா., “மூப்பர்களும்.”

அதி. 21

a மத் 21:46, லூ 7:16, லூ 24:19
b மாற் 11:15, 16, லூ 19:45, யோவா 2:15
c ஏசா 56:7
d எரே 7:11, மாற் 11:17, லூ 19:46, யோவா 2:16
e மத் 21:9
f மாற் 11:18, லூ 19:39, 40
g சங் 8:2
h மாற் 11:11, லூ 21:37, யோவா 11:1
i மாற் 11:12
j லூ 13:6
k மத் 3:10, மாற் 11:13, 14
l மாற் 11:20, 21
m மத் 17:20, மாற் 11:22, 23, லூ 17:6
n மாற் 11:24, லூ 11:9, யோவா 14:13, யாக் 1:5, 1யோ 3:22
o மாற் 11:27-33, லூ 20:1-8

அதி. 21

னுக்குக் கொடுத்தது யார்? கடவுளா* மனுஷர்களா?” என்று கேட்டார். அப்
போது அவர்கள், “‘கடவுள்’ என்று சொன்னால், ‘பின்பு ஏன் அவரை நம்ப
வில்லை?’[a] என்று கேட்பான்; **26** ‘மனுஷர்கள்’ என்று சொன்னால், ஜனங்
களிடம் மாட்டிக்கொள்வோம்; ஏனென்றால், யோவானை ஒரு தீர்க்கதரிசி
என்று அவர்கள் எல்லாரும் நம்புகிறார்கள்” என்று தங்களுக்குள்ளே பேசிக்
கொண்டார்கள். **27** அதனால், “எங்களுக்குத் தெரியாது” என்று இயேசுவி
டம் சொன்னார்கள். அதற்கு அவர், “அப்படியானால், எந்த அதிகாரத்தால்
இதையெல்லாம் செய்கிறேன் என்று நானும் உங்களுக்குச் சொல்ல மாட்
டேன்” என்றார்.

28 பின்பு அவர், “ஒருவருக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். அவர்
தன்னுடைய முதல் மகனிடம் வந்து, ‘மகனே, நீ இன்றைக்குத் திராட்சைத்
தோட்டத்துக்குப் போய் வேலை செய்’ என்று சொன்னார். **29** அதற்கு
அவன், ‘போக மாட்டேன்’ என்று சொன்னான். ஆனால், அதற்குப்
பின்பு மனம் வருந்தி அங்கே போனான். **30** அவர் தன் இரண்டாவது மக
னிடம் வந்து அதையே சொன்னார். அதற்கு அவன், ‘போகிறேன்,
அப்பா’ என்று சொல்லிவிட்டு, போகாமலேயே இருந்துவிட்டான். **31** இந்த
இரண்டு பேரில் தங்களுடைய அப்பாவின் விருப்பப்படி நடந்துகொண்டது
யார்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” என்று கேட்டார். அதற்கு அவர்கள்,
“முதல் மகன்தான்” என்று சொன்னார்கள். அப்போது அவர், “உண்மையா
கவே உங்களுக்குச் சொல்கிறேன், வரி வசூலிப்பவர்களும் விலைமகள்க
ளும் உங்களுக்கு முன்பே கடவுளுடைய அரசாங்கத்துக்குள் போய்க்
கொண்டிருக்கிறார்கள். **32** ஏனென்றால், நீதியான வழியைக் காட்ட
யோவான் உங்களிடம் வந்தார், நீங்களோ அவரை நம்பவில்லை. ஆனால்,
வரி வசூலிப்பவர்களும் விலைமகள்களும் அவரை நம்பினார்கள்;[b]
இதைப் பார்த்த பின்பும்கூட நீங்கள் மனம் வருந்தவில்லை, அவரை நம்ப
வும் இல்லை.

33 இன்னொரு உவமையைக் கேளுங்கள்: நிலச் சொந்தக்காரர் ஒருவர்
திராட்சைத் தோட்டம் போட்டு,[c] அதைச் சுற்றிலும் வேலியடைத்தார்.
அதில் திராட்சரச ஆலை அமைத்து, காவலுக்கு ஒரு கோபுரத்தைக் கட்டி
னார்.[d] அதைத் தோட்டக்காரர்களிடம் குத்தகைக்கு விட்டுவிட்டுத் தூர
தேசத்துக்குப் போனார்.[e] **34** அறுவடைக் காலம் வந்தபோது, தனக்குச்
சேர வேண்டிய பங்கை வாங்கி வரச் சொல்லி தன்னுடைய அடிமைகளை
அந்தத் தோட்டக்காரர்களிடம் அனுப்பினார். **35** ஆனால், அந்தத் தோட்
டக்காரர்கள் அவருடைய அடிமைகளைப் பிடித்து, ஒருவனை அடித்தார்
கள், மற்றொருவனைக் கொலை செய்தார்கள், இன்னொருவனை கல்லெ
றிந்து கொன்றார்கள்.[f] **36** மறுபடியும் அவர், முதலில் அனுப்பியதைவிட
அதிகமான அடிமைகளை அனுப்பினார்; அவர்களுக்கும் அதேபோல் செய்
தார்கள்.[g] **37** ‘என் மகனுக்கு மதிப்புக் கொடுப்பார்கள்’ என்று நினைத்து,
கடைசியாக அவர் தன்னுடைய மகனையே அனுப்பினார். **38** ஆனால்,
அந்தத் தோட்டக்காரர்கள் அவருடைய மகனைப் பார்த்தபோது, ‘இவன்
தான் வாரிசு.[h] வாருங்கள், நாம் இவனைத் தீர்த்துக்கட்டிவிட்டு, இவனு
டைய சொத்தை எடுத்துக்கொள்ளலாம்!’ என்று தங்களுக்குள் பேசிக்கொண்
டார்கள். **39** அதன்படியே அவருடைய மகனைப் பிடித்து, திராட்சைத்

a மத் 21:32; மாற் 11:30, 31; லூ 7:29, 30
b லூ 3:12; லூ 7:29, 30
c ஏசா 5:7
d ஏசா 5:2
e மாற் 12:1-9; லூ 20:9-16
f நெ 9:26
g 2நா 36:15; அப் 7:52; எபி 11:32, 37
h எபி 1:2

21:25 * நே.மொ., “பரலோகமா.”

தோட்டத்துக்கு வெளியே தள்ளி, கொலை செய்தார்கள்.[a] **40** அதனால்,
அந்தத் திராட்சைத் தோட்டத்தின் சொந்தக்காரர் வரும்போது, அந்தத் தோட்
டக்காரர்களை என்ன செய்வார்?" என்று கேட்டார். **41** அதற்கு அவர்கள்,
"அந்த அக்கிரமக்காரர்களை அடியோடு ஒழித்துக்கட்டிவிடுவார்; தனக்குச்
சேர வேண்டிய பங்கைச் சரியான சமயத்தில் கொடுக்கிற வேறு தோட்டக்
காரர்களிடம் திராட்சைத் தோட்டத்தைக் குத்தகைக்குக் கொடுத்துவிடுவார்"
என்று சொன்னார்கள்.

42 அப்போது இயேசு, "'கட்டிடம் கட்டுகிறவர்கள் ஒதுக்கித்தள்ளிய
கல்லே மூலைக்குத் தலைக்கல்லாக ஆனது;[b] இது யெகோவாவின்*
செயல், இது நம்முடைய கண்களுக்கு அருமையாக இருக்கிறது'[c] என்று
வேதவசனங்களில் நீங்கள் வாசித்ததே இல்லையா? **43** அதனால்தான்
நான் உங்களுக்குச் சொல்கிறேன், கடவுளுடைய அரசாங்கத்தின் ஆசீர்வா
தங்கள் உங்களிடமிருந்து பறிக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தரு
கிற ஒரு ஜனத்திடம் கொடுக்கப்படும். **44** அதோடு, இந்தக் கல்லின் மேல்
விழுகிறவன் சின்னாபின்னமாவான்.[d] இது யார்மேல் விழுகிறதோ
அவனை நசுக்கிப்போடும்" என்று சொன்னார்.[e]

45 முதன்மை குருமார்களும் பரிசேயர்களும் இந்த உவமைகளைக்
கேட்டபோது, தங்களை மனதில் வைத்துதான் அவர் பேசுகிறார் என்று
புரிந்துகொண்டார்கள்.[f] **46** அதனால், அவரைப் பிடிக்க* நினைத்தார்கள்;
ஆனாலும், அவரை ஒரு தீர்க்கதரிசி என்று மக்கள் நம்பியதால்,[g] அவர்க
ளுக்குப் பயந்தார்கள்.

22 இயேசு மறுபடியும் உவமைகளைப் பயன்படுத்திப் பேசினார்; அவர்
களிடம், **2** "பரலோக அரசாங்கம், மகனுடைய திருமண விருந்
துக்கு ஏற்பாடு செய்த ஒரு ராஜாவைப் போல் இருக்கிறது.[h] **3** திருமண
விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களை வரச் சொல்லி அவர் தன்னுடைய
அடிமைகளை அனுப்பினார்; ஆனால், அழைக்கப்பட்டவர்கள் வர விரும்ப
வில்லை.[i] **4** அவர் மறுபடியும் வேறு அடிமைகளைக் கூப்பிட்டு, 'அழைக்
கப்பட்டவர்களிடம் நீங்கள் போய், "இதோ! நான் மதிய விருந்து ஏற்பாடு
செய்திருக்கிறேன், காளைகளையும் கொழுத்த மிருகங்களையும் அடித்துச்
சமைத்து வைத்திருக்கிறேன், எல்லாம் தயாராக இருக்கிறது; திருமண விருந்
துக்கு வாருங்கள்" என நான் அழைப்பதாகச் சொல்லுங்கள்' என்று சொல்லி
அனுப்பினார். **5** ஆனால், அழைக்கப்பட்டவர்கள் அதை அசட்டை
செய்து, ஒருவன் தன்னுடைய வயலுக்குப் போய்விட்டான், வேறொரு
வன் தன்னுடைய வியாபாரத்தைக் கவனிக்கப் போய்விட்டான்.[j] **6** மற்றவர்
களோ, அவருடைய அடிமைகளைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொன்று
போட்டார்கள்.

7 ராஜாவுக்குப் பயங்கர கோபம் வந்தது; அதனால், தன் படைவீ
ரர்களை அனுப்பி அந்தக் கொலைகாரர்களைக் கொன்றுபோட்டார், அவர்
களுடைய நகரத்தையும் கொளுத்தினார்.[k] **8** பின்பு தன் அடிமைகளிடம்,
'திருமண விருந்து தயாராக இருக்கிறது, ஆனால் அழைக்கப்பட்டவர்கள்
அதற்குத் தகுதியில்லாதவர்களாக ஆகிவிட்டார்கள்.[l] **9** அதனால், நகரத்
துக்கு வெளியே செல்லும் சாலைகளுக்குப் போய், யாரையெல்லாம் பார்க்
கிறீர்களோ அவர்களையெல்லாம் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்

அதி. 21
a அப் 2:23, அப் 3:15
b ஏசா 28:16, லூ 20:17, அப் 4:11, ரோ 9:33, எபே 2:20, 1பே 2:7
c சங் 118:22, 23, மாற் 12:10, 11
d ஏசா 8:14, 1பே 2:7, 8
e லூ 20:18
f மாற் 12:12, லூ 20:19
g மத் 21:11, யோவா 7:40

அதி. 22
h லூ 14:16, வெளி 19:9
i லூ 14:17, 18
j லூ 14:18, 19
k தானி 9:26
l அப் 13:45, 46

21:42 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **21:46** * வே.வா., "கைது செய்ய."

கள்'[a] என்று சொன்னார். **10** அதன்படியே, அந்த அடிமைகள் அந்தச் சாலைகளுக்குப் போய், அவர்கள் பார்த்த நல்லவர்கள் கெட்டவர்கள் எல்லாரையும் அழைத்து வந்தார்கள்; திருமண மண்டபம் விருந்தாளிகளால் நிரம்பி வழிந்தது.

11 விருந்தாளிகளைப் பார்வையிட ராஜா உள்ளே வந்தபோது, திருமண நிகழ்ச்சிக்குப் பொருத்தமான உடையைப் போடாத ஒருவன் அங்கே இருப்பதைப் பார்த்தார். **12** அதனால் அவனிடம், 'திருமண நிகழ்ச்சிக்குப் பொருத்தமான உடையைப் போடாமல் நீ எப்படி உள்ளே வந்தாய்?' என்று கேட்டார். அவனால் எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை. **13** அப்போது ராஜா தன் வேலையாட்களிடம், 'அவனுடைய கை கால்களைக் கட்டி, வெளியே இருட்டில் வீசியெறியுங்கள். அங்கே அவன் அழுது அங்கலாய்ப்பான்'* என்று சொன்னார்.

14 இப்படியாக, அழைக்கப்படுகிறவர்கள் பலர், ஆனால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் சிலர்" என்றார்.

15 பின்பு அந்தப் பரிசேயர்கள் அங்கிருந்து போய், அவருடைய பேச்சிலேயே அவரைச் சிக்க வைப்பதற்காக ஒன்றுகூடி சதித்திட்டம் போட்டார்கள்.[b] **16** அதன்படி, தங்களுடைய சீஷர்களையும் ஏரோதுவின் ஆதரவாளர்களையும் அவரிடம் அனுப்பி,[c] "போதகரே, நீங்கள் எப்போதும் உண்மை பேசுகிறவர், கடவுளைப் பற்றிய சத்தியங்களைச் சொல்லிக்கொடுக்கிறவர், யாருடைய தயவையும் எதிர்பார்க்காதவர், மனுஷர்களுடைய வெளித்தோற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காதவர் என்றெல்லாம் எங்களுக்குத் தெரியும். **17** அதனால் எங்களுக்குச் சொல்லுங்கள், ரோம அரசனுக்கு* வரி# கட்டுவது சரியா இல்லையா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். **18** ஆனால் இயேசு அவர்களுடைய கெட்ட எண்ணத்தைப் புரிந்துகொண்டு, "வெளிவேஷக்காரர்களே, ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? **19** வரிக் காசு ஒன்றை என்னிடம் காட்டுங்கள்" என்று சொன்னார். அப்போது அவர்கள் ஒரு தினாரியுவை* அவரிடம் கொண்டு வந்தார்கள். **20** "இதில் இருக்கிற உருவமும் பட்டப்பெயரும் யாருடையது?" என்று அவர் கேட்டார். **21** அப்போது அவர்கள், "ரோம அரசனுடையது" என்று சொன்னார்கள். அதற்கு அவர், "அப்படியானால், அரசனுடையதை அரசனுக்கும் கடவுளுடையதைக் கடவுளுக்கும் கொடுங்கள்"[d] என்று சொன்னார். **22** அவர் சொன்னதைக் கேட்டு அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, அவரைவிட்டுப் போனார்கள்.

23 உயிர்த்தெழுதல் இல்லை என்று சொல்கிற சதுசேயர்கள்[e] அன்று அவரிடம் வந்து,[f] **24** "போதகரே, 'ஒருவன் பிள்ளைகள் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய மனைவியை அவனுடைய சகோதரன் திருமணம் செய்துகொண்டு அவனுக்காக வாரிசு உருவாக்க வேண்டும்' என மோசே சொன்னார்.[g] **25** எங்களோடு ஏழு சகோதரர்கள் இருந்தார்கள்; மூத்தவன் திருமணம் செய்து, வாரிசு இல்லாமல் இறந்துபோனான். அதனால், அவனுடைய மனைவியை அவனுடைய சகோதரன் திருமணம் செய்துகொண்டான். **26** இரண்டாம் மூன்றாம் சகோதரன்முதல் ஏழாம் சகோதரன்வரை

அதி. 22
a மத் 21:43; லூ 14:23
b மாற் 12:13-17; லூ 20:20-26
c மாற் 3:6
d தானி 3:17, 18; மல் 3:8; மாற் 12:17; லூ 20:25; லூ 23:2; ரோ 13:7
e அப் 4:1, 2; அப் 23:8
f மாற் 12:18-23; லூ 20:27-33
g ஆதி 38:7, 8; உபா 25:5, 6; ரூ 1:11; ரூ 3:13

22:13 *நே.மொ., "பற்களை நறநறவென்று கடிப்பான்." இது கோபத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் செயல். **22:17** *நே.மொ., "சீஸருக்கு." சொல் பட்டியலைப் பாருங்கள். #நே.மொ., "தலைவரி." **22:19** *இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அப்படியே நடந்தது. **27** கடைசியில் அந்தப் பெண்ணும் இறந்துபோனாள்.
28 அவர்கள் உயிரோடு எழுப்பப்படும்போது, அந்த ஏழு பேரில் யாருக்கு
அவள் மனைவியாக இருப்பாள்? அவர்கள் எல்லாருக்கும் அவள் மனைவி
யாக இருந்தாளே" என்றார்கள்.

29 அதற்கு இயேசு, "உங்கள் எண்ணம் தவறாக இருக்கிறது; ஏனென்
றால், உங்களுக்கு வேதவசனங்களும் தெரியவில்லை, கடவுளுடைய வல்ல
மையும் தெரியவில்லை.[a] **30** உயிரோடு எழுப்பப்படுகிற ஆண்களும் சரி,
பெண்களும் சரி, திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள்; அவர்கள் பர
லோகத்திலுள்ள தேவதூதர்களைப் போல் இருப்பார்கள்.[b] **31** இறந்தவர்
கள் உயிரோடு எழுப்பப்படுவது சம்பந்தமாகக் கடவுள் உங்களுக்குச் சொன்
னதை நீங்கள் வாசித்ததில்லையா? **32** 'நான் ஆபிரகாமின் கடவுளாகவும்,
ஈசாக்கின் கடவுளாகவும், யாக்கோபின் கடவுளாகவும் இருக்கிறேன்'[c] என்று
அவர் சொன்னார், இல்லையா? அவர் இறந்தவர்களின் கடவுளாக அல்ல,
உயிருள்ளவர்களின் கடவுளாக இருக்கிறார்"[d] என்று சொன்னார். **33** அவ
ருடைய போதனையைக் கேட்ட மக்கள் மலைத்துப்போனார்கள்.[e]

34 அவர் சதுசேயர்களுடைய வாயை அடைத்துவிட்டார் என்பதை பரி
சேயர்கள் கேள்விப்பட்டபோது, கூட்டமாக அவரிடம் வந்தார்கள்.
35 அவர்களில் திருச்சட்ட அறிஞன் ஒருவன் அவரைச் சோதிப்பதற்
காக அவரிடம், **36** "போதகரே, திருச்சட்டத்திலேயே மிக முக்கியமான
கட்டளை எது?"[f] என்று கேட்டான். **37** அதற்கு அவர், "'உன் கடவுளா
கிய யெகோவாமேல்* உன் முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் முழு
மனதோடும் அன்பு காட்ட வேண்டும்.'[g] **38** இதுதான் மிக முக்கியமான
கட்டளை, முதலாம் கட்டளை. **39** இதோடு சம்பந்தப்பட்ட இரண்டாம் கட்
டளை இதுதான்: 'உன்மேல் நீ அன்பு காட்டுவது போல மற்றவர்கள்
மேலும்* அன்பு காட்ட வேண்டும்.'[h] **40** இந்த இரண்டு கட்டளைகள்தான்
திருச்சட்டம் முழுவதுக்கும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களுக்கும் அடிப்ப
டையாக இருக்கின்றன"[i] என்று சொன்னார்.

41 பரிசேயர்கள் ஒன்றுகூடியிருந்தபோது இயேசு அவர்களிடம்,[j]
42 "நீங்கள் கிறிஸ்துவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாரு
டைய மகன்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "தாவீதின் மகன்"[k] என்று
சொன்னார்கள். **43** அப்போது அவர், "அப்படியானால், கடவுளுடைய சக்
தியின் தூண்டுதலால் தாவீது[l] அவரை எஜமான் என்று அழைத்தது எப்
படி? **44** 'யெகோவா* என் எஜமானிடம், "உன்னுடைய எதிரிகளை நான்
உன் காலடியில் வீழ்த்தும்வரை நீ என் வலது பக்கத்தில் உட்கார்ந்திரு" என்
றார்'[m] என தாவீது சொன்னாரே. **45** தாவீதே அவரை எஜமான் என்று
அழைத்திருப்பதால் அவர் எப்படி இவருடைய மகனாக இருக்க முடி
யும்?"[n] என்று அவர்களிடம் கேட்டார். **46** யாராலும் ஒரு வார்த்தைகூட
பதில் சொல்ல முடியவில்லை; அன்றுமுதல் அவரிடம் கேள்வி கேட்பதற்கு
யாருக்குமே துணிச்சல் வரவில்லை.

23 பின்பு இயேசு, கூட்டத்தாரையும் தன்னுடைய சீஷர்களையும்
பார்த்து, **2** "வேத அறிஞர்களும் பரிசேயர்களும் மோசேயின்
இருக்கையில் உட்கார்ந்திருக்கிறார்கள். **3** அதனால், அவர்கள் உங்களுக்கு
என்னவெல்லாம் சொல்கிறார்களோ அதையெல்லாம் செய்யுங்கள். ஆனால்,

22:37, 44 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **22:39** * வே.வா., "சக மனிதர்மேலும்."

அதி. 22
a மாற் 12:24-27
b லூ 20:35, 36
c யாத் 3:6
d லூ 20:37, 38; ரோ 4:17
e மத் 7:28; மாற் 11:18
f மாற் 12:28
g உபா 6:5; உபா 10:12; யோசு 22:5; மாற் 12:30; லூ 10:27
h லேவி 19:18; மாற் 12:31; லூ 10:27; கொலோ 3:14; யாக் 2:8; 1பே 1:22
i ரோ 13:10; கலா 5:14
j மாற் 12:35-37; லூ 20:41-44
k யோவா 7:42
l 2சா 23:2
m சங் 110:1; அப் 2:34, 35; 1கொ 15:25; எபி 1:13; எபி 10:12, 13
n மாற் 12:37

அதி. 23

அவர்கள் செய்வதுபோல் நீங்கள் செய்யாதீர்கள்; ஏனென்றால், சொல்வதுபோல் அவர்கள் செய்வதில்லை.[a] **4** பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர்களுடைய தோள்களில் வைக்கிறார்கள்,[b] ஆனால், தங்களுடைய விரலினால்கூட அவற்றைத் தொடுவதற்கு அவர்கள் விரும்புவதில்லை.[c] **5** மனுஷர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் எல்லாவற்றையும் செய்கிறார்கள்;[d] தாங்கள் கட்டியிருக்கிற வேதாகமத் தாயத்துகளை*[e] அகலமாக்குகிறார்கள்; தங்களுடைய அங்கிகளின் ஓரங்களைப் பெரிதாக்குகிறார்கள்.[f] **6** விருந்துகளில் மிக முக்கியமான இடங்களிலும் ஜெபக்கூடங்களில் முன்வரிசை* இருக்கைகளிலும் உட்கார விரும்புகிறார்கள்.[g] **7** அதோடு, சந்தைகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் சொல்ல வேண்டுமென்றும், தங்களை ரபீ* என்று அழைக்க வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். **8** ஆனால், நீங்கள் ரபீ என்று அழைக்கப்படாதீர்கள்; ஒரே ஒருவர்தான் உங்கள் போதகர்;[h] நீங்கள் எல்லாரும் சகோதரர்கள். **9** அதுமட்டுமல்ல, பூமியில் இருக்கிற யாரையும் தந்தை* என்று அழைக்காதீர்கள், பரலோகத்தில் இருக்கிற ஒருவர்தான் உங்கள் தந்தை.[i] **10** தலைவர் என்றும் அழைக்கப்படாதீர்கள், கிறிஸ்து ஒருவர்தான் உங்கள் தலைவர். **11** உங்களில் யார் மிகவும் உயர்ந்தவராக இருக்கிறாரோ அவர் உங்களுக்குச் சேவை செய்கிறவராக இருக்க வேண்டும்.[j] **12** தன்னைத்தானே உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்,[k] தன்னைத்தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.[l]

13 வெளிவேஷக்காரர்களான வேத அறிஞர்களே, பரிசேயர்களே, உங்களுக்குக் கேடுதான் வரும்! மனுஷர்கள் போக முடியாதபடி பரலோக அரசாங்கத்தின் கதவைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்களும் அதில் போவதில்லை, போக முயற்சி செய்கிறவர்களையும் போக விடுவதில்லை.[m] **14** *—

15 வெளிவேஷக்காரர்களான[n] வேத அறிஞர்களே, பரிசேயர்களே, உங்களுக்குக் கேடுதான் வரும்! ஒரு நபரை உங்கள்* மதத்துக்கு மாற்றுவதற்காகக் கடல் வழியாகவும் தரை வழியாகவும் பயணம் செய்கிறீர்கள்; ஆனால், அந்த நபர் உங்களில் ஒருவராகும்போது அவரை உங்களைவிட இரண்டு மடங்கு கெஹென்னாவுக்கு# ஆளாக்குகிறீர்கள்.

16 குருட்டு வழிகாட்டிகளே,[o] உங்களுக்குக் கேடுதான் வரும்! 'ஒருவன் ஆலயத்தின் மேல் சத்தியம் செய்தால் ஒன்றுமில்லை, ஆனால் ஆலயத்தில் இருக்கிற தங்கத்தின் மேல் சத்தியம் செய்தால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறான்'[p] என்று சொல்கிறீர்கள். **17** முட்டாள்களே! குருடர்களே! எது முக்கியம்? தங்கமா அல்லது அந்தத் தங்கத்தைப் புனிதமாக்கிய ஆலயமா? **18** அதோடு, 'ஒருவன் பலிபீடத்தின் மேல் சத்தியம் செய்தால் ஒன்றுமில்லை, ஆனால் அதன்மேல் இருக்கிற காணிக்கையின் மேல் சத்தியம் செய்தால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறான்' என்று

a மல் 2:7, 8
b மத் 11:28
c லூ 11:46
d மத் 6:1, 2
e உபா 6:6, 8
f எண் 15:38, 39
g மாற் 12:38, 39; லூ 11:43; லூ 14:7, 10; லூ 20:46
h யோவா 13:13
i மத் 6:9
j மத் 20:26; மாற் 9:35; லூ 22:26
k நீதி 16:18
l நீதி 29:23; மத் 18:4; லூ 14:11; ரோ 12:3; 1பே 5:5
m லூ 11:52
n மத் 6:2; லூ 12:56
o மத் 15:14
p மத் 5:34, 35

23:5 *இந்தத் தாயத்துகள் சிறுபெட்டிகள் போல் இருக்கும். யூத ஆண்கள் தங்களுடைய பாதுகாப்புக்கென்று இவற்றை நெற்றியிலும் இடது கையிலும் கட்டியிருந்தார்கள்; இவற்றில் திருச்சட்ட வாசகங்கள் இருந்தன. **23:6** *வே.வா., "மிகச் சிறந்த." **23:7** *வே.வா., "போதகர்." **23:9** *"தந்தை" என்ற வார்த்தையை மதப் பட்டப்பெயராக மனிதர்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று இயேசு சொன்னார். **23:14** *இணைப்பு A3-ஐப் பாருங்கள். **23:15** *வே.வா., "யூத." #சொல் பட்டியலைப் பாருங்கள்.

சொல்கிறீர்கள். **19** குருடர்களே! எது முக்கியம்? காணிக்கையா அல்லது
அந்தக் காணிக்கையைப் புனிதமாக்குகிற பலிபீடமா? **20** அதனால், பலிபீ
டத்தின் மேல் சத்தியம் செய்கிறவன் அதன்மேலும் அதன்மேல் வைக்கப்
பட்டுள்ள எல்லாவற்றின் மேலும் சத்தியம் செய்கிறான். **21** அதேபோல்,
ஆலயத்தின் மேல் சத்தியம் செய்கிறவன் அதன்மேலும் அதில் குடிகொண்
டிருக்கிறவரின்[a] மேலும் சத்தியம் செய்கிறான். **22** பரலோகத்தின் மேல் சத்
தியம் செய்கிறவன் கடவுளுடைய சிம்மாசனத்தின் மேலும் அதில் உட்கார்ந்
திருக்கிறவரின் மேலும் சத்தியம் செய்கிறான்.

23 வெளிவேஷக்காரர்களான வேத அறிஞர்களே, பரிசேயர்களே, உங்
களுக்குக் கேடுதான் வரும்! புதினாவிலும், சதகுப்பையிலும்,* சீரகத்திலும்
பத்திலொரு பாகத்தைக் கொடுக்கிறீர்கள்;[b] ஆனால், திருச்சட்டத்தில் சொல்
லப்பட்டிருக்கிற நியாயம்,[c] இரக்கம்,[d] விசுவாசம் ஆகிய மிக முக்கியமான
காரியங்களை விட்டுவிட்டீர்கள். இவற்றை நீங்கள் கண்டிப்பாகக் கடைப்
பிடித்திருக்க வேண்டும், அவற்றையும் விட்டுவிடாமல் இருந்திருக்க வேண்
டும்.[e] **24** குருட்டு வழிகாட்டிகளே![f] நீங்கள் கொசுவை வடிகட்டிவிட்டு,[g]
ஒட்டகத்தை விழுங்கிவிடுகிறீர்கள்![h]

25 வெளிவேஷக்காரர்களான வேத அறிஞர்களே, பரிசேயர்களே, உங்
களுக்குக் கேடுதான் வரும்! கிண்ணத்தையும் பாத்திரத்தையும் வெளிப்புறத்
தில் சுத்தம் செய்கிறீர்கள்,[i] ஆனால் உட்புறத்தில் அவை பேராசையாலும்*[j]
கட்டுக்கடங்காத ஆசைகளாலும் நிறைந்திருக்கின்றன.[k] **26** குருட்டுப் பரி
சேயனே, கிண்ணத்தையும் பாத்திரத்தையும் முதலாவது உள்ளே சுத்தம்
செய், அப்போது அது வெளியிலும் சுத்தமாகும்.

27 வெளிவேஷக்காரர்களான[l] வேத அறிஞர்களே, பரிசேயர்களே, உங்
களுக்குக் கேடுதான் வரும்! நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக
ளைப்[m] போல் இருக்கிறீர்கள்; அவை வெளியே அழகாகத் தெரிகின்றன,
உள்ளேயோ இறந்தவர்களின் எலும்புகளாலும் எல்லா விதமான அசுத்தங்க
ளாலும் நிறைந்திருக்கின்றன. **28** அதுபோலவே, நீங்கள் மனுஷர்களுக்கு
முன்னால் நீதிமான்களாகத் தெரிகிறீர்கள், ஆனால் உங்களுக்குள்ளே
போலித்தனமும் அக்கிரமமும்தான் நிறைந்திருக்கின்றன.[n]

29 வெளிவேஷக்காரர்களான[o] வேத அறிஞர்களே, பரிசேயர்களே, உங்
களுக்குக் கேடுதான் வரும்! நீங்கள் தீர்க்கதரிசிகளுக்குக் கல்லறைகளைக்
கட்டி, நீதிமான்களுடைய சமாதிகளை அலங்கரிக்கிறீர்கள்.[p] **30** ‘நாங்கள்
எங்களுடைய முன்னோர்களின் காலத்தில் வாழ்ந்திருந்தால், தீர்க்கதரிசிக
ளைக் கொலை செய்ய அவர்களுக்கு உடந்தையாக இருந்திருக்க மாட்
டோம்’ என்று சொல்கிறீர்கள். **31** இப்படிச் சொல்வதன் மூலம் நீங்கள்
அந்தத் தீர்க்கதரிசிகளைக் கொன்றவர்களுடைய பிள்ளைகள் என்று உங்க
ளுக்கு எதிராகவே சாட்சி சொல்கிறீர்கள்.[q] **32** அதனால், உங்கள் முன்
னோர்கள் ஆரம்பித்து வைத்த காரியங்களை நீங்கள் முடித்துவிடுங்கள்.

33 பாம்புகளே, விரியன் பாம்புக் குட்டிகளே,[r] கெஹென்னாவின்* தண்
டனையிலிருந்து நீங்கள் எப்படித் தப்பிக்க முடியும்?[s] **34** இதற்காகத்
தான் தீர்க்கதரிசிகளையும்[t] ஞானிகளையும் போதகர்களையும்[u] உங்களி
டம் அனுப்புகிறேன். அவர்களில் சிலரை நீங்கள் கொலை செய்வீர்கள்,[v]

23:23 * ஒருவகை வாசனை மூலிகை. **23:25** * வே.வா., “சூறையாடப்பட்ட பொருள்
களாலும்.” **23:33** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 23
a 1ரா 8:13
b லேவி 27:30
c மீ 6:8; யோவா 7:24
d மத் 9:13; மத் 12:7
e லூ 11:42
f மத் 15:14
g லேவி 11:23
h லேவி 11:4
i மாற் 7:3, 4
j மாற் 12:38, 40
k லூ 11:39
l லூ 12:56
m லூ 11:44; அப் 23:3
n லூ 16:15
o மத் 6:2
p லூ 11:47
q லூ 11:48; அப் 7:52; எபி 11:32, 37
r மத் 3:7; மத் 12:34; லூ 3:7
s மத் 10:28; லூ 12:5
t லூ 11:49-51
u மத் 13:52
v யோவா 16:2; அப் 7:59

மரக் கம்பங்களில்* அறைவீர்கள், உங்கள் ஜெபக்கூடங்களில் முள்சாட்டை
யால் அடிப்பீர்கள்,[a] நகரத்துக்கு நகரம் போய்த் துன்புறுத்துவீர்கள்.[b]
35 இதனால், நீதிமானாகிய ஆபேலின் இரத்தம்முதல்,[c] பரகியாவின் மக
னும் பரிசுத்த இடத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலை செய்
தவருமான சகரியாவின் இரத்தம்வரை, உலகத்தில் கொல்லப்பட்ட எல்லா
நீதிமான்களுடைய கொலைப்பழிக்கும்* நீங்கள் ஆளாவீர்கள்.[d] **36** உண்
மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், இவையெல்லாம் இந்தத் தலைமு
றைமேல் நிச்சயம் வரும்.

37 எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவளே,
உன்னிடம் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொன்றவளே![e] கோழி
தன் குஞ்சுகளை இறக்கைகளின் கீழே கூட்டிச்சேர்ப்பதுபோல் நான் உன்
பிள்ளைகளைக் கூட்டிச்சேர்க்க எத்தனையோ தடவை ஆசைப்பட்டேன்!
ஆனால் மக்களே, நீங்கள் அதை விரும்பவில்லை.[f] **38** இதோ! உங்கள்
வீடு* ஒதுக்கித்தள்ளப்பட்டு# உங்களிடமே விடப்படும்.[g] **39** நான் உங்க
ளுக்குச் சொல்கிறேன், 'யெகோவாவின்* பெயரில் வருகிறவர் ஆசீர்வதிக்
கப்பட்டவர்!'[h] என்று நீங்கள் சொல்லும்வரை இனி ஒருபோதும் என்னைப்
பார்க்க மாட்டீர்கள்" என்றார்.

24 ஆலயத்தைவிட்டு இயேசு புறப்பட்டுப் போனபோது, அவ
ருடைய சீஷர்கள் அவரிடம் வந்து ஆலயத்தின் கட்டிடங்களைக்
காட்டினார்கள். **2** அப்போது அவர், "இவற்றையெல்லாம் பார்க்கிறீர்களே,
உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், ஒரு கல்லின் மேல் ஒரு கல்
இல்லாதபடி எல்லாமே நிச்சயமாகத் தரைமட்டமாக்கப்படும்"[i] என்று அவர்
களிடம் சொன்னார்.

3 பின்பு, அவர் ஒலிவ மலையில் உட்கார்ந்திருந்தார்; சீஷர்கள் அவரி
டம் தனியாக வந்து, "இதெல்லாம் எப்போது நடக்கும், உங்களுடைய பிர
சன்னத்துக்கும்*[j] இந்தச் சகாப்தத்தின்* கடைசிக் கட்டத்துக்கும்[k] அடையா
ளம் என்ன? எங்களுக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டார்கள்.

4 அதற்கு இயேசு, "உங்களை யாரும் ஏமாற்றிவிடாதபடி எச்சரிக்
கையாக இருங்கள்.[l] **5** ஏனென்றால், நிறைய பேர் என் பெயரை வைத்துக்
கொண்டு வந்து, 'நான்தான் கிறிஸ்து' என்று சொல்லி நிறைய பேரை ஏமாற்
றுவார்கள்.[m] **6** போர் முழக்கங்களையும் போர்ச் செய்திகளையும் நீங்கள்
கேட்பீர்கள்; இருந்தாலும், திகிலடையாதீர்கள். இதெல்லாம் நடக்க வேண்
டும், ஆனால் முடிவு அப்போதே வராது.[n]

7 ஜனத்துக்கு எதிராக ஜனமும் நாட்டுக்கு எதிராக நாடும்* சண்டை
போடும்,[o] அடுத்தடுத்து பல இடங்களில் பஞ்சங்களும்[p] நிலநடுக்கங்க
ளும்[q] ஏற்படும். **8** இவையெல்லாம் வேதனைகளுக்கு* ஆரம்பம்.

9 அப்போது மக்கள் உங்களை உபத்திரவப்படுத்துவார்கள்,[r] கொலை
யும் செய்வார்கள்;[s] நீங்கள் என் சீஷர்களாக இருப்பதால் எல்லா தேசத்து மக்
களும் உங்களை வெறுப்பார்கள்.[t] **10** அதோடு, பலர் விசுவாசத்தைவிட்டு
விலகிவிடுவார்கள், ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுப்பார்கள், ஒருவரை

அதி. 23
a அப் 5:40; 2கொ 11:24
b லூ 21:12
c ஆதி 4:8, 10; எபி 11:4
d 2நா 24:20-22
e யோவா 8:59; எபி 11:32, 37
f லூ 13:34; லூ 19:41, 42
g 1ரா 9:7, 8; எரே 12:7; எரே 22:5; மத் 21:43; லூ 21:20
h சங் 118:26

அதி. 24
i மாற் 13:1, 2; லூ 19:44; லூ 21:5, 6
j மத் 24:27; மத் 24:37-39
k மத் 13:39; மத் 28:20; மாற் 13:3, 4; லூ 21:7
l மாற் 13:5, 6; லூ 21:8
m மத் 24:24
n மாற் 13:7; லூ 21:9
o வெளி 6:4
p அப் 11:28; வெளி 6:6
q மாற் 13:8; லூ 21:10, 11
r யோவா 15:20; அப் 11:19; வெளி 2:10
s யோவா 16:2; அப் 7:59; அப் 12:1, 2; வெளி 6:11
t மத் 10:17, 22; மாற் 13:9, 13; லூ 21:12, 13; லூ 21:17; யோவா 15:21; 2தீ 3:12

23:34; 24:3 *சொல் பட்டியலைப் பாருங்கள். **23:35** *வே.வா., "இரத்தப்பழிக்கும்." **23:38** *அதாவது, "ஆலயம்." #அல்லது, "பாழாக்கப்பட்டு." **23:39** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **24:7** *வே.வா., "ராஜ்யத்துக்கு எதிராக ராஜ்யமும்." **24:8** *நே.மொ., "பிரசவ வேதனை போன்ற வேதனைகளுக்கு."

ஒருவர் வெறுப்பார்கள். **11** போலித் தீர்க்கதரிசிகள் பலர் வந்து நிறைய
பேரை ஏமாற்றுவார்கள்;[a] **12** அக்கிரமம் அதிகமாவதால் பெரும்பாலான
வர்களின் அன்பு குறைந்துவிடும். **13** ஆனால், முடிவுவரை சகித்திருப்ப
வர்தான் மீட்புப் பெறுவார்.[b] **14** கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிய
இந்த நல்ல செய்தி உலகம் முழுவதும் இருக்கிற எல்லா தேசத்தாருக்கும்
சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்;[c] பின்பு முடிவு வரும்.

15 அதனால், தானியேல் தீர்க்கதரிசியின் மூலம் சொல்லப்பட்டபடி,
பாழாக்கும் அருவருப்பு பரிசுத்தமான இடத்தில் நிற்பதை நீங்கள் பார்க்கும்
போது[d] (வாசிப்பவர் பகுத்தறிவைப் பயன்படுத்தி இதைப் புரிந்துகொள்ளட்
டும்), **16** யூதேயாவில் இருப்பவர்கள் மலைகளுக்குத் தப்பியோட வேண்
டும்.[e] **17** வீட்டு மாடியில் இருப்பவர் தன் வீட்டிலிருந்து பொருள்களை
எடுத்துக்கொண்டு போவதற்காகக் கீழே இறங்கி வர வேண்டாம். **18** வய
லில் இருப்பவர் தன் மேலங்கியை எடுப்பதற்காகத் திரும்பிப் போக வேண்
டாம். **19** அந்த நாட்களில் கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்
கும் ஐயோ, ஆபத்து! **20** குளிர் காலத்திலோ ஓய்வுநாளிலோ ஓடிப்போக
வேண்டிய நிலை உங்களுக்கு வந்துவிடக் கூடாதென்று ஜெபம் செய்து
கொண்டிருங்கள். **21** ஏனென்றால், அப்போது மிகுந்த உபத்திரவம்[f] உண்
டாகும்; அப்படிப்பட்ட உபத்திரவம் உலகத்தின் ஆரம்பம்முதல் இதுவரை
வந்ததில்லை, அதற்குப் பிறகும் வரப்போவதில்லை.[g] **22** சொல்லப்
போனால், அந்த நாட்கள் குறைக்கப்படவில்லை என்றால் யாருமே தப்பிப்
பிழைக்க மாட்டார்கள்; ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்காக அந்த
நாட்கள் குறைக்கப்படும்.[h]

23 அப்போது யாராவது உங்களிடம், 'இதோ! கிறிஸ்து இங்கே
இருக்கிறார்,'[i] 'அதோ! அங்கே இருக்கிறார்' என்று சொன்னால் நம்பாதீர்
கள்.[j] **24** ஏனென்றால், போலிக் கிறிஸ்துக்களும் போலித் தீர்க்கதரிசிக
ளும்[k] வருவார்கள்; முடிந்தால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக்கூட ஏமாற்று
வதற்குப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.[l]
25 இதோ! முன்கூட்டியே உங்களை எச்சரித்துவிட்டேன். **26** அதனால்
யாராவது உங்களிடம், 'அதோ! அவர் வனாந்தரத்தில் இருக்கிறார்' என்று
சொன்னால், புறப்பட்டுப் போகாதீர்கள்; 'இதோ! அவர் வீட்டின் உள்ளறைக்
குள் இருக்கிறார்' என்று சொன்னால், நம்பாதீர்கள்.[m] **27** ஏனென்றால், மின்
னல் கிழக்கில் தோன்றி மேற்குவரை மின்னுவதுபோல் மனிதகுமாரனின் பிர
சன்னமும்* இருக்கும்.[n] **28** பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள்
வந்து கூடும்.[o]

29 அந்த நாட்களின் உபத்திரவத்துக்குப் பின்பு, உடனடியாகச் சூரியன்
இருண்டுவிடும்,[p] சந்திரன் ஒளி கொடுக்காது, வானத்திலிருந்து நட்சத்திரங்
கள் விழும், வான மண்டலங்கள் அசைக்கப்படும்.[q] **30** பின்பு, மனிதகுமா
ரனின் அடையாளம் வானத்தில் தோன்றும். பின்பு, பூமியில் இருக்கிற எல்லா
கோத்திரத்தாரும் நெஞ்சில் அடித்துக்கொண்டு புலம்புவார்கள்.[r] அதோடு,
மனிதகுமாரன்[s] வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்து மேகங்
கள்மேல் வருவதை அவர்கள் பார்ப்பார்கள்.[t] **31** எக்காள சத்தம் முழங்க
அவர் தன்னுடைய தேவதூதர்களை அனுப்புவார்; கடவுளால் தேர்ந்தெடுக்

24:27 *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 24
a மத் 7:15; 1தீ 4:1; 2பே 2:1
b மத் 10:22; மாற் 13:13; லூ 21:19; எபி 10:36
c மத் 9:35; மத் 28:19, 20; மாற் 13:10; வெளி 14:6
d தானி 9:27; தானி 11:31; தானி 12:11; மாற் 13:14-18; லூ 21:20
e லூ 21:21-23
f லூ 21:23; வெளி 7:14
g தானி 12:1; மாற் 13:19
h மாற் 13:20
i மத் 24:5
j மாற் 13:21-23
k மத் 7:15; 2பே 2:1
l மத் 7:22, 23; 2தெ 2:9
m லூ 17:23
n லூ 17:24
o லூ 17:37
p யோவே 2:31
q மாற் 13:24, 25; லூ 21:25, 26
r வெளி 1:7
s தானி 7:13
t மத் 26:64; மாற் 13:26; லூ 21:27

கப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை, நான்கு
திசைகளிலிருந்தும்* அவர்கள் கூட்டிச்சேர்ப்பார்கள்.[a]

32 அத்தி மர உவமையிலிருந்து இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்
கள்: அதில் இளங்கிளைகள் தோன்றி, இலைகள் துளிர்க்க ஆரம்பித்த
துமே கோடைக் காலம் நெருங்கிவிட்டது என்று தெரிந்துகொள்கிறீர்கள்.[b]
33 அப்படியே, இவையெல்லாம் நடப்பதை நீங்கள் பார்க்கும்போது, கத
வுக்குப் பக்கத்திலேயே அவர் வந்துவிட்டார் என்று தெரிந்துகொள்ளுங்
கள்.[c] **34** உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், இவையெல்லாம்
நடப்பதற்கு முன்பு இந்தத் தலைமுறை ஒருபோதும் ஒழிந்துபோகாது.
35 வானமும் பூமியும் ஒழிந்துபோகும், ஆனால் என் வார்த்தைகள்
ஒருபோதும் ஒழிந்துபோகாது.[d]

36 அந்த நாளும் அந்த நேரமும் பரலோகத் தகப்பன் ஒருவரைத்
தவிர[e] வேறு யாருக்கும் தெரியாது,[f] பரலோகத்தில் இருக்கிற தேவதூதர்
களுக்கும் தெரியாது, மகனுக்கும் தெரியாது. **37** நோவாவின் நாட்களில்
நடந்தது போலவே[g] மனிதகுமாரனின் பிரசன்னத்தின்போதும்* நடக்கும்.[h]
38 எப்படியென்றால், பெருவெள்ளம் வருவதற்கு முந்தின காலத்தில், மக்
கள் சாப்பிட்டுக்கொண்டும் குடித்துக்கொண்டும் பெண் எடுத்துக்கொண்டும்
பெண் கொடுத்துக்கொண்டும் இருந்தார்கள். நோவா பேழைக்குள்*
நுழைந்த நாள்வரை அப்படித்தான் இருந்தார்கள்.[i] **39** பெருவெள்ளம்
வந்து எல்லாரையும் அடித்துக்கொண்டு போகும்வரை அவர்கள் கவனம்
செலுத்தவே இல்லை;[j] மனிதகுமாரனுடைய பிரசன்னத்தின்போதும் அப்
படியே நடக்கும். **40** அப்போது, இரண்டு ஆண்கள் வயலில் இருப்பார்
கள்; ஒருவன் அழைத்துக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்.
41 இரண்டு பெண்கள் கல்லில்* மாவு அரைத்துக்கொண்டிருப்பார்கள்;
ஒருத்தி அழைத்துக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள்.[k]
42 அதனால், விழிப்புடன் இருங்கள்; ஏனென்றால், உங்கள் எஜமான் எந்த
நாளில் வருவார் என்பது உங்களுக்குத் தெரியாது.[l]

43 ஆனால், ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்: ராத்திரி எந்த
நேரத்தில் திருடன் வருவான்[m] என்பது வீட்டு எஜமானுக்குத் தெரிந்திருந்
தால், அவர் விழித்திருந்து, வீட்டுக்குள் திருடன் புகுந்துவிடாமல் பார்த்துக்
கொள்வார்.[n] **44** அதனால், நீங்களும் தயாராக இருங்கள்;[o] ஏனென்றால்,
நீங்கள் நினைக்காத நேரத்தில் மனிதகுமாரன் வருவார்.

45 ஏற்ற வேளையில் தன்னுடைய வீட்டாருக்கு உணவு கொடுப்பதற்
காக எஜமான் நியமித்த உண்மையும் விவேகமும்* உள்ள அடிமை
யார்?[p] **46** எஜமான் வரும்போது அப்படிச் செய்துகொண்டிருக்கிற அடி
மையே சந்தோஷமானவன்![q] **47** உண்மையாகவே உங்களுக்குச் சொல்கி
றேன், அவர் தன்னுடைய உடைமைகள் எல்லாவற்றையும் கவனித்துக்
கொள்ள அவனை நியமிப்பார்.

48 ஆனால், அந்த அடிமை பொல்லாதவனாக இருந்து, ‘என்னுடைய
எஜமான் வரத் தாமதிக்கிறார்’ என்று தன் இதயத்தில் சொல்லிக்கொண்டு,[r]

24:31 *நே.மொ., “நான்கு காற்றுகளிலிருந்தும்.” **24:37** *சொல் பட்டியலைப் பாருங்கள். **24:38** *இது கப்பலைப் போல் பெரிதாக இருந்தது, ஆனால் நீளமான ஒரு பெட்டிபோல் இருந்தது. **24:41** *வே.வா., “திரிகைக் கல்லில்.” **24:45** *வே.வா., “ஞானமும்.”

அதி. 24
a மாற் 13:27
b மாற் 13:28-31; லூ 21:29-33
c யாக் 5:8, 9
d லூ 21:33
e மாற் 13:32; அப் 1:7
f 1தெ 5:1, 2
g ஆதி 6:11-13
h லூ 17:26, 27
i ஆதி 7:7; எபி 11:7; 1பே 3:19, 20; 2பே 2:5
j ஆதி 7:23; 2பே 3:6
k லூ 17:35
l மத் 25:13; மாற் 13:33; லூ 21:36
m 1தெ 5:2; 2பே 3:10
n லூ 12:39, 40
o மாற் 13:35
p லூ 12:42-44
q வெளி 16:15
r லூ 12:45, 46

49 சக அடிமைகளை அடிக்கவும் குடிகாரர்களோடு சேர்ந்து சாப்பிட்டுக்
குடிக்கவும் ஆரம்பித்தால் என்ன ஆகும்? 50 அவன் எதிர்பார்க்காத
நாளில், அவனுக்குத் தெரியாத நேரத்தில் அவனுடைய எஜமான் வந்து,[a]
51 அவனை மிகக் கடுமையாகத் தண்டிப்பார்; வெளிவேஷக்காரர்கள் தள்
ளப்படும் இடத்தில் அவனைத் தள்ளிவிடுவார். அங்கே அவன் அழுது அங்
கலாய்ப்பான்"*[b] என்றார்.

25 பின்பு அவர், "பரலோக அரசாங்கம் விளக்குகளை எடுத்துக்
கொண்டு[c] மணமகனைப்[d] பார்க்க போன பத்துக் கன்னிப்பெண்க
ளைப் போல் இருக்கிறது. 2 அவர்களில் ஐந்து பேர் புத்தியில்லாதவர்கள்,
ஐந்து பேர் புத்தியுள்ளவர்கள்.*[e] 3 புத்தியில்லாதவர்கள் தங்களுடைய
விளக்குகளைக் கொண்டுபோனார்கள், ஆனால் எண்ணெயைக் கொண்டு
போகவில்லை. 4 புத்தியுள்ளவர்களோ தங்கள் விளக்குகளோடு குப்பிக
ளில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். 5 மணமகன் வரத் தாமதித்
ததால், அவர்கள் எல்லாரும் அசந்து தூங்கிவிட்டார்கள். 6 நடுராத்திரி
யில், 'இதோ, மணமகன் வருகிறார்! அவரைப் பார்க்கப் புறப்பட்டுப்
போங்கள்' என்ற சத்தம் கேட்டது. 7 அப்போது, அந்தக் கன்னிப்பெண்
கள் எல்லாரும் எழுந்து தங்கள் விளக்குகளைத் தயார்படுத்தினார்கள்.[f]
8 புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களிடம், 'எங்களுடைய விளக்குகள்
அணையப்போகின்றன, உங்களிடம் இருக்கிற எண்ணெயில் எங்களுக்குக்
கொஞ்சம் கொடுங்கள்' என்று கேட்டார்கள். 9 அதற்குப் புத்தியுள்ளவர்
கள், 'எங்களுக்கும் உங்களுக்கும் எண்ணெய் போதாமல் போய்விடலாம்.
அதனால், விற்கிறவர்களிடம் போய் நீங்களே அதை வாங்கிக்கொள்
ளுங்கள்' என்று சொன்னார்கள். 10 ஆனால், அவர்கள் அதை வாங்கப்
போனபோது மணமகன் வந்துவிட்டார்; தயாராக இருந்த கன்னிப்பெண்கள்
அவரோடு திருமண விருந்தில் கலந்துகொள்ள வீட்டுக்குள் போனார்கள்,[g]
கதவும் மூடப்பட்டது. 11 அதன் பின்பு, மற்ற ஐந்து கன்னிப்பெண்களும்
அங்கே வந்து, 'எஜமானே! எஜமானே! கதவைத் திறங்கள்!'[h] என்றார்கள்.
12 அதற்கு அவர், 'நிஜமாகச் சொல்கிறேன், நீங்கள் யாரென்றே எனக்குத்
தெரியாது' என்று சொல்லிவிட்டார்.

13 அதனால், விழிப்புடன் இருங்கள்;[i] ஏனென்றால், உங்களுக்கு அந்த
நாளும் தெரியாது, அந்த நேரமும் தெரியாது.[j]

14 பரலோக அரசாங்கம், தூர தேசத்துக்குப் புறப்பட்டுப் போகிற ஒருவ
ரைப் போல் இருக்கிறது. அவர் போவதற்கு முன்பு, தன்னுடைய அடி
மைகளைக் கூப்பிட்டுத் தன் உடைமைகளை அவர்களிடம் ஒப்படைத்தார்.[k]
15 அவனவனுடைய திறமைக்கு ஏற்றபடி, ஒருவனுக்கு ஐந்து தாலந்தும்,*
இன்னொருவனுக்கு இரண்டு தாலந்தும், மற்றொருவனுக்கு ஒரு தாலந்தும்
கொடுத்துவிட்டுத் தூர தேசத்துக்குப் போனார். 16 ஐந்து தாலந்தை வாங்
கியவன் உடனே போய், அவற்றை வைத்து வியாபாரம் செய்து, இன்னும்
ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். 17 அதேபோல், இரண்டு தாலந்தை
வாங்கியவனும் இன்னும் இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான். 18 ஒரே

24:51 * நே.மொ., "பற்களை நறநறவென்று கடிப்பான்." இது கோபத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் செயல். 25:2 * வே.வா., "விவேகமுள்ளவர்கள்." 25:15 * ஒரு கிரேக்க தாலந்து 20.4 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 24
a மத் 25:13
b மத் 13:42

அதி. 25
c லூ 12:35 பிலி 2:15
d யோவா 3:28, 29 வெளி 19:7
e மத் 7:24, 26
f லூ 12:35
g வெளி 19:9
h லூ 13:25, 27
i 1தெ 5:6 1பே 5:8
j மத் 24:42, 50 மாற் 13:33
k லூ 19:12, 13

அதி. 25
a லூ 19:15
b லூ 19:16, 17
c லூ 16:10
d எபி 12:2
e லூ 19:18, 19
f லூ 19:20–23
g லூ 19:24–26
h மத் 13:12
மாற் 4:25
லூ 8:18
யோவா 15:2
i தானி 7:13
j மத் 16:27

வொரு தாலந்தை வாங்கியவனோ புறப்பட்டுப் போய், தன் எஜமான்
கொடுத்த பணத்தை* குழிதோண்டிப் புதைத்து வைத்தான்.

19 ரொம்பக் காலத்துக்குப் பிறகு, அந்த அடிமைகளுடைய எஜமான்
திரும்பி வந்து அவர்களிடம் கணக்குக் கேட்டார்.[a] **20** ஐந்து தாலந்தை
வாங்கியவன் அவர் முன்னால் வந்து, இன்னும் ஐந்து தாலந்தைக் காட்டி,
‘எஜமானே, நீங்கள் என்னிடம் ஐந்து தாலந்தை ஒப்படைத்தீர்கள்; இதோ
பாருங்கள், நான் இன்னும் ஐந்து தாலந்தைச் சம்பாதித்திருக்கிறேன்’[b] என்று
சொன்னான். **21** அதற்கு அவனுடைய எஜமான், ‘சபாஷ்! உண்மையுள்ள
நல்ல அடிமையே, நீ கொஞ்சக் காரியங்களில் உண்மையுள்ளவனாக இருந்
தாய்; அதனால், நிறைய காரியங்களைக் கவனித்துக்கொள்ள உன்னை
நியமிப்பேன்.[c] உன் எஜமானோடு சேர்ந்து நீயும் சந்தோஷப்படு’[d] என்று
சொன்னார். **22** அடுத்து, இரண்டு தாலந்தை வாங்கியவன் அவர் முன்
னால் வந்து, ‘எஜமானே, நீங்கள் என்னிடம் இரண்டு தாலந்தை ஒப்படைத்
தீர்கள்; இதோ பாருங்கள், நான் இன்னும் இரண்டு தாலந்தைச் சம்பாதித்தி
ருக்கிறேன்’[e] என்று சொன்னான். **23** அதற்கு அவனுடைய எஜமான்,
‘சபாஷ்! உண்மையுள்ள நல்ல அடிமையே, நீ கொஞ்சக் காரியங்களில் உண்
மையுள்ளவனாக இருந்தாய்; அதனால் நிறைய காரியங்களைக் கவனித்துக்
கொள்ள உன்னை நியமிப்பேன். உன் எஜமானோடு சேர்ந்து நீயும் சந்தோ
ஷப்படு’ என்று சொன்னார்.

24 கடைசியாக, ஒரு தாலந்தை வாங்கியவன் அவர் முன்னால்
வந்து, ‘எஜமானே, நீங்கள் கறாரானவர், மற்றவர்கள் விதைத்ததை அறு
வடை செய்கிறவர், மற்றவர்கள் புடைத்ததைச் சேகரிக்கிறவர் என்றெல்
லாம் எனக்குத் தெரியும்.[f] **25** அதனால் நான் உங்களுக்குப் பயந்து,
நீங்கள் கொடுத்த தாலந்தை மண்ணுக்குள் புதைத்து வைத்தேன். இதோ,
உங்கள் தாலந்து’ என்று சொன்னான். **26** அதற்கு அவனுடைய எஜமான்,
‘பொல்லாத அடிமையே, சோம்பேறியே, நான் மற்றவர்கள் விதைத்ததை
அறுவடை செய்கிறவன் என்றும், மற்றவர்கள் புடைத்ததைச் சேகரிக்கிற
வன் என்றும் உனக்குத் தெரிந்திருந்ததுதானே? **27** அப்படியானால், என்
னுடைய பணத்தை* நீ வட்டிக் கடைக்காரர்களிடமாவது கொடுத்து வைத்தி
ருக்க வேண்டும்; நான் திரும்பி வந்ததும் எனக்குச் சேர வேண்டியதை வட்டி
யோடு வாங்கியிருப்பேனே’ என்று சொன்னார்.

28 பின்பு அவர் தன் வேலைக்காரர்களிடம், ‘அவனிடம் இருக்கிற
தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்து வைத்திருப்பவனிடம் கொடுங்கள்.[g]
29 இருக்கிறவனுக்கு அதிகமாகக் கொடுக்கப்படும், அவன் ஏராளமாகப்
பெற்றிருப்பான்; ஆனால், இல்லாதவனிடமிருந்து இருப்பதும் எடுத்துக்
கொள்ளப்படும்.[h] **30** ஒன்றுக்கும் உதவாத இந்த அடிமையைத் தூக்கி
வெளியே இருட்டில் வீசிவிடுங்கள். அங்கே அவன் அழுது அங்கலாய்ப்
பான்’* என்று சொன்னார்.

31 மனிதகுமாரன்[i] தன்னுடைய மகிமையில் எல்லா தேவதூதர்களோ
டும் வரும்போது,[j] தன் மகிமையான சிம்மாசனத்தில் உட்காருவார்.
32 எல்லா தேசத்தாரும் அவர் முன்னால் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்;

25:18, 27 * நே.மொ., “வெள்ளியை.” **25:30** * நே.மொ., “பற்களை நறநறவென்று கடிப்
பான்.” இது கோபத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் செயல்.

செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் ஒரு மேய்ப்பன் தனித்தனியா
கப் பிரிப்பதுபோல், அவர்களை அவர் பிரிப்பார். **33** செம்மறியாடுக
ளைத்[a] தன் வலது பக்கத்தில் நிறுத்துவார், வெள்ளாடுகளையோ தன் இடது
பக்கத்தில் நிறுத்துவார்.[b]

34 பின்பு, ராஜா தன் வலது பக்கத்தில் இருக்கிறவர்களைப் பார்த்து,
'என் தகப்பனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, வாருங்கள்; உலகம் உண்டா
னதுமுதல் உங்களுக்காகத் தயார்படுத்தப்பட்டுள்ள அரசாங்கத்தைச் சொந்த
மாக்கிக்கொள்ளுங்கள். **35** ஏனென்றால் நான் பசியாக இருந்தேன், எனக்
குச் சாப்பிடக் கொடுத்தீர்கள்; தாகமாக இருந்தேன், குடிக்கக் கொடுத்தீர்கள்;
அன்னியனாக இருந்தேன், என்னை வரவேற்று உபசரித்தீர்கள்;[c]
36 உடையில்லாமல் இருந்தேன், எனக்கு உடை கொடுத்தீர்கள்.[d] நோயா
ளியாக இருந்தேன், என்னைக் கவனித்துக்கொண்டீர்கள். சிறையில் இருந்
தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்'[e] என்று சொன்னார். **37** உடனே,
நீதிமான்களாகிய அவர்கள், 'எஜமானே, நீங்கள் எப்போது பசியாக இருப்
பதைப் பார்த்துச் சாப்பிடக் கொடுத்தோம், தாகமாக இருப்பதைப் பார்த்
துக் குடிக்கக் கொடுத்தோம்?[f] **38** நீங்கள் எப்போது அன்னியராக இருப்
பதைப் பார்த்து வரவேற்று உபசரித்தோம், உடையில்லாமல் இருப்பதைப்
பார்த்து உடை கொடுத்தோம்? **39** எப்போது உங்களை நோயாளியா
கப் பார்த்தோம் அல்லது சிறையில் வந்து பார்த்தோம்?' என்று கேட்பார்கள்.
40 அதற்கு ராஜா, 'உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், மிகச் சிறி
யவர்களான என் சகோதரர்களாகிய இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதைச்
செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்'[g] என்று சொல்வார்.

41 பின்பு, அவர் தன்னுடைய இடது பக்கத்தில் இருக்கிறவர்களைப்
பார்த்து, 'சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு விலகி,[h] பிசாசுக்காகவும்
அவனுடைய தூதர்களுக்காகவும் தயார்படுத்தப்பட்டுள்ள,[i] என்றென்றும்
அணையாத நெருப்புக்குள் போய் விழுங்கள்.[j] **42** ஏனென்றால் நான்
பசியாக இருந்தேன், நீங்கள் எனக்குச் சாப்பிட எதுவும் கொடுக்க
வில்லை; தாகமாக இருந்தேன், குடிக்க எதுவும் தரவில்லை. **43** அன்னிய
னாக இருந்தேன், என்னை வரவேற்று உபசரிக்கவில்லை; உடையில்லாமல்
இருந்தேன், உடை கொடுக்கவில்லை; நோயாளியாகவும் சிறைக்கைதியாக
வும் இருந்தேன், என்னைக் கவனித்துக்கொள்ளவில்லை' என்று சொல்வார்.
44 அப்போது அவர்கள், 'எஜமானே, நீங்கள் பசியாகவோ தாகமாகவோ
அன்னியராகவோ உடையில்லாதவராகவோ நோயாளியாகவோ சிறைக்
கைதியாகவோ இருப்பதைப் பார்த்து நாங்கள் எப்போது உங்களுக்குப்
பணிவிடை செய்யாமல் இருந்தோம்?' என்று கேட்பார்கள். **45** அதற்கு
அவர், 'உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், மிகச் சிறியவர்களான
என் சகோதரர்களாகிய இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்யவில்
லையோ அதை எனக்கே செய்யவில்லை'[k] என்று சொல்வார். **46** இவர்
கள் நிரந்தரமாக அழிக்கப்படுவார்கள்,[l] ஆனால் நீதிமான்கள் நிரந்தரமான*
வாழ்வைப் பெறுவார்கள்"[m] என்றார்.

26 இந்த எல்லா விஷயங்களையும் இயேசு பேசி முடித்த பின்பு தன்
னுடைய சீஷர்களிடம், **2** "உங்களுக்குத் தெரிந்தபடி, இன்னும்
இரண்டு நாட்களில் பஸ்கா பண்டிகை வரப்போகிறது,[n] அப்போது மனித

25:46 * அல்லது, "முடிவில்லாத."

அதி. 25
a யோவா 10:15
b மத் 25:41
c எபி 13:2; 3யோ 5
d யாக் 2:15, 16
e 2தீ 1:16
f மத் 10:42
g நீதி 19:17; மத் 10:40; மாற் 9:41; எபி 6:10
h மத் 7:23
i வெளி 12:9; வெளி 20:10
j மத் 18:8, 9
k சக 2:8; அப் 9:4, 5
l 2பே 2:9
m ரோ 2:6, 7

அதி. 26
n யாத் 12:14; மாற் 14:1, 2; லூ 22:1, 2; யோவா 13:1

குமாரன் மரக் கம்பத்தில்* அறைந்து கொல்லப்படுவதற்கு ஒப்படைக்கப்
படுவார்"[a] என்று சொன்னார்.

3 அந்தச் சமயத்தில், முதன்மை குருமார்களும் பெரியோர்களும்* தலை
மைக் குருவாகிய காய்பா என்பவருடைய வீட்டின் உள்முற்றத்தில் ஒன்றாகக்
கூடிவந்து,[b] **4** இயேசுவைத் தந்திரமாகப் பிடித்து* கொன்றுபோட திட்டம்
போட்டார்கள்.[c] **5** ஆனால், "பண்டிகையின்போது வேண்டாம், மக்கள்
மத்தியில் ஒருவேளை கலவரம் ஏற்படலாம்" என்று பேசிக்கொண்டார்கள்.

6 பெத்தானியாவில், முன்பு தொழுநோயாளியாக இருந்த சீமோனின்
வீட்டில் இயேசு[d] சாப்பிட உட்கார்ந்திருந்தார். **7** அப்போது ஒரு பெண்,
விலை உயர்ந்த வாசனை எண்ணெயை வெண்சலவைக்கல் குப்பி ஒன்றில்
எடுத்துவந்து, அதை அவருடைய தலையில் ஊற்ற ஆரம்பித்தாள்.
8 அதைப் பார்த்த சீஷர்கள் கோபப்பட்டு, "ஏன் இதை இப்படி வீணாக்கு
கிறாள்? **9** இதை நல்ல விலைக்கு விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்க
லாமே" என்று பேசிக்கொண்டார்கள். **10** இயேசு அதைத் தெரிந்து
கொண்டு, "ஏன் இந்தப் பெண்ணின் மனதை நோகடிக்கிறீர்கள்? இவள்
எனக்கு நல்லதுதான் செய்தாள். **11** ஏனென்றால், ஏழைகள் எப்போதும்
உங்களோடு இருக்கிறார்கள்,[e] ஆனால் நான் எப்போதும் உங்களோடு
இருக்கப்போவதில்லை.[f] **12** இந்தப் பெண் என்னுடைய உடல்மேல் இந்த
வாசனை எண்ணெயை ஊற்றி, நான் அடக்கம் செய்யப்படுவதற்கு என்
னைத் தயார்செய்திருக்கிறாள்.[g] **13** உண்மையாகவே உங்களுக்குச் சொல்
கிறேன், உலகில் எங்கெல்லாம் நல்ல செய்தி பிரசங்கிக்கப்படுகிறதோ,
அங்கெல்லாம் இந்தப் பெண் செய்த காரியமும் இவள் நினைவாகச் சொல்
லப்படும்" என்று சொன்னார்.[h]

14 பின்பு, பன்னிரண்டு பேரில்* ஒருவனான யூதாஸ் இஸ்காரியோத்து[i]
முதன்மை குருமார்களிடம் போய்,[j] **15** "அவரைக் காட்டிக்கொடுத்தால்
எனக்கு என்ன தருவீர்கள்?"[k] என்று கேட்டான். அவர்கள் 30 வெள்ளிக்
காசுகள் கொடுப்பதாக அவனோடு ஒப்பந்தம் செய்தார்கள்.[l] **16** அது
முதல், அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சரியான சந்தர்ப்பத்தை அவன்
தேடிக்கொண்டே இருந்தான்.

17 புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையின்[m] முதலாம் நாளில் சீஷர்
கள் அவரிடம் வந்து, "பஸ்கா உணவைச் சாப்பிட நாங்கள் எங்கே ஏற்
பாடு செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள்.[n] **18** அதற்கு அவர், "நீங்
கள் நகரத்துக்குள் போய், இன்னாரைப் பார்த்து, 'எனக்குக் குறிக்கப்பட்ட
நேரம் நெருங்கிவிட்டது; உங்கள் வீட்டில் என் சீஷர்களோடு பஸ்கா பண்
டிகையைக் கொண்டாடப்போகிறேன்' என்று போதகர் சொன்னதாகச் சொல்
லுங்கள்" என்றார். **19** சீஷர்களும் இயேசு சொன்னபடியே செய்து, பஸ்கா
வுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

20 சாயங்காலம் ஆனபோது[o] அவர் 12 சீஷர்களோடு சாப்பிட
உட்கார்ந்திருந்தார்.[p] **21** அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, "உண்
மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், உங்களில் ஒருவன் என்னைக்
காட்டிக்கொடுப்பான்" என்றார்.[q] **22** அதைக் கேட்டு அவர்கள் மிகவும் துக்
கப்பட்டு, "எஜமானே, அது நானா, நானா?" என்று ஒவ்வொருவரும்

26:2 *சொல் பட்டியலைப் பாருங்கள். **26:3** *வே.வா., "மூப்பர்களும்." **26:4** *வே.வா., "கைது செய்து." **26:14** *அதாவது, "அப்போஸ்தலர்களில்."

அதி. 26
a மத் 16:21; மத் 20:18, 19; மத் 27:26; மாற் 15:15; யோவா 19:16
b மத் 26:57; லூ 3:2; யோவா 11:49; யோவா 18:13, 24
c சங் 2:2
d மாற் 14:3-9; யோவா 12:1-8
e உபா 15:11
f மாற் 14:7
g மாற் 14:8; யோவா 12:7
h மாற் 14:9
i மத் 10:2, 4; யோவா 13:2
j மாற் 14:10, 11; லூ 22:3-6
k யோவா 11:57
l யாத் 21:32; சக 11:12; மத் 27:3
m யாத் 12:18; யாத் 23:15; லூ 22:1
n மாற் 14:12-16; லூ 22:7-13
o உபா 16:6
p மாற் 14:17-21; லூ 22:14
q லூ 22:21-23; யோவா 6:70; யோவா 13:21, 22

கேட்க ஆரம்பித்தார்கள். **23** அதற்கு அவர், “என்னோடு சேர்ந்து இந்தப்
பாத்திரத்திலிருந்து எடுத்துச் சாப்பிடுகிறவன்தான் என்னைக் காட்டிக்கொடுப்
பான்.[a] **24** மனிதகுமாரன் தன்னைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறபடியே உங்
களைவிட்டுப் போகிறார் என்பது உண்மைதான்; ஆனால், மனிதகுமார
னைக் காட்டிக்கொடுக்கிறவனுக்குக்[b] கேடுதான் வரும்![c] அவன் பிறக்காமல்
இருந்திருந்தாலே அவனுக்கு நல்லதாக இருந்திருக்கும்”[d] என்று சொன்னார்.
25 அவரைக் காட்டிக்கொடுக்கவிருந்த யூதாஸ், “ரபீ,* அது நானா?” என்று
அவரிடம் கேட்டான். அதற்கு அவர், “அதை நீயே சொல்லிவிட்டாய்” என்று
சொன்னார்.

26 அவர்கள் தொடர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, இயேசு ரொட்
டியை எடுத்து, ஜெபம் செய்து,* அதைப் பிட்டு[e] சீஷர்களிடம் கொடுத்து,
“இதைச் சாப்பிடுங்கள், இது என் உடலைக் குறிக்கிறது”[f] என்று சொன்னார்.
27 அதோடு, ஒரு கிண்ணத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி சொல்லி, அவர்
களிடம் கொடுத்து, “நீங்கள் எல்லாரும் இதிலிருந்து குடியுங்கள்;[g]
28 ஏனென்றால் இது, ‘ஒப்பந்தத்தை[h] உறுதிப்படுத்தும் என் இரத்தத்தை’[i]
குறிக்கிறது; என் இரத்தம், பாவ மன்னிப்புக்கென்று[j] பலருக்காகச் சிந்தப்ப
டப்போகிறது.[k] **29** ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், என் தகப்ப
னுடைய அரசாங்கத்தில் புதிய திராட்சமதுவை உங்களோடு சேர்ந்து குடிக்
கும் நாள்வரை இனி நான் திராட்சமதுவையே குடிக்க மாட்டேன்”[l] என்று
சொன்னார். **30** கடைசியில், கடவுளைப் புகழ்ந்து பாடல்கள்* பாடிவிட்டு,
ஒலிவ மலைக்கு அவர்கள் போனார்கள்.[m]

31 அப்போது இயேசு அவர்களிடம், “இன்று ராத்திரி எனக்கு நடக்கப்
போவதைப் பார்த்து நீங்கள் எல்லாரும் என்னைவிட்டு ஓடிப்போவீர்
கள்; ஏனென்றால், ‘நான் மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையில் இருக்கிற
ஆடுகள் சிதறி ஓடும்’ என்று எழுதப்பட்டிருக்கிறது.[n] **32** ஆனால், நான்
உயிரோடு எழுப்பப்பட்ட பிறகு உங்களுக்கு முன்னதாகவே கலிலேயாவுக்
குப் போவேன்”[o] என்று சொன்னார். **33** பேதுருவோ, “உங்களுக்கு நடக்
கப்போவதைப் பார்த்து மற்ற எல்லாரும் உங்களைவிட்டு ஓடிப்போனாலும்
நான் ஓடிப்போகவே மாட்டேன்!”[p] என்று சொன்னார். **34** அதற்கு இயேசு,
“உண்மையாகவே உனக்குச் சொல்கிறேன், இன்று ராத்திரி சேவல் கூவு
வதற்கு முன்பு, என்னைத் தெரியாதென்று நீ மூன்று தடவை சொல்லிவிடு
வாய்”[q] என்றார். **35** ஆனால் பேதுரு, “நான் உங்களோடு சாக வேண்டியி
ருந்தாலும் உங்களைத் தெரியாது என்று சொல்லவே மாட்டேன்”[r] என்றார்.
மற்ற எல்லா சீஷர்களும் அதையே சொன்னார்கள்.

36 பின்பு, கெத்செமனே என்ற இடத்துக்கு இயேசு தன் சீஷர்களோடு
வந்தார்;[s] அப்போது அவர் அவர்களிடம், “நான் அங்கே போய் ஜெபம்
செய்கிற வரைக்கும் நீங்கள் இங்கேயே உட்கார்ந்திருங்கள்”[t] என்று சொல்
லிவிட்டு, **37** பேதுருவையும் செபெதேயுவின் இரண்டு மகன்களையும்
தன்னோடு கூட்டிக்கொண்டு போனார்; அப்போது, அவர் மிகுந்த துக்கமும்
மனக்கலக்கமும் அடைந்து,[u] **38** “உயிர் போகுமளவுக்கு நான் துக்கத்தில்
தவிக்கிறேன். நீங்கள் இங்கேயே இருந்து, என்னோடு விழித்திருங்கள்”[v]
என்று அவர்களிடம் சொன்னார். **39** பின்பு சற்று முன்னே போய், மண்டி

26:25 * அதாவது, “போதகரே.” **26:26** * நே.மொ., “ஆசீர்வதித்து.” **26:30** * வே.வா., “சங்கீதங்கள்.”

அதி. 26
a சங் 41:9; மாற் 14:20; லூ 22:21; யோவா 13:26
b லூ 22:22; யோவா 17:12
c உபா 27:25
d மாற் 14:21
e 1கொ 10:16
f மாற் 14:22; லூ 22:19; 1கொ 11:23-26
g மாற் 14:23; லூ 22:20
h யாத் 24:8; எரே 31:31; எபி 7:22
i 1கொ 10:16
j எபே 1:7; எபி 9:20, 22
k மத் 20:28; மாற் 14:24
l மாற் 14:25; லூ 22:18
m லூ 22:39; யோவா 18:1
n சக 13:7; மாற் 14:27, 28; யோவா 16:32
o மத் 28:7; மத் 28:16
p மாற் 14:29-31
q மாற் 14:30; லூ 22:34; யோவா 13:38
r லூ 22:33
s யோவா 18:1
t மாற் 14:32-36; லூ 22:40
u ஏசா 53:3
v மாற் 14:34

போட்டு தரைவரைக்கும் குனிந்து, “தகப்பனே, இந்தக் கிண்ணம்*[a] என்னி
டமிருந்து நீங்க முடியுமானால் நீங்கும்படி செய்யுங்கள். ஆனாலும், என்னு
டைய விருப்பத்தின்படி# அல்ல, உங்களுடைய விருப்பத்தின்படியே△
நடக்கட்டும்”[b] என்று ஜெபம் செய்தார்.[c]

40 அதன் பின்பு, அவர் வந்து சீஷர்களைப் பார்த்தபோது
அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்; அப்போது பேதுருவிடம், “உங்க
ளால் ஒரு மணிநேரம்கூட என்னோடு சேர்ந்து விழித்திருக்க முடியவில்
லையா?[d] **41** சோதனைக்கு இணங்கிவிடாதபடி[e] நீங்கள் விழித்திருந்து,[f]
தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள்.[g] உள்ளம் ஆர்வமாக இருக்கிறது, உடலோ
பலவீனமாக இருக்கிறது”[h] என்று சொன்னார். **42** மறுபடியும் அவர் இரண்
டாவது தடவை போய், “தகப்பனே, நான் இந்தக் கிண்ணத்திலிருந்து குடிப்
பதைத் தவிர வேறு வழி இல்லையென்றால், உங்களுடைய விருப்பத்
தின்படியே△ நடக்கட்டும்”[i] என்று சொல்லி ஜெபம் செய்தார். **43** சீஷர்கள்
பயங்கர தூக்கக் கலக்கத்தில் இருந்ததால், அவர் மறுபடியும் வந்து பார்த்த
போது அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். **44** அதனால் அவர் மறுபடி
யும் அவர்களைவிட்டுப் போய், முன்பு சொன்ன விஷயங்களையே சொல்லி
மூன்றாவது தடவை ஜெபம் செய்தார். **45** பின்பு சீஷர்களிடம் வந்து, “இப்
படிப்பட்ட நேரத்தில் தூங்கிக்கொண்டும் ஓய்வெடுத்துக்கொண்டும் இருக்கி
றீர்களே! இதோ, மனிதகுமாரன் பாவிகளிடம் காட்டிக்கொடுக்கப்படுகிற
நேரம் நெருங்கிவிட்டது. **46** எழுந்திருங்கள், போகலாம். இதோ, என்
னைக் காட்டிக்கொடுக்கிறவன் நெருங்கி வந்துவிட்டான்” என்று சொன்னார்.
47 அவர் பேசிக்கொண்டிருந்தபோதே, பன்னிரண்டு பேரில் ஒருவனாகிய
யூதாஸ் அங்கே வந்தான்; முதன்மை குருமார்களும் பெரியோர்களும்
அனுப்பிய ஆட்கள் வாள்களோடும் தடிகளோடும் பெரிய கூட்டமாக அவ
னோடு வந்தார்கள்.[j]

48 அவரைக் காட்டிக்கொடுப்பவன், “நான் யாருக்கு முத்தம் கொடுக்கி
றேனோ அவர்தான் அந்த ஆள்; அவரைப் பிடித்துக்கொள்ளுங்கள்” என்று
அவர்களிடம் சொல்லியிருந்தான். **49** அதனால் அவன் நேராக இயேசுவி
டம் போய், “ரபீ,* வாழ்க!” என்று சொல்லி, மென்மையாக முத்தம் கொடுத்
தான். **50** ஆனால் இயேசு அவனிடம், “நீ எதற்காக இங்கே வந்தாய்?”[k]
என்று கேட்டார். அப்போது, அந்த ஆட்கள் அவர் பக்கத்தில் போய் அவ
ரைப் பிடித்துக் கைது செய்தார்கள். **51** ஆனால், இயேசுவோடு இருந்தவர்
களில் ஒருவர் தன் வாளை உருவி, தலைமைக் குருவின் வேலைக்காரனைத்
தாக்கினார்; அவனுடைய காது அறுந்துபோனது.[l] **52** அப்போது இயேசு
அவரிடம், “உன் வாளை உறையில் போடு;[m] வாளை எடுக்கிற எல்லா
ரும் வாளால் சாவார்கள்.[n] **53** இந்த நொடியே 12 லேகியோனுக்கும்* அதி
கமான தேவதூதர்களை[o] அனுப்பச் சொல்லி என் தகப்பனிடம் என்னால்
வேண்டிக்கொள்ள முடியாதென்றா நினைக்கிறாய்? **54** நான் அப்படிச்

26:39 *“கிண்ணம்” என்பது கடவுளுடைய சித்தத்தை, அதாவது இயேசு தெய்வ நிந்தனை செய்தார் என்று பொய்யாகக் குற்றம்சாட்டப்பட்டுக் கொல்லப்படுவதற்குக் கடவுள் அவரை அனுமதித்ததை அடையாளப்படுத்துகிறது. #வே.வா., “சித்தத்தின்படி.” **26:39, 42** △வே.வா., “சித்தத்தின்படியே.” **26:49** *அதாவது, “போதகரே.” **26:53** *“லேகியோன்” என்பது அந்தக் காலத்தில் ரோமப் படையின் முக்கியப் பிரிவு. இந்த வசனத்தில் இது பெரும் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

அதி. 26
a மத் 20:22; யோவா 18:11
b மாற் 14:36; லூ 22:42; யோவா 5:30; யோவா 6:38; எபி 10:9
c எபி 5:7
d மாற் 14:37-42; லூ 22:45
e மத் 6:13; லூ 22:46
f மாற் 13:33; 1பே 5:8; வெளி 16:15
g லூ 18:1; ரோ 12:12; எபே 6:18; 1பே 4:7
h மாற் 14:38; ரோ 7:23
i மத் 6:10; யோவா 12:27
j மாற் 14:43-47; லூ 22:47-51; யோவா 18:3
k சங் 41:9
l மாற் 14:47; லூ 22:50; யோவா 18:10
m யோவா 18:11
n ஆதி 9:6
o 2ரா 6:17; தானி 7:10; மத் 4:11

செய்தால், இதெல்லாம் நடக்க வேண்டுமென்று சொல்கிற வேதவசனங்
கள் எப்படி நிறைவேறும்?” என்று கேட்டார். **55** அந்தச் சமயத்தில் இயேசு
அந்தக் கூட்டத்தாரிடம், “ஒரு கொள்ளைக்காரனைப் பிடிக்க வருவது
போல வாள்களோடும் தடிகளோடும் என்னைப் பிடிக்க வந்திருக்கிறீர்களா?
நான் தினமும் ஆலயத்தில் உட்கார்ந்து கற்பித்துக்கொண்டிருந்தேன்;[a] அப்
போதெல்லாம் நீங்கள் என்னைக் கைது செய்யவில்லை.[b] **56** ஆனால்,
தீர்க்கதரிசிகள் எழுதிவைத்த வசனங்கள் நிறைவேறும்படியே இவையெல்
லாம் நடந்திருக்கின்றன”[c] என்று சொன்னார். அதன் பின்பு, சீஷர்கள் எல்
லாரும் அவரை விட்டுவிட்டு ஓடிப்போனார்கள்.[d]

57 இயேசுவைக் கைது செய்தவர்கள் அவரைத் தலைமைக் குருவான
காய்பாவிடம் கொண்டுபோனார்கள்;[e] அங்கே வேத அறிஞர்களும் பெரி
யோர்களும் கூடியிருந்தார்கள்.[f] **58** ஆனால் பேதுரு தூரத்திலிருந்தப
டியே அவரைப் பின்தொடர்ந்து, தலைமைக் குருவின் வீட்டு உள்முற்றம்
வரை போனார்; என்ன நடக்கப்போகிறது என்பதைப் பார்ப்பதற்காக அந்த
வீட்டு வேலைக்காரர்களோடு உட்கார்ந்துகொண்டார்.[g]

59 இதற்கிடையில், முதன்மை குருமார்களும் நியாயசங்க உறுப்பி
னர்கள் எல்லாரும், இயேசுவுக்கு மரண தண்டனை விதிக்க அவருக்கு எதி
ராகப் பொய்க் குற்றச்சாட்டுகள் கிடைக்குமா என்று பார்த்துக்கொண்டிருந்
தார்கள்;[h] **60** பொய் சாட்சி சொல்ல பலர் முன்வந்தாலும்,[i] தகுந்த குற்றச்
சாட்டுகள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பின்பு இரண்டு
பேர் முன்வந்து, **61** “இந்த மனுஷன், கடவுளுடைய ஆலயத்தைத் தரை
மட்டமாக்கி மூன்று நாட்களுக்குள் அதைக் கட்டியெழுப்புவதாகச் சொன்
னான்”[j] என்றார்கள். **62** அப்போது, தலைமைக் குரு எழுந்து, “உனக்கு
எதிராக இவர்கள் சாட்சி சொல்கிறார்களே, நீ பதில் சொல்ல மாட்டாயா?”[k]
என்று அவரிடம் கேட்டார். **63** ஆனால், இயேசு அமைதியாக இருந்
தார்.[l] அதனால் தலைமைக் குரு, “உயிருள்ள கடவுள்மேல் ஆணையாகச்
சொல், நீதான் கடவுளுடைய மகனாகிய கிறிஸ்துவா?”[m] என்று கேட்டார்.
64 அதற்கு இயேசு, “அதை நீங்களே சொல்லிவிட்டீர்கள். ஆனாலும் உங்
கள் எல்லாரிடமும் சொல்கிறேன், இதுமுதல் மனிதகுமாரன்[n] வல்லமையுள்
ளவரின் வலது பக்கத்தில் உட்கார்ந்திருப்பதையும்[o] வானத்து மேகங்கள்
மேல் வருவதையும் நீங்கள் பார்ப்பீர்கள்”[p] என்று சொன்னார். **65** அதைக்
கேட்டு தலைமைக் குரு தன் மேலங்கியைக் கிழித்து, “இது தெய்வ நிந்
தனை! இனி நமக்கு வேறு சாட்சிகள் எதற்கு? இதோ! இந்த நிந்தனையை
நீங்களே இப்போது கேட்டீர்கள். **66** உங்கள் அபிப்பிராயம் என்ன?”
என்று கேட்டார். அதற்கு அவர்கள், “இவன் சாக வேண்டும்”[q] என்று சொன்
னார்கள். **67** பின்பு, அவருடைய முகத்தில் துப்பி,[r] தங்கள் கைமுஷ்டிக
ளால் குத்தினார்கள்.[s] மற்றவர்கள் அவருடைய கன்னத்தில் அறைந்து,[t]
68 “கிறிஸ்துவே, நீ ஒரு தீர்க்கதரிசியாக இருந்தால், உன்னை அடித்தது
யாரென்று சொல் பார்க்கலாம்!” என்றார்கள்.

69 பேதுரு வெளியே முற்றத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார்; அப்
போது, ஒரு வேலைக்காரப் பெண் அவரிடம் வந்து, “கலிலேயனாகிய இயே
சுவோடு நீயும்தான் இருந்தாய்!”[u] என்று சொன்னாள். **70** ஆனால்,
அவர் எல்லாருக்கும் முன்பாக அதை மறுத்து, “நீ என்ன சொல்கிறாய்
என்றே எனக்குத் தெரியவில்லை” என்றார். **71** பின்பு, அவர் வாசல்

அதி. 26
a லூ 19:47; யோவா 18:20
b மாற் 14:48, 49; லூ 22:52, 53
c சங் 22:16-18; ஏசா 53; தானி 9:26
d சக 13:7; மாற் 14:50; யோவா 16:32
e யோவா 18:13
f மாற் 14:53, 54; லூ 22:54, 55
g யோவா 18:16
h மாற் 14:55-59
i சங் 27:12; சங் 35:11
j மத் 27:39, 40; யோவா 2:19; அப் 6:14
k மாற் 14:60-65
l ஏசா 53:7; அப் 8:32
m லூ 22:67-71
n தானி 7:13; யோவா 1:51
o சங் 110:1; லூ 22:69
p மாற் 14:62; வெளி 1:7
q லேவி 24:16; யோவா 19:7
r ஏசா 50:6
s லூ 22:63, 64
t ஏசா 53:3
u மாற் 14:66-72; லூ 22:54-62; யோவா 18:15-17

மண்டபத்துக்குப் போனபோது, மற்றொரு பெண் அவரைப் பார்த்து, “நாசரேத்தூர் இயேசுவோடு இந்த ஆளும் இருந்தான்”[a] என்று அங்கிருந்தவர்களிடம் சொன்னாள். **72** ஆனால் அவர் மறுபடியும் அதை மறுத்து, “எனக்கு அந்த மனுஷனைத் தெரியவே தெரியாது!” என்று ஆணையிட்டுச் சொன்னார். **73** கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, அங்கு சுற்றிலும் நின்றுகொண்டிருந்தவர்கள் பேதுருவிடம் வந்து, “நிச்சயமாகவே நீயும் அவர்களில் ஒருவன்தான்; உன் பேச்சே* உன்னைக் காட்டிக்கொடுக்கிறது” என்று சொன்னார்கள். **74** அப்போது அவர், தான் சொல்வது பொய்யாக இருந்தால் தன்மேல் சாபம் வரட்டும் என்று சொல்லி, “அந்த மனுஷனை எனக்குத் தெரியவே தெரியாது!” எனச் சத்தியம் செய்ய ஆரம்பித்தார். உடனே சேவல் கூவியது. **75** “சேவல் கூவுவதற்கு முன்பு, என்னைத் தெரியாதென்று மூன்று தடவை நீ சொல்லிவிடுவாய்”[b] என்று இயேசு சொன்னது அப்போது பேதுருவின் ஞாபகத்துக்கு வந்தது. அதனால், அவர் வெளியே போய்க் கதறி அழுதார்.

27 பொழுது விடிந்தபோது முதன்மை குருமார்கள், பெரியோர்கள்* ஆகிய எல்லாரும் இயேசுவை எப்படிக் கொன்றுபோடலாம் என்று ஒன்றுகூடிப் பேசினார்கள்.[c] **2** பின்பு, அவருடைய கைகளைக் கட்டி, ஆளுநர் பிலாத்துவிடம் கொண்டுபோய் ஒப்படைத்தார்கள்.[d]

3 அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைப் பார்த்து மனம் வருந்தினான்; அதனால், முதன்மை குருமார்களிடமும் பெரியோர்களிடமும் அந்த 30 வெள்ளிக் காசுகளைத் திரும்பக் கொண்டுபோய்,[e] **4** “எந்தத் தப்பும் செய்யாத ஒருவரை* காட்டிக்கொடுத்துப் பாவம் செய்துவிட்டேன்” என்று சொன்னான். அதற்கு அவர்கள், “எங்களுக்கென்ன? அது உன் பாடு!” என்று சொன்னார்கள். **5** அதனால், அவன் அந்த வெள்ளிக் காசுகளை ஆலயத்துக்குள் வீசியெறிந்துவிட்டு அங்கிருந்து போய்த் தூக்குப்போட்டுக்கொண்டான்.[f] **6** ஆனால், முதன்மை குருமார்கள் அந்த வெள்ளிக் காசுகளை எடுத்து, “இது இரத்தத்தின் விலையாக இருப்பதால் ஆலயத்தின் பொக்கிஷ அறையில் இதைப் போடுவது சரியல்ல” என்று சொன்னார்கள். **7** அவர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்த பின்பு, அன்னியர்களைப் புதைப்பதற்காக அந்தக் காசுகளை வைத்து குயவரின் நிலத்தை வாங்கினார்கள். **8** அதனால், அது இரத்த நிலம்[g] என்று இந்த நாள்வரை அழைக்கப்படுகிறது. **9** “இஸ்ரவேலர்கள் சிலரால் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையான 30 வெள்ளிக் காசுகளை அவர்கள் எடுத்து, **10** குயவரின் நிலத்தை விலைக்கு வாங்கினார்கள்; யெகோவா* எனக்குக் கட்டளையிட்டது இதுவே”[h] என்று எரேமியா# தீர்க்கதரிசியின் மூலம் சொல்லப்பட்டது அப்போது நிறைவேறியது.

11 ஆளுநர் முன்னால் இயேசு நின்றுகொண்டிருந்தார்; ஆளுநர்

26:73 *வே.வா., “உச்சரிப்பே.” **27:1** *வே.வா., “மூப்பர்கள்.” **27:4** *நே.மொ., “நீதியுள்ள இரத்தத்தை.” **27:10** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். #மேற்கோள் காட்டப்பட்டுள்ள வசனங்கள் சக 11:12, 13-ன் அடிப்படையில் அமைந்துள்ளன. மத்தேயுவின் காலத்திலே, தீர்க்கதரிசிகளுடைய புத்தகங்களில் எரேமியா முதலாவதாக இருந்தது; ‘எரேமியா’ என்ற பெயர் சகரியா உட்பட எல்லா தீர்க்கதரிசனப் புத்தகங்களையும் குறிக்கிற பொதுப் பெயராகவும் இருந்திருக்கலாம்.

அதி. 26
a யோவா 18:25-27
b மத் 26:34; மாற் 14:30; யோவா 13:38

அதி. 27
c மாற் 15:1; லூ 22:66
d சங் 2:2; மத் 20:18, 19; லூ 23:1; யோவா 18:28; அப் 3:13
e மத் 26:14, 15; மாற் 14:10, 11
f அப் 1:16, 18
g அப் 1:19
h சக 11:12, 13

அவரிடம், “நீ யூதர்களுடைய ராஜாவா?” என்று கேட்டார். அதற்கு இயேசு,
“அதை நீங்களே சொல்லிவிட்டீர்கள்” என்றார்.[a] **12** ஆனால், முதன்மை
குருமார்களும் பெரியோர்களும் அவர்மேல் குற்றம்சாட்டியபோது அவர்
எந்தப் பதிலும் சொல்லவில்லை.[b] **13** பின்பு பிலாத்து அவரிடம், “இவர்
கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சுமத்துகிறார்கள், அதையெல்
லாம் நீ கேட்கவில்லையா?” என்றார். **14** ஆனால் அவர் பதில் சொல்ல
வில்லை, ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை; அதனால் ஆளுநர் மிகவும்
ஆச்சரியப்பட்டார்.

15 ஒவ்வொரு வருஷமும் பஸ்கா பண்டிகையின்போது, மக்களுடைய
விருப்பத்தின்படி ஒரு சிறைக்கைதியை விடுதலை செய்வது ஆளுநருடைய
வழக்கம்.[c] **16** பரபாஸ் என்ற பேர்போன கைதி அப்போது காவலில் வைக்
கப்பட்டிருந்தான். **17** அதனால், மக்கள் ஒன்றுகூடி வந்தபோது பிலாத்து
அவர்களிடம், “நான் யாரை விடுதலை செய்ய வேண்டும், பரபாசையா
அல்லது கிறிஸ்து என்று அழைக்கப்படும் இயேசுவையா?” என்று கேட்டார்.
18 ஏனென்றால், பொறாமையால்தான் அவரைத் தன்னிடம் ஒப்படைத்தி
ருந்தார்கள் என்பது பிலாத்துவுக்குத் தெரிந்திருந்தது. **19** அதோடு, நியா
யத்தீர்ப்பு மேடையில் அவர் உட்கார்ந்திருந்தபோது, அவருடைய மனைவி
அவரிடம் ஆள் அனுப்பி, “அந்த நல்ல மனுஷனுடைய விஷயத்தில் நீங்கள்
தலையிட வேண்டாம்; அவரைப் பற்றி இன்று நான் ஒரு கனவு கண்டு ரொம்
பவே கலங்கிப்போனேன்” என்று சொன்னாள். **20** ஆனால், பரபாசை
விடுதலை செய்துவிட்டு[d] இயேசுவைக் கொல்ல வேண்டுமென்று[e] அவரி
டம் கேட்கச் சொல்லி முதன்மை குருமார்களும் பெரியோர்களும் கூட்டத்
தாரைத் தூண்டினார்கள். **21** அப்போது ஆளுநர், “இந்த இரண்டு பேரில்
யாரை உங்களுக்காக விடுதலை செய்ய வேண்டும்?” என்று கேட்டார்.
“பரபாசை!” என்று அவர்கள் கத்தினார்கள். **22** அதற்கு பிலாத்து, “அப்படி
யானால், கிறிஸ்து என்று அழைக்கப்படும் இயேசுவை நான் என்ன செய்ய
வேண்டும்?” என்று கேட்டார். அவர்கள் எல்லாரும், “இவனை மரக் கம்பத்
தில் அறைந்து கொல்லுங்கள்!” என்று கத்தினார்கள்.[f] **23** அப்போது அவர்,
“ஏன்? இவன் என்ன குற்றம் செய்தான்?” என்று கேட்டார். அதற்கு அவர்
கள், “இவனை மரக் கம்பத்தில் அறைந்து கொல்லுங்கள்!” என்று சொல்லி
இன்னும் அதிகமாகக் கூச்சல் போட்டார்கள்.[g]

24 தன்னுடைய முயற்சி பலன் தரவில்லை என்பதையும் கலவ
ரம்தான் வெடிக்கப்போகிறது என்பதையும் பிலாத்து புரிந்துகொண்டு, தண்
ணீரை எடுத்து, “இந்த மனுஷனுடைய சாவுக்கு* நான் பொறுப்பாளி கிடை
யாது. நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்” என்று சொல்லி, கூட்டத்தார்முன்
தன் கைகளைக் கழுவினார். **25** அதற்கு மக்கள் எல்லாரும், “இவனுடைய
சாவுக்கு* நாங்களும் எங்கள் பிள்ளைகளுமே பொறுப்பு ஏற்றுக்கொள்கி
றோம்”[h] என்று சொன்னார்கள். **26** பின்பு, அவர்களுக்காக பரபாசை விடு
தலை செய்தார்; இயேசுவையோ சாட்டையால் அடித்து,[i] மரக் கம்பத்தில்
அறைந்து கொல்லும்படி படைவீரர்களுக்குக் கட்டளையிட்டார்.[j]

27 அதன் பின்பு, ஆளுநருடைய படைவீரர்கள் இயேசுவை ஆளுநர்
மாளிகைக்குள் கொண்டுபோய், மற்ற எல்லா படைவீரர்களையும் அவரி

27:24, 25 * வே.வா., “இரத்தப்பழிக்கு.”

அதி. 27

a மாற் 15:2-5, லூ 23:3, யோவா 18:33, 37
b ஏசா 53:7, மத் 26:63, யோவா 19:9
c மாற் 15:6-10, யோவா 18:39
d லூ 23:18, யோவா 18:40, அப் 3:14
e மாற் 15:11-14
f லூ 23:21
g லூ 23:23, அப் 3:13
h அப் 5:27, 28, 1தெ 2:14, 15
i லூ 18:33, யோவா 19:1
j மாற் 15:15, லூ 23:25

டம் கூடிவரச் செய்தார்கள்.[a] **28** பின்பு, அவருடைய உடையைக் கழற்றி,
கருஞ்சிவப்பு நிற சால்வையை அவருக்குப் போர்த்திவிட்டார்கள்.[b]
29 முட்களால் ஒரு கிரீடத்தைச் செய்து அதை அவர் தலைமேல் வைத்து,
அவருடைய வலது கையில் ஒரு கோலைக் கொடுத்தார்கள்; பின்பு, அவ
ருக்கு முன்னால் மண்டிபோட்டு, "யூதர்களுடைய ராஜாவே, வாழ்க!"
என்று சொல்லிக் கேலி செய்தார்கள். **30** அதன்பின் அவர்மேல் துப்பி,[c]
அந்தக் கோலை எடுத்து அவருடைய தலையில் அடிக்க ஆரம்பித்தார்கள்.
31 அவரைக் கேலி செய்த பின்பு, கடைசியாக அந்தச் சால்வையை
எடுத்துவிட்டு அவருடைய மேலங்கியை அவருக்குப் போட்டுவிட்டார்கள்;
பின்பு, அவரை மரக் கம்பத்தில் வைத்து ஆணியடிப்பதற்காகக் கொண்டு
போனார்கள்.[d]

32 அவர்கள் போய்க்கொண்டிருந்தபோது, சிரேனே ஊரைச் சேர்ந்த
சீமோன் என்பவரைப் பார்த்தார்கள்; அவரைக் கட்டாயப்படுத்தி, இயேசு
சுமந்து வந்த சித்திரவதைக் கம்பத்தை* சுமக்க வைத்தார்கள்.[e] **33** *கொல்*
கொதா, அதாவது மண்டையோடு, என்று அழைக்கப்பட்ட இடத்துக்கு[f]
அவர்கள் வந்தபோது, **34** கசப்புப் பொருள்* கலந்த திராட்சமதுவை இயே
சுவுக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்;[g] அவரோ அதை ருசிபார்த்துவிட்டு,
குடிக்க மறுத்தார். **35** அவர்கள் அவரை மரக் கம்பத்தில் வைத்து ஆணி
யடித்த பின்பு, குலுக்கல் போட்டுப் பார்த்து அவருடைய மேலங்கிகளைப்
பங்குபோட்டுக் கொண்டார்கள்.[h] **36** பின்பு, அங்கே உட்கார்ந்து அவரைக்
காவல் காத்தார்கள். **37** அதோடு, அவருக்கு எதிரான குற்றச்சாட்டைத்
தெரியப்படுத்தும்படி, "இவர் யூதர்களுடைய ராஜாவாகிய இயேசு" என்று
எழுதி அவருடைய தலைக்குமேல் வைத்தார்கள்.[i]

38 பின்பு, அவருடைய வலது பக்கம் ஒருவன், இடது பக்கம் ஒருவன்
என இரண்டு கொள்ளைக்காரர்களை மரக் கம்பங்களில் ஏற்றினார்கள்.[j]
39 அந்த வழியாகப் போனவர்கள் கேலியாகத் தலையை ஆட்டி,[k]
40 "ஆலயத்தைத் தரைமட்டமாக்கி மூன்று நாட்களில் கட்டப்போகிறவனே,[l]
உன்னை நீயே காப்பாற்றிக்கொள்! நீ கடவுளுடைய மகன் என்றால் சித்திர
வதைக் கம்பத்தைவிட்டு* இறங்கி வா!"[m] என்று அவரைப் பழித்துப்
பேசினார்கள்.[n] **41** அதேபோல், முதன்மை குருமார்களும் வேத அறிஞர்
களும் பெரியோர்களும் ஒன்றுசேர்ந்து அவரைக் கேலி செய்து,[o] **42** "மற்ற
வர்களைக் காப்பாற்றினான், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை!
இவன் இஸ்ரவேலின் ராஜாவாம்;[p] இப்போது சித்திரவதைக் கம்பத்தை
விட்டு* கீழே இறங்கி வருகிறானா பார்ப்போம், பிறகு இவனை நம்பு
வோம். **43** இவன்தான் கடவுள்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறானே; 'நான்
கடவுளுடைய மகன்'[q] என்றுகூட சொன்னானே, அவர் இவன்மேல் பிரிய
மாயிருந்தால் இப்போது இவனைக் காப்பாற்றட்டும்"[r] என்று சொன்னார்
கள். **44** அதேபோல், அவர் பக்கத்திலே மரக் கம்பங்களில் ஏற்றப்பட்டி
ருந்த கொள்ளைக்காரர்களும் அவரைப் பழித்துப் பேசினார்கள்.[s]

45 ஆறாம் மணிநேரத்திலிருந்து* ஒன்பதாம் மணிநேரம்வரை# பூமி

அதி. 27
a மாற் 15:16-20
b யோவா 19: 2, 3
c ஏசா 50:6; மத் 26:67
d ஏசா 53:7; மத் 20:18, 19
e மாற் 15:21; லூ 23:26
f மாற் 15:22-24; லூ 23:33; யோவா 19:17
g சங் 69:21
h சங் 22:18; மாற் 15:24; லூ 23:34; யோவா 19: 23, 24
i மாற் 15:26; லூ 23:38; யோவா 19:19
j ஏசா 53:12; மாற் 15:27; லூ 23:33; யோவா 19:18
k சங் 22:7; சங் 109:25
l மத் 26:60, 61; யோவா 2:19
m மாற் 15:29-32
n லூ 18:32; எபி 12:3
o லூ 23:35
p யோவா 1:49; யோவா 12:13
q மாற் 14:62; யோவா 5:18; யோவா 10:36
r சங் 22:8
s லூ 23:39

27:32, 40, 42 *சொல் பட்டியலைப் பாருங்கள். **27:34** *இது தாவரங்களிலி
ருந்து தயாரிக்கப்பட்ட கசப்பான போதைப்பொருளாக இருக்கலாம். **27:45** *அதா
வது, "மதியம் சுமார் 12 மணியிலிருந்து." #அதாவது, "பிற்பகல் சுமார் 3 மணிவரை."

முழுவதும் இருள் சூழ்ந்தது.[a] **46** சுமார் ஒன்பதாம் மணிநேரத்தில்,
"ஏலி, ஏலி, லாமா சபக்தானி?" என்று இயேசு சத்தமாகச் சொன்னார்;
அதாவது, "என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்கள்?"[b]
என்று சொன்னார். **47** அங்கே நின்றுகொண்டிருந்த சிலர் அதைக் கேட்டு,
"இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்" என்று சொன்னார்கள்.[c] **48** உடனே
அவர்களில் ஒருவன் ஓடிப்போய், புளிப்பான திராட்சமதுவில் ஒரு கடற்
பஞ்சை நனைத்து, அதை ஒரு கோலில் மாட்டி, குடிப்பதற்காக அவருக்குக்
கொடுத்தான்.[d] **49** மற்றவர்களோ, "பொறு! எலியா இவனைக் காப்பாற்ற
வருகிறாரா பார்ப்போம்" என்று சொன்னார்கள். **50** மறுபடியும் இயேசு
உரத்த குரலில் சத்தமிட்டு உயிர்விட்டார்.[e]

51 அப்போது, ஆலயத்தின் திரைச்சீலை*[f] மேலிருந்து கீழ்வரை[g] இரண்
டாகக் கிழிந்தது,[h] பூமி அதிர்ந்தது, பாறைகள் பிளந்தன. **52** கல்லறை
கள் திறந்துகொண்டன, இறந்துபோன* பரிசுத்தவான்களுடைய சடலங்கள்
பல வெளியே வந்து விழுந்தன; **53** பலர் அவற்றைப் பார்த்தார்கள். (அவர்
உயிரோடு எழுப்பப்பட்ட பின்பு, கல்லறைத் தோட்டத்திலிருந்து வந்த ஆட்
கள் பரிசுத்த நகரத்துக்குள் போனார்கள்.)* **54** படை அதிகாரியும் அவ
ரோடு இயேசுவைக் காவல்காத்த ஆட்களும், பூமி அதிர்ந்ததையும் மற்ற சம்
பவங்களையும் பார்த்து மிகவும் பயந்து, "நிச்சயமாகவே இவர் கடவுளுடைய
மகன்தான்" என்று சொன்னார்கள்.[i]

55 இயேசுவுக்குப் பணிவிடை செய்வதற்காக கலிலேயாவிலிருந்து அவ
ரோடு வந்திருந்த பெண்கள் பலர், தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்
கள்.[j] **56** அவர்களில் மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்
கும் அம்மாவான மரியாளும், செபெதேயுவின் மகன்களுடைய அம்மாவும்
இருந்தார்கள்.[k]

57 சாயங்கால நேரமாகிவிட்டதால், அரிமத்தியா ஊரைச் சேர்ந்த
பணக்காரரும் இயேசுவின் சீஷராக ஆகியிருந்தவருமான யோசேப்பு,[l]
58 பிலாத்துவிடம் போய், இயேசுவின் உடலைக் கேட்டார்.[m] அதை அவ
ரிடம் கொடுக்கச் சொல்லி பிலாத்து கட்டளையிட்டார்.[n] **59** யோசேப்பு
அவருடைய உடலை எடுத்து, சுத்தமான, உயர்தரமான நாரிழை* துணி
யில் சுற்றி,[o] **60** தனக்காகப் பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறை
யில்* வைத்தார்;[p] பின்பு, அந்தக் கல்லறை வாசலில் ஒரு பெரிய கல்லை
உருட்டி வைத்துவிட்டுப் போனார். **61** ஆனால், மகதலேனா மரியாளும்
மற்ற மரியாளும் அங்கேயே கல்லறைக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டி
ருந்தார்கள்.[q]

62 அடுத்த நாள், அதாவது ஆயத்த நாளுக்கு அடுத்த நாள்,[r] முதன்மை
குருமார்களும் பரிசேயர்களும் பிலாத்துவிடம் கூட்டமாக வந்து, **63** "ஐயா,
அந்த மோசக்காரன் உயிரோடு இருந்தபோது, 'மூன்று நாட்களுக்குப் பிறகு
நான் உயிரோடு எழுப்பப்படுவேன்'[s] என்று சொன்னது எங்களுக்கு ஞாப
கம் இருக்கிறது. **64** அதனால், அவனுடைய சீஷர்கள் வந்து அவன் உட
லைத் திருடிக்கொண்டு போய், 'அவர் உயிரோடு எழுப்பப்பட்டார்!' என்று

27:51 *இது பரிசுத்த அறைக்கும் மகா பரிசுத்த அறைக்கும் இடையில் இருந்தது. **27:52** *நே.மொ., "தூங்கிவிட்ட." **27:53** *அடைப்புக்குறிகளுக்குள் உள்ளவை பிற்பாடு நடந்த சம்பவங்களைக் குறிக்கின்றன. **27:59** *அதாவது, "லினன்." **27:60** *வே.வா., "நினைவுக் கல்லறையில்."

அதி. 27
a மாற் 15:33; லூ 23:44
b சங் 22:1; ஏசா 53:10; மாற் 15:34
c மாற் 15:35, 36
d சங் 69:21; லூ 23:36; யோவா 19:29
e மாற் 15:37; லூ 23:46; யோவா 19:30
f யாத் 26:31-33; எபி 9:3
g மாற் 15:38; லூ 23:45
h எபி 10:19, 20
i மாற் 15:39
j மாற் 15:40, 41; லூ 8:2, 3
k மத் 20:20; யோவா 19:25
l மாற் 15:42, 43; லூ 23:50-53
m உபா 21:22, 23
n மாற் 15:45-47; யோவா 19:38
o யோவா 19:40, 41
p ஏசா 53:9
q லூ 23:55
r மாற் 15:42; லூ 23:54; யோவா 19:14
s மத் 12:40; யோவா 2:19

மக்களிடம் சொல்லிவிடாதபடி, மூன்றாம் நாள்வரை கல்லறையைக் காவல்
காப்பதற்குக் கட்டளையிடுங்கள்;[a] இல்லையென்றால், முதலில் செய்த
மோசடியைவிட இந்த மோசடி படுமோசமாக இருக்கும்” என்று சொன்னார்
கள். **65** அதற்கு பிலாத்து, “காவலர்களைக் கூட்டிக்கொண்டு போய், உங்க
ளால் முடிந்தளவு காவல் காத்துக்கொள்ளுங்கள்” என்று சொன்னார்.
66 அதனால், அவர்கள் போய் அந்தக் கல்லறையின் கல்லுக்கு முத்திரை
போட்டு, அதைக் காவல் காக்க காவலர்களை நிறுத்தினார்கள்.

28 ஓய்வுநாளுக்குப் பின்பு, வாரத்தின் முதலாம் நாள், பொழுது விடி
யும் நேரத்தில் மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறை
யைப் பார்க்கப் போனார்கள்.[b]

2 அங்கே பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது; ஏனென்றால்,
யெகோவாவின்* தூதர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து, கல்லறையின்
கல்லைப் புரட்டிப் போட்டு அதன்மேல் உட்கார்ந்துகொண்டிருந்தார்.[c]
3 அவருடைய தோற்றம் மின்னலைப் போல் மின்னியது; அவருடைய
உடை பனியைப் போல் வெண்மையாக இருந்தது.[d] **4** அவரைப் பார்த்த
காவல்காரர்கள் பயந்து நடுங்கி, செத்தவர்களைப் போல ஆனார்கள்.

5 தேவதூதர் அந்தப் பெண்களிடம், “பயப்படாதீர்கள், மரக் கம்பத்தில்
அறைந்து கொல்லப்பட்ட இயேசுவைத்தானே தேடுகிறீர்கள்?[e] **6** அவர்
இங்கே இல்லை, அவர் சொன்னபடியே உயிரோடு எழுப்பப்பட்டிருக்கி
றார்.[f] அவர் வைக்கப்பட்டிருந்த இடத்தை வந்து பாருங்கள். **7** சீக்கிரமாக
அவருடைய சீஷர்களிடம் போய், அவர் உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார்
என்று சொல்லுங்கள். உங்களுக்கு முன்பே அவர் கலிலேயாவுக்குப் போய்க்
கொண்டிருக்கிறார்;[g] அங்கே அவரைப் பார்ப்பீர்கள். இதைச் சொல்லத்தான்
நான் வந்தேன்”[h] என்றார்.

8 அவர்கள் சீக்கிரமாகக் கல்லறையைவிட்டு* வெளியே வந்து, பயத்
தோடும் அதேசமயத்தில் மிகுந்த சந்தோஷத்தோடும், இந்த விஷயத்தை
அவருடைய சீஷர்களுக்குச் சொல்வதற்காக ஓடினார்கள்.[i] **9** திடீரென்று
இயேசுவே அவர்களிடம் வந்து அவர்களை வாழ்த்தினார். அவர்கள் அவர்
முன்னால் போய் மண்டிபோட்டு, அவருடைய கால்களைக் கட்டிக்கொண்
டார்கள். **10** இயேசு அவர்களிடம், “பயப்படாதீர்கள்! நீங்கள் என் சகோ
தரர்களிடம் போய், அவர்களை கலிலேயாவுக்குப் போகச் சொல்லுங்கள்;
அங்கே அவர்கள் என்னைப் பார்ப்பார்கள்” என்று சொன்னார்.

11 அவர்கள் போய்க்கொண்டிருந்தபோது, காவலர்களில்[j] சிலர் நகரத்
துக்குள் போய், நடந்த எல்லாவற்றையும் முதன்மை குருமார்களிடம்
சொன்னார்கள். **12** இவர்கள் பெரியோர்களோடு* கூடிவந்து ஆலோசனை
செய்தார்கள்; அதன் பின்பு, படைவீரர்களுக்கு ஏராளமான வெள்ளிக் காசுக
ளைக் கொடுத்து, **13** “‘ராத்திரியில் நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது
அவருடைய சீஷர்கள் வந்து அவருடைய உடலைத் திருடிக்கொண்டு
போய்விட்டார்கள்’[k] என்று சொல்லுங்கள். **14** இது ஆளுநருடைய
காதுக்கு எட்டினால், நாங்கள் அவரிடம் பேசிக்கொள்கிறோம், நீங்கள் எதற்
கும் கவலைப்படாதீர்கள்” என்றார்கள். **15** அதனால், அவர்கள் வெள்
ளிக் காசுகளை வாங்கிக்கொண்டு, தங்களுக்குச் சொல்லப்பட்டபடியே

அதி. 27
a மத் 28:12, 13

அதி. 28
b மாற் 16:1, லூ 24:1, லூ 24:10, யோவா 20:1
c மாற் 16:4, 5, லூ 24:2, 4
d அப் 1:10
e மாற் 16:6
f மத் 16:21, மத் 17:22, 23, 1கொ 15:3, 4
g மத் 26:32, மத் 28:16, மாற் 14:28
h மாற் 16:7
i மாற் 16:8, லூ 24:9
j மத் 27:65
k மத் 27:64

28:2 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **28:8** *வே.வா., “நினைவுக் கல்லறையை
விட்டு.” **28:12** *வே.வா., “மூப்பர்களோடு.”

செய்தார்கள்; இந்தப் பேச்சு யூதர்கள் மத்தியில் இந்த நாள்வரை பரவியி
ருக்கிறது.
16 இயேசு சொன்னபடியே[a] 11 சீஷர்களும் கலிலேயாவில் இருக்கிற
மலைக்குப் போனார்கள்.[b] **17** அங்கே அவரைப் பார்த்தபோது அவர்
முன்னால் மண்டிபோட்டு தலைவணங்கினார்கள்; ஆனால், அவரைப் பின்
பற்றியவர்களில் சிலர் சந்தேகப்பட்டார்கள். **18** அப்போது, இயேசு சீஷர்க
ளுக்குப் பக்கத்தில் போய், "பரலோகத்திலும் பூமியிலும் எனக்கு எல்லா
அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.[c] **19** அதனால், நீங்கள் புறப்பட்டுப்
போய், எல்லா தேசத்தாரையும் சீஷர்களாக்கி,[d] பரலோகத் தகப்பனின் பெய
ரிலும், அவருடைய மகனின் பெயரிலும், அவருடைய சக்தியின் பெயரிலும்
ஞானஸ்நானம் கொடுங்கள்.[e] **20** நான் உங்களுக்குக் கட்டளையிட்ட எல்
லாவற்றையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி அவர்களுக்குக் கற்றுக்கொடுங்
கள்.[f] இதோ! இந்தச் சகாப்தத்தின் கடைசிக் கட்டம்வரை*[g] எல்லா நாட்களி
லும் நான் உங்கள் கூடவே இருக்கிறேன்" என்று சொன்னார்.

28:20 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 28
a 1கொ 15:6
b மத் 26:32
c எபே 1:20, 21; பிலி 2:9
d அப் 1:8; ரோ 10:18; ரோ 11:13; வெளி 14:6
e அப் 2:38; அப் 8:12
f அப் 20:20; 1கொ 11:23; 2பே 3:1, 2; 1யோ 3:23
g மத் 13:39; மத் 13:49; மத் 24:3

மாற்கு

எழுதியது

முக்கியக் குறிப்புகள்

1 யோவான் ஸ்நானகர் பிரசங்கிக்கிறார் (1-8)
இயேசுவின் ஞானஸ்நானம் (9-11)
சாத்தானால் இயேசு சோதிக்கப்படுகிறார் (12, 13)
கலிலேயாவில் பிரசங்கிக்க ஆரம்பிக்கிறார் (14, 15)
முதல் சீஷர்களை அழைக்கிறார் (16-20)
பேயைத் துரத்துகிறார் (21-28)
கப்பர்நகூமில் பலரைக் குணமாக்குகிறார் (29-34)
தனிமையான இடத்தில் ஜெபம் செய்கிறார் (35-39)
தொழுநோயாளியைக் குணமாக்குகிறார் (40-45)

2 பக்கவாத நோயாளியைக் குணமாக்குகிறார் (1-12)
லேவியைக் கூப்பிடுகிறார் (13-17)
விரதம் பற்றிய கேள்வி (18-22)
இயேசு 'ஓய்வுநாளுக்கு எஜமான்' (23-28)

3 சூம்பிய கையுடையவன் குணமாக்கப்படுகிறான் (1-6)
கடலோரத்தில் மக்கள் கூட்டம் (7-12)
12 அப்போஸ்தலர்கள் (13-19)
கடவுளுடைய சக்திக்கு விரோதமாக நிந்தனை செய்வது (20-30)
இயேசுவின் அம்மாவும் சகோதரர்களும் (31-35)

4 பரலோக அரசாங்கத்தைப் பற்றிய உவமைகள் (1-34)
விதைக்கிறவன் (1-9)
இயேசு ஏன் உவமைகளைப் பயன்படுத்தினார் (10-12)
விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் (13-20)
விளக்கைக் கூடையால் மூடிவைக்க மாட்டார்கள் (21-23)
நீங்கள் அளந்துகொடுக்கும் அளவை (24, 25)
விதைத்துவிட்டு தூங்குகிறவன் (26-29)
கடுகு விதை (30-32)
உவமைகளைப் பயன்படுத்துவது (33, 34)
இயேசு புயல்காற்றை அடக்குகிறார் (35-41)

5 பேய்களைப் பன்றிகளுக்குள் அனுப்புகிறார் (1-20)
யவீருவின் மகள்; இயேசுவின் மேலங்கியைத் தொடும் பெண் (21-43)

6 சொந்த ஊர்க்காரர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை (1-6)
ஊழியம் செய்ய பன்னிரண்டு பேருக்கும் அறிவுரை (7-13)
யோவான் ஸ்நானகர் கொல்லப்படுகிறார் (14-29)
5,000 பேருக்கு இயேசு உணவு கொடுக்கிறார் (30-44)
இயேசு தண்ணீர்மேல் நடக்கிறார் (45-52)
கெனேசரேத்தில் பலரைக் குணமாக்குகிறார் (53-56)

7 மனித பாரம்பரியங்களை அம்பலப்படுத்துகிறார் (1-13)
இதயத்திலிருந்து வருபவை தீட்டுப்படுத்துகின்றன (14-23)
சீரியாவிலுள்ள பெனிக்கேயப் பெண்ணின் விசுவாசம் (24-30)
காதுகேளாதவன் குணமடைகிறான் (31-37)

8 இயேசு 4,000 பேருக்கு உணவு கொடுக்கிறார் (1-9)
இயேசுவிடம் ஓர் அடையாளத்தைக் கேட்கிறார்கள் (10-13)
பரிசேயர்கள் மற்றும் ஏரோதுவின் புளித்த மாவு (14-21)
பெத்சாயிதாவில் பார்வையில்லாத ஒருவன் குணமாக்கப்படுகிறான் (22-26)
கிறிஸ்து யாரென்று பேதுரு சொல்கிறார் (27-30)
இயேசு தன்னுடைய மரணத்தைப் பற்றி முன்னறிவிக்கிறார் (31-33)
உண்மையான சீஷர்கள் (34-38)

9 இயேசுவின் தோற்றம் மாறுகிறது (1-13)
பேய் பிடித்த பையன் குணமாக்கப்படுகிறான் (14-29)
விசுவாசம் இருந்தால் எல்லாமே முடியும் (23)
தன் மரணத்தைப் பற்றி இயேசு மறுபடியும் சொல்கிறார் (30-32)
யார் உயர்ந்தவர் என்று சீஷர்கள் வாக்குவாதம் (33-37)
நமக்கு விரோதமாக இல்லாதவன் நம் பக்கம் இருக்கிறான் (38-41)
பாவம் செய்ய வைக்கிறவை (42-48)
“சுவை இழக்காத உப்புபோல் இருங்கள்” (49, 50)

10 திருமணமும் விவாகரத்தும் (1-12)
பிள்ளைகளை இயேசு ஆசீர்வதிக்கிறார் (13-16)
பணக்காரனின் கேள்வி (17-25)
அரசாங்கத்துக்காகத் தியாகங்கள் (26-31)
தன் மரணத்தைப் பற்றி இயேசு மறுபடியும் சொல்கிறார் (32-34)
யாக்கோபு, யோவானின் வேண்டுகோள் (35-45)
இயேசு பலருக்காக மீட்புவிலை கொடுக்கிறார் (45)
பார்வையில்லாத பர்திமேயுவைக் குணமாக்குகிறார் (46-52)

11 இயேசுவின் வெற்றி பவனி (1-11)
அத்தி மரத்தைச் சபிக்கிறார் (12-14)
ஆலயத்தைச் சுத்தப்படுத்துகிறார் (15-18)
பட்டுப்போன அத்தி மரத்திலிருந்து பாடம் (19-26)
இயேசுவின் அதிகாரத்தைப் பற்றிக் கேள்வி கேட்கிறார்கள் (27-33)

12 கொலைவெறி பிடித்த தோட்டக்காரர்களைப் பற்றிய உவமை (1-12)
கடவுளும் ரோம அரசனும் (13-17)
உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி (18-27)
மிக முக்கியமான இரண்டு கட்டளைகள் (28-34)
கிறிஸ்து தாவீதின் மகனா? (35-37அ)
வேத அறிஞர்களைக் குறித்து எச்சரிக்கை (37ஆ-40)
ஏழை விதவை போட்ட இரண்டு காசுகள் (41-44)

13 இந்தச் சகாப்தத்தின் கடைசிக் கட்டத்திற்கான அடையாளம் (1-37)
போர்கள், நிலநடுக்கங்கள், பஞ்சங்கள் (8)
நல்ல செய்தி பிரசங்கிக்கப்படும் (10)
மிகுந்த உபத்திரவம் (19)
மனிதகுமாரனின் வருகை (26)
அத்தி மரம் பற்றிய உவமை (28-31)
விழிப்புடன் இருங்கள் (32-37)

14 இயேசுவைக் கொல்ல குருமார்களின் திட்டம் (1, 2)
இயேசுவின் தலையில் வாசனை எண்ணெய் ஊற்றப்படுகிறது (3-9)
இயேசுவை யூதாஸ் காட்டிக்கொடுக்கிறான் (10, 11)
கடைசி பஸ்கா (12-21)
எஜமானின் இரவு விருந்து (22-26)

தன்னைத் தெரியாதென்று பேதுரு சொல்லிவிடுவாரென இயேசு முன்னறிவிக்கிறார் (27-31)
கெத்செமனேயில் இயேசு ஜெபம் செய்கிறார் (32-42)
இயேசு கைது செய்யப்படுகிறார் (43-52)
நியாயசங்கத்தில் விசாரணை (53-65)
இயேசுவைத் தெரியாதென்று பேதுரு சொல்கிறார் (66-72)

15 பிலாத்து முன்னால் இயேசு (1-15)
எல்லாரும் கேலி செய்கிறார்கள் (16-20)
கொல்கொதாவில் மரக் கம்பத்தில் வைத்து ஆணியடிக்கப்படுகிறார் (21-32)
இயேசுவின் மரணம் (33-41)
இயேசு அடக்கம் செய்யப்படுகிறார் (42-47)

16 இயேசு உயிரோடு எழுப்பப்படுகிறார் (1-8)

1 கடவுளுடைய மகன் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தி
யின் ஆரம்பம்: **2** ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில், "(இதோ! என்
னுடைய தூதுவரை உனக்கு முன்னால் அனுப்புகிறேன், அவர் உன்
பாதையைத் தயார்படுத்துவார்.)[a] **3** 'யெகோவாவுக்கு* வழியைத் தயார்
படுத்துங்கள், அவருக்காகப் பாதைகளைச் சமப்படுத்துங்கள்'[b] என்று வனாந்
தரத்தில் ஒருவர் சத்தமாகச் சொல்கிறார்!" என்று எழுதப்பட்டிருக்கிறது.
4 அதன்படியே யோவான் ஸ்நானகர்,* பாவ மன்னிப்புக்காக மனம்
திருந்த வேண்டுமென்றும், அதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் எடுக்க
வேண்டுமென்றும் வனாந்தரத்தில் பிரசங்கித்துவந்தார்.[c] **5** அதனால், யூதே
யாவிலும் எருசலேமிலும் குடியிருந்த மக்கள் எல்லாரும் அவரிடம் போனார்
கள்; தாங்கள் செய்த பாவங்களை வெளிப்படையாக ஒத்துக்கொண்டு, யோர்
தான் ஆற்றில் அவரிடம் ஞானஸ்நானம்* பெற்றார்கள்.[d] **6** யோவான்
ஒட்டக ரோமத்தால் செய்யப்பட்ட உடையைப் போட்டிருந்தார், தோல்
வாரை இடுப்பில் கட்டியிருந்தார்;[e] வெட்டுக்கிளிகளையும் காட்டுத் தேனை
யும் சாப்பிட்டுவந்தார்.[f] **7** அவர் மக்களிடம், "என்னைவிட வல்லவர்
ஒருவர் எனக்குப் பின்பு வரப்போகிறார்; அவருடைய செருப்புகளின் வார்
களைக் குனிந்து அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை.[g] **8** நான் உங்
களுக்குத் தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுத்தேன், ஆனால் அவர் கடவு
ளுடைய சக்தியால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்"[h] என்று
பிரசங்கித்துவந்தார்.

9 அந்த நாட்களில், கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து இயேசு
வந்து, யோர்தான் ஆற்றில் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றார்.[i]
10 இயேசு தண்ணீருக்குள்ளிருந்து வெளியே வந்தவுடன், வானம் திறப்ப
தையும் கடவுளுடைய சக்தி புறாவைப் போல் தன்மேல் இறங்குவதையும்
பார்த்தார்.[j] **11** அப்போது, "நீ என் அன்பு மகன்; நான் உன்னை ஏற்றுக்
கொள்கிறேன்"*[k] என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

12 உடனே, வனாந்தரத்துக்குப் போகும்படி கடவுளுடைய சக்தி அவ
ரைத் தூண்டியது. **13** அவர் 40 நாட்கள் வனாந்தரத்தில் இருந்தபோது

1:3 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:4** *ஸ்நானகர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர். **1:5** *அதாவது, "முழுக்கு ஞானஸ்நானம்." **1:11** *வே.வா., "அங்கீகரிக்கிறேன்; உன்மேல் பிரியமாக இருக்கிறேன்."

அதி. 1
a மல் 3:1, மத் 3:1, 3, மத் 11:10, லூ 3:2-6, லூ 7:27
b ஏசா 40:3, யோவா 1:23
c மத் 3:1, 2, அப் 13:24, அப் 19:4
d மத் 3:5, 6
e 2ரா 1:8
f மத் 3:4
g லூ 3:16, யோவா 1:26, 27, அப் 13:25
h யோவே 2:28, அப் 2:1, 4, அப் 11:16, 1கொ 12:13
i மத் 3:13, லூ 3:21, 22
j ஏசா 42:1, மத் 3:16, யோவா 1:32-34
k சங் 2:7, மத் 3:17, லூ 3:22, 2பே 1:17

சாத்தான் அவரைச் சோதித்தான்.[a] அங்கே காட்டு மிருகங்கள் இருந்தன.
ஆனால், தேவதூதர்கள் அவருக்குப் பணிவிடை* செய்தார்கள்.[b]
14 யோவான் கைது செய்யப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவுக்குப்[c]
போய் கடவுளைப் பற்றிய நல்ல செய்தியைப் பிரசங்கித்தார்.[d] **15** "குறித்த
காலம் வந்துவிட்டது, கடவுளுடைய அரசாங்கம் நெருங்கி வந்துவிட்டது;
மக்களே, மனம் திருந்துங்கள்,[e] நல்ல செய்தியில் விசுவாசம் வையுங்கள்"
என்று சொன்னார்.
16 அவர் கலிலேயா கடலோரமாக நடந்துபோனபோது, சீமோனை
யும் சீமோனுடைய சகோதரன் அந்திரேயாவையும்[f] பார்த்தார். அவர்கள்
இரண்டு பேரும் கடலில் தங்கள் வலைகளை வீசிக்கொண்டிருந்தார்கள்.[g]
ஏனென்றால், அவர்கள் மீனவர்கள்.[h] **17** இயேசு அவர்களிடம், "என்
பின்னால் வாருங்கள், உங்களை மனுஷர்களைப் பிடிப்பவர்களாக ஆக்கு
வேன்"[i] என்று சொன்னார். **18** அவர்கள் உடனடியாக வலைகளை விட்டு
விட்டு அவர் பின்னால் போனார்கள்.[j] **19** அவர் கொஞ்சத் தூரம்
போன பின்பு, செபெதேயுவின் மகன்களான யாக்கோபையும் யோவா
னையும் பார்த்தார்; அவர்கள் தங்களுடைய படகில் வலைகளைப் பழுது
பார்த்துக்கொண்டிருந்தார்கள்.[k] **20** உடனே அவர்களையும் கூப்பிட்டார்;
அப்போது, அவர்கள் தங்களுடைய அப்பா செபெதேயுவைக் கூலியாட்க
ளோடு படகில் விட்டுவிட்டு, அவர் பின்னால் போனார்கள். **21** அவர்கள்
கப்பர்நகூமுக்குப் போனார்கள்.
ஓய்வுநாள் வந்ததும் அவர் ஜெபக்கூடத்துக்குப் போய்க் கற்பிக்க ஆரம்
பித்தார்.[l] **22** அவர் கற்பித்த விதத்தைப் பார்த்து மக்கள் அசந்துபோனார்
கள்; ஏனென்றால், அவர் வேத அறிஞர்களைப் போல் கற்பிக்காமல், கடவு
ளிடமிருந்து அதிகாரம் பெற்றவராகக் கற்பித்தார்.[m] **23** அப்போது அந்த
ஜெபக்கூடத்தில், பேய் பிடித்த ஒருவன் இருந்தான். **24** அவன் அவரைப்
பார்த்து, "நாசரேத்தூர் இயேசுவே, உங்களுக்கும் எங்களுக்கும் என்ன சம்
பந்தம்?[n] எங்களை ஒழித்துக்கட்டவா வந்தீர்கள்? நீங்கள் யாரென்று எனக்கு
நன்றாகத் தெரியும், நீங்கள் கடவுளால் அனுப்பப்பட்ட பரிசுத்தர்!"[o] என்று
கத்தினான். **25** ஆனால் இயேசு, "பேசாதே, இவனைவிட்டு வெளியே
போ!" என்று அதட்டினார். **26** அந்தப் பேய் அவனுக்கு வலிப்பு உண்
டாக்கி, பயங்கரமாகக் கத்திக்கொண்டே அவனைவிட்டு வெளியே போனது.
27 அங்கே இருந்த எல்லாரும் மிகவும் ஆச்சரியப்பட்டு, "இது என்ன? புது
விதமாகக் கற்பிக்கிறாரே! அதிகாரத்தோடு பேய்களுக்கும் கட்டளையிடு
கிறார், அவையும் கீழ்ப்படிகின்றனவே!" என்று ஒருவருக்கொருவர் பேசிக்
கொண்டார்கள். **28** உடனடியாக, அவரைப் பற்றிய செய்தி கலிலேயா
பகுதியெங்கும் நாலாபக்கங்களிலும் பரவியது.
29 அப்போது, அவர்கள் ஜெபக்கூடத்திலிருந்து புறப்பட்டு யாக்கோ
போடும் யோவானோடும் சேர்ந்து சீமோன், அந்திரேயா சகோதரர்களின்
வீட்டுக்குப் போனார்கள்.[p] **30** அங்கே சீமோனின் மாமியார்[q] காய்ச்சலில்
படுத்துக்கிடந்தாள். அதைப் பற்றி அவரிடம் உடனடியாகச் சொன்னார்கள்.
31 அவர் அவளுக்குப் பக்கத்தில் போய் அவளுடைய கையைப் பிடித்
துத் தூக்கினார், உடனே காய்ச்சல் போய்விட்டது. அவள் அவர்களுக்குப்
பணிவிடை செய்ய ஆரம்பித்தாள்.

1:13 * வே.வா., "உதவிகள்."

அதி. 1
a மத் 4:1-10
லூ 4:1-13
b மத் 4:11
c மத் 4:12
d லூ 4:14, 15
லூ 8:1
e மத் 4:17
f மத் 10:2
g லூ 5:4
h மத் 4:18
i மத் 4:19, 20
j மத் 19:27
லூ 5:11
k மத் 4:21, 22
l லூ 4:31-37
m மத் 7:28, 29
n மத் 8:28, 29
o யாக் 2:19
p மத் 8:14, 15
லூ 4:38, 39
q 1கொ 9:5

32 சாயங்காலத்தில், சூரியன் மறைந்த பின்பு, எல்லா நோயாளிக
ளையும் பேய் பிடித்தவர்களையும் மக்கள் அவரிடம் கொண்டுவர ஆரம்
பித்தார்கள்.[a] **33** அந்த வீட்டு வாசலில் ஊரே திரண்டு வந்தது. **34** பல
விதமான நோய்களால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த நிறைய பேரை அவர்
குணமாக்கினார்,[b] ஏராளமான பேய்களைத் துரத்தினார்; ஆனால், அவர்
தான் கிறிஸ்து* என்று அந்தப் பேய்களுக்குத் தெரிந்திருந்ததால், அவர்
அவற்றைப் பேசவிடவில்லை.

35 விடியற்காலையில், இன்னமும் இருட்டாக இருந்தபோதே, அவர்
எழுந்து வெளியே போய்த் தனிமையான ஓர் இடத்தில் ஜெபம் செய்ய
ஆரம்பித்தார்.[c] **36** சீமோனும் அவரோடு இருந்தவர்களும் அவரைத்
தேடிக்கொண்டு போனார்கள். **37** அவரைக் கண்டுபிடித்தபோது, "எல்லா
ரும் உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள்.
38 ஆனால் அவர், "பக்கத்திலுள்ள வேறு ஊர்களுக்குப் போகலாம், வாருங்
கள்; அங்கேயும் நான் பிரசங்கிக்க வேண்டும்; இதற்காகத்தான் நான் வந்தி
ருக்கிறேன்"[d] என்று சொன்னார். **39** அதன்படியே, கலிலேயா முழுவதும்
இருந்த ஜெபக்கூடங்களுக்குப் போய்ப் பிரசங்கித்தார், பேய்களையும் விரட்
டினார்.[e]

40 தொழுநோயாளி ஒருவன் அவரிடம் வந்து மண்டிபோட்டு, "உங்க
ளுக்கு விருப்பம் இருந்தால், என்னைச் சுத்தமாக்க முடியும்"[f] என்று சொல்
லிக் கெஞ்சினான். **41** அப்போது, அவர் மனம் உருகி, தன் கையை நீட்டி
அவனைத் தொட்டு, "எனக்கு விருப்பம் இருக்கிறது, நீ சுத்தமாகு"[g] என்று
சொன்னார். **42** உடனே தொழுநோய் மறைந்து, அவன் சுத்தமானான்.
43 அதன் பின்பு அவனுக்குக் கண்டிப்புடன் கட்டளைகள் கொடுத்து,
44 "இதைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்லாதே, ஆனால் குருமாரி
டம் போய் உன்னைக் காட்டு; நீ சுத்தமானதற்காக, மோசே கட்டளையிட்ட
காணிக்கைகளைக் கொடு;[h] நீ குணமானதற்கு அத்தாட்சியாக அது அவர்
களுக்கு இருக்கும்"[i] என்று சொல்லி உடனடியாக அவனை அனுப்பினார்.
45 ஆனால், அந்த மனிதன் அங்கிருந்து புறப்பட்டுப் போய், அந்த விஷ
யத்தை எல்லாருக்கும் பரப்ப ஆரம்பித்தான்; அதனால் இயேசு எந்த நகரத்
துக்குள்ளும் வெளிப்படையாகப் போக முடியவில்லை, ஒதுக்குப்புறமான
இடங்களிலேயே தங்கியிருந்தார். அப்படியிருந்தும், அவரைப் பார்க்க
எல்லா திசைகளிலிருந்தும் மக்கள் வந்துகொண்டே இருந்தார்கள்.[j]

2 சில நாட்கள் கழித்து, அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார்;
அவர் வீட்டில் இருக்கிறார்[k] என்ற செய்தி எல்லாருக்கும் பரவியது.
2 அதனால், நிறைய பேர் அங்கே வந்தார்கள்; வாசல்கதவின் பக்கத்தில்
கூட நிற்க முடியாதளவுக்குக் கூட்டம் நிரம்பி வழிந்தது. அவர்களிடம் கடவு
ளுடைய வார்த்தையை அவர் பேச ஆரம்பித்தார்.[l] **3** அப்போது, பக்கவா
தத்தால் பாதிக்கப்பட்ட ஒருவனை நான்கு பேர் தூக்கிக்கொண்டு
வந்தார்கள்.[m] **4** கூட்டம் அதிகமாக இருந்ததால் இயேசுவுக்குப் பக்கத்தில்
அவனைக் கொண்டுபோக முடியவில்லை. அதனால், அவர் இருந்த இடத்
துக்கு மேலே கூரையில் ஒரு திறப்பு உண்டாக்கி, பக்கவாதத்தால் பாதிக்கப்
பட்டவனைப் படுக்கையோடு கீழே இறக்கினார்கள். **5** அவர்களுடைய
விசுவாசத்தை இயேசு பார்த்து,[n] பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவனிடம்,

1:34 * அல்லது, "அவர் யார்."

அதி. 1
a மத் 8:16 லூ 4:40, 41
b ஏசா 53:4
c மத் 14:23 மாற் 14:32 லூ 4:42 எபி 5:7
d ஏசா 61:1 லூ 4:43 யோவா 17:4
e மத் 4:23
f மத் 8:1, 2 லூ 5:12
g மத் 8:3 லூ 5:13
h லேவி 14:3, 4 லேவி 14:10, 11 உபா 24:8
i மத் 8:4 லூ 5:14
j லூ 5:15

அதி. 2
k மத் 4:13 மத் 9:1
l ஏசா 61:1 எபே 2:17 எபி 2:3
m லூ 5:18, 19
n அப் 14:9, 10

“மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன”[a] என்று சொன்னார்.
6 அங்கே உட்கார்ந்திருந்த வேத அறிஞர்கள் சிலர், 7 “இந்த மனுஷன்
ஏன் இப்படிப் பேசுகிறான்? இவன் தெய்வ நிந்தனை செய்கிறான். கடவுள்
ஒருவரைத் தவிர வேறு யாரால் பாவங்களை மன்னிக்க முடியும்?”[b] என்று
தங்கள் இதயங்களில் யோசித்துக்கொண்டிருந்தார்கள்.[c] 8 அவர்கள் அப்
படி யோசித்துக்கொண்டிருந்ததை இயேசு உடனடியாகப் புரிந்துகொண்டு,
“உங்கள் இதயத்தில் ஏன் இப்படி யோசிக்கிறீர்கள்?[d] 9 இந்தப் பக்கவாத
நோயாளியிடம், ‘உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன’ என்று சொல்
வது சுலபமா, அல்லது ‘எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட’
என்று சொல்வது சுலபமா? 10 ஆனாலும், பூமியில் பாவங்களை மன்னிக்
கிற அதிகாரம்[e] மனிதகுமாரனுக்கு[f] இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து
கொள்வதற்காக—” என்று சொல்லிவிட்டு, பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட
வனிடம், 11 “நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்து உன் படுக்கையை
எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போ” என்றார். 12 உடனடியாக அவன்
எழுந்து, தன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கும் முன்
னால் வெளியே நடந்துபோனான்; அதைப் பார்த்த எல்லாரும் மிகவும் ஆச்
சரியப்பட்டு, “இந்த மாதிரி ஒன்றை இதுவரை நாங்கள் பார்த்ததே இல்லை”[g]
என்று சொல்லி கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.

13 அவர் மறுபடியும் புறப்பட்டு கடலோரமாகப் போனார்; மக்கள் எல்
லாரும் அவரிடம் வந்துகொண்டே இருந்தார்கள்; அப்போது, அவர்க
ளுக்குக் கற்பிக்க ஆரம்பித்தார். 14 பின்பு, அந்த வழியாக அவர் போய்க்
கொண்டிருந்தபோது, வரி வசூலிக்கும் அலுவலகத்தில் அல்பேயுவின்
மகன் லேவி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார்; அவரிடம், “என்னைப் பின்
பற்றி வா” என்று சொன்னார். உடனே லேவி எழுந்து அவரைப் பின்பற்றிப்
போனார்.[h] 15 பிற்பாடு, லேவியின் வீட்டில் இயேசு சாப்பிட்டுக்கொண்டி
ருந்தபோது, வரி வசூலிப்பவர்கள் பலரும், பாவிகள் பலரும் அவரோ
டும் அவருடைய சீஷர்களோடும் சேர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்
கள். அவர்களில் நிறைய பேர் அவரைப் பின்பற்றினார்கள்.[i] 16 ஆனால்,
அவர் பாவிகளோடும் வரி வசூலிப்பவர்களோடும் சேர்ந்து சாப்பிடுவ
தைப் பரிசேயர்களாக இருந்த வேத அறிஞர்கள் பார்த்தபோது, “இவர் ஏன்
வரி வசூலிப்பவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து சாப்பிடுகிறார்?” என்று
அவருடைய சீஷர்களிடம் கேட்டார்கள். 17 அது இயேசுவின் காதில்
விழுந்தபோது, “ஆரோக்கியமாக இருக்கிறவர்களுக்கு மருத்துவர் தேவை
யில்லை, நோயாளிகளுக்குத்தான் தேவை; நீதிமான்களை அல்ல, பாவிக
ளைத்தான் நான் அழைக்க வந்தேன்”[j] என்று சொன்னார்.

18 யோவானுடைய சீஷர்களும் பரிசேயர்களும் விரதமிருப்பது வழக்
கம். அதனால் யோவானுடைய சீஷர்கள் இயேசுவிடம் வந்து, “நாங்களும்
பரிசேயர்களுடைய சீஷர்களும் தவறாமல் விரதம் இருக்கிறோம்; ஆனால்
உங்களுடைய சீஷர்கள் ஏன் விரதம் இருப்பதில்லை?”[k] என்று கேட்டார்
கள். 19 அதற்கு இயேசு, “மணமகன்[l] தங்களோடு இருக்கும்போது அவ
ருடைய நண்பர்கள் விரதம் இருக்க வேண்டிய அவசியமே இல்லைதானே?
மணமகன் தங்களோடு இருக்கும் காலமெல்லாம் அவர்களால் விரதமிருக்க
முடியாது. 20 ஆனால், மணமகன் அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்
ளப்படும் நாட்கள் வரும்,[m] அப்போது அவர்கள் விரதம் இருப்பார்கள்.

அதி. 2
a ஏசா 53:11; மத் 9:2; லூ 5:20; லூ 7:47, 48
b ஏசா 43:25
c மத் 9:3-8; லூ 5:21-26
d மத் 9:4; லூ 6:8; வெளி 2:23
e ஏசா 53:11
f தானி 7:13
g மத் 9:33; யோவா 7:31; யோவா 9:32
h மத் 9:9; லூ 5:27, 28
i மத் 9:10, 11; லூ 5:29, 30
j ஏசா 61:1; மத் 9:12, 13; லூ 5:31, 32; லூ 19:10; 1தீ 1:15
k மத் 9:14, 15; லூ 5:33-35
l மத் 22:2; 2கொ 11:2; வெளி 19:7
m லூ 17:22

21 புதிய துணியைப் பழைய உடையில் வைத்து யாருமே ஒட்டுப்போட
மாட்டார்கள். அப்படிச் செய்தால், புதிய துணி சுருங்கும்போது, பழைய
உடையின் கிழிசல் இன்னும் பெரிதாகிவிடும்.[a] **22** அதேபோல், பழைய
தோல் பைகளில் யாருமே புதிய திராட்சமதுவை ஊற்றி வைக்க மாட்டார்
கள்; அப்படி ஊற்றி வைத்தால், திராட்சமது அந்தப் பைகளை வெடிக்க
வைத்துவிடும்; அப்போது திராட்சமதுவும் கொட்டிவிடும், பைகளும் நாச
மாகிவிடும். அதனால்தான், புதிய திராட்சமதுவைப் புதிய தோல் பைகளில்
ஊற்றி வைப்பார்கள்" என்று சொன்னார்.

23 ஓய்வுநாளில் அவர் தன்னுடைய சீஷர்களோடு வயல் வழியாகப்
போய்க்கொண்டிருந்தார்; அப்போது, அவருடைய சீஷர்கள் கதிர்களைப்
பறித்து சாப்பிட்டுக்கொண்டே போனார்கள்.[b] **24** அதனால் பரிசேயர்கள்
அவரிடம், "ஓய்வுநாளில் செய்யக்கூடாத காரியத்தை இவர்கள் ஏன் செய்கி
றார்கள்?" என்று கேட்டார்கள். **25** அதற்கு அவர், "தாவீதும் அவருடைய
ஆட்களும் உணவு கிடைக்காமல் பசியாக இருந்தபோது அவர் என்ன
செய்தார்[c] என்பதை நீங்கள் வாசித்ததே இல்லையா? **26** தாவீது கடவு
ளுடைய வீட்டுக்குள்* போய், குருமார்கள் தவிர வேறு யாருமே சாப்பிடக்
கூடாத படையல் ரொட்டிகளைச் சாப்பிட்டு,[d] அவற்றில் சிலவற்றைத் தன்
னோடிருந்த ஆட்களுக்கும் கொடுத்தார் என்பதை முதன்மை குருவாகிய
அபியத்தாரை[e] பற்றிய பதிவில் நீங்கள் வாசித்ததே இல்லையா?" என்று
கேட்டார். **27** அதோடு, "மனுஷனுக்காகத்தான் ஓய்வுநாள் உண்டாக்கப்
பட்டதே[f] தவிர, ஓய்வுநாளுக்காக மனுஷன் உண்டாக்கப்படவில்லை;
28 அதனால், மனிதகுமாரன் ஓய்வுநாளுக்கும் எஜமானாக இருக்கிறார்"[g]
என்று சொன்னார்.

3 மறுபடியும் அவர் ஒரு ஜெபக்கூடத்துக்குள் போனார்; சூம்பிய* கையு
டைய ஒருவன் அங்கே இருந்தான்.[h] **2** அந்த ஓய்வுநாளில் அவர்
அவனைக் குணமாக்குவாரா என்று பரிசேயர்கள் கூர்ந்து கவனித்துக்கொண்
டிருந்தார்கள்; ஏனென்றால், அவரிடம் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும்
என்று குறியாக இருந்தார்கள். **3** அப்போது, சூம்பிய கையுடையவனைப்
பார்த்து, "எழுந்து வந்து நடுவில் நில்" என்று அவர் சொன்னார். **4** பின்பு
பரிசேயர்களைப் பார்த்து, "ஓய்வுநாளில் எதைச் செய்வது சரி? நல்லது
செய்வதா கெட்டது செய்வதா, ஒரு உயிரைக் காப்பாற்றுவதா கொல்வதா?"[i]
என்று கேட்டார். ஆனால் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். **5** அத
னால், கோபத்தோடு அவர்களைப் பார்த்தார்; அவர்களுடைய இதயம் மரத்
துப்போயிருந்ததை[j] நினைத்து மிகவும் துக்கப்பட்டார்; பின்பு, சூம்பிய கையு
டையவனைப் பார்த்து, "உன் கையை நீட்டு" என்று சொன்னார். அவனும்
கையை நீட்டினான், அது குணமானது. **6** அதைப் பார்த்ததும் பரிசேயர்கள்
வெளியே போய், அவரைக் கொலை செய்வதற்காக ஏரோதுவின் ஆதரவா
ளர்களோடு[k] உடனடியாகத் திட்டம் தீட்ட ஆரம்பித்தார்கள்.

7 ஆனால், இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தன்னுடைய சீஷர்களோடு
கடலோரமாகப் போனார்; கலிலேயாவிலிருந்தும் யூதேயாவிலிருந்தும் வந்த
மக்கள் கூட்டம் கூட்டமாக அவர் பின்னால் போனார்கள்.[l] **8** அவர்
செய்துவந்த நிறைய விஷயங்களைக் கேள்விப்பட்டு, எருசலேமிலிருந்தும்

2:26 *அதாவது, "வழிபாட்டுக் கூடாரத்துக்குள்." **3:1** *வே.வா., "பக்கவாதத்தால்
பாதிக்கப்பட்ட."

அதி. 2
a மத் 9:16, 17
லூ 5:36-38
b மத் 12:1-8
லூ 6:1-5
c 1சா 21:1-6
d யாத் 25:30
லேவி 24:5-9
e 1சா 22:20
f யாத் 20:9, 10
g மத் 12:8
லூ 6:5

அதி. 3
h மத் 12:9-14
லூ 6:6-11
i லூ 14:1-3
j யோவா 12:
39, 40
k மத் 22:16
மாற் 12:13
l மத் 12:15

இதுமேயாவிலிருந்தும் யோர்தானுக்கு அக்கரையிலிருந்தும், தீரு, சீதோன்
பகுதிகளின் சுற்றுவட்டாரத்திலிருந்தும்கூட மக்கள் கூட்டம் கூட்டமாக வந்
தார்கள். **9** கூட்டம் தன்னை நெருக்காமல் இருப்பதற்காக ஒரு சிறிய பட
கைத் தயாராக வைக்கும்படி சீஷர்களிடம் அவர் சொன்னார். **10** அவர்
நிறைய பேரைக் குணமாக்கியதால், கொடிய நோய்களால் அவதிப்பட்ட
எல்லாரும் அவரைத் தொடுவதற்காக[a] அவரைச் சுற்றிலும் கும்பலாகக்
கூடிவந்தார்கள். **11** பேய்களும்கூட,*[b] அவரைப் பார்த்தபோதெல்லாம்
அவர் முன்னால் விழுந்து, “நீங்கள் கடவுளுடைய மகன்”[c] என்று சொல்லிக்
கத்தின. **12** ஆனால், தன்னைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடா
தென்று பல தடவை அந்தப் பேய்களுக்கு அவர் கண்டிப்புடன் கட்டளை
யிட்டார்.[d]

13 அவர் ஒரு மலைமேல் ஏறிப்போய், தன்னுடைய சீஷர்களில் சிலரை
யும் அங்கே வரச் சொன்னார்;[e] அவர்களும் அங்கே போனார்கள்.[f]
14 அப்போது அவர் 12 பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு அப்
போஸ்தலர்கள்* என்று பெயர் வைத்தார். எப்போதும் தன்னோடு இருப்
பதற்காகவும், நல்ல செய்தியைப் பிரசங்கிப்பதற்காகவும், **15** பேய்களைத்
துரத்தும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அவர்களைத் தேர்ந்
தெடுத்தார்.[g]

16 அந்த 12 பேர் இவர்கள்தான்:[h] சீமோன் (இவருக்கு பேதுரு
என்றும் பெயர் வைத்தார்),[i] **17** செபெதேயுவின் மகன் யாக்கோபு, யாக்
கோபின் சகோதரன் யோவான் (இவர்கள் இரண்டு பேருக்கும் பொவ
னெர்கேஸ் என்று பெயர் வைத்தார், இதற்கு “இடிமுழக்க மகன்கள்” என்று
அர்த்தம்),[j] **18** அந்திரேயா, பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா,
அல்பேயுவின் மகன் யாக்கோபு, ததேயு, பக்திவைராக்கியமுள்ள* சீமோன்,
19 இயேசுவைப் பிற்பாடு காட்டிக்கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத்து.

பின்பு, அவர் ஒரு வீட்டுக்குள் போனார். **20** மறுபடியும் அங்கே கூட்
டம் கூடியதால், அவர்களால் சாப்பிடக்கூட முடியவில்லை. **21** எல்லாவற்
றையும் அவருடைய சொந்தக்காரர்கள் கேள்விப்பட்டபோது, “அவனுக்குப்
பைத்தியம் பிடித்துவிட்டது”[k] என்று சொல்லி, அவரைப் பிடித்துக்
கொண்டுவர அங்கே போனார்கள். **22** அதுமட்டுமல்ல, எருசலேமிலி
ருந்து வந்த வேத அறிஞர்கள், “இவனை பெயல்செபூப்* பிடித்திருக்கிறது,
பேய்களுடைய தலைவனின் உதவியால்தான் இவன் பேய்களை விரட்டுகி
றான்”[l] என்று சொல்லிக்கொண்டார்கள். **23** அதனால் அவர்களைத் தன்
னிடம் கூப்பிட்டு, உவமைகளைப் பயன்படுத்திப் பேசினார்; “சாத்தான் எப்ப
டிச் சாத்தானை விரட்ட முடியும்? **24** ஒரு ராஜ்யத்துக்குள் பிரிவினைகள்
இருந்தால், அந்த ராஜ்யம் நிலைக்காது.[m] **25** ஒரு வீட்டுக்குள் பிரிவினை
கள் இருந்தால் அந்த வீடு நிலைத்திருக்க முடியாது. **26** அதேபோல், சாத்
தானும் தனக்கு விரோதமாகவே பிரிவினைகள் உண்டாக்கினால், அவன்
நிலைத்திருக்க முடியாது, அழிந்துதான் போவான். **27** ஒரு பலசாலியின்
வீட்டுக்குள் நுழைகிற எவனும், முதலில் அவனைக் கட்டிப்போடாவிட்டால்
அவனுடைய வீட்டிலுள்ள பொருள்களைக் கொள்ளையடிக்க முடியாது;

3:11 *அதாவது, “கெட்ட தேவதூதர்களும்கூட.” **3:14** *அர்த்தம், “அனுப்பப்பட்ட வர்கள்.” **3:18** *நே.மொ., “கெனனீயனாகிய.” **3:22** *சாத்தானைக் குறிக்கும் பெயர்.

அதி. 3
a மத் 9:20, 21; மாற் 5:27, 28; மாற் 6:56
b மத் 8:31
c மாற் 1:23, 24; மாற் 5:7; லூ 4:41
d மத் 12:15, 16; மாற் 1:25
e யோவா 15:16
f லூ 6:12, 13
g மத் 10:1
h மத் 10:2-4; லூ 6:14-16; அப் 1:13
i யோவா 1:42
j லூ 9:54
k யோவா 7:5
l மத் 9:34; மத் 10:25; மத் 12:24-29; லூ 11:15; யோவா 8:48
m லூ 11:17, 18

அவனைக் கட்டிப்போட்ட பின்புதான் வீட்டைக் கொள்ளையடிக்க முடியும்.
28 உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், மனுஷர்கள் செய்கிற எந்
தப் பாவமும் மன்னிக்கப்படும்; அவர்கள் நிந்தித்துப் பேசுகிற எந்த நிந்த
னையும் மன்னிக்கப்படும். 29 ஆனால், கடவுளுடைய சக்திக்கு விரோத
மாக நிந்தனை செய்கிற எவனுக்கும் என்றுமே மன்னிப்பு கிடையாது;[a]
தீராத பாவத்துக்கே அவன் ஆளாவான்"[b] என்று சொன்னார். 30 "அவ
னுக்குப் பேய் பிடித்திருக்கிறது"[c] என்று அவர்கள் சொல்லிவந்ததால் அவர்
அப்படிச் சொன்னார்.

31 அவருடைய அம்மாவும் சகோதரர்களும்[d] வந்து வெளியே நின்று
கொண்டு, அவரை வரச் சொல்லி ஆள் அனுப்பினார்கள்.[e] 32 அப்
போது அவரைச் சுற்றி மக்கள் கூட்டமாக உட்கார்ந்திருந்தார்கள்; அவர்
கள் அவரிடம், "உங்கள் அம்மாவும் உங்கள் சகோதரர்களும் உங்களைத்
தேடி வந்திருக்கிறார்கள், அவர்கள் வெளியே நின்றுகொண்டிருக்கிறார்கள்"[f]
என்று சொன்னார்கள். 33 அதற்கு அவர், "யார் என்னுடைய அம்மா,
யார் என்னுடைய சகோதரர்கள்?" என்று கேட்டார். 34 பின்பு, தன்னைச்
சுற்றி வட்டமாக உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்து, "இதோ! என் அம்
மாவும் சகோதரர்களும் இவர்கள்தான்![g] 35 கடவுளுடைய விருப்பத்தின்
படி* நடக்கிறவர்தான் என் சகோதரர், என் சகோதரி, என் அம்மா"[h] என்று
சொன்னார்.

4 இயேசு மறுபடியும் கடலோரத்தில் கற்பிக்க ஆரம்பித்தார். அப்
போது, ஏராளமான மக்கள் அவருக்குப் பக்கத்தில் திரண்டு வந்ததால்,
அவர் கடலில் நின்ற ஒரு படகில் ஏறி உட்கார்ந்தார். மக்கள் எல்லா
ரும் கரையில் இருந்தார்கள்.[i] 2 அப்போது, உவமைகளால்[j] நிறைய விஷ
யங்களை அவர்களுக்குக் கற்பிக்க ஆரம்பித்தார். அப்படிக் கற்பித்த
போது,[k] 3 "கேளுங்கள்; விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் போனான்.[l]
4 அவன் தூவிய சில விதைகள் பாதையோரத்தில் விழுந்தன, பறவைகள்
வந்து அவற்றைக் கொத்தித் தின்றன. 5 வேறு சில விதைகள் மண் அதி
கமாக இல்லாத பாறை நிலத்தில் விழுந்தன; அவை உடனே முளைத்தபோ
திலும், மண் ஆழமாக இல்லாததால் வேர்பிடிக்கவில்லை.[m] 6 அதனால்,
வெயில் வந்தபோது அவை வாடி வதங்கி காய்ந்துபோயின. 7 இன்னும்
சில விதைகள் முட்செடிகள் இருக்கிற நிலத்தில் விழுந்தன; அந்த முட்செ
டிகள் பெரிதாக வளர்ந்து அவற்றை நெருக்கிப்போட்டன, அதனால் அவை
எந்தப் பலனையும் தரவில்லை.[n] 8 மற்ற விதைகளோ நல்ல நிலத்தில்
விழுந்தன; அவை முளைத்து, பெரிதாக வளர்ந்து, விளைச்சல் தர ஆரம்
பித்தன; அவை 30 மடங்காகவும் 60 மடங்காகவும் 100 மடங்காகவும்
பலன் தந்தன"[o] என்று சொன்னார். 9 இப்படிச் சொல்லிவிட்டு, "கேட்பதற்
குக் காதுள்ளவன் கவனித்துக் கேட்கட்டும்"[p] என்றார்.

10 மக்கள் எல்லாரும் அங்கிருந்து போன பின்பு, அவரைச் சுற்றியிருந்த
சில சீஷர்களும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் அவரிடம் அந்த உவ
மைகளைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தார்கள்.[q] 11 அதற்கு அவர், "கடவு
ளுடைய அரசாங்கத்தைப் பற்றிய பரிசுத்த ரகசியம்[r] உங்களுக்கு வெளிப்
படையாகச் சொல்லப்படுகிறது; ஆனால் மற்றவர்களுக்கு எல்லா விஷயங்
களும் உவமைகளாகவே சொல்லப்படுகின்றன.[s] 12 அவர்கள் கண்ணால்

3:35 * வே.வா., "சித்தத்தின்படி."

அதி. 3
a மத் 12:31, 32
லூ 12:10
b எபி 6:4, 6
எபி 10:26
c யோவா 7:20
யோவா 10:20
d மத் 13:55
யோவா 2:12
அப் 1:14
e மத் 12:46-50
லூ 8:19-21
f மாற் 6:3
g மத் 12:49
எபி 2:11
h மத் 12:50
லூ 8:21
யோவா 15:14

அதி. 4
i மத் 13:1, 2
லூ 8:4
j மத் 13:34
k மத் 13:3-9
லூ 8:5-8
l மாற் 4:14
m மாற் 4:16, 17
n மாற் 4:18, 19
o மாற் 4:20
p நீதி 1:5
மத் 11:15
லூ 8:8
q மத் 13:10
லூ 8:9
r எபே 1:9, 10
கொலோ 1:
26, 27
s மத் 13:11
லூ 8:10

பார்த்தும் உணர்ந்துகொள்ளாதபடிக்கும், காதால் கேட்டும் புரிந்துகொள்ளாத
படிக்கும், என்னிடம் திரும்பி வந்து மன்னிப்பு பெறாதபடிக்கும்[a] அவை உவ
மைகளாகவே சொல்லப்படுகின்றன” என்று சொன்னார். **13** பின்பு அவர்க
ளிடம், “இந்த உவமையையே நீங்கள் புரிந்துகொள்ளவில்லை என்றால், மற்ற
எல்லா உவமைகளையும் எப்படிப் புரிந்துகொள்வீர்கள்?

14 விதைக்கிறவன் கடவுளுடைய செய்தியை விதைக்கிறான்.[b]
15 பாதையோர நிலத்தைப் போல் இருப்பவர்கள் அந்தச் செய்தியைக்
கேட்கிறார்கள்; ஆனால், அவர்களுக்குள் விதைக்கப்பட்ட அந்தச் செய்தி
யைச் சாத்தான் வந்து[c] உடனடியாக எடுத்துவிடுகிறான்.[d] **16** பாறை நிலத்
தைப் போல் இருப்பவர்கள் அந்தச் செய்தியைக் கேட்டதும் அதைச் சந்
தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள்.[e] **17** ஆனால், அவர்களுக்குள் அது
வேர்விடுவதில்லை; அதனால், அவர்கள் கொஞ்சக் காலத்துக்கு மட்டுமே
நிலைத்திருக்கிறார்கள்; அந்தச் செய்தியின் காரணமாக உபத்திரவமோ
துன்புறுத்தலோ வந்தவுடன் விசுவாசத்தை விட்டுவிடுகிறார்கள். **18** முட்
செடிகள் இருக்கிற நிலத்தைப் போல் இருப்பவர்கள் அந்தச் செய்தியைக்
கேட்கிறார்கள்.[f] **19** ஆனால், இந்த உலகத்தின்* கவலைகளும்,[g] செல்
வத்தின் வஞ்சக சக்தியும்,[h] மற்ற ஆசைகளும்[i] இதயத்துக்குள் புகுந்து அந்
தச் செய்தியை நெருக்கிப் போடுகின்றன, அதனால் அது பலன் கொடுக்
காமல் போகிறது. **20** நல்ல நிலத்தைப் போல் இருப்பவர்களோ அந்தச்
செய்தியைக் காதுகொடுத்துக் கேட்டு, அதை மனதார ஏற்றுக்கொண்டு, 30
மடங்காகவும் 60 மடங்காகவும் 100 மடங்காகவும் பலன் கொடுக்கிறார்கள்”[j]
என்று சொன்னார்.

21 அதோடு அவர் அவர்களிடம், “ஒரு விளக்கைக் கொண்டுவந்து
யாராவது கூடையால் மூடி வைப்பார்களா அல்லது கட்டிலுக்குக் கீழே
வைப்பார்களா? விளக்குத்தண்டின் மேல்தானே வைப்பார்கள்?[k] **22** மூடி
வைக்கப்படுகிற எதுவும் வெளியில் தெரியாமல் போகாது, மறைத்து வைக்
கப்படுகிற எதுவும் அம்பலமாகாமல் போகாது.[l] **23** கேட்பதற்குக் காதுள்
ளவன் கவனித்துக் கேட்கட்டும்”[m] என்று சொன்னார்.

24 அதோடு, “நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிற விஷயங்களுக்குக் கவ
னம் செலுத்துங்கள்.[n] எந்த அளவையால் அளந்து கொடுக்கிறீர்களோ
அதே அளவையால்தான் உங்களுக்கும் அளந்து கொடுக்கப்படும், அதற்கு
அதிகமாகவும் கொடுக்கப்படும். **25** இருக்கிறவனுக்கு இன்னும் அதிகமா
கக் கொடுக்கப்படும்;[o] ஆனால், இல்லாதவனிடமிருந்து இருப்பதும் எடுத்
துக்கொள்ளப்படும்”[p] என்று சொன்னார்.

26 அதோடு அவர்களிடம், “கடவுளுடைய அரசாங்கம், தன் நிலத்
தில் விதையைத் தூவுகிற ஒருவனைப் போல் இருக்கிறது. **27** அவன்
ஒவ்வொரு ராத்திரியும் தூங்கிவிட்டுக் காலையில் வந்து பார்க்கும்போது,
அவனுக்கே தெரியாமல் அந்த விதை முளைத்துப் பெரிதாக வளருகிறது.
28 அந்த நிலம் தானாகவே படிப்படியாகப் பலன் தருகிறது; முதலில் தண்
டையும், பின்பு இளங்கதிரையும், கடைசியில் முற்றிய கதிரையும் தருகிறது.
29 பயிர் விளைந்து அறுவடைக் காலம் வந்தவுடன், அவன் அதை அரி
வாளால் அறுக்கிறான்” என்று சொன்னார்.

30 அதோடு, “கடவுளுடைய அரசாங்கம் எதைப் போல் இருக்கிறது,

4:19 * வே.வா., “சகாப்தத்தின்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 4
a ஏசா 6:9, 10; மத் 13:13, 14; யோவா 12:40; அப் 28:26
b மத் 13:18; லூ 8:11; 1பே 1:25
c 1பே 5:8
d மத் 13:19; லூ 8:12
e மத் 13:20, 21; லூ 8:13
f மத் 13:22; லூ 8:14
g மத் 6:25; மத் 24:38, 39
h நீதி 23:4, 5; மாற் 10:23; லூ 18:24; 1தீ 6:9; 2தீ 4:10
i 1யோ 2:16
j மத் 13:23; லூ 8:15
k மத் 5:15; லூ 8:16, 17; லூ 11:33
l மத் 10:26; லூ 12:2
m நீதி 1:5; மத் 11:15; வெளி 2:7
n லூ 8:18; யாக் 1:25
o மத் 25:23
p மத் 13:12; லூ 8:18; லூ 19:26

எந்த உவமையின் மூலம் அதை விளக்கலாம்? **31** அது கடுகு விதை
யைப் போல் இருக்கிறது, நிலத்தில் விதைக்கப்படும்போது பூமியில் இருக்
கிற எல்லா விதைகளையும்விட அது மிகச் சிறியதாக இருக்கிறது.[a]
32 ஆனால் விதைக்கப்பட்ட பின்பு, அது முளைத்து, மற்ற எல்லா செடிக
ளையும்விட பெரிதாகி, வானத்துப் பறவைகள் அதன் நிழலில் தங்கும் அள
வுக்குப் பெரிய கிளைகளை விடுகிறது” என்று சொன்னார்.

33 அவர்களுடைய புரிந்துகொள்ளும் திறனுக்கு ஏற்றபடி இதுபோன்ற
பல உவமைகள்[b] மூலம் கடவுளுடைய வார்த்தையை அவர்களிடம் பேசி
னார். **34** சொல்லப்போனால், உவமைகளைப் பயன்படுத்தாமல் அவர்க
ளிடம் அவர் பேசியதே இல்லை; ஆனால், சீஷர்களோடு தனியாக இருந்
தபோது எல்லா விஷயங்களையும் விளக்கினார்.[c]

35 அன்று சாயங்காலத்தில், “அக்கரைக்குப் போகலாம் வாருங்கள்”[d]
என்று அவர்களிடம் சொன்னார். **36** அதனால் கூட்டத்தை அவர்கள்
அனுப்பிவிட்டு, அவர் உட்கார்ந்திருந்த படகிலேயே அவரைக் கூட்டிக்
கொண்டு போனார்கள்; அந்தப் படகுடன் வேறு சில படகுகளும் சென்
றன.[e] **37** அப்போது, பயங்கரமான புயல்காற்று வீச ஆரம்பித்தது; அலை
கள் படகின் மேல் வேகமாக மோதிக்கொண்டிருந்ததால், படகு கிட்டத்தட்ட
மூழ்கிவிடும் நிலையில் இருந்தது.[f] **38** ஆனால், அவர் படகின் பின்புறத்
தில் தலையணை வைத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். அதனால், அவர்கள்
அவரை எழுப்பி, “போதகரே, நாம் சாகப்போகிறோம்! உங்களுக்குக் கவ
லையே இல்லையா?” என்று கேட்டார்கள். **39** அப்போது, அவர் எழுந்து
காற்றை அதட்டினார்; கடலைப் பார்த்து, “உஷ்! அமைதியாக இரு!”[g] என்று
சொன்னார். அப்போது காற்று அடங்கி, மிகுந்த அமைதி உண்டானது.
40 அதன் பின்பு, “ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? இன்னும் உங்களுக்கு
விசுவாசம் வரவில்லையா?” என்று அவர்களிடம் கேட்டார். **41** ஆனால்
அவர்கள் பீதியடைந்து, “இவர் உண்மையில் யார்? காற்றும் கடலும்கூட
இவருக்கு அடங்கிவிடுகின்றனவே!”[h] என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்
கொண்டார்கள்.

5 பின்பு, அவர்கள் கடலுக்கு அக்கரையில் இருக்கிற கெரசேனர் பகு
திக்கு வந்தார்கள்.[i] **2** இயேசு படகிலிருந்து இறங்கியவுடனே, பேய்
பிடித்த ஒருவன் கல்லறைகளின் நடுவிலிருந்து அவருக்கு எதிரில் வந்தான்.
3 அவன் அந்தக் கல்லறைகளில் நடுவில்தான் தங்கியிருந்தான்; அதுவரை
ஒருவராலும் அவனைச் சங்கிலியால்கூட கட்டி வைக்க முடியவில்லை;
4 ஏனென்றால், விலங்குகளாலும் சங்கிலிகளாலும் பல தடவை அவனைக்
கட்டிப்போட்டும், அந்தச் சங்கிலிகளை முறித்தெறிந்தான், விலங்குகளை
யும் உடைத்துப்போட்டான்; ஒருவராலும் அவனை அடக்க முடியவில்லை.
5 அவன் அந்தக் கல்லறைகளிலும் மலைகளிலும் ராத்திரி பகலாகக் கூச்
சல் போட்டுக்கொண்டும், கற்களால் தன்னையே கீறிக்கொண்டும் இருந்
தான். **6** ஆனால், தூரத்திலிருந்து இயேசுவைப் பார்த்ததும் ஓடிப்போய்
அவர் முன்னால் மண்டிபோட்டு,[j] **7** “இயேசுவே, உன்னதமான கடவு
ளின் மகனே, உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் என்னைப்
பாடுபடுத்த மாட்டீர்கள் என்று கடவுள்மேல் ஆணையிட்டுச் சொல்லுங்
கள்!” என்று சத்தமாகக் கத்தினான்.[k] **8** ஏனென்றால் இயேசு அவனிடம்,
“பேயே, இந்த மனுஷனைவிட்டு வெளியே போ!”[l] என்று சொல்லியிருந்

அதி. 4
a மத் 13:31, 32
லூ 13:18, 19
b சங் 78:2
c மத் 13:11
மத் 13:34, 35
மாற் 4:11
d மத் 8:18
e மத் 8:23
லூ 8:22
f மத் 8:24-27
லூ 8:23-25
g சங் 89:9
h யோவா 6:19

அதி. 5
i மத் 8:28
லூ 8:26, 27
j லூ 8:28-30
k மத் 8:29
யாக் 2:19
l அப் 16:17, 18

அதி. 5
a லூ 8:31
b லேவி 11:7, 8 உபா 14:8
c மத் 8:30-33 லூ 8:32-34
d லூ 8:35-37
e மத் 8:34
f லூ 8:38, 39
g லூ 8:40
h மத் 9:18 லூ 8:41, 42
i லூ 4:40
j லேவி 15:25
k மத் 9:20-22 லூ 8:43, 44

தார். **9** அப்போது இயேசு அவனிடம், "உன் பெயர் என்ன?" என்று கேட்டார்; அதற்கு அவன், "என் பெயர் லேகியோன்.* ஏனென்றால், நாங்கள் நிறைய பேர் இருக்கிறோம்" என்று சொல்லி, **10** அந்தப் பகுதியைவிட்டுத் தங்களைத் துரத்த வேண்டாம் என்று திரும்பத் திரும்ப இயேசுவிடம் கெஞ்சினான்.[a]

11 அப்போது பன்றிகள்[b] பெருங்கூட்டமாக மலையில் மேய்ந்துகொண்டிருந்தன.[c] **12** அதனால், "அந்தப் பன்றிகளுக்குள் எங்களை அனுப்பிவிடுங்கள், அவற்றுக்குள் நாங்கள் புகுந்துகொள்கிறோம்" என்று அந்தப் பேய்கள் கெஞ்சிக் கேட்டன. **13** அவரும் அனுமதி கொடுத்தார். உடனே அந்தப் பேய்கள் அவனைவிட்டு வெளியேறி பன்றிகளுக்குள் புகுந்துகொண்டன; கிட்டத்தட்ட 2,000 பன்றிகள் ஓட்டமாக ஓடி செங்குத்தான பாறையிலிருந்து கடலுக்குள் குதித்து மூழ்கின. **14** அவற்றை மேய்த்துக்கொண்டிருந்த ஆட்கள் ஓடிப்போய் நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் இருந்தவர்களிடம் அதைச் சொன்னார்கள்; என்ன நடந்ததென்று பார்க்க மக்கள் புறப்பட்டுப் போனார்கள்.[d] **15** அவர்கள் இயேசுவிடம் வந்தபோது, லேகியோனாகிய பேய்கள் பிடித்திருந்த அந்த மனிதன் உடை உடுத்தி, புத்தி தெளிந்து உட்கார்ந்திருந்ததைப் பார்த்துப் பயந்துபோனார்கள். **16** நடந்ததை நேரில் பார்த்தவர்கள், பேய் பிடித்தவனுக்கும் பன்றிகளுக்கும் என்ன ஆனதென்று அவர்களுக்கு விளக்கமாகச் சொன்னார்கள். **17** அதனால், தங்களுடைய பகுதியைவிட்டுப் போகச் சொல்லி அவர்கள் இயேசுவிடம் கெஞ்சிக் கேட்க ஆரம்பித்தார்கள்.[e]

18 அவர் படகில் ஏறியபோது, பேய் பிடித்திருந்த அந்த மனிதனும் கூடவே வருவதாகச் சொல்லிக் கெஞ்சினான்.[f] **19** ஆனால் அவர் அதற்குச் சம்மதிக்காமல், "நீ உன் வீட்டுக்குப் போய், யெகோவா* உனக்காகச் செய்த எல்லாவற்றைப் பற்றியும், அவர் உனக்குக் காட்டிய இரக்கத்தைப் பற்றியும் உன் சொந்தக்காரர்களிடம் சொல்" என்றார். **20** அவனும் அங்கிருந்து போய், இயேசு தனக்குச் செய்ததையெல்லாம் தெக்கப்போலியில்* சொல்ல ஆரம்பித்தான்; அதைக் கேட்ட எல்லாரும் பிரமித்துப்போனார்கள்.

21 இயேசு படகில் இக்கரைக்குத் திரும்பி வந்த பின்பு, மக்கள் அவரிடம் திரண்டு வந்தார்கள்; அவர் கடலோரத்தில் இருந்தார்.[g] **22** அப்போது, ஜெபக்கூடத் தலைவர்களில் ஒருவரான யவீரு அங்கே வந்தார்; இயேசுவைப் பார்த்ததும் அவருடைய காலில் விழுந்து,[h] **23** "என்னுடைய சிறுபெண்ணின் உடல்நிலை ரொம்ப மோசமாக இருக்கிறது;* தயவுசெய்து நீங்கள் வந்து அவள்மேல் கைகளை வையுங்கள்;[i] அவள் குணமாகி, பிழைத்துக்கொள்வாள்" என்று சொல்லிப் பல தடவை கெஞ்சினார். **24** அதனால் யவீருவுடன் இயேசு போனார். ஒரு பெரிய கூட்டம் அவரை நெருக்கிக்கொண்டு அவர் பின்னால் போனது.

25 ஒரு பெண் 12 வருஷங்களாக இரத்தப்போக்கினால்[j] அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள்.[k] **26** நிறைய மருத்துவர்கள் கொடுத்த சிகிச்சைகளால்

5:9 * "லேகியோன்" என்பது அந்தக் காலத்தில் ரோமப் படையின் முக்கியப் பிரிவு. இந்த வசனத்தில் இது பெரும் எண்ணிக்கையைக் குறிக்கிறது. **5:19** * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **5:20** * வே.வா., "பத்து நகரங்களின் பகுதியில்." **5:23** * வே.வா., "சிறுபெண் சாகக் கிடக்கிறாள்."

அவள் பயங்கர வேதனையை அனுபவித்திருந்தாள், தன்னிடம் இருந்த
பணத்தையெல்லாம் செலவு செய்திருந்தாள்; ஆனால், அவள் குணமாக
வில்லை; நிலைமை இன்னும் மோசமாகத்தான் ஆகியிருந்தது. **27** இயேசு
வைப் பற்றி அவள் நிறைய கேள்விப்பட்டிருந்ததால், “அவருடைய மேலங்
கியைத் தொட்டாலே போதும், நான் குணமாகிவிடுவேன்”[a] என்று தனக்குள்
சொல்லிக்கொண்டே, **28** பின்பக்கமாகக் கூட்டத்துக்குள் நுழைந்து அவ
ருடைய மேலங்கியைத் தொட்டாள்.[b] **29** உடனே அவளுடைய இரத்தப்
போக்கு நின்றது; தன்னைப் பாடாய்ப் படுத்திய அந்த நோயிலிருந்து குண
மானதை அவளால் உணர முடிந்தது.

30 இயேசுவும் தன்னிடமிருந்து வல்லமை[c] வெளியேறியதை உடனடி
யாக உணர்ந்தார்; அதனால் கூட்டத்தாரிடம் திரும்பி, “என் மேலங்கியைத்
தொட்டது யார்?”[d] என்று கேட்டார். **31** அப்போது அவருடைய சீஷர்கள்,
“கூட்டம் உங்களை நெருக்கித் தள்ளுவதை நீங்களே பார்க்கிறீர்கள்; அப்ப
டியிருக்கும்போது, ‘யார் என்னைத் தொட்டது?’ என்று கேட்கிறீர்களே” என்
றார்கள். **32** ஆனாலும், தன்னைத் தொட்டது யார் என்று தெரிந்துகொள்
வதற்காக அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். **33** அப்போது அந்தப் பெண்
தனக்கு நடந்ததை உணர்ந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் அவர் முன்
னால் வந்து மண்டிபோட்டு, எல்லா உண்மையையும் சொன்னாள்.
34 அதற்கு அவர், “மகளே, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியிருக்
கிறது. உன்னைப் பாடாய்ப் படுத்திய நோயிலிருந்து சுகமாகி,[e] சமாதானமா
கப் போ”[f] என்று சொன்னார்.

35 அவர் பேசிக்கொண்டிருந்தபோதே, ஜெபக்கூடத் தலைவரின் வீட்டி
லிருந்து சில ஆட்கள் வந்து, “உங்கள் மகள் இறந்துவிட்டாள்! இனி எதற்கா
கப் போதகரைத் தொந்தரவு செய்ய வேண்டும்?”[g] என்று கேட்டார்கள்.
36 அவர்கள் சொன்னது இயேசுவின் காதில் விழுந்ததும், அவர் ஜெபக்கூ
டத் தலைவரிடம், “பயப்படாதே, விசுவாசத்தோடு இரு”[h] என்று சொன்னார்.
37 பின்பு பேதுரு, யாக்கோபு, யாக்கோபின் சகோதரரான யோவான் ஆகி
யோரை மட்டும் கூட்டிக்கொண்டு போனார், வேறு யாரையும் வர அனும
திக்கவில்லை.[i]

38 ஜெபக்கூடத் தலைவரின் வீட்டுக்கு அவர்கள் போய்ச் சேர்ந்தார்
கள்; அங்கு ஒரே கூச்சலும் குழப்பமும் அழுகையும் புலம்பலுமாக இருந்
ததை அவர் பார்த்தார்.[j] **39** உள்ளே போன பின்பு அங்கிருந்தவர்களிடம்,
“ஏன் இப்படி அழுது, கூச்சல்போட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்? சிறுமி சாக
வில்லை, அவள் தூங்கிக்கொண்டிருக்கிறாள்”[k] என்று சொன்னார்.
40 அப்போது, அவர்கள் அவரைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்க ஆரம்
பித்தார்கள். ஆனால், அவர்கள் எல்லாரையும் அவர் வெளியே அனுப்பி
விட்டு, அந்தச் சிறுமியின் அப்பாவையும் அம்மாவையும் தன்னோடு
வந்தவர்களையும் மட்டும் கூட்டிக்கொண்டு அவளுடைய உடல் வைக்கப்
பட்டிருந்த இடத்துக்குப் போனார். **41** பின்பு அந்தச் சிறுமியின் கையைப்
பிடித்து, *“தலீத்தா கூமி”* என்று சொன்னார்; அதற்கு, “சிறுமியே, ‘எழுந்திரு!’
என்று நான் உனக்குச் சொல்கிறேன்”[l] என்று அர்த்தம். **42** உடனே, அந்
தச் சிறுமி எழுந்து நடக்க ஆரம்பித்தாள்; (அவளுக்கு 12 வயது.) அதைப்
பார்த்ததும் அவளுடைய பெற்றோர் அடைந்த சந்தோஷத்துக்கு அளவே
இல்லை. **43** ஆனால், இதை யாருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்

அதி. 5
a மத் 9:21
b மத் 14:36 மாற் 6:56
c லூ 5:17 லூ 6:19
d லூ 8:45-48
e மத் 9:22
f லூ 7:50 லூ 8:48
g லூ 8:49
h லூ 8:50 யோவா 11:39, 40
i மத் 17:1 மத் 26:36, 37
j மத் 9:23-26 லூ 8:51-56
k லூ 8:52 யோவா 11:11
l மத் 9:25 லூ 7:14 லூ 8:54 அப் 9:40

திரும்பத் திரும்ப அவர்களுக்குக் கட்டளையிட்டார்;* [a] பின்பு, அவளுக்குச்
சாப்பிட ஏதாவது கொடுக்கும்படி சொன்னார்.

6 அவர் அங்கிருந்து புறப்பட்டுத் தன்னுடைய சொந்த ஊருக்கு வந்
தார்,[b] சீஷர்களும் அவர் பின்னால் வந்தார்கள். **2** ஓய்வுநாளில்
ஜெபக்கூடத்தில் அவர் கற்பிக்க ஆரம்பித்தார்; அதைக் கேட்ட பெரும்
பாலோர் பிரமித்துப்போனார்கள்; "இதையெல்லாம் இவன் எங்கிருந்து
தெரிந்துகொண்டான்?[c] இவ்வளவு ஞானம் இவனுக்கு எப்படிக் கிடைத்
தது? இப்பேர்ப்பட்ட அற்புதங்களைச் செய்ய இவனால் எப்படி முடிகி
றது?[d] **3** இவன் தச்சன்தானே?[e] இவன் மரியாளின் மகன்தானே?[f] யாக்
கோபு,[g] யோசே, யூதாஸ், சீமோன் என்பவர்களுடைய சகோதரன்தானே?[h]
இவனுடைய சகோதரிகளும் நம்முடைய ஊரில்தானே இருக்கிறார்கள்?"
என்று சொல்லி அவர்மேல் விசுவாசம் வைக்க மறுத்தார்கள். **4** அப்
போது இயேசு அவர்களிடம், "ஒரு தீர்க்கதரிசிக்கு மற்ற இடங்களிலெல்
லாம் மதிப்புக் கிடைக்கிறது, ஆனால் அவருடைய ஊரிலும் உறவிலும் வீட்
டிலும் மதிப்புக் கிடைப்பதில்லை"[i] என்று சொன்னார். **5** அதனால், சில
நோயாளிகள்மேல் கைகளை வைத்து குணமாக்கியதோடு சரி, வேறெந்த
அற்புதத்தையும் அவர் அங்கே செய்யவில்லை. **6** அவர்கள் விசுவாசம்
வைக்காததைப் பார்த்து அவர் ஆச்சரியப்பட்டார். பின்பு, அந்த வட்டாரத்
தில் ஒவ்வொரு கிராமமாகப் போய்க் கற்பித்தார்.[j]

7 அதன் பின்பு, பன்னிரண்டு பேரையும்* கூப்பிட்டு, அவர்களை இரண்
டிரண்டு பேராக அனுப்ப ஆரம்பித்தார்;[k] பேய்களைத் துரத்தும் அதிகா
ரத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.[l] **8** அப்போது, பயணத்துக்காக ஒரு
தடியைத் தவிர ரொட்டி, உணவுப் பை, காசு* என எதையுமே எடுத்துக்
கொண்டு போக வேண்டாம் என்று கட்டளை கொடுத்தார்.[m] **9** செருப்புக
ளைப் போட்டுக்கொள்ள வேண்டும் என்றும், இரண்டு உடைகளைக்
கொண்டுபோக வேண்டாம்* என்றும்கூட சொன்னார். **10** அதோடு, "நீங்
கள் எந்த ஊரிலாவது ஒரு வீட்டுக்குப் போனால், அந்த ஊரைவிட்டுப் புறப்
படும்வரை அங்கேயே தங்கியிருங்கள்.[n] **11** எந்த ஊர்க்காரர்களாவது
உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அல்லது நீங்கள் சொல்வதைக்
கேட்காவிட்டால், அந்த ஊரைவிட்டுப் புறப்படும்போது உங்கள் பாதங்க
ளில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்; இது அவர்களுக்கு ஒரு சாட்சி
யாக இருக்கும்"[o] என்று சொன்னார். **12** அதனால், அவர்கள் புறப்பட்டுப்
போய், மனம் திருந்தச் சொல்லி மக்களுக்குப் பிரசங்கித்தார்கள்.[p] **13** பல
ஆட்களிடமிருந்து பேய்களை விரட்டினார்கள்,[q] பல நோயாளிகளுக்கு
எண்ணெய் பூசி அவர்களைக் குணமாக்கினார்கள்.

14 ஏரோது ராஜா இதைக் கேள்விப்பட்டான்; ஏனென்றால், இயே
சுவின் பெயர் எல்லா இடங்களிலும் பிரபலமாகியிருந்தது. மக்களில் சிலர்,
"யோவான் ஸ்நானகர்தான்* உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார்; அதனால்
தான், இவரால் அற்புதங்களைச் செய்ய முடிகிறது"[r] என்று பேசிக்கொண்டி
ருந்தார்கள். **15** இன்னும் சிலர், "இவர் எலியா" என்று சொன்னார்கள். வேறு

5:43 * வே.வா., "கண்டிப்புடன் கட்டளையிட்டார்." **6:7** * அதாவது, "அப்போஸ்தலர்களையும்." **6:8** * நே.மொ., "இடுப்புவாரிலுள்ள பணப் பைகளில் செம்புக் காசு." **6:9** * வே.வா., "கூடுதலாக ஓர் உடையைப் போட்டுக்கொள்ள வேண்டாம்." **6:14** * ஸ்நானகர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்.

அதி. 5
a மாற் 1:42-44; மாற் 7:35, 36

அதி. 6
b லூ 4:16
c யோவா 6:42; யோவா 7:15
d மத் 13:54-58
e ஏசா 53:2
f யோவா 6:42
g கலா 1:19
h மாற் 3:31
i மத் 13:57; லூ 4:24; யோவா 4:44
j மத் 9:35; லூ 13:22
k லூ 10:1
l மத் 10:1; லூ 9:1-6
m மத் 10:9, 10
n மத் 10:11
o மத் 10:14; லூ 10:10, 11; அப் 13:50, 51
p அப் 2:38; அப் 3:19
q லூ 10:17
r மத் 14:1-5; லூ 9:7-9

சிலரோ, “அந்தக் காலத்திலிருந்த மற்ற தீர்க்கதரிசிகளைப் போல் இவ
ரும் ஒரு தீர்க்கதரிசி”[a] என்று சொன்னார்கள். **16** ஆனால் ஏரோது இதைக்
கேள்விப்பட்டபோது, “இவர் யோவான்தான்! இவர் தலையை நான் வெட்
டினேன்; இப்போது இவர் உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார்” என்று
சொன்னான். **17** இந்த ஏரோது தன்னுடைய சகோதரனாகிய பிலிப்புவின்
மனைவி ஏரோதியாளைத் தன் மனைவியாக வைத்திருந்தான்.[b] **18** “உங்
கள் சகோதரனுடைய மனைவியை நீங்கள் வைத்திருப்பது சரியல்ல”[c]
என்று யோவான் நிறைய தடவை அவனிடம் சொல்லியிருந்தார்; அதனால்
ஏரோதியாளைப் பிரியப்படுத்துவதற்காக, ஏரோது ஆள் அனுப்பி யோவா
னைப் பிடித்து, சங்கிலியால் கட்டி சிறையில் அடைத்திருந்தான்.
19 யோவான்மேல் ஏரோதியாள் வன்மம் வைத்திருந்தாள், அவரைக் கொல்
லத் துடித்தாள், ஆனால் முடியவில்லை. **20** ஏனென்றால், யோவான் நீதி
மான் என்பதும் பரிசுத்தமானவர்[d] என்பதும் ஏரோதுவுக்குத் தெரிந்திருந்த
தால், அவருக்குப் பயந்து அவரைப் பாதுகாத்து வந்திருந்தான். யோவான்
பேசுவதைக் கேட்டபோதெல்லாம் அவரை என்ன செய்வதென்று தெரியா
மல் மிகவும் குழம்பிப்போயிருந்தான்; ஆனாலும், அவர் பேசுவதை எப்போ
தும் விருப்பத்தோடு கேட்டு வந்திருந்தான்.

21 ஏரோது தன்னுடைய பிறந்தநாளில்[e] உயர் அதிகாரிகளுக்கும்
படைத் தளபதிகளுக்கும் கலிலேயாவிலிருந்த முக்கியப் பிரமுகர்களுக்கும்
சாயங்கால விருந்து கொடுத்தபோது,[f] ஏரோதியாளுக்குச் சரியான சந்தர்ப்
பம் கிடைத்தது. **22** அப்போது ஏரோதியாளின் மகள் அங்கே வந்து நடன
மாடி, ஏரோதுவையும் அவனுடைய விருந்தாளிகளையும் சந்தோஷப்படுத்
தினாள். ராஜா அந்தப் பெண்ணிடம், “என்ன வேண்டுமானாலும் கேள், நான்
உனக்குத் தருகிறேன்” என்று சொன்னான். **23** “நீ என்ன கேட்டாலும் தரு
கிறேன், என்னுடைய ராஜ்யத்தில் பாதியைக் கேட்டாலும் தருகிறேன்” என்
றும்கூட சத்தியம் செய்து கொடுத்தான். **24** அதனால் அவள் வெளியே
போய்த் தன்னுடைய அம்மாவிடம், “நான் என்ன கேட்கட்டும்?” என்றாள்.
அதற்கு அவள், “யோவான் ஸ்நானகனின் தலையைக் கேள்” என்று சொன்
னாள். **25** உடனே அந்தப் பெண் வேகமாக ராஜாவிடம் போய்,
“யோவான் ஸ்நானகனின் தலையை ஒரு தட்டில் வைத்து இப்போதே எனக்
குக் கொடுங்கள்”[g] என்று சொன்னாள். **26** அதைக் கேட்டு ராஜா மிகவும்
துக்கமடைந்தான்; ஆனாலும், விருந்தாளிகள் முன்னால் ஆணையிட்டுக்
கொடுத்திருந்ததால் அவள் கேட்டதை மறுக்க முடியவில்லை. **27** அத
னால், உடனடியாகத் தன் மெய்க்காவலனை அனுப்பி அவருடைய தலை
யைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அதன்படியே அந்தக் காவ
லன் போய், சிறையிலிருந்த யோவானின் தலையை வெட்டி, **28** அதை
ஒரு தட்டில் எடுத்துவந்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தான்; அவள்
அதைத் தன் அம்மாவிடம் கொண்டுபோய்க் கொடுத்தாள். **29** யோவான்
ஸ்நானகரின் சீஷர்கள் அதைக் கேள்விப்பட்டபோது, அங்கே போய் அவ
ருடைய உடலை எடுத்து ஒரு கல்லறையில்* வைத்தார்கள்.

30 பிற்பாடு, அப்போஸ்தலர்கள் இயேசுவிடம் வந்து, தாங்கள் செய்த
எல்லாவற்றையும், கற்பித்த எல்லாவற்றையும் பற்றிச் சொன்னார்கள்.[h]
31 அப்போது அவர், “தனிமையான ஒரு இடத்துக்குப் போய், கொஞ்

6:29 * வே.வா., “நினைவுக் கல்லறையில்.”

அதி. 6
a மத் 16:14
மாற் 8:28
b லூ 3:19, 20
c லேவி 18:16
லேவி 20:21
d மத் 11:11
மத் 21:26
e ஆதி 40:
20–22
f மத் 14:6-12
g மத் 14:8
h லூ 9:10

அதி. 6

சம் ஓய்வெடுக்கலாம் வாருங்கள்”[a] என்று சொன்னார். ஏனென்றால், நிறைய
பேர் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்ததால் சாப்பிடுவதற்குக்கூட
அவர்களுக்கு நேரமே கிடைக்கவில்லை. **32** அதனால், அவர்கள் படகில்
ஏறி தனிமையான ஓர் இடத்துக்குப் போனார்கள்.[b] **33** ஆனால், அவர்கள்
போவதை மக்கள் பார்த்துவிட்டார்கள்; நிறைய பேருக்கு விஷயம் தெரிய
வந்ததால், எல்லா நகரங்களிலிருந்தும் அவர்கள் கூட்டமாக ஓடி, அவர்
களுக்கு முன்னால் அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். **34** அவர்
படகிலிருந்து இறங்கியபோது, ஏராளமான மக்கள் அங்கே திரண்டு வந்திருந்
ததைப் பார்த்தார். அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல் இருந்
ததால்[c] அவர் மனம் உருகினார்.[d] அதனால், அவர்களுக்கு நிறைய விஷ
யங்களைக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார்.[e]

35 ரொம்ப நேரமாகிவிட்டதால் சீஷர்கள் அவரிடம் வந்து, “இது ஒதுக்
குப்புறமான இடம், ரொம்ப நேரமும் ஆகிவிட்டது.[f] **36** அதனால் இவர்
களை அனுப்பிவிடுங்கள், சுற்றியிருக்கிற ஊர்களுக்கும் கிராமங்களுக்கும்
போய் இவர்கள் ஏதாவது வாங்கிச் சாப்பிடட்டும்”[g] என்று சொன்னார்கள்.
37 ஆனால் அவர், “நீங்களே இவர்களுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுங்
கள்” என்று சொன்னார். அதற்கு அவர்கள், “நாங்கள் போய் 200 தினாரி
யுவுக்கு* ரொட்டிகளை வாங்கி வந்து இவர்களுக்குச் சாப்பிடக் கொடுக்க
லாமா?”[h] என்று கேட்டார்கள். **38** அப்போது அவர், “உங்களிடம்
எத்தனை ரொட்டிகள் இருக்கின்றன? போய்ப் பாருங்கள்!” என்று சொன்
னார். அவர்கள் பார்த்து வந்து, “ஐந்து ரொட்டிகளும், அதோடு இரண்டு மீன்
களும் இருக்கின்றன”[i] என்று சொன்னார்கள். **39** அதன் பின்பு, பசும்புல்
தரையில் எல்லாரையும் சிறுசிறு கூட்டமாக உட்காரச் சொன்னார்.[j]
40 அப்படியே, எல்லாரும் நூறுநூறு பேராகவும் ஐம்பதுஐம்பது பேராக
வும் உட்கார்ந்தார்கள். **41** அப்போது, அவர் அந்த ஐந்து ரொட்டிகளை
யும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தைப் பார்த்து, ஜெபம் செய்து,*[k]
அந்த ரொட்டிகளைப் பிட்டு, அங்கே இருந்தவர்களுக்குப் பரிமாறுவதற்கா
கச் சீஷர்களிடம் கொடுத்தார்; அப்படியே அந்த இரண்டு மீன்களையும் எல்
லாருக்கும் பங்குபோட்டுக் கொடுத்தார். **42** எல்லாரும் திருப்தியாகச் சாப்
பிட்டார்கள். **43** மீதியான ரொட்டித் துண்டுகளை 12 கூடைகள் நிறைய
அவர்கள் சேகரித்தார்கள், மீதியிருந்த மீன்களையும் சேகரித்தார்கள்.[l]
44 ரொட்டி சாப்பிட்ட ஆண்களின் எண்ணிக்கை 5,000.

45 பின்பு, கூட்டத்தாரை அவர் அனுப்ப ஆரம்பித்தார்; அதோடு, உட
னடியாகப் படகில் ஏறி தனக்கு முன்பே பெத்சாயிதாவை நோக்கி அக்க
ரைக்குப் போகும்படி சீஷர்களை அனுப்பினார்.[m] **46** அவர்களை அனுப்
பிய பின்பு, ஜெபம் செய்வதற்காக ஒரு மலைக்குப் போனார்.[n]
47 சாயங்கால நேரத்தில், படகு நடுக்கடல்வரை போயிருந்தது, அவரோ
அங்கேயே தனியாக இருந்தார்.[o] **48** எதிர்க்காற்று வீசியதால் படகை
ஓட்ட முடியாமல் சீஷர்கள் திணறினார்கள்; அவர் அதைப் பார்த்து,
சுமார் நான்காம் ஜாமத்தில்,* கடல்மேல் நடந்து அவர்களை நோக்கி
வந்தார்; ஆனால், அவர்களைக் கடந்துபோவதுபோல் போனார்.

6:37 *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **6:41** *நே.மொ., “ஆசீர்வதித்து.” **6:48** *அதாவது, “அதிகாலை சுமார் 3 மணியிலிருந்து சுமார் 6 மணிக்கு இடைப்பட்ட சமயத்தில்.”

- *a* மத் 11:29; மத் 14:13
- *b* யோவா 6:1, 2
- *c* 1ரா 22:17; ஏசா 53:6; எசே 34:5, 8; மத் 9:36
- *d* மத் 14:14; எபி 4:15
- *e* ஏசா 61:1; லூ 9:11
- *f* மத் 14:15-21; லூ 9:12-17
- *g* யோவா 6:5
- *h* 2ரா 4:42-44; மத் 15:33; யோவா 6:7
- *i* யோவா 6:9
- *j* யோவா 6:10-13
- *k* மாற் 8:6; லூ 24:30; அப் 27:35
- *l* மத் 14:20; லூ 9:17; யோவா 6:13
- *m* மத் 14:22
- *n* மத் 6:6; மத் 14:23; மாற் 1:35; லூ 6:12
- *o* மத் 14:24-33; யோவா 6:16-21

49 அவர் கடல்மேல் நடந்து வருவதை அவர்கள் பார்த்தபோது, "ஏதோ
மாய உருவம்!" என்று நினைத்து அலறினார்கள். **50** எல்லாருமே அவ
ரைப் பார்த்துக் கலக்கமடைந்தார்கள். உடனே அவர், "தைரியமாக இருங்
கள், நான்தான், பயப்படாதீர்கள்"[a] என்று சொன்னார். **51** பின்பு அவர்க
ளுடைய படகில் ஏறினார், அப்போது காற்று அடங்கியது. அதைப்
பார்த்து அவர்கள் மிகவும் பிரமித்துப்போனார்கள். **52** அற்புதமாய் ரொட்
டிகளைக் கொடுத்தவரால் இந்த அற்புதத்தையும் செய்ய முடியும் என்பதை
அவர்கள் புரிந்துகொள்ளவில்லை; இதையெல்லாம் புரிந்துகொள்ள முடியா
தபடி அவர்களுடைய இதயம் மந்தமாகவே இருந்தது.

53 பின்பு, அக்கரையிலுள்ள கெனேசரேத்துக்குப் போய், படகை நங்கூர
மிட்டு நிறுத்தினார்கள்.[b] **54** அவர்கள் படகிலிருந்து இறங்கியவுடனே மக்
கள் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். **55** அதனால், அந்தப்
பகுதியில் இருக்கிற எல்லா இடங்களுக்கும் ஓடிப்போய், நோயாளிகளைப்
படுக்கையோடு தூக்கிக்கொண்டு, அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட
இடங்களுக்கெல்லாம் கொண்டுவர ஆரம்பித்தார்கள். **56** நகரங்கள், நாட்
டுப்புறங்கள் என அவர் எங்கே போனாலும் அங்கிருந்த சந்தைவெளிக
ளில் நோயாளிகளைக் கொண்டுவந்து, அவருடைய மேலங்கியின் ஓரத்தை
யாவது தொட அனுமதிக்கும்படி அவரைக் கெஞ்சிக் கேட்டார்கள்.[c]
அப்படித் தொட்ட அத்தனை பேரும் குணமானார்கள்.

7 எருசலேமிலிருந்து வந்த பரிசேயர்களும் சில வேத அறிஞர்களும்
அவரிடம் கூடிவந்தார்கள்.[d] **2** அவருடைய சீஷர்களில் சிலர் தீட்டான
கைகளால், அதாவது கழுவாத கைகளால்,* சாப்பிடுவதை அவர்கள் பார்த்
தார்கள். **3** (பரிசேயர்கள் உட்பட யூதர்கள் எல்லாரும் முன்னோர்களுடைய
பாரம்பரியத்தைக் கடைப்பிடித்து முழங்கைவரை கழுவிவிட்டுத்தான் சாப்பி
டுவார்கள். **4** அதோடு, சந்தையிலிருந்து வந்த பிறகு, தங்களைத் தண்ணீ
ரால் தூய்மைப்படுத்திக்கொண்ட பின்புதான் சாப்பிடுவார்கள்; இதுபோன்ற
இன்னும் பல பாரம்பரியங்களையும் கடைப்பிடிப்பார்கள்; கிண்ணங்கள்,
கூஜாக்கள், செம்புப் பாத்திரங்கள் ஆகியவற்றைத் தண்ணீரில் அமிழ்த்தியெ
டுப்பார்கள்.)[e] **5** அதனால், அந்தப் பரிசேயர்களும் வேத அறிஞர்களும்,
"உன்னுடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கா
மல் ஏன் தீட்டான கைகளால் சாப்பிடுகிறார்கள்?"[f] என்று அவரிடம் கேட்
டார்கள். **6** அதற்கு அவர், "வெளிவேஷக்காரர்களான உங்களைப் பற்றி
ஏசாயா சரியாகத்தான் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்; 'இந்த ஜனங்
கள் என்னை உதட்டளவில் புகழ்கிறார்கள். ஆனால், இவர்களுடைய இதயம்
என்னைவிட்டுத் தூரமாக இருக்கிறது.[g] **7** இவர்கள் என்னை வணங்குவது
வீண், ஏனென்றால் மனுஷர்களுடைய கோட்பாடுகளைத்தான் இவர்கள் கற்
றுக்கொடுக்கிறார்கள்'[h] என்று எழுதியிருக்கிறார். **8** அதன்படியே, நீங்கள்
கடவுளுடைய கட்டளையை விட்டுவிட்டு மனுஷர்களுடைய பாரம்பரியத்
தைப் பிடித்துக்கொள்கிறீர்கள்"[i] என்று சொன்னார்.

9 அதோடு அவர்களிடம், "உங்களுடைய பாரம்பரியத்தைக் கட்டிக்காப்
பதற்காகக் கடவுளுடைய கட்டளையைச் சாமர்த்தியமாக ஒதுக்கிவிடுகிறீர்
கள்.[j] **10** உதாரணத்துக்கு, 'உங்கள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மதிப்புக்
கொடுக்க வேண்டும்'[k] என்றும், 'அப்பாவையோ அம்மாவையோ கேவலமா

7:2 * யூத பாரம்பரியத்தின்படி தூய்மைச் சடங்கு செய்யாததைக் குறிக்கிறது.

அதி. 6
a மத் 14:27; யோவா 6:20
b மத் 14:34-36
c மத் 9:20; மாற் 5:25-28; லூ 8:43, 44; அப் 19:11, 12

அதி. 7
d மத் 15:1
e மத் 23:25; லூ 11:38, 39
f மத் 15:2
g மத் 15:7-9
h ஏசா 29:13
i கலா 1:14; கொலோ 2:8
j மத் 15:3-6
k யாத் 20:12; உபா 5:16; எபே 6:2

கப் பேசுகிற* எவனும் கொல்லப்பட வேண்டும்'[a] என்றும் மோசே சொன்
னார். **11** ஆனால் நீங்கள், 'ஒருவன் தன் அப்பாவிடமோ அம்மாவிடமோ,
"என்னிடம் இருப்பதையெல்லாம் ஏற்கெனவே கொர்பானாக (அதாவது,
கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட காணிக்கையாக) கொடுத்துவிட்டேன், அத
னால் உங்களுக்கு என்னால் உதவி செய்ய முடியாது" என்று சொன்னால்,'
12 அவன் தன்னுடைய அப்பாவுக்கோ அம்மாவுக்கோ இனிமேல் எதை
யுமே செய்ய வேண்டியதில்லை என்று சொல்கிறீர்கள்.[b] **13** இப்படி, நீங்கள்
வழிவழியாகப் பின்பற்றுகிற பாரம்பரியத்தால் கடவுளுடைய வார்த்தையை
மதிப்பற்றதாக்கிவிடுகிறீர்கள்.[c] இதுபோல் இன்னும் நிறைய காரியங்களைச்
செய்கிறீர்கள்"[d] என்று சொன்னார். **14** பின்பு, கூட்டத்தாரை அவர் மறுபடி
யும் தன் பக்கத்தில் கூப்பிட்டு, "நான் சொல்வதை நீங்கள் எல்லாரும் கவனித்
துக் கேட்டு, அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.[e] **15** வெளியே
இருந்து ஒரு மனுஷனுக்குள் போகிற எதுவும் அவனைத் தீட்டுப்படுத்தாது;
அவனுக்குள்ளிருந்து வெளியே வருபவைதான் அவனைத் தீட்டுப்படுத்
தும்"[f] என்று சொன்னார். **16** *—

17 பின்பு, அவர் அந்தக் கூட்டத்தாரைவிட்டு ஒரு வீட்டுக்குள் போன
போது, அந்த உவமையைப் பற்றிச் சீஷர்கள் அவரிடம் கேட்க ஆரம்பித்
தார்கள்.[g] **18** அதற்கு அவர், "நீங்களுமா அவர்களைப் போல் புரிந்து
கொள்ளாமல் இருக்கிறீர்கள்? வெளியே இருந்து ஒரு மனுஷனுக்குள்
போகிற எதுவும் அவனைத் தீட்டுப்படுத்தாது என்பது உங்களுக்குத் தெரி
யாதா? **19** அது அவனுடைய இதயத்துக்குள் போகாமல் வயிற்றுக்குள்
போய் பின்பு கழிப்பிடத்துக்குப் போய்விடுகிறது, இல்லையா?" என்று கேட்
டார்; இப்படி, எல்லா உணவுகளும் சுத்தமானவைதான் என்பதைத் தெரி
யப்படுத்தினார். **20** அதோடு அவர்களிடம், "ஒரு மனுஷனுக்குள்ளிருந்து
வெளியே வருபவைதான் அவனைத் தீட்டுப்படுத்துகின்றன.[h] **21** ஏனென்
றால் கெட்ட எண்ணங்கள்,[i] அதாவது பாலியல் முறைகேடு,* திருட்டு,
கொலை, **22** மணத்துணைக்குத் துரோகம், பேராசை, அக்கிரமம், வஞ்ச
கம், வெட்கங்கெட்ட நடத்தை,* பொறாமை,# நிந்தனை, கர்வம், வறட்டுப்
பிடிவாதம் ஆகியவை மனுஷர்களுடைய இதயத்திலிருந்துதான் வெளியே
வருகின்றன. **23** இந்தப் பொல்லாத விஷயங்களெல்லாம் ஒருவனுக்குள்ளி
ருந்து வந்து அவனைத் தீட்டுப்படுத்துகின்றன" என்று சொன்னார்.

24 பின்பு அவர் அங்கிருந்து புறப்பட்டு தீரு, சீதோன் பகுதிக்குப்
போய்,[j] அங்கிருந்த ஒரு வீட்டுக்குள் போனார்; தான் அங்கே இருப்
பது யாருக்குமே தெரியக் கூடாதென்று நினைத்தார், ஆனாலும் தெரிந்து
விட்டது. **25** அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட ஒரு பெண் உடனே
அங்கே வந்து அவருடைய காலடியில் விழுந்தாள்.[k] **26** அவள் சீரியா
விலுள்ள பெனிக்கேயில் பிறந்த கிரேக்கப் பெண். அவளுடைய சின்னஞ்
சிறு மகளுக்குப் பேய் பிடித்திருந்தது; தன் மகளைப் பிடித்திருந்த பேயை
விரட்டச் சொல்லி அவரிடம் அவள் கேட்டுக்கொண்டே இருந்தாள்.
27 அதற்கு அவர், "முதலில் பிள்ளைகள் திருப்தியாகச் சாப்பிடட்டும், பிள்
ளைகளின் ரொட்டியை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது சரியல்ல"[l]
என்று சொன்னார். **28** அவளோ, "உண்மைதான் ஐயா, ஆனால் சின்னப்

அதி. 7
a யாத் 21:17, லேவி 20:9, நீதி 20:20
b 1தீ 5:8
c மத் 15:6
d மாற் 7:3
e மத் 15:10
f மத் 15:11, தீத் 1:15
g மத் 15:15-20
h மத் 15:18
i ஆதி 6:5, ஆதி 8:21, எரே 17:9
j மத் 15:21
k மத் 15:22-28
l மத் 10:5, 6, மத் 15:26, ரோ 9:4, எபே 2:12

7:10 * வே.வா., "சபித்துப் பேசுகிற." **7:16** * இணைப்பு A3-ஐப் பாருங்கள். **7:21, 22** * சொல் பட்டியலைப் பாருங்கள். **7:22** # வே.வா., "பொறாமைப் பார்வை."

பிள்ளைகள் சிந்தும் துணுக்குகளை மேஜைக்குக் கீழே இருக்கும் நாய்க்
குட்டிகள் சாப்பிடுமே” என்று சொன்னாள். **29** அதற்கு அவர், “நீ இதைச்
சொன்னதால், இப்போது போகலாம்; உன் மகளைப் பிடித்திருந்த பேய்
போய்விட்டது”[a] என்று சொன்னார். **30** அவள் வீடு திரும்பியபோது, அந்
தச் சிறுமி கட்டிலில் படுத்திருந்ததைப் பார்த்தாள், அந்தப் பேய் அவளை
விட்டுப் போயிருந்தது.[b]

31 பின்பு, இயேசு தீருவைவிட்டு சீதோன் வழியாகவும் தெக்கப்போலி*
வழியாகவும் கலிலேயா கடற்கரைக்குப் போனார்.[c] **32** இங்கே,* காது
கேட்காதவனும், பேச்சுக் குறைபாடு உள்ளவனுமான ஒருவனை[d] அவரிடம்
கொண்டுவந்து அவன்மேல் கைகளை வைக்கும்படி சிலர் கெஞ்சிக்
கேட்டார்கள். **33** அப்போது அவர், கூட்டத்தாரைவிட்டு அவனைத் தனி
யாகக் கூட்டிக்கொண்டு போய் அவனுடைய காதுகளில் தன் விரல்களை
வைத்து, உமிழ்ந்து, பின்பு அவனுடைய நாக்கைத் தொட்டார்.[e] **34** அதன்
பின்பு, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு, *“எப்பத்தா”*
என்று சொன்னார்; அதற்கு “திறக்கப்படு” என்று அர்த்தம். **35** அப்போது
அவனுடைய காதுகள் திறந்தன,[f] அவனுடைய பேச்சுக் குறைபாடும் சரி
யாகி அவன் தெளிவாகப் பேச ஆரம்பித்தான். **36** இந்த விஷயத்தைப்
பரப்ப வேண்டாம் என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார்;[g]
ஆனால், அவர் பல தடவை சொல்லியும் இன்னும் அதிகமாகத்தான்
அவர்கள் அதைப் பரப்பினார்கள்.[h] **37** “எல்லாவற்றையும் இவர் எவ்வ
ளவு அருமையாகச் செய்கிறார்! காது கேட்காதவர்களைக்கூட கேட்க வைக்
கிறார், பேச முடியாதவர்களைக்கூட பேச வைக்கிறார்!”[i] என்று மிகுந்த ஆச்
சரியத்தோடு[j] சொன்னார்கள்.

8 அந்த நாட்களில், மக்கள் மறுபடியும் ஒரு பெரிய கூட்டமாகக் கூடி
வந்தபோது, அவர்களிடம் சாப்பிட எதுவும் இருக்கவில்லை; அதனால்,
அவர் தன்னுடைய சீஷர்களைக் கூப்பிட்டு, **2** “இந்த மக்களைப் பார்க்கும்
போது என் மனம் உருகுகிறது;[k] இவர்கள் மூன்று நாட்களாக என்
னோடு இருக்கிறார்கள், சாப்பிடுவதற்கும் இவர்களிடம் ஒன்றுமே இல்லை.[l]
3 இவர்களை நான் பட்டினியாக வீட்டுக்கு அனுப்பிவிட்டால், போகிற வழி
யிலேயே மயங்கி விழுந்துவிடுவார்கள். அதுவும் இவர்களில் சிலர் ரொம்
பத் தூரத்திலிருந்து வந்திருக்கிறார்கள்” என்று சொன்னார். **4** அதற்கு
அவருடைய சீஷர்கள், “ஒதுக்குப்புறமான இந்த இடத்தில் இந்த மக்களுக்குத்
தேவையான ரொட்டிகளை எங்கிருந்து வாங்க முடியும்?” என்று கேட்டார்
கள். **5** அப்போது அவர், “உங்களிடம் எத்தனை ரொட்டிகள் இருக்கின்
றன?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “ஏழு”[m] என்று சொன்னார்கள்.
6 அப்போது, தரையில் உட்காரும்படி கூட்டத்தாரிடம் அவர் சொன்
னார்; பின்பு அந்த ஏழு ரொட்டிகளை எடுத்து, கடவுளுக்கு நன்றி சொல்லி,
அவற்றைப் பிட்டு, பரிமாறுவதற்காகச் சீஷர்களிடம் கொடுத்தார், அவர்
களும் அதைக் கூட்டத்தாருக்குப் பரிமாறினார்கள்.[n] **7** அவர்களிடம் சில
சிறுமீன்களும் இருந்தன; அவற்றுக்காகவும் கடவுளுக்கு நன்றி சொல்லி
விட்டு, பரிமாறுவதற்காக அவர்களிடம் கொடுத்தார். **8** எல்லாரும் திருப்
தியாகச் சாப்பிட்டார்கள்; அதன் பின்பு, மீதியான ரொட்டித் துண்டுகளை

7:31 *வே.வா., “பத்து நகரங்களின் பகுதி.” **7:32** *அதாவது, “தெக்கப்போலி பகுதியில்.”

அதி. 7
a மத் 15:28
b யோவா 4:49-51
c மத் 15:29
d மத் 9:32, 33; லூ 11:14
e மாற் 8:23; யோவா 9:6
f ஏசா 35:5; மத் 11:5; மத் 15:30
g ஏசா 42:2; மத் 8:3, 4; மாற் 5:42, 43
h மாற் 1:43-45
i ஏசா 35:5, 6; மத் 15:31
j அப் 14:11

அதி. 8
k மத் 14:14; மாற் 6:34
l மத் 15:32-38
m மாற் 6:38
n மாற் 6:41

ஏழு பெரிய கூடைகள் நிறைய அவர்கள் சேகரித்தார்கள்.[a] 9 அங்கே
சுமார் 4,000 ஆண்கள் இருந்தார்கள். பின்பு, அவர்களை அவர் அனுப்பி
வைத்தார்.

10 அதன்பின், சீஷர்களோடு உடனடியாகப் படகில் ஏறி தல்மனூத்தா
பகுதிக்குப் போனார்.[b] 11 பரிசேயர்கள் அங்கே வந்து அவரோடு வாக்
குவாதம் செய்ய ஆரம்பித்தார்கள்; அவரைச் சோதிப்பதற்காக, வானத்திலி
ருந்து ஓர் அடையாளத்தைக் காட்டும்படி கேட்டார்கள்.[c] 12 அப்போது
அவர் உள்ளம் குமுறிப் பெருமூச்சுவிட்டு, "இந்தத் தலைமுறையினர்
ஏன்தான் அடையாளத்தைக் கேட்கிறார்களோ?[d] உண்மையாகவே சொல்
கிறேன், இந்தத் தலைமுறையினருக்கு எந்த அடையாளமும் கொடுக்கப்
படாது"[e] என்று சொன்னார். 13 அதன் பின்பு, அவர்களை விட்டுவிட்டு
மறுபடியும் படகில் ஏறி அக்கரைக்குப் போனார்.

14 ரொட்டிகளை எடுத்துக்கொண்டுவர சீஷர்கள் மறந்துவிட்டார்கள்,
ஒரேவொரு ரொட்டியைத் தவிர வேறொன்றுமே படகில் இல்லை.[f]
15 அவர் அவர்களிடம், "பரிசேயர்களுடைய புளித்த மாவையும் ஏரோ
துவுடைய புளித்த மாவையும் குறித்து ஜாக்கிரதையாகவும் விழிப்பாக
வும் இருங்கள்"[g] என்று தெளிவாக எச்சரித்தார். 16 அப்போது, ரொட்
டியை எடுத்துக்கொண்டு வராததற்காக அவர்கள் ஒருவருக்கொருவர்
வாக்குவாதம் செய்ய ஆரம்பித்தார்கள். 17 அவர் இதைப் பார்த்துவிட்டு,
"ரொட்டியை எடுத்துக்கொண்டு வராததற்காக ஏன் இப்படி வாக்குவாதம்
செய்கிறீர்கள்? இன்னுமா நீங்கள் உணரவில்லை? இன்னுமா புரிந்துகொள்
ளவில்லை? புரிந்துகொள்ள முடியாதளவுக்கு உங்கள் இதயம் இன்னும்
மந்தமாகத்தான் இருக்கிறதா? 18 'கண் இருந்தும் பார்க்காமல் இருக்கிறீர்
களா, காது இருந்தும் கேட்காமல் இருக்கிறீர்களா?' 19 உங்களுக்கு
ஞாபகமில்லையா, நான் ஐந்து ரொட்டிகளைப் பிட்டு[h] 5,000 ஆண்களுக்
குக் கொடுத்தபோது, மீதியான துண்டுகளை எத்தனை கூடைகள் நிறைய
சேகரித்தீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "பன்னிரண்டு"[i] என்று
சொன்னார்கள். 20 "நான் ஏழு ரொட்டிகளைப் பிட்டு 4,000 ஆண்க
ளுக்குக் கொடுத்தபோது, மீதியான துண்டுகளை எத்தனை பெரிய கூடை
கள் நிறைய சேகரித்தீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஏழு"[j]
என்று சொன்னார்கள். 21 அப்போது அவர், "இன்னுமா உங்களுக்குப் புரி
யவில்லை?" என்று கேட்டார்.

22 பின்பு, அவர்கள் பெத்சாயிதாவுக்கு வந்துசேர்ந்தார்கள்; அங்கே பார்
வையில்லாத ஒருவனை மக்கள் அவரிடம் கூட்டிக்கொண்டு வந்து, அவ
னைத் தொடச் சொல்லிக் கெஞ்சினார்கள்.[k] 23 அதனால், அவர் அந்த
மனிதனுடைய கையைப் பிடித்து கிராமத்துக்கு வெளியே கூட்டிக்கொண்டு
போனார். பிறகு, அவனுடைய கண்கள்மேல் உமிழ்ந்து,[l] அவன்மேல்
கைகளை வைத்து, "ஏதாவது தெரிகிறதா?" என்று கேட்டார். 24 அந்த மனி
தன் நிமிர்ந்து பார்த்து, "ஆட்கள் நடமாடுவது தெரிகிறது; ஆனால், அவர்
கள் மரங்களைப் போல் தெரிகிறார்கள்" என்று சொன்னான். 25 மறுபடியும்
அவர் அந்த மனிதனுடைய கண்கள்மேல் கைகளை வைத்தார்; அப்
போது அவனுக்கு முழுமையாகப் பார்வை கிடைத்தது, எல்லாமே அவனுக்
குத் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது. 26 பின்பு அவர், "இப்போது கிராமத்
துக்குள் போகாதே" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார்.

அதி. 8
a மத் 15:37
b மத் 15:39
c மத் 16:1-3
d மத் 12:38; யோவா 6:30
e மத் 16:4
f மத் 16:5-12
g மத் 16:6; லூ 12:1
h மாற் 6:38
i மத் 14:20; மாற் 6:43; லூ 9:17; யோவா 6:13
j மத் 15:37
k மாற் 6:56
l மாற் 7:32, 33; யோவா 9:1, 6

27 அதன் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷர்களும் பிலிப்புச் செசரி
யாவில் இருக்கிற கிராமங்களுக்குப் போனார்கள்; வழியில் அவர் தன்
னுடைய சீஷர்களிடம், "நான் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?"[a] என்று
கேட்டார். **28** அதற்கு அவர்கள், "சிலர் யோவான் ஸ்நானகர்*[b] என்றும்,
வேறு சிலர் எலியா[c] என்றும், இன்னும் சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர்
என்றும் சொல்கிறார்கள்" என்றார்கள். **29** அப்போது அவர், "ஆனால் நீங்
கள் என்னை யாரென்று சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு
பேதுரு, "நீங்கள் கிறிஸ்து"[d] என்று சொன்னார். **30** அப்போது, தன்னைப்
பற்றி யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று அவர்களுக்குக் கண்டிப்புடன்
கட்டளையிட்டார்.[e] **31** அதோடு, மனிதகுமாரன் பல பாடுகள் பட வேண்
டும், பெரியோர்களாலும்* முதன்மை குருமார்களாலும் வேத அறிஞர்களா
லும் ஒதுக்கித்தள்ளப்பட்டு, கொலை செய்யப்பட வேண்டும்,[f] மூன்று
நாட்களுக்குப் பின்பு உயிரோடு எழுப்பப்பட வேண்டும்[g] என்று அவர்
களுக்குக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். **32** இதையெல்லாம் அவர்க
ளிடம் வெளிப்படையாகவே சொன்னார். ஆனால், பேதுரு அவரைத்
தனியாகக் கூட்டிக்கொண்டுபோய் அவரிடம் அதட்டலாகப் பேச ஆரம்
பித்தார்.[h] **33** அப்போது அவர் தன்னுடைய சீஷர்கள் பக்கம் திரும்பிக்
கொண்டு பேதுருவிடம், "என் பின்னால் போ, சாத்தானே!* நீ கடவுளைப்
போல் யோசிக்காமல் மனுஷர்களைப் போல் யோசிக்கிறாய்"[i] என்று சொல்
லிக் கண்டித்தார்.

34 கூட்டத்தாரையும் சீஷர்களையும் அவர் தன்னிடம் கூப்பிட்டு, "யாரா
வது என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவர் தன்னையே துறந்து, தன்
சித்திரவதைக் கம்பத்தை* சுமந்துகொண்டு தொடர்ந்து என் பின்னால்
வர வேண்டும்.[j] **35** தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நினைக்கி
றவன் அதை இழந்துபோவான்; ஆனால், எனக்காகவும் நல்ல செய்திக்காக
வும் தன் உயிரை இழப்பவன் அதைக் காப்பாற்றிக்கொள்வான்.[k]
36 சொல்லப்போனால், ஒருவர் இந்த உலகத்தில் இருக்கிற எல்லாவற்றை
யும் சம்பாதித்தாலும் தன் உயிரை இழந்துவிட்டால் என்ன பிரயோஜனம்?[l]
37 உயிருக்கு ஈடாக ஒருவரால் எதைக் கொடுக்க முடியும்?[m] **38** விசுவா
சதுரோகமும் பாவமும் செய்கிற இந்தத் தலைமுறையினரில் ஒருவன் என்
னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் வெட்கப்பட்டால், மனித
குமாரன் தன்னுடைய தகப்பனின்* மகிமையில் பரிசுத்த தூதர்களோடு
வரும்போது[n] அவனைக் குறித்து வெட்கப்படுவார்"[o] என்று சொன்னார்.

9 அதோடு அவர், "உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன்,
இங்கே நிற்கிறவர்களில் சிலர், கடவுளுடைய அரசாங்கம் முழு அதிகா
ரத்தோடு வந்துவிட்டதைப் பார்ப்பதற்கு முன்னால் சாகவே மாட்டார்கள்"[p]
என்று அவர்களிடம் சொன்னார். **2** ஆறு நாட்களுக்குப் பின்பு, பேதுரு
வையும் யாக்கோபையும் யோவானையும் மட்டும் கூட்டிக்கொண்டு உயர
மான ஒரு மலைக்கு இயேசு போனார்; அங்கே அவர்கள் முன்னால் அவ
ருடைய தோற்றம் மாறியது.[q] **3** அவருடைய மேலங்கி பளபளவென்று

8:28 * ஸ்நானகர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர். **8:31** * வே.வா., "மூப்பர்க
ளாலும்." **8:33** * "சாத்தான்" என்ற வார்த்தையின் அர்த்தம் "எதிர்ப்பவன்." இந்த அர்த்
தத்தில்தான் பேதுருவைச் சாத்தான் என்று இயேசு சொன்னதாகத் தெரிகிறது. **8:34**
* சொல் பட்டியலைப் பாருங்கள். **8:38** * வே.வா., "தகப்பனிடமிருந்து பெற்ற."

அதி. 8
a மத் 16:13-15
லூ 9:18, 19
b மத் 14:1, 2
மாற் 6:14
c மாற் 9:11
d மத் 16:16
லூ 9:20
யோவா 1:40, 41
யோவா 6:68, 69
e மத் 16:20
மாற் 9:9
லூ 9:21, 22
f மத் 26:2
g மத் 16:21
மத் 17:22, 23
h மத் 16:22
i மத் 16:23
j மத் 10:38
மத் 16:24
லூ 9:23
லூ 14:27
k மத் 10:39
மத் 16:25
லூ 9:24
யோவா 12:25
வெளி 12:11
l மத் 16:26
லூ 9:25
m சங் 49:8
n மத் 16:27
மத் 25:31
2தெ 1:7
o மத் 10:33
லூ 9:26
லூ 12:9
2தீ 1:7, 8

அதி. 9
p மத் 16:28
லூ 9:27
q மத் 17:1-8
லூ 9:28-36

மின்ன ஆரம்பித்தது. பூமியில் இருக்கிற எந்தச் சலவைக்காரராலும் வெண்
மையாக்க முடியாதளவுக்கு வெள்ளைவெளேரென ஆனது. **4** அதோடு,
எலியாவும் மோசேயும் தோன்றி இயேசுவுடன் பேசிக்கொண்டிருந்தார்கள்.
5 அப்போது பேதுரு, “ரபீ,* இங்கே இருப்பது எங்கள் பாக்கியம்.
உங்களுக்கு ஒன்றும், மோசேக்கு ஒன்றும், எலியாவுக்கு ஒன்றுமாக
மூன்று கூடாரங்களை நாங்கள் போடுகிறோம்” என்று இயேசுவிடம் சொன்
னார். **6** உண்மையில், என்ன சொல்வதென்றே தெரியாமல் அப்படிச்
சொன்னார். ஏனென்றால், அவர்கள் எல்லாரும் மிகவும் பயந்துபோயிருந்
தார்கள். **7** பின்பு, ஒரு மேகம் தோன்றி அவர்கள்மேல் நிழலிட்டது; அப்
போது, “இவர் என் அன்பு மகன்;[a] இவர் சொல்வதைக் கேளுங்கள்”[b]
என்று அந்த மேகத்திலிருந்து ஒரு குரல்[c] ஒலித்தது. **8** உடனடியாக அவர்
கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள், ஆனால் இயேசுவைத் தவிர வேறு யாரை
யும் காணவில்லை.

9 அந்த மலையிலிருந்து அவர்கள் இறங்கி வந்துகொண்டிருந்தபோது
இயேசு அவர்களிடம், ‘நீங்கள் பார்த்ததை மனிதகுமாரன் உயிர்த்தெழும்
வரை யாரிடமும் சொல்லக் கூடாது’[d] என்று கண்டிப்புடன் கட்டளையிட்
டார்.[e] **10** அதை அவர்கள் மனதில் வைத்துக்கொண்டார்கள்;* ஆனால்,
உயிர்த்தெழுவதைப் பற்றி அவர் சொன்னதற்கு என்ன அர்த்தம் என்று ஒரு
வருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். **11** அப்போது அவரிடம்,
“எலியா[f] முதலில் வர வேண்டும் என்று வேத அறிஞர்கள் ஏன் சொல்கிறார்
கள்?”[g] என்று கேட்டார்கள். **12** அதற்கு அவர், “எலியா முதலில் வந்து
எல்லாவற்றையும் சரிப்படுத்துவார்[h] என்பது உண்மைதான்; ஆனால், மனி
தகுமாரன் பல பாடுகள் படுவார்[i] என்றும், அவமதிக்கப்படுவார்[j] என்றும்
எழுதப்பட்டிருக்கிறதே, அது எப்படி? **13** நான் உங்களுக்குச் சொல்கி
றேன், எலியா[k] வந்துவிட்டார்; அவர்கள் தங்களுடைய இஷ்டப்படியெல்
லாம் அவரை நடத்தினார்கள்; அவரைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறபடியே
அவை நடந்தன”[l] என்று சொன்னார்.

14 பின்பு, அவர்கள் மற்ற சீஷர்களிடம் வந்தார்கள்; அப்போது, அந்தச்
சீஷர்களைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் இருப்பதையும், வேத அறிஞர்கள்
அவர்களோடு வாக்குவாதம் செய்வதையும் பார்த்தார்கள்.[m] **15** ஆனால்,
அந்தக் கூட்டத்தார் எல்லாரும் அவரைப் பார்த்தவுடன் மிகவும் ஆச்சரியப்
பட்டு, ஓடிப்போய் வரவேற்றார்கள். **16** அப்போது அவர்களிடம், “எதைப்
பற்றி இவர்களோடு வாக்குவாதம் செய்துகொண்டிருக்கிறீர்கள்?” என்று
அவர் கேட்டார். **17** கூட்டத்திலிருந்த ஒருவர், “போதகரே, பேய் பிடித்த
தால் என் மகன் ஊமையாகிவிட்டான்.[n] அதனால் அவனை உங்களி
டம் கூட்டிக்கொண்டு வந்தேன். **18** அவனுக்குப் பேய் பிடிக்கும்போ
தெல்லாம், அது அவனைத் தரையில் வீசியடிக்கிறது; அப்போது அவன்
வாயில் நுரை தள்ளுகிறது, பற்களை நறநறவென்று கடிக்கிறான், பின்பு அப்
படியே துவண்டுவிடுகிறான். அந்தப் பேயை விரட்டச் சொல்லி உங்கள்
சீஷர்களிடம் கேட்டேன், அவர்களால் முடியவில்லை” என்று சொன்னார்.
19 அதற்கு அவர், “விசுவாசமில்லாத தலைமுறையே,[o] நான் இன்னும் எத்
தனை காலம்தான் உங்களோடு இருக்க வேண்டுமோ? எத்தனை காலம்
தான் உங்களைச் சகித்துக்கொள்ள வேண்டுமோ?” என்று சொல்லிவிட்டு,

9:5 * அதாவது, “போதகரே.” **9:10** * அல்லது, “யாரிடமும் சொல்லவில்லை.”

அதி. 9
a சங் 2:7, ஏசா 42:1, மத் 3:17, 2பே 1:17
b உபா 18:15, மத் 17:5, லூ 9:35, அப் 3:22, 23
c லூ 3:22, யோவா 12:28
d மத் 17:9, லூ 9:36
e மத் 12:15, 16, மாற் 8:29, 30
f மல் 4:5, 6, மாற் 8:27, 28
g மத் 17:10
h மத் 17:11
i தானி 9:26
j சங் 22:6, 7, ஏசா 50:6, ஏசா 53:3, லூ 23:11
k மத் 11:13, 14, லூ 1:13, 17
l மத் 17:12
m லூ 9:37
n மத் 17:14-17, லூ 9:38-42
o உபா 32:20

“அவனை என்னிடம் கூட்டிக்கொண்டு வாருங்கள்”[a] என்றார். **20** அவர்கள் அந்தப் பையனைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவரைப் பார்த்ததுமே அந்தப் பேய் அவனுக்கு வலிப்பு உண்டாக்கியது. அவன் தரையில் விழுந்து உருண்டான், அவனுடைய வாயில் நுரை தள்ளியது. **21** அப்போது அவர், “எவ்வளவு காலமாக இவனுக்கு இப்படி நடக்கிறது?” என்று அவனுடைய அப்பாவிடம் கேட்டார். அதற்கு அவர், “சிறுவயதிலிருந்தே” என்று சொல்லிவிட்டு, **22** “அவனைக் கொல்வதற்காக அந்தப் பேய் அடிக்கடி அவனைத் தண்ணீரிலும் நெருப்பிலும் தள்ளிவிடுகிறது; உங்களால் முடிந்தால், எங்களுக்குக் கருணை காட்டி உதவி செய்யுங்கள்” என்று சொன்னார். **23** அதற்கு இயேசு, “‘உங்களால் முடிந்தால்’ என்று சொல்கிறாயே! ஒருவருக்கு விசுவாசம் இருந்தால் எல்லாமே முடியும்”[b] என்று சொன்னார். **24** உடனே அந்தப் பையனின் அப்பா, “எனக்கு விசுவாசம் இருக்கிறது! என் விசுவாசம் இன்னும் பலமாவதற்கு உதவி செய்யுங்கள்!”[c] என்று சத்தமாகச் சொன்னார்.

25 மக்கள்கூட்டம் தன்னிடம் வேகமாக வருவதை இயேசு பார்த்தபோது அந்தப் பேயை அதட்டி, “ஊமையாக்கும் பேயே! செவிடாக்கும் பேயே! நான் உனக்குக் கட்டளையிடுகிறேன், இவனைவிட்டு வெளியே போ, இனிமேல் இவனுக்குள் நுழையாதே”[d] என்று சொன்னார். **26** அப்போது அந்தப் பேய் கத்திக் கூச்சல்போட்டு, அவனுக்குப் பயங்கரமாக வலிப்பு உண்டாக்கி, அவனைவிட்டு வெளியே போனது. அவன் பேச்சுமூச்சில்லாமல் கிடந்தான். அதனால் அங்கிருந்த பெரும்பாலோர், “அவன் செத்துவிட்டான்!” என்று பேசிக்கொண்டார்கள். **27** ஆனால், இயேசு அவனுடைய கையைப் பிடித்துத் தூக்கிவிட்டார்; அவன் எழுந்துகொண்டான். **28** இயேசு ஒரு வீட்டுக்குள் போன பின்பு, அவருடைய சீஷர்கள் தனியாக வந்து, “எங்களால் ஏன் அந்தப் பேயை விரட்ட முடியவில்லை?”[e] என்று கேட்டார்கள். **29** அதற்கு அவர், “இப்படிப்பட்ட பேயை ஜெபத்தினால் மட்டும்தான் விரட்ட முடியும்” என்று சொன்னார்.

30 அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு கலிலேயா வழியாகப் போனார்கள்; ஆனால், அது யாருக்கும் தெரியக் கூடாதென்று அவர் நினைத்தார். **31** ஏனென்றால், “மனிதகுமாரன் காட்டிக்கொடுக்கப்பட்டு, மக்களுடைய கையில் ஒப்படைக்கப்பட்டு, அவர்களால் கொலை செய்யப்படுவார்;[f] ஆனாலும், மூன்று நாட்களுக்குப் பிறகு உயிரோடு எழுப்பப்படுவார்”[g] என்று தன்னுடைய சீஷர்களிடம் விளக்கிக்கொண்டிருந்தார். **32** அவர் சொன்ன விஷயம் அவர்களுக்குப் புரியவில்லை; அதைப் பற்றி அவரிடம் கேள்வி கேட்கவும் பயந்தார்கள்.

33 அதன் பின்பு, அவர்கள் கப்பர்நகூமுக்கு வந்தார்கள்; அவர் வீட்டுக்குள் இருந்தபோது, “வழியில் எதைப் பற்றி வாக்குவாதம் செய்துகொண்டிருந்தீர்கள்?”[h] என்று அவர்களிடம் கேட்டார். **34** அவர்கள் பதிலே சொல்லவில்லை; ஏனென்றால், தங்களில் யார் உயர்ந்தவர் என்பதைப் பற்றித்தான் வழியில் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தார்கள். **35** அதனால் அவர் உட்கார்ந்து, பன்னிரண்டு பேரையும்* கூப்பிட்டு, “உங்களில் யாராவது முதலானவராக இருக்க விரும்பினால், அவர் எல்லாருக்கும் கடைசியானவராக இருக்க வேண்டும், எல்லாருக்கும் சேவை செய்கிறவராக இருக்க வேண்

9:35 * அதாவது, “அப்போஸ்தலர்களையும்.”

அதி. 9
a மத் 17:17; லூ 9:41
b மத் 17:20; மாற் 11:23; லூ 17:6; யோவா 11:40; அப் 14:9, 10
c லூ 17:5
d மத் 17:18; மாற் 1:23-25; லூ 4:34, 35; அப் 10:38
e மத் 17:19, 20
f மத் 26:2
g மத் 16:21; மத் 17:22, 23; மாற் 8:31; லூ 9:44, 45
h மத் 18:1-5; லூ 9:46-48; லூ 22:24

டும்”[a] என்று சொன்னார். **36** பின்பு, ஒரு சின்னப் பிள்ளையைக் கொண்
டுவந்து அவர்கள் நடுவில் நிறுத்தி, அதைத் தன் கைகளால் அணைத்து,
37 “இப்படிப்பட்ட ஒரு சின்னப் பிள்ளையை எனக்காக* ஏற்றுக்கொள்கிற
வன்[b] என்னையும் ஏற்றுக்கொள்கிறான்; என்னை ஏற்றுக்கொள்கிறவன்
என்னை மட்டுமல்ல, என்னை அனுப்பியவரையும் ஏற்றுக்கொள்கிறான்”[c]
என்று அவர்களிடம் சொன்னார்.

38 யோவான் அவரிடம், “போதகரே, ஒருவன் உங்களுடைய பெயரைச்
சொல்லி பேய்களை விரட்டுவதைப் பார்த்தோம்; அவன் நம்மைப் பின்
பற்றி வராததால், அவனைத் தடுக்க முயற்சி செய்தோம்”[d] என்று சொன்
னார். **39** ஆனால் இயேசு, “அவனைத் தடுக்காதீர்கள், ஏனென்றால் என்
பெயரைச் சொல்லி அற்புதம் செய்கிற யாருமே அவ்வளவு சீக்கிரத்தில்
என்னைப் பற்றி மோசமாகப் பேச மாட்டார்கள். **40** நமக்கு விரோதமாக
இல்லாதவன் நம் பக்கம் இருக்கிறான்.[e] **41** உண்மையாகவே உங்களுக்
குச் சொல்கிறேன், நீங்கள் கிறிஸ்துவின் சீஷர்கள் என்பதால், உங்களுக்குக்
குடிக்க ஒரு குவளை தண்ணீர் கொடுக்கிறவனும்கூட[f] கண்டிப்பாகத் தன்
னுடைய பலனைப் பெறுவான்.[g] **42** ஆனால், என்மேல் விசுவாசம் வைக்
கிற இந்தச் சிறியவர்களில் ஒருவரை யாராவது பாவம் செய்ய வைத்தால்,
மாவு அரைக்கும் ஒரு பெரிய கல்லை* அவனுடைய கழுத்தில் கட்டி, கட
லில் தள்ளிவிடுவதே அவனுக்கு நல்லது.[h]

43 உன் கை உன்னைப் பாவம் செய்ய வைத்தால், அதை வெட்டி
எறிந்துவிடு; அணையாமல் எரிந்துகொண்டிருக்கிற கெஹென்னாவுக்குள்*
நீ இரண்டு கைகளோடு போவதைவிட, ஊனமான கையோடு வாழ்வை#
பெறுவது நல்லது.[i] **44** *— **45** உன் கால் உன்னைப் பாவம் செய்ய
வைத்தால், அதை வெட்டி எறிந்துவிடு; நீ இரண்டு கால்களோடு கெஹென்
னாவுக்குள்* வீசப்படுவதைவிட, ஊனமான காலோடு வாழ்வை# பெறுவது
நல்லது.[j] **46** *— **47** உன் கண் உன்னைப் பாவம் செய்ய வைத்தால்,
அதைப் பிடுங்கிப்போடு;[k] நீ இரண்டு கண்களோடு கெஹென்னாவுக்
குள்* வீசப்படுவதைவிட, ஒற்றைக் கண்ணோடு கடவுளுடைய அரசாங்கத்
துக்குள் போவது நல்லது.[l] **48** கெஹென்னாவில் புழுக்கள் சாவதில்லை,
நெருப்பும் அணைவதில்லை.[m]

49 உப்பைப் போல நெருப்பு எல்லார்மேலும் கொட்டப்பட வேண்டும்.*[n]
50 உப்பு நல்லதுதான்; ஆனால், உப்பு என்றாவது அதன் சுவையை இழந்
தால், எதை வைத்து அதற்கு மறுபடியும் சுவை சேர்க்க முடியும்?[o] நீங்கள்
சுவை இழக்காத உப்புபோல் இருங்கள்.[p] அப்படி இருந்தால், ஒருவருக்கொ
ருவர் சமாதானமாக இருக்க முடியும்”[q] என்று சொன்னார்.

10 அவர் அங்கிருந்து புறப்பட்டு, யோர்தானைக் கடந்து யூதேயா
வின் எல்லைப் பகுதிகளுக்குப் போனார்; மறுபடியும் மக்கள் அவ
ரிடம் கூட்டமாக வந்தார்கள், வழக்கம்போல் அவர்களுக்குக் கற்பிக்க
ஆரம்பித்தார்.[r] **2** அப்போது அவரைச் சோதிப்பதற்காக பரிசேயர்கள்

9:37 *வே.வா., “என் பெயரில்.” **9:42** *வே.வா., “கழுதையை வைத்து இழுக்கப்படும் திரிகைக் கல்லை.” **9:43, 45, 47** *சொல் பட்டியலைப் பாருங்கள். **9:43, 45** #அதாவது, “முடிவில்லாத வாழ்வை.” **9:44, 46** *இணைப்பு A3-ஐப் பாருங்கள். **9:49** *இது உருவக நடையில் சொல்லப்பட்டுள்ளது; கெஹென்னாவில் அழிக்கப்படுவதைக் குறிக்கிறது.

அதி. 9
a மத் 20:26-28, மாற் 10:43-45, பிலி 2:8, 9
b லூ 18:16
c மத் 10:40, லூ 9:48, யோவா 13:20
d லூ 9:49
e லூ 9:50
f மத் 25:40
g மத் 10:42
h மத் 18:6, லூ 17:1, 2
i மத் 5:30, மத் 18:8, கொலோ 3:5
j மத் 10:28, மத் 23:33, லூ 12:5
k கலா 5:24
l மத் 5:29, மத் 18:9, ரோ 8:13
m ஏசா 66:24
n லூ 17:29
o மத் 5:13, லூ 14:34, 35
p கொலோ 4:6
q ரோ 12:18, எபே 4:29, 1தெ 5:13, எபி 12:14

அதி. 10
r மத் 19:1, 2

வந்து, ‘ஒருவன் தன் மனைவியை விவாகரத்து செய்வது சரியா?’[a]
என்று கேட்டார்கள். **3** அதற்கு அவர், “மோசே உங்களுக்கு என்ன கட்ட
ளையிட்டார்?” என்று கேட்டார். **4** “விவாகரத்துப் பத்திரத்தை எழுதிக்
கொடுத்துவிட்டு மனைவியை விவாகரத்து செய்துகொள்ள மோசே அனு
மதி கொடுத்தார்”[b] என்று சொன்னார்கள். **5** ஆனால் இயேசு, “உங்களு
டைய இதயம் இறுகிப்போயிருந்த காரணத்தால்தான்[c] இந்தக் கட்டளையை
அவர் உங்களுக்குக் கொடுத்தார்.[d] **6** இருந்தாலும், கடவுள் ஆரம்பத்
தில் மனுஷர்களைப் படைத்தபோது, ‘அவர்களை ஆணாகவும் பெண்
ணாகவும் படைத்தார்.[e] **7** இதன் காரணமாக, மனிதன் தன்னுடைய அப்
பாவையும் அம்மாவையும் விட்டுப் பிரிந்திருப்பான்;[f] **8** அவனும் அவன்
மனைவியும்* ஒரே உடலாக# இருப்பார்கள்.’ இப்படி, அவர்கள் இரண்டு
பேராக இல்லாமல், ஒரே உடலாக இருப்பார்கள்.[g] **9** அதனால், கடவுள்
இணைத்து வைத்ததை* எந்த மனிதனும் பிரிக்காமல் இருக்கட்டும்”[h]
என்று அவர்களிடம் சொன்னார். **10** அவர் மறுபடியும் வீட்டுக்குள் வந்
தபோது சீஷர்கள் இதைப் பற்றி அவரிடம் கேட்டார்கள். **11** அப்போது
அவர்களிடம், “மனைவியை விவாகரத்து செய்துவிட்டு வேறொரு பெண்
ணைத் திருமணம் செய்துகொள்கிறவன் முறைகேடான உறவுகொள்கிறான்;[i]
இப்படி, தன் மனைவிக்குத் துரோகம் செய்கிறான். **12** கணவனை விவாக
ரத்து செய்துவிட்டு வேறொரு ஆணைத் திருமணம் செய்துகொள்கிறவள்
முறைகேடான உறவுகொள்கிறாள்”[j] என்று சொன்னார்.

13 பின்பு, சின்னப் பிள்ளைகளை அவர் தொடுவதற்காக மக்கள் அவர்
களைக் கொண்டுவர ஆரம்பித்தார்கள்; ஆனால், அந்த மக்களைச் சீஷர்
கள் திட்டினார்கள்.[k] **14** இயேசு இதைப் பார்த்துக் கோபப்பட்டு, “சின்னப்
பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதீர்கள்; இப்ப
டிப்பட்டவர்களுக்கே கடவுளுடைய அரசாங்கம் சொந்தமாகும்.[l] **15** உண்
மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், ஒரு சின்னப் பிள்ளையைப்
போலிருந்து கடவுளுடைய அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளாத எவனும்
அதில் அனுமதிக்கப்படவே மாட்டான்”[m] என்று சொன்னார். **16** பின்பு,
அந்தச் சின்னப் பிள்ளைகளை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல்
கைகளை வைத்து ஆசீர்வதித்தார்.[n]

17 அங்கிருந்து அவர் போய்க்கொண்டிருந்தபோது ஒருவன் ஓடிவந்து
அவர் முன்னால் மண்டிபோட்டு, “நல்ல போதகரே, முடிவில்லாத வாழ்
வைப் பெற நான் என்ன செய்ய வேண்டும்?”[o] என்று கேட்டான்.
18 அதற்கு இயேசு அவனிடம், “என்னை ஏன் நல்லவன் என்று சொல்கி
றாய்? கடவுள் ஒருவரைத் தவிர வேறு யாரும் நல்லவர் கிடையாது.[p]
19 ‘கொலை செய்யாதே,[q] மணத்துணைக்குத் துரோகம் செய்யாதே,[r] திரு
டாதே,[s] பொய் சாட்சி சொல்லாதே,[t] மோசடி செய்யாதே,[u] அப்பாவுக்
கும் அம்மாவுக்கும் மதிப்புக் கொடு’[v] என்ற கட்டளைகளெல்லாம் உனக்
குத் தெரியுமே” என்று சொன்னார். **20** அதற்கு அவன், “போதகரே,
இவை எல்லாவற்றையும் சிறுவயதிலிருந்தே கடைப்பிடித்து வருகிறேன்”
என்று சொன்னான். **21** இயேசு அன்போடு அவனைப் பார்த்து, “நீ செய்ய
வேண்டிய இன்னொரு காரியமும் இருக்கிறது; நீ போய் உன்னிடம் இருப்ப

10:8 *நே.மொ., “இரண்டு பேரும்.” #நே.மொ., “சதையாக.” **10:9** *நே.மொ., “நுகத்
தடியில் பிணைத்ததை.”

அதி. 10
a மத் 19:3
b உபா 24:1
மத் 5:31
மத் 19:7
c உபா 9:6
அப் 13:18
d மத் 19:8
e ஆதி 1:27
ஆதி 5:2
மத் 19:4
f மத் 19:5
g ஆதி 2:24
எபே 5:31
h மத் 19:6
i மத் 5:32
மத் 19:9
லூ 16:18
j ரோ 7:3
k மத் 19:13
லூ 18:15
l மத் 18:4
மத் 19:14
லூ 18:16
1பே 2:2
m மத் 18:3
லூ 18:17
n மாற் 9:36
o மத் 19:16
லூ 18:18
p சங் 86:5
மத் 19:17
லூ 18:19
q யாத் 20:13
உபா 5:17
மத் 5:21
1யோ 3:15
r யாத் 20:14
உபா 5:18
s யாத் 20:15
உபா 5:19
t யாத் 20:16
உபா 5:20
u லேவி 19:13
v யாத் 20:12
உபா 5:16
எபே 6:2

அதி. 10

தையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, என்னைப் பின்பற்றி
வா; அப்போது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் சேரும்"[a] என்று
சொன்னார். 22 இதைக் கேட்டதும் அவனுடைய முகம் வாடியது, அவன்
துக்கத்தோடு திரும்பிப் போனான்; ஏனென்றால், அவனிடம் நிறைய சொத்
துகள் இருந்தன.[b]

23 அப்போது இயேசு சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்துவிட்டுத் தன்
சீஷர்களிடம், "பணக்காரர்கள் கடவுளுடைய அரசாங்கத்துக்குள் நுழைவது
எவ்வளவு கஷ்டம்!"[c] என்று சொன்னார். 24 இதைக் கேட்டு அவர்கள்
ஆச்சரியப்பட்டார்கள். இயேசு அவர்களிடம், "பிள்ளைகளே, கடவுளுடைய
அரசாங்கத்துக்குள் நுழைவது எவ்வளவு கஷ்டம்! 25 கடவுளுடைய அர
சாங்கத்துக்குள் ஒரு பணக்காரன் நுழைவதைவிட ஊசியின் காதுக்குள் ஒரு
ஒட்டகம் நுழைவது சுலபம்"[d] என்றார். 26 அவர்கள் இன்னும் அதிக பிர
மிப்போடு, "அப்படியானால், யாரால் மீட்புப் பெற முடியும்?"[e] என்று கேட்
டார்கள்.* 27 இயேசு அவர்களை நேராகப் பார்த்து, "மனுஷர்களால் இது
முடியாது; ஆனால் கடவுளால் முடியும்; ஏனென்றால், கடவுளால் எல்லாமே
செய்ய முடியும்"[f] என்று சொன்னார். 28 பேதுரு அவரிடம், "இதோ!
நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உங்களைப் பின்பற்றி வந்திருக்கி
றோமே"[g] என்று சொன்னார். 29 அதற்கு இயேசு, "உண்மையாகவே உங்
களுக்குச் சொல்கிறேன், எனக்காகவும் நல்ல செய்திக்காகவும் வீட்டையோ
சகோதரர்களையோ சகோதரிகளையோ அம்மாவையோ அப்பாவையோ
பிள்ளைகளையோ வயல்களையோ தியாகம் செய்கிறவன்,[h] 30 இந்தக்
காலத்தில் துன்புறுத்தல்களோடுகூட, 100 மடங்கு அதிகமாக வீடுகளையும்
சகோதரர்களையும் சகோதரிகளையும் அம்மாக்களையும் பிள்ளைகளையும்
வயல்களையும் பெறுவான்;[i] வரப்போகும் காலத்தில்* முடிவில்லாத வாழ்
வையும் நிச்சயம் பெறுவான். 31 ஆனால், முந்தினவர்கள் பலர் பிந்தி
னவர்களாகவும், பிந்தினவர்கள் முந்தினவர்களாகவும் ஆவார்கள்"[j] என்று
சொன்னார்.

32 எருசலேமுக்குப் போகும் வழியில், சீஷர்களுக்கு முன்னால் இயேசு
போய்க்கொண்டிருந்தார்; அதைப் பார்த்து சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள்;
பின்னால் போன மற்றவர்களோ பயப்பட ஆரம்பித்தார்கள். அவர் மறுபடி
யும் பன்னிரண்டு பேரையும்* தனியாகக் கூப்பிட்டு, தனக்கு நடக்கப்
போகும் சம்பவங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.[k] 33 "இதோ! நாம்
எருசலேமுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம், மனிதகுமாரன் முதன்மை
குருமார்களிடமும் வேத அறிஞர்களிடமும் ஒப்படைக்கப்படுவார்; அவர்
கள் அவருக்கு மரண தண்டனை விதித்து, மற்ற தேசத்தாரிடம் அவரை ஒப்
படைத்துவிடுவார்கள். 34 அவர்கள் அவரைக் கேலி செய்து, அவர்மேல்
துப்பி, அவரை முள்சாட்டையால் அடித்து, பின்பு கொலை செய்வார்
கள்; ஆனால், மூன்றாம் நாளில் அவர் உயிரோடு எழுப்பப்படுவார்"[l] என்று
சொன்னார்.

35 செபெதேயுவின் மகன்களான யாக்கோபும் யோவானும்[m] அவரிடம்
வந்து, "போதகரே, நீங்கள் எங்களுக்கு ஒன்று செய்ய வேண்டுமென்று

a மத் 19:21
b லூ 18:23
c எரே 9:23; 1தீ 6:17
d மத் 19:24; லூ 18:25
e மத் 19:25, 26; லூ 18:26, 27
f யோபு 42:2
g மத் 19:27; லூ 18:28
h மத் 10:37; மத் 19:29; லூ 18:29, 30
i மத் 5:11; அப் 14:22
j மத் 19:30; மத் 20:16; லூ 13:30
k மத் 20:17-19; மாற் 8:31; மாற் 9:31; லூ 9:22; லூ 18:31-33
l அப் 10:40; 1கொ 15:3, 4
m மத் 10:2

10:26 *அல்லது, "ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்." 10:30 *வே.வா., "சகாப்தத்தில்." சொல் பட்டியலைப் பாருங்கள். 10:32 *அதாவது, "அப்போஸ்தலர்களையும்."

கேட்டுக்கொள்கிறோம்”[a] என்றார்கள். **36** அதற்கு அவர், “என்ன செய்ய
வேண்டும்? சொல்லுங்கள்” என்று கேட்டார். **37** அப்போது அவர்கள்,
“நீங்கள் ராஜ மகிமையில் உட்கார்ந்திருக்கும்போது, எங்களில் ஒருவரை
உங்கள் வலது பக்கத்திலும் இன்னொருவரை இடது பக்கத்திலும்
உட்கார வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்”[b] என்றார்கள்.
38 ஆனால் இயேசு, “நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்றே உங்களுக்குத்
தெரியவில்லை. நான் குடிக்கும் கிண்ணத்தில் உங்களால் குடிக்க முடியுமா?
நான் பெறும் ஞானஸ்நானத்தை உங்களால் பெற முடியுமா?”[c] என்று கேட்
டார். **39** அதற்கு அவர்கள் “முடியும்” என்று சொன்னார்கள். அப்போது
இயேசு, “நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும்
ஞானஸ்நானத்தை நீங்களும் பெறுவீர்கள்.[d] **40** ஆனால், என்னுடைய
வலது பக்கத்திலோ இடது பக்கத்திலோ உங்களை உட்கார வைக்க எனக்கு
அதிகாரம் இல்லை. அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் அங்கே
உட்கார முடியும்” என்று சொன்னார்.

41 நடந்ததைக் கேள்விப்பட்ட மற்ற பத்துப் பேரும் யாக்கோபின்
மேலும் யோவானின் மேலும் கோபப்பட்டார்கள்.[e] **42** இயேசுவோ அவர்
களைத் தன்னிடம் கூப்பிட்டு, “மற்ற தேசத்து ஆட்சியாளர்கள்* மக்களை
அடக்கி ஆளுவதும், உயர் அதிகாரிகள் அவர்கள்மேல் அதிகாரம் செலுத்
துவதும் உங்களுக்குத் தெரியும்.[f] **43** ஆனால், நீங்கள் அப்படி இருக்கக்
கூடாது. உங்களில் உயர்ந்தவனாக இருக்க விரும்புகிறவன் உங்களுக்குச்
சேவை செய்கிறவனாக இருக்க வேண்டும்.[g] **44** உங்களில் முதலாவதாக
இருக்க விரும்புகிறவன் எல்லாருக்கும் அடிமையாக இருக்க வேண்டும்.
45 ஏனென்றால், மனிதகுமாரனும் மற்றவர்களுடைய சேவையைப் பெறுவ
தற்கு வராமல், மற்றவர்களுக்குச் சேவை செய்வதற்கும்[h] பலருடைய உயி
ருக்கு ஈடாகத் தன்னுடைய உயிரை மீட்புவிலையாகக் கொடுப்பதற்குமே
வந்தார்”[i] என்று சொன்னார்.

46 அவர்கள் எரிகோவுக்கு வந்து சேர்ந்தார்கள். பின்பு, அவரும் அவ
ருடைய சீஷர்களும் திரளான மக்களும் எரிகோவைவிட்டுப் போய்க்
கொண்டிருந்தபோது, பார்வையில்லாத ஒரு பிச்சைக்காரன் பாதையோரம்
உட்கார்ந்திருந்தான். அவன் பெயர் பர்திமேயு, அவன் திமேயுவின் மகன்.[j]
47 நாசரேத்தூர் இயேசு போகிறார் என்பதைக் கேள்விப்பட்டு, “தாவீதின்
மகனே,[k] இயேசுவே, எனக்கு இரக்கம் காட்டுங்கள்!”[l] என்று அவன் சத்தமா
கக் கத்த ஆரம்பித்தான். **48** அமைதியாக இருக்கச் சொல்லி நிறைய பேர்
அவனை அதட்டினார்கள்; ஆனாலும், “தாவீதின் மகனே, எனக்கு இரக்
கம் காட்டுங்கள்!” என்று இன்னும் சத்தமாகக் கத்திக்கொண்டே இருந்
தான். **49** அதனால் இயேசு நின்று, “அவனை என்னிடம் கூட்டிக்கொண்டு
வாருங்கள்” என்று சொன்னார். அவர்கள் அவனிடம், “தைரியமாக எழுந்து
வா, அவர் உன்னைக் கூப்பிடுகிறார்” என்று சொல்லி அவனைக் கூப்பிட்
டார்கள். **50** உடனே, அவன் தன்னுடைய மேலங்கியைத் தூக்கியெறிந்து
விட்டு, துள்ளியெழுந்து இயேசுவிடம் போனான். **51** இயேசு அவனிடம்,
“உனக்காக நான் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார். பார்வையில்
லாத அந்த மனிதன், *“ரபூனி,** தயவுசெய்து எனக்குப் பார்வை கொடுங்கள்”

10:42 *வே.வா., “ஆட்சியாளர்களாகக் கருதப்படுகிறவர்கள்.” **10:51** *அர்த்தம், “போதகரே.”

அதி. 10
a மத் 20:20, 21
b மத் 19:28
c மத் 20:22, 23; லூ 12:50; யோவா 18:11; ரோ 6:3
d அப் 12:2; வெளி 1:9
e மத் 20:24
f மத் 20:25; லூ 22:25; 1பே 5:2, 3
g மத் 20:26, 27; மாற் 9:35; லூ 9:48; லூ 22:26
h யோவா 13:14; பிலி 2:7
i ஏசா 53:10; தானி 9:24; மத் 20:28; கலா 3:13; தீத் 2:13, 14
j மத் 20:29–34; லூ 18:35–43
k எரே 23:5; ரோ 1:3
l மத் 9:27; மத் 15:22

என்று சொன்னான். **52** அதற்கு இயேசு, “உன் விசுவாசம் உன்னைக் குண
மாக்கியிருக்கிறது,[a] நீ போகலாம்” என்று சொன்னார். உடனே அவன்
பார்வை பெற்று,[b] அவர் போன வழியில் அவரைப் பின்பற்றிப் போனான்.

11 அவர்கள் எருசலேமை நெருங்கிக்கொண்டிருந்தார்கள்; ஒலிவ
மலையில் இருக்கிற பெத்பகே, பெத்தானியா[c] என்ற கிராமங்களுக்
குப் பக்கத்தில் வந்தபோது அவர் தன்னுடைய சீஷர்கள் இரண்டு பேரை
அனுப்பி,[d] **2** “அதோ! அங்கே தெரிகிற அந்தக் கிராமத்துக்குப் போங்கள்;
அங்கே போனவுடன், இதுவரை யாரும் ஏறாத கழுதைக்குட்டி ஒன்று கட்டி
வைக்கப்பட்டிருப்பதைப் பார்ப்பீர்கள்; அதை அவிழ்த்து இங்கே கொண்
டுவாருங்கள். **3** ‘ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?’ என்று யாராவது கேட்டால்,
‘எஜமானுக்கு வேண்டும், உடனே அவர் இதைத் திருப்பி அனுப்பிவிடு
வார்’ என்று சொல்லுங்கள்” என்றார். **4** அதன்படியே அவர்கள் புறப்பட்
டுப் போய், ஒரு வீட்டு வாசலுக்கு வெளியே தெருவில் கட்டப்பட்டி
ருந்த கழுதைக்குட்டியைப் பார்த்து அதை அவிழ்த்தார்கள்.[e] **5** அப்போது
அங்கே நின்றுகொண்டிருந்த சிலர், “கழுதைக்குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்
கள்?” என்று அவர்களிடம் கேட்டார்கள். **6** இயேசு சொன்னபடியே அவர்
கள் பதில் சொன்னபோது அவர்களைப் போகவிட்டார்கள்.

7 பின்பு, அவர்கள் இரண்டு பேரும் அந்தக் கழுதைக்குட்டியை[f] இயேசு
விடம் கொண்டுவந்து, அதன்மேல் தங்கள் மேலங்கிகளைப் போட்டார்கள்;
அவர் அதன்மேல் உட்கார்ந்தார்.[g] **8** நிறைய பேர் தங்களுடைய மேலங்
கிகளை வழியில் விரித்தார்கள்; வேறு சிலர் பாதையோரத்திலிருந்து இளங்
கிளைகளை ஒடித்துக்கொண்டு வந்து வழியில் பரப்பினார்கள்.[h] **9** முன்
னால் போனவர்களும் பின்னால் வந்தவர்களும், “கடவுளே, இவரைக்
காத்தருளுங்கள்!*[i] யெகோவாவின்# பெயரில் வருகிறவர் ஆசீர்வதிக்
கப்பட்டவர்![j] **10** வரப்போகிற நம் தந்தை தாவீதின் அரசாங்கம் ஆசீர்வ
திக்கப்பட்டது![k] பரலோகத்தில் இருக்கிறவரே, இவரைக் காத்தருளுங்கள்!”
என்று ஆரவாரம் செய்துகொண்டே இருந்தார்கள். **11** அவர் எருசலே
முக்கு வந்து, ஆலயத்துக்குள் போய், அங்கிருந்த எல்லாவற்றையும் பார்த்
தார்; அதற்குள் அதிக நேரமாகிவிட்டதால் பன்னிரண்டு பேரோடு* பெத்
தானியாவுக்குப் போனார்.[l]

12 மறுநாள் பெத்தானியாவிலிருந்து அவர்கள் வந்துகொண்டிருந்த
போது அவருக்குப் பசி எடுத்தது.[m] **13** அப்போது இலைகள் நிறைந்த ஓர்
அத்தி மரத்தைத் தூரத்திலிருந்து பார்த்தார்; அதில் கனி ஏதாவது இருக்கி
றதா என்று பார்க்க அதன் பக்கத்தில் போனார். ஆனால், அதில் இலைகள்
மட்டும்தான் இருந்தன, ஒரு கனிகூட இல்லை; ஏனென்றால், அது அத்திப்
பழ பருவம் கிடையாது. **14** அப்போது அவர் அந்த மரத்தைப் பார்த்து,
“இனி யாரும் எப்போதும் உன் கனிகளைச் சாப்பிடாமல் இருக்கட்டும்”[n]
என்று சொன்னார். அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்
தார்கள்.

15 பின்பு, அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். அவர் ஆலயத்துக்குள்
போய், அங்கே விற்றுக்கொண்டும் வாங்கிக்கொண்டும் இருந்தவர்களை
வெளியே துரத்த ஆரம்பித்தார்; காசு மாற்றுபவர்களின் மேஜைகளையும்

11:9 * கிரேக்கில், “ஓசன்னா.” # இணைப்பு A5-ஐப் பாருங்கள். **11:11** * அதாவது, “அப்போஸ்தலர்களோடு.”

அதி. 10
a மத் 9:20, 22
b ஏசா 35:5; ஏசா 42:7; மாற் 8:25

அதி. 11
c யோவா 11:18
d மத் 21:1-3; லூ 19:29-34
e மத் 21:6
f 1ரா 1:33; சக 9:9
g மத் 21:7, 8; யோவா 12:14, 15
h லூ 19:36; யோவா 12:13
i மத் 21:15
j சங் 118:25, 26; மத் 21:9; லூ 19:37, 38; யோவா 12:13
k சக 9:9; லூ 1:32
l மத் 21:10
m மத் 21:18
n மத் 21:19; மாற் 11:20

புறா விற்பவர்களின் இருக்கைகளையும் கவிழ்த்துப்போட்டார்.[a] **16** ஆல
யத்தின் வழியாக எதையும் எடுத்துக்கொண்டு போக அவர் யாரையும்
அனுமதிக்கவில்லை. **17** அதேசமயம், அவர் தொடர்ந்து கற்பித்து, "'என்
னுடைய வீடு எல்லா தேசத்தாருக்கும் ஜெப வீடாக இருக்கும்' என்று எழு
தப்பட்டிருக்கிறது,[b] இல்லையா? ஆனால் நீங்கள் அதைக் கொள்ளைக்கா
ரர்களின் குகையாக்கிவிட்டீர்கள்"[c] என்றார். **18** இதைக் கேட்ட முதன்மை
குருமார்களும் வேத அறிஞர்களும் அவரைக் கொல்வதற்கு வழிதேட
ஆரம்பித்தார்கள்;[d] ஆனாலும், அவர் கற்பித்ததைக் கேட்டு மக்கள் எல்லா
ரும் மலைத்துப்போனதால் அவரை நினைத்துப் பயந்தார்கள்.[e]

19 சாயங்கால நேரத்தில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் நக
ரத்துக்கு வெளியே போனார்கள். **20** விடியற்காலையில் அந்த வழியாக
அவர்கள் வந்துகொண்டிருந்தபோது, அந்த அத்தி மரம் வேரோடு பட்டுப்
போயிருந்ததைப் பார்த்தார்கள்.[f] **21** இயேசு சொன்னது பேதுருவின்
ஞாபகத்துக்கு வந்தது; அதனால், "ரபீ,* இதோ! நீங்கள் சபித்த அத்தி மரம்
பட்டுப்போய்விட்டது"[g] என்று சொன்னார். **22** அதற்கு அவர், "கடவுள்
மேல் விசுவாசம் வையுங்கள். **23** உண்மையாகவே உங்களுக்குச் சொல்கி
றேன், யாராவது இந்த மலையைப் பார்த்து, 'இங்கிருந்து பெயர்ந்து போய்க்
கடலில் விழு' என்று சொல்லி, அது நடக்குமென்று சந்தேகப்படாமல்
விசுவாசித்தால், அவர் சொன்னபடியே நடக்கும்.[h] **24** இதனால்தான் நான்
சொல்கிறேன், நீங்கள் கடவுளிடம் எதையெல்லாம் கேட்கிறீர்களோ அதை
யெல்லாம் பெற்றுக்கொண்டதாகவே விசுவாசியுங்கள், அப்போது அதை
யெல்லாம் நிச்சயம் பெற்றுக்கொள்வீர்கள்.[i] **25** நீங்கள் ஜெபம் செய்ய நிற்
கும்போது, யார் மீதாவது உங்களுக்கு மனவருத்தம் இருந்தால் அவர்களை
மன்னித்துவிடுங்கள்; அப்போதுதான் உங்கள் பரலோகத் தகப்பனும் உங்
கள் குற்றங்களை மன்னிப்பார்"[j] என்று சொன்னார். **26** *—

27 அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு வந்தார்கள். ஆலயத்தில் அவர்
நடந்துகொண்டிருந்தபோது, முதன்மை குருமார்களும் வேத அறிஞர்களும்
பெரியோர்களும்* அவரிடம் வந்து, **28** "எந்த அதிகாரத்தால் நீ இதை
யெல்லாம் செய்கிறாய்? இதையெல்லாம் செய்ய உனக்கு அதிகாரம் கொடுத்
தது யார்?"[k] என்று கேட்டார்கள். **29** அதற்கு இயேசு, "நான் உங்களி
டம் ஒரு கேள்வி கேட்கிறேன், அதற்குப் பதில் சொல்லுங்கள்; அப்போது,
எந்த அதிகாரத்தால் இதையெல்லாம் செய்கிறேன் என்று நானும் உங்களுக்
குச் சொல்கிறேன். **30** ஞானஸ்நானம் கொடுக்கிற அதிகாரத்தை யோவா
னுக்குக்[l] கொடுத்தது கடவுளா* மனுஷர்களா? பதில் சொல்லுங்கள்"[m] என்
றார். **31** அப்போது அவர்கள், "'கடவுள்' என்று சொன்னால், 'பின்பு ஏன்
அவரை நம்பவில்லை?' என்று கேட்பான். **32** 'மனுஷர்கள்' என்று சொன்
னால் நம் கதி என்னவாகும்?" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்
கள். யோவான் உண்மையிலேயே ஒரு தீர்க்கதரிசி என்று மக்கள் எல்லாரும்
நம்பியதால் அப்படிச் சொல்ல பயந்தார்கள்.[n] **33** அதனால், "எங்களுக்குத்
தெரியாது" என்று இயேசுவிடம் சொன்னார்கள். அதற்கு இயேசு, "அப்படி
யானால், எந்த அதிகாரத்தால் இதையெல்லாம் செய்கிறேன் என்று நானும்
உங்களுக்குச் சொல்ல மாட்டேன்" என்றார்.

11:21 *அதாவது, "போதகரே." **11:26** *இணைப்பு A3-ஐப் பாருங்கள். **11:27** *வே.வா., "மூப்பர்களும்." **11:30** *நே.மொ., "பரலோகமா."

அதி. 11
a மத் 21:12; லூ 19:45, 46; யோவா 2:14-16
b 1ரா 8:43; ஏசா 56:7
c எரே 7:11; மத் 21:13; லூ 19:46; யோவா 2:16
d மாற் 14:1; லூ 20:19
e லூ 19:47, 48
f மத் 21:19, 20
g மாற் 11:14
h மத் 17:20; மத் 21:21; லூ 17:6
i மத் 7:7; மத் 18:19; மத் 21:22; லூ 11:9; யோவா 14:13; யோவா 15:7; யோவா 16:24
j சங் 103:10-12; மத் 6:12, 14; எபே 4:32; கொலோ 3:13
k மத் 21:23-27; லூ 20:1-8
l மாற் 1:4
m மத் 21:25; லூ 20:4
n மத் 3:1, 5; மத் 14:3, 5; மாற் 6:20

12 பின்பு, உவமைகளைப் பயன்படுத்தி பேச ஆரம்பித்தார்; அவர்க
ளிடம், “ஒரு மனுஷர் ஒரு திராட்சைத் தோட்டம் போட்டு,[a] அதைச்
சுற்றிலும் வேலியடைத்தார். அதில் திராட்சரசத் தொட்டியை அமைத்து,
காவலுக்கு ஒரு கோபுரத்தைக் கட்டினார்.[b] அதைத் தோட்டக்காரர்களிடம்
குத்தகைக்கு விட்டுவிட்டுத் தூர தேசத்துக்குப் போனார்.[c] **2** அறுவடைக்
காலம் வந்தபோது, தனக்குச் சேர வேண்டிய பங்கை வாங்கி வரச் சொல்லி
ஓர் அடிமையை அந்தத் தோட்டக்காரர்களிடம் அனுப்பினார். **3** ஆனால்,
அவர்கள் அவனைப் பிடித்து, அடித்து, வெறுங்கையோடு அனுப்பிவிட்டார்
கள். **4** அதனால், மறுபடியும் வேறொரு அடிமையை அனுப்பினார்; அவர்
கள் அவனைத் தலையில் தாக்கி, அவமானப்படுத்தினார்கள்.[d] **5** பின்பு
இன்னும் ஒருவனை அனுப்பினார், அவனைக் கொன்றுபோட்டார்கள். வேறு
பலரையும் அனுப்பினார்; அவர்களில் சிலரை அடித்தார்கள், சிலரைக்
கொலை செய்தார்கள். **6** அவருக்கு ஒரு அன்பான மகன்[e] இருந்தான்;
‘என் மகனுக்கு மதிப்புக் கொடுப்பார்கள்’ என்று நினைத்து, கடைசியாக
அவர் தன்னுடைய மகனையே அனுப்பினார். **7** ஆனால் அந்தத் தோட்
டக்காரர்கள், ‘இவன்தான் வாரிசு.[f] வாருங்கள், நாம் இவனைத் தீர்த்துக்கட்டி
விடலாம், இவனுடைய சொத்து நமக்குக் கிடைத்துவிடும்’ என்று தங்களுக்
குள் பேசிக்கொண்டு, **8** அவனைப் பிடித்து, கொலை செய்து, திராட்சைத்
தோட்டத்துக்கு வெளியே தூக்கிப்போட்டார்கள்.[g] **9** இப்போது, அந்தத்
திராட்சைத் தோட்டத்தின் சொந்தக்காரர் என்ன செய்வார்? அவர் வந்து,
அந்தத் தோட்டக்காரர்களைக் கொன்றுவிட்டு, திராட்சைத் தோட்டத்தை மற்
றவர்களிடம் குத்தகைக்குக் கொடுத்துவிடுவார்.[h] **10** ‘கட்டிடம் கட்டுகிறவர்
கள் ஒதுக்கித்தள்ளிய கல்லே மூலைக்குத் தலைக்கல்லாக ஆனது;[i]
11 இது யெகோவாவின்* செயல், இது நம்முடைய கண்களுக்கு அருமை
யாக இருக்கிறது’[j] என்ற வசனத்தை நீங்கள் வாசித்ததே இல்லையா?” என்று
கேட்டார்.

12 அதைக் கேட்டதும், அவரைப் பிடிக்க* நினைத்தார்கள்; ஏனென்
றால், தங்களை மனதில் வைத்துதான் அவர் இந்த உவமையைச் சொன்னார்
என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். ஆனால், மக்களுக்குப் பயந்து
அவரைவிட்டு விலகிப்போனார்கள்.[k]

13 பின்பு, அவருடைய பேச்சிலேயே அவரைச் சிக்க வைப்பதற்காக
பரிசேயர்கள் சிலரையும் ஏரோதுவின் ஆதரவாளர்கள் சிலரையும் அனுப்பி
னார்கள்.[l] **14** அவர்கள் அவரிடம் வந்து, “போதகரே, நீங்கள் எப்போதும்
உண்மை பேசுகிறவர், யாருடைய தயவையும் எதிர்பார்க்காதவர், மனுஷர்க
ளுடைய வெளித்தோற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காதவர், கடவு
ளைப் பற்றிய சத்தியங்களைச் சொல்லிக்கொடுக்கிறவர் என்றெல்லாம் எங்
களுக்குத் தெரியும். ரோம அரசனுக்கு* வரி# கட்டுவது சரியா இல்லையா?
15 நாங்கள் வரி கட்ட வேண்டுமா வேண்டாமா?” என்று கேட்டார்கள்.
அவர்களுடைய வெளிவேஷத்தை அவர் புரிந்துகொண்டு, “ஏன் என்
னைச் சோதிக்கிறீர்கள்? ஒரு தினாரியுவை* என்னிடம் கொண்டுவாருங்
கள்” என்று சொன்னார். **16** அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள்.

12:11 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12:12** *வே.வா., “கைது செய்ய.” **12:14** *நே.மொ., “சீஸருக்கு.” சொல் பட்டியலைப் பாருங்கள். #நே.மொ., “தலைவரி.” **12:15** *இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 12
a ஏசா 5:7
b ஏசா 5:2
c மத் 21:33-41; லூ 20:9-16
d எபி 11:32, 37
e சங் 2:7; கலா 4:4; 1யோ 4:9
f சங் 2:8; எபி 1:2
g அப் 2:23
h மத் 21:41, 43
i மத் 21:42; லூ 20:17; அப் 4:10, 11; எபே 2:20; 1பே 2:7
j சங் 118:22, 23
k மத் 21:45, 46; லூ 20:19
l மத் 22:15-22; லூ 20:20-26

“இதில் இருக்கிற உருவமும் பட்டப்பெயரும் யாருடையது?” என்று அவர்
கேட்டார். அதற்கு அவர்கள், “ரோம அரசனுடையது” என்று சொன்னார்கள்.
17 அப்போது இயேசு, “அரசனுடையதை* அரசனுக்கும்[a] கடவுளுடைய
தைக் கடவுளுக்கும்[b] கொடுங்கள்” என்று சொன்னார். அவர் சொன்னதைக்
கேட்டு அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

18 உயிர்த்தெழுதல் இல்லை என்று சொல்கிற சதுசேயர்கள்[c] அவரிடம்
வந்து,[d] **19** “போதகரே, ஒருவன் பிள்ளையில்லாமல் இறந்துபோனால்,
அவனுடைய மனைவியை அவனுடைய சகோதரன் திருமணம் செய்து
கொண்டு அவனுக்காக வாரிசு உருவாக்க வேண்டும் என்று மோசே எழுதி
வைத்திருக்கிறார்.[e] **20** எங்களோடு ஏழு சகோதரர்கள் இருந்தார்கள்; மூத்
தவன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, வாரிசு இல்லாமல் இறந்து
போனான். **21** இரண்டாவது சகோதரன் அவளைத் திருமணம் செய்து
அவனும் வாரிசு இல்லாமல் இறந்துபோனான். மூன்றாவது சகோதரனும்
அதேபோல் செய்து இறந்துபோனான். **22** அந்த ஏழு பேரும் வாரிசு
இல்லாமல் இறந்துபோனார்கள்; கடைசியில் அந்தப் பெண்ணும் இறந்து
போனாள். **23** அவர்கள் உயிரோடு எழுப்பப்படும்போது, அவள்
யாருக்கு மனைவியாக இருப்பாள்? அந்த ஏழு பேருக்கும் அவள் மனை
வியாக இருந்தாளே” என்றார்கள். **24** அதற்கு இயேசு, “உங்கள் எண்
ணம் தவறு. ஏனென்றால் உங்களுக்கு வேதவசனங்களும் தெரியவில்லை,
கடவுளுடைய வல்லமையும் தெரியவில்லை;[f] **25** உயிரோடு எழுப்பப்ப
டுகிற ஆண்களும் சரி, பெண்களும் சரி, திருமணம் செய்துகொள்ள மாட்
டார்கள்; அவர்கள் பரலோகத்திலுள்ள தேவதூதர்களைப் போல் இருப்பார்
கள்.[g] **26** இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்படுவதைப் பற்றி மோசேயின்
புத்தகத்தில் இருக்கிற முட்புதரைப் பற்றிய பதிவில் நீங்கள் வாசித்ததில்
லையா? கடவுள் அவரிடம், ‘நான் ஆபிரகாமின் கடவுளாகவும், ஈசாக்கின்
கடவுளாகவும், யாக்கோபின் கடவுளாகவும் இருக்கிறேன்’[h] என்று சொன்
னார், இல்லையா? **27** அவர் இறந்தவர்களின் கடவுளாக அல்ல, உயிருள்
ளவர்களின் கடவுளாக இருக்கிறார். அதனால் உங்கள் எண்ணம் முற்றிலும்
தவறு”[i] என்று சொன்னார்.

28 அவர்கள் அவரிடம் வாதாடியதையும் அவர் மிக நன்றாகப் பதில்
சொன்னதையும் பார்த்து, அங்கே வந்திருந்த வேத அறிஞர்களில் ஒரு
வன், “கட்டளைகளிலேயே முதலாவது* கட்டளை எது?”[j] என்று அவரிடம்
கேட்டான். **29** அதற்கு இயேசு, “‘இஸ்ரவேலர்களே, இதைக் கேளுங்கள்,
நம் கடவுளாகிய யெகோவா* ஒருவரே யெகோவா.* **30** உங்கள் கடவு
ளாகிய யெகோவாமேல்* உங்கள் முழு இதயத்தோடும் முழு மூச்சோடும்
முழு மனதோடும் முழு பலத்தோடும் அன்பு காட்ட வேண்டும்’[k] என்பதே
முதலாவது கட்டளை. **31** ‘உங்கள்மேல் நீங்கள் அன்பு காட்டுவது போல
மற்றவர்கள்மேலும்* அன்பு காட்ட வேண்டும்’ என்பது இரண்டாவது கட்
டளை.[l] இவற்றைவிட முக்கியமான கட்டளை வேறெதுவும் இல்லை” என்று
சொன்னார். **32** அதற்கு அந்த வேத அறிஞன், “போதகரே, நீங்கள் அரு
மையாகச் சொன்னீர்கள், நீங்கள் சொன்னதுதான் உண்மை; ‘கடவுள் ஒரு

12:17 * நே.மொ., “சீஸருடையதை.” சொல் பட்டியலைப் பாருங்கள். **12:28** * வே.வா., “மிக முக்கியமான.” **12:29, 30** * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12:31** * வே.வா., “சக மனிதர்மேலும்.”

அதி. 12
a ரோ 13:7; தீத் 3:1; 1பே 2:13
b மல் 3:8; மத் 22:21; லூ 20:25
c அப் 23:8
d மத் 22:23-28; லூ 20:27-33
e ஆதி 38:7, 8; உபா 25:5, 6
f மத் 22:29
g மத் 22:30; லூ 20:34-36
h யாத் 3:2, 6; மத் 22:31; லூ 20:37
i மத் 22:32; லூ 20:38
j மத் 22:34-36
k உபா 6:4, 5; யோசு 22:5; மத் 22:37; லூ 10:27
l லேவி 19:18; மத் 22:39, 40; ரோ 13:9; கலா 5:14; யாக் 2:8

வரே, அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை';[a] **33** அதுமட்டுமல்ல, தகன
பலிகளையும் மற்ற பலிகளையும் கொடுப்பதைவிட முழு இதயத்தோடும்
முழு மனதோடும்* முழு பலத்தோடும் அவர்மேல் அன்பு காட்டுவதும்,
தன்மேல் அன்பு காட்டுவது போல மற்றவர்கள்மேலும்# அன்பு காட்டுவ
தும்தான் சிறந்தது"[b] என்று சொன்னான். **34** அவன் புத்திசாலித்தனமாகச்
சொன்னதைப் பார்த்து, "கடவுளுடைய அரசாங்கம் உனக்கு ரொம்பத் தூரத்
தில் இல்லை" என்று இயேசு சொன்னார். அதன் பின்பு அவரிடம் கேள்வி
கேட்க யாருக்குமே தைரியம் வரவில்லை.[c]

35 ஆலயத்தில் இயேசு கற்பித்துக்கொண்டிருந்தபோது அவர்களிடம்,
"கிறிஸ்துவை தாவீதின் மகன்[d] என்று வேத அறிஞர்கள் எப்படிச் சொல்
கிறார்கள்? **36** 'யெகோவா* என் எஜமானிடம், "உன்னுடைய எதிரிகளை
நான் உன் காலடியில் வீழ்த்தும்வரை நீ என் வலது பக்கத்தில் உட்
கார்ந்திரு"[e] என்றார்' எனக் கடவுளுடைய சக்தியால்[f] தாவீது சொன்னார்.
37 தாவீதே அவரை எஜமான் என்று அழைத்திருப்பதால் அவர் எப்படி
இவருடைய மகனாக இருக்க முடியும்?"[g] என்று கேட்டார்.

அவர் பேசியதை ஏராளமான மக்கள் ஆர்வமாகக் கேட்டுக்கொண்
டிருந்தார்கள். **38** அவர் தொடர்ந்து கற்பித்தபோது, "வேத அறிஞர்களைக்
குறித்து எச்சரிக்கையாக இருங்கள்; அவர்கள் நீளமான அங்கிகளைப்
போட்டுக்கொண்டு திரிய விரும்புகிறார்கள்; சந்தைகளில் மக்கள் தங்களுக்கு
வணக்கம் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்கள்.[h] **39** அதோடு,
ஜெபக்கூடங்களில் முன்வரிசை* இருக்கைகளிலும் விருந்துகளில் மிக முக்
கியமான இடங்களிலும் உட்கார விரும்புகிறார்கள்.[i] **40** விதவைகளுடைய
சொத்துகளை* விழுங்கிவிடுகிறார்கள்; மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்
பதற்காக நீண்ட ஜெபம் செய்கிறார்கள்; அதனால், அவர்களுக்குக் கடுமை
யான தண்டனை கிடைக்கும்" என்று சொன்னார்.

41 பின்பு, காணிக்கைப் பெட்டிகளைப்[j] பார்த்தபடி அவர் உட்கார்ந்
துகொண்டு, அவற்றில் மக்கள் காசு போடுவதைக் கவனிக்க ஆரம்பித்தார்.
பணக்காரர்கள் பலர் நிறைய காசுகளைப் போட்டார்கள்.[k] **42** அந்தச் சம
யத்தில், ஓர் ஏழை விதவை வந்து, மிகக் குறைந்த மதிப்புள்ள இரண்டு சிறிய
காசுகளை* போட்டாள்.[l] **43** அப்போது, அவர் தன்னுடைய சீஷர்களைக்
கூப்பிட்டு, "உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், காணிக்கைப்
பெட்டிகளில் மற்ற எல்லாரும் போட்டதைவிட இந்த ஏழை விதவைதான்
அதிகமாகப் போட்டாள்.[m] **44** அவர்கள் எல்லாரும் தங்கள் தேவைக்கு
அதிகமாக இருந்ததைத்தான் போட்டார்கள்; ஆனால், இவள் தனக்குத்
தேவையிருந்தும், தன்னிடமிருந்த எல்லாவற்றையும், தன் பிழைப்புக்காக
வைத்திருந்த எல்லாவற்றையும் போட்டுவிட்டாள்"[n] என்று சொன்னார்.

13 ஆலயத்தைவிட்டு அவர் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தபோது
அவருடைய சீஷர்களில் ஒருவர், "போதகரே, பாருங்கள்! எவ்வ
ளவு அழகான கற்கள், எவ்வளவு அழகான கட்டிடங்கள்!"[o] என்று சொன்
னார். **2** ஆனால் இயேசு அவரிடம், "பிரமாண்டமான இந்தக்

12:33 *வே.வா., "புரிந்துகொள்ளுதலோடும்." #வே.வா., "சக மனிதர்மேலும்." **12:36** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12:39** *வே.வா., "மிகச் சிறந்த." **12:40** *நே.மொ., "வீடுகளை." **12:42** *நே.மொ., "இரண்டு லெப்டன் காசுகளை." இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 12
a உபா 4:39, உபா 6:4, ஏசா 45:21
b உபா 6:5, 1சா 15:22, ஓசி 6:6
c மத் 22:46
d மத் 22:42-45, லூ 20:41-44, யோவா 7:42
e சங் 110:1, அப் 2:34, 35, 1கொ 15:25, எபி 1:13
f 2சா 23:2, 2தீ 3:16, 2பே 1:21
g ரோ 1:3, வெளி 22:16
h லூ 20:45-47
i மத் 23:6, 7, லூ 11:43
j 2ரா 12:9
k லூ 21:1
l லூ 21:2
m லூ 21:3, 2கொ 8:12
n லூ 21:4

அதி. 13
o மத் 24:1, லூ 21:5

கட்டிடங்களையா பார்க்கிறாய்? ஒரு கல்லின் மேல் ஒரு கல் இல்லாதபடி
எல்லாமே நிச்சயமாகத் தரைமட்டமாக்கப்படும்”[a] என்று சொன்னார்.

3 பின்பு, ஆலயத்தைப் பார்த்தபடி ஒலிவ மலைமேல் அவர் உட்கார்ந்தி
ருந்தபோது, பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் தனி
யாக வந்து, **4** “இதெல்லாம் எப்போது நடக்கும், இதெல்லாம் நிறைவேறப்
போகிற* காலத்துக்கு அடையாளம் என்ன, எங்களுக்குச் சொல்லுங்கள்”[b]
என்று கேட்டார்கள். **5** அதற்கு இயேசு, “உங்களை யாரும் ஏமாற்றிவிடாத
படி எச்சரிக்கையாக இருங்கள்.[c] **6** நிறைய பேர் என் பெயரை வைத்துக்
கொண்டு வந்து, ‘நான்தான் கிறிஸ்து’ என்று சொல்லி நிறைய பேரை
ஏமாற்றுவார்கள். **7** அதுமட்டுமல்ல, போர் முழக்கங்களையும் போர்ச் செய்
திகளையும் நீங்கள் கேட்கும்போது, திகிலடையாதீர்கள். இதெல்லாம் நடக்க
வேண்டும், ஆனால் முடிவு அப்போதே வராது.[d]

8 ஜனத்துக்கு எதிராக ஜனமும் நாட்டுக்கு எதிராக நாடும்* சண்டை
போடும்.[e] அடுத்தடுத்து பல இடங்களில் நிலநடுக்கங்கள் ஏற்படும். பஞ்சங்
களும் உண்டாகும்.[f] இவையெல்லாம் வேதனைகளுக்கு# ஆரம்பம்.[g]

9 ஆனால், நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் என்னுடைய
சீஷர்களாக இருப்பதால் மக்கள் உங்களை உள்ளூர் நீதிமன்றங்களுக்குக்
கொண்டுபோய் நிறுத்துவார்கள்,[h] ஜெபக்கூடங்களில் அடிப்பார்கள்,[i] ஆளு
நர்களுக்கும் ராஜாக்களுக்கும் முன்னால் நிறுத்துவார்கள். அப்போது நீங்
கள் அவர்களுக்குச் சாட்சி கொடுக்க முடியும்.[j] **10** எல்லா தேசத்தாருக்
கும் நல்ல செய்தி முதலாவது பிரசங்கிக்கப்பட வேண்டும்.[k] **11** அவர்கள்
உங்களை நீதிமன்றத்துக்குக் கொண்டுபோகும்போது, என்ன பேசுவதென்று
நினைத்துக் கவலைப்படாதீர்கள்; அந்த நேரத்தில் உங்களுக்கு என்ன அரு
ளப்படுகிறதோ அதையே பேசுங்கள்; ஏனென்றால் பேசுவது நீங்கள் அல்ல,
கடவுளுடைய சக்தியே.[l] **12** அதோடு, சகோதரனின் சாவுக்கு சகோதர
னும், பிள்ளையின் சாவுக்கு அப்பாவும் காரணமாக இருப்பார்கள். பெற்றோ
ருக்கு எதிராகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களுடைய சாவுக்குக் காரண
மாவார்கள்.[m] **13** நீங்கள் என் சீஷர்களாக இருப்பதால் எல்லா மக்களும்
உங்களை வெறுப்பார்கள்;[n] ஆனால், முடிவுவரை சகித்திருப்பவர்தான்[o]
மீட்புப் பெறுவார்.[p]

14 இருந்தாலும், பாழாக்கும் அருவருப்பு[q] நிற்கக்கூடாத இடத்தில் நிற்
பதை நீங்கள் பார்க்கும்போது (வாசிப்பவர் பகுத்தறிவைப் பயன்படுத்தி
இதைப் புரிந்துகொள்ளட்டும்), யூதேயாவில் இருப்பவர்கள் மலைகளுக்குத்
தப்பியோட வேண்டும்.[r] **15** வீட்டு மாடியில் இருப்பவர் கீழே இறங்கிவர
வேண்டாம், எதையாவது எடுத்துக்கொண்டு போவதற்காகத் தன் வீட்
டுக்குள் போகவும் வேண்டாம். **16** வயலில் இருப்பவர் தன் மேலங்கியை
எடுப்பதற்காகத் திரும்பிப் போக வேண்டாம். **17** அந்த நாட்களில் கர்ப்
பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஐயோ ஆபத்து![s] **18** இது
குளிர் காலத்தில் நடந்துவிடக் கூடாது என்று ஜெபம் செய்துகொண்டி
ருங்கள். **19** ஏனென்றால், அந்த நாட்கள் உபத்திரவ[t] நாட்களாக இருக்
கும். கடவுள் உலகத்தைப் படைத்ததுமுதல் அதுவரை அப்படிப்பட்ட உபத்
திரவம் வந்திருக்காது, அதற்குப் பிறகும் வராது.[u] **20** சொல்லப்போனால்,

---

13:4 * வே.வா., “முடிவடையப்போகிற.” **13:8** * வே.வா., “ராஜ்யத்துக்கு எதிராக ராஜ்யமும்.” # நே.மொ., “பிரசவ வேதனை போன்ற வேதனைகளுக்கு.”

அதி. 13
a லேவி 26:31
மத் 24:2
லூ 19:44
லூ 21:6
b மத் 24:3
லூ 21:7
c மத் 24:4, 5
லூ 21:8
d மத் 24:6
லூ 21:9
e வெளி 6:4
f மத் 24:7
லூ 21:10, 11
வெளி 6:6, 8
g மத் 24:8
h அப் 4:15
i மத் 10:17
யோவா 16:2
j மத் 24:9
லூ 21:12, 13
2தீ 3:12
வெளி 2:10
k மத் 24:14
ரோ 10:18
வெளி 14:6
l யாத் 4:12
மத் 10:19, 20
லூ 12:11, 12
லூ 21:14, 15
அப் 4:8
அப் 6:9, 10
m மீ 7:6
மத் 10:21
லூ 21:16
2தீ 3:1, 3
n லூ 21:17
o 2தீ 4:7
எபி 3:6
p மத் 10:22
மத் 24:13
லூ 21:19
வெளி 2:10
q தானி 9:27
தானி 11:31
r மத் 24:15-20
லூ 21:20-23
s லூ 21:23
லூ 23:28
t வெளி 7:14
u தானி 12:1
மத் 24:21

யெகோவா* அந்த நாட்களைக் குறைக்கவில்லை என்றால், யாருமே
தப்பிப்பிழைக்க மாட்டார்கள்; ஆனால், தான் தேர்ந்தெடுத்த மக்களுக்காக
அவர் அந்த நாட்களைக் குறைத்திருக்கிறார்.[a]

21 அதோடு, யாராவது உங்களிடம், 'இதோ! கிறிஸ்து இங்கே இருக்கி
றார்,' 'அதோ! அங்கே இருக்கிறார்' என்று சொன்னால் நம்பாதீர்கள்.[b]
22 ஏனென்றால், போலிக் கிறிஸ்துக்களும் போலித் தீர்க்கதரிசிகளும் வரு
வார்கள்;[c] முடிந்தால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் வழிவிலக வைப்ப
தற்காக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். 23 அத
னால், விழிப்புடன் இருங்கள்;[d] எல்லாவற்றையும் உங்களிடம் முன்கூட்டியே
சொல்லிவிட்டேன்.

24 ஆனால் அந்த நாட்களில், அந்த உபத்திரவத்துக்குப் பின்பு, சூரியன்
இருண்டுவிடும், சந்திரன் ஒளி கொடுக்காது,[e] 25 வானத்திலிருந்து நட்சத்
திரங்கள் விழும், வான மண்டலங்கள் அசைக்கப்படும். 26 அதன்
பின்பு, மனிதகுமாரன்[f] மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்
களில் வருவதை அவர்கள் பார்ப்பார்கள்.[g] 27 பிறகு, அவர் தேவதூதர்
களை அனுப்பி, கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பூமியின் ஒரு
முனையிலிருந்து வானத்தின் மறுமுனைவரை நான்கு திசைகளிலிருந்தும்*
கூட்டிச்சேர்ப்பார்.[h]

28 அத்தி மர உவமையிலிருந்து இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்
ளுங்கள்: அதில் இளங்கிளைகள் தோன்றி, இலைகள் துளிர்க்க ஆரம்பித்
ததுமே கோடைக் காலம் நெருங்கிவிட்டது என்று தெரிந்துகொள்கிறீர்கள்.[i]
29 அப்படியே, இவையெல்லாம் நடப்பதை நீங்கள் பார்க்கும்போது, அவர்
கதவுக்குப் பக்கத்திலேயே வந்துவிட்டார் என்று தெரிந்துகொள்ளுங்கள்.[j]
30 உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், இவையெல்லாம் நடப்ப
தற்கு முன்பு இந்தத் தலைமுறை ஒருபோதும் ஒழிந்துபோகாது.[k] 31 வான
மும் பூமியும் ஒழிந்துபோகும்,[l] ஆனால் என் வார்த்தைகள் ஒருபோதும்
ஒழிந்துபோகாது.[m]

32 அந்த நாளோ அந்த நேரமோ பரலோகத் தகப்பன் ஒருவரைத்
தவிர வேறு யாருக்கும் தெரியாது, பரலோகத்தில் இருக்கிற தேவதூதர்களுக்
கும் தெரியாது, மகனுக்கும் தெரியாது.[n] 33 இதெல்லாம் எப்போது நடக்கு
மென்று உங்களுக்குத் தெரியாததால்[o] எச்சரிக்கையாக இருங்கள், விழிப்
புடன் இருங்கள்.[p] 34 ஒருவர் தன் வீட்டைவிட்டுத் தூர தேசத்துக்குப்
புறப்பட்டுப் போகும்போது தன் அடிமைகளுக்கு அதிகாரத்தையும் அவ
னவன் செய்ய வேண்டிய வேலையையும் கொடுத்துவிட்டு,[q] விழிப்புடன்
இருக்கச் சொல்லி வாயிற்காவலனுக்குக் கட்டளையிடுகிறார்.[r] 35 அத
னால், விழிப்புடன் இருங்கள்; ஏனென்றால் வீட்டு எஜமான் வரும்
நேரம் மாலையா,* நடுராத்திரியா,# சேவல் கூவும் நேரமா,△ அல்லது விடி
யற்காலையா⊠[s] என்பது உங்களுக்குத் தெரியாது.[t] 36 அவர் திடீரென்று

13:20 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **13:27** *நே.மொ., "நான்கு காற்றுகளிலிருந்தும்." **13:35** *கிரேக்க மற்றும் ரோமக் கணக்குப்படி, இது முதலாம் ஜாமம்; சூரிய அஸ்தமனத்திலிருந்து ராத்திரி சுமார் 9 மணிவரை. #இது இரண்டாம் ஜாமம்; ராத்திரி சுமார் 9 மணியிலிருந்து நடுராத்திரிவரை. △இது மூன்றாம் ஜாமம்; நடுராத்திரியிலிருந்து காலை சுமார் 3 மணிவரை. ⊠இது நான்காம் ஜாமம்; காலை சுமார் 3 மணியிலிருந்து சூரியன் உதிக்கும்வரை.

அதி. 13
a மத் 24:22
b மத் 24:23, 24; லூ 17:23; லூ 21:8; 1யோ 4:1
c மத் 7:15
d மத் 24:42; எபே 6:18; 2பே 3:17
e மத் 24:29; லூ 21:25, 26
f தானி 7:13
g மத் 24:30; லூ 21:27; வெளி 1:7
h மத் 24:31
i மத் 24:32; லூ 21:29-33
j மத் 24:33
k மத் 24:34; லூ 21:32
l ஏசா 51:6
m யோசு 23:14; ஏசா 40:8; மத் 24:35
n மத் 24:36; அப் 1:7
o மத் 25:13; லூ 21:34
p ரோ 13:11; 1தெ 5:6
q மத் 25:14
r லூ 12:35, 36
s லூ 21:36
t மத் 24:42

வரும்போது, நீங்கள் தூங்கிக்கொண்டிருக்காதபடி[a] பார்த்துக்கொள்ளுங்
கள். **37** உங்களுக்குச் சொல்வதை எல்லாருக்கும் சொல்கிறேன், விழிப்
புடன் இருங்கள்”[b] என்றார்.

14 பஸ்காவும்[c] புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையும்[d] வர இன்
னும் இரண்டு நாட்கள் இருந்தன.[e] அவரை எப்படித் தந்திரமாகப்
பிடித்து* கொன்றுபோடலாம் என்று முதன்மை குருமார்களும் வேத அறி
ஞர்களும் வழி தேடிக்கொண்டிருந்தார்கள்.[f] **2** ஆனாலும், “பண்டிகையின்
போது வேண்டாம், மக்கள் மத்தியில் ஒருவேளை கலவரம் ஏற்படலாம்”
என்று பேசிக்கொண்டார்கள்.

3 பெத்தானியாவில், முன்பு தொழுநோயாளியாக இருந்த சீமோனின்
வீட்டில் இயேசு சாப்பிட உட்கார்ந்திருந்தார்; அப்போது ஒரு பெண் சுத்த
மான, மிகவும் விலை உயர்ந்த சடாமாஞ்சி என்ற வாசனை எண்ணெயை
வெண்சலவைக்கல் குப்பி ஒன்றில் எடுத்து வந்தாள். அவள் அந்தக் குப்
பியை உடைத்து, அதிலிருந்த எண்ணெயை அவருடைய தலையில் ஊற்ற
ஆரம்பித்தாள்.[g] **4** அதைப் பார்த்த சிலர் எரிச்சலடைந்து, “இந்த வாசனை
எண்ணெயை ஏன் இப்படி வீணாக்குகிறாள்? **5** இதை 300 தினாரியுவுக்
கும்* அதிகமாக விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே!” என்று ஒரு
வருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். அவள்மேல் அவர்கள் பயங்கர
எரிச்சல் அடைந்தார்கள்.# **6** ஆனால் இயேசு, “இவளை ஒன்றும் சொல்
லாதீர்கள். ஏன் இவளுடைய மனதை நோகடிக்கிறீர்கள்? இவள் எனக்கு நல்
லதுதான் செய்தாள்.[h] **7** ஏனென்றால், ஏழைகள் எப்போதும் உங்களோடு
இருக்கிறார்கள்,[i] நீங்கள் விரும்பும்போதெல்லாம் அவர்களுக்கு நல்லது
செய்யலாம்; ஆனால், நான் எப்போதும் உங்களோடு இருக்கப்போவ
தில்லை.[j] **8** இவள் தன்னால் முடிந்ததையெல்லாம் செய்திருக்கிறாள்; நான்
அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னேற்பாடாக என் உடல்மேல் வாசனை
எண்ணெயை ஊற்றியிருக்கிறாள்.[k] **9** உண்மையாகவே உங்களுக்குச்
சொல்கிறேன், உலகில் எங்கெல்லாம் நல்ல செய்தி பிரசங்கிக்கப்படுகிறதோ[l]
அங்கெல்லாம் இந்தப் பெண் செய்த காரியமும் இவள் நினைவாகச் சொல்
லப்படும்”[m] என்றார்.

10 அவரைக் காட்டிக்கொடுப்பதற்காக, பன்னிரண்டு பேரில்* ஒருவ
னான யூதாஸ் இஸ்காரியோத்து முதன்மை குருமார்களிடம் போனான்.[n]
11 அவன் சொன்னதைக் கேட்டபோது அவர்கள் மனம் குளிர்ந்துபோய்,
அவனுக்கு வெள்ளிக் காசுகள் தருவதாக வாக்குக் கொடுத்தார்கள்.[o] அத
னால், அவரைக் காட்டிக்கொடுப்பதற்கு அவன் சந்தர்ப்பம் தேட ஆரம்
பித்தான்.

12 புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையின் முதலாம் நாள்[p]
வந்தது; வழக்கமாக, பஸ்கா பலி கொடுக்கப்படுகிற[q] அந்த நாளில் அவரு
டைய சீஷர்கள் அவரிடம் வந்து, “நீங்கள் பஸ்கா உணவைச் சாப்பிட நாங்
கள் எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும்?”[r] என்று கேட்டார்கள். **13** அதற்கு
அவர் தன்னுடைய சீஷர்கள் இரண்டு பேரிடம், “நீங்கள் நகரத்துக்குள் போங்
கள்; மண்ஜாடியில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வருகிற ஒருவன் அங்கே

14:1 *வே.வா., “கைது செய்து.” **14:5** *இணைப்பு B14-ஐப் பாருங்கள். #வே.வா., “அவளிடம் கோபமாகப் பேசினார்கள்; அவளைத் திட்டினார்கள்.” **14:10** *அதாவது, “அப்போஸ்தலர்களில்.”

அதி. 13
- *a* மத் 25:5
- *b* ஆப 2:3

அதி. 14
- *c* யாத் 12:3, 6; லேவி 23:5
- *d* லேவி 23:6
- *e* யோவா 13:1
- *f* மத் 26:2-5; லூ 22:1, 2
- *g* மத் 26:6-9; யோவா 12:2-5
- *h* மத் 26:10; யோவா 12:7
- *i* உபா 15:11
- *j* மத் 26:11; யோவா 12:8
- *k* மத் 26:12; யோவா 12:7
- *l* மத் 24:14
- *m* மத் 26:13
- *n* மத் 26:14-16; லூ 22:3-6
- *o* சக 11:12
- *p* யாத் 12:15, 18; யாத் 23:15
- *q* லூ 22:1, 7
- *r* எண் 9:2; மத் 26:17-19

உங்களைச் சந்திப்பான். அவன் பின்னால் போங்கள்.[a] **14** அவன் எந்த வீட்டுக்குள் போகிறானோ அந்த வீட்டுச் சொந்தக்காரரிடம், '"என் சீஷர்களோடு நான் பஸ்கா உணவு சாப்பிடுவதற்கான விருந்தினர் அறை எங்கே?" என்று போதகர் கேட்கிறார்' எனச் சொல்லுங்கள். **15** அப்போது, மாடியில் தேவையான வசதிகள் செய்யப்பட்ட ஒரு பெரிய அறையை அவர் உங்களுக்குக் காட்டுவார்; அங்கே நமக்காக ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொன்னார். **16** அவர் சொன்னபடியே சீஷர்களும் போனார்கள்; நகரத்துக்குள் போனபோது அவர் சொன்னதெல்லாம் அப்படியே நடந்ததைப் பார்த்து, பஸ்காவுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

17 சாயங்காலம் ஆனபோது, அவர் அந்தப் பன்னிரண்டு பேரோடு வந்தார்.[b] **18** அவர்கள் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, "உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், என்னோடு சாப்பிட்டுக்கொண்டிருக்கும் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்"[c] என்று இயேசு சொன்னார். **19** அப்போது அவர்கள் எல்லாரும் துக்கப்பட்டு, "அது நானா, நானா?" என்று ஒவ்வொருவராகக் கேட்டார்கள். **20** அதற்கு அவர், "பன்னிரண்டு பேரில் ஒருவன்தான் அவன்; என்னோடு சேர்ந்து இந்தப் பாத்திரத்திலிருந்து எடுத்துச் சாப்பிடுகிறவன்தான் அவன்.[d] **21** மனிதகுமாரன், தன்னைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறபடியே உங்களைவிட்டுப் போகிறார்; ஆனால், மனிதகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறவனுக்குக் கேடுதான் வரும்![e] அவன் பிறக்காமல் இருந்திருந்தாலே அவனுக்கு நன்றாக இருந்திருக்கும்"[f] என்று சொன்னார்.

22 அவர்கள் தொடர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, அவர் ரொட்டியை எடுத்து, ஜெபம் செய்து,* அதைப் பிட்டு, "இதை வாங்கிக்கொள்ளுங்கள், இது என் உடலைக் குறிக்கிறது"[g] என்று சொல்லி அவர்களிடம் கொடுத்தார். **23** அதோடு, ஒரு கிண்ணத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி சொல்லி, அவர்களிடம் கொடுத்தார்; எல்லாரும் அதிலிருந்து குடித்தார்கள்.[h] **24** அப்போது அவர், "இது 'ஒப்பந்தத்தை[i] உறுதிப்படுத்தும் என் இரத்தத்தை'[j] குறிக்கிறது; என் இரத்தம் பலருக்காகச் சிந்தப்படப்போகிறது.[k] **25** உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், கடவுளுடைய அரசாங்கத்தில் புதிய திராட்சமதுவை நான் குடிக்கும் நாள்வரை இனி நான் திராட்சமதுவையே குடிக்க மாட்டேன்" என்று சொன்னார். **26** கடைசியில், கடவுளைப் புகழ்ந்து பாடல்கள்* பாடிவிட்டு, ஒலிவ மலைக்கு அவர்கள் போனார்கள்.[l]

27 அப்போது இயேசு அவர்களிடம், "நீங்கள் எல்லாரும் என்னை விட்டு ஓடிப்போவீர்கள்; ஏனென்றால், 'நான் மேய்ப்பனை வெட்டுவேன்,[m] ஆடுகள் சிதறி ஓடும்'[n] என்று எழுதப்பட்டிருக்கிறது. **28** ஆனால், நான் உயிரோடு எழுப்பப்பட்ட பிறகு உங்களுக்கு முன்னதாகவே கலிலேயாவுக்குப் போவேன்"[o] என்று சொன்னார். **29** அதற்கு பேதுரு, "மற்ற எல்லாரும் உங்களைவிட்டு ஓடிப்போனாலும் நான் ஓடிப்போக மாட்டேன்"[p] என்று சொன்னார். **30** அதற்கு இயேசு, "உண்மையாகவே உனக்குச் சொல்கிறேன், இன்று, ஆம் இன்றைக்கு ராத்திரியே, சேவல் இரண்டு தடவை கூவுவதற்கு முன்பு, என்னைத் தெரியாதென்று நீ மூன்று தடவை சொல்லிவிடுவாய்"[q] என்றார். **31** ஆனால் பேதுரு, "நான் உங்களோடு சாக

அதி. 14
- a லூ 22:10-13
- b மத் 26:20; லூ 22:14
- c சங் 41:9; மத் 26:21, 22; லூ 22:21, 23; யோவா 13:21, 22
- d மத் 26:23
- e லூ 22:22
- f மத் 26:24
- g மத் 26:26; லூ 22:19; 1கொ 11:23, 24
- h மத் 26:27; 1கொ 10:16; 1கொ 11:25
- i எரே 31:31; எபி 7:22; எபி 9:15
- j யாத் 24:8; லேவி 17:11; எபி 9:22
- k ஏசா 53:12; மத் 26:28; லூ 22:20
- l மத் 26:30; லூ 22:39; யோவா 18:1
- m ஏசா 53:5; தானி 9:26
- n சக 13:7; மத் 26:31-33; மத் 26:56; மாற் 14:50; யோவா 16:32
- o மாற் 16:7
- p லூ 22:31-33; யோவா 13:37
- q மத் 26:34; லூ 22:34; யோவா 13:38

14:22 * நே.மொ., "ஆசீர்வதித்து." **14:26** * வே.வா., "சங்கீதங்கள்."

வேண்டியிருந்தாலும் உங்களைத் தெரியாது என்று சொல்லவே மாட்டேன்”
என்று அடித்துச் சொன்னார். மற்ற எல்லாரும் அதையே சொன்னார்கள்.[a]
32 அவர்கள் கெத்செமனே என்ற இடத்துக்கு வந்தார்கள்; அப்போது
அவர், “நான் ஜெபம் செய்யும்வரை நீங்கள் இங்கேயே உட்கார்ந்திருங்
கள்”[b] என்று சீஷர்களிடம் சொன்னார். **33** பின்பு, பேதுருவையும் யாக்
கோபையும் யோவானையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு போனார்;[c] அப்
போது, அவர் மிகுந்த வேதனையும் மனக்கலக்கமும் அடைந்து,
34 “உயிர் போகுமளவுக்கு நான் துக்கத்தில் தவிக்கிறேன்.[d] நீங்கள் இங்
கேயே இருந்து, விழித்திருங்கள்”[e] என்று அவர்களிடம் சொன்னார்.
35 பின்பு சற்று முன்னே போய், மண்டிபோட்டு தரைவரைக்கும் குனிந்து,
இந்தச் சோதனை* தன்னைவிட்டு நீங்க முடியுமானால் நீங்க வேண்டு
மென்று ஜெபம் செய்ய ஆரம்பித்தார்; **36** அப்போது, “*அபா,** தகப்
பனே,[f] உங்களால் எல்லாமே முடியும்; இந்தக் கிண்ணத்தை# என்னிடமி
ருந்து எடுத்துவிடுங்கள். ஆனாலும், என்னுடைய விருப்பத்தின்படி அல்ல,
உங்களுடைய விருப்பத்தின்படியே நடக்கட்டும்”[g] என்று சொன்னார்.
37 அதன் பின்பு, அவர் வந்து பார்த்தபோது அவர்கள் தூங்கிக்கொண்டி
ருந்தார்கள்; அப்போது பேதுருவிடம், “சீமோனே, தூங்கிக்கொண்டா இருக்
கிறாய்? ஒரு மணிநேரம்கூட விழித்திருக்க உனக்குப் பலம் இல்லையா?[h]
38 நண்பர்களே, சோதனைக்கு இணங்கிவிடாதபடி நீங்கள் விழித்திருந்து,
தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள்.[i] உள்ளம் ஆர்வமாக இருக்கிறது, உடலோ
பலவீனமாக இருக்கிறது”[j] என்று சொன்னார். **39** பின்பு மறுபடியும் போய்,
முன்பு சொன்னதையே[k] சொல்லி ஜெபம் செய்தார். **40** அவர்கள் பயங்
கர தூக்கக் கலக்கத்தில் இருந்ததால், அவர் மறுபடியும் வந்து பார்த்தபோது
தூங்கிக்கொண்டிருந்தார்கள்; அதனால், அவரிடம் என்ன சொல்வதென்றே
அவர்களுக்குத் தெரியவில்லை. **41** மூன்றாவது தடவையாக அவர் வந்து
பார்த்து, “இப்படிப்பட்ட நேரத்தில் தூங்கிக்கொண்டும் ஓய்வெடுத்துக்
கொண்டும் இருக்கிறீர்களே! போதும்! இதோ, மனிதகுமாரன் பாவிகளி
டம் காட்டிக்கொடுக்கப்படுகிற நேரம் வந்துவிட்டது![l] **42** எழுந்திருங்கள்,
போகலாம். இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவன் நெருங்கி வந்துவிட்
டான்”[m] என்று சொன்னார்.
43 அப்போதே, அவர் பேசிக்கொண்டிருந்தபோதே, பன்னிரண்டு
பேரில் ஒருவனாகிய யூதாஸ் அங்கே வந்தான். முதன்மை குருமார்க
ளும் வேத அறிஞர்களும் பெரியோர்களும்* அனுப்பிய ஆட்கள் வாள்க
ளோடும் தடிகளோடும் அவனுடன் கூட்டமாக வந்தார்கள்.[n] **44** அவரைக்
காட்டிக்கொடுப்பவன், “நான் யாருக்கு முத்தம் கொடுக்கிறேனோ அவர்
தான் அந்த ஆள்; அவரைப் பிடித்துக்கொள்ளுங்கள், காவலோடு கொண்
டுபோங்கள்” என்று அவர்களிடம் சொல்லி வைத்திருந்தான். **45** அவன்
நேராக அவரிடம் வந்து, “ரபீ!”* என்று சொல்லி, மென்மையாக முத்தம்

14:35 *நே.மொ., “நேரம்.” **14:36** *பிள்ளைகள் தங்கள் அப்பாவைச் செல்லமாகவும், அதேசமயத்தில் மரியாதையாகவும் கூப்பிடுவதற்குப் பயன்படுத்திய எபிரெய அல்லது அரமேயிக் வார்த்தை இது. #“கிண்ணம்” என்பது கடவுளுடைய சித்தத்தை, அதாவது இயேசு தெய்வ நிந்தனை செய்தார் என்று பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்படுவதற்குக் கடவுள் அவரை அனுமதித்ததை அடையாளப்படுத்துகிறது. **14:43** *வே.வா., “மூப்பர்களும்.” **14:45** *அதாவது, “போதகரே.”

அதி. 14
a மத் 26:35
b மத் 26:36, 37; லூ 22:39-41; யோவா 18:1
c மாற் 9:2
d யோவா 12:27
e மத் 26:38
f ரோ 8:15; கலா 4:6
g மத் 26:39; லூ 22:42; யோவா 6:38; எபி 5:7
h மத் 26:40; லூ 22:45
i மத் 6:13; லூ 11:4; லூ 22:46
j மத் 26:41; ரோ 7:23
k மத் 26:42-46
l யோவா 13:1
m யோவா 18:2
n மத் 26:47-51; லூ 22:47-51; யோவா 18:3

கொடுத்தான். **46** அப்போது, அவர்கள் அவரைப் பிடித்துக் கைது செய்
தார்கள். **47** ஆனால், அங்கே நின்றுகொண்டிருந்தவர்களில் ஒருவர் தன்
வாளை உருவி, தலைமைக் குருவின் வேலைக்காரனைத் தாக்கினார்;
அவனுடைய காது அறுந்துபோனது.[a] **48** அப்போது இயேசு, “ஒரு கொள்
ளைக்காரனைப் பிடிக்க வருவது போல வாள்களோடும் தடிகளோடும் என்
னைப் பிடிக்க வந்திருக்கிறீர்களா?[b] **49** நான் தினமும் உங்களோடு
இருந்து ஆலயத்தில் கற்பித்துக்கொண்டிருந்தேன்.[c] அப்போதெல்லாம் நீங்
கள் என்னைக் கைது செய்யவில்லை. இருந்தாலும், வேதவசனங்கள் நிறை
வேறும்படியே[d] இப்படி நடக்கிறது” என்று சொன்னார்.

50 அப்போது, சீஷர்கள் எல்லாரும் அவரை விட்டுவிட்டு ஓடிப்போ
னார்கள்.[e] **51** ஆனால், உயர்தரமான நாரிழை* அங்கியை அணிந்திருந்த
ஓர் இளம் மனிதர் சற்று நெருக்கமாகவே அவரைப் பின்தொடர ஆரம்பித்
தார்; அவரையும் பிடிக்கப் பார்த்தார்கள், **52** அவரோ அந்த அங்கியை
விட்டுவிட்டு உள்ளாடையோடு ஓடிப்போனார்.

53 அவர்கள் இயேசுவைத் தலைமைக் குருவிடம்[f] கொண்டுபோ
னார்கள்; அங்கே முதன்மை குருமார்கள், பெரியோர்கள், வேத அறிஞர்கள்
ஆகிய எல்லாரும் கூடியிருந்தார்கள்.[g] **54** ஆனால், பேதுரு தூரத்திலிருந்
தபடியே அவரைப் பின்தொடர்ந்து போனார்; தலைமைக் குருவின் வீட்டு
உள்முற்றம்வரை போய், அந்த வீட்டு வேலைக்காரர்களோடு உட்கார்ந்து,
நெருப்பு பக்கத்தில் குளிர்காய்ந்துகொண்டிருந்தார்.[h] **55** இதற்கிடையில்,
முதன்மை குருமார்களும் நியாயசங்க உறுப்பினர்கள் எல்லாரும், இயேசு
வுக்கு மரண தண்டனை விதிக்க அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள்
கிடைக்குமா என்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்; ஆனால், ஒன்றும் கிடைக்
கவில்லை.[i] **56** நிறைய பேர் அவருக்கு எதிராகப் பொய் சாட்சி[j] சொன்ன
போதிலும் அவை ஒன்றுக்கொன்று முரணாக இருந்தன. **57** அதோடு,
சிலர் வந்து அவருக்கு எதிராகப் பொய் சாட்சி சொன்னார்கள். **58** “‘கைக
ளால் கட்டப்பட்ட இந்த ஆலயத்தைத் தரைமட்டமாக்கி, கைகளால் கட்டப்
படாத வேறொரு ஆலயத்தை மூன்று நாட்களுக்குள் கட்டுவேன்’ என்று
இவன் சொன்னதை நாங்கள் கேட்டோம்”[k] என்றார்கள். **59** இந்த விஷ
யத்திலும்கூட அவர்கள் சொன்ன சாட்சி ஒன்றுக்கொன்று முரணாகத்தான்
இருந்தது.

60 கடைசியாக, தலைமைக் குரு எழுந்து அவர்கள் நடுவில் நின்று,
இயேசுவைப் பார்த்து, “உனக்கு எதிராக இவர்கள் சாட்சி சொல்கிறார்களே, நீ
பதில் சொல்ல மாட்டாயா?”[l] என்று கேட்டார். **61** ஆனால், அவர் எந்தப்
பதிலும் சொல்லாமல் அமைதியாக இருந்தார்.[m] மறுபடியும் தலைமைக்
குரு, “கடவுளின்* மகனாகிய கிறிஸ்து நீதானா?” என்று கேட்டார். **62** அப்
போது இயேசு, “நான் கிறிஸ்துதான்; மனிதகுமாரன்[n] வல்லமையுள்ளவரின்
வலது பக்கத்தில் உட்கார்ந்திருப்பதையும்[o] வானத்து மேகங்களோடு வருவ
தையும் நீங்கள் பார்ப்பீர்கள்”[p] என்று சொன்னார். **63** அதைக் கேட்டதும்
தலைமைக் குரு தன் அங்கிகளைக் கிழித்து, “இனி நமக்கு வேறு சாட்சிகள்
எதற்கு?[q] **64** இவன் தெய்வ நிந்தனை செய்ததை நீங்களே கேட்டீர்கள்.
இப்போது என்ன சொல்கிறீர்கள்?” என்று கேட்டார். அவர் சாக
வேண்டுமென்று[r] எல்லாரும் சொன்னார்கள். **65** அப்போது சிலர்

அதி. 14
a மத் 26:51, லூ 22:50, யோவா 18:10
b மத் 26:55, 56, லூ 22:52, 53
c லூ 19:47, யோவா 18:20
d சங் 22:6, ஏசா 53:7, தானி 9:26, லூ 22:37
e சக 13:7, மத் 26:31, யோவா 16:32
f யோவா 18:13
g மத் 26:57, லூ 22:54, 55
h மத் 26:58, யோவா 18:15
i மத் 26:59, 60
j சங் 35:11
k மத் 26:61, மாற் 15:29, யோவா 2:19
l மத் 26:62, 63
m ஏசா 53:7, 1பே 2:23
n தானி 7:13
o சங் 110:1, எபே 1:20, கொலோ 3:1
p மத் 24:30, மத் 26:64, லூ 21:27, வெளி 1:7
q மத் 26:65, 66
r லேவி 24:16, யோவா 19:7

14:51 * அதாவது, “லினன்.” **14:61** * நே.மொ., “புகழுக்குரியவரின்.”

அவர்மேல் துப்பினார்கள்;[a] அவருடைய முகத்தை மூடி, தங்கள்
கைமுஷ்டிகளால் குத்தி, “நீ ஒரு தீர்க்கதரிசியாக இருந்தால் உன்னை அடித்
தது யாரென்று சொல்!” என்றார்கள். பின்பு, நீதிமன்ற அதிகாரிகள் அவரு
டைய கன்னத்தில் அறைந்து, அவரைக் கொண்டுபோனார்கள்.[b]

66 பேதுரு கீழே முற்றத்தில் இருந்தபோது, தலைமைக் குருவின்
வேலைக்காரப் பெண்களில் ஒருத்தி வந்தாள்.[c] **67** குளிர்காய்ந்துகொண்டி
ருந்த பேதுருவை அவள் நேருக்குநேர் பார்த்து, “அந்த நாசரேத்தூர் இயே
சுவோடு நீயும்தான் இருந்தாய்!” என்று சொன்னாள். **68** ஆனால் பேதுரு
அதை மறுத்து, “எனக்கு அவரைத் தெரியாது, நீ என்ன சொல்கிறாய் என்றே
எனக்குப் புரியவில்லை” என்று சொல்லிவிட்டு நுழைவு மண்டபத்துக்குப்
போனார். **69** அந்த வேலைக்காரப் பெண் அங்கே அவரைப் பார்த்த
போது, “இவனும் அவர்களில் ஒருவன்தான்” என அங்கே நின்றுகொண்டி
ருந்த ஆட்களிடம் மறுபடியும் சொல்ல ஆரம்பித்தாள். **70** அவரோ
மறுபடியும் அதை மறுத்தார். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, அங்கே நின்று
கொண்டிருந்தவர்கள் பேதுருவைப் பார்த்து, “நிச்சயமாகவே நீயும் அவர்க
ளில் ஒருவன்தான், நீ ஒரு கலிலேயன்தான்” என்று சொல்ல ஆரம்பித்தார்
கள். **71** ஆனால் அவர், தான் சொல்வது பொய்யாக இருந்தால் தன்மேல்
சாபம் வரட்டும் என்று சொல்லி, “நீங்கள் சொல்லும் ஆளை எனக்குத்
தெரியவே தெரியாது!” எனச் சத்தியம் செய்ய ஆரம்பித்தார். **72** உடனே
சேவல் இரண்டாவது தடவை கூவியது;[d] அப்போது, “சேவல் இரண்டு
தடவை கூவுவதற்கு முன்பு, என்னைத் தெரியாதென்று நீ மூன்று தடவை
சொல்லிவிடுவாய்”[e] என்று இயேசு சொன்னது பேதுருவின் ஞாபகத்துக்கு
வந்தது. அதனால், அவர் மனமுடைந்து அழ ஆரம்பித்தார்.

15 பொழுது விடிந்தவுடனே, முதன்மை குருமார்களும் பெரியோர்
களும்* வேத அறிஞர்களும், சொல்லப்போனால் நியாயசங்கத்
தின் உறுப்பினர்கள் எல்லாரும், கூடிப்பேசினார்கள்; அவர்கள் இயேசு
வின் கைகளைக் கட்டி, பிலாத்துவிடம் கொண்டுபோய் ஒப்படைத்தார்கள்.[f]
2 அப்போது பிலாத்து அவரிடம், “நீ யூதர்களுடைய ராஜாவா?”[g] என்று
கேட்டார்; அதற்கு அவர், “அதை நீங்களே சொல்லிவிட்டீர்கள்”[h] என்றார்.
3 ஆனால், முதன்மை குருமார்கள் அவர்மேல் பல குற்றங்களைச் சுமத்திக்
கொண்டிருந்தார்கள். **4** மறுபடியும் பிலாத்து அவரிடம், “இதோ, இவர்கள்
உனக்கு எதிராக எத்தனையோ குற்றங்களைச் சுமத்துகிறார்களே.[i] நீ எந்தப்
பதிலும் சொல்ல மாட்டாயா?”[j] என்று கேட்டார். **5** அப்போதுகூட இயேசு
எந்தப் பதிலும் சொல்லவில்லை, அதைப் பார்த்து பிலாத்து ஆச்சரியப்
பட்டார்.[k]

6 ஒவ்வொரு வருஷமும் பஸ்கா பண்டிகையின்போது, மக்கள் கேட்டுக்
கொள்கிறபடி ஒரு சிறைக்கைதியை விடுதலை செய்வது பிலாத்துவின் வழக்
கம்.[l] **7** ஒரு கலகத்தின்போது கொலை செய்ததற்காகச் சில தேசத்
துரோகிகள் அப்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில்
பரபாஸ் என்ற ஒருவனும் இருந்தான். **8** பிலாத்துவிடம் மக்கள் கூட்ட
மாக வந்து, அவர் வழக்கமாகச் செய்வதுபோல் இப்போதும் தங்களுக்குச்
செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். **9** அதற்கு அவர், “யூதர்களுடைய
ராஜாவை நான் உங்களுக்கு விடுதலை செய்யட்டுமா?”[m] என்று கேட்

15:1 * வே.வா., “மூப்பர்களும்.”

அதி. 14
a ஏசா 50:6 ஏசா 53:3 மத் 26:67, 68
b லூ 22:63–65
c மத் 26:69–75 லூ 22:55–62 யோவா 18:25, 26
d யோவா 18:27
e மத் 26:34 மாற் 14:30 லூ 22:34 யோவா 13:38

அதி. 15
f சங் 2:2 மத் 27:1, 2 லூ 22:66 யோவா 18:28 அப் 3:13 அப் 4:26
g யோவா 18:33, 37
h மத் 27:11–14 லூ 23:3
i யோவா 19:9, 10
j மத் 26:62
k ஏசா 53:7
l மத் 27:15–18 யோவா 18:39
m லூ 23:16

டார். **10** ஏனென்றால், முதன்மை குருமார்கள் பொறாமையால்தான் அவ
ரைத் தன்னிடம் ஒப்படைத்திருந்தார்கள் என்பது பிலாத்துவுக்குத் தெரிந்தி
ருந்தது.[a] **11** ஆனால், அவருக்குப் பதிலாக பரபாசை விடுதலை செய்யச்
சொல்லி முதன்மை குருமார்கள் அந்தக் கூட்டத்தாரைத் தூண்டினார்கள்.[b]
12 மறுபடியும் பிலாத்து அவர்களிடம், "அப்படியானால், யூதர்களுடைய
ராஜா என்று நீங்கள் சொல்கிற இவனை நான் என்ன செய்ய வேண்
டும்?"[c] என்று கேட்டார். **13** "இவனை மரக் கம்பத்தில் அறைந்து கொல்
லுங்கள்!"[d] என்று மறுபடியும் கத்தினார்கள். **14** அப்போது பிலாத்து, "ஏன்?
இவன் என்ன குற்றம் செய்தான்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள்,
"இவனை மரக் கம்பத்தில் அறைந்து கொல்லுங்கள்!" என்று இன்னும் அதி
கமாகக் கூச்சல் போட்டார்கள்.[e] **15** பிலாத்து அந்தக் கூட்டத்தாரைத் திருப்
திப்படுத்துவதற்காக பரபாசை விடுதலை செய்தார்; இயேசுவையோ சாட்டை
யால் அடித்து,[f] மரக் கம்பத்தில்* அறைந்து கொல்லும்படி படைவீரர்களிடம்
கட்டளையிட்டார்.[g]

16 பின்பு, படைவீரர்கள் அவரை ஆளுநர் மாளிகையின் முற்றத்துக்குக்
கொண்டுபோய், மற்ற எல்லா படைவீரர்களையும் ஒன்றுகூட்டினார்கள்.[h]
17 அவருக்கு ஊதா நிற சால்வையைப் போர்த்தி, முள்கிரீடம் செய்து
அவர் தலைமேல் வைத்தார்கள். **18** "யூதர்களுடைய ராஜாவே, வாழ்க!"[i]
என்று சொல்ல ஆரம்பித்தார்கள். **19** பின்பு, ஒரு கோலினால் அவரு
டைய தலையில் பல தடவை அடித்தார்கள், அவர்மேல் துப்பினார்கள்;
அவர் முன்னால் மண்டிபோட்டு தலைவணங்கினார்கள். **20** அவரைக்
கேலி செய்த பின்பு, கடைசியாக அந்த ஊதா நிற சால்வையை எடுத்து
விட்டு அவருடைய மேலங்கியை அவருக்குப் போட்டுவிட்டார்கள்; பின்பு,
அவரை மரக் கம்பத்தில் வைத்து ஆணியடிப்பதற்காக வெளியே கொண்டு
போனார்கள்.[j] **21** அப்போது, நாட்டுப்புறத்திலிருந்து வந்துகொண்டிருந்த
சிரேனே ஊரைச் சேர்ந்த சீமோனைக் கட்டாயப்படுத்தி, இயேசு சுமந்து
வந்த சித்திரவதைக் கம்பத்தை* சுமக்க வைத்தார்கள்; அவர் அலெக்சந்தர்
மற்றும் ரூப்பு என்பவர்களின் அப்பா.[k]

22 பின்பு, *கொல்கொதா* என்ற இடத்துக்கு இயேசுவைக் கொண்டுபோ
னார்கள்; அதற்கு "மண்டையோடு" என்று அர்த்தம்.[l] **23** அங்கே, போதை
யூட்டும் வெள்ளைப்போளத்தை* திராட்சமதுவில் கலந்து இயேசுவுக்குக்
கொடுக்கப் பார்த்தார்கள்,[m] ஆனால் அவர் அதைக் குடிக்கவில்லை.
24 பின்பு, அவரை மரக் கம்பத்தில் வைத்து ஆணியடித்தார்கள்; அவரு
டைய மேலங்கிகளில் யாருக்கு எது என்று குலுக்கல் போட்டுப் பார்த்து
அவற்றைப் பங்குபோட்டுக்கொண்டார்கள்.[n] **25** அவரை மரக் கம்பத்தில்
வைத்து ஆணியடித்தபோது மூன்றாம் மணிநேரமாக* இருந்தது. **26** அவ
ருக்கு எதிரான குற்றச்சாட்டைத் தெரியப்படுத்தும்படி, "யூதர்களுடைய
ராஜா"[o] என்று எழுதி வைத்தார்கள். **27** அதோடு, அவருடைய வலது பக்
கத்தில் ஒரு கொள்ளைக்காரனையும், இடது பக்கத்தில் ஒரு கொள்ளைக்கார
னையும் மரக் கம்பங்களில் ஏற்றினார்கள்.[p] **28** *— **29** அந்த வழியாகப்
போனவர்கள் கேலியாகத் தலையை ஆட்டி,[q] "ஹா! ஆலயத்தைத்
தரைமட்டமாக்கி மூன்று நாட்களில் கட்டப்போகிறவனே,[r] **30** இப்போது

அதி. 15
a மத் 21:38
b மத் 27:20-23; அப் 3:14
c லூ 23:20-25
d யோவா 19:6
e அப் 3:13; அப் 13:28
f யோவா 19:1
g மத் 27:24, 26
h மத் 27:27-31
i யோவா 19:3
j யோவா 19:16
k மத் 27:32; லூ 23:26
l மத் 27:33-37; லூ 23:33; யோவா 19:17; எபி 13:12
m சங் 69:21
n சங் 22:18; யோவா 19:23, 24
o மத் 27:29, 37; லூ 23:38; யோவா 19:19
p மத் 27:38
q சங் 22:7; சங் 109:25; ஏசா 53:3
r மத் 27:39-42; மாற் 14:58

15:15, 21, 23 * சொல் பட்டியலைப் பாருங்கள். **15:25** * அதாவது, "காலை சுமார் 9 மணியாக." **15:28** * இணைப்பு A3-ஐப் பாருங்கள்.

சித்திரவதைக் கம்பத்தைவிட்டு* இறங்கி வந்து, உன்னை நீயே காப்பாற்றிக்
கொள்" என்று சொல்லி அவரைப் பழித்துப் பேசினார்கள். **31** இதே
போல், வேத அறிஞர்களோடு சேர்ந்து முதன்மை குருமார்கள் அவரைக்
கேலி செய்து, "மற்றவர்களைக் காப்பாற்றினான், தன்னைக் காப்பாற்றிக்
கொள்ள முடியவில்லை![a] **32** இஸ்ரவேலின் ராஜாவான கிறிஸ்து இப்
போது சித்திரவதைக் கம்பத்தைவிட்டு* கீழே இறங்கி வருகிறானா பார்ப்
போம், பிறகு அவனை நம்புவோம்"[b] என்று பேசிக்கொண்டார்கள். அவர்
பக்கத்திலே மரக் கம்பங்களில் ஏற்றப்பட்டவர்களும் அவரைப் பழித்துப்
பேசினார்கள்.[c]

33 ஆறாம் மணிநேரமானபோது* பூமி முழுவதும் இருள் சூழ்ந்தது;
ஒன்பதாம் மணிநேரம்வரை# அப்படியே இருந்தது.[d] **34** ஒன்பதாம் மணி
நேரத்தில், *"ஏலி, ஏலி, லாமா சபக்தானி?"* என்று இயேசு சத்தமாகச் சொன்
னார்; அதற்கு, "என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்
கள்?"[e] என்று அர்த்தம். **35** பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சிலர் அதைக்
கேட்டு, "இதோ! இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்" என்று சொன்னார்கள்.
36 அப்போது ஒருவன் ஓடிப்போய், புளிப்பான திராட்சமதுவில் ஒரு கடற்
பஞ்சை நனைத்து, அதை ஒரு கோலில் மாட்டி, குடிப்பதற்காக அவருக்குக்
கொடுத்து,[f] "பொறுங்கள்! எலியா இவனைக் கீழே இறக்கிவிட வருகிறாரா
பார்ப்போம்" என்று சொன்னான். **37** பின்பு, இயேசு உரத்த குரலில் சத்
தமிட்டு, இறந்துபோனார்.*[g] **38** அப்போது, ஆலயத்தின் திரைச்சீலை*[h]
மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது.[i] **39** அவருக்கு எதிரே நின்
றுகொண்டிருந்த படை அதிகாரி அவர் இறந்தபோது நடந்த எல்லா சம்ப
வங்களையும் பார்த்து, "நிச்சயமாகவே இந்த மனுஷர் கடவுளுடைய மகன்
தான்"[j] என்று சொன்னார்.

40 பெண்களும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்; அவர்க
ளில் மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் அம்மா
வான மரியாளும், சலோமேயும் இருந்தார்கள்.[k] **41** அவர் கலிலேயாவில்
இருந்தபோது அவர்கூடவே போய் அவருக்குப் பணிவிடை செய்துவந்த
வர்கள் இவர்கள்தான்.[l] அவரோடு எருசலேமுக்கு வந்திருந்த இன்னும்
நிறைய பெண்களும் அங்கே இருந்தார்கள்.

42 இதற்குள் சாயங்காலம் ஆகிவிட்டது, அது ஓய்வுநாளுக்கு முந்
தின நாளான ஆயத்த நாளாகவும் இருந்தது. **43** அதனால், அரிமத்தியா
ஊரைச் சேர்ந்தவரும், நியாயசங்கத்தின் மதிப்புக்குரிய உறுப்பினரும், கடவு
ளுடைய அரசாங்கத்துக்காகக் காத்திருந்தவருமான யோசேப்பு தைரியத்தை
வரவழைத்துக்கொண்டு பிலாத்துவிடம் போய் இயேசுவின் உடலைக்
கேட்டார்.[m] **44** இயேசு அதற்குள் இறந்துவிட்டதைக் குறித்து பிலாத்து
ஆச்சரியப்பட்டு, படை அதிகாரியைக் கூப்பிட்டு, 'அவர் அதற்குள் இறந்து
விட்டாரா?' என்று கேட்டார். **45** படை அதிகாரியிடம் அதை நிச்சயப்படுத்
திக்கொண்ட பிறகு, அவருடைய உடலை எடுத்துக்கொள்ள யோசேப்புக்கு
அனுமதி கொடுத்தார். **46** யோசேப்பு உயர்தரமான நாரிழை* துணியை

15:30, 32 *சொல் பட்டியலைப் பாருங்கள். **15:33** *அதாவது, "மதியம் சுமார் 12 மணியானபோது." #அதாவது, "பிற்பகல் சுமார் 3 மணிவரை." **15:37** *வே.வா., 'இறுதி மூச்சை விட்டார்.' **15:38** *இது பரிசுத்த அறைக்கும் மகா பரிசுத்த அறைக்கும் இடையில் இருந்தது. **15:46** *அதாவது, "லினன்."

அதி. 15
a லூ 23:35
b மத் 16:4
c மத் 27:44; 1பே 2:23
d மத் 27:45; லூ 23:44
e சங் 22:1; மத் 27:46-49
f சங் 69:21; யோவா 19:29
g சங் 31:5; மத் 27:50; லூ 23:46; யோவா 19:30
h யாத் 26:31-33; எபி 6:19
i மத் 27:51; லூ 23:45; எபி 10:19, 20
j மத் 27:54; லூ 23:47
k மத் 27:55, 56; லூ 23:49
l லூ 8:2, 3
m உபா 21:22, 23; மத் 27:57, 58; லூ 23:50-52; யோவா 19:38

வாங்கிவந்து, அவருடைய உடலைக் கீழே இறக்கி அந்தத் துணியால்
சுற்றி, பாறையில் வெட்டப்பட்ட ஒரு கல்லறையில்* வைத்தார்;[a] பின்பு, அந்
தக் கல்லறை வாசலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார்.[b] **47** மகதலேனா
மரியாளும் யோசேயின் அம்மாவான மரியாளும் அவர் வைக்கப்பட்டிருந்த
இடத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.[c]

16 ஓய்வுநாள்[d] முடிந்த பின்பு, மகதலேனா மரியாளும் யாக்கோபின்
அம்மாவான மரியாளும்[e] சலோமேயும், அவருடைய உடலில்
பூசுவதற்காக நறுமணப் பொருள்களை வாங்கினார்கள்.[f] **2** அவர்கள்
வாரத்தின் முதலாம் நாள் விடியற்காலையிலேயே, சூரியன் உதயமான
நேரத்திலேயே, கல்லறைக்கு* போனார்கள்.[g] **3** “கல்லறை வாசலில் இருக்
கிற கல்லை நமக்காக யார் உருட்டிப் போடுவார்கள்?” என்று பேசிக்
கொண்டார்கள். **4** அவர்கள் நிமிர்ந்து பார்த்தபோது, அந்தக் கல் மிகப்
பெரியதாக இருந்தபோதிலும், அது ஏற்கெனவே உருட்டப்பட்டிருந்த
தைப் பார்த்தார்கள்.[h] **5** அவர்கள் அந்தக் கல்லறைக்குள் நுழைந்தபோது,
வெள்ளை அங்கி போட்டிருந்த ஓர் இளம் மனிதர் வலது பக்கத்தில் உட்
கார்ந்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார்கள். **6** அப்போது அவர்,
“அதிர்ச்சி அடையாதீர்கள்.[i] மரக் கம்பத்தில் அறைந்து கொல்லப்பட்ட நாச
ரேத்தூர் இயேசுவைத்தானே தேடுகிறீர்கள்? அவர் இங்கே இல்லை, அவர்
உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார்.[j] இதோ! அவர் வைக்கப்பட்டிருந்த இடத்
தைப் பாருங்கள்.[k] **7** இப்போது புறப்பட்டுப் போய் அவருடைய சீஷர்
களிடமும் பேதுருவிடமும், ‘உங்களுக்கு முன்பே அவர் கலிலேயாவுக்குப்
போய்க்கொண்டிருக்கிறார்,[l] அவர் உங்களிடம் சொன்னது போலவே
அங்கே அவரைப் பார்ப்பீர்கள்’ என்று சொல்லுங்கள்”[m] என்றார். **8** அவர்
கள் நடுக்கத்தோடும், அதேசமயத்தில் பிரமிப்போடும் அந்தக் கல்லறையை
விட்டு ஓட்டமாக ஓடினார்கள். பயத்தில் அவர்கள் யாரிடமும் எதையும்
சொல்லவில்லை.*[n]

15:46 * வே.வா., “நினைவுக் கல்லறையில்.” **16:2** * வே.வா., “நினைவுக் கல்லறைக்கு.” **16:8** * நம்பகமான, ஆரம்பக் கால கையெழுத்துப் பிரதிகளின்படி, மாற்கு எழுதிய சுவிசேஷம் வசனம் 8-ல் உள்ள வார்த்தைகளுடன் முடிவடைகிறது. இணைப்பு A3-ஐப் பாருங்கள்.

அதி. 15
a ஏசா 53:9
b மத் 27:59, 60; லூ 23:53; யோவா 19:40
c மத் 27:61; லூ 23:55

அதி. 16
d யாத் 20:8, 9
e மத் 28:1
f லூ 23:55, 56
g லூ 24:1; யோவா 20:1
h லூ 24:2, 3
i லூ 24:4
j மாற் 8:31; லூ 18:33; அப் 4:10
k மத் 28:5, 6
l மத் 26:32; மாற் 14:28
m மத் 28:7
n மத் 28:8; லூ 24:9

லூக்கா

எழுதியது

முக்கியக் குறிப்புகள்

1 தெயோப்பிலுவுக்குக் கடிதம் (1-4)
யோவான் ஸ்நானகரின் பிறப்பைப் பற்றி காபிரியேல் முன்னறிவிக்கிறார் (5-25)
இயேசுவின் பிறப்பைப் பற்றி காபிரியேல் முன்னறிவிக்கிறார் (26-38)
எலிசபெத்தை மரியாள் சந்திக்கிறாள் (39-45)
யெகோவாவை மரியாள் புகழ்கிறாள் (46-56)
யோவான் பிறக்கிறார், அவருக்குப் பெயர் வைக்கப்படுகிறது (57-66)
சகரியாவின் தீர்க்கதரிசனம் (67-80)

2 இயேசுவின் பிறப்பு (1-7)
தேவதூதர்கள் மேய்ப்பர்கள்முன் தோன்றுகிறார்கள் (8-20)
விருத்தசேதனமும் தூய்மைச் சடங்கும் (21-24)
கிறிஸ்துவை சிமியோன் பார்க்கிறார் (25-35)
பிள்ளையைப் பற்றி அன்னாள் பேசுகிறார் (36-38)
நாசரேத்துக்குத் திரும்புகிறார்கள் (39, 40)
ஆலயத்தில் 12 வயது இயேசு (41-52)

3 யோவானின் ஊழியம் ஆரம்பமாகிறது (1, 2)
ஞானஸ்நானத்தைப் பற்றி யோவான் பிரசங்கிக்கிறார் (3-20)
இயேசுவின் ஞானஸ்நானம் (21, 22)
இயேசு கிறிஸ்துவின் வம்சாவளி (23-38)

4 இயேசுவைப் பிசாசு சோதிக்கிறான் (1-13)
கலிலேயாவில் இயேசு பிரசங்கிக்க ஆரம்பிக்கிறார் (14, 15)
நாசரேத்தில் இயேசு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை (16-30)
கப்பர்நகூமிலுள்ள ஜெபக்கூடத்தில் (31-37)
சீமோனின் மாமியாரும் மற்றவர்களும் குணமாக்கப்படுகிறார்கள் (38-41)
இயேசு தனிமையாக இருந்த இடத்துக்கு மக்கள் போகிறார்கள் (42-44)

5 அற்புதமாக மீன் பிடிக்கிறார்கள்; முதல் சீஷர்கள் (1-11)
தொழுநோயாளி குணமாக்கப்படுகிறான் (12-16)
பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவனை இயேசு குணமாக்குகிறார் (17-26)
லேவியை இயேசு கூப்பிடுகிறார் (27-32)
விரதம் இருப்பதைப் பற்றிய கேள்வி (33-39)

6 இயேசு, 'ஓய்வுநாளுக்கு எஜமான்' (1-5)
சூம்பிய கையுடையவன் குணமாக்கப்படுகிறான் (6-11)
12 அப்போஸ்தலர்கள் (12-16)
இயேசு கற்பிக்கிறார், குணமாக்குகிறார் (17-19)
சந்தோஷமும் கேடும் (20-26)
எதிரிகளிடம் அன்பு (27-36)
நியாயந்தீர்ப்பதை நிறுத்துங்கள் (37-42)
கனியை வைத்துத் தெரிந்துகொள்ளலாம் (43-45)
நன்றாகக் கட்டப்பட்ட வீடு; உறுதியான அஸ்திவாரம் இல்லாத வீடு (46-49)

7 படை அதிகாரியின் விசுவாசம் (1-10)
நாயீன் நகரத்து விதவையின் மகனை இயேசு உயிரோடு எழுப்புகிறார் (11-17)
யோவான் ஸ்நானகர் புகழப்படுகிறார் (18-30)
குறை சொல்கிற தலைமுறையைக் கண்டிக்கிறார் (31-35)
பாவியான பெண் மன்னிக்கப்படுகிறாள் (36-50)
கடன் வாங்கியவர்களைப் பற்றிய உவமை (41-43)

8 இயேசுவுடன் போன பெண்கள் (1-3)
விதைப்பவனைப் பற்றிய உவமை (4-8)
இயேசு ஏன் உவமைகளைப் பயன்படுத்தினார் (9, 10)
விதைப்பவனைப் பற்றிய உவமையின் விளக்கம் (11-15)
விளக்கை மூடி வைக்கக் கூடாது (16-18)
இயேசுவின் அம்மாவும் சகோதரர்களும் (19-21)
இயேசு புயல்காற்றை அடக்குகிறார் (22-25)
பேய்களைப் பன்றிகளுக்குள் அனுப்புகிறார் (26-39)
யவீருவின் மகள்; இயேசுவின் மேலங்கியைத் தொட்ட பெண் (40-56)

9 ஊழியம் சம்பந்தமாக 12 பேருக்கும் அறிவுரைகள் (1-6)
இயேசுவை நினைத்து ஏரோது குழம்புகிறான் (7-9)
5,000 பேருக்கு இயேசு உணவு கொடுக்கிறார் (10-17)
இயேசுவே கிறிஸ்து என்று பேதுரு அடையாளம் காட்டுகிறார் (18-20)
இயேசு தன் மரணத்தைப் பற்றி முன்னறிவிக்கிறார் (21, 22)
உண்மையான சீஷர்கள் (23-27)
இயேசுவின் தோற்றம் மாறுகிறது (28-36)
பேய் பிடித்த பையன் குணமாக்கப்படுகிறான் (37-43அ)
தன் மரணத்தைப் பற்றி இயேசு மறுபடியும் சொல்கிறார் (43ஆ-45)
யார் உயர்ந்தவர் என்று சீஷர்கள் விவாதம் (46-48)
நமக்கு விரோதமாக இல்லாதவன் நம் பக்கம் இருக்கிறான் (49, 50)
சமாரிய கிராமத்தார் இயேசுவை ஏற்றுக்கொள்வதில்லை (51-56)
இயேசுவைப் பின்பற்றுவது எப்படி (57-62)

10 இயேசு 70 பேரை அனுப்புகிறார் (1-12)
மனம் திருந்தாத நகரங்களுக்குக் கேடு (13-16)
70 பேர் திரும்பி வருகிறார்கள் (17-20)

தாழ்மையானவர்களுக்குத் தயவு காட்டியதற்காக இயேசு தன் தகப்பனைப் புகழ்கிறார் (21-24)
அன்பு காட்டிய சமாரியனைப் பற்றிய உவமை (25-37)
மார்த்தாள், மரியாளை இயேசு சந்திக்கிறார் (38-42)

11 ஜெபம் செய்வது எப்படி (1-13)
மாதிரி ஜெபம் (2-4)
கடவுளுடைய சக்தியால் பேய்கள் விரட்டப்படுகின்றன (14-23)
பேய் திரும்பி வருகிறது (24-26)
உண்மையான சந்தோஷம் (27, 28)
யோனாவின் அடையாளம் (29-32)
உடலின் விளக்கு (33-36)
வெளிவேஷம் போடுகிற மதத் தலைவர்களுக்குக் கேடுதான் வரும் (37-54)

12 பரிசேயர்களின் புளித்த மாவு (1-3)
கடவுளுக்குப் பயப்படுங்கள், மனிதர்களுக்கு அல்ல (4-7)
கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது (8-12)
புத்தியில்லாத பணக்காரனைப் பற்றிய உவமை (13-21)
கவலைப்படுவதை நிறுத்துங்கள் (22-34)
சிறுமந்தை (32)
விழித்திருங்கள் (35-40)
உண்மையுள்ள நிர்வாகி, உண்மையற்ற நிர்வாகி (41-48)
சமாதானம் அல்ல, பிரிவினை (49-53)
காலத்தின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளுங்கள் (54-56)
வழக்கைத் தீர்ப்பது (57-59)

13 மனம் திருந்தவில்லை என்றால் அழிவு (1-5)
கனி கொடுக்காத அத்தி மரத்தின் உவமை (6-9)
கூன் விழுந்த பெண் ஓய்வுநாளில் குணமாக்கப்படுகிறாள் (10-17)
கடுகு விதை மற்றும் புளித்த மாவு பற்றிய உவமைகள் (18-21)
இடுக்கமான கதவு வழியாக நுழைய முயற்சி தேவை (22-30)
“அந்தக் குள்ளநரி” ஏரோது (31-33)
எருசலேமை நினைத்து இயேசு புலம்புகிறார் (34, 35)

14 நீர்க்கோவை நோயாளி ஓய்வுநாளில் குணமாக்கப்படுகிறான் (1-6)
தாழ்மையான விருந்தாளியாக இருங்கள் (7-11)
கைமாறு செய்ய முடியாதவர்களை அழையுங்கள் (12-14)
சாக்குப்போக்கு சொன்ன விருந்தாளிகளைப் பற்றிய உவமை (15-24)
சீஷராவதற்குச் செய்ய வேண்டிய தியாகங்கள் (25-33)
சுவை இழந்த உப்பு (34, 35)

15 காணாமல்போன ஆட்டைப் பற்றிய உவமை (1-7)
தொலைந்துபோன காசைப் பற்றிய உவமை (8-10)
காணாமல்போன மகனைப் பற்றிய உவமை (11-32)

16 அநீதியான நிர்வாகியைப் பற்றிய உவமை (1-13)
‘சின்ன விஷயத்தில் உண்மையுள்ளவன் பெரிய விஷயத்திலும் உண்மையுள்ளவன்’ (10)
திருச்சட்டமும் கடவுளின் அரசாங்கமும் (14-18)
பணக்காரனையும் லாசருவையும் பற்றிய உவமை (19-31)

17 பாவம் செய்தல், மன்னிப்பு, விசுவாசம் (1-6)
ஒன்றுக்கும் உதவாத அடிமைகள் (7-10)
10 தொழுநோயாளிகள் குணமாக்கப்படுகிறார்கள் (11-19)
கடவுளுடைய அரசாங்கத்தின் வருகை (20-37)
கடவுளுடைய அரசாங்கம் “உங்கள் மத்தியிலேயே இருக்கிறது” (21)
“லோத்துவின் மனைவியை நினைத்துப் பாருங்கள்” (32)

18 விடாப்பிடியாக நியாயம் கேட்ட விதவையைப் பற்றிய உவமை (1-8)
பரிசேயனும் வரி வசூலிப்பவனும் (9-14)
இயேசுவும் பிள்ளைகளும் (15-17)
பணக்காரத் தலைவனின் கேள்வி (18-30)
தன் மரணத்தைப் பற்றி இயேசு மறுபடியும் சொல்கிறார் (31-34)
பார்வையில்லாத பிச்சைக்காரனுக்குப் பார்வை கிடைக்கிறது (35-43)

19 சகேயுவை இயேசு சந்திக்கிறார் (1-10)
10 மினாக்களைப் பற்றிய உவமை (11-27)
இயேசுவின் வெற்றி பவனி (28-40)
எருசலேமைப் பார்த்து இயேசு அழுகிறார் (41-44)
ஆலயத்தை இயேசு சுத்தப்படுத்துகிறார் (45-48)

20 இயேசுவின் அதிகாரத்தைப் பற்றிய கேள்வி (1-8)
கொலைவெறி பிடித்த தோட்டக்காரர்களைப் பற்றிய உவமை (9-19)
கடவுளும் ரோம அரசனும் (20-26)
உயிர்த்தெழுதல் பற்றிய கேள்வி (27-40)
கிறிஸ்து, தாவீதின் மகனா? (41-44)
வேத அறிஞர்களைப் பற்றிய எச்சரிக்கை (45-47)

21 ஏழை விதவையின் இரண்டு காசுகள் (1-4)
எதிர்காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களுக்கு அடையாளம் (5-36)
போர்கள், பெரிய நிலநடுக்கங்கள், கொள்ளைநோய்கள், பஞ்சங்கள் (10, 11)
எருசலேமைப் படைகள் சுற்றிவளைத்திருக்கும் (20)
மற்ற தேசத்தாருக்குக் குறிக்கப்பட்ட காலங்கள் (24)
மனிதகுமாரனின் வருகை (27)
அத்தி மரத்தைப் பற்றிய உவமை (29-33)
விழித்திருங்கள் (34-36)
ஆலயத்தில் இயேசு கற்பிக்கிறார் (37, 38)

22 இயேசுவைக் கொல்ல குருமார்களின் திட்டம் (1-6)
கடைசி பஸ்காவுக்கு ஏற்பாடுகள் (7-13)
எஜமானின் இரவு விருந்து (14-20)
"என்னைக் காட்டிக்கொடுப்பவன் என்னோடு சாப்பிட உட்கார்ந்திருக்கிறான்" (21-23)
யார் உயர்ந்தவர் என்ற கடும் வாக்குவாதம் (24-27)
பரலோக அரசாங்கத்துக்காக இயேசு செய்யும் ஒப்பந்தம் (28-30)
தன்னைத் தெரியாதென்று பேதுரு சொல்லிவிடுவாரென இயேசு முன்னறிவிக்கிறார் (31-34)
தயாராக இருப்பது அவசியம்; இரண்டு வாள்கள் (35-38)
ஒலிவ மலையில் இயேசு ஜெபம் செய்கிறார் (39-46)
இயேசு கைது செய்யப்படுகிறார் (47-53)
இயேசுவைத் தெரியாதென்று பேதுரு சொல்கிறார் (54-62)
இயேசு கேலி செய்யப்படுகிறார் (63-65)
நியாயசங்கத்தில் விசாரணை (66-71)

23 பிலாத்துவிடமும் ஏரோதுவிடமும் இயேசு கொண்டுபோகப்படுகிறார் (1-25)
மரக் கம்பத்தில் இயேசுவும் இரண்டு குற்றவாளிகளும் (26-43)
"நீ என்னோடு பூஞ்சோலையில் இருப்பாய்" (43)
இயேசுவின் மரணம் (44-49)
இயேசு அடக்கம் செய்யப்படுகிறார் (50-56)

24 இயேசு உயிரோடு எழுப்பப்படுகிறார் (1-12)
எம்மாவுக்குப் போகிற வழியில் (13-35)
இயேசு தன் சீஷர்களுக்குத் தோன்றுகிறார் (36-49)
இயேசு பரலோகத்துக்குப் போகிறார் (50-53)

---

1 மாண்புமிகு தெயோப்பிலு[a] அவர்களே, நாம் முழுமையாக நம்பு
கிற உண்மைச் சம்பவங்களைத் தொகுத்து எழுத நிறைய பேர் அதிக
முயற்சி எடுத்திருக்கிறார்கள்.[b] **2** கடவுளுடைய செய்தியை அறிவிக்கிற
ஊழியர்கள் தாங்கள் ஆரம்பத்திலிருந்து நேரில் பார்த்த[c] அந்த உண்
மைச் சம்பவங்களை நம்மிடம் சொன்னார்கள்.[d] **3** எல்லா விஷயங்களை
யும் ஆரம்பத்திலிருந்தே நான் துல்லியமாக ஆராய்ந்திருப்பதால், நானும்
கூட அவற்றை சரியான வரிசையில் உங்களுக்கு எழுதத் தீர்மானித்தேன்.
4 வாய்மொழியாக உங்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்ட விஷயங்கள்[e]
எவ்வளவு நம்பகமானவை என்பதை இந்தப் பதிவிலிருந்து நீங்கள் முழு
மையாகத் தெரிந்துகொள்வீர்கள்.

5 யூதேயாவின் ராஜாவாகிய ஏரோதுவின்* காலத்தில்,[f] சகரியா என்ற
ஆலய குரு ஒருவர் இருந்தார்; அவர் அபியா[g] என்ற குருத்துவப் பிரிவைச்

அதி. 1
a அப் 1:1
b யோவா 20:30, 31
c யோவா 15:27 1பே 5:1 2பே 1:16
d எபி 2:3
e யோவா 20:30, 31
f மத் 2:1
g 1நா 24:3, 10

1:5 *சொல் பட்டியலைப் பாருங்கள்.

சேர்ந்தவர்; அவருடைய மனைவியின் பெயர் எலிசபெத்; அவள்
ஆரோனின் வம்சத்தில் வந்தவள். **6** அவர்கள் இரண்டு பேரும் யெகோ
வாவுக்கு* முன்னால் நீதியுள்ளவர்களாக இருந்தார்கள், குற்றமற்றவர்க
ளாக நடந்தார்கள்; ஏனென்றால், அவருடைய எல்லா கட்டளைகளுக்கும்
சட்டங்களுக்கும் அவர்கள் கீழ்ப்படிந்தார்கள். **7** ஆனால், அவர்களுக்
குக் குழந்தை இல்லை; ஏனென்றால், எலிசபெத் கருத்தரிக்க முடியாதவளாக
இருந்தாள்; அதோடு, அவர்கள் இரண்டு பேரும் ரொம்ப வயதானவர்களாக
இருந்தார்கள்.

8 சகரியாவுடைய குருத்துவப் பிரிவின்[a] முறை வந்தபோது, அவர் கட
வுளுக்கு முன்னால் குருவாகச் சேவை செய்துகொண்டிருந்தார். **9** குருத்
துவப் பணியின் வழக்கப்படி, தூபம் காட்டுவதற்கு[b] சகரியாவின் முறை வந்
தபோது அவர் யெகோவாவின்* ஆலயத்துக்குள்[c] போனார். **10** தூபம்
காட்டப்படுகிற நேரத்தில், திரண்டு வந்திருந்த மக்கள் எல்லாரும் வெளியே
ஜெபம் செய்துகொண்டிருந்தார்கள். **11** அப்போது, தூபபீடத்தின் வலது
பக்கத்தில் சகரியாவுக்கு முன்னால் யெகோவாவின்* தூதர் வந்து நின்
றார். **12** அவரைப் பார்த்ததும் சகரியா குழப்பமும் பயமும் அடைந்
தார். **13** ஆனால் தேவதூதர் அவரிடம், “சகரியாவே, பயப்படாதே; உன்னு
டைய மன்றாட்டைக் கடவுள் கேட்டார்; உன் மனைவி எலிசபெத்துக்கு ஒரு
மகன் பிறப்பான்; நீ அவனுக்கு யோவான் என்று பெயர் வைக்க வேண்டும்.[d]
14 நீ சந்தோஷத்தில் திக்குமுக்காடிப்போவாய்; அவனுடைய பிறப்பால்
நிறைய பேர் சந்தோஷப்படுவார்கள்.[e] **15** யெகோவாவின்* பார்வையில்
அவன் உயர்ந்தவனாக இருப்பான்.[f] திராட்சமதுவையோ வேறெந்த மது
வையோ அவன் குடிக்கக் கூடாது.[g] தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே
கடவுளுடைய சக்தியால் அவன் நிரப்பப்பட்டிருப்பான்.[h] **16** இஸ்ரவேலர்
களில் நிறைய பேரை அவர்களுடைய கடவுளாகிய யெகோவாவின்*
பக்கம் மறுபடியும் கொண்டுவருவான்.[i] **17** அதோடு, கடவுளுக்கு முன்னே
போய், எலியாவுக்கு இருந்த அதே ஆர்வத்துடிப்போடும் வல்லமையோடும்
செயல்படுவான்;[j] தகப்பன்களின் உள்ளத்தைப் பிள்ளைகளுடைய உள்ளத்
தைப் போல மாற்றுவான்;#[k] கீழ்ப்படியாதவர்களைத் திருத்தி நீதிமான்க
ளைப் போல் ஞானமாக நடப்பதற்கு உதவி செய்வான்; இப்படி, யெகோவா
வுக்கு* ஏற்ற ஒரு ஜனத்தைத் தயார்படுத்துவான்”[l] என்று சொன்னார்.

18 சகரியா அந்தத் தேவதூதரிடம், “இதை நான் எப்படி நம்புவேன்?
நான் வயதானவன், என் மனைவிக்கும் வயதாகிவிட்டதே” என்று சொன்
னார். **19** அதற்கு அந்தத் தேவதூதர், “நான் காபிரியேல்;[m] கடவுளுடைய
முன்னிலையில் நிற்பவன்;[n] உன்னிடம் பேசுவதற்கும் இந்த நல்ல செய்தியை
உனக்குச் சொல்வதற்கும் அனுப்பப்பட்டேன். **20** இதோ! குறித்த காலத்
தில் நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ நம்பாததால், இவையெல்
லாம் நடக்கும் நாள்வரை பேச முடியாமல் ஊமையாக இருப்பாய்” என்று
சொன்னார். **21** இதற்கிடையே, சகரியாவுக்காக மக்கள் காத்துக்கொண்டி
ருந்தார்கள்; ரொம்ப நேரமாகியும் அவர் ஆலயத்திலிருந்து வெளியே வரா
ததால் அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். **22** அவர் வெளியே வந்தபோது
அவர்களிடம் அவரால் பேச முடியவில்லை; அதனால், ஆலயத்துக்குள்

அதி. 1
a 1நா 24:1, 19; 2நா 8:14; 2நா 31:2
b யாத் 30:7, 8
c யாத் 40:5
d லூ 1:59, 60
e லூ 1:57, 58
f லூ 7:28
g எண் 6:2, 3; மத் 11:18
h எரே 1:5; ரோ 9:10-12
i மல் 4:6
j மத் 11:13, 14; மத் 17:10-12
k மல் 4:5, 6
l ஏசா 40:3; மல் 3:1
m தானி 8:16; தானி 9:21; லூ 1:26, 27
n எபி 1:7, 14

1:6, 9, 11, 15-17 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:17** #வே.வா., “தகப்பன்களின் உள்ளத்தைப் பிள்ளைகளிடம் திருப்புவான்.”

அவர் ஓர் அற்புதக் காட்சியை* பார்த்திருக்க வேண்டுமென்று அவர்கள்
புரிந்துகொண்டார்கள்; அவர் அவர்களிடம் சைகைகளாலேயே பேசிவந்தார்,
அவருக்குப் பேச்சே வரவில்லை. **23** பரிசுத்த சேவை செய்கிற நாட்கள்
முடிவடைந்தபோது, அவர் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பிப் போனார்.

24 சில நாட்களுக்குப் பின்பு, அவருடைய மனைவி எலிசபெத் கர்ப்பமா
னாள்; ஐந்து மாதங்களுக்கு வெளியே போகாமல் வீட்டிலேயே இருந்தாள்.
25 "யெகோவா* என்னை இப்போது ஆசீர்வதித்திருக்கிறார்; என்னுடைய
நிலைமையைப் பார்த்து, மக்கள் மத்தியில் எனக்கு ஏற்பட்ட அவமானத்தை
நீக்கிவிட்டார்"[a] என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டாள்.

26 ஆறாவது மாதத்தில், கலிலேயாவில் இருக்கிற நாசரேத் என்ற நக
ரத்தில் குடியிருந்த ஒரு கன்னிப்பெண்ணிடம் காபிரியேல் தேவதூதரைக்[b]
கடவுள் அனுப்பினார். **27** தாவீதின் வம்சத்தில் வந்த யோசேப்புக்கும்
அவளுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது; அந்தக் கன்னிப்பெண்
ணின்[c] பெயர் மரியாள்.[d] **28** மரியாளிடம் தேவதூதர் வந்து, "கடவுளுக்கு
மிகவும் பிரியமானவளே, வாழ்த்துக்கள்! யெகோவா* உன்னோடு இருக்கி
றார்" என்று சொன்னார். **29** அவர் சொன்னதைக் கேட்டு அவள் மிகவும்
கலக்கமடைந்து, அந்த வாழ்த்துதலுக்கு என்ன அர்த்தம் என்று யோசிக்க
ஆரம்பித்தாள். **30** அதனால் தேவதூதர் அவளிடம், "மரியாளே, பயப்ப
டாதே; நீ கடவுளுக்குப் பிரியமானவள். **31** இதோ! நீ கர்ப்பமாகி ஒரு மக
னைப் பெற்றெடுப்பாய்;[e] அவருக்கு இயேசு என்று நீ பெயர் வைக்க வேண்
டும்.[f] **32** அவர் உயர்ந்தவராக இருப்பார்;[g] உன்னதமான கடவுளின் மகன்
என்று அழைக்கப்படுவார்;[h] அவருடைய தந்தையான தாவீதின் சிம்மாச
னத்தைக் கடவுளாகிய யெகோவா* அவருக்குக் கொடுப்பார்.[i] **33** அவர்
ராஜாவாக யாக்கோபுடைய வம்சத்தை என்றென்றும் ஆட்சி செய்வார்;
அவருடைய ஆட்சிக்கு முடிவே இருக்காது"[j] என்று சொன்னார்.

34 அப்போது மரியாள், "இது எப்படி நடக்கும்? நான் கன்னிப்பெண்
ணாக இருக்கிறேனே"*[k] என்றாள். **35** அதற்கு அவர், "கடவுளுடைய சக்தி
உன்மேல் வரும்;[l] உன்னதமான கடவுளுடைய வல்லமை உன்மேல் தங்கும்.
அதனால், உனக்குப் பிறக்கப்போகும் குழந்தை பரிசுத்தமானது என்றும்,[m]
கடவுளுடைய மகன் என்றும் அழைக்கப்படும்.[n] **36** இதோ! உன் சொந்தக்
காரப் பெண் எலிசபெத்தும் வயதான காலத்தில் ஒரு மகனை வயிற்றில் சுமக்
கிறாள்; மலடி என்று அழைக்கப்பட்ட அவளுக்கு இது ஆறாவது மாதம்.
37 கடவுளால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதி* எதுவுமே இல்லை"[o]
என்று சொன்னார். **38** அதற்கு மரியாள், "இதோ! நான் யெகோவாவின்*
அடிமைப் பெண்! நீங்கள் சொன்னபடியே எனக்கு நடக்கட்டும்" என்றாள்.
அப்போது, தேவதூதர் அவளைவிட்டுப் போனார்.

39 மரியாள் உடனடியாகப் புறப்பட்டு, மலைப்பகுதியில் இருக்கிற யூதா
விலுள்ள ஒரு நகரத்துக்கு வேகமாகப் போனாள். **40** அவள் சகரியாவின்
வீட்டுக்குள் போய், எலிசபெத்துக்கு வாழ்த்துச் சொன்னாள். **41** மரியாள்
சொன்ன வாழ்த்தை எலிசபெத் கேட்டபோது, அவளுடைய வயிற்றிலிருந்த
குழந்தை துள்ளியது; எலிசபெத் கடவுளுடைய சக்தியால் நிரப்பப்பட்டு,

---

1:22 *வே.வா., "ஒரு தரிசனத்தை." **1:25, 28, 32, 38** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:34** *வே.வா., "நான் ஒரு ஆணோடு உறவுகொண்டதே இல்லையே." **1:37** *வே.வா., "நிறைவேற்ற முடியாதது."

அதி. 1
a ஆதி 30:22, 23; 1சா 1:10, 11
b தானி 8:16; லூ 1:19
c ஏசா 7:14
d மத் 1:18
e கலா 4:4
f மத் 1:21-23; லூ 2:21
g பிலி 2:9-11; 1தீ 6:15
h மத் 27:54; யோவா 1:49
i 2சா 7:8, 12; சங் 132:11; ஏசா 9:7; ஏசா 11:1, 10; எரே 23:5; மத் 1:1
j தானி 2:44; தானி 7:13, 14; எபி 1:8
k ஏசா 7:14; மத் 1:24, 25
l மத் 1:18, 20
m யோவா 6:68, 69
n மத் 14:33; யோவா 1:32, 34; யோவா 20:31
o ஆதி 18:14; மத் 19:26

42 “நீ பெண்களிலேயே மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவள்; உன் வயிற்றி
லுள்ள குழந்தையும் ஆசீர்வதிக்கப்பட்டது! 43 என் எஜமானுடைய தாய்
என்னைப் பார்க்க வருவதற்கு நான் என்ன பாக்கியம் செய்தேன்!
44 இதோ! நீ வாழ்த்திய சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றி
லுள்ள குழந்தை சந்தோஷத்தில் துள்ளியது. 45 யெகோவாவின்* வார்த்
தையை நம்பிய நீ சந்தோஷமானவள்; அவர் உனக்குச் சொன்னதெல்லாம்
முழுமையாக நிறைவேறும்” என்று உரத்த குரலில் சொன்னாள்.

46 அப்போது மரியாள், “யெகோவாவை* நான் மகிமைப்படுத்துகி
றேன்.[a] 47 என் மீட்பராகிய கடவுளை நினைத்து என் உள்ளம் மகிழ்ச்சி
யில் பொங்குகிறது.[b] 48 ஏனென்றால், அவர் தன்னுடைய அடிமைப்
பெண்ணின் தாழ்ந்த நிலையைக் கவனித்திருக்கிறார்.[c] இதுமுதல் எல்லா
தலைமுறையினரும் என்னைச் சந்தோஷமானவள்[d] என்று புகழ்வார்கள்.
49 ஏனென்றால், வல்லமையுள்ள கடவுள் எனக்காக அற்புதமான செயல்க
ளைச் செய்திருக்கிறார்; அவருடைய பெயர் பரிசுத்தமானது.[e] 50 அவருக்
குப் பயந்து நடப்பவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாக அவர்
இரக்கம் காட்டுகிறார்.[f] 51 அவர் தன்னுடைய கைகளால் வல்லமை
யான செயல்களைச் செய்திருக்கிறார். இதயத்தில் கர்வமுள்ளவர்களைச் சித
றிப்போக வைத்திருக்கிறார்.[g] 52 அதிகாரமுள்ளவர்களைச் சிம்மாசனங்க
ளிலிருந்து இறக்கியிருக்கிறார்,[h] தாழ்ந்தவர்களை உயர்த்தியிருக்கிறார்.[i]
53 ஏழைகளுக்கு* நல்ல நல்ல காரியங்களைக் கொடுத்து முழுமையாகத்
திருப்திப்படுத்தியிருக்கிறார்;[j] பணக்காரர்களை வெறுங்கையோடு அனுப்பி
யிருக்கிறார். 54 ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் என்றென்றும்
இரக்கம் காட்டுவதாக[k] நம்முடைய முன்னோர்களுக்குக் கொடுத்த வாக்குறு
தியை நினைத்துப் பார்த்து,[l] 55 தன்னுடைய ஊழியனான இஸ்ரவேலுக்கு
உதவி செய்திருக்கிறார்” என்று சொன்னாள். 56 மரியாள் சுமார் மூன்று
மாதங்கள் அவளோடு தங்கிவிட்டு, தன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

57 எலிசபெத்துக்குப் பிரசவ நேரம் வந்தது, அவள் ஒரு மகனைப்
பெற்றெடுத்தாள். 58 அவளுக்கு யெகோவா* மிகுந்த இரக்கம் காட்டி
யதை அக்கம்பக்கத்தாரும் சொந்தக்காரர்களும் கேள்விப்பட்டபோது, அவ
ளோடு சேர்ந்து சந்தோஷப்பட்டார்கள்.[m] 59 எட்டாம் நாளில் அந்தக்
குழந்தைக்கு விருத்தசேதனம் செய்வதற்காக[n] அவர்கள் எல்லாரும் கூடிவந்
தார்கள்; அதற்கு சகரியா என்று அதன் அப்பாவின் பெயரையே வைக்க
லாம் என்று நினைத்தார்கள். 60 ஆனால் குழந்தையின் அம்மா, “வேண்
டாம்! இவனுக்கு யோவான் என்று பெயர் வைக்க வேண்டும்” என்று
சொன்னாள். 61 அதற்கு அவர்கள், “உன் சொந்தக்காரர்களில் யாருக்
குமே இந்தப் பெயர் இல்லையே” என்று சொன்னார்கள். 62 பின்பு,
குழந்தைக்கு என்ன பெயர் வைக்க விரும்புகிறார் என்று அதன் அப்பா
விடம் சைகையால் கேட்டார்கள். 63 அவர் ஒரு பலகையைக் கொண்டு
வரச் சொல்லி, “யோவான் என்று பெயர் வைக்க வேண்டும்”[o] என்று
எழுதினார். அதைப் பார்த்து எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். 64 அந்த
நொடியே அவருக்குப் பேச்சு வந்துவிட்டது;[p] அவர் கடவுளைப் போற்றிப்
புகழ ஆரம்பித்தார். 65 அக்கம்பக்கத்தார் எல்லாரும் பயந்துபோனார்கள்;

1:45, 46, 58 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:53** * வே.வா., “பசியில் இருக்கிறவர்
களுக்கு.”

அதி. 1
a 1சா 2:1
b 2சா 22:3; ஏசா 43:3; ஆப 3:18; தீத் 1:3; யூ 25
c 1சா 1:10, 11
d லூ 11:27
e சங் 71:19; சங் 111:9
f சங் 103:17
g 2சா 22:28
h யோபு 12:19
i 1சா 2:7
j 1சா 2:5; சங் 34:10; சங் 107:9
k சங் 98:3; ஏசா 41:8, 9
l ஆதி 17:19; மீ 7:20; கலா 3:16
m லூ 1:14
n ஆதி 17:10, 12; லேவி 12:2, 3
o லூ 1:13
p லூ 1:20

நடந்த விஷயங்களெல்லாம் யூதேயா மலைப்பகுதியெங்கும் பேசப்பட்
டது. **66** அவற்றைக் கேள்விப்பட்ட எல்லாரும் அவற்றை மனதில் வைத்
துக்கொண்டு, “இந்தப் பிள்ளை எப்படிப்பட்ட ஆளாக ஆவானோ?” என்று
சொல்லிக்கொண்டார்கள். உண்மையிலேயே, யெகோவா* அந்தக் குழந்தை
யோடு இருந்தார்.#

67 அதன் அப்பாவாகிய சகரியா கடவுளுடைய சக்தியால் நிரப்
பப்பட்டு இப்படித் தீர்க்கதரிசனம் சொன்னார்: **68** “இஸ்ரவேலின் கடவுளா
கிய யெகோவா* புகழப்படட்டும்.[a] ஏனென்றால், அவர் தன்னுடைய
மக்கள்மேல் கவனத்தைத் திருப்பி, அவர்களுக்கு விடுதலை கொடுத்தி
ருக்கிறார்.[b] **69** பண்டைய காலம்முதல் தன்னுடைய பரிசுத்த தீர்க்கதரிசி
கள் மூலம் சொன்னபடியே,[c] **70** பலம்படைத்த மீட்பர் ஒருவரை*[d]
தன்னுடைய ஊழியனாகிய தாவீதின் வம்சத்தில்[e] நமக்காக வர வைத்திருக்
கிறார்; **71** நம் எதிரிகளிடமிருந்தும் நம்மை வெறுக்கிற எல்லாரிடமிருந்
தும் மீட்பதற்காகவும்,[f] **72** நம் முன்னோர்களுக்கு இரக்கம் காட்டுவதாக
அவர் கொடுத்த வாக்குறுதியை[g] நிறைவேற்றுவதற்காகவும் அந்த மீட்பரை
வர வைத்திருக்கிறார். **73** நம் மூதாதையான ஆபிரகாமுக்கு ஆணை
யிட்டுக் கொடுத்த பரிசுத்த ஒப்பந்தத்தை[h] நினைத்துப் பார்ப்பதற்காக
வும், **74** ஆணையிட்டுக் கொடுத்தபடி, எதிரிகளுடைய கைகளிலிருந்து
நம்மைக் காப்பாற்றி, **75** நாம் உயிரோடிருக்கிற காலமெல்லாம் உண்மை
யோடும்* நீதியோடும் தைரியத்தோடும் அவர்முன் பரிசுத்த சேவை செய்
கிற பாக்கியத்தை நமக்குக் கொடுப்பதற்காகவும் அவரை வர வைத்திருக்
கிறார். **76** குழந்தையே, நீ உன்னதமான கடவுளுடைய தீர்க்கதரிசி என்று
அழைக்கப்படுவாய்; யெகோவாவுக்கு* முன்னே போய் அவருக்காக வழி
களைத் தயார்படுத்துவாய்.[i] **77** நம் கடவுள் காட்டுகிற கரிசனையால் அவ
ருடைய மக்களுக்குப் பாவ மன்னிப்பின் மூலம் கிடைக்கிற மீட்பைப்
பற்றிச் சொல்வாய்.[j] **78** இந்தக் கரிசனையால், சூரிய உதயத்தைப் போன்ற
ஓர் ஒளி மேலே இருந்து நம்மிடம் வந்து, **79** இருட்டிலும் மரணத்தின் நிழ
லிலும் உட்கார்ந்திருப்பவர்களுக்கு வெளிச்சத்தைத் தரும்;[k] அதோடு, நம்
முடைய கால்களைச் சமாதான வழியில் கொண்டுபோகும்.”

80 குழந்தையாக இருந்த யோவான் வளர்ந்து ஆளானார், மனவலிமை
பெற்றார்; இஸ்ரவேலர்களுக்குப் பிரசங்கிக்க ஆரம்பிக்கும்வரை வனாந்தரத்
திலேயே வாழ்ந்துவந்தார்.

2 அந்த நாட்களில், குடிமக்கள் எல்லாரும் பெயர்ப்பதிவு செய்ய வேண்
டும் என்று ரோம அரசனாகிய* அகஸ்து கட்டளையிட்டார். **2** (இந்த
முதலாம் பெயர்ப்பதிவு, குரேனியு என்பவர் சீரியாவின் ஆளுநராக இருந்த
போது செய்யப்பட்டது.) **3** அந்தக் கட்டளையின்படி, பெயர்ப்பதிவு செய்
வதற்காக எல்லா மக்களும் தங்கள் சொந்த நகரங்களுக்குப் போனார்கள்.
4 அப்போது யோசேப்பும்கூட,[l] கலிலேயாவில் இருக்கிற நாசரேத்திலி
ருந்து யூதேயாவில் இருக்கிற தாவீதின் ஊரான பெத்லகேமுக்குப்[m]
போனார். ஏனென்றால், அவர் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவர். **5** நிச்

1:66, 68, 76 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:66** #நே.மொ., “யெகோவாவின் கை அந்தக் குழந்தையோடு இருந்தது.” **1:70** *நே.மொ., “மீட்கும் கொம்பு ஒன்றை.” சொல் பட்டியலில் “கொம்பு” என்ற தலைப்பைப் பாருங்கள். **1:75** *வே.வா., “பற்று மாறாத குணத்தோடும்.” **2:1** *நே.மொ., “சீஸராகிய.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 1
a 1ரா 1:48, சங் 41:13, சங் 72:18, சங் 106:48
b சங் 111:9, லூ 7:16
c எரே 23:5, தானி 9:24
d 1சா 2:10
e சங் 132:17
f சங் 106:10
g ஆதி 17:7, லேவி 26:42, சங் 106:45, 46
h ஆதி 22:15–18, சங் 105:8, 9, மீ 7:20
i ஏசா 40:3, மல் 3:1, மத் 3:3
j மாற் 1:4
k சங் 107:10, ஏசா 9:2, மத் 4:16

அதி. 2
l மத் 1:16
m 1சா 16:1, மீ 5:2, மத் 2:6

அதி. 2

சயிக்கப்பட்டபடியே தனக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட மரியா
ளோடு,[a] பெயர்ப்பதிவு செய்வதற்காக அவர் போனார்; அந்தச் சமயத்தில்
மரியாள் நிறைமாதக் கர்ப்பிணியாக[b] இருந்தாள். **6** அவர்கள் அந்த இடத்
தில் இருந்தபோது, அவளுக்குப் பிரசவ நேரம் வந்தது. **7** அவள் தன்னு
டைய மூத்த மகனைப் பெற்றெடுத்தாள்;[c] அந்தக் குழந்தையைத் துணிக
ளில் சுற்றி, தீவனத் தொட்டியில் படுக்க வைத்தாள்;[d] ஏனென்றால்,
சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.

8 அப்போது, அந்தப் பகுதியிலிருந்த மேய்ப்பர்கள் வயல்வெளியில்
தங்கி, ராத்திரியில் தங்களுடைய மந்தைகளைக் காவல் காத்துக்கொண்
டிருந்தார்கள். **9** திடீரென்று யெகோவாவின்* தூதர் அவர்கள் முன்னால்
வந்து நின்றார்; யெகோவாவின்* மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்
தது, அவர்கள் மிகவும் பயந்துபோனார்கள். **10** ஆனால் அந்தத் தேவதூ
தர் அவர்களிடம், “பயப்படாதீர்கள், எல்லா மக்களுக்கும் அதிக சந்தோஷத்
தைத் தருகிற நல்ல செய்தியை உங்களுக்குச் சொல்கிறேன். **11** இன்று
தாவீதின் ஊரில்[e] உங்களுக்கு ஒரு மீட்பர்[f] பிறந்திருக்கிறார், அவர்தான்
எஜமானாகிய கிறிஸ்து.[g] **12** அந்தக் குழந்தை துணிகளில் சுற்றப்பட்டு,
தீவனத் தொட்டியில் படுக்க வைக்கப்பட்டிருப்பதைப் பார்ப்பீர்கள். இது
தான் உங்களுக்கு அடையாளம்” என்று சொன்னார். **13** அந்த நொடியே
திரளான தேவதூதர்கள்* அந்தத் தேவதூதரோடு தோன்றி,[h] **14** “பரலோ
கத்தில் இருக்கிற கடவுளுக்கு மகிமையும், பூமியில் அவருடைய அனுக்கி
ரகம் பெற்ற மக்களுக்குச் சமாதானமும் உண்டாகட்டும்” என்று சொல்லி கட
வுளைப் புகழ்ந்தார்கள்.

15 தேவதூதர்கள் அவர்களைவிட்டுப் பரலோகத்துக்குப் போன பின்பு,
மேய்ப்பர்கள் ஒருவருக்கொருவர், “வாருங்கள், நாம் உடனே பெத்லகே
முக்குப் போய், யெகோவா* நமக்குச் சொன்ன இந்தக் காரியத்தைப்
பார்ப்போம்” என்று சொல்லிக்கொண்டார்கள். **16** பின்பு, வேகமாகப்
போய் மரியாளையும், யோசேப்பையும், தீவனத் தொட்டியில் படுக்க
வைக்கப்பட்டிருந்த குழந்தையையும் பார்த்தார்கள். **17** அப்போது, குழந்
தையைப் பற்றித் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்
கள். **18** மேய்ப்பர்கள் சொன்ன விஷயங்களைக் கேட்ட எல்லாரும் மிக
வும் ஆச்சரியப்பட்டார்கள். **19** அந்த விஷயங்களையெல்லாம் மரியாள்
தன் இதயத்தில் பதிய வைத்துக்கொண்டு, அவற்றைப் பற்றி ஆழ்ந்து
யோசித்தாள்.[i] **20** மேய்ப்பர்கள் தாங்கள் பார்த்த விஷயங்களுக்காகவும்
கேட்ட விஷயங்களுக்காகவும் கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே
திரும்பிப் போனார்கள். அவர்களுக்குச் சொல்லப்பட்டபடியே அதெல்லாம்
நடந்திருந்தது.

21 குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டிய எட்டாவது நாள்[j]
வந்தது; அது தாயின் வயிற்றில் உருவாவதற்கு முன்பு தேவதூதர் சொல்லி
யிருந்தபடியே அதற்கு இயேசு என்ற பெயர் வைக்கப்பட்டது.[k]

22 மோசேயின் திருச்சட்டப்படி அவர்கள் தூய்மைச் சடங்கு செய்வதற்
கான சமயம் வந்தபோது,[l] அந்தக் குழந்தையை யெகோவாவின்* சன்னி
தியில் காட்டுவதற்காக அதை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்.

2:9, 15, 22 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:13** *நே.மொ., “மாபெரும் பர
லோகப் படை.”

a லூ 1:26, 27
b மத் 1:18
c மத் 1:25
d ஏசா 53:2
e 1சா 20:6
f ஏசா 9:6
g அப் 2:36 பிலி 2:11
h தானி 7:10 வெளி 5:11
i லூ 2:51
j ஆதி 17:10, 12 லேவி 12:2, 3
k மத் 1:20, 21 லூ 1:30, 31
l லேவி 12:2, 4

23 ஏனென்றால், “மூத்த மகன் ஒவ்வொருவனும் யெகோவாவுக்கு* அர்ப்
பணிக்கப்பட்டவனாக# இருக்க வேண்டும்” என்று யெகோவாவின்*
திருச்சட்டத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[a] **24** அதோடு, “ஒரு ஜோடி காட்
டுப்புறாவை அல்லது இரண்டு புறாக் குஞ்சுகளை”[b] பலியாகக் கொடுக்க
வேண்டும் என்று யெகோவாவின்* திருச்சட்டத்தில் சொல்லப்பட்டபடியே
செய்தார்கள்.

25 அப்போது, எருசலேமில் சிமியோன் என்பவர் இருந்தார்; அவர் நீதி
மான், பக்தியுள்ளவர், இஸ்ரவேலுக்கு ஆறுதல் கிடைப்பதற்காகக் காத்திருந்
தவர்,[c] கடவுளுடைய சக்தியைப் பெற்றிருந்தவர். **26** யெகோவாவுடைய*
கிறிஸ்துவைப் பார்ப்பதற்கு முன்பு அவர் இறந்துபோக மாட்டார் என்று
கடவுளுடைய சக்தியால் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. **27** அந்
தச் சக்தியின் தூண்டுதலால் ஆலயத்துக்குள் அவர் வந்தார். அதே நேரத்
தில், திருச்சட்டத்தின்படி செய்ய வேண்டியவற்றைச் செய்வதற்கு, பிள்ளை
யாகிய இயேசுவைத் தூக்கிக்கொண்டு அதனுடைய அப்பாவும் அம்மாவும்
உள்ளே வந்தார்கள்;[d] **28** அவர் அந்தப் பிள்ளையைத் தன் கையில்
வாங்கிக்கொண்டு, கடவுளைப் புகழ்ந்து, **29** “உன்னதப் பேரரசரே, உங்க
ளுடைய வார்த்தையின்படியே, உங்கள் ஊழியன் நிம்மதியாகக் கண்மூடுவ
தற்கு வழிசெய்துவிட்டீர்கள்.[e] **30** ஏனென்றால், எல்லா மக்களும் பார்க்கும்
படி[f] நீங்கள் ஏற்பாடு செய்திருக்கிற மீட்பரை[g] **31** இப்போது என்
கண்களால் பார்த்துவிட்டேன். **32** இவரே மற்ற தேசத்தாரை மூடியிருக்
கிற இருளைப் போக்கும்[h] ஒளியாகவும்,[i] உங்கள் மக்களாகிய இஸ்ரவேலர்
களுக்கு மகிமையாகவும் இருப்பார்” என்று சொன்னார். **33** பிள்ளையைப்
பற்றிச் சொல்லப்பட்ட விஷயங்களைக் கேட்டு, அதனுடைய அப்பாவும்
அம்மாவும் ரொம்பவே ஆச்சரியப்பட்டார்கள். **34** அவர்களை சிமியோன்
ஆசீர்வதித்தார்; பின்பு, பிள்ளையின் அம்மாவான மரியாளிடம், “இதோ!
இவர் இஸ்ரவேலர்களில் பலருடைய வீழ்ச்சிக்கும்[j] எழுச்சிக்கும்[k] காரணமாக
இருப்பார், அவமதிப்புக்கு ஆளாவார்.*[l] **35** இதனால் பலருடைய இதயத்
திலிருக்கிற எண்ணங்கள் வெளிப்படுத்தப்படும்; உன் உள்ளத்தையும் நீண்ட
வாள் ஒன்று ஊடுருவிச் செல்லும்”[m] என்று சொன்னார்.

36 ஆசேர் கோத்திரத்தைச் சேர்ந்த பானுவேலின் மகளான அன்னாள்
தீர்க்கதரிசனம் சொல்லிவந்தார்; அவர் வயதானவர்; திருமணமாகி, கணவ
ரோடு ஏழு வருஷங்கள் மட்டுமே வாழ்ந்தவர். **37** அந்த 84 வயது
விதவை ஆலயத்துக்கு வராமல் இருந்ததே இல்லை; விரதமிருந்து, மன்
றாடி, இரவும் பகலும் பரிசுத்த சேவை செய்துவந்தார். **38** அவரும் அந்த
நேரத்தில் அங்கே வந்து கடவுளுக்கு நன்றி சொன்னார்; எருசலேமின் விடு
தலைக்காகக்[n] காத்திருந்த எல்லாரிடமும் அந்தப் பிள்ளையைப் பற்றிப்
பேசினார்.

39 யெகோவாவின்* திருச்சட்டத்தின்படி எல்லாவற்றையும் அவர்கள்
செய்து முடித்த பின்பு,[o] கலிலேயாவில் இருக்கிற தங்கள் சொந்த ஊரான
நாசரேத்துக்குத் திரும்பிப் போனார்கள்.[p] **40** பிள்ளை வளர்ந்து, பலம்
பெற்று, ஞானத்தால் நிறைந்து, கடவுளுடைய பிரியத்தைப் பெற்றுவந்தது.[q]

2:23, 24, 26, 39 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:23** #நே.மொ., “பரிசுத்தமானவ
னாக.” **2:34** *நே.மொ., “எதிர்த்துப் பேசப்படுகிற அடையாளமாக இருப்பார்.”

அதி. 2

a யாத் 13:2, 12; யாத் 22:29; எண் 3:13; எண் 8:17
b லேவி 12:6, 8
c ஏசா 40:1; ஏசா 49:13
d லேவி 12:6, 7
e ஆதி 46:30
f ஏசா 40:5
g ஏசா 52:10; லூ 3:4, 6; அப் 4:12
h ஏசா 11:10; ஏசா 42:6; ஏசா 49:6; அப் 13:47; அப் 26:23
i ஏசா 9:2; மத் 4:16
j ஏசா 8:14
k 1கொ 1:23, 24
l அப் 28:22; 1பே 2:7, 8
m யோவா 19:25
n ஏசா 52:9; மாற் 15:43; லூ 2:25
o லேவி 12:6
p மத் 2:23; லூ 1:26
q லூ 2:52

அதி. 2
a யாத் 23:14, 15
உபா 16:16
b யாத் 34:23
c சங் 119:99
மத் 7:28
மாற் 1:22
யோவா 7:15
d யோவா 2:16
e யாத் 20:12
உபா 5:16
எபே 6:1
கொலோ
3:20
f லூ 2:19

அதி. 3
g மத் 14:1
லூ 23:6, 7
h மத் 26:57
யோவா 18:13
யோவா 18:24
அப் 4:5, 6
i யோவா 1:6
j லூ 1:80
k மத் 3:1, 2
மாற் 1:4
லூ 1:76, 77

41 ஒவ்வொரு வருஷமும் இயேசுவின் அப்பாவும் அம்மாவும் பஸ்கா
பண்டிகைக்காக எருசலேமுக்குப் போவது வழக்கம்.[a] **42** அவருக்கு
12 வயதானபோது, வழக்கம் போலவே அந்தப் பண்டிகைக்காக அவர்கள்
எருசலேமுக்குப் போனார்கள்.[b] **43** பண்டிகை முடிந்து அவர்கள் திரும்பி
வந்துகொண்டிருந்தபோது, இயேசு எருசலேமிலேயே தங்கிவிட்டார்; அதை
அவருடைய அப்பாவும் அம்மாவும் கவனிக்கவில்லை. **44** பயணம் செய்
கிறவர்களுடைய கூட்டத்தில் இருப்பார் என்று அவர்கள் நினைத்துக்
கொண்டார்கள். அதனால், ஒருநாள் முழுவதும் பயணம் செய்த பின்புதான்
சொந்தக்காரர்கள் மத்தியிலும் தெரிந்தவர்கள் மத்தியிலும் அவரை மும்முர
மாகத் தேட ஆரம்பித்தார்கள். **45** அவரைக் கண்டுபிடிக்க முடியாததால்,
எருசலேமுக்குத் திரும்பிப் போய் அவரைத் தீவிரமாகத் தேடினார்கள்.
46 மூன்று நாட்களுக்குப் பின்பு அவரை ஆலயத்தில் கண்டுபிடித்தார்
கள்; அவர் போதகர்கள் நடுவில் உட்கார்ந்து, அவர்கள் சொல்வதைக் கவ
னித்துக்கொண்டும் அவர்களிடம் கேள்விகள் கேட்டுக்கொண்டும் இருந்
தார். **47** அவருடைய புத்திக்கூர்மையைப் பார்த்தும், அவர் சொன்ன
பதில்களைக் கேட்டும் அங்கிருந்த எல்லாருமே பிரமித்துப்போனார்கள்.[c]
48 அவருடைய அப்பாவும் அம்மாவும் அவரைப் பார்த்தபோது மிக
வும் ஆச்சரியப்பட்டார்கள்; அவருடைய அம்மா அவரிடம், “மகனே, ஏன்
இப்படிச் செய்தாய்? உன் அப்பாவும் நானும் எவ்வளவு பதற்றத்தோடு
உன்னைத் தேடிக்கொண்டிருந்தோம், தெரியுமா?” என்றாள். **49** அதற்கு
அவர், “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தகப்பனுடைய
வீட்டில் இருப்பேன் என்று உங்களுக்குத் தெரியாதா?”[d] என்று கேட்டார்.
50 ஆனால், அவர் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

51 பின்பு, அவர் அவர்களோடு நாசரேத்துக்குப் போய், தொடர்ந்து
அவர்களுக்குக் கட்டுப்பட்டு* நடந்தார்.[e] இந்த விஷயங்களையெல்லாம்
அவருடைய அம்மா தன்னுடைய இதயத்தில் நன்றாகப் பதிய வைத்துக்
கொண்டாள்.[f] **52** இயேசு வளரவளர ஞானத்தில் பெருகி, கடவுளுடைய
பிரியத்தையும் மனிதர்களுடைய பிரியத்தையும் பெற்றுவந்தார்.

3 ரோம அரசன்* திபேரியு ஆட்சி செய்த 15-ஆம் வருஷத்தில், பொந்
தியு பிலாத்து யூதேயாவின் ஆளுநராகவும், ஏரோது#[g] கலிலேயா
வின் மாகாண அதிபதியாகவும், அவனுடைய சகோதரனான பிலிப்பு
என்பவன் இத்துரேயா மற்றும் திராகொனித்தி பகுதிகளுக்கு மாகாண அதி
பதியாகவும், லிசானியா என்பவன் அபிலேனே பகுதிக்கு மாகாண அதிப
தியாகவும், **2** அன்னா என்பவர் முதன்மை குருமார்களில் ஒருவராகவும்,
காய்பா என்பவர் தலைமைக் குருவாகவும்[h] இருந்தார்கள். அப்போது, சக
ரியாவின் மகன் யோவானுக்கு[i] வனாந்தரத்தில்[j] கடவுளுடைய வார்த்தை
அருளப்பட்டது.

3 அதனால், அவர் யோர்தானைச் சுற்றியிருக்கிற எல்லா பகுதிகளுக்
கும் போய், பாவ மன்னிப்புக்காக மனம் திருந்த வேண்டுமென்றும்,
அதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமென்றும் பிரசங்
கித்துவந்தார்.[k] **4** இதைப் பற்றித்தான் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில்,

2:51 * வே.வா., “கீழ்ப்படிந்து.” **3:1** * நே.மொ., “சீஸர்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.
அதாவது, “ஏரோது அந்திப்பா.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

"'யெகோவாவுக்கு* வழியைத் தயார்படுத்துங்கள், அவருக்காகப் பாதைக
ளைச் சமப்படுத்துங்கள்.[a] **5** எல்லா பள்ளத்தாக்குகளும் நிரப்பப்பட
வேண்டும், எல்லா மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்பட வேண்டும்,
வளைந்த பாதைகள் நேராக்கப்பட வேண்டும், கரடுமுரடான பாதைகள் சம
மாக்கப்பட வேண்டும். **6** கடவுள் தரப்போகிற மீட்பை எல்லா மக்க
ளும் பார்ப்பார்கள்'[b] என்று வனாந்தரத்தில் ஒருவர் சத்தமாகச் சொல்வதைக்
கேளுங்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

7 யோவான் தன்னிடம் ஞானஸ்நானம் பெற வந்த கூட்டத்தாரைப்
பார்த்து, "விரியன் பாம்புக் குட்டிகளே, கடவுளுடைய கோபத்தின்
நாளில் தப்பித்து ஓடச் சொல்லி உங்களை எச்சரித்தது யார்?[c] **8** நீங்கள்
மனம் திருந்திவிட்டீர்கள் என்பதைச் செயலில் காட்டுங்கள்;* 'ஆபிரகாம்
எங்கள் தகப்பன்' என்று மனதுக்குள் சொல்லிக்கொள்ளாதீர்கள். கடவுள்
நினைத்தால் இந்தக் கற்களிலிருந்துகூட ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை
உண்டாக்க முடியுமென்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். **9** மரங்க
ளின் வேருக்குப் பக்கத்தில் ஏற்கெனவே கோடாலி இருக்கிறது; நல்ல பழங்
களைத் தராத எல்லா மரங்களும் வெட்டப்பட்டு நெருப்பில் போடப்படும்"[d]
என்று சொன்னார்.

10 அந்த மக்கள் அவரிடம், "அப்படியானால், நாங்கள் என்ன செய்ய
வேண்டும்?" என்று கேட்டார்கள். **11** அதற்கு அவர், "இரண்டு உடை
களை* வைத்திருப்பவன் எதுவுமே இல்லாதவனுக்கு ஒன்றைக் கொடுக்க
வேண்டும்; அதேபோல், உணவு வைத்திருப்பவனும் இல்லாதவனுக்குக்
கொடுக்க வேண்டும்"[e] என்று சொன்னார். **12** வரி வசூலிப்பவர்களும்
கூட ஞானஸ்நானம் பெற யோவானிடம் வந்து,[f] "போதகரே, நாங்கள்
என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள். **13** அதற்கு அவர், "நிர்
ணயிக்கப்பட்ட வரியைவிட அதிகமாக வசூலிக்காதீர்கள்"[g] என்று சொன்
னார். **14** அதோடு, படைவீரர்கள் அவரிடம் வந்து, "நாங்கள் என்ன
செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "யாரையும் கொடு
மைப்படுத்தியோ, யார்மீதும் பொய்க் குற்றம் சுமத்தியோ எதையும் அபக
ரிக்காதீர்கள்,[h] உங்களுக்குக் கொடுக்கப்படுவதை* வைத்துத் திருப்தியாக
இருங்கள்" என்று சொன்னார்.

15 அந்தச் சமயத்தில் மக்கள் எல்லாரும் கிறிஸ்துவை எதிர்பார்த்
துக்கொண்டிருந்தார்கள்; அதனால் தங்கள் இதயத்தில், "இவர்தான் கிறிஸ்து
வாக இருப்பாரோ?"[i] என்று யோவானைப் பற்றி யோசித்தார்கள். **16** அத
னால் யோவான் அவர்கள் எல்லாரிடமும், "நான் உங்களுக்குத் தண்ணீரால்
ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆனால், என்னைவிட வல்லவர் ஒருவர்
வரப்போகிறார், அவருடைய செருப்புகளின் வார்களை அவிழ்க்கக்கூட
எனக்குத் தகுதியில்லை.[j] அவர் உங்களுக்குக் கடவுளுடைய சக்தியா
லும் நெருப்பாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்.[k] **17** அவர் தன்னுடைய
கையில் தூற்றுவாரியை* வைத்திருக்கிறார்; அதை வைத்துத் தன்னுடைய
களத்துமேடு முழுவதையும் சுத்தப்படுத்தி, கோதுமையைத் தன்னுடைய

3:4 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:8** *நே.மொ., "மனம் திருந்தியதற்கு ஏற்ற கனி
களைக் கொடுங்கள்." **3:11** *வே.வா., "கூடுதலாக ஒரு உடையை." **3:14** *வே.வா.,
"கொடுக்கப்படும் சம்பளத்தை." **3:17** *தானியத்தைப் பதரிலிருந்து பிரிப்பதற்குப்
பயன்படுத்தப்படும் நீண்ட கைப்பிடியுள்ள ஒரு கருவி.

அதி. 3
a மத் 3:3, மாற் 1:3, யோவா 1:23
b ஏசா 40:3-5, லூ 2:30, அப் 28:28
c மத் 3:7-10, மத் 23:33
d மத் 7:19
e 1தீ 6:18, யாக் 2:15, 16, 1யோ 3:17
f மத் 21:32, லூ 7:29
g லூ 19:8
h யாத் 23:1, 7, லேவி 19:11
i யோவா 1:25
j யோவா 1:26, 27
k மத் 3:11, 12, மாற் 1:7, 8, அப் 2:1, 4

களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அணைக்க முடியாத நெருப்பில் சுட்
டெரிப்பார்" என்று சொன்னார்.

18 அவர் இன்னும் நிறைய அறிவுரைகளைக் கொடுத்து, மக்களுக்குத்
தொடர்ந்து நல்ல செய்தியைச் சொல்லிவந்தார். **19** மாகாண அதிபதியான
ஏரோதுவை யோவான் கண்டித்திருந்தார். ஏனென்றால், ஏரோது தன்னுடைய
சகோதரனின் மனைவி ஏரோதியாளை வைத்திருந்தான்; அதோடு, இன்
னும் நிறைய கெட்ட செயல்களைச் செய்துவந்திருந்தான். **20** இதெல்லாம்
போதாதென்று, யோவானையும் சிறையில் அடைத்து வைத்தான்.[a]

21 மக்கள் எல்லாரும் ஞானஸ்நானம் எடுத்த சமயத்தில், இயேசுவும்
ஞானஸ்நானம் எடுத்தார்;[b] அவர் ஜெபம் செய்துகொண்டிருந்தபோது
வானம் திறக்கப்பட்டது;[c] **22** கடவுளுடைய சக்தி புறா வடிவில் தோன்றி
அவர்மேல் இறங்கியது. அப்போது, "நீ என் அன்பு மகன்; நான் உன்னை
ஏற்றுக்கொள்கிறேன்"*[d] என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

23 இயேசு ஊழியத்தை ஆரம்பித்த சமயத்தில் அவருக்குச்[e] சுமார் 30
வயது.[f] அவர் யோசேப்பின் மகன் என்று கருதப்பட்டார்;

யோசேப்பு[g] ஹேலியின் மகன்;
24 ஹேலி மாத்தாத்தின் மகன்;
மாத்தாத் லேவியின் மகன்;
லேவி மெல்கியின் மகன்;
மெல்கி யன்னாவின் மகன்;
யன்னா யோசேப்பின் மகன்;
25 யோசேப்பு மத்தத்தியாவின் மகன்;
மத்தத்தியா ஆமோசின் மகன்;
ஆமோஸ் நாகூமின் மகன்;
நாகூம் எஸ்லியின் மகன்;
எஸ்லி நங்காயின் மகன்;
26 நங்காய் மாகாத்தின் மகன்;
மாகாத் மத்தத்தியாவின் மகன்;
மத்தத்தியா சேமேயின் மகன்;
சேமேய் யோசேக்கின் மகன்;
யோசேக் யோதாவின் மகன்;
27 யோதா யோவன்னாவின் மகன்;
யோவன்னா ரேசாவின் மகன்;
ரேசா செருபாபேலின்[h] மகன்;
செருபாபேல் சலாத்தியேலின்[i] மகன்;
சலாத்தியேல் நேரியின் மகன்;
28 நேரி மெல்கியின் மகன்;
மெல்கி அத்தியின் மகன்;
அத்தி கோசாமின் மகன்;
கோசாம் எல்மோதாமின் மகன்;
எல்மோதாம் ஏரின் மகன்;

அதி. 3
a மத் 14:3-5, மாற் 6:17-20
b மத் 3:13
c மத் 3:16, மாற் 1:9, 10
d சங் 2:7, மத் 3:17, மத் 17:5, மாற் 1:11, யோவா 1:32-34
e மத் 1:1-17
f எண் 4:2, 3
g மத் 1:16, மத் 13:55, லூ 4:22, யோவா 6:42
h எஸ்றா 3:2
i 1நா 3:17, மத் 1:12

3:22 * வே.வா., "அங்கீகரிக்கிறேன்; உன்மேல் பிரியமாக இருக்கிறேன்."

29 ஏர் இயேசுவின் மகன்;
இயேசு எலியேசரின் மகன்;
எலியேசர் யோரீமின் மகன்;
யோரீம் மாத்தாத்தின் மகன்;
மாத்தாத் லேவியின் மகன்;
30 லேவி சிமியோனின் மகன்;
சிமியோன் யூதாசின் மகன்;
யூதாஸ் யோசேப்பின் மகன்;
யோசேப்பு யோனாமின் மகன்;
யோனாம் எலியாக்கீமின் மகன்;
31 எலியாக்கீம் மெலெயாவின் மகன்;
மெலெயா மயினானின் மகன்;
மயினான் மாத்தாத்தாவின் மகன்;
மாத்தாத்தா நாத்தானின் மகன்;
நாத்தான்[a] தாவீதின் மகன்;
32 தாவீது[b] ஈசாயின் மகன்;
ஈசாய்[c] ஓபேத்தின் மகன்;
ஓபேத்[d] போவாசின் மகன்;
போவாஸ்[e] சல்மோனின் மகன்;
சல்மோன்[f] நகசோனின் மகன்;
33 நகசோன்[g] அம்மினதாபின் மகன்;
அம்மினதாப் ஆர்னியின் மகன்;
ஆர்னி எஸ்ரோனின் மகன்;
எஸ்ரோன் பாரேசின் மகன்;
பாரேஸ்[h] யூதாவின் மகன்;
34 யூதா[i] யாக்கோபின் மகன்;
யாக்கோபு[j] ஈசாக்கின் மகன்;
ஈசாக்கு[k] ஆபிரகாமின் மகன்;
ஆபிரகாம்[l] தேராகுவின் மகன்;
தேராகு[m] நாகோரின் மகன்;
35 நாகோர்[n] சேரூக்கின் மகன்;
சேரூக்[o] ரெகூவின் மகன்;
ரெகூ[p] பேலேகுவின் மகன்;
பேலேகு[q] ஏபேரின் மகன்;
ஏபேர்[r] சேலாவின் மகன்;
36 சேலா[s] காயினானின் மகன்;
காயினான் அர்பக்சாத்தின் மகன்;
அர்பக்சாத்[t] சேமின் மகன்;
சேம்[u] நோவாவின் மகன்;
நோவா[v] லாமேக்கின் மகன்;
37 லாமேக்கு[w] மெத்தூசலாவின் மகன்;
மெத்தூசலா[x] ஏனோக்கின் மகன்;

அதி. 3
a 2சா 5:13, 14; 1நா 3:5
b 1சா 16:13; 1சா 17:58; மத் 1:6
c ஏசா 11:1
d ரூ 4:17
e ரூ 4:13
f ரூ 4:21
g 1நா 2:11
h ரூ 4:12; ரூ 4:18, 19; 1நா 2:4, 5
i ஆதி 29:35; 1நா 2:1
j ஆதி 25:26
k ஆதி 21:2, 3
l 1நா 1:28
m ஆதி 11:24; ஆதி 11:26, 27
n ஆதி 11:22
o ஆதி 11:20
p ஆதி 11:18
q ஆதி 11:16
r ஆதி 11:14; 1நா 1:25
s ஆதி 11:12
t ஆதி 11:10
u ஆதி 5:32
v ஆதி 5:29
w ஆதி 5:25
x ஆதி 5:21

ஏனோக்கு யாரேத்தின் மகன்;
யாரேத்[a] மகலாலெயேலின் மகன்;
மகலாலெயேல்[b] காயினானின் மகன்;
38 காயினான்[c] ஏனோசின் மகன்;
ஏனோஸ்[d] சேத்தின் மகன்;
சேத்[e] ஆதாமின் மகன்;
ஆதாம்[f] கடவுளின் மகன்.

4 கடவுளுடைய சக்தியால் நிரப்பப்பட்ட இயேசு யோர்தானைவிட்டுத்
திரும்பினார்; அவர் 40 நாட்கள் வனாந்தரத்தில் இருந்தபோது கடவு
ளுடைய சக்தி அவரை வழிநடத்தியது.[g] **2** அந்த 40 நாட்களும் அவர்
ஒன்றுமே சாப்பிடாததால் அதன்பின் அவருக்குப் பசியெடுத்தது. அப்
போது பிசாசு அவரைச் சோதித்தான்.[h] **3** அவன் அவரிடம், "நீ கடவு
ளுடைய மகனாக இருந்தால், இந்தக் கல்லை ரொட்டியாகும்படி சொல்"
என்றான். **4** அதற்கு இயேசு, "'மனுஷன் உணவால்* மட்டுமே உயிர்வாழக்
கூடாது' என எழுதப்பட்டிருக்கிறதே"[i] என்று சொன்னார்.

5 அதனால், பிசாசு அவரை உயரமான இடத்துக்குக் கொண்டுபோய்,
இந்த உலகத்தில் இருக்கிற எல்லா ராஜ்யங்களையும் ஒரே நொடியில் அவ
ருக்குக் காட்டி,[j] **6** "இவை எல்லாவற்றின் மீதுள்ள அதிகாரத்தையும் இவற்
றின் மகிமையையும் நான் உனக்குத் தருவேன்; ஏனென்றால், இந்த அதிகா
ரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது;[k] எனக்கு இஷ்டமானவனுக்கு
இதைக் கொடுப்பேன். **7** நீ ஒரேவொரு தடவை என்னை வணங்கினால்
இதெல்லாம் உனக்குச் சொந்தமாகும்" என்று சொன்னான். **8** அதற்கு
இயேசு, "'உன் கடவுளாகிய யெகோவாவை* மட்டுமே வணங்க வேண்டும்,
அவர் ஒருவருக்குத்தான் பரிசுத்த சேவை செய்ய வேண்டும்' என எழுதப்
பட்டிருக்கிறதே"[l] என்று சொன்னார்.

9 பின்பு, அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், ஆல
யத்தின் உயரமான இடத்தில்* அவரை நிற்க வைத்து, "நீ கடவுளுடைய
மகனாக இருந்தால், இங்கிருந்து கீழே குதி.[m] **10** ஏனென்றால், 'உன்னைப்
பாதுகாக்கச் சொல்லி அவர் தன்னுடைய தூதர்களுக்குக் கட்டளை கொடுப்
பார்.' **11** 'உன் பாதம் கல்லில் மோதாதபடி அவர்கள் உன்னைத் தங்கள்
கைகளில் சுமந்துகொண்டு போவார்கள்' என எழுதப்பட்டிருக்கிறது"[n] என்று
சொன்னான். **12** அதற்கு இயேசு, "'உன் கடவுளாகிய யெகோவாவை*
சோதித்துப் பார்க்கக் கூடாது' எனச் சொல்லப்பட்டிருக்கிறதே"[o] என்றார்.
13 பிசாசு எல்லா சோதனைகளையும் முடித்த பின்பு, வேறொரு நல்ல சந்
தர்ப்பம் வரும்வரை அவரைவிட்டு விலகிப்போனான்.[p]

14 அதன் பின்பு, கடவுளுடைய சக்தியின் தூண்டுதலால் கலிலேயா
வுக்கு இயேசு திரும்பி வந்தார்.[q] அந்தச் சுற்றுவட்டாரம் முழுவதும் அவரு
டைய புகழ் பரவியது. **15** அவர்களுடைய ஜெபக்கூடங்களில் அவர் கற்
பிக்க ஆரம்பித்தார்; எல்லாரும் அவரை உயர்வாக மதித்தார்கள்.

16 பின்பு, தான் வளர்ந்த ஊரான நாசரேத்துக்கு அவர் வந்தார்;[r] தன்
னுடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபக்கூடத்துக்குப்[s] போய்,

---

4:4 *நே.மொ., "ரொட்டியால்." **4:8, 12** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:9** *வே.வா., "ஆலயத்தின் கொத்தளத்தில்; ஆலயத்தின் மதில்மேல்."

அதி. 3
a ஆதி 5:19
b ஆதி 5:12, 16
c ஆதி 5:9; 1நா 1:2
d ஆதி 4:26; ஆதி 5:10
e ஆதி 5:7
f ஆதி 5:1, 4; 1நா 1:1

அதி. 4
g மத் 4:1-4; மாற் 1:12, 13
h எபி 2:18
i உபா 8:3
j மத் 4:8-10
k யோவா 12:31; யோவா 14:30; எபே 2:2
l யாத் 20:3; உபா 6:13; உபா 10:20
m மத் 4:5-7
n சங் 91:11, 12
o உபா 6:16; 1கொ 10:9
p மத் 4:11; எபி 4:15
q மத் 4:12; யோவா 4:3
r மத் 2:23
s அப் 17:1, 2

வாசிப்பதற்காக எழுந்து நின்றார். **17** ஏசாயா தீர்க்கதரிசியின் சுருள் அவ
ரிடம் கொடுக்கப்பட்டது; அந்தச் சுருளை அவர் விரித்து, **18** “யெகோவா
வின்* சக்தி என்மேல் இருக்கிறது, ஏழைகளுக்கு நல்ல செய்தியைச்
சொல்ல அவர் என்னைத் தேர்ந்தெடுத்தார்.# கைப்பற்றப்பட்டவர்களுக்கு
விடுதலையும் பார்வை இல்லாதவர்களுக்குப் பார்வையும் கிடைக்கு
மென்று அறிவிப்பதற்காகவும், ஒடுக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்
காகவும்,[a] **19** யெகோவாவின்* அனுக்கிரகக் காலத்தைப் பற்றிப் பிரசங்
கிப்பதற்காகவும் அவர் என்னை அனுப்பினார்”[b] என்று எழுதப்பட்டிருந்த
பகுதியை எடுத்து வாசித்தார். **20** அதன் பின்பு, அந்தச் சுருளைச் சுருட்டி
ஜெபக்கூடப் பணியாளனிடம் கொடுத்துவிட்டு உட்கார்ந்தார்; அங்கிருந்த
எல்லாருடைய கண்களும் அவர்மேல்தான் இருந்தன. **21** பின்பு அவர்
பேச ஆரம்பித்து, “இப்போது நீங்கள் கேட்ட இந்த வேதவசனம் இன்று
நிறைவேறிவிட்டது”[c] என்று சொன்னார்.

22 அங்கிருந்த எல்லாரும் அவர் பேசிய கனிவான வார்த்தைக
ளைக்[d] கேட்டு ஆச்சரியத்துடன், “இவன் யோசேப்பின் மகன்களில் ஒரு
வன்தானே?”[e] என்று சொல்லி, அவரைப் புகழ்ந்துபேச ஆரம்பித்தார்கள்.
23 அப்போது அவர், “‘மருத்துவனே, நீயே உன்னைக் குணமாக்கிக்கொள்’
என்ற பழமொழியை நீங்கள் எனக்குப் பொருத்தி, ‘கப்பர்நகூமில்[f] நீ செய்த
காரியங்களை நாங்கள் கேள்விப்பட்டோம். அவற்றை இங்கே உன்னுடைய
சொந்த ஊரிலும் செய்’ என்று சொல்வீர்கள். **24** ஆனாலும், உண்மையா
கவே நான் உங்களுக்குச் சொல்கிறேன், எந்தத் தீர்க்கதரிசியும் தன் சொந்த
ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.[g] **25** நிஜமாகவே உங்களுக்குச்
சொல்கிறேன், எலியாவின் நாட்களில் இஸ்ரவேலில் நிறைய விதவை
கள் இருந்தார்கள்; அப்போது, மூன்றரை வருஷங்களுக்கு மழை பெய்யாத
தால் தேசம் முழுவதும் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது.[h] **26** ஆனாலும்,
சீதோனில் உள்ள சாறிபாத் நகரத்திலிருந்த விதவையிடம் மட்டுமே எலியா
அனுப்பப்பட்டார்,[i] வேறெந்த விதவையிடமும் அல்ல. **27** அதோடு,
தீர்க்கதரிசியான எலிசாவின் காலத்தில் இஸ்ரவேலில் நிறைய தொழுநோ
யாளிகள் இருந்தார்கள்; ஆனால், சீரியாவைச் சேர்ந்த நாகமானைத் தவிர
அவர்களில் வேறொருவரும் சுத்தமாக்கப்படவில்லை”[j] என்று சொன்
னார். **28** ஜெபக்கூடத்தில் இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த எல்லாரும்
கோபத்தில் கொதித்தெழுந்தார்கள்.[k] **29** அவரை வேகவேகமாக நகரத்
துக்கு வெளியே கொண்டுபோனார்கள்; அந்த நகரம் அமைந்திருந்த மலை
யின் விளிம்பிலிருந்து தலைகுப்புறத் தள்ளிவிடுவதற்காக அவரை அங்கே
கொண்டுபோனார்கள். **30** ஆனால், இயேசு அவர்கள் நடுவே புகுந்து
அங்கிருந்து போய்விட்டார்.[l]

31 பின்பு அவர் கலிலேயாவில் இருக்கிற கப்பர்நகூம் என்ற நகரத்
துக்குப் போய், ஓய்வுநாளில் மக்களுக்குக் கற்பித்தார்.[m] **32** அவர் கற்பித்த
விதத்தைப் பார்த்து மக்கள் அசந்துபோனார்கள்;[n] ஏனென்றால், அவர் அதி
காரத்தோடு பேசினார். **33** அப்போது, பேய் பிடித்த ஒருவன் அந்த ஜெபக்
கூடத்தில் இருந்தான். அவன் உரத்த குரலில்,[o] **34** “ஐயோ! நாசரேத்தூர்
இயேசுவே,[p] உங்களுக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்? எங்களை ஒழித்
துக்கட்டவா வந்தீர்கள்? நீங்கள் யாரென்று எனக்கு நன்றாகத் தெரியும், நீங்

4:18, 19 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:18** # வே.வா., “அபிஷேகம் செய்தார்.”

அதி. 4
a மத் 12:20
b ஏசா 61:1, 2
c மத் 5:17
d சங் 45:2; ஏசா 50:4
e மத் 13:54; மாற் 6:2; யோவா 6:42
f மத் 4:13
g மத் 13:57; மாற் 6:4; யோவா 4:44
h 1ரா 18:1
i 1ரா 17:9, 10
j 2ரா 5:1, 14
k லூ 2:34
l யோவா 8:59; யோவா 10:39
m மாற் 1:21, 22
n மத் 7:28; யோவா 7:46
o மாற் 1:23-28
p மத் 2:23

கள் கடவுளால் அனுப்பப்பட்ட பரிசுத்தர்”[a] என்று கத்தினான். **35** ஆனால்
இயேசு, “பேசாதே, இவனைவிட்டு வெளியே போ!” என்று அதட்டினார்.
அப்போது, அந்தப் பேய் அவர்கள் முன்னால் அவனைக் கீழே தள்ளியது;
அவனைக் காயப்படுத்தாமல் அவனைவிட்டு வெளியே போனது.
36 அங்கிருந்த எல்லாரும் இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். “எப்படிப்
பேசுகிறார், பாருங்கள்! அதிகாரத்தோடும் வல்லமையோடும் பேய்களுக்குக்
கட்டளையிடுகிறார், அவையும் வெளியே போகின்றனவே!” என்று ஒருவ
ருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். **37** அவரைப் பற்றிய செய்தி அந்தச்
சுற்றுவட்டாரத்தில் இருந்த எல்லா பகுதிகளுக்கும் பரவியது.

38 பின்பு, அவர் ஜெபக்கூடத்திலிருந்து புறப்பட்டு சீமோனுடைய வீட்
டுக்குப் போனார். அங்கே சீமோனின் மாமியார் கடுமையான காய்ச்சலில்
படுத்துக்கிடந்தாள். அவளுக்கு உதவி செய்யச் சொல்லி அவரிடம் அவர்
கள் கேட்டுக்கொண்டார்கள்.[b] **39** அப்போது அவர் அவளுக்குப் பக்
கத்தில் வந்து நின்று, காய்ச்சல் போகும்படி கட்டளையிட்டார். உடனடியா
கக் காய்ச்சல் போய்விட்டது; அவள் எழுந்து அவர்களுக்குப் பணிவிடை
செய்ய ஆரம்பித்தாள்.

40 சூரியன் மறையும் நேரத்தில், தங்களுடைய வீட்டில் பலவிதமான
நோய்களால் அவதிப்பட்டவர்களை மக்கள் எல்லாரும் அவரிடம் கூட்டிக்
கொண்டு வந்தார்கள்; அவர்கள் ஒவ்வொருவர்மேலும் கைகளை வைத்து
அவர் குணப்படுத்தினார்.[c] **41** பேய்களும், “நீங்கள் கடவுளுடைய
மகன்”[d] என்று கத்தியபடி நிறைய பேரைவிட்டு வெளியேறின. ஆனால்,
அவர்தான் கிறிஸ்து என்று அந்தப் பேய்களுக்குத் தெரிந்திருந்ததால்,[e]
அவர் அவற்றை அதட்டி, பேசவிடாமல் தடுத்தார்.[f]

42 பொழுது விடிந்தபோது, அவர் எழுந்து தனிமையான ஓர் இடத்துக்
குப் போனார்.[g] ஆனால், மக்கள் அவரைத் தேடிக்கொண்டு அவர் இருந்த
இடத்துக்கே வந்து, தங்களைவிட்டுப் போகாதபடி அவரைத் தடுக்கப் பார்த்
தார்கள். **43** ஆனால் அவர், “நான் மற்ற நகரங்களிலும் கடவுளுடைய அர
சாங்கத்தைப் பற்றிய நல்ல செய்தியை அறிவிக்க வேண்டும், இதற்காகவே
அனுப்பப்பட்டிருக்கிறேன்”[h] என்று சொன்னார். **44** அதன்படியே, யூதேயா
விலிருந்த ஜெபக்கூடங்களில் அவர் பிரசங்கித்துவந்தார்.

5 ஒருசமயம் கெனேசரேத்து ஏரி*[i] பக்கத்தில் நின்று கடவுளுடைய வார்த்
தையை அவர் கற்பித்துக்கொண்டிருந்தார்; அதைக் கேட்டுக்கொண்டி
ருந்த கூட்டத்தார் அவரை நெருக்கித்தள்ள ஆரம்பித்தார்கள். **2** அப்
போது, ஏரிக்கரையில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு படகுகளை அவர்
பார்த்தார். மீனவர்கள் அவற்றைவிட்டு இறங்கி தங்களுடைய வலைகளை
அலசிக்கொண்டிருந்தார்கள்.[j] **3** அந்தப் படகுகள் ஒன்றில் அவர் ஏறினார்,
அது சீமோனுடைய படகு; அதைக் கரையிலிருந்து சற்றுத் தள்ளும்படி அவ
ரைக் கேட்டுக்கொண்டார். பின்பு, அந்தப் படகில் உட்கார்ந்துகொண்டே கூட்
டத்தாருக்குக் கற்பிக்க ஆரம்பித்தார். **4** அவர் பேசி முடித்தபோது சீமோ
னிடம், “ஆழமான இடத்துக்குப் படகைக் கொண்டுபோய், உங்கள்
வலைகளைப் போட்டு மீன்பிடியுங்கள்” என்று சொன்னார். **5** ஆனால்
சீமோன் அவரைப் பார்த்து, “போதகரே, ராத்திரி முழுவதும் நாங்கள்
பாடுபட்டும் ஒன்றுமே கிடைக்கவில்லை;[k] இருந்தாலும், நீங்கள் சொல்வதால்

5:1 * அதாவது, “கலிலேயா கடல்.”

அதி. 4
a மத் 8:29; லூ 4:41; லூ 8:28; யாக் 2:19
b மத் 8:14, 15; மாற் 1:29-31
c மத் 8:16, 17; மாற் 1:32-34
d மத் 8:28, 29; மாற் 3:11
e மாற் 1:23-25; மாற் 3:11, 12; லூ 4:33-35
f அப் 16:17, 18
g மாற் 1:35-38
h மத் 4:23; லூ 8:1

அதி. 5
i மத் 4:18; மாற் 1:16
j மத் 4:21
k யோவா 21:3

வலைகளைப் போடுகிறேன்” என்று சொன்னார். **6** அதன்படியே, அவர்கள்
வலைகளைப் போட்டபோது ஏராளமான மீன்கள் சிக்கின. சொல்லப்
போனால், அவர்களுடைய வலைகளே கிழிய ஆரம்பித்தன.[a] **7** அத
னால், இன்னொரு படகிலிருந்த தங்கள் கூட்டாளிகளிடம் சைகை காட்டி
உதவிக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டார்கள். அவர்கள் வந்து இரண்டு படகு
களையும் மீன்களால் நிரப்பினார்கள், அப்போது அவை மூழ்கிவிடும்போல்
ஆகிவிட்டன. **8** இதைப் பார்த்து சீமோன் பேதுரு இயேசுவின் காலில்
விழுந்து, “எஜமானே, நான் ஒரு பாவி, என்னைவிட்டுப் போய்விடுங்கள்”
என்று சொன்னார். **9** அத்தனை மீன்களைப் பிடித்ததைப் பார்த்து அவரும்
அவரோடு இருந்தவர்களும் மலைத்துப்போயிருந்தார்கள். **10** சீமோனு
டைய கூட்டாளிகளான செபெதேயுவின் மகன்கள் யாக்கோபும் யோவானும்
கூட[b] மலைத்துப்போயிருந்தார்கள். ஆனால் சீமோனிடம் இயேசு, “பயப்ப
டாதே. இனிமேல் நீ மனுஷர்களை உயிரோடு பிடிப்பாய்”[c] என்று
சொன்னார். **11** அவர்கள் தங்களுடைய படகுகளைக் கரைசேர்த்த பின்பு,
எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றிப் போனார்கள்.[d]

12 இன்னொரு சமயம் அவர் ஒரு நகரத்தில் இருந்தபோது, உடல் முழு
வதும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவன் வந்தான். அவன் இயேசு
வைப் பார்த்ததும் அவர் முன்னால் விழுந்து, “ஐயா, உங்களுக்கு விருப்பம்
இருந்தால், என்னைச் சுத்தமாக்க முடியும்” என்று சொல்லிக் கெஞ்சி
னான்.[e] **13** அப்போது, அவர் தன்னுடைய கையை நீட்டி அவனைத்
தொட்டு, “எனக்கு விருப்பம் இருக்கிறது, நீ சுத்தமாகு” என்று சொன்னார்.
உடனே தொழுநோய் அவனைவிட்டு மறைந்தது.[f] **14** இதைப் பற்றி யாரி
டமும் சொல்லக் கூடாது என்று அவனுக்குக் கட்டளை கொடுத்தார்.
“ஆனால், குருமாரிடம் போய் உன்னைக் காட்டு; நீ சுத்தமானதற்காக, மோசே
கட்டளையிட்ட காணிக்கையைக் கொடு;[g] நீ குணமானதற்கு அத்தாட்சியாக
அது அவர்களுக்கு இருக்கும்”[h] என்று சொல்லி அனுப்பினார். **15** அப்படி
யிருந்தும், அவரைப் பற்றிய செய்தி அதிகமாகத்தான் பரவியது. அவர் பேசு
வதைக் கேட்பதற்கும், நோய்களிலிருந்து குணமாவதற்கும் மக்கள் கூட்டம்
கூட்டமாக அவரிடம் வந்தார்கள்.[i] **16** ஆனால், அவர் ஜெபம் செய்வதற்
காக அடிக்கடி தனிமையான இடங்களுக்குப் போனார்.

17 ஒருநாள் அவர் மக்களுக்குக் கற்பித்துக்கொண்டிருந்தபோது, கலி
லேயாவிலும் யூதேயாவிலும் இருக்கிற எல்லா கிராமங்களிலிருந்தும் எரு
சலேம் நகரத்திலிருந்தும் வந்த பரிசேயர்களும் திருச்சட்டப் போதகர்களும்
உட்கார்ந்திருந்தார்கள்; மக்களைக் குணமாக்குவதற்கு யெகோவாவின்* வல்
லமை அவரிடம் இருந்தது.[j] **18** அப்போது, பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட
ஒருவனைச் சில ஆட்கள் படுக்கையோடு தூக்கிக்கொண்டு வந்தார்கள்;
அவனை உள்ளே கொண்டுபோய் இயேசுவின் முன்னால் வைப்பதற்காக
அவர்கள் முயற்சி செய்துகொண்டிருந்தார்கள்.[k] **19** கூட்டம் அதிகமாக
இருந்ததால் அவனை உள்ளே கொண்டுபோக வழி கிடைக்கவில்லை; அத
னால் வீட்டுக்கூரையின் மேல் ஏறி, ஓடுகள் வழியாக அவனைப் படுக்கை
யோடு சேர்த்து இயேசுவுக்கு முன்பாகக் கூட்டத்தின் நடுவில் இறக்கினார்
கள். **20** அவர்களுடைய விசுவாசத்தை அவர் பார்த்தபோது, “மனுஷனே,
உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன”[l] என்று சொன்னார். **21** இதைக்

5:17 * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 5
a யோவா 21:6
b மத் 4:21; மாற் 1:19
c மத் 4:19; மாற் 1:17
d மத் 4:20; மத் 6:33; மத் 19:27; மாற் 1:20; லூ 18:28; பிலி 3:8
e மத் 8:2; மாற் 1:40-45
f மத் 8:3; மாற் 1:41
g லேவி 14:2-4; லேவி 14: 10, 20
h மத் 8:4
i மத் 4:24, 25; மாற் 3:7, 8; யோவா 6:2
j மாற் 2:1, 2
k மத் 9:2; மாற் 2:3-12
l மத் 9:2-8

கேட்ட வேத அறிஞர்களும் பரிசேயர்களும், “தெய்வ நிந்தனை செய்கிற
இவன் யார்? கடவுள் ஒருவரைத் தவிர வேறு யாரால் பாவங்களை மன்
னிக்க முடியும்?”[a] என்று யோசிக்க ஆரம்பித்தார்கள். **22** ஆனால்
இயேசு அவர்களுடைய யோசனையைப் புரிந்துகொண்டு, “உங்கள் இதயத்
தில் என்ன யோசிக்கிறீர்கள்? **23** ‘உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்
டன’ என்று சொல்வது சுலபமா, அல்லது ‘எழுந்து நட’ என்று சொல்வது சுல
பமா? **24** ஆனாலும், பூமியில் பாவங்களை மன்னிக்கிற அதிகாரம்
மனிதகுமாரனுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்வதற்காக—”
என்று சொல்லிவிட்டு, பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவனிடம், “நான் உனக்
குச் சொல்கிறேன், எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்
போ”[b] என்று சொன்னார். **25** அவன் உடனே அவர்கள் முன்பாக எழுந்து,
தான் படுத்திருந்த படுக்கையை எடுத்துக்கொண்டு, கடவுளை மகிமைப்
படுத்திக்கொண்டே தன் வீட்டுக்குப் போனான். **26** அதைப் பார்த்த எல்லா
ரும் பிரமித்துப்போய், கடவுளை மகிமைப்படுத்தினார்கள்; அதேசமயத்தில்
மிகுந்த பயபக்தியோடு, “இன்றைக்கு எப்பேர்ப்பட்ட அதிசயங்களைப் பார்த்
தோம்!” என்று பேசிக்கொண்டார்கள்.

27 இதற்குப் பின்பு அவர் வெளியே போய், வரி வசூலிக்கும் அலுவல
கத்தில் லேவி என்பவர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார்; வரி வசூலிப்பவ
ரான அவரிடம், “என்னைப் பின்பற்றி வா”[c] என்று சொன்னார். **28** அவர்
எழுந்து, எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றிப் போனார்.
29 அதோடு, அவர் தன்னுடைய வீட்டில் இயேசுவுக்காக ஒரு பெரிய
விருந்து வைத்தார்; வரி வசூலிப்பவர்கள் பலரும் மற்றவர்களும் சாப்பிட்
டுக்கொண்டிருந்தார்கள்.[d] **30** அப்போது, பரிசேயர்களும் அவர்களுடைய
வேத அறிஞர்களும் அவருடைய சீஷர்களிடம் முணுமுணுத்து, “நீங்கள்
ஏன் வரி வசூலிப்பவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து சாப்பிட்டுக் குடிக்
கிறீர்கள்”[e] என்று கேட்டார்கள். **31** அதற்கு இயேசு, “ஆரோக்கியமாக
இருக்கிறவர்களுக்கு மருத்துவர் தேவையில்லை, நோயாளிகளுக்குத்தான்
தேவை.[f] **32** நீதிமான்களை அல்ல, பாவிகளைத்தான் மனம் திருந்தும்படி
அழைக்க வந்திருக்கிறேன்”[g] என்று அவர்களிடம் சொன்னார்.

33 அப்போது அவர்கள், “யோவானுடைய சீஷர்கள் அடிக்கடி விரதமி
ருந்து, மன்றாடி ஜெபம் செய்கிறார்கள்; பரிசேயர்களுடைய சீஷர்களும் அப்
படியே செய்கிறார்கள்; ஆனால், உன்னுடைய சீஷர்கள் சாப்பிடுவதும் குடிப்
பதுமாக இருக்கிறார்களே”[h] என்று அவரிடம் சொன்னார்கள். **34** அதற்கு
இயேசு, “மணமகன் தங்களோடு இருக்கும்போது அவருடைய நண்பர்களை
விரதமிருக்கச் செய்ய உங்களால் முடியாது, இல்லையா? **35** ஆனால்,
மணமகன்[i] உண்மையிலேயே அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும்
நாட்கள் வரும், அப்போது அவர்கள் விரதம் இருப்பார்கள்”[j] என்று
சொன்னார்.

36 அதோடு, அவர்களுக்கு ஓர் உவமையையும் சொன்னார்; “யாருமே
புதிய உடையிலிருந்து ஒரு துண்டுத் துணியைக் கிழித்து பழைய உடை
யில் ஒட்டுப்போட மாட்டார்கள். அப்படிச் செய்தால், அந்தப் புதிய ஒட்டுத்
துணி கிழிந்துவிடும், பழைய உடைக்கு அது பொருத்தமாகவும் இருக்காது.[k]
37 அதேபோல், பழைய தோல் பைகளில் யாருமே புதிய திராட்சம
துவை ஊற்றி வைக்க மாட்டார்கள்; அப்படிச் செய்தால், புதிய திராட்சமது

அதி. 5
- *a* சங் 103:2, 3; சங் 130:3, 4; ஏசா 43:25
- *b* யோவா 5:6-9
- *c* மத் 9:9; மாற் 2:14
- *d* மத் 9:10-13; மாற் 2:15-17
- *e* லூ 15:1, 2
- *f* ஏசா 53:4; மத் 9:12; மாற் 2:17
- *g* மத் 9:13; 1தீ 1:15
- *h* மத் 9:14, 15; மாற் 2:18-20; லூ 7:34
- *i* மத் 22:2; 2கொ 11:2; வெளி 19:7
- *j* யோவா 16:19, 20
- *k* மத் 9:16, 17; மாற் 2:21, 22

அந்தப் பைகளை வெடிக்க வைத்துவிடும்; அப்போது திராட்சமதுவும்
கொட்டிவிடும், பைகளும் நாசமாகிவிடும். **38** அதனால்தான், புதிய திராட்
சமதுவைப் புதிய தோல் பைகளில் ஊற்றி வைக்க வேண்டும். **39** பழைய
திராட்சமதுவைக் குடித்த எவனும் புதிய திராட்சமதுவை விரும்ப மாட்டான்;
'பழையதுதான் நன்றாக இருக்கிறது' என்று சொல்வான்" என்றார்.

6 ஓய்வுநாளில் அவர் தன்னுடைய சீஷர்களோடு வயல் வழியாகப்
போய்க்கொண்டிருந்தார்; அப்போது, அவருடைய சீஷர்கள் கதிர்க
ளைப் பறித்து[a] தங்களுடைய கைகளில் தேய்த்துச் சாப்பிட்டார்கள்.[b]
2 அதைப் பார்த்த பரிசேயர்களில் சிலர், "ஓய்வுநாளில் செய்யக்கூடாத
காரியத்தை ஏன் செய்கிறீர்கள்?"[c] என்று கேட்டார்கள். **3** அதற்கு இயேசு,
"தாவீதுக்கும் அவருடைய ஆட்களுக்கும் பசியெடுத்தபோது அவர் என்ன
செய்தார் என்பதை நீங்கள் வாசித்ததே இல்லையா?[d] **4** அவர் கடவு
ளுடைய வீட்டுக்குள்* போய், குருமார்கள் தவிர வேறு யாருமே சாப்பிடக்
கூடாத படையல் ரொட்டிகளை வாங்கிச் சாப்பிட்டு, அவற்றில் சிலவற்றைத்
தன்னோடிருந்த ஆட்களுக்கும் கொடுத்தார்"[e] என்று சொன்னார். **5** "மனி
தகுமாரன் ஓய்வுநாளுக்கு எஜமானாக இருக்கிறார்"[f] என்றும் அவர்களிடம்
சொன்னார்.

6 இன்னொரு ஓய்வுநாளில்[g] அவர் ஒரு ஜெபக்கூடத்துக்குள் போய்க்
கற்பிக்க ஆரம்பித்தார். அங்கே வலது கை சூம்பிய* ஒருவன் இருந்தான்.[h]
7 அந்த ஓய்வுநாளில் இயேசு குணப்படுத்துவாரா என்று வேத அறிஞர்க
ளும் பரிசேயர்களும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள்; ஏனென்றால்,
அவரிடம் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்று குறியாக இருந்
தார்கள். **8** ஆனால், அவர்களுடைய எண்ணங்கள் அவருக்குத் தெரிந்தி
ருந்தது.[i] அதனால், சூம்பிய* கையுடையவனைப் பார்த்து, "எழுந்து வந்து
நடுவில் நில்" என்று சொன்னார். அவனும் எழுந்து வந்து நின்றான். **9** அப்
போது இயேசு அவர்களிடம், "நான் உங்களிடம் ஒன்று கேட்கிறேன், ஓய்
வுநாளில் எதைச் செய்வது சரி? நல்லது செய்வதா கெட்டது செய்வதா, உயி
ரைக் காப்பாற்றுவதா, அழிப்பதா?"[j] என்று கேட்டார். **10** பின்பு, தன்னைச்
சுற்றியிருந்த எல்லாரையும் பார்த்துவிட்டு அவனிடம், "உன் கையை நீட்டு"
என்று சொன்னார். அவனும் நீட்டினான், அது குணமானது. **11** ஆனால்
அவர்கள் கோபவெறியோடு, இயேசுவை என்ன செய்யலாம் என்று கூடிப்
பேச ஆரம்பித்தார்கள்.

12 ஒருநாள், ஜெபம் செய்வதற்காக அவர் ஒரு மலைக்குப் போனார்;[k]
அன்று ராத்திரி முழுவதும் கடவுளிடம் ஜெபம் செய்தார்.[l] **13** விடிந்த
தும் தன்னுடைய சீஷர்களை வரவழைத்து அவர்களில் 12 பேரைத் தேர்ந்
தெடுத்தார்; அவர்களுக்கு அப்போஸ்தலர்கள்* என்று பெயர் வைத்தார்.[m]
14 அந்த 12 பேர் இவர்கள்தான்: சீமோன் (இவருக்கு பேதுரு என்று பெயர்
வைத்தார்), இவருடைய சகோதரர் அந்திரேயா, யாக்கோபு, யோவான்,
பிலிப்பு,[n] பர்த்தொலொமேயு, **15** மத்தேயு, தோமா,[o] அல்பேயுவின் மகன்
யாக்கோபு, "பக்திவைராக்கியமுள்ளவன்" என்று அழைக்கப்பட்ட சீமோன்,
16 யாக்கோபின் மகன் யூதாஸ், துரோகியாக மாறிய யூதாஸ் இஸ்காரி
யோத்து.

6:4 * அதாவது, "வழிபாட்டுக் கூடாரத்துக்குள்." **6:6, 8** * வே.வா., "பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட." **6:13** * அர்த்தம், "அனுப்பப்பட்டவர்கள்."

அதி. 6
a உபா 23:25
b மத் 12:1-8; மாற் 2:23-28
c யாத் 20:9, 10; உபா 5:13, 14; யோவா 5:9, 10
d 1சா 21:1-6
e லேவி 24:5-9
f மத் 12:8; மாற் 2:27, 28
g லூ 13:14; யோவா 9:16
h மத் 12:9-14; மாற் 3:1-6
i லூ 5:22; யோவா 2:24, 25
j மத் 12:11; மாற் 3:4; யோவா 7:23
k மத் 6:6; மாற் 3:13
l மத் 14:23
m மத் 10:2-4; மாற் 3:14-19; அப் 1:13
n யோவா 14:8
o யோவா 11:16

17 இயேசு அவர்களோடு கீழே இறங்கி ஒரு சமவெளிக்கு வந்தார்;
அங்கே அவருடைய சீஷர்களில் ஏராளமானவர்கள் இருந்தார்கள். யூதேயா
முழுவதிலிருந்தும், எருசலேமிலிருந்தும், கடலோரப் பகுதிகளான தீரு, சீதோ
னிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்திருந்தார்கள். இவர்கள் எல்லா
ரும் அவருடைய போதனைகளைக் கேட்பதற்கும் நோய்களிலிருந்து குண
மாவதற்கும் அங்கே வந்திருந்தார்கள். **18** பேய்களின் தொல்லைக்கு
ஆளானவர்களும் குணமானார்கள். **19** மக்கள் எல்லாரும் அவரைத்
தொட முயற்சி செய்தார்கள்; ஏனென்றால், அவரிடமிருந்து வல்லமை புறப்
பட்டு[a] எல்லாரையும் குணமாக்கியது.

20 அப்போது, அவர் தன்னுடைய சீஷர்களைப் பார்த்து:

“ஏழைகளாக இருக்கிற நீங்கள் சந்தோஷமானவர்கள், ஏனென்றால்
கடவுளுடைய அரசாங்கம் உங்களுடையது.[b]

21 இப்போது பசியாக இருக்கிற நீங்கள் சந்தோஷமானவர்கள், ஏனென்
றால் நீங்கள் திருப்தி செய்யப்படுவீர்கள்.[c]

இப்போது அழுகிற நீங்கள் சந்தோஷமானவர்கள், ஏனென்றால் நீங்கள்
சிரித்து மகிழ்வீர்கள்.[d]

22 நீங்கள் மனிதகுமாரனின் சீஷர்கள் என்பதால் மக்கள் உங்களை
வெறுக்கும்போதும்,[e] உங்களை விலக்கி வைக்கும்போதும்,[f] கேவலமா
கப் பேசும்போதும், பொல்லாதவர்கள் என்று சொல்லி உங்கள் பெய
ரைக் கெடுக்கும்போதும் சந்தோஷப்படுங்கள். **23** அந்த நாளில் மகிழ்ச்சி
யோடு துள்ளிக் குதியுங்கள்; பரலோகத்தில் உங்களுக்கு மிகப் பெரிய பலன்
கிடைக்கும்; அவர்களுடைய முன்னோர்களும் அதைத்தான் தீர்க்கதரிசிக
ளுக்குச் செய்துவந்தார்கள்.[g]

24 ஆனால், பணக்காரர்களான உங்களுக்குக் கேடுதான் வரும்![h]
ஏனென்றால், நீங்கள் எல்லா சௌகரியங்களையும் அனுபவித்துவிட்டீர்கள்.[i]

25 இப்போது திருப்தியாக இருக்கிற உங்களுக்குக் கேடுதான் வரும்!
ஏனென்றால், நீங்கள் பசியால் வாடுவீர்கள்.

இப்போது சிரித்து மகிழ்கிற உங்களுக்குக் கேடுதான் வரும்! ஏனென்
றால், நீங்கள் துக்கப்பட்டு அழுவீர்கள்.[j]

26 எல்லா மனுஷர்களும் உங்களைப் புகழ்ந்து பேசும்போது உங்களுக்
குக் கேடுதான் வரும்![k] ஏனென்றால், அவர்களுடைய முன்னோர்களும்
போலித் தீர்க்கதரிசிகளுக்கு அப்படித்தான் செய்தார்கள்.

27 நான் பேசுவதைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கிற உங்
களுக்குச் சொல்கிறேன்: உங்கள் எதிரிகளிடம் தொடர்ந்து அன்பு காட்
டுங்கள், உங்களை வெறுக்கிறவர்களுக்குத் தொடர்ந்து நல்லது செய்யுங்கள்.[l]
28 உங்களைச் சபிக்கிறவர்களைத் தொடர்ந்து ஆசீர்வதியுங்கள், உங்
களை அவமதிக்கிறவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள்.[m]
29 உங்களை ஒரு கன்னத்தில் அடிக்கிறவனுக்கு இன்னொரு கன்னத்தை
யும் காட்டுங்கள்; உங்கள் மேலங்கியை எடுத்துக்கொள்கிறவன் உங்கள்
உள்ளங்கியையும் எடுத்துக்கொள்ளப் பார்த்தால் அவனைத் தடுக்காதீர்
கள்.[n] **30** உங்களிடம் கேட்கிற எல்லாருக்கும் கொடுங்கள்,[o] உங்களு
டைய பொருள்களை எடுத்துக்கொள்கிறவனிடம் அவற்றைத் திருப்பிக் கேட்
காதீர்கள்.

அதி. 6

a மாற் 5:30

b மத் 5:2, 3; யாக் 2:5

c சங் 107:9; ஏசா 55:1; எரே 31:25; மத் 5:6

d ஏசா 61:3; வெளி 21:4

e மத் 5:10, 11; யோவா 17:14; 1பே 3:14

f யோவா 16:2

g 2நா 36:16; மத் 5:12; லூ 11:47; அப் 7:52

h யாக் 5:1

i மத் 6:2

j ஏசா 65:13

k யாக் 4:4; 1யோ 4:5

l யாத் 23:4; நீதி 25:21; மத் 5:44; ரோ 12:20

m அப் 7:59, 60; ரோ 12:14

n மத் 5:39, 40; 1கொ 6:7

o உபா 15:7, 8; நீதி 3:27; நீதி 21:26; மத் 5:42

31 அதோடு, மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று
விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.[a]

32 உங்கள்மேல் அன்பு காட்டுகிறவர்களிடம் மட்டுமே நீங்கள் அன்பு
காட்டினால், உங்களைப் பாராட்ட என்ன இருக்கிறது? பாவிகளும்கூட தங்
கள்மேல் அன்பு காட்டுகிறவர்களிடம் மட்டுமே அன்பு காட்டுகிறார்கள்.[b]
33 உங்களுக்கு நல்லது செய்கிறவர்களுக்கு மட்டுமே நீங்கள் நல்லது செய்
தால், உங்களைப் பாராட்ட என்ன இருக்கிறது? பாவிகளும்கூட அதைத்
தான் செய்கிறார்கள். **34** அதோடு, திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்த்து
நீங்கள் கடன் கொடுத்தால்,* உங்களைப் பாராட்ட என்ன இருக்கிறது?[c]
பாவிகளும்கூட அப்படி எதிர்பார்த்துதான் பாவிகளுக்குக் கடன் கொடுக்கி
றார்கள். **35** உங்கள் எதிரிகளிடம் தொடர்ந்து அன்பு காட்டுங்கள், அவர்
களுக்கு நல்லது செய்யுங்கள், எதையும் எதிர்பார்க்காமல் கடன் கொடுங்
கள்.[d] அப்போது, உங்களுக்கு மிகப் பெரிய பலன் கிடைக்கும்,
உன்னதமான கடவுளுடைய பிள்ளைகளாகவும் இருப்பீர்கள்; ஏனென்றால்,
அவர் நன்றிகெட்டவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும்கூட கருணை
காட்டுகிறார்.[e] **36** உங்கள் பரலோகத் தகப்பன் இரக்கமுள்ளவராக இருப்
பது போலவே நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள்.[f]

37 மற்றவர்களை நியாயந்தீர்ப்பதை நிறுத்துங்கள், அப்போது நீங்களும்
நியாயந்தீர்க்கப்பட மாட்டீர்கள்;[g] மற்றவர்களைக் கண்டனம் செய்வதை
நிறுத்துங்கள், அப்போது நீங்களும் கண்டனம் செய்யப்பட மாட்டீர்கள்.
மன்னித்துக்கொண்டே இருங்கள், அப்போது நீங்களும் மன்னிக்கப்படுவீர்
கள்.[h] **38** கொடுப்பதைப் பழக்கமாக்கிக்கொள்ளுங்கள், அப்போது மக்க
ளும் உங்களுக்குக் கொடுப்பார்கள்.[i] அதுவும், அமுக்கிக் குலுக்கி நிரம்பி
வழியும்படி நன்றாக அளந்து உங்களுடைய மடியில் போடுவார்கள். எந்த
அளவையால் மற்றவர்களுக்கு அளக்கிறீர்களோ, அதே அளவையால்தான்
அவர்களும் உங்களுக்கு அளப்பார்கள்" என்று சொன்னார்.

39 பின்பு, அவர்களுக்கு ஓர் உவமையையும் சொன்னார்; "குருட
னுக்குக் குருடன் வழிகாட்ட முடியாது, இல்லையா? இரண்டு பேரும் குழி
யில்தானே விழுவார்கள்?[j] **40** மாணவன் தன்னுடைய ஆசிரியரைவிட*
உயர்ந்தவன் கிடையாது, ஆனால் முழுமையாகப் பயிற்சி கொடுக்கப்
பட்ட ஒவ்வொருவனும் தன்னுடைய ஆசிரியரைப் போலவே இருப்பான்.
41 உங்கள் கண்ணில் இருக்கிற மரக்கட்டையை* கவனிக்காமல் உங்
கள் சகோதரன் கண்ணில் இருக்கிற தூசியை ஏன் பார்க்கிறீர்கள்?[k] **42** உங்
கள் கண்ணில் இருக்கிற மரக்கட்டையைக் கவனிக்காமல் நீங்கள் எப்படி
உங்கள் சகோதரனிடம், 'உன் கண்ணில் இருக்கிற தூசியை எடுக்கட்டுமா?'
என்று கேட்க முடியும்? வெளிவேஷக்காரர்களே! முதலில் உங்கள் கண்
ணில் இருக்கிற மரக்கட்டையை எடுத்துப்போடுங்கள், அப்போதுதான் உங்
கள் சகோதரன் கண்ணில் இருக்கிற தூசியை எப்படி எடுப்பது என்று உங்
களுக்குத் தெளிவாகத் தெரியும்.

43 நல்ல மரம் எதுவும் கெட்ட கனியைக் கொடுக்காது; அதேபோல்,
கெட்ட மரம் எதுவும் நல்ல கனியைக் கொடுக்காது.[l] **44** ஒவ்வொரு மர

6:34 * அதாவது, "வட்டியில்லாமல் கடன் கொடுத்தால்." **6:40** * வே.வா., "சீஷன் தன்னுடைய போதகரைவிட." **6:41** * நே.மொ., "உத்திரத்தை."

அதி. 6

a மத் 7:12

b மத் 5:46, 47

c லேவி 25:35, 36; உபா 15:7, 8; மத் 5:42

d யாத் 22:25; லேவி 25:37; உபா 23:20; சங் 37:25, 26

e மத் 5:45; அப் 14:17

f மத் 5:48; எபே 5:1, 2; யாக் 2:13

g மத் 7:1, 2; ரோ 14:10

h மத் 6:14; மாற் 11:25

i நீதி 19:17

j மத் 15:14

k மத் 7:3-5

l மத் 7:16-18

அதி. 6
a மத் 12:33
b மத் 12:34, 35
c மத் 7:21
லூ 13:24
ரோ 2:13
யாக் 1:22
d மத் 7:24-27
e சங் 125:1
f யாக் 1:23, 24

அதி. 7
g மத் 8:5, 6
h மத் 8:8, 9

மும் எப்படிப்பட்டது என்பதை அதன் கனியை வைத்துத் தெரிந்துகொள்ள
லாம்.[a] உதாரணமாக, யாரும் முட்செடிகளிலிருந்து அத்திகளைப் பறிப்பது
இல்லை, முட்புதர்களிலிருந்து திராட்சைகளைப் பறிப்பதும் இல்லை.
45 நல்ல மனுஷன் தன்னுடைய இதயம் என்ற நல்ல பொக்கிஷத்திலிருந்து
நல்லவற்றை எடுக்கிறான், பொல்லாத மனுஷனோ தன்னுடைய பொல்லாத
பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவற்றை எடுக்கிறான். இதயத்தில் நிறைந்தி
ருப்பதையே வாய் பேசும்.[b]

46 நான் சொல்கிறபடி செய்யாமல் ஏன் என்னை 'கர்த்தாவே! கர்த்
தாவே!'* என்று கூப்பிடுகிறீர்கள்?[c] **47** என்னிடம் வந்து என்னுடைய
வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படி செய்கிறவன் யாரைப் போல் இருக்
கிறான் என்று உங்களுக்குச் சொல்கிறேன்:[d] **48** ஆழமாகத் தோண்டி,
பாறைமேல் அஸ்திவாரம் போட்டு வீடு கட்டிய மனுஷனைப் போல்
அவன் இருக்கிறான். வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து அந்த வீட்
டின்மேல் மோதியபோதும், அதை அசைக்க முடியவில்லை. ஏனென்
றால், அது உறுதியாகக் கட்டப்பட்டிருந்தது.[e] **49** ஆனால், நான் சொன்ன
இந்த வார்த்தைகளைக் கேட்டும் அவற்றின்படி செய்யாதவன்[f] அஸ்திவா
ரம் போடாமல் மண்மேல் வீடு கட்டிய மனுஷனைப் போல் இருக்கிறான்.
வெள்ளம் பெருக்கெடுத்து அதன்மேல் மோதிய உடனே அது விழுந்து
அடியோடு நாசமானது" என்றார்.

7 மக்களுக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் அவர் சொல்லி
முடித்த பிறகு கப்பர்நகூமுக்குள் போனார். **2** படை அதிகாரியான*
ஒருவருக்குப் பிரியமான வேலைக்காரன் வியாதிப்பட்டு, சாகிற நிலை
யில் இருந்தான்.[g] **3** இயேசுவைப் பற்றி அந்தப் படை அதிகாரி கேள்விப்
பட்டபோது தன்னுடைய வேலைக்காரனைக் காப்பாற்ற வரும்படி கேட்டுக்
கொள்வதற்காக யூதர்களுடைய பெரியோர்களில்* சிலரை அவரிடம்
அனுப்பினார். **4** அவர்கள் இயேசுவிடம் போய் மிகவும் கெஞ்சி, "நீங்கள்
இந்த உதவியைச் செய்வதற்கு இவர் தகுதியானவர். **5** ஏனென்றால், இவர்
நம்முடைய மக்களை நேசிக்கிறார்; இங்கே ஒரு ஜெபக்கூடத்தையும் கட்டித்
தந்திருக்கிறார்" என்று சொன்னார்கள். **6** அதனால், இயேசு அவர்களோடு
போனார். ஆனால், அந்த வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் அவர் வந்து
கொண்டிருந்தபோதே, படை அதிகாரி தன் நண்பர்களை அனுப்பி, "ஐயா,
உங்களுக்குச் சிரமம் வேண்டாம்; நீங்கள் என்னுடைய வீட்டுக்குள் அடியெ
டுத்து வைப்பதற்கு எனக்கு எந்தத் தகுதியும் இல்லை.[h] **7** உங்களை வந்து
பார்ப்பதற்கும்கூட தகுதி இல்லை. அதனால், ஒரு வார்த்தை சொல்லுங்
கள், என் வேலைக்காரன் குணமாகட்டும். **8** நான் அதிகாரம் உள்ளவர்க
ளின் கீழ் வேலை செய்தாலும், என் அதிகாரத்துக்குக் கீழும் படைவீரர்கள்
இருக்கிறார்கள்; நான் அவர்களில் ஒருவனிடம் 'போ!' என்றால் போகிறான்,
இன்னொருவனிடம் 'வா!' என்றால் வருகிறான்; என் அடிமையிடம் 'இதைச்
செய்!' என்றால் செய்கிறான்" என்று சொல்லச் சொன்னார். **9** அதைக்
கேட்டு இயேசு ஆச்சரியப்பட்டு, தன் பின்னால் வந்துகொண்டிருந்த கூட்டத்
தாரிடம் திரும்பி, "நான் உங்களுக்குச் சொல்கிறேன், இஸ்ரவேலில்கூட

6:46 * வே.வா., "எஜமானே! எஜமானே!" **7:2** * அதாவது, "நூறு வீரர்களுக்கு அதிகா
ரியான." **7:3** * வே.வா., "மூப்பர்களில்."

இப்பேர்ப்பட்ட விசுவாசத்தை நான் பார்த்ததில்லை”[a] என்று சொன்னார்.
10 அவரிடம் அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது,
அந்த வேலைக்காரன் குணமாகியிருந்ததைப் பார்த்தார்கள்.[b]

11 பின்பு, நாயீன் என்ற நகரத்துக்கு அவர் பயணம் செய்தார். அவரு
டைய சீஷர்களும் ஏராளமான மக்களும் அவரோடு பயணம் செய்தார்
கள். **12** அந்த நகரத்தின் வாசலுக்குப் பக்கத்தில் அவர் வந்தபோது,
இறந்துபோன ஒருவனைச் சிலர் தூக்கிக்கொண்டு வந்தார்கள். அவன் தன்
னுடைய அம்மாவுக்கு ஒரே மகன்.[c] அவளோ ஒரு விதவை. அந்த நகரத்
தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் அவளோடு வந்தார்கள். **13** இயேசு அவ
ளைப் பார்த்தபோது, மனம் உருகி,[d] “அழாதே”[e] என்று சொன்னார்.
14 பின்பு, பாடைக்குப் பக்கத்தில் போய் அதைத் தொட்டார். அதைத்
தூக்கிக்கொண்டு வந்தவர்கள் அப்படியே நின்றார்கள். அப்போது அவர்,
“இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திரு!”[f] என்று சொன்னார்.
15 இறந்துபோனவன் எழுந்து உட்கார்ந்து பேச ஆரம்பித்தான்; பின்பு,
இயேசு அவனை அவனுடைய அம்மாவிடம் ஒப்படைத்தார்.[g] **16** அங்
கிருந்த எல்லாரும் பயந்துபோனார்கள்; “பெரிய தீர்க்கதரிசி ஒருவர் நம் மத்
தியில் தோன்றியிருக்கிறார்”[h] என்றும், “கடவுள் தன்னுடைய மக்கள்மேல்
கவனத்தைத் திருப்பியிருக்கிறார்”[i] என்றும் சொல்லி கடவுளை மகிமைப்
படுத்த ஆரம்பித்தார்கள். **17** அவரைப் பற்றிய இந்தச் செய்தி யூதேயா
முழுவதும் அதன் சுற்றுப்புறம் முழுவதும் பரவியது.

18 யோவானுடைய சீஷர்கள் இவற்றையெல்லாம் யோவானிடம் சொன்
னார்கள்.[j] **19** அதனால், அவர் தன் சீஷர்களில் இரண்டு பேரைக் கூப்
பிட்டு, “வர வேண்டியவர் நீங்கள்தானா[k] அல்லது வேறொருவரையும்
நாங்கள் எதிர்பார்க்க வேண்டுமா?” என்று கேட்கச் சொல்லி இயேசுவிடம்
அனுப்பினார். **20** அந்தச் சீஷர்கள் போய், “யோவான் ஸ்நானகர்* எங்
களை உங்களிடம் அனுப்பி, ‘வர வேண்டியவர் நீங்கள்தானா அல்லது
வேறொருவரையும் நாங்கள் எதிர்பார்க்க வேண்டுமா?’ என்று கேட்கச்
சொன்னார்” என்றார்கள். **21** அந்த நேரத்தில் பலவிதமான நோய்களை
யும் கொடிய வியாதிகளையும் அவர் நீக்கினார்,[l] பேய்களைத் துரத்தி
னார், ஏராளமான ஆட்களைக் குணமாக்கினார், பார்வையில்லாத நிறைய
பேருக்குப் பார்வை கொடுத்தார். **22** அதன் பின்பு அவர் அந்தச் சீஷர்க
ளிடம், “நீங்கள் பார்த்ததையும் கேட்டதையும் யோவானிடம் போய்ச் சொல்
லுங்கள்: பார்வை இல்லாதவர்கள் பார்க்கிறார்கள்,[m] நடக்க முடியாதவர்கள்
நடக்கிறார்கள், தொழுநோயாளிகள் சுத்தமாகிறார்கள், காது கேட்காதவர்
கள் கேட்கிறார்கள்,[n] இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்படுகிறார்கள், ஏழை
களுக்கு நல்ல செய்தி சொல்லப்படுகிறது.[o] **23** எந்தச் சந்தேகத்துக்கும்
இடம் கொடுக்காமல் என்னை நம்புகிறவன் சந்தோஷமானவன்”[p] என்று
சொன்னார்.

24 யோவான் அனுப்பிய ஆட்கள் திரும்பிப் போன பின்பு,
இயேசு அந்தக் கூட்டத்தாரிடம் யோவானைப் பற்றிப் பேச ஆரம்பித்
தார்; அவர்களிடம், “எதைப் பார்க்க வனாந்தரத்துக்குப் போனீர்கள்? காற்றில்
அசைந்தாடும் நாணலையா?[q] **25** இல்லையென்றால், வேறு எதைப் பார்க்
கப் போனீர்கள்? விலை உயர்ந்த உடை உடுத்திய மனுஷனையா?[r]

7:20 * ஸ்நானகர் என்றால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்.

அதி. 7
a மத் 8:10
b மத் 8:13
c 1ரா 17:17; லூ 8:41, 42
d எபி 4:15
e லூ 8:52; யோவா 11:33
f 1ரா 17:21, 22; லூ 8:52-54; யோவா 11:43; அப் 9:40
g 1ரா 17:23; 2ரா 4:36
h உபா 18:15; யோவா 4:19; யோவா 6:14; யோவா 7:40
i லூ 1:68
j மத் 11:2-6
k சங் 40:7; சங் 118:26; சக 9:9; மத் 3:11
l ஏசா 53:4
m ஏசா 42:7
n ஏசா 29:18; ஏசா 35:5, 6
o ஏசா 61:1; லூ 4:18; யாக் 2:5
p ஏசா 8:14; லூ 2:34; யோவா 6:66
q மத் 11:7-11
r மாற் 1:6

அதி. 7
a மாற் 1:2
லூ 1:67, 76
b ஏசா 40:3
மல் 3:1
லூ 1:16, 17
யோவா 1:23
c மத் 11:11
d மத் 3:5, 6
லூ 3:12
e அப் 13:46
ரோ 10:2, 3
f மத் 11:16-19
g எண் 6:2, 3
மத் 3:4
லூ 1:13, 15
h மத் 11:19
லூ 5:30
i யோவா 10:37, 38
j மத் 26:6, 7
மாற் 14:3
யோவா 12:3
k லூ 15:2

விலை உயர்ந்த உடை உடுத்தி ஆடம்பரமாக வாழ்கிறவர்கள் அரண்மனை
களில்தானே இருக்கிறார்கள்! **26** இல்லையென்றால், வேறு யாரைப் பார்க்
கப் போனீர்கள்? ஒரு தீர்க்கதரிசியைப் பார்ப்பதற்காகவா? ஆம், நான் உங்
களுக்குச் சொல்கிறேன், ஒரு தீர்க்கதரிசியைவிட மேலானவரைப் பார்க்கவே
போனீர்கள்.[a] **27** 'இதோ! நான் என்னுடைய தூதுவரை உனக்கு முன்னால்
அனுப்புகிறேன். அவர் உனக்கு முன்னால் போய் உன் பாதையைத் தயார்
படுத்துவார்' என்று இவரைப் பற்றித்தான் எழுதப்பட்டிருக்கிறது.[b] **28** நான்
உங்களுக்குச் சொல்கிறேன், மனுஷராகப் பிறந்தவர்களில் யோவானைவிட
உயர்ந்தவர் யாரும் இல்லை; ஆனால், கடவுளுடைய அரசாங்கத்தில் தாழ்ந்
தவராக இருக்கிறவர் அவரைவிட உயர்ந்தவராக இருக்கிறார்"[c] என்று சொன்
னார். **29** யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றிருந்த வரி வசூலிப்பவர்க
ளும் மற்ற எல்லாரும்[d] இதைக் கேட்டு, கடவுள் நீதியுள்ளவர் என்று
அறிவித்தார்கள். **30** ஆனால், அவரிடம் ஞானஸ்நானம் பெறாத பரிசேயர்
களும் திருச்சட்ட வல்லுநர்களும் கடவுளுடைய அறிவுரையை அலட்சியம்
செய்தார்கள்.[e]

31 அதோடு இயேசு, "இந்தத் தலைமுறையை நான் யாருக்கு ஒப்பி
டுவேன்? இவர்கள் யாரைப் போல் இருக்கிறார்கள்?[f] **32** சந்தையில் உட்
கார்ந்துகொண்டு மற்ற பிள்ளைகளைப் பார்த்து, 'உங்களுக்காகக் குழல்
ஊதினோம், ஆனால் நீங்கள் நடனம் ஆடவில்லை; புலம்பி அழு
தோம், ஆனால் நீங்கள் அழவில்லை' என்று சொல்கிற சின்னப் பிள்ளை
களைப் போல் இருக்கிறார்கள். **33** எப்படியென்றால், யோவான் ஸ்நான
கர் ரொட்டி சாப்பிடவும் இல்லை, திராட்சமது குடிக்கவும் இல்லை;[g]
ஆனால், 'இவனுக்குப் பேய் பிடித்திருக்கிறது' என்று நீங்கள் சொல்கிறீர்கள்.
34 மனிதகுமாரனோ சாப்பிடுகிறார், குடிக்கிறார்; ஆனால், 'இவன் பெருந்
தீனிக்காரன், குடிகாரன், வரி வசூலிப்பவர்களுக்கும் பாவிகளுக்கும் நண்
பன்!'[h] என்று சொல்கிறீர்கள். **35** இருந்தாலும், ஒருவர் செய்கிற நீதியான
செயல்கள்* அவர் ஞானமுள்ளவர் என்பதை நிரூபிக்கும்"[i] என்று
சொன்னார்.

36 இயேசுவைத் தன்னுடைய வீட்டுக்கு விருந்து சாப்பிட வரச் சொல்லி
பரிசேயர்களில் ஒருவன் கேட்டுக்கொண்டே இருந்தான். அதனால்,
அவர் அவனுடைய வீட்டுக்குப் போய்ச் சாப்பிட உட்கார்ந்தார். **37** அந்த
நகரத்திலிருந்த பாவியாகிய ஒரு பெண் அதைக் கேள்விப்பட்டு,
வாசனை எண்ணெய் நிறைந்த வெண்சலவைக்கல் குப்பி ஒன்றை எடுத்து
வந்தாள்.[j] **38** அவருக்குக் கால்மாட்டில் பின்புறமாக உட்கார்ந்துகொண்டு,
அழுதுகொண்டே அவருடைய பாதங்களைக் கண்ணீரால் நனைத்து, தன்
னுடைய கூந்தலால் துடைத்தாள். அவருடைய பாதங்களை மென்மை
யாக முத்தமிட்டு, அந்த வாசனை எண்ணெயை ஊற்றினாள். **39** அவரை
விருந்துக்கு அழைத்த பரிசேயன் இதைப் பார்த்து, "இவர் ஒரு தீர்க்கதரிசி
யாக இருந்தால், தன்னைத் தொடுகிற இவள் யார், எப்படிப்பட்டவள் என்
றெல்லாம் இவருக்குத் தெரிந்திருக்கும்; இவள் ஒரு பாவியாயிற்றே" என்று
தனக்குள் சொல்லிக்கொண்டான்.[k] **40** அப்போது இயேசு அவனிடம்,
"சீமோனே, நான் உனக்கு ஒன்று சொல்கிறேன்" என்றார். அதற்கு அவன்,
"சொல்லுங்கள், போதகரே!" என்றான்.

7:35 * வே.வா., "செயல்களால் கிடைக்கிற பலன்கள்."

41 அப்போது அவர், “ஒருவரிடம் இரண்டு பேர் கடன் வாங்கியிருந்தார்
கள்; ஒருவன் 500 தினாரியு* வாங்கியிருந்தான், இன்னொருவன் 50 தினா
ரியு வாங்கியிருந்தான். **42** அவர்களால் கடனைத் திருப்பிக்கொடுக்க முடி
யாமல் போனபோது, அவர்கள் இரண்டு பேரையுமே அவர் தாராளமாக
மன்னித்தார். அப்படியானால், அந்த இரண்டு பேரில் யார் அவரிடம் அதி
கமாக அன்பு காட்டுவான்?” என்று கேட்டார். **43** அதற்கு சீமோன், “எவ
னுக்கு அதிகக் கடனை மன்னித்தாரோ அவன்தான் என்று நினைக்கிறேன்”
என்றான். அவர், “சரியாகச் சொன்னாய்” என்றார். **44** பின்பு அந்தப்
பெண்ணின் பக்கம் திரும்பி, சீமோனிடம், “இந்தப் பெண்ணைப் பார்த்
தாயா? நான் உன்னுடைய வீட்டுக்கு வந்தேன்; நீ என் பாதங்களைக்
கழுவத் தண்ணீர் தரவில்லை. ஆனால் இவள் என் பாதங்களைக் கண்ணீ
ரால் நனைத்து, தன்னுடைய கூந்தலால் துடைத்தாள். **45** நீ என்னை முத்
தமிடவில்லை; ஆனால், இந்தப் பெண் நான் உள்ளே வந்ததுமுதல் என்
னுடைய பாதங்களை மென்மையாக முத்தமிட்டுக்கொண்டே இருக்கிறாள்.
46 நீ என் தலையில் எண்ணெய் ஊற்றவில்லை; ஆனால், இந்தப் பெண்
என் பாதங்களில் வாசனை எண்ணெயை ஊற்றினாள். **47** நான் உனக்குச்
சொல்கிறேன், இவள் நிறைய* பாவங்கள் செய்திருந்தாலும் அவையெல்
லாம் மன்னிக்கப்படுகின்றன,[a] அதனால் இவள் இன்னும் அதிகமாக அன்பு
காட்டுகிறாள்; ஆனால், குறைவாக மன்னிக்கப்படுகிறவன் குறைவாகவே
அன்பு காட்டுகிறான்” என்று சொன்னார். **48** பின்பு அவளிடம், “உன்
னுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன”[b] என்று சொன்னார். **49** அவ
ரோடு சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள், “இவர் யார்? பாவங்களைக்கூட
மன்னிக்கிறாரே!” என்று சொல்லிக்கொண்டார்கள்.[c] **50** ஆனால் அவர்
அந்தப் பெண்ணிடம், “உன் விசுவாசம் உனக்கு மீட்பு தந்திருக்கிறது;[d] சமா
தானமாகப் போ” என்று சொன்னார்.

8 பின்பு, அவர் நகரம் நகரமாகவும் கிராமம் கிராமமாகவும் போய்
கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிய நல்ல செய்தியைப் பிரசங்கித்
தும் அறிவித்தும் வந்தார்.[e] பன்னிரண்டு பேரும்* அவரோடு இருந்தார்கள்.
2 பேய்களிலிருந்தும் நோய்களிலிருந்தும் விடுபட்ட பெண்கள் சிலர் அவ
ரோடு இருந்தார்கள்; ஏழு பேய்களிடமிருந்து விடுபட்ட மகதலேனா என்ற
மரியாள், **3** ஏரோதுவின் அரண்மனை மேற்பார்வையாளரான கூசாவின்
மனைவி யோவன்னாள்,[f] சூசன்னாள் எனப் பல பெண்கள் இருந்தார்கள்.
அவர்கள் தங்களுடைய உடைமைகளைக் கொண்டு அவருக்கும் அவரு
டைய அப்போஸ்தலர்களுக்கும் பணிவிடை செய்துவந்தார்கள்.[g]

4 அவருடன் நகரம் நகரமாகப் போனவர்களோடு மக்களும் பெரிய
கூட்டமாகத் திரண்டு வந்தார்கள். அப்போது, அவர் ஓர் உவமையை
அவர்களுக்குச் சொன்னார்;[h] **5** “விதைக்கிறவன் ஒருவன் விதை விதைக்
கப் போனான்; அவன் தூவிய சில விதைகள் பாதையோரத்தில் விழுந்து
மிதிபட்டன; வானத்துப் பறவைகள் வந்து அவற்றைக் கொத்தித் தின்றன.[i]
6 வேறு சில விதைகள் பாறை நிலத்தில் விழுந்தன; அவை முளைத்த பின்பு
அங்கே ஈரம் இல்லாததால் காய்ந்துவிட்டன.[j] **7** இன்னும் சில விதை
கள் முட்செடிகள் இருக்கிற நிலத்தில் விழுந்தன; அந்த முட்செடிகள் அவற்

7:41 *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **7:47** *வே.வா., “பெரிய.” **8:1** *அதாவது, “அப்போஸ்தலர்களும்.”

அதி. 7
a சங் 32:1
சங் 51:1
சங் 103:2, 3
ஏசா 1:18
ஏசா 43:25
ஏசா 44:22
b மத் 9:2
மாற் 2:5
c மாற் 2:7
லூ 5:21
d மத் 9:22
லூ 8:48

அதி. 8
e மத் 9:35
லூ 4:43
f லூ 24:9, 10
g மத் 27:55
மாற் 15:40, 41
h மத் 13:1-3
மாற் 4:1, 2
i மத் 13:3-9
மாற் 4:3-9
லூ 8:12
j லூ 8:13

அதி. 8
a லூ 8:14
b லூ 8:15
c மத் 11:15
மத் 13:9
மாற் 4:9
d மத் 13:10
மாற் 4:10
e சங் 78:2
மத் 13:34, 35
மாற் 4:34
f ஏசா 6:9, 10
மத் 13:11, 13
மாற் 4:11, 12
g மத் 13:18-23
மாற் 4:14-20
h மத் 13:19
மாற் 4:15
2கொ 4:3, 4
i மத் 13:20, 21
மாற் 4:16, 17
j மத் 19:23
1தீ 6:9
k 2தீ 4:10
l மத் 13:22
மாற் 4:18, 19
m அப் 16:14
n மத் 13:23
மாற் 4:20
எபி 10:36
o மத் 5:15
மாற் 4:21
லூ 11:33
பிலி 2:15
p மத் 10:26
மாற் 4:22
லூ 12:2
q மத் 25:23
r மத் 13:12
மத் 25:29
மாற் 4:24, 25
லூ 19:26
s மத் 13:55
யோவா 7:5
அப் 1:14
t மத் 12:46, 47
மாற் 3:31, 32
u மத் 12:48-50
மாற் 3:33-35
யோவா 15:14
v மத் 8:18, 23
மாற் 4:35, 36

றோடு கூடவே வளர்ந்து அவற்றை நெருக்கிப்போட்டன.[a] **8** மற்ற விதை
களோ நல்ல நிலத்தில் விழுந்தன; அவை முளைத்து, 100 மடங்கு பலன்
தந்தன"[b] என்றார். இவற்றைச் சொன்ன பின்பு, "கேட்பதற்குக் காதுள்ளவன்
கவனித்துக் கேட்கட்டும்"[c] என்று உரத்த குரலில் சொன்னார்.

9 இந்த உவமையின் அர்த்தம் என்னவென்று சீஷர்கள் அவரிடம் கேட்
டார்கள்.[d] **10** அதற்கு அவர், "கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிய பரி
சுத்த ரகசியங்களைப் புரிந்துகொள்ளும் பாக்கியம் உங்களுக்குக் கொடுக்
கப்பட்டிருக்கிறது; ஆனால், மற்றவர்களுக்கு அவை உவமைகள் மூலம்
சொல்லப்படுகின்றன.[e] அவர்கள் கண்ணால் பார்த்தும் பார்க்காதபடிக்கும்,
காதால் கேட்டும் புரிந்துகொள்ளாதபடிக்கும்[f] அவை உவமைகள் மூலம்
சொல்லப்படுகின்றன. **11** இந்த உவமையின் அர்த்தம் இதுதான்: விதை
கடவுளுடைய செய்தி.[g] **12** பாதையோர நிலத்தைப் போல் இருப்பவர்கள்
அந்தச் செய்தியைக் கேட்கிறார்கள்; ஆனால், அவர்கள் நம்பிக்கை வைக்
காமலும் மீட்புப் பெறாமலும் இருப்பதற்காகப் பிசாசு வந்து அவர்களுடைய
இதயத்திலிருந்து அந்தச் செய்தியை எடுத்துவிடுகிறான்.[h] **13** பாறை நிலத்
தைப் போல் இருப்பவர்கள் அந்தச் செய்தியைக் கேட்கும்போது சந்தோஷ
மாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அவர்களுக்குள் வேர் இல்லை; அத
னால் கொஞ்சக் காலத்துக்கு விசுவாசம் வைக்கிறார்கள், சோதனைக் காலம்
வந்தவுடன் விசுவாசத்தை விட்டுவிடுகிறார்கள்.[i] **14** முட்செடிகள் இருக்
கிற நிலத்தைப் போல் இருப்பவர்கள் அந்தச் செய்தியைக் கேட்கிறார்கள்;
ஆனால், கவலைகளும் செல்வங்களும்[j] சுகபோகங்களும்[k] அவர்களைத்
திசைதிருப்பி, முற்றிலும் நெருக்கி, முழு வளர்ச்சி அடையாதபடி செய்துவிடு
கின்றன.[l] **15** நல்ல நிலத்தைப் போல் இருப்பவர்களோ நேர்மையான நல்ல
இதயத்தோடு அந்தச் செய்தியைக் கேட்டு,[m] அதைத் தங்களுக்குள் பதிய
வைத்துக்கொண்டு, சகித்திருந்து பலன் கொடுக்கிறார்கள்.[n]

16 யாருமே விளக்கைக் கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தால் மூடி
வைக்க மாட்டார்கள், கட்டிலின் கீழும் வைக்க மாட்டார்கள்; உள்ளே வரு
கிறவர்களுக்கு வெளிச்சமாக இருக்கும்படி அதை விளக்குத்தண்டின் மேல்
தான் வைப்பார்கள்.[o] **17** மூடி வைக்கப்படுகிற எதுவும் வெளியில் தெரியா
மல் போகாது, மறைத்து வைக்கப்படுகிற எதுவும் வெட்டவெளிச்சமாகாமல்
போகாது, அம்பலமாகாமலும் போகாது.[p] **18** அதனால், நீங்கள் கேட்கிற
விதத்துக்குக் கவனம் செலுத்துங்கள். இருக்கிறவனுக்கு இன்னும் அதிகமா
கக் கொடுக்கப்படும்;[q] ஆனால், இல்லாதவனிடமிருந்து அவன் தன்னிடம்
இருப்பதாக நினைப்பதும் எடுத்துக்கொள்ளப்படும்"[r] என்று சொன்னார்.

19 அவருடைய அம்மாவும் சகோதரர்களும்[s] அவரைப் பார்க்க
வந்தார்கள், ஆனால் கூட்டமாக இருந்ததால் அவருக்குப் பக்கத்தில் போக
முடியவில்லை.[t] **20** அப்போது, "உங்கள் அம்மாவும் உங்கள் சகோதரர்க
ளும் உங்களைப் பார்க்க வெளியே நின்றுகொண்டிருக்கிறார்கள்" என்று
அவரிடம் சொன்னார்கள். **21** அதற்கு அவர், "கடவுளுடைய வார்த்தை
யைக் கேட்டு அதன்படி செய்கிற இவர்கள்தான் என் அம்மா, என் சகோத
ரர்கள்"[u] என்று சொன்னார்.

22 ஒருநாள் அவர் தன்னுடைய சீஷர்களோடு ஒரு படகில் ஏறிய
தும், "ஏரியின் அக்கரைக்குப் போகலாம் வாருங்கள்" என்று அவர்களி
டம் சொன்னார். அதனால், அவர்கள் படகை ஓட்டிக்கொண்டு போனார்கள்.[v]

23 படகு போய்க்கொண்டிருந்தபோது அவர் தூங்கிவிட்டார். அந்தச் சமயத்
தில், புயல்காற்று பயங்கரமாக வீசியது; படகு தண்ணீரால் நிரம்ப ஆரம்பித்
ததால், மூழ்கிவிடும் ஆபத்தில் இருந்தது.[a] **24** அப்போது அவர்கள் அவ
ரிடம் வந்து, “போதகரே, போதகரே, நாம் சாகப்போகிறோம்!” என்று சொல்லி
அவரை எழுப்பினார்கள். அவர் எழுந்து, காற்றையும் கொந்தளிக்கிற கட
லையும் அதட்டினார். உடனே அவை அடங்கின; அமைதி உண்டானது.[b]
25 அப்போது அவர்களிடம், “உங்கள் விசுவாசம் எங்கே?” என்று கேட்டார்.
அவர்களோ பயத்தோடும் பிரமிப்போடும், “இவர் உண்மையில் யார்? காற்
றையும் கடலையும்கூட அதட்டுகிறார், அவையும் இவருக்கு அடங்கிவிடு
கின்றனவே” என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள்.[c]

26 கலிலேயாவுக்கு எதிரே இருக்கும் கெரசேனர் பகுதியில் அவர்
கள் கரைசேர்ந்தார்கள்.[d] **27** அவர் படகிலிருந்து இறங்கியபோது, அந்த
நகரத்தைச் சேர்ந்த ஒருவன் அவருக்கு எதிரில் வந்தான்; பேய் பிடித்திருந்த
அவன் பல காலமாக உடை உடுத்தாமல் இருந்தான். அதோடு, வீட்டில் தங்
காமல் கல்லறைகளின் நடுவில் தங்கியிருந்தான்.[e] **28** இயேசுவைப் பார்த்
ததும் அவன் கத்திக் கூச்சல்போட்டு, அவர் முன்னால் மண்டிபோட்டு,
“இயேசுவே, உன்னதமான கடவுளின் மகனே, உங்களுக்கும் எனக்கும்
என்ன சம்பந்தம்? உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன், என்னைப் பாடுபடுத்
தாதீர்கள்” என்று கத்தினான்.[f] **29** ஏனென்றால் அவனைவிட்டு வெளியே
போகச் சொல்லி அந்தப் பேய்க்கு அவர் கட்டளையிட்டிருந்தார். அது எத்
தனையோ தடவை* அவனைப் பிடித்திருந்தது;[g] அவன் சங்கிலிகளாலும்
கால்விலங்குகளாலும் அடிக்கடி கட்டிப்போடப்பட்டு காவல் வைக்கப்பட்
டிருந்தும் அவற்றை உடைத்தெறிந்துபோட்டான். அந்தப் பேய் அவனை
ஒதுக்குப்புறமான இடங்களுக்கு ஓடிப்போக வைத்தது. **30** இயேசு அவ
னிடம், “உன் பெயர் என்ன?” என்று கேட்டார். அதற்கு அவன், “லேகி
யோன்”* என்று சொன்னான். ஏனென்றால், நிறைய பேய்கள் அவனுக்குள்
புகுந்திருந்தன. **31** ‘எங்களை அதலபாதாளத்துக்குப் போகச் சொல்லிக்
கட்டளையிடாதீர்கள்’[h] என்று அவரிடம் கெஞ்சிக்கொண்டே இருந்தன.
32 அப்போது மலையில் ஏராளமான பன்றிகள்[i] கூட்டமாக மேய்ந்து
கொண்டிருந்ததால், அந்தப் பன்றிகளுக்குள் புகுந்துகொள்ள அனுமதி
கொடுக்கும்படி அவரிடம் கெஞ்சிக் கேட்டன; அவரும் அனுமதி கொடுத்
தார்.[j] **33** அப்போது, அந்தப் பேய்கள் அவனைவிட்டு வெளியேறி பன்
றிகளுக்குள் புகுந்துகொண்டன; அந்தப் பன்றிகள் ஓட்டமாக ஓடி செங்குத்
தான பாறையிலிருந்து ஏரிக்குள் குதித்து மூழ்கிப்போயின. **34** அவற்றை
மேய்த்துக்கொண்டிருந்த ஆட்கள் இதைப் பார்த்து, ஓடிப்போய் நகரத்திலும்
நாட்டுப்புறத்திலும் இருந்தவர்களிடம் சொன்னார்கள்.

35 நடந்ததைப் பார்ப்பதற்காக மக்கள் புறப்பட்டு இயேசுவிடம் வந்தார்
கள்; பேய்கள் பிடித்திருந்த அந்த மனிதன் உடை உடுத்தி, புத்தி
தெளிந்து இயேசுவின் காலடியில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துப் பயந்து
போனார்கள். **36** நடந்ததை நேரில் பார்த்தவர்கள், பேய் பிடித்தவன் எப்
படிக் குணமானான் என்பதை அவர்களுக்குச் சொன்னார்கள். **37** கெர

அதி. 8
a மத் 8:24-27 மாற் 4:37-41
b சங் 89:9
c மத் 8:27 மாற் 4:41
d மாற் 5:1
e மத் 8:28, 29 மாற் 5:2-10
f மாற் 1:23, 24
g மாற் 9:20, 21
h வெளி 20:2, 3
i லேவி 11:7, 8 உபா 14:8
j மத் 8:30-34 மாற் 5:11-17

8:29 * அல்லது, “ரொம்பக் காலமாக.” **8:30** * “லேகியோன்” என்பது அந்தக் காலத்தில் ரோமப் படையின் முக்கியப் பிரிவு. இந்த வசனத்தில் இது பெரும் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

அதி. 8
a மாற் 5:18-20
b மாற் 5:21
c மத் 9:18, 19 மாற் 5:22-24
d லேவி 15:25
e மத் 9:20-22 மாற் 5:25-29
f எண் 15: 38, 39
g மாற் 5:30-34
h லூ 5:17
i மத் 9:22 லூ 7:50
j மாற் 5:35-37
k யோவா 11:25 ரோ 4:17
l லூ 7:12, 13
m மத் 9:23-26 மாற் 5:38-43 யோவா 11:11 அப் 7:60 அப் 13:36
n மாற் 5:41 லூ 7:14 யோவா 11:43
o ஆதி 2:7 பிர 3:19 ஏசா 42:5

சேனர் பகுதியைச் சேர்ந்த ஏராளமான மக்கள் மிகவும் பயந்துபோனதால்
தங்களைவிட்டுப் போகும்படி இயேசுவைக் கேட்டுக்கொண்டார்கள். அப்
போது அவர் திரும்பிப் போவதற்காகப் படகில் ஏறினார். **38** பேய்களிட
மிருந்து விடுதலையான அந்த மனிதன், தானும் அவரோடு வருவதாகக்
கெஞ்சிக்கொண்டே இருந்தான். **39** ஆனால் அவர், "நீ உன் வீட்டுக்குப்
போ, கடவுள் உனக்குச் செய்ததை எல்லாருக்கும் அறிவி" என்று சொல்லி
அவனை அனுப்பினார்.[a] அவனும் அங்கிருந்து போய், இயேசு தனக்குச்
செய்த எல்லாவற்றையும் நகரம் முழுவதும் அறிவித்தான்.

40 இயேசு திரும்பி வந்தபோது, மக்கள் எல்லாரும் அவருக்காக ஆவ
லோடு காத்திருந்ததால்[b] அவரை அன்புடன் வரவேற்றார்கள். **41** அப்
போது, ஜெபக்கூடத் தலைவரான யவீரு வந்தார். அவர் இயேசுவின் காலில்
விழுந்து, தன்னுடைய வீட்டுக்கு வரச் சொல்லிக் கெஞ்சினார்.[c] **42** ஏனென்
றால், சுமார் 12 வயதுள்ள அவருடைய ஒரே மகள் சாகும் நிலையில்
இருந்தாள்.

இயேசு போய்க்கொண்டிருந்தபோது மக்கள் கூட்டம் அவரை நெருக்கித்
தள்ளியது. **43** ஒரு பெண் 12 வருஷங்களாக இரத்தப்போக்கினால்[d]
அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள்; யாராலும் அவளைக் குணமாக்க முடிய
வில்லை.[e] **44** அவள் அவருக்குப் பின்னால் போய் அவருடைய மேலங்
கியின் ஓரத்தைத்[f] தொட்டாள். உடனே அவளுடைய இரத்தப்போக்கு
நின்றது. **45** அப்போது இயேசு, "யார் என்னைத் தொட்டது?" என்று
கேட்டார். எல்லாரும் மறுத்தபோது பேதுரு அவரிடம், "போதகரே, மக்
கள் உங்களைச் சுற்றிலும் நெருக்கிக்கொண்டிருக்கிறார்கள்"[g] என்று சொன்
னார். **46** ஆனால் இயேசு, "யாரோ என்னைத் தொட்டார்கள்; என்னிடமி
ருந்து வல்லமை[h] வெளியேறியது எனக்குத் தெரியும்" என்று சொன்னார்.
47 தான் இனியும் மறைந்திருக்க முடியாது என்பதை அந்தப் பெண்
உணர்ந்து, நடுக்கத்தோடு அவர் முன்னால் வந்து மண்டிபோட்டாள்; அவ
ரைத் தொட்டதற்கான காரணத்தையும் தான் உடனடியாகக் குணமானதை
யும் பற்றி அங்கிருந்த எல்லா மக்களுக்கு முன்பாகவும் சொன்னாள்.
48 இயேசு அவளிடம், "மகளே, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியி
ருக்கிறது; சமாதானமாகப் போ"[i] என்று சொன்னார்.

49 அவர் பேசிக்கொண்டிருந்தபோதே, ஜெபக்கூடத் தலைவரின் வீட்டி
லிருந்து ஒருவன் வந்து, "உங்கள் மகள் இறந்துவிட்டாள்! போதகரை இனி
தொந்தரவு செய்ய வேண்டாம்"[j] என்று சொன்னான். **50** இயேசு அதைக்
கேட்டு யவீருவிடம், "பயப்படாதே, விசுவாசம் வை; அவள் பிழைப்பாள்"[k]
என்று சொன்னார். **51** அவர் யவீருவின் வீட்டுக்கு வந்தபோது பேதுரு
வையும் யோவானையும் யாக்கோபையும் அந்தச் சிறுமியின் அப்பா
வையும் அம்மாவையும் தவிர வேறு யாரையும் தன்னோடு உள்ளே வர
அனுமதிக்கவில்லை. **52** மக்கள் எல்லாரும் அவளுக்காக அழுதுகொண்
டும் நெஞ்சில் அடித்துக்கொண்டும் இருந்தார்கள். அதனால் அவர், "அழா
தீர்கள்.[l] அவள் சாகவில்லை, தூங்கிக்கொண்டிருக்கிறாள்"[m] என்று
சொன்னார். **53** அவள் இறந்துவிட்டாள் என்பது அவர்களுக்குத் தெரிந்தி
ருந்ததால் எல்லாரும் அவரைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்க ஆரம்பித்தார்
கள். **54** ஆனால், அவர் அந்தச் சிறுமியின் கையைப் பிடித்து, "சிறுமியே,
எழுந்திரு!"[n] என்றார். **55** அப்போது அவளுக்கு உயிர்[o] திரும்ப வந்தது,

உடனே எழுந்துகொண்டாள்;[a] சாப்பிட அவளுக்கு ஏதாவது கொடுக்கும்
படி அவர் கட்டளையிட்டார். **56** அவளுடைய பெற்றோர் சந்தோஷத்
தில் திக்குமுக்காடிப்போனார்கள். ஆனால், நடந்த விஷயத்தை யாருக்கும்
சொல்ல வேண்டாமென்று அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார்.[b]

9 பின்பு, அவர் பன்னிரண்டு பேரையும்* ஒன்றாக வரவழைத்து பேய்க
ளையெல்லாம் துரத்துவதற்கும், நோய்களைக் குணமாக்குவதற்கும்
அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்.[c] **2** கடவுளுடைய
அரசாங்கத்தைப் பற்றிப் பிரசங்கிப்பதற்காகவும் நோயாளிகளைக் குணப்
படுத்துவதற்காகவும் அவர்களை அனுப்பினார். **3** அப்போது அவர்களி
டம், “பயணத்துக்காகத் தடியோ உணவுப் பையோ ரொட்டியோ காசோ*
எதையுமே எடுத்துக்கொண்டு போகாதீர்கள்; இரண்டு உடைகளையும்#
கொண்டுபோகாதீர்கள்.[d] **4** நீங்கள் எந்த ஊரிலாவது ஒரு வீட்டுக்குப்
போனால், புறப்படும்வரை அங்கேயே தங்கியிருங்கள்.[e] **5** மக்கள் உங்
களை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர்களுடைய நகரத்தைவிட்டுப் புறப்
படும்போது உங்கள் பாதங்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்; இது
அவர்களுக்கு எதிரான சாட்சியாக இருக்கும்”[f] என்று சொன்னார். **6** அவர்
கள் புறப்பட்டு கிராமம் கிராமமாகப் போய், அந்தப் பகுதி முழுவதும் நல்ல
செய்தியை அறிவித்தார்கள், நோயாளிகளைக் குணமாக்கினார்கள்.[g]

7 நடந்துகொண்டிருந்த எல்லா விஷயங்களையும் மாகாண அதிபதி
ஏரோது* கேள்விப்பட்டான். யோவான்தான் உயிரோடு எழுப்பப்பட்டிருக்கி
றார்[h] என்று சிலரும், **8** எலியாதான் மறுபடியும் வந்திருக்கிறார் என்று
வேறு சிலரும், பூர்வ தீர்க்கதரிசிகளில் ஒருவர்தான் உயிரோடு எழுந்துவந்தி
ருக்கிறார் என்று இன்னும் சிலரும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.[i] அதனால்,
அவன் பயங்கர குழப்பத்தில் இருந்தான். **9** “யோவானுடைய தலையை
நான் வெட்டினேனே.[j] அப்படியானால், இந்த மனுஷர் யார்? இவரைப் பற்றி
இப்படியெல்லாம் கேள்விப்படுகிறேனே” என்று சொன்னான். அதனால்,
அவரைப் பார்க்க வாய்ப்பு தேடிக்கொண்டிருந்தான்.[k]

10 அப்போஸ்தலர்கள் திரும்பி வந்தபோது, தாங்கள் செய்த எல்லாவற்
றையும் இயேசுவிடம் சொன்னார்கள்.[l] அதன் பின்பு, அவர் அவர்களைக்
கூட்டிக்கொண்டு, தனியாய் இருப்பதற்காக பெத்சாயிதா என்ற நகரத்துக்குப்
போனார்.[m] **11** அதைத் தெரிந்துகொண்டு ஏராளமான மக்கள் அவரைப்
பின்தொடர்ந்து போனார்கள். அவர்களை அவர் அன்போடு வரவேற்று,
கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்; நோயாளிக
ளைக் குணமாக்கினார்.[n] **12** பொழுதுசாயும் நேரத்தில் பன்னிரண்டு
பேரும் அவரிடம் வந்து, “நாம் ஒதுக்குப்புறமான இடத்தில் இருக்கிறோம்.
அதனால், சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் இந்த மக்களை
அனுப்பிவிடுங்கள்; இவர்கள் அங்கே போய்த் தங்கி, உணவுப் பொருள்
களை வாங்கிக்கொள்ளட்டும்”[o] என்று சொன்னார்கள். **13** ஆனால் அவர்,
“நீங்களே இவர்களுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுங்கள்”[p] என்று சொன்னார்.
அதற்கு அவர்கள், “ஐந்து ரொட்டிகளையும் இரண்டு மீன்களையும் தவிர
எங்களிடம் வேறெதுவும் இல்லையே. நாங்கள் போய் இவர்கள் எல்லாருக்

9:1 *அதாவது, “அப்போஸ்தலர்களையும்.” **9:3** *நே.மொ., “வெள்ளிக் காசோ.” #வே.வா., “கூடுதல் உடையையும்.” **9:7** *அதாவது, “ஏரோது அந்திப்பா.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 8
a மாற் 5:42
b மாற் 7:35, 36

அதி. 9
c மத் 10:1 மாற் 6:7
d மத் 10:9, 10 மாற் 6:8, 9 லூ 10:4
e மத் 10:11 மாற் 6:10 லூ 10:5, 7
f மத் 10:14 மாற் 6:11 லூ 10:10, 11 அப் 13:50, 51
g மத் 11:1 மாற் 6:12, 13
h மத் 14:1, 2 மாற் 6:14–16
i மாற் 8:27, 28 லூ 9:18, 19
j மத் 14:3, 10
k லூ 23:8
l மாற் 6:30
m மத் 14:13
n மத் 14:14 மாற் 6:34 யோவா 6:2
o மத் 14:15–21 மாற் 6:35–44 யோவா 6: 5–13
p 2ரா 4:42–44

கும் உணவு வாங்கி வந்தால்தான் உண்டு” என்று சொன்னார்கள்.
14 அங்கே சுமார் 5,000 ஆண்கள் இருந்தார்கள்; ஆனாலும், அவர் தன்
னுடைய சீஷர்களிடம், “இவர்களைச் சுமார் ஐம்பதுஐம்பது பேராக உட்கார
வையுங்கள்” என்று சொன்னார். **15** அவர் சொன்னபடியே அவர்கள் எல்
லாரையும் உட்கார வைத்தார்கள். **16** அப்போது அவர் அந்த ஐந்து ரொட்
டிகளையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தைப் பார்த்து, ஜெபம்
செய்தார்.* பின்பு ரொட்டிகளைப் பிட்டு, மக்களுக்குப் பரிமாறுவதற்காக
அந்த ரொட்டிகளையும் மீன்களையும் சீஷர்களிடம் கொடுத்தார். **17** எல்
லாரும் திருப்தியாகச் சாப்பிட்டார்கள்; மீதியிருந்த ரொட்டித் துண்டுகளை 12
கூடைகளில் அவர்கள் சேகரித்தார்கள்.[a]

18 பின்பு, அவர் தனியாக ஜெபம் செய்துகொண்டிருந்தபோது, சீஷர்கள்
அவரிடம் வந்தார்கள்; அப்போது அவர், “நான் யாரென்று மக்கள் சொல்கி
றார்கள்?”[b] என்று கேட்டார். **19** அதற்கு அவர்கள், “சிலர் யோவான்
ஸ்நானகர்* என்றும், வேறு சிலர் எலியா என்றும் சொல்கிறார்கள்; இன்
னும் சிலர், பூர்வ தீர்க்கதரிசிகளில் ஒருவர் உயிரோடு எழுந்து வந்துவிட்
டார் என்று சொல்கிறார்கள்”[c] என்றார்கள். **20** அப்போது அவர், “ஆனால்
நீங்கள் என்னை யாரென்று சொல்கிறீர்கள்?” என்று கேட்டார். அதற்கு
பேதுரு, “நீங்கள் கடவுளால் அனுப்பப்பட்ட கிறிஸ்து”[d] என்று சொன்னார்.
21 இதை யாருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கண்டிப்பு
டன் கட்டளையிட்டார்.[e] **22** அதோடு, “மனிதகுமாரன் பல பாடுகள் பட
வேண்டும், பெரியோர்களாலும்* முதன்மை குருமார்களாலும் வேத அறி
ஞர்களாலும் ஒதுக்கித்தள்ளப்பட்டு, கொலை செய்யப்பட வேண்டும்,[f]
பின்பு மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பப்பட வேண்டும்”[g] என்றும்
சொன்னார்.

23 அதன்பின் எல்லாரிடமும், “யாராவது என்னைப் பின்பற்றிவர விரும்
பினால், அவர் தன்னையே துறந்து,[h] தன் சித்திரவதைக் கம்பத்தை* தின
மும் சுமந்துகொண்டு, தொடர்ந்து என் பின்னால் வர வேண்டும்.[i] **24** தன்
னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நினைக்கிறவன் அதை இழந்து
போவான். ஆனால், எனக்காகத் தன் உயிரை இழப்பவன் அதைக் காப்பாற்
றிக்கொள்வான்.[j] **25** சொல்லப்போனால், ஒருவர் இந்த உலகத்தில் இருக்
கிற எல்லாவற்றையும் சம்பாதித்தாலும் தன் உயிரை இழந்துவிட்டால்
அல்லது தனக்குக் கேடு உண்டாக்கிக்கொண்டால் என்ன பிரயோஜனம்?[k]
26 என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் ஒருவன் வெட்கப்
பட்டால், மனிதகுமாரன் தன்னுடைய மகிமையிலும் தன்னுடைய தகப்பனின்
மகிமையிலும் பரிசுத்த தூதர்களின் மகிமையிலும் வரும்போது அவனைக்
குறித்து வெட்கப்படுவார்.[l] **27** உண்மையாகவே உங்களுக்குச் சொல்கி
றேன், இங்கே நிற்கிறவர்களில் சிலர், கடவுளுடைய அரசாங்கத்தைப் பார்ப்
பதற்கு முன்னால் சாகவே மாட்டார்கள்” என்று சொன்னார்.[m]

28 அவர் இந்த வார்த்தைகளைச் சொல்லி சுமார் எட்டு நாட்களுக்குப்
பின்பு, பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு,
ஜெபம் செய்வதற்காக ஒரு மலைமேல் ஏறினார்.[n] **29** அவர் ஜெபம்

9:16 *நே.மொ., “அவற்றை ஆசீர்வதித்தார்.” **9:19** *ஸ்நானகர் என்றால் ஞானஸ்நா
னம் கொடுக்கிறவர். **9:22** *வே.வா., “மூப்பர்களாலும்.” **9:23** *சொல் பட்டியலைப்
பாருங்கள்.

அதி. 9

a மத் 14:20, மாற் 6:43, யோவா 6:13
b மத் 16:13-16, மாற் 8:27-30
c லூ 9:7, 8
d மத் 16:16, மாற் 8:29, யோவா 1:41, யோவா 6:68, 69
e மத் 16:20
f ஏசா 53:5, 8, லூ 17:25
g மத் 16:21, மாற் 8:31
h பிலி 3:7, 8
i மத் 10:38, மத் 16:24, மாற் 8:34, லூ 14:27
j மத் 16:25, மாற் 8:35, யோவா 12:25, அப் 20:24, வெளி 2:10
k மத் 16:26, மாற் 8:36
l மத் 10:33, மாற் 8:38, 2தீ 2:12
m மத் 16:28, மாற் 9:1
n மத் 17:1-8, மாற் 9:2-8

செய்துகொண்டிருந்தபோது, அவருடைய முகத்தின் தோற்றம் மாறியது,
அவருடைய உடை வெண்மையாக மின்னியது. **30** அவரோடு மோசே,
எலியா ஆகிய இரண்டு பேரும் பேசிக்கொண்டிருந்தார்கள். **31** மகிமையு
டன் தோன்றிய இவர்கள் எருசலேமில் நிறைவேறப்போகிற[a] அவருடைய
இறுதிப் பயணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். **32** பேதுருவும்
அவரோடு இருந்தவர்களும் அரைத்தூக்கத்தில் இருந்தார்கள். அவர்கள்
விழித்துக்கொண்டபோது, அவருடைய மகிமையையும் அந்த இரண்டு பேர்
அவருடன் நின்றுகொண்டிருந்ததையும் பார்த்தார்கள்.[b] **33** அந்த இரண்டு
பேரும் அவரைவிட்டுப் புறப்பட்டபோது பேதுரு இயேசுவிடம், “போத
கரே, இங்கே இருப்பது எங்கள் பாக்கியம். உங்களுக்கு ஒன்றும், மோசேக்கு
ஒன்றும், எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை நாங்கள் போடுகி
றோம்” என்று சொன்னார்; அவர் என்ன சொன்னார் என்று அவருக்கே தெரி
யவில்லை. **34** அவர் இதைச் சொல்லிக்கொண்டிருந்தபோதே, ஒரு மேகம்
தோன்றி அவர்கள்மேல் நிழலிடத் தொடங்கியது; அது அவர்களைச் சூழ்ந்து
கொண்டபோது அவர்கள் பயந்துபோனார்கள். **35** அப்போது, “இவர் என்
மகன், இவரை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்;[c] இவர் சொல்வதைக் கேளுங்
கள்”[d] என்று அந்த மேகத்திலிருந்து ஒரு குரல்[e] ஒலித்தது. **36** அந்தச் சம
யத்தில் இயேசு மட்டும் தனியாக இருப்பதை அவர்கள் பார்த்தார்கள். அவர்
கள் தாங்கள் பார்த்த எதையும் அந்த நாட்களில் யாருக்கும் சொல்லாமல்
அமைதியாக இருந்தார்கள்.[f]

37 அடுத்த நாள் அவர்கள் மலையிலிருந்து இறங்கியபோது, பெரிய
கூட்டமாக மக்கள் அவரைப் பார்க்க வந்தார்கள்.[g] **38** அப்போது கூட்டத்
திலிருந்த ஒருவர், “போதகரே, உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன், என் மக
னுக்கு உதவி செய்யுங்கள்,* அவன் எனக்கு ஒரே மகன்.[h] **39** அவனை
ஒரு பேய் பிடித்துக்கொள்கிறது, திடீர் திடீரென்று கத்த வைக்கிறது; அவ
னுக்கு வலிப்பு உண்டாக்கி வாயில் நுரை தள்ள வைக்கிறது; அவனைக்
காயப்படுத்திய பிறகும் எளிதில் அவனைவிட்டுப் போவதில்லை. **40** அந்
தப் பேயை விரட்டச் சொல்லி உங்கள் சீஷர்களிடம் கெஞ்சினேன், அவர்
களால் முடியவில்லை” என்று சொன்னார். **41** அப்போது இயேசு, “விசுவா
சமில்லாத சீர்கெட்ட தலைமுறையே![i] நான் இன்னும் எத்தனை காலம்தான்
உங்களோடிருந்து உங்களைச் சகித்துக்கொள்ள வேண்டுமோ?” என்று
சொல்லிவிட்டு, “உன் மகனை இங்கே கொண்டுவா”[j] என்றார். **42** அவன்
வந்துகொண்டிருந்தபோதே, அந்தப் பேய் அவனைக் கீழே தள்ளி அவ
னுக்குப் பயங்கரமாக வலிப்பு உண்டாக்கியது. ஆனாலும், இயேசு அந்தப்
பேயை அதட்டி, அந்தப் பையனைக் குணமாக்கி, அவனுடைய அப்பா
விடம் ஒப்படைத்தார். **43** கடவுளுடைய மகா வல்லமையைப் பார்த்து
எல்லாரும் பிரமித்துப்போனார்கள்.

இயேசு செய்த எல்லாவற்றையும் குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்
டபோது அவர் தன்னுடைய சீஷர்களிடம், **44** “நான் சொல்வதைக் கவ
னமாகக் கேட்டு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், மனிதகுமாரன் காட்
டிக்கொடுக்கப்பட்டு, மக்களுடைய கையில் ஒப்படைக்கப்படுவார்”[k] என்று
சொன்னார். **45** ஆனால், அவர் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ள
வில்லை. சொல்லப்போனால், அவர்கள் உணர்ந்துகொள்ளாதபடி அது

9:38 * வே.வா., “என் மகனைக் கண்ணோக்கிப் பாருங்கள்.”

அதி. 9
a லூ 9:22; லூ 13:33
b 2பே 1:16
c சங் 2:7; ஏசா 42:1; மத் 3:17; 2பே 1:17
d உபா 18:15; மத் 17:5; மாற் 9:7; அப் 3:22, 23
e லூ 3:22; யோவா 12:28
f மத் 17:9; மாற் 9:9
g மாற் 9:14, 15
h மத் 17:14-16; மாற் 9:17, 18
i உபா 32:5
j மத் 17:17, 18; மாற் 9:19-27
k மத் 17:22, 23; மாற் 9:31, 32; லூ 18:31-33

அவர்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது. அதைப் பற்றி அவரிடம் கேள்வி
கேட்கவும் பயந்தார்கள்.

46 பின்பு, தங்களில் யார் மிக உயர்ந்தவர் என்ற விவாதம்[a] சீஷர்
கள் மத்தியில் உண்டானது. **47** அவர்களுடைய எண்ணங்களை இயேசு
தெரிந்துகொண்டு, ஒரு சின்னப் பிள்ளையைக் கொண்டுவந்து தன் பக்கத்
தில் நிறுத்தி, **48** “இந்தச் சின்னப் பிள்ளையை எனக்காக* ஏற்றுக்கொள்கி
றவன் என்னையும் ஏற்றுக்கொள்கிறான்; என்னை ஏற்றுக்கொள்கிறவன்
என்னை அனுப்பியவரையும் ஏற்றுக்கொள்கிறான்.[b] உங்கள் எல்லாரிலும்
யார் தன்னைத் தாழ்த்திக்கொள்கிறானோ அவனே உயர்ந்தவனாக இருப்
பான்”[c] என்று அவர்களிடம் சொன்னார்.

49 அப்போது யோவான், “போதகரே, ஒருவன் உங்களுடைய பெய
ரைச் சொல்லி பேய்களை விரட்டுவதைப் பார்த்தோம்; அவன் நம்மைப் பின்
பற்றி வராததால், அவனைத் தடுக்க முயற்சி செய்தோம்”[d] என்று சொன்னார்.
50 ஆனால் இயேசு, “அவனைத் தடுக்காதீர்கள், உங்களுக்கு விரோதமாக
இல்லாதவன் உங்கள் பக்கம் இருக்கிறான்” என்று சொன்னார்.

51 பின்பு, அவர் மேலே எடுத்துக்கொள்ளப்படும்[e] காலம் நெருங்
கிக்கொண்டிருந்தபோது, எருசலேமுக்குப் போகத் தீர்மானமாக இருந்தார்.
52 அதனால், தனக்கு முன்னால் தூதுவர்களை அனுப்பினார். அவர்கள்
புறப்பட்டு, அவருக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக சமாரியர்க
ளுடைய ஒரு கிராமத்துக்குள் போனார்கள். **53** அவர் எருசலேமுக்குப்
போகத் தீர்மானமாக இருந்ததால் அந்தக் கிராமத்து மக்கள் அவரை ஏற்
றுக்கொள்ளவில்லை.[f] **54** அதைப் பார்த்து அவருடைய சீஷர்களான யாக்
கோபும் யோவானும்,[g] “எஜமானே, எங்களுக்குக் கட்டளையிடுங்கள்,
வானத்திலிருந்து நெருப்பை வரவழைத்து இவர்களை அழித்துவிடுகி
றோம்”[h] என்று சொன்னார்கள். **55** அவரோ திரும்பிப் பார்த்து அவர்க
ளைக் கண்டித்தார். **56** அதன் பின்பு, அவர்கள் வேறொரு கிராமத்துக்குப்
போனார்கள்.

57 அவர்கள் போய்க்கொண்டிருந்தபோது வழியில் ஒருவன் அவரி
டம், “நீங்கள் எங்கே போனாலும் நான் உங்கள் பின்னால் வருவேன்” என்று
சொன்னான். **58** அதற்கு இயேசு, “குள்ளநரிகளுக்குக் குழிகளும் பறவை
களுக்குக் கூடுகளும் இருக்கின்றன, ஆனால் மனிதகுமாரனுக்குத் தலை
சாய்க்க இடமில்லை”[i] என்று சொன்னார். **59** பின்பு இன்னொருவனிடம்,
“என்னைப் பின்பற்றி வா” என்று சொன்னார். அப்போது அவன், “எஜ
மானே, முதலில் நான் போய் என்னுடைய அப்பாவை அடக்கம் செய்து
விட்டு வருகிறேன், எனக்கு அனுமதி கொடுங்கள்”[j] என்று கேட்டான்.
60 அதற்கு அவர், “இறந்தவர்கள்[k] இறந்தவர்களை அடக்கம் செய்யட்
டும், நீ போய்க் கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றி எல்லா இடங்களி
லும் சொல்”[l] என்றார். **61** வேறொருவன், “எஜமானே, நான் உங்களைப்
பின்பற்றி வருவேன். ஆனால், என் வீட்டில் இருப்பவர்களிடமிருந்து விடை
பெற்று வர முதலில் எனக்கு அனுமதி கொடுங்கள்” என்று கேட்டான்.
62 இயேசு அவனிடம், “கலப்பையின் மேல் கை வைத்த பிறகு, பின்னால்
திரும்பிப் பார்க்கிற[m] எவனும் கடவுளுடைய அரசாங்கத்துக்குத் தகுதி இல்
லாதவன்”[n] என்று சொன்னார்.

அதி. 9
a மத் 18:1-5, மாற் 9:33-37, லூ 22:24
b மாற் 9:37, யோவா 12:44
c நீதி 18:12, மத் 18:4, 5, மத் 23:11, 12
d மாற் 9:38-40
e அப் 1:1, 2, 1தீ 3:16
f யோவா 4:9
g மாற் 3:17
h 2ரா 1:10
i மத் 8:20
j மத் 8:21
k எபே 2:1
l மத் 8:22
m ஆதி 19:17
n மத் 10:37, 1கொ 9:24, பிலி 3:13

9:48 * வே.வா., “என் பெயரில்.”

10 இவற்றுக்குப் பின்பு, இயேசு இன்னும் 70 பேரை நியமித்து, தான்
போகவிருந்த ஒவ்வொரு நகரத்துக்கும் இடத்துக்கும் அவர்களைத்
தனக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.[a] **2** அப்போது
அவர்களிடம், "அறுவடை அதிகமாக இருக்கிறது, ஆனால் வேலையாட்
கள் குறைவாக இருக்கிறார்கள். அதனால், அறுவடைக்கு வேலையாட்களை
அனுப்பச் சொல்லி அறுவடையின் எஜமானிடம் கெஞ்சிக் கேளுங்கள்.[b]
3 புறப்பட்டுப் போங்கள்; இதோ! ஓநாய்கள் நடுவில் ஆட்டுக்குட்டிகளை
அனுப்புவதுபோல் உங்களை அனுப்புகிறேன்.[c] **4** பணப் பையையோ
உணவுப் பையையோ செருப்புகளையோ எடுத்துக்கொண்டு போகாதீர்
கள்;[d] வழியில் யாருக்கும் வாழ்த்துச் சொல்லாதீர்கள்.* **5** நீங்கள் ஒரு வீட்
டுக்குள் போகும்போது, 'இந்த வீட்டுக்குச் சமாதானம் கிடைக்கட்டும்' என்று
முதலில் வாழ்த்துச் சொல்லுங்கள்.[e] **6** சமாதானத்தை விரும்பாதவர்
அங்கே இருந்தால், நீங்கள் சொன்ன சமாதான வாழ்த்து உங்களிடம் திரும்
பிவிடும். ஆனால், சமாதானத்தை விரும்புகிறவர் அங்கே இருந்தால், நீங்
கள் வாழ்த்திய சமாதானம் அவர்மேல் தங்கும். **7** அதனால் நீங்கள் அந்த
வீட்டிலேயே தங்கி,[f] அங்கிருப்பவர்கள் தருவதைச் சாப்பிடுங்கள், குடி
யுங்கள்.[g] வேலையாள் தன் கூலியைப் பெறத் தகுதியானவன்.[h] வீடு வீடாக
மாறிக்கொண்டே இருக்காதீர்கள்.

8 அதோடு, நீங்கள் ஒரு நகரத்துக்குள் போகும்போது, அங்கிருப்
பவர்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்கள் முன்னால் வைக்கப்படுவ
தைச் சாப்பிடுங்கள். **9** அங்கே இருக்கிற நோயாளிகளைக் குணமாக்
குங்கள். 'கடவுளுடைய அரசாங்கம் நெருங்கி வந்துவிட்டது'[i] என்று அந்த
நகரத்தில் இருப்பவர்களிடம் சொல்லுங்கள். **10** ஆனால், ஒரு நகரத்துக்
குள் போகும்போது அங்கிருப்பவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்
டால் அதன் முக்கியத் தெருக்களுக்குப் போய், **11** 'எங்கள் பாதங்களில்
படிந்த உங்கள் நகரத்தின் தூசியைக்கூட உங்களுக்கு எதிராகத் தட்டிப்
போடுகிறோம்.[j] ஆனாலும், கடவுளுடைய அரசாங்கம் நெருங்கி வந்துவிட்
டதைத் தெரிந்துகொள்ளுங்கள்' என்று சொல்லுங்கள். **12** நியாயத்தீர்ப்பு
நாளில், சோதோமுக்குக் கிடைக்கும் தண்டனையைவிட அந்த நகரத்துக்
குக் கிடைக்கும் தண்டனை பயங்கரமாக இருக்கும் என்று நான் உங்களுக்
குச் சொல்கிறேன்.[k]

13 கோராசினே, உனக்குக் கேடுதான் வரும்! பெத்சாயிதாவே, உனக்குக்
கேடுதான் வரும்! உங்களுடைய நகரங்களில் செய்யப்பட்ட அற்புதங்கள்
தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்தால், அங்கிருக்கிறவர்கள் எப்
போதோ துக்கத் துணியை உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து மனம் திருந்தியி
ருப்பார்கள்.[l] **14** அதனால், நியாயத்தீர்ப்பு நாளில் தீருவுக்கும் சீதோனுக்
கும் கிடைக்கும் தண்டனையைவிட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை
பயங்கரமாக இருக்கும். **15** கப்பர்நகூமே, நீ வானம்வரை உயர்த்தப்படு
வாய் என்றா நினைக்கிறாய்? நீ கல்லறைவரை தாழ்த்தப்படுவாய்!

16 நீங்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்கிறவன் நான் சொல்வ
தையும் காதுகொடுத்துக் கேட்கிறான்.[m] உங்களை அலட்சியம் செய்கிறவன்

10:4 *அந்தக் காலத்தில், வழியில் பார்க்கிறவர்களுக்கு வாழ்த்துச் சொல்லி முத்தம் கொடுப்பதும், அரவணைப்பதும், ரொம்ப நேரம் நலம் விசாரிப்பதும் வழக்கமாக இருந்தது.

அதி. 10

a மாற் 6:7

b மத் 9:37, 38 1கொ 3:9 2தெ 3:1

c மத் 10:16

d மத் 10:9, 10 லூ 9:3

e மத் 10:12, 13

f மத் 10:11 லூ 9:4

g கலா 6:6

h மத் 10:9, 10 1கொ 9:11, 14 1தீ 5:18

i மத் 3:1, 2 லூ 9:2

j மத் 10:14 லூ 9:5 அப் 13:50, 51

k மத் 11:24

l மத் 11:21-23

m மத் 10:40 மாற் 9:37 யோவா 13:20

என்னையும் அலட்சியம் செய்கிறான். அதோடு, என்னை அலட்சியம் செய்
கிறவன் என்னை அனுப்பியவரையும் அலட்சியம் செய்கிறான்”[a] என்று
சொன்னார்.
17 பின்பு, அந்த 70 பேரும் சந்தோஷத்தோடு திரும்பி வந்து,
“எஜமானே, உங்கள் பெயரைச் சொல்லிக் கட்டளையிடும்போது பேய்கள்
கூட எங்களுக்கு அடங்கிவிடுகின்றன”[b] என்று சொன்னார்கள். **18** அப்
போது அவர், “சாத்தான் பரலோகத்திலிருந்து மின்னல் வேகத்தில் விழுந்து
விட்டதை நான் பார்க்கிறேன்.[c] **19** இதோ! பாம்புகளையும் தேள்களையும்
மிதிப்பதற்கும், எதிரியின் முழு வல்லமையை அடக்குவதற்கும் நான் உங்க
ளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன்;[d] எதுவுமே உங்களுக்குத் தீங்கு
செய்யாது. **20** இருந்தாலும், பேய்கள் உங்களுக்கு அடங்கிவிடுவதை
நினைத்து சந்தோஷப்படாதீர்கள்; உங்களுடைய பெயர்கள் பரலோகத்தில்
எழுதப்பட்டிருப்பதை நினைத்தே சந்தோஷப்படுங்கள்”[e] என்று சொன்
னார். **21** அப்போது அவர் சந்தோஷத்தாலும் கடவுளுடைய சக்தியா
லும் நிறைந்து, “தகப்பனே, பரலோகத்துக்கும் பூமிக்கும் எஜமானே, எல்லார்
முன்னாலும் நான் உங்களைப் புகழ்கிறேன்; ஏனென்றால், இந்த விஷயங்
களை நீங்கள் ஞானிகளுக்கும் அறிவாளிகளுக்கும் மறைத்து,[f] சிறுபிள்ளை
களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். தகப்பனே, அப்படிச் செய்வதுதான்
உங்களுடைய விருப்பமாக இருந்தது.[g] **22** என் தகப்பன் எல்லாவற்றை
யும் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்; தகப்பனைத் தவிர வேறு யாருக்கும்
மகனைத் தெரியாது.[h] மகனுக்கும், மகன் யாருக்கு அவரை வெளிப்படுத்த
விரும்புகிறாரோ அவருக்கும் தவிர வேறு யாருக்கும் தகப்பன் யாரென்று
தெரியாது”[i] என்று சொன்னார்.
23 பின்பு, சீஷர்கள் தனியாக இருந்தபோது அவர் அவர்களிடம், “நீங்கள்
பார்க்கிறவற்றைப் பார்க்கும் கண்கள் சந்தோஷமானவை.[j] **24** ஏனென்றால்,
நான் உங்களுக்குச் சொல்கிறேன், நிறைய தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும்
நீங்கள் பார்க்கிறவற்றைப் பார்க்க ஆசைப்பட்டும் பார்க்கவில்லை.[k] நீங்கள்
கேட்கிறவற்றைக் கேட்க ஆசைப்பட்டும் கேட்கவில்லை” என்று சொன்னார்.
25 அப்போது திருச்சட்ட வல்லுநன் ஒருவன் எழுந்து, அவரைச் சோதிப்
பதற்காக, “போதகரே, முடிவில்லாத வாழ்வைப் பெறுவதற்கு* நான் என்ன
செய்ய வேண்டும்?”[l] என்று கேட்டான். **26** அதற்கு அவர் “திருச்சட்டத்
தில் என்ன எழுதியிருக்கிறது? நீ என்ன வாசித்திருக்கிறாய்?” என்று கேட்
டார். **27** அப்போது அவன், “‘உங்கள் கடவுளாகிய யெகோவாமேல்*
உங்கள் முழு இதயத்தோடும் முழு மூச்சோடும் முழு பலத்தோடும் முழு
மனதோடும் அன்பு காட்ட வேண்டும்’[m] என்றும், ‘உங்கள்மேல் நீங்கள்
அன்பு காட்டுவது போல மற்றவர்கள்மேலும்# அன்பு காட்ட வேண்டும்’[n]
என்றும் எழுதியிருக்கிறது” என்று சொன்னான். **28** அப்போது அவர், “சரி
யாகச் சொன்னாய்; அப்படியே செய்துகொண்டிரு, அப்போது உனக்கு முடி
வில்லாத வாழ்வு கிடைக்கும்”[o] என்று சொன்னார்.
29 ஆனால் அவன், தான் நீதிமான் எனக் காட்டிக்கொள்வதற்காக,[p]
“நான் அன்பு காட்ட வேண்டிய அந்த மற்றவர்கள்* உண்மையில்
யார்?” என்று இயேசுவிடம் கேட்டான். **30** அதற்கு இயேசு, “ஒருவன்

அதி. 10
a யோவா 5:23, யோவா 12:48, யோவா 15:23
b அப் 16:17, 18
c யோவா 12:31, யோவா 16:11, எபி 2:14, வெளி 12:7-9
d சங் 91:13
e யாத் 32:32, தானி 12:1, பிலி 4:3, வெளி 3:5
f 1கொ 1:19, 1கொ 2:6
g மத் 11:25, 26
h யோவா 10:15
i மத் 11:27, யோவா 1:18, 2கொ 4:6
j மத் 13:16, 17
k 1பே 1:10, 11
l மத் 19:16, மாற் 10:17, லூ 18:18
m உபா 6:5, உபா 10:12, யோசு 22:5, மாற் 12:30
n லேவி 19:18, மத் 19:19, ரோ 13:9, கலா 5:14, யாக் 2:8
o லேவி 18:5, யோவா 17:3
p லூ 16:15

10:25 *நே.மொ., “ஆஸ்தியாகப் பெறுவதற்கு.” **10:27** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். #வே.வா., “சக மனிதர்மேலும்.” **10:29** *வே.வா., “சக மனிதர்.”

எருசலேமிலிருந்து கீழ்நோக்கி எரிகோவுக்குப் போய்க்கொண்டிருந்தான்.
அப்போது, கொள்ளைக்காரர்களின் கையில் மாட்டிக்கொண்டான். அவர்கள்
அவனிடமிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு, அவனை அடித்து,
கிட்டத்தட்ட சாகும் நிலையில் விட்டுவிட்டுப் போனார்கள். **31** ஆலய
குரு ஒருவர் தற்செயலாக அந்த வழியில் வந்துகொண்டிருந்தார்; ஆனால்
அவனைப் பார்த்தபோது, எதிர்ப்பக்கமாகப் போய்விட்டார். **32** அதே
போல், ஒரு லேவியரும் அந்த வழியில் வந்து அவனைப் பார்த்தபோது
எதிர்ப்பக்கமாகப் போய்விட்டார். **33** ஆனால், அந்த வழியில் பயணம்
செய்துகொண்டிருந்த சமாரியர்[a] ஒருவர் அவனைப் பார்த்தபோது மனம்
உருகினார். **34** அதனால் அவன் பக்கத்தில் போய், அவனுடைய காயங்
கள்மேல் எண்ணெயையும் திராட்சமதுவையும் ஊற்றி, அவற்றுக்குக் கட்டுப்
போட்டார். பின்பு, அவனைத் தன்னுடைய கழுதையின் மேல் ஏற்றி, ஒரு
சத்திரத்துக்குக் கொண்டுபோய்க் கவனித்துக்கொண்டார். **35** அடுத்த நாள்
இரண்டு தினாரியுவை* எடுத்து சத்திரக்காரன் கையில் கொடுத்து, 'இவ
னைக் கவனித்துக்கொள்; இதற்குமேல் ஏதாவது செலவானால் நான் திரும்பி
வரும்போது உனக்குக் கொடுத்துவிடுகிறேன்' என்று சொன்னார். **36** அப்
படியென்றால், இந்த மூன்று பேரில், கொள்ளைக்காரர்கள் கையில் மாட்டிக்
கொண்டவனிடம் உண்மையிலேயே அன்பு காட்டியவர்*[b] யாரென்று
நினைக்கிறாய்?" என்று இயேசு கேட்டார். **37** அதற்கு, "அவனிடம் இரக்
கத்தோடு நடந்துகொண்டவர்தான்"[c] என்று அவன் சொன்னான். அப்போது
அவர், "நீயும் போய் அதேபோல் நடந்துகொள்"[d] என்று சொன்னார்.

38 பின்பு, அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றபோது அவர் ஒரு
கிராமத்துக்குள் போனார். அங்கே மார்த்தாள்[e] என்ற பெண் அவரைத் தன்
வீட்டுக்குக் கூப்பிட்டு உபசரித்தாள். **39** இந்தப் பெண்ணுக்கு மரியாள்
என்ற சகோதரியும் இருந்தாள். இவள் இயேசுவின் காலடியில் உட்கார்ந்து,
அவர் சொல்வதையே கேட்டுக்கொண்டிருந்தாள். **40** ஆனால், மார்த்தாள்
நிறைய வேலைகளை மும்முரமாகச் செய்துகொண்டிருந்தாள். அதனால்
அவள் அவரிடம் போய், "என் சகோதரி என்னைத் தனியாக வேலை செய்ய
விட்டுவிட்டதை நீங்கள் கவனிக்கவில்லையா? எனக்கு உதவி செய்யும்படி
அவளிடம் சொல்லுங்கள்" என்றாள். **41** அதற்கு அவர், "மார்த்தாள், மார்த்
தாள், நீ நிறைய காரியங்களை இழுத்துப்போட்டுக்கொண்டு திண்டாடுகிறாய்.
42 கொஞ்சம் இருந்தாலே போதும், ஒன்றே ஒன்றுகூடப் போதும். மரி
யாளைப் பொறுத்தவரை, அவள் மிகச் சிறந்ததைத் தேர்ந்தெடுத்துக்கொண்
டாள்.[f] அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" என்று சொன்னார்.

11 அவர் ஓர் இடத்தில் ஜெபம் செய்துகொண்டிருந்தார். அதை முடித்
தபோது சீஷர்களில் ஒருவர் அவரிடம், "எஜமானே, யோவான் தன்
னுடைய சீஷர்களுக்கு ஜெபம் செய்யக் கற்றுக்கொடுத்தது போல நீங்களும்
எங்களுக்குக் கற்றுக்கொடுங்கள்" என்று கேட்டார்.

2 அதற்கு அவர், "நீங்கள் ஜெபம் செய்யும்போதெல்லாம், 'தகப்பனே,
உங்களுடைய பெயர் பரிசுத்தப்பட வேண்டும்.[g] உங்களுடைய அரசாங்கம்
வர வேண்டும்.[h] **3** அந்தந்த நாளுக்குத் தேவையான உணவை அந்தந்த
நாளில் எங்களுக்குக் கொடுங்கள்.[i] **4** எங்களுக்கு எதிராகப் பாவம் செய்

10:35 *இணைப்பு B14-ஐப் பாருங்கள். **10:36** *வே.வா., "சக மனிதராக நடந்து
கொண்டவர்."

அதி. 10
a யோவா 4:9
b மத் 19:19
c நீதி 14:21
d லூ 6:36; யோவா 13:17; எபே 4:32
e யோவா 12:2
f மத் 4:4; மத் 6:33

அதி. 11
g லேவி 22:32; ஏசா 5:16; எசே 36:23
h தானி 2:44; தானி 7:13, 14; மத் 6:9-13
i சங் 37:25

அதி. 11
a மாற் 11:25
எபே 4:32
கொலோ 3:13
b சங் 79:9
தானி 9:19
c லூ 22:46
1கொ 10:13
யாக் 1:13
வெளி 3:10
d லூ 18:5
e ரோ 12:12
f மத் 7:7, 8
g மாற் 11:24
யோவா 15:7
யாக் 1:6
1யோ 3:22
1யோ 5:14
h மத் 7:9, 10
i மத் 7:11
யாக் 1:17
j மத் 12:22
k மத் 9:32-34
l மத் 12:24-30
மாற் 3:22-27
m மத் 12:38
மாற் 8:11
n யோவா 2:
24, 25

கிற* எல்லாரையும் நாங்கள் மன்னிக்கிறோம்,[a] அதனால் எங்கள் பாவங்
களையும் மன்னியுங்கள்.[b] சோதனைக்கு இணங்கிவிடாமல் இருக்க எங்க
ளுக்கு உதவி செய்யுங்கள்' என்று சொல்லுங்கள்"[c] என்றார்.
5 பின்பு அவர்களிடம், "உங்களில் ஒருவன் நடுராத்திரியில் தன்னுடைய
நண்பனிடம் போய், 'நண்பா, மூன்று ரொட்டிகளை எனக்குக் கடனாகக்
கொடு. **6** ஏனென்றால், என்னுடைய நண்பன் ஒருவன் பயணம் செய்கிற
வழியில் என்னிடம் வந்திருக்கிறான். அவனுக்குக் கொடுப்பதற்கு என்னி
டம் ஒன்றுமே இல்லை' என்று சொல்கிறான். **7** ஆனால் அந்த நண்பன்
உள்ளே இருந்துகொண்டு, 'என்னைத் தொந்தரவு செய்யாதே. ஏற்கெனவே
கதவைப் பூட்டிவிட்டேன். என் குழந்தைகளும் நானும் படுத்துவிட்டோம்.
நான் எழுந்துவந்து எதுவும் கொடுக்க முடியாது' என்று சொல்கிறான்.
8 ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், தன்னுடைய நண்பன் என்ப
தற்காக அவன் எழுந்துவந்து எதையாவது கொடுக்காவிட்டாலும், அவன்
விடாப்பிடியாகக் கேட்கிறான்[d] என்பதற்காகவாவது எழுந்துவந்து அவ
னுக்குத் தேவையானதைக் கொடுப்பான். **9** அதனால், நான் உங்களுக்குச்
சொல்கிறேன், கேட்டுக்கொண்டே இருங்கள்,[e] அப்போது உங்களுக்குக்
கொடுக்கப்படும். தேடிக்கொண்டே இருங்கள், அப்போது கண்டுபிடிப்பீர்
கள். தட்டிக்கொண்டே இருங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்ப
டும்.[f] **10** ஏனென்றால், கேட்கிற ஒவ்வொருவனும் பெற்றுக்கொள்கிறான்,[g]
தேடுகிற ஒவ்வொருவனும் கண்டுபிடிக்கிறான், தட்டுகிற ஒவ்வொருவனுக்
கும் திறக்கப்படும். **11** உங்களில் எந்த அப்பாவாவது தன் மகன் மீனைக்
கேட்டால், மீனுக்குப் பதிலாக அவனுக்குப் பாம்பைக் கொடுப்பாரா?[h]
12 அல்லது முட்டையைக் கேட்டால், தேளைக் கொடுப்பாரா? **13** அப்
படியானால், பொல்லாதவர்களான நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு
நல்ல பரிசுகளைக் கொடுக்கத் தெரிந்திருக்கும்போது, பரலோகத் தகப்பன்
தன்னிடம் கேட்கிறவர்களுக்குத் தன்னுடைய சக்தியை இன்னும் எந்தளவு
கொடுப்பார்!"[i] என்று சொன்னார்.
14 பின்பு, ஊமையாக்கும் பேயை ஒரு மனிதனிடமிருந்து அவர் விரட்டி
னார்.[j] அந்தப் பேய் வெளியேறியதும் ஊமையாக இருந்த அந்த மனி
தன் பேச ஆரம்பித்தான். அதைப் பார்த்து மக்கள் ஆச்சரியப்பட்டார்
கள்.[k] **15** ஆனால் அவர்களில் சிலர், "பேய்களுடைய தலைவனான
பெயல்செபூப்* உதவியால்தான் இவன் பேய்களை விரட்டுகிறான்"[l] என்று
சொன்னார்கள். **16** மற்றவர்களோ அவரைச் சோதிப்பதற்காக, பரலோகத்தி
லிருந்து* ஓர் அடையாளத்தைக் காட்டச் சொல்லி அவரிடம் கேட்டார்
கள்.[m] **17** அவர்களுடைய எண்ணங்களை அவர் தெரிந்துகொண்டு,[n] "ஒரு
ராஜ்யத்துக்குள் பிரிவினைகள் இருந்தால் அந்த ராஜ்யம் நிலைக்காது. ஒரு
வீட்டுக்குள் பிரிவினைகள் இருந்தால் அந்த வீடு நிலைக்காது. **18** அதே
போல், சாத்தான் தனக்கு விரோதமாகவே பிரிவினைகள் உண்டாக்கியிருந்
தால், அவனுடைய ராஜ்யம் எப்படி நிலைக்கும்? நான் பெயல்செபூப் உதவி
யால் பேய்களை விரட்டுகிறேன் என்று சொல்கிறீர்களே. **19** நான்
பெயல்செபூப் உதவியால் பேய்களை விரட்டுகிறேன் என்றால், உங்களு
டைய சீஷர்கள்* யாருடைய உதவியால் அவற்றை விரட்டுகிறார்கள்?

11:4 * நே.மொ., "எங்கள் கடனாளிகளாக இருக்கிற." **11:15** * சாத்தானைக் குறிக்கும் பெயர். **11:16** * வே.வா., "வானத்திலிருந்து." **11:19** * நே.மொ., "மகன்கள்."

அதனால், உங்களுடைய சீஷர்களே நீங்கள் சொல்வது தவறு என்று நிரூபிக்
கிறார்கள். **20** நான் கடவுளுடைய சக்தியால்தான்*[a] பேய்களை விரட்டு
கிறேன் என்றால், கடவுளுடைய அரசாங்கம் வந்துவிட்டதை நீங்கள் கவனிக்
கவில்லை என்றுதான் அர்த்தம்.[b] **21** பலசாலி ஒருவன் எல்லா ஆயுதங்க
ளையும் வைத்துக்கொண்டு தன் மாளிகையைக் காவல் காக்கும்போது, அவ
னுடைய உடைமைகள் பத்திரமாக இருக்கும். **22** ஆனால், அவனைவிட
பலசாலி ஒருவன் அவனுக்கு விரோதமாக வந்து அவனை வீழ்த்தும்போது,
அவன் நம்பியிருந்த எல்லா ஆயுதங்களையும் பறித்துக்கொள்வான். பின்பு,
அவனிடமிருந்து பறித்துக்கொண்ட பொருள்களை மற்றவர்களுக்குப் பங்கு
போட்டுக் கொடுப்பான். **23** என் பக்கம் இல்லாதவன் எனக்கு விரோதமாக
இருக்கிறான், என்னோடு சேர்ந்து மக்களைக் கூட்டிச்சேர்க்காதவன் அவர்க
ளைச் சிதறிப்போக வைக்கிறான்.[c]

24 ஒரு பேய் ஒரு மனுஷனைவிட்டுப் போகும்போது, ஓய்வெடுக்க
இடம் தேடி வறண்ட இடங்கள் வழியாக அலைந்து திரிகிறது. ஆனால்
எந்த இடமும் கிடைக்காதபோது, 'நான் விட்டுவந்த என் வீட்டுக்கே
திரும்பிப் போவேன்'[d] என்று சொல்கிறது. **25** அது திரும்பிப் போகும்
போது அந்த வீடு நன்றாகப் பெருக்கி அலங்கரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்
கிறது. **26** பின்பு, மறுபடியும் போய், தன்னைவிடப் பொல்லாத ஏழு பேய்
களைக் கூட்டிக்கொண்டு வருகிறது. அந்தப் பேய்கள் உள்ளே புகுந்து
அங்கேயே குடியிருக்கின்றன. அதனால், அந்த மனுஷனுடைய நிலைமை
முதலில் இருந்ததைவிட இன்னும் மோசமாகிறது" என்று சொன்னார்.

27 அவர் இந்த விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தபோது, அந்தக்
கூட்டத்திலிருந்த ஒரு பெண் உரத்த குரலில் அவரிடம், "உங்களை வயிற்
றில் சுமந்து, பாலூட்டி வளர்த்த தாய் சந்தோஷமானவள்!"[e] என்று சொன்
னாள். **28** அதற்கு அவர், "இல்லை, கடவுளுடைய வார்த்தையைக் கேட்டு
அதன்படி நடக்கிறவர்கள்தான் சந்தோஷமானவர்கள்!"[f] என்று சொன்னார்.

29 மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தபோது, "இந்தத் தலைமுறையினர்
பொல்லாதவர்கள்; இவர்கள் ஒரு அடையாளத்தைத் தேடுகிறார்கள்.
ஆனால், யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறெந்த அடையாளமும்
இவர்களுக்குக் கொடுக்கப்படாது.[g] **30** நினிவே மக்களுக்கு யோனா[h] ஒரு
அடையாளமாக இருந்தது போல, இந்தத் தலைமுறையினருக்கு மனிதகுமா
ரன் ஒரு அடையாளமாக இருப்பார். **31** நியாயத்தீர்ப்பின்போது தென்தே
சத்து ராணி[i] இந்தத் தலைமுறையினரோடு எழுந்துவந்து இவர்களைக் கண்
டனம் செய்வாள். ஏனென்றால், அவள் சாலொமோனின் ஞானத்தைக் கேட்க
பூமியின் தொலைதூரப் பகுதியிலிருந்து வந்தாள். ஆனால் இதோ! சாலொ
மோனைவிட பெரியவர் ஒருவர் இங்கே இருக்கிறார்.[j] **32** நியாயத்தீர்ப்பின்
போது நினிவே மக்கள் இந்தத் தலைமுறையினரோடு எழுந்துவந்து இவர்
களைக் கண்டனம் செய்வார்கள். ஏனென்றால், யோனா பிரசங்கித்த
விஷயங்களைக் கேட்டு அவர்கள் மனம் திருந்தினார்கள்.[k] ஆனால் இதோ!
யோனாவைவிட பெரியவர் ஒருவர் இங்கே இருக்கிறார். **33** யாரும் விளக்
கைக் கொளுத்தி மறைவான இடத்திலும் வைக்க மாட்டார்கள், கூடையால்
மூடியும் வைக்க மாட்டார்கள், உள்ளே வருகிறவர்களுக்கு வெளிச்சமாக

11:20 * நே.மொ., "விரலால்தான்."

அதி. 11
a யாத் 8:19
b மத் 12:28; லூ 17:21
c மத் 12:30
d மத் 12:43-45
e லூ 1:46-48
f உபா 29:9; சங் 1:1, 2; சங் 112:1; சங் 119:2; மத் 7:21; யாக் 1:25
g மத் 12:38-42; மத் 16:4
h யோனா 1:17
i 1ரா 10:1; 2நா 9:1
j மத் 12:42
k யோனா 3:5

இருக்கும்படி அதை விளக்குத்தண்டின் மேல்தான் வைப்பார்கள்.[a] **34** கண்
தான் உடலுக்கு விளக்கு. உங்கள் கண் ஒரே விஷயத்தின் மேல் கவனமாக*
இருந்தால், உங்கள் முழு உடலும் பிரகாசமாக இருக்கும். ஆனால் உங்கள்
கண் பொறாமையோடு பார்த்துக்கொண்டிருந்தால்,# உங்கள் உடலும் இரு
ளாக இருக்கும்.[b] **35** அதனால் உங்களுக்குள் இருக்கும் ஒளி, இருளாக
இல்லாதபடி எச்சரிக்கையாக இருங்கள். **36** உங்கள் உடலின் எந்தப் பாக
மும் இருளடையாமல் முழுவதும் பிரகாசமாக இருந்தால், உங்களுக்கு ஒளி
தருகிற விளக்கைப் போலவே உங்கள் முழு உடலும் பிரகாசமாக இருக்கும்”
என்று சொன்னார்.

37 அவர் இப்படிப் பேசி முடித்தபோது, பரிசேயன் ஒருவன் தன்னோடு
மதிய உணவு சாப்பிட வரும்படி அவரைக் கேட்டுக்கொண்டான். அதனால்,
அவர் அவனுடைய வீட்டுக்குப் போய் சாப்பிட உட்கார்ந்தார்.
38 ஆனால், சாப்பிடுவதற்கு முன்பு அவர் கை கழுவாததை* பார்த்து
அந்தப் பரிசேயன் ஆச்சரியப்பட்டான்.[c] **39** அப்போது இயேசு அவனி
டம், “பரிசேயர்களே, கிண்ணத்தையும் பாத்திரத்தையும் வெளிப்புறத்தில் சுத்
தம் செய்கிறீர்கள், உங்கள் உட்புறமோ* பேராசையாலும் அக்கிரமத்தாலும்
நிறைந்திருக்கிறது.[d] **40** புத்தியில்லாதவர்களே! வெளிப்புறத்தை உண்டாக்
கியவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையா? **41** உட்புறத்தில் இருப்ப
வற்றைத் தானதர்மம் செய்யுங்கள். அப்போது, எல்லாமே உங்களுக்குச் சுத்
தமாக இருக்கும். **42** பரிசேயர்களே, உங்களுக்குக் கேடுதான் வரும்!
ஏனென்றால், நீங்கள் புதினாவிலும் சதாப்புவிலும்* மற்ற எல்லா புல்பூண்டுக
ளிலும் பத்திலொரு பாகத்தைக் கொடுக்கிறீர்கள்.[e] ஆனால், நியாயத்தையும்
கடவுள்மேல் காட்ட வேண்டிய அன்பையும் ஒதுக்கித்தள்ளுகிறீர்கள்.
இவற்றை நீங்கள் கண்டிப்பாகக் கடைப்பிடித்திருக்க வேண்டும், அவற்
றையும் விட்டுவிடாமல் இருந்திருக்க வேண்டும்.[f] **43** பரிசேயர்களே, உங்
களுக்குக் கேடுதான் வரும்! ஏனென்றால், ஜெபக்கூடங்களில் முன்வரிசை*
இருக்கைகளில் உட்கார வேண்டுமென்றும், சந்தைகளில் மக்கள் உங்களுக்கு
வணக்கம் சொல்ல வேண்டுமென்றும் ஆசைப்படுகிறீர்கள்.[g] **44** உங்களுக்
குக் கேடுதான் வரும்! ஏனென்றால், வெளியே தெரியாத கல்லறைகளைப்
போல நீங்கள் இருக்கிறீர்கள்.[h] கல்லறைகள் என்றே தெரியாமல் ஆட்கள்
அவற்றின் மேல் நடந்துபோகிறார்கள்” என்று சொன்னார்.

45 அப்போது, திருச்சட்ட வல்லுநன் ஒருவன் அவரிடம், “போதகரே,
இதையெல்லாம் சொல்லி எங்களையும் அவமானப்படுத்துகிறீர்கள்” என்று
சொன்னான். **46** அதற்கு அவர், “திருச்சட்ட வல்லுநர்களே, உங்களுக்கும்
கேடுதான் வரும்! ஏனென்றால், சுமப்பதற்குக் கஷ்டமாக இருக்கிற சுமை
களை மக்கள்மேல் சுமத்துகிறீர்கள், நீங்களோ அந்தச் சுமைகளை விரலால்
கூட தொடுவதில்லை.[i]

47 உங்களுக்குக் கேடுதான் வரும்! ஏனென்றால், தீர்க்கதரிசிகளுக்குக்
கல்லறை கட்டுகிறீர்கள், ஆனால் உங்கள் முன்னோர்கள்தான் அவர்க
ளைக் கொலை செய்தார்கள்.[j] **48** உங்களுடைய முன்னோர்கள் செய்த

11:34 *வே.வா., “கண் தெளிவாக.” நே.மொ., “கண் எளிமையாக.” #நே.மொ., “உங்கள் கண் கெட்டதாக இருந்தால்.” **11:38** *யூத பாரம்பரியத்தின்படி தூய்மைச் சடங்கு செய்யாததைக் குறிக்கிறது. **11:39** *வே.வா., “இதயமோ.” **11:42** *ஒரு வகை வாசனை மூலிகை. **11:43** *வே.வா., “மிகச் சிறந்த.”

அதி. 11
a மத் 5:15; மாற் 4:21; லூ 8:16
b மத் 6:22, 23
c மத் 15:2
d மத் 23:25, 26
e லேவி 27:30
f மத் 23:23, 24; யோவா 7:24
g மத் 23:6, 7
h மத் 23:27, 28
i மத் 23:2, 4
j மத் 23:29-31

செயல்கள் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் அவற்றை ஏற்றுக்கொள்
கிறீர்கள். எப்படியென்றால், அவர்கள் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தார்
கள்.[a] ஆனால், நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குக் கல்லறை கட்டுகிறீர்கள்.
49 அதனால்தான் ஞானமுள்ள கடவுள், 'தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்
தலர்களையும் அவர்களிடம் அனுப்புவேன், அவர்களில் சிலரை அவர்
கள் கொலை செய்வார்கள், துன்புறுத்துவார்கள். **50** இதனால், ஆபேலின்
இரத்தம்முதல்[b] பலிபீடத்துக்கும் பரிசுத்த இடத்துக்கும் நடுவே சிந்தப்பட்ட
சகரியாவின் இரத்தம்வரை,[c] **51** உலகம் உண்டானதிலிருந்து* சிந்தப்பட்ட
எல்லா தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்துக்கும் இந்தத் தலைமுறையினர்மேல்
குற்றம் சுமத்தப்படும்'[d] என்று சொன்னார். நானும் உங்களுக்குச் சொல்கி
றேன், இந்தத் தலைமுறையினர்மேல் குற்றம் சுமத்தப்படும்.

52 திருச்சட்ட வல்லுநர்களே, உங்களுக்குக் கேடுதான் வரும்! ஏனென்
றால், அறிவு என்ற சாவியை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள். நீங்களும்
உள்ளே போகவில்லை, போகிறவர்களையும் போக விடுவதில்லை"[e] என்று
சொன்னார்.

53 அவர் அங்கிருந்து புறப்பட்டபோது வேத அறிஞர்களும் பரிசேயர்
களும் அவரை ரொம்பவே தொல்லைப்படுத்த ஆரம்பித்தார்கள். இன்னும்
நிறைய விஷயங்களைப் பற்றி அவரிடம் சரமாரியாகக் கேள்வி கேட்க
ஆரம்பித்தார்கள். **54** அவருடைய வாயாலேயே அவரைச் சிக்க வைக்க
சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.[f]

12 இதற்கிடையே, நெரிசலில் மிதிபடும் அளவுக்கு ஆயிரக்கணக்கான
மக்கள் திரண்டு வந்திருந்தபோது, முதலில் அவர் தன்னுடைய
சீஷர்களிடம், "பரிசேயர்களின் புளித்த மாவைக் குறித்து, அதாவது அவர்
களுடைய வெளிவேஷத்தைக் குறித்து, எச்சரிக்கையாக இருங்கள்.[g]
2 மறைத்து வைக்கப்படுகிற எதுவும் வெளியில் தெரியாமல் போகாது, ரக
சியமாக வைக்கப்படுகிற எதுவும் வெட்டவெளிச்சமாகாமல் போகாது.[h]
3 அதனால், நீங்கள் இருட்டில் சொல்லும் விஷயங்கள் வெளிச்சத்தில்
கேட்கப்படும்; உள்ளறைகளில் காதோடு காதாகச் சொல்லும் விஷயங்
கள் வீட்டு மாடிகளிலிருந்து பிரசங்கிக்கப்படும். **4** என் நண்பர்களே![i] நான்
உங்களுக்குச் சொல்கிறேன், உடலைக் கொல்ல முடிந்தாலும் அதற்கு
மேல் எதுவும் செய்ய முடியாதவர்களைப் பார்த்துப் பயப்படாதீர்கள்.[j]
5 ஆனால், நீங்கள் யாருக்குப் பயப்பட வேண்டும் என்று சொல்கிறேன்
கேளுங்கள்: உங்களைக் கொன்று கெஹென்னாவுக்குள்* வீசியெறிய அதி
காரமுள்ளவருக்கே பயப்படுங்கள்.[k] ஆம், நான் உங்களுக்குச் சொல்கி
றேன், அவருக்கே பயப்படுங்கள்.[l] **6** குறைந்த மதிப்புள்ள இரண்டு
காசுக்கு* ஐந்து சிட்டுக்குருவிகளை விற்கிறார்கள்தானே? ஆனால், அவற்
றில் ஒன்றைக்கூட கடவுள் மறப்பதில்லை.#[m] **7** உங்கள் தலையிலுள்ள
முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.[n] பயப்படாதீர்கள்; சிட்டுக்குருவி
களைவிட நீங்கள் மதிப்புள்ளவர்கள்.[o]

8 அப்படியானால், நான் உங்களுக்குச் சொல்கிறேன், மனுஷர்கள் முன்
னால் என்னை ஏற்றுக்கொள்கிறவனைக்[p] கடவுளுடைய தூதர்கள் முன்னால்

11:51 *அதாவது, "ஆதாம் ஏவாளுக்குப் பிள்ளைகள் பிறந்ததிலிருந்து." **12:5** *சொல் பட்டியலைப் பாருங்கள். **12:6** *நே.மொ., "இரண்டு அசாரியனுக்கு." இணைப்பு B14-ஐப் பாருங்கள். #வே.வா., "கண்டும்காணாமல் விடுவதில்லை."

அதி. 11
a அப் 7:52
எபி 11:32, 37
b ஆதி 4:8, 10
c 2நா 24:20-22
d வெளி 18:21, 24
e மத் 23:13
1தெ 2:14-16
f லூ 20:20

அதி. 12
g மத் 16:6
மாற் 8:15
h மத் 10:26, 27
மாற் 4:22
லூ 8:17
i யோவா 15:14
j அப் 20:24
k மத் 10:28
l ஏசா 8:13
எபி 10:31
1பே 2:17
வெளி 14:7
m மத் 10:29
n மத் 10:30
லூ 21:18
o மத் 10:31
லூ 12:24
p ரோ 10:9

மனிதகுமாரனும் ஏற்றுக்கொள்வார்.[a] **9** ஆனால், மனுஷர்கள் முன்னால்
என்னை ஒதுக்கித்தள்ளுகிறவனைக் கடவுளுடைய தூதர்கள் முன்னால்
மனிதகுமாரனும் ஒதுக்கித்தள்ளுவார்.[b] **10** மனிதகுமாரனுக்கு விரோத
மாக யாராவது ஒரு வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்
கப்படும்; ஆனால், கடவுளுடைய சக்திக்கு விரோதமாக நிந்தனை செய்கி
றவனுக்கு மன்னிப்பே கிடையாது.[c] **11** பொதுக் கூட்டங்களுக்கு*
முன்பாகவும் அரசாங்க அதிகாரிகள், தலைவர்கள் முன்பாகவும் அவர்கள்
உங்களைக் கொண்டுபோய் நிறுத்தும்போது எப்படிப் பதில் சொல்வோம்,
என்ன பதில் சொல்வோம், எதைப் பேசுவோம் என்று நினைத்துக் கவ
லைப்படாதீர்கள்.[d] **12** ஏனென்றால், நீங்கள் பேச வேண்டியதையெல்லாம்
அந்த நேரத்தில் கடவுளுடைய சக்தி உங்களுக்குச் சொல்லிக்கொடுக்கும்"[e]
என்றார்.

13 அப்போது, கூட்டத்திலிருந்த ஒருவன் அவரிடம், "போதகரே,
சொத்தை எனக்குப் பிரித்துக் கொடுக்கும்படி என் சகோதரனுக்குச் சொல்
லுங்கள்" என்றான். **14** அதற்கு அவர், "மனுஷனே, என்னை உங்கள் நடு
வராகவோ உங்களுக்குப் பாகம் பிரித்துக் கொடுப்பவராகவோ நியமித்தது
யார்?" என்று கேட்டார். **15** பின்பு அவர்களிடம், "விழித்திருங்கள், எல்லா
விதமான பேராசையைக் குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள்;[f] ஏனென்
றால், ஒருவனுக்கு ஏராளமான சொத்து இருந்தாலும் அது அவனுக்கு
வாழ்வைத் தராது"[g] என்று சொன்னார். **16** அதன் பின்பு, ஓர் உவ
மையை அவர்களுக்குச் சொன்னார்; "பணக்காரன் ஒருவனுடைய நிலம்
அமோக விளைச்சலைத் தந்தது. **17** அதனால் அவன், 'என் விளைச்ச
லைச் சேர்த்து வைப்பதற்கு இடமில்லையே, இப்போது என்ன செய்வேன்?'
என்று யோசிக்க ஆரம்பித்தான். **18** 'ஒன்று செய்வேன்:[h] என் களஞ்சியங்
களை இடித்துவிட்டு இன்னும் பெரிய களஞ்சியங்களைக் கட்டுவேன்; அவற்
றில் என்னுடைய எல்லா தானியங்களையும் பொருள்களையும் சேர்த்து
வைப்பேன். **19** அதன் பிறகு என்னிடம் நானே, "பல வருஷங்களுக்
குத் தேவையான நல்ல நல்ல பொருள்களை உனக்காகச் சேர்த்து வைத்தி
ருக்கிறேன்; அதனால் நீ ஓய்வெடு, சாப்பிட்டுக் குடித்துச் சந்தோஷமாக இரு"
என்று சொல்வேன்' எனத் தனக்குள் சொல்லிக்கொண்டான். **20** ஆனால்
கடவுள் அவனிடம், 'புத்தியில்லாதவனே, இன்று ராத்திரி உன் உயிரை உன்
னிடமிருந்து எடுத்துவிடுவார்கள், அப்போது நீ சேர்த்து வைத்திருப்ப
தெல்லாம் யாருக்குச் சொந்தமாகும்?'[i] என்று கேட்டார். **21** கடவுளுடைய
பார்வையில் பணக்காரனாக இல்லாமல் தனக்காகவே பொக்கிஷங்களைச்
சேர்த்து வைக்கிறவனுக்கு இப்படித்தான் நடக்கும்"[j] என்றார்.

22 பின்பு, அவர் தன்னுடைய சீஷர்களிடம், "அதனால்தான் உங்க
ளுக்குச் சொல்கிறேன், எதைச் சாப்பிடுவது என்று உங்கள் உயிருக்காக
வும், எதை உடுத்திக்கொள்வது என்று உங்கள் உடலுக்காகவும் கவலைப்ப
டுவதை நிறுத்துங்கள்.[k] **23** உணவைவிட உங்கள் உயிரும் உடையைவிட
உங்கள் உடலும் அதிக மதிப்புள்ளது. **24** அண்டங்காக்கைகளைப் பாருங்
கள்; அவை விதைப்பதும் இல்லை, அறுவடை செய்வதும் இல்லை, அவற்
றுக்குச் சேமிப்புக் கிடங்கும் இல்லை, களஞ்சியமும் இல்லை; ஆனாலும்,
கடவுள் அவற்றுக்கு உணவு கொடுக்கிறார்.[l] பறவைகளைவிட நீங்கள் அதிக

12:11 *வே.வா., "ஜெபக்கூடங்களுக்கு."

அதி. 12
a மத் 10:32, 33
b மாற் 8:38; லூ 9:26; 2தீ 2:12; 1யோ 2:23
c மத் 12:31, 32; மாற் 3:28, 29
d மத் 10:19, 20; மாற் 13:11; லூ 21:14, 15
e யாத் 4:12; அப் 6:8, 10
f யாத் 20:17; உபா 5:21; கொலோ 3:5
g 1தீ 6:7
h யாக் 4:13-16
i சங் 49:16-19; நீதி 27:1
j பிர 11:9; மத் 6:20; 1தீ 6:17-19; யாக் 2:5
k மத் 6:25-30; பிலி 4:6
l யோபு 38:41; சங் 147:9

மதிப்புள்ளவர்கள், இல்லையா?[a] **25** கவலைப்படுவதால் உங்களில் யாரா
வது தன்னுடைய வாழ்நாளில் ஒரு நொடியை* கூட்ட முடியுமா? **26** இந்
தச் சின்ன விஷயத்தைக்கூட உங்களால் செய்ய முடியாதபோது, மற்ற
விஷயங்களைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்?[b] **27** காட்டுப் பூக்
கள் வளருவதைப் பாருங்கள். அவை உழைப்பதும் இல்லை, நூல் நூற்
பதும் இல்லை; ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன், செல்வச்சீமா
னாக இருந்த சாலொமோன்கூட இந்தப் பூக்களில் ஒன்றைப் போல்
உடுத்தியதில்லை.[c] **28** விசுவாசத்தில் குறைவுபட்டவர்களே, இன்றைக்கு
இருந்து நாளைக்கு இல்லாமல்போகும்* காட்டுச் செடிகளுக்கே இவ்வளவு
அழகான உடையைக் கடவுள் கொடுத்திருக்கிறார் என்றால், உங்களுக்கு
இன்னும் எந்தளவு அதிகமாகக் கொடுப்பார்! **29** அதனால், எதைச் சாப்
பிடுவோம், எதைக் குடிப்போம் என்று யோசித்துக்கொண்டிருப்பதை விட்டு
விடுங்கள், என்ன ஆகுமோ என்று அநாவசியமாகக் கவலைப்படுவதையும்
விட்டுவிடுங்கள்.[d] **30** இவற்றையெல்லாம் பெறுவதற்கு உலக மக்கள்தான்
அலைந்து திரிகிறார்கள். இவையெல்லாம் உங்களுக்குத் தேவை என்று
உங்கள் பரலோகத் தகப்பனுக்குத் தெரியும்.[e] **31** அதனால், எப்போ
துமே அவருடைய அரசாங்கத்துக்கு முதலிடம் கொடுங்கள்; அப்போது,
இவற்றை அவர் உங்களுக்குக் கொடுப்பார்.[f]

32 பயப்படாதே சிறுமந்தையே,[g] உங்களிடம் தன் அரசாங்கத்தைக்
கொடுக்க உங்கள் தகப்பன் பிரியமாக இருக்கிறார்.[h] **33** உங்கள் சொத்து
களை விற்று தானதர்மம்* செய்யுங்கள்.[i] இற்றுப்போகாத பணப் பைகளை
உங்களுக்காகச் செய்துகொள்ளுங்கள்; அதாவது, ஒருபோதும் குறையாத
பொக்கிஷத்தைப் பரலோகத்தில் சேர்த்து வையுங்கள்;[j] அங்கே திருட
னும் நெருங்க மாட்டான், பூச்சியும்# அரிக்காது. **34** உங்கள் பொக்கிஷம்
எங்கே இருக்கிறதோ அங்கேதான் உங்கள் இதயமும் இருக்கும்.

35 இடுப்புப்பட்டையைக் கட்டிக்கொண்டு* தயாராயிருங்கள்,[k] உங்கள்
விளக்குகளை எரியவிடுங்கள்.[l] **36** திருமண விருந்திலிருந்து தங்கள் எஜ
மான் திரும்பி வந்து[m] கதவைத் தட்டியதும் அதைத் திறக்கக் காத்திருக்கிற
ஆட்களைப் போல் இருங்கள்.[n] **37** எஜமான் வரும்போது எந்த அடிமை
கள் விழித்திருப்பதை அவர் பார்க்கிறாரோ அந்த அடிமைகளே சந்தோஷ
மானவர்கள்! உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், எஜமான் தன்னு
டைய இடுப்புப்பட்டையைக் கட்டிக்கொண்டு,* அவர்களைச் சாப்பிட
உட்கார வைத்து, அவர்களிடம் வந்து பணிவிடை செய்வார். **38** அவர்
இரண்டாம் ஜாமத்திலாவது* மூன்றாம் ஜாமத்திலாவது# வரும்போது
யாரெல்லாம் தயாராக இருப்பதைப் பார்க்கிறாரோ அவர்களெல்லாம் சந்தோ
ஷமானவர்கள்! **39** ஆனால், இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்:
திருடன் எந்த நேரத்தில் வருவான் என்பது வீட்டு எஜமானுக்குத் தெரிந்தி
ருந்தால், வீட்டுக்குள் திருடன் புகுந்துவிடாமல் அவர் பார்த்துக்கொள்வார்.[o]

12:25 *நே.மொ., “முழத்தை.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **12:28** *நே.மொ., “அடுப்பில் போடப்படும்.” **12:33** *சொல் பட்டியலைப் பாருங்கள். #நே.மொ., “அந்துப்பூச்சியும்.” **12:35, 37** *வே.வா., “இடையை வரிந்துகட்டிக்கொண்டு.” **12:38** *அதாவது, “ராத்திரி சுமார் 9 மணியிலிருந்து நடுராத்திரிக்கு இடைப்பட்ட சமயத்திலாவது.” #அதாவது, “நடுராத்திரியிலிருந்து காலை சுமார் 3 மணிக்கு இடைப்பட்ட சமயத்திலாவது.”

அதி. 12
a மத் 6:26; லூ 12:7
b மத் 6:34
c 1ரா 10:4-7
d மத் 6:31, 32
e 2நா 16:9; பிலி 4:19
f சங் 34:10; மத் 6:33; 1தீ 4:8
g யோவா 10:14
h தானி 7:27; லூ 22:28-30; எபி 12:28; யாக் 2:5; வெளி 1:6
i மத் 19:21; லூ 18:22; அப் 2:45; அப் 4:34, 35
j மத் 6:20, 21; லூ 16:9; 1தீ 6:18, 19
k எபே 6:14; 1பே 1:13
l மத் 25:1; பிலி 2:15
m மத் 25:5
n மாற் 13:35
o மத் 24:43; 1தெ 5:2; 2பே 3:10; வெளி 16:15

அதி. 12
a மத் 24:44
மத் 25:13
வெளி 3:3
b மத் 24:45-47
c மத் 24:48-51
d யாக் 1:22
யாக் 4:17
e மத் 25:29
யோவா 15:2
f யோவா 12:27
g மத் 10:34-36
யோவா 7:
41, 43
யோவா 9:16
h மீ 7:6

40 அதனால், நீங்களும் தயாராயிருங்கள்; ஏனென்றால், நீங்கள் நினைக்காத
நேரத்தில் மனிதகுமாரன் வருவார்”[a] என்று சொன்னார்.
41 அப்போது பேதுரு அவரிடம், “எஜமானே, இந்த உவமையை எங்க
ளுக்கு மட்டும் சொல்கிறீர்களா அல்லது எல்லாருக்கும் சொல்கிறீர்களா?”
என்று கேட்டார். **42** அதற்கு இயேசு, “தன் வீட்டுப் பணியாளர்களுக்கு*
போதுமான உணவை ஏற்ற வேளையில் கொடுத்து வருவதற்காக எஜ
மான் நியமிக்கப்போகிற உண்மையும் விவேகமும்# உள்ள நிர்வாகி
யார்?[b] **43** எஜமான் வரும்போது அப்படிச் செய்துகொண்டிருக்கிற அடி
மையே சந்தோஷமானவன்! **44** உண்மையிலேயே உங்களுக்குச் சொல்
கிறேன், அவர் தன்னுடைய உடைமைகள் எல்லாவற்றையும் கவனித்துக்
கொள்ள அவனை நியமிப்பார். **45** ஆனால் அந்த அடிமை, ‘என்னு
டைய எஜமான் வரத் தாமதிக்கிறார்’ என்று தன் இதயத்தில் சொல்லிக்
கொண்டு, வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும், சாப்
பிட்டுக் குடித்து வெறிக்கவும் ஆரம்பித்தால்,[c] **46** அவன் எதிர்பார்க்
காத நாளில், அவனுக்குத் தெரியாத நேரத்தில் அவனுடைய எஜமான்
வந்து அவனை மிகக் கடுமையாகத் தண்டிப்பார்; உண்மையாக நடக்காத
வர்களுக்கு ஏற்படும் அதே கதிதான் அவனுக்கும் ஏற்படும். **47** அடுத்த
தாக, எஜமானுடைய விருப்பத்தைத் தெரிந்திருந்தும் தயாராக இல்லாமலோ
அவர் சொன்னபடி* செய்யாமலோ இருக்கும் அடிமை பல அடிகள் வாங்
குவான்.[d] **48** அதேசமயத்தில், அவருடைய விருப்பம் என்ன என்பதைத்
தெரியாமலிருந்து தண்டனைக்குரிய செயல்களைச் செய்கிறவனும் சில அடி
கள் வாங்குவான். ஆம், எவனிடம் அதிகம் கொடுக்கப்பட்டதோ அவனி
டம் அதிகம் கேட்கப்படும். எவனிடம் அதிக பொறுப்பு ஒப்படைக்கப்பட்
டதோ அவனிடம் வழக்கத்துக்கு அதிகமாகவே கேட்கப்படும்.[e]
49 பூமியில் நான் தீ மூட்ட வந்தேன்; நான் மூட்டிய தீ இப்போது எரிந்து
கொண்டிருப்பதால், அதைவிட எனக்கு வேறென்ன வேண்டும்? **50** ஆனா
லும், நான் எடுக்க வேண்டிய ஒரு ஞானஸ்நானம் இருக்கிறது. அது முடிந்து
தீரும்வரை எனக்கு எவ்வளவு மனவேதனை![f] **51** பூமியில் சமாதானத்தை
உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களா? இல்லை, பிரிவினையையே
உண்டாக்க வந்தேன் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்.[g] **52** இதுமு
தல் ஒரே வீட்டிலுள்ள ஐந்து பேரில், மூன்று பேர் இரண்டு பேருக்கு விரோத
மாகவும், இரண்டு பேர் மூன்று பேருக்கு விரோதமாகவும் பிரிந்திருப்பார்கள்.
53 அப்பாவுக்கு விரோதமாக மகனும், மகனுக்கு விரோதமாக அப்பாவும்,
மகளுக்கு விரோதமாக அம்மாவும், அம்மாவுக்கு விரோதமாக மகளும், மரு
மகளுக்கு விரோதமாக மாமியாரும், மாமியாருக்கு விரோதமாக மருமகளும்
பிரிந்திருப்பார்கள்”[h] என்று சொன்னார்.
54 பின்பு, அவர் அந்தக் கூட்டத்தாரிடம், “மேற்கில் மேகம் திரண்டு
வருவதைப் பார்க்கும்போது, ‘புயல் அடிக்கும்’ என்று உடனடியாகச் சொல்
கிறீர்கள்; அது அப்படியே நடக்கிறது. **55** தெற்கிலிருந்து காற்றடிப்பதைப்
பார்க்கும்போது, ‘அனல்காற்று வீசும்’ என்று சொல்கிறீர்கள்; அதுவும் அப்
படியே நடக்கிறது. **56** வெளிவேஷக்காரர்களே, பூமியையும் வானத்தை
யும் பார்த்து உங்களால் வானிலையைத் தெரிந்துகொள்ள முடிகிறதே,

12:42 * வே.வா., “வேலைக்காரர்களுக்கு.” # வே.வா., “ஞானமும்.” **12:47** * வே.வா., “விருப்பத்தின்படி.”

இந்தக் காலத்தில் நடக்கிற காரியங்களின் அர்த்தத்தை மட்டும் ஏன்
தெரிந்துகொள்ள முடியவில்லை?[a] **57** எது நீதியென்று நீங்களே ஏன்
தீர்மானிக்காமல் இருக்கிறீர்கள்? **58** உதாரணமாக, உங்கள்மேல் வழக்கு
போடுகிறவனோடு சேர்ந்து அதிகாரியிடம் போகும்போது, வழியிலேயே
அவனோடு வழக்கைத் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள்; இல்லாவிட்
டால், அவன் உங்களை நீதிபதியிடம் ஒப்படைப்பான், நீதிபதி உங்களைக்
காவலரிடம் ஒப்படைப்பார், அந்தக் காவலர் உங்களைச் சிறையில் தள்
ளுவார்.[b] **59** நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் அங்கிருந்து வரும்
போது சல்லிக்காசுகூட* உங்கள் கையில் மிஞ்சாது” என்று சொன்னார்.

13

அந்தச் சமயத்தில், பலி கொடுத்துக்கொண்டிருந்த கலிலேயர்களை
பிலாத்து கொன்றுபோட்ட செய்தியை அங்கிருந்த சிலர் அவரிடம்
சொன்னார்கள். **2** அப்போது அவர், “அந்த கலிலேயர்களுக்கு இப்படி
நடந்ததால் மற்ற எல்லா கலிலேயர்களையும்விட அவர்கள் பெரிய பாவி
கள் என்று நினைக்கிறீர்களா? **3** இல்லவே இல்லை என்று நான் உங்களுக்
குச் சொல்கிறேன். மனம் திருந்தவில்லை என்றால் நீங்கள் எல்லாரும் அது
போலவே கொல்லப்படுவீர்கள்.[c] **4** அல்லது, சீலோவாம் பக்கத்தில்
கோபுரம் இடிந்து விழுந்தபோது செத்துப்போன 18 பேர், எருசலேமில் குடி
யிருக்கிற மற்ற எல்லாரையும்விட பெரிய குற்றவாளிகள் என்று நினைக்கி
றீர்களா? **5** இல்லவே இல்லை என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்.
மனம் திருந்தவில்லை என்றால் நீங்கள் எல்லாரும் அவர்களைப் போலவே
அழிந்துபோவீர்கள்” என்று அவர்களிடம் சொன்னார்.

6 பின்பு, அவர் ஓர் உவமையைச் சொன்னார்; “ஒருவர் தன்னுடைய
திராட்சைத் தோட்டத்தில் அத்தி மரம் ஒன்றை நட்டு வைத்திருந்தார். பழம்
ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க வந்தபோது அதில் ஒன்றுகூட இல்லை.[d]
7 அதனால் தோட்டக்காரரிடம், ‘இந்த அத்தி மரத்தில் பழம் ஏதாவது இருக்
கிறதா என்று பார்க்க மூன்று வருஷங்களாக வருகிறேன். ஆனால் இதில்
ஒரு பழத்தைக்கூட பார்க்கவில்லை. அதனால், இதை வெட்டிப்போடு!
இது ஏன் வீணாக இடத்தை அடைத்துக்கொண்டிருக்க வேண்டும்?’ என்றார்.
8 அதற்கு அந்தத் தோட்டக்காரர், ‘எஜமானே, இந்த மரம் இன்னும் ஒரு
வருஷம் இருக்கட்டும். இதைச் சுற்றிலும் கொத்திவிட்டு எரு போடுகிறேன்.
9 வருங்காலத்தில் இது கனி கொடுத்தால் நல்லது. இல்லையென்றால், இதை
வெட்டிப்போடுங்கள்’[e] என்று சொன்னான்” என்றார்.

10 பின்பு, ஓய்வுநாளில் ஒரு ஜெபக்கூடத்தில் அவர் கற்பித்துக்கொண்
டிருந்தார். **11** பேய் பிடித்திருந்ததால் 18 வருஷங்களாக உடல்நலப் பிரச்
சினையோடு தவித்துவந்த ஒரு பெண் அங்கே இருந்தாள். கொஞ்சமும்
நிமிர முடியாதளவு அவளுக்குக் கூன் விழுந்திருந்தது. **12** இயேசு அவ
ளைப் பார்த்தபோது, “பெண்ணே, உன் உடல்நலப் பிரச்சினையிலிருந்து நீ
விடுதலை பெற்றாய்”[f] என்று அவளிடம் சொல்லி, **13** அவள்மேல் தன்
னுடைய கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து நின்று, கடவுளை
மகிமைப்படுத்த ஆரம்பித்தாள். **14** இயேசு ஓய்வுநாளில் குணப்படுத்திய
தால் ஜெபக்கூடத் தலைவனுக்கு அவர்மேல் பயங்கர கோபம் வந்தது. அத
னால் கூட்டத்தாரிடம், “வேலை செய்வதற்கு ஆறு நாட்கள் இருக்கி
றதே;[g] அந்த நாட்களில் வந்து குணமடையுங்கள், ஓய்வுநாளில் கூடாது”[h]

12:59 * நே.மொ., “கடைசி லெப்டன்கூட.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 12
a மத் 16:2, 3
லூ 19:42
b மத் 5:25, 26

அதி. 13
c அப் 3:19
d மத் 21:19
மாற் 11:13
e 2பே 3:9
f ஏசா 61:1
லூ 4:18
g யாத் 20:9, 10
யாத் 35:2
உபா 5:13, 14
h மத் 12:10
மாற் 3:2
யோவா 5:
15, 16

அதி. 13
a மத் 23:27, 28
லூ 12:1
b லூ 14:5
c லூ 9:43
d மத் 13:31, 32
மாற் 4:30-32
e மத் 13:33
f ஏசா 55:6
மத் 7:13, 14
பிலி 3:12-14
1தீ 6:12
g லூ 6:46
h மத் 7:22, 23
i மத் 8:11, 12
j மத் 19:30
மாற் 10:31

என்று சொன்னான். **15** அதற்கு இயேசு, “வெளிவேஷக்காரர்களே,[a] ஓய்
வுநாளில் நீங்கள் யாரும் உங்களுடைய காளையையோ கழுதையையோ
தொழுவத்திலிருந்து அவிழ்த்துப்போய் அதற்குத் தண்ணீர் காட்ட மாட்டீர்
களா?[b] **16** அப்படியானால், சாத்தான் 18 வருஷங்களாகக் கட்டி வைத்
திருந்த ஆபிரகாமின் மகளான இந்தப் பெண்ணை இந்தக் கட்டிலிருந்து
ஓய்வுநாளில் விடுதலை செய்யக் கூடாதா?” என்று கேட்டார். **17** அவர்
இப்படிக் கேட்டபோது, அவரை எதிர்த்த எல்லாரும் வெட்கப்பட்டுப்போ
னார்கள். ஆனால், கூட்டத்தார் எல்லாரும் அவர் செய்த அற்புதமான
செயல்களையெல்லாம் பார்த்து சந்தோஷப்பட்டார்கள்.[c]

18 பின்பு அவர், “கடவுளுடைய அரசாங்கம் எதைப் போல் இருக்கிறது,
அதை எதற்கு ஒப்பிடுவேன்? **19** அது கடுகு விதையைப் போல் இருக்
கிறது. ஒருவன் அதை எடுத்து தன்னுடைய தோட்டத்தில் விதைத்தான்.
அது வளர்ந்து மரமானது, வானத்துப் பறவைகள் வந்து அதன் கிளைகளில்
தங்கின”[d] என்று சொன்னார்.

20 மறுபடியும் அவர், “கடவுளுடைய அரசாங்கத்தை நான் எதற்கு ஒப்
பிடுவேன்? **21** அது புளித்த மாவுக்கு ஒப்பாக இருக்கிறது. ஒரு பெண்
அதை மூன்று பெரிய படி* மாவில் கலந்து# வைத்தாள், அந்த மாவு முழு
வதும் புளித்துப்போனது”[e] என்று சொன்னார்.

22 எருசலேமுக்குப் பயணம் செய்தபோது, அவர் நகரம் நகரமாகவும்
கிராமம் கிராமமாகவும் கற்பித்துக்கொண்டே போனார். **23** அப்போது
ஒருவன் அவரிடம் வந்து, “எஜமானே, மீட்கப்படுகிறவர்கள் சிலர்தானா?”
என்று கேட்டான். அதற்கு இயேசு அவர்களிடம், **24** “இடுக்கமான கதவு
வழியாக நுழைவதற்குத் தீவிரமாக முயற்சி செய்யுங்கள்.[f] ஏனென்றால்,
நிறைய பேர் உள்ளே நுழையப் பார்ப்பார்கள். ஆனால், நுழைய முடியா
மல்போகும் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். **25** வீட்டுச் சொந்
தக்காரர் எழுந்து கதவைப் பூட்டிய பின்பு நீங்கள் வெளியில் நின்று கத
வைத் தட்டி, ‘எஜமானே, கதவைத் திறங்கள்’[g] என்று சொல்வீர்கள்.
ஆனாலும் அவர், ‘நீங்கள் எங்கிருந்து வந்தவர்களோ, உங்களை எனக்குத்
தெரியாது’ என்று சொல்லிவிடுவார். **26** அப்போது, ‘உங்களோடு சாப்
பிட்டோம், குடித்தோம். எங்களுடைய முக்கியத் தெருக்களில் நீங்கள்
கற்பித்தீர்கள்’[h] என்று சொல்ல ஆரம்பிப்பீர்கள். **27** ஆனால் அவர், ‘நீங்
கள் எங்கிருந்து வந்தவர்களோ, உங்களை எனக்குத் தெரியாது. அநீதி செய்
கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னைவிட்டுப் போய்விடுங்கள்!’ என்று
சொல்வார். **28** ஆபிரகாமும் ஈசாக்கும் யாக்கோபும் மற்ற எல்லா தீர்க்க
தரிசிகளும் கடவுளுடைய அரசாங்கத்தில் இருப்பதைப் பார்ப்பீர்கள். நீங்
களோ வெளியே வீசப்படுவீர்கள், அங்கே அழுது அங்கலாய்ப்பீர்கள்.*[i]
29 அதோடு, கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் தெற்கிலி
ருந்தும் மக்கள் வந்து கடவுளுடைய அரசாங்கத்தில் விருந்து சாப்பிட உட்
காருவார்கள். **30** இப்படி, பிந்தினவர்கள் முந்தினவர்களாக ஆவார்கள்,
முந்தினவர்கள் பிந்தினவர்களாக ஆவார்கள்”[j] என்று சொன்னார்.

31 அந்த நேரத்தில் பரிசேயர்கள் சிலர் அவரிடம் வந்து, “இங்கிருந்து

13:21 *நே.மொ., “மூன்று சியா அளவு.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். #நே.மொ., “மறைத்து.” **13:28** *நே.மொ., “பற்களை நறநறவென்று கடிப்பீர்கள்.” இது கோபத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் செயல்.

போய்விடுங்கள், ஏரோது உங்களைக் கொல்லத் திட்டம் போட்டிருக்கி
றான்” என்று சொன்னார்கள். **32** அப்போது அவர், “‘இன்றைக்கும் நாளைக்
கும் பேய்களை விரட்டி, நோய்களைக் குணப்படுத்தி, மூன்றாம் நாளில் என்
வேலையை முடித்துவிடுவேன்’ என்று நான் சொன்னதாக அந்தக் குள்ளநரி
யிடம் போய்ச் சொல்லுங்கள். **33** இருந்தாலும், இன்றைக்கும் நாளைக்கும்
அதற்கடுத்த நாளைக்கும் எருசலேமை நோக்கி என் பயணத்தைத் தொடர
வேண்டும். ஏனென்றால், ஒரு தீர்க்கதரிசி எருசலேமுக்கு வெளியே கொல்
லப்படுவது நடக்காத காரியம்.*[a] **34** எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரி
சிகளைக் கொலை செய்தவளே! உன்னிடம் அனுப்பப்பட்டவர்களைக் கல்
லெறிந்து கொன்றவளே![b] கோழி தன் குஞ்சுகளை இறக்கைகளின் கீழே
கூட்டிச்சேர்ப்பதுபோல் நான் உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்க்க எத்
தனையோ தடவை ஆசைப்பட்டேன். ஆனால் மக்களே, நீங்கள் அதை
விரும்பவில்லை![c] **35** இதோ! உங்கள் வீடு* ஒதுக்கித்தள்ளப்பட்டு உங்
களிடமே விடப்படும்.[d] ‘யெகோவாவின்# பெயரில் வருகிறவர் ஆசீர்வதிக்
கப்பட்டவர்’[e] என்று நீங்கள் சொல்லும்வரை இனி ஒருபோதும் என்னைப்
பார்க்க மாட்டீர்கள் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.

14 ஓர் ஓய்வுநாளில், பரிசேயர்களின் தலைவன் ஒருவனுடைய வீட்
டுக்கு விருந்து சாப்பிட இயேசு போனார். அங்கிருந்தவர்கள் அவ
ரைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள். **2** நீர்க்கோவை நோயால்*
பாதிக்கப்பட்ட ஒருவன் அவருக்கு முன்னால் இருந்தான். **3** அந்தச் சமயத்
தில், திருச்சட்ட வல்லுநர்களிடமும் பரிசேயர்களிடமும், “ஓய்வுநாளில் குண
மாக்குவது சரியா இல்லையா?”[f] என்று இயேசு கேட்டார். **4** அவர்கள்
ஒன்றும் பேசவில்லை. அப்போது, அவர் அந்த மனிதனைத் தொட்டு, குண
மாக்கி அனுப்பினார். **5** பின்பு அவர்களிடம், “ஓய்வுநாளில் உங்களுடைய
பிள்ளையோ காளையோ கிணற்றில் விழுந்தால்,[g] அதை உடனே தூக்கிவிட
மாட்டீர்களா?”[h] என்று கேட்டார். **6** அதற்கு அவர்களால் பதில் சொல்ல
முடியவில்லை.

7 விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் மிக முக்கியமான இடங்களைத்
தேர்ந்தெடுப்பதை[i] அவர் கவனித்தபோது அவர்களுக்கு ஓர் உவமையைச்
சொன்னார்; **8** “யாராவது உங்களைத் திருமண விருந்துக்கு அழைத்தால்,
மிக முக்கியமான இடத்தில் போய் உட்காராதீர்கள்.[j] ஏனென்றால், உங்க
ளைவிட முக்கியமான நபரும் அழைக்கப்பட்டிருக்கலாம். **9** உங்களையும்
அவரையும் அழைத்தவர் உங்களிடம் வந்து, ‘இவருக்கு இந்த இடத்
தைக் கொடுங்கள்’ என்று சொல்வார். அப்போது, நீங்கள் அவமானத்
தோடு கடைசி இடத்துக்குப் போக வேண்டியிருக்கும். **10** அதனால் நீங்
கள் அழைக்கப்பட்டிருந்தால், கடைசி இடத்தில் போய் உட்காருங்கள்;
உங்களை அழைத்தவர் வந்து, ‘நண்பரே, முன்னால் வந்து உட்காருங்கள்’
என்று சொல்வார். அப்போது, மற்ற விருந்தினர்கள்முன் உங்களுக்குக் கௌ
ரவமாக இருக்கும்.[k] **11** தன்னைத்தானே உயர்த்துகிறவன் தாழ்த்தப்படு
வான், தன்னைத்தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்”[l] என்றார்.

12 பின்பு, தன்னை விருந்துக்கு அழைத்தவரிடம், “நீங்கள் மத்தியா

13:33 *வே.வா., “கொல்லப்படுவதை நினைத்துக்கூட பார்க்க முடியாது.” **13:35** *அதாவது, “ஆலயம்.” #இணைப்பு A5-ஐப் பாருங்கள். **14:2** *உடலில் அளவுக்கதிகமாக நீர் சேர்ந்துவிடும் ஒரு நோய்.

அதி. 13
a மத் 16:21
b 2நா 24:20, 21; நெ 9:26
c மத் 23:37
d லேவி 26:31; 1ரா 9:7, 8; எரே 12:7; எரே 22:5
e சங் 118:26; மத் 23:38, 39

அதி. 14
f லூ 6:9; யோவா 7:23
g யாத் 23:5; உபா 22:4
h மத் 12:11; லூ 13:15
i மத் 23:2, 6; லூ 11:43; லூ 20:46
j நீதி 25:6, 7
k நீதி 15:33; யாக் 4:10; 1பே 5:5
l நீதி 29:23; மத் 23:12; லூ 18:14; யாக் 4:6

னத்தில் அல்லது சாயங்காலத்தில் விருந்து கொடுக்கும்போது, உங்கள்
நண்பர்களையோ சகோதரர்களையோ சொந்தக்காரர்களையோ அக்கம்பக்
கத்தில் இருக்கிற பணக்காரர்களையோ அழைக்காதீர்கள். அப்படி அழைத்
தால் ஒருவேளை பதிலுக்கு அவர்களும் உங்களை எப்போதாவது அழைக்
கலாம். அது உங்களுக்குக் கைமாறு செய்வதுபோல் ஆகிவிடும்.
13 அதனால் விருந்து கொடுக்கும்போது, ஏழைகளையும் உடல் ஊனமா
னவர்களையும் கால் ஊனமானவர்களையும் பார்வை இல்லாதவர்களையும்
அழையுங்கள்.[a] **14** அப்போது சந்தோஷப்படுவீர்கள். ஏனென்றால், உங்
களுக்குக் கைமாறு செய்ய அவர்களிடம் ஒன்றும் இருக்காது. ஆனால், நீதி
மான்கள் உயிரோடு எழுப்பப்படும்போது[b] உங்களுக்குக் கைமாறு கிடைக்
கும்" என்று சொன்னார்.

15 இதையெல்லாம் கேட்ட விருந்தாளிகளில் ஒருவர் அவரிடம், "கடவு
ளுடைய அரசாங்கத்தில் விருந்து சாப்பிடுகிறவன் சந்தோஷமானவன்"
என்று சொன்னார்.

16 அதற்கு இயேசு அவரிடம்: "ஒரு மனுஷர் பெரிய விருந்தை ஏற்பாடு
செய்து[c] நிறைய பேரை அழைத்தார். **17** விருந்துக்கு நேரமானபோது,
அவர் தன்னுடைய அடிமையைக் கூப்பிட்டு, '"எல்லாம் தயாராக இருக்
கிறது, வாருங்கள்" என அழைக்கப்பட்டவர்களிடம் போய்ச் சொல்' என்றார்.
18 ஆனால், அவர்கள் எல்லாருமே சாக்குப்போக்கு சொல்ல ஆரம்பித்
தார்கள்.[d] முதலில் ஒருவன், 'நான் ஒரு வயல் வாங்கியிருக்கிறேன். அதைப்
போய்ப் பார்க்க வேண்டும், தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள்'
என்று சொன்னான். **19** மற்றொருவன், 'ஐந்து ஜோடி ஏர்மாடுகளை வாங்
கியிருக்கிறேன். அவற்றைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன், தயவுசெய்து
என்னை மன்னித்துவிடுங்கள்'[e] என்று சொன்னான். **20** இன்னொருவனோ,
'எனக்கு இப்போதுதான் கல்யாணம் ஆகியிருக்கிறது. அதனால் நான் வர
முடியாது' என்று சொன்னான். **21** அந்த அடிமை வந்து நடந்ததையெல்
லாம் வீட்டு எஜமானிடம் சொன்னான். அப்போது அந்த எஜமான் பயங்கர
கோபத்தில் தன் அடிமையிடம், 'நீ நகரத்தில் இருக்கிற முக்கியத் தெருக்க
ளுக்கும் வீதிகளுக்கும் சீக்கிரமாகப் போய், ஏழைகளையும் உடல் ஊனமா
னவர்களையும் பார்வை இல்லாதவர்களையும் கால் ஊனமானவர்களையும்
இங்கே கூட்டிக்கொண்டு வா' என்று சொன்னார். **22** பின்பு அந்த அடிமை
அவரிடம் வந்து, 'எஜமானே, நீங்கள் சொன்னபடியே செய்துவிட்டேன்,
ஆனால் இன்னமும் இடம் இருக்கிறது' என்று சொன்னான். **23** அப்போது
எஜமான் அந்த அடிமையிடம், 'நீ சாலைகளுக்கும் சந்துகளுக்கும் போய்,
என் வீடு நிரம்பும் அளவுக்கு ஆட்களை வற்புறுத்திக் கூட்டிக்கொண்டு
வா.[f] **24** முதலில் அழைக்கப்பட்ட யாரும் நான் கொடுக்கிற விருந்
தைச் சாப்பிடப்போவதில்லை என்று உங்கள் எல்லாருக்கும் சொல்கிறேன்'[g]
என்றார்."

25 மக்கள் கூட்டம் கூட்டமாக இயேசுவோடு பயணம் செய்துகொண்டி
ருந்தார்கள். அப்போது அவர் அவர்களைத் திரும்பிப் பார்த்து, **26** "என்
னிடம் வருகிற ஒருவன் தன் அப்பாவையும் அம்மாவையும் மனைவியை
யும் பிள்ளைகளையும் சகோதரர்களையும் சகோதரிகளையும், ஏன்,
தன் உயிரையும்கூட வெறுக்கவில்லை* என்றால்[h] அவன் என்னுடைய

14:26 * வே.வா., "குறைவாக நேசிக்கவில்லை."

அதி. 14
a யோபு 31:16, 22; நீதி 3:27, 28
b யோவா 5:28, 29; யோவா 11:24; அப் 24:15
c மத் 22:2
d மத் 22:3
e மத் 22:5
f மத் 22:9, 10
g மத் 21:43; மத் 22:8
h வெளி 12:11

சீஷனாக இருக்க முடியாது.[a] 27 சித்திரவதைக் கம்பத்தை* சுமந்து
கொண்டு என்னைப் பின்பற்றி வராத எவனும் என்னுடைய சீஷனாக
இருக்க முடியாது.[b] 28 உதாரணத்துக்கு, உங்களில் யாராவது ஒரு கோபு
ரம் கட்ட விரும்பினால், அதைக் கட்டி முடிக்க தனக்குப் போதுமான வசதி
இருக்கிறதா என்று முதலில்* செலவைக் கணக்கு பார்க்காமல் இருப்பானா?
29 அப்படிச் செய்யாவிட்டால், அஸ்திவாரம் போட்ட பிறகு, அவனால்
அதைக் கட்டி முடிக்க முடியாமல் போய்விடும். பார்ப்பவர்கள் எல்லாரும்,
30 ‘இந்த மனுஷன் கட்ட ஆரம்பித்தான், ஆனால் முடிக்க முடியவில்லை’
என்று சொல்லி அவனைக் கேலி செய்வார்கள். 31 எந்த ராஜாவாவது
போருக்குப் போகும்போது, தனக்கு எதிராக 20,000 படைவீரர்களோடு வரு
கிற ராஜாவைத் தன்னுடைய 10,000 படைவீரர்களோடு ஜெயிக்க முடியுமா,
முடியாதா என்று முதலில்* கலந்தாலோசிக்காமல் இருப்பாரா? 32 அவ
ரால் ஜெயிக்க முடியாது என்று தெரிந்தால், எதிரி தூரத்தில் வரும்
போதே தன்னுடைய தூதுவர் குழுவை அனுப்பி, சமாதானம் செய்துகொள்
ளப் பார்ப்பார், இல்லையா? 33 அதுபோலவே, உங்களில் யாராவது தன்
உடைமைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வரவில்லை என்றால், அவன்
நிச்சயமாகவே என்னுடைய சீஷனாக இருக்க முடியாது.[c]

34 உப்பு நல்லதுதான். ஆனால், உப்பு அதன் சுவையை இழந்தால்,
எதை வைத்து அதற்கு மறுபடியும் சுவை சேர்க்க முடியும்?[d] 35 அது
நிலத்துக்கும் பயன்படாது, உரத்துக்கும் பயன்படாது. மக்கள் அதை வெளி
யில்தான் கொட்டுவார்கள். கேட்பதற்குக் காதுள்ளவன் கவனித்துக் கேட்கட்
டும்”[e] என்று சொன்னார்.

15 வரி வசூலிப்பவர்கள், பாவிகள் ஆகிய எல்லாரும் அவர் சொல்வ
தைக் கேட்பதற்காக அவர் பக்கத்தில் வந்துகொண்டே இருந்தார்
கள்.[f] 2 அதனால் பரிசேயர்களும் வேத அறிஞர்களும், “இந்த மனுஷன்
பாவிகளோடு பழகுகிறான், அவர்களோடு சேர்ந்து சாப்பிடுகிறான்” என்று
முணுமுணுத்துக்கொண்டே இருந்தார்கள். 3 அப்போது அவர் ஒரு உவ
மையை அவர்களுக்குச் சொன்னார்; 4 “உங்களில் யாராவது தன்னுடைய
100 செம்மறியாடுகளில் ஒன்று காணாமல் போனால், மற்ற 99 ஆடுகளையும்
வனாந்தரத்தில் விட்டுவிட்டு, வழிதவறிப்போன ஆட்டைக் கண்டுபிடிக்கிற
வரைக்கும் அதைத் தேடிக்கொண்டிருக்க மாட்டானா?[g] 5 அவன் அதைக்
கண்டுபிடிக்கும்போது, தன் தோள்கள்மேல் அதைப் போட்டுக்கொண்டு சந்
தோஷப்படுவான். 6 பின்பு வீட்டுக்கு வந்து, தன் நண்பர்களையும் அக்கம்
பக்கத்தில் இருப்பவர்களையும் கூப்பிட்டு, ‘காணாமல்போன என் ஆட்டைக்
கண்டுபிடித்துவிட்டேன், என்னோடு சேர்ந்து சந்தோஷப்படுங்கள்’[h] என்று
சொல்வான். 7 அதேபோல், மனம் திருந்தத் தேவையில்லாத 99 நீதிமான்
களைக் குறித்து ஏற்படுகிற சந்தோஷத்தைவிட மனம் திருந்துகிற ஒரே பாவி
யைக் குறித்துப் பரலோகத்தில் ஏற்படுகிற சந்தோஷம் அதிகமாக இருக்கும்[i]
என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

8 பத்து வெள்ளிக் காசுகளை* வைத்திருக்கும் எந்தப் பெண்ணாவது
அதில் ஒரு காசைத் தொலைத்துவிட்டால் விளக்கைக் கொளுத்தி, தன்

14:27 * சொல் பட்டியலைப் பாருங்கள். **14:28, 31** * நே.மொ., “முதலில் உட்கார்ந்து.”
15:8 * நே.மொ., “பத்து திராக்மாவை.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 14
a மத் 10:37; லூ 18:29, 30; யோவா 12:25
b மத் 16:24; மாற் 8:34; லூ 9:23
c மத் 19:27; லூ 9:62; பிலி 3:7, 8
d மத் 5:13; மாற் 9:50; கொலோ 4:6
e மத் 13:43; மாற் 4:9; வெளி 2:29

அதி. 15
f மத் 9:10, 11; மாற் 2:15, 16; லூ 5:29, 30; 1தீ 1:15
g எசே 34:11, 16; மத் 18:12, 13; லூ 19:10
h மத் 18:14; ரோ 12:15; 1பே 2:25
i எசே 33:11; லூ 5:32

னுடைய வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் கவன
மாகத் தேடிக்கொண்டிருக்க மாட்டாளா? **9** அதைக் கண்டுபிடித்ததும் தன்
னுடைய தோழிகளையும் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களையும் கூப்பிட்டு,
‘என்னோடு சேர்ந்து சந்தோஷப்படுங்கள், நான் தொலைத்த வெள்ளிக்
காசைக் கண்டுபிடித்துவிட்டேன்’ என்று சொல்வாள். **10** அதேபோல்,
பாவிகளில் ஒருவன் மனம் திருந்தும்போது கடவுளுடைய தூதர்கள் எல்லா
ரும் சந்தோஷப்படுவார்கள்[a] என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்”
என்றார்.

11 அதோடு, “ஒரு மனுஷருக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள்.
12 இளைய மகன் தன்னுடைய அப்பாவிடம் வந்து, ‘அப்பா, சொத்தில்
எனக்குச் சேர வேண்டிய பங்கைக் கொடுத்துவிடுங்கள்’ என்று கேட்
டான். அதனால், அவர் தன்னுடைய சொத்துகளை அவர்களுக்குப் பிரித்
துக் கொடுத்தார். **13** சில நாட்கள் கழித்து, அந்த இளைய மகன் எல்
லாவற்றையும் எடுத்துக்கொண்டு தூர தேசத்துக்குப் புறப்பட்டுப் போனான்.
அங்கே அவன் மோசமான வாழ்க்கை* வாழ்ந்து, தன்னிடமிருந்த சொத்து
களையெல்லாம் ஊதாரித்தனமாகச் செலவழித்தான். **14** அவன் தன்னிடம்
இருந்ததையெல்லாம் செலவழித்த பிறகு, அந்தத் தேசம் முழுவதும் கடுமை
யான பஞ்சம் ஏற்பட்டது. அவன் வறுமையில் வாடினான். **15** அதனால்,
அந்தத் தேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் போய் வேலைக்குச் சேர்ந்துகொண்
டான். அவர் தன்னுடைய பன்றிகளை[b] மேய்க்கச் சொல்லி அவனைத் தன்
னுடைய வயல்களுக்கு அனுப்பினார். **16** பன்றித் தீவனம்* சாப்பிட்டா
வது தன் வயிற்றை நிரப்ப அவன் ஏங்கினான். ஆனால், அவனுக்கு யாரும்
எதையும் கொடுக்கவில்லை.

17 அவனுக்குப் புத்தி வந்தபோது, ‘என் அப்பா வீட்டில் எத்தனையோ
கூலியாட்கள் வயிறார சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது, நான் இங்கே பசி
யால் செத்துக்கொண்டிருக்கிறேன்! **18** அதனால் நான் என் அப்பாவிடம்
போய், “அப்பா, கடவுளுக்கும்* உங்களுக்கும் விரோதமாகப் பாவம் செய்து
விட்டேன். **19** உங்கள் மகன் என்று சொல்வதற்குக்கூட இனி எனக்கு
அருகதையில்லை. உங்களுடைய கூலியாட்களில் ஒருவனாக என்னை ஏற்
றுக்கொள்ளுங்கள்” என்று சொல்வேன்’ எனச் சொல்லிக்கொண்டு,
20 தன் அப்பாவிடம் புறப்பட்டுப் போனான். அவன் ரொம்பத் தூரத்தில்
வந்துகொண்டிருந்தபோதே அவனுடைய அப்பா அவனைப் பார்த்துவிட்
டார். உடனே அவருடைய மனம் உருகியது, ஓடிப்போய் அவனைக் கட்டிப்
பிடித்து முத்தம் கொடுத்தார். **21** அப்போது அவன், ‘அப்பா, கடவுளுக்
கும் உங்களுக்கும் விரோதமாகப் பாவம் செய்துவிட்டேன்.[c] உங்கள் மகன்
என்று சொல்வதற்குக்கூட இனி எனக்கு அருகதையில்லை’ என்று சொன்
னான். **22** ஆனால் அவனுடைய அப்பா தன் அடிமைகளிடம், ‘சீக்கி
ரம்! முதல்தரமான அங்கியைக் கொண்டுவந்து இவனுக்குப் போட்டுவிடுங்
கள். இவனுடைய விரலில் மோதிரத்தையும் காலில் செருப்பையும் போட்டு
விடுங்கள். **23** கொழுத்த கன்றுக்குட்டியைக் கொண்டுவந்து அடியுங்கள்,
நாம் சாப்பிட்டுக் கொண்டாடுவோம். **24** ஏனென்றால், என்னுடைய மகன்

அதி. 15
a மத் 9:13
மாற் 2:17

b லேவி 11:7, 8

c 2நா 7:14
சங் 32:5
சங் 51:4
நீதி 28:13
லூ 18:13
1யோ 1:9

15:13 * வே.வா., “மனம்போன போக்கில்.” **15:16** * நே.மொ., “கரோப் மரக் காய்கள்.”
15:18 * நே.மொ., “பரலோகத்துக்கும்.”

செத்துப்போயிருந்தான், இப்போது உயிரோடு வந்துவிட்டான்;[a] காணாமல் போயிருந்தான், இப்போது கிடைத்துவிட்டான்' என்று சொன்னார். அதனால், அவர்கள் சந்தோஷமாகக் கொண்டாட ஆரம்பித்தார்கள்.

25 அவருடைய மூத்த மகன் அப்போது வயலில் இருந்தான். அவன் அங்கிருந்து கிளம்பி வீட்டுக்குப் பக்கத்தில் வந்துகொண்டிருந்தபோது, ஆடல்பாடலின் சத்தத்தைக் கேட்டான். **26** அதனால், வேலைக்காரர்களில் ஒருவனைக் கூப்பிட்டு, என்ன நடக்கிறது என்று கேட்டான். **27** அதற்கு அவன், 'உங்கள் தம்பி வந்துவிட்டார். அவர் பத்திரமாக வீடு திரும்பிவிட்டதால் உங்கள் அப்பா கொழுத்த கன்றுக்குட்டியை அடித்து விருந்து வைத்திருக்கிறார்' என்று சொன்னான். **28** அதைக் கேட்டு அவனுக்குப் பயங்கர கோபம் வந்தது; வீட்டுக்குள் போகவே அவனுக்குப் பிடிக்கவில்லை. அப்போது, அவனுடைய அப்பா வெளியே வந்து, அவனைக் கெஞ்சிக் கூப்பிட்டார். **29** அதற்கு அவன் தன்னுடைய அப்பாவிடம், 'இத்தனை வருஷங்களாக நான் உங்களுக்காகப் பாடுபட்டு வேலை செய்திருக்கிறேன், உங்கள் பேச்சைத் தட்டியதே இல்லை. இருந்தாலும், என் நண்பர்களோடு விருந்து கொண்டாட இதுவரை நீங்கள் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியைக் கூட கொடுத்ததில்லை. **30** ஆனால், விபச்சாரிகளோடு உல்லாசமாயிருந்து உங்கள் சொத்துகளை வீணாக்கிய உங்களுடைய மகன் வந்தவுடன் அவனுக்காகக் கொழுத்த கன்றுக்குட்டியை அடித்து விருந்து வைத்திருக்கிறீர்கள்' என்று சொன்னான். **31** அதற்கு அவர், 'மகனே, நீ எப்போதும் என்னோடு இருக்கிறாய்; என்னிடம் இருப்பதெல்லாம் உன்னுடையதுதான். **32** ஆனால், உன் தம்பி செத்துப்போயிருந்தான்; இப்போது உயிரோடு வந்துவிட்டான். காணாமல் போயிருந்தான், இப்போது கிடைத்துவிட்டான். இந்தச் சந்தோஷத்தை நாம் கொண்டாடாமல் இருக்க முடியுமா?' என்று கேட்டார்" என்றார்.

16 பின்பு இயேசு தன்னுடைய சீஷர்களைப் பார்த்து, "பணக்காரர் ஒருவருக்கு வீட்டு நிர்வாகி ஒருவன் இருந்தான். அவருடைய பொருள்களையெல்லாம் அவன் வீணாக்குவதாக அவருக்குப் புகார் வந்தது. **2** அதனால், அவர் அவனைக் கூப்பிட்டு, 'என்ன இது? உன்னைப் பற்றி இப்படிக் கேள்விப்படுகிறேனே? நிர்வாகக் கணக்கையெல்லாம் ஒப்படைத்துவிடு, இனிமேல் நீ என் வீட்டை நிர்வகிக்க வேண்டாம்' என்று சொன்னார். **3** அப்போது அந்த நிர்வாகி, 'வீட்டை நிர்வகிக்கும் வேலையிலிருந்து எஜமான் என்னை நீக்கப்போகிறார், இப்போது என்ன செய்வேன்? மண்ணைக் கொத்தி வேலை செய்ய எனக்குச் சக்தி இல்லை, பிச்சையெடுக்கவும் வெட்கமாக இருக்கிறது. **4** ஆ! எனக்கு ஒரு யோசனை வருகிறது! எஜமான் என்னை வேலையிலிருந்து நீக்கும்போது மற்றவர்கள் என்னைத் தங்களுடைய வீடுகளில் ஏற்றுக்கொள்ளும்படி நான் ஒன்று செய்யப்போகிறேன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். **5** பின்பு, தன் எஜமானிடம் கடன் வாங்கியிருந்த ஒவ்வொருவரையும் கூப்பிட்டான். முதலில் வந்தவரிடம், 'என் எஜமானிடம் நீங்கள் எவ்வளவு கடன் வாங்கினீர்கள்?' என்று கேட்டான். **6** அதற்கு அவர், '100 ஜாடி* ஒலிவ எண்ணெய்' என்று சொன்

16:6 *மூலமொழியில், "100 பாத்." ஒரு பாத் என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 15
a ரோ 6:13
எபே 2:4, 5

னார். அப்போது அவன், ‘இதோ, உங்களுடைய கடன் பத்திரம். உட்கார்ந்து
50 என்று சீக்கிரம் எழுதுங்கள்’ என்றான். **7** பின்பு அடுத்து வந்தவரிடம்,
‘நீங்கள் எவ்வளவு கடன் வாங்கினீர்கள்?’ என்று கேட்டான். அதற்கு அவர்,
‘100 கலம்* கோதுமை’ என்று சொன்னார். அப்போது அவன், ‘இதோ,
உங்களுடைய கடன் பத்திரம். 80 என்று எழுதுங்கள்’ என்றான். **8** அந்த
நிர்வாகி அநீதியுள்ளவனாக இருந்தாலும், ஞானமாக* நடந்துகொண்டதால்
அவனுடைய எஜமான் அவனைப் பாராட்டினார். இப்படி, ஒளியின் பிள்
ளைகளைவிட[a] இந்த உலகத்தின்# பிள்ளைகள் அதிக ஞானமாக நடந்து
கொள்கிறார்கள்.

9 அதனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன், அநீதியான* செல்வங்
களை[b] வைத்து உங்களுக்காக நண்பர்களைச் சம்பாதித்துக்கொள்ளுங்கள்.
அப்போது, அவை இல்லாமல் போகும்போது அவர்கள் உங்களை என்
றென்றும் நிலைத்திருக்கும் வீடுகளில் ஏற்றுக்கொள்வார்கள்.[c] **10** சின்ன
விஷயத்தில் உண்மையுள்ளவனாக இருக்கிறவன் பெரிய விஷயத்திலும்
உண்மையுள்ளவனாக இருக்கிறான், சின்ன விஷயத்தில் அநீதியுள்ளவ
னாக இருக்கிறவன் பெரிய விஷயத்திலும் அநீதியுள்ளவனாக இருக்கி
றான். **11** அதனால், அநீதியான செல்வங்களைக் கையாளுவதில் நீங்கள்
உண்மையுள்ளவர்களாக இல்லையென்றால், யார் உங்களை நம்பி உண்மை
யான செல்வங்களை ஒப்படைப்பார்கள்? **12** மற்றவர்களுடைய பொருள்
களைக் கையாளுவதில் நீங்கள் உண்மையுள்ளவர்களாக இல்லையென்
றால், உங்களுக்குரியதை யார் உங்களிடம் கொடுப்பார்கள்?[d] **13** எந்த
வேலைக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு அடிமையாக இருக்க முடி
யாது. ஏனென்றால், அவன் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அன்பு காட்
டுவான். அல்லது ஒருவரிடம் ஒட்டிக்கொண்டு மற்றவரை அலட்சியம் செய்
வான். நீங்கள் ஒரே நேரத்தில் கடவுளுக்கும் செல்வத்துக்கும் அடிமையாக
இருக்க முடியாது”[e] என்று சொன்னார்.

14 பண ஆசைபிடித்த பரிசேயர்கள் இவற்றையெல்லாம் கேட்டபோது
அவரை ஏளனம் செய்ய ஆரம்பித்தார்கள்.[f] **15** அதனால் அவர்களிடம்
அவர் இப்படிச் சொன்னார்: “மனுஷர்கள் முன்னால் உங்களை நீதிமான்க
ளாகக் காட்டிக்கொள்கிறீர்கள்.[g] ஆனால், உங்களுடைய இதயத்தில் என்ன
இருக்கிறது என்று கடவுளுக்குத் தெரியும்.[h] மனுஷர்களுடைய பார்வையில்
எது உயர்வாக இருக்கிறதோ அது கடவுளுடைய பார்வையில் அருவருப்
பாக இருக்கிறது.[i]

16 திருச்சட்டமும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களும் யோவானுடைய
காலம்வரை அறிவிக்கப்பட்டன. அதுமுதல் கடவுளுடைய அரசாங்கமே
நல்ல செய்தியாக அறிவிக்கப்பட்டு வருகிறது. எல்லா விதமான ஆட்க
ளும் அதற்குள் நுழைய தீவிரமாக முயற்சி செய்துகொண்டிருக்கிறார்
கள்.[j] **17** உண்மையில், வானமும் பூமியும் அழிந்துபோனாலும் திருச்சட்
டத்திலுள்ள ஒரு எழுத்தின் சின்ன கோடுகூட அழிந்துபோகாது, அதிலுள்ள
எல்லாமே நிறைவேறும்.[k]

அதி. 16
a யோவா 12:36, எபே 5:8, 1தெ 5:5
b மத் 19:21, 1தீ 6:17
c மத் 25:34, லூ 12:20, 21
d லூ 12:48
e மத் 6:24
f ஏசா 53:3
g மத் 6:2, மத் 23:27, 28, லூ 18:9
h 1சா 16:7, 1நா 28:9, 2நா 6:30
i 1பே 5:5
j மத் 11:12, 13
k மத் 5:17, 18

16:7 *மூலமொழியில், “100 கோர்.” ஒரு கோர் என்பது சுமார் 220 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள். **16:8** *வே.வா., “நடைமுறையில் ஞானமாக; சாமர்த்தியமாக; விவேகமாக.” #வே.வா., “சகாப்தத்தின்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **16:9** *வே.வா., “இந்த உலகத்தின்.”

18 தன் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு வேறொரு பெண்ணைக்
கல்யாணம் செய்கிறவன் அவளோடு முறைகேடான உறவுகொள்கிறான்;
கணவனால் விவாகரத்து செய்யப்பட்ட பெண்ணைக் கல்யாணம் செய்கிற
வனும் முறைகேடான உறவுகொள்கிறான்.[a]

19 பணக்காரன் ஒருவன் ஊதா நிற உடைகளையும் விலை உயர்ந்த*
அங்கிகளையும் போட்டுக்கொண்டு, ஒவ்வொரு நாளும் சுகபோகமாக
வாழ்ந்து வந்தான். **20** லாசரு என்ற பிச்சைக்காரன் ஒருவனும் இருந்தான்.
அந்தப் பணக்காரனுடைய வீட்டு வாசலில் சிலர் அவனை வழக்கமாக உட்
கார வைத்தார்கள். அவனுடைய உடல் முழுவதும் சீழ்பிடித்த புண்கள் இருந்
தன. **21** அந்தப் பணக்காரனுடைய மேஜையிலிருந்து விழுகிறதைச் சாப்
பிட்டு அவன் தன்னுடைய வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டான். நாய்கள்கூட
வந்து அவனுடைய புண்களை நக்கின. **22** ஒருநாள் அந்தப் பிச்சைக்கா
ரன் இறந்துபோனான். அப்போது, தேவதூதர்கள் அவனைத் தூக்கிக்கொண்
டுபோய் ஆபிரகாமின் பக்கத்தில்* உட்கார வைத்தார்கள்.

பின்பு, அந்தப் பணக்காரனும் இறந்துபோய் அடக்கம் செய்யப்பட்டான்.
23 கல்லறையில் அவன் வேதனைப்படுகிறபோது, தூரத்தில் ஆபிரகா
மும் அவருக்குப் பக்கத்தில்* லாசருவும் இருப்பதை அண்ணாந்து பார்த்
தான். **24** அப்போது அவன், ‘தந்தை ஆபிரகாமே, எனக்கு இரக்கம் காட்
டுங்கள்; லாசரு தன் விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து என் நாவைக்
குளிர வைப்பதற்காக அவனை அனுப்புங்கள். ஏனென்றால், கொழுந்து
விட்டு எரிகிற இந்த நெருப்பில் நான் மிகவும் அவதிப்படுகிறேன்’ என்று
சொன்னான். **25** அதற்கு ஆபிரகாம், ‘மகனே, உன்னுடைய வாழ்நாளில்
எல்லா நல்ல காரியங்களையும் நீ அனுபவித்தாய், லாசருவோ கஷ்டங்க
ளையே அனுபவித்தான் என்பது உனக்கு ஞாபகம் இல்லையா? இப்போது
அவனுக்கு இங்கே ஆறுதல் கிடைக்கிறது, நீயோ மிகவும் அவதிப்படுகி
றாய். **26** இவை எல்லாவற்றையும் தவிர, எங்களுக்கும் உங்களுக்கும்
இடையே மாபெரும் பிளவு ஒன்று நிரந்தரமாக உண்டாக்கப்பட்டிருக்கிறது.
அதனால், இங்கிருந்து உங்களிடம் வர விரும்புகிறவர்கள் அதைக் கடந்து
வர முடியாது, அதேபோல் அங்கிருந்து யாருமே எங்களிடம் வர முடியாது’
என்று சொன்னார். **27** அதற்கு அவன், ‘அப்படியானால் தந்தையே, லாச
ருவை என்னுடைய அப்பாவின் வீட்டுக்கு அனுப்பும்படி உங்களைக் கேட்
டுக்கொள்கிறேன். **28** ஏனென்றால், எனக்கு ஐந்து சகோதரர்கள் இருக்கி
றார்கள்; வேதனையான இந்த இடத்துக்கு அவர்களும் வராதபடி அவன்
எச்சரிக்கட்டும்’ என்று சொன்னான். **29** அதற்கு ஆபிரகாம், ‘அவர்களிடம்
மோசேயின் புத்தகங்களும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களும் இருக்கின்றன.
அவற்றிலுள்ள வார்த்தைகளை அவர்கள் காதுகொடுத்துக் கேட்கட்டும்’[b]
என்று சொன்னார். **30** அதற்கு அவன், ‘அப்படியில்லை, தந்தை ஆபிர
காமே, இறந்தவர்கள் யாராவது அவர்களிடம் போனால் மனம் திருந்துவார்
கள்’ என்று சொன்னான். **31** அதற்கு அவர், ‘மோசேயின் புத்தகங்களும்
தீர்க்கதரிசிகளின் புத்தகங்களும் சொல்வதை அவர்கள் காதுகொடுத்துக்
கேட்கவில்லை என்றால்,[c] இறந்த ஒருவர் உயிரோடு எழுந்து போனாலும்
அவர்கள் நம்ப மாட்டார்கள்’ என்று சொன்னார்.”

16:19 * நே.மொ., “நாரிழை.” அதாவது, “லினன்.” **16:22** * நே.மொ., “நெஞ்சருகே.”
16:23 * நே.மொ., “அவருடைய நெஞ்சருகே.”

அதி. 16
a மத் 5:32
மத் 19:9
மாற் 10:11, 12

b உபா 18:18
லூ 24:25-27

c யோவா 5:46

17 பின்பு, இயேசு தன்னுடைய சீஷர்களிடம், “மக்களைப் பாவம்
செய்ய வைக்கிற காரியங்கள் கண்டிப்பாக வரும். ஆனால்,
அவை எந்த மனுஷனால் வருகிறதோ அந்த மனுஷனுக்குக் கேடுதான்
வரும்! **2** இந்தச் சிறியவர்களில் ஒருவரை யாராவது பாவம் செய்ய வைத்
தால், மாவு அரைக்கும் ஒரு கல்லை* அவனுடைய கழுத்தில் கட்டி
கடலில் தள்ளிவிடுவதே அவனுக்கு நல்லது.[a] **3** உங்களைக் குறித்துக் கவ
னமாயிருங்கள். உங்கள் சகோதரன் பாவம் செய்தால் அவனை எச்சரியுங்
கள்;*[b] அவன் மனம் திருந்தினால் அவனை மன்னியுங்கள்.[c] **4** அவன்
உங்களுக்கு விரோதமாக ஒரே நாளில் ஏழு தடவை பாவம் செய்து அந்த
ஏழு தடவையும் உங்களிடம் வந்து, ‘மனம் திருந்திவிட்டேன்’ என்று சொன்
னால், நீங்கள் அவனை மன்னிக்க வேண்டும்”[d] என்று சொன்னார்.

5 அப்போது அப்போஸ்தலர்கள், “எங்களுடைய விசுவாசத்தை அதிக
மாக்குங்கள்”[e] என்று இயேசுவிடம் சொன்னார்கள். **6** அதற்கு அவர்,
“உங்களுக்குக் கடுகளவு விசுவாசம் இருந்தால்கூட இந்த முசுக்கட்டை
மரத்தைப் பார்த்து, ‘இங்கிருந்து பெயர்ந்துபோய்க் கடலில் வேரூன்றி நில்!’
என்று நீங்கள் சொன்னால் அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.[f]

7 ஒரு அடிமை வயலில் உழுதுவிட்டு அல்லது மந்தையை மேய்த்து
விட்டு வந்ததுமே, ‘நீ வந்து முதலில் சாப்பிடு’ என்று எந்த எஜமானாவது
சொல்வாரா? **8** அதற்குப் பதிலாக, ‘நீ எனக்கு உணவு தயார் செய்து, துண்
டைக் கட்டிக்கொண்டு எனக்குப் பரிமாறு; நான் சாப்பிட்டுக் குடித்த பிறகு நீ
போய்ச் சாப்பிட்டுக் குடிக்கலாம்’ என்றுதானே சொல்வார்? **9** கொடுக்கப்
பட்ட வேலைகளைச் செய்ததற்காக அந்த அடிமைக்கு அவர் நன்றியுள்ள
வராக இருக்க மாட்டார்தானே? **10** அதனால் நீங்களும் கொடுக்கப்பட்ட
எல்லா வேலைகளையும் செய்து முடித்த பின்பு, ‘நாங்கள் ஒன்றுக்கும் உத
வாத அடிமைகள்; செய்ய வேண்டிய கடமையைத்தான் செய்தோம்’[g] என்று
சொல்லுங்கள்” என்றார்.

11 அவர் எருசலேமுக்குப் போகும்போது, சமாரியா மற்றும் கலிலேயா
வின் எல்லை வழியாகப் போனார். **12** அவர் ஒரு கிராமத்துக்குள் நுழைந்
தபோது, தொழுநோயாளிகள் பத்துப் பேர் அவரைப் பார்த்தார்கள். தூரத்தி
லிருந்த[h] அவர்கள் எழுந்து நின்று, **13** “இயேசுவே, போதகரே, எங்க
ளுக்கு இரக்கம் காட்டுங்கள்!” என்று சத்தமாகச் சொன்னார்கள்.
14 அவர் அவர்களைப் பார்த்தபோது, “நீங்கள் போய் குருமார்களிடம் உங்
களைக் காட்டுங்கள்”[i] என்று சொன்னார். அவர்கள் போய்க்கொண்டிருந்த
போதே சுத்தமானார்கள்.[j] **15** அவர்களில் ஒருவன் தான் குணமானதைப்
பார்த்து, சத்தமாகக் கடவுளை மகிமைப்படுத்திக்கொண்டே திரும்பி வந்
தான். **16** பின்பு, இயேசுவின் காலில் விழுந்து அவருக்கு நன்றி சொன்
னான்; அவன் ஒரு சமாரியன்.[k] **17** அப்போது இயேசு, “பத்துப் பேர் சுத்
தமாக்கப்பட்டார்களே, மற்ற ஒன்பது பேர் எங்கே? **18** வெளிதேசத்தைச்
சேர்ந்த இவனைத் தவிர வேறு யாருமே கடவுளை மகிமைப்படுத்துவதற்குத்
திரும்பி வரவில்லையா?” என்று கேட்டார். **19** பிறகு, “நீ எழுந்து போ; உன்
விசுவாசம் உன்னைக் குணமாக்கியிருக்கிறது”[l] என்று சொன்னார்.

20 கடவுளுடைய அரசாங்கம் எப்போது வரும்[m] என்று பரிசேயர்கள்
அவரிடம் கேட்டபோது, “கடவுளுடைய அரசாங்கம் வெளிப்படையாகத்

அதி. 17
a மத் 18:6
மாற் 9:42
b நீதி 17:10
c லேவி 19:17
மத் 18:15
d ஏசா 55:7
மத் 6:12
மத் 18:21, 22
கொலோ 3:13
1பே 4:8
e மாற் 9:23, 24
எபி 12:2
f மத் 17:20
மத் 21:21
மாற் 11:23
g 1கொ 9:16
h லேவி 13:
45, 46
i லேவி 14:2-4
உபா 24:8
மத் 8:3, 4
லூ 5:13, 14
j 2ரா 5:1, 14
k 2ரா 17:24
யோவா 4:9
l மத் 9:22
மாற் 5:34
லூ 7:50
m மத் 24:3

17:2 * வே.வா., “திரிகைக் கல்லை.” **17:3** * வே.வா., “கண்டியுங்கள்.”

தெரியும் விதத்தில் வராது. **21** ‘இங்கே பாருங்கள்!’ அல்லது ‘அங்கே
பாருங்கள்!’ என்று மக்கள் சொல்லிக்கொண்டும் இருக்க மாட்டார்கள்.
இதோ! கடவுளுடைய அரசாங்கம் உங்கள் மத்தியிலேயே இருக்கிறது”[a]
என்று சொன்னார்.

22 பின்பு அவர் தன்னுடைய சீஷர்களிடம், “மனிதகுமாரனுடைய நாட்
களில் ஒரு நாளைப் பார்க்க வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுகிற
காலம் வரும், ஆனால் அதைப் பார்க்க மாட்டீர்கள். **23** மக்கள் உங்க
ளிடம், ‘அங்கே பாருங்கள்!’ அல்லது ‘இங்கே பாருங்கள்!’ என்று
சொல்வார்கள். ஆனால், வெளியே போகாதீர்கள், அவர்களுக்குப் பின்னா
லும் ஓடாதீர்கள்.[b] **24** ஏனென்றால், வானத்தின் ஒரு முனையிலிருந்து மறு
முனைவரை மின்னல் மின்னுவதுபோல் மனிதகுமாரன்[c] தன்னுடைய நாளில்
வெளிப்படுவார்.[d] **25** இருந்தாலும், முதலில் அவர் பல பாடுகள் பட்டு,
இந்தத் தலைமுறையினரால் ஒதுக்கித்தள்ளப்பட வேண்டும்.[e] **26** நோவா
வின் நாட்களில்[f] நடந்தது போலவே மனிதகுமாரனுடைய நாட்களிலும்
நடக்கும்.[g] **27** நோவா பேழைக்குள்* நுழைந்த[h] நாள்வரை மக்கள் சாப்
பிட்டுக்கொண்டும் குடித்துக்கொண்டும் பெண் எடுத்துக்கொண்டும் பெண்
கொடுத்துக்கொண்டும் இருந்தார்கள்; பெருவெள்ளம் வந்து அவர்கள் எல்
லாரையும் அழித்துப்போட்டது.[i] **28** லோத்துவின் நாட்களில்[j] நடந்தது
போலவும் நடக்கும்; மக்கள் சாப்பிட்டுக்கொண்டும் குடித்துக்கொண்டும்
வாங்கிக்கொண்டும் விற்றுக்கொண்டும் நட்டுக்கொண்டும் கட்டிக்கொண்
டும் இருந்தார்கள். **29** ஆனால், சோதோம் நகரத்தைவிட்டு லோத்து
வெளியே போன நாளில் வானத்திலிருந்து நெருப்பும் கந்தகமும் பெய்து
அவர்கள் எல்லாரையும் அழித்துப்போட்டது.[k] **30** மனிதகுமாரன் வெளிப்
படும் நாளிலும் அப்படியே நடக்கும்.[l]

31 அந்த நாளில், வீட்டு மாடியில் இருப்பவர் தன் வீட்டில்
இருக்கிற பொருள்களை எடுப்பதற்காகக் கீழே இறங்கி வர வேண்டாம்.
வயலில் இருப்பவர் தான் விட்டுவந்த பொருள்களை எடுப்பதற்காகத் திரும்
பிப் போக வேண்டாம். **32** லோத்துவின் மனைவியை நினைத்துப் பாருங்
கள்.[m] **33** தன்னுடைய உயிரைப் பாதுகாக்க முயற்சி செய்கிறவன் அதை
இழந்துபோவான். ஆனால், தன் உயிரை இழப்பவன் அதைப் பாதுகாத்துக்
கொள்வான்.[n] **34** நான் உங்களுக்குச் சொல்கிறேன், அந்த இரவில் ஒரே
படுக்கையில் இரண்டு பேர் படுத்திருப்பார்கள்; அவர்களில் ஒருவன்
அழைத்துக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்.[o] **35** ஒரே
கல்லில்* இரண்டு பெண்கள் மாவு அரைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருத்தி
அழைத்துக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள்” என்று சொன்
னார். **36** *— **37** அப்போது அவர்கள், “எங்கே, எஜமானே?” என்று
அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர், “பிணம் எங்கேயோ அங்கே கழு
குகளும் வந்து கூடும்”[p] என்று சொன்னார்.

18 அதன் பின்பு, மனம் தளராமல் எப்போதும் ஜெபம் செய்வது எவ்
வளவு முக்கியம்[q] என்பதைக் காட்ட அவர் ஓர் உவமையை
அவர்களுக்குச் சொன்னார்; **2** “ஒரு நகரத்தில் நீதிபதி ஒருவர் இருந்

17:27 *இது கப்பலைப் போல் பெரிதாக இருந்தது, ஆனால் நீளமான ஒரு பெட்டி போல் இருந்தது. **17:35** *வே.வா., “திரிகைக் கல்லில்.” **17:36** *இணைப்பு A3-ஐப் பாருங்கள்.

அதி. 17
a மத் 12:28, மத் 21:5
b மத் 24:23, மாற் 13:21, லூ 21:8, 1யோ 4:1
c தானி 7:13
d மத் 24:27
e மாற் 8:31, மாற் 9:31, லூ 9:22
f ஆதி 6:5
g மத் 24:37-39
h ஆதி 7:7
i ஆதி 7:17, 21
j ஆதி 19:15
k ஆதி 19: 24, 25
l 1கொ 1:7, 2தெ 1:7, 8
m ஆதி 19: 17, 26
n மத் 10:39, மத் 16:25, மாற் 8:35, லூ 9:24, யோவா 12:25
o மத் 24:40, 41
p மத் 24:28

அதி. 18
q ரோ 12:12, எபே 6:18, பிலி 4:6, கொலோ 4:2, 1தெ 5:17

அதி. 18
a லூ 11:7, 8
b 2பே 3:9
c வெளி 6:9, 10
d மத் 23:23
e சங் 51:1-3
f ஏசா 66:2
மத் 21:28-31
g ஏசா 2:11
மத் 23:12
யாக் 4:6
1பே 5:5
h மத் 19:13-15
மாற் 10:13-16
i 1பே 2:2
j மத் 18:3
மாற் 10:15
k மத் 19:16-22
மாற் 10:17-22
லூ 10:25-28

தார்; அவர் கடவுளுக்குப் பயப்படாதவர், மனுஷர்களையும் மதிக்காதவர்.
3 அந்த நகரத்தில் ஒரு விதவையும் இருந்தாள். அவள் ஓயாமல் அவரிடம்
போய், 'எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற வழக்கில் எனக்கு நியாயம்
வழங்குங்கள்' என்று கேட்டுக்கொண்டே இருந்தாள். **4** அவரோ பல நாட்
களாக அவளுக்கு உதவி செய்ய விரும்பவில்லை. அதன் பின்பு அவர்,
'நான் கடவுளுக்கும் பயப்படுவதில்லை, எந்த மனுஷரையும் மதிப்பதில்லை.
5 இருந்தாலும், இந்த விதவை ஓயாமல் என்னை நச்சரிப்பதால், எப்படியா
வது இவளுக்கு நியாயம் வழங்கிவிட வேண்டும். அப்போதுதான் இவள்
திரும்பத் திரும்ப வந்து என் உயிரை வாங்க மாட்டாள்'[a] என்று தனக்குள்
சொல்லிக்கொண்டார்" என்றார். **6** பின்பு இயேசு, "அந்த நீதிபதி அநீதி
யுள்ளவராக இருந்தும் என்ன சொன்னாரென்று கவனித்தீர்களா? **7** அப்ப
டியிருக்கும்போது, கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவரை நோக்கி
இரவும் பகலும் கூப்பிடும்போது, அவர் அவர்களிடம் பொறுமையோடு
இருந்து,[b] அவர்களுக்கு நியாயம் வழங்காமல் இருப்பாரா?[c] **8** நான் உங்
களுக்குச் சொல்கிறேன், சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயம் வழங்குவார்.
இருந்தாலும், மனிதகுமாரன் வரும்போது பூமியில் உண்மையிலேயே இப்
படிப்பட்ட விசுவாசத்தைப் பார்ப்பாரா?" என்று கேட்டார்.

9 தங்களை நீதிமான்கள் என்று நினைத்துக்கொண்டு மற்றவர்களைத்
துளியும் மதிக்காத சிலருக்காக இந்த உவமையையும் அவர் சொன்னார்:
10 "ஜெபம் செய்வதற்காக இரண்டு பேர் ஆலயத்துக்குப் போனார்கள். ஒரு
வன் பரிசேயன், இன்னொருவன் வரி வசூலிப்பவன். **11** அந்தப் பரிசே
யன் நின்றுகொண்டு, 'கடவுளே, கொள்ளையடிப்பவர்களையும் அநீதியாக
நடக்கிறவர்களையும் மணத்துணைக்குத் துரோகம் செய்கிறவர்களையும்
போல நான் இல்லை, வரி வசூலிக்கிற இவனைப் போலவும் நான் இல்லை.
இதற்காக நான் உங்களுக்கு நன்றி சொல்கிறேன். **12** நான் வாரத்தில்
இரண்டு தடவை விரதம் இருக்கிறேன், எனக்குக் கிடைக்கிற எல்லாவற்றிலும்
பத்திலொரு பாகத்தைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன்'[d] என்று மனதுக்
குள் ஜெபம் செய்தான். **13** தூரத்தில் நின்றுகொண்டிருந்த வரி வசூலிப்ப
வனோ, வானத்தைப் பார்ப்பதற்குக்கூட துணியாமல், தன் நெஞ்சில் அடித்
துக்கொண்டு, 'கடவுளே, இந்தப் பாவிக்குக் கருணை காட்டுங்கள்'[e] என்று
ஜெபம் செய்தான். **14** நான் உங்களுக்குச் சொல்கிறேன், அந்தப் பரிசேய
னைவிட இவனே அதிக நீதியுள்ளவனாகத் தன் வீட்டுக்குத் திரும்பிப்
போனான்.[f] ஏனென்றால், தன்னைத்தானே உயர்த்துகிறவன் தாழ்த்தப்படு
வான்; தன்னைத்தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்."[g]

15 கைக்குழந்தைகளை அவர் தொடுவதற்காக மக்கள் அவர்களைக்
கொண்டுவந்தார்கள். இதைப் பார்த்தபோது, சீஷர்கள் அவர்களைத் திட்ட
ஆரம்பித்தார்கள்.[h] **16** ஆனால், இயேசு அந்தக் குழந்தைகளைத் தன்னி
டம் கொடுக்கச் சொன்னார். பின்பு, "சின்னப் பிள்ளைகளை என்னிடம் வர
விடுங்கள், அவர்களைத் தடுக்காதீர்கள், இப்படிப்பட்டவர்களுக்கே கடவு
ளுடைய அரசாங்கம் சொந்தமாகும்.[i] **17** உண்மையாகவே உங்களுக்குச்
சொல்கிறேன், ஒரு சின்னப் பிள்ளையைப் போலிருந்து கடவுளுடைய அர
சாங்கத்தை ஏற்றுக்கொள்ளாத எவனும் அதில் அனுமதிக்கப்படவே மாட்
டான்"[j] என்று சொன்னார்.

18 அப்போது, யூதத் தலைவர்களில் ஒருவன் அவரிடம், "நல்ல போத
கரே, முடிவில்லாத வாழ்வைப் பெற நான் என்ன செய்ய வேண்டும்?"[k]

என்று கேட்டான். **19** அதற்கு இயேசு அவனிடம், “என்னை ஏன் நல்ல
வன் என்று சொல்கிறாய்? கடவுள் ஒருவரைத் தவிர வேறு யாரும் நல்லவர்
கிடையாது.[a] **20** ‘மணத்துணைக்குத் துரோகம் செய்யாதே,[b] கொலை செய்
யாதே,[c] திருடாதே,[d] பொய் சாட்சி சொல்லாதே,[e] அப்பாவுக்கும் அம்மா
வுக்கும் மதிப்புக் கொடு’[f] என்ற கட்டளைகளெல்லாம் உனக்குத் தெரியுமே”
என்று சொன்னார். **21** அதற்கு அவன், “இவை எல்லாவற்றையும் சிறு
வயதிலிருந்தே கடைப்பிடித்து வருகிறேன்” என்று சொன்னான். **22** இயேசு
இதைக் கேட்டபோது, “நீ செய்ய வேண்டிய இன்னொரு காரியமும் இருக்
கிறது: நீ போய் உன்னிடம் இருப்பதையெல்லாம் விற்று ஏழைகளுக்குக்
கொடுத்துவிட்டு, என்னைப் பின்பற்றி வா. அப்போது, பரலோகத்தில் உனக்
குப் பொக்கிஷம் சேரும்”[g] என்று சொன்னார். **23** அவன் பெரிய பணக்கா
ரனாக இருந்ததால், இதைக் கேட்டு மிகவும் துக்கப்பட்டான்.[h]

24 பின்பு இயேசு அவனைப் பார்த்து, “பணக்காரர்கள் கடவுளுடைய
அரசாங்கத்துக்குள் போவது எவ்வளவு கஷ்டம்![i] **25** சொல்லப்போனால்,
கடவுளுடைய அரசாங்கத்துக்குள் ஒரு பணக்காரன் நுழைவதைவிட ஊசி
யின் காதுக்குள் ஒரு ஒட்டகம் நுழைவது சுலபம்”[j] என்றார். **26** இதைக்
கேட்டவர்கள், “அப்படியானால், யாரால் மீட்புப் பெற முடியும்?”[k] என்று
கேட்டார்கள். **27** அதற்கு அவர், “மனுஷர்களால் செய்ய முடியாத காரியங்
களைக் கடவுளால் செய்ய முடியும்”[l] என்று சொன்னார். **28** பேதுருவோ
அவரிடம், “இதோ! எங்களுக்குச் சொந்தமானதையெல்லாம் விட்டுவிட்டு
உங்களைப் பின்பற்றி வந்திருக்கிறோமே”[m] என்று சொன்னார். **29** அதற்கு
அவர், “உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், கடவுளுடைய அர
சாங்கத்துக்காக வீட்டையோ மனைவியையோ சகோதரர்களையோ பெற்
றோரையோ பிள்ளைகளையோ தியாகம் செய்கிறவன்[n] **30** இந்தக் காலத்
தில் பல மடங்கு அதிகமாகப் பெறுவான். வரப்போகும் காலத்தில்*
முடிவில்லாத வாழ்வையும் நிச்சயம் பெறுவான்”[o] என்று சொன்னார்.

31 பின்பு, பன்னிரண்டு பேரையும்* தனியாகக் கூப்பிட்டு, “நாம்
இப்போது எருசலேமுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம்; மனிதகுமாரனைப்
பற்றித் தீர்க்கதரிசிகள் மூலம் எழுதப்பட்ட எல்லா விஷயங்களும் நிறைவே
றும்.[p] **32** உதாரணமாக, மற்ற தேசத்தாரிடம் அவர் ஒப்படைக்கப்படுவார்.[q]
அவர்கள் அவரைக் கேலி செய்து,[r] அவமதித்து, அவர்மேல் துப்புவார்
கள்.[s] **33** அவரை முள்சாட்டையால் அடித்து, பின்பு கொலை செய்வார்
கள்.[t] ஆனால், மூன்றாம் நாளில் அவர் உயிரோடு எழுப்பப்படுவார்”[u] என்று
சொன்னார். **34** இருந்தாலும், இவற்றில் எதையுமே அவர்கள் புரிந்துகொள்
ளவில்லை. அவர் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் அவர்களுக்கு மறைக்
கப்பட்டிருந்ததால் அவர்கள் அவற்றைப் புரிந்துகொள்ளவில்லை.

35 இயேசு எரிகோவை நெருங்கியபோது, பார்வையில்லாத ஒருவன்
பாதையோரமாக உட்கார்ந்து பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான்.[v] **36** மக்
கள் கூட்டமாகப் போகிற சத்தத்தைக் கேட்டு, என்ன நடக்கிறதென்று
விசாரிக்க ஆரம்பித்தான். **37** அதற்கு அவர்கள், “நாசரேத்தூர் இயேசு
போய்க்கொண்டிருக்கிறார்!” என்று சொன்னார்கள். **38** அப்போது அவன்
சத்தமாக, “இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரக்கம் காட்டுங்கள்!”

18:30 *வே.வா., “சகாப்தத்தில்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **18:31** *அதாவது, “அப்போஸ்தலர்களையும்.”

அதி. 18
a மத் 19:17, மாற் 10:18
b யாத் 20:14, உபா 5:18
c யாத் 20:13, உபா 5:17
d யாத் 20:15, உபா 5:19
e யாத் 20:16, உபா 5:20
f யாத் 20:12, உபா 5:16, ரோ 13:9, எபே 6:2
g மத் 6:20, மத் 19:21, மாற் 10:21, லூ 12:33, 1தீ 6:18, 19
h மத் 19:22, மாற் 10:22
i நீதி 11:28, மத் 19:23, மாற் 10:23, 24, 1தீ 6:9
j மத் 19:24, மாற் 10:25
k மத் 19:25
l மத் 19:26, மாற் 10:27
m மத் 19:27
n மத் 19:28, 29, மாற் 10:29, 30
o வெளி 2:10
p மத் 16:21, மத் 20:17-19, மாற் 10:32-34
q மத் 27:2, அப் 3:13
r சங் 22:7
s ஏசா 50:6
t ஏசா 53:5, 7
u மாற் 10:33, 34, லூ 9:22
v மத் 20:29-34, மாற் 10:46-52

என்று சொன்னான். **39** முன்னால் போய்க்கொண்டிருந்தவர்கள் அவ
னைப் பேசாமல் இருக்கச் சொல்லி அதட்டினார்கள். ஆனாலும் அவன்,
“தாவீதின் மகனே, எனக்கு இரக்கம் காட்டுங்கள்!” என்று இன்னும் சத்தமா
கக் கத்திக்கொண்டே இருந்தான். **40** அப்போது இயேசு நின்று, அவ
னைக் கூட்டிக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அவன் பக்கத்தில் வந்
தவுடன், **41** “உனக்காக நான் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார்.
அதற்கு அவன், “எஜமானே, தயவுசெய்து எனக்குப் பார்வை கொடுங்கள்”
என்று சொன்னான். **42** அதற்கு இயேசு, “உனக்குப் பார்வை கிடைக்கட்
டும்; உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியிருக்கிறது”[a] என்று சொன்னார்.
43 அந்த நொடியே அவன் பார்வை பெற்று, கடவுளை மகிமைப்படுத்திக்
கொண்டே அவரைப் பின்பற்றிப் போனான்.[b] அதைப் பார்த்து, மக்கள் எல்
லாரும் கடவுளைப் புகழ்ந்தார்கள்.[c]

19 பின்பு அவர் எரிகோவுக்கு வந்து, அந்த ஊர் வழியாக நடந்து
போய்க்கொண்டிருந்தார். **2** அங்கே சகேயு என்ற ஒரு பணக்
காரன் இருந்தான். அவன் வரி வசூலிப்பவர்களின் தலைவன். **3** இயேசு
யாரென்று பார்க்க அவன் ஆசைப்பட்டான். ஆனால், அவன் குள்ளமாக
இருந்ததால் அந்தக் கூட்டத்தில் அவரைப் பார்க்க முடியவில்லை. **4** அத
னால் அவர் போய்க்கொண்டிருந்த வழியில், முன்னால் ஓடிப்போய், அவ
ரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டத்தி மரத்தின் மேல் ஏறினான். **5** இயேசு
அந்த இடத்துக்கு வந்தபோது அண்ணாந்து பார்த்து, “சகேயு, சீக்கிரம்
இறங்கி வா; நான் இன்றைக்கு உன் வீட்டில் தங்க வேண்டும்” என்று சொன்
னார். **6** அப்போது அவன் சீக்கிரமாக இறங்கி வந்து, சந்தோஷத்தோடு
அவரைத் தன் விருந்தாளியாக அழைத்துக்கொண்டு போனான். **7** அவ
னுடைய வீட்டுக்குள் அவர் போவதைப் பார்த்த எல்லாரும், “ஒரு பாவி
யின் வீட்டுக்கு விருந்தாளியாகப் போகிறாரே” என்று முணுமுணுக்க ஆரம்
பித்தார்கள்.[d] **8** ஆனால் சகேயு எழுந்து நின்று, “எஜமானே, இதோ! என்
சொத்தில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன்; மற்றவர்களிடமி
ருந்து அபகரித்ததையெல்லாம்* நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து
விடுகிறேன்”[e] என்று சொன்னான். **9** அப்போது இயேசு அவனிடம்,
“இன்று இந்த வீட்டுக்கு மீட்பு வந்திருக்கிறது; ஏனென்றால், இவனும் ஆபி
ரகாமின் மகன்தான். **10** வழிதவறிப்போனவர்களைத் தேடுவதற்கும் மீட்ப
தற்குமே மனிதகுமாரன் வந்தார்”[f] என்று சொன்னார்.

11 அவர் பேசியதையெல்லாம் சீஷர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.
அவர் எருசலேமுக்குப் பக்கத்தில் இருந்ததாலும், கடவுளுடைய அர
சாங்கம் உடனடியாக வருமென்று அவர்கள் நினைத்ததாலும்,[g] இந்த உவ
மையை அவர்களுக்குச் சொன்னார்: **12** “அரச குடும்பத்தைச் சேர்ந்த
ஒருவர் ராஜ அதிகாரத்தைப் பெற்றுவர தூர தேசத்துக்குப் புறப்பட்டார்.[h]
13 அப்போது, தன்னுடைய பத்து அடிமைகளைக் கூப்பிட்டு ஆளுக்
கொரு மினாவை* கொடுத்து, ‘நான் வரும்வரை இவற்றை வைத்து
வியாபாரம் செய்யுங்கள்’[i] என்று சொன்னார். **14** அவருடைய குடிமக்கள்
அவரை வெறுத்தார்கள். அதனால், ‘இவன் எங்களுக்கு ராஜாவாக ஆவதில்

19:8 *வே.வா., “பொய்க் குற்றம்சாட்டி அபகரித்ததையெல்லாம்.” **19:13** *ஒரு கிரேக்க மினாவின் எடை 340 கிராம். இது 100 திராக்மாவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 18
a லூ 7:50
லூ 17:19
b மத் 20:34
c லூ 5:26

அதி. 19
d மத் 9:11
லூ 5:30
லூ 15:2
e யாத் 22:1
லேவி 6:4, 5
f எசே 34:16
மத் 9:13
மத் 15:24
லூ 15:4
ரோ 5:8
1தீ 1:15
g அப் 1:6
h மத் 25:14
மாற் 13:34
யோவா 18:36
i மத் 25:15

எங்களுக்கு விருப்பமே இல்லை' என்று சொல்லும்படி தூதுவர் குழுவை
அவருக்குப் பின்னால் அனுப்பினார்கள்.
15 கடைசியில், அவர் ராஜ அதிகாரத்தை* பெற்றுக்கொண்டு திரும்பி
வந்தபோது, தான் பணம்# கொடுத்திருந்த அடிமைகளை வரச் சொன்னார்.
ஏனென்றால், அவர்கள் வியாபாரம் செய்து எவ்வளவு சம்பாதித்திருக்கி
றார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்பினார்.[a] **16** அப்போது முதலாம்
அடிமை வந்து, 'எஜமானே, நீங்கள் கொடுத்த மினாவை வைத்து இன்
னும் பத்து மினாவைச் சம்பாதித்தேன்'[b] என்று சொன்னான். **17** அதற்கு
அவர், 'சபாஷ்! நல்ல அடிமையே, மிகச் சிறிய காரியத்தில் உண்மையுள்ளவ
னாக இருந்தாய், அதனால் பத்து நகரங்களுக்கு நீ அதிகாரியாக இரு'[c] என்று
சொன்னார். **18** அடுத்து, இரண்டாம் அடிமை வந்து, 'எஜமானே, நீங்கள்
கொடுத்த மினாவை வைத்து இன்னும் ஐந்து மினாவைச் சம்பாதித்தேன்'[d]
என்று சொன்னான். **19** அவனிடமும் எஜமான், 'நீயும்கூட ஐந்து நகரங்க
ளுக்கு அதிகாரியாக இரு' என்று சொன்னார். **20** ஆனால் வேறொரு
வன் வந்து, 'எஜமானே, இதோ! நீங்கள் கொடுத்த மினா. இதை நான்
ஒரு துணியில் சுற்றி வைத்திருந்தேன். **21** உங்களுக்குப் பயந்து அப்படிச்
செய்தேன்; ஏனென்றால், நீங்கள் ரொம்பக் கறாரானவர், மற்றவர்கள் சேமித்
ததை எடுக்கிறவர், மற்றவர்கள் விதைத்ததை அறுக்கிறவர்'[e] என்று சொன்
னான். **22** அதற்கு அவர், 'பொல்லாத அடிமையே, உன்னுடைய வார்த்தை
களை வைத்தே உன்னை நியாயந்தீர்ப்பேன்; நான் ரொம்பக் கறாரானவன்,
மற்றவர்கள் சேமித்ததை எடுக்கிறவன், மற்றவர்கள் விதைத்ததை அறுக்கிற
வன் என்றெல்லாம் உனக்குத் தெரிந்திருந்ததுதானே?[f] **23** அப்படியானால்,
என் பணத்தை# நீ ஏன் வட்டிக் கடையில் கொடுத்து வைக்கவில்லை? நான்
வந்ததும் அதை வட்டியோடு வாங்கியிருப்பேனே' என்று சொன்னார்.
24 அப்படிச் சொல்லிவிட்டு, பக்கத்தில் நின்றவர்களிடம், 'அவனிடமி
ருந்து அந்த மினாவை எடுத்து, பத்து மினா வைத்திருப்பவனிடம் கொடுங்
கள்'[g] என்று சொன்னார். **25** ஆனால் அவர்கள், 'எஜமானே, அவனிடம்
ஏற்கெனவே பத்து மினா இருக்கிறது!' என்று சொன்னார்கள். **26** அதற்கு
அவர், 'நான் உங்களுக்குச் சொல்கிறேன், இருக்கிறவனுக்கு அதிகமாகக்
கொடுக்கப்படும்; ஆனால், இல்லாதவனிடமிருந்து இருப்பதும் எடுத்துக்
கொள்ளப்படும்.[h] **27** நான் ராஜாவாக ஆவதை விரும்பாத என் எதிரி
களை இங்கே கொண்டுவந்து என் முன்னால் கொன்றுபோடுங்கள்' என்று
சொன்னார்."
28 இயேசு இவற்றைச் சொன்ன பின்பு, எருசலேமை நோக்கி அவர்
களுக்கு முன்னால் நடந்து போய்க்கொண்டிருந்தார். **29** ஒலிவ மலை
என்று அழைக்கப்பட்ட மலையிலுள்ள[i] பெத்பகே, பெத்தானியா கிராமங்க
ளுக்குப் பக்கத்தில் வந்தபோது அவர் தன்னுடைய சீஷர்கள் இரண்டு
பேரை அனுப்பி,[j] **30** "அதோ! அங்கே தெரிகிற அந்தக் கிராமத்துக்
குப் போங்கள்; அங்கே போனவுடன், இதுவரை யாரும் ஏறாத கழுதைக்
குட்டி ஒன்று கட்டி வைக்கப்பட்டிருப்பதைப் பார்ப்பீர்கள். அதை அவிழ்த்து
இங்கே கொண்டுவாருங்கள். **31** 'இதை ஏன் அவிழ்க்கிறீர்கள்?' என்று
யாராவது உங்களிடம் கேட்டால், 'எஜமானுக்கு வேண்டும்' என்று
சொல்லுங்கள்" என்றார். **32** அவர்கள் புறப்பட்டுப் போய், அவர் சொல்

19:15 * வே.வா., "ராஜ்யத்தை." **19:15, 23** # நே.மொ., "வெள்ளியை."

அதி. 19
a மத் 25:19
b மத் 25:20, 21
c லூ 16:10
d மத் 25:22, 23
e மத் 25:24
f மத் 25:26, 27
g மத் 25:28
h மத் 13:12; மத் 25:29; மாற் 4:25; லூ 8:18
i அப் 1:12
j மத் 21:1-3; மாற் 11:1-6

லியிருந்தபடியே ஒரு கழுதைக்குட்டியைப் பார்த்தார்கள்.[a] **33** அவர்கள்
அதை அவிழ்த்துக்கொண்டிருந்தபோது, “கழுதைக்குட்டியை ஏன் அவிழ்க்
கிறீர்கள்?” என்று அதன் உரிமையாளர்கள் கேட்டார்கள். **34** அதற்கு
அவர்கள், “எஜமானுக்கு வேண்டும்” என்று சொன்னார்கள்; **35** பின்பு
அதை இயேசுவிடம் கொண்டுவந்து, அதன்மேல் தங்கள் மேலங்கிகளைப்
போட்டு, இயேசுவை அதன்மேல் உட்கார வைத்தார்கள்.[b]

36 அவர் போகும்போது, மக்கள் தங்களுடைய மேலங்கிகளை வழியில்
விரித்தார்கள்.[c] **37** ஒலிவ மலையிலிருந்து கீழ்நோக்கிப் போகும் பாதைக்
குப் பக்கத்தில் அவர் வந்தவுடன், திரளான சீஷர்கள் எல்லாரும் தாங்
கள் பார்த்த அற்புதங்கள் எல்லாவற்றையும் குறித்து சந்தோஷப்பட்டு,
38 “யெகோவாவின்* பெயரில் ராஜாவாக வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்ட
வர்! பரலோகத்தில் சமாதானம்! பரலோகத்தில் இருக்கிறவருக்கு மகிமை!”[d]
என்று உரத்த குரலில் கடவுளைப் புகழ ஆரம்பித்தார்கள். **39** ஆனால்
கூட்டத்திலிருந்த பரிசேயர்களில் சிலர், “போதகரே, உங்களுடைய சீஷர்
களை அதட்டுங்கள்”[e] என்று அவரிடம் சொன்னார்கள். **40** ஆனால்
அவர், “நான் உங்களுக்குச் சொல்கிறேன், இவர்கள் அமைதியாக இருந்
தால் இந்தக் கற்களே சத்தமிடும்” என்று சொன்னார்.

41 எருசலேம் நகரத்துக்குப் பக்கத்தில் அவர் வந்தபோது, அதைப்
பார்த்து அழுது,[f] **42** “சமாதானத்துக்கு வழிநடத்துகிற காரியங்களை நீ
இன்றைக்காவது பகுத்தறிந்திருக்கக் கூடாதா? இப்போது அவை உன்
கண்களிலிருந்து மறைக்கப்பட்டிருக்கின்றன.[g] **43** நீ நியாயந்தீர்க்கப்படும்*
காலத்தைப் பகுத்தறியாததால் உன் எதிரிகள் உன்னைச் சுற்றிலும் கூர்முனை
கொண்ட கம்பங்களால் அரண் எழுப்பி, உன்னை வளைத்துக்கொண்டு,
எல்லா பக்கங்களிலிருந்தும் உன்னை நெருக்கி,[h] **44** உன்னையும் உன் பிள்
ளைகளையும் அடித்து நொறுக்கி,[i] ஒரு கல்லின் மேல் ஒரு கல் இல்லாதபடி
உன்னைத் தரைமட்டமாக்கப்போகும்[j] நாட்கள் வரும்” என்று சொன்னார்.

45 பின்பு அவர் ஆலயத்துக்குள் போய், அங்கே விற்பனை
செய்துகொண்டிருந்தவர்களிடம், **46** “‘என் வீடு ஜெப வீடாக இருக்கும்’[k]
என எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் அதைக் கொள்ளைக்காரர்க
ளின் குகையாக்கிவிட்டீர்கள்”[l] என்று சொல்லி அவர்களை வெளியே துரத்த
ஆரம்பித்தார்.[m]

47 அவர் தினமும் ஆலயத்தில் கற்பித்துவந்தார். ஆனால்,
முதன்மை குருமார்களும் வேத அறிஞர்களும் முக்கியப் பிரமுகர்களும்
அவரைக் கொல்வதற்கு வழிதேடினார்கள்.[n] **48** இருந்தாலும், மக்கள் எல்
லாரும் அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டு அவரிடமே ஒட்டிக்கொண்டி
ருந்ததால்,[o] அவரைக் கொன்றுபோட அவர்களுக்கு எந்த வழியும் கிடைக்
கவில்லை.

20 ஒருநாள் அவர், ஆலயத்தில் மக்களுக்குக் கற்பித்துக்கொண்டும்
நல்ல செய்தியை அறிவித்துக்கொண்டும் இருந்தார். அப்போது,
முதன்மை குருமார்களும் வேத அறிஞர்களும் பெரியோர்களும்* அவர்
பக்கத்தில் வந்து, **2** “எந்த அதிகாரத்தால் நீ இதையெல்லாம் செய்கிறாய்?
உனக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்?”[p] என்று கேட்டார்கள்.

19:38 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **19:43** *நே.மொ., “சோதனையிடப்படும்.”
20:1 *வே.வா., “மூப்பர்களும்.”

அதி. 19
a மத் 21:6, 7
b சக 9:9; மாற் 11:7-10; யோவா 12:14, 15
c மத் 21:8
d சங் 118:26; மத் 21:9; மாற் 11:9
e மத் 21:15; யோவா 12:19
f யோவா 11:35
g ஏசா 6:9, 10; மத் 13:14
h உபா 28:52; தானி 9:26; லூ 21:20
i லூ 23:28, 29
j மத் 24:2; மாற் 13:2; லூ 21:6
k ஏசா 56:7
l எரே 7:11; மத் 21:13; மாற் 11:17; யோவா 2:16
m மத் 21:12; மாற் 11:15, 16
n மாற் 11:18
o மாற் 12:37; லூ 21:38

அதி. 20
p மத் 21:23-27; மாற் 11:27-33

3 அதற்கு அவர், “நானும் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன், நீங்கள்
பதில் சொல்லுங்கள். **4** ஞானஸ்நானம் கொடுக்கிற அதிகாரத்தை யோவா
னுக்குக் கொடுத்தது கடவுளா* மனுஷர்களா?” என்று கேட்டார். **5** அப்
போது அவர்கள், “‘கடவுள்’* என்று சொன்னால், ‘பின்பு ஏன் அவரை நம்ப
வில்லை?’ என்று கேட்பான். **6** ‘மனுஷர்கள்’ என்று சொன்னால், ஜனங்கள்
எல்லாரும் நம்மைக் கல்லெறிந்து கொல்வார்கள். யோவானை ஒரு தீர்க்க
தரிசி என்று அவர்கள் நம்புகிறார்களே”[a] என்று தங்களுக்குள் பேசிக்
கொண்டு, **7** ‘அதைக் கொடுத்தது யாரென்று எங்களுக்குத் தெரியாது’
என்று சொன்னார்கள். **8** அதற்கு இயேசு, “அப்படியானால், எந்த அதிகா
ரத்தால் இதையெல்லாம் செய்கிறேன் என்று நானும் உங்களுக்குச் சொல்ல
மாட்டேன்” என்றார்.

9 பின்பு, மக்களிடம் ஒரு உவமையை அவர் சொல்ல ஆரம்பித்தார்;
“ஒருவர் திராட்சைத் தோட்டம் போட்டு,[b] அதைத் தோட்டக்காரர்களிடம்
குத்தகைக்கு விட்டுவிட்டு, பல காலமாகத் தூர தேசத்துக்குப் போயிருந்
தார்.[c] **10** அறுவடைக் காலம் வந்தபோது, தனக்குச் சேர வேண்டிய
பங்கை வாங்கி வரச் சொல்லி ஒரு அடிமையை அந்தத் தோட்டக்காரர்களி
டம் அனுப்பினார். ஆனால், அந்தத் தோட்டக்காரர்கள் அவனை அடித்து,
வெறுங்கையோடு அனுப்பிவிட்டார்கள்.[d] **11** மறுபடியும் அவர் வேறொரு
அடிமையை அவர்களிடம் அனுப்பினார். அவனையும் அவர்கள் அடித்து,
அவமானப்படுத்தி, வெறுங்கையோடு அனுப்பிவிட்டார்கள். **12** மறுபடி
யும் அவர் மூன்றாவது அடிமையை அனுப்பினார். அவனையும் அவர்கள்
காயப்படுத்தி, துரத்திவிட்டார்கள். **13** அப்போது அந்தத் தோட்டத்தின்
சொந்தக்காரர், ‘இப்போது என்ன செய்வது? என் அன்பு மகனை[e] அனுப்பு
வேன். ஒருவேளை அவனுக்கு மதிப்புக் கொடுப்பார்கள்’ என்று சொல்லிக்
கொண்டார். **14** அந்தத் தோட்டக்காரர்கள் அவருடைய மகனைப் பார்த்த
தும், ‘இவன்தான் வாரிசு. வாருங்கள், இவனைத் தீர்த்துக்கட்டிவிட்டு, இவ
னுடைய சொத்தை எடுத்துக்கொள்ளலாம்’ என்று ஒருவருக்கொருவர் சொல்
லிக்கொண்டார்கள். **15** அதன்படியே, அவனைத் திராட்சைத் தோட்டத்
துக்கு வெளியே தள்ளி கொலை செய்தார்கள்.[f] அப்படியானால், திராட்சைத்
தோட்டத்தின் சொந்தக்காரர் அந்தத் தோட்டக்காரர்களை என்ன செய்வார்?
16 அவர் வந்து அவர்களைக் கொன்றுபோட்டு, திராட்சைத் தோட்டத்தை
மற்றவர்களிடம் குத்தகைக்குக் கொடுத்துவிடுவார்” என்றார்.

மக்கள் இதைக் கேட்டபோது, “ஒருபோதும் அப்படி நடக்கக் கூடாது!”
என்று சொன்னார்கள். **17** ஆனால், இயேசு நேராக அவர்களைப் பார்த்து,
“‘கட்டிடம் கட்டுகிறவர்கள் ஒதுக்கித்தள்ளிய கல்லே மூலைக்குத் தலைக்கல்
லாக ஆனது’[g] என்று எழுதப்பட்ட வேதவசனத்தின் அர்த்தம் என்ன?
18 இந்தக் கல்லின் மேல் விழுகிற எவனும் சின்னாபின்னமாவான்.[h] இது
யார்மேல் விழுகிறதோ அவனை நசுக்கிப்போடும்” என்று சொன்னார்.

19 வேத அறிஞர்களும் முதன்மை குருமார்களும் இந்த உவமையைக்
கேட்டபோது, தங்களை மனதில் வைத்துதான் அதை அவர் சொன்னார்
என்று புரிந்துகொண்டார்கள். அதனால், அப்போதே அவரைப் பிடிக்கப்
பார்த்தார்கள். ஆனாலும், மக்களுக்குப் பயந்தார்கள்.[i] **20** அதனால் அவ
ரைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே இருந்தார்கள். பின்பு, ரகசியமாக ஆட்

20:4 * நே.மொ., “பரலோகமா.” **20:5** * நே.மொ., “பரலோகம்.”

அதி. 20
a லூ 7:29
b ஏசா 5:7
c மத் 21:33-41
மாற் 12:1-9
d 2ரா 17:13, 14
2நா 36:15, 16
அப் 7:52
எபி 11:36, 37
e மத் 17:5
யோவா 3:16
f அப் 3:15
g சங் 118:22
ஏசா 28:16
மத் 21:42, 44
மாற் 12:10, 11
அப் 4:11
1பே 2:7
h ஏசா 8:14, 15
i மத் 21:45, 46
மாற் 12:12

அதி. 20
a மத் 22:15-22
மாற் 12:13-17
b ரோ 13:7
தீத் 3:1
1பே 2:13
c மத் 22:21
மாற் 12:17
d அப் 23:8
e மத் 22:23-28
மாற் 12:18-23
f ஆதி 38:7, 8
உபா 25:5, 6
g மத் 22:29, 30
மாற் 12:24, 25
h யாத் 3:2, 6
மத் 22:31-33
மாற் 12:26, 27

களைக் கூலிக்கு அமர்த்தி அவரிடம் அனுப்பினார்கள். நீதிமான்களைப்
போல நடித்து, அவருடைய பேச்சிலேயே அவரைச் சிக்க வைத்து,[a] அர
சாங்கத்திடமும் ஆளுநரிடமும்* அவரை ஒப்படைப்பதற்காக அவர்களை
அனுப்பினார்கள். **21** அவர்கள் அவரிடம் வந்து, “போதகரே, நீங்கள் சரி
யாகப் பேசுகிறவர், சரியாகக் கற்பிக்கிறவர், பாரபட்சம் காட்டாதவர், கடவு
ளைப் பற்றிய சத்தியங்களைச் சொல்லிக்கொடுக்கிறவர் என்றெல்லாம் எங்
களுக்குத் தெரியும்” என்று சொல்லிவிட்டு, **22** “ரோம அரசனுக்கு* வரி#
கட்டுவது சரியா இல்லையா?” என்று கேட்டார்கள். **23** இயேசு அவர்களு
டைய தந்திரத்தைப் புரிந்துகொண்டு, **24** “ஒரு தினாரியுவை* என்னிடம்
காட்டுங்கள். இதில் இருக்கிற உருவமும் பட்டப்பெயரும் யாருடையது?”
என்று கேட்டார். அவர்கள், “ரோம அரசனுடையது” என்று சொன்னார்கள்.
25 அதற்கு அவர், “அப்படியானால், அரசனுடையதை அரசனுக்கும்[b] கட
வுளுடையதைக் கடவுளுக்கும் கொடுங்கள்”[c] என்று அவர்களிடம் சொன்
னார். **26** மக்கள்முன் அவரைப் பேச்சிலேயே சிக்க வைக்க அவர்களால்
முடியவில்லை. மாறாக, அவர் சொன்ன பதிலைக் கேட்டு ஆச்சரியப்
பட்டுப்போய் அமைதியாகிவிட்டார்கள்.

27 உயிர்த்தெழுதல் இல்லை என்று சொல்கிற சதுசேயர்களில்[d] சிலர்
அப்போது அவரிடம் வந்து,[e] **28** “போதகரே, ‘திருமணமான ஒருவன்
பிள்ளை இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய மனைவியை அவ
னுடைய சகோதரன் திருமணம் செய்துகொண்டு அவனுக்காக வாரிசு உரு
வாக்க வேண்டும்’ என மோசே எழுதி வைத்திருக்கிறார்.[f] **29** எங்களோடு
ஏழு சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவன் ஒரு பெண்ணைத் திருமணம்
செய்து, பிள்ளை இல்லாமல் இறந்துபோனான். **30** இரண்டாவது சகோதர
னும் மூன்றாவது சகோதரனும் அவளைத் திருமணம் செய்து, பின்பு இறந்து
போனார்கள். **31** அப்படியே ஏழு சகோதரர்களும் அவளைத் திருமணம்
செய்து பிள்ளை இல்லாமல் இறந்துபோனார்கள். **32** கடைசியில் அந்
தப் பெண்ணும் இறந்துபோனாள். **33** அவர்கள் உயிரோடு எழுப்பப்படும்
போது, அவர்களில் யாருக்கு அவள் மனைவியாக இருப்பாள்? அந்த ஏழு
பேருக்கும் அவள் மனைவியாக இருந்தாளே” என்றார்கள்.

34 அதற்கு இயேசு, “இந்தக் காலத்தில்* மக்கள் பெண் எடுக்கிறார்கள்,
பெண் கொடுக்கிறார்கள். **35** ஆனால், வரப்போகும் காலத்தில்* வாழ்வு
பெறுவதற்கும் உயிரோடு எழுப்பப்படுவதற்கும் தகுதியானவர்களாகக் கரு
தப்படுகிறவர்கள் பெண் எடுப்பதும் இல்லை, பெண் கொடுப்பதும் இல்லை.[g]
36 சொல்லப்போனால், இனி அவர்களால் சாக முடியாது, அவர்கள் தேவதூ
தர்களைப் போல் இருப்பார்கள்; அவர்கள் உயிரோடு எழுப்பப்படுவார்கள்*
என்பதால் கடவுளுடைய பிள்ளைகளாக இருப்பார்கள். **37** இறந்தவர்கள்
உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்பதை மோசேயும்கூட முட்புதரைப்
பற்றிய தன் பதிவில் சொல்லியிருக்கிறார். அதில், யெகோவாவை* ‘ஆபி
ரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்’[h] என்று அவர்
அழைத்திருக்கிறார். **38** கடவுளைப் பொறுத்தவரை, இவர்கள் எல்லாரும்

20:20 *நே.மொ., “ஆளுநருடைய அதிகாரத்திடமும்.” **20:22** *நே.மொ., “சீஸ
ருக்கு.” சொல் பட்டியலைப் பாருங்கள். #நே.மொ., “தலைவரி.” **20:24** *இணைப்பு
B14-ஐப் பாருங்கள். **20:34, 35** *நே.மொ., “சகாப்தத்தில்.” சொல் பட்டியலைப்
பாருங்கள். **20:36** *நே.மொ., “உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக இருப்பார்கள்.”
20:37 *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

உயிருள்ளவர்களாகவே இருக்கிறார்கள். அதனால் அவர் இறந்தவர்களின்
கடவுளாக அல்ல, உயிருள்ளவர்களின் கடவுளாக இருக்கிறார்"[a] என்று
சொன்னார். **39** வேத அறிஞர்களில் சிலர் அதைக் கேட்டு, "போதகரே, சரி
யாகச் சொன்னீர்கள்" என்றார்கள். **40** அதன் பிறகு அவரிடம் எந்தக் கேள்
வியையும் கேட்க அவர்களுக்குத் தைரியம் வரவில்லை.

41 பின்பு இயேசு அவர்களிடம், "கிறிஸ்துவை தாவீதின் மகன் என்று
எப்படிச் சொல்கிறார்கள்?[b] **42** தாவீதும், 'யெகோவா* என் எஜமானிடம்,
"நான் உன் எதிரிகளை உனக்குக் கால்மணையாக்கிப் போடும்வரை
43 என் வலது பக்கத்தில் உட்கார்ந்திரு" என்றார்'[c] எனச் சங்கீத புத்தகத்
தில் சொல்லியிருக்கிறார். **44** அதனால், தாவீதே அவரை எஜமான் என்று
அழைத்திருப்பதால் அவர் எப்படி இவருடைய மகனாக இருக்க முடியும்?"
என்று கேட்டார்.

45 மக்கள் எல்லாரும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தபோது அவர்
தன்னுடைய சீஷர்களிடம், **46** "வேத அறிஞர்களைக் குறித்து எச்சரிக்
கையாக இருங்கள். அவர்கள் நீளமான அங்கிகளைப் போட்டுக்கொண்டு
திரிய விரும்புகிறார்கள், சந்தைகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் சொல்ல
வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஜெபக்கூடங்களில் முன்வரிசை* இருக்
கைகளிலும் விருந்துகளில் மிக முக்கியமான இடங்களிலும் உட்கார
விரும்புகிறார்கள்.[d] **47** விதவைகளுடைய சொத்துகளை* விழுங்கிவிடுகி
றார்கள். மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக நீண்ட ஜெபம் செய்
கிறார்கள். அதனால், அவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்"
என்று சொன்னார்.

21 அவர் ஏறெடுத்துப் பார்த்தபோது, காணிக்கைப் பெட்டிகளில் பணக்
காரர்கள் தங்களுடைய காணிக்கைகளைப் போடுவதைக் கவனித்
தார்.[e] **2** ஓர் ஏழை விதவை மிகக் குறைந்த மதிப்புள்ள இரண்டு
சிறிய காசுகளை* அதில் போடுவதையும் கவனித்தார்.[f] **3** அப்போது
அவர், "உண்மையிலேயே உங்களுக்குச் சொல்கிறேன், மற்ற எல்லாரையும்
விட இந்த ஏழை விதவைதான் அதிகமாகப் போட்டாள்.[g] **4** ஏனென்றால்,
அவர்கள் எல்லாரும் தங்களுடைய தேவைக்கு அதிகமாக இருந்ததைத்
தான் காணிக்கையாகப் போட்டார்கள். ஆனால் இவள் தனக்குத் தேவை
யிருந்தும், தன் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டு
விட்டாள்"[h] என்று சொன்னார்.

5 பின்பு, சிறந்த கற்களாலும் அர்ப்பணிக்கப்பட்ட பொருள்களாலும்
ஆலயம் அலங்கரிக்கப்பட்டிருந்ததைப்[i] பற்றிச் சிலர் பேசிக்கொண்டிருந்
தார்கள். **6** அப்போது அவர், "இவற்றையெல்லாம் பார்க்கிறீர்களே, ஒரு
கல்லின் மேல் ஒரு கல் இல்லாதபடி எல்லாமே தரைமட்டமாக்கப்படும் நாட்
கள் வரும்"[j] என்று சொன்னார். **7** அதற்கு அவர்கள், "போதகரே, இதெல்
லாம் எப்போது நடக்கும், இதெல்லாம் நடக்கப்போகிற காலத்துக்கு அடை
யாளம் என்ன?" என்று அவரிடம் கேட்டார்கள்.[k] **8** அப்போது அவர்,
"நீங்கள் ஏமாறாதபடி எச்சரிக்கையாக இருங்கள்.[l] ஏனென்றால், நிறைய
பேர் என் பெயரை வைத்துக்கொண்டு வந்து, 'நான்தான் கிறிஸ்து'* என்றும்,

---

20:42 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **20:46** *வே.வா., "மிகச் சிறந்த." **20:47** *நே.மொ., "வீடுகளை." **21:2** *நே.மொ., "இரண்டு லெப்டன் காசுகளை." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **21:8** *நே.மொ., "அவர்."

அதி. 20
a மத் 22:32
b மத் 22:41-46; மாற் 12:35-37
c சங் 110:1; அப் 2:34, 35
d மத் 23:2, 6, 7; மாற் 12:38-40

அதி. 21
e மாற் 12:41
f மாற் 12:42
g மாற் 12:43, 44; 2கொ 8:12
h மத் 22:37
i மத் 24:1, 2; மாற் 13:1, 2
j லூ 19:44
k மத் 24:3; மாற் 13:4
l 2தீ 3:13; 1யோ 4:1; வெளி 12:9

‘காலம் நெருங்கிவிட்டது’ என்றும் சொல்வார்கள். அவர்கள் பின்னால்
போகாதீர்கள்.[a] **9** போர்களைப் பற்றியும் கலவரங்களைப் பற்றியும் கேள்
விப்படும்போது திகிலடையாதீர்கள். இதெல்லாம் முதலில் நடக்க வேண்
டும், ஆனால் முடிவு உடனே வராது”[b] என்று சொன்னார்.

10 அதோடு அவர்களிடம், “ஜனத்துக்கு எதிராக ஜனமும்[c] நாட்டுக்கு
எதிராக நாடும்* சண்டை போடும்.[d] **11** பெரிய நிலநடுக்கங்கள் ஏற்படும்.
அடுத்தடுத்து பல இடங்களில் பஞ்சங்களும் கொள்ளைநோய்களும் உண்
டாகும்.[e] திகிலுண்டாக்கும் காட்சிகள் தெரியும், வானத்திலிருந்து* மாபெ
ரும் அடையாளங்கள் தோன்றும்.

12 ஆனால் இவையெல்லாம் நடப்பதற்கு முன்பு, என் பெயரை
முன்னிட்டு மக்கள் உங்களைப் பிடித்துத் துன்புறுத்தி,[f] ஜெபக்கூடங்களி
லும் சிறைச்சாலைகளிலும் ஒப்படைப்பார்கள். நீங்கள் ராஜாக்களுக்கும்
ஆளுநர்களுக்கும் முன்னால் நிறுத்தப்படுவீர்கள்.[g] **13** சாட்சி கொடுப்ப
தற்கான வாய்ப்பாக அது உங்களுக்கு அமையும். **14** அதனால், எப்படிப்
பதில் சொல்வதென்று முன்கூட்டியே உங்கள் உள்ளத்தில் ஒத்திகை
பார்க்க வேண்டாம்.[h] **15** உங்கள் எதிரிகள் எல்லாரும் திரண்டு வந்தாலும்
உங்களை எதிர்த்து நிற்கவோ எதிர்த்துப் பேசவோ முடியாதபடி நான்
உங்களுக்கு வார்த்தைகளையும் ஞானத்தையும் அருளுவேன்.[i] **16** பெற்
றோரும் சகோதரர்களும் சொந்தக்காரர்களும் நண்பர்களும்கூட உங்களை
அதிகாரிகளிடம் ஒப்படைப்பார்கள்.* உங்களில் சிலரைக் கொலையும் செய்
வார்கள்.[j] **17** நீங்கள் என் சீஷர்களாக இருப்பதால் எல்லா மக்களும் உங்
களை வெறுப்பார்கள்.[k] **18** இருந்தாலும், உங்கள் தலைமுடியில் ஒன்றுகூட
விழாது.[l] **19** சகித்திருப்பதன் மூலம் உங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்
வீர்கள்.[m]

20 ஆனால், எருசலேமைப் படைகள் சுற்றிவளைத்திருப்பதை[n] நீங்
கள் பார்க்கும்போது அதற்கு அழிவு நெருங்கிவிட்டதென்று தெரிந்து
கொள்ளுங்கள்.[o] **21** அப்போது, யூதேயாவில் இருப்பவர்கள் மலைகளுக்
குத் தப்பியோட வேண்டும்.[p] எருசலேமுக்குள் இருப்பவர்கள் அங்கிருந்து
வெளியேற வேண்டும். நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள் எருசலேமுக்
குள் நுழையாதிருக்க வேண்டும். **22** ஏனென்றால், முன்பு எழுதப்பட்ட
வையெல்லாம் நிறைவேறும்படி, அவை தண்டனை வழங்கும்* நாட்களாக
இருக்கும். **23** அந்த நாட்களில், கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்
களுக்கும் ஐயோ ஆபத்து![q] ஏனென்றால், தேசத்தின் மேல் கடும் துன்பமும்,
மக்களின் மேல் கடும் கோபமும் வரும். **24** அப்போது, அவர்கள் வாள்
முனையில் வீழ்த்தப்படுவார்கள், சிறைபிடிக்கப்பட்டு மற்ற தேசங்களுக்குக்
கொண்டுபோகப்படுவார்கள்.[r] மற்ற தேசத்தாருக்கு* குறிக்கப்பட்ட காலங்
கள் நிறைவேறும்வரை எருசலேம் மற்ற தேசத்தாரால்# மிதிக்கப்படும்.[s]

25 அதோடு, சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடை
யாளங்கள் தோன்றும்.[t] கடல் சீற்றத்தாலும் கடல் கொந்தளிப்பாலும்
என்ன செய்வதென்று தெரியாமல் பூமியிலுள்ள தேசத்தாரெல்லாம்

அதி. 21
a மத் 24:4, 5; மாற் 13:5, 6
b மத் 24:6; மாற் 13:7
c வெளி 6:4
d மத் 24:7; மாற் 13:8
e அப் 11:28; வெளி 6:8
f யோவா 16:2
g மத் 10:17, 18; மத் 24:9; மாற் 13:9; அப் 25:23; வெளி 2:10
h லூ 12:11, 12
i மாற் 13:11; அப் 6:8, 10
j மீ 7:6; மாற் 13:12, 13; அப் 7:59
k மத் 10:22; மத் 24:9
l மத் 10:29, 30; லூ 12:6, 7
m மத் 24:13; ரோ 5:3, 4; எபி 10:36; 2பே 1:5, 6
n லூ 19:43
o தானி 9:26; மத் 23:37, 38; மத் 24:15, 16
p மாற் 13:14
q மத் 24:19; மாற் 13:17; லூ 23:28, 29
r உபா 28:64; தானி 9:26
s தானி 4:25
t மத் 24:29; மாற் 13:24, 25

21:10 *வே.வா., “ராஜ்யத்துக்கு எதிராக ராஜ்யமும்.” **21:11** *நே.மொ., “பரலோகத்திலிருந்து.” **21:16** *வே.வா., “காட்டிக்கொடுப்பார்கள்.” **21:22** *வே.வா., “பழி வாங்கும்.” **21:24** *வே.வா., “யூதரல்லாதவர்களுக்கு.” #வே.வா., “யூதரல்லாதவர்களால்.”

தத்தளிப்பார்கள். **26** உலகத்துக்கு என்ன நடக்குமோ என்ற பயத்தில் மக்
களுக்குத் தலைசுற்றும். ஏனென்றால், வான மண்டலங்கள் அசைக்கப்படும்.
27 பின்பு, மனிதகுமாரன்[a] வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும்
மேகத்தில் வருவதை அவர்கள் பார்ப்பார்கள்.[b] **28** இவையெல்லாம்
நடக்க ஆரம்பிக்கும்போது நீங்கள் நேராக நிமிர்ந்து நின்று, உங்கள் தலை
களை உயர்த்துங்கள்; ஏனென்றால், உங்கள் விடுதலை நெருங்கிவருகிறது"
என்று சொன்னார்.

29 அதன் பின்பு, அவர்களுக்கு ஓர் உவமையைச் சொன்னார்; "அத்தி
மரத்தையும் மற்ற எல்லா மரங்களையும் கவனியுங்கள்.[c] **30** அவை
துளிர்ப்பதை நீங்கள் பார்க்கும்போது கோடைக் காலம் நெருங்கிவிட்டது
என்று தெரிந்துகொள்கிறீர்கள். **31** அதேபோல், இவையெல்லாம் நடப்
பதை நீங்கள் பார்க்கும்போது, கடவுளுடைய அரசாங்கம் நெருங்கி வந்
துவிட்டது என்று தெரிந்துகொள்ளுங்கள். **32** உண்மையாகவே உங்களுக்
குச் சொல்கிறேன், இவையெல்லாம் நடப்பதற்கு முன்பு இந்தத் தலைமுறை
ஒருபோதும் ஒழிந்துபோகாது.[d] **33** வானமும் பூமியும் ஒழிந்துபோகும்,
ஆனால் என் வார்த்தைகள் ஒருபோதும் ஒழிந்துபோகாது.[e]

34 பெருந்தீனியாலும் குடிவெறியாலும்[f] வாழ்க்கைக் கவலைகளாலும்[g]
உங்கள் இதயம் பாரமடையாதபடி எச்சரிக்கையாக இருங்கள். இல்லாவிட்
டால், எதிர்பாராத வேளையில் அந்த நாள் திடீரென உங்கள்மேல் கண்ணி
யைப் போல் வரும்.[h] **35** பூமி முழுவதும் குடியிருக்கிற எல்லார்மேலும்
அது வரும். **36** அதனால், விழித்திருந்து[i] எப்போதும் மன்றாடுங்கள்.[j]
அப்படிச் செய்தால்தான், நடக்கப்போகிற இவை எல்லாவற்றிலிருந்தும் உங்
களால் தப்பிக்க முடியும், மனிதகுமாரனுக்கு முன்பாக நிற்கவும் முடியும்"[k]
என்றார்.

37 அவர் பகலிலே ஆலயத்தில் கற்பித்துவந்தார், ராத்திரியிலோ
வெளியே போய் ஒலிவ மலை என்று அழைக்கப்பட்ட மலையில் தங்கிவந்
தார். **38** ஆலயத்தில் அவர் பேசுவதைக் கேட்பதற்காக மக்கள் எல்லாரும்
விடியற்காலையிலேயே அவரிடம் கூடிவந்தார்கள்.

22 பஸ்கா[l] என்ற புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகை நெருங்கி
வந்தது.[m] **2** முதன்மை குருமார்களும் வேத அறிஞர்களும் மக்க
ளுக்குப் பயந்ததால்,[n] சாமர்த்தியமான விதத்தில் இயேசுவை ஒழித்துக்கட்டு
வதற்கு வழி தேடிக்கொண்டிருந்தார்கள்.[o] **3** பின்பு, பன்னிரண்டு பேரில்*
ஒருவனான இஸ்காரியோத்து என்ற யூதாசின் இதயத்துக்குள் சாத்தான்
புகுந்தான்.[p] **4** அவன் முதன்மை குருமார்களிடமும் ஆலயத்தின் காவல்
தலைவர்களிடமும் போய் அவரைக் காட்டிக்கொடுப்பது பற்றிக் கலந்து
பேசினான்.[q] **5** அவர்கள் மனம் குளிர்ந்துபோய், அவனுக்கு வெள்ளிக்
காசுகள்[r] தருவதாக ஒத்துக்கொண்டார்கள். **6** அவனும் அதற்குச் சம்ம
தித்து, கூட்டம் இல்லாத சமயத்தில் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சரி
யான சந்தர்ப்பத்தைத் தேட ஆரம்பித்தான்.

7 புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகை நாள் வந்தது; அதாவது, பஸ்கா
பலியைக் கொடுக்க வேண்டிய நாள் வந்தது.[s] **8** அதனால் அவர் பேதுரு
விடமும் யோவானிடமும், "நாம் பஸ்கா உணவைச் சாப்பிடுவதற்கு
நீங்கள் போய் ஏற்பாடு செய்யுங்கள்"[t] என்று சொல்லி அனுப்பினார்.

22:3 * அதாவது, "அப்போஸ்தலர்களில்."

அதி. 21
a தானி 7:13
b மத் 24:30; மாற் 13:26; வெளி 1:7
c மத் 24:32, 33; மாற் 13:28, 29
d மத் 24:34; மாற் 13:30
e மத் 24:35; மாற் 13:31
f ஏசா 5:11, 12; ரோ 13:13
g நீதி 11:4; மத் 6:25; 1தீ 6:8
h 1தெ 5:2, 3; 2பே 3:10
i மத் 25:13; மாற் 13:33; 1கொ 16:13; 1பே 5:8
j ரோ 12:12; எபே 6:18; 1பே 4:7
k மத் 24:42; மாற் 13:35; வெளி 6:16, 17; வெளி 16:15

அதி. 22
l லேவி 23:5-8; லூ 22:7; யோவா 13:1
m யாத் 12:3, 6
n மத் 21:45, 46; மத் 26:3-5; மாற் 14:1, 2; லூ 20:19
o லூ 9:22
p மத் 26:14-16; மாற் 14:10, 11; யோவா 6:70; யோவா 13:2, 27; அப் 1:16, 17
q யோவா 13:18
r சக 11:12
s யாத் 12:14, 18; உபா 16:1, 2; மத் 26:17; மாற் 14:12
t யாத் 12:8

9 அப்போது அவர்கள், “நாங்கள் அதை எங்கே ஏற்பாடு செய்ய வேண்
டும்?” என்று கேட்டார்கள். **10** அதற்கு அவர், “நீங்கள் நகரத்துக்குள்
போகும்போது, மண்ஜாடியில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வருகிற ஒருவன்
உங்களைச் சந்திப்பான். அவன் பின்னால் போய் அவன் நுழையும் வீட்
டுக்குள் நுழையுங்கள்.[a] **11** அந்த வீட்டுச் சொந்தக்காரரிடம், ‘“என் சீஷர்க
ளோடு நான் பஸ்கா உணவு சாப்பிடுவதற்கான விருந்தினர் அறை எங்கே?”
என்று போதகர் கேட்கிறார்’ எனச் சொல்லுங்கள். **12** அப்போது, மாடியில்
தேவையான வசதிகள் செய்யப்பட்ட ஒரு பெரிய அறையை அவர் உங்
களுக்குக் காட்டுவார். அங்கே பஸ்காவுக்கு ஏற்பாடு செய்யுங்கள்” என்று
சொன்னார். **13** சீஷர்களும் போய், அவர் சொன்னதெல்லாம் அப்படியே
நடந்ததைப் பார்த்து, பஸ்காவுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

14 நேரம் வந்தபோது, அவர் அப்போஸ்தலர்களோடு சேர்ந்து சாப்பிட
உட்கார்ந்தார்.[b] **15** அப்போது அவர், “நான் பாடுகள் படுவதற்கு முன்பு
உங்களோடு சேர்ந்து இந்த பஸ்கா உணவைச் சாப்பிட மிகவும் ஆசை
யாக இருந்தேன். **16** ஏனென்றால், கடவுளுடைய அரசாங்கத்தில் இது
நிறைவேறும்வரை இனி இதைச் சாப்பிட மாட்டேன் என்று நான் உங்களுக்
குச் சொல்கிறேன்” என்றார். **17** பின்பு, கிண்ணத்தை வாங்கி கடவுளுக்கு
நன்றி சொல்லி, “ஒவ்வொருவராக இதை வாங்கிக் குடியுங்கள். **18** நான்
உங்களுக்குச் சொல்கிறேன், கடவுளுடைய அரசாங்கம் வரும்வரை இனி
திராட்சமதுவைக் குடிக்க மாட்டேன்” என்று சொன்னார்.

19 பின்பு ரொட்டியை[c] எடுத்து, கடவுளுக்கு நன்றி சொல்லி, அதைப்
பிட்டு அவர்களிடம் கொடுத்து, “இது உங்களுக்காகக் கொடுக்கப்படும்[d] என்
உடலைக் குறிக்கிறது.[e] என் நினைவாக இதைத் தொடர்ந்து செய்யுங்கள்”[f]
என்று சொன்னார். **20** உணவு சாப்பிட்ட பின்பு, அதேபோல் கிண்ணத்தை
யும் கொடுத்து, “இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படப்போகிற[g] என்
இரத்தத்தின் அடிப்படையிலான[h] புதிய ஒப்பந்தத்தைக்[i] குறிக்கிறது.

21 இதோ! என்னைக் காட்டிக்கொடுப்பவன் என்னோடு சாப்பிட உட்
கார்ந்திருக்கிறான்.[j] **22** முன்பே தீர்மானிக்கப்பட்டபடி,[k] மனிதகுமாரன் உங்
களைவிட்டுப் போகிறார்; ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிறவனுக்
குக் கேடு வந்தே தீரும்!”[l] என்று சொன்னார். **23** அப்போது, தங்களில் யார்
அப்படிச் செய்வார் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.[m]

24 பின்பு, தங்களில் யார் மிக உயர்ந்தவர் என்பதைப் பற்றி அவர்களுக்
குள் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.[n] **25** அதனால் அவர் அவர்
களிடம், “மற்ற தேசத்து ராஜாக்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள்,
மக்கள்மேல் அதிகாரம் உள்ளவர்கள் ‘மக்கள் தொண்டர்கள்’ என்று அழைக்
கப்படுகிறார்கள்.[o] **26** நீங்களோ அப்படி இருக்கக் கூடாது.[p] உங்களில் மிக
உயர்ந்தவராக இருப்பவர் எல்லாருக்கும் சிறியவரைப் போல் இருக்க வேண்
டும்,[q] உங்களை வழிநடத்துகிறவர் பணிவிடைக்காரரைப் போல் இருக்க
வேண்டும். **27** யார் உயர்ந்தவர்? சாப்பிட உட்கார்ந்திருப்பவரா அல்லது
பணிவிடை செய்பவரா? சாப்பிட உட்கார்ந்திருப்பவர்தானே? அப்படியிருந்
தும், நான் உங்கள் மத்தியில் பணிவிடை செய்பவனாக இருக்கிறேன்.[r]

28 ஆனாலும், எனக்குச் சோதனைகள்[s] வந்தபோது என்னோடுகூட
நிலைத்திருந்தவர்கள் நீங்கள்தான்.[t] **29** அதனால், ஒரு அரசாங்கத்துக்
காக[u] என் தகப்பன் என்னோடு ஒப்பந்தம் செய்திருப்பதுபோல் நானும்

அதி. 22
a மத் 26:18, 19; மாற் 14:13-16
b மத் 26:20; மாற் 14:17
c யாத் 12:8
d எபி 10:10; 1பே 2:24
e 1கொ 10:16
f மத் 26:27, 28; மாற் 14:23, 24; 1கொ 11:23-25
g எபி 9:13, 14; 1பே 1:18, 19
h யாத் 24:8
i எரே 31:31; எபி 7:22; எபி 8:8
j சங் 41:9; மத் 26:21; மாற் 14:18; யோவா 13:21
k ஏசா 53:7, 8; தானி 9:26; அப் 4:27, 28
l மத் 26:24
m மத் 26:22; மாற் 14:19; யோவா 13:22
n மாற் 9:34; லூ 9:46
o மத் 20:25-27; மாற் 10:42-44
p 1பே 5:2, 3
q லூ 9:46-48
r மத் 20:28; யோவா 13:3-5; பிலி 2:5-7
s எபி 4:15
t யோவா 6:67, 68
u தானி 7:27; லூ 12:32; 2தீ 2:12; எபி 12:28; யாக் 2:5; வெளி 1:6

உங்களோடு ஒரு ஒப்பந்தம் செய்கிறேன். **30** என்னுடைய அரசாங்கத்
தில் நீங்கள் என்னோடு உட்கார்ந்து உணவும் பானமும் சாப்பிடுவீர்கள்.[a]
இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் நியாயந்தீர்க்க[b] சிம்மாசனங்களில்
உட்காருவீர்கள்.[c]

31 சீமோனே, சீமோனே, இதோ! கோதுமையைப் புடைத்தெடுப்பது
போல் உங்கள் எல்லாரையும் புடைத்தெடுக்க வேண்டும் என்று சாத்தான்
கேட்டிருக்கிறான்.[d] **32** ஆனால், நீ விசுவாசத்தை விட்டுவிடாமல் இருக்க
வேண்டுமென்று உனக்காக மன்றாடியிருக்கிறேன்.[e] நீ மனம் திருந்தியதும்
உன் சகோதரர்களைப் பலப்படுத்து"[f] என்று சொன்னார். **33** அப்போது
பேதுரு, "எஜமானே, உங்களோடு சிறைக்குப் போவதற்கும் சாவதற்கும் நான்
தயாராக இருக்கிறேன்"[g] என்று சொன்னார். **34** ஆனால் அவர், "பேதுரு,
நான் உனக்குச் சொல்கிறேன், இன்று சேவல் கூவுவதற்கு முன்பு, என்னைத்
தெரியாதென்று நீ மூன்று தடவை சொல்லிவிடுவாய்"[h] என்றார்.

35 பின்பு அவர் சீஷர்களிடம், "பணப் பையும் உணவுப் பையும் செருப்
புகளும் இல்லாமல் நான் உங்களை அனுப்பியபோது,[i] உங்களுக்கு ஏதா
வது குறை இருந்ததா?" என்று கேட்டார். அவர்கள், "இல்லை!" என்று
சொன்னார்கள். **36** அதற்கு அவர், "இப்போதோ, பணப் பையை வைத்தி
ருப்பவன் அதைக் கொண்டுபோகட்டும், அதுபோல உணவுப் பையையும்
கொண்டுபோகட்டும். வாள் இல்லாதவன் தன்னுடைய மேலங்கியை விற்று
ஒரு வாளை வாங்கிக்கொள்ளட்டும். **37** 'அக்கிரமக்காரர்களில் ஒருவ
ராக அவர் கருதப்பட்டார்'[j] என்று எழுதப்பட்டிருக்கிற வேதவசனம் என்
னில் நிறைவேற வேண்டும் என்பதற்காக இதை நான் உங்களுக்குச் சொல்
கிறேன். என்னைப் பற்றி எழுதப்பட்டதெல்லாம் நிறைவேறி வருகிறது"[k]
என்று சொன்னார். **38** அப்போது அவர்கள், "எஜமானே, இதோ! இங்கே
இரண்டு வாள்கள் இருக்கின்றன" என்று சொன்னார்கள். அதற்கு அவர்,
"இது போதும்" என்று சொன்னார்.

39 பின்பு அங்கிருந்து புறப்பட்டு, தன்னுடைய வழக்கத்தின்படியே
ஒலிவ மலைக்குப் போனார். அவருடைய சீஷர்களும் அவருக்குப் பின்
னால் போனார்கள்.[l] **40** அந்த இடத்துக்கு வந்ததுமே அவர்களிடம்,
"சோதனைக்கு இணங்கிவிடாதபடி தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள்"[m]
என்று அவர் சொன்னார். **41** பின்பு, அவர்களைவிட்டுக் கல்லெறி
தூரம் போய் மண்டிபோட்டு, **42** "தகப்பனே, உங்களுக்கு விருப்பமா
னால் இந்தக் கிண்ணத்தை* என்னிடமிருந்து எடுத்துவிடுங்கள். ஆனால்
என்னுடைய விருப்பத்தின்படி# அல்ல, உங்களுடைய விருப்பத்தின்ப
டியே△ நடக்கட்டும்"[n] என்று சொன்னார். **43** அப்போது, பரலோகத்திலி
ருந்து ஒரு தேவதூதர் அவருக்குத் தோன்றி அவரைப் பலப்படுத்தினார்.[o]
44 ஆனால், அவர் ரொம்பவே வேதனையில் இருந்ததால் இன்னும் அதிக
உருக்கமாக ஜெபம் செய்துகொண்டிருந்தார்.[p] அவருடைய வியர்வைத்
துளிகள் இரத்தத் துளிகள்போல் தரையில் விழுந்தன. **45** ஜெபம் செய்த
பின்பு அவர் எழுந்து சீஷர்களிடம் போனார். அங்கே அவர்கள் துக்கத்தில்

22:42 *"கிண்ணம்" என்பது கடவுளுடைய சித்தத்தை, அதாவது இயேசு தெய்வ நிந்தனை செய்தார் என்று பொய்யாகக் குற்றம்சாட்டப்பட்டுக் கொல்லப்படுவதற்குக் கடவுள் அவரை அனுமதித்ததை அடையாளப்படுத்துகிறது. #வே.வா., "சித்தத்தின்படி." △வே.வா., "சித்தத்தின்படியே."

அதி. 22

a லூ 13:29, யோவா 17:24
b மத் 19:28
c 1கொ 6:2, வெளி 2:26, 27, வெளி 3:21, வெளி 20:6
d மத் 26:31, மாற் 14:27, 1பே 5:8
e யோவா 17:15
f எபி 12:12
g மத் 26:33, மாற் 14:29, யோவா 13:37
h மத் 26:34, மாற் 14:30, லூ 22:61, யோவா 13:38
i மத் 10:9, 10, மாற் 6:7-9, லூ 9:2, 3
j ஏசா 53:12
k லூ 18:31
l மத் 26:30, மாற் 14:26, யோவா 18:1
m மத் 26:41, மாற் 14:38, லூ 22:46
n மத் 6:10, மத் 26:39, மாற் 14:36, யோவா 5:30, யோவா 6:38
o 1ரா 19:5, 7, தானி 10:18, 19, மத் 4:11
p யோவா 12:27, எபி 5:7

துவண்டுபோய்த் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து,[a] **46** “ஏன் தூங்கிக்
கொண்டிருக்கிறீர்கள்? எழுந்திருங்கள், சோதனைக்கு இணங்கிவிடாதபடி
தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள்” என்று சொன்னார்.[b]

47 அவர் பேசிக்கொண்டிருந்தபோதே, ஆட்கள் கூட்டமாக வந்தார்கள்.
பன்னிரண்டு பேரில் ஒருவனாகிய யூதாஸ் அவர்களைக் கூட்டிக்கொண்டு
வந்தான்; அவன் இயேசுவுக்கு முத்தம் கொடுக்க அவர் பக்கத்தில் வந்
தான்.[c] **48** ஆனால் இயேசு அவனிடம், “யூதாஸ், மனிதகுமாரனை முத்தம்
கொடுத்தா காட்டிக்கொடுக்கிறாய்?” என்று கேட்டார். **49** அவரோடு நின்று
கொண்டிருந்தவர்கள் நடக்கப்போவதை உணர்ந்து, “எஜமானே, நாங்கள்
வாளால் வெட்டலாமா?” என்று கேட்டார்கள். **50** அவர்களில் ஒருவர்
தலைமைக் குருவின் வேலைக்காரனைத் தாக்கினார், அவனுடைய வலது
காது அறுந்துபோனது.[d] **51** அப்போது இயேசு, “இதோடு நிறுத்திக்கொள்
ளுங்கள்” என்று சொன்னார். பின்பு, அந்த வேலைக்காரனுடைய காதைத்
தொட்டு அவனைக் குணப்படுத்தினார். **52** அதன் பின்பு, இயேசு தன்
னைப் பிடிக்க வந்திருந்த முதன்மை குருமார்களையும் ஆலயத்தின்
காவல் தலைவர்களையும் பெரியோர்களையும்* பார்த்து, “ஒரு கொள்ளைக்
காரனைப் பிடிக்க வருவது போல வாள்களோடும் தடிகளோடும் என்னைப்
பிடிக்க வந்திருக்கிறீர்களா?[e] **53** நான் தினமும் ஆலயத்தில் உங்களோடு
இருந்தபோதெல்லாம்[f] நீங்கள் என்மேல் கை வைக்கவில்லை.[g] ஆனால்,
இது உங்களுடைய நேரம், இருள் அதிகாரம் செலுத்துகிற நேரம்”[h] என்று
சொன்னார்.

54 அவர்கள் அவரைக் கைது செய்து, தலைமைக் குருவின் வீட்
டுக்குள் கொண்டுபோனார்கள்.[i] ஆனால், பேதுரு தூரத்திலிருந்தபடி அவர்
களைப் பின்தொடர்ந்து போனார்.[j] **55** முற்றத்தின் நடுவில் நெருப்பு மூட்டி
அதைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்களோடு அவரும் உட்கார்ந்துகொண்டார்.[k]
56 எரிந்துகொண்டிருந்த நெருப்புக்குப் பக்கத்தில் அவர் உட்கார்ந்திருந்
ததை ஒரு வேலைக்காரப் பெண் கண்டு, அவரை உற்றுப் பார்த்து, “இந்த
ஆளும் அவரோடு இருந்தான்” என்று சொன்னாள். **57** ஆனால் பேதுரு,
“இல்லை, எனக்கு அவரைத் தெரியாது” என்று சொல்லி மறுத்தார்.
58 சிறிது நேரம் கழித்து இன்னொருவன் அவரைப் பார்த்து, “நீயும் அவர்க
ளில் ஒருவன்தான்” என்று சொன்னான். ஆனால் பேதுரு, “இல்லவே
இல்லை”[l] என்று சொன்னார். **59** சுமார் ஒரு மணிநேரம் கழித்து வேறொரு
ஆள், “நிச்சயமாகவே இந்த மனுஷனும் அவரோடு இருந்தான், இவன் ஒரு
கலிலேயன்தான்!” என்று அடித்துச் சொல்ல ஆரம்பித்தான். **60** ஆனால்
பேதுரு, “நீ என்ன சொல்கிறாய் என்றே எனக்குத் தெரியவில்லை” என்றார்.
இப்படி அவர் சொல்லிக்கொண்டிருந்தபோதே, உடனடியாக ஒரு சேவல்
கூவியது. **61** அப்போது இயேசு திரும்பி, பேதுருவை நேராகப் பார்த்
தார். “இன்று சேவல் கூவுவதற்கு முன்பு, என்னைத் தெரியாதென்று நீ மூன்று
தடவை சொல்லிவிடுவாய்” என்று இயேசு தன்னிடம் சொன்னது பேதுரு
வின் ஞாபகத்துக்கு வந்தது.[m] **62** அதனால், அவர் வெளியே போய்க்
கதறி அழுதார்.

63 இயேசுவைக் காவல் காத்த ஆட்கள் அவரைக் கேலி செய்யவும்[n]
அடிக்கவும்[o] ஆரம்பித்தார்கள். **64** அவருடைய முகத்தை மூடி, “நீ ஒரு

22:52 * வே.வா., “மூப்பர்களையும்.”

அதி. 22
a மத் 26:40 மாற் 14:37
b மத் 26:41 மாற் 14:38 லூ 22:40
c மத் 26:47-50 மாற் 14:43-46 யோவா 18: 2, 3
d மத் 26:51, 52 மாற் 14:47 யோவா 18: 10, 11
e மத் 26:55, 56 மாற் 14:48, 49
f லூ 19:47
g யோவா 7:30
h யோவா 19:11
i ஏசா 53:7 அப் 8:32
j மத் 26:57, 58 மாற் 14:53, 54 யோவா 18:15
k மத் 26:69-75 மாற் 14:66-72 யோவா 18:18
l யோவா 18: 25-27
m மத் 26:75 மாற் 14:72
n சங் 22:7
o ஏசா 50:6 ஏசா 53:5 மத் 26:67, 68 மாற் 14:65

தீர்க்கதரிசியாக இருந்தால் உன்னை அடித்தது யார் என்று சொல் பார்க்க
லாம்” என்றார்கள். **65** அவருக்கு எதிராக இன்னும் பலவற்றைச் சொல்லி
நிந்தித்தார்கள்.

66 பொழுது விடிந்தபோது, முதன்மை குருமார்களும் வேத அறிஞர்க
ளும் அடங்கிய பெரியோர் குழுவினர் ஒன்றுகூடி,[a] நியாயசங்க மன்றத்தில்
அவரைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். **67** அவரிடம், “நீ கிறிஸ்துவா?
எங்களுக்குச் சொல்”[b] என்றார்கள். அதற்கு அவர், “நான் அதை உங்களுக்
குச் சொன்னாலும் நீங்கள் நம்பப் போவதில்லை. **68** உங்களிடம் நான்
கேள்வி கேட்டாலும் நீங்கள் பதில் சொல்லப்போவதில்லை. **69** ஆனால்,
இப்போதுமுதல் மனிதகுமாரன்[c] வல்லமையுள்ள கடவுளின் வலது பக்கத்
தில் உட்கார்ந்திருப்பார்”[d] என்று சொன்னார். **70** அதற்கு அவர்கள் எல்
லாரும், “அப்படியானால், நீ கடவுளுடைய மகனா?” என்று கேட்டார்கள்.
அதற்கு, “நான் அவர்தான் என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள்” என்றார்.
71 அப்போது அவர்கள், “இனி நமக்கு வேறு சாட்சி எதற்கு? இவனுடைய
வாயிலிருந்து நாமே கேட்டுவிட்டோம்”[e] என்று சொன்னார்கள்.

23 பின்பு, கூட்டத்தார் எல்லாரும் கும்பலாக எழுந்து அவரை பிலாத்து
விடம் கொண்டுபோனார்கள்.[f] **2** “இந்த மனுஷன் எங்களுடைய
மக்களைக் கலகம் செய்யத் தூண்டுகிறான். ரோம அரசனுக்கு* வரி கட்டக்
கூடாது[g] என்றும், தான்தான் கிறிஸ்துவாகிய ராஜா என்றும் சொல்லிக்கொள்
கிறான்”[h] என அவர்மேல் குற்றம்சாட்ட ஆரம்பித்தார்கள்.[i] **3** அப்போது
பிலாத்து அவரிடம், “நீ யூதர்களுடைய ராஜாவா?” என்று கேட்டார். அதற்கு
அவர், “அதை நீங்களே சொல்லிவிட்டீர்கள்”[j] என்றார். **4** பின்பு, பிலாத்து
முதன்மை குருமார்களையும் கூட்டத்தாரையும் பார்த்து, “இந்த மனுஷன்
எந்தக் குற்றமும் செய்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை”[k] என்று
சொன்னார். **5** அப்போது அவர்கள், “இவன் யூதேயா முழுவதிலும், கலி
லேயா தொடங்கி இந்த இடம் வரையிலும், மக்களுக்குக் கற்பித்து, அவர்
களைக் கலகம் செய்யத் தூண்டுகிறான்” என்று அடித்துச் சொன்னார்கள்.
6 பிலாத்து இதைக் கேட்டதும், அவர் கலிலேயாவைச் சேர்ந்தவரா என்று
விசாரித்தார். **7** அவர் ஏரோதுவின் ஆட்சி எல்லைக்கு[l] உட்பட்டவர் என்
பதை உறுதிப்படுத்தியதும் ஏரோதுவிடமே அவரை அனுப்பினார்; அந்த
நாட்களில் ஏரோது எருசலேமில் இருந்தான்.

8 இயேசுவைப் பற்றி ஏரோது கேள்விப்பட்டிருந்தான்,[m] அவர் செய்கிற
அற்புதங்களில் ஒன்றைப் பார்க்க விரும்பினான். அதனால், பல நாட்க
ளாக அவரைச் சந்திக்க ஆவலோடு இருந்தான். அவரைச் சந்தித்த
போது மிகவும் சந்தோஷப்பட்டு, **9** அவரிடம் நிறைய கேள்விகளைக்
கேட்க ஆரம்பித்தான். ஆனால், அவர் எந்தப் பதிலும் சொல்லவில்லை.[n]
10 இருந்தாலும், முதன்மை குருமார்களும் வேத அறிஞர்களும் திரும்
பத் திரும்ப எழுந்து நின்று அவர்மேல் கடுமையாகக் குற்றம்சாட்டினார்கள்.
11 அப்போது, ஏரோது தன் படைவீரர்களோடு சேர்ந்து அவரை அவமதித்
தான்.[o] அவருக்கு ஆடம்பரமான உடையை உடுத்தி கேலி செய்தான்.[p]
பின்பு, பிலாத்துவிடமே திருப்பி அனுப்பினான். **12** அதுவரை எதிரிகளாக
இருந்த ஏரோதுவும் பிலாத்துவும் அன்றைக்கு நண்பர்களாக ஆனார்கள்.

13 பின்பு முதன்மை குருமார்களையும் தலைவர்களையும் மக்களை

23:2 * நே.மொ., “சீஸருக்கு.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 22
a சங் 2:2; மத் 27:1; மாற் 15:1; அப் 4:26
b மத் 26:63; மாற் 14:61
c தானி 7:13
d சங் 110:1; மத் 26:64; மாற் 14:62; அப் 2:32, 33; அப் 7:55; ரோ 8:34; கொலோ 3:1; எபி 1:3
e மத் 26:65; மாற் 14:63

அதி. 23
f மத் 27:2; மாற் 15:1; யோவா 18:28
g மாற் 12:17
h யோவா 18:36
i சங் 35:11
j மத் 27:11
k யோவா 18:38; எபி 7:26; 1பே 2:21, 22
l லூ 3:1
m மத் 14:1; மாற் 6:14; லூ 9:7-9
n ஏசா 53:7
o ஏசா 53:3
p சங் 22:7

யும் பிலாத்து ஒன்றுகூட்டி, **14** “இந்த மனுஷன் மக்களைக் கலகம் செய்
யத் தூண்டுவதாகச் சொல்லி என்னிடம் கொண்டுவந்தீர்கள். இதோ!
இவனை உங்கள் முன்னால் விசாரித்தேன். ஆனால், இவனுக்கு எதிராக
நீங்கள் சுமத்தும் குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரமும் இருப்பதாக
எனக்குத் தெரியவில்லை.[a] **15** சொல்லப்போனால், ஏரோதுவுக்கும் தெரிய
வில்லை; அதனால்தான், அவரும் இவனை நம்மிடம் திருப்பி அனுப்பிவிட்
டார். மரண தண்டனை கொடுக்கும் அளவுக்கு எந்தக் குற்றத்தையும் இவன்
செய்யவில்லை. **16** அதனால், இவனைத் தண்டித்து[b] விடுதலை செய்
வேன்” என்று சொன்னார். **17** *— **18** ஆனால், கூட்டத்தார் எல்லாரும்,
“இவனை ஒழித்துக்கட்டுங்கள், பரபாசை எங்களுக்கு விடுதலை செய்யுங்
கள்!”[c] என்று கத்தினார்கள். **19** நகரத்தில் நடந்த தேசத் துரோகச் செய
லில் ஈடுபட்டதற்காகவும் கொலை செய்ததற்காகவும் இந்த பரபாஸ் சிறை
யில் அடைக்கப்பட்டிருந்தான். **20** இயேசுவை விடுதலை செய்ய பிலாத்து
விரும்பியதால் மறுபடியும் அவர்களோடு பேசினார்.[d] **21** அப்போது
அவர்கள், “இவனை மரக் கம்பத்தில் அறைந்து கொல்லுங்கள்! மரக் கம்
பத்தில் அறைந்து கொல்லுங்கள்!” என்று கூச்சல்போட ஆரம்பித்தார்கள்.[e]
22 மூன்றாவது தடவை அவர்களைப் பார்த்து, “ஏன்? இவன் என்ன குற்றம்
செய்தான்? மரண தண்டனை கொடுக்கும் அளவுக்கு இவன் எந்தக் குற்ற
மும் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. அதனால், இவனைத் தண்டித்து
விடுதலை செய்வேன்” என்று சொன்னார். **23** ஆனால், அவரை மரக்
கம்பத்தில் அறைந்து கொல்ல வேண்டுமென்று அந்தக் கூட்டத்தார் திரும்
பத் திரும்பக் கூச்சல் போட்டார்கள். கடைசியில், அவர்களுடைய குரல்தான்
ஜெயித்தது.[f] **24** அதனால், அவர்கள் கேட்டபடியே பிலாத்து தீர்ப்பு வழங்
கினார். **25** அவர்கள் வற்புறுத்திக் கேட்டதால், தேசத் துரோகமும்
கொலையும் செய்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டவனை விடுதலை
செய்தார். ஆனால், இயேசுவை அவர்களுடைய விருப்பப்படி செய்ய
விட்டுவிட்டார்.

26 அவர்கள் அவரைக் கூட்டிக்கொண்டு போனபோது, சிரேனே ஊரைச்
சேர்ந்த சீமோன் என்பவர் நாட்டுப்புறத்திலிருந்து வந்துகொண்டிருந்தார்.
அவர்கள் அவரைப் பிடித்து, சித்திரவதைக் கம்பத்தை* அவர்மேல் வைத்து,
இயேசுவுக்குப் பின்னால் சுமந்துகொண்டுபோக வைத்தார்கள்.[g] **27** ஏராள
மான மக்கள் அவருக்குப் பின்னால் போனார்கள், அந்தக் கூட்டத்திலிருந்த
பெண்களும் அவருக்காக நெஞ்சில் அடித்துக்கொண்டு புலம்பிக்கொண்டே
போனார்கள். **28** இயேசு அந்தப் பெண்களைத் திரும்பிப் பார்த்து, “எரு
சலேம் மகள்களே, எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்
ளைகளுக்காகவும் அழுங்கள்.[h] **29** ஏனென்றால், ‘கருத்தரிக்க முடியாத
பெண்களும் பிள்ளை பெறாத பெண்களும் பாலூட்டாத பெண்களும் சந்
தோஷமானவர்கள்!’[i] என்று சொல்லப்படும் நாட்கள் வரும். **30** அப்போது
அவர்கள் மலைகளைப் பார்த்து, ‘எங்களை மூடிக்கொள்ளுங்கள்!’ என்றும்,
குன்றுகளைப் பார்த்து, ‘எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்!’[j] என்றும் சொல்
வார்கள். **31** மரம் பச்சையாக இருக்கும்போதே இப்படிச் செய்கிறார்கள்
என்றால், மரம் பட்டுப்போன பின்பு என்ன நடக்கும்?” என்று கேட்டார்.

32 குற்றவாளிகளான வேறு இரண்டு பேரும் மரண தண்டனைக்காக

23:17 * இணைப்பு A3-ஐப் பாருங்கள். **23:26** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 23
a யோவா 18:38
b மத் 27:26; யோவா 19:1
c மத் 27:20, 21; மாற் 15:11; யோவா 18:40
d மத் 27:22-26; மாற் 15:12-15; யோவா 19:12
e யோவா 19:6
f யோவா 19:15, 16
g மாற் 15:21; யோவா 19:17
h மாற் 13:17
i மத் 24:19; லூ 21:23
j ஓசி 10:8

அவரோடு கொண்டுபோகப்பட்டார்கள்.[a] **33** மண்டையோடு என்றழைக்
கப்பட்ட இடத்துக்கு[b] வந்ததும் அங்கே அவரை மரக் கம்பத்தில்
வைத்து ஆணியடித்தார்கள். அவருடைய வலது பக்கத்தில் ஒரு குற்றவாளி
யையும் இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் மரக் கம்பங்களில் ஏற்றி
னார்கள்.[c] **34** அப்போது இயேசு, "தகப்பனே, இவர்களை மன்னித்துவிடுங்
கள், இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று இவர்களுக்கே தெரியவில்லை"
என்று சொன்னார். அவர்கள் அவருடைய அங்கிகளைப் பங்குபோடுவதற்
காகக் குலுக்கல் போட்டுப் பார்த்தார்கள்.[d] **35** மக்கள் இவற்றைப் பார்த்
துக்கொண்டே நின்றுகொண்டிருந்தார்கள். அதிகாரிகளோ அவரை ஏளனம்
செய்து, "மற்றவர்களைக் காப்பாற்றினானே, இவன் கடவுளால் தேர்ந்தெடுக்
கப்பட்ட கிறிஸ்துவாக இருந்தால், இப்போது தன்னைக் காப்பாற்றிக்கொள்
ளட்டும்"[e] என்று சொன்னார்கள். **36** படைவீரர்கள் அவர் பக்கத்தில் போய்
அவருக்குப் புளிப்பான திராட்சமதுவைக் கொடுத்து,[f] **37** "நீ யூதர்களு
டைய ராஜாவாக இருந்தால், உன்னை நீயே காப்பாற்றிக்கொள்" என்று கேலி
செய்தார்கள். **38** "இவர் யூதர்களுடைய ராஜா" என்று எழுதப்பட்டு, அவ
ருக்கு மேல் வைக்கப்பட்டது.[g]

39 மரக் கம்பத்தில் தொங்கவிடப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் அவ
ரைப் பார்த்து, "நீ கிறிஸ்துதானே? அப்படியானால், உன்னையும் எங்களை
யும் காப்பாற்று" என்று பழித்துப் பேச ஆரம்பித்தான்.[h] **40** அப்போது மற்
றவன் அவனை அதட்டி, "கடவுளுக்குப் பயப்பட மாட்டாயா? உனக்கும்
இதே தீர்ப்புதானே கிடைத்திருக்கிறது? **41** நாம் தண்டிக்கப்படுவது நியா
யம். நம்முடைய செயல்களுக்கு ஏற்ற தண்டனைதான் நமக்குக் கிடைத்தி
ருக்கிறது. ஆனால், இவர் எந்தக் குற்றமும் செய்யவில்லையே" என்று
சொன்னான். **42** பின்பு, "இயேசுவே, நீங்கள் ஆட்சிக்கு வரும்போது
என்னை நினைத்துக்கொள்ளுங்கள்"[i] என்று சொன்னான். **43** அதற்கு
அவர், "உண்மையாகவே இன்று உனக்குச் சொல்கிறேன், நீ என்னோடு பூஞ்
சோலையில்* இருப்பாய்"[j] என்று சொன்னார்.

44 அப்போது, சுமார் ஆறாம் மணிநேரமாக* இருந்தது. ஆனாலும், ஒன்
பதாம் மணிநேரம்வரை# பூமி முழுவதும் இருள் சூழ்ந்தது.[k] **45** ஏனென்
றால், சூரியன் ஒளி கொடுக்கவில்லை. பின்பு, ஆலயத்தின் திரைச்சீலை*[l]
நடுவில் இரண்டாகக் கிழிந்தது.[m] **46** இயேசு உரத்த குரலில், "தகப்பனே,
என் உயிரை உங்களுடைய கைகளில் ஒப்படைக்கிறேன்"[n] என்று சொல்லி
இறந்துபோனார்.*[o] **47** நடந்ததையெல்லாம் பார்த்த படை அதிகாரி, "நிஜ
மாகவே இந்த மனுஷர் ஒரு நீதிமான்"[p] என்று சொல்லி, கடவுளை மகிமைப்
படுத்த ஆரம்பித்தார். **48** இயேசு கொலை செய்யப்படுவதைப் பார்ப்பதற்
காகக் கூடியிருந்த மக்கள் எல்லாரும் நடந்த சம்பவங்களைக் கண்டு,
நெஞ்சில் அடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிப் போனார்கள். **49** அவ
ருக்குத் தெரிந்தவர்கள் எல்லாரும் தூரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். கலி
லேயாவிலிருந்து அவரோடு வந்திருந்த பெண்களும் அங்கே நின்று நடந்
ததையெல்லாம் பார்த்தார்கள்.[q]

23:43 *சொல் பட்டியலைப் பாருங்கள். **23:44** *அதாவது, "மதியம் சுமார் 12 மணியாக." #அதாவது, "பிற்பகல் சுமார் 3 மணிவரை." **23:45** *இது பரிசுத்த அறைக்கும் மகா பரிசுத்த அறைக்கும் இடையில் இருந்தது. **23:46** *வே.வா., "இறுதி மூச்சை விட்டார்."

அதி. 23
a ஏசா 53:12; மத் 27:38
b மத் 27:33
c யோவா 19:17, 18
d சங் 22:18; மத் 27:35; மாற் 15:24; யோவா 19:24
e சங் 22:7, 8; மத் 27:42, 43; மாற் 15:31
f சங் 69:21
g மத் 27:37; மாற் 15:26; யோவா 19:19
h மத் 27:44; மாற் 15:32
i லூ 1:32, 33
j ஏசா 11:6; ஏசா 35:1; ஏசா 65:17; அப் 24:15; வெளி 21:1
k மத் 27:45; மாற் 15:33
l யாத் 26:31-33
m எபி 10:19, 20
n சங் 31:5
o மத் 27:50
p மத் 27:54
q மத் 27:55, 56; மாற் 15:40, 41; லூ 8:2, 3

50 யோசேப்பு என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். இவர் நல்லவர், நீதி
மான். நியாயசங்க உறுப்பினர்களில் ஒருவர்.[a] **51** மற்ற உறுப்பினர்களின்
சதித்திட்டத்தையும் செயலையும் ஆதரிக்காதவர், யூதேயர்களின் நகரமான
அரிமத்தியாவைச் சேர்ந்தவர், கடவுளுடைய அரசாங்கத்துக்காகக் காத்தி
ருந்தவர். **52** இவர் பிலாத்துவிடம் போய், இயேசுவின் உடலைக் கேட்டார்.
53 பின்பு அவருடைய உடலைக் கீழே இறக்கி,[b] உயர்தரமான நாரிழை*
துணியால் சுற்றி, பாறையில் வெட்டப்பட்ட ஒரு கல்லறையில்# வைத்தார்;[c]
அதற்கு முன்பு அதில் யாருமே அடக்கம் செய்யப்படவில்லை. **54** அது
ஆயத்த நாளாக இருந்தது,[d] ஓய்வுநாளும்[e] ஆரம்பிக்கவிருந்தது. **55** கலி
லேயாவிலிருந்து அவரோடு வந்திருந்த பெண்கள் அங்கே போய், அந்
தக் கல்லறையையும் அதில் அவருடைய உடல் வைக்கப்பட்ட விதத்தையும்
பார்த்தார்கள்.[f] **56** பின்பு, நறுமணப் பொருள்களையும் வாசனை எண்
ணெய்களையும் தயார் செய்வதற்காகத் திரும்பிப் போனார்கள். ஆனால்,
திருச்சட்டத்தின்படி ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.[g]

24 பின்பு, வாரத்தின் முதலாம் நாள் விடியற்காலையிலேயே, தாங்கள்
தயார் செய்து வைத்திருந்த நறுமணப் பொருள்களை எடுத்துக்
கொண்டு கல்லறைக்கு* அவர்கள் போனார்கள்.[h] **2** ஆனால், கல்லறை
யின் கல் ஏற்கெனவே உருட்டிப் போடப்பட்டிருந்ததைப் பார்த்தார்கள்.[i]
3 உள்ளே போனபோது, எஜமானாகிய இயேசுவின் உடல் அங்கே இருக்க
வில்லை.[j] **4** அதைப் பற்றி அவர்கள் குழம்பிக்கொண்டிருந்தபோது, ஒளி
வீசும் உடையில் இரண்டு ஆண்கள் திடீரென்று அவர்கள் பக்கத்தில்
வந்து நின்றார்கள். **5** பயத்தில் அந்தப் பெண்கள் தலைநிமிராமல் குனிந்த
படியே நின்றார்கள். அப்போது, அந்த ஆண்கள் அவர்களிடம், "உயிரோடு
இருப்பவரை ஏன் இறந்தவர்களுடைய இடத்தில் தேடுகிறீர்கள்?[k] **6** அவர்
இங்கே இல்லை, அவர் உயிரோடு எழுப்பப்பட்டுவிட்டார். அவர் கலி
லேயாவில் இருந்தபோது சொன்ன விஷயங்களை ஞாபகப்படுத்திப்
பாருங்கள். **7** மனிதகுமாரன் பாவிகளிடம் ஒப்படைக்கப்படவும், மரக் கம்
பத்தில் அறைந்து கொல்லப்படவும், அதன் பின்பு மூன்றாம் நாளில் உயி
ரோடு எழுப்பப்படவும் வேண்டுமென்று அவர் சொன்னாரே" என்றார்கள்.[l]
8 அப்போது, அவர் சொல்லியிருந்த வார்த்தைகள் அவர்களுடைய ஞாப
கத்துக்கு வந்தன.[m] **9** அவர்கள் கல்லறையைவிட்டுத் திரும்பிப் போய்
நடந்த எல்லா விஷயங்களையும் பதினொரு பேருக்கும் மற்ற எல்லா
சீஷர்களுக்கும் சொன்னார்கள்.[n] **10** மகதலேனா மரியாள், யோவன்னாள்,
யாக்கோபின் அம்மாவான மரியாள் ஆகியவர்கள்தான் அந்தப் பெண்கள்;
அவர்களோடு போன மற்ற பெண்களும் அப்போஸ்தலர்களுக்கு இந்த
விஷயங்களைச் சொன்னார்கள். **11** ஆனால், இந்த விஷயங்கள் இவர்க
ளுக்கு அபத்தமாகத் தோன்றியதால் அந்தப் பெண்கள் சொன்னதை இவர்
கள் நம்பவில்லை.

12 ஆனால், பேதுரு எழுந்து கல்லறைக்கு ஓடினார். அங்கே அவர்
குனிந்து பார்த்தபோது நாரிழை* துணிகளை மட்டுமே கண்டார். இதைப்
பற்றி ஆச்சரியப்பட்டுக்கொண்டே அங்கிருந்து திரும்பிப் போனார்.

13 அதே நாளில் சீஷர்களில் இரண்டு பேர் எருசலேமிலிருந்து சுமார்

அதி. 23
a மத் 27:57-60 மாற் 15:43-46 யோவா 19:38
b உபா 21:22, 23
c ஏசா 53:9
d மாற் 15:42 யோவா 19:42
e யாத் 20:9, 10 உபா 5:13, 14
f மத் 27:61 மாற் 15:47
g யாத் 16:29 யாத் 20:9, 10 யாத் 31:15 உபா 5:12

அதி. 24
h மத் 28:1 மாற் 16:1, 2 யோவா 20:1
i மத் 28:2 மாற் 16:4
j மாற் 16:5
k மத் 28:5-7 மாற் 16:5-7
l யோனா 1:17 மத் 16:21 மாற் 8:31 லூ 9:22
m யோவா 2:22
n மத் 28:8

23:53; 24:12 *அதாவது, "லினன்." **23:53** #வே.வா., "நினைவுக் கல்லறையில்."
24:1 *வே.வா., "நினைவுக் கல்லறைக்கு."

7 மைல்* தூரத்திலிருந்த எம்மாவு என்ற கிராமத்துக்குப் போய்க்கொண்டி
ருந்தார்கள். **14** நடந்த எல்லா சம்பவங்களையும் பற்றி ஒருவருக்கொரு
வர் பேசிக்கொண்டே போனார்கள்.

15 இப்படி அவர்கள் பேசிக்கொண்டு போனபோது, இயேசுவே அங்கு
வந்து அவர்களோடு சேர்ந்து நடக்க ஆரம்பித்தார். **16** ஆனால், அவரை
அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி அவர்களுடைய கண்கள் மறைக்
கப்பட்டிருந்தன.[a] **17** அப்போது அவர், "நீங்கள் ஒருவருக்கொருவர்
எதைப் பற்றி விவாதம் செய்துகொண்டே போகிறீர்கள்?" என்று கேட்டார்.
அவர்கள் சோகமாக அப்படியே நின்றார்கள். **18** அவர்களில் கிலெ
யோப்பா என்ற ஒருவர், "நீங்கள் எருசலேமில் தனியாக வாழ்கிற அன்னி
யரா?* கடந்த சில நாட்களாக இங்கு நடந்த விஷயங்களைப் பற்றித் தெரியா
மல் இருக்கிறீர்களே!" என்றார். **19** அதற்கு அவர், "எந்த விஷயங்களை?"
என்று கேட்டார். அப்போது அவர்கள், "நாசரேத்தூர் இயேசுவைப்[b] பற்
றிய விஷயங்களைத்தான் சொல்கிறோம். அவர் கடவுளுக்கு முன்பாகவும்
எல்லா மக்களுக்கு முன்பாகவும் சொல்லிலும் செயலிலும் வலிமையான ஒரு
தீர்க்கதரிசியாக இருந்தார்.[c] **20** ஆனால், எங்களுடைய முதன்மை குரு
மார்களும் அதிகாரிகளும் அவருக்கு மரண தண்டனை வாங்கிக்கொடுத்து[d]
அவரை மரக் கம்பத்தில் வைத்து ஆணியடித்தார்கள். **21** அவர்தான்
இஸ்ரவேலை விடுவிப்பார் என்று நம்பிக்கொண்டிருந்தோம்.[e] இதெல்லாம்
நடந்து இன்றோடு மூன்று நாள் ஆகிறது. **22** அதுமட்டுமல்ல, எங்கள் மத்
தியிலிருந்த சில பெண்கள் விடியற்காலையில் கல்லறைக்குப் போனபோது,[f]
23 அவருடைய உடல் அங்கு இல்லாததால் திரும்பிவந்து, தேவதூதர்க
ளைப் பார்த்ததாகவும் இயேசு உயிரோடிருப்பதாக அவர்கள் சொன்னதாக
வும் தெரிவித்தார்கள். அதைக் கேட்டு நாங்கள் பிரமித்துப்போனோம்.
24 பின்பு, எங்களோடிருந்த சிலரும் கல்லறைக்குப் போய்[g] அந்தப் பெண்
கள் சொன்னபடியே இருந்ததைப் பார்த்தார்கள்; ஆனால் அவரைப் பார்க்க
வில்லை" என்று சொன்னார்கள்.

25 அப்போது இயேசு அவர்களிடம், "புத்தியில்லாதவர்களே, மந்த இத
யம் உள்ளவர்களே, தீர்க்கதரிசிகள் சொன்ன விஷயங்களையெல்லாம் நம்
பாமல் இருக்கிறீர்களே! **26** கிறிஸ்து தன்னுடைய மகிமையைப் பெறுவதற்
காக[h] இப்படிப்பட்ட பாடுகளை அனுபவிப்பது அவசியமாக இருந்தது
தானே?"[i] என்று கேட்டார். **27** அதன் பின்பு, மோசேயின் புத்தகங்கள்
முதல் எல்லா தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள்வரை[j] வேதவசனங்களில்
தன்னைப் பற்றி எழுதப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் அவர்களுக்கு
விளக்கினார்.

28 கடைசியில், அவர்கள் போக வேண்டிய கிராமத்தை நெருங்கி
னார்கள்; அவர் அதற்கும் அப்பால் போகிறவர்போல் காட்டிக்கொண்
டார். **29** அப்போது அவர்கள், "எங்களோடு தங்கிவிடுங்கள்; பொழுது
சாயப்போகிறது, சீக்கிரத்தில் இருட்டிவிடும்" என்று சொல்லி, அவரை வருந்
திக் கேட்டுக்கொண்டார்கள். அதனால் அவர்களோடு போய்த் தங்கினார்.

24:13 *வே.வா., "சுமார் 11 கி.மீ." நே.மொ., "60 ஸ்டேடியா." ஒரு ஸ்டேடியம் என்பது 185 மீ. (606.95 அடி). இணைப்பு B14-ஐப் பாருங்கள். **24:18** *அல்லது, "எருசலேமுக்கு வந்திருப்பவர்களில் இந்த விஷயத்தைப் பற்றித் தெரியாதவர் நீங்கள் ஒருவர் தானோ?"

அதி. 24
a யோவா 20:14 யோவா 21:4
b மத் 2:23 மத் 21:11
c உபா 18:18 லூ 7:15, 16 யோவா 3:2 யோவா 6:14 அப் 2:22
d லூ 23:1 அப் 3:13 அப் 13:27, 28
e அப் 1:6
f மத் 28:1, 8 லூ 24:9-11
g லூ 24:12 யோவா 20:3
h பிலி 2:9-11 எபி 2:9 1பே 1:11
i சங் 22:16-18 ஏசா 53:7-9 1கொ 15:3
j யோவா 1:45 அப் 10:43 அப் 26:22

30 அவர்களோடு சாப்பிட உட்கார்ந்தபோது, அவர் ரொட்டியை எடுத்து,
ஜெபம் செய்து,* அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுக்க ஆரம்பித்தார்.[a]
31 அப்போது அவர்களுடைய கண்கள் முழுமையாகத் திறக்கப்பட்டதால்,
அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். ஆனால், அவர்களைவிட்டு
அவர் மறைந்துபோனார்.[b] **32** அப்போது அவர்கள், “வழியில் அவர் நம்
மோடு பேசி, வேதவசனங்களை முழுமையாக* விளக்கிக் காட்டியபோது,
நம் இதயம் கொழுந்துவிட்டு எரிந்தது,# இல்லையா?” என்று ஒருவருக்
கொருவர் சொல்லிக்கொண்டு, **33** அப்போதே எழுந்து எருசலேமுக்குத்
திரும்பிப் போனார்கள். அங்கே பதினொரு பேரும் மற்ற சீஷர்களும் கூடி
யிருந்ததைப் பார்த்தார்கள். **34** அங்கே இருந்தவர்கள், “எஜமான் நிஜ
மாகவே உயிரோடு எழுப்பப்பட்டுவிட்டார்! சீமோனுக்குத் தோன்றினார்!”[c]
என்று சொல்வதைக் கேட்டார்கள். **35** பின்பு, வழியில் நடந்த சம்பவங்க
ளைப் பற்றியும், அவர் ரொட்டியைப் பிட்டுக்கொடுத்த விதத்தை வைத்து
அவரை அடையாளம் கண்டுகொண்டதைப் பற்றியும்[d] இவர்கள் விளக்க
மாகச் சொன்னார்கள்.

36 இந்த விஷயங்களை அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, அவரே
அவர்கள் நடுவில் வந்து நின்று, “உங்களுக்குச் சமாதானம்!”[e] என்று
சொன்னார். **37** அவர்கள் திகிலடைந்து, ஒரு மாய உருவத்தைப் பார்ப்
பதாக நினைத்து நடுங்கினார்கள். **38** அதனால் அவர், “ஏன் கலங்குகிறீர்
கள், உங்கள் இதயத்தில் ஏன் சந்தேகப்படுகிறீர்கள்? **39** என் கைகளை
யும் பாதங்களையும் பாருங்கள். நான்தான், என்னைத் தொட்டுப்
பாருங்கள். எனக்குச் சதையும் எலும்புகளும் இருக்கின்றன, மாய உருவத்
துக்கு இவை இருக்காதே” என்று சொல்லி, **40** தன்னுடைய கைகளையும்
பாதங்களையும் அவர்களுக்குக் காட்டினார். **41** ஆனாலும் அவர்கள்
நம்ப முடியாமல் ஆச்சரியப்பட்டார்கள், மிகுந்த சந்தோஷமும் அடைந்
தார்கள். அப்போது அவர், “உங்களிடம் சாப்பிட ஏதாவது இருக்கிறதா?”
என்று கேட்டார். **42** அதற்கு அவர்கள், சுட்ட மீன் துண்டு ஒன்றை அவ
ரிடம் கொடுத்தார்கள். **43** அதை எடுத்து அவர்கள் கண் முன்னால் சாப்
பிட்டார்.

44 பின்பு அவர்களிடம், “என்னைப் பற்றி மோசேயின் திருச்சட்டத்தி
லும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களிலும் சங்கீதங்களிலும் எழுதப்பட்ட எல்லா
விஷயங்களும் நிறைவேற வேண்டுமென்று[f] நான் உங்களோடு இருந்த
போது சொன்னேனே”[g] என்றார். **45** அதன் பின்பு, வேதவசனங்களின்
அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு அவர்களுடைய மனக்கண்களை முழு
மையாகத் திறந்தார்.[h] **46** பின்பு அவர்களிடம், “கிறிஸ்து பாடுகள் பட்டு,
இறந்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்திருப்பார்[i] என்றும், **47** பாவ
மன்னிப்பு பெறுவதற்காக மனம் திருந்தும்படி[j] எருசலேம் தொடங்கி[k] எல்லா
தேசங்களிலும் அவருடைய பெயரில் பிரசங்கிக்கப்படும்[l] என்றும் எழுதப்
பட்டிருக்கிறது. **48** இவற்றைப் பற்றி நீங்கள் சாட்சி கொடுக்க வேண்டும்.[m]
49 என் தகப்பன் வாக்குறுதி கொடுத்ததை நான் உங்களுக்கு அனுப்பு
கிறேன். பரலோகத்திலிருந்து வரும் வல்லமையால் நீங்கள் நிரப்பப்படும்
வரை இந்த நகரத்திலேயே தங்கியிருங்கள்”[n] என்று சொன்னார்.

24:30 *நே.மொ., “ஆசீர்வதித்து.” **24:32** *வே.வா., “தெள்ளத்தெளிவாக.” #வே.வா., “நம் இதயம் நெகிழ்ந்துபோனது.”

அதி. 24
a மத் 14:19; மத் 15:36; மாற் 6:41
b யோவா 20:19
c 1கொ 15:3, 5
d லூ 24:30, 31
e யோவா 20:21
f லூ 24:27
g மத் 16:21; லூ 9:22
h யோவா 12:16
i ஏசா 53:5; மாற் 9:31
j அப் 5:31
k அப் 4:1, 2; அப் 5:27, 28
l கலா 3:14
m யோவா 15:26, 27; அப் 1:8
n யோவே 2:28; யோவா 14:16; அப் 1:4, 5; அப் 2:1, 4

50 பின்பு, அவர்களை பெத்தானியா வரைக்கும் கூட்டிக்கொண்டு
போய்த் தன்னுடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார்.
51 அப்படி அவர்களை ஆசீர்வதிக்கும்போதே அவர்களிடமிருந்து பிரிந்து,
பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.[a] **52** அவர்கள் அவருக்குத்
தலைவணங்கிவிட்டு, மிகவும் சந்தோஷமாக எருசலேமுக்குத் திரும்பிப்
போனார்கள்.[b] **53** அதன் பின்பு, ஆலயத்தில் இடைவிடாமல் கடவுளைப்
புகழ்ந்து வந்தார்கள்.[c]

அதி. 24
a அப் 1:9
b யோவா 16:22 அப் 1:12
c அப் 2:46, 47

யோவான்

எழுதியது

முக்கியக் குறிப்புகள்

1 வார்த்தை மனிதராக ஆனார் (1-18)
யோவான் ஸ்நானகரின் சாட்சி (19-28)
இயேசு, கடவுளால் அனுப்பப்பட்ட ஆட்டுக்குட்டி (29-34)
இயேசுவின் முதல் சீஷர்கள் (35-42)
பிலிப்புவும் நாத்தான்வேலும் (43-51)

2 கானா ஊர் கல்யாணம்; தண்ணீர் திராட்சமதுவாக மாற்றப்படுகிறது (1-12)
ஆலயத்தை இயேசு சுத்தப்படுத்துகிறார் (13-22)
மனிதனின் இதயத்தில் இருப்பது இயேசுவுக்குத் தெரியும் (23-25)

3 இயேசுவும் நிக்கொதேமுவும் (1-21)
மறுபடியும் பிறப்பது (3-8)
உலகத்தின்மேல் கடவுள் அன்பு காட்டினார் (16)
இயேசுவைப் பற்றி யோவான் கடைசியாகச் சாட்சி கொடுக்கிறார் (22-30)
மேலிருந்து வருகிறவர் (31-36)

4 இயேசுவும் சமாரியப் பெண்ணும் (1-38)
“சக்தியின் வழிநடத்துதலோடும் சத்தியத்தோடும்” கடவுளை வணங்க வேண்டும் (23, 24)
சமாரியர்கள் நிறைய பேர் விசுவாசம் வைக்கிறார்கள் (39-42)
அதிகாரியின் மகனை இயேசு குணமாக்குகிறார் (43-54)

5 வியாதிப்பட்ட ஒருவர் பெத்சதாவில் குணமாக்கப்படுகிறார் (1-18)
இயேசுவுக்கு அவருடைய தகப்பன் அதிகாரம் கொடுக்கிறார் (19-24)
இறந்தவர்கள் இயேசுவின் குரலைக் கேட்பார்கள் (25-30)
இயேசுவைப் பற்றிய சாட்சிகள் (31-47)

6 இயேசு 5,000 பேருக்கு உணவு கொடுக்கிறார் (1-15)
தண்ணீர்மேல் நடக்கிறார் (16-21)
இயேசுதான் “வாழ்வு தரும் உணவு” (22-59)
இயேசு சொன்னதைக் கேட்ட நிறைய பேர் அவரை விட்டுப் போய்விடுகிறார்கள் (60-71)

7 கூடாரப் பண்டிகையில் இயேசு கலந்துகொள்கிறார் (1-13)
பண்டிகை சமயத்தில் இயேசு கற்பிக்கிறார் (14-24)
கிறிஸ்துவைப் பற்றி வித்தியாசமான கருத்துகள் (25-52)

8 இயேசுவைப் பற்றி தகப்பன் சாட்சி கொடுக்கிறார் (12-30)
இயேசு, “உலகத்துக்கு ஒளி” (12)
ஆபிரகாமின் பிள்ளைகள் (31-41)
“சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” (32)
பிசாசின் பிள்ளைகள் (42-47)
இயேசுவும் ஆபிரகாமும் (48-59)

9 பார்வையற்றவனாகப் பிறந்தவனை இயேசு குணமாக்குகிறார் (1-12)
குணமானவனைப் பரிசேயர்கள் விசாரிக்கிறார்கள் (13-34)
பரிசேயர்கள் பார்வையற்றவர்கள் (35-41)

10 மேய்ப்பனும் தொழுவங்களும் (1-21)
இயேசுவே நல்ல மேய்ப்பர் (11-15)
“வேறே ஆடுகளும் எனக்கு இருக்கின்றன” (16)
ஆலய அர்ப்பணப் பண்டிகையில் இயேசுவிடம் யூதர்கள் விவாதம் (22-39)
யூதர்கள் பலர் நம்ப மறுக்கிறார்கள் (24-26)
“என் ஆடுகள் என் குரலைக் கேட்கின்றன” (27)
தகப்பனோடு மகன் ஒன்றுபட்டிருக்கிறார் (30, 38)
யோர்தானுக்கு அக்கரையில் நிறைய பேர் விசுவாசம் வைக்கிறார்கள் (40-42)

11 லாசருவின் மரணம் (1-16)
மார்த்தாளுக்கும் மரியாளுக்கும் இயேசு ஆறுதல் சொல்கிறார் (17-37)
லாசருவை உயிரோடு எழுப்புகிறார் (38-44)
இயேசுவைக் கொல்ல திட்டம் (45-57)

12 இயேசுவின் பாதங்களில் மரியாள் எண்ணெய் ஊற்றுகிறாள் (1-11)
இயேசுவின் வெற்றி பவனி (12-19)
தன் மரணத்தைப் பற்றி இயேசு முன்னறிவிக்கிறார் (20-37)
யூதர்கள் விசுவாசம் வைக்காதது தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுகிறது (38-43)
இயேசு உலகத்தை மீட்க வந்தார் (44-50)

13 இயேசு சீஷர்களின் பாதங்களைக் கழுவுகிறார் (1-20)
தன்னைக் காட்டிக்கொடுக்கப்போகிறவனை இயேசு அடையாளம் காட்டுகிறார் (21-30)
புதிய கட்டளை (31-35)
“நீங்கள் ஒருவர்மேல் ஒருவர் அன்பு காட்டினால்” (35)
தன்னைத் தெரியாதென்று பேதுரு சொல்லிவிடுவாரென இயேசு முன்னறிவிக்கிறார் (36-38)

14 தகப்பனிடம் போவதற்கு இயேசு மட்டும்தான் வழி (1-14)
‘நானே வழி, சத்தியம், வாழ்வு’ (6)
கடவுளுடைய சக்தியை அனுப்புவதாக இயேசு வாக்குறுதி தருகிறார் (15-31)
“என் தகப்பன் என்னைவிட பெரியவர்” (28)

15 உண்மையான திராட்சைக் கொடியைப் பற்றிய உவமை (1-10)
கிறிஸ்துவைப் போல் அன்பு காட்ட வேண்டும் என்ற கட்டளை (11-17)
‘இதைவிட மேலான அன்பு வேறு எதுவும் இல்லை’ (13)
இயேசுவின் சீஷர்களை உலகம் வெறுக்கிறது (18-27)

16 இயேசுவின் சீஷர்கள் கொலை செய்யப்படலாம் (1-4அ)
கடவுளுடைய சக்தியின் செயல் (4ஆ-16)
சீஷர்களின் வேதனை சந்தோஷமாக மாறும் (17-24)
இயேசு உலகத்தை ஜெயித்தார் (25-33)

17 அப்போஸ்தலர்களோடு இயேசு செய்த கடைசி ஜெபம் (1-26)
கடவுளைப் பற்றித் தெரிந்துகொண்டே இருந்தால் முடிவில்லாத வாழ்வு கிடைக்கும் (3)
கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தின் பாகமாக இல்லை (14-16)
“உங்களுடைய வார்த்தைதான் சத்தியம்” (17)
“உங்களுடைய பெயரைத் தெரியப்படுத்தினேன்” (26)

18 இயேசுவை யூதாஸ் காட்டிக்கொடுக்கிறான் (1-9)
பேதுரு வாளால் தாக்குகிறார் (10, 11)
அன்னாவிடம் இயேசு கொண்டுபோகப்படுகிறார் (12-14)
இயேசுவைத் தெரியாதென்று பேதுரு முதல் தடவை சொல்கிறார் (15-18)
அன்னாவின் முன்னால் இயேசு (19-24)
இயேசுவைத் தெரியாதென்று பேதுரு இரண்டாம், மூன்றாம் தடவை சொல்கிறார் (25-27)
பிலாத்து முன்னால் இயேசு (28-40)
“என்னுடைய அரசாங்கம் இந்த உலகத்தின் பாகமல்ல” (36)

19 இயேசு முள்சாட்டையால் அடிக்கப்படுகிறார், கேலி செய்யப்படுகிறார் (1-7)
பிலாத்து மறுபடியும் இயேசுவைக் கேள்வி கேட்கிறார் (8-16அ)
கொல்கொதாவில் மரக் கம்பத்தில் இயேசு ஆணியடிக்கப்படுகிறார் (16ஆ-24)
தன் அம்மாவைக் கவனித்துக்கொள்ள இயேசு ஏற்பாடு செய்கிறார் (25-27)
இயேசுவின் மரணம் (28-37)
இயேசு அடக்கம் செய்யப்படுகிறார் (38-42)

20 கல்லறை காலியாக இருக்கிறது (1-10)
இயேசு மகதலேனா மரியாளுக்குமுன் தோன்றுகிறார் (11-18)
இயேசு சீஷர்களுக்குமுன் தோன்றுகிறார் (19-23)

தோமா சந்தேகப்படுகிறார், பிறகு நம்புகிறார் (24-29)
இந்தச் சுருள் எழுதப்பட்டதற்கான காரணம் (30, 31)

21 இயேசு சீஷர்களுக்குமுன் தோன்றுகிறார் (1-14)
இயேசுமேல் தனக்கு அன்பு இருப்பதை பேதுரு உறுதிப்படுத்துகிறார் (15-19)
“என் ஆட்டுக்குட்டிகளுக்கு உணவு கொடு” (17)
இயேசுவின் அன்புச் சீஷருடைய எதிர்காலம் (20-23)
முடிவுரை (24, 25)

1 ஆரம்பத்தில் வார்த்தை என்பவர் இருந்தார்,[a] அந்த வார்த்தை கட
வுளோடு இருந்தார்,[b] அந்த வார்த்தை தெய்வீகத்தன்மை உள்ளவராக
இருந்தார்.[c] **2** அவர் ஆரம்பத்தில் கடவுளோடு இருந்தார். **3** எல்லாம்
அவர் மூலமாகத்தான் உண்டானது,[d]

அவரில்லாமல் எதுவுமே உண்டாகவில்லை. **4** அவர் மூலம் வாழ்வு
உண்டானது, அந்த வாழ்வு மனிதர்களுக்கு ஒளியாக இருந்தது.[e] **5** அந்த
ஒளி, இருளில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது;[f] இருள் அதை அடக்கி
ஆளவில்லை.

6 கடவுளுடைய பிரதிநிதியாக அனுப்பப்பட்ட ஒரு மனிதர் வந்தார்; அவ
ருடைய பெயர் யோவான்.[g] **7** அவர் ஒரு சாட்சியாக வந்தார்; எல்லா வித
மான மக்களும் தன் மூலம் அந்த ஒளியில் நம்பிக்கை வைப்பதற்காக அந்த
ஒளியைப் பற்றிச் சாட்சி கொடுக்க வந்தார்.[h] **8** அவர் அந்த ஒளி அல்ல,[i]
ஆனால் அந்த ஒளியைப் பற்றிச் சாட்சி கொடுக்க வந்தவர்.

9 எல்லா விதமான மனிதர்களுக்கும் ஒளி கொடுக்கிற அந்த உண்
மையான ஒளி இந்த உலகத்துக்குச் சீக்கிரத்தில் வரவிருந்தார்.[j] **10** அவர்*
இந்த உலகத்தில் இருந்தார்.[k] அவர் மூலமாக இந்த உலகம் உண்டானது,[l]
ஆனால் இந்த உலகம் அவரைப் பற்றித் தெரிந்துகொள்ளவில்லை.
11 அவர் தன்னுடைய சொந்த தேசத்துக்கே வந்தார், ஆனால் அவரு
டைய சொந்த மக்களே அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. **12** இருந்தாலும்,
அவரை ஏற்றுக்கொண்ட எல்லாருக்கும் கடவுளுடைய பிள்ளைகளாகும் உரி
மையைக் கொடுத்தார்.[m] ஏனென்றால், அவருடைய பெயரில் அவர்கள் விசு
வாசம் வைத்திருந்தார்கள்.[n] **13** அவர்கள் இரத்தத்தாலோ இயற்கையான
ஆசையாலோ ஆண்மகனின் விருப்பத்தாலோ பிறந்தவர்கள் அல்ல, கடவு
ளால் பிறந்தவர்கள்.[o]

14 அந்த வார்த்தை ஒரு மனிதராகி*[p] நம் மத்தியில் குடியிருந்தார்.
அவருடைய மகிமையைப் பார்த்தோம். அந்த மகிமை தகப்பனிடமி
ருந்து ஒரே மகனுக்கு#[q] கிடைக்கும் மகிமையாக இருந்தது. அவர் அள
வற்ற கருணையும்△ சத்தியமும் நிறைந்தவராக இருந்தார். **15** (அவரைப்
பற்றி யோவான் சாட்சி கொடுத்தார்; "‘எனக்குப் பின்னால் வரப்போகிறவர்
எனக்கு முன்னால் போயிருக்கிறார்; ஏனென்றால், அவர் எனக்கு முன்பி

1:10 * அதாவது, “அந்த வார்த்தை.” **1:14** * நே.மொ., “ஒரு சதையாகி.” # அதாவது, “கடவுளால் நேரடியாகப் படைக்கப்பட்ட ஒரே மகனுக்கு.” △ வே.வா., “கடவுளுடைய பிரியமும்.”

அதி. 1
a கொலோ 1:15; வெளி 19:11, 13
b நீதி 8:22, 30
c ஏசா 9:6; யோவா 1:18; பிலி 2:5, 6
d யோவா 1:10
e யோவா 8:12
f யோவா 3:19
g மத் 3:1; லூ 3:2
h மத் 3:11
i யோவா 1:19, 20
j மத் 4:16, 17; யோவா 3:19; யோவா 12:46; 1யோ 2:8
k யோவா 1:14
l ஆதி 1:26; 1கொ 8:6; கொலோ 1:16; எபி 1:2
m ரோ 8:14, 16; 2கொ 6:18; எபே 1:5; 1யோ 3:1
n கலா 3:26
o யோவா 3:3; 1பே 1:23; 1யோ 3:9
p பிலி 2:7; 1தீ 3:16; எபி 2:14
q யோவா 3:16; 1யோ 4:9

ருந்தே இருக்கிறார்' என நான் சொன்னது இவரைப் பற்றித்தான்" என்று சத்
தமாகச் சொன்னார்.)[a] **16** அவர் அளவற்ற கருணை நிறைந்தவராக இருந்
தார், அதனால் அவரிடமிருந்து நாம் எல்லாரும் அளவற்ற கருணைக்கு
மேல் அளவற்ற கருணையைப் பெற்றோம். **17** மோசேயின் மூலம்
திருச்சட்டம் கொடுக்கப்பட்டது;[b] ஆனால், இயேசு கிறிஸ்துவின் மூலம்[c]
அளவற்ற கருணையும்[d] சத்தியமும் கிடைத்தன. **18** கடவுளை ஒருவரும்
ஒருபோதும் பார்த்ததில்லை.[e] தகப்பனின் பக்கத்தில் இருப்பவரும்*[f] தெய்
வீகத்தன்மை உள்ளவருமான[g] அவருடைய ஒரே மகனே அவரைப் பற்றி
விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்.[h]

19 யூதர்கள் எருசலேமிலிருந்து ஆலய குருமார்களையும் லேவியர்க
ளையும் யோவானிடம் அனுப்பி, "நீ யார்?"[i] என்று கேட்டபோது, **20** அவர்
தயங்காமல், "நான் கிறிஸ்து அல்ல" என்று வெளிப்படையாக ஒத்துக்கொண்
டார். **21** அதற்கு அவர்கள், "அப்படியானால், நீ எலியாவா?"[j] என்று கேட்
டார்கள். அப்போது அவர், "இல்லை" என்று சொன்னார். "நீதான் வரவேண்
டிய தீர்க்கதரிசியா?"[k] என்று கேட்டார்கள். அதற்கும் அவர், "இல்லை!" என்று
சொன்னார். **22** அதனால் அவர்கள், "அப்படியானால், நீ யார்? எங்களை
அனுப்பியவர்களுக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும். உன்னைப் பற்றி
என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்கள். **23** அதற்கு அவர், "'யெகோவா
வுக்கு* வழியைச் சமப்படுத்துங்கள்'[l] என்று வனாந்தரத்தில் ஒருவர் சத்தமா
கச் சொல்வார் என ஏசாயா தீர்க்கதரிசி சொன்னது என்னைப் பற்றித்தான்"[m]
என்றார். **24** அப்போது, பரிசேயர்களால் அனுப்பப்பட்ட அந்த ஆட்கள்
அவரிடம், **25** "நீ கிறிஸ்துவும் அல்ல, எலியாவும் அல்ல, வரவேண்டிய
தீர்க்கதரிசியும் அல்ல என்றால், எதற்காக ஞானஸ்நானம் கொடுக்கிறாய்?"
என்று கேட்டார்கள். **26** அதற்கு யோவான், "நான் தண்ணீரால் ஞானஸ்நா
னம் கொடுக்கிறேன். உங்கள் மத்தியில் ஒருவர் இருக்கிறார், அவர்
யாரென்று உங்களுக்குத் தெரியாது. **27** அவர் எனக்குப்பின் வரப்போகிற
வர்; அவருடைய செருப்புகளின் வாரை அவிழ்ப்பதற்குக்கூட எனக்குத் தகு
தியில்லை"[n] என்று சொன்னார். **28** இவையெல்லாம் யோர்தானுக்கு அக்க
ரையில் பெத்தானியாவில் நடந்தன. அங்கேதான் யோவான் ஞானஸ்நானம்
கொடுத்துவந்தார்.[o]

29 அடுத்த நாள் இயேசு தன்னை நோக்கி வருவதை யோவான்
பார்த்தபோது, "இதோ, உலகத்தின்[p] பாவத்தைப் போக்குவதற்குக்[q] கடவு
ளால் அனுப்பப்பட்ட ஆட்டுக்குட்டி![r] **30** 'எனக்குப்பின் வரப்போகிறவர்
எனக்கு முன்னால் போயிருக்கிறார். ஏனென்றால், அவர் எனக்கு முன்பி
ருந்தே இருக்கிறார்'[s] என்று நான் சொன்னது இவரைப் பற்றித்தான்.
31 எனக்கும்கூட இவரைத் தெரியவில்லை. ஆனால், இவர் யாரென்று இஸ்
ரவேல் மக்களுக்கு வெளிப்பட வேண்டும் என்பதற்காகவே தண்ணீரால்
ஞானஸ்நானம் கொடுக்க வந்தேன்"[t] என்று சொன்னார். **32** அதோடு,
"கடவுளுடைய சக்தி புறாவைப் போல் பரலோகத்திலிருந்து இறங்கி
இவர்மேல் தங்கியதைப் பார்த்தேன்.[u] **33** எனக்கும்கூட இவரைத் தெரிய
வில்லை; ஆனால், தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு என்னை
அனுப்பியவர், 'கடவுளுடைய சக்தி இறங்கி யார்மேல் தங்குவதைப்

1:18 *வே.வா., "தகப்பனின் நெஞ்சத்துக்கு நெருக்கமானவரும்." **1:23** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 1
a யோவா 8:58
b யாத் 31:18
c யோவா 8:31, 32; யோவா 14:6; யோவா 18:37
d ரோ 3:23, 24; எபே 1:5, 6
e யாத் 33:17, 20; யோவா 6:46
f நீதி 8:22, 30
g யோவா 1:1
h மத் 11:27
i லூ 3:15
j மல் 4:5
k உபா 18:15; யோவா 6:14, 15; யோவா 7:37, 40; அப் 3:22
l ஏசா 40:3
m மத் 3:1, 3; மாற் 1:3; லூ 1:67, 76; லூ 3:3, 4; லூ 7:27, 28
n மத் 3:11
o மத் 3:1, 6
p யோவா 6:51; 1யோ 2:1, 2; 1யோ 4:14
q ஏசா 53:7, 11; 1கொ 15:3; எபி 9:13, 14; 1பே 2:24; 1யோ 3:5
r அப் 8:32, 35; 1பே 1:18, 19; வெளி 5:6
s யோவா 1:15
t அப் 19:4
u மத் 3:16; மாற் 1:10; லூ 3:22

பார்க்கிறாயோ[a] அவர்தான் அந்தச் சக்தியால் ஞானஸ்நானம் கொடுப்ப
வர்'[b] என்று என்னிடம் சொல்லியிருந்தார். **34** அதை நான் பார்த்தேன்,
அதனால் இவர்தான் கடவுளுடைய மகன்[c] என்று சாட்சி கொடுத்துவருகி
றேன்" என்று சொன்னார்.

35 அடுத்த நாள், மறுபடியும் தன்னுடைய சீஷர்கள் இரண்டு பேரோடு
யோவான் நின்றுகொண்டிருந்தார். **36** அப்போது இயேசு நடந்துபோவ
தைப் பார்த்து, "இதோ! கடவுளால் அனுப்பப்பட்ட ஆட்டுக்குட்டி"[d] என்று
சொன்னார். **37** அவர் அப்படிச் சொன்னதை அந்தச் சீஷர்கள் இரண்டு
பேரும் கேட்டவுடன், இயேசுவின் பின்னால் போனார்கள். **38** அவர்கள்
தன் பின்னால் வருவதை இயேசு திரும்பிப் பார்த்து, "உங்களுக்கு என்ன
வேண்டும்?" என்று கேட்டார். அப்போது அவர்கள், "ரபீ (இதற்கு "போத
கரே" என்று அர்த்தம்), நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?" என்று கேட்
டார்கள். **39** அதற்கு அவர், "நீங்களே வந்து பாருங்கள்" என்று சொன்
னார். அவர்களும் அவர் தங்கியிருந்த இடத்தைப் போய்ப் பார்த்தார்கள்,
அன்று அவருடன் தங்கினார்கள். அப்போது, சுமார் பத்தாம் மணிநேர
மாக* இருந்தது. **40** யோவான் சொன்னதைக் கேட்டு இயேசுவின் பின்
னால் போன இரண்டு பேரில் ஒருவர் அந்திரேயா,[e] இவர் சீமோன்
பேதுருவின் சகோதரர். **41** இவர் முதலில் போய்த் தன்னுடைய சொந்த
சகோதரராகிய சீமோனைப் பார்த்து, "நாங்கள் மேசியாவைக் கண்டுகொண்
டோம்"[f] என்று சொன்னார். (மேசியா என்பது "கிறிஸ்து" என்று மொழி
பெயர்க்கப்படுகிறது). **42** பின்பு, அவரை இயேசுவிடம் கூட்டிக்கொண்டு
போனார். இயேசு அவரைப் பார்த்தபோது, "நீ யோவானுடைய மகன்
சீமோன்;[g] இனி கேபா என்று அழைக்கப்படுவாய்" என்றார். (கேபா என்ற
வார்த்தை "பேதுரு" என மொழிபெயர்க்கப்படுகிறது).[h]

43 அடுத்த நாள், இயேசு கலிலேயாவுக்குப் போக விரும்பினார். அப்
போது பிலிப்புவைப்[i] பார்த்து, "என்னைப் பின்பற்றி வா" என்று சொன்னார்.
44 அந்திரேயாவையும் பேதுருவையும் போலவே இந்த பிலிப்புவும்
பெத்சாயிதா நகரத்தைச் சேர்ந்தவர். **45** இவர் நாத்தான்வேலைச்[j] சந்
தித்து, "தீர்க்கதரிசிகளும், திருச்சட்டத்தில் மோசேயும் யாரைப் பற்றி
எழுதினார்களோ அவரை நாங்கள் கண்டுகொண்டோம். யோசேப்பின்[k]
மகனும் நாசரேத்தைச் சேர்ந்தவருமான இயேசுதான் அவர்" என்று சொன்
னார். **46** ஆனால் நாத்தான்வேல் அவரிடம், "நாசரேத்திலிருந்து நல்லது
ஏதாவது வர முடியுமா?" என்று கேட்டார். அதற்கு பிலிப்பு, "நீயே வந்து
பார்" என்று சொன்னார். **47** நாத்தான்வேல் தன்னை நோக்கி வருவதை
இயேசு பார்த்து, "இதோ! கள்ளம்கபடமில்லாத உத்தம இஸ்ரவேலன்"[l]
என்று சொன்னார். **48** அதற்கு நாத்தான்வேல், "என்னை எப்படி உங்க
ளுக்குத் தெரியும்?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "பிலிப்பு உன்னைக்
கூப்பிடுவதற்கு முன்னால் நீ அத்தி மரத்தின் கீழ் இருந்தபோதே நான்
உன்னைப் பார்த்தேன்" என்று சொன்னார். **49** அதற்கு நாத்தான்வேல்,
"ரபீ, நீங்கள்தான் கடவுளுடைய மகன், நீங்கள்தான் இஸ்ரவேலின் ராஜா"[m]
என்று சொன்னார். **50** அப்போது இயேசு அவரிடம், "அத்தி மரத்தின்
கீழ் உன்னைப் பார்த்தேன் என்று சொன்னதால்தான் நம்புகிறாயா? இவற்
றைவிட பெரிய காரியங்களை நீ பார்ப்பாய்" என்று சொன்னார். **51** பின்பு,

1:39 * அதாவது, "மாலை சுமார் 4 மணியாக."

அதி. 1
a மத் 3:16
b மத் 3:11; அப் 1:5; அப் 2:1, 4
c மத் 3:17
d வெளி 5:12
e மத் 4:18
f தானி 9:25
g மத் 10:2; அப் 15:14
h மத் 16:18
i மத் 10:2, 3
j மத் 10:2, 3; லூ 6:13, 14
k மத் 1:16; மத் 13:55; லூ 2:4
l யோவா 2: 24, 25
m மத் 27:11; லூ 1:31, 32; யோவா 12:13

அவரிடம், “வானம் திறந்திருப்பதையும் தேவதூதர்கள் மனிதகுமாரனிடம்
இறங்குவதையும் அவரிடமிருந்து ஏறுவதையும்[a] பார்ப்பீர்கள் என்று உண்
மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.

2 மூன்றாம் நாள் கலிலேயாவில் இருக்கிற கானா ஊரில் ஒரு கல்
யாண விருந்து நடந்தது. இயேசுவின் அம்மா அங்கே வந்திருந்தார்.
2 இயேசுவும் அவருடைய சீஷர்களும்கூட அந்தக் கல்யாண விருந்துக்கு
அழைக்கப்பட்டிருந்தார்கள்.

3 திராட்சமது கிட்டத்தட்ட தீர்ந்துபோனபோது இயேசுவின் அம்மா, “பரி
மாறுவதற்கு அவர்களிடம் திராட்சமது இல்லை” என்று அவரிடம் சொன்
னார். **4** அப்போது இயேசு, “பெண்மணியே, அதற்கு நாம் என்ன செய்
வது?* என்னுடைய நேரம் இன்னும் வரவில்லை” என்று சொன்னார்.
5 அதனால் அவருடைய அம்மா, “அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி
செய்யுங்கள்” என்று பரிமாறுகிறவர்களிடம் சொன்னார். **6** யூதர்களுடைய
தூய்மைச் சடங்குக்குத்[b] தேவையான ஆறு தண்ணீர் ஜாடிகள் அங்கே
வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கல்ஜாடிகள் ஒவ்வொன்றும் இரண்டு அல்லது
மூன்று குடம்* தண்ணீர் பிடிப்பவை. **7** பரிமாறுகிறவர்களைப் பார்த்து
இயேசு, “இந்த ஜாடிகளில் தண்ணீர் நிரப்புங்கள்” என்று சொன்னார்.
அவர்களும் அவற்றின் விளிம்புவரை நிரப்பினார்கள். **8** பின்பு அவர்களி
டம், “இதிலிருந்து எடுத்துக்கொண்டு போய் விருந்தின் மேற்பார்வையாளரி
டம் கொடுங்கள்” என்று சொன்னார். அவர்களும் அப்படியே செய்தார்கள்.
9 திராட்சமதுவாக மாற்றப்பட்ட தண்ணீரை மேற்பார்வையாளர் ருசிபார்த்
தார். அந்தத் திராட்சமது எப்படி வந்ததென்று அதைக் கொண்டுவந்தவர்
களுக்குத் தெரிந்திருந்தபோதிலும் அவருக்குத் தெரியவில்லை. அதனால்,
அந்த மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு, **10** “எல்லாரும் தர
மான திராட்சமதுவை முதலில் பரிமாறிவிட்டு, விருந்தாளிகள் மனம்போல்
குடித்த பிறகு தரம் குறைந்ததைப் பரிமாறுவார்கள். ஆனால், நீங்கள் தர
மான திராட்சமதுவை இதுவரை வைத்திருக்கிறீர்களே” என்று சொன்னார்.
11 கலிலேயாவில் இருக்கிற கானா ஊரில் இயேசு இந்த முதல் அற்புதத்
தைச் செய்து, தன்னுடைய வல்லமையைக் காட்டினார்.[c] அவருடைய சீஷர்
கள் அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள்.

12 இதன் பின்பு, அவரும் அவருடைய அம்மாவும் அவருடைய சகோ
தரர்களும்[d] அவருடைய சீஷர்களும் கப்பர்நகூமுக்குப்[e] போனார்கள்.
ஆனால், அங்கே அவர்கள் அதிக நாட்கள் தங்கவில்லை.

13 யூதர்களுடைய பஸ்கா பண்டிகை[f] நெருங்கிவிட்டதால் இயேசு எருச
லேமுக்குப் போனார். **14** ஆலயத்தில் ஆடு, மாடு, புறா[g] விற்பவர்க
ளையும், இருக்கைகளில் உட்கார்ந்திருந்த காசுத் தரகர்களையும் பார்த்தார்.
15 உடனே, கயிறுகளால் ஒரு சாட்டை செய்து, ஆடு மாடுகளோடு சேர்த்து
அவர்கள் எல்லாரையும் ஆலயத்திலிருந்து விரட்டினார்; காசு மாற்றுபவர்க
ளின் காசுகளைக் கீழே கொட்டி, அவர்களுடைய மேஜைகளைக் கவிழ்த்துப்
போட்டார்.[h] **16** புறா விற்பவர்களிடம், “இதையெல்லாம் இங்கிருந்து

2:4 *நே.மொ., “எனக்கும் உங்களுக்கும் என்ன?” மறுப்புத் தெரிவிப்பதற்காக இந்த மரபுத்தொடர் பயன்படுத்தப்பட்டது. “பெண்மணியே” என்ற வார்த்தை அவமரியாதையைக் குறிக்காது. **2:6** *அநேகமாக, ஒரு குடம் என்பது “பாத்” அளவைக் குறிக்கலாம். ஒரு பாத் என்பது 22 லி. இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 1
a ஆதி 28:10, 12
சங் 104:4
தானி 7:13
மத் 4:11
லூ 22:43

அதி. 2
b மாற் 7:3
c ஏசா 9:1, 2
யோவா 1:14
d மத் 13:55
மாற் 3:31
லூ 8:19
அப் 1:14
e மத் 4:13
f யாத் 12:14
எண் 28:16
உபா 16:1
யோவா 11:55
g லேவி 1:14
h மத் 21:12
மாற் 11:15, 16
லூ 19:45

எடுத்துக்கொண்டு போங்கள்! என் தகப்பனுடைய வீட்டை இனியும் சந்தைக் கடை ஆக்காதீர்கள்!"[a] என்று சொன்னார். **17** அப்போது, "உங்களுடைய வீட்டின் மேலுள்ள பக்திவைராக்கியம் எனக்குள் பற்றியெரியும்"[b] என்று எழுதப்பட்டிருக்கிற வசனத்தை அவருடைய சீஷர்கள் நினைத்துப் பார்த்தார்கள்.

18 யூதர்கள் அவரிடம், "இப்படியெல்லாம் செய்கிறாயே, உனக்கு அதிகாரம் இருப்பதை நிரூபிக்க என்ன அடையாளத்தை எங்களுக்குக் காட்டப்போகிறாய்?"[c] என்று கேட்டார்கள். **19** அதற்கு இயேசு, "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாட்களில் இதை எழுப்புவேன்"[d] என்று சொன்னார். **20** அப்போது யூதர்கள், "இந்த ஆலயத்தைக் கட்ட 46 வருஷங்கள் எடுத்தன, நீ இதை மூன்று நாட்களில் எழுப்பிவிடுவாயோ?" என்றார்கள். **21** ஆனால், அவர் தன்னுடைய உடலாகிய ஆலயத்தைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்.[e] **22** இயேசு அடிக்கடி அப்படிச் சொன்னதை அவர் உயிரோடு எழுப்பப்பட்டபோது சீஷர்கள் நினைத்துப் பார்த்தார்கள்.[f] அதனால், வேதவசனங்களையும் அவர் சொன்ன வார்த்தைகளையும் நம்பினார்கள்.

23 பஸ்கா பண்டிகை சமயத்தில் அவர் எருசலேமில் செய்த அடையாளங்களைப் பார்த்து, நிறைய பேர் அவருடைய பெயரில் விசுவாசம் வைத்தார்கள். **24** ஆனால், இயேசு அவர்களை நம்பவில்லை. ஏனென்றால், அவர்கள் எல்லாரையும் பற்றி அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. **25** எந்த மனிதனைப் பற்றியும் அவருக்கு யாரும் எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஏனென்றால், அவர்களுடைய இதயத்தில் என்ன இருந்ததென்று அவருக்குத் தெரிந்திருந்தது.[g]

3 நிக்கொதேமு[h] என்ற ஒரு பரிசேயர் இருந்தார்; அவர் யூதர்களுடைய தலைவர்களில் ஒருவர். **2** அவர் ஒருநாள் ராத்திரி இயேசுவிடம் போய்,[i] "ரபீ,[j] நீங்கள் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் செய்கிற இந்த அடையாளங்களைக்[k] கடவுளுடைய உதவி இல்லாமல் யாராலும் செய்ய முடியாது"[l] என்று சொன்னார். **3** அப்போது இயேசு, "உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், ஒருவன் மறுபடியும் பிறக்கவில்லை*[m] என்றால், கடவுளுடைய அரசாங்கத்தைப் பார்க்க முடியாது"[n] என்று சொன்னார். **4** அதற்கு நிக்கொதேமு, "வயதான பிறகு ஒருவனால் எப்படிப் பிறக்க முடியும்? இரண்டாவது தடவை அவன் தன்னுடைய தாயின் வயிற்றிலிருந்து பிறக்க முடியாது, இல்லையா?" என்று கேட்டார். **5** அப்போது இயேசு, "உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், தண்ணீராலும்[o] கடவுளுடைய சக்தியாலும் ஒருவன் பிறக்கவில்லை என்றால்,[p] அவன் கடவுளுடைய அரசாங்கத்துக்குள் நுழைய முடியாது. **6** மனுஷனால் பிறக்கிறவன் மனுஷனுடைய பிள்ளை, கடவுளுடைய சக்தியால் பிறக்கிறவன் கடவுளுடைய பிள்ளை. **7** ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று நான் உங்களிடம் சொன்னதைப் பற்றி ஆச்சரியப்படாதீர்கள். **8** காற்று அதற்கு விருப்பமான இடத்தில் வீசுகிறது, அதன் சத்தத்தை நீங்கள் கேட்கிறீர்கள். ஆனால் அது எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறது என்பது உங்களுக்குத் தெரியாது. கடவுளுடைய சக்தியால் பிறந்திருக்கிற எல்லாரும் அப்படித்தான் இருக்கிறார்கள்"[q] என்று சொன்னார்.

3:3 * அல்லது, "மேலிருந்து பிறக்கவில்லை."

அதி. 2
a எரே 7:11, மத் 21:13, மாற் 11:17, லூ 19:46
b சங் 69:9
c மத் 12:38, மத் 16:1, யோவா 4:48, யோவா 6:30
d மத் 26:59-61, மத் 27:39, 40, மாற் 14:57, 58
e மத் 16:21
f லூ 24:6-8
g மத் 9:3, 4, மாற் 2:6-8, யோவா 1:47, 48, யோவா 6:64, வெளி 2:23

அதி. 3
h யோவா 7:50, 51, யோவா 19:39
i யோவா 12:42
j யோவா 1:38
k யோவா 2:11
l யோவா 14:11, அப் 2:22, அப் 10:38
m யோவா 1:12, 13, 1பே 1:3, 23, 1யோ 3:9
n 1கொ 15:50
o மத் 28:19, அப் 8:36, அப் 10:47
p மத் 3:11, அப் 1:5, அப் 10:45, அப் 19:5, 6
q ரோ 8:14, 16

9 அதற்கு நிக்கொதேமு, "இதெல்லாம் எப்படி நடக்கும்?" என்று கேட்
டார். 10 அப்போது இயேசு, "இஸ்ரவேல் மக்களுக்குப் போதகராக இருந்
தும்கூட இது உங்களுக்குத் தெரியவில்லையா? 11 உண்மையாகவே உண்
மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், எங்களுக்குத் தெரிந்ததைப் பற்றித்
தான் நாங்கள் பேசுகிறோம், பார்த்ததைப் பற்றித்தான் சாட்சி சொல்கிறோம்.
ஆனால், நீங்கள் எல்லாரும் எங்களுடைய சாட்சியை ஏற்றுக்கொள்வ
தில்லை. 12 பூமிக்குரிய விஷயங்களைப் பற்றி நான் உங்களுக்குச் சொன்
னதை நீங்கள் நம்பவில்லை என்றால், பரலோகத்துக்குரிய விஷயங்க
ளைப் பற்றிச் சொல்லும்போது எப்படி நம்புவீர்கள்? 13 எந்த மனுஷனும்
பரலோகத்துக்கு ஏறிப் போனதில்லை.[a] ஆனால், மனிதகுமாரன் பரலோகத்
திலிருந்து இறங்கி வந்திருக்கிறார்.[b] 14 வனாந்தரத்தில் மோசேயால்
பாம்பு உயர்த்தப்பட்டதுபோல்[c] மனிதகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும்.[d]
15 அப்போதுதான், அவரை நம்புகிற எல்லாரும் முடிவில்லாத வாழ்வைப்
பெறுவார்கள்.[e]

16 கடவுள் தன்னுடைய ஒரே மகன்மேல்*[f] விசுவாசம் வைக்கிற யாரும்
அழிந்துபோகாமல் முடிவில்லாத வாழ்வைப் பெற வேண்டும் என்பதற்
காக அவரைத் தந்து,[g] இந்தளவுக்கு உலகத்தின் மேல் அன்பு காட்டினார்.
17 இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பதற்கு அல்ல, மீட்பதற்கே கடவுள் தன்
னுடைய மகனை இந்த உலகத்துக்கு அனுப்பினார்.[h] 18 அவர்மேல் விசு
வாசம் வைக்கிறவன் நியாயந்தீர்க்கப்படுவதில்லை.[i] விசுவாசம் வைக்காத
வனோ, கடவுளுடைய ஒரே மகனின்* பெயரில் விசுவாசம் வைக்காததால்
ஏற்கெனவே நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டான்.[j] 19 நியாயத்தீர்ப்புக்கு அடிப்
படையாக இருப்பது இதுதான்: இந்த உலகத்துக்கு ஒளி வந்திருக்கிறது.[k]
ஆனாலும், மக்களுடைய செயல்கள் பொல்லாதவையாக இருப்பதால்
ஒளிக்குப் பதிலாக இருளையே விரும்புகிறார்கள். 20 கெட்ட செயல்க
ளைத் தொடர்ந்து செய்கிறவன் ஒளியை வெறுக்கிறான், தன்னுடைய செயல்
கள் அம்பலமாகிவிட* கூடாது என்பதற்காக ஒளியிடம் வராமல் இருக்கி
றான். 21 நீதியான செயல்களைச் செய்கிறவனோ, தன்னுடைய செயல்கள்
கடவுளுடைய விருப்பத்தின்படி இருக்கின்றன என்பது வெளிப்படுவதற்
காக ஒளியிடம் வருகிறான்[l]" என்று சொன்னார்.

22 இவற்றுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷர்களும் யூதே
யாவில் இருக்கிற கிராமங்களுக்குப் போனார்கள். அங்கே அவர் சீஷர்
களோடு சில காலம் தங்கி, ஞானஸ்நானம் கொடுத்துவந்தார்.[m] 23 அப்
போது, யோவானும் சாலிமுக்குப் பக்கத்தில் அயினோன் என்ற இடத்தில்
ஞானஸ்நானம் கொடுத்துவந்தார். ஏனென்றால், அங்கே நிறைய தண்
ணீர் இருந்தது.[n] மக்கள் அங்கே போய் ஞானஸ்நானம் பெற்றுவந்தார்கள்.[o]
24 அதுவரை யோவான் சிறையில் அடைக்கப்படவில்லை.[p]

25 தூய்மைச் சடங்கு பற்றி யோவானுடைய சீஷர்களுக்கும் ஒரு யூத
னுக்கும் இடையே வாக்குவாதம் உண்டானது. 26 அவர்கள் யோவானி
டம் வந்து, "ரபீ, யோர்தானுக்கு அக்கரையில் உங்களோடு ஒருவர் இருந்
தாரே, அவரைப் பற்றி நீங்களும் சாட்சி கொடுத்தீர்களே,[q] இதோ, அவர்

3:16 *அதாவது, "கடவுளால் நேரடியாகப் படைக்கப்பட்ட ஒரே மகன்மேல்." 3:18 *அதாவது, "கடவுளால் நேரடியாகப் படைக்கப்பட்ட ஒரே மகனின்." 3:20 *வே.வா., "கண்டிக்கப்பட."

அதி. 3
a அப் 2:34
b யோவா 6:38; யோவா 8:23, 42
c எண் 21:8, 9
d யோவா 8:28; கலா 3:13
e யோவா 3:36; யோவா 20:31
f ரோ 5:8; ரோ 8:32; 1யோ 4:9, 10; 1யோ 4:19
g யோவா 6:40; யோவா 20:31; ரோ 6:23; 2தீ 3:15; 1யோ 5:13
h லூ 19:10; யோவா 12:47; 1கொ 15:22; 2கொ 5:18, 19; 1தீ 1:15; 1யோ 2:1, 2; 1யோ 4:14
i யோவா 5:24
j மத் 10:33; எபி 10:29
k யோவா 1:9; யோவா 8:12; யோவா 9:5; யோவா 12:46
l யோவா 12:36, 46; 1யோ 1:7
m யோவா 4:2
n மாற் 1:10; அப் 8:38
o மத் 3:1, 5, 6
p மத் 14:3; லூ 3:19, 20
q யோவா 1:33, 34

இப்போது ஞானஸ்நானம் கொடுத்துவருகிறார், எல்லாரும் அவரிடம்
போகிறார்கள்” என்று சொன்னார்கள். **27** அதற்கு யோவான், “பரலோகத்
திலிருந்து அருளப்பட்டால் தவிர யாரும் எதையும் பெற்றுக்கொள்ள முடி
யாது. **28** ‘நான் கிறிஸ்து அல்ல,[a] ஆனால் அவருக்குமுன் அனுப்பப்
பட்டவன்’[b] என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள். **29** மணமகள்
யாருக்குச் சொந்தமோ அவர்தான் மணமகன்.[c] இருந்தாலும், மணமகனின்
தோழன் அவர் பக்கத்தில் நின்று அவர் பேசுவதைக் கேட்டு மிகவும் சந்
தோஷப்படுகிறான். இந்தச் சந்தோஷம் எனக்கு நிறைவாகக் கிடைத்திருக்
கிறது. **30** அவருடைய செயல்கள் அதிகமாகிக்கொண்டே இருக்க வேண்
டும், ஆனால் என்னுடைய செயல்கள் குறைந்துகொண்டே இருக்க
வேண்டும்” என்று சொன்னார்.

31 மேலிருந்து வருகிறவர்[d] எல்லாருக்கும் மேலானவர். ஆனால், பூமியி
லிருந்து வருகிறவர் பூமியிலிருந்து வருவதால் பூமிக்குரிய விஷயங்களைப்
பேசுகிறார். பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரையும்விட மேலான
வர்.[e] **32** தான் பார்த்ததையும் கேட்டதையும் பற்றி அவர் சாட்சி கொடுக்
கிறார்,[f] ஆனால் ஒருவனும் அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்வ
தில்லை.[g] **33** அவருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டவனோ, கடவுள்
உண்மையானவர் என்பதை முத்திரைபோட்டு உறுதிப்படுத்துகிறான்.[h]
34 கடவுளால் அனுப்பப்பட்டவர் கடவுளுடைய வார்த்தைகளைப் பேசுகி
றார்.[i] ஏனென்றால், கடவுள் அவருக்குத் தன்னுடைய சக்தியை அளவில்லா
மல் கொடுக்கிறார்.* **35** தகப்பன் தன்னுடைய மகன்மேல் அன்புகாட்டி,[j]
எல்லாவற்றையும் அவருடைய கையில் ஒப்படைத்திருக்கிறார்.[k] **36** மகன்
மேல் விசுவாசம் வைக்கிறவனுக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்கும்;[l]
ஆனால், மகனுக்குக் கீழ்ப்படியாதவனுக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்
காது,[m] அவன் கடவுளுடைய கடும் கோபத்துக்கே ஆளாவான்.[n]

4 யோவானைவிட இயேசு நிறைய பேரைச் சீஷர்களாக்கி ஞானஸ்நா
னம் கொடுத்துவருகிறார் என்ற செய்தியை பரிசேயர்கள் கேள்விப்பட்
டார்கள்.[o] **2** உண்மையில் இயேசு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை,
அவருடைய சீஷர்கள்தான் கொடுத்தார்கள். **3** அந்தச் செய்தியை பரிசே
யர்கள் கேள்விப்பட்டார்கள் என்பது இயேசுவுக்குத் தெரியவந்தபோது,
யூதேயாவைவிட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் புறப்பட்டார்.
4 ஆனால், அவர் சமாரியா வழியாகப் போக வேண்டியிருந்தது; **5** அத
னால், சீகார் என்ற சமாரிய நகரத்துக்கு அவர் வந்தார். யாக்கோபு தன்
னுடைய மகன் யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்குப் பக்கத்தில் அந்த
நகரம் இருந்தது.[p] **6** அங்கே யாக்கோபின் கிணறு* இருந்தது.[q] பயணம்
செய்து களைப்பாக இருந்ததால் இயேசு அந்தக் கிணற்றுக்குப் பக்கத்தில்
உட்கார்ந்தார். அப்போது, சுமார் ஆறாம் மணிநேரமாக# இருந்தது.

7 அந்தச் சமயத்தில், ஒரு சமாரியப் பெண் தண்ணீர் எடுக்க அங்கே வந்
தாள். இயேசு அவளிடம், “குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் தா” என்று கேட்
டார். **8** (அவருடைய சீஷர்கள் உணவு வாங்குவதற்காக நகரத்துக்குள்ளே
போயிருந்தார்கள்.) **9** சமாரியர்களோடு யூதர்கள் எந்தத் தொடர்பும் வைத்
துக்கொள்ள மாட்டார்கள்[r] என்பதால் அந்தச் சமாரியப் பெண் அவரி

3:34 *வே.வா., “சக்தியை அளந்து அளந்து கொடுப்பதில்லை.” **4:6** *வே.வா., “நீரூற்று.” #அதாவது, “மதியம் சுமார் 12 மணியாக.”

அதி. 3
a யோவா 1:19, 20
b மத் 11:7, 10; லூ 1:13, 17
c 2கொ 11:2; எபே 5:25; வெளி 21:9
d யோவா 8:23
e மத் 3:11
f யோவா 8:26; யோவா 15:15
g யோவா 1:11; யோவா 3:11
h 1யோ 5:10
i யோவா 7:16
j யோவா 5:20; யோவா 15:9, 10
k மத் 11:27; லூ 10:22
l யோவா 3:16; யோவா 6:47; ரோ 1:17; எபி 5:9
m 2தெ 1:7, 8; 1யோ 5:12
n எபே 5:5, 6; எபி 10:26, 27

அதி. 4
o யோவா 3:22
p ஆதி 33:18, 19; யோசு 24:32
q யோவா 4:12
r 2ரா 17:24; அப் 10:28

டம், “நான் ஒரு சமாரியப் பெண், நீங்களோ ஒரு யூதர். அப்படியிருக்கும்
போது, குடிப்பதற்கு என்னிடம் எப்படித் தண்ணீர் கேட்கிறீர்கள்?” என்றாள்.
10 அதற்கு இயேசு, “கடவுள் கொடுக்கும் இலவச அன்பளிப்பு[a] எது
என்றும், குடிப்பதற்கு உன்னிடம் தண்ணீர் கேட்பவர் யார் என்றும் உனக்
குத் தெரிந்திருந்தால், நீயே அவரிடம் கேட்டிருப்பாய். அவர் உனக்கு
வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்”[b] என்று சொன்னார். **11** அப்
போது அவள், “ஐயா, தண்ணீர் எடுக்க உங்களிடம் வாளிகூட இல்லை, கிண
றும் ஆழமாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது, வாழ்வு தரும் தண்ணீர்
உங்களுக்கு எங்கிருந்து கிடைக்கும்? **12** எங்களுக்கு இந்தக் கிணற்றைக்
கொடுத்த எங்கள் மூதாதையான யாக்கோபைவிட நீங்கள் உயர்ந்தவரா?
அவரும் அவருடைய பிள்ளைகளும் இதிலிருந்துதானே தண்ணீர் குடித்தார்
கள், அவருடைய கால்நடைகளும் இதிலிருந்துதானே தண்ணீர் குடித்தன”
என்று சொன்னாள். **13** அதற்கு இயேசு, “இந்தத் தண்ணீரைக் குடிக்கிற
எல்லாருக்கும் மறுபடியும் தாகமெடுக்கும். **14** ஆனால், நான் கொடுக்
கும் தண்ணீரைக் குடிக்கிற ஒருவனுக்கும் என்றுமே தாகம் எடுக்காது;[c] நான்
கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளிருந்து பொங்கிவருகிற நீரூற்றாக மாறி,
முடிவில்லாத வாழ்வைத் தரும்”[d] என்று சொன்னார். **15** அந்தப் பெண்
அவரிடம், “ஐயா, எனக்கு அந்தத் தண்ணீரைக் கொடுங்கள்; அப்போது
எனக்குத் தாகமும் எடுக்காது, தண்ணீர் எடுக்க நான் இங்கே வர வேண்டிய
அவசியமும் இருக்காது” என்று சொன்னாள்.

16 அதற்கு அவர், “நீ போய் உன் கணவனை இங்கே கூட்டிக்
கொண்டு வா” என்று சொன்னார். **17** அந்தப் பெண்ணோ, “எனக்குக் கண
வன் இல்லை” என்று சொன்னாள். அப்போது இயேசு, “‘எனக்குக் கணவன்
இல்லை’ என்று நீ சொன்னது சரிதான். **18** ஏனென்றால், உனக்கு ஐந்து
கணவர்கள் இருந்தார்கள், இப்போது உன்னோடு இருப்பவன் உன் கண
வன் அல்ல. நீ உண்மையைச் சொன்னாய்” என்றார். **19** அந்தப் பெண்,
“ஐயா, நீங்கள் ஒரு தீர்க்கதரிசி என்று எனக்குப் புரிந்துவிட்டது.[e]
20 எங்களுடைய முன்னோர்கள் இந்த மலையில் கடவுளை வணங்கினார்
கள். ஆனால், எருசலேமில்தான் அவரை வணங்க வேண்டுமென்று நீங்கள்
எல்லாரும் சொல்கிறீர்கள்”[f] என்றாள். **21** இயேசு அவளிடம், “பெண்ணே,
என்னை நம்பு. நேரம் வருகிறது, அப்போது பரலோகத் தகப்பனை நீங்கள்
இந்த மலையிலும் வணங்க மாட்டீர்கள், எருசலேமிலும் வணங்க மாட்டீர்
கள். **22** நீங்கள் தெரியாமல் வணங்குகிறீர்கள்.[g] நாங்களோ தெரிந்து
வணங்குகிறோம். ஏனென்றால், மீட்பு யூதர்களிடமிருந்து ஆரம்பிக்கிறது.[h]
23 ஆனாலும், உண்மை வணக்கத்தார் பரலோகத் தகப்பனை அவருடைய
சக்தியின் வழிநடத்துதலோடும் சத்தியத்தோடும் வணங்கப்போகிற நேரம்
வருகிறது, அது ஏற்கெனவே வந்துவிட்டது. சொல்லப்போனால், தன்னை
இப்படி வணங்க விரும்புகிறவர்களையே தகப்பன் தேடிக்கொண்டிருக்கி
றார்.[i] **24** கடவுள் பார்க்க முடியாத உருவத்தில்* இருக்கிறார்.[j] அவரை
வணங்குகிறவர்கள் அவருடைய சக்தியின் வழிநடத்துதலோடும் சத்தியத்
தோடும் வணங்க வேண்டும்”[k] என்று சொன்னார். **25** அந்தப் பெண் அவ
ரிடம், “கிறிஸ்து என்ற மேசியா வருவார் என்று எனக்குத் தெரியும். அவர்
வரும்போது எல்லா விஷயங்களையும் எங்களுக்கு வெளிப்படையாகச்

அதி. 4

a எபே 2:8

b யோவா 7:37

c யோவா 6:35

d யோவா 7:38
ரோ 6:23
1யோ 5:20

e லூ 7:16
யோவா 9:17

f உபா 12:5, 6
1ரா 9:3
2நா 7:12
சங் 122

g 2ரா 17:29, 33

h ஏசா 2:3
ரோ 9:4

i 2நா 16:9

j 2கொ 3:17
1தீ 1:17
எபி 11:27

k ரோ 12:1

4:24 * அதாவது, “பரலோகத்துக்குரிய உடலில்.”

சொல்வார்” என்றாள். **26** அதற்கு இயேசு, “உன்னோடு பேசிக்கொண்டி
ருக்கிற நான்தான் அவர்”[a] என்று சொன்னார்.

27 அந்தச் சமயத்தில் அவருடைய சீஷர்கள் திரும்பி வந்தார்கள்,
அவர் ஒரு பெண்ணோடு பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்
பட்டார்கள். ஆனால், “என்ன வேண்டும்?” என்றோ “அவளோடு ஏன் பேசு
கிறீர்கள்?” என்றோ யாரும் அவரிடம் கேட்கவில்லை. **28** பின்பு, அந்தப்
பெண் தன்னுடைய தண்ணீர் ஜாடியை வைத்துவிட்டு, நகரத்துக்குள் போய்
அங்கிருந்த மக்களிடம், **29** “நான் செய்த எல்லாவற்றையும் ஒருவர் என்
னிடம் சொன்னார்; அவரை வந்து பாருங்கள். அவர் கிறிஸ்துவாக இருப்
பாரோ?” என்றாள். **30** அதனால், அவர்கள் நகரத்திலிருந்து புறப்பட்டு
அவரிடம் வர ஆரம்பித்தார்கள்.

31 இதற்கிடையே அவருடைய சீஷர்கள், “ரபீ,[b] சாப்பிடுங்கள்” என்று
அவரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். **32** ஆனால் அவர், “உங்களுக்
குத் தெரியாத ஒரு உணவு என்னிடம் இருக்கிறது” என்று சொன்னார்.
33 அப்போது சீஷர்கள், “யாராவது அவருக்கு உணவு கொண்டுவந்து
கொடுத்திருப்பார்களோ?” என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்
கள். **34** இயேசு அவர்களிடம், “என்னை அனுப்பியவருடைய விருப்பத்
தின்படி* செய்து[c] அவருடைய வேலையை முடிப்பதே[d] என்னுடைய உண
வாக இருக்கிறது. **35** அறுவடைக்கு இன்னும் நான்கு மாதங்கள்
இருக்கிறதென்று நீங்கள் சொல்வதில்லையா? இதோ! நான் உங்களுக்
குச் சொல்கிறேன்: வயல்களை ஏறெடுத்துப் பாருங்கள். அவை விளைந்து
அறுவடைக்குத் தயாராக இருக்கின்றன.[e] **36** அறுவடை செய்கிறவர் ஏற்
கெனவே கூலியை வாங்கிக்கொண்டு, முடிவில்லாத வாழ்வுக்காகப் பயிர்க
ளைச் சேகரித்து வருகிறார். இதனால், விதைக்கிறவரும் அறுவடை
செய்கிறவரும் ஒன்றுசேர்ந்து சந்தோஷப்படுகிறார்கள்.[f] **37** விதைக்கிறவர்
ஒருவர், அறுவடை செய்கிறவர் வேறொருவர் என்ற பழமொழி இந்த
விஷயத்தில் உண்மையாக இருக்கிறது. **38** நீங்கள் பாடுபட்டு பயிர் செய்
யாததை அறுவடை செய்ய நான் உங்களை அனுப்பினேன். மற்றவர்
கள் உழைத்தார்கள், அவர்களுடைய உழைப்பின் பலனை நீங்களும் அனு
பவித்துவருகிறீர்கள்” என்று சொன்னார்.

39 “நான் செய்த எல்லாவற்றையும் அவர் எனக்குச் சொன்னார்”[g] என்று
சாட்சி சொன்ன பெண்ணின் வார்த்தையைக் கேட்டு, அந்த நகரத்திலிருந்த
சமாரியர்கள் நிறைய பேர் அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள். **40** அத
னால் அந்தச் சமாரியர்கள் அவரிடம் வந்து, தங்களோடு தங்க வேண்டு
மென்று அவரைக் கேட்டுக்கொண்டார்கள். அவரும் இரண்டு நாட்கள்
அங்கே தங்கினார். **41** இதன் விளைவாக, இன்னும் நிறைய பேர் அவர்
சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அவர்மேல் நம்பிக்கை வைத்தார்கள்.
42 அந்தப் பெண்ணிடம் அவர்கள், “நீ சொன்னதை வைத்து நாங்கள் இனி
நம்ப வேண்டியதில்லை, நாங்களே அவர் பேசியதைக் கேட்டோம்; நிச்சய
மாக அவர்தான் இந்த உலகத்தின் மீட்பர் என்று தெரிந்துகொண்டோம்”[h]
என்றார்கள்.

43 அந்த இரண்டு நாட்களுக்குப் பின்பு அவர் கலிலேயாவுக்குப் புறப்
பட்டார். **44** ஆனாலும், ஒரு தீர்க்கதரிசிக்குத் தன்னுடைய சொந்த தேசத்

4:34 * வே.வா., “சித்தத்தின்படி.”

அதி. 4
a யோவா 9: 35-37
b யோவா 1:38
c யோவா 6:38
d யோவா 5: 30, 36 யோவா 17:4 யோவா 19:30
e மத் 9:37
f 1கொ 3:8
g யோவா 4:29
h மத் 1:21 யோவா 1:29 1தீ 1:15 1யோ 4:14

தில் மதிப்பில்லை என்று இயேசுவே சொல்லியிருந்தார்.[a] **45** அவர் கலிலேயாவுக்கு வந்தபோது, கலிலேயர்கள் அவரை வரவேற்றார்கள். ஏனென்றால், பண்டிகைக்காக எருசலேமுக்கு அவர்கள் போயிருந்தபோது[b] அவர் செய்த எல்லாவற்றையும் பார்த்திருந்தார்கள்.[c]

46 பின்பு, கலிலேயாவில் இருந்த கானா ஊருக்கு அவர் மறுபடியும் வந்தார். அங்கேதான் முன்பு தண்ணீரைத் திராட்சமதுவாக மாற்றியிருந்தார்.[d] அவர் வந்த சமயத்தில், ஓர் அரசு அதிகாரியின் மகன் கப்பர்நகூமில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தான். **47** இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்திருக்கிறார் என்பதை அந்த அதிகாரி கேள்விப்பட்டு அவரிடம் போனார், சாகக்கிடந்த தன் மகனைக் குணப்படுத்த வரும்படி அவரைக் கேட்டுக்கொண்டார். **48** இயேசு அவரிடம், “நீங்கள் எல்லாரும் அடையாளங்களையும் அற்புதங்களையும் பார்த்தால் தவிர ஒருபோதும் நம்ப மாட்டீர்கள்”[e] என்று சொன்னார். **49** அந்த அரசு அதிகாரி அவரிடம், “எஜமானே, என்னுடைய பிள்ளை சாவதற்கு முன்பு என் வீட்டுக்கு வாருங்கள்” என்று கேட்டுக்கொண்டார். **50** அதற்கு இயேசு, “நீ புறப்பட்டுப் போ, உன்னுடைய மகன் பிழைத்துக்கொண்டான்”[f] என்று சொன்னார். இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து அவர் அங்கிருந்து புறப்பட்டுப் போனார். **51** அவர் போய்க்கொண்டிருந்தபோதே அவருடைய வேலைக்காரர்கள் அவர் எதிரில் வந்து, அவருடைய மகன் பிழைத்துக்கொண்டதாக* சொன்னார்கள். **52** அவன் எந்த நேரத்தில் குணமடைந்தான் என்று அவர்களிடம் விசாரித்தார். அதற்கு அவர்கள், “நேற்று ஏழாம் மணிநேரத்தில்* அவனுக்குக் காய்ச்சல் விட்டது” என்று சொன்னார்கள். **53** சரியாக அதே மணிநேரத்தில்தான், “உன்னுடைய மகன் பிழைத்துக்கொண்டான்”[g] என்று இயேசு சொல்லியிருந்ததை அவர் நினைத்துப் பார்த்தார். அதன் பின்பு, அவரும் அவருடைய வீட்டிலிருந்த எல்லாரும் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள். **54** இதுதான் இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தபோது செய்த இரண்டாவது அற்புதம்.[h]

5 இதற்குப் பின்பு யூதர்களின் பண்டிகை ஒன்று வந்தது,[i] அப்போது இயேசு எருசலேமுக்குப் போனார். **2** எருசலேமில் ‘ஆட்டு நுழைவாசலுக்கு’[j] பக்கத்தில், எபிரெய மொழியில் *பெத்சதா* என்று அழைக்கப்பட்ட ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தைச் சுற்றி ஐந்து மண்டபங்கள் இருந்தன. **3** ஏராளமான நோயாளிகளும் பார்வை இல்லாதவர்களும் கால் ஊனமானவர்களும் கை கால் சூம்பியவர்களும்* அந்த மண்டபங்களில் படுத்துக்கிடந்தார்கள். **4** *— **5** அங்கே 38 வருஷங்களாக வியாதியால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த ஒருவரும் இருந்தார். **6** அவர் அங்கே படுத்திருப்பதை இயேசு பார்த்தார்; அவர் ரொம்பக் காலமாக வியாதிப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டு, “நீங்கள் குணமாக விரும்புகிறீர்களா?”[k] என்று கேட்டார். **7** அதற்கு அந்த நோயாளி, “ஐயா, குளத்து நீர் கலங்கும்போது என்னை அதில் இறக்கிவிட யாரும் இல்லை; நான் இறங்குவதற்குள் வேறு யாராவது எனக்கு முன்னால் இறங்கிவிடுகிறார்கள்” என்று சொன்னார். **8** அப்போது இயேசு, “எழுந்து, உங்கள் படுக்கையை எடுத்துக்கொண்டு

4:51 *வே.வா., “குணமாகி வருவதாக.” **4:52** *அதாவது, “பிற்பகல் சுமார் 1 மணிக்கு.” **5:3** *வே.வா., “பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களும்.” **5:4** *இணைப்பு A3-ஐப் பாருங்கள்.

அதி. 4
a மத் 13:57, மாற் 6:4, லூ 4:24
b உபா 16:16
c யோவா 2:23
d யோவா 2:1-11
e மத் 16:1, 1கொ 1:22
f மத் 8:13, மாற் 7:29, 30
g மத் 8:13
h யோவா 2:11

அதி. 5
i யாத் 12:14, உபா 16:1, 16, யோவா 2:13, யோவா 6:4
j நெ 3:1
k ஏசா 53:3

நடங்கள்”[a] என்று சொன்னார். **9** உடனே அந்த மனிதர் குணமடைந்து, தன்
படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்.

அந்த நாள் ஓய்வுநாளாக இருந்தது. **10** அதனால் யூதர்கள், “இது ஓய்
வுநாள், நீ படுக்கையைத் தூக்கிக்கொண்டு போவது சரியல்ல”[b] என்று குண
மடைந்த மனிதரிடம் சொன்னார்கள். **11** அவரோ, “என்னைக் குணமாக்
கியவர்தான் ‘படுக்கையை எடுத்துக்கொண்டு நடங்கள்’ என்று என்னிடம்
சொன்னார்” என்றார். **12** அதற்கு அவர்கள், “‘இதை எடுத்துக்கொண்டு
நடங்கள்’ என்று உனக்குச் சொன்ன அந்த மனுஷன் யார்?” என்று கேட்டார்
கள். **13** குணமடைந்த மனிதருக்கோ அவர் யாரென்று தெரியவில்லை.
ஏனென்றால், இயேசு கூட்டத்தோடு கூட்டமாகப் போயிருந்தார்.

14 பின்பு, இயேசு அவரை ஆலயத்தில் பார்த்து, “இதோ, நீங்கள் குண
மாகிவிட்டீர்கள். முன்பு இருந்ததைவிட மோசமான எதுவும் உங்களுக்கு ஏற்
படாமல் இருக்க இனிமேல் பாவம் செய்யாதீர்கள்” என்று சொன்னார்.
15 அந்த மனிதர் அங்கிருந்து போய், தன்னைக் குணமாக்கியது இயேசு
தான் என்று யூதர்களிடம் சொன்னார். **16** இயேசு ஓய்வுநாளில் இவற்றைச்
செய்ததால் யூதர்கள் அவரை எதிர்த்தார்கள். **17** அவரோ, “என் தகப்
பன் இதுவரை வேலை செய்துவந்திருக்கிறார், நானும் வேலை செய்துவருகி
றேன்”[c] என்று அவர்களிடம் சொன்னார். **18** அவர் ஓய்வுநாள் சட்டத்தை
மீறியதோடு கடவுளைத் தன்னுடைய சொந்தத் தகப்பன் என்று சொல்லித்[d]
தன்னைக் கடவுளுக்குச் சமமாக்கிக்கொண்டதாக[e] யூதர்கள் நினைத்தார்கள்.
அதனால், அவரைக் கொலை செய்ய இன்னும் தீவிரமாக முயற்சி செய்
தார்கள்.

19 அப்போது இயேசு அவர்களைப் பார்த்து, “உண்மையாகவே உண்
மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், மகனால் எதையுமே சொந்தமா
கச் செய்ய முடியாது; தகப்பன் எதைச் செய்வதைப் பார்க்கிறாரோ அதை
மட்டுமே அவரால் செய்ய முடியும்.[f] தகப்பன் எவற்றையெல்லாம் செய்
கிறாரோ அவற்றையெல்லாம் மகனும் அப்படியே செய்கிறார். **20** மகன்
மேல் தகப்பன் பாசம் வைத்திருப்பதால்,[g] தான் செய்கிற எல்லாவற்றை
யும் அவருக்குக் காட்டுகிறார்; நீங்கள் ஆச்சரியப்படும்படி, அவற்றைவிட
பெரிய செயல்களையும் அவருக்குக் காட்டுவார்.[h] **21** இறந்தவர்களைத்
தகப்பன் உயிரோடு எழுப்புவது போலவே[i] மகனும் தனக்கு விருப்பமா
னவர்களை உயிரோடு எழுப்புகிறார்.[j] **22** தகப்பன் ஒருவரையும் நியாயந்
தீர்ப்பதில்லை, நியாயந்தீர்க்கிற அதிகாரம் முழுவதையும் மகனிடம் ஒப்ப
டைத்திருக்கிறார்.[k] **23** எல்லாரும் தகப்பனுக்கு மதிப்புக் கொடுப்பது
போலவே மகனுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அப்ப
டிச் செய்திருக்கிறார். மகனுக்கு மதிப்புக் கொடுக்காதவன் அவரை அனுப்
பிய தகப்பனுக்கும் மதிப்புக் கொடுப்பதில்லை.[l] **24** உண்மையாகவே
உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், என் வார்த்தையைக் கேட்டு
என்னை அனுப்பியவரை நம்புகிறவனுக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்
கும்;[m] அவன் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாமல் சாவைக் கடந்து வாழ்
வைப் பெறுவான்.[n]

25 உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன்,
இறந்தவர்கள் கடவுளுடைய மகனின் குரலைக் கேட்கும் நேரம் வருகிறது,
அது இப்போதே வந்துவிட்டது. அதைக் காதுகொடுத்துக் கேட்கிறவர்க

அதி. 5

a மத் 9:6; மாற் 2:10, 11; லூ 5:24

b யாத் 20:9, 10; மத் 12:2; லூ 6:2

c யோவா 9:4; யோவா 14:10

d யோவா 14:28

e பிலி 2:5, 6

f யோவா 5:30; யோவா 8:28; யோவா 12:49

g மத் 3:17; யோவா 3:35; யோவா 10:17; 2பே 1:17

h லூ 8:25; யோவா 6:10, 11; யோவா 6:19

i 2ரா 4:32-34; எபி 11:35

j லூ 7:12, 14; லூ 8:52-54; யோவா 11:25

k அப் 10:42; அப் 17:31; 2கொ 5:10; 2தீ 4:1

l லூ 10:16

m யோவா 3:16; யோவா 6:40; யோவா 8:51

n 1யோ 3:14

ளுக்கு வாழ்வு கிடைக்கும். **26** உயிர் கொடுக்கும் வல்லமை தகப்பனுக்கு
இருக்கிறது,[a] அந்த வல்லமையை மகனுக்கும் அவர் கொடுத்திருக்கிறார்.[b]
27 அதோடு, அவருடைய மகன் மனிதகுமாரனாக[c] இருப்பதால் நியா
யந்தீர்க்கும் அதிகாரத்தை அவருக்குக் கொடுத்திருக்கிறார்.[d] **28** இதைப்
பற்றி ஆச்சரியப்படாதீர்கள்; ஏனென்றால், நேரம் வருகிறது; அப்போது,
நினைவுக் கல்லறைகளில்* இருக்கிற எல்லாரும் அவருடைய குரலைக்
கேட்டு வெளியே வருவார்கள்.[e] **29** நல்லது செய்தவர்கள் வாழ்வு பெறும்
படி உயிர்த்தெழுப்பப்படுவார்கள், கெட்டதைச் செய்துவந்தவர்கள் தண்ட
னைத் தீர்ப்பு பெறும்படி உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.*[f] **30** என்னால்
எதையுமே சொந்தமாகச் செய்ய முடியாது. என் தகப்பன் சொல்கிறபடி
தான் நான் நியாயந்தீர்க்கிறேன். என்னுடைய தீர்ப்பு நீதியானது,[g] ஏனென்
றால் நான் என்னுடைய விருப்பத்தை* அல்ல, என்னை அனுப்பியவரு
டைய விருப்பத்தையே# நாடுகிறேன்.[h]

31 நான் மட்டுமே என்னைப் பற்றிச் சாட்சி கொடுத்தால், என்
சாட்சி உண்மையாக இருக்காது.[i] **32** என்னைப் பற்றி வேறொருவர் சாட்சி
கொடுக்கிறார், என்னைப் பற்றி அவர் கொடுக்கும் சாட்சி உண்மை என்று
எனக்குத் தெரியும்.[j] **33** நீங்கள் யோவானிடம் ஆள் அனுப்பினீர்கள்,
அவர் சத்தியத்தைப் பற்றிச் சாட்சி கொடுத்தார்.[k] **34** ஆனாலும், மனுஷ
னுடைய சாட்சியை நான் சார்ந்திருப்பதில்லை. நீங்கள் மீட்புப் பெற வேண்
டும் என்பதற்காகத்தான் இவற்றைச் சொல்கிறேன். **35** அவர் பிரகாசமாக
எரிகிற விளக்காக இருந்தார். கொஞ்சக் காலம் அவருடைய ஒளியில்
சந்தோஷமாக இருக்க விரும்பினீர்கள்.[l] **36** ஆனால், யோவானுடைய
சாட்சியைவிட முக்கியமான சாட்சி என்னிடம் இருக்கிறது. நான் செய்து
முடிப்பதற்காக என் தகப்பன் என்னிடம் ஒப்படைத்த செயல்கள்தான், அதா
வது நான் செய்து வருகிற செயல்கள்தான், தகப்பன் என்னை அனுப்பி
னார் என்பதற்குச் சாட்சி கொடுக்கின்றன.[m] **37** அதோடு, என்னை அனுப்
பிய தகப்பனே என்னைப் பற்றிச் சாட்சி கொடுத்திருக்கிறார்.[n] நீங்கள்
ஒருபோதும் அவருடைய குரலைக் கேட்டதில்லை, அவருடைய உருவத்
தைப் பார்த்ததுமில்லை.[o] **38** அவரால் அனுப்பப்பட்டவரையே நீங்கள்
நம்பாததால், அவருடைய வார்த்தை உங்கள் இதயத்தில் நிலைத்து நிற்ப
துமில்லை.

39 முடிவில்லாத வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக வேதவச
னங்களை ஆராய்ந்து பார்க்கிறீர்கள்;[p] அவையே என்னைப் பற்றிச் சாட்சி
கொடுக்கின்றன.[q] **40** அப்படியிருந்தும், வாழ்வு பெறுவதற்கு என்னிடம்
வர உங்களுக்கு விருப்பமில்லை.[r] **41** மனுஷர்கள் தரும் மகிமையை
நான் ஏற்றுக்கொள்வதில்லை. **42** ஆனால், உங்களுக்குக் கடவுள்மேல்
அன்பு இல்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். **43** நான் என்னு
டைய தகப்பனின் பெயரில் வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள
வில்லை. வேறொருவன் தன் சொந்தப் பெயரில் வந்தால், அவனை நீங்கள்
ஏற்றுக்கொள்வீர்கள். **44** ஒரே கடவுளிடமிருந்து வரும் மகிமையை நாடா
மல் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு வரும் மகிமையை ஏற்றுக்கொள்கிற

அதி. 5
- *a* சங் 36:9; அப் 17:28
- *b* யோவா 11:25
- *c* தானி 7:13
- *d* யோவா 5:22; 2தீ 4:1
- *e* யோபு 14:13; ஏசா 25:8; ஏசா 26:19
- *f* வெளி 20:12, 15
- *g* ஏசா 11:4
- *h* மத் 26:39; யோவா 4:34; யோவா 6:38
- *i* உபா 19:15
- *j* மத் 3:17; மாற் 9:7; யோவா 12:28-30; 1யோ 5:9
- *k* யோவா 1:15, 32
- *l* மத் 3:1, 5, 6; மாற் 6:20
- *m* மத் 11:5; யோவா 3:2; யோவா 7:31; யோவா 10:25
- *n* மாற் 1:11; யோவா 8:18
- *o* உபா 4:11, 12; யோவா 1:18; யோவா 6:46
- *p* லூ 11:52
- *q* உபா 18:15
- *r* ஏசா 53:3; யோவா 1:11

5:28 *சொல் பட்டியலைப் பாருங்கள். **5:29** *இங்கே நல்லது, கெட்டது என்று சொல்லப்படுவது உயிர்த்தெழுப்பப்பட்ட பிறகு செய்யப்படுகிற செயல்களைக் குறிக்கலாம். **5:30** *வே.வா., "சித்தத்தை." #வே.வா., "சித்தத்தையே."

நீங்கள் எப்படி என்னை நம்புவீர்கள்?[a] **45** என்னுடைய தகப்பனுக்கு
முன்னால் நான் உங்களைக் குற்றம்சாட்டுவேன் என்று நினைக்காதீர்கள்.
உங்களைக் குற்றம்சாட்டுகிற ஒருவர் இருக்கிறார்; நீங்கள் நம்பிக்கை வைத்
திருக்கிற மோசேதான் அவர்.[b] **46** நீங்கள் மோசேயை நம்பினால் என்
னையும் நம்புவீர்கள். ஏனென்றால், அவர் என்னைப் பற்றி எழுதியிருக்கி
றார்.[c] **47** அவர் எழுதியவற்றை நீங்கள் நம்பவில்லை என்றால், நான்
சொல்கிறவற்றை எப்படி நம்புவீர்கள்?” என்று கேட்டார்.

6 இதற்குப் பின்பு திபேரியா கடலின், அதாவது கலிலேயா கடலின்,
அக்கரைக்கு இயேசு போனார்.[d] **2** நோயாளிகளை அவர் அற்புத
மாகக் குணமாக்கியதைப் பார்த்து[e] ஒரு பெரிய கூட்டம் அவருக்குப்
பின்னாலேயே போனது.[f] **3** அதனால் இயேசு ஒரு மலைமேல் ஏறிப்
போய், அங்கே தன்னுடைய சீஷர்களோடு உட்கார்ந்தார். **4** யூதர்களு
டைய பஸ்கா பண்டிகை[g] சீக்கிரத்தில் வரவிருந்தது. **5** இயேசு தன்னுடைய
கண்களை ஏறெடுத்து, தன்னிடம் வந்துகொண்டிருந்த பெரிய கூட்டத்தைப்
பார்த்து, “இந்த ஜனங்கள் சாப்பிடுவதற்கு ரொட்டிகளை எங்கே வாங்க
லாம்?”[h] என்று பிலிப்புவிடம் கேட்டார். **6** தான் என்ன செய்யப்போகிறார்
என்று தெரிந்திருந்தும் பிலிப்புவைச் சோதிப்பதற்காக இப்படிக் கேட்டார்.
7 அதற்கு பிலிப்பு, “ஆளுக்குக் கொஞ்சம் கொடுக்க வேண்டுமென்றாலும்,
200 தினாரியுவுக்கு* ரொட்டிகளை வாங்கினால்கூட போதாதே” என்று
சொன்னார். **8** அவருடைய சீஷர்களில் ஒருவரும் சீமோன் பேதுருவின்
சகோதரனுமாகிய அந்திரேயா அவரிடம், **9** “இதோ, இங்கிருக்கிற ஒரு
சிறுவனிடம் ஐந்து பார்லி ரொட்டிகளும் இரண்டு சிறிய மீன்களும் இருக்
கின்றன. ஆனால், இத்தனை பேருக்கு அது எப்படிப் போதும்?”[i] என்று
கேட்டார்.

10 அப்போது இயேசு, “இவர்களை உட்கார வையுங்கள்” என்று சொன்
னார். அந்த இடத்தில் நிறைய புல் இருந்ததால் அவர்கள் உட்கார்ந்தார்
கள். அவர்களில் சுமார் 5,000 ஆண்கள் இருந்தார்கள்.[j] **11** இயேசு
ரொட்டிகளை எடுத்து, கடவுளுக்கு நன்றி சொல்லி, அங்கே உட்கார்ந்திருந்
தவர்களுக்குக் கொடுத்தார். அதேபோல், அந்தச் சிறிய மீன்களையும்
அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் வேண்டுமளவுக்குச் சாப்பிட்டார்கள்.
12 எல்லாரும் வயிறார சாப்பிட்டு முடித்த பிறகு அவர் தன்னுடைய சீஷர்
களிடம், “எதுவும் வீணாகாதபடி, மீதியான ரொட்டித் துண்டுகளைச் சேகரி
யுங்கள்” என்று சொன்னார். **13** அதனால், மக்கள் சாப்பிட்டு முடித்த
பிறகு, அந்த ஐந்து பார்லி ரொட்டிகளில் மீதியான துண்டுகளை 12 கூடை
கள் நிறைய சேகரித்தார்கள்.

14 அவர் செய்த அடையாளங்களை மக்கள் பார்த்தபோது, “இந்த உல
கத்துக்கு வர வேண்டிய தீர்க்கதரிசி நிச்சயமாகவே இவர்தான்”[k] என்று
சொல்ல ஆரம்பித்தார்கள். **15** அவர்கள் வந்து தன்னைப் பிடித்து ராஜா
வாக்கப்போகிறார்கள் என்பதை இயேசு தெரிந்துகொண்டு, அந்த இடத்தை
விட்டு[l] மறுபடியும் மலைக்குத் தனியாகப்[m] போனார்.

16 சாயங்காலம் ஆனபோது அவருடைய சீஷர்கள் கடற்கரைக்குப்
போனார்கள்.[n] **17** ஒரு படகில் ஏறி, அக்கரையில் இருக்கிற கப்பர்ந
கூமை நோக்கிப் போனார்கள். அதற்குள் இருட்டிவிட்டது, இயேசுவும்

6:7 *இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 5
a யோவா 12:42, 43
b உபா 31:26, 27; யோவா 7:19
c உபா 18:15; லூ 24:44; யோவா 1:45

அதி. 6
d மத் 14:13; லூ 9:10
e லூ 9:11
f மாற் 6:33
g யோவா 2:13; யோவா 5:1
h மத் 14:14-17; மாற் 6:35-38; லூ 9:12, 13
i 2ரா 4:42-44
j மத் 14:19-21; மாற் 6:39-44; லூ 9:14-17
k உபா 18:15, 18
l யோவா 17:16; யோவா 18:36
m மத் 14:23; மாற் 6:45
n மத் 14:22

அதுவரை அவர்களிடம் வந்துசேரவில்லை.[a] **18** அதோடு, காற்று பலமாக
வீசியதால் கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது.[b] **19** சுமார் மூன்று அல்லது
நான்கு மைல்* தூரத்துக்கு அவர்கள் படகை ஓட்டிய பிறகு, இயேசு கடல்
மேல் நடந்து, படகுக்குப் பக்கத்தில் வருவதைப் பார்த்துப் பயந்துபோ
னார்கள். **20** ஆனால் அவர், “நான்தான், பயப்படாதீர்கள்!”[c] என்று
சொன்னார். **21** அதனால், சந்தோஷமாக அவரைப் படகில் ஏற்றிக்
கொண்டார்கள். படகு கொஞ்ச நேரத்திலேயே போக வேண்டிய இடத்துக்
குப் போய்ச் சேர்ந்தது.[d]

22 சில மக்கள் கடலின் அக்கரையிலேயே தங்கிவிட்டார்கள். அங்
கிருந்த ஒரே சின்னப் படகில் சீஷர்கள் மட்டும் ஏறிப்போய்விட்டார்கள் என்
பதும், இயேசு அந்தப் படகில் ஏறவில்லை என்பதும் அடுத்த நாள்
அவர்களுடைய ஞாபகத்துக்கு வந்தது. **23** திபேரியாவிலிருந்து வந்த சில
படகுகள், இயேசு நன்றி சொல்லி ஜெபம் செய்த பின்பு அவர்கள் ரொட்டி
சாப்பிட்ட இடத்துக்குப் பக்கத்தில் வந்துசேர்ந்தன. **24** அந்தப் படகுகளில்
இயேசுவும் அவருடைய சீஷர்களும் இல்லை என்று தெரிந்தவுடன் மக்கள்
தங்களுடைய படகுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக்கொண்டு கப்பர்நகூமுக்
குப் போனார்கள்.

25 கடலின் அக்கரையில் அவர்கள் அவரைப் பார்த்தபோது, “ரபீ,[e] எப்
போது இங்கே வந்தீர்கள்?” என்று கேட்டார்கள். **26** அதற்கு இயேசு,
“உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், அற்புதங்
களைப் பார்த்ததால் அல்ல, ரொட்டிகளைச் சாப்பிட்டுத் திருப்தியானதால்
தான் நீங்கள் என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள்.[f] **27** அழிந்துபோகும்
உணவுக்காக அல்ல, முடிவில்லாத வாழ்வைத்[g] தரும் அழியாத உணவுக்
காகவே பாடுபடுங்கள். மனிதகுமாரன் இதை உங்களுக்குக் கொடுப்பார்;
இவரை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாகத் தகப்பனாகிய கடவுளே
இவர்மேல் தன்னுடைய முத்திரையை குத்தியிருக்கிறார்”[h] என்று அவர்களி
டம் சொன்னார்.

28 அதனால் அவர்கள், “கடவுள் எங்களை ஏற்றுக்கொள்வதற்கு நாங்
கள் என்ன செய்ய வேண்டும்?” என்று அவரிடம் கேட்டார்கள். **29** அப்
போது இயேசு, “கடவுள் உங்களை ஏற்றுக்கொள்வதற்கு, அவரால் அனுப்
பப்பட்டவர்மேல் நீங்கள் விசுவாசம் வைக்க வேண்டும்”[i] என்று சொன்னார்.
30 அதற்கு அவர்கள், “அப்படியென்றால், உங்களை நம்புவதற்கு நாங்
கள் பார்க்கும்படி என்ன அடையாளத்தைக் காட்டப்போகிறீர்கள்?[j] என்ன
செயலைச் செய்யப்போகிறீர்கள்? **31** வனாந்தரத்தில் எங்களுடைய முன்
னோர்கள் மன்னாவைச் சாப்பிட்டார்களே,[k] ‘அவர்கள் சாப்பிடுவதற்காகப்
பரலோகத்திலிருந்து அவர் உணவு தந்தார்’[l] என எழுதப்பட்டிருக்கிறதே”
என்று சொன்னார்கள். **32** அதற்கு இயேசு, “உண்மையாகவே உண்மை
யாகவே உங்களுக்குச் சொல்கிறேன், மோசே உங்களுக்குப் பரலோகத்திலி
ருந்து உணவைத் தரவில்லை, என்னுடைய தகப்பன்தான் பரலோகத்தி
லிருந்து உண்மையான உணவை உங்களுக்குத் தருகிறார். **33** கடவுள்
தருகிற உணவு பரலோகத்திலிருந்து வந்து, உலகத்துக்கு வாழ்வு தருகி
றது” என்று அவர்களிடம் சொன்னார். **34** அதற்கு அவர்கள், “எஜமானே,

---

6:19 * வே.வா., “சுமார் 5 அல்லது 6 கி.மீ.” நே.மொ., “சுமார் 25 அல்லது 30 ஸ்டேடியா.”
இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 6
a மாற் 6:47-51
b மத் 8:24; மத் 14:24-33
c மத் 14:27; மாற் 6:50
d மத் 14:34
e யோவா 1:38
f யோவா 6:11
g யோவா 4:14; யோவா 17:3; ரோ 6:23
h மத் 3:17; அப் 2:22; 2பே 1:17
i அப் 16:31; 1யோ 3:23
j மத் 12:38; மாற் 8:12; யோவா 2:18; 1கொ 1:22
k யாத் 16:15; எண் 11:7
l சங் 78:24; சங் 105:40

அந்த உணவையே எங்களுக்கு எப்போதும் கொடுங்கள்” என்று சொன்
னார்கள்.

35 அப்போது இயேசு, “வாழ்வு தரும் உணவு நான்தான். என்னிடம் வரு
கிறவனுக்குப் பசியே எடுக்காது, என்மேல் விசுவாசம் வைக்கிறவனுக்குத்
தாகமே எடுக்காது.[a] **36** ஆனால், நான் உங்களுக்குச் சொன்னபடி, நீங்
கள் என்னைப் பார்த்தும் நம்பாமல் இருக்கிறீர்கள்.[b] **37** தகப்பன் எனக்குத்
தருகிற ஒவ்வொருவனும் என்னிடம் வருவான், அப்படி என்னிடம் வருகி
றவனை நான் ஒருபோதும் துரத்திவிட மாட்டேன்.[c] **38** ஏனென்றால்,
என்னுடைய விருப்பத்தின்படி* செய்வதற்காக அல்ல, என்னை அனுப்பி
யவருடைய விருப்பத்தின்படி* செய்வதற்காகத்தான்[d] பரலோகத்திலிருந்து
இறங்கி வந்திருக்கிறேன்.[e] **39** அவர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனை
யும் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவர்கள் எல்லாரையும் நான் உயி
ரோடு எழுப்ப வேண்டும்[f] என்பது என்னை அனுப்பியவருடைய விருப்
பம்.* **40** அதோடு, மகனை ஏற்றுக்கொண்டு அவர்மேல் விசுவாசம்
வைக்கிற ஒவ்வொருவனுக்கும் முடிவில்லாத வாழ்வு கிடைக்க வேண்டும்
என்பதும்,[g] கடைசி நாளில் நான் அவனை உயிரோடு எழுப்ப வேண்டும்[h]
என்பதும் என் தகப்பனின் விருப்பம்”* என்று சொன்னார்.

41 “பரலோகத்திலிருந்து வந்த உணவு நான்தான்”[i] என்று அவர்
சொன்னதால் யூதர்கள் அவரைப் பற்றி முணுமுணுத்தார்கள். **42** “இவன்
யோசேப்பின் மகன் இயேசுதானே? இவனுடைய அப்பாவும் அம்மாவும்
நமக்குத் தெரிந்தவர்கள்தானே?[j] அப்படியிருக்கும்போது, ‘நான் பரலோ
கத்திலிருந்து வந்திருக்கிறேன்’ என்று இவன் எப்படிச் சொல்கிறான்?” எனப்
பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். **43** அப்போது இயேசு, “ஒருவருக்கொ
ருவர் முணுமுணுப்பதை நிறுத்துங்கள். **44** என்னை அனுப்பிய தகப்
பன் ஒருவனை ஈர்க்காவிட்டால்* அவன் என்னிடம் வர முடியாது;[k]
கடைசி நாளில் நான் அவனை உயிரோடு எழுப்புவேன்.[l] **45** ‘அவர்கள்
எல்லாரும் யெகோவாவினால்* கற்பிக்கப்பட்டிருப்பார்கள்’[m] என்று தீர்க்கத
ரிசிகளின் புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறது. தகப்பனிடமிருந்து கேட்டுக்
கற்றுக்கொள்கிற ஒவ்வொருவனும் என்னிடம் வருகிறான். **46** அதற்காக,
தகப்பனை எந்த மனுஷனாவது பார்த்திருக்கிறான் என்று அர்த்தமாகாது,[n]
தகப்பனாகிய கடவுளிடமிருந்து வந்தவர் மட்டும்தான் அவரைப் பார்த்தி
ருக்கிறார்.[o] **47** உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கி
றேன், என்னை நம்புகிறவனுக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்கும்.[p]

48 வாழ்வு தரும் உணவு நான்தான்.[q] **49** உங்களுடைய முன்னோர்
கள் வனாந்தரத்தில் மன்னாவைச் சாப்பிட்டார்கள், ஆனால் இறந்துபோ
னார்கள்.[r] **50** பரலோகத்திலிருந்து வந்திருக்கும் இந்த உணவைச் சாப்பிடு
கிற எவரும் சாகவே மாட்டார். **51** பரலோகத்திலிருந்து வந்திருக்கும் உயி
ருள்ள உணவு நான்தான்; இந்த உணவைச் சாப்பிடுகிற எவரும்
என்றென்றும் உயிர் வாழ்வார். சொல்லப்போனால், நான் கொடுக்கப்போகிற
உணவு, உலகத்துக்கு வாழ்வு கிடைப்பதற்காக நான் தரப்போகிற என் சதை
தான்”[s] என்று சொன்னார்.

52 அப்போது யூதர்கள், “இவன் எப்படித் தன்னுடைய சதையை நமக்குச்

6:38 *வே.வா., “சித்தத்தின்படி.” **6:39, 40** *வே.வா., “சித்தம்.” **6:44** *வே.வா., “இழுத்துக்கொள்ளாவிட்டால்.” **6:45** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 6
a யோவா 4:14; யோவா 7:37; வெளி 22:17
b யோவா 6:64
c மத் 11:28, 29; யோவா 17:6
d மத் 26:39; யோவா 5:30
e யோவா 3:13; யோவா 8: 23, 42
f யோவா 5: 28, 29; ரோ 6:5
g யோவா 10: 27, 28
h யோவா 11:24; அப் 17:31; 1தெ 4:16; வெளி 20:12
i யோவா 6:33
j மாற் 6:3
k யோவா 6:65
l யோவா 11:24
m ஏசா 54:13
n யாத் 33:17, 20
o மத் 11:27; லூ 10:22; யோவா 1:18
p யோவா 3:16
q யோவா 6:33
r யோவா 6:31
s எபி 10:10

சாப்பிடக் கொடுக்க முடியும்?" என்று சொல்லி, ஒருவருக்கொருவர் வாக்கு
வாதம் செய்ய ஆரம்பித்தார்கள். **53** அதனால் இயேசு அவர்களிடம்,
"உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், மனிதகுமா
ரனின் சதையைச் சாப்பிட்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தால் தவிர நீங்
கள் வாழ்வு பெற மாட்டீர்கள்.*[a] **54** என் சதையைச் சாப்பிட்டு என் இரத்
தத்தைக் குடிக்கிறவனுக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்கும், நான்
அவனைக் கடைசி நாளில் உயிரோடு எழுப்புவேன்.[b] **55** என் சதைதான்
உண்மையான உணவு, என் இரத்தம்தான் உண்மையான பானம். **56** என்
சதையைச் சாப்பிட்டு என் இரத்தத்தைக் குடிக்கிறவன் என்னோடு ஒன்று
பட்டிருக்கிறான், நானும் அவனோடு ஒன்றுபட்டிருக்கிறேன்.[c] **57** என்றென்
றும் உயிரோடிருக்கிற தகப்பன் என்னை அனுப்பினார்; அவரால்தான் நான்
உயிர் வாழ்கிறேன்; அதேபோல், என்னைச் சாப்பிடுகிறவனும் என்னால்
உயிர் வாழ்வான்.[d] **58** பரலோகத்திலிருந்து வந்திருக்கும் உணவு இதுதான்.
இந்த உணவு உங்களுடைய முன்னோர்கள் சாப்பிட்ட உணவைப் போன்றது
அல்ல, அதைச் சாப்பிட்டும் அவர்கள் இறந்துபோனார்கள். இந்த உணவைச்
சாப்பிடுகிறவனோ என்றென்றும் உயிர் வாழ்வான்"[e] என்று சொன்னார்.
59 கப்பர்நகூமில் இருக்கிற ஜெபக்கூடத்தில் அவர் கற்பித்துக்கொண்டிருந்த
போது இந்த விஷயங்களைச் சொன்னார்.

60 அவர் சொன்னதைக் கேட்டபோது, "இவர் சொல்வது அதிர்ச்சி
யாக இருக்கிறது; யாரால் இதைக் கேட்டுக்கொண்டிருக்க முடியும்?" என்று
அவருடைய சீஷர்களில் பலர் சொன்னார்கள். **61** தன்னுடைய சீஷர்கள்
இதைப் பற்றி முணுமுணுப்பதை இயேசு உணர்ந்துகொண்டு, "நான் சொல்
வது உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறதா? **62** அப்படியென்றால், மனி
தகுமாரன் தான் முன்பிருந்த இடத்துக்கு ஏறிப்போவதை[f] நீங்கள் பார்த்தால்
இன்னும் எந்தளவு அதிர்ச்சியாக இருக்கும்? **63** கடவுளுடைய சக்திதான்
வாழ்வு தருகிறது;[g] மனுஷனுடைய முயற்சியால் எந்தப் பிரயோஜனமும்
இல்லை. நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தைகள் கடவுளுடைய சக்தி
யால் கொடுக்கப்பட்டவை, வாழ்வு தருபவை.[h] **64** ஆனாலும், உங்களில்
சிலர் இதை நம்புவதில்லை" என்று சொன்னார். நம்பாதவர்கள் யார் என்றும்,
தன்னைக் காட்டிக்கொடுக்கப்போகிறவன் யார் என்றும் இயேசுவுக்கு ஆரம்
பத்திலிருந்தே தெரிந்திருந்ததால்[i] அவர்களிடம் அப்படிச் சொன்னார்.
65 அதோடு அவர், "அதனால்தான், தகப்பனுடைய அனுமதி இல்லை
யென்றால் யாரும் என்னிடம் வர முடியாது[j] என்று உங்களுக்குச் சொன்
னேன்" என்றார்.

66 அவர் இப்படியெல்லாம் பேசியதால், அவருடைய சீஷர்களில் பலர்
அவரைப் பின்பற்றுவதை நிறுத்திவிட்டு, தாங்கள் விட்டுவந்த காரியங்
களைக் கவனிப்பதற்காகத் திரும்பிப் போய்விட்டார்கள்.[k] **67** அதனால்
இயேசு பன்னிரண்டு பேரிடம்,* "நீங்களும் என்னைவிட்டுப் போகப் போகி
றீர்களா?" என்று கேட்டார். **68** அதற்கு சீமோன் பேதுரு, "எஜமானே, நாங்
கள் யாரிடம் போவோம்?[l] முடிவில்லாத வாழ்வைத் தருகிற வார்த்தைகள்
உங்களிடம்தானே இருக்கின்றன.[m] **69** நீங்கள்தான் கடவுளால் அனுப்பப்
பட்ட பரிசுத்தர்[n] என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும், நாங்கள் அதை

6:53 * நே.மொ., "உங்களுக்குள் வாழ்வு இருக்காது." **6:67** * அதாவது, "அப்போஸ்த
லர்களிடம்."

அதி. 6
a யோவா 6:33
b யோவா 6:40, 1கொ 15: 51, 52, 1தெ 4:16
c யோவா 15:4
d யோவா 5:26, 1கொ 15:22
e யோவா 6:51
f யோவா 3:13, யோவா 6:38, யோவா 8:23, அப் 1:9
g கலா 6:8
h உபா 8:3, மத் 4:4
i மத் 9:3, 4, யோவா 2: 24, 25, யோவா 13:11
j யோவா 6:44
k லூ 9:62
l மத் 16:16, மாற் 8:29
m யோவா 6:63, யோவா 17:3
n லூ 9:20

நம்புகிறோம்” என்று சொன்னார். **70** அப்போது இயேசு அவர்களிடம்,
“பன்னிரண்டு பேரான உங்களை நான் தேர்ந்தெடுத்தேன், இல்லையா?[a]
ஆனாலும், உங்களில் ஒருவன் அவதூறு பேசுகிறவனாக* இருக்கிறான்”[b]
என்று சொன்னார். **71** சீமோன் இஸ்காரியோத்து என்பவரின் மகனாகிய
யூதாசைப் பற்றித்தான் அவர் இப்படிச் சொன்னார். ஏனென்றால், அவன்
அந்தப் பன்னிரண்டு பேரில் ஒருவனாக இருந்தும் அவரைக் காட்டிக்கொ
டுக்கவிருந்தான்.[c]

7 இதற்குப் பின்பு, இயேசு கலிலேயாவிலேயே பயணம் செய்து
வந்தார்.* அவரைக் கொலை செய்வதற்கு யூதர்கள்# வழிதேடிக்
கொண்டிருந்ததால்[d] அவர் யூதேயாவில் பயணம் செய்ய விரும்பவில்லை.
2 யூதர்களுடைய கூடாரப் பண்டிகை[e] நெருங்கிக்கொண்டிருந்தது. **3** அத
னால் அவருடைய சகோதரர்கள்[f] அவரிடம், “நீங்கள் இந்த இடத்தை
விட்டு யூதேயாவுக்குப் போங்கள், நீங்கள் செய்யும் செயல்களை உங்களு
டைய சீஷர்களும் பார்க்கட்டும். **4** பிரபலமாக இருக்க விரும்புகிற யாரும்
எதையும் ரகசியமாகச் செய்ய மாட்டார்கள். இதையெல்லாம் செய்வதாக
இருந்தால் ஊர் உலகத்துக்கே செய்து காட்டுங்கள்” என்று சொன்னார்கள்.
5 அவருடைய சகோதரர்கள் அவர்மேல் விசுவாசம் வைக்காததால்[g] அப்
படிச் சொன்னார்கள். **6** அதற்கு இயேசு அவர்களிடம், “என்னுடைய நேரம்
இன்னும் வரவில்லை,[h] ஆனால் உங்களுக்கு எந்த நேரமும் சரியான நேரம்
தான். **7** இந்த உலகம் உங்களை வெறுப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை;
அதன் செயல்கள் பொல்லாதவை என்று நான் சாட்சி கொடுப்பதால் அது
என்னைத்தான் வெறுக்கிறது.[i] **8** பண்டிகைக்கு நீங்கள் போங்கள்; நான்
இப்போது போகப்போவதில்லை; ஏனென்றால், என்னுடைய நேரம் இன்னும்
வரவில்லை”[j] என்று சொன்னார். **9** அவர்களிடம் இப்படிச் சொன்ன பின்பு
அவர் கலிலேயாவிலேயே இருந்துவிட்டார்.

10 ஆனால், பண்டிகைக்கு அவருடைய சகோதரர்கள் போன பின்பு
அவரும் அங்கே போனார்; ஆனாலும், வெளிப்படையாகப் போகாமல்
ரகசியமாகப் போனார். **11** அதனால், பண்டிகையின்போது யூதர்கள் அவ
ரைத் தேட ஆரம்பித்தார்கள்; “அந்த ஆள் எங்கே?” என்று கேட்டார்கள்.
12 மக்கள் அவரைப் பற்றிப் பலவிதமாகக் கிசுகிசுத்தார்கள். சிலர், “அவர்
ஒரு நல்ல மனுஷர்” என்று சொன்னார்கள். மற்றவர்களோ, “இல்லை, அவன்
மக்களை ஏமாற்றுகிறான்”[k] என்று சொன்னார்கள். **13** ஆனால், யூதர்க
ளுக்குப் பயந்ததால் அவர்களில் யாருமே அவரைப் பற்றி வெளிப்படை
யாகப் பேசவில்லை.[l]

14 பண்டிகை பாதி முடிந்தபோது, ஆலயத்துக்குப் போய் இயேசு
கற்பிக்க ஆரம்பித்தார். **15** அப்போது யூதர்கள், “பள்ளிகளுக்கு* போகாத
இவனுக்கு[m] வேதவசனங்களைப்[n] பற்றி எப்படி இந்தளவு அறிவு வந்
தது?” என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள். **16** அதற்கு இயேசு, “என்
போதனை என்னுடையதல்ல, என்னை அனுப்பியவருடையது.[o] **17** அவ
ருடைய விருப்பத்தின்படி* செய்ய ஒருவன் விரும்பினால், என் போதனை
கடவுளிடமிருந்து வந்திருக்கிறதா[p] அல்லது நானே சொந்தமாகப் பேசுகி

6:70 *வே.வா., “இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறவனாக; பிசாசாக.” **7:1**
*வே.வா., “நடந்துகொண்டிருந்தார்.” #அதாவது, “யூதத் தலைவர்கள்.” **7:15**
*அதாவது, “ரபீக்களுடைய பள்ளிகளுக்கு.” **7:17** *வே.வா., “சித்தத்தின்படி.”

அதி. 6
a லூ 6:13
b லூ 22:3; யோவா 13:18
c மத் 26:14, 15; யோவா 12:4

அதி. 7
d யோவா 5:18
e லேவி 23:34
f மத் 12:46; மாற் 6:3; லூ 8:19; யோவா 2:12; அப் 1:14; கலா 1:19
g மாற் 3:21
h யோவா 2:4; யோவா 7:30
i யோவா 3:19; யோவா 15:19
j யோவா 8:20
k யோவா 9:16
l யோவா 9:22; யோவா 12:42; யோவா 19:38
m மத் 13:54; மாற் 6:2; லூ 2:46, 47; அப் 4:13
n லூ 4:16, 17
o யோவா 8:28; யோவா 12:49; யோவா 14:10
p யோவா 8:47

றேனா என்று தெரிந்துகொள்வான். **18** சொந்தமாகப் பேசுகிறவன் சொந்த
மகிமையை விரும்புகிறான். ஆனால், தன்னை அனுப்பியவருக்கு மகிமை
சேர்க்க[a] விரும்புகிறவன்தான் உண்மையுள்ளவன். அவனிடம் எந்த அநீ
தியும் இல்லை. **19** மோசே உங்களுக்குத் திருச்சட்டத்தைக் கொடுத்தார்,[b]
இல்லையா? ஆனால், உங்களில் ஒருவர்கூட அந்தச் சட்டத்துக்குக் கீழ்ப்படி
வதில்லை. இப்போது என்னை ஏன் கொல்லப் பார்க்கிறீர்கள்?"[c] என்று கேட்
டார். **20** அதற்கு அந்தக் கூட்டத்தார், "உனக்குப் பேய் பிடித்திருக்கிறது.
யார் உன்னைக் கொல்லப் பார்க்கிறார்கள்?" என்று கேட்டார்கள். **21** அப்
போது இயேசு, "நான் ஒரேவொரு செயலைச் செய்ததற்காக நீங்கள் எல்லா
ரும் ஆச்சரியப்படுகிறீர்கள். **22** அப்படியானால் இதை யோசித்துப் பாருங்
கள்: மோசே உங்களுக்கு விருத்தசேதனத்தைப்[d] பற்றிய கட்டளையைக்
கொடுத்தார்—அது மோசேயின் காலத்திலிருந்து அல்ல, அவருக்குமுன்
வாழ்ந்த முன்னோர்கள் காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது[e]—அதன்
படி, ஓய்வுநாளில் ஒருவனுக்கு விருத்தசேதனம் செய்கிறீர்கள். **23** மோசே
யின் திருச்சட்டத்தை மீறக் கூடாது என்பதற்காக ஓய்வுநாளில் ஒருவனுக்கு
நீங்கள் விருத்தசேதனம் செய்கிறீர்கள் என்றால், அதே ஓய்வுநாளில் நான்
ஒருவனை முழுமையாகக் குணமாக்கியதற்காக ஏன் என்மேல் சீறுகிறீர்கள்?[f]
24 வெளித்தோற்றத்தைப் பார்த்துத் தீர்ப்பு கொடுப்பதை நிறுத்திவிட்டு, நீதி
யின்படி தீர்ப்பு கொடுங்கள்"[g] என்று சொன்னார்.

25 அப்போது, எருசலேம் குடிமக்களில் சிலர், "இவரைத்தானே கொலை
செய்யத் தேடுகிறார்கள்?[h] **26** அப்படியிருந்தும், இதோ! மக்களிடம் இவர்
வெளிப்படையாகப் பேசிக்கொண்டிருக்கிறார், அவர்களும் இவரிடம் ஒன்
றும் சொல்லாமல் இருக்கிறார்கள். இவர்தான் கிறிஸ்து என்று தலைவர்
கள் உறுதியாகத் தெரிந்துகொண்டார்களோ? **27** ஆனால், கிறிஸ்து எங்
கிருந்து வருவார் என்பது யாருக்கும் தெரியாமல்தானே இருக்கும்!
இவர் எங்கிருந்து வந்திருக்கிறார் என்பதுதான் நமக்குத் தெரியுமே!"[i]
என்று பேசிக்கொண்டார்கள். **28** அதனால், ஆலயத்தில் கற்பித்துக்
கொண்டிருந்த இயேசு உரத்த குரலில் அவர்களிடம், "நான் யார் என்றும்,
எங்கிருந்து வந்திருக்கிறேன் என்றும் உங்களுக்குத் தெரியும். நான் சுயமாக
வரவில்லை,[j] என்னை அனுப்பியவர் நிஜமானவர், உங்களுக்கு அவரைத்
தெரியாது.[k] **29** எனக்கு அவரைத் தெரியும்;[l] ஏனென்றால், நான் அவரு
டைய பிரதிநிதியாக வந்திருக்கிறேன்; அவரே என்னை அனுப்பினார்"
என்று சொன்னார். **30** இதைக் கேட்டதும் அவர்கள் அவரைப் பிடிக்க
வழிதேடினார்கள்.[m] ஆனால், அவருடைய நேரம் இன்னும் வராததால் ஒரு
வரும் அவர்மேல் கை வைக்கவில்லை.[n] **31** இருந்தாலும், மக்களில் பலர்
அவர்மேல் விசுவாசம் வைத்து,[o] "கிறிஸ்து வரும்போது இவர் செய்வதைவி
டவா அதிகமான அடையாளங்களைச் செய்யப்போகிறார்?" என்று பேசிக்
கொள்ள ஆரம்பித்தார்கள்.

32 மக்கள் அவரைப் பற்றி இப்படிக் கிசுகிசுப்பதைப் பரிசேயர்கள்
கேட்டார்கள்; அதனால், முதன்மை குருமார்களும் பரிசேயர்களும் அவ
ரைப் பிடித்துக்கொண்டு வருவதற்காகக் காவலர்களை அனுப்பினார்கள்.
33 அப்போது இயேசு, "இன்னும் கொஞ்சக் காலம்தான் உங்களோடு
இருப்பேன், அதன் பின்பு என்னை அனுப்பியவரிடமே போய்விடு
வேன்.[p] **34** நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனால் கண்டுபிடிக்க மாட்
டீர்கள்; நான் இருக்கும் இடத்துக்கு உங்களால் வரவும் முடியாது"[q] என்று

அதி. 7
a யோவா 5:41 யோவா 8:50
b யாத் 24:3
c மத் 12:14 மாற் 3:6
d லேவி 12:2, 3
e ஆதி 17:9, 10
f யோவா 5:8, 9
g ஏசா 11:3, 4 மத் 23:23
h யோவா 5:18
i மத் 13:55
j யோவா 8:42
k யோவா 8: 54, 55
l மத் 11:27 யோவா 1:18 யோவா 10:15
m மாற் 11:18 லூ 19:47
n யோவா 8:20
o யோவா 2:23 யோவா 8:30 யோவா 10: 40, 42 யோவா 11:45
p யோவா 13:33 யோவா 16:16
q யோவா 8: 21, 22

சொன்னார். **35** அதனால் அந்த யூதர்கள், “நாம் கண்டுபிடிக்க முடியாத
படி இவன் எங்கே போகப் போகிறான்? கிரேக்கர்கள் மத்தியில் சிதறியிருக்
கிற யூதர்களிடம் போகப் போகிறானோ, கிரேக்கர்களுக்கும்கூட கற்பிக்கப்
போகிறானோ? **36** ‘என்னைத் தேடுவீர்கள், ஆனால் கண்டுபிடிக்க மாட்டீர்
கள்; நான் இருக்கும் இடத்துக்கு உங்களால் வரவும் முடியாது’ என்று சொல்
கிறானே, இதற்கு என்ன அர்த்தம்?” என்று பேசிக்கொண்டார்கள்.

37 பண்டிகையின் மிக முக்கியமான நாளாகிய கடைசி நாளில்[a]
இயேசு எழுந்து நின்று, “ஒருவன் தாகமாக இருந்தால், அவன் என்னி
டம் வந்து தண்ணீர் குடிக்கட்டும்.[b] **38** ஒருவன் என்மேல் விசுவாசம்
வைத்தால், வேதவசனத்தில் சொல்லியிருக்கிறபடி, ‘வாழ்வு தரும் தண்ணீர்
அவனுக்குள்ளிருந்து ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்’ ”[c] என்று சொன்னார்.
39 அவர்மேல் விசுவாசம் வைத்தவர்களுக்கு அருளப்படவிருந்த கடவு
ளுடைய சக்தியைப் பற்றியே அவர் அப்படிச் சொன்னார்; இயேசு அது
வரை மகிமைப்படாததால்[d] கடவுளுடைய சக்தி அதுவரை அவர்களுக்கு
அருளப்படவில்லை.[e] **40** இந்த வார்த்தைகளைக் கேட்ட மக்களில் சிலர்,
“நிச்சயமாகவே இவர்தான் வர வேண்டிய தீர்க்கதரிசி”[f] என்று சொன்
னார்கள். **41** மற்றவர்களோ, “இவர்தான் கிறிஸ்து”[g] என்று சொன்னார்கள்.
ஆனால் வேறு சிலர், “கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார்?[h]
42 அவர் தாவீதின் வம்சத்தில்,[i] தாவீது குடியிருந்த[j] பெத்லகேம்[k] கிராமத்
திலிருந்துதான் வருவாரென வேதவசனம் சொல்கிறது, இல்லையா?” என்
றார்கள். **43** இப்படி, அவரைப் பற்றி மக்கள் மத்தியில் பிரிவினை ஏற்பட்
டது. **44** அவர்களில் சிலர் அவரைப் பிடித்துக்கொடுக்க நினைத்தார்கள்,
ஆனால் ஒருவரும் அவர்மேல் கை வைக்கவில்லை.

45 பின்பு, முதன்மை குருமார்களிடமும் பரிசேயர்களிடமும் அந்தக்
காவலர்கள் திரும்பிப்போனபோது, “ஏன் அவனைப் பிடித்துக்கொண்டு வர
வில்லை?” என்று பரிசேயர்கள் அவர்களிடம் கேட்டார்கள். **46** அதற்கு
அவர்கள், “அந்த மனுஷர் பேசுவதுபோல் இதுவரை யாருமே பேசிய
தில்லை”[l] என்று சொன்னார்கள். **47** அப்போது பரிசேயர்கள், “நீங்களுமா
ஏமாந்துவிட்டீர்கள்? **48** தலைவர்களிலும் பரிசேயர்களிலும் ஒருவராவது
அவன்மேல் விசுவாசம் வைத்திருக்கிறார்களா?[m] **49** திருச்சட்டத்தைப்
புரிந்துகொள்ளாத இந்த மக்கள் சபிக்கப்பட்டவர்கள்” என்று சொன்னார்கள்.
50 அந்தப் பரிசேயர்களில் ஒருவரும், முன்பு இயேசுவிடம் வந்தவருமான
நிக்கொதேமு அவர்களிடம், **51** “ஒருவனை முதலில் விசாரித்து அவன்
என்ன செய்தானென்று தெரிந்துகொள்ளாமல் அவனுக்குத் தீர்ப்பளிக்கும்
படி நம்முடைய திருச்சட்டம் சொல்கிறதா?”[n] என்று கேட்டார். **52** அதற்கு
அவர்கள், “நீங்களும் கலிலேயரா என்ன? கலிலேயாவிலிருந்து எந்தத் தீர்க்
கதரிசியும் வர மாட்டார் என்பதை வேதவசனங்களில் ஆராய்ந்து தெரிந்து
கொள்ளுங்கள்” என்று சொன்னார்கள்.*

8 **12** இயேசு மறுபடியுமாக மக்களிடம், “நான் இந்த உலகத்துக்கு ஒளி
யாக இருக்கிறேன்.[o] என்னைப் பின்பற்றுகிற யாரும் ஒருபோதும்
இருளில் நடக்க மாட்டார்கள், ஆனால் வாழ்வு தரும் ஒளியைப் பெற்றிருப்
பார்கள்”[p] என்று சொன்னார். **13** அதனால் பரிசேயர்கள் அவரிடம், “உன்

7:52 * பழமையான, அதிகாரப்பூர்வ கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் 53-ஆம் வச
னம்முதல் 8-ஆம் அதிகாரம் 11-ஆம் வசனம்வரை காணப்படுவதில்லை.

அதி. 7
a யோவா 7:2
b யோவா 4:14, யோவா 6:35
c யாத் 17:6, எண் 20:8, யோவா 4:14
d யோவா 12:16, யோவா 13:31, 32, 1தீ 3:16
e யோவே 2:28, யோவா 16:7, அப் 2:17
f உபா 18:18, யோவா 6:14
g யோவா 4:40, 42, யோவா 6:68, 69
h யோவா 1:46, யோவா 7:52
i 2நா 13:5, சங் 89:3, 4, சங் 132:11, எரே 23:5
j 1சா 16:1
k மீ 5:2, லூ 2:4
l மத் 7:28, 29, லூ 4:22
m யோவா 12:42, அப் 6:7
n உபா 1:16, 17

அதி. 8
o ஏசா 9:2, ஏசா 49:6, மத் 4:16, யோவா 1:5, யோவா 12:35
p யோவா 12:46, 1பே 2:9, 1யோ 2:8

னைப் பற்றி நீயே சாட்சி கொடுக்கிறாய்; உன்னுடைய சாட்சி உண்மையான
தல்ல” என்று சொன்னார்கள். **14** அதற்கு இயேசு, “என்னைப் பற்றி நானே
சாட்சி கொடுத்தாலும் என் சாட்சி உண்மையானதுதான்; ஏனென்றால்,
நான் எங்கிருந்து வந்தேன், எங்கே போகிறேன் என்று எனக்குத் தெரியும்.[a]
ஆனால், நான் எங்கிருந்து வந்தேன், எங்கே போகிறேன் என்று உங்களுக்
குத் தெரியாது. **15** நீங்கள் மனுஷ கண்ணோட்டத்தில் நியாயந்தீர்க்கி
றீர்கள்;[b] நான் எந்த மனுஷனையும் நியாயந்தீர்ப்பதில்லை. **16** அப்படியே
நான் நியாயந்தீர்த்தாலும் என்னுடைய தீர்ப்பு உண்மையானது; ஏனென்
றால், நான் தனியாக இல்லை, என்னை அனுப்பிய தகப்பன் என்னோடு
இருக்கிறார்.[c] **17** அதோடு, ‘இரண்டு பேருடைய சாட்சி உண்மையானது’[d]
என்று உங்கள் திருச்சட்டத்திலேயே எழுதப்பட்டிருக்கிறது. **18** நான் என்
னைப் பற்றிச் சாட்சி கொடுக்கிறேன், என்னை அனுப்பிய தகப்பனும்
என்னைப் பற்றிச் சாட்சி கொடுக்கிறார்”[e] என்று சொன்னார். **19** அதனால்
அவர்கள், “உன்னுடைய தகப்பன் எங்கே?” என்று கேட்டார்கள். அதற்கு
இயேசு, “உங்களுக்கு என்னையும் தெரியாது, என் தகப்பனையும் தெரி
யாது.[f] உங்களுக்கு என்னைத் தெரிந்திருந்தால், என் தகப்பனையும் தெரிந்
திருக்கும்”[g] என்று சொன்னார். **20** ஆலயத்தில் காணிக்கைப் பெட்டிகள்[h]
வைக்கப்பட்டிருந்த பகுதியில் கற்பித்துக்கொண்டிருந்தபோது அவர் இந்த
விஷயங்களைச் சொன்னார். ஆனால், அவருடைய நேரம் இன்னும் வரா
ததால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை.[i]

21 அவர் மறுபடியுமாக அவர்களிடம், “நான் போகிறேன்; நீங்கள் என்
னைத் தேடுவீர்கள், ஆனாலும் உங்கள் பாவத்திலேயே சாவீர்கள்.[j] நான்
போகும் இடத்துக்கு உங்களால் வர முடியாது”[k] என்று சொன்னார்.
22 அப்போது யூதர்கள், “‘நான் போகும் இடத்துக்கு உங்களால் வர
முடியாது’ என்று சொல்கிறானே, இவன் என்ன தற்கொலையா செய்துகொள்
ளப்போகிறான்?” என்று பேசிக்கொண்டார்கள். **23** அதனால் அவர், “நீங்
கள் கீழே இருந்து வந்தவர்கள். நான் மேலே இருந்து வந்தவன்.[l] நீங்
கள் இந்த உலகத்திலிருந்து வந்தவர்கள். நான் இந்த உலகத்திலிருந்து
வரவில்லை. **24** அதனால்தான், உங்களுடைய பாவங்களிலேயே சாவீர்
கள் என்று சொன்னேன். நான்தான் அவர் என்பதை நீங்கள் நம்ப
வில்லை என்றால் உங்களுடைய பாவங்களிலேயே சாவீர்கள்” என்று
அவர்களிடம் சொன்னார். **25** அப்போது அவர்கள், “நீ யார்?” என்று கேட்
டார்கள். அதற்கு இயேசு, “நான் ஏன்தான் உங்களிடம் பேசிக்கொண்டிருக்க
வேண்டுமோ? **26** உங்களைப் பற்றிச் சொல்வதற்கு நிறைய விஷயங்கள்
இருக்கின்றன, நான் நியாயந்தீர்ப்பதற்கும் நிறைய காரியங்கள் இருக்கின்
றன. என்னை அனுப்பியவர் உண்மையானவர், அவரிடமிருந்து கேட்டுத்
தெரிந்துகொண்ட விஷயங்களைத்தான் இந்த உலகத்தில் பேசிக்கொண்டி
ருக்கிறேன்”[m] என்று சொன்னார். **27** பரலோகத் தகப்பனைப் பற்றித்தான்
அவர் பேசிக்கொண்டிருந்தார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.
28 அதனால் இயேசு, “மனிதகுமாரனை நீங்கள் உயர்த்திய*[n] பின்பு நான்
தான் அவர்[o] என்றும், நான் எதையும் சொந்தமாகச் செய்வதில்லை[p]
என்றும், தகப்பன் எனக்குக் கற்றுக்கொடுத்தபடியே இந்த விஷயங்களைப்
பேசுகிறேன் என்றும் தெரிந்துகொள்வீர்கள். **29** என்னை அனுப்பியவர்

8:28 * அதாவது, “மரக் கம்பத்தில் அறைந்து கொன்ற.”

அதி. 8

a யோவா 7:28, யோவா 13:3, யோவா 16:28

b யோவா 7:24

c யோவா 14:10

d உபா 17:6, உபா 19:15

e யோவா 5:37, 2பே 1:17, 1யோ 5:9

f யோவா 16:3

g மத் 11:27, யோவா 14:7

h மாற் 12:41

i யோவா 7:30

j யோவா 8:24

k யோவா 7:34, யோவா 13:33

l யோவா 3:31, யோவா 16:28

m யோவா 18:19, 20

n எண் 21:8, 9, தானி 7:13, மத் 26:64, யோவா 3:14, யோவா 12:32, 33, கலா 3:13

o மத் 27:54

p யோவா 5:19, 30

என்னோடு இருக்கிறார். நான் எப்போதும் அவருக்குப் பிரியமான காரி
யங்களையே செய்வதால்[a] அவர் என்னைத் தனியாக விட்டுவிடவில்லை”
என்று சொன்னார். **30** அவர் பேசிய இந்த விஷயங்களைக் கேட்டு
நிறைய பேர் அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள்.

31 பின்பு, இயேசு தன்மேல் நம்பிக்கை வைத்த யூதர்களிடம், “நீங்
கள் எப்போதும் என் வார்த்தைகளைக் கடைப்பிடித்தால் நிஜமாகவே என்
சீஷர்களாக இருப்பீர்கள்; **32** சத்தியத்தைத் தெரிந்துகொள்வீர்கள்,[b] சத்தி
யம் உங்களை விடுதலையாக்கும்”[c] என்று சொன்னார். **33** அதற்கு மற்ற
வர்கள், “நாங்கள் ஆபிரகாமின் வம்சத்தில் வந்தவர்கள், எந்தக் காலத்திலும்
எந்த மனுஷனுக்கும் நாங்கள் அடிமைகளாக இருந்தது கிடையாது. அப்
படியிருக்கும்போது, நாங்கள் விடுதலையாவோம் என்று எப்படிச் சொல்கி
றாய்?” என்றார்கள். **34** இயேசு அவர்களிடம், “உண்மையாகவே உண்
மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், பாவம் செய்கிற ஒவ்வொருவனும்
பாவத்துக்கு அடிமையாக இருக்கிறான்.[d] **35** அதோடு, ஒரு வீட்டில்
அடிமை நிரந்தரமாக இருப்பதில்லை. மகனோ நிரந்தரமாக இருப்பார்.
36 அதனால், மகன் உங்களை விடுதலையாக்கினால், நீங்கள் உண்மை
யில் விடுதலையாவீர்கள். **37** நீங்கள் ஆபிரகாமின் வம்சத்தில் வந்தவர்
கள் என்று எனக்குத் தெரியும். ஆனால், என்னுடைய போதனையை நீங்
கள் ஏற்றுக்கொள்ளாததால் என்னைக் கொல்ல வழிதேடுகிறீர்கள்.
38 நான் என்னுடைய தகப்பனோடு இருந்தபோது பார்த்த காரியங்களைப்
பேசுகிறேன்.[e] நீங்கள் உங்களுடைய தகப்பனிடமிருந்து கேட்ட காரியங்க
ளைச் செய்கிறீர்கள்” என்று சொன்னார். **39** அதற்கு அவர்கள், “ஆபிரகாம்
தான் எங்கள் தகப்பன்” என்று சொன்னார்கள். இயேசுவோ, “நீங்கள் ஆபிர
காமின் பிள்ளைகள்[f] என்றால், ஆபிரகாம் செய்த செயல்களையே
செய்வீர்கள். **40** ஆனால், கடவுளிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்ட[g]
சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன என்னைக் கொல்ல இப்போது வழி
தேடுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே. **41** உங்களுடைய
தகப்பன் செய்த செயல்களைத்தான் நீங்கள் செய்கிறீர்கள்” என்று சொன்
னார். அப்போது அவர்கள், “நாங்கள் முறைகேடாக* பிறந்தவர்கள் அல்ல.
எங்களுக்கு ஒரே தகப்பன் இருக்கிறார், அவர்தான் கடவுள்” என்று சொன்
னார்கள்.

42 இயேசு அவர்களிடம், “கடவுள்தான் உங்கள் தகப்பன் என்றால், நீங்
கள் என்மேல் அன்பு காட்டுவீர்கள்.[h] ஏனென்றால், நான் கடவுளிடமிருந்து
இங்கே வந்திருக்கிறேன். நான் சுயமாக வரவில்லை, அவர்தான் என்னை
இங்கே அனுப்பினார்.[i] **43** நான் சொல்வதை ஏன் புரிந்துகொள்ளாமல்
இருக்கிறீர்கள்? என் வார்த்தையை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத
தால்தான். **44** பிசாசுதான் உங்களுக்குத் தகப்பன். உங்கள் தகப்பனுடைய
ஆசைகளின்படி செய்ய விரும்புகிறீர்கள்.[j] ஆரம்பத்திலிருந்தே அவன் ஒரு
கொலைகாரனாக இருக்கிறான்;[k] சத்தியம் அவனுக்குள் இல்லாததால் சத்
தியத்தில் அவன் நிலைத்திருக்கவில்லை. தன் சுபாவத்தின்படியே அவன்
பொய் பேசுகிறான்; ஏனென்றால், அவன் பொய்யனும் பொய்க்குத் தகப்ப
னுமாக இருக்கிறான்.[l] **45** நானோ சத்தியத்தைப் பேசுகிறேன், ஆனாலும்
நீங்கள் என்னை நம்புவதில்லை. **46** நான் பாவம் செய்ததாக உங்களில்

8:41 * வே.வா., “பாலியல் முறைகேட்டால்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 8

a யோவா 4:34 யோவா 14:10 எபி 1:9

b யோவா 17:17 யோவா 18:37

c ரோ 6:14, 22 யாக் 1:25

d ரோ 6:6, 16 ரோ 7:14

e யோவா 5:19

f ரோ 2:28, 29 ரோ 9:7, 8 கலா 3:7, 29

g யோவா 8:26

h யோவா 16:27 1யோ 5:1

i யோவா 3:16 யோவா 5: 19, 30

j ஆதி 3:15

k 1யோ 3:8

l ஆதி 3:4 2கொ 11:3 வெளி 12:9

யார் என்மேல் குற்றம்சாட்ட முடியும்? நான் சத்தியத்தைப் பேசினால்
கூட, நீங்கள் ஏன் என்னை நம்புவதில்லை? **47** கடவுள் உங்கள் தகப்ப
னாக இருந்தால் அவருடைய வார்த்தைகளைக் கேட்பீர்கள்.[a] அவர் உங்
கள் தகப்பனாக இல்லாததால் அவருடைய வார்த்தைகளை நீங்கள்
கேட்பதில்லை"[b] என்று சொன்னார்.

48 அதற்கு யூதர்கள் அவரிடம், "'நீ ஒரு சமாரியன்,[c] பேய் பிடித்
தவன்'[d] என்றெல்லாம் நாங்கள் சொல்வது சரிதான்" என்று சொன்னார்
கள். **49** அதற்கு இயேசு, "நான் பேய் பிடித்தவன் அல்ல, நான் என்
தகப்பனுக்கு மதிப்புக் கொடுக்கிறேன், நீங்களோ என்னை அவமதிக்கி
றீர்கள். **50** ஆனால், நானே எனக்காக மகிமை தேடுவதில்லை.[e] அதைத்
தேடித்தருகிற ஒருவர் இருக்கிறார், அவரே நியாயந்தீர்ப்பவர். **51** உண்
மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், என் வார்த்தை
யைக் கேட்டு நடக்கிற யாரும் சாகவே மாட்டார்கள்"[f] என்று சொன்
னார். **52** யூதர்கள் அவரிடம், "உனக்குப் பேய் பிடித்திருக்கிறது என்பது
இப்போது எங்களுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. ஆபிரகாம் இறந்து
போனார், தீர்க்கதரிசிகளும் இறந்துபோனார்கள். ஆனால் நீ, 'என் வார்த்தை
யைக் கேட்டு நடக்கிற யாரும் சாகவே மாட்டார்கள்' என்று சொல்கி
றாய். **53** இறந்துபோன எங்கள் தகப்பனாகிய ஆபிரகாமைவிட நீ என்ன
உயர்ந்தவனா? தீர்க்கதரிசிகளும் இறந்துவிட்டார்கள். அப்படியிருக்கும்
போது, உன்னை நீ யாரென்று சொல்லிக்கொள்கிறாய்?" எனக் கேட்டார்கள்.
54 அதற்கு இயேசு, "நானே என்னை மகிமைப்படுத்தினால், என் மகிமை
வீணாக இருக்கும். என் தகப்பன் என்னை மகிமைப்படுத்துகிறார்.[g] அவரை
உங்கள் கடவுள் என்று சொல்லிக்கொள்கிறீர்கள். **55** இருந்தாலும், உங்க
ளுக்கு அவரைத் தெரியாது.[h] ஆனால், எனக்கு அவரைத் தெரியும்.[i]
அவரைத் தெரியாது என்று நான் சொன்னால் உங்களைப் போலவே
நானும் ஒரு பொய்யனாக இருப்பேன். ஆனால், எனக்கு அவரைத் தெரி
யும், நான் அவருடைய வார்த்தையின்படி நடக்கிறேன். **56** உங்கள் தகப்
பனாகிய ஆபிரகாம் என் நாளைப் பார்க்கப்போகிற எதிர்பார்ப்பில் ரொம்
பச் சந்தோஷமாக இருந்தார், அதைப் பார்த்து சந்தோஷப்பட்டார்"[j] என்று
சொன்னார். **57** அப்போது யூதர்கள், "உனக்கு இன்னும் 50 வயதுகூட
ஆகவில்லை, நீயா ஆபிரகாமைப் பார்த்திருக்கிறாய்?" என்று கேட்டார்
கள். **58** அதற்கு இயேசு, "உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்
குச் சொல்கிறேன், ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருந்திருக்கி
றேன்"[k] என்று சொன்னார். **59** அவர்கள் இதைக் கேட்டபோது கற்களை
எடுத்து அவர்மேல் எறியப் பார்த்தார்கள். ஆனால், இயேசு அவர்களிடமி
ருந்து நழுவி ஆலயத்தைவிட்டு வெளியே போனார்.

9 அவர் போய்க்கொண்டிருந்தபோது, பிறவியிலேயே பார்வையற்றவ
னாக இருந்த ஒருவனைப் பார்த்தார். **2** அப்போது அவருடைய
சீஷர்கள், "ரபீ,[l] இவன் குருடனாகப் பிறந்தது யார் செய்த பாவம்? இவன்
செய்த பாவமா, இவனுடைய அப்பா அம்மா செய்த பாவமா?" என்று
கேட்டார்கள். **3** அதற்கு இயேசு, "இவன் செய்த பாவமும் இல்லை, இவ
னுடைய அப்பா அம்மா செய்த பாவமும் இல்லை. கடவுளுடைய செயல்
கள் இவன் மூலம் எல்லாருக்கும் தெரியவரும்படியே இப்படிப் பிறந்திருக்கி
றான்.[m] **4** என்னை அனுப்பியவருடைய செயல்களைப் பகலிலேயே நாம்

அதி. 8
a யோவா 18:37
b யோவா 10:26; 1யோ 4:6
c யோவா 4:9
d மத் 12:24; யோவா 7:20; யோவா 10:20
e யோவா 5:41; யோவா 7:18
f யோவா 5:24; யோவா 11:25, 26; 1கொ 15:54; வெளி 20:6
g யோவா 5:41; யோவா 13:31, 32; அப் 3:13
h யோவா 7:28
i யோவா 7:29
j மத் 13:17; எபி 11:13
k நீதி 8:22; யோவா 17:5; பிலி 2:6, 7; கொலோ 1:15–17

அதி. 9
l யோவா 1:38
m யோவா 11:2–4

செய்ய வேண்டும்.[a] ராத்திரி வரப்போகிறது, அப்போது எந்த மனுஷனாலும்
வேலை செய்ய முடியாது. **5** நான் இந்த உலகத்தில் இருக்கும்வரை, இந்த
உலகத்துக்கு ஒளியாக இருக்கிறேன்"[b] என்று சொன்னார். **6** இவற்றைச்
சொன்ன பின்பு, தரையில் துப்பி, எச்சிலால் மண்ணைக் குழைத்து, அந்த
மனிதனுடைய கண்கள்மேல் பூசி,[c] **7** "சீலோவாம் குளத்துக்குப் போய்க்
கழுவு" என்றார். (சீலோவாம் என்றால் "அனுப்பப்பட்டது" என்று அர்த்தம்.)
அவனும் போய், கழுவி, பார்வை பெற்றுத் திரும்பி வந்தான்.[d]

8 அக்கம்பக்கத்தில் இருந்தவர்களும் முன்பு அவன் பிச்சை எடுத்த
தைப் பார்த்தவர்களும், "இங்கே உட்கார்ந்து பிச்சை எடுத்துக்கொண்டிருந்
தவன் இவன்தானே?" என்று பேசிக்கொண்டார்கள். **9** சிலர், "இவன்தான்"
என்று சொன்னார்கள். வேறு சிலர், "இல்லவே இல்லை, ஆனால் அவனைப்
போலவே இருக்கிறான்" என்று சொன்னார்கள். அந்த மனிதனோ, "நான்
தான் அவன்" என்று திரும்பத் திரும்பச் சொன்னான். **10** அதற்கு அவர்
கள், "அப்படியானால், உனக்கு எப்படிப் பார்வை கிடைத்தது?" என்று கேட்
டார்கள். **11** அப்போது அவன், "இயேசு என்பவர் மண்ணைக் குழைத்து
என் கண்கள்மேல் பூசி, 'சீலோவாம் குளத்துக்குப் போய்க் கழுவு'[e] என்று
சொன்னார். நானும் போய்க் கழுவினேன், எனக்குப் பார்வை கிடைத்தது"
என்று சொன்னான். **12** அதற்கு அவர்கள், "அவர் எங்கே?" என்று கேட்
டார்கள். அவனோ, "எனக்குத் தெரியாது" என்று சொன்னான்.

13 முன்பு பார்வையற்றவனாக இருந்த அந்த மனிதனைப் பரிசேயர்
களிடம் அவர்கள் கூட்டிக்கொண்டு போனார்கள். **14** இயேசு மண்ணைக்
குழைத்து அவனுடைய கண்கள்மேல் பூசிய[f] நாள் ஓய்வுநாளாக இருந்
தது.[g] **15** அப்போது பரிசேயர்களும், "உனக்கு எப்படிப் பார்வை கிடைத்
தது?" என்று அவனிடம் கேட்க ஆரம்பித்தார்கள். அதற்கு அவன், "மண்
ணைக் குழைத்து அவர் என் கண்கள்மேல் பூசினார்; அதைக் கழுவிய
பிறகு எனக்குப் பார்வை கிடைத்தது" என்று சொன்னான். **16** பின்பு பரிசே
யர்களில் சிலர், "அந்த மனுஷன் கடவுளிடமிருந்து வந்தவனல்ல. ஏனென்
றால், அவன் ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதில்லை"[h] என்று சொல்ல ஆரம்
பித்தார்கள். மற்றவர்களோ, "இப்படிப்பட்ட அற்புதங்களை ஒரு பாவியால்
எப்படிச் செய்ய முடியும்?"[i] என்று கேட்டார்கள். இதனால், அவர்கள் மத்தி
யில் பிரிவினை ஏற்பட்டது.[j] **17** பின்பு அந்த மனிதனிடம், "அவன் உனக்
குத்தானே பார்வை கொடுத்தான், அந்த ஆளைப் பற்றி நீ என்ன சொல்கி
றாய்?" என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன், "அவர் ஒரு
தீர்க்கதரிசி" என்று சொன்னான்.

18 ஆனால், பார்வையற்றவனாக இருந்தவன் இப்போது பார்க்கிறான்
என்பதை யூத மதத் தலைவர்கள் நம்பவில்லை. அதனால், அவனுடைய
அப்பா அம்மாவைக் கூப்பிட்டு விசாரித்தார்கள். **19** "இவன்தான் உங்கள்
மகனா? இவன் குருடனாகப் பிறந்தான் என்று சொல்கிறீர்களே, இப்போது
இவனுக்கு எப்படிப் பார்வை கிடைத்தது?" என்று அவர்களிடம் கேட்டார்
கள். **20** அப்போது அவனுடைய அப்பா அம்மா, "இவன் எங்களுடைய
மகன்தான், பிறக்கும்போதே குருடனாகத்தான் பிறந்தான். **21** ஆனால்,
இப்போது இவனுக்கு எப்படிப் பார்வை கிடைத்தது என்று எங்களுக்குத்
தெரியாது, யார் இவனுக்குப் பார்வை தந்தது என்றும் எங்களுக்குத் தெரி
யாது. இவனையே கேளுங்கள். இவன் வளர்ந்த பையன்தானே, இவனே

அதி. 9

a யோவா 4:34 யோவா 11:9

b ஏசா 49:6 ஏசா 61:1 யோவா 1:5 யோவா 8:12

c மாற் 8:23

d 2ரா 5:10, 14

e யோவா 9:7

f யோவா 9:6

g லூ 13:14 யோவா 5:8, 9

h யாத் 20:9, 10

i யோவா 3:2

j லூ 12:51 யோவா 7: 12, 43 யோவா 10:19

சொல்லட்டும்” என்றார்கள். **22** யூத மதத் தலைவர்களுக்குப் பயந்து[a] அவ
னுடைய அப்பா அம்மா இப்படிச் சொன்னார்கள்; ஏனென்றால், இயேசு
வைக் கிறிஸ்து என்று யாராவது சொன்னால் ஜெபக்கூடத்திலிருந்து அவர்
களை நீக்கிவிட வேண்டுமென்று[b] அந்தத் தலைவர்கள் ஏற்கெனவே
தீர்மானம் எடுத்திருந்தார்கள். **23** அதனால்தான், “இவன் வளர்ந்த பையன்
தானே. இவனையே கேளுங்கள்” என்று அவனுடைய அப்பா அம்மா
சொன்னார்கள்.

24 முன்பு பார்வையற்றவனாக இருந்த அந்த மனிதனை இரண்டாவது
தடவை அவர்கள் கூப்பிட்டு, “உண்மையைச் சொல்லி கடவுளை மகிமைப்
படுத்து. அந்த ஆள் ஒரு பாவி என்று எங்களுக்குத் தெரியும்” என்று சொன்
னார்கள். **25** அதற்கு அவன், “அவர் ஒரு பாவியா இல்லையா என்பது
எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் தெரியும், பார்க்க முடியாமலி
ருந்த என்னால் இப்போது பார்க்க முடிகிறது” என்று சொன்னான். **26** அப்
போது அவர்கள், “அவன் உனக்கு என்ன செய்தான்? உனக்கு எப்படிப்
பார்வை தந்தான்?” என்று அவனிடம் கேட்டார்கள். **27** அதற்கு அவன்,
“நான் ஏற்கெனவே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேட்கவில்லை. மறு
படியும் ஏன் கேட்கிறீர்கள்? நீங்களும் அவருடைய சீஷர்களாக விரும்பு
கிறீர்களா என்ன?” என்று கேட்டான். **28** அப்போது அவர்கள் அவ
னைச் சபித்து, “நீதான் அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயுடைய
சீஷர்கள். **29** மோசேயிடம் கடவுள் பேசினார் என்று எங்களுக்குத் தெரி
யும்; ஆனால், அந்த ஆள் எங்கிருந்து வந்திருக்கிறான் என்று எங்களுக்
குத் தெரியாது” என்று சொன்னார்கள். **30** அதற்கு அந்த மனிதன்,
“என்ன ஆச்சரியம்! அவர் எனக்குப் பார்வை தந்திருக்கிறார், அப்படியி
ருந்தும் அவர் எங்கிருந்து வந்திருக்கிறார் என்று தெரியாது என்கிறீர்களே!
31 பாவிகளுடைய ஜெபத்தைக் கடவுள் கேட்பதில்லை,[c] அவருக்குப்
பயந்து அவருடைய விருப்பத்தின்படி* செய்கிறவனுடைய ஜெபத்தைத்
தான் அவர் கேட்கிறார்[d] என்பது நமக்குத் தெரியும். **32** பிறவிக் குரு
டனுக்கு ஒருவர் பார்வை தந்ததாகச் சரித்திரமே இல்லை. **33** அவர் கட
வுளிடமிருந்து வரவில்லை என்றால், அவரால் ஒன்றுமே செய்திருக்க
முடியாது”[e] என்று சொன்னான். **34** அதற்கு அவர்கள், “முழுக்க முழுக்கப்
பாவத்தில் பிறந்த நீயா எங்களுக்குச் சொல்லித்தருகிறாய்?” என்று கேட்டு,
அவனைத் துரத்திவிட்டார்கள்![f]

35 அவனைத் துரத்திவிட்டார்கள் என்ற விஷயத்தை இயேசு கேள்விப்
பட்டார்; பிறகு அவனைப் பார்த்தபோது, “மனிதகுமாரன்மேல் நீ விசுவா
சம் வைக்கிறாயா?” என்று கேட்டார். **36** அதற்கு அந்த மனிதன், “ஐயா,
அவர் யார் என்று சொல்லுங்கள்; அப்போது நான் விசுவாசம் வைப்பேன்”
என்று சொன்னான். **37** இயேசு அவனிடம், “நீ அவரைப் பார்த்திருக்கி
றாய்; உன்னிடம் பேசிக்கொண்டிருப்பவர்தான் அவர்” என்று சொன்னார்.
38 உடனடியாக அவன், “எஜமானே, நான் விசுவாசம் வைக்கிறேன்” என்று
சொல்லி அவர் முன்னால் மண்டிபோட்டு தலைவணங்கினான். **39** பின்பு
இயேசு, “பார்வையற்றவர்கள் பார்வை அடையும்படியும்[g] பார்வையுள்ளவர்
கள் பார்வை இழக்கும்படியும்[h] தீர்ப்பு பெறுவதற்காகவே நான் இந்த உல
கத்துக்கு வந்தேன்” என்று சொன்னார். **40** அவனோடிருந்த பரிசேயர்கள்

9:31 * வே.வா., “சித்தத்தின்படி.”

அதி. 9
a யோவா 7:13; யோவா 19:38
b யோவா 12:42; யோவா 16:2
c சங் 66:18; நீதி 28:9; ஏசா 1:15
d சங் 34:15; நீதி 15:29
e யோவா 5:36
f யோவா 9:22; யோவா 16:2
g லூ 4:18; யோவா 12:46
h மத் 11:25; மத் 13:13; யோவா 3:19

இவற்றைக் கேட்டு, “நாங்களும் என்ன பார்வையற்றவர்களா?” என்று கேட்
டார்கள். **41** அதற்கு இயேசு, “நீங்கள் பார்வையற்றவர்களாக இருந்திருந்
தால், பாவமில்லாமல் இருந்திருப்பீர்கள். ஆனால், ‘நாங்கள் பார்க்கிறோம்’
என்று நீங்கள் சொல்வதால் பாவமுள்ளவர்களாகவே இருக்கிறீர்கள்”[a]
என்று சொன்னார்.

10 பின்பு இயேசு அவர்களிடம், “உண்மையாகவே உண்மையாகவே
உங்களுக்குச் சொல்கிறேன், ஆட்டுத்தொழுவத்தின் கதவு வழி
யாக வராமல் வேறு வழியாக ஏறி வருகிறவன் திருடனாகவும் கொள்ளைக்
காரனாகவும் இருக்கிறான்.[b] **2** ஆனால், கதவு வழியாக வருகிறவர் ஆடுக
ளின் மேய்ப்பராக இருக்கிறார்.[c] **3** காவல்காரன் அவருக்குத்தான் கதவைத்
திறந்துவிடுகிறான்;[d] ஆடுகளும் அவருடைய குரலைக் கேட்கின்றன;[e] அவர்
தன்னுடைய ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, அவற்றை வெளியே
நடத்திக்கொண்டு போகிறார். **4** அவர் தன்னுடைய ஆடுகள் எல்லாவற்
றையும் வெளியே கொண்டுவந்த பின்பு, அவற்றுக்கு முன்னால் போகிறார்;
அந்த ஆடுகள் அவருடைய குரலைத் தெரிந்து வைத்திருப்பதால் அவ
ருக்குப் பின்னால் போகின்றன. **5** அன்னியர்களுடைய குரல் அவற்றுக்
குத் தெரியாது; அதனால், அவை அன்னியன் பின்னால் போகவே போகாது,
அவனைவிட்டு ஓடிவிடும்” என்று சொன்னார். **6** அவர் சொன்ன இந்த ஒப்
புமையை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

7 அதனால் இயேசு மறுபடியும் அவர்களிடம், “உண்மையாகவே உண்
மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், நான்தான் ஆட்டுத்தொழுவத்தின்
கதவு.[f] **8** என் பெயரில் போலியாக வந்த எல்லாரும் திருடர்கள், கொள்
ளைக்காரர்கள்; அவர்களுடைய குரலுக்கு ஆடுகள் காதுகொடுக்கவில்லை.
9 நான்தான் கதவு; என் வழியாக நுழைகிற எவரும் மீட்புப் பெறுவார்;
அவர் உள்ளே போவார், வெளியே வருவார், மேய்ச்சல் நிலத்தைக் கண்டு
பிடிப்பார்.[g] **10** திருடன் திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமே
தவிர வேறெதற்கும் வருவதில்லை.[h] நானோ, அவற்றுக்கு வாழ்வு கிடைப்
பதற்காக, அதுவும் முடிவில்லாத வாழ்வு கிடைப்பதற்காக, வந்திருக்கிறேன்.
11 நான்தான் நல்ல மேய்ப்பன்;[i] நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன்
உயிரையே கொடுக்கிறான்.[j] **12** ஆனால் கூலிக்கு மேய்ப்பவன், உண்
மையான மேய்ப்பனாக இல்லாததாலும் ஆடுகளுக்குச் சொந்தக்காரனாக
இல்லாததாலும், ஓநாய் வருவதைப் பார்த்ததுமே ஆடுகளை விட்டுவிட்டு
ஓடிவிடுகிறான். அந்த ஓநாய் ஆடுகளைப் பிடித்துக்கொண்டு, மந்தை
யைச் சிதறடித்துவிடுகிறது. **13** அவன் கூலிக்கு மேய்ப்பவனாக இருப்ப
தால் ஆடுகள்மேல் அவனுக்கு அக்கறையில்லை. **14** நான்தான் நல்ல
மேய்ப்பன். தகப்பன் என்னைத் தெரிந்து வைத்திருப்பது போலவும் தகப்
பனை நான் தெரிந்து வைத்திருப்பது போலவும்,[k] **15** நான் என்னுடைய
ஆடுகளைத் தெரிந்து வைத்திருக்கிறேன், என்னுடைய ஆடுகளும் என்
னைத் தெரிந்து வைத்திருக்கின்றன.[l] ஆடுகளுக்காக நான் என் உயிரையே
கொடுக்கிறேன்.[m]

16 இந்தத் தொழுவத்தைச் சேராத வேறே ஆடுகளும் எனக்கு இருக்
கின்றன.[n] அவற்றையும் நான் கொண்டுவர வேண்டும், அவை என்னுடைய
குரலைக் கேட்கும்.* அப்போது, அவை ஒரே மேய்ப்பரின் கீழ் ஒரே மந்தை

10:16 * வே.வா., “குரலுக்குக் கீழ்ப்படியும்.”

அதி. 9
a யோவா 15:22

அதி. 10
b மத் 7:15
c மத் 26:31; மாற் 14:27; யோவா 10:11
d லூ 1:17; யோவா 3:28
e யோவா 10:27
f யோவா 14:6
g யோவா 21:17
h மத் 7:15
i எசே 34:23; மத் 9:36
j 1சா 17:34, 35; மத் 20:28; எபி 13:20
k மத் 11:27
l யோவா 10:27
m மத் 20:28; யோவா 15:13; 1யோ 3:16
n லூ 12:32

யாகும்.[a] **17** நான் என் உயிரைக் கொடுப்பதால்[b] என் தகப்பன் என்மேல்
அன்பு காட்டுகிறார்;[c] என் உயிரை மறுபடியும் பெற்றுக்கொள்வதற்காக நான்
அதைக் கொடுக்கிறேன். **18** ஒருவனும் என் உயிரை என்னிடமிருந்து
பறிக்க மாட்டான். நானாகவே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுப்
பதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது, மறுபடியும் பெற்றுக்கொள்வதற்கும்
அதிகாரம் இருக்கிறது.[d] இந்தக் கட்டளையை என்னுடைய தகப்பன் எனக்
குக் கொடுத்திருக்கிறார்” என்று சொன்னார்.

19 அவர் இப்படிச் சொன்னதால் மறுபடியும் யூதர்கள் மத்தியில்
பிரிவினை உண்டானது.[e] **20** அவர்களில் பலர், “இவனுக்குப் பேய் பிடித்
திருக்கிறது. இவன் ஒரு பைத்தியம், இவன் சொல்வதை ஏன் கேட்டுக்
கொண்டிருக்கிறீர்கள்?” என்றார்கள். **21** மற்றவர்களோ, “பேய் பிடித்தவன்
இப்படியா பேசுவான்? குருடர்களுக்குப் பேயால் பார்வை தர முடியுமா?”
என்று கேட்டார்கள்.

22 அப்போது, எருசலேமில் ஆலய அர்ப்பணப் பண்டிகை நடந்தது.
அது குளிர் காலமாக இருந்தது. **23** ஆலயத்தில் இருக்கிற சாலொமோன்
மண்டபத்தில்[f] இயேசு நடந்துகொண்டிருந்தார். **24** யூதர்கள் அவரைச்
சுற்றிவளைத்து, “எவ்வளவு காலத்துக்குத்தான் உன்னைப் பற்றிச் சொல்லா
மல் எங்களைக் காக்க வைப்பாய்? நீதான் கிறிஸ்து என்றால், அதை எங்க
ளுக்கு வெளிப்படையாகச் சொல்லிவிடு” என்று கேட்டார்கள். **25** அதற்கு
இயேசு, “நான் உங்களுக்குச் சொன்னேன், ஆனால் நீங்கள் நம்பவில்லை.
என் தகப்பனுடைய பெயரில் நான் செய்கிற செயல்களே என்னைப் பற்றிச்
சாட்சி கொடுக்கின்றன.[g] **26** நீங்கள் என் மந்தையைச் சேர்ந்த ஆடுகள்
இல்லை,[h] அதனால்தான் நம்பாமல் இருக்கிறீர்கள். **27** என் ஆடுகள் என்
னுடைய குரலைக் கேட்கின்றன,* நான் அவற்றைத் தெரிந்து வைத்திருக்
கிறேன், அவை என் பின்னால் வருகின்றன.[i] **28** நான் அவற்றுக்கு முடி
வில்லாத வாழ்வு தருகிறேன்,[j] அவை ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை.
அவற்றை ஒருவனும் என் கையிலிருந்து பறித்துக்கொள்ள மாட்டான்.[k]
29 என்னுடைய தகப்பன் எனக்குக் கொடுத்திருக்கும் அந்த ஆடுகள் மற்ற
எல்லாவற்றையும்விட மதிப்புள்ளவை. அவற்றை ஒருவனும் என் தகப்பனு
டைய கையிலிருந்து பறித்துக்கொள்ள முடியாது.[l] **30** நானும் என் தகப்ப
னும் ஒன்றாயிருக்கிறோம்”*[m] என்று சொன்னார்.

31 அப்போது, அந்த யூதர்கள் அவரைக் கல்லெறிந்து கொல்வ
தற்காக மறுபடியும் கற்களை எடுத்தார்கள். **32** இயேசு அவர்களிடம்,
“என் தகப்பன் சொன்னபடி எத்தனையோ நல்ல செயல்களை உங்கள்
முன்னால் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றில் எந்தச் செயலுக்காக
நீங்கள் என்மேல் கல்லெறிகிறீர்கள்?” என்று கேட்டார். **33** அதற்கு அந்த
யூதர்கள், “நல்ல செயலுக்காக அல்ல, கடவுளை நிந்தித்துப் பேசியதற்
காக உன்மேல் கல்லெறிகிறோம்;[n] நீ மனுஷனாயிருந்தும் உன்னைக் கட
வுளாக்கிக்கொள்கிறாய்” என்று சொன்னார்கள். **34** அதற்கு இயேசு, “உங்க
ளுடைய திருச்சட்டத்தில் ‘“நீங்கள் எல்லாரும் கடவுள்கள்”*[o] எனச் சொன்
னேன்’ என்று எழுதப்பட்டிருக்கிறது, இல்லையா? **35** கடவுளுடைய வார்த்
தையால் கண்டனம் செய்யப்பட்டவர்களையே ‘கடவுள்கள்’[p] என்று அவர்

10:27 * வே.வா., “குரலுக்குக் கீழ்ப்படிகின்றன.” **10:30** * வே.வா., “ஒற்றுமையாக இருக்கிறோம்.” **10:34** * வே.வா., “கடவுளைப் போன்றவர்கள்.”

அதி. 10
a எசே 34:23, எசே 37:24, 1பே 5:4
b ஏசா 53:12, பிலி 2:8, எபி 2:9, எபி 12:2
c யோவா 17:23
d அப் 2:23, 24
e லூ 12:51, யோவா 7:12, யோவா 9:16
f அப் 3:11
g யோவா 3:2, யோவா 5:36, யோவா 10:38, யோவா 14:10, அப் 2:22
h யோவா 8:47
i யோவா 10:3
j யோவா 5:24, யோவா 17:1, 2
k யோவா 6:37, யோவா 18:9
l 1பே 1:4, 5
m யோவா 10:38, யோவா 17:11, 21
n லேவி 24:16
o சங் 82:6, 1கொ 8:5
p சங் 82:1

அழைத்திருக்கிறார்; அதோடு, வேதவசனங்கள் சொல்வதையும் தள்ளு
படி செய்ய முடியாது. **36** அப்படியிருக்கும்போது, தகப்பனால் புனிதமாக்
கப்பட்டும் இந்த உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை ‘கடவு
ளுடைய மகன்’ என்று சொன்னதற்காகவா ‘கடவுளை நிந்திக்கிறாய்’ என்று
சொல்கிறீர்கள்?[a] **37** என் தகப்பனின் செயல்களை நான் செய்யாவிட்டால்,
நீங்கள் என்னை நம்ப வேண்டியதில்லை. **38** அவற்றைச் செய்கிறேன் என்
றால், என்னை நீங்கள் நம்பாவிட்டால்கூட, என் செயல்களையாவது நம்புங்
கள்;[b] அப்போது, என் தகப்பன் என்னோடு ஒன்றுபட்டிருக்கிறார் என்பதை
யும், நானும் என் தகப்பனோடு ஒன்றுபட்டிருக்கிறேன் என்பதையும்
தெரிந்துகொள்வீர்கள்,[c] தொடர்ந்து தெரிந்துகொண்டே இருப்பீர்கள்” என்று
சொன்னார். **39** இதனால், அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கப் பார்த்
தார்கள்; அவரோ அவர்களிடம் சிக்காமல் தப்பித்துக்கொண்டார்.

40 அவர் மறுபடியும் யோர்தானைக் கடந்து, யோவான் முதலில்
ஞானஸ்நானம் கொடுத்துவந்த இடத்துக்குப் போய்[d] அங்கே தங்கினார்.
41 நிறைய பேர் அவரிடம் வந்தார்கள்; அப்போது அவர்கள், “யோவான்
எந்தவொரு அற்புதமும் செய்யவில்லை; ஆனால், இவரைப் பற்றி
யோவான் சொன்னதெல்லாம் உண்மையாக இருக்கிறது”[e] என்று ஒருவ
ருக்கொருவர் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். **42** அங்கே அவர்மேல்
நிறைய பேர் விசுவாசம் வைத்தார்கள்.

11 பெத்தானியா கிராமத்தில் லாசரு என்பவன் வியாதியாக இருந்
தான். மரியாளும் மார்த்தாளும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்
கள்.[f] **2** இந்த மரியாள்தான் இயேசுமேல் வாசனை எண்ணெயை ஊற்றி,
தன்னுடைய கூந்தலால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள்;[g] இவளு
டைய சகோதரன் லாசருதான் வியாதியாக இருந்தான். **3** அதனால் அவ
னுடைய சகோதரிகள் ஆள் அனுப்பி, “எஜமானே, உங்கள் பாசத்துக்குரிய
நண்பன் வியாதியாக இருக்கிறான்” என்று சொல்லச் சொன்னார்கள்.
4 இயேசு இதைக் கேட்டபோது, “இந்த வியாதியின் முடிவில் மரணம்
அல்ல, கடவுளுக்கு மகிமைதான் உண்டாகும்;[h] இதன் மூலம் கடவுளுடைய
மகனுக்கும் மகிமை உண்டாகும்” என்று சொன்னார்.

5 மார்த்தாளையும் அவளுடைய சகோதரியையும் லாசருவையும் இயேசு
நேசித்தார். **6** ஆனால், லாசருவுக்கு உடல்நிலை சரியில்லை என்பதைக்
கேள்விப்பட்ட பிறகும் தான் இருந்த இடத்திலேயே இன்னும் இரண்டு நாட்
கள் தங்கினார். **7** அதன் பின்பு அவர் தன்னுடைய சீஷர்களிடம், “மறுபடி
யும் யூதேயாவுக்குப் போகலாம், வாருங்கள்” என்று சொன்னார். **8** அதற்
குச் சீஷர்கள், “ரபீ,[i] சமீபத்தில்தான் யூதேய மக்கள் உங்களைக் கல்லெறிந்து
கொல்லப் பார்த்தார்கள்,[j] மறுபடியுமா அங்கே போகப்போகிறீர்கள்?” என்று
கேட்டார்கள். **9** அப்போது இயேசு, “பகலுக்கு 12 மணிநேரம் இருக்கிறது,
இல்லையா?[k] ஒருவன் பகலில் நடந்தால் தடுக்கி விழ மாட்டான். ஏனென்
றால், அவன் இந்த உலகத்தின் ஒளியைப் பார்க்கிறான். **10** ஆனால், ஒரு
வன் இருட்டில் நடந்தால் தடுக்கி விழுவான். ஏனென்றால், அவனிடம் ஒளி
இல்லை” என்று சொன்னார்.

11 இப்படிச் சொல்லிவிட்டு, “நம்முடைய நண்பன் லாசரு தூங்குகி
றான்,[l] அவனை எழுப்புவதற்காக நான் அங்கே போகப்போகிறேன்”
என்று சொன்னார். **12** அதற்குச் சீஷர்கள், “எஜமானே, அவன் தூங்கி

அதி. 10
a லூ 1:35; யோவா 5:18
b யோவா 5:36
c யோவா 14:10; யோவா 17:21
d யோவா 1:28
e யோவா 1:29

அதி. 11
f லூ 10:38
g மத் 26:6, 7; மாற் 14:3; யோவா 12:3
h யோவா 9:1-3
i யோவா 1:38
j யோவா 8:59; யோவா 10:31
k யோவா 9:4; யோவா 12:35
l சங் 13:3; மத் 9:24; அப் 7:59, 60; 1கொ 15:6

னால் குணமாகிவிடுவானே" என்று சொன்னார்கள். **13** லாசரு இறந்துவிட்
டதைப் பற்றி இயேசு பேசிக்கொண்டிருந்தார். அவர்களோ, தூங்குவதைப்
பற்றி அவர் பேசுவதாக நினைத்துக்கொண்டார்கள். **14** அதனால் இயேசு,
"லாசரு இறந்துவிட்டான்"[a] என்று அவர்களிடம் வெளிப்படையாகவே
சொன்னார். **15** "நான் அங்கே இல்லாததால் உங்கள் நம்பிக்கை அதிகமா
வதற்கு வாய்ப்புக் கிடைக்கப்போகிறது, அதை நினைத்துச் சந்தோஷப்படு
கிறேன். வாருங்கள், இப்போது நாம் அவனிடம் போகலாம்" என்று சொன்
னார். **16** திதிமு என்ற தோமா மற்ற சீஷர்களிடம், "நாம் அவரோடு
சேர்ந்து சாக வேண்டியிருந்தாலும் சரி, அவரோடு போகலாம், வாருங்கள்"[b]
என்று சொன்னார்.

17 இயேசு அங்கே போய்ச் சேர்ந்தபோது, லாசரு கல்லறையில்* வைக்
கப்பட்டு ஏற்கெனவே நான்கு நாட்கள் ஆகியிருந்தன. **18** எருசலேமுக்
குப் பக்கத்தில் கிட்டத்தட்ட இரண்டு மைல்* தூரத்தில் பெத்தானியா
இருந்தது. **19** மார்த்தாள் மற்றும் மரியாளின் சகோதரன் இறந்திருந்ததால்
அவர்களுக்கு ஆறுதல் சொல்ல யூதர்கள் நிறைய பேர் அங்கே வந்திருந்
தார்கள். **20** இயேசு வந்துகொண்டிருப்பதைக் கேள்விப்பட்டபோது அவ
ரைச் சந்திக்க மார்த்தாள் போனாள். ஆனால், மரியாள்[c] வீட்டிலேயே உட்
கார்ந்திருந்தாள். **21** மார்த்தாள் இயேசுவைப் பார்த்து, "எஜமானே, நீங்கள்
இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான். **22** ஆனா
லும், நீங்கள் கடவுளிடம் எதைக் கேட்டாலும் அவர் உங்களுக்குத் தரு
வாரென்று இப்போதும் நம்புகிறேன்" என்று சொன்னாள். **23** இயேசு அவ
ளிடம், "உன் சகோதரன் எழுந்திருப்பான்" என்று சொன்னார். **24** அதற்கு
மார்த்தாள், "கடைசி நாளில் உயிர்த்தெழுதல்[d] நடக்கும்போது அவன் உயி
ரோடு வருவான் என்று எனக்குத் தெரியும்" என்று சொன்னாள். **25** அப்
போது இயேசு, "நானே உயிர்த்தெழுதலும் வாழ்வுமாக இருக்கிறேன்.[e]
என்மேல் விசுவாசம் வைக்கிறவன் இறந்தாலும் உயிர்பெறுவான். **26** உயி
ரோடிருந்து என்மேல் விசுவாசம் வைக்கிற யாரும் இறந்துபோகவே மாட்
டார்கள்.[f] இதை நம்புகிறாயா?" என்று கேட்டார். **27** அதற்கு அவள்,
"ஆமாம், எஜமானே. நீங்கள்தான் கடவுளுடைய மகனாகிய கிறிஸ்து, நீங்
கள்தான் இந்த உலகத்துக்கு வரவேண்டியவர் என்பதை நம்புகிறேன்"
என்று சொன்னாள். **28** இப்படிச் சொல்லிவிட்டு தன் சகோதரி மரியாளிடம்
போய், "போதகர்[g] வந்திருக்கிறார், உன்னைக் கூப்பிடுகிறார்" என்று அவள்
காதில் சொன்னாள். **29** மரியாள் இதைக் கேட்டவுடன், அவரைச் சந்திக்க
வேகமாக எழுந்து போனாள்.

30 இயேசு இன்னும் கிராமத்துக்குள் வராமல், மார்த்தாள்
தன்னைச் சந்தித்த இடத்திலேயே இருந்தார். **31** மரியாளின் வீட்டில்
அவளுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்த யூதர்கள், அவள் வேக
மாக எழுந்து வெளியே போவதைப் பார்த்து, அழுவதற்காகக் கல்லறைக்
குப்[h] போகிறாள் என நினைத்துக்கொண்டு அவள் பின்னாலேயே போனார்
கள். **32** இயேசு இருந்த இடத்துக்கு மரியாள் வந்து, அவரைப் பார்த்ததும்
அவருடைய காலில் விழுந்து, "எஜமானே, நீங்கள் இங்கே இருந்திருந்தால்
என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்" என்று சொன்னாள். **33** அவள்

11:17 * வே.வா., "நினைவுக் கல்லறையில்." **11:18** * வே.வா., "சுமார் 3 கி.மீ." நே.மொ.,
"சுமார் 15 ஸ்டேடியா." இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 11
a பிர 9:5
b யோவா 11:8
c லூ 10:38, 39
d ஏசா 26:19; யோவா 5:28, 29; அப் 24:15; எபி 11:35; வெளி 20:12
e யோவா 14:6
f யோவா 8:51
g மத் 23:8; யோவா 13:13
h யோவா 11:17

அழுவதையும் அவளோடு வந்த யூதர்கள் அழுவதையும் இயேசு பார்த்த
போது உள்ளம் குமுறினார், மனம் கலங்கினார். **34** "அவனை எங்கே
வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "எஜமானே, வந்து
பாருங்கள்" என்று சொன்னார்கள். **35** அப்போது, இயேசு கண்ணீர்விட்
டார்.[a] **36** அதனால் யூதர்கள், "பாருங்கள், அவன்மேல் இவருக்கு எவ்வ
ளவு பாசம்!" என்று பேசிக்கொண்டார்கள். **37** ஆனால் அவர்களில் வேறு
சிலர், "குருடனுடைய கண்களைத் திறந்த இவரால்[b] லாசருவின் சாவைத்
தடுக்க முடியவில்லையா?" என்று கேட்டார்கள்.

38 இயேசு மறுபடியும் உள்ளத்தில் குமுறியபடி கல்லறைக்கு வந்தார்.
அது கல்லால் மூடப்பட்டிருந்த ஒரு குகை. **39** "இந்தக் கல்லை எடுத்துப்
போடுங்கள்" என்று இயேசு சொன்னார். அப்போது, இறந்தவனின் சகோத
ரியான மார்த்தாள் அவரிடம், "எஜமானே, நான்கு நாளாகிவிட்டது, நாறுமே"
என்று சொன்னாள். **40** அதற்கு இயேசு, "நீ நம்பிக்கை வைத்தால் கடவு
ளுடைய மகிமையைப் பார்ப்பாய் என்று உனக்குச் சொன்னேன், இல்
லையா?"[c] என்று கேட்டார். **41** பின்பு, அவர்கள் கல்லை எடுத்துப் போட்
டார்கள். அதன்பின், இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து,[d] "தகப்பனே,
என் ஜெபத்தைக் கேட்டதற்காக உங்களுக்கு நன்றி சொல்கிறேன். **42** நீங்
கள் எப்போதும் என் ஜெபத்தைக் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.
ஆனால், நீங்கள்தான் என்னை அனுப்பினீர்கள் என்பதை இங்கே சுற்றி நிற்
கிற மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காகவே இப்படி ஜெபம் செய்கிறேன்"[e]
என்று சொன்னார். **43** இவற்றைச் சொன்ன பின்பு, "லாசருவே, வெளியே
வா!"[f] என்று சத்தமாகக் கூப்பிட்டார். **44** அப்போது, இறந்தவன் உயி
ரோடு வெளியே வந்தான்; அவனுடைய கால்களும் கைகளும் துணிக
ளால் சுற்றப்பட்டிருந்தன. முகத்திலும் ஒரு துணி சுற்றப்பட்டிருந்தது. இயேசு
அவர்களிடம், "இவனுடைய கட்டுகளை அவிழ்த்துவிடுங்கள், இவன்
போகட்டும்" என்று சொன்னார்.

45 மரியாளைப் பார்க்க வந்திருந்த யூதர்கள் நிறைய பேர் அவர்
செய்ததைப் பார்த்து அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள்.[g] **46** ஆனால்,
அவர்களில் சிலர் பரிசேயர்களிடம் போய், இயேசு செய்த காரியங்க
ளைப் பற்றிச் சொன்னார்கள். **47** இதனால் முதன்மை குருமார்களும் பரி
சேயர்களும் நியாயசங்கத்தைக் கூட்டி, "இப்போது என்ன செய்வது?
இந்த மனுஷன் நிறைய அற்புதங்களைச் செய்கிறானே![h] **48** இவனை இப்
படியே விட்டுவிட்டால் எல்லாரும் இவன்மேல் விசுவாசம் வைப்பார்கள்.
பிறகு, ரோமர்கள் வந்து நம்முடைய ஆலயத்தையும் தேசத்தையும்
எடுத்துக்கொள்வார்கள்" என்று சொன்னார்கள். **49** அப்போது, அவர்க
ளில் ஒருவராகவும் அந்த வருஷத்தின் தலைமைக் குருவாகவும்
இருந்த காய்பா[i] அவர்களிடம், "உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை.
50 முழு தேசமும் அழிந்துபோவதைவிட மக்களுக்காக ஒரேவொரு மனு
ஷன் சாவது உங்களுக்குத்தான் நல்லது என்பதை யோசிக்காமல் இருக்கி
றீர்களே" என்று சொன்னார். **51** இந்த வார்த்தைகளை அவர் சொந்தமாகச்
சொல்லவில்லை; அவர் அந்த வருஷத்தின் தலைமைக் குருவாக இருந்த
தால், இயேசு அந்தத் தேசத்துக்காகச் சாகப்போகிறார் என்றும், **52** அந்தத்
தேசத்துக்காக மட்டுமல்ல, சிதறிப்போன கடவுளுடைய பிள்ளைகளைக்
கூட்டிச்சேர்க்கும்படி அவர்களுக்காகவும் சாகப்போகிறார் என்றும் தீர்க்கத

அதி. 11

a லூ 19:41, எபி 4:15
b யோவா 9:6, 7
c யோவா 9:1-3
d மத் 14:19, மாற் 7:34, 35
e யோவா 12:28-30, யோவா 17:8
f லூ 7:12, 14
g யோவா 2:23, யோவா 10:42, யோவா 12:10, 11
h யோவா 12:37, அப் 4:15, 16
i மத் 26:3, லூ 3:2, அப் 4:5, 6

ரிசனமாகச் சொன்னார். **53** அன்றுமுதல், அவர்கள் இயேசுவைக் கொல்
வதற்கு திட்டம் தீட்ட ஆரம்பித்தார்கள்.

54 அதனால், யூதர்கள் மத்தியில் இயேசு வெளிப்படையாக நடமா
டாமல், அங்கிருந்து புறப்பட்டு, வனாந்தரத்துக்குப் பக்கத்திலிருந்த எப்பிரா
யீம்[a] என்ற நகரத்துக்குப் போய்த் தன்னுடைய சீஷர்களோடு தங்கினார்.
55 யூதர்களுடைய பஸ்கா பண்டிகை[b] நெருங்கிக்கொண்டிருந்தது. தூய்
மைச் சடங்கு செய்துகொள்வதற்காக நாட்டுப்புறத்திலிருந்து நிறைய பேர்
பஸ்காவுக்கு முன்பே எருசலேமுக்குப் போனார்கள். **56** அங்கே அவர்
கள் இயேசுவைத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆலயத்தில் கூடிநின்றபோது,
"அவர் பண்டிகைக்கு வர மாட்டாரா, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"
என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள். **57** முதன்மை குருமார்
களும் பரிசேயர்களும் இயேசுவைப் பிடிக்க* நினைத்தார்கள். அதனால்,
அவர் இருக்கிற இடம் யாருக்காவது தெரியவந்தால் அதைத் தங்களுக்குச்
சொல்ல வேண்டுமென்று கட்டளை போட்டிருந்தார்கள்.

12 பஸ்கா பண்டிகைக்கு ஆறு நாட்களுக்கு முன்பு இயேசு பெத்தா
னியாவுக்கு வந்துசேர்ந்தார். அங்குதான் அவர் உயிரோடு எழுப்
பிய லாசரு[c] இருந்தான். **2** அங்கே அவருக்குச் சாயங்கால உணவு
பரிமாறப்பட்டது. மார்த்தாள்தான் பரிமாறிக்கொண்டிருந்தாள்,[d] அவரோடு
சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களில் லாசருவும் ஒருவன். **3** அப்போது மரி
யாள் சுத்தமான, மிகவும் விலை உயர்ந்த சடாமாஞ்சி என்ற வாசனை எண்
ணெயை எடுத்துவந்தாள். ஒரு ராத்தல்* அளவுள்ள அந்த எண்ணெயை
இயேசுவின் பாதங்களில் ஊற்றி, தன்னுடைய கூந்தலால் அவருடைய
பாதங்களைத் துடைத்தாள். வீடு முழுவதும் அந்த எண்ணெய் வாசம் வீசி
யது.[e] **4** ஆனால், அவருடைய சீஷர்களில் ஒருவனும் அவரைக் காட்டிக்
கொடுக்க இருந்தவனுமான யூதாஸ் இஸ்காரியோத்து,[f] **5** "இந்த வாசனை
எண்ணெயை 300 தினாரியுவுக்கு* விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக்
கூடாதா?" என்று கேட்டான். **6** ஏழைகள் மீதுள்ள அக்கறையால் அல்ல,
அவன் திருடனாக இருந்ததால்தான் அப்படிச் சொன்னான். பணப்பெட்டி
அவனிடம் இருந்ததால், அதில் போடப்பட்ட பணத்தைத் திருடுவது அவ
னுடைய வழக்கமாக இருந்தது. **7** அதற்கு இயேசு, "இவளை ஒன்றும்
சொல்லாதே, அடக்க நாளுக்கு என்னைத் தயார்செய்வதற்காக அவள்
இதைச் செய்யட்டும்.[g] **8** ஏனென்றால், ஏழைகள் எப்போதும் உங்களோடு
இருக்கிறார்கள்,[h] ஆனால், நான் எப்போதும் உங்களோடு இருக்கப்போவ
தில்லை"[i] என்று சொன்னார்.

9 அவர் அங்கே இருப்பதைக் கேள்விப்பட்டு யூதர்களில் நிறைய பேர்
கூட்டமாக வந்தார்கள். இயேசுவைப் பார்ப்பதற்காக மட்டுமல்ல, அவர் உயி
ரோடு எழுப்பிய லாசருவைப் பார்ப்பதற்காகவும் வந்தார்கள்.[j] **10** அத
னால், லாசருவையும் கொலை செய்ய முதன்மை குருமார்கள் திட்டம் தீட்
டினார்கள். **11** ஏனென்றால், லாசருவினால்தான் யூதர்களில் நிறைய பேர்
இயேசுவிடம் போய், அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள்.[k]

12 அடுத்த நாள், பண்டிகைக்கு வந்திருந்த ஏராளமான மக்கள் இயேசு
எருசலேமுக்கு வருகிறார் என்பதைக் கேள்விப்பட்டார்கள். **13** அதனால்,

---

11:57 * வே.வா., "கைது செய்ய." **12:3** * அதாவது, "ரோம ராத்தல்." சுமார் 327 கிராம். இணைப்பு B14-ஐப் பாருங்கள். **12:5** * இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 11

a 2சா 13:23; 2நா 13:19

b யாத் 12:14; உபா 16:1; யோவா 2:13; யோவா 5:1; யோவா 6:4; யோவா 12:1

அதி. 12

c யோவா 11:1, 43

d லூ 10:40

e மத் 26:6-10; மாற் 14:3-6

f மத் 26:47; மாற் 14:10; லூ 22:48; யோவா 13:29; அப் 1:16

g மத் 26:12; மாற் 14:8; யோவா 19:40

h உபா 15:11

i மத் 26:11; மாற் 14:7

j யோவா 11:43, 44

k யோவா 7:31; யோவா 11:44, 45

குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவரைப் பார்க்கப் போனார்
கள். பின்பு, “கடவுளே, இவரைக் காத்தருளுங்கள்! யெகோவாவின்* பெய
ரில் வருகிற[a] இஸ்ரவேலின் ராஜா ஆசீர்வதிக்கப்பட்டவர்!”[b] என்று
ஆரவாரம் செய்ய ஆரம்பித்தார்கள். **14** இயேசு ஒரு கழுதைக்குட்டி
யைப் பார்த்தபோது அதன்மேல் உட்கார்ந்தார்.[c] **15** “சீயோன் மகளே,
பயப்படாதே. இதோ! உன் ராஜா ஒரு கழுதைக்குட்டியின் மேல் ஏறிவருகி
றார்”[d] என்று எழுதப்பட்டுள்ளபடியே இது நடந்தது. **16** இவற்றை அவரு
டைய சீஷர்கள் ஆரம்பத்தில் புரிந்துகொள்ளவில்லை. ஆனால், அவரைப்
பற்றிய இந்த விஷயங்கள் முன்பே எழுதப்பட்டிருந்தன என்பதும், அவற்
றின்படியே தாங்கள் அவருக்குச் செய்தார்கள் என்பதும், இயேசு மகிமைப்
படுத்தப்பட்ட பிறகுதான்[e] அவர்களுடைய ஞாபகத்துக்கு வந்தன.[f]

17 லாசருவை அவர் கல்லறையிலிருந்து* வெளியே வரும்படி கூப்
பிட்டு உயிர்த்தெழுப்பியபோது[g] அவரோடிருந்த மக்கள், அங்கு நடந்த
தைப் பற்றிச் சாட்சி கொடுத்துவந்தார்கள்.[h] **18** அவர் செய்த இந்த அற்பு
தத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட மக்களும் அவரைச் சந்திக்கப் போனார்கள்.
19 அதனால் பரிசேயர்கள் ஒருவருக்கொருவர், “பாருங்கள், நம்மால் எது
வுமே செய்ய முடியவில்லை. உலகமே அவன் பின்னால் போய்விட்டது”[i]
என்று பேசிக்கொண்டார்கள்.

20 பண்டிகையின்போது கடவுளை வணங்குவதற்காக வந்தவர்களில்
சில கிரேக்கர்களும் இருந்தார்கள். **21** கலிலேயாவில் இருக்கிற பெத்சாயி
தாவைச் சேர்ந்த பிலிப்புவிடம்[j] அவர்கள் போய், “ஐயா, நாங்கள் இயேசு
வைப் பார்க்க வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்கள். **22** பிலிப்பு
போய் இதை அந்திரேயாவிடம் சொன்னார். பின்பு, அந்திரேயாவும் பிலிப்
புவும் போய் இயேசுவிடம் சொன்னார்கள்.

23 இயேசு அவர்களிடம், “மனிதகுமாரன் மகிமைப்படுத்தப்படும்
நேரம் வந்துவிட்டது.[k] **24** உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்
குச் சொல்கிறேன், கோதுமை மணி நிலத்தில் விழுந்து சாகாவிட்டால்
அது ஒரே மணியாகத்தான் இருக்கும்; அது செத்தால்தான்[l] அதிக விளைச்
சலைத் தரும். **25** தன் உயிரை நேசிக்கிறவன் அதை இழந்துபோவான்.*
இந்த உலகத்தில் தன் உயிரை வெறுக்கிறவனோ[m] அதைப் பாதுகாத்துக்
கொண்டு முடிவில்லாத வாழ்வைப் பெறுவான்.[n] **26** ஒருவன் எனக்கு
ஊழியம் செய்ய விரும்பினால், அவன் என்னைப் பின்பற்றி வரவேண்டும்,
நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியனும் இருப்பான்.[o] ஒரு
வன் எனக்கு ஊழியம் செய்தால், அவனை என் தகப்பன் கௌரவிப்பார்.
27 இப்போது என் மனம் கலங்குகிறது,[p] நான் என்ன சொல்வேன்? தகப்
பனே, இந்தச் சோதனையிலிருந்து* என்னைக் காப்பாற்றுங்கள்.[q] இருந்தா
லும், நான் இந்தச் சோதனையை எதிர்ப்பட்டே ஆக வேண்டும். **28** தகப்
பனே, உங்களுடைய பெயரை மகிமைப்படுத்துங்கள்” என்று சொன்னார்.
அப்போது, “நான் அதை மகிமைப்படுத்தினேன், மறுபடியும் மகிமைப்படுத்
துவேன்”[r] என்று வானத்திலிருந்து ஒரு குரல்[s] வந்தது.

29 அங்கே கூட்டமாக நின்றுகொண்டிருந்த மக்கள் இதைக் கேட்டு,
இடி இடித்ததென்று பேசிக்கொண்டார்கள். மற்றவர்களோ, “ஒரு தேவதூதர்

12:13 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12:17** *வே.வா., “நினைவுக் கல்லறையிலிருந்து.” **12:25** *நே.மொ., “அழிக்கிறான்.” **12:27** *நே.மொ., “நேரத்திலிருந்து.”

அதி. 12

a சங் 118:25, 26
b மத் 21:8, 9; மாற் 11:8, 9; யோவா 1:49
c மத் 21:7; மாற் 11:7; லூ 19:35
d 1ரா 1:33, 34; ஏசா 62:11; சக 9:9; மத் 21:5
e யோவா 7:39
f லூ 24:45; யோவா 14:26
g யோவா 11:1, 43
h மத் 21:15; லூ 19:37
i யோவா 11:48
j யோவா 1:44
k யோவா 13:31, 32; யோவா 17:1
l மத் 16:21; ரோ 14:9; 1கொ 15:36
m வெளி 12:11
n மத் 16:25; மாற் 8:35; லூ 9:24
o யோவா 14:3; யோவா 17:24; 1தெ 4:17
p மத் 26:38; மாற் 14:34
q லூ 12:50; லூ 22:41, 42; எபி 5:7
r யோவா 17:1
s மத் 3:17; மத் 17:5; மாற் 1:11; மாற் 9:7; லூ 3:22; லூ 9:35; 2பே 1:17

இவரோடு பேசினார்” என்று சொன்னார்கள். **30** அதற்கு இயேசு, “இந்தக்
குரல் எனக்காக அல்ல, உங்களுக்காக வந்தது. **31** இப்போதே இந்த உல
கம் நியாயந்தீர்க்கப்படுகிறது, இந்த உலகத்தை ஆளுகிறவன்[a] வீழ்த்தப்படு
வான்.[b] **32** ஆனால், நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது*[c]
எல்லா விதமான மக்களையும் என்னிடம் ஈர்த்துக்கொள்வேன்” என்று
சொன்னார். **33** எப்படிச் சாகப்போகிறார்[d] என்பதைச் சுட்டிக்காட்டவே
அவர் அப்படிச் சொன்னார். **34** அப்போது மக்கள் அவரிடம், “கிறிஸ்து
என்றென்றும் இருப்பார் என்று திருச்சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதைக்
கேட்டிருக்கிறோம்.[e] அப்படியிருக்கும்போது, மனிதகுமாரன் உயர்த்தப்படு
வார் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?[f] யார் இந்த மனிதகுமாரன்?” என்று
கேட்டார்கள். **35** அதற்கு இயேசு அவர்களிடம், “இன்னும் கொஞ்சக்
காலத்துக்குத்தான் ஒளி உங்களோடு இருக்கும். இருள் உங்களை அடக்கி
ஆளாதபடி, ஒளி உங்களோடு இருக்கும்போதே நடந்துபோங்கள். இருளில்
நடந்துபோகும் ஒருவனுக்கு தான் போகிற இடம் தெரியாது.[g] **36** நீங்கள்
ஒளியின் பிள்ளைகளாவதற்கு[h] ஒளி உங்களோடு இருக்கும்போதே அதில்
விசுவாசம் வையுங்கள்” என்று சொன்னார்.

இயேசு இவற்றைச் சொன்ன பின்பு, அவர்களைவிட்டுப் போய் மறைந்
துகொண்டார். **37** அவர்கள் முன்னால் அவர் ஏராளமான அடையாளங்
களைச் செய்திருந்தும் அவர்மேல் அவர்கள் விசுவாசம் வைக்கவில்லை.
38 ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன இந்த வார்த்தைகள் நிறைவேறும்படியே
அப்படி நடந்தது: “யெகோவாவே,* நாங்கள் சொன்ன விஷயத்தை#
கேட்டு அதில் விசுவாசம் வைத்தது யார்?[i] யெகோவா* யாருக்குத் தன்
னுடைய பலத்தை△ காட்டியிருக்கிறார்?”[j] **39** அதோடு, அவர்கள் நம்பாத
தற்கான காரணத்தையும் ஏசாயா சொன்னார்: **40** “அவர்கள் தங்களுடைய
கண்களால் பார்க்காமலும் இதயத்தால் உணராமலும் என்னிடம் திரும்பி
வராமலும் நான் அவர்களைக் குணமாக்காமலும் இருக்கும்படி, அவர்களு
டைய கண்களைக் குருடாக்கியிருக்கிறார், அவர்களுடைய இதயத்தை
இறுகிப்போகச் செய்திருக்கிறார்.”[k] **41** அவருடைய மகிமையைப் பார்த்த
தால்தான் ஏசாயா அவரைப் பற்றி இப்படிச் சொன்னார்.[l] **42** இருந்தாலும்,
யூதத் தலைவர்களில்கூட நிறைய பேர் அவர்மேல் விசுவாசம் வைத்தார்
கள்.[m] ஆனால், தங்களைப் பரிசேயர்கள் ஜெபக்கூடத்திலிருந்து நீக்கிவிடக்
கூடாது என்பதற்காக அதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளவில்லை.[n]
43 கடவுளிடமிருந்து வரும் மகிமையைவிட மனிதர்களிடமிருந்து வரும்
மகிமையையே அவர்கள் அதிகமாக விரும்பினார்கள்.[o]

44 ஆனாலும் இயேசு சத்தமாக, “என்மேல் விசுவாசம் வைக்கிறவன்,
என்மேல் மட்டுமல்ல, என்னை அனுப்பியவர்மேலும் விசுவாசம் வைக்கி
றான்.[p] **45** என்னைப் பார்க்கிறவன் என்னை அனுப்பியவரையும் பார்க்கி
றான்.[q] **46** என்மேல் விசுவாசம் வைக்கிற ஒவ்வொருவரும் இருளி
லேயே[r] இருக்காதபடி நான் இந்த உலகத்துக்கு ஒளியாக வந்திருக்கிறேன்.[s]
47 ஆனால், ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டு அவற்றைக் கடைப்
பிடிக்காமல்போனால், நான் அவனை நியாயந்தீர்க்க மாட்டேன். ஏனென்
றால், நான் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக வரவில்லை, இந்த

அதி. 12
a யோவா 14:30, யோவா 16:11, அப் 26:17, 18, 2கொ 4:3, 4, எபே 2:1, 2, 1யோ 5:19
b லூ 10:18, வெளி 12:9
c யோவா 8:28
d அப் 5:30
e சங் 89:35, 36, சங் 110:4, ஏசா 9:7
f யோவா 3:14
g யோவா 11:10
h எபே 5:8
i ரோ 10:16
j ஏசா 53:1
k ஏசா 6:10, மத் 13:14, மாற் 4:11, 12, அப் 28:27
l ஏசா 6:1, 8
m யோவா 19:38
n யோவா 9:22, யோவா 16:2
o யோவா 5:44
p மத் 10:40, மாற் 9:37
q யோவா 14:9
r யோவா 12:35
s யோவா 3:19, யோவா 8:12, யோவா 9:5

12:32 *அதாவது, “மரக் கம்பத்தில் அறைந்து கொல்லப்படும்போது.” **12:38** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். #வே.வா., “செய்தியை.” △நே.மொ., “கையை.”

உலகத்தை மீட்பதற்காகவே வந்தேன்.[a] **48** என்னை அலட்சியம் செய்து நான் சொல்கிறவற்றை ஏற்றுக்கொள்ளாத ஒருவனை நியாயந்தீர்க்கும் ஒன்று இருக்கிறது. நான் சொன்ன செய்தியே அது; கடைசி நாளில் அதுவே அவனை நியாயந்தீர்க்கும். **49** ஏனென்றால், நான் சொந்தமாகப் பேசவில்லை, நான் எதைப் பேச வேண்டுமென்றும் எதைக் கற்பிக்க வேண்டுமென்றும் என்னை அனுப்பிய தகப்பனே எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.[b] **50** அவருடைய கட்டளையைக் கடைப்பிடிக்கும்போது முடிவில்லாத வாழ்வு[c] கிடைக்கும் என்று எனக்குத் தெரியும். அதனால், நான் எதைப் பேசினாலும் என் தகப்பன் எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்”[d] என்றார்.

13 இந்த உலகத்தைவிட்டுத் தகப்பனிடம் போவதற்கு[e] நேரம் வந்துவிட்டதென்று[f] பஸ்கா பண்டிகைக்கு முன்பு இயேசுவுக்குத் தெரிந்திருந்தது. அதனால், உலகத்திலிருந்த தன்னுடைய சீஷர்கள்மேல் அதுவரை அன்பு காட்டியது போலவே முடிவுவரை அன்பு காட்டினார்.[g] **2** எல்லாரும் சாயங்காலத்தில் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்; இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்[h] எண்ணத்தை சீமோனுடைய மகன் யூதாஸ் இஸ்காரியோத்தின்[i] இதயத்தில் பிசாசு ஏற்கெனவே விதைத்திருந்தான். **3** தகப்பன் எல்லாவற்றையும் தன்னுடைய கைகளில் ஒப்படைத்திருந்ததையும், தான் கடவுளிடமிருந்து வந்திருந்ததையும், கடவுளிடமே திரும்பிப் போக[j] வேண்டியிருந்ததையும் இயேசு தெரிந்து வைத்திருந்தார். **4** அதனால், இயேசு எழுந்து, தன்னுடைய மேலங்கியைக் கழற்றி, ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார்;[k] **5** பின்பு, ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, சீஷர்களின் பாதங்களைக் கழுவவும், தன்னுடைய இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கவும் ஆரம்பித்தார். **6** அவர் சீமோன் பேதுருவிடம் வந்தபோது, “எஜமானே, நீங்களா என் பாதங்களைக் கழுவப்போகிறீர்கள்?” என்று பேதுரு கேட்டார். **7** அதற்கு இயேசு, “நான் என்ன செய்கிறேன் என்பது இப்போது உனக்குப் புரியாது, பிறகு புரிந்துகொள்வாய்” என்று சொன்னார். **8** அப்போது பேதுரு, “நீங்கள் என் பாதங்களைக் கழுவவே கூடாது” என்று சொன்னார். இயேசுவோ, “நான் உன் பாதங்களைக் கழுவவில்லை என்றால்[l] என்னோடு உனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை” என்று சொன்னார். **9** அதற்கு சீமோன் பேதுரு, “அப்படியென்றால் எஜமானே, என் பாதங்களை மட்டுமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூட கழுவுங்கள்” என்று சொன்னார். **10** அதற்கு இயேசு, “குளித்தவன் தன் பாதங்களை மட்டும் கழுவினால் போதும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான். நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள், ஆனால் எல்லாருமே அல்ல” என்று சொன்னார். **11** தன்னைக் காட்டிக்கொடுப்பவன் யாரென்று அவருக்குத் தெரிந்திருந்தது.[m] அதனால்தான், “உங்களில் எல்லாருமே சுத்தமானவர்கள் அல்ல” என்று சொன்னார்.

12 அவர்களுடைய பாதங்களைக் கழுவிய பின்பு, தன்னுடைய மேலங்கியைப் போட்டுக்கொண்டு மறுபடியும் சாப்பிட உட்கார்ந்து, “நான் உங்களுக்கு என்ன செய்தேன் என்று புரிந்துகொண்டீர்களா? **13** என்னை ‘போதகர்’ என்றும், ‘எஜமான்’ என்றும் நீங்கள் கூப்பிடுவது சரிதான். ஏனென்றால், நான் போதகர்தான், எஜமான்தான்.[n] **14** எஜமானாகவும் போதகராகவும் இருக்கிற நானே உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால்,[o] நீங்

அதி. 12
a யோவா 3:16, 17
b யோவா 8:38; யோவா 14:10
c யோவா 6:40
d யோவா 3:34

அதி. 13
e யோவா 16:28; யோவா 17:11
f மத் 26:2; யோவா 12:23; யோவா 17:1
g யோவா 15:9; எபே 5:2; 1யோ 3:16
h மத் 26:14-16; மத் 26:24; மாற் 14:10, 11
i லூ 22:3, 4; யோவா 13:27
j யோவா 16:28
k பிலி 2:5-7
l 1கொ 6:11; எபே 5:25, 26; தீத் 3:5; எபி 10:22
m யோவா 6:64
n மத் 23:8
o லூ 22:27

களும் ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவ வேண்டும்.*[a] **15** நான் உங்களுக்குச் செய்தது போலவே நீங்களும் செய்ய வேண்டும் என்பதற்காக உங்களுக்கு முன்மாதிரி வைத்தேன்.[b] **16** உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், அடிமை தன் எஜமானைவிட உயர்ந்தவன் கிடையாது, அனுப்பப்பட்டவரும் தன்னை அனுப்பியவரைவிட உயர்ந்தவர் கிடையாது. **17** இதையெல்லாம் இப்போது தெரிந்துகொண்டீர்கள், ஆனால் இதன்படி நடந்தால் சந்தோஷமானவர்களாக இருப்பீர்கள்.[c] **18** உங்கள் எல்லாரையும் பற்றி நான் பேசவில்லை. நான் தேர்ந்தெடுத்தவர்களைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால், 'என்னோடு சேர்ந்து சாப்பிட்டவனே எனக்கு எதிரியாகிவிட்டான்'*[d] என்ற வேதவசனம் நிறைவேற வேண்டும்.[e] **19** அது நிறைவேறும்போது நான்தான் அவர் என்று நீங்கள் நம்புவதற்காக இப்போதே, அது நிறைவேறுவதற்கு முன்பே, நான் உங்களிடம் சொல்கிறேன்.[f] **20** உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்கிறவன் என்னையும் ஏற்றுக்கொள்கிறான்.[g] என்னை ஏற்றுக்கொள்கிறவன் என்னை அனுப்பியவரையும் ஏற்றுக்கொள்கிறான்"[h] என்று சொன்னார்.

21 இவற்றைச் சொன்ன பின்பு இயேசு மனம் கலங்கி, "உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்"[i] என்று வெளிப்படையாகச் சொன்னார். **22** யாரைப் பற்றி இப்படிச் சொன்னார் என்று தெரியாமல் சீஷர்கள் ஒருவரை ஒருவர் குழப்பத்தோடு பார்த்துக்கொண்டார்கள்.[j] **23** இயேசுவின் சீஷர்களில் அவருக்கு அன்பானவராக இருந்த ஒருவர்[k] அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். **24** சீமோன் பேதுரு அவரிடம், "யாரைப் பற்றிச் சொல்கிறார்?" என்று சைகையால் கேட்டார். **25** அப்போது அவர் இயேசுவின் நெஞ்சில் சாய்ந்துகொண்டு, "எஜமானே, அது யார்?"[l] என்று கேட்டார். **26** அதற்கு இயேசு, "நான் யாருக்கு ரொட்டித் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான்"[m] என்று சொன்னார். பின்பு, ரொட்டித் துண்டைத் தோய்த்து, சீமோன் இஸ்காரியோத்தின் மகனான யூதாசிடம் கொடுத்தார். **27** அவன் ரொட்டித் துண்டை வாங்கியதும் சாத்தான் அவனுடைய இதயத்துக்குள் புகுந்தான்.[n] அதனால் இயேசு அவனிடம், "நீ செய்யப்போவதைச் சீக்கிரமாகச் செய்" என்று சொன்னார். **28** ஆனால், எதற்காக அவனிடம் இப்படிச் சொன்னார் என்று அங்கே உட்கார்ந்திருந்த யாருக்கும் புரியவில்லை. **29** பணப்பெட்டி யூதாசிடம் இருந்ததால்,[o] பண்டிகைக்குத் தேவையானதை வாங்கி வரும்படியோ ஏழைகளுக்கு ஏதாவது கொடுக்கும்படியோ இயேசு சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்துக்கொண்டார்கள். **30** அவன் அந்த ரொட்டித் துண்டை வாங்கியதும் உடனடியாக வெளியே போனான். அது ராத்திரி நேரமாக இருந்தது.[p]

31 அவன் வெளியே போன பின்பு இயேசு, "இப்போது மனிதகுமாரன் மகிமைப்படுகிறார்,[q] அவர் மூலம் கடவுளும் மகிமைப்படுகிறார். **32** கடவுளே அவரை மகிமைப்படுத்துவார்,[r] உடனே அவரை மகிமைப்படுத்துவார். **33** சிறுபிள்ளைகளே, இன்னும் கொஞ்ச நேரம்தான் நான் உங்களோடு இருப்பேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனாலும், 'நான்

13:14 *வே.வா., "கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்." **13:18** *நே.மொ., "எனக்கு எதிராகத் தன் குதிங்காலைத் தூக்கினான்."

அதி. 13
a மத் 20:26, 27; லூ 9:48; லூ 22:26; ரோ 12:10; 1பே 5:5
b பிலி 2:5; 1பே 2:21; 1யோ 2:6
c மத் 7:24, 25; லூ 11:28; யாக் 1:25
d சங் 41:9; மத் 26:23
e யோவா 17:12
f யோவா 14:29; யோவா 16:4
g மத் 25:40
h மத் 10:40
i மத் 26:21; மாற் 14:18; லூ 22:21; யோவா 6:70
j மத் 26:22; லூ 22:23
k யோவா 19:26; யோவா 20:2
l யோவா 21:20
m மத் 26:23
n லூ 22:3, 4
o யோவா 12:4-6
p மத் 26:20
q யோவா 12:23
r யோவா 17:1

போகிற இடத்துக்கு உங்களால் வர முடியாது’[a] என்று நான் யூதர்களிடம்
சொன்னதையே இப்போது உங்களிடமும் சொல்கிறேன். **34** நீங்கள் ஒரு
வர்மேல் ஒருவர் அன்பு காட்டுங்கள். நான் உங்கள்மேல் அன்பு காட்டியது
போலவே[b] நீங்களும் ஒருவர்மேல் ஒருவர் அன்பு காட்ட வேண்டுமென்ற[c]
புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். **35** நீங்கள் ஒருவர்
மேல் ஒருவர் அன்பு காட்டினால், நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்
லாரும் தெரிந்துகொள்வார்கள்”[d] என்று சொன்னார்.

36 சீமோன் பேதுரு அவரிடம், “எஜமானே, நீங்கள் எங்கே போகிறீர்
கள்?” என்று கேட்டார். அதற்கு இயேசு, “நான் போகிற இடத்துக்கு என்
பின்னால் வர இப்போது உன்னால் முடியாது, ஆனால் பிற்பாடு வருவாய்”[e]
என்று சொன்னார். **37** அப்போது பேதுரு, “எஜமானே, இப்போது உங்கள்
பின்னால் வர என்னால் ஏன் முடியாது? உங்களுக்காக என் உயிரையே
கொடுப்பேன்”[f] என்று சொன்னார். **38** அதற்கு இயேசு, “நீ எனக்காக உயி
ரையே கொடுப்பாயா? உண்மையாகவே உண்மையாகவே உனக்குச் சொல்
கிறேன், சேவல் கூவுவதற்கு முன்பு, என்னைத் தெரியாதென்று நீ மூன்று
தடவை சொல்லிவிடுவாய்”[g] என்றார்.

14 பின்பு, “நீங்கள் மனம் கலங்க வேண்டாம்.[h] கடவுள்மேல் விசு
வாசம் வையுங்கள்,[i] என்மேலும் விசுவாசம் வையுங்கள். **2** என்
னுடைய தகப்பனின் வீட்டில் தங்குவதற்கு நிறைய இடங்கள் இருக்கின்றன.
அப்படி இல்லாதிருந்தால் நானே உங்களுக்குச் சொல்லியிருப்பேன். உங்க
ளுக்காக ஒரு இடத்தைத் தயார்படுத்துவதற்கு நான் போகிறேன்.[j] **3** நான்
போய் உங்களுக்காக ஒரு இடத்தைத் தயார்படுத்திய பின்பு, மறுபடியும்
வந்து என் வீட்டுக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போவேன். அப்போது,
நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்.[k] **4** நான் போகும்
இடத்துக்கான வழி உங்களுக்குத் தெரியும்” என்று சொன்னார்.

5 தோமா[l] அவரிடம், “எஜமானே, நீங்கள் எங்கே போகிறீர்கள் என்
றுகூட எங்களுக்குத் தெரியாது, அப்படியிருக்கும்போது அந்த வழி எங்க
ளுக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டார்.

6 அதற்கு இயேசு, “நானே வழியும்[m] சத்தியமும்[n] வாழ்வுமாக இருக்கி
றேன்.[o] என் மூலமாக மட்டுமே ஒருவரால் தகப்பனிடம் வர முடியும்.[p]
7 உங்களுக்கு என்னைத் தெரிந்திருந்தால் என் தகப்பனையும் தெரிந்திருக்
கும்; இப்போதிலிருந்து நீங்கள் அவரைத் தெரிந்தும் பார்த்தும் இருக்கிறீர்
கள்”[q] என்று சொன்னார்.

8 பிலிப்பு அவரிடம், “எஜமானே, தகப்பனை எங்களுக்குக் காட்டுங்கள்,
அது போதும்” என்று சொன்னார்.

9 அதற்கு இயேசு அவரிடம், “பிலிப்பு, இத்தனை காலம் நான் உங்
களோடு இருந்தும் நீ என்னைத் தெரிந்துகொள்ளவில்லையா? என்னைப்
பார்த்தவன் என் தகப்பனையும் பார்த்திருக்கிறான்.[r] அப்படியிருக்கும்
போது, ‘தகப்பனை எங்களுக்குக் காட்டுங்கள்’ என்று நீ எப்படிக் கேட்கி
றாய்? **10** நான் என் தகப்பனோடும் என் தகப்பன் என்னோடும் ஒன்றுபட்
டிருப்பதை நீ நம்பவில்லையா?[s] நான் உங்களுக்குச் சொல்கிற
விஷயங்களைச் சொந்தமாகச் சொல்லவில்லை.[t] என்னோடு ஒன்றுபட்டிருக்
கும் என் தகப்பன்தான் தன்னுடைய செயல்களை என் மூலம் செய்து
வருகிறார். **11** நான் என் தகப்பனோடும் என் தகப்பன் என்னோடும்

அதி. 13
a யோவா 7:34
யோவா 8:21
b யோவா 15:9
c லேவி 19:18
யோவா 15:12
1தெ 4:9
யாக் 2:8
1பே 1:22
1யோ 3:14
d ரோ 13:8
1கொ 13:8, 13
1யோ 4:20
e யோவா 14:3
f மத் 26:33
மாற் 14:29
லூ 22:33
g மத் 26:34
மாற் 14:30
லூ 22:34
யோவா 18:27

அதி. 14
h யோவா 14:27
i மாற் 11:22
1பே 1:21
j லூ 12:32
1பே 1:3, 4
k யோவா 17:24
ரோ 8:17
பிலி 1:23
1தெ 4:16, 17
l யோவா 11:16
m யோவா 10:9
எபே 2:18
எபி 10:19, 20
n யோவா 1:17
எபே 4:21
o யோவா 1:4
யோவா 6:63
யோவா 17:3
ரோ 6:23
p அப் 4:12
q மத் 11:27
யோவா 1:18
r யோவா 12:45
கொலோ 1:15
எபி 1:3
s யோவா 10:38
யோவா 17:21
t யோவா 7:16
யோவா 8:28
யோவா 12:49

ஒன்றுபட்டிருப்பதாக நான் சொல்வதை நம்புங்கள். இல்லையென்றால்,
என் செயல்களைப் பார்த்தாவது நம்புங்கள்.[a] **12** உண்மையாகவே உண்
மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன், என்மேல் விசுவாசம் வைக்கிற
வன் நான் செய்கிற செயல்களைச் செய்வான், அவற்றைவிட பெரிய செயல்
களையும் செய்வான்.[b] ஏனென்றால், நான் என் தகப்பனிடம் போகிறேன்.[c]
13 அதோடு, மகன் மூலம் தகப்பன் மகிமைப்படும்படி, என் பெயரில் நீங்
கள் எதைக் கேட்டாலும் அதைச் செய்வேன்.[d] **14** என் பெயரில் நீங்கள்
கேட்பதையெல்லாம் நான் செய்வேன்.

15 என்மேல் உங்களுக்கு அன்பிருந்தால் என் கட்டளைகளின்படி
நடப்பீர்கள்.[e] **16** என் தகப்பனிடம் நான் வேண்டிக்கொள்வேன். அப்
போது, என்றென்றும் உங்களோடு இருப்பதற்காக இன்னொரு சகாயரை*
அவர் உங்களுக்குத் தருவார்.[f] **17** அதுதான் சத்தியத்தை வெளிப்படுத்து
கிற கடவுளுடைய சக்தி.[g] உலகத்தால் அதைப் பெற்றுக்கொள்ள முடியாது.
ஏனென்றால், இந்த உலகம் அதைப் பார்க்காமலும் தெரிந்துகொள்ளாம
லும் இருக்கிறது.[h] ஆனால், நீங்கள் அதைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்.
ஏனென்றால், அது உங்களுடனேயே இருக்கிறது, உங்களுக்குள்ளும் இருக்
கிறது. **18** நான் உங்களைத் தனியாக* தவிக்க விடமாட்டேன், கண்டிப்
பாக உங்களிடம் வருவேன்.[i] **19** இன்னும் கொஞ்சக் காலத்தில் உலகம்
என்னைப் பார்க்காது, நீங்களோ என்னைப் பார்ப்பீர்கள்.[j] ஏனென்றால் நான்
உயிரோடிருக்கிறேன், நீங்களும் உயிரோடிருப்பீர்கள். **20** அந்த நாளில்,
நான் என் தகப்பனோடு ஒன்றுபட்டிருப்பதையும், நீங்கள் என்னோடு ஒன்
றுபட்டிருப்பதையும், நான் உங்களோடு ஒன்றுபட்டிருப்பதையும் தெரிந்து
கொள்வீர்கள்.[k] **21** என் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு அவற்றின்படி
நடப்பவன்தான் என்மேல் அன்பு காட்டுகிறான். என்மேல் அன்பு காட்டுகி
றவனிடம் என் தகப்பனும் அன்பு காட்டுவார், நானும் அவன்மேல் அன்பு
காட்டி அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்” என்று சொன்னார்.

22 யூதாஸ்[l] என்பவர் (யூதாஸ் இஸ்காரியோத்து அல்ல) அவரிடம், “எஜ
மானே, நீங்கள் உங்களை உலகத்துக்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு
மட்டுமே வெளிப்படுத்துவதாகச் சொல்கிறீர்களே, ஏன்?” என்று கேட்டார்.

23 அதற்கு இயேசு, “ஒருவனுக்கு என்மேல் அன்பு இருந்தால், அவன்
என் வார்த்தையின்படி நடப்பான்,[m] என் தகப்பனும் அவன்மேல் அன்பு
காட்டுவார். நாங்கள் இரண்டு பேரும் அவனிடம் வந்து அவனோடு தங்கு
வோம்.[n] **24** என்மேல் அன்பு காட்டாதவன் என் வார்த்தைகளின்படி
நடக்க மாட்டான்; நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிற வார்த்தை என்னுடைய
தல்ல, என்னை அனுப்பிய தகப்பனுடையது.[o]

25 நான் உங்களோடு இருக்கும்போதே இவற்றை உங்களுக்குச் சொல்
லிவிட்டேன். **26** ஆனால், என் தகப்பன் என்னுடைய பெயரில் அனுப்பப்
போகிற அவருடைய சக்தியாகிய சகாயர் எல்லா காரியங்களையும்
உங்களுக்குக் கற்றுக்கொடுத்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லா விஷ
யங்களையும் உங்களுக்கு ஞாபகப்படுத்துவார்.[p] **27** உங்களுக்குச் சமாதா
னத்தைத் தந்துவிட்டுப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்க
ளுக்குத் தருகிறேன்.[q] இந்த உலகம் தருகிற விதத்தில் நான் அதைத்

அதி. 14
a யோவா 5:36
b மத் 21:21; அப் 1:8; அப் 2:41
c அப் 2:32, 33
d யோவா 15:16; யோவா 16:23
e யோவா 13:34; யோவா 15:10; யாக் 1:22
f லூ 24:49; யோவா 15:26; யோவா 16:7; அப் 1:5; அப் 2:1, 4; ரோ 8:26
g மத் 10:19, 20; யோவா 16:13; 1கொ 2:12; 1யோ 2:27
h 1கொ 2:14
i மத் 28:20
j அப் 10:40, 41
k யோவா 10:38; யோவா 17:21
l லூ 6:13, 16; அப் 1:13
m யோவா 15:10
n 1யோ 2:24; வெளி 3:20
o யோவா 5:19; யோவா 7:16; யோவா 12:49
p லூ 24:49; யோவா 15:26; யோவா 16:13; 1யோ 2:27
q யோவா 16:33; எபே 2:14; பிலி 4:6, 7; கொலோ 3:15; 2தெ 3:16

14:16 * வே.வா., “ஆறுதல்படுத்துகிறவரை.” கடவுளுடைய சக்தி இங்கே ஆளுருவில் பேசப்பட்டிருக்கிறது. **14:18** * வே.வா., “அநாதைகளைப் போல்.”

தருவதில்லை. நீங்கள் மனம் கலங்க வேண்டாம், பயப்பட வேண்டாம்.
28 ‘நான் போவேன், ஆனால் மறுபடியும் உங்களிடம் வருவேன்’ என்று
உங்களுக்குச் சொன்னதைக் கேட்டீர்கள். என்மேல் உங்களுக்கு அன்பு
இருந்தால், நான் என் தகப்பனிடம் போவதை நினைத்து சந்தோஷப்படுவீர்
கள். ஏனென்றால், என் தகப்பன் என்னைவிட பெரியவர்.[a] **29** இது நடக்
கும்போது நீங்கள் நம்புவதற்காக இப்போதே, இது நடப்பதற்கு முன்பே,
இதை உங்களுக்குச் சொல்லிவிட்டேன்.[b] **30** இனி நான் உங்களோடு
அதிகம் பேச மாட்டேன். ஏனென்றால், இந்த உலகத்தை ஆளுகிறவன்[c]
வருகிறான். அவனுக்கு என்மேல் அதிகாரம் இல்லை.[d] **31** தகப்பன்மேல்
நான் அன்பு வைத்திருக்கிறேன் என்பதை உலகம் தெரிந்துகொள்வதற்
காக என் தகப்பனின் கட்டளைப்படியே செய்கிறேன்.[e] எழுந்திருங்கள், இங்
கிருந்து போகலாம்.”

15 “நான்தான் உண்மையான திராட்சைக் கொடி, என் தகப்பன்தான்
திராட்சைத் தோட்டக்காரர். **2** கனி தராத என்னுடைய கிளைகள்
எல்லாவற்றையும் அவர் வெட்டிப்போடுகிறார். கனி தருகிற கிளைகள் ஒவ்
வொன்றையும், அது அதிகமாகக் கனி தரும்படி சுத்தம் செய்கிறார்.[f]
3 நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே சுத்தமாகியிருக்
கிறீர்கள்.[g] **4** என்னோடு நிலைத்திருங்கள், நானும் உங்களோடு நிலைத்தி
ருப்பேன். எந்தவொரு கிளையும் தானாகக் கனி தர முடியாது, திராட்சைக்
கொடியோடு நிலைத்திருந்தால் மட்டும்தான் கனி தர முடியும். அதேபோல்,
நீங்களும் என்னோடு நிலைத்திருந்தால் மட்டும்தான் உங்களால் கனி
தர முடியும்.[h] **5** நான் திராட்சைக் கொடி, நீங்கள் கிளைகள். ஒருவன் என்
னோடும் நான் அவனோடும் நிலைத்திருந்தால் அவன் அதிகமாகக் கனி
தருவான்.[i] என்னோடு இல்லையென்றால் உங்களால் எதையுமே செய்ய
முடியாது. **6** ஒருவன் என்னோடு நிலைத்திருக்கவில்லை என்றால், கிளை
யைப் போல் அவன் வெட்டியெறியப்பட்டுக் காய்ந்துபோவான். அப்படிப்
பட்ட கிளைகளை ஆட்கள் சேகரித்து நெருப்பில் போடுவார்கள், அவை
எரிந்துபோகும். **7** நீங்கள் என்னோடு நிலைத்திருந்தால், அதோடு என்
வார்த்தைகள் உங்களுடைய இதயத்தில் நிலைத்திருந்தால், நீங்கள் விரும்பு
கிற எதை வேண்டுமானாலும் கேளுங்கள், கேட்டபடியே உங்களுக்கு நடக்
கும்.[j] **8** நீங்கள் அதிகமதிகமாகக் கனி தந்து, என்னுடைய சீஷர்கள் என்று
நிரூபிக்கும்போது, என் தகப்பன் மகிமைப்படுகிறார்.[k] **9** தகப்பன் என்
மேல் அன்பு காட்டியதைப் போல்[l] நான் உங்கள்மேல் அன்பு காட்டியிருக்
கிறேன், அதனால் நீங்கள் என் அன்பில் நிலைத்திருங்கள். **10** நான் என்
தகப்பனுடைய கட்டளைகளின்படி நடந்து அவருடைய அன்பில் நிலைத்
திருப்பது போலவே, நீங்களும் என் கட்டளைகளின்படி நடந்தால் என்னு
டைய அன்பில் நிலைத்திருப்பீர்கள்.

11 என்னைப் போலவே நீங்களும் நிறைவான சந்தோஷத்தை அனு
பவிக்க வேண்டும் என்பதற்காக இவற்றை உங்களுக்குச் சொல்லியிருக்
கிறேன்.[m] **12** நான் உங்கள்மேல் அன்பு காட்டியதுபோல் நீங்களும் ஒரு
வர்மேல் ஒருவர் அன்பு காட்ட வேண்டும் என்பதுதான் என் கட்டளை.[n]
13 ஒருவன் தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுக்கிற அன்பைவிட
மேலான அன்பு வேறு எதுவும் இல்லை.[o] **14** என்னுடைய கட்டளைப்
படி நீங்கள் நடந்தால் என் நண்பர்களாக இருப்பீர்கள்.[p] **15** இனி உங்
களை அடிமைகள் என்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால், எஜமான்

அதி. 14
a யோவா 20:17; 1கொ 11:3; 1கொ 15:28; பிலி 2:5, 6
b யோவா 13:19; யோவா 16:4
c யோவா 12:31; யோவா 16:11
d யோவா 16:33
e யோவா 10:18; யோவா 12:49; யோவா 15:10; பிலி 2:8

அதி. 15
f 2பே 1:8
g யோவா 13:10; யோவா 17:17
h யோவா 6:56; 1கொ 12:27; எபே 4:16
i யோவா 15:16
j மத் 7:7; யோவா 16:23
k மத் 5:16; யோவா 13:35; பிலி 1:9, 11
l யோவா 3:35
m யோவா 16:24; யோவா 17:13
n மாற் 12:31; யோவா 13:34; 1தெ 4:9; 1பே 4:8
o யோவா 10:11; ரோ 5:7, 8; எபே 5:1, 2; 1யோ 3:16
p மத் 12:50; யோவா 14:23

செய்வது ஒரு அடிமைக்குத் தெரியாது. நான் உங்களை நண்பர்கள் என்றே
சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், என் தகப்பனிடமிருந்து கேட்ட எல்லா
விஷயங்களையும் நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். **16** நீங்கள்
என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்தெடுத்
தேன். நிலைத்திருக்கிற கனியைக் கொடுக்கும்படி நான்தான் உங்களை நிய
மித்தேன். நீங்கள் அப்படிக் கனி கொடுக்கும்போது, என் பெயரில் தகப்ப
னிடம் எதைக் கேட்டாலும் அதை அவர் உங்களுக்குத் தருவார்.[a]

17 நீங்கள் ஒருவர்மேல் ஒருவர் அன்பு காட்ட வேண்டும் என்ப
தற்காக இவற்றைக் கட்டளையிடுகிறேன்.[b] **18** உலகம் உங்களை வெறுத்
தால், அது உங்களை வெறுப்பதற்கு முன்பே என்னை வெறுத்தது என்று
தெரிந்துகொள்ளுங்கள்.[c] **19** நீங்கள் இந்த உலகத்தின் பாகமாக இருந்தி
ருந்தால், அவர்களுக்குச் சொந்தமான உங்களை இந்த உலகம் நேசித்திருக்
கும். ஆனால், நீங்கள் உலகத்தின் பாகமாக இல்லாததாலும்,[d] நான் இந்த
உலகத்திலிருந்து உங்களைத் தேர்ந்தெடுத்திருப்பதாலும் உலகம் உங்களை
வெறுக்கிறது.[e] **20** நான் உங்களுக்குச் சொன்ன இந்த வார்த்தைகளை
ஞாபகத்தில் வையுங்கள்: அடிமை தன் எஜமானைவிட உயர்ந்தவன்
அல்ல. அவர்கள் என்னைத் துன்புறுத்தியிருந்தால் உங்களையும் துன்புறுத்
துவார்கள்;[f] என் வார்த்தையின்படி நடந்திருந்தால் உங்கள் வார்த்தையின்
படியும் நடப்பார்கள். **21** நீங்கள் என் சீஷர்களாக இருப்பதால்தான்
உங்களுக்கு விரோதமாக இவற்றையெல்லாம் செய்வார்கள். ஏனென்றால்,
என்னை அனுப்பியவரைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது.[g] **22** நான்
வந்து அவர்களிடம் பேசியிருக்காவிட்டால், அவர்களுக்குப் பாவம் இருந்
திருக்காது.[h] ஆனால், இப்போது அவர்களுடைய பாவத்துக்கு அவர்களால்
எந்தச் சாக்குப்போக்கும் சொல்ல முடியாது.[i] **23** என்னை வெறுக்கிறவன்
என் தகப்பனையும் வெறுக்கிறான்.[j] **24** வேறு யாருமே செய்யாத செயல்
களை நான் அவர்கள் மத்தியில் செய்யாமல் இருந்திருந்தால், அவர்களுக்
குப் பாவம் இருந்திருக்காது.[k] ஆனால், இப்போது அவர்கள் என்னைப்
பார்த்தும்கூட என்னையும் என் தகப்பனையும் வெறுத்திருக்கிறார்கள்.
25 ‘காரணமில்லாமல் என்னை வெறுத்தார்கள்’[l] என்று அவர்களுடைய
திருச்சட்டத்தில் எழுதப்பட்ட வார்த்தை நிறைவேறும்படியே இப்படி நடந்
தது. **26** தகப்பனிடமிருந்து நான் அனுப்பப்போகிற சகாயர்* வரும்போது,
அதாவது சத்தியத்தை வெளிப்படுத்துகிற சக்தி[m] தகப்பனிடமிருந்து வரும்
போது, அவர் என்னைப் பற்றிச் சாட்சி கொடுப்பார்.[n] **27** ஆரம்பத்திலி
ருந்து நீங்கள் என்னோடு இருப்பதால், நீங்களும் என்னைப் பற்றிச் சாட்சி
கொடுக்க வேண்டும்.[o]

16 “நீங்கள் விசுவாசத்தைவிட்டு விலகிப்போகாமல் இருப்பதற்காக
இவற்றை நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். **2** அவர்கள்
உங்களை ஜெபக்கூடத்தைவிட்டு நீக்கிவிடுவார்கள்.[p] சொல்லப்போனால்,
உங்களைக் கொலை செய்கிறவர்கள்[q] கடவுளுக்குப் பரிசுத்த சேவை செய்
வதாக நினைத்துக்கொள்கிற காலம் வரும். **3** தகப்பனைப் பற்றியோ என்
னைப் பற்றியோ தெரிந்துகொள்ளாததால் அவர்கள் இப்படியெல்லாம்
செய்வார்கள்.[r] **4** ஆனாலும், இவை நடக்கும் காலம் வரும்போது

15:26 *வே.வா., “ஆறுதல்படுத்துகிறவர்.” கடவுளுடைய சக்தி இங்கே ஆளுருவில் பேசப்பட்டிருக்கிறது.

அதி. 15

a யோவா 14:13
b யோவா 13:34; 1யோ 3:23
c மத் 10:22; யோவா 17:14
d யாக் 4:4
e லூ 6:22; யோவா 17:14; 1பே 4:4
f மத் 5:11; மத் 10:22; மத் 24:9; 2தீ 3:12; 1பே 2:21
g யோவா 16: 2, 3
h யோவா 9:41
i மத் 11:21
j யோவா 5:23; 1யோ 2:23
k மத் 11:23; யோவா 7:31; யோவா 11:47
l சங் 35:19; சங் 69:4; லூ 23:22
m லூ 24:49; யோவா 14:26
n 1யோ 5:6
o லூ 24:48; அப் 1:8; அப் 2:22; அப் 5:32

அதி. 16

p யோவா 9:22
q மத் 24:9; அப் 8:1; அப் 12:1, 2; அப் 26:11
r யோவா 8:19; யோவா 15: 20, 21; ரோ 10:2; 1கொ 2:8

இவற்றை நான் உங்களுக்கு முன்பு சொல்லியிருந்தேன் என்பதை நீங்
கள் நினைத்துக்கொள்ள வேண்டும், இதற்காகவே இவற்றை உங்களிடம்
சொன்னேன்.[a]

இவற்றை முதலிலேயே நான் உங்களுக்குச் சொல்லவில்லை. ஏனென்
றால், நான் உங்களோடு இருந்தேன். **5** ஆனால், இப்போது என்னை
அனுப்பியவரிடம் போகப் போகிறேன்.[b] அப்படியிருந்தும், 'எங்கே போகி
றீர்கள்?' என்று நீங்கள் யாருமே என்னிடம் கேட்கவில்லை. **6** நான் இவற்
றைச் சொன்னதால் உங்கள் இதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.[c]
7 இருந்தாலும், உண்மையைச் சொல்கிறேன், உங்களுடைய நன்மைக்காகத்
தான் நான் போகிறேன். நான் போகவில்லை என்றால் அந்தச் சகாயர்*[d] உங்
களிடம் வர மாட்டார். நான் போனால் அவரை உங்களிடம் அனுப்புவேன்.
8 அவர் வரும்போது, பாவத்தையும் நீதியையும் நியாயத்தீர்ப்பையும் பற்றி
இந்த உலகத்திலுள்ள மக்களுக்கு நம்பகமான அத்தாட்சி கொடுப்பார்.
9 அவர்கள் என்மேல் விசுவாசம் வைக்காததால்[e] முதலில் பாவத்தைப்[f] பற்
றியும், **10** நான் தகப்பனிடம் போகப்போகிறேன் என்பதாலும் இனி நீங்கள்
என்னைப் பார்க்க முடியாது என்பதாலும் நீதியைப் பற்றியும், **11** இந்த உல
கத்தை ஆளுகிறவன் நியாயந்தீர்க்கப்பட்டிருப்பதால்[g] நியாயத்தீர்ப்பைப் பற்
றியும் அவர் நம்பகமான அத்தாட்சி கொடுப்பார்.

12 இன்னும் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய விஷயங்கள்
நிறைய இருக்கின்றன, ஆனால் இப்போது அவற்றை உங்களால் புரிந்து
கொள்ள முடியாது. **13** இருந்தாலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிற சக்தி
யாகிய[h] அவர்* வரும்போது, சத்தியத்தை முழுமையாகப் புரிந்து
கொள்ள உங்களுக்கு உதவி செய்வார். ஏனென்றால், அவர் சொந்தமாகப்
பேசாமல் தான் கேட்கிறவற்றையே பேசுவார், வரப்போகும் காரியங்களை
யும் உங்களுக்கு அறிவிப்பார்.[i] **14** அவர் என்னை மகிமைப்படுத்துவார்.[j]
ஏனென்றால், என்னிடம் கேட்ட விஷயங்களை உங்களுக்கு அறிவிப்
பார்.[k] **15** தகப்பனிடம் இருக்கிற எல்லாமே என்னுடையது.[l] அதனால்
தான், அவர்* என்னிடம் கேட்ட விஷயங்களை உங்களுக்கு அறிவிப்பார்
என்று சொன்னேன். **16** இன்னும் கொஞ்சக் காலத்தில் நீங்கள் என்னைப்
பார்க்க மாட்டீர்கள்,[m] அதன் பின்பு கொஞ்சக் காலத்தில் மறுபடியும் என்
னைப் பார்ப்பீர்கள்" என்று சொன்னார்.

17 அப்போது அவருடைய சீஷர்களில் சிலர், "'இன்னும் கொஞ்சக்
காலத்தில் நீங்கள் என்னைப் பார்க்க மாட்டீர்கள், அதன் பின்பு கொஞ்
சக் காலத்தில் மறுபடியும் என்னைப் பார்ப்பீர்கள்.' 'ஏனென்றால், நான்
தகப்பனிடம் போகப்போகிறேன்' என்றெல்லாம் சொல்கிறாரே, இதற்கெல்
லாம் என்ன அர்த்தம்?" என்று ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டார்கள்.
18 அதோடு, "'கொஞ்சக் காலம்' என்று சொல்கிறாரே, இதற்கு என்ன அர்த்
தம்? என்ன பேசுகிறார் என்றே புரியவில்லை" என்றும் சொல்லிக்கொண்டார்

16:7 *வே.வா., "ஆறுதல்படுத்துகிறவர்." கடவுளுடைய சக்தி இங்கே ஆளுருவில் பேசப்பட்டிருக்கிறது. **16:13** *13-ஆம் மற்றும் 14-ஆம் வசனங்களில் உள்ள "அவர்" என்ற வார்த்தை 7-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள 'சகாயரை' குறிக்கிறது. கடவுளுடைய சக்தியை ஆளுருவில் குறிப்பிடுவதற்காக "சகாயர்" என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்தினார். இது ஒரு நபர் கிடையாது. **16:15** *அதாவது, "அந்தச் சகாயர்."

அதி. 16

a யோவா 13:19, யோவா 14:29
b யோவா 7:33, யோவா 13:3
c யோவா 16:22
d யோவா 14:16, 26, யோவா 15:26, அப் 2:32, 33
e யோவா 5:37, 38
f யோவா 15:22
g யோவா 12:31, யோவா 14:30
h யோவா 16:7
i அப் 11:28, அப் 21:10, 11, 1தீ 4:1
j 1யோ 4:2
k யோவா 15:26, 1யோ 2:27
l யோவா 17:10
m யோவா 7:33, யோவா 14:19

கள். **19** அவர்கள் தன்னிடம் கேள்வி கேட்க நினைக்கிறார்கள் என்பதை
இயேசு புரிந்துகொண்டு அவர்களிடம், "'இன்னும் கொஞ்சக் காலத்தில் நீங்
கள் என்னைப் பார்க்க மாட்டீர்கள், அதன் பின்பு கொஞ்சக் காலத்தில் மறு
படியும் என்னைப் பார்ப்பீர்கள்' என்று நான் சொன்னதைப் பற்றி உங்க
ளுக்குள் பேசிக்கொண்டிருக்கிறீர்களா? **20** உண்மையாகவே உண்மையா
கவே உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ
சந்தோஷப்படும். நீங்கள் வேதனைப்படுவீர்கள், ஆனால் உங்களுடைய
வேதனை சந்தோஷமாக மாறும்.[a] **21** குழந்தையைப் பெற்றெடுக்கும் ஒரு
பெண், தனக்குப் பிரசவ நேரம் வந்துவிட்டதற்காக வேதனைப்படுகிறாள்.
ஆனால் குழந்தையைப் பெற்றெடுத்த பின்பு, இந்த உலகத்தில் ஒரு
குழந்தை பிறந்துவிட்ட சந்தோஷத்தில் அந்த வேதனையை மறந்துவிடுகி
றாள். **22** நீங்களும்கூட இப்போது வேதனைப்படுகிறீர்கள். ஆனால், நான்
மறுபடியும் உங்களைப் பார்ப்பேன். அப்போது, உங்கள் இதயம் சந்தோஷத்
தால் நிரம்பும்.[b] உங்கள் சந்தோஷத்தை யாராலும் பறிக்க முடியாது.
23 அந்த நாளில் நீங்கள் என்னிடம் எந்தக் கேள்வியையும் கேட்க மாட்
டீர்கள். உண்மையாகவே உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன்,
நீங்கள் என் தகப்பனிடம் எதைக் கேட்டாலும்,[c] அதை அவர் என்னுடைய
பெயரில் உங்களுக்குத் தருவார்.[d] **24** இதுவரை நீங்கள் எதையுமே என்னு
டைய பெயரில் கேட்கவில்லை. கேளுங்கள், அப்போது பெற்றுக்கொள்வீர்
கள், நிறைவான சந்தோஷத்தையும் அனுபவிப்பீர்கள்.

25 ஒப்புமைகளைப் பயன்படுத்தி இவற்றை உங்களிடம் பேசியிருக்
கிறேன். ஆனால், நான் ஒப்புமைகளைப் பயன்படுத்திப் பேசாத காலம்
வரும். அப்போது, தகப்பனைப் பற்றி வெளிப்படையாகவே உங்களுக்குச்
சொல்வேன். **26** அந்த நாளில் என்னுடைய பெயரில் நீங்கள் தகப்பனி
டம் வேண்டிக்கொள்வீர்கள். அதற்காக, ஒவ்வொரு முறையும் நான் உங்க
ளுக்காகத் தகப்பனிடம் வேண்டிக்கொள்ள அவசியம் இல்லை. **27** தகப்
பனே உங்கள்மேல் பாசம் வைத்திருக்கிறார். ஏனென்றால், நீங்கள் என்மேல்
பாசம் வைத்து,[e] கடவுளுடைய பிரதிநிதியாக நான் வந்திருப்பதை நம்புகிறீர்
கள்.[f] **28** தகப்பனின் பிரதிநிதியாக நான் இந்த உலகத்துக்கு வந்தேன். இப்
போது இந்த உலகத்தைவிட்டுத் தகப்பனிடமே போகப்போகிறேன்"[g] என்று
சொன்னார்.

29 அதற்கு அவருடைய சீஷர்கள், "இப்போதுதான் நீங்கள் வெளிப்ப
டையாகப் பேசுகிறீர்கள், ஒப்புமைகளைப் பயன்படுத்திப் பேசவில்லை.
30 உங்களுக்கு எல்லாமே தெரியும், யாரும் உங்களைக் கேள்வி கேட்
கத் தேவையில்லை என்பது இப்போது எங்களுக்குப் புரிகிறது. அத
னால், நீங்கள் கடவுளிடமிருந்து வந்திருக்கிறீர்கள் என்று நம்புகிறோம்"
என்று சொன்னார்கள். **31** அதற்கு இயேசு, "இப்போது நீங்கள் நம்புகி
றீர்களா? **32** ஆனால் நேரம் வரும், சொல்லப்போனால், அது வந்து
விட்டது. நீங்கள் ஒவ்வொருவரும் சிதறடிக்கப்பட்டு அவரவருடைய வீட்
டுக்குப் போவீர்கள். என்னையோ தனியாக விட்டுவிடுவீர்கள்.[h] ஆனாலும்,
நான் தனியாக இல்லை, என் தகப்பன் என்னோடு இருக்கிறார்.[i] **33** என்
மூலம் உங்களுக்குச் சமாதானம் கிடைப்பதற்காக இதையெல்லாம் உங்களி
டம் சொல்கிறேன்.[j] இந்த உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் இருக்கும்.
ஆனால் தைரியமாயிருங்கள்! நான் இந்த உலகத்தை ஜெயித்துவிட்டேன்"[k]
என்று சொன்னார்.

அதி. 16

a மத் 28:8; லூ 24:39-41; யோவா 20:19, 20
b லூ 24:51, 52
c பிலி 4:6
d யோவா 14:13; யோவா 15:16; 1யோ 5:14
e யோவா 14:21
f யோவா 17:7, 8
g யோவா 13:3; எபி 9:24
h சக 13:7; மத் 26:31; மாற் 14:27
i யோவா 8:29
j யோவா 14:27; எபே 2:14
k யோவா 14:30; அப் 14:22; 1யோ 4:4; 1யோ 5:4; வெளி 3:21

17 இயேசு இவற்றைச் சொன்ன பின்பு வானத்தை அண்ணாந்து
பார்த்து, “தகப்பனே, நேரம் வந்துவிட்டது; உங்களுடைய மகன்
உங்களை மகிமைப்படுத்தும்படி நீங்கள் உங்களுடைய மகனை மகி
மைப்படுத்துங்கள்.[a] **2** ஏனென்றால், நீங்கள் அவருக்குத் தந்திருக்கிற
எல்லா மனுஷர்களுக்கும்[b] அவர் முடிவில்லாத வாழ்வைக்[c] கொடுப்ப
தற்காக அவர்கள் எல்லார்மேலும் அவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறீர்
கள்.[d] **3** ஒரே உண்மையான கடவுளாகிய[e] உங்களையும், நீங்கள் அனுப்
பிய இயேசு கிறிஸ்துவையும்[f] பற்றி அவர்கள் தெரிந்துகொண்டே இருந்தால்
அவர்களுக்கு முடிவில்லாத வாழ்வு[g] கிடைக்கும். **4** நீங்கள் எனக்குக்
கொடுத்த வேலையைச் செய்து முடித்து[h] பூமியில் உங்களை மகிமைப்படுத்
தியிருக்கிறேன்.[i] **5** அதனால் தகப்பனே, உலகம் உண்டாவதற்கு முன்பு
உங்கள் பக்கத்தில் எனக்கிருந்த அதே மகிமையைத் தந்து[j] இப்போது உங்
கள் பக்கத்தில் என்னை மகிமைப்படுத்துங்கள்.

6 நீங்கள் இந்த உலகத்திலிருந்து தேர்ந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷர்
களுக்கு உங்களுடைய பெயரைத் தெரியப்படுத்தியிருக்கிறேன்.[k] இவர்கள்
உங்களுக்குச் சொந்தமானவர்களாக இருந்தார்கள், இவர்களை என்னிடம்
தந்தீர்கள், இவர்கள் உங்களுடைய வார்த்தையின்படி நடந்திருக்கிறார்கள்.
7 நீங்கள் எனக்குத் தந்த எல்லாமே உங்களிடமிருந்து வந்தவை என்று இப்
போது இவர்கள் தெரிந்துகொண்டார்கள். **8** ஏனென்றால், நீங்கள் எனக்குச்
சொன்ன வார்த்தைகளை நான் இவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன்;[l] இவர்
கள் அவற்றை ஏற்றுக்கொண்டு, நான் உங்களுடைய பிரதிநிதியாக வந்தி
ருக்கிறேன் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டார்கள்,[m] நீங்கள்தான்
என்னை அனுப்பினீர்கள் என்பதை நம்புகிறார்கள்.[n] **9** இவர்களுக்காக
நான் வேண்டிக்கொள்கிறேன். உலகத்துக்காக அல்ல, நீங்கள் எனக்குத் தந்
தவர்களுக்காகவே வேண்டிக்கொள்கிறேன். ஏனென்றால், இவர்கள் உங்க
ளுக்குச் சொந்தமானவர்கள். **10** எனக்குச் சொந்தமானவையெல்லாம்
உங்களுக்குச் சொந்தமானவை, உங்களுக்குச் சொந்தமானவையெல்லாம்
எனக்குச் சொந்தமானவை.[o] இவர்களால் நான் மகிமைப்படுத்தப்பட்டி
ருக்கிறேன்.

11 இனியும் நான் இந்த உலகத்தில் இருக்கப்போவதில்லை. ஆனால்,
இவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள்,[p] நான் உங்களிடம் வருகிறேன்.
பரிசுத்த தகப்பனே, நாம் ஒன்றாயிருப்பது* போல இவர்களும் ஒன்றாயி
ருப்பதற்காக,[q] நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கிற உங்கள் பெயரை
முன்னிட்டு இவர்களைக் காத்துக்கொள்ளுங்கள்.[r] **12** நான் இவர்களோடு
இருந்தபோது, நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கிற உங்கள் பெயரை முன்
னிட்டு இவர்களைப் பாதுகாத்தும் காப்பாற்றியும் வந்தேன்.[s] வேதவச
னம் நிறைவேறும்படி,[t] அழிவின் மகனைத்[u] தவிர இவர்களில் ஒருவர்
கூட அழிந்துபோகவில்லை.[v] **13** ஆனால், இப்போது நான் உங்களிடம்
வரப்போகிறேன்; என்னுடைய சந்தோஷத்தை இவர்களும் நிறைவாய்
அனுபவிப்பதற்காக[w] நான் இந்த உலகத்தில் இருக்கும்போதே இவற்
றைச் சொல்கிறேன். **14** உங்களுடைய வார்த்தையை நான் இவர்களுக்
குச் சொல்லியிருக்கிறேன். ஆனால், இந்த உலகம் இவர்களை வெறுக்கிறது;

17:11 * வே.வா., “ஒற்றுமையாக இருப்பது.”

அதி. 17
a யோவா 12:23; யோவா 13:31, 32
b யோவா 6:37
c யோவா 4:14; யோவா 6:27
d பிலி 2:9, 10
e 1யோ 5:20
f எபே 4:11, 13; 2பே 3:18
g லூ 10:25-28
h யோவா 4:34
i யோவா 13:31
j யோவா 1:1; யோவா 8:58; கொலோ 1:15
k சங் 22:22; அப் 15:14; எபி 2:12
l யோவா 6:68; யோவா 8:28; யோவா 12:49; யோவா 14:10
m யோவா 16:27
n யோவா 16:30
o யோவா 16:15
p யோவா 13:1
q யோவா 10:30; யோவா 17:21
r 1பே 1:5; யூ 24
s யோவா 6:39; யோவா 10:28
t சங் 41:9; சங் 109:8; அப் 1:20
u மாற் 14:21
v யோவா 18:9
w யோவா 15:11

ஏனென்றால், நான் இந்த உலகத்தின் பாகமாக இல்லாதது போலவே இவர்
களும் இந்த உலகத்தின் பாகமாக இல்லை.[a]

15 நீங்கள் இவர்களை இந்த உலகத்திலிருந்து எடுத்துவிட வேண்டு
மென்று நான் கேட்கவில்லை, பொல்லாதவனிடமிருந்து இவர்களைப் பாது
காக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.[b] **16** நான் இந்த உல
கத்தின் பாகமாக இல்லாதது போலவே[c] இவர்களும் இந்த உலகத்தின்
பாகமாக இல்லை.[d] **17** சத்தியத்தின் மூலம் இவர்களைப் புனிதப்படுத்
துங்கள்;*[e] உங்களுடைய வார்த்தைதான் சத்தியம்.[f] **18** நீங்கள் என்னை
இந்த உலகத்துக்குள் அனுப்பியது போலவே நானும் இவர்களை இந்த உல
கத்துக்குள் அனுப்பினேன்.[g] **19** சத்தியத்தின் மூலம் இவர்கள் புனிதமாகும்
படி, இவர்களுக்காக என்னையே புனிதப்படுத்திக்கொள்கிறேன்.

20 இவர்களுக்காக மட்டுமல்ல, இவர்களுடைய வார்த்தையைக் கேட்டு
என்மேல் விசுவாசம் வைப்பவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன்.
21 இவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.[h]
தகப்பனே, நீங்கள் என்னோடும் நான் உங்களோடும் ஒன்றுபட்டிருப்பது
போலவே அவர்களும் நம்மோடு ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்று கேட்
டுக்கொள்கிறேன்.[i] நீங்கள்தான் என்னை அனுப்பினீர்கள் என்பதை அப்
போது இந்த உலகம் நம்பும். **22** நாம் ஒன்றாயிருப்பது போலவே அவர்
களும் ஒன்றாயிருப்பதற்காக,[j] நீங்கள் எனக்குத் தந்த மகிமையை நான்
அவர்களுக்குத் தந்திருக்கிறேன். **23** அவர்கள் முழுமையாக ஒன்றுபட்டி
ருப்பதற்காக, நான் அவர்களோடும் நீங்கள் என்னோடும் ஒன்றுபட்டிருக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது, நீங்கள்தான் என்னை
அனுப்பினீர்கள் என்பதையும், நீங்கள் என்மேல் அன்பு காட்டுவது
போலவே அவர்கள்மேலும் அன்பு காட்டுகிறீர்கள் என்பதையும் இந்த
உலகம் தெரிந்துகொள்ளும். **24** தகப்பனே, இந்த உலகம் உண்டாவ
தற்கு முன்பு நீங்கள் என்மேல் அன்பு காட்டியதால் எனக்கு மகிமை தந்
தீர்கள்;[k] நீங்கள் எனக்குத் தந்தவர்கள் அந்த மகிமையைப் பார்ப்பதற்காக
நான் இருக்கும் இடத்தில் அவர்கள் என்னோடு இருக்க வேண்டுமென்று
விரும்புகிறேன்.[l] **25** நீதியுள்ள தகப்பனே, இந்த உலகத்துக்கு உங்களைத்
தெரியாது.[m] ஆனால், எனக்கு உங்களைத் தெரியும்;[n] நீங்கள்தான் என்னை
அனுப்பினீர்கள் என்பதை இவர்களும் தெரிந்துகொண்டார்கள். **26** நீங்
கள் என்மேல் அன்பு காட்டியது போலவே இவர்கள் மற்றவர்கள்மேல்
அன்பு காட்டுவதற்காகவும், நான் இவர்களோடு ஒன்றுபட்டிருப்பதற்காக
வும்[o] இவர்களுக்கு உங்களுடைய பெயரைத் தெரியப்படுத்தினேன், இன்ன
மும் தெரியப்படுத்துவேன்"[p] என்று சொன்னார்.

18 இயேசு இவற்றைச் சொன்ன பின்பு, தன்னுடைய சீஷர்களோடு
வெளியே போய், கீதரோன் பள்ளத்தாக்கைக்[q] கடந்து ஒரு தோட்
டத்தை அடைந்தார். அந்தத் தோட்டத்துக்குள் அவரும் அவருடைய
சீஷர்களும் போனார்கள்.[r] **2** அங்கே இயேசு தன்னுடைய சீஷர்களோடு
அடிக்கடி போயிருந்ததால், அவரைக் காட்டிக்கொடுக்க இருந்த யூதாசுக்
கும் அந்த இடம் தெரிந்திருந்தது. **3** அதனால் படைப்பிரிவினரையும்,
முதன்மை குருமார்கள் மற்றும் பரிசேயர்கள் அனுப்பிய காவலர்களையும்

17:17 * வே.வா., "தனியாகப் பிரித்து வையுங்கள்; பரிசுத்தமாக்குங்கள்."

அதி. 17
a யோவா 15:19; யாக் 4:4
b மத் 6:13; 2தெ 3:3; 1யோ 5:18
c யோவா 18:36
d கொலோ 1:13
e எபே 5:25, 26; 1தெ 5:23; 2தெ 2:13; 1பே 1:22
f சங் 12:6; சங் 119: 151, 160
g யோவா 20:21
h ரோ 12:5; 1கொ 1:10; கலா 3:28
i யோவா 10:38; யோவா 14:10
j யோவா 14:20; யோவா 17:11; 1யோ 3:24
k யோவா 17:5
l லூ 22:28-30; 1தெ 4:17
m யோவா 8:55; யோவா 15:21
n மத் 11:27
o யோவா 15:9
p மத் 6:9; யோவா 17:6

அதி. 18
q 2சா 15:23
r மத் 26:36; மாற் 14:32; லூ 22:39

கூட்டிக்கொண்டு அவன் அங்கே வந்தான்; அவர்கள் தீப்பந்தங்களை
யும் விளக்குகளையும் ஆயுதங்களையும் கொண்டுவந்தார்கள்.[a] **4** இயேசு
தனக்கு நடக்கப்போகிற எல்லாவற்றையும் தெரிந்திருந்ததால் அவர்களுக்கு
நேராகப் போய், "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார். **5** அதற்கு
அவர்கள், "நாசரேத்தூர் இயேசுவைத் தேடுகிறோம்"[b] என்று சொன்னார்கள்.
அப்போது அவர், "நான்தான்" என்று சொன்னார். அவரைக் காட்டிக்கொ
டுத்த யூதாசும் அவர்களோடு நின்றுகொண்டிருந்தான்.[c]

6 "நான்தான்" என்று அவர் சொன்னதும், அவர்கள் பின்வாங்கி தரை
யில் விழுந்தார்கள்.[d] **7** அவர் மறுபடியும் அவர்களிடம், "யாரைத் தேடு
கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "நாசரேத்தூர் இயேசுவைத்
தேடுகிறோம்" என்று சொன்னார்கள். **8** அப்போது இயேசு, "நான்தான்
என்று உங்களுக்குச் சொன்னேனே. என்னைத் தேடுகிறீர்கள் என்றால்
இவர்களைப் போகவிடுங்கள்" என்று சொன்னார். **9** "நீங்கள் எனக்குத் தந்
தவர்களில் ஒருவரையும் நான் இழந்துவிடவில்லை"[e] என்று அவர் சொன்ன
வார்த்தைகள் நிறைவேறும்படியே அப்படிச் சொன்னார்.

10 அப்போது, சீமோன் பேதுரு தன்னுடைய வாளை உருவி தலை
மைக் குருவின் வேலைக்காரனான மல்குஸ் என்பவனைத் தாக்கினார், அவ
னுடைய வலது காது அறுந்துபோனது.[f] **11** அப்போது இயேசு, "வாளை
உறையிலே போடு.[g] என் தகப்பன் எனக்குக் கொடுத்திருக்கிற கிண்ணத்தி
லிருந்து* நான் குடித்தாக வேண்டும், இல்லையா?"[h] என்று பேதுருவிடம்
சொன்னார்.

12 அப்போது, படைப்பிரிவினரும் படைத் தளபதியும் யூதர்களின் காவ
லர்களும் இயேசுவைப் பிடித்துக் கட்டி, **13** முதலில் அன்னா என்பவரி
டம் அவரைக் கொண்டுபோனார்கள். அவர் அந்த வருஷத்தின் தலை
மைக் குருவான[i] காய்பாவின்[j] மாமனார். **14** 'மக்களுக்காக ஒரேவொரு
மனுஷன் சாவது உங்களுக்குத்தான் நல்லது' என்று யூதர்களுக்கு ஆலோ
சனை சொன்னது இந்த காய்பாதான்.[k]

15 சீமோன் பேதுருவும் மற்றொரு சீஷரும் இயேசுவுக்குப் பின்னால்
போனார்கள்.[l] இந்தச் சீஷர் தலைமைக் குருவுக்குத் தெரிந்தவர் என்பதால்
இயேசுவோடு தலைமைக் குருவுடைய வீட்டு முற்றத்துக்குப் போனார்.
16 ஆனால், பேதுரு வெளியே வாசலில் நின்றுகொண்டிருந்தார். தலை
மைக் குருவுக்குத் தெரிந்த அந்தச் சீஷர் வெளியே போய், வாசலில்
காவல் காத்துக்கொண்டிருந்த பெண்ணிடம் பேசி, பேதுருவை உள்ளே கூட்
டிக்கொண்டு போனார். **17** அப்போது, வாசலில் காவல் காத்துக்கொண்
டிருந்த அந்த வேலைக்காரி, "நீயும் அந்த மனுஷனுடைய சீஷன்தானே?"
என்று பேதுருவிடம் கேட்டாள். அதற்கு அவர், "இல்லை" என்று சொன்
னார்.[m] **18** குளிராக இருந்ததால் வேலைக்காரர்களும் காவலர்களும் கரி
யால் தீ மூட்டி அதைச் சுற்றிநின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தார்கள். பேது
ருவும் அவர்களோடு நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தார்.

19 இயேசுவிடம் அவருடைய சீஷர்களைப் பற்றியும் அவருடைய

18:11 *"கிண்ணம்" என்பது கடவுளுடைய சித்தத்தை, அதாவது இயேசு தெய்வ நிந்தனை செய்தார் என்று பொய்யாகக் குற்றம்சாட்டப்பட்டுக் கொல்லப்படுவதற்குக் கடவுள் அவரை அனுமதித்ததை அடையாளப்படுத்துகிறது.

அதி. 18
a மத் 26:47 மாற் 14:43
b மத் 2:23
c லூ 22:47
d யோவா 7:46
e யோவா 6:39 யோவா 17:12
f மத் 26:51 மாற் 14:47 லூ 22:50
g மத் 26:52 லூ 22:51 யோவா 18:36
h மத் 20:22 மத் 26:42
i மத் 26:57 யோவா 18:24
j லூ 3:2 அப் 4:5, 6
k யோவா 11:49, 50
l மத் 26:58 மாற் 14:54 லூ 22:54
m மத் 26:69, 70 மாற் 14:66-68 லூ 22:55-57 யோவா 18:25

போதனையைப் பற்றியும் தலைமைக் குரு விசாரணை செய்தார். **20** அப்
போது இயேசு, “நான் உலகறியப் பேசியிருக்கிறேன். யூதர்கள் எல்லாரும்
கூடிவருகிற ஜெபக்கூடத்திலும் ஆலயத்திலும் எப்போதும் கற்பித்திருக்
கிறேன்;[a] எதையும் நான் ரகசியமாகப் பேசியதே இல்லை. **21** அப்படியி
ருக்கும்போது, ஏன் என்னை விசாரணை செய்கிறீர்கள்? நான் பேசிய
தைக் கேட்டவர்களிடம் விசாரணை செய்யுங்கள். நான் என்ன பேசினேன்
என்று அவர்களுக்குத் தெரியும்” என்று சொன்னார். **22** இயேசு இப்படிச்
சொன்னதும், அங்கே நின்றுகொண்டிருந்த காவலர்களில் ஒருவன் அவரு
டைய கன்னத்தில் அறைந்து,[b] “முதன்மை குருவுக்கு இப்படித்தான் பதில்
சொல்வதா?” என்று கேட்டான். **23** அதற்கு இயேசு, “நான் தவறாகப்
பேசியிருந்தால், அந்தத் தவறு என்னவென்று சொல். சரியாகப் பேசியிருந்
தால், என்னை ஏன் அடிக்கிறாய்?” என்று கேட்டார். **24** அதன் பின்பு, கட்
டுகளை அவிழ்க்காமலேயே அவரைத் தலைமைக் குருவான காய்பாவிடம்
அன்னா அனுப்பி வைத்தார்.[c]

25 சீமோன் பேதுரு அங்கே நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தார். அப்
போது சிலர் அவரிடம், “நீயும் அவனுடைய சீஷன்தானே?” என்று கேட்
டார்கள். அதற்கு அவர், “இல்லை” என்று மறுத்தார்.[d] **26** தலைமைக்
குருவுடைய வேலைக்காரர்களில் ஒருவன், பேதுருவால் காது வெட்டப்பட்
டவனுடைய சொந்தக்காரன்.[e] அவன் அவரிடம், “தோட்டத்தில் நான்
உன்னை அவரோடு பார்த்தேனே” என்று சொன்னான். **27** ஆனால்
பேதுரு மறுபடியும் மறுத்தார், உடனே சேவல் கூவியது.[f]

28 பின்பு, அவர்கள் இயேசுவை காய்பாவிடமிருந்து ஆளுநர் மாளி
கைக்குக் கொண்டுபோனார்கள்.[g] அது பொழுது விடியும் நேரம். பஸ்கா
உணவைச் சாப்பிடுவதற்கு முன்பு தீட்டுப்படக் கூடாது என்பதற்காக யூதர்
கள் அந்த மாளிகைக்குள் போகவில்லை.[h] **29** அதனால் பிலாத்து
வெளியே வந்து, “இந்த மனுஷன்மேல் நீங்கள் என்ன குற்றம் சுமத்துகிறீர்
கள்?” என்று அவர்களிடம் கேட்டார். **30** அதற்கு அவர்கள், “இவன் ஒரு
குற்றவாளி இல்லையென்றால், இவனை உங்களிடம் ஒப்படைத்திருக்கவே
மாட்டோம்” என்று சொன்னார்கள். **31** அப்போது பிலாத்து, “இவனை
நீங்களே கொண்டுபோய் உங்கள் சட்டப்படி தீர்ப்பு வழங்குங்கள்”[i] என்று
சொன்னார். அதற்கு யூதர்கள், “யாருக்கும் மரண தண்டனை விதிக்க எங்க
ளுக்கு அதிகாரம் இல்லை”[j] என்று சொன்னார்கள். **32** தான் எந்த விதத்
தில் சாக வேண்டியிருக்கும்[k] என்று இயேசு குறிப்பாகச் சொல்லியிருந்
தாரோ அது நிறைவேறும்படியே அப்படி நடந்தது.

33 பிலாத்து மறுபடியும் ஆளுநர் மாளிகைக்குள் போய் இயேசுவைக்
கூப்பிட்டு, “நீ யூதர்களுடைய ராஜாவா?”[l] என்று கேட்டார். **34** அதற்கு
இயேசு, “நீங்களே இதைக் கேட்கிறீர்களா, அல்லது மற்றவர்கள் என்னைப்
பற்றிச் சொன்னதை வைத்துக் கேட்கிறீர்களா?” என்றார். **35** அப்போது
பிலாத்து, “நான் ஒரு யூதனா என்ன? உன்னுடைய தேசத்தாரும் முதன்மை
குருமார்களும்தான் உன்னை என்னிடம் ஒப்படைத்தார்கள். நீ என்ன செய்
தாய்?” என்று கேட்டார். **36** அதற்கு இயேசு,[m] “என்னுடைய அரசாங்கம்
இந்த உலகத்தின் பாகமல்ல.[n] என்னுடைய அரசாங்கம் இந்த உலகத்தின்
பாகமாக இருந்திருந்தால், நான் யூதர்களிடம் ஒப்படைக்கப்படாதபடி என்

அதி. 18
a மத் 26:55, லூ 4:15, லூ 19:47, யோவா 7:14
b ஏசா 50:6
c மத் 26:57
d மத் 26:69, 70, மாற் 14:69, 70, லூ 22:58
e யோவா 18:10
f மத் 26:74, மாற் 14:72, லூ 22:60, யோவா 13:38
g மத் 27:2, மாற் 15:1, லூ 23:1
h அப் 10:28
i யோவா 19:6
j யோவா 19:10
k மத் 20:18, 19, யோவா 3:14, யோவா 12:32
l மத் 27:11, யோவா 12:13
m 1தீ 6:13
n ஏசா 9:6, தானி 2:44, தானி 7:14

ஊழியர்கள் எனக்காகப் போராடியிருப்பார்கள்.[a] ஆனால், என்னுடைய
அரசாங்கம் இந்த உலகத்தைச் சேர்ந்ததல்ல” என்று சொன்னார். **37** “அப்
படியென்றால் நீ ஒரு ராஜாவா?” என்று பிலாத்து கேட்டார். அதற்கு இயேசு,
“நான் ஒரு ராஜாவென்று நீங்களே சொல்லிவிட்டீர்கள்.[b] சத்தியத்தைப் பற்
றிச் சாட்சி கொடுப்பதற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உல
கத்துக்கு வந்தேன்.[c] சத்தியத்தின் பக்கம் இருக்கிற ஒவ்வொருவனும்
நான் சொல்வதைக் கேட்கிறான்” என்று சொன்னார். **38** “சத்தியமா? அது
என்ன?” என்று பிலாத்து கேட்டார்.

இப்படிக் கேட்டுவிட்டு, அவர் மறுபடியும் வெளியே வந்து யூதர்களைப்
பார்த்து, “இவனிடம் எந்தவொரு குற்றமும் இருப்பதாக எனக்குத் தெரிய
வில்லை.[d] **39** பஸ்கா பண்டிகையின்போது உங்களுக்காக நான் ஒரு
கைதியை விடுதலை செய்யும் வழக்கம் இருக்கிறதே.[e] அதன்படி, யூதர்
களுடைய ராஜாவை நான் உங்களுக்கு விடுதலை செய்யட்டுமா?” என்று
கேட்டார். **40** அதற்கு அவர்கள், “வேண்டாம், பரபாசை விடுதலை செய்
யுங்கள்!” என்று மறுபடியும் கத்தினார்கள். அந்த பரபாஸ் ஒரு கொள்ளைக்
காரன்.[f]

19 பின்பு, இயேசுவைக் கொண்டுபோய் முள்சாட்டையால் அடிக்
கும்படி பிலாத்து கட்டளையிட்டார்.[g] **2** படைவீரர்கள் ஒரு முள்கி
ரீடம் செய்து அதை அவர் தலைமேல் வைத்தார்கள், பின்பு ஊதா நிற சால்
வையை அவருக்குப் போர்த்திவிட்டார்கள்.[h] **3** அவர் பக்கத்தில் திரும்பத்
திரும்பப் போய், “யூதர்களுடைய ராஜாவே, வாழ்க!” என்று சொன்னார்
கள். அவருடைய கன்னத்தில் மறுபடியும் மறுபடியும் அறைந்தார்கள்.[i]
4 பிலாத்து திரும்பவும் வெளியே வந்து கூட்டத்தாரிடம், “அவனிடம் எந்
தக் குற்றத்தையும் நான் பார்க்கவில்லை.[j] இதை நீங்கள் தெரிந்துகொள்வ
தற்காக அவனை வெளியே உங்களிடம் கொண்டுவருகிறேன்” என்று
சொன்னார். **5** அப்போது, முள்கிரீடத்தோடும் ஊதா நிற சால்வையோ
டும் இயேசு வெளியே வந்தார். பிலாத்து அவர்களிடம், “இதோ! இந்த மனு
ஷன்!” என்று சொன்னார். **6** ஆனால், முதன்மை குருமார்களும் காவலர்
களும் அவரைப் பார்த்தபோது, “இவனை மரக் கம்பத்தில் அறைந்து
கொல்லுங்கள்! மரக் கம்பத்தில் அறைந்து கொல்லுங்கள்!”[k] என்று கத்தி
னார்கள். அப்போது பிலாத்து, “நீங்களே இவனைக் கொண்டுபோய் மரக்
கம்பத்தில் அறைந்து கொல்லுங்கள், இவனிடம் எந்தக் குற்றத்தையும்
நான் பார்க்கவில்லை”[l] என்று சொன்னார். **7** அதற்கு யூதர்கள், “எங்க
ளுக்கு ஒரு சட்டம் இருக்கிறது, அந்தச் சட்டத்தின்படி இவன் சாக வேண்
டும்.[m] ஏனென்றால், இவன் தன்னைக் கடவுளுடைய மகன் என்று சொல்
லிக்கொண்டான்”[n] என்றார்கள்.

8 பிலாத்து இதைக் கேட்டபோது இன்னும் அதிகமாகப் பயந்தார்.
9 அதனால் மறுபடியும் மாளிகைக்குள் போய், “நீ எங்கிருந்து வந்திருக்கி
றாய்?” என்று இயேசுவிடம் கேட்டார். அதற்கு இயேசு எந்தப் பதிலும்
சொல்லவில்லை.[o] **10** அப்போது பிலாத்து அவரிடம், “என்னிடம் பேச
மாட்டாயா? உன்னை விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரம் இருக்கிறது,
உன்னைக் கொல்லவும் எனக்கு அதிகாரம் இருக்கிறது என்று உனக்குத் தெரி
யாதா?” என்று கேட்டார். **11** அப்போது இயேசு, “மேலே இருந்து உங்க
ளுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் எனக்கு எதிராக எதையும்

அதி. 18
a மத் 26:52, 53; யோவா 18:11
b மத் 27:11
c யோவா 1:14, 17; யோவா 14:6
d மத் 27:24; லூ 23:4; யோவா 15:25
e மத் 27:15; மாற் 15:6
f எண் 35:31; லூ 23:18, 19; அப் 3:14

அதி. 19
g ஏசா 50:6; மத் 20:18, 19; மத் 27:26; மாற் 15:15
h மத் 27:27-29; மாற் 15:16, 17; லூ 23:11
i ஏசா 53:3
j லூ 23:4; யோவா 18:38
k மத் 27:22; மாற் 15:13; லூ 23:21
l யோவா 18:31
m லேவி 24:16
n மத் 26:63-65; யோவா 5:18
o ஏசா 53:7; மத் 27:12, 14

அதி. 19
a லூ 23:2; அப் 17:6, 7
b யோவா 19:31
c தானி 9:26; மத் 27:26, 31; மாற் 15:15; லூ 23:24, 25
d எபி 13:12
e மத் 27:32, 33; மாற் 15:22
f யோவா 3:14; அப் 5:30; கலா 3:13
g ஏசா 53:9; லூ 23:33
h மத் 27:37; மாற் 15:26; லூ 23:38
i மத் 27:35; மாற் 15:24; லூ 23:34

செய்ய உங்களுக்கு அதிகாரம் இருக்காது. இதனால்தான் என்னை உங்களி
டம் ஒப்படைத்தவனுக்கு அதிக பாவம் இருக்கிறது" என்று சொன்னார்.

12 அதனால், அவரை விடுதலை செய்வதற்கு பிலாத்து வழிதேடிக்
கொண்டே இருந்தார். யூதர்களோ, "இவனை விடுதலை செய்தால் ரோம
அரசனுக்கு* நீங்கள் நண்பர் கிடையாது. தன்னை ராஜா என்று சொல்
லிக்கொள்கிற எவனும் ரோம அரசனுக்கு விரோதி"[a] என்று கத்தினார்கள்.
13 பிலாத்து இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இயேசுவை வெளியே வர
வழைத்தார். பின்பு, கல்தளம் என்ற இடத்திலிருந்த நியாயத்தீர்ப்பு மேடை
யில் உட்கார்ந்தார். அந்த இடத்துக்கு எபிரெய மொழியில் *கபத்தா* என்று
பெயர். **14** அன்று, பஸ்காவுக்கு ஆயத்த நாளாக இருந்தது.[b] அப்போது,
சுமார் ஆறாம் மணிநேரமாக* இருந்தது. அவர் யூதர்களிடம், "இதோ! உங்
கள் ராஜா!" என்று சொன்னார். **15** அதற்கு அவர்கள், "இவனை ஒழித்
துக்கட்டுங்கள்! ஒழித்துக்கட்டுங்கள்! மரக் கம்பத்தில் அறைந்து கொல்லுங்
கள்!" என்று கத்தினார்கள். பிலாத்து அவர்களிடம், "உங்கள் ராஜாவையா
கொல்லச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு முதன்மை குருமார்
கள், "ரோம அரசனைத் தவிர வேறெந்த ராஜாவும் எங்களுக்கு இல்லை"
என்று சொன்னார்கள். **16** பின்பு, மரக் கம்பத்தில் அறைந்து கொல்வதற்
காக அவரை பிலாத்து அவர்களிடம் ஒப்படைத்தார்.[c]

அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள். **17** சித்திர
வதைக் கம்பத்தை* அவரே சுமந்துகொண்டு மண்டையோடு என்ற இடத்
துக்குப் போனார்;[d] எபிரெய மொழியில் அதற்கு *கொல்கொதா* என்று
பெயர்.[e] **18** அங்கே அவர்கள் இயேசுவை மரக் கம்பத்தில் வைத்து
ஆணியடித்தார்கள்;[f] அவருக்கு இந்தப் பக்கம் ஒருவனும் அந்தப் பக்கம்
ஒருவனுமாக வேறு இரண்டு பேரையும் மரக் கம்பங்களில் ஏற்றினார்கள்.[g]
19 பிலாத்து ஒரு வாசகத்தை எழுதி அவருடைய சித்திரவதைக் கம்பத்
தின்* மேல் வைத்தார். அதில், "நாசரேத்தூர் இயேசு, யூதர்களுடைய
ராஜா"[h] என்று எழுதப்பட்டிருந்தது. **20** மரக் கம்பத்தில் இயேசு ஆணிய
டிக்கப்பட்ட இடம் நகரத்துக்குப் பக்கத்தில் இருந்ததால் நிறைய யூதர்கள்
அந்த வாசகத்தைப் படித்தார்கள். அது எபிரெயுவிலும் லத்தீனிலும் கிரேக்
கிலும் எழுதப்பட்டிருந்தது. **21** யூதர்களின் முதன்மை குருமார்களோ,
"'யூதர்களுடைய ராஜா' என்று எழுதாமல், 'நான் யூதர்களுடைய ராஜா'
என்று அவன் சொல்லிக்கொண்டதாக எழுதுங்கள்" என்று பிலாத்துவிடம்
சொன்னார்கள். **22** அதற்கு பிலாத்து, "நான் எழுதியது எழுதியதுதான்"
என்று சொன்னார்.

23 படைவீரர்கள் இயேசுவை மரக் கம்பத்தில் வைத்து ஆணியடித்த
பின்பு, அவருடைய மேலங்கிகளை நான்கு பாகங்களாக்கி ஆளுக்கொரு
பாகத்தை எடுத்துக்கொண்டார்கள்; உள்ளங்கியையும் எடுத்துக்கொண்டார்
கள். அந்த உள்ளங்கி தையல் இல்லாமல் மேலிருந்து கீழ்வரை ஒரே
துணியாக நெய்யப்பட்டிருந்தது. **24** அதனால், "இதைக் கிழிக்க வேண்
டாம்; இது யாருக்கு என்று குலுக்கல் போட்டுப் பார்க்கலாம்"[i] என ஒருவ
ருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். "என்னுடைய அங்கிகளைப் பங்கு

19:12 *நே.மொ., "சீஸருக்கு." சொல் பட்டியலைப் பாருங்கள். **19:14** *அதாவது, "மதியம் சுமார் 12 மணியாக." **19:17, 19** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

போட்டுக்கொள்கிறார்கள், என்னுடைய உடைக்காகக் குலுக்கல் போடுகி
றார்கள்”[a] என்ற வசனம் நிறைவேறும்படியே அப்படி நடந்தது. உண்மை
யில், அந்தப் படைவீரர்கள் அதைத்தான் செய்தார்கள்.

25 இயேசுவுடைய சித்திரவதைக் கம்பத்துக்கு* பக்கத்தில் அவருடைய
அம்மாவும்,[b] அம்மாவின் சகோதரியும், குளோப்பாவின் மனைவி மரியா
ளும், மகதலேனா மரியாளும்[c] நின்றுகொண்டிருந்தார்கள். **26** அப்போது,
பக்கத்தில் இருந்த தன்னுடைய அம்மாவையும் அன்புச் சீஷரையும்[d]
இயேசு பார்த்து, தன்னுடைய அம்மாவிடம், “பெண்மணியே, இதோ! உங்
கள் மகன்!” என்று சொன்னார். **27** அடுத்ததாக அந்தச் சீஷரிடம், “இதோ!
உன் அம்மா!” என்று சொன்னார். அன்றைக்கே அவருடைய அம்மாவை
அந்தச் சீஷர் தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

28 பின்பு, எல்லாம் முடிந்துவிட்டதை இயேசு தெரிந்துகொண்டு, “எனக்
குத் தாகமாக இருக்கிறது”[e] என்று சொன்னார். வேதவசனம் நிறைவேறும்ப
டியே இப்படிச் சொன்னார். **29** புளிப்பான திராட்சமது நிறைந்த ஒரு
ஜாடி அங்கே இருந்ததால், ஒரு கடற்பஞ்சை அதில் நனைத்து மருவுச்செ
டியின்* தண்டில் மாட்டி அவருடைய வாய்க்குப் பக்கத்தில் நீட்டினார்கள்.[f]
30 இயேசு அந்தப் புளிப்பான திராட்சமதுவைச் சுவைத்த பின்பு, “முடித்து
விட்டேன்!”[g] என்று சொல்லி, தலைசாய்த்து உயிர்விட்டார்.[h]

31 அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு[i] ஆயத்த நாளாக இருந்தது;[j]
அதனால், ஓய்வுநாளிலே உடல்கள் சித்திரவதைக் கம்பங்களில் தொங்
கிக்கொண்டிருக்காதபடி[k] அவர்களுடைய கால்களை உடைத்து உடல்களை
எடுத்துவிடும்படி பிலாத்துவிடம் யூதர்கள் கேட்டுக்கொண்டார்கள்.
32 உடனே படைவீரர்கள் போய், அவர் பக்கத்திலிருந்த மரக் கம்பங்களில்
ஏற்றப்பட்டவர்களில் ஒருவனுடைய கால்களை முதலில் உடைத்தார்கள்,
பின்பு மற்றவனுடைய கால்களையும் உடைத்தார்கள். **33** ஆனால் இயே
சுவிடம் வந்தபோது, அவர் ஏற்கெனவே இறந்திருந்ததைப் பார்த்து அவ
ருடைய கால்களை உடைக்காமல் விட்டுவிட்டார்கள். **34** இருந்தாலும்,
படைவீரர்களில் ஒருவன் அவருடைய விலாவை ஈட்டியால் குத்தினான்;[l]
உடனே இரத்தமும் தண்ணீரும் வெளியே வந்தன. **35** இதை நேரில்
பார்த்த ஒருவர் சாட்சி கொடுத்திருக்கிறார், அவருடைய சாட்சி உண்மையா
னது. அவர் உண்மையைத்தான் சொல்கிறார் என்பது அவருக்குத் தெரியும்.
நீங்களும் நம்ப வேண்டும் என்பதற்காக அவற்றைச் சொல்லியிருக்கிறார்.[m]
36 “அவருடைய எலும்புகளில் ஒன்றுகூட முறிக்கப்படாது”*[n] என்ற வச
னம் நிறைவேறும்படியே அவை நடந்தன. **37** “அவர்கள் யாரைக் குத்
தினார்களோ அவரைப் பார்ப்பார்கள்”[o] என்று வேறொரு வசனமும்
சொல்கிறது.

38 அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் இயேசுவின் சீஷர்
களில் ஒருவர். ஆனால், யூதர்களுக்குப் பயந்து அதை வெளியே சொல்
லாமல் இருந்தவர்.[p] அவர் இயேசுவின் உடலை எடுத்துக்கொண்டு போக
பிலாத்துவிடம் அனுமதி கேட்டார். பிலாத்து அனுமதி கொடுத்ததால் அவ
ருடைய உடலை எடுத்துக்கொண்டு போனார்.[q] **39** முதல் தடவை ஒரு
ராத்திரி நேரத்தில் அவரைச் சந்தித்திருந்த நிக்கொதேமு[r] என்பவர்கூட,

19:25, 29 *சொல் பட்டியலைப் பாருங்கள். **19:36** *வே.வா., “நொறுக்கப்படாது.”

அதி. 19
a சங் 22:18
b லூ 2:34, 35
c மத் 27:55, 56 மத் 27:61 மாற் 15:40 லூ 23:49
d யோவா 13:23 யோவா 21:7, 20
e சங் 22:15
f சங் 69:21 மத் 27:48 மாற் 15:36 லூ 23:36
g யோவா 17:4
h ஏசா 53:12 மத் 27:50 மாற் 15:37 லூ 23:46
i லேவி 23:5-7
j யோவா 19:14
k உபா 21:22, 23
l ஏசா 53:5 சக 12:10 யோவா 20:25
m யோவா 20:31 யோவா 21:24
n யாத் 12:46 எண் 9:12 சங் 34:20
o சக 12:10 வெளி 1:7
p யோவா 7:13 யோவா 9:22
q உபா 21:22, 23 மத் 27:57-60 மாற் 15:43-46
r யோவா 3:1, 2 யோவா 7:50-52

வெள்ளைப்போளமும்* அகில் தூளும் கலந்த நறுமணக் கலவையை#
ஏறக்குறைய நூறு ராத்தல்△ கொண்டுவந்தார்.[a] **40** அவர்கள் இயேசுவின்
உடலை எடுத்து, யூதர்கள் அடக்கம் செய்கிற வழக்கத்தின்படியே நறுமணப்
பொருள்களோடு நாரிழை* துணிகளில் சுற்றிக் கட்டினார்கள்.[b] **41** அவர்
கொல்லப்பட்ட இடத்தில் ஒரு தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில்
ஒரு புதிய கல்லறை* இருந்தது. அந்தக் கல்லறையில் அதுவரை ஒருவ
ரும் அடக்கம் செய்யப்படவில்லை.[c] **42** அது யூத பண்டிகையின் ஆயத்த
நாளாக இருந்ததாலும்,[d] பக்கத்திலேயே அந்தக் கல்லறை இருந்ததாலும்
இயேசுவை அங்கே அடக்கம் செய்தார்கள்.

20 வாரத்தின் முதலாம் நாள் விடியற்காலையில், இன்னும் இருட்டாக
இருந்தபோதே, மகதலேனா மரியாள் கல்லறைக்கு* போனாள்;[e]
கல்லறையின் கல் ஏற்கெனவே எடுத்துப் போடப்பட்டிருந்ததைப் பார்த்
தாள்.[f] **2** அதனால், சீமோன் பேதுருவிடமும் இயேசுவின் பாசத்துக்குரிய
சீஷரிடமும்[g] ஓடிப்போய், "நம் எஜமானை யாரோ கல்லறையிலிருந்து[h]
எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை எங்கே வைத்திருக்கிறார்
கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை" என்று சொன்னாள்.

3 அப்போது பேதுருவும் மற்ற சீஷரும் கல்லறைக்குப் போவதற்
காகப் புறப்பட்டார்கள். **4** சொல்லப்போனால், அவர்கள் இரண்டு பேரும்
சேர்ந்து ஓட ஆரம்பித்தார்கள். ஆனால், மற்ற சீஷர் பேதுருவைவிட வேக
மாக ஓடி முதலில் கல்லறைக்குப் போய்ச் சேர்ந்தார். **5** அவர் கல்லறைக்
குள் குனிந்து பார்த்தபோது, அங்கே நாரிழை* துணிகள் கிடப்பதைப் பார்த்
தார்,[i] ஆனால் உள்ளே போகவில்லை. **6** அதன் பின்பு, சீமோன்
பேதுருவும் வந்துசேர்ந்தார்; அவர் கல்லறைக்குள் போய், நாரிழைத் துணி
கள் கிடப்பதைப் பார்த்தார். **7** இயேசுவின் தலையில் சுற்றப்பட்டிருந்த
துணி மற்ற கட்டுத்துணிகளோடு இல்லாமல் தனியாக ஓர் இடத்தில் சுருட்டி
வைக்கப்பட்டிருந்ததையும் பார்த்தார். **8** அப்போது, கல்லறைக்கு முத
லில் வந்துசேர்ந்த சீஷரும் உள்ளே போய்ப் பார்த்தார், பின்பு நம்பினார்.
9 அவர் உயிரோடு எழுந்திருக்க வேண்டும் என்ற வேதவசனத்தை அவர்
கள் இன்னும் புரிந்துகொள்ளாமல் இருந்தார்கள்.[j] **10** பின்பு, அந்தச் சீஷர்
கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிப் போனார்கள்.

11 ஆனால், மரியாள் கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்
டிருந்தாள். அழுதபடியே குனிந்து கல்லறைக்குள் பார்த்தாள். **12** அப்
போது, வெள்ளை உடை அணிந்த இரண்டு தேவதூதர்கள்[k] இயேசுவின்
உடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில், தலைமாட்டில் ஒருவரும் கால்மாட்
டில் ஒருவருமாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்தாள். **13** அவர்கள் அவளி
டம், "பெண்ணே, ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கு
அவள், "யாரோ என் எஜமானை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்,
அவரை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை" என்று சொன்
னாள். **14** அவள் இப்படிச் சொல்லிவிட்டுத் திரும்பியபோது, அங்கே
இயேசு நிற்பதைப் பார்த்தாள். ஆனால், அவர் இயேசு என்பதைப்

அதி. 19
a லூ 23:55, 56
b யோவா 20:7
c ஏசா 53:9
d யோவா 19:14

அதி. 20
e மத் 28:1; மாற் 16:1, 2
f லூ 24:1-3
g யோவா 13:23; யோவா 19:26; யோவா 21:24
h யோவா 19: 41, 42
i யோவா 19:40
j சங் 16:10; மத் 16:21; அப் 2:27
k மாற் 16:5

19:39 *சொல் பட்டியலைப் பாருங்கள். #அல்லது, "கட்டு ஒன்றை." △அதாவது, "ரோம ராத்தல்." இணைப்பு B14-ஐப் பாருங்கள். **19:40; 20:5** *அதாவது, "லினன்." **19:41** *வே.வா., "நினைவுக் கல்லறை." **20:1** *வே.வா., "நினைவுக் கல்லறைக்கு."

புரிந்துகொள்ளவில்லை.[a] **15** இயேசு அவளிடம், “பெண்ணே, ஏன் அழு
கிறாய்? யாரைத் தேடுகிறாய்?” என்று கேட்டார். அவரைத் தோட்டக்காரர்
என்று நினைத்து, “ஐயா, நீங்கள் அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால்,
எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள், நான் போய் அவரை
எடுத்துக்கொள்கிறேன்” என்று சொன்னாள். **16** அப்போது இயேசு, “மரி
யாளே!” என்று கூப்பிட்டார். அவள் திரும்பிப் பார்த்து, *“ரபூனி!”* என்று எபி
ரெய மொழியில் சொன்னாள்; இதற்கு, “போதகரே!” என்று அர்த்தம்.
17 இயேசு அவளிடம், “என்னைப் பிடித்துக்கொண்டிருக்காதே. ஏனென்
றால், நான் இன்னும் என் தகப்பனிடம் போகவில்லை. நீ என் சகோதரர்
களிடம் போய்,[b] ‘நான் என் தகப்பனிடமும்[c] உங்கள் தகப்பனிடமும் என்
கடவுளிடமும்[d] உங்கள் கடவுளிடமும் போகப்போகிறேன்’ என்று சொல்”
என்றார். **18** அதன்படியே, மகதலேனா மரியாள் சீஷர்களிடம் போய்,
“நான் எஜமானைப் பார்த்தேன்!” என்று சொன்னாள். அவர் தன்னிடம்
சொன்ன விஷயங்களையும் அவர்களிடம் சொன்னாள்.[e]

19 அன்று வாரத்தின் முதலாம் நாள். அன்று சாயங்காலத்தில், யூதர்க
ளுக்குப் பயந்து சீஷர்கள் கதவுகளைப் பூட்டி வைத்திருந்தார்கள். இருந்தா
லும், இயேசு அவர்கள் நடுவில் வந்து நின்று, “உங்களுக்குச் சமாதானம்!”[f]
என்று சொன்னார். **20** இப்படிச் சொல்லிவிட்டு, தன்னுடைய கைகளை
யும் தன்னுடைய விலாவையும் அவர்களுக்குக் காட்டினார்.[g] எஜமானைப்
பார்த்ததால் சீஷர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.[h] **21** இயேசு மறுப
டியும் அவர்களிடம், “உங்களுக்குச் சமாதானம்![i] தகப்பன் என்னை அனுப்
பியதுபோல்[j] நானும் உங்களை அனுப்புகிறேன்”[k] என்று சொன்னார்.
22 இப்படிச் சொன்ன பின்பு அவர்கள்மேல் ஊதி, “கடவுளுடைய சக்தி
யைப் பெற்றுக்கொள்ளுங்கள்.[l] **23** யாருடைய பாவங்களை மன்னிக்கிறீர்
களோ, அவை அவர்களுக்கு மன்னிக்கப்படும். யாருடைய பாவங்களை
மன்னிக்காமல் இருக்கிறீர்களோ அவை அவர்களுக்கு மன்னிக்கப்படாது”
என்று சொன்னார்.

24 ஆனால், இயேசு வந்திருந்தபோது பன்னிரண்டு பேரில்* ஒருவ
ரான திதிமு என்ற தோமா[m] அவர்களோடு இல்லை. **25** அதனால் மற்ற
சீஷர்கள் தோமாவிடம், “நாங்கள் எஜமானைப் பார்த்தோம்!” என்று சொன்
னார்கள். அப்போது அவர், “அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட
காயத்தை* பார்த்து, அதில் என் விரலைவிட்டு, அவருடைய விலாவில்[n]
கை வைத்தால் தவிர நான் நம்ப மாட்டேன்” என்று சொன்னார்.

26 எட்டு நாட்களுக்குப் பின்பு சீஷர்கள் மறுபடியும் வீட்டுக்குள் இருந்
தார்கள், தோமாவும் அங்கே இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும்
இயேசு அவர்கள் நடுவில் வந்துநின்று, “உங்களுக்குச் சமாதானம்!”[o] என்று
சொன்னார். **27** பின்பு தோமாவிடம், “உன் விரலால் என் கைகளைத்
தொட்டுப் பார். உன் கையை என் விலாவில் வைத்துப் பார். சந்தேகப்படு
வதை விட்டுவிட்டு நம்பிக்கை வை” என்று சொன்னார். **28** அதற்கு
தோமா, “என் எஜமானே, என் கடவுளே!” என்று சொன்னார். **29** அப்
போது இயேசு, “என்னைப் பார்த்ததால்தான் நம்புகிறாயா? பார்க்காமலேயே
நம்புகிறவர்கள் சந்தோஷமானவர்கள்” என்று சொன்னார்.

20:24 * அதாவது, “அப்போஸ்தலர்களில்.” **20:25** * வே.வா., “அடையாளத்தை.”

அதி. 20
a லூ 24:15, 16; லூ 24:30, 31; யோவா 21:4
b மத் 28:10
c யோவா 14:28; யோவா 16:28
d 1கொ 11:3; எபே 1:17; கொலோ 1:3
e லூ 24:9, 10
f லூ 24:36
g யோவா 19:34
h யோவா 16:22
i லூ 24:36
j ஏசா 61:1; யோவா 5:36
k மத் 28:19, 20; யோவா 17:18
l அப் 2:2, 4
m யோவா 11:16
n யோவா 19:34
o யோவா 20:19

30 உண்மைதான், இயேசு தன்னுடைய சீஷர்கள் முன்னால் இன்னும் நிறைய அடையாளங்களைச் செய்தார்; அவை இந்தச் சுருளில் எழுதப்படவில்லை.[a] **31** ஆனால், இயேசுதான் கடவுளுடைய மகனாகிய கிறிஸ்து என்று நீங்கள் நம்புவதற்காகவும், அப்படி நம்பிக்கை வைத்து அவருடைய பெயரில் வாழ்வு பெறுவதற்காகவும்தான் இவையெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன.[b]

21 இவற்றுக்குப் பின்பு, திபேரியா கடலுக்குப் பக்கத்தில் இயேசு மறுபடியும் தன்னுடைய சீஷர்களுக்குத் தோன்றினார். அவர் தோன்றிய விவரம் இதுதான்: **2** சீமோன் பேதுருவும், திதிமு என்ற தோமாவும்,[c] கலிலேயாவில் இருக்கிற கானா ஊரைச் சேர்ந்த நாத்தான்வேலும்,[d] செபெதேயுவின் மகன்களும்,[e] அவருடைய சீஷர்களில் இன்னும் இரண்டு பேரும் கூடியிருந்தார்கள். **3** அப்போது சீமோன் பேதுரு அவர்களிடம், “நான் மீன்பிடிக்கப் போகிறேன்” என்று சொன்னார். அதற்கு அவர்கள், “நாங்களும் உங்களோடு வருகிறோம்” என்று சொல்லிவிட்டு, படகில் ஏறிப் போனார்கள். ஆனால், அன்று ராத்திரி அவர்களுக்கு ஒரு மீன்கூட கிடைக்கவில்லை.[f]

4 பொழுது விடியும் நேரத்தில், இயேசு கடற்கரையில் நின்றுகொண்டிருந்தார். ஆனால், அவர்தான் இயேசு என்பதைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை.[g] **5** இயேசு அவர்களிடம், “பிள்ளைகளே, உங்களிடம் சாப்பிடுவதற்கு ஏதாவது* இருக்கிறதா?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “ஒன்றுமே இல்லை!” என்று சொன்னார்கள். **6** அப்போது அவர், “படகின் வலது பக்கத்தில் வலையைப் போடுங்கள், உங்களுக்கு மீன் கிடைக்கும்” என்று சொன்னார். அவர்களும் வலையைப் போட்டார்கள், ஏராளமான மீன்கள் சிக்கின. அதனால், வலையை அவர்களால் இழுக்கக்கூட முடியவில்லை.[h] **7** இயேசுவின் அன்புச் சீஷர்[i] அதைப் பார்த்து, “அவர் நம் எஜமான்தான்!” என்று சீமோன் பேதுருவிடம் சொன்னார். பேதுரு அதைக் கேட்டதும், கழற்றி வைத்திருந்த மேலங்கியைப் போட்டுக்கொண்டு கடலில் குதித்தார். **8** மற்ற சீஷர்களோ சிறிய படகில் இருந்தபடி, மீன்கள் நிறைந்த வலையை இழுத்துக்கொண்டு வந்தார்கள். ஏனென்றால், கரையிலிருந்து அவர்கள் வெகு தூரத்தில் இல்லை, சுமார் 300 அடி* தூரத்தில்தான் இருந்தார்கள்.

9 அவர்கள் படகைவிட்டு இறங்கியபோது, கரியால் தீ மூட்டப்பட்டு அதன்மேல் மீன் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தார்கள், அங்கே ரொட்டியும் இருந்தது. **10** இயேசு அவர்களிடம், “இப்போது நீங்கள் பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டுவாருங்கள்” என்று சொன்னார். **11** அதனால் சீமோன் பேதுரு படகில் ஏறி, பெரிய மீன்கள் நிறைந்த வலையைக் கரைக்கு இழுத்தார். அதில் 153 மீன்கள் இருந்தன. அத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. **12** இயேசு அவர்களிடம், “வந்து சாப்பிடுங்கள்” என்று சொன்னார். சீஷர்களில் ஒருவருக்குக்கூட, “நீங்கள் யார்?” என்று கேட்கத் தைரியம் வரவில்லை; ஏனென்றால், அவர்தான் தங்கள் எஜமான் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. **13** இயேசு வந்து ரொட்டியை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார், அதேபோல் மீனையும் கொடுத்தார்.

21:5 *வே.வா., “மீன் ஏதாவது.” **21:8** *நே.மொ., “200 முழம்.” இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 20
a யோவா 21:25
b யோவா 3:15, யோவா 5:24, 1பே 1:8, 9, 1யோ 5:13

அதி. 21
c யோவா 11:16, யோவா 20:24
d யோவா 1:45
e மத் 4:21
f லூ 5:4, 5
g லூ 24:15, 16, யோவா 20: 11, 14
h லூ 5:4, 6
i யோவா 13:23, யோவா 19:26, யோவா 20:2

14 இயேசு உயிரோடு எழுப்பப்பட்ட பின்பு தன்னுடைய சீஷர்கள் முன்
னால் தோன்றியது இது மூன்றாவது தடவை.[a]

15 அவர்கள் சாப்பிட்டு முடித்த பின்பு சீமோன் பேதுருவிடம் இயேசு,
“யோவானின் மகனான சீமோனே, இவற்றைவிட என்மேல் உனக்கு அதிக
அன்பு இருக்கிறதா?” என்று கேட்டார். அதற்கு அவர், “ஆமாம், எஜ
மானே, உங்கள்மேல் எனக்குப் பாசம் இருப்பது உங்களுக்கே தெரியும்”
என்று சொன்னார். “அப்படியென்றால், என் ஆட்டுக்குட்டிகளுக்கு நீ உணவு
கொடுக்க வேண்டும்”[b] என்று சொன்னார். **16** பின்பு இரண்டாவது தடவை
யாக, “யோவானின் மகனான சீமோனே, என்மேல் உனக்கு அன்பு இருக்கி
றதா?” என்று கேட்டார். அதற்கு அவர், “ஆமாம், எஜமானே, உங்கள்மேல்
எனக்குப் பாசம் இருக்கிறது என்று உங்களுக்கே தெரியும்” என்று சொன்
னார். “அப்படியென்றால், என் ஆட்டுக்குட்டிகளை நீ மேய்க்க வேண்டும்”[c]
என்று சொன்னார். **17** பின்பு மூன்றாவது தடவையாக, “யோவானின் மக
னான சீமோனே, என்மேல் உனக்குப் பாசம் இருக்கிறதா?” என்று கேட்டார்.
இப்படி மூன்றாவது தடவையாக, “என்மேல் உனக்குப் பாசம் இருக்கிறதா?”
என்று அவர் கேட்டதால் பேதுரு துக்கப்பட்டு, “எஜமானே, உங்களுக்கு எல்
லாமே தெரியும். உங்கள்மேல் எனக்குப் பாசம் இருப்பதும் தெரியும்”
என்று சொன்னார். அப்போது இயேசு, “என் ஆட்டுக்குட்டிகளுக்கு நீ உணவு
கொடுக்க வேண்டும்.[d] **18** உண்மையாகவே உண்மையாகவே உனக்குச்
சொல்கிறேன், நீ இளைஞனாக இருந்தபோது நீயே உடை உடுத்திக்கொண்டு
விரும்பிய இடங்களுக்குப் போனாய். ஆனால், வயதாகும்போது நீ உன்
கைகளை நீட்டுவாய், வேறொருவன் உனக்கு உடை உடுத்தி நீ விரும்பாத
இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்” என்று சொன்னார். **19** பேதுரு
எப்படி மரணமடைந்து கடவுளுக்கு மகிமை சேர்ப்பார் என்பதைச் சுட்டிக்
காட்டவே அவர் அப்படிச் சொன்னார். அப்படிச் சொல்லிவிட்டு, “நீ என்
னைத் தொடர்ந்து பின்பற்றி வா”[e] என்று சொன்னார்.

20 பேதுரு திரும்பிப் பார்த்தபோது, இயேசுவின் அன்புச் சீஷர்[f] பின்
னால் நடந்து வருவதைப் பார்த்தார்; சாயங்கால உணவு சாப்பிட்ட சமயத்
தில் அவருடைய நெஞ்சில் சாய்ந்துகொண்டு, “எஜமானே, உங்களைக் காட்
டிக்கொடுப்பவன் யார்?” என்று கேட்டது அந்தச் சீஷர்தான். **21** பேதுரு
அவரைப் பார்த்ததும் இயேசுவிடம், “எஜமானே, இவனுக்கு என்ன நடக்
கும்?” என்று கேட்டார். **22** அதற்கு இயேசு, “நான் வரும்வரை இவன்
உயிரோடிருக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம் என்றால், உனக்
கென்ன? நீ என்னைத் தொடர்ந்து பின்பற்றி வா” என்று சொன்னார்.
23 அதனால், அந்தச் சீஷர் இறந்துபோக மாட்டார் என்ற பேச்சு சகோத
ரர்கள் மத்தியில் பரவியது. ஆனால், அவர் இறந்துபோக மாட்டார் என்று
இயேசு சொல்லவில்லை. மாறாக, “நான் வரும்வரை இவன் உயிரோடிருக்க
வேண்டுமென்பது என்னுடைய விருப்பம் என்றால், உனக்கென்ன?” என்று
தான் சொன்னார்.

24 அந்தச் சீஷர்தான்[g] இவற்றைப் பற்றிச் சாட்சி கொடுத்து இவற்றை
எழுதினார்; அவர் கொடுக்கும் சாட்சி உண்மை என்று நமக்குத் தெரியும்.

25 இயேசு இன்னும் நிறைய காரியங்களைச் செய்தார். அவை ஒவ்
வொன்றையும் எழுதினால், எழுதப்படும் சுருள்களை உலகமே கொள்ளாது
என்று நினைக்கிறேன்.[h]

அதி. 21

a யோவா 20:19, 26

b லூ 22:32
அப் 20:28
1பே 5:2, 3

c அப் 1:15
எபி 13:20
1பே 2:25

d யோவா 10:14, 15

e மத் 19:28
யோவா 12:26
வெளி 14:4

f யோவா 13:23
யோவா 20:2

g யோவா 13:23
யோவா 19:26
யோவா 20:2
யோவா 21:7

h யோவா 20:30, 31

அப்போஸ்தலரின் செயல்கள்

முக்கியக் குறிப்புகள்

1 தெயோப்பிலுவுக்கு எழுதப்படுகிறது (1-5)
பூமியின் எல்லைகள் வரையிலும் சாட்சிகள் (6-8)
இயேசு பரலோகத்துக்குப் போகிறார் (9-11)
சீஷர்கள் ஒருமனதாகக் கூடிவருகிறார்கள் (12-14)
யூதாசுக்குப் பதிலாக மத்தியா தேர்ந்தெடுக்கப்படுகிறார் (15-26)

2 பெந்தெகொஸ்தே நாளில் கடவுளுடைய சக்தி பொழியப்படுகிறது (1-13)
பேதுருவின் பேச்சு (14-36)
பேதுருவின் பேச்சைக் கேட்டு கூட்டத்தார் செயல்படுகிறார்கள் (37-41)
3,000 பேர் ஞானஸ்நானம் எடுக்கிறார்கள் (41)
சீஷர்கள் ஒன்றுகூடியிருக்கிறார்கள் (42-47)

3 கால் ஊனமான பிச்சைக்காரனை பேதுரு குணமாக்குகிறார் (1-10)
சாலொமோன் மண்டபத்தில் பேதுரு பேசுகிறார் (11-26)
'எல்லாம் புதுப்பிக்கப்படும்' (21)
மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கதரிசி (22)

4 பேதுருவும் யோவானும் விசாரிக்கப்படுகிறார்கள் (1-4)
5,000 ஆண்கள் நம்பிக்கை வைக்கிறார்கள் (4)
நியாயசங்கத்தின் முன்னால் விசாரணை (5-22)
"பேசுவதை எங்களால் நிறுத்த முடியாது" (20)
தைரியத்துக்காக ஜெபம் (23-31)
உடைமைகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள் (32-37)

5 அனனியாவும் சப்பீராளும் (1-11)
அப்போஸ்தலர்கள் நிறைய அடையாளங்களைச் செய்கிறார்கள் (12-16)
சிறைச்சாலையில் போடப்படுகிறார்கள், விடுதலை செய்யப்படுகிறார்கள் (17-21அ)
மறுபடியும் நியாயசங்கத்துக்கு முன்னால் நிறுத்தப்படுகிறார்கள் (21ஆ-32)
"மனுஷர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்குத்தான் கீழ்ப்படிய வேண்டும்" (29)
கமாலியேலின் ஆலோசனை (33-40)
வீடு வீடாகப் பிரசங்கிக்கிறார்கள் (41, 42)

6 ஏழு ஆண்கள் முக்கிய வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் (1-7)
கடவுளை நிந்தித்ததாக ஸ்தேவான் குற்றம்சாட்டப்படுகிறார் (8-15)

7 நியாயசங்கத்தின் முன்னால் ஸ்தேவான் பேசுகிறார் (1-53)
வம்சத் தலைவர்களின் காலம் (2-16)
மோசேயின் தலைமை; இஸ்ரவேலர்களின் சிலை வணக்கம் (17-43)
மனிதர்கள் கட்டிய ஆலயங்களில் கடவுள் குடியிருப்பதில்லை (44-50)
ஸ்தேவான் கல்லெறியப்படுகிறார் (54-60)

8 சவுல் துன்புறுத்துகிறான் (1-3)
சமாரியாவில் பிலிப்புவின் ஊழியத்துக்கு நல்ல பலன் (4-13)
பேதுருவும் யோவானும் சமாரியாவுக்கு அனுப்பப்படுகிறார்கள் (14-17)
கடவுளின் சக்தியைப் பணம்கொடுத்து வாங்க சீமோன் முயற்சிக்கிறான் (18-25)
எத்தியோப்பிய அதிகாரி (26-40)

9 தமஸ்குவுக்குப் போகும் வழியில் சவுல் (1-9)
சவுலுக்கு உதவ அனனியா அனுப்பப்படுகிறார் (10-19அ)
தமஸ்குவில் இயேசுவைப் பற்றி சவுல் பிரசங்கிக்கிறார் (19ஆ-25)
எருசலேமுக்கு சவுல் போகிறார் (26-31)
ஐனேயாவை பேதுரு குணமாக்குகிறார் (32-35)
தாராள குணமுள்ள தொற்காள் உயிரோடு எழுப்பப்படுகிறாள் (36-43)

10 கொர்நேலியுவுக்குக் கிடைத்த தரிசனம் (1-8)
சுத்தமாக்கப்பட்ட விலங்குகளை பேதுரு தரிசனத்தில் பார்க்கிறார் (9-16)
கொர்நேலியுவை பேதுரு சந்திக்கிறார் (17-33)
மற்ற தேசத்து மக்களுக்கு நல்ல செய்தியை பேதுரு அறிவிக்கிறார் (34-43)
"கடவுள் பாரபட்சம் காட்டாதவர்" (34, 35)
மற்ற தேசத்து மக்களும் கடவுளின் சக்தியைப் பெற்று, ஞானஸ்நானம் எடுக்கிறார்கள் (44-48)

11 அப்போஸ்தலர்களுக்கு விஷயங்களை விவரிக்கிறார் (1-18)
சீரியா அந்தியோகியாவில் பர்னபாவும் சவுலும் (19-26)

சீஷர்கள் முதன்முதலாக கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் (26)
பஞ்சம் வரப்போவதாக அகபு முன்னறிவிக்கிறார் (27-30)

12 யாக்கோபு கொல்லப்படுகிறார்; பேதுரு சிறையில் அடைக்கப்படுகிறார் (1-5)
பேதுரு அற்புதமாக விடுதலை செய்யப்படுகிறார் (6-19)
ஏரோதுவை தேவதூதர் தாக்குகிறார் (20-25)

13 பர்னபாவும் சவுலும் மிஷனரிகளாக அனுப்பப்படுகிறார்கள் (1-3)
சீப்புரு தீவில் ஊழியம் (4-12)
பிசீதியாவில் உள்ள அந்தியோகியாவில் பவுல் பேசுகிறார் (13-41)
மற்ற தேசத்து மக்களிடம் போகச் சொல்லி ஒரு தீர்க்கதரிசனத்தில் கட்டளை (42-52)

14 இக்கோனியாவில் வளர்ச்சியும் எதிர்ப்பும் (1-7)
லீஸ்திராவில் தெய்வங்கள் என்று தவறாகக் கருதப்படுகிறார்கள் (8-18)
கல்லெறியப்பட்டாலும் பவுல் பிழைத்துக்கொள்கிறார் (19, 20)
சபைகளைப் பலப்படுத்துதல் (21-23)
சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்குத் திரும்புதல் (24-28)

15 விருத்தசேதனத்தைப் பற்றி அந்தியோகியாவில் விவாதம் (1, 2)
பிரச்சினை பற்றிப் பேச எருசலேமுக்குப் போகிறார்கள் (3-5)
மூப்பர்களும் அப்போஸ்தலர்களும் ஒன்றுகூடுகிறார்கள் (6-21)
ஆளும் குழுவின் கடிதம் (22-29)
இரத்தத்துக்கு விலகியிருங்கள் (28, 29)
கடிதத்தால் சபைகள் உற்சாகம் பெறுகின்றன (30-35)
பவுலும் பர்னபாவும் பிரிந்துபோகிறார்கள் (36-41)

16 தீமோத்தேயுவை பவுல் தேர்ந்தெடுக்கிறார் (1-5)
மக்கெதோனியாவைச் சேர்ந்த ஒருவனைப் பற்றிய தரிசனம் (6-10)
பிலிப்பியில் லீதியாள் ஞானஸ்நானம் எடுக்கிறாள் (11-15)
பவுலும் சீலாவும் சிறையில் தள்ளப்படுகிறார்கள் (16-24)
சிறைக்காவலரும் அவருடைய வீட்டில் இருப்பவர்களும் ஞானஸ்நானம் எடுக்கிறார்கள் (25-34)
அதிகாரிகள் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று பவுல் சொல்கிறார் (35-40)

17 பவுலும் சீலாவும் தெசலோனிக்கேயில் (1-9)
பவுலும் சீலாவும் பெரோயாவில் (10-15)
அத்தேனேயில் பவுல் (16-22அ)
அரியோபாகுவில் பவுல் கொடுக்கும் பேச்சு (22ஆ-34)

18 கொரிந்துவில் பவுலின் ஊழியம் (1-17)
சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்குத் திரும்புதல் (18-22)
பவுல் கலாத்தியாவுக்கும் பிரிகியாவுக்கும் போகிறார் (23)
திறமையாகப் பேசுகிற அப்பொல்லோவுக்கு உதவி (24-28)

19 எபேசுவில் பவுல்; சிலர் மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்கிறார்கள் (1-7)
பவுல் கற்பிக்கிறார் (8-10)
பேய்களின் தொல்லைகள் மத்தியிலும் வெற்றி (11-20)
எபேசுவில் கலவரம் (21-41)

20 மக்கெதோனியாவுக்கும் கிரேக்கு தேசத்துக்கும் பவுல் போகிறார் (1-6)
துரோவாவில் ஐத்திகு உயிரோடு எழுப்பப்படுகிறான் (7-12)
துரோவாவிலிருந்து மிலேத்துவுக்கு (13-16)
எபேசு சபை மூப்பர்களை பவுல் சந்திக்கிறார் (17-38)
வீடு வீடாகக் கற்பிக்கிறார் (20)
“கொடுப்பதில்தான் அதிக சந்தோஷம்” (35)

21 எருசலேமுக்குப் போகும் வழியில் (1-14)
எருசலேமுக்குப் போய்ச் சேருதல் (15-19)
மூப்பர்களின் ஆலோசனைப்படி பவுல் செய்கிறார் (20-26)
ஆலயத்தில் கலகம்; பவுல் கைது செய்யப்படுகிறார் (27-36)
கூட்டத்தாரிடம் பேச பவுலுக்கு அனுமதி கிடைக்கிறது (37-40)

22 கூட்டத்தார் முன்னால் பவுலின் வாதம் (1-21)
ரோமக் குடியுரிமையைப் பவுல் பயன்படுத்துகிறார் (22-29)
நியாயசங்கத்தார் கூடிவருகிறார்கள் (30)

23 நியாயசங்கத்துக்கு முன்னால் பவுல் பேசுகிறார் (1-10)
பவுலை எஜமான் தைரியப்படுத்துகிறார் (11)
பவுலைக் கொல்ல சதித்திட்டம் (12-22)
செசரியாவுக்குப் பவுல் அனுப்பப்படுகிறார் (23-35)

24 பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டு (1-9)
பேலிக்ஸ் முன்னால் பவுல் வாதாடுகிறார் (10-21)
பவுலின் வழக்கு இரண்டு வருஷங்களுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது (22-27)

25 பெஸ்துவுக்கு முன்னால் பவுல் விசாரிக்கப்படுகிறார் (1-12)
"ரோம அரசனிடம் நான் மேல்முறையீடு செய்கிறேன்!" (11)
அகிரிப்பா ராஜாவிடம் பெஸ்து ஆலோசனை கேட்கிறார் (13-22)
அகிரிப்பா முன்னால் பவுல் (23-27)

26 அகிரிப்பா முன்னால் பவுல் பேசுகிறார் (1-11)
கிறிஸ்தவராக மாறியதைப் பற்றி பவுல் விளக்குகிறார் (12-23)
பெஸ்துவும் அகிரிப்பாவும் பதில் சொல்கிறார்கள் (24-32)

27 பவுல் ரோமுக்குக் கப்பலில் பயணம் செய்கிறார் (1-12)
கப்பலைப் புயல் தாக்குகிறது (13-38)
கப்பற்சேதம் (39-44)

28 மெலித்தாவில் கரை சேருகிறார்கள் (1-6)
புபிலியுவின் அப்பா குணமாகிறார் (7-10)
ரோமுக்குப் பயணம் (11-16)
ரோமிலுள்ள யூதர்களிடம் பவுல் பேசுகிறார் (17-29)
இரண்டு வருஷங்களுக்கு பவுல் தைரியமாகப் பிரசங்கிக்கிறார் (30, 31)

அதி. 1
a லூ 1:3; லூ 3:23
b 1தீ 3:16
c யோவா 15:16
d லூ 24:27
e மத் 28:9; யோவா 20:19; 1கொ 15:4-7
f லூ 24:49
g யோவா 14:16, 17; அப் 2:33
h யோவே 2:28; மத் 3:11; மாற் 1:8
i லூ 19:11; லூ 24:21
j தானி 2:20, 21; மத் 24:36
k அப் 4:33
l அப் 5:27, 28
m அப் 8:14
n கொலோ 1:23
o ஏசா 43:10; லூ 24:48; யோவா 15:26, 27
p லூ 24:51; யோவா 6:62

1 அன்புள்ள தெயோப்பிலுவே, இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்
ளப்பட்ட நாள்வரை செய்த எல்லாவற்றையும் கற்பித்த எல்லாவற்றை
யும் பற்றி என்னுடைய முதல் புத்தகத்தில் எழுதியிருந்தேன்.[a] **2** அவர்
எடுத்துக்கொள்ளப்படுவதற்கு[b] முன்பு, தான் தேர்ந்தெடுத்திருந்த அப்
போஸ்தலர்களுக்குக்[c] கடவுளுடைய சக்தியினால் அறிவுரைகள் கொடுத்
தார். **3** பாடுகள் பட்டு இறந்த பின்பு, 40 நாட்களாக அவர்களுக்குத்
தோன்றி, கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லிவந்தார்;[d] தான்
உயிரோடு இருப்பதை நம்பகமான பல ஆதாரங்கள் மூலம் அவர்களுக்குக்
காட்டினார்.[e] **4** அவர்களைச் சந்தித்தபோது, "எருசலேமைவிட்டுப் போகா
தீர்கள்;[f] தகப்பனின் வாக்குறுதியைப் பற்றி உங்களுக்கு ஏற்கெனவே
சொல்லியிருக்கிறேன், அந்த வாக்குறுதி நிறைவேறும்வரை காத்திருங்கள்"[g]
என்று கட்டளை கொடுத்தார். **5** "யோவான் தண்ணீரால் ஞானஸ்நானம்
கொடுத்தார்; நீங்களோ இன்னும் சில நாட்களில் கடவுளுடைய சக்தியால்
ஞானஸ்நானம் பெறுவீர்கள்"[h] என்றும் சொன்னார்.

6 அவர்கள் மறுபடியும் ஒன்றாகக் கூடியிருந்தபோது, "எஜமானே, இந்
தச் சமயத்திலா இஸ்ரவேலுக்கு அரசாங்கத்தை மீட்டுத் தரப்போகிறீர்கள்?"[i]
என்று அவரிடம் கேட்டார்கள். **7** அதற்கு அவர், "தகப்பனின் கட்டுப்பாட்
டிலுள்ள* காலங்களையோ வேளைகளையோ#[j] நீங்கள் தெரிந்துகொள்ள
வேண்டிய அவசியம் இல்லை. **8** ஆனால், கடவுளுடைய சக்தி உங்
கள்மேல் வரும்போது நீங்கள் வல்லமை பெற்று,[k] எருசலேமிலும்[l] யூதேயா
முழுவதிலும் சமாரியாவிலும்[m] பூமியின் எல்லைகள் வரையிலும்[n] எனக்
குச் சாட்சிகளாக இருப்பீர்கள்"[o] என்று சொன்னார். **9** அவர் இதையெல்
லாம் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தபோதே மேலே
எடுத்துக்கொள்ளப்பட்டார்; ஒரு மேகம் அவர்களுடைய பார்வையிலிருந்து
அவரை மறைத்தது.[p] **10** அவர் மேலே போய்க்கொண்டிருந்தபோது,

1:7 * வே.வா., "அதிகாரத்திலுள்ள." # வே.வா., "குறித்த நாட்களையோ."

அவர்கள் வானத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது,
வெள்ளை உடை அணிந்திருந்த இரண்டு பேர்[a] திடீரென்று அவர்கள் பக்
கத்தில் வந்து நின்று, **11** “கலிலேயர்களே, ஏன் வானத்தையே பார்த்துக்
கொண்டிருக்கிறீர்கள்? உங்களிடமிருந்து வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்
பட்ட இயேசு, எந்த விதத்தில் வானத்துக்குப் போவதைப் பார்த்தீர்களோ
அந்த விதத்திலேயே வருவார்” என்று சொன்னார்கள்.

12 பின்பு, ஒலிவ மலை என்று அழைக்கப்பட்ட மலையிலிருந்து அவர்
கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்;[b] அந்த மலை எருசலேமுக்குப்
பக்கத்தில், ஓர் ஓய்வுநாள் பயணதூரத்தில்தான்* இருந்தது. **13** பேதுரு,
யோவான், யாக்கோபு, அந்திரேயா, பிலிப்பு, தோமா, பர்த்தொலொமேயு,
மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, பக்திவைராக்கியமுள்ளவன்
என்று அழைக்கப்பட்ட சீமோன், யாக்கோபின் மகன் யூதாஸ் ஆகிய அவர்
கள் எருசலேமுக்கு வந்து, தாங்கள் தங்கியிருந்த வீட்டின் மாடி அறைக்குப்
போனார்கள்.[c] **14** சில பெண்களோடும்[d] இயேசுவின் சகோதரர்களோடும்
அவருடைய அம்மா மரியாளோடும்[e] அவர்கள் எல்லாரும் விடாமல் ஒரு
மனதோடு ஜெபம் செய்துகொண்டிருந்தார்கள்.

15 அப்படி ஒருநாள் சுமார் 120 பேர் கூடியிருந்தபோது, பேதுரு அவர்
கள் நடுவில் எழுந்து நின்று, **16** “சகோதரர்களே, இயேசுவைக் கைது
செய்தவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த யூதாசைப்[f] பற்றிக் கடவுளுடைய
சக்தி தாவீதின் மூலம் முன்னதாகவே சொன்ன வசனம் நிறைவேற வேண்
டியிருந்தது.[g] **17** அவன் எங்களில் ஒருவனாக இருந்தான்,[h] எங்களோடு
சேர்ந்து இந்த ஊழியத்தைச் செய்துவந்தான். **18** ஆனால், அவன் செய்த
அநீதிக்குக் கிடைத்த கூலியை[i] வைத்து ஒரு நிலத்தை வாங்கினான். பின்பு
தலைகுப்புற விழுந்ததால் அவனுடைய வயிறு வெடித்து, குடலெல்லாம் சித
றிப்போனது.[j] **19** இந்த விஷயம் எருசலேமில் குடியிருந்த எல்லாருக்கும்
தெரியவந்தது. அதனால், அந்த நிலத்துக்கு அவர்களுடைய மொழியில் *அக்
கெல்தமா* என்று பெயர் வைத்தார்கள். இதற்கு “இரத்த நிலம்” என்று அர்த்
தம். **20** சங்கீத புத்தகத்தில், ‘அவனுடைய வீடு வெறிச்சோடிப் போகட்டும்,
அது ஆளில்லாமல் கிடக்கட்டும்’[k] என்றும், ‘அவனுடைய கண்காணிக்கும்
பொறுப்பை வேறொருவன் எடுத்துக்கொள்ளட்டும்’ என்றும் எழுதப்பட்டி
ருக்கிறது.[l] **21** அதனால், அவனுக்குப் பதிலாக வேறொருவரை இப்போது
தேர்ந்தெடுக்க வேண்டும். அவர், எஜமானாகிய இயேசு எங்களோடு ஊழி
யம் செய்த காலம் முழுவதும் எங்களோடு இருந்திருக்க வேண்டும்.
22 அதாவது, யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் பெற்ற[m] நாள்முதல்
மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரை[n] எங்களோடு இருந்திருக்க
வேண்டும்; எங்களோடு சேர்ந்து அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி
யாகவும் இருந்திருக்க வேண்டும்”[o] என்று சொன்னார்.

23 அப்போது, சீஷர்கள் இரண்டு பேருடைய பெயர்களைக் குறிப்
பிட்டார்கள். ஒருவர் பர்சபா என்று அழைக்கப்பட்ட யோசேப்பு; இவ
ருக்கு யுஸ்து என்ற பெயரும் உண்டு. இன்னொருவர் மத்தியா. **24** பின்பு
அவர்கள் ஜெபம் செய்து, “யெகோவாவே,* எல்லா இதயங்களையும்

1:12 *அதாவது, “சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில்தான்.” ஓய்வு நாளன்று ஒரு யூதர் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்ட தூரம் இது. **1:24** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 1
a மத் 28:2, 3
b லூ 24:52
c மத் 10:2-4 மாற் 3:16-19
d லூ 23:49
e மத் 13:55 யோவா 7:5 கலா 1:19
f லூ 22:47 யோவா 18:3
g சங் 41:9 சங் 55:12 யோவா 13:18
h மத் 10:2, 4 லூ 6:12-16 யோவா 6:70, 71
i சக 11:12 மத் 26:14, 15
j மத் 27:5-8
k சங் 69:25
l சங் 109:8
m மத் 3:13
n லூ 24:51 அப் 1:9
o மத் 28:5, 6 மாற் 16:6

அறிந்தவரே,[a] இந்த ஊழியத்தையும் அப்போஸ்தலப் பணியையும் விட்டு
விட்டுத் தன் போக்கில் போன யூதாசுக்குப் பதிலாக,[b] **25** இந்த இரண்டு
பேரில் யாரைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்பதை எங்களுக்குக் காட்டுங்
கள்" என்று சொன்னார்கள். **26** பின்பு, அவர்களுடைய பெயர்களில் குலுக்
கல் போட்டார்கள்.[c] அது மத்தியாவின் பெயருக்கு விழுந்தது. அதனால்,
11 அப்போஸ்தலர்களோடு அவரும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

2 பெந்தெகொஸ்தே பண்டிகை[d] நாளில், அவர்கள் எல்லாரும் ஒரே
இடத்தில் கூடியிருந்தார்கள். **2** அப்போது, திடீரென்று பலத்த காற்று
வீசுவது போன்ற சத்தம் வானத்திலிருந்து வந்தது; அந்தச் சத்தம் அவர்கள்
உட்கார்ந்திருந்த வீடு முழுவதும் கேட்டது.[e] **3** அதோடு, நெருப்பு
போன்ற நாவுகளை அவர்கள் பார்த்தார்கள்; அவை ஒவ்வொன்றும் பிரிந்
துபோய் அங்கிருந்த ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தன. **4** அவர்கள் எல்
லாரும் கடவுளுடைய சக்தியால் நிரப்பப்பட்டார்கள்;[f] அந்தச் சக்தியின் உத
வியால் வெவ்வேறு மொழிகளில்* பேச ஆரம்பித்தார்கள்.[g]

5 அந்தச் சமயத்தில், உலகத்தில் இருந்த எல்லா தேசங்களிலிருந்தும்
வந்திருந்த பக்தியுள்ள யூதர்கள் எருசலேமில் தங்கியிருந்தார்கள்.[h]
6 அந்தச் சத்தம் வந்தபோது மக்கள் கூட்டமாகக் கூடிவந்து, தங்களு
டைய மொழிகளில் அவர்கள் பேசுவதைக் கேட்டுத் திகைத்துப்போனார்கள்.
7 எல்லாருமே மிகவும் ஆச்சரியப்பட்டு, "இங்கே பாருங்கள்! பேசிக்கொண்
டிருக்கிற இவர்கள் எல்லாரும் கலிலேயர்கள்தானே?[i] **8** அப்படியிருக்
கும்போது, இவர்கள் நம்முடைய சொந்த மொழிகளில்* பேசுவதைக்
கேட்கிறோமே, அது எப்படி? **9** பார்த்தர்களும் மேதியர்களும்[j] ஏலாமியர்
களும்,[k] மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து,
ஆசிய மாகாணம்,[l] **10** பிரிகியா, பம்பிலியா, எகிப்து ஆகிய இடங்களில்
குடியிருக்கிறவர்களும், சிரேனே நகரத்துக்குப் பக்கத்திலுள்ள லீபியாவின்
பகுதிகளில் குடியிருக்கிறவர்களும், ரோமிலிருந்து வந்து தங்கியிருக்கிற
வர்களுமான யூதர்களும் யூத மதத்துக்கு மாறியவர்களும்,[m] **11** கிரேத்தர்
களும், அரேபியர்களுமாகிய நாம், கடவுளுடைய மகத்தான செயல்க
ளைப் பற்றி இவர்கள் நம்முடைய சொந்த மொழிகளில் பேசுவதைக்
கேட்கிறோமே!" என்று சொல்லிக்கொண்டார்கள். **12** அவர்கள் எல்லா
ரும், "இதெல்லாம் என்ன?" என்று குழப்பத்தோடும் பிரமிப்போடும் ஒரு
வரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள். **13** வேறு சிலரோ, "இவர்கள் தித்
திப்பான* மதுவைக் குடித்து வெறித்திருக்கிறார்கள்" என்று சொல்லிக் கேலி
செய்தார்கள்.

14 ஆனால், பேதுரு மற்ற பதினொரு அப்போஸ்தலர்களோடு[n]
எழுந்து நின்று, உரத்த குரலில், "யூதேய மக்களே, எருசலேமில் குடியி
ருக்கிறவர்களே, நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். **15** நீங்கள்
நினைப்பது போல இவர்கள் குடிபோதையில் இல்லை. ஏனென்றால், இது
மூன்றாம் மணிநேரம்.* **16** யோவேல் தீர்க்கதரிசி மூலம் இப்படிச் சொல்
லப்பட்டதுதான் இப்போது நிறைவேறியிருக்கிறது: **17** 'கடவுள் சொல்வது
என்னவென்றால், "கடைசி நாட்களில், பலதரப்பட்ட மக்கள்மேல் என் சக்தி
யைப் பொழிவேன், உங்களுடைய மகன்களும் மகள்களும் தீர்க்கதரிசனம்

2:4 *வே.வா., "அன்னிய பாஷைகளில்." **2:8** *வே.வா., "தாய்மொழிகளில்." **2:13** *வே.வா., "புதிய." **2:15** *அதாவது, "காலை சுமார் 9 மணி."

அதி. 1
a 1சா 16:7
1நா 28:9
எரே 11:20
b யோவா 6:70
c நீதி 16:33

அதி. 2
d லேவி 23:16
உபா 16:9-11
e அப் 4:31
f மாற் 1:8
யோவா 14:26
g அப் 10:45, 46
1கொ 12:8, 10
h யாத் 23:17
i மாற் 14:70
அப் 1:11
j 2ரா 17:6
k தானி 8:1, 2
l 1பே 1:1
m யாத் 12:48
n அப் 1:13

சொல்வார்கள்; உங்கள் இளைஞர்கள் தரிசனங்களைப் பார்ப்பார்கள், உங்
கள் முதியவர்கள் கனவுகளைக் காண்பார்கள்.[a] **18** அந்த நாட்களில்,
எனக்கு ஊழியம் செய்கிற ஆண்கள்மேலும் பெண்கள்மேலும் என் சக்தி
யைப் பொழிவேன்; அப்போது அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்.[b]
19 மேலே வானத்தில் அதிசயங்களையும் கீழே பூமியில் அடையாளங்க
ளையும் நான் செய்து காட்டுவேன். எங்கு பார்த்தாலும் இரத்தமாகவும்,
நெருப்பாகவும், புகை மண்டலமாகவும் இருக்கும். **20** யெகோவாவின்*
மகத்தான மகா நாள் வருவதற்குமுன் சூரியன் இருண்டுவிடும், சந்திரன்
இரத்த நிறமாகிவிடும். **21** யெகோவாவின்* பெயரைச் சொல்லி வேண்
டிக்கொள்கிற ஒவ்வொருவரும் மீட்புப் பெறுவார்கள்."'[c]

22 இஸ்ரவேல் மக்களே, நான் சொல்வதைக் கேளுங்கள். நாசரேத்
தூர் இயேசுவின் மூலம் கடவுள் உங்கள் நடுவில் வல்லமையான செயல்க
ளையும் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து, அவர் யார்
என்பதை உங்களுக்கு வெளிப்படையாகக் காட்டினார்.[d] இது உங்களுக்கே
தெரியும். **23** கடவுளுடைய மாறாத நோக்கத்தின்படியும்* முன்னறிவின்ப
டியும்[e] உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அவரைத்தான் நீங்கள் அக்கிரமக்கா
ரர்களின் கையால் மரக் கம்பத்தில் அறைந்து கொன்றீர்கள்.[f] **24** ஆனால்,
கடவுள் அவரை மரணத்தின் பிடியிலிருந்து* காப்பாற்றி உயிரோடு எழுப்பி
னார்;[g] மரணத்தால் அவரைத் தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை.[h]
25 அவர் இப்படிச் சொல்வதாக தாவீது குறிப்பிட்டிருக்கிறார்: 'யெகோவா
வை* எப்போதும் என் கண் முன்னால் வைத்திருக்கிறேன்; அவர் என் வலது
பக்கத்தில் இருப்பதால் என்னை யாரும் அசைக்க முடியாது. **26** அத
னால், என் இதயம் சந்தோஷத்தில் பூரிக்கிறது, என் நாவு மகிழ்ச்சி
பொங்கப் பேசுகிறது, நான் நம்பிக்கையோடு வாழ்வேன்; **27** ஏனென்றால்,
நீங்கள் என்னைக் கல்லறையில்* விட்டுவிட மாட்டீர்கள்; உங்களுக்கு உண்
மையாக# இருப்பவரின் உடல் அழிந்துபோக விடமாட்டீர்கள்.[i] **28** வாழ்
வின் வழிகளை எனக்குக் காட்டியிருக்கிறீர்கள், உங்களுடைய சன்னிதியில்
என்னை மிகுந்த சந்தோஷத்தால் நிரப்புவீர்கள்.'[j]

29 சகோதரர்களே, வம்சத் தலைவரான தாவீதைப் பற்றி உங்களிடம் எந்
தத் தயக்கமும் இல்லாமல் என்னால் பேச முடியும்; அவர் இறந்த பின்பு
அடக்கம் செய்யப்பட்டார்.[k] அவருடைய சமாதி இன்றுவரை நம் மத்தியில்
தான் இருக்கிறது. **30** அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்ததாலும், கடவுள்
அவரிடம், 'உன்னுடைய சந்ததியில் வரும் ஒருவரை உன் சிம்மாசனத்
தில் உட்கார வைப்பேன்'[l] என்று ஆணையிட்டுக் கொடுத்ததை அறிந்தி
ருந்ததாலும், **31** கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து முன்கூட்டியே
தெரிந்து, கிறிஸ்து கல்லறையில்* விட்டுவிடப்பட மாட்டார் என்றும், அவ
ருடைய உடல் அழிந்துபோகாது[m] என்றும் சொல்லியிருந்தார். **32** இந்த
இயேசுவைத்தான் கடவுள் உயிரோடு எழுப்பினார்; இதற்கு நாங்கள் எல்
லாரும் சாட்சிகள்.[n] **33** தகப்பனாகிய கடவுளுடைய வலது பக்கத்துக்கு
அவர் உயர்த்தப்பட்டு,[o] வாக்குறுதி கொடுக்கப்பட்டபடி கடவுளுடைய சக்
தியைப் பெற்று[p] இப்போது அதைப் பொழிந்திருக்கிறார்; இதைத்தான்

2:20, 21, 25 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:23** * வே.வா., "தீர்மானத்தின்படியும்." **2:24** * அல்லது, "கயிறுகளிலிருந்து." **2:27, 31** * மூலமொழியில், "ஹேடீசில்." சொல் பட்டியலைப் பாருங்கள். **2:27** # வே.வா., "பற்றுமாறாமல்."

அதி. 2
a யோவே 2:28
b 1கொ 12:8, 10
c யோவே 2: 28-32; ரோ 10:13
d யோவா 5:36; யோவா 14:10
e யோவா 19: 10, 11; அப் 4:27, 28; 1பே 1:20
f லூ 23:33; அப் 5:30; அப் 7:52
g அப் 3:15; ரோ 4:24; 1கொ 6:14; கொலோ 2:12; எபி 13:20
h யோவா 10: 17, 18
i அப் 13:35
j சங் 16:8-11
k 1ரா 2:10
l 2சா 7:12, 13; சங் 89:3, 4; சங் 132:11
m சங் 16:10
n லூ 24:46-48; அப் 1:8; அப் 3:15
o ரோ 8:34; பிலி 2:9-11; 1பே 3:22
p யோவா 14:26

நீங்கள் பார்க்கிறீர்கள், கேட்கிறீர்கள். **34** உண்மையில், தாவீது பரலோகத்
துக்கு ஏறிப்போகவில்லை; அவரே இப்படிச் சொன்னார்: ‘யெகோவா*
என் எஜமானிடம், **35** “நான் உன் எதிரிகளை உனக்குக் கால்மணையாக்
கிப் போடும்வரை என் வலது பக்கத்தில் உட்கார்ந்திரு”[a] என்று சொன்னார்.’
36 அதனால், நீங்கள் மரக் கம்பத்தில் அறைந்து கொன்ற[b] இந்த இயேசு
வையே எஜமானாகவும்[c] கிறிஸ்துவாகவும் கடவுள் நியமித்தார் என்பதை
இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளட்டும்”
என்று சொன்னார்.

37 இந்த வார்த்தைகளெல்லாம் அங்கே இருந்தவர்களுடைய உள்ளத்
தைத் துளைத்தன; அதனால், “சகோதரர்களே, நாங்கள் இப்போது
என்ன செய்ய வேண்டும்?” என்று பேதுருவிடமும் மற்ற அப்போஸ்தலர்
களிடமும் கேட்டார்கள். **38** அதற்கு பேதுரு, “மனம் திருந்துங்கள்,[d] உங்
கள் பாவங்கள் மன்னிக்கப்பட[e] வேண்டுமென்றால் நீங்கள் ஒவ்வொருவ
ரும் இயேசு கிறிஸ்துவின் பெயரில் ஞானஸ்நானம் எடுங்கள்;[f] அப்போது
கடவுளுடைய சக்தியை இலவச அன்பளிப்பாகப் பெறுவீர்கள். **39** இந்த
வாக்குறுதி[g] உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், ரொம்பத் தூரத்திலி
ருக்கிற மற்ற எல்லாருக்கும், நம் கடவுளாகிய யெகோவா* அழைக்கிற அத்
தனை பேருக்கும் கொடுக்கப்படுகிறது”[h] என்று சொன்னார். **40** இதைப்
பற்றி இன்னும் நிறைய சொல்லி முழுமையாகச் சாட்சி கொடுத்து,
“சீர்கெட்ட இந்தத் தலைமுறைக்கு[i] வரும் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்
ளுங்கள்” என்று அறிவுரை சொல்லிக்கொண்டே இருந்தார். **41** அவர்
சொன்னதைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் எடுத்
தார்கள்;[j] அன்று சுமார் 3,000 பேர் அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள்.[k]
42 அப்போஸ்தலர்கள் சொல்லிக்கொடுத்த விஷயங்களுக்கு அவர்கள்
முழு கவனம் செலுத்திவந்தார்கள், தவறாமல் ஒன்றுகூடி வந்தார்கள்,* ஒன்
றாகச் சேர்ந்து சாப்பிட்டார்கள்,[l] தொடர்ந்து ஜெபம் செய்தார்கள்.[m]

43 அப்போஸ்தலர்கள் மூலம் நிறைய அற்புதங்களும் அடையாளங்க
ளும் நடக்க ஆரம்பித்தன;[n] எல்லாருக்கும் பயபக்தி ஏற்பட்டது. **44** இயே
சுவின் சீஷர்களாக ஆகியிருந்த எல்லாரும் ஒன்றாகக் கூடியிருந்தார்கள், தங்
களிடமிருந்த எல்லாவற்றையும் பொதுவாக வைத்துப் பயன்படுத்தினார்கள்.
45 தங்கள் உடைமைகளையும் சொத்துகளையும் விற்று,[o] அந்தப் பணத்தை
அவரவருடைய தேவைக்கு ஏற்றபடி எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்
கள்.[p] **46** அவர்கள் ஒரே நோக்கத்தோடு ஆலயத்தில் தினமும் கூடி
வந்து, வெவ்வேறு வீடுகளில் உணவு சாப்பிட்டு, தங்களிடம் இருந்த
உணவை மிகுந்த சந்தோஷத்தோடும் கள்ளம்கபடமில்லாத உள்ளத்தோ
டும் பகிர்ந்துகொண்டு, **47** கடவுளைப் புகழ்ந்து வந்தார்கள், எல்லா மனிதர்
களுடைய பிரியத்தையும் பெற்று வந்தார்கள். மீட்புப் பெறவிருந்தவர்களை
யெகோவா* தினமும் அவர்களோடு சேர்த்துக்கொண்டே வந்தார்.[q]

3 ஜெப நேரமாகிய ஒன்பதாம் மணிநேரத்தில்,* பேதுருவும் யோவானும்
ஆலயத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். **2** பிறவியிலேயே கால்
ஊனமாக இருந்த ஒருவனைச் சிலர் தினமும் அங்கே தூக்கிக்கொண்டு

2:34, 39, 47 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:42** *வே.வா., “தங்களிடம் இருந்த வற்றை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டார்கள்.” **3:1** *அதாவது, “மதியம் சுமார் 3 மணிக்கு.”

அதி. 2
a சங் 110:1
லூ 20:42, 43
1கொ 15:25
எபி 10:12, 13
b யோவா 19:6
c மத் 28:18
யோவா 3:35
அப் 5:31
d லூ 24:46, 47
அப் 17:30
அப் 26:20
e மத் 26:27, 28
எபே 1:7
f மத் 28:19
g யோவே 2:28
h யோவே 2:32
i உபா 32:5
சங் 78:8
j அப் 8:12
அப் 18:8
k அப் 4:4
அப் 5:14
l அப் 2:46
m அப் 1:14
n அப் 5:12
o மத் 19:21
p அப் 4:32, 34
q அப் 5:14
அப் 11:21
1கொ 3:7

வந்து, ஆலயத்துக்குள் போகிறவர்களிடம் பிச்சை கேட்பதற்காக ‘அழகு
நுழைவாசல்’ என்ற வாசலுக்குப் பக்கத்தில் உட்கார வைத்தார்கள்.
3 பேதுருவும் யோவானும் ஆலயத்துக்குள் நுழையப்போவதை அவன்
பார்த்தபோது அவர்களிடம் பிச்சை கேட்டான். **4** அப்போது பேதுருவும்
யோவானும் அவனை நேராகப் பார்த்து, “எங்களைப் பார்” என்று சொன்
னார்கள். **5** அவர்கள் ஏதாவது கொடுப்பார்கள் என்று நினைத்து அவர்க
ளையே அவன் உற்றுப் பார்த்தான். **6** அப்போது பேதுரு, “தங்கமும்
வெள்ளியும் என்னிடம் இல்லை. ஆனால், என்னிடம் இருப்பதை உனக்
குத் தருகிறேன்; நாசரேத்தூர் இயேசு கிறிஸ்துவின் பெயரில் சொல்கி
றேன், எழுந்து நட!”[a] என்று சொல்லி, **7** அவனுடைய வலது கையைப்
பிடித்துத் தூக்கிவிட்டார்;[b] உடனே அவனுடைய உள்ளங்கால்களும் கணுக்
கால்களும் பலமடைந்தன.[c] **8** அவன் துள்ளியெழுந்து நடக்க ஆரம்பித்
தான்;[d] பின்பு, துள்ளிக் குதித்துக்கொண்டு கடவுளைப் புகழ்ந்துகொண்டே
அவர்களோடு ஆலயத்துக்குள் போனான். **9** அவன் கடவுளைப் புகழ்ந்
துகொண்டு நடந்துபோவதை அங்கிருந்த எல்லா மக்களும் பார்த்தார்கள்.
10 வழக்கமாக ஆலயத்தின் ‘அழகு நுழைவாசலில்’ உட்கார்ந்துகொண்டு
பிச்சை கேட்பவன்தான்[e] அவன் என்பதைத் தெரிந்துகொண்டு, அவனுக்கு
நடந்த அற்புதத்தைப் பார்த்து மலைத்துப்போனார்கள், பிரமிப்பும் பூரிப்பும்
அடைந்தார்கள்.

11 சாலொமோன் மண்டபம்[f] என்ற இடத்தில் பேதுருவின் கையை
யும் யோவானின் கையையும் அவன் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தபோது,
அந்த மக்கள் எல்லாரும் ஆச்சரியம் தாங்காமல் அவர்களிடம் கூட்ட
மாக ஓடிவந்தார்கள். **12** பேதுரு அதைப் பார்த்தபோது, “இஸ்ரவேல் மக்
களே, ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? எங்களுடைய சொந்த சக்தி
யாலோ பக்தியாலோ இவனை நாங்கள் நடக்க வைத்ததுபோல் ஏன்
எங்களையே உற்றுப் பார்க்கிறீர்கள்? **13** நம் முன்னோர்களான ஆபிர
காம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் கடவுள்[g] தன்னுடைய ஊழிய
ரான இயேசுவை[h] மகிமைப்படுத்தியிருக்கிறார்;[i] அவரைத்தான் முன்பு நீங்
கள் எதிரிகளிடம் ஒப்படைத்தீர்கள்.[j] பிலாத்து அவரை விடுதலை செய்யத்
தீர்மானித்தபோதும் அதை ஏற்றுக்கொள்ளாமல் பிலாத்துவுக்கு முன்
னால் அவரை ஒதுக்கித்தள்ளினீர்கள். **14** பரிசுத்தமானவரும் நீதியுள்ளவ
ருமான அவரை ஒதுக்கித்தள்ளிவிட்டு, கொலைகாரனை விடுதலை செய்
யும்படி கேட்டுக்கொண்டீர்கள்.[k] **15** வாழ்வின் அதிபதியையே[l] கொலை
செய்தீர்கள். ஆனால், கடவுள் அவரை உயிரோடு எழுப்பினார்; இதற்கு
நாங்கள் சாட்சிகளாக இருக்கிறோம்.[m] **16** அவருடைய பெயர்தான், அவ
ருடைய பெயரில் நாங்கள் வைத்திருக்கிற விசுவாசம்தான், நீங்கள் பார்க்
கிற, அறிந்திருக்கிற இந்த மனுஷனின் கால்களைப் பலப்படுத்தியிருக்கிறது;
இயேசுவின் மேல் நாங்கள் வைத்திருக்கிற விசுவாசம்தான் உங்கள் எல்லா
ருக்கும் முன்னால் இவனை முழுமையாகக் குணப்படுத்தியிருக்கிறது.
17 சகோதரர்களே, உங்கள் தலைவர்களைப் போல்[n] நீங்களும் அறியா
மையால்தான் இப்படிச் செய்தீர்கள்[o] என்று எனக்குத் தெரியும். **18** தன்னு
டைய கிறிஸ்து பாடுகள் படுவார் என்று எல்லா தீர்க்கதரிசிகள் மூலமாக
வும் முன்கூட்டியே சொன்னதைத்தான் கடவுள் இப்படி நிறைவேற்றியிருக்
கிறார்.[p]

அதி. 3
a அப் 3:16, அப் 4:10
b மத் 8:14, 15, மத் 9:24, 25
c யோவா 5:8, 9, அப் 9:34, அப் 14:8-10
d ஏசா 35:6
e அப் 3:2
f யோவா 10:23, அப் 5:12
g யாத் 3:6
h பிலி 2:9-11
i ஏசா 52:13, ஏசா 53:11
j அப் 5:30
k மத் 27:20, 21, லூ 23:14, 18
l அப் 5:31, எபி 2:10
m லூ 24:46-48, அப் 1:8, அப் 2:32
n 1கொ 2:8
o யோவா 16:2, 3, 1தீ 1:13
p சங் 118:22, ஏசா 50:6, ஏசா 53:8, தானி 9:26, லூ 22:15

19 அதனால், மனம் திருந்தி,[a] உங்கள் வழியை மாற்றிக்கொள்ளுங்
கள்;*[b] அப்போதுதான் உங்களுடைய பாவங்கள் துடைத்தழிக்கப்படும்,[c]
யெகோவாவிடமிருந்து# புத்துணர்ச்சி கிடைத்துக்கொண்டே இருக்கும்.
20 அதோடு, உங்களுக்கென்று நியமிக்கப்பட்ட கிறிஸ்துவாகிய இயேசுவை
அவர் உங்களிடம் அனுப்புவார். **21** பூர்வ காலத்தில் பரிசுத்த தீர்க்கதரிசி
கள் மூலம் அவர் சொன்னபடியே, எல்லாம் புதுப்பிக்கப்படுகிற காலங்கள்
வரை கிறிஸ்து பரலோகத்திலேயே இருக்க வேண்டும். **22** சொல்லப்
போனால், 'உங்கள் கடவுளாகிய யெகோவா* உங்கள் சகோதரர்களுக்குள்
என்னைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியைத் தேர்ந்தெடுத்து உங்களுக்காக
நியமிப்பார்.[d] அந்தத் தீர்க்கதரிசி சொல்கிற எல்லாவற்றையும் நீங்கள் கேட்டு
நடக்க வேண்டும்.[e] **23** அவர் சொல்வதைக் கேட்டு நடக்காத எவனும் மக்
கள் மத்தியிலிருந்து அடியோடு அழிக்கப்படுவான்' என்று மோசே சொன்
னார்.[f] **24** எல்லா தீர்க்கதரிசிகளும், சொல்லப்போனால் சாமுவேல் முதற்
கொண்டு அடுத்தடுத்து வந்த எல்லா தீர்க்கதரிசிகளும், இந்த நாட்களைப்
பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.[g] **25** நீங்கள் அந்தத் தீர்க்கத
ரிசிகளுக்கும் உங்கள் முன்னோர்களோடு கடவுள் செய்த ஒப்பந்தத்துக்
கும் வாரிசுகளாக இருக்கிறீர்கள்;[h] அந்த ஒப்பந்தத்தின்படி, 'உன்னுடைய சந்
ததியின் மூலம் பூமியிலுள்ள எல்லா குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்'[i]
என்று ஆபிரகாமிடம் கடவுள் சொன்னார். **26** உங்கள் ஒவ்வொருவரை
யும் உங்களுடைய பொல்லாத செயல்களிலிருந்து விலக்கி ஆசீர்வதிப்பதற்
காகக் கடவுள் தன்னுடைய ஊழியரை நியமித்து, முதன்முதலில் உங்களிடம்
தான் அனுப்பினார்"[j] என்று சொன்னார்.

4 பேதுருவும் யோவானும் மக்களோடு பேசிக்கொண்டிருந்தபோது,
குருமார்களும் ஆலயத்தின் காவல் தலைவரும் சதுசேயர்களும்[k]
அவர்களிடம் வந்தார்கள். **2** அந்த அப்போஸ்தலர்கள் மக்களுக்குக் கற்
பித்துக்கொண்டும், இயேசு உயிரோடு எழுப்பப்பட்டுவிட்டார் என வெளிப்
படையாக அறிவித்துக்கொண்டும் இருந்ததைப் பார்த்து அவர்கள் எரிச்சல
டைந்தார்கள்.[l] **3** அதனால், அவர்களைக் கைது செய்தார்கள்; ஏற்கெனவே
சாயங்காலம் ஆகியிருந்ததால், அடுத்த நாள்வரை அவர்களைக் காவலில்
வைத்தார்கள்;[m] **4** ஆனாலும், அந்த இரண்டு பேரும் பேசியதைக் கேட்ட
நிறைய பேர் நம்பிக்கை வைத்தார்கள்; அப்படி நம்பிக்கை வைத்த ஆண்க
ளின் எண்ணிக்கை சுமார் 5,000.[n]

5 அடுத்த நாள் யூதத் தலைவர்களும் பெரியோர்களும்* வேத அறி
ஞர்களும் எருசலேமில் கூடிவந்தார்கள். **6** அவர்களோடு முதன்மை குரு
அன்னாவும்[o] காய்பாவும்[p] யோவானும் அலெக்சந்தரும் முதன்மை குரு
வின் சொந்தக்காரர்கள் எல்லாரும் கூடிவந்தார்கள். **7** பின்பு, பேதுருவை
யும் யோவானையும் தங்கள் நடுவில் நிறுத்தி, "எந்த அதிகாரத்தில், யாரு
டைய பெயரில் இதைச் செய்தீர்கள்?" என்று கேட்டார்கள். **8** அப்போது
பேதுரு கடவுளுடைய சக்தியால் நிரப்பப்பட்டு,[q]

"மக்களை ஆளுகிறவர்களே, பெரியோர்களே, **9** ஊனமாயிருந்த இந்த
மனுஷனுக்குச் செய்யப்பட்ட நல்ல காரியத்தைப்[r] பற்றி இன்று எங்களை

3:19 *நே.மொ., "முழுமையாகத் திரும்புங்கள்." #நே.மொ., "யெகோவாவின் முகத்
திலிருந்து." இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:22** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.
4:5 *வே.வா., "மூப்பர்களும்."

அதி. 3
a அப் 2:38
b எசே 33:11, எபே 4:22
c எசே 33:14, 16; 1யோ 1:7
d உபா 34:10; அப் 7:37
e உபா 18:15, 18
f உபா 18:19
g லூ 24:27; அப் 10:43
h ரோ 9:4
i ஆதி 22:18; கலா 3:8
j அப் 13:45, 46; ரோ 1:16

அதி. 4
k அப் 23:8
l அப் 4:33; அப் 17:18
m லூ 21:12
n அப் 2:41; அப் 6:7
o யோவா 18:13
p மத் 26:57; லூ 3:2; யோவா 11:49-51
q அப் 7:55
r அப் 3:7

விசாரிக்கிறீர்கள்; இவனைக் குணமாக்கியது யாரென்று தெரிந்துகொள்ள
விரும்புகிறீர்கள். **10** நாசரேத்தூர் இயேசு கிறிஸ்துவின் பெயரில்தான்[a]
இந்த மனுஷன் குணமாகி உங்களுக்கு முன்னால் நிற்கிறான் என்பதை நீங்
களும் இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் தெரிந்துகொள்ளுங்கள். இயேசுவை
நீங்கள் மரக் கம்பத்தில் அறைந்து கொன்றீர்கள்,[b] ஆனால் அவரைக்
கடவுள் உயிரோடு எழுப்பினார்.[c] **11** அந்த இயேசுதான், ‘கட்டிடம் கட்டு
கிறவர்களாகிய உங்களால் கொஞ்சம்கூட மதிக்கப்படாத கல்லாக இருந்த
போதிலும் மூலைக்குத் தலைக்கல்லாக[d] ஆகியிருக்கிறார்.’ **12** அவரைத்
தவிர வேறு யாராலும் மீட்பு இல்லை;[e] ஏனென்றால், நாம் மீட்புப் பெறும்
படி பூமியிலுள்ள மனுஷர்களுக்கு அவருடைய பெயரைத் தவிர வேறெந்
தப் பெயரும் கொடுக்கப்படவில்லை என்பதையும் தெரிந்துகொள்ளுங்
கள்”[f] என்று சொன்னார்.

13 பேதுருவும் யோவானும் கல்வியறிவு இல்லாத* சாதாரண ஆட்கள்[g]
என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்ததால், அந்த இரண்டு பேரும் பய
மில்லாமல்# பேசியதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் இயேசு
வோடு இருந்தவர்கள்[h] என்பதையும் புரிந்துகொண்டார்கள். **14** குணமாக்
கப்பட்ட மனிதன் அவர்களோடு நிற்பதைப் பார்த்ததால்,[i] அவர்களுக்கு
எதிராக எதுவும் பேச முடியவில்லை.[j] **15** அதனால், நியாயசங்கத்தை
விட்டு வெளியே போகும்படி அவர்கள் இரண்டு பேருக்கும் கட்டளை
கொடுத்தார்கள்; பின்பு, தங்களுக்குள் கூடிப்பேசி, **16** “இவர்களை என்ன
செய்வது?[k] இவர்கள் மூலம் நிஜமாகவே ஒரு பெரிய அற்புதம் நடந்திருக்
கிறது, எருசலேமில் குடியிருக்கிற எல்லாருக்கும் இது தெரியும்,[l] நம்மால்
இதை மறுக்க முடியாது. **17** ஆனாலும், இந்த விஷயம் மக்கள் மத்தியில்
இன்னும் அதிகமாகப் பரவாமல் இருப்பதற்கு, இனிமேல் யாரிடமும் இந்
தப் பெயரில் பேசக் கூடாதென்று இவர்களை மிரட்டி வைப்போம்”[m] என்று
சொல்லிக்கொண்டார்கள்.

18 பின்பு இரண்டு பேரையும் கூப்பிட்டு, இயேசுவின் பெயரில் எதையும்
பேசவோ கற்பிக்கவோ கூடாது என்று கட்டளையிட்டார்கள். **19** அதற்கு
பேதுருவும் யோவானும், “கடவுள் சொல்வதைக் கேட்காமல் நீங்கள் சொல்
வதைக் கேட்பது கடவுளுக்கு முன்னால் சரியாக இருக்குமா என்பதை நீங்
களே தீர்மானித்துக்கொள்ளுங்கள். **20** எங்களைப் பொறுத்தவரை, நாங்
கள் பார்த்தவற்றையும் கேட்டவற்றையும் பற்றிப் பேசுவதை எங்களால்
நிறுத்த முடியாது”[n] என்று சொன்னார்கள். **21** அவர்களோ, மறுபடியும்
அந்த இரண்டு பேரையும் மிரட்டிவிட்டு, விடுதலை செய்தார்கள்; ஏனென்
றால், அவர்களைத் தண்டிக்க எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. அதோடு,
நடந்த அற்புதத்தைக் குறித்து கடவுளை மகிமைப்படுத்திக்கொண்டிருந்த
மக்கள் எல்லாரையும் நினைத்துப் பயந்தார்கள்.[o] **22** அற்புதமாகக் குணம
டைந்த அந்த மனிதன் 40 வயதைத் தாண்டியவனாக இருந்தான்.

23 அவர்கள் விடுதலையான பின்பு மற்ற சீஷர்களிடம் போய்,
முதன்மை குருமார்களும் பெரியோர்களும் தங்களிடம் சொன்னதைத் தெரி
வித்தார்கள். **24** அவர்கள் எல்லாரும் அதைக் கேட்டபோது, ஒருமன
தோடு குரலை உயர்த்தி, கடவுளிடம்,

4:13 *அவர்களுக்குப் படிப்பறிவே இல்லை என்று அர்த்தம் கிடையாது. ரபீக்களு
டைய பள்ளிகளில் படிக்காததைத்தான் இது குறிக்கிறது. #வே.வா., “தைரியமாக.”

அதி. 4
a அப் 3:6
b அப் 2:36
c அப் 2:24; அப் 5:30
d சங் 118:22; ஏசா 28:16; மத் 21:42; 1பே 2:7
e யோவா 1:12; யோவா 14:6; 1தீ 2:5, 6
f மத் 1:21; அப் 10:43; பிலி 2:9, 10
g மத் 11:25; 1கொ 1:26, 27
h யோவா 7:14, 15
i அப் 3:11
j லூ 21:15
k யோவா 11:47
l அப் 3:9, 10
m அப் 5:40
n அப் 5:29
o லூ 22:2; அப் 5:26

“உன்னதப் பேரரசரே, நீங்கள்தான் பரலோகத்தையும் பூமியையும்
கடலையும் அவற்றில் இருக்கிற எல்லாவற்றையும் படைத்தீர்கள்.[a]
25 எங்களுடைய மூதாதையாகவும் உங்களுடைய ஊழியராகவும் இருந்த
தாவீதுக்கு[b] உங்கள் சக்தியைக் கொடுத்து, ‘தேசங்கள் ஏன் கொந்தளித்தன?
மக்கள் ஏன் வீணான காரியங்களை யோசிக்கிறார்கள்? **26** யெகோவாவுக்
கும்* அவரால் அபிஷேகம் செய்யப்பட்டவருக்கும்# விரோதமாக பூமி
யின் ராஜாக்கள் அணிவகுத்து நின்றார்கள், ஆட்சியாளர்கள் ஒன்றுகூடி வந்
தார்கள்’[c] என்று சொன்னீர்கள். **27** அதன்படியே, உங்களால் அபிஷேகம்
செய்யப்பட்ட[d] உங்கள் பரிசுத்த ஊழியரான இயேசுவுக்கு எதிராக ஏரோது
வும் பொந்தியு பிலாத்துவும்[e] இஸ்ரவேல் மக்களும் மற்ற தேசத்து மக்களும்
இந்த நகரத்தில் ஒன்றுகூடினார்கள். **28** உங்கள் வல்லமையாலும் நோக்கத்
தாலும் நீங்கள் முன்கூட்டியே தீர்மானித்த விஷயங்களை நிறைவேற்றினார்
கள்.[f] **29** இப்போதும் யெகோவாவே,* அவர்களுடைய மிரட்டல்களைக்
கவனியுங்கள்; உங்கள் வார்த்தையை முழு தைரியத்தோடு பேசிக்
கொண்டே இருக்க உங்களுடைய ஊழியர்களுக்கு உதவி செய்யுங்கள்.
30 உங்கள் கையை நீட்டி உங்களுடைய பரிசுத்த ஊழியராகிய இயேசுவின்
பெயரில்[g] நோயாளிகள் குணமாகும்படி செய்யுங்கள், அடையாளங்களும்
அற்புதங்களும் நடக்கும்படி செய்யுங்கள்”[h] என்று மன்றாடினார்கள்.

31 அவர்கள் மன்றாடி முடித்தபோது,* அவர்கள் கூடியிருந்த இடம்
அதிர்ந்தது; அவர்கள் எல்லாரும் கடவுளுடைய சக்தியால் நிரப்பப்பட்டு,[i]
அவருடைய வார்த்தையைத் தைரியமாகப் பேச ஆரம்பித்தார்கள்.[j]

32 நம்பிக்கை வைத்த ஏராளமான மக்கள் ஒரே இதயத்தோடும்
ஒரே மனதோடும் இருந்தார்கள்; ஒருவரும் தங்களுடைய உடைமைக
ளில் ஒன்றைக்கூட தங்களுடையது என்று சொல்லிக்கொள்ளவில்லை; எல்
லாவற்றையும் பொதுவாக வைத்துப் பயன்படுத்தினார்கள்.[k] **33** அதோடு,
எஜமானாகிய இயேசு உயிரோடு எழுந்ததைப் பற்றி[l] அப்போஸ்தலர்கள்
வலிமைமிக்க விதத்தில்* சாட்சி கொடுத்துக்கொண்டே இருந்தார்கள்; கடவு
ளுடைய அளவற்ற கருணை அவர்கள் எல்லாருக்கும் மிகுதியாகக் கிடைத்
தது. **34** சொல்லப்போனால், அவர்கள் எல்லாருடைய தேவையும் பூர்த்தி
செய்யப்பட்டது;[m] நிலங்களையோ வீடுகளையோ வைத்திருந்தவர்கள்
அவற்றை விற்று அந்தப் பணத்தைக் கொண்டுவந்து, **35** அப்போஸ்தலர்
களிடம் கொடுத்தார்கள்.[n] அது அவரவர் தேவைக்கு ஏற்றபடி எல்லாருக்
கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.[o] **36** சீப்புரு தீவைச் சேர்ந்த யோசேப்பு
என்ற லேவியர் ஒருவர் இருந்தார்; அப்போஸ்தலர்கள் இவரை பர்னபா[p]
என்றும் கூப்பிட்டார்கள். “ஆறுதலின் மகன்” என்பதுதான் அதன் அர்த்தம்.
37 இவரும் தன் நிலத்தை விற்று அந்தப் பணத்தைக் கொண்டுவந்து அப்
போஸ்தலர்களிடம் கொடுத்தார்.[q]

5 அனனியா என்ற ஒருவன் தன்னுடைய மனைவி சப்பீராளோடு சேர்ந்து
ஒரு நிலத்தை விற்றான். **2** ஆனால், விற்ற பணத்தில் ஒரு பகுதியை
ஒளித்து வைத்துக்கொண்டான், இது அவனுடைய மனைவிக்கும் தெரி
யும்; பின்பு, மீதி பணத்தை மட்டும் கொண்டுவந்து அப்போஸ்தலர்களிடம்

அதி. 4
a யாத் 20:11, நெ 9:6, சங் 146:6
b 2சா 23:1, 2
c சங் 2:1, 2
d சங் 45:7, அப் 10:38
e லூ 23:12
f ஏசா 53:10, லூ 24:44, அப் 2:23, 1பே 1:20
g அப் 3:16
h அப் 2:43, அப் 5:12
i அப் 2:2, 4
j 1தெ 2:2
k அப் 2:44, 45
l அப் 1:21, 22, அப் 4:2
m அப் 2:44, 45
n அப் 5:1, 2
o அப் 6:1
p அப் 11:22, அப் 12:25
q லூ 12:33

4:26, 29 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:26** # வே.வா., “அவருடைய கிறிஸ்துவுக்கும்.” **4:31** * வே.வா., “உருக்கமாக ஜெபம் செய்த பின்பு.” **4:33** * வே.வா., “மிகவும் திறமையாக.”

கொடுத்தான்.[a] **3** அப்போது பேதுரு, “அனனியாவே, நிலம் விற்ற பணத்
தில் ஒரு பகுதியை ஒளித்து வைத்துக்கொண்டு கடவுளுடைய சக்திக்கு[b]
விரோதமாகப் பொய் சொல்லத் துணியும்படி சாத்தான் உன்னைத் தூண்டி
யது ஏன்?[c] **4** நிலத்தை விற்பதற்கு முன்புவரை அது உனக்குத்தானே
சொந்தமாக இருந்தது, அதை விற்ற பின்பும் அந்தப் பணம் உன்னுடையதா
கத்தானே இருந்தது? இப்படியொரு காரியத்தைச் செய்ய ஏன் உள்ளத்தில்
திட்டம் போட்டாய்? மனுஷர்களிடம் அல்ல, கடவுளிடமே பொய் சொல்
லியிருக்கிறாய்” என்றார். **5** இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அனனியா
கீழே விழுந்து செத்துப்போனான். இதைக் கேள்விப்பட்ட எல்லாரும் மிக
வும் பயந்தார்கள். **6** பின்பு, சில இளைஞர்கள் எழுந்துவந்து அவனைத்
துணிகளில் சுற்றி, அங்கிருந்து தூக்கிக்கொண்டுபோய் அடக்கம் செய்
தார்கள்.

7 சுமார் மூன்று மணிநேர இடைவெளிக்குப் பின்பு, அவனுடைய
மனைவி அங்கே வந்தாள்; ஆனால், நடந்தது எதுவும் அவளுக்குத்
தெரியவில்லை. **8** பேதுரு அவளிடம், “நீங்கள் இரண்டு பேரும் நிலத்தை
இவ்வளவுக்குத்தான் விற்றீர்களா?” என்று கேட்டார். அதற்கு அவள்,
“ஆமாம், இவ்வளவுக்குத்தான் விற்றோம்” என்று சொன்னாள். **9** அப்
போது பேதுரு, “நீங்கள் இரண்டு பேரும் கூட்டுச் சேர்ந்து யெகோவாவின்*
சக்தியை ஏன் சோதித்தீர்கள்? இதோ! உன்னுடைய கணவனை அடக்
கம் செய்த ஆட்கள் கதவுக்குப் பக்கத்தில் நிற்கிறார்கள், அவர்கள் உன்னை
யும் தூக்கிக்கொண்டு போவார்கள்” என்று சொன்னார். **10** உடனே அவள்
அவருடைய காலடியில் விழுந்து செத்துப்போனாள். அந்த இளைஞர்கள்
உள்ளே வந்து பார்த்தபோது அவள் செத்துக் கிடந்தாள்; அவர்கள் அவ
ளைத் தூக்கிக்கொண்டுபோய் அவளுடைய கணவனுக்குப் பக்கத்தில்
அடக்கம் செய்தார்கள். **11** இதனால் சபையில் இருந்தவர்களும், இதைக்
கேள்விப்பட்ட மற்ற எல்லாரும் ரொம்பவே பயந்துபோனார்கள்.

12 அப்போஸ்தலர்கள் நிறைய அடையாளங்களையும் அற்புதங்களை
யும் மக்கள் மத்தியில் செய்துகொண்டிருந்தார்கள்.[d] அவர்கள் எல்லாரும்
வழக்கமாக சாலொமோன் மண்டபத்தில்[e] ஒன்றுகூடிவந்தார்கள். **13** அவர்
களோடு சேர்ந்துகொள்ள மற்றவர்கள் யாருக்கும் தைரியம் வரவில்லை;
இருந்தாலும், அவர்களைப் பற்றிப் பொதுமக்கள் உயர்வாகப் பேசினார்கள்.
14 அதிகமதிகமான ஆண்களும் பெண்களும் எஜமானின் மேல் விசு
வாசம் வைத்து அவருடைய சீஷர்களாக ஆனார்கள்.[f] **15** பேதுரு நடந்து
போகும்போது நோயாளிகள் சிலர்மேல் அவருடைய நிழலாவது பட
வேண்டும் என்பதற்காக[g] அவர்களைச் சிறிய படுக்கைகளிலும் பாய்களி
லும் கிடத்தி முக்கியத் தெருக்களில் கொண்டுவந்து வைத்தார்கள்.
16 அதுமட்டுமல்ல, எருசலேமைச் சுற்றியிருந்த நகரங்களிலிருந்து நோயா
ளிகளையும் பேய்களால் அவதிப்பட்டவர்களையும் கூட்டிக்கொண்டு மக்
கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள்; அவர்கள் அத்தனை பேரும் குணமாக்
கப்பட்டார்கள்.

17 அப்போது, தலைமைக் குருவும் அவரோடு இருந்த சதுசேய மதப்
பிரிவினர் எல்லாரும் பொறாமையால் பொங்கியெழுந்து, **18** அப்போஸ்த
லர்களைப் பிடித்து* நகரச் சிறைச்சாலையில் போட்டார்கள்.[h] **19** ஆனால்,

5:9 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **5:18** * வே.வா., “கைது செய்து.”

அதி. 5
a அப் 4:34, 35
b அப் 5:9
c சங் 101:7; எபே 4:25; கொலோ 3:9
d அப் 4:29, 30; அப் 6:8; அப் 14:3; அப் 15:12; ரோ 15:18, 19; 2கொ 12:12
e யோவா 10:23; அப் 3:11
f அப் 6:7
g மத் 9:20, 21
h லூ 21:12

அன்று ராத்திரி யெகோவாவின்* தூதர் சிறைச்சாலையின் கதவுகளைத்
திறந்து[a] அவர்களை வெளியே கொண்டுவந்து, **20** “நீங்கள் போய் ஆல
யத்தில் நின்று முடிவில்லாத வாழ்வைப் பற்றிய எல்லா விஷயங்களையும்
மக்களிடம் தொடர்ந்து பேசுங்கள்” என்று சொன்னார். **21** அதன்படியே,
பொழுது விடிந்தவுடன் ஆலயத்துக்குப் போய் அவர்கள் கற்பிக்க ஆரம்
பித்தார்கள்.

தலைமைக் குருவும் அவரோடு இருந்தவர்களும் வந்து, நியாயசங்
கத்தைச் சேர்ந்தவர்களையும் இஸ்ரவேல் மக்களின் பெரியோர் குழுவி
னர் எல்லாரையும் ஒன்றுகூட்டினார்கள்; பின்பு, அப்போஸ்தலர்களைச்
சிறையிலிருந்து கொண்டுவருவதற்காகக் காவலர்களை அனுப்பினார்கள்.
22 ஆனால், அந்தக் காவலர்கள் அங்கே போய்ப் பார்த்தபோது
சிறைச்சாலையில் அவர்களைக் காணவில்லை. அதனால் அந்தக் காவலர்
கள் திரும்பி வந்து, **23** “சிறைச்சாலை நன்றாகப் பூட்டப்பட்டிருந்தது, காவ
லாளிகளும் கதவுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார்கள்; ஆனால், கத
வைத் திறந்தபோது உள்ளே யாரையும் காணவில்லை” என்று
சொன்னார்கள். **24** இதைக் கேட்டதும், ஆலயத்தின் காவல் தலைவரும்
முதன்மை குருமார்களும் அடுத்து என்ன நடக்குமோ என்று நினைத்துக்
குழம்பினார்கள். **25** அப்போது ஒருவன் வந்து, “அதோ! நீங்கள் சிறை
யில் அடைத்திருந்த ஆட்கள் ஆலயத்தில் நின்று மக்களுக்குக் கற்பித்துக்
கொண்டிருக்கிறார்கள்” என்று சொன்னான். **26** அதனால், அந்தக் காவல்
தலைவர் தன் காவலர்களோடு போய் அவர்களைப் பிடித்துக் கொண்டுவந்
தார்; ஆனால், மக்கள் தங்கள்மேல் கல்லெறிவார்கள் என்று பயந்ததால்[b]
வன்முறை எதையும் கையாளவில்லை.

27 பின்பு, அப்போஸ்தலர்களைக் கொண்டுவந்து நியாயசங்கத்தில்
நிறுத்தினார்கள். அப்போது தலைமைக் குரு அவர்களிடம், **28** “இந்தப்
பெயரில் கற்பிக்கக் கூடாதென்று நாங்கள் உங்களுக்குக் கண்டிப்புடன்
கட்டளை கொடுத்திருந்தோம்;[c] அப்படியிருந்தும், எருசலேம் முழுவதை
யும் உங்கள் போதனையால் நிரப்பியிருக்கிறீர்கள்; அந்த மனுஷனு
டைய சாவுக்கு எங்கள்மேல் பழிபோட* குறியாக இருக்கிறீர்கள்”[d] என்று
சொன்னார். **29** அதற்கு பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும், “நாங்கள்
மனுஷர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்குத்தான் கீழ்ப்படிய வேண்
டும்.[e] **30** நீங்கள் மரக் கம்பத்தில்* அறைந்து# கொன்ற இயேசுவை நம்
முன்னோர்களுடைய கடவுள் உயிரோடு எழுப்பினார்.[f] **31** இஸ்ர
வேலர்கள் மனம் திருந்தி, பாவ மன்னிப்பைப் பெறுவதற்காக[g] அவரை
அதிபதியாகவும்[h] மீட்பராகவும்[i] தன்னுடைய வலது பக்கத்துக்கு உயர்த்
தினார்.[j] **32** இதற்கெல்லாம் நாங்கள் சாட்சிகள்;[k] கடவுள் தனக்குக் கீழ்ப்
படிகிறவர்களுக்குத் தருகிற அவருடைய சக்தியும் சாட்சி”[l] என்று சொன்
னார்கள்.

33 அந்த வார்த்தைகளைக் கேட்டு நியாயசங்கத்தார் கொதிப்படைந்து,
அவர்களைக் கொன்றுபோடத் துடித்தார்கள். **34** அப்போது, எல்லாராலும்
உயர்வாக மதிக்கப்பட்டுவந்த திருச்சட்டப் போதகரான கமாலியேல்[m] என்ற

5:19 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **5:28** *வே.வா., “இந்த மனுஷனுடைய இரத்
தப்பழியை எங்கள்மேல் சுமத்த.” **5:30** *வே.வா., “மரத்தில்.” #நே.மொ., “தொங்
கவிட்டு.”

அதி. 5
a சங் 34:7
அப் 12:7
அப் 16:26
எபி 1:7, 14
b லூ 20:19
c அப் 4:18
d மத் 27:25
அப் 3:14, 15
e தானி 3:17, 18
அப் 4:19, 20
f அப் 2:23, 24
g ஏசா 53:11
அப் 2:38
அப் 10:43
h அப் 3:15
i மத் 1:21
எபி 2:10
j அப் 2:32, 33
பிலி 2:9
k லூ 24:46-48
அப் 1:8
l யோவா 15:26
m அப் 22:3

பரிசேயர் நியாயசங்கத்தில் எழுந்து நின்று, அப்போஸ்தலர்களைக் கொஞ்ச
நேரத்துக்கு வெளியே கொண்டுபோகும்படி கட்டளையிட்டார். **35** பின்பு,
அங்கிருந்தவர்களைப் பார்த்து, “இஸ்ரவேலர்களே, இந்த மனுஷர்க
ளுக்கு நீங்கள் செய்ய நினைத்திருப்பதைக் குறித்து எச்சரிக்கையாக இருங்
கள். **36** சில காலத்துக்கு முன்னால், தெயுதாஸ் என்பவன் தன்னை ஒரு
பெரிய ஆளாகக் காட்டிக்கொண்டிருந்தான்; சுமார் 400 ஆண்கள் அவனு
டைய கூட்டத்தில் சேர்ந்துகொண்டார்கள். ஆனால், அவன் கொல்லப்பட்
டான்; அவன் பேச்சைக் கேட்ட எல்லாரும் சிதறடிக்கப்பட்டு, இருந்த
இடம் தெரியாமல் போனார்கள். **37** அதற்குப் பின்பு, பெயர்ப்பதிவு செய்
யப்பட்ட காலத்தில் யூதாஸ் என்ற கலிலேயன் ஒருவன் தன்னோடு ஆட்க
ளைச் சேர்த்துக்கொண்டான். ஆனால், அவனும் அழிந்துபோனான், அவ
னைப் பின்பற்றிய எல்லாரும் சிதறடிக்கப்பட்டார்கள். **38** அதனால் நான்
உங்களுக்குச் சொல்கிறேன், இந்த மனுஷர்களுடைய விஷயத்தில் தலை
யிடாதீர்கள், இவர்களை விட்டுவிடுங்கள்; இந்தத் திட்டம் அல்லது செயல்
மனுஷர்களுடையதாக இருந்தால், அது ஒழிந்துபோகும். **39** ஆனால்,
அது கடவுளுடையதாக இருந்தால், உங்களால் அதை ஒழிக்கவே முடி
யாது;[a] அதில் தலையிட்டால், நீங்கள் கடவுளோடு போர் செய்கிறவர்களா
கக்கூட ஆகிவிடலாம்”[b] என்று சொன்னார். **40** அவர்களும் அவருடைய
ஆலோசனையை ஏற்றுக்கொண்டார்கள்; பின்பு அப்போஸ்தலர்களை வர
வழைத்து, அவர்களை அடித்து,[c] இயேசுவின் பெயரில் பேசுவதை நிறுத்
தும்படி கட்டளையிட்டு அனுப்பினார்கள்.

41 ஆனால், அவருடைய பெயருக்காகத் தாங்கள் அவமானப்படத் தகு
தியுள்ளவர்களெனக் கருதப்பட்டதை நினைத்து அப்போஸ்தலர்கள் சந்தோ
ஷமாக[d] நியாயசங்கத்தைவிட்டுப் போனார்கள். **42** அவர்கள் தினமும்
ஆலயத்திலும் வீடு வீடாகவும்[e] இடைவிடாமல் கற்பித்து, கிறிஸ்துவாகிய
இயேசுவைப் பற்றிய நல்ல செய்தியை அறிவித்துவந்தார்கள்.[f]

6 அந்த நாட்களில், சீஷர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே
போனபோது எபிரெய மொழி பேசிய யூதர்களுக்கு எதிராகக் கிரேக்க
மொழி பேசிய யூதர்கள் குறை சொல்ல ஆரம்பித்தார்கள்; ஏனென்றால்,
அன்றாட உணவு கொடுக்கிற விஷயத்தில் அவர்கள் மத்தியிலிருந்த வித
வைகள் சரியாகக் கவனிக்கப்படவில்லை.[g] **2** அப்போது, பன்னிரண்டு
அப்போஸ்தலர்கள் மற்ற எல்லா சீஷர்களையும் கூப்பிட்டு, “நாங்கள்
கடவுளுடைய வார்த்தையைக் கற்பிக்கும் வேலையை விட்டுவிட்டு
உணவு கொடுக்கிற வேலையில் ஈடுபடுவது சரியாக இருக்காது.[h] **3** அத
னால் சகோதரர்களே, கடவுளுடைய சக்தியாலும் ஞானத்தாலும் நிறைந்த
வர்களாகவும்,[i] நல்ல பெயரெடுத்தவர்களாகவும்[j] இருக்கிற ஏழு ஆண்களை
உங்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுங்கள். இந்த அவசியமான வேலையை
மேற்பார்வை செய்ய நாங்கள் அவர்களை நியமிப்போம்.[k] **4** அதேசமயத்
தில், ஜெபம் செய்வதற்கும் கடவுளுடைய வார்த்தையைக் கற்பிப்பதற்கும்
நாங்கள் முழு கவனம் செலுத்துவோம்” என்று சொன்னார்கள். **5** அவர்
கள் சொன்னது சரியென்று அங்கிருந்த எல்லாருக்கும் தோன்றியது. அத
னால், கடவுளுடைய சக்தியும் விசுவாசமும் நிறைந்தவரான ஸ்தேவானை
யும், பிலிப்புவையும்,[l] பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும்,
பர்மெனாவையும், அந்தியோகியா நகரத்தைச் சேர்ந்தவரும் யூத மதத்துக்கு

அதி. 5
a நீதி 21:30
b அப் 26:14
c மத் 10:17; மாற் 13:9
d மத் 5:12; அப் 16:25; ரோ 5:3; 2கொ 12:10; பிலி 1:29; எபி 10:34; 1பே 4:13
e அப் 20:20
f அப் 4:31

அதி. 6
g அப் 4:34, 35; 1தீ 5:3; யாக் 1:27
h யாத் 18:17, 18
i அப் 6:8, 10
j அப் 16:1, 2; 1தீ 3:7
k உபா 1:13
l அப் 21:8

மாறியவருமான நிக்கொலாவையும் தேர்ந்தெடுத்தார்கள். **6** பின்பு, அவர்
களை அப்போஸ்தலர்களிடம் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; அப்போஸ்த
லர்கள் ஜெபம் செய்துவிட்டு அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்.[a]

7 இதன் காரணமாக, கடவுளுடைய வார்த்தை பரவிக்கொண்டே வந்
தது;[b] எருசலேமில் சீஷர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக்கொண்டே
வந்தது;[c] ஏராளமான குருமார்களும் இயேசுவின் சீஷர்களானார்கள்.[d]

8 கடவுளுடைய கருணையும் வல்லமையும் நிறைந்தவரான ஸ்தேவான்
பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் மக்கள் மத்தியில் செய்து
வந்தார். **9** இருந்தாலும், ‘விடுதலை பெற்றவர்களின் ஜெபக்கூடம்’ என்ற
பிரிவைச் சேர்ந்த ஆட்களில் சிலர், சிரேனே, அலெக்சந்திரியா, சிலிசியா,
ஆசியா ஆகிய இடங்களைச் சேர்ந்த சிலரோடு வந்து ஸ்தேவானோடு
வாக்குவாதம் செய்தார்கள். **10** ஆனால், ஞானத்தாலும் கடவுளுடைய சக்
தியாலும் பேசிய அவரை அவர்களால் ஜெயிக்க முடியவில்லை.[e]
11 பின்பு, அவர்கள் சில ஆட்களை ரகசியமாகக் கூப்பிட்டு, “மோசேயை
யும் கடவுளையும் இவன் நிந்தித்துப் பேசியதை நாங்கள் கேட்டோம்”
என்று சொல்லும்படி தூண்டிவிட்டார்கள். **12** அதோடு, மக்களையும்
பெரியோர்களையும்* வேத அறிஞர்களையும் தூண்டிவிட்டார்கள்; அவர்
கள் திடீரென்று அவரிடம் வந்து, அவரைப் பலவந்தமாகப் பிடித்து நியா
யசங்கத்துக்கு இழுத்துக்கொண்டு போனார்கள். **13** பின்பு, பொய் சாட்சி
களை அங்கே நிறுத்தினார்கள்; இவர்கள், “இந்தப் பரிசுத்த இடத்துக்கு
எதிராகவும் திருச்சட்டத்துக்கு எதிராகவும் இவன் பேசிக்கொண்டே இருக்கி
றான். **14** உதாரணத்துக்கு, நாசரேத்தூர் இயேசு இந்த இடத்தை அழித்து
விடுவார், மோசே நமக்குக் கொடுத்த சட்டதிட்டங்களை* மாற்றிவிடுவார்
என்றெல்லாம் இவன் சொல்கிறான்; அதை நாங்களே கேட்டோம்” என்று
சொன்னார்கள்.

15 நியாயசங்கத்தில் உட்கார்ந்திருந்த எல்லாரும் அவரை உற்றுப் பார்த்
தபோது அவருடைய முகம் ஒரு தேவதூதரின் முகம்போல் இருந்ததைக்
கவனித்தார்கள்.

7 ஆனால் தலைமைக் குரு, “இதெல்லாம் உண்மையா?” என்று அவரிடம்
கேட்டார். **2** அதற்கு ஸ்தேவான், “சகோதரர்களே, தகப்பன்மார்களே,
கேளுங்கள். நம்முடைய மூதாதையான ஆபிரகாம் ஆரானில் குடியேறு
வதற்கு[f] முன்னால் மெசொப்பொத்தாமியாவில் இருந்தபோது மகிமையான
கடவுள் அவர்முன் தோன்றி, **3** ‘நீ உன் தேசத்தையும் உன் சொந்தக்காரர்
களையும்விட்டு நான் காட்டப்போகிற தேசத்துக்கு வா’[g] என்று சொன்னார்.
4 அதனால், ஆபிரகாம் கல்தேயர்களுடைய தேசத்தைவிட்டு ஆரானில்
குடியேறினார். அவருடைய அப்பா இறந்த பின்பு,[h] நீங்கள் இப்போது குடி
யிருக்கும் இந்தத் தேசத்தில் கடவுள் அவரைக் குடியேற வைத்தார்.[i]
5 இருந்தாலும், இங்கே அவருக்கு எந்தவொரு நிலத்தையும் சொத்தாகக்
கொடுக்கவில்லை, ஓரடி நிலத்தைக்கூட கொடுக்கவில்லை; ஆனால் அவ
ருக்குக் குழந்தை இல்லாதபோதே, இந்தத் தேசத்தை அவருக்கும் அவருக்
குப் பிறகு அவருடைய சந்ததிக்கும் சொத்தாகக் கொடுக்கப்போவதாய் வாக்
குறுதி தந்தார்.[j] **6** அதுமட்டுமல்ல, அவருடைய சந்ததியில் வருகிறவர்கள்

6:12 * வே.வா., “மூப்பர்களையும்.” **6:14** * வே.வா., “முறைமைகளை.”

அதி. 6
- *a* உபா 34:9; அப் 8:14, 17; அப் 13:2, 3; 1தீ 4:14; 1தீ 5:22; 2தீ 1:6
- *b* அப் 12:24; அப் 19:20
- *c* அப் 2:47
- *d* யோவா 12:42; அப் 15:5
- *e* ஏசா 54:17; லூ 21:15; அப் 6:3

அதி. 7
- *f* ஆதி 11:31
- *g* ஆதி 12:1
- *h* ஆதி 11:32
- *i* ஆதி 12:4, 5; எபி 11:8
- *j* ஆதி 12:7; ஆதி 13:14, 15; ஆதி 17:1, 8

வேறொரு தேசத்தில் அன்னியர்களாகக் குடியிருப்பார்கள் என்றும், அந்தத்
தேசத்து மக்கள் 400 வருஷங்களுக்கு அவர்களை அடிமைகளாக வைத்துக்
கொடுமைப்படுத்துவார்கள் என்றும் சொன்னார்.[a] **7** அதோடு, 'அவர்களை
அடிமைப்படுத்திய அந்தத் தேசத்தை நான் தண்டிப்பேன்'[b] என்றும், 'அதன்
பின்பு அவர்கள் அங்கிருந்து வெளியே வந்து, இந்த இடத்தில் எனக்குப் பரி
சுத்த சேவை செய்வார்கள்'[c] என்றும் சொன்னார்.

8 அதோடு, ஆபிரகாமுடன் விருத்தசேதன ஒப்பந்தத்தைக் கடவுள் செய்
தார்;[d] அதன்படி, ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றபோது[e] எட்டாம் நாளில் அவ
ருக்கு விருத்தசேதனம் செய்தார்;[f] ஈசாக்குக்கு யாக்கோபு பிறந்தார்,*
யாக்கோபுக்கு 12 வம்சத் தலைவர்கள் பிறந்தார்கள். **9** இந்த வம்சத் தலை
வர்கள் யோசேப்புமேல் பொறாமைப்பட்டு[g] அவரை எகிப்தியர்களிடம் விற்
றார்கள்;[h] ஆனாலும், கடவுள் அவரோடு இருந்தார்;[i] **10** அவருக்கு வந்த
எல்லா கஷ்டங்களிலிருந்தும் அவரை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய
பார்வோனுக்கு முன்னால் ஞானமுள்ளவராக இருப்பதற்கும் அவருடைய
பிரியத்தைப் பெறுவதற்கும் உதவி செய்தார். எகிப்து தேசத்தையும் தன்
னுடைய வீடு முழுவதையும் நிர்வகிப்பதற்காக பார்வோன் அவரை நியமித்
தார்.[j] **11** அந்தச் சமயத்தில் எகிப்து, கானான் ஆகிய தேசங்கள் முழுவதி
லும் பஞ்சம் ஏற்பட்டது, அது மிகக் கொடியதாக இருந்தது; அதனால்,
நம்முடைய முன்னோர்களுக்குச் சாப்பிட எதுவுமே கிடைக்கவில்லை.[k]
12 ஆனால், எகிப்தில் உணவுப் பொருள்கள்* கிடைப்பதாக யாக்கோபு
கேள்விப்பட்டபோது, நம் முன்னோர்களை முதல் தடவையாக அங்கே
அனுப்பினார்.[l] **13** இரண்டாவது தடவை அவர்கள் அங்கே போனபோது,
தான் யார் என்பதை யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்குச் சொன்னார்;
அதன் பின்பு, யோசேப்பின் குடும்பத்தைப் பற்றி பார்வோனுக்குத் தெரிய
வந்தது.[m] **14** அதனால், யோசேப்பு தன்னுடைய அப்பா யாக்கோபையும்
தன்னுடைய சொந்தக்காரர்கள் எல்லாரையும் கானானிலிருந்து வரச் சொல்லி
செய்தி அனுப்பினார்;[n] அவர்கள் 75 பேர் இருந்தார்கள்.[o] **15** யாக்கோபு
எகிப்துக்குப் போனார்,[p] பின்பு அங்கே இறந்துபோனார்;[q] நம் முன்னோர்
களும் அங்கேயே இறந்துபோனார்கள்.[r] **16** அவர்களுடைய எலும்புகள்
சீகேமுக்குக் கொண்டுபோகப்பட்டன; அங்கே ஏமோரின் மகன்களிடம்
ஆபிரகாம் வெள்ளிக் காசுகளை விலையாகக் கொடுத்து வாங்கிய ஒரு கல்
லறையில் அவை வைக்கப்பட்டன.[s]

17 ஆபிரகாமுக்குக் கடவுள் கொடுத்த வாக்குறுதி நிறைவேறும் காலம்
நெருங்கியபோது நம் மக்கள் எகிப்தில் ஏராளமாகப் பெருகியிருந்தார்கள்.
18 பின்பு, யோசேப்பைப் பற்றித் தெரியாத வேறொருவன் எகிப்துக்கு ராஜா
வானான்.[t] **19** நம் இனத்தாரிடம் அவன் தந்திரமாக நடந்துகொண்டு, அவர்
களுடைய பச்சிளம் குழந்தைகளைச் சாகடிப்பதற்காக அவர்களை
வெளியே விட்டுவிடச்சொல்லிக் கட்டாயப்படுத்தினான்.[u] **20** அந்தச் சம
யத்தில்தான் மோசே பிறந்தார்; அவர் தெய்வீக அழகுள்ளவராக* இருந்
தார்; தன்னுடைய அப்பாவின் வீட்டில் மூன்று மாதங்களுக்கு வளர்க்கப்
பட்டார்.[v] **21** ஆனால், அவர் வெளியே விடப்பட்டபோது,[w] பார்வோனின்
மகள் அவரை எடுத்துக்கொண்டுபோய்த் தன் சொந்த மகனாக வளர்த்தாள்.[x]

7:8 *அல்லது, "ஈசாக்கு அதேபோல் யாக்கோபுக்குச் செய்தார்." **7:12** *வே.வா., "தானியம்." **7:20** *வே.வா., "கடவுளுடைய பார்வையில் அழகாக."

அதி. 7
a ஆதி 15:13
யாத் 12:40
b ஆதி 15:14
c யாத் 3:12
d ஆதி 17:9, 10
e ஆதி 21:1-3
f ஆதி 21:4
g ஆதி 37:9-11
h ஆதி 37:28
ஆதி 45:4
i ஆதி 39:2, 3
j ஆதி 41:40-46
k ஆதி 41:54
ஆதி 42:5
l ஆதி 42:2, 6
m ஆதி 45:1, 16
n ஆதி 45:9-11
o ஆதி 46:27
உபா 10:22
p ஆதி 46:29
உபா 26:5
q ஆதி 49:33
r யாத் 1:6
s ஆதி 23:16
யாத் 13:19
யோசு 24:32
t யாத் 1:7, 8
u யாத் 1:10, 22
v யாத் 2:2
எபி 11:23
w யாத் 2:3
x யாத் 2:5, 10

22 இதனால், மோசே எகிப்தியர்களுடைய எல்லா துறைகளிலும்* பயிற்சி
பெற்று, சொல்லிலும் செயலிலும் வல்லவராக ஆனார்.[a]
23 அவருக்கு 40 வயதானபோது, தன்னுடைய சகோதரர்களான இஸ்ர
வேலர்களின் நிலைமையைப் பார்த்துவிட்டு வர வேண்டுமென்ற எண்ணம்
அவர் உள்ளத்தில் எழுந்தது.*[b] **24** அவர்களில் ஒருவனை ஓர் எகிப்தியன்
அநியாயமாக நடத்துவதைப் பார்த்தபோது, உடனடியாக உதவிக்குப் போய்,
அவனுக்காக அந்த எகிப்தியனைக் கொன்றுபோட்டு பழிவாங்கினார்.
25 தன்னுடைய சகோதரர்களைத் தன் மூலம் கடவுள் காப்பாற்றுவார் என்
பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று அவர் நினைத்தார், ஆனால்
அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை. **26** அடுத்த நாள், அவர்களில்
இரண்டு பேர் சண்டை போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தபோது, 'நீங்
கள் சகோதரர்கள்தானே? ஏன் ஒருவரை ஒருவர் மோசமாக நடத்துகிறீர்கள்?'
என்று சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்த முயற்சி செய்தார்.
27 ஆனால், சக இஸ்ரவேலனை மோசமாக நடத்தியவன் அவரைத் தள்ளி
விட்டு, 'உன்னை எங்களுக்குத் தலைவனாகவும் நீதிபதியாகவும் நியமித்தது
யார்? **28** நேற்று நீ எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல் என்னையும்
கொன்றுபோட நினைக்கிறாயா?' என்றான். **29** இதைக் கேட்டதும் மோசே
அங்கிருந்து தப்பித்து, மீதியான் தேசத்துக்குப் போய் அன்னியராகக் குடியி
ருந்தார்; அங்கே அவருக்கு இரண்டு மகன்கள் பிறந்தார்கள்.[c]
30 40 வருஷங்களுக்குப் பின்பு, சீனாய் மலைக்குப் பக்கத்திலிருந்த
வனாந்தரத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த முட்புதர் நடுவில்
ஒரு தேவதூதர் அவருக்குத் தோன்றினார்.[d] **31** மோசே அந்தக் காட்சி
யைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார். அதைக் கூர்ந்து கவனிப்பதற்காக
அதன் பக்கத்தில் போனபோது, யெகோவா* அவரிடம், **32** 'நான் உன்னு
டைய முன்னோர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் கட
வுளாக இருக்கிறேன்'[e] என்று சொன்னதைக் கேட்டு நடுநடுங்கிப்போனார்.
அதன் பின்பு, அந்த முட்புதரைக் கூர்ந்து கவனிக்க அவருக்குத் தைரி
யம் வரவில்லை. **33** அப்போது யெகோவா* அவரிடம், 'உன் செருப்பைக்
கழற்று, ஏனென்றால் நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது. **34** எகிப்தில் என்னு
டைய மக்கள் அனுபவிக்கிற கொடுமையை நான் கண்ணால் பார்த்தேன்,
அவர்கள் வேதனையில் குமுறுவதைக் கேட்டேன்;[f] அதனால், அவர்களைக்
காப்பாற்றுவதற்காக இறங்கி வந்திருக்கிறேன். இப்போது உன்னை எகிப்
துக்கு அனுப்பப்போகிறேன்' என்று சொன்னார். **35** இந்த மோசேயிடம்
தான், 'உன்னைத் தலைவனாகவும் நீதிபதியாகவும் நியமித்தது யார்?'[g] என்று
அந்த மக்கள் கேட்டு, அவரை ஒதுக்கித்தள்ளினார்கள். ஆனால், முட்புதரில்
தோன்றிய தேவதூதர் மூலம் கடவுள் அவரைத்தான் தலைவராகவும் விடு
விக்கிறவராகவும் அனுப்பி வைத்தார்.[h] **36** மோசேதான் அந்த மக்களை
எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார்;[i] அந்தத் தேசத்திலும் செங்கடலி
லும்[j] 40 வருஷங்கள் வனாந்தரத்திலும்[k] நிறைய அற்புதங்களையும் அடை
யாளங்களையும் செய்தார்.[l]
37 'கடவுள் உங்களுடைய சகோதரர்களுக்குள் என்னைப் போன்ற ஒரு
தீர்க்கதரிசியைத் தேர்ந்தெடுத்து உங்களுக்காக நியமிப்பார்'[m] என்று

அதி. 7
a யாத் 11:3
b யாத் 2:11-15
c யாத் 2:21, 22; யாத் 18:2-4
d யாத் 3:2-10
e யாத் 3:6; மாற் 12:26; லூ 20:37
f யாத் 2:23, 24
g யாத் 2:14; அப் 7:27
h யாத் 4:19
i யாத் 12:41
j யாத் 14:21, 22; யாத் 15:4, 5
k யாத் 16:35; எண் 14: 33, 34
l யாத் 7:3
m உபா 18:15; அப் 3:22

7:22 * நே.மொ., "ஞானத்திலும்." **7:23** * வே.வா., "பார்த்துவிட்டு வரவேண்டும் என்று தீர்மானித்தார்." **7:31, 33** * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

இஸ்ரவேல் மக்களிடம் சொன்னவரும் அதே மோசேதான். **38** வனாந்
தரத்தில் மக்கள் ஒரு சபையாகக் கூடிவந்தபோது அவர்களோடு இருந்தவர்
அவர்தான்; சீனாய் மலையில் பேசிய தேவதூதரோடும் நம்முடைய முன்
னோர்களோடும் இருந்தவர் அவர்தான்.[a] அழியாத பரிசுத்த வார்த்தை
களை நமக்குக் கொடுப்பதற்காக அவற்றைப் பெற்றுக்கொண்டவரும்
அவர்தான்.[b] **39** ஆனால், நம்முடைய முன்னோர்கள் அவருக்குக் கீழ்ப்
படியவில்லை; அவரை உதறித்தள்ளிவிட்டு,[c] மனதளவில் எகிப்துக்கே
திரும்பிப் போனார்கள்.[d] **40** அவர்கள் ஆரோனிடம், 'எகிப்திலிருந்து நம்
மைக் கூட்டிக்கொண்டு வந்த மோசேக்கு என்ன ஆனதோ தெரியவில்லை;
அதனால் நம்மை வழிநடத்துவதற்குத் தெய்வங்களைச் செய்துகொடுங்கள்'
என்று சொன்னார்கள்.[e] **41** அந்தச் சமயத்தில்தான் அவர்கள் ஒரு கன்றுக்
குட்டி சிலையைச் செய்து, அதற்குப் பலி செலுத்தினார்கள். தங்கள்
கைகளால் செய்த அந்தச் சிலையை வைத்துக் கொண்டாடி மகிழ ஆரம்
பித்தார்கள்.[f] **42** இதனால், கடவுள் அவர்களிடமிருந்து விலகி, வானத்
தின் படையை* வணங்கும்படி அவர்களை விட்டுவிட்டார்.[g] இதைப்
பற்றித்தான் தீர்க்கதரிசிகளின் புத்தகத்தில், 'இஸ்ரவேல் ஜனங்களே, 40
வருஷங்கள் வனாந்தரத்தில் அலைந்தபோது பலிகளையும் காணிக்கைக
ளையும் எனக்காகவா கொடுத்தீர்கள்? **43** மோளோகின் கூடாரத்தையும்[h]
ரேப்பான் தெய்வத்தின் நட்சத்திரத்தையும்தானே சுமந்துகொண்டு போனீர்
கள்; வணங்குவதற்காக இவற்றைத்தான் உருவங்களாகச் செய்துகொண்டீர்
கள்; அதனால், நான் உங்களை பாபிலோனுக்கு அப்பால் நாடுகடத்து
வேன்'[i] என்று எழுதப்பட்டிருக்கிறது.

44 வனாந்தரத்தில் நம்முடைய முன்னோர்களுக்குச் சாட்சிக் கூடாரம்
இருந்தது; தரிசனத்தில் காட்டப்பட்ட மாதிரியின்படி அந்தக் கூடாரத்தை
அமைக்க வேண்டுமென மோசேக்குக் கடவுள் கட்டளை கொடுத்திருந்தார்.
அதன்படியே அந்தக் கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது.[j] **45** நம்முடைய
முன்னோர்கள் அந்தக் கூடாரத்தைப் பெற்றுக்கொண்டு, தங்கள் கண்முன்
கடவுள் துரத்திவிட்ட மக்களுடைய தேசத்துக்குள் யோசுவாவோடு வந்த
போது அதைக் கொண்டுவந்தார்கள்;[k] தாவீதின் நாட்கள்வரை அந்தக் கூடா
ரம் அங்கேயே இருந்தது. **46** தாவீது கடவுளுடைய பிரியத்தைப் பெற்றார்;
அதனால், யாக்கோபின் கடவுளுக்காக ஒரு வீட்டைக் கட்டும் பாக்கியத்தைத்
தரும்படி அவர் வேண்டிக்கொண்டார்.[l] **47** ஆனால், சாலொமோன்தான்
கடவுளுக்காக ஒரு ஆலயத்தை* கட்டினார்.[m] **48** ஆனாலும், கைகளால்
கட்டப்பட்ட ஆலயங்களில்* உன்னதமான கடவுள் குடியிருப்பதில்லை.[n]
49 'பரலோகம் என் சிம்மாசனம்,[o] பூமி என் கால்மணை.[p] அப்படியிருக்கும்
போது, எனக்காக எப்படிப்பட்ட ஆலயத்தை* கட்டுவீர்கள்? நான் தங்குவ
தற்கு எப்படிப்பட்ட இடத்தைத் தருவீர்கள்? **50** இவை எல்லாவற்றையும்
என் கையால்தானே படைத்தேன்?[q] என்று யெகோவா* கேட்கிறார்' என
ஒரு தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறாரே.

51 பிடிவாதக்காரர்களே, இதயங்களிலும் காதுகளிலும் விருத்தசேதனம்
செய்யாதவர்களே, கடவுளுடைய சக்தியை நீங்கள் எப்போதும் எதிர்க்கிறீர்
கள்; உங்கள் முன்னோர்கள் செய்தது போலவே நீங்களும் செய்கிறீர்கள்.[r]

7:42 * அதாவது, "சூரிய, சந்திர, நட்சத்திரங்களை." **7:47, 49** * நே.மொ., "வீட்டை." **7:48** * நே.மொ., "வீடுகளில்." **7:50** * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 7

a யாத் 19:3, உபா 5:27, அப் 7:53, கலா 3:19
b யாத் 21:1, உபா 9:10
c எண் 14:3, 4
d யாத் 16:3
e யாத் 32:1, 23
f யாத் 32:4, 6
g 2ரா 17:16
h 1ரா 11:7
i எரே 25:11, ஆமோ 5: 25–27
j யாத் 25:40
k ஆதி 17:1, 8, உபா 3:28, உபா 31:3, யோசு 3:14, யோசு 23:9, யோசு 24:18
l 2சா 7:2, 1நா 22:7, சங் 132:1–5
m 1ரா 6:1
n அப் 17:24
o சங் 11:4
p மத் 5:34, 35
q ஏசா 66:1, 2, எபி 3:4
r ஏசா 63:10

52 எந்தத் தீர்க்கதரிசியைத்தான் உங்களுடைய முன்னோர்கள் துன்புறுத்தா
மல் இருந்தார்கள்?[a] நீதியுள்ளவருடைய வருகையைப் பற்றி முன்கூட்
டியே அறிவித்த ஆட்களை அவர்கள் கொன்றுபோட்டார்கள்;[b] இப்போது
நீங்கள் அந்த நீதியுள்ளவரைக் காட்டிக்கொடுத்துக் கொன்றுவிட்டீர்கள்;[c]
53 தேவதூதர்கள் மூலம் திருச்சட்டத்தைப் பெற்றிருந்தும்[d] அதைக் கடைப்
பிடிக்காமல் விட்டுவிட்டீர்கள்” என்று சொன்னார்.

54 இவற்றையெல்லாம் கேட்டபோது அவர்களுடைய உள்ளம் கொதித்
தது; அவரைப் பார்த்துப் பற்களை நறநறவென்று கடித்தார்கள்.
55 அவரோ, கடவுளுடைய சக்தியால் நிறைந்தவராக, வானத்தை உற்றுப்
பார்த்து, கடவுளுடைய மகிமையையும் அவருடைய வலது பக்கத்தில்
இயேசு நிற்பதையும் பார்த்தார்.[e] **56** “அதோ! வானம் திறந்திருப்பதையும்
மனிதகுமாரன்[f] கடவுளுடைய வலது பக்கத்தில் நிற்பதையும் பார்க்கி
றேன்”[g] என்று சொன்னார். **57** அதைக் கேட்டதும் அவர்கள் தொண்டை
கிழிய கத்தியபடி, தங்களுடைய காதுகளை அடைத்துக்கொண்டு, ஒன்று
சேர்ந்து அவர்மேல் பாய்ந்தார்கள். **58** பின்பு, நகரத்துக்கு வெளியே அவ
ரைக் கொண்டுபோய், அவர்மேல் கல்லெறிய ஆரம்பித்தார்கள்.[h] அவ
ருக்கு எதிராகச் சாட்சி சொன்னவர்கள்[i] தங்களுடைய மேலங்கிகளை சவுல்
என்ற இளம் மனிதனுடைய காலடியில் வைத்தார்கள்.[j] **59** ஸ்தேவான்
மேல் அவர்கள் கல்லெறிந்துகொண்டிருந்தபோது அவர், “எஜமானாகிய
இயேசுவே, என் உயிரை ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று கேட்டுக்கொண்டார்.
60 அதன் பின்பு மண்டிபோட்டு, “யெகோவாவே,* இந்தப் பாவத்தை இவர்
கள்மேல் சுமத்தாதீர்கள்”[k] என்று சத்தமாகச் சொல்லி உயிர்விட்டார்.#

8 ஸ்தேவானைக் கொலை செய்வதற்கு சவுலும் உடந்தையாக
இருந்தான்.[l]

அந்த நாளில், எருசலேமிலிருந்த சபைக்குக் கடுமையான துன்புறுத்தல்
வந்தது; அப்போஸ்தலர்களைத் தவிர மற்ற எல்லாரும் யூதேயா, சமா
ரியா பகுதிகள் முழுவதும் சிதறிப்போனார்கள்.[m] **2** பயபக்தியுள்ள ஆண்
கள் ஸ்தேவானின் உடலைத் தூக்கிக்கொண்டுபோய் அடக்கம் செய்து,
அவருக்காக மிகவும் அழுது துக்கம் அனுசரித்தார்கள். **3** சவுலோ, ஒவ்
வொரு வீடாகப் புகுந்து ஆண்களையும் பெண்களையும் இழுத்துக்கொண்
டுபோய்ச் சிறையில் அடைத்து, சபையைக் கொடூரமாகத் துன்புறுத்தி
வந்தான்.[n]

4 ஆனாலும், சிதறிப்போனவர்கள் தேசம் முழுவதும் போய் கடவு
ளுடைய வார்த்தையைப் பற்றிய நல்ல செய்தியை அறிவித்தார்கள்.[o]
5 பிலிப்பு என்பவர் சமாரியா நகரத்துக்கு*[p] போய் அங்கே இருந்தவர்க
ளுக்குக் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். **6** எல்லாருமே
அவர் சொன்ன விஷயங்களைக் கூர்ந்து கேட்டார்கள்; அவர் செய்த
எல்லா அடையாளங்களையும் கவனித்தார்கள். **7** நிறைய பேரைப் பிடித்
திருந்த பேய்கள் கத்திக் கூச்சல் போட்டுக்கொண்டு அவர்களைவிட்டு
வெளியேறின.[q] பக்கவாத நோயாளிகள் பலரும், கால் ஊனமான பல
ரும் குணமாக்கப்பட்டார்கள். **8** அதனால், அந்த நகரத்தில் இருந்தவர்கள்
ரொம்பவே சந்தோஷப்பட்டார்கள்.

7:60 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். # நே.மொ., “தூங்கிவிட்டார்.” **8:5** * அல்லது, “சமாரியாவில் இருக்கிற ஒரு நகரத்துக்கு.”

அதி. 7
a 2நா 36:16
b மத் 23:31
c ஏசா 53:8; அப் 3:13, 14
d அப் 7:38; கலா 3:19
e சங் 110:1; மத் 26:64
f தானி 7:13
g ரோ 8:34
h லேவி 24:14, 16; மத் 23:37; யோவா 16:2
i உபா 17:7
j அப் 8:1; அப் 22:20
k மத் 5:44

அதி. 8
l அப் 7:58
m மத் 10:23; அப் 11:19
n அப் 9:1, 2; அப் 22:4; அப் 26:10; கலா 1:13; பிலி 3:5, 6
o அப் 11:19
p யோவா 4:39-42; அப் 1:8
q மத் 10:1; மாற் 6:7

9 அதே நகரத்தில் சீமோன் என்ற ஒருவன் இருந்தான்; அவன் மாயமந்
திரங்கள் செய்து, சமாரியாவிலிருந்த மக்களைப் பிரமிக்க வைத்திருந்
தான்; தன்னை ஒரு பெரிய ஆள் என்று சொல்லிக்கொண்டும் இருந்தான்.
10 சிறியோர்முதல் பெரியோர்வரை எல்லாரும் அவன் சொல்வதைக் கவ
னித்துக் கேட்டு, “இவர் சக்திபடைத்த தெய்வப் பிறவி” என்று சொன்னார்
கள். **11** அவன் தன்னுடைய மாயமந்திரங்கள் மூலம் ரொம்பக் காலமா
கவே மக்களைப் பிரமிக்க வைத்திருந்ததால், அவன் சொன்னதைக்
கவனித்து கேட்டார்கள். **12** ஆனால், கடவுளுடைய அரசாங்கத்தையும்[a]
இயேசு கிறிஸ்துவின் பெயரையும் பற்றிய நல்ல செய்தியை பிலிப்பு சொன்
னபோது, ஆண்களும் பெண்களும் நம்பிக்கை வைத்து ஞானஸ்நானம்
எடுத்தார்கள்.[b] **13** சீமோனும்கூட இயேசுவின் சீஷனாக ஆனான்; அவன்
ஞானஸ்நானம் எடுத்த பின்பு, எப்போதும் பிலிப்புவோடு[c] இருந்தான்;
அடையாளங்களும் மாபெரும் அற்புதங்களும்* நடப்பதைப் பார்த்துப் பிர
மித்துப்போனான்.

14 கடவுளுடைய வார்த்தையை சமாரியர்கள் ஏற்றுக்கொண்ட செய்
தியை எருசலேமில் இருந்த அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டபோது,[d]
பேதுருவையும் யோவானையும் அவர்களிடம் அனுப்பினார்கள். **15** அந்த
இரண்டு பேரும் அங்கே போய், கடவுளுடைய சக்தி சமாரியர்களுக்குக்
கிடைக்க வேண்டுமென்று ஜெபம் செய்தார்கள்.[e] **16** அதுவரை அவர்க
ளில் யாருக்கும் கடவுளுடைய சக்தி கிடைக்கவில்லை; எஜமானாகிய
இயேசுவின் பெயரில் ஞானஸ்நானம் மட்டுமே எடுத்திருந்தார்கள்.[f]
17 அதனால், அவர்கள் இரண்டு பேரும் சமாரியர்கள்மேல் கைகளை வைத்
தார்கள்;[g] அப்போது, கடவுளுடைய சக்தியை அவர்கள் பெற்றுக்கொண்
டார்கள்.

18 அப்போஸ்தலர்கள் யார்மேல் கைகளை வைக்கிறார்களோ அவர்க
ளுக்குக் கடவுளுடைய சக்தி கிடைப்பதை சீமோன் பார்த்தபோது அவர்க
ளிடம் பணத்தைக் கொண்டுவந்து, **19** “நானும் யார்மேல் கைகளை வைக்
கிறேனோ அவர்களுக்குக் கடவுளுடைய சக்தி கிடைக்கும்படி எனக்கும்
இந்த அதிகாரத்தைக் கொடுங்கள்” என்று கேட்டான். **20** ஆனால் பேதுரு
அவனிடம், “கடவுள் தரும் இலவச அன்பளிப்பைப் பணம் கொடுத்து
வாங்கலாம் என்று நீ நினைத்ததால் உன் பணம் உன்னோடு அழிந்துபோ
கட்டும்.[h] **21** உன் உள்ளம் கடவுளுடைய பார்வையில் நேர்மையாக இல்
லாததால், இதில் உனக்குப் பங்கும் கிடையாது, பாகமும் கிடையாது.
22 உன்னுடைய கெட்ட குணத்தைவிட்டு மனம் திருந்து; உன் உள்ளத்தில்
தோன்றிய பொல்லாத எண்ணத்துக்காக மன்னிப்பு கேட்டு யெகோவா
விடம்* மன்றாடு, ஒருவேளை அவர் உன்னை மன்னிக்கலாம். **23** நீ
கசப்பான விஷம்!* அநீதிக்கு அடிமை!” என்றார். **24** அதற்கு சீமோன்,
“நீங்கள் சொன்ன எதுவும் எனக்கு நடந்துவிடாதபடி தயவுசெய்து எனக்காக
யெகோவாவிடம்* மன்றாடுங்கள்” என்று கேட்டுக்கொண்டான்.

25 பின்பு, யெகோவாவின்* வார்த்தையைப் பற்றி அவர்கள் முழுமையா
கச் சாட்சி கொடுத்துவிட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்; வழியில்
சமாரியர்களுடைய பல கிராமங்களில் நல்ல செய்தியை அறிவித்தார்கள்.[i]

8:13 * நே.மொ., “வல்லமையான செயல்களும்.” **8:22, 24, 25** * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **8:23** * நே.மொ., “பித்தநீர்.”

அதி. 8
a லூ 8:1
b மத் 28:19; அப் 18:8
c அப் 6:5
d அப் 11:1
e மத் 16:19
f அப் 10:47, 48; அப் 19:2, 3
g அப் 6:5, 6; அப் 19:6; 2தீ 1:6
h மத் 10:8; அப் 10:45
i மத் 9:35; அப் 1:8

அதி. 8

26 பின்பு பிலிப்புவிடம் யெகோவாவின்* தூதர்,[a] “நீ எழுந்து, எருசலே
மிலிருந்து காசாவுக்குப் போகும் பாதையில் தெற்கு நோக்கிப் போ” என்று
சொன்னார். (இது ஒரு பாலைவனப் பாதை.) **27** அதன்படியே அவர்
எழுந்து போனார்; அப்போது, எத்தியோப்பியர்களுடைய ராணியின்*
சொத்துகள் எல்லாவற்றையும் நிர்வகித்த எத்தியோப்பிய அதிகாரி# ஒருவர்
கடவுளை வணங்குவதற்காக எருசலேமுக்குப் போய்விட்டு,[b] **28** திரும்பி
வந்துகொண்டிருந்தார். ரதத்தில் உட்கார்ந்தபடி ஏசாயாவின் தீர்க்கதரிச
னத்தை அவர் சத்தமாக வாசித்துக்கொண்டிருந்தார். **29** அப்போது
கடவுளுடைய சக்தி பிலிப்புவிடம், “நீ ஓடிப்போய் அந்த ரதத்தோடு சேர்ந்
துகொள்” என்று சொன்னது. **30** பிலிப்பு அந்த ரதத்தோடு சேர்ந்து ஓடி
யபோது, ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை அந்த அதிகாரி சத்தமாக வாசித்
துக்கொண்டிருப்பதைக் கேட்டார்; அப்போது அவரிடம், “நீங்கள் வாசிப்பது
உங்களுக்குப் புரிகிறதா?” என்று கேட்டார். **31** அதற்கு அவர், “ஒருவர்
கற்றுக்கொடுக்காவிட்டால் எனக்கு எப்படிப் புரியும்?” என்று சொல்லி, தன்
னோடு வந்து உட்காரும்படி பிலிப்புவைக் கேட்டுக்கொண்டார். **32** அவர்
சத்தமாக வாசித்துக்கொண்டிருந்த வேதவசனங்கள் இவைதான்: “வெட்டப்
படுவதற்காகக் கொண்டுபோகப்படும் ஆட்டைப் போலவும், மயிர் கத்த
ரிப்பவன் முன்னால் அமைதியாக இருக்கிற ஆட்டுக்குட்டியைப் போலவும்
அவர் வாயே திறக்கவில்லை.[c] **33** அவர் அவமானப்படுத்தப்பட்டபோது,
அநியாயமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டார்.[d] அவருடைய வம்சத்தின் விவ
ரங்களைப் பற்றி யார் சொல்வார்கள்? அவருடைய உயிர் இந்தப் பூமியிலி
ருந்து எடுக்கப்பட்டுவிட்டதே.”[e]

34 பிலிப்புவிடம் அந்த அதிகாரி, “தீர்க்கதரிசி இதில் யாரைப்
பற்றிச் சொல்கிறார்? தன்னைப் பற்றியா வேறொருவரைப் பற்றியா? தயவு
செய்து எனக்குச் சொல்லுங்கள்” என்று கேட்டார். **35** அப்போது பிலிப்பு
பேச ஆரம்பித்தார்; அந்த வேதவசனத்திலிருந்து ஆரம்பித்து, இயேசு
வைப் பற்றிய நல்ல செய்தியை அவருக்கு அறிவித்தார். **36** அவர்கள்
அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது, தண்ணீர் இருக்கிற ஓர்
இடத்துக்கு வந்தார்கள்; அப்போது அந்த அதிகாரி, “இதோ, இங்கே
தண்ணீர் இருக்கிறது! ஞானஸ்நானம் எடுக்க இனி எனக்கு என்ன தடை?”
என்று கேட்டார். **37** *— **38** உடனே, ரதத்தை நிறுத்தச்சொல்லி உத்தர
விட்டார்; அப்போது, அவரும் பிலிப்புவும் தண்ணீருக்குள் இறங்கினார்கள்.
அவருக்கு பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்தார். **39** அவர்கள் தண்ணீருக்
குள்ளிருந்து வெளியே வந்தபோது, யெகோவாவின்* சக்தி பிலிப்புவை
உடனடியாக வேறொரு இடத்துக்கு வழிநடத்தியது; அதற்குப் பின்பு, அந்த
அதிகாரி அவரைப் பார்க்கவில்லை; இருந்தாலும், அவர் சந்தோஷமா
கத் தன் வழியில் போனார். **40** பிலிப்புவோ அஸ்தோத்துக்குப் போனார்.
அங்கிருந்து அவர் செசரியாவுக்குப்[f] போய்ச் சேரும்வரை, வழியில்
இருக்கிற எல்லா நகரங்களிலும் நல்ல செய்தியை அறிவித்துக்கொண்டே
போனார்.

8:26, 39 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **8:27** * கிரேக்கில், “கந்தாகே” என்ற பட்டப் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எத்தியோப்பிய ராணிகள் பலருக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர். # நே.மொ., “அண்ணகர்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **8:37** * இணைப்பு A3-ஐப் பாருங்கள்.

a எபி 1:7, 14; வெளி 14:6
b 2நா 6:32, 33
c 1பே 2:23
d மத் 26:59
e ஏசா 53:7, 8; தானி 9:26; பிலி 2:8
f அப் 21:8

9 சவுலோ, எஜமானின் சீஷர்களை இன்னமும் மிரட்டிக்கொண்டும்
கொல்லத் துடித்துக்கொண்டும் இருந்தான்.[a] அதனால் அவன் தலை
மைக் குருவிடம் போய், **2** இந்த மார்க்கத்தை*[b] சேர்ந்த ஆண்களையும்
பெண்களையும் தமஸ்கு நகரத்திலிருந்து எருசலேமுக்குக் கட்டியிழுத்து
வருவதற்காக, அந்த நகரத்திலிருந்த ஜெபக்கூடங்களுக்குக் கொடுக்க அனு
மதிக் கடிதங்களைக் கேட்டு வாங்கினான்.

3 பின்பு, அங்கிருந்து புறப்பட்டு தமஸ்குவை நெருங்கிக்கொண்டி
ருந்தான்; அப்போது, திடீரென்று வானத்திலிருந்து ஓர் ஒளி தோன்றி அவ
னைச் சுற்றிப் பிரகாசித்தது.[c] **4** அவன் தரையில் விழுந்தான்; அப்போது,
“சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?” என்று தன்னோடு
பேசுகிற ஒரு குரலைக் கேட்டான். **5** அதற்கு அவன், “எஜமானே, நீங்கள்
யார்?” என்றான். அப்போது அவர், “நீ துன்புறுத்துகிற[d] இயேசு நான்தான்.[e]
6 நீ எழுந்து நகரத்துக்குள் போ; நீ என்ன செய்ய வேண்டுமென்று அங்கே
உனக்குச் சொல்லப்படும்” என்றார். **7** அவனோடு பயணம் செய்த ஆட்
கள் வாயடைத்து நின்றார்கள். அவர்கள் அந்தக் குரலின் சத்தத்தைக் கேட்
டார்கள், ஆனால் எந்த மனிதனையும் பார்க்கவில்லை.[f] **8** சவுல் தரையி
லிருந்து எழுந்தான்; அவனுடைய கண்கள் திறந்திருந்தும் அவனால்
எதையும் பார்க்க முடியவில்லை. அதனால், அவனைக் கைத்தாங்கலாக
தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். **9** மூன்று நாட்கள் அவன்
எதையும் பார்க்கவுமில்லை,[g] சாப்பிடவுமில்லை, குடிக்கவுமில்லை.

10 தமஸ்குவில் அனனியா[h] என்ற ஒரு சீஷர் இருந்தார். ஒரு தரிசனத்
தில் எஜமான் அவரை, “அனனியாவே!” என்று கூப்பிட்டார். அதற்கு அவர்,
“இதோ இருக்கிறேன், எஜமானே” என்று சொன்னார். **11** அப்போது எஜ
மான் அவரிடம், “நீ எழுந்து, நேர் தெரு என்ற தெருவுக்குப் போ; யூதாஸ்
என்பவருடைய வீட்டில் தர்சு நகரத்தைச் சேர்ந்த சவுல்[i] என்ற ஒருவன்
இருக்கிறான். அவனைப் போய்ப் பார். அவன் இப்போது ஜெபம் செய்து
கொண்டிருக்கிறான். **12** அனனியா என்ற ஒருவர் வந்து அவன்மேல்
கைகளை வைத்து மறுபடியும் பார்வை தருவது போன்ற ஒரு தரிசனம் அவ
னுக்குக் கிடைத்திருக்கிறது”[j] என்று சொன்னார். **13** அதற்கு அனனியா,
“எஜமானே, இந்த மனுஷன் எருசலேமில் உள்ள பரிசுத்தவான்களுக்குச்
செய்த எல்லா கொடுமைகளைப் பற்றியும் பல பேரிடமிருந்து கேள்விப்பட்
டிருக்கிறேன். **14** உங்கள் பெயரில் நம்பிக்கை வைக்கிற* எல்லாரையும்
கைது செய்ய முதன்மை குருமார்கள் அவனுக்கு அதிகாரம் கொடுத்திருக்
கிறார்கள்”[k] என்று சொன்னார். **15** ஆனால் எஜமான் அவரிடம், “நீ புறப்
பட்டுப் போ, ஏனென்றால், மற்ற தேசத்து மக்களுக்கும்[l] ராஜாக்களுக்
கும்[m] இஸ்ரவேல் மக்களுக்கும் என்னுடைய பெயரை அறிவிப்பதற்கு
அவனை ஒரு கருவியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.[n] **16** என் பெயருக்
காக அவன் எவ்வளவு கஷ்டப்பட வேண்டுமென்பதை நான் அவனுக்குத்
தெளிவாகக் காட்டுவேன்”[o] என்று சொன்னார்.

17 அதனால், அனனியா அங்கிருந்து புறப்பட்டு அந்த வீட்டுக்குப்
போனார். பின்பு, சவுல்மேல் கைகளை வைத்து, “சவுலே, சகோதரனே, நீ வந்
துகொண்டிருந்த வழியில் உனக்குக் காட்சி கொடுத்த எஜமானாகிய இயேசு

9:2 *சொல் பட்டியலைப் பாருங்கள். **9:14** *நே.மொ., “உங்கள் பெயரில் கூப்பிடுகிற.”

அதி. 9
a அப் 8:3; அப் 22:4; அப் 26:10, 11; கலா 1:13; 1தீ 1:12, 13
b அப் 11:26; அப் 22:4
c அப் 22:6-11; அப் 26:13-18
d மத் 25:45
e 1கொ 15:8
f அப் 22:9
g அப் 13:11
h அப் 22:12
i அப் 21:39; அப் 22:3
j அப் 9:17
k அப் 9:1, 2
l ரோ 1:5; கலா 2:7; 1தீ 2:7
m அப் 26:1; அப் 27:24
n அப் 13:2; ரோ 1:1; 1தீ 1:12
o அப் 20:22, 23; அப் 21:11; 2கொ 11:23-28; கொலோ 1:24; 2தீ 1:12

தான் என்னை அனுப்பியிருக்கிறார், உனக்கு மறுபடியும் பார்வை கிடைப்
பதற்காகவும் நீ கடவுளுடைய சக்தியால் நிரப்பப்படுவதற்காகவும் என்னை
இங்கே அனுப்பியிருக்கிறார்”[a] என்று சொன்னார். **18** உடனே, சவுலு
டைய கண்களிலிருந்து செதில்கள் போன்றவை கீழே விழுந்தன, அப்
போது அவருக்குப் பார்வை கிடைத்தது; அவர் எழுந்துபோய் ஞானஸ்நா
னம் எடுத்தார். **19** பின்பு, சாப்பிட்டுப் பலம் பெற்றார்.

சவுல் தமஸ்குவில் இருந்த சீஷர்களோடு சில நாட்கள் தங்கி,[b]
20 இயேசுதான் கடவுளுடைய மகன் என்று ஜெபக்கூடங்களில் உடனடியா
கப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். **21** அவர் பேசுவதைக் கேட்ட எல்லாரும்
திகைத்துப்போய், “எருசலேமில் இயேசுவின் பெயரில் நம்பிக்கை வைக்கி
றவர்களை* கொடூரமாகத் துன்புறுத்தியவன் இவன்தானே?[c] அவர்களைக்
கைது செய்து முதன்மை குருமார்களிடம் கொண்டுபோவதற்கு இங்கே வந்
தவன் இவன்தானே?”[d] என்று பேசிக்கொண்டார்கள். **22** ஆனால், சவுல்
மேலும் மேலும் வல்லவராகி, இயேசுதான் கிறிஸ்து என்று தமஸ்குவில்
இருந்த யூதர்களுக்குத் தர்க்கரீதியில் நிரூபித்துக்[e] காட்டி, அவர்களைத்
திணறடித்தார்.

23 பல நாட்களுக்குப் பின்பு, சவுலைக் கொல்ல யூதர்கள் ஒன்று
சேர்ந்து சதித்திட்டம் தீட்டினார்கள்.[f] **24** ஆனால், அவர்களுடைய சதித்
திட்டம் சவுலுக்குத் தெரியவந்தது. அவரைக் கொல்வதற்காக நகரவாசல்க
ளைக்கூட ராத்திரி பகலாக அவர்கள் உன்னிப்பாய்க் கண்காணித்தார்கள்.
25 அதனால் ஒருநாள் ராத்திரி, அவருடைய சீஷர்கள் அவரைக் கூட்டிக்
கொண்டுபோய், ஒரு கூடையில் உட்கார வைத்து, நகரத்தின் மதிலிலிருந்த
ஜன்னல் வழியாகக் கீழே இறக்கிவிட்டார்கள்.[g]

26 அவர் எருசலேமுக்கு வந்தபோது,[h] மற்ற சீஷர்களோடு சேர்ந்து
கொள்ள முயற்சி செய்தார். ஆனால், அவர் ஒரு சீஷர் என்பதை நம்பாத
தால் அவர்கள் எல்லாரும் அவரைப் பார்த்துப் பயந்தார்கள். **27** அப்
போது, பர்னபா[i] அவருடைய உதவிக்கு வந்து, அவரை அப்போஸ்தலர்க
ளிடம் கூட்டிக்கொண்டு போனார்; வழியில் சவுலுக்கு எஜமான் காட்சி
கொடுத்ததையும்,[j] அவரோடு பேசியதையும், சவுல் தமஸ்குவில் இருந்த
போது இயேசுவின் பெயரில் தைரியமாகப் பிரசங்கித்ததையும்[k] பற்றி விவர
மாக அவர்களிடம் சொன்னார். **28** சவுல் அவர்கள் கூடவே இருந்து,
எருசலேமின் எல்லா பகுதிகளுக்கும் போய், எஜமானுடைய பெயரில் தைரி
யமாகப் பிரசங்கித்துவந்தார். **29** கிரேக்க மொழி பேசிய யூதர்களிடம்கூட
பிரசங்கித்துக்கொண்டும் வாதாடிக்கொண்டும் இருந்தார். ஆனால் அவர்கள்
சவுலைக் கொல்வதற்கு முயற்சி செய்துவந்தார்கள்.[l] **30** சகோதரர்களுக்கு
இது தெரியவந்தபோது, அவரை செசரியாவுக்குக் கூட்டிக்கொண்டுபோய்
அங்கிருந்து தர்சுவுக்கு[m] அனுப்பி வைத்தார்கள்.

31 பின்பு யூதேயா, கலிலேயா, சமாரியா[n] முழுவதிலும் இருந்த சபை
சமாதானக் காலத்தை அனுபவித்தது, விசுவாசத்திலும் பலப்பட்டு வந்தது.
அதோடு, யெகோவாவுக்கு* பயந்து நடந்ததாலும், அவருடைய சக்தியின்[o]
மூலம் ஆறுதல் பெற்று அதன்படி நடந்ததாலும் சபை வளர்ந்துகொண்டே
போனது.

9:21 * நே.மொ., “இந்தப் பெயரில் கூப்பிடுகிறவர்களை.” **9:31** * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 9
a அப் 22:12, 13
b அப் 26:19, 20
c அப் 8:3; கலா 1:13, 23
d அப் 9:1, 2
e அப் 17:2, 3
f அப் 20:2, 3; அப் 23:12; 2கொ 11:23
g 2கொ 11: 32, 33
h கலா 1:18
i அப் 4:36, 37
j அப் 9:3, 4; 1கொ 9:1
k அப் 9:19, 20
l 2கொ 11: 23, 26
m அப் 11:25; கலா 1:21
n அப் 8:1
o யோவா 14:16

32 பேதுரு எல்லா இடங்களுக்கும் போனபோது, லித்தா ஊரில்[a] வாழ்ந்
துவந்த பரிசுத்தவான்களிடமும் போனார். **33** அங்கே ஐனேயா என்ற ஒரு
வனைப் பார்த்தார்; அவன் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, எட்டு வருஷங்
களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். **34** பேதுரு அவனிடம்,
"ஐனேயாவே, இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்.[b] எழுந்து உன்
படுக்கையை மடித்துவை"[c] என்று சொன்னார். உடனே அவன் எழுந்தான்.
35 லித்தாவிலும் சாரோன் சமவெளியிலும் வாழ்ந்துவந்த எல்லாரும் அவன்
குணமானதைப் பார்த்து, எஜமான்மேல் நம்பிக்கை வைத்தார்கள்.

36 யோப்பா நகரத்தில் தபீத்தாள் என்ற ஒரு சிஷ்யை இருந்தாள்; தபீத்
தாள் என்ற பெயரின் கிரேக்க மொழிபெயர்ப்பு "தொற்காள்."* அவள்
நிறைய நல்ல காரியங்களையும் தானதர்மங்களையும் செய்துவந்தாள்.
37 ஒருநாள் அவள் உடல்நிலை சரியில்லாமல் இறந்துபோனாள். அதனால்
அவளைக் குளிப்பாட்டி, ஒரு மாடி அறையில் வைத்தார்கள். **38** லித்தா
ஊரில் பேதுரு இருக்கிறார் என்பதைச் சீஷர்கள் கேள்விப்பட்டார்கள்.
அது யோப்பா நகரத்துக்குப் பக்கத்தில் இருந்ததால், "தயவுசெய்து சீக்கிர
மாக வாருங்கள்" என்று இரண்டு ஆட்களிடம் சொல்லி அனுப்பினார்கள்.
39 பேதுருவும் புறப்பட்டு அவர்களோடு வந்தார். அவர் வந்து சேர்ந்ததும்,
அவரை அந்த மாடி அறைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள்; விதவைகள்
எல்லாரும் அவரிடம் வந்து, தொற்காள் தங்களோடிருந்த காலத்தில் தைத்துக்
கொடுத்திருந்த நிறைய உடைகளையும் அங்கிகளையும்* காட்டி அழுதார்
கள். **40** பேதுரு எல்லாரையும் வெளியே அனுப்பிவிட்டு,[d] மண்டிபோட்டு
ஜெபம் செய்தார்; பின்பு, அவளுடைய உடலைப் பார்த்து, "தபீத்தாளே,
எழுந்திரு!" என்று சொன்னார். அப்போது அவள் தன்னுடைய கண்களைத்
திறந்தாள், பேதுருவைப் பார்த்ததும் எழுந்து உட்கார்ந்தாள்.[e] **41** அவர்
அவளுக்குக் கைகொடுத்துத் தூக்கிவிட்டார்; பின்பு, பரிசுத்தவான்களையும்
விதவைகளையும் கூப்பிட்டு அவர்களிடம் அவளை உயிரோடு ஒப்படைத்
தார்.[f] **42** யோப்பா நகரம் முழுவதும் இந்தச் செய்தி பரவியது; நிறைய பேர்
எஜமானின் சீஷர்களானார்கள்.[g] **43** அதன் பின்பு, தோல் பதனிடுபவரான
சீமோன் என்பவரோடு யோப்பாவில் பேதுரு பல நாட்கள் தங்கினார்.[h]

10 செசரியாவில் கொர்நேலியு என்ற ஒருவர் இருந்தார். அவர் இத்தா
லியப் பிரிவு* என்ற படைப்பிரிவில் ஓர் அதிகாரியாக# இருந்தார்.
2 அவர் கடவுள்பக்தி உள்ளவர்; தன் வீட்டிலிருந்த எல்லாரோடும் சேர்ந்து
கடவுளுக்குப் பயந்து நடந்தார். மக்களுக்குப் பல தானதர்மங்கள் செய்தார்.
எப்போதும் கடவுளிடம் மன்றாடிவந்தார். **3** ஒருநாள் சுமார் ஒன்பதாம்
மணிநேரத்தில்*[i] அவர் ஒரு தரிசனத்தைப் பார்த்தார்; அது மிகவும் தெளி
வாக இருந்தது. அதில் ஒரு தேவதூதர் அவரிடம் வந்து, "கொர்நேலியுவே!"
என்று கூப்பிட்டார். **4** அப்போது அவர் அந்தத் தேவதூதரை உற்றுப்
பார்த்து, "என்ன எஜமானே?" என்று பயத்தோடு கேட்டார். அதற்குத் தேவ
தூதர், "உன்னுடைய ஜெபங்களும் தானதர்மங்களும் கடவுளுடைய சன்னி
தியை எட்டியிருக்கின்றன, அவற்றை அவர் ஞாபகத்தில் வைத்திருக்கி

9:36 *"தொற்காள்" என்ற கிரேக்க பெயருக்கும் "தபீத்தாள்" என்ற அரமேயிக் பெய
ருக்கும் "நவ்வி மான்" என்று அர்த்தம். **9:39** *வே.வா., "மேலங்கிகளையும்." **10:1**
*600 வீரர்களைக் கொண்ட ரோமப் படைப்பிரிவு. #அதாவது, "நூறு வீரர்களுக்கு
அதிகாரியாக." **10:3** *அதாவது, "மதியம் சுமார் 3 மணிக்கு."

அதி. 9
a அப் 9:38
b மத் 10:8; அப் 4:9, 10
c அப் 3:6
d லூ 8:51
e மத் 9:24, 25; லூ 7:14, 15; யோவா 11:43, 44
f 1ரா 17:23
g யோவா 11:44, 45
h அப் 10:6, 32

அதி. 10
i அப் 3:1

அதி. 10
a சங் 65:2
b அப் 11:5-10
c லேவி 11:4, லேவி 11:13-20, லேவி 20:25, உபா 14:3, 19, எசே 4:14
d அப் 11:11
e அப் 13:2, அப் 15:28, அப் 16:6, அப் 20:23
f அப் 10:1

றார்.[a] **5** இப்போது நீ யோப்பாவுக்கு ஆட்களை அனுப்பி, பேதுரு என்று
அழைக்கப்படும் சீமோனைக் கூட்டிக்கொண்டு வா. **6** தோல் பதனிடுபவ
ரான சீமோனின் வீட்டில் அவர் விருந்தாளியாகத் தங்கியிருக்கிறார்; அந்த
வீடு கடலோரத்தில் இருக்கிறது" என்று சொன்னார். **7** அந்தத் தேவதூதர்
மறைந்தவுடனே, அவர் தன்னுடைய வேலைக்காரர்களில் இரண்டு பேரை
யும், தன்னுடைய படைவீரர்களில் கடவுள்பக்தி உள்ள ஒருவரையும் கூப்
பிட்டு, **8** நடந்த எல்லாவற்றையும் சொல்லி, அவர்களை யோப்பாவுக்கு
அனுப்பினார்.

9 அவர்களும் புறப்பட்டுப் போனார்கள்; அடுத்த நாள் அவர்கள் அந்த
நகரத்தை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில், பேதுரு ஜெபம் செய்வ
தற்காகச் சுமார் ஆறாம் மணிநேரத்தின்போது* வீட்டு மாடிக்குப் போனார்.
10 அவர் மிகவும் பசியாக இருந்ததால் சாப்பிட விரும்பினார். சாப்
பாடு தயாராகிக்கொண்டிருந்த நேரத்தில் அவர் ஒரு தரிசனத்தைப் பார்த்
தார்.*[b] **11** வானம் திறந்திருப்பதையும், பெரிய நாரிழை* விரிப்பைப்
போன்ற ஒன்று நான்கு முனைகளில் கட்டப்பட்டு பூமியில் இறக்கிவிடப்ப
டுவதையும் பார்த்தார். **12** பூமியில் இருக்கிற எல்லா வகையான நான்கு
கால் விலங்குகளும் ஊரும் பிராணிகளும் வானத்துப் பறவைகளும் அதில்
இருந்தன. **13** அப்போது, "பேதுருவே, நீ எழுந்து இவற்றை அடித்துச் சாப்
பிடு!" என்ற குரல் கேட்டது. **14** ஆனால் பேதுரு, "வேண்டவே வேண்
டாம் எஜமானே, தீட்டானதையும் அசுத்தமானதையும் நான் ஒருபோதும்
சாப்பிட்டதில்லை"[c] என்று சொன்னார். **15** அந்தக் குரல் இரண்டாவது
தடவை அவரிடம், "கடவுள் சுத்தமாக்கியவற்றைத் தீட்டென்று சொல்லாதே"
என்றது. **16** மூன்றாவது தடவையும் அந்தக் குரல் கேட்டது. உடனடியாக
அந்த விரிப்பு வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

17 பேதுரு தான் பார்த்த தரிசனத்தின் அர்த்தம் புரியாமல் குழம்பிக்
கொண்டிருந்த சமயத்தில், கொர்நேலியு அனுப்பிய ஆட்கள் சீமோனுடைய
வீட்டை விசாரித்துக்கொண்டே அந்த வீட்டு வாசலில் வந்து நின்றார்கள்.[d]
18 பின்பு, பேதுரு என்று அழைக்கப்படும் சீமோன் அங்கே விருந்தாளியா
கத் தங்கியிருக்கிறாரா என்று அந்த வீட்டில் இருந்தவரைக் கூப்பிட்டுக் கேட்
டார்கள். **19** அந்தத் தரிசனத்தைப் பற்றி பேதுரு யோசித்துக்கொண்டிருந்
தபோது கடவுளுடைய சக்தி[e] அவரிடம், "இதோ! மூன்று பேர்
உன்னைத் தேடி வந்திருக்கிறார்கள். **20** நீ எழுந்து கீழே போய், எதைப் பற்
றியும் சந்தேகப்படாமல் அவர்களோடு புறப்பட்டுப் போ, நான்தான் அவர்
களை அனுப்பியிருக்கிறேன்" என்று சொன்னது. **21** பேதுரு கீழே இறங்கி
வந்து அந்த ஆட்களிடம், "நீங்கள் தேடுகிற ஆள் நான்தான். எதற்காக
இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். **22** அதற்கு அவர்கள், "கொர்
நேலியு[f] என்ற படை அதிகாரி எங்களை அனுப்பியிருக்கிறார்; அவர் ஒரு
நீதிமான், கடவுளுக்குப் பயந்து நடப்பவர், யூதர்கள் எல்லாராலும் உயர்வா
கப் பேசப்படுபவர். உங்களை வீட்டுக்கு வரவழைத்து நீங்கள் சொல்வதைக்
கேட்க வேண்டுமென்று பரிசுத்த தூதர் மூலம் கடவுள் அவருக்குக் கட்டளை
யிட்டிருக்கிறார்" என்று சொன்னார்கள். **23** அதனால், பேதுரு அவர்களை
உள்ளே அழைத்து விருந்தாளிகளாகத் தங்க வைத்தார்.

10:9 * அதாவது, "மதியம் சுமார் 12 மணிக்கு." **10:10** * நே.மொ., "மெய்மறந்த நிலைக்குள்ளானார்." **10:11** * அதாவது, "லினன்."

அடுத்த நாள் அவர்களோடு புறப்பட்டுப் போனார்; யோப்பாவில்
இருந்த சில சகோதரர்களும் அவரோடு போனார்கள். **24** அதற்கு
அடுத்த நாள் அவர் செசரியாவுக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே கொர்நே
லியு தன்னுடைய சொந்தக்காரர்களையும் நெருங்கிய நண்பர்களையும் ஒன்
றுகூட்டி, அவர்களுக்காகக் காத்திருந்தார். **25** பேதுரு வீட்டுக்குள் நுழைந்
ததும், கொர்நேலியு அவரிடம் போய், அவருடைய காலில் விழுந்து
வணங்கினார். **26** அப்போது பேதுரு, "எழுந்திருங்கள்; நானும் ஒரு மனு
ஷன்தான்"[a] என்று சொல்லி அவரைத் தூக்கிவிட்டார். **27** அதன் பின்பு,
அவரோடு பேசிக்கொண்டே உள்ளே போனபோது அங்கே நிறைய பேர்
கூடியிருந்ததைப் பார்த்தார். **28** அப்போது அவர்களிடம், "ஒரு யூதன்
வேறு இனத்தைச் சேர்ந்த ஒருவரைச் சந்திப்பதோ அவரோடு பழகு
வதோ யூத சட்டத்துக்கு எதிரானது என்பது உங்களுக்கே நன்றாகத் தெரி
யும்.[b] ஆனாலும், யாரையும் தீட்டானவர் என்றும், அசுத்தமானவர் என்றும்
சொல்லக் கூடாது என்பதைக் கடவுள் எனக்குக் காட்டியிருக்கிறார்.[c]
29 அதனால், நீங்கள் என்னைக் கூப்பிட்டு அனுப்பியபோது எந்த மறுப்
பும் தெரிவிக்காமல் வந்தேன். இப்போது சொல்லுங்கள், எதற்காக என்
னைக் கூப்பிட்டு அனுப்பினீர்கள்" என்று கேட்டார்.

30 அதற்கு கொர்நேலியு, "நான்கு நாட்களுக்கு முன்பு இதே நேரத்
தில், ஒன்பதாம் மணிநேரத்தில்,* நான் என்னுடைய வீட்டில் ஜெபம் செய்
துகொண்டிருந்தேன். அப்போது, பிரகாசமான உடையில் ஒருவர் என்
முன்னால் வந்து நின்றார். **31** அவர் என்னிடம், 'கொர்நேலியுவே, உன்னு
டைய ஜெபத்தைக் கடவுள் கேட்டிருக்கிறார், நீ செய்த தானதர்மங்களையும்
ஞாபகத்தில் வைத்திருக்கிறார். **32** அதனால் நீ யோப்பாவுக்கு ஆட்களை
அனுப்பி, பேதுரு என்று அழைக்கப்படும் சீமோனைக் கூட்டிக்கொண்டு
வா. தோல் பதனிடுபவரான சீமோனுடைய வீட்டில் அவர் விருந்தாளியா
கத் தங்கியிருக்கிறார்.[d] அந்த வீடு கடலோரத்தில் இருக்கிறது' என்று சொன்
னார். **33** உடனே உங்களிடம் ஆட்களை அனுப்பினேன். நீங்களும்
பெரியமனதுபண்ணி இங்கே வந்தீர்கள். எங்களுக்குச் சொல்லச் சொல்லி
யெகோவா* உங்களுக்குக் கட்டளையிட்ட எல்லா விஷயங்களையும்
கேட்பதற்கு நாங்கள் எல்லாரும் இப்போது அவர் முன்னால் கூடியிருக்கி
றோம்" என்று சொன்னார்.

34 அப்போது பேதுரு பேச ஆரம்பித்து, "கடவுள் பாரபட்சம் காட்டா
தவர்[e] என்பதையும், **35** அவருக்குப் பயந்து சரியானதைச் செய்கிறவன்
எந்தத் தேசத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவனை அவர் ஏற்றுக்
கொள்கிறார்[f] என்பதையும் இப்போது நான் நன்றாகப் புரிந்துகொண்
டேன். **36** இயேசு கிறிஸ்துவின் மூலம் அவர் சமாதானத்தின் நல்ல செய்
தியை[g] அறிவித்து, இஸ்ரவேல் மக்களுக்குத் தெரிவித்த விஷயம்
இதுதான்: கிறிஸ்துவே எல்லாருக்கும் எஜமான்.[h] **37** ஞானஸ்நானத்தைப்
பற்றி யோவான் பிரசங்கித்த பின்பு கலிலேயா[i] தொடங்கி யூதேயா முழுவ
தும் என்ன விஷயம் பேசப்பட்டதென்று உங்களுக்கே தெரியும். **38** நாச
ரேத்தைச் சேர்ந்த இயேசுவைக் கடவுள் தன்னுடைய சக்தியாலும்[j] வல்ல
மையாலும் அபிஷேகம் செய்ததையும், கடவுள் அவரோடு இருந்ததால்[k]

10:30 *அதாவது, "மதியம் சுமார் 3 மணிக்கு." **10:33** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 10
a லூ 4:8; அப் 14:12-15; வெளி 19:10; வெளி 22:8, 9
b யோவா 18:28
c அப் 10:45; எபே 3:5, 6
d அப் 9:43
e உபா 10:17; 2நா 19:7; ரோ 2:11
f ரோ 2:13; 1கொ 12:13; கலா 3:28
g ஏசா 52:7; நாகூ 1:15
h மத் 28:18; ரோ 14:9; வெளி 19:11, 16
i லூ 4:14
j ஏசா 11:2; ஏசா 42:1; ஏசா 61:1; மத் 3:16
k யோவா 3:1, 2

அவர் தேசம் முழுவதும் போய் நன்மைகள் செய்ததையும், பிசாசின் கொடு
மைக்கு ஆளான[a] எல்லாரையும் குணப்படுத்தியதையும் பற்றிப் பேசப்பட்
டதெல்லாம் உங்களுக்கே தெரியும். **39** யூதர்களுடைய தேசத்திலும் எருச
லேம் நகரத்திலும் அவர் செய்த எல்லா காரியங்களுக்கும் நாங்கள்
சாட்சிகளாக இருக்கிறோம். ஆனால், அவர்கள் அவரை மரக் கம்பத்தில்*
அறைந்து# கொன்றார்கள். **40** கடவுள் அவரை மூன்றாம் நாளில் உயி
ரோடு எழுப்பி,[b] மக்கள்முன் தோன்ற வைத்தார். **41** ஆனால் எல்லா மக்
களுக்கும் அல்ல, தான் முன்கூட்டியே நியமித்த சாட்சிகள்முன், அதாவது
இயேசு உயிரோடு எழுந்த பின்பு அவரோடு சாப்பிட்டுக் குடித்த எங்கள்
முன்,[c] தோன்ற வைத்தார். **42** அதோடு, உயிருள்ளவர்களுக்கும் இறந்த
வர்களுக்கும் அவரையே நீதிபதியாக நியமித்தார்[d] என்ற விஷயத்தை மக்
களிடம் பிரசங்கிக்க வேண்டும் என்றும், முழுமையாகச் சாட்சி கொடுக்க
வேண்டும் என்றும் இயேசு எங்களுக்குக் கட்டளையிட்டார்.[e] **43** அவர்
மேல் விசுவாசம் வைக்கிற எல்லாருக்கும் அவருடைய பெயரால் பாவ மன்
னிப்பு கிடைக்கும்[f] என்று எல்லா தீர்க்கதரிசிகளும் அவரைப் பற்றிச் சாட்சி
சொல்லியிருக்கிறார்கள்”[g] என்றார்.

44 பேதுரு இந்த விஷயங்களைப் பேசப் பேசவே, அதைக் கேட்
டுக்கொண்டிருந்த எல்லார்மேலும் கடவுளுடைய சக்தி பொழியப்பட்டது.[h]
45 கடவுளுடைய இலவச அன்பளிப்பாகிய அவருடைய சக்தி மற்ற
தேசத்து மக்கள்மேலும்* பொழியப்பட்டதை பேதுருவோடு வந்திருந்த
விருத்தசேதனம் செய்யப்பட்ட சீஷர்கள்# பார்த்து மிகவும் ஆச்சரியப்
பட்டார்கள். **46** ஏனென்றால், அந்த மக்கள் வெவ்வேறு மொழிகளில்
பேசி கடவுளை மகிமைப்படுத்துவதை அவர்கள் கேட்டார்கள்.[i] அப்
போது பேதுரு, **47** “நம்மைப் போலவே கடவுளுடைய சக்தியைப் பெற்றுக்
கொண்ட இவர்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் எடுப்பதை யாராவது தடுக்க
முடியுமா?”[j] என்று சொல்லி, **48** இயேசு கிறிஸ்துவின் பெயரில் ஞானஸ்நா
னம் எடுக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.[k] பின்பு, சில நாட்கள்
அங்கே தங்கச் சொல்லி அவர்கள் அவரைக் கேட்டுக்கொண்டார்கள்.

11 மற்ற தேசத்து மக்களும் கடவுளுடைய வார்த்தையை ஏற்றுக்
கொண்டார்கள் என்பதை யூதேயாவிலிருந்த அப்போஸ்தலர்களும்
மற்ற சகோதரர்களும் கேள்விப்பட்டார்கள். **2** அதனால், பேதுரு எருசலே
முக்கு வந்தபோது விருத்தசேதனத்தை ஆதரித்தவர்கள்[l] அவரிடம் போய்,
3 “விருத்தசேதனம் செய்யாதவர்களுடைய வீட்டுக்குப் போய், அவர்க
ளோடு சேர்ந்து சாப்பிட்டீர்களே” என்று அவரைக் குறை சொல்ல* ஆரம்
பித்தார்கள். **4** அப்போது பேதுரு, நடந்த விஷயங்களை அவர்களுக்கு
விவரமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

5 “யோப்பா நகரத்தில் நான் ஜெபம் செய்துகொண்டிருந்தபோது ஒரு தரி
சனத்தைப் பார்த்தேன்.* பெரிய நாரிழை# விரிப்பைப் போன்ற ஒன்று
நான்கு முனைகளில் கட்டப்பட்டு வானத்திலிருந்து இறக்கிவிடப்பட்டு என்
பக்கத்திலேயே வந்தது.[m] **6** அதை நான் உற்றுப் பார்த்தபோது, பூமியில்

அதி. 10
a லூ 13:16
b யோனா 1:17; யோனா 2:10; அப் 2:23, 24
c லூ 24:30, 31; யோவா 21:13, 14
d அப் 17:31; ரோ 14:9; 2கொ 5:10; 2தீ 4:1; 1பே 4:5
e மத் 28:19, 20; அப் 1:8
f ஏசா 53:11; எரே 31:34; தானி 9:24
g லூ 24:27; வெளி 19:10
h அப் 4:31; அப் 8:14, 15
i அப் 2:1, 4; அப் 19:6
j மத் 3:11; அப் 8:36; அப் 11:17
k மத் 16:19; அப் 2:38

அதி. 11
l அப் 10:45; கலா 2:12
m அப் 10:10-16

10:39 * வே.வா., “மரத்தில்.” # நே.மொ., “தொங்கவிட்டு.” **10:45** * அதாவது, “யூதரல்லாதவர்கள்மேலும்.” # வே.வா., “உண்மையுள்ள ஆட்கள்.” **11:3** * வே.வா., “அவருடன் வாக்குவாதம் செய்ய.” **11:5** * நே.மொ., “மெய்மறந்த நிலையில் பார்த்தேன்.” # அதாவது, “லினன்.”

இருக்கிற நான்கு கால் விலங்குகளும் கொடிய மிருகங்களும் ஊரும் பிரா
ணிகளும் வானத்துப் பறவைகளும் அதில் இருந்தன. **7** அப்போது, ‘பேது
ருவே, நீ எழுந்து இவற்றை அடித்துச் சாப்பிடு!’ என்று ஒரு குரல் கேட்டது.
8 ஆனால் நான், ‘வேண்டவே வேண்டாம், எஜமானே. தீட்டானதோ அசுத்
தமானதோ ஒருபோதும் என் வாய்க்குள் போனதில்லை’ என்று சொன்
னேன். **9** வானத்திலிருந்து அந்தக் குரல் இரண்டாவது தடவை என்னிடம்,
‘கடவுள் சுத்தமாக்கியவற்றைத் தீட்டென்று சொல்லாதே’ என்றது. **10** மூன்
றாவது தடவையும் அந்தக் குரல் கேட்டது. பின்பு, எல்லாமே திரும்ப வானத்
துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. **11** அந்தச் சமயம் பார்த்து, செசரியாவி
லிருந்து என்னிடம் அனுப்பப்பட்ட மூன்று ஆட்கள் நாங்கள் தங்கியிருந்த
வீட்டுக்கு முன்னால் வந்து நின்றார்கள்.[a] **12** எதைப் பற்றியும் சந்தேகப்ப
டாமல் அவர்களோடு புறப்பட்டுப் போகும்படி கடவுளுடைய சக்தி என்னி
டம் சொன்னது. இந்த ஆறு சகோதரர்களும் என்னோடு வந்தார்கள். நாங்
கள் அந்த மனுஷருடைய வீட்டுக்குள் போனோம்.

13 ஒரு தேவதூதர் தன்னுடைய வீட்டில் வந்து நின்றதைப் பார்த்ததாக
வும், அந்தத் தேவதூதர் அவரிடம், ‘யோப்பாவுக்கு ஆட்களை அனுப்பி
பேதுரு என்று அழைக்கப்படும் சீமோனைக் கூட்டிக்கொண்டு வா.[b]
14 நீயும் உன் வீட்டில் இருப்பவர்களும் மீட்புப் பெறுவதற்கு என்ன செய்ய
வேண்டுமென்று அவர் உனக்குச் சொல்வார்’ என்று சொன்னதாகவும் அவர்
எங்களிடம் தெரிவித்தார். **15** ஆனால் நான் பேச ஆரம்பித்தபோது,
கடவுளுடைய சக்தி முதலில் நம்மேல் எப்படிப் பொழியப்பட்டதோ[c] அப்
படியே அவர்கள்மேலும் பொழியப்பட்டது. **16** ‘யோவான் தண்ணீரால்
ஞானஸ்நானம் கொடுத்தார்.[d] ஆனால் நீங்கள் கடவுளுடைய சக்தியால்
ஞானஸ்நானம் பெறுவீர்கள்’[e] என்று எஜமான் சொல்லிவந்த வார்த்தைகள்
அப்போது என்னுடைய ஞாபகத்துக்கு வந்தன. **17** எஜமானாகிய இயேசு
கிறிஸ்துமேல் நம்பிக்கை வைத்திருக்கிற நமக்குக் கொடுக்கப்பட்ட அதே
இலவச அன்பளிப்பைக் கடவுள் அவர்களுக்கும் கொடுத்தார் என்றால், கட
வுளைத் தடுக்க* நான் யார்?”[f] என்றார்.

18 அவர்கள் இதையெல்லாம் கேட்டபோது எதிர்ப்புத் தெரிவிப்பதை
நிறுத்திவிட்டு,* “அப்படியென்றால், மற்ற தேசத்து மக்களும் வாழ்வு பெற
வேண்டும் என்பதற்காக மனம் திருந்துகிற வாய்ப்பைக் கடவுள் அவர்க
ளுக்கும் கொடுத்திருக்கிறார்”[g] என்று சொல்லி கடவுளை மகிமைப்படுத்தி
னார்கள்.

19 ஸ்தேவானுடைய மரணத்துக்குப் பின்பு துன்புறுத்தல் வந்ததால்,
பெனிக்கே, சீப்புரு, அந்தியோகியா ஆகிய இடங்கள்வரை சீஷர்கள் சித
றிப்போயிருந்தார்கள்.[h] அவர்கள் யூதர்களுக்கு மட்டுமே கடவுளுடைய
வார்த்தையைப் பற்றி அறிவித்தார்கள்.[i] **20** ஆனால் அவர்களில் சீப்புரு,
சிரேனே ஆகிய இடங்களைச் சேர்ந்த சிலர் அந்தியோகியாவுக்கு வந்து
எஜமானாகிய இயேசுவைப் பற்றிய நல்ல செய்தியைக் கிரேக்க மொழி
பேசிய மக்களுக்குச் சொல்ல ஆரம்பித்தார்கள். **21** யெகோவாவின்*
கை அவர்களோடு இருந்தது. ஏராளமான மக்கள் எஜமானின் சீஷர்களா
னார்கள்.[j]

11:17 *வே.வா., “கடவுளுடைய பாதையில் குறுக்கே நிற்க.” **11:18** *நே.மொ., “அமைதியாகிவிட்டு.” **11:21** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 11
a அப் 10:17-20
b அப் 10:30-33
c அப் 2:1, 4; அப் 10:44, 45
d மத் 3:11; மாற் 1:8; லூ 3:16; அப் 1:5
e யோவே 2:28; யோவா 1:33; அப் 2:17
f அப் 10:47
g ஏசா 11:10; அப் 17:30; ரோ 10:12; ரோ 15:8, 9
h அப் 8:1
i மத் 10:5, 6
j அப் 2:47; அப் 9:35

22 அவர்களைப் பற்றிய செய்தி எருசலேமில் இருந்த சபையாரின்
காதுக்கு எட்டியது. அதனால், பர்னபாவை[a] அந்தியோகியாவரை போகச்
சொல்லி அனுப்பி வைத்தார்கள். **23** அவர் அங்கே போய்ச் சேர்ந்த
போது, கடவுளுடைய அளவற்ற கருணையைப் பார்த்து சந்தோஷப்பட்
டார். இதயத்தில் உறுதியோடு எஜமானுக்குத் தொடர்ந்து உண்மையாக
இருக்கும்படி எல்லாரையும் உற்சாகப்படுத்தினார்.[b] **24** பர்னபா நல்லவ
ராக, கடவுளுடைய சக்தியும் விசுவாசமும் நிறைந்தவராக இருந்தார். ஏரா
ளமான ஆட்கள் எஜமான்மேல் நம்பிக்கை வைத்தார்கள்.[c] **25** பின்பு,
சவுலை மும்முரமாகத் தேடிக் கண்டுபிடிக்க பர்னபா தர்சுவுக்குப் போனார்.[d]
26 சவுலைக் கண்டுபிடித்த பின்பு அந்தியோகியாவுக்குக் கூட்டிக்கொண்டு
வந்தார். பிறகு அவர்கள் ஒரு வருஷம் முழுவதும் அந்தச் சபையாரோடு
கூடி, ஏராளமான மக்களுக்குக் கற்பித்தார்கள். தெய்வீக வழிநடத்துதலால்,
சீஷர்கள் முதன்முதலாக அந்தியோகியாவில்தான் கிறிஸ்தவர்கள்[e] என்று
அழைக்கப்பட்டார்கள்.

27 அந்த நாட்களில், சில தீர்க்கதரிசிகள்[f] எருசலேமிலிருந்து அந்தியோ
கியாவுக்கு வந்தார்கள். **28** அவர்களில் அகபு[g] என்ற ஒருவர், உலகம்
முழுவதும் கொடிய பஞ்சம் வரப்போகிறது என்று கடவுளுடைய சக்தியால்
முன்னறிவித்தார்.[h] அதன்படியே கிலவுதியு அரசனின் காலத்தில் நடந்
தது. **29** அப்போது, சீஷர்கள் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த நிவா
ரண உதவிகளை[i] யூதேயாவில் இருந்த சகோதரர்களுக்குச் செய்ய வேண்டு
மென்று தீர்மானித்தார்கள்.[j] **30** அதன்படியே, நிவாரணப் பொருள்களை
பர்னபாவிடமும் சவுலிடமும் கொடுத்து அங்கிருந்த மூப்பர்களுக்கு அனுப்
பினார்கள்.[k]

12 கிட்டத்தட்ட அதே காலத்தில், சபையிலிருந்த சிலரை
ஏரோது ராஜா கொடுமைப்படுத்த ஆரம்பித்தான்.[l] **2** யோவானு
டைய சகோதரனாகிய யாக்கோபை[m] வாளால் வெட்டிக் கொன்றான்.[n]
3 அது யூதர்களுக்குச் சந்தோஷம் தந்ததைப் பார்த்து, அடுத்தபடியாக
பேதுருவையும் கைது செய்ய முடிவெடுத்தான். (இது புளிப்பில்லாத ரொட்
டிப் பண்டிகை நாட்களின்போது நடந்தது.)[o] **4** பின்பு, அவரைப் பிடித்துச்
சிறையில் அடைத்தான்;[p] மாறிமாறி அவரைக் காவல்காப்பதற்காக நான்கு
படைவீரர்கள் கொண்ட நான்கு குழுக்களை நியமித்தான். பஸ்கா பண்டிகை
முடிந்த பின்பு அவரை மக்கள் முன்னால் நிறுத்தலாம்* என நினைத்தான்.
5 அதனால், பேதுருவைச் சிறையிலேயே அடைத்து வைத்திருந்தான். அந்
தச் சமயத்தில், சபையிலிருந்த எல்லாரும் அவருக்காகக் கடவுளிடம் உருக்
கமாக ஜெபம் செய்துவந்தார்கள்.[q]

6 அவரை மக்கள் முன்னால் நிறுத்த வேண்டுமென்று ஏரோது
நினைத்திருந்த நாளுக்கு முந்தின ராத்திரி, பேதுரு இரண்டு சங்கிலிகளால்
கட்டப்பட்டு இரண்டு படைவீரர்களுக்கு நடுவே தூங்கிக்கொண்டிருந்தார்.
கதவுக்கு வெளியே காவலர்கள் சிறைச்சாலையைக் காவல் காத்துக்கொண்
டிருந்தார்கள். **7** அப்போது யெகோவாவின்* தூதர் அங்கே வந்து நின்
றார்,[r] அறைக்குள் ஒளி பிரகாசித்தது. அவர் பேதுருவின் முதுகில் தட்டி,
“சீக்கிரம் எழுந்திரு!” என்று சொன்னார். உடனே, அவருடைய

12:4 * வே.வா., “விசாரிக்கலாம்.” **12:7** * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 11
a அப் 4:36, 37
b அப் 13:43; அப் 14:21, 22
c அப் 2:47; அப் 4:4; அப் 5:14; அப் 9:31
d அப் 21:39
e அப் 9:2
f 1கொ 12:28; எபே 4:11
g அப் 21:10, 11
h மத் 24:7
i கலா 2:10
j 2கொ 8:12
k அப் 12:25

அதி. 12
l யோவா 15:20
m மத் 4:21
n மத் 20:20-23; லூ 11:49
o யாத் 12:15; யாத் 23:15; லேவி 23:6
p லூ 21:12
q 2கொ 1:11
r சங் 34:7; எபி 1:7, 14

கைகளிலிருந்து சங்கிலிகள் கழன்று விழுந்தன.[a] **8** தேவதூதர் அவரிடம்,
“புறப்படு,* செருப்பைப் போட்டுக்கொள்” என்று சொன்னார். அவர் அப்ப
டியே செய்தார். பின்பு அவரிடம், “உன் மேலங்கியைப் போட்டுக்கொண்டு,
என் பின்னால் வா” என்று சொன்னார். **9** பேதுரு வெளியே வந்து அவர்
பின்னால் போனார். ஆனால், தேவதூதர் மூலம் நடக்கிற இவையெல்லாம்
நிஜம் என்பதை அவர் உணரவில்லை. ஒரு தரிசனத்தைப் பார்ப்பதா
கவே நினைத்தார். **10** அவர்கள் முதலாம் காவலையும் இரண்டாம் காவ
லையும் கடந்து, நகரத்துக்குப் போகிற வாசலின் இரும்புக் கதவுக்குப் பக்கத்
தில் வந்தார்கள். அப்போது அது தானாகவே திறந்துகொண்டது. அவர்கள்
வெளியே வந்து ஒரு தெரு வழியாக நடந்துபோனார்கள். உடனே, அந்தத்
தேவதூதர் அவரைவிட்டுப் போனார். **11** நடந்ததையெல்லாம் பேதுரு
உணர்ந்துகொண்டதும், “இப்போது எனக்கு நன்றாகப் புரிகிறது, யெகோவா
தான்* தன்னுடைய தூதரை அனுப்பி ஏரோதுவின் கையிலிருந்து என்னை
விடுதலை செய்திருக்கிறார், யூதர்கள் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல்
என்னைக் காப்பாற்றியிருக்கிறார்”[b] என்று சொல்லிக்கொண்டார்.

12 அவர் இதைப் புரிந்துகொண்ட பின்பு, மாற்கு[c] என்று அழைக்
கப்பட்ட யோவானின் அம்மாவான மரியாளுடைய வீட்டுக்குப் போனார்.
அங்கே நிறைய பேர் ஒன்றுகூடி ஜெபம் செய்துகொண்டிருந்தார்கள்.
13 அவர் வாசல் கதவைத் தட்டியபோது, யாரென்று பார்க்க ரோதை என்ற
வேலைக்காரப் பெண் வந்தாள். **14** பேதுருவுடைய குரலென்று தெரிந்தவு
டன், சந்தோஷத்தில் கதவைக்கூட திறக்காமல் உள்ளே ஓடிப்போய், வாச
லில் பேதுரு நின்றுகொண்டிருப்பதாகச் சொன்னாள். **15** அதற்கு அவர்
கள், “உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது” என்று சொன்னார்கள். ஆனால்,
தான் சொல்வது உண்மை என்று அவள் திரும்பத் திரும்பச் சொன்னாள்.
அப்போது அவர்கள், “அவருடைய தூதராக இருக்கலாம்” என்று சொன்னார்
கள். **16** பேதுரு கதவைத் தட்டிக்கொண்டே இருந்தார். அவர்கள் கதவைத்
திறந்தபோது, அவரைப் பார்த்துத் திகைத்துப்போனார்கள். **17** ஆனால்,
அவர்களை அமைதியாக இருக்கும்படி பேதுரு தன் கையால் சைகை
காட்டிவிட்டு, சிறையிலிருந்து யெகோவா* தன்னை விடுதலை செய்ததைப்
பற்றி அவர்களிடம் விவரமாகச் சொன்னார். பின்பு, “இந்த விஷயங்களை
யாக்கோபுக்கும்[d] மற்ற சகோதரர்களுக்கும் தெரிவியுங்கள்” என்று சொல்லி
விட்டு, அங்கிருந்து வேறொரு இடத்துக்குப் போனார்.

18 பொழுது விடிந்தபோது, பேதுருவுக்கு என்ன ஆனதென்று தெரியா
ததால் படைவீரர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. **19** ஏரோது
அவரைத் தீவிரமாகத் தேடினான். ஆனாலும், அவரைக் கண்டுபிடிக்க முடி
யவில்லை. அதனால், காவலர்களை அவன் விசாரித்துவிட்டு, அவர்களை
இழுத்துக்கொண்டுபோய்த் தண்டிக்கச் சொல்லி உத்தரவிட்டான்.[e] பிறகு,
யூதேயாவிலிருந்து செசரியாவுக்குப் போய் அங்கே கொஞ்சக் காலம்
தங்கினான்.

20 தீரு மற்றும் சீதோன் மக்கள்மேல் அவன் பயங்கர கோபமாக
இருந்தான்.* அதனால், அந்த மக்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து அவனி

12:8 *வே.வா., “இடுப்புப்பட்டையைக் கட்டிக்கொள்.” **12:11, 17** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12:20** *வே.வா., “மக்களோடு சண்டை போட நினைத்திருந்தான்.”

அதி. 12
a அப் 5:18, 19
b 2பே 2:9
c அப் 13:5
அப் 15:37, 38
கொலோ 4:10
d மத் 13:55
அப் 15:13
அப் 21:18
1கொ 15:7
கலா 1:19
கலா 2:9
e அப் 16:27

டம் வந்தார்கள். முதலில் ராஜாவின் அந்தரங்க அதிகாரியான பிலாஸ்து
விடம் பக்குவமாகப் பேசி, ராஜாவோடு சமாதானமாவதற்கு முயற்சி செய்
தார்கள். ஏனென்றால், ஏரோதுவின் தேசத்திலிருந்துதான் அவர்களுடைய
தேசத்துக்கு உணவுப் பொருள்கள் வந்தன. **21** ஒருநாள் ஏரோது, ராஜ
உடை போட்டுக்கொண்டு நியாயத்தீர்ப்பு மேடையில் உட்கார்ந்து மக்கள்
முன்னால் பேச ஆரம்பித்தான். **22** அப்போது அங்கே கூடியிருந்த மக்
கள், “இது தெய்வக் குரல்! மனுஷக் குரல் அல்ல!” என்று ஆரவாரம் செய்ய
ஆரம்பித்தார்கள். **23** கடவுளை அவன் மகிமைப்படுத்தாததால், அந்த
நொடியே யெகோவாவின்* தூதர் அவனைத் தாக்கினார். இதனால் அவன்
வியாதிப்பட்டுப் புழுபுழுத்துச் செத்தான்.

24 யெகோவாவின்* வார்த்தை அதிகமதிகமாகப் பரவிவந்தது,[a]
நிறைய பேர் விசுவாசம் வைத்தார்கள்.

25 பர்னபாவும்[b] சவுலும் எருசலேமில் நிவாரணப் பணியை முழுமை
யாக முடித்த பின்பு,[c] மாற்கு என்று அழைக்கப்பட்ட யோவானைக் கூட்டிக்
கொண்டு[d] அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்தார்கள்.

13 அந்தியோகியாவில் இருந்த சபையில்[e] பர்னபாவும், நீகர் என்று
அழைக்கப்பட்ட சிமியோனும், சிரேனே ஊர்க்காரரான லூகியும்,
மாகாண அதிபதியான ஏரோதுவோடு படித்த மனாயீனும், சவுலும் தீர்க்க
தரிசிகளாகவும் போதகர்களாகவும் இருந்தார்கள். **2** அவர்கள் யெகோ
வாவுக்கு* ஊழியம் செய்தும் விரதமிருந்தும் வந்தபோது, “பர்னபாவையும்
சவுலையும் எந்த வேலைக்காக நான் தேர்ந்தெடுத்திருக்கிறேனோ[f] அந்த
வேலைக்காக அவர்களை எனக்கென்று ஒதுக்கிவையுங்கள்”[g] என்று கடவு
ளுடைய சக்தி சொன்னது. **3** அவர்கள் விரதமிருந்து ஜெபம் செய்த பிறகு,
அவர்கள் இரண்டு பேர்மேலும் கைகளை வைத்து அவர்களை அனுப்பி
னார்கள்.

4 இப்படி, கடவுளுடைய சக்தியால் அனுப்பப்பட்ட அந்த இரண்டு
பேரும் செலூக்கியாவுக்குப் போய், அங்கிருந்து சீப்புரு தீவுக்குக் கப்பல்
ஏறினார்கள். **5** அவர்கள் சாலமி நகரத்துக்கு வந்தபோது, யூதர்களுடைய
ஜெபக்கூடங்களில் கடவுளுடைய வார்த்தையை அறிவிக்க ஆரம்பித்தார்
கள். யோவானும் ஓர் உதவியாளராக அவர்களோடு இருந்தார்.[h]

6 அங்கிருந்து அந்தத் தீவு முழுவதும் பயணம் செய்து பாப்போ நக
ரம்வரை போனபோது, பர்யேசு என்ற பெயருடைய ஒரு யூதனைச் சந்தித்
தார்கள்; அவன் ஒரு சூனியக்காரன், போலித் தீர்க்கதரிசி. **7** ரோம மாநில
ஆளுநரான* செர்கியு பவுலோடு அவன் இருந்தான். அந்த ஆளுநர் புத்
திக்கூர்மை உள்ளவராக இருந்தார்; கடவுளுடைய வார்த்தையைக் கேட்க
அந்த ஆளுநர் ஆர்வமாக இருந்ததால் பர்னபாவையும் சவுலையும் தன்
னிடம் வரவழைத்தார். **8** ஆனால், எலிமா என்று அழைக்கப்பட்ட அந்
தச் சூனியக்காரன் (எலிமா என்ற பெயரின் அர்த்தமே சூனியக்காரன் என்
பதுதான்) அவர்களை எதிர்த்துக்கொண்டும், எஜமான்மேல் அந்த ஆளுநர்
நம்பிக்கை வைப்பதைத் தடுக்க முயற்சி செய்துகொண்டும் இருந்தான்.
9 பவுல் என்ற சவுல் கடவுளுடைய சக்தியால் நிறைந்தவராக, அவனை
உற்றுப் பார்த்து, **10** “எல்லா விதமான பித்தலாட்டமும் எல்லா விதமான

12:23, 24; 13:2 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **13:7** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 12
a அப் 6:7, அப் 19:20, கொலோ 1:6
b அப் 4:36, 37
c அப் 11:29, 30
d அப் 13:5, அப் 15:37, 38

அதி. 13
e 1கொ 12:28, எபே 4:11, 12
f 1தீ 2:7
g அப் 9:15
h அப் 12:25

அக்கிரமமும் நிறைந்தவனே, பிசாசின் மகனே,[a] நீதியான எல்லாவற்றுக்கும் பகைவனே, யெகோவாவின்* நீதியான வழிகளைப் புரட்டிப்போடுவதை நிறுத்த மாட்டாயா? **11** இதோ! யெகோவாவின்* கை உனக்கு எதிராக வந்திருக்கிறது; கொஞ்சக் காலத்துக்கு நீ குருடனாகி, சூரிய ஒளியைப் பார்க்காமல் இருப்பாய்" என்று சொன்னார். உடனே அவனுடைய கண் மங்கலாகி, இருண்டுபோனது. அதனால், தன்னுடைய கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போவதற்கு ஆட்களை அவன் தேட ஆரம்பித்தான். **12** நடந்ததையெல்லாம் பார்த்த ஆளுநர் இயேசுவின் சீஷராக ஆனார். ஏனென்றால், அவர் யெகோவாவை* பற்றிய போதனையைக் கேட்டு மலைத்துப்போனார்.

13 அதன் பின்பு, பவுலும் அவரோடு இருந்தவர்களும் பாப்போவிலிருந்து கப்பல் ஏறி பம்பிலியாவில் உள்ள பெர்கேவுக்கு வந்தார்கள். ஆனால், யோவான்[b] அவர்களைவிட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்.[c] **14** அவர்களோ பெர்கேவிலிருந்து பிசீதியாவில் உள்ள அந்தியோகியாவுக்கு வந்துசேர்ந்தார்கள்; ஓய்வுநாளில் ஜெபக்கூடத்துக்குள்[d] போய் உட்கார்ந்தார்கள். **15** அங்கே கூடியிருந்தவர்களுக்கு முன்னால் திருச்சட்டமும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களும் வாசிக்கப்பட்டன.[e] அதன் பின்பு, ஜெபக்கூடத் தலைவர்கள் இவர்களிடம் ஆள் அனுப்பி, "சகோதரர்களே, இங்கே இருப்பவர்களை உற்சாகப்படுத்துவதற்கு ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்கள். **16** அதனால் பவுல் எழுந்து, எல்லாரையும் அமைதியாக இருக்கும்படி சைகை காட்டிவிட்டுப் பேச ஆரம்பித்தார்:

"இஸ்ரவேல் மக்களே, கடவுள்பயமுள்ள மற்றவர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள். **17** இஸ்ரவேல் மக்களின் கடவுள் நம்முடைய முன்னோர்களைத் தேர்ந்தெடுத்தார். எகிப்து தேசத்தில் அவர்கள் அன்னியர்களாகக் குடியிருந்தபோது, அவர்களை அவர் உயர்த்தினார்; தன்னுடைய கைபலத்தால் அங்கிருந்து அவர்களை வெளியே கூட்டிக்கொண்டு வந்தார்.[f] **18** கிட்டத்தட்ட 40 வருஷங்கள் வனாந்தரத்தில் அவர்களைச் சகித்துக்கொண்டார்.[g] **19** பின்பு, கானான் தேசத்திலிருந்த ஏழு இனத்தவர்களை ஒழித்து, அந்தத் தேசத்தை இஸ்ரவேலர்களுக்குச் சொத்தாகக் கொடுத்தார்.[h] **20** இவையெல்லாம் சுமார் 450 வருஷ காலப்பகுதியில் நடந்தன.

இவற்றுக்குப் பின்பு, சாமுவேல் தீர்க்கதரிசியின் காலம்வரை, அவர்களுக்காக நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார்.[i] **21** ஆனால், அதற்குப் பிறகு தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்திக் கேட்டார்கள்;[j] அதனால் கடவுள், பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த கீசின் மகன் சவுலை[k] 40 வருஷத்துக்கு ராஜாவாக அவர்களுக்குக் கொடுத்தார். **22** பின்பு, அவரை நீக்கிவிட்டு தாவீதை ராஜாவாக நியமித்து,[l] 'ஈசாயின் மகன் தாவீது என் இதயத்துக்குப் பிடித்தமானவனாக இருப்பதைக் கண்டேன்;[m] நான் விரும்பிய எல்லா காரியங்களையும் அவன் செய்வான்' என்று அவரைப் பற்றிச் சாட்சி கொடுத்தார். **23** தான் கொடுத்த வாக்குறுதியின்படியே, தாவீதின் சந்ததியிலிருந்து இயேசுவை இஸ்ரவேலின் மீட்பராக[n] வர வைத்தார். **24** இவர் வருவதற்கு முன்பே, மனம் திருந்தியதற்கு

13:10-12 *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 13
a யோவா 8:44
b அப் 12:12
c அப் 15:37, 38
d அப் 17:1, 2
அப் 18:4
அப் 19:8
e அப் 15:21
f யாத் 6:1, 6
உபா 7:6, 8
g யாத் 16:35
எண் 14:33, 34
h உபா 7:1
யோசு 14:1, 2
i நியா 2:16
1சா 3:20
j 1சா 8:4, 5
k 1சா 10:21
1சா 11:15
l 1சா 16:12, 13
சங் 89:20
m 1சா 13:13, 14
1சா 16:1
n 2சா 7:12
ஏசா 11:1
லூ 1:31, 32
லூ 1:68, 69

அடையாளமாக ஞானஸ்நானம் பெறும்படி இஸ்ரவேலர்கள் எல்லாருக்
கும் யோவான் பிரசங்கித்துவந்தார்.[a] **25** ஆனால், யோவான் தன்னுடைய
ஊழியத்தை முடிக்கப்போகும் சமயத்தில், 'நான் யாரென்று நீங்கள் நினைக்
கிறீர்கள்? நான் அவரல்ல. இதோ! எனக்குப் பின்பு ஒருவர் வரப்போகி
றார். அவருடைய செருப்புகளை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை'[b]
என்று சொன்னார்.

26 சகோதரர்களே, ஆபிரகாமின் வம்சத்தில் வந்த மக்களே,
இங்கே கூடியிருக்கும் கடவுள்பயமுள்ள மற்றவர்களே, மீட்பைப் பற்றிய
இந்தச் செய்தி நமக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.[c] **27** ஏனென்றால், எரு
சலேமின் குடிமக்களும் அவர்களுடைய தலைவர்களும் அவர் யார் என்
பதைப் புரிந்துகொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, அவருக்கு அவர்
கள் தீர்ப்பு கொடுத்தபோது, ஒவ்வொரு ஓய்வுநாளிலும் தீர்க்கதரிசிகளின்
புத்தகங்களிலிருந்து சத்தமாக வாசிக்கப்படுகிற வார்த்தைகளையே[d] நிறை
வேற்றினார்கள். **28** மரண தண்டனைக்கேற்ற குற்றம் எதையும் அவரிடம்
கண்டுபிடிக்காதபோதிலும்,[e] அவரைக் கொலை செய்யும்படி பிலாத்துவை
வற்புறுத்தினார்கள்.[f] **29** அவரைப் பற்றி எழுதப்பட்ட எல்லாவற்றையும்
நிறைவேற்றிய பின்பு, அவரை மரக் கம்பத்திலிருந்து* இறக்கி, கல்லறை
யில்# வைத்தார்கள்.[g] **30** ஆனால், கடவுள் அவரை உயிரோடு எழுப்
பினார்.[h] **31** கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குத் தன்னோடு வந்திருந்த
வர்கள்முன் பல நாட்களாக அவர் தோன்றினார். அவர்கள்தான் இப்போது
மக்கள் முன்னால் அவருடைய சாட்சிகளாக இருக்கிறார்கள்.[i]

32 அதனால், முன்னோர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியைப்
பற்றிய நல்ல செய்தியை நாங்கள் உங்களுக்குச் சொல்கிறோம். **33** இயே
சுவைக் கடவுள் உயிரோடு எழுப்பியதன் மூலம், அவர்களுடைய பிள்
ளைகளான நமக்கு அந்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றியிருக்
கிறார்.[j] இவரைப் பற்றித்தான் இரண்டாம் சங்கீதத்தில், 'நீ என்னுடைய
மகன், இன்று நான் உனக்குத் தகப்பனாக ஆனேன்' என்று எழுதப்பட்டிருக்
கிறது.[k] **34** அவர் இனி ஒருபோதும் அழிந்துபோகாதபடி கடவுள் அவரை
உயிரோடு எழுப்பினார். இதைப் பற்றித்தான், 'நான் தாவீதுக்கு வாக்கு
றுதி கொடுத்தபடியே உங்கள்மேல் மாறாத அன்பைக் காட்டுவேன், என்
வாக்குறுதி நம்பகமானது' என்று தெரிவித்திருக்கிறார்.[l] **35** வேறொரு சங்
கீதத்தில், 'உங்களுக்கு உண்மையாக* இருப்பவரின் உடல் அழிந்துபோக
விடமாட்டீர்கள்' என்றும் சொல்லியிருக்கிறார்.[m] **36** தாவீது தன்னுடைய
வாழ்நாள் காலத்தில் கடவுளுக்குச் சேவை செய்துவிட்டு* கண்மூடினார்.
பின்பு, தன்னுடைய முன்னோர்களோடு அடக்கம் செய்யப்பட்டார், அவரு
டைய உடல் அழிந்துபோனது.[n] **37** ஆனால், கடவுளால் உயிரோடு
எழுப்பப்பட்டவரின் உடல் அழிந்துபோகவில்லை.[o]

38 அதனால் சகோதரர்களே, இதைத் தெரிந்துகொள்ளுங்கள்: அவர்
மூலம்தான் உங்களுக்குப் பாவ மன்னிப்பு கிடைக்கும் என்பதை அறிவிக்
கிறோம்.[p] **39** நீங்கள் விசுவாசம் வைத்தால், எந்தக் காரியங்களில்

அதி. 13
a மத் 3:1, 6
b மத் 3:11; லூ 3:16
c மத் 10:5, 6; லூ 24:47, 48
d ஏசா 53:7, 8
e மத் 26:59, 60; லூ 23:13-15; யோவா 19:4
f மத் 27:22, 23; யோவா 19:15
g மத் 27:59, 60; யோவா 19: 40-42
h மத் 28:5, 6; அப் 2:24
i மத் 28:16; அப் 1:3; அப் 3:15; 1கொ 15:4-7
j ரோ 1:4
k சங் 2:7; எபி 1:5; எபி 5:5
l ஏசா 55:3
m சங் 16:10; அப் 2:31
n அப் 2:29
o அப் 2:27
p லூ 24:46, 47; அப் 5:31; அப் 10:43

13:29 *வே.வா., "மரத்திலிருந்து." #வே.வா., "நினைவுக் கல்லறையில்." **13:35** *வே.வா., "பற்றுமாறாமல்." **13:36** *வே.வா., "கடவுளுடைய சித்தத்தைச் செய்துவிட்டு."

மோசேயின் திருச்சட்டம் உங்கள் குற்றங்களை நீக்க முடியவில்லையோ[a]
அந்தக் காரியங்களிலெல்லாம் அவர் மூலமாக உங்கள் குற்றங்கள் நீக்
கப்படும்.[b] **40** அதனால், தீர்க்கதரிசிகளின் புத்தகத்தில் எழுதப்பட்டிருப்
பது உங்களுக்கு நடக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். **41** அதில், ‘ஏள
னம் செய்பவர்களே, பாருங்கள், ஆச்சரியப்படுங்கள், ஒழிந்துபோங்கள்;
ஏனென்றால், உங்களுடைய காலத்தில் நான் ஒரு செயலைச் செய்யப்
போகிறேன். அதைப் பற்றி யாராவது உங்களுக்கு விவரமாகச் சொன்னால்
கூட நீங்கள் அதை ஒருபோதும் நம்ப மாட்டீர்கள்’ என எழுதப்பட்டிருக்கி
றது”[c] என்று சொன்னார்.

42 பின்பு அவர்கள் வெளியே வந்தபோது, அடுத்த ஓய்வுநாளிலும்
இந்த விஷயங்களைப் பற்றித் தங்களிடம் பேசும்படி அங்கிருந்த மக்
கள் கேட்டுக்கொண்டார்கள். **43** ஜெபக்கூடத்துக்கு வந்திருந்த கூட்டம்
கலைந்த பின்பு, நிறைய யூதர்களும் யூத மதத்துக்கு மாறிய பக்தியுள்ள
ஆட்களும் பவுலுக்கும் பர்னபாவுக்கும் பின்னால் போனார்கள். பவுலும் பர்
னபாவும் அவர்களோடு பேசியபோது கடவுளுடைய அளவற்ற கருணை
யைப் பெற எப்போதும் தகுதியுள்ளவர்களாக இருக்கும்படி அவர்களை உற்
சாகப்படுத்தினார்கள்.[d]

44 அடுத்த ஓய்வுநாளின்போது, யெகோவாவின்* வார்த்தையைக் கேட்
பதற்காக கிட்டத்தட்ட நகரவாசிகள் எல்லாரும் கூடிவந்தார்கள். **45** யூதர்
கள் அந்தக் கூட்டத்தைப் பார்த்தபோது பொறாமையால் பொங்கியெ
ழுந்தார்கள். பவுல் சொன்ன விஷயங்களுக்கு முரணாகப் பேசி, கடவுளை
நிந்தித்தார்கள்.[e] **46** அதனால், பவுலும் பர்னபாவும் தைரியமாக அவர்க
ளிடம், “கடவுளுடைய வார்த்தையை உங்களுக்குத்தான் நாங்கள் முதலில்
சொல்ல வேண்டியிருந்தது.[f] ஆனால் நீங்கள் அதை உதறித்தள்ளி, முடி
வில்லாத வாழ்வுக்கு உங்களைத் தகுதியற்றவர்களாக ஆக்கிக்கொள்கிறீர்
கள்! அதனால், இப்போது நாங்கள் மற்ற தேசத்து மக்களிடம் போகிறோம்.[g]
47 ஏனென்றால், ‘பூமியெங்கும் இருக்கிறவர்களுக்கு மீட்புக்கான வழியைக்
காட்டுவதற்காக உன்னைத் தேசங்களுக்கெல்லாம் ஒளியாக நியமித்திருக்கி
றேன்’ என்ற வசனத்தில் யெகோவாவே* எங்களுக்குக் கட்டளை கொடுத்
திருக்கிறார்”[h] என்று சொன்னார்.

48 மற்ற தேசத்து மக்கள் இதைக் கேட்டபோது மிகவும் சந்தோ
ஷப்பட்டு, யெகோவாவின்* வார்த்தையை மகிமைப்படுத்த ஆரம்பித்தார்
கள். முடிவில்லாத வாழ்வைப் பெறுவதற்கேற்ற மனப்பான்மையோடு இருந்
தவர்கள் இயேசுவின் சீஷர்களானார்கள். **49** அதோடு, யெகோவாவின்*
வார்த்தை அந்தப் பகுதி முழுவதும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வந்தது.
50 ஆனால் யூதர்கள், கடவுளை வணங்கிவந்த பிரபலமான பெண்களை
யும் நகரத்திலிருந்த முக்கியமான ஆண்களையும் தூண்டிவிட்டு, பவுலை
யும் பர்னபாவையும் துன்புறுத்தி,[i] தங்களுடைய நகரத்துக்கு வெளியே தள்
ளிவிட்டார்கள். **51** அப்போது அவர்கள் இரண்டு பேரும், தங்கள்
பாதத்தில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிவிட்டு,[j] இக்கோனி
யாவுக்குப் போனார்கள். **52** சீஷர்கள் சந்தோஷத்தாலும்[k] கடவுளுடைய
சக்தியாலும் நிரப்பப்பட்டு வந்தார்கள்.

13:44, 47-49 *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 13
a எபி 10:1
b ஏசா 53:11; ரோ 3:28; ரோ 5:18; ரோ 8:3; எபி 7:19
c ஆப 1:5
d அப் 11:23; அப் 14:21, 22
e அப் 14:1, 2; அப் 17:4, 5
f மத் 10:5, 6; அப் 3:25, 26; ரோ 1:16
g லூ 2:29-32; அப் 18:5, 6; ரோ 10:19
h ஏசா 49:6; அப் 1:8
i மத் 23:34; அப் 14:2, 19; அப் 17:5
j மத் 10:14; லூ 9:5
k மத் 5:12

14 இக்கோனியாவில் யூதர்களுடைய ஜெபக்கூடத்துக்கு அவர்கள்
இரண்டு பேரும் ஒன்றாகப் போனார்கள். அங்கே அவர்கள் திற
மையாகப் பேசியதால் ஏராளமான யூதர்களும் கிரேக்கர்களும் இயேசுவின்
சீஷர்களானார்கள். **2** ஆனால், விசுவாசம் வைக்காத யூதர்கள் மற்ற
தேசத்து மக்களுடைய* மனதைக் கெடுத்து, அந்தச் சகோதரர்களுக்கு எதி
ராக அவர்களைத் தூண்டிவிட்டார்கள்.[a] **3** அதனால், அவர்கள் இரண்டு
பேரும் அங்கே பல வாரங்கள் தங்கி, யெகோவா* தந்த அதிகாரத்தில்
தைரியமாகப் பேசிவந்தார்கள். அவர் தன்னுடைய அளவற்ற கருணை
யைப் பற்றிய செய்திக்குச் சாட்சியாக அவர்கள் மூலம் அடையாளங்க
ளும் அற்புதங்களும் நடக்கும்படி செய்தார்.[b] **4** இருந்தாலும், நகர மக்க
ளுக்கு இடையில் பிரிவினை உண்டானது; சிலர் யூதர்களின் பக்கமும்
சிலர் அப்போஸ்தலர்களின் பக்கமும் சேர்ந்துகொண்டார்கள். **5** அப்
போஸ்தலர்களை அவமானப்படுத்திக் கல்லெறிந்து கொல்ல மற்ற தேசத்து
மக்களும் யூதர்களும் யூதத் தலைவர்களும் முயற்சி செய்துகொண்டிருந்
தார்கள்.[c] **6** இதைப் பற்றி அவர்கள் தெரிந்துகொண்டவுடன் லிக்கவோனி
யாவைச் சேர்ந்த நகரங்களான லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் அவற்றைச்
சுற்றியிருந்த பகுதிகளுக்கும் தப்பித்து ஓடினார்கள்.[d] **7** அங்கே அவர்கள்
நல்ல செய்தியைத் தொடர்ந்து அறிவித்து வந்தார்கள்.

8 லீஸ்திராவில், பிறவியிலேயே கால் ஊனமான ஒருவன் உட்கார்ந்தி
ருந்தான்; அவன் ஒருபோதும் நடந்ததில்லை. **9** பவுல் பேசுவதை அவன்
கேட்டுக்கொண்டிருந்தான். அதனால் பவுல் அவனை உற்றுப் பார்த்து,
குணமாவதற்கு ஏற்ற விசுவாசம்[e] அவனுக்கு இருப்பதைப் புரிந்துகொண்டு,
10 “எழுந்து நில்” என்று சத்தமாகச் சொன்னார். அப்போது, அவன் துள்ளி
யெழுந்து நடக்க ஆரம்பித்தான்.[f] **11** பவுல் செய்ததைக் கூட்டத்தார்
பார்த்தபோது, “தெய்வங்கள் மனுஷ உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கி
றார்கள்!”[g] என்று லிக்கவோனிய மொழியில் கத்தினார்கள். **12** பின்பு, பர்
னபாவை சீயுஸ் என்றும், பவுல் முன்நின்று பேசியதால் அவரை ஹெர்மஸ்
என்றும் அழைத்தார்கள். **13** நகரவாசலில் இருந்த சீயுஸ் கோயில் பூசாரி,
அங்கே காளைகளையும் மாலைகளையும் கொண்டுவந்து, கூட்டத்தாரோடு
சேர்ந்து அவர்களுக்குப் பலி கொடுக்க விரும்பினான்.

14 ஆனால், அப்போஸ்தலர்களாகிய பர்னபாவும் பவுலும் இதைக் கேள்
விப்பட்டபோது, தங்கள் மேலங்கிகளைக் கிழித்துக்கொண்டு அந்தக் கூட்
டத்துக்குள் ஓடிப்போய், **15** “மக்களே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?
நாங்களும் உங்களைப் போல் குறைபாடுகள் உள்ள மனுஷர்கள்தான்.[h]
இந்த வீணான காரியங்களை விட்டுவிட்டு, வானத்தையும் பூமியையும் கட
லையும் அவற்றிலுள்ள எல்லாவற்றையும் படைத்த உயிருள்ள கடவுளிடம்[i]
திரும்புங்கள், அதற்காகவே உங்களுக்கு நல்ல செய்தியைச் சொல்கிறோம்.
16 கடந்த காலங்களில் அவர் எல்லா தேசத்து மக்களையும் அவரவரு
டைய இஷ்டப்படி நடக்க அனுமதித்திருந்தார்.[j] **17** ஆனாலும், அவர்
தன்னைப் பற்றிச் சாட்சி கொடுக்காமல் இருந்ததில்லை.[k] எப்படியென்றால்,
வானத்திலிருந்து மழையையும், பருவ காலங்களில் அமோக விளைச்சலை
யும்,[l] ஏராளமான உணவையும் உங்களுக்குத் தந்து, உங்கள் உள்ளத்தைச்

14:2 * அதாவது, “யூதரல்லாதவர்களுடைய.” **14:3** * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 14
a அப் 13:45
b அப் 19:11; எபி 2:3, 4
c அப் 14:19
d மத் 10:23
e மத் 9:28
f ஏசா 35:6
g அப் 28:3-6
h அப் 10:25, 26
i யாத் 20:11; சங் 146:6
j அப் 17:30
k அப் 17:26, 27; ரோ 1:20
l சங் 147:8; எரே 5:24; மத் 5:45

சந்தோஷத்தால் நிரப்பி நன்மை செய்திருக்கிறார்”[a] என்று சத்தமாகச் சொன்
னார்கள். **18** இப்படிச் சொன்ன பிறகும், தங்களுக்குப் பலி செலுத்தாதபடி
கூட்டத்தாரைத் தடுப்பது அவர்களுக்குப் பெரும் பாடாக இருந்தது.

19 பின்பு, அந்தியோகியாவிலிருந்தும் இக்கோனியாவிலிருந்தும் யூதர்
கள் சிலர் வந்து, கூட்டத்தாரைத் தூண்டிவிட்டு[b] பவுல்மேல் கல்லெறிந்தார்
கள். அதன் பின்பு, அவர் இறந்துவிட்டதாக நினைத்து நகரத்துக்கு வெளியே
அவரை இழுத்துக்கொண்டுபோய்ப் போட்டார்கள்.[c] **20** ஆனால், சீஷர்
கள் அவரைச் சூழ்ந்து நின்றபோது அவர் எழுந்து நகரத்துக்குள்
போனார். அடுத்த நாள் பர்னபாவோடு தெர்பைக்குப் புறப்பட்டுப் போ
னார்.[d] **21** அவர்கள் இரண்டு பேரும் அந்த நகரத்தில் நல்ல செய்தியை
அறிவித்து, நிறைய பேரைச் சீஷர்களாக்கினார்கள். பின்பு, லீஸ்திராவுக்
கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பிப் போய்,
22 அங்கிருந்த சீஷர்களைப் பலப்படுத்தினார்கள்;[e] “கடவுளுடைய அர
சாங்கத்துக்குள் போவதற்கு நாம் பல உபத்திரவங்களைச் சந்தித்தே தீர
வேண்டும்” என்று சொல்லி, விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி அவர்களை
உற்சாகப்படுத்தினார்கள்.[f] **23** அதோடு, ஒவ்வொரு சபையிலும் அவர்க
ளுக்காக மூப்பர்களை நியமித்து,[g] விரதமிருந்து, ஜெபம் செய்து,[h] யெகோ
வாமேல்* நம்பிக்கை வைத்திருந்த அவர்களைப் பாதுகாக்கும்படி அவரி
டம் வேண்டிக்கொண்டார்கள்.

24 பின்பு, அவர்கள் பிசீதியா வழியாக பம்பிலியாவுக்கு வந்தார்கள்.[i]
25 பெர்கே நகரத்தில் கடவுளுடைய வார்த்தையை அறிவித்த பின்பு
அத்தலியாவுக்குப் போனார்கள். **26** பிற்பாடு, அங்கிருந்து கப்பல் ஏறி
அந்தியோகியாவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். கடவுளுடைய அளவற்ற கரு
ணையால் அவருடைய வேலை அங்குதான் அவர்களிடம் ஒப்படைக்கப்
பட்டிருந்தது. இப்போது அந்த வேலையை அவர்கள் முழுமையாகச்
செய்து முடித்திருந்தார்கள்.[j]

27 அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்த பின்பு, சபையில் இருந்தவர்களை
ஒன்றுகூட்டி, தங்கள் மூலம் கடவுள் செய்த பல காரியங்களைப் பற்றியும்,
விசுவாசக் கதவை மற்ற தேசத்து மக்களுக்கு அவர் திறந்துவிட்டதைப் பற்
றியும் சொன்னார்கள்.[k] **28** அங்கே சீஷர்களோடு கொஞ்சக் காலம் அவர்
கள் தங்கியிருந்தார்கள்.

15 யூதேயாவிலிருந்து சில ஆட்கள் வந்து, “மோசேயின் சட்டத்
தின்படி விருத்தசேதனம்[l] செய்யாவிட்டால் மீட்புப் பெற முடியாது”
என்று சகோதரர்களுக்குக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார்கள். **2** அதனால்
அவர்களுக்கும் பவுல், பர்னபா ஆகியோருக்கும் இடையே பயங்கர கருத்
துவேறுபாடும் விவாதமும் ஏற்பட்டது. இந்த விஷயத்தை* பற்றிப் பேசுவ
தற்காக பவுலையும் பர்னபாவையும் வேறு சிலரையும் எருசலேமிலிருந்த
அப்போஸ்தலர்களிடமும் மூப்பர்களிடமும் அனுப்ப வேண்டும் என்று தீர்
மானிக்கப்பட்டது.[m]

3 சபையில் இருந்தவர்கள் கொஞ்சத் தூரத்துக்கு அவர்கள் கூடவே
போய் வழியனுப்பி வைத்தார்கள். அவர்கள் பெனிக்கே மற்றும் சமா
ரியா வழியாகப் போய், மற்ற தேசத்து மக்களும் கடவுளிடம் திரும்பியதைப்

14:23 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **15:2** * வே.வா., “விவாதத்தை.”

அதி. 14
a சங் 145:16
b அப் 17:13
c 2கொ 11:25
d அப் 16:1
e அப் 11:22, 23
f மத் 10:38
யோவா 15:19
ரோ 8:17
1தெ 3:4
g தீத் 1:5
h அப் 13:2, 3
i அப் 13:13
j அப் 13:1, 2
k அப் 11:18

அதி. 15
l ஆதி 17:9, 10
யாத் 12:48
லேவி 12:2, 3
m கலா 2:1

பற்றிச் சகோதரர்களுக்கு விவரமாகச் சொன்னார்கள், இதைக் கேட்டு
அவர்கள் எல்லாரும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். **4** அவர்கள் எருச
லேமுக்கு வந்துசேர்ந்தபோது, சபையில் இருந்தவர்களும் அப்போஸ்தலர்க
ளும் மூப்பர்களும் அவர்களை அன்பாக வரவேற்றார்கள். அப்போது, தங்
கள் மூலம் கடவுள் செய்த பல காரியங்களைப் பற்றி அவர்கள் விவரித்துச்
சொன்னார்கள். **5** ஆனால், பரிசேய மதப்பிரிவிலிருந்து விலகி இயேசு
வின் சீஷர்களாக ஆகியிருந்த சிலர் தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்து,
"மற்ற தேசத்து மக்களுக்குக் கண்டிப்பாக விருத்தசேதனம் செய்ய வேண்
டும், மோசேயின் திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கும்படி கட்டளையிடவும்
வேண்டும்"[a] என்று சொன்னார்கள்.

6 இந்த விஷயத்தைப் பற்றிக் கலந்துபேச அப்போஸ்தலர்களும் மூப்
பர்களும் ஒன்றுகூடினார்கள். **7** வெகு நேரம் தீவிரமாகக் கலந்துபேசிய*
பிறகு பேதுரு எழுந்து, "சகோதரர்களே, மற்ற தேசத்து மக்கள்# என்
மூலம் நல்ல செய்தியைக் கேட்டு நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதற்
காக உங்களில் ஒருவனான என்னைப் பல நாட்களுக்கு முன்பே
கடவுள் தேர்ந்தெடுத்தார். இது உங்களுக்கே நன்றாகத் தெரியும்.[b] **8** இத
யத்தில் இருப்பதைத் தெரிந்திருக்கிற கடவுள்[c] தன்னுடைய சக்தியை நமக்
குக் கொடுத்தது[d] போலவே அவர்களுக்கும் கொடுத்து அவர்களை ஏற்றுக்
கொண்டதற்குச் சாட்சி கொடுத்தார். **9** அவர்களுக்கும் நமக்கும் இடையே
அவர் எந்தப் பாகுபாடும் பார்க்கவில்லை,[e] அவர்களுடைய விசுவாசத்தின்
காரணமாக அவர்களுடைய இதயங்களைச் சுத்தமாக்கினார்.[f] **10** இப்படி
யிருக்கும்போது, நம்முடைய முன்னோர்களாலும் நம்மாலும் சுமக்க முடியா
மலிருந்த[g] நுகத்தடியைச் சீஷர்களுடைய கழுத்தில் சுமத்தி[h] கடவுளை ஏன்
சோதிக்கிறீர்கள்? **11** எஜமானாகிய இயேசுவின் அளவற்ற கருணையால்[i]
மீட்புப் பெறுவோமென்று நாம் நம்புவதைப் போலவே அவர்களும் நம்பு
கிறார்கள்" என்று சொன்னார்.[j]

12 அப்போது, அங்கே கூடியிருந்த எல்லாரும் அமைதியாகி, பர்
னபா சொல்வதையும் பவுல் சொல்வதையும் கவனமாகக் கேட்க ஆரம்பித்
தார்கள். மற்ற தேசத்து மக்கள் மத்தியில் பல அடையாளங்களையும் அற்
புதங்களையும் கடவுள் தங்கள் மூலம் செய்ததை அவர்கள் இரண்டு பேரும்
விவரித்துச் சொன்னார்கள். **13** அவர்கள் பேசி முடித்த பின்பு, யாக்
கோபு அங்கே கூடியிருந்தவர்களிடம், "சகோதரர்களே, நான் சொல்வதைக்
கேளுங்கள். **14** கடவுள் முதல் தடவையாக மற்ற தேசத்து மக்கள்மேல்
தன் கவனத்தைத் திருப்பி, அவர்கள் மத்தியிலிருந்து தன்னுடைய பெய
ருக்கென்று ஒரு ஜனத்தைப் பிரித்தெடுத்த விதத்தைப் பற்றி சிமி
யோன்*[k] நமக்கு நன்றாக விவரித்துச் சொன்னார்.[l] **15** தீர்க்கதரிசிகளின்
புத்தகங்களிலுள்ள வார்த்தைகள் அதை ஆமோதிக்கின்றன. **16** எப்படி
யென்றால், 'இவற்றுக்குப் பின்பு நான் திரும்பி வந்து, விழுந்துபோயிருக்
கும் தாவீதின் கூடாரத்தை* மறுபடியும் எடுத்து நிறுத்துவேன். சேதமான
வற்றைத் திரும்பக் கட்டி, அதைச் சரிசெய்வேன். **17** இவர்களில் மிச்சம்
இருக்கிற ஆட்கள் எல்லா தேசத்து மக்களோடும் சேர்ந்து, அதாவது
என் பெயரால் அழைக்கப்படுகிற மக்களோடு சேர்ந்து, யெகோவாவாகிய*

15:7 *வே.வா., "விவாதித்த." #அதாவது, "யூதரல்லாதவர்கள்." **15:14** *அதாவது, "பேதுரு." **15:16** *வே.வா., "வீட்டை." **15:17** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 15
a யாத் 12:48; அப் 11:2, 3
b அப் 10:34, 35; அப் 11:16, 17
c 1நா 28:9; எரே 11:20
d அப் 10:44, 45; அப் 11:15
e கலா 3:28
f கலா 2:15, 16; 1பே 1:22
g கலா 3:10
h கலா 5:1
i ஏசா 53:11; யோவா 1:17
j மத் 20:28
k மத் 10:2; அப் 11:13; 2பே 1:1
l 1பே 2:9, 10

என்னை ஊக்கமாகத் தேடுவதற்காக அந்தக் கூடாரத்தை எடுத்து நிறுத்
துவேன் என்று யெகோவா* சொல்கிறார்.[a] இவற்றைச் செய்கிறவர் அவர்
தான். **18** இதையெல்லாம் பூர்வ காலத்திலிருந்து தெரிந்து வைத்திருப்பவ
ரும் அவர்தான்' என்று எழுதப்பட்டிருக்கிறது.[b] **19** அதனால், என் கருத்து
இதுதான்: கடவுளிடம் திரும்புகிற மற்ற தேசத்து மக்களுக்கு நாம் கஷ்டம்
கொடுக்கக் கூடாது.[c] **20** அதற்குப் பதிலாக, உருவச் சிலைகளால் தீட்டுப்
பட்டதற்கும்[d] பாலியல் முறைகேட்டுக்கும்*[e] நெரித்துக் கொல்லப்பட்டதற்
கும்# இரத்தத்துக்கும் விலகியிருக்க வேண்டும்[f] என்று அவர்களுக்கு
நாம் எழுத வேண்டும். **21** ஏனென்றால், இந்தக் கட்டளைகள் அடங்கிய
மோசேயின் புத்தகங்கள் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஜெபக்கூடங்களில்
சத்தமாக வாசிக்கப்பட்டு வந்திருக்கின்றன.[g] அதனால், அவற்றைப் பிரசங்
கிப்பவர்கள் பூர்வ காலத்திலிருந்தே எல்லா நகரங்களிலும் இருந்திருக்கிறார்
கள்" என்று சொன்னார்.

22 பின்பு அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் சபையிலிருந்த எல்லா
ரோடும் சேர்ந்து தங்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களை பவு
லோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்கு அனுப்பத் தீர்மானித்தார்
கள். அதன்படி, சகோதரர்களை வழிநடத்திய பர்சபா என்ற யூதாசையும்
சீலாவையும்[h] தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள். **23** அவர்கள் மூலம் இந்
தக் கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார்கள்:

"அந்தியோகியாவிலும்[i] சீரியாவிலும் சிலிசியாவிலும் இருக்கிற மற்ற
தேசத்தைச் சேர்ந்த சகோதரர்களுக்கு அப்போஸ்தலர்களும் மூப்பர்களு
மான உங்கள் சகோதரர்கள் எழுதுவதாவது: உங்களுக்கு வாழ்த்துக்கள்!
24 எங்களில் சிலர் உங்களிடம் வந்து தங்களுடைய வார்த்தைகளால்
உங்கள் மனதைக் குழப்பி, உங்களுடைய நம்பிக்கையைக் குலைத்துப்
போட முயற்சி செய்திருப்பதாகக் கேள்விப்பட்டோம்.[j] ஆனால், நாங்கள்
அவர்களுக்கு எந்தக் கட்டளையும் கொடுக்கவில்லை. **25** அதனால், நம்
முடைய எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் பெயருக்காகத் தங்கள் உயி
ரையே பணயம் வைத்த[k] எங்களுடைய அன்பான பர்னபாவோடும் பவு
லோடும் சேர்த்து, **26** நாங்கள் தேர்ந்தெடுத்த நபர்களை உங்களிடம்
அனுப்ப வேண்டுமென்று ஒருமனதாகத் தீர்மானித்தோம். **27** அதன்படி,
யூதாசையும் சீலாவையும் அனுப்புகிறோம்; இந்த விஷயங்களை அவர்கள்
நேரில் வந்து உங்களிடம் சொல்வார்கள்.[l] **28** ஏனென்றால், முக்கியமான
இந்த விஷயங்களைத் தவிர வேறு எதையும் உங்கள்மேல் சுமத்தக் கூடா
தென்று கடவுளுடைய சக்தியின் வழிநடத்துதலால்[m] நாங்கள் தீர்மானித்தி
ருக்கிறோம்: **29** உருவச் சிலைகளுக்குப் படைக்கப்பட்டதற்கும்[n] இரத்தத்
துக்கும்[o] நெரித்துக் கொல்லப்பட்டதற்கும்#[p] பாலியல் முறைகேட்டுக்கும்*[q]
தொடர்ந்து விலகியிருங்கள். இவற்றை அடியோடு தவிர்த்தால், சிறப்புடன்
வாழ்வீர்கள். நலமாயிருங்கள்!"

30 அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு அந்தியோகியாவுக்குப் போய்ச்
சேர்ந்த பின்பு, சபையிலிருந்த எல்லாரையும் ஒன்றுகூட்டி அவர்களிடம்
அந்தக் கடிதத்தைக் கொடுத்தார்கள். **31** சபையில் இருந்தவர்கள் அதை

15:17 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **15:20, 29** * சொல் பட்டியலைப் பாருங்கள்.
15:20, 29 # வே.வா., "இரத்தம் வடிக்காமல் கொல்லப்பட்டதற்கும்."

அதி. 15
a ஆமோ 9:11, 12
b ஏசா 45:21
c அப் 15:10
d ஆதி 35:2; யாத் 20:3; 1கொ 10:14
e 1கொ 6:9, 10; கொலோ 3:5; 1தெ 4:3
f ஆதி 9:4; லேவி 3:17; லேவி 7:26; லேவி 17:10, 13; லேவி 19:26; உபா 12:23; உபா 15:23; 1சா 14:32, 33
g அப் 13:15; 2கொ 3:15
h 1தெ 1:1; 1பே 5:12
i அப் 11:26
j அப் 15:1
k அப் 13:50; 1கொ 15:30, 31; 2கொ 11:23-26
l அப் 16:4
m யோவா 16:13; அப் 5:32
n ஆதி 35:2; யாத் 20:3; யாத் 34:15; 1கொ 10:14
o ஆதி 9:4; லேவி 3:17; லேவி 7:26; லேவி 17:10; உபா 12:16, 23; 1சா 14:32, 33
p லேவி 17:13
q ஆதி 39:7-9; 1கொ 6:9, 10; எபே 5:5; கொலோ 3:5; 1தெ 4:3

வாசித்த பின்பு, உற்சாகமும் சந்தோஷமும் அடைந்தார்கள். **32** யூதாசும்
சீலாவும் தீர்க்கதரிசிகளாக இருந்ததால், நிறைய பேச்சுகளைக் கொடுத்து
அந்தச் சகோதரர்களை உற்சாகப்படுத்தினார்கள், பலப்படுத்தினார்கள்.[a]
33 இவர்கள் அங்கே சில காலம் தங்கியிருந்த பின்பு, அந்தச் சகோதரர்
களிடமிருந்து விடைபெற்று தங்களை அனுப்பியவர்களிடம் திரும்பிப்
போனார்கள். **34** *— **35** ஆனால், பவுலும் பர்னபாவும் அந்தியோகி
யாவிலேயே தங்கி, இன்னும் நிறைய பேரோடு சேர்ந்து யெகோவாவின்*
வார்த்தையைப் பற்றிய நல்ல செய்தியைக் கற்பித்துக்கொண்டும் அறிவித்
துக்கொண்டும் இருந்தார்கள்.

36 சில நாட்களுக்குப் பின்பு பவுல் பர்னபாவிடம், “யெகோவாவின்*
வார்த்தையைப் பற்றி நாம் அறிவித்த ஒவ்வொரு நகரத்துக்கும் இப்போது#
திரும்பிப் போய், அங்கிருக்கிற சகோதரர்களைச் சந்தித்து அவர்கள் எப்படி
இருக்கிறார்கள் என்று பார்க்கலாம்” என்று சொன்னார்.[b] **37** மாற்கு என்று
அழைக்கப்பட்ட யோவானைக் கூட்டிக்கொண்டு போக வேண்டும் என்ப
தில் பர்னபா உறுதியாக இருந்தார்.[c] **38** ஆனால், மாற்கு முன்பு பம்பிலி
யாவில் அவர்களைவிட்டுப் பிரிந்து ஊழியம் செய்ய வராமல் இருந்த
தால், அவரைக் கூட்டிக்கொண்டு போக பவுல் விரும்பவில்லை.[d]
39 இதனால், பவுலுக்கும் பர்னபாவுக்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்
பட்டது; அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோனார்கள்; பர்னபா,[e]
மாற்குவைக் கூட்டிக்கொண்டு சீப்புருவுக்குக் கப்பல் ஏறினார். **40** பவுல்,
சீலாவைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். சகோதரர்கள் பவுலை யெகோவா
வின்* கையில் ஒப்படைத்து, அவருடைய அளவற்ற கருணை[f] பவுல்மேல்
இருக்கும்படி ஜெபம் செய்தார்கள். அதன் பின்பு, அவர் அங்கிருந்து புறப்
பட்டு, **41** சீரியா, சிலிசியா வழியாகப் போய், அங்கிருந்த சபைகளைப்
பலப்படுத்தினார்.

16 பவுல் தெர்பைக்கும் பின்பு லீஸ்திராவுக்கும் வந்துசேர்ந்தார்.[g]
அங்கே தீமோத்தேயு என்ற ஒரு சீஷர் இருந்தார்.[h] அவருடைய
அம்மா இயேசுவைப் பின்பற்றிய ஒரு யூதப் பெண், ஆனால் அப்பா
ஒரு கிரேக்கர். **2** லீஸ்திராவிலும் இக்கோனியாவிலும் இருந்த சகோதரர்
கள் தீமோத்தேயுவைப் பற்றி உயர்வாகப் பேசினார்கள். **3** அவரை பவுல்
தன்னோடு கூட்டிக்கொண்டு போக விரும்புவதாகச் சொன்னார். ஆனால்,
அந்த இடங்களில் வாழ்கிற யூதர்களை மனதில் வைத்து அவருக்கு விருத்
தசேதனம் செய்தார்.[i] ஏனென்றால், தீமோத்தேயுவின் அப்பா ஒரு கிரேக்கர்
என்பது அவர்கள் எல்லாருக்கும் தெரிந்திருந்தது. **4** அவர்கள் நகரம் நகர
மாகப் போனபோது, எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களும் மூப்பர்களும்
தீர்மானித்த கட்டளைகளை அங்கே இருந்தவர்களிடம் தெரிவித்து, அவற்
றைக் கடைப்பிடிக்கும்படி சொன்னார்கள்.[j] **5** இதனால், சபையில் இருந்த
வர்கள் விசுவாசத்தில் பலப்பட்டு வந்தார்கள், அவர்களுடைய எண்ணிக்கை
யும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வந்தது.

6 பின்பு, கடவுளுடைய வார்த்தையை ஆசிய மாகாணத்தில் அறிவிக்க
வேண்டாமென்று கடவுளுடைய சக்தி தடுத்ததால் பிரிகியா, கலாத்தியா

அதி. 15
a அப் 18:23
b 2கொ 11:28
c அப் 13:4, 5; கொலோ 4:10; 2தீ 4:11
d அப் 13:13
e அப் 4:36, 37
f அப் 14:26

அதி. 16
g அப் 14:5-7; 2தீ 3:11
h அப் 19:22; ரோ 16:21; 1கொ 4:17; 1தெ 3:2; 1தீ 1:2
i 1கொ 9:20
j அப் 15:28, 29

15:34 * இணைப்பு A3-ஐப் பாருங்கள். **15:35, 36, 40** * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **15:36** # அல்லது, “எப்படியாவது.”

பகுதிகள் வழியாக அவர்கள் போனார்கள்.[a] **7** அதன் பின்பு, மீசியாவுக்கு
வந்தபோது பித்தினியாவுக்குள்[b] போக முயற்சி செய்தார்கள். ஆனாலும்,
கடவுளுடைய சக்தியால் இயேசு அவர்களைத் தடுத்தார். **8** அதனால்,
அவர்கள் மீசியாவைக் கடந்து துரோவாவுக்கு வந்தார்கள். **9** அங்கே ராத்
திரி நேரத்தில் பவுல் ஒரு தரிசனத்தைப் பார்த்தார். அந்தத் தரிசனத்தில், மக்
கெதோனியாவைச் சேர்ந்த ஒருவன் வந்து நின்று, "மக்கெதோனியாவுக்கு
வந்து எங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று அவரைக் கெஞ்சிக் கேட்
டான். **10** அவர் அந்தத் தரிசனத்தைப் பார்த்ததும், மக்கெதோனியர்க
ளுக்கு நல்ல செய்தியைச் சொல்ல கடவுள் எங்களை அழைத்திருக்கி
றார் என்று நாங்கள் முடிவு பண்ணி, உடனே அங்கே போக ஏற்பாடுகள்
செய்தோம்.

11 பின்பு, நாங்கள் துரோவாவில் கப்பல் ஏறி, நேராக சாமோத்தி
ராக்கே தீவுக்குப் போனோம், அடுத்த நாள் நெயாப்போலி நகரத்துக்
குப் போனோம். **12** அங்கிருந்து மக்கெதோனிய மாகாணத்தின் முக்கி
யக் குடியேற்ற நகரமான பிலிப்பிக்குப்[c] போய், சில நாட்கள் தங்கினோம்.
13 ஓய்வுநாளன்று, அந்த நகரத்தின் வாசலுக்கு வெளியே இருந்த ஓர் ஆற்
றங்கரையில் ஜெபம் செய்கிற இடம் இருக்குமென்று நினைத்து அங்கே
போனோம். பின்பு அங்கே உட்கார்ந்துகொண்டு, கூடிவந்திருந்த பெண்களி
டம் பிரசங்கிக்க ஆரம்பித்தோம். **14** தியத்தீரா[d] நகரத்தைச் சேர்ந்த ஒரு
பெண் நாங்கள் பேசுவதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள்
பெயர் லீதியாள்; ஊதா நிறத் துணிகளை* விற்பவள்; கடவுளை
வணங்கி வந்தவள். பவுல் சொன்ன விஷயங்களை ஏற்றுக்கொள்ளும்படி
யெகோவா# அவளுடைய இதயத்தை முழுமையாகத் திறந்தார். **15** அவ
ளும் அவளுடைய வீட்டில் இருந்தவர்களும் ஞானஸ்நானம் எடுத்தார்கள்.[e]
அப்போது அவள் எங்களிடம், "நான் யெகோவாமேல்# விசுவாசம் வைத்
திருக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால் என் வீட்டுக்கு வந்து தங்குங்கள்"
என்று கெஞ்சிக் கேட்டாள், கடைசியில் எங்களைச் சம்மதிக்கவே வைத்து
விட்டாள்.

16 ஜெபம் செய்கிற இடத்துக்கு நாங்கள் போய்க்கொண்டிருந்தபோது,
ஒரு வேலைக்காரப் பெண் எங்களுக்கு எதிரில் வந்தாள். குறிசொல்ல வைக்
கிற ஒரு பேய்[f] அவளைப் பிடித்திருந்தது. குறிசொல்வதன் மூலம் அவள்
தன்னுடைய எஜமான்களுக்கு நிறைய லாபம் சம்பாதித்துக் கொடுத்தாள்.
17 பவுலையும் எங்களையும் அவள் விடாமல் பின்தொடர்ந்து வந்து,
"இவர்கள் உன்னதமான கடவுளின் ஊழியர்கள்,[g] மீட்பின் வழியை உங்க
ளுக்கு அறிவிக்கிறவர்கள்" என்று கத்திக்கொண்டே இருந்தாள். **18** இப்ப
டியே பல நாட்கள் செய்துவந்தாள். கடைசியில் பவுல், அந்தத் தொல்
லையைப் பொறுக்க முடியாமல், திரும்பிப் பார்த்து, "இயேசு கிறிஸ்துவின்
பெயரில் கட்டளையிடுகிறேன், இவளைவிட்டு வெளியே போ" என்று அந்
தப் பேயிடம் சொன்னார். அந்த நொடியே அது அவளைவிட்டு வெளியே
போனது.[h]

19 அவளுடைய எஜமான்கள் தங்களுக்கு இனி லாபம் கிடைக்காது
என்பதைப் புரிந்துகொண்டபோது,[i] பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தை
யிலிருந்த தலைவர்களிடம் இழுத்துக்கொண்டு போனார்கள்.[j] **20** அங்கே

அதி. 16
a அப் 18:23
b 1பே 1:1
c பிலி 1:1
d வெளி 1:11
e அப் 16:33
அப் 18:8
f லேவி 19:31
லேவி 20:6
g மாற் 1:23, 24
லூ 4:41
h மத் 17:18
மாற் 1:25, 26
மாற் 1:34
லூ 9:1
லூ 10:17
i அப் 19:24, 25
j மத் 10:18

16:14 *வே.வா., "சாயத்தை." **16:14, 15** #இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அவர்களை நடுவர்கள் முன்னால் நிறுத்தி, “இந்த ஆட்கள் நம்முடைய நக
ரத்தில் பயங்கர குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள்;[a] இவர்கள் யூதர்கள்.
21 ரோமர்களான நாம் ஏற்றுக்கொள்ளவோ கடைப்பிடிக்கவோ கூடாத சம்
பிரதாயங்களை இவர்கள் கற்பிக்கிறார்கள்” என்று குற்றம்சாட்டினார்கள்.
22 அப்போது, கூட்டத்தார் அந்த இரண்டு பேருக்கும் எதிராகத் திரண்டெ
ழுந்தார்கள். நடுவர்கள் அவர்களுடைய உடைகளைக் கிழித்தெறிந்து, அவர்
களைப் பிரம்புகளால் அடிக்கும்படி உத்தரவிட்டார்கள்.[b] **23** அவர்களை
நன்றாக அடித்துச் சிறையில் தள்ளி, கவனமாகக் காவல் காக்கும்படி சிறைக்
காவலனுக்குக் கட்டளையிட்டார்கள்.[c] **24** இந்தக் கட்டளை கொடுக்கப்பட்
டதால், சிறைக்காவலன் அவர்களை உட்சிறையில் தள்ளி, அவர்களுடைய
கால்களைத் தொழுமரங்களில் பூட்டி வைத்தான்.

25 ஆனால், ஏறக்குறைய நடுராத்திரியில் பவுலும் சீலாவும் ஜெபம் செய்
துகொண்டும் கடவுளைப் புகழ்ந்து பாடிக்கொண்டும் இருந்தார்கள்.[d]
மற்ற கைதிகள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். **26** அப்போது,
திடீரென்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. சிறைச்சாலையின் அஸ்தி
வாரங்கள் ஆட்டங்கண்டன. அந்த நொடியே எல்லா கதவுகளும் திறந்து
கொண்டன, எல்லாருடைய விலங்குகளும் கழன்றுவிட்டன.[e] **27** தூங்கிக்
கொண்டிருந்த சிறைக்காவலன் எழுந்து, சிறைக் கதவுகள் திறந்து
கிடப்பதைப் பார்த்தான். கைதிகள் தப்பித்து[f] ஓடிவிட்டதாக நினைத்து தன்
வாளை உருவித் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தான்.
28 ஆனால் பவுல் சத்தமாக, “உன்னை நீயே எதுவும் செய்துகொள்
ளாதே! நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம்!” என்று சொன்
னார். **29** உடனே அந்தச் சிறைக்காவலன் விளக்குகளைக் கொண்டுவரச்
சொல்லி, உள்ளே வேகமாக ஓடினான். நடுநடுங்கியபடி பவுலுக்கும் சீலா
வுக்கும் முன்னால் மண்டிபோட்டான். **30** பின்பு அவர்களை வெளியே
கூட்டிக்கொண்டு வந்து, “மதிப்புக்குரியவர்களே, மீட்புப் பெற நான்
என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டான். **31** அதற்கு அவர்கள், “எஜ
மானாகிய இயேசுவை நம்பு, அப்போது நீயும் உன் வீட்டில் இருப்பவர்க
ளும் மீட்புப் பெறுவீர்கள்”[g] என்று சொன்னார்கள். **32** பின்பு, அவனுக்கும்
அவனுடைய வீட்டிலிருந்த எல்லாருக்கும் யெகோவாவின்* வார்த்தையை
எடுத்துச் சொன்னார்கள். **33** அவன் அந்த ராத்திரியிலேயே அவர்களைக்
கூட்டிக்கொண்டுபோய் அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவ
னும் அவனுடைய வீட்டிலிருந்த எல்லாரும் தாமதிக்காமல் உடனடியாக
ஞானஸ்நானம் எடுத்தார்கள்.[h] **34** அதன் பின்பு, அவர்களைத் தன்னு
டைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்து உணவு பரிமாறினான். கடவுள்
மேல் நம்பிக்கை வைத்ததற்காகத் தன் வீட்டிலுள்ள எல்லாரோடும் சேர்ந்து
மிகவும் சந்தோஷப்பட்டான்.

35 பொழுது விடிந்ததும் நடுவர்கள், “அந்த ஆட்களை விடுதலை செய்
யுங்கள்” என்று காவலர்களிடம் சொல்லி அனுப்பினார்கள். **36** சிறைக்கா
வலன் இந்தச் செய்தியை பவுலிடம் தெரிவித்து, “உங்கள் இரண்டு
பேரையும் விடுதலை செய்யச் சொல்லி நடுவர்கள் ஆள் அனுப்பியிருக்கி
றார்கள். அதனால் நீங்கள் சிறையிலிருந்து வெளியே வாருங்கள், சமாதா
னத்தோடு புறப்பட்டுப் போங்கள்” என்று சொன்னான். **37** ஆனால் பவுல்

அதி. 16
a அப் 17:6
b 1தெ 2:2
c லூ 21:12
d எபே 5:19, கொலோ 3:16
e அப் 5:18-20, அப் 12:7
f அப் 12:18, 19
g யோவா 3:16, யோவா 6:47
h அப் 8:12

16:32 * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அவர்களிடம், “நாங்கள் ரோமக் குடிமக்கள். எங்களுக்கு முறைப்படி தீர்ப்ப
ளிக்காமலேயே* எல்லாருக்கும் முன்னால் அடித்துச் சிறையில் தள்ளினார்
கள்.[a] இப்போது ரகசியமாக எங்களை வெளியே அனுப்பப் பார்க்கிறார்
களா? அது நடக்கவே நடக்காது! அவர்களே வந்து எங்களை வெளியே
கூட்டிக்கொண்டு போகட்டும்” என்று சொன்னார். **38** அவர் சொன்னதை
நடுவர்களிடம் காவலர்கள் சொன்னார்கள். அவர்கள் இரண்டு பேரும்
ரோமக் குடிமக்கள் என்பதைக் கேட்டவுடன் அந்த நடுவர்கள் பயந்து
போனார்கள்.[b] **39** அதனால், அவர்களே அங்கு போய்க் கெஞ்சி அந்த
இரண்டு பேரையும் வெளியே கூட்டிக்கொண்டு வந்து, அந்த நகரத்தைவிட்
டுப் போகும்படி கேட்டுக்கொண்டார்கள். **40** சிறையிலிருந்து அவர்கள்
வெளியே வந்த பின்பு, லீதியாளின் வீட்டுக்குப் போனார்கள். அங்கே சகோ
தரர்களைப் பார்த்து அவர்களை உற்சாகப்படுத்தினார்கள்,[c] பின்பு அங்கி
ருந்து புறப்பட்டுப் போனார்கள்.

17 அவர்கள் அம்பிபோலி, அப்பொலோனியா நகரங்கள் வழியாக
தெசலோனிக்கே நகரத்துக்கு வந்தார்கள்.[d] அங்கே யூதர்களுடைய
ஜெபக்கூடம் ஒன்று இருந்தது. **2** பவுல் தன் வழக்கத்தின்படியே[e] ஜெபக்
கூடத்துக்குப் போய், அங்கிருந்தவர்களிடம் மூன்று ஓய்வுநாட்களுக்கு
வேதவசனங்களிலிருந்து நியாயங்காட்டிப் பேசினார்.[f] **3** கிறிஸ்து பாடு
கள் படுவதும்,[g] பின்பு உயிரோடு எழுந்திருப்பதும்[h] அவசியமாக இருந்த
தென்றும், தான் அறிவித்த இயேசுதான் அந்தக் கிறிஸ்து என்றும் நிரூ
பிக்கிற விதத்தில் மேற்கோள்கள் காட்டி விளக்கினார். **4** இதனால், அவர்
களில் சிலர் இயேசுவின் சீஷர்களாகி பவுலோடும் சீலாவோடும்[i] சேர்ந்து
கொண்டார்கள். அதேபோல், கடவுளை வணங்கிய கிரேக்கர்களில் ஏராள
மான ஆட்களும், முக்கியமான பெண்களில் நிறைய பேரும் அவர்களோடு
சேர்ந்துகொண்டார்கள்.

5 ஆனால் யூதர்கள் பொறாமைப்பட்டு,[j] சந்தையில் வெட்டியாகத் திரிந்
துகொண்டிருந்த மோசமான ஆட்கள் சிலரைக் கும்பலாகச் சேர்த்துக்
கொண்டு நகரத்தில் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தார்கள். பின்பு, பவு
லையும் சீலாவையும் அந்தக் கும்பலிடம் இழுத்து வருவதற்காக யாசோன்
என்பவருடைய வீட்டைத் தாக்கி உள்ளே புகுந்தார்கள். **6** அவர்களை
அங்கே கண்டுபிடிக்க முடியாததால், யாசோனையும் வேறு சில சகோதரர்
களையும் நகரத் தலைவர்களிடம் இழுத்துக்கொண்டுபோய், “உலகமெங்கும்
அமளி உண்டாக்குகிற ஆட்கள் இங்கேயும் வந்துவிட்டார்கள்.[k] **7** இவர்
களை யாசோன் தன்னுடைய வீட்டில் விருந்தாளிகளாகத் தங்க வைத்திருக்
கிறான். இவர்கள் எல்லாரும் இயேசு என்ற வேறொரு ராஜா இருப்பதாகச்
சொல்லி, ரோம அரசனுடைய* கட்டளைகளுக்கு எதிராகச் செயல்படுகி
றார்கள்” என்று கூச்சல் போட்டார்கள்.[l] **8** இதையெல்லாம் கேட்டபோது
கூட்டத்தாரும் நகரத் தலைவர்களும் கலக்கம் அடைந்தார்கள். **9** அந்த
நகரத் தலைவர்கள், யாசோனிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் ஜாமீன்
தொகையை வாங்கிக்கொண்டு அவர்களை விடுதலை செய்தார்கள்.

10 இருட்டிய உடனே, பவுலையும் சீலாவையும் சகோதரர்கள் பெரோயா
வுக்கு அனுப்பினார்கள்; அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்ததும் யூதர்களு

16:37 *வே.வா., “எங்களை விசாரணை செய்யாமலேயே.” **17:7** *நே.மொ., “சீஸரு
டைய.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 16
a அப் 22:25
அப் 23:27
b அப் 22:27-29
c 2கொ 1:3, 4

அதி. 17
d 1தெ 2:1
e அப் 9:19, 20
அப் 13:13, 14
அப் 14:1
அப் 18:4
f அப் 18:19
g சங் 22:7
சங் 34:20
சங் 69:21
சங் 118:22
ஏசா 50:6
ஏசா 53:3, 5
h சங் 16:10
லூ 24:45, 46
i அப் 15:22, 40
j அப் 13:45
k அப் 16:19-21
l லூ 23:1, 2
யோவா 19:12

அதி. 17
a அப் 14:2, 19 டைய ஜெபக்கூடத்துக்குப் போனார்கள். **11** தெசலோனிக்கேயில் இருந்த
யூதர்களைவிட பெரோயாவில் இருந்த யூதர்கள் பரந்த மனப்பான்மை
உள்ளவர்களாக இருந்தார்கள். ஏனென்றால், கடவுளுடைய வார்த்தை
களை அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு கேட்டு, அவையெல்லாம் சரி
தானா என்று தினமும் வேதவசனங்களைக் கவனமாக ஆராய்ந்து பார்த்தார்
கள். **12** அதனால், அவர்களில் பலர் இயேசுவின் சீஷர்களானார்கள்.
மதிப்புக்குரிய கிரேக்க பெண்களில் பலரும் ஆண்களில் சிலரும்கூட சீஷர்க
b மத் 10:23 ளானார்கள். **13** பவுல் கடவுளுடைய வார்த்தையை பெரோயாவிலும் அறி
வித்து வருகிறார் என்று தெசலோனிக்கேயில் இருந்த யூதர்கள் கேள்விப்
பட்டபோது, மக்களைத் தூண்டி கலகம் உண்டாக்க அங்கேயும் வந்தார்கள்.[a]
14 சகோதரர்கள் உடனே பவுலைக் கடற்கரைக்கு அனுப்பி வைத்தார்கள்.[b]
ஆனால், சீலாவும் தீமோத்தேயுவும் பெரோயாவிலேயே தங்கிவிட்டார்
கள். **15** பவுலோடு போனவர்கள் அத்தேனே நகரம்வரை கூடவே
c அப் 16:1, 2 போனார்கள். பின்பு, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சீலா
1தெ 3:2 வும் தீமோத்தேயுவும்[c] தன்னிடம் வரவேண்டுமென்ற கட்டளையை பவுலிட
மிருந்து அவர்கள் பெற்றுக்கொண்டு திரும்பி வந்தார்கள்.

16 சீலாவுக்காகவும் தீமோத்தேயுவுக்காகவும் அத்தேனே நகரத்தில்
பவுல் காத்துக்கொண்டிருந்தபோது, அந்த நகரம் முழுவதும் சிலைகள்
இருந்ததைப் பார்த்து எரிச்சலடைந்தார். **17** அதனால், ஜெபக்கூடத்தில்
யூதர்களிடமும் கடவுளை வணங்கிய மற்றவர்களிடமும் தினமும் சந்தை
யில் சந்தித்த ஆட்களிடமும் நியாயங்காட்டிப் பேசினார். **18** ஆனால்,
d யோவா 5: 28, 29 தத்துவ ஞானிகளான சில எப்பிக்கூரர்களும் ஸ்தோயிக்கர்களும் அவ
ரோடு வாக்குவாதம் செய்தார்கள். சிலர், “இந்த உளறுவாயன் என்ன
யோவா 11:25 சொல்கிறான்?” என்று கேட்டார்கள். வேறு சிலர், “இவன் அன்னிய தெய்
1கொ 15:12 வங்களைப் பற்றி அறிவிக்கிறவன்போல் தெரிகிறது” என்று சொன்னார்கள்.
இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் பற்றிய நல்ல செய்தியை[d] அவர்
அறிவித்ததால் அப்படிச் சொன்னார்கள். **19** பின்பு, அவர்கள் அவரை
அரியோபாகுவுக்குக் கூட்டிக்கொண்டுபோய், “நீ ஏதோ புதிதாகக் கற்றுக்
கொடுக்கிறாயே, அது என்னவென்று நாங்கள் தெரிந்துகொள்ளலாமா?
20 நீ சொல்கிற சில விஷயங்கள் விசித்திரமாக இருக்கின்றன; அவற்றின்
அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்” என்றார்கள். **21** சொல்
e அப் 17:33, 34 லப்போனால், அத்தேனே நகரத்திலிருந்த எல்லாரும், அங்கே தங்கியிருந்த
மற்ற தேசத்து மக்களும், புதுப்புது விஷயங்களைப் பேசுவதிலும் கேட்பதி
லும்தான் பொழுதைக் கழித்தார்கள். **22** அப்போது, அரியோபாகுவின்[e]
நடுவில் பவுல் எழுந்து நின்று,

“அத்தேனே நகர மக்களே, மற்ற மக்களைவிட நீங்கள் எல்லா
விதத்திலும் தெய்வங்கள்மேல் பயபக்தி உள்ளவர்களாக இருப்பதைப்
f அப் 17:16 பார்க்கிறேன்.[f] **23** உதாரணமாக, நான் இந்த நகரத்தின் வழியாக வந்த
போது, நீங்கள் வணங்குகிறவற்றைக் கவனமாகப் பார்த்துக்கொண்டே வந்
தேன். அப்போது, ‘அறியப்படாத கடவுளுக்கு’ என்று பொறிக்கப்பட்டிருந்த
ஒரு பலிபீடத்தைக்கூட பார்த்தேன். நீங்கள் அறியாமல் வணங்குகிற அந்
தக் கடவுளைப் பற்றித்தான் உங்களுக்குச் சொல்கிறேன். **24** உலகத்தை
யும் அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்த கடவுள் வானத்துக்கும் பூமிக்
g சங் 146:6 கும் எஜமானாக இருப்பதால்,[g] மனுஷர்களால் கட்டப்பட்ட கோயில்களில்

அவர் குடியிருப்பதில்லை.[a] **25** மனுஷர்களுடைய கைகளால் அவர் எந்
தப் பணிவிடையையும் பெற்றுக்கொள்வதில்லை,[b] அதற்கான அவசியமும்
அவருக்கு இல்லை. ஏனென்றால், அவர்தான் எல்லாருக்கும் உயிரையும்
சுவாசத்தையும்[c] மற்ற எல்லாவற்றையும் தருகிறார். **26** ஒரே மனுஷனி
லிருந்து எல்லா தேசத்து மக்களையும் உண்டுபண்ணி,[d] அவர்களைப் பூமி
முழுவதும் குடியிருக்க வைத்திருக்கிறார்.[e] குறித்த காலங்களையும், குடியி
ருக்கும் எல்லைகளையும் அவர்களுக்கு நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறார்.[f]
27 உண்மையில், அவர் நம் ஒருவருக்கும் தூரமானவராக இல்லாதபோதி
லும், அவரை நாம் தேட வேண்டும் என்பதற்காக, அதுவும் தட்டித் தடவி
யாவது கண்டுபிடிக்க வேண்டும்[g] என்பதற்காக அப்படிச் செய்திருக்கிறார்.
28 அவரால்தான் நாம் உயிர் வாழ்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்;
உங்கள் கவிஞர்களில் சிலர்கூட, 'நாம் அவருடைய பிள்ளைகள்'* என்று
சொல்லியிருக்கிறார்கள்.

29 நாம் கடவுளுடைய பிள்ளைகளாக*[h] இருப்பதால், மனுஷர்க
ளுடைய சிற்ப வேலைப்பாட்டாலும் கற்பனையாலும் வடிவமைக்கப்பட்ட
பொன், வெள்ளி, கல் உருவங்களைப் போலக் கடவுள் இருப்பார் என்று
நாம் நினைக்கக் கூடாது.[i] **30** உண்மைதான், மக்கள் அறியாமையில்
இருந்த காலங்களைக்[j] கடவுள் கண்டும்காணாதவர்போல் விட்டுவிட்டார்.
ஆனால், இப்போது மனம் திருந்தும்படி எல்லா இடங்களிலும் உள்ள மக்க
ளுக்குச் சொல்கிறார். **31** ஏனென்றால், தான் நியமித்த ஒரு மனுஷர்
மூலம் இந்த உலகத்தை நீதியோடு நியாயந்தீர்க்க அவர் ஒரு நாளைக் குறித்
திருக்கிறார்.[k] இறந்துபோன அந்த மனுஷரை உயிர்த்தெழுப்பியதன் மூலம்
அதற்கான உத்தரவாதத்தை எல்லா மனுஷர்களுக்கும் கொடுத்திருக்கிறார்"[l]
என்று சொன்னார்.

32 உயிர்த்தெழுதலைப் பற்றி அவர்கள் கேட்டபோது சிலர் கேலி
செய்ய ஆரம்பித்தார்கள்.[m] இன்னும் சிலர், "இன்னொரு சமயத்தில் இதைப்
பற்றி மறுபடியும் கேட்கிறோம்" என்று சொன்னார்கள். **33** அதனால், பவுல்
அவர்களைவிட்டுப் புறப்பட்டுப் போனார். **34** இருந்தாலும், சில ஆட்கள்
அவரோடு சேர்ந்துகொண்டு இயேசுவின் சீஷர்களானார்கள். அவர்களில்
அரியோபாகு நீதிமன்றத்தின் நீதிபதிகளில் ஒருவரான தியொனீசியு என்பவ
ரும், தாமரி என்ற பெண்ணும், வேறு சிலரும் இருந்தார்கள்.

18 இதற்குப் பின்பு, அவர் அத்தேனே நகரத்தைவிட்டு கொரிந்து
வுக்கு வந்தார். **2** அங்கே பொந்து மாகாணத்தைச் சேர்ந்த ஆக்
கில்லா[n] என்ற யூதரையும் அவருடைய மனைவி பிரிஸ்கில்லாளையும் சந்
தித்து, அவர்களுடைய வீட்டுக்குப் போனார். யூதர்கள் எல்லாரையும்
ரோமைவிட்டுப் போகச் சொல்லி கிலவுதியு அரசன் கட்டளை கொடுத்தி
ருந்ததால், அந்தத் தம்பதி சமீபத்தில்தான் இத்தாலியிலிருந்து அங்கே வந்
திருந்தார்கள். **3** அவர்கள் கூடாரத் தொழில் செய்பவர்கள். பவுலும் அதே
தொழில் செய்கிறவராக இருந்ததால் அவர்களுடைய வீட்டில் தங்கி அவர்க
ளோடு வேலை பார்த்தார்.[o] **4** அவர் ஒவ்வொரு ஓய்வுநாளிலும்[p] ஜெபக்
கூடத்துக்குப் போய்,[q] யூதர்களும் கிரேக்கர்களும் நம்பிக்கை வைக்கும்
அளவுக்குப் பக்குவமாகப் பேசிவந்தார்.

17:28 * வே.வா., "சந்ததி." **17:29** * வே.வா., "சந்ததியாக."

அதி. 17
a 1ரா 8:27
b சங் 50:12
c ஏசா 42:5
d ஆதி 5:2
e ஆதி 1:28
f உபா 2:5, 19; உபா 32:8; சங் 74:17
g உபா 4:29; சங் 145:18; ரோ 1:20
h ஆதி 1:27
i உபா 5:8; ஏசா 37:19; ஏசா 40:18-20; ஏசா 46:5
j எபே 4:17, 18
k சங் 96:13; சங் 98:9; யோவா 5:22; அப் 10:42
l யோவா 11:25; அப் 2:24; அப் 13:32, 33
m 1கொ 1:23

அதி. 18
n அப் 18:24, 26; 1கொ 16:19; 2தீ 4:19
o அப் 20:34; 1கொ 4:11, 12; 1கொ 9:15; 1தெ 2:9; 2தெ 3:8, 10
p அப் 17:2
q மத் 4:23

அதி. 18
a அப் 15:27 அப் 17:14
b அப் 16:1, 2 1தெ 3:6
c அப் 17:2, 3 அப் 28:23
d மத் 10:14
e எசே 33:4
f அப் 20:26
g அப் 13:46 அப் 28:28 ரோ 1:16
h 1கொ 1:14
i மத் 28:20
j அப் 23:29 அப் 25:19
k 1கொ 1:1
l ரோ 16:1
m அப் 17:2

5 சீலாவும்[a] தீமோத்தேயுவும்[b] மக்கெதோனியாவிலிருந்து வந்த பின்பு,
யூதர்களிடம் பவுல் கடவுளுடைய வார்த்தையை முழு மூச்சோடு பிரசங்
கிக்கவும், இயேசுவே கிறிஸ்து என்று நிரூபிப்பதற்காகச் சாட்சி கொடுக்க
வும் ஆரம்பித்தார்.[c] **6** ஆனால், யூதர்கள் தொடர்ந்து எதிர்த்துக்கொண்டும்
பழித்துக்கொண்டும் இருந்தார்கள். அதனால், அவர் தன்னுடைய
உடையை உதறி,[d] “இனி உங்களுக்கு என்ன நடந்தாலும் அதற்கு நீங்
கள்தான் பொறுப்பு,[e] நான் பொறுப்பல்ல.*[f] இனி நான் மற்ற தேசத்து
மக்களிடம் போகிறேன்”[g] என்று சொன்னார். **7** பின்பு, அவர் அந்த
இடத்தைவிட்டு,* கடவுளை வணங்கிவந்த தீத்தியு யுஸ்து என்பவரு
டைய வீட்டுக்குப் போனார். இவருடைய வீடு ஜெபக்கூடத்தை ஒட்டியிருந்
தது. **8** அந்த ஜெபக்கூடத்தின் தலைவரான கிறிஸ்பு[h] என்பவரும் அவரு
டைய வீட்டிலிருந்த எல்லாரும் எஜமானின் சீஷர்களானார்கள். நல்ல
செய்தியைக் கேட்ட கொரிந்து நகர மக்கள் பலரும் எஜமான்மேல் விசுவா
சம் வைத்து ஞானஸ்நானம் எடுத்தார்கள். **9** ராத்திரி நேரத்தில் பவுலுக்கு
எஜமான் தரிசனமாகி, “பயப்படாதே, பேசிக்கொண்டே இரு, அமைதியாகி
விடாதே. **10** நான் உன்னோடு இருக்கிறேன்,[i] யாரும் உன்னைத் தாக்க
மாட்டார்கள். இந்த நகரத்தில் என்னுடைய மக்கள் இன்னும் நிறைய பேர்
இருக்கிறார்கள்” என்று சொன்னார். **11** அதனால் பவுல் அங்கே ஒன்றரை
வருஷம் தங்கியிருந்து, கடவுளுடைய வார்த்தையை அவர்களுக்குக் கற்
பித்துவந்தார்.

12 கல்லியோன் என்பவர் அகாயாவில் மாநில ஆளுநராக* இருந்த
போது பவுலுக்கு எதிராக யூதர்கள் ஒன்றுதிரண்டு, அவரை நியாயத்தீர்ப்பு
மேடைக்குக் கொண்டுபோய், **13** “சட்டத்துக்கு முரணான விதத்தில் கட
வுளை வணங்கச் சொல்லி இந்த ஆள் மக்களைத் தூண்டுகிறான்”
என்று சொன்னார்கள். **14** பவுல் பேச வாயெடுத்தபோது, கல்லியோன்
அந்த யூதர்களிடம், “யூதர்களே, ஏதாவது தவறோ பெரிய குற்றமோ நடந்
திருந்தால் நீங்கள் சொல்வதை நான் பொறுமையோடு கேட்பது நியாயமாக
இருக்கும். **15** ஆனால், இது வார்த்தைகளையும் பெயர்களையும் உங்க
ளுடைய சட்டங்களையும் பற்றிய சர்ச்சையாக[j] இருப்பதால், இப்படிப்பட்ட
விஷயங்களை விசாரிக்க எனக்கு விருப்பமில்லை, நீங்களே பார்த்துக்
கொள்ளுங்கள்” என்று சொல்லி, **16** அவர்களை நியாயத்தீர்ப்பு மேடை
யிலிருந்து துரத்திவிட்டார். **17** அதனால், அவர்கள் எல்லாரும் ஜெபக்கூ
டத் தலைவரான சொஸ்தேனேயைப்[k] பிடித்து நியாயத்தீர்ப்பு மேடைக்கு
முன்னால் அடிக்க ஆரம்பித்தார்கள். ஆனால், அவர்கள் செய்ததை கல்லி
யோன் கொஞ்சமும் கண்டுகொள்ளவில்லை.

18 பவுல் அங்கே பல நாட்கள் தங்கிய பின்பு சகோதரர்களிடமி
ருந்து விடைபெற்று, பிரிஸ்கில்லாளுடனும் ஆக்கில்லாவுடனும் சீரியாவுக்
குக் கப்பல் ஏறினார். நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக அவர் கெங்கிரே
யாவில்[l] தலைமுடியை ஒட்ட வெட்டிக்கொண்டார். **19** அவர்கள் எபேசு
நகரத்துக்கு வந்தபோது, அவர் அவர்களை விட்டுவிட்டு ஜெபக்கூடத்துக்
குப் போய் யூதர்களிடம் நியாயங்காட்டிப் பேசினார்.[m] **20** இன்னும்

18:6 *நே.மொ., “உங்கள் இரத்தப்பழி உங்கள் தலைமீதே இருக்கட்டும். நான் சுத்த
மாக இருக்கிறேன்.” **18:7** *அதாவது, “ஜெபக்கூடத்தைவிட்டு.” **18:12** *சொல் பட்
டியலைப் பாருங்கள்.

கொஞ்சக் காலம் தங்களோடு இருக்கும்படி அவர்கள் திரும்பத் திரும்பக்
கேட்டார்கள், ஆனால் அவர் சம்மதிக்கவில்லை. **21** “யெகோவாவுக்கு*
விருப்பம்# இருந்தால் மறுபடியும் உங்களிடம் வருவேன்” என்று அவர்க
ளிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். பின்பு எபேசுவிலிருந்து கப்பல்
ஏறி, **22** செசரியாவுக்குப் போனார். அதன் பின்பு, மேலே* போய் சபை
யில் இருந்தவர்களைச் சந்தித்து வாழ்த்துச் சொல்லிவிட்டு, அந்தியோகியா
வுக்குப் போனார்.[a]

23 அங்கே கொஞ்சக் காலம் தங்கியிருந்த பின்பு, கலாத்தியா, பிரிகியா
பகுதிகள் முழுவதும் ஒவ்வொரு இடமாகப் போய்,[b] சீஷர்கள் எல்லாரை
யும் பலப்படுத்தினார்.[c]

24 அலெக்சந்திரியாவைச் சேர்ந்த அப்பொல்லோ[d] என்ற ஒரு யூதர்
எபேசுவுக்கு வந்தார். அவர் திறமையாகப் பேசுபவராக இருந்தார், வேதவ
சனங்களை நன்றாகத் தெரிந்துவைத்திருந்தார். **25** யெகோவாவின்* வழி
யைப் பற்றி அவருக்குக் கற்பிக்கப்பட்டிருந்தது. அவர் கடவுளுடைய சக்தி
யினால் நிறைந்து ஆர்வத்துடிப்போடு இயேசுவைப் பற்றிய விஷயங்களைப்
பேசிக்கொண்டும், திருத்தமாகக் கற்பித்துக்கொண்டும் இருந்தார். ஆனால்,
யோவான் பிரசங்கித்த ஞானஸ்நானத்தைப் பற்றி மட்டுமே அவருக்குத்
தெரிந்திருந்தது. **26** ஜெபக்கூடத்திலும் அவர் தைரியமாகப் பேச ஆரம்
பித்தார். அவர் பேசியதை பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும்[e] கேட்டபோது,
அவரைத் தங்களோடு கூட்டிக்கொண்டுபோய், கடவுளுடைய வழிகளைப்
பற்றி இன்னும் திருத்தமாக அவருக்கு விளக்கினார்கள். **27** அவர் அகாயா
வுக்குப் போக விரும்பியதால், அவரை அன்போடு வரவேற்கும்படி அங்
கிருந்த சீஷர்களுக்கு எபேசுவிலிருந்த சகோதரர்கள் கடிதம் எழுதினார்கள்;
அவர் அங்கே போனபோது, கடவுளுடைய அளவற்ற கருணையால் சீஷர்க
ளானவர்களுக்கு அதிக உதவியாக இருந்தார். **28** எப்படியென்றால், இயே
சுவே கிறிஸ்து என்று வேதவசனங்களிலிருந்து எடுத்துக் காட்டி,[f] யூதர்க
ளுடைய போதனைகள் தவறென்று முழுமையாகவும் வெளிப்படையாகவும்
மிகத் தீவிரமாகவும் நிரூபித்துவந்தார்.

19 அப்பொல்லோ[g] கொரிந்துவில் இருந்தபோது, பவுல் மலைப்பகுதி
கள் வழியாக எபேசுவுக்குப்[h] போய்ச் சேர்ந்தார். அங்கே சில சீஷர்
களைப் பார்த்து அவர்களிடம், **2** “நீங்கள் இயேசுவின் சீஷர்களானபோது
கடவுளுடைய சக்தியைப் பெற்றுக்கொண்டீர்களா?”[i] என்று கேட்டார்.
அதற்கு அவர்கள், “கடவுளுடைய சக்தியைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்ட
துகூட இல்லை” என்று சொன்னார்கள். **3** “அப்படியானால், நீங்கள் எந்த
ஞானஸ்நானத்தைப் பெற்றீர்கள்?” என்று அவர் கேட்டார். அதற்கு,
“யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப்[j] பெற்றோம்” என்று சொன்னார்
கள். **4** அப்போது பவுல், “யோவான் தனக்குப்பின் வரவிருந்த இயேசு
மேல் நம்பிக்கை வைக்கும்படி மக்களிடம் சொல்லி,[k] மனம் திருந்துவதற்கு
அடையாளமாக ஞானஸ்நானம் கொடுத்து வந்தார்”[l] என்று சொன்னார்.
5 இதைக் கேட்டபோது எஜமானாகிய இயேசுவின் பெயரில் அவர்கள்
ஞானஸ்நானம் எடுத்தார்கள். **6** அவர்கள்மேல் பவுல் தன்னுடைய
கைகளை வைத்தபோது கடவுளுடைய சக்தி அவர்களுக்குக் கிடைத்தது.[m]

18:21, 25 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **18:21** #வே.வா., “சித்தம்.” **18:22** *அநேகமாக, “எருசலேமுக்கு.”

அதி. 18
a அப் 15:36
b அப் 16:6
c அப் 14:21, 22; அப் 15:32
d அப் 19:1; 1கொ 1:12; 1கொ 3:5, 6
e ரோ 16:3; 1கொ 16:19
f உபா 18:15; சங் 16:10; ஏசா 7:14; மீ 5:2

அதி. 19
g அப் 18:24; 1கொ 3:5, 6
h 1கொ 16:8, 9
i அப் 2:38
j அப் 18:24, 25
k யோவா 1:15, 30
l மத் 3:11; மாற் 1:4
m அப் 8:14, 17

அவர்கள் வெவ்வேறு மொழிகளில் பேசவும் தீர்க்கதரிசனம் சொல்லவும்
ஆரம்பித்தார்கள்.[a] **7** அங்கே ஏறக்குறைய 12 ஆண்கள் இருந்தார்கள்.

8 பின்பு, அவர் மூன்று மாதங்களாக ஜெபக்கூடத்துக்குப் போய்த்[b]
தைரியமாகப் பேசிவந்தார்; கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிப் பேச்
சுகள் கொடுத்து, பக்குவமாக நியாயங்காட்டிப் பேசிவந்தார்.[c] **9** ஆனால்,
அங்கிருந்த சிலர் அவர் சொல்வதை நம்பாமல் பிடிவாதமாக இருந்தார்கள்,
இந்த மார்க்கத்தை*[d] பற்றிக் கூட்டத்தார் முன்னால் கேவலமாகப் பேசினார்
கள். அதனால் பவுல் அவர்களைவிட்டு விலகினார்;[e] சீஷர்களைத் தனியா
கக் கூட்டிக்கொண்டுபோய், திரன்னு பள்ளி அரங்கத்தில் தினமும் பேச்சுகள்
கொடுத்துவந்தார். **10** இரண்டு வருஷங்களுக்கு இப்படியே செய்துவந்
தார். அதனால், ஆசிய மாகாணம் முழுவதிலும் வாழ்ந்துவந்த யூதர்களும்
கிரேக்கர்களும் எஜமானின் வார்த்தையைக் கேட்டார்கள்.

11 பவுலின் கைகளால் கடவுள் மாபெரும் அற்புதங்களைச் செய்து
கொண்டே இருந்தார்.[f] **12** சொல்லப்போனால், அவருடைய கைக்குட்டை
களையும் துணிகளையும் கொண்டுவந்து நோயாளிகள்மேல் வைத்த
போது[g] நோய்கள் குணமாயின, பேய்களும் ஓடிப்போயின.[h] **13** பல
இடங்களுக்குப் பயணம் செய்து பேய்களை விரட்டிவந்த யூதர்கள் சிலர், எஜ
மானாகிய இயேசுவின் பெயரைப் பயன்படுத்த முயற்சி செய்தார்கள்.
அவர்கள், "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பெயரில் கட்டளையிடுகி
றேன், போய்விடு"[i] என்று சொல்லி பேய்களை விரட்ட முயற்சி செய்தார்
கள். **14** ஸ்கேவா என்ற யூத முதன்மை குருவின் ஏழு மகன்களும் இப்ப
டிச் செய்தார்கள். **15** அப்போது அந்தப் பேய், "எனக்கு இயேசுவைத்
தெரியும்,[j] பவுலையும் தெரியும்,[k] ஆனால் நீங்கள் யார்?" என்று கேட்
டது. **16** பேய் பிடித்திருந்த அந்த ஆள் உடனே அவர்கள் எல்லார்மேலும்
பாய்ந்து, அவர்களை அமுக்கித் திணறடித்தான். அதனால், அவர்கள் காயங்
களோடு அந்த வீட்டைவிட்டு நிர்வாணமாக ஓடிப்போனார்கள். **17** இந்தச்
செய்தி எபேசுவில் வாழ்ந்துவந்த யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் தெரிய
வந்தபோது அவர்கள் எல்லாரும் பயந்துபோனார்கள். எஜமானாகிய இயே
சுவின் பெயருக்குப் புகழ் சேர்ந்துகொண்டே இருந்தது. **18** இயேசுவின்
சீஷர்களாக மாறிய பலர், தாங்கள் பழக்கமாகச் செய்த பாவங்களை வெளிப்
படையாக ஒத்துக்கொண்டார்கள். **19** மாயமந்திரங்கள் செய்துவந்த ஏராள
மான ஆட்கள் தங்களுடைய புத்தகங்களை மொத்தமாகக் கொண்டுவந்து,
எல்லாருக்கும் முன்னால் தீ வைத்துக் கொளுத்தினார்கள்.[l] அவற்றின் மதிப்பு
50,000 வெள்ளிக் காசுகள் என்று கணக்கிட்டார்கள். **20** இப்படி, யெகோவா
வின்* வார்த்தை மாபெரும் விதத்தில் பரவி, தடைகளையெல்லாம் வென்று
வந்தது.[m]

21 இவையெல்லாம் நடந்து முடிந்த பின்பு, பவுல் மக்கெதோனியாவுக்
கும்[n] அகாயாவுக்கும் போக வேண்டுமென்றும், அதன்பின் எருசலேமுக்குப்
போக வேண்டுமென்றும்[o] தன்னுடைய மனதில் தீர்மானித்தார். "அங்கிருந்து
ரோமுக்கும் போக வேண்டும்" என்று சொல்லிக்கொண்டார்.[p] **22** அத
னால், தனக்கு உதவி செய்தவர்களில் இரண்டு பேரை, அதாவது தீமோத்தே
யுவையும்[q] எரஸ்துவையும்,[r] மக்கெதோனியாவுக்கு அனுப்பிவிட்டு, அவர்
மட்டும் சில காலம் ஆசிய மாகாணத்திலேயே தங்கினார்.

அதி. 19
a அப் 2:1, 4
அப் 10:45, 46
1கொ 12:8, 10
b அப் 17:2
c அப் 1:3
அப் 28:30, 31
d அப் 9:1, 2
அப் 22:4
e மத் 10:14
f அப் 14:3
g மாற் 6:56
அப் 5:15
h மத் 10:1
i அப் 16:18
j மத் 8:28, 29
மாற் 1:23, 24
லூ 4:33, 34
k அப் 16:16, 17
l உபா 18:10, 11
m அப் 6:7
அப் 12:24
கொலோ 1:6
n 1கொ 16:5
o அப் 20:22
p அப் 23:11
q அப் 16:1, 2
r 2தீ 4:20

19:9 * சொல் பட்டியலைப் பாருங்கள். **19:20** * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

23 அந்தக் காலத்தில், இந்த மார்க்கம்[a] சம்பந்தமாகப் பெரிய கலவரம்
வெடித்தது.[b] **24** தெமேத்திரியு என்ற வெள்ளி ஆசாரி ஒருவன் அர்த்தமி
கோயிலின் வடிவத்தை வெள்ளியில் சின்ன உருவங்களாகச் செய்து, கைத்
தொழிலாளிகளுக்கு ஏராளமான லாபம் தேடித் தந்தான்.[c] **25** இவர்களை
யும் இப்படிப்பட்ட தொழில் செய்கிற மற்றவர்களையும் அவன் ஒன்றுகூட்டி,
“நண்பர்களே, இந்தத் தொழில் நமக்கு நிறைய வருமானத்தைத் தருகிறது
என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். **26** ஆனால், கைகளால் செய்
யப்பட்டதெல்லாம் தெய்வங்கள் கிடையாது என்று இந்த பவுல் சொல்லிக்
கொண்டு திரிகிறான்.[d] எபேசுவில்[e] மட்டுமல்ல, கிட்டத்தட்ட ஆசிய மாகா
ணம் முழுவதும் இப்படிச் சொல்லி ஏராளமான ஆட்களை நம்ப வைத்து,
அவர்களுடைய மனதைத் திசைதிருப்பியிருக்கிறான்; இதை நீங்களே பார்த்
தும் கேட்டும் இருக்கிறீர்கள். **27** இதனால், நம் தொழிலுக்குக் கெட்ட
பெயர் வருவது மட்டுமல்ல, மகா தேவி அர்த்தமியின் கோயிலுக்கு எந்த
மதிப்பும் இல்லாமல் போய்விடும். ஆசிய மாகாணம் முழுவதும், ஏன் உல
கம் முழுவதும், மக்கள் வணங்குகிற நம் தேவியின் மகத்துவமும் மங்கிவி
டும்” என்று சொன்னான். **28** இதைக் கேட்ட அந்த ஆட்கள் எல்லாரும்
கோபத்தில் பொங்கியெழுந்து, “எபேசியர்களின் அர்த்தமியே மகா தேவி!”
என்று கோஷம்போட்டார்கள்.

29 நகரமே குழப்பத்தில் மூழ்கியது. பவுலின் பயணத் தோழர்களான
காயு, அரிஸ்தர்க்கு[f] ஆகிய மக்கெதோனியர்களை அவர்கள் பிடித்து
இழுத்துக்கொண்டு ஒன்றாக அரங்கத்துக்குள் ஓடினார்கள். **30** அப்போது
பவுல், கூட்டத்துக்குள் போக விரும்பினார். ஆனால், சீஷர்கள் அவரைப்
போக விடவில்லை. **31** பண்டிகைகளையும் விளையாட்டுகளையும் ஏற்
பாடு செய்துவந்த சில அதிகாரிகள்கூட, அதாவது அவருக்குப் பழக்கமான
சில அதிகாரிகள்கூட, அவரிடம் ஆள் அனுப்பி, அரங்கத்துக்குள் போய்
ஆபத்தை விலைக்கு வாங்க வேண்டாமென்று அவரைக் கேட்டுக்கொண்
டார்கள். **32** கூட்டத்தில் ஒரே குழப்பமாக இருந்தது; சிலர் இப்படியும்
சிலர் அப்படியுமாகக் கத்திக்கொண்டிருந்தார்கள். சொல்லப்போனால், எதற்
காகக் கூடிவந்திருந்தார்கள் என்றே பெரும்பாலான ஆட்களுக்குத் தெரிய
வில்லை. **33** அப்போது யூதர்கள், அலெக்சந்தர் என்பவரைக் கூட்டத்தி
லிருந்து முன்னுக்குத் தள்ளினார்கள். அவர் தன்னுடைய கையால் சைகை
காட்டிவிட்டு, மக்களிடம் பேச முயற்சி செய்தார். **34** ஆனால், அவர் ஒரு
யூதர் என்பதைத் தெரிந்துகொண்ட அந்தக் கூட்டத்தார் எல்லாரும், “எபே
சியர்களின் அர்த்தமியே மகா தேவி!” என்று கிட்டத்தட்ட இரண்டு மணிநே
ரம் ஒரே குரலில் கத்தினார்கள்.

35 கடைசியில், மாநகராட்சித் தலைவர் கூட்டத்தாரை அமைதிப்
படுத்திய பின்பு, “எபேசு மக்களே, மகா தேவி அர்த்தமியின் கோயிலையும்
வானத்திலிருந்து விழுந்த சிலையையும் எபேசு நகரம்தான் பாதுகாத்து வரு
கிறது என்பதைத் தெரியாதவர்கள் யாராவது இருக்கிறார்களா? **36** இதை
யாராலும் மறுக்க முடியாது. அதனால் நீங்கள் அமைதியாக இருங்கள்,
அவசரப்பட்டு எதையும் செய்துவிடாதீர்கள். **37** நீங்கள் இங்கே இழுத்து
வந்திருக்கும் ஆட்கள் கோயில் கொள்ளையர்களும் கிடையாது, நம்
தேவியை நிந்திப்பவர்களும் கிடையாது. **38** அதனால், தெமேத்திரியுவுக்
கும்[g] அவரோடு இருக்கிற கைத்தொழிலாளிகளுக்கும் யார் மீதாவது

அதி. 19

a அப் 9:1, 2
அப் 19:9
அப் 22:4

b 2கொ 1:8

c அப் 16:16

d அப் 17:29
1கொ 8:4

e எபே 1:1

f அப் 20:4
கொலோ 4:10
பிலே 23, 24

g அப் 19:24

வழக்கு இருந்தால், நீதிமன்றம் கூடுகிற நாட்களில் மாநில ஆளுநர்களி
டம்* ஒருவரைப் பற்றி ஒருவர் முறையிட்டுக்கொள்ளட்டும். **39** இவர்கள்
மேல் உங்களுக்கு வேறு ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால், சட்டப்படி கூடு
கிற கூட்டத்தில் நீங்கள் அதைத் தீர்த்துக்கொள்ளலாம். **40** ஏனென்றால்,
இன்று நடந்த காரியத்துக்காக நம்மேல் நிச்சயமாகவே கலகக் குற்றம்
சுமத்தப்படலாம். இந்தக் கலவரத்தை நியாயப்படுத்த எந்தவொரு காரண
மும் நமக்குக் கிடையாது” என்று சொன்னார். **41** இப்படிச் சொல்லிவிட்
டுக் கூட்டத்தைக் கலைத்தார்.

20 கலவரம் ஓய்ந்த பின்பு சீஷர்களை பவுல் வரவழைத்து உற்சா
கப்படுத்தினார். பின்பு, அவர்களை வழியனுப்பிவிட்டு மக்கெ
தோனியாவுக்குப் புறப்பட்டுப் போனார். **2** அங்கே ஊர் ஊராகப் போய்
பல விஷயங்களைச் சொல்லி அங்கிருந்தவர்களை உற்சாகப்படுத்தினார்.
அதன் பின்பு, கிரேக்கு தேசத்துக்குப் போய், **3** அங்கே மூன்று மாதங்கள்
தங்கினார். சீரியாவுக்குக் கப்பலில் பயணம் செய்யவிருந்த சமயத்தில், யூதர்
கள் அவருக்கு எதிராகச் சதி செய்திருப்பதைத்[a] தெரிந்துகொண்டு மக்கெ
தோனியா வழியாகத் திரும்பிப்போக முடிவுசெய்தார். **4** பெரோயாவைச்
சேர்ந்த பீருவின் மகன் சோபத்தரும், தெசலோனிக்கேயர்களான அரிஸ்
தர்க்கும்[b] செக்குந்தும், தெர்பையைச் சேர்ந்த காயுவும், தீமோத்தேயுவும்,[c]
ஆசிய மாகாணத்தைச் சேர்ந்த தீகிக்கும்[d] துரோப்பீமும்[e] அவரோடு
போனார்கள். **5** இவர்கள் முன்னதாகவே போய், துரோவாவில் எங்களுக்
காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். **6** நாங்களோ, புளிப்பில்லாத ரொட்
டிப் பண்டிகை[f] நாட்களுக்குப் பின்பு பிலிப்பியிலிருந்து கப்பல் ஏறி, ஐந்து
நாட்களுக்குள் துரோவாவிலிருந்த அவர்களிடம் போய்ச் சேர்ந்தோம்;
அங்கே ஏழு நாட்கள் தங்கினோம்.

7 வாரத்தின் முதல்நாள், உணவு சாப்பிடுவதற்காக நாங்கள் கூடியி
ருந்தோம். அடுத்த நாள் பவுல் புறப்பட இருந்ததால், அவர்களோடு
பேச ஆரம்பித்தார்; நடுராத்திரிவரை தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.
8 நாங்கள் கூடியிருந்த மாடி அறையில் நிறைய விளக்குகள் இருந்தன.
9 ஐத்திகு என்ற ஓர் இளைஞன் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்தான்.
பவுல் பேசிக்கொண்டே இருந்தபோது அவன் அசந்து தூங்கிவிட்டான்;
அதனால் மூன்றாம் மாடியிலிருந்து* கீழே விழுந்தான்; அவனைப் பிணமா
கத்தான் எடுத்தார்கள். **10** பவுல் கீழே இறங்கி வந்து, அவன்மேல் படுத்து,
அவனை அணைத்துக்கொண்டு,[g] “கூச்சல் போடாதீர்கள், இவனுக்கு உயிர்
வந்துவிட்டது”[h] என்று சொன்னார். **11** பின்பு மாடிக்குப் போய், ரொட்டி
யைப் பிட்டுக் கொடுத்து அவரும் சாப்பிட ஆரம்பித்தார். அதன் பின்பு,
பொழுது விடியும்வரை ரொம்ப நேரம் பேசிவிட்டு, புறப்பட்டுப் போனார்.
12 உயிர்பெற்ற அந்த இளைஞனை அவர்கள் கூட்டிக்கொண்டுபோய்,
அளவில்லாத ஆறுதல் அடைந்தார்கள்.

13 ஆசோ நகரம்வரை நடந்தே போக வேண்டுமென்று பவுல் நினைத்
திருந்ததால், அவரை அங்கே கப்பலில் ஏற்றிக்கொள்வதற்காக, அவர்
சொன்னபடியே நாங்கள் முன்னதாகப் புறப்பட்டுப் போனோம். **14** பின்பு,

அதி. 20
a அப் 23:12, 16; 2கொ 11:23, 26
b அப் 27:2
c அப் 16:1, 2
d எபே 6:21; கொலோ 4:7; 2தீ 4:12
e அப் 21:29; 2தீ 4:20
f யாத் 12:15; யாத் 23:15
g 1ரா 17:21, 22; 2ரா 4:32, 34
h மத் 9:23, 24; யோவா 11:39, 40; அப் 9:39, 40

19:38 * சொல் பட்டியலைப் பாருங்கள். **20:9** * இங்கே தரைத்தளத்தையும் சேர்த்து மூன்றாம் மாடி என்று சொல்லப்படுகிறது.

ஆசோவில் அவர் எங்களைச் சந்தித்தபோது, அவரைக் கப்பலில் ஏற்
றிக்கொண்டு மித்திலேனே நகரத்துக்குப் போனோம். **15** மறுநாள் அங்கி
ருந்து புறப்பட்டு கீயு தீவின் எதிர்ப்புறமாக வந்துசேர்ந்தோம். அடுத்த நாள்
சாமு தீவில் சற்று நின்றோம், அதற்கடுத்த நாள் மிலேத்து நகரத்துக்கு வந்
துசேர்ந்தோம். **16** எப்படியாவது பெந்தெகொஸ்தே பண்டிகை நாளன்று
எருசலேமுக்குப்[a] போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்ற அவசரத்தில் பவுல்
இருந்தார். அதனால், ஆசிய மாகாணத்தில் இனியும் காலம் தாழ்த்தாமல்
எபேசுவைக் கடந்துபோய்விடத்[b] தீர்மானித்திருந்தார்.

17 ஆனாலும், மிலேத்துவிலிருந்து எபேசுவுக்குச் செய்தி அனுப்பி, அந்
தச் சபையிலுள்ள மூப்பர்களை வரவழைத்தார். **18** அவர்கள் வந்துசேர்ந்
ததும் அவர்களிடம், “நான் ஆசிய மாகாணத்துக்கு[c] வந்து உங்களோடிருந்த
நாள்முதல் எப்படி நடந்துகொண்டேன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரி
யும். **19** யூதர்களுடைய சதித்திட்டங்களால் ஏற்பட்ட சோதனைகளின்
போது நான் மிகுந்த மனத்தாழ்மையோடும்[d] கண்ணீரோடும் எஜமானுக்கு
ஊழியம் செய்தேன். **20** நன்மையான எல்லாவற்றையும் உங்களுக்குச்
சொன்னேன். பொது இடங்களிலும்[e] வீடு வீடாகவும் உங்களுக்குக் கற்பித்
தேன்.[f] **21** அதோடு, கடவுளிடம் மனம் திருந்தி வருவதைப் பற்றியும்,[g]
நம்முடைய எஜமானாகிய இயேசுமேல் விசுவாசம் வைப்பதைப் பற்றியும்
யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் முழுமையாகச் சாட்சி கொடுத்தேன்.[h]
22 இப்போது, கடவுளுடைய சக்திக்குக் கட்டுப்பட்டு எருசலேமுக்குப்
போகிறேன். ஆனால், அங்கே எனக்கு என்ன நடக்குமென்று தெரியாது.
23 சிறைவாசத்தையும் உபத்திரவத்தையும் அனுபவிக்கப்போகிறேன்
என்று மட்டுமே தெரியும். இதை ஒவ்வொரு நகரத்திலும் கடவுளுடைய
சக்தி என்னிடம் சொல்கிறது.[i] **24** ஆனாலும், என் உயிர் எனக்கு முக்கிய
மல்ல, எஜமானாகிய இயேசுவிடமிருந்து நான் பெற்ற ஊழியத்தைச் செய்து
முடிப்பதுதான் எனக்கு முக்கியம்.[j] ஆம், கடவுளுடைய அளவற்ற கருணை
யைப் பற்றிய நல்ல செய்திக்கு முழுமையாகச் சாட்சி கொடுத்து என் ஓட்
டத்தை முடிப்பதுதான் எனக்கு முக்கியம்.

25 கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றி உங்கள் எல்லாரிடமும் நான்
பிரசங்கித்து வந்தேன். ஆனால், நீங்கள் இனி என் முகத்தைப் பார்க்க
மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். **26** அதனால், எந்த மனுஷனு
டைய சாவுக்கும்* நான் பொறுப்பல்ல[k] என்பதற்குச் சாட்சி சொல்ல இப்
போது உங்களை அழைக்கிறேன். **27** கடவுளுடைய நோக்கங்களில் ஒன்
றைக்கூட மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்குச்
சொல்லியிருக்கிறேன்.[l] **28** உங்களுக்கும்[m] மந்தை முழுவதுக்கும் கவனம்
செலுத்துங்கள். கடவுளுடைய சபையாகிய அந்த மந்தையை மேய்ப்பதற்
குக்[n] கடவுளுடைய சக்தி உங்களைக் கண்காணிகளாக நியமித்திருக்கிறது.[o]
கடவுள் தன்னுடைய சொந்த மகனின் இரத்தத்தால் வாங்கிய சபை அது.[p]
29 நான் போன பின்பு கொடிய ஓநாய் போன்ற ஆட்கள் உங்கள் நடு
வில் நுழைவார்கள்[q] என்பது எனக்குத் தெரியும். கடவுளுடைய மந்தையை
அவர்கள் மென்மையாக நடத்த மாட்டார்கள். **30** அதோடு, உங்கள் மத்
தியிலிருந்தே சிலர் எழும்பி சீஷர்களைத் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்
வதற்காக உண்மைகளைத் திரித்துச் சொல்வார்கள்.[r]

20:26 * வே.வா., “இரத்தத்துக்கும்.”

அதி. 20
a அப் 24:17
b அப் 18:21
c அப் 19:9, 10
d 1கொ 15:9; 1தெ 2:6
e மத் 28:19, 20; 2தீ 4:2
f அப் 5:42
g மாற் 1:14, 15
h லூ 24:46, 47
i அப் 9:15, 16; அப் 21:4, 11
j 2தீ 4:7
k எசே 33:8
l மத் 28:19, 20
m 1தீ 4:16
n யோவா 21:15; எபே 4:11; 1பே 5:2-4
o 1தீ 3:1-7; தீத் 1:5-9; எபி 13:17
p மத் 26:27, 28; 1யோ 1:7
q மத் 7:15; 2தெ 2:3; 2பே 2:1
r 1தீ 4:1; 2தீ 4:3, 4; 1யோ 2:18, 19

31 அதனால் விழிப்புடன் இருங்கள். மூன்று வருஷங்கள் ராத்திரி
பகலாக[a] நான் கண்ணீரோடு உங்கள் ஒவ்வொருவருக்கும் விடாமல் புத்தி
சொன்னதை ஞாபகத்தில் வையுங்கள். **32** இப்போது கடவுளும் அவரு
டைய அளவற்ற கருணையும்* உங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று
ஜெபம் செய்கிறேன். அந்த அளவற்ற கருணையைப் பற்றிய செய்தி
உங்களைப் பலப்படுத்தும், புனிதமாக்கப்பட்ட எல்லாரும் பெறப்போகிற
சொத்தை உங்களுக்குக் கொடுக்கும்.[b] **33** யாருடைய தங்கத்தையும்
வெள்ளியையும் உடையையும் அடைவதற்கு நான் ஆசைப்பட்டதில்லை.[c]
34 என்னுடைய தேவைகளுக்காகவும் என்னோடு இருந்தவர்களுடைய
தேவைகளுக்காகவும் இந்தக் கைகள்தான் வேலை செய்தன,[d] இது உங்
களுக்கே தெரியும். **35** இப்படிக் கடினமாக உழைத்து பலவீனமானவர்க
ளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை நான் உங்களுக்கு எல்லாவற்றி
லும் காட்டியிருக்கிறேன்.[e] 'வாங்குவதைவிட கொடுப்பதில்தான் அதிக
சந்தோஷம் இருக்கிறது'[f] என்று எஜமானாகிய இயேசு சொன்ன வார்த்தை
களை மறந்துவிடாதீர்கள்" என்று சொன்னார்.

36 பவுல் இவற்றைச் சொன்ன பின்பு, எல்லாரோடும் சேர்ந்து மண்டி
போட்டு ஜெபம் செய்தார். **37** 'இனி நீங்கள் என் முகத்தைப் பார்க்க மாட்
டீர்கள்' என்று அவர் சொன்னபோது அவர்களுக்கு மிகவும் வேதனையாக
இருந்தது.[g] **38** அதனால், அவர்கள் எல்லாரும் கதறி அழுது, அவரைக்
கட்டிப்பிடித்து, பாசத்தோடு முத்தம் கொடுத்தார்கள். பின்பு, அவரை வழி
யனுப்ப கப்பல்வரை அவர் கூடவே போனார்கள்.

21 அவர்களிடமிருந்து நாங்கள் பிரியாவிடை பெற்றுக்கொண்டு,
கப்பல் ஏறி நேராக கோஸ் நகரத்துக்குப் போனோம். அடுத்த
நாள் ரோதுவுக்கும், அங்கிருந்து பத்தாராவுக்கும் போனோம். **2** அங்கே
பெனிக்கேவுக்குப் போகிற ஒரு கப்பலைப் பார்த்து, அதில் ஏறிப் பயணம்
செய்தோம். **3** எங்களுக்கு இடது பக்கம் சீப்புரு தீவு தெரிந்தது. ஆனால்,
அங்கே போகாமல் சீரியாவை நோக்கிப் பயணம் செய்து தீருவில்
இறங்கினோம். கப்பலிலிருந்த சரக்குகளை அங்கே இறக்க வேண்டியிருந்
தது. **4** அங்கிருந்த சீஷர்களைத் தேடிக் கண்டுபிடித்து, ஏழு நாட்கள்
தங்கினோம். அவர்கள் கடவுளுடைய சக்தியினால் வழிநடத்தப்பட்டதால்,
எருசலேமுக்குள் காலெடுத்து வைக்க வேண்டாமென்று பவுலிடம் திரும்பத்
திரும்பச் சொன்னார்கள்.[h] **5** அந்த ஏழு நாட்களுக்குப் பிறகு, அங்கிருந்து
தொடர்ந்து பயணம் செய்ய ஆரம்பித்தோம். எங்களை வழியனுப்புவதற்கு
அவர்கள் எல்லாரும் பெண்களோடும் பிள்ளைகளோடும் நகரத்துக்கு வெளி
யேவரை வந்தார்கள். கடற்கரையில் நாங்கள் மண்டிபோட்டு ஜெபம் செய்
தோம். **6** பின்பு, அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு கப்பல் ஏறி
னோம். அவர்கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிப் போனார்கள்.

7 நாங்கள் தீரு நகரத்திலிருந்து பித்தொலோமாய் நகரத்துக்கு வந்து
கப்பல் பயணத்தை முடித்துக்கொண்டோம். அங்கிருந்த சகோதரர்களுக்கு
வாழ்த்துச் சொல்லிவிட்டு, அவர்களோடு ஒரு நாள் தங்கினோம்.
8 அடுத்த நாள் அங்கிருந்து புறப்பட்டு செசரியாவுக்குப் போனோம். நற்
செய்தியாளரான பிலிப்புவின் வீட்டுக்குப் போய் அவரோடு தங்கினோம்.

20:32 * நே.மொ., "அளவற்ற கருணையைப் பற்றிய செய்தியும்."

அதி. 20
a அப் 19:9, 10
b எபே 1:18; கொலோ 1:12
c 1சா 12:1, 3; மத் 10:8; 1கொ 9:11, 12; 2கொ 7:2; தீத் 1:7
d அப் 18:3; 1கொ 4:11, 12; 1தெ 2:9
e எபே 4:28; 1தெ 4:11, 12; 2தெ 3:7, 8
f நீதி 19:17; மத் 10:8; லூ 6:38
g அப் 20:25

அதி. 21
h அப் 21:10-12

முன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு ஆண்களில் அவரும் ஒருவர்.[a] **9** திரு
மணமாகாத நான்கு மகள்கள் அவருக்கு இருந்தார்கள். அவர்கள் தீர்க்கதரி
சனம் சொல்லி வந்தார்கள்.[b] **10** அங்கே நாங்கள் பல நாட்கள் தங்கியி
ருந்தபோது, அகபு[c] என்ற தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தார்.
11 அவர் எங்களிடம் வந்து, பவுலின் இடுப்புவாரை எடுத்து தன்னுடைய
கால்களையும் கைகளையும் கட்டிக்கொண்டு, “கடவுளுடைய சக்தி சொல்
வது என்னவென்றால், ‘இந்த இடுப்புவார் யாருக்குச் சொந்தமோ
அவரை யூதர்கள் எருசலேமில் இப்படிக் கட்டி,[d] மற்ற தேசத்து மக்களின்
கைகளில் ஒப்படைப்பார்கள்’ ”[e] என்று சொன்னார். **12** இதைக் கேட்ட
போது எருசலேமுக்குப் போக வேண்டாமென்று நாங்களும் அங்கிருந்தவர்
களும் பவுலைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டோம். **13** அதற்கு பவுல், “ஏன்
இப்படி அழுது என்னை மனம்தளர வைக்கிறீர்கள்? எஜமானாகிய இயேசு
வின் பெயருக்காக எருசலேமில் கைது செய்யப்படுவதற்கு மட்டுமல்ல,
சாவதற்குக்கூட தயாராக இருக்கிறேன்”[f] என்று சொன்னார். **14** நாங்
கள் எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை; அதனால்,
“யெகோவாவுடைய* விருப்பப்படி# நடக்கட்டும்” என்று சொல்லி அமைதி
யாகிவிட்டோம்.

15 அந்த நாட்களுக்குப் பின்பு, பயண ஏற்பாடுகளைச் செய்து, எரு
சலேமுக்குப் புறப்பட்டோம். **16** செசரியாவிலிருந்து சில சீஷர்களும் எங்
களோடு வந்தார்கள். சீப்புரு தீவைச் சேர்ந்த மினாசோன் என்ற ஆரம்
பக் கால சீஷர் ஒருவருடைய வீட்டில் விருந்தாளிகளாகத் தங்குவதற்கு
எங்களைக் கூட்டிக்கொண்டு போனார்கள். **17** நாங்கள் எருசலேமுக்குப்
போய்ச் சேர்ந்தபோது, சகோதரர்கள் எங்களைச் சந்தோஷமாக வரவேற்
றார்கள். **18** அடுத்த நாள், பவுல் எங்களைக் கூட்டிக்கொண்டு யாக்கோ
பைப்[g] பார்க்கப் போனார். அங்கே மூப்பர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள்.
19 அப்போது அவர்களுக்கு அவர் வாழ்த்துச் சொல்லிவிட்டு, தன் ஊழி
யத்தின் மூலம் மற்ற தேசத்து மக்கள் மத்தியில் கடவுள் செய்த காரியங்க
ளைப் பற்றி விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

20 அதைக் கேட்டதும் அங்கே இருந்தவர்கள் கடவுளை மகிமைப்படுத்
தினார்கள்; பின்பு அவரிடம், “சகோதரரே, யூதர்களில் எத்தனையோ ஆயி
ரம் பேர் இயேசுவின் சீஷர்களாகியிருப்பது உங்களுக்கே தெரியும்;
அவர்கள் எல்லாரும் திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் வைராக்கியமாக
இருக்கிறார்கள்.[h] **21** ஆனால், மற்ற தேசத்து மக்கள் மத்தியில் வாழும்
யூதர்களிடம் அவர்களுடைய பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யவோ
நம்முடைய சம்பிரதாயங்களின்படி நடக்கவோ கூடாது என்று சொல்லி,
மோசேயின் திருச்சட்டத்தைவிட்டு விலகுமாறு* நீங்கள் கற்பிக்கிறீர்கள்[i]
என்ற வதந்தியை அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். **22** இப்போது
என்ன செய்வது? நீங்கள் இங்கே வந்திருப்பது எப்படியும் அவர்களுக்
குத் தெரியவரும். **23** அதனால் நாங்கள் சொல்கிறபடி செய்யுங்கள்: கடவு
ளிடம் நேர்ந்துகொண்ட நான்கு ஆண்கள் இப்போது எங்களோடு இருக்கி
றார்கள். **24** அவர்களைக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களோடு சேர்ந்து

21:14 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். #வே.வா., “சித்தத்தின்படி.” **21:21** *நே.மொ., “விசுவாசதுரோகியாக ஆகுமாறு.”

அதி. 21
a அப் 6:3, 5
b யோவே 2:28; அப் 2:17; 1கொ 11:5
c அப் 11:27, 28
d அப் 20:22, 23; அப் 21:33
e அப் 9:15, 16
f அப் 20:24; 2கொ 4:10, 11; 2தீ 4:6
g அப் 12:17; அப் 15:13; கலா 1:19; கலா 2:9; யாக் 1:1
h அப் 15:1
i ரோ 2:28, 29; 1கொ 7:18-20

நீங்களும் தூய்மைச் சடங்கு செய்துகொள்ளுங்கள். அவர்கள் தலைச்
சவரம் செய்துகொள்வதற்கு ஆகும் எல்லா செலவுகளையும் நீங்களே பார்த்
துக்கொள்ளுங்கள். இப்படிச் செய்தால் உங்களைப் பற்றிச் சொல்லப்பட்ட
விஷயமெல்லாம் வெறும் வதந்தி என்பதையும், நீங்கள் நல்ல நடத்தை உள்
ளவர் என்பதையும், திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பவர் என்பதையும் எல்
லாரும் புரிந்துகொள்வார்கள்.[a] **25** இயேசுவின் சீஷர்களாகியிருக்கிற மற்ற
தேசத்து மக்களைப் பொறுத்ததில், உருவச் சிலைகளுக்குப் படைக்கப்பட்ட
தற்கும்[b] இரத்தத்துக்கும்[c] நெரித்துக் கொல்லப்பட்டதற்கும்*[d] பாலியல்
முறைகேட்டுக்கும்#[e] விலகியிருக்க வேண்டுமென்ற நம் தீர்மானத்தை அவர்
களுக்கு எழுதி அனுப்பியிருக்கிறோம்” என்று சொன்னார்கள்.

26 அடுத்த நாள் பவுல் அந்த ஆண்களைக் கூட்டிக்கொண்டுபோய்,
அவர்களோடு சேர்ந்து அவரும் தூய்மைச் சடங்கு செய்துகொண்டார்.[f]
அதன் பின்பு, தூய்மைச் சடங்கு நாட்கள் எப்போது முடிவுக்கு வரும்
என்றும், அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் எப்போது காணிக்கை செலுத்
தப்பட வேண்டுமென்றும் சொல்வதற்காக ஆலயத்துக்குள் போனார்.

27 அந்த ஏழு நாட்கள் முடியப்போகும் சமயத்தில், ஆசியாவிலிருந்து
வந்திருந்த யூதர்கள் சிலர் அவரை ஆலயத்தில் பார்த்து, கூட்டத்தாரைத்
தூண்டிவிட்டு, அவரைப் பிடித்துக்கொண்டு, **28** “இஸ்ரவேல் மக்களே,
ஓடி வாருங்கள்! இந்த ஆள்தான் எங்கும் போய் நம்முடைய மக்களுக்
கும் நம்முடைய திருச்சட்டத்துக்கும் இந்த இடத்துக்கும் விரோதமாக எல்
லாருக்கும் கற்பித்து வருகிறான். கிரேக்கர்களைக்கூட ஆலயத்துக்குள் கூட்
டிக்கொண்டுவந்து இந்தப் பரிசுத்த இடத்தைத் தீட்டுப்படுத்தியிருக்கிறான்”[g]
என்று கத்தினார்கள். **29** ஏனென்றால், எபேசுவைச் சேர்ந்த துரோப்பீமு[h]
என்பவரை பவுலோடு நகரத்தில் அவர்கள் பார்த்திருந்தார்கள். பவுல்
அவரை ஆலயத்துக்குள் கூட்டிக்கொண்டு வந்திருப்பார் என்று அவர்கள்
நினைத்துக்கொண்டார்கள். **30** நகரம் முழுவதும் ஒரே ஆர்ப்பாட்டமாக
இருந்தது. மக்கள் கூட்டமாக ஓடிவந்து பவுலைப் பிடித்து, ஆலயத்துக்கு
வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள். கதவுகள் உடனடியாக மூடப்
பட்டன. **31** அவர்கள் அவரை அடித்துக் கொல்ல முயற்சி செய்தபோது,
எருசலேம் முழுவதும் குழப்பத்தில் இருக்கிறது என்ற செய்தி படைப்பிரி
வின் தளபதிக்கு* தெரியவந்தது. **32** உடனே அவர் படைவீரர்களையும்
படை அதிகாரிகளையும் கூட்டிக்கொண்டு அவர்களிடம் இறங்கி ஓடிவந்
தார். படைத் தளபதியையும் படைவீரர்களையும் பார்த்தவுடனே, பவுலை
அடிப்பதை அவர்கள் நிறுத்தினார்கள்.

33 அப்போது, படைத் தளபதி பவுலுக்குப் பக்கத்தில் போய் அவ
ரைக் கைது செய்து, அவரை இரண்டு சங்கிலிகளால் கட்டும்படி கட்டளை
யிட்டார்.[i] பின்பு, அவர் யார் என்றும், என்ன செய்தார் என்றும் விசாரித்தார்.
34 ஆனால், கூட்டத்தில் இருந்தவர்களில் சிலர் இப்படியும் சிலர் அப்படி
யுமாகக் கத்த ஆரம்பித்தார்கள். அங்கே கூச்சலும் குழப்பமுமாக இருந்த
தால் அவரால் எதையும் சரியாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அத
னால், பவுலைப் படைவீரர்களின் குடியிருப்புக்குக் கொண்டுவரச் சொல்லிக்

21:25 *வே.வா., “இரத்தம் வடிக்காமல் கொல்லப்பட்டதற்கும்.” #சொல் பட்டிய
லைப் பாருங்கள். **21:31** *அதாவது, “1,000 படைவீரர்களின் தளபதிக்கு.”

அதி. 21
a 1கொ 9:20
b ஆதி 35:2; யாத் 34:15
c ஆதி 9:4; லேவி 3:17; லேவி 17:10; 1சா 14:32, 33
d லேவி 17:13; உபா 12:23, 24
e அப் 15:28, 29; 1கொ 6:9; கொலோ 3:5; 1தெ 4:3; 1பே 4:3
f 1கொ 9:20
g அப் 24:5, 6
h அப் 20:4; 2தீ 4:20
i அப் 20:22, 23; அப் 21:10, 11

கட்டளையிட்டார். **35** பவுல் படிக்கட்டுகளில் ஏறியபோது கூட்டத்தார்
வெறித்தனமாக நடந்துகொண்டதால் படைவீரர்கள் அவரைத் தூக்கிக்
கொண்டு போக வேண்டியிருந்தது. **36** அப்போது அந்தக் கூட்டத்தார்,
“அவனை ஒழித்துக்கட்டுங்கள்!” என்று கத்திக்கொண்டே பின்னால் வந்
தார்கள்.

37 பவுல், படைவீரர்களின் குடியிருப்புக்குள் போகவிருந்த சமயத்தில்
படைத் தளபதியிடம், “நான் உங்களிடம் ஒன்று சொல்லலாமா?” என்று
கேட்டார். அதற்கு அவர், “கிரேக்க மொழிகூட உனக்குத் தெரியுமா?”
என்று கேட்டுவிட்டு, **38** “சில காலத்துக்கு முன்பு, ஒரு கலகத்தை
மூட்டி, 4,000 கொலைகாரர்களை வனாந்தரத்துக்குக் கொண்டுபோன எகிப்
தியன் நீதானே?” என்று கேட்டார். **39** அப்போது பவுல், “நான் உண்மை
யில் ஒரு யூதன்.[a] சிலிசியாவில் உள்ள தர்சு நகரத்தைச் சேர்ந்தவன்.[b]
புகழ்பெற்ற அந்த நகரத்தின் குடிமகன். அதனால், இந்த மக்களிடம் பேச
இப்போது எனக்கு அனுமதி கொடுக்கும்படி உங்களிடம் கெஞ்சிக் கேட்கி
றேன்” என்றார். **40** அவர் அனுமதி கொடுத்தபோது, பவுல் படிக்கட்டில்
நின்றுகொண்டு மக்களிடம் சைகை காட்டினார். மிகுந்த அமைதி உண்டா
னதும் எபிரெய மொழியில்[c] பேச ஆரம்பித்தார்.

22 “சகோதரர்களே, தகப்பன்மார்களே, இப்போது என்னுடைய வாதத்
தைக் கேளுங்கள்”[d] என்று அவர் சொன்னார். **2** எபிரெய மொழி
யில் அவர் பேசியதைக் கேட்டபோது, அவர்கள் இன்னும் அமைதியானார்
கள். அப்போது அவர், **3** “நான் ஒரு யூதன்,[e] சிலிசியாவில் இருக்கிற தர்சு
நகரத்தில் பிறந்தேன்.[f] இந்த நகரத்தில் கமாலியேலின் காலடியில் கல்வி கற்
றேன்.[g] முன்னோர்களுடைய திருச்சட்டத்தை நுணுக்கமாகக் கற்றுக்
கொண்டேன்.[h] இன்று கூடியிருக்கும் உங்கள் எல்லாரையும் போலவே கட
வுளுக்காகப் பக்திவைராக்கியத்தோடு இருந்தேன்.[i] **4** இந்த மார்க்கத்தை*
சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் கட்டியிழுத்துக் கொண்டுபோய்ச்
சிறையில் அடைத்தேன், அவர்களைத் துன்புறுத்தினேன், அவர்கள் கொல்
லப்படும்படி செய்தேன்.[j] **5** தலைமைக் குருவும் பெரியோர் குழுவினர்
எல்லாரும் இதற்குச் சாட்சிகள். தமஸ்குவில் இருக்கிற யூதச் சகோதரர்களி
டம் கொடுப்பதற்காக இவர்களிடமிருந்து அனுமதிக் கடிதங்களை வாங்கிக்
கொண்டு, அங்கே இருக்கிற கிறிஸ்தவர்களை எருசலேமுக்குக் கட்டியி
ழுத்து வந்து தண்டிப்பதற்காகப் போய்க்கொண்டிருந்தேன்.

6 ஆனால், நான் தமஸ்குவை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில், ஏறக்
குறைய மத்தியான நேரத்தில், திடீரென்று வானத்திலிருந்து பெரிய ஒளி
தோன்றி என்னைச் சுற்றிப் பிரகாசித்தது.[k] **7** நான் தரையில் விழுந்தேன்.
அப்போது, ‘சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?’ என்று
சொல்கிற ஒரு குரலைக் கேட்டேன். **8** அதற்கு நான், ‘எஜமானே, நீங்கள்
யார்?’ என்று கேட்டேன். அப்போது அவர், ‘நீ துன்புறுத்துகிற நாசரேத்
தூர் இயேசு நான்தான்’ என்று சொன்னார். **9** என்னோடு இருந்த ஆட்கள்
அந்த ஒளியைப் பார்த்தார்கள், ஆனால் என்னிடம் பேசியவருடைய குர
லைக் கேட்கவில்லை. **10** அப்போது, ‘நான் என்ன செய்ய வேண்டும், எஜ
மானே?’ என்று கேட்டேன். எஜமான் என்னிடம், ‘நீ எழுந்து தமஸ்குவுக்குப்

22:4 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 21
a பிலி 3:4, 5
b அப் 22:3
c அப் 26:14

அதி. 22
d பிலி 1:7
e ரோ 11:1
f அப் 21:39
g அப் 5:34
h அப் 26:4, 5
i கலா 1:14; பிலி 3:4-6
j அப் 8:3; அப் 9:1, 2; அப் 26:9-11; 1தீ 1:12, 13
k அப் 9:3-8; அப் 26:13-15

போ; நீ செய்ய வேண்டியதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்’[a]
என்றார். **11** அந்தப் பிரகாசமான ஒளியினால் என்னுடைய கண்பார்வை
போனது. அதனால், என்னோடு இருந்தவர்கள் என்னைக் கைத்தாங்கலாக
தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள்.

12 திருச்சட்டத்தைப் பயபக்தியோடு கடைப்பிடித்து வந்த அனனியா
என்ற ஒருவர் அங்கே இருந்தார். அங்கே குடியிருந்த யூதர்கள் எல்லா
ராலும் அவர் உயர்வாகப் பேசப்பட்டார். **13** அவர் என் பக்கத்தில் வந்து
நின்று, ‘சவுலே, சகோதரனே, உனக்கு மறுபடியும் பார்வை கிடைக்கட்டும்!’
என்று சொன்னார். அந்த நொடியே எனக்குப் பார்வை கிடைத்தது, நான்
அவரைப் பார்த்தேன்.[b] **14** அப்போது அவர் என்னிடம், ‘கடவுளுடைய
விருப்பத்தை* தெரிந்துகொள்வதற்கும் நீதியுள்ளவரைப் பார்ப்பதற்கும்[c]
அவருடைய குரலைக் கேட்பதற்கும் நம் முன்னோர்களுடைய கடவுள்
உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். **15** ஏனென்றால், நீ பார்த்தவற்றை
யும் கேட்டவற்றையும் பற்றி எல்லாருக்கும் அறிவித்து, அவருக்குச் சாட்
சியாக இருக்க வேண்டும்.[d] **16** இப்போது ஏன் தாமதிக்கிறாய்? எழுந்து,
ஞானஸ்நானம் பெற்றுக்கொள். அவருடைய பெயரில் நம்பிக்கை வை,*[e]
அப்போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும்’[f] என்று சொன்னார்.

17 பின்பு நான் எருசலேமுக்குத் திரும்பி வந்து[g] ஆலயத்தில் ஜெபம்
செய்துகொண்டிருந்தபோது, ஒரு தரிசனத்தைப் பார்த்தேன்.* **18** அந்தத்
தரிசனத்தில் எஜமான் என்னிடம், ‘சீக்கிரம்! எருசலேமைவிட்டு உடனே
புறப்பட்டுப் போ. ஏனென்றால், என்னைப் பற்றி நீ சொல்லும் சாட்சியை
இவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்’[h] என்று சொன்னார். **19** அதற்கு
நான், ‘எஜமானே, உங்கள்மேல் நம்பிக்கை வைத்தவர்களை நான் சிறை
யில் அடைத்தேன், ஒவ்வொரு ஜெபக்கூடமாகப் போய் அங்கிருந்தவர்
களை அடித்தேன்.[i] **20** உங்களுக்குச் சாட்சியாக இருந்த ஸ்தேவான்
கொலை செய்யப்பட்டபோது அதற்கு நானும் உடந்தையாக இருந்தேன்.
அங்கே நின்றுகொண்டு அவரைக் கொலை செய்தவர்களுடைய மேலங்கி
களைக் காவல் காத்துக்கொண்டிருந்தேன்.[j] இதெல்லாம் இவர்களுக்கு நன்
றாகத் தெரியுமே’ என்று சொன்னேன். **21** இருந்தாலும் அவர் என்னிடம்,
‘நீ புறப்பட்டுப் போ. நான் உன்னைத் தூரத்திலுள்ள மற்ற தேசத்து மக்களி
டம் அனுப்பப்போகிறேன்’[k] என்று சொன்னார்.”

22 இவ்வளவு நேரம் பவுல் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள்,
“இவனை ஒழித்துக்கட்டுங்கள், இவன் உயிரோடே இருக்கக் கூடாது!” என்று
கத்தினார்கள். **23** அவர்கள் கூச்சல் போட்டுக்கொண்டும் தங்களுடைய
மேலங்கிகளைக் கழற்றி எறிந்துகொண்டும் மண்ணை அள்ளி வீசிக்கொண்
டும் இருந்தார்கள்.[l] **24** அதனால், அவரைப் படைவீரர்களுடைய குடியி
ருப்புக்குக் கொண்டுபோகும்படி படைத் தளபதி கட்டளை கொடுத்தார்.
அதோடு, பவுலுக்கு எதிராக ஏன் அவர்கள் இப்படிக் கத்திக் கூச்சல் போடு
கிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு அவரை முள்சாட்
டையால் அடித்து விசாரிக்கும்படி கட்டளை கொடுத்தார். **25** சாட்டையடி
கொடுப்பதற்காக அவர்கள் அவருடைய கைகளை இழுத்துக் கட்டியபோது,

அதி. 22
a அப் 26:16
b அப் 9:17, 18
c 1கொ 9:1; 1கொ 15:8; கலா 1:15, 16
d அப் 23:11; அப் 26:16
e அப் 10:43
f 1கொ 6:11; 1யோ 1:7; வெளி 1:5
g அப் 9:26; கலா 1:18
h அப் 9:28, 29
i அப் 8:3
j அப் 7:58; அப் 8:1; 1தீ 1:13, 15
k அப் 9:15; அப் 13:2; ரோ 1:5; ரோ 11:13; கலா 2:7; 1தீ 2:7
l 2சா 16:13

22:14 *வே.வா., “சித்தத்தை.” **22:16** *நே.மொ., “பெயரைக் கூப்பிடு.” **22:17** *நே.மொ., “மெய்மறந்த நிலைக்குள்ளானேன்.”

தன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த படை அதிகாரியிடம், “ஒரு ரோமக் குடி
மகனுக்கு, அதுவும் குற்றவாளியாகத் தீர்க்கப்படாத* ஒருவனுக்கு, நீங்கள்
சாட்டையடி கொடுப்பது சட்டப்படி சரியா?”[a] என்று கேட்டார். **26** படை
அதிகாரி இதைக் கேட்டதும் படைத் தளபதியிடம் போய், “என்ன காரி
யம் செய்யப் பார்த்தீர்கள்! இவன் ஒரு ரோமக் குடிமகன்” என்று சொன்னார்.
27 அதனால், படைத் தளபதி பவுலிடம் போய், “நீ ஒரு ரோமக் குடிம
கனா?” என்று கேட்டார். அதற்கு அவர், “ஆமாம்” என்று சொன்னார்.
28 அப்போது படைத் தளபதி, “இந்தக் குடியுரிமையை நான் நிறைய பணம்
கொடுத்து வாங்கினேன்” என்று சொன்னார். அதற்கு பவுல், “ஆனால், நான்
ரோமக் குடிமகனாகவே பிறந்தேன்”[b] என்று சொன்னார்.

29 இதைக் கேட்டதும், அவரைச் சித்திரவதை செய்து விசாரிக்கவிருந்த
ஆட்கள் அவரைவிட்டு விலகினார்கள். படைத் தளபதியோ, அவர் ஒரு
ரோமக் குடிமகன் என்பதைத் தெரிந்துகொண்டதாலும் அவரைச் சங்கிலி
யால் கட்டி வைத்ததாலும் பயந்துபோனார்.[c]

30 யூதர்கள் பவுல்மேல் ஏன் குற்றம்சாட்டுகிறார்கள் என்பதை அவர்
திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள விரும்பினார். அதனால் அடுத்த நாளே
அவருடைய சங்கிலிகளை அவிழ்த்தார், முதன்மை குருமார்களையும் நியா
யசங்கத்தார் எல்லாரையும் கூடிவரும்படி உத்தரவிட்டார். பின்பு, பவுலை
அவர்கள் முன்னால் கொண்டுபோய் நிறுத்தினார்.[d]

23 நியாயசங்கத்தாரை பவுல் உற்றுப் பார்த்து, “சகோதரர்களே, இந்த
நாள்வரை கடவுளுக்கு முன்னால் முற்றிலும் சுத்தமான மனசாட்சி
யோடு நடந்து வந்திருக்கிறேன்”[e] என்று சொன்னார். **2** அப்போது தலை
மைக் குருவான அனனியா, பவுலின் வாயில் அடிக்கச் சொல்லி தன் பக்கத்
தில் நின்றுகொண்டிருந்தவர்களிடம் கட்டளையிட்டார். **3** பவுல் அவரிடம்,
“வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, கடவுள் உன்னை அடிக்கப்போகிறார். சட்
டப்படி என்னை நியாயம் விசாரிக்க உட்கார்ந்திருக்கிற நீயே சட்டத்தை மீறி
என்னை அடிக்கச் சொல்லிக் கட்டளை கொடுக்கிறாயா?” என்று கேட்டார்.
4 அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர்கள், “கடவுளுக்குச் சேவை செய்
யும் தலைமைக் குருவையே அவமதிக்கிறாயா?” என்று கேட்டார்கள்.
5 அதற்கு பவுல், “சகோதரர்களே, அவர் தலைமைக் குரு என்று எனக்
குத் தெரியாது. ‘உங்கள் மக்களின் தலைவரை நீங்கள் மரியாதையில்லாமல்
பேசக் கூடாது’ என எழுதப்பட்டிருக்கிறதே”[f] என்று சொன்னார்.

6 நியாயசங்கத்தாரில் ஒரு பகுதியினர் சதுசேயர்கள், மற்றொரு பகுதியி
னர் பரிசேயர்கள் என்பது பவுலுக்குத் தெரிந்திருந்ததால், “சகோதரர்களே,
நான் ஒரு பரிசேயன்.[g] ஆம், பரிசேயர்களுடைய மகன். இறந்தவர்கள் உயி
ரோடு எழுப்பப்படுவார்கள் என்று நான் நம்புவதால்தான் நியாயம் விசாரிக்
கப்படுகிறேன்” என்று சத்தமாகச் சொன்னார். **7** அவர் இப்படிச் சொன்ன
தால், பரிசேயர்களுக்கும் சதுசேயர்களுக்கும் இடையே வாக்குவாதம்
ஏற்பட்டு, அவர்களுக்குள் பிரிவினை உண்டானது. **8** ஏனென்றால் உயிர்த்
தெழுதலும் இல்லை, தேவதூதர்களும் இல்லை, பரலோக ஜீவிகளும்
இல்லை என்று சதுசேயர்கள் சொல்லி வந்தார்கள், பரிசேயர்களோ அவை
யெல்லாம் இருப்பதாக நம்பினார்கள்.*[h] **9** அதனால், அங்கே பயங்கர

அதி. 22
a அப் 16:37, 38
அப் 23:27
b அப் 16:37
c அப் 25:16
d மத் 10:17, 18
லூ 21:12

அதி. 23
e அப் 24:15, 16
2கொ 1:12
எபி 13:18
1பே 3:16
f யாத் 22:28
g அப் 26:4, 5
பிலி 3:4, 5
h அப் 4:1, 2

22:25 *வே.வா., “விசாரணை செய்யப்படாத.” **23:8** *வே.வா., “அறிவித்துவந்தார்கள்.”

கூச்சல் உண்டானது. பரிசேயப் பிரிவைச் சேர்ந்த வேத அறிஞர்களில் சிலர்
எழுந்து, “இந்த மனுஷன் எந்தக் குற்றமும் செய்திருப்பதாக எங்களுக்குத்
தெரியவில்லை. ஆனால், ஒரு பேயோ தேவதூதரோ அவனிடம் பேசியி
ருந்தால்,[a]—” என்று காரசாரமாக வாக்குவாதம் செய்ய ஆரம்பித்தார்
கள். **10** வாக்குவாதம் முற்றியபோது, பவுலை அவர்கள் பிய்த்து விடுவார்
களோ என்று படைத் தளபதி பயந்தார். அதனால் படைவீரர்களைக் கீழே
அனுப்பி, அவர்கள் மத்தியிலிருந்து அவரை இழுத்து படைவீரர்களுடைய
குடியிருப்புக்குள் கொண்டுவரச் சொல்லிக் கட்டளை கொடுத்தார்.

11 ஆனால், அன்று ராத்திரி பவுலுக்குப் பக்கத்தில் எஜமான் வந்து
நின்று, “தைரியமாயிரு![b] எருசலேமில் நீ என்னைப் பற்றி முழுமையாகச்
சாட்சி கொடுத்துவந்திருப்பது போலவே, ரோமிலும் சாட்சி கொடுக்க வேண்
டும்”[c] என்று சொன்னார்.

12 பொழுது விடிந்ததும் யூதர்கள் சதித்திட்டம் போட்டார்கள். ‘பவு
லைக் கொலை செய்யும்வரை சாப்பிடவோ குடிக்கவோ மாட்டோம்’ என்று
சொல்லி, சபதமும்* செய்தார்கள். **13** இப்படிச் சபதம் செய்த சதிகாரர்க
ளின் எண்ணிக்கை 40-க்கும் அதிகம். **14** அவர்கள் முதன்மை குருமார்க
ளிடமும் பெரியோர்களிடமும்* போய், “பவுலைக் கொலை செய்யும்வரை
நாங்கள் ஒரு வாய்கூட சாப்பிடப் போவதில்லை என்று சபதம் செய்திருக்
கிறோம். **15** அதனால், இப்போது நீங்களும் நியாயசங்கத்தாரும், பவு
லுடைய வழக்கை இன்னும் நன்றாக விசாரிக்க விரும்புவதுபோல்
நடித்து, அவனை உங்களிடம் கூட்டிக்கொண்டு வரும்படி படைத் தளபதிக்
குச் செய்தி அனுப்புங்கள். வழியிலேயே அவனைத் தீர்த்துக்கட்ட நாங்கள்
தயாராக இருப்போம்” என்று சொன்னார்கள்.

16 இந்தச் சதித்திட்டத்தைப் பற்றி பவுலுடைய சகோதரியின் மகன்
கேள்விப்பட்டதும், படைவீரர்களுடைய குடியிருப்புக்குள் போய் பவுலிடம்
சொன்னான். **17** அதனால் படை அதிகாரிகளில் ஒருவரை பவுல் கூப்
பிட்டு, “இந்த இளைஞனைப் படைத் தளபதியிடம் கூட்டிக்கொண்டு
போங்கள், அவரிடம் ஏதோ சொல்ல வேண்டுமாம்” என்றார். **18** அத
னால், அவனைப் படைத் தளபதியிடம் அவர் கூட்டிக்கொண்டுபோய்,
“பவுல் என்ற கைதி என்னைக் கூப்பிட்டு, இந்த இளைஞனை உங்களி
டம் கூட்டிக்கொண்டு போகும்படி கேட்டுக்கொண்டார், உங்களிடம்
இவன் ஏதோ சொல்ல வேண்டுமாம்” என்றார். **19** படைத் தளபதி
அவன் கையைப் பிடித்து தனியாகக் கூட்டிக்கொண்டு போய், “என்னிடம்
என்ன சொல்ல வேண்டும்?” என்று கேட்டார். **20** அதற்கு அவன், “யூதர்
கள் பவுலுடைய வழக்கை இன்னும் நன்றாக விசாரிக்க விரும்புவதுபோல்
நடித்து, அவரை நாளைக்கு நியாயசங்கத்தாரிடம் கொண்டுவரும்படி உங்
களைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள்.[d] **21** இதற்கு நீங்கள்
சம்மதிக்காதீர்கள். ஏனென்றால், அவர்களுடைய ஆட்களில் 40 பேருக்கும்
அதிகமானவர்கள் அவரைக் கொலை செய்யக் காத்திருக்கிறார்கள். அப்
படிக் கொலை செய்யும்வரை சாப்பிடவோ குடிக்கவோ போவதில்லை
என்று சபதம் செய்திருக்கிறார்கள்.[e] தங்களுடைய வேண்டுகோளை நீங்கள்

அதி. 23
a அப் 22:6, 7
அப் 22:17, 18
b அப் 18:9
c அப் 27:23, 24
அப் 28:23
அப் 28:30, 31
d அப் 23:15
e அப் 23:12

23:12 *இந்தச் சபதத்தை நிறைவேற்றாவிட்டால் தங்களுக்குச் சாபம் வருமென்று
அவர்கள் நம்பினார்கள். **23:14** *வே.வா., “மூப்பர்களிடமும்.”

ஏற்றுக்கொள்வீர்கள் என்ற எதிர்பார்ப்போடு இப்போது தயாராக இருக்கி
றார்கள்” என்று சொன்னான். **22** அப்போது அந்தப் படைத் தளபதி,
“இதையெல்லாம் நீ என்னிடம் சொன்னதாக யாரிடமும் சொல்லிவிடாதே”
என்று கட்டளை கொடுத்து அவனை அனுப்பிவிட்டார்.

23 பின்பு, அவர் படை அதிகாரிகளில் இரண்டு பேரை அழைத்து, “ராத்
திரி மூன்றாம் மணிநேரத்தில்* செசரியாவுக்குப் போக 200 காலாட்படை
வீரர்களையும் 70 குதிரை வீரர்களையும் 200 ஈட்டி வீரர்களையும் ஏற்பாடு
செய்யுங்கள். **24** பவுலை ஏற்றிக்கொண்டு போக குதிரைகளைக் கொடுங்
கள். அவரை ஆளுநர் பேலிக்சிடம் பத்திரமாகக் கொண்டுபோக வேண்
டும்” என்று சொன்னார். **25** அதோடு, பேலிக்சுக்கு இந்தக் கடிதத்தையும்
எழுதினார்:

26 “மாண்புமிகு ஆளுநர் பேலிக்ஸ் அவர்களுக்கு, கிலவுதியு லீசியா
எழுதுவதாவது: உங்களுக்கு வாழ்த்துக்கள்! **27** இந்த மனுஷரை யூதர்கள்
பிடித்துக் கொலை செய்யவிருந்தார்கள். அவர் ஒரு ரோமக் குடிமகன்[a] என்
பதை நான் தெரிந்துகொண்டதால், உடனே படைவீரர்களோடு போய் அவ
ரைக் காப்பாற்றினேன்.[b] **28** அவர்மேல் ஏன் குற்றம்சாட்டுகிறார்கள் என்ப
தைத் தெரிந்துகொள்வதற்காக அவர்களுடைய நியாயசங்கத்தாரிடம்
அவரைக் கொண்டுபோனேன்.[c] **29** அப்போது, அவர்களுடைய சட்டம்
சம்பந்தமான கருத்து வேறுபாடுகளால்தான்[d] அவர் குற்றம்சாட்டப்பட்டிருக்
கிறார் என்பதைத் தெரிந்துகொண்டேன். மரண தண்டனையோ சிறைத் தண்
டனையோ கொடுக்கும் அளவுக்கு அவர் எந்தக் குற்றமும் செய்திருப்பதாக
எனக்குத் தெரியவில்லை. **30** ஆனால் இவருக்கு எதிராகச் சதித்திட்டம்
போடப்பட்டிருப்பதைப் பற்றி எனக்குத் தெரியவந்தது,[e] அதனால் இவரை
உடனே உங்களிடம் அனுப்பி வைக்கிறேன். உங்கள் முன்னால் வந்து
வழக்காடும்படி இவர்மேல் குற்றம்சாட்டியவர்களுக்குக் கட்டளை கொடுத்தி
ருக்கிறேன்.”

31 படைவீரர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையின்படியே
ராத்திரி நேரத்தில் பவுலைக் கூட்டிக்கொண்டு[f] அந்திப்பத்திரி நகரத்துக்
குப் போனார்கள். **32** அடுத்த நாள் குதிரைவீரர்களை அவரோடு அனுப்
பிவிட்டு, தங்களுடைய குடியிருப்புக்குத் திரும்பி வந்தார்கள். **33** குதிரை
வீரர்கள் செசரியாவுக்குப் போய், அந்தக் கடிதத்தை ஆளுநரிடம்
கொடுத்து, பவுலை அவர் முன்னால் நிறுத்தினார்கள். **34** ஆளுநர்
அதைப் படித்துவிட்டு, பவுல் எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர் என்று கேட்
டார்; அவர் சிலிசியாவைச் சேர்ந்தவர்[g] என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட
பின்பு, **35** “உன்மேல் குற்றம்சாட்டுகிறவர்கள் இங்கே வந்தவுடன்[h] உன்
னைத் தீர விசாரிப்பேன்” என்று சொன்னார். பின்பு, ஏரோதுவின் மாளிகை
யில் அவரைக் காவல் வைக்கும்படி கட்டளை கொடுத்தார்.

24 ஐந்து நாட்களுக்குப் பின்பு, தலைமைக் குருவான அனனியா[i] சில
பெரியோர்களையும்* தெர்த்துல்லு என்ற வழக்கறிஞரையும் கூட்
டிக்கொண்டு ஆளுநரிடம்[j] வந்தார். பவுலுக்கு எதிராக அவர்கள் தங்களு
டைய வழக்கைச் சொன்னார்கள். **2** தெர்த்துல்லு அழைக்கப்பட்டபோது,
அவன் பவுல்மேல் குற்றம்சாட்ட ஆரம்பித்து,

23:23 * அதாவது, “ராத்திரி சுமார் 9 மணிக்கு.” **24:1** * வே.வா., “மூப்பர்களையும்.”

அதி. 23
a அப் 16:37
அப் 22:25
b அப் 21:31-33
c அப் 22:30
d அப் 25:19
e அப் 23:16
f அப் 23:23, 24
g அப் 21:39
அப் 22:3
h அப் 24:1

அதி. 24
i அப் 23:2
j அப் 23:26

அதி. 24
a மத் 5:11
அப் 16:20, 21
அப் 17:6, 7
b மத் 2:23
அப் 28:22
c லூ 23:1, 2
d அப் 21:27, 28
e பிலி 1:7
f அப் 21:17, 26
g யாத் 3:15
அப் 3:13
2தீ 1:3
h அப் 28:23
ரோ 3:21
i லூ 23:43
j ஏசா 26:19
மத் 22:31, 32
லூ 14:13, 14
யோவா 5:
28, 29
யோவா 11:25
எபி 11:35
வெளி 20:12
k அப் 23:1
1கொ 4:4
எபி 13:18
l 2கொ 8:4
m அப் 21:24, 26

"மாண்புமிகு பேலிக்ஸ் அவர்களே, உங்களால்தான் நாங்கள் மிகுந்த
சமாதானத்தை அனுபவித்து வருகிறோம். உங்களுடைய முன்யோசனை
யால்தான் இந்தத் தேசத்தில் சீர்திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன.
3 எல்லா சமயங்களிலும் எல்லா இடங்களிலும் இவற்றை நாங்கள் வரவேற்
கிறோம், அதற்காக மிகவும் நன்றியோடு இருக்கிறோம். **4** இனியும் நான்
உங்களுடைய நேரத்தை வீணாக்க விரும்பாததால் சுருக்கமாகச் சொல்கி
றேன். தயவாகக் கேட்கும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன். **5** இந்த
ஆள் ஒரு விஷமி.*[a] நாசரேத்தூராரின் மதப்பிரிவுக்குத் தலைவன்;[b] உல
கம் முழுவதும் இருக்கிற யூதர்கள் மத்தியில் தேசத் துரோகச் செயல்களைத்
தூண்டிவிடுகிறான்.[c] **6** ஆலயத்தின் புனிதத்தைக் கெடுப்பதற்கும் முயற்சி
செய்தான்; அதனால்தான் இவனைப் பிடித்தோம்.[d] **7** *— **8** நாங்கள்
சுமத்துகிற குற்றச்சாட்டுகளெல்லாம் உண்மை என்பதை இவனை விசாரிக்
கும்போது நீங்களே தெரிந்துகொள்வீர்கள்" என்று சொன்னான்.

9 யூதர்களும் அவனோடு சேர்ந்துகொண்டு, அவன் சொன்னதெல்லாம்
உண்மைதான் என்று சாதித்தார்கள். **10** பின்பு, பவுலைப் பேசச் சொல்லி
ஆளுநர் தலையசைத்தார். அப்போது பவுல்,

"பல வருஷங்களாக நீங்கள் இந்தத் தேசத்தாருக்கு நீதிபதியாக இருப்பது
எனக்கு நன்றாகத் தெரியும். அதனால், இப்போது என்னுடைய வாதத்தை
உங்கள் முன்னால் வைப்பதில் சந்தோஷப்படுகிறேன்.[e] **11** கடவுளை
வணங்குவதற்காக நான் எருசலேமுக்குப் போய் 12 நாட்கள்கூட ஆக
வில்லை.[f] இதை நீங்களே விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். **12** ஆல
யத்தில் நான் யாருடனாவது வாக்குவாதம் செய்ததையோ, ஜெபக்கூடங்க
ளிலும் சரி, நகரத்தின் வேறெந்தப் பகுதியிலும் சரி, கலகம் செய்ய
மக்களைத் தூண்டிவிட்டதையோ இவர்கள் பார்க்கவில்லை. **13** அது
மட்டுமல்ல, இப்போது என்மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை உங்கள்
முன் இவர்களால் நிரூபிக்கவும் முடியாது. **14** ஆனால், ஒன்றை மட்டும்
நான் ஒத்துக்கொள்கிறேன். மதப்பிரிவு என்று இவர்கள் சொல்கிற வணக்க
முறையின்படி நான் என்னுடைய முன்னோர்களின் கடவுளுக்குப் பரிசுத்த
சேவை செய்து வருகிறேன்.[g] ஏனென்றால், திருச்சட்டத்திலும் தீர்க்கதரிசிக
ளின் புத்தகங்களிலும் எழுதப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் நான் நம்புகி
றேன்.[h] **15** அதோடு, நீதிமான்களும் அநீதிமான்களும்[i] உயிரோடு எழுப்
பப்படுவார்கள்[j] என்று கடவுளிடம் இவர்கள் நம்பிக்கை வைத்திருப்பது
போலவே நானும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். **16** அதனால்தான், கட
வுளுக்கும் மனுஷர்களுக்கும் முன்னால் சுத்தமான* மனசாட்சியோடு
இருக்க எப்போதும் கடினமாக முயற்சி செய்கிறேன்.[k] **17** அதனால், பல
வருஷங்களுக்குப் பின்பு, என்னுடைய தேசத்தைச் சேர்ந்தவர்களுக்குப்
பண உதவி செய்வதற்கும்[l] என்னுடைய கடவுளுக்குக் காணிக்கைகள்
கொடுப்பதற்கும் வந்தேன். **18** தூய்மைச் சடங்கு செய்திருந்த என்னை
இவர்கள் அப்போதுதான் ஆலயத்தில் பார்த்தார்கள்.[m] அங்கு என்
னோடு எந்தக் கூட்டமும் இருக்கவில்லை, எந்த அமளியும் ஏற்பட
வில்லை. ஆனால், ஆசிய மாகாணத்திலிருந்து வந்த சில யூதர்கள் இருந்
தார்கள். **19** எனக்கு எதிராக ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால் அந்த

24:5 *நே.மொ., "கொள்ளைநோய்." **24:7** *இணைப்பு A3-ஐப் பாருங்கள். **24:16** *வே.வா., "குற்றமில்லாத."

யூதர்களே உங்கள் முன்னால் வந்து குற்றம்சாட்டியிருக்க வேண்டும்.[a]
20 அல்லது, நான் நியாயசங்கத்தார் முன்னால் நின்றபோது என்னிடம்
என்ன குற்றத்தைக் கண்டார்கள் என இங்கே இருப்பவர்களாவது சொல்லட்
டும். **21** அவர்கள் மத்தியில் நின்று, ‘இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்
படுவார்கள் என்று நான் நம்புவதால்தான் இன்று உங்கள் முன்னால்
நியாயம் விசாரிக்கப்படுகிறேன்!’[b] என்று சத்தமாகச் சொன்னதைத் தவிர,
வேறென்ன குற்றத்தை இவர்கள் என்னிடம் கண்டார்கள்?” என்று கேட்டார்.

22 ஆனால், பேலிக்சுக்கு இந்த மார்க்கத்தை*[c] பற்றிய உண்மைகள் நன்
றாகத் தெரிந்திருந்ததால், “படைத் தளபதி லீசியா வரும்போது இந்த வழக்கு
சம்பந்தமாக முடிவெடுப்பேன்” என்று சொல்லி வழக்கை ஒத்தி வைத்
தார். **23** பின்பு படை அதிகாரியிடம், ‘இவனைக் காவலில் வையுங்கள்.
ஆனால் இவனுக்குக் கொஞ்சம் சுதந்திரம் கொடுங்கள்; இவனுடைய ஆட்
கள் இவனுக்குத் தேவையான உதவிகள் செய்வதைத் தடுக்க வேண்டாம்’
என்று உத்தரவிட்டார்.

24 சில நாட்களுக்குப் பின்பு, பேலிக்ஸ் தன்னுடைய யூத மனைவியா
கிய துருசில்லாளோடு வந்தார். பின்பு பவுலை வரவழைத்து, கிறிஸ்து இயே
சுவைப் பற்றிய நம்பிக்கையைக் குறித்து அவர் சொன்ன விஷயங்களைக்
கவனித்துக் கேட்டார்.[d] **25** ஆனால், நீதியையும் சுயக்கட்டுப்பாட்டையும்
வரப்போகிற நியாயத்தீர்ப்பையும்[e] பற்றி அவர் சொன்னபோது பேலிக்ஸ்
பயந்துபோனார்; அதனால், “நீ இப்போது போகலாம். சமயம் வரும்போது
உன்னை மறுபடியும் வரச் சொல்லி ஆள் அனுப்புகிறேன்” என்று சொன்
னார். **26** அதேசமயத்தில், பவுல் தனக்கு லஞ்சம் கொடுப்பார் என்று எதிர்
பார்த்தார். அதனால், அவரை அடிக்கடி வரவழைத்து அவரோடு பேசினார்.
27 ஆனால், இரண்டு வருஷங்களுக்குப் பின்பு, பேலிக்சுக்கு அடுத்து
பொர்க்கியு பெஸ்து பதவிக்கு வந்தார். பேலிக்ஸ் யூதர்களுடைய தயவைப்
பெற விரும்பியதால்[f] பவுலைச் சிறையிலேயே விட்டுவிட்டுப் போனார்.

25 மாகாணத்துக்கு வந்து ஆளுநராகப் பதவியேற்ற மூன்று நாட்க
ளுக்குப் பின்பு, பெஸ்து[g] செசரியாவிலிருந்து எருசலேமுக்குப்
போனார். **2** முதன்மை குருமார்களும் பிரபலமான யூத ஆண்களும் பவு
லைப் பற்றி அவரிடம் புகார் செய்தார்கள்.[h] **3** பவுலை மறுபடியும் எரு
சலேமுக்கு அனுப்பி வைத்துத் தங்களுக்குத் தயவு காட்டும்படி அவரை
வேண்டிக்கொண்டார்கள். ஏனென்றால், வழியில் பதுங்கியிருந்து அவ
ரைக் கொன்றுபோட அவர்கள் திட்டம் போட்டிருந்தார்கள்.[i] **4** ஆனால்
பெஸ்து, “பவுல் செசரியாவிலேயே காவலில் இருக்க வேண்டும். நானும்
சீக்கிரத்தில் அங்கே போவேன். **5** அவன் ஏதாவது தவறு செய்திருந்
தால், உங்கள் தலைவர்கள் என்னோடு வந்து அவன்மேல் குற்றம்சாட்டட்
டும்”[j] என்று சொன்னார்.

6 பெஸ்து எட்டு அல்லது பத்து நாட்கள்வரை அவர்களோடு தங்கி
விட்டு செசரியாவுக்குப் போனார். அடுத்த நாள் நியாயத்தீர்ப்பு மேடையில்
உட்கார்ந்துகொண்டு, பவுலை அழைத்து வரும்படி கட்டளை கொடுத்தார்.
7 பவுல் உள்ளே வந்தபோது எருசலேமிலிருந்து வந்திருந்த யூதர்கள் அவ
ரைச் சுற்றி நின்று, பயங்கரமான குற்றச்சாட்டுகள் பலவற்றை அவர்

24:22 *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 24
a அப் 25:16
b அப் 23:6
c அப் 9:1, 2; அப் 19:9
d மத் 10:18
e அப் 17:30, 31; 2கொ 5:10
f அப் 25:9

அதி. 25
g அப் 24:27
h அப் 24:1
i அப் 23:20, 21
j அப் 25:16

மேல் சுமத்தினார்கள். ஆனால், அவர்களால் அவற்றை நிரூபிக்க முடிய
வில்லை.[a]

8 அப்போது பவுல், “யூதர்களுடைய திருச்சட்டத்துக்கோ ஆலயத்
துக்கோ ரோம அரசனுக்கோ* விரோதமாக நான் எந்தப் பாவமும் செய்ய
வில்லை”[b] என்று சொன்னார். **9** பெஸ்து யூதர்களுடைய தயவைப் பெற
விரும்பியதால்,[c] “நீ எருசலேமுக்கு வந்து, அங்கே என் முன்னால் இந்தக்
குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரிக்கப்பட விரும்புகிறாயா?” என்று பவுலி
டம் கேட்டார். **10** அதற்கு பவுல், “நான் ரோம அரசனுடைய* நியா
யத்தீர்ப்பு மேடைக்கு முன்னால் நிற்கிறேன். இங்குதான் என்னை விசா
ரிக்க வேண்டும். யூதர்களுக்கு நான் எந்தக் கெடுதலும் செய்யவில்லை. இது
உங்களுக்கே நன்றாகத் தெரியவந்திருக்கும். **11** நான் உண்மையிலேயே
கெட்டவனாக இருந்து மரண தண்டனைக்குரிய குற்றம் ஏதாவது செய்திருந்
தால்,[d] சாவதற்குக்கூட தயங்க மாட்டேன். இவர்கள் என்மேல் சுமத்தும் குற்
றச்சாட்டுகள் எதுவும் உண்மை இல்லையென்றால், என்னை இவர்களிடம்
ஒப்படைக்க யாருக்கும் உரிமை இல்லை. ரோம அரசனிடம் நான் மேல்
முறையீடு செய்கிறேன்!”[e] என்று சொன்னார். **12** அப்போது, பெஸ்து தன்
னுடைய ஆலோசகர் குழுவிடம் கலந்துபேசிவிட்டு, “ரோம அரசனிடம்* நீ
மேல்முறையீடு செய்திருக்கிறாய். அதனால் ரோம அரசனிடமே நீ போக
லாம்” என்று சொன்னார்.

13 சில நாட்களுக்குப் பின்பு, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயா
ளும் பெஸ்துவைச் சந்தித்து வாழ்த்துச் சொல்ல செசரியாவுக்கு வந்தார்கள்.
14 அவர்கள் அங்கே பல நாட்கள் தங்கியிருந்ததால், பவுலுக்கு எதிரான
வழக்கைப் பற்றி ராஜாவிடம் பெஸ்து இப்படிச் சொன்னார்:

“பேலிக்ஸ் கைதியாக விட்டுச்சென்ற ஒரு மனுஷன் இருக்கிறான்.
15 நான் எருசலேமில் இருந்தபோது யூதர்களுடைய முதன்மை குருமார்க
ளும் பெரியோர்களும்* அவனைப் பற்றி என்னிடம் புகார் செய்து,[f]
அவனுக்குத் தண்டனை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். **16** அப்
போது நான், ‘குற்றம்சாட்டப்படுகிற எந்த மனுஷனுக்கும் குற்றம்சாட்டிய
வர்கள் முன்னால் நேருக்கு நேர் நின்று தன்னுடைய வாதத்தைச் சொல்ல
வாய்ப்புக் கொடுக்க வேண்டும்; அப்படி வாய்ப்புக் கொடுப்பதற்கு முன்பு,
குற்றம்சாட்டியவர்களுடைய விருப்பப்படி அவர்களிடமே அவனை ஒப்ப
டைப்பது ரோமரின் வழக்கம் அல்ல’[g] என்று சொன்னேன். **17** அத
னால் அவர்கள் இங்கே வந்தபோது, நான் தாமதிக்காமல் அடுத்த
நாளே நியாயத்தீர்ப்பு மேடையில் உட்கார்ந்து அந்த மனுஷனைக்
கொண்டுவரும்படி கட்டளையிட்டேன். **18** குற்றம்சாட்டியவர்கள் எழுந்து
பேசியபோது, நான் நினைத்த அளவுக்குப் பயங்கரமான குற்றச்சாட்டு
கள் எதையும் அவன்மேல் அவர்கள் சுமத்தவில்லை.[h] **19** தங்களுடைய
தெய்வத்தை வணங்கும் முறையை* பற்றியும்,[i] இயேசு என்ற மனுஷ
னைப் பற்றியும் மட்டுமே பவுலோடு அவர்களுக்குச் சில வாக்குவாதங்கள்
இருந்தன. இறந்துபோன அந்த நபர் இன்னும் உயிரோடிருப்பதாக பவுல்

அதி. 25
a மத் 5:11
லூ 23:1, 2
அப் 24:5
b அப் 24:11, 12
c அப் 24:27
d அப் 23:26, 29
e அப் 28:17-19
f அப் 25:2, 3
g அப் 25:5
h அப் 25:7
i அப் 18:14, 15
அப் 23:26, 29

25:8 *நே.மொ., “சீஸருக்கோ.” சொல் பட்டியலைப் பாருங்கள். **25:10** *நே.மொ., “சீஸருடைய.” சொல் பட்டியலைப் பாருங்கள். **25:12** *நே.மொ. “சீஸரிடம்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **25:15** *வே.வா., “மூப்பர்களும்.” **25:19** *வே.வா., “தங்களுடைய மதத்தை.”

சாதித்துக்கொண்டிருந்தான்.[a] **20** இந்த விவாதத்தை எப்படித் தீர்ப்பது
என்று தெரியாமல் நான் குழம்பிப்போனதால், 'நீ எருசலேமுக்குப் போய்
அங்கே இந்த விஷயங்களைப் பற்றி விசாரிக்கப்பட விரும்புகிறாயா?'
என்று அவனிடம் கேட்டேன்.[b] **21** ஆனால், அவன் தன் வழக்கை மாண்
புமிக்கவரே*[c] விசாரித்துத் தீர்ப்பளிக்கும்வரை தன்னைக் காவலில் வைக்க
வேண்டுமென மேல்முறையீடு செய்தான். அதனால், அவனை ரோம அர
சனிடம் அனுப்பும்வரை காவலில் வைக்கும்படி கட்டளை கொடுத்தேன்"
என்று சொன்னார்.

22 அதற்கு அகிரிப்பா, "அவன் பேசுவதை நான் கேட்க விரும்பு
கிறேன்"[d] என்று பெஸ்துவிடம் சொன்னார். அதற்கு அவர், "அவன் பேசு
வதை நாளைக்கு நீங்கள் கேட்கலாம்" என்று சொன்னார். **23** அடுத்த
நாள் அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் ஆடம்பரமாக விசாரணை மன்றத்
துக்கு வந்தார்கள். படைத் தளபதிகளும் நகரத்திலிருந்த முக்கியப் பிரமுகர்
களும் அவர்களோடு வந்தார்கள். பின்பு, பெஸ்துவின் கட்டளைப்படி
பவுல் அங்கே கொண்டுவரப்பட்டார். **24** அப்போது பெஸ்து, "அகிரிப்பா
ராஜாவே, எங்களோடு இங்கு கூடியிருப்பவர்களே, நீங்கள் பார்க்கிற இந்த
மனுஷனுக்கு எதிராக எருசலேமிலும் இங்கேயும் யூதர்கள் எல்லாரும் என்
னிடம் முறையிட்டார்கள், இவனை உயிரோடு விட்டுவைக்கக் கூடாதென்று
கூச்சல் போட்டார்கள்.[e] **25** ஆனால், மரண தண்டனைக்குரிய எந்தக் குற்
றத்தையும் இவன் செய்யவில்லை என்பதை நான் தெரிந்துகொண்டேன்.[f]
அதனால் இவன் மாண்புமிக்கவரிடம் மேல்முறையீடு செய்தபோது, அவரி
டம் அனுப்பத் தீர்மானித்தேன். **26** ஆனாலும், இவனைப் பற்றி என் எஜ
மானுக்குத் திட்டவட்டமாக எழுத என்னிடம் எதுவும் இல்லை. அதனால்,
நியாயவிசாரணைக்குப் பிறகு இவனைப் பற்றி எழுத எனக்கு ஏதாவது
விஷயம் கிடைக்குமென்று நினைத்து இவனை உங்கள் எல்லாருக்கும் முன்
னால், குறிப்பாக அகிரிப்பா ராஜாவே உங்கள் முன்னால், கொண்டுவந்து
நிறுத்தியிருக்கிறேன். **27** ஒரு கைதியின் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்
சாட்டுகளைப் பற்றிக் குறிப்பிடாமலேயே அவனை அனுப்புவது எனக்கு
நியாயமாகத் தெரியவில்லை" என்று சொன்னார்.

26 அகிரிப்பா[g] பவுலிடம், "இப்போது உன் தரப்பில் பேச அனுமதி தரு
கிறேன்" என்றார். அப்போது பவுல் தன்னுடைய கையை நீட்டி, தன்
தரப்பில் பேச ஆரம்பித்தார்:

2 "அகிரிப்பா ராஜாவே, யூதர்கள் என்மேல் சுமத்தும் எல்லா குற்றச்
சாட்டுகளையும்[h] பற்றி இன்று உங்கள் முன்னால் பேச வாய்ப்புக் கிடைத்த
தற்காகச் சந்தோஷப்படுகிறேன். **3** முக்கியமாக, யூதர்களுடைய சம்பிரதா
யங்களையும் அவர்கள் மத்தியில் இருக்கிற சர்ச்சைகளையும் பற்றி நீங்கள்
மிக நன்றாகத் தெரிந்து வைத்திருப்பதற்காகச் சந்தோஷப்படுகிறேன். அத
னால், நான் சொல்வதைப் பொறுமையாகக் கேட்கும்படி உங்களை வேண்
டிக்கொள்கிறேன்.

4 இளமைப் பருவம்முதல் நான் எருசலேமில் என்னுடைய மக்கள் மத்
தியில் எப்படி வாழ்ந்துவந்தேன் என்று ஆரம்பத்திலிருந்து என்னோடு பழ
கிய யூதர்கள் எல்லாருக்கும் தெரியும்.[i] **5** எங்கள் மதத்தின் மிகக் கண்டிப்

25:21 * வே.வா., "அகஸ்து." இது நான்காம் ரோம அரசனான நீரோவின் பட்டப்பெயர்; இந்தப் பட்டப்பெயரை வைத்திருந்த முதலாம் ரோம அரசன் ஆக்டேவியன்.

அதி. 25
a அப் 22:6-8
b அப் 25:9
c அப் 25:11, 12
d அப் 9:15
e அப் 22:22
f அப் 23:26, 29

அதி. 26
g அப் 25:13
h அப் 24:5, 9
i கலா 1:13, 14

பான பரிசேயப் பிரிவின்படி[a] பரிசேயனாக வாழ்ந்தேன்;[b] வேண்டுமானால்
அவர்களே இதைப் பற்றிச் சாட்சி சொல்லட்டும். **6** ஆனாலும், எங்கள்
முன்னோர்களுக்குக் கடவுள் கொடுத்த வாக்குறுதியில் நம்பிக்கை வைத்த
தால்தான்[c] இப்போது விசாரணைக்காக நிறுத்தப்பட்டிருக்கிறேன். **7** அந்த
வாக்குறுதி நிறைவேறும் என்ற நம்பிக்கையில் எங்கள் 12 கோத்திரத்தா
ரும் ராத்திரி பகலாக முழு மூச்சோடு பரிசுத்த சேவை செய்து வருகிறார்
கள். ராஜாவே, இந்த நம்பிக்கையைக் குறித்துதான் யூதர்கள் என்மேல் குற்
றம் சுமத்தியிருக்கிறார்கள்.[d]

8 இறந்தவர்களைக் கடவுள் உயிரோடு எழுப்புவார் என்பதை ஏன்
நம்ப முடியாத விஷயமென்று நினைக்கிறீர்கள்? **9** நாசரேத்தூர் இயேசு
வின் பெயருக்கு விரோதமாக எத்தனையோ காரியங்கள் செய்ய வேண்
டும் என்பதில் நானும்கூட உறுதியாக இருந்தேன். **10** அதைத்தான்
நான் எருசலேமில் செய்தேன். முதன்மை குருமார்களிடமிருந்து அதிகாரம்
பெற்று,[e] பரிசுத்தவான்கள் பலரைச் சிறையில் அடைத்தேன்.[f] அவர்களுக்கு
மரண தண்டனை வழங்கச் சம்மதம் தெரிவித்தேன். **11** எல்லா ஜெபக்
கூடங்களுக்கும் போய் அவர்களைப் பல தடவை தண்டித்தேன், விசு
வாசத்தை விட்டுவிடும்படி கட்டாயப்படுத்தினேன். அவர்கள்மேல் பயங்கர
வெறியோடு இருந்ததால் வேறு நகரங்களுக்கும் போய் அவர்களைத் துன்
புறுத்தினேன்.

12 இப்படிச் செய்துகொண்டிருந்தபோது, முதன்மை குருமார்களிடமி
ருந்து அதிகாரமும் உத்தரவும் பெற்றுக்கொண்டு தமஸ்குவுக்குப் போய்க்
கொண்டிருந்தேன். **13** போகும் வழியில், மத்தியான நேரத்தில், ராஜாவே,
சூரிய ஒளியைவிட மிகப் பிரகாசமான ஒரு ஒளி வானத்திலிருந்து
வந்து, என்னையும் என்னோடு இருந்தவர்களையும் சுற்றிப் பிரகாசித்தது.[g]
14 நாங்கள் எல்லாரும் தரையில் விழுந்தோம். அப்போது ஒரு குரல் என்
னிடம், ‘சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்? தார்க்
கோலை* உதைத்துக்கொண்டே இருப்பது உனக்குத்தான் கேடு’ என்று
எபிரெய மொழியில் சொல்வதைக் கேட்டேன். **15** அதற்கு நான், ‘எஜ
மானே, நீங்கள் யார்?’ என்று கேட்டேன். அப்போது அவர், ‘நீ துன்புறுத்
துகிற இயேசு நான்தான். **16** இப்போது எழுந்து நில். என்னுடைய
ஊழியனாகவும் சாட்சியாகவும் உன்னை நியமிப்பதற்காகத்தான் உன்
முன்னால் தோன்றியிருக்கிறேன். இப்போது நீ பார்த்த விஷயங்களை
யும், இனி நான் உனக்குக் காட்டப்போகிற விஷயங்களையும் பற்றி நீ
சாட்சி கொடுக்க வேண்டும்.[h] **17** இந்தத் தேசத்தாரிடமும் மற்ற தேசத்து
மக்களிடமும் நான் உன்னை அனுப்புவேன்,[i] அவர்களால் வரும்
ஆபத்துகளிலிருந்து உன்னைக் காப்பாற்றுவேன். **18** நீ அவர்களை இரு
ளிலிருந்து[j] ஒளியிடமும்[k] சாத்தானின் பிடியிலிருந்து[l] கடவுளிடமும் திருப்
பும்படி அவர்களுடைய கண்களைத் திறக்க வேண்டும்.[m] அப்போதுதான்,
அவர்கள் என்மேல் விசுவாசம் வைத்து பாவங்களிலிருந்து மன்னிப்பை
யும்,[n] புனிதமாக்கப்பட்டோருக்குரிய சொத்தையும் பெறுவார்கள்’ என்று
சொன்னார்.

19 அதனால் அகிரிப்பா ராஜாவே, வானத்திலிருந்து தோன்றிய காட்சி
யைப் பார்த்தபோது எனக்குக் கிடைத்த கட்டளைக்கு நான் உடனடியாகக்

26:14 *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 26
- *a* அப் 22:3
- *b* அப் 23:6; பிலி 3:4, 5
- *c* அப் 24:15
- *d* அப் 24:20, 21
- *e* அப் 9:1, 2, 14
- *f* யோவா 16:2; அப் 8:3; 1கொ 15:9; கலா 1:13; 1தீ 1:13
- *g* அப் 9:3-5; அப் 22:6-8
- *h* அப் 22:14, 15; கலா 1:11, 12; 1தீ 1:12
- *i* அப் 22:21; ரோ 11:13
- *j* கொலோ 1:13
- *k* யோவா 8:12; 2கொ 4:6
- *l* எபே 2:1, 2
- *m* ஏசா 61:1
- *n* 1யோ 3:5

கீழ்ப்படிந்தேன். **20** அதனால், மனம் திருந்த வேண்டுமென்றும், மனம்
திருந்தியதைச்[a] செயலில் காட்டி கடவுள் பக்கம் வர வேண்டுமென்றும்
அறிவித்தேன். முதலில் தமஸ்குவிலும்,[b] பின்பு எருசலேமிலும்,[c] அதன்பின்
யூதேயா தேசத்தார் எல்லாருக்கும், மற்ற தேசத்தாருக்கும் அறிவித்தேன்.
21 இதனால்தான், யூதர்கள் என்னை ஆலயத்தில் பிடித்துக் கொல்லப்
பார்த்தார்கள்.[d] **22** ஆனாலும், கடவுள் எனக்கு உதவி செய்ததால் இந்த
நாள்வரை சாதாரண ஆட்களுக்கும் பெரிய ஆட்களுக்கும் சாட்சி
கொடுத்து வருகிறேன். தீர்க்கதரிசிகளின் புத்தகங்களிலும் மோசேயின் புத்
தகங்களிலும் முன்கூட்டியே சொல்லப்பட்டதைப் பற்றித்தான் சாட்சி
கொடுத்து வருகிறேனே தவிர, வேறொன்றைப் பற்றியும் அல்ல.[e]
23 கிறிஸ்து பாடுகள் பட வேண்டும்[f] என்றும், இறந்தவர்களில் முதலாவ
தாக உயிர்த்தெழுப்பப்பட்டு[g] இந்த மக்களுக்கும் மற்ற தேசத்து மக்க
ளுக்கும் ஒளியைப் பற்றித் தெரிவிப்பார்[h] என்றும் அவற்றில் சொல்லப்பட்
டதைப் பற்றித்தான் அறிவித்து வருகிறேன்."

24 பவுல் இப்படித் தன் தரப்பில் பேசிக்கொண்டிருந்தபோது, பெஸ்து சத்
தமாக, "பவுலே, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது! அதிக படிப்பு
உன்னைப் பைத்தியக்காரனாக்கிவிட்டது!" என்று சொன்னார். **25** ஆனால்
பவுல், "மாண்புமிகு பெஸ்து அவர்களே, எனக்குப் பைத்தியம் பிடிக்க
வில்லை, நான் சத்திய வார்த்தைகளைத்தான் பேசுகிறேன், தெளிவாக
யோசித்துதான் பேசுகிறேன். **26** உண்மையில், இந்த விஷயங்களைப்
பற்றி ராஜாவுக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான், தயக்கமில்லாமல்
அவரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். இந்த விஷயங்களில் ஒன்றுகூட
அவருடைய கவனத்தில் படாமல் போயிருக்காது என்பதை உறுதியாக நம்
புகிறேன். ஏனென்றால், இதெல்லாம் ஏதோவொரு மூலையில் நடக்க
வில்லை.[i] **27** அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நீங்
கள் நம்புகிறீர்களா? நம்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்" என்று
சொன்னார். **28** அப்போது அகிரிப்பா, "இப்படிப் பக்குவமாகப் பேசிப்
பேசி கொஞ்ச நேரத்தில் என்னையும் கிறிஸ்தவனாக மாற்றிவிடுவாய்
போலிருக்கிறதே" என்று பவுலிடம் சொன்னார். **29** அதற்கு பவுல்,
"கொஞ்ச நேரத்திலோ அதிக நேரத்திலோ, நீங்கள் மட்டுமல்ல இன்று நான்
சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கும் எல்லாருமே இந்தக் கைவிலங்கு
கள் மட்டும் இல்லாமல் என்னைப் போல ஆக வேண்டும் என்றுதான் கட
வுளிடம் வேண்டிக்கொள்கிறேன்" என்று சொன்னார்.

30 பின்பு, ராஜாவும் ஆளுநரும் பெர்னீக்கேயாளும் அவர்களோடு உட்
கார்ந்திருந்தவர்களும் எழுந்து, **31** அங்கிருந்து வெளியே போய், "இந்த
மனுஷன் மரண தண்டனைக்கோ சிறைத் தண்டனைக்கோ உரிய எந்தக்
குற்றத்தையும் செய்யவில்லை"[j] என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள
ஆரம்பித்தார்கள். **32** பின்பு பெஸ்துவிடம் அகிரிப்பா, "இந்த மனுஷன்
ரோம அரசனிடம்* மேல்முறையீடு செய்யாமல் இருந்திருந்தால் இவனை
விடுதலை செய்திருக்கலாம்"[k] என்று சொன்னார்.

27 நாங்கள் இத்தாலிக்குக் கப்பல் ஏறிப்போக வேண்டும் என்று அவர்
கள் தீர்மானித்து,[l] பவுலையும் வேறு சில கைதிகளையும் அகஸ்து
படைப்பிரிவைச் சேர்ந்த யூலியு என்ற படை அதிகாரியிடம் ஒப்படைத்தார்

26:32 * நே.மொ., "சீஸரிடம்." சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 26
a மத் 3:8
b அப் 9:22
c அப் 9:28
d அப் 21:30, 31
e லூ 24:27, 44; ரோ 3:21
f சங் 22:7; சங் 35:19; ஏசா 50:6; ஏசா 53:5
g சங் 16:10
h சங் 18:49; ஏசா 11:10; லூ 2:30-32
i யோவா 18:20
j அப் 23:26, 29; அப் 25:24, 25
k அப் 25:11, 12

அதி. 27
l அப் 25:12

அதி. 27
a அப் 19:29
அப் 20:4
கொலோ 4:10

கள். **2** அதிரமித்தியம் நகரத்திலிருந்து வந்த கப்பல் ஆசிய மாகாணத்தின்
கரையோரமாக இருக்கிற துறைமுகங்களுக்குப் போகவிருந்தது. அந்தக்
கப்பலில் நாங்கள் ஏறினோம். தெசலோனிக்கே நகரத்தைச் சேர்ந்த அரிஸ்
தர்க்கு[a] என்ற மக்கெதோனியரும் எங்களோடு இருந்தார். **3** அடுத்த
நாள் சீதோனுக்குப் போய்ச் சேர்ந்தோம். பவுலை யூலியு மனிதாபிமானத்
தோடு நடத்தினார். அதோடு, பவுல் தன்னுடைய நண்பர்களைப் போய்ப்
பார்ப்பதற்கும் அவர்களுடைய உதவியைப் பெறுவதற்கும் அனுமதி
கொடுத்தார்.

4 பின்பு, அங்கிருந்து கப்பலில் புறப்பட்டோம். எதிர்க்காற்று வீசியதால்
சீப்புரு தீவைச் சுற்றி, காற்று அதிகம் அடிக்காத பக்கமாகப் பயணம் செய்
தோம். **5** அதன் பின்பு சிலிசியா, பம்பிலியா ஆகிய பகுதிகளை ஒட்டி
யுள்ள கடல் வழியாகப் போய், லீசியாவில் இருக்கிற மீறா துறைமு
கத்தை அடைந்தோம். **6** அங்கே படை அதிகாரி, இத்தாலிக்குப் போகும்
அலெக்சந்திரியா நகரத்துக் கப்பலைப் பார்த்து, அதில் எங்களை ஏற்றினார்.
7 பல நாட்கள் மெதுவாகவே பயணம் செய்த பின்பு, கஷ்டப்பட்டு கினீது
நகரத்துக்கு வந்துசேர்ந்தோம். எதிர்க்காற்று வீசியதால் தொடர்ந்து போக
முடியாமல், சல்மோனே முனையைக் கடந்து கிரேத்தா தீவைச் சுற்றி, காற்று
அதிகம் அடிக்காத பக்கமாகப் பயணம் செய்தோம். **8** கரையோரமாகவே
கஷ்டப்பட்டுப் பயணம் செய்து, லசேயா நகரத்துக்குப் பக்கத்தில் இருக்கிற
'நல்ல துறைமுகம்' என்ற இடத்துக்கு வந்துசேர்ந்தோம்.

b லேவி 16: 29, 30
லேவி 23:27

9 இதற்குள் பல நாட்கள் ஆகிவிட்டன; பாவப் பரிகார விரத நாளும்*[b]
ஏற்கெனவே கடந்துவிட்டதால் பயணம் செய்வது ஆபத்தாக இருந்தது.
அதனால் அவர்களுக்கு பவுல் ஓர் ஆலோசனையைச் சொல்லி, **10** "நண்
பர்களே, இந்தப் பயணத்தால் கப்பலுக்கும் அதில் இருக்கிற சரக்குகளுக்கும்
பயங்கர சேதமும் இழப்பும் ஏற்படும், நம் உயிருக்கும்கூட ஆபத்து ஏற்ப
டும் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். **11** ஆனால் படை அதி
காரி, பவுலின் பேச்சைக் கேட்காமல் கப்பல் தலைவருடைய பேச்சையும்
கப்பல் உரிமையாளருடைய பேச்சையும்தான் கேட்டார். **12** குளிர் காலத்
தில் தங்குவதற்கு அந்தத் துறைமுகம் வசதியாக இல்லாததால், அங்கிருந்து
எப்படியாவது கிரேத்தா தீவுக்குப் பயணம் செய்து, வடகிழக்கையும் தென்
கிழக்கையும் நோக்கியிருந்த பேனிக்ஸ் துறைமுகத்தில் குளிர் காலத்தைக்
கழிக்கலாம் என்று பெரும்பாலோர் ஆலோசனை சொன்னார்கள்.

13 தென்திசைக் காற்று மென்மையாக வீசியபோது, தங்களுடைய எண்
ணம் கைகூடியதாக அவர்கள் நினைத்தார்கள். அதனால், நங்கூரத்தைத்
தூக்கிவிட்டு கிரேத்தா தீவின் கரையோரமாகப் பயணம் செய்ய ஆரம்
பித்தார்கள். **14** ஆனால் கொஞ்ச நேரத்துக்குள், அந்தத் தீவில் யூரோக்
கிலோ* என்ற கடும் புயல்காற்று வீசியது. **15** கப்பல் அதில் பயங்கரமா
கச் சிக்கிக்கொண்டதால், காற்றை எதிர்த்து கப்பலை ஓட்ட முடியவில்லை.
அதனால், காற்று வீசிய திசையிலேயே அது அடித்துச் செல்லப்படும்
படி விட்டுவிட்டோம். **16** அதன் பின்பு, கிலவுதா என்ற சின்னத் தீவைச்
சுற்றி, காற்று அதிகம் அடிக்காத பக்கமாகப் பயணம் செய்தோம்.

27:9 *இது திஸ்ரி மாதத்தில், அதாவது செப்டம்பர்/அக்டோபர் மாதத்தில், வந்தது. மழையும் கடல் சீற்றமும் ஆரம்பிக்கிற காலமாக இருந்தது. **27:14** *இது வடகிழக்குக் காற்று.

ஆனாலும், கப்பலின் பின்புறத்தில் இணைக்கப்பட்டிருந்த சின்னப் பட
கைத் தூக்குவது எங்களுக்குப் பெரும் பாடாக இருந்தது. **17** எப்படியோ
அவர்கள் அதைத் தூக்கிக் கப்பலில் வைத்தார்கள். பின்பு, கயிறு முதலிய
வற்றைப் பயன்படுத்தி கப்பலைக் கட்டினார்கள். அதன் பின்பு, சிர்ட்டிஸ்*
மணல்திட்டில் கப்பல் சிக்கிக்கொள்ளும் என்று பயந்து, கப்பற்பாயின் கயிறு
களை அவிழ்த்து, காற்றின் போக்கிலேயே கப்பலைப் போகும்படி விட்டு
விட்டார்கள். **18** இருந்தாலும், புயல்காற்று எங்களைப் பயங்கரமாக
அலைக்கழித்ததால், அடுத்த நாள் கப்பலின் எடையை அவர்கள் குறைக்க
ஆரம்பித்தார்கள். **19** மூன்றாம் நாள், தங்களுடைய கையாலேயே கப்பற்
பாய்ச் சாதனங்களை வீசியெறிந்தார்கள்.

20 பல நாட்களுக்குச் சூரியனோ நட்சத்திரங்களோ தெரியவில்லை,
பயங்கர புயல்காற்று எங்களைத் தாக்கிக்கொண்டே இருந்தது. தப்பிப்
பிழைப்போம் என்ற நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்
பித்தது. **21** பல நாட்களாக அவர்கள் சாப்பிடாமல் இருந்ததால், பவுல்
அவர்கள் நடுவில் எழுந்து நின்று, "நண்பர்களே, நீங்கள் என் ஆலோசனை
யைக் கேட்டு, கிரேத்தா தீவைவிட்டுப் புறப்படாமல் இருந்திருக்க வேண்
டும். அப்படிச் செய்திருந்தால் இந்தச் சேதமும் இழப்பும் ஏற்பட்டிருக்காது.[a]
22 ஆனாலும், தைரியமாக இருக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கி
றேன். நீங்கள் யாருமே உயிரை இழக்க மாட்டீர்கள், கப்பல் மட்டும்தான்
சேதமடையும். **23** என்மேல் உரிமையுள்ளவரும் நான் பரிசுத்த சேவை
செய்கிறவருமான கடவுள் தன்னுடைய தூதரை[b] அனுப்பினார். அவர்
நேற்று ராத்திரி என் பக்கத்தில் வந்து நின்று, **24** 'பவுலே, பயப்படாதே. நீ
ரோம அரசனுக்கு* முன்னால் நிற்க வேண்டும்.[c] இதோ! உன்னோடு பய
ணம் செய்கிற எல்லாருடைய உயிரையும் கடவுள் காப்பாற்றுவார்' என்று
சொன்னார். **25** அதனால் நண்பர்களே, தைரியமாக இருங்கள். கடவுள்
மேல் நான் நம்பிக்கையாக இருக்கிறேன், என்னிடம் சொல்லப்பட்டபடியே
நடக்கும். **26** ஆனாலும், நாம் ஏதாவது ஒரு தீவில் தள்ளப்படுவோம்"[d]
என்று சொன்னார்.

27 பதினான்காம் நாள் ராத்திரி நேரத்தில் ஆதிரியா கடலில் எங்கள் கப்
பல் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டது. நடுராத்திரியில் கப்பல் ஏதோ
வொரு கரையை நெருங்குவதுபோல் கப்பலோட்டிகளுக்குத் தோன்றியது.
28 அப்போது, அவர்கள் கடலின் ஆழத்தை ஆழமானியால் அளந்து
20 ஆழம்* என்று தெரிந்துகொண்டார்கள். கொஞ்சத் தூரம் போனதும்
மறுபடியும் ஆழமானியால் அளந்து 15 ஆழம்# என்று தெரிந்துகொண்டார்
கள். **29** பாறைகளில் மோதிவிடுவோமோ என்று பயந்து கப்பலின் பின்பு
றத்திலிருந்து நான்கு நங்கூரங்களை இறக்கி, பொழுது விடிவதற்காக ஏக்கத்
தோடு காத்திருந்தார்கள். **30** ஆனால், கப்பலோட்டிகள் கப்பலிலிருந்து
தப்பித்துப்போவதற்கு வழிதேட ஆரம்பித்தார்கள். அதற்காக, கப்பலின்
முன்புறத்திலிருந்து நங்கூரங்களை இறக்குவதுபோல் நடித்து அதிலிருந்த
சின்னப் படகைக் கடலில் இறக்கிக்கொண்டிருந்தார்கள். **31** அப்போது

27:17 *சொல் பட்டியலைப் பாருங்கள். **27:24** *நே.மொ., "சீஸருக்கு." சொல் பட்டி
யலைப் பாருங்கள். **27:28** *சுமார் 36 மீ. (120 அடி). இணைப்பு B14-ஐப் பாருங்கள்.
#சுமார் 27 மீ. (90 அடி). இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 27
a அப் 27:9, 10
b அப் 5:18, 19
எபி 1:7, 14
c அப் 23:11
அப் 25:11, 12
d அப் 28:1

பவுல், படை அதிகாரியையும் படைவீரர்களையும் பார்த்து, “இந்த ஆட்கள்
கப்பலிலேயே இருந்தால்தான் உங்களால் தப்பிப்பிழைக்க முடியும்”[a] என்று
சொன்னார். **32** அதனால், படைவீரர்கள் அந்தச் சின்ன படகு கட்டப்பட்
டிருந்த கயிறுகளை அறுத்து, அதைக் கடலில் விட்டுவிட்டார்கள்.

33 பொழுது விடியப்போகும் நேரத்தில், பவுல் எல்லாரையும் பார்த்து,
“இன்று 14-வது நாளாக நீங்கள் எதுவுமே சாப்பிடாமல் கவலையோடு
காத்துக்கொண்டிருக்கிறீர்கள். **34** அதனால், ஏதாவது சாப்பிடும்படி உங்க
ளைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பிழைக்க வேண்டுமென்ற அக்கறை
யில்தான் இதைச் சொல்கிறேன். உங்களில் யாருடைய தலையிலிருந்தும்
ஒரு முடிகூட கீழே விழாது” என்று சொன்னார். **35** இப்படிச் சொல்லி
விட்டு, ரொட்டியை எடுத்து, எல்லாருக்கும் முன்னால் கடவுளுக்கு நன்றி
சொல்லி, அதைப் பிட்டுச் சாப்பிட ஆரம்பித்தார். **36** அப்போது, அவர்
கள் எல்லாரும் தைரியமடைந்து, சாப்பிட ஆரம்பித்தார்கள். **37** நாங்
கள் மொத்தம் 276 பேர் கப்பலில் இருந்தோம். **38** அவர்கள் திருப்தியாகச்
சாப்பிட்ட பின்பு, கப்பலிலிருந்த கோதுமையைக் கடலில் தூக்கியெறிந்து
கப்பலின் எடையைக் குறைத்தார்கள்.[b]

39 பொழுது விடிந்தபோது, எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை
அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை.[c] ஆனால், மணற்கரையுள்ள
ஒரு விரிகுடாவைப் பார்த்தார்கள்; முடிந்தால் கப்பலை அந்தக் கரையில்
சேர்க்கலாம் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். **40** அதனால், நங்கூரங்
களை அறுத்து கடலில் விட்டார்கள்; அதேசமயம், சுக்கான் துடுப்புகளின்
கட்டுகளை அவிழ்த்தார்கள்; முன்புற பாயைக் காற்றின் திசையில் உயர்த்
திக் கட்டி, கப்பலை அந்தக் கரையை நோக்கி ஓட்டினார்கள். **41** ஆனால்,
எதிரோட்டங்களிடையே இருந்த மணல்திட்டில் அது சிக்கிக்கொண்டது.
கப்பலின் முன்புறம் மண்ணுக்குள் புதைந்து அசையாமல் இருந்தது, அதன்
பின்புறமோ அலைகள் வேகமாக அடித்ததால் துண்டு துண்டாக உடைய
ஆரம்பித்தது.[d] **42** கைதிகள் யாரும் நீந்திச்சென்று தப்பிவிடக் கூடாது
என்பதற்காக அவர்களைக் கொன்றுபோட படைவீரர்கள் தீர்மானித்தார்
கள். **43** ஆனால், படை அதிகாரி பவுலைக் காப்பாற்ற விரும்பியதால்,
அவர்களுடைய திட்டத்தை நிறைவேற்ற விடவில்லை. நீச்சல் தெரிந்தவர்
கள் கடலில் குதித்து முதலில் கரை சேரும்படியும், **44** மற்றவர்கள் பலகை
களையோ கப்பலில் இருந்த பொருள்களையோ பிடித்துக்கொண்டு கரை
சேரும்படியும் அவர் கட்டளையிட்டார். இப்படி, எல்லாருமே பத்திரமாகக்
கரைசேர்ந்தோம்.[e]

28 நாங்கள் பத்திரமாகக் கரைசேர்ந்த அந்தத் தீவின் பெயர்
மெலித்தா[f] என்று தெரிந்துகொண்டோம். **2** வேறு மொழி பேசிய
அந்தத் தீவுவாசிகள் எங்களிடம் அளவுகடந்த மனிதாபிமானத்தோடு நடந்
துகொண்டார்கள். மழை பெய்ததாலும் குளிராக இருந்ததாலும் நெருப்பு
மூட்டி எங்கள் எல்லாருக்கும் அன்பாக உதவி செய்தார்கள். **3** பவுல் அந்
தச் சமயத்தில் ஒரு கட்டு விறகுக் குச்சிகளை எடுத்து நெருப்பில் போட்ட
போது, சூடு தாங்காமல் ஒரு விரியன் பாம்பு வெளியே வந்து அவரு
டைய கையைக் கவ்விக்கொண்டது. **4** வேறு மொழி பேசிய அந்த
மக்கள் அவருடைய கையில் விஷப் பாம்பு தொங்குவதைப் பார்த்தபோது,

அதி. 27
a அப் 27:22
b யோனா 1:5
c அப் 28:1
d அப் 27:22
2கொ 11:25
e அப் 27:23, 24

அதி. 28
f அப் 27:26

“நிச்சயமாகவே இந்த ஆள் ஒரு கொலைகாரன்தான். கடலிலிருந்து
இவன் தப்பித்தாலும், நீதிநியாயத்திடமிருந்து* தப்பிக்க முடியவில்லை”
என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். **5** ஆனால், அவர் அந்
தப் பாம்பை நெருப்புக்குள் உதறினார்; அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்பட
வில்லை. **6** அவருக்கு வீக்கம் ஏற்படும் அல்லது அவர் திடீரென்று செத்து
விழுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ரொம்ப நேரம் காத்திருந்தும்
அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாததால், தங்களுடைய மனதை மாற்றிக்
கொண்டு, அவர் ஒரு தெய்வம் என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

7 அந்தத் தீவின் முக்கியத் தலைவரான புபிலியு என்பவருக்குச் சொந்த
மான நிலங்கள் அந்த இடத்துக்குப் பக்கத்தில் இருந்தன. அவர் எங்களை
அன்பாக வரவேற்று மூன்று நாட்களுக்கு உபசரித்தார். **8** அந்தச்
சமயத்தில், புபிலியுவின் அப்பா காய்ச்சலாலும் சீதபேதியாலும் அவதிப்பட்
டுப் படுக்கையில் கிடந்தார். பவுல் அவரிடம் போய் ஜெபம் செய்து, அவர்
மேல் கைகளை வைத்து அவரைக் குணப்படுத்தினார்.[a] **9** இது நடந்த
பின்பு, அந்தத் தீவில் நோய்வாய்ப்பட்டிருந்த மற்றவர்களும் பவுலிடம்
வந்து குணமடைந்தார்கள்.[b] **10** அவர்கள் நிறைய அன்பளிப்புகளைக்
கொடுத்து எங்களைக் கௌரவப்படுத்தினார்கள். நாங்கள் கப்பலேறிய
போது, எங்கள் பயணத்துக்குத் தேவையான பொருள்களையும் கொண்டு
வந்து குவித்தார்கள்.

11 மூன்று மாதங்களுக்குப் பின்பு, “சீயுசின் மகன்களுடைய” சின்னத்
தைக் கொண்ட ஒரு கப்பலில் ஏறிப் புறப்பட்டோம். அந்தக் கப்பல் அலெக்
சந்திரியா நகரத்திலிருந்து வந்திருந்தது, குளிர் காலத்துக்காக அந்தத் தீவில்
ஒதுங்கியிருந்தது. **12** நாங்கள் சீரகூசா துறைமுகத்தை அடைந்து, அங்கே
மூன்று நாட்கள் தங்கினோம். **13** அந்த இடத்திலிருந்து புறப்பட்டு ரேகியு
நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். அடுத்த நாள் தென்திசைக் காற்று வீசி
யது, இரண்டாம் நாள் புத்தேயோலி துறைமுகத்தை அடைந்தோம்.
14 அங்கே சகோதரர்களைச் சந்தித்தோம். ஏழு நாட்கள் தங்களோடு
தங்கும்படி அவர்கள் எங்களைக் கேட்டுக்கொண்டார்கள். அங்கே தங்
கிய பின்பு, ரோமுக்குப் புறப்பட்டுப் போனோம். **15** ரோமிலிருந்த சகோ
தரர்கள் நாங்கள் வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, எங்களைச் சந்திப்ப
தற்காக “மூன்று சத்திரம்” என்ற இடம்வரை வந்தார்கள். அவர்களில் சிலர்,
“அப்பியு சந்தை” வரைக்கும்கூட வந்தார்கள். பவுல் அவர்களைப் பார்த்த
தும் கடவுளுக்கு நன்றி சொல்லி, தைரியம் அடைந்தார்.[c] **16** கடைசியாக,
நாங்கள் ரோமுக்குள் போனபோது, ஒரு படைவீரனுடைய காவலில் தனி
வீட்டில் தங்கியிருக்க பவுலுக்கு அனுமதி கிடைத்தது.

17 இருந்தாலும் மூன்று நாட்களுக்குப் பின்பு, பிரபலமான யூத ஆண்
களை பவுல் வரவழைத்தார். அவர்கள் கூடிவந்த பின்பு, “சகோதரர்களே,
நம் மக்களுக்கு விரோதமாகவோ நம் முன்னோர்களின் சம்பிரதாயங்க
ளுக்கு விரோதமாகவோ நான் எதுவும் செய்யவில்லை.[d] ஆனாலும் எருச
லேமில் கைது செய்யப்பட்டு, ரோமர்களுடைய கையில் ஒப்படைக்கப்பட்
டேன்.[e] **18** அவர்கள் என்னை விசாரணை செய்த பின்பு,[f] மரண
தண்டனை கொடுக்குமளவுக்கு எந்தக் குற்றத்தையும் என்னிடம் பார்க்காத

28:4 * கிரேக்கில், *டைக்கி.* இது, நீதிநியாயம் வழங்கும் பெண் தெய்வத்தையும்
குறிக்கலாம்.

அதி. 28
a லூ 4:38, 39
b மத் 10:8
c 2கொ 1:3, 4
d அப் 24:11, 12
அப் 25:8
e அப் 21:33
f அப் 24:10

தால் என்னை விடுதலை செய்ய விரும்பினார்கள்.[a] **19** யூதர்கள் அதை
எதிர்த்ததால், ரோம அரசனிடம்* நான் மேல்முறையீடு[b] செய்ய வேண்டிய
கட்டாயம் ஏற்பட்டது. என் தேசத்தார்மேல் ஏதோவொரு குற்றச்சாட்டைச்
சுமத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் அப்படிச் செய்யவில்லை.
20 இதனால்தான் உங்களைப் பார்த்துப் பேசுவதற்காக இங்கே வரும்படி
உங்களைக் கேட்டுக்கொண்டேன். இஸ்ரவேலர்கள் நம்பிக்கையோடு எதிர்
பார்த்திருந்தவரின் காரணமாகத்தான் இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கி
றேன்"[c] என்று சொன்னார். **21** அதற்கு அவர்கள், "உங்களைப் பற்றி
யூதேயாவிலிருந்து எங்களுக்கு எந்தக் கடிதமும் வரவில்லை. இங்கே வந்த
சகோதரர்கள் யாரும் உங்களைப் பற்றி எதுவும் தவறாக அறிவிக்கவோ
சொல்லவோ இல்லை. **22** இருந்தாலும், உங்களுடைய கருத்துகளை உங்
களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்வதுதான் சரி என்று நினைக்கிறோம்.
ஏனென்றால், எல்லா இடங்களிலும் இந்த மதப்பிரிவுக்கு[d] விரோதமாகவே
பேசப்படுகிறது[e] என்று எங்களுக்குத் தெரியும்" என்றார்கள்.

23 பின்பு, அவரைச் சந்திக்க ஒரு நாளைக் குறித்துக்கொண்டு, அவர்
தங்கியிருந்த வீட்டுக்கு ஏராளமான ஆட்கள் வந்தார்கள். அப்போது,
காலையிலிருந்து சாயங்காலம்வரை, கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றி
அவர்களிடம் முழுமையாகச் சாட்சி கொடுத்தார். மோசேயின் திருச்சட்டத்
திலிருந்தும்[f] தீர்க்கதரிசிகளின் புத்தகங்களிலிருந்தும்[g] இயேசுவைப் பற்
றிய விஷயங்களைப் பக்குவமாக விளக்கிச் சொன்னார்.[h] **24** சிலர் அவர்
சொன்ன விஷயங்களை நம்பினார்கள். ஆனால் மற்றவர்கள் நம்பவில்லை.
25 அவர்களுக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டதால், அந்த இடத்தைவிட்
டுப் போக ஆரம்பித்தார்கள். அப்போது பவுல் இந்தக் குறிப்பை அவர்களி
டம் சொன்னார்:

"ஏசாயா தீர்க்கதரிசி மூலம் கடவுளுடைய சக்தி மிகச் சரியாகவே உங்கள்
முன்னோர்களிடம் இப்படிச் சொன்னது: **26** '"காதால் கேட்டாலும் ஒரு
போதும் புரிந்துகொள்ள மாட்டீர்கள்; கண்ணால் பார்த்தாலும் ஒருபோதும்
உணர்ந்துகொள்ள மாட்டீர்கள்.[i] **27** இந்த ஜனங்கள் கண்களால் பார்க்கா
மலும் காதுகளால் கேட்காமலும் இதயத்தால் உணராமலும் என்னிடம்
திரும்பி வராமலும் நான் அவர்களைக் குணப்படுத்தாமலும் இருக்கும்படி,
அவர்களுடைய இதயம் இறுகிப்போயிருக்கிறது; இவர்கள் தங்கள் காதால்
மந்தமாய்க் கேட்கிறார்கள், தங்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள்"[j]
என்று நீ இந்த ஜனங்களிடம் போய்ச் சொல்.' **28** அதனால்தான், கடவுள்
தரப்போகிற இந்த மீட்பைப் பற்றிய செய்தி மற்ற தேசத்து மக்களுக்கு அறி
விக்கப்பட்டு வருகிறது[k] என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். அதை அவர்
கள் நிச்சயம் காதுகொடுத்துக் கேட்பார்கள்."[l] **29** *—

30 பவுல் தன்னுடைய வாடகை வீட்டில் இரண்டு வருஷங்கள் தங்கியி
ருந்தார்.[m] தன்னைப் பார்க்க வந்த எல்லாரையும் அன்பாக வரவேற்று,
31 எந்தத் தடையும் இல்லாமல் கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றி
அவர்களுக்குப் பிரசங்கித்துவந்தார். அதோடு, எஜமானாகிய இயேசு கிறிஸ்
துவைப் பற்றிய விஷயங்களைக் கொஞ்சமும் தயக்கமில்லாமல்*[n] கற்பித்து
வந்தார்.

28:19 *நே.மொ., "சீஸரிடம்." சொல் பட்டியலைப் பாருங்கள். **28:29** *இணைப்பு A3-ஐப் பாருங்கள். **28:31** *வே.வா., "விஷயங்களை மிகுந்த தைரியத்தோடு."

அதி. 28
a அப் 23:26, 29; அப் 25:24, 25; அப் 26:31, 32
b அப் 25:11, 12
c அப் 23:6; அப் 26:6; எபே 6:19, 20; 2தீ 1:16
d அப் 24:14
e லூ 2:34; யோவா 15:19
f யோவா 5:46
g அப் 26:22, 23
h அப் 17:2, 3
i ரோ 11:8
j ஏசா 6:9, 10; மத் 13:14, 15
k லூ 3:4, 6; அப் 13:45, 46; அப் 22:21; ரோ 11:11
l சங் 67:2; சங் 98:3; ஏசா 11:10
m அப் 28:16
n எபே 6:19

ரோமருக்கு

எழுதப்பட்ட கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1-7)
ரோமுக்குப் போக பவுல் விரும்புகிறார் (8-15)
விசுவாசத்தால் நீதிமான் வாழ்வு பெறுவான் (16, 17)
கடவுள்பக்தியற்ற ஆட்கள் சாக்குப்போக்கு சொல்ல முடியாது (18-32)
கடவுளின் குணங்கள் படைப்புகளில் தெரிகின்றன (20)

2 யூதர்கள், கிரேக்கர்கள்மீது கடவுளின் நியாயத்தீர்ப்பு (1-16)
மனசாட்சி எப்படிச் செயல்படுகிறது (14, 15)
யூதர்களும் திருச்சட்டமும் (17-24)
இதயத்தில் விருத்தசேதனம் (25-29)

3 "கடவுள் உண்மையானவராக இருப்பார்" (1-8)
யூதர்களும் கிரேக்கர்களும் பாவிகள் (9-20)
விசுவாசத்தால் நீதிமான்களாக முடியும் (21-31)
எல்லாருமே கடவுளின் மகிமையான குணங்களைக் காட்டுவதில்லை (23)

4 விசுவாசத்தால் ஆபிரகாம் நீதிமானாக ஏற்றுக்கொள்ளப்பட்டார் (1-12)
விசுவாசம் வைக்கிற எல்லாருக்கும் ஆபிரகாம் தகப்பன் (11)
விசுவாசத்தால் கிடைத்த வாக்குறுதி (13-25)

5 கிறிஸ்து மூலம் கடவுளோடு சமரசம் (1-11)
ஆதாமால் மரணம், கிறிஸ்துவால் வாழ்வு (12-21)
பாவமும் மரணமும் எல்லாருக்கும் பரவியது (12)
ஒரே நீதியான செயல் (18)

6 கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் எடுப்பதன் மூலம் புதிய வாழ்வு (1-11)
பாவம் உங்கள் உடலை ஆட்சி செய்ய அனுமதிக்காதீர்கள் (12-14)
முன்பு பாவத்துக்கு அடிமைகள், இப்போது கடவுளுக்கு அடிமைகள் (15-23)
பாவத்தின் சம்பளம் மரணம்; கடவுளின் அன்பளிப்போ முடிவில்லாத வாழ்வு (23)

7 திருச்சட்டத்திலிருந்து விடுதலை பெற்றதைப் பற்றிய உதாரணம் (1-6)
பாவம் என்ன என்பதைத் திருச்சட்டம் காட்டியது (7-12)
பாவத்தோடு போராட்டம் (13-25)

8 கடவுளுடைய சக்தியின் மூலம் வாழ்வும் விடுதலையும் (1-11)
மகன்களாகத் தத்தெடுக்கிற சக்தி நம் மனதில் ஊர்ஜிதப்படுத்துகிறது (12-17)
கடவுளின் பிள்ளைகளுக்குரிய விடுதலைக்காகப் படைப்பு காத்திருக்கிறது (18-25)
"அந்தச் சக்தி நமக்காகப் பரிந்து பேசுகிறது" (26, 27)
கடவுள் முன்தீர்மானிக்கிறார் (28-30)
கடவுளின் அன்பு மூலம் வெற்றி பெறுகிறோம் (31-39)

9 இஸ்ரவேலர்களை நினைத்து பவுல் துக்கப்படுகிறார் (1-5)
ஆபிரகாமின் உண்மையான சந்ததி (6-13)
கடவுள் தேர்ந்தெடுக்கிறவர்களைப் பற்றி யாரும் கேள்வி கேட்க முடியாது (14-26)
கடும் கோபத்துக்கும் அழிவுக்கும் உரிய பாத்திரங்கள் (22, 23)
மீதியாக இருப்பவர்களே காப்பாற்றப்படுவார்கள் (27-29)
இஸ்ரவேலர்கள் தடுக்கி விழுந்தார்கள் (30-33)

10 கடவுளுக்கு முன்னால் நீதிமான்களாவது எப்படி (1-15)
வாயினால் அறிவிப்பது (10)
யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்கிறவர்கள் மீட்புப் பெறுவார்கள் (13)
நல்ல செய்தியை அறிவிக்கிறவர்களின் பாதங்கள் அழகானவை (15)
நல்ல செய்தி ஒதுக்கித்தள்ளப்படுகிறது (16-21)

11 இஸ்ரவேலர்கள் ஒதுக்கித்தள்ளப்படுகிறார்கள், ஒட்டுமொத்தமாக அல்ல (1-16)
ஒலிவ மரத்தைப் பற்றிய உதாரணம் (17-32)
கடவுளின் ஞானத்தின் ஆழம் (33-36)

12 உங்கள் உடலை உயிருள்ள பலியாக அர்ப்பணியுங்கள் (1, 2)

வித்தியாசமான வரங்கள், ஆனால் ஒரே உடல் (3-8)
கிறிஸ்தவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு ஆலோசனைகள் (9-21)

13 அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்குக் கட்டுப்படுவது (1-7)
வரி கட்டுவது (6, 7)
அன்பு திருச்சட்டத்தை நிறைவேற்றுகிறது (8-10)
பகலில் நடக்கிறவர்களைப் போல் நடங்கள் (11-14)

14 ஒருவரையொருவர் நியாயந்தீர்க்காதீர்கள் (1-12)
மற்றவர்களின் விசுவாசம் பலவீனமாவதற்குக் காரணமாகாதீர்கள் (13-18)
சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் இருக்க முயலுங்கள் (19-23)

15 கிறிஸ்து நம்மை வரவேற்றதுபோல் நீங்களும் ஒருவரை ஒருவர் வரவேற்க வேண்டும் (1-13)
பவுல், மற்ற தேசத்து மக்களுக்குத் தொண்டர் (14-21)
பவுலின் பயணத் திட்டங்கள் (22-33)

16 கடவுளுக்கு ஊழியம் செய்கிற பெபேயாளை பவுல் அறிமுகப்படுத்துகிறார் (1, 2)
ரோமில் இருக்கிற கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்துக்கள் (3-16)
பிரிவினைகளைப் பற்றிய எச்சரிப்பு (17-20)
பவுலோடு ஊழியம் செய்கிறவர்களும் வாழ்த்துச் சொல்கிறார்கள் (21-24)
பரிசுத்த ரகசியம் இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (25-27)

அதி. 1
a அப் 9:11, 15
b 2சா 7:8, 12; லூ 1:32; 2தீ 2:8
c அப் 13:33
d சங் 2:7; எபி 1:5
e அப் 15:17; கலா 2:7
f 1தீ 2:7
g 1தெ 3:10; 2தீ 1:3

1 ரோமில் இருக்கிற கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும் கிறிஸ்து இயேசுவின் அடிமையாகிய பவுல் எழுதுவது:
பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம்முடைய எஜமானாகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதானமும் கிடைக்கட்டும்.

2 நீங்கள் எல்லாரும் கடவுளுடைய அன்பைப் பெற்றவர்கள், பரிசுத்தவான்களாவதற்கு அழைப்புப் பெற்றவர்கள். நானும் அப்போஸ்தலனாவதற்கு அழைப்புப் பெற்றவன், கடவுளுடைய நல்ல செய்தியை அறிவிப்பதற்கு நியமிக்கப்பட்டவன்.*[a]
3 கடவுள் தன்னுடைய மகனைப் பற்றிய அந்த நல்ல செய்தியைத் தன்னுடைய தீர்க்கதரிசிகள் மூலம் பரிசுத்த வேதாகமத்தில் முன்கூட்டியே வாக்குறுதி கொடுத்திருந்தார்.
4 அந்த மகன் தாவீதின் சந்ததியில்[b] மனிதனாகப் பிறந்தார்.
5 உயிரோடு எழுப்பப்பட்ட தன் மூலம்[c] கடவுளுடைய மகன்[d] என்று பரிசுத்த சக்தியின் வல்லமையால் நிரூபிக்கப்பட்டார். அந்த மகன்தான் நம்முடைய எஜமானாகிய இயேசு கிறிஸ்து.
6 அவருடைய பெயர் புகழப்படும்படி, மற்ற தேசத்து மக்கள் எல்லாரும் அவர்மேல் விசுவாசம் வைத்துக் கீழ்ப்படிய வேண்டும்.[e] இதற்காகத்தான் அவர் மூலம் அளவற்ற கருணையையும் அப்போஸ்தலப் பணியையும் நாங்கள் பெற்றோம்.[f]
7 மற்ற தேசத்து மக்கள் மத்தியிலிருந்து நீங்களும் இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாக அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

8 முதலாவதாக, உங்கள் எல்லாருக்காகவும் இயேசு கிறிஸ்துவின் மூலம் என் கடவுளுக்கு நன்றி சொல்கிறேன். ஏனென்றால், உங்களுடைய விசுவாசத்தைப் பற்றி உலகம் முழுவதும் பேசப்படுகிறது.
9 நான் உங்களுக்காக எப்போதும் ஜெபம் செய்கிறேன்.[g] கடவுளுடைய மகனைப் பற்றிய நல்ல

1:2 * நே.மொ., “பிரித்தெடுக்கப்பட்டவன்.”

செய்தியை அறிவிப்பதன் மூலம் நான் முழு இதயத்தோடு பரிசுத்த சேவை
செய்துவருகிற கடவுள்தான் இதற்குச் சாட்சி. **10** கடவுளுக்கு விருப்பமா
னால் இப்போதாவது நான் உங்களிடம் நல்லபடியாக வந்துசேர வேண்டும்
என்று அவரிடம் கெஞ்சிக் கேட்கிறேன். **11** உங்களைப் பார்ப்பதற்கும்,
கடவுள் தரும்* அன்பளிப்பைக் கொடுத்து உங்களைப் பலப்படுத்துவதற்
கும் ஏங்குகிறேன். **12** சொல்லப்போனால், உங்களுடைய விசுவாசத்தால்
நானும் என்னுடைய விசுவாசத்தால் நீங்களும், ஒருவருக்கொருவர் உற்சா
கம் பெற வேண்டும்[a] என்று ஏங்குகிறேன்.

13 சகோதரர்களே, மற்ற தேசத்தார் மத்தியில் என் ஊழியத்துக்குப்
பலன் கிடைத்ததுபோல் உங்கள் மத்தியிலும் பலன் கிடைக்க வேண்டும்
என்று ஆசைப்பட்டதால் உங்களிடம் வருவதற்குப் பல தடவை விரும்பி
னேன். ஆனால், ஒவ்வொரு தடவையும் தடங்கல் ஏற்பட்டது; இதை
நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். **14** கிரேக்கர்க
ளுக்கும் கிரேக்கர்களாக இல்லாதவர்களுக்கும், ஞானம் உள்ளவர்களுக்கும்
ஞானம் இல்லாதவர்களுக்கும் நான் கடன்பட்டிருக்கிறேன். **15** அதனால்,
ரோமில் இருக்கிற உங்களுக்கும் நல்ல செய்தியைச் சொல்ல மிகவும் ஆர்
வமாக இருக்கிறேன்.[b] **16** நல்ல செய்தியைச் சொல்வதற்கு நான் வெட்கப்
படுவதில்லை.[c] ஏனென்றால், அது கடவுளுடைய வல்லமையின் வெளிக்
காட்டாக இருக்கிறது. முதலில் யூதர்களையும்[d] பின்பு கிரேக்கர்களையும்,[e]
சொல்லப்போனால், விசுவாசம் வைக்கிற எல்லாரையும்,[f] மீட்பதற்கு அவர்
செய்திருக்கிற ஏற்பாடாக இருக்கிறது. **17** அந்த நல்ல செய்தியின் மூலம்
கடவுள் தன்னுடைய நீதியை வெளிப்படுத்துகிறார், இதை விசுவாசமுள்
ளவர்கள் பார்க்கிறார்கள்,[g] இதனால் அவர்களுடைய விசுவாசம் பலப்படு
கிறது. ஏனென்றால், "விசுவாசத்தால் நீதிமான் வாழ்வு பெறுவான்" என்று
எழுதப்பட்டிருக்கிறது.[h]

18 சில ஆட்கள் உண்மையை அநியாயமாக மூடிமறைக்கிறார்கள்,
எல்லா விதமான கடவுள்பக்தியற்ற செயல்களையும் அநீதியான செயல்களை
யும் செய்கிறார்கள்,[i] அவர்கள்மேல் கடவுளுடைய கடும் கோபம்[j] பர
லோகத்திலிருந்து வருகிறது. **19** ஏனென்றால், கடவுளைப் பற்றித் தெரிந்து
கொள்ளக்கூடிய விஷயங்கள் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அவற்
றைக் கடவுளே அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்.[k] **20** பார்க்க
முடியாத அவருடைய குணங்களை, அதாவது நித்திய வல்லமை,[l] கடவுள்
தன்மை[m] ஆகியவற்றை, உலகம் படைக்கப்பட்ட சமயத்திலிருந்தே படைப்
புகள் மூலம் தெளிவாகப் பார்க்க முடிகிறது.[n] அதனால், அவர்கள் சாக்குப்
போக்கு சொல்ல முடியாது. **21** கடவுளைப் பற்றித் தெரிந்திருந்தும்
அவருக்குக் கொடுக்க வேண்டிய மகிமையை அவர்கள் கொடுக்கவில்லை;
அவருக்கு நன்றி சொல்லவுமில்லை. அவர்களுடைய யோசனை அர்த்தமில்
லாததாக இருக்கிறது. அவர்களுடைய புத்திகெட்ட உள்ளம் இருண்டுபோயி
ருக்கிறது.[o] **22** அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்லிக்கொண்டா
லும் முட்டாள்களாக ஆனார்கள். **23** அழிந்துபோகாத கடவுளை மகிமைப்
படுத்துவதற்குப் பதிலாக அழிந்துபோகிற மனிதர்கள், பறவைகள், மிருகங்
கள், ஊரும் பிராணிகள் ஆகியவற்றின் உருவங்களை மகிமைப்படுத்துகி
றார்கள்.[p]

1:11 * வே.வா., "ஆன்மீக."

அதி. 1
a 1தெ 5:11; எபி 10:25
b அப் 19:21
c மாற் 8:38; 2தீ 1:8
d அப் 3:25, 26
e அப் 18:5, 6
f எபி 11:6
g யோவா 3:36; ரோ 3:21, 22
h ஆப 2:4; கலா 3:11; எபி 10:38
i ரோ 1:25
j ரோ 2:5; எபே 5:6
k சங் 19:1; அப் 14:17
l எரே 10:12
m சங் 103:19; எரே 10:10; வெளி 15:3
n ஏசா 40:26; வெளி 4:11
o ஆதி 6:5
p எரே 2:11; அப் 17:29

24 அதனால், தங்களுடைய உள்ளத்திலுள்ள ஆசைகளின்படி அசுத்த
மான உறவில் ஈடுபட்டுத் தங்களுடைய உடல்களை அவமானப்படுத்துவ
தற்குக் கடவுள் அவர்களை விட்டுவிட்டார். **25** அப்படிப்பட்டவர்கள் கட
வுளைப் பற்றிய உண்மையை நம்பாமல் பொய்யை நம்பினார்கள்.
படைப்புகளை வணங்கி, அவற்றுக்குப் பூஜை செய்தார்கள், படைத்தவ
ரையோ விட்டுவிட்டார்கள். அவருக்கே என்றென்றும் புகழ் சேருவதாக.
ஆமென்.* **26** அதனால்தான், கட்டுக்கடங்காத காமப்பசிக்கு[a] இணங்
கிவிடும்படி கடவுள் அவர்களை விட்டுவிட்டார். அவர்கள் மத்தியிலுள்ள
பெண்கள் இயல்பான முறையில் உறவுகொள்வதை விட்டுவிட்டு இயல்
புக்கு மாறான முறையில் உறவுகொண்டார்கள்.[b] **27** அதேபோல், ஆண்க
ளும் இயல்பான முறையில் பெண்களோடு உறவுகொள்வதை விட்டுவிட்டு,
ஒருவர்மீது ஒருவர் மோகம்கொண்டு காமத்தீயில் பற்றியெரிந்தார்கள்.
ஆண்கள் ஆண்களோடு ஆபாசமாக நடந்து,[c] தங்களுடைய தவறுக்குத்
தகுந்த தண்டனையை முழுமையாகப் பெற்றார்கள்.[d]

28 கடவுளைப் பற்றித் திருத்தமாகத் தெரிந்துகொள்ள அவர்களுக்கு
விருப்பம் இல்லாததால், கெட்ட விஷயங்களை யோசிப்பதற்கும் முறை
கேடான செயல்களைச் செய்வதற்கும் கடவுள் அவர்களை விட்டுவிட்டார்.[e]
29 அவர்கள் எல்லா விதமான அநீதியும்[f] கெட்ட குணமும் பேராசை
யும்[g] தீமையும் நிறைந்தவர்களாக இருந்தார்கள். பொறாமையும்[h] கொலை
வெறியும்[i] வஞ்சகமும் வன்மமும்[j] நிறைந்தவர்களாக இருந்தார்கள். சண்டை
சச்சரவு செய்கிறவர்களாகவும்,[k] கிசுகிசுக்கிறவர்களாகவும்,* **30** புண்படுத்
திப் பேசுகிறவர்களாகவும்,[l] கடவுளை வெறுக்கிறவர்களாகவும், திமிர்பிடித்
தவர்களாகவும், கர்வமுள்ளவர்களாகவும், ஆணவமுள்ளவர்களாகவும், சதித்
திட்டம் தீட்டுகிறவர்களாகவும், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களாகவும்,[m]
31 அறிவில்லாதவர்களாகவும்,[n] வாக்குத் தவறுகிறவர்களாகவும், பந்தபாசம்
இல்லாதவர்களாகவும், ஈவிரக்கம் இல்லாதவர்களாகவும் இருந்தார்கள்.
32 இப்படியெல்லாம் செய்துவருகிறவர்களுக்கு மரண தண்டனை கிடைக்
கும்[o] என்ற கடவுளுடைய நீதியான தீர்ப்பை நன்றாகத் தெரிந்திருந்தும்
அவற்றைச் செய்துகொண்டே இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவற்றைச்
செய்துவருகிற மற்றவர்களை மனதார ஏற்றுக்கொள்ளவும் செய்கிறார்கள்.

2 அதனால் சகோதரர்களே, நீங்கள் யாராக இருந்தாலும் சரி,[p] மற்றவர்க
ளைக் குற்றவாளிகள் என்று நியாயந்தீர்த்துவிட்டு, சாக்குப்போக்கு
சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. மற்றவர்களை நீங்கள் நியாயந்
தீர்க்கும்போது, உங்களுக்கு நீங்களே தண்டனைத் தீர்ப்பு கொடுத்துக்கொள்
கிறீர்கள். ஏனென்றால், அந்தச் செயல்களையே நீங்களும் செய்துவருகிறீர்
கள்.[q] **2** அப்படிப்பட்ட செயல்களைச் செய்துவருகிறவர்களுக்குக் கடவுள்
கொடுக்கிற நியாயத்தீர்ப்பு சத்தியத்தின் அடிப்படையில் இருக்கும் என்று
நமக்குத் தெரியும்.

3 சகோதரர்களே, அப்படிப்பட்ட செயல்களைச் செய்துவருகிறவர்களை
நியாயந்தீர்க்கிற நீங்களே அவற்றைச் செய்யும்போது, கடவுளுடைய நியா
யத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று எப்படி நினைக்கிறீர்கள்?
4 கடவுள் தன்னுடைய கருணையால் உங்களை மனம் திருந்தத்

1:25 * அதாவது, “அப்படியே ஆகட்டும்.” **1:29** * வே.வா., “வீண்பேச்சு பேசுகிறவர்
களாகவும்.”

அதி. 1
a கலா 5:19
1தெ 4:4, 5
b யூ 7
c ஆதி 19:5
லேவி 18:22
லேவி 20:13
1கொ 6:9, 10
d கலா 6:7
e கலா 5:19-21
f 1பே 4:3
g உபா 5:21
h தீத் 3:3
i 1யோ 3:15
j 1பே 2:1
k எபே 4:31
l 1பே 2:1
m உபா 21:18, 21
n ரோ 1:21
o வெளி 21:8

அதி. 2
p ரோ 2:9
q மத் 7:5

தூண்டுகிறார் என்று தெரியாமல்,[a] அவருடைய மகா கருணையையும்[b]
சகிப்புத்தன்மையையும்[c] பொறுமையையும்[d] அலட்சியம் செய்கிறீர்களா?
5 நீங்கள் பிடிவாதக்காரர்களாகவும் மனம் திருந்தாதவர்களாகவும் இருப்ப
தால், கடவுளுடைய கடும் கோபத்தைச் சம்பாதித்துக்கொள்கிறீர்கள்.
அவர் தன்னுடைய நீதியான தீர்ப்பை வழங்கும் நாளில் அந்தக்
கோபத்தை வெளிக்காட்டுவார்.[e] **6** அப்போது, அவனவனுடைய செயல்
களுக்குத் தக்க பலனை அவனவனுக்குத் தருவார்:[f] **7** சோர்ந்துவிடாமல்
நல்ல செயல்களைச் செய்வதன் மூலம் மகிமையையும் மதிப்பையும் அழி
யாமையையும்[g] தேடுகிறவர்களுக்கு முடிவில்லாத வாழ்வைத் தருவார்.
8 ஆனால், சண்டைக்காரர்கள்மேலும் சத்தியத்துக்குக் கீழ்ப்படியாமல் அநீ
திக்குக் கீழ்ப்படிகிறவர்கள்மேலும் அவர் கோபத்தையும் ஆக்ரோஷத்தை
யும் காட்டுவார்.[h] **9** கெட்ட செயல்களைச் செய்கிற ஒவ்வொருவனுக்கும்
உபத்திரவத்தையும் மிகுந்த வேதனையையும் கொடுப்பார். முதலில் யூதர்
களுக்கும் பின்பு கிரேக்கர்களுக்கும் அப்படிக் கொடுப்பார். **10** ஆனால்,
நல்ல செயல்களைச் செய்கிற ஒவ்வொருவனுக்கும் மகிமையையும் மதிப்பை
யும் சமாதானத்தையும் கொடுப்பார். முதலில் யூதர்களுக்கும்[i] பின்பு கிரேக்
கர்களுக்கும்[j] அப்படிக் கொடுப்பார். **11** ஏனென்றால், கடவுள் பாரபட்சம்
காட்டாதவர்.[k]

12 உதாரணத்துக்கு, திருச்சட்டம் இல்லாமல் பாவம் செய்த எல்லாரும்
திருச்சட்டம் இல்லாமல் அழிந்துபோவார்கள்.[l] ஆனால், திருச்சட்டத்தின்கீழ்
பாவம் செய்த எல்லாரும் திருச்சட்டத்தால் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.[m]
13 திருச்சட்டத்தை வெறுமனே கேட்கிறவர்கள் கடவுளுடைய பார்வையில்
நீதிமான்களாக இருக்க மாட்டார்கள். திருச்சட்டத்தின்படி நடக்கிறவர்கள்
தான் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.[n] **14** திருச்சட்டம் இல்
லாத மற்ற தேசத்து மக்கள் இயல்பாகவே திருச்சட்டத்தின்படி நடக்கும்போ
தெல்லாம், அவர்களுக்குத் திருச்சட்டம் இல்லாதபோதிலும்,[o] தங்களுக்குத்
தாங்களே திருச்சட்டமாக இருக்கிறார்கள். **15** திருச்சட்டத்திலுள்ள விஷ
யங்கள் தங்களுடைய இதயத்தில் எழுதப்பட்டிருப்பதைச் செயலில் காட்டு
கிறார்கள். தங்களுடைய மனசாட்சி சொல்கிற சாட்சியை யோசித்துப்
பார்த்து, தாங்கள் குற்றமுள்ளவர்களா குற்றமில்லாதவர்களா என்பதைத்
தாங்களே தீர்மானித்துக்கொள்கிறார்கள். **16** நான் அறிவிக்கிற நல்ல செய்
தியின்படி மனிதர்களுடைய ரகசியமான காரியங்களைக் கிறிஸ்து இயேசு
வின் மூலம் கடவுள் நியாயந்தீர்க்கப்போகிறார்,[p] அப்படி நியாயந்தீர்க்கிற
நாளில் இதெல்லாம் நடக்கும்.

17 நீங்கள் உங்களை யூதர்கள் என்று சொல்லிக்கொள்கிறீர்கள்,[q] திருச்சட்
டத்தைச் சார்ந்திருக்கிறீர்கள், கடவுளோடு உங்களுக்கு இருக்கிற பந்தத்தை
நினைத்துப் பெருமைப்பட்டுக்கொள்கிறீர்கள். **18** திருச்சட்டம் உங்களுக்
குக் கற்றுக்கொடுக்கப்பட்டிருப்பதால்* கடவுளுடைய விருப்பம்# என்ன
என்பதைத் தெரிந்திருக்கிறீர்கள்,[r] மதிப்புமிக்க காரியங்களைப் பகுத்தறிந்து
கொள்கிறீர்கள். **19** பார்வை இல்லாதவர்களுக்கு வழிகாட்டியாகவும், இருட்
டில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சமாகவும், **20** புத்தி இல்லாதவர்களுக்குப்
புத்திசொல்கிறவர்களாகவும், முதிர்ச்சி இல்லாதவர்களுக்கு ஆசிரியர்களாக

2:18 *வே.வா., “வாய்மொழியாகக் கற்றுக்கொடுக்கப்பட்டிருப்பதால்.” #வே.வா., “சித்தம்.”

அதி. 2
a 2பே 3:9
b ரோ 11:22 எபே 1:7
c ரோ 3:25
d ஏசா 30:18
e 2தெ 1:7, 8 வெளி 6: 16, 17 வெளி 11:18
f சங் 62:12 நீதி 24:12 மத் 16:27
g 1கொ 15:53 வெளி 20:6
h ரோ 1:18 கொலோ 3:6 எபி 10:26, 27
i யோவா 4:22 அப் 13:45, 46
j அப் 15:14
k உபா 10:17 2நா 19:7 அப் 10:34, 35
l எபே 2:12
m ரோ 3:19
n உபா 30:14 எசே 20:11 யாக் 1:22
o சங் 147:19, 20
p யோவா 5:22 அப் 10:42 1பே 4:5
q ரோ 9:6
r உபா 4:8

வும் இருப்பதாக நம்புகிறீர்கள். அதோடு, கடவுளைப் பற்றிய அடிப்படை
அறிவையும் உண்மையையும் திருச்சட்டத்திலிருந்து தெரிந்துவைத்திருப்ப
தாகவும் நம்புகிறீர்கள். **21** அப்படியிருந்தும், மற்றவர்களுக்குக் கற்பிக்கிற
நீங்களே உங்களுக்குக் கற்பிக்காமல் இருக்கலாமா?[a] “திருடாதே”[b] என்று
பிரசங்கிக்கிற நீங்களே திருடலாமா? **22** “மணத்துணைக்குத் துரோகம்
செய்யக் கூடாது”[c] என்று சொல்கிற நீங்களே மணத்துணைக்குத் துரோகம்
செய்யலாமா? சிலைகளை அருவருக்கிற நீங்களே கோயில்களைக் கொள்
ளையடிக்கலாமா? **23** திருச்சட்டத்தைப் பற்றிப் பெருமைப்பட்டுக்கொள்
கிற நீங்களே அந்தச் சட்டத்தை மீறி கடவுளை அவமதிக்கலாமா?
24 ஏனென்றால் எழுதப்பட்டுள்ளபடியே, “உங்களால் மற்ற தேசத்து மக்கள்
மத்தியில் கடவுளுடைய பெயர் நிந்திக்கப்படுகிறது.”[d]

25 உண்மையில், நீங்கள் திருச்சட்டத்தைக் கடைப்பிடித்தால் மட்டும்
தான்[e] விருத்தசேதனத்தால்[f] பயன் பெறுவீர்கள். திருச்சட்டத்தை மீறி
னால், விருத்தசேதனம் செய்திருந்தும் விருத்தசேதனம் செய்யாதவர்கள்
போலத்தான் இருப்பீர்கள். **26** அதனால், விருத்தசேதனம் செய்யாதவன்[g]
திருச்சட்டத்திலுள்ள நீதியான விதிமுறைகளைக் கடைப்பிடித்தால், அவன்
விருத்தசேதனம் செய்யாதிருந்தும் விருத்தசேதனம் செய்தவனாகவே கரு
தப்படுவான், இல்லையா?[h] **27** உடலில் விருத்தசேதனம் செய்யாதிருந்தும்
திருச்சட்டத்தை நிறைவேற்றுகிற ஒருவன் திருச்சட்டத்தை மீறுகிற உங்க
ளைக் குற்றவாளியாக நியாயந்தீர்க்கிறான். ஏனென்றால், எழுதப்பட்ட அந்தச்
சட்டத்தை வைத்திருந்தும், விருத்தசேதனம் செய்திருந்தும் நீங்கள் அந்தச்
சட்டத்தை மீறுகிறீர்கள். **28** வெளிப்புறத்தில் யூதனாக இருக்கிறவன் யூதன்
அல்ல;[i] அவனுடைய உடலில் செய்யப்படுகிற விருத்தசேதனமும் விருத்
தசேதனம் அல்ல.[j] **29** ஆனால், உள்ளத்தில் யூதனாக இருக்கிறவன்தான்
யூதன்.[k] அவனுடைய விருத்தசேதனம் கடவுளுடைய சக்தியால் இதயத்தில்
செய்யப்படுகிறது,[l] எழுதப்பட்ட சட்டத்தால் செய்யப்படுவதில்லை.[m] அப்ப
டிப்பட்டவன் மனிதர்களால் அல்ல, கடவுளால் புகழப்படுகிறான்.[n]

3 அப்படியானால், யூதனாக இருப்பதால் நன்மை இருக்கிறதா, விருத்த
சேதனம் செய்வதால் பயன் இருக்கிறதா? **2** எல்லா விதத்திலும்
நிறைய நன்மை இருக்கிறது. முதலாவதாக, யூதர்களிடம்தான் கடவுளுடைய
பரிசுத்த வார்த்தைகள் ஒப்படைக்கப்பட்டன.[o] **3** இருந்தாலும், சில யூதர்
கள் விசுவாசம் வைக்கவில்லை! அதனால் என்ன? சிலர் விசுவாசம் வைக்
காததால் கடவுள் உண்மையில்லாதவராக ஆகிவிடுவாரா? **4** இல்லவே
இல்லை! மனிதர்கள் எல்லாரும் பொய்யர்களாக இருந்தாலும்[p] கடவுள்
உண்மையானவராக இருப்பார்.[q] ஏனென்றால், “நீங்கள் நீதியுள்ளவர் என்
பதை உங்களுடைய வார்த்தைகள் நிரூபிக்கும்.[r] உங்களுடைய வழக்கில்
நீங்கள் வெற்றி பெறுவீர்கள்” என்று எழுதப்பட்டிருக்கிறது. **5** ஆனாலும்
சிலர், “நாம் அநீதியாக நடந்துகொள்ளும்போது, கடவுள் நீதியானவர் என்
பது தெளிவாகத் தெரிகிறது, இல்லையா? அப்படியிருக்கும்போது, அவர்
நம்மேல் கடும் கோபத்தைக் காட்டுவது நியாயமாக இருக்குமா?” என்று
நினைக்கிறார்கள். **6** கடவுள் நியாயமில்லாதவராக இருக்கவே முடியாது!
அப்படி அவர் நியாயமில்லாதவர் என்றால், அவரால் எப்படி இந்த உல
கத்தை நியாயந்தீர்க்க முடியும்?[s]

7 வேறு சிலர், “நான் பொய் பேசும்போது, கடவுள் உண்மையானவர்
என்பது தெளிவாகத் தெரிவதோடு அவருக்கு மகிமையும் சேருகிறது,

அதி. 2
a மத் 23:2, 3
b யாத் 20:15
c உபா 5:18
d ஏசா 52:5; எசே 36:20
e 1கொ 7:19; கலா 5:3
f ஆதி 17:10
g எபே 2:11
h ரோ 4:9, 10
i யோவா 8:39; வெளி 2:9
j 1கொ 7:19
k ரோ 9:6
l எரே 4:4; அப் 7:51; பிலி 3:3
m ரோ 7:6
n யோவா 5:44; 1கொ 4:5

அதி. 3
o உபா 4:8; சங் 147:19, 20; அப் 7:38
p எண் 23:19; சங் 116:11
q ஏசா 55:10, 11; யோவா 8:26; 2தீ 2:13
r சங் 51:4
s சங் 9:8; சங் 96:13; சங் 98:9; அப் 17:31

இல்லையா? அப்படியிருக்கும்போது, நான் ஏன் பாவி என்று தீர்ப்பளிக்கப்
பட வேண்டும்” என்று கேட்கிறார்கள். **8** அப்படிப் பார்த்தால், “நாம்
தீமை செய்யலாம். அதன் மூலம் நன்மை வரும்” என்று சொல்லலாமே?
நாங்கள் இப்படிச் சொல்வதாகச் சில ஆட்கள் எங்கள்மீது குற்றம்சாட்டுகி
றார்கள். அவர்கள் சொல்வது பொய். அவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு
கிடைப்பது நியாயம்தான்.[a]

9 அப்படியானால் என்ன? யூதர்களான நாம் மற்றவர்களைவிட உயர்ந்
தவர்களா? இல்லவே இல்லை! யூதர்கள், கிரேக்கர்கள் எல்லாருமே பாவத்
தின் பிடியில் இருப்பதாக[b] ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். **10** எழு
தப்பட்டிருக்கிறபடி, “நீதிமானே இல்லை, ஒருவன்கூட இல்லை.[c] **11** விவே
கமாக நடக்கிறவன் ஒருவன்கூட இல்லை, கடவுளைத் தேடுகிறவன் ஒரு
வன்கூட இல்லை. **12** எல்லா மனிதர்களும் வழிவிலகிப் போயிருக்கி
றார்கள், எல்லாரும் கெட்டுப்போயிருக்கிறார்கள்; கருணை காட்டுகிற
வனே இல்லை, ஒருவன்கூட இல்லை.”[d] **13** “அவர்களுடைய தொண்டை
ஒரு திறந்த கல்லறை, அவர்கள் தங்களுடைய நாவுகளால் ஏமாற்றியி
ருக்கிறார்கள்.”[e] “அவர்களுடைய உதடுகளின் பின்னால் பாம்பின் விஷம்
இருக்கிறது.”[f] **14** “அவர்கள் வாயைத் திறந்தாலே சாபங்களும் கசப்பான
வார்த்தைகளும்தான் வருகின்றன.”[g] **15** “அவர்களுடைய கால்கள் இரத்
தத்தைச் சிந்த ஓடுகின்றன.”[h] **16** “எப்போதும் மற்றவர்களுக்குக் கெடுதல்
செய்கிறார்கள், கஷ்டம் கொடுக்கிறார்கள். **17** சமாதான வழியைப் பற்றித்
தெரியாமல் இருக்கிறார்கள்.”[i] **18** “அவர்களுக்குக் கடவுள்பயம் துளிகூட
இல்லை.”[j]

19 திருச்சட்டம் சொல்கிற எல்லாம் திருச்சட்டத்தின்கீழ் இருக்கிறவர்க
ளுக்குத்தான் என்பது நமக்குத் தெரியும். அதனால், அவர்களில் யாரும் தங்
களைக் குற்றமில்லாதவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியாது. உல
கமே கடவுளுடைய தண்டனைக்கு ஆளாகும் நிலையில் இருக்கிறது.[k]
20 அதனால், திருச்சட்டத்தின் செயல்களைச் செய்வதால் யாருமே கடவு
ளுக்கு முன்னால் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள்.[l]
திருச்சட்டத்தின் மூலம்தான் பாவத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்கி
றார்கள்.[m]

21 இப்போதோ, திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்காமலேயே கடவுளுக்கு
முன்னால் நீதிமான்களாக இருக்க முடியும் என்பது தெளிவாகக் காட்டப்பட்
டிருக்கிறது.[n] இது திருச்சட்டத்திலும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களிலும்கூட
குறிப்பிடப்பட்டிருக்கிறது.[o] **22** இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்
பதன் மூலம் கடவுளுக்கு முன்னால் நீதிமான்களாக இருக்க முடியும், விசு
வாசம் வைக்கிற எல்லாருமே நீதிமான்களாக இருக்க முடியும். இதில் எந்தப்
பாகுபாடும் இல்லை.[p] **23** ஏனென்றால், எல்லாருமே பாவம் செய்து கடவு
ளுடைய மகிமையான குணங்களைக் காட்டத் தவறியிருக்கிறார்கள்.[q]
24 இருந்தாலும், கிறிஸ்து இயேசு செலுத்திய மீட்புவிலையால் அவர்கள்
விடுதலை செய்யப்பட்டு,[r] நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.
இது கடவுளுடைய அளவற்ற கருணையால்[s] கிடைக்கும் ஓர் இலவச அன்
பளிப்பு.[t] **25** கிறிஸ்துவின் இரத்தத்தில் விசுவாசம் வைப்பதன் மூலம்[u] மனி
தர்கள் தன்னோடு சமாதானமாவதற்காக அவரைப் பிராயச்சித்த பலியாக*

3:25 * வே.வா., “பாவப் பரிகார பலியாக.”

அதி. 3
a எபி 2:2, 3
b ரோ 3:23; கலா 3:22
c நீதி 20:9; பிர 7:20
d சங் 14:1-3
e சங் 5:9
f சங் 140:3
g சங் 10:7; யாக் 3:8, 9
h நீதி 1:16
i ஏசா 59:7, 8
j சங் 36:1
k ரோ 2:12; ரோ 5:13; கலா 3:10
l கலா 2:16; கலா 3:11
m ரோ 7:9, 13; கலா 3:19
n ரோ 1:16, 17
o ஏசா 53:11; எரே 31:34; தானி 9:24
p கலா 3:28
q பிர 7:20
r மத் 20:28; 1தீ 2:5, 6; 1பே 2:24
s எபே 2:8
t ரோ 5:17
u லேவி 17:11; அப் 13:39; எபே 1:7

கடவுள் கொடுத்தார்.[a] முற்காலத்தில் செய்யப்பட்ட பாவங்களைச் சகித்துக்
கொண்டு மன்னித்தது நீதியான செயல் என்பதைக் காட்டுவதற்காக அவர்
அப்படிச் செய்தார். **26** இயேசுவின் மேல் விசுவாசம் வைக்கும் மனிதனை
நீதிமானாக ஏற்றுக்கொள்வதன்[b] மூலம் தான் நீதியுள்ளவர்[c] என்பதை இந்
தக் காலத்தில் நிரூபிப்பதற்காகவும் அவர் அப்படிச் செய்தார்.

27 அதனால், ஒருவன் பெருமையடிக்க முடியுமா? முடியாது. எந்தச்
சட்டத்தின் அடிப்படையில் ஒருவனால் பெருமையடிக்க முடியும்? செயல்
கள் முக்கியம் என்று சொல்கிற சட்டத்தின் அடிப்படையிலா?[d] இல்லவே
இல்லை, விசுவாசம் முக்கியம் என்று சொல்கிற சட்டத்தின் அடிப்படையில்
தான். **28** அதனால், திருச்சட்டத்தின் செயல்களைச் செய்வதால் அல்ல,
விசுவாசத்தால்தான் ஒருவன் நீதிமானாக ஏற்றுக்கொள்ளப்படுகிறான் என்ற
முடிவுக்கு வருகிறோம்.[e] **29** கடவுள் யூதர்களுக்கு மட்டுமா கடவுள்?[f]
மற்ற தேசத்து மக்களுக்கும் அவர்தானே கடவுள்?[g] ஆம், மற்ற தேசத்து
மக்களுக்கும் அவர்தான் கடவுள்.[h] **30** கடவுள் ஒருவர்[i] என்பதால், விருத்
தசேதனம் செய்தவர்களையும் சரி, விருத்தசேதனம் செய்யாதவர்களையும்
சரி, அவர்களுடைய விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக ஏற்றுக்கொள்
வார்.[j] **31** அப்படியானால், நம்முடைய விசுவாசத்தால் நாம் திருச்சட்
டத்தை ஒழிக்கிறோமா? இல்லவே இல்லை! உண்மையில், நாம் திருச்சட்
டத்தை நிலைநாட்டுகிறோம்.[k]

4 அப்படியிருக்கும்போது, நம்முடைய மூதாதையான ஆபிரகாமுக்குக்
கிடைத்த நன்மையைப் பற்றி என்ன சொல்வோம்? **2** உதாரணத்துக்கு,
ஆபிரகாம் தன்னுடைய செயல்களால் நீதிமானாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்
தால், பெருமை பேச அவருக்குக் காரணம் இருந்திருக்கும். ஆனால், கட
வுளுக்கு முன்பாகப் பெருமை பேச காரணம் இருந்திருக்காது. **3** வேதவச
னம் என்ன சொல்கிறது? "யெகோவாமேல்* ஆபிரகாம் விசுவாசம்
வைத்தார், அதனால் அவர் நீதிமானாகக் கருதப்பட்டார்"[l] என்று சொல்கிறது.
4 வேலை செய்கிறவனுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் ஓர் அன்பளிப்
பாக* கருதப்படுவதில்லை, அவனுடைய உழைப்புக்குக் கிடைக்க வேண்
டிய கூலியாகவே கருதப்படுகிறது. **5** மறுபட்சத்தில், ஒருவன் தன்னுடைய
செயல்கள்மேல் நம்பிக்கை வைக்காமல் பாவிகளை நீதிமான்களாக ஏற்
றுக்கொள்கிற கடவுள்மேல் விசுவாசம் வைக்கும்போது, அவன் நீதிமானாகக்
கருதப்படுகிறான்.[m] **6** செயல்கள் இல்லாமல் கடவுளால் நீதிமானாகக் கரு
தப்படுகிற மனிதனுக்குக் கிடைக்கும் சந்தோஷத்தைப் பற்றி தாவீதும் சொல்
கிறார்: **7** "யாருடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, யாருடைய
பாவங்கள் மூடப்பட்டதோ* அவர்கள் சந்தோஷமானவர்கள். **8** எந்த மனி
தருடைய பாவத்தை யெகோவா* ஒருபோதும் கணக்கில் எடுத்துக்கொள்ள
மாட்டாரோ அவர் சந்தோஷமானவர்."[n]

9 அப்படியானால், இந்தச் சந்தோஷம் விருத்தசேதனம் செய்தவர்க
ளுக்கு மட்டுமே கிடைக்கிறதா அல்லது விருத்தசேதனம் செய்யாதவர்க
ளுக்கும் கிடைக்கிறதா?[o] "விசுவாசத்தால் ஆபிரகாம் நீதிமானாகக்
கருதப்பட்டார்"[p] என்று நாம் சொல்கிறோம். **10** அவர் எப்போது நீதிமா
னாகக் கருதப்பட்டார்? விருத்தசேதனம் செய்திருந்தபோதா விருத்தசேதனம்

4:3, 8 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:4** *வே.வா., "அளவற்ற கருணையாக."
4:7 *வே.வா., "மன்னிக்கப்பட்டதோ."

அதி. 3
a ஏசா 53:11, 2கொ 5:19, 1யோ 2:1, 2, 1யோ 4:10
b 1கொ 1:30, 1யோ 1:9
c சங் 89:14
d அப் 13:38, 39, எபே 2:8, 9
e கலா 2:15, 16, யாக் 2:24
f அப் 17:26, 27
g அப் 10:4
h ஏசா 54:5, ரோ 10:12, கலா 3:14
i உபா 6:4, 1கொ 8:6, எபே 4:6
j 1கொ 7:18, கலா 3:8
k மத் 5:17, ரோ 8:3, 4, ரோ 13:10

அதி. 4
l ஆதி 15:6, கலா 3:6, யாக் 2:23
m கலா 2:15, 16
n சங் 32:1, 2
o ரோ 3:30
p ரோ 4:3

செய்யாமலிருந்தபோதா? விருத்தசேதனம் செய்திருந்தபோது அல்ல, விருத்
தசேதனம் செய்யாமலிருந்தபோதுதான் நீதிமானாகக் கருதப்பட்டார்.
11 அவர் விருத்தசேதனம் செய்யாமலிருந்தபோது காட்டிய விசுவாசத்தால்
ஓர் அடையாளத்தைப் பெற்றார், அதாவது விருத்தசேதனத்தை நீதியின் முத்
திரையாக* பெற்றார்.[a] இப்படி, விருத்தசேதனம் செய்யாமலிருந்தும் கடவுள்
மேல் விசுவாசம் வைப்பதால் நீதிமான்களாகக் கருதப்படுகிற எல்லாருக்கும்
அவர் தகப்பன் ஆனார்.[b] **12** நம் தகப்பனாகிய ஆபிரகாம்,[c] விருத்தசேத
னத்தைக் கடைப்பிடிக்கிறவர்களுக்கு மட்டுமல்ல, விருத்தசேதனம் செய்யா
மலிருந்தபோது தான் காட்டிய விசுவாசத்தின் அடிச்சுவடுகளை நெருக்கமா
கப் பின்பற்றி நடக்கிறவர்களுக்கும் தகப்பன் ஆனார்.

13 உலகத்தைச் சொந்தமாக்கிக்கொள்வது பற்றிய வாக்குறுதி ஆபிரகா
முக்கோ அவருடைய சந்ததியாருக்கோ திருச்சட்டத்தால் கிடைக்கவில்லை.[d]
விசுவாசத்தால் கடவுளுக்குமுன் அவர் நீதிமானாக இருந்ததால்தான் கிடைத்
தது.[e] **14** திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள் மட்டுமே அதைச் சொந்
தமாக்கிக்கொள்வார்கள் என்றால், விசுவாசம் வீணானதாக இருக்கும், அந்த
வாக்குறுதியும் அழிந்துபோயிருக்கும். **15** உண்மையில், திருச்சட்டம் கடவு
ளுடைய கடும் கோபத்தைத்தான் கொண்டுவருகிறது.[f] அந்தச் சட்டம் இல்
லாத காலத்தில் எந்தச் சட்டமீறுதலும் இருக்கவில்லை.[g]

16 அதனால்தான், அந்த வாக்குறுதி விசுவாசத்தால் கிடைக்கிறது.
அதோடு, கடவுளுடைய அளவற்ற கருணையின் அடிப்படையில் கிடைக்கி
றது.[h] இப்படி, ஆபிரகாமின் வம்சத்தார் எல்லாருக்கும், அதாவது திருச்சட்
டத்தைக் கடைப்பிடிக்கிறவர்களுக்கு மட்டுமல்ல ஆபிரகாமைப் போல்
விசுவாசம் வைத்திருக்கிற எல்லாருக்கும்,[i] அந்த வாக்குறுதி நிச்சயமா
னது.[j] **17** (“நான் உன்னை நிறைய தேசங்களுக்குத் தகப்பனாக நியமித்தி
ருக்கிறேன்” என்று எழுதப்பட்டிருக்கிறபடியே, ஆபிரகாம் நம் எல்லாருக்கும்
தகப்பன் ஆனார்.)[k] இறந்தவர்களுக்கு உயிர் கொடுக்கிறவரும் நடக்கப்
போகிறவற்றை நடந்ததுபோல்* சொல்கிறவருமான கடவுள்மேல் ஆபிர
காம் விசுவாசம் வைத்து, அவரிடமிருந்து அந்த வாக்குறுதியைப் பெற்றார்.
18 “இப்படித்தான் உன் சந்ததி எண்ணற்றதாக ஆகும்”[l] என்று சொல்லப்
பட்டது நடக்குமென்று விசுவாசம் வைத்தார். நிறைய தேசங்களுக்கு அவர்
தகப்பன் ஆவார் என்பது நம்ப முடியாததாக இருந்தாலும் அதில் நம்பிக்கை
வைத்தார். **19** அவருக்குக் கிட்டத்தட்ட 100 வயதாகிவிட்டதால் அவரு
டைய உடல் தளர்ந்து செத்ததுபோல் இருந்ததையும்,[m] சாராளின் கருப்பை
செத்த நிலையில்* இருந்ததையும் அவர் அறிந்திருந்தார்.[n] ஆனாலும், விசு
வாசத்தில் தளரவில்லை. **20** கடவுளுடைய வாக்குறுதியில் ஆபிரகாமுக்கு
விசுவாசம் இருந்ததால் அவர் சந்தேகப்படவில்லை, மாறாக விசுவாசத்
தில் பலமுள்ளவராகி கடவுளை மகிமைப்படுத்தினார். **21** அதோடு, கடவு
ளால் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்ற முடியும் என்பதை முழுமை
யாக நம்பினார்.[o] **22** அதனால், “அவர் நீதிமானாகக் கருதப்பட்டார்.”[p]

23 ஆனாலும், “அவர் நீதிமானாகக் கருதப்பட்டார்” என்ற வார்த்தைகள்
அவருக்காக மட்டும் எழுதப்படவில்லை,[q] **24** நமக்காகவும் எழுதப்பட்
டன. நம் எஜமானாகிய இயேசுவை உயிரோடு எழுப்பிய கடவுள்மேல் நாம்

4:11 *வே.வா., “உத்தரவாதமாக.” **4:17** *அல்லது, “இல்லாததை இருப்பதுபோல்.”
4:19 *வே.வா., “கருத்தரிக்க முடியாமல்.”

அதி. 4
a ஆதி 17:1, 2, 11
b ரோ 4:16; கலா 3:7
c கலா 3:29
d ஆதி 12:1-3; ஆதி 17:5, 6; ஆதி 22: 17, 18
e எபி 11:8
f ரோ 3:20; ரோ 5:20; 2கொ 3:7
g ரோ 5:13
h ரோ 3:24
i ரோ 4:11
j ரோ 9:8; கலா 3:29
k ஆதி 17:5
l ஆதி 15:5; எபி 11:17, 18
m ஆதி 17:17
n ஆதி 18:11; எபி 11:11, 12
o எபி 11:19
p ஆதி 15:6; யாக் 2:23
q ரோ 15:4

விசுவாசம் வைப்பதால்,[a] நாமும் நீதிமான்களாகக் கருதப்படுவோம்.
25 நம்முடைய எஜமான் நாம் செய்த குற்றங்களுக்காகச் சாகும்படி அனுப்
பப்பட்டார்.[b] நாம் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக உயிரோடு
எழுப்பப்பட்டார்.[c]

5 விசுவாசத்தால் நாம் இப்போது நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு
இருப்பதால்,[d] நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் கடவு
ளோடு சமாதானத்தை அனுபவிக்கலாம்.*[e] **2** கிறிஸ்துமீதுள்ள விசுவாசத்
தால் நாம் இப்போது இந்த அளவற்ற கருணையை அனுபவிக்கிறோம்.[f] அத
னால், கடவுள் நம்மை மகிமைப்படுத்துவார் என்ற நம்பிக்கையில்
சந்தோஷப்படலாம்.* **3** அதுமட்டுமல்ல, உபத்திரவங்களிலும் சந்தோஷப்
படலாம்.*[g] ஏனென்றால், உபத்திரவம் சகிப்புத்தன்மையையும்,[h] **4** சகிப்புத்
தன்மை கடவுளுடைய அங்கீகாரத்தையும், கடவுளுடைய அங்கீகாரம்[i] நம்
பிக்கையையும்[j] உண்டாக்குகிறது என்பது நமக்குத் தெரியும். **5** அந்த நம்
பிக்கை ஏமாற்றம் தராது.[k] ஏனென்றால், கடவுள் தன்னுடைய சக்தியை
நமக்குத் தந்து தன்னுடைய அன்பை நம் இதயங்களில் பொழிந்திருக்கிறார்.[l]

6 உண்மையில், நாம் பலவீனர்களாக* இருந்தபோதே[m] கடவுள்பக்தி
இல்லாத மனிதர்களுக்காகக் குறித்த காலத்தில் கிறிஸ்து தன்னுடைய உயி
ரைக் கொடுத்தார். **7** நீதிமானுக்காக ஒருவர் உயிரைக் கொடுப்பது அபூர்
வம். ஒருவேளை நல்லவனுக்காக யாராவது தன் உயிரைக் கொடுக்கத் துணி
யலாம். **8** ஆனாலும், நாம் பாவிகளாக இருந்தபோதே நமக்காக உயிரைக்
கொடுக்க கிறிஸ்துவைக் கடவுள் அனுப்பினார்; இதன் மூலம், கடவுள் நம்
மீது அன்பைக் காட்டினார்.[n] **9** கிறிஸ்து சிந்திய இரத்தத்தின் மூலம் நாம்
இப்போது நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதால்,[o]
கடவுளுடைய கடும் கோபத்துக்குத் தப்பி அவர் மூலம் காப்பாற்றப்படு
வது அதிக நிச்சயம், இல்லையா?[p] **10** நாம் கடவுளுக்கு எதிரிகளாக
இருந்தபோதே அவருடைய மகனின் மரணத்தின் மூலம் அவரோடு சமரசம்
செய்யப்பட்டோம்[q] என்றால், இப்போது சமரசம் செய்யப்பட்டிருக்கிற நாம்
அவருடைய மகனின் வாழ்வின் மூலம் காப்பாற்றப்படுவது அதிக நிச்சயம்,
இல்லையா? **11** அதுமட்டுமல்ல, நம்முடைய எஜமானாகிய இயேசு கிறிஸ்
துவின் மூலம் கடவுளோடு நாம் இப்போது சமரசம் செய்யப்பட்டிருப்பதற்கா
கச்[r] சந்தோஷமும் அடைகிறோம், இல்லையா?

12 ஒரே மனிதனால் பாவமும் பாவத்தினால் மரணமும் இந்த
உலகத்தில் வந்தது.[s] இப்படி, எல்லா மனிதர்களும் பாவம் செய்ததால் மர
ணம் எல்லா மனிதர்களுக்கும் பரவியது.[t] **13** திருச்சட்டம் கொடுக்கப்பட்
டதற்கு முன்பே இந்த உலகத்தில் பாவம் இருந்தது. ஆனால், திருச்சட்டம்
இல்லாத காலத்தில் பாவத்துக்காக யார்மீதும் குற்றம் சுமத்தப்படவில்லை.[u]
14 இருந்தாலும், ஆதாம்முதல் மோசேவரை வாழ்ந்தவர்கள் ஆதாம் செய்
ததுபோல் கடவுளுடைய கட்டளையை மீறி பாவம் செய்யாதபோதிலும், மர
ணம் ஒரு ராஜாவாக அவர்கள்மீது ஆட்சி செய்துவந்தது. அந்த ஆதாம்
பிற்பாடு வரவிருந்தவருக்கு ஒப்பாக இருந்தான்.[v]

15 குற்றத்தால் வந்த விளைவும் இலவச அன்பளிப்பால் வந்த விளை
வும் வேறுவேறு. எப்படியென்றால், ஒரே மனிதனுடைய குற்றத்தால் நிறைய

அதி. 4
a அப் 2:24; அப் 13:30; 1பே 1:21
b மத் 20:28
c ஏசா 53:11, 12; 2கொ 5:21

அதி. 5
d அப் 13:38, 39
e எபே 2:14
f 2கொ 5:18; எபே 3:11, 12; எபி 10:19
g பிலி 2:17; 1பே 4:12, 13
h அப் 5:41, 42
i யாக் 1:12
j பிலி 1:18-20
k யோசு 21:45
l 2கொ 1:22; கலா 4:6; எபே 1:13, 14
m எபே 2:1, 5
n ஏசா 53:12; யோவா 3:16; எபே 2:4, 5; 1பே 3:18; 1யோ 4:10
o அப் 13:38, 39; எபி 9:14
p 1தெ 1:10
q 2கொ 5:18; கொலோ 1:21, 22
r 2கொ 5:19
s ஆதி 2:17; ஆதி 3:6; ஆதி 3:19; 1கொ 15:21
t சங் 51:5; ரோ 3:23
u ரோ 4:15
v 1கொ 15:45

5:1 *அல்லது, “சமாதானமாக இருக்கிறோம்.” **5:2, 3** *அல்லது, “சந்தோஷப்படு
கிறோம்.” **5:6** *அதாவது, “பாவிகளாக.”

பேருக்கு மரணம் வந்தது. ஆனால், இயேசு கிறிஸ்து என்ற ஒரே மனிதன்
மூலம் கடவுள் கொடுத்த இலவச அன்பளிப்பாலும் அளவற்ற கருணையா
லும்[a] நிறைய பேருக்கு ஏராளமான நன்மை கிடைத்தது.*[b] **16** ஒரே
மனிதனுடைய பாவத்தால்[c] வந்த விளைவும் கடவுளுடைய இலவச அன்ப
ளிப்பால் வந்த விளைவும் வேறுவேறு. எப்படியென்றால், ஒருவனுடைய குற்
றத்தால் மனிதர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு கிடைத்தது.[d] ஆனால்,
பலருடைய குற்றங்களுக்குப் பின்பு கொடுக்கப்பட்ட அன்பளிப்பால் அவர்
கள் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.[e] **17** ஒருவனுடைய குற்
றத்தால் அந்த ஒருவன் மூலம் மரணம் ராஜாவாக ஆட்சி செய்தது;[f] அப்ப
டியென்றால், அளவற்ற கருணையையும் நீதியாகிய அன்பளிப்பையும்[g]
ஏராளமாகப் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்ற ஒருவர் மூலம்[h] வாழ்வு
பெற்று ராஜாக்களாக ஆட்சி செய்யப்போவது[i] அதிக நிச்சயம், இல்லையா?

18 அதனால், ஒரே மனிதன் குற்றம் செய்ததால் எல்லா விதமான ஆட்
களுக்கும் தண்டனைத் தீர்ப்பு கிடைத்தது[j] போல, ஒரே மனிதன் நீதியான
செயலைச் செய்ததால் எல்லா விதமான ஆட்களுக்கும் வாழ்வு கிடைக்
கும்.[k] அவர்கள் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.[l] **19** ஒரே
மனிதன் கீழ்ப்படியாமல் போனதால் நிறைய பேர் பாவிகளாக்கப்பட்டது[m]
போல, ஒரே மனிதன் கீழ்ப்படிந்ததால் நிறைய பேர் நீதிமான்களாக்கப்படு
வார்கள்.[n] **20** இப்படிப்பட்ட நிலையில், குற்றங்களை வெட்டவெளிச்ச
மாக்குவதற்குத் திருச்சட்டமும் வந்தது.[o] ஆனால், பாவங்கள் பெருகப்
பெருக அளவற்ற கருணையும் அதைவிட அதிகமாகப் பெருகியது.
21 எதற்காக? மரணத்தோடு சேர்ந்து பாவம் ராஜாவாக ஆட்சி செய்தது
போல்[p] நீதியின் மூலம் அளவற்ற கருணை ராஜாவாக ஆட்சி செய்வதற்
காகத்தான். அந்த அளவற்ற கருணை நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்து
வின் மூலம் முடிவில்லாத வாழ்வைத் தருகிறது.[q]

6 அப்படியானால், நாம் என்ன சொல்வோம்? அளவற்ற கருணை
அதிகமதிகமாகக் கிடைக்கும் என்று நினைத்துக்கொண்டு தொடர்ந்து
பாவம் செய்யலாமா? **2** கூடவே கூடாது! பாவத்தைப் பொறுத்தவரை
நாம் இறந்துவிட்டதால்,[r] இனி எப்படிப் பாவ வாழ்க்கை நடத்திக்கொண்டே
இருக்க முடியும்?[s] **3** கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் எடுத்த[t] நாம்
எல்லாரும் அவருடைய மரணத்துக்குள் ஞானஸ்நானம் எடுத்தோம்[u] என்
பது உங்களுக்குத் தெரியாதா? **4** பரலோகத் தகப்பனின் வல்லமையால்*
கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டார். அதேபோல், நாமும் புதிய வாழ்வு
வாழ்வதற்காக[v] அவருடைய மரணத்துக்குள் ஞானஸ்நானம் எடுத்து அவ
ரோடுகூட அடக்கம் செய்யப்பட்டோம்.[w] **5** நாம் அவரைப் போல
இறந்து அவரோடு ஒன்றுபட்டால்,[x] அவரைப் போல உயிருடன் எழுந்து
நிச்சயம் அவரோடு ஒன்றுபடுவோம்.[y] **6** நம்முடைய பாவ உடல் நம்
மேல் ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பதற்காக,[z] நம்முடைய பழைய சுபா
வம் அவரோடு மரக் கம்பத்தில் வைத்து ஆணியடிக்கப்பட்டது என்று
நமக்குத் தெரியும்.[a] அதனால் இனிமேல் நாம் பாவத்துக்கு அடிமைகளாக
இருக்க மாட்டோம்.[b] **7** ஏனென்றால், இறந்தவன் தன்னுடைய பாவத்திலி
ருந்து முழுமையாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறான்.*

5:15 *வே.வா., "பொங்கிவழிந்தது." **6:4** *நே.மொ., "மகிமையால்." **6:7** *வே.வா., "மன்னிப்புப் பெற்றிருக்கிறான்."

அதி. 5
a எபி 2:9
b ஏசா 53:11 மத் 20:28
c ஆதி 2:17 ஆதி 3:6
d ஆதி 3:17-19
e ரோ 4:25
f ரோ 5:12, 14
g ரோ 3:24
h 1பே 3:18 வெளி 1:5, 6
i வெளி 5:9, 10 வெளி 20:4
j 1கொ 15:21
k ரோ 1:16 1தீ 2:3, 4
l யோவா 10:10
m ரோ 5:12
n ஏசா 53:11 எபி 2:10
o ரோ 3:20 கலா 3:19
p 1கொ 15:56
q யோவா 3:16 1யோ 4:9

அதி. 6
r 1பே 2:24
s எபி 10:26, 27
t 1கொ 12:13 கலா 3:27
u மாற் 10:38, 39 1கொ 15:29
v கொலோ 3:10 1யோ 3:14
w கொலோ 2:12
x 2கொ 4:10 பிலி 3:10
y 1கொ 15: 42, 49
z கொலோ 2:11 கொலோ 3:5
a கலா 5:24
b 2கொ 7:1

8 நாம் கிறிஸ்துவோடு இறந்திருந்தோம் என்றால், அவரோடு வாழ்வ
தும் நிச்சயம். **9** ஏனென்றால், இப்போது உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிற
கிறிஸ்து[a] இனி இறப்பதில்லை[b] என்று நமக்குத் தெரியும். மரணம் இனிமேல்
அவருடைய எஜமானாக இருக்காது. **10** அவர் இறந்தார், பாவத்தைப்
போக்குவதற்காக எல்லா காலத்துக்கும் ஒரேமுறை இறந்தார்.[c] ஆனால்,
இப்போது உயிர்வாழ்கிறார், கடவுளுக்காக உயிர்வாழ்கிறார். **11** அதே
போல் நீங்களும் பாவத்தைப் பொறுத்தவரை இறந்தவர்களாகவும், கிறிஸ்து
இயேசுவின் மூலம் கடவுளுக்காக உயிர்வாழ்கிறவர்களாகவும் உங்களை
நினைத்துக்கொள்ளுங்கள்.[d]

12 அதனால், உங்களுடைய உடலின் ஆசைகளுக்குப் பாவம் உங்
களை அடிமைப்படுத்தி, சாவுக்குரிய உங்கள் உடலில் தொடர்ந்து ராஜா
வாக ஆட்சி செய்ய அனுமதிக்காதீர்கள்.[e] **13** உங்களுடைய உடலை*
அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்துக்கு அர்ப்பணிக்காமல், நீதியின் ஆயு
தங்களாகக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள். செத்த நிலையிலிருந்து உயிர்
பெற்றிருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து உங்களையே அவருக்கு அர்ப்ப
ணியுங்கள்.[f] **14** பாவம் உங்கள் எஜமானாக இருக்க அனுமதிக்காதீர்கள்.
ஏனென்றால், நீங்கள் திருச்சட்டத்தின்கீழ் இல்லாமல்[g] அளவற்ற கருணை
யின்கீழ் இருக்கிறீர்கள்.[h]

15 அப்படியானால் என்ன சொல்வது? நாம் திருச்சட்டத்தின்கீழ் இல்லா
மல் அளவற்ற கருணையின்கீழ் இருக்கிறோம் என்பதற்காகப் பாவம் செய்
யலாமா?[i] கூடவே கூடாது! **16** யாருக்கு உங்களை அர்ப்பணித்துக் கீழ்ப்
படிகிறீர்களோ அவருக்குத்தான் நீங்கள் அடிமைகள் என்பது உங்களுக்குத்
தெரியாதா? அதனால், நீங்கள் பாவத்துக்கு அடிமைகளாக இருந்தால்[j] மர
ணமடைவீர்கள்,[k] கீழ்ப்படிதலுக்கு அடிமைகளாக இருந்தால்[l] நீதிமான்களா
வீர்கள். **17** முன்பு நீங்கள் பாவத்துக்கு அடிமைகளாக இருந்தாலும்,
நீங்கள் எந்தப் போதனையிடம்* ஒப்படைக்கப்பட்டீர்களோ அந்தப் போத
னைக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தீர்கள்; அதற்காகக் கடவுளுக்கு நன்றி
சொல்கிறேன். **18** நீங்கள் பாவத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டதால்,[m]
நீதிக்கு அடிமைகளானீர்கள்.[n] **19** உங்களுடைய பலவீனத்தின்* காரண
மாக எளிய வார்த்தைகளில் நான் உங்களிடம் பேசுகிறேன். அக்கிரமச்
செயல்களைச் செய்வதற்காக உங்களுடைய உடலுறுப்புகளை அசுத்தத்துக்
கும் அக்கிரமத்துக்கும் அடிமைகளாக முன்பு அர்ப்பணித்தீர்கள். ஆனால்,
இப்போது பரிசுத்த செயல்களைச் செய்வதற்காக உங்களுடைய உடலுறுப்
புகளை நீதிக்கு அடிமைகளாக அர்ப்பணியுங்கள்.[o] **20** ஏனென்றால், நீங்
கள் பாவத்துக்கு அடிமைகளாக இருந்தபோது நீதிக்குக் கட்டுப்பட்டவர்க
ளாக இல்லை.

21 அப்போது செய்த செயல்களால் உங்களுக்கு என்ன பலன்கள்
கிடைத்தன? இப்போது அவற்றை நினைத்து வெட்கப்படுகிறீர்கள். அவை
மரணத்துக்கு வழிநடத்துகின்றன.[p] **22** ஆனாலும், நீங்கள் இப்போது
பாவத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டு கடவுளுக்கு அடிமைகளாகி
இருப்பதால், பரிசுத்த வாழ்க்கையைப் பலனாகப் பெற்றிருக்கிறீர்கள்;[q]
அது முடிவில்லாத வாழ்வுக்கு வழிநடத்துகிறது.[r] **23** பாவத்தின் சம்பளம்

6:13 * நே.மொ., “உடலுறுப்புகளை.” **6:17** * நே.மொ., “போதனையின் மாதிரியிடம்.”
6:19 * நே.மொ., “உடல் பலவீனத்தின்.”

அதி. 6
a அப் 13:34
b வெளி 1:17, 18
c எபி 9:28; 1பே 3:18
d 1பே 2:24
e ஆதி 4:7
f ரோ 12:1
g ரோ 7:6; கலா 5:18; கொலோ 2:13, 14
h யோவா 1:17
i ரோ 5:21
j யோவா 8:34
k ரோ 6:23
l 2பே 2:19
m யோவா 8:31, 32
n 1பே 2:24
o ரோ 12:1
p ரோ 8:6; கலா 5:19-21
q கலா 5:22, 23
r 1கொ 9:25

மரணம்;[a] நம் எஜமானாகிய கிறிஸ்து இயேசுவின் மூலம்[b] கடவுள் தரும்
அன்பளிப்போ முடிவில்லாத வாழ்வு.[c]

7 சகோதரர்களே, திருச்சட்டம் தெரிந்த உங்களிடம் பேசுகிறேன். ஒரு
மனிதன் உயிரோடு இருக்கும்வரைதான் திருச்சட்டம் அவனுடைய எஜ
மானாக இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா? **2** உதாரணத்துக்கு,
திருமணமான ஒரு பெண் தன்னுடைய கணவன் உயிரோடு இருக்கும்வ
ரைதான் சட்டப்படி அவனோடு இணைக்கப்பட்டிருப்பாள். கணவன் இறந்து
விட்டால், அவனுடைய சட்டத்திலிருந்து விடுதலை செய்யப்படுவாள்.[d]
3 அதனால், கணவன் உயிரோடு இருக்கும்போது அவள் வேறொருவனுக்
குச் சொந்தமானால், நடத்தைகெட்டவள் என்று அழைக்கப்படுவாள்.[e] கண
வன் இறந்துவிட்டால், அவனுடைய சட்டத்திலிருந்து விடுதலையாவாள்.
அதனால், அவள் வேறொருவனுக்குச் சொந்தமானாலும் நடத்தைகெட்ட
வள் அல்ல.[f]

4 அப்படியே, என் சகோதரர்களே, உயிரோடு எழுப்பப்பட்ட கிறிஸ்
துவுக்கு[g] நீங்கள் சொந்தமாவதற்காக,[h] அவருடைய பலியின்* மூலம்
திருச்சட்டத்தைப் பொறுத்தவரை இறந்தவர்களானீர்கள். இப்படி, நம் எல்லா
ராலும் கடவுளுக்கேற்ற செயல்களைச் செய்ய முடிகிறது.[i] **5** நாம் உடலின்
ஆசைகளின்படி வாழ்ந்தபோது, மரணத்தை உண்டாக்கும் பாவ ஆசைகள்
நம்முடைய உடலில்* பொங்கியெழுந்தன.[j] அந்த ஆசைகள் எவை என்
பதைத் திருச்சட்டம் வெட்டவெளிச்சமாக்கியது. **6** நம்மைக் கட்டுப்படுத்தி
வைத்திருந்த திருச்சட்டத்தைப் பொறுத்தவரை நாம் இறந்திருப்பதால், இப்
போது அதிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கிறோம்.[k] அதனால், எழு
தப்பட்ட பழைய சட்டத்தின் வழியில் நாம் அவருக்கு அடிமைகளாக இல்
லாமல்,[l] கடவுளுடைய சக்தியின் புதிய வழியில் அவருக்கு அடிமைகளாக
இருக்கிறோம்.[m]

7 அப்படியானால், நாம் என்ன சொல்லலாம்? திருச்சட்டம் பாவ
மென்று சொல்லலாமா? கூடவே கூடாது! உண்மையில், திருச்சட்டம் இல்லா
திருந்தால் பாவம் என்னவென்று எனக்குத் தெரிந்திருக்காது.[n] உதாரணமாக,
“பேராசைப்படக் கூடாது” என்று திருச்சட்டம் சொல்லாதிருந்தால், பேராசை
யைப் பற்றி எனக்குத் தெரிந்திருக்காது.[o] **8** ஆனால், பாவம் என்ன
வென்று அந்தச் சட்டம் எனக்கு உணர்த்தியது. அதாவது, எல்லா விதமான
பேராசையும் எனக்குள் இருக்கிறது என்பதையும், அவை பாவம் என்பதை
யும் அது எனக்கு உணர்த்தியது. திருச்சட்டம் இல்லாதபோதோ பாவம்
செத்த நிலையில் இருந்தது.[p] **9** சொல்லப்போனால், திருச்சட்டம் இல்லாத
காலத்தில் நான் உயிரோடிருந்தேன். திருச்சட்டம் வந்தபோதோ பாவம்
மறுபடியும் உயிர்பெற்றது, ஆனால் நான் மரணமடைந்தேன்.[q] **10** வாழ்
வுக்கு வழிநடத்த வேண்டிய திருச்சட்டமே[r] மரணத்துக்கு வழிநடத்துவ
தைப் புரிந்துகொண்டேன். **11** அந்தச் சட்டத்தால் எனக்கு உணர்த்தப்பட்ட
பாவம் என்னை ஏமாற்றி, அந்தச் சட்டத்தாலேயே என்னைக் கொன்றுபோட்
டது. **12** இருந்தாலும், திருச்சட்டம் பரிசுத்தமானது. அதிலுள்ள கட்டளைக
ளும் பரிசுத்தமானவை, நீதியானவை, நன்மையானவை.[s]

13 அப்படியானால், நன்மையான ஒன்று என்னைக் கொன்றுபோட்
டதா? இல்லவே இல்லை! பாவம்தான் என்னைக் கொன்றுபோட்டது, பாவம்

7:4 * நே.மொ., “உடலின்.” **7:5** * நே.மொ., “உடலுறுப்புகளில்.”

அதி. 6
a ஆதி 2:17
b 1தீ 1:16; 1யோ 2:1, 2; யூ 21
c மத் 25:46; 1பே 1:3, 4

அதி. 7
d 1கொ 7:39
e மத் 5:32; மத் 19:9; மாற் 10:11, 12; லூ 16:18
f 1கொ 7:8, 9; 1தீ 5:14
g அப் 5:30; 2கொ 5:15
h 2கொ 11:2
i கலா 5:22, 23; கொலோ 1:10
j யாக் 1:14, 15
k ரோ 10:4; எபே 2:15; கொலோ 2:13, 14
l கலா 3:10
m ரோ 12:11
n ரோ 3:20; கலா 3:19
o யாத் 20:17; உபா 5:21
p ரோ 4:15; ரோ 5:20
q 2கொ 3:6
r லேவி 18:5; லூ 10:26-28
s உபா 4:8; சங் 19:8

என்னவென்று காட்டுவதற்காக அந்தப் பாவம்தான் நன்மையான ஒன்றை
வைத்து என்னைக் கொன்றுபோட்டது.[a] இப்படி, அந்தப் பாவம் எவ்வளவு
கொடியது என்பதைத் திருச்சட்டம்தான் எனக்குக் காட்டியது.[b] **14** நமக்
குத் தெரிந்தபடி, திருச்சட்டம் கடவுளுக்குச் சொந்தமானது. நானோ பாவத்
துக்குச் சொந்தமானவன், பாவத்துக்கு அடிமையாக விற்கப்பட்டவன்.[c]
15 நான் ஏன் இப்படி நடந்துகொள்கிறேன் என்று எனக்கே புரியவில்லை.
எதைச் செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை. எதை
வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன். **16** நான் விரும்பாததையே
செய்கிறேன் என்ற உணர்வு எனக்கு இருந்தால், திருச்சட்டம் நல்லது என்று
நான் ஒத்துக்கொள்வதை அது காட்டுகிறது. **17** ஆனால், விரும்பாததைச்
செய்வது நான் அல்ல, எனக்குள் குடியிருக்கிற பாவம்தான் அப்படிச் செய்
கிறது.[d] **18** எப்படியென்றால், என்னிடத்தில், அதாவது என் பாவ உட
லில், நல்லது எதுவும் இல்லையென்று எனக்குத் தெரியும். நல்லது செய்ய
வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் இருக்கிறது, ஆனால் நல்லது செய்
யத்தான் என்னால் முடியவில்லை.[e] **19** நான் விரும்புகிற நல்லதைச் செய்
யாமல் விரும்பாத கெட்டதையே செய்துவருகிறேன். **20** நான் விரும்பா
ததைச் செய்கிறேன் என்றால், அதை நானாகச் செய்யவில்லை, எனக்குள்
குடியிருக்கிற பாவம்தான் அப்படிச் செய்கிறது.

21 அதனால், இந்தச் சட்டத்தை என்னிடம் பார்க்கிறேன்: நல்லது
செய்ய விரும்புகிற எனக்குள் கெட்டது இருக்கிறது.[f] **22** கடவுளுடைய
சட்டத்தைக் குறித்து என் உள்ளத்தின் ஆழத்தில் மிகவும் சந்தோஷப்படு
கிறேன்.[g] **23** ஆனால், என் மனதின் சட்டத்துக்கு விரோதமாகப் போரா
டுகிற வேறொரு சட்டம் என் உடலில்* இருப்பதைப் பார்க்கிறேன்.[h] என்
உடலில்* இருக்கிற அந்தப் பாவச் சட்டம் என்னைச் சிறைபிடித்து வைத்
திருக்கிறது.[i] **24** எப்பேர்ப்பட்ட பரிதாபமான நிலையில் இருக்கிறேன்! மர
ணத்தை உண்டாக்கும் இந்த உடலிலிருந்து யார் என்னைக் காப்பாற்றுவார்?
25 நம்முடைய எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் கடவுளுக்கு
நன்றி! இப்படி, நான் என் மனதால் கடவுளின் சட்டத்துக்கும் உடலால்
பாவத்தின் சட்டத்துக்கும் அடிமையாக இருக்கிறேன்.[j]

8 அதனால், கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபட்டிருக்கிறவர்களுக்குத் தண்
டனைத் தீர்ப்பு கிடையாது. **2** கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபட்டிருக்
கிறவர்களுக்கு வாழ்வு தருகிற கடவுளுடைய சக்தியின் சட்டம் உங்களைப்
பாவத்தின் சட்டத்திலிருந்தும் மரணத்தின் சட்டத்திலிருந்தும் விடுதலை
செய்திருக்கிறது.[k] **3** மனிதர்களுடைய பாவ இயல்பால் திருச்சட்டம் முழு
மையாகக் கடைப்பிடிக்கப்பட முடியாததாகவும் அவர்களைக் காப்பாற்ற
முடியாததாகவும் இருந்தது.[l] அந்தத் திருச்சட்டம் செய்ய முடியாததைக்[m] கட
வுளே செய்தார். அதாவது, பாவத்தைப் போக்குவதற்குத் தன்னுடைய மக
னைப் பாவமுள்ள மனித சாயலில்[n] அனுப்பி,[o] மனிதர்களிடமுள்ள பாவத்
தைக் கண்டனம் செய்தார். **4** பாவ வழியில் நடக்காமல் கடவுளுடைய
சக்தி காட்டுகிற வழியில் நடக்கிற நாம்,[p] திருச்சட்டத்தின் நீதியான கட்டளை
களை நிறைவேற்ற வேண்டும்[q] என்பதற்காக அப்படிச் செய்தார். **5** பாவ
வழியில் நடக்கிறவர்கள் பாவ காரியங்களைப் பற்றியே யோசிக்கிறார்கள்.[r]

7:23 *நே.மொ., “உடலுறுப்புகளில்.”

அதி. 7
- *a* 1கொ 15:56
- *b* ரோ 5:13
- *c* சங் 51:5; யோவா 8:34; ரோ 6:16
- *d* ஆதி 8:21
- *e* மத் 26:41
- *f* எரே 17:9
- *g* 2கொ 4:16; எபே 3:16; எபே 4:23, 24
- *h* கலா 5:17; யாக் 4:1
- *i* யோவா 8:34
- *j* ரோ 6:13; கலா 5:17

அதி. 8
- *k* யோவா 8:31, 32; யாக் 1:25
- *l* எபி 7:18
- *m* ரோ 3:20; எபி 7:11
- *n* யோவா 1:14
- *o* 1யோ 4:9
- *p* கலா 5:16, 18
- *q* ரோ 3:31
- *r* கலா 5:19-21

ஆனால், கடவுளுடைய சக்தி காட்டுகிற வழியில் நடக்கிறவர்கள் கடவு
ளுடைய சக்திக்குரிய காரியங்களைப் பற்றியே யோசிக்கிறார்கள்.[a] **6** பாவ
காரியங்களைப் பற்றியே யோசிப்பவர்கள் மரணமடைவார்கள்,[b] கடவு
ளுடைய சக்திக்குரிய காரியங்களைப் பற்றியே யோசிப்பவர்கள் வாழ்வை
யும் சமாதானத்தையும் அடைவார்கள்.[c] **7** பாவ காரியங்களைப் பற்றியே
யோசிப்பது கடவுளுக்கு விரோதமானது.[d] அது கடவுளுடைய சட்டத்துக்குக்
கட்டுப்பட்டதாக இல்லை, சொல்லப்போனால் கட்டுப்பட்டதாக இருக்கவும்
முடியாது. **8** அதனால், பாவ வழியில் நடக்கிறவர்கள் கடவுளைப் பிரியப்
படுத்த முடியாது.

9 ஆனாலும், கடவுளுடைய சக்தி உண்மையிலேயே உங்களிடம் குடியி
ருந்தால் பாவ வழியில் நடக்காமல் கடவுளுடைய சக்தி காட்டுகிற வழியில்
நடப்பீர்கள்.[e] கிறிஸ்துவின் சிந்தை ஒருவனிடம் இல்லையென்றால், அவன்
கிறிஸ்துவுக்குச் சொந்தமானவன் அல்ல. **10** ஆனால் கிறிஸ்து உங்க
ளோடு ஒன்றுபட்டிருந்தால்,[f] பாவத்தின் காரணமாக உங்கள் உடல் செத்தி
ருந்தாலும் நீதியின் காரணமாகக் கடவுளுடைய சக்தி உங்களுக்கு உயிர்
கொடுக்கும். **11** இயேசுவை உயிரோடு எழுப்பியவரின் சக்தி உங்களி
டம் இப்போது குடியிருந்தால், கிறிஸ்து இயேசுவை உயிரோடு எழுப்பிய
அவரே[g] தன்னுடைய சக்தியால் சாவுக்குரிய உங்கள் உடல்களுக்கு உயிர்
கொடுப்பார்.[h]

12 சகோதரர்களே, பாவ இயல்புக்கு அடிபணிந்து அதன் ஆசைக
ளின்படி வாழ வேண்டிய கட்டாயம் நமக்கு இல்லை.[i] **13** நீங்கள் அப்படிப்
பாவ ஆசைகளின்படி வாழ்ந்தால் நிச்சயம் சாவீர்கள்.[j] உங்களுடைய கெட்ட
செயல்களைக் கடவுளுடைய சக்தியின் உதவியோடு ஒழித்துவிட்டால் உயிர்
வாழ்வீர்கள்.[k] **14** கடவுளுடைய சக்தியால் வழிநடத்தப்படுகிற எல்லாரும்
கடவுளுடைய மகன்களாக இருக்கிறார்கள்.[l] **15** கடவுளுடைய சக்தி
நம்மை அடிமைத்தனத்துக்கு உட்படுத்தி பயப்பட வைப்பதில்லை. அதற்குப்
பதிலாக, கடவுளுடைய மகன்களாகத் தத்தெடுக்கப்படுவதற்கு வழிநடத்தி,
அவரை *"அபா,** தகப்பனே!" என்று கூப்பிட வைக்கிறது.[m] **16** நாம் கடவு
ளுடைய பிள்ளைகள்[n] என்பதை அந்தச் சக்தி நம் மனதில் ஊர்ஜிதப்படுத்
துகிறது.*[o] **17** நாம் பிள்ளைகள் என்றால், வாரிசுகளாகவும் இருப்போம்.
உண்மையில், கடவுளுடைய வாரிசுகளாக, கிறிஸ்துவின் சக வாரிசுகளாக,[p]
இருப்போம். கிறிஸ்துவோடு சேர்ந்து நாம் பாடுகளை அனுபவித்தால்[q] அவ
ரோடு சேர்ந்து மகிமையையும் பெறுவோம்.[r]

18 அதனால், நம் மூலம் வெளிப்படப்போகிற மகிமையோடு ஒப்பிடும்
போது இந்தக் காலத்தில் நாம் படும் பாடுகள் ஒன்றுமே இல்லை என்று
நினைக்கிறேன்.[s] **19** கடவுளுடைய மகன்களின் மகிமை வெளிப்படுவதற்
காகப் படைப்பு* மிகவும் ஆவலோடு காத்திருக்கிறது.[t] **20** ஏனென்றால்,
படைப்பு வீணான வாழ்க்கை வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டது;[u]
அதன் சொந்த விருப்பத்தால் அல்ல, கடவுளுடைய விருப்பத்தால் அப்ப
டித் தள்ளப்பட்டது. **21** படைப்பு அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து

8:15 *பிள்ளைகள் தங்கள் அப்பாவைச் செல்லமாகவும், அதேசமயத்தில் மரியாதை யாகவும் கூப்பிடுவதற்குப் பயன்படுத்திய எபிரெய அல்லது அரமேயிக் வார்த்தை இது. **8:16** *நே.மொ., "நம் மனதோடு சேர்ந்து சாட்சி கொடுக்கிறது." **8:19** *இது முக்கியமாக மனிதர்களைக் குறிக்கிறது.

அதி. 8
a கலா 5:22, 23
b ரோ 6:21
c கலா 6:7, 8
d ஏசா 59:2; கொலோ 1:21
e கலா 5:25
f யோவா 15:4
g அப் 2:24
h எபே 2:1, 5
i கலா 5:19-21
j 1கொ 9:27; கலா 5:24; எபே 4:22; கொலோ 3:5
k கலா 6:7, 8
l யோவா 1:12; யோவா 3:5
m கலா 4:4-6
n யோவா 1:12; கலா 3:26; 1யோ 3:2
o 1கொ 2:10, 12; 2கொ 1:22
p லூ 12:32; கலா 3:29
q பிலி 1:29; கொலோ 1:24
r 1கொ 15:53; வெளி 3:21
s 2கொ 4:17; 1பே 4:13
t 1யோ 3:2
u ஆதி 3:17-19

விடுதலை செய்யப்பட்டு[a] கடவுளுடைய பிள்ளைகளுக்குரிய மகிமை
யான விடுதலையைப் பெறும் என்ற நம்பிக்கையோடு அப்படித் தள்ளப்
பட்டது. **22** நமக்குத் தெரிந்தபடி, இதுவரை எல்லா படைப்புகளும் ஒன்
றாகக் குமுறிக்கொண்டும் வேதனைப்பட்டுக்கொண்டும் இருக்கின்றன.
23 அதுமட்டுமல்ல, நமக்குக் கிடைக்கப்போகிற ஆஸ்திக்கு உத்தரவாதமா
கக் கடவுளுடைய சக்தியைப் பெற்ற நாமும்கூட,* ஆம் நாமும்கூட, உள்
ளுக்குள் குமுறிக்கொண்டிருக்கிறோம்.[b] அதேசமயம், கடவுளுடைய மகன்
களாகத் தத்தெடுக்கப்படுவதற்கு,[c] அதாவது மீட்புவிலையால் நம்முடைய
உடலிலிருந்து விடுதலை செய்யப்படுவதற்கு, மிகவும் ஆவலோடு காத்தி
ருக்கிறோம். **24** இந்த நம்பிக்கையில்தான் நாம் காப்பாற்றப்பட்டோம்.
ஆனால், கண்களால் பார்ப்பதை நம்புவது உண்மையில் நம்பிக்கையே
அல்ல. ஒருவன் ஒன்றை நேரடியாகப் பார்க்கும்போது அதற்காக அவன்
நம்பிக்கையோடு காத்திருக்கிறான் என்று சொல்வோமா? **25** கண்களால்
பார்க்காததை[d] நாம் நம்பினால்தான்,[e] சகிப்புத்தன்மையுடன்[f] அதற்காக
ஆவலோடு காத்துக்கொண்டிருப்போம்.

26 அதோடு, நாம் பலவீனமாக இருக்கிற சமயங்களில் கடவுளுடைய
சக்தியும் நமக்கு உதவி செய்கிறது.[g] எப்படியென்றால், ஜெபம் செய்ய
வேண்டிய சூழ்நிலையில் என்ன ஜெபிப்பதென்று நமக்குத் தெரியாதபோது,
வார்த்தைகளால் சொல்ல முடியாத* நம் உள்ளக் குமுறல்களைப் பற்றி
அந்தச் சக்தி நமக்காகப் பரிந்து பேசுகிறது. **27** இதயங்களை ஆராய்ந்து
பார்க்கிற கடவுளுக்கு,[h] அந்தச் சக்தி என்ன சொல்கிறது என்று தெரியும்.
ஏனென்றால், அது அவருடைய விருப்பத்தின்படி* பரிசுத்தவான்களுக்கா
கப் பரிந்து பேசுகிறது.

28 கடவுள் தன்னை நேசிக்கிறவர்களுடைய, அதாவது தன் நோக்கத்
தின்படி[i] அழைக்கப்பட்டவர்களுடைய, நன்மைக்காகத் தன்னுடைய எல்லா
செயல்களையும் ஒன்றுக்கொன்று இசைந்துபோக வைக்கிறார் என்பது நமக்
குத் தெரியும். **29** ஏனென்றால், தன்னுடைய விசேஷ கவனத்தைப் பெற்ற
வர்கள் தன்னுடைய மகனின் சாயலுக்கு ஒப்பாக இருக்க வேண்டும்[j] என்று
அவர் முன்தீர்மானித்தார். தன்னுடைய மகனே முதல் மகனாகவும்[k] அவர்
கள் அவருடைய சகோதரர்களாகவும்[l] இருக்க வேண்டும் என்பதற்காக
அப்படிச் செய்தார். **30** அவரால் முன்தீர்மானிக்கப்பட்டவர்கள்[m] அவரால்
அழைக்கப்பட்டவர்களாக[n] இருக்கிறார்கள். அவரால் அழைக்கப்பட்டவர்
கள் அவரால் நீதிமான்களாய் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக[o] இருக்கிறார்
கள். அவரால் நீதிமான்களாய் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் அவரால் மகி
மைப்படுத்தப்பட்டவர்களாக[p] இருக்கிறார்கள்.

31 இவற்றைப் பற்றி நாம் என்ன சொல்வோம்? கடவுள் நம் பக்கம் இருக்
கும்போது, யாரால் நம்மை எதிர்க்க முடியும்?[q] **32** தன்னுடைய சொந்த
மகனென்றும் பார்க்காமல் நம் எல்லாருக்காகவும் அவரைக் கொடுத்தவர்[r]
அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்காமல் இருப்பாரா?
33 கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்மீது யாரால் குற்றம்சாட்ட முடி
யும்?[s] கடவுள்தான் அவர்களை நீதிமான்களாக ஏற்றுக்கொள்கிறாரே.[t]

அதி. 8
- *a* யோவா 8:31, 32; 1கொ 15:22
- *b* 2கொ 5:1, 2
- *c* கலா 4:4, 5; எபே 1:5; வெளி 21:7
- *d* 2கொ 5:7
- *e* 1பே 1:3, 4
- *f* ரோ 5:3-5
- *g* யோவா 14:16, 26; யோவா 16:7
- *h* எரே 11:20
- *i* எபே 1:9-11; 2தீ 1:9
- *j* யோவா 13:15; ரோ 6:5; 1கொ 15:49
- *k* எபி 1:6
- *l* எபி 2:11
- *m* எபே 1:5
- *n* பிலி 3:14; 1தெ 2:12; எபி 3:1
- *o* ரோ 5:18; தீத் 3:7
- *p* 2கொ 4:6
- *q* சங் 118:6; 1யோ 4:4
- *r* யோவா 3:16; ரோ 3:25; 1யோ 4:9
- *s* ஏசா 50:8
- *t* அப் 13:38, 39; எபி 10:16, 17

8:23 *நே.மொ., “அதுமட்டுமல்ல, கடவுளுடைய சக்தியாகிய முதல் விளைச்சலைப் பெற்ற நாமும்கூட.” **8:26** *வே.வா., “சொல்லப்படாத.” **8:27** *வே.வா., “சித்தத்தின்படி.”

34 அவர்களுக்கு யாரால் தண்டனைத் தீர்ப்பு கொடுக்க முடியும்? இறந்த
பின்பு, சொல்லப்போனால், உயிரோடு எழுப்பப்பட்ட பின்பு, கடவுளுடைய
வலது பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற கிறிஸ்து இயேசுவும்[a] நமக்காகப் பரிந்து
பேசுகிறாரே.[b]

35 கிறிஸ்துவின் அன்பிலிருந்து எது நம்மைப் பிரிக்க முடியும்?[c] உபத்
திரவமா, வேதனையா, துன்புறுத்தலா, பசியா, நிர்வாணமா, ஆபத்தா,
வாளா?[d] **36** “உங்களுக்காக ஒவ்வொரு நாளும் நாங்கள் கொல்லப்படு
கிறோம்; வெட்டப்படுகிற ஆடுகள் போல ஆகிவிட்டோம்”[e] என்று எழு
தப்பட்டிருக்கிறபடியே நமக்கு நடக்கும். **37** இருந்தாலும், நம்மேல் அன்பு
காட்டியவரின் உதவியோடு இவை எல்லாவற்றிலும் நாம் முழு வெற்றி[f]
பெற்றுவருகிறோம். **38** சாவோ, வாழ்வோ, தேவதூதர்களோ, அரசாங்கங்
களோ, இன்றுள்ள காரியங்களோ, இனிவரும் காரியங்களோ, வலிமைமிக்க
சக்திகளோ,[g] **39** உயர்வான காரியங்களோ, தாழ்வான காரியங்களோ,
வேறெந்தப் படைப்போ நம் எஜமானாகிய கிறிஸ்து இயேசுவின் மூலம்
கடவுள் காட்டுகிற அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாதென்று உறுதி
யாக நம்புகிறேன்.

9 கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நான் உண்மையைத்தான் பேசுகிறேன்,
பொய் பேசவில்லை. ஏனென்றால், கடவுளுடைய சக்தியால் வழிநடத்
தப்படுகிற என் மனசாட்சி என்னோடுகூட சாட்சி சொல்கிறது. **2** இதயத்தில்
எனக்கு மிகுந்த துக்கமும் தீராத வேதனையும் இருக்கிறது. **3** என் இனத்
தைச் சேர்ந்த என் சகோதரர்களுக்காக நானே கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து
சாபத்துக்குள்ளாக முடியுமானால் அதற்கும் தயாராயிருக்கிறேன். **4** அவர்
கள்தான் இஸ்ரவேலர்கள், அவர்கள்தான் கடவுளுடைய மகன்களாகத்
தத்தெடுக்கப்பட்டவர்கள்,[h] மகிமையையும் ஒப்பந்தங்களையும்[i] திருச்சட்டத்
தையும்[j] பரிசுத்த சேவை செய்கிற பாக்கியத்தையும்[k] வாக்குறுதிகளை
யும்[l] பெற்றவர்கள். **5** அவர்கள்தான் முன்னோர்களின் வழியில் வந்தவர்
கள்;[m] அவர்களுடைய வம்சத்தில்தான் கிறிஸ்து வந்தார்.[n] எல்லாவற்றுக்கும்
மேலான கடவுள் என்றென்றும் போற்றப்படுவாராக. ஆமென்.*

6 ஆனாலும், கடவுளுடைய வார்த்தை நிறைவேறாமல் போய்விட்ட
தென்று அர்த்தமாகாது. ஏனென்றால், இஸ்ரவேல் வம்சத்தில் வருகிற எல்
லாரும் உண்மையில் “இஸ்ரவேலர்கள்” கிடையாது.[o] **7** அதேபோல், அவர்
கள் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் எல்லா
ரும் உண்மையில் அவருடைய பிள்ளைகளும் கிடையாது.[p] ஆனால்,
“ஈசாக்கின் வழியாக உருவாகும் சந்ததிதான் உன்னுடைய சந்ததி என்று
அழைக்கப்படும்”[q] என்று அவருக்குச் சொல்லப்பட்டது. **8** அதனால்,
இயல்பான முறையில் ஆபிரகாமுக்குப் பிறந்த பிள்ளைகள் கடவுளுடைய
பிள்ளைகள் கிடையாது,[r] வாக்குறுதியின்படி பிறந்த பிள்ளைகள்தான்[s] ஆபி
ரகாமின் சந்ததியாகக் கடவுளால் கருதப்படுகிறார்கள். **9** “இதே சமயம்
நான் வருவேன், அப்போது சாராளுக்கு ஒரு மகன் இருப்பான்” என்ற
வாக்குறுதி கொடுக்கப்பட்டது.[t] **10** அதுமட்டுமல்ல, நம்முடைய மூதாதை
யான ஈசாக்கின் மூலம் ரெபெக்காள் இரட்டைக் குழந்தைகளைக் கருத்தரித்த
போது,[u] **11** அதாவது இன்னும் அந்தக் குழந்தைகள் பிறக்காமலும் நல்
லதோ கெட்டதோ செய்யாமலும் இருந்தபோது, “பெரியவன் சின்னவனுக்கு

9:5 * அதாவது, “அப்படியே ஆகட்டும்.”

அதி. 8
a சங் 110:1
b எபி 7:25; 1யோ 2:1
c யோவா 15:10
d 2கொ 4:8, 9
e சங் 44:22
f யோவா 16:33
g எபே 6:12

அதி. 9
h யாத் 4:22
i அப் 3:25; அப் 7:8
j யாத் 24:12
k அப் 26:7; எபி 9:1
l ரோ 4:13
m உபா 10:15
n மத் 1:17
o ரோ 2:28; வெளி 2:9
p யோவா 8:39; கலா 3:29
q ஆதி 21:12; எபி 11:18
r யோவா 1:12, 13
s கலா 4:28
t ஆதி 18:10, 14
u ஆதி 25:21, 24

அதி. 9
a ஆதி 25:23
b மல் 1:2, 3 எபி 12:16
c உபா 32:4 யோபு 34:10
d யாத் 33:19
e தீத் 3:4, 5
f யாத் 9:16
g யாத் 10:1 யாத் 14:4
h யோபு 40:2
i ஏசா 29:16 ஏசா 45:9
j ஏசா 64:8 எரே 18:6
k 1தெ 5:9
l ரோ 11:13 எபே 3:6
m எபே 2:12
n ஓசி 2:23 மத் 21:43 1பே 2:10
o ஓசி 1:10 கலா 3:26

அடிமையாக இருப்பான்" என்று அவளிடம் சொல்லப்பட்டது.[a] **12** "யாக்
கோபை நேசித்தேன், ஏசாவை வெறுத்தேன்" என்று எழுதப்பட்டும் இருக்
கிறது.[b] **13** அதனால், கடவுளுடைய நோக்கத்தின்படி மனிதர்கள் தேர்ந்தெ
டுக்கப்படுவது அவர்களுடைய செயல்களைச் சார்ந்தில்லை, தேர்ந்தெடுக்கிற
அவரையே எப்போதும் சார்ந்திருக்கிறது.

14 அப்படியானால், நாம் என்ன சொல்வோம்? கடவுளிடம் அநி
யாயம் இருக்கிறதா? இல்லவே இல்லை![c] **15** ஏனென்றால் அவர் மோசே
யிடம், "யாருக்கு இரக்கம் காட்ட நினைக்கிறேனோ அவர்களுக்கு இரக்கம்
காட்டுவேன்; யாருக்குக் கரிசனை காட்ட நினைக்கிறேனோ அவர்களுக்குக்
கரிசனை காட்டுவேன்"[d] என்று சொன்னார். **16** அதனால், தேர்ந்தெடுக்
கப்படுவது இரக்கமுள்ள கடவுளைத்தான் சார்ந்திருக்கிறது,[e] ஒருவருடைய
விருப்பத்தையோ முயற்சியையோ* சார்ந்தில்லை. **17** பார்வோனிடம்
கடவுள், "உன் மூலம் என் வல்லமையைக் காட்டுவதற்கும் பூமியெங்கும் என்
பெயர் அறிவிக்கப்படுவதற்குமே நான் உன்னை விட்டுவைத்திருக்கிறேன்"
என்று சொன்னதாக வேதவசனம் குறிப்பிடுகிறது.[f] **18** அதனால், அவர்
யாருக்கு இரக்கம் காட்ட விரும்புகிறாரோ அவருக்கு இரக்கம் காட்டுகிறார்,
யாரைப் பிடிவாதக்காரராக இருக்கும்படி விட்டுவிட விரும்புகிறாரோ அவ
ரைப் பிடிவாதக்காரராக இருக்கும்படி விட்டுவிடுகிறார்.[g]

19 அப்படியானால், "மனிதர்கள்மீது கடவுள் குற்றம் கண்டுபிடிப்பது
நியாயமா? அவர் தீர்மானித்திருப்பதை யாராலும் மாற்ற முடியாது, இல்
லையா?" என்று நீங்கள் கேட்கலாம். **20** ஆனால், கடவுளை எதிர்த்துப்
பேச நீங்கள் யார்?[h] வடிவமைக்கப்பட்ட பொருள் தன்னை வடிவமைத்தவ
ரிடம், "நீ ஏன் என்னை இப்படி வடிவமைத்தாய்?" என்று கேட்க முடியுமா?[i]
21 ஒரே களிமண் உருண்டையை வைத்து கண்ணியமான காரியத்துக்காக
ஒரு பாத்திரத்தையும் கண்ணியமற்ற காரியத்துக்காக இன்னொரு பாத்திரத்
தையும் செய்ய அந்தக் களிமண்மீது குயவனுக்கு அதிகாரம் இல்
லையா?[j] **22** தன்னுடைய கடும் கோபத்தையும் வல்லமையையும் வெளிக்
காட்ட கடவுளுக்கு விருப்பம் இருந்தாலும், கடும் கோபத்துக்கும்
அழிவுக்கும் உரிய பாத்திரங்களைப் பொறுமையோடு சகித்துக்கொண்டார்
என்றால், யார் என்ன சொல்ல முடியும்? **23** மகிமை பெறும்படி தான் உண்
டாக்கியிருந்த இரக்கத்துக்குரிய பாத்திரங்கள்மீது[k] தன்னுடைய அளவில்
லாத மகிமையைக் காட்டுவதற்காக, **24** அதாவது யூதர்களிலிருந்து மட்டு
மல்லாமல் மற்ற தேசத்து மக்களிலிருந்தும் அழைக்கப்பட்டவர்களாகிய[l]
நம்மீது தன்னுடைய அளவில்லாத மகிமையைக் காட்டுவதற்காக, அப்படிப்
பொறுமையோடு இருந்தார் என்றால், யார் என்ன சொல்ல முடியும்?
25 அதுபோலவே, "என்னுடைய ஜனங்களாக இல்லாதவர்களை[m] 'என்
ஜனங்கள்' என்றும், அன்புக்குரியவளாக இல்லாதவளை 'அன்புக்குரியவள்'
என்றும் அழைப்பேன்" என்று ஓசியா புத்தகத்தில்கூட அவர் சொல்லியி
ருக்கிறாரே.[n] **26** அதோடு, "'நீங்கள் என்னுடைய ஜனங்கள் அல்ல' என்று
எந்த இடத்தில் சொன்னேனோ அதே இடத்தில், 'நீங்கள் உயிருள்ள கடவு
ளின் பிள்ளைகள்' என்று அழைப்பேன்" என்றும் சொல்லியிருக்கிறாரே.[o]

27 அதோடு, இஸ்ரவேலர்களைப் பற்றி ஏசாயா, "இஸ்ரவேல் ஜனங்க
ளுடைய எண்ணிக்கை கடற்கரை மணலைப் போல் இருந்தாலும், மீதியாக

9:16 * நே.மொ., "விரும்புகிறவனையோ ஓடுகிறவனையோ."

இருப்பவர்களே காப்பாற்றப்படுவார்கள்.[a] **28** ஏனென்றால், இந்தப் பூமி
யில் வாழும் மக்களிடம் யெகோவா* கணக்குக் கேட்பார், அதைச் சீக்கிர
மாகச் செய்து முடிப்பார்”[b] என்று சொன்னார். **29** அதோடு, “பரலோகப்
படைகளின் யெகோவா* நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காமல்
போயிருந்தால், நாம் சோதோமைப் போலவும், கொமோராவைப் போலவும்
ஆகியிருப்போம்”[c] என்று அவர் முன்கூட்டியே சொன்னார்.

30 அப்படியானால், நாம் என்ன சொல்வோம்? மற்ற தேசத்து மக்
கள் நீதிமான்களாவதற்கு முயற்சி செய்யாதபோதிலும்,[d] விசுவாசத்தால் கட
வுளுக்குமுன் நீதிமான்களானார்கள்.[e] **31** ஆனால் இஸ்ரவேலர்கள் திருச்
சட்டத்தின் அடிப்படையில் நீதிமான்களாவதற்கு முயற்சி செய்தபோதிலும்,
நீதிமான்களாகவில்லை. **32** ஏன்? ஏனென்றால், அவர்கள் விசுவாசத்தால்
நீதிமான்களாவதற்கு முயற்சி செய்யாமல், செயல்களால் நீதிமான்களாவ
தற்கு முயற்சி செய்தார்கள். “தடைக்கல்” மீது அவர்கள் தடுக்கி விழுந்தார்
கள்.[f] **33** இதைப் பற்றித்தான், “இதோ! தடைக்கல்லை,[g] அதாவது தடுக்கி
விழ வைக்கும் கற்பாறையை, நான் சீயோனில் வைக்கிறேன். அதன்மீது
விசுவாசம் வைக்கிறவன் ஏமாற்றம் அடைய மாட்டான்”[h] என்று எழுதப்பட்
டிருக்கிறது.

10 சகோதரர்களே, இஸ்ரவேலர்கள் மீட்புப் பெற வேண்டும் என்பது
என் இதயப்பூர்வமான ஆசை,[i] அதற்காகவே நான் கடவுளிடம் மன்
றாடுகிறேன். **2** அவர்களுக்குக் கடவுள்மீது பக்திவைராக்கியம் இருக்கிறது
என்று சாட்சி சொல்கிறேன்;[j] ஆனால், அது திருத்தமான அறிவுக்கேற்ற
வைராக்கியம் கிடையாது. **3** கடவுளுடைய வழியில் நீதிமான்களாவது எப்
படியென்று தெரியாமல்[k] தங்களுடைய சொந்த வழியில் நீதிமான்களாவ
தற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.[l] அதனால், கடவுளுடைய நீதியான
வழிக்குக் கட்டுப்படாமல் இருக்கிறார்கள்.[m] **4** கிறிஸ்து திருச்சட்டத்தின்
முடிவாக இருக்கிறார்[n] என்பதால் விசுவாசம் வைக்கிற எல்லாரும் கடவு
ளுக்கு முன்னால் நீதிமான்களாக முடியும்.[o]

5 திருச்சட்டத்தின்படி நீதிமானாக இருக்கிறவனைப் பற்றிச் சொல்லும்
போது, “அதிலுள்ள கட்டளைகளின்படி நடக்கிற மனிதன் அவற்றால்
வாழ்வு பெறுவான்”[p] என்று மோசே எழுதியிருக்கிறார். **6** ஆனால், விசு
வாசத்தின் மூலம் கடவுளுக்குமுன் நீதிமான்களாவதைப் பற்றி, “‘பரலோகத்
துக்கு யாரால் ஏறிப்போக முடியும்?’[q] அதாவது யாரால் பரலோகத்துக்கு
ஏறிப்போய் கிறிஸ்துவைக் கீழே கொண்டுவர முடியும், என்றோ, **7** ‘அதல
பாதாளத்துக்குள் யாரால் இறங்கிப்போக முடியும்?’[r] அதாவது யாரால் அத
லபாதாளத்துக்குள் இறங்கிப்போய் மரணத்திலிருந்து கிறிஸ்துவை மேலே
கொண்டுவர முடியும், என்றோ உங்கள் மனதில் கேட்டுக்கொண்டிருக்கா
தீர்கள்”[s] என வேதவசனம் சொல்கிறது. **8** வேதவசனம் இன்னும் என்ன
சொல்கிறது? “அந்த வார்த்தை,” அதாவது நாங்கள் பிரசங்கிக்கிற விசுவா
சத்தின் செய்தி, “உங்களுக்குப் பக்கத்திலேயே இருக்கிறது, உங்கள் வாயி
லும் இதயத்திலும் இருக்கிறது.”[t] **9** இயேசுதான் எஜமான் என்று உங்களு
டைய வாயினால் எல்லாருக்கும் சொல்லி,[u] அவரைக் கடவுள் உயிரோடு
எழுப்பினார் என உங்களுடைய இதயத்தில் விசுவாசித்தால் உங்களுக்கு
மீட்பு கிடைக்கும். **10** ஒருவன் இதயத்தில் விசுவாசிக்கும்போது கடவு

9:28, 29 *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 9
a ஓசி 1:10; ரோ 11:4, 5
b ஏசா 10:22, 23
c ஏசா 1:9
d ரோ 10:20
e ரோ 4:11; பிலி 3:9
f ஏசா 8:14; லூ 20:17, 18; 1கொ 1:23
g சங் 118:22; மத் 21:42
h ஏசா 28:16; ரோ 10:11; 1பே 2:6

அதி. 10
i ரோ 9:3, 4
j அப் 21:20; கலா 1:14
k ரோ 1:16, 17
l லூ 16:15; பிலி 3:9
m லூ 7:29, 30
n மத் 5:17; ரோ 7:6; எபே 2:15; கொலோ 2:13, 14
o கலா 3:24
p லேவி 18:5; கலா 3:12
q உபா 30:12
r உபா 30:13
s உபா 9:4
t உபா 30:14
u அப் 16:31

ளுக்கு முன்னால் நீதிமானாகிறான். தன்னுடைய வாயினால் அறிவிக்கும்
போது[a] மீட்புப் பெறுகிறான்.

11 “அவர்மீது விசுவாசம் வைக்கிற யாருமே ஏமாற்றம் அடைய
மாட்டார்கள்” என்றும் வேதவசனம் சொல்கிறது.[b] **12** யூதனுக்கும் கிரேக்க
னுக்கும் இடையில் எந்தப் பாகுபாடும் இல்லை.[c] ஏனென்றால், எல்லாருக்
கும் எஜமான் ஒருவரே; அவரிடம் வேண்டிக்கொள்கிற எல்லாருக்கும் அவர்
ஆசீர்வாதங்களை அள்ளிக் கொடுக்கிறார். **13** அதனால், “யெகோவா
வின்* பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்கிற ஒவ்வொருவரும் மீட்புப்
பெறுவார்கள்.”[d] **14** ஆனாலும், அவர்மேல் விசுவாசம் வைக்காதவர்கள்
எப்படி அவரிடம் வேண்டிக்கொள்வார்கள்? அவரைப் பற்றிக் கேள்விப்படா
தவர்கள் எப்படி அவர்மேல் விசுவாசம் வைப்பார்கள்? யாருமே பிரசங்கிக்
காவிட்டால் எப்படி அவர்கள் கேள்விப்படுவார்கள்? **15** அனுப்பப்படா
மல் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?[e] “நல்ல விஷயங்களை நல்ல செய்தியாக
அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன!”[f]
என்று எழுதப்பட்டிருக்கிறதே.

16 ஆனாலும், அவர்கள் எல்லாருமே நல்ல செய்தியைக் காதுகொடுத்
துக் கேட்கவில்லை. இதைப் பற்றி, “யெகோவாவே,* நாங்கள் சொன்ன
விஷயத்தை# கேட்டு அதில் விசுவாசம் வைத்தது யார்?” என்று ஏசாயா
கேட்கிறார்.[g] **17** அதனால், சொல்லப்பட்ட விஷயத்தைக் கேட்டால்தான்
விசுவாசம் உண்டாகும்.[h] கிறிஸ்துவைப் பற்றிய செய்தி சொல்லப்பட்டால்
தான் அதைக் கேட்க முடியும். **18** ஆனாலும், அவர்கள் கேட்காமலா
இருந்தார்கள்? சொல்லப்போனால், “அவர்களுடைய சத்தம் பூமியெங்கும்
எட்டுகிறது; அவர்களுடைய செய்தி பூமியின் எல்லைகள்வரை போய்ச்
சேருகிறது.”[i] **19** ஆனாலும், இஸ்ரவேலர்களுக்குத் தெரியாமலா இருந்
தது?[j] “ஒன்றுக்கும் உதவாத ஜனங்களைக் கொண்டு உங்களுடைய கோபத்
தைக் கிளறுவேன். முட்டாள்தனமான தேசத்தைக் கொண்டு உங்களுக்கு
ஆக்ரோஷத்தை உண்டாக்குவேன்” என்று முதலில் மோசே சொல்கிறார்.[k]
20 ஏசாயா மிகவும் தைரியத்தோடு, “என்னைத் தேடாதவர்கள் என்னைக்
கண்டுபிடிக்க வழிசெய்தேன்,[l] என்னைப் பற்றிக் கேட்காதவர்களுக்கு என்
னைத் தெரியப்படுத்தினேன்” என்று சொல்கிறார்.[m] **21** ஆனால், “கீழ்ப்படி
யாமல் இருக்கிற, பிடிவாதம் பிடிக்கிற ஜனங்களைப் பார்த்து நாளெல்லாம்
என் கைகளை நீட்டிக்கொண்டிருந்தேன்”[n] என்று இஸ்ரவேலர்களைப் பற்
றிச் சொல்கிறார்.

11 அப்படியானால் நான் கேட்கிறேன், கடவுள் தன்னுடைய மக்
களை ஒதுக்கித்தள்ளிவிட்டாரா?[o] இல்லவே இல்லை! நானும் ஓர்
இஸ்ரவேலன், ஆபிரகாமின் சந்ததியில் வந்தவன், பென்யமீன் கோத்திரத்
தைச் சேர்ந்தவன். **2** கடவுள் முதன்முதலில் தேர்ந்தெடுத்த தன்னுடைய
மக்களை ஒதுக்கித்தள்ளவில்லை.[p] இஸ்ரவேலர்களுக்கு எதிராக அவரிடம்
எலியா முறையிட்டதைப் பற்றி வேதவசனம் என்ன சொல்கிறது என்று உங்
களுக்குத் தெரியாதா? **3** “யெகோவாவே,* அவர்கள் உங்களுடைய தீர்க்
கதரிசிகளைக் கொன்றுவிட்டார்கள், உங்களுடைய பலிபீடங்களை இடித்
துப் போட்டுவிட்டார்கள். நான் ஒருவன் மட்டும்தான் மீதியாக இருக்கிறேன்.

10:13, 16; 11:3 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **10:16** # வே.வா., “செய்தியை.”

அதி. 10
a 1கொ 9:16; 2கொ 4:13; எபி 13:15
b ஏசா 28:16; ரோ 9:33
c அப் 15:7-9; கலா 3:28
d யோவே 2:32; அப் 2:21
e மத் 28:19, 20
f ஏசா 52:7; எபே 6:14, 15
g ஏசா 53:1; யோவா 12:37, 38
h யோவா 4:42
i சங் 19:4; அப் 1:8
j மத் 10:5, 6; அப் 2:14
k உபா 32:21
l ரோ 9:30
m ஏசா 65:1
n ஏசா 65:2

அதி. 11
o 1சா 12:22; எரே 31:37
p யாத் 19:5; சங் 94:14

இப்போது, என் உயிரையும் பறிக்கப் பார்க்கிறார்கள்” என்று அவர் சொன்
னார்.[a] **4** இருந்தாலும், அவருக்குக் கடவுள் என்ன சொன்னார்? “பாகால்
முன் மண்டிபோடாத 7,000 பேர் இன்னும் எனக்காக இருக்கிறார்கள்” என்று
சொன்னார்.[b] **5** அதேபோல், அளவற்ற கருணையால் தேர்ந்தெடுக்கப்
பட்டவர்களில் சிலர் இந்தக் காலத்திலும் மீதியாக இருக்கிறார்கள்.[c] **6** அத
னால், மக்கள் அளவற்ற கருணையால்[d] தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்
றால், இனியும் செயல்களால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை[e] என்பது
தெளிவாகிறது. அப்படிச் செயல்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால், அளவற்ற
கருணைக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

7 அப்படியானால் என்ன சொல்வோம்? இஸ்ரவேலர்கள் எதைப் பெறு
வதற்காக ஊக்கமாக முயற்சி செய்கிறார்களோ அதை அவர்கள் பெற
வில்லை, ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதைப் பெற்றார்கள்.[f] மற்
றவர்களுடைய மனம் மழுங்கிப்போனது.[g] **8** ஏனென்றால், “இன்றுவரை
கடவுள் அவர்களுக்கு ஆழ்ந்த தூக்கத்தைக் கொடுத்திருக்கிறார்,[h] பார்க்க
முடியாத கண்களைக் கொடுத்திருக்கிறார், கேட்க முடியாத காதுகளைக்
கொடுத்திருக்கிறார்” என்று எழுதப்பட்டிருக்கிறது.[i] **9** அதோடு, “அவர்க
ளுடைய விருந்தே* அவர்களுக்குக் கண்ணியாகவும் வலையாகவும் முட்
டுக்கட்டையாகவும் தண்டனையாகவும் ஆகட்டும். **10** பார்க்க முடியாத
படி அவர்களுடைய கண்கள் இருண்டு போகட்டும், அவர்களுடைய
முதுகு நிமிர முடியாதபடி எப்போதும் குனிந்திருக்கட்டும்” என்று தாவீதும்
சொல்லியிருக்கிறார்.[j]

11 அதனால் நான் கேட்கிறேன், கால் தடுக்கியதால் அவர்கள் ஒரேய
டியாக விழுந்துவிட்டார்களா? இல்லவே இல்லை! அவர்கள் தவறு செய்த
தால் மீட்புப் பெறும் வாய்ப்பு மற்ற தேசத்து மக்களுக்குக் கிடைத்திருக்கி
றது. இதனால், அவர்களுக்குப் பொறாமை உண்டாகியிருக்கிறது.[k]
12 அவர்கள் தவறு செய்து எண்ணிக்கையில் குறைந்துபோனது உலக மக்
களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறதென்றால்,[l] அவர்கள் எண்ணிக்கையில்
நிறைவுபெறுவது எப்பேர்ப்பட்ட ஆசீர்வாதமாக இருக்கும்!

13 மற்ற தேசத்து மக்களாகிய உங்களிடம் இப்போது நான் பேசிக்கொண்
டிருக்கிறேன். மற்ற தேசத்து மக்களுக்கு நான் ஓர் அப்போஸ்தலனாக[m]
இருப்பதால் என் ஊழியத்தை மகிமைப்படுத்துகிறேன்.[n] **14** இதன் மூலம்
என் சொந்த மக்களுடைய மனதில் பொறாமையை உண்டாக்கி அவர்க
ளில் சிலரையாவது மீட்க முயற்சி செய்கிறேன். **15** அவர்கள் ஒதுக்கித்தள்
ளப்பட்டது[o] உலக மக்கள் கடவுளோடு சமரசமாவதற்கு வழிசெய்கிறது என்
றால், அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது செத்த நிலையிலிருந்து அவர்கள்
உயிர்பெறுவதற்கு நிச்சயம் வழிசெய்யும், இல்லையா? **16** பிசைந்த மாவில்
முதலில் ஒரு பிடி மாவை எடுத்து கடவுளுக்கு அர்ப்பணித்து பரிசுத்தமாக்
கினால், முழு மாவும் பரிசுத்தமாகிறது. அதேபோல், மரத்தின் வேர் பரிசுத்த
மாக இருந்தால் அதன் கிளைகளும் பரிசுத்தமாகின்றன.

17 இருந்தாலும், ஒலிவ மரத்திலுள்ள சில கிளைகள் வெட்டப்பட்ட
பின்பு, காட்டு ஒலிவ மரக் கிளைகளாகிய நீங்கள் அவற்றின் இடத்தில்
ஒட்ட வைக்கப்பட்டு ஒலிவ மரத்தின் செழுமையான வேரிலிருந்து ஊட்டம்
பெறுகிறீர்கள் என்றால், **18** வெட்டப்பட்ட அந்தக் கிளைகளிடம் நீங்கள்

11:9 * நே.மொ., “மேஜையே.”

அதி. 11
- *a* 1ரா 19:2, 14
- *b* 1ரா 19:18
- *c* ரோ 9:27
- *d* எபே 1:7; எபே 2:8
- *e* கலா 2:15, 16
- *f* யோவா 1: 11, 12
- *g* 2கொ 3:14, 15
- *h* ஏசா 29:10
- *i* உபா 29:4
- *j* சங் 69:22, 23
- *k* உபா 32:21; ரோ 10:19
- *l* ரோ 9:23, 24
- *m* அப் 9:15; கலா 1:15, 16; எபே 3:8
- *n* அப் 28:30, 31; கொலோ 1:23; 2தீ 4:5
- *o* மத் 21:43

ஆணவமாக நடந்துகொள்ளாதீர்கள்.* அப்படி ஆணவமாக நடந்துகொண்
டால்,#[a] நீங்கள் அந்த வேரைத் தாங்காமல் அந்த வேர்தான் உங்களைத்
தாங்குகிறது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். **19** “நாங்கள் ஒட்ட
வைக்கப்படுவதற்காகத்தான் அந்தக் கிளைகள் வெட்டப்பட்டன”[b] என்று
நீங்கள் சொல்லலாம். **20** உண்மைதான்! விசுவாசம் இல்லாததால்தான்
அவை வெட்டப்பட்டன![c] நீங்களோ விசுவாசம் வைத்ததால் நிலைத்தி
ருக்கிறீர்கள்.[d] அதனால், தலைக்கனத்தை விட்டுவிட்டு பயத்தோடு நடந்து
கொள்ளுங்கள். **21** இயற்கையாக வளர்ந்த கிளைகளையே கடவுள் வெட்
டிவிட்டார் என்றால், உங்களையும் வெட்டிவிட மாட்டாரா? **22** அதனால்,
கடவுளுடைய கருணையையும்[e] கண்டிப்பையும் பற்றி யோசித்துப் பாருங்
கள். தவறு செய்தவர்களிடம் அவர் கண்டிப்பைக் காட்டுகிறார்,[f] உங்களி
டமோ கருணையைக் காட்டுகிறார். ஆனால், அவருடைய கருணையைப்
பெறுவதற்கு எப்போதும் தகுதியுள்ளவர்களாக இருந்தால் மட்டும்தான் உங்
களிடம் கருணை காட்டுவார். இல்லையென்றால் நீங்களும் வெட்டப்படுவீர்
கள். **23** அவர்கள் விசுவாசமில்லாமல் நடப்பதை விட்டுவிட்டு விசுவாசம்
வைக்க ஆரம்பித்தால் அவர்களும் ஒட்ட வைக்கப்படுவார்கள்;[g] அவர்க
ளைக் கடவுளால் மறுபடியும் ஒட்ட வைக்க முடியும். **24** காட்டு ஒலிவ
மரத்திலிருந்த நீங்களே வெட்டப்பட்டு, தோட்டத்து ஒலிவ மரத்தில் இயற்
கைக்கு மாறாக ஒட்ட வைக்கப்பட்டீர்கள் என்றால், இயற்கையாக வளர்ந்த
கிளைகளாகிய அவர்கள் தங்களுடைய மரத்திலேயே ஒட்ட வைக்கப்படு
வது எவ்வளவு நிச்சயம்!

25 சகோதரர்களே, உங்களை நீங்களே ஞானிகள் என்று நினைத்
துக்கொள்ளக் கூடாது என்பதற்காக இந்தப் பரிசுத்த ரகசியத்தை[h] உங்களுக்
குச் சொல்ல ஆசைப்படுகிறேன்: இஸ்ரவேலர்களில் ஒரு பகுதியைச் சேர்ந்
தவர்களுக்கு மனம் மழுங்கிவிட்டதால் அவர்களுடைய எண்ணிக்கை மற்ற
தேசத்து மக்களால் பூர்த்தி செய்யப்படும். **26** இப்படி இஸ்ரவேலர்கள் எல்
லாரும்[i] மீட்புப் பெறுவார்கள். “விடுவிக்கிறவர்* சீயோனிலிருந்து வந்து,[j] கட
வுள்பக்தியற்ற செயல்களை யாக்கோபைவிட்டு நீக்குவார். **27** நான்
அவர்களுடைய பாவங்களைப் போக்கும்போது,[k] அவர்களோடு இந்த ஒப்
பந்தத்தைச் செய்வேன்”[l] என்று எழுதப்பட்டிருக்கிறது. **28** உண்மைதான்,
நல்ல செய்தியை ஏற்றுக்கொள்ளாததால் அவர்கள் உங்களுடைய நன்மைக்
காகக் கடவுளுக்கு எதிரிகளாக இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய
முன்னோர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை முன்னிட்டு அவர்களில் சில
ரைக் கடவுள் தேர்ந்தெடுத்திருப்பதால் அவருக்கு அன்பானவர்களாக
இருக்கிறார்கள்.[m] **29** தான் கொடுக்கிற அன்பளிப்புகளையும் அழைப்புக
ளையும் நினைத்து கடவுள் வருத்தப்பட மாட்டார். **30** ஒருகாலத்தில்
நீங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தாலும்,[n] இஸ்ரவேலர்கள் கீழ்ப்ப
டியாமல் போனதால்[o] இப்போது உங்களுக்கு இரக்கம் கிடைத்திருக்கிறது.[p]
31 இப்போது அவர்கள் கீழ்ப்படியாமல் இருப்பதால் உங்களுக்கு
இரக்கம் கிடைத்திருப்பதைப் போல் அவர்களுக்கும் இரக்கம் கிடைக்கும்.
32 அவர்கள் எல்லாருக்கும் இரக்கம் காட்டுவதற்காகவே[q] அவர்கள் எல்
லாரையும் கீழ்ப்படியாமை என்ற சிறையில் கடவுள் விட்டுவிட்டார்.[r]

11:18 *வே.வா., “கிளைகளுக்கு எதிராகப் பெருமையடிக்காதீர்கள்.” #வே.வா., “கிளைகளுக்கு எதிராகப் பெருமையடித்தால்.” **11:26** *வே.வா., “மீட்பர்.”

அதி. 11

a 1கொ 10:12
b அப் 15:14
c மத் 21:43
d எபே 2:8
e ரோ 2:4
f மத் 23:38
g அப் 2:38
h எபே 3:5, 6
i ரோ 2:29; ரோ 9:6; கலா 3:29
j சங் 14:7
k ஏசா 27:9
l ஏசா 59:20, 21
m உபா 10:15
n எபே 2:1, 2
o அப் 7:51
p அப் 15:7-9
q 1தீ 2:3, 4
r ரோ 3:9

33 ஆ! கடவுளுடைய ஆசீர்வாதங்கள்* எவ்வளவு மகத்தானவை!
அவருடைய ஞானமும் அறிவும் எவ்வளவு ஆழமானவை! அவருடைய
நீதித்தீர்ப்புகள் ஆராய முடியாதவை! அவருடைய வழிகள் கண்டறிய முடி
யாதவை! **34** “யெகோவாவின்* சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு
அறிவுரை கொடுப்பவன் யார்?”[a] **35** அல்லது, “அவர் கைமாறு செய்யும்
படி அவருக்கு முன்னதாகவே எதையாவது கொடுத்தவன் யார்?”[b]
36 எல்லாம் அவரிடமிருந்துதான் வந்தன; அவரால்தான் இருக்கின்றன;
அவருக்காகத்தான் இருக்கின்றன. அவருக்கே என்றென்றும் புகழ் உண்டா
வதாக. ஆமென்.*

12 அதனால் சகோதரர்களே, கடவுள் கரிசனையுள்ளவராக இருப்ப
தால் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். உங்களுடைய உடலை[c]
உயிருள்ளதும் பரிசுத்தமுள்ளதும்[d] கடவுளுக்குப் பிரியமுள்ளதுமான பலி
யாக அர்ப்பணியுங்கள். சிந்திக்கும் திறனைப்[e] பயன்படுத்தி அவருக்குப்
பரிசுத்த சேவை செய்யுங்கள். **2** இந்த உலகத்தின்* பாணியைப் பின்பற்
றுவதை நிறுத்துங்கள். நீங்கள் யோசிக்கும் விதத்தை மாற்றுவதன்
மூலம் உங்களையே மாற்றிக்கொள்ளுங்கள்.[f] அப்போதுதான், நன்மையா
னதும் பிரியமானதும் பரிபூரணமானதுமான கடவுளுடைய விருப்பம்# என்
னவென்பதை நீங்கள் நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும்.△[g]

3 உங்களில் யாரும் தன்னைப் பற்றி அளவுக்கு அதிகமாக எண்
ணாமல்,[h] அவரவருக்குக் கடவுள் கொடுத்திருக்கிற* விசுவாசத்தின்படியே[i]
எண்ண வேண்டும். அப்படிச் செய்வது உங்களுக்குத் தெளிந்த புத்தி
இருப்பதைக் காட்டும். எனக்குக் கொடுக்கப்பட்ட அளவற்ற கருணையால்
இதை உங்கள் எல்லாருக்கும் சொல்கிறேன். **4** ஒரே உடலில் பல உறுப்பு
கள் இருந்தாலும்[j] எல்லா உறுப்புகளும் ஒரே வேலையைச் செய்வ
தில்லை; **5** அதேபோல், நாமும் பலராக இருந்தாலும் கிறிஸ்துவோடு
ஒன்றுபட்டு ஒரே உடலாக இருக்கிறோம். ஆனால், ஒன்றையொன்று சார்ந்
திருக்கிற தனித்தனி உறுப்புகளாக இருக்கிறோம்.[k] **6** நமக்குக் கொடுக்கப்
பட்ட அளவற்ற கருணையின்படி நம் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான
வரங்கள் இருக்கின்றன.[l] இதனால், அவரவருக்குக் கொடுக்கப்பட்ட விசுவா
சத்தின்படியே, தீர்க்கதரிசனம் சொல்கிறவர்கள் தொடர்ந்து தீர்க்கதரிசனம்
சொல்லட்டும். **7** ஊழியம் செய்கிறவர்கள் தொடர்ந்து ஊழியம் செய்யட்
டும். கற்றுக்கொடுக்கிறவர்கள் தொடர்ந்து கற்றுக்கொடுக்கட்டும்.[m] **8** உற்
சாகப்படுத்துகிறவர்கள்* தொடர்ந்து உற்சாகப்படுத்தட்டும்.#[n] பகிர்ந்து
கொடுக்கிறவர்கள் தாராளமாகப் பகிர்ந்து கொடுக்கட்டும்.△[o] தலைமை தாங்
குகிறவர்கள் ஊக்கம் தளராமல்⊠ தலைமை தாங்கட்டும்.[p] இரக்கம் காட்டு
கிறவர்கள் சந்தோஷமாக இரக்கம் காட்டட்டும்.[q]

9 உங்களுடைய அன்பு போலியாக இருக்க வேண்டாம்.[r] பொல்

11:33 *நே.மொ., “செல்வங்கள்.” இவை ஆன்மீகச் செல்வங்களைக் குறிக்கின்றன. **11:34** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **11:36** *அதாவது, “அப்படியே ஆகட்டும்.” **12:2** *வே.வா., “சகாப்தத்தின்.” சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., “சித்தம்.” △வே.வா., “நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும்.” **12:3** *வே.வா., “பகிர்ந்து கொடுத்திருக்கிற.” **12:8** *வே.வா., “அறிவுரை சொல்கிறவர்கள்.” #வே.வா., “அறிவுரை சொல்லட்டும்.” △வே.வா., “நன்கொடை கொடுக்கிறவர்கள் தாராளமாகக் கொடுக்கட்டும்.” ⊠வே.வா., “ஆர்வமாக.”

அதி. 11
a ஏசா 40:13
தானி 4:35
b யோபு 41:11

அதி. 12
c ரோ 6:13
d 2கொ 7:1
1பே 1:15
e 2தீ 1:7
f எபே 4:23, 24
g 1தீ 4:15
h நீதி 16:18
கலா 6:3
1பே 5:5
i எபே 2:8
j 1கொ 12:12
k 1கொ 12:25
l எபே 3:7
m 1தீ 5:17
1பே 4:10, 11
n 2தீ 4:2
o உபா 15:11
2கொ 8:2
p 1தெ 5:12
1பே 5:2
q எபே 4:32
r 1தீ 1:5
யாக் 3:17
1பே 1:22

அதி. 12
a சங் 97:10 நீதி 8:13
b பிலி 2:3
c நீதி 13:4
d அப் 18:24, 25
e ரோ 6:22
f அப் 14:22
g பிலி 4:6 1தெ 5:17
h நீதி 3:27 1யோ 3:17
i 1பே 4:9 3யோ 8
j மத் 5:44 லூ 6:27, 28
k யாக் 3:9, 10
l லூ 14:10 லூ 22:24-26 யோவா 13:14 பிலி 2:3
m யோபு 37:24 நீதி 3:7
n 1தெ 5:15 1பே 2:23 1பே 3:9
o 2தீ 2:24 எபி 12:14 யாக் 3:18
p உபா 32:35 எபி 10:30
q லேவி 19:18 மத் 5:39
r நீதி 25:21, 22
s யாத் 23:4 மத் 5:44 லூ 6:27

அதி. 13
t தீத் 3:1 1பே 2:13, 14
u யோவா 19:10, 11
v அப் 17:26
w 1பே 2:13, 14

லாததை அடியோடு வெறுத்துவிடுங்கள்.[a] நல்லதை உறுதியாகப் பிடித்துக்
கொள்ளுங்கள். **10** ஒருவருக்கொருவர் சகோதர அன்பையும் கனிவான
பாசத்தையும் காட்டுங்கள். ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுப்பதில்
முந்திக்கொள்ளுங்கள்.*[b] **11** சுறுசுறுப்பாக* இருங்கள், சோம்பேறியாக
இருக்காதீர்கள்.#[c] யெகோவாவின்△ சக்தியால் நிறைந்து ஆர்வத்துடிப்
போடு செயல்படுங்கள்.[d] அவருக்கு அடிமைகளாக வேலை செய்யுங்
கள்.[e] **12** நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்தில் சகித்தி
ருங்கள்;[f] விடாமல் ஜெபம் செய்யுங்கள்.[g] **13** உங்களிடம் இருப்பதைப்
பரிசுத்தவான்களுடைய தேவைகளுக்கு ஏற்ப அவர்களோடு பகிர்ந்து
கொள்ளுங்கள்.[h] உபசரிப்பதைப் பழக்கமாக்கிக்கொள்ளுங்கள்.[i] **14** உங்க
ளைக் கொடுமைப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிக்கச் சொல்லி கடவுளிடம்
தொடர்ந்து கேளுங்கள்.[j] ஆம், ஆசீர்வதிக்கச் சொல்லிக் கேளுங்கள்,
அவர்களைச் சபிக்காதீர்கள்.[k] **15** சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோ
ஷப்படுங்கள். அழுகிறவர்களோடு அழுங்கள். **16** உங்களைப் பற்றி எப்
படி நினைக்கிறீர்களோ அப்படியே மற்றவர்களைப் பற்றியும் நினையுங்கள்.
மேட்டிமையான விஷயங்களைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்காதீர்கள்,*
மனத்தாழ்மையாக இருங்கள்.[l] உங்களை ஞானிகள் என்று நினைத்துக்கொள்
ளாதீர்கள்.[m]

17 யாருக்கும் தீமைக்குத் தீமை செய்யாதீர்கள்.[n] எல்லாருடைய பார்
வையிலும் எது நல்லதோ அதையே செய்யுங்கள். **18** கூடுமானால், உங்க
ளால் முடிந்தவரை எல்லாரோடும் சமாதானமாக இருங்கள்.[o] **19** அன்புக்
கண்மணிகளே, "'பழிவாங்குவது என் பொறுப்பு, நானே பதிலடி கொடுப்
பேன்' என்று யெகோவா△ சொல்கிறார்" என்று எழுதப்பட்டிருப்பதால்,[p] நீங்
கள் பழிக்குப்பழி வாங்காமல் அதைக் கடவுளுடைய கடும் கோபத்துக்கு
விட்டுவிடுங்கள்.[q] **20** "உங்கள் எதிரி பசியாக இருந்தால், அவனுக்கு ஏதா
வது சாப்பிட கொடுங்கள். அவன் தாகமாக இருந்தால், அவனுக்கு ஏதாவது
குடிக்கக் கொடுங்கள். இப்படிச் செய்யும்போது நெருப்புத் தணலை அவன்
தலைமேல் குவிப்பீர்கள்."*[r] **21** தீமை உங்களை வெல்ல விடாமல்,
தீமையை எப்போதும் நன்மையால் வெல்லுங்கள்.[s]

13 அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்கு* எல்லாரும் கட்டுப்பட்டு நடக்க
வேண்டும்.[t] ஏனென்றால், கடவுளுடைய அனுமதி இல்லாமல் எந்த
அதிகாரமும் இல்லை.[u] தனக்குக் கீழ்ப்பட்ட ஸ்தானங்களில் இருக்கும்படி
கடவுள் அவர்களை அனுமதித்திருக்கிறார்.[v] **2** அதனால், அதிகாரத்தை
எதிர்க்கிறவன் கடவுளுடைய ஏற்பாட்டை எதிர்க்கிறான்; அதை எதிர்க்கிற
வன் தண்டிக்கப்படுவான். **3** நல்ல செயல்களைச் செய்கிறவர்கள் அதிகா
ரத்தில் இருக்கிறவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை, கெட்ட செயல்க
ளைச் செய்கிறவர்கள்தான் பயப்பட வேண்டும்.[w] அதிகாரத்தில் இருக்
கிறவர்களுக்கு நீங்கள் பயப்படாமல் இருக்க வேண்டுமா? அப்படியானால்,

12:10 *வே.வா., "முதல் படியை எடுங்கள்." **12:11** *வே.வா., "பக்திவைராக்கியத்தோடு." #வே.வா., "உங்கள் வேலையில் மந்தமாக இருக்காதீர்கள்." **12:11, 19** △இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12:16** *வே.வா., "மேட்டிமையான எண்ணத்தை வளர்த்துக்கொள்ளாதீர்கள்." **12:20** *அதாவது, ஒருவரைச் சாந்தப்படுத்தி, அவருடைய கல்நெஞ்சத்தைக் கரைய வைப்பதைக் குறிக்கிறது. **13:1** *வே.வா., "உயர் அதிகாரத்துக்கு."

தொடர்ந்து நல்லதைச் செய்யுங்கள்,[a] அவர்களிடமிருந்து உங்களுக்குப்
பாராட்டு கிடைக்கும். **4** உங்களுடைய நன்மைக்காக அவர்கள் கடவு
ளுடைய வேலையாட்களாக இருக்கிறார்கள். நீங்கள் கெட்டது செய்தால்,
அவர்களுக்குப் பயப்பட வேண்டும். ஏனென்றால், தண்டிக்கிற அதிகா
ரம்* அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அது வீணாகக் கொடுக்கப்ப
டவில்லை. அவர்கள் கடவுளுடைய வேலையாட்கள், கெட்டது செய்துவரு
கிறவர்கள்மீது கடவுளுடைய தண்டனையை# நிறைவேற்றுகிறவர்கள்.

5 அதனால், தண்டனை கிடைக்கும்* என்பதற்காக மட்டுமல்ல, உங்களு
டைய மனசாட்சியின் காரணமாகவும் நீங்கள் கட்டுப்பட்டு நடப்பது அவசி
யமாக இருக்கிறது.[b] **6** அதனால்தான், நீங்கள் வரியும் கட்டுகிறீர்கள்.
அதிகாரத்தில் இருக்கிறவர்கள் கடவுளுடைய தொண்டர்களாக எப்போ
தும் சேவை செய்துவருகிறார்கள். **7** அதனால், அவர்கள் எல்லாருக்கும்
நீங்கள் கொடுக்க வேண்டியவற்றைக் கொடுங்கள்: யாருக்கு வரி கொடுக்க
வேண்டுமோ அவருக்கு வரி கொடுங்கள்,[c] யாருக்குப் பணம்* கட்ட
வேண்டுமோ அவருக்குப் பணம்* கட்டுங்கள்; யாருக்குப் பயப்பட வேண்
டுமோ அவருக்குப் பயப்படுங்கள்;[d] யாருக்கு மதிப்புக் கொடுக்க வேண்
டுமோ அவருக்கு மதிப்புக் கொடுங்கள்.[e]

8 யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்பு காட்
டுவதுதான்[f] நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாக இருக்க வேண்
டும். மற்றவர்கள்மேல் அன்பு காட்டுகிறவன் திருச்சட்டத்தை நிறைவேற்று
கிறான்.[g] **9** ஏனென்றால், “மணத்துணைக்குத் துரோகம் செய்யக் கூடாது,[h]
கொலை செய்யக் கூடாது,[i] திருடக் கூடாது,[j] பேராசைப்படக் கூடாது”[k]
என்ற கட்டளைகளும் மற்ற எல்லா கட்டளைகளும், “உங்கள்மேல் நீங்கள்
அன்பு காட்டுவது போல மற்றவர்கள்மேலும்* அன்பு காட்ட வேண்டும்”
என்ற ஒரே கட்டளையில் அடங்கியிருக்கின்றன.[l] **10** அன்பு காட்டுகிற
வன் மற்றவர்களுக்குக் கெட்டது செய்ய மாட்டான்.[m] அதனால், அன்பு
திருச்சட்டத்தை நிறைவேற்றுகிறது.[n]

11 எப்படிப்பட்ட காலத்தில் வாழ்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்
திருப்பதால், அதாவது தூக்கத்திலிருந்து எழுந்திருக்க வேண்டிய நேரம் வந்
துவிட்டது[o] என்பது உங்களுக்குத் தெரிந்திருப்பதால் இவற்றையெல்லாம்
செய்யுங்கள். நாம் கிறிஸ்தவர்களான சமயத்தில் இருந்ததைவிட இப்
போது மீட்பு மிகவும் பக்கத்தில் இருக்கிறது. **12** இரவு முடியப்போகி
றது; பகல் நெருங்கிவிட்டது. அதனால், நாம் இருளுக்குரிய செயல்களைக்
களைந்துவிட்டு,[p] ஒளிக்குரிய ஆயுதங்களை அணிந்துகொள்ள வேண்
டும்.[q] **13** குடித்துக் கும்மாளம் போடுதல், குடிவெறி, பாலியல் முறைகேடு,
வெட்கங்கெட்ட நடத்தை,*[r] சண்டை சச்சரவு, பொறாமை ஆகியவற்றைத்
தவிர்த்து,[s] பகலில் நடக்கிறவர்களைப் போல் கண்ணியமாக நடக்க வேண்
டும்.[t] **14** அதனால், பாவ ஆசைகளின்படி நடக்க[u] முன்கூட்டியே திட்டம்
போடாதீர்கள். அதற்குப் பதிலாக, எஜமானாகிய இயேசு கிறிஸ்துவை
அணிந்துகொள்ளுங்கள்.*[v]

13:4 *நே.மொ., “வாள்.” #நே.மொ., “கடும் கோபத்தை.” **13:5** *நே.மொ., “கடும் கோபத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும்.” **13:7** *வே.வா., “கப்பம்.” **13:9** *வே.வா., “சக மனிதர்மேலும்.” **13:13** *சொல் பட்டியலைப் பாருங்கள். **13:14** *வே.வா., “இயேசு கிறிஸ்துவின் குணங்களைப் பின்பற்றுங்கள்.”

அதி. 13
a 1பே 3:13
b 1பே 2:19; 1பே 3:16
c மத் 22:21; மாற் 12:17; லூ 20:25
d நீதி 24:21
e 1பே 2:13, 17
f கொலோ 3:14; 1தீ 1:5; 1யோ 4:11
g கலா 5:14; யாக் 2:8
h யாத் 20:14; மத் 5:27, 28; 1கொ 6:9, 10
i ஆதி 9:6; உபா 5:17
j யாத் 20:15
k யாத் 20:17
l லேவி 19:18; மத் 22:39
m லூ 6:31; 2தீ 2:24
n மத் 22:37-40
o லூ 21:36; 1தெ 5:6
p எபே 5:10, 11
q 2கொ 6:4, 7; எபே 6:11; 1தெ 5:8
r எபே 4:19; 1பே 4:3
s 2கொ 12:20
t 1பே 2:12
u கலா 5:16
v 1கொ 11:1; கலா 3:27; எபே 4:24

14 விசுவாசத்தில் பலவீனமாக இருப்பவனை ஏற்றுக்கொள்ளுங்கள்.[a]
அவனுடைய தனிப்பட்ட கருத்துகளை* வைத்து அவனை நியாயந்
தீர்க்காதீர்கள். **2** ஒருவன் எல்லா விதமான உணவையும் சாப்பிடலா
மென நம்புகிறான், விசுவாசத்தில் பலவீனமாக இருப்பவனோ காய்கறிகளை
மட்டுமே சாப்பிடுகிறான். **3** எல்லா விதமான உணவையும் சாப்பிடுகிறவன்
அதைச் சாப்பிடாதவனைத் தாழ்வாகக் கருத வேண்டாம், சாப்பிடாதவனும்
சாப்பிடுகிறவனை நியாயந்தீர்க்க வேண்டாம்.[b] ஏனென்றால், அவனையும்
கடவுள் ஏற்றுக்கொண்டிருக்கிறார். **4** வேறொருவருடைய வேலைக்கா
ரனை நியாயந்தீர்க்க நீங்கள் யார்?[c] அவன் நிற்பானா விழுவானா என்ப
தைத் தீர்மானிப்பது அவன் எஜமானுடைய பொறுப்பு.[d] உண்மையில்,
அவன் நிற்பான், யெகோவாவினால்* அவனை நிற்க வைக்க முடியும்.

5 ஒருவன் ஒரு நாளை மற்றொரு நாளைவிட விசேஷமாக நினைக்
கிறான்.[e] வேறொருவனோ எல்லா நாட்களையும் ஒரே மாதிரி நினைக்கி
றான்.[f] எதுவானாலும் சரி, அவனவன் தன் மனதில் நன்றாக உறுதிப்
படுத்திக்கொள்ளட்டும். **6** ஒரு நாளை விசேஷமாக நினைக்கிறவன் அதை
யெகோவாவுக்காக* விசேஷமாக நினைக்கிறான். அதுபோலவே, சாப்பி
டுகிறவன் யெகோவாவுக்காக* சாப்பிட்டு, அவருக்கு நன்றி சொல்கிறான்.[g]
சாப்பிடாதவனும் யெகோவாவுக்காக* சாப்பிடாமலிருந்து, அவருக்கு நன்றி
சொல்கிறான்.[h] **7** சொல்லப்போனால், நம்மில் யாரும் நமக்காகவே வாழ்வ
துமில்லை,[i] நமக்காகவே இறப்பதுமில்லை. **8** நாம் வாழ்ந்தாலும் யெகோ
வாவுக்காக* வாழ்கிறோம்,[j] இறந்தாலும் யெகோவாவுக்காக* இறக்கிறோம்.
அதனால், நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் யெகோவாவுக்கு* சொந்தமான
வர்களாக இருக்கிறோம்.[k] **9** இதற்காகத்தான், இறந்தவர்களுக்கும் உயிருள்
ளவர்களுக்கும் எஜமானாக இருப்பதற்கு கிறிஸ்து இறந்து உயிரோடு
எழுந்தார்.[l]

10 அதனால், நீங்கள் ஏன் உங்களுடைய சகோதரனை நியாயந்
தீர்க்கிறீர்கள்?[m] ஏன் உங்களுடைய சகோதரனைத் தாழ்வாக நினைக்கிறீர்
கள்? நாம் எல்லாரும் கடவுளுடைய நியாயத்தீர்ப்பு மேடைக்கு முன்னால்
நிற்போம், இல்லையா?[n] **11** ஏனென்றால், "'எனக்கு முன்னால் எல்லாரும்
மண்டிபோடுவார்கள், என்னைக் கடவுள் என்று எல்லாரும் வெளிப்படையா
கச் சொல்வார்கள்[o] என என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்'#[p]
என்று யெகோவா* சொல்கிறார்" என எழுதப்பட்டிருக்கிறது. **12** அத
னால், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய செயல்களுக்காகக் கடவுளுக்குக்
கணக்குக் கொடுக்க வேண்டும்.[q]

13 அதனால், நாம் இனி ஒருவரை ஒருவர் நியாயந்தீர்க்கக் கூடாது.[r]
ஒரு சகோதரனுடைய விசுவாசம் பலவீனமாவதற்கோ அவன் விசுவாசத்
தைவிட்டு விலகுவதற்கோ நாம் காரணமாகிவிடக் கூடாது என்ற தீர்மானத்
தோடும் இருக்க வேண்டும்.[s] **14** இயற்கையாகவே எதுவும் தீட்டானது
கிடையாது என்று நம் எஜமானாகிய இயேசுவைப் பின்பற்றுகிற நான் அறிந்
திருக்கிறேன்,[t] அதை நம்பவும் செய்கிறேன். ஆனால், ஒருவன் ஏதோ
வொன்றைத் தீட்டு என நினைக்கும்போதுதான் அது அவனுக்குத் தீட்டாக

14:1 *அல்லது, "மனதுக்குள் வருகிற கேள்விகளை." **14:4, 6, 8, 11** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **14:11** #வே.வா., "நான் உயிரோடு இருப்பது எந்தளவு நிச்சயமோ அந்தளவு நிச்சயமாகச் சொல்கிறேன்."

அதி. 14
- a ரோ 15:1; 1தெ 5:14
- b கொலோ 2:16
- c மத் 7:1; யாக் 4:12
- d 1கொ 4:4
- e கலா 4:10
- f கொலோ 2:16
- g 1தீ 4:4
- h 1கொ 10:31
- i 1கொ 6:19, 20
- j சங் 146:2; 1பே 4:1, 2
- k 1தெ 4:14
- l 1தெ 5:10; வெளி 1:17, 18
- m லூ 6:37; ரோ 14:4
- n அப் 10:42; 2கொ 5:10
- o ஏசா 45:23
- p ஏசா 49:18
- q பிர 12:14; மத் 12:36; 2கொ 5:10
- r மத் 7:1
- s மத் 18:6; 1கொ 8:9; 1கொ 10:32
- t மத் 15:11; அப் 10:15; 1தீ 4:4

இருக்கும். **15** நீங்கள் சாப்பிடுகிற உணவு உங்கள் சகோதரனுக்கு மனசங்
கடத்தை உண்டாக்கினால், நீங்கள் அன்பாக நடந்துகொள்ளவில்லை என்று
அர்த்தம்.[a] உங்கள் உணவின் காரணமாக அவனை அழித்துவிடாதீர்கள்;
அவனுக்காகவும்தானே கிறிஸ்து இறந்தார்.[b] **16** அதனால், நீங்கள் செய்
கிற நன்மை உங்களுக்குக் கெட்ட பெயர் வாங்கித்தராமல் பார்த்துக்
கொள்ளுங்கள். **17** கடவுளுடைய அரசாங்கம் சாப்பிடுவதோடும் குடிப்ப
தோடும் சம்பந்தப்பட்டதாக இல்லை.[c] கடவுளுடைய சக்தியால் உண்டாகிற
நீதியோடும் சமாதானத்தோடும் மகிழ்ச்சியோடுமே சம்பந்தப்பட்டதாக
இருக்கிறது. **18** இதை மனதில் வைத்து கிறிஸ்துவுக்கு அடிமையாக
வேலை செய்கிறவன் கடவுளுக்கு ஏற்றவனாகவும் மனிதர்களுக்குப் பிரிய
மானவனாகவும் இருக்கிறான்.

19 அதனால், மற்றவர்களோடு சமாதானமாக இருப்பதற்கும்[d] ஒருவரை
ஒருவர் பலப்படுத்துவதற்கும் உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்
யுங்கள்.[e] **20** கடவுள் கட்டியிருப்பதை உணவின் காரணமாக இடித்துப்
போடாதீர்கள்.[f] எல்லாமே சுத்தமானதுதான். ஆனால், ஒருவன் சாப்பிடுகிற
உணவு மற்றவர்களுடைய விசுவாசத்தைப் பலவீனமாக்கினால் அது அவ
னுக்குத் தீங்கையே உண்டாக்கும்.*[g] **21** இறைச்சி சாப்பிடுவதோ திராட்ச
மது குடிப்பதோ வேறெதாவது செய்வதோ உங்கள் சகோதரனுடைய விசு
வாசத்தைப் பலவீனமாக்கினால், அதைச் செய்யாமல் இருப்பதே நல்லது.[h]
22 உங்களுடைய நம்பிக்கையை உங்களுக்கும் கடவுளுக்கும் இடையில்
மட்டுமே வைத்துக்கொள்ளுங்கள். தான் சரி என்று நம்புவதை ஒருவன்
செய்யும்போது தன்னையே அவன் குற்றவாளியாகத் தீர்க்காதிருந்தால்,
அவன் சந்தோஷமானவன். **23** ஆனால், ஏதோவொரு உணவை அவன்
சந்தேகத்தோடு சாப்பிடுகிறான் என்றால், ஏற்கெனவே குற்றவாளியாகத்
தீர்க்கப்பட்டுவிட்டான். ஏனென்றால், தான் செய்வது சரி என்ற நம்பிக்கை
யோடு அவன் சாப்பிடவில்லை. சொல்லப்போனால், நம்பிக்கை இல்லாமல்
செய்யப்படுகிற எதுவும் பாவம்தான்.

15 ஆனாலும், விசுவாசத்தில் பலமாக இருக்கிற நாம் பலவீனமாக
இருக்கிறவர்களுடைய பலவீனங்களைத் தாங்கிக்கொள்ளக் கட
மைப்பட்டிருக்கிறோம்.[i] நமக்குப் பிரியமாக நாம் நடந்துகொள்ளக் கூடாது.[j]
2 நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பலப்படுத்துவதற்காக அவர்
களுக்கு நன்மை செய்ய வேண்டும், அவர்களுக்குப் பிரியமாக நடந்து
கொள்ள வேண்டும்.[k] **3** கிறிஸ்துவும் தனக்குப் பிரியமாக நடந்துகொள்ளா
மல்,[l] “உங்களைப் பழித்துப் பேசியவர்களின் பழிப்பேச்சுகளை நான்
தாங்கிக்கொண்டேன்”[m] என்று எழுதப்பட்டிருக்கிறபடியே நடந்துகொண்
டார். **4** அன்று எழுதப்பட்ட வேதவசனங்கள் எல்லாம் நமக்கு அறி
வுரை கொடுப்பதற்காகவே எழுதப்பட்டன;[n] அவை நமக்கு நம்பிக்கை
தருகின்றன.[o] ஏனென்றால், அவை நம்மை ஆறுதல்படுத்துகின்றன, சகித்தி
ருக்க நமக்கு உதவுகின்றன.[p] **5** சகிப்புத்தன்மையையும் ஆறுதலையும் தரு
கிற கடவுள், கிறிஸ்து இயேசுவுக்கு இருந்த அதே சிந்தையை உங்களுக்கும்
கொடுக்கட்டும். **6** அப்போதுதான், நீங்கள் ஒன்றுசேர்ந்து[q] நம் எஜமானா
கிய இயேசு கிறிஸ்துவின் கடவுளை, அவருடைய தகப்பனை, ஒரே குரலில்*
புகழ்வீர்கள்.

14:20 * வே.வா., “அது தவறு.” **15:6** * நே.மொ., “வாயினால்.”

அதி. 14
a எபே 5:2
b 1கொ 8:10, 11
c 1கொ 8:8
d மத் 5:9, ரோ 12:18
e 1கொ 14:12, எபி 10:24
f ரோ 14:3, 1கொ 8:11
g 1கொ 8:9
h ரோ 14:13, 1கொ 8:13, 1கொ 10:24

அதி. 15
i ரோ 14:1, 1தெ 5:14
j 1கொ 10:24
k 1கொ 9:22, பிலி 2:4
l மாற் 10:45, யோவா 5:30
m சங் 69:9
n 1கொ 10:11, 2தீ 3:16, 17, 2பே 1:19
o சங் 119:49, 50, எபி 3:6, 1பே 1:10
p ரோ 5:3, 4
q 1கொ 1:10, 2கொ 13:11, பிலி 2:2, 1பே 3:8

7 அதனால், கிறிஸ்து நம்மை வரவேற்றதுபோல்[*][a] நீங்களும் ஒருவரை
ஒருவர் வரவேற்க[#] வேண்டும்.[b] அப்போது, கடவுளுக்குப் புகழ் சேர்ப்
பீர்கள். **8** கடவுள் உண்மையுள்ளவர் என்பதை நிரூபிப்பதற்காகவும் முன்
னோர்களுக்கு அவர் கொடுத்த வாக்குறுதிகளை உறுதிப்படுத்துவதற்காக
வும்,[c] விருத்தசேதனம் செய்தவர்களுக்குக் கிறிஸ்து ஊழியரானார்.[d]
9 அதோடு, மற்ற தேசத்து மக்கள் கடவுளுடைய இரக்கத்தைப் பெற்று
அவரைப் புகழ்வதற்காகவும்[e] கிறிஸ்து ஊழியரானார் என்று நான் சொல்கி
றேன். “அதனால் எல்லா மக்கள் மத்தியிலும் நான் உங்களைப் புகழ்வேன்,
உங்களுடைய பெயரைப் புகழ்ந்து பாடுவேன்”[f] என்று எழுதப்பட்டிருக்கிற
படியே நடந்தது. **10** அதோடு, “தேசங்களே, அவருடைய ஜனங்களோடு
சேர்ந்து சந்தோஷப்படுங்கள்” என்றும் எழுதப்பட்டிருக்கிறது.[g] **11** “தேசங்
களே, எல்லாரும் யெகோவாவை[*] புகழுங்கள்; எல்லா மக்களும் அவரைப்
புகழ்வார்களாக” என்றும் எழுதப்பட்டிருக்கிறது.[h] **12** ஏசாயாவும் இப்படிச்
சொல்கிறார்: “ஈசாயின் வேராக இருப்பவர் தோன்றுவார்,[i] பல தேசத்து மக்
களை ஆட்சி செய்வதற்கு அவர் எழும்புவார்.[j] அந்த மக்கள் அவர்மேல்
நம்பிக்கை வைப்பார்கள்.”[k] **13** நீங்கள் கடவுள்மேல் விசுவாசம் வைத்தி
ருப்பதால், நம்பிக்கை தருகிற கடவுள் உங்களை எல்லாவித சந்தோஷத்
தாலும் சமாதானத்தாலும் நிரப்பட்டும். அப்போது, கடவுளுடைய சக்தியின்
வல்லமையால் உங்களுடைய நம்பிக்கை அதிகமதிகமாகப் பலப்படும்.[l]

14 என் சகோதரர்களே, நீங்கள் எல்லா அறிவும் நிறைந்தவர்களாக
இருப்பது போலவே, நல்ல செயல்கள் செய்வதற்குத் தயாரானவர்களாகவும்
ஒருவருக்கொருவர் புத்திசொல்ல[*] தகுதியுள்ளவர்களாகவும் இருக்கிறீர்கள்
என்பதை உறுதியாக நம்புகிறேன். **15** இருந்தாலும் சகோதரர்களே, கடவு
ளுடைய அளவற்ற கருணை எனக்குக் கிடைத்திருப்பதால் இப்போது
உங்களுக்குச் சில குறிப்புகளை மறுபடியும் ஞாபகப்படுத்துவதற்காக ஒளி
வுமறைவில்லாமல் எழுதியிருக்கிறேன். **16** கிறிஸ்து இயேசுவின் தொண்ட
னாக நான் கடவுளுடைய நல்ல செய்தியை மற்ற தேசத்து மக்களுக்கு அறி
விப்பதற்காக அந்த அளவற்ற கருணையைப் பெற்றேன்.[m] மற்ற தேசத்து
மக்கள் கடவுளுடைய சக்தியால் புனிதமாக்கப்பட்டு அவருக்குப் பிரியமான
காணிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த நல்ல செய்
தியை அறிவிக்கும் பரிசுத்த வேலையைச் செய்து வருகிறேன்.[n]

17 அதனால், கிறிஸ்து இயேசுவின் சீஷனாகிய நான் கடவுளுக்குச் செய்
யும் சேவைகளை நினைத்து சந்தோஷப்பட காரணம் இருக்கிறது.
18 மற்ற தேசத்து மக்கள் கீழ்ப்படிவதற்காகக் கிறிஸ்து என் மூலம் செய்த
வற்றைத் தவிர வேறெதைப் பற்றியும் பேசுவதற்கு நான் துணிய மாட்டேன்.
என்னுடைய சொல்லாலும் செயலாலும், **19** அற்புதங்களாலும் அடையா
ளங்களாலும்,[o] கடவுளுடைய சக்தியின் வல்லமையாலும் எல்லாவற்றையும்
அவர் செய்தார். அதனால், நான் எருசலேமிலிருந்து இல்லிரிக்கம்வரை சுற்
றிலும் போய், கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தியை முழுமையாகப் பிர
சங்கித்திருக்கிறேன்.[p] **20** கிறிஸ்துவைப் பற்றி இதுவரை அறிவிக்கப்படாத
இடங்களில் மட்டும்தான் அந்த நல்ல செய்தியை அறிவிக்க வேண்டும்

15:7 [*]வே.வா., “ஏற்றுக்கொண்டதுபோல்.” [#]வே.வா., “ஏற்றுக்கொள்ள.” **15:11** [*]இணைப்பு A5-ஐப் பாருங்கள். **15:14** [*]வே.வா., “ஆலோசனை சொல்ல.”

அதி. 15
a யோவா 6:37
b பிலே 10, 17
c ஆதி 22:16-18; சங் 89:3
d மத் 15:24; யோவா 1:11
e ரோ 9:23, 24
f 2சா 22:50; சங் 18:49
g உபா 32:43
h சங் 117:1
i வெளி 5:5
j ஆதி 49:10
k ஏசா 11:1, 10; மத் 12:21
l ஏசா 40:31
m ரோ 11:13; கலா 2:7, 8
n அப் 20:24
o அப் 15:12; 2கொ 12:12
p அப் 21:18, 19

என்பதை என்னுடைய குறிக்கோளாக வைத்தேன். ஏனென்றால், வேறொரு
வன் கட்டிய அஸ்திவாரத்தின் மேல் கட்ட எனக்கு விருப்பமில்லை.
21 அதனால், “அவரைப் பற்றி யாருக்குச் சொல்லப்படவில்லையோ அவர்
கள் பார்ப்பார்கள், அவரைப் பற்றி யார் கேள்விப்படவில்லையோ அவர்கள்
புரிந்துகொள்வார்கள்” என்று எழுதப்பட்டிருக்கிறபடியே[a] செய்யத் தீர்மான
மாயிருந்தேன்.

22 அதனால்தான், உங்களிடம் வருவதற்குப் பல தடவை எனக்குத்
தடங்கல் ஏற்பட்டது. **23** ஆனால், இந்த இடங்களில் நான் பிரசங்கிக்காத
பகுதிகள் இனி எதுவும் இல்லை. அதோடு, உங்களிடம் வருவதற்குப் பல*
வருஷங்களாக நான் ஏங்கிக்கொண்டிருக்கிறேன். **24** அதனால், ஸ்பெயி
னுக்குப் போகும் வழியில் உங்களைச் சந்தித்து சில காலமாவது உங்களோடு
சந்தோஷமாக நேரம் செலவு செய்வேன் என்று எதிர்பார்க்கிறேன். பின்பு,
அங்கிருந்து சற்றுத் தூரம் என் கூடவே வந்து என்னை வழியனுப்புவீர்
கள் என்றும் நம்புகிறேன். **25** இப்போது, எருசலேமில் இருக்கிற பரிசுத்த
வான்களுக்கு உதவி செய்ய* புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.[b] **26** மக்கெ
தோனியாவிலும் அகாயாவிலும் இருக்கிற சகோதரர்கள் எருசலேமில் உள்ள
ஏழை எளிய பரிசுத்தவான்களுக்குச் சந்தோஷமாக நன்கொடை கொடுத்தி
ருக்கிறார்கள்.[c] **27** உண்மையில், அப்படிக் கொடுப்பதற்கு அவர்கள் கடன்
பட்டிருந்தார்கள். கடவுளிடமிருந்து அந்தப் பரிசுத்தவான்கள் பெற்றுக்கொண்
டதை மற்ற தேசத்து மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதனால், மற்ற
தேசத்து மக்கள் தங்களுடைய பொருள்களைக் கொடுத்து அந்தப் பரிசுத்
தவான்களுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருந்தார்கள்.[d] **28** இந்த நன்
கொடையைப் பரிசுத்தவான்களின் கையில் பத்திரமாக ஒப்படைத்து என்
வேலையை முடித்த பின்பு, ஸ்பெயினுக்குப் போகும் வழியில் உங்களைச்
சந்திக்க வருவேன். **29** அப்போது, கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட
நிறைவான ஆசீர்வாதங்களோடு வருவேன்.

30 சகோதரர்களே, நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்
திருக்கிற விசுவாசத்தின் காரணமாகவும், கடவுளுடைய சக்தி பொழிகிற
அன்பின் காரணமாகவும் நான் உங்களைக் கேட்டுக்கொள்வது இதுதான்:
என்னோடு சேர்ந்து எனக்காகக் கடவுளிடம் உருக்கமாக ஜெபம் செய்
யுங்கள்.[e] **31** யூதேயாவில் நல்ல செய்தியை ஏற்றுக்கொள்ளாத ஆட்களி
டமிருந்து நான் பாதுகாக்கப்பட வேண்டும்[f] என்றும், எருசலேமில் உள்ள
பரிசுத்தவான்களுக்கு நான் செய்யப்போகிற உதவியை அவர்கள் மகிழ்ச்சி
யோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்[g] என்றும் ஜெபம் செய்யுங்கள். **32** அப்
போதுதான், கடவுளுடைய விருப்பத்தின்படி* நான் சந்தோஷமாக வந்து
உங்களோடு சேர்ந்து புத்துணர்ச்சி அடைவேன். **33** சமாதானத்தைத் தரு
கிற கடவுள் உங்கள் எல்லாரோடும் இருக்கட்டும்.[h] ஆமென்.*

16 கெங்கிரேயா[i] சபையில் ஊழியம் செய்கிற நம் சகோதரி பெபே
யாளை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்.* **2** நீங்கள் பரிசுத்
தவான்களை வரவேற்பதுபோல் நம் எஜமானைப் பின்பற்றுகிற அவளை
யும் வரவேற்று அவளுக்குத் தேவையான எல்லா உதவிகளையும்

15:23 *அல்லது, “சில.” **15:25** *நே.மொ., “சேவை செய்ய.” **15:32** *வே.வா., “சித்தத்தின்படி.” **15:33** *அதாவது, “அப்படியே ஆகட்டும்.” **16:1** *வே.வா., “சிபாரிசு செய்கிறேன்.”

அதி. 15
a ஏசா 52:15
b அப் 19:21; அப் 20:22
c 1கொ 16:1; 2கொ 8:1-4; 2கொ 9:2, 12
d கலா 6:6; எபி 13:16
e 2கொ 1:11; எபே 6:18; கொலோ 4:3; 1தெ 5:25
f 2தெ 3:1, 2
g ரோ 15:26
h 1கொ 14:33; பிலி 4:9

அதி. 16
i அப் 18:18

அதி. 16
a ரோ 12:13
1யோ 3:17
b அப் 18:2
அப் 18:24, 26
2தீ 4:19
c 1யோ 3:16
d 1கொ 16:19
கொலோ 4:15
பிலே 2
e ரோ 16:11
f மத் 7:15
தீத் 3:10
2யோ 10

செய்யுங்கள்.[a] ஏனென்றால், அவள் நிறைய பேருக்கு ஆதரவாக இருந்
தாள், எனக்கும்கூட ஆதரவாக இருந்தாள்.
3 கிறிஸ்து இயேசுவின் சேவையில் என் சக வேலையாட்களாக இருக்கிற
பிரிஸ்கில்லாளுக்கும் ஆக்கில்லாவுக்கும்[b] என்னுடைய வாழ்த்துக்களைச்
சொல்லுங்கள். **4** எனக்காக அவர்கள் தங்களுடைய உயிரையே பணயம்
வைத்தார்கள்.[c] அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன், மற்ற தேசத்தாரின்
எல்லா சபைகளும்கூட நன்றி சொல்கின்றன. **5** அந்தத் தம்பதியின் வீட்
டில் கூடுகிற சபைக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள்.[d] ஆசியாவில் முதன்முத
லாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களில் ஒருவரான என் அன்புக்குரிய
எப்பனெத்துவுக்கு வாழ்த்துச் சொல்லுங்கள். **6** உங்களுக்காகக் கடினமாக
உழைத்த மரியாளுக்கு வாழ்த்துச் சொல்லுங்கள். **7** என்னோடு கைதிகளா
யிருந்த என்னுடைய சொந்தக்காரர்கள்[e] அன்றோனீக்குவுக்கும் யூனியாவுக்
கும் வாழ்த்துச் சொல்லுங்கள். இவர்கள் அப்போஸ்தலர்களிடம் நல்ல பெயர்
எடுத்தவர்கள், எனக்கு முன்பே கிறிஸ்துவின் சீஷர்களானவர்கள்.
8 நம் எஜமானைப் பின்பற்றுகிற என் அன்புக்குரிய அம்பிலியாத்துக்கு
வாழ்த்துச் சொல்லுங்கள். **9** கிறிஸ்துவின் சேவையில் நம்முடைய சக
வேலையாளாகிய உர்பானுவுக்கும், என்னுடைய அன்பான ஸ்தாக்கிக்கு
வுக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள். **10** கிறிஸ்துவின் சீஷனாக நல்ல
பெயர் எடுத்த அப்பெல்லேவுக்கு வாழ்த்துச் சொல்லுங்கள். அரிஸ்தொபுலு
வின் வீட்டில் இருப்பவர்களுக்கு வாழ்த்துச் சொல்லுங்கள். **11** என்னு
டைய சொந்தக்காரர் ஏரோதியோனுக்கு வாழ்த்துச் சொல்லுங்கள். நம்
முடைய எஜமானைப் பின்பற்றுகிற நர்கீசுவின் வீட்டில் இருப்பவர்களுக்கு
வாழ்த்துச் சொல்லுங்கள். **12** நம் எஜமானுக்காகக் கடினமாய் உழைத்து
வருகிற பெண்களான திரிபேனாளுக்கும் திரிபோசாளுக்கும் வாழ்த்துச்
சொல்லுங்கள். நம் எஜமானுக்காக கடினமாய் உழைத்த அன்புக்குரிய பெர்
சியாளுக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள். **13** நம் எஜமானால் தேர்ந்தெ
டுக்கப்பட்ட ரூபுவுக்கும் அவனுடைய அம்மாவுக்கும் வாழ்த்துச் சொல்லுங்
கள்; அவர் எனக்கும் அம்மாதான். **14** அசிங்கிரீத்து, பிலெகோன், எர்மே,
பத்திரொபா, எர்மா ஆகியோருக்கும் அவர்களோடு இருக்கிற சகோதரர்
களுக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள். **15** பிலொலோகுவுக்கும், யூலியாளுக்
கும், நேரேயைக்கும், அவனுடைய சகோதரிக்கும், ஒலிம்பாவுக்கும், அவர்க
ளோடு இருக்கிற பரிசுத்தவான்கள் எல்லாருக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள்.
16 சுத்தமான இதயத்தோடு ஒருவருக்கொருவர் முத்தம் கொடுத்து வாழ்த்
துச் சொல்லுங்கள். கிறிஸ்துவின் எல்லா சபைகளும் உங்களுக்கு வாழ்த்துச்
சொல்கின்றன.
17 சகோதரர்களே, நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். நீங்கள் கற்
றுக்கொண்ட போதனைக்கு முரணாகப் பிரிவினைகளையும் தடைகளையும்
ஏற்படுத்துகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள், அவர்களிடமி
ருந்து விலகியிருங்கள்.[f] **18** அப்படிப்பட்டவர்கள் நம்முடைய எஜமானா
கிய கிறிஸ்துவுக்கு அடிமைகளாக இல்லை, தங்களுடைய ஆசைகளுக்கே*
அடிமைகளாக இருக்கிறார்கள். கள்ளம்கபடம் இல்லாதவர்களுடைய உள்
ளத்தைத் தங்கள் நயமான பேச்சினாலும் புகழ்ச்சியினாலும் ஏமாற்றுகிறார்
கள். **19** நீங்கள் கீழ்ப்படிந்து நடப்பதை எல்லாரும் அறிந்திருக்கிறார்கள்;

16:18 * வே.வா., “வயிற்றுக்கே.”

அதனால், உங்களை நினைத்து சந்தோஷப்படுகிறேன். ஆனால், நீங்கள்
நன்மை செய்வதில் ஞானமுள்ளவர்களாகவும், தீமையைப் பற்றித் தெரியா
தவர்களாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.[a] **20** சமாதானத்
தைத் தருகிற கடவுள் சீக்கிரத்தில் சாத்தானை உங்கள் காலடியில் நசுக்கிப்
போடுவார்.[b] நம் எஜமானாகிய இயேசுவின் அளவற்ற கருணை
உங்களோடு இருக்கட்டும்.

21 என்னுடைய சக வேலையாளாகிய தீமோத்தேயுவும், என்னுடைய
சொந்தக்காரர்கள்[c] லூகியுவும் யாசோனும் சொசிபத்தரும் உங்களுக்கு
வாழ்த்துச் சொல்கிறார்கள்.

22 பவுல் சொல்லச்சொல்ல இந்தக் கடிதத்தை எழுதிய தெர்தியுவாகிய
நான் கிறிஸ்தவ வாழ்த்துக்களை உங்களுக்குச் சொல்கிறேன்.

23 என்னையும் சபையார் எல்லாரையும் உபசரித்து வருகிற காயு[d] உங்க
ளுக்கு வாழ்த்துச் சொல்கிறார். நகர பொருளாளர்* ஏரஸ்துவும் அவருடைய
சகோதரன் குவர்த்துவும் உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள். **24** *—

25 கடவுளால் உங்களைப் பலப்படுத்த முடியும் என்பதை நான்
அறிவிக்கிற நல்ல செய்தியும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கப்ப
டுகிற செய்தியும் காட்டுகின்றன. அந்த நல்ல செய்தி, நீண்ட காலம் மறை
பொருளாக வைக்கப்பட்டு இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிற பரிசுத்த
ரகசியத்தோடு[e] ஒத்திருக்கிறது. **26** தீர்க்கதரிசனப் புத்தகங்களில் வெளிப்ப
டுத்தப்பட்டுள்ள இந்த ரகசியம், எல்லா தேசத்து மக்களுக்கும் அறிவிக்கப்
பட்டு வருகிறது. என்றென்றும் இருக்கிற கடவுளின் கட்டளைப்படி அவர்கள்
விசுவாசித்துக் கீழ்ப்படிவதற்காக அவர்கள் மத்தியில் அறிவிக்கப்பட்டு வரு
கிறது. **27** அந்தக் கடவுள் ஒருவர்தான் ஞானமுள்ளவர்.[f] இயேசு கிறிஸ்து
வின் மூலம் அவருக்கே என்றென்றும் புகழ் உண்டாவதாக. ஆமென்.*

16:23 *வே.வா., "நிர்வாகி." **16:24** *இணைப்பு A3-ஐப் பாருங்கள். **16:27** *அதாவது, "அப்படியே ஆகட்டும்."

அதி. 16
a 1கொ 14:20
b ஆதி 3:15; எபி 2:14
c ரோ 16:7
d 1கொ 1:14
e எபே 1:9-12; கொலோ 1:26, 27
f ரோ 11:33

கொரிந்தியருக்கு

எழுதப்பட்ட முதலாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1-3)
- கொரிந்தியர்களுக்காகக் கடவுளுக்கு பவுல் நன்றி சொல்கிறார் (4-9)
- ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்ற ஆலோசனை (10-17)
- கிறிஸ்து கடவுளுடைய வல்லமை, கடவுளுடைய ஞானம் (18-25)
- யெகோவாவைப் பற்றியே பெருமை பேசுங்கள் (26-31)

2 கொரிந்துவில் பவுல் பிரசங்கிக்கிறார் (1-5)
- கடவுளின் ஞானம் உயர்ந்தது (6-10)
- ஆன்மீகச் சிந்தையுள்ள மனிதனும் உலகச் சிந்தையுள்ள மனிதனும் (11-16)

3 கொரிந்தியர்களுக்கு இன்னமும் ஆன்மீகச் சிந்தை இல்லை (1-4)
- கடவுள்தான் வளர வைக்கிறார் (5-9)
  - கடவுளுடைய சக வேலையாட்கள் (9)

நெருப்பில் எரிந்துபோகாத பொருள்களை வைத்துக் கட்டுங்கள் (10-15)
நீங்கள்தான் கடவுளின் ஆலயம் (16, 17)
உலக ஞானம் கடவுளின் பார்வையில் முட்டாள்தனம் (18-23)

4 நிர்வாகிகள் உண்மையோடு இருக்க வேண்டும் (1-5)
கிறிஸ்துவின் ஊழியர்கள் மனத்தாழ்மையாக இருக்க வேண்டும் (6-13)
"எழுதப்பட்ட விஷயங்களுக்கு மிஞ்சிப் போகாதீர்கள்" (6)
கிறிஸ்தவர்கள் காட்சிப்பொருளாக இருக்கிறார்கள் (9)
பவுலுக்குத் தன் ஆன்மீகப் பிள்ளைகள்மீது அக்கறை (14-21)

5 பாலியல் முறைகேட்டில் ஈடுபட்ட மனிதன் (1-5)
புளிப்புள்ள கொஞ்சம் மாவு பிசைந்த மாவு முழுவதையும் புளிக்க வைத்துவிடும் (6-8)
பொல்லாத மனிதனை நீக்க வேண்டும் (9-13)

6 சகோதரர்கள் மத்தியில் வழக்குகள் (1-8)
கடவுளுடைய அரசாங்கத்துக்குள் அனுமதிக்கப்படாதவர்கள் (9-11)
உங்கள் உடலால் கடவுளை மகிமைப்படுத்துங்கள் (12-20)
"பாலியல் முறைகேட்டிலிருந்து விலகி ஓடுங்கள்" (18)

7 திருமணம் ஆனவர்களுக்கும் ஆகாதவர்களுக்கும் ஆலோசனை (1-16)
நீங்கள் எந்த நிலையில் அழைக்கப்பட்டீர்களோ அந்த நிலையிலேயே இருங்கள் (17-24)
திருமணமாகாதவர்களும் விதவைகளும் (25-40)
திருமணம் செய்யாமல் இருப்பதால் வரும் நன்மைகள் (32-35)
"எஜமானைப் பின்பற்றுகிற ஒருவரையே" திருமணம் செய்யுங்கள் (39)

8 சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவு (1-13)
ஒரே கடவுள்தான் நமக்கு இருக்கிறார் (5, 6)

9 பவுலின் முன்மாதிரி (1-27)
"போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டக் கூடாது" (9)
"நல்ல செய்தியை நான் அறிவிக்காவிட்டால் எனக்குக் கேடுதான்!" (16)
எல்லா விதமான ஆட்களுக்கும் எல்லா விதமாகவும் ஆனேன் (19-23)
வாழ்வுக்கான ஓட்டத்தில் சுயக்கட்டுப்பாடு (24-27)

10 இஸ்ரவேலர்கள் செய்ததை நமக்கு எச்சரிக்கை (1-13)
சிலை வழிபாட்டைப் பற்றி எச்சரிக்கை (14-22)
யெகோவாவின் மேஜை, பேய்களின் மேஜை (21)
சுதந்திரமும், மற்றவர்கள்மீது அக்கறையும் (23-33)
"எல்லாவற்றையும் கடவுளுடைய மகிமைக்காகவே செய்யுங்கள்" (31)

11 "என்னுடைய முன்மாதிரியைப் பின்பற்றுங்கள்" (1)
தலைமையும் முக்காடும் (2-16)
எஜமானுடைய இரவு விருந்தை அனுசரிப்பது (17-34)

12 கடவுளுடைய சக்தி கொடுக்கிற வரங்கள் (1-11)
ஒரே உடல், நிறைய உறுப்புகள் (12-31)

13 அன்பு—தலைசிறந்தது (1-13)

14 தீர்க்கதரிசனம் சொல்கிற வரமும் வெவ்வேறு மொழிகளில் பேசுகிற வரமும் (1-25)
ஒழுங்காக நடத்தப்படும் கிறிஸ்தவக் கூட்டங்கள் (26-40)
சபையில் பெண்களின் ஸ்தானம் (34, 35)

15 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (1-11)
உயிர்த்தெழுதல்தான் விசுவாசத்துக்கு அடிப்படை (12-19)
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஓர் உத்தரவாதம் (20-34)
பூமிக்குரிய உடல், பரலோகத்துக்குரிய உடல் (35-49)
அழியாமை, சாவாமை (50-57)
எஜமானுடைய வேலையை அதிகமதிகமாகச் செய்யுங்கள் (58)

16 எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக நன்கொடை திரட்டுவது (1-4)
பவுலின் பயணத் திட்டங்கள் (5-9)
தீமோத்தேயு, அப்பொல்லோவின் பயணத் திட்டம் (10-12)
அறிவுரைகளும் வாழ்த்துக்களும் (13-24)

1 கடவுளுடைய விருப்பத்தால்* கிறிஸ்து இயேசுவின் அப்போஸ்த
லனாக இருப்பதற்கு அழைக்கப்பட்ட பவுல்,[a] சகோதரர் சொஸ்தேனே
யோடு சேர்ந்து கொரிந்துவில்[b] இருக்கிற கடவுளுடைய சபைக்கு எழுதுவது:
2 பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதா
னமும் கிடைக்கட்டும்.
3 நீங்கள் கிறிஸ்து இயேசுவின் சீஷர்களாகப் பரிசுத்தமாக்கப்பட்டு
இருக்கிறீர்கள்,[c] நம் எல்லாருக்கும் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின்
பெயரில் நம்பிக்கை வைக்கிற* எல்லாரோடும் சேர்ந்து பரிசுத்தவான்களா
கும்படி அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள்.[d] **4** கிறிஸ்து இயேசுவின் மூலம்
என்னுடைய கடவுள் உங்களுக்குக் காட்டிய அளவற்ற கருணைக்காக எப்
போதும் அவருக்கு நன்றி சொல்கிறேன். **5** கிறிஸ்துவோடு ஒன்றுபட்டிருப்
பதால் பேச்சுத் திறமையும் அறிவும் மற்ற எல்லாமும் உங்களுக்கு
நிறைவாகக் கிடைத்திருக்கிறது.[e] **6** கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்கப்பட்ட
செய்தி[f] உங்களுக்குள் வேரூன்றியிருக்கிறது. **7** அதனால், நம் எஜமானா
கிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்காக[g] ஆவலோடு காத்திருக்கும் நீங்
கள் எந்த வரத்திலும் குறைவுபடாமல் இருக்கிறீர்கள். **8** நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவின் நாளில்[h] நீங்கள் எந்தக் குற்றச்சாட்டுக்கும் ஆளாகா
தபடி, முடிவுவரை உறுதியோடு இருக்க கடவுள் உங்களுக்கு உதவி
செய்வார். **9** அவருடைய மகனும் நமது எஜமானுமாகிய இயேசு கிறிஸ்
துவோடு ஒன்றுபட்டிருப்பதற்காக* உங்களை அழைத்திருக்கிற கடவுள் நம்
பகமானவர்.[i]
10 சகோதரர்களே, நீங்கள் எல்லாரும் முரண்பாடில்லாமல் பேச வேண்டு
மென்றும், உங்களுக்குள் பிரிவினைகள் இல்லாமல்[j] ஒரே மனதோடும் ஒரே
யோசனையோடும் முழுமையாக ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்றும்[k] நம்
எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் உங்களைக் கேட்டுக்கொள்கி
றேன். **11** ஏனென்றால், என் சகோதரர்களே, உங்களுக்குள் பிரிவினை
கள் இருப்பதாக குலோவேயாளின் குடும்பத்தைச் சேர்ந்த சிலர் உங்களைப்
பற்றி என்னிடம் சொன்னார்கள். **12** உங்களில் சிலர், "நான் பவுலைச் சேர்ந்
தவன்" என்றும், சிலர் "நான் அப்பொல்லோவைச்[l] சேர்ந்தவன்" என்றும்,
சிலர் "நான் கேபாவை* சேர்ந்தவன்" என்றும், சிலர் "நான் கிறிஸ்துவைச்
சேர்ந்தவன்" என்றும் சொல்லிக்கொள்வதாகக் கேள்விப்பட்டேன். **13** அப்
படியானால், கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? உங்களுக்காக பவுலா மரக் கம்
பத்தில் அறைந்து கொல்லப்பட்டார்? அல்லது, பவுலின் பெயரிலா ஞானஸ்
நானம் எடுத்தீர்கள்? **14** கிறிஸ்புவையும்[m] காயுவையும்[n] தவிர உங்களில்
வேறு யாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை; அதற்காகக் கட
வுளுக்கு நன்றி சொல்கிறேன். **15** அதனால், என் பெயரில் ஞானஸ்நானம்
எடுத்ததாக உங்களில் யாரும் சொல்ல முடியாது. **16** உண்மைதான், ஸ்தே
வனானுடைய வீட்டில் இருப்பவர்களுக்கும்[o] நான் ஞானஸ்நானம் கொடுத்
தேன். மற்றபடி, வேறு யாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததாக எனக்கு
ஞாபகமில்லை. **17** ஞானஸ்நானம் கொடுப்பதற்கு அல்ல, நல்ல செய்
தியை அறிவிப்பதற்குத்தான் கிறிஸ்து என்னை அனுப்பினார்.[p] இருந்தாலும்,

---

1:1 *வே.வா., "சித்தத்தால்." **1:3** *நே.மொ., "பெயரில் கூப்பிடுகிற." **1:9** *வே.வா., "பங்குள்ளவர்களாக இருப்பதற்காக." **1:12** *பேதுரு என்றும் அழைக்கப்படுகிறார்.

அதி. 1
a அப் 9:15
b அப் 18:1
c 1கொ 6:11; எபி 9:13, 14
d மத் 12:18, 21; அப் 4:12
e கொலோ 1:9
f அப் 18:5
g லூ 17:29, 30; 2தெ 1:7; 1பே 1:7
h 1கொ 4:5; 1கொ 5:5; வெளி 1:10
i உபா 7:9
j ரோ 16:17
k ரோ 15:5, 6; 2கொ 13:11; எபே 4:1, 3; பிலி 2:2
l அப் 18:24; 1கொ 3:4, 5; 1கொ 3:21-23
m அப் 18:8
n ரோ 16:23
o 1கொ 16:15
p அப் 9:15

அதி. 1
a அப் 17:18
1கொ 2:14
b ரோ 1:16
c ஏசா 29:14
d கொலோ 2:8
e லூ 10:21
f 1கொ 2:14
1கொ 3:18
g மத் 12:38
லூ 11:29
h அப் 17:32
i கொலோ 2:3
j 2கொ 13:4
k அப் 4:13
l யோவா 7:48
யாக் 2:5
m மத் 11:25
n 1கொ 2:6
o ரோ 10:4
2கொ 5:21
p யோவா 17:19
எபி 10:10

பேச்சுத் திறமையால்* அறிவிப்பதற்கு அவர் என்னை அனுப்பவில்லை;
அப்படி அறிவித்தால், சித்திரவதைக் கம்பத்தில்# கிறிஸ்து இறந்ததற்கு அர்த்
தமில்லாமல் போய்விடும்.

18 சித்திரவதைக் கம்பத்தை# பற்றிய செய்தி, அழிவின் பாதையில்
போகிறவர்களுக்கு முட்டாள்தனமாக இருக்கிறது,[a] ஆனால் மீட்பின்
பாதையில் போகிற நமக்குக் கடவுளுடைய வல்லமையாக இருக்கிறது.[b]
19 ஏனென்றால், “ஞானிகளின் ஞானத்தை அழிப்பேன், அறிவாளிகளின்
அறிவை ஒதுக்கிவிடுவேன்” என்று எழுதப்பட்டிருக்கிறது.[c] **20** அப்படியா
னால், இந்த உலகத்தின்* ஞானி எங்கே? வேத அறிஞன்# எங்கே? வாதா
டுகிறவன் எங்கே? இந்த உலகத்தின் ஞானத்தைக் கடவுள் முட்டாள்தன
மாக்கிவிடவில்லையா? **21** இந்த உலக மக்கள் தங்களுடைய ஞானத்தை
நம்புவதால்,[d] கடவுளைத் தெரிந்துகொள்ளவில்லை.[e] நாம் அறிவிக்கிற
செய்தி அவர்களுக்கு முட்டாள்தனமாகத் தெரிகிறது.[f] ஆனால், நம்பிக்கை
வைக்கிறவர்களை இந்தச் செய்தியின் மூலம் காப்பாற்ற கடவுள் தீர்மானித்
தார். இதிலிருந்து கடவுளுடைய ஞானம் தெளிவாகத் தெரிகிறது.

22 யூதர்கள் அடையாளங்களைக் கேட்கிறார்கள்,[g] கிரேக்கர்கள் ஞானத்
தைத் தேடுகிறார்கள். **23** நாமோ மரக் கம்பத்தில் அறைந்து கொல்லப்
பட்ட கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கிறோம்; அந்தச் செய்தி யூதர்களுக்
குத் தடைக்கல்லாகவும் மற்ற தேசத்து மக்களுக்கு முட்டாள்தனமாகவும்
இருக்கிறது.[h] **24** ஆனாலும், யூதர்களுக்கும் சரி, கிரேக்கர்களுக்கும் சரி,
கடவுளால் அழைக்கப்பட்ட எல்லாருக்கும், கிறிஸ்து கடவுளுடைய வல்ல
மையாகவும் கடவுளுடைய ஞானமாகவும் இருக்கிறார்.[i] **25** ஏனென்றால்,
கடவுளுடைய முட்டாள்தனம் என்று கருதப்படுவது மனிதர்களுடைய
ஞானத்தைவிட அதிக ஞானமுள்ளதாக இருக்கிறது; கடவுளுடைய பலவீ
னம் என்று கருதப்படுவது மனிதர்களுடைய பலத்தைவிட அதிக பலமுள்
ளதாக இருக்கிறது.[j]

26 சகோதரர்களே, நீங்கள் அழைக்கப்பட்டபோது எப்படிப்பட்டவர்
களாக இருந்தீர்கள் என்பது உங்களுக்கே தெரியும்; மனிதர்களுடைய பார்
வையில், உங்களில் பலர் ஞானிகளாகவோ[k] செல்வாக்குள்ளவர்களாகவோ
உயர்குடியில் பிறந்தவர்களாகவோ* இல்லை.[l] **27** ஆனால் ஞானிகளை
வெட்கப்படுத்துவதற்காக, உலகத்தின் பார்வையில் முட்டாள்களாக இருப்ப
வர்களைக் கடவுள் தேர்ந்தெடுத்தார்; பலமாக இருப்பவர்களை வெட்கப்ப
டுத்துவதற்காக, உலகத்தின் பார்வையில் பலவீனமாக இருப்பவர்களைத்
தேர்ந்தெடுத்தார்.[m] **28** இந்த உலகம் மதிப்புள்ளதாகக் கருதுகிறவற்றை
ஒன்றுமில்லாமல் செய்வதற்காக, இந்த உலகம் அற்பமாகவும் தாழ்வாக
வும் தூசியாகவும் கருதுகிறவற்றையே தேர்ந்தெடுத்தார்.[n] **29** எந்த மனித
னும் அவர் முன்னால் பெருமை பேசக் கூடாது என்பதற்காக இப்படிச்
செய்தார். **30** கடவுளால்தான் நீங்கள் கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபட்டி
ருக்கிறீர்கள்; இவர் கடவுளிடமிருந்து வந்த ஞானமாக இருக்கிறார்; நம்
மைக் கடவுளுக்கு முன்னால் நீதிமான்களாக்கி,[o] பரிசுத்தமானவர்களாக்கி,[p]

1:17 *வே.வா., “புத்திசாலித்தனமான பேச்சால்.” **1:17, 18** #சொல் பட்டியலைப் பாருங்கள். **1:20** *வே.வா., “சகாப்தத்தின்.” சொல் பட்டியலைப் பாருங்கள். #அதாவது, “திருச்சட்ட வல்லுநன்.” **1:26** *வே.வா., “முக்கியமான குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவோ.”

மீட்புவிலையால் விடுவிக்கிறவராகவும் இருக்கிறார்.[a] **31** அதனால்,
“பெருமை பேசுகிறவன் யெகோவாவை* பற்றியே பெருமை பேசட்டும்”
என்று எழுதப்பட்டிருக்கிறது.[b]

2 அதனால் சகோதரர்களே, நான் உங்களிடம் வந்தபோது கடவுளுடைய
பரிசுத்த ரகசியத்தைப்[c] பகட்டான வார்த்தைகளாலோ[d] மனித ஞானத்
தாலோ அறிவிக்கவில்லை. **2** இயேசு கிறிஸ்துவைப் பற்றித்தான், அதுவும்
மரக் கம்பத்தில் அறைந்து கொல்லப்பட்ட அவரைப் பற்றித்தான்,[e] உங்க
ளுக்கு அறிவிக்கத் தீர்மானித்திருந்தேன், வேறெந்த விஷயத்தைப் பற்றி
யும் அல்ல. **3** நான் பலவீனத்தோடும் பயத்தோடும் அதிக நடுக்கத்
தோடும் உங்களிடம் வந்தேன். **4** என்னுடைய பேச்சிலும் பிரசங்கத்திலும்
வசீகரமான வார்த்தைகளோ மனித ஞானமோ இருக்கவில்லை, அவற்றில்
கடவுளுடைய சக்தியும் வல்லமையும்தான் வெளிப்பட்டன.[f] **5** ஏனென்
றால் உங்கள் விசுவாசம், மனிதர்களுடைய ஞானத்தின் அடிப்படையில்
இருக்கக் கூடாது, கடவுளுடைய வல்லமையின் அடிப்படையில் இருக்க
வேண்டும்.

6 இப்போது முதிர்ச்சியுள்ளவர்களிடம் ஞானத்தைப் பற்றிப் பேசுகி
றோம்.[g] இந்த உலக* ஞானத்தைப் பற்றியோ அழியப்போகிற இந்த உலகத்
தலைவர்களுடைய[h] ஞானத்தைப் பற்றியோ அல்ல. **7** பரிசுத்த ரகசியத்
தில்[i] இருக்கிற கடவுளுடைய ஞானத்தை, அதாவது மறைவான ஞானத்தை,
பற்றித்தான் பேசுகிறோம்; நாம் மகிமையடைய வேண்டும் என்பதற்காகச்
சகாப்தங்கள்* தோன்றுவதற்கு முன்னால் கடவுள் இதை முன்தீர்மானித்
தார். **8** அந்த ஞானத்தைப் பற்றி இந்த உலகத்தின்* தலைவர்களில் ஒருவ
ருக்குக்கூட தெரியவில்லை;[j] அது அவர்களுக்குத் தெரிந்திருந்தால் மகிமை
யுள்ள நம் எஜமானைக் கொன்றுபோட்டிருக்க# மாட்டார்கள். **9** ஆனால்
எழுதப்பட்டிருக்கிறபடி, “தன்மீது அன்பு காட்டுகிறவர்களுக்காகக் கடவுள்
தயார் செய்திருக்கிறவற்றைக் கண்கள் பார்க்கவும் இல்லை, காதுகள் கேட்க
வும் இல்லை, அவை மனிதர்களுடைய இதயத்தில் தோன்றவும் இல்லை.”[k]
10 அவற்றை நமக்குத்தான் கடவுள் தன்னுடைய சக்தியின்[l] மூலம் வெளிப்
படுத்தியிருக்கிறார்;[m] அந்தச் சக்தி எல்லா காரியங்களையும், சொல்லப்
போனால் கடவுளுடைய ஆழமான காரியங்களையும்கூட, ஆராய்கிறது.[n]

11 ஒருவனுடைய யோசனைகளை அவனுடைய உள்ளத்தைத் தவிர
வேறெந்த மனிதனாலும் தெரிந்துகொள்ள முடியாது. அதுபோலவே,
கடவுளுடைய யோசனைகளை அவருடைய சக்தி வெளிப்படுத்தினால்
தவிர எந்த மனிதனாலும் தெரிந்துகொள்ள முடியாது. **12** நாம் இந்த உல
கத்தின் சிந்தையைப் பெறவில்லை, கடவுளுடைய சக்தியைத்தான் பெற்றி
ருக்கிறோம்.[o] அதனால்தான், கடவுள் நமக்குத் தயவுடன் வெளிப்படுத்தியி
ருக்கிற விஷயங்களை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது. **13** இவற்றை
நாம் பேசும்போது மனித ஞானத்தால் கற்றுக்கொண்ட வார்த்தைகளில்
பேசாமல்,[p] கடவுளுடைய சக்தியால் கற்றுக்கொண்ட வார்த்தைகளில் பேசு
கிறோம்.[q] ஆன்மீக விஷயங்களை விளக்குவதற்கு ஆன்மீக வார்த்தைக
ளைப் பயன்படுத்துகிறோம்.

1:31 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:6, 8** * வே.வா., “சகாப்தத்தின்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **2:7** * சொல் பட்டியலைப் பாருங்கள். **2:8** # வே.வா., “மரக் கம்பத்தில் அறைந்து கொன்றுபோட்டிருக்க.”

அதி. 1
a ரோ 3:24; கொலோ 1:13, 14
b எரே 9:24; 2கொ 10:17

அதி. 2
c எபே 3:5, 6; கொலோ 2:2
d 1கொ 1:17
e கலா 6:14
f ரோ 15:18, 19; 1கொ 4:20; 1தெ 1:5
g 1கொ 14:20; எபே 4:13; எபி 5:14
h 1கொ 15:24
i ரோ 16:25, 26; எபே 3:8, 9
j யோவா 7:48; அப் 13:27, 28
k ஏசா 64:4
l யோவா 14:26; 1யோ 2:27
m மத் 16:17; மாற் 4:11; எபே 3:5; 2தீ 1:9, 10; 1பே 1:12
n ரோ 11:33
o யோவா 15:26
p கொலோ 2:8
q யோவா 16:13

அதி. 2
a ரோ 8:5
b ஏசா 40:13
c ரோ 15:5

அதி. 3
d 1கொ 2:15
கொலோ 1:9
e 1கொ 14:20
f எபி 5:12-14
g ரோ 8:7, 8
h கலா 5:19, 20
i அப் 18:24, 25
j 2கொ 3:5, 6
கொலோ 1:23
1தீ 1:12
k அப் 18:4
l அப் 18:26-28
அப் 19:1
m ரோ 9:16
n ரோ 2:6
1கொ 4:5
வெளி 22:12
o எபே 2:22
1பே 2:5
p ரோ 15:20
எபி 6:1
q சங் 118:22
ஏசா 28:16
மத் 21:42
எபே 2:20
1பே 2:6

14 உலகச் சிந்தையுள்ள மனிதனோ கடவுளுடைய சக்தி வெளிப்படுத்
துகிற விஷயங்களை ஏற்றுக்கொள்வதில்லை, அவை அவனுக்கு முட்டாள்
தனமாக இருக்கின்றன; அவற்றை அவனால் தெரிந்துகொள்ள முடியாது.
ஏனென்றால், கடவுளுடைய சக்தியின் உதவியால் மட்டுமே அவற்றை
ஆராய முடியும். **15** ஆனால், ஆன்மீகச் சிந்தையுள்ள மனிதன் எல்லா
காரியங்களையும் ஆராய்கிறான்;[a] இருந்தாலும், அவனை வேறெந்த மனி
தனாலும் ஆராய முடியாது. **16** ஏனென்றால், “யெகோவாவுக்கு* அறி
வுரை கொடுப்பதற்கு அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்?”[b]
நமக்கோ கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறது.[c]

3 ஆனாலும் சகோதரர்களே, உங்களை ஆன்மீகச் சிந்தையுள்ள மனிதர்
களாக[d] நினைத்து என்னால் பேச முடியாமல் போனது. ஆன்மீகச்
சிந்தை இல்லாத மனிதர்களாக, கிறிஸ்தவ விசுவாசத்தில் குழந்தைகளாக,[e]
நினைத்தே உங்களிடம் பேசினேன். **2** நான் உங்களுக்குத் திட உணவை
ஊட்டவில்லை, பாலைத்தான் ஊட்டினேன். ஏனென்றால், நீங்கள் திட
உணவைச் சாப்பிட முடியாமல் இருந்தீர்கள். சொல்லப்போனால், இப்போ
தும் சாப்பிட முடியாமல்தான் இருக்கிறீர்கள்.[f] **3** இன்னும் நீங்கள் ஆன்மீ
கச் சிந்தை இல்லாதவர்களாகத்தான் இருக்கிறீர்கள்.[g] உங்கள் மத்தியில்
பொறாமையும் சண்டை சச்சரவும் இருப்பதால் நீங்கள் ஆன்மீகச் சிந்தை
இல்லாதவர்கள்தானே?[h] உலக மக்களைப் போலத்தானே நடந்துகொள்கிறீர்
கள்? **4** உங்களில் ஒருவன், “நான் பவுலைச் சேர்ந்தவன்” என்றும் வேறொ
ருவன், “நான் அப்பொல்லோவைச்[i] சேர்ந்தவன்” என்றும் சொல்வதால் நீங்
கள் உலக மக்களைப் போலத்தானே இருக்கிறீர்கள்?

5 அப்பொல்லோ யார்? பவுல் யார்? நீங்கள் இயேசுவின் சீஷர்க
ளாவதற்கு உதவி செய்த ஊழியர்கள்தானே![j] நம் எஜமான் அவரவருக்குக்
கொடுத்த ஊழியத்தைச் செய்கிறவர்கள்தானே! **6** நான் நட்டேன்,[k] அப்
பொல்லோ தண்ணீர் ஊற்றினார்.[l] ஆனால், கடவுள்தான் வளர வைத்தார்.
7 அதனால், நடுகிறவனுக்கும் பெருமை சேருவதில்லை, தண்ணீர் ஊற்றுகி
றவனுக்கும் பெருமை சேருவதில்லை; வளர வைக்கிற கடவுளுக்குத்
தான் பெருமை சேரும்.[m] **8** நடுகிறவனும் தண்ணீர் ஊற்றுகிறவனும் ஒன்
றாயிருக்கிறார்கள்;* ஒவ்வொருவனும் தன்னுடைய உழைப்புக்கு ஏற்ற
பலனைப் பெறுவான்.[n] **9** நாங்கள் கடவுளுடைய சக வேலையாட்களாக
இருக்கிறோம். நீங்கள் கடவுளால் பண்படுத்தப்படுகிற நிலமாகவும், கடவு
ளால் கட்டப்படுகிற கட்டிடமாகவும் இருக்கிறீர்கள்.[o]

10 கடவுள் எனக்குக் காட்டிய அளவற்ற கருணையால், திறமையான
கட்டிடக் கலைஞனைப் போல் அஸ்திவாரம் போட்டேன்.[p] ஆனால்,
அதன்மேல் வேறொருவன் கட்டிக்கொண்டிருக்கிறான். இருந்தாலும், ஒவ்
வொருவனும் தான் கட்டும் விதத்தைக் குறித்துக் கவனமாயிருக்க வேண்
டும். **11** ஏனென்றால், போடப்பட்டிருக்கிற அஸ்திவாரத்துக்குப் பதிலாக
வேறெந்த அஸ்திவாரத்தையும் யாராலும் போட முடியாது; அந்த அஸ்
திவாரம் இயேசு கிறிஸ்துதான்.[q] **12** அந்த அஸ்திவாரத்தின் மீது தங்கம்,
வெள்ளி, விலைமதிப்புள்ள கற்கள், மரம், புல், வைக்கோல் ஆகியவற்றில்
எவற்றையாவது வைத்து மனிதர்கள் கட்டிடம் கட்டலாம். **13** ஆனால்,

---

2:16 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:8** *வே.வா., “ஒரே குறிக்கோளோடு இருக்
கிறார்கள்.”

ஒவ்வொருவனுடைய வேலைப்பாடும் எப்படிப்பட்டதென்று கடைசியில்
தெரிந்துவிடும்; சோதனை நாள் அதைக் காட்டிக்கொடுத்துவிடும். ஏனென்
றால், அது நெருப்பால் வெளிப்படுத்தப்படும்;[a] ஒவ்வொருவனுடைய
வேலைப்பாடும் எப்படிப்பட்டது என்பதை அந்த நெருப்பே நிரூபித்து
விடும். **14** அந்த அஸ்திவாரத்தின் மீது ஒருவன் கட்டியது நிலைத்திருந்
தால், அதற்கான பலனை அவன் பெறுவான். **15** ஒருவன் கட்டியது எரிந்
துபோனால் அவனுக்கு இழப்பு ஏற்படும், அவனோ காப்பாற்றப்படுவான்.
ஆனால், நெருப்பிலிருந்து தப்பித்தவன்போல் இருப்பான்.

16 நீங்கள்தான் கடவுளுடைய ஆலயம்[b] என்றும், கடவுளுடைய சக்தி
உங்களுக்குள் குடியிருக்கிறது[c] என்றும் உங்களுக்குத் தெரியாதா?
17 ஒருவன் கடவுளுடைய ஆலயத்தை அழித்தால், கடவுள் அவனை
அழித்துவிடுவார்; ஏனென்றால், கடவுளுடைய ஆலயம் பரிசுத்தமானது,
நீங்கள்தான் அந்த ஆலயம்.[d]

18 ஒருவனும் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். ஒருவன்
இந்த உலகத்தில்* தன்னை ஞானி என்று நினைத்துக்கொண்டால், அவன்
முட்டாளாகட்டும், அப்போது அவன் உண்மையில் ஞானியாவான்.
19 ஏனென்றால், இந்த உலகத்தின் ஞானம் கடவுளுடைய பார்வையில் முட்
டாள்தனமாக இருக்கிறது; “ஞானிகளை அவர்களுடைய தந்திரத்தை
வைத்தே அவர் மடக்குகிறார்” என்று எழுதப்பட்டிருக்கிறது.[e] **20** “ஞானிக
ளுடைய யோசனைகள் வீண் என்பது யெகோவாவுக்கு* தெரியும்” என்றும்
எழுதப்பட்டிருக்கிறது.[f] **21** அதனால், மனிதர்கள் செய்வதைப் பற்றி
யாரும் பெருமையடிக்க வேண்டாம். **22** பவுலோ அப்பொல்லோவோ
கேபாவோ*[g] எல்லாரும் உங்களுக்குச் சொந்தமானவர்கள்தான்; அதே
போல், உலகமோ வாழ்வோ சாவோ இன்றுள்ள காரியங்களோ இனிவரும்
காரியங்களோ எல்லாம் உங்களுக்குச் சொந்தமானவைதான். **23** ஆனால்,
நீங்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள்;[h] கிறிஸ்துவோ கடவுளுக்குச்
சொந்தமானவர்.

4 எங்களைக் கிறிஸ்துவின் வேலையாட்கள்* என்றும், கடவுளுடைய பரி
சுத்த ரகசியங்களை[i] அறிவிப்பதற்கு நியமிக்கப்பட்ட நிர்வாகிகள்
என்றும் மக்கள் நினைக்க வேண்டும். **2** நிர்வாகிகள் உண்மையோடு
இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். **3** என்னைப் பொறுத்
தவரை, நீங்களோ ஒரு நீதிமன்றமோ என்னை நியாயந்தீர்த்தால் அதைப்
பற்றி நான் கவலைப்பட மாட்டேன்; சொல்லப்போனால், என்னை நானே
நியாயந்தீர்த்துக்கொள்ளவும் மாட்டேன். **4** ஏனென்றால், என்னிடம் எந்தக்
குற்றமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை; அதற்காக நான் குற்றமற்ற
வனாக ஆகிவிட மாட்டேன்; என்னை நியாயந்தீர்ப்பவர் யெகோவாதான்.*[j]
5 அதனால், ஏற்ற காலத்துக்கு முன்பே, அதாவது நம் எஜமான் வருவதற்கு
முன்பே, எதைக் குறித்தும் நியாயந்தீர்க்காதீர்கள்.[k] அவர் இருட்டில் மறைந்
திருப்பவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவார், உள்ளத்தில் இருக்கிற
நோக்கங்களையும் வெளிப்படுத்துவார். அப்போது, கடவுளிடமிருந்து
ஒவ்வொருவனும் அவனுக்குரிய பாராட்டைப் பெறுவான்.[l]

அதி. 3
a 1பே 4:12
b 2கொ 6:16 எபே 2:21 1பே 2:5
c 1கொ 6:19
d 1பே 2:5
e யோபு 5:13
f சங் 94:11
g 1கொ 1:12
h யோவா 17:9 2கொ 10:7

அதி. 4
i மத் 13:11 ரோ 16:25, 26
j நீதி 21:2 ரோ 14:10 எபி 4:13
k மத் 7:1
l நீதி 10:9 2கொ 10:18 1தீ 5:24, 25

3:18 *வே.வா., “சகாப்தத்தில்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **3:20; 4:4** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:22** *பேதுரு என்றும் அழைக்கப்படுகிறார். **4:1** *வே.வா., “அடிமைகள்.”

6 சகோதரர்களே, என்னையும் அப்பொல்லோவையும்[a] உதாரணமாகக்
காட்டி உங்கள் நன்மைக்காக இவற்றைச் சொல்கிறேன்; "எழுதப்பட்ட விஷ
யங்களுக்கு மிஞ்சிப் போகாதீர்கள்" என்ற நியதியை நீங்கள் எங்களைப்
பார்த்துக் கற்றுக்கொள்ளுங்கள். அப்போதுதான், நீங்கள் தலைக்கனம் இல்
லாதவர்களாகவும்[b] பாரபட்சம் காட்டாதவர்களாகவும் இருப்பீர்கள். **7** நீங்
கள் எந்த விதத்தில் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள்? உங்களிடம் இருக்
கிற எல்லாமே கடவுள் கொடுத்ததுதானே?[c] எல்லாமே அவரிடமிருந்து
கிடைத்திருக்கும்போது, உங்களுடைய சொந்த பலத்தால் பெற்றுக்கொண்ட
துபோல் ஏன் பெருமையடிக்கிறீர்கள்?

8 தேவையானதெல்லாம் ஏற்கெனவே உங்களுக்குக் கிடைத்துவிட்
டதோ? ஏற்கெனவே பணக்காரர்களாகிவிட்டீர்களோ? நாங்கள் இல்லாம
லேயே ராஜாக்களாக ஆட்சி செய்ய ஆரம்பித்துவிட்டீர்களோ?[d] அப்படி
நீங்கள் ராஜாக்களாக ஆட்சி செய்ய ஆரம்பித்துவிட்டாலும் நல்லதுதான்;
நாங்களும் உங்களோடுகூட ராஜாக்களாக ஆட்சி செய்வோமே.[e]
9 கொல்லப்படுவதற்காக அரங்கில் கடைசியாக நிறுத்தப்படுகிற ஆட்க
ளைப் போல் ஆகும்படி அப்போஸ்தலர்களாகிய எங்களைக் கடவுள் செய்
துவிட்டார்[f] என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், இந்த உலகத்
துக்கும் தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் நாங்கள் காட்சிப்பொருளாக
ஆகியிருக்கிறோம்.[g] **10** கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் நாங்கள் முட்டாள்
களாகக் கருதப்படுகிறோம்;[h] நீங்களோ, கிறிஸ்துவைப் பின்பற்றுகிற விவே
கிகளாக உங்களை நினைத்துக்கொள்கிறீர்கள். நாங்கள் பலவீனமானவர்
களாகக் கருதப்படுகிறோம்; நீங்களோ, உங்களைப் பலசாலிகளாக நினைத்
துக்கொள்கிறீர்கள். நாங்கள் மதிப்பில்லாதவர்களாகக் கருதப்படுகிறோம், நீங்
களோ, உங்களை மதிப்புக்குரியவர்களாக நினைத்துக்கொள்கிறீர்கள்.
11 இந்த நேரம்வரை நாங்கள் பசியோடு இருக்கிறோம்,[i] தாகத்தோடு இருக்
கிறோம்,[j] போதுமான உடையில்லாமல்* இருக்கிறோம்; அடித்து நொறுக்கப்
படுகிறோம்,[k] வீடுவாசல் இல்லாமல் தவிக்கிறோம். **12** எங்கள் கைகளால்
பாடுபட்டு வேலை செய்கிறோம்;[l] மற்றவர்கள் எங்களை அவமானப்ப
டுத்தும்போது ஆசீர்வதிக்கிறோம்,[m] கொடுமைப்படுத்தும்போது பொறுமை
யோடு சகித்துக்கொள்கிறோம்.[n] **13** இல்லாததையும் பொல்லாததையும்
சொல்லும்போது சாந்தமாகப் பதில் சொல்கிறோம்;[o] இன்றுவரை நாங்கள்
இந்த உலகத்தின் குப்பையாகவும் எல்லாவற்றின் கழிவுப்பொருளாகவும் கரு
தப்படுகிறோம்.

14 உங்களை வெட்கப்படுத்துவதற்காக நான் இவற்றை எழுதவில்லை,
என் அன்புக் கண்மணிகளாக நினைத்து உங்களுக்குப் புத்திசொல்வதற்கா
கவே இதையெல்லாம் எழுதுகிறேன். **15** கிறிஸ்துவின் சீஷர்களில் 10,000
ஆசான்கள்* உங்களுக்கு இருக்கலாம், ஆனாலும் நிச்சயம் நிறைய தகப்
பன்மார் உங்களுக்கு இல்லை. நல்ல செய்தியை அறிவித்ததால் கிறிஸ்து
இயேசுவின் மூலம் நான் உங்களுக்குத் தகப்பனாக ஆகியிருக்கிறேன்.[p]
16 அதனால், என்னைப் போல் நடந்துகொள்ளும்படி[q] உங்களைக் கெஞ்
சிக் கேட்டுக்கொள்கிறேன். **17** அதனால்தான், நம் எஜமானுடைய
சேவையை உண்மையோடு செய்கிற என் அன்புப் பிள்ளை தீமோத்தே
யுவை உங்களிடம் அனுப்புகிறேன். கிறிஸ்து இயேசுவின் சேவையில் நான்

4:11 * நே.மொ., "நிர்வாணமாக." **4:15** * வே.வா., "பாதுகாப்பாளர்கள்."

அதி. 4
a 1கொ 1:12
b ரோ 12:3; 2கொ 12:20; 3யோ 9
c யோவா 3:27
d வெளி 20:4, 6
e 2தீ 2:12; வெளி 3:21
f ரோ 8:36; 1கொ 15:32; 2கொ 6:4, 9
g எபி 10:33
h 1கொ 3:18
i பிலி 4:12
j 2கொ 11:27
k அப் 14:19; அப் 23:2; 2கொ 11:24
l அப் 18:3; அப் 20:34; 1தெ 2:9
m ரோ 12:14; 1பே 3:9
n மத் 5:44
o 1பே 2:23
p கலா 4:19; 1தெ 2:11
q 1கொ 11:1; பிலி 3:17; 1தெ 1:6

பயன்படுத்தும் முறைகளை அவர் உங்களுக்கு ஞாபகப்படுத்துவார்.[a] நான்
எல்லா இடங்களிலும் எல்லா சபைகளிலும் அந்த முறைகளையே கற்றுக்
கொடுத்து வருகிறேன்.

18 நான் உங்களிடம் வர மாட்டேன் என்று நினைத்துக்கொண்டு சிலர்
தலைக்கனத்தோடு நடக்கிறார்கள். **19** ஆனால், யெகோவாவுக்கு* விருப்
பம்# இருந்தால் நான் உங்களிடம் சீக்கிரம் வருவேன். தலைக்கனத்தோடு
நடக்கிற இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அல்ல, இவர்களுக்குக்
கடவுளுடைய வல்லமை இருக்கிறதா என்பதையே பார்க்கப்போகிறேன்.
20 கடவுளுடைய அரசாங்கம் பேச்சின் மூலம் அல்ல, அவருடைய வல்ல
மையின் மூலம்தான் தெளிவாகத் தெரிகிறது. **21** அதனால், நான் உங்களி
டம் எப்படி வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? பிரம்போடு வர வேண்
டுமா,[b] அன்போடும் சாந்தத்தோடும் வர வேண்டுமா?

5 உங்கள் மத்தியில் பாலியல் முறைகேடு*[c] நடப்பதாகக் கேள்விப்பட்
டேன்; ஒருவன் தன்னுடைய அப்பாவின் மனைவியை வைத்திருக்கி
றானாம்;[d] இப்படிப்பட்ட பாலியல் முறைகேடு* மற்ற தேசத்து மக்கள் மத்தி
யில்கூட நடப்பதில்லை. **2** இதற்காக நீங்கள் துக்கப்படாமல்,[e] உங்களைக்
குறித்துப் பெருமைப்பட்டுக்கொள்கிறீர்களா? அப்படிப்பட்ட காரியத்தைச்
செய்தவனை உங்களைவிட்டு நீக்கியிருக்க வேண்டாமா?[f] **3** உடலால்
உங்கள் மத்தியில் இல்லாவிட்டாலும், உள்ளத்தால் உங்கள் மத்தியில் இருக்
கிறேன். அப்படி இருப்பதாகவே நினைத்து, அந்தக் காரியத்தைச் செய்த
வனை நியாயந்தீர்த்துவிட்டேன். **4** நம் எஜமானாகிய இயேசுவின் பெய
ரில் நீங்கள் ஒன்றுகூடி வரும்போது, நம் எஜமானாகிய இயேசுவிடமிருந்து
அதிகாரத்தைப் பெற்றிருக்கிற நான் உள்ளத்தால் அங்கே இருப்பேன்.
5 அந்த மனிதனுடைய கெட்ட செல்வாக்கை ஒழிப்பதற்காக, அவனைச்
சாத்தானிடம் ஒப்படைத்துவிடுங்கள்.[g] அப்போதுதான், நம் எஜமானுடைய
நாளில் சபையாரின் சிந்தை பாதுகாக்கப்படும்.[h]

6 நீங்கள் பெருமையடிப்பது நல்லதல்ல; புளிப்புள்ள கொஞ்சம் மாவு
பிசைந்த மாவு முழுவதையும் புளிக்க வைத்துவிடும் என்று உங்களுக்குத்
தெரியாதா?[i] **7** நீங்கள் புளிப்பில்லாத புதிய மாவாய் இருப்பதற்காக,
பழைய புளித்த மாவை எறிந்துவிடுங்கள். சொல்லப்போனால், நீங்கள்
புளிப்பில்லாத மாவாகத்தான் இருக்கிறீர்கள். நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்
டியாகிய கிறிஸ்து[j] பலியிடப்பட்டிருக்கிறாரே.[k] **8** அதனால், பஸ்கா பண்டி
கையைப்[l] பழைய புளித்த மாவை வைத்தோ, கெட்டகுணம், பொல்லாத்த
னம் ஆகிய புளித்த மாவை வைத்தோ அனுசரிக்காமல், நேர்மை, உண்மை
ஆகிய புளிப்பில்லாத ரொட்டிகளை வைத்து அனுசரிப்போமாக.

9 பாலியல் முறைகேட்டில்* ஈடுபடுகிறவர்களோடு பழகுவதை நீங்கள்
விட்டுவிட வேண்டுமென்று என்னுடைய கடிதத்தில் எழுதியிருந்தேன்.
10 இருந்தாலும், பாலியல் முறைகேட்டில்* ஈடுபடுகிறவர்கள்,[m] பேராசைப்
படுகிறவர்கள், கொள்ளையடிக்கிறவர்கள், சிலை வழிபாட்டில் ஈடுபடுகிறவர்
கள் ஆகியோரோடு பழகுவதை அடியோடு விட்டுவிட வேண்டுமென்று
நான் எழுதவில்லை. அப்படியானால், நீங்கள் இந்த உலகத்தைவிட்டே
வெளியேற வேண்டியிருக்கும்.[n] **11** ஆனால், சகோதரன் என்று அழைக்

4:19 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். #வே.வா., "சித்தம்." **5:1, 9, 10** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 4
a 2தீ 1:13
b 2கொ 13:10

அதி. 5
c எபே 5:3
d லேவி 18:8
e 2கொ 7:9
f 1கொ 5:13, 2யோ 10
g 1தீ 1:20
h 1கொ 1:8
i 1கொ 15:33, கலா 5:9, 2தீ 2:16, 17
j யோவா 1:29
k 1பே 1:19, 20, வெளி 5:12
l யாத் 13:7
m 1யோ 2:17
n யோவா 17:15

கப்படுகிற எவனும் பாலியல் முறைகேட்டில்* ஈடுபடுகிறவனாகவோ பேரா
சைப்படுகிறவனாகவோ[a] சிலை வழிபாட்டில் ஈடுபடுகிறவனாகவோ
சபித்துப் பேசுகிறவனாகவோ# குடிகாரனாகவோ[b] கொள்ளையடிக்கிறவ
னாகவோ[c] இருந்தால், அப்படிப்பட்டவனோடு பழகுவதை விட்டுவிட
வேண்டும்[d] என்றுதான் இப்போது நான் உங்களுக்கு எழுதுகிறேன்; அப்ப
டிப்பட்டவனோடு சேர்ந்து நீங்கள் சாப்பிடவும் கூடாது. **12** சபைக்கு
வெளியே இருக்கிறவர்களை நியாயந்தீர்ப்பது என் வேலையா? வெளியே
இருக்கிறவர்களைக் கடவுளே நியாயந்தீர்க்கிறார்.[e] **13** உள்ளே இருக்கிற
வர்களை நீங்கள்தானே நியாயந்தீர்க்க வேண்டும்? அதனால், “அந்தப்
பொல்லாத மனிதனை உங்கள் மத்தியிலிருந்து நீக்கிவிடுங்கள்.”[f]

6 உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடு வழக்கு இருந்தால்,[g]
அதைத் தீர்த்துக்கொள்ள அவன் பரிசுத்தவான்களிடம் போகாமல்
நீதிமன்றத்துக்குப் போய் அநீதிமான்கள் முன்னால் நிற்கத் துணிவது ஏன்?
2 பரிசுத்தவான்கள் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று உங்க
ளுக்குத் தெரியாதா?[h] உலகத்தையே நியாயந்தீர்க்கப்போகிற உங்களுக்கு,
சின்னச் சின்ன வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளத் தகுதி இல்லையா?
3 நாம் தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போம் என்று உங்களுக்குத் தெரி
யாதா?[i] அப்படியிருக்கும்போது, இந்த வாழ்க்கைக்குரிய வழக்குகளை ஏன்
தீர்த்துக்கொள்ள முடியாது? **4** அவற்றைத் தீர்த்துக்கொள்ள[j] சபைக்கு
வெளியே இருக்கிறவர்களைப்போய் நீதிபதிகளாக வைக்கிறீர்களே! **5** நீங்
கள் வெட்கப்படுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். சகோதரர்களுக்குள்
இருக்கிற வழக்குகளைத் தீர்ப்பதற்கு ஞானமுள்ளவர் ஒருவர்கூட உங்கள்
மத்தியில் இல்லையா? **6** சகோதரனுக்கு எதிராகச் சகோதரன் நீதிமன்றத்
தில் வழக்கு போடுகிறானாமே, அதுவும் உலக மக்களுக்கு முன்னால் அப்
படிச் செய்கிறானாமே!

7 உண்மையில், நீங்கள் ஒருவருக்கு எதிராக ஒருவர் வழக்கு போடு
வதே நீங்கள் படுதோல்வி அடைந்துவிட்டதைக் காட்டுகிறது. அதனால்,
உங்களுக்குச் செய்யப்பட்ட அநியாயத்தை ஏன் பொறுத்துக்கொள்ளக்
கூடாது?[k] உங்களுக்குச் செய்யப்பட்ட மோசடியை ஏன் சகித்துக்கொள்ளக்
கூடாது? **8** அதற்குப் பதிலாக நீங்களே அநியாயமும் மோசடியும் செய்கி
றீர்கள், அதுவும் உங்கள் சகோதரர்களுக்கு அப்படிச் செய்கிறீர்கள்.

9 அநீதிமான்கள் கடவுளுடைய அரசாங்கத்துக்குள் அனுமதிக்கப்பட#
மாட்டார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா?[l] ஏமாந்துவிடாதீர்கள். பாலி
யல் முறைகேட்டில்* ஈடுபடுகிறவர்கள்,[m] சிலையை வணங்குகிறவர்கள்,[n]
மணத்துணைக்குத் துரோகம் செய்கிறவர்கள்,[o] ஆண் விபச்சாரக்காரர்கள்,△[p]
ஆண்களோடு உறவுகொள்ளும் ஆண்கள்,[q] **10** திருடர்கள், பேராசைக்கா
ரர்கள்,[r] குடிகாரர்கள்,[s] சபித்துப் பேசுகிறவர்கள்,* கொள்ளையடிக்கிறவர்கள்
ஆகியோர் கடவுளுடைய அரசாங்கத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்
கள்.[t] **11** உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாகத்தான் இருந்தீர்கள்.

5:11; 6:9 *சொல் பட்டியலைப் பாருங்கள். **5:11** #வே.வா., “கெட்ட வார்த்தைக
ளால் திட்டுகிறவனாகவோ.” **6:9** #நே.மொ., “அநீதிமான்கள் கடவுளுடைய அரசாங்
கத்தை ஆஸ்தியாகப் பெற.” △வே.வா., “மற்ற ஆண்கள் தங்களோடு உறவு
கொள்ள அனுமதிக்கும் ஆண்கள்.” **6:10** *வே.வா., “கெட்ட வார்த்தைகளால்
திட்டுகிறவர்கள்.”

அதி. 5
a எபே 5:5
b உபா 21:20, 21; 1பே 4:3
c 1கொ 6:9, 10; கலா 5:19-21
d எண் 16:25, 26; ரோ 16:17; 2யோ 10
e பிர 12:14
f ஆதி 3:23, 24; உபா 17:7; தீத் 3:10; 2யோ 10

அதி. 6
g மத் 18:15-17
h வெளி 2:26, 27; வெளி 20:4
i ரோ 16:20
j மத் 18:17
k மத் 5:39, 40
l எபே 5:5; வெளி 22:15
m வெளி 21:8
n கொலோ 3:5
o எபி 13:4
p ரோ 1:27
q 1தீ 1:9, 10
r 1கொ 5:11
s உபா 21:20, 21; நீதி 23:20; 1பே 4:3
t எபி 12:14

ஆனால், நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் பெயராலும் கடவுளுடைய
சக்தியாலும் சுத்தமாகக் கழுவப்பட்டீர்கள்,[a] பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்,[b] நீதி
மான்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டீர்கள்.[c]

12 எல்லா காரியங்களையும் செய்ய எனக்கு அதிகாரம்* இருக்கிறது;
ஆனால், எல்லா காரியங்களும் பிரயோஜனமானவை கிடையாது.[d] எல்லா
காரியங்களையும் செய்ய எனக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், எந்தக்
காரியத்துக்கும் நான் அடிமையாகிவிட மாட்டேன். **13** வயிற்றுக்காகவே
உணவு, உணவுக்காகவே வயிறு. ஆனால், இவை இரண்டையும் கடவுள்
அழித்துவிடுவார்.[e] உடலானது பாலியல் முறைகேட்டுக்காக* அல்ல, நம்
எஜமானுக்காக இருக்கிறது;[f] நம் எஜமானும் உடலுக்காக இருக்கிறார்.
14 கடவுள் தன்னுடைய வல்லமையால்[g] நம் எஜமானை உயிரோடு எழுப்
பினார்,[h] அதேபோல் நம்மையும் உயிரோடு எழுப்புவார்.[i]

15 உங்களுடைய உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள் என்பது உங்
களுக்குத் தெரியாதா?[j] அப்படியிருக்கும்போது, கிறிஸ்துவின் உறுப்புகளை
எடுத்து ஒரு விபச்சாரியின் உறுப்புகளோடு நான் சேர்க்கலாமா? கூடவே
கூடாது! **16** விபச்சாரியோடு சேர்ந்திருக்கிறவன் அவளோடு ஒரே உட
லாக இருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியாதா? ஏனென்றால், “அவர்
கள் இரண்டு பேரும் ஒரே உடலாக* இருப்பார்கள்” என்று கடவுள்
சொல்லியிருக்கிறார்.[k] **17** ஆனால், நம் எஜமானோடு சேர்ந்திருக்கிறவன்
அவரோடு ஒரே சிந்தையாக இருக்கிறான்.[l] **18** பாலியல் முறைகேட்டிலி
ருந்து* விலகி ஓடுங்கள்.[m] ஒரு மனிதன் செய்கிற வேறெந்தப் பாவமும் உட
லோடு நேரடியாகச் சம்பந்தப்படாதது. ஆனால், பாலியல் முறைகேட்டில்
ஈடுபடுகிறவன் தன் உடலுக்கு எதிராகவே பாவம் செய்கிறான்.[n] **19** உங்
கள் உடல் கடவுளுடைய சக்தி குடியிருக்கிற[o] ஆலயம் என்பது உங்களுக்
குத் தெரியாதா?[p] நீங்கள் உங்களுக்குச் சொந்தமானவர்கள் கிடையாது.[q]
20 ஏனென்றால், நீங்கள் விலைக்கு வாங்கப்பட்டீர்கள்.[r] அதனால், உங்கள்
உடலால்[s] கடவுளை மகிமைப்படுத்துங்கள்.[t]

7 இப்போது, நீங்கள் எனக்கு எழுதிக் கேட்ட விஷயங்களைப் பற்றிப்
பார்ப்போம்; ஓர் ஆண் ஒரு பெண்ணைத் தொடாமல்* இருப்பது
நல்லது. **2** ஆனால், பாலியல் முறைகேடு* எல்லா இடங்களிலும் பரவியி
ருப்பதால், ஒவ்வொரு ஆணும் தன் சொந்த மனைவியோடு வாழட்டும்,[u]
ஒவ்வொரு பெண்ணும் தன் சொந்த கணவனோடு வாழட்டும்.[v] **3** கணவன்
தன்னுடைய மனைவிக்குக் கொடுக்க வேண்டிய கடனை* கொடுக்கட்டும்;
அதேபோல், மனைவியும் தன்னுடைய கணவனுக்குக் கொடுக்க வேண்டிய
தைக் கொடுக்கட்டும்.[w] **4** மனைவிக்குத் தன்னுடைய உடல்மீது அதிகா
ரம் இல்லை, அவளுடைய கணவனுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது;
அதேபோல், கணவனுக்குத் தன்னுடைய உடல்மீது அதிகாரம் இல்லை, அவ
னுடைய மனைவிக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. **5** ஒருவருக்
கொருவர் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுக்காமல் இருந்துவிடாதீர்கள்;
இரண்டு பேரும் ஒத்துக்கொண்டால் மட்டுமே, ஜெபம் செய்ய நேரம் ஒதுக்
குவதற்காகக் குறிப்பிட்ட காலத்துக்கு இணையாமல் இருக்கலாம். ஆனால்,

---

6:12 *வே.வா., “அனுமதி.” **6:13, 18; 7:2** *சொல் பட்டியலைப் பாருங்கள். **6:16** *நே.மொ., “சதையாக.” **7:1** *அதாவது, “பெண்ணோடு உறவுகொள்ளாமல்.” **7:3** *அதாவது, “தாம்பத்தியக் கடனை.”

அதி. 6
a அப் 22:16, எபி 10:22
b எபே 5:25, 26, 2தெ 2:13
c ரோ 5:18
d 1கொ 10:23
e ரோ 14:17
f 1தெ 4:3
g ரோ 8:11, எபே 1:19, 20
h அப் 2:24
i 2கொ 4:14
j ரோ 12:4, 5, 1கொ 12:18, 27, எபே 4:15, எபே 5:29, 30
k ஆதி 2:24, மத் 19:4, 5
l யோவா 17:20, 21
m ஆதி 39:10–12, 1தெ 4:3
n ரோ 1:24, 27
o 1கொ 3:16
p 2கொ 6:16
q ரோ 14:8
r 1கொ 7:23, எபி 9:12, 1பே 1:18, 19
s ரோ 12:1
t மத் 5:16

அதி. 7
u நீதி 5:18, 19
v ஆதி 2:24, எபி 13:4
w யாத் 21:10, 1கொ 7:5

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத சமயங்களில் சாத்தான் உங்களைச்
சோதிக்காமல் இருப்பதற்காக மறுபடியும் இணைந்துவிடுங்கள். **6** இருந்தா
லும் இதை நான் ஒரு கட்டளையாகக் கொடுக்கவில்லை, சூழ்நிலையை
மனதில் வைத்து உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன். **7** எல்லாரும் என்
னைப் போலவே இருந்துவிட்டால் நல்லது. ஆனாலும், ஒவ்வொருவனும்
தன்தன் வரத்தைக் கடவுளிடமிருந்து பெற்றிருக்கிறான்;[a] அது ஒருவனுக்கு
ஒரு விதமாகவும் வேறொருவனுக்கு வேறு விதமாகவும் இருக்கிறது.

8 திருமணம் ஆகாதவர்களுக்கும் விதவைகளுக்கும் நான் சொல்வது
இதுதான்: அவர்கள் என்னைப் போலவே இருந்துவிட்டால் நல்லது.[b]
9 ஆனால், அவர்களுக்குச் சுயக்கட்டுப்பாடு இல்லையென்றால் திருமணம்
செய்துகொள்ளட்டும். ஏனென்றால், காமத் தீயில் பற்றியெரிவதைவிட திரு
மணம் செய்துகொள்வதே மேல்.[c]

10 திருமணம் ஆனவர்களுக்கு நான் தரும் அறிவுரைகள் இவைதான்,
உண்மையில் நான் அல்ல நம் எஜமான் தரும் அறிவுரைகள் இவை
தான்: மனைவி தன்னுடைய கணவனைவிட்டுப் பிரிந்துபோகக் கூடாது.[d]
11 அப்படியே பிரிந்துபோனாலும், அவள் மறுமணம் செய்யாமல் இருக்க
வேண்டும் அல்லது மறுபடியும் தன்னுடைய கணவனோடு சமரசம் செய்து
கொள்ள வேண்டும்; கணவனும் தன்னுடைய மனைவியைவிட்டுப் பிரிந்து
போகக் கூடாது.[e]

12 ஆனால் மற்றவர்களுக்கு நான் சொல்வது இதுதான், நம் எஜ
மான் அல்ல, நான் சொல்வது இதுதான்:[f] ஒரு சகோதரனுடைய மனைவி
விசுவாசியாக* இல்லாவிட்டாலும் அவள் அவனோடு வாழச் சம்மதித்தால்,
அவன் அவளைவிட்டுப் பிரியக் கூடாது. **13** அதேபோல், ஒரு சகோதரி
யின் கணவன் விசுவாசியாக இல்லாவிட்டாலும் அவன் அவளோடு வாழச்
சம்மதித்தால், அவள் அவனைவிட்டுப் பிரியக் கூடாது. **14** ஏனென்றால்,
விசுவாசியாக இல்லாத கணவன் விசுவாசியாக இருக்கிற தன்னுடைய
மனைவியின் மூலம் பரிசுத்தமாக்கப்படுகிறான். அதேபோல், விசுவாசியாக
இல்லாத மனைவியும் விசுவாசியாக இருக்கிற தன்னுடைய கணவனின்
மூலம் பரிசுத்தமாக்கப்படுகிறாள்; இல்லையென்றால், உங்கள் பிள்ளைகள்
அசுத்தமானவர்களாக இருப்பார்களே; இப்போதோ அவர்கள் பரிசுத்தமா
னவர்களாக இருக்கிறார்கள். **15** ஆனால், கணவன் மனைவி ஆகிய
இரண்டு பேரில் விசுவாசியாக இல்லாதவர் பிரிந்துபோக விரும்பினால்
பிரிந்துபோகட்டும்; இப்படிப்பட்ட சூழ்நிலையில் விசுவாசியாக இருக்கிற
கணவனுக்கோ மனைவிக்கோ சேர்ந்து வாழ வேண்டிய கட்டாயம் இல்லை.
ஆனாலும், சமாதானமாக இருப்பதற்காகத்தான் கடவுள் உங்களை அழைத்
திருக்கிறார்.[g] **16** ஏனென்றால் மனைவியே, உன்னால் உன் கணவன் காப்
பாற்றப்படலாம், இல்லையா?[h] கணவனே, உன்னால் உன் மனைவி காப்
பாற்றப்படலாம், இல்லையா?

17 யெகோவா* ஒருவனை எந்த நிலையில் இருக்க அனுமதித்திருக்கி
றாரோ, ஒருவனை எந்த நிலையில் அழைத்திருக்கிறாரோ, அந்த நிலையி
லேயே அவன் தொடர்ந்து வாழ வேண்டும்;[i] இதை எல்லா சபைகளுக்கும்
உத்தரவிடுகிறேன். **18** ஒருவன் அழைக்கப்பட்டபோது விருத்தசேதனம்
செய்தவனாக இருந்தானா?[j] அப்படியானால், அவன் அந்த நிலையிலேயே

அதி. 7
a மத் 19:10, 11
b 1கொ 7:39, 40; 1கொ 9:5
c 1தெ 4:4, 5; 1தீ 5:11, 14
d மத் 5:32; மத் 19:6
e மாற் 10:11; லூ 16:18
f 1கொ 7:25, 40
g எபி 12:14
h 1பே 3:1, 2
i 1கொ 7:7
j அப் 21:20

7:12 * வே.வா., “இயேசுவின் சீஷராக.” **7:17** * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

இருக்கட்டும். ஒருவன் அழைக்கப்பட்டபோது விருத்தசேதனம் செய்யாதவ
னாக இருந்தானா? அப்படியானால், அவன் விருத்தசேதனம் செய்து
கொள்ள வேண்டாம்.[a] **19** விருத்தசேதனம்* செய்துகொள்வதும் முக்கிய
மல்ல, விருத்தசேதனம் செய்துகொள்ளாமல் இருப்பதும் முக்கியமல்ல,[b]
கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதுதான் முக்கியம்.[c] **20** ஒவ்
வொருவனும் எந்த நிலையில் அழைக்கப்பட்டானோ அந்த நிலையிலேயே
இருக்க வேண்டும்.[d] **21** நீங்கள் அடிமையாக இருக்கும்போது அழைக்கப்
பட்டீர்களா? கவலைப்பட வேண்டாம்.[e] ஆனாலும், நீங்கள் சுதந்திரம்
பெற வாய்ப்பு இருக்கிறதென்றால், அதை நழுவ விடாதீர்கள். **22** ஏனென்
றால், அடிமையாக இருக்கும்போது நம் எஜமானால் அழைக்கப்பட்ட
எவனும் அவரால் சுதந்திரம் பெற்று அவருக்குச் சொந்தமானவனாக இருக்
கிறான்.[f] அதேபோல், சுதந்திரமாக இருக்கும்போது அழைக்கப்பட்ட எவ
னும் கிறிஸ்துவின் அடிமையாக இருக்கிறான். **23** நீங்கள் விலைக்கு வாங்
கப்பட்டீர்கள்;[g] அதனால், மனிதர்களுக்கு அடிமைகளாவதை நிறுத்துங்கள்.
24 சகோதரர்களே, ஒவ்வொருவனும் எந்த நிலையில் அழைக்கப்பட்
டானோ அந்த நிலையிலேயே கடவுள் முன்னால் இருக்க வேண்டும்.

25 திருமணம் ஆகாதவர்கள்* சம்பந்தமாக நம்முடைய எஜமானிட
மிருந்து எனக்கு எந்தக் கட்டளையும் கிடைக்கவில்லை. ஆனால், நம்
எஜமானுடைய இரக்கத்தால் உண்மையுள்ளவனாக இருக்கும் நான் என்னு
டைய கருத்தைச் சொல்கிறேன்.[h] **26** இன்றைய நெருக்கடியான நிலைமை
யைப் பார்க்கும்போது, ஒருவன் திருமணம் செய்யாமல் இருப்பதே மிகச்
சிறந்தது என்று நினைக்கிறேன். **27** ஒரு பெண்ணோடு நீங்கள் திருமண
பந்தத்தில் இணைக்கப்பட்டிருக்கிறீர்களா? அப்படியானால், அந்தப் பந்
தத்திலிருந்து விடுபடுவதற்கு வழிதேடாதீர்கள்.[i] நீங்கள் திருமண பந்தத்தில்
இணைக்கப்படாமல் இருக்கிறீர்களா?* அப்படியானால், திருமணம் செய்து
கொள்ள வழிதேடாதீர்கள். **28** நீங்கள் திருமணம் செய்துகொண்டாலும்
அதில் பாவம் இல்லை. திருமணம் ஆகாதவர்* திருமணம் செய்துகொள்வ
திலும் பாவம் இல்லை. ஆனாலும், திருமணம் செய்துகொள்கிறவர்களுக்கு
வாழ்க்கையில்# உபத்திரவங்கள் வரும். அதிலிருந்து உங்களைக் காப்பாற்
றவே முயற்சி செய்கிறேன்.

29 அதோடு சகோதரர்களே, நான் சொல்வது இதுதான்: இன்னும்
கொஞ்சக் காலம்தான் மீதியிருக்கிறது.[j] அதனால் மனைவி உள்ளவர்கள்
இனி மனைவி இல்லாதவர்கள் போலவும், **30** அழுகிறவர்கள் அழாதவர்
கள் போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போல
வும், பொருள்களை வாங்குகிறவர்கள் அவை இல்லாதவர்கள் போல
வும், **31** உலகத்தைப் பயன்படுத்துகிறவர்கள் அதை முழுமையாகப்
பயன்படுத்தாதவர்கள் போலவும் இருக்கட்டும். ஏனென்றால், இந்த உலகத்
தின் காட்சி மாறிக்கொண்டே இருக்கிறது. **32** நீங்கள் கவலையில்லாமல்
இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். திருமணம் ஆகாதவன் நம்
முடைய எஜமானுக்கு எப்படிப் பிரியமாக இருக்கலாம் என்று யோசித்து,
நம் எஜமானுடைய காரியங்களுக்காகக் கவலைப்படுகிறான். **33** ஆனால்,

---

7:19 *சொல் பட்டியலைப் பாருங்கள். **7:25** *நே.மொ., “கன்னி கழியாதவர்கள்.” **7:27** *இது மனைவியை இழந்தவர்களையும் குறிக்கலாம். **7:28** *நே.மொ., “கன்னி கழியாதவர்.” #நே.மொ., “உடலில்.”

அதி. 7
a அப் 10:45, அப் 15:1, 24, கலா 5:2
b கலா 6:15, கொலோ 3:11
c பிர 12:13, எரே 7:23, ரோ 2:25, கலா 5:6, 1யோ 5:3
d 1கொ 7:17
e கலா 3:28
f யோவா 8:36, பிலே 15, 16
g 1கொ 6:19, 20, எபி 9:12, 1பே 1:18, 19
h 1கொ 7:12, 1கொ 7:40
i மல் 2:16, மத் 19:6, எபே 5:33
j ரோ 13:11, 1பே 4:7

திருமணம் ஆனவன் தன்னுடைய மனைவிக்கு எப்படிப் பிரியமாக இருக்
கலாம் என்று யோசித்து, உலகக் காரியங்களுக்காகக் கவலைப்படுகிறான்.[a]
34 அவனுடைய மனம் இரண்டுபட்டிருக்கிறது. அதேபோல், கணவனில்
லாத பெண்ணும் சரி, கன்னிப்பெண்ணும் சரி, உடலிலும் உள்ளத்திலும் பரி
சுத்தமாய் இருப்பதற்காக நம் எஜமானுடைய காரியங்களுக்காகக் கவலைப்
படுகிறார்கள்.[b] ஆனால், திருமணமான பெண் தன்னுடைய கணவனுக்கு
எப்படிப் பிரியமாக இருக்கலாம் என்று யோசித்து, உலகக் காரியங்க
ளுக்காகக் கவலைப்படுகிறாள். **35** உங்கள் சொந்த நன்மைக்காக இதைச்
சொல்கிறேன், உங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல. ஆம், நீங்கள் சரி
யான காரியத்தைச் செய்வதற்கும் கவனச்சிதறல் இல்லாமல் நம் எஜமானுக்
குத் தொடர்ந்து ஊழியம் செய்வதற்கும் உங்கள் மனதைத் தூண்டுவதற்காக
இதைச் சொல்கிறேன்.

36 ஆனால், திருமணம் செய்யாத ஒருவனால் தன்னுடைய காம
உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தால்,* இளமை மலரும்
பருவத்தை அவன் கடந்திருந்தால், அவன் தன் விருப்பப்படியே திரும
ணம் செய்யட்டும்; அதில் பாவம் இல்லை. அப்படிப்பட்டவர்கள் திருமணம்
செய்துகொள்ளட்டும்.[c] **37** ஆனால், ஒருவன் திருமணம் அவசியமில்லை
என்று நினைத்து தன்னுடைய இதயத்தில் உறுதியாக இருந்தால், தன்னு
டைய ஆசைகளைக் கட்டுப்படுத்த முடிந்தவனாக இருந்தால், அது அவ
னுக்கு நல்லது. அதோடு, திருமணமே வேண்டாம்* என்று அவன் தன்னு
டைய இதயத்தில் தீர்மானம் எடுத்திருந்தால் நல்லது.[d] **38** திருமணம்
செய்வதும் நல்லதுதான், ஆனால் திருமணம் செய்யாமல் இருப்பது அதை
விட நல்லது.[e]

39 கணவன் உயிரோடிருக்கும் காலமெல்லாம் மனைவி அவனோடு
திருமண பந்தத்தில் பிணைக்கப்பட்டிருக்கிறாள்.[f] ஆனால், அவளுடைய
கணவன் இறந்துவிட்டால்* தனக்குப் பிடித்த ஒருவரை அவள் திருமணம்
செய்துகொள்ளலாம். இருந்தாலும், நம் எஜமானைப் பின்பற்றுகிற ஒருவ
ரையே அவள் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.[g] **40** ஆனால்,
அவள் அப்படியே இருந்துவிட்டால் மிகவும் சந்தோஷமாக இருப்பாள்
என்பதுதான் என் கருத்து. எனக்கும் கடவுளுடைய சக்தி இருக்கிறது என்று
உறுதியாக நம்புகிறேன்.

8 இப்போது, சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுகளைப் பற்றிப்
பார்ப்போம்;[h] இதைப் பற்றிய அறிவு நம் எல்லாருக்கும் இருக்கிறதென்
பது நமக்குத் தெரியும்.[i] அறிவு தலைக்கனத்தை உண்டாக்குகிறது, அன்போ
பலப்படுத்துகிறது.[j] **2** ஒரு விஷயத்தைப் பற்றித் தனக்கு நன்றாகத் தெரி
யும் என்று ஒருவன் நினைத்தால், தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு
அவன் அதைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறான். **3** ஆனால், ஒருவன்
கடவுள்மீது அன்பு வைத்திருந்தால், கடவுள் அவனை நன்றாகத் தெரிந்து
வைத்திருக்கிறார்.

4 சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவைச் சாப்பிடும் விஷயத்தைப்
பொறுத்ததில், சிலை என்பது ஒன்றுமே இல்லை[k] என்றும், ஒரே கடவுளைத்

அதி. 7
a 1தீ 5:8
b 1தீ 5:5
c மத் 19:12; 1கொ 7:28
d மத் 19:10, 11
e 1கொ 7:32
f ரோ 7:2
g ஆதி 24:2, 3; உபா 7:3, 4; நெ 13:25, 26; 2கொ 6:14

அதி. 8
h அப் 15:20, 29
i ரோ 14:14; 1கொ 8:10
j 1கொ 8:13; 1கொ 13:4, 5
k உபா 32:21; 2ரா 19:17, 18; எரே 16:20

7:36 *வே.வா., “ஒருவன் தன்னுடைய கற்பைக் காத்துக்கொள்ள முடியாததுபோல் உணர்ந்தால்.” **7:37** *வே.வா., “கன்னி கழியாமல் இருக்க வேண்டும்.” **7:39** *நே.மொ., “தூங்கிவிட்டால்.”

தவிர வேறு கடவுள் இல்லை[a] என்றும் நமக்குத் தெரியும். **5** பரலோகத்தி
லும் பூமியிலும் கடவுள்கள் என்று அழைக்கப்படுபவை நிறைய இருக்கின்
றன.[b] இப்படி நிறைய “கடவுள்களும்” நிறைய “எஜமான்களும்” இருந்தா
லும், **6** உண்மையில் ஒரே கடவுள்தான் நமக்கு இருக்கிறார்,[c] அவர்தான்
பரலோகத் தகப்பன்;[d] அவரால்தான் எல்லாம் உண்டாயிருக்கிறது, அவருக்
காக நாமும் உண்டாயிருக்கிறோம்;[e] இயேசு கிறிஸ்துவாகிய ஒரே எஜமா
னும் இருக்கிறார்; அவர் மூலம் எல்லாம் உண்டாயிருக்கிறது,[f] அவர் மூலம்
நாமும் உண்டாயிருக்கிறோம்.

7 ஆனாலும், இந்த அறிவு எல்லாருக்கும் இல்லை;[g] முன்பு சிலைகளை
வணங்கிவந்த சிலர் அவற்றுக்குப் படைக்கப்பட்ட உணவைச் சாப்பிடும்
போது அதைப் படையல் என்று நினைப்பதால்[h] அவர்களுடைய பலவீன
மான மனசாட்சி கறைபட்டுவிடுகிறது.[i] **8** ஆனாலும், உணவு நம்மைக் கட
வுளுக்குப் பிரியமானவர்களாக ஆக்கிவிடாது.[j] சாப்பிடாமல் இருப்பதால்
நமக்கு எந்த நஷ்டமும் இல்லை, சாப்பிடுவதால் நமக்கு எந்த லாபமும்
இல்லை.[k] **9** உங்களுக்கு இருக்கும் தேர்ந்தெடுக்கிற உரிமை பலவீனமான
வர்களுக்கு எந்த விதத்திலும் தடைக்கல்லாகிவிடாதபடி எப்போதும் கவன
மாக இருங்கள்.[l] **10** அறிவைப் பெற்ற நீங்கள் சிலைகள் இருக்கிற ஒரு
கோயிலில் சாப்பிட உட்காருகிறீர்கள் என்றால், அதைப் பார்க்கிற பலவீன
மான ஒருவனுடைய மனசாட்சி சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றைச்
சாப்பிடும் அளவுக்குத் துணிந்துவிடும், இல்லையா? **11** பலவீனமாக
இருக்கிறவன் உங்களுடைய அறிவால் சீரழிந்துவிடுகிறான்; இவனும் உங்க
ளுடைய சகோதரன்தானே, இவனுக்காகவும் கிறிஸ்து இறந்தாரே.[m]
12 இப்படி, உங்களுடைய சகோதரர்களுக்கு எதிராக நீங்கள் பாவம்
செய்து அவர்களுடைய பலவீனமான மனசாட்சிக்குப் பாதிப்புண்டாக்கும்
போது,[n] கிறிஸ்துவுக்கு எதிராகவே பாவம் செய்கிறீர்கள். **13** அதனால்,
நான் சாப்பிடுகிற இறைச்சி என் சகோதரனுடைய விசுவாசத்துக்குத் தடைக்
கல்லாக இருந்தால், நான் அவனுக்குத் தடைக்கல்லாகிவிடாதபடி இனிமேல்
அதைச் சாப்பிடவே மாட்டேன்.[o]

9 என் விருப்பப்படி நடக்க எனக்குச் சுதந்திரம் இருக்கிறது, இல்லையா?
நானும் ஓர் அப்போஸ்தலன்தான், இல்லையா? நம் எஜமானாகிய
இயேசுவை நான் பார்த்திருக்கிறேன், இல்லையா?[p] எஜமானுக்காக நான்
செய்கிற ஊழியத்தின் பலன் நீங்கள்தான், இல்லையா? **2** நான் மற்றவர்க
ளுக்கு அப்போஸ்தலனாக இல்லாவிட்டாலும், நிச்சயமாகவே உங்களுக்கு
அப்போஸ்தலன்தான்! ஏனென்றால், எஜமானுடைய சேவையில் நான் அப்
போஸ்தலனாக இருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்துகிற முத்திரை நீங்
கள்தான்.

3 என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு என்னுடைய தரப்பில் நான்
சொல்வது இதுதான்: **4** சாப்பிடவும் குடிக்கவும் எங்களுக்கு உரிமை* இல்
லையா? **5** மற்ற அப்போஸ்தலர்களும் நம் எஜமானின் சகோதரர்களும்[q]
கேபாவும்*[r] செய்வதுபோல், ஒரு கிறிஸ்தவப் பெண்ணைத் திருமணம்
செய்துகொண்டு, கூடவே கூட்டிக்கொண்டு போக எங்களுக்கு உரிமை
இல்லையா?[s] **6** பிழைப்புக்காக வேலை செய்யாமல் இருக்க பர்னபா
வுக்கும்[t] எனக்கும் மட்டும்தான் உரிமை இல்லையா? **7** சொந்தச் செலவில்

9:4 * நே.மொ., “அதிகாரம்.” **9:5** * பேதுரு என்றும் அழைக்கப்படுகிறார்.

அதி. 8
a உபா 6:4
உபா 32:39
b சங் 82:1, 6
யோவா 10:
34, 35
c 1தீ 2:5
d மல் 2:10
மத் 23:9
e அப் 17:28
ரோ 11:36
f யோவா 1:1, 3
கொலோ 1:
15, 16
g ரோ 14:14
h 1கொ 10:
27, 28
i ரோ 14:23
j ரோ 14:17
k எபி 13:9
l ரோ 14:13, 20
m ரோ 14:15
n 1கொ 10:
28, 29
o மத் 18:6
ரோ 14:15, 21

அதி. 9
p அப் 9:3-5
1கொ 15:7, 8
q மத் 13:55
கலா 1:19
r யோவா 1:42
s மத் 19:11
t அப் 13:2

அதி. 9
a உபா 20:6
நீதி 27:18
b உபா 25:4
1தீ 5:18
c ரோ 15:26, 27
கலா 6:6
பிலி 4:15-17
d அப் 18:3
அப் 20:34
2தெ 3:7, 8
e 2கொ 6:3
2கொ 11:7
f லேவி 6:14, 16
எண் 18:30, 31
உபா 18:1
g மத் 10:9, 10
லூ 10:7, 8
h அப் 18:3
அப் 20:34
1கொ 4:11, 12
2தெ 3:8
i 2கொ 11:8-10
j எசே 3:18
k கலா 2:7
எபே 3:1, 2
கொலோ 1:25

எவனாவது படைவீரனாக வேலை செய்வானா? திராட்சைத் தோட்டக்காரன்
எவனாவது அதன் பழத்தைச் சாப்பிடாமல் இருப்பானா?[a] அல்லது, ஆடு
மேய்க்கிற எவனாவது அதன் பாலைக் குடிக்காமல் இருப்பானா?

8 நான் மனிதர்களுடைய கண்ணோட்டத்திலா இவற்றைச் சொல்கி
றேன்? திருச்சட்டமும் இவற்றைச் சொல்கிறது, இல்லையா? **9** “போரடிக்
கிற மாட்டின் வாயைக் கட்டக் கூடாது” என்று மோசேயின் திருச்சட்டத்தில்
எழுதப்பட்டிருக்கிறதே.[b] மாடுகள் மீதுள்ள அக்கறையால் கடவுள் இப்படிச்
சொல்கிறாரா? **10** அல்லது, முழுக்க முழுக்க நமக்காக இப்படிச் சொல்கி
றாரா? ஆமாம், நமக்காகத்தான் அது எழுதப்பட்டிருக்கிறது. ஏனென்
றால், விளைச்சலில் பங்கு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு உழவன் உழ
வேண்டும், கதிரடிக்கிறவன் கதிரடிக்க வேண்டும்.

11 ஆன்மீக விஷயங்களை உங்கள் மத்தியில் நாங்கள் விதைத்திருப்
பதால், எங்களுடைய பொருளாதாரத் தேவைகளை உங்களிடமிருந்து அறு
வடையாகப் பெற்றாலும் தவறில்லைதானே?[c] **12** உங்களிடமிருந்து இவற்
றைப் பெற்றுக்கொள்ள மற்றவர்களுக்கு உரிமை* இருக்கிறது என்றால்,
எங்களுக்கு அதைவிட அதிக உரிமை இருக்கிறது, இல்லையா? அப்படியி
ருந்தும்கூட நாங்கள் இந்த உரிமையைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.[d]
கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தி பரவுவதற்கு எங்களால் எந்தத் தடை
யும் வந்துவிடக் கூடாது என்பதற்காக எல்லாவற்றையும் நாங்கள் சகித்துக்
கொள்கிறோம்.[e] **13** ஆலயத்தில் பரிசுத்த வேலைகளைச் செய்கிறவர்கள்
அங்கே கிடைக்கிற உணவைச் சாப்பிடுகிறார்கள் என்பதும், பலிபீடத்
தில் தவறாமல் சேவை செய்கிறவர்கள் பலிப்பொருள்களில் ஒரு பங்கைப்
பெற்றுக்கொள்கிறார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியாதா?[f] **14** அது
போலவே, நல்ல செய்தியை அறிவிக்கிறவர்களும் அந்த நல்ல செய்தி
யின் மூலம் பிழைப்புக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்
டுமென்று நம் எஜமான் கட்டளை கொடுத்திருக்கிறார்.[g]

15 ஆனால், இந்த ஏற்பாடுகளில் ஒன்றைக்கூட நான் பயன்படுத்திக்
கொள்ளவில்லை.[h] உங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்
காக நான் இதையெல்லாம் எழுதவில்லை. அதைவிட நான் சாவதே மேல்.
இந்த விஷயத்தில் எனக்கு இருக்கும் பெருமையை எடுத்துப்போட யாரை
யும் அனுமதிக்க மாட்டேன்.[i] **16** நான் இப்போது நல்ல செய்தியை அறி
வித்து வந்தாலும் பெருமை பேச எனக்கு இடமில்லை; ஏனென்றால், அதை
அறிவிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. உண்மையில், நல்ல செய்
தியை நான் அறிவிக்காவிட்டால் எனக்குக் கேடுதான்![j] **17** அதை விருப்
பத்தோடு செய்தால் எனக்குப் பலன் இருக்கிறது; அதை விருப்பமில்லாமல்
செய்தால்கூட, என்னிடம் ஒரு நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டி
ருக்கிறது.[k] **18** அப்படியானால், எனக்குக் கிடைக்கிற பலன் என்ன? உங்க
ளுக்கு எந்தச் செலவும் வைக்காமல் நல்ல செய்தியை அறிவிக்கிற
பெருமைதான் எனக்குக் கிடைக்கிற பலன்; நல்ல செய்தியை அறிவிக்கிற
வர்களுக்கு இருக்கிற உரிமையைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள நான்
விரும்பவில்லை.

19 நான் யாருக்கும் கடமைப்பட்டவனாக இல்லையென்றாலும், எத்
தனை பேரை முடியுமோ அத்தனை பேரையும் கிறிஸ்துவின் வழிக்குக்

9:12 * நே.மொ., “அதிகாரம்.”

கொண்டுவர என்னையே எல்லாருக்கும் அடிமையாக்கியிருக்கிறேன்.
20 யூதர்களைக் கிறிஸ்துவின் வழிக்குக் கொண்டுவர யூதர்களுக்கு யூத
னைப் போல் ஆனேன்;[a] திருச்சட்டத்தின்கீழ் நான் இல்லாதபோதிலும்,
திருச்சட்டத்தின்கீழ் இருப்பவர்களைக் கிறிஸ்துவின் வழிக்குக் கொண்டு
வர திருச்சட்டத்தின்கீழ் இருப்பவனைப் போல் ஆனேன்.[b] **21** திருச்சட்
டம் இல்லாதவர்களைக் கிறிஸ்துவின் வழிக்குக் கொண்டுவர திருச்சட்டம்
இல்லாதவனைப் போல் ஆனேன். ஆனாலும் நான் கடவுளுடைய சட்டத்
தின்கீழ் இல்லாதவன் என்று அர்த்தம் கிடையாது, ஏனென்றால் நான் கிறிஸ்
துவின் சட்டத்தின்கீழ் இருக்கிறேன்.[c] **22** பலவீனமானவர்களைக் கிறிஸ்து
வின் வழிக்குக் கொண்டுவர பலவீனமானவர்களுக்குப் பலவீனமானவன்
ஆனேன்.[d] எப்படியாவது சிலரை மீட்புக்கு வழிநடத்த வேண்டும் என்
பதற்காக எல்லா விதமான ஆட்களுக்கும் எல்லா விதமாகவும் ஆனேன்.
23 நல்ல செய்தியை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்காக எல்லாவற்றையும்
நல்ல செய்திக்காகவே செய்கிறேன்.[e]

24 ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்கிற எல்லாரும் ஓடுவார்கள்,
ஆனால் ஒருவர் மட்டும்தான் பரிசு பெறுவார் என்று உங்களுக்குத் தெரி
யாதா? பரிசைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் நீங்களும் ஓடுங்கள்.[f]
25 போட்டியில் கலந்துகொள்கிற எல்லாரும்* எல்லாவற்றிலும் சுயக்கட்டுப்
பாட்டுடன் இருப்பார்கள். அழிந்துபோகிற கிரீடத்தைப் பெறுவதற்காக அவர்
கள் அப்படிச் செய்கிறார்கள்,[g] ஆனால் நாம் அழிந்துபோகாத கிரீடத்தைப்
பெறுவதற்காக அப்படிச் செய்கிறோம்.[h] **26** அதனால், நான் இப்போது
ஓடுகிறேன், ஆனால் சேரவேண்டிய இடம் எதுவென்று தெரியாதவன்போல்
ஓடுவதில்லை.[i] குத்துச்சண்டை போடுகிறேன், ஆனால் காற்றோடு குத்துச்
சண்டை போடுகிறவன்போல் போடுவதில்லை. **27** மற்றவர்களுக்கு நல்ல
செய்தியைப் பிரசங்கிக்கிற நானே எந்த விதத்திலும் கடவுளால் ஒதுக்கப்ப
டாதபடி* என்னுடைய உடலை அடக்கியொடுக்கி#[j] அடிமைபோல் நடத்தி
வருகிறேன்.

10 சகோதரர்களே, நீங்கள் இவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டு
மென்று விரும்புகிறேன்: நம்முடைய முன்னோர்கள் எல்லாரும்
மேகத்தின் கீழே,[k] கடல் வழியாக நடந்துபோனார்கள்.[l] **2** அவர்கள் எல்லா
ரும் மோசேயைப் பின்தொடர்ந்தபோது மேகத்தாலும் கடலாலும் ஞானஸ்
நானம் பெற்றார்கள். **3** கடவுள் கொடுத்த உணவையே எல்லாரும் சாப்பிட்
டார்கள்.[m] **4** கடவுள் கொடுத்த தண்ணீரையே எல்லாரும் குடித்தார்கள்.[n]
தங்களைப் பின்தொடர்ந்து வந்ததுபோல் தோன்றிய கற்பாறையின் தண்ணீ
ரைக் குடித்தார்கள். கடவுள் தந்த அந்தக் கற்பாறை கிறிஸ்துவைக் குறித்
தது.*[o] **5** இருந்தாலும், அவர்களில் பெரும்பாலோர்மீது கடவுள் பிரியப்ப
டவில்லை; அதனால் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள்.[p]

6 அவர்களைப் போல் நாமும் கெட்ட காரியங்களை விரும்பாமல் இருப்
பதற்காக இவை நமக்கு உதாரணங்களாக இருக்கின்றன.[q] **7** அவர்களில்
சிலரைப் போல் நாமும் சிலைகளை வணங்காமல் இருப்போமாக; எழுதப்
பட்டிருக்கிறபடியே, “ஜனங்கள் சாப்பிட்டார்கள், குடித்தார்கள், சந்தோஷமாக

9:25 *வே.வா., “ஓட்டப்பந்தய வீரர்கள் ஒவ்வொருவரும்.” **9:27** *வே.வா., “எந்த விதத்திலும் தகுதியில்லாதவனாக ஆகிவிடாதபடி.” #வே.வா., “தண்டித்து; கடுமையாகக் கண்டித்து.” **10:4** *வே.வா., “கிறிஸ்துதான்.”

அதி. 9
a அப் 16:3
அப் 18:18
b அப் 21:24, 26
c யோவா 13:34
கலா 6:2
d ரோ 14:1
ரோ 15:1
2கொ 11:29
e அப் 19:26
1தெ 2:8
f மத் 10:22
பிலி 3:14
2தீ 4:7, 8
g 2தீ 2:5
h யாக் 1:12
i கலா 2:2
பிலி 2:16
எபி 12:1
j ரோ 8:13
கொலோ 3:5

அதி. 10
k யாத் 13:21
l யாத் 14:21, 22
m யாத் 16:14, 15
n யாத் 17:6
o எண் 20:11
யோவா 4:10, 25
p எண் 14:29
எண் 14:35
q எண் 11:4, 34

இருந்தார்கள்.”[a] **8** அவர்களில் சிலர் பாலியல் முறைகேட்டில்* ஈடுபட்ட
தால் ஒரே நாளில் 23,000 பேர் செத்துப்போனார்கள்; அவர்களைப் போல்
நாமும் பாலியல் முறைகேட்டில்* ஈடுபடாமல் இருப்போமாக.[b] **9** அவர்க
ளில் சிலர் யெகோவாவை* சோதித்துப் பார்த்ததால்[c] பாம்புகளால் கொல்
லப்பட்டார்கள்; அவர்களைப் போல் நாமும் அவரைச் சோதித்துப் பார்க்கக்
கூடாது.[d] **10** அவர்களில் சிலர் முணுமுணுத்ததால்[e] கடவுளுடைய தூத
னால் அழிக்கப்பட்டார்கள்;[f] அவர்களைப் போல் நாமும் முணுமுணுக்கா
மல் இருப்போமாக. **11** அவர்களுக்கு நடந்ததெல்லாம் நமக்கு உதாரணங்
களாக இருக்கின்றன. இந்த உலகத்தின்* முடிவு காலத்தில் வாழ்கிற நம்மை
எச்சரிப்பதற்காக எழுதப்பட்டிருக்கின்றன.[g]

12 அதனால், தான் நிற்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறவன் விழுந்து
விடாதபடி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.[h] **13** மனிதர்களுக்குப்
பொதுவாக வருகிற சோதனையைத் தவிர வேறெந்தச் சோதனையும் உங்க
ளுக்கு வரவில்லை.[i] ஆனால், கடவுள் நம்பகமானவர்; உங்களால் தாங்
கிக்கொள்ள முடியாதளவுக்கு எந்தச் சோதனையையும் அவர் அனுமதிக்க
மாட்டார்.[j] அதைச் சகித்துக்கொள்வதற்கும் அதிலிருந்து விடுபடுவதற்கும்
அவர் வழிசெய்வார்.[k]

14 அதனால், என் அன்புக் கண்மணிகளே, சிலை வழிபாட்டிலிருந்து
விலகி ஓடுங்கள்.[l] **15** நீங்கள் பகுத்தறிவுள்ளவர்கள் என்று நினைத்துப்
பேசுகிறேன்; நான் சொல்வதை நீங்களே யோசித்து முடிவுசெய்யுங்கள்.
16 நாம் கடவுளைப் புகழ்ந்து ஆசீர்வாதக் கிண்ணத்திலிருந்து குடிக்கும்
போது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்கிறோம், இல்லையா?[m] ரொட்
டியைப் பிட்டுச் சாப்பிடும்போது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்கிறோம்,
இல்லையா?[n] **17** ரொட்டி ஒன்றுதான்; அந்த ஒரே ரொட்டியை நாம் எல்
லாரும் சாப்பிடுவதால், நாம் நிறைய பேராக இருந்தாலும், ஒரே உடலாக
இருக்கிறோம்.[o]

18 இஸ்ரவேல் வம்சத்தாரை நினைத்துப் பாருங்கள்; பலியிடப்பட்ட
தைச் சாப்பிடுகிறவர்கள் பலிபீடத்தோடு சேர்ந்து பங்குகொள்கிறார்கள், இல்
லையா?[p] **19** அப்படியானால், சிலைக்குப் பலியிடப்பட்டதோ சிலையோ
முக்கியம் என்றா சொல்கிறேன்? **20** இல்லை; இந்த உலக மக்கள், கடவு
ளுக்குப் பலி செலுத்தவில்லை, பேய்களுக்கே பலி செலுத்துகிறார்கள்[q]
என்றுதான் சொல்கிறேன்; நீங்கள் பேய்களோடு பங்குகொள்வதில்
எனக்கு விருப்பமில்லை.[r] **21** யெகோவாவின்* கிண்ணத்திலும் பேய்க
ளின் கிண்ணத்திலும் நீங்கள் குடிக்க முடியாதே; “யெகோவாவின்* மேஜை
யிலும்”[s] பேய்களின் மேஜையிலும் நீங்கள் சாப்பிட முடியாதே. **22** ‘நாம்
யெகோவாவின்* கோபத்தைக் கிளறலாமா?’[t] அவரை எதிர்க்கிற பலம்
நமக்கு இருக்கிறதா?

23 எல்லாவற்றையும் அனுபவிக்க ஒருவனுக்கு அதிகாரம்* இருக்கிறது;
ஆனால், எல்லாமே பிரயோஜனமானவை கிடையாது; எல்லாவற்றையும்
அனுபவிக்க ஒருவனுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், எல்லாமே பலப்
படுத்துவதில்லை.[u] **24** ஒவ்வொருவனும் தனக்குப் பிரயோஜனமானதைத்
தேடாமல், மற்றவர்களுக்குப் பிரயோஜனமானதையே தேட வேண்டும்.[v]

10:8 * சொல் பட்டியலைப் பாருங்கள். **10:9, 21, 22** * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.
10:11 * நே.மொ., “சகாப்தங்களின்.” **10:23** * வே.வா., “அனுமதி.”

அதி. 10
a யாத் 32:4, 6
b எண் 25:1, 9
c உபா 6:16
d எண் 21:5, 6; மத் 4:7
e எண் 14:2
f எண் 14: 36, 37
g ரோ 15:4
h நீதி 28:14; லூ 22:33, 34; கலா 6:1
i 1பே 5:8, 9
j லூ 22:31, 32; 2பே 2:9
k ஏசா 40:29; பிலி 4:13
l உபா 4:25, 26; 2கொ 6:17; 1யோ 5:21
m மத் 26:27, 28
n மத் 26:26; லூ 22:19; 1கொ 12:18
o ரோ 12:5
p லேவி 7:15
q உபா 32:17
r யூ 6
s எசே 41:22; மல் 1:12
t யாத் 34:14; உபா 32:21
u ரோ 14:19; ரோ 15:2
v 1கொ 10: 32, 33; 1கொ 13:4, 5; பிலி 2:4

25 சந்தையில் விற்கிற எந்த இறைச்சியையும் வாங்கிச் சாப்பிடுங்கள்;
உங்கள் மனசாட்சி உறுத்தாமல் இருப்பதற்காக எதையும் விசாரிக்காதீர்கள்.
26 ஏனென்றால், “பூமியும் அதிலிருக்கிற அனைத்தும் யெகோவாவுக்குத்
தான்* சொந்தம்.”[a] **27** விசுவாசியாக* இல்லாத ஒருவர் உங்களை விருந்
துக்கு அழைக்கும்போது நீங்கள் போக விரும்பினால், உங்கள் முன்னால்
வைக்கப்படுகிற எல்லாவற்றையும் சாப்பிடுங்கள்; உங்கள் மனசாட்சி உறுத்
தாமல் இருப்பதற்காக எதையும் விசாரிக்காதீர்கள். **28** ஆனால், “இது
சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவு” என்று ஒருவன் உங்களிடம் சொன்
னால், அவன் அப்படிச் சொன்னதற்காகவும் மனசாட்சி உறுத்தாமல் இருப்ப
தற்காகவும் அதைச் சாப்பிடாதீர்கள்.[b] **29** உங்களுடைய மனசாட்சியைப்
பற்றிச் சொல்லவில்லை, மற்றவனுடைய மனசாட்சியைப் பற்றித்தான் சொல்
கிறேன். எனக்கு இருக்கும் சுதந்திரம் ஏன் இன்னொருவனுடைய மனசாட்சி
யால் நியாயந்தீர்க்கப்பட வேண்டும்?[c] **30** நான் கடவுளுக்கு நன்றி சொல்
லிச் சாப்பிட்டால், அப்படி நன்றி சொல்லிச் சாப்பிடுகிற அந்த உணவால்[d]
நான் ஏன் பழிப்பேச்சுக்கு ஆளாக வேண்டும்?

31 அதனால், நீங்கள் சாப்பிட்டாலும் குடித்தாலும் எதைச் செய்
தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மகிமைக்காகவே செய்யுங்கள்.[e]
32 யூதர்களுக்கோ கிரேக்கர்களுக்கோ கடவுளுடைய சபைக்கோ தடைக்
கல்லாகிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.[f] **33** ஏனென்றால், நானும்
அப்படியே எல்லா விஷயங்களிலும் எல்லாருக்கும் பிரியமாக நடக்க
முயற்சி செய்கிறேன்; எனக்குப் பிரயோஜனமானதைத் தேடாமல்,[g] நிறைய
பேர் மீட்புப் பெறுவதற்காக அவர்களுக்குப் பிரயோஜனமானதையே தேடு
கிறேன்.[h]

11 நான் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றுவதுபோல் நீங்கள்
என்னுடைய முன்மாதிரியைப் பின்பற்றுங்கள்.[i]

2 என்னை ஞாபகத்தில் வைத்து எல்லாவற்றையும் செய்வதற்காகவும்,
நான் உங்களுக்குக் கற்றுக்கொடுத்த விஷயங்களை அப்படியே கடைப்பி
டிப்பதற்காகவும் உங்களைப் பாராட்டுகிறேன். **3** ஆனால், ஒவ்வொரு
ஆணுக்கும் கிறிஸ்து தலையாக இருக்கிறார்,[j] பெண்ணுக்கு ஆண் தலை
யாக* இருக்கிறான்,[k] கிறிஸ்துவுக்குக் கடவுள் தலையாக இருக்கிறார்[l] என்
பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.
4 ஜெபம் செய்யும்போது அல்லது தீர்க்கதரிசனம் சொல்லும்போது தன்னு
டைய தலையை மூடிக்கொள்கிற ஒவ்வொரு ஆணும் தன்னுடைய
தலையை அவமதிக்கிறான். **5** ஆனால், ஜெபம் செய்யும்போது அல்லது
தீர்க்கதரிசனம் சொல்லும்போது முக்காடு போடாத ஒவ்வொரு பெண்ணும்[m]
தன்னுடைய தலையை அவமதிக்கிறாள்; இது அவளுடைய தலைமுடியைச்
சிரைத்துவிட்டதற்குச் சமம். **6** ஒரு பெண் முக்காடு போடவில்லை என்
றால், தன்னுடைய தலைமுடியை ஒட்ட வெட்டிக்கொள்ள வேண்டும்; அப்ப
டித் தன்னுடைய தலைமுடியை ஒட்ட வெட்டிக்கொள்வதோ தலைமுடியைச்
சிரைத்துக்கொள்வதோ அவளுக்கு அவமானமாக இருந்தால், அவள் முக்
காடு போட வேண்டும்.

7 ஆண் தன்னுடைய தலையில் முக்காடு போட்டுக்கொள்ளக் கூடாது,

அதி. 10
a சங் 24:1; 1தீ 4:4
b 1கொ 8:7, 10
c ரோ 14:15, 16; 1கொ 8:12
d ரோ 14:6; 1தீ 4:3
e மத் 5:16; கொலோ 3:17
f ரோ 14:13; 1கொ 8:13; 2கொ 6:3
g ரோ 15:2; பிலி 2:4
h 1கொ 9:22

அதி. 11
i பிலி 3:17; 2தெ 3:9
j ரோ 14:9; எபே 4:15; கொலோ 2:10
k எபே 5:23; 1பே 3:1
l 1கொ 15:27, 28
m யோவே 2:28; அப் 21:8, 9

10:26 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **10:27** *வே.வா., “இயேசுவின் சீஷராக.”
11:3 *அல்லது, “தலைவனாக.”

ஏனென்றால் அவன் கடவுளுடைய சாயலாகவும்[a] அவருக்குப் பெருமை
சேர்க்கிறவனாகவும் இருக்கிறான்; பெண்ணோ ஆணுக்குப் பெருமை சேர்க்
கிறவளாக இருக்கிறாள். **8** பெண்ணிலிருந்து ஆண் வரவில்லை, ஆணிலி
ருந்துதான் பெண் வந்தாள்.[b] **9** அதோடு, பெண்ணுக்காக ஆண் படைக்
கப்படவில்லை, ஆணுக்காகத்தான் பெண் படைக்கப்பட்டாள்.[c] **10** இதை
முன்னிட்டும் தேவதூதர்களை முன்னிட்டும்,[d] பெண் தன்னுடைய தலை
யில் கீழ்ப்படிதலின் அடையாளமாகிய முக்காட்டைப் போட்டுக்கொள்ள
வேண்டும்.

11 ஆனாலும், நம் எஜமானைப் பின்பற்றுகிறவர்கள் மத்தியில் ஆண்
இல்லாமல் பெண் இல்லை, பெண் இல்லாமல் ஆண் இல்லை. **12** ஆணி
லிருந்து பெண் உண்டானது போலவே,[e] பெண்ணிலிருந்து ஆண் உண்டா
கிறான்; ஆனால், எல்லாமே கடவுளிடமிருந்துதான் உண்டாகின்றன.[f]
13 அதனால், ஒரு பெண் முக்காடு போட்டுக்கொள்ளாமல் கடவுளிடம்
ஜெபம் செய்வது சரியா என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.
14 ஓர் ஆணுக்கு நீளமான தலைமுடி இருப்பது அவனுக்கு வெட்கக்கேடு
என்பதையும், **15** ஒரு பெண்ணுக்கு நீளமான தலைமுடி இருப்பது அவ
ளுக்குப் பெருமை என்பதையும் இயற்கையே உங்களுக்குக் கற்றுக்கொடுக்
கிறது, இல்லையா? தலைமுடி அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்
கிறதே. **16** ஆனால், வேறு ஏதாவது வழக்கத்தைப் பின்பற்ற வேண்டும்
என்று ஒருவன் வாக்குவாதம் செய்தால், எங்களுக்கும் கடவுளுடைய சபை
களுக்கும் அப்படிப்பட்ட எந்த வழக்கமும் இல்லை என்று அவன் தெரிந்து
கொள்ளட்டும்.

17 இந்த அறிவுரைகளைக் கொடுக்கிற நான் உங்களைப் பாராட்டப்போ
வதில்லை; ஏனென்றால், நீங்கள் ஒன்றுகூடிவருவது நன்மைக்குப் பதிலாகத்
தீமையையே உண்டாக்குகிறது. **18** முதலாவதாக, சபை கூடிவரும்போது
உங்களுக்குள் பிரிவினைகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்; அதை ஓர
ளவு நம்புகிறேன். **19** கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்கள் யார் என்
பது தெளிவாய்த் தெரிவதற்காக உங்கள் மத்தியில் பிரிவினைகள் இருக்கத்
தான் செய்யும்.[g]

20 நீங்கள் கூடிவரும்போது நம்முடைய எஜமானின் இரவு
விருந்தை[h] சரியான விதத்தில் அனுசரிப்பதில்லை. **21** நீங்கள் அதை
அனுசரிக்கும்போது, உங்களில் சிலர் தங்களுடைய உணவை முதலில்
சாப்பிட்டுவிடுகிறார்கள்; இதனால் ஒருவன் பசியோடு இருக்கிறான், மற்
றொருவன் குடிவெறியோடு இருக்கிறான். **22** சாப்பிடுவதற்கும் குடிப்பதற்
கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? கடவுளுடைய சபையை அவமதிக்
கிறீர்களா, ஏழைகளை அவமானப்படுத்துகிறீர்களா? நான் என்ன சொல்வது?
உங்களைப் பாராட்டுவதா? இந்த விஷயத்தில் உங்களைப் பாராட்டப்போ
வதில்லை.

23 நம் எஜமானிடமிருந்து பெற்றுக்கொண்டதையே உங்களுக்குக் கற்றுக்
கொடுத்தேன்: எஜமானாகிய இயேசு தான் காட்டிக்கொடுக்கப்படவிருந்த இர
வில்[i] ரொட்டியை எடுத்து, **24** நன்றி சொல்லி அதைப் பிட்டு, “இது
உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் உடலைக் குறிக்கிறது.[j] என் நினை
வாக இதைச் செய்துகொண்டிருங்கள்” என்று சொன்னார்.[k] **25** உணவு சாப்
பிட்ட பின்பு, அதேபோல் கிண்ணத்தையும் எடுத்து,[l] “இந்தக் கிண்ணம் என்

அதி. 11
a ஆதி 1:27
b ஆதி 2:22, 23
c ஆதி 2:18
d 1கொ 4:9
e ஆதி 2:21, 22
f 1கொ 8:6
g அப் 20:29, 30; 1கொ 1:12; 1தீ 4:1; 2பே 2:1
h லூ 22:19, 20
i மத் 26:20; லூ 22:14
j மத் 26:26; மாற் 14:22; ரோ 7:4; 1கொ 10:17
k லூ 22:19
l மத் 26:27; மாற் 14:23; 1கொ 10:16

இரத்தத்தின் அடிப்படையிலான[a] புதிய ஒப்பந்தத்தைக் குறிக்கிறது;[b] நீங்கள்
இதிலிருந்து குடிக்கும்போதெல்லாம் என் நினைவாக இதைச் செய்துகொண்
டிருங்கள்” என்று சொன்னார்.[c] **26** நீங்கள் இந்த ரொட்டியைச் சாப்பிட்டு
இந்தக் கிண்ணத்திலிருந்து குடிக்கும்போதெல்லாம் நம் எஜமான் வரும்வரை
அவருடைய மரணத்தை அறிவிக்கிறீர்கள்.

27 அதனால், எவன் தகுதியில்லாமல் இந்த ரொட்டியைச் சாப்பிட்டு, நம்
எஜமானுடைய கிண்ணத்திலிருந்து குடிக்கிறானோ அவன் நம் எஜமானு
டைய உடலையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாக இருப்பான்.
28 எந்த மனிதனும் தான் தகுதியுள்ளவனா என்று சோதித்துப் பார்த்த பின்
புதான்[d] இந்த ரொட்டியைச் சாப்பிட்டு, இந்தக் கிண்ணத்திலிருந்து குடிக்க
வேண்டும். **29** ஏனென்றால், ரொட்டி நம் எஜமானுடைய உடலைக் குறிக்
கிறது என்பதைப் பகுத்தறியாமல் சாப்பிடுகிறவனும் குடிக்கிறவனும் தனக்கே
நியாயத்தீர்ப்பை வரவழைத்துக்கொள்கிறான். **30** அதனால்தான் உங்களில்
நிறைய பேர் பலவீனமானவர்களாகவும் நோய்வாய்ப்பட்டவர்களாகவும்
இருக்கிறார்கள்; அதோடு, நிறைய பேர் ஏற்கெனவே இறந்துவிட்டார்கள்.*[e]
31 ஆனால், நாம் எப்படிப்பட்டவர்கள் என்று நம்மை நாமே ஆராய்ந்து
பார்த்தால் நியாயத்தீர்ப்புக்கு ஆளாக மாட்டோம். **32** நியாயத்தீர்ப்புக்கு
ஆளாகிறோம் என்றால், யெகோவாவினால்* கண்டிக்கப்படுகிறோம் என்று
அர்த்தம்.[f] அப்போதுதான், இந்த உலக மக்களோடு சேர்த்து தண்டிக்கப்பட
மாட்டோம்.[g] **33** அதனால் என் சகோதரர்களே, நீங்கள் அதைச் சாப்பிடு
வதற்கு ஒன்றுகூடி வரும்போது ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்.
34 ஒருவன் பசியோடு இருந்தால் அவன் வீட்டிலேயே சாப்பிடட்டும். அப்
போதுதான், நீங்கள் கூடிவரும்போது நியாயத்தீர்ப்புக்கு ஆளாக மாட்டீர்
கள்.[h] மற்ற விஷயங்களை நான் அங்கே வரும்போது சரிசெய்வேன்.

12 சகோதரர்களே, கடவுளுடைய சக்தி தருகிற வரங்களைப்[i] பற்றி நீங்
கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். **2** நீங்கள்
உலக மக்களை* போல் இருந்த காலத்தில், ஊமைச் சிலைகளை வணங்கி,[j]
அவற்றின் வழியில் போய்க்கொண்டிருந்தீர்கள்; இது உங்களுக்கே தெரி
யும். **3** அதனால், இப்போது நான் உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்
புவது இதுதான்: கடவுளுடைய சக்தியால் பேசுகிற யாரும், “இயேசு
சபிக்கப்பட்டவர்!” என்று சொல்ல மாட்டார்; கடவுளுடைய சக்தியால் பேசு
கிறவரைத் தவிர வேறு யாராலும், “இயேசுவே எஜமான்!” என்று சொல்ல
முடியாது.[k]

4 வித்தியாசமான வரங்கள் இருக்கின்றன; ஆனால் கடவுளுடைய
சக்தி ஒன்றுதான்.[l] **5** வித்தியாசமான ஊழியங்கள் இருக்கின்றன,[m]
ஆனால் எஜமான் ஒருவர்தான். **6** வித்தியாசமான செயல்கள் இருக்கின்
றன, ஆனால் கடவுள் ஒருவர்தான், அவர்தான் இவை எல்லாவற்றையும்
எல்லாருக்குள்ளும் செயல்படுத்துகிறார்.[n] **7** ஏதோவொரு நன்மைக்காகத்
தான் ஒவ்வொரு மனிதரிலும் கடவுளுடைய சக்தியின் செயல்கள் தெளிவா
கக் காட்டப்படுகின்றன.[o] **8** உதாரணமாக, கடவுளுடைய சக்தியால் ஒரு
வருக்கு ஞானத்தோடு பேசுகிற வரமும், அதே சக்தியால் வேறொருவருக்கு

11:30 *அநேகமாக, ஆன்மீக அர்த்தத்தில் இறந்துவிட்டதைக் குறிக்கலாம். **11:32** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12:2** *அதாவது, “உண்மைக் கடவுளை நம்பாத ஆட்களை.”

அதி. 11
a லூ 22:20; எபி 9:13, 14; 1பே 1:18, 19
b எரே 31:31; எபி 8:8; எபி 9:15
c யாத் 12:14
d 2கொ 13:5
e 1தெ 5:6
f எபி 12:5
g 2பே 2:20; 2பே 3:7
h 1கொ 11:29

அதி. 12
i 1கொ 14:1
j சங் 115:5; ஆப 2:18; 1கொ 8:4; கலா 4:8; 1தெ 1:9
k 1யோ 4:2, 3
l எபே 4:4
m எபே 4:11
n 1பே 4:11
o 1கொ 14:26

அறிவோடு பேசுகிற வரமும், **9** அதே சக்தியால் வேறொருவருக்கு விசு
வாசம் வைக்கிற வரமும்,[a] அந்த ஒரே சக்தியால் வேறொருவருக்குக்
குணப்படுத்துகிற வரமும் கொடுக்கப்படுகிறது.[b] **10** வேறொருவருக்கு
அற்புதச் செயல்களைச் செய்கிற வரமும்,[c] வேறொருவருக்குத் தீர்க்கதரி
சனம் சொல்கிற வரமும், வேறொருவருக்கு ஒரு செய்தி கடவுளிடமிருந்து
வந்ததா என்பதைப் பகுத்தறிகிற வரமும்,[d] வேறொருவருக்கு வெவ்வேறு
மொழிகளில் பேசுகிற வரமும்,[e] வேறொருவருக்கு அதை மொழிபெயர்க்
கிற வரமும் கொடுக்கப்படுகிறது.[f] **11** ஆனால், ஒரே சக்திதான் இவை
எல்லாவற்றையும் செய்கிறது, அதன் விருப்பத்தின்படி ஒவ்வொருவருக்கும்
இவற்றைப் பகிர்ந்து கொடுக்கிறது.

12 உடல் ஒன்று, ஆனால் அதற்குப் பல உறுப்புகள் இருக்கின்றன. இப்
படி, உடலில் பல உறுப்புகள் இருந்தாலும் அவை எல்லாமே ஒரே உட
லாக இருக்கின்றன;[g] அதுபோலத்தான் கிறிஸ்துவின் உடலும் இருக்கிறது.
13 நாம் யூதர்களாக இருந்தாலும், கிரேக்கர்களாக இருந்தாலும், அடிமை
களாக இருந்தாலும், சுதந்திரமானவர்களாக இருந்தாலும், எல்லாரும் ஒரே
உடலாவதற்காக ஒரே சக்தியால் ஞானஸ்நானம் பெற்றோம்; நம் எல்லாருக்
கும் ஒரே சக்திதான் கொடுக்கப்பட்டது.

14 உடல் ஒரே உறுப்பால் ஆனது அல்ல, பல உறுப்புகளால் ஆனது.[h]
15 கால், “நான் கை அல்ல, அதனால் நான் உடலின் பாகமல்ல” என்று
சொன்னால், அது உடலின் பாகமல்ல என்றாகிவிடுமா? **16** காது, “நான்
கண் அல்ல, அதனால் நான் உடலின் பாகமல்ல” என்று சொன்னால், அது
உடலின் பாகமல்ல என்றாகிவிடுமா? **17** முழு உடலும் கண்ணாக இருந்
தால், கேட்பது எப்படி? முழு உடலும் காதாக இருந்தால், முகர்வது எப்படி?
18 ஆனால், கடவுள் தனக்குப் பிரியமானபடியே ஒவ்வொரு உறுப்பையும்
உடலில் வைத்திருக்கிறார்.

19 எல்லாம் ஒரே உறுப்பாக இருந்தால், உடல் என ஒன்று இருக்
குமா? **20** உறுப்புகள் நிறைய இருக்கின்றன, ஆனால் உடல் ஒன்றுதான்.
21 கண் கையைப் பார்த்து, “நீ எனக்குத் தேவையில்லை” என்றோ, தலை
காலைப் பார்த்து, “நீ எனக்குத் தேவையில்லை” என்றோ சொல்ல முடியாது.
22 அதற்குப் பதிலாக, உடல் உறுப்புகளில் பலவீனமாகத் தோன்றுகிற உறுப்
புகளே மிகவும் அவசியமாக இருக்கின்றன. **23** அதோடு, உடல் உறுப்புக
ளில் நமக்கு மதிப்பில்லாதவையாகத் தோன்றுகிற உறுப்புகளுக்கே நாம்
அதிக மதிப்புக் கொடுக்கிறோம்.[i] அதனால், நமக்குக் கண்ணியமற்றதாகத்
தோன்றுகிற உறுப்புகளுக்கு அதிக மதிப்புக் கிடைக்கிறது. **24** நம்முடைய
கண்ணியமான உறுப்புகளுக்கோ எதுவும் தேவையில்லை. இருந்தாலும்,
மதிப்புக் கொடுக்கப்படாத உறுப்புக்கு அதிக மதிப்புக் கொடுக்கும் விதத்தில்
உடல் உறுப்புகளைக் கடவுள் ஒருங்கிணைத்தார். **25** உடலில் எந்தப் பிரி
வினையும் இல்லாமல் அதன் உறுப்புகள் ஒன்றுக்கொன்று அக்கறையோடு
இருக்க வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்தார்.[j] **26** ஓர் உறுப்பு வேத
னைப்பட்டால் மற்ற எல்லா உறுப்புகளும் அதனோடு சேர்ந்து வேதனைப்
படும்;[k] ஓர் உறுப்புக்கு மதிப்புக் கிடைத்தால் மற்ற எல்லா உறுப்புகளும் அத
னோடு சேர்ந்து சந்தோஷப்படும்.[l]

27 நீங்கள் கிறிஸ்துவின் உடலாக இருக்கிறீர்கள்,[m] ஒவ்வொருவரும்
அதன் தனித்தனி உறுப்புகளாக இருக்கிறீர்கள்.[n] **28** சபையில் முதலாவது

அதி. 12
a 1கொ 13:2
b அப் 3:5-8; அப் 28:8, 9
c எபி 2:3, 4
d 1யோ 4:1
e அப் 10:45, 46; 1கொ 14:18
f 1கொ 14:26
g ரோ 12:4, 5
h எபே 4:16
i ஆதி 3:7, 21
j ரோ 12:10; கலா 6:2; எபே 4:25
k எபி 13:3
l ரோ 12:15
m எபே 1:22, 23
n ரோ 12:4, 5

அப்போஸ்தலர்களையும்,[a] இரண்டாவது, தீர்க்கதரிசனம் சொல்கிறவர்களை
யும்,[b] மூன்றாவது, போதகர்களையும்[c] கடவுள் ஏற்படுத்தியிருக்கிறார்.
பின்பு, அற்புதச் செயல்கள் செய்கிறவர்களையும்,[d] குணப்படுத்துகிற வரம்
பெற்றவர்களையும்,[e] மற்றவர்களுக்கு உதவிகள் செய்கிறவர்களையும், வழிந
டத்துகிற திறமை பெற்றவர்களையும்,[f] வெவ்வேறு மொழிகளில் பேசுகிறவர்
களையும்[g] ஏற்படுத்தியிருக்கிறார். **29** எல்லாருமே அப்போஸ்தலர்களா?
எல்லாருமே தீர்க்கதரிசனம் சொல்கிறவர்களா? எல்லாருமே போதகர்களா?
எல்லாருமே அற்புதச் செயல்களைச் செய்கிறவர்களா? **30** எல்லாருமே
குணப்படுத்துகிற வரம் பெற்றவர்களா? எல்லாருமே வெவ்வேறு மொழிக
ளில் பேசுகிறவர்களா?[h] எல்லாருமே மொழிபெயர்க்கிறவர்களா? இல்
லையே.[i] **31** ஆனால், நீங்கள் முக்கியமான வரங்களைப் பெற்றுக்கொள்ள
கடினமாக* முயற்சி செய்யுங்கள்.[j] இருந்தாலும், இவை எல்லாவற்றையும்
விட மிகச் சிறந்த வழி ஒன்றை உங்களுக்குக் காட்டுகிறேன்.[k]

13 நான் மனிதர்களுடைய மொழிகளில் பேசினாலும் தேவதூதர்க
ளுடைய மொழிகளில் பேசினாலும் எனக்கு அன்பு இல்லையென்
றால், ஓசையெழுப்புகிற வெண்கலத்தைப் போலவும் சத்தமிடுகிற ஜால்ரா
வைப் போலவும்தான் இருப்பேன். **2** தீர்க்கதரிசனம் சொல்கிற வரம்
எனக்கு இருந்தாலும், பரிசுத்த ரகசியங்கள் எல்லாவற்றையும் புரிந்திருப்பவ
னாக இருந்தாலும், எல்லா அறிவும் இருந்தாலும்,[l] மலைகளை நகர வைக்கு
மளவுக்கு விசுவாசம் இருந்தாலும், எனக்கு அன்பு இல்லையென்றால்
நான் ஒன்றுமே இல்லை.*[m] **3** தற்பெருமைக்காக என்னிடம் இருப்பதை
யெல்லாம் அன்னதானம் செய்வதற்குக் கொடுத்தாலும்[n] என் உயிரையே
தியாகம் செய்தாலும், எனக்கு அன்பு இல்லையென்றால்[o] எந்தப் பிரயோ
ஜனமும் இல்லை.

4 அன்பு[p] பொறுமையும்[q] கருணையும்[r] உள்ளது. அன்பு பொறாமைப்
படாது,[s] பெருமையடிக்காது, தலைக்கனம் அடையாது,[t] **5** கேவலமாக*
நடந்துகொள்ளாது,[u] சுயநலமாக நடந்துகொள்ளாது,[v] எரிச்சல் அடையாது,[w]
தீங்கை# கணக்கு வைக்காது,[x] **6** அநீதியைக் குறித்து சந்தோஷப்படாமல்[y]
உண்மையைக் குறித்து சந்தோஷப்படும். **7** எல்லாவற்றையும் தாங்கிக்
கொள்ளும்,[z] எல்லாவற்றையும் நம்பும்,[a] எல்லாவற்றையும் நம்பிக்கையோடு
எதிர்பார்க்கும்,[b] எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளும்.[c]

8 அன்பு ஒருபோதும் ஒழியாது. ஆனால், தீர்க்கதரிசனம் சொல்கிற
வரமானாலும் ஒழிந்துபோகும், வெவ்வேறு மொழி* பேசுகிற வரமானாலும்#
மறைந்துபோகும்; அறிவென்ற வரமானாலும் அழிந்துபோகும். **9** ஏனென்
றால், நமக்கு அரைகுறையான அறிவுதான் இருக்கிறது,[d] அரைகுறையாகத்
தான் தீர்க்கதரிசனம் சொல்கிறோம். **10** ஆனால், முழுமையானது வரும்
போது அரைகுறையானது ஒழிந்துபோகும். **11** நான் குழந்தையாக
இருந்தபோது குழந்தையைப் போல் பேசினேன், குழந்தையைப் போல் சிந்
தித்தேன், குழந்தையைப் போல் யோசித்தேன்; இப்போது நான் பெரியவனா
கிவிட்டதால் குழந்தைத்தனமானவற்றை ஒழித்துவிட்டேன். **12** இப்போது

12:31 *வே.வா., “பக்திவைராக்கியத்தோடு.” **13:2** *வே.வா., “நான் ஒன்றுக்கும் உதவாதவனாக இருப்பேன்.” **13:5** *வே.வா., “அநாகரிகமாக.” #வே.வா., “தவறுகளை.” **13:8** *வே.வா, “அன்னிய பாஷை.” #அதாவது, “அற்புதமாக மற்ற மொழிகளில் பேசுகிற வரமானாலும்.”

அதி. 12
a எபே 2:20
b அப் 13:1
c எபே 4:11
d கலா 3:5
e அப் 5:16
f எபி 13:17
g அப் 2:6, 7
h 1கொ 14:4
i 1கொ 14:5
j 1கொ 14:1
k 1கொ 13:8

அதி. 13
l 1கொ 12:8
m 1யோ 4:20
n மத் 6:2
o 2கொ 9:7
p 1யோ 4:8
q 1தெ 5:14
r ரோ 13:10
எபே 4:32
s கலா 5:26
t 1பே 5:5
u ரோ 13:13
1கொ 14:40
v 1கொ 10:24
பிலி 2:4
w மத் 5:39
யாக் 1:19
x எபே 4:32
கொலோ 3:13
y ரோ 12:9
z 1பே 4:8
a அப் 17:11
b ரோ 8:25
ரோ 12:12
c 1தெ 1:3
d நீதி 4:18

நாம் உலோகக் கண்ணாடியில் மங்கலாகப் பார்க்கிறோம், அப்போதோ
தெள்ளத்தெளிவாக* பார்ப்போம். இப்போது நான் கடவுளைப் பற்றி அரை
குறையாகத் தெரிந்து வைத்திருக்கிறேன், அப்போதோ கடவுள் என்னைப்
பற்றி முழுமையாகத் தெரிந்து வைத்திருப்பதைப் போல நான் அவரைப்
பற்றி முழுமையாகத் தெரிந்து வைத்திருப்பேன். **13** ஆனால் விசுவாசம்,
நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றும் நிலைத்திருக்கும்; இவற்றில் அன்புதான்
தலைசிறந்தது.[a]

14 அன்பு காட்ட ஊக்கமாக முயற்சி செய்யுங்கள்; அதேசமயம், கடவு
ளுடைய சக்தி கொடுக்கிற வரங்களைப் பெற கடினமாக* முயற்சி
செய்யுங்கள், முக்கியமாக, தீர்க்கதரிசனம் சொல்கிற வரத்தைப் பெற கடின
மாக முயற்சி செய்யுங்கள்.[b] **2** ஏனென்றால், வேறொரு மொழியில்*
பேசுகிறவன் மனிதர்களிடம் அல்ல, கடவுளிடம் பேசுகிறான்; அவரு
டைய சக்தியால் பரிசுத்த ரகசியங்களைப்[c] பேசுகிறான்; அதை யாரும் புரிந்
துகொள்வதில்லை.[d] **3** தீர்க்கதரிசனம் சொல்கிறவனோ தன்னுடைய பேச்
சின் மூலம் மற்றவர்களைப் பலப்படுத்துகிறான், உற்சாகப்படுத்துகிறான்,
ஆறுதல்படுத்துகிறான். **4** வேறொரு மொழியில் பேசுகிறவன் தன்னைப்
பலப்படுத்துகிறான். தீர்க்கதரிசனம் சொல்கிறவனோ சபையைப் பலப்படுத்
துகிறான். **5** நீங்கள் எல்லாரும் வெவ்வேறு மொழிகளில் பேச[e] வேண்டும்
என்று விரும்புகிறேன்; ஆனாலும், நீங்கள் தீர்க்கதரிசனம் சொல்ல[f] வேண்
டும் என்றே அதிகமாக விரும்புகிறேன். உண்மையில், வெவ்வேறு மொழி
களைப் பேசுகிறவன் சபையைப் பலப்படுத்துவதற்காக அவற்றை மொழி
பெயர்க்கவும் வேண்டும்; இல்லையென்றால், அவனைவிட தீர்க்கதரிசனம்
சொல்கிறவன்தான் உயர்ந்தவன். **6** ஆனால் சகோதரர்களே, இந்தச் சம
யத்தில் நான் உங்களிடம் வந்து வெவ்வேறு மொழிகளில் மட்டும் பேசி
விட்டு, வெளிப்படுத்துதல் என்ற வரத்தினாலோ,[g] அறிவு என்ற வரத்தி
னாலோ,[h] தீர்க்கதரிசனம் என்ற வரத்தினாலோ, போதனை என்ற வரத்
தினாலோ அவற்றுக்கு விளக்கம் கொடுக்கவில்லை என்றால் உங்களுக்கு
என்ன பிரயோஜனம்?

7 குழல், யாழ் போன்ற உயிரற்ற கருவிகளிலிருந்து வருகிற சத்தம்
ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இல்லையென்றால், குழலிசை எதுவென்
றும் யாழிசை எதுவென்றும் எப்படித் தெரியும்? **8** எக்காள சத்தம் தெளி
வாக இல்லையென்றால் போருக்கு யார் தயாராவார்கள்? **9** அதேபோல்,
எளிமையாகப் புரிந்துகொள்ளும் விதத்தில் நீங்கள் பேசவில்லை என்றால்,
பேசுகிற விஷயம் என்னவென்று எப்படித் தெரியும்? சொல்லப்போனால்,
உளறுகிறவர்களாகத்தான் இருப்பீர்கள். **10** உலகத்தில் எத்தனையோ வித
மான மொழிகள் இருக்கின்றன. ஆனால், அர்த்தம் தராத மொழி எதுவுமே
இல்லை. **11** ஒருவன் பேசுவது எனக்குப் புரியவில்லை என்றால், அவன்
எனக்கு வெளிநாட்டவன்போல் இருப்பான், நான் அவனுக்கு வெளிநாட்ட
வன்போல் இருப்பேன். **12** இது உங்களுக்கும் பொருந்துகிறது; கடவு
ளுடைய சக்தி கொடுக்கிற வரங்களில் நீங்கள் அதிக ஆர்வம் காட்டுவ
தால், சபையைப் பலப்படுத்துகிற வரங்களை[i] அதிகமதிகமாகப் பெற
முயற்சி செய்யுங்கள்.

அதி. 13
a மத் 22:37
ரோ 13:10

அதி. 14
b 1தெ 5:20
c 1கொ 13:2
d 1கொ 14:5
e 1கொ 12:30
f யோவே 2:28
அப் 2:17
அப் 21:8, 9
g கலா 1:11, 12
கலா 2:2
h 1கொ 12:8
i 1கொ 12:7
1கொ 14:4, 26

13:12 *நே.மொ., “முகமுகமாக.” **14:1** *வே.வா., “பக்திவைராக்கியத்தோடு.” **14:2** *வே.வா., “அன்னிய பாஷையில்.”

13 அதனால், வேறொரு மொழியில் பேசுகிறவன் அதை மொழி
பெயர்க்கிற வரத்திற்காக[a] ஜெபம் செய்ய வேண்டும். **14** நான் வேறொரு
மொழியில் ஜெபம் செய்தால், கடவுளுடைய சக்தி கொடுக்கிற வரத்தால்
தான் ஜெபம் செய்வேன்; ஆனால் என் மனம் அதைப் புரிந்துகொள்ளாது.
15 அப்படியானால், நான் என்ன செய்வேன்? கடவுளுடைய சக்தி கொடுக்
கிற வரத்தால் ஜெபம் செய்வேன், என் மனதாலும் ஜெபம் செய்வேன். கடவு
ளுடைய சக்தி கொடுக்கிற வரத்தால் புகழ்ந்து பாடுவேன், என் மனதாலும்
புகழ்ந்து பாடுவேன். **16** இல்லையென்றால், கடவுளுடைய சக்தி கொடுக்
கிற வரத்தால் நீங்கள் அவரைப் புகழ்ந்து அவருக்கு நன்றி சொல்லும்
போது, அங்கே இருக்கிற ஒரு பாமரன் "ஆமென்"* என்று எப்படிச்
சொல்வான்? ஏனென்றால், நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்றே அவனுக்
குப் புரியாது. **17** நீங்கள் நன்றி சொல்லி ஜெபம் செய்வது நன்றாகத்தான்
இருக்கிறது, ஆனால் மற்றவன் பலப்படுத்தப்படுவதில்லை. **18** உங்கள்
எல்லாரையும்விட நான் அதிகமாய் வெவ்வேறு மொழிகளில் பேசுவதற்
காகக் கடவுளுக்கு நன்றி சொல்கிறேன். **19** இருந்தாலும், சபையில் நான்
வேறொரு மொழியில் பத்தாயிரம் வார்த்தைகளைப் பேசுவதைவிட மற்ற
வர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்காக* அர்த்தத்தோடு ஐந்து வார்த்தை
களைப் பேசவே விரும்புகிறேன்.[b]

20 சகோதரர்களே, கெட்ட குணத்தைப் பொறுத்ததில் குழந்தைகளாக
இருங்கள்;[c] புரிந்துகொள்ளும் திறனைப் பொறுத்ததிலோ குழந்தைகளாக
இல்லாமல்[d] முதிர்ச்சி அடைந்தவர்களாக இருங்கள்.[e] **21** ஏனென்றால்,
"'அன்னியர்களுடைய மொழிகளிலும், முன்பின் தெரியாதவர்களுடைய
வார்த்தைகளிலும் நான் இந்த ஜனங்களிடம் பேசுவேன்; அப்போதும்
நான் சொல்வதை அவர்கள் காதுகொடுத்துக் கேட்க மாட்டார்கள்'
என்று யெகோவா* சொல்கிறார்" என்று திருச்சட்டத்தில் எழுதப்பட்டிருக்
கிறது.[f] **22** அதனால், வெவ்வேறு மொழிகள் பேசுவது இயேசுமேல் விசு
வாசமுள்ளவர்களுக்கு அடையாளமாக இல்லாமல் விசுவாசம் இல்லாதவர்
களுக்கு அடையாளமாக இருக்கிறது;[g] தீர்க்கதரிசனம் சொல்வதோ
விசுவாசம் இல்லாதவர்களுக்கு அடையாளமாக இல்லாமல் விசுவாசமுள்
ளவர்களுக்கு அடையாளமாக இருக்கிறது. **23** சபையார் ஓரிடத்தில் கூடி
வந்து எல்லாரும் வெவ்வேறு மொழிகளில் பேசுவதாக வைத்துக்கொள்
ளுங்கள்; அப்போது, பாமரர்களோ விசுவாசம் இல்லாதவர்களோ உள்ளே
வந்தால், உங்களைப் பைத்தியம் பிடித்தவர்கள் என்று சொல்ல மாட்டார்
களா? **24** ஆனால், நீங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்வதாக வைத்
துக்கொள்ளுங்கள்; அப்போது, விசுவாசம் இல்லாதவனோ பாமரனோ
உள்ளே வந்தால், எல்லாருடைய வார்த்தைகளும் அவனுடைய தவறுகளை
அவனுக்குப் புரிய வைக்கும், இல்லையா? தன்னையே நன்றாக ஆராய்ந்து
பார்ப்பதற்கு அவன் தூண்டப்படுவான், இல்லையா? **25** அப்போது, அவ
னுடைய இதயத்தில் இருக்கிற ரகசியங்கள் வெளிப்படும்; அதனால் அவன்
சாஷ்டாங்கமாக விழுந்து கடவுளை வணங்கி, "உண்மையாகவே கடவுள்
உங்கள் மத்தியில் இருக்கிறார்"[h] என்று சொல்வான்.

26 அப்படியானால் சகோதரர்களே, நீங்கள் என்ன செய்ய வேண்

14:16 *அதாவது, "அப்படியே ஆகட்டும்." **14:19** *வே.வா., "வாய்மொழியாகக் கற்றுக்கொடுப்பதற்காக." **14:21** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 14
a 1கொ 12:8, 10; 1கொ 14:5
b 1கொ 14:4
c ரோ 16:19
d எபே 4:14
e எபி 5:13, 14
f ஏசா 28:11, 12
g அப் 2:4, 13
h ஏசா 45:14; சக 8:23

டும்? நீங்கள் ஒன்றுகூடி வரும்போது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகி
றான், ஒருவன் கற்றுக்கொடுக்கிறான், ஒருவன் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட
விஷயங்களைச் சொல்கிறான், ஒருவன் வேறொரு மொழியில் பேசுகிறான்,
ஒருவன் மொழிபெயர்க்கிறான்;[a] இவை எல்லாவற்றையும் சபையைப் பலப்
படுத்துகிற விதத்தில் செய்ய வேண்டும். **27** வேறொரு மொழியில் பேசு
வதாக இருந்தால், இரண்டு பேர் பேசலாம், மிஞ்சிப்போனால் மூன்று பேர்
பேசலாம். ஆனால், ஒருவர்பின் ஒருவராகப் பேச வேண்டும்; வேறொ
ருவன் அதை மொழிபெயர்க்க வேண்டும்.[b] **28** மொழிபெயர்க்க யாரும்
இல்லையென்றால், அவன் தன்னுடைய மனதில் கடவுளோடு மட்டும்
பேசிக்கொண்டு சபையில் அமைதியாக இருக்க வேண்டும். **29** இரண்டு
பேரோ மூன்று பேரோ தீர்க்கதரிசனம் சொல்லலாம்;[c] மற்றவர்கள்
அதன் அர்த்தத்தைப் பகுத்தறிய வேண்டும். **30** அங்கே உட்கார்ந்தி
ருக்கிற வேறொருவனுக்கு ஏதாவது வெளிப்படுத்துதல் கிடைத்தால்,
முதலில் பேசிக்கொண்டிருந்தவன் அமைதியாகிவிட வேண்டும். **31** நீங்
கள் எல்லாரும் ஒருவர்பின் ஒருவராகத் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும்;
அப்போதுதான் எல்லாராலும் கற்றுக்கொள்ள முடியும், உற்சாகம் பெற முடி
யும்.[d] **32** தீர்க்கதரிசனம் சொல்கிறவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட
வரத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். **33** ஏனென்றால், கடவுள்
குழப்பத்தின் கடவுள் அல்ல, சமாதானத்தின் கடவுள்.[e]

பரிசுத்தவான்களுடைய சபைகள் எல்லாவற்றிலும் கடைப்பிடிக்கப்படுகி
றபடி, **34** சபைகளில் பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும். ஏனென்
றால், பேச அவர்களுக்கு அனுமதியில்லை;[f] அவர்கள் கட்டுப்பட்டு நடக்க
வேண்டும்.[g] அதைத்தான் திருச்சட்டமும் சொல்கிறது. **35** அவர்கள்
ஏதோவொன்றைத் தெரிந்துகொள்ள விரும்பினால், வீட்டில் தங்களுடைய
கணவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், சபையில்
ஒரு பெண் பேசுவது அவமதிப்பான செயல்.

36 கடவுளுடைய வார்த்தை உங்களிடமிருந்தா வந்தது? உங்களுக்கு
மட்டுமா கொடுக்கப்பட்டது?

37 ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசனம் சொல்கிறவன் என்றோ கடவு
ளுடைய சக்தி கொடுக்கிற வரத்தைப் பெற்றவன் என்றோ நினைத்தால்,
நான் உங்களுக்கு எழுதுகிற விஷயங்களை அவன் ஏற்றுக்கொள்ள வேண்
டும்; ஏனென்றால், அவை நம் எஜமானுடைய கட்டளைகளாக இருக்கின்றன.
38 இவற்றை ஒருவன் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், கடவுள் அவனை
ஏற்றுக்கொள்ள மாட்டார்.* **39** அதனால் சகோதரர்களே, தீர்க்கதரிசனம்
சொல்வதற்குக் கடினமாக முயற்சி செய்யுங்கள்.[h] அதேசமயம், வெவ்வேறு
மொழிகளில் பேசுவதையும் தடை செய்யாதீர்கள்.[i] **40** எல்லா காரியங்க
ளும் கண்ணியமாகவும் ஒழுங்காகவும் நடக்க வேண்டும்.[j]

15

சகோதரர்களே, நான் சொன்ன நல்ல செய்தியை[k] உங்களுக்கு
ஞாபகப்படுத்துகிறேன்; அதை நீங்கள் ஏற்றுக்கொண்டதோடு
அதன்படி நடந்தும் வருகிறீர்கள். **2** அந்த நல்ல செய்தியை உறுதியா
கப் பிடித்துக்கொண்டால், அதன் மூலம் மீட்புப் பெறுவீர்கள்; இல்லையென்
றால், நீங்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக ஆனதே வீணாக இருக்கும்.

அதி. 14
a 1கொ 12:8, 10
b 1கொ 14:5
c அப் 13:1
d எபி 10:24, 25
e 1கொ 14:40; கொலோ 2:5
f 1தீ 2:11, 12
g 1கொ 11:3; எபே 5:22; கொலோ 3:18; தீத் 2:5; 1பே 3:1
h 1தெ 5:20
i 1கொ 14:27
j 1கொ 14:33; கொலோ 2:5

அதி. 15
k அப் 18:1, 11

14:38 *அல்லது, “ஒருவன் இவற்றைத் தெரியாதவனாக இருந்தால், தொடர்ந்து தெரியாதவனாகவே இருப்பான்.”

3 நான் பெற்றுக்கொண்டதும் உங்களிடம் ஒப்படைத்ததுமாகிய மிக
முக்கியமான செய்தி இதுதான்: வேதவசனங்களில் எழுதப்பட்டிருக்கிறபடி,
கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார்.[a] **4** பின்பு அடக்கம்
செய்யப்பட்டார்;[b] ஆம், வேதவசனங்களில் எழுதப்பட்டிருக்கிறபடி,[c] மூன்
றாம் நாளில்[d] உயிரோடு எழுப்பப்பட்டார்.[e] **5** பின்பு கேபாவுக்கும்,*[f]
அதன் பின்பு பன்னிரண்டு பேருக்கும்[g] தோன்றினார். **6** பின்பு, ஒரே
நேரத்தில் 500-க்கும் அதிகமான சகோதரர்களுக்குத் தோன்றினார்;[h] அவர்
களில் பெரும்பாலோர் இன்னமும் உயிரோடு இருக்கிறார்கள், சிலரோ
இறந்துவிட்டார்கள்.* **7** பின்பு யாக்கோபுக்கும்,[i] அதன் பின்பு எல்லா அப்
போஸ்தலர்களுக்கும் தோன்றினார்;[j] **8** கடைசியாக, குறைமாதத்தில் பிறந்
தவனைப் போலிருக்கிற எனக்கும் தோன்றினார்.[k]

9 அப்போஸ்தலர்கள் எல்லாரிலும் நான் அற்பமானவன்; கடவுளுடைய
சபையைக் கொடுமைப்படுத்தியதால்[l] அப்போஸ்தலன் என்று அழைக்கப்
படுவதற்குக்கூட தகுதியில்லாதவன். **10** ஆனாலும், கடவுளுடைய அள
வற்ற கருணையால் இப்போது இந்த நிலையில் இருக்கிறேன்; அவர்
எனக்குக் காட்டிய அளவற்ற கருணை வீண்போகவில்லை; அவர்கள் எல்லா
ரையும்விட நான் அதிகமாகவே உழைத்தேன்; இருந்தாலும், நானாக உழைக்
கவில்லை, என்னிடம் இருக்கிற கடவுளுடைய அளவற்ற கருணையே
என்னை அப்படி உழைக்க வைத்தது. **11** நானும் சரி, அவர்களும் சரி,
இதைத்தான் பிரசங்கிக்கிறோம், இதைத்தான் நீங்களும் நம்பினீர்கள்.

12 கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார் என்று பிரசங்கிக்கப்பட்டு
வரும்போது,[m] இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்பட மாட்டார்கள் என்று
உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? **13** இறந்தவர்கள் உயிரோடு எழுப்
பப்பட மாட்டார்கள் என்றால், கிறிஸ்துவும் உயிரோடு எழுப்பப்படவில்லை
என்றாகிவிடும். **14** கிறிஸ்து உயிரோடு எழுப்பப்படவில்லை என்றால்,
நாம் பிரசங்கிப்பது நிச்சயமாகவே வீணாக இருக்கும், நம்முடைய விசுவா
சமும் வீணாக இருக்கும். **15** அதுமட்டுமல்ல, கடவுளுக்கு விரோதமாகப்
பொய் சாட்சி சொல்கிறவர்களாகவும் ஆகிவிடுவோம்.[n] ஆம், இறந்தவர்கள்
உண்மையில் உயிரோடு எழுப்பப்பட மாட்டார்கள் என்றால், இறந்துபோன
கிறிஸ்துவைக் கடவுள் உயிரோடு எழுப்பியதாக நாம் சாட்சி சொல்லும்
போது[o] அவருக்கு விரோதமாகப் பொய் சாட்சி சொல்கிறவர்களாக ஆகிவி
டுவோம். **16** இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்பட மாட்டார்கள் என்றால்,
கிறிஸ்துவும் உயிரோடு எழுப்பப்படவில்லை என்றாகிவிடும். **17** கிறிஸ்து
உயிரோடு எழுப்பப்படவில்லை என்றால், உங்கள் விசுவாசம் வீணாக இருக்
கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில்தான் இருப்பீர்கள்.[p]
18 சொல்லப்போனால், கிறிஸ்துவின் சீஷர்களாயிருந்து இறந்தவர்களும்
அழிந்துபோனவர்களாகத்தான் இருப்பார்கள்.[q] **19** இன்றுள்ள வாழ்க்கைக்
காக மட்டுமே கிறிஸ்துமேல் நாம் நம்பிக்கை வைத்தால், மற்ற எல்லாரையும்
விட நாம்தான் மிகவும் பரிதாபத்திற்குரியவர்களாக இருப்போம்.

20 ஆனாலும், இறந்தவர்களில் முதல் நபராக* கிறிஸ்து உயிரோடு எழுப்
பப்பட்டிருக்கிறார்.[r] **21** ஒரே மனிதனால் மரணம் வந்தது,[s] அதேபோல்
ஒரே மனிதனால் உயிர்த்தெழுதலும் வருகிறது.[t] **22** ஆதாமினால் எல்

15:5 * பேதுரு என்றும் அழைக்கப்படுகிறார். **15:6** * நே.மொ., “தூங்கிவிட்டார்கள்.”
15:20 * நே.மொ., “முதல் விளைச்சலாக.”

அதி. 15
a சங் 22:15
ஏசா 53:8, 12
தானி 9:26
1பே 2:24
b ஏசா 53:9
மத் 27:59, 60
c சங் 16:10
d யோனா 1:17
லூ 24:46
e மத் 28:7
f மத் 10:2
லூ 24:33, 34
g யோவா 20:26
h மத் 28:16, 17
i அப் 12:17
j அப் 1:3, 6
k அப் 9:3-5
l அப் 8:3
கலா 1:13
m அப் 4:2
அப் 17:31
n அப் 3:15
o அப் 2:24
அப் 4:10
அப் 13:30, 31
p ரோ 4:25
எபி 7:25
q அப் 7:59
1கொ 15:14
1பே 1:3
r அப் 26:23
கொலோ 1:18
s ஆதி 3:17, 19
t யோவா 11:25

லாரும் சாகிறதுபோல்,[a] கிறிஸ்துவினால் எல்லாரும் உயிரோடு எழுப்பப்படு
வார்கள்.[b] **23** ஆனால், ஒவ்வொருவரும் அவரவர் வரிசையில் உயிரோடு
எழுப்பப்படுவார்கள்; முதல் நபராக* உயிரோடு எழுப்பப்பட்டவர் கிறிஸ்து;[c]
பின்பு, கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் அவருடைய பிரசன்னத்தின்
போது உயிரோடு எழுப்பப்படுவார்கள்.[d] **24** அதன் பின்பு, முடிவில்,
அவர் எல்லா அரசாங்கத்தையும் எல்லா அதிகாரத்தையும் எல்லா வல்லமை
யையும் ஒழித்துவிட்டு,[e] அவருடைய கடவுளாகவும் தகப்பனாகவும்
இருப்பவரிடமே ஆட்சியை* ஒப்படைப்பார். **25** ஆனால், எல்லா எதிரிக
ளையும் அவருடைய காலடியில் கடவுள் வீழ்த்தும்வரை அவர் ராஜா
வாக ஆட்சி செய்ய வேண்டும்.[f] **26** ஒழிக்கப்படும் கடைசி எதிரி மரணம்.[g]
27 கடவுள் “எல்லாவற்றையும் அவருடைய காலடியில் கீழ்ப்படுத்தினார்.”[h]
ஆனால், ‘எல்லாமே அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டது’ என்று சொல்லும்
போது,[i] எல்லாவற்றையும் அவருக்குக் கீழ்ப்படுத்தியவர் அவருக்குக் கீழ்ப்ப
டுத்தப்படவில்லை என்பது தெளிவாக இருக்கிறது.[j] **28** எல்லாமே மகனுக்
குக் கீழ்ப்படுத்தப்பட்ட பின்பு, எல்லாவற்றையும் அவருக்குக் கீழ்ப்படுத்திய
கடவுளுக்கு மகனும் கீழ்ப்பட்டிருப்பார்.[k] அப்போது, கடவுள்தான் எல்லாருக்
கும் எல்லாமுமாக இருப்பார்.[l]

29 இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்பட மாட்டார்கள் என்றால், இறந்
தவர்களாய் இருப்பதற்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு என்ன பிர
யோஜனம்?[m] இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்படவே மாட்டார்கள்
என்றால், அப்படி இறந்தவர்களாய் இருப்பதற்காக அவர்கள் ஏன் ஞானஸ்
நானம் பெறுகிறார்கள்? **30** அதோடு, நாம் ஏன் எந்நேரமும் ஆபத்தில்
இருக்கிறோம்?[n] **31** தினமும் நான் சாவை எதிர்ப்படுகிறேன்; சகோதரர்
களே, நம் எஜமானாகிய கிறிஸ்து இயேசுவின் சீஷனாகிய நான் உங்களை
நினைத்து சந்தோஷப்படுவது உண்மையாக இருப்பதுபோல் இதுவும் உண்
மைதான். **32** நான் எபேசுவில் கொடிய மிருகங்களோடு போராடி
னேனே,[o] மற்றவர்களைப் போலவே* நானும் போராடியிருந்தால், எனக்கு
என்ன நன்மை? இறந்தவர்கள் உயிரோடு எழுப்பப்பட மாட்டார்கள் என்
றால், “சாப்பிடுவோம், குடிப்போம், நாளைக்குச் சாவோம்”[p] என்று இருக்
கலாமே! **33** ஏமாந்துவிடாதீர்கள்; கெட்ட சகவாசம் நல்ல பழக்கவழக்
கங்களை* கெடுத்துவிடும்.[q] **34** அதனால், மனத்தெளிவு அடையுங்கள்;
நீதியின்படி நடங்கள்; பாவம் செய்துகொண்டே இருக்காதீர்கள். உங்களில்
சிலருக்குக் கடவுளைப் பற்றிய அறிவே இல்லை; உங்களை வெட்கப்படுத்
துவதற்காக இதைச் சொல்கிறேன்.

35 ஆனாலும், “இறந்தவர்கள் எப்படி உயிரோடு எழுப்பப்படுவார்கள்?
எப்படிப்பட்ட உடலோடு வருவார்கள்?”[r] என்று ஒருவன் கேட்கலாம்.
36 புத்தியில்லாதவனே! நீ விதைக்கிற விதை செத்தால் தவிர உயிர்
பெறாது. **37** நீ விதைக்கிறபோது, முளைத்த பயிரை விதைக்காமல், வெறும்
விதையைத்தான் விதைக்கிறாய்; அது கோதுமை விதையாகவோ வேறொரு
விதையாகவோ இருக்கலாம். **38** ஆனால், கடவுள் தனக்குப் பிரியமான
படி அதற்கு ஓர் உடலைக் கொடுக்கிறார்; ஒவ்வொரு விதைக்கும் அதற்
குரிய உடலைக் கொடுக்கிறார். **39** எல்லா உடலும் ஒரே விதமான உடல்

அதி. 15
a ரோ 5:12
b ரோ 5:17; ரோ 6:23
c வெளி 1:5
d மத் 24:3; 1தெ 4:16
e தானி 2:44
f சங் 110:1, 2
g வெளி 20:14
h சங் 8:6; எபே 1:22
i எபி 2:8
j 1பே 3:22
k யோவா 14:28
l 1கொ 3:23
m ரோ 6:4
n ரோ 8:36; 2கொ 11:23-27
o 2கொ 1:8
p ஏசா 22:13
q நீதி 13:20; 1கொ 5:6
r 1யோ 3:2

15:23 *நே.மொ., “முதல் விளைச்சலாக.” **15:24** *நே.மொ., “அரசாங்கத்தை.” **15:32** *அல்லது, “மனித கண்ணோட்டத்தில்.” **15:33** *வே.வா., “ஒழுக்கநெறிகளை.”

கிடையாது; மனிதர்களுடைய உடல் வேறு, மிருகங்களுடைய உடல்
வேறு, பறவைகளுடைய உடல் வேறு, மீன்களுடைய உடல் வேறு. **40** பர
லோகத்துக்குரிய உடல்களும் இருக்கின்றன,[a] பூமிக்குரிய உடல்களும் இருக்
கின்றன;[b] பரலோகத்துக்குரிய உடல்களின் மகிமை ஒரு விதம், பூமிக்குரிய
உடல்களின் மகிமை ஒரு விதம்; **41** சூரியனின் மகிமை ஒரு விதம், சந்தி
ரனின் மகிமை ஒரு விதம்,[c] நட்சத்திரங்களின் மகிமை ஒரு விதம்; சொல்லப்
போனால், மகிமையில் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் வேறுபடுகிறது.

42 இறந்தவர்களுடைய உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்; அழி
வுள்ளதாக விதைக்கப்படுவது அழிவில்லாததாக உயிர்த்தெழுப்பப்படும்.[d]
43 மதிப்பில்லாததாக விதைக்கப்படுவது மகிமையுள்ளதாக உயிர்த்தெழுப்
பப்படும்;[e] பலவீனமுள்ளதாக விதைக்கப்படுவது பலமுள்ளதாக உயிர்த்தெ
ழுப்பப்படும்.[f] **44** பூமிக்குரிய உடலாக விதைக்கப்படுவது பரலோகத்துக்கு
ரிய உடலாக எழுப்பப்படும்; பூமிக்குரிய உடல் இருக்கிறதென்றால்
பரலோகத்துக்குரிய உடலும் இருக்கிறது. **45** பூமிக்குரிய உடலைப்
பெற்ற “முதல் ஆதாம் உயிருள்ளவன் ஆனான்” என்று எழுதப்பட்டிருக்கி
றது;[g] பரலோகத்துக்குரிய உடலைப் பெற்ற கடைசி ஆதாம் உயிர்
கொடுக்கிறவர் ஆனார்.[h] **46** இருந்தாலும், பரலோகத்துக்குரிய உடல் முந்
தினதல்ல, பூமிக்குரிய உடல்தான் முந்தினது; பரலோகத்துக்குரிய உடல் பிந்
தினது. **47** முதல் மனிதன் பூமியிலிருந்து வந்தவன், மண்ணால் உண்டான
வன்;[i] இரண்டாம் மனிதரோ பரலோகத்திலிருந்து வந்தவர்.[j] **48** மண்ணால்
உண்டான மனிதனைப் போலவே மண்ணால் உண்டான மற்றவர்களும்
இருப்பார்கள்; பரலோகத்துக்குரியவரைப் போலவே பரலோகத்துக்குரிய மற்
றவர்களும் இருப்பார்கள்.[k] **49** நாம் மண்ணால் உண்டானவனுடைய சாய
லில் இருப்பதுபோல்,[l] பரலோகத்துக்குரியவருடைய சாயலிலும் இருப்
போம்.[m]

50 ஆனாலும் சகோதரர்களே, நான் சொல்வது இதுதான்: மனித
உடலோடு* கடவுளுடைய அரசாங்கத்துக்குள் போக முடியாது; அழிவுள்
ளது அழியாமையைப் பெற முடியாது. **51** இதோ! உங்களுக்குப் பரிசுத்த
ரகசியம் ஒன்றைச் சொல்கிறேன்: நாம் எல்லாரும் மரணத்தில் தூங்கப்போவ
தில்லை. **52** ஆனால் கடைசி எக்காளம் முழங்கும்போது, ஒரே நொடியில்,
கண்ணிமைக்கும் நேரத்தில், நாம் எல்லாரும் மாற்றம் அடைவோம்.[n] எக்கா
ளம் முழங்கும்;[o] அப்போது, இறந்தவர்கள் அழிவில்லாதவர்களாக உயி
ரோடு எழுப்பப்படுவார்கள்; நாமும் மாற்றம் அடைவோம். **53** ஏனென்
றால், அழிவுக்குரியது அழியாமையுள்ளதாக மாற வேண்டும்;[p] சாவுக்குரியது
சாவாமையுள்ளதாக மாற வேண்டும்.[q] **54** அழிவுக்குரியது அழியாமையுள்
ளதாகவும், சாவுக்குரியது சாவாமையுள்ளதாகவும் மாறும்போது, எழுதப்பட்
டிருக்கிற இந்த வார்த்தைகள் நிறைவேறும்: “மரணம் அடியோடு ஒழிக்கப்
பட்டது.”[r] **55** “மரணமே, உன் வெற்றி எங்கே? மரணமே, உன் கொடுக்கு
எங்கே?”[s] **56** மரணத்தை உண்டாக்குகிற கொடுக்கு பாவம்,[t] பாவத்துக்குப்
பலம் தருவது திருச்சட்டம்.[u] **57** ஆனால், நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்
துவின் மூலம் நமக்கு வெற்றி தருகிற கடவுளுக்கு நன்றி![v]

58 அதனால், என் அன்பான சகோதரர்களே, நம் எஜமானுக்காக
நீங்கள் உழைப்பது வீண்போகாதென்று அறிந்து,[w] உறுதியானவர்களாக

15:50 *நே.மொ., “சதையும் இரத்தமும்.”

அதி. 15
a மத் 28:3, லூ 24:4
b எபி 2:6, 7
c ஆதி 1:16
d ரோ 2:6, 7
e கொலோ 3:4
f வெளி 20:4
g ஆதி 2:7
h யோவா 5:26, 1தீ 3:16
i ஆதி 2:7
j யோவா 3:13
k பிலி 3:20, 21
l ஆதி 5:3
m ரோ 8:29
n 1தெ 4:17
o 1தெ 4:16
p ரோ 2:6, 7
q 2கொ 5:4
r ஏசா 25:8, வெளி 20:6
s ஓசி 13:14
t ரோ 6:23
u ரோ 3:20, ரோ 7:12, 13
v யோவா 3:16, அப் 4:12
w 2நா 15:7, 1கொ 3:8, வெளி 14:13

வும்[a] அசைக்க முடியாதவர்களாகவும் எந்நேரமும் நம் எஜமானுடைய
வேலையை அதிகமதிகமாகச் செய்கிறவர்களாகவும் இருங்கள்.[b]

16 பரிசுத்தவான்களுக்காக நன்கொடை திரட்டுவது[c] பற்றி கலாத்
தியாவில் உள்ள சபைகளுக்கு நான் கொடுத்த ஆலோசனைகளின்
படி நீங்களும் செய்யுங்கள். **2** ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும், நீங்
கள் ஒவ்வொருவருமே உங்களுடைய வருமானத்துக்கு ஏற்றபடி ஏதாவது
சேமித்து வையுங்கள். அப்படிச் செய்தால், நான் வந்த பின்பு நன்கொடை
களைத் திரட்ட வேண்டியிருக்காது. **3** நான் வந்த பின்பு, நம்பிக்கைக்குரி
யவர்கள் என்று கடிதம் மூலம் நீங்கள் எனக்குத் தெரியப்படுத்துகிற
சகோதரர்களிடம்[d] உங்கள் நன்கொடைகளை எருசலேமுக்குக் கொடுத்து
அனுப்புவேன். **4** நானும் அங்கே போவது நல்லதென்றால் போவேன்;
அவர்கள் என்னோடு வருவார்கள்.

5 நான் மக்கெதோனியாவுக்குப்[e] போகப்போகிறேன்; அங்கிருந்து உங்
களிடம் வருவேன். **6** ஒருவேளை உங்களோடு சில நாட்கள் தங்குவேன்,
அல்லது குளிர் காலம் முடியும்வரை தங்குவேன். அதன் பின்பு, சற்றுத்
தூரம்வரை நீங்கள் என்கூடவே வந்து, நான் போகும் இடத்துக்கு என்னை
வழியனுப்பி வையுங்கள். **7** இப்போது, போகிற வழியில் வெறுமனே உங்
களைப் பார்த்துவிட்டுப் போக நான் விரும்பவில்லை. யெகோவா* அனு
மதித்தால், உங்களோடு சில காலம் தங்கலாம் என்று எதிர்பார்க்கிறேன்.[f]
8 ஆனால், பெந்தெகொஸ்தே பண்டிகைவரை எபேசுவில்தான் இருப்
பேன்;[g] **9** ஏனென்றால், ஊழியம் செய்வதற்கான வாய்ப்பு என்ற பெரிய
கதவு எனக்காகத் திறக்கப்பட்டிருக்கிறது;[h] ஆனால், எதிரிகள் நிறைய பேர்
இருக்கிறார்கள்.

10 தீமோத்தேயு[i] அங்கே வந்தால், அவர் உங்களிடம் பயமில்லாமல்
இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்; அவரும் என்னைப் போலவே
யெகோவாவின்* வேலையைச் செய்துவருகிறார்.[j] **11** அதனால், ஒருவ
ரும் அவரை அற்பமாக நினைக்கக் கூடாது; நீங்கள் அவரைப் பத்திரமாக
என்னிடம் அனுப்பி வையுங்கள்; சகோதரர்களோடு அவருக்காக நான் காத்
துக்கொண்டிருக்கிறேன்.

12 நம்முடைய சகோதரரான அப்பொல்லோவைப்[k] பற்றி உங்களுக்குச்
சொல்கிறேன்; மற்ற சகோதரர்களோடு உங்களைப் பார்க்க வரும்படி நான்
அவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். ஆனால், இப்போது அங்கே
வருகிற எண்ணம் அவருக்கு இல்லை; ஆனாலும், சந்தர்ப்பம் கிடைக்கும்
போது அவர் வருவார்.

13 விழிப்புடன் இருங்கள்,[l] விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருங்
கள்,[m] தைரியமாக* செயல்படுங்கள்,[n] பலமடையுங்கள்.[o] **14** எல்லாவற்
றையும் அன்போடு செய்யுங்கள்.[p]

15 சகோதரர்களே, ஸ்தேவனானுடைய வீட்டில் இருப்பவர்கள் அகாயா
வில் முதன்முதலாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள்* என்பதும், பரி
சுத்தவான்களுக்குச் சேவை செய்ய தங்களையே அர்ப்பணித்தார்கள் என்ப
தும் உங்களுக்குத் தெரியும். **16** இப்படிப்பட்டவர்களுக்கும், இவர்களோடு
ஒன்றுசேர்ந்து கடினமாக உழைக்கிற எல்லாருக்கும் நீங்கள் எப்போதும்

16:7, 10 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **16:13** * நே.மொ., “ஆண்மகனாக.” **16:15** * நே.மொ., “அகாயாவில் முதல் விளைச்சலாக இருந்தார்கள்.”

அதி. 15
a கொலோ 1:23; எபி 3:14; 2பே 3:17
b ரோ 12:11

அதி. 16
c அப் 24:17; ரோ 15:26; 2கொ 8:3, 4
d 2கொ 8:19
e அப் 19:21; 2கொ 1:15, 16
f அப் 20:2
g அப் 19:1
h அப் 19:10, 11
i அப் 16:1, 2
j பிலி 2:19, 20
k அப் 18:24, 25
l 1தெ 5:6
m 1கொ 15:58; பிலி 1:27
n அப் 4:29
o எபே 6:10; கொலோ 1:11
p 1கொ 13:4; 1பே 4:8

கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று உங்களுக்கு அறிவுரை சொல்கிறேன்.[a]
17 ஸ்தேவனாஸ்,[b] பொர்த்துனாத்து, அகாயுக்கு ஆகியோர் இங்கே வந்
திருப்பது எனக்குச் சந்தோஷம்; நீங்கள் இங்கே இல்லாத குறையை அவர்
கள் தீர்த்திருக்கிறார்கள். **18** எனக்கும் உங்களுக்கும் புத்துணர்ச்சி தந்திருக்
கிறார்கள்; அதனால், இப்படிப்பட்டவர்களை உயர்வாக மதியுங்கள்.

19 ஆசியாவில் உள்ள சபைகள் உங்களுக்கு வாழ்த்துச் சொல்கின்றன.
நம் எஜமானுடைய ஊழியர்களான உங்களுக்கு ஆக்கில்லாவும் பிரிஸ்கில்
லாளும் தங்களுடைய வீட்டில் கூடுகிற சபையோடு[c] சேர்ந்து இதயப்பூர்வ
மாக வாழ்த்துச் சொல்கிறார்கள். **20** சகோதரர்கள் எல்லாரும் உங்களுக்கு
வாழ்த்துச் சொல்கிறார்கள். சுத்தமான இதயத்தோடு ஒருவருக்கொருவர்
முத்தம் கொடுத்து வாழ்த்துச் சொல்லுங்கள்.

21 பவுலாகிய நான் என் கைப்பட எழுதி உங்களுக்கு வாழ்த்துச்
சொல்கிறேன்.

22 ஒருவனுக்கு நம் எஜமான்மேல் பாசம் இல்லையென்றால், அவன்
சபிக்கப்பட்டவனாக இருக்கட்டும். எங்கள் எஜமானே, வாருங்கள்! **23** நம்
எஜமானாகிய இயேசுவின் அளவற்ற கருணை உங்கள்மீது இருக்கட்டும்.
24 கிறிஸ்து இயேசுவின் சீஷர்களான உங்கள் எல்லாருக்கும் என் அன்
பைத் தெரிவிக்கிறேன்.

அதி. 16
a பிலி 2:29, 30; 1தெ 5:12; 1தீ 5:17
b 1கொ 1:16
c ரோ 16:3, 5; பிலே 2

கொரிந்தியருக்கு

எழுதப்பட்ட இரண்டாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1, 2)
எல்லா சோதனைகளிலும் கடவுள் ஆறுதல் தருகிறார் (3-11)
பவுலின் பயணத் திட்டத்தில் மாற்றம் (12-24)

2 சந்தோஷப்படுத்த வேண்டுமென்ற பவுலின் தீர்மானம் (1-4)
தவறு செய்தவர் மன்னிக்கப்படுகிறார், மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார் (5-11)
துரோவாவுக்கும் மக்கெதோனியாவுக்கும் பவுல் போகிறார் (12, 13)
ஊழியம் ஒரு வெற்றி ஊர்வலம் (14-17)
கடவுளின் வார்த்தையை வைத்துப் பணம் சம்பாதிப்பதில்லை (17)

3 சிபாரிசுக் கடிதங்கள் (1-3)
புதிய ஒப்பந்தத்தின் ஊழியர்கள் (4-6)
புதிய ஒப்பந்தத்தின் மேலான மகிமை (7-18)

4 நல்ல செய்தியின் ஒளி (1-6)
விசுவாசிகளாக இல்லாதவர்களின் மனக்கண்கள் குருடாக்கப்பட்டிருக்கின்றன (4)
மண்பாத்திரங்களில் பொக்கிஷம் (7-18)

5 பரலோக வீடாகிய உடலை அணிந்துகொள்வது (1-10)
சமரசமாக்கும் ஊழியம் (11-21)
புதிய படைப்பு (17)
கிறிஸ்துவின் தூதுவர்கள் (20)

6 கடவுளின் அளவற்ற கருணையைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது (1, 2)
பவுல் தன் ஊழியத்தைப் பற்றிச் சொல்கிறார் (3-13)
விசுவாசிகளாக இல்லாதவர்களோடு பிணைக்கப்படாதீர்கள் (14-18)

7 கறைகளை நீக்கி சுத்தப்படுத்திக்கொள்வோமாக (1)

கொரிந்தியர்களை நினைத்து பவுல் சந்தோஷப்படுகிறார் (2-4)
தீத்து நல்ல அறிக்கையைக் கொண்டுவருகிறார் (5-7)
கடவுளுக்கு ஏற்ற வருத்தமும் மனம் திருந்துதலும் (8-16)

8 யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக நன்கொடை திரட்டப்படுகிறது (1-15)
கொரிந்துவுக்கு தீத்து அனுப்பப்படுகிறார் (16-24)

9 நன்கொடை கொடுப்பதற்கு உற்சாகப்படுத்துகிறார் (1-15)
சந்தோஷமாகக் கொடுப்பவரைத்தான் கடவுள் நேசிக்கிறார் (7)

10 பவுல் தன் ஊழியத்தை ஆதரித்துப் பேசுகிறார் (1-18)
எங்கள் போராயுதங்கள் உலக மக்களுடைய போராயுதங்கள் போன்றவை அல்ல (4, 5)

11 பவுலும் “அருமை” அப்போஸ்தலர்களும் (1-15)
ஓர் அப்போஸ்தலனாக பவுல் சந்தித்த கஷ்டங்கள் (16-33)

12 பவுல் பார்த்த தரிசனங்கள் (1-7அ)
பவுலின் “உடலில் ஒரு முள்” (7ஆ-10)
“அருமை” அப்போஸ்தலர்களைவிட தாழ்ந்தவன் அல்ல (11-13)
கொரிந்தியர்கள்மீது பவுலுக்கு அக்கறை (14-21)

13 கடைசி எச்சரிப்புகளும் அறிவுரைகளும் (1-14)
“விசுவாசத்தில் நிலைத்திருக்கிறீர்களா என்பதை எப்போதும் சோதித்துப் பாருங்கள்” (5)
உங்களைச் சரிப்படுத்திக்கொள்ளுங்கள்; ஒரே சிந்தையோடு இருங்கள் (11)

அதி. 1

1 கடவுளுடைய விருப்பத்தின்படி* கிறிஸ்து இயேசுவின் அப்போஸ்
தலனாக இருக்கிற பவுல், சகோதரரான தீமோத்தேயுவோடு[a] சேர்ந்து,
கொரிந்துவில் இருக்கிற கடவுளுடைய சபைக்கும் அகாயா[b] முழுவதிலும்
இருக்கிற பரிசுத்தவான்கள் எல்லாருக்கும் எழுதுவது:
2 பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதா
னமும் கிடைக்கட்டும்.
3 நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கடவுளாகவும் தகப்பனாக
வும்[c] இருக்கிறவருக்குப் புகழ் சேரட்டும். அவர்தான் கனிவும் இரக்கமும்
உள்ள தகப்பன்.[d] எல்லா விதமான ஆறுதலின் கடவுள்.[e] **4** நமக்கு வரு
கிற எல்லா சோதனைகளிலும்* அவர் நமக்கு ஆறுதல்# தருகிறார்.[f] அவரி
டமிருந்து நமக்கு ஆறுதல் கிடைப்பதால்[g] எப்பேர்ப்பட்ட சோதனையில்△
இருப்பவர்களுக்கும் நம்மால் ஆறுதல் தர முடிகிறது.[h] **5** கிறிஸ்துவுக்காக
நாம் அதிகமதிகமாகக் கஷ்டங்களை அனுபவிப்பதுபோல்[i] கிறிஸ்துவின்
மூலம் நமக்கு அதிகமதிகமாக ஆறுதலும் கிடைக்கிறது. **6** எங்களுக்குச்
சோதனைகள்* வந்தால், உங்களுக்கு ஆறுதலும் மீட்பும் கிடைக்கும். எங்
களுக்கு ஆறுதல் கிடைத்தால், உங்களுக்கும் ஆறுதல் கிடைக்கும். அந்த
ஆறுதல், நாங்கள் படுகிற அதே கஷ்டங்களை நீங்களும் சகித்துக்கொள்ள
உங்களுக்கு உதவி செய்யும். **7** அதனால், எங்களுடைய கஷ்டங்களில்
நீங்கள் பங்கெடுப்பதுபோல் எங்களுடைய ஆறுதலிலும் பங்கெடுப்பீர்கள்[j]

a அப் 16:1, 2; பிலி 2:19, 20
b 1தெ 1:8
c யோவா 20:17
d யாத் 34:6; சங் 86:5; மீ 7:18
e ஏசா 51:3; ரோ 15:5
f சங் 23:4; 2கொ 7:6
g ரோ 15:4; 2தெ 2:16, 17
h எபே 6:21, 22; 1தெ 4:18
i 1கொ 4:11-13; கொலோ 1:24
j ரோ 8:18; 2தீ 2:11, 12

1:1 *வே.வா., “சித்தத்தின்படி.” **1:4** *வே.வா., “உபத்திரவங்களிலும்.” #வே.வா., “உற்சாகம்.” △வே.வா., “உபத்திரவத்தில்.” **1:6** *வே.வா., “உபத்திரவங்கள்.”

என்பதை அறிந்து உங்களைக் குறித்து உறுதியான நம்பிக்கையோடு இருக்
கிறோம்.

8 சகோதரர்களே, ஆசிய மாகாணத்தில் எங்களுக்கு வந்த சோத
னையைப்[a] பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகி
றோம். அங்கே எங்கள் சக்திக்கு மிஞ்சிய பயங்கர சோதனை வந்தது;
பிழைப்போம் என்ற நம்பிக்கையே போய்விட்டது.[b] **9** சொல்லப்போனால்,
மரண தண்டனை கொடுக்கப்பட்டதைப் போல உணர்ந்தோம். நாங்கள் எங்
கள்மேல் நம்பிக்கை வைக்காமல், இறந்தவர்களை உயிரோடு எழுப்புகிற
கடவுள்மேல் நம்பிக்கை வைப்பதற்காகத்தான் அப்படிப்பட்ட சோதனை வந்
தது.[c] **10** உயிருக்கு ஆபத்தான அந்தச் சூழ்நிலையிலிருந்து அவர் எங்
களைக் காப்பாற்றினார், எதிர்காலத்திலும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை
எங்களுக்கு இருக்கிறது.[d] **11** எங்களுக்காக மன்றாடுவதன் மூலம் நீங்க
ளும்கூட உதவி செய்யலாம்.[e] ஏனென்றால், எங்களுக்காக நிறைய பேர் மன்
றாடும்போது,[f] எங்களுக்கு உதவி கிடைக்கும். இதனால், இன்னும் நிறைய
பேர் எங்கள் சார்பாகக் கடவுளுக்கு நன்றி சொல்வார்கள்.

12 உலகத்தில், முக்கியமாக உங்கள் மத்தியில், நாங்கள் மனித ஞானத்
தைச் சார்ந்திருக்காமல்,[g] கடவுளுடைய அளவற்ற கருணையைச் சார்ந்தி
ருந்து, பரிசுத்தத்தோடும் அவர் தருகிற நேர்மையோடும் நடந்தோமென்று
எங்கள் மனசாட்சி சாட்சி கொடுக்கிறது. இதற்காகப் பெருமைப்படுகிறோம்.
13 உங்களால் நன்றாக வாசிக்க முடிந்தவற்றையும்* புரிந்துகொள்ள முடிந்
தவற்றையும் தவிர வேறொன்றையும் நாங்கள் உங்களுக்கு எழுத
வில்லை. இனிமேலும் அவற்றை முழுமையாக# புரிந்துகொள்வீர்கள் என்று
நம்புகிறேன். **14** இப்போது உங்களில் சிலர் புரிந்துகொண்டபடி, நாங்கள்
உங்களுடைய பெருமைக்குரியவர்களாக இருக்கிறோம். அதேபோல், நம்
எஜமானாகிய இயேசுவின் நாளில் நீங்களும் எங்களுடைய பெருமைக்குரி
யவர்களாக இருப்பீர்கள்.

15 இந்த நம்பிக்கையுடன்தான் உங்களை முதலில் வந்து சந்திக்க வேண்
டுமென்று நினைத்திருந்தேன். இதன் மூலம், இரண்டு தடவை உங்களைச் சந்
தோஷப்படுத்த* நினைத்திருந்தேன். **16** மக்கெதோனியாவுக்குப் போகும்
வழியிலும் அங்கிருந்து திரும்பி வரும் வழியிலும் உங்களைச் சந்திக்க
வேண்டுமென்றும், நீங்கள் என்னை யூதேயாவுக்கு வழியனுப்ப வேண்டு
மென்றும் யோசித்திருந்தேன்.[h] **17** நான் இப்படி யோசித்த பின்பு பொறுப்
பில்லாமல் அதை மாற்றிவிட்டதாக நினைக்கிறீர்களா? அல்லது, என் விருப்
பப்படி திட்டமிட்டு, “ஆம், ஆம்” என்று சொன்னதை “இல்லை, இல்லை”
என்று பிறகு மாற்றிவிடுவதாக நினைக்கிறீர்களா? **18** நாங்கள் எதையுமே
‘ஆம்’ என்றும் அதே சமயத்தில் ‘இல்லை’ என்றும் சொல்வதில்லை. கடவுள்
சொல்வது எப்படி நம்பகமானதோ அப்படியே நாங்கள் சொல்வதும் நம்பக
மானதுதான். **19** கடவுளுடைய மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி
நானும் சில்வானுவும்* தீமோத்தேயுவும்[i] உங்களுக்குப் பிரசங்கித்தோம்.
அவர், ‘ஆம்’ என்றும் அதே சமயத்தில் ‘இல்லை’ என்றும் ஆகிவிடவில்லை.
அவருடைய விஷயத்தில் ‘ஆம்’ என்பது ‘ஆம்’ என்றே ஆகியிருக்கிறது.

1:13 *அல்லது, “ஏற்கெனவே உங்களுக்கு நன்றாகத் தெரிந்தவற்றையும்.” #நே.மொ., “கடைசிவரை.” **1:15** *அல்லது, “உங்களுக்குப் பலனளிக்க.” **1:19** *சீலா என்றும் அழைக்கப்படுகிறார்.

அதி. 1
a அப் 20:18, 19
b 1கொ 15:32
c 2கொ 12:10
d சங் 34:7, 19
2தீ 4:18
2பே 2:9
e பிலி 1:19
பிலே 22
f அப் 12:5
ரோ 15:30-32
g 1கொ 2:4, 5
h 1கொ 16:5, 6
i அப் 18:5

20 கடவுளுடைய வாக்குறுதிகள் எத்தனை இருந்தாலும், அவை அத்தனை
யும் அவர் மூலமாக ‘ஆம்’ என்றே ஆகியிருக்கின்றன.[a] அதனால்தான்,
கடவுளுக்கு மகிமை சேர்ப்பதற்காக அவர் வழியாக “ஆமென்”*[b] என்று
சொல்கிறோம். **21** ஆனால், நீங்களும் நாங்களும் கிறிஸ்துவுக்குச் சொந்
தமானவர்கள் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறவரும் நம்மைத்
தேர்ந்தெடுத்திருக்கிறவரும்* கடவுள்தான்.[c] **22** அதோடு, நமக்குக் கிடைக்
கப்போகும் ஆஸ்திக்கு உத்தரவாதமாக* தன்னுடைய சக்தியை[d] நம் இத
யங்களில் பொழிந்து, நம்மேல் தன்னுடைய முத்திரையைப்[e] பதித்திருக்கிற
வரும் அவர்தான்.

23 என் உயிர்மேல் ஆணையாகச் சொல்கிறேன்: உங்களை மேலும்
வருத்தப்படுத்திவிடக் கூடாது என்பதற்காகவே இதுவரை நான் கொரிந்து
வுக்கு வரவில்லை; கடவுள்தான் இதற்குச் சாட்சி. **24** உங்களுடைய
விசுவாசத்துக்கு நாங்கள் அதிகாரிகளாக இருக்கிறோம் என்று நான் சொல்
லவில்லை.[f] உங்களுடைய சந்தோஷத்துக்காக உங்கள் சக வேலையாட்க
ளாகவே இருக்கிறோம். ஏனென்றால், உங்களுடைய விசுவாசத்தினால்தான்
நீங்கள் உறுதியாக நிற்கிறீர்கள்.

2 நான் மறுபடியும் வரும்போது உங்களை வருத்தப்படுத்திவிடக் கூடா
தென்று தீர்மானித்திருக்கிறேன். **2** நான் உங்களுக்கு வருத்தம் உண்
டாக்கினால், என்னைச் சந்தோஷப்படுத்த யார் இருக்கிறார்கள்? என்னால்
வருத்தமடைந்த நீங்கள்தானே? **3** நான் வரும்போது எனக்குச் சந்தோஷம்
கொடுக்க வேண்டிய உங்களால் எனக்கு வருத்தம் உண்டாகிவிடக் கூடாது
என்பதற்காகவே அதை உங்களுக்கு எழுதினேன். எனக்கு எது சந்தோஷத்
தைத் தருகிறதோ அதுதான் உங்கள் எல்லாருக்கும் சந்தோஷத்தைத் தரும்
என்று உறுதியாக நம்புகிறேன். **4** உங்களை வருத்தப்படுத்துவதற்காக நான்
அதை எழுதவில்லை. உங்கள்மேல் நான் வைத்திருக்கும் அளவுகடந்த
அன்பை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே மிகுந்த துய
ரத்தோடும் மனவேதனையோடும் கண்ணீரோடும் எழுதினேன்.[g]

5 ஒருவன் வருத்தப்படுத்தியிருந்தால்,[h] அவன் என்னை மட்டுமல்ல,
ஓரளவு உங்கள் எல்லாரையுமே வருத்தப்படுத்தியிருக்கிறான்—நான் கடு
மையான வார்த்தைகளில் பேசுவதாக நினைக்க வேண்டாம். **6** அவனை
உங்களில் பெரும்பான்மையோர் கண்டித்திருப்பதே போதும். **7** அவன்
ஒரேயடியாகச் சோகத்தில் மூழ்கிவிடாதபடி[i] இப்போது நீங்கள் அவனை
மனதார மன்னித்து ஆறுதல்படுத்த வேண்டும்.[j] **8** அதனால், நீங்கள்
அவன்மேல் அன்பு வைத்திருக்கிறீர்கள் என்பதைக் காட்டும்படி உங்களி
டம் கேட்டுக்கொள்கிறேன்.[k] **9** நீங்கள் எல்லாவற்றிலும் கீழ்ப்படிகிறீர்களா
என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.
10 ஒருவன் செய்கிற தவறை நீங்கள் மன்னித்தால் நானும் அதை மன்னிக்
கிறேன். சொல்லப்போனால், நான் யாரையாவது மன்னித்திருந்தால் அதை
உங்களுக்காக மன்னித்திருக்கிறேன், கிறிஸ்துவின் முன்னிலையில் மன்னித்
திருக்கிறேன். **11** இல்லையென்றால், சாத்தான் நம்மைத் தந்திரமாக ஏமாற்
றிவிடலாம்,[l] அதற்கு நாம் இடம்கொடுக்கக் கூடாது. அவனுடைய சதித்திட்
டங்கள் நமக்குத் தெரிந்தவைதானே.[m]

1:20 * அதாவது, “அப்படியே ஆகட்டும்.” **1:21** * வே.வா., “அபிஷேகம் செய்திருக்கிறவரும்.” **1:22** * வே.வா., “முன்பணமாக.”

அதி. 1
a ரோ 15:8
b வெளி 3:14
c 1யோ 2:20, 27
d ரோ 8:23; 2கொ 5:5; எபே 1:13, 14
e எபே 4:30
f எபி 13:17; 1பே 5:2, 3

அதி. 2
g 2கொ 7:8, 9
h 1கொ 5:1
i எபி 12:12
j லூ 15:23, 24
k ரோ 12:10
l லூ 22:31; 2தீ 2:26
m எபே 6:11, 12; 1பே 5:8

12 கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தியைச் சொல்ல துரோவாவுக்கு[a]
வந்தபோது, நம் எஜமானுக்குச் சேவை செய்வதற்கான வாய்ப்பு என்ற கதவு
எனக்குத் திறக்கப்பட்டது. **13** ஆனால், என் சகோதரனான தீத்துவைப்[b]
பார்க்காததால் நிம்மதி இல்லாமல் இருந்தேன். அதனால், அங்கிருந்தவர்களி
டம் சொல்லிவிட்டு மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப் போனேன்.[c]

14 கடவுள் நம்மை எப்போதும் கிறிஸ்துவோடு வெற்றி ஊர்வலத்தில்
நடத்திக்கொண்டு போவதற்காகவும், தன்னைப் பற்றிய அறிவின் வாச
னையை நம் மூலமாக எல்லா இடங்களிலும் பரப்புவதற்காகவும் அவருக்கு
நன்றி சொல்கிறேன். **15** மீட்பின் வழியில் போகிறவர்களுக்கும் அழிவின்
வழியில் போகிறவர்களுக்கும் நாம் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும்போது,
கடவுளுக்கு முன்னால் இனிய வாசனையாக இருக்கிறோம். **16** அழி
வின் வழியில் போகிறவர்களுக்கு, மரணத்துக்கு வழிநடத்துகிற மரண வாச
னையாகவும்[d] மீட்பின் வழியில் போகிறவர்களுக்கு, வாழ்வுக்கு வழிநடத்து
கிற வாழ்வின் வாசனையாகவும் இருக்கிறோம். இப்படிப்பட்ட சேவைக்குப்
போதிய தகுதி பெற்றவர்கள் யார்? **17** நாங்கள்தான். ஏனென்றால்,
நிறைய பேரைப் போல நாங்கள் கடவுளுடைய வார்த்தையை வைத்
துப் பணம் சம்பாதிப்பதில்லை.*[e] கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்ற
முறையில், அவருடைய முன்னிலையில், கிறிஸ்துவோடு ஒன்றுபட்டு
உண்மை மனதோடு பிரசங்கிக்கிறோம்.

3 மறுபடியும் எங்களைப் பற்றி நாங்களே சிபாரிசு செய்கிறோம் என்று
நினைக்கிறீர்களா? சிலரைப் போல், சிபாரிசுக் கடிதங்களை உங்களிடம்
காட்டுவதோ உங்களிடமிருந்து வாங்குவதோ எங்களுக்கு அவசியமா?
2 எங்கள் இதயங்களில் எழுதப்பட்டும், எல்லா மக்களாலும் அறியப்பட்
டும், வாசிக்கப்பட்டும் வருகிற எங்கள் சிபாரிசுக் கடிதம் நீங்கள்தான்.[f]
3 ஊழியர்களாகிய நாங்கள்[g] எழுதிய கிறிஸ்துவின் கடிதம் நீங்கள் என்
பது தெளிவாகவே தெரிகிறது. அது மையினால் அல்ல, உயிருள்ள கடவு
ளுடைய சக்தியினால் எழுதப்பட்டிருக்கிறது. கற்பலகைகளில் அல்ல,[h] இத
யப் பலகைகளில் எழுதப்பட்டிருக்கிறது.[i]

4 கிறிஸ்துவின் மூலம் கடவுள்மேல் நாங்கள் வைத்திருக்கிற நம்பிக்கை
யால் இப்படிச் சொல்கிறோம். **5** எங்களுடைய சொந்த முயற்சியால்
போதிய தகுதி பெற்றிருக்கிறோம் என்று நினைக்கவில்லை. அதற்குப் பதி
லாக, கடவுள்தான் எங்களுக்குப் போதிய தகுதியைக் கொடுத்திருக்கிறார்.[j]
6 எழுதப்பட்ட சட்டத்தின்படி அல்ல, தன்னுடைய சக்தியின்படி புதிய ஒப்
பந்தத்தின்[k] ஊழியர்களாக இருக்க அவர்தான் எங்களுக்குப் போதிய தகுதி
யைக் கொடுத்திருக்கிறார். ஏனென்றால், எழுதப்பட்ட சட்டம்[l] மரணத் தீர்ப்பு
கொடுக்கிறது,[m] கடவுளுடைய சக்தியோ உயிர் கொடுக்கிறது.[n]

7 மரணத்தை ஏற்படுத்துகிறதும் கற்களில் எழுத்துக்களாகப் பொறிக்கப்
பட்டதுமான அந்தச் சட்டம்[o] மகிமையுள்ளதாக இருந்தது. அந்த மகிமை
மோசேயின் முகத்தில் பிரகாசித்ததால்,[p] இஸ்ரவேல் மக்களால் அவரு
டைய முகத்தைப் பார்க்க முடியவில்லை. மறைந்துபோகவிருந்த சட்டமே
அந்தளவு மகிமையுள்ளதாக இருந்ததென்றால், **8** கடவுளுடைய சக்தியின்
ஊழியம்[q] இன்னும் எந்தளவு மகிமையுள்ளதாக இருக்கும்![r] **9** தண்டனைத்
தீர்ப்பு வழங்குகிற சட்டமே[s] அந்தளவு மகிமையுள்ளதாக இருந்ததென்

2:17 * நே.மொ., “வியாபாரம் செய்வதில்லை; லாபம் சம்பாதிப்பதில்லை.”

அதி. 2
a அப் 16:8
b கலா 2:3
தீத் 1:4
c 2கொ 7:5
d யோவா 15:19
2கொ 4:3
1பே 2:7, 8
e 2கொ 4:2

அதி. 3
f 1கொ 9:2
g 1கொ 3:5
h யாத் 31:18
யாத் 34:1
i நீதி 3:3
நீதி 7:3
j யாத் 4:12, 15
பிலி 2:13
k எபி 8:6
l ரோ 13:9
m கலா 3:10
n யோவா 6:63
o யாத் 31:18
யாத் 32:16
p யாத் 34:
29, 30
q அப் 2:1, 4
r 1பே 4:14
s உபா 27:26

றால்,[a] நீதியை வழங்குகிற ஊழியம் இன்னும் எந்தளவு மகிமையுள்ள
தாக இருக்கும்![b] **10** சொல்லப்போனால், ஒருகாலத்தில் மகிமையுள்ளதாக
இருந்ததும்கூட அதைவிட மகிமையானது வந்ததால் அதன் மகிமையை
இழந்துபோனது.[c] **11** மறைந்துபோகவிருந்ததே அந்தளவு மகிமையுள்ள
தாக இருந்ததென்றால்,[d] நிலையானது இன்னும் எந்தளவு மகிமையுள்ளதாக
இருக்கும்![e]

12 இப்படிப்பட்ட நம்பிக்கை எங்களுக்கு இருப்பதால்,[f] எந்தத் தயக்
கமும் இல்லாமல் நாங்கள் பேசுகிறோம். **13** மறைந்துபோகவிருந்த மகி
மையை* இஸ்ரவேல் மக்கள் உற்றுப்பார்க்கக் கூடாது என்பதற்காக மோசே
முகத்திரை[g] போட்டுக்கொண்டதைப் போல் நாங்கள் போட்டுக்கொள்வ
தில்லை. **14** அந்த மக்களுடைய மனம் மழுங்கியிருந்தது.[h] இப்போதும்
கூட, பழைய ஒப்பந்தம் வாசிக்கப்படும்போது அதே முகத்திரை அவர்களி
டமிருந்து நீக்கப்படாமல் இருக்கிறது.[i] ஏனென்றால், அது கிறிஸ்துவின்
மூலம்தான் நீக்கப்படுகிறது.[j] **15** சொல்லப்போனால், மோசேயின் புத்தகங்
கள் வாசிக்கப்படும்போது[k] இந்நாள்வரை அவர்களுடைய இதயத்தை ஒரு
திரை மறைத்திருக்கிறது.[l] **16** ஆனால், ஒருவர் யெகோவாவிடம்* திரும்
பும்போது, அந்தத் திரை நீக்கப்பட்டுவிடுகிறது.[m] **17** யெகோவா* காண
முடியாத உருவத்தில்# இருக்கிறார்;[n] யெகோவாவின்* சக்தி எங்கேயோ
அங்கே சுதந்திரம் உண்டு.[o] **18** நாம் எல்லாரும் முகத்திரை இல்லாமல்
யெகோவாவின்* மகிமையைக் கண்ணாடிபோல் பிரதிபலிக்கிறோம். இப்படி,
யெகோவாவின்# செயலுக்கு ஏற்றபடியே மகிமைக்குமேல் மகிமை பெற்று
அவர் சாயலாக மாற்றப்படுகிறோம்.[p]

4 அதனால்தான், இந்த ஊழியத்தைக் கடவுளுடைய இரக்கத்தால்
பெற்றிருக்கிற நாங்கள் சோர்ந்துபோவதில்லை. **2** மறைவாகச் செய்
யப்படுகிற வெட்கக்கேடான காரியங்களை ஒதுக்கித்தள்ளியிருக்கிறோம்.
தந்திரமாக நடக்காமலும் கடவுளுடைய வார்த்தையைக் கலப்படம் செய்யா
மலும் சத்தியத்தைத் தெரியப்படுத்துகிறோம்.[q] அதனால், கடவுளுக்கு முன்
னால் எல்லா மனிதர்களுக்கும்* முன்மாதிரிகளாக இருக்கிறோம்.[r] **3** நாங்
கள் சொல்கிற நல்ல செய்தி திரையால் மறைக்கப்பட்டிருந்தால், அழிவின்
பாதையில் போகிறவர்களுக்குத்தான் அது மறைக்கப்பட்டிருக்கும். **4** விசு
வாசிகளாக* இல்லாத அவர்களுடைய மனக்கண்களை இந்த உலகத்தின்#
கடவுள்[s] குருடாக்கியிருக்கிறான்.[t] அதனால், கடவுளுடைய சாயலில்[u] இருக்
கிற கிறிஸ்துவைப் பற்றிய அருமையான நல்ல செய்தியின் ஒளியை அவர்
களால் பார்க்க முடிவதில்லை.[v] **5** நாங்கள் எங்களைப் பற்றியே பிரசங்கிப்
பதில்லை. அதற்குப் பதிலாக, இயேசு கிறிஸ்துவே எஜமான் என்றும்,
இயேசுவுக்காக நாங்கள் உங்களுடைய அடிமைகள் என்றும்தான் பிரசங்கிக்
கிறோம். **6** “இருளிலிருந்து வெளிச்சம் பிரகாசிக்கட்டும்”[w] என்று சொன்ன
கடவுள்தான் கிறிஸ்துவின் மூலம்* தன்னைப் பற்றிய அருமையான அறி
வொளியை எங்கள் இதயங்களில் பிரகாசிக்க வைத்திருக்கிறார்.[x]

3:13 *அதாவது, “விளைவை; முடிவை.” **3:16-18** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:17** #அதாவது, “பரலோகத்துக்குரிய உடலில்.” **3:18** #அல்லது, “காண முடியாத உருவத்தில் இருக்கிற யெகோவாவின்.” இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:2** *நே.மொ., “மனிதர்களுடைய மனசாட்சிக்கும்.” **4:4** *வே.வா., “இயேசுவின் சீஷர்களாக.” #வே.வா., “சகாப்தத்தின்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **4:6** *நே.மொ., “கிறிஸ்துவுடைய முகத்தின் மூலம்.”

அதி. 3
a யாத் 34:35
b ரோ 3:21, 22
c கொலோ 2:16, 17
d யாத் 19:16; யாத் 24:17
e எபி 12:22-24
f 1பே 1:3, 4
g யாத் 34:33-35
h ரோ 11:7
i யோவா 12:40
j ரோ 7:6; எபே 2:15
k அப் 15:21
l ரோ 11:8
m யாத் 34:34
n யோவா 4:24
o ஏசா 61:1; ரோ 6:14; ரோ 8:15; கலா 5:1, 13
p 2கொ 4:6; எபே 4:23, 24; எபே 5:1

அதி. 4
q 2கொ 2:17; கலா 1:9
r 2கொ 6:3, 4
s யோவா 14:30; எபே 2:2; 1யோ 5:19
t 2கொ 11:14
u கொலோ 1:15; எபி 1:3
v ஏசா 60:2; யோவா 8:12
w ஆதி 1:3
x 1பே 2:9

7 இருந்தாலும், இயல்புக்கு மிஞ்சிய சக்தி எங்களுடையது அல்ல, அது
கடவுளுடையது என்பது தெளிவாய்த் தெரிவதற்காக,[a] நாங்கள் இந்தப்
பொக்கிஷத்தை[b] மண்பாத்திரங்களில்*[c] பெற்றிருக்கிறோம். **8** நாங்கள்
எல்லா விதத்திலும் பயங்கரமாக நெருக்கப்படுகிறோம், ஆனால் முடங்கிப்
போவதில்லை. குழம்பித் தவிக்கிறோம், ஆனால் வழி தெரியாமல் திண்
டாடுவதில்லை.*[d] **9** கொடுமைப்படுத்தப்படுகிறோம், ஆனால் கைவிடப்
படுவதில்லை.[e] தள்ளப்படுகிறோம், ஆனால் அழிந்துபோவதில்லை.[f]
10 இயேசுவைப் போல நாங்கள் வாழ்கிறோம் என்பது எங்கள் உடலில்
வெளிப்படுவதற்காக, இயேசு அனுபவித்த மரண அவஸ்தைகளை எங்கள்
உடலில் சகித்து வருகிறோம்.[g] **11** இயேசுவைப் போல நாங்கள் வாழ்கி
றோம் என்பது சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படுவதற்காக, உயிரோடி
ருக்கும் நாங்கள் இயேசுவுக்காக எப்போதும் மரணத்தை எதிர்ப்படுகிறோம்.[h]
12 இதனால், எங்களுக்கு மரணம் வருகிறது, உங்களுக்கோ வாழ்வு
கிடைக்கிறது.

13 "நான் விசுவாசம் வைத்தேன், அதனால் பேசினேன்"[i] என்று எழு
தப்பட்டிருக்கிறது. அதேபோன்ற விசுவாசம் எங்களுக்கு இருப்பதால் நாங்
களும் விசுவாசம் வைக்கிறோம், அதனால் பேசுகிறோம். **14** இயேசுவை
உயிரோடு எழுப்பியவர் இயேசுவைப் போலவே எங்களையும் உயிரோடு
எழுப்பி,[j] உங்களோடுகூட அவருக்கு முன்பாக நிறுத்துவார் என்று அறிந்
திருக்கிறோம். **15** உங்களில் பலர் கடவுளுக்கு நன்றி சொல்வதற்காகவும்,
அதன் மூலம் அவருடைய அளவற்ற கருணையை நீங்கள் மேலும் மேலும்
பெற்று அவருக்கு மகிமை சேர்ப்பதற்காகவும் இவையெல்லாம் உங்களுக்
காகவே நடக்கிறது.[k]

16 அதனால், நாம் சோர்ந்துபோவதில்லை. நம் உடல் அழிந்துவந்தாலும்,
நம் உள்ளம் நாளுக்குநாள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. **17** நமக்கு வரும்
உபத்திரவம்* லேசானது, அது நொடிப்பொழுதுதான் இருக்கும். அந்த
உபத்திரவத்தால் நமக்கு வரும் மகிமையோ மகத்தானது, அது என்றென்றும்
நிலைத்திருக்கும்.[l] **18** அதனால், பார்க்க முடிந்த காரியங்கள்மீது அல்ல,
பார்க்க முடியாத காரியங்கள் மீதே நம்முடைய கண்களைப் பதிய வைத்தி
ருக்கிறோம்.[m] பார்க்க முடிந்த காரியங்கள் தற்காலிகமானவை, பார்க்க முடி
யாத காரியங்களோ என்றென்றும் நிலைத்திருப்பவை.

5 நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நம்முடைய பூமிக்குரிய வீடாகிய இந்தக்
கூடாரம் அழிந்துபோனால்,[n] பரலோகத்தில் நிலையான ஒரு வீடு கடவு
ளிடமிருந்து நமக்குக் கிடைக்கும்; அது கைகளால் கட்டப்படாத கட்டிடமாக
இருக்கும்.[o] **2** பூமிக்குரிய வீடாகிய இந்த உடலில் இருக்கும்போது நாம்
மனம் குமுறுகிறோம். பரலோக வீடாகிய உடலை அணிந்துகொள்வதற்கு
மிகவும் ஏங்குகிறோம்.[p] **3** அதை அணிந்துகொள்ளும்போதுதான் நாம்
நிர்வாணமாகத் தெரிய மாட்டோம். **4** சொல்லப்போனால், இந்தக் கூடாரத்
தில் இருக்கிற நாம் மனபாரத்தின் காரணமாகக் குமுறுகிறோம். ஏனென்றால்,
இதைக் களைந்துபோட நாம் விரும்புவதில்லை, மற்றொன்றை அணிந்து
கொள்ளவே விரும்புகிறோம்.[q] சாவுக்குரிய ஒன்றுக்குப் பதிலாக வாழ்வுக்கு
ரிய ஒன்றையே பெற விரும்புகிறோம்.[r] **5** இதற்காக நம்மைத் தயார்படுத்

4:7 * வே.வா., "மண் ஜாடிகளில்." **4:8** * அல்லது, "நம்பிக்கை இல்லாமல் விட்டுவிடப்படுவதில்லை." **4:17** * வே.வா., "சோதனை."

அதி. 4
a 2கொ 12:9, 10; பிலி 4:13
b 2கொ 4:1
c ஏசா 64:8; அப் 9:15; 1கொ 15:47
d 1கொ 10:13
e எபி 13:5
f வெளி 2:10
g பிலி 3:10; 1பே 4:13
h ரோ 8:36; 1கொ 4:9; 1கொ 15:31
i சங் 116:10
j 1கொ 6:14
k 2தீ 2:10
l மத் 5:12; ரோ 8:18
m 2கொ 5:7; எபி 11:1

அதி. 5
n 2பே 1:13, 14
o 1கொ 15:50; பிலி 3:20, 21
p ரோ 6:5; ரோ 8:23; 1கொ 15: 48, 49
q 1கொ 15: 43, 44; பிலி 1:21
r 1பே 1:3, 4

தியவர் கடவுள்தான்.[a] நமக்குக் கிடைக்கப்போகிற ஆஸ்திக்கு உத்தரவாத
மாக* அவர் தன்னுடைய சக்தியை நமக்குக் கொடுத்தார்.[b]

6 அதனால், எப்போதும் மிகுந்த தைரியத்துடன் இருக்கிறோம். அதோடு,
இந்த உடலில் குடியிருக்கும்போது நம் எஜமானிடமிருந்து தூரத்தில்
இருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம்.[c] **7** ஏனென்றால், நாம் கண்
ணால் பார்க்கிறபடி நடக்காமல் விசுவாசத்தின்படி நடக்கிறோம். **8** நாம்
மிகுந்த தைரியத்தோடு இருக்கிறோம்; இந்த உடலில் குடியிருக்காமல்
நம் எஜமானோடு குடியிருக்கவே அதிகமாக ஆசைப்படுகிறோம்.[d] **9** நாம்
அவரோடு குடியிருந்தாலும் சரி, குடியிருக்காவிட்டாலும் சரி, அவருக்குப்
பிரியமானவர்களாக இருப்பதையே நம் குறிக்கோளாக வைத்திருக்கிறோம்.
10 நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு மேடைக்கு முன்பாக நிற்க
வேண்டும். அப்போது, நாம் ஒவ்வொருவரும் உடலில் குடியிருந்தபோது
செய்துவந்த நல்லது கெட்டதுக்குத் தகுந்தபடி பலன் பெறுவோம்.[e]

11 நம் எஜமானுக்குப் பயந்து நடக்க வேண்டும் என்பதை நாங்கள்
உணர்ந்திருப்பதால், எங்களுடைய வார்த்தைகளைக் கேட்கும்படி மக்களை
ஊக்குவித்து வருகிறோம். ஆனால், நாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது
கடவுளுக்கு நன்றாகத் தெரியும். உங்கள் மனசாட்சிக்கும் நன்றாகத் தெரியும்
என்று நம்புகிறேன். **12** மறுபடியும் எங்களை உங்களிடம் சிபாரிசு செய்வ
தாக நினைக்க வேண்டாம். நீங்கள் எங்களைப் பற்றிப் பெருமையாகப் பேச
வேண்டும் என்பதற்காகவே இதையெல்லாம் சொல்கிறோம். அப்போது,
இதயத்தைப் பார்க்காமல் வெளித்தோற்றத்தை மட்டுமே பார்த்துப் பெரு
மையடிக்கிறவர்களுக்கு உங்களால் பதில் சொல்ல முடியும்.[f] **13** நாங்கள்
பைத்தியமாக இருக்கிறோம் என்றால்,[g] அது கடவுளுக்காகத்தான்; நாங்கள்
தெளிந்த புத்தியோடு இருக்கிறோம் என்றால், அது உங்களுக்காகத்தான்.
14 கிறிஸ்துவின் அன்பு எங்களைத் தூண்டியெழுப்புகிறது. ஏனென்றால்,
எல்லாருக்காகவும் அவர் ஒருவரே இறந்தார்.[h] சொல்லப்போனால், எல்லா
ரும் இறந்த நிலையில் இருந்தார்கள். **15** அவர் எல்லாருக்காகவும் இறந்
திருப்பதால், வாழ்கிறவர்கள் இனி தங்களுக்காக வாழாமல்[i] தங்களுக்காக
இறந்து உயிரோடு எழுப்பப்பட்டவருக்காகவே வாழ வேண்டும் என்பதை
உணர்ந்திருக்கிறோம்.

16 அதனால், நாங்கள் இனிமேல் யாரையும் மனித கண்ணோட்டத்தில்
பார்க்க மாட்டோம்.[j] கிறிஸ்துவை மனித கண்ணோட்டத்தில்* ஒருவேளை
பார்த்திருந்தாலும் இனிமேல் ஒருபோதும் அப்படிப் பார்க்க மாட்டோம்.[k]
17 ஒருவன் கிறிஸ்துவோடு ஒன்றுபட்டிருந்தால் அவன் புதிய படைப்பாக
இருக்கிறான்.[l] பழையவை ஒழிந்துபோய்விட்டன, இதோ! புதியவை தோன்
றியிருக்கின்றன. **18** எல்லாம் கடவுளிடமிருந்தே வந்திருக்கின்றன. அவர்
தான் கிறிஸ்துவின் மூலம் எங்களைத் தன்னோடு சமரசமாக்கி,[m] சமரசமாக்
கும் ஊழியத்தை எங்களிடம் ஒப்படைத்தார்.[n] **19** அதாவது, உலக
மக்களுடைய குற்றங்களை நினைத்துப் பார்க்காமல்,[o] கிறிஸ்துவின் மூலம்
அவர்களைத் தன்னோடு சமரசமாக்கி,[p] சமரசமாக்கும் செய்தியை எங்களி
டம் ஒப்படைத்தார்.[q]

20 அதனால், நாங்கள் கிறிஸ்துவின் சார்பில்[r] தூதுவர்களாக இருக்கி
றோம்.[s] ‘கடவுளோடு சமரசமாகுங்கள்’ என்று கிறிஸ்துவின் சார்பில் கெஞ்சிக்

5:5 * வே.வா., “முன்பணமாக.” **5:16** * வே.வா., “உடலில்.”

அதி. 5
a எபே 2:10
b ரோ 8:23; எபே 1:13, 14
c யோவா 14:3
d பிலி 1:23
e வெளி 22:12
f 2கொ 10:10
g 2கொ 11:1, 16
h ஏசா 53:10; மத் 20:28; 1தீ 2:5, 6
i ரோ 14:7, 8
j மத் 12:50
k யோவா 20:17
l கலா 6:15
m ரோ 5:10; எபே 2:15, 16; கொலோ 1:19, 20
n அப் 20:24
o ரோ 4:25; ரோ 5:18
p ரோ 5:6; 1யோ 2:1, 2
q மத் 28:19, 20; அப் 13:38, 39
r பிலி 3:20
s எபே 6:19, 20

கேட்டுக்கொள்கிறோம். எங்கள் மூலம் கடவுளே உங்களுக்கு இந்த வேண்டு
கோளை விடுப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். **21** கிறிஸ்துவின் மூலம்
நாம் கடவுளுடைய பார்வையில் நீதிமான்களாகும்படி,[a] பாவமே செய்யாத
அவரைக்[b] கடவுள் நமக்காகப் பாவப் பரிகார பலியாகக் கொடுத்தார்.

6 கடவுளிடமிருந்து அளவற்ற கருணையைப் பெற்றுக்கொண்ட பின்பு
அதனுடைய நோக்கத்தை நிறைவேற்றாமல் இருந்துவிடாதீர்கள்[c]
என்று அவருடைய சக வேலையாட்களான நாங்கள் உங்களைக் கெஞ்சிக்
கேட்டுக்கொள்கிறோம்.[d] **2** ஏனென்றால், “அனுக்கிரகக் காலத்தில் உன்னு
டைய வேண்டுதலைக் கேட்டேன், மீட்பின் நாளில் உனக்கு உதவி செய்
தேன்”[e] என்று கடவுள் சொல்கிறார். இதோ! இப்போதே அனுக்கிரகக்
காலம். இதோ! இப்போதே மீட்பின் நாள்.

3 எங்களுடைய ஊழியத்தில் யாரும் குறை கண்டுபிடிக்கக் கூடாது[f]
என்பதற்காக நாங்கள் யாருக்கும் எந்தவித இடைஞ்சலும்* உண்டாக்காமல்
இருக்கிறோம். **4** எல்லா விதத்திலும் எங்களைக் கடவுளுடைய ஊழியர்க
ளாகச் சிபாரிசு செய்கிறோம்.[g] உபத்திரவங்கள், நெருக்கடிகள், கஷ்டங்கள்,[h]
5 அடிகள், சிறைவாசங்கள்,[i] கலகங்கள், பாடுகள், தூக்கமில்லாத இரவுகள்,
பட்டினிகள்[j] ஆகியவற்றின்போது நாங்கள் காட்டிய சகிப்புத்தன்மையின்
மூலமும், **6** தூய்மை, அறிவு, பொறுமை,[k] கருணை,[l] கடவுளுடைய சக்தி,
வெளிவேஷமில்லாத அன்பு,[m] **7** உண்மையான பேச்சு, கடவுளுடைய
வல்லமை[n] ஆகியவற்றின் மூலமும், வலது கையிலும்* இடது கையிலும்#
பிடித்திருக்கிற நீதியின் ஆயுதங்கள்[o] மூலமும் கடவுளுடைய ஊழியர்களாக
எங்களைச் சிபாரிசு செய்கிறோம். **8** அதோடு, மற்றவர்கள் எங்களைப்
புகழ்ந்து பேசினாலும் கேவலமாகப் பேசினாலும், தாழ்வாகப் பேசினாலும்
உயர்வாகப் பேசினாலும் கடவுளுடைய ஊழியர்களாக எங்களைச் சிபாரிசு
செய்கிறோம். அதுமட்டுமல்ல, நாங்கள் ஏமாற்றுக்காரர்களாகத் தோன்றி
னாலும் உண்மையுள்ளவர்களாகவும், **9** அறியப்படாதவர்களாகத் தோன்றி
னாலும் நன்கு அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்களாக* தோன்றினாலும்
உயிரோடிருக்கிறவர்களாகவும்,[p] தண்டிக்கப்பட்டவர்களாக# தோன்றினா
லும் கொல்லப்படாதவர்களாகவும்,[q] **10** துக்கப்படுகிறவர்களாகத் தோன்
றினாலும் எப்போதுமே சந்தோஷப்படுகிறவர்களாகவும், ஏழைகளாகத்
தோன்றினாலும் நிறைய பேரை பணக்காரர்களாக ஆக்குகிறவர்களாகவும்,
ஒன்றுமில்லாதவர்களாகத் தோன்றினாலும் எல்லாவற்றையும் பெற்றவர்களா
கவும்[r] இருப்பதன் மூலமும் கடவுளுடைய ஊழியர்களாக எங்களைச் சிபா
ரிசு செய்கிறோம்.

11 கொரிந்தியர்களே, நாங்கள் உங்களிடம் ஒளிவுமறைவில்லாமல் பேசி
யிருக்கிறோம், உங்களுக்காக எங்கள் இதயக் கதவை அகலமாகத் திறந்தி
ருக்கிறோம். **12** எங்களுடைய இதயத்தில் உங்களுக்கு இடம் கொடுத்தி
ருக்கிறோம்,[s] ஆனால் உங்களுடைய இதயத்தில் எங்களுக்கு இடம்
கொடுக்காமல் இருக்கிறீர்கள், எங்கள்மேல் கனிவான பாசத்தைக் காட்டா
மல் இருக்கிறீர்கள். **13** அதனால், என்னுடைய பிள்ளைகளுக்குச் சொல்

6:3 *வே.வா., “தடுமாற்றமும்.” **6:7** *ஒருவேளை, தாக்குவதற்காக இருக்கலாம். #ஒருவேளை, தற்காப்புக்காக இருக்கலாம். **6:9** *வே.வா., “சாக வேண்டியவர்களாக.” #வே.வா., “கண்டிக்கப்பட்டவர்களாக.”

அதி. 5
a ரோ 1:16, 17
b எபி 4:15; எபி 7:26

அதி. 6
c ரோ 2:4
d 2கொ 5:20
e ஏசா 49:8
f 1கொ 9:22
g 2கொ 4:1, 2
h 2கொ 11:23
i வெளி 2:10
j 2கொ 11: 25, 27
k கொலோ 3:13; 1தெ 5:14
l எபே 4:32
m ரோ 12:9
n 1கொ 2:4, 5
o 2கொ 10:4; எபே 6:11
p 2கொ 4:10, 11
q அப் 14:19; 2கொ 4:8, 9
r பிலி 4:13; வெளி 2:9
s 2கொ 12:15

வதுபோல் சொல்கிறேன், எங்களுக்காக நீங்களும் உங்கள் இதயக் கதவை
அகலமாகத் திறங்கள்.[a]

14 விசுவாசிகளாக* இல்லாதவர்களோடு பிணைக்கப்படாதீர்கள்.#[b] நீதிக்
கும் அநீதிக்கும் என்ன உறவு இருக்கிறது?[c] ஒளிக்கும் இருளுக்கும்
என்ன தொடர்பு இருக்கிறது?[d] **15** கிறிஸ்துவுக்கும் பொல்லாதவனுக்கும்*
என்ன இசைவு இருக்கிறது?[e] விசுவாசியாக இருப்பவனுக்கும் விசுவாசியாக
இல்லாதவனுக்கும் என்ன பொருத்தம் இருக்கிறது?[f] **16** கடவுளுடைய
ஆலயத்துக்கும் சிலைகளுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?[g] நாம் உயி
ருள்ள கடவுளின் ஆலயமாக இருக்கிறோமே;[h] இதைப் பற்றித்தான்
கடவுள், “நான் அவர்கள் நடுவில் தங்கியிருந்து,[i] அவர்கள் நடுவில் நடப்
பேன். நான் அவர்களுடைய கடவுளாக இருப்பேன், அவர்கள் என்னு
டைய ஜனங்களாக இருப்பார்கள்”[j] என்று சொன்னார். **17** “‘அதனால், நீங்
கள் அவர்களைவிட்டு வெளியே வாருங்கள், அவர்களிடமிருந்து பிரிந்து
போங்கள், அசுத்தமானதைத் தொடாதீர்கள்’;[k] ‘அப்போது நான் உங்களை
ஏற்றுக்கொள்வேன்’[l] என்று யெகோவா* சொல்கிறார்.” **18** “‘அதோடு,
நான் உங்களுக்குத் தகப்பனாக இருப்பேன்,[m] நீங்கள் எனக்கு மகன்க
ளாகவும் மகள்களாகவும் இருப்பீர்கள்’[n] என்று சர்வவல்லமையுள்ளவரான
யெகோவா* சொல்கிறார்.”

7 அன்புக் கண்மணிகளே, இப்படிப்பட்ட வாக்குறுதிகள் நமக்குக்
கொடுக்கப்பட்டிருப்பதால்,[o] உடலிலிருந்தும் உள்ளத்திலிருந்தும்
எல்லா கறைகளையும் நீக்கி நம்மைச் சுத்தப்படுத்திக்கொள்வோமாக.[p] கட
வுளுக்குப் பயந்து நடந்து பரிசுத்தத்தன்மையை முழுமையாய்க் காட்டு
வோமாக.

2 உங்களுடைய இதயத்தில் எங்களுக்கு இடம் கொடுங்கள்.[q] நாங்கள்
யாருக்கும் அநியாயம் செய்யவில்லை, யாரையும் கெடுக்கவில்லை, யாரி
டமும் ஆதாயம் தேடவில்லை.[r] **3** உங்களைக் கண்டனம் செய்வதற்காக
நான் இப்படிச் சொல்லவில்லை. நான் ஏற்கெனவே சொன்னபடி, வாழ்
வானாலும் சாவானாலும், எல்லா சந்தர்ப்பங்களிலும் நீங்கள் எங்களுடைய
நெஞ்சில் நிறைந்திருக்கிறீர்கள். **4** உங்களிடம் எந்தத் தயக்கமும் இல்
லாமல் என்னால் பேச முடிகிறது. உங்களை நினைத்து மிகவும் பெருமைப்
படுகிறேன். எனக்கு நிறைவான ஆறுதல் கிடைத்திருக்கிறது, எல்லா துன்
பங்களின் மத்தியிலும் என் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது.[s]

5 நாங்கள் மக்கெதோனியா[t] வந்துசேர்ந்த பின்பும்கூட, எங்களுடைய
கஷ்டங்கள் தீரவில்லை. எல்லா விதத்திலும் தொடர்ந்து துன்பப்பட்டோம்
—வெளியே போராட்டங்களும் உள்ளே பயங்களும் இருந்தன. **6** ஆனா
லும், சோர்ந்துபோனவர்களை ஆறுதல்படுத்துகிற கடவுள்,[u] தீத்துவின் வர
வால் எங்களை ஆறுதல்படுத்தினார். **7** தீத்துவின் வரவால் மட்டுமல்ல,
உங்களால் தீத்துவுக்குக் கிடைத்த ஆறுதலாலும் எங்களை ஆறுதல்படுத்தி
னார். நீங்கள் என்னைப் பார்க்க ஏங்குவதையும், மிகுந்த துக்கத்தில் இருப்ப
தையும், என்மேல் ஆழ்ந்த அக்கறையோடு இருப்பதையும் பற்றி தீத்து

அதி. 6
a 1பே 2:17; 1யோ 4:20
b யாத் 23:32, 33; உபா 7:3, 4; 1ரா 11:4; 1கொ 7:39
c யாக் 4:4
d எபே 5:7, 8
e மத் 4:10; வெளி 12:7, 8
f 1கொ 10:21
g 1கொ 10:14
h 1கொ 3:16
i யாத் 29:45
j லேவி 26:11, 12; எசே 37:27
k ஏசா 52:11; எரே 51:45; வெளி 18:4
l எசே 20:41; 2கொ 7:1
m 2சா 7:14
n ஏசா 43:6; ஓசி 1:10; யோவா 1:12

அதி. 7
o 2கொ 6:16
p ரோ 12:1; 1தீ 1:5; 1தீ 3:9; 1யோ 3:3
q ரோ 12:10; 2கொ 6:12, 13
r அப் 20:33, 34; 2கொ 12:17
s பிலி 2:17; பிலே 7
t அப் 20:1
u 2கொ 1:3, 4

6:14 *வே.வா., “இயேசுவின் சீஷர்களாக.” #நே.மொ., “பொருத்தமற்ற நுகத்தடியில் பிணைக்கப்படாதீர்கள்.” **6:15** *நே.மொ., “பேலியாளுக்கும்.” எபிரெயுவில் இதன் அர்த்தம், “ஒன்றுக்கும் உதவாதவன்.” இது சாத்தானைக் குறிக்கிறது. **6:17, 18** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

எங்களிடம் சொன்னார். அதைக் கேட்டு நான் இன்னும் அதிகமாகச் சந்தோ
ஷப்பட்டேன்.

8 அதனால், என் கடிதம் உங்களை வருத்தப்பட வைத்திருந்தாலும்[a]
அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன். அந்தக் கடிதம் உங்களைக்
கொஞ்சக் காலத்துக்கு வருத்தப்படுத்தியது உண்மைதான். முதலில்
அதை நினைத்து நான் வருத்தப்பட்டாலும், **9** இப்போது சந்தோஷப்படு
கிறேன். நீங்கள் வருத்தப்பட்டதற்காக அல்ல, உங்கள் மனவருத்தம் உங்
களை மனம் திருந்த வைத்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். கடவுளுக்கு
ஏற்ற வருத்தத்தைக் காட்டினீர்கள். அதனால், உங்களுக்கு எந்தக் கெடு
தலும் எங்களால் ஏற்படவில்லை. **10** கடவுளுக்கு ஏற்ற வருத்தம் மனம்
திருந்த வைக்கிறது, இது மீட்புக்கு வழிநடத்துகிறது. இதற்காக யாரும் வருத்
தப்பட வேண்டியதில்லை;[b] உலக மக்களைப் போல் வருத்தப்படுவதோ மர
ணத்தை உண்டாக்குகிறது. **11** கடவுளுக்கு ஏற்ற வருத்தம் உங்களுக்குள்
எவ்வளவு ஊக்கத்தை ஏற்படுத்தியது பாருங்கள்! களங்கத்தைப் போக்கிக்
கொள்ள எவ்வளவு ஆவலையும், குற்றத்தின்மேல் எவ்வளவு கொதிப்பை
யும், கடவுள்மேல் எவ்வளவு பயத்தையும், பிரச்சினைகளைச் சரிசெய்ய எவ்
வளவு ஏக்கத்தையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், தவறைச்
சரிப்படுத்த எவ்வளவு ஆர்வத்தையும் ஏற்படுத்தியது![c] இந்த விஷயத்தில்
உங்களைத் தூய்மையானவர்கள்* என்று எல்லா விதத்திலும் காட்டினீர்கள்.
12 அநியாயம் செய்தவனுக்காகவோ அநியாயத்துக்கு ஆளானவனுக்கா
கவோ நான் உங்களுக்குக் கடிதம் எழுதவில்லை.[d] நாங்கள் சொல்வதைக்
கேட்க ஊக்கமாக முயற்சி எடுக்கிறீர்கள் என்பதைக் கடவுளுக்கு முன்னால்
நீங்கள் காட்ட வேண்டும் என்பதற்காகவே எழுதினேன். **13** அதனால்
தான் எங்களுக்கு ஆறுதல் கிடைத்தது.

ஆறுதல் கிடைத்தது மட்டுமல்ல, தீத்து அடைந்த சந்தோஷத்தைப்
பார்த்து அதிக மகிழ்ச்சியும் கிடைத்தது. ஏனென்றால், உங்கள் எல்லாரா
லும் அவருடைய உள்ளம் புத்துணர்ச்சி அடைந்திருக்கிறது. **14** உங்க
ளைப் பற்றி தீத்துவிடம் பெருமையாய்ப் பேசியதற்காக நான் வெட்கப்பட
வில்லை. நாங்கள் உங்களிடம் சொன்னதெல்லாம் எப்படி உண்மையோ
அப்படியே தீத்துவிடம் உங்களைப் பற்றிப் பெருமையாய்ப் பேசியதும்
உண்மை என்பதை நிரூபித்துவிட்டீர்கள். **15** நீங்கள் எல்லாரும் கீழ்ப்ப
டிந்து நடந்ததையும்[e] ஆழ்ந்த மரியாதையோடு தன்னை ஏற்றுக்கொண்
டதையும் அவர் நினைக்கும்போதெல்லாம், கனிவான பாசம் அவருக்குள்
பொங்குகிறது. **16** உங்கள்மேல் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது,*
அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன்.

8 சகோதரர்களே, மக்கெதோனியாவில்[f] இருக்கிற சபைகள்மேல் கடவுள்
காட்டியிருக்கிற அளவற்ற கருணையைப் பற்றி நீங்கள் தெரிந்து
கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். **2** பயங்கரமான சோதனை
யில் அவர்கள் கஷ்டப்பட்டபோதிலும் மிகவும் சந்தோஷமாக இருந்தார்கள்.
கொடிய வறுமையில் வாடியபோதிலும் தாராள குணத்தைக் காட்டுவதில்
செல்வந்தர்களாக இருந்தார்கள். **3** தங்களால் முடிந்த அளவுக்குக் கொடுத்
தார்கள்,[g] ஏன், அதைவிட அதிகமாகவே கொடுத்தார்கள்.[h] அதற்கு நான்

7:11 *வே.வா., "களங்கம் இல்லாதவர்கள்." **7:16** *அல்லது, "உங்களால் எனக்கு மிகுந்த தைரியம் கிடைத்திருக்கிறது."

அதி. 7
a 2கொ 2:4
b சங் 32:5; 1யோ 1:9
c மத் 3:8
d 1கொ 5:5
e 2கொ 2:9; எபி 13:17

அதி. 8
f ரோ 15:26
g அப் 11:29; 2கொ 9:7
h மாற் 12:43, 44

அதி. 8
a ரோ 15:25, 26
1கொ 16:1
2கொ 9:1, 2
b 2கொ 12:18
c 1தீ 6:18
d மத் 8:20
பிலி 2:7
e 1கொ 7:25
f உபா 16:10, 17
நீதி 3:27, 28
g யாத் 16:18
h 2கொ 12:18

சாட்சி. **4** பரிசுத்தவான்களுக்காக நன்கொடை கொடுத்து, நிவாரண ஊழி
யத்தில் பங்கு பெறும்[a] பாக்கியத்தைத் தர வேண்டும் என்று அவர்களா
கவே வந்து திரும்பத் திரும்ப எங்களைக் கெஞ்சிக் கேட்டார்கள். **5** நாங்
கள் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே அவர்கள் செய்தார்கள். முதலாவதாக,
கடவுளுடைய விருப்பத்தின்படி* நம் எஜமானுக்கும் எங்களுக்கும் தங்க
ளையே அர்ப்பணித்தார்கள். **6** அதனால், இந்த நிவாரணப் பணியை உங்
களிடம் ஆரம்பித்த தீத்துவே[b] அதை முடித்துக் கொடுக்க வேண்டும் என்று
அவரிடம் கேட்டுக்கொண்டோம். **7** அதனால், விசுவாசத்தில், பேச்சுத்திற
மையில், அறிவில், ஆர்வத்தில், எங்களிடமிருந்து பெற்றிருக்கிற அன்பில்
என எல்லாவற்றிலும் நீங்கள் செல்வந்தர்களாக இருப்பது போலவே தாராள
குணத்திலும் செல்வந்தர்களாக இருங்கள்.[c]

8 இதைக் கட்டளையாக நான் உங்களுக்குச் சொல்லவில்லை. மற்றவர்
கள் எந்தளவு ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரியப்
படுத்துவதற்காகவும், உங்களுடைய அன்பு உண்மையானதா என்பதைச்
சோதிப்பதற்காகவும் இதைச் சொல்கிறேன். **9** நம் எஜமானாகிய இயேசு
கிறிஸ்துவின் அளவற்ற கருணையைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரி
யும். அவர் செல்வந்தராக இருந்தும் உங்களுக்காக ஏழையானார்;[d] தன்னு
டைய வறுமையால் உங்களைச் செல்வந்தர்களாக்குவதற்காக அப்படி
ஏழையானார்.

10 நிவாரணப் பணியைப் பற்றி என் கருத்தைச் சொல்கிறேன்:[e] இது உங்
களுக்குப் பிரயோஜனமாக இருக்கும். இந்தப் பணியை ஒரு வருஷத்துக்கு
முன்பே நீங்கள் ஆரம்பித்தீர்கள், அதுவும் ஆர்வமாகச் செய்ய ஆரம்பித்
தீர்கள். **11** அப்படி ஆரம்பித்ததை இப்போது செய்து முடித்துவிடுங்கள்.
ஆர்வத்தோடு அதைச் செய்ய ஆரம்பித்தது போலவே, உங்களிடம் இருப்
பதைக் கொடுத்து அதே ஆர்வத்தோடு செய்து முடித்துவிடுங்கள்.
12 கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் ஒருவனுக்கு இருந்தால், அவன்
தன்னிடம் இருப்பதற்கு ஏற்றபடி எதைக் கொடுத்தாலும் அதைக் கடவுள்
சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்.[f] இல்லாததைக் கொடுக்க வேண்டும்
என்று எதிர்பார்ப்பதில்லை. **13** மற்றவர்களுடைய கஷ்டத்தைப் போக்க
நீங்கள் கஷ்டப்பட வேண்டும் என்று நான் விரும்பவில்லை. **14** உங்கள்
மத்தியில் சமநிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே சொல்கிறேன். அப்
படிச் சமநிலை ஏற்படும்போது, உங்களிடம் மிகுதியாக இருப்பது அவர்க
ளுடைய பற்றாக்குறையை ஈடுகட்டும்; அவர்களிடம் மிகுதியாக இருப்பது
உங்களுடைய பற்றாக்குறையை ஈடுகட்டும். **15** “அதிகமாக இருப்பவ
னுக்கு மிக அதிகமாகவும் இல்லை, குறைவாக இருப்பவனுக்கு மிகக் குறை
வாகவும் இல்லை” என்று எழுதப்பட்டிருக்கிறது.[g]

16 உங்கள்மேல் எங்களுக்கு இருக்கும் அதே ஆழ்ந்த அக்கறையை
தீத்துவின்[h] இதயத்திலும் தூண்டிய கடவுளுக்கு நன்றி. **17** ஏனென்
றால், நாங்கள் கேட்டுக்கொண்டதற்காக மட்டுமல்ல, அவராகவே மிகுந்த
ஆர்வத்தோடு உங்களைப் பார்க்க வருகிறார். **18** நல்ல செய்தியை அறி
விப்பதில் எல்லா சபைகளிலும் புகழ் பெற்றிருக்கிற சகோதரரையும் தீத்து
வோடு அனுப்புகிறோம். **19** இந்த நிவாரணத் தொகையைப் பகிர்ந்து
கொடுப்பதற்காக நாங்கள் அதைக் கொண்டுபோகும்போது எங்களுக்கு

8:5 * வே.வா., “சித்தத்தின்படி.”

வழித்துணையாய் இருப்பதற்காகச் சபைகளால் இந்தச் சகோதரர் நியமிக்
கப்பட்டிருக்கிறார். இந்த நிவாரணத் தொகையை நம் எஜமானுடைய மகி
மைக்காகவும் எங்களுடைய உதவும் மனப்பான்மைக்குச் சாட்சியாகவும்
எடுத்துக்கொண்டு போகிறோம். **20** இப்படி, தாராளமாகக் கொடுக்கப்பட்
டிருக்கிற இந்த நன்கொடையைப் பகிர்ந்து கொடுக்கிற விஷயத்தில் யாரும்
எங்கள்மேல் குறை சொல்லிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கி
றோம்.[a] **21** 'எல்லாவற்றையும் யெகோவாவுடைய* பார்வையில் மட்டு
மல்ல, மனிதர்களுடைய பார்வையிலும் நேர்மையாகச் செய்ய முயற்சி
எடுக்கிறோம்.'[b]

22 இவர்களோடு இன்னொரு சகோதரரையும் அனுப்பி வைக்கிறோம்.
அவருடைய ஆர்வத்தைப் பல விஷயங்களில் பல தடவை நாங்கள்
சோதித்து அறிந்திருக்கிறோம். அவர் உங்கள்மேல் முழு நம்பிக்கை வைத்
திருப்பதால் இன்னும் அதிக ஆர்வமாக இருக்கிறார். **23** ஒருவேளை தீத்
துவைப் பற்றி யாராவது கேள்வி கேட்டால், அவர் என் நண்பர் என்றும்,
உங்கள் நலனுக்காக உழைக்கிற என் சக வேலையாள் என்றும் தெரிந்து
கொள்ளட்டும். நாங்கள் அனுப்புகிற மற்ற சகோதரர்களைப் பற்றிக் கேள்வி
கேட்டால், அந்தச் சகோதரர்கள் சபைகளுக்கு அப்போஸ்தலர்கள் என்றும்,
கிறிஸ்துவுக்கு மகிமை சேர்ப்பவர்கள் என்றும் தெரிந்துகொள்ளட்டும்.
24 அதனால், உங்களுடைய அன்பு உண்மையானது என்பதையும், நாங்
கள் உங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசியது பொய்யல்ல என்பதையும்
சபைகளுக்கு நிரூபியுங்கள்.[c]

9 பரிசுத்தவான்களுக்குச் செய்ய வேண்டிய சேவையைப்[d] பற்றி நான்
உங்களுக்கு எழுத வேண்டியதில்லை. **2** ஏனென்றால், நீங்கள் எவ்வ
ளவு ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அகாயாவைச்
சேர்ந்த சகோதரர்களாகிய நீங்கள் ஒரு வருஷமாகவே உதவி செய்யத்
தயாராக இருக்கிறீர்கள் என்று மக்கெதோனியர்களிடம் உங்களைப் பற்றிப்
பெருமையாகப் பேசி வருகிறேன். உங்களுடைய பக்திவைராக்கியம் அவர்
களில் பெரும்பாலோரைத் தூண்டியிருக்கிறது. **3** ஆனால், இந்த விஷயத்
தில் உங்களைப் பற்றி நாங்கள் பெருமையாகப் பேசுவது பொய்யாகிவிடக்
கூடாது என்பதற்காகவும், உங்களைப் பற்றி நான் சொல்லி வந்தபடியே நீங்
கள் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தச் சகோதரர்களை
உங்களிடம் அனுப்புகிறேன். **4** இல்லையென்றால், மக்கெதோனியாவில்
இருக்கிற சகோதரர்கள் என்னோடு வந்து நீங்கள் தயாராக இல்லாததைப்
பார்த்தால், உங்கள்மீது இவ்வளவு நம்பிக்கையோடு இருந்ததற்காக நாங்
கள் வெட்கப்பட வேண்டியிருக்கும், நீங்களும் வெட்கப்பட வேண்டியிருக்
கும். **5** அதனால், இந்தச் சகோதரர்கள் எனக்கு முன்பே உங்களிடம் வரும்
படியும், தாராளமாய்த் தருவதாக நீங்கள் வாக்குக் கொடுத்திருந்த நிவாரணத்
தொகையைத் திரட்டி வைக்கும்படியும் அவர்களை உற்சாகப்படுத்த வேண்
டும் என்று நினைத்தேன். அப்போதுதான், அந்தத் தொகை கட்டாயப்படுத்தி
வாங்கியதாக இல்லாமல் தாராளமாய்க் கொடுத்ததாக இருக்கும்.

6 இதைப் பற்றி நான் சொல்வது என்னவென்றால்: கொஞ்சமாக
விதைப்பவர் கொஞ்சமாக அறுவடை செய்வார், ஏராளமாக விதைப்பவர்
ஏராளமாக அறுவடை செய்வார்.[e] **7** ஒவ்வொருவரும் வேண்டாவெறுப்

8:21 * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 8
a 1கொ 16:1
b நீதி 3:4, 1பே 2:12
c 1பே 1:22, 1பே 2:17

அதி. 9
d ரோ 15:26, 1கொ 16:1, 2கொ 9:12
e நீதி 11:24, நீதி 19:17, நீதி 22:9, பிர 11:1, லூ 6:38

பாகவும்* அல்ல, கட்டாயமாகவும் அல்ல,[a] தன் இதயத்தில் தீர்மானித்தப
டியே கொடுக்கட்டும். ஏனென்றால், சந்தோஷமாகக் கொடுப்பவரைத்தான்
கடவுள் நேசிக்கிறார்.[b]

8 கடவுள் தன்னுடைய அளவற்ற கருணையை உங்கள்மேல் அதிகமதி
கமாகப் பொழிவதற்கு வல்லவராகவும் இருக்கிறார். அதனால், தேவை
யானதெல்லாம் உங்களுக்கு எப்போதும் நிறைவாக இருக்கும். எல்லா வித
மான நல்ல செயல்களையும் செய்வதற்குத் தேவையானவை உங்களிடம்
ஏராளமாகவே இருக்கும்.[c] **9** (இதைப் பற்றித்தான், “வாரி வழங்கியிருக்கி
றான்,* ஏழைகளுக்குக் கொடுத்திருக்கிறான்; அவனுடைய நீதி என்றென்
றும் நிலைத்திருக்கும்” என்று எழுதப்பட்டிருக்கிறது.[d] **10** விதைக்கிறவ
னுக்கு விதையையும் சாப்பிடுகிறவனுக்கு உணவையும் ஏராளமாகக்
கொடுப்பவர் உங்களுக்கும்கூட விதைப்பதற்கு விதையைக் கொடுத்து
அதைப் பெருகச் செய்வார். உங்கள் நீதியான செயல்களின் பலனை அதிக
ரிக்கவும் செய்வார்.) **11** நீங்கள் எல்லா விதத்திலும் தாராளமாய்க் கொடுப்
பதற்காக அவர் உங்களை எல்லாவற்றிலும் வளமாக்கி வருகிறார். எங்கள்
மூலம் நீங்கள் காட்டிய இந்தத் தாராள குணத்தின் காரணமாக நிறைய பேர்
கடவுளுக்கு நன்றி சொல்கிறார்கள். **12** இப்படி, இந்தப் பொதுப்பணி பரி
சுத்தவான்களுடைய தேவைகளை நன்றாகப் பூர்த்தி செய்வது மட்டுமல்லா
மல்,[e] கடவுளுக்குத் தாராளமாக நன்றி சொல்ல நிறைய பேரைத் தூண்டவும்
செய்கிறது. **13** உங்களுடைய தாராள குணத்துக்கு அத்தாட்சியாக இருக்
கிற இந்த நிவாரண ஊழியத்தைப் பார்த்து கடவுளை அவர்கள் மகிமைப்
படுத்துகிறார்கள். நீங்கள் அறிவிக்கிற கிறிஸ்துவின் நல்ல செய்திக்கு நீங்
கள் அடிபணிந்து நடப்பதாலும், அவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும்
தாராளமாக நன்கொடை கொடுப்பதாலும் கடவுளை மகிமைப்படுத்துகிறார்
கள்.[f] **14** அதோடு, ஈடிணையில்லாத மகா கருணையைக் கடவுள் உங்கள்
மேல் பொழிந்திருப்பதால், அவர்கள் உங்களுக்காக மன்றாடுகிறார்கள், உங்
கள்மேல் பாசம் வைத்திருக்கிறார்கள்.

15 வார்த்தைகளால் விவரிக்க முடியாத இலவச அன்பளிப்பைக்
கொடுக்கிற கடவுளுக்கு நன்றி.

10 உங்களோடு இருக்கும்போது அற்பமானவனாகவும்[g] உங்களோடு
இல்லாதபோது கண்டிப்பானவனாகவும்[h] தெரிகிற பவுலாகிய நான்
கிறிஸ்துவுக்கே உரிய சாந்தத்தோடும் கருணையோடும்[i] உங்களை ஒன்று
கேட்டுக்கொள்கிறேன். **2** நாங்கள் உலகச் சிந்தையோடு நடப்பதாக
நினைக்கிற சிலருக்கு எதிராக நான் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று நினைத்தாலும், நான் உங்களைப் பார்க்க வரும்போது அப்படி நட
வடிக்கை எடுக்கத் தேவையில்லாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். **3** நாங்
கள் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், உலக மக்களைப் போல் போர்
செய்வதில்லை. **4** ஏனென்றால், எங்களுடைய போராயுதங்கள் இந்த
உலக மக்களுடைய போராயுதங்களைப் போன்றவை அல்ல.[j] அவற்றைக்
கடவுள் எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்,[k] ஆழமாக வேரூன்றியவற்றைத்
தகர்த்தெறிகிற சக்தி அவற்றுக்கு இருக்கிறது. **5** தவறான யோசனைகளை
யும், கடவுளைப் பற்றிய அறிவுக்கு எதிராகத் தலைதூக்குகிற ஆணவமான
எல்லாவற்றையும் நாங்கள் தகர்த்தெறிந்து வருகிறோம்.[l] அதோடு, எல்லா

9:7 * வே.வா., “தயக்கத்தோடு.” **9:9** * வே.வா., “தாராளமாகக் கொடுத்திருக்கிறான்.”

அதி. 9
a உபா 15:7, 10
b யாத் 22:29, நீதி 11:25, அப் 20:35, எபி 13:16
c நீதி 28:27, மல் 3:10, பிலி 4:18, 19
d சங் 112:9
e ரோ 15:26, 27, 2கொ 8:14
f மத் 5:16, எபி 13:16, யாக் 1:27, 1யோ 3:17

அதி. 10
g 1கொ 2:3
h 2கொ 10:10
i மத் 11:29, 30
j மத் 26:52, 1தீ 1:18, 19
k 2கொ 6:4, 7
l 1கொ 1:19, 20, 1கொ 3:19, 20, 2தீ 2:24, 25

எண்ணங்களையும் கட்டுப்படுத்தி கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் செய்துவரு
கிறோம். **6** நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்ப்படிதலைக் காட்டிய
பின்பு யாராவது கீழ்ப்படியாமல் இருந்தால் அதற்குத் தண்டனை கொடுக்
கவும் தயாராக இருக்கிறோம்.[a]

7 நீங்கள் எல்லாவற்றையும் வெளித்தோற்றத்தை வைத்து எடை போடு
கிறீர்கள். ஒருவன் தன்னைக் கிறிஸ்துவின் சீஷன் என்று உறுதியாக நம்பி
னால், அவனைப் போல் நாங்களும் கிறிஸ்துவின் சீஷர்கள் என்பதை
அவன் ஞாபகப்படுத்திக்கொள்ளட்டும். **8** நம் எஜமான் எங்களுக்குத் தந்
திருக்கிற அதிகாரத்தைப் பற்றி நான் சற்று அதிகமாகப் பெருமை பேசினா
லும் அதற்காக நான் வெட்கப்பட மாட்டேன். ஏனென்றால், உங்களை
நொறுக்கிப்போடுவதற்கு அல்ல, உங்களைப் பலப்படுத்துவதற்காகத்தான்
அவர் இந்த அதிகாரத்தை எங்களுக்குத் தந்திருக்கிறார்.[b] **9** கடிதங்கள்
மூலம் நான் உங்களைப் பயமுறுத்துவதாக நீங்கள் நினைக்கக் கூடாது என்
பதற்காகவே இதைச் சொல்கிறேன். **10** ஏனென்றால், “அவனுடைய கடிதங்
களில் ஆழமான கருத்துகள் இருக்கின்றன, அவை வலிமையானவை
யாக இருக்கின்றன. ஆனால் நேரில் பார்க்கும்போது அவனுடைய தோற்றம்
கம்பீரமாக இல்லை, பேச்சும் அர்த்தமுள்ளதாக இல்லை” என்று சிலர்
சொல்கிறார்கள். **11** அப்படிச் சொல்கிறவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்
ளட்டும்: நாங்கள் தூரத்திலிருந்து கடிதங்களை எழுதும்போது என்ன சொல்
கிறோமோ, அதைத்தான் உங்களிடம் வந்திருக்கும்போது செயலில் காட்டு
வோம்.[c] **12** ஆனாலும், தங்களையே சிபாரிசு செய்துகொள்கிற சிலரோடு
எங்களைச் சரிசமமாக்கிக்கொள்வதற்கோ அப்படிப்பட்ட சிலரோடு எங்
களை ஒப்பிடுவதற்கோ நாங்கள் துணிய மாட்டோம்.[d] அவர்கள் தங்களை
வைத்தே தங்களை அளவிடுகிறார்கள், தங்களை வைத்தே தங்களை ஒப்பி
டுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அறிவில்லாதவர்கள்.[e]

13 எங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை மீறி நாங்கள் பெருமை
பேச மாட்டோம்; கடவுள் எங்களுக்கு அளந்துகொடுத்த பகுதியின் எல்
லைக்குள்ளாகவே பெருமை பேசுவோம்; அந்த எல்லைக்குள்தான் நீங்க
ளும் இருக்கிறீர்கள்.[f] **14** நீங்கள் அந்த எல்லைக்குள் இல்லாதிருந்தால்
நாங்கள் எல்லை மீறிப்போகிறவர்களாக இருந்திருப்போம். உண்மையில்,
கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தியைச் சொல்வதற்கு நாங்கள்தான் உங்
களிடம் முதன்முதலில் வந்தோம்.[g] **15** மற்றவர்கள் செய்த வேலையை
நாங்கள் செய்ததாகச் சொல்லி, எங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லை
களை மீறி நாங்கள் பெருமை பேசவில்லை. உங்கள் விசுவாசம் அதிக
ரிக்க அதிகரிக்க எங்களுடைய ஊழியமும் இந்தப் பகுதியில் அதிகரிக்கும்.
16 உங்களுடைய பகுதிக்கு அப்பால் இருக்கிற இடங்களில் நாங்கள் நல்ல
செய்தியை அறிவிக்கும்போது எங்களுடைய ஊழியம் இன்னும் அதிகரிக்
கும். மற்றவர்களுடைய பகுதியில் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிற ஊழி
யத்தைப் பற்றி நாங்கள் பெருமை பேச மாட்டோம். **17** “ஆனால்,
பெருமை பேசுகிறவன் யெகோவாவை* பற்றியே பெருமை பேசட்டும்.”[h]
18 தன்னைத் தானே சிபாரிசு செய்கிறவன் யெகோவாவினால்* ஏற்றுக்
கொள்ளப்பட மாட்டான்,[i] அவரால் சிபாரிசு செய்யப்படுகிறவன்தான் ஏற்
றுக்கொள்ளப்படுவான்.[j]

10:17, 18 * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 10
a 1தீ 1:20
b எபி 13:17
c 2கொ 13:2
d 2கொ 5:12
e நீதி 26:12 கலா 6:3
f அப் 9:15 கலா 2:8
g 1கொ 3:10 1கொ 4:15
h எரே 9:24 1கொ 1:31
i லூ 18:10-14
j 1கொ 4:5 2தீ 2:15

11 ஓரளவு புத்தியில்லாமல் பேசுகிற என்னை நீங்கள் பொறுத்
துக்கொண்டால் நல்லது. சொல்லப்போனால், நீங்கள் என்னைப்
பொறுத்துக்கொண்டுதான் வருகிறீர்கள்! **2** கடவுளைப் போலவே எனக்
கும் உங்கள்மேல் உள்ளப்பூர்வமான அக்கறை இருக்கிறது. ஏனென்றால்,
கிறிஸ்து என்ற ஒரே மணமகனுக்கு நான் உங்களை நிச்சயம் செய்து
கொடுத்தேன். அதனால் உங்களைக் கற்புள்ள* கன்னிப்பெண்ணாக அவர்
முன்னால் நிறுத்த விரும்புகிறேன்.[a] **3** ஆனாலும், பாம்பின் தந்திரத்தால்
ஏவாள் மோசம்போக்கப்பட்டதைப் போல[b] உங்கள் மனமும் ஏதோவொரு
விதத்தில் கெடுக்கப்பட்டு கிறிஸ்துவுக்குக் காட்ட வேண்டிய உண்மைத்தன்
மையிலிருந்தும் தூய்மையிலிருந்தும் விலக்கப்பட்டுவிடுமோ என்று பயப்
படுகிறேன்.[c] **4** ஒருவன் உங்களிடம் வந்து நாங்கள் பிரசங்கித்த இயேசு
வைத் தவிர வேறொரு இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தால், அல்லது
நீங்கள் பெற்றுக்கொண்ட சிந்தையை* தவிர வேறொரு சிந்தையைப்
பெற வைத்தால், அல்லது நீங்கள் ஏற்றுக்கொண்ட நல்ல செய்தியைத் தவிர
வேறொரு நல்ல செய்தியைச் சொன்னால்,[d] அவனை எளிதில் பொறுத்
துக்கொள்கிறீர்கள். **5** உங்கள் “அருமை” அப்போஸ்தலர்களைவிட நான்
எந்த விதத்திலும் தாழ்ந்தவன் அல்ல என்று நினைக்கிறேன்.[e] **6** எனக்குப்
பேச்சுத்திறன் இல்லாமல் இருக்கலாம்,[f] ஆனால் நிச்சயமாகவே அறிவுத்
திறன் இல்லாமல் இல்லை. இதை எல்லா விதத்திலும் எல்லா காரியங்களி
லும் உங்களுக்குத் தெளிவுபடுத்தினோம்.

7 நீங்கள் உயர்த்தப்படுவதற்காக என்னையே நான் தாழ்த்தி, உங்க
ளுக்கு எந்தச் செலவும் வைக்காமல் கடவுளுடைய நல்ல செய்தியைச் சந்
தோஷமாக அறிவித்தேன்.[g] இதுதான் நான் செய்த பாவமா? **8** உங்களுக்
குச் சேவை செய்வதற்காக மற்ற சபைகளிடமிருந்து தேவையானவற்றை*
பெற்றேன்;[h] இப்படி உங்களுக்காக அவர்களைக் கொள்ளையிட்டதாகவே
சொல்வேன். **9** ஆனாலும், நான் உங்களோடிருந்த சமயத்தில் எனக்குப்
பற்றாக்குறை ஏற்பட்டபோது, ஒருவருக்கும் நான் பாரமாக இருக்க
வில்லை. மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர்கள் எனக்குத் தேவை
யானவற்றை வாரி வழங்கினார்கள்.[i] எந்த விதத்திலும் நான் உங்களுக்குப்
பாரமாக இல்லாதபடி பார்த்துக்கொண்டேன், இனியும் பார்த்துக்கொள்
வேன்.[j] **10** கிறிஸ்துவின் சத்தியம் எனக்குள் இருக்கும்வரை நான் இப்ப
டிப் பெருமை பேசுவதை அகாயாவில் இருக்கிற யாரும் தடுக்க முடியாது.[k]
11 நான் ஏன் உங்களுக்குப் பாரமாக இல்லாதபடி பார்த்துக்கொண்டேன்?
உங்கள்மேல் அன்பு இல்லாததாலா? உங்கள்மேல் எனக்கு அன்பு இருக்
கிறது என்று கடவுளுக்குத் தெரியும்.

12 தாங்களும் அப்போஸ்தலர்கள் என்று பெருமையடித்துக்கொள்கிற
சிலர், தங்கள் பணியை எங்களுடைய பணிபோல் காட்டிக்கொள்ள
வழிதேடுகிறார்கள். அதற்கு இடம்கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக
இப்போது செய்துவருவதையே இனிமேலும் செய்துவருவேன்.[l] **13** அப்
படிப்பட்ட ஆட்கள் போலி அப்போஸ்தலர்கள், ஏமாற்றுகிற வேலை
யாட்கள், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களைப் போல் வேஷம் போடுகி
றவர்கள்.[m] **14** இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால்,

அதி. 11
a மாற் 2:19, எபே 5:23, வெளி 21:2, 9
b ஆதி 3:4, 5, யோவா 8:44
c 1தீ 6:3-5, எபி 13:9, 2பே 3:17
d கலா 1:7, 8
e 2கொ 11:23
f 2கொ 10:10
g அப் 18:3, 1கொ 9:18
h பிலி 4:10
i பிலி 4:15, 16
j 1தெ 2:9
k 1கொ 9:14, 15
l 1கொ 9:11, 12
m ரோ 16:17, 18, 2பே 2:1

11:2 *வே.வா., “தூய்மையான.” **11:4** *வே.வா., “கடவுளுடைய சக்தியை.” **11:8** *வே.வா., “ஆதரவை.”

சாத்தானும்கூட ஒளியின் தூதனைப் போல் வேஷம் போடுகிறான்.[a]
15 அதனால், அவனுடைய ஊழியர்களும் நீதியின் ஊழியர்களைப் போல்
வேஷம் போடுவது பெரிய விஷயம் அல்ல. அவர்களுடைய முடிவு அவர்
களுடைய செயல்களுக்கு ஏற்றபடிதான் இருக்கும்.[b]

16 மறுபடியும் நான் சொல்கிறேன்: யாரும் என்னைப் புத்தியில்லா
தவன் என்று நினைக்க வேண்டாம்; அப்படியே நீங்கள் நினைத்தாலும், புத்
தியில்லாதவனைப் போலாவது என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது,
அவர்களைப் போலவே நானும் கொஞ்சம் பெருமை பேசிக்கொள்ள
லாம். **17** நம் எஜமானுடைய முன்மாதிரியைப் பின்பற்றி நான் இப்படிப்
பேசவில்லை, பெருமை பேசும் ஆட்களுக்கே உரிய அளவுக்குமீறிய தன்
னம்பிக்கையால்தான் புத்தியில்லாதவனைப் போல் பேசுகிறேன். **18** இந்த
உலகத்தில் இருக்கிற விஷயங்களைப் பற்றி நிறைய பேர் பெருமை பேசு
கிறார்கள், நானும் பெருமை பேசுவேன். **19** நீங்கள் “அதிபுத்திசாலிகளாக”
இருப்பதால் புத்தியில்லாதவர்களைச் சந்தோஷமாகப் பொறுத்துக்கொள்
கிறீர்கள். **20** சொல்லப்போனால், உங்களை அடிமைப்படுத்துகிற எவனை
யும், உங்களை விழுங்கப்பார்க்கிற எவனையும், உங்களுடைய சொத்துக
ளைப் பிடுங்கிக்கொள்கிற எவனையும், உங்களுக்கு மேலாகத் தன்னை
உயர்த்திக்கொள்கிற எவனையும், உங்கள் கன்னத்தில் அறைகிற எவனை
யும் நீங்கள் பொறுத்துக்கொள்கிறீர்கள்.

21 நாங்கள் எங்களுடைய அதிகாரத்தைச் சரிவரப் பயன்படுத்து
வதில்லை என்று சிலர் நினைக்கிறார்கள். இதைச் சொல்வதற்கே வெட்கக்
கேடாக இருக்கிறது.

மற்றவர்கள் துணிந்து பெருமை பேசுகிறார்கள் என்றால், நானும் துணிந்து
பெருமை பேசுவேன்—புத்தியில்லாதவன்போல் பேசுகிறேன். **22** அவர்
கள் எபிரெயர்களா? நானும் ஒரு எபிரெயன்.[c] அவர்கள் இஸ்ரவேலர்களா?
நானும் ஒரு இஸ்ரவேலன். அவர்கள் ஆபிரகாமின் சந்ததியில் வந்தவர்
களா? நானும் ஆபிரகாமின் சந்ததியில் வந்தவன்.[d] **23** அவர்கள் கிறிஸ்து
வின் ஊழியர்களா? பைத்தியக்காரனைப் போல் பதில் சொல்கிறேன், நான்
அவர்களைவிட சிறந்த ஊழியன். ஆம், அவர்களைவிட அதிகமாக உழைத்
தேன்,[e] பல தடவை சிறையில் அடைக்கப்பட்டேன்,[f] ஏராளமாக அடி
வாங்கினேன், எத்தனையோ தடவை செத்துப்பிழைத்தேன்.[g] **24** யூதர்களி
டம் ஐந்து தடவை 39* சாட்டையடிகளை வாங்கினேன்.[h] **25** மூன்று
தடவை தடிகளால் அடிக்கப்பட்டேன்,[i] ஒரு தடவை கல்லெறியப்பட்டேன்,[j]
மூன்று தடவை கப்பல் விபத்தில் மாட்டிக்கொண்டேன்,[k] ஒரு இரவும் பகலும்
நடுக்கடலில் தத்தளித்தேன். **26** அடிக்கடி பயணம் செய்தேன். ஆறுகளால்
வந்த ஆபத்துகளையும், திருடர்களால் வந்த ஆபத்துகளையும், என் சொந்த
இனத்தைச் சேர்ந்தவர்களால் வந்த ஆபத்துகளையும்,[l] மற்ற தேசத்து மக்க
ளால் வந்த ஆபத்துகளையும்,[m] நகரத்தில் வந்த ஆபத்துகளையும்,[n] வனாந்
தரத்தில் வந்த ஆபத்துகளையும், கடலில் வந்த ஆபத்துகளையும், போலிச்
சகோதரர்களால் வந்த ஆபத்துகளையும் எதிர்ப்பட்டேன். **27** அதோடு,
கடினமாக உழைத்தேன், தூக்கமில்லாமல் பல இரவுகளைக் கழித்தேன்,[o] பசி
யோடும் தாகத்தோடும் இருந்தேன்,[p] பல தடவை பட்டினி கிடந்தேன்,[q] குளி
ரில் நடுங்கினேன், உடையில்லாமல் இருந்தேன்.

11:24 *நே.மொ., “ஒன்று குறைய 40.”

அதி. 11
a கலா 1:8; 2தெ 2:9
b மத் 16:27; பிலி 3:18, 19; 2தீ 4:14
c அப் 22:3
d ரோ 11:1; பிலி 3:4, 5
e ரோ 11:13; 1கொ 15:10
f அப் 16:23, 24
g அப் 9:15, 16; 2கொ 6:4, 5; 1பே 2:20, 21
h உபா 25:3
i அப் 16:22
j அப் 14:19
k அப் 27:41
l அப் 20:3; அப் 23:10
m அப் 14:5, 6
n அப் 13:50
o அப் 20:31
p 1கொ 4:11
q 2கொ 6:4, 5

அதி. 11
a 2கொ 2:4
கொலோ 2:1

28 இவை தவிர, எல்லா சபைகளையும் பற்றிய கவலை[a] தினம் தினம்
என்னை வாட்டி வதைக்கிறது. **29** ஒருவன் பலவீனமடைந்தால், நான்
பலவீனமாக உணர்வதில்லையா? ஒருவனுடைய விசுவாசம் குலைக்கப்பட்
டால், எனக்குக் கோபம் பற்றியெரிவதில்லையா?

30 நான் பெருமை பேச வேண்டியிருந்தால், என் பலவீனத்தைக் காட்டு
கிற காரியங்களைப் பற்றித்தான் பெருமை பேசுவேன். **31** நான் பொய்
சொல்லவில்லை என்பது நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் தகப்பனா
கவும் கடவுளாகவும், என்றென்றும் புகழப்பட வேண்டியவராகவும் இருக்கி
றவருக்குத் தெரியும். **32** நான் தமஸ்கு நகரத்தில் இருந்தபோது, அரேத்தா
ராஜாவிடம் வேலை செய்த ஆளுநர் என்னைப் பிடிப்பதற்காக அந்த நக
ரத்துக்குக் காவல் போட்டிருந்தார். **33** ஆனால், நான் ஒரு கூடையில்
வைக்கப்பட்டு, நகரத்தின் மதிலில் இருந்த ஜன்னல் வழியாக இறக்கிவிடப்
பட்டேன்.[b] இப்படி, அவருடைய கையிலிருந்து தப்பித்தேன்.

b அப் 9:24, 25

அதி. 12
c அப் 2:17

12 நான் பெருமை பேச வேண்டும். அதில் எந்தப் பிரயோ
ஜனமும் இல்லை என்றாலும், நம் எஜமானிடமிருந்து வந்த அற்புத
தரிசனங்களையும்[c] செய்திகளையும்[d] பற்றி இப்போது சொல்கிறேன்.
2 கிறிஸ்துவோடு ஒன்றுபட்டிருக்கிற ஒரு மனிதனை எனக்குத் தெரியும்.
14 வருஷங்களுக்கு முன்பு மூன்றாம் பரலோகத்துக்கு அவன் எடுத்துக்
கொள்ளப்பட்டான். அவன் உடலோடு எடுத்துக்கொள்ளப்பட்டானா இல்
லையா என்று எனக்குத் தெரியாது, கடவுளுக்குத்தான் தெரியும். **3** ஆம்,
பூஞ்சோலைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்ட அந்த மனிதனை எனக்குத்
தெரியும். ஆனால், அவன் உடலோடு எடுத்துக்கொள்ளப்பட்டானா இல்
லையா என்று எனக்குத் தெரியாது, கடவுளுக்குத்தான் தெரியும். **4** எந்த
மனிதனும் உச்சரிக்கவோ பேசவோ கூடாத வார்த்தைகளை அந்தப் பூஞ்
சோலைக்குள் அவன் கேட்டான். **5** அந்த மனிதனைப் பற்றி நான் பெரு
மையாகப் பேசுவேன். என்னைப் பொறுத்தவரை, என் பலவீனங்களைத்
தவிர வேறு எதைப் பற்றியும் பெருமை பேச மாட்டேன். **6** அப்ப
டியே நான் பெருமை பேச விரும்பினாலும், புத்தியில்லாதவனாக இருக்க
மாட்டேன். ஏனென்றால், நான் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும்.
ஆனால், என்னிடம் பார்ப்பதையும் கேட்பதையும்விட உயர்வாக என்
னைப் பற்றி யாரும் நினைத்துவிடக் கூடாது என்பதற்காகப் பெருமை பேசு
வதைத் தவிர்க்கிறேன். **7** எனக்கு இப்படிப்பட்ட அதிசயமான விஷயங்
கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்காக யாரும் என்னை
அளவுக்குமீறி புகழக் கூடாது.

d அப் 22:17, 18

e கலா 4:13

நான் அளவுக்குமீறி பெருமைப்பட்டுக்கொள்ளாதபடி என் உடலில் ஒரு
முள் குத்திக்கொண்டிருக்கிறது.[e] அது என்னை அறைந்துகொண்டே*
இருக்க சாத்தான் அனுப்பிய தூதனைப் போல இருக்கிறது. **8** அதை
என்னிடமிருந்து எடுத்துவிடும்படி மூன்று தடவை நம் எஜமானிடம் கெஞ்
சிக் கேட்டேன். **9** அவரோ, “என் அளவற்ற கருணை உனக்குப் போதும்.
நீ பலவீனமாக இருக்கும்போது என்னுடைய பலம் உனக்கு முழுமையாகக்
கிடைக்கும்”[f] என்று சொன்னார். அதனால், கிறிஸ்துவின் வல்லமை எனக்கு
ஒரு கூடாரம்போல் இருக்க வேண்டும் என்பதற்காக நான் மிகுந்த சந்
தோஷத்தோடு என் பலவீனங்களைப் பற்றிப் பெருமை பேசுவேன்.

f ஏசா 40:29

12:7 * வே.வா., “அடித்துக்கொண்டே.”

10 எனக்கு ஏற்படுகிற பலவீனங்கள், அவமானங்கள், நெருக்கடிகள், துன்பு
றுத்தல்கள், கஷ்டங்கள் ஆகியவற்றை கிறிஸ்துவுக்காகச் சந்தோஷத்தோடு
ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால், நான் பலவீனமாக இருக்கும்போது பல
முள்ளவனாக இருக்கிறேன்.[a]

11 நான் புத்தியில்லாமல் பேசிவிட்டேன். நீங்கள்தான் என்னை அப்ப
டிப் பேச வைத்துவிட்டீர்கள். உண்மையில், நீங்கள் எனக்கு ஆதரவா
கப் பேசியிருக்க வேண்டும். உங்களுடைய பார்வையில் நான் அற்பமானவ
னாக இருந்தாலும், உங்கள் “அருமை” அப்போஸ்தலர்களைவிட நான் எந்த
விதத்திலும் தாழ்ந்தவன் அல்ல.[b] **12** சொல்லப்போனால், நான் உங்களி
டம் காட்டிய அதிகமான சகிப்புத்தன்மையும்,[c] நான் செய்த அடையாளங்க
ளும் அற்புதங்களும் வல்லமைமிக்க செயல்களும்[d] நான் ஒரு அப்போஸ்த
லன் என்பதற்கு அத்தாட்சிகளாக இருக்கின்றன. **13** மற்ற சபைகளைவிட
நீங்கள் எந்த விதத்தில் குறைந்துபோய்விட்டீர்கள்? உங்களுக்குப் பாரமாக
இல்லாததுதான்[e] நான் வைத்த ஒரே குறை. இந்த அநியாயத்துக்காக என்
னைத் தயவுசெய்து மன்னித்துவிடுங்கள்.

14 இதோ, மூன்றாவது தடவையாக நான் உங்களிடம் வருவதற்குத் தயா
ராயிருக்கிறேன். ஆனால், நான் உங்களுக்குப் பாரமாக இருக்க மாட்டேன்.
ஏனென்றால், உங்களுடைய சொத்துகள் எனக்கு வேண்டாம்,[f] நீங்கள்தான்
எனக்கு வேண்டும். பெற்றோருக்குப் பிள்ளைகள்[g] சேர்த்து வைக்க வேண்
டியதில்லை, பெற்றோர்தான் பிள்ளைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டும்.
15 அதனால், என்னிடம் இருப்பவற்றை உங்களுக்காகச் சந்தோஷமாய்ச்
செலவு செய்வேன், என்னையே முழுவதும் உங்களுக்காக அர்ப்பணிப்
பேன்.[h] நான் உங்கள்மேல் காட்டும் அன்பு இவ்வளவு அதிகமாக இருக்கும்
போது, நீங்கள் என்மேல் காட்டும் அன்பு குறைவாக இருக்கலாமா?
16 எப்படியிருந்தாலும், நான் உங்களுக்குப் பாரமாக இருக்கவில்லை.[i]
ஆனாலும், நான் “சூழ்ச்சிக்காரனாக” இருந்தேன் என்றும், “தந்திரமாக” உங்
களைப் பிடித்தேன் என்றும் சொல்கிறீர்கள். **17** நான் உங்களிடம் அனுப்
பியவர்களில் யார் மூலமாவது ஆதாயம் தேடினேனா? **18** உங்களை
வந்து சந்திக்கும்படி தீத்துவைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன், அவரோடு
ஒரு சகோதரரையும் அனுப்பி வைத்தேன். தீத்து உங்களிடம் எந்த விதத்
திலாவது ஆதாயம் தேடினாரா?[j] நாங்கள் ஒரே சிந்தையோடு இருக்கவில்
லையா? ஒரே விதமாக நடந்துகொள்ளவில்லையா?

19 நாங்கள் எங்களுக்காக வாதாடுகிறோம் என்றா இதுவரை நினைத்
துக்கொண்டிருந்தீர்கள்? கிறிஸ்துவின் சீஷர்களாகக் கடவுளுக்கு முன்
னால்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். அன்புக் கண்மணிகளே, உங்க
ளைப் பலப்படுத்துவதற்காகத்தான் எல்லாவற்றையும் செய்து வருகிறோம்.
20 ஆனால் நான் அங்கே வரும்போது, நான் விரும்புகிறபடி நீங்கள்
இல்லாமலும் நீங்கள் விரும்புகிறபடி நான் இல்லாமலும் இருக்க நேரிடுமோ
என்று பயப்படுகிறேன். உங்கள் மத்தியில் சண்டை சச்சரவு, பொறாமை,
கோபாவேசம், கருத்துவேறுபாடு, புண்படுத்தும் பேச்சு, கிசுகிசுப்பு,* தலைக்
கனம், கலகம் ஆகியவை இருக்குமோ என்று பயப்படுகிறேன். **21** நான்
மறுபடியும் அங்கே வரும்போது, என் கடவுள் உங்கள் முன்னால் என்னைத்

12:20 * வே.வா., “வீண் பேச்சு.”

அதி. 12
a பிலி 4:13
b 2கொ 11:23
c 2கொ 6:4, 5
d அப் 14:3; அப் 15:12; ரோ 15:18, 19
e 1கொ 9:11, 12; 2கொ 11:9
f அப் 20:33
g 1கொ 4:14
h 2கொ 1:6; கொலோ 1:24; 1தெ 2:8; எபி 13:17
i 2கொ 11:9
j 2கொ 8:6

தலைகுனிய வைத்துவிடுவாரோ என்று பயப்படுகிறேன். அதுமட்டுமல்ல,
முன்பு பாவம் செய்துவந்த நிறைய பேர் அசுத்தமான நடத்தை, பாலியல்
முறைகேடு,* வெட்கங்கெட்ட நடத்தை* ஆகியவற்றைவிட்டு மனம் திருந்
தாமல் இருப்பதைப் பார்த்து நான் துக்கப்பட வேண்டியிருக்குமோ என்றும்
பயப்படுகிறேன்.

13 நான் உங்களிடம் வருவதற்கு மூன்றாவது தடவையாக முயற்சி
எடுக்கிறேன். “எந்த விஷயத்தையும் இரண்டு அல்லது மூன்று
சாட்சிகளுடைய வாக்குமூலத்தை வைத்துதான் உறுதி செய்ய வேண்டும்.”[a]
2 நான் இப்போது தூரத்தில் இருந்தாலும், இரண்டாவது தடவை உங்க
ளிடம் வந்திருப்பதாக நினைத்துக்கொண்டு என் வார்த்தைகளைக் கேளுங்
கள். உங்களில் பாவம் செய்தவர்களையும் மற்ற எல்லாரையும் நான்
அப்போது எச்சரித்ததுபோல் இப்போதும் எச்சரிக்கிறேன்: அடுத்த
தடவை நான் வந்தால் தவறு செய்கிறவர்களைத் தண்டிக்காமல் விடமாட்
டேன். **3** ஏனென்றால், உங்கள் மத்தியில் பலவீனராக இல்லாமல், பலமுள்
ளவராக இருக்கிற கிறிஸ்துதான் என் மூலம் பேசுகிறார் என்பதற்கு நீங்கள்
அத்தாட்சி தேடுகிறீர்கள். **4** உண்மைதான், அவர் பலவீனராக மரக் கம்
பத்தில் அறைந்து கொல்லப்பட்டார். ஆனாலும், கடவுளுடைய வல்லமை
யால் உயிர்வாழ்ந்து வருகிறார்.[b] அவர் முன்பு பலவீனராக இருந்ததுபோல்
நாங்களும் பலவீனர்களாக இருக்கிறோம் என்பது உண்மைதான். ஆனா
லும், கடவுளுடைய வல்லமையால் அவரோடுகூட உயிர்வாழ்வோம்.[c]
அதே வல்லமை உங்களிடமும் செயல்படுகிறது.[d]

5 நீங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறீர்களா என்பதை எப்போதும்
சோதித்துப் பாருங்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைத்
தெரிந்துகொள்ள உங்களையே எப்போதும் ஆராய்ந்து பாருங்கள்.[e]
இயேசு கிறிஸ்து உங்களோடு ஒன்றுபட்டிருக்கிறார் என்பதை நீங்கள் உண
ரவில்லையா? நீங்கள் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக இருந்
தால் மட்டும்தான் உணர்வீர்கள். **6** நாங்கள் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்
பட்டவர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று உறுதியாக
நம்புகிறேன்.

7 நீங்கள் எந்தத் தவறும் செய்யாமலிருக்க வேண்டும் என்று கடவு
ளிடம் ஜெபம் செய்கிறோம். மற்ற ஜனங்கள் எங்களை ஏற்றுக்கொண்டி
ருக்கிறார்கள் என்று காட்டுவதற்காக நாங்கள் ஜெபம் செய்யவில்லை.
மற்றவர்கள் எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், நீங்கள் சரியான
தைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் ஜெபம் செய்கிறோம்.
8 சத்தியத்துக்கு விரோதமாக எங்களால் எதையும் செய்ய முடியாது, சத்தி
யத்துக்கு ஆதரவாக மட்டுமே எதையும் செய்ய முடியும். **9** நாங்கள் பலவீ
னர்களாக இருந்தாலும், நீங்கள் பலமுள்ளவர்களாக இருந்தால் எங்களுக்குச்
சந்தோஷம்தான். நீங்கள் உங்களைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்
பதற்காகத்தான் ஜெபம் செய்கிறோம். **10** இதையெல்லாம் தூரத்தில் இருக்
கும்போதே எழுதுகிறேன். ஏனென்றால், நான் உங்களிடம் வரும்போது, நம்
எஜமான் தந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி உங்களிடம் கடுமையாக நடந்
துகொள்ள விரும்பவில்லை.[f] உங்களை நொறுக்கிப்போடுவதற்கு அல்ல,

12:21 *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 13
a உபா 19:15 மத் 18:16
b ரோ 6:4 1பே 3:18
c 2தீ 2:11, 12
d 1கொ 6:14
e 1கொ 11:28 கலா 6:4
f 1கொ 4:21

பலப்படுத்துவதற்காகத்தான் அவர் எனக்கு அந்த அதிகாரத்தைத் தந்தி
ருக்கிறார்.

11 கடைசியாக, சகோதரர்களே, எப்போதும் சந்தோஷமாக இருங்கள்,
உங்களைச் சரிப்படுத்திக்கொள்ளுங்கள், ஆறுதல் அடையுங்கள்,[a] ஒரே
சிந்தையோடு இருங்கள்,[b] சமாதானத்தோடு வாழுங்கள்.[c] அப்போது அன்
புக்கும் சமாதானத்துக்கும் ஊற்றாக இருக்கிற கடவுள் உங்களோடு இருப்
பார்.[d] **12** சுத்தமான இதயத்தோடு ஒருவருக்கொருவர் முத்தம் கொடுத்து
வாழ்த்துங்கள். **13** பரிசுத்தவான்கள் எல்லாரும் உங்களுக்கு வாழ்த்துச்
சொல்கிறார்கள்.

14 நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் அளவற்ற கருணையும்,
கடவுளுடைய அன்பும், சபையாக உங்களுக்கு நன்மை தருகிற கடவு
ளுடைய சக்தியும் உங்கள் எல்லார்மேலும் இருக்கட்டும்.

அதி. 13
a 2கொ 1:3, 4
b பிலி 2:2
c 1தெ 5:13
யாக் 3:17
1பே 3:11
2பே 3:14
d 1கொ 14:33

கலாத்தியருக்கு

எழுதப்பட்ட கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1-5)
- வேறொரு நல்ல செய்தி இல்லை (6-9)
- பவுல் சொன்ன நல்ல செய்தி கடவுளிடமிருந்து வந்தது (10-12)
- பவுல் ஒரு கிறிஸ்தவராகிறார், அவருடைய ஆரம்பகால செயல்கள் (13-24)

2 எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களை பவுல் சந்திக்கிறார் (1-10)
- பேதுருவை (கேபாவை) பவுல் திருத்துகிறார் (11-14)
- விசுவாசத்தால் மட்டுமே நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் (15-21)

3 திருச்சட்டத்தின் செயல்களும் விசுவாசமும் (1-14)
- விசுவாசத்தால் நீதிமான் வாழ்வு பெறுவான் (11)
- ஆபிரகாமுக்குத் திருச்சட்டத்தின் மூலம் வாக்குறுதி கொடுக்கப்படவில்லை (15-18)
  - கிறிஸ்துதான் ஆபிரகாமின் சந்ததி (16)
- திருச்சட்டத்தின் ஆரம்பமும் நோக்கமும் (19-25)
- விசுவாசத்தால் கடவுளுடைய மகன்கள் (26-29)
  - கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் ஆபிரகாமின் சந்ததி (29)

4 இனி அடிமைகள் அல்ல, மகன்கள் (1-7)
- கலாத்தியர்கள்மீது பவுலுக்கு அக்கறை (8-20)
- ஆகாரும் சாராளும்: இரண்டு ஒப்பந்தங்கள் (21-31)
  - மேலான எருசலேம் சுதந்திரமாக இருக்கிறாள், அவள்தான் நமக்குத் தாய் (26)

5 கிறிஸ்தவ சுதந்திரம் (1-15)
- கடவுளுடைய சக்தி காட்டுகிற வழியில் நடப்பது (16-26)
  - பாவ இயல்புக்குரிய செயல்கள் (19-21)
  - கடவுளுடைய சக்தியால் வருகிற குணங்கள் (22, 23)

6 ஒருவர் சுமைகளை ஒருவர் சுமந்துகொள்ளுங்கள் (1-10)
- ஒருவன் எதை விதைக்கிறானோ அதையே அறுவடை செய்வான் (7, 8)
- விருத்தசேதனம் முக்கியமல்ல (11-16)
  - புதிய படைப்பு (15)
- முடிவுரை (17, 18)

அதி. 1

1 மனிதனிடமிருந்தும் அல்ல, மனிதனாலும் அல்ல, இயேசு கிறிஸ்து
மூலமாகவும்[a] அவரை உயிரோடு எழுப்பிய பரலோகத் தகப்பனாகிய
கடவுள் மூலமாகவும்[b] அப்போஸ்தல நியமிப்பைப் பெற்றிருக்கிற பவுலா
கிய நான், **2** என்னோடு இருக்கிற சகோதரர்கள் எல்லாரோடும் சேர்ந்து
கலாத்தியாவிலுள்ள சபைகளுக்கு எழுதுவது:

3 பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதா
னமும் கிடைக்கட்டும். **4** இந்தப் பொல்லாத உலகத்திலிருந்து* நம்மைக்
காப்பாற்ற[c] நம்முடைய பாவங்களுக்காகக் கிறிஸ்து தன்னையே கொடுத்
தார்.[d] இதுதான் நம்முடைய கடவுளாகவும் தகப்பனாகவும் இருக்கிறவரு
டைய விருப்பம்.#[e] **5** இவருக்கே என்றென்றும் மகிமை உண்டாவதாக!
ஆமென்.*

6 கிறிஸ்துவின் அளவற்ற கருணையால் உங்களை அழைத்தவரை நீங்
கள் இவ்வளவு சீக்கிரமாக விட்டுவிட்டு வேறொரு நல்ல செய்தியை ஏற்
றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டீர்களே![f] எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.
7 சொல்லப்போனால், அது நல்ல செய்தியே கிடையாது. சிலர் உங்களைக்
குழப்பி,[g] கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தியைத் திரித்துச் சொல்லப்
பார்க்கிறார்களே தவிர வேறொன்றும் இல்லை. **8** நாங்கள் உங்களுக்கு
அறிவித்த நல்ல செய்தியைத் தவிர வேறொரு நல்ல செய்தியை எங்களில்
ஒருவனோ பரலோகத்திலிருந்து வருகிற ஒரு தேவதூதனோ உங்களுக்கு
அறிவித்தால், அவன் சபிக்கப்பட்டவனாக இருக்கட்டும். **9** இப்போது
சொன்னதையே மறுபடியும் சொல்கிறேன்: நீங்கள் ஏற்றுக்கொண்ட நல்ல
செய்தியைத் தவிர வேறொரு நல்ல செய்தியை எவனாவது உங்களுக்கு
அறிவித்தால் அவன் சபிக்கப்பட்டவனாக இருக்கட்டும்.

10 உண்மையில், நான் இப்போது மனிதர்களுடைய தயவைப்
பெறுவதற்கு முயற்சி செய்கிறேனா, கடவுளுடைய தயவைப் பெறுவ
தற்கு முயற்சி செய்கிறேனா? நான் மனிதர்களையா பிரியப்படுத்தப் பார்க்
கிறேன்? நான் இன்னமும் மனிதர்களைப் பிரியப்படுத்திக்கொண்டிருந்தால்
கிறிஸ்துவின் அடிமையாக இருக்க முடியாது, இல்லையா? **11** சகோத
ரர்களே, நான் உங்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்: நான் அறி
வித்த நல்ல செய்தி மனிதனிடமிருந்து வந்தது கிடையாது.[h] **12** அதை
நான் எந்த மனிதனிடமிருந்தும் பெற்றுக்கொள்ளவில்லை, அதை எந்த மனி
தனும் எனக்குக் கற்றுக்கொடுக்கவும் இல்லை. இயேசு கிறிஸ்துதான் அதை
எனக்கு வெளிப்படுத்தினார்.

13 நான் யூத மதத்தில் இருந்தபோது எப்படி நடந்துகொண்டேன் என்று
நீங்களே கேள்விப்பட்டிருப்பீர்கள்.[i] கடவுளுடைய சபையைப் பயங்கரமா
கத் துன்புறுத்திக்கொண்டும் பாழாக்கிக்கொண்டும் இருந்தேன்.[j] **14** என்
முன்னோர்களுடைய பாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பதில் மிகவும்
வைராக்கியமாக இருந்தேன்.[k] அதனால், என் தேசத்தில் என் வயதிலிருந்த
நிறைய பேரைவிட யூத மதத்தைப் பின்பற்றுவதில் சிறந்தவனாக இருந்
தேன். **15** ஆனால், என் அம்மாவின் வயிற்றிலிருந்து என்னைப் பிரித்தெ
டுத்த கடவுள், **16** தன்னுடைய மகனைப் பற்றிய நல்ல செய்தியை என்

a அப் 9:15; அப் 26:15, 16
b அப் 22:14, 15
c யோவா 15:19
d 1யோ 2:1, 2
e 1தீ 2:3, 4
f 2கொ 11:3, 4; கலா 5:7
g கலா 5:10
h 1தெ 2:13
i அப் 23:6
j அப் 8:3; அப் 9:1, 2; அப் 22:4; அப் 26:9-11
k அப் 22:3; பிலி 3:4-6

1:4 *வே.வா., “சகாப்தத்திலிருந்து.” சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., “சித்தம்.” **1:5** *அதாவது, “அப்படியே ஆகட்டும்.”

மூலம் மற்ற தேசத்து மக்களுக்குச் சொல்வது நல்லதென்று நினைத்தார்.[a]
அதனால், அவர்களுக்கு என் மூலம் அவரை வெளிப்படுத்துவதற்காகத்
தன்னுடைய அளவற்ற கருணையால் என்னை அழைத்தார்.[b] நான் உடனே
இன்னொருவரிடம் போய் ஆலோசனை கேட்கவில்லை. **17** எனக்கு
முன்பே அப்போஸ்தலர்களாக இருந்தவர்களைச் சந்திக்க எருசலேமுக்குப்
போகவுமில்லை. அதற்குப் பதிலாக, அரேபியாவுக்குப் போனேன், அங்கி
ருந்து தமஸ்குவுக்குத் திரும்பி வந்தேன்.[c]

18 மூன்று வருஷங்களுக்குப் பிறகு, கேபாவை*[d] சந்தித்துப் பேசுவதற்
காக எருசலேமுக்குப் போய்[e] அவரோடு 15 நாட்கள் தங்கினேன்.
19 ஆனால், மற்ற அப்போஸ்தலர்களில் நம் எஜமானுடைய சகோதரரா
கிய யாக்கோபைத்[f] தவிர வேறு யாரையும் நான் பார்க்கவில்லை.
20 நான் உங்களுக்கு எழுதுகிற இந்த விஷயங்களெல்லாம் பொய் அல்ல
என்று கடவுளுக்கு முன்னால் உறுதியாகச் சொல்கிறேன்.

21 அதற்குப் பிறகு சீரியா, சிலிசியா பகுதிகளுக்குப் போனேன்.[g]
22 ஆனால், யூதேயாவில் இருக்கிற கிறிஸ்தவ சபைகளுக்கு நான் அது
வரை அறிமுகமாகாமல் இருந்தேன். **23** "இதற்கு முன்பு நம்மைத் துன்பு
றுத்தி,[h] கிறிஸ்தவ மதத்தை அழிக்கப் பார்த்தவன் இப்போது அதைப்
பற்றிய நல்ல செய்தியை அறிவிக்கிறான்"[i] என்று மட்டுமே அவர்கள் கேள்
விப்பட்டிருந்தார்கள். **24** அதனால், என்னை முன்னிட்டு கடவுளை அவர்
கள் மகிமைப்படுத்த ஆரம்பித்தார்கள்.

2 பதினான்கு வருஷங்களுக்குப் பின்பு, தீத்துவையும் கூட்டிக்கொண்டு
மறுபடியும் பர்னபாவோடு[j] எருசலேமுக்குப் போனேன்.[k] **2** அங்கே
போகும்படி எனக்கு வெளிப்படுத்தப்பட்டதால் போனேன். நான் மற்ற
தேசத்து மக்களுக்குப் பிரசங்கித்துக்கொண்டிருக்கிற நல்ல செய்தியைப்
பற்றி மதிப்புக்குரியவர்களிடம் எடுத்துச் சொன்னேன். ஆனாலும், நான்
அப்போது செய்துகொண்டிருந்த ஊழியமும் அதுவரை செய்திருந்த ஊழி
யமும் வீண்போய்விடக் கூடாது என்பதற்காகத் தனிமையில் அவர்களிடம்
எடுத்துச் சொன்னேன். **3** என்னோடிருந்த தீத்து[l] ஒரு கிரேக்கராக இருந்
தாலும் விருத்தசேதனம் செய்துகொள்ளும்படி யாரும் அவரைக் கட்டா
யப்படுத்தவில்லை.[m] **4** ஆனால், கிறிஸ்து இயேசுவின் சீஷர்களாகிய நாம்
அனுபவிக்கிற சுதந்திரத்தைக் கெடுத்து நம்மை முழுவதுமாக அடிமைப்
படுத்துவதற்கென்று,[n] சபைக்குள் திருட்டுத்தனமாக நுழைந்த போலிச் சகோ
தரர்கள்[o] பிரச்சினையைக் கிளப்பினார்கள்.[p] **5** நல்ல செய்தியின் சத்தியம்
உங்களிடம் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் கொஞ்சம்கூட
அவர்களுக்கு அடிபணியவில்லை.[q]

6 இருந்தாலும், முக்கியமானவர்களாகக் கருதப்பட்டவர்கள்,[r] சொல்லப்
போனால் மதிப்புக்குரியவர்கள், புதிதாக எதையும் எனக்குச் சொல்ல
வில்லை. (முன்பு அவர்கள் எந்த நிலையில் இருந்தார்கள் என்பது எனக்கு
முக்கியமல்ல. ஏனென்றால், மனிதர்கள் பார்க்கிற விதமாகக் கடவுள் பார்ப்
பதில்லை.) **7** ஆனால், விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களுக்கு நல்ல
செய்தியை அறிவிக்கும் பொறுப்பு பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த
தைப் போல், விருத்தசேதனம் செய்யப்படாதவர்களுக்கு நல்ல செய்தியை
அறிவிக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததை[s] அவர்கள்

1:18 * பேதுரு என்றும் அழைக்கப்படுகிறார்.

அதி. 1
a அப் 9:15; ரோ 11:13
b 1கொ 15:10
c அப் 9:19
d யோவா 1:42; 1கொ 15:5
e அப் 9:26
f மத் 13:55; அப் 12:17
g அப் 9:29, 30
h கலா 1:13
i அப் 8:3

அதி. 2
j அப் 9:27
k அப் 15:1, 2
l 2கொ 2:13
m அப் 16:3
n கலா 4:9
o 2கொ 3:17; கலா 5:1
p அப் 15:1, 24
q கலா 2:14
r கலா 2:9
s அப் 22:21; ரோ 11:13; 1தீ 2:7

பார்த்தார்கள். **8** (விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களுக்கு அப்போஸ்த
லனாகச் செயல்படும் திறனை பேதுருவுக்குக் கொடுத்தவர் மற்ற தேசத்து
மக்களுக்கு அப்போஸ்தலனாகச் செயல்படும் திறனை எனக்கும் கொடுத்தி
ருந்தார்.)[a] **9** ஆம், சபையின் தூண்கள் என்று கருதப்பட்ட யாக்கோபும்[b]
கேபாவும்* யோவானும் அந்த அளவற்ற கருணை எனக்குக் கொடுக்
கப்பட்டதைப்[c] பார்த்தார்கள். அதனால், விருத்தசேதனம் செய்யப்பட்டவர்
களிடம் அவர்கள் போக வேண்டும் என்றும், நானும் பர்னபாவும்[d] மற்ற
தேசத்து மக்களிடம் போக வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். ஒப்பு
தலுக்கு அடையாளமாக எங்கள் இரண்டு பேரோடும் கைகுலுக்கினார்கள்.
10 வறுமையிலுள்ள சகோதரர்களை மறந்துவிட வேண்டாமென்று மட்டும்
கேட்டுக்கொண்டார்கள்; அதைச் செய்வதற்குத்தான் நானும் ஊக்கமாக
உழைத்து வந்திருக்கிறேன்.[e]

11 ஆனாலும், அந்தியோகியாவுக்கு[f] கேபா*[g] வந்தபோது அவர் நடந்
துகொண்ட விதம் தவறாக இருந்ததால்# அதை நேருக்கு நேர் சுட்டிக்
காட்டினேன். **12** யாக்கோபிடமிருந்து[h] சில ஆட்கள் வருவதற்கு முன்பு
அவர் மற்ற தேசத்து மக்களோடு சேர்ந்து சாப்பிட்டு வந்தார்.[i] ஆனால்
அவர்கள் வந்தபோது, விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களுக்குப் பயந்து,
மற்ற தேசத்து மக்களை விட்டுவிலகி, ஒதுங்கியே இருந்துவிட்டார்.[j]
13 மற்ற யூதர்களும் அவரைப் போலவே பாசாங்கு செய்தார்கள்.*
சொல்லப்போனால், பர்னபாவும் அவர்களோடு சேர்ந்து பாசாங்கு செய்ய#
தூண்டப்பட்டார். **14** நல்ல செய்தியின் சத்தியத்துக்கு ஏற்ப அவர்கள்
நேர்மையாக நடக்காததை நான் பார்த்தபோது,[k] அவர்கள் எல்லாருக்கும்
முன்பாக கேபாவை* பார்த்து, “யூதராக இருக்கிற நீங்களே ஒரு யூதரைப்
போல் நடக்காமல் மற்ற தேசத்து மக்களைப் போல் நடக்கிறீர்கள். அப்படி
இருக்கும்போது, யூத வழக்கப்படி நடக்க வேண்டும் என்று மற்ற தேசத்து
மக்களை நீங்கள் எப்படிக் கட்டாயப்படுத்தலாம்?”[l] என்று கேட்டேன்.

15 நாம் பிறப்பால் யூதர்கள், மற்ற தேசத்தைச் சேர்ந்த பாவிகள் கிடை
யாது. **16** இருந்தாலும், திருச்சட்டத்தின் செயல்களால் அல்ல, கிறிஸ்து
இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தால்தான்[m] ஒருவன் நீதிமானாக ஏற்றுக்
கொள்ளப்படுகிறான்[n] என்று அறிந்திருக்கிறோம். அதனால், நாமும் திருச்
சட்டத்தின் செயல்களால் அல்ல, கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தால்
நீதிமான்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக கிறிஸ்து இயேசுவின்
மீது விசுவாசம் வைக்கிறோம். ஏனென்றால், எந்த மனிதனும் திருச்சட்டத்
தின் செயல்களால் நீதிமானாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டான்.[o] **17** கிறிஸ்
துவின் மூலம் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முயற்சி செய்
கிற நாம் பாவிகளாகக் கருதப்படுகிறோம் என்றால், கிறிஸ்து பாவத்துக்குத்
துணைபோகிறார் என்று அர்த்தமா? இல்லவே இல்லை. **18** ஒருகாலத்தில்
நான் எதையெல்லாம் இடித்துப்போட்டேனோ அதையெல்லாம் மறுபடி
யும் கட்டினால், நானே என்னைக் குற்றவாளியாகக் காட்டிக்கொள்கிறவ
னாய் இருப்பேன். **19** நான் கடவுளுக்கென்று வாழ்வதற்காக, திருச்சட்டத்
தின் மூலம் திருச்சட்டத்துக்கு இறந்துவிட்டேன்.[p] **20** கிறிஸ்துவோடுகூட

2:9, 11, 14 *பேதுரு என்றும் அழைக்கப்படுகிறார். **2:11** #வே.வா., “அவர் குற்றம் செய்ததால்.” **2:13** *வே.வா., “வெளிவேஷம் போட்டார்கள்.” #வே.வா., “வெளிவேஷம் போட.”

அதி. 2
a அப் 9:15
b அப் 15:13
c எபே 3:8
d அப் 13:2; அப் 15:25
e அப் 11:29, 30; 1கொ 16:1
f அப் 11:25, 26; அப் 15:35
g யோவா 1:42
h அப் 12:17
i அப் 10:26, 28; அப் 11:2, 3
j அப் 21:20, 21
k அப் 10:34, 35
l அப் 15:10; அப் 15:28, 29
m ரோ 1:17; யாக் 2:23
n அப் 13:39; ரோ 5:17; 1கொ 6:11
o ரோ 3:20-22
p ரோ 7:9

நான் மரக் கம்பத்தில் வைத்து ஆணியடிக்கப்பட்டிருக்கிறேன்.[a] இனி வாழ்
வது நான் அல்ல,[b] என்னோடு ஒன்றுபட்டிருக்கிற கிறிஸ்துதான் வாழ்கிறார்.
சொல்லப்போனால், இப்போது நான் வாழும் வாழ்க்கை கடவுளுடைய மகன்
மீதுள்ள விசுவாசத்தால்தான்.[c] அவர்தான் என்மேல் அன்பு வைத்து எனக்
காகத் தன்னையே தியாகம் செய்தார்.[d] **21** கடவுளுடைய அளவற்ற கரு
ணையை நான் ஒதுக்கித்தள்ளுவதில்லை;[e] திருச்சட்டத்தின் மூலம் ஒருவன்
நீதிமானாக முடியுமென்றால், கிறிஸ்து இறந்தது வீணாக இருக்குமே.[f]

3 புத்தியில்லாத கலாத்தியர்களே, இயேசு கிறிஸ்து மரக் கம்பத்தில்
வைத்து ஆணியடிக்கப்பட்டது உங்களுக்குத் தத்ரூபமாக விளக்கிக்
காட்டப்படவில்லையா?[g] அப்படியிருக்கும்போது, இந்தக் கெட்ட செல்
வாக்கின்கீழ் உங்களைக் கொண்டுவந்தவன் யார்?[h] **2** உங்களிடம் ஒன்
றைக் கேட்க விரும்புகிறேன்: உங்களுக்குக் கடவுளுடைய சக்தி எதனால்
கிடைத்தது? நீங்கள் திருச்சட்டத்தின் செயல்களைச் செய்ததாலா, அல்லது
நல்ல செய்தியைக் கேட்டு அதன்மேல் விசுவாசம் வைத்ததாலா?[i]
3 ஆன்மீக வழியில் ஆரம்பித்த கிறிஸ்தவ வாழ்க்கையை இப்போது பாவ
வழியில் முடித்துக்கொள்ளப் போகிறீர்களா?[j] இந்தளவுக்கு நீங்கள் புத்தி
யில்லாதவர்களா? **4** வீணாகத்தான் இத்தனை பாடுகள் பட்டீர்களா? கண்
டிப்பாக அப்படியிருக்க முடியாது. **5** உங்களுக்குச் சக்தியைக் கொடுத்து
உங்கள் மத்தியில் அற்புதங்களை* செய்கிறவர்[k] எதனால் அப்படிச் செய்
கிறார்? நீங்கள் திருச்சட்டத்தின் செயல்களைச் செய்ததாலா அல்லது நல்ல
செய்தியைக் கேட்டு அதன்மேல் விசுவாசம் வைத்ததாலா? **6** ஆபிரகா
மும் "யெகோவாமேல்* விசுவாசம் வைத்தார், அதனால் அவர் நீதிமானா
கக் கருதப்பட்டார்."[l]

7 விசுவாசத்தோடு வாழ்கிறவர்கள்தான் ஆபிரகாமின் பிள்ளைகள்[m]
என்பது நிச்சயமாகவே உங்களுக்குத் தெரியும். **8** விசுவாசத்தைக் காட்
டும் மற்ற தேசத்து மக்களைக் கடவுள் நீதிமான்களாக ஏற்றுக்கொள்வார்
என்பதை வேதவசனம் முன்கூட்டியே சொன்னது; அதாவது, "உன் மூலமாக
எல்லா தேசத்தாரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்" என்ற நல்ல
செய்தியை ஆபிரகாமுக்குச் சொன்னது.[n] **9** அதனால், விசுவாசத்தோடு
வாழ்கிறவர்கள் விசுவாசமுள்ள ஆபிரகாமைப் போல[o] ஆசீர்வதிக்கப்படு
கிறார்கள்.

10 திருச்சட்டத்தின் செயல்களை நம்பியிருக்கிற எல்லாரும் சாபத்துக்கு
உட்பட்டவர்கள். ஏனென்றால், "திருச்சட்ட சுருளில் எழுதப்பட்ட அனைத்
தையும் தொடர்ந்து கடைப்பிடிக்காத எல்லாரும் சபிக்கப்பட்டவர்கள்"
என்று எழுதப்பட்டிருக்கிறது.[p] **11** அதோடு, "விசுவாசத்தால் நீதிமான்
வாழ்வு பெறுவான்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது.[q] அதனால், ஒருவனும்
திருச்சட்டத்தின் மூலம் கடவுளுக்கு முன்னால் நீதிமானாக ஏற்றுக்கொள்ளப்
படுவதில்லை[r] என்பது தெளிவாகத் தெரிகிறது. **12** விசுவாசம்தான் முக்
கியம் என்று திருச்சட்டம் சொல்வதில்லை. அதற்குப் பதிலாக, "அதிலுள்ள
கட்டளைகளின்படி நடப்பவர்கள் அவற்றால் வாழ்வு பெறுவார்கள்" என்று
தான் சொல்கிறது.[s] **13** "மரக் கம்பத்தில் தொங்கவிடப்பட்ட எவனும் சபிக்
கப்பட்டவன்" என்று எழுதப்பட்டிருப்பதால்,[t] கிறிஸ்து நமக்குப் பதிலாகச்
சாபமாகி, நம்மை விலைகொடுத்து வாங்குவதன் மூலம்[u] திருச்சட்டத்

3:5 *வே.வா., "வல்லமையான செயல்களை." **3:6** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 2
a ரோ 6:6; கலா 5:24
b 1பே 4:1, 2
c 2கொ 5:15
d 1தீ 2:5, 6
e யோவா 1:17
f கலா 3:21; எபி 7:11

அதி. 3
g 1கொ 1:23
h கலா 5:7
i எபே 1:13
j கலா 4:9, 10
k 1கொ 12:8-10
l ஆதி 15:6; ரோ 4:3; யாக் 2:23
m ரோ 4:11, 12
n ஆதி 12:3; ஆதி 18:18
o ரோ 4:16, 17
p உபா 27:26; அப் 15:10; யாக் 2:10
q ஆப 2:4; ரோ 1:17; எபி 10:38
r கலா 2:15, 16
s லேவி 18:5; உபா 30:16; ரோ 10:5
t உபா 21:23; அப் 5:30
u 1கொ 7:23

அதி. 3
a மத் 26:27, 28
எபி 9:15
b எபே 2:15, 16
c யோவே 2:28
d ஆதி 12:1–3
ஆதி 12:7
ஆதி 13:
14, 15
ஆதி 17:7
ஆதி 22:
17, 18
ஆதி 24:7
e மத் 1:17
f யாத் 12:40, 41
g ஆதி 22:17
h யோவா 1:29
ரோ 10:4
i ரோ 3:20
j அப் 7:38, 53
எபி 2:2
k யாத் 20:19
உபா 5:5
யோவா 1:17
l ரோ 10:4
m அப் 13:39
ரோ 5:1
ரோ 8:33
n மத் 5:17
o கொலோ 2:17
p எபி 8:6
q யோவா 1:12
r ரோ 8:14
s ரோ 13:14
எபே 4:24

தின் சாபத்திலிருந்து நம்மை விடுதலை செய்தார்.[a]
14 ஆபிரகாமுக்குக் கிடைத்த ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவின் மூலம் மற்ற தேசத்து மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும்,[b] வாக்குக் கொடுக்கப்பட்ட கடவுளுடைய சக்தியை நாம் விசுவாசத்தால் பெற்றுக்கொள்ள வேண்டும்[c] என்பதற்காகவும்தான் அப்படிச் செய்தார்.

15 சகோதரர்களே, உலக வழக்கிலிருந்து ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்: ஒரு மனிதனால் உறுதி செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தத்தைக்கூட யாராலும் செல்லாததாக்கவோ, அதனுடன் எதையும் சேர்க்கவோ முடியாது.
16 ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன.[d] "சந்ததிகளுக்கு" என்று பலரைப் பற்றிச் சொல்லாமல், "உன் சந்ததிக்கு" என்று ஒருவரைப் பற்றித்தான் வேதவசனம் சொல்கிறது; அந்தச் சந்ததி கிறிஸ்துதான்.[e]
17 அதோடு நான் சொல்கிறேன்: கடவுளால் முன்பு உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தத்தை 430 வருஷங்களுக்குப் பின்பு வந்த திருச்சட்டம் செல்லாததாக்கிவிடாது,[f] அவருடைய வாக்குறுதியை ஒழித்தும்விடாது.
18 கடவுள் கொடுக்கிற ஆஸ்தி திருச்சட்டத்தின் அடிப்படையில் கிடைக்கிறதென்றால், இனி அது வாக்குறுதியின் அடிப்படையில் கிடைக்காது. ஆனால், கடவுள் அதை ஆபிரகாமுக்கு ஒரு வாக்குறுதியின் மூலம் கொடுத்திருக்கிறார்.[g]

19 அப்படியானால், திருச்சட்டம் எதற்கு? வாக்குறுதி கொடுக்கப்பட்ட சந்ததி வரும்வரை[h] குற்றங்களை வெளிப்படுத்துவதற்காக அது சேர்க்கப்பட்டது.[i] தேவதூதர்களைக் கொண்டு[j] ஒரு மத்தியஸ்தர் மூலம்[k] அது கொடுக்கப்பட்டது.
20 ஒருவர் மட்டுமே செயல்படும்போது மத்தியஸ்தர் தேவையில்லை. அதனால், வாக்குறுதி கொடுத்தபோது கடவுள் ஒருவர்தான் செயல்பட்டார்.
21 அப்படியானால், திருச்சட்டம் கடவுளுடைய வாக்குறுதிகளுக்கு எதிராக இருக்கிறதா? இல்லவே இல்லை! வாழ்வு தரக்கூடிய ஒரு சட்டம் கொடுக்கப்பட்டிருந்தால் அந்தச் சட்டத்தின் மூலமாகவே ஒருவர் கடவுளுக்கு முன்னால் நீதிமானாக ஆகியிருக்கலாம்.
22 ஆனால், இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு அந்த விசுவாசத்தின் மூலம் கடவுளுடைய வாக்குறுதி கிடைக்க வேண்டும் என்பதற்காக வேதவசனம் எல்லாரையும் பாவத்தின் சிறையில் ஒட்டுமொத்தமாக அடைத்திருக்கிறது.

23 ஆனாலும், கிறிஸ்தவ விசுவாசம் வருவதற்கு முன்னால், நாம் திருச்சட்டத்தின் சிறையில் அடைக்கப்பட்டு அதன் காவலில் இருந்தோம், அந்த விசுவாசம் வெளிப்படுவதற்காகக் காத்திருந்தோம்.[l]
24 இப்படி, விசுவாசத்தால் நாம் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்காகத் திருச்சட்டம்[m] நம்மைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துகிற பாதுகாவலராக* இருந்து வந்தது.[n]
25 ஆனால், இப்போது கிறிஸ்தவ விசுவாசம் வந்துவிட்டதால்[o] நாம் இனி அந்தப் பாதுகாவலரின்கீழ் இல்லை.[p]

26 சொல்லப்போனால், நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவின்மேல் வைத்திருக்கிற விசுவாசத்தால்[q] கடவுளுடைய மகன்களாக[r] ஆகியிருக்கிறீர்கள்.
27 கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லாரும் கிறிஸ்துவை அணிந்திருக்கிறீர்கள்.*[s]
28 இனி உங்களிடையே யூதன்

3:24 * வே.வா., "ஆசானாக." **3:27** * வே.வா., "கிறிஸ்துவின் குணங்களைப் பின்பற்றுகிறீர்கள்."

என்றோ கிரேக்கன் என்றோ இல்லை.[a] அடிமை என்றோ சுதந்திரமான
வன் என்றோ இல்லை.[b] ஆண் என்றோ பெண் என்றோ இல்லை.[c]
கிறிஸ்து இயேசுவின் சீஷர்களான நீங்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கிறீர்
கள்.[d] **29** அதோடு, நீங்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்றால்,
உண்மையிலேயே ஆபிரகாமின் சந்ததியாக,[e] வாக்குறுதியின்படி[f] அவரு
டைய வாரிசுகளாக[g] இருக்கிறீர்கள்.

4 நான் சொல்வது என்னவென்றால், வாரிசாக இருப்பவன் எல்லாவற்
றுக்கும் எஜமானாக இருந்தாலும், சின்னப் பிள்ளையாக இருக்கும்வரை
அவனுக்கும் அடிமைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. **2** அவனுடைய
அப்பா குறித்திருக்கும் நாள் வரும்வரை அவன் தன்னுடைய மேற்பார்
வையாளர்களுக்கும் வீட்டு நிர்வாகிகளுக்கும் கீழ்ப்பட்டுதான் இருப்பான்.
3 அதேபோல், நாமும் குழந்தைகளாக இருந்தபோது இந்த உலகத்தின்
அடிப்படைக் காரியங்களுக்கு அடிமையாக இருந்தோம்.[h] **4** ஆனால்
குறித்த காலம் வந்தபோது, கடவுள் தன்னுடைய மகனை இந்த உலகத்
துக்கு அனுப்பினார். அந்த மகன் ஒரு பெண்ணிடம் பிறந்து[i] திருச்சட்டத்
துக்குக் கீழ்ப்பட்டிருந்தார்.[j] **5** திருச்சட்டத்தின்கீழ் இருப்பவர்களை விலை
கொடுத்து மீட்பதற்காகவும்[k] அதன் மூலம் நம்மை மகன்களாகத் தத்தெடுப்
பதற்காகவும்தான் கடவுள் அவரை அனுப்பினார்.[l]

6 இப்போது நீங்கள் மகன்களாக இருப்பதால், கடவுள் தன்னுடைய மக
னுக்குக் கொடுத்த சக்தியை[m] நம்முடைய இதயங்களுக்குள் அனுப்பியிருக்
கிறார்.[n] அந்தச் சக்தி *“அபா,** தகப்பனே!” என்று கூப்பிடுகிறது.[o] **7** அத
னால், இனி நீங்கள் அடிமைகளாக இல்லாமல் மகன்களாக இருக்கிறீர்கள்.
நீங்கள் மகன்கள் என்றால், வாரிசுகளாகவும் இருக்கிறீர்கள்.[p] இது கடவு
ளுடைய செயல்.

8 ஆனாலும், உங்களுக்குக் கடவுளைப் பற்றித் தெரியாமல் இருந்த
காலத்தில் கடவுளாக இல்லாதவற்றுக்கு அடிமைகளாக இருந்தீர்கள்.
9 ஆனால், இப்போது உங்களுக்குக் கடவுளைப் பற்றித் தெரியும்; சொல்லப்
போனால், கடவுளுக்கு உங்களைப் பற்றித் தெரியும். அப்படியிருக்கும்
போது, பலவீனமாகவும் வெறுமையாகவும்[q] இருக்கிற அடிப்படைக் காரியங்
களுக்கு நீங்கள் ஏன் திரும்பிப்போகிறீர்கள்? பழையபடி அவற்றுக்கு
ஏன் அடிமையாவதற்கு விரும்புகிறீர்கள்?[r] **10** நாட்களையும் மாதங்களை
யும் காலங்களையும் வருஷங்களையும் நுணுக்கமாக அனுசரிக்கிறீர்களே.[s]
11 உங்களுக்காக நான் பாடுபட்டதெல்லாம் வீணாகிவிட்டதோ என்று பயப்
படுகிறேன்.

12 சகோதரர்களே, ஒருகாலத்தில் நானும் உங்களைப் போலத்தான் இருந்
தேன்.[t] அதனால் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்: நீங்கள் இப்
போது என்னைப் போல் ஆகுங்கள். நீங்கள் எனக்கு எந்த அநியாயமும்
செய்யவில்லை. **13** ஆனால் உங்களுக்குத் தெரிந்தபடி, எனக்கு உடல்
நிலை சரியில்லாமல் போனதால்தான், முதன்முதலில் உங்களுக்கு நல்ல
செய்தியை அறிவிக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. **14** என் உடல்
நலக் குறைவு உங்களுக்கு ஒரு சோதனையாக இருந்தபோதிலும், அதற்காக

4:6 *பிள்ளைகள் தங்கள் அப்பாவைச் செல்லமாகவும், அதேசமயத்தில் மரி
யாதையாகவும் கூப்பிடுவதற்குப் பயன்படுத்திய எபிரெய அல்லது அரமேயிக்
வார்த்தை இது.

அதி. 3
a ரோ 10:12
b 1கொ 12:13 கொலோ 3:10, 11
c அப் 2:17 1பே 3:7
d யோவா 17:20, 21
e ரோ 9:7, 8
f ஆதி 22:18
g ரோ 8:17

அதி. 4
h கொலோ 2:8 கொலோ 2:20-22
i யோவா 1:14 எபி 2:14
j மத் 5:17
k 1கொ 7:23 கலா 3:13
l யோவா 1:12 ரோ 8:23
m யோவா 14:26
n ரோ 5:5
o ரோ 8:15
p ரோ 8:17 கலா 3:29 எபே 1:13, 14
q ரோ 8:3 எபி 7:18, 19
r கொலோ 2:20-22
s கொலோ 2:16
t கலா 1:14

நீங்கள் என்னை அவமதிக்கவோ அருவருக்கவோ* இல்லை. அதற்குப் பதி
லாக, ஒரு தேவதூதரை ஏற்றுக்கொள்வது போலவும், கிறிஸ்து இயேசுவை
ஏற்றுக்கொள்வது போலவும் என்னை ஏற்றுக்கொண்டீர்கள். **15** அப்போது
உங்களுக்கு இருந்த சந்தோஷம் இப்போது எங்கே? முடிந்தால், உங்கள்
கண்களைக்கூட எனக்காகப் பிடுங்கிக் கொடுத்திருப்பீர்களே.[a] **16** நான்
உங்களிடம் உண்மையைச் சொல்வதால் உங்களுக்கு எதிரியாகிவிட்டேனா?
17 சிலர் உங்களைத் தங்கள் பக்கம் இழுப்பதற்குத் தீவிரமாக முயற்சி செய்
கிறார்கள். நல்ல எண்ணத்தில் அப்படிச் செய்யாமல், அவர்கள் பின்னால்
நீங்கள் ஆர்வமாக வர வேண்டும் என்ற எண்ணத்தில்தான் என்னிடமிருந்து
உங்களைப் பிரிக்கப் பார்க்கிறார்கள். **18** யாராவது நல்ல எண்ணத்தில்
உங்கள்மேல் ஆர்வம் காட்டினால் நல்லதுதான். ஆனால், நான் உங்க
ளோடு இருக்கிற சமயத்தில் மட்டுமல்ல, எல்லா சமயத்திலும் அப்படி ஆர்
வம் காட்ட வேண்டும். **19** சின்னப் பிள்ளைகளே,[b] கிறிஸ்து உங்களுக்குள்
உருவாகும்வரை உங்களுக்காக நான் மறுபடியும் பிரசவ வேதனைப்படுகி
றேன். **20** உங்களை நினைக்கும்போது எனக்குக் குழப்பமாக இருக்கிறது.
அதனால் இப்போதே உங்களிடம் வந்து இன்னும் சாந்தமாகப் பேச வேண்
டும் என்று ஆசைப்படுகிறேன்.

21 திருச்சட்டத்துக்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிறவர்களே, இதை
எனக்குச் சொல்லுங்கள்: திருச்சட்டம் சொல்வதை நீங்கள் கேட்பதில்
லையா? **22** உதாரணமாக, ஆபிரகாமுக்கு இரண்டு மகன்கள் பிறந்தார்
கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஒருவன் அடிமைப் பெண்ணிடம் பிறந்த
வன்,[c] இன்னொருவன் சுதந்திரப் பெண்ணிடம் பிறந்தவன்.[d] **23** அடிமைப்
பெண்ணிடம் பிறந்தவன் இயல்பான முறையில் பிறந்தான்,[e] சுதந்திரப் பெண்
ணிடம் பிறந்தவனோ கடவுளுடைய வாக்குறுதியால் பிறந்தான்.[f] **24** இவற்
றுக்கு அடையாள அர்த்தம் இருக்கலாம்;* ஏனென்றால், இந்தப் பெண்கள்
இரண்டு ஒப்பந்தங்களைக் குறிக்கிறார்கள். அவற்றில் ஒரு ஒப்பந்தம்
சீனாய் மலையில்[g] செய்யப்பட்டது, இந்த ஒப்பந்தத்துக்கு உட்பட்ட எல்
லாரும் அடிமைகளாக இருக்கிறார்கள்; இந்த ஒப்பந்தம் ஆகார் என்ப
வள்தான். **25** அரேபியாவில் இருக்கிற சீனாய் மலையை[h] ஆகார் குறிக்
கிறாள்; இப்போது இருக்கிற எருசலேம் ஆகாருக்கு ஒப்பாக இருக்கிறாள்.
ஏனென்றால், இவள் தன் பிள்ளைகளோடுகூட அடிமையாக இருக்கிறாள்.
26 ஆனால், மேலான எருசலேம் சுதந்திரமாக இருக்கிறாள், அவள்தான்
நமக்குத் தாய்.

27 ஏனென்றால், “குழந்தை பெறாதவளே, சந்தோஷப்படு. பிரசவ வேத
னைப்படாதவளே, சந்தோஷமாக ஆரவாரம் செய்; கணவனோடு வாழ்கி
றவளைவிட கைவிடப்பட்டவளுக்கே ஏராளமான பிள்ளைகள் இருக்கிறார்
கள்” என்று எழுதப்பட்டிருக்கிறது.[i] **28** சகோதரர்களே, நாம் ஈசாக்கைப்
போல வாக்குறுதியால் பிறந்த பிள்ளைகளாக இருக்கிறோம்.[j]
29 ஆனால், இயல்பான முறையில் பிறந்தவன் கடவுளுடைய சக்தியால்
பிறந்தவனை அப்போது துன்புறுத்தியது போலவே[k] இப்போதும் நடந்து
வருகிறது.[l] **30** இருந்தாலும், வேதவசனம் என்ன சொல்கிறது? “அடிமைப்
பெண்ணையும் அவளுடைய மகனையும் துரத்திவிடுங்கள். அடிமைப்

அதி. 4
a அப் 23:5; கலா 6:11
b 1கொ 4:15; 1தெ 2:11; பிலே 10
c ஆதி 16:15
d ஆதி 21:2, 3
e ஆதி 16:1, 2
f ஆதி 17:15, 16
g யாத் 19:20; யாத் 24:12
h யாத் 19:18
i ஏசா 54:1
j ரோ 9:8; கலா 3:29
k ஆதி 21:9
l கலா 5:11; 2தீ 3:12

4:14 *வே.வா., “என்மேல் துப்பவோ.” **4:24** *நே.மொ., “இவை அடையாளப்பூர்வ நாடகத்தைக் குறிக்கலாம்.”

பெண்ணின் மகன் சுதந்திரப் பெண்ணின் மகனோடு சேர்ந்து ஒருபோதும்
வாரிசாக இருக்க முடியாது” என்று சொல்கிறது.[a] **31** அதனால் சகோத
ரர்களே, நாம் அடிமைப் பெண்ணின் பிள்ளைகளாக இல்லாமல் சுதந்திரப்
பெண்ணின் பிள்ளைகளாக இருக்கிறோம்.

5 இப்படிச் சுதந்திரமாக இருப்பதற்காகத்தான் கிறிஸ்து நம்மை விடு
தலை செய்தார். அதனால் உறுதியாக நிலைத்திருங்கள்;[b] மறுபடியும்
அடிமைத்தனம் என்ற நுகத்தடியின்கீழ் போய்விடாதீர்கள்.[c]

2 பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்கிறேன்: நீங்கள் விருத்தசேத
னம் செய்துகொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமும்
இருக்காது.[d] **3** மறுபடியும் சொல்கிறேன், விருத்தசேதனம் செய்துகொள்
கிற ஒவ்வொருவனும் திருச்சட்டம் முழுவதையும் கடைப்பிடிக்கக் கடமைப்
பட்டிருக்கிறான்.[e] **4** திருச்சட்டத்தால் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படு
வதற்கு முயற்சி செய்கிற நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும்
சரி, கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்திருக்கிறீர்கள்.[f] அவருடைய அளவற்ற கரு
ணையிலிருந்து விலகியிருக்கிறீர்கள். **5** ஆனால் நாங்கள், கடவு
ளுடைய சக்தியாலும் எங்களுடைய விசுவாசத்தாலும் நீதிமான்களாவோம்
என்று எதிர்பார்த்து ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறோம். **6** கிறிஸ்து
இயேசுவோடு ஒன்றுபட்டிருப்பவர்களைப் பொறுத்ததில், விருத்தசேதனம்
செய்துகொள்வதும் முக்கியமல்ல, விருத்தசேதனம் செய்துகொள்ளாமல்
இருப்பதும் முக்கியமல்ல.[g] அன்பினால் விசுவாசத்தைக் காட்டுவதுதான்
முக்கியம்.

7 சத்திய பாதையில் நீங்கள் நன்றாக ஓடிக்கொண்டிருந்தீர்களே.[h] அப்
படியிருக்கும்போது, நீங்கள் தொடர்ந்து சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்ப
தைத் தடுத்தது யார்? **8** விருத்தசேதனம் செய்துகொள்ள உங்களைத்
தூண்டியது யார்? உங்களை அழைத்த கடவுள் அல்ல. **9** புளிப்புள்ள சிறி
தளவு மாவு பிசைந்த மாவு முழுவதையும் புளிக்க வைத்துவிடும்.[i]
10 நம் எஜமானோடு ஒன்றுபட்டிருக்கிற நீங்கள்[j] என்னுடைய கருத்தை
ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன். உங்கள் மத்தி
யில் பிரச்சினை உண்டாக்குகிறவன்[k] யாராக இருந்தாலும் சரி, அவனுக்குத்
தண்டனைத் தீர்ப்பு கிடைக்கும். **11** சகோதரர்களே, விருத்தசேதனம் செய்
யச் சொல்லி நான் இன்னமும் பிரசங்கிக்கிறேன் என்றால், ஏன் இன்னமும்
துன்புறுத்தப்படுகிறேன்? நான் அப்படிப் பிரசங்கித்தால், சித்திரவதைக் கம்
பத்தை*[l] பற்றிய செய்தி யாரையும் கோபப்படுத்தாதே. **12** விருத்தசேத
னம் என்ற பெயரில் உங்களைத் திசைதிருப்ப முயற்சி செய்கிறவர்கள் தங்
களுடைய உறுப்பைத் துண்டித்துக்கொள்ளட்டும்.*

13 சகோதரர்களே, நீங்கள் சுதந்திரமாக இருக்க அழைக்கப்பட்டீர்கள்
என்பது உண்மைதான். ஆனால், இந்தச் சுதந்திரத்தைப் பாவ ஆசைகளை
நிறைவேற்றுவதற்குச் சாக்காகப் பயன்படுத்தாதீர்கள்.[m] அதற்குப் பதிலாக,
அன்பினால் ஒருவருக்கொருவர் அடிமைகளாக வேலை செய்யுங்கள்.[n]

5:11 *சொல் பட்டியலைப் பாருங்கள். **5:12** *வே.வா., “அண்ணகர்களாக ஆகட்டும்.” இப்படிச் செய்வதன் மூலம், எந்தச் சட்டத்தை அவர்கள் ஆதரிக்கிறார்களோ அந்தச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு அவர்கள் தகுதியில்லாதவர்களாக ஆகிவிடுவார்கள்.

அதி. 4
a ஆதி 21:10

அதி. 5
b 1கொ 16:13; பிலி 4:1
c அப் 15:10
d கலா 6:12
e ரோ 2:25; கலா 3:10
f ரோ 3:20
g 1கொ 7:19; கலா 6:15; கொலோ 3:10, 11
h 1கொ 9:24; கலா 3:3
i 1கொ 5:6; 1கொ 15:33; 2தீ 2:16–18
j யோவா 17:20, 21
k கலா 1:7
l 1கொ 1:23
m 1பே 2:16
n 1கொ 9:19

14 ஏனென்றால், “உங்கள்மேல் நீங்கள் அன்பு காட்டுவது போல மற்றவர்
கள்மேலும்* அன்பு காட்ட வேண்டும்” என்ற ஒரே கட்டளையில் திருச்சட்
டம் முழுவதும் நிறைவேறுகிறது.#[a] **15** நீங்கள் ஒருவரை ஒருவர் கடித்துக்
குதறிக்கொண்டே இருந்தால்[b] ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவீர்கள்,[c] எச்
சரிக்கை!

16 நான் சொல்வது இதுதான்: கடவுளுடைய சக்தி காட்டுகிற வழியில்
நடந்துகொண்டிருங்கள்,[d] அப்போது எந்தவொரு பாவ ஆசையையும் நிறை
வேற்ற மாட்டீர்கள்.[e] **17** பாவ ஆசை கடவுளுடைய சக்திக்கு விரோதமா
னது. கடவுளுடைய சக்தியோ பாவ ஆசைக்கு விரோதமானது. இவை ஒன்
றுக்கொன்று எதிராக இருப்பதால் நீங்கள் செய்ய விரும்புகிற காரியங்களைச்
செய்ய முடிவதில்லை.[f] **18** அதோடு, கடவுளுடைய சக்தி காட்டுகிற வழி
யில் நடந்தால், நீங்கள் திருச்சட்டத்தின்கீழ் இல்லை என்று அர்த்தம்.

19 பாவ இயல்புக்குரிய செயல்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன.
அவை பாலியல் முறைகேடு,*[g] அசுத்தமான நடத்தை, வெட்கங்கெட்ட
நடத்தை,*[h] **20** சிலை வழிபாடு, ஆவியுலகத் தொடர்பு,*[i] பகை, சண்டை
சச்சரவு, பொறாமை, கோப வெறி, கருத்துவேறுபாடு, பிரிவினை, மதப்பி
ரிவு, **21** மற்றவர்களைப் பார்த்து வயிறெரிதல், குடிவெறி,[j] குடித்துக் கும்
மாளம் போடுதல் போன்றவையாகும்.[k] இதுபோன்ற காரியங்களைச் செய்து
வருகிறவர்கள் கடவுளுடைய அரசாங்கத்துக்குள் அனுமதிக்கப்பட* மாட்
டார்கள்[l] என்று உங்களை ஏற்கெனவே எச்சரித்தது போல இப்போதும் எச்
சரிக்கிறேன்.

22 ஆனால், கடவுளுடைய சக்தியால் உண்டாகிற குணங்கள்* அன்பு,
சந்தோஷம், சமாதானம், பொறுமை, கருணை, நல்மனம்,[m] விசுவாசம்,
23 சாந்தம், சுயக்கட்டுப்பாடு ஆகியவையே.[n] இப்படிப்பட்டவற்றுக்கு எதி
ராக எந்தவொரு சட்டமும் இல்லை. **24** கிறிஸ்து இயேசுவுக்குச் சொந்த
மானவர்கள் தங்கள் உடலை அதன் மோகங்களோடும் ஆசைகளோடும்
சேர்த்து மரக் கம்பத்தில் ஆணியடித்துவிட்டார்கள்.[o]

25 கடவுளுடைய சக்தி காட்டுகிற வழியில் நாம் வாழ்ந்துகொண்டி
ருந்தால், அது காட்டுகிற வழியிலேயே தொடர்ந்து சீராக நடப்போமாக.[p]
26 அதுமட்டுமல்ல, வறட்டு கௌரவம் பார்க்காமலும்,[q] ஒருவருக்கொரு
வர் போட்டி போடாமலும்,[r] ஒருவர்மேல் ஒருவர் வயிற்றெரிச்சல் படாம
லும் இருப்போமாக.

6 சகோதரர்களே, ஒருவன் தவறான பாதையில் தெரியாமல் அடியெடுத்து
வைத்தாலும்கூட, ஆன்மீகத் தகுதிகளையுடைய நீங்கள் அப்படிப்பட்
டவனைச் சாந்தமாகச்[s] சரிப்படுத்த முயற்சி செய்யுங்கள். அதேசமயத்தில்,
நீங்களும் எந்தத் தவறும் செய்துவிடாதபடி[t] கவனமாக இருங்கள்.[u] **2** எப்
போதும் ஒருவர் சுமைகளை ஒருவர் சுமந்துகொள்ளுங்கள்.[v] இப்படிச்
செய்யும்போது, நீங்கள் கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்.[w]
3 ஒருவன் முக்கியமானவனாக இல்லாமலிருந்தும் தன்னை முக்கியமானவ
னாக நினைத்துக்கொண்டால்,[x] அவன் தன்னையே ஏமாற்றிக்கொள்கிறான்.

5:14 *வே.வா., “சக மனிதர்மேலும்.” #அல்லது, “அடங்கியிருக்கிறது.” **5:19** *சொல் பட்டியலைப் பாருங்கள். **5:20** *வே.வா., “பில்லிசூனியம்; போதைப்பொருளைப் பயன்படுத்துவது.” **5:21** *நே.மொ., “கடவுளுடைய அரசாங்கத்தை ஆஸ்தியாகப் பெற.” **5:22** *நே.மொ., “கடவுளுடைய சக்தியின் கனி.”

அதி. 5
a லேவி 19:18; மத் 7:12; மத் 22:39; ரோ 13:8, 9; யாக் 2:8
b யாக் 3:14
c யாக் 4:1, 2
d ரோ 8:5, 13
e ரோ 6:12; 1பே 2:11
f ரோ 7:15, 19; ரோ 7:23
g 1கொ 5:9; எபே 5:3; கொலோ 3:5; வெளி 2:20
h மாற் 7:21, 22; எபே 4:19; 2பே 2:2; யூ 4
i லேவி 19:26, 31; உபா 18:10, 11
j உபா 21:20, 21; ஏசா 5:11
k 1பே 4:3
l 1கொ 6:9, 10
m எபே 5:9
n யாக் 3:17
o ரோ 6:6
p ரோ 8:4
q பிலி 2:3
r பிர 4:4; 1கொ 4:7; கலா 6:4

அதி. 6
s நீதி 15:1; கொலோ 3:12; 1தீ 6:11; தீத் 3:2
t யாக் 3:2
u 1கொ 10:12
v 1தெ 5:14
w யோவா 13:34; யோவா 15:12; 1யோ 4:21
x ரோ 12:3

4 ஒவ்வொருவனும் தன்னுடைய செயல்களை ஆராய்ந்து பார்க்கட்டும்.[a]
அப்போது, அவன் மற்றவனோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து சந்தோஷப்
படாமல் தன்னைப் பார்த்தே சந்தோஷப்படுவான்.[b] **5** ஒவ்வொருவனும்
அவனவன் பாரத்தை* சுமப்பான்.[c]

6 அதோடு, கடவுளுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்கிறவன்*
அதைக் கற்றுக்கொடுக்கிறவரோடு# சேர்ந்து நன்மையான எல்லா காரியங்
களிலும் பங்குகொள்ளட்டும்.[d]

7 ஏமாந்துவிடாதீர்கள்! யாராலும் கடவுளை முட்டாளாக்க* முடியாது.
ஒருவன் எதை விதைக்கிறானோ அதையே அறுவடை செய்வான்.[e]
8 பாவத்துக்காக விதைக்கிறவன் தன் பாவத்தால் அழிவை அறுவடை செய்
வான். கடவுளுடைய சக்திக்காக விதைக்கிறவன் கடவுளுடைய சக்தியால்
முடிவில்லாத வாழ்வை அறுவடை செய்வான்.[f] **9** அதனால், நன்மை செய்
வதை நாம் விட்டுவிடாமல் இருக்க வேண்டும். நாம் சோர்ந்துபோகாமல்*
இருந்தால் ஏற்ற காலத்தில் அறுவடை செய்வோம்.[g] **10** அதனால், காலம்
சாதகமாக இருக்கும்போதே எல்லாருக்கும் நன்மை செய்ய வேண்டும், முக்
கியமாக நம்முடைய விசுவாசக் குடும்பத்தாருக்கு நன்மை செய்ய வேண்டும்.

11 என் கைப்பட எவ்வளவு பெரிய எழுத்துக்களில் உங்களுக்கு எழுதி
யிருக்கிறேன், பாருங்கள்!

12 நல்லவர்களாகக் காட்டிக்கொள்ள விரும்புகிறவர்கள்தான் விருத்தசே
தனம் செய்யச் சொல்லி உங்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவுக்
காக* தாங்கள் துன்புறுத்தப்படாமல் இருப்பதற்கே அப்படிச் செய்கிறார்கள்.
13 விருத்தசேதனம் செய்துகொள்கிறவர்கள்கூட திருச்சட்டத்தைக் கடைப்பி
டிப்பதில்லை.[h] ஆனால், உங்களை விருத்தசேதனம் செய்ய வைத்துவிட்ட
தாகப் பெருமையடித்துக்கொள்ளத்தான் உங்களை விருத்தசேதனம் செய்யச்
சொல்கிறார்கள். **14** நானோ நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவுடைய சித்
திரவதைக் கம்பத்தை* தவிர வேறு எதைப் பற்றியும் ஒருபோதும் பெருமை
பேச மாட்டேன்.[i] என்னைப் பொறுத்தவரை, அவரால் இந்த உலகம்
மரக் கம்பத்தில் அறையப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தைப் பொறுத்தவரை,
நானும் மரக் கம்பத்தில் அறையப்பட்டிருக்கிறேன். **15** விருத்தசேதனம்
செய்துகொள்வதும் முக்கியமல்ல, விருத்தசேதனம் செய்துகொள்ளாததும்
முக்கியமல்ல.[j] புதிய படைப்பாக ஆவதுதான் முக்கியம்.[k] **16** இந்த விதி
முறைப்படி சீராக நடக்கிறவர்களாகிய கடவுளுடைய இஸ்ரவேலர்கள்[l] எல்
லாருக்கும் சமாதானமும் இரக்கமும் கிடைக்கட்டும்.

17 இனி யாரும் எனக்குப் பிரச்சினை உண்டாக்க வேண்டாம். ஏனென்
றால், நான் இயேசுவின் அடிமை என்பதற்கு அடையாளமாக என்னுடைய
உடலில் சூட்டுத் தழும்புகளைச் சுமந்துகொண்டிருக்கிறேன்.[m]

18 சகோதரர்களே, நல்ல மனப்பான்மையை வெளிக்காட்டுகிற உங்கள்
மேல் நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் அளவற்ற கருணை இருக்
கட்டும். ஆமென்.*

6:5 *வே.வா., "பொறுப்பு என்ற பாரத்தை." **6:6** *வே.வா., "வாய்மொழியாகக் கற்றுக்கொள்கிறவன்." #வே.வா., "வாய்மொழியாகக் கற்றுக்கொடுக்கிறவரோடு." **6:7** *வே.வா., "ஏளனம் செய்துவிட்டுத் தப்பிக்க." **6:9** *வே.வா., "விட்டுவிடாமல்." **6:12** *நே.மொ., "கிறிஸ்துவின் சித்திரவதைக் கம்பத்துக்காக." **6:14** *சொல் பட்டியலைப் பாருங்கள். **6:18** *அதாவது, "அப்படியே ஆகட்டும்."

அதி. 6

a 2கொ 13:5
b கலா 5:26
c ரோ 14:4; 2கொ 5:10
d மத் 10:9, 10; லூ 10:7; ரோ 15:27; 1கொ 9:11, 14
e ரோ 2:6-8
f ரோ 8:6, 13
g எபி 3:14; எபி 12:3; வெளி 2:10
h யாக் 2:10
i 1கொ 2:2
j 1கொ 7:19; கலா 5:6; கொலோ 3:10, 11
k 2கொ 5:17; எபே 2:10
l ரோ 9:6
m 2கொ 4:10; பிலி 3:10

எபேசியருக்கு

எழுதப்பட்ட கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1, 2)
கடவுள் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்கள் (3-7)
எல்லாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகக் கூட்டிச்சேர்க்கப்படுகிறது (8-14)
குறித்த காலங்களில் ஒரு “நிர்வாகம்” (10)
ஆஸ்திக்கு “உத்தரவாதமாக” கடவுளுடைய சக்தியால் முத்திரை (13, 14)
எபேசியர்களின் விசுவாசத்துக்காகக் கடவுளுக்கு பவுல் நன்றி சொல்கிறார், அவர்களுக்காக ஜெபிக்கிறார் (15-23)

2 கிறிஸ்துவோடு உயிர் பெற்றிருக்கிறார்கள் (1-10)
பிரித்து வைத்த சுவர் தகர்க்கப்பட்டது (11-22)

3 மற்ற தேசத்து மக்களும் சேர்த்துக்கொள்ளப்படுவதைப் பற்றிய பரிசுத்த ரகசியம் (1-13)
மற்ற தேசத்து மக்களும் கிறிஸ்துவின் சக வாரிசுகள் (6)
கடவுளுடைய நித்திய நோக்கம் (11)
எபேசியர்களுக்கு விவேகம் கிடைக்க வேண்டுமென ஜெபம் (14-21)

4 கிறிஸ்துவின் உடலில் ஒற்றுமை (1-16)
மனிதர்களைப் பரிசுகளாகக் கொடுத்தார் (8)
பழைய சுபாவமும் புதிய சுபாவமும் (17-32)

5 சுத்தமான பேச்சும் நடத்தையும் (1-5)
ஒளியின் பிள்ளைகளாக நடந்துகொள்ளுங்கள் (6-14)
கடவுளுடைய சக்தியால் நிரப்பப்படுங்கள் (15-20)
நேரத்தை மிக நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் (16)
கணவனுக்கும் மனைவிக்கும் அறிவுரை (21-33)

6 பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் அறிவுரை (1-4)
எஜமான்களுக்கும் அடிமைகளுக்கும் அறிவுரை (5-9)
கடவுள் தருகிற முழு கவசம் (10-20)
முடிவான வாழ்த்துக்கள் (21-24)

அதி. 1
a வெளி 2:1, 3

1 கடவுளுடைய விருப்பத்தால் கிறிஸ்து இயேசுவின் அப்போஸ்தலனாக
இருக்கும் பவுல், எபேசுவில்[a] கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபட்டிருக்
கிற உண்மையுள்ள பரிசுத்தவான்களுக்கு எழுதுவது:
2 பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதா
னமும் கிடைக்கட்டும்.

b எபே 2:6

3 நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் கடவுளாகவும் தகப்பனாகவும்
இருக்கிறவருக்குப் புகழ் சேரட்டும். ஏனென்றால், கிறிஸ்துவோடு ஒன்று
பட்டிருக்கிற நமக்குக் கடவுள் தன்னுடைய சக்தியின் மூலம் எல்லா
ஆசீர்வாதங்களையும் பரலோகத்தில் கொடுத்து நம்மை ஆசீர்வதித்திருக்கி
றார்.[b] **4** கிறிஸ்துவோடு ஒன்றுபட்டிருக்கிற நாம் அவருக்கு முன்பாக அன்

c எபே 5:25-27

பானவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் களங்கமில்லாதவர்களாகவும்[c]
இருக்க வேண்டும் என்பதற்காக இந்த உலகம் உண்டாவதற்கு முன்பே நம்
மைத் தேர்ந்தெடுத்தார். **5** அவருடைய பிரியத்தின்படியும் விருப்பத்தின்
படியும்,*[d] இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்மைத் தன்னுடைய சொந்த

d ரோ 8:28

1:5 * வே.வா., “சித்தத்தின்படியும்.”

மகன்களாகத் தத்தெடுப்பதற்கு[a] முன்தீர்மானித்தார்.[b] **6** தனக்குப் புகழ்
சேருவதற்காக, தன்னுடைய அன்பு மகன்[c] மூலம் இப்படி அளவற்ற கரு
ணையை[d] நமக்குத் தயவாகக் காட்டியிருக்கிறார். **7** அவருடைய அள
வற்ற கருணையின்படி, அந்த அன்பு மகன் தன்னுடைய இரத்தத்தை மீட்பு
விலையாகக் கொடுத்தார்.[e] அதனால் நமக்கு விடுதலை கிடைத்திருக்கிறது,
அதாவது நம் குற்றங்களுக்கு மன்னிப்பு கிடைத்திருக்கிறது.[f]

8 எல்லா ஞானத்தோடும் புத்தியோடும்கூட* இந்த அளவற்ற கருணை
யையும் அவர் எங்களுக்கு அதிகமதிகமாகக் கொடுத்து, **9** தன்னுடைய
விருப்பத்தை* பற்றிய பரிசுத்த ரகசியத்தைத்[g] தெரியப்படுத்தினார். இந்த
ரகசியம், ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அவருடைய நோக்
கத்துக்கும் பிரியத்துக்கும் ஏற்றபடி இருக்கிறது. **10** குறித்த காலங்கள்
நிறைவேறும்போது அந்த நிர்வாகம் செயல்பட வேண்டும் என்பது அவ
ருடைய நோக்கமாக இருந்தது. அதாவது, பரலோகத்தில் இருக்கிற எல்லா
வற்றையும் பூமியில் இருக்கிற எல்லாவற்றையும்[h] மறுபடியும் கிறிஸ்துவுக்
குள் ஒன்றாகக் கூட்டிச்சேர்க்க வேண்டும் என்பது அவருடைய நோக்கமாக
இருந்தது. அதன்படியே, கிறிஸ்துவுக்குள் கூட்டிச்சேர்க்கப்பட்டு **11** அவ
ரோடு ஒன்றுபட்டிருக்கிற எங்களை வாரிசுகளாகவும் நியமித்தார்.[i] எல்
லாவற்றையும் தன்னுடைய விருப்பத்தின்படி* தீர்மானித்து நிறைவேற்றுகிற
அவர், தன்னுடைய நோக்கத்தின்படி எங்களை முன்கூட்டியே தேர்ந்தெடுத்
தார்.# **12** கிறிஸ்துமேல் முதன்முதலில் நம்பிக்கை வைத்த எங்கள் மூலம்
தனக்கு மகிமையும் புகழும் சேருவதற்காக எங்களை அப்படித் தேர்ந்
தெடுத்தார். **13** ஆனால் சத்தியத்தின் செய்தியை, அதாவது உங்கள் மீட்
பைப் பற்றிய நல்ல செய்தியை, கேட்ட பின்பு நீங்களும் அவர்மேல் நம்
பிக்கை வைத்தீர்கள். அப்படி நம்பிக்கை வைத்த பின்பு, வாக்குறுதி
கொடுக்கப்பட்ட கடவுளுடைய சக்தியால் அவர் மூலம் நீங்கள் முத்
திரை போடப்பட்டீர்கள்.[j] **14** கடவுளுக்குச் சொந்தமானவர்கள்[k] மீட்பு
விலையால்[l] விடுதலையாகி தங்களுடைய ஆஸ்தியைப் பெறுவார்கள்
என்பதற்கு அவருடைய சக்தியே உத்தரவாதமாக* இருக்கிறது.[m] கடவுள்
தனக்கு மகிமையும் புகழும் சேருவதற்காக இப்படியெல்லாம் செய்தார்.

15 அதனால்தான், நம் எஜமானாகிய இயேசுவின் மேல் நீங்கள் வைத்
திருக்கிற விசுவாசத்தையும், பரிசுத்தவான்கள் எல்லார்மேலும் நீங்கள்
காட்டுகிற அன்பையும் பற்றி நான் கேள்விப்பட்ட சமயத்திலிருந்து
16 உங்களுக்காக இடைவிடாமல் கடவுளுக்கு நன்றி சொல்லி வருகிறேன்.
என்னுடைய ஜெபங்களில் எப்போதும் உங்களை நினைத்துக்கொள்கிறேன்.
17 நீங்கள் அவரைப் பற்றித் திருத்தமாகக் கற்றுக்கொள்ளும்போது,[n] நம்
எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் கடவுளாகவும் மகிமையுள்ள தகப்பனா
கவும் இருக்கிற அவர் உங்களுக்கு ஞானத்தையும் வெளிப்படுத்துதலையும்
கொடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். **18** அவர் உங்களு
டைய மனக்கண்களைத் திறந்திருக்கிறார். அவர் உங்களை அழைத்ததால்
நீங்கள் பெற்றிருக்கிற நம்பிக்கை எப்படிப்பட்டது என்றும், பரிசுத்தவான்க
ளுக்கு அவர் ஆஸ்தியாகத் தரப்போகிற மகத்தான ஆசீர்வாதங்கள் எப்ப

1:8 *வே.வா., "புரிந்துகொள்ளுதலோடும்கூட." **1:9** *வே.வா., "சித்தத்தை." **1:11** *வே.வா., "சித்தத்தின்படி." #நே.மொ., "முன்தீர்மானித்தார்." **1:14** *வே.வா., "முன்பணமாக."

அதி. 1
a ரோ 8:15, 29
ரோ 8:23
b 2தெ 2:13
1பே 1:2
c யோவா 3:35
d ரோ 3:24
e அப் 20:28
ரோ 3:25
வெளி 5:9
f அப் 13:38
கொலோ 1:14
கொலோ 2:13
g ரோ 16:25, 26
h பிலி 2:9, 10
கொலோ 1:19, 20
i ரோ 8:17
எபே 3:5, 6
j 2கொ 1:22
எபே 4:30
வெளி 7:4
k 1பே 2:9
l ரோ 8:23
1தீ 2:5, 6
m 2கொ 5:5
1பே 1:3, 4
n கொலோ 1:9
1தீ 2:3, 4

டிப்பட்டது என்றும்,[a] **19** விசுவாசிகளாகிய* நம்மிடம் அவர் வெளிக்காட்
டுகிற மகா மேன்மையான வல்லமை எப்படிப்பட்டது என்றும் நீங்கள்
தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்திருக்கிறார்.[b]
அந்த மகா வல்லமையையும் ஆற்றலையும் **20** கிறிஸ்துவின் விஷயத்தில்
கடவுள் காட்டினார். எப்படியென்றால், கிறிஸ்துவை உயிரோடு எழுப்பி, பர
லோகத்தில் தன்னுடைய வலது பக்கத்தில் உட்கார வைத்தார்.[c] **21** எல்லா
அரசாங்கத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் தலைமை ஸ்தானத்துக்
கும் மேலாக அவரை உயர்த்தினார். இந்த உலகத்தில்* மட்டுமல்ல, இனிவ
ரும் உலகத்திலும்கூட, எல்லா பெயருக்கும் மேலாக இருக்கும்படி அவரை
உயர்த்தினார்.[d] **22** எல்லாவற்றையும் அவருடைய காலடியில் கீழ்ப்ப
டுத்தி,[e] சபை சம்பந்தப்பட்ட எல்லாவற்றுக்கும் தலையாக அவரை நிய
மித்தார்.[f] **23** அவருடைய உடலாகிய[g] சபை அவரால் நிறைந்திருக்கிறது;
அவரே எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிறைவு செய்கிறார்.

2 அதோடு, குற்றங்களாலும் பாவங்களாலும் செத்த நிலையில் இருந்த
போதிலும், கடவுள் உங்களுக்கு உயிர் தந்தார்.[h] **2** ஒருகாலத்தில்
நீங்கள் இந்த உலகம் போகிற போக்கில் போய்க்கொண்டிருந்தீர்கள்.[i]
காற்றுபோல் நம்மைச் சூழ்ந்திருக்கிற உலகச் சிந்தையை,[j] அதாவது
கீழ்ப்படியாதவர்களிடம் இப்போது செயல்படுகிற சிந்தையை, ஆளுகிறவ
னுடைய விருப்பத்தின்படி வாழ்ந்துகொண்டிருந்தீர்கள்.[k] **3** ஆம், ஒருகா
லத்தில் நாம் எல்லாரும் நம்முடைய பாவ ஆசைகளின்படி நடந்து,[l]
நம்முடைய உடலும் உள்ளமும் ஆசைப்பட்டதையெல்லாம் செய்துகொண்
டிருந்தோம்.[m] மற்றவர்களைப் போல நாமும் இயல்பிலேயே கடவுளுடைய
கடும் கோபத்துக்கு ஆளாகும் பிள்ளைகளாக இருந்தோம்.[n] **4** குற்றங்க
ளால் நாம் செத்த நிலையில்[o] இருந்தபோதிலும், மகா இரக்கமுடைய
கடவுள்[p] நம்மேல் வைத்திருக்கிற அளவுகடந்த அன்பினால்,[q] **5** கிறிஸ்து
வோடு ஒன்றுபட்டிருக்கிற நமக்கு உயிர் தந்திருக்கிறார். அவருடைய அள
வற்ற கருணையால் உங்களைக் காப்பாற்றியிருக்கிறார். **6** கிறிஸ்து இயே
சுவோடு ஒன்றுபட்டிருக்கிற நம்மை உயிரோடு எழுப்பி, அவரோடு
பரலோகத்தில் உட்கார வைத்திருக்கிறார்.[r] **7** கிறிஸ்து இயேசுவோடு ஒன்
றுபட்டிருக்கும் நமக்குத் தயவோடு அவர் தருகிற அளவற்ற கருணையின்
ஈடில்லாத செல்வத்தை இனிவரும் உலகத்தில்* வெளிக்காட்டுவதற்காகவே
இப்படிச் செய்திருக்கிறார்.

8 இந்த அளவற்ற கருணையால்தான் விசுவாசத்தின் மூலம் நீங்கள்
மீட்புப் பெற்றிருக்கிறீர்கள்;[s] இதை நீங்களாகவே சம்பாதிக்கவில்லை, இது
கடவுளுடைய அன்பளிப்பு. **9** இதைச் செயல்களால் பெற முடியாது.[t]
அதனால், பெருமை பேச ஒருவனுக்கும் இடமில்லை. **10** நாம் அவரு
டைய கைவேலைப்பாடாக இருக்கிறோம். நல்ல செயல்கள் செய்வதற்கா
கப் படைக்கப்பட்டு,[u] கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபட்டவர்களாக இருக்கி
றோம்.[v] நாம் செய்ய வேண்டிய அந்த நல்ல செயல்களைக் கடவுள்
முன்கூட்டியே தீர்மானித்திருக்கிறார்.

11 அதனால், இதை எப்போதும் மனதில் வையுங்கள்: பிறப்பால்
நீங்கள் மற்ற தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தீர்கள். மனிதரால் உடலில்

1:19 *வே.வா., “இயேசுவின் சீஷர்களாகிய.” **1:21; 2:7** *வே.வா., “சகாப்தத்தில்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 1
a 1பே 1:3, 4
b 2கொ 13:4
c சங் 110:1; அப் 7:55
d அப் 4:12; பிலி 2:9-11
e சங் 8:6; 1கொ 15:27; எபி 2:8
f மத் 28:18; எபே 5:23; கொலோ 1:18
g ரோ 12:5; எபே 4:16

அதி. 2
h கொலோ 2:13
i ரோ 12:2; எபே 4:17
j 1கொ 2:12
k யோவா 12:31
l 1கொ 6:9-11
m 1பே 4:3
n யோவா 3:36
o கொலோ 2:12, 13
p சங் 145:9
q ரோ 5:8; 1யோ 4:9, 19
r எபே 1:3
s ரோ 4:16
t ரோ 3:20
u கலா 6:15
v எபே 1:3, 4

“விருத்தசேதனம் செய்யப்பட்டவர்கள்” உங்களை “விருத்தசேதனம் செய்யப்
படாதவர்கள்” என்று சொன்னார்கள். **12** நீங்கள் அந்தச் சமயத்தில்
கிறிஸ்துவைப் பற்றித் தெரியாதவர்களாகவும், இஸ்ரவேல் தேசத்துக்கு அன்
னியர்களாகவும், வாக்குறுதி அடங்கிய ஒப்பந்தங்களுக்குச் சம்பந்தமே இல்
லாதவர்களாகவும்,[a] நம்பிக்கை இல்லாதவர்களாகவும், கடவுளைப் பற்றித்
தெரியாதவர்களாகவும் இந்த உலகத்தில் வாழ்ந்து வந்தீர்கள்.[b] **13** ஆனால்,
ஒருகாலத்தில் கடவுளைவிட்டுத் தூரத்தில் இருந்த நீங்கள் இப்போது
கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபட்டு கிறிஸ்துவின் இரத்தத்தால் கடவுளுக்
குப் பக்கத்தில் வந்திருக்கிறீர்கள். **14** கிறிஸ்துதான் நம்முடைய சமாதானத்
துக்குக் காரணமாக இருக்கிறார்.[c] இரண்டு தொகுதிகளுக்கும் நடுவில் இருந்த
சுவரைத் தகர்த்து,[d] அவரே அவர்களை ஒன்றாக்கினார்.[e] **15** அவர் தன்னு
டைய உடலைப் பலியாகக் கொடுத்து, பகைக்குக் காரணமானதும் கட்டளை
களும் ஆணைகளும் அடங்கியதுமான திருச்சட்டத்தை ஒழித்தார். இரண்டு
தொகுதிகளையும் தன்னோடு ஒன்றுபட்ட ஒரே புதிய மக்களாக*[f] உரு
வாக்கி சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அப்படிச் செய்தார். **16** சித்திர
வதைக் கம்பத்தின்*[g] மூலம் இரண்டு தொகுதிகளையும் ஒரே மக்களா
கக் கடவுளோடு முழுமையாய்ச் சமரசமாக்கினார்; தன்னுடைய மரணத்தின்
மூலம் அந்தப் பகையை அழித்தார்.[h] **17** அதுமட்டுமல்ல, கடவுளைவிட்
டுத் தூரத்தில் இருந்த உங்களிடமும் கடவுளுக்குப் பக்கத்தில் இருந்தவர்களி
டமும் வந்து, சமாதானத்தைப் பற்றிய நல்ல செய்தியை அறிவித்தார்.
18 இவர் வழியாகத்தான், இரண்டு தொகுதிகளைச் சேர்ந்த நாம் நம்முடைய
தகப்பனை அவருடைய ஒரே சக்தியால் அணுகும் உரிமையைப் பெற்றிருக்
கிறோம்.

19 அதனால், நீங்கள் இனி சம்பந்தமில்லாதவர்களும் கிடையாது, அன்
னியர்களும் கிடையாது,[i] ஆனால் பரிசுத்தவான்களுடைய சக குடிமக்களா
கவும்[j] கடவுளுடைய வீட்டாராகவும் இருக்கிறீர்கள்.[k] **20** அதோடு, அப்
போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் அஸ்திவாரமாக வைத்துக்
கட்டப்பட்டிருக்கிறீர்கள்.[l] கிறிஸ்து இயேசுவே அதற்கு மூலைக்கல்லாக
இருக்கிறார்.[m] **21** அவரோடு ஒன்றுபட்டிருக்கிற முழு கட்டிடமும் ஒன்
றாக இணைக்கப்பட்டு,[n] யெகோவாவுக்கு* பரிசுத்த ஆலயமாக[o] உருவாகி
வருகிறது. **22** அவரோடு ஒன்றுபட்டிருக்கிற நீங்களும், கடவுள் தன்னு
டைய சக்தியின் மூலம் குடியிருக்கிற இடமாக ஒன்றுசேர்த்துக் கட்டப்பட்டு
வருகிறீர்கள்.[p]

3 இதனால்தான், மற்ற தேசத்தைச் சேர்ந்தவர்களான உங்களுடைய சார்
பில் கிறிஸ்து இயேசுவுக்காகக் கைதியாய் இருக்கிற பவுலாகிய
நான்—*[q] **2** உங்கள் நன்மைக்காகக் கடவுளுடைய அளவற்ற கருணை
யால் எனக்கு நிர்வாகப் பொறுப்பு கொடுக்கப்பட்டதைப்[r] பற்றி, **3** அதா
வது எனக்குப் பரிசுத்த ரகசியம் வெளிப்படுத்தப்பட்டதைப் பற்றி, நிச்சயம்
நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதைப் பற்றி ஏற்கெனவே உங்களுக்குச்
சுருக்கமாக எழுதியிருந்தேன். **4** இதை நீங்கள் வாசிக்கும்போது கிறிஸ்து
வைப் பற்றிய பரிசுத்த ரகசியத்தைக்[s] குறித்து நான் புரிந்துவைத்திருக்கிறேன்

அதி. 2
a ரோ 9:4
b ஏசா 65:1
c கொலோ 1:19, 20
d லேவி 20:26; கொலோ 2:13, 14
e கொலோ 3:11
f 1கொ 12:12; கலா 3:28
g எபி 12:2
h அப் 10:28
i எபே 2:12
j பிலி 3:20
k 1தீ 3:15; எபி 3:6
l 1கொ 12:28
m ஏசா 28:16
n கொலோ 2:19
o 1கொ 3:16; 1கொ 6:19
p 1பே 2:5

அதி. 3
q எபே 4:1
r 1கொ 9:16, 17; கொலோ 1:25, 26
s 1கொ 4:1; எபே 6:19

2:15 *நே.மொ., “மனிதனாக.” **2:16** *சொல் பட்டியலைப் பாருங்கள். **2:21** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:1** *இதன் தொடர்ச்சி, வசனம் 14-ல் இருப்பதாகத் தெரிகிறது.

அதி. 3
a ரோ 11:25 ரோ 16:25, 26
b எபே 2:15, 16
c கொலோ 1: 25–27
d 1கொ 15:9
e 1தீ 1:13, 14
f எபே 1:9, 10
g 1பே 1:10, 12
h 1பே 2:9
i எபே 1:11
j யோவா 14:6 எபி 4:15, 16
k 2தீ 2:10
l 2கொ 4:16
m யோவா 14:23
n கொலோ 2: 6, 7
o கொலோ 1:23
p ரோ 8:35

என்பதைத் தெரிந்துகொள்வீர்கள். **5** அந்த ரகசியம் அவருடைய பரிசுத்த
அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் இப்போது கடவுளுடைய
சக்தியால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அளவுக்கு, கடந்த தலைமுறையைச்
சேர்ந்த யாருக்கும் வெளிப்படுத்தப்படவில்லை.[a] **6** நல்ல செய்தியைக்
கேட்பதன் மூலமும் கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபடுவதன் மூலமும் மற்ற
தேசத்து மக்கள் அவருடைய சக வாரிசுகளாகவும், ஒரே உடலின் உறுப்புக
ளாகவும்,[b] கடவுளுடைய வாக்குறுதியில் நம்மோடு பங்குள்ளவர்களாகவும்
இருப்பார்கள் என்பதுதான் அந்த ரகசியம். **7** கடவுளுடைய அளவற்ற
கருணை என்ற இலவச அன்பளிப்பின் காரணமாக நான் அந்த ரகசி
யத்தை அறிவிக்கும் ஊழியனாக ஆனேன். அந்த அன்பளிப்பை அவர் தன்
னுடைய வல்லமையின் மூலம் எனக்குத் தந்தார்.[c]

8 பரிசுத்தவான்கள் எல்லாரிலும் நான் மிக மிக அற்பமானவனாக
இருந்தாலும்,[d] கிறிஸ்துவிடமிருந்து வரும் எல்லையில்லாத ஆசீர்வாதங்க
ளைப் பற்றிய நல்ல செய்தியை மற்ற தேசத்து மக்களுக்கு அறிவிப்பதற்கா
கக் கடவுள் தன்னுடைய அளவற்ற கருணையை எனக்குத் தந்தார்.[e]
9 அதோடு, எல்லாவற்றையும் படைத்த கடவுளால்* பல காலமாக மறைக்
கப்பட்டிருந்த பரிசுத்த ரகசியம்[f] எப்படி நிர்வகிக்கப்படுகிறது என்பதை எல்
லாருக்குமே புரிய வைப்பதற்காகவும் அவர் தன்னுடைய அளவற்ற கரு
ணையை எனக்குத் தந்தார். **10** பல்வேறு விதங்களில் வெளிப்படுகிற
கடவுளுடைய ஞானம், பரலோகத்தில் இருக்கிற நிர்வாகங்களுக்கும் அதி
காரங்களுக்கும் சபையின் மூலம்[g] இப்போது தெரியப்படுத்தப்பட வேண்
டும் என்பதுதான் இதன் நோக்கம்.[h] **11** கிறிஸ்துவாகிய நம் எஜமான்
இயேசுவின் சம்பந்தமாகக் கடவுள் ஏற்படுத்திய நித்திய நோக்கத்தின்படி
இது இருக்கிறது.[i] **12** அவர் மூலம் நம்மால் கடவுளிடம்* தயக்கமில்லா
மல் பேச முடிகிறது; அவர்மேல் வைத்திருக்கிற விசுவாசத்தால் கடவுளை
நம்பிக்கையோடு தாராளமாக அணுகவும் முடிகிறது.[j] **13** அதனால், உங்
களுக்காக நான் படுகிற இந்த உபத்திரவங்களைப் பார்த்து நீங்கள் மனம்
தளர்ந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இவை
உங்களுக்கு மகிமை சேர்க்கும்.[k]

14 இதனால்தான், பரலோகத் தகப்பனுக்கு முன்னால் மண்டிபோட்டு
வேண்டுகிறேன். **15** பரலோகத்திலும் பூமியிலும் இருக்கிற ஒவ்வொரு
குடும்பமும் அவரால்தான் உருவாகியிருக்கிறது.* **16** அளவில்லாத மகி
மையுள்ள அவர் தன்னுடைய சக்தி தருகிற வல்லமையால் உங்களுக்கு மன
வலிமை கொடுக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.[l] **17** நீங்கள் காட்டுகிற
விசுவாசத்தால் உங்கள் அன்பான இதயங்களில் கிறிஸ்துவை அவர் குடியி
ருக்கச் செய்யும்படியும்[m] வேண்டிக்கொள்கிறேன். நீங்கள் வேரூன்றியவர்க
ளாகவும்[n] அஸ்திவாரத்தின்மேல் நிலையாய் நிற்கிறவர்களாகவும்[o] இருக்க
வேண்டும். **18** அப்போதுதான், பரிசுத்தவான்கள் எல்லாரோடும் சேர்ந்து
கடவுளைப் பற்றிய விஷயங்களின் அகலமும் நீளமும் உயரமும் ஆழமும்
என்னவென்று நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். **19** அதோடு,
அறிவைவிட மிக மிக உயர்ந்த கிறிஸ்துவின் அன்பை[p] நீங்கள் தெரிந்து
கொள்வதற்காகக் கடவுள் தருகிற குணங்களால் நிரப்பப்படவும் முடியும்.

3:9 *நே.மொ., “கடவுளுக்குள்.” **3:12** *அல்லது, “மக்களிடம்.” **3:15** *நே.மொ., “அவரிடமிருந்தே அதன் பெயரைப் பெற்றிருக்கிறது.”

20 நமக்குள் செயல்படுகிற அவருடைய வல்லமையின்படி,[a] நாம் கேட்
பதையும் நினைப்பதையும்விட மிக அதிகமாக, பல மடங்கு அதிகமாக எல்
லாவற்றையும் செய்ய வல்லவரான[b] அவருக்கே, **21** சபையின் மூலமும்
கிறிஸ்து இயேசுவின் மூலமும் தலைமுறை தலைமுறையாக என்றென்றும்
மகிமை சேரட்டும். ஆமென்.*

4 அதனால், நம் எஜமானுக்காகக் கைதியாய் இருக்கிற நான்[c] உங்களைக்
கெஞ்சிக் கேட்கிறேன், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்புக்குத்
தகுதியானவர்களாக நடந்துகொள்ளுங்கள்;[d] **2** எப்போதும் மனத்தாழ்மை
யாகவும்[e] சாந்தமாகவும் பொறுமையாகவும்[f] நடந்துகொள்ளுங்கள்; அன்பி
னால் ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள்;[g] **3** கடவுளுடைய
சக்தி தருகிற ஒற்றுமையைக் காத்துக்கொள்வதற்கும் சமாதானமாக* வாழ்
வதற்கும் ஊக்கமாக முயற்சி செய்யுங்கள்.[h] **4** ஒரே நம்பிக்கை உண்டு,[i]
அந்த நம்பிக்கையைப் பெற நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். அதே
போல், ஒரே உடலும்[j] ஒரே சக்தியும்[k] உண்டு. **5** ஒரே எஜமானும்[l] ஒரே
விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும் உண்டு. **6** எல்லாருக்கும் ஒரே கடவு
ளும் தகப்பனும் உண்டு. அவர் எல்லாருக்கும் மேலானவர், எல்லார் மூல
மும் செயல்படுகிறவர், எல்லாருக்குள்ளும் செயல்படுகிறவர்.

7 அளவற்ற கருணை என்ற இலவச அன்பளிப்பு[m] நம் ஒவ்வொருவருக்
கும் கொடுக்கப்பட்டது; கிறிஸ்து நமக்குக் கொடுத்த அளவின்படி அதைப்
பெற்றுக்கொண்டோம். **8** அதனால்தான், "அவர் மேலே ஏறிப்போன
போது, சிறைபிடிக்கப்பட்ட கைதிகளைப் பிடித்துக்கொண்டுபோனார், மனி
தர்களைப் பரிசுகளாகக் கொடுத்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.[n]
9 'ஏறிப்போய்' என்ற வார்த்தை, அவர் கீழே இறங்கி வந்திருந்தார் என்ப
தையும், அதாவது பூமிக்கு வந்திருந்தார் என்பதையும், அர்த்தப்படுத்து
கிறது, இல்லையா? **10** கீழே இறங்கி வந்திருந்தவர்தான் எல்லா காரியங்
களையும் நிறைவேற்றுவதற்காக எல்லா வானங்களுக்கும் மேலாக[o]
ஏறிப்போனவராகவும் இருக்கிறார்.[p]

11 அவர் சிலரை அப்போஸ்தலர்களாகவும்,[q] சிலரைத் தீர்க்கதரிசிக
ளாகவும்,[r] சிலரை நற்செய்தியாளர்களாகவும்,*[s] சிலரை மேய்ப்பர்களாகவும்
போதகர்களாகவும்[t] சபைக்குக் கொடுத்தார். **12** பரிசுத்தவான்களைச் சரிப்
படுத்துவதற்காகவும்,* ஊழியம் சம்பந்தமான வேலைகளைச் செய்வதற்காக
வும், கிறிஸ்துவின் உடலைப் பலப்படுத்துவதற்காகவும் அவர்களைக்
கொடுத்தார்.[u] **13** நாம் எல்லாரும் விசுவாசத்திலும் கடவுளுடைய மக
னைப் பற்றிய திருத்தமான அறிவிலும் ஒன்றுபட்டு* இருப்பதற்காகவும்,
கிறிஸ்து எந்தளவுக்கு முதிர்ச்சி நிறைந்தவராக இருக்கிறாரோ அந்தளவுக்கு
முழு வளர்ச்சி அடைவதற்காகவும்[v] அவர்களைக் கொடுத்தார். **14** அத
னால், இனி நாம் குழந்தைகளாக இருக்கக் கூடாது. மனிதர்களுடைய தந்தி
ரத்தையும் சூழ்ச்சியான ஏமாற்று வழிகளையும் நம்பி, அலைகளால் அலைக்
கழிக்கப்படவோ அவர்களுடைய போதனைகளாகிய பலவிதமான காற்றால்
இங்குமங்கும் அடித்துச் செல்லப்படவோ கூடாது.[w] **15** அதற்குப் பதிலாக,

---

3:21 * அதாவது, "அப்படியே ஆகட்டும்." **4:3** * நே.மொ., "சமாதானப் பிணைப்பில் ஒன்றிணைக்கப்பட்டவர்களாக." **4:11** * வே.வா., "நல்ல செய்தியை அறிவிக்கிறவர்களாகவும்." **4:12** * வே.வா., "பரிசுத்தவான்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகவும்." **4:13** * வே.வா., "ஒற்றுமையாக."

அதி. 3
a கொலோ 1:29
b மாற் 11:24

அதி. 4
c பிலே 9
d பிலி 1:27
e மத் 11:29; ரோ 12:3; பிலி 2:3; 1பே 5:5
f 1தெ 5:14
g 1கொ 13:4
h 1கொ 1:10; கொலோ 3:15
i 1பே 1:3, 4
j ரோ 12:5
k 1கொ 12:4
l 1கொ 8:6; 1கொ 12:5, 6
m 1கொ 12:11
n சங் 68:18; 1கொ 12:28; எபே 4:11
o எபி 9:24
p அப் 1:9; 1தீ 3:16
q மத் 10:2-4
r 1கொ 12:28
s அப் 21:8
t அப் 13:1; யாக் 3:1
u 1கொ 14:26
v 1கொ 14:20
w எபி 13:9

சத்தியத்தைப் பேசி, தலையாக இருக்கிற கிறிஸ்துவின்[a] கீழ் எல்லாவற்றி
லேயும் அன்பினால் வளருகிறவர்களாக இருக்க வேண்டும். **16** அவரால்
தான் எல்லா உடலுறுப்புகளும்,[b] அவற்றுக்கு உதவி செய்கிற எல்லா மூட்
டுகளாலும் ஒன்றோடொன்று இசைவாக இணைக்கப்பட்டு ஒற்றுமையாக
வேலை செய்கின்றன; ஒவ்வொரு உறுப்பும் அதனதன் வேலையைச் சரியா
கச் செய்வதால் முழு உடலும் வளர்ச்சியடைந்து அன்பால் பலப்படுத்தப்
படுகிறது.[c]

17 அதனால், உலக மக்கள் தங்களுடைய வீணான எண்ணங்களின்படி[d]
நடப்பதுபோல் நீங்களும் இனி நடக்கக் கூடாதென்று[e] நம் எஜமான் முன்
னால் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். **18** அவர்கள் வேண்டுமென்றே
கடவுளைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள், அவர்களுடைய இதயம்
மரத்துப்போயிருக்கிறது; அதனால் அவர்களுடைய மனம் இருண்டு போயி
ருக்கிறது, கடவுள் தருகிற வாழ்வு கிடைக்காதபடி அவர்கள் விலக்கி வைக்
கப்பட்டிருக்கிறார்கள். **19** ஒழுக்க உணர்வு துளிகூட இல்லாமல், எல்லா
வித அசுத்தமான செயல்களையும் பேராசையோடு செய்து வருவதற்காக
வெட்கங்கெட்ட நடத்தைக்கு*[f] தங்களையே கொடுத்துவிட்டார்கள்.

20 ஆனால், கிறிஸ்து இப்படி நடந்துகொண்டதாக நீங்கள் கற்றுக்
கொள்ளவில்லை. **21** இயேசுவிடம் இருக்கிற சத்தியத்தின்படியே நீங்கள்
அவரிடம் கேட்டு, அவர் மூலம் கற்பிக்கப்பட்டவர்களாக இருந்தால் அது
உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். **22** உங்களுடைய முந்தின நடத்
தையை மாற்றிக்கொள்ளவும் வஞ்சிக்கிற ஆசைகளால்[g] சீரழிந்துவருகிற
பழைய சுபாவத்தைக் களைந்துபோடவும் கற்பிக்கப்பட்டீர்கள்.[h] **23** உங்
கள் மனதை ஆதிக்கம் செலுத்துகிற மனப்பான்மையை* புதுப்பித்துக்
கொண்டே இருங்கள்.[i] **24** கடவுளுடைய விருப்பத்தின்படி,* உண்மை
யான நீதிக்கும் உண்மைத்தன்மைக்கும்# ஏற்றபடி உருவாக்கப்பட்ட புதிய
சுபாவத்தை அணிந்துகொள்ளுங்கள்.[j]

25 நீங்கள் இப்போது பொய்யைக் களைந்திருப்பதால், ஒவ்வொருவரும்
மற்றவர்களிடம் எப்போதும் உண்மை பேசுங்கள்;[k] ஏனென்றால், நாம் ஒரே
உடலின் உறுப்புகளாக இருக்கிறோம்.[l] **26** பயங்கர கோபம் வந்தாலும்,
பாவம் செய்யாதீர்கள்;[m] சூரியன் மறைவதற்கு முன்னால் உங்கள்
கோபம் தணிய வேண்டும்.[n] **27** பிசாசுக்கு எந்த வாய்ப்பும் கொடுத்து
விடாதீர்கள்.*[o] **28** திருடுகிறவன் இனி திருடாமல் இருக்க வேண்டும்;
இல்லாதவர்களுக்குக் கொடுப்பதற்காக,[p] தானே தன் கையால் பாடு
பட்டு நேர்மையாக உழைக்க வேண்டும்.[q] **29** கெட்ட வார்த்தை ஒன்றும்
உங்கள் வாயிலிருந்து வர வேண்டாம்.[r] கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன
மாய் இருப்பதற்காக, சூழ்நிலைக்கு ஏற்றபடி, அவர்களைப் பலப்படுத்துகிற
நல்ல வார்த்தைகளையே பேசுங்கள்.[s] **30** அதோடு, நீங்கள் மீட்புவிலை
யால் விடுவிக்கப்படும் நாளுக்கென்று[t] முத்திரையாகப் பெற்றிருக்கிற[u]
கடவுளுடைய சக்தியைத் துக்கப்படுத்தாமல்* இருங்கள்.[v]

31 எல்லா விதமான மனக்கசப்பையும்,[w] சினத்தையும், கடும்

அதி. 4
a 1கொ 11:3, கொலோ 1:18
b 1கொ 12:27
c கொலோ 2:19
d ரோ 1:21
e 1பே 4:3
f கலா 5:19
g ரோ 7:23
h ரோ 6:6, கொலோ 3:9
i சங் 51:10, ரோ 12:2
j கொலோ 3:10
k சக 8:16, கொலோ 3:8, 9, வெளி 21:8
l ரோ 12:5
m சங் 4:4
n லேவி 19:17, கொலோ 3:13
o யாக் 4:7
p அப் 20:35, 1தெ 4:11, 12
q 2தெ 3:10
r மத் 15:11, யாக் 3:10
s கொலோ 4:6
t ரோ 8:23
u எபே 1:13
v ஏசா 63:10
w யாக் 3:14

4:19 *சொல் பட்டியலைப் பாருங்கள். **4:23** *வே.வா., "உங்கள் மனதை உந்துவிக்கிற சக்தியை." **4:24** *வே.வா., "சித்தத்தின்படி." #வே.வா., "பற்றுமாறாத குணத்துக்கும்." **4:27** *வே.வா., "இடம் கொடுத்துவிடாதீர்கள்." **4:30** *வே.வா., "வேதனைப்படுத்தாமல்."

கோபத்தையும், கூச்சலையும், பழிப்பேச்சையும்,[a] மற்ற எல்லா விதமான
கெட்ட குணத்தையும் உங்களைவிட்டு நீக்கிப்போடுங்கள்.[b] **32** ஒருவ
ருக்கொருவர் கருணையும் கரிசனையும் காட்டுங்கள்.[c] கிறிஸ்துவின் மூலம்
கடவுள் உங்களைத் தாராளமாக மன்னித்ததுபோல், நீங்களும் ஒருவரை
ஒருவர் தாராளமாக மன்னியுங்கள்.[d]

5 அதனால், அன்பான பிள்ளைகளைப் போல் கடவுளுடைய முன்மாதி
ரியைப் பின்பற்றுங்கள்.[e] **2** கிறிஸ்து நமக்காக* நறுமணம் வீசுகிற
காணிக்கையாகவும் பலியாகவும்[f] கடவுளுக்குத் தன்னை அர்ப்பணித்து,
நம்மேல்# அன்பு காட்டியது போலவே[g] நீங்களும் தொடர்ந்து அன்பின்
வழியில் நடங்கள்.[h]

3 பாலியல் முறைகேடு,* எல்லா விதமான அசுத்தம், பேராசை ஆகிய
வற்றைப் பற்றிய பேச்சுகூட உங்கள் மத்தியில் இருக்கக் கூடாது.[i] இவை
பரிசுத்தமான மக்களுக்கு ஏற்றவை அல்ல.[j] **4** அதேபோல், வெட்கக்கே
டான நடத்தை, முட்டாள்தனமான பேச்சு, ஆபாசமான கேலிப் பேச்சு ஆகி
யவை உங்கள் மத்தியில் இருக்கக் கூடாது.[k] இவையெல்லாம்கூட ஏற்றவை
அல்ல, கடவுளுக்கு நன்றி சொல்வதுதான் ஏற்றது.[l] **5** பாலியல் முறை
கேட்டில்* ஈடுபடுகிறவனோ,[m] அசுத்தமான செயல்களைச் செய்கிறவனோ,
பேராசை பிடித்தவனோ,[n] அதாவது சிலை வழிபாடு செய்கிறவனோ, கிறிஸ்
துவுக்கும் கடவுளுக்கும் உரிய அரசாங்கத்துக்குள் அனுமதிக்கப்படவே
மாட்டான்#[o] என்பது உங்களுக்குத் தெரியும். சொல்லப்போனால், அதை
நன்றாகப் புரிந்துகொண்டும் இருக்கிறீர்கள்.

6 இப்படிப்பட்ட காரியங்களால்தான், கீழ்ப்படியாதவர்கள்மேல் கடவு
ளுடைய கடும் கோபம் வரப்போகிறது. அதனால், ஒருவனும் உங்களை
வீண் வார்த்தைகளால் ஏமாற்றிவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
7 அவர்களோடு எந்தச் சம்பந்தமும் வைத்துக்கொள்ளாதீர்கள். **8** ஒருகா
லத்தில் நீங்கள் இருளாக இருந்தீர்கள். இப்போதோ நம் எஜமானோடு
ஒன்றுபட்டிருப்பதால்,[p] ஒளியாக இருக்கிறீர்கள்.[q] தொடர்ந்து ஒளியின் பிள்
ளைகளாக நடந்துகொள்ளுங்கள். **9** ஏனென்றால், ஒளி எங்கேயோ அங்
கேதான் எல்லா விதமான நல்ல குணமும் நீதியும் நேர்மையும் இருக்கும்.*[r]
10 நம் எஜமானுக்கு எது பிரியமானது என்பதை எப்போதும் நிச்சயப்
படுத்திக்கொள்ளுங்கள்.[s] **11** இருளுக்குரிய பலனற்ற செயல்களை அவர்
களோடு சேர்ந்து செய்வதை நிறுத்துங்கள்.[t] அதற்குப் பதிலாக, அவற்றை
வெட்டவெளிச்சமாக்குங்கள். **12** அவர்கள் ரகசியமாகச் செய்கிற காரியங்
களைச் சொல்வதற்குக்கூட வெட்கக்கேடாக இருக்கிறது. **13** வெளிச்சத்
துக்குக் கொண்டுவரப்படுகிற* எல்லா காரியங்களும் ஒளியால் வெட்ட
வெளிச்சமாகின்றன. இப்படி, வெட்டவெளிச்சமாகிற எல்லாமே ஒளியாக
இருக்கின்றன. **14** அதனால், "தூங்குகிறவனே, விழித்துக்கொள். மரணத்தி
லிருந்து எழுந்திரு.[u] கிறிஸ்து உன்மேல் ஒளிவீசுவார்" என்று சொல்லப்பட்
டிருக்கிறது.[v]

15 அதனால், நீங்கள் ஞானமில்லாதவர்களாக நடக்காமல், ஞானமுள்ள

5:2 * அல்லது, "உங்களுக்காக." # அல்லது, "உங்கள்மேல்." **5:3, 5** * சொல் பட்டிய
லைப் பாருங்கள். **5:5** # நே.மொ., "அரசாங்கத்தை ஆஸ்தியாகப் பெற மாட்டான்."
5:9 * நே.மொ., "ஏனென்றால், எல்லா விதமான நல்ல குணமும் நீதியும் நேர்மையும்
ஒளியின் கனிகளாக இருக்கின்றன." **5:13** * வே.வா., "கண்டனத்துக்குரிய."

அதி. 4
a கொலோ 3:8
b தீத் 3:2
c கொலோ 3:12; 1பே 3:8
d மத் 6:14; மத் 18:35; மாற் 11:25

அதி. 5
e மத் 5:48; லூ 6:36
f யாத் 29:18
g யோவா 13:34; 1யோ 3:23
h 1கொ 16:14
i 1கொ 5:11; கொலோ 3:5
j 1தெ 4:3
k கொலோ 3:8
l 1தெ 5:18
m அப் 15:28, 29
n 1தீ 3:8; தீத் 1:7
o 1கொ 6:9, 10; கலா 5:19, 21
p 1பே 2:9
q மத் 5:16; யோவா 12:36
r கலா 5:22, 23
s ரோ 12:2
t ரோ 13:12, 13; 2கொ 6:14
u எபே 2:1; கொலோ 2:13
v யோவா 8:12

வர்களாக நடப்பதற்கு அதிக கவனம் செலுத்துங்கள். **16** உங்கள்
நேரத்தை மிக நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.*[a] ஏனென்றால்,
நாட்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. **17** அதனால், புத்தியில்லா
மல் நடந்துகொள்ளாதீர்கள். அதற்குப் பதிலாக, யெகோவாவின்* விருப்
பம்# என்னவென்று புரிந்துகொள்ள முயற்சி செய்துகொண்டே இருங்
கள்.[b] **18** அதோடு, உங்களைச் சீரழிக்கிற* குடிவெறியை விட்டுவிட்டு,[c]
எப்போதும் கடவுளுடைய சக்தியால் நிரப்பப்படுங்கள். **19** சங்கீதங்களை
யும் புகழ் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் ஒன்றுசேர்ந்து# பாடுங்
கள்;[d] உங்கள் இதயத்தில் யெகோவாவை* புகழ்ந்து[e] இனிமையான
பாடல்களைப் பாடுங்கள்.[f] **20** நம் கடவுளாகவும் தகப்பனாகவும் இருக்கி
றவருக்கு நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில்[g] எல்லாவற்றுக்
காகவும் எப்போதும் நன்றி சொல்லுங்கள்.[h]

21 கிறிஸ்துவுக்குப் பயந்து, ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு நடங்கள்.[i]
22 மனைவிகளே, நம்முடைய எஜமானுக்கு நீங்கள் கட்டுப்பட்டு நடப்பது
போல், உங்கள் கணவருக்குக் கட்டுப்பட்டு நடங்கள்.[j] **23** ஏனென்றால்,
கிறிஸ்து சபைக்குத் தலையாக இருப்பதுபோல்,[k] கணவனும் மனைவிக்குத்
தலையாக இருக்கிறான்.[l] கிறிஸ்து தன்னுடைய உடலாகிய சபையின் மீட்
பராக இருக்கிறார். **24** கிறிஸ்துவுக்குச் சபை கட்டுப்பட்டு நடப்பதுபோல்
மனைவிகளும் தங்கள் கணவருக்கு எல்லா விஷயத்திலும் கட்டுப்பட்டு
நடக்க வேண்டும். **25** கணவர்களே, சபைக்காகக் கிறிஸ்து தன்னையே
கொடுத்து அதன்மீது அன்பு காட்டியதுபோல்[m] நீங்களும் உங்கள் மனைவி
மீது தொடர்ந்து அன்பு காட்டுங்கள்.[n] **26** கடவுளுடைய வார்த்தையாகிய
தண்ணீரால்* சபையைச் சுத்தப்படுத்திப் புனிதமாக்குவதற்காக அவர் அப்
படிச் செய்தார்.[o] **27** எந்தவொரு கறையோ எந்தவொரு குறையோ இல்
லாமல் பரிசுத்தமான, களங்கமில்லாத[p] சபையாக அது தனக்கு முன்னால்
பிரகாசிக்க வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்தார்.[q]

28 அதேபோல, கணவர்களும் தங்கள் சொந்த உடல்மீது அன்பு காட்டு
வதுபோல் தங்கள் மனைவிமீதும் அன்பு காட்ட வேண்டும். தன் மனைவி
மீது அன்பு காட்டுகிறவன் தன்மீதே அன்பு காட்டுகிறான். **29** ஒருவனும்
தன் உடலை வெறுக்க மாட்டான், அதைக் கவனித்துக்கொண்டு நெஞ்சார
நேசிப்பான். கிறிஸ்துவும் இப்படித்தான் சபையை நேசிக்கிறார். **30** ஏனென்
றால், நாம் அவருடைய உடலின் உறுப்புகளாக இருக்கிறோம்.[r] **31** “இதன்
காரணமாக, மனிதன் தன்னுடைய அப்பாவையும் அம்மாவையும் விட்
டுத் தன் மனைவியோடு சேர்ந்திருப்பான்;* அவர்கள் இரண்டு பேரும்
ஒரே உடலாக# இருப்பார்கள்.”[s] **32** இந்தப் பரிசுத்த ரகசியம்[t] மகத்தானது.
இப்போது கிறிஸ்துவையும் சபையையும் பற்றித்தான் சொல்கிறேன்.[u]
33 இருந்தாலும், நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள்மீது அன்பு காட்டுவது
போல், உங்கள் மனைவிமீதும் அன்பு காட்ட வேண்டும்;[v] மனைவி தன் கண
வனுக்கு ஆழ்ந்த மரியாதை காட்ட வேண்டும்.[w]

அதி. 5
a கொலோ 4:5
b ரோ 12:2; 1தெ 4:3; 1பே 4:2
c ஏசா 5:11
d யாக் 5:13
e அப் 16:25; கொலோ 3:16
f சங் 33:2, 3
g கொலோ 3:17
h 1தெ 5:18
i பிலி 2:3; 1பே 5:5
j கொலோ 3:18; தீத் 2:4, 5; 1பே 3:1
k 1கொ 11:3
l ரோ 7:2
m அப் 20:28
n 1பே 3:7
o யோவா 17:17
p எபே 1:4; கொலோ 1:21, 22
q தீத் 2:13, 14
r ரோ 12:5; எபே 1:22, 23
s ஆதி 2:24; மத் 19:5
t எபே 1:9, 10; கொலோ 1:26, 27
u எபே 3:5, 6
v கொலோ 3:19
w 1பே 3:5, 6

5:16 *நே.மொ., “குறித்த நேரத்தை விலைக்கு வாங்குங்கள்.” **5:17, 19** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **5:17** #வே.வா., “சித்தம்.” **5:18** *வே.வா., “முரட்டுத்தனமாக நடக்க வைக்கிற.” **5:19** #அல்லது, “உங்களுக்குள்.” **5:26** *நே.மொ., “தண்ணீர் குளியலால்.” **5:31** *இதற்கான மூல வார்த்தை, பசைபோல் இறுக ஒட்டிக்கொண்டிருப்பதை அர்த்தப்படுத்துகிறது. #நே.மொ., “சதையாக.”

6 பிள்ளைகளே, நம் எஜமான் விரும்புகிறபடி உங்கள் அப்பாவுக்கும்
அம்மாவுக்கும் கீழ்ப்படிந்து நடங்கள்,[a] இதுதான் சரியானது.
2 “உங்கள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மதிப்புக் கொடுங்கள்”[b] என்ப
துதான் வாக்குறுதியோடு கொடுக்கப்பட்ட முதலாம் கட்டளை. **3** “நீ சீரும்
சிறப்புமாக இருப்பாய்,* பூமியில் நீண்ட காலம் வாழ்வாய்” என்பதுதான்
அந்த வாக்குறுதி. **4** அப்பாக்களே, உங்களுடைய பிள்ளைகளுக்கு எரிச்ச
லூட்டாதீர்கள்.[c] அதற்குப் பதிலாக, யெகோவா* சொல்கிற விதத்தில் அவர்க
ளைக் கண்டித்து,#[d] அவர் தருகிற புத்திமதியின்படி△ வளர்த்து வாருங்கள்.[e]

5 அடிமைகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதுபோல், இந்த உல
கத்தில் இருக்கிற உங்கள் எஜமான்களுக்குப் பயத்தோடும் மரியாதை
யோடும் உண்மை மனதோடும் கீழ்ப்படிந்து நடங்கள்.[f] **6** மனிதர்களைப்
பிரியப்படுத்துவதற்காக, மற்றவர்கள் பார்க்கும்போது மட்டுமே கீழ்ப்படியா
தீர்கள்.[g] கிறிஸ்துவின் அடிமைகளாகக் கடவுளுடைய விருப்பத்தை*
முழு மூச்சோடு நிறைவேற்றுங்கள்.[h] **7** மனிதர்களுக்கு அல்ல, யெகோ
வாவுக்கே* கீழ்ப்படிவதாக நினைத்து, நல்ல எண்ணத்தோடு வேலை
செய்யுங்கள்.[i] **8** ஏனென்றால், அடிமையாக இருந்தாலும் சுதந்திரமானவ
னாக இருந்தாலும் அவனவன் செய்கிற நன்மையின்படியே யெகோவாவி
டமிருந்து* அவனுக்குப் பலன் கிடைக்கும்[j] என்பதை அறிந்திருக்கிறீர்கள்.
9 எஜமான்களே, நீங்களும் இதை மனதில் வைத்து உங்கள் அடிமைகளை
நடத்துங்கள், அவர்களை மிரட்டாதீர்கள். ஏனென்றால், அவர்களுக்கும்
உங்களுக்கும் எஜமான் பரலோகத்தில் இருக்கிறார்[k] என்பதையும், அவர்
பாரபட்சம் காட்டாதவர் என்பதையும் அறிந்திருக்கிறீர்கள்.

10 கடைசியாக நான் சொல்வது இதுதான்: நம் எஜமான் தருகிற மகா
பலத்தால் வலிமை[l] பெற்றுக்கொண்டே இருங்கள். **11** பிசாசின் சூழ்ச்சி
களை* நீங்கள் உறுதியோடு எதிர்த்து நிற்க வேண்டுமானால், கடவுள் தருகிற
முழு கவசத்தையும் போட்டுக்கொள்ளுங்கள்.[m] **12** ஏனென்றால், மனிதர்க
ளோடு* அல்ல, அரசாங்கங்களோடும், அதிகாரிகளோடும், இந்த இருண்ட
உலகத்தின் தலைவர்களோடும், பரலோகத்தில் இருக்கிற பொல்லாத தூதர்
கூட்டத்தோடும்[n] நாம் போராட# வேண்டியிருக்கிறது.[o] **13** அதனால்,
கடவுள் தருகிற முழு கவசத்தையும் போட்டுக்கொள்ளுங்கள்;[p] அப்போது
தான், பொல்லாத நாளில் அவர்களை உங்களால் எதிர்க்கவும் எல்லாவற்றை
யும் முழுமையாகச் செய்து முடித்து உறுதியோடு நிற்கவும் முடியும்.

14 அதனால், சத்தியத்தை உங்கள் இடுப்புவாராகக்[q] கட்டிக்கொண்டும்,
நீதியை மார்புக் கவசமாகப் போட்டுக்கொண்டும்,[r] **15** சமாதானத்தின்
நல்ல செய்தியைக் காலணியாகப் போட்டுக்கொண்டும் உறுதியாக நில்லுங்
கள்.*[s] **16** இவை எல்லாவற்றோடும்கூட, பொல்லாதவன் எறிகிற நெருப்

6:3 *வே.வா., “வளமாக வாழ்வாய்.” **6:4, 7, 8** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **6:4** #‘கண்டித்தல்’ என்பதற்கான மூல வார்த்தைக்கு கட்டுப்படுத்துவது, கட்டளையிடுவது, கற்பிப்பது, திருத்துவது, அறிவுறுத்துவது, தண்டிப்பது, புத்தி சொல்லுவது, பயிற்றுவிப்பது என பல அர்த்தங்கள் இருக்கின்றன. △வே.வா., “அறிவுரையின்படி; ஆலோசனையின்படி.” நே.மொ., “அவருடைய சிந்தையை அவர்களுடைய மனதில் பதிய வைக்கும் விதத்தில்.” **6:6** *வே.வா., “சித்தத்தை.” **6:11** *வே.வா., “சதித்திட்டங்களை.” **6:12** *நே.மொ., “சதையோடும் இரத்தத்தோடும்.” #நே.மொ., “மல்யுத்தம் செய்ய.” **6:15** *நே.மொ., “சமாதானத்தின் நல்ல செய்தியை அறிவிக்க உங்கள் கால்களைத் தயார்நிலையில் வைத்துக்கொள்ளுங்கள்.”

அதி. 6

a நீதி 1:8; நீதி 6:20; கொலோ 3:20
b யாத் 20:12; உபா 5:16; நீதி 20:20; நீதி 23:22; மத் 15:4
c கொலோ 3:21
d நீதி 13:24
e உபா 6:6, 7; நீதி 3:11; நீதி 19:18; நீதி 22:6
f 1தீ 6:1; 1பே 2:18
g கொலோ 3:22
h லூ 10:27
i 1கொ 10:31
j கொலோ 3: 23, 24
k 1கொ 7:22
l எபே 3:16
m ரோ 13:12
n 2பே 2:4
o 2தீ 4:7
p 2கொ 6:4, 7
q ஏசா 11:5
r நீதி 4:23; ஏசா 59:17
s ஏசா 52:7; ரோ 10:15

புக் கணைகளையெல்லாம்*[a] அணைப்பதற்காக, விசுவாசத்தைப் பெரிய
கேடயமாகப் பிடித்துக்கொள்ளுங்கள்.[b] **17** அதோடு, மீட்பைத் தலைக்
கவசமாக அணிந்துகொள்ளுங்கள்;[c] கடவுளுடைய சக்தியால் கொடுக்கப்
பட்டிருக்கிற அவருடைய வார்த்தையை[d] வாளாக எடுத்துக்கொள்ளுங்கள்.
18 அதுமட்டுமல்ல, எல்லா சந்தர்ப்பங்களிலும் கடவுளுடைய சக்தியின்
உதவியால்[e] எல்லா விதமான ஜெபங்களையும்[f] மன்றாட்டுகளையும் ஏறெ
டுங்கள். அதற்காக விழிப்புடன் இருந்து, பரிசுத்தவான்கள் எல்லாருக்கா
கவும் எப்போதும் மன்றாடுங்கள். **19** நல்ல செய்தியின் பரிசுத்த ரகசியத்
தைத்[g] தைரியமாகப் பேசுவதற்குக் கடவுள் என் வாயில் வார்த்தைகளைத்
தர வேண்டுமென்று எனக்காகவும் ஜெபம் செய்யுங்கள். **20** இந்த நல்ல
செய்திக்காகச் சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கிற தூதுவனாகிய[h] நான்,
அதைப் பற்றிப் பேச வேண்டிய விதத்தில் தைரியமாகப் பேசுவதற்கு எனக்
காக ஜெபம் செய்யுங்கள்.

21 நான் எப்படி இருக்கிறேன், என்ன செய்து வருகிறேன் என்பதை
யெல்லாம் அன்பான சகோதரரும் நம் எஜமானுடைய உண்மையுள்ள ஊழி
யருமான தீகிக்கு[i] உங்களிடம் சொல்வார்.[j] **22** எங்களைப் பற்றிய விஷ
யங்களைத் தெரியப்படுத்துவதற்கும், உங்கள் இதயங்களுக்கு ஆறுதல்
தருவதற்கும்தான் அவரை உங்களிடம் அனுப்புகிறேன்.

23 பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் சகோதரர்களுக்குச் சமாதானமும் விசுவாசத்
தோடுகூடிய அன்பும் கிடைக்கட்டும். **24** நம் எஜமானாகிய இயேசு
கிறிஸ்துமேல் அழியாத அன்பு காட்டுகிற எல்லாருக்கும் கடவுளுடைய
அளவற்ற கருணை கிடைக்கட்டும்.

6:16 * வே.வா., “அம்புகளையெல்லாம்.”

அதி. 6
a 1பே 5:8, 9
b 1யோ 5:4
c ஏசா 59:17; 1தெ 5:8
d எபி 4:12
e யூ 20
f கொலோ 4:2
g கொலோ 4:3
h 2கொ 5:20
i 2தீ 4:12; தீத் 3:12
j கொலோ 4: 7, 8

பிலிப்பியருக்கு

எழுதப்பட்ட கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1, 2)
- கடவுளுக்கு நன்றி; பவுலின் ஜெபம் (3-11)
- பிரச்சினைகள் மத்தியிலும் நல்ல செய்தி பரவுகிறது (12-20)
- வாழ்ந்தால் கிறிஸ்துவுக்காக வாழ்வேன், செத்தாலும் லாபம்தான் (21-26)
- கிறிஸ்துவின் நல்ல செய்திக்குத் தகுதியானவர்களாக இருங்கள் (27-30)

2 கிறிஸ்தவர்கள் மனத்தாழ்மையாக இருக்க வேண்டும் (1-4)
- கிறிஸ்துவின் மனத்தாழ்மையும் உயர்ந்த நிலையும் (5-11)
- உங்கள் மீட்புக்காக உழையுங்கள் (12-18)
  - விளக்குகளாக ஒளிவீசுங்கள் (15)
- தீமோத்தேயுவும் எப்பாப்பிரோதீத்துவும் அனுப்பப்படுகிறார்கள் (19-30)

3 மனிதர்களுடைய காரியங்கள்மேல் நம்பிக்கை வைப்பதில்லை (1-11)
- கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டம் என்று நினைக்கிறேன் (7-9)

பரிசை எட்டிப்பிடிக்க ஓடுகிறேன் (12-21)
பரலோகத்தில் குடியுரிமை (20)

4 ஒற்றுமை, சந்தோஷம், சரியான சிந்தனைகள் (1-9)
எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள் (6, 7)

பிலிப்பியர்கள் கொடுத்த பரிசுப்பொருள்களுக்கு நன்றி சொல்கிறார் (10-20)

முடிவான வாழ்த்துக்கள் (21-23)

---

1 பிலிப்பி நகரத்தில்,[a] கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபட்டிருக்கிற பரிசுத்
தவான்கள் எல்லாருக்கும், கண்காணிகளுக்கும், உதவி ஊழியர்களுக்
கும்[b] கிறிஸ்து இயேசுவின் அடிமைகளான பவுலும் தீமோத்தேயுவும்
எழுதுவது:

2 பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதா
னமும் கிடைக்கட்டும்.

3 என் மன்றாட்டுகளில் உங்களை நினைக்கும்போதெல்லாம் என் கடவு
ளுக்கு நன்றி சொல்கிறேன். **4** நீங்கள் நல்ல செய்தியை ஏற்றுக்கொண்ட
நாள்முதல் இந்த நாள்வரை அதை அறிவிக்கும் வேலைக்காக உங்களு
டைய பங்கைச் செய்திருக்கிறீர்கள். **5** அதனால், உங்கள் எல்லாருக்காக
வும் நான் எப்போதும் சந்தோஷத்தோடு மன்றாடுகிறேன்.[c] **6** உங்களில்
இந்த நல்ல வேலையை ஆரம்பித்த கடவுள் அதை கிறிஸ்து இயேசு
வின் நாள் வருவதற்குள்[d] செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையோடு இருக்
கிறேன்.[e] **7** உங்கள் எல்லாரையும் பற்றி நான் இப்படி நினைப்பது முற்
றிலும் சரிதான். ஏனென்றால், நான் கைதியாக[f] இருந்தபோதும் சரி, நல்ல
செய்திக்காக வழக்காடி, அதற்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெற முயற்சி
செய்தபோதும்[g] சரி, நீங்கள் எல்லாரும் எனக்கு ஆதரவாக இருந்தீர்கள்.
என்னோடு சேர்ந்து நீங்களும் கடவுளுடைய அளவற்ற கருணையிலிருந்து
நன்மை அடைந்தீர்கள். அதனால், நீங்கள் என் இதயத்தில் இடம்பிடித்து
விட்டீர்கள்.

8 கிறிஸ்து இயேசு காட்டுகிற அதே கனிவான பாசத்தோடு உங்கள்
எல்லாரையும் வந்து பார்க்க நான் மிகவும் ஏங்குகிறேன், இதற்குக் கடவுள்
தான் சாட்சி. **9** உங்களுடைய அன்பு, திருத்தமான அறிவோடும்[h] முழு
மையான பகுத்தறிவோடும்[i] அதிகமதிகமாகப் பெருக வேண்டும்[j] என்றும்,
10 மிக முக்கியமான காரியங்கள் எவை என்று நீங்கள் நிச்சயப்படுத்திக்
கொள்ள வேண்டும்[k] என்றும் தொடர்ந்து ஜெபம் செய்கிறேன். கிறிஸ்துவின்
நாள் வரும்வரை நீங்கள் குற்றமற்றவர்களாகவும், மற்றவர்களுடைய விசு
வாசத்தைக் குலைக்காதவர்களாகவும்[l] இருப்பதற்காக இப்படி ஜெபம் செய்
கிறேன். **11** இயேசு கிறிஸ்துவின் உதவியோடு நீதியான செயல்களை[m]
ஏராளமாகச் செய்து* கடவுளுக்கு மகிமையையும் புகழையும் சேர்ப்பவர்க
ளாக இருப்பதற்காகவும் இப்படி ஜெபம் செய்கிறேன்.

12 சகோதரர்களே, என்னுடைய சூழ்நிலை நல்ல செய்தி பரவுவதற்கு
உதவியாக இருந்ததே தவிர, தடையாக இருக்கவில்லை என்பதை நீங்கள்

1:11 * நே.மொ., "நீதியான கனிகளால் நிறைந்து."

அதி. 1
a அப் 16:12
b 1தீ 3:1, 8
c 1தெ 1:2
d 1கொ 1:8
e பிலி 2:13
f எபே 3:1; பிலி 1:13; கொலோ 4:18; 2தீ 1:8; பிலே 13
g அப் 24:10, 14; அப் 25:10-12
h யோவா 17:3
i எபி 5:14
j 1தெ 3:12
k ரோ 12:2
l ரோ 14:13, 21
m யோவா 15:5

தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். **13** நான் கிறிஸ்துவுக்
காகத்தான் கைதியாக[a] இருக்கிறேன் என்பது ரோம அரசனின் மெய்க்காவ
லர்கள் அனைவருக்கும் மற்ற எல்லாருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கிறது.[b]
14 நான் கைதியாக இருப்பதைப் பார்த்து, நம் எஜமானுக்கு ஊழியம் செய்
கிற சகோதரர்களில் பெரும்பாலோருக்கு உறுதியான நம்பிக்கை கிடைத்தி
ருக்கிறது. அதனால், கடவுளுடைய வார்த்தையைப் பயமில்லாமல் இன்னும்
தைரியமாக அறிவித்து வருகிறார்கள்.

15 உண்மைதான், ஒரு தொகுதியைச் சேர்ந்தவர்கள் பொறாமையாலும்
போட்டியாலும் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்து வருகிறார்கள், ஆனால்
இன்னொரு தொகுதியைச் சேர்ந்தவர்கள் நல்ல எண்ணத்தால் பிரசங்
கித்து வருகிறார்கள். **16** இந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் அன்பால்
தூண்டப்பட்டு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்து வருகிறார்கள். நல்ல செய்
திக்காக வழக்காட நான் இங்கே நியமிக்கப்பட்டிருக்கிறேன் என்பது இவர்
களுக்குத் தெரியும்.[c] **17** ஆனால், முதல் தொகுதியைச் சேர்ந்தவர்கள்
பகை உணர்ச்சியால் பிரசங்கித்து வருகிறார்கள், நல்ல நோக்கத்தால் அல்ல;
கைதியாக இருக்கிற எனக்கு இன்னும் கஷ்டம் கொடுக்க வேண்டும் என்று
தான் அவர்கள் நினைக்கிறார்கள். **18** இதன் விளைவு என்ன? அவர்
கள் போலித்தனமாகப் பிரசங்கித்து வந்தாலும் சரி, உண்மையாகப் பிர
சங்கித்து வந்தாலும் சரி, எல்லா விதத்திலும் கிறிஸ்துவைப் பற்றிய செய்தி
அறிவிக்கப்படுகிறது. இதை நினைத்து சந்தோஷப்படுகிறேன், இனிமேலும்
சந்தோஷப்பட்டுக்கொண்டே இருப்பேன். **19** ஏனென்றால், உங்கள் மன்
றாட்டினாலும்,[d] இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட கடவுளுடைய சக்
தியின் உதவியினாலும்[e] நான் மீட்புப் பெறுவேன் என்று எனக்குத் தெரியும்.
20 இதுவே என்னுடைய பேராவலாகவும் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.
நான் எந்த விதத்திலும் வெட்கப்பட்டுப்போக மாட்டேன். வாழ்வானாலும்
சரி, சாவானாலும் சரி,[f] எந்தத் தயக்கமும் இல்லாமல் பிரசங்கிப்பேன். அத
னால், எப்போதும்போல் இப்போதும் கிறிஸ்து என்னுடைய உடலால் மகி
மைப்படுவார்.

21 நான் வாழ்ந்தால் கிறிஸ்துவுக்காக வாழ்வேன்,[g] செத்தாலும் அது
எனக்கு லாபம்தான்.[h] **22** ஆனாலும், நான் இந்த உடலிலேயே வாழ்ந்து
வந்தால், என்னுடைய ஊழியம் பலன் தரும். ஆனால், எதைத் தேர்ந்தெ
டுக்கப்போகிறேன் என்று நான் சொல்ல விரும்பவில்லை. **23** இந்த இரண்
டுக்கும் நடுவில் நான் திண்டாடுகிறேன்; ஆனால், கிறிஸ்துவோடு இருப்
பதற்காக விடுதலை பெற வேண்டுமென்று விரும்புகிறேன்,[i] ஏனென்றால்
இதுதான் மேலானது.[j] **24** என்றாலும், உங்களுக்காக நான் இந்த உடலி
லேயே இருப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. **25** இதை நான் உறு
தியாக நம்புகிறேன். நீங்கள் முன்னேற்றம் அடைவதற்காகவும், விசுவாசத்
தால் வரும் சந்தோஷத்தை அனுபவிப்பதற்காகவும் நான் உங்கள்
எல்லாரோடும் தொடர்ந்து இருப்பேன். **26** நான் மறுபடியும் உங்களிடம்
வரப்போவதால், கிறிஸ்து இயேசுவின் சீஷர்களான நீங்கள் அதிகமாகச் சந்
தோஷப்படுவீர்கள்.

27 ஒன்றை மட்டும் மறந்துவிடாதீர்கள், நீங்கள் கிறிஸ்துவின் நல்ல செய்
திக்குத் தகுதியானவர்களாக* நடந்துகொள்ளுங்கள்.[k] உங்களைப் பார்க்க

1:27 * வே.வா., "தகுதியான குடிமக்களாக."

அதி. 1
a எபே 3:1
b அப் 28:30, 31
c பிலி 1:7
d 2கொ 1:11
e யோவா 15:26
f ரோ 14:8; 1பே 4:16
g கலா 2:20
h 1தெ 4:14; 2தீ 4:8; வெளி 14:13
i 2தீ 4:6
j 2கொ 5:6, 8
k எபே 4:1, 3; கொலோ 1:10

நான் அங்கே வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நீங்கள் ஒரே சிந்தையில்
உறுதியாக நிற்கிறீர்கள் என்றும், நல்ல செய்தியின் மேல் வைத்திருக்கிற விசு
வாசத்துக்காக ஒரே உள்ளத்துடன்*[a] தோளோடு தோள் சேர்ந்து பாடுபடு
கிறீர்கள் என்றும் நான் கேள்விப்பட வேண்டும். **28** எதிரிகளைப் பார்த்து
துளிகூட பயப்படாமல் இருக்கிறீர்கள் என்றும் நான் கேள்விப்பட வேண்
டும். இது அவர்களுடைய அழிவுக்கும்[b] உங்களுடைய மீட்புக்கும்[c] அத்
தாட்சியாக இருக்கும்; இந்த அத்தாட்சி கடவுளிடமிருந்து வந்ததாக இருக்
கும். **29** கிறிஸ்துமேல் விசுவாசம் வைப்பதற்கு மட்டுமல்ல, அவருக்காகப்
பாடுகளை அனுபவிப்பதற்கும் உங்களுக்குப் பாக்கியம் கிடைத்திருக்கி
றது.[d] **30** முன்பு எனக்கிருந்த போராட்டத்தை நீங்கள் பார்த்தீர்கள்,[e] இப்
போது எனக்கிருக்கிற போராட்டத்தைப் பற்றியும் கேள்விப்படுகிறீர்கள்;
அதே போன்ற போராட்டம் உங்களுக்கும் இருக்கிறது.

2 கிறிஸ்தவர்களான நீங்கள் ஒருவருக்கொருவர் உற்சாகத்தையும், அன்
பினால் ஆறுதலையும், அக்கறையையும், கனிவான பாசத்தையும், கரி
சனையையும் காட்டுகிறீர்கள் என்றால், **2** ஒரே சிந்தையோடும் ஒரே அன்
போடும் ஒரே உள்ளத்தோடும் ஒரே யோசனையோடும் அதைச் செய்து
என்னைச் சந்தோஷத்தால் நிரப்புங்கள்.[f] **3** எதையும் பகையினாலோ[g]
வறட்டு கௌரவத்தினாலோ[h] செய்யாமல், மனத்தாழ்மையினால் செய்யுங்
கள். மற்றவர்களை உங்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதுங்கள்.[i] **4** உங்
களுடைய நலனில் மட்டுமே அக்கறை காட்டாமல்,[j] மற்றவர்களுடைய நல
னிலும் அக்கறை காட்டுங்கள்.[k]

5 கிறிஸ்து இயேசுவுக்கு இருந்த இதே மனப்பான்மை உங்களுக்கும்
இருக்கட்டும்.[l] **6** அவர் கடவுளுடைய சாயலில் இருந்தபோதிலும்,[m] கடவு
ளுடைய ஸ்தானத்தைப் பறித்துக்கொள்ளவோ அவருக்குச் சமமாக இருக்
கவோ நினைக்கவில்லை.[n] **7** அதற்குப் பதிலாக, தன்னிடமிருந்த எல்லா
வற்றையும் விட்டுவிட்டு ஓர் அடிமையைப் போல் ஆனார்,[o] ஒரு
மனிதராக ஆனார்.[p] **8** அதுமட்டுமல்ல, அவர் மனிதராக வந்தபோது
சாகும் அளவுக்கு, ஆம், சித்திரவதைக் கம்பத்தில்*[q] சாகும் அளவுக்கு, தன்
னையே தாழ்த்திக் கீழ்ப்படிதலைக் காட்டினார்.[r] **9** அதனால்தான், கடவுள்
அவரை மேலான நிலைக்கு உயர்த்தினார்.[s] மற்ற எல்லா பெயர்களுக்கும்
மேலான பெயரை அவருக்குக் கொடுத்தார்.[t] **10** பரலோகத்திலும் பூமியி
லும் மண்ணுக்குள்ளும் இருக்கிற எல்லாரும் இயேசுவின் பெயரில் மண்டி
போட வேண்டும் என்பதற்காகவும்,[u] **11** இயேசு கிறிஸ்துதான் எஜமான்
என்று எல்லாரும் வெளிப்படையாக ஒத்துக்கொள்ள வேண்டும்[v] என்ப
தற்காகவும் அப்படிச் செய்தார். இவையெல்லாம், பரலோகத் தகப்பனாகிய
கடவுளுடைய மகிமைக்காகத்தான்.

12 என் அன்புக் கண்மணிகளே, நீங்கள் எப்போதும் கீழ்ப்படிந்து வந்தி
ருக்கிறீர்கள். நான் உங்களோடு இருந்த சமயத்தில் மட்டுமல்ல, உங்களோடு
இல்லாத இந்தச் சமயத்திலும் இன்னும் நன்றாகக் கீழ்ப்படிந்து வருகிறீர்கள்.
பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்களுடைய மீட்புக்காக உழைத்து வாருங்
கள். **13** கடவுள்தான் தனக்குப் பிரியமானதைச் செய்வதற்கான ஆர்வத்
தையும் வல்லமையையும் உங்களுக்குக் கொடுத்து உங்களைப் பலப்ப
டுத்துகிறார். **14** எல்லாவற்றையும் முணுமுணுக்காமலும்[w] வாதாடாமலும்[x]

1:27 * வே.வா., “ஒன்றுபட்டு.” **2:8** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 1
a ரோ 15:5, 6; 1கொ 1:10
b 2தெ 1:6
c லூ 21:19; 2தெ 1:4, 5
d அப் 5:41
e அப் 16:22, 23; 1தெ 2:2

அதி. 2
f 1கொ 1:10; 2கொ 13:11; 1பே 3:8
g பிலி 1:15, 17; யாக் 3:14, 16
h கலா 5:26
i மத் 23:11; எபே 4:1, 2; எபே 5:21
j 1கொ 13:4, 5
k 1கொ 10:24; 1கொ 10: 32, 33
l மத் 11:29; யோவா 13: 14, 15
m கொலோ 1:15; எபி 1:3
n யோவா 14:28
o ஏசா 53:2, 3
p யோவா 1:14
q கலா 3:13
r யோவா 10:17; எபி 2:9; எபி 5:8
s ஏசா 52:13; அப் 2:32, 33
t அப் 4:12; எபே 1:20, 21
u யோவா 5: 22, 23
v ரோ 10:9
w 1கொ 10:10; 1பே 4:9
x 1தீ 2:8

செய்துகொண்டிருங்கள். **15** அப்போதுதான், வாழ்வு தரும் வார்த்தையை
உறுதியாகப் பிடித்துக்கொண்டும்[a] இந்த உலகத்தில் விளக்குகளாக ஒளி
வீசிக்கொண்டும் இருக்கிற நீங்கள்,[b] சீர்கெட்டு நெறிகெட்டுப்போன தலை
முறையின்[c] நடுவே குற்றமில்லாதவர்களும் கபடமில்லாதவர்களும் கடவு
ளுடைய களங்கமில்லாத பிள்ளைகளுமாக[d] இருப்பீர்கள். **16** அப்போது,
நான் உழைத்ததும் வீண்போகவில்லை, பாடுபட்டதும் வீண்போக
வில்லை என்பதை நினைத்து கிறிஸ்துவின் நாளில் சந்தோஷப்படுவேன்.
17 அதோடு, விசுவாசத்தால் நீங்கள் செய்கிற பரிசுத்த சேவையின் மூலம்
செலுத்துகிற பலிமீது[e] நான் திராட்சமது காணிக்கையைப் போல் ஊற்றப்பட்
டாலும்[f] சந்தோஷமாக இருப்பேன், உங்கள் எல்லாரோடும் சேர்ந்து சந்தோ
ஷப்படுவேன். **18** அதேபோல், நீங்களும் சந்தோஷமாக இருங்கள், என்
னோடு சேர்ந்து சந்தோஷப்படுங்கள்.

19 நானும் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு சந்தோஷப்படுவதற்காக,
நம் எஜமானாகிய இயேசுவுக்கு விருப்பமானால் சீக்கிரத்திலேயே தீமோத்
தேயுவை உங்களிடம் அனுப்ப நினைத்திருக்கிறேன்.[g] **20** உங்களுடைய
விஷயங்களை அக்கறையோடு கவனிப்பதற்கு அவரைப் போன்ற மன
முள்ளவர் வேறு யாரும் என்னோடு இல்லை. **21** மற்ற எல்லாரும் தங்க
ளுடைய விஷயங்களிலேயே ஆர்வம் காட்டுகிறார்கள், இயேசு கிறிஸ்துவு
டைய விஷயங்களில் ஆர்வம் காட்டுவதில்லை. **22** ஆனால் தீமோத்
தேயுவைப் பற்றி உங்களுக்கே தெரியும், அப்பாவோடு சேர்ந்து பிள்ளை[h]
உழைப்பதுபோல் நல்ல செய்தியை அறிவிப்பதில் என்னோடு சேர்ந்து
அவர் கடினமாக உழைத்திருக்கிறார். **23** அதனால், எனக்கு என்ன நடக்கப்
போகிறதென்று தெரிந்தவுடன் இவரைத்தான் உங்களிடம் அனுப்ப நினைத்தி
ருக்கிறேன். **24** நம் எஜமானுக்கு விருப்பமானால் நானும் சீக்கிரத்தில் வரு
வேன் என்று நம்பிக்கையோடு இருக்கிறேன்.[i]

25 இப்போது, என் சகோதரரும் சக வேலையாளும் சக வீரரும், நீங்கள்
அனுப்பிய தூதுவரும், எனக்குத் தேவையான உதவிகளைச் செய்கிற பணி
விடைக்காரருமான எப்பாப்பிரோதீத்துவை உங்களிடம் அனுப்ப வேண்டு
மென்று நினைத்திருக்கிறேன்.[j] **26** ஏனென்றால், அவர் உங்கள் எல்லாரை
யும் பார்க்க வேண்டுமென்று ஏக்கமாக இருக்கிறார்; அதோடு, அவர்
நோய்வாய்ப்பட்ட விஷயம் உங்களுக்குத் தெரிந்துவிட்டதை நினைத்து
மனச்சோர்வடைந்து இருக்கிறார். **27** அவர் நோய்வாய்ப்பட்டு சாகும்
நிலையில் இருந்தது உண்மைதான். ஆனாலும், கடவுள் அவருக்கு இரக்கம்
காட்டினார்; சொல்லப்போனால், அவருக்கு மட்டுமல்ல, துக்கத்துக்குமேல்
துக்கம் உண்டாகாதபடி எனக்கும் இரக்கம் காட்டினார். **28** அதனால்,
நான் அவரைச் சீக்கிரத்தில் அனுப்பி வைக்கிறேன். நீங்கள் அவரை மறுபடி
யும் பார்த்து சந்தோஷப்படுவீர்கள், நானும் வேதனைப்படாமல் இருப்பேன்.
29 நம் எஜமானைப் பின்பற்றுகிறவர்களை வழக்கமாக ஏற்றுக்கொள்கிற
படியே அவரையும் மிகுந்த சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அவ
ரைப் போன்ற சகோதரர்களை உயர்வாக மதியுங்கள்.[k] **30** ஏனென்றால்,
எனக்குப் பணிவிடை செய்ய[l] நீங்கள் இங்கே இல்லாத குறையை அடி
யோடு போக்குவதற்காக அவர் தன்னுடைய உயிரையே பணயம் வைத்து,
கிறிஸ்துவின் ஊழியத்துக்காக* மரண வாசல்வரை போனார்.

2:30 * அல்லது, "எஜமானின் வேலைக்காக."

அதி. 2
a யோவா 6:68; எபி 4:12
b மத் 5:14; எபே 5:8, 9; 1பே 2:9, 12
c உபா 32:5
d எபே 5:1
e எபி 13:15; 1பே 2:5
f எண் 28:6, 7; 2கொ 12:15; 2தீ 4:6
g 1கொ 4:17; 1கொ 16:10
h 2தீ 1:2
i பிலே 22
j பிலி 4:18
k 1கொ 16:18; 1தெ 5:12, 13
l பிலே 10, 13

3 கடைசியாக, என் சகோதரர்களே, நம் எஜமானுடைய சேவையில்
தொடர்ந்து சந்தோஷமாக இருங்கள்.[a] எழுதிய விஷயங்களையே
எழுதுவதில் எனக்குக் கஷ்டமில்லை, உங்களுடைய பாதுகாப்புக்காகத்
தான் எழுதுகிறேன்.

2 அருவருப்பாக நடக்கிறவர்களை* குறித்து எச்சரிக்கையாக இருங்கள்,
தீமை செய்கிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள், விருத்தசேத
னம் செய்கிறவர்களை#[b] குறித்து எச்சரிக்கையாக இருங்கள். **3** ஏனென்
றால், நாமே உண்மையான விருத்தசேதனம்* செய்தவர்கள்,[c] கடவுளுடைய
சக்தியால் பரிசுத்த சேவை செய்கிறவர்கள், கிறிஸ்து இயேசுவைக் குறித்துப்
பெருமைப்படுகிறவர்கள்,[d] மனிதர்களுடைய காரியங்கள்மேல் நம்பிக்கை
வைக்காதவர்கள். **4** அப்படி மனிதர்களுடைய காரியங்கள்மேல் நம்
பிக்கை வைக்க யாருக்காவது காரணங்கள் இருந்தால், அது நிச்சயம் நானா
கத்தான் இருப்பேன்.

மனிதர்களுடைய காரியங்கள்மேல் நம்பிக்கை வைக்க காரணங்கள்
இருப்பதாக யாராவது நினைத்தால், அவரைவிட எனக்குத்தான் அதிகமான
காரணங்கள் இருக்கின்றன: **5** நான் எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்
யப்பட்டவன்,[e] இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்தவன், பென்யமீன் கோத்திரத்
தைச் சேர்ந்தவன், எபிரெயர்களுக்குப் பிறந்த எபிரெயன்,[f] திருச்சட்டத்தைக்
கடைப்பிடிப்பதில் பரிசேயன்;[g] **6** பக்திவைராக்கியமாக இருந்ததால் சபை
யைத் துன்புறுத்தியவன்,[h] திருச்சட்டத்தின் நீதியைப் பொறுத்ததில் குற்றமற்
றவனாக இருந்தவன். **7** ஆனாலும், நான் லாபம் என்று நினைத்தவற்றை
கிறிஸ்துவுக்காக நஷ்டம் என்று நினைக்கிறேன்.*[i] **8** உண்மையில், என்
எஜமானாகிய கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவுதான் ஈடில்லாத செல்வம்
என்பதால், மற்ற எல்லாவற்றையும் நஷ்டம் என்று நினைக்கிறேன். அவருக்
காக எல்லா நஷ்டத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். கிறிஸ்துவை நான்
லாபமாக்கிக்கொண்டு அவரோடு ஒன்றுபட்டிருப்பதற்காக அவற்றையெல்
லாம் வெறும் குப்பையாக நினைக்கிறேன். **9** திருச்சட்டத்தின் அடிப்
படையில் சுயநீதிமானாக இருக்க விரும்பாமல், கிறிஸ்துவின் மீதுள்ள விசு
வாசத்தின் அடிப்படையில்[j] கடவுளால் நீதிமானாக ஏற்றுக்கொள்ளப்படவே
விரும்புகிறேன்.[k] **10** நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின்
வல்லமையையும்[l] தெரிந்துகொண்டு, அவரைப் போலவே பாடுகள் பட்டு,[m]
அவரைப் போலவே இறந்து,[n] **11** எப்படியாவது முந்தின உயிர்த்தெழு
தலை[o] அடைவதற்கு முயற்சி செய்கிறேன்.

12 நான் ஏற்கெனவே அதைப் பெற்றுவிட்டேன் என்றோ, ஏற்கெனவே
பரிபூரணம் அடைந்துவிட்டேன் என்றோ சொல்லவில்லை; கிறிஸ்து இயேசு
எதற்காக என்னைத் தேர்ந்தெடுத்தாரோ[p] அதை அடைவதற்காகவே முயற்சி
செய்கிறேன்.[q] **13** சகோதரர்களே, அதை அடைந்துவிட்டேன் என்று நான்
நினைக்கவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்: பின்னால் இருப்ப
வற்றை மறந்தபடியே,[r] முன்னால் இருப்பவற்றை எட்டிப்பிடிப்பதற்காக ஓடு
கிறேன்,[s] **14** கிறிஸ்து இயேசுவின் மூலம் கடவுள் கொடுக்கிற பரலோக
அழைப்பு[t] என்ற பரிசைப்[u] பெற்றுக்கொள்ளும் லட்சியத்தோடு ஓடுகி

3:2 *நே.மொ., "நாய்களை." #நே.மொ., "உறுப்பைச் சிதைக்கிறவர்களை." **3:3** *சொல் பட்டியலைப் பாருங்கள். **3:7** *அல்லது, "மனப்பூர்வமாக ஒதுக்கித்தள்ளி விட்டேன்."

அதி. 3
a 2கொ 13:11; பிலி 4:4; 1தெ 5:16
b கலா 5:2
c எரே 4:4; ரோ 2:29; கொலோ 2:11
d கலா 6:14; எபி 9:13, 14
e ஆதி 17:12; லேவி 12:3
f 2கொ 11:22
g அப் 23:6; அப் 26:4, 5
h அப் 8:3; அப் 9:1, 2; கலா 1:13
i மத் 13:44
j ரோ 4:5; கலா 2:15, 16
k ரோ 3:20-22
l 1கொ 15:22; 2கொ 13:4
m ரோ 8:17; 2கொ 4:10; கொலோ 1:24
n ரோ 6:5
o 1தெ 4:16; வெளி 20:6
p 1தீ 6:12
q லூ 13:24
r லூ 9:62
s 1கொ 9:24
t எபி 3:1
u 2தீ 4:8; எபி 12:1

றேன். **15** நம்மில் முதிர்ச்சியுள்ள எல்லாரும்[a] இதே மனப்பான்மையோடு
இருக்க வேண்டும்; எதிலாவது உங்களுக்கு மாறுபட்ட மனப்பான்மை இருந்
தால், சரியான மனப்பான்மை எதுவென்று கடவுள் உங்களுக்கு வெளிப்படுத்
துவார். **16** முன்னேற்றப் பாதையில் நாம் எதுவரை போயிருந்தாலும் சரி,
அதே பாதையில்* தொடர்ந்து சீராக நடக்க வேண்டும்.

17 சகோதரர்களே, நீங்கள் எல்லாரும் என்னைப் பின்பற்றி நடங்கள்;[b]
நாங்கள் வைத்த முன்மாதிரியின்படி நடக்கிறவர்களைக் கூர்ந்து கவனியுங்
கள். **18** நிறைய பேர் கிறிஸ்துவுடைய சித்திரவதைக் கம்பத்துக்கு* விரோ
திகளாக நடந்துகொள்கிறார்கள்; அவர்களைப் பற்றி உங்களிடம் நிறைய
தடவை சொல்லியிருக்கிறேன், இப்போதும் கண்ணீரோடு சொல்கிறேன்.
19 அழிவுதான் அவர்களுடைய முடிவு; வயிறுதான் அவர்களுடைய
கடவுள். வெட்கப்பட வேண்டிய விஷயங்களை நினைத்து அவர்கள் பெரு
மைப்படுகிறார்கள்; பூமிக்குரிய காரியங்களிலேயே சிந்தனையாக இருக்கி
றார்கள்.[c] **20** ஆனால், நம்முடைய குடியுரிமை[d] பரலோகத்தில் இருக்
கிறது;[e] அங்கே இருக்கிற எஜமானாகிய இயேசு கிறிஸ்து என்ற
மீட்பருக்காக நாம் ஆவலோடு காத்திருக்கிறோம்.[f] **21** எல்லாவற்றையும்
தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக,[g] அவர் தன்னுடைய வல்ல
மையால் நம்முடைய அற்பமான உடலைத் தன்னுடைய மகிமையான உட
லைப் போல் மாற்றுவார்.[h]

4

அதனால், என் அன்புக் கண்மணிகளே, என் பிரியமான சகோதரர்
களே, என் சந்தோஷம் நீங்களே, என் கிரீடமும் நீங்களே.[i] நான் சொன்
னபடி நம் எஜமானுடைய சீஷர்களாக உறுதியாய் நில்லுங்கள்.[j]

2 நம் எஜமானுடைய சேவையில் ஒரே மனதோடு இருக்க வேண்டும்[k]
என்று எயோதியாளையும் சிந்திகேயாளையும் உற்சாகப்படுத்துகிறேன்.
3 உண்மையான என் சக ஊழியனே, இந்தப் பெண்களுக்குத் தொடர்ந்து
உதவி செய்யும்படி உன்னையும் கேட்டுக்கொள்கிறேன். கிலேமெந்தைப்
போலவும் என்னுடைய சக வேலையாட்களாகிய மற்றவர்களைப் போலவும்
அவர்கள் என்னுடன் தோளோடு தோள் சேர்ந்து நல்ல செய்தியை அறிவிப்
பதில் கடினமாக உழைத்திருக்கிறார்கள்; அவர்களுடைய பெயர்கள் வாழ்
வின் புத்தகத்தில்[l] இருக்கின்றன.

4 நம் எஜமானுடைய சேவையில் எப்போதும் சந்தோஷமாக இருங்கள்.
மறுபடியும் சொல்கிறேன், சந்தோஷமாக இருங்கள்![m] **5** நீங்கள் நியாயமா
னவர்கள்*[n] என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கட்டும். நம் எஜமான் பக்கத்
திலேயே இருக்கிறார். **6** நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்;[o]
உங்களுடைய எல்லா விண்ணப்பங்களையும் நன்றியோடுகூடிய ஜெபத்தின்
மூலமும் மன்றாட்டின் மூலமும் கடவுளிடம் சொல்லுங்கள்.[p] **7** அப்போது,
எல்லா சிந்தனைக்கும் மேலான தேவசமாதானம்[q] உங்கள் இதயத்தையும்[r]
மனதையும்* கிறிஸ்து இயேசுவின் மூலமாகப் பாதுகாக்கும்.

8 கடைசியாக, சகோதரர்களே, உண்மையானவை எவையோ, அதி
முக்கியமானவை எவையோ, நீதியானவை எவையோ, சுத்தமானவை
எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, மெச்சத்தக்கவை எவையோ,

3:16 *நே.மொ., “வழக்கப்படி.” **3:18** *சொல் பட்டியலைப் பாருங்கள். **4:5** *வே.வா., “வளைந்துகொடுப்பவர்கள்.” **4:7** *வே.வா., “யோசிக்கும் திறமையையும்; யோசனைகளையும்.”

அதி. 3

a 1கொ 14:20; எபி 5:14
b 1கொ 4:16; 2தெ 3:9
c ரோ 8:5; யாக் 3:15
d எபே 2:19
e யோவா 18:36; எபே 2:6; கொலோ 3:1
f 1கொ 1:7; 1தெ 1:10; தீத் 2:13; எபி 9:28
g 1கொ 15:27; எபி 2:8
h 1கொ 15: 42, 49

அதி. 4

i 1தெ 2:19
j பிலி 1:27
k ரோ 15:5, 6; 1கொ 1:10; 2கொ 13:11; பிலி 2:2; 1பே 3:8
l சங் 69:28; லூ 10:20
m சங் 64:10; 1தெ 5:16
n தீத் 3:2; யாக் 3:17
o மத் 6:25; லூ 12:22
p யோவா 16:23; ரோ 12:12; 1பே 5:6, 7
q யோவா 16:33; ரோ 5:1
r கொலோ 3:15

ஒழுக்கமானவை எவையோ, பாராட்டுக்குரியவை எவையோ அவற்றையே
யோசித்துக்கொண்டிருங்கள்.*[a] 9 நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்டவற்
றையும் ஏற்றுக்கொண்டவற்றையும் கேட்டவற்றையும் பார்த்தவற்றையும்
தொடர்ந்து செய்யுங்கள்;[b] அப்போது, சமாதானத்தின் கடவுள் உங்களோடு
இருப்பார்.

10 இத்தனை நாட்களுக்குப் பின்பு நீங்கள் மறுபடியும் என்னைப்
பற்றி நினைத்துப் பார்த்ததை[c] அறிந்து நம் எஜமானுடைய ஊழியனா
கிய நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். என்மேல் உண்மையிலேயே
உங்களுக்கு அக்கறை இருந்தாலும் அதைக் காட்டுவதற்கான வாய்ப்பு உங்
களுக்குக் கிடைக்கவில்லை. 11 எனக்கு ஏதோ தேவைப்படுவதால் இப்
படிச் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். ஏனென்றால், எந்தச் சூழ்
நிலையிலும் நான் மனநிறைவோடு* இருப்பதற்குக் கற்றுக்கொண்டேன்.[d]
12 குறைவான பொருள்களை வைத்தும் எனக்கு வாழத் தெரியும்,[e] ஏராள
மான பொருள்களை வைத்தும் எனக்கு வாழத் தெரியும். வயிறார சாப்பி
டும்போதும் சரி, பட்டினி கிடக்கும்போதும் சரி, நிறைவாக இருந்தாலும் சரி,
குறைவாக இருந்தாலும் சரி, எந்தச் சூழ்நிலையிலும் எல்லாவற்றிலும் திருப்
தியோடு இருப்பதற்கான ரகசியத்தை நான் கற்றுக்கொண்டேன். 13 என்
னைப் பலப்படுத்துகிறவர் மூலம் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலம்
இருக்கிறது.[f]

14 ஆனாலும், நான் உபத்திரவப்பட்டபோது நீங்கள் எனக்கு உதவி
செய்ததற்காக உங்களைப் பாராட்டுகிறேன். 15 சொல்லப்போனால்,
பிலிப்பியர்களே, நல்ல செய்தியை நீங்கள் முதன்முதலில் கேள்விப்பட்ட
சமயத்திலும், மக்கெதோனியாவைவிட்டு நான் புறப்பட்ட சமயத்திலும், உங்
களைத் தவிர வேறெந்தச் சபையும் எனக்கு உதவி செய்யவோ என்னிடமி
ருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளவோ இல்லை;[g] இது உங்களுக்கே தெரி
யும். 16 நான் தெசலோனிக்கேயில் இருந்த சமயத்திலும்கூட, எனக்குத்
தேவையானதை ஒரு தடவை மட்டுமல்ல, இரண்டு தடவை நீங்கள்
அனுப்பினீர்கள். 17 நீங்கள் கொடுக்கும் பரிசுப்பொருள்களைப் பெற்றுக்
கொள்ளத் துடிக்கிறேன் என்று நினைக்க வேண்டாம், உங்களுடைய கணக்
கில் இருக்கிற தொகையை இன்னும் அதிகமாக்குகிற ஆசீர்வாதங்களை
நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் துடிக்கிறேன். 18 தேவை
யான எல்லாமே என்னிடம் இருக்கிறது, தேவைக்கு அதிகமாகவும் இருக்
கிறது. நீங்கள் எப்பாப்பிரோதீத்துவின்[h] மூலம் அனுப்பியதைப் பெற்றுக்
கொண்டு திருப்தி அடைந்திருக்கிறேன். கடவுளுக்கு அவை நறுமணம்
வீசுகிற காணிக்கையாகவும்,[i] அவர் பிரியத்தோடு ஏற்றுக்கொள்கிற பலியா
கவும் இருக்கின்றன. 19 மகா ஐசுவரியமுள்ள என் கடவுள் உங்களு
டைய குறைவையெல்லாம்* கிறிஸ்து இயேசுவின் மூலம் நிறைவாக்குவார்.[j]
20 நம்முடைய கடவுளும் தகப்பனுமாக இருக்கிறவருக்கு என்றென்றும்
மகிமை உண்டாவதாக. ஆமென்.*

21 கிறிஸ்து இயேசுவின் சீஷர்களாயிருக்கிற பரிசுத்தவான்கள் ஒவ்
வொருவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைச் சொல்லுங்கள். என்னோடு

அதி. 4
a கொலோ 3:2
b பிலி 3:17
c 2கொ 11:8, 9
d 1தீ 6:6, 8; எபி 13:5
e 1கொ 4:11; 2கொ 6:4, 10; 2கொ 11:27
f ஏசா 40:29; 2கொ 4:7; 2கொ 12:9, 10
g 2கொ 11:8, 9
h பிலி 2:25
i யாத் 29:18
j 2கொ 9:8

4:8 *வே.வா., "ஆழமாகச் சிந்தித்துக்கொண்டிருங்கள்; தியானித்துக்கொண்டிருங்கள்." **4:11** *வே.வா., "திருப்தியோடு." **4:19** *வே.வா., "தேவைகளையெல்லாம்." **4:20** *அதாவது, "அப்படியே ஆகட்டும்."

அதி. 4
a பிலி 1:12, 13

இருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள். **22** பரி
சுத்தவான்கள் எல்லாரும், விசேஷமாக ரோம அரசனுடைய* வீட்டாரும்,[a]
உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள்.

23 நல்ல மனப்பான்மையைக் காட்டுகிற உங்கள்மேல் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவின் அளவற்ற கருணை இருக்கட்டும்.

4:22 * நே.மொ., "சீஸருடைய." சொல் பட்டியலைப் பாருங்கள்.

கொலோசெயருக்கு

எழுதப்பட்ட கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1, 2)
- கொலோசெயர்களின் விசுவாசத்துக்காக நன்றி (3-8)
- ஆன்மீக வளர்ச்சிக்காக ஜெபம் (9-12)
- கிறிஸ்துவின் முக்கியப் பங்கு (13-23)
- சபைக்காக பவுலின் கடின உழைப்பு (24-29)

2 கிறிஸ்துதான் கடவுளுடைய பரிசுத்த ரகசியம் (1-5)
- ஏமாற்றுக்காரர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள் (6-15)
- கிறிஸ்துதான் நிஜம் (16-23)

3 பழைய சுபாவமும் புதிய சுபாவமும் (1-17)
- உடல் உறுப்புகளை அழித்துப்போடுங்கள் (5)
- எல்லாரையும் பரிபூரணமாக இணைப்பது அன்புதான் (14)
- கிறிஸ்தவ குடும்பங்களுக்கு அறிவுரை (18-25)

4 எஜமான்களுக்கு அறிவுரை (1)
- "தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள்" (2-4)
- சபைக்கு வெளியே இருப்பவர்களிடம் ஞானமாக நடந்துகொள்ளுங்கள் (5, 6)
- முடிவான வாழ்த்துக்கள் (7-18)

அதி. 1
a 1கொ 4:17

1 கடவுளுடைய விருப்பத்தால்* கிறிஸ்து இயேசுவின் அப்போஸ்தல
னாக இருக்கும் பவுல் நம் சகோதரராகிய தீமோத்தேயுவோடு[a] சேர்ந்து,
2 கொலோசெ நகரத்தில் கிறிஸ்துவுடன் ஒன்றுபட்டிருக்கிற பரிசுத்தவான்க
ளும் உண்மையுள்ளவர்களுமான சகோதரர்களுக்கு எழுதுவது:

நம் பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்து உங்களுக்கு அளவற்ற
கருணையும் சமாதானமும் கிடைக்கட்டும்.

3 உங்களுக்காக நாங்கள் ஜெபம் செய்யும்போதெல்லாம் நம் எஜ
மான் இயேசு கிறிஸ்துவின் தகப்பனாகிய கடவுளுக்கு நன்றி சொல்கி
றோம்; **4** ஏனென்றால், கிறிஸ்து இயேசுமீது நீங்கள் வைத்திருக்கிற விசுவா
சத்தையும், பரிசுத்தவான்கள் எல்லார்மீதும் நீங்கள் காட்டுகிற அன்பை
யும் பற்றிக் கேள்விப்பட்டோம். **5** உங்களுடைய பரலோக நம்பிக்கை
நிறைவேறப்போவதைப்[b] பற்றி நீங்கள் தெரிந்திருப்பதால் அப்படிப்பட்ட
நல்ல மனப்பான்மையைக் காட்டுகிறீர்கள். சத்தியத்தின் செய்தியாகிய நல்ல

b 2தீ 4:8
1பே 1:3, 4

1:1 * வே.வா., "சித்தத்தால்."

செய்தி உங்களுக்கு அறிவிக்கப்பட்ட சமயத்தில் இந்த நம்பிக்கையைப் பற்
றித் தெரிந்துகொண்டீர்கள். **6** உலகம் முழுவதும் பரவி ஏராளமாகப் பலன்
தந்து வருகிற அந்த நல்ல செய்தி[a] உங்களிடமும் வந்து சேர்ந்தது; கடவு
ளுடைய அளவற்ற கருணையைப் பற்றிய உண்மையை நீங்கள் திருத்தமா
கக் கேட்டுத் தெரிந்துகொண்ட நாள்முதல் உங்கள் மத்தியிலும் பலன் தந்து
வருகிறது. **7** அதைத்தான் நம் அன்பான சக அடிமையாகிய எப்பாப்பிரா
விடமிருந்து[b] நீங்கள் தெரிந்துகொண்டீர்கள். அவர் கிறிஸ்துவின் உண்மை
யுள்ள ஊழியராக எங்கள் சார்பில் சேவை செய்கிறார். **8** கடவுளுடைய
சக்தியால் நிறைந்து நீங்கள் காட்டுகிற அன்பைப் பற்றியும் அவர்தான் எங்
களிடம் சொன்னார்.

9 அதனால், உங்களுடைய அன்பையும் விசுவாசத்தையும் நாங்கள்
கேள்விப்பட்ட நாள்முதல் உங்களுக்காகத் தொடர்ந்து ஜெபம் செய்கி
றோம்.[c] எல்லா ஞானத்தையும் ஆன்மீக விஷயங்களைப் பற்றிய புரிந்து
கொள்ளுதலையும்[d] நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், கடவு
ளுடைய விருப்பத்தை* பற்றிய திருத்தமான அறிவால் நிரப்பப்பட
வேண்டும்[e] என்றும் ஜெபம் செய்கிறோம். **10** அப்போதுதான், கடவுளா
கிய யெகோவாவுக்கு* ஏற்ற விதத்தில் நடந்து அவரை முழுமையாகப் பிரி
யப்படுத்துவீர்கள்; நீங்கள் செய்கிற எல்லா நல்ல செயல்களும் பலன்
தரும், அவரைப் பற்றிய திருத்தமான அறிவில்[f] மேலும் மேலும் வளரு
வீர்கள். **11** அதுமட்டுமல்ல, நீங்கள் பொறுமையோடும் சந்தோஷத்தோ
டும் எல்லாவற்றையும் சகித்துக்கொள்வதற்காக, கடவுளுடைய மகா வல்ல
மையால் நீங்கள் எல்லா வல்லமையையும் பெற்று பலப்படுத்தப்படுவீர்கள்.[g]
12 அறிவொளி பெற்ற பரிசுத்தவான்களுடைய ஆஸ்தியில்[h] பங்கு பெறு
வதற்கு உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கிய பரலோகத் தகப்பனுக்கு நன்றி
சொல்வீர்கள்.

13 அவர் நம்மை இருளின் அதிகாரத்திலிருந்து காப்பாற்றி,[i] தன்னு
டைய அன்பான மகனின் அரசாங்கத்துக்குக் கொண்டுவந்தார். **14** அந்த
மகனுடைய மீட்புவிலையால் நமக்கு விடுதலை, அதாவது பாவ மன்
னிப்பு, கிடைத்திருக்கிறது.[j] **15** அவர் பார்க்க முடியாத கடவுளுடைய
சாயலாகவும்[k] படைப்புகளிலேயே முதல் படைப்பாகவும்*[l] இருக்கிறார்.
16 ஏனென்றால், பரலோகத்தில் இருப்பவை, பூமியில் இருப்பவை, பார்க்க
முடிந்தவை, பார்க்க முடியாதவை ஆகிய எல்லாம்[m]—அவை சிம்மாசனங்
களோ தலைமை ஸ்தானங்களோ அரசாங்கங்களோ அதிகாரங்களோ எது
வாக இருந்தாலும்—அவர் மூலம்தான் படைக்கப்பட்டன. எல்லாமே
அவர் வழியாகவும் அவருக்காகவும் படைக்கப்பட்டன.[n] **17** அவர் எல்லா
படைப்புகளுக்கும்* முன்பே இருக்கிறார்;[o] அவர் மூலமாகத்தான் எல்லாம்
உண்டாக்கப்பட்டன. **18** அவர்தான் சபையாகிய உடலுக்குத் தலையாக
இருக்கிறார்,[p] அவர்தான் முதலானவராக இருக்கிறார், முதன்முதலில் உயி
ரோடு எழுப்பப்பட்டவராக இருக்கிறார்;[q] இப்படி, எல்லாவற்றிலும் முதன்
மையானவராக இருக்கிறார். **19** ஏனென்றால், எல்லாம் அவருக்குள் நிறை
வாகக் குடியிருக்க வேண்டும்[r] என்று கடவுள் விரும்பினார். **20** அதோடு,
சித்திரவதைக் கம்பத்தில்* சிந்தப்பட்ட இரத்தத்தால்[s] சமாதானத்தை ஏற்

1:9 *வே.வா., “சித்தத்தை.” **1:10** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:15** *நே.மொ., “பிறப்பாகவும்.” **1:17** *நே.மொ., “எல்லாவற்றுக்கும்.” **1:20** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 1
a கொலோ 1:23; 1தீ 3:16
b கொலோ 4:12, 13; பிலே 23
c எபே 1:15, 16
d 2தீ 2:7; 1யோ 5:20
e பிலி 1:9
f எபே 1:17; 2பே 1:2
g எபே 3:14, 16
h ரோ 8:17; எபே 1:13, 14
i எபே 2:1, 2
j எபே 1:7
k யோவா 4:24; யோவா 10:30; யோவா 14:9; 1தீ 1:17
l வெளி 3:14
m யோவா 1:3
n யோவா 1:10; எபி 1:2
o யோவா 17:5
p எபே 1:22
q 1கொ 15:23; வெளி 1:5
r கொலோ 2:3, 9
s லேவி 17:11

படுத்தி, பூமியிலும் பரலோகத்திலும் இருக்கிற எல்லாவற்றையும் அவர் மூல
மாகத் தன்னோடு சமரசமாக்க வேண்டுமென்றும் கடவுள் விரும்பினார்.[a]
21 ஒருகாலத்தில் நீங்கள் கெட்ட விஷயங்களையே நினைத்துக்கொண்
டிருந்ததால் கடவுளுக்கு அன்னியர்களாகவும் எதிரிகளாகவும் இருந்தீர்கள்.
22 ஆனால், இப்போது கடவுள் உங்களைப் பரிசுத்தமுள்ளவர்களாகவும்
களங்கமில்லாதவர்களாகவும் குற்றமில்லாதவர்களாகவும் தனக்கு முன்னால்
நிறுத்துவதற்காக,[b] மனித உடலில் இருந்தவருடைய மரணத்தின் மூலம் உங்
களைத் தன்னோடு சமரசமாக்கியிருக்கிறார். **23** ஆனால், நீங்கள் விசுவா
சத்தை விட்டுவிடாதவர்களாகவும்,[c] அதன் அஸ்திவாரத்தின்மேல்[d] நிலை
யாய் நிற்கிறவர்களாகவும்,[e] உறுதியானவர்களாகவும், நல்ல செய்தியால்
பெற்ற நம்பிக்கையைவிட்டு விலகாதவர்களாகவும் இருக்க வேண்டும்.
அந்த நல்ல செய்தி வானத்தின் கீழ் இருக்கிற எல்லா மக்களுக்கும் பிரசங்
கிக்கப்பட்டது;[f] அந்த நல்ல செய்தியை அறிவிப்பதற்காகத்தான் பவுலாகிய
நான் ஊழியனானேன்.[g]

24 இப்போது உங்களுக்காகத் துன்பப்படுவதில்[h] சந்தோஷப்படு
கிறேன்; கிறிஸ்துவின் உடலாகிய சபையைச்[i] சேர்ந்த நான் இன்னும் முழு
மையாக உபத்திரவங்களை அனுபவிக்கவில்லை என்றுதான் நினைக்கி
றேன்.[j] **25** கடவுளுடைய வார்த்தையை உங்களுக்கு முழுமையாய்ப்
பிரசங்கிப்பதற்காக அவர் எனக்குக் கொடுத்த நிர்வாகப் பொறுப்பின்படி,[k]
அந்தச் சபைக்கு நான் ஊழியனானேன். **26** கடவுளுடைய வார்த்தை
யில் இருக்கிற பரிசுத்த ரகசியம்[l] கடந்த சகாப்தங்களுக்கும்* கடந்த
தலைமுறைகளுக்கும் மறைக்கப்பட்டிருந்தது.[m] ஆனால், இப்போது கடவு
ளுடைய பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.[n] **27** மகத்
தான ஆசீர்வாதங்கள் நிறைந்த அந்தப் பரிசுத்த ரகசியத்தை[o] மற்ற தேசத்து
மக்களுக்குச் சொல்வதில் கடவுள் சந்தோஷம் அடைந்திருக்கிறார். கிறிஸ்து
உங்களோடு ஒன்றுபட்டிருப்பதால் அவரோடு மகிமைப்படுவதற்கான[p] நம்
பிக்கை உங்களுக்கு இருக்கிறது என்பதுதான் அந்தப் பரிசுத்த ரகசியம்.
28 அவரைப் பற்றித்தான் நாங்கள் அறிவித்து வருகிறோம். ஒவ்வொருவ
ரையும் கிறிஸ்துவின் முதிர்ச்சியுள்ள சீஷராகக்[q] கடவுள் முன்னால் நிறுத்து
வதற்காக ஒவ்வொருவருக்கும் புத்திசொல்லி, எல்லா ஞானத்தோடும் கற்
றுக்கொடுத்து வருகிறோம். **29** எனக்குள் வல்லமையோடு செயல்படுகிற
அவருடைய பலத்தின் உதவியால்[r] கடினமாகவும் தீவிரமாகவும் இதற்காக
உழைத்து வருகிறேன்.

2 உங்களுக்காகவும் லவோதிக்கேயாவில்[s] இருப்பவர்களுக்காகவும்
என்னை நேரில் பார்க்காத எல்லாருக்காகவும் நான் எந்தளவு பாடுப
டுகிறேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்
படுகிறேன். **2** அவர்களுடைய இதயங்களுக்கு ஆறுதல் கிடைக்க வேண்
டும்[t] என்றும், அவர்கள் எல்லாரும் அன்பினால் ஒன்றாக இணைக்கப்பட
வேண்டும்[u] என்றும் ஆசைப்படுகிறேன். அப்போதுதான், அவர்கள் எல்லா
ருக்கும் ஒப்பற்ற ஆசீர்வாதம் கிடைக்கும், அதாவது சத்தியத்தைத் தெளி
வாகப் புரிந்துகொண்டோம் என்ற முழு நம்பிக்கை கிடைக்கும்; அதோடு,
கடவுளுடைய பரிசுத்த ரகசியமாகிய கிறிஸ்துவைப் பற்றிய திருத்தமான
அறிவு கிடைக்கும்.[v] **3** ஞானம், அறிவு ஆகிய பொக்கிஷங்களெல்லாம்

1:26 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 1
a 2கொ 5:19; எபே 1:10
b 1கொ 1:8
c வெளி 2:10
d 1கொ 3:11
e 1கொ 15:58; எபி 3:14
f 1தீ 3:16
g எபே 3:8
h எபே 3:1
i எபே 1:22, 23
j அப் 9:16; பிலி 3:10
k 1கொ 9:16, 17
l எபே 3:5-7; எபே 5:32
m லூ 8:10; 1கொ 2:7
n ரோ 16:25, 26
o எபே 3:8, 9
p ரோ 8:18
q எபே 4:13
r பிலி 4:13

அதி. 2
s கொலோ 4:16
t 2கொ 1:6
u கொலோ 3:14
v 1கொ 2:7; எபே 3:5, 6

அவருக்குள் பத்திரமாக மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.[a] **4** சாமர்த்தி
யமாகப் பேசி யாரும் உங்களை ஏமாற்றிவிடக் கூடாது என்பதற்காக
இதைச் சொல்கிறேன். **5** உடலால் நான் உங்களோடு இல்லையென்றா
லும், உள்ளத்தால் உங்களோடு இருந்து, உங்கள் மத்தியில் இருக்கிற ஒழுங்
கையும்[b] கிறிஸ்துவின் மேல் நீங்கள் வைத்திருக்கிற உறுதியான விசுவாசத்
தையும்[c] பார்த்து சந்தோஷப்படுகிறேன்.

6 அதனால், நம் எஜமானாகிய கிறிஸ்து இயேசுவை எப்படி ஏற்றுக்
கொண்டீர்களோ, அப்படியே அவரோடு தொடர்ந்து ஒன்றுபட்டு நடங்கள்.
7 உங்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டபடியே, அவரில் வேரூன்றியவர்களா
கவும், அவர்மேல் கட்டப்படுகிறவர்களாகவும்,[d] விசுவாசத்தில் பலப்படுகிற
வர்களாகவும் இருங்கள்;[e] கடவுளுக்கு எப்போதும் நன்றி சொல்லுங்கள்.[f]

8 தத்துவங்கள் மூலமாகவும் வஞ்சனையான வீண் கருத்துகள் மூல
மாகவும் ஒருவனும் உங்களை அடிமையாக* பிடித்துக்கொண்டு போகாத
படி எச்சரிக்கையாக இருங்கள்.[g] அவை மனித பாரம்பரியங்களையும்
இந்த உலகத்தின் அடிப்படைக் காரியங்களையும்தான் சார்ந்திருக்கின்
றன, கிறிஸ்துவின் போதனைகளைச் சார்ந்தில்லை. **9** ஏனென்றால், அவரி
டம்தான் தெய்வீகப் பண்புகள் முழு நிறைவாகக் குடிகொண்டிருக்கின்றன.[h]
10 அதனால், எல்லா அரசாங்கங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தலை
யாக இருக்கிற அவர் மூலம் உங்களுக்கு எல்லாமே நிறைவாகக் கிடைத்
திருக்கிறது.[i] **11** நீங்கள் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் மனித
கைகளால் செய்யப்படாத விருத்தசேதனத்தைச் செய்துகொண்டீர்கள்; பாவ
முள்ள சதையைக் களைந்து,[j] கிறிஸ்துவுக்குரிய விருத்தசேதனத்தைச் செய்
துகொண்டீர்கள்.[k] **12** அவருக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் அவ
ரோடு அடக்கம் செய்யப்பட்டீர்கள்.[l] அதோடு, அவரை உயிர்த்தெழுப்பிய
கடவுளுடைய[m] வல்லமையில் விசுவாசம் வைத்ததால் அவரோடு இணைந்
தவர்களாக அவரோடு உயிர்த்தெழுப்பப்பட்டீர்கள்.[n]

13 அதுமட்டுமல்ல, குற்றங்கள் செய்ததன் காரணமாகவும் விருத்தசேத
னம் செய்துகொள்ளாததன் காரணமாகவும் நீங்கள் செத்த நிலையில் இருந்
தபோதிலும், கடவுள் உங்களை அவரோடு உயிர்ப்பித்தார்.[o] நம்முடைய
எல்லா குற்றங்களையும் தயவாக மன்னித்தார்.[p] **14** அதோடு, ஆணைகள்
அடங்கியதும்[q] நமக்கு விரோதமாக எழுதப்பட்டதுமான[r] திருச்சட்டத்தைத்[s]
துடைத்தழித்தார்; அதைச் சித்திரவதைக் கம்பத்தில்* வைத்து ஆணியடித்து
நம் மத்தியிலிருந்து நீக்கிவிட்டார்.[t] **15** இதன்* மூலம், ஆட்சியாளர்களை
யும் அதிகாரிகளையும் அவர் நிர்வாணக் கோலமாக்கி, வெற்றி ஊர்வலத்
தில் எல்லாருக்கும் முன்பாக அவர்களைக் கைதிகளாக இழுத்துக்கொண்டு
போனார்.[u]

16 அதனால், சாப்பிடுவது குடிப்பது பற்றியோ,[v] பண்டிகை நாள், மாதப்
பிறப்பு,*[w] ஓய்வுநாள்[x] ஆகியவற்றை அனுசரிக்காமல் இருப்பது பற்றியோ
ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாமல் இருக்கட்டும். **17** ஏனென்றால்,
அவை வரப்போகிற காரியங்களின் நிழல் மட்டுமே,[y] கிறிஸ்துதான் நிஜம்.[z]
18 போலியான தாழ்மையையும் தேவதூதர்களின் வழிபாட்டையும் விரும்
புகிற எவனும், உங்களுக்குப் பரிசு[a] கிடைக்காமல் செய்துவிட அனுமதிக்

2:8 * வே.வா., "இரையாக." **2:14** * சொல் பட்டியலைப் பாருங்கள். **2:15** * அல்லது, "அவர்." **2:16** * வே.வா., "முதலாம் பிறை."

அதி. 2
a 1கொ 1:30, 1கொ 2:16
b 1கொ 14:40
c 1கொ 15:58, எபி 3:14
d எபே 2:20, எபே 3:17
e மத் 7:24, 25
f எபே 5:20, 1தெ 5:18
g எபே 5:6, எபி 13:9
h கொலோ 1:19
i எபே 1:20, 21, 1பே 3:22
j ரோ 6:6
k ரோ 2:29, பிலி 3:3
l ரோ 6:4
m அப் 2:24, எபே 1:19, 20
n எபே 2:6, கொலோ 3:1
o எபே 2:1, 5
p அப் 2:38
q எபே 2:14, 15
r ரோ 7:10, கலா 3:10
s யாத் 34:27, உபா 31: 24-26, எபி 7:18
t கலா 3:13, எபி 9:15, 1பே 2:24
u 1யோ 5:4, வெளி 3:21
v ரோ 14:3, 17
w சங் 81:3
x ரோ 14:6
y எபி 8:5, எபி 10:1
z யோவா 14:6, எபி 9:11, 12
a பிலி 3:14

காதீர்கள்; அப்படிப்பட்டவன் தான் பார்த்த தரிசனங்களை வைத்து “நிலை
நிற்கை எடுக்கிறான்”;* உலகச் சிந்தையால் வீண் பெருமைகொள்கிறான்.
19 தலையாக இருப்பவரை உறுதியாகப் பிடித்துக்கொள்ளாமல் இருக்கி
றான்;[a] ஆனால் அவரால்தான் முழு உடலும் மூட்டுகளாலும் தசைநார்களா
லும் ஒன்றாக இணைக்கப்பட்டு, ஊட்டம் பெற்று, கடவுள் வளரச் செய்கிற
படி வளர்ந்துவருகிறது.[b]

20 இந்த உலகத்தின் அடிப்படைக் காரியங்களைப்[c] பொறுத்தவரை நீங்
கள் கிறிஸ்துவோடு இறந்திருந்தால், இன்னும் ஏன் இந்த உலகத்தின் பாக
மானவர்களைப் போல் வாழ்ந்து வருகிறீர்கள்? **21** உதாரணத்துக்கு, “எடுக்
காதே, ருசிக்காதே, தொடாதே” என்ற விதிமுறைகளுக்கு[d] ஏன் கட்டுப்பட்டு
நடக்கிறீர்கள்? **22** இவையெல்லாம், பயன்படுத்தியவுடன் அழிந்துபோகிற
பொருள்களைப் பற்றிய விதிமுறைகள்தான். இவை மனிதர்களுடைய கட்
டளைகளாகவும் போதனைகளாகவும்தான் இருக்கின்றன.[e] **23** இப்படிப்
பட்ட விதிமுறைகள், இஷ்டப்படி வழிபடுவதையும் போலியாகத் தாழ்மை
காட்டுவதையும் உடலை வருத்திக்கொள்வதையும் ஞானமானவைபோல்
தோன்ற வைப்பது உண்மைதான்.[f] இருந்தாலும், பாவ ஆசைகளை எதிர்த்
துப் போராட இவை எந்த விதத்திலும் உதவாது.

3 ஆனாலும், நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்த்தெழுப்பப்பட்டவர்கள்[g]
என்றால், கடவுளுடைய வலது பக்கத்தில் அவர் உட்கார்ந்திருக்கிற[h]
இடத்துக்குரிய காரியங்களையே, அதாவது பரலோகத்துக்குரிய காரியங்க
ளையே, தொடர்ந்து தேடுங்கள். **2** பூமிக்குரிய காரியங்கள் மீதல்ல,[i] பர
லோகத்துக்குரிய காரியங்கள் மீதே[j] உங்கள் மனதைப் பதிய வையுங்கள்.
3 ஏனென்றால், நீங்கள் இறந்துபோனீர்கள்; கடவுளுடைய விருப்பத்தின்படி
உங்கள் வாழ்வு கிறிஸ்துவின் கையில் இருக்கிறது. **4** நமக்கு வாழ்வு தரும்
கிறிஸ்து[k] வெளிப்படுத்தப்படும்போது, நீங்களும் அவரோடு மகிமையுடன்
வெளிப்படுத்தப்படுவீர்கள்.[l]

5 அதனால், பாலியல் முறைகேடு,* அசுத்தமான நடத்தை, கட்டுக்கடங்
காத காமப்பசி,[m] கெட்ட ஆசை, சிலை வழிபாட்டுக்குச் சமமான
பேராசை ஆகியவற்றைத் தூண்டுகிற உங்களுடைய உடல் உறுப்புகளை#
அழித்துப்போடுங்கள்.△[n] **6** இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறவர்கள்
மீது கடவுளுடைய கடும் கோபம் வரப்போகிறது. **7** ஒருகாலத்தில் நீங்க
ளும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துவந்தீர்கள்.[o] **8** இப்போதோ
கடும் கோபம், சினம், கெட்ட குணம்,[p] பழிப்பேச்சு ஆகிய எல்லாவற்
றையும் அடியோடு விட்டுவிடுங்கள்;[q] ஆபாசமான பேச்சு உங்கள் வாயிலி
ருந்து ஒருபோதும் வரக் கூடாது.[r] **9** ஒருவரிடம் ஒருவர் பொய் சொல்லா
தீர்கள்.[s] பழைய சுபாவத்தையும் அதற்குரிய பழக்கவழக்கங்களையும்
களைந்துபோட்டு,[t] **10** கடவுள் தருகிற புதிய சுபாவத்தை அணிந்துகொள்
ளுங்கள்;[u] அதாவது, திருத்தமான அறிவின் மூலம் உங்கள் சுபாவத்
தைக் கடவுளுடைய சாயலுக்கு ஏற்றபடி புதிதாக்கிக்கொண்டே இருங்கள்.[v]
11 இந்த விஷயத்தில் கிரேக்கர் என்றோ, யூதர் என்றோ, விருத்தசேத
னம் செய்தவர் என்றோ, விருத்தசேதனம் செய்யாதவர் என்றோ, அன்னியர்

2:18 *பொய் மத ரகசிய சடங்குகளில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள்.
3:5 *சொல் பட்டியலைப் பாருங்கள். #நே.மொ., “மண்ணினாலான உங்கள் உடல்
உறுப்புகளை.” △நே.மொ., “சாகடியுங்கள்.”

அதி. 2
a எபே 1:22, 23
b எபே 2:21; எபே 4:16
c கலா 4:3; கொலோ 2:8
d எபே 2:15; கொலோ 2:14
e மத் 15:9
f 1தீ 4:3

அதி. 3
g எபே 2:6
h சங் 110:1; 1பே 3:22
i 1யோ 2:15
j பிலி 3:20; பிலி 4:8; 1பே 1:13
k யோவா 11:25
l 1கொ 15:42, 43
m 1கொ 6:18; எபே 5:3
n மாற் 9:43; கலா 5:24
o 1கொ 6:9-11; எபே 2:3; தீத் 3:3
p 1பே 2:1
q எபே 4:31
r எபே 5:3, 4
s எபே 4:25; வெளி 21:8
t எபே 4:22
u ரோ 12:2; எபே 4:24
v ஆதி 1:26, 27; 1பே 1:16

என்றோ, சீத்தியர்* என்றோ, அடிமை என்றோ, சுதந்திரமானவர் என்றோ
எந்த வேறுபாடும் இல்லை. கிறிஸ்துதான் எல்லாருக்குள்ளும் எல்லாமுமாக
இருக்கிறார்.[a]

12 அதனால், கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு[b] அவருக்குப் பரிசுத்தமா
னவர்களாகவும் அன்பானவர்களாகவும் இருக்கிற நீங்கள், கனிவான
பாசத்தையும் கரிசனையையும்[c] கருணையையும் மனத்தாழ்மையையும்[d]
சாந்தத்தையும்[e] பொறுமையையும்[f] காட்டுங்கள்.* **13** ஒருவர்மேல் ஒருவ
ருக்கு ஏதாவது மனக்குறை இருந்தால்,[g] தொடர்ந்து ஒருவரை ஒருவர்
பொறுத்துக்கொள்ளுங்கள், தாராளமாக மன்னித்துக்கொண்டே இருங்கள்.[h]
யெகோவா* உங்களைத் தாராளமாக மன்னித்ததுபோல் நீங்களும் ஒருவரை
ஒருவர் மன்னியுங்கள்.[i] **14** இவை எல்லாவற்றுக்கும் மேலாக அன்பைக்
காட்டுங்கள்.*[j] எல்லாரையும் பரிபூரணமாக இணைப்பது அன்புதான்.[k]

15 கிறிஸ்து தருகிற சமாதானம் உங்கள் இதயங்களில் ஆட்சி செய்யட்
டும்.[l] ஏனென்றால், இதற்காகத்தான் நீங்கள் ஒரே உடலாக ஆகும்படி
அழைக்கப்பட்டீர்கள்; இதற்கு நன்றியுள்ளவர்களாக இருப்பதைக் காட்டுங்
கள். **16** கிறிஸ்துவின் போதனை உங்களுக்குள் நிறைவாக இருந்து,
எல்லா ஞானத்தையும் கொடுக்கட்டும். சங்கீதங்களாலும்[m] புகழ் பாடல்க
ளாலும் நன்றியோடு# பாடப்படுகிற பக்திப்பாடல்களாலும் ஒருவருக்கொரு
வர் கற்றுக்கொடுத்து உற்சாகப்படுத்திக்கொண்டே△ இருங்கள். உங்கள்
இதயத்திலிருந்து யெகோவாவை* புகழ்ந்து பாடிக்கொண்டே இருங்கள்.[n]
17 நீங்கள் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும்
நம் எஜமானாகிய இயேசுவின் பெயரில் செய்து, பரலோகத் தகப்பனாகிய
கடவுளுக்கு அவர் மூலம் நன்றி சொல்லுங்கள்.[o]

18 மனைவிகளே, உங்கள் கணவருக்குக் கட்டுப்பட்டு நடங்கள்;[p]
இதுவே நம் எஜமானைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஏற்றது. **19** கணவர்
களே, உங்கள் மனைவிமேல் எப்போதும் அன்பு காட்டுங்கள்,[q] அவளிடம்
கடுகடுப்பாக* நடந்துகொள்ளாதீர்கள்.[r] **20** பிள்ளைகளே, உங்கள் அப்பா
வுக்கும் அம்மாவுக்கும் எல்லா விஷயத்திலும் கீழ்ப்படிந்து நடங்கள்.[s] இது
தான் நம் எஜமானுக்குப் பிரியமானது. **21** அப்பாக்களே, உங்கள் பிள்ளை
களுக்கு எரிச்சல்* உண்டாக்காதீர்கள்;[t] அவர்கள் சோர்ந்துபோவார்கள்.
22 அடிமைகளே, இந்த உலகத்தில் இருக்கிற உங்கள் எஜமான்களுக்கு
எல்லா விஷயத்திலும் கீழ்ப்படிந்து நடங்கள்;[u] மனிதர்களைப் பிரியப்படுத்து
வதற்காக, அவர்கள் பார்க்கும்போது மட்டும் வேலை செய்யாமல், யெகோ
வாவுக்கு* பயந்து உண்மை மனதோடு வேலை செய்யுங்கள். **23** நீங்கள்
எதைச் செய்தாலும், அதை மனிதர்களுக்காகச் செய்யாமல், யெகோவாவுக்
காக* முழு மூச்சோடு செய்யுங்கள்.[v] **24** அதன் பலனாக யெகோவாவிட
மிருந்து* ஆஸ்தி கிடைக்கும்[w] என்பது உங்களுக்குத் தெரியும், இல்
லையா? எஜமானாகிய கிறிஸ்துவுக்கு அடிமைகளாக வேலை செய்யுங்கள்.
25 தவறு செய்கிறவன் தான் செய்த தவறுக்குத் தகுந்த கூலியை நிச்சயம்
பெறுவான்;[x] இதில் எந்தப் பாரபட்சமும் கிடையாது.[y]

3:11 *காட்டுமிராண்டித்தனமான மக்களையும் இந்த வார்த்தை குறித்தது. **3:12, 14** *நே.மொ., “அணிந்துகொள்ளுங்கள்.” **3:13, 16, 22-24** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:16** #வே.வா., “இனிமையாக.” △வே.வா., “புத்திசொல்லிக்கொண்டே.” **3:19** *வே.வா., “முரட்டுத்தனமாக.” **3:21** *வே.வா., “கோபம்.”

அதி. 3
a கலா 3:28
b 1பே 2:9
c பிலி 2:1, 2
d ரோ 12:16
e தீத் 3:2
f எபே 4:1, 2; 1தெ 5:14
g மத் 18:15
h நீதி 19:11; எபே 4:32; 1பே 4:8
i மத் 6:14; மாற் 11:25
j 1யோ 3:23
k 1கொ 13:4-7
l யோவா 14:27; பிலி 4:7
m 1கொ 14:26
n எபே 5:19
o 1கொ 10:31
p எபே 5:22; 1பே 3:1
q எபே 5:25; 1பே 3:7
r எபே 4:31
s நீதி 6:20; லூ 2:51; எபே 6:1
t எபே 6:4
u எபே 6:5, 6; தீத் 2:9; 1பே 2:18
v லூ 10:27; ரோ 12:11
w எபே 6:8; 1பே 1:3, 4
x ரோ 2:6; கலா 6:7
y ரோ 2:11; 1பே 1:17

அதி. 4

4 எஜமான்களே, உங்களுக்கும் ஒரு எஜமான் பரலோகத்தில் இருக்கிறார்
என்பதை மனதில் வைத்து, உங்கள் அடிமைகளிடம் நீதியோடும் நியா
யத்தோடும் நடந்துகொள்ளுங்கள்.[a]
2 விழிப்போடும் நன்றியோடும்[b] விடாமல் ஜெபம் செய்யுங்கள்.[c]
3 அதேசமயம், கிறிஸ்துவைப் பற்றிய பரிசுத்த ரகசியத்தை அறிவிப்பதற்
கான வாய்ப்பு என்ற கதவைக் கடவுள் எங்களுக்குத் திறக்க வேண்டும்
என்று எங்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்;[d] சொல்லப்போனால், அந்த
ரகசியத்தின் காரணமாகத்தான் நான் கைதியாக இருக்கிறேன்.[e] 4 நான்
அந்த ரகசியத்தைத் தெளிவாக அறிவிக்க வேண்டிய விதத்தில் அறிவிப்ப
தற்காக ஜெபம் செய்யுங்கள்.
5 சபைக்கு வெளியே இருப்பவர்களிடம் ஞானமாக நடந்துகொள்ளுங்
கள்; உங்கள் நேரத்தை மிக நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.*[f]
6 உங்கள் பேச்சு எப்போதும் கனிவாகவும் சுவையாகவும்* இருக்க வேண்
டும்.[g] அப்போதுதான், ஒவ்வொருவருக்கும் எப்படிப் பதில் சொல்ல வேண்
டும்[h] என்பதைத் தெரிந்திருப்பீர்கள்.
7 என் அன்புச் சகோதரரும் நம் எஜமானுடைய சேவையில் உண்
மையுள்ள ஊழியரும் என் சக அடிமையுமான தீகிக்கு[i] என்னைப் பற்
றிய எல்லா விஷயங்களையும் உங்களிடம் சொல்வார். 8 நாங்கள் எப்படி
இருக்கிறோம் என்பதைப் பற்றி உங்களிடம் சொல்வதற்கும், உங்கள் இதயங்
களுக்கு ஆறுதல் அளிப்பதற்கும் அவரை உங்களிடம் அனுப்பி வைக்கி
றேன். 9 உங்களில் ஒருவராகவும் நம்பிக்கைக்குரிய அன்புச் சகோதரராக
வும் இருக்கிற ஒநேசிமுவையும்[j] அவரோடு அனுப்பி வைக்கிறேன்; இங்கே
நடக்கிற எல்லாவற்றையும் அவர்கள் உங்களிடம் சொல்வார்கள்.
10 என்னுடைய சக கைதியான அரிஸ்தர்க்கு[k] உங்களுக்கு வாழ்த்துச்
சொல்கிறார்; பர்னபாவின் ஒன்றுவிட்ட சகோதரராகிய மாற்குவும்[l] வாழ்த்
துச் சொல்கிறார் (இவர் உங்களிடம் வந்தால் அன்பாக ஏற்றுக்கொள்
ளும்படி[m] உங்களுக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது); 11 யுஸ்து என்ற
இயேசுவும் உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறார்; விருத்தசேதனம் செய்யப்
பட்ட இவர்கள் மட்டும்தான் கடவுளுடைய அரசாங்கத்துக்காக உழைக்கிற
என் சக வேலையாட்களாக இருக்கிறார்கள்; எனக்கு மிகவும் ஆறுதலாக
வும்* இருக்கிறார்கள். 12 உங்களில் ஒருவராகவும் கிறிஸ்து இயேசுவின்
அடிமையாகவும் இருக்கிற எப்பாப்பிரா[n] உங்களுக்கு வாழ்த்துச் சொல்
கிறார். நீங்கள் முதிர்ச்சி* அடைந்தவர்களாகவும் கடவுளுக்கு விருப்ப
மான எல்லாவற்றிலும் உறுதியான நம்பிக்கை உள்ளவர்களாகவும் கடைசி
வரை நிலைத்து நிற்க வேண்டும் என்று உங்களுக்காக எப்போதும்
அவர் ஊக்கமாக ஜெபம் செய்கிறார். 13 உங்களுக்காகவும் லவோதிக்கே
யாவில் இருக்கிறவர்களுக்காகவும் எராப்போலியில் இருக்கிறவர்களுக்காக
வும் இவர் மிகக் கடினமாக உழைக்கிறார்; இதற்கு நானே சாட்சி.
14 அன்பான மருத்துவர் லூக்காவும்,[o] அவரோடு சேர்ந்து தேமாவும்[p]
உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள். 15 லவோதிக்கேயாவில் இருக்
கிற சகோதரர்களுக்கும் நிம்பாவுக்கும் அவள் வீட்டில் கூடுகிற சபைக்கும்

a எபே 6:9
b கொலோ 3:15; 1தெ 5:18
c லூ 18:1; ரோ 12:12; எபே 6:18
d ரோ 15:30
e எபே 6:19, 20; பிலி 1:7
f எபே 5:15, 16
g மத் 5:13; மாற் 9:50
h 1பே 3:15
i எபே 6:21, 22
j பிலே 10
k அப் 19:29; அப் 20:4; அப் 27:2
l அப் 12:12; அப் 15:37; பிலே 23, 24
m ரோ 15:7
n கொலோ 1:7, 8
o லூ 1:3; அப் 1:1
p பிலே 23, 24

4:5 *நே.மொ., “குறித்த நேரத்தை விலைக்கு வாங்குங்கள்.” **4:6** *நே.மொ., “உப்பால் சாரமேறியதாகவும்.” **4:11** *வே.வா., “பக்கபலமாகவும்.” **4:12** *வே.வா., “முழுமை.”

என் வாழ்த்தைச் சொல்லுங்கள்.[a] **16** இந்தக் கடிதம் உங்களிடம் வாசிக்
கப்பட்ட பின்பு, லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படுவதற்கு[b] ஏற்பாடு
செய்யுங்கள். அதேபோல், லவோதிக்கேயாவிலிருந்து வரும் கடிதத்தை நீங்
களும் வாசியுங்கள். **17** “எஜமானுடைய சீஷனாக நீ பெற்றிருக்கிற ஊழி
யத்தை நிறைவேற்றுவதற்கு எப்போதும் கவனமாக இரு” என்று அர்க்கிப்பு
விடம்[c] சொல்லுங்கள்.

18 பவுலாகிய நான் என் கைப்பட எழுதி உங்களுக்கு வாழ்த்துச் சொல்
கிறேன்.[d] நான் கைதியாக இருக்கிறேன்[e] என்பதை எப்போதும் ஞாபகத்தில்
வைத்துக்கொள்ளுங்கள். கடவுளுடைய அளவற்ற கருணை உங்கள்மேல்
இருக்கட்டும்.

அதி. 4
a ரோ 16:5
1கொ 16:19
b 1தெ 5:27
c பிலே 1, 2
d 2தெ 3:17
e பிலி 1:7
பிலே 9

தெசலோனிக்கேயருக்கு

எழுதப்பட்ட முதலாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1)
தெசலோனிக்கேயர்களின் விசுவாசத்துக்காக நன்றி (2–10)

2 தெசலோனிக்கேயில் பவுலின் ஊழியம் (1–12)
தெசலோனிக்கேயர்கள் கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொள்கிறார்கள் (13–16)
தெசலோனிக்கேயர்களைப் பார்க்க பவுல் ஏங்குகிறார் (17–20)

3 அத்தேனேயில் பவுல் கவலையோடு காத்திருக்கிறார் (1–5)
தீமோத்தேயு ஆறுதலான செய்தி கொண்டுவருகிறார் (6–10)
தெசலோனிக்கேயர்களுக்காக ஜெபம் செய்கிறார் (11–13)

4 பாலியல் முறைகேட்டைப் பற்றிய எச்சரிப்பு (1–8)
ஒருவருக்கொருவர் அதிகமாக அன்பு காட்டுங்கள் (9–12)
“மற்றவர்களுடைய விஷயத்தில் தலையிடாமல் இருங்கள்” (11)
கிறிஸ்துவின் சீஷர்களாக இறந்தவர்கள் முதலில் உயிரோடு எழுந்திருப்பார்கள் (13–18)

5 யெகோவாவின் நாள் வரும் (1–5)
“இதோ! சமாதானம், பாதுகாப்பு!” (3)
விழிப்போடும் தெளிந்த புத்தியோடும் இருங்கள் (6–11)
அறிவுரைகள் (12–24)
முடிவான வாழ்த்துக்கள் (25–28)

1 பரலோகத் தகப்பனாகிய கடவுளோடும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவோடும் ஒன்றுபட்டிருக்கிற தெசலோனிக்கேயருடைய
சபைக்கு, சில்வானுவோடும்*[a] தீமோத்தேயுவோடும்[b] சேர்ந்து பவுல்
எழுதுவது:

கடவுளிடமிருந்து அளவற்ற கருணையும் சமாதானமும் உங்களுக்குக்
கிடைக்கட்டும்.

அதி. 1
a அப் 15:22
1பே 5:12
b அப் 16:1, 2

1:1 * சீலா என்றும் அழைக்கப்படுகிறார்.

2 உங்களுக்காக நாங்கள் ஜெபம் செய்யும்போதெல்லாம்[a] கடவுளுக்கு
நன்றி சொல்கிறோம். **3** விசுவாசத்தால் நீங்கள் செய்கிற ஊழியத்தை
யும், உங்களுடைய அன்பான உழைப்பையும், நம் எஜமானாகிய இயேசு
கிறிஸ்துமேல் வைத்திருக்கிற நம்பிக்கையின்[b] காரணமாக நீங்கள் காட்டு
கிற சகிப்புத்தன்மையையும் நம்முடைய தகப்பனாகிய கடவுளுக்கு முன்
னால் எப்போதும் நினைத்துக்கொள்கிறோம். **4** கடவுளுடைய அன்பைப்
பெற்ற சகோதரர்களே, நீங்கள் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள்
என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். **5** ஏனென்றால், நல்ல செய்தியை
உங்களுக்கு வார்த்தைகளால் மட்டுமே பிரசங்கிக்காமல், வல்லமையோடும்
கடவுளுடைய சக்தியோடும் முழு நிச்சயத்தோடும் பிரசங்கித்தோம். உங்க
ளுடைய நலனை மனதில் வைத்து நாங்கள் எப்படியெல்லாம் நடந்து
கொண்டோம் என்பது உங்களுக்கே தெரியும். **6** உங்களுக்குப் பயங்கர
உபத்திரவம் வந்தபோதிலும்,[c] கடவுளுடைய சக்தியால் கிடைக்கிற சந்தோ
ஷத்தோடு அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டீர்கள்; எங்களைப்
போலவும்[d] நம் எஜமானைப் போலவும்[e] நடந்துகொண்டீர்கள். **7** இப்படி,
மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் இருக்கிற விசுவாசிகள்* எல்லாருக்
கும் முன்மாதிரிகளாக ஆனீர்கள்.

8 உண்மையில், மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் இருக்கிற மக்க
ளுக்கு யெகோவாவின்* செய்தி உங்கள் மூலம் தெரியவந்திருக்கிறது.
அதுமட்டுமல்ல, கடவுள்மேல் நீங்கள் விசுவாசம் வைத்திருக்கிறீர்கள் என்ற
செய்தி எல்லா இடங்களுக்கும் பரவியிருக்கிறது.[f] அதனால், நாங்கள் எது
வுமே சொல்ல வேண்டியதில்லை. **9** நாங்கள் முதன்முதலில் உங்களிடம்
வந்தபோது நீங்கள் எங்களை ஏற்றுக்கொண்ட விதத்தையும், சிலைகளை
விட்டுவிட்டு[g] உயிருள்ள உண்மைக் கடவுளுக்கு ஊழியம் செய்ய அவ
ரிடம் திரும்பிய விதத்தையும் அவர்களே மற்றவர்களுக்குச் சொல்லி வரு
கிறார்கள். **10** அதோடு, கடவுளால் உயிரோடு எழுப்பப்பட்டவரும் வரப்
போகிற கடும் கோபத்திலிருந்து[h] நம்மைக் காப்பாற்றுகிறவருமான அவரு
டைய மகன் இயேசு பரலோகத்திலிருந்து வெளிப்படுவதற்காக[i] நீங்கள்
காத்துக்கொண்டிருப்பதையும் சொல்லி வருகிறார்கள்.

2 சகோதரர்களே, நாங்கள் உங்களிடம் வந்தது வீண்போகவில்லை[j] என்
பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். **2** நீங்கள் அறிந்திருக்கிறபடி,
முன்பு பிலிப்பியில் நாங்கள் துன்புறுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டா
லும்,[k] மிகுந்த எதிர்ப்பின்* மத்தியில் நம் கடவுளுடைய நல்ல செய்தியை
உங்களுக்குச் சொல்வதற்காக[l] அவருடைய உதவியால் தைரியத்தை வர
வழைத்துக்கொண்டோம். **3** நாங்கள் கொடுக்கும் அறிவுரைகள் தவறான
கருத்துகளையோ அசுத்தமான எண்ணங்களையோ வஞ்சகத்தையோ
அடிப்படையாகக் கொண்டவை அல்ல. **4** நல்ல செய்தியை ஒப்படைப்
பதற்குக் கடவுள் எங்களைத் தகுதியுள்ளவர்களாகக் கருதியதால், நாங்கள்
மனிதர்களுக்குப் பிரியமாகப் பேசாமல் எங்கள் இதயங்களை ஆராய்கிற
கடவுளுக்குப்[m] பிரியமாகப் பேசுகிறோம்.

5 சொல்லப்போனால், நாங்கள் ஒருபோதும் உங்களைப் போலியாகப்
புகழ்ந்ததில்லை, உங்களிடம் இருப்பதை அடைவதற்காகப் பேராசைப்பட்டு

1:7 * வே.வா., "இயேசுவின் சீஷர்கள்." **1:8** * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:2** * அல்லது, "போராட்டத்தின்."

அதி. 1
a 2தெ 1:11, 12
b 1பே 1:3, 4
c 1தெ 2:14
d 1கொ 11:1; பிலி 3:17; 2தெ 3:9
e 1பே 2:21
f 2தெ 1:4
g 1கொ 10:14; 1கொ 12:2; கலா 4:8; 1யோ 5:21
h 1தெ 5:2; 2பே 3:12
i அப் 1:10, 11; தீத் 2:13

அதி. 2
j அப் 17:1, 4
k அப் 16:12; அப் 16:22-24
l அப் 17:1, 2
m நீதி 17:3; எரே 11:20

வெளிவேஷம் போட்டதுமில்லை[a] என்பது உங்களுக்குத் தெரியும்; கட
வுளே இதற்குச் சாட்சி! **6** உங்களிடமும் சரி, மற்றவர்களிடமும் சரி, நாங்
கள் புகழ்தேடி அலைந்ததில்லை; கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என்ற
முறையில் நாங்கள் உங்களுக்குப் பெரிய பாரமாக இருந்திருக்க முடியும்.[b]
7 ஆனால், பாலூட்டுகிற தாய் தன் குழந்தைகளைக் கனிவோடு கவனித்
துக்கொள்வதுபோல்* உங்களை நேசித்து உங்களிடம் மென்மையாக நடந்து
கொண்டோம். **8** இப்படி, உங்கள்மேல் கனிவான பாசம் வைத்திருப்பதால்,
கடவுளுடைய நல்ல செய்தியை மட்டுமல்ல, எங்கள் உயிரையே உங்களுக்
காகக் கொடுக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தோம்;[c] அந்தளவுக்கு
நீங்கள் எங்களுடைய அன்புக்குரியவர்களாக ஆகியிருந்தீர்கள்.[d]

9 சகோதரர்களே, நாங்கள் பாடுபட்டு உழைத்தது நிச்சயமாக உங்க
ளுக்கு ஞாபகம் இருக்கும். உங்களில் யாருக்கும் பெரிய பாரமாக இல்லாத
படி,[e] நாங்கள் இரவும் பகலும் வேலை செய்து கடவுளுடைய நல்ல செய்
தியை உங்களுக்குப் பிரசங்கித்தோம். **10** விசுவாசிகளாகிய* உங்களிடம்
நாங்கள் எந்தளவு உண்மையுள்ளவர்களாகவும்# நீதியுள்ளவர்களாகவும்
குற்றமற்றவர்களாகவும் நடந்துகொண்டோம் என்பதற்கு நீங்களும் சாட்சி,
கடவுளும் சாட்சி. **11** ஒரு அப்பா[f] தன் பிள்ளைகளை நடத்துவதுபோல்
நாங்கள் உங்களை நடத்தினோம் என்பது உங்களுக்கே தெரியும்; உங்கள்
ஒவ்வொருவருக்கும் நாங்கள் அறிவுரை கொடுத்து, ஆறுதலளித்து, புத்தி
சொல்லி வந்தோம்.[g] **12** தன்னுடைய அரசாங்கத்திலும் மகிமையிலும்[h]
பங்குகொள்வதற்காக உங்களை அழைத்த[i] கடவுளுக்கு முன்னால் நீங்கள்
எப்போதும் தகுதியுள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும்[j] என்பதற்காக
அப்படிச் செய்துவந்தோம்.

13 நீங்கள் கடவுளுடைய வார்த்தையை எங்கள் மூலம் கேள்விப்பட்டு
ஏற்றுக்கொண்டபோது, அதை மனிதர்களுடைய வார்த்தையாக அல்ல
கடவுளுடைய வார்த்தையாக ஏற்றுக்கொண்டீர்கள். இதற்காக நாங்கள் எப்
போதும் கடவுளுக்கு நன்றி சொல்கிறோம்.[k] அது உண்மையிலேயே கடவு
ளுடைய வார்த்தைதான். விசுவாசிகளாகிய உங்களுக்குள் அது செயல்பட்
டும் வருகிறது. **14** சகோதரர்களே, யூதேயாவில் இருக்கிற கடவுளுடைய
சபைகளுக்கு, அதாவது கிறிஸ்து இயேசுவோடு ஒன்றுபட்டிருக்கிற சபைக
ளுக்கு, நடப்பது போலவே உங்களுக்கும் நடக்கிறது. யூதர்களால் அந்
தச் சபையில் இருக்கிறவர்கள் துன்பப்படுவது போலவே நீங்களும் உங்
கள் சொந்த மக்களால் துன்பப்படுகிறீர்கள்.[l] **15** அந்த யூதர்கள்தான் நம்
எஜமானாகிய இயேசுவையும் தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தார்கள்,[m]
எங்களையும் துன்புறுத்தினார்கள்.[n] அவர்கள் இப்போதும் கடவுளுக்குப்
பிரியமாக நடப்பதில்லை. மக்களுடைய நலனுக்கு எதிராகவே செயல்படுகி
றார்கள். **16** எப்படியென்றால், மற்ற தேசத்து மக்களைக் காப்பாற்றுவதற்
காக அவர்களிடம் நாங்கள் பிரசங்கிக்கும்போது எங்களைத் தடுக்கப் பார்க்
கிறார்கள்.[o] இப்படி, பாவத்துக்குமேல் பாவம் செய்கிறார்கள்; அவர்கள்மேல்
கடவுள் தன்னுடைய கடும் கோபத்தைக் காட்டப்போகிற நேரம் இப்போது
வந்துவிட்டது.[p]

17 சகோதரர்களே, கொஞ்சக் காலம் நாங்கள் உங்களைவிட்டுப் பிரிந்து

2:7 * வே.வா., “நெஞ்சார நேசிப்பதுபோல்.” **2:10** * வே.வா., “இயேசுவின் சீஷர்களா
கிய.” # வே.வா., “பற்றுமாறாதவர்களாகவும்.”

அதி. 2
a அப் 20:33
b 2கொ 11:9
2தெ 3:8, 10
c யோவா 15:13
d யோவா 13:35
e அப் 18:3
அப் 20:34
2கொ 11:9
2தெ 3:8, 10
f 1கொ 4:15
g அப் 20:31
h 1பே 5:10
i லூ 22:28-30
j எபே 4:1
கொலோ 1:10
1பே 1:15
k 1தெ 1:2, 3
l அப் 17:5
m அப் 2:22, 23
அப் 7:52
n மத் 23:34
o லூ 11:52
அப் 13:49, 50
p ரோ 1:18

போனாலும், உள்ளத்தால் அல்ல, உடலால் மட்டுமே பிரிந்திருந்தோம்.
ஆனால், எப்படியாவது உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று ஏங்
கினோம். **18** அதனால், உங்களைப் பார்க்க வர வேண்டுமென்று ஆசைப்
பட்டோம்; அதிலும், பவுலாகிய நான் ஒரு தடவை அல்ல, இரண்டு தடவை
உங்களைப் பார்க்க வருவதற்கு முயற்சி செய்தேன்; ஆனால், சாத்தான் எங்
களுடைய வழியில் குறுக்கிட்டான். **19** நம் எஜமானாகிய இயேசுவின் பிர
சன்னத்தின்போது அவர் முன்னால் எங்கள் நம்பிக்கையாகவும் சந்தோஷ
மாகவும் பெருமைக்குரிய கிரீடமாகவும் இருக்கப்போகிறவர்கள் யார்?
நீங்கள்தானே?[a] **20** நிச்சயமாகவே, நீங்கள்தான் எங்கள் மகிமை, நீங்கள்
தான் எங்கள் சந்தோஷம்.

3 உங்களுடைய பிரிவால் ஏற்பட்ட வேதனையை எங்களால் தாங்க முடி
யாமல் போனபோது, நாங்கள் மட்டும் அத்தேனே நகரத்தில் இருப்பது
நல்லது என்று நினைத்தோம்.[b] **2** கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தியைச்
சொல்கிற கடவுளுடைய ஊழியரான* நம் சகோதரர் தீமோத்தேயுவை[c]
உங்களிடம் அனுப்பி வைத்தோம்; உங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தி
உங்களுக்கு ஆறுதல் சொல்வதற்காகவும், **3** உங்களுக்கு வருகிற உபத்தி
ரவங்களால் நீங்கள் யாரும் நிலைகுலைந்துவிடாதபடி பார்த்துக்கொள்வதற்
காகவும் அவரை அனுப்பி வைத்தோம். இந்த உபத்திரவங்கள் நமக்கு நிச்
சயம் வரும் என்பது உங்களுக்கே தெரியும்.[d] **4** சொல்லப்போனால்,
நமக்குக் கண்டிப்பாக உபத்திரவம் வரும் என்று உங்களோடு இருந்த
போதே நாங்கள் பல தடவை சொன்னோம்; அதன்படியே உபத்திரவம் வந்
துவிட்டது, இதுவும் உங்களுக்குத் தெரியும்.[e] **5** அதனால்தான், உங்களு
டைய பிரிவால் ஏற்பட்ட வேதனையை என்னால் தாங்க முடியாமல்
போனபோது, உங்கள் உண்மைத்தன்மையைப் பற்றித் தெரிந்துகொள்வதற்
காக தீமோத்தேயுவை அனுப்பி வைத்தேன்.[f] ஏனென்றால், ஏதோவொரு
விதத்தில் சோதனைக்காரன்[g] உங்களைச் சோதித்திருப்பானோ என்றும்,
எங்களுடைய உழைப்பு வீண்போயிருக்குமோ என்றும் பயந்தேன்.

6 இப்போதுதான் தீமோத்தேயு உங்களிடமிருந்து வந்து,[h] நீங்கள் காட்டு
கிற உண்மைத்தன்மையையும் அன்பையும் பற்றி நல்ல செய்தி சொன்
னார். நீங்கள் எப்போதும் எங்களைப் பாசத்தோடு நினைத்துப் பார்ப்பதாக
வும், நாங்கள் உங்களைப் பார்க்க ஏங்குவது போலவே நீங்களும்
எங்களைப் பார்க்க ஏங்குவதாகவும் சொன்னார். **7** அதனால்தான் சகோ
தரர்களே, எங்களுக்கு எவ்வளவோ கஷ்டங்களும் உபத்திரவங்களும் வந்
தபோதிலும், நீங்கள் உண்மையாக இருப்பதை நினைத்து ஆறுதல் அடைந்
திருக்கிறோம்.[i] **8** ஏனென்றால், நம் எஜமானுடைய ஊழியர்களாக நீங்கள்
உறுதியோடு நிற்கும்போது எங்களுக்குப் புதுத்தெம்பு கிடைக்கிறது. **9** நம்
கடவுளுக்குமுன் உங்களால் எங்களுக்குக் கிடைத்திருக்கிற அளவில்லாத
சந்தோஷத்துக்காக அவருக்கு எப்படி நன்றி சொல்வோம்? **10** உங்களு
டைய முகத்தைப் பார்ப்பதற்கும், உங்களுடைய விசுவாசத்தில் குறைவுபடு
கிறவற்றை நிறைவாக்குவதற்கும் இரவு பகலாக மிகவும் ஊக்கத்தோடு அவ
ரிடம் மன்றாடுகிறோம்.[j]

11 நாங்கள் உங்களிடம் நல்லபடியாக வந்துசேருவதற்கு நம் தகப்பனா
கிய கடவுளும் நம் எஜமானாகிய இயேசுவும் எங்களுக்கு உதவி

3:2 * அல்லது, "கடவுளுடைய சக வேலையாளான."

அதி. 2
a 1தெ 5:23 2தெ 1:4

அதி. 3
b அப் 17:15
c அப் 16:1, 2 ரோ 16:21 1கொ 16:10
d அப் 14:22 1கொ 4:9 1பே 2:21
e 1தெ 2:14
f 1தெ 3:2
g மத் 4:3 2கொ 11:3
h அப் 18:5
i 2தெ 1:4
j 2தெ 1:3

செய்வார்களாக. **12** அதோடு, நாங்கள் உங்கள்மீது வைத்திருக்கிற அன்
பில் வளர்வதுபோல், நீங்களும் ஒருவர்மீது ஒருவர் வைத்திருக்கிற அன்பி
லும் மற்ற எல்லார்மீதும் வைத்திருக்கிற அன்பிலும் அதிகமதிகமாக வள
ரும்படி நம் எஜமான் உதவி செய்வாராக.[a] **13** இப்படி, நம் எஜமானாகிய
இயேசு தன்னுடைய பரிசுத்தவான்கள் எல்லாரோடும்கூட பிரசன்னமாகும்
போது,[b] நம் கடவுளாகவும் தகப்பனாகவும் இருக்கிறவருடைய பார்வையில்
நீங்கள் குற்றமற்றவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் இருப்பதற்கு
உங்கள் இதயங்களைப் பலப்படுத்துவாராக.[c]

4 சகோதரர்களே, நீங்கள் எப்படி நடக்க வேண்டும், கடவுளை எப்படிப்
பிரியப்படுத்த வேண்டும்[d] என்பதைப் பற்றி நாங்கள் கொடுத்த அறிவு
ரைகளின்படியே நடந்து வருகிறீர்கள். அதை இன்னும் முழுமையாகச்
செய்யும்படி நம் எஜமானாகிய இயேசுவின் பெயரில் உங்களிடம் கெஞ்சிக்
கேட்கிறோம், மன்றாடிக் கேட்கிறோம். **2** ஏனென்றால், நம் எஜமானாகிய
இயேசுவின் பெயரில் நாங்கள் கொடுத்த அந்த அறிவுரைகள்* உங்களுக்
குத் தெரியும்.

3 நீங்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டும்[e] என்பதும், பாலியல்
முறைகேட்டுக்கு* விலகியிருக்க வேண்டும்[f] என்பதும் கடவுளுடைய
விருப்பம்.# **4** உடலைப் பரிசுத்தமாகவும் மதிப்புள்ளதாகவும் வைத்திருப்
பது எப்படி என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்
டும்.[g] **5** கடவுளைப் பற்றித் தெரியாத உலக மக்கள்[h] திருப்தியடையாமல்
கட்டுக்கடங்காத காமப்பசிக்கு இடம்கொடுப்பது போல நாம் இடம்கொடுக்
கக் கூடாது.[i] **6** இந்த விஷயத்தில், யாரும் எல்லை மீறிப் போய்த் தன்னு
டைய சகோதரனுக்குக் கெடுதல் செய்துவிடக் கூடாது. ஏனென்றால், இப்
படிப்பட்ட எல்லா செயல்களுக்கும் யெகோவா* தண்டனை கொடுப்பார்.
இதை நாங்கள் உங்களுக்கு முன்பே சொல்லியிருந்தோம், கடுமையாக எச்
சரித்தும் இருந்தோம். **7** ஏனென்றால், அசுத்தமாக வாழ்வதற்காக அல்ல,
பரிசுத்தமாக வாழ்வதற்காகத்தான் கடவுள் நம்மை அழைத்திருக்கிறார்.[j]
8 அப்படியானால், இந்தப் போதனையை அலட்சியம் செய்கிறவன் மனி
தனை அல்ல, தன்னுடைய சக்தியை உங்களுக்குத் தருகிற கடவுளையே[k]
அலட்சியம் செய்கிறான்.[l]

9 சகோதர அன்பைப்[m] பற்றி நாங்கள் உங்களுக்கு எழுத வேண்டிய
தில்லை; ஒருவருக்கொருவர் அன்பு காட்டும்படி நீங்களே கடவுளிடமிருந்து
கற்றுக்கொண்டிருக்கிறீர்கள்.[n] **10** சொல்லப்போனால், மக்கெதோனியா
முழுவதிலும் இருக்கிற சகோதரர்கள் எல்லாரிடமும் நீங்கள் அன்பு காட்டி
வருகிறீர்கள். சகோதரர்களே, அதை இன்னும் அதிகமாகக் காட்டும்படி உங்
களை உற்சாகப்படுத்துகிறோம். **11** நாங்கள் உங்களுக்குக் கொடுத்த அறி
வுரையின்படியே, அமைதியாக வாழ்வதைக் குறிக்கோளாக வையுங்கள்,[o]
மற்றவர்களுடைய விஷயத்தில் தலையிடாமல் இருங்கள்,[p] உங்கள் கைக
ளால் வேலை செய்யுங்கள்.[q] **12** அப்போதுதான், வெளியாட்களுடைய*
பார்வையில் நீங்கள் கண்ணியமாய் நடந்துகொள்கிறவர்களாக இருப்பீர்
கள்;[r] உங்களுக்கு ஒரு குறையும் இருக்காது.

4:2 *வே.வா., “கட்டளைகள்.” **4:3** *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., “சித்தம்.” **4:6** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:12** *வே.வா., “கிறிஸ்தவ சபையில் இல்லாத ஆட்களுடைய.”

அதி. 3
a 1தெ 4:9; 2தெ 1:3
b 1தெ 2:19; 1தெ 5:23; 2தெ 2:1, 2
c 1கொ 1:8

அதி. 4
d கொலோ 1:10; 1பே 2:12
e யோவா 17:19; எபே 5:25-27; 2தெ 2:13; 1பே 1:15, 16
f எபே 5:3
g ரோ 6:19; கொலோ 3:5; 2தீ 2:22
h சங் 79:6; எபே 4:17, 19; 1பே 4:3
i 1கொ 6:18; எபே 5:5
j எபி 12:14; 1பே 1:15, 16
k 1யோ 3:24
l 1கொ 6:18, 19
m ரோ 12:10
n யோவா 13:34, 35; 1பே 1:22; 1யோ 4:21
o 2தெ 3:11, 12
p 1பே 4:15
q 1கொ 4:11, 12; எபே 4:28; 2தெ 3:10; 1தீ 5:8
r ரோ 12:17

13 சகோதரர்களே, இறந்தவர்களுக்கு*[a] என்ன நடக்கும் என்பது உங்க
ளுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்; அப்போதுதான்,
நம்பிக்கையில்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துக்கப்பட மாட்டீர்
கள்.[b] **14** இயேசு இறந்து உயிரோடு எழுந்தார்[c] என்ற விசுவாசம்
நமக்கு இருக்கிறது. அப்படியானால், இயேசுவின் சீஷர்களாக இறந்தவர்
களையும்* அவரோடு இருப்பதற்காகக் கடவுள் உயிரோடு எழுப்புவார்.[d]
15 யெகோவாவுடைய* வார்த்தையின் அடிப்படையில் இதைத்தான் நாங்
கள் உங்களுக்குச் சொல்கிறோம்: நம் எஜமானுடைய பிரசன்னத்தின்போது
நம்மில் உயிரோடிருப்பவர்கள் இறந்தவர்களை# எந்த விதத்திலும் முந்திக்
கொள்ள மாட்டோம். **16** ஏனென்றால், நம் எஜமான் அதிகார தொனி
யோடும், தலைமைத் தூதருக்குரிய[e] குரலோடும், கடவுளுடைய எக்காள
முழக்கத்தோடும் பரலோகத்திலிருந்து இறங்கி வருவார். அப்போது, கிறிஸ்
துவின் சீஷர்களாக இறந்தவர்கள் முதலில் உயிரோடு எழுந்திருப்பார்கள்.[f]
17 பின்பு, நம்மில் உயிரோடிருப்பவர்கள், வானத்தில் நம் எஜமானைச் சந்
திப்பதற்காக[g] அவர்களோடுகூட மேகங்களில் எடுத்துக்கொள்ளப்படு
வோம்.[h] இப்படி, எப்போதும் நம் எஜமானோடு இருப்போம்.[i] **18** அத
னால், இந்த வார்த்தைகளைச் சொல்லி எப்போதும் ஒருவரை ஒருவர்
ஆறுதல்படுத்துங்கள்.

5 சகோதரர்களே, இவை நடக்கப்போகிற காலங்களையும் வேளைக
ளையும்* பற்றி நான் உங்களுக்கு எதுவும் எழுத வேண்டிய
தில்லை. **2** ஏனென்றால், இரவில் திருடன் வருவதுபோல்[j] யெகோவா
வின்* நாள்[k] வரும் என்று உங்களுக்கே நன்றாகத் தெரியும். **3** “இதோ!
சமாதானம், பாதுகாப்பு!” என்று அவர்கள் சொல்லும்போது, ஒரு கர்ப்பிணிக்
குப் பிரசவ வலி வருவதுபோல் எதிர்பாராத நேரத்தில் திடீரென்று அவர்
களுக்கு அழிவு வரும்.[l] அவர்களால் தப்பிக்கவே முடியாது. **4** ஆனால்
சகோதரர்களே, நீங்கள் இருட்டில் இருப்பவர்கள் அல்ல; அதனால், வெளிச்
சத்தில் திடீரென்று மாட்டிக்கொள்கிற திருடர்களைப் போல் நீங்கள் அந்த
நாளில் மாட்டிக்கொள்ள மாட்டீர்கள். **5** நீங்கள் எல்லாரும் ஒளியின் பிள்
ளைகளாகவும் பகலின் பிள்ளைகளாகவும் இருக்கிறீர்கள்;[m] நாம் இரவுக்கோ
இருட்டுக்கோ சொந்தமானவர்கள் அல்ல.[n]

6 அப்படியானால், மற்றவர்களைப் போல் நாம் தூங்கிக்கொண்டிருக்கக்
கூடாது;[o] அதற்குப் பதிலாக, விழிப்போடும் தெளிந்த புத்தியோடும்
இருக்க வேண்டும்.[p] **7** தூங்குகிறவர்கள் இரவில் தூங்குவார்கள்; குடிவெ
றியர்கள் இரவில் குடிபோதையில் இருப்பார்கள்.[q] **8** ஆனால், பகலுக்குச்
சொந்தமானவர்களான நாம் தெளிந்த புத்தியோடிருந்து, விசுவாசத்தையும்
அன்பையும் மார்புக் கவசமாகவும், மீட்புக்கான நம்பிக்கையைத் தலைக்கவ
சமாகவும் போட்டுக்கொள்ள வேண்டும்.[r] **9** ஏனென்றால், கடவுள் நம்மேல்
கடும் கோபத்தைக் காட்டுவதற்காக நம்மைத் தேர்ந்தெடுக்காமல், நம் எஜமா
னாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மீட்பதற்காகத்தான் நம்மைத் தேர்ந்தெ
டுத்தார்.[s] **10** நாம் விழித்திருந்தாலும் கண்மூடிவிட்டாலும்* கிறிஸ்துவோடு

4:13 *நே.மொ., “தூங்கிவிட்டவர்களுக்கு.” **4:14** *நே.மொ., “தூங்கிவிட்டவர்களையும்.” **4:15; 5:2** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:15** #நே.மொ., “தூங்கிவிட்டவர்களை.” **5:1** *அதாவது, “குறித்த நாட்களையும்.” **5:10** *வே.வா., “இறந்துவிட்டாலும்.”

அதி. 4
a யோவா 11:11, அப் 7:59, 60, 1கொ 15:6
b 1கொ 15:32
c ரோ 14:9, 1கொ 15:3, 4
d 1கொ 15:22, 23, பிலி 3:20, 21, 2தெ 2:1, வெளி 20:4
e யூ 9
f 1கொ 15:51, 52
g 2தெ 2:1
h அப் 1:9
i யோவா 14:3, யோவா 17:24, 2கொ 5:8, பிலி 1:23, வெளி 20:6

அதி. 5
j மத் 24:36, 2பே 3:10
k செப் 1:14
l சங் 37:10, எரே 8:11
m யோவா 12:36, ரோ 13:12, எபே 5:8
n யோவா 8:12, கொலோ 1:13, 1பே 2:9
o ரோ 13:11
p மத் 24:42, 1பே 5:8
q ரோ 13:13
r எபே 6:14-17
s 2தெ 2:13

உயிர்வாழ வேண்டும்[a] என்பதற்காகவே கிறிஸ்து நமக்காக இறந்தார்.[b]
11 அதனால், நீங்கள் இப்போது செய்து வருகிறபடியே எப்போதும்
ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துங்கள்,* ஒருவரை ஒருவர் பலப்படுத்
துங்கள்.[c]

12 சகோதரர்களே, உங்கள் மத்தியில் கடினமாக உழைத்து, நம் எஜமா
னுடைய சேவையில் உங்களை வழிநடத்தி, உங்களுக்குப் புத்திசொல்
கிற சகோதரர்களுக்கு மரியாதை காட்டும்படி உங்களைக் கேட்டுக்கொள்கி
றோம். **13** அவர்களுடைய உழைப்பின் காரணமாக அவர்களை மிக
உயர்வாகக் கருதி, அவர்கள்மேல் அன்பு காட்டும்படியும் கேட்டுக்
கொள்கிறோம்.[d] ஒருவரோடொருவர் சமாதானமாகுங்கள்.[e] **14** சகோதரர்
களே, நாங்கள் உங்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொள்வது இதுதான்:
ஒழுங்கீனமாக இருப்பவர்களை எச்சரியுங்கள்,*[f] மனச்சோர்வால் வாடுகிற
வர்களிடம்# ஆறுதலாகப் பேசுங்கள், பலவீனமாக இருப்பவர்களுக்கு ஆத
ரவு கொடுங்கள், எல்லாரிடமும் பொறுமையாக இருங்கள்.[g] **15** உங்களில்
யாரும் தீமைக்குத் தீமை செய்யாதீர்கள்;[h] உங்கள் மத்தியில் இருப்பவர்க
ளுக்கு மட்டுமல்ல, மற்ற எல்லாருக்கும் நன்மை செய்ய எப்போதும் முயற்சி
செய்யுங்கள்.[i]

16 எப்போதும் சந்தோஷமாக இருங்கள்.[j] **17** எப்போதும் ஜெபம்
செய்யுங்கள்.[k] **18** எல்லாவற்றுக்காகவும் நன்றி சொல்லுங்கள்;[l] கிறிஸ்து
இயேசுவின் சீஷர்களான நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும் என்பது
தான் கடவுளுடைய விருப்பம்.* **19** கடவுளுடைய சக்தி உங்களுக்குள்
பற்றவைக்கிற ஆர்வத் தீயை அணைத்துவிடாதீர்கள்.[m] **20** தீர்க்கதரிசனங்
களை அவமதிக்காதீர்கள்.[n] **21** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நல்
லது எது என்று நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்;[o] அதையே உறுதியாகப்
பிடித்துக்கொள்ளுங்கள். **22** எல்லா விதமான கெட்ட செயலையும் விட்டு
விலகுங்கள்.[p]

23 சமாதானத்தின் கடவுள் உங்களை முழுமையாகப் புனிதமாக்கட்டும்.
சகோதரர்களே, நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தின்
போது உங்கள் சிந்தை, உயிர், உடல் ஆகியவை எல்லா விதத்திலும் குறை
யில்லாமலும் குற்றமில்லாமலும் இருக்கும்படி பாதுகாக்கட்டும்.[q] **24** உங்
களை அழைக்கிறவர் நம்பகமானவர் என்பதால் நிச்சயம் அப்படிச்
செய்வார்.

25 சகோதரர்களே, எங்களுக்காகத் தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள்.[r]

26 சுத்தமான இதயத்தோடு எல்லா சகோதரர்களுக்கும் முத்தம்
கொடுத்து வாழ்த்துங்கள்.

27 இந்தக் கடிதத்தைச் சகோதரர்கள் எல்லாருக்கும் நீங்கள் வாசித்துக்
காட்ட வேண்டும் என்று நம் எஜமானுடைய பெயரில் கட்டளை கொடுக்
கிறேன்.[s]

28 நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் அளவற்ற கருணை உங்கள்
மேல் இருக்கட்டும்.

5:11 *வே.வா., “ஆறுதல்படுத்துங்கள்.” **5:14** *வே.வா., “இருப்பவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள்.” #வே.வா., “சோர்ந்துபோய் இருப்பவர்களிடம்.” **5:18** *வே.வா., “சித்தம்.”

அதி. 5
a 1தெ 4:16, 17
b ரோ 5:8
c ரோ 1:11, 12; ரோ 15:2
d பிலி 2:29, 30; 1தீ 5:17; எபி 13:7
e மாற் 9:50; 2கொ 13:11
f லேவி 19:17; 2தீ 4:2
g 1கொ 13:4; கலா 5:22; எபே 4:1, 2; கொலோ 3:13
h மத் 5:39
i ரோ 12:17, 19
j 2கொ 6:4, 10; பிலி 4:4
k லூ 18:1; ரோ 12:12
l எபே 5:20; கொலோ 3:17
m எபே 4:30
n 1கொ 14:1
o 1யோ 4:1
p யோபு 2:3
q 1கொ 1:8
r ரோ 15:30
s கொலோ 4:16

தெசலோனிக்கேயருக்கு

எழுதப்பட்ட இரண்டாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1, 2)
தெசலோனிக்கேயர்களின் விசுவாசம் அதிகமாகி வருகிறது (3-5)
கீழ்ப்படியாதவர்களைப் பழிவாங்குவார் (6-10)
சபைக்காக ஜெபம் (11, 12)

2 அக்கிரமக்காரன் (1-12)
உறுதியோடு நிற்கும்படி அறிவுரை (13-17)

3 தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள் (1-5)
ஒழுங்கீனமாக நடக்கிறவர்களுக்கு எச்சரிக்கை (6-15)
முடிவான வாழ்த்துக்கள் (16-18)

1 பரலோகத் தகப்பனாகிய கடவுளோடும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவோடும் ஒன்றுபட்டிருக்கிற தெசலோனிக்கேயரு
டைய சபைக்கு, சில்வானுவோடும்* தீமோத்தேயுவோடும்[a] சேர்ந்து பவுல்
எழுதுவது:
2 பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதா
னமும் கிடைக்கட்டும்.
3 சகோதரர்களே, நாங்கள் எப்போதும் உங்களுக்காகக் கடவுளுக்கு
நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்; அப்படிச் செய்வது சரியானதே.
ஏனென்றால், உங்கள் விசுவாசம் அதிகமதிகமாக வளர்ந்து வருகிறது; நீங்
கள் எல்லாரும் ஒருவர்மேல் ஒருவர் காட்டுகிற அன்பும் அதிகமாகி வரு
கிறது.[b] **4** எல்லா துன்புறுத்தல்களையும் கஷ்டங்களையும்* நீங்கள்
தாங்கிக்கொண்டு# சகிப்புத்தன்மையையும் விசுவாசத்தையும் காட்டி வருவ
தால்,[c] கடவுளுடைய சபைகளில் உங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசு
கிறோம்.[d] **5** கடவுள் நீதியோடு நியாயந்தீர்க்கிறார் என்பதற்கு இது அத்
தாட்சியாக இருக்கிறது. இதன் காரணமாக, கடவுளுடைய அரசாங்கத்துக்கு
நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் கருதப்படுவீர்கள்; இந்த அரசாங்கத்துக்கா
கத்தான் இப்போது நீங்கள் துன்பங்களை அனுபவிக்கிறீர்கள்.[e]
6 கடவுளுடைய இந்த நியாயத்தீர்ப்பு நீதியானது. ஏனென்றால், உங்க
ளுக்கு உபத்திரவம் கொடுக்கிறவர்களுக்கு அவர் உபத்திரவத்தைக்
கொடுப்பார்.[f] **7** ஆனால், இப்போது உபத்திரவப்படுகிற உங்களுக்கு, நம்
எஜமானாகிய இயேசு ஜுவாலித்து எரிகிற நெருப்புடன் தன்னுடைய வல்ல
மைமிக்க தேவதூதர்களோடு பரலோகத்திலிருந்து வெளிப்படும்போது,[g]
எங்களோடு உங்களுக்கும் விடுதலை கொடுப்பார்.[h] **8** அப்போது, கடவு
ளைப் பற்றித் தெரியாதவர்களையும் நம் எஜமானாகிய இயேசுவைப் பற்
றிய நல்ல செய்திக்குக் கீழ்ப்படியாதவர்களையும் அவர் பழிவாங்குவார்.[i]

1:1 *சீலா என்றும் அழைக்கப்படுகிறார். **1:4** *வே.வா., "உபத்திரவங்களையும்." #வே.வா., "சகித்துக்கொண்டு."

அதி. 1
a 2கொ 1:19
b 1தெ 3:12, 1தெ 4:9, 10
c 1தெ 1:6, 1தெ 2:14, 1பே 2:21
d 1தெ 2:19
e அப் 14:22, ரோ 8:17, 2தீ 2:12
f ரோ 12:19, வெளி 6:9, 10
g மாற் 8:38
h லூ 17:29, 30, 1பே 1:7
i ரோ 2:8

9 இப்படிப்பட்டவர்கள் நம் எஜமானுக்கு முன்னாலிருந்தும் அவருடைய
மகத்தான வல்லமையிலிருந்தும் நீக்கப்பட்டு, நிரந்தர அழிவைத் தண்ட
னையாகப் பெறுவார்கள்.[a] **10** அந்தச் சமயத்தில் அவர் தன்னுடைய பரி
சுத்தவான்களோடுகூட மகிமைப்படும்படி வருவார். நாங்கள் கொடுத்த சாட்
சியை நீங்கள் விசுவாசித்தது போல விசுவாசிக்கிற எல்லாரும் அந்த நாளில்
அவரைப் பார்த்து மலைத்துப்போவார்கள்.

11 அதனால், நாங்கள் எப்போதும் உங்களுக்காக ஜெபம் செய்கி
றோம். தான் கொடுத்த அழைப்புக்கு நம் கடவுள் உங்களைத் தகுதியுள்ள
வர்களாகக் கருதட்டும்;[b] தனக்குப் பிரியமான எல்லா நல்ல காரியங்களை
யும் முழுமையாக நிறைவேற்றட்டும்; விசுவாசத்தால் நீங்கள் செய்து
வருகிற வேலையைத் தன்னுடைய வல்லமையால் வெற்றிபெறச் செய்
யட்டும். **12** அப்போது, நம்முடைய கடவுளும் நம் எஜமானாகிய இயேசு
கிறிஸ்துவும் கொடுக்கிற அளவற்ற கருணையால் நம் எஜமானாகிய இயே
சுவின் பெயர் உங்கள் மூலம் மகிமைப்படும், அவரோடு ஒன்றுபட்டிருக்கிற
நீங்களும் மகிமைப்படுவீர்கள்.

2 இருந்தாலும் சகோதரர்களே, நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்து
வின் பிரசன்னத்தைப்[c] பற்றியும், நாம் அவரோடு கூட்டிச்சேர்க்கப்
படுவதைப்[d] பற்றியும் நாங்கள் உங்களிடம் இதைக் கேட்டுக்கொள்கி
றோம்: **2** யெகோவாவின்* நாள்[e] வந்துவிட்டது என்று யாராவது அருள்
வாக்கு சொன்னாலோ,[f] செய்தி சொன்னாலோ, எங்களிடமிருந்து வந்த ஒரு
கடிதத்தில் இருப்பதாகச் சொன்னாலோ, உடனே நிதானம் இழந்து பரபரப்
பாகிவிடாதீர்கள்.

3 யாரும் எந்த விதத்திலும் உங்களை மோசம்போக்குவதற்கு அனும
திக்காதீர்கள். ஏனென்றால், விசுவாசதுரோகம்[g] முதலில் ஏற்பட்டு, அழிவின்
மகனாகிய[h] அக்கிரமக்காரன்[i] வெளிப்பட்டால் தவிர அந்த நாள் வராது.
4 அவன் ஓர் எதிரி; கடவுள் என்று அழைக்கப்பட்டும் வணங்கப்பட்டும்
வருகிற எல்லாவற்றுக்கும் மேலாக அவன் தன்னை உயர்த்திக்கொள்வான்,
கடவுளுடைய ஆலயத்தில் உட்கார்ந்து எல்லார் முன்னாலும் தன்னை ஒரு
கடவுளாகக் காட்டிக்கொள்வான். **5** நான் உங்களோடு இருந்த சமயத்தில்
இதைப் பற்றியெல்லாம் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இல்லையா?

6 குறித்த காலத்துக்கு முன்பு அவன் வெளிப்படாதபடி, அவனுக்குத்
தடையாகச் செயல்படுவது எதுவென்று இப்போது உங்களுக்கே தெரியும்.
7 மர்மமாக இருக்கிற இந்த அக்கிரமம் ஏற்கெனவே செயல்பட்டு வருவது
உண்மைதான்.[j] ஆனால், இப்போது தடையாகச் செயல்படுகிறவன் நீக்கப்
படும்வரைதான் அது மர்மமாக இருக்கும். **8** அதன் பின்பு, அந்த அக்கி
ரமக்காரன் வெளிப்படுவான்; நம் எஜமானாகிய இயேசு தான் பிரசன்னமாகி
இருப்பதைத் தெரியப்படுத்தும்போது தன்னுடைய வாயிலிருந்து புறப்ப
டும் வல்லமையால் அவனை அழித்து,[k] ஒன்றுமில்லாமல் செய்துவிடுவார்.[l]
9 ஆனால், அந்த அக்கிரமக்காரன் செயல்பட்டு வருவதற்குச் சாத்தானின்
செல்வாக்குதான்[m] காரணமாக இருக்கும். அந்தச் சமயத்தில், எல்லா வகை
யான வல்லமையுள்ள செயல்களும், பொய்யான அடையாளங்களும் அற்
புதங்களும்,[n] **10** எல்லா விதமான அநீதியும் ஏமாற்று வேலைகளும் நடக்
கும்.[o] இவையெல்லாம் அழிவின் பாதையில் போகிறவர்களிடம் நடக்கும்.

2:2 * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 1
a 2பே 3:7
b ரோ 8:30

அதி. 2
c மத் 24:3
d 1தெ 4:17
e செப் 1:14 2பே 3:10
f 1யோ 4:1
g 1தீ 4:1 2தீ 2:16-18 2தீ 4:3 2பே 2:1 1யோ 2:18, 19
h 2பே 2:1, 3
i மத் 7:15 அப் 20:29, 30
j அப் 20:29, 30 1கொ 11: 18, 19 1யோ 2:18
k ஏசா 11:4 வெளி 19:15
l 1தீ 6:13-15 2தீ 4:1, 8
m 2கொ 11:3
n மத் 24:24
o மத் 24:11

ஏனென்றால், மீட்புப் பெறும்படி சத்தியத்தை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு
விருப்பமில்லை. **11** அதனால், அவர்கள் பொய்யை நம்பி வஞ்சகத்
தின் பிடியில் சிக்கிக்கொள்வதற்குக்[a] கடவுள் அவர்களை விட்டுவிடுவார்.
12 சத்தியத்தை நம்பாமல் அநீதியை விரும்புகிற அவர்கள் எல்லாருக்கும்
தண்டனைத் தீர்ப்பு கொடுப்பதற்காக அப்படிச் செய்வார்.

13 இருந்தாலும், யெகோவாவின்* அன்பைப் பெற்ற சகோதரர்களே,
உங்களுக்காக எப்போதும் அவருக்கு நன்றி சொல்ல நாங்கள் கடமைப்பட்
டிருக்கிறோம்; நீங்கள் சத்தியத்தின்மீது விசுவாசம் வைத்ததால் அவர் தன்
னுடைய சக்தியால் உங்களைப் பரிசுத்தமாக்கி,[b] மீட்பதற்காக ஆரம்பத்தி
லேயே உங்களைத் தேர்ந்தெடுத்தார்.[c] **14** இந்த மீட்பைப் பெறுவதற்காக,
நாங்கள் அறிவிக்கிற நல்ல செய்தியின் மூலம் அவர் உங்களை அழைத்
தார்; நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமை உங்களுக்குக்
கிடைக்க வேண்டும் என்பதற்காக அப்படி அழைத்தார்.[d] **15** அதனால்
சகோதரர்களே, வாய்மொழியாகவோ கடிதம் மூலமாகவோ உங்களுக்குக்
கற்றுக்கொடுக்கப்பட்ட விஷயங்களை நன்றாகப் பிடித்துக்கொண்டு[e] உறுதி
யோடு நில்லுங்கள்.[f] **16** நம்மேல் அன்பு காட்டி[g] அளவற்ற கருணையால்
நிரந்தர ஆறுதலையும் அருமையான நம்பிக்கையையும் கொடுத்திருக்
கிற[h] நம் தகப்பனாகிய கடவுளும், நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவும்,
17 உங்கள் இதயத்துக்கு ஆறுதல் தந்து, நீங்கள் நல்லதையே சொல்வதற்
கும் செய்வதற்கும் உங்களைப் பலப்படுத்துவார்களாக.

3 கடைசியாக, சகோதரர்களே, எங்கள் மூலம் யெகோவாவின்*
வார்த்தை உங்கள் மத்தியில் வேகமாகப் பரவி[i] மகிமையடைந்து வரு
வதுபோல் எல்லா இடங்களிலும் பரவி மகிமையடைய வேண்டும் என்று
ஜெபம் செய்யுங்கள்.[j] **2** தீமை செய்கிறவர்களிடமிருந்தும் கெட்ட ஆட்க
ளிடமிருந்தும் நாங்கள் காப்பாற்றப்பட வேண்டும்[k] என்று ஜெபம் செய்
யுங்கள். ஏனென்றால், எல்லாரிடமும் விசுவாசம் இல்லை.[l] **3** ஆனால்,
நம் எஜமான் நம்பகமானவர்; அவர் உங்களைப் பலப்படுத்துவார், பொல்
லாதவனிடமிருந்து பாதுகாப்பார். **4** நாங்கள் கொடுத்த அறிவுரைகளின்
படி இப்போது நீங்கள் நடப்பது போலவே இனிமேலும் நடப்பீர்கள் என்று
நம் எஜமானுடைய ஊழியர்களான நாங்கள் உங்கள்மீது நம்பிக்கையோடு
இருக்கிறோம். **5** கடவுள்மேல் அன்பும்,[m] கிறிஸ்துவின் சேவையில் சகிப்
புத்தன்மையும் காட்டுவதற்கு[n] நம் எஜமான் உங்கள் இதயங்களைத்
தொடர்ந்து வழிநடத்தட்டும்.

6 சகோதரர்களே, உங்களுக்கு* நாங்கள் கொடுத்த அறிவுரைகளின்படி
நடக்காமல்[o] ஒழுங்கீனமாக நடக்கிற எந்தச் சகோதரனையும்விட்டு நீங்
கள் விலக வேண்டுமென்று[p] நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின்
பெயரில் இப்போது உங்களுக்குக் கட்டளை கொடுக்கிறோம். **7** எந்த
விதத்தில் எங்களுடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்று
உங்களுக்கே தெரியும்;[q] உங்கள் மத்தியில் நாங்கள் ஒழுங்கீனமாக நடக்
கவில்லை. **8** அதோடு, யாரிடமும் இலவசமாக* சாப்பிடவில்லை;[r] உங்
களில் யாருக்கும் அதிக பாரமாக இருக்கக் கூடாது என்பதற்காக
இரவும் பகலும் பாடுபட்டு வேலை செய்தோம்.[s] **9** உங்களுடைய

2:13; 3:1 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:6** *அல்லது, “அவர்களுக்கு.” **3:8** *வே.வா., “பணம் கொடுக்காமல்.”

அதி. 2
a மத் 24:5; 1தீ 4:1; 2தீ 4:3, 4
b யோவா 17:17; 1கொ 6:11; 1தெ 4:7
c யோவா 6:44; ரோ 8:30
d 1பே 5:10
e 1கொ 11:2
f 1கொ 15:58; 1கொ 16:13
g 1யோ 4:10
h 1பே 1:3, 4

அதி. 3
i அப் 19:20; 1தெ 1:8
j ரோ 15:30; 1தெ 5:25; எபி 13:18
k ஏசா 25:4
l அப் 28:24; ரோ 10:16
m 1யோ 5:3
n லூ 21:19; ரோ 5:3
o 1கொ 11:2; 2தெ 2:15; 2தெ 3:14
p 1தெ 5:14
q 1கொ 4:16; 1தெ 1:6
r அப் 20:34
s அப் 18:3; 1கொ 9:14, 15; 2கொ 11:9; 1தெ 2:9

உதவியைப் பெற்றுக்கொள்ள எங்களுக்கு அதிகாரம் இல்லை என்
பதால் நாங்கள் அப்படிச் செய்யவில்லை;[a] நீங்கள் பின்பற்றுவதற்கு நாங்
கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும்[b] என்பதற்காகத்தான் அப்படிச்
செய்தோம். **10** சொல்லப்போனால், நாங்கள் உங்களோடு இருந்தபோது,
“வேலை செய்ய ஒருவனுக்கு இஷ்டம் இல்லை என்றால், அவன் சாப்பி
டவும் கூடாது”[c] என்று கட்டளை கொடுத்துவந்தோம். **11** ஆனால், சிலர்
எந்த வேலையும் செய்யாமல், மற்றவர்களுடைய விஷயத்தில் அநாவசிய
மாகத் தலையிடுவதாகவும், ஒழுங்கீனமாக நடப்பதாகவும் கேள்விப்படுகி
றோம்.[d] **12** இப்படிப்பட்டவர்கள் அமைதியாக அவரவர் வேலையை மட்
டுமே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்றும், தாங்களே உழைத்துச்
சாப்பிட வேண்டும்[e] என்றும் நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்
களான நாங்கள் உங்களுக்குக் கட்டளை கொடுக்கிறோம், கெஞ்சியும் கேட்
டுக்கொள்கிறோம்.

13 சகோதரர்களே, நல்ல காரியங்கள் செய்வதை விட்டுவிடாதீர்கள்.
14 இந்தக் கடிதத்தில் இருக்கிற எங்கள் வார்த்தைக்கு யாராவது கீழ்ப்படி
யாமல்போனால், அவன் வெட்கப்படும்படி அவனைக் குறித்து வைத்துக்
கொண்டு, அவனோடு பழகுவதை நிறுத்திவிடுங்கள்.[f] **15** இருந்தாலும்,
அவனை எதிரியாக நினைக்காமல், சகோதரனாக நினைத்து அவனுக்குத்
தொடர்ந்து புத்திசொல்லுங்கள்.[g]

16 சமாதானத்தின் எஜமான் எப்போதும் எல்லாவற்றிலும் உங்களுக்குச்
சமாதானத்தைக் கொடுக்கட்டும்.[h] நம் எஜமான் உங்கள் எல்லாரோடும்
இருக்கட்டும்.

17 பவுலாகிய நானே கைப்பட எழுதி உங்களுக்கு வாழ்த்துச் சொல்கி
றேன்.[i] இதுதான் என்னுடைய ஒவ்வொரு கடிதத்துக்கும் அடையாளம், இது
தான் என் கையெழுத்து.

18 நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் அளவற்ற கருணை உங்கள்
எல்லார்மீதும் இருக்கட்டும்.

அதி. 3
a மத் 10:9, 10; 1கொ 9:6, 7
b 1கொ 11:1; பிலி 3:17
c 1தெ 4:11, 12; 1தீ 5:8
d 1தெ 5:14; 1தீ 5:13; 1பே 4:15
e எபே 4:28
f 2தெ 3:6
g 1தெ 5:14
h யோவா 14:27
i 1கொ 16:21; கொலோ 4:18

தீமோத்தேயுவுக்கு

எழுதப்பட்ட முதலாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1, 2)
- பொய்ப் போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை (3-11)
- பவுலுக்குக் காட்டப்பட்ட அளவற்ற கருணை (12-16)
- என்றென்றுமுள்ள ராஜா (17)
- ‘சிறந்த போராட்டத்தைப் போராடு’ (18-20)

2 எல்லா விதமான ஆட்களுக்காகவும் ஜெபம் (1-7)
- ஒரே கடவுள், ஒரே மத்தியஸ்தர் (5)
- எல்லாருக்காகவும் சரிசமமான மீட்புவிலை (6)
- ஆண்களுக்கும் பெண்களுக்கும் அறிவுரைகள் (8-15)
  - அடக்கமாக உடை உடுத்துங்கள் (9, 10)

3 கண்காணியின் தகுதிகள் (1-7)
உதவி ஊழியர்களின் தகுதிகள் (8-13)
கடவுள்பக்தியைப் பற்றிய பரிசுத்த ரகசியம் (14-16)

4 பேய்களின் போதனைகளுக்கு எதிராக எச்சரிக்கை (1-5)
இயேசுவின் சிறந்த ஊழியனாக இருப்பது எப்படி (6-10)
உடற்பயிற்சியும் கடவுள்பக்தியும் (8)
உன் போதனையின் மீது கவனம் செலுத்து (11-16)

5 பெரியவர்களையும் சிறியவர்களையும் எப்படி நடத்த வேண்டும் (1, 2)
விதவைகளுக்கு உதவி (3-16)
குடும்பத்தில் இருக்கிறவர்களைக் கவனித்துக்கொள்வது (8)
கடினமாக உழைக்கிற மூப்பர்களுக்கு மரியாதை (17-25)
‘வயிற்றுக் கோளாறுக்காகக் கொஞ்சம் திராட்சமது’ (23)

6 அடிமைகள் தங்கள் எஜமான்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் (1, 2)
பொய்ப் போதகர்களும் பண ஆசையும் (3-10)
கடவுளுடைய ஊழியனுக்கு அறிவுரைகள் (11-16)
நல்ல செயல்களைச் செய்வதில் செல்வந்தர்கள் (17-19)
உன்னிடம் ஒப்படைக்கப்பட்டதைப் பாதுகாத்துக்கொள் (20, 21)

---

1 நம்முடைய மீட்பராயிருக்கிற கடவுளும் நம்முடைய நம்பிக்கையாயி
ருக்கிற கிறிஸ்து இயேசுவும்[a] கட்டளை கொடுத்தபடி, கிறிஸ்து இயேசு
வின் அப்போஸ்தலனாக இருக்கிற பவுல், **2** உண்மையான மகனாகவும்
சக விசுவாசியாகவும் இருக்கிற[b] தீமோத்தேயுவுக்கு*[c] எழுதுவது:

பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய கிறிஸ்து
இயேசுவிடமிருந்தும் உனக்கு அளவற்ற கருணையும் இரக்கமும் சமாதான
மும் கிடைக்கட்டும்.

3 நான் மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டபோது எபேசுவில் தங்கியி
ருக்கச் சொல்லி உன்னை உற்சாகப்படுத்தியது போலவே இப்போதும் உற்சா
கப்படுத்துகிறேன். ஏனென்றால், அங்கே இருக்கிற சிலர் பொய்க் கோட்பாடு
களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். **4** அதோடு, கட்டுக்கதைகளுக்கும்[d] வம்
சாவளிப் பட்டியல்களுக்கும் கவனம் செலுத்துகிறார்கள். இவையெல்லாம்
கடவுளுடைய விஷயங்களைப் போதித்து விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்
குப் பதிலாக வீண் கேள்விகளைத்தான் எழுப்புகின்றன.[e] அதனால், இப்ப
டிச் செய்யக் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிடு. **5** இந்தக் கட்ட
ளையின் நோக்கம், சுத்தமான இதயத்தோடும் நல்ல மனசாட்சியோடும்
வெளிவேஷமில்லாத விசுவாசத்தோடும் நாம் அன்பு காட்ட வேண்டும் என்
பதுதான்.[f] **6** சிலர் இவற்றைவிட்டு விலகி, வீண்பேச்சு பேசிக்கொண்டிருக்
கிறார்கள்.[g] **7** அவர்கள் திருச்சட்டப் போதகர்களாக[h] இருப்பதற்கு விரும்
புகிறார்கள். ஆனால், தாங்கள் எவற்றைச் சொல்கிறார்கள் என்பதையும்,
எவற்றைச் செய்ய வற்புறுத்துகிறார்கள் என்பதையும் புரிந்துகொள்ளாமல்
இருக்கிறார்கள்.

8 திருச்சட்டம் நல்லது என்பது நமக்குத் தெரியும். ஆனால், ஒருவர்
அதைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். **9** நமக்குத் தெரிந்திருக்கிற
படி, நீதிமான்களுக்காகச் சட்டம் இயற்றப்படுவதில்லை; அதற்குப் பதி
லாக, அக்கிரமக்காரர்கள்,[i] அடங்காதவர்கள், கடவுள்பக்தி இல்லாதவர்கள்,

---

1:2 * அர்த்தம், “கடவுளுக்கு மரியாதை கொடுப்பவன்.”

அதி. 1
a 1பே 1:3, 4
b 1கொ 4:17
c அப் 16:1, 2; பிலி 2:19, 20
d 1தீ 4:7; 2தீ 4:3, 4; தீத் 1:13, 14
e 1தீ 6:20; 2தீ 2:14
f ரோ 13:8; கலா 5:6
g 1தீ 6:20; 2தீ 2:16-18
h யாக் 3:1
i கலா 3:19

பாவிகள், உண்மையில்லாதவர்கள்,* பரிசுத்தமானவற்றை அவமதிக்கிறவர்
கள், அப்பா அம்மாவையோ மற்றவர்களையோ கொலை செய்கிறவர்கள்,
10 பாலியல் முறைகேட்டில்* ஈடுபடுகிறவர்கள், ஆண்களோடு உறவு
கொள்ளும் ஆண்கள், ஆட்களைக் கடத்துகிறவர்கள், பொய் சொல்கிறவர்
கள், கொடுத்த வாக்கை மீறுகிறவர்கள்# ஆகியோருக்காகவும், பயனுள்ள△
போதனைகளுக்கு[a] எதிரான எல்லா செயல்களையும் செய்கிறவர்களுக்கா
கவும்தான் சட்டம் இயற்றப்படுகிறது. **11** பயனுள்ள இந்தப் போதனைகள்,
சந்தோஷமுள்ள கடவுள் என்னிடம் ஒப்படைத்திருக்கிற மகத்தான நல்ல
செய்திக்கு இசைவாக இருக்கின்றன.[b]

12 என்னைப் பலப்படுத்திய நம் எஜமானாகிய கிறிஸ்து இயேசுவுக்கு
நன்றியோடு இருக்கிறேன். ஏனென்றால், அவர் என்னை உண்மையுள்ளவன்
என்று கருதி, அவருடைய ஊழியத்தைச் செய்வதற்கு என்னை நியமித்தார்.[c]
13 முன்பு நான் துன்புறுத்துகிறவனாகவும், கடவுளை நிந்திக்கிறவனாகவும்,
திமிர்பிடித்தவனாகவும் இருந்தேன்.[d] ஆனாலும், அறியாமையின் காரண
மாக நான் விசுவாசமில்லாமல் நடந்துகொண்டதால் அவர் என்மேல் இரக்
கம் காட்டினார். **14** நம் எஜமானுடைய அளவற்ற கருணை எனக்குத் தாரா
ளமாகக் கிடைத்தது; அதோடு, விசுவாசமும் கிறிஸ்து இயேசுவின் மீதுள்ள
அன்பும் எனக்குள் அதிகமானது. **15** பாவிகளை மீட்பதற்காகக் கிறிஸ்து
இயேசு உலகத்துக்கு வந்தார்[e] என்ற வார்த்தை உண்மையானது, முழுமை
யாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. அந்தப் பாவிகளில் பெரும் பாவி
நான்தான்.[f] **16** ஆனாலும், கிறிஸ்து இயேசுமேல் விசுவாசம் வைத்து முடி
வில்லாத வாழ்வைப்[g] பெறப்போகிறவர்களுக்கு நான் ஓர் எடுத்துக்காட்
டாக இருக்கும்படி, அவர் என்மேல் பொறுமையை முழுமையாகக் காட்டி
னார், பெரும் பாவியாகிய என்மேல் இரக்கத்தைக் காட்டினார்.

17 என்றென்றுமுள்ள ராஜாவாகவும்,[h] அழிவில்லாதவராகவும்,[i] பார்க்க
முடியாதவராகவும்[j] இருக்கிற ஒரே கடவுளுக்கே[k] என்றென்றும் மாண்பும்
மகிமையும் சேருவதாக. ஆமென்.*

18 தீமோத்தேயு, என் பிள்ளையே, உன்னைப் பற்றிச் சொல்லப்பட்ட
தீர்க்கதரிசனங்களுக்கு ஏற்ப நான் உனக்கு இவற்றைக் கட்டளையிடுகிறேன்.
அந்தத் தீர்க்கதரிசனங்களை நீ மனதில் வைத்து, சிறந்த போராட்டத்தைப்
போராடிக்கொண்டே[l] இருக்க வேண்டும் என்பதற்காகவும், **19** விசுவாசத்
தையும் நல்ல மனசாட்சியையும் நீ காத்துக்கொள்ள வேண்டும்[m] என்ப
தற்காகவும் இவற்றைக் கட்டளையிடுகிறேன்; இவற்றைச் சிலர் ஒதுக்கிவிட்டு
தங்களுடைய விசுவாசக் கப்பலை மூழ்கடித்திருக்கிறார்கள். **20** இமெனே
யுவும்[n] அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்தான். அவர்களை நான் சாத்
தானிடம் ஒப்படைத்துவிட்டேன்.[o] கடவுளை நிந்திக்கக் கூடாது என்ற
பாடத்தை அவர்களுக்குக் கொடுக்கப்படும் கண்டிப்பிலிருந்து அவர்கள் கற்
றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்தேன்.

2 எல்லாரிடமும் நான் முதலாவதாகக் கேட்டுக்கொள்வது இதுதான்: நாம்
கடவுள்பக்தி உள்ளவர்களாகவும் பொறுப்புள்ளவர்களாகவும் தொல்
லையில்லாமல் அமைதியாக வாழ்வதற்கு எல்லா விதமான ஆட்களுக்

1:9 *வே.வா., “மாறாத அன்பு இல்லாதவர்கள்.” **1:10** *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., “பொய் சத்தியம் செய்கிறவர்கள்.” △வே.வா., “ஆரோக்கியமான.” **1:17** *அதாவது, “அப்படியே ஆகட்டும்.”

அதி. 1
a 2தீ 1:13; தீத் 1:7, 9
b கலா 2:7, 8
c அப் 9:15; 2கொ 3:5, 6
d அப் 8:3; அப் 9:1, 2; கலா 1:13; பிலி 3:5, 6
e லூ 5:32; 2கொ 5:19; 1யோ 2:1, 2
f அப் 9:1, 2; 1கொ 15:9
g யோவா 6:40; யோவா 20:31
h சங் 10:16; சங் 90:2; தானி 6:26; வெளி 15:3
i ரோ 1:23
j கொலோ 1:15
k ஏசா 43:10; 1கொ 8:4
l 2தீ 2:3
m 1தீ 1:5
n 2தீ 2:16-18
o 1கொ 5:5, 11

காகவும் **2** ராஜாக்களுக்காகவும் உயர் அதிகாரிகளுக்காகவும்*[a] கடவுளி
டம் மன்றாடுங்கள், ஜெபம் செய்யுங்கள், வேண்டுதல் செய்யுங்கள், நன்றி
சொல்லுங்கள்.[b] **3** இதுதான் நம்முடைய மீட்பரான கடவுளுடைய பார்வை
யில் சிறந்தது, சரியானது.[c] **4** எல்லா விதமான மக்களும் சத்தியத்தைப் பற்
றிய திருத்தமான அறிவைப் பெற வேண்டுமென்பதும், மீட்புப் பெற[d]
வேண்டுமென்பதும் அவருடைய விருப்பம்.* **5** ஒரே கடவுள்தான் இருக்கி
றார்.[e] கடவுளுக்கும் மனிதர்களுக்கும் நடுவில்[f] ஒரே மத்தியஸ்தர்தான் இருக்
கிறார்,[g] அவர்தான் மனிதராகிய கிறிஸ்து இயேசு.[h] **6** சரிசமமான மீட்பு
விலையாகத்[i] தன்னையே எல்லாருக்காகவும்* கொடுத்தவர் அவர்தான்.
இதைப் பற்றிய சாட்சியே குறித்த காலத்தில் கொடுக்கப்படும். **7** இதற்
காகத்தான்[j] ஒரு பிரசங்கிப்பாளனாகவும் அப்போஸ்தலனாகவும்,[k] அதாவது
மற்ற தேசத்து மக்களுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் கற்றுக்கொடுக்
கிற போதகனாகவும், நியமிக்கப்பட்டேன்;[l] நான் சொல்வது உண்மை,
பொய் அல்ல.

8 அதனால், நீங்கள் எல்லாரும் கூடிவருகிற இடங்களில் ஆண்கள்
கடும் கோபத்தையும்[m] தர்க்கங்களையும்[n] தவிர்த்து, உண்மையோடு* தங்
கள் கைகளை உயர்த்தி ஜெபம் செய்ய வேண்டும்[o] என்று விரும்புகிறேன்.
9 அதேபோல், பெண்கள் விதவிதமான பின்னல் சடைகளாலும் தங்கத்
தாலும் முத்துக்களாலும் விலை உயர்ந்த உடையினாலும் தங்களை
அலங்கரித்துக்கொள்ளாமல், நேர்த்தியான* உடையினாலும் அடக்கத்தினா
லும் தெளிந்த புத்தியினாலும்# தங்களை அலங்கரித்துக்கொள்ள வேண்
டும்.[p] **10** அதோடு, கடவுள்பக்தி உள்ள பெண்களுக்குத் தகுந்தபடி நல்ல
செயல்களால் தங்களை அலங்கரித்துக்கொள்ள வேண்டும்[q] என்று விரும்
புகிறேன்.

11 பெண்கள் அமைதியாக இருந்து, மிகவும் பணிவோடு கற்றுக்கொள்ள
வேண்டும்.[r] **12** கற்றுக்கொடுப்பதற்கோ, ஆண்கள்மேல் அதிகாரம் செலுத்
துவதற்கோ பெண்களை நான் அனுமதிக்க மாட்டேன்; அவர்கள் அமை
தியாக இருக்க வேண்டும்.[s] **13** ஏனென்றால், ஆதாம்தான் முதலில் உரு
வாக்கப்பட்டான், பின்புதான் ஏவாள் உருவாக்கப்பட்டாள்.[t] **14** அதோடு,
ஆதாம் ஏமாற்றப்படவில்லை, பெண்தான் முற்றிலும் ஏமாற்றப்பட்டாள்,[u]
அவள்தான் கட்டளையை மீறினாள். **15** ஆனாலும், பெண்கள் பிள்ளை
களைப் பெற்று[v] தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும்*[w] விசுவாசமுள்ளவர்க
ளாகவும் அன்புள்ளவர்களாகவும் பரிசுத்தமுள்ளவர்களாகவும் நிலைத்திருந்
தால் பாதுகாக்கப்படுவார்கள்.

3 இது நம்பகமான விஷயம்: கண்காணியாவதற்கு முயற்சி செய்கிற
ஒருவர்[x] சிறந்த வேலையை விரும்புகிறார். **2** அதனால், கண்கா
ணியாக இருப்பவர் குற்றம்சாட்டப்படாதவராகவும், ஒரே மனைவியை
உடையவராகவும், பழக்கவழக்கங்களில் அளவுக்குமீறி போகாதவராக
வும், தெளிந்த புத்தியுள்ளவராகவும்,*[y] ஒழுங்குள்ளவராகவும், உபசரிக்கும்

அதி. 2
a மத் 5:44
b எரே 29:7
c யூ 25
d ஏசா 45:22; அப் 17:30; ரோ 5:18; 1தீ 4:10
e உபா 6:4; ரோ 3:30
f 1கொ 11:25
g எபி 8:6; எபி 9:15
h அப் 4:12; ரோ 5:15; 2தீ 1:9, 10
i மத் 20:28; மாற் 10:45; கொலோ 1:13, 14
j அப் 9:15
k கலா 2:7, 8
l கலா 1:15, 16
m யாக் 1:20
n பிலி 2:14
o சங் 141:2
p 1பே 3:3, 4
q நீதி 31:30
r எபே 5:24
s 1கொ 14:34
t ஆதி 2:18, 22; 1கொ 11:8
u ஆதி 3:6, 13
v 1தீ 5:14
w 1தீ 2:9, 10

அதி. 3
x அப் 20:28; தீத் 1:5-9
y ரோ 12:3; 1பே 4:7

2:2 * வே.வா., “உயர் பதவியில் இருக்கிறவர்களுக்காகவும்.” **2:4** * வே.வா., “சித்தம்.” **2:6** * வே.வா., “எல்லா விதமான மக்களுக்காகவும்.” **2:8** * வே.வா., “பற்றுமாறாமல்.” **2:9** * வே.வா., “கண்ணியமான.” # வே.வா., “சரியாக முடிவெடுக்கிற திறமையாலும்; விவேகத்தாலும்.” **2:15** * வே.வா., “சரியாக முடிவெடுக்கிற திறமையுள்ளவர்களாகவும்; விவேகமுள்ளவர்களாகவும்.” **3:2** * வே.வா., “சரியாக முடிவெடுக்கிற திறமையுள்ளவராகவும்; விவேகமுள்ளவராகவும்.”

குணமுள்ளவராகவும்,[a] கற்றுக்கொடுக்கத் தகுதியுள்ளவராகவும்[b] இருக்க
வேண்டும்; **3** குடிகாரராகவும்,[c] மூர்க்கமானவராகவும்* இருக்கக் கூடாது.
அதற்குப் பதிலாக, நியாயமானவராகவும்,#[d] தகராறு செய்யாதவராகவும்,[e]
பண ஆசையில்லாதவராகவும்,[f] **4** தன்னுடைய குடும்பத்தைச் சிறந்த
விதத்தில் நடத்துகிறவராகவும், நல்ல நடத்தையும் கீழ்ப்படிதலும் உள்ள
பிள்ளைகளை[g] உடையவராகவும் இருக்க வேண்டும். **5** (ஒருவருக்குத் தன்
னுடைய குடும்பத்தையே நடத்தத் தெரியவில்லை என்றால் கடவுளுடைய
சபையை எப்படிக் கவனித்துக்கொள்வார்?) **6** அதோடு, அவர் சமீபத்தில்
கிறிஸ்தவரானவராக இருக்கக் கூடாது.[h] ஏனென்றால், அவருக்குத் தலைக்க
னம் வந்துவிடலாம், இதனால் பிசாசுக்குக் கிடைத்திருக்கும் தண்டனை
அவருக்கும் கிடைத்துவிடலாம். **7** அதுமட்டுமல்ல, வெளியாட்களிடமும்*
நல்ல பெயர் எடுத்தவராக இருக்க வேண்டும்.[i] அப்போதுதான், அவர் பழிச்
சொல்லுக்கு ஆளாகாமலும், பிசாசின் வலையில் விழாமலும் இருப்பார்.

8 அதேபோல், உதவி ஊழியர்கள் பொறுப்புடன் நடக்கிறவர்களாக
வும், இரண்டு விதமாகப் பேசாதவர்களாகவும்,* திராட்சமதுவை அளவுக்கு
அதிகமாகக் குடிக்காதவர்களாகவும், அநியாய லாபம் சம்பாதிக்க அலையா
தவர்களாகவும்,[j] **9** விசுவாசத்தின் பரிசுத்த ரகசியத்தைச் சுத்த மனசாட்சி
யோடு[k] காத்துக்கொண்டிருப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

10 அதோடு, இவர்கள் தகுதியுள்ளவர்களா என்று முதலில் சோதிக்
கப்பட வேண்டும்; இவர்கள்மேல் எந்தக் குற்றச்சாட்டும் இல்லையென்றால்[l]
இவர்கள் உதவி ஊழியர்களாகச் சேவை செய்யலாம்.

11 அதேபோல், பெண்கள் பொறுப்புடன் நடக்கிறவர்களாகவும், மற்
றவர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் பேசாதவர்களாக
வும்,[m] பழக்கவழக்கங்களில் அளவுக்குமீறி போகாதவர்களாகவும், எல்லா
விஷயங்களிலும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.[n]

12 உதவி ஊழியர்கள் ஒரே மனைவியை உடைய கணவர்களாகவும்,
தங்கள் பிள்ளைகளையும் வீட்டாரையும் நல்ல விதத்தில் நடத்துகிறவர்களா
கவும் இருக்க வேண்டும். **13** நல்ல விதத்தில் ஊழியம் செய்கிற ஆண்கள்
நல்ல பெயர் எடுக்கிறார்கள், அதோடு கிறிஸ்து இயேசுவின் மேல்
வைத்திருக்கிற விசுவாசத்தைப் பற்றி எந்தத் தயக்கமும் இல்லாமல் பேசுகி
றார்கள்.

14 சீக்கிரத்தில் நான் உன்னிடம் வருவேன் என்று நம்பிக்கையோடு
இருக்கிறேன்; **15** ஒருவேளை நான் வருவதற்குத் தாமதமானால், கடவு
ளுடைய வீட்டாரிடம்[o] எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நீ
தெரிந்துகொள்வதற்காக இதையெல்லாம் எழுதுகிறேன். அந்த வீட்டாரே
உயிருள்ள கடவுளுடைய சபையாக, சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாக
இருக்கிறார்கள். **16** கடவுள்பக்தியின் பரிசுத்த ரகசியம் நிச்சயமாகவே
மகத்தானது: 'அவர் பூமிக்குரிய உடலில் வந்தார்,[p] பரலோகத்துக்குரிய உட
லில் நீதியுள்ளவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்,[q] தேவதூதர்களுக்குக்
காணப்பட்டார்,[r] மற்ற தேசத்து மக்கள் மத்தியில் பிரசங்கிக்கப்பட்டார்,[s]

3:3 *வே.வா., "மற்றவர்களை அடிக்கிறவராகவும்." #அதாவது, "வளைந்துகொடுப்பவராகவும்." **3:7** *வே.வா., "கிறிஸ்தவ சபையில் இல்லாத ஆட்களிடமும்." **3:8** *நே.மொ., "இரட்டை நாக்கு இல்லாதவர்களாகவும்." வே.வா., "பொய் பேசாதவர்களாகவும்."

அதி. 3
a அப் 28:7; 1பே 4:9
b 1தீ 5:17; 2தீ 2:24; தீத் 1:7, 9
c ரோ 13:13
d பிலி 4:5; யாக் 3:17
e ரோ 12:18; யாக் 3:18
f எபி 13:5; 1பே 5:2
g எபே 6:4
h 1தீ 5:22
i அப் 22:12; 1தெ 4:11, 12
j அப் 6:3; தீத் 1:7; 1பே 5:2
k 1தீ 1:5; 1தீ 1:18, 19; 2தீ 1:3; 1பே 3:16
l 1பே 2:12
m 1தீ 5:13
n தீத் 2:3-5
o எபி 3:6
p யோவா 1:14; பிலி 2:7
q 1பே 3:18
r 1பே 3:19, 20
s கொலோ 1:23

உலக மக்களால் நம்பிக்கை வைக்கப்பட்டார்,[a] மகிமையில் பரலோகத்துக்கு
எடுத்துக்கொள்ளப்பட்டார்.'

4 ஆனாலும், கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கிற செய்தியின்படி, நிச்
சயமாகவே பிற்காலத்தில் சிலர் பேய்களிடமிருந்து வருகிற வஞ்ச
னையான செய்திகளுக்கும்[b] போதனைகளுக்கும் கவனம் செலுத்தி, விசு
வாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்; **2** மரத்துப்போன* மனசாட்சியுள்ள
பொய்யர்களுடைய வெளிவேஷத்தை நம்பியும் விலகிப்போவார்கள்.[c]
3 திருமணம் செய்யக் கூடாதென்றும்,[d] சில உணவுகளுக்கு விலகியிருக்க
வேண்டுமென்றும்[e] அந்தப் பொய்யர்கள் சொல்வார்கள். ஆனால், விசுவாச
முள்ளவர்களும் சத்தியத்தைத் திருத்தமாகத் தெரிந்தவர்களும் நன்றி சொல்
லிச் சாப்பிடுவதற்காகத்தான்[f] கடவுள் அந்த உணவுகளைப் படைத்தி
ருக்கிறார்.[g] **4** கடவுளுடைய ஒவ்வொரு படைப்பும் நல்லதுதான்;[h] நன்றி
சொல்லி ஏற்றுக்கொண்டால் எதையும் ஒதுக்க வேண்டியதில்லை.[i]
5 ஏனென்றால், அது கடவுளுடைய வார்த்தையின் மூலமாகவும் ஜெபத்
தின் மூலமாகவும் புனிதமாக்கப்படுகிறது.

6 சகோதரர்களுக்கு நீ இந்த அறிவுரையைக் கொடுத்தால் கிறிஸ்து
இயேசுவின் சிறந்த ஊழியனாக இருப்பாய்; விசுவாசத்துக்குரிய வார்த்
தைகளாலும், நீ நெருக்கமாகப் பின்பற்றி வந்திருக்கிற சிறந்த போதனைக
ளாலும் ஊட்டம் பெற்றவனாக இருப்பாய்.[j] **7** கடவுளை அவமதிக்கிற கட்
டுக்கதைகளை, அதாவது கிழவிகள் சொல்வது போன்ற கட்டுக்கதைகளை,
ஒதுக்கித்தள்ளு.[k] அதற்குப் பதிலாக, கடவுள்பக்தி காட்டுவதைக் குறிக்கோ
ளாக வைத்து உனக்கு நீயே பயிற்சி கொடுத்துக்கொள். **8** உடற்பயிற்சி ஓர
ளவுக்கு நன்மை தரும்; ஆனால், கடவுள்பக்தி எல்லா விதத்திலும் நன்மை
தரும். ஏனென்றால், இந்தக் காலத்திலும் இனிவரும் காலத்திலும் வாழ்வு
பெறுவோம் என்ற வாக்குறுதியை அது தருகிறது.[l] **9** இந்த விஷயம் நம்ப
கமானது, முழுமையாக ஏற்றுக்கொள்வதற்குத் தகுதியானது. **10** அதனால்
தான், கடினமாகவும் தீவிரமாகவும் உழைத்து வருகிறோம்.[m] ஏனென்றால்,
எல்லா விதமான ஆட்களுக்கும்[n] மீட்பராயிருக்கிற, முக்கியமாக விசுவாச
முள்ள ஆட்களுக்கு மீட்பராயிருக்கிற, உயிருள்ள கடவுள்மேல்[o] நம்பிக்கை
வைத்திருக்கிறோம்.

11 இவை எல்லாவற்றையும் நீ அவர்களுக்குக் கட்டளையிட்டுக்கொண்
டும் கற்றுக்கொடுத்துக்கொண்டும் இரு. **12** நீ இளைஞனாக இருப்பதால்
யாரும் உன்னை அற்பமாக நினைக்காதபடி பார்த்துக்கொள். பேச்சிலும்,
நடத்தையிலும், அன்பிலும், விசுவாசத்திலும், ஒழுக்கத்திலும் உண்மை
யுள்ளவர்களுக்கு நீ முன்மாதிரியாக இரு. **13** நான் வரும்வரை, சபையார்
முன்னால் வாசிப்பதிலும்,[p] அவர்களுக்கு அறிவுரை சொல்வதிலும்,* கற்
றுக்கொடுப்பதிலும் முழு மூச்சோடு ஈடுபட்டுக்கொண்டிரு. **14** உன்னைப்
பற்றிச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்துக்கு ஏற்ப, மூப்பர் குழுவினர் உன்
மேல் கைகளை வைத்தபோது[q] கடவுள் உனக்குக் கொடுத்த வரத்தை
அலட்சியம் செய்யாதே. **15** இவற்றைப் பற்றியே ஆழமாக யோசித்துக்
கொண்டிரு;* இவற்றிலேயே மூழ்கியிரு; அப்போதுதான் உன்னுடைய
முன்னேற்றம் எல்லாருக்கும் தெளிவாகத் தெரியவரும். **16** உன் மீதும்

4:2 * நே.மொ., "காய்ச்சிய கம்பியால் தழும்புண்டான." **4:13** * வே.வா., "அவர்களை உற்சாகப்படுத்துவதிலும்." **4:15** * வே.வா., "தியானித்துக்கொண்டிரு."

அதி. 3
a கொலோ 1:6

அதி. 4
b 2தெ 2:1, 2; 2தீ 4:3, 4; 2பே 2:1
c அப் 20:29, 30; 2தீ 2:16; 2பே 2:3
d 1கொ 7:36; 1கொ 9:5
e ரோ 14:3
f ரோ 14:17; 1கொ 10:25
g ஆதி 9:3
h ஆதி 1:31
i அப் 10:15
j 2தீ 2:15
k 1தீ 6:20; தீத் 1:13, 14
l யோவா 17:3
m லூ 13:24
n 1தீ 2:3, 4
o யூ 25
p கொலோ 4:16; 1தெ 5:27
q அப் 6:5, 6; அப் 13:2, 3; அப் 19:6; 2தீ 1:6

உன் போதனையின் மீதும் எப்போதும் கவனம் செலுத்து.[a] இவற்றிலேயே
நிலைத்திரு; இப்படிச் செய்யும்போது நீயும் மீட்புப் பெறுவாய், நீ சொல்வ
தைக் கேட்கிறவர்களும் மீட்புப் பெறுவார்கள்.[b]

5 வயதான ஆண்களிடம் கடுமையாகப் பேசாதே.[c] அதற்குப் பதிலாக,
அவர்களை அப்பாக்கள் போல நினைத்து அன்பாக நடத்து; அப்ப
டியே, இளம் ஆண்களைத் தம்பிகள் போலவும், **2** வயதான பெண்களை
அம்மாக்கள் போலவும், இளம் பெண்களைச் சுத்தமான உள்ளத்தோடு தங்
கைகள் போலவும் நினைத்து அன்பாக நடத்து.

3 ஆதரவு இல்லாத* விதவைகளைக் கவனித்துக்கொள்.#[d] **4** ஆனால்,
எந்த விதவைக்காவது பிள்ளைகளோ பேரப்பிள்ளைகளோ இருந்தால், இந்
தப் பிள்ளைகள் முதலில் தங்களுடைய வீட்டில் கடவுள்பக்தியைக் கடைப்
பிடிப்பதற்கும்,[e] தங்களுடைய பெற்றோருக்கும் தாத்தா பாட்டிக்கும் செய்ய
வேண்டிய கடமையைச் செய்வதற்கும் கற்றுக்கொள்ளட்டும்;[f] இதுதான் கட
வுளுக்குப் பிரியமானது.[g] **5** ஆதரவு இல்லாமல் தனியாக வாழ்கிற ஒரு
விதவை, கடவுள்மேல் நம்பிக்கை வைத்து[h] இரவும் பகலும் விடாமல் அவ
ரிடம் மன்றாடி ஜெபம் செய்வாள்.[i] **6** ஆனால், தன்னுடைய ஆசைகளை*
திருப்தி செய்வதற்காகவே வாழ்கிற விதவை, உயிரோடிருந்தாலும் செத்தவ
ளாகவே இருப்பாள். **7** அதனால், விதவைகள் குற்றம்சாட்டப்படாதவர்க
ளாக இருப்பதற்கு, இவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து
அறிவுரை கொடு. **8** ஒருவன் தன்னை நம்பியிருக்கிறவர்களை, முக்கியமா
கத் தன்னுடைய குடும்பத்தில் இருக்கிறவர்களை, கவனித்துக்கொள்ள
வில்லை என்றால் அவன் விசுவாசத்தை விட்டுவிட்டவனாகவும் விசுவாசத்
தில் இல்லாதவனைவிட மோசமானவனாகவும் இருப்பான்.[j]

9 விதவைகளின் பட்டியலில் சேர்க்கப்படுகிறவர்கள் 60 வயதைத் தாண்
டியவர்களாக இருக்க வேண்டும்; ஒரே கணவனுக்கு மனைவியாக இருந்தி
ருக்க வேண்டும். **10** அதோடு, பிள்ளைகளை வளர்ப்பது,[k] மற்றவர்களை
உபசரிப்பது,[l] பரிசுத்தவான்களின் பாதங்களைக் கழுவுவது,[m] கஷ்டப்படுகி
றவர்களுக்கு உதவி செய்வது[n] போன்ற எல்லா விதமான நல்ல செயல்க
ளையும் செய்வதற்குத் தங்களையே அர்ப்பணித்து, நல்ல பெயர் எடுத்தவர்
களாக இருக்க வேண்டும்.[o]

11 ஆனால், இளம் விதவைகளை இந்தப் பட்டியலில் சேர்க்காதே.
ஏனென்றால், கிறிஸ்துவோடு உள்ள பந்தத்துக்கு முட்டுக்கட்டையாக
இருக்கிற பாலியல் ஆசைகள் அவர்களுக்குள் வரும்போது மறுமணம் செய்
துகொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். **12** அவர்கள் முதலில் கொடுத்த
வாக்கை மீறுவதால் அவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு கிடைக்கும்.
13 அதேசமயம், வேலைவெட்டி இல்லாமல் வீடுவீடாகத் திரிவதற்கும் பழ
கிவிடுகிறார்கள்; வேலைவெட்டி இல்லாதவர்களாக மட்டுமல்ல, வம்பளக்கிற
வர்களாகவும், மற்றவர்களுடைய விஷயங்களில் அநாவசியமாகத் தலை
யிடுகிறவர்களாகவும்,[p] பேசக்கூடாத விஷயங்களைப் பேசுகிறவர்களாகவும்
ஆகிவிடுகிறார்கள். **14** அதனால், இளம் விதவைகள் மறுமணம் செய்து,[q]
பிள்ளைகளைப் பெற்று,[r] வீட்டைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும்,

---

5:3 *வே.வா., "உண்மையிலேயே உதவி தேவைப்படுகிற." #நே.மொ., "விதவைக
ளுக்கு மதிப்புக் கொடு." **5:6** *அநேகமாக, பாலியல் ஆசைகளைக் குறிக்கலாம்.

அதி. 4
a 2தீ 4:2
b 1கொ 9:22

அதி. 5
c லேவி 19:32
d 1தீ 5:16
e 1தீ 5:8
f மத் 15:4 எபே 6:2
g யாக் 1:27
h 1கொ 7:34
i லூ 2:36, 37
j மத் 15:4-6
k 1தீ 2:15
l எபி 13:2 1பே 4:9
m யோவா 13:5, 14
n 1தீ 5:16 யாக் 1:27
o அப் 9:39
p 2தெ 3:11
q 1கொ 7:8, 9
r 1தீ 2:15

அதி. 5

a உபா 15:11 1தீ 5:5 யாக் 1:27

b 1பே 5:2, 3

c 1தெ 5:12 எபி 13:7

d அப் 28:10 எபி 13:17

e உபா 25:4 1கொ 9:7, 9

f லேவி 19:13 மத் 10:9, 10 லூ 10:7 கலா 6:6

g உபா 19:15 மத் 18:16

h 1கொ 15:34 1யோ 3:9

i தீத் 1:7, 9 தீத் 1:13 வெளி 3:19

j லேவி 19:15 யாக் 3:17

k அப் 6:5, 6 அப் 14:23 1தீ 3:2, 6 1தீ 4:14

l யோசு 7:11 எபி 4:13

m மத் 5:16

n 1கொ 4:5

அதி. 6

o ரோ 13:7 எபே 6:5 கொலோ 3:22

p 1பே 2:13, 14

எதிரிகள் குற்றம் கண்டுபிடிக்க அவர்கள் இடம்கொடுத்துவிடக் கூடாது
என்றும் விரும்புகிறேன். **15** சொல்லப்போனால், விதவைகள் சிலர் ஏற்கெ
னவே வழிதவறி சாத்தானைப் பின்பற்றிப் போய்விட்டார்கள். **16** விசுவா
சியாக* இருக்கும் ஒரு பெண்ணின் குடும்பத்தில் விதவைகள் இருந்தால்,
அவள்தான் அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்; அந்தச் சுமை
யைச் சபையின் மேல் சுமத்தக் கூடாது. அப்போதுதான், ஆதரவு இல்லாத
விதவைகளுக்குச் சபையால் ஆதரவு கொடுக்க முடியும்.[a]

17 சபையை நல்ல விதத்தில் நடத்துகிற மூப்பர்கள்,[b] அதுவும்
கடவுளுடைய வார்த்தையைப் பற்றிப் பேசுவதிலும் கற்றுக்கொடுப்பதிலும்
கடுமையாக உழைக்கிற மூப்பர்கள்,[c] இரட்டிப்பான மதிப்பைப் பெறத் தகு
தியுள்ளவர்களாகக் கருதப்பட வேண்டும்.[d] **18** ஏனென்றால், “போரடிக்கிற
மாட்டின் வாயைக் கட்டக் கூடாது”[e] என்றும், “வேலையாள் தன் கூலியைப்
பெறத் தகுதியுள்ளவன்” என்றும் வேதவசனம் சொல்கிறது.[f] **19** ஒரு மூப்
பர்மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டை, இரண்டு அல்லது மூன்று பேருடைய
சாட்சி இருந்தால் தவிர ஏற்றுக்கொள்ளாதே.[g] **20** பாவம் செய்துகொண்டே
இருக்கிறவர்களை[h] எல்லாருக்கும் முன்னால் கண்டிக்க வேண்டும்;[i] அது மற்
றவர்களுக்கு ஓர் எச்சரிப்பாக இருக்கும்.* **21** கடவுளுக்கும், கிறிஸ்து
இயேசுவுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட தேவதூதர்களுக்கும் முன்னால் நான்
உனக்கு ஆணையிட்டுச் சொல்கிறேன்: எந்தவித தப்பெண்ணமோ பாரபட்
சமோ இல்லாமல் இந்த அறிவுரைகளைக் கடைப்பிடி.[j]

22 யாரையும் அவசரப்பட்டு நியமித்துவிடாதே;*[k] மற்றவர்கள் செய்
யும் பாவங்களுக்கு உடந்தையாக இருக்காதே; எப்போதும் ஒழுக்கமுள்ள
வனாக நடந்துகொள்.

23 உன் வயிற்றுக் கோளாறின் காரணமாகவும், அடிக்கடி உனக்கு ஏற்
படுகிற உடல்நலக் குறைவின் காரணமாகவும் இனி தண்ணீரைக் குடிக்கா
மல்* கொஞ்சம் திராட்சமதுவைக் குடி.

24 சிலருடைய பாவங்கள் உடனடியாகத் தெரியவருவதால் அவர்களுக்
குத் தண்டனை கிடைக்கும். ஆனால், மற்றவர்களுடைய பாவங்களும் தெரி
யவரும், ஆனால் பிற்பாடு தெரியவரும்.[l] **25** அதேபோல், நல்ல செயல்
களும் தெரியவரும்;[m] அப்படித் தெரியவராத நல்ல செயல்களை
என்றென்றும் மறைத்து வைக்க முடியாது.[n]

6 அடிமைகளாக* இருக்கிற எல்லாரும் தங்களுடைய எஜமான்களை மிக
வும் மதிப்புக்குரியவர்களாகக் கருத வேண்டும்;[o] அப்போதுதான், கடவு
ளுடைய பெயருக்கும் போதனைக்கும் எந்தப் பழிச்சொல்லும் வராது.[p]
2 அதோடு, கிறிஸ்தவ எஜமான்களைச் சகோதரர்கள்தானே என்று
நினைத்து அவர்களிடம் மரியாதை இல்லாமல் நடந்துகொள்ளக் கூடாது.
அதற்குப் பதிலாக, தங்களுடைய நல்ல வேலையால் பயன் பெறுகிற
தங்கள் எஜமான்கள் விசுவாசிகளாகவும்* அன்புக்குரியவர்களாகவும் இருப்
பதை மனதில் வைத்து இன்னும் ஆர்வத்தோடு அவர்களுக்காக உழைக்க
வேண்டும்.

5:16 * வே.வா., “இயேசுவின் சீஷராக.” **5:20** * நே.மொ., “அப்போதுதான் மற்றவர்களுக்குப் பயம் வரும்.” **5:22** * வே.வா., “யார்மீதும் அவசரப்பட்டு கைகளை வைத்துவிடாதே.” **5:23** * வே.வா., “தண்ணீரை மட்டும் குடிக்காமல்.” **6:1** * நே.மொ., “அடிமைத்தனம் என்ற நுகத்தடியின்கீழ்.” **6:2** * வே.வா., “இயேசுவின் சீஷர்களாகவும்.”

இவை எல்லாவற்றையும் நீ அவர்களுக்குத் தொடர்ந்து கற்றுக்கொடு,
தொடர்ந்து அறிவுரை சொல். **3** ஒருவன் பொய்க் கோட்பாட்டைக் கற்றுக்
கொடுக்கிறவனாக, நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்து கற்றுக்கொடுத்த பய
னுள்ள* அறிவுரைகளையோ[a] கடவுள்பக்திக்குரிய விஷயங்களையோ[b]
ஏற்றுக்கொள்ளாதவனாக இருந்தால், **4** அவன் தலைக்கனம் பிடித்தவன்,
எதையும் புரிந்துகொள்ளாதவன்,[c] விவாதங்களிலும் வார்த்தைகளைப் பற்
றிய வாக்குவாதங்களிலும் மூழ்கிப்போயிருப்பவன்.*[d] இவற்றிலிருந்தே
பொறாமையும், சண்டை சச்சரவும், அவதூறான பேச்சும்,# பொல்லாத
சந்தேகங்களும் வருகின்றன. **5** அதோடு, புத்திகெட்டவர்களாகவும்[e] சத்
தியத்தைப் புரிந்துகொள்ளாதவர்களாகவும் இருக்கிறவர்கள் மத்தியில் சிறு
சிறு விஷயங்களைப் பற்றிய வாக்குவாதங்கள் எப்போதும் ஏற்படுகின்றன;
கடவுள்பக்தியின் மூலம் ஆதாயம் பெறலாம் என்று இவர்கள் நினைக்கி
றார்கள்.[f] **6** கடவுள்பக்தி மிகுந்த ஆதாயம் தரும்[g] என்பது உண்மைதான்;
ஆனால் கடவுள்பக்தியோடுகூட, போதுமென்ற மனம்* உள்ளவர்களுக்குத்
தான் அது மிகுந்த ஆதாயம் தரும். **7** ஏனென்றால், இந்த உலகத்தில் நாம்
எதையும் கொண்டுவரவில்லை, இங்கிருந்து எதையும் கொண்டுபோகவும்
முடியாது.[h] **8** அதனால், நமக்கு உணவும் உடையும்* இருந்தால் அதுவே
போதும் என்று திருப்தியோடு வாழ வேண்டும்.[i]

9 ஆனால், பணக்காரராக வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறவர்
கள் சோதனையிலும் கண்ணியிலும் சிக்கிக்கொள்கிறார்கள்;[j] அதோடு,
தீமையான, முட்டாள்தனமான பலவிதமான ஆசைகளுக்கு அடிபணிந்து
விடுகிறார்கள்; இவை மனிதர்களை நாசத்திலும் அழிவிலும்தான் அமிழ்த்து
கின்றன.[k] **10** பண ஆசை எல்லா விதமான தீமைக்கும் வேராக இருக்
கிறது; சிலர் இந்த ஆசையை வளர்த்துக்கொண்டு, விசுவாசத்தைவிட்டு
விலகி, பலவிதமான வேதனைகளால் தங்கள் உடல் முழுவதும் குத்திக்
கொண்டிருக்கிறார்கள்.[l]

11 ஆனால், கடவுளுடைய ஊழியனாகிய நீ இவற்றைவிட்டு விலகி
ஓடு. நீதி, கடவுள்பக்தி, விசுவாசம், அன்பு, சகிப்புத்தன்மை, சாந்தம்[m]
ஆகியவற்றையே நாடு. **12** விசுவாசத்துக்காகச் சிறந்த போராட்டத்தைப்
போராடு; முடிவில்லாத வாழ்வை உறுதியாகப் பிடித்துக்கொள்; அந்த வாழ்
வுக்காகத்தான் நீ அழைக்கப்பட்டிருக்கிறாய்; அதைப் பற்றித்தான் நீ நிறைய
பேருக்கு முன்னால் அருமையாகச் சாட்சி கொடுத்திருக்கிறாய்.

13 எல்லாவற்றையும் பாதுகாத்து வருகிற கடவுளின் முன்னிலையி
லும், பொந்தியு பிலாத்துவுக்கு முன்னால் அருமையாகச் சாட்சி கொடுத்த
கிறிஸ்து இயேசுவின்[n] முன்னிலையிலும் நான் உனக்குக் கட்டளை கொடுக்
கிறேன்: **14** நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்து வெளிப்படும்வரை,[o] எந்த
விதமான களங்கத்துக்கும் குற்றச்சாட்டுக்கும் இடமளிக்காத விதத்தில்
நான் கொடுத்த கட்டளையைக் கடைப்பிடி. **15** குறித்த காலத்தில் அவர்
தன்னை வெளிப்படுத்துவார். அவர்தான் சந்தோஷமானவர், ஒரே
மாமன்னர், ராஜாக்களுக்கெல்லாம் ராஜா, எஜமான்களுக்கெல்லாம் எஜ
மான்.[p] **16** அவர் ஒருவர்தான் சாவாமை உள்ளவர்,[q] அணுக முடியாத

6:3 *வே.வா., "ஆரோக்கியமான." **6:4** *வே.வா., "வெறித்தனமாக ஈடுபடுகிறவன்." #வே.வா., "இல்லாததையும் பொல்லாததையும் பேசுவதும்." **6:6** *நே.மொ., "மன திருப்தி." **6:8** *வே.வா., "இருப்பிடமும்."

அதி. 6
a 2தீ 1:13
b தீத் 1:1, 2
c 1கொ 8:2
d 2தீ 2:14, தீத் 1:10, தீத் 3:9
e 2கொ 11:3, 2தீ 3:8, யூ 10
f 1பே 5:2
g 1தீ 4:8
h யோபு 1:21, சங் 49:16, 17
i நீதி 30:8, 9, எபி 13:5
j மத் 13:22
k நீதி 28:20, 22, யாக் 5:1
l மத் 6:24
m நீதி 15:1, மத் 5:5, கலா 5:22, 23, கொலோ 3:12, 1பே 3:15
n மத் 27:11, யோவா 18:33, 36, யோவா 19:10, 11
o 2தெ 2:8, 2தீ 4:1, 8
p வெளி 17:14, வெளி 19:16
q எபி 7:15, 16

ஒளியில் குடிகொண்டிருப்பவர்;[a] எந்த மனிதனும் அவரைப் பார்த்ததில்லை,
பார்க்கவும் முடியாது.[b] அவருக்கே மாண்பும் முடிவில்லாத வல்லமையும்
சொந்தம்! ஆமென்.*

17 இந்த உலகத்தில்* செல்வந்தர்களாக இருக்கிறவர்கள் ஆணவமாக
நடந்துகொள்ளக் கூடாதென்று அவர்களுக்கு அறிவுரை சொல்; நிலையில்
லாத செல்வங்கள்மீது[c] நம்பிக்கை வைக்காமல், நம்முடைய சந்தோஷத்துக்
காக எல்லாவற்றையும் வாரி வழங்குகிற கடவுள்[d] மீதே நம்பிக்கை வைக்க
வேண்டும் என்றும் அறிவுரை சொல்.# 18 அதோடு, நன்மை செய்கிறவர்
களாகவும், நல்ல செயல்களைச் செய்வதில் செல்வந்தர்களாகவும், தாராள
மாகக் கொடுக்கிறவர்களாகவும், தங்களிடம் இருப்பதைப் பகிர்ந்துகொள்ள
மனமுள்ளவர்களாகவும்[e] இருக்க வேண்டும் என்றும் அறிவுரை சொல்.
19 இந்த விதத்தில் எதிர்காலத்துக்காக நல்ல அஸ்திவாரத்தைப் போட்டு,
அதைப் பொக்கிஷமாகப் பாதுகாக்க வேண்டும்[f] என்று அறிவுரை சொல்;
இப்படிச் செய்யும்போது, உண்மையான வாழ்வை அவர்களால் உறுதியாகப்
பிடித்துக்கொள்ள முடியும்.[g]

20 தீமோத்தேயு, உன்னிடம் ஒப்படைக்கப்பட்டதை நீ பாதுகாத்துக்
கொள்;[h] பரிசுத்தமான விஷயங்களுக்கு விரோதமான வீண் பேச்சுகளுக்
கும், "அறிவு" என்று தவறாக அழைக்கப்படுகிற முரண்பட்ட கருத்துக
ளுக்கும் விலகியிரு.[i] 21 ஏனென்றால், அப்படிப்பட்ட அறிவு தங்களுக்கு
இருப்பதாகக் காட்டிக்கொண்டு சிலர் விசுவாசத்தைவிட்டே விலகிப்போயி
ருக்கிறார்கள்.

கடவுளுடைய அளவற்ற கருணை உன்மீது இருக்கட்டும்!

6:16 * அதாவது, "அப்படியே ஆகட்டும்." **6:17** * வே.வா., "சகாப்தத்தில்." சொல் பட்டியலைப் பாருங்கள். # வே.வா., "கட்டளையிடு."

அதி. 6
a அப் 9:3; வெளி 1:13, 16
b யோவா 14:19; 1பே 3:18
c மத் 13:22; மாற் 10:23
d பிர 5:19; மத் 6:33; யாக் 1:17
e ரோ 12:13; 2கொ 8:14; யாக் 1:27
f மத் 6:20
g லூ 16:9
h 2தீ 1:13, 14; 2தீ 3:14; 2தீ 4:5
i 1கொ 2:13; 1கொ 3:19; கொலோ 2:8

தீமோத்தேயுவுக்கு

எழுதப்பட்ட இரண்டாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1, 2)
தீமோத்தேயுவின் விசுவாசத்துக்காகக் கடவுளுக்கு பவுல் நன்றி சொல்கிறார் (3-5)
கடவுள் தந்த வரத்தை நெருப்புபோல் மூட்டிவிட்டுக்கொண்டே இரு (6-11)
பயனுள்ள வார்த்தைகளை மாதிரியாக வைத்துப் பின்பற்று (12-14)
பவுலின் எதிரிகளும் நண்பர்களும் (15-18)

2 தகுதியுள்ள ஆட்களிடம் செய்தியைச் சொல் (1-7)
நல்ல செய்திக்காகக் கஷ்டங்களைச் சகிப்பது (8-13)
கடவுளின் வார்த்தையைச் சரியாகப் பயன்படுத்துவது (14-19)
இளமைப் பருவத்தின் ஆசைகளைவிட்டு ஓடு (20-22)
எதிர்ப்பவர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய விதம் (23-26)

3 கடைசி நாட்கள் படுமோசமாக இருக்கும் (1-7)
பவுலின் முன்மாதிரியை நெருக்கமாகப் பின்பற்ற வேண்டும் (8-13)

‘நீ கற்றுக்கொண்ட விஷயங்களை விடாமல் கடைப்பிடி’ (14-17)
வேதவசனங்கள் எல்லாம் கடவுளுடைய சக்தியின் தூண்டுதலால் கொடுக்கப்பட்டிருக்கின்றன (16)

4 “உன் ஊழியத்தை முழுமையாகச் செய்து முடி” (1-5)
கடவுளின் வார்த்தையை அவசர உணர்வோடு பிரசங்கி (2)
“சிறந்த போராட்டத்தைப் போராடியிருக்கிறேன்” (6-8)
தனிப்பட்ட குறிப்புகள் (9-18)
முடிவான வாழ்த்துக்கள் (19-22)

---

1 கிறிஸ்து இயேசுவின் மூலம் கிடைக்கிற வாழ்வைப்[a] பற்றிய வாக்குறு
தியை அறிவிக்கும்படி, கடவுளுடைய விருப்பத்தால்* கிறிஸ்து இயே
சுவின் அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டிருக்கிற பவுல், **2** அன்பான
பிள்ளை தீமோத்தேயுவுக்கு[b] எழுதுவது:

பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் எஜமானாகிய கிறிஸ்து
இயேசுவிடமிருந்தும் உனக்கு அளவற்ற கருணையும் இரக்கமும் சமாதான
மும் கிடைக்கட்டும்.

3 சுத்தமான மனசாட்சியோடு என் முன்னோர்களைப் போல் கடவு
ளுக்குப் பரிசுத்த சேவை செய்துவருகிற நான், அவருக்கு நன்றியுள்ளவனாக
இருக்கிறேன். நான் அவரிடம் இரவும் பகலும் மன்றாடியபோது உன்னை
நினைக்காமல் இருந்ததே இல்லை. **4** நீ கண்ணீர் விட்டது என் ஞாபகத்
தில் இருக்கிறது, அதனால் உன்னைப் பார்க்க வேண்டுமென்று ஏங்குகிறேன்.
அப்போதுதான் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். **5** வெளிவே
ஷமில்லாத உன் விசுவாசம்[c] என் ஞாபகத்துக்கு வருகிறது. அப்படிப்பட்ட
விசுவாசம் முதலில் உன் பாட்டி லோவிசாளுக்கும் உன் அம்மா ஐனிக்
கேயாளுக்கும் இருந்தது; அது உனக்கும் இருக்கிறதென்று உறுதியாக நம்
புகிறேன்.

6 அதனால்தான், உன்மேல் நான் கைகளை வைத்தபோது கடவுள்
உனக்குக் கொடுத்த அந்த வரத்தை நெருப்புபோல் மூட்டிவிட்டுக்கொண்டே
இருக்கும்படி உனக்கு ஞாபகப்படுத்துகிறேன்.[d] **7** கடவுள் தருகிற சக்தி*
நமக்குக் கோழைத்தனத்தை அல்ல,[e] வல்லமையையும்[f] அன்பையும்
தெளிந்த புத்தியையும் கொடுக்கிறது. **8** அதனால், நம்முடைய எஜமா
னுக்காகச் சாட்சி கொடுப்பதை நினைத்து வெட்கப்படாதே,[g] அவருக்காகக்
கைதியாக இருக்கிற என்னை நினைத்தும் வெட்கப்படாதே. அதற்குப் பதி
லாக, கடவுளுடைய வல்லமையில் சார்ந்திருந்து[h] நல்ல செய்திக்காகக் கஷ்
டங்களைப் பொறுத்துக்கொள்.[i] **9** அவர் நம்முடைய செயல்களால் அல்ல,
தன்னுடைய சொந்த நோக்கத்தாலும் அளவற்ற கருணையாலும் நம்மைக்
காப்பாற்றியிருக்கிறார்,[j] பரிசுத்தவான்களாக அழைத்திருக்கிறார்;[k] அவரு
டைய அளவற்ற கருணை பல காலத்துக்கு முன்பே கிறிஸ்து இயேசுவின்
மூலம் நமக்குக் கொடுக்கப்பட்டது. **10** இப்போதோ, நம்முடைய மீட்பரான
கிறிஸ்து இயேசு தோன்றியதன் மூலம்[l] அது தெளிவாக வெளிப்படுத்தப்

1:1 * வே.வா., “சித்தத்தால்.” **1:7** * வே.வா., “மனப்பான்மை.”

அதி. 1
a யோவா 3:16; யோவா 6: 40, 44; 1பே 1:3, 4
b 1கொ 4:17
c 1தீ 4:6
d 1தீ 4:14
e ரோ 8:15; 1தெ 2:2
f லூ 24:49; அப் 1:8
g ரோ 1:16
h பிலி 4:13; கொலோ 1:11
i கொலோ 1:24; 2தீ 2:3
j எபே 2:5; எபே 2:8; தீத் 3:5
k எபே 1:4; எபி 3:1
l யோவா 1:14; எபி 2:9

பட்டிருக்கிறது; அவர் மரணத்தை ஒழித்து,[a] வாழ்வையும்[b] அழியாமையை
யும்[c] பெறுவதற்கான வழியை நல்ல செய்தியின் மூலம்[d] நமக்குத் தெளிவா
கக் காட்டியிருக்கிறார்; **11** அந்த நல்ல செய்தியின் பிரசங்கிப்பாளனாகவும்
அப்போஸ்தலனாகவும் ஆசிரியனாகவும் நான் நியமிக்கப்பட்டேன்.[e]

12 இதனால்தான் கஷ்டத்தை அனுபவிக்கிறேன்,[f] ஆனால் அதற்காக
வெட்கப்பட மாட்டேன்.[g] ஏனென்றால், நான் நம்புகிற கடவுளை எனக்கு நன்
றாகத் தெரியும், நான் அவரிடம் ஒப்படைத்திருப்பதை நியாயத்தீர்ப்பு நாள்
வரை அவர் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.[h] **13** என்
னிடமிருந்து நீ கற்றுக்கொண்ட பயனுள்ள* வார்த்தைகளை[i] மாதிரியாக
வைத்து, இவற்றைப் பின்பற்றிக்கொண்டே இரு. கிறிஸ்து இயேசுமேல் வைத்
திருக்கிற விசுவாசத்தாலும் அன்பாலும் அப்படிச் செய். **14** உன்னிடம் ஒப்
படைக்கப்பட்டிருக்கிற அருமையான இந்தப் பொக்கிஷத்தை நமக்குள் குடி
யிருக்கிற கடவுளுடைய சக்தியால் காத்துக்கொள்.[j]

15 பிகெல்லு, எர்மொகெனே ஆகியோர் உட்பட ஆசிய மாகாணத்தில்[k]
இருக்கிற எல்லாரும் என்னைவிட்டு விலகிவிட்டார்கள் என்பது உனக்குத்
தெரிந்திருக்கும். **16** ஒநேசிப்போருவின்[l] வீட்டாருக்கு நம் எஜமான் இரக்
கம் காட்டட்டும்; ஏனென்றால், அவர் எனக்குப் பல தடவை புத்து
ணர்ச்சி கொடுத்தார்; நான் கைதியாக இருப்பதை நினைத்து அவர் வெட்
கப்படவில்லை. **17** அதற்குப் பதிலாக, அவர் ரோமுக்கு வந்திருந்தபோது,
அதிக முயற்சி எடுத்து என்னைத் தேடிக் கண்டுபிடித்தார். **18** நியாயத்
தீர்ப்பு நாளில் நம் எஜமானாகிய யெகோவா* அவருக்கு இரக்கம் காட்டட்
டும். எபேசுவில் அவர் செய்த எல்லா சேவைகளும் உனக்கு நன்றாகவே
தெரிந்திருக்கும்.

2 என் பிள்ளையே,[m] கிறிஸ்து இயேசுவின் அளவற்ற கருணை மூலம்
நீ வலிமை பெற்றுக்கொண்டே இரு. **2** என்னிடமிருந்து நீ கற்றுக்
கொண்டதும் பலர் சாட்சி கொடுத்ததுமான விஷயங்களை[n] உண்மையுள்ள
ஆட்களிடம் சொல்; அப்போது, மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்க அவர்
கள் போதிய தகுதி பெறுவார்கள். **3** கிறிஸ்து இயேசுவின் சிறந்த படைவீ
ரனாக[o] கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்.[p] **4** படைவீரனாகச் சேவை
செய்கிற எந்த மனிதனும் மற்ற தொழில்களில்* ஈடுபட மாட்டான்;#
தன்னைப் படைவீரனாகச் சேர்த்துக்கொண்டவரின் பிரியத்தைச் சம்பா
திக்கவே முயற்சி செய்வான். **5** போட்டி விளையாட்டுகளில் பங்குகொள்
கிற ஒருவன் விதிமுறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் அவனுக்குக் கிரீ
டம் கிடைக்காது.[q] **6** கடினமாக உழைக்கிற விவசாயிதான் விளைச்சலின்
பலனை முதலில் அனுபவிக்க வேண்டும். **7** நான் சொல்கிற விஷயங்
களை எப்போதும் யோசித்துக்கொண்டிரு; எல்லா விஷயங்களையும் புரிந்
துகொள்கிற* திறமையை நம் எஜமான் உனக்குக் கொடுப்பார்.

8 தாவீதின் சந்ததியில்[r] வந்த இயேசு கிறிஸ்து உயிரோடு எழுப்பப்
பட்டார்[s] என்பதை ஞாபகத்தில் வை; இதுதான் நான் பிரசங்கிக்கும்
நல்ல செய்தி.[t] **9** இதற்காகத்தான் நான் ஒரு குற்றவாளியைப் போல்

அதி. 1
a 1கொ 15:54, எபி 2:14
b யோவா 5:24, 1யோ 1:2
c 1பே 1:3, 4
d ரோ 1:16
e அப் 9:15, 1தீ 2:7
f அப் 9:16, எபே 3:1
g 2கொ 4:2
h 2தீ 4:8
i 1தீ 6:3, 4, தீத் 1:7, 9
j ரோ 8:11
k அப் 19:10
l 2தீ 4:19

அதி. 2
m 1தீ 1:2
n 2தீ 3:14
o 1தீ 1:18
p 2தீ 1:8
q 1கொ 9:25
r அப் 2:29-32, ரோ 1:4
s அப் 2:24
t அப் 13:23

1:13 *வே.வா., “ஆரோக்கியமான.” **1:18** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:4** *அல்லது, “அன்றாட வேலைகளில்.” #நே.மொ., “சிக்கிக்கொள்ள மாட்டான்.” **2:7** *வே.வா., “பகுத்தறிகிற.”

சிறையில் அடைத்து வைக்கப்பட்டு,[a] கஷ்டங்களை அனுபவித்து வரு
கிறேன். ஆனாலும், கடவுளுடைய வார்த்தையை அடைத்து வைக்க
முடியாது.[b] **10** கிறிஸ்து இயேசு மூலம் கிடைக்கிற மீட்பையும் முடிவில்
லாத மகிமையையும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ள வேண்
டும் என்பதற்காக எல்லா கஷ்டங்களையும் அவர்களுக்காகச் சகித்துவருகி
றேன்.[c] **11** இது நம்பகமான விஷயம்: நாம் அவரோடு இறந்தால், நிச்சயம்
அவரோடு வாழ்வோம்;[d] **12** நாம் கஷ்டங்களைச் சகித்துவந்தால், ராஜாக்
களாக அவரோடு ஆட்சியும் செய்வோம்;[e] நாம் அவரைத் தெரியாது
என்று சொன்னால், அவரும் நம்மைத் தெரியாது என்று சொல்லிவிடுவார்.[f]
13 நாம் உண்மையுள்ளவர்களாக இல்லாவிட்டாலும் அவர் உண்மையுள்ள
வராகவே இருப்பார்; ஏனென்றால், அவர் தன்னுடைய இயல்புக்கு மாறாகச்
செயல்பட மாட்டார்.

14 இதையெல்லாம் அவர்களுக்கு ஞாபகப்படுத்திக்கொண்டே இரு;
வார்த்தைகளுக்காகச் சண்டை போட வேண்டாம் என்று கடவுளுக்கு
முன்னால் அவர்களுக்கு அறிவுரை சொல்;* அப்படிச் சண்டை போடு
வது எதற்கும் உதவாது, கேட்கிறவர்களுடைய விசுவாசத்தைக் குலைத்
துதான் போடும். **15** எதற்காகவும் வெட்கப்படாத வேலையாளாக, சத்திய
வார்த்தையைச் சரியாய்ப் பயன்படுத்துகிறவனாக, அவரால் ஏற்றுக்கொள்
ளப்பட்டவனாக அவருக்கு முன்னால் நிற்பதற்கு உன்னால் முடிந்த எல்லா
வற்றையும் செய்.[g] **16** ஆனால், பரிசுத்தமான விஷயங்களுக்கு விரோத
மான வீண் பேச்சுகளை அடியோடு தவிர்த்து விடு;[h] ஏனென்றால்,
கடவுள்பக்தியற்ற செயல்களை அதிகமதிகமாகச் செய்வதற்குத்தான்
அவை வழிநடத்தும்.* **17** அப்படிப் பேசுகிறவர்களுடைய வார்த்தைகள்
சதை அழுகல் நோயைப் போல் பரவும். இமெனேயுவும் பிலேத்துவும் அப்
படிப்பட்டவர்கள்தான்.[i] **18** இந்த ஆட்கள், உயிர்த்தெழுதல் ஏற்கெனவே
நடந்துவிட்டது என்று சொல்லி சத்தியத்தைவிட்டு விலகிப்போயிருக்கி
றார்கள்;[j] அதோடு, சிலருடைய விசுவாசத்தைக் குலைத்தும் வருகிறார்கள்.
19 அப்படியிருந்தும், கடவுள் போட்டிருக்கிற உறுதியான அஸ்திவாரம்
நிலைத்து நிற்கிறது. அதில், "தனக்குச் சொந்தமானவர்களை யெகோவா*
அறிந்திருக்கிறார்"[k] என்றும், "யெகோவாவின்* பெயரைச் சொல்லி வேண்
டிக்கொள்கிறவர்கள்[l] அநீதியைக் கைவிட வேண்டும்" என்றும் பொறிக்கப்
பட்டிருக்கிறது.

20 ஒரு பெரிய வீட்டில் தங்கப் பாத்திரங்களும் வெள்ளிப் பாத்திரங்க
ளும் மட்டுமல்ல, மரப் பாத்திரங்களும் மண் பாத்திரங்களும் இருக்கின்றன.
அவற்றில் சில கண்ணியமான காரியத்துக்காகவும், மற்றவை கண்ணியமில்
லாத காரியத்துக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. **21** கண்ணியமில்லாத
காரியத்துக்காகப் பயன்படுத்தப்படுகிற பாத்திரங்களைவிட்டு ஒருவன் வில
கியிருந்தால், கண்ணியமான காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகிற பாத்திர
மாக* இருப்பான்; பரிசுத்தமாக்கப்பட்டவனாக, தன் எஜமானுக்குப் பிரயோ
ஜனமானவனாக, எல்லா விதமான நல்ல செயல்களையும் செய்யத்
தயாராக்கப்பட்டவனாக இருப்பான். **22** அதனால், இளமைப் பருவத்தில்

2:14 * நே.மொ., "முழுமையாகச் சாட்சி கொடு." **2:16** * வே.வா., "அவர்கள் வழிநடத்துவார்கள்." **2:19** * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:21** * வே.வா., "கருவியாக."

அதி. 2
a அப் 9:16; பிலி 1:7
b கொலோ 4:3, 4
c 2கொ 1:6; எபே 3:13; கொலோ 1:24
d ரோ 6:5, 8
e வெளி 3:21; வெளி 20:4, 6
f மத் 10:33; லூ 12:9
g 2தீ 4:2
h 1தீ 4:7; 1தீ 6:20
i 1தீ 1:20
j 1கொ 15:12
k எண் 16:5
l ஏசா 26:13

வருகிற ஆசைகளைவிட்டு நீ விலகி ஓடு; சுத்த இதயத்தோடு நம் எஜமான்
மேல் நம்பிக்கை வைக்கிறவர்களுடன்* சேர்ந்து நீதி, விசுவாசம், அன்பு,
சமாதானம் ஆகியவற்றை நாடு.

23 அதோடு முட்டாள்தனமான, அர்த்தமில்லாத விவாதங்களை ஒதுக்
கித்தள்ளு;[a] அவை சண்டைகளைத்தான் மூட்டிவிடும். **24** நம் எஜமா
னின் ஊழியன் சண்டைபோடக் கூடாது; அதற்குப் பதிலாக, எல்லாரிடமும்
மென்மையாக* நடந்துகொள்கிறவனாகவும்,[b] கற்றுக்கொடுக்கத் தகுதியுள்
ளவனாகவும், தீமையைப் பொறுத்துக்கொள்கிறவனாகவும்,[c] **25** கலகம்
செய்கிறவர்களுக்குச் சாந்தத்தோடு அறிவுரை சொல்கிறவனாகவும் இருக்க
வேண்டும்.[d] ஏனென்றால், அவர்கள் மனம் திருந்தி* சத்தியத்தைத் திருத்த
மாகத் தெரிந்துகொள்வதற்குக்[e] கடவுள் ஒருவேளை அவர்களுக்கு வாய்ப்
புக் கொடுக்கலாம். **26** அப்போது, பிசாசுடைய விருப்பத்தின்படி நடக்க
அவனால் உயிரோடு பிடித்து வைக்கப்பட்டிருக்கிற அவர்கள்,[f] புத்தி
தெளிந்து அவனுடைய கண்ணியிலிருந்து விடுபடலாம்.

3 ஆனால் கடைசி நாட்களில்,[g] சமாளிக்க முடியாத அளவுக்கு
நிலைமை படுமோசமாக இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்.
2 ஏனென்றால், மனிதர்கள் சுயநலக்காரர்களாக, பண ஆசைபிடித்தவர்க
ளாக, ஆணவமுள்ளவர்களாக, கர்வமுள்ளவர்களாக, கடவுளை நிந்திக்கிற
வர்களாக, அப்பா அம்மாவுக்குக் கீழ்ப்படியாதவர்களாக, நன்றிகெட்டவர்க
ளாக, உண்மையில்லாதவர்களாக, **3** பந்தபாசம் இல்லாதவர்களாக,
எதற்குமே ஒத்துப்போகாதவர்களாக, மற்றவர்களைப் பற்றி இல்லாததை
யும் பொல்லாததையும் பேசுகிறவர்களாக, சுயக்கட்டுப்பாடு இல்லாதவர்க
ளாக, கொடூரமானவர்களாக, நல்ல காரியங்களை விரும்பாதவர்களாக,
4 நம்பிக்கைத் துரோகிகளாக, அடங்காதவர்களாக, தலைக்கனம் பிடித்த
வர்களாக, கடவுளை நேசிக்காமல் சுகபோக வாழ்க்கையை நேசிக்கிறவர்க
ளாக, **5** பக்திமான்களைப் போல் காட்டிக்கொண்டு அதற்கு நேர்மாறாக
வாழ்கிறவர்களாக* இருப்பார்கள்;[h] இப்படிப்பட்டவர்களை நீ விட்டுவிலகு.
6 இவர்களில் சிலர், தந்திரமாகக் குடும்பங்களுக்குள் நுழைந்து பலவீன
மான பெண்களை வசப்படுத்திக்கொள்கிறார்கள். இந்தப் பெண்கள் தங்களு
டைய பாவங்களிலேயே ஊறிப்போனவர்கள், பலவிதமான ஆசைகளுக்கு
அடிபணிந்தவர்கள்; **7** இவர்கள் எப்போதும் கற்றுக்கொண்டே இருந்தா
லும், சத்தியத்தைப் பற்றிய திருத்தமான அறிவை ஒருபோதும் பெற்றுக்
கொள்ள மாட்டார்கள்.

8 யந்நே, யம்பிரே என்பவர்கள் மோசேயை எதிர்த்ததுபோல், இந்தப்
பக்திமான்களும் சத்தியத்தை எதிர்த்துக்கொண்டே இருக்கிறார்கள்;
இவர்கள் முழுக்க முழுக்க புத்திகெட்டுப்போனவர்கள்; விசுவாசத்தைப்
பொறுத்தவரை கடவுளால் ஒதுக்கித்தள்ளப்பட்டவர்கள். **9** இனியும் இவர்
களால் தங்கள் போக்கிலேயே போய்க்கொண்டிருக்க முடியாது. ஏனென்
றால், அந்த இரண்டு பேருடைய முட்டாள்தனத்தைப் போலவே இவர்களு
டைய முட்டாள்தனமும் எல்லாருக்கும் வெட்டவெளிச்சமாகிவிடும்.[i]

அதி. 2
a 1தீ 1:3, 4; 1தீ 4:7; தீத் 3:9
b 1தெ 2:7
c மத் 5:39
d நீதி 15:1; கலா 6:1; தீத் 3:2; 1பே 3:15
e 1தீ 2:3, 4
f யோவா 13:27; அப் 5:3; 1தீ 1:20

அதி. 3
g மத் 24:3; 1தீ 4:1; 2பே 3:3; யூ 17, 18
h மத் 7:15; மத் 7:22, 23
i யாத் 7:11, 12; யாத் 9:11

2:22 *நே.மொ., “எஜமானைக் கூப்பிடுகிறவர்களுடன்.” **2:24** *வே.வா., “சாதுரிய
மாக.” **2:25** *வே.வா., “மனம் மாறி.” **3:5** *நே.மொ., “கடவுள்பக்தியின் வல்லமை
யைப் பொய்யாக்குகிறவர்களாக.”

10 நீயோ என் போதனையையும், வாழ்க்கைப் பாணியையும்,[a] குறிக்
கோளையும், விசுவாசத்தையும், பொறுமையையும், அன்பையும், சகிப்புத்
தன்மையையும் நெருக்கமாகப் பின்பற்றி வந்திருக்கிறாய். **11** எனக்கு ஏற்
பட்ட துன்புறுத்தல்களும் பாடுகளும் அந்தியோகியா,[b] இக்கோனியா,[c]
லீஸ்திரா[d] ஆகிய நகரங்களில் எனக்கு வந்த கஷ்டங்களும் உனக்கு
நன்றாகத் தெரியும். இதையெல்லாம் நான் சகித்துக்கொண்டேன்; இவை எல்
லாவற்றிலிருந்தும் நம் எஜமான் என்னைக் காப்பாற்றினார்.[e] **12** உண்மை
யில், கிறிஸ்து இயேசுவின் சீஷர்களாகக் கடவுள்பக்தியோடு வாழ
விரும்புகிற எல்லாரும் துன்புறுத்தப்படுவார்கள்.[f] **13** ஆனால், பொல்லா
தவர்களும் ஏமாற்றுக்காரர்களும் மேலும் மேலும் மோசமாவார்கள்; அவர்
கள் ஏமாற்றிக்கொண்டும் ஏமாந்துகொண்டும் இருப்பார்கள்.[g]

14 ஆனால், நீ கற்றுக்கொண்ட விஷயங்களை, நம்பிக்கை வைக்கும்
விதத்தில் உனக்குப் பக்குவமாக எடுத்துச்சொல்லப்பட்ட விஷயங்களை
விடாமல் கடைப்பிடி;[h] அவற்றை யாரிடமிருந்து கற்றுக்கொண்டாய் என்
பது உனக்குத் தெரியுமே. **15** அதுவும், பரிசுத்த எழுத்துக்களை நீ சிசுப்
பருவத்திலிருந்தே[i] அறிந்திருக்கிறாய்;[j] அவை உனக்கு ஞானத்தைத் தந்து
கிறிஸ்து இயேசுமேல் வைத்திருக்கிற விசுவாசத்தின் மூலம் நீ மீட்கப்படு
வதற்கு வழிநடத்தும்.[k] **16** வேதவசனங்கள் எல்லாம் கடவுளுடைய சக்தி
யின் தூண்டுதலால் கொடுக்கப்பட்டிருக்கின்றன.[l] அவை கற்றுக்கொடுப்ப
தற்கும்,[m] கண்டிப்பதற்கும், காரியங்களைச் சரிசெய்வதற்கும், கடவுளுடைய
நீதிநெறியின்படி திருத்துவதற்கும் பிரயோஜனமுள்ளவையாக இருக்கின்
றன.[n] **17** அதனால், கடவுளுடைய ஊழியன் எந்தவொரு நல்ல வேலை
யையும் செய்வதற்கு எல்லா திறமையையும், எல்லா விதமான தகுதிகளை
யும் பெற்றவனாக இருப்பான்.

4 கடவுளுக்கு முன்பாகவும், உயிருள்ளவர்களையும் இறந்தவர்களையும்[o]
நியாயந்தீர்க்கப்போகிற கிறிஸ்து இயேசுவுக்கு[p] முன்பாகவும், கிறிஸ்து
வின் வெளிப்படுதலின் பேரிலும்,[q] அவருடைய அரசாங்கத்தின்[r] பேரி
லும் நான் உனக்கு ஆணையிடுகிறேன்: **2** கடவுளுடைய வார்த்தையைப்
பிரசங்கி;[s] சாதகமான காலத்திலும் சரி, பாதகமான காலத்திலும் சரி, அவ
சர உணர்வோடு பிரசங்கி; கற்பிக்கும் கலையைப்[t] பயன்படுத்தி பொறுமை
யோடு கண்டித்துப் பேசு,[u] கடுமையாக எச்சரி, அறிவுரை சொல்.
3 ஏனென்றால், ஒரு காலம் வரும்; அப்போது, பயனுள்ள* போதனை
களை[v] அவர்கள் ஒதுக்கித்தள்ளுவார்கள்; அதற்குப் பதிலாக, தங்கள்
காதுகளுக்கு இனிமையாய் இருக்கும் விஷயங்களைக் கேட்பதற்காக, தங்
கள் விருப்பத்துக்கு ஏற்ப தங்களுக்கென்று போதகர்களைச் சேர்த்துக்கொள்
வார்கள்.[w] **4** அதோடு, சத்தியத்தைக் கேட்காமல் கட்டுக்கதைகளைக்
காதுகொடுத்துக் கேட்பார்கள். **5** நீயோ, எல்லா விஷயங்களிலும் யோசிக்
கும் திறனை நன்றாகப் பயன்படுத்து; கஷ்டங்களைச் சகித்துக்கொள்,[x]
நற்செய்தியாளரின் வேலையைச் செய்,* உன் ஊழியத்தை முழுமையாகச்
செய்து முடி.[y]

6 ஏனென்றால், நான் ஏற்கெனவே என்னைத் திராட்சமது காணிக்கை
யைப் போல் ஊற்றிவிட்டேன்;[z] நான் விடுதலை பெறுகிற நேரம்[a]

4:3 *வே.வா., “ஆரோக்கியமான.” **4:5** *வே.வா., “நல்ல செய்தியைத் தொடர்ந்து
பிரசங்கி.”

அதி. 3
a 1கொ 4:17
2தீ 1:13
b அப் 13:50
c அப் 14:1, 5, 6
d அப் 14:19
e 2கொ 1:10
f மத் 16:24
யோவா 15:20
அப் 14:22
g 2தெ 2:11
1தீ 4:1
h 2தீ 1:13
i நீதி 22:6
j அப் 16:1, 2
k யோவா 5:39
l யோவா 14:26
2பே 1:21
m ரோ 15:4
n 1கொ 10:11

அதி. 4
o யோவா 5:
28, 29
அப் 10:42
p யோவா 5:22
அப் 17:31
2கொ 5:10
q 1தீ 6:14, 15
1பே 5:4
r வெளி 11:15
வெளி 12:10
s 2தீ 2:15
t 2தீ 2:24, 25
u 1தீ 5:20
தீத் 1:7, 9
தீத் 1:13
தீத் 2:15
v 1தீ 1:9, 10
w 1தீ 4:1
x 2தீ 1:8
2தீ 2:3
y ரோ 15:19
கொலோ 1:25
z எண் 28:6, 7
a பிலி 1:23

நெருங்கிவிட்டது. **7** சிறந்த போராட்டத்தைப் போராடியிருக்கிறேன்;[a]
என் ஓட்டத்தைக் கடைசிவரை ஓடி முடித்திருக்கிறேன்,[b] கிறிஸ்தவ விசு
வாசத்தைக் கடைப்பிடித்திருக்கிறேன். **8** இப்போதுமுதல், நீதியின் கிரீடம்
எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது;[c] நீதியுள்ள நீதிபதியான நம் எஜமான்[d]
நியாயத்தீர்ப்பு நாளில் அதை எனக்குப் பரிசாகத் தருவார்;[e] எனக்கு மட்டு
மல்ல, அவர் வெளிப்படப்போவதை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டி
ருக்கிற எல்லாருக்கும் தருவார்.

9 சீக்கிரமாக என்னிடம் வருவதற்கு உன்னால் முடிந்த எல்லாவற்
றையும் செய். **10** ஏனென்றால், தேமா[f] இந்த உலகத்தின்* மேல் ஆசை
வைத்து என்னைவிட்டுப் பிரிந்து தெசலோனிக்கேவுக்குப் போய்விட்டான்.
கிரெஸ்கே கலாத்தியாவுக்கும், தீத்து தல்மாத்தியாவுக்கும் போயிருக்கிறார்
கள். **11** லூக்கா மட்டும் என்னோடு இருக்கிறார். மாற்குவை உன்னோடு
கூட்டிக்கொண்டு வா. ஏனென்றால், ஊழியத்தில் அவர் எனக்கு உதவியாக
இருப்பார். **12** தீகிக்குவை[g] நான் எபேசுவுக்கு அனுப்பியிருக்கிறேன்.
13 துரோவாவில் உள்ள கார்புவிடம் நான் விட்டுவந்த என் சால்வையை
யும் சுருள்களையும், முக்கியமாகத் தோல் சுருள்களையும், நீ வரும்போது
எடுத்துக்கொண்டு வா.

14 செம்புக் கொல்லனாகிய அலெக்சந்தர் எனக்கு நிறைய கெடுதல்
களைச் செய்தான்; அவன் செய்த எல்லாவற்றுக்கும் யெகோவா* பதிலடி
கொடுப்பார்.[h] **15** நீயும் அவனிடம் எச்சரிக்கையாக இரு. ஏனென்றால்,
நம்முடைய செய்தியை அவன் தீவிரமாக எதிர்த்தான்.

16 முதல் தடவை நான் என்னுடைய தரப்பில் வாதாடியபோது,
எனக்கு ஆதரவாக யாரும் வரவில்லை; எல்லாரும் என்னைக் கைவிட்டார்
கள்—அந்தக் குற்றம் அவர்களுடைய கணக்கில் சேராமல் இருக்கட்டும்—
17 ஆனால், என் மூலம் பிரசங்க வேலை முழுமையாக நிறைவேறுவதற்
காகவும், எல்லா தேசத்து மக்களும் அந்தச் செய்தியைக் கேட்பதற்காகவும்[i]
நம் எஜமான் என் பக்கத்தில் நின்று, எனக்குப் பலம் கொடுத்தார்; சிங்கத்
தின் வாயிலிருந்தும் நான் காப்பாற்றப்பட்டேன்.[j] **18** பொல்லாத செயல்
கள் எல்லாவற்றிலிருந்தும் நம் எஜமான் என்னை விடுவித்து, காப்பாற்றி,
அவருடைய பரலோக அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்வார்.[k] அவருக்கே
என்றென்றும் மகிமை சொந்தம். ஆமென்.*

19 பிரிஸ்காளுக்கும் ஆக்கில்லாவுக்கும்[l] ஒநேசிப்போருவின்[m] வீட்டில்
இருக்கிறவர்களுக்கும் என் வாழ்த்துக்களைச் சொல்.

20 எரஸ்து[n] கொரிந்து நகரத்தில் தங்கிவிட்டார்; துரோப்பீமுவுக்கு[o]
உடல்நிலை சரியில்லாததால், அவரை மிலேத்துவில் விட்டுவிட்டு வந்
தேன். **21** குளிர் காலத்துக்கு முன்பு இங்கே வர உன்னால் முடிந்த எல்லா
வற்றையும் செய்.

ஐப்பூலுவும், புதேஞ்சும், லீனுவும், கிலவுதியாளும், மற்ற சகோதரர்கள் எல்
லாரும் உனக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள்.

22 நல்ல மனப்பான்மையை வெளிக்காட்டுகிற உன்னோடு நம் எஜமான்
இருக்கட்டும். அவருடைய அளவற்ற கருணை உன்மீது இருக்கட்டும்.

4:10 *வே.வா., "சகாப்தத்தின்." சொல் பட்டியலைப் பாருங்கள். **4:14** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:18** *அதாவது, "அப்படியே ஆகட்டும்."

அதி. 4
a 1கொ 9:26; 1தீ 6:12
b பிலி 3:14
c 1கொ 9:25; யாக் 1:12
d யோவா 5:22
e 1பே 5:4; வெளி 2:10
f கொலோ 4:14; பிலே 23, 24
g எபே 6:21; கொலோ 4:7
h சங் 28:4; சங் 62:12; நீதி 24:12
i அப் 9:15
j சங் 22:21
k வெளி 20:4
l ரோ 16:3
m 2தீ 1:16
n அப் 19:22
o அப் 21:29

தீத்துவுக்கு

எழுதப்பட்ட கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1-4)
கிரேத்தாவில் மூப்பர்களை தீத்து நியமிக்க வேண்டும் (5-9)
கலகக்காரர்களைக் கண்டிக்க வேண்டும் (10-16)

2 பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் அறிவுரை (1-15)
கடவுள்பக்தியற்ற நடத்தையை விட்டுவிட வேண்டும் (12)
நல்ல செயல்கள் செய்வதில் வைராக்கியமாக இருங்கள் (14)

3 சரியான விதத்தில் அடிபணிவது (1-3)
நல்ல செயல்கள் செய்யத் தயாராயிருக்க வேண்டும் (4-8)
முட்டாள்தனமான விவாதங்களையும் பிரிவினைகளையும் தவிர்த்து விடு (9-11)
தனிப்பட்ட ஆலோசனைகளும் வாழ்த்துக்களும் (12-15)

1 கடவுளுடைய அடிமையும் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனுமா
கிய பவுல், உண்மையான மகனாகவும் சக விசுவாசியாகவும் இருக்கிற
தீத்துவுக்கு எழுதுவது:

பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் நம் மீட்பராகிய கிறிஸ்து
இயேசுவிடமிருந்தும் உனக்கு அளவற்ற கருணையும் சமாதானமும்
கிடைக்கட்டும்.

2 என்னுடைய விசுவாசம் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின்
விசுவாசத்துக்கும், சத்தியத்தைப் பற்றிய திருத்தமான அறிவுக்கும் இசை
வாக இருக்கிறது; அந்தச் சத்தியம், கடவுள்பக்திக்கு இசைவாக இருக்கிறது;
3 பொய் சொல்ல முடியாத கடவுள்[a] பல காலத்துக்கு முன்பே வாக்குறுதி
தந்த முடிவில்லாத வாழ்வு என்ற நம்பிக்கையின்[b] அடிப்படையில் இது
இருக்கிறது. **4** நம் மீட்பரான கடவுளுடைய கட்டளையின்படி என்னிடம்
ஒப்படைக்கப்பட்ட பிரசங்க வேலையின்[c] மூலம் சரியான நேரத்தில் அவ
ருடைய வார்த்தை அவரால் வெளிப்படுத்தப்பட்டது.

5 தவறுகளை* சரிசெய்வதற்காகவும், என் அறிவுரையின்படி ஒவ்
வொரு நகரத்திலும் மூப்பர்களை நியமிப்பதற்காகவும் நான் உன்னை
கிரேத்தா தீவில் விட்டுவந்தேன். **6** அப்படி நியமிக்கப்படுகிறவர் குற்றம்
சாட்டப்படாதவராக இருக்க வேண்டும், ஒரே மனைவியை உடையவராக
இருக்க வேண்டும்; அவருடைய பிள்ளைகள் விசுவாசிகளாகவும், மோச
மானவர்கள் என்றோ அடங்காதவர்கள் என்றோ பெயர் எடுக்காதவர்களா
கவும் இருக்க வேண்டும்.[d] **7** கண்காணியாக இருப்பவர் கடவுளால் நிய
மிக்கப்பட்ட நிர்வாகி என்பதால், அவர் குற்றம்சாட்டப்படாதவராக இருக்க
வேண்டும்; தன்னுடைய இஷ்டப்படி நடக்கிறவராகவோ,[e] முன்கோபக்கார
ராகவோ,[f] குடிகாரராகவோ, மூர்க்கமானவராகவோ,* அநியாய லாபம் சம்

அதி. 1
a எண் 23:19
b ரோ 6:23
c அப் 9:15
d 1தீ 3:2-7
e 2பே 2:10
f யாக் 1:19

1:5 * வே.வா., "குறைகளை." **1:7** * வே.வா., "மற்றவர்களை அடிக்கிறவராகவோ."

பாதிக்க அலைகிறவராகவோ இருக்கக் கூடாது. **8** அதற்குப் பதிலாக, உப
சரிக்கும் குணமுள்ளவராக,[a] நல்ல காரியங்களை விரும்புகிறவராக,
தெளிந்த புத்தியுள்ளவராக,*[b] நீதியுள்ளவராக, உண்மையுள்ளவராக,#[c]
சுயக்கட்டுப்பாடுள்ளவராக[d] இருக்க வேண்டும். **9** அதோடு, கற்பிக்கும்
கலையைப் பயன்படுத்தும்போது சத்திய* வார்த்தையை உறுதியோடு பிடித்
துக்கொண்டிருக்கிறவராகவும்[e] இருக்க வேண்டும். அப்போதுதான், பய
னுள்ள# போதனைகளின்[f] மூலம் மற்றவர்களை உற்சாகப்படுத்த△ முடியும்,
அந்தப் போதனைகளுக்கு முரணாகப் பேசுகிறவர்களைக் கண்டிக்கவும்[g]
அவரால் முடியும்.

10 நிறைய ஆட்கள், குறிப்பாக விருத்தசேதன வழக்கத்தைக் கடைப்
பிடிக்கிற ஆட்கள்,[h] கலகக்காரர்களாகவும் வீண்பேச்சுப் பேசுகிறவர்களா
கவும் ஏமாற்றுக்காரர்களாகவும் இருக்கிறார்கள். **11** இப்படிப்பட்ட ஆட்க
ளுடைய வாயை அடைக்க வேண்டும்; இவர்கள் அநியாய லாபம்
சம்பாதிப்பதற்காக, கற்றுக்கொடுக்கக் கூடாத விஷயங்களைக் கற்றுக்கொ
டுத்து எல்லா குடும்பங்களையும் சீரழித்து வருகிறார்கள். **12** “கிரேத்தர்கள்
எப்போதும் பொய் சொல்கிறவர்கள், கொடிய மிருகங்கள், வேலைவெட்டி
யில்லாத பெருந்தீனிக்காரர்கள்” என்று அவர்களில் ஒருவராகிய அவர்களு
டைய தீர்க்கதரிசியே சொல்லியிருக்கிறார்.

13 அவர் சொன்னது உண்மைதான். அதனால், அவர்களைக் கடுமையா
கக் கண்டித்துக்கொண்டிரு. அப்போது, விசுவாசத்தில் அவர்கள் ஆரோக்கி
யமாக இருப்பார்கள். **14** அதோடு, யூத கட்டுக்கதைகளுக்கும் சத்தியத்
தைவிட்டு விலகுகிற ஆட்களுடைய கட்டளைகளுக்கும் அவர்கள் கவனம்
செலுத்தாமல் இருப்பார்கள். **15** சுத்தமானவர்களுக்கு எல்லாமே சுத்தமாக
இருக்கிறது.[i] ஆனால், கறைபட்டவர்களுக்கும் விசுவாசம் இல்லாதவர்களுக்
கும் எதுவுமே சுத்தமாக இருக்காது; அவர்களுடைய மனமும் சரி,
மனசாட்சியும் சரி, இரண்டுமே கறைபட்டதாக இருக்கின்றன.[j] **16** கடவு
ளைப் பற்றித் தங்களுக்குத் தெரியும் என்று அவர்கள் வெளிப்படையாகச்
சொன்னாலும், தங்கள் செயல்களால் அவரை ஒதுக்கித்தள்ளிவிடுகிறார்கள்;[k]
ஏனென்றால், அவர்கள் அருவருப்பானவர்கள், கீழ்ப்படியாதவர்கள், எந்த
வொரு நல்ல செயலைச் செய்வதற்கும் தகுதியில்லாதவர்கள்.

2 ஆனால் நீ பயனுள்ள# போதனைகளுக்கு இசைவான விஷயங்க
ளைத் தொடர்ந்து பேசு.[l] **2** வயதான ஆண்கள் பழக்கவழக்கங்க
ளில் அளவுக்குமீறி போகாதவர்களாக, பொறுப்போடு நடக்கிறவர்களாக,
தெளிந்த புத்தியுள்ளவர்களாக, விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாக, அன்
பையும் சகிப்புத்தன்மையையும் காட்டுவதில் சிறந்தவர்களாக இருக்க
வேண்டும். **3** அதேபோல், வயதான பெண்கள் பயபக்தியோடு நடக்கிற
வர்களாக, மற்றவர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் பேசாத
வர்களாக, திராட்சமதுவுக்கு அடிமையாகாதவர்களாக, நல்லதைக் கற்றுக்கொ
டுக்கிறவர்களாக இருக்க வேண்டும். **4** அப்போதுதான், இளம் பெண்கள்
தங்களுடைய கணவர்மீதும் பிள்ளைகள்மீதும் அன்புள்ளவர்களாக,

அதி. 1
a 1பே 4:9
b ரோ 12:3; 1தீ 3:2
c 1தீ 2:8
d 2தீ 2:24; யாக் 3:13
e 1தீ 4:16; 1தீ 6:3, 4
f 1தீ 1:9, 10; 2தீ 1:13
g 1தீ 5:20; 2தீ 4:2; தீத் 1:13; வெளி 3:19
h அப் 15:1
i ரோ 14:14
j மத் 15:11
k மத் 7:16-18

அதி. 2
l 1தீ 4:16; 2தீ 1:13

1:8 *வே.வா., “சரியாக முடிவெடுக்கிற திறமையுள்ளவராக; விவேகமுள்ளவராக.” #வே.வா., “பற்றுமாறாதவராக.” **1:9** *வே.வா., “நம்பகமான.” **1:9; 2:1** #வே.வா., “ஆரோக்கியமான.” **1:9** △வே.வா., “மற்றவர்களுக்கு அறிவுரை சொல்ல.”

5 தெளிந்த புத்தியுள்ளவர்களாக, கற்புள்ளவர்களாக, வீட்டு வேலைகளைச்
செய்கிறவர்களாக,* நல்லவர்களாக, தங்கள் கணவருக்குக் கட்டுப்பட்டு நடக்
கிறவர்களாக[a] இருக்கும்படி அவர்களால் புத்திசொல்ல# முடியும்; கடவு
ளுடைய வார்த்தையைப் பற்றி மற்றவர்கள் பழித்துப்பேச இடமிருக்காது.

6 அதேபோல், இளம் ஆண்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாக[b] இருக்க
வேண்டும் என்று சொல்லிக்கொண்டே இரு. **7** நல்ல செயல்கள் செய்
வதில் எல்லா விதத்திலும் முன்மாதிரியாக இரு. உண்மையான விஷயங்
களைக் கருத்தாகக் கற்றுக்கொடு.*[c] **8** அப்படிக் கற்றுக்கொடுக்கும்போது,
யாரும் குற்றம்சொல்ல முடியாத நல்ல* வார்த்தைகளைப் பேசு;[d] அப்போ
துதான், எதிரிகள் நம்மைப் பற்றித் தவறாக# பேச வழியில்லாமல்[e]
வெட்கப்பட்டுப்போவார்கள். **9** அடிமைகள் எல்லாவற்றிலும் தங்கள் எஜ
மான்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்,[f] அவர்களைப் பிரியப்
படுத்த முயற்சி செய்ய வேண்டும், எதிர்த்துப் பேசக் கூடாது, **10** திருடக்
கூடாது;[g] அதற்குப் பதிலாக, தாங்கள் முழு நம்பிக்கைக்குரியவர்கள் என்ப
தைக் காட்ட வேண்டும். அப்போதுதான், நம்முடைய மீட்பரான கடவு
ளுடைய போதனைகளை எல்லா விதத்திலும் அவர்களால் அலங்கரிக்க
முடியும்.[h]

11 கடவுளுடைய அளவற்ற கருணை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது,
எல்லா விதமான ஆட்களையும் காப்பாற்றுவதற்கு[i] அது உதவி செய்கிறது;
12 கடவுள்பக்தியற்ற நடத்தையையும் உலக ஆசைகளையும் விட்டுவிடுவ
தற்கும்[j] தெளிந்த புத்தியுள்ளவர்களாக, நீதிமான்களாக, கடவுள்பக்தி உள்
ளவர்களாக இந்த உலகத்தில்* வாழ்வதற்கும்[k] அந்த அளவற்ற கருணை
நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. **13** நம்முடைய சந்தோஷமான எதிர்பார்ப்பு
நிறைவேறுவதற்காகவும்,[l] நம்முடைய மகத்தான கடவுளும் நம்முடைய மீட்
பராகிய கிறிஸ்து இயேசுவும் மகிமையோடு வெளிப்படுவதற்காகவும் காத்
திருக்கிற நேரத்தில் நாம் அப்படி வாழ வேண்டும். **14** கிறிஸ்து நமக்காகத்
தன்னையே கொடுத்தார்;[m] இப்படி, நம்மை எல்லா விதமான அக்கிரமங்
களிலிருந்தும் விடுவித்தார்.[n] அதோடு, அவருக்குச் சொந்தமான விசேஷ
சொத்தாகவும் நல்ல செயல்கள் செய்வதில் வைராக்கியமுள்ள மக்களாகவும்
ஆகும்படி நம்மைச் சுத்தமாக்கினார்.[o]

15 இந்த விஷயங்களைப் பற்றி நீ முழு அதிகாரத்தோடு தொடர்ந்து
பேசு, தொடர்ந்து அறிவுரை கொடு,* தொடர்ந்து கண்டித்துப் பேசு.[p] யாரும்
உன்னைத் தாழ்வாகப் பார்க்க இடம்கொடுக்காதே.

3 அரசாங்கங்களுக்கும் அதிகாரிகளுக்கும் அடிபணிந்து நடக்க வேண்
டும், கீழ்ப்படிய வேண்டும்,[q] எல்லா விதமான நல்ல செயல்களையும்
செய்யத் தயாராக இருக்க வேண்டும், **2** யாரைப் பற்றியும் மோசமாகப்
பேசக் கூடாது, யாரோடும் தகராறு செய்யக் கூடாது, நியாயமானவர்க
ளாக* நடந்துகொள்ள வேண்டும்,[r] எல்லாரிடமும் எல்லாவற்றிலும் சாந்த

2:5 *வே.வா., “வீட்டைக் கவனித்துக்கொள்கிறவர்களாக.” #வே.வா., “பயிற்சி கொடுக்க.” **2:7** *அல்லது, “கருத்தாகவும் உண்மையாகவும் கற்றுக்கொடு.” **2:8** *வே.வா., “ஆரோக்கியமான; பயனுள்ள.” #வே.வா., “கீழ்த்தரமாக.” **2:12** *வே.வா., “சகாப்தத்தில்.” சொல் பட்டியலைப் பாருங்கள். **2:15** *வே.வா., “உற்சாகப்படுத்து.” **3:2** *அல்லது, “வளைந்துகொடுப்பவர்களாக.”

அதி. 2
a 1கொ 14:34, 35; 1பே 3:1, 2
b ரோ 12:3; 1பே 5:5
c 2தீ 2:15
d கொலோ 3:8
e 1பே 2:15
f எபே 6:5; 1தீ 6:1; 1பே 2:18
g எபே 4:28
h மத் 5:16
i ரோ 5:18
j 1யோ 2:16
k ரோ 12:2
l 1பே 1:13
m மத் 20:28; 1தீ 2:5, 6
n எபே 1:7; கொலோ 1:13, 14
o எபே 2:10; எபி 9:14
p 2தீ 4:2

அதி. 3
q மாற் 12:17; ரோ 13:1; 1பே 2:13, 14
r பிலி 4:5; யாக் 3:17

குணத்தைக் காட்ட வேண்டும்[a] என்றெல்லாம் அவர்களுக்குத் தொடர்ந்து
ஞாபகப்படுத்து. **3** ஏனென்றால், நாமும்கூட ஒருகாலத்தில் புத்தியில்லாத
வர்களாக, கீழ்ப்படியாதவர்களாக, வழிதவறி நடக்கிறவர்களாக, பலவித
மான ஆசைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களாக, தீமை
யும் பொறாமையும் நிறைந்தவர்களாக, வெறுக்கத்தக்கவர்களாக, ஒருவரை
ஒருவர் பகைக்கிறவர்களாக இருந்தோம்.

4 ஆனாலும், நம் மீட்பராகிய கடவுள் தன்னுடைய கருணையையும்[b]
அன்பையும் மனிதர்கள்மேல் காட்டியபோது, **5** மறுவாழ்வு பெறுவதற்கு
நம்மைத் தூய்மையாக்கியதன்* மூலமும்[c] தன்னுடைய சக்தியால் புதுப்
பித்ததன் மூலமும் நம்மை மீட்டார்;[d] நம்முடைய நீதியான செயல்களால்
அல்ல,[e] தன்னுடைய இரக்கத்தால் நம்மை மீட்டார்.[f] **6** அந்தச் சக்தியை
நம் மீட்பரான இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்மேல் அளவில்லாமல்*
பொழிந்தார்.[g] **7** அவருடைய அளவற்ற கருணையால் நாம் நீதிமான்க
ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு,[h] முடிவில்லாத வாழ்வு[i] என்ற நம்பிக்கையைச்
சொத்தாகப் பெற வேண்டும்[j] என்பதற்காக அப்படிச் செய்தார்.

8 இந்த வார்த்தைகள் நம்பகமானவை; அதனால், கடவுள்மேல் நம்
பிக்கை வைத்திருக்கிறவர்கள் தொடர்ந்து நல்ல செயல்கள் செய்வதில்
முழு கவனத்தோடு இருப்பதற்காக இவற்றை நீ அவர்களுக்கு வலியுறுத்
திக்கொண்டே இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இவை சிறந்தவை,
மனிதர்களுக்குப் பிரயோஜனமானவை.

9 முட்டாள்தனமான விவாதங்களையும், வம்சாவளி விவரங்களைப் பற்
றிய ஆராய்ச்சிகளையும், சச்சரவுகளையும், திருச்சட்டத்தைப் பற்றிய
சண்டைகளையும் அடியோடு தவிர்த்து விடு; அவை பிரயோஜனம் இல்
லாதவை, வீணானவை.[k] **10** சபையில் பிரிவினைகளை உண்டாக்குகிறவ
னுக்கு[l] ஒரு தடவை புத்திசொல்,* இரண்டாவது தடவையும் புத்திசொல்,[m]
அதன் பின்பு அவனை ஒதுக்கிவிடு.[n] **11** ஏனென்றால், அப்படிப்பட்ட
வன் வழிதவறி நடக்கிறான், பாவம் செய்கிறான், தனக்குத்தானே தண்ட
னைத் தீர்ப்பை வரவழைத்துக்கொள்கிறான்.

12 அர்தெமாவையோ தீகிக்குவையோ[o] நான் உன்னிடம் அனுப்பிய
பின்பு, நிக்கொப்போலிக்கு என்னிடம் வர உன்னால் முடிந்த எல்லாவற்
றையும் செய்; அங்கேதான் குளிர் காலத்தில் தங்க வேண்டும் என்று
தீர்மானித்திருக்கிறேன். **13** திருச்சட்ட வல்லுநனாகிய சேனாவுக்கும், அப்
பொல்லோவுக்கும் எந்தக் குறைவும் இல்லாதபடி அவர்களுடைய பயணத்
துக்கு வேண்டியதையெல்லாம் பார்த்துக் கொடுத்தனுப்பு.[p] **14** நம்மைச்
சேர்ந்தவர்களும் தொடர்ந்து நல்ல செயல்கள் செய்து, அவசரத் தேவைக
ளைப் பூர்த்தி செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும்.[q] அப்போதுதான், அவர்
கள் பலன் தராத ஊழியர்களாக இருக்க மாட்டார்கள்.[r]

15 என்னோடு இருக்கிற எல்லாரும் உனக்கு வாழ்த்துச் சொல்கிறார்
கள். விசுவாசத்தில் இருக்கிற நம் நண்பர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்க
ளைச் சொல்.

கடவுளுடைய அளவற்ற கருணை உங்கள் எல்லார்மீதும் இருக்கட்டும்.

3:5 * நே.மொ., "குளியலின்." **3:6** * வே.வா., "தாராளமாக." **3:10** * வே.வா., "எச்சரி."

அதி. 3
a நீதி 15:1; கலா 6:1; எபே 4:1, 2; 1தீ 6:11; 2தீ 2:24, 25; 1பே 3:15
b லூ 6:35; ரோ 2:4; எபே 4:32
c ரோ 5:18
d யோவா 3:5; ரோ 8:23; 2கொ 5:17
e உபா 9:5; ரோ 3:10; கலா 3:21
f ரோ 5:15, 21; ரோ 6:23
g அப் 2:33
h ரோ 3:24; கலா 2:15, 16
i ரோ 6:23
j ரோ 8:17
k 1தீ 1:3, 4; 1தீ 6:3-5
l 1கொ 11:19; வெளி 2:6
m 2தீ 4:2
n ரோ 16:17; 2யோ 10
o அப் 20:4; எபே 6:21; 2தீ 4:12
p 1கொ 9:14; கலா 6:6; எபி 13:16
q 1கொ 9:11
r கொலோ 1:10

பிலேமோனுக்கு

எழுதப்பட்ட கடிதம்

முக்கியக் குறிப்புகள்

வாழ்த்துக்கள் (1–3)
பிலேமோனின் அன்பும் விசுவாசமும் (4–7)
ஒநேசிமுவுக்காக பவுல் கெஞ்சிக் கேட்கிறார் (8–22)
முடிவான வாழ்த்துக்கள் (23–25)

1 கிறிஸ்து இயேசுவுக்காகக் கைதியாய் இருக்கிற பவுல்,[a] சகோதரர்
தீமோத்தேயுவோடு[b] சேர்ந்து, எங்கள் அன்பான சக வேலையாளாகிய
பிலேமோனுக்கும், **2** எங்கள் சகோதரி அப்பியாளுக்கும், சக வீரன் அர்க்
கிப்புவுக்கும்,[c] உங்களுடைய வீட்டில் கூடுகிற சபைக்கும்[d] எழுதுவது:

3 நம் பரலோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் எஜமானாகிய
இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதா
னமும் கிடைக்கட்டும்.

4 உங்களுக்காக ஜெபம் செய்யும்போதெல்லாம் நான் கடவுளுக்கு
நன்றி சொல்கிறேன்.[e] **5** ஏனென்றால், நீங்கள் வைத்திருக்கிற விசுவாசத்
தையும், நம் எஜமானாகிய இயேசுமீதும் பரிசுத்தவான்கள் எல்லார்மீதும் நீங்
கள் காட்டுகிற அன்பையும் பற்றி நான் கேள்விப்பட்டு வருகிறேன்.
6 கிறிஸ்துவின் மூலம் நமக்கு ஏராளமான நன்மைகள் கிடைத்திருப்பதை
நீங்கள் உணர்ந்து, உங்களுடைய விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்வதில் மும்
முரமாக இருக்க வேண்டுமென்று ஜெபம் செய்கிறேன். **7** சகோதரரே, நீங்
கள் காட்டுகிற அன்பைப் பற்றிக் கேள்விப்பட்டு நான் மிகுந்த சந்தோஷமும்
ஆறுதலும் அடைந்தேன். ஏனென்றால், பரிசுத்தவான்களின் இதயங்கள் உங்
களால் புத்துணர்ச்சி அடைந்திருக்கின்றன.

8 அதனால், நீங்கள் சரியானதைச் செய்ய வேண்டுமென்று கிறிஸ்துவின்
அப்போஸ்தலன் என்ற முறையில் என்னால் எந்தத் தயக்கமும் இல்லாமல்
உத்தரவிட முடியுமென்றாலும், **9** அன்பின் அடிப்படையில் உங்களைக்
கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். வயதானவனாக, அதுவும் கிறிஸ்து இயே
சுவுக்காக இப்போது கைதியாய் இருக்கிற பவுலாகிய நான், **10** சிறையில்
இருந்தபோது எனக்குப் பிள்ளை போலான[f] ஒநேசிமுவுக்காக[g] உங்களைக்
கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். **11** முன்பு அவன் உங்களுக்குப் பிர
யோஜனம் இல்லாதவனாக இருந்தான், இப்போதோ உங்களுக்கும் எனக்
கும் பிரயோஜனமுள்ளவனாக இருக்கிறான். **12** அவனை, என் உயிருக்கு
உயிரான அவனை,* உங்களிடமே திரும்ப அனுப்புகிறேன்.

13 நல்ல செய்திக்காகக்[h] கைதியாய் இருக்கிற எனக்குத் தொடர்ந்து
பணிவிடைகள் செய்ய உங்களுக்குப் பதிலாக அவனை என்னுடனேயே

---

12 * வே.வா., "என் இதயத்தை."

a எபே 4:1
b அப் 16:1, 2; எபி 13:23
c கொலோ 4:17
d ரோ 16:5; 1கொ 16:19
e எபே 1:15, 16; 1தெ 1:2
f 1கொ 4:15
g கொலோ 4:9
h எபே 6:19, 20; பிலி 1:7

வைத்துக்கொள்ள விரும்புகிறேன். **14** ஆனாலும், உங்களுடைய சம்மதம் இல்லாமல் நான் எதையும் செய்ய விரும்பவில்லை. ஏனென்றால், நீங்கள் இந்த உதவியைக் கட்டாயத்தால் செய்யாமல் மனப்பூர்வமாகச்[a] செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். **15** அவன் என்றென்றும் உங்களோடு இருக்கத்தான் கொஞ்சக் காலம் உங்களைவிட்டுப் பிரிந்திருந்தான் போலிருக்கிறது. **16** இனி அவன் வெறும் அடிமையாக இல்லாமல்,[b] அடிமையைவிட மேலான அன்புச் சகோதரனாக இருப்பான்.[c] எனக்கே அன்பானவன் என்றால், உங்களுக்கு இன்னும் எந்தளவு அன்பானவனாக இருப்பான்! அவன் உங்களுக்கு அடிமையாகவும் அன்பான கிறிஸ்தவ சகோதரனாகவும் இருப்பான். **17** அதனால், நீங்கள் என்னை உங்களுடைய நண்பனாக நினைத்தால், என்னை அன்புடன் ஏற்றுக்கொள்வது போலவே அவனையும் ஏற்றுக்கொள்ளுங்கள். **18** அதேசமயத்தில், அவன் உங்களுக்கு ஏதாவது நஷ்டம் உண்டாக்கியிருந்தால் அல்லது உங்களுக்குக் கடன்பட்டிருந்தால், அதை என் கணக்கில் சேர்த்துக்கொள்ளுங்கள். **19** அதைக் கொடுத்துவிடுவதாக பவுலாகிய நானே என் கைப்பட எழுதுகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக, உங்களுடைய உயிருக்காக நீங்களே எனக்குக் கடன்பட்டிருக்கிறீர்கள், இல்லையா? **20** சகோதரரே, நம் எஜமானுக்காக எனக்கு இந்த உதவியைச் செய்யுங்கள். கிறிஸ்துவுக்காக என் இதயத்துக்கு புத்துணர்ச்சி கொடுங்கள்.

21 நீங்கள் என் சொல்லுக்குக் கட்டுப்படுவீர்கள் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன்; நான் கேட்டுக்கொள்வதற்கும் அதிகமாகவே நீங்கள் செய்வீர்கள் என்று எனக்குத் தெரியும். **22** நீங்கள் எல்லாரும் செய்கிற ஜெபத்தின் காரணமாக, நான் விடுதலையாகி உங்களை வந்து பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது,[d] அதனால், நான் வந்து தங்குவதற்கு ஓர் இடத்தை ஏற்பாடு செய்யுங்கள்.

23 கிறிஸ்து இயேசுவுக்காக என் சக கைதியாக இருக்கும் எப்பாப்பிராவும்,[e] **24** என் சக வேலையாட்களான மாற்கு, அரிஸ்தர்க்கு,[f] தேமா,[g] லூக்கா[h] ஆகியோரும் உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள்.

25 நல்ல மனப்பான்மையைக் காட்டுகிற உங்கள்மீது நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் அளவற்ற கருணை இருக்கட்டும்.

a 2கொ 9:7
b 1கொ 7:22
c 1தீ 6:2
d பிலி 2:24
e கொலோ 1:7; கொலோ 4:12, 13
f அப் 19:29; அப் 27:2; கொலோ 4:10
g 2தீ 4:10
h கொலோ 4:14

எபிரெயருக்கு

எழுதப்பட்ட கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 தன் மகன் மூலம் கடவுள் பேசினார் (1-4)
தேவதூதர்களைவிட மகன் மேலானவர் (5-14)

2 வழக்கத்தைவிட அதிகமாகக் கவனம் செலுத்துவது அவசியம் (1-4)
எல்லாமே இயேசுவுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது (5-9)
இயேசுவும் அவருடைய சகோதரர்களும் (10-18)

மீட்பின் அதிபதி (10)

இரக்கமுள்ள தலைமைக் குரு (17)

3 மோசேயைவிட இயேசு உயர்ந்தவர் (1-6)

எல்லாவற்றையும் உண்டாக்கியவர் கடவுள் (4)

விசுவாசக் குறைவுக்கு எதிரான எச்சரிக்கை (7-19)

“இன்று நீங்கள் அவருடைய பேச்சைக் கேட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!” (7, 15)

4 கடவுளோடு சேர்ந்து ஓய்வை அனுபவிக்கத் தகுதியில்லாதவர்களாக ஆகிவிடக் கூடாது (1-10)

கடவுளோடு சேர்ந்து ஓய்வை அனுபவிக்க வேண்டும் (11-13)

கடவுளுடைய வார்த்தைக்கு உயிர் இருக்கிறது (12)

இயேசு மாபெரும் தலைமைக் குரு (14-16)

5 மனித தலைமைக் குருமார்களைவிட இயேசு உயர்ந்தவர் (1-10)

மெல்கிசேதேக்கைப் போன்றவர் (6, 10)

கஷ்டங்களின் மூலம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (8)

நிரந்தர மீட்பு கிடைப்பதற்குக் காரணமானார் (9)

முதிர்ச்சி இல்லாதவர்களாய் நடக்கக் கூடாது என்ற எச்சரிக்கை (11-14)

6 முதிர்ச்சியை நோக்கி முன்னேறுங்கள் (1-3)

விசுவாசத்தைவிட்டு விலகியவர்கள், கடவுளுடைய மகனை மறுபடியும் மரக் கம்பத்தில் ஆணியடிக்கிறார்கள் (4-8)

நம்பிக்கை நிறைவேறும் என்ற முழு உறுதியோடு இருங்கள் (9-12)

கடவுளுடைய வாக்குறுதி நிச்சயம் நிறைவேறும் (13-20)

கடவுளுடைய வாக்குறுதியும் உறுதிமொழியும் மாறாதவை (17, 18)

7 மெல்கிசேதேக்கு தனித்தன்மையுள்ள ராஜா, குரு (1-10)

கிறிஸ்துவின் குருத்துவம் உயர்ந்தது (11-28)

கிறிஸ்து முழுமையாக மீட்பதற்கு வல்லவர் (25)

8 கூடாரம் பரலோகக் காரியங்களின் நிழல் (1-6)

பழைய ஒப்பந்தத்திற்கும் புதிய ஒப்பந்தத்திற்கும் உள்ள வித்தியாசம் (7-13)

9 பூமிக்குரிய கூடாரத்தில் பரிசுத்த சேவை (1-10)

கிறிஸ்து தன் சொந்த இரத்தத்தை எடுத்துக்கொண்டு பரலோகத்துக்குள் போனார் (11-28)

புதிய ஒப்பந்தத்தின் மத்தியஸ்தர் (15)

10 மிருக பலிகளால் பலனில்லை (1-4)

திருச்சட்டம் ஒரு நிழல் (1)

எல்லா காலத்துக்கும் ஒரே தடவையாகக் கிறிஸ்து பலி கொடுத்தார் (5-18)

புதிய வழி, வாழ்வு தரும் வழி (19-25)

சபைக் கூட்டங்களுக்கு வராமல் இருந்துவிடக் கூடாது (24, 25)

வேண்டுமென்றே பாவம் செய்வதற்கு எதிரான எச்சரிக்கை (26-31)

சகித்திருப்பதற்கு நம்பிக்கையும் விசுவாசமும் அவசியம் (32-39)

11 விசுவாசம் என்பது என்ன (1, 2)

விசுவாசத்துக்கு உதாரணங்கள் (3-40)

விசுவாசமில்லாமல் யாரும் கடவுளைப் பிரியப்படுத்தவே முடியாது (6)

12 இயேசு நம் விசுவாசத்தை முழுமையாக்குகிறவர் (1-3)

திரண்ட மேகம் போன்ற சாட்சிகள் (1)

யெகோவாவின் புத்திமதியை அலட்சியம் செய்யாதே (4-11)

நீங்கள் போகிற பாதைகளை எப்போதும் நேராக்குங்கள் (12-17)

பரலோக எருசலேமை அணுகுவது (18-29)

13 முடிவான அறிவுரைகளும் வாழ்த்துக்களும் (1-25)

உபசரிக்கும் குணத்தைக் காட்ட மறந்துவிடாதீர்கள் (2)

திருமண ஏற்பாட்டை மதியுங்கள் (4)

உங்களை வழிநடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் (7, 17)

புகழ்ச்சிப் பலியைக் கொடுங்கள் (15, 16)

1 பல காலத்துக்கு முன்னால், நம்முடைய முன்னோர்களிடம் பல சந்தர்ப்
பங்களில் பல வழிகளில் தீர்க்கதரிசிகள் மூலம் கடவுள் பேசினார்.[a]
2 இந்தக் கடைசி நாட்களில் தன்னுடைய மகன்[b] மூலமாக நம்மிடம் பேசியி
ருக்கிறார்; எல்லாவற்றுக்கும் அவரையே வாரிசாக நியமித்தார்,[c] அவர் மூல
மாகவே இந்த உலகத்தையும்* உண்டாக்கினார்.[d] 3 அவர் கடவுளுடைய
மகிமையைப் பிரதிபலிக்கிறார்,[e] அவருடைய குணங்களை அப்படியே
காட்டுகிறார்;[f] வல்லமையுள்ள வார்த்தையால் எல்லாவற்றையும் பாதுகாக்
கிறார்; நம்மைப் பாவங்களிலிருந்து சுத்தமாக்கிய[g] பின்பு, பரலோகத்தில்
இருக்கிற மகிமையுள்ளவரின் வலது பக்கத்தில் உட்கார்ந்தார்.[h] 4 தேவதூ
தர்களைவிட மிகச் சிறந்த பெயர் கிடைத்திருப்பதால்,*[i] அவர் அந்தளவுக்கு
அவர்களைவிட மேலானவராக ஆகியிருக்கிறார்.[j]

5 எப்படியென்றால், கடவுள் தன்னுடைய தூதர்களில் யாரிடமாவது, "நீ
என்னுடைய மகன், இன்று நான் உனக்குத் தகப்பனாக ஆனேன்"[k] என்று
எப்போதாவது சொல்லியிருக்கிறாரா? அல்லது, அவர்களில் யாரைப் பற்றி
யாவது, "நான் அவனுக்குத் தகப்பனாக இருப்பேன், அவன் எனக்கு மக
னாக இருப்பான்"[l] என்று சொல்லியிருக்கிறாரா? 6 இல்லை; தன்னுடைய
முதல் மகனை[m] மறுபடியும் உலகத்துக்கு அனுப்பும்போது "தேவதூதர்கள்
எல்லாரும் அவர் முன்னால் மண்டிபோட்டு தலைவணங்க வேண்டும்" என்
றுதான் சொல்லியிருக்கிறார்.

7 அதோடு, தேவதூதர்களைப் பற்றி இப்படிச் சொல்லியிருக்கிறார்: "தன்
னுடைய தூதர்களை வல்லமையுள்ள சக்திகளாகவும் தன்னுடைய ஊழியர்
களை*[n] தீ ஜுவாலைகளாகவும் ஆக்குகிறார்."[o] 8 மகனைப் பற்றியோ,
"கடவுள்தான் என்றென்றும் உன்னுடைய சிம்மாசனம்,*[p] உன்னுடைய ராஜ்
யத்தின் செங்கோல் நேர்மையான# செங்கோல். 9 நீ நீதியை நேசித்
தாய், அநியாயத்தை வெறுத்தாய்; அதனால்தான் உன்னுடைய கடவுள்,
மற்ற ராஜாக்களைவிட[q] அதிகமாக உன்னை ஆனந்தத் தைலத்தால் அபி
ஷேகம் செய்தார்"[r] என்று சொல்லியிருக்கிறார். 10 அதோடு, "எஜ
மானே, ஆரம்பத்தில் நீங்கள் பூமிக்கு அஸ்திவாரம் போட்டீர்கள்;
வானத்தை உங்கள் கைகளால் உருவாக்கினீர்கள். 11 அவை அழிந்துபோ
னாலும் நீங்கள் நிலைத்திருப்பீர்கள்; அவையெல்லாம் துணி போல நைந்து
போகும்; 12 சால்வையைப் போல் நீங்கள் அவற்றைச் சுருட்டிவிடுவீர்கள்,
உடையைப் போல் அவற்றை மாற்றிவிடுவீர்கள்; ஆனால், நீங்கள்
மாறாதவர், உங்களுடைய ஆயுளுக்கு முடிவே இல்லை"[s] என்று எழுதப்பட்
டிருக்கிறது.

13 அதோடு, தேவதூதர்களில் யாரிடமாவது, "நான் உன் எதிரிகளை
உனக்குக் கால்மணையாக்கிப் போடும்வரை என் வலது பக்கத்தில்
உட்கார்ந்திரு"[t] என்று அவர் எப்போதாவது சொல்லியிருக்கிறாரா?
14 அவர்கள் எல்லாரும் பரிசுத்த சேவை செய்கிற தூதர்கள்தானே?[u] மீட்
பைப் பெறப்போகிறவர்களுக்குப் பணிவிடை செய்ய அனுப்பப்படுகிறவர்
கள்தானே?

1:2 * வே.வா., "சகாப்தங்களையும்." சொல் பட்டியலைப் பாருங்கள். **1:4** * நே.மொ., "பெயரை ஆஸ்தியாகப் பெற்றிருப்பதால்." **1:7** * வே.வா., "தொண்டர்களை." **1:8** * அதாவது, "என்றென்றும் கடவுளே உன் சிம்மாசனத்தை உனக்குக் கொடுப்பவர்." # வே.வா., "நியாயமான."

அதி. 1
a யாத் 24:3; எண் 12:8; எரே 7:25
b மத் 17:5
c சங் 2:8
d யோவா 1:3; 1கொ 8:6; கொலோ 1:16
e யோவா 1:14; யோவா 17:5
f கொலோ 1:15
g எபி 9:26
h சங் 110:1; அப் 2:32, 33; அப் 7:55
i அப் 4:12; பிலி 2:9, 10
j எபே 1:20, 21; 1பே 3:22
k சங் 2:7
l 2சா 7:14; மாற் 1:11; லூ 9:35; 2பே 1:17
m யோவா 1:14; ரோ 8:29; கொலோ 1:15
n சங் 91:11; லூ 22:43
o சங் 104:4
p மத் 28:18; வெளி 3:21
q சங் 45:6, 7
r ஏசா 61:1; லூ 3:21, 22; லூ 4:18
s சங் 102:25-27
t சங் 110:1; மத் 22:44
u சங் 34:7; சங் 91:11; அப் 5:18, 19

2 அதனால், நாம் கேட்ட விஷயங்களுக்கு[a] வழக்கத்தைவிட அதிகமா
கக் கவனம் செலுத்துவது அவசியம்; அப்போதுதான், விசுவாசத்
தைவிட்டு நாம் ஒருபோதும் வழிதவறிப் போக மாட்டோம்.[b] **2** தேவதூ
தர்கள் மூலம் சொல்லப்பட்ட வார்த்தை[c] உறுதியாக இருந்ததென்றால்,
அதை மீறிய குற்றத்துக்கும் அதற்குக் கீழ்ப்படியாத குற்றத்துக்கும் நியாய
மான தண்டனை கிடைத்ததென்றால்,[d] **3** மாபெரும் மீட்பின் செய்தியை
அலட்சியம் செய்துவிட்டு நம்மால் எப்படித் தப்பிக்க முடியும்?[e] ஏனென்
றால், அது முதன்முதலில் நம்முடைய எஜமானால் அறிவிக்கப்பட்டு,[f]
அதைக் கேட்டவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது. **4** கடவுளும்
கூட அடையாள அற்புதங்களாலும், வல்லமையான பல செயல்களாலும்,[g]
தன்னுடைய விருப்பத்தின்படி அவரவருக்குக் கொடுத்த தன்னுடைய சக்தி
யின் வரங்களாலும்[h] அதற்குச் சாட்சி கொடுத்திருக்கிறார்.

5 வரப்போகும் உலகத்தைப் பற்றி நாம் பேசுகிறோம், கடவுள்
அதைத் தன்னுடைய தூதர்களுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்த
வில்லை.[i] **6** இதற்குச் சாட்சியாக ஒருவர் இப்படி எழுதியிருக்கிறார்: "மனு
ஷனை நீங்கள் ஞாபகம் வைப்பதற்கோ, மனிதகுமாரனை அக்கறை
யோடு கவனித்துக்கொள்வதற்கோ அவன் யார்?[j] **7** தேவதூதர்களைவிட
அவனைக் கொஞ்சம் தாழ்ந்தவனாக ஆக்கினீர்கள், மகிமையையும் மதிப்
பையும் அவனுக்குக் கிரீடமாகச் சூட்டினீர்கள், உங்கள் கைகளால்
படைத்தவற்றுக்கு அவனை அதிகாரியாக நியமித்தீர்கள். **8** அதோடு, எல்
லாவற்றையும் அவனுடைய காலடியில் கீழ்ப்படுத்தினீர்கள்."[k] கடவுள் எல்
லாவற்றையும் தன்னுடைய மகனுக்குக் கீழ்ப்படுத்தியிருப்பதால்[l] எதை
யுமே அவருக்குக் கீழ்ப்படுத்தாமல் விடவில்லை.[m] அப்படியிருந்தும்,
எல்லாமே அவருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருப்பதை இது
வரை நாம் பார்க்கவில்லை.[n] **9** அதற்குப் பதிலாக, இயேசு பாடுகள்
பட்டு இறந்ததால்[o] அவருக்கு மகிமையும் மாண்பும் கிரீடமாகச் சூட்டப்பட்
டிருப்பதைத்தான் பார்க்கிறோம். அவர் கடவுளுடைய அளவற்ற கருணை
யால் எல்லாருக்காகவும் மரணமடையும்படி[p] தேவதூதர்களைவிட கொஞ்
சம் தாழ்த்தப்பட்டிருந்தார்.[q]

10 எல்லாம் கடவுளுக்காக உண்டாயிருக்கிறது, எல்லாம் அவர் மூலமா
கவே உண்டாயிருக்கிறது; அதனால், மகன்கள் நிறைய பேரை மகிமைப்
படுத்துவதற்காக,[r] மீட்பின் அதிபதியைப்[s] பாடுகளால் பரிபூரணமாக்குவது
சரியென்று[t] அவர் நினைத்தார். **11** எப்படியென்றால், பரிசுத்தமாக்குகிறவ
ரும் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களும்[u] ஒருவரால்தான் உண்டாயிருக்கிறார்
கள்;[v] இதனால், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களைச் சகோதரர்கள்[w] என்று
சொல்வதற்குப் பரிசுத்தமாக்குகிறவர் வெட்கப்படுவது இல்லை. **12** "என்
னுடைய சகோதரர்களுக்கு உங்களுடைய பெயரை அறிவிப்பேன்; சபை
நடுவில் உங்களைப் புகழ்ந்து பாடுவேன்"[x] என்றும், **13** "நான் அவர்மேல்
நம்பிக்கையாக இருப்பேன்"[y] என்றும், "யெகோவா* எனக்குத் தந்த பிள்
ளைகளோடு[z] நான் இருக்கிறேன்" என்றும் அவர் சொல்கிறார்.

14 அதனால், 'பிள்ளைகள்' சதையும் இரத்தமுமாக இருப்பதால், அவ
ரும் அவர்களைப் போலவே சதையும் இரத்தமுமாக ஆனார்;[a] மரணத்
துக்கு வழிவகுக்கிற[b] பிசாசைத்[c] தன்னுடைய மரணத்தால் அழிப்பதற்கும்,

---

2:13 * இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 2
- a லூ 8:15
- b சங் 73:2; எபி 3:12; 2பே 3:17
- c கலா 3:19
- d உபா 4:3; யூ 5
- e எபி 10:28, 29
- f மாற் 1:14
- g அப் 2:22
- h 1கொ 12:11
- i அப் 17:31; 2பே 3:13
- j சங் 144:3
- k சங் 8:4-6
- l மத் 28:18; 1கொ 15:27; எபே 1:22
- m 1பே 3:22
- n சங் 110:1
- o வெளி 5:9
- p ஏசா 53:5, 8; ரோ 5:17; 1தீ 2:5, 6
- q பிலி 2:7
- r ரோ 8:18, 19; 2கொ 6:18
- s அப் 5:31; எபி 12:2
- t லூ 24:26; எபி 5:8
- u யோவா 17:19; எபி 10:14
- v யோவா 20:17
- w மத் 12:50; ரோ 8:29
- x சங் 22:22
- y ஏசா 8:17
- z ஏசா 8:18
- a யோவா 1:14
- b யோபு 1:19
- c ஆதி 3:15; லூ 10:18; யோவா 8:44; 1யோ 3:8; வெளி 12:9

15 வாழ்நாள் முழுவதும் மரண பயத்துக்கு அடிமைப்பட்டிருந்த எல்லா
ரையும் விடுதலை செய்வதற்கும்தான் அவர் அப்படியானார்.[a] **16** அவர்
உண்மையில் தேவதூதர்களுக்கு உதவி செய்ய வரவில்லை, ஆபிரகாமின்
சந்ததிக்குத்தான்[b] உதவி செய்ய வந்தார். **17** அதனால், எல்லா விதத்தி
லும் அவர் தன்னுடைய ‘சகோதரர்களை’ போல ஆக வேண்டியிருந்தது.[c]
இரக்கமும் உண்மையும் உள்ள தலைமைக் குருவாகக் கடவுளுக்குச் சேவை
செய்து, மக்களுடைய பாவங்களுக்காகப்[d] பிராயச்சித்த பலி[e] கொடுப்ப
தற்காக* அவர்களைப் போலானார். **18** இப்படி, அவரே சோதிக்கப்பட்ட
போது[f] பாடுகளை அனுபவித்ததால், சோதிக்கப்படுகிறவர்களுக்கு அவ
ரால் உதவி செய்ய முடியும்.[g]

3

3 அதனால், பரலோக அழைப்பில்[h] பங்குகொள்கிற பரிசுத்த சகோ
தரர்களே, நாம் விசுவாசத்தோடு அறிவிக்கிற அப்போஸ்தலரும்
தலைமைக் குருவுமான இயேசுவைப்[i] பற்றி யோசித்துப் பாருங்கள்.
2 கடவுளுடைய வீட்டில் மோசே சேவை செய்தபோது அவருக்கு உண்
மையுள்ளவராக இருந்தது போலவே,[j] இவரும் தன்னை அப்போஸ்தல
ராகவும் தலைமைக் குருவாகவும் நியமித்த கடவுளுக்கு[k] உண்மையுள்ளவ
ராக இருந்தார். **3** ஆனால், வீட்டை உண்டாக்கியவர் வீட்டைவிட அதிக
மதிப்புள்ளவராக இருப்பது போல, இவர்* மோசேயைவிட அதிக மகிமை
யைப்[l] பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவராக இருக்கிறார். **4** உண்மைதான்,
ஒவ்வொரு வீடும் யாரோ ஒருவரால் உண்டாக்கப்படுகிறது, ஆனால் எல்
லாவற்றையும் உண்டாக்கியவர் கடவுளே. **5** பணியாளர் என்ற முறையில்
மோசே கடவுளுடைய வீடு முழுவதும் சேவை செய்தபோது உண்மையுள்
ளவராக இருந்தார். அவருடைய சேவை, பிற்பாடு வெளிப்படுத்தப்படவி
ருந்த காரியங்களுக்குச் சாட்சியாக இருந்தது. **6** ஆனால் கிறிஸ்து, மகன்[m]
என்ற முறையில் கடவுளுடைய வீட்டின் அதிகாரியாக, உண்மையுள்ளவ
ராக இருந்தார். அதனால், தைரியத்தையும்,* நாம் பெருமைப்படுகிற எதிர்
கால நம்பிக்கையையும் முடிவுவரை உறுதியாகப் பிடித்துக்கொண்டிருந்
தால், நாமே கடவுளுடைய வீடாக[n] இருப்போம்.

7 அதனால், கடவுளுடைய சக்தி சொல்வது இதுதான்:[o] “இன்று நீங்கள்
அவருடைய பேச்சைக் கேட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! **8** வனாந்
தரத்தில் அவரைச் சோதித்துப் பார்த்த நாளன்று அவருக்குப் பயங்கர
கோபமூட்டிய உங்கள் முன்னோர்களைப் போல் உங்கள் இதயத்தை இறு
கிப்போகச் செய்யாதீர்கள்;[p] **9** அங்கே அவர்கள் 40 வருஷங்களாக நான்
செய்த செயல்களைப் பார்த்திருந்தும், என்னைச் சோதித்தார்கள்.[q] **10** அத
னால்தான், நான் அந்தத் தலைமுறையைப் பார்த்து வெறுப்படைந்து,
‘அவர்களுடைய இதயம் எப்போதும் வழிவிலகிப் போகிறது, அவர்கள்
என் வழிகளைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்’ என்று சொன்னேன்.
11 அதனால் ‘அவர்கள் என்னோடு சேர்ந்து ஓய்வை அனுபவிக்க மாட்டார்
கள்’ என்று கோபத்தோடு ஆணையிட்டுச் சொன்னேன்.”[r]

12 அதனால் சகோதரர்களே, உயிருள்ள கடவுளைவிட்டு விலகிப்
போவதன் காரணமாக உங்களில் யாருடைய இதயமும் விசுவாசம் இல்லாத

அதி. 2
a ஏசா 25:8; ரோ 8:20, 21; 1கொ 15:26
b கலா 3:29
c பிலி 2:7
d ரோ 5:10
e ரோ 3:25; 1யோ 2:1, 2; 1யோ 4:10
f எபி 4:15
g எபி 7:25; வெளி 3:10

அதி. 3
h பிலி 3:14; 1தெ 2:12
i எபி 8:1
j எண் 12:7
k யோவா 8:29
l மத் 17:1, 2
m மத் 17:5
n 1பே 2:5
o 2சா 23:2; அப் 1:16
p யாத் 17:7
q யாத் 16:35; எண் 32:13; சங் 95:9
r எண் 14:22, 23; சங் 95:7-11

2:17 *வே.வா., “பாவப் பரிகார பலியைக் கொடுப்பதற்காக; பாவப் பரிகாரம் செய்வதற்காக.” **3:3** *அதாவது, “இயேசு.” **3:6** *வே.வா., “தயக்கமில்லாமல் பேசுவதையும்.”

பொல்லாத இதயமாக மாறிவிடாதபடி எப்போதும் எச்சரிக்கையாக இருங்
கள்.[a] **13** அதோடு, உங்களில் யாருடைய இதயமும் பாவத்தின் வஞ்
சக சக்தியால் இறுகிப்போகாதபடி, “இன்று”[b] எனக் குறிப்பிடப்படும் காலம்
நீடிக்கும்வரை, தினமும் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திக்கொண்டே
இருங்கள். **14** ஆரம்பத்தில் நமக்கு இருந்த நம்பிக்கையை முடிவுவரை
உறுதியாகப் பிடித்துக்கொண்டிருந்தால் மட்டும்தான் நாம் கிறிஸ்துவோடு
பங்குள்ளவர்களாக ஆவோம்.[c] **15** அதனால்தான், “இன்று நீங்கள் அவ
ருடைய பேச்சைக் கேட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அவருக்
குப் பயங்கர கோபமூட்டிய உங்கள் முன்னோர்களைப் போல் உங்கள் இத
யத்தை இறுகிப்போகச் செய்யாதீர்கள்” என்று சொல்லப்பட்டிருக்கிறது.[d]

16 அவருடைய குரலைக் கேட்டும் அவருக்குப் பயங்கர கோபமூட்டிய
வர்கள் யார்? மோசேயின் தலைமையில் எகிப்திலிருந்து புறப்பட்ட எல்லா
ரும்தான், இல்லையா?[e] **17** அதோடு, கடவுள் 40 வருஷங்களாக யார்மீது
வெறுப்படைந்தார்?[f] பாவம் செய்தவர்கள்மீதுதான், இல்லையா? அவர்களு
டைய சடலங்கள் வனாந்தரத்தில் விழுந்தன, இல்லையா?[g] **18** தன்னோடு
சேர்ந்து ஓய்வை அனுபவிக்க மாட்டார்கள் என்று அவர் யாரிடம் ஆணை
யிட்டுச் சொன்னார்? கீழ்ப்படியாதவர்களிடம்தான், இல்லையா? **19** அத
னால், விசுவாசம் இல்லாததால்தான் அவரோடு சேர்ந்து அவர்களால்
ஓய்வை அனுபவிக்க முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.[h]

4 அவரோடு சேர்ந்து ஓய்வை அனுபவிப்பது பற்றிய வாக்குறுதி இன்
னும் இருப்பதால், நம்மில் யாரும் அதை அனுபவிக்கத் தகுதியில்லா
தவர்களாக ஆகிவிடாதபடி எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.[i] **2** நம்
முன்னோர்களைப் போலவே நமக்கும் நல்ல செய்தி அறிவிக்கப்பட்டது;[j]
ஆனால், அவர்கள் கேட்ட அந்தச் செய்தி அவர்களுக்குப் பிரயோஜனமாக
இருக்கவில்லை; ஏனென்றால், அந்தச் செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு
இருந்த அதே விசுவாசம் அவர்களுக்கு இருக்கவில்லை. **3** விசுவாசம்
வைத்திருக்கிற நாம்தான் அவரோடு ஓய்வை அனுபவிக்கிறோம்; அந்த
ஓய்வைப் பற்றித்தான் கடவுள், “‘அவர்கள் என்னோடு சேர்ந்து ஓய்வை
அனுபவிக்க மாட்டார்கள்’ என்று கோபத்தோடு ஆணையிட்டுச் சொன்
னேன்” என்று சொல்லியிருக்கிறார்;[k] இந்த உலகம் உண்டானதுமுதல்
அவருடைய வேலைகள் முடிவுக்கு வந்தபோதிலும் அப்படிச் சொல்லியி
ருக்கிறார்.[l] **4** ஏனென்றால், இன்னொரு வசனத்தில், “கடவுள் தன்னுடைய
வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு ஏழாம் நாளில் ஓய்வெடுத்தார்”
என்று ஏழாம் நாளைப் பற்றி அவர் சொல்லியிருக்கிறார்.[m] **5** “அவர்கள்
என்னோடு சேர்ந்து ஓய்வை அனுபவிக்க மாட்டார்கள்” என்றும் சொல்லி
யிருக்கிறார்.[n]

6 இன்னும் சிலர் அந்த ஓய்வை அனுபவிக்க வேண்டியிருக்கிறது;
நல்ல செய்தியை முதலில் கேட்டவர்கள் கீழ்ப்படியாமல்போனதால் அதை
அனுபவிக்கவில்லை.[o] **7** அதனால்தான், அவர் “இன்று” என மறுபடியும்
ஒரு நாளைத் தீர்மானித்து, “இன்று அவருடைய பேச்சைக் கேட்டால் எவ்
வளவு நன்றாக இருக்கும்! உங்கள் இதயத்தை இறுகிப்போகச் செய்யாதீர்
கள்” என்று மேலே சொல்லப்பட்டபடியே பல காலத்துக்குப் பின்பு தாவீ
தின் சங்கீதத்தில் சொன்னார்.[p] **8** ஓய்வெடுக்கிற இடத்துக்கு அவர்களை
யோசுவா[q] வழிநடத்தியிருந்தார் என்றால், வேறொரு நாளைப் பற்றிப்

அதி. 3
a எபி 2:1
b சங் 95:7
c வெளி 2:10
d சங் 95:7, 8
e யாத் 17:1-3 எண் 14:2, 4
f எண் 14:11 உபா 32:21
g எண் 14: 22, 23 எண் 14: 28–30 யூ 5
h எபி 4:6

அதி. 4
i எபி 3:12, 13
j மத் 4:23 அப் 15:7 கொலோ 1:23
k சங் 95:11 எபி 3:11
l யாத் 31:17
m ஆதி 2:2, 3
n சங் 95:11
o எண் 14:30 உபா 31:27
p சங் 95:7, 8
q யாத் 24:13 உபா 1:38

பிற்பாடு கடவுள் சொல்லியிருக்க மாட்டாரே. **9** அதனால், கடவுளுடைய
மக்களுக்கு ஓய்வுகாலம் வரப்போகிறது.[a] **10** ஏனென்றால், கடவுள் தன்னு
டைய வேலைகளை முடித்துவிட்டு ஓய்வெடுப்பது போலவே அவரோடு
சேர்ந்து ஓய்வை அனுபவிப்பவனும் தன்னுடைய வேலைகளை முடித்து
விட்டு ஓய்வெடுக்கிறான்.[b]

11 அதனால், அந்த ஓய்வை அனுபவிக்க நம்மால் முடிந்த எல்லா
வற்றையும் செய்ய வேண்டும்; அப்போதுதான், நம்மில் யாரும் கீழ்ப்படியாத
வர்களுடைய மாதிரியைப் பின்பற்றிப் பாவத்தில் விழுந்துவிட மாட்டோம்.[c]
12 கடவுளுடைய வார்த்தைக்கு உயிர் இருக்கிறது, வல்லமை இருக்கிறது.[d]
அது இரண்டு பக்கமும் கூர்மையான எந்த வாளையும்விட[e] கூர்மையானது.
அகத்தையும்* புறத்தையும்# மூட்டுகளையும் அவற்றின் மஜ்ஜையையும்
பிரிக்குமளவுக்கு ஊடுருவக்கூடியது. இதயத்தில் இருக்கிற எண்ணங்களை
யும் நோக்கங்களையும் பகுத்தறியும் சக்தி கொண்டது. **13** எந்தப் படைப்
பும் அவருடைய பார்வைக்கு மறைவாக இல்லை;[f] எல்லாமே அவருடைய
கண்களுக்கு முன்னால் ஒளிவுமறைவில்லாமல் வெட்டவெளிச்சமாக இருக்
கிறது. அவருக்குத்தான் நாம் கணக்குக் கொடுக்க வேண்டும்.[g]

14 அதனால், பரலோகத்துக்குள் போயிருக்கிற கடவுளுடைய மகனா
கிய இயேசு[h] நமக்கு மாபெரும் தலைமைக் குருவாக இருப்பதால், அவரைப்
பற்றி அறிவிப்பதை நாம் விட்டுவிடக் கூடாது.[i] **15** நம்முடைய தலைமைக்
குரு நம் பலவீனங்களைக் குறித்து அனுதாபப்பட முடியாதவர் அல்ல,[j]
ஆனால் நம்மைப் போல் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டவர்; என்றா
லும், பாவமே இல்லாதவர்.[k] **16** அதனால், அளவற்ற கருணை காட்டு
கிற கடவுளுடைய சிம்மாசனத்தை நாம் தயக்கமில்லாமல் அணுகுவோமாக.[l]
அப்படிச் செய்தால், நமக்கு உதவி தேவைப்படுகிறபோது சரியான சமயத்
தில் இரக்கத்தையும் அளவற்ற கருணையையும் பெறுவோம்.

5 மனிதர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற ஒவ்வொரு தலைமைக் குரு
வும், மனிதர்கள் சார்பில் கடவுளுக்குச் சேவை செய்ய நியமிக்கப்படு
கிறார்;[m] பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் அவர்
கொடுக்கிறார்.[n] **2** அதோடு, தனக்கும் பலவீனங்கள் இருப்பதை அவர்
உணர்ந்திருப்பதால், தெரியாமல் தவறு செய்கிறவர்களிடம்* கரிசனை
யோடு# நடந்துகொள்கிறார். **3** மக்களுடைய பாவங்களுக்காக அவர் பலி
கொடுப்பது போல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலி கொடுக்க
வேண்டும்.[o]

4 மதிப்புள்ள இந்தப் பொறுப்பை ஒருவரும் தானாகப் பெற முடியாது;
ஆரோனைப்[p] போல் கடவுளால் அழைக்கப்பட்டால்தான் இதைப் பெற
முடியும். **5** அதேபோல், கிறிஸ்துவும் தன்னைத் தானே தலைமைக் குரு
வாக்கிக்கொள்வதன் மூலம் தன்னை மகிமைப்படுத்திக்கொள்ளவில்லை;[q]
“நீ என்னுடைய மகன்; இன்று நான் உனக்குத் தகப்பனாக ஆனேன்”[r] என்று
அவரிடம் சொன்னவர்தான் அவரை மகிமைப்படுத்தினார். **6** வேறொரு
வசனத்தில், “மெல்கிசேதேக்கைப் போலவே நீ என்றென்றும் குருவாக
இருக்கிறாய்” என்று அவர் சொல்லியிருக்கிறார்.[s]

4:12 *வே.வா., “உள்மனதையும்.” #வே.வா., “வெளித்தோற்றத்தையும்.” **5:2** *வே.வா., “தாறுமாறாக நடக்கிறவர்களிடம்.” #வே.வா., “மென்மையாக.”

அதி. 4
a மாற் 2:28
b ஆதி 2:2, 3
c சங் 95:11
d எரே 23:29
1தெ 2:13
e எபே 6:17
f சங் 7:9
சங் 90:8
நீதி 15:11
g அப் 17:31
ரோ 2:16
ரோ 14:12
h மாற் 1:11
i எபி 10:23
j ஏசா 53:4
எபி 2:17
k எபி 7:26
1பே 2:22
l எபே 3:11, 12
எபி 10:19-22

அதி. 5
m யாத் 40:13
n லேவி 5:6
o லேவி 9:7
லேவி 16:6
p யாத் 28:1
q யோவா 8:54
r சங் 2:7
அப் 13:33
s சங் 110:4

7 கிறிஸ்து இந்தப் பூமியில் வாழ்ந்தபோது, தன்னை மரணத்திலிருந்து
காப்பாற்ற முடிந்தவரிடம் கண்ணீர்விட்டுக் கதறி, மன்றாட்டுகளையும் விண்
ணப்பங்களையும் ஏறெடுத்தார்;[a] அவருடைய பயபக்தியின் காரணமாகக்
கடவுள் அவருடைய ஜெபத்தைக் கேட்டார். **8** அவர் கடவுளுடைய மக
னாக இருந்தாலும் தான் பட்ட கஷ்டங்களின் மூலம் கீழ்ப்படிதலைக்
கற்றுக்கொண்டார்.[b] **9** இப்படி அவர் பரிபூரணமாக்கப்பட்ட பின்பு,[c] தனக்
குக் கீழ்ப்படிகிற எல்லாருக்கும் நிரந்தர மீட்பு கிடைப்பதற்குக் காரணமா
னார்.[d] **10** மெல்கிசேதேக்கைப் போலவே தலைமைக் குருவாக இருக்கும்
படி கடவுள் அவரை நியமித்திருக்கிறார்.[e]

11 அவரைப் பற்றிச் சொல்வதற்கு நிறைய இருக்கிறது; ஆனால், காது
கொடுத்துக் கேட்பதில் நீங்கள் மந்தமாக இருப்பதால் அதை விளக்கிச்
சொல்வது கஷ்டம். **12** இதற்குள்* நீங்கள் போதகர்களாகியிருக்க வேண்
டும். ஆனால், கடவுளுடைய பரிசுத்த வார்த்தைகளில் இருக்கிற அடிப்படை
விஷயங்களை[f] ஆரம்பத்திலிருந்து மறுபடியும் சொல்லிக்கொடுக்க வேண்
டிய நிலையில் இருக்கிறீர்கள். திட உணவு சாப்பிடுகிறவர்களாக அல்ல,
திரும்பவும் பால் குடிக்கிறவர்களாகவே ஆகியிருக்கிறீர்கள். **13** பாலையே
குடித்துக்கொண்டிருக்கிற எல்லாரும் குழந்தைகள் என்பதால், கடவுளுடைய
நீதியான வார்த்தையைப் பற்றித் தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.[g]
14 திட உணவோ முதிர்ச்சியுள்ளவர்களுக்கே உரியது; சரி எது, தவறு எது
என்பதைப் பிரித்துப் பார்க்க தங்களுடைய பகுத்தறியும் திறன்களைப் பயன்
படுத்திப் பயிற்றுவித்திருக்கிற ஆட்களுக்கே உரியது.

6 அதனால்தான், கிறிஸ்துவைப் பற்றிய அடிப்படை போதனைகளைக்[h]
கற்று முடித்திருக்கிற நாம், வீணான செயல்களைவிட்டு மனம் திருந்து
வது, கடவுள்மேல் விசுவாசம் வைப்பது ஆகியவற்றையும், **2** ஞானஸ்நா
னங்கள், கைகளை வைப்பது,[i] உயிர்த்தெழுதல்,[j] நிரந்தர நியாயத்தீர்ப்பு
ஆகிய போதனைகளையும் மறுபடியும் அஸ்திவாரமாகப் போடாமல் முதிர்ச்
சியை நோக்கி வேகமாக முன்னேற வேண்டும்.[k] **3** கடவுள் அனுமதித்தால்
நாம் கண்டிப்பாக முதிர்ச்சியை நோக்கி முன்னேறுவோம்.

4 ஒருசமயம் அறிவொளியைப் பெற்றும்,[l] பரலோக அன்பளிப்பை*
ருசிபார்த்தும், கடவுளுடைய சக்தியைப் பெற்றும், **5** கடவுளுடைய நல்ல
வார்த்தையைச் சுவைத்தும், வரப்போகிற உலகத்தின்* வல்லமையான
காரியங்களை ருசித்தும் **6** விசுவாசத்தைவிட்டு விலகியவர்கள்,[m] கடவு
ளுடைய மகனைத் தாங்களே மறுபடியும் மரக் கம்பத்தில் ஆணியடித்து
வெளிப்படையாக அவரை அவமானப்படுத்துகிறார்கள்.[n] அதனால், அவர்
களுடைய புத்தியைத் தெளிய வைத்து அவர்களைத் திருத்துவது முடி
யாத காரியம். **7** உதாரணமாக, நிலம் அதன்மேல் அடிக்கடி பெய்கிற
மழை நீரை உறிஞ்சிக்கொண்டு, அதில் பயிர் செய்கிறவர்களுக்குப் பிரயோ
ஜனமாக இருக்கிற விளைச்சலைத் தரும்போது, அது கடவுளால் ஆசீர்வ
திக்கப்படும். **8** ஆனால், களைகளையும் முட்செடிகளையும் முளைப்பிக்
கும்போது, அது ஒதுக்கித்தள்ளப்பட்டு விரைவில் சாபத்துக்குள்ளாகும்,
முடிவில் சுட்டெரிக்கப்படும்.

5:12 *நே.மொ., “காலத்தைப் பார்த்தால்.” **6:4** *வே.வா., “இலவச அன்பளிப்பை.”
6:5 *வே.வா., “சகாப்தத்தின்.” சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 5
a லூ 22:44; யோவா 12:27
b மத் 26:39; பிலி 2:8
c எபி 7:28
d யோவா 3:16
e சங் 110:4
f எபி 6:1
g எபே 4:14

அதி. 6
h எபி 5:12
i அப் 8:17
j மத் 22:31; யோவா 5:28, 29; யோவா 11:25
k 1கொ 14:20; எபே 4:13; எபி 5:14
l எபே 1:18; எபி 10:26
m 1யோ 2:19
n எபி 10:29

9 அன்புக் கண்மணிகளே, நாங்கள் இப்படிப் பேசினாலும், விசுவாசத்தை விட்டு விலகியவர்களைவிட நீங்கள் நல்ல நிலையில் இருக்கிறீர்கள் என்றும், மீட்புக்கு வழிநடத்துகிற காரியங்களைப் பெற்றிருக்கிறீர்கள் என்றும் நம்பிக்கையோடு இருக்கிறோம். **10** பரிசுத்தவான்களுக்காக நீங்கள் சேவை செய்திருக்கிறீர்கள், சேவை செய்தும் வருகிறீர்கள்; அதனால், உங்களுடைய உழைப்பையும் தன்னுடைய பெயருக்காக நீங்கள் காட்டிய அன்பையும் மறந்துவிடுவதற்குக் கடவுள் அநீதியுள்ளவர் கிடையாது.[a] **11** நீங்கள் ஒவ்வொருவரும் தொடர்ந்து சுறுசுறுப்பாகச் சேவை செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அப்போதுதான், உங்களுடைய நம்பிக்கை[b] நிறைவேறும் என்ற முழு உறுதி கடைசிவரை[c] உங்களுக்கு இருக்கும். **12** அதனால், மந்தமானவர்களாக ஆகிவிடாதீர்கள்;[d] அதற்குப் பதிலாக, விசுவாசத்தாலும் பொறுமையாலும் கடவுளுடைய வாக்குறுதிகளைப் பெற்றவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றுங்கள்.

13 ஆபிரகாமுக்குக் கடவுள் வாக்குறுதி கொடுத்தபோது, ஆணையிட்டுச் சொல்வதற்குத் தன்னைவிடப் பெரியவர் யாரும் இல்லாததால் தன் மீதே ஆணையிட்டு,[e] **14** "நான் உன்னை நிச்சயம் ஆசீர்வதிப்பேன்; நான் உன்னை நிச்சயம் பெருகப் பண்ணுவேன்" என்று சொன்னார்.[f] **15** அதன்படியே, ஆபிரகாம் பொறுமையாகக் காத்திருந்த பின்பு கடவுள் வாக்குறுதி கொடுத்ததைப் பெற்றுக்கொண்டார். **16** மக்கள் தங்களைவிட பெரியவர்கள் பெயரில்தான் ஆணையிடுவார்கள். அந்த உறுதிமொழி சட்டப்பூர்வ உத்தரவாதம்[g] கொடுப்பதால், எல்லா வாக்குவாதங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கிறது. **17** அப்படியே, கடவுளும் தன்னுடைய வாக்குறுதியை ஆஸ்தியாகப் பெற்றவர்களுக்குத்[h] தன்னுடைய நோக்கம் மாறாது என்பதை இன்னும் தெளிவுபடுத்த விரும்பி, ஓர் உறுதிமொழியின் மூலம் அதற்கு உத்தரவாதம் கொடுத்தார். **18** கடவுளால் பொய் சொல்லவே முடியாத,[i] மாறாத இரண்டு காரியங்களை* வைத்துப் பார்க்கும்போது, அவரை அடைக்கலமாக நினைத்து ஓடிவந்த நாம், நம் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையைப் பலமாகப் பிடித்துக்கொண்டு மிகுந்த ஊக்கம் பெறுவதற்காகவே அதை உறுதிப்படுத்தினார் என்பது தெளிவாகத் தெரிகிறது. **19** அந்த நம்பிக்கை[j] நம் உயிருக்கு நங்கூரம் போன்றது; அது உறுதியானது, நம்பகமானது; திரைச்சீலைக்குள் போக அது நம்மை வழிநடத்துகிறது.[k] **20** மெல்கிசேதேக்கைப் போலவே என்றென்றும் தலைமைக் குருவாகியிருக்கிற[l] நம் முன்னோடியான இயேசு[m] நம் சார்பில் அந்தத் திரைச்சீலைக்குள் போயிருக்கிறார்.

7 அந்த மெல்கிசேதேக்கு, சாலேமின் ராஜாவாகவும் உன்னதமான கடவுளுக்குச் சேவை செய்த குருவாகவும் இருந்தார்; ராஜாக்களைத் தோற்கடித்துவிட்டு வந்துகொண்டிருந்த ஆபிரகாமை அவர் சந்தித்து ஆசீர்வதித்தார்.[n] **2** ஆபிரகாம் எல்லாவற்றிலும் பத்திலொரு பாகத்தை அவருக்குக் கொடுத்தார். மெல்கிசேதேக்கு என்ற பெயருக்கு "நீதியின் ராஜா" என்று அர்த்தம். சாலேமின் ராஜா என்பதற்கு "சமாதானத்தின் ராஜா" என்று அர்த்தம். **3** அவருடைய தாய் தகப்பனைப் பற்றி யாருக்கும் தெரியாது. அவரைப் பற்றிய வம்ச வரலாறும் கிடையாது; அவர் எப்போது பிறந்தார்,

---

6:18 * அதாவது, "யெகோவாவின் வாக்குறுதியையும் ஆணையையும்."

அதி. 6
a எபி 10:32, 33
b 1பே 1:3, 4
c எபி 3:14
d ரோ 12:11; வெளி 2:4
e ஆதி 22:16
f ஆதி 22:17
g ஆதி 31:53
h கலா 3:29
i எண் 23:19; தீத் 1:2
j 1பே 1:3, 4
k லேவி 16: 2, 12; எபி 9:7; எபி 10:19, 20
l சங் 110:4; எபி 5:6
m எபி 4:14

அதி. 7
n ஆதி 14: 17–20

எப்போது இறந்தார் என்று யாருக்கும் தெரியாது. ஆனால், அவர் கடவு
ளுடைய மகனைப் போல் ஆக்கப்பட்டார், அவர் என்றென்றும் குருவாக
இருக்கிறார்.[a]

4 வம்சத் தலைவரான* ஆபிரகாமே தான் கைப்பற்றிய மிகச் சிறந்த
பொருள்களில் பத்திலொரு பாகத்தை அவருக்குக் கொடுத்தார்[b] என்றால்
அவர் எவ்வளவு உயர்ந்தவர் என்று பாருங்கள். **5** உண்மைதான், குருத்து
வப் பொறுப்பு கொடுக்கப்படுகிற லேவியின் மகன்கள்[c] இஸ்ரவேல் மக்களி
டமிருந்து, அதாவது தங்கள் சகோதரர்களிடமிருந்து, பத்திலொரு பாகத்தை
வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற கட்டளை திருச்சட்டத்தில் இருக்கிறது.[d]
இஸ்ரவேல் மக்கள் ஆபிரகாமின் வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிற
போதிலும் அந்தக் கட்டளையின்படி லேவியின் மகன்கள் அதை வாங்
கிக்கொள்கிறார்கள். **6** இருந்தாலும், லேவியின் வம்சத்தில் வராத மெல்கி
சேதேக்கு ஆபிரகாமிடமிருந்து பத்திலொரு பாகத்தை வாங்கிக்கொண்டார்;
அதோடு, கடவுளுடைய வாக்குறுதிகளைப் பெற்ற அவரை ஆசீர்வதித்
தார்.[e] **7** சிறியவரை பெரியவர் ஆசீர்வதிப்பதுதான் முறை; இதில் எந்தக்
கேள்விக்கும் இடமில்லை. **8** இப்போது, இறந்துபோகிற மனிதர்கள் பத்தி
லொரு பாகத்தை வாங்கிக்கொள்கிறார்கள்; ஆனால் அப்போது, உயிர்வாழ்
கிறவர் என்று சாட்சி பெற்றவர் அதை வாங்கிக்கொண்டார்.[f] **9** பத்திலொரு
பாகத்தை வாங்கிக்கொள்கிற லேவியும்கூட ஆபிரகாமின் மூலம் பத்தி
லொரு பாகத்தை அவருக்குக் கொடுத்தான் என்று சொல்லலாம்.
10 எப்படியென்றால், மெல்கிசேதேக்கு ஆபிரகாமைச் சந்தித்தபோது,[g]
லேவி தன்னுடைய மூதாதையான ஆபிரகாமின் வருங்காலச் சந்ததியாக
இருந்தான்.

11 இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட திருச்சட்டத்தில் லேவி
கோத்திரத்தின் குருத்துவம் ஓர் அம்சமாக இருந்தது. அந்தக் குருத்துவத்
தின் மூலம்தான் ஒருவன் பரிபூரணமாக ஆவான்[h] என்றால், ஆரோ
னைப் போல் இல்லாமல் மெல்கிசேதேக்கைப் போல்[i] வேறொரு குரு
தோன்ற வேண்டிய அவசியம் என்ன? **12** குருத்துவம் மாற்றப்படுவ
தால், திருச்சட்டமும் கட்டாயம் மாற்றப்பட வேண்டும்.[j] **13** ஏனென்றால்,
இந்த விவரங்களெல்லாம் யாரைப் பற்றியதோ அவர் வேறொரு கோத்தி
ரத்தைச் சேர்ந்தவர்; அந்தக் கோத்திரத்தைச் சேர்ந்த யாரும் பலிபீடத்தில்
சேவை செய்ததில்லை.[k] **14** நம்முடைய எஜமான் அந்த யூதா கோத்திரத்
திலிருந்து வந்தவர்[l] என்ற விஷயம் தெளிவாக இருக்கிறது; அந்தக் கோத்
திரத்தைச் சேர்ந்தவர்கள் குருமார்களாக ஆவதைப் பற்றி மோசே சொல்
லவே இல்லை.

15 அதனால், மெல்கிசேதேக்கைப் போன்ற[m] வேறொரு குரு[n] வந்திருக்
கிறார் என்பது இன்னும் தெளிவாகிவிட்டது. **16** திருச்சட்டத்தில் சொல்
லப்பட்டுள்ள கோத்திரத்தின்படி அல்ல, அழியாத வாழ்வைத்[o] தரும்
வல்லமையால்தான் அவர் குருவாகியிருக்கிறார். **17** இதற்குச் சாட்சியாக,
“மெல்கிசேதேக்கைப் போலவே[p] நீ என்றென்றும் குருவாக இருக்கிறாய்”
என்று ஒரு வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

18 முந்தின கட்டளை பலவீனமாகவும் பலனற்றதாகவும்[q] இருப்பதால்
அது நீக்கப்படுகிறது. **19** திருச்சட்டம் எதையுமே பரிபூரணமாக்கவில்லை;[r]

7:4 * வே.வா., “மூதாதையான.”

அதி. 7
a சங் 110:4
b ஆதி 14:20
c யாத் 40:12, 15
d எண் 18:21, 26; உபா 14:28
e ஆதி 12:7; ஆதி 14:18-20; ஆதி 17:6; ஆதி 22:17
f எபி 7:3
g ஆதி 14:18
h ரோ 3:20; எபி 7:19; எபி 9:9; எபி 10:1
i சங் 110:4
j ரோ 3:27; 1கொ 9:21; கலா 6:2; கொலோ 2:13, 14
k எண் 18:6, 7
l ஆதி 49:10; மத் 1:1, 3; லூ 3:23, 33
m சங் 110:4
n எபி 3:1; எபி 7:26
o ரோ 6:9; 1தீ 6:16
p சங் 110:4
q ரோ 8:3; எபி 9:9; எபி 13:9
r அப் 13:38, 39; கலா 2:15, 16; எபி 10:1

அதைவிட மேலான நம்பிக்கையோ[a] எல்லாவற்றையும் பரிபூரணமாக்குகி
றது; இந்த நம்பிக்கையின் மூலம்தான் நாம் கடவுளிடம் நெருங்கிப்
போகிறோம்.[b] **20** மற்றவர்கள் குருமார்களானபோது, எதுவும் ஆணை
யிட்டுச் சொல்லப்படவில்லை. **21** ஆனால், இயேசுவுக்கு ஆணையிட்டுச்
சொல்லப்பட்டதால் அவர் குருவாகியிருக்கிறார். "'நீ என்றென்றும் குருவாக
இருக்கிறாய்' என்று யெகோவா* ஆணையிட்டுச் சொன்னார். அவர் தன்
னுடைய மனதை மாற்றிக்கொள்ள மாட்டார்."#[c] **22** இதனால்தான், இயேசு
மேலான ஓர் ஒப்பந்தத்துக்கு உத்தரவாதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார்.[d]
23 குருமார்கள் தங்களுடைய சேவையைத் தொடர்ந்து செய்வதற்கு மர
ணம் தடையாக இருந்தது; அதனால், அடுத்தடுத்து வேறு பலர் குருமார்க
ளாக நியமிக்கப்பட வேண்டியிருந்தது.[e] **24** ஆனால் அவர் என்றென்றும்
உயிரோடு இருப்பதால்[f] அவருக்கு அடுத்து வேறு யாரும் குருவாக நிய
மிக்கப்பட வேண்டியதில்லை. **25** அதனால், தன் மூலம் கடவுளை அணு
குகிற ஆட்களை முழுமையாக மீட்பதற்கு அவர் வல்லவராக இருக்கிறார்.
ஏனென்றால், அவர்களுக்காகப் பரிந்து பேச[g] அவர் எப்போதும் உயிரோடு
இருக்கிறார்.

26 இப்படிப்பட்ட தலைமைக் குருதான் நமக்கு ஏற்றவர்; அவர் உண்மை
யுள்ளவர்,* சூதுவாதில்லாதவர், களங்கமில்லாதவர்,[h] பாவிகளைப் போல
இல்லாதவர், வானங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர்.[i] **27** அதனால்,
மற்ற தலைமைக் குருமார்களைப் போல், முதலில் தன்னுடைய பாவங்க
ளுக்காகவும் பின்பு மக்களுடைய பாவங்களுக்காகவும்[j] அவர் தினமும்
பலி கொடுக்க வேண்டியதில்லை.[k] ஏனென்றால், அவர் எல்லா காலத்துக்
கும் ஒரே தடவையாகத் தன்னையே பலியாகக் கொடுத்துவிட்டார்.[l]
28 திருச்சட்டத்தின்படி, பலவீனங்கள் உள்ள மனிதர்கள் தலைமைக் குரு
மார்களாக நியமிக்கப்படுகிறார்கள்.[m] ஆனால், திருச்சட்டத்துக்குப் பின்பு
கொடுக்கப்பட்ட ஆணையின்படி,[n] என்றென்றும் பரிபூரணமாக்கப்பட்ட
மகன்[o] தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

8 இதுவரை சொன்ன விஷயங்களின் முக்கியக் குறிப்பு என்னவென்
றால்: பரலோகத்தில் மகிமையுள்ளவரின் சிம்மாசனத்துக்கு வலது பக்
கத்தில் உட்கார்ந்திருப்பவரும்,[p] **2** மனிதனால் இல்லாமல் யெகோவாவி
னால்* அமைக்கப்பட்ட உண்மையான கூடாரத்தின் மகா பரிசுத்த
அறையில்[q] சேவை# செய்கிறவருமானவர்தான் நமக்குத் தலைமைக் குரு
வாக இருக்கிறார்.[r] **3** ஒவ்வொரு தலைமைக் குருவும் காணிக்கைகளை
யும் பலிகளையும் கொடுப்பதற்கு நியமிக்கப்படுகிறார். அதனால், இவரும்
கூட ஏதோவொன்றைப் பலி கொடுப்பது அவசியமாக இருந்தது.[s]
4 இப்போது இவர் பூமியில் இருந்திருந்தால் ஒரு குருவாக இருந்திருக்க
மாட்டார்.[t] ஏனென்றால், திருச்சட்டத்தின்படி காணிக்கைகளைக் கொடுப்ப
தற்கு மற்ற குருமார்கள் ஏற்கெனவே இருக்கிறார்கள். **5** ஆனாலும், இவர்
கள் செய்யும் பரிசுத்த சேவை பரலோகக் காரியங்களின்[u] மாதிரிப் படி
வமாகவும் அவற்றின் நிழலாகவும்தான் இருக்கிறது.[v] மோசே கூடாரத்தை
அமைப்பதற்குப் போனபோது, "மலையில் நான் உனக்குக் காட்டிய மாதி
ரியின்படியே எல்லாவற்றையும் செய்ய நீ கவனமாக இருக்க வேண்டும்"

7:21; 8:2 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **7:21** # வே.வா., "அவர் வருத்தப்பட மாட்டார்." **7:26** * வே.வா., "பற்றுமாறாதவர்." **8:2** # வே.வா., "தொண்டு."

அதி. 7
a 1பே 1:3, 4
b யோவா 14:6; எபி 4:16
c சங் 110:4
d எரே 31:31; மத் 26:27, 28; 1கொ 11:25; எபி 8:6; எபி 9:15; எபி 12:22, 24
e 1நா 6:4
f லூ 1:33; எபி 7:15, 16
g ரோ 8:34; 1தீ 2:5; எபி 9:24; 1யோ 2:1
h ஏசா 53:9; 1பே 2:21, 22
i எபே 1:20, 21; 1பே 3:22
j லேவி 9:8, 15
k எண் 28:3
l ரோ 6:10; எபி 9:28; எபி 10:14
m லேவி 16:11
n சங் 2:7; சங் 110:4
o எபி 2:10; எபி 5:9

அதி. 8
p சங் 110:1; எபி 1:3
q எபி 9:8, 24
r எபி 3:1; எபி 7:26
s எபே 5:2
t எபி 7:14
u எபி 9:9, 24
v கொலோ 2:16, 17; எபி 10:1

என்ற கட்டளையைக் கடவுள் அவருக்குக் கொடுத்தார்.[a] **6** ஆனால் இப்
போது, இயேசு அதைவிட சிறப்பான சேவையைச் செய்வதற்கு நியமிக்கப்
பட்டிருக்கிறார். அதனால், முன்பு செய்யப்பட்ட ஒப்பந்தத்தைவிட மேலான
ஒப்பந்தத்துக்கு[b] அவர் மத்தியஸ்தராகவும்[c] இருக்கிறார். இந்த ஒப்பந்தம்
முன்பு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளைவிட மேலான வாக்குறுதிகளின்
அடிப்படையில் சட்டப்படி செய்யப்பட்டுள்ளது.[d]

7 முதலாம் ஒப்பந்தம் குறையில்லாததாக இருந்திருந்தால், இரண்டாம்
ஒப்பந்தத்துக்கு அவசியமே இருந்திருக்காது.[e] **8** ஆனால், கடவுள் தன்
மக்களுடைய குறையை இப்படி எடுத்துக்காட்டுகிறார்: "'இதோ, காலம்
வருகிறது. அப்போது, இஸ்ரவேல் ஜனங்களோடும் யூதா ஜனங்களோடும்
நான் ஒரு புதிய ஒப்பந்தம் செய்வேன்' என்று யெகோவா* சொல்கிறார்.
9 'அவர்களுடைய முன்னோர்களை நான் எகிப்திலிருந்து கைப்பிடித்து
நடத்திக்கொண்டு வந்தபோது[f] செய்த ஒப்பந்தத்தைப் போல அது இருக்
காது. ஏனென்றால், அந்த ஒப்பந்தத்தின்படி அவர்கள் தொடர்ந்து நடக்க
வில்லை. அதனால், அவர்கள்மேல் அக்கறை காட்டுவதையே நான் விட்
டுவிட்டேன்' என்றும் யெகோவா* சொல்கிறார்.

10 'அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் ஜனங்களோடு செய்
யப்போகிற ஒப்பந்தம் இதுதான்' என்று யெகோவா* சொல்கிறார். 'நான்
அவர்களுடைய மனதில் என் சட்டங்களை வைப்பேன், அவர்களுடைய
இதயத்தில் அவற்றை எழுதுவேன்.[g] நான் அவர்களுடைய கடவுளாக
இருப்பேன், அவர்கள் என்னுடைய ஜனங்களாக இருப்பார்கள்.[h]

11 அதுமுதல் அவர்கள் யாரும் தங்களுடைய சக குடிமகனிடமோ தங்
கள் சகோதரனிடமோ, "யெகோவாவை* பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்!"
என்று சொல்ல மாட்டார்கள். ஏனென்றால், சிறியோர்முதல் பெரியோர்வரை
எல்லாரும் என்னைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பார்கள். **12** அவர்களு
டைய அநீதியான செயல்களை இரக்கத்தோடு நான் மன்னிப்பேன், அவர்
களுடைய பாவங்களை இனியும் நினைத்துப் பார்க்க மாட்டேன்' என்றும்
அவர் சொல்கிறார்."[i]

13 "புதிய ஒப்பந்தம்" என்று அவர் சொல்லும்போது, முந்தின ஒப்பந்
தத்தை நீக்கிவிட்டார்[j] என்று அர்த்தமாகிறது; அப்படி நீக்கப்பட்ட, பழைய
தாகிக்கொண்டிருக்கிற அந்த ஒப்பந்தம் சீக்கிரத்தில் மறையப்போகிறது.[k]

9 முந்தின ஒப்பந்தத்தின்படி, பரிசுத்த சேவை சம்பந்தமாகவும் பூமியிலி
ருக்கிற பரிசுத்த அறை சம்பந்தமாகவும் சட்டங்கள் இருந்தன.[l]
2 எப்படியென்றால், ஒரு கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது; அதனுடைய
முதல் அறையில் குத்துவிளக்கும்[m] மேஜையும் படையல் ரொட்டிகளும்[n]
இருந்தன; அது பரிசுத்த அறை[o] என்று அழைக்கப்பட்டது. **3** இரண்டாம்
திரைச்சீலைக்குப்[p] பின்னால் மகா பரிசுத்த அறை[q] என்ற ஓர் அறை இருந்
தது. **4** அங்கே தங்கத் தூபக்கரண்டியும்,[r] முழுவதும் தங்கத் தகடு அடிக்
கப்பட்ட[s] ஒப்பந்தப் பெட்டியும்[t] இருந்தன. அந்தப் பெட்டிக்குள் மன்னா[u]
வைக்கப்பட்ட தங்க ஜாடியும், ஆரோனின் துளிர்விட்ட கோலும்,[v] ஒப்பந்
தம் எழுதப்பட்ட கற்பலகைகளும்[w] இருந்தன. **5** அந்தப் பெட்டியின்
மேலிருந்த பிராயச்சித்த மூடிமீது*[x] மகிமையுள்ள கேருபீன்களின் உருவங்

8:8-11 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **9:5** *வே.வா., "பாவப் பரிகார இடத்தின்மீது."

அதி. 8
a யாத் 25:9, 40; யாத் 26:30; எண் 8:4
b 1கொ 11:25; எபி 7:22; எபி 9:15; எபி 12:22, 24
c 1தீ 2:5
d சங் 110:4; ரோ 8:17
e எபி 7:11, 18
f யாத் 12:51
g ரோ 2:29
h 2கொ 6:16
i எரே 31:31-34
j ரோ 10:4; எபி 7:12
k கொலோ 2:13, 14

அதி. 9
l யாத் 25:8
m எண் 4:9
n யாத் 40:22-24
o யாத் 26:33
p யாத் 36:35
q யாத் 26:31, 33
r லேவி 16:12; வெளி 8:3
s யாத் 25:10, 11
t யாத் 40:21
u யாத் 16:33
v எண் 17:10
w யாத் 32:15
x யாத் 25:18, 22; எண் 7:89

கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் நிழல் அந்த மூடிமேல் விழுந்தது; ஆனால், இவற்றைப் பற்றி விவரமாகப் பேச இப்போது நேரம் இல்லை.

6 இவையெல்லாம் இப்படி அமைக்கப்பட்ட பிறகு, குருமார்கள் பரிசுத்த சேவைகளைச் செய்வதற்காகக் கூடாரத்தின் முதல் அறைக்குள் வழக்கமாகப் போவார்கள்.[a] **7** ஆனால், இரண்டாவது அறைக்குள் தலைமைக் குரு மட்டும்தான் வருஷத்துக்கு ஒருமுறை[b] இரத்தத்தை எடுத்துக் கொண்டு போய்,[c] தனக்காகவும்[d] மக்கள் தெரியாமல் செய்த பாவங்களுக்காகவும்[e] செலுத்துவார். **8** அதனால், கடவுளுடைய சக்தி தெளிவுபடுத்தியிருப்பது இதுதான்: முதலாவது கூடாரம் இருந்தவரை மகா பரிசுத்த அறைக்குள் போகிற வழி திறக்கப்படவில்லை.[f] **9** அன்றைக்கு இருந்த கூடாரம், இந்தக் காலத்துக்கு அடையாளமாக இருக்கிறது.[g] அந்த ஏற்பாட்டின்படி, காணிக்கைகளும் பலிகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன.[h] ஆனாலும், அவற்றைக் கொடுக்கிறவர்களுக்கு* அவற்றால் குற்றமில்லாத மனசாட்சியைத் தர முடிவதில்லை.[i] **10** அவை வெறுமனே உணவுகளோடும் பானங்களோடும் பலவிதமான தூய்மைச் சடங்குகளோடும்தான்*[j] சம்பந்தப்பட்டிருக்கின்றன; உடல் சம்பந்தப்பட்ட சட்டங்களாகத்தான் இருக்கின்றன;[k] எல்லாவற்றையும் சரிப்படுத்துவதற்கான காலம் வரும்வரை மட்டுமே அவை நீடித்திருக்கும்.

11 ஆனாலும், நிறைய நன்மைகளைச் செய்திருக்கிற தலைமைக் குருவான கிறிஸ்து, கையால் செய்யப்பட்ட பூமிக்குரிய கூடாரத்துக்குள் போகவில்லை; அதைவிட பரிபூரணமான பெரிய கூடாரத்துக்குள் போயிருக்கிறார். **12** வெள்ளாடுகள், இளம் காளைகள் ஆகியவற்றின் இரத்தத்தை எடுத்துக்கொண்டு போகவில்லை. அதற்குப் பதிலாக, தன்னுடைய சொந்த இரத்தத்தை[l] எடுத்துக்கொண்டு எல்லா காலத்துக்கும் ஒரே தடவையாக மகா பரிசுத்த அறைக்குள் போய், நமக்காக நிரந்தர விடுதலை* வாங்கித் தந்திருக்கிறார்.[m] **13** வெள்ளாடுகளின் இரத்தமும் காளைகளின் இரத்தமும்[n] தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்படுகிற இளம் பசுவின் சாம்பலுமே அவர்களுடைய உடலைத் தூய்மையாக்குகிறது[o] என்றால், **14** கிறிஸ்துவின் இரத்தம்[p] நம்முடைய மனசாட்சியை இன்னும் எந்தளவு தூய்மையாக்கும்! செத்த செயல்களைவிட்டு மனம் திருந்தி உயிருள்ள கடவுளுக்கு நாம் பரிசுத்த சேவை செய்வதற்காக[q] அதை எந்தளவு தூய்மையாக்கும்![r] கடவுளுடைய நிரந்தரச் சக்தியின் மூலம் கிறிஸ்து தன்னையே குறையில்லாத பலியாக அவருக்கு அர்ப்பணித்தார்.

15 அதனால்தான், கிறிஸ்து ஒரு புதிய ஒப்பந்தத்தின் மத்தியஸ்தராக[s] ஆகியிருக்கிறார். கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் வாக்குறுதி கொடுக்கப்பட்ட முடிவில்லாத வாழ்வை* பெறுவதற்காக[t] அப்படி மத்தியஸ்தராக ஆகியிருக்கிறார். அவருடைய மரணத்தின் மூலம்தான் இது சாத்தியமாகி இருக்கிறது; அவருடைய மரணத்தின் மூலம்தான் முந்தின ஒப்பந்தத்தின் கீழ் செய்த குற்றங்களிலிருந்து ஒரு மீட்புவிலையால்[u] அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். **16** ஓர் ஒப்பந்தம் செய்யப்படுகிறது என்றால், அந்த ஒப்பந்தத்தைச் செய்த மனிதர்* சாக வேண்டியது அவசியம்.

9:9 *நே.மொ., "பரிசுத்த சேவை செய்கிறவர்களுக்கு." **9:10** *நே.மொ., "ஞானஸ்நானங்களோடும்தான்." **9:12** *நே.மொ., "மீட்பை." **9:15** *நே.மொ., "ஆஸ்தியை." **9:16** *வே.வா., "ஒப்பந்தத்தின் மத்தியஸ்தர்."

அதி. 9
a லேவி 24:3, 4
b லேவி 16:2
c யாத் 30:10; லேவி 16:14
d லேவி 16:6, 11
e லேவி 16:15
f எபி 10:19, 20
g கொலோ 2:16, 17; எபி 8:5; எபி 10:1
h லேவி 23:37, 38
i கலா 3:21; எபி 7:11, 19
j யாத் 30:17-19
k எண் 19:13
l எபி 12:24; எபி 13:20
m தானி 9:24; மத் 20:28; 1தீ 2:5, 6
n லேவி 16:6, 15
o எண் 19:9, 17, 19
p 1பே 1:18, 19
q ரோ 12:1
r 1யோ 1:7
s லூ 22:20; 1தீ 2:5; எபி 12:22, 24
t ரோ 8:17
u மத் 20:28

17 ஏனென்றால், சாவு ஏற்பட்ட பின்புதான் ஓர் ஒப்பந்தம் செல்லுபடி
யாகும்; அதைச் செய்த மனிதர் உயிரோடு இருக்கும்வரை அது செல்
லுபடியாகாது. **18** அதனால்தான், முந்தின ஒப்பந்தமும் இரத்தமில்லாமல்
அமலுக்கு வரவில்லை. **19** திருச்சட்டத்தில் இருக்கிற எல்லா கட்டளைக
ளையும் மோசே எல்லா மக்களுக்கும் சொன்ன பின்பு, இளம் காளை
கள், வெள்ளாடுகள் ஆகியவற்றின் இரத்தத்தைத் தண்ணீரில் கலந்து, கருஞ்
சிவப்புக் கம்பளி நூலால் கட்டப்பட்ட மருவுக்கொத்தால் புத்தகத்தின்*
மீதும் மக்கள் மீதும் அதைத் தெளித்து, **20** “நீங்கள் கடைப்பிடிக்கும்
படி கடவுள் உங்களுக்குக் கொடுத்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் இரத்
தம் இதுதான்” என்று சொன்னார்.[a] **21** அதைப் போலவே, கூடாரத்தின்
மீதும் பரிசுத்த வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் எல்லா பாத்திரங்க
ளின் மீதும் அந்த இரத்தத்தைத் தெளித்தார்.[b] **22** திருச்சட்டத்தின்படி
ஏறக்குறைய எல்லாமே இரத்தத்தால் சுத்தமாக்கப்படுகின்றன;[c] இரத்தம் சிந்
தப்படவில்லை என்றால், மன்னிப்பு இல்லை.[d]

23 அதனால், பரலோகக் காரியங்களின் பூமிக்குரிய மாதிரிப் படி
வங்கள்[e] இப்படி மிருக பலிகளால் சுத்தமாக்கப்படுவது அவசியமாக இருந்
தது;[f] பரலோகக் காரியங்களுக்கோ அவற்றைவிட மேலான பலிகள் அவசி
யமாக இருக்கின்றன. **24** அதனால்தான் கிறிஸ்து, நிஜத்தின் சாயலாகவும்[g]
கையால் செய்யப்பட்டதாகவும் இருக்கிற மகா பரிசுத்த அறைக்குள் போகா
மல்,[h] கடவுளுக்கு* முன்னால் இப்போது நமக்காகத் தோன்றும்படி[i] பர
லோகத்துக்குள் போயிருக்கிறார்.[j] **25** தலைமைக் குரு வருஷா வருஷம்
மகா பரிசுத்த அறைக்குள் போய் மிருக இரத்தத்தைக் கொடுத்தது போல,[k]
கிறிஸ்து தன்னையே திரும்பத் திரும்பப் பலி கொடுக்க வேண்டிய அவசி
யம் இருக்கவில்லை. **26** அப்படி அவசியம் இருந்திருந்தால், உலகம்
உண்டானதுமுதல் அவர் பல தடவை பாடுகள் பட வேண்டியிருந்திருக்கும்.
ஆனால், பாவங்களைப் போக்க அவர் தன்னையே பலி கொடுப்பதற்காக
இந்தச் சகாப்தத்தின்* கடைசிக் கட்டத்தில் ஒரே தடவை வெளிப்பட்டிருக்
கிறார்.[l] **27** மனிதர்களுக்கு ஒரேவொரு தடவை மரணம் வருகிறது, பின்பு
நியாயத்தீர்ப்பு வருகிறது. **28** கிறிஸ்துவும் பலருடைய பாவங்களைச் சுமப்
பதற்காக எல்லா காலத்துக்கும் ஒரே தடவையாகப் பலி கொடுக்கப்பட்
டார்.[m] ஆனாலும், அவர் இரண்டாவது தடவை தோன்றும்போது, பாவத்
தைப் போக்குவதற்காக இல்லாமல், தன்னை ஆவலோடு எதிர்பார்த்துக்
காத்திருப்பவர்களை மீட்பதற்காகத் தோன்றுவார்.[n]

10 திருச்சட்டம், வரப்போகிற நன்மைகளின் நிஜம் அல்ல,[o] அவற்
றின் நிழல்தான்.[p] அதனால்தான், திருச்சட்டத்தாலும்* வருஷா வரு
ஷம் தொடர்ந்து கொடுக்கப்படுகிற ஒரேவிதமான பலிகளாலும் கடவுளை
வணங்குகிற ஆட்களை ஒருபோதும் பரிபூரணமாக்க முடியாது.[q] **2** அப்
படிப் பரிபூரணமாக்க முடியுமென்றால் பலி கொடுப்பது நிறுத்தப்பட்டி
ருக்கும், இல்லையா? பலி கொடுக்கிறவர்கள்* ஒரு தடவை சுத்தமாகிவிட்
டால், அதன் பிறகு பாவங்களைப் பற்றிய உணர்வுகூட அவர்களுக்கு

9:19 *வே.வா., “சுருளின்.” **9:24** *நே.மொ., “கடவுளுடைய முகத்துக்கு.” **9:26** *சொல் பட்டியலைப் பாருங்கள். **10:1** *அல்லது, “ஆட்களாலும்.” **10:2** *நே.மொ., “பரிசுத்த சேவை செய்கிறவர்கள்.”

அதி. 9
a யாத் 24:6-8
b யாத் 29:12, லேவி 8:15
c லேவி 17:11
d லேவி 9:7-9
e எபி 8:5, எபி 9:9
f லேவி 16:19, 20
g கொலோ 2:16, 17
h எபி 8:1, 2
i லேவி 16:15, ரோ 8:34
j எபி 6:19, 20, எபி 9:12
k லேவி 16:2, 34
l தானி 9:24, எபி 7:27, 1பே 3:18
m ஏசா 53:12, ரோ 6:10, 1பே 2:24
n 2தீ 4:8, தீத் 2:13

அதி. 10
o கொலோ 2:16, 17
p எபி 8:5
q எபி 7:19, எபி 9:9

இருக்காதே!* **3** ஆனால், பாவங்கள் இன்னமும் இருக்கின்றன என்பதை அந்தப் பலிகள் வருஷா வருஷம் ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கின்றன.[a] **4** ஏனென்றால் காளைகள், வெள்ளாடுகள் ஆகியவற்றின் இரத்தத்தால் பாவங்களைப் போக்க முடியாது.

5 அதனால், கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்தபோது, "'பலியையும் காணிக்கையையும் நீங்கள் விரும்பவில்லை, ஆனால் எனக்காக ஓர் உடலைத் தயார்படுத்தினீர்கள். **6** தகன பலிகளையும் பாவப் பரிகார பலிகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று கடவுளிடம் சொன்னார்.[b] **7** அதோடு, 'கடவுளே, இதோ, உங்களுடைய விருப்பத்தை* நிறைவேற்ற வந்துவிட்டேன். சுருளில்# என்னைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது' என்று சொன்னேன்" என்றார்.[c] **8** முதலில், திருச்சட்டத்தின்படி கொடுக்கப்படுகிற பலிகளைப் பற்றி, "பலிகளையும் காணிக்கைகளையும் தகன பலிகளையும் பாவப் பரிகார பலிகளையும் நீங்கள் விரும்பவில்லை, அவற்றை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை" என்று சொன்னாலும், **9** பின்பு, "இதோ! உங்களுடைய விருப்பத்தை* நிறைவேற்ற வந்துவிட்டேன்" என்று சொன்னார்.[d] அதனால், இரண்டாவதை நிலைநாட்டுவதற்காக முதலாவதை அவர் நீக்கிப்போடுகிறார். **10** இயேசு கிறிஸ்து தன்னுடைய உடலை எல்லா காலத்துக்கும் ஒரே தடவையாகப் பலி கொடுத்து அந்த "விருப்பத்தை"[e] நிறைவேற்றியதால்தான் நாம் புனிதமாக்கப்பட்டிருக்கிறோம்.[f]

11 தினமும் மக்களுக்குப் பரிசுத்த சேவை* செய்கிற ஒவ்வொரு குருவும்[g] ஒரேவிதமான பலிகளைத் திரும்பத் திரும்பக் கொடுக்கிறார்;[h] அவற்றால் ஒருபோதும் பாவங்களை முழுமையாகப் போக்க முடியாது.[i] **12** ஆனால், இவர் நம்முடைய பாவங்களுக்காக எல்லா காலத்துக்கும் ஒரே தடவையாகப் பலி கொடுத்துவிட்டு, கடவுளுடைய வலது பக்கத்தில் உட்கார்ந்தார்.[j] **13** அந்தச் சமயத்திலிருந்து, தன்னுடைய எதிரிகள் தனக்குக் கால்மணையாக்கிப் போடப்படும்வரை காத்துக்கொண்டிருக்கிறார்.[k] **14** புனிதமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியால் என்றென்றும் இவர் பரிபூரணமாக்கியிருக்கிறார்.[l] **15** கடவுளுடைய சக்தியும் இப்படி நமக்குச் சாட்சி கொடுக்கிறது: **16** "யெகோவா* சொல்கிறார், 'அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடு செய்யப்போகிற ஒப்பந்தம் இதுதான். நான் அவர்களுடைய இதயத்தில் என் சட்டங்களை வைப்பேன், அவர்களுடைய மனதில் அவற்றை எழுதுவேன்.'"[m] **17** "அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் இனியும் நினைத்துப் பார்க்க மாட்டேன்"[n] என்றும் அது சொல்கிறது. **18** அதனால், இவற்றுக்கு மன்னிப்பு கிடைத்த பின்பு பாவப் பரிகார பலிக்கு அவசியம் இல்லை.

19 அதனால் சகோதரர்களே, இயேசு தன்னுடைய உடலாகிய திரைச்சீலையைக்[o] கடப்பதன் மூலம் மகா பரிசுத்த அறைக்குள் போக நமக்காக ஒரு புதிய வழியைத் திறந்திருக்கிறார்,[p] அது வாழ்வு தரும் வழி. **20** அந்த வழியில் மகா பரிசுத்த அறைக்குள் போக அவருடைய இரத்தத்தால் நமக்குத் தைரியம்* கிடைத்திருப்பதாலும், **21** கடவுளுடைய

அதி. 10
a லேவி 16:34
b சங் 40:6
c சங் 40:8
d சங் 40:6-8
e கலா 1:4
f எபி 13:12
g 1சா 2:27, 28
h யாத் 29:38; எண் 28:3
i எபி 7:18; எபி 10:1
j ரோ 8:34
k சங் 110:1; 1கொ 15:25
l எபி 7:19
m எரே 31:33; எபி 8:10
n எரே 31:34; எபி 8:12
o மத் 27:51
p எபி 9:8, 24

10:2 *வே.வா., "பாவங்களைக் குறித்து இனியும் அவர்களுடைய மனசாட்சி உறுத்தாது." **10:7, 9** *வே.வா., "சித்தத்தை." **10:7** #நே.மொ., "புத்தகச் சுருளில்." **10:11** *வே.வா., "தொண்டு." **10:16** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **10:20** *வே.வா., "உறுதியான நம்பிக்கை."

வீட்டின் மீது அதிகாரமுள்ள அவர் நம்முடைய மாபெரும் குருவாக
இருப்பதாலும்[a] முழு விசுவாசத்தோடு கடவுளை நாம் அணுக வேண்டும்.
22 கெட்ட மனசாட்சியிலிருந்து சுத்தமாக்கப்பட்ட*[b] இதயமும், சுத்தமான
தண்ணீரால் கழுவப்பட்ட உடலும்[c] உள்ளவர்களாக, உண்மை இதயத்தோ
டும் முழு விசுவாசத்தோடும் அவரை அணுக வேண்டும். **23** நமக்கு வாக்
குறுதி தந்தவர் நம்பகமானவர் என்பதால், எந்த விதமான சந்தேகமும் இல்
லாமல் நம்முடைய நம்பிக்கையைப் பற்றி எல்லாருக்கும் சொல்ல
வேண்டும்.[d] **24** அன்பு காட்டுவதற்கும் நல்ல செயல்கள் செய்வதற்கும்
ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி, ஒருவர்மீது ஒருவர் ஆழ்ந்த அக்கறை
காட்ட வேண்டும்;[e] **25** சிலர் வழக்கமாகச் சபைக் கூட்டங்களுக்கு வரா
மல் இருந்துவிடுவதுபோல் நாமும் இருந்துவிடக் கூடாது. அதற்குப் பதி
லாக, ஒன்றுகூடிவந்து[f] ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்த வேண்டும்;[g]
நாள் நெருங்கி வருவதை நாம் எந்தளவுக்குப் பார்க்கிறோமோ[h] அந்தள
வுக்கு ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்த வேண்டும்.

26 சத்தியத்தைப் பற்றித் திருத்தமாகத் தெரிந்துகொண்ட பின்பு[i] வேண்
டுமென்றே நாம் பாவங்கள் செய்துவந்தால் அந்தப் பாவங்களுக்காக நாம்
வேறெந்தப் பலியும் கொடுக்க முடியாது.[j] **27** நாம் பயத்தோடு எதிர்பார்க்
கிற நியாயத்தீர்ப்பையும், எதிரிகளைச் சுட்டுப் பொசுக்கப்போகிற கடவு
ளுடைய பயங்கர கோபத்தையும்தான் சந்திக்க வேண்டியிருக்கும்.[k]
28 மோசேயின் திருச்சட்டத்தை அவமதிக்கிறவன் இரண்டு அல்லது
மூன்று சாட்சிகளுடைய வாக்குமூலத்தின் அடிப்படையில் இரக்கமில்லாமல்
கொல்லப்படுகிறான் என்றால்,[l] **29** கடவுளுடைய மகனை மிதித்து, தன்
னைப் புனிதப்படுத்திய ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் இரத்தத்தைச்[m] சாதா
ரணமாக நினைத்து, அளவற்ற கருணையைக் காட்டுகிற கடவுளுடைய
சக்தியை அவமதிக்கிறவனுக்கு இன்னும் எந்தளவு கடுமையான தண்டனை
கிடைக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.[n] **30** “யெகோவா* தன்னுடைய
ஜனங்களுக்குத் தீர்ப்பு கொடுப்பார்” என்று சொல்லப்பட்டிருக்கிறது; “பழி
வாங்குவது என் பொறுப்பு, நானே பதிலடி கொடுப்பேன்” என்று சொன்ன
வரை நமக்குத் தெரியும்.[o] **31** உயிருள்ள கடவுளுடைய கைகளில் சிக்கிக்
கொள்வது பயங்கரமாக இருக்கும்.

32 ஆனாலும், முந்தின நாட்களை எப்போதும் நினைத்துப் பாருங்
கள்; உங்களுக்கு அறிவொளி[p] கிடைத்த பின்பு பயங்கரமான போராட்
டங்களையும் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டீர்கள். **33** சிலசமயங்க
ளில், எல்லாருக்கும் முன்பாக* அவமானங்களுக்கும் உபத்திரவங்களுக்கும்
ஆளானீர்கள். சிலசமயங்களில், அப்படிப்பட்ட கஷ்டங்களை அனுபவித்த
வர்களுக்குத் துணையாக இருந்தீர்கள். **34** சிறையில் அடைக்கப்பட்டவர்க
ளுக்காக அனுதாபப்பட்டீர்கள்; உங்களுடைய உடைமைகள் பறிக்கப்பட்ட
போது, அவற்றைவிட உயர்ந்த, நிலையான சொத்து உங்களுக்கு
இருப்பதைத் தெரிந்து,[q] அந்த இழப்பைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்
டீர்கள்.[r]

10:22 *நே.மொ., “தெளிக்கப்பட்ட.” அதாவது, இயேசுவின் இரத்தத்தால் தெளிக்கப்பட்ட. **10:30** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **10:33** *நே.மொ., “அரங்கத்திலே வேடிக்கை செய்யப்படுகிறவர்கள் போல்.”

அதி. 10
a சக 6:13; எபி 3:6
b 1யோ 1:7
c எபே 5:25, 26
d 1கொ 15:58; கொலோ 1:23
e கொலோ 3:23; 1தீ 6:18
f உபா 31:12; அப் 2:42
g ஏசா 35:3; ரோ 1:11, 12
h ரோ 13:11; 2பே 3:11, 12
i 2பே 2:21
j மத் 12:32; எபி 6:4-6; 1யோ 5:16
k ஏசா 26:11
l உபா 17:6
m மத் 26:27, 28; லூ 22:20
n எபி 6:4-6
o உபா 32:35, 36
p 2கொ 4:6; எபி 6:4
q லூ 16:9
r மத் 5:12

35 அதனால், தைரியத்தை* விட்டுவிடாதீர்கள்; அதற்குப் பெரிய பலன் கிடைக்கும்.[a] **36** நீங்கள் கடவுளுடைய விருப்பத்தை* நிறைவேற்றி, அவர் வாக்குறுதி கொடுத்ததைப் பெற வேண்டுமென்றால் சகித்திருப்பது[b] அவசியம். **37** ஏனென்றால், இன்னும் “கொஞ்ச நேரம்தான் இருக்கிறது,”[c] “வரப்போகிறவர் தாமதிக்காமல் வந்துவிடுவார்.”[d] **38** “நீதிமானாக இருக்கிற என் ஊழியனோ விசுவாசத்தால் வாழ்வு பெறுவான்;[e] அவன் பின்வாங்கினால் அவன்மேல் எனக்குப் பிரியம் இருக்காது” என்று எழுதப்பட்டிருக்கிறது.[f] **39** அதனால்தான், நாம் பின்வாங்கி அழிந்துபோகிறவர்களாக இல்லாமல்,[g] விசுவாசத்தோடு இருந்து நம் உயிரைப் பாதுகாத்துக்கொள்கிறவர்களாக இருக்கிறோம்.

11 விசுவாசம் என்பது எதிர்பார்க்கிற காரியங்கள் நிச்சயம் நடக்கும் என்று உறுதியாக நம்புவதாகும்;[h] பார்க்க முடியாத காரியங்கள் நிஜமானவை என்பதற்குத் தெளிவான அத்தாட்சியை* பார்ப்பதாகும். **2** விசுவாசத்தால்தான் கடவுளிடமிருந்து நம் முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்.

3 இந்தப் பிரபஞ்சத்தில்* இருப்பதெல்லாம் கடவுளுடைய வார்த்தையால் படைக்கப்பட்டன# என்பதையும் பார்க்க முடியாதவற்றிலிருந்து பார்க்க முடிகிறவை தோன்றியிருக்கின்றன என்பதையும் விசுவாசத்தால் நாம் புரிந்துகொள்கிறோம்.

4 விசுவாசத்தால்தான் ஆபேல், காயீனுடைய பலியைவிட உயர்ந்த பலியைக் கடவுளுக்குக் கொடுத்தார்.[i] அதனால் அவர் நீதிமான் என்று நற்சாட்சி பெற்றார். அவருடைய காணிக்கைகளைக் கடவுள் ஏற்றுக்கொண்டாரே.*[j] அவர் இறந்துபோனாலும் தன்னுடைய விசுவாசத்தால் இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறார்.[k]

5 விசுவாசத்தால்தான் ஏனோக்கு,[l] வேதனைப்பட்டுச் சாகாதபடி வேறு இடத்துக்கு மாற்றப்பட்டார். அப்படி அவரைக் கடவுள் இடம் மாற்றியதால் அதற்குப் பின்பு அவரை யாரும் பார்க்கவில்லை;[m] அவர் இடம் மாற்றப்படுவதற்கு முன்பே, கடவுளுக்கு மிகவும் பிரியமாக நடந்துகொண்டவர் என்று நற்சாட்சி பெற்றிருந்தார். **6** விசுவாசமில்லாமல் யாரும் கடவுளைப் பிரியப்படுத்தவே முடியாது. ஏனென்றால், கடவுளை அணுகுகிறவன் அவர் இருக்கிறார் என்றும், அவரை ஊக்கமாகத் தேடுகிறவர்களுக்குப் பலன் கொடுக்கிறார் என்றும் நம்ப வேண்டும்.[n]

7 விசுவாசத்தால்தான் நோவா,[o] பார்க்காதவற்றைப் பற்றிக் கடவுளிடமிருந்து எச்சரிப்பு கிடைத்தபோது[p] கடவுள்பயத்தைக் காட்டினார். தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு பேழையைக் கட்டினார்;[q] இந்த விசுவாசத்தால்தான் உலகத்தை அவர் கண்டனம் செய்தார்,[r] அதே விசுவாசத்தால்தான் நீதிமான்களில் ஒருவரானார்.

8 விசுவாசத்தால்தான் ஆபிரகாம்,[s] தனக்குச் சொத்தாகக் கிடைக்கவிருந்த இடத்துக்குப் போகும்படி சொல்லப்பட்டபோது, அந்த இடம் எங்கே இருக்கிறதென்று தெரியாவிட்டாலும் கீழ்ப்படிந்து புறப்பட்டுப்

10:35 *நே.மொ., “தயக்கமில்லாமல் பேசுவதை.” **10:36** *வே.வா., “சித்தத்தை.” **11:1** *வே.வா., “நம்பகமான ஆதாரத்தை.” **11:3** *வே.வா., “சகாப்தங்களில்.” சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., “ஒழுங்கமைக்கப்பட்டன.” **11:4** *வே.வா., “காணிக்கைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் கடவுள் சாட்சி கொடுத்தாரே.”

அதி. 10
a மத் 10:32; 1கொ 15:58
b லூ 21:19; யாக் 5:11
c ஏசா 26:20
d ஆப 2:3; 2பே 3:9
e யோவா 3:16; ரோ 1:17
f ஆப 2:4
g 2பே 2:20

அதி. 11
h எபி 11:13
i ஆதி 4:5
j ஆதி 4:4
k ஆதி 4:8, 10
l ஆதி 5:22; யூ 14
m ஆதி 5:24
n சங் 58:11; செப் 2:3; மத் 5:12; மத் 6:33
o ஆதி 6:8, 9
p ஆதி 6:13, 17
q ஆதி 6:14
r ஆதி 6:22; 2பே 2:5
s ரோ 4:9, 11

போனார்.[a] **9** விசுவாசத்தால்தான் அவர், வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்
தில் ஓர் அன்னியனாகத் தங்கியிருந்தார்.[b] அதே வாக்கைப் பெற்ற சக வாரி
சுகளான ஈசாக்கோடும் யாக்கோபோடும்[c] கூடாரங்களில் தங்கியிருந்தார்.[d]
10 ஏனென்றால், கடவுளே வடிவமைத்துக் கட்டிய உறுதியான அஸ்திவா
ரங்களைக் கொண்ட நகரத்துக்காக[e] அவர் காத்துக்கொண்டிருந்தார்.

11 விசுவாசத்தால்தான் சாராள்கூட, வயதானவளாக இருந்தாலும் கர்ப்
பமானாள்.*[f] ஏனென்றால், வாக்குறுதி கொடுத்தவர் உண்மையுள்ளவர்#
என்று அவள் நம்பினாள். **12** அதனால்தான், பிள்ளை பெற முடியாத*[g]
ஒரு மனிதருக்கு வானத்திலுள்ள ஏராளமான நட்சத்திரங்களைப் போலவும்
கடற்கரையிலுள்ள எண்ணற்ற மணலைப் போலவும்[h] பிள்ளைகள் பிறந்
தார்கள்.[i]

13 மேலே சொல்லப்பட்ட இவர்கள் எல்லாரும் விசுவாசமுள்ளவர்களாக
இறந்தார்கள். வாக்குறுதிகள் நிறைவேறுவதை அவர்கள் பார்க்காவிட்டா
லும்,[j] தூரத்திலிருந்து அவற்றைப் பார்த்து சந்தோஷப்பட்டார்கள்.[k] தாங்கள்
குடியிருந்த தேசத்தில் தங்களை அன்னியர்கள் என்றும், தற்காலிகக் குடிகள்
என்றும் எல்லாருக்கும் சொன்னார்கள். **14** இப்படிச் சொல்கிறவர்கள் தங்க
ளுக்காக ஒரு தேசத்தை ஊக்கமாகத் தேடிக்கொண்டிருந்ததற்கு அத்தாட்சி
கொடுக்கிறார்கள். **15** ஆனாலும், தாங்கள் விட்டுவந்த இடத்தை அவர்
கள் நினைத்துக்கொண்டே இருக்கவில்லை;[l] அப்படி நினைத்துக்கொண்டே
இருந்திருந்தால், அங்கே திரும்பிப்போக அவர்களுக்கு வாய்ப்பு இருந்தி
ருக்கும். **16** ஆனால், அதைவிட உயர்ந்த இடத்தை, அதாவது பரலோகத்
துக்குரிய இடத்தை, பெறுவதற்கு அவர்கள் முயற்சி செய்தார்கள். அதனால்,
அவர்களுடைய கடவுள் என்று அழைக்கப்படுவதைக் கடவுள் அவமான
மாக நினைக்கவில்லை.[m] அதற்குப் பதிலாக, அவர்களுக்கென்று ஒரு நகரத்
தைத் தயார்படுத்தி வைத்திருக்கிறார்.[n]

17 விசுவாசத்தால்தான் ஆபிரகாம், தான் சோதிக்கப்பட்டபோது[o] ஈசாக்
கைப் பலி கொடுக்கும் அளவுக்குப் போனார். வாக்குறுதிகளைச் சந்தோ
ஷத்தோடு பெற்றிருந்த அவர், தன்னுடைய ஒரே மகனைப் பலி கொடுக்க
முன்வந்தார்.[p] **18** “ஈசாக்கின் வழியாக உருவாகும் சந்ததிதான் உன்னு
டைய சந்ததி என்று அழைக்கப்படும்” என்று அவருக்குச் சொல்லப்பட்டி
ருந்தாலும் அப்படிச் செய்ய முன்வந்தார்.[q] **19** ஏனென்றால், இறந்தவனை
மறுபடியும் கடவுளால் உயிரோடு எழுப்ப முடியும் என்பது அவருக்குத்
தெரிந்திருந்தது. அதனால், மரணத்திடமிருந்து அவனைப் பெற்றுக்கொண்
டார்; எதிர்காலத்தில் நடக்கவிருந்த சம்பவத்துக்கு இது ஓர் அடையாளமாக
இருந்தது.[r]

20 விசுவாசத்தால்தான் ஈசாக்கு, எதிர்கால சம்பவங்களைப் பற்றிச்
சொல்லி யாக்கோபையும்[s] ஏசாவையும் ஆசீர்வதித்தார்.[t]

21 விசுவாசத்தால்தான் யாக்கோபு, தான் சாவதற்கு முன்பு[u] யோசேப்
பின் மகன்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தார்,[v] பின்பு தன்னுடைய
கைத்தடியில் சாய்ந்தபடி கடவுளை வணங்கினார்.[w]

22 விசுவாசத்தால்தான் யோசேப்பு, சாகும் நிலையில் இருந்தபோது,
இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தைவிட்டு வெளியே போவார்கள் என்று

அதி. 11
a ஆதி 12:1, 4
b ஆதி 23:4
c ஆதி 17:6; ஆதி 26:3; ஆதி 28:13
d ஆதி 12:8
e எபி 11:16
f ஆதி 17:17; ஆதி 21:2
g ரோ 4:19
h ஆதி 22:17; 1ரா 4:20
i ஆதி 21:5
j ஆதி 47:9
k யோவா 8:56
l ஆதி 11:31
m யாத் 3:6, 15
n எபி 11:10; எபி 12:22
o ஆதி 22:1, 2
p ஆதி 22:9, 10; யோவா 3:16
q ஆதி 21:12
r 1கொ 10:11
s ஆதி 27:27-29
t ஆதி 27:38-40
u ஆதி 47:29
v ஆதி 48:15, 16, 20
w ஆதி 47:31

11:11 *வே.வா., “கருத்தரிப்பதற்குப் பலம் பெற்றாள்.” #வே.வா., “நம்பகமானவர்.”
11:12 *நே.மொ., “செத்தவர் போலிருந்த.”

சொன்னார். அதோடு, தன்னுடைய எலும்புகளை என்ன செய்ய வேண்டும்
என்பது சம்பந்தமான* அறிவுரைகளையும்# கொடுத்தார்.[a]

23 விசுவாசத்தால்தான் மோசேயின் அப்பாவும் அம்மாவும், ராஜாவின்
கட்டளைக்குப் பயப்படாமல்,[b] அழகான குழந்தையாகிய மோசேயை[c]
மூன்று மாதங்கள் ஒளித்து வைத்தார்கள்.[d] **24** விசுவாசத்தால்தான்
மோசே, வளர்ந்து ஆளானபோது[e] பார்வோனுடைய மகளின் மகன்[f] என்று
அழைக்கப்படுவதை விரும்பவில்லை; **25** பாவத்தால் வரும் தற்காலிகச்
சந்தோஷங்களை அனுபவிப்பதைவிட, கடவுளுடைய மக்களோடு சேர்ந்து
துன்புறுத்தப்படுவதையே அவர் தேர்ந்தெடுத்தார். **26** ஏனென்றால், எகிப்
தின் பொக்கிஷங்களைவிட கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக* இருப்
பதால் வரும் அவமானத்தையே உயர்ந்த செல்வமாக நினைத்தார், தனக்
குக் கிடைக்கவிருந்த பலன்மேல் கண்களைப் பதிய வைத்தார்.
27 விசுவாசத்தால்தான் அவர், ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல்[g]
எகிப்தைவிட்டுப் புறப்பட்டுப் போனார்;[h] பார்க்க முடியாதவரைப்[i] பார்ப்பது
போல் விசுவாசத்தில் தொடர்ந்து உறுதியாக இருந்தார். **28** விசுவாசத்தால்
தான் அவர், இஸ்ரவேலர்களின் மூத்த மகன்களைக் கடவுளுடைய தூதன்
கொல்லாதபடி* பஸ்காவைக் கொண்டாடினார், வாசல் நிலைக்கால்களில்
இரத்தத்தைத் தெளித்தார்.[j]

29 விசுவாசத்தால்தான் அவர்கள், வறண்ட தரையில் நடப்பதுபோல்
செங்கடலில் நடந்து போனார்கள்;[k] எகிப்தியர்கள் அதைக் கடக்க முயற்சி
செய்தபோது அதில் மூழ்கிப்போனார்கள்.[l]

30 விசுவாசத்தால்தான், எரிகோ நகரத்தின் மதிலை இஸ்ரவேலர்கள்
ஏழு நாட்கள் சுற்றி வந்தபின்பு அது விழுந்தது.[m] **31** விசுவாசத்தால்
தான் ராகாப் என்ற விலைமகள், உளவாளிகளைச் சமாதானத்தோடு ஏற்
றுக்கொண்டாள்.[n] அதனால், கீழ்ப்படியாதவர்களோடு சேர்ந்து அவள் அழி
யவில்லை.

32 இன்னும் யாரைப் பற்றிச் சொல்வேன்? கிதியோன்,[o] பாராக்,[p]
சிம்சோன்,[q] யெப்தா,[r] தாவீது,[s] சாமுவேல்[t] என்பவர்களையும், மற்ற தீர்க்
கதரிசிகளையும் பற்றிச் சொல்லிக்கொண்டே போனால் எனக்கு நேரம்
போதாது. **33** விசுவாசத்தால்தான் இவர்கள் ராஜ்யங்களைத் தோற்கடித்
தார்கள்,[u] நீதியை நிலைநாட்டினார்கள், வாக்குறுதிகளைப் பெற்றார்கள்,[v]
சிங்கங்களின் வாயை அடைத்தார்கள்,[w] **34** கொழுந்துவிட்டு எரியும்
நெருப்பைத் தாக்குப்பிடித்தார்கள்,[x] வாளுக்குத் தப்பினார்கள்,[y] பலவீனத்
தில் பலம் பெற்றார்கள்,[z] போர்களில் வல்லவர்களாக ஆனார்கள்,[a] எதிரிக
ளுடைய படைகளைத் தோற்கடித்தார்கள்.[b] **35** பெண்கள், இறந்துபோன
தங்களுடைய அன்புக்குரியவர்களை உயிர்த்தெழுதலில் பெற்றுக்கொண்
டார்கள்.[c] வேறு சிலர், அதைவிட மேலான உயிர்த்தெழுதல் கிடைப்ப
தற்காக, விடுதலை* பெறச் சம்மதிக்காமல் சித்திரவதையைச் சகித்தார்கள்.
36 மற்றவர்கள் கேலி செய்யப்பட்டார்கள், முள்சாட்டையால் அடிக்கப்பட்
டார்கள், சங்கிலிகளால் கட்டப்பட்டார்கள்,[d] சிறையில் தள்ளப்பட்டார்கள்.[e]
37 அதோடு கல்லெறியப்பட்டார்கள்,[f] சோதிக்கப்பட்டார்கள், இரண்டாக

அதி. 11
a ஆதி 50: 24, 25; யாத் 13:19
b யாத் 1:16, 22
c அப் 7:20
d யாத் 2:2
e யாத் 2:11
f யாத் 2:10
g யாத் 10:28
h யாத் 12:51
i 1தீ 1:17
j யாத் 12:21-23
k யாத் 14:22
l யாத் 14:27, 28
m யோசு 6: 15, 20
n யோசு 6:17
o நியா 6:11
p நியா 4:6
q நியா 13:24
r நியா 11:1
s 1சா 16:13
t 1சா 3:20
u நியா 7:12, 22
v 2சா 7:8, 12
w நியா 14:5, 6; 1சா 17:34-36; தானி 6:21, 22
x தானி 3:23-25
y 2ரா 6:15, 16
z நியா 16:28; 1ரா 18:46
a நியா 11:32
b நியா 4:16
c 1ரா 17:22-24; 2ரா 4:32, 34
d எரே 20:2
e எரே 37:15
f 2நா 24:20, 21

11:22 *வே.வா., “தன்னுடைய சவ அடக்கத்தைப் பற்றிய.” #வே.வா., “கட்டளையை
யும்.” **11:26** *நே.மொ., “கிறிஸ்துவாக.” **11:28** *நே.மொ., “தொடாதபடி.” **11:35**
*வே.வா., “ஏதோவொரு மீட்புவிலை கொடுத்து விடுதலை.”

அறுத்துக் கொல்லப்பட்டார்கள், வாளால் வெட்டப்பட்டார்கள்,[a] உபத்திர
வங்களின்போது செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்க
ளையும் போட்டிருந்தார்கள்,[b] வறுமையில் வாடினார்கள், உபத்திரவத்தை
அனுபவித்தார்கள்,[c] கொடுமைக்கு ஆளானார்கள்.[d] **38** அப்படிப்பட்ட
வர்களைப் பெற்றிருக்க இந்த உலகத்துக்கு அருகதை இல்லாமல்போனது;
அவர்கள் பாலைவனங்களிலும் மலைகளிலும் அலைந்து திரிந்தார்கள்,
குகைகளிலும்[e] குழிகளிலும் தஞ்சம் புகுந்தார்கள்.

39 அவர்கள் எல்லாரும் தங்களுடைய விசுவாசத்தால் கடவுளிட
மிருந்து நற்சாட்சி பெற்றிருந்தாலும் அவர் தந்த வாக்குறுதி நிறைவேறுவ
தைப் பார்க்கவில்லை. **40** ஏனென்றால், நமக்கு முன்பே அவர்கள் பரிபூ
ரணம் அடையாதபடி, மேலான ஒன்றை நமக்குக் கொடுக்க கடவுள் நினைத்
திருந்தார்.[f]

12 அதனால், திரண்ட மேகம் போன்ற இத்தனை சாட்சிகள் நம்மைச்
சூழ்ந்திருப்பதால், நாமும்கூட பாரமான எல்லாவற்றையும், நம்மை
எளிதில் சிக்க வைக்கிற பாவத்தையும்,[g] உதறித்தள்ளிவிட்டு நமக்கு நியமிக்
கப்பட்டிருக்கிற ஓட்டப் பந்தயத்தில் சகிப்புத்தன்மையோடு ஓடுவோமாக.[h]
2 விசுவாசத்தின் அதிபதியும் நம்முடைய விசுவாசத்தை முழுமையாக்குகி
றவருமான* இயேசுவின் மீதே கண்களைப் பதிய வைத்து[i] ஓடுவோ
மாக. அவர் தன் முன்னால் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் காரணமாக
அவமானத்தைப் பொருட்படுத்தாமல் மரக் கம்பத்தில்# வேதனைகளைச்
சகித்தார்; இப்போது, கடவுளுடைய சிம்மாசனத்தின் வலது பக்கத்தில்
உட்கார்ந்திருக்கிறார்.[j] **3** பாவிகள் தங்களுக்கே கேடுண்டாகும்படி பேசிய
கேவலமான பேச்சுகளையெல்லாம்[k] சகித்துக்கொண்ட அவரைப் பற்றிக்
கவனமாக யோசித்துப் பாருங்கள். அப்படிச் செய்தால், நீங்கள் சோர்ந்து
போய் பின்வாங்கிவிட மாட்டீர்கள்.[l]

4 பாவத்துக்கு எதிரான உங்களுடைய போராட்டத்தில் இரத்தம் சிந்து
மளவுக்கு நீங்கள் இன்னும் போராடவில்லை. **5** பிள்ளைகளுக்குச் சொல்
லப்படுவதுபோல் உங்களுக்குச் சொல்லப்பட்ட அறிவுரையை நீங்கள் அடி
யோடு மறந்துவிட்டீர்கள்: “என் மகனே, யெகோவாவின்* புத்திமதியை#
அலட்சியம் செய்யாதே, அவர் உன்னைத் திருத்தும்போது சோர்ந்து
போகாதே. **6** யெகோவா* யார்மேல் அன்பு வைத்திருக்கிறாரோ அவர்க
ளைக் கண்டித்துத் திருத்துகிறார். சொல்லப்போனால், யாரையெல்லாம் தன்
னுடைய மகன்களாக ஏற்றுக்கொள்கிறாரோ அவர்களையெல்லாம் தண்டிக்
கிறார்.”#[m]

7 உங்களைத் திருத்துவதற்காகத்தான்* கடவுள் உங்களைத் தண்டிக்
கிறார் என்பதைப் புரிந்துகொண்டு, அதைச் சகித்துக்கொள்ளுங்கள். அவர்
உங்களைத் தன்னுடைய மகன்களைப் போல் நடத்துகிறார்;[n] தகப்பன் கண்
டித்துத் திருத்தாத மகன் உண்டா?[o] **8** எல்லாருக்கும் கிடைக்கிற கண்டிப்பு
உங்களுக்குக் கிடைக்காவிட்டால் நீங்கள் உண்மையான மகன்களாக இல்
லாமல் முறைகேடாகப் பிறந்த மகன்களாகத்தான் இருப்பீர்கள். **9** பூமியி

12:2 *வே.வா., “பரிபூரணமாக்குகிறவருமான.” #சொல் பட்டியலைப் பாருங்கள். **12:5, 6** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12:5** #வே.வா., “யெகோவா கண்டிக்கும்போது.” **12:6** #நே.மொ., “அவர்களுக்கெல்லாம் சாட்டையடி கொடுக்கிறார்.” **12:7** *வே.வா., “உங்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகத்தான்.”

அதி. 11
a 1ரா 19:10
b 2ரா 1:8
c 1ரா 19:2
d 1ரா 22:24; எரே 38:6
e 1ரா 18:4; 1ரா 19:9
f எபி 2:3; எபி 3:1; எபி 7:22

அதி. 12
g எபி 3:12
h 1கொ 9:24, 26; பிலி 3:13, 14
i யோவா 14:6; அப் 5:31; எபி 2:10
j சங் 110:1; எபி 10:12
k மத் 27:39
l கலா 6:9
m நீதி 3:11, 12
n 2சா 7:14; எபி 2:10
o நீதி 13:24

லுள்ள நம் தகப்பன்கள் நம்மைக் கண்டித்துத் திருத்தினாலும், நாம் அவர்
களுக்கு மரியாதை கொடுத்தோம்; அப்படியானால், வாழ்வு பெறுவதற்காக
நம் பரலோகத் தகப்பனுக்கு* நாம் இன்னும் அதிகமாகக் கட்டுப்பட்டு
நடக்க வேண்டும், இல்லையா?[a] **10** பூமியிலுள்ள தகப்பன்கள் தங்களுக்
குச் சரியாகத் தோன்றியபடி கொஞ்சக் காலம் நம்மைக் கண்டித்துத் திருத்
தினார்கள். பரலோகத் தகப்பனோ, தன்னைப் போல் நாமும் பரிசுத்தமான
வர்களாக இருக்கும்படி[b] நம்முடைய நன்மைக்காக நம்மைக் கண்டித்துத்
திருத்துகிறார். **11** உண்மைதான், எந்தக் கண்டிப்பும் அந்தச் சமயத்தில்
சந்தோஷமாகத் தோன்றாது, வேதனையாகத்தான் தோன்றும். ஆனாலும்,
அதனால் பயிற்சி பெற்றவர்களுக்கு அது பிற்பாடு சமாதான பலனைத்
தரும், அதாவது நீதியான வாழ்வைத் தரும்.

12 அதனால், பலமில்லாத கைகளையும் தள்ளாடுகிற முழங்கால்களை
யும் பலப்படுத்துங்கள்;[c] **13** நீங்கள் போகிற பாதைகளை எப்போதும்
நேராக்குங்கள்;[d] அப்போதுதான், பலவீனமான கைகால் மூட்டுகள் பிசகிப்
போகாது, அவை குணமாகும். **14** எல்லாரோடும் சமாதானமாக இருக்கப்
பாடுபடுங்கள்,[e] புனிதமானவர்களாக இருக்கவும் பாடுபடுங்கள்;[f] புனிதமில்
லாதவர்கள் யாரும் நம் எஜமானைப் பார்க்க மாட்டார்கள். **15** உங்களில்
யாரும் கடவுளுடைய அளவற்ற கருணையை இழந்துவிடாதபடி எச்சரிக்
கையாக இருங்கள்; எந்தவொரு விஷத்தன்மையுள்ள வேரும் உங்களுக்
குள் முளைத்து பிரச்சினை உண்டாக்காதபடியும், அதனால் பலர் தீட்டுப்ப
டாதபடியும் எச்சரிக்கையாக இருங்கள்.[g] **16** அதோடு, உங்களில் யாரும்
பாலியல் முறைகேட்டில்* ஈடுபடுகிறவராகவோ, ஏசாவைப் போல் பரிசுத்த
காரியங்களை மதிக்காதவராகவோ இல்லாதபடி எச்சரிக்கையாக இருங்
கள்; அவன் ஒரேவொரு வேளை உணவுக்காகத் தன்னுடைய மூத்தமகன்
உரிமையைக் கொடுத்துவிட்டான்.[h] **17** அதன் பிறகு என்ன நடந்ததென்று
உங்களுக்கே தெரியும்; அவன் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்
பியும் ஒதுக்கித்தள்ளப்பட்டான்; அப்போது, அவன் கண்ணீர்விட்டுத்[i] தன்
அப்பாவுடைய மனதை மாற்ற எவ்வளவோ முயற்சி செய்தும் அவனால்
முடியவில்லை.

18 அப்படியானால், நீங்கள் அணுகியிருப்பது* தொட்டு உணரக்கூடிய
மலையை[j] அல்ல; அது தீப்பற்றி எரிந்தது,[k] அங்கே கார்மேகம் சூழ்ந்
தது, காரிருள் கவ்வியது, புயல்காற்று வீசியது,[l] **19** எக்காளம் முழங்கி
யது,[m] குரல் கேட்டது.[n] அந்தக் குரலைக் கேட்ட மக்கள் அதற்குமேல் ஒரு
வார்த்தைகூட அது தங்களிடம் பேச வேண்டாமென்று மோசேயிடம் கெஞ்
சிக் கேட்டுக்கொண்டார்கள்.[o] **20** ஏனென்றால், “ஒரு மிருகம் இந்த மலை
யைத் தொட்டால்கூட, அது கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்” என்ற
கட்டளையைக் கேட்டு அவர்கள் பயந்துபோயிருந்தார்கள்.[p] **21** அதோடு
மோசேயும்கூட, “நான் பயந்து நடுங்குகிறேன்”[q] என்று சொல்லும் அள
வுக்கு அந்தக் காட்சி பயங்கரமாக இருந்தது. **22** நீங்களோ பரலோக
சீயோன் மலையையும்,[r] உயிருள்ள கடவுளுடைய நகரமாகிய பரலோக எரு
சலேமையும்,[s] லட்சக்கணக்கான தேவதூதர்கள் அடங்கிய பேரவையையும்,[t]

12:9 * நே.மொ., “நம் ஆன்மீக வாழ்வின் தகப்பனுக்கு.” **12:16** * சொல் பட்டியலைப் பாருங்கள். **12:18** * இஸ்ரவேலர்கள் சீனாய் மலையை அணுகிய சமயத்தை இது குறிக்கிறது.

அதி. 12
a யாக் 4:10
b 1பே 1:15, 16
c ஏசா 35:3
d நீதி 4:26
e சங் 34:14; ரோ 12:18; ரோ 14:19
f ரோ 6:19; 1தெ 4:3, 4; எபி 10:10
g உபா 29:18
h ஆதி 25:32, 34
i ஆதி 27:34
j யாத் 19:12
k யாத் 19:18
l யாத் 19:16
m யாத் 19:19
n உபா 4:11, 12
o யாத் 20:18, 19
p யாத் 19:12, 13
q உபா 9:19
r வெளி 14:1
s வெளி 21:2
t தானி 7:10

23 பரலோக உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிற மூத்தமகன்களின்
சபையையும், எல்லாருக்கும் நீதிபதியாகிய கடவுளையும்,[a] அவருடைய சக்
தியால் பிறப்பிக்கப்பட்டுப்[b] பரிபூரணமாக்கப்பட்ட நீதிமான்களையும்,[c]
24 புதிய ஒப்பந்தத்தின்[d] மத்தியஸ்தரான இயேசுவையும்,[e] ஆபேலின் இரத்
தம்[f] பேசியதைவிட மேலான விதத்தில் பேசுகிற அவருடைய இரத்தமாகிய
தெளிக்கப்பட்ட இரத்தத்தையும் அணுகியிருக்கிறீர்கள்.

25 அதனால், கடவுள் பேசும்போது செவிகொடுக்காமல் இருந்து
விடாதபடி* பார்த்துக்கொள்ளுங்கள். ஏனென்றால், பூமியில் தெய்வீக எச்ச
ரிப்பைக் கொடுத்தவருக்குச் செவிகொடுக்காமல் இருந்தவர்கள் தண்டனை
யிலிருந்து தப்பிக்கவில்லை. அப்படியிருக்கும்போது, பரலோகத்திலிருந்து
பேசுகிறவருக்கு நாம் செவிகொடுக்காமல் அவரைவிட்டு விலகினால்,
தண்டனையிலிருந்து எப்படித் தப்பிப்போம்?[g] **26** அன்று கடவுளுடைய
குரல் பூமியை உலுக்கியது;[h] இன்றோ, "நான் இன்னொரு தடவை இந்தப்
பூமியை மட்டுமல்ல, வானத்தையும் உலுக்குவேன்" என்று அவர் வாக்குறுதி
கொடுத்திருக்கிறார்.[i] **27** "இன்னொரு தடவை" என்று அவர் குறிப்பிட்
டிருப்பது உலுக்கப்படுகிறவை, அதாவது உண்டாக்கப்பட்டவை, அழிக்கப்
படும் என்பதை அர்த்தப்படுத்துகிறது; உலுக்கப்படாதவை நிலைத்திருப்ப
தற்காக அவை அழிக்கப்படும். **28** அதனால், உலுக்கி அசைக்க முடியாத
அரசாங்கம் நமக்குக் கிடைக்கப்போவதால் தொடர்ந்து அளவற்ற கருணை
யைப் பெற்று, பயத்தோடும் பக்தியோடும் கடவுளுக்குப் பிரியமாகப் பரி
சுத்த சேவை செய்வோமாக. **29** ஏனென்றால், நம்முடைய கடவுள் சுட்டெ
ரிக்கிற நெருப்பாக இருக்கிறார்.[j]

13 தொடர்ந்து சகோதர அன்பைக் காட்டுங்கள்.[k] **2** உபசரிக்கும்
குணத்தை* காட்ட மறந்துவிடாதீர்கள்;[l] இந்தக் குணம் இருந்த
தால் சிலர் தங்களுக்கே தெரியாமல் தேவதூதர்களையும் உபசரித்தார்கள்.[m]
3 சிறையில் இருப்பவர்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்,[n] அவர்
களோடு நீங்களும் சிறையில் இருப்பதுபோல் நினைத்துக்கொள்ளுங்கள்;[o]
துன்புறுத்தப்படுகிறவர்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஏனென்
றால், நீங்களும்கூட இன்னும் இந்தப் பூமியில்தான் இருக்கிறீர்கள்.*
4 திருமண ஏற்பாட்டை எல்லாரும் மதியுங்கள்; தாம்பத்திய உறவின்* புனி
தத்தைக் கெடுக்காதீர்கள்.[p] ஏனென்றால், பாலியல் முறைகேட்டில்# ஈடுபடு
கிறவர்களையும், மணத்துணைக்குத் துரோகம் செய்கிறவர்களையும் கடவுள்
நியாயந்தீர்ப்பார்.[q] **5** பண ஆசையில்லாமல் வாழுங்கள்.[r] உள்ளதை
வைத்துத் திருப்தியோடு இருங்கள்.[s] ஏனென்றால், "நான் ஒருபோதும்
உன்னைவிட்டு விலக மாட்டேன், ஒருபோதும் உன்னைக் கைவிடவும் மாட்
டேன்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.[t] **6** அதனால், "யெகோவா*
எனக்குத் துணையாக இருக்கிறார். நான் பயப்பட மாட்டேன், மனித
னால் என்னை என்ன செய்ய முடியும்?"[u] என்று நாம் மிகவும் தைரியமா
கச் சொல்லலாம்.

12:25 *வே.வா., "சாக்குப்போக்கு சொல்லாதபடி; அலட்சியம் செய்யாதபடி." **13:2** *வே.வா., "அன்னியர்களுக்குத் தயவு." **13:3** *அல்லது, "அவர்களோடு சேர்ந்து நீங்களும் கஷ்டப்படுவதாக நினைத்துக்கொள்ளுங்கள்." **13:4** *நே.மொ., "பள்ளியறைப் படுக்கையின்." #சொல் பட்டியலைப் பாருங்கள். **13:6** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 12
a ஆதி 18:25; சங் 94:2; ஏசா 33:22
b எபி 12:9
c எபி 10:14
d மத் 26:27, 28
e 1தீ 2:5; எபி 9:15
f ஆதி 4:8, 10
g எபி 1:2; எபி 2:2-4
h யாத் 19:18
i ஆகா 2:6
j உபா 4:24

அதி. 13
k 1தெ 4:9; 1பே 1:22
l ரோ 12:13; 1தீ 3:2
m ஆதி 18:2, 3; ஆதி 19:1-3
n கொலோ 4:18
o ரோ 12:15
p நீதி 5:16, 20; மத் 5:28
q நீதி 6:32; 1கொ 6:9, 10; 1கொ 6:18; கலா 5:19, 21
r 1தீ 6:10
s நீதி 30:8, 9; 1தீ 6:8
t உபா 31:6, 8
u சங் 118:6; தானி 3:17; லூ 12:4

7 உங்களுக்குக் கடவுளுடைய வார்த்தையைக் கற்றுக்கொடுத்து
உங்களை வழிநடத்துகிறவர்களை நினைத்துப் பாருங்கள்.[a] அவர்களுடைய
நல்ல நடத்தையால் வருகிற பலன்களை ஆழமாக யோசித்து, அவர்களு
டைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.[b]

8 இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.

9 விசித்திரமான பலவித போதனைகளை நம்பி, வழிவிலகிப் போய்வி
டாதீர்கள். உணவால்* அல்ல, அளவற்ற கருணையால் இதயம் பலப்படு
வது நல்லது; உணவுக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுக்கிறவர்
களுக்கு எந்தப் பிரயோஜனமும் கிடைப்பதில்லை.[c]

10 நமக்கு ஒரு பலிபீடம் இருக்கிறது. அதில் கொடுக்கப்படுகிற பலிக
ளைச் சாப்பிட,[d] கூடாரத்தில் பரிசுத்த சேவை செய்கிறவர்களுக்கு அதிகா
ரம் இல்லை. **11** ஏனென்றால், பாவப் பரிகார பலியாக எந்த மிருகங்களின்
இரத்தத்தைத் தலைமைக் குரு மகா பரிசுத்த அறைக்குள் கொண்டுபோகி
றாரோ அந்த மிருகங்களின் உடல்கள் முகாமுக்கு வெளியே சுட்டெரிக்கப்
படுகின்றன.[e] **12** அதனால், இயேசுவும் தன்னுடைய சொந்த இரத்தத்தால்
மக்களைப் புனிதப்படுத்துவதற்காக[f] நகரவாசலுக்கு வெளியே பாடுகள் பட்
டார்.[g] **13** நாமும் அவருக்கு ஏற்பட்ட அவமானங்களைச் சுமந்து
கொண்டு,[h] முகாமுக்கு வெளியே அவரிடம் போவோமாக. **14** ஏனென்
றால், நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிற
நகரத்துக்காகவே நாம் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறோம்.[i] **15** அத
னால், இயேசுவின் வழியாகக் கடவுளுக்கு எப்போதும் நம்முடைய உதடுக
ளின் கனியைப் பலி செலுத்துவோமாக.[j] அதாவது, கடவுளுடைய
பெயரை எல்லாருக்கும் அறிவிப்பதன்[k] மூலம் அவருக்குப் புகழ்ச்சிப் பலி
யைச் செலுத்துவோமாக.[l] **16** அதோடு, நல்லது செய்வதற்கும், உங்களிடம்
இருப்பதை மற்றவர்களுக்குத் தாராளமாகக் கொடுப்பதற்கும் மறந்துவிடாதீர்
கள்;[m] இப்படிப்பட்ட பலிகளைக் கடவுள் மிகவும் விரும்புகிறார்.[n]

17 உங்களை வழிநடத்துகிறவர்கள் உங்களைப் பற்றிக் கணக்குக்
கொடுக்க வேண்டியிருப்பதால்[o] உங்களைப் பாதுகாத்து வருகிறார்கள்; அத
னால், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து,[p] அடிபணிந்து நடங்கள்;[q] அப்போது,
அவர்கள் இதை வருத்தத்தோடு செய்யாமல் சந்தோஷத்தோடு செய்
வார்கள்; அவர்கள் இதை வருத்தத்தோடு செய்தால் நீங்கள்தான் பாதிக்கப்
படுவீர்கள்.

18 எங்களுக்காகத் தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள்; ஏனென்றால்,
நாங்கள் எல்லாவற்றிலும் நேர்மையாக நடக்க விரும்புகிறோம்; எங்க
ளுக்குச் சுத்தமான* மனசாட்சி இருக்கிறது என்று உறுதியாக நம்புகிறோம்.[r]
19 முக்கியமாக, நான் சீக்கிரத்தில் உங்களிடம் வருவதற்காக ஜெபம் செய்
யும்படி உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.

20 ஆடுகளின் பெரிய மேய்ப்பரான[s] நம் எஜமான் இயேசுவை
என்றென்றுமுள்ள ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் இரத்தத்தோடு உயிருடன்
எழுப்பிய சமாதானத்தின் கடவுள், **21** தன்னுடைய விருப்பத்தை* நீங்கள்
செய்வதற்குத் தேவையான நல்ல காரியங்கள் எல்லாவற்றையும்

13:9 *அதாவது, "உணவைப் பற்றிய சட்டங்களால்." **13:18** *நே.மொ., "நல்ல." **13:21** *வே.வா., "சித்தத்தை."

அதி. 13
a 1தீ 5:17; எபி 13:17
b 1கொ 11:1; 2தெ 3:7
c ரோ 14:17; 1கொ 8:8; கொலோ 2:16
d 1கொ 9:13; 1கொ 10:18
e லேவி 16:27
f எபி 9:13, 14
g யோவா 19:17
h ரோ 15:3; 2கொ 12:10; 1பே 4:14
i எபி 11:10; எபி 12:22
j சங் 69:30, 31; ஓசி 14:2
k ரோ 10:9
l லேவி 7:12; சங் 50:14, 23
m ரோ 12:13
n பிலி 4:18
o அப் 20:28
p 1தெ 5:12
q எபே 5:21; 1பே 5:5
r 2கொ 1:12
s 1பே 5:4

உங்களுக்குத் தருவாராக; தனக்குப் பிரியமானதை இயேசு கிறிஸ்து மூலம் நம்மைச் செய்ய வைப்பாராக; அவருக்கே என்றென்றும் மகிமை உண்டாவதாக. ஆமென்.*

22 சகோதரர்களே, உற்சாகம் தருகிற இந்த வார்த்தைகளைப் பொறுமையாக வாசிக்கும்படி உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்; நான் உங்களுக்குச் சுருக்கமாகத்தான் கடிதம் எழுதியிருக்கிறேன்.
23 நம் சகோதரராகிய தீமோத்தேயு விடுதலையாகிவிட்டார் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் சீக்கிரமாக வந்தால், நான் அவரோடு வந்து உங்களைப் பார்ப்பேன்.

24 உங்களை வழிநடத்துகிறவர்களுக்கும் மற்ற எல்லா பரிசுத்தவான்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைச் சொல்லுங்கள். இத்தாலியில்[a] இருக்கிறவர்கள் உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள்.

25 நம் எஜமானுடைய அளவற்ற கருணை உங்கள் எல்லார்மீதும் இருக்கட்டும்.

13:21 * அதாவது, "அப்படியே ஆகட்டும்."

அதி. 13
a அப் 27:1

யாக்கோபு

எழுதிய கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1)
- சகிப்புத்தன்மை சந்தோஷத்தைத் தருகிறது (2-15)
  - சோதிக்கப்பட்ட விசுவாசம் (3)
  - விசுவாசத்தோடு கேட்டுக்கொண்டே இருங்கள் (5-8)
  - ஆசை, பாவத்திலும் மரணத்திலும் கொண்டுபோய் விடும் (14, 15)
- நல்ல பரிசுகள் பரலோகத்திலிருந்து வருகின்றன (16-18)
- கடவுளுடைய வார்த்தையைக் கேட்பதும் அதன்படி செய்வதும் (19-25)
  - கண்ணாடியில் முகத்தைப் பார்க்கிற மனிதன் (23, 24)
- சுத்தமான, களங்கமில்லாத வழிபாடு (26, 27)

2 பாரபட்சம் காட்டுவது ஒரு பாவம் (1-13)
  - அன்பு, ராஜ சட்டம் (8)
- செயல்கள் இல்லாத விசுவாசம் செத்தது (14-26)
  - பேய்களும்கூட நம்பி, பயந்து நடுங்குகின்றன (19)
  - ஆபிரகாம் யெகோவாவின் நண்பர் (23)

3 நாக்கை அடக்குவது (1-12)
  - நிறைய பேர் போதகர்களாக வேண்டாம் (1)
- பரலோகத்திலிருந்து வருகிற ஞானம் (13-18)

4 உலகத்துக்கு நண்பராக இருக்காதீர்கள் (1-12)
  - பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் (7)
  - கடவுளிடம் நெருங்கி வாருங்கள் (8)
- பெருமைப்படக் கூடாது (13-17)
  - "யெகோவாவுக்கு விருப்பமானால்" (15)

5 பணக்காரர்களுக்கு எச்சரிக்கை (1-6)
- பொறுமையாகச் சகித்திருப்பவர்களைக் கடவுள் ஆசீர்வதிக்கிறார் (7-11)
- நீங்கள் "ஆம்" என்று சொல்வது ஆம் என்று இருக்கட்டும் (12)
- விசுவாசத்தோடு செய்யப்படுகிற ஜெபம் மிகவும் வலிமையுள்ளது (13-18)
- ஒரு பாவி திரும்பிவர உதவி செய்வது (19, 20)

அதி. 1

1 கடவுளுக்கும் நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அடிமையாக
இருக்கிற யாக்கோபு,[a] பல இடங்களுக்குச் சிதறிப்போன 12 கோத்தி
ரத்தாருக்கு எழுதுவது:
வாழ்த்துக்கள்!
2 என் சகோதரர்களே, உங்களுக்குப் பலவிதமான கஷ்டங்கள்*
வரும்போது அதற்காகச் சந்தோஷப்படுங்கள்.[b] 3 இப்படிக் கஷ்டங்கள்*
மூலம் சோதிக்கப்பட்ட உங்கள் விசுவாசம்[c] சகிப்புத்தன்மையை உண்டாக்
கும் என்பது உங்களுக்குத் தெரியும். 4 உங்கள் சகிப்புத்தன்மை முழுமை
யாக வேலை செய்யட்டும்; அப்போதுதான் நீங்கள் முழுமையானவர்களாக
வும், எந்தக் குறையுமில்லாமல் எல்லா விதத்திலும் நிறைவானவர்களாகவும்
இருப்பீர்கள்.[d]
5 உங்களில் ஒருவனுக்கு ஞானம் குறைவாக இருந்தால், கடவுளிடம்
அவன் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்;[e] அப்படிக் கேட்கிறவர்
களை அவர் திட்ட* மாட்டார். எல்லாருக்கும் தாராளமாகக் கொடுக்கிற
கடவுள் அவனுக்கும் கொடுப்பார்.[f] 6 ஆனால், அவன் கொஞ்சம்கூட சந்
தேகப்படாமல் விசுவாசத்தோடு[g] கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.[h]
ஏனென்றால், சந்தேகப்படுகிறவன் காற்றால் இங்குமங்கும் அடிக்கப்படுகிற
கடல் அலையைப் போல் இருக்கிறான். 7 அப்படிப்பட்ட மனிதன்
யெகோவாவிடமிருந்து* எதையாவது பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்
பார்க்கக் கூடாது; 8 அவன் இரண்டு மனதாக இருப்பவன்,[i] தன் வழிகளி
லெல்லாம் உறுதியில்லாதவன்.
9 தாழ்ந்த நிலையில் இருக்கிற ஒரு சகோதரன் தனக்கு ஏற்பட்டிருக்
கிற உயர்வை நினைத்து சந்தோஷப்படட்டும்.*[j] 10 பணக்காரனாக இருக்
கிற ஒரு சகோதரன் தனக்கு ஏற்பட்ட தாழ்வை நினைத்து சந்தோஷப்படட்
டும்.[k] ஏனென்றால், புல்வெளியில் இருக்கிற பூவைப் போல் அவன் காய்ந்து
போவான். 11 உச்சிவெயில் கொளுத்தும்போது, செடி வாடி வதங்குகி
றது, பூ உதிர்ந்து, அதன் அழகு மறைந்துபோகிறது. அதேபோல், பணக்கா
ரனும் தன்னுடைய போக்கில் போய்க்கொண்டிருக்கும்போதே வாடி மறைந்
துபோவான்.[l]
12 சோதனைகளைச் சகித்துக்கொண்டே இருக்கும் மனிதன் சந்தோஷ
மானவன்;[m] ஏனென்றால், யெகோவாவினால்* ஏற்றுக்கொள்ளப்படும்போது,
வாழ்வு என்ற கிரீடம் அவனுக்குக் கிடைக்கும்.[n] தன்னிடம் தொடர்ந்து
அன்பு காட்டுகிறவர்களுக்கு அதைத் தருவதாக அவர் வாக்குக் கொடுத்தி
ருக்கிறார்.[o] 13 சோதனை வரும்போது, “கடவுள் என்னைச் சோதிக்கிறார்”
என்று யாரும் சொல்லக் கூடாது. கெட்ட காரியங்களால் கடவுளைச்
சோதிக்க முடியாது, அவரும் யாரையும் சோதிப்பது கிடையாது. 14 ஒவ்
வொருவனும் தன்னுடைய ஆசையால் கவர்ந்திழுக்கப்பட்டு, சிக்க வைக்கப்
பட்டு, சோதிக்கப்படுகிறான்.[p] 15 பின்பு அந்த ஆசை கருத்தரித்து, பாவத்
தைப் பிறப்பிக்கிறது, பாவம் கடைசியில் மரணத்தை உண்டாக்குகிறது.[q]
16 என் அன்பான சகோதரர்களே, ஏமாந்துவிடாதீர்கள். 17 நல்ல பரி
சுகள் ஒவ்வொன்றும், மிகச் சிறந்த* அன்பளிப்புகள் ஒவ்வொன்றும்

1:2, 3 *வே.வா., “சோதனைகள்.” **1:5** *வே.வா., “குறைசொல்ல.” **1:7, 12** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:9** *நே.மொ., “பெருமை பேசட்டும்.” **1:17** *நே.மொ., “பரிபூரணமான.”

a மத் 13:55
b மத் 5:11, 12
c 1பே 1:6, 7
d 1கொ 14:20; எபே 4:13
e 1ரா 3:9; மாற் 11:24; 1யோ 3:22
f நீதி 2:3-6; மத் 7:11; யோவா 15:7; 1யோ 5:14
g மத் 21:22; எபி 11:6
h மத் 7:7
i யாக் 4:8
j யாக் 2:5
k 1தீ 6:17
l ஏசா 40:6, 7; மத் 19:24
m மத் 5:10; யாக் 1:2
n 2தீ 4:8; 1பே 5:4; வெளி 2:10
o யாக் 2:5
p ஆதி 3:6; 1யோ 2:16
q ரோ 5:21

பரலோகத்திலிருந்து வருகின்றன,[a] ஆம், ஒளியின் தகப்பனிடமிருந்து வரு
கின்றன;[b] அவர் நிழலைப் போல் மாறிக்கொண்டே இருப்பவர் அல்ல.[c]
18 அவரால் படைக்கப்பட்டவர்களில் நாம் முதலாவது தேர்ந்தெடுக்கப்
பட்டவர்களாக*[d] இருக்க வேண்டுமென்று அவர் விரும்பியதால்,# சத்திய
வார்த்தையின் மூலம் நமக்கு உயிர் கொடுத்தார்.[e]

19 என் அன்பான சகோதரர்களே, இதைத் தெரிந்துகொள்ளுங்கள்: ஒவ்
வொருவரும் நன்றாகக் காதுகொடுத்துக் கேட்கிறவர்களாகவும், யோசித்து
நிதானமாகப் பேசுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்,[f] சட்டென்று கோபப்
படாதவர்களாகவும் இருக்க வேண்டும்.[g] **20** ஏனென்றால், கோபப்படுகிற
மனிதனால் கடவுளுடைய நீதியை நிறைவேற்ற முடியாது.[h] **21** அதனால்,
எல்லா விதமான அருவருப்பையும் ஒதுக்கிவிடுங்கள்; கெட்ட குணத்தை*
சுவடு தெரியாமல் ஒழித்துவிடுங்கள்.[i] அதோடு, உங்களை மீட்பதற்கு
வல்லமையுள்ள கடவுளுடைய வார்த்தையைச் சாந்தமாக ஏற்றுக்கொண்டு
அதை உங்கள் மனதில் பதிய வையுங்கள்.

22 ஆனாலும், கடவுளுடைய வார்த்தையைக் கேட்டால் மட்டும் போது
மென்று நினைத்துக்கொண்டு உங்களையே ஏமாற்றிக்கொள்ளாதீர்கள்,
அந்த வார்த்தையின்படி செய்கிறவர்களாகவும் இருங்கள்.[j] **23** ஏனென்
றால், கடவுளுடைய வார்த்தையைக் கேட்டுவிட்டு அதன்படி செய்யாத
மனிதன்,[k] கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கிறவனைப் போல் இருக்கி
றான். **24** அவன் தன்னைக் கண்ணாடியில் பார்த்துவிட்டுப் போனவுடனே
தன் தோற்றம் எப்படி இருந்தது என்பதை மறந்துவிடுகிறான். **25** ஆனால்,
விடுதலை தருகிற பரிபூரணமான சட்டத்தைக்[l] கூர்ந்து கவனித்து அதை
விடாமல் கடைப்பிடிக்கிறவன், தான் கேட்ட விஷயங்களை மறந்துவிடா
மல் அதன்படி செய்கிறான்; அப்படிச் செய்வதால் அவன் சந்தோஷமாக
இருக்கிறான்.[m]

26 கடவுளை வழிபடுவதாக* நினைத்துக்கொண்டிருக்கிற ஒருவன் தன்
நாக்கை அடக்காமல்#[n] தன் இதயத்தை ஏமாற்றிக்கொண்டிருந்தால்,
அவனுடைய வழிபாடு வீணானதாக இருக்கும். **27** கஷ்டப்படுகிற
அநாதைகளையும்[o] விதவைகளையும்[p] கவனித்துக்கொள்வதும்,[q] இந்த உல
கத்தால் கறைபடாமல்[r] நம்மைப் பாதுகாத்துக்கொள்வதும்தான் நம் தகப்
பனாகிய கடவுளுடைய பார்வையில் சுத்தமான, களங்கமில்லாத வழிபா
டாகும்.*

2 என் சகோதரர்களே, மகிமையுள்ள நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்து
மேல் விசுவாசம் வைத்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு பாரபட்சம்
காட்டுகிறீர்களா?[s] **2** தங்க மோதிரங்களும் ஆடம்பரமான உடையும்
போட்ட ஒரு மனிதனும், அழுக்கு உடை போட்ட ஓர் ஏழை மனிதனும் உங்
கள் கூட்டத்துக்கு வந்தால், **3** ஆடம்பரமான உடை போட்டிருப்ப
வனை விசேஷமாகக் கவனித்து, “நீங்கள் இந்த நல்ல இடத்தில் உட்கா
ருங்கள்” என்று சொல்கிறீர்களா? ஆனால், ஏழை மனிதனைப் பார்த்து, “நீ
நின்றுகொண்டே இரு,” அல்லது “நீ தரையில்* உட்கார்” என்று சொல்கிறீர்

1:18 *நே.மொ., “முதல் விளைச்சலாக.” #வே.வா., “சித்தம்கொண்டதால்.” **1:21** *அல்லது, “மிகுதியான கெட்ட குணத்தை.” **1:26** *வே.வா., “தன்னைப் பக்திமானாக.” #வே.வா., “நாக்குக்குக் கடிவாளம் போடாமல்.” **1:27** *வே.வா., “மதமாகும்.” **2:3** *நே.மொ., “என் கால்மணை பக்கத்தில்.”

அதி. 1
a மத் 7:11
b எரே 31:35; 2கொ 4:6
c மல் 3:6
d வெளி 14:4
e யோவா 1:12, 13; ரோ 8:28; எபே 1:13, 14; 2தெ 2:13; 1பே 1:23
f நீதி 10:19; நீதி 17:27
g பிர 7:9; மத் 5:22
h யாக் 3:18
i கொலோ 3:8; 1பே 2:1
j லேவி 18:5; 1சா 15:22; மத் 7:21; 1யோ 3:7
k லூ 6:46; யாக் 2:14
l சங் 19:7
m மத் 7:24; லூ 11:28; யோவா 13:17
n சங் 39:1; நீதி 12:18; நீதி 15:2; 1பே 3:10
o உபா 14:29; உபா 27:19; சங் 68:5
p ஏசா 1:17; 1தீ 5:3
q யோபு 29:12, 13; ஏசா 58:7
r 1கொ 5:7; யாக் 4:4; வெளி 18:4

அதி. 2
s 1தீ 5:21; யாக் 3:17

களா?[a] 4 அப்படியென்றால், உங்கள் மத்தியில் பாகுபாடு காட்டி[b] அநி
யாயமான தீர்ப்புகளைக் கொடுக்கும் நீதிபதிகளாக ஆகியிருக்கிறீர்கள் என்
றுதானே அர்த்தம்?[c]

5 என் அன்பான சகோதரர்களே, கேளுங்கள். இந்த உலகத்தில் ஏழை
களாக இருப்பவர்கள் விசுவாசத்தில் செல்வந்தர்களாக[d] இருப்பதற்குக்
கடவுள் அவர்களைத் தேர்ந்தெடுத்தார், இல்லையா? தன்மீது அன்பு காட்
டுகிறவர்களுக்குத் தான் வாக்குக் கொடுத்த அரசாங்கத்தின் வாரிசுகளாக
இருப்பதற்கும் தேர்ந்தெடுத்தார், இல்லையா?[e] 6 ஆனால், நீங்கள் ஏழை
களை அவமானப்படுத்துகிறீர்கள். பணக்காரர்கள்தானே உங்களை ஒடுக்கி,[f]
நீதிமன்றங்களுக்கு இழுத்துக்கொண்டு போகிறார்கள்? 7 உங்களுக்குக்
கொடுக்கப்பட்ட மதிப்புள்ள பெயரை அவர்கள்தானே நிந்திக்கிறார்கள்?
8 “உங்கள்மேல் நீங்கள் அன்பு காட்டுவது போல மற்றவர்கள்மேலும்*
அன்பு காட்ட வேண்டும்” என்று வேதவசனம் சொல்கிறது.[g] இந்த ராஜ சட்
டத்தை இப்போது நீங்கள் கடைப்பிடித்து வந்தால் மிகவும் நல்லது.
9 ஆனால், தொடர்ந்து பாரபட்சம் காட்டுகிறீர்கள் என்றால்,[h] பாவம் செய்
கிறீர்கள்; ஏனென்றால், நீங்கள் குற்றவாளிகள் என்று அந்தச் சட்டமே தீர்ப்பு
கொடுக்கிறது.*[i]

10 ஒருவன் திருச்சட்டத்தில் இருக்கிற எல்லா கட்டளைகளையும் கடைப்
பிடித்து, ஒரேவொரு கட்டளையை மட்டும் மீறினால், அவன் எல்லா கட்ட
ளைகளையும் மீறியவனாக ஆகிவிடுவான்.[j] 11 ஏனென்றால், “மணத்
துணைக்குத் துரோகம் செய்யக் கூடாது”[k] என்று சொன்னவர்தான், “கொலை
செய்யக் கூடாது”[l] என்றும் சொன்னார். அதனால், நீங்கள் மணத்துணைக்குத்
துரோகம் செய்யாதபோதிலும் கொலை செய்தால், திருச்சட்டத்தை மீறியவர்
களாக இருப்பீர்கள். 12 சுதந்திரமான மக்களுடைய சட்டத்தின்படி*[m] நியா
யந்தீர்க்கப்படுகிறவர்கள் எப்படிப் பேச வேண்டுமோ அப்படியே பேசுங்
கள், எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படியே நடந்துகொள்ளுங்கள்.
13 ஏனென்றால், இரக்கம் காட்டாதவன் இரக்கமில்லாமல் நியாயந்தீர்க்கப்
படுவான்.[n] இரக்கம் நியாயத்தீர்ப்பை ஜெயிக்கும்.

14 என் சகோதரர்களே, ஒருவன் தனக்கு விசுவாசம் இருப்பதாகச்
சொல்லிக்கொண்டு அதற்கேற்ற செயல்களைச் செய்யாமலிருந்தால் என்ன
பிரயோஜனம்?[o] அந்த விசுவாசம் அவனைக் காப்பாற்றாது, இல்லையா?[p]
15 ஒரு சகோதரனுக்கோ சகோதரிக்கோ உடையும் அன்றாட உணவும்
இல்லாதபோது, 16 உங்களில் ஒருவன் அவரிடம், “சமாதானமாகப் போங்
கள், உங்களைக் கதகதப்பாக வைத்துக்கொள்ளுங்கள், வயிறார சாப்பிடுங்
கள்” என்று சொல்லிவிட்டு அவருடைய உடலுக்குத் தேவையானவற்
றைக் கொடுக்கவில்லை என்றால் என்ன பிரயோஜனம்?[q] 17 அதேபோல்,
விசுவாசத்தைச் செயலில் காட்டவில்லை என்றால், அது செத்ததாக
இருக்கும்.[r]

18 ஆனாலும் ஒருவன், “உன்னிடம் விசுவாசம் இருக்கிறது, என்
னிடம் செயல்கள் இருக்கின்றன. செயல்கள் இல்லாமல் உன்னுடைய விசு
வாசத்தை எனக்குக் காட்டு, நான் என் விசுவாசத்தைச் செயல்கள் மூலம்
உனக்குக் காட்டுகிறேன்” என்று சொல்வான். 19 கடவுள் ஒருவர்

2:8 *வே.வா., “சக மனிதர்மேலும்.” **2:9** *வே.வா., “கண்டிக்கிறது.” **2:12** *நே.மொ., “சுதந்திர சட்டத்தின்படி.”

அதி. 2
a லேவி 19:15
b கலா 3:28
c உபா 1:17
d வெளி 2:9
e லூ 22:28-30
f அப் 13:50
g லேவி 19:18, மத் 22:39, ரோ 13:10
h யாக் 2:1
i லேவி 19:15
j உபா 27:26, கலா 3:10
k யாத் 20:14, உபா 5:18
l யாத் 20:13, உபா 5:17
m யாக் 1:25
n நீதி 21:13, மத் 5:7, மத் 6:15, லூ 6:36
o தீத் 3:8, யாக் 1:25
p 1கொ 13:2
q உபா 15:7, 8, மத் 25:35, 36, லூ 3:11, ரோ 12:13, 1தீ 5:4, யாக் 1:27, 1யோ 3:17
r மத் 7:21, எபி 10:24

இருக்கிறார் என்று நீ நம்புகிறாய், இல்லையா? நல்லதுதான். ஆனால், பேய்
களும்கூட அப்படி நம்பி, பயந்து நடுங்குகின்றன.[a] **20** அறிவில்லாத மனி
தனே, செயல்கள் இல்லாத விசுவாசத்தால் எந்தப் பிரயோஜனமும் இல்லை
என்பதை ஒத்துக்கொள்ள உனக்கு ஆதாரம் வேண்டுமா? **21** நம் தகப்ப
னான ஆபிரகாம் தன்னுடைய மகன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் படுக்க
வைத்தபோது, செயல்களால்தானே நீதிமானாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்?[b]
22 உனக்குத் தெரிந்தபடி, அவருடைய விசுவாசமும் அவருடைய செயல்
களும் ஒன்றுசேர்ந்து செயல்பட்டன, அவருடைய செயல்களால் அவரு
டைய விசுவாசம் முழுமையானது.*[c] **23** இப்படி, "ஆபிரகாம் யெகோவா
மேல்* விசுவாசம் வைத்தார், அதனால் அவர் நீதிமானாகக் கருதப்பட்டார்"
என்ற வேதவசனம் நிறைவேறியது.[d] அவர் யெகோவாவின்* நண்பர்
என்று அழைக்கப்பட்டார்.[e]

24 ஒரு மனிதன் விசுவாசத்தால் மட்டுமல்ல, அவனுடைய செயல்களா
லும் நீதிமானாக ஏற்றுக்கொள்ளப்படுகிறான் என்பது புரிகிறது, இல்லையா?
25 அதேபோல், ராகாப் என்ற விலைமகளும் தூதுவர்களை உபசரித்து
வேறு வழியாக அனுப்பி வைத்தபோது, அவளுடைய செயல்களால்
தானே நீதியுள்ளவளாக ஏற்றுக்கொள்ளப்பட்டாள்?[f] **26** உயிர்* இல்லாத
உடல் செத்ததாயிருப்பதுபோல்,[g] செயல்கள் இல்லாத விசுவாசமும் செத்த
தாயிருக்கிறது.[h]

3 என் சகோதரர்களே, போதகர்களான எங்களுக்கு வருகிற நியா
யத்தீர்ப்பு மற்றவர்களுக்கு வருவதைவிட மிகக் கடுமையாக இருக்கும்[i]
என்பது உங்களுக்குத் தெரிந்திருப்பதால் உங்களில் நிறைய பேர் போதகர்
களாக வேண்டாம். **2** நாம் எல்லாரும் பல தடவை தவறு செய்கிறோம்.*[j]
பேச்சில் தவறு செய்யாதவன் எவனோ அவனே பரிபூரணமான மனி
தன்; அவன் தன்னுடைய முழு உடலையும் கடிவாளம்போட்டு அடக்க முடி
கிறவனாக இருப்பான். **3** குதிரைகளை அடக்க நாம் அவற்றின் வாயில்
கடிவாளம் போடும்போது அவற்றின் முழு உடலையும் கட்டுப்படுத்திவிடு
கிறோம், இல்லையா? **4** கப்பல்களைப் பாருங்கள்! அவை எவ்வளவு
பெரிதாக இருந்தாலும், பலத்த காற்றால் அலைக்கழிக்கப்பட்டாலும், கப்ப
லோட்டி மிகச் சிறிய சுக்கானை வைத்து தான் விரும்புகிற திசையை
நோக்கி அவற்றை ஓட்டுகிறான்.

5 அதேபோல், நாக்கும்கூட ஒரு சிறிய உறுப்புதான். இருந்தாலும், அது
பயங்கரமாகப் பெருமையடிக்கிறது. சிறிதளவு நெருப்பு எவ்வளவு பெரிய
காட்டைக் கொளுத்திவிடுகிறது, பாருங்கள்! **6** நாக்கும் நெருப்புதான்.[k]
நம்முடைய உறுப்புகளில் ஒன்றான இந்த நாக்கு அநீதி நிறைந்த உலகமாக
இருக்கிறது. ஏனென்றால், அது நம் முழு உடலையும் கறைபடுத்தி,[l] நம்
முழு வாழ்க்கையையும்* எரித்துவிடுகிறது; அதற்கு கெஹென்னா#
நெருப்பு மூட்டிவிடுகிறது. **7** எல்லா வகையான காட்டு மிருகங்களையும்
பறவைகளையும் ஊரும் பிராணிகளையும் கடல் பிராணிகளையும் மனித
னால் அடக்கிவிட முடியும், அடக்கியும் இருக்கிறான். **8** ஆனால், நாக்கை
எந்த மனிதனாலும் அடக்க முடியாது. அது அடங்காதது, தீமை உண்டாக்

2:22 *வே.வா., "பரிபூரணமானது." **2:23** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:26** *வே.வா., "உயிர்மூச்சு." **3:2** *நே.மொ., "தடுக்கி விழுகிறோம்." **3:6** *நே.மொ., "நம் வாழ்க்கைச் சக்கரத்தை." #சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 2
a மத் 8:28, 29
லூ 4:33, 34
b ஆதி 22:9, 12
c எபி 11:17
d ஆதி 15:6
ரோ 4:3
கலா 3:6
e 2நா 20:7
ஏசா 41:8
f யோசு 2:1, 15
யோசு 6:17
எபி 11:31
g சங் 146:4
h ரோ 10:10
யாக் 2:17

அதி. 3
i லூ 12:48
j 1ரா 8:46
நீதி 20:9
1யோ 1:8
k நீதி 16:27
மத் 12:36, 37
l சங் 39:1
மத் 15:11, 18
மாற் 7:23

குவது, கொடிய விஷம் நிறைந்தது.[a] **9** அந்த நாக்கினால் நம்முடைய தகப்பனாகிய யெகோவாவை* புகழ்கிறோம்; இருந்தாலும், “கடவுளுடைய சாயலில்” படைக்கப்பட்ட மனிதர்களை[b] அதே நாக்கினால் சபிக்கிறோம். **10** புகழ்வதும் சபிப்பதும் ஒரே வாயிலிருந்து வருகின்றன.

என் சகோதரர்களே, இப்படியெல்லாம் நடக்கக் கூடாது.[c] **11** ஒரே நீரூற்றிலிருந்து தித்திப்பான தண்ணீரும் கசப்பான தண்ணீரும் வருமா? **12** என் சகோதரர்களே, அத்தி மரம் ஒலிவப் பழங்களையோ, திராட்சைக் கொடி அத்திப் பழங்களையோ கொடுக்குமா?[d] அதேபோல், உப்பு நீரூற்று நல்ல* தண்ணீரைக் கொடுக்குமா?

13 உங்கள் மத்தியில் யாருக்கு ஞானமும் புரிந்துகொள்ளும் திறனும் இருக்கிறது? இவற்றை நல்ல நடத்தையின் மூலமும், ஞானத்தால் வருகிற சாந்தத்தின் மூலமும் அவன் காட்டட்டும். **14** உங்கள் இதயங்களில் பயங்கர பொறாமையும்[e] பகையும்* இருக்கிறதென்றால்,[f] நீங்கள் பெருமையடிக்காதீர்கள்.[g] உண்மைக்கு விரோதமாகப் பொய் பேசாதீர்கள். **15** இப்படிப்பட்ட ஞானம் பரலோகத்திலிருந்து வருகிற ஞானம் அல்ல. இது உலகப் பிரகாரமானது,[h] மிருகத்தனமானது, பேய்த்தனமானது. **16** பொறாமையும் பகையும்* எங்கேயோ, அங்கே கலகங்களும் கீழ்த்தரமான எல்லா செயல்களும் இருக்கும்.[i]

17 பரலோகத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமானதாக இருக்கிறது.[j] பின்பு சமாதானம் பண்ணுவதாக,[k] நியாயமானதாக,*[l] கீழ்ப்படியத் தயாரானதாக, இரக்கமும் நல்ல செயல்களும் நிறைந்ததாக,[m] பாரபட்சம் இல்லாததாக,[n] வெளிவேஷம் போடாததாக இருக்கிறது.[o] **18** சமாதானம் பண்ணுகிறவர்களுக்காக*[p] சமாதானச் சூழலில் நீதியின் விதை விதைக்கப்பட்டு, அதன் கனி அறுவடை செய்யப்படுகிறது.[q]

4 உங்கள் மத்தியில் சண்டைகளும் தகராறுகளும் வருவதற்குக் காரணம் என்ன? உங்கள் உடல் உறுப்புகளில் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற உடலின் ஆசைகள்தான், இல்லையா?[r] **2** நீங்கள் ஆசைப்படுகிறீர்கள், ஆனாலும் உங்களுக்குக் கிடைப்பதில்லை. நீங்கள் கொலை செய்துகொண்டும் பேராசைப்பட்டுக்கொண்டும் அலைகிறீர்கள்; ஆனாலும், உங்களால் பெற முடிவதில்லை. விடாப்பிடியாகச் சண்டைகளிலும் தகராறுகளிலும் ஈடுபடுகிறீர்கள்.[s] நீங்கள் வேண்டிக்கொள்ளாததால் உங்களுக்குக் கிடைப்பதில்லை. **3** நீங்கள் வேண்டிக்கொண்டாலும் கிடைப்பதில்லை; ஏனென்றால், தவறான நோக்கத்துக்காக, அதாவது உங்கள் உடலின் ஆசைகளைத் திருப்திப்படுத்துவதற்காக வேண்டிக்கொள்கிறீர்கள்.

4 கடவுளுக்கு உண்மையாக இல்லாதவர்களே,* உலக நட்பு கடவுளுக்குப் பகை என்பது உங்களுக்குத் தெரியாதா? அதனால், உலகத்துக்கு நண்பனாக இருக்க ஆசைப்படுகிற எவனும் கடவுளுக்கு எதிரியாகிறான்.[t] **5** “நமக்குள் குடிகொண்டிருக்கிற மனப்பான்மை பொறாமைக் குணத்தோடு சதா ஏங்கிக்கொண்டிருக்கிறது” என்று வேதவசனம் வீணாகச் சொல்கிறதென நினைக்கிறீர்களா?[u] **6** இருந்தாலும், கடவுள் காட்டுகிற அளவற்ற கருணை அந்தக் குணத்தை வென்றுவிடும். அதனால், “தலைக்கனம்

3:9 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:12** *நே.மொ., “தித்திப்பான.” **3:14, 16** *அல்லது, “சுயநல லட்சியமும்.” **3:17** *அதாவது, “வளைந்துகொடுப்பதாக.” **3:18** *அல்லது, “பண்ணுகிறவர்களால்.” **4:4** *நே.மொ., “விபச்சாரிகளே.”

அதி. 3
a சங் 140:3; நீதி 12:18; நீதி 18:7
b ஆதி 1:26, 27
c எபே 4:29
d மத் 7:16
e ரோ 13:13; 1கொ 3:3
f எபே 4:31
g 1கொ 13:4
h 1கொ 2:14; பிலி 3:19
i நீதி 14:30; கலா 5:19-21
j ரோ 12:9; 1தீ 5:1, 2
k 2கொ 13:11; 1தெ 5:13; 2பே 3:14
l 1தீ 3:3; தீத் 3:2
m கலா 5:22, 23
n யாக் 2:9
o 1பே 1:22
p மத் 5:9; 1பே 3:11
q ஏசா 32:17; எபி 12:11

அதி. 4
r ரோ 7:23; கலா 5:17; யாக் 3:14; 1பே 2:11
s மத் 5:22; யாக் 3:16
t 2நா 19:2; யோவா 15:19; யோவா 17:14; யோவா 18:36; 1யோ 2:15; 1யோ 5:19
u ஆதி 6:5; ஆதி 8:21

உள்ளவர்களைக் கடவுள் எதிர்க்கிறார்,[a] தாழ்மை உள்ளவர்களுக்கோ அள
வற்ற கருணை காட்டுகிறார்" என்று வேதவசனம் சொல்கிறது.[b]

7 அதனால், கடவுளுக்கு அடங்கி நடங்கள்;[c] பிசாசுக்கு எதிர்த்து
நில்லுங்கள்,[d] அப்போது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.[e] **8** கட
வுளிடம் நெருங்கி வாருங்கள், அப்போது அவர் உங்களிடம் நெருங்கி வரு
வார்.[f] பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்தமாக்குங்கள்;[g] இரண்டு மனதாக
இருக்கிறவர்களே, உங்கள் இதயங்களைத் தூய்மையாக்குங்கள்.[h] **9** வருத்
தப்பட்டு புலம்பி அழுங்கள்.[i] உங்கள் சிரிப்பு அழுகையாகவும், உங்கள் சந்
தோஷம் துக்கமாகவும் மாறட்டும். **10** யெகோவாவுக்கு* முன்னால் உங்க
ளைத் தாழ்த்துங்கள்,[j] அப்போது அவர் உங்களை உயர்த்துவார்.[k]

11 சகோதரர்களே, ஒருவருக்கு விரோதமாக ஒருவர் பேசுவதை விட்டு
விடுங்கள்.[l] தன் சகோதரனுக்கு விரோதமாகப் பேசுகிறவன் அல்லது தன்
சகோதரனை நியாயந்தீர்க்கிறவன் சட்டத்துக்கு விரோதமாகப் பேசுகிறான்,
சட்டத்தை நியாயந்தீர்க்கிறான். நீங்கள் அப்படிச் சட்டத்தை நியாயந்தீர்க்கி
றீர்கள் என்றால், சட்டத்தைக் கடைப்பிடிக்கிறவர்களாக அல்ல, அதற்கு
நீதிபதிகளாகவே இருக்கிறீர்கள். **12** ஆனால், சட்டத்தைக் கொடுப்பவ
ராகவும் நீதிபதியாகவும் இருப்பவர் ஒருவர்தான்;[m] காப்பாற்றவும் அழிக்க
வும் வல்லவர் அவர்தான்.[n] அப்படியிருக்கும்போது, மற்றவர்களை நியாயந்
தீர்க்க நீங்கள் யார்?[o]

13 “இன்றைக்கோ நாளைக்கோ நாங்கள் இந்த நகரத்துக்குப் போய், ஒரு
வருஷம் தங்கி, வியாபாரம் செய்து லாபம் சம்பாதிப்போம்”[p] என்று சொல்கி
றவர்களே, கேளுங்கள். **14** நாளைக்கு உங்கள் வாழ்க்கையில் என்ன நடக்
குமென்று உங்களுக்குத் தெரியாது.[q] ஏனென்றால், கொஞ்சம் நேரம் இருந்
துவிட்டு மறைந்துபோகிற மூடுபனியைப் போல் நீங்கள் இருக்கிறீர்கள்.[r]
15 அதனால், “யெகோவாவுக்கு* விருப்பமானால்,#[s] நாங்கள் உயிரோடி
ருப்போம், இதை இதைச் செய்வோம்” என்றுதான் நீங்கள் சொல்ல வேண்
டும். **16** ஆனால், இப்போது நீங்கள் ஆணவத்தோடு உங்களைப் பற்றிப்
பெருமையடிக்கிறீர்கள், அது போதாதென்று அதைப் பற்றிப் பெருமைப்பட்
டும் கொள்கிறீர்கள். இப்படிப்பட்ட எல்லா விதமான பெருமையும் பொல்
லாதது. **17** அதனால், சரியானதைச் செய்ய ஒருவனுக்குத் தெரிந்திருந்தும்
அதை அவன் செய்யாமல் இருந்தால், அது பாவம்.[t]

5 பணக்காரர்களே, கேளுங்கள், உங்களுக்கு வரப்போகிற கஷ்டங்
களை நினைத்துக் கதறி அழுங்கள்.[u] **2** உங்களுடைய செல்வங்கள்
மக்கிப்போய்விட்டன. உங்களுடைய உடைகள் பூச்சிகளால்* அரிக்கப்பட்டு
விட்டன.[v] **3** உங்கள் தங்கமும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன. அந்தத்
துருவே உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லும், அது உங்கள் சதை
யைத் தின்றுவிடும். நீங்கள் குவித்து வைத்திருப்பது கடைசி நாட்களில் ஒரு
நெருப்பைப் போல் இருக்கும்.[w] **4** உங்கள் வயல்களில் அறுவடை செய்த
வர்களுடைய கூலியைப் பிடித்து வைத்திருக்கிறீர்கள்; அது கதறிக்
கொண்டே இருக்கிறது. அறுவடை செய்தவர்களுடைய கூக்குரல், பரலோ
கப் படைகளின் யெகோவாவுடைய* காதுக்கு எட்டியிருக்கிறது.[x] **5** இந்தப்
பூமியில் நீங்கள் ஆடம்பரமாக வாழ்ந்திருக்கிறீர்கள், ஆசைகளைத் திருப்தி

4:10, 15; 5:4 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:15** #வே.வா., “சித்தமானால்.” **5:2** *நே.மொ., “அந்துப்பூச்சிகளால்.”

அதி. 4
a சங் 138:6
b நீதி 3:34
1பே 5:5
c எபி 12:9
1பே 2:17
1பே 5:6
d எபே 4:27
எபே 6:11
e மத் 4:10, 11
லூ 4:13
f ஏசா 44:22
ஏசா 55:6, 7
g ஏசா 1:16
h 1யோ 3:3
i யோவே 2:12
j 2நா 7:14
2நா 33:12, 13
k நீதி 29:23
மத் 23:12
l லேவி 19:16
நீதி 17:9
m ஏசா 33:22
n மத் 10:28
o மத் 7:1
லூ 6:37
ரோ 14:4
p லூ 12:18-20
q சங் 39:6
நீதி 27:1
பிர 6:12
r யோபு 14:1, 2
சங் 102:3
1பே 1:24
s அப் 18:21
எபி 6:3
t லூ 12:47
யோவா 9:41
யோவா 15:22

அதி. 5
u நீதி 11:28
லூ 6:24
லூ 18:25
v மத் 6:19
லூ 12:33
w எசே 7:19
x லேவி 19:13
உபா 24:
14, 15
எரே 22:13
மல் 3:5

செய்வதிலேயே மூழ்கியிருக்கிறீர்கள். வெட்டப்படும் நாளுக்காகக் கொழுக்க
வைக்கப்பட்டிருக்கிற மிருகங்களைப் போல் உங்களுடைய இதயம்
கொழுத்துப்போய் இருக்கிறது.[a] **6** நீதிமானைக் கண்டனம் செய்திருக்கி
றீர்கள், கொலையும் செய்திருக்கிறீர்கள். அதனால்தானே அவர் உங்களை
எதிர்க்கிறார்?

7 சகோதரர்களே, நம் எஜமானுடைய பிரசன்னம்வரை[b] பொறுமை
யோடு இருங்கள். இதோ! நிலத்தில் நல்ல விளைச்சல் கிடைப்பதற்காக
முதல் பருவ மழையும் கடைசி பருவ மழையும் வரும்வரை[c] ஒரு விவ
சாயி பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறான். **8** அதேபோல், நீங்
களும் பொறுமையோடு இருங்கள்;[d] உங்கள் இதயத்தை உறுதிப்படுத்துங்
கள்; ஏனென்றால், நம் எஜமானுடைய பிரசன்னம் நெருங்கிவிட்டது.[e]

9 சகோதரர்களே, நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதபடி, ஒருவ
ருக்கு விரோதமாக ஒருவர் முணுமுணுக்காதீர்கள்;*[f] இதோ! நீதிபதி கதவுக்
குப் பக்கத்தில் நிற்கிறார். **10** சகோதரர்களே, கஷ்டத்தைத் தாங்கிக்கொள்
வதிலும் பொறுமையைக் காட்டுவதிலும்,[g] யெகோவாவின்* பெயரில்
பேசிய தீர்க்கதரிசிகளை[h] உங்கள் முன்மாதிரிகளாக வைத்துக்கொள்
ளுங்கள்.[i] **11** சகிப்புத்தன்மை காட்டியவர்களைச் சந்தோஷமானவர்கள்#
என்று கருதுகிறோம்.[j] யோபுவின் சகிப்புத்தன்மையைப் பற்றிக் கேள்விப்
பட்டிருக்கிறீர்கள்,[k] முடிவில் யெகோவா* அவரை ஆசீர்வதித்ததைப் பற்
றியும் தெரிந்திருக்கிறீர்கள்;[l] யெகோவா* கனிவான பாசமும்△ இரக்கமும்
நிறைந்தவர்,[m] இல்லையா?

12 எல்லாவற்றுக்கும் மேலாக, என் சகோதரர்களே, சத்தியம் செய்வதை
நிறுத்திவிடுங்கள்; பரலோகத்தின் மீதோ பூமியின் மீதோ வேறெதன் மீதோ
சத்தியம் செய்யாதீர்கள். நீங்கள் “ஆம்” என்று சொல்வது ஆம் என்றும்,
“இல்லை” என்று சொல்வது இல்லை என்றும் இருக்கட்டும்.[n] இப்படிச் செய்
தால் நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாக மாட்டீர்கள்.

13 உங்களில் எவனாவது கஷ்டப்படுகிறானா? அப்படியானால், அவன்
தொடர்ந்து ஜெபம் செய்யட்டும்.[o] எவனாவது சந்தோஷமாக இருக்கி
றானா? அவன் சங்கீதம் பாடட்டும்.[p] **14** உங்களில் எவனாவது வியா
தியாக இருக்கிறானா? அப்படியானால், சபையில் இருக்கிற மூப்பர்களை
அவன் வரவழைக்கட்டும்.[q] அவர்கள் யெகோவாவின்* பெயரில் அவ
னுக்கு எண்ணெய் பூசி[r] அவனுக்காக ஜெபம் செய்யட்டும். **15** விசுவாசத்
தோடு செய்யப்படுகிற ஜெபம் வியாதியாக# இருப்பவனைக் குணமாக்கும்,
யெகோவா* அவனை எழுந்திருக்க வைப்பார். அதோடு, அவன் பாவங்
கள் செய்திருந்தால், அவற்றை அவர் மன்னிப்பார்.

16 அதனால், உங்கள் பாவங்களை ஒருவருக்கொருவர் வெளிப்படை
யாக ஒத்துக்கொள்ளுங்கள்.[s] ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்யுங்கள்,
அப்போது குணமாவீர்கள். நீதிமானின் மன்றாட்டு மிகவும் வலிமையுள்ளது.[t]
17 எலியா நம்மைப் போன்ற மனிதர்தான், நமக்கு இருக்கும் உணர்ச்சிகள்
தான் அவருக்கும் இருந்தன. ஆனாலும், மழை பெய்யக் கூடாதென்று அவர்

அதி. 5
a எரே 12:3
b மத் 24:3
c உபா 11:14; எரே 5:24
d எபி 6:12
e 1தெ 3:13
f 1கொ 4:5
g எபி 6:12
h 2நா 36:16
i மத் 5:12
j யாக் 1:2-4
k யோபு 1:20, 21
l யோபு 42:10
m சங் 103:8; லூ 6:36
n மத் 5:34-37
o சங் 50:15
p கொலோ 3:16
q அப் 20:28, 35; 1பே 5:2
r சங் 141:5; மாற் 6:13; லூ 10:34
s 2சா 12:13; சங் 32:5; நீதி 28:13; 1யோ 1:9
t 1சா 12:18; 1ரா 13:6

5:9 *வே.வா., “குமுறாதீர்கள்; குறை சொல்லாதீர்கள்.” நே.மொ., “பெருமூச்சு விடாதீர்கள்.” **5:10, 11, 14, 15** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **5:11** #வே.வா., “ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.” △வே.வா., “மிகுந்த கரிசனையும்.” **5:15** #அல்லது, “சோர்வாக.”

ஊக்கமாக ஜெபம் செய்தபோது, பூமியில் மூன்றரை வருஷங்களுக்கு மழை
பெய்யவில்லை.[a] 18 அவர் மறுபடியும் ஜெபம் செய்தபோது வானத்திலி
ருந்து மழை பெய்தது, பூமி அதன் பலனைத் தந்தது.[b]
19 என் சகோதரர்களே, யாராவது உங்களில் ஒருவனைச் சத்தியத்தை
விட்டு வழிவிலகச் செய்யும்போது மற்றொருவன் அவனைத் திரும்பிவர
வைத்தால், 20 தவறான வழியிலிருந்து அந்தப் பாவியைத் திரும்பிவர
வைக்கிறவன்[c] அவனுடைய உயிரைக் காப்பாற்றி, அவன் செய்த ஏராள
மான பாவங்களை மூடுவான்[d] என்று தெரிந்துகொள்ளுங்கள்.

அதி. 5
a 1ரா 17:1
b 1ரா 18:42, 45
c கலா 6:1
d 1தீ 4:16

பேதுரு
எழுதிய முதலாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1, 2)
அசைக்க முடியாத நம்பிக்கை கிடைப்பதற்காகப் புதிய பிறப்பைக் கொடுத்தார் (3–12)
கீழ்ப்படிகிற பிள்ளைகளாக, பரிசுத்தமாக நடந்துகொள்ளுங்கள் (13–25)

2 கடவுளுடைய வார்த்தைக்காக ஏக்கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள் (1–3)
உயிருள்ள கற்கள் ஆன்மீக வீடாகக் கட்டப்படுகின்றன (4–10)
இந்த உலகத்தில் அன்னியர்களாக வாழுங்கள் (11, 12)
சரியான விதத்தில் கட்டுப்பட்டு நடங்கள் (13–25)
கிறிஸ்து நமக்கு ஒரு முன்மாதிரி (21)

3 மனைவிகளும் கணவர்களும் (1–7)
அனுதாபம் காட்டுங்கள்; சமாதானத்தைத் தேடுங்கள் (8–12)
நீதிக்காகப் படும் கஷ்டம் (13–22)
உங்கள் நம்பிக்கையை ஆதரித்துப் பேச தயாராயிருங்கள் (15)
ஞானஸ்நானமும் நல்ல மனசாட்சியும் (21)

4 கிறிஸ்துவைப் போல், கடவுளுடைய விருப்பத்தின்படி வாழுங்கள் (1–6)
எல்லாவற்றுக்கும் முடிவு நெருங்கிவிட்டது (7–11)
கிறிஸ்தவராக இருப்பதால் கஷ்டங்களை அனுபவிப்பது (12–19)

5 கடவுளுடைய மந்தையை மேய்த்துவாருங்கள் (1–4)
மனத்தாழ்மையுடனும் விழிப்புடனும் இருங்கள் (5–11)
கவலைகளையெல்லாம் கடவுள்மேல் போட்டுவிடுங்கள் (7)
கர்ஜிக்கிற சிங்கம்போல் பிசாசு (8)
முடிவான வார்த்தைகள் (12–14)

1 பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா,[a] ஆசியா, பித்தினியா ஆகிய
இடங்களுக்குச் சிதறிப்போய்த் தற்காலிகக் குடிமக்களாக வாழ்கிற
உங்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு[b]
எழுதுவது:
கடவுளுடைய அளவற்ற கருணையும் சமாதானமும் உங்களுக்கு அதி
கமதிகமாகக் கிடைக்கட்டும்.

அதி. 1
a அப் 2:5, 9
b மத் 10:2

2 நீங்கள் பரலோகத் தகப்பனாகிய கடவுளுக்குக் கீழ்ப்படிகிறவர்களா
கவும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்பட்டவர்களாகவும்[a] இருப்
பதற்காக, கடவுளுடைய முன்னறிவின்படி[b] தேர்ந்தெடுக்கப்பட்டு, அவரு
டைய சக்தியால் பரிசுத்தமாக்கப்பட்டு இருக்கிறீர்கள்.[c]

3 நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் கடவுளாகவும் தகப்பனாகவும்
இருப்பவருக்குப் புகழ் சேரட்டும். அவர் இயேசு கிறிஸ்துவை உயிரோடு
எழுப்பியதன் மூலம்[d] தன்னுடைய மகா இரக்கத்தின்படி எங்களுக்குப்
புதிய பிறப்பைக் கொடுத்தார்.[e] இதனால் அசைக்க முடியாத நம்பிக்கையும்,[f]
4 அழியாத, களங்கமில்லாத, மறையாத ஆஸ்தியும்,[g] எங்களுக்குக் கிடைத்
திருக்கிறது. அந்த ஆஸ்தி உங்களுக்காகவும் பரலோகத்தில் வைக்கப்பட்டி
ருக்கிறது.[h] **5** விசுவாசத்தின் மூலம் கடைசிக் காலத்தில் வெளிப்படுத்தப்ப
டும் மீட்புக்கென்று கடவுளுடைய வல்லமையால் பாதுகாக்கப்பட்டு வருகிற
உங்களுக்காகவும் அந்த ஆஸ்தி பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.
6 இதனால் நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள். ஆனாலும், கொஞ்சக்
காலம் பலவிதமான சோதனைகளால் நீங்கள் வேதனைப்பட வேண்டியிருக்
கிறது.[i] **7** இப்படிச் சோதனைகளால் சோதிக்கப்பட்ட* உங்கள் விசுவாசம்[j]
தங்கத்தைவிட மதிப்புள்ளது. ஏனென்றால், நெருப்பில் சோதிக்கப்படுகிற தங்
கம்கூட அழிந்துபோகும். உங்கள் விசுவாசமோ இயேசு கிறிஸ்து வெளிப்
படும் சமயத்தில் உங்களுக்குப் புகழையும் மகிமையையும் மதிப்பையும்
சேர்க்கும்.[k] **8** நீங்கள் அவரைப் பார்த்ததே இல்லையென்றாலும், அவர்
மேல் அன்பு காட்டுகிறீர்கள். இப்போது நீங்கள் அவரைப் பார்க்காமல்
இருந்தாலும், அவர்மேல் விசுவாசம் வைக்கிறீர்கள்; அதோடு, சொல்ல முடி
யாத சந்தோஷத்தையும் அளவில்லாத மகிழ்ச்சியையும் அடைகிறீர்கள்.
9 ஏனென்றால், உங்களுடைய விசுவாசத்தின் பலனாக உங்களுக்கு மீட்பு
கிடைக்கும் என்று உறுதியாக நம்புகிறீர்கள்.[l]

10 உங்களுக்குக் கிடைக்கவிருந்த அளவற்ற கருணையைப் பற்றி முன்
கூட்டியே சொன்ன தீர்க்கதரிசிகள், இந்த மீட்பைப் பற்றித்தான் ஊக்கமா
கவும் கவனமாகவும் அலசி ஆராய்ந்தார்கள்.[m] **11** கிறிஸ்து அனுப
விக்க வேண்டியிருந்த பாடுகளையும்[n] அவற்றுக்குப் பின்பு வரவிருந்த
மகிமையையும் பற்றி அவர்களிடமிருந்த கடவுளுடைய சக்தி முன்கூட்
டியே சொன்னபோது, எந்தக் காலத்தை அல்லது எந்த வேளையை
அது சுட்டிக்காட்டுகிறது என்பதை அவர்கள் ஆராய்ந்துகொண்டே இருந்
தார்கள்.[o] **12** அவர்கள் சேவை செய்துவந்தது தங்களுக்காக அல்ல, உங்
களுக்காகத்தான் என்பது அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள்
முன்கூட்டியே சொன்ன விஷயங்கள், பரலோகத்திலிருந்து கொடுக்கப்
பட்ட கடவுளுடைய சக்தியால் நல்ல செய்தியைப் பிரசங்கித்தவர்களின்
மூலம் இப்போது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.[p] அந்த விஷ
யங்களைக் கூர்ந்து கவனிப்பதற்குத் தேவதூதர்களும் ஆவலோடு இருக்கி
றார்கள்.

13 அதனால், மும்முரமாகச் செயல்படுவதற்கு உங்கள் மனதைத் தயார்
படுத்துங்கள்,*[q] எப்போதும் தெளிந்த புத்தியோடு இருங்கள்.[r] இயேசு

1:7 * வே.வா., "புடமிடப்பட்ட." **1:13** * நே.மொ., "உங்கள் மனதின் கச்சையைக் கட்டிக்கொள்ளுங்கள்."

அதி. 1
a ஏபி 12:22, 24
b ரோ 8:29
c 2தெ 2:13
d 1கொ 15:20
e 1பே 1:23
f வெளி 20:6
g 1கொ 15:53; 2தீ 1:10; 1பே 5:4
h யோவா 14:2; 2தீ 4:8
i 2கொ 4:17; 2தீ 3:12
j யாக் 1:2, 3
k 2தெ 1:7
l ரோ 6:22
m மத் 13:17
n ஏசா 53:5
o தானி 9:24-27
p யோவா 15:26; அப் 2:4
q லூ 12:35
r எபே 5:17; 1பே 4:7

கிறிஸ்து வெளிப்படும் சமயத்தில் உங்களுக்குக் கொடுக்கப்படுகிற அள
வற்ற கருணையின் மேல் நம்பிக்கை வையுங்கள். **14** கடவுளைப் பற்றித்
தெரியாத காலத்தில் உங்களுக்கு இருந்த ஆசைகளின்படி நடப்பதை
விட்டுவிட்டு, கீழ்ப்படிகிற பிள்ளைகளாக நடந்துகொள்ளுங்கள். **15** உங்
களை அழைத்தவர் பரிசுத்தமானவராக இருப்பது போல நீங்களும் உங்கள்
நடத்தை எல்லாவற்றிலும் பரிசுத்தமாக இருங்கள்.[a] **16** “நான் பரிசுத்தமா
னவர், அதனால் நீங்களும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்” என்று எழுதப்
பட்டிருக்கிறதே.[b]

17 பாரபட்சம் இல்லாமல்[c] அவரவருடைய செயல்களுக்கு ஏற்ப தீர்ப்பு
கொடுக்கிற தகப்பனிடம் நீங்கள் ஜெபம் செய்வதால், தற்காலிகக் குடி
மக்களாக வாழும் காலமெல்லாம் பயபக்தியோடு நடந்துகொள்ளுங்கள்.[d]
18 ஏனென்றால், உங்கள் முன்னோர்களிடமிருந்து* வந்த வீணான
வாழ்க்கை முறையிலிருந்து, அழியக்கூடிய பொருள்களான தங்கம்,
வெள்ளி போன்றவற்றால் நீங்கள் விடுவிக்கப்படாமல்,[e] **19** மாசில்லாத,
களங்கமில்லாத ஆட்டுக்குட்டியாகிய[f] கிறிஸ்துவின்[g] விலைமதிப்புள்ள
இரத்தத்தால்[h] விடுவிக்கப்பட்டு* இருக்கிறீர்கள், இது உங்களுக்கே தெரி
யும். **20** உண்மைதான், உலகம் உண்டாவதற்கு முன்பே கடவுளால் அவர்
தேர்ந்தெடுக்கப்பட்டார்,[i] ஆனால் இந்தக் கடைசிக் காலங்களில் உங்களுக்
காக வெளிப்படுத்தப்பட்டார்.[j] **21** அவர் மூலம்தான் நீங்கள் கடவுள்மேல்
நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்.[k] அப்படி நீங்கள் கடவுள்மேல் விசுவாசமும்
நம்பிக்கையும் வைப்பதற்காகத்தான் கடவுள் அவரை உயிரோடு எழுப்பி[l]
மகிமைப்படுத்தினார்.[m]

22 நீங்கள் சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து உங்களைச் சுத்தமாக்கியிருப்ப
தால் வெளிவேஷம் இல்லாத சகோதரப் பாசத்தைக் காட்டுகிறீர்கள்;[n] அத
னால் இப்போது, இதயப்பூர்வமான அன்பை ஒருவருக்கொருவர் ஊக்க
மாகக் காட்டுங்கள்.[o] **23** ஏனென்றால், அழியக்கூடிய விதையால் அல்ல,[p]
அழியாத விதையால்,* என்றென்றும் இருக்கிற உயிருள்ள கடவு
ளுடைய வார்த்தையின் மூலம்[q] நீங்கள் புதிய பிறப்பைப் பெற்றிருக்கி
றீர்கள்.[r] **24** வேதவசனம் சொல்கிறபடி, “மனுஷர்கள் எல்லாரும் புல்லைப்
போல் இருக்கிறார்கள், அவர்களுடைய மகிமையெல்லாம் புல்வெளிப்
பூவைப் போல் இருக்கிறது; புல் உலர்ந்துபோகும், அதன் பூவும் உதிர்ந்து
போகும். **25** ஆனால், யெகோவாவின்* வார்த்தை என்றென்றும் நிலைத்
திருக்கும்.”[s] இந்த ‘வார்த்தைதான்’ உங்களுக்கு நல்ல செய்தியாக அறிவிக்
கப்பட்டிருக்கிறது.[t]

2 அதனால், எல்லா விதமான கெட்ட குணத்தையும் சூழ்ச்சியையும்
வெளிவேஷத்தையும் பொறாமையையும் புண்படுத்துகிற பேச்சையும்
விட்டுவிடுங்கள்.[u] **2** பச்சிளம் குழந்தைகள்[v] பாலுக்காக ஏங்குவதுபோல்,
கடவுளுடைய வார்த்தையில் இருக்கிற கலப்படமில்லாத* பாலுக்காக ஏக்
கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்; அதைக் குடிப்பதன் மூலம் நீங்கள் வளர்ச்
சியடைந்து மீட்புப் பெறுவீர்கள்.[w] **3** ஏனென்றால், நம் எஜமான் கருணை
யுள்ளவர் என்பதை நீங்கள் ருசித்து* பார்த்திருக்கிறீர்கள்.

1:18 *வே.வா., “பாரம்பரியத்தால்.” **1:19** *நே.மொ., “மீட்கப்பட்டு.” **1:23** *அதாவது, “கனி தரக்கூடிய விதையால்.” **1:25** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **2:2** *வே.வா., “சுத்தமான.” **2:3** *வே.வா., “அனுபவத்தில்.”

அதி. 1

a உபா 28:9, ரோ 12:1, எபி 12:14
b லேவி 11:44, லேவி 19:2, லேவி 20:7, 26
c உபா 10:17
d 2கொ 7:1
e 1கொ 6:20
f யாத் 12:5, லேவி 22:20, யோவா 1:29
g 1கொ 5:7
h ஏசா 53:12, எபி 9:14
i யோவா 17:5, எபே 1:4
j கொலோ 1:26, 27
k யோவா 14:6
l அப் 2:24
m எபி 2:9
n ரோ 12:9, 1யோ 3:17
o 1தீ 1:5
p யோவா 3:6
q யோவா 6:63, யாக் 1:18
r யோவா 3:3, 2கொ 5:17, 1பே 1:3, 1யோ 3:9
s ஏசா 40:6-8
t தீத் 1:3

அதி. 2

u கலா 5:16, யாக் 1:21
v மாற் 10:15
w 2தீ 3:15

4 மனிதர்களால் ஒதுக்கித்தள்ளப்பட்டதாக[a] இருந்தாலும், கடவுளால்
தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அவருடைய பார்வையில் விலைமதிப்புள்ள
தாகவும் இருக்கிற உயிருள்ள கல்லாகிய நம் எஜமானிடம்[b] வரும்போது,
5 உயிருள்ள கற்களாகிய நீங்களும்கூட ஆன்மீக வீடாகக் கட்டப்படுகிறீர்
கள்.[c] கடவுளுக்குப் பிரியமான ஆன்மீக பலிகளை[d] இயேசு கிறிஸ்துவின்
மூலம் கொடுக்கும்படி, பரிசுத்த குருமார்களாக இருக்க அப்படிக் கட்டப்ப
டுகிறீர்கள். **6** ஏனென்றால், "இதோ! நான் சீயோனில் ஒரு மூலைக்கல்லை
நாட்டுகிறேன்; அது தேர்ந்தெடுக்கப்பட்ட, விலைமதிப்புள்ள மூலைக்கல்;
அதன்மீது விசுவாசம் வைக்கிற யாருமே ஒருபோதும் ஏமாற்றம் அடைய*
மாட்டார்கள்" என்று வேதவசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.[e]

7 அதனால், விசுவாசிகளாக* இருக்கிற உங்களுக்கு அவர் மதிப்புள்ள
வராக இருக்கிறார். ஆனால் விசுவாசிகளாக இல்லாதவர்களுக்கு, "கட்டி
டம் கட்டுகிறவர்கள் ஒதுக்கித்தள்ளிய[f] கல்லே மூலைக்குத் தலைக்கல்லாக
ஆனது."[g] **8** அதோடு, "தடைக்கல்லாகவும், தடுக்கிவிழ வைக்கும் கற்
பாறையாகவும் ஆனது."[h] கடவுளுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாததால்
தான் அவர்கள் தடுக்கி விழுகிறார்கள்; அதுதான் அப்படிப்பட்டவர்களுக்கு
வரப்போகும் முடிவு. **9** ஆனால் நீங்கள், இருளிலிருந்து தன்னுடைய
அற்புதமான ஒளியின் பக்கம் உங்களை அழைத்தவருடைய[i] "மகத்துவங்
களை* எல்லா இடங்களிலும் அறிவிப்பதற்குத்[j] தேர்ந்தெடுக்கப்பட்ட இன
மாக, ராஜ அதிகாரமுள்ள குருமார்களாக, பரிசுத்த ஜனமாக,[k] அவருடைய
விசேஷ சொத்தாக"[l] இருக்கிறீர்கள். **10** முன்பு நீங்கள் கடவுளுடைய
மக்களாக இருக்கவில்லை, இப்போதோ அவருடைய மக்களாக இருக்கிறீர்
கள்;[m] முன்பு உங்களுக்குக் கடவுள் இரக்கம் காட்டவில்லை, இப்போதோ
இரக்கம் காட்டியிருக்கிறார்.[n]

11 அன்பானவர்களே, நீங்கள் இந்த உலகத்தில் அன்னியர்களாகவும்
தற்காலிகக் குடிமக்களாகவும்[o] இருப்பதால், உங்களுக்கு எதிராகப் போர்
செய்துகொண்டிருக்கிற[p] பாவ ஆசைகளிலிருந்து விலகியிருக்க வேண்டு
மென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.[q] **12** உலக மக்கள் மத்தியில்
எப்போதும் நல்ல நடத்தை உள்ளவர்களாக இருங்கள்;[r] அவர்கள் உங்க
ளைக் கெட்டவர்கள் என்று சொன்னாலும், உங்களுடைய நல்ல செயல்
களை நேரடியாகப் பார்த்து,[s] கடவுள் சோதனையிடும் நாளில் அவரை மகி
மைப்படுத்துவார்கள்.

13 அதிகாரத்தில் இருக்கிற எல்லாருக்கும்,*[t] எஜமானை முன்னிட்டு
கட்டுப்பட்டு நடங்கள்: உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிற ராஜாவாக இருந்தா
லும்[u] சரி, **14** கெட்டது செய்கிறவர்களைத் தண்டிப்பதற்கும் நல்லது செய்கி
றவர்களைப் பாராட்டுவதற்கும் அவரால் அனுப்பப்பட்ட ஆளுநராக இருந்
தாலும் சரி, எல்லாருக்கும் கட்டுப்பட்டு நடங்கள்.[v] **15** இப்படி நீங்கள்
சரியான விதத்தில் நடந்து,* முட்டாள்தனமாகப் பேசுகிற புத்தியில்லாத
ஆட்களின் வாயை அடைக்க வேண்டுமென்பது கடவுளுடைய விருப்
பம்.#[w] **16** நீங்கள் சுதந்திரமாக வாழுங்கள்.[x] இருந்தாலும், உங்களுடைய

2:6 *நே.மொ., "அவமானப்பட." **2:7** *வே.வா., "இயேசுவின் சீஷர்களாக." **2:9** *அதாவது, "புகழுக்குரிய குணங்களையும் செயல்களையும்." **2:13** *வே.வா., "மனிதர்களால் உருவாக்கப்பட்ட எல்லாவற்றுக்கும்." **2:15** *வே.வா., "நல்லது செய்து." #வே.வா., "சித்தம்."

அதி. 2
a ஏசா 53:3; யோவா 19:15
b சங் 118:22; ஏசா 42:1; மத் 21:42; அப் 4:11
c எபே 2:21
d ரோ 12:1; எபி 13:15
e ஏசா 28:16
f சங் 69:8
g சங் 118:22; மத் 21:42; லூ 20:17; அப் 4:11
h ஏசா 8:14
i எபே 5:8; கொலோ 1:13
j ஏசா 43:20, 21
k வெளி 5:10; வெளி 20:6
l யாத் 19:5, 6; உபா 7:6; உபா 10:15; மல் 3:17
m ஓசி 1:10; அப் 15:14; ரோ 9:25
n ஓசி 2:23
o 1பே 1:17
p கலா 5:17; யாக் 4:1
q ரோ 8:5; கலா 5:24
r ரோ 12:17; 1தீ 3:7
s மத் 5:16; யாக் 3:13
t ரோ 13:1; எபே 6:5; தீத் 3:1
u 1பே 2:17
v ரோ 13:3, 4
w தீத் 2:7, 8
x கலா 5:1

சுதந்திரத்தைக் கெட்ட செயல்களை மறைக்கும் போர்வையாக* பயன்படுத்
தாதீர்கள்,[a] கடவுளுக்கு அடிமைகளாக வாழுங்கள்.[b] **17** எல்லா விதமான
ஆட்களுக்கும் மதிப்புக் கொடுங்கள்.[c] சகோதரர்கள் எல்லாரிடமும் அன்பு
காட்டுங்கள்.[d] கடவுளுக்குப் பயந்து நடங்கள்.[e] ராஜாவுக்கு மதிப்புக்
கொடுங்கள்.[f]

18 வேலைக்காரர்களே, உங்கள் முதலாளிகளுக்குத் தகுந்த மரியாதை
காட்டி அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடங்கள்;[g] நல்லவர்களாகவும் நியாய
மானவர்களாகவும் இருக்கிற முதலாளிகளுக்கு மட்டுமல்ல, பிரியப்படுத்
தக் கடினமானவர்களாக இருக்கிறவர்களுக்கும் கட்டுப்பட்டு நடங்கள்.
19 கடவுளுக்கு முன்னால் நீங்கள் சுத்தமான மனசாட்சியோடு இருப்பதற்
காக அநியாயமாய்ப் பாடுகள் பட்டு வேதனைகளை* சகித்துக்கொண்டால்,[h]
அது கடவுளுக்குப் பிரியமாக இருக்கும். **20** நீங்கள் பாவம் செய்ததற்
காக அடிக்கப்படும்போது சகித்துக்கொண்டால், அதில் என்ன விசேஷம்?[i]
ஆனால், நீங்கள் நன்மை செய்ததற்காகப் பாடுகள் படும்போது அவற்றைச்
சகித்துக்கொண்டால், அதுதான் கடவுளுக்குப் பிரியமாக இருக்கும்.[j]

21 சொல்லப்போனால், நீங்கள் இப்படி நடந்துகொள்ள வேண்டும் என்
பதற்காகத்தான் கடவுள் உங்களை அழைத்திருக்கிறார். ஏனென்றால்,
கிறிஸ்து உங்களுக்காகப் பாடுகள் பட்டு,[k] நீங்கள் அவருடைய அடிச்
சுவடுகளை நெருக்கமாகப் பின்பற்றி வருவதற்காக உங்களுக்கு ஒரு முன்
மாதிரியை வைத்துவிட்டுப்போனார்.[l] **22** அவர் பாவம் செய்யவில்லை,[m]
அவருடைய பேச்சில் சூதுவாது இருக்கவில்லை.[n] **23** அவர் அவமானப்
படுத்தப்பட்டபோது*[o] பதிலுக்கு அவமானப்படுத்தவில்லை.#[p] துன்புறுத்
தப்பட்டபோது[q] மிரட்டவில்லை; மாறாக, நீதியான தீர்ப்பு கொடுக்கிறவரி
டம்[r] தன்னையே ஒப்படைத்தார். **24** நாம் பாவச் செயல்களுக்குச் செத்து
நீதியான செயல்களுக்கென்று வாழ்வதற்காகத்தான், மரக் கம்பத்தில்*
அறையப்பட்ட தன்னுடைய உடலில்[s] அவர் நம்முடைய பாவங்களைச்
சுமந்தார்.[t] "அவருடைய காயங்களால் நீங்கள் குணமானீர்கள்."[u] **25** நீங்
கள் வழிதவறித் திரிகிற ஆடுகளைப் போல் இருந்தீர்கள்.[v] ஆனால் இப்
போது, உங்கள் உயிரைப் பாதுகாக்கிற மேய்ப்பராகவும் கண்காணியாகவும்
இருப்பவரிடமே திரும்பி வந்திருக்கிறீர்கள்.[w]

3 அதேபோல் மனைவிகளே, உங்கள் கணவருக்குக் கட்டுப்பட்டு நடங்
கள்.[x] அப்போது, அவர் கடவுளுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாத
வராக இருந்தாலும், **2** உங்கள் கற்புள்ள நடத்தையையும்[y] நீங்கள் காட்டு
கிற ஆழ்ந்த மரியாதையையும் பார்த்து அவர் விசுவாசியாக* ஆகலாம்;[z]
நீங்கள் ஒரு வார்த்தைகூட சொல்லாமலேயே உங்கள் நடத்தையால் அவர்
விசுவாசியாக ஆகலாம். **3** தலைமுடியைப் பின்னிக்கொள்வது, தங்க
நகைகளைப் போட்டுக்கொள்வது,[a] ஆடம்பரமான உடைகளை உடுத்திக்
கொள்வது போன்ற வெளிப்புற அலங்காரம் உங்களுக்கு அலங்காரமாக
இருக்க வேண்டாம். **4** அதற்குப் பதிலாக, இதயத்தில் மறைந்திருக்கிற
அமைதியும் சாந்தமுமான குணம்தான் உங்களுக்கு அழியாத அலங்கார

2:16 *வே.வா., "கெட்ட செயல்களைச் செய்வதற்குச் சாக்காக." **2:19** *வே.வா., "வலிகளை." **2:23** *வே.வா., "சபித்துப் பேசப்பட்டபோது." #வே.வா., "சபித்துப் பேசவில்லை." **2:24** *வே.வா., "மரத்தில்." **3:2** *வே.வா., "இயேசுவின் சீஷராக."

அதி. 2
a கலா 5:13
b 1கொ 7:22
c லேவி 19:32, ரோ 12:10, ரோ 13:7
d 1யோ 2:10, 1யோ 4:21
e சங் 111:10, நீதி 8:13, 2கொ 7:1
f நீதி 24:21
g எபே 6:5, கொலோ 3:22, 1தீ 6:1, தீத் 2:9
h ரோ 13:5
i 1பே 4:15
j மத் 5:10, அப் 5:41, 1பே 4:14
k 1பே 3:18
l மத் 16:24, யோவா 13:15
m யோவா 8:46, எபி 4:15
n ஏசா 53:9
o மத் 27:39
p ஏசா 53:7, ரோ 12:21
q எபி 5:8
r எரே 11:20, யோவா 8:50
s பிலி 2:8
t லேவி 16:21
u ஏசா 53:5
v ஏசா 53:6
w சங் 23:1, ஏசா 40:11

அதி. 3
x ரோ 7:2, 1கொ 11:3, எபே 5:22
y 1பே 2:12
z 1கொ 7:16
a நீதி 11:22

மாக இருக்க வேண்டும்.[a] அதுதான் கடவுளுடைய பார்வையில் மிகவும்
மதிப்புள்ளது. **5** பூர்வ காலத்தில் கடவுள்மேல் நம்பிக்கை வைத்திருந்த
பரிசுத்த பெண்களும் தங்களை இப்படித்தான் அலங்கரித்துக்கொண்டு தங்
களுடைய கணவருக்குக் கட்டுப்பட்டு நடந்தார்கள். **6** சாராளும்கூட
ஆபிரகாமை எஜமானே என்று கூப்பிட்டு, அவருக்குக் கீழ்ப்படிந்தாள்;[b]
நீங்களும் தொடர்ந்து நல்ல செயல்கள் செய்து, எதற்கும் பயப்படாமல்
இருந்தால்,[c] சாராளுக்கு மகள்களாக இருப்பீர்கள்.

7 அதேபோல் கணவர்களே, நீங்களும் உங்கள் மனைவியை நன்றாகப்
புரிந்துகொண்டு* அவளோடு வாழுங்கள்; பெண்ணாக இருப்பவள் உங்க
ளைவிட பலவீனமாக# இருப்பதாலும், கடவுளுடைய அளவற்ற தயவால்
உங்களோடுகூட அவளுக்கும் முடிவில்லாத வாழ்வு கிடைக்கப்போவதா
லும்,[d] அவளுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுங்கள்;[e] இல்லை
யென்றால், உங்கள் ஜெபங்களைக் கடவுள் கேட்க மாட்டார்.

8 முடிவாக, நீங்கள் எல்லாரும் ஒரே சிந்தையோடு இருங்கள்,[f] அனு
தாபத்தையும் சகோதரப் பாசத்தையும் கரிசனையையும்[g] மனத்தாழ்மையை
யும்[h] காட்டுங்கள். **9** யாராவது கெட்டது செய்தால் பதிலுக்குக் கெட்டது
செய்யாதீர்கள்,[i] யாராவது அவமானப்படுத்தினால் பதிலுக்கு அவமானப்ப
டுத்தாதீர்கள்;[j] அதற்கு மாறாக, அவர்களை ஆசீர்வதியுங்கள்.[k] இப்படி நடந்
துகொண்டு ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காகவே* நீங்கள் அழைக்கப்பட்டி
ருக்கிறீர்கள்.

10 “வாழ்க்கையைச் சந்தோஷமாக அனுபவித்து, நன்றாக வாழ விரும்
புகிற ஒருவன் கெட்ட விஷயங்களைப் பேசாதபடி தன் நாவையும், பொய்
பேசாதபடி தன் உதடுகளையும் அடக்கி வைக்க வேண்டும்.[l] **11** கெட்ட
தைவிட்டு விலகி[m] நல்லது செய்ய வேண்டும்;[n] சமாதானத்தைத் தேடி,
அதற்காகப் பாடுபட வேண்டும்.[o] **12** ஏனென்றால், யெகோவாவின்*
கண்கள் நீதிமான்களைக் கவனிக்கின்றன, அவருடைய காதுகள் அவர்களு
டைய மன்றாட்டைக் கேட்கின்றன;[p] ஆனால், யெகோவாவுடைய* முகம்
கெட்டவர்களுக்கு விரோதமாக இருக்கிறது.”[q]

13 நீங்கள் நல்லது செய்வதில் வைராக்கியமாக இருந்தால், யார் உங்க
ளுக்குக் கெடுதல் செய்வார்கள்?[r] **14** நீதிக்காக நீங்கள் கஷ்டப்பட வேண்
டியிருந்தாலும், சந்தோஷமாக இருப்பீர்கள்.[s] மற்றவர்கள் எதைப் பார்த்துப்
பயப்படுகிறார்களோ அதைப் பார்த்து நீங்களும் பயப்படாதீர்கள்,* கலக்கம்
அடையாதீர்கள்.[t] **15** கிறிஸ்துவை எஜமானாகவும், பரிசுத்தமானவராகவும்
உங்கள் இதயங்களில் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் நம்பிக்கையைப் பற்
றிக் கேள்வி கேட்கிறவர்களுக்குச் சாந்தத்தோடும்[u] ஆழ்ந்த மரியாதையோ
டும் பதில் சொல்ல எப்போதும் தயாராக இருங்கள்.[v]

16 நல்ல மனசாட்சியோடு இருங்கள்.[w] அப்போதுதான், கிறிஸ்துவின்
சீஷர்களாக இருக்கிற உங்களுடைய நல்ல நடத்தையைப்[x] பழிக்கிறவர்
கள் உங்களுக்கு விரோதமாய்ப் பேசியதற்காக வெட்கப்பட்டுப்போவார்
கள்.[y] **17** நீங்கள் கெட்டது செய்து கஷ்டப்படுவதைவிட,[z] கடவுளுக்கு

3:7 *வே.வா., “மனைவிமீது அக்கறை காட்டி.” #நே.மொ., “பலவீனமான பாத்தி ரமாக.” **3:9** *நே.மொ., “ஆஸ்தியாகப் பெறுவதற்காகவே.” **3:12** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:14** *அல்லது, “மற்றவர்களுடைய மிரட்டல்களுக்குப் பயப்ப டாதீர்கள்.”

அதி. 3
a எபே 4:24, கொலோ 3:10, 12, 1தீ 2:9, 10
b ஆதி 18:12, எபே 5:33
c நீதி 3:25, பிலி 1:28
d கலா 3:28
e எபே 5:25
f 1கொ 1:10, பிலி 2:2
g ரோ 12:10
h ரோ 15:5, கொலோ 3:12
i ரோ 12:17, 1தெ 5:15
j 1பே 2:23
k ரோ 12:14, 1கொ 4:12
l யாக் 3:8
m நீதி 8:13
n 3யோ 11
o 1தெ 5:13, யாக் 3:17
p 1யோ 3:22
q சங் 34:12-16
r ரோ 13:3, 4
s மத் 5:11, 12, அப் 5:41, 1பே 2:19
t மத் 10:28
u நீதி 15:1, 2தீ 2:24, 25, தீத் 3:1, 2
v கொலோ 4:6
w அப் 23:1, அப் 24:16, 1தீ 1:5, 1தீ 1:18, 19, 1தீ 3:9
x ரோ 12:21, 1பே 2:12
y தீத் 2:8
z 1பே 4:15

விருப்பமானால்,* நல்லது செய்து கஷ்டப்படுவதே மேல்.[a] **18** கிறிஸ்து
வும், பாவங்களுக்காக எல்லா காலத்துக்கும் ஒரே தடவையாக இறந்
தார்;[b] அநீதிமான்களுக்காக ஒரு நீதிமான் மரணமடைந்தார்;[c] உங்க
ளைக் கடவுளிடம் வழிநடத்துவதற்காக[d] இறந்தார். அவர் பூமிக்குரிய
உடலில் கொல்லப்பட்டார்,[e] பரலோகத்துக்குரிய உடலில் உயிர்ப்பிக்கப்பட்
டார்.[f] **19** பின்பு, காவலில் இருக்கிற தேவதூதர்களிடம் போய்ப் பிரசங்
கித்தார்.[g] **20** அந்தத் தேவதூதர்கள், முற்காலத்தில் நோவா பேழையைக்
கட்டிக்கொண்டிருந்த நாட்களில்,[h] கடவுள் பொறுமையோடு காத்துக்கொண்
டிருந்தபோது கீழ்ப்படியாமல் போனவர்கள்;[i] அந்தப் பேழைக்குள் இருந்த
வர்கள் மட்டும்தான், அதாவது எட்டுப் பேர்* மட்டும்தான் வெள்ளத்திலி
ருந்து காப்பாற்றப்பட்டார்கள்.[j]

21 இதற்கு ஒப்பாக இருக்கிற ஞானஸ்நானம், இயேசு கிறிஸ்துவின்
உயிர்த்தெழுதல் மூலம் இப்போது உங்களைக் காப்பாற்றுகிறது. ஞானஸ்நா
னம் உடலின் அழுக்கை நீக்குவதாக இல்லாமல், நல்ல மனசாட்சிக்காகக் கட
வுளிடம் வேண்டுதல் செய்வதாக இருக்கிறது.[k] **22** கிறிஸ்து பரலோகத்துக்
குப் போய், இப்போது கடவுளுடைய வலது பக்கத்தில் இருக்கிறார்;[l]
தேவதூதர்களும் அதிகாரத்தில் இருப்பவர்களும் வல்லமையுள்ளவர்களும்
அவருடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு இருக்கிறார்கள்.[m]

4 கிறிஸ்து ஒரு மனிதராக இருந்தபோது பாடுகளை அனுபவித்தார்;[n]
அதனால், அவர் காட்டிய அதே மனப்பான்மையை* நீங்களும் காட்
டுங்கள்.# ஏனென்றால், பாடுகளை அனுபவிக்கிறவன் பாவம் செய்வதிலி
ருந்து விலகியிருக்கிறான்.[o] **2** இப்படி, உயிரோடு வாழ்கிற காலமெல்லாம்
மனிதர்களுடைய ஆசைகளின்படி வாழாமல்[p] கடவுளுடைய விருப்பத்
தின்படி* வாழ்கிறான்.[q] **3** முன்பு நீங்கள் உலக மக்களுடைய விருப்பத்
தின்படி[r] வெட்கங்கெட்ட நடத்தையில்* ஈடுபடுவதிலும், கட்டுக்கடங்காத
ஆசைகளுக்கு இடம்கொடுப்பதிலும், குடித்து வெறிப்பதிலும், குடித்துக்
கும்மாளம் போடுவதிலும், போட்டி போட்டுக்கொண்டு குடிப்பதிலும்,
கண்டனத்துக்குரிய சிலை வழிபாடுகளில் கலந்துகொள்வதிலும் ஏற்கெ
னவே நிறைய காலத்தைச் செலவழித்துவிட்டீர்கள்.[s] **4** அதே மோச
மான சகதியில் நீங்கள் அவர்களோடு தொடர்ந்து புரளாததால், அவர்கள்
உங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, எப்போதும் பழித்துப் பேசுகிறார்
கள்.[t] **5** ஆனால், உயிரோடு இருப்பவர்களையும் இறந்தவர்களையும்
நியாயந்தீர்க்கத்[u] தயாராக இருக்கிறவருக்கு அவர்கள் கணக்குக் கொடுக்க
வேண்டும். **6** சொல்லப்போனால், இதற்காகத்தான் இறந்தவர்களுக்கும்*
நல்ல செய்தி அறிவிக்கப்பட்டது.[v] மனிதர்கள் நியாயந்தீர்க்கப்படுவதுபோல்
அவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டாலும், கடவுளுடைய சக்தியின் வழிநடத்துத
லின்படி அவர்களால் வாழ முடியும்.

7 ஆனால், எல்லாவற்றுக்கும் முடிவு நெருங்கிவிட்டது; அதனால்

3:17 *வே.வா., “சித்தமானால்.” **3:20** *சொல் பட்டியலில் “நெஃபெஷ், சைக்கீ” என்ற தலைப்பைப் பாருங்கள். **4:1** *வே.வா., “அவருக்கு இருந்த அதே உறுதியை.” #நே.மொ., “போர்க்கவசமாக அணிந்துகொள்ளுங்கள்.” **4:2** *வே.வா., “சித்தத்தின்படி.” **4:3** *சொல் பட்டியலைப் பாருங்கள். **4:6** *ஆன்மீக ரீதியில் இறந்தவர்களைக் குறிக்கிறது. எபேசியர் 2:1-ஐப் பாருங்கள்.

அதி. 3
a 2கொ 1:7, கொலோ 1:24
b எபி 9:28
c ரோ 5:6
d 2கொ 5:18
e 1கொ 15:50
f 1தீ 3:16
g 2பே 2:4, யூ 6
h ஆதி 6:14
i ஆதி 6:2, 3
j ஆதி 7:13, 23
k எபி 9:14, எபி 10:22
l சங் 110:1, அப் 7:55, எபி 10:12
m மத் 28:18, 1கொ 15:25, எபே 1:20, 21, பிலி 2:9, 10, எபி 1:6

அதி. 4
n பிலி 2:8
o ரோ 6:11, கொலோ 3:5, 1யோ 3:6
p 2கொ 5:15
q கலா 2:20, எபே 5:17
r தீத் 3:3
s ரோ 13:13, 1கொ 5:11, கலா 5:19, 21, எபே 4:17-19
t 1பே 3:16
u அப் 10:42, அப் 17:31, 2தீ 4:1, வெளி 20:12
v எபே 2:1

தெளிந்த புத்தியோடு இருங்கள்,[a] ஜெபம் செய்ய விழிப்போடு இருங்கள்.[b]
8 எல்லாவற்றுக்கும் மேலாக, ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்
டுங்கள்;[c] ஏனென்றால், அன்பு ஏராளமான பாவங்களை மூடும்.[d] **9** முணு
முணுக்காமல் ஒருவரை ஒருவர் உபசரியுங்கள்.[e] **10** பல விதங்களில்
வெளிக்காட்டப்படுகிற கடவுளுடைய அளவற்ற கருணையைப் பெற்ற நீங்
கள் அதன் சிறந்த நிர்வாகிகளாக இருக்கிறீர்கள்; அதனால், அவரவருக்குக்
கிடைத்த வரத்துக்கு ஏற்றபடி, அந்த வரத்தை ஒருவருக்கொருவர் சேவை
செய்யப் பயன்படுத்துங்கள்.[f] **11** ஒருவன் பேசினால், கடவுளுடைய பரி
சுத்த வார்த்தைகளின்படி பேச வேண்டும். ஒருவன் சேவை செய்தால்,
கடவுள் கொடுக்கிற பலத்தில் சார்ந்திருந்து சேவை செய்ய வேண்டும்.[g]
இப்படி, இயேசு கிறிஸ்து மூலம் கடவுள் மகிமைப்படும்படி எல்லாவற்றை
யும் செய்ய வேண்டும்.[h] அவருக்கே என்றென்றும் மகிமையும் வல்லமை
யும் இருக்கிறது. ஆமென்.*

12 அன்பானவர்களே, துன்பம் என்ற தீயில் நீங்கள் சோதிக்கப்படும்
போது,[i] விசித்திரமான ஏதோவொன்று நடப்பதாக நினைத்து ஆச்சரியப்ப
டாதீர்கள். **13** அதற்குப் பதிலாக, கிறிஸ்துவின் பாடுகளில் உங்களுக்
குப் பங்கு கிடைத்திருப்பதை[j] நினைத்து எப்போதும் சந்தோஷப்படுங்கள்.[k]
அப்போது, அவருடைய மகிமை வெளிப்படுகிற வேளையிலும் நீங்கள்
சந்தோஷப்பட்டு, மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பீர்கள்.[l] **14** கிறிஸ்துவின்
பெயருக்காக நீங்கள் கேவலமாகப் பேசப்படுகிறீர்கள்* என்றால், நீங்கள்
சந்தோஷமானவர்கள்.[m] ஏனென்றால், கடவுளுடைய சக்தியாகிய மகிமை
யான சக்தி உங்கள்மேல் தங்கியிருக்கிறது.

15 ஆனாலும் உங்களுக்கு வருகிற கஷ்டங்கள், நீங்கள் கொலைகா
ரராகவோ திருடராகவோ கெட்டது செய்கிறவராகவோ மற்றவர்களுடைய
விஷயங்களில் அநாவசியமாகத் தலையிடுகிறவராகவோ இருப்பதால்
வந்தவையாக இருக்கக் கூடாது.[n] **16** ஒரு கிறிஸ்தவராக நீங்கள் கஷ்
டப்பட வேண்டியிருந்தால், அதற்காக வெட்கப்படாதீர்கள்.[o] ஒரு கிறிஸ்த
வராக வாழ்ந்து எப்போதும் கடவுளை மகிமைப்படுத்துங்கள். **17** ஏனென்
றால், நியாயத்தீர்ப்பு கடவுளுடைய வீட்டில்[p] ஆரம்பிக்கிற நேரம்
வந்துவிட்டது; அது முதலில் நம்மிடம் ஆரம்பிக்கிறது[q] என்றால், கடவு
ளுடைய நல்ல செய்திக்குக் கீழ்ப்படியாதவர்களுடைய முடிவு என்னவாக
இருக்கும்?[r] **18** “நீதிமான் காப்பாற்றப்படுவதே கஷ்டம் என்றால், கட
வுள்பக்தி இல்லாதவனுக்கும் பாவிக்கும் என்ன ஆகும்?”[s] **19** அதனால்,
கடவுளுடைய விருப்பத்தின்படி* நடப்பதால் கஷ்டங்களை அனுபவிக்கிற
வர்கள் தொடர்ந்து நல்லது செய்து, நம்பகமான படைப்பாளராகிய அவரி
டம் தங்களை ஒப்படைப்பார்களாக.[t]

5 கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியாக இருக்கிறவனும் வெளிப்படப்
போகிற மகிமையில்[u] பங்குகொள்ளப் போகிறவனுமாகிய நான், சக
மூப்பர் என்ற முறையில் உங்கள் மத்தியில் இருக்கிற மூப்பர்களிடம்
கேட்டுக்கொள்வது* இதுதான்: **2** கண்காணிகளாகச் சேவை செய்து,*

அதி. 4
a ரோ 12:3; 1தீ 3:2; தீத் 2:6
b கொலோ 4:2
c கொலோ 3:14
d நீதி 10:12; நீதி 17:9; 1கொ 13:4, 7
e 2கொ 9:7; எபி 13:2
f ரோ 12:6-8
g ஏசா 12:2; எபே 3:20
h 1கொ 10:31
i 1பே 5:9
j ரோ 8:17; 2கொ 4:10; 2தீ 3:12
k அப் 5:41; யாக் 1:2
l 1பே 1:7
m யாக் 1:12; யாக் 5:11
n 1தீ 5:13; 1பே 2:20
o கொலோ 1:24; எபி 12:2
p எபி 3:6
q 1கொ 11:32
r 2தெ 1:7, 8
s நீதி 11:31; மத் 7:13, 14
t 2தீ 1:12

அதி. 5
u ரோ 8:18

4:11 * அதாவது, “அப்படியே ஆகட்டும்.” **4:14** * வே.வா., “அவமானப்படுத்தப்படு கிறீர்கள்.” **4:19** * வே.வா., “சித்தத்தின்படி.” **5:1** * வே.வா., “மூப்பர்களுக்குச் சொல் லும் அறிவுரை.” **5:2** * வே.வா., “கவனமாகக் கண்காணித்து.”

உங்களுடைய பொறுப்பில் இருக்கிற கடவுளுடைய மந்தையை மேய்த்து
வாருங்கள்.[a] கட்டாயத்தால் இல்லாமல் கடவுளுக்குமுன் மனப்பூர்வமாக
வும்,[b] அநியாயமான ஆதாயத்துக்காக இல்லாமல்[c] ஆர்வமாகவும் இதைச்
செய்யுங்கள். **3** கடவுளுடைய சொத்தாக இருக்கிற மந்தையின் மேல்
ஆதிக்கம் செலுத்தாமல்,[d] மந்தைக்கு முன்மாதிரிகளாக இருங்கள்.[e]
4 அப்போதுதான், முதன்மை மேய்ப்பர்[f] வெளிப்படும்போது, வாடாத கிரீ
டமான மகிமையின் கிரீடம் உங்களுக்குக் கிடைக்கும்.[g]

5 அதேபோல் இளைஞர்களே, நீங்கள் பெரியவர்களுக்கு* அடிபணிந்து
நடங்கள்.[h] எல்லாரும் ஒருவருக்கொருவர் மனத்தாழ்மையோடு நடந்து
கொள்ளுங்கள்.# ஏனென்றால், தலைக்கனம் உள்ளவர்களைக் கடவுள்
எதிர்க்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ அளவற்ற கருணை காட்டு
கிறார்.[i]

6 அதனால், கடவுளுடைய பலத்த கைக்குள் உங்களைத் தாழ்த்திக்
கொள்ளுங்கள்; அப்போது, சரியான நேரத்தில் கடவுள் உங்களை உயர்த்து
வார்.[j] **7** அவர் உங்கள்மேல் அக்கறையாக இருக்கிறார்.[k] அதனால், உங்
கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் போட்டுவிடுங்கள்.[l] **8** தெளிந்த
புத்தியோடு இருங்கள், விழிப்புடன் இருங்கள்![m] உங்கள் எதிரியான பிசாசு
கர்ஜிக்கிற சிங்கம்போல் யாரை விழுங்கலாம் என்று அலைந்து திரிகிறான்.*[n]
9 நீங்களோ விசுவாசத்தில் உறுதியாக இருந்து, அவனை எதிர்த்து நில்லுங்
கள்.[o] உலகத்தில் இருக்கிற உங்கள் சகோதரர்கள் எல்லாரும் நீங்கள் அனு
பவிப்பது போன்ற துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள் என்பது உங்க
ளுக்குத் தெரியுமே.[p] **10** அளவற்ற கருணை நிறைந்த கடவுள், கொஞ்சக்
காலம் நீங்கள் கஷ்டம் அனுபவித்த பின்பு உங்களுடைய பயிற்சியை முடிப்
பார். உங்களை உறுதிப்படுத்துவார்,[q] உங்களைப் பலப்படுத்துவார்,[r] உங்
களை உறுதியான அஸ்திவாரத்தின் மேல் நிற்க வைப்பார். கிறிஸ்து
வோடு ஒன்றுபட்டிருக்கிற உங்களுக்குத் தன்னுடைய முடிவில்லாத மகிமை[s]
கிடைக்க வேண்டும் என்பதற்காக உங்களை அழைத்திருக்கிறார். **11** அவ
ருக்கே என்றென்றும் வல்லமை சொந்தம். ஆமென்.*

12 நம்பிக்கைக்குரிய சகோதரனாக நான் கருதுகிற சில்வானு*[t] மூலம்
இந்தக் கடிதத்தைச் சுருக்கமாக எழுதியிருக்கிறேன். உங்களை உற்சாகப்
படுத்துவதற்காகவும், கடவுளுடைய அளவற்ற கருணை உண்மையானது
என்பதை உங்களுக்கு ஆணித்தரமாக எடுத்துக்காட்டுவதற்காகவும் இதை
எழுதியிருக்கிறேன்; அந்த அளவற்ற கருணையை இழந்துவிடாதீர்கள்.
13 பாபிலோனில் இருப்பவளும்,* அதாவது உங்களைப் போலவே கடவு
ளால் தேர்ந்தெடுக்கப்பட்டவளும், உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறாள்.
அப்படியே என் மகன் மாற்குவும்[u] வாழ்த்துச் சொல்கிறான். **14** அன்பு
முத்தத்தோடு ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்.

கிறிஸ்துவோடு ஒன்றுபட்டிருக்கிற உங்கள் எல்லாருக்கும் சமாதானம்
கிடைக்கட்டும்.

5:5 *வே.வா., "மூப்பர்களுக்கு." #வே.வா., "மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்." **5:8** *வே.வா., "தேடி அலைகிறான்." **5:11** *அதாவது, "அப்படியே ஆகட்டும்." **5:12** *சீலா என்றும் அழைக்கப்படுகிறார். **5:13** *இவள், பாபிலோனிலிருந்த சபையைக் குறிக்கலாம்.

அதி. 5

a ஏசா 40:11, யோவா 21:16, அப் 20:28
b யோவா 10:11
c 1தீ 3:2, 3
d 2கொ 1:24
e பிலி 3:17
f எபி 13:20
g 1கொ 9:25, 2தீ 4:8, 1பே 1:3, 4
h எபே 5:21, யாக் 3:17
i நீதி 3:34, ஏசா 57:15, யாக் 4:6
j மத் 23:12, லூ 14:11
k சங் 55:22
l மத் 6:25
m 1தெ 5:6
n லூ 22:31
o எபே 6:11, யாக் 4:7
p அப் 14:22, 2தீ 3:12
q 2தெ 2:16, 17
r எபே 6:10
s 2கொ 4:17, 1தெ 2:12
t அப் 15:27
u அப் 12:12

பேதுரு
எழுதிய இரண்டாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்த்துக்கள் (1)
உங்கள் அழைப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் (2-15)
விசுவாசத்தோடு சேர்க்கப்படுகிற குணங்கள் (5-9)
தீர்க்கதரிசன வார்த்தைகள் இன்னும் உறுதியாகிவிட்டன (16-21)

2 போலிப் போதகர்கள் வருவார்கள் (1-3)
போலிப் போதகர்களுக்கு நியாயத்தீர்ப்பு நிச்சயம் (4-10அ)
தேவதூதர்கள் டார்டரசுக்குள் தள்ளப்படுகிறார்கள் (4)
பெரிய வெள்ளம்; சோதோம், கொமோரா (5-7)
போலிப் போதகர்களின் குணங்கள் (10ஆ-22)

3 கேலி செய்கிறவர்கள் வரப்போகிற அழிவை அலட்சியம் செய்கிறார்கள் (1-7)
யெகோவா தாமதிப்பதில்லை (8-10)
நீங்கள் எந்தளவுக்குப் பரிசுத்த நடத்தை உள்ளவர்களாக இருக்க வேண்டும்! (11-16)
புதிய வானமும் புதிய பூமியும் (13)
கவர்ந்திழுக்கப்படாதபடி எச்சரிக்கையாக இருங்கள் (17, 18)

1 நம் கடவுளின் நீதியாலும் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் நீதியாலும்
நாங்கள் பெற்றிருக்கிற அதே விலைமதிப்புள்ள நம்பிக்கையைப் பெற்
றிருப்பவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் அடிமையும் அப்போஸ்தலனுமா
கிய சீமோன் பேதுரு எழுதுவது:
2 கடவுளையும் நம் எஜமானாகிய இயேசுவையும் பற்றிய திருத்தமான
அறிவின் மூலம்[a] உங்களுக்கு அளவற்ற கருணையும் சமாதானமும் அதி
கமதிகமாகக் கிடைக்கட்டும். **3** ஏனென்றால், தன்னுடைய மகிமையாலும்
நல்ல குணத்தாலும் கடவுள் நம்மை அழைத்திருக்கிறார். அவரைப் பற்றித்
திருத்தமாகத் தெரிந்துகொள்வதன் மூலம்[b] நாம் கடவுள்பக்தியோடு வாழ்
வதற்குத் தேவையான எல்லாவற்றையும் தன்னுடைய வல்லமையால் நமக்
குத் தந்திருக்கிறார்.* **4** கெட்ட# ஆசையால் சீரழிந்து கிடக்கும் உலகத்தி
லிருந்து தப்பித்திருக்கிற நமக்கு மகிமையாலும் நல்ல குணத்தாலும் மிக
அருமையான, மகத்தான வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார்;*[c] தெய்வீகத்
தன்மையை நீங்கள் பெறுவதற்காக[d] இப்படிச் செய்திருக்கிறார்.
5 இந்தக் காரணத்துக்காக, உங்கள் விசுவாசத்தோடு ஒழுக்கத்தையும்,[e]
ஒழுக்கத்தோடு அறிவையும்,[f] **6** அறிவோடு சுயக்கட்டுப்பாட்டையும்,
சுயக்கட்டுப்பாட்டோடு[g] சகிப்புத்தன்மையையும், சகிப்புத்தன்மையோடு கட
வுள்பக்தியையும்,[h] **7** கடவுள்பக்தியோடு சகோதரப் பாசத்தையும், சகோத
ரப் பாசத்தோடு அன்பையும்[i] சேர்த்து தாராளமாகக் காட்டுவதற்கு அதிக
ஊக்கமாக முயற்சி செய்யுங்கள்.[j] **8** இந்தப் பண்புகள் உங்களுக்குள் அதி
கமதிகமாகப் பெருகினால், நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய
திருத்தமான அறிவைப் பயன்படுத்துவதில் நீங்கள் செயலற்றவர்களாகவும்
பலனற்றவர்களாகவும்[k] ஆகிவிட மாட்டீர்கள்.

1:3, 4 * வே.வா., "இலவசமாகத் தந்திருக்கிறார்." **1:4** # வே.வா., "காமம்."

அதி. 1
a கொலோ 1:9
b யோவா 17:3
c லூ 22:29, 30; யோவா 14:2; கலா 3:29
d 1கொ 15:53; 1பே 1:3, 4; 1யோ 3:2; வெளி 20:6
e பிலி 4:8
f யோவா 17:3; எபி 5:14
g 1கொ 9:25; 2தீ 2:24
h 2பே 2:9
i 1தெ 4:9
j பிலி 2:12; 2தீ 2:15; எபி 4:11; யூ 3
k தீத் 3:14

9 இந்தப் பண்புகளில் குறைவுபடுகிறவன் குருடனாக, ஒளியைப் பார்க்க
விரும்பாமல் தன் கண்களை மூடிக்கொள்கிறவனாக* இருக்கிறான்;[a] ஒருகா
லத்தில் தான் செய்த பாவங்களிலிருந்து சுத்தமாக்கப்பட்டதை மறந்தவனாக
இருக்கிறான்.[b] **10** அதனால் சகோதரர்களே, நீங்கள் அழைக்கப்பட்டும்[c]
தேர்ந்தெடுக்கப்பட்டும் இருப்பதால், கடைசிவரை அதற்குத் தகுதியுள்ள
வர்களாக இருப்பதற்கு இன்னும் ஊக்கமாக முயற்சி செய்யுங்கள். நீங்கள்
இவற்றைச் செய்துவந்தால் ஒருபோதும் தகுதியில்லாதவர்களாக ஆகிவிட
மாட்டீர்கள்.[d] **11** சொல்லப்போனால், நம்முடைய எஜமானும் மீட்பரு
மான இயேசு கிறிஸ்துவின்[e] முடிவில்லாத அரசாங்கத்துக்குள்[f] போவதற்
குத் தாராளமாக அனுமதிக்கப்படுவீர்கள்.

12 இதனால்தான், இந்த விஷயங்களைப் பற்றித் தெரிந்தவர்களாகவும்
கற்றுக்கொண்ட சத்தியத்தில் உறுதியாக நிலைத்திருக்கிறவர்களாகவும் நீங்
கள் இருக்கிறபோதிலும், இவற்றை உங்களுக்கு ஞாபகப்படுத்த எப்போதும்
தயாராக இருக்கிறேன். **13** நான் இந்தக் கூடாரத்தில்*[g] இருக்கும்வரை
உங்களுக்கு ஞாபகப்படுத்தி[h] உங்களைத் தூண்டுவது சரியென்று நினைக்
கிறேன். **14** ஏனென்றால், நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்து எனக்குச்
சொன்னபடி, சீக்கிரத்தில் நான் இந்தக் கூடாரத்தைவிட்டுப் போக வேண்டி
யிருக்கும்.[i] **15** நான் போன பின்பு இந்த விஷயங்களை நீங்கள் எப்போ
தும் ஞாபகப்படுத்திப் பார்ப்பதற்காக, இப்போது என்னால் முடிந்த எல்லா
வற்றையும் செய்யப்போகிறேன்.

16 நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் பிரசன்னத்
தையும் பற்றி நாங்கள் உங்களிடம் சொன்னபோது, தந்திரமாக உருவாக்கப்
பட்ட கட்டுக்கதைகளின் அடிப்படையில் பேசவில்லை; அவருடைய மகத்
துவத்தை நேரில் பார்த்ததால்தான் பேசினோம்.[j] **17** “இவர் என் அன்பு
மகன்; நான் இவரை ஏற்றுக்கொள்கிறேன்” என்று உன்னதமான மகிமையி
டமிருந்து வார்த்தைகள் கேட்டன.*[k] அப்போது, கடவுளாகிய தகப்பனிட
மிருந்து கிறிஸ்துவுக்கு மாண்பும் மகிமையும் கிடைத்தன. **18** அவரோடு
பரிசுத்த மலையில் நாங்கள் இருந்தபோது, வானத்திலிருந்து வந்த அந்த
வார்த்தைகளைக் கேட்டோம்.

19 அதனால், தீர்க்கதரிசன வார்த்தைகள் நமக்கு இன்னும் உறுதியாகி
விட்டன; பொழுது விடிந்து விடிவெள்ளி[l] உதிக்கும்வரை, இருட்டில் பிரகா
சிக்கிற விளக்கைப் போல்[m] உங்கள் இதயங்களில் பிரகாசிக்கிற அவற்றுக்கு
நீங்கள் கவனம் செலுத்துவது நல்லது. **20** வேதவசனங்களில் இருக்கிற
எந்தத் தீர்க்கதரிசனமும் தனி நபர்களுடைய கருத்துகளின் அடிப்படையில்
சொல்லப்படவில்லை என்பதை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்
டும். **21** ஏனென்றால், மனிதர்கள் ஒருகாலத்திலும் தங்களுடைய விருப்
பத்தால் தீர்க்கதரிசனம் சொல்லவில்லை.[n] கடவுளுடைய வார்த்தைகளை
அவருடைய சக்தியால் தூண்டப்பட்டுதான் சொன்னார்கள்.[o]

2 இருந்தாலும், பூர்வ காலத்தில் மக்கள் மத்தியில் போலித் தீர்க்கதரிசிக
ளும் வந்தார்கள், அப்படியே உங்கள் மத்தியிலும் போலிப் போத
கர்கள் வருவார்கள்.[p] அழிவை ஏற்படுத்துகிற மதப்பிரிவுகளை அவர்
கள் தந்திரமாக உண்டாக்குவார்கள். அதோடு, தங்களை விலைகொடுத்து

1:9 * அல்லது, “குருடனாக, கிட்டப்பார்வை உள்ளவனாக.” **1:13** * அதாவது, “மனித உடலில்.” **1:17** * நே.மொ., “ஒரு குரல் கேட்டது.”

அதி. 1
a 1யோ 2:9; வெளி 3:17
b எபி 9:14
c எபி 3:1
d 2தீ 4:7, 8
e லூ 16:9; யோவா 3:5
f தானி 2:44
g 2கொ 5:1
h ரோ 15:15; யூ 5
i யோவா 21:18
j மத் 17:2; மாற் 9:2; லூ 9:29
k சங் 2:7; மத் 17:1, 5; மாற் 9:7; லூ 9:35
l எண் 24:17; வெளி 22:16
m சங் 119:105; யோவா 1:9
n 2தீ 3:16
o 2சா 23:2; அப் 1:16; அப் 28:25; 1பே 1:11

அதி. 2
p மத் 24:24; 1தீ 4:1

வாங்கிய[a] உரிமையாளரை ஒதுக்கிவிட்டு, சீக்கிரத்தில் தங்களுக்கு அழி
வைத் தேடிக்கொள்வார்கள். **2** அவர்களுடைய வெட்கங்கெட்ட நடத்
தையை*[b] நிறைய பேர் பின்பற்றுவார்கள்; இவர்களால், சத்திய வழி பழித்
துப் பேசப்படும்.[c] **3** அவர்கள் தங்களுடைய போலிப் போதனைகளால்
உங்களைப் பேராசையோடு சுரண்டிப் பிழைப்பார்கள்; ஆனால், பல காலத்
துக்கு முன்பே அவர்களுக்குத் தீர்மானிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு[d] தாமதிக்
காது, அவர்களுக்கு அழிவு வரப்போவது நிச்சயம்.[e]

4 பாவம் செய்த தேவதூதர்களைக்[f] கடவுள் தண்டிக்காமல் விட
வில்லை; அவர்களை டார்டரசுக்குள்*[g] தள்ளி, பயங்கர இருட்டில் அவர்
களைச் சங்கிலிகளால் கட்டி# நியாயத்தீர்ப்புக்காக அடைத்து வைத்தார்.[h]
5 பூர்வ உலகத்தையும் அவர் தண்டிக்காமல் விடவில்லை;[i] நீதியைப் பிர
சங்கித்தவராகிய நோவா[j] உட்பட எட்டுப் பேரை மட்டும் காப்பாற்றினார்,[k]
கடவுள்பக்தி இல்லாதவர்கள் நிறைந்த அந்த உலகத்தின் மீது பெரிய
வெள்ளத்தைக் கொண்டுவந்தார்.[l] **6** சோதோம், கொமோரா நகரங்களை
யும் தண்டித்தார்.[m] கடவுள்பக்தி இல்லாதவர்களுக்கு வரப்போகும் முடிவு
எப்படியிருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக[n] அவற்றை எரித்துச் சாம்ப
லாக்கினார். **7** வெட்கங்கெட்ட நடத்தையில்* ஈடுபட்ட அடங்காத மக்க
ளைப் பார்த்து மிகவும் வேதனைப்பட்ட நீதிமானாகிய லோத்துவைக் காப்
பாற்றினார்.[o] **8** அந்த நீதிமான் அவர்கள் மத்தியில் வாழ்ந்தபோது,
தினம்தினம் அவர்களுடைய அக்கிரமச் செயல்களைப் பார்த்தும் கேள்விப்
பட்டும் வந்ததால் அவருடைய நீதியான உள்ளம் வாட்டிவதைக்கப்பட்டது.
9 கடவுள்பக்தி உள்ளவர்களைச் சோதனையிலிருந்து விடுதலை செய்ய
வும்,[p] அநீதிமான்களை நியாயத்தீர்ப்பு நாளில் அழிப்பதற்காக விட்டுவைக்
கவும்[q] யெகோவா* அறிந்திருக்கிறார். **10** முக்கியமாக, மற்றவர்களோடு
தகாத உறவுகொண்டு அவர்களைக் கெடுப்பதற்கு அலைகிறவர்களை
யும்,[r] அதிகாரத்தில் உள்ளவர்களைக் கேவலமாக நினைக்கிறவர்களையும்[s]
அழிக்க அவர் அறிந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட ஆட்கள் துணிச்சல்காரர்கள், இஷ்டப்படி நடக்கிறவர்கள்,
மகிமையானவர்களைப் பழித்துப் பேசப் பயப்படாதவர்கள். **11** ஆனால்,
அதிக பலமும் வல்லமையும் உள்ள தேவதூதர்கள்கூட, யெகோவா
மேல்* வைத்திருக்கும் மரியாதையின் காரணமாகப் போலிப் போதகர்க
ளைக் கடுமையான வார்த்தைகளால் குற்றம்சாட்டுவதில்லை.[t] **12** ஆனா
லும், பிடிபட்டுக் கொல்லப்படுவதற்காகவே பிறந்திருக்கும் மிருகங்களை,
அதாவது இயல்புணர்ச்சியால் செயல்படுகிற புத்தியில்லாத மிருகங்களை,
போன்ற அந்த ஆட்கள், தங்களுக்குத் தெரியாதவற்றைப் பழித்துப் பேசு
வார்கள்,[u] தங்களுடைய அழிவின் பாதையிலேயே போய் அழிந்து
போவார்கள். **13** அவர்கள் செய்த தீமைக்குப் பலனாகத் தீமைதான்
அவர்களுக்கு வரும்.

பட்டப்பகலில் பாவ ஆசைகளில் புரளுவதை இன்பம் என்று நினைக்கி
றார்கள்.[v] உங்களோடு விருந்து சாப்பிடும்போது தங்களுடைய போதனை
களால் உங்களை ஏமாற்றுவதில் பயங்கரமாகச் சந்தோஷப்படுகிறார்கள்.[w]
உங்கள் மத்தியில் அவர்கள் கறையாகவும் களங்கமாகவும் இருக்கிறார்கள்.

2:2, 4, 7 *சொல் பட்டியலைப் பாருங்கள். **2:4** #அல்லது, “படுகுழிகளில் தள்ளி.”
2:9, 11 *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 2
a 1கொ 6:20
b யூ 4
c ஏசா 52:5
d யூ 4
e 2பே 3:9
f ஆதி 6:4; எபே 6:12
g 1பே 3:19, 20
h யூ 6
i ஆதி 7:23
j ஆதி 6:9; எபி 11:7
k ஆதி 8:18
l 2பே 3:6
m ஆதி 19:24, 25
n யூ 7
o ஆதி 19:15, 16
p சங் 34:19; 1கொ 10:13; 2தீ 4:18; வெளி 3:10
q ரோ 2:5; 2பே 3:7
r யூ 7
s யாத் 22:28; யூ 8
t யூ 9
u யூ 10
v ரோ 13:13
w யூ 12

14 அவர்களுடைய கண்களில் காமவெறி*[a] நிறைந்திருக்கிறது, கட்டுப்
படுத்த முடியாத பாவ ஆசை அவர்களுக்கு இருக்கிறது. மன உறுதி
இல்லாத ஆட்களை அவர்கள் வசப்படுத்திக்கொள்கிறார்கள்; பேராசைப்ப
டுவதில் தேர்ச்சிபெற்ற இதயம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள்
சபிக்கப்பட்டவர்கள். **15** நேர்மையான வழியைவிட்டு விலகி மோசம்போ
யிருக்கிறார்கள். பெயோரின் மகனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றி
யிருக்கிறார்கள்.[b] அந்த பிலேயாம் கூலிக்காகத் தவறு செய்ய ஆசைப்பட்
டான்.[c] **16** ஆனால், சட்டத்தை மீறியதால் அவன் கண்டிக்கப்பட்டான்.[d]
வாயில்லாத ஜீவன் ஒன்று மனித குரலில் பேசி, அந்தத் தீர்க்கதரிசியின்
பைத்தியக்காரச் செயலைத் தடுக்க முயற்சி செய்தது.[e]

17 அவர்கள் தண்ணீர் இல்லாத நீரூற்றுகள், புயல்காற்றில் அடித்துக்
கொண்டு போகப்படும் மேகங்கள்; பயங்கர இருட்டில்தான் அவர்கள் தள்
ளப்படுவார்கள்.[f] **18** அவர்கள் வீண்பெருமை பேசுகிறார்கள்; தவறு செய்
கிறவர்களிடமிருந்து தப்பித்து வருகிறவர்களைப் பாவ ஆசைகளாலும்[g]
வெட்கங்கெட்ட நடத்தையாலும்* வசீகரிக்கிறார்கள்.[h] **19** அவர்களுக்கு
விடுதலை கொடுப்பதாக வாக்குக் கொடுக்கிறார்கள், ஆனால் அவர்களே
கெட்ட காரியங்களுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள்;[i] ஒருவன் எவனால்*
அடக்கி ஆளப்படுகிறானோ அவனுக்கு# இவன் அடிமையாகிவிடுகிறான்.[j]
20 நம் எஜமானும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவைப் பற்றித் திருத்த
மாகத் தெரிந்துகொண்டு உலகத்தின் பாவச் சேற்றிலிருந்து தப்பித்தவர்
கள்,[k] மறுபடியும் அதில் சிக்கிக்கொண்டு அதனால் அடக்கி ஆளப்பட்
டால், நிச்சயமாகவே அவர்களுடைய நிலைமை முதலில் இருந்ததைவிட
மோசமாக இருக்கும்.[l] **21** நீதியின் வழியையும் பரிசுத்த கட்டளையை
யும் அவர்கள் திருத்தமாகத் தெரிந்துகொண்ட பின்பு அதைவிட்டு விலகு
வதைவிட அதைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருந்திருந்தாலே அவர்
களுக்கு நல்லதாக இருந்திருக்கும்.[m] **22** “நாய் தான் கக்கியதைத் தின்னத்
திரும்பிப் போகும்; பன்றியைக் குளிப்பாட்டினாலும் அது மறுபடியும் சேற்
றில் புரளும்” என்று சொல்லப்பட்ட பழமொழியின்படியே* அவர்களுக்கு
நடந்தது.[n]

3 அன்பானவர்களே, இப்போது நான் உங்களுக்கு எழுதுவது இரண்டா
வது கடிதம். என்னுடைய முதல் கடிதத்தைப் போலவே இந்தக் கடி
தத்தின் மூலமும் சில விஷயங்களை ஞாபகப்படுத்தி, தெளிவாக
யோசிக்கும் உங்கள் திறனைத் தூண்டியெழுப்புகிறேன்.[o] **2** பரிசுத்த தீர்க்
கதரிசிகள் முன்கூட்டியே சொன்ன வார்த்தைகளை மட்டுமல்ல, நம் எஜமா
னாகவும் மீட்பராகவும் இருக்கிறவர் அப்போஸ்தலர்கள் மூலம் கொடுத்த
கட்டளைகளையும் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்
பதற்காகத்தான் அப்படிச் செய்கிறேன். **3** முதலில் நீங்கள் தெரிந்து
கொள்ள வேண்டியது இதுதான்: கடைசி நாட்களில், கேலி செய்கிறவர்கள்
மக்கள் மத்தியில் வருவார்கள். அவர்கள் தங்களுடைய ஆசைகளின்படி
நடந்து,[p] **4** “அவர் வருவதாக வாக்குக் கொடுத்தாரே, அவர் எங்கே?[q] நம்
முன்னோர்களும் போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.* உலகம் உண்டான காலத்

அதி. 2
a மத் 5:28
b எண் 22:5, 6; யூ 11; வெளி 2:14
c எண் 22:7; நெ 13:2
d எண் 22:31, 34; எண் 31:8
e எண் 22:28
f யூ 12, 13
g யூ 16
h 2பே 2:14
i 1பே 2:16
j ரோ 6:16
k 2பே 1:4
l எபி 6:4-6; எபி 10:26
m லூ 12:47; யோவா 15:22
n நீதி 26:11

அதி. 3
o ரோ 15:15; 2பே 1:13
p யூ 17, 18
q எரே 17:15; மத் 24:48; லூ 12:45

2:14 * வே.வா., “முறைகேடான உறவுகொள்ளும் வெறி.” **2:18** * சொல் பட்டியலைப் பாருங்கள். **2:19** * வே.வா., “எதனால்.” # வே.வா., “அதற்கு.” **2:22** * வே.வா., “நீதி மொழியின்படியே.” **3:4** * நே.மொ., “முன்னோர்களும் தூங்கிவிட்டார்கள்.”

திலிருந்தே எல்லாம் அப்படியேதான் இருக்கிறது"[a] என்று சொல்லிக் கேலி
செய்வார்கள்.

5 பல காலத்துக்கு முன்னால் கடவுளுடைய வார்த்தையால் வானமும்
பூமியும் உண்டாயின என்பதையும், பூமி தண்ணீரிலிருந்து மேலே எழும்பித்
தண்ணீருக்கு நடுவில் உறுதியாக நின்றது[b] என்பதையும், **6** அவற்றினால்
அப்போது இருந்த உலகம் பெரிய வெள்ளத்தால் அழிந்தது[c] என்பதை
யும் அவர்கள் நினைத்துப் பார்க்க மறுக்கிறார்கள். **7** இப்போது இருக்கிற
வானமும் பூமியும் அதே வார்த்தையால் நெருப்புக்காக வைக்கப்பட்டிருக்
கின்றன, கடவுள்பக்தி இல்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து
போகிற[d] நாளுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

8 ஆனாலும் அன்பானவர்களே, யெகோவாவுக்கு* ஒரு நாள் ஆயிரம்
வருஷங்கள் போலவும், ஆயிரம் வருஷங்கள் ஒரு நாள் போலவும் இருக்
கிறது[e] என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம். **9** யெகோவா* தன்னு
டைய வாக்குறுதியை நிறைவேற்றத் தாமதிப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள்.
ஆனால், அவர் தாமதிப்பதில்லை.[f] ஒருவரும் அழிந்துபோகாமல் எல்லா
ரும் மனம் திருந்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.[g] அதனால்தான்
உங்கள்மேல் பொறுமையாக இருக்கிறார். **10** ஆனாலும், யெகோவா
வின்* நாள்[h] திருடன் வருவதுபோல் வரும்.[i] அப்போது, வானம் பயங்
கர சத்தத்தோடு மடமடவென்று ஒழிந்து போய்விடும்;[j] கடும் வெப்பத்தில்
மூலப்பொருள்கள் அழிந்துவிடும், பூமியும் அதில் உண்டாக்கப்பட்டவை
யும் எரிந்து நாசமாகும்.#[k]

11 இவையெல்லாம் அழியப்போவதால், நீங்கள் எந்தளவுக்குப் பரிசுத்த
நடத்தை உள்ளவர்களாகவும் கடவுள்பக்திக்குரிய செயல்களைச் செய்கிற
வர்களாகவும் இருக்க வேண்டும்! **12** அதேசமயத்தில், யெகோவாவின்*
நாளை#[l] எப்போதும் மனதில் வைத்து△ அதற்காக எந்தளவுக்கு ஆவ
லோடு காத்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும்! அந்த நாளில் வானம்
எரிந்து அழிந்துபோகும்,[m] மூலப்பொருள்கள் கடும் வெப்பத்தில் உருகிப்
போகும். **13** ஆனால், அவருடைய வாக்குறுதியின்படியே நீதி குடியிருக்
கிற[n] புதிய வானமும் புதிய பூமியும்[o] உண்டாகுமென்று ஆவலோடு காத்
திருக்கிறோம்.

14 அதனால் அன்பானவர்களே, இவையெல்லாம் வருவதற்கு நீங்
கள் ஆவலோடு காத்திருப்பதால், அவர் முன்னால் கறையில்லாதவர்களா
கவும் களங்கமில்லாதவர்களாகவும் சமாதானமுள்ளவர்களாகவும்[p] காணப்
படுவதற்கு உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்யுங்கள்.
15 அதோடு, நம் எஜமானுடைய பொறுமை நமக்கு மீட்பு என்று எண்
ணுங்கள். நம்முடைய அன்புச் சகோதரராகிய பவுலும் தனக்குக் கொடுக்கப்
பட்ட ஞானத்தால் இதைத்தான் உங்களுக்கு எழுதினார்.[q] **16** சொல்லப்
போனால், தன்னுடைய எல்லா கடிதங்களிலும் இவற்றைப் பற்றித்தான்
எழுதினார். ஆனாலும், அவர் எழுதியவற்றில் சில விஷயங்கள் புரிந்து
கொள்வதற்குக் கடினமாக இருக்கின்றன. சரியான புரிந்துகொள்ளுதல் இல்
லாதவர்களும்* உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவசனங்களைத் திரித்துச்

3:8-10, 12 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **3:10** #நே.மொ., "வெட்டவெளிச்சமாக் கப்படும்." **3:12** #நே.மொ., "நாளின் பிரசன்னத்தை." △வே.வா., "ஆசையாக எதிர் பார்த்து." நே.மொ., "விரைவாக்கி." **3:16** *வே.வா., "கற்பிக்கப்படாதவர்களும்."

அதி. 3
a எசே 12:22, 27
b ஆதி 1:6, 9
c ஆதி 7:11, 23; மத் 24:38, 39
d உபா 7:10; 2தெ 1:7-9
e சங் 90:4
f ஆப 2:3
g ரோ 2:4
h யோவே 2:31; செப் 1:14
i 1தெ 5:2
j வெளி 21:1
k சங் 37:10; ஏசா 13:9; செப் 1:18; வெளி 6:14
l செப் 1:14
m ஏசா 34:4
n ஏசா 11:4, 5
o ஏசா 65:17; ஏசா 66:22; வெளி 21:1
p 2கொ 13:11
q ரோ 2:4

சொல்வதுபோல் இவற்றையும் திரித்துச் சொல்லி, தங்களுக்கே அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள்.

17 அன்பானவர்களே, இவற்றைப் பற்றி முன்கூட்டியே அறிந்திருக்கிறீர்கள்; அதனால், அந்த அக்கிரமக்காரர்கள் சொல்கிற தவறான கருத்துகளால் கவர்ந்திழுக்கப்பட்டு நிலைதடுமாறிவிடாதபடி எச்சரிக்கையாக இருங்கள்.[a]
18 நம்முடைய எஜமானும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் அளவற்ற கருணையிலும் அவரைப் பற்றிய அறிவிலும் வளர்ந்துகொண்டே இருங்கள். இன்றும் என்றும் அவருக்கு மகிமை உண்டாவதாக. ஆமென்.*

3:18 * அதாவது, "அப்படியே ஆகட்டும்."

அதி. 3
a மத் 24:24
எபே 4:14

யோவான்

எழுதிய முதலாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

1 வாழ்வளிக்கும் வார்த்தை (1-4)
ஒளியில் நடப்பது (5-7)
பாவங்களை ஒத்துக்கொள்வது முக்கியம் (8-10)

2 இயேசு ஒரு பிராயச்சித்த பலி (1, 2)
கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பது (3-11)
பழைய கட்டளை, புதிய கட்டளை (7, 8)
இவற்றை எழுதுவதற்கான காரணங்கள் (12-14)
உலகத்தின் மீது அன்பு வைக்காதீர்கள் (15-17)
அந்திக்கிறிஸ்துவைக் குறித்து எச்சரிக்கை (18-29)

3 நாம் கடவுளின் பிள்ளைகள் (1-3)
கடவுளின் பிள்ளைகளும் பிசாசின் பிள்ளைகளும் (4-12)
பிசாசின் செயல்களை இயேசு ஒழிப்பார் (8)
ஒருவருக்கொருவர் அன்பு காட்டுங்கள் (13-18)
கடவுள் நம் இதயத்தைவிட உயர்ந்தவர் (19-24)

4 செய்திகளைச் சோதித்துப் பாருங்கள் (1-6)
கடவுளைத் தெரிந்துகொள்வது, அன்பு காட்டுவது (7-21)
"கடவுள் அன்பாகவே இருக்கிறார்" (8, 16)
அன்பில் பயம் இல்லை (18)

5 இயேசுமீதுள்ள விசுவாசம் உலகத்தை ஜெயிக்கிறது (1-12)
கடவுள்மீது அன்பு காட்டுவது என்றால் என்ன (3)
ஜெபத்தின் வல்லமையில் நம்பிக்கை (13-17)
பொல்லாத உலகத்தில் எச்சரிக்கை (18-21)
உலகம் முழுவதும் பொல்லாதவனுடைய கட்டுப்பாட்டில் (19)

1 ஆரம்பம்முதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களால் பார்த்ததும், நாங்கள் கவனித்ததும், கைகளால் தொட்டுப் பார்த்ததுமான வாழ்வளிக்கும் வார்த்தையை[a] உங்களுக்குச் சொல்கிறோம்.
2 (ஆம், முடிவில்லாத வாழ்வு[b] வெளிப்படுத்தப்பட்டது; அதை நாங்கள் பார்த்திருக்கிறோம், பரலோகத் தகப்பனிடம் இருந்ததும் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான அந்த வாழ்வைப் பற்றியே இப்போது உங்க

அதி. 1
a யோவா 1:4
யோவா 6:68
b யோவா 17:3

ளுக்குச் சாட்சியாகச் சொல்கிறோம்.)[a] **3** பரலோகத் தகப்பனோடும் அவ
ருடைய மகன் இயேசு கிறிஸ்துவோடும் நாம் ஒன்றுபட்டிருப்பது*[b]
போலவே, நீங்கள் எங்களோடு ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதற்
காக, நாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் உங்களுக்குச் சொல்கிறோம்.[c]
4 நம்முடைய சந்தோஷம் நிறைவாய் இருப்பதற்காக இந்த விஷயங்களை
உங்களுக்கு எழுதுகிறோம்.

5 நாங்கள் அவரிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவித்து வருகிற
செய்தி இதுதான்: கடவுள் ஒளியாக இருக்கிறார்;[d] இருள் என்பது அவரிடம்
துளிகூட இல்லை. **6** “அவரோடு ஒன்றுபட்டிருக்கிறோம்” என்று சொல்
லிக்கொண்டு இருளிலேயே நடந்தால், நாம் பொய் சொல்கிறவர்களாகவும்
சத்தியத்தைக் கடைப்பிடிக்காதவர்களாகவும் இருப்போம்.[e] **7** ஆனாலும்,
அவர் ஒளியில் இருப்பதுபோல் நாமும் ஒளியில் நடந்தால், ஒருவரோடொ
ருவர் ஒன்றுபட்டிருப்போம். அதோடு, அவருடைய மகனான இயேசுவின்
இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்தமாக்கும்.[f]

8 “எங்களிடம் பாவம் இல்லை” என்று சொன்னால், நம்மையே
ஏமாற்றிக்கொள்கிறவர்களாக இருப்போம்;[g] நமக்குள் சத்தியம் இருக்காது.
9 நம்முடைய பாவங்களை ஒத்துக்கொண்டால், கடவுள் அந்தப் பாவங்
களை மன்னித்து, அநீதியான எல்லாவற்றிலிருந்தும் நம்மைச் சுத்தமாக்கு
வார்.[h] ஏனென்றால், அவர் நம்பகமானவர், நீதியுள்ளவர். **10** “நாங்கள்
பாவம் செய்யவில்லை” என்று சொன்னால், கடவுள் ஒரு பொய்யர் என்று
சொல்வதுபோல் இருக்கிறது. அவருடைய வார்த்தை நம் உள்ளத்தில்
இருக்காது.

2 சின்னப் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாமல் இருப்பதற்காக
இந்த விஷயங்களை நான் உங்களுக்கு எழுதுகிறேன். ஆனாலும், நம்
மில் யாராவது ஏதாவது பாவம் செய்துவிட்டால், பரலோகத் தகப்பனோடு
இருக்கிற நீதியுள்ளவரான[i] இயேசு கிறிஸ்து நமக்குத் துணையாக* இருப்
பார்.[j] **2** நம்முடைய பாவங்களுக்குப்[k] பிராயச்சித்த பலி*[l] அவர்தான்; நம்
முடைய பாவங்களுக்கு மட்டுமல்ல, முழு உலகத்தின் பாவங்களுக்கும் பிரா
யச்சித்த பலி அவர்தான்.[m] **3** அவருடைய கட்டளைகளைத் தொடர்ந்து
கடைப்பிடித்தால், அவரை அறிந்திருக்கிறோம் என்று நாம் சொல்ல முடியும்.
4 “அவரை அறிந்திருக்கிறேன்” என்று ஒருவன் சொல்லிக்கொண்டு அவரு
டைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் அவன் பொய்யன்;
அவனுக்குள் சத்தியம் இல்லை. **5** ஆனால், ஒருவன் அவருடைய வார்த்
தையைக் கடைப்பிடித்தால் அவன் உண்மையில் கடவுளுடைய அன்பை
முழுமையாகக் காட்டுகிறான்.[n] நாம் அவரோடு ஒன்றுபட்டிருக்கிறோம் என்
பதை இதனால் தெரிந்துகொள்கிறோம்.[o] **6** ‘நான் அவரோடு ஒன்றுபட்டி
ருக்கிறேன்’ என்று சொல்கிற ஒருவன், அவர் நடந்தபடியே தானும்
தொடர்ந்து நடக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.[p]

7 அன்புக் கண்மணிகளே, நான் உங்களுக்கு எழுதுவது ஒரு புதிய கட்
டளை அல்ல, ஆரம்பத்திலிருந்து உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பழைய
கட்டளைதான்,[q] நீங்கள் கேட்ட செய்திதான். **8** இருந்தாலும், ஒரு புதிய

1:3 *வே.வா., “நல்லுறவை அனுபவிப்பது.” **2:1** *வே.வா., “வழக்கறிஞராக.” **2:2** *வே.வா., “பாவப் பரிகார பலி; சமாதானப்படுத்துவதற்காகக் கொடுக்கப்படுகிறது.”

அதி. 1
a யோவா 21:24; அப் 2:32
b யோவா 17:20, 21
c யோவா 15:26, 27; அப் 4:20
d யாக் 1:17
e 2கொ 6:14; எபே 5:8; தீத் 1:16; 1யோ 2:4
f ரோ 3:25; எபே 1:7; எபி 9:14; எபி 10:22; வெளி 1:5
g 1ரா 8:46; பிர 7:20
h சங் 32:5; நீதி 28:13; யாக் 5:16

அதி. 2
i 1தீ 2:5
j ரோ 8:34; எபி 7:25
k ஏசா 53:5; ரோ 3:25; 1தீ 1:15; எபி 2:17; 1பே 2:24; 1யோ 4:10
l 1கொ 5:7
m மத் 20:28; யோவா 1:29
n 1யோ 4:18
o யோவா 14:20; யோவா 17:21
p யோவா 13:15; 1பே 2:21
q யோவா 13:34; 2யோ 5

கட்டளையை நான் உங்களுக்கு எழுதுகிறேன். அவர் கடைப்பிடித்த கட்
டளை அது; நீங்களும் அதைக் கடைப்பிடித்தீர்கள். ஏனென்றால், இருள்
விலகிக்கொண்டிருக்கிறது, சத்திய ஒளி ஏற்கெனவே பிரகாசித்துக்கொண்டி
ருக்கிறது.[a]

9 ஒளியில் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு தன் சகோதரனை வெறுக்
கிறவன்[b] இன்னும் இருளிலேயே இருக்கிறான்.[c] **10** தன் சகோதரன்மேல்
அன்பு காட்டுகிறவன் ஒளியில் நிலைத்திருக்கிறான்;[d] எதுவுமே அவனைத்
தடுக்கி விழ வைக்காது. **11** ஆனால், தன் சகோதரனை வெறுக்கிறவன்
இருளில் இருக்கிறான், இருளில் நடக்கிறான்;[e] இருள் அவனுடைய கண்
களைக் குருடாக்கியிருப்பதால் அவன் எங்கே போகிறான் என்பதே அவ
னுக்குத் தெரிவதில்லை.[f]

12 சின்னப் பிள்ளைகளே, அவருடைய பெயருக்காக உங்கள் பாவங்
கள் மன்னிக்கப்பட்டிருப்பதால்[g] நான் உங்களுக்கு எழுதுகிறேன். **13** அப்
பாக்களே, ஆரம்பத்திலிருந்து இருக்கிறவரை நீங்கள் அறிந்திருப்பதால்
நான் உங்களுக்கு எழுதுகிறேன். இளைஞர்களே, பொல்லாதவனை நீங்கள்
ஜெயித்திருப்பதால்[h] நான் உங்களுக்கு எழுதுகிறேன். இளம் பிள்ளைகளே,
பரலோகத் தகப்பனை நீங்கள் அறிந்திருப்பதால்[i] நான் உங்களுக்கு எழுது
கிறேன். **14** அப்பாக்களே, ஆரம்பத்திலிருந்து இருக்கிறவரை நீங்கள்
அறிந்திருப்பதால் நான் உங்களுக்கு எழுதுகிறேன். இளைஞர்களே, நீங்கள்
பலமுள்ளவர்களாக இருக்கிறீர்கள்,[j] கடவுளுடைய வார்த்தை உங்களுக்குள்
நிலைத்திருக்கிறது,[k] பொல்லாதவனை நீங்கள் ஜெயித்திருக்கிறீர்கள்;[l] அத
னால் உங்களுக்கு எழுதுகிறேன்.

15 இந்த உலகத்தின் மீதோ, இந்த உலகத்தில் இருக்கிற காரியங்க
ளின் மீதோ அன்பு வைக்காதீர்கள்.[m] ஒருவன் இந்த உலகத்தின் மீது
அன்பு வைத்தால், பரலோகத் தகப்பன்மீது அவனுக்கு அன்பு இல்லை.[n]
16 ஏனென்றால், உலகத்தில் இருக்கிற எல்லாமே, அதாவது உடலின்
ஆசையும்[o] கண்களின் ஆசையும்[p] பொருள் வசதிகளைப் பகட்டாகக்
காட்டிக்கொள்கிற குணமும்,* பரலோகத் தகப்பனிடமிருந்து வருவதில்லை,
இந்த உலகத்திடமிருந்துதான் வருகின்றன. **17** அதோடு, இந்த உலகமும்
அதன் ஆசையும் ஒழிந்துபோகும்;[q] கடவுளுடைய விருப்பத்தை* செய்கி
றவனோ என்றென்றும் நிலைத்திருப்பான்.[r]

18 இளம் பிள்ளைகளே, இது கடைசிக் காலம். அந்திக்கிறிஸ்து வருவ
தாக[s] நீங்கள் கேள்விப்பட்டபடி, இப்போதே அந்திக்கிறிஸ்துக்கள் நிறைய
பேர் வந்திருக்கிறார்கள்.[t] இது கடைசிக் காலம் என்பதை இதிலிருந்து
தெரிந்துகொள்கிறோம். **19** அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள்,
ஏனென்றால் அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள் அல்ல.[u] அவர்கள் நம்மைச்
சேர்ந்தவர்களாக இருந்திருந்தால் நம்மிடமே இருந்திருப்பார்கள். எல்லாரும்
நம்மைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது வெட்டவெளிச்சமாவதற்குத்தான்
அப்படி நடந்திருக்கிறது.[v] **20** பரிசுத்தமானவரால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்
பட்டிருக்கிறீர்கள்.*[w] உங்கள் எல்லாருக்கும் சத்தியம் தெரியும். **21** உங்க
ளுக்குச் சத்தியம்[x] தெரியாது என்பதால் அல்ல, அது உங்களுக்குத்

2:16 * வே.வா., “தன்னிடம் இருப்பதைப் பற்றிப் பெருமையடிக்கிற குணமும்.” **2:17** * வே.வா., “சித்தத்தை.” **2:20** * வே.வா., “அபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறீர்கள்.”

அதி. 2

a யோவா 1:9, யோவா 8:12
b எபே 4:31, கொலோ 3:8
c 1கொ 13:2, 1யோ 3:15
d எபே 5:8
e 1யோ 4:20
f யோவா 12:35
g லூ 24:47, அப் 4:12, அப் 10:43
h யாக் 4:7, 1யோ 5:19, வெளி 12:10, 11
i யோவா 17:25
j எபே 6:10
k 3யோ 3
l ரோ 8:37
m ரோ 12:2, 1கொ 7:31, தீத் 2:11, 12
n மத் 6:24, யாக் 4:4
o மத் 5:28, ரோ 13:14
p ஆதி 3:6, நீதி 27:20, மத் 4:8
q 1கொ 7:31, 1பே 1:24
r சங் 37:29, மத் 7:21, யோவா 6:40
s 2தெ 2:3, 2பே 2:1
t 2தெ 2:7, 2யோ 7, யூ 4
u அப் 20:30
v 1கொ 11:19
w 2கொ 1:21, 1யோ 2:27
x யோவா 8:31, 32

தெரியும் என்பதாலும், எந்தப் பொய்யும் சத்தியத்திலிருந்து வராது[a] என்ப
தாலும்தான் உங்களுக்கு எழுதுகிறேன்.

22 இயேசுவைக் கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ள மறுக்கிறவனைத்
தவிர வேறு யார் பொய்யன்?[b] தகப்பனையும் மகனையும் ஏற்றுக்
கொள்ள மறுக்கிறவன்தான் அந்திக்கிறிஸ்து.[c] **23** மகனை ஏற்றுக்கொள்ள
மறுக்கிறவர்களைத் தகப்பன் ஏற்றுக்கொள்ள மாட்டார்.[d] ஆனால், மகனை
வெளிப்படையாக ஏற்றுக்கொள்கிறவனைத்[e] தகப்பன் ஏற்றுக்கொள்வார்.[f]
24 அதனால், ஆரம்பத்திலிருந்து கேட்ட விஷயங்கள் உங்களுக்குள்
நிலைத்திருக்க வேண்டும்.[g] ஆரம்பத்திலிருந்து கேட்ட விஷயங்கள் உங்க
ளுக்குள் நிலைத்திருந்தால், மகனோடும் ஒன்றுபட்டிருப்பீர்கள், தகப்பனோ
டும் ஒன்றுபட்டிருப்பீர்கள். **25** அதோடு, அவர் நமக்கு முடிவில்லாத
வாழ்வை[h] வாக்குக் கொடுத்திருக்கிறார்.

26 உங்களை ஏமாற்றப் பார்க்கிறவர்களிடம் நீங்கள் எச்சரிக்கையாக
இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விஷயங்களை உங்களுக்கு
எழுதுகிறேன். **27** அவர் தன்னுடைய சக்தியால் உங்களைத் தேர்ந்தெடுத்
திருக்கிறார்;[i] அந்தச் சக்தி உங்களில் நிலைத்திருக்கிறது. அதனால், யாருமே
உங்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவரிடமி
ருந்து வருகிற அந்தச் சக்தி உண்மையானது, பொய் அல்ல. அது உங்க
ளுக்கு எல்லா விஷயங்களைப் பற்றியும் கற்றுக்கொடுக்கிறது.[j] அதனால்,
கற்றுக்கொண்டபடியே அவரோடு ஒன்றுபட்டிருங்கள்.[k] **28** சின்னப் பிள்
ளைகளே, அவர் வெளிப்படும்போது தயக்கமில்லாமல் பேசுகிறவர்களாக[l]
இருப்பதற்காகவும், அவருடைய பிரசன்னத்தின்போது அவமானத்தில்
விலகிப்போய்விடாமல் இருப்பதற்காகவும் அவரோடு ஒன்றுபட்டிருங்கள்.
29 அவர் நீதியுள்ளவர் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தால், நீதியைக்
கடைப்பிடிக்கிற எல்லாரும் அவருடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள்[m]
என்பதையும் தெரிந்துகொள்வீர்கள்.

3 நாம் கடவுளுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறோம்
என்றால், பரலோகத் தகப்பன் எந்தளவுக்கு நம்மேல் அன்பு காட்டி
யிருக்கிறார் என்று பாருங்கள்![n] நாம் அவருடைய பிள்ளைகளாகவே இருக்
கிறோம்.[o] இந்த உலகம் அவரைப் பற்றித் தெரியாமல் இருப்பதால்தான்[p] நம்
மைப் பற்றியும் தெரியாமல் இருக்கிறது.[q] **2** அன்புக் கண்மணிகளே, நாம்
இப்போது கடவுளுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்.[r] ஆனால், இனி நாம்
எந்த விதத்தில் இருப்போம் என்பது இன்னும் நமக்கு வெளிப்படுத்தப்பட
வில்லை.[s] இருந்தாலும், அவர் வெளிப்படும்போது நாம் அவரைப்
போலவே இருப்போம் என்பது நமக்குத் தெரியும். ஏனென்றால், அவர்
எந்த விதத்தில் இருக்கிறாரோ அந்த விதத்திலேயே அவரைப் பார்ப்போம்.
3 இந்த நம்பிக்கையோடு இருக்கிற ஒவ்வொருவனும், அவர் சுத்தமாக
இருப்பதைப் போலவே தன்னையும் சுத்தமாக்கிக்கொள்கிறான்.[t]

4 பாவம் செய்துகொண்டே இருக்கிற ஒவ்வொருவனும் சட்டத்தை மீறி
நடக்கிறான். சட்டத்தை மீறுவதுதான் பாவம். **5** நம்முடைய பாவங்களைப்
போக்குவதற்காகக் கிறிஸ்து வந்தார்[u] என்றும் உங்களுக்குத் தெரியும். அவ
ரிடம் பாவமே இல்லை. **6** அவரோடு ஒன்றுபட்டிருக்கிற யாரும் பாவம்
செய்துகொண்டே இருப்பதில்லை;[v] பாவம் செய்துகொண்டே இருக்கிற

அதி. 2
a யோவா 8:44
b 1யோ 4:3; 2யோ 7
c 1யோ 2:18
d யோவா 5:23; 2யோ 9
e ரோ 10:9, 10
f 1யோ 4:15
g யோவா 14:23; 2யோ 6
h யோவா 17:3; 1யோ 1:2
i 2கொ 1:21; 1யோ 2:20
j யோவா 14:26; யோவா 16:13
k யோவா 17:21
l 1யோ 4:17
m 1பே 1:23; 1யோ 4:7

அதி. 3
n யோவா 3:16
o யோவா 1:12, 13
p யோவா 17:25
q யோவா 15:19
r ரோ 8:15, 16; எபே 1:5
s 1கொ 15:49; பிலி 3:20, 21
t 2கொ 7:1
u லேவி 16:21, 22; ஏசா 53:11; யோவா 1:29
v ரோ 6:12

யாரும் அவரைப் பார்த்ததும் இல்லை, அவரைப் பற்றித் தெரிந்துகொண்ட
தும் இல்லை. **7** சின்னப் பிள்ளைகளே, நீங்கள் யாரிடமும் ஏமாந்து
விடாதீர்கள். நீதியான செயல்களைச் செய்துகொண்டே இருக்கிறவன்,
அவர் நீதியுள்ளவராக இருப்பதைப் போலவே தானும் நீதியுள்ளவனாக
இருக்கிறான். **8** பாவம் செய்துகொண்டே இருக்கிறவன் பிசாசின் பக்கம்
இருக்கிறான்; ஏனென்றால், பிசாசு ஆரம்பத்திலிருந்தே பாவம் செய்துவந்
திருக்கிறான்.[a] பிசாசின் செயல்களை ஒழிப்பதற்காகத்தான் கடவுளுடைய
மகன் வந்தார்.[b]

9 கடவுளுடைய பிள்ளையாக இருக்கிற யாரும் பாவம் செய்து
கொண்டே இருப்பதில்லை.[c] ஏனென்றால், கடவுளுடைய சக்தி* அப்படிப்
பட்டவனில் நிலைத்திருக்கிறது; அவன் கடவுளுடைய பிள்ளையாக[d] இருப்
பதால் அவனால் பாவம் செய்துகொண்டே இருக்க முடியாது. **10** நீதியான
செயல்களைச் செய்துகொண்டே இருக்காத யாரும் கடவுளின் பக்கம்
இல்லை. அதேபோல், தன் சகோதரன்மேல் அன்பு காட்டாத யாரும் கடவு
ளின் பக்கம் இல்லை.[e] கடவுளுடைய பிள்ளைகள் யார் என்றும், பிசா
சின் பிள்ளைகள் யார் என்றும் இந்த உண்மையிலிருந்து தெளிவாகத்
தெரிந்துகொள்ளலாம். **11** நாம் ஒருவருக்கொருவர் அன்பு காட்ட வேண்
டும் என்பதுதான் ஆரம்பத்திலிருந்து நீங்கள் கேட்ட செய்தி.[f] **12** பொல்
லாதவனின் பக்கம் இருந்த காயீனைப் போல் நாம் இருக்கக் கூடாது.
அவன் தன்னுடைய சகோதரனைப் படுகொலை செய்தான்.[g] ஏன் படு
கொலை செய்தான்? ஏனென்றால், அவனுடைய செயல்கள் பொல்லாதவை
யாக இருந்தன;[h] ஆனால், அவனுடைய சகோதரனின் செயல்கள் நீதியான
வையாக இருந்தன.[i]

13 சகோதரர்களே, இந்த உலகம் உங்களை வெறுப்பதைப் பார்த்து ஆச்
சரியப்படாதீர்கள்.[j] **14** சகோதரர்கள்மேல் நாம் அன்பு காட்டுவதால்,[k] இறந்
தவர்களைப் போல் இருந்த நாம் இப்போது உயிர் வாழ்கிறோம் என்பதைத்
தெரிந்துகொள்கிறோம்.[l] அன்பு காட்டாதவன் இறந்தவனைப் போல் இருக்கி
றான்.[m] **15** தன் சகோதரனை வெறுக்கிற ஒவ்வொருவனும் கொலைகாரன்
தான்.[n] கொலைகாரன் எவனுக்கும் முடிவில்லாத வாழ்வு இல்லை[o] என்
பது உங்களுக்குத் தெரியும். **16** அவர் நமக்காகத் தன்னுடைய உயிரைக்
கொடுத்ததால் அன்பு என்றால் என்ன என்பதை நாம் தெரிந்துகொண்
டோம்;[p] நாமும் நம் சகோதரர்களுக்காக நம்முடைய உயிரைக் கொடுக்கக்
கடமைப்பட்டிருக்கிறோம்.[q] **17** ஆனால், இந்த உலகத்தில் பொருள் வசதி
கள் உள்ளவன் தன்னுடைய சகோதரன் வறுமையில் வாடுவதைப் பார்த்
தும், அவன்மேல் கரிசனை காட்ட மறுத்தால் கடவுள்மேல் அவனுக்கு
அன்பு இருக்கிறதென்று எப்படிச் சொல்ல முடியும்?[r] **18** சின்னப் பிள்
ளைகளே, உங்களுடைய சொல்லில் மட்டுமல்ல,[s] செயலிலும் அன்பு காட்ட
வேண்டும்,[t] அதை உண்மை மனதோடு காட்ட வேண்டும்.[u]

19 இதன் மூலம்தான், நாம் சத்தியத்தின் பக்கம் இருக்கிறோம் என்ப
தைத் தெரிந்துகொள்வோம். **20** எந்தக் காரணத்துக்காவது நம்முடைய இத
யம் நம்மைக் கண்டனம் செய்யும்போது, கடவுள் நம்மைக் கண்டனம் செய்
வதில்லை என்று நம் இதயத்துக்கு உறுதி அளித்துக்கொள்ளலாம்.*

3:9 *நே.மொ., "கடவுளுடைய விதை." அதாவது, கனி தரக்கூடிய விதை. **3:20** *வே.வா., "இதயத்தை நம்ப வைக்கலாம்."

அதி. 3
- *a* ஆதி 3:14; யோவா 8:44
- *b* யோவா 16:33; எபி 2:14
- *c* 1யோ 5:18
- *d* 1பே 1:23
- *e* 1யோ 4:8
- *f* யோவா 13:34; 1யோ 2:7; 2யோ 5
- *g* ஆதி 4:8
- *h* ஆதி 4:5
- *i* ஆதி 4:4; எபி 11:4
- *j* மத் 5:11; யோவா 15:18; 2தீ 3:12
- *k* 1யோ 2:10
- *l* யோவா 5:24; ரோ 8:2
- *m* யோவா 3:36
- *n* மத் 5:21, 22; எபே 4:31
- *o* ஆதி 9:6; எண் 35:31; வெளி 21:8
- *p* யோவா 3:16; யோவா 13:1; யோவா 15:13
- *q* யோவா 13:15; ரோ 16:3, 4; 1தெ 2:8
- *r* உபா 15:7, 8; லூ 3:11; ரோ 12:13; யாக் 2:15, 16; 1யோ 4:20
- *s* ரோ 12:9
- *t* யாக் 1:22; யாக் 2:17
- *u* 1பே 1:22

அதி. 3
a எபி 4:13
b எபி 4:16
1யோ 5:14
c சங் 34:15
மத் 7:8
1பே 3:12
d யோவா 6:29
e யோவா 13:34
f 1யோ 2:24
g யோவா 14:23

அதி. 4
h 2தெ 2:1, 2
1தீ 4:1
i வெளி 22:6
j 2பே 2:1
k யோவா 1:14
1கொ 12:3
வெளி 19:10
l 1யோ 2:22
m 2தெ 2:7
1யோ 2:18
n அப் 20:29, 30
o எபே 2:2
p யோவா 17:21
q 1யோ 5:4
r 1யோ 5:19
s யோவா 15:19
t யோவா 10:27
u யோவா 8:47
v 1யோ 4:1
w 1பே 1:22
x 1யோ 4:16
y யாத் 34:6
மீ 7:18
1யோ 4:19
z யோவா 3:16
ரோ 5:8
ரோ 8:32
1யோ 5:11
a யோவா 1:14

ஏனென்றால், கடவுள் நம் இதயத்தைவிட உயர்ந்தவராக இருக்கிறார், எல்
லாவற்றையும் தெரிந்தவராகவும் இருக்கிறார்.[a] **21** அன்புக் கண்மணிகளே,
நம்முடைய இதயம் நம்மைக் கண்டனம் செய்யவில்லை என்றால், கடவு
ளிடம் நாம் தயக்கமில்லாமல் பேச முடியும்.[b] **22** அதோடு, நாம்
எதைக் கேட்டாலும் அவர் நமக்குத் தருவார்.[c] ஏனென்றால், நாம் அவ
ருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவருக்குப் பிரியமான காரியங்
களைச் செய்துவருகிறோம். **23** உண்மையில் இதுதான் அவருடைய
கட்டளை: அவருடைய மகனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் நாம் விசு
வாசம் வைத்து,[d] அவர் நமக்குக் கட்டளை கொடுத்தபடியே ஒருவருக்கொரு
வர் அன்பு காட்ட வேண்டும்.[e] **24** அவருடைய கட்டளைகளைக் கடைப்
பிடிக்கிறவன் அவரோடு ஒன்றுபட்டிருக்கிறான். அப்படிப்பட்டவனோடு
அவரும் ஒன்றுபட்டிருக்கிறார்.[f] அவர் நம்மோடு ஒன்றுபட்டிருக்கிறார்[g] என்
பதை அவர் நமக்குத் தந்த சக்தியால் தெரிந்துகொள்கிறோம்.

4 அன்புக் கண்மணிகளே, கடவுளிடமிருந்து வந்ததுபோல் தெரிகிற
செய்திகள் எல்லாவற்றையும் நம்பாதீர்கள்;[h] அவை கடவுளிடமிருந்து
தான் வந்திருக்கின்றனவா என்பதைச் சோதித்துப் பாருங்கள்.[i] ஏனென்றால்,
போலித் தீர்க்கதரிசிகள் நிறைய பேர் இந்த உலகத்தில் வந்திருக்கிறார்கள்.[j]

2 கடவுளிடமிருந்து வந்த செய்தியைத் தெரிந்துகொள்ளும் வழி இது
தான்: இயேசு கிறிஸ்து மனிதராக வந்தார் என்பதைத் தெரிவிக்கிற செய்திக
ளெல்லாம் கடவுளிடமிருந்து வந்திருக்கின்றன.[k] **3** ஆனால், இயேசு மனித
ராக வந்தார் என்பதைத் தெரிவிக்காத செய்திகளெல்லாம் கடவுளிடமிருந்து
வரவில்லை.[l] அதோடு, அந்திக்கிறிஸ்துவின் செய்தி வருமென்று நீங்கள்
கேள்விப்பட்டபடி,[m] அது ஏற்கெனவே உலகத்தில் வந்துவிட்டது.[n]

4 சின்னப் பிள்ளைகளே, நீங்கள் கடவுளின் பக்கம் இருக்கிறீர்கள். உல
கத்தோடு ஒன்றுபட்டிருக்கிற பிசாசைவிட[o] உங்களோடு ஒன்றுபட்டிருக்
கிற கடவுள்[p] உயர்ந்தவராக இருப்பதால், அப்படிப்பட்ட ஆட்களை நீங்கள்
ஜெயித்திருக்கிறீர்கள்.[q] **5** அந்த ஆட்கள் உலகத்தின் பக்கம் இருக்கிறார்
கள்.[r] அதனால்தான் உலக விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார்கள், உலக
மும் அவர்கள் சொல்வதைக் கேட்கிறது.[s] **6** ஆனால், நாம் கடவுளின் பக்
கம் இருக்கிறோம். கடவுளைப் பற்றித் தெரிந்துகொள்கிறவன் நாம்
சொல்கிற விஷயங்களைக் காதுகொடுத்துக் கேட்கிறான்.[t] கடவுளின் பக்
கம் இல்லாதவன் நாம் சொல்கிற விஷயங்களைக் கேட்பதில்லை.[u] பொய்
யான செய்தி எது என்பதையும், கடவுளால் கொடுக்கப்பட்ட உண்மையான
செய்தி எது என்பதையும் இப்படித்தான் தெரிந்துகொள்கிறோம்.[v]

7 அன்புக் கண்மணிகளே, நாம் தொடர்ந்து ஒருவருக்கொருவர்
அன்பு காட்டுவோமாக.[w] ஏனென்றால், அன்பு கடவுளிடமிருந்துதான் வரு
கிறது. அன்பு காட்டுகிற ஒவ்வொருவனும் கடவுளுடைய பிள்ளையாக
இருக்கிறான், கடவுளைப் பற்றித் தெரிந்தவனாக இருக்கிறான்.[x] **8** அன்பு
காட்டாதவன் கடவுளைப் பற்றித் தெரியாதவனாக இருக்கிறான். ஏனென்
றால், கடவுள் அன்பாகவே இருக்கிறார்.[y] **9** தன்னுடைய ஒரே மகன்
மூலம் நமக்கு வாழ்வு கிடைப்பதற்காகக்[z] கடவுள் அவரை இந்த உலகத்
துக்கு அனுப்பினார்;[a] இதன் மூலம் கடவுள் நம்மேல் வைத்திருக்கிற அன்பு
தெரியவந்தது. **10** நாம் கடவுள்மேல் அன்பு காட்டியதால் அல்ல, அவர்

நம்மேல் அன்பு காட்டியதால்தான் நம் பாவங்களுக்குப்[a] பிராயச்சித்த பலி
யாக*[b] தன்னுடைய மகனை அனுப்பினார், இதுதான் அன்பு.

11 அன்புக் கண்மணிகளே, இந்த விதத்தில் கடவுள் நம்மேல்
அன்பு காட்டினார் என்றால், நாமும் ஒருவருக்கொருவர் அன்பு காட்டக்
கடமைப்பட்டிருக்கிறோம்.[c] **12** ஒருவனும் ஒருபோதும் கடவுளைப் பார்த்
ததில்லை.[d] நாம் ஒருவருக்கொருவர் தொடர்ந்து அன்பு காட்டினால்,
கடவுள் நம்மோடு நிலைத்திருப்பார், தன்னுடைய அன்பை நமக்கு முழு
மையாக* காட்டுவார்.[e] **13** அவர் தன்னுடைய சக்தியை நமக்குக்
கொடுத்ததால்தான் நாம் அவரோடு ஒன்றுபட்டிருக்கிறோம் என்பதையும்,
அவர் நம்மோடு ஒன்றுபட்டிருக்கிறார் என்பதையும் தெரிந்துகொள்கிறோம்.
14 அதுமட்டுமல்ல, பரலோகத் தகப்பன் தன்னுடைய மகனை இந்த உலகத்
துக்கு மீட்பராக அனுப்பியதை[f] நாங்கள் நேரடியாகப் பார்த்திருக்கிறோம்,
அதைப் பற்றிச் சாட்சி கொடுத்தும் வருகிறோம். **15** இயேசுதான் கடவு
ளுடைய மகன் என்று ஏற்றுக்கொள்கிறவனோடு[g] கடவுள் ஒன்றுபட்டிருக்
கிறார், அவனும் கடவுளோடு ஒன்றுபட்டிருக்கிறான்.[h] **16** கடவுள் எங்கள்
மேல் அன்பு வைத்திருக்கிறார் என்பதை நாங்கள் தெரிந்துகொண்டோம்,
அதை நம்பவும் செய்கிறோம்.[i]

கடவுள் அன்பாகவே இருக்கிறார்.[j] தொடர்ந்து அன்பு காட்டுகிறவன்
கடவுளோடு ஒன்றுபட்டிருக்கிறான், கடவுளும் அவனோடு ஒன்றுபட்டிருக்
கிறார்.[k] **17** நியாயத்தீர்ப்பு நாளில் நாம் தயக்கமில்லாமல் பேசுவதற்காகத்
தான்*[l] இந்த விதத்தில் அன்பு நமக்கு முழுமையாகக் கிடைத்திருக்கிறது;
ஏனென்றால், அவர் இருக்கிற விதமாகவே நாமும் இந்த உலகத்தில் இருக்
கிறோம். **18** அன்பில் பயம் இல்லை,[m] முழுமையான* அன்பு பயத்தைப்
போக்கிவிடும்.# ஏனென்றால், பயம் ஒருவனைக் கட்டுப்படுத்தி வைக்கிறது.
சொல்லப்போனால், பயப்படுகிறவனிடம் முழுமையான அன்பு இல்லை.[n]
19 கடவுள் முதலில் நம்மேல் அன்பு காட்டியதால் நாமும் அன்பு காட்டு
கிறோம்.[o]

20 “கடவுள்மேல் எனக்கு அன்பு இருக்கிறது” என்று சொல்லிக்கொண்டு
ஒருவன் தன் சகோதரனை வெறுத்தால், அவன் பொய்யன்.[p] ஏனென்றால்,
தான் பார்க்கிற சகோதரன்மேல் அன்பு காட்டாதவன்,[q] தான் பார்க்காத
கடவுள்மேல்[r] அன்பு காட்ட முடியாது. **21** கடவுள்மேல் அன்பு காட்டுகி
றவன் தன் சகோதரன்மேலும் அன்பு காட்ட வேண்டும். இதுதான் அவர்
நமக்குக் கொடுத்த கட்டளை.[s]

5 இயேசுதான் கிறிஸ்து என்று நம்புகிற ஒவ்வொருவனும் கடவு
ளுடைய பிள்ளையாக இருக்கிறான்.[t] தகப்பனாகிய கடவுள்மீது அன்பு
காட்டுகிற ஒவ்வொருவனும் அவருடைய பிள்ளைமீதும் அன்பு காட்டுகி
றான். **2** நாம் கடவுள்மீது அன்பு காட்டி அவருடைய கட்டளைகளின்படி
நடக்கும்போது, அவருடைய பிள்ளைகள்மீது[u] அன்பு காட்டுகிறோம் என்று
சொல்ல முடியும். **3** நாம் கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்ப
துதான் அவர்மீது அன்பு காட்டுவதாகும்.[v] அவருடைய கட்டளைகள் பார

4:10 *வே.வா., “பாவப் பரிகார பலி; சமாதானப்படுத்துவதற்காகக் கொடுக்கப்படு
கிறது.” **4:12** *வே.வா., “பரிபூரணமாக.” **4:17** *வே.வா., “நம்பிக்கையோடு இருப்ப
தற்காகத்தான்.” **4:18** *வே.வா., “பரிபூரண.” #வே.வா., “விரட்டிவிடும்.”

அதி. 4
a ரோ 3:25 எபி 2:17 எபி 9:26 1யோ 2:1, 2
b 1கொ 5:7
c மத் 18:33 யோவா 15:12 ரோ 13:8 1யோ 3:16
d யாத் 33:20 யோவா 1:18 யோவா 4:24 யோவா 6:46
e 1யோ 2:5
f மத் 1:21 யோவா 3:17 யோவா 12:47 அப் 5:31
g ரோ 10:9
h 1யோ 2: 23, 24
i யோவா 3:16
j 1யோ 4:8
k யோவா 17:21
l எபி 4:16 1யோ 2:28
m ரோ 8:15
n 1யோ 2:5
o 1யோ 4:10
p 1யோ 2:4
q 1யோ 3:17
r 1யோ 4:12
s மத் 22:37, 39 யோவா 13:34 யோவா 15:12

அதி. 5
t யோவா 3:3 1பே 1:3, 23 1யோ 3:9
u யோவா 1: 12, 13 ரோ 8:14
v யோவா 14:23

மானவை அல்ல.[a] **4** ஏனென்றால், கடவுளுடைய பிள்ளைகள் எல்லாரும் இந்த உலகத்தை ஜெயிக்கிறார்கள்.*[b] நம்முடைய விசுவாசம்தான் இந்த உலகத்தை ஜெயித்திருக்கிற ஜெயம்.[c]

5 இந்த உலகத்தை யாரால் ஜெயிக்க முடியும்?[d] இயேசுதான் கடவுளுடைய மகன் என்று விசுவாசிக்கிறவனால்தான் முடியும், இல்லையா?[e] **6** இயேசு கிறிஸ்துவாகிய இவர்தான் தண்ணீராலும் இரத்தத்தாலும் வந்தவர். இவர் தண்ணீரோடு மட்டுமல்ல,[f] தண்ணீரோடும் இரத்தத்தோடும் வந்தவர்.[g] கடவுளுடைய சக்திதான் இதற்குச் சாட்சி,[h] ஏனென்றால் அந்தச் சக்திதான் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. **7** சாட்சி கொடுப்பவை மூன்று: **8** கடவுளுடைய சக்தி,[i] தண்ணீர்,[j] இரத்தம்.[k] இந்த மூன்றும் ஒரே விஷயத்தைப் பற்றிச் சாட்சி கொடுக்கின்றன.

9 மனிதர்கள் கொடுக்கிற சாட்சியை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்றால், கடவுள் கொடுக்கிற சாட்சி அதைவிட உயர்ந்தது. ஏனென்றால், அது கடவுளே தன்னுடைய மகனைப் பற்றிக் கொடுத்திருக்கிற சாட்சி. **10** கடவுளுடைய மகன்மேல் விசுவாசம் வைக்கிறவன் தனக்குக் கொடுக்கப்பட்ட அந்தச் சாட்சியை மனதார ஏற்றுக்கொண்டிருப்பதைக் காட்டுகிறான். கடவுளை விசுவாசிக்காதவனோ அவரைப் பொய்யராக்கியிருக்கிறான்.[l] ஏனென்றால், அவர் தன்னுடைய மகனைப் பற்றிக் கொடுத்த சாட்சியில் அவன் விசுவாசம் வைப்பதில்லை. **11** கடவுள் நமக்கு முடிவில்லாத வாழ்வைக்[m] கொடுத்தார் என்பதுதான் அந்தச் சாட்சி. அந்த வாழ்வு அவருடைய மகன் மூலம் வருகிறது.[n] **12** மகனை ஏற்றுக்கொள்கிறவனுக்கு அந்த வாழ்வு கிடைக்கிறது. கடவுளுடைய மகனை ஏற்றுக்கொள்ளாதவனுக்கோ அந்த வாழ்வு கிடைப்பதில்லை.[o]

13 கடவுளுடைய மகனின் பெயரில் விசுவாசம் வைக்கிற[p] உங்களுக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்கும்.[q] இதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றை எழுதுகிறேன். **14** கடவுளுடைய விருப்பத்துக்கு* ஏற்றபடி நாம் எதைக் கேட்டாலும், அவர் காதுகொடுத்துக் கேட்கிறார்[r] என்பதுதான் நாம் அவர்மேல் வைத்திருக்கிற அசைக்க முடியாத நம்பிக்கை.#[s] **15** அதோடு, நாம் எதைக் கேட்டாலும் அவர் காதுகொடுத்துக் கேட்கிறார் என்பதை அறிந்திருப்பதால், அவரிடம் கேட்டுக்கொண்ட காரியங்கள் நமக்குக் கிடைக்கும் என்பதையும் அறிந்திருக்கிறோம்.[t]

16 மரணத்துக்கு வழிநடத்தாத ஒரு பாவத்தைத் தன் சகோதரன் செய்வதை ஒருவர் பார்த்துவிட்டால், அவர் அவனுக்காகக் கடவுளிடம் ஜெபம் செய்வார். கடவுள் அவனுக்கு வாழ்வு கொடுப்பார்.*[u] ஆம், மரணத்துக்கு வழிநடத்தாத பாவத்தைச்[v] செய்தவர்களுக்குத்தான் அது பொருந்தும். மரணத்துக்கு வழிநடத்துகிற பாவம் இருக்கிறது. அப்படிப்பட்ட பாவத்தைச் செய்கிறவனுக்காகக் கடவுளிடம் ஜெபம் செய்யும்படி நான் அவரிடம் சொல்லவில்லை. **17** அநீதியான எல்லா செயலும் பாவம்தான்.[w] ஆனால், மரணத்துக்கு வழிநடத்தாத பாவமும் இருக்கிறது.

5:4 *நே.மொ., “கடவுளிடமிருந்து வருகிற எல்லாமே இந்த உலகத்தை ஜெயிக்கும்.” **5:14** *வே.வா. “சித்தத்துக்கு.” #வே.வா., “காதுகொடுத்துக் கேட்கிறார் என்பதால் நாம் அவரிடம் தயக்கமில்லாமல் பேச முடியும்.” **5:16** *வே.வா., “அவனை மன்னிப்பார்.”

அதி. 5
- *a* உபா 30:11, மீ 6:8
- *b* யோவா 16:33, 1யோ 5:18
- *c* எபே 6:16, 2தீ 4:7, வெளி 12:10, 11
- *d* 1யோ 4:4
- *e* யோவா 20:31
- *f* மத் 3:13
- *g* அப் 20:28, எபே 1:7, 1பே 1:19
- *h* மத் 3:16, யோவா 1:32, 33
- *i* லூ 3:22, லூ 4:18
- *j* லூ 3:21
- *k* எபி 9:14
- *l* யோவா 3:33
- *m* யோவா 17:3
- *n* யோவா 5:26
- *o* யோவா 3:36
- *p* யோவா 20:31
- *q* 1யோ 1:2
- *r* நீதி 15:29
- *s* எபி 4:16, 1யோ 3:21
- *t* லூ 11:13, யோவா 14:13
- *u* யாக் 5:15, 1யோ 1:9
- *v* மத் 12:31, மாற் 3:29, லூ 12:10, எபி 6:4-6, எபி 10:26
- *w* 1யோ 3:4

18 கடவுளுடைய பிள்ளையாக இருக்கிற ஒவ்வொருவனும் பாவம்
செய்துகொண்டே இருப்பதில்லை என்று நமக்குத் தெரியும்; ஆனால், கடவு
ளுடைய பிள்ளையாக இருப்பவர்* அவனைப் பாதுகாக்கிறார்; பொல்லாத
வனால் அவனை எதுவும் செய்ய முடியாது.[a] **19** நாம் கடவுளின் பக்கம்
இருக்கிறோம் என்று நமக்குத் தெரியும், ஆனால் இந்த உலகம்
முழுவதும் பொல்லாதவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.[b] **20** கடவு
ளுடைய மகன் வந்திருக்கிறார்[c] என்றும், உண்மையானவரைப் பற்றிய
அறிவை நாம் அடையும்படி ஆழமான புரிந்துகொள்ளுதலை* தந்திருக்கி
றார் என்றும் நமக்குத் தெரியும். உண்மையானவருடைய மகனாகிய இயேசு
கிறிஸ்து மூலம் நாம் அவரோடு ஒன்றுபட்டிருக்கிறோம்.[d] அவர்தான் உண்
மையான கடவுளாகவும் முடிவில்லாத வாழ்வாகவும் இருக்கிறார்.[e] **21** சின்
னப் பிள்ளைகளே, சிலைகளுக்கு விலகி உங்களைப் பாதுகாத்துக்கொள்
ளுங்கள்.[f]

5:18 * அதாவது, "கடவுளுடைய மகனாகிய இயேசு கிறிஸ்து." **5:20** * நே.மொ., "புத்திக்கூர்மையை."

அதி. 5
a யோவா 17:15
b மத் 13:19; லூ 4:6; யோவா 12:31
c 1தீ 3:16
d யோவா 17:20, 21
e யோவா 17:3
f 1கொ 10:14

யோவான்

எழுதிய இரண்டாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

வாழ்த்துக்கள் (1-3)
தொடர்ந்து சத்தியத்தில் நடங்கள் (4-6)
ஏமாற்றுக்காரர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள் (7-11)
  வாழ்த்துச் சொல்லாதீர்கள் (10, 11)
சந்திக்கும் திட்டமும் வாழ்த்துக்களும் (12, 13)

1 கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணிக்கும் அவளுடைய பிள்
ளைகளுக்கும், மூப்பராகிய* நான் எழுதுவது என்னவென்றால்: எனக்கு
உங்கள்மேல் உண்மையாகவே அன்பு இருக்கிறது. எனக்கு மட்டுமல்ல,
சத்தியத்தைத் தெரிந்துகொண்ட எல்லாருக்கும் உங்கள்மேல் அன்பு இருக்
கிறது. **2** அதற்குக் காரணம் நம்மிடம் இருக்கிற சத்தியம்தான், அது என்
றென்றும் நம்மோடு இருக்கும். **3** சத்தியமும் அன்பும் மட்டுமல்ல, பர
லோகத் தகப்பனாகிய கடவுளிடமிருந்தும் அவருடைய மகனாகிய இயேசு
கிறிஸ்துவிடமிருந்தும் வருகிற அளவற்ற கருணையும் இரக்கமும் சமாதான
மும் நம்மோடு இருக்கும்.

---

1 * வே.வா., "வயதில் பெரியவராகிய."

4 பரலோகத் தகப்பன் நமக்குக் கொடுத்த கட்டளையின்படியே, உன்னு
டைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்தில் நடப்பதைப் பார்த்து நான் மிகவும்
சந்தோஷப்படுகிறேன்.[a] **5** பெண்மணியே, ஒருவருக்கொருவர் அன்பு
காட்ட வேண்டுமென்று உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு புதிய
கட்டளை அல்ல, ஆரம்பத்திலிருந்தே நமக்குக் கொடுக்கப்பட்ட கட்ட
ளையைத்தான் உனக்கு எழுதுகிறேன்.[b] **6** நாம் தொடர்ந்து அவருடைய
கட்டளைகளின்படி நடந்தால்தான் அன்பு காட்டுகிறோம் என்று அர்த்தம்.[c]
தொடர்ந்து அன்பு காட்ட வேண்டும் என்பதுதான் ஆரம்பத்திலிருந்து நீங்
கள் எல்லாரும் கேட்ட கட்டளை. **7** ஏமாற்றுக்காரர்கள் நிறைய பேர் இந்த
உலகத்தில் வந்திருக்கிறார்கள்.[d] இயேசு கிறிஸ்து மனிதராக வந்ததை[e] இவர்
கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இப்படி மறுக்கிறவன்தான் ஏமாற்றுக்கா
ரன், அந்திக்கிறிஸ்து.*[f]

8 நாங்கள் பாடுபட்டு உண்டாக்கியவற்றை நீங்கள் இழந்துவிடாமல்
முழு பலனைப் பெற்றுக்கொள்வதற்கு[g] விழிப்புடன் இருங்கள். **9** கிறிஸ்து
வின் போதனையில் நிலைத்திருக்காமல் வரம்புமீறிப் போகிற எவனையும்
கடவுள் ஏற்றுக்கொள்ள மாட்டார்.[h] ஆனால், இந்தப் போதனையில் நிலைத்
திருப்பவனைப் பரலோகத் தகப்பனும் மகனும் ஏற்றுக்கொள்கிறார்கள்.[i]
10 உங்களிடம் வருகிற யாராவது இந்தப் போதனைக்கு ஏற்றபடி கற்றுக்
கொடுக்கவில்லை என்றால், அவனை ஒருபோதும் உங்களுடைய வீட்டுக்
குள் சேர்க்காதீர்கள்,[j] அவனுக்கு வாழ்த்தும் சொல்லாதீர்கள். **11** அப்படி
அவனுக்கு வாழ்த்துச் சொல்கிற ஒருவன் அவனுடைய பொல்லாத செயல்
களுக்கு உடந்தையாக இருக்கிறான்.

12 நான் உங்கள் எல்லாருக்கும் எழுத வேண்டிய விஷயங்கள் இன்னும்
நிறைய இருக்கின்றன, ஆனால் தாளிலும் மையிலும் அவற்றை எழுத நான்
விரும்பவில்லை; உங்கள் சந்தோஷம் நிறைவாகும்படி, உங்களை நேருக்கு
நேர் சந்தித்துப் பேச ஆவலாக இருக்கிறேன்.

13 கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவளான உன்னுடைய சகோதரியின்
பிள்ளைகள் உனக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள்.

---

7 * அதாவது, “கிறிஸ்துவை எதிர்க்கிறவன்.”

a 2கொ 4:2; 3யோ 3
b யோவா 13:34; யோவா 15:12; 1பே 4:8; 1யோ 2:7
c யோவா 14:21; 1யோ 2:5
d மத் 7:15; அப் 20:29, 30; 2தெ 2:3, 7; 2பே 2:1; வெளி 2:2
e 1யோ 4:2
f 1யோ 2:18, 22; 1யோ 4:3; யூ 4
g எபி 10:35
h யோவா 14:6; யோவா 15:6; 3யோ 9
i எபி 3:14; 1யோ 2:23
j உபா 17:2-5; ரோ 16:17; 1கொ 5:11

யோவான்

எழுதிய மூன்றாம் கடிதம்

முக்கியக் குறிப்புகள்

வாழ்த்துக்களும் ஜெபமும் (1-4)

காயுவுக்குப் பாராட்டு (5-8)

முதலிடம் பெறத் துடிக்கிற தியோத்திரேப்பு (9, 10)

தேமேத்திரியுவைப் பற்றி உயர்வாகச் சொல்லப்படுகிறது (11, 12)

சந்திக்கும் திட்டமும் வாழ்த்துக்களும் (13, 14)

1 அன்புள்ள காயுவுக்கு, உன்மேல் உண்மையாகவே பிரியமாயிருக்கும்
மூப்பராகிய* நான் எழுதுவது:

2 அன்புள்ள சகோதரனே, நீ இப்போது வளமாக வாழ்வதுபோல் எல்லா
வளமும் பெற்று நலமாக வாழ வேண்டும் என்று ஜெபம் செய்கிறேன். **3** நீ
சத்தியத்தை உறுதியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறாய் என்று சகோதரர்கள்
வந்து சாட்சி சொன்னபோது மிகவும் சந்தோஷப்பட்டேன். நீ தொடர்ந்து
சத்தியத்தில் நடப்பதை நினைத்து சந்தோஷப்படுகிறேன்.[a] **4** என் பிள்
ளைகள் தொடர்ந்து சத்தியத்தில் நடக்கிறார்கள் என்பதைக் கேள்விப்படும்
போது ஏற்படுகிற சந்தோஷத்தைவிட அதிகமான சந்தோஷம்* எனக்கு
வேறு எதுவும் இல்லை.[b]

5 அன்புள்ள சகோதரனே, சகோதரர்களுக்காக, அதுவும் முன்பின் தெரி
யாத சகோதரர்களுக்காக, நீ எல்லாவற்றையும் உண்மை மனதோடு செய்கி
றாய்.[c] **6** உன் அன்பைப் பற்றிச் சபைக்கு முன்பாக அவர்கள் சாட்சி
சொன்னார்கள். தயவுசெய்து அவர்களைக் கடவுளுக்குப் பிரியமான விதத்
தில் வழியனுப்பி வை.[d] **7** ஏனென்றால், கடவுளுடைய பெயருக்காக
அவர்கள் புறப்பட்டு வந்திருக்கிறார்கள். உலக மக்களிடமிருந்து எதையும்
வாங்கிக்கொள்ளவில்லை.[e] **8** அதனால், அப்படிப்பட்டவர்களை வர
வேற்று உபசரிக்கும் கடமை நமக்கு இருக்கிறது.[f] நாம் அவர்களை உபசரிக்
கும்போது, சத்தியத்துக்காக உழைக்கிற சக வேலையாட்களாக இருப்போம்.[g]

9 சபைக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். ஆனால், சபையில் முதலி
டம் பெறத் துடிக்கிற[h] தியோத்திரேப்பு, நாங்கள் சொல்லும் எதையுமே மரி
யாதையுடன் ஏற்றுக்கொள்வதில்லை.[i] **10** அதனால், நான் அங்கே வந்
தால், அவன் செய்துவருகிற காரியங்களையெல்லாம் சொல்வேன். அவன்
எங்களைப் பற்றிப் படுமோசமாகப் பேசிக்கொண்டு திரிகிறான்.[j] அது
போதாதென்று, அங்கே வருகிற சகோதரர்களை அவன் மரியாதையு
டன் வரவேற்கவும் மறுக்கிறான்.[k] அப்படி வரவேற்க விரும்புகிறவர்களைத்
தடுப்பதற்கும் சபையிலிருந்து நீக்குவதற்கும் பார்க்கிறான்.

11 அன்புள்ள சகோதரனே, கெட்டதை அல்ல, நல்லதையே பின்பற்று.[l]
நல்லதைச் செய்கிறவன் கடவுளின் பக்கம் இருக்கிறான்.[m] கெட்டதைச் செய்
கிறவனோ கடவுளைப் பார்த்ததில்லை.[n] **12** தேமேத்திரியுவைப் பற்றி
எல்லா சகோதரர்களும் உயர்வாகப் பேசியிருக்கிறார்கள், சத்தியத்தின்படி
அவர் வாழ்கிற விதமும் இது உண்மை என்று நிரூபித்திருக்கிறது; அவரைப்
பற்றி எங்களுக்கும் நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. நாங்கள் சொல்வது
உண்மை என்று உனக்கே தெரியும்.

13 நான் உனக்கு எழுத வேண்டிய விஷயங்கள் இன்னும் நிறைய
இருந்தாலும், அவற்றை எழுதுகோலினாலும் மையினாலும் எழுத விரும்ப
வில்லை. **14** சீக்கிரத்தில் உன்னை நேரில் சந்தித்துப் பேச ஆவலாக
இருக்கிறேன்.

உனக்குச் சமாதானம் கிடைக்கட்டும்.

இங்கே இருக்கிற நண்பர்கள் உனக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள். அங்கே இருக்கிற நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக என் வாழ்த்துக்களைச் சொல்லவும்.

---

1 *வே.வா., "வயதில் பெரியவராகிய." 4 *அல்லது, "நன்றியுணர்வைவிட அதிகமான நன்றியுணர்வு."

a 2யோ 4
b 1கொ 4:15; 2தீ 1:2; தீத் 1:4; பிலே 10
c எபி 13:2
d தீத் 3:13
e 1கொ 9:11, 12
f மத் 10:41; பிலே 22; 1பே 4:9
g ரோ 12:13
h அப் 20:29, 30
i ரோ 12:10; பிலி 2:3; எபி 13:17
j சங் 101:5; நீதி 6:16, 19
k அப் 15:25, 27; எபே 6:21; பிலி 2:19; கொலோ 4:7; தீத் 1:5
l ரோ 12:9; 1பே 3:11
m 1யோ 3:9
n 1யோ 3:6, 10

யூதா

எழுதிய கடிதம்

முக்கியக் குறிப்புகள்

வாழ்த்துக்கள் (1, 2)
பொய்ப் போதகர்களுக்கு நியாயத்தீர்ப்பு நிச்சயம் (3-16)
மிகாவேலுக்கும் பிசாசுக்கும் விவாதம் (9)
ஏனோக்கின் தீர்க்கதரிசனம் (14, 15)
கடவுளுடைய அன்புக்குப் பாத்திரமானவர்களாக இருங்கள் (17-23)
கடவுளுக்கு மகிமை (24, 25)

1 பரலோகத் தகப்பனாகிய கடவுளுக்கு அன்பானவர்களாகவும் இயேசு
கிறிஸ்துவுக்கென்று பாதுகாக்கப்பட்டவர்களாகவும்[a] இருக்கிற அழைக்கப்
பட்டவர்களுக்கு,[b] இயேசு கிறிஸ்துவின் அடிமையும் யாக்கோபின்[c] சகோ
தரனுமாகிய யூதா எழுதுவது:
2 உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் அதிகமதிகமாகக்
கிடைக்கட்டும்.
3 அன்பானவர்களே, நம் எல்லாருக்கும் நன்மை தருகிற மீட்பைப்[d]
பற்றி உங்களுக்கு எழுத வேண்டும் என்று மிகவும் ஆவலாக இருந்தேன்.
ஆனாலும், எல்லா காலத்துக்கும் ஒரே தடவையாகப் பரிசுத்தவான்களிடம்
ஒப்படைக்கப்பட்ட விசுவாசத்துக்காகக் கடினமாய்ப் போராடும்படி[e] உங்
களை உற்சாகப்படுத்தி எழுதுவது அவசியம் என்று எனக்குத் தோன்றியது.
4 ஏனென்றால், சில ஆட்கள் நம் மத்தியில் தந்திரமாக நுழைந்திருக்கிறார்
கள். கடவுள்பக்தி இல்லாத அந்த ஆட்கள் வெட்கங்கெட்ட நடத்தை
யில்*[f] ஈடுபடுவதற்கு நம் கடவுளுடைய அளவற்ற கருணையை ஒரு சாக்
காக வைத்துக்கொள்கிறார்கள். நம் ஒரே தலைவரும் உரிமையாளருமாகிய#
இயேசு கிறிஸ்துவுக்குத் துரோகம் செய்கிறார்கள்.[g] அவர்களுக்குத் தண்
டனை கிடைக்க வேண்டுமென்று பல காலத்துக்கு முன்பே வேதவசனங்க
ளில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.
5 எல்லா விஷயங்களும் உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தாலும்
உங்களுக்குச் சில விஷயங்களை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.
யெகோவா* தன்னுடைய மக்களை எகிப்திலிருந்து காப்பாற்றியபோதிலும்,[h]
விசுவாசம் காட்டாதவர்களைப் பிற்பாடு அழித்தார்.[i] **6** சில தேவதூதர்
கள் ஆரம்பத்தில் தங்களுக்கு இருந்த ஸ்தானத்தைக் காத்துக்கொள்ளாமல்
தாங்கள் இருக்க வேண்டிய இடத்தை* விட்டுவிட்டார்கள்,[j] அதனால், அவர்
களை மகா நாளின் நியாயத்தீர்ப்புக்காக நித்திய சங்கிலிகளால் கட்டி, பயங்
கர இருட்டில் அடைத்து வைத்திருக்கிறார்.[k] **7** அதேபோல், சோதோம்
கொமோராவிலும் அவற்றைச் சுற்றியிருந்த நகரங்களிலும் வாழ்ந்த மக்
கள் அந்தத் தேவதூதர்களைப் போல் பாலியல் முறைகேட்டில்* மூழ்கியி
ருந்தார்கள். இயற்கைக்கு மாறான பாலியல் பழக்கங்களில் ஈடுபட்டார்கள்.[l]

a யோவா 17:15; 1பே 1:5
b எபி 3:1
c மத் 13:55; மாற் 6:3; கலா 2:9; யாக் 1:1
d எபி 2:3
e எபே 6:11; 1தீ 1:18, 19; 1தீ 6:12
f கலா 5:19
g அப் 20:29, 30; 2பே 2:1
h யாத் 12:41
i எண் 14:35; 1கொ 10:1, 5; எபி 3:16, 19
j ஆதி 6:1-4; 1பே 3:19, 20
k லூ 8:30, 31; 2பே 2:4; வெளி 20:1, 2
l ஆதி 19:4, 5; லேவி 18:22

---

4 *சொல் பட்டியலைப் பாருங்கள். #வே.வா., "எஜமானுமாகிய." **5** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **6** *வே.வா., "தங்களுக்குத் தகுந்த குடியிருப்பை." **7** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதனால், என்றும் அணையாத நெருப்பில் தண்டிக்கப்பட்டார்கள். அவர்க
ளுடைய உதாரணம் நமக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கிறது.[a]

8 அப்படியிருந்தும், கடவுள்பக்தி இல்லாத அந்த ஆட்களும்கூட கற்
பனைக் கனவுகளில் மூழ்கியிருக்கிறார்கள், தங்களுடைய உடலைக்
கறைபடுத்துகிறார்கள், அதிகாரத்தில் இருப்பவர்களை அவமதிக்கிறார்கள்,
மகிமையானவர்களைப் பழித்துப் பேசுகிறார்கள்.[b] **9** ஆனால், மோசே
யின் உடலைப்[c] பற்றித் தலைமைத் தூதராகிய[d] மிகாவேலுக்கும்[e] பிசாசுக்
கும் விவாதம் ஏற்பட்டபோது, மிகாவேல் அவனைக் கண்டனம் செய்யத்
துணியவில்லை, கடுமையான வார்த்தைகளில் திட்டவில்லை.[f] அதற்குப்
பதிலாக, “யெகோவா* உன்னைக் கண்டிக்கட்டும்” என்றுதான் சொன்
னார்.[g] **10** ஆனால் அந்த ஆட்கள், தங்களுக்குப் புரியாத காரியங்களை
யெல்லாம் பழித்துப் பேசுகிறார்கள்.[h] அவர்கள் இயல்புணர்ச்சியால் செயல்
படுகிற புத்தியில்லாத மிருகங்களைப் போன்றவர்கள்.[i] தாங்கள் செய்கிற
எல்லாவற்றையும் மிருகங்களுடைய சுபாவத்தின்படியே செய்து தங்களைச்
சீரழித்துக்கொள்கிறார்கள்.

11 அவர்களுக்குக் கேடுதான் வரும். ஏனென்றால், அவர்கள் காயீனைப்
போல் பொல்லாத வழியில் போயிருக்கிறார்கள்,[j] பிலேயாமைப் போல்
கூலிக்காகத் தவறு செய்ய வேகமாகப் போயிருக்கிறார்கள்,[k] கோராகுவைப்
போல்[l] கலகத்தனமான பேச்சால்[m] அழிந்திருக்கிறார்கள். **12** அன்பின்
விருந்துகளில் உங்களோடு உணவு சாப்பிடுகிற அவர்கள், தண்ணீருக்கு அடி
யில் மறைந்திருக்கிற பாறைகள்;[n] பயமில்லாமல் தங்களுடைய வயிற்றை
நிரப்பிக்கொள்கிற மேய்ப்பர்கள்;[o] காற்றில் இங்குமங்கும் அடித்துக்கொண்டு
போகப்படுகிற தண்ணீர் இல்லாத மேகங்கள்;[p] பழம் கொடுக்க வேண்டிய
காலத்தில்* பழம் கொடுக்காமல் முழுவதும் பட்டுப்போய்# வேரோடு பிடுங்
கப்படுகிற மரங்கள். **13** தங்களுடைய வெட்கக்கேடுகளை நுரைதள்ளுகிற
கொந்தளிப்பான கடல் அலைகள்.[q] வழிதவறித் திரியும் நட்சத்திரங்கள். பயங்
கர இருட்டில்தான் அவர்கள் என்றென்றும் தள்ளப்படுவார்கள்.[r]

14 ஆதாமின் ஏழாம் தலைமுறையான ஏனோக்கு[s] அவர்களைப் பற்றி
இப்படித் தீர்க்கதரிசனம் சொன்னார்: “இதோ! யெகோவா* தன்னுடைய
லட்சக்கணக்கான பரிசுத்த தூதர்களோடு[t] எல்லாரையும் நியாயந்தீர்க்க வந்
தார். **15** கடவுள்பக்தி இல்லாத எல்லாரும் கடவுள்பக்தி இல்லாத விதத்தில்
செய்த கடவுள்பக்தி இல்லாத எல்லா செயல்களுக்காகவும், கடவுள்பக்தி இல்
லாத பாவிகள் தனக்கு விரோதமாகப் பேசிய அதிர்ச்சியூட்டும் பேச்சுக்காக
வும்[u] அவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்க வந்தார்.”[v]

16 இப்படிப்பட்ட ஆட்கள் முணுமுணுக்கிறார்கள்,[w] தங்களுடைய
வாழ்க்கையைப் பற்றிக் குறை சொல்கிறார்கள், தங்களுடைய கெட்ட ஆசை
களின்படி நடக்கிறார்கள்,[x] அளவுக்கதிகமாகப் பெருமையடிக்கிறார்கள்,
சொந்த லாபத்துக்காக மற்றவர்களைப் போலியாகப் புகழ்கிறார்கள்.[y]

17 ஆனால் என் அன்புக் கண்மணிகளே, நம் எஜமானாகிய இயேசு
கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் சொன்ன* வார்த்தைகளை நினைத்துப்
பாருங்கள். **18** “கடைசிக் காலத்தில் கேலி செய்கிறவர்கள் மக்கள் மத்தி

9, 14 * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **12** * நே.மொ., “இலையுதிர் காலத்தின் முடிவில்.” # நே.மொ., “இரண்டு தடவை செத்துப்போய்.” **17** * வே.வா., “முன்கூட்டியே சொன்ன.”

a ஆதி 19:24; 2பே 2:6
b யாத் 22:28; 2பே 2:10; 3யோ 9, 10
c உபா 34:5, 6
d 1தெ 4:16
e தானி 10:21; தானி 12:1
f 2பே 2:11
g சக 3:2
h யூ 19
i 2பே 2:12
j ஆதி 4:5, 8; 1யோ 3:12
k எண் 22:32; 2பே 2:15, 16; வெளி 2:14
l எண் 16:3, 32
m 1தீ 1:20
n 2பே 2:13
o எசே 34:8
p 2பே 2:17
q ஏசா 57:20
r எபி 6:4-6; வெளி 21:8
s ஆதி 5:21, 22
t உபா 33:2; தானி 7:10; சக 14:5
u மத் 12:36
v 2தெ 1:6
w 1கொ 10:10; பிலி 2:14
x 2பே 2:18
y யாக் 2:9

யில் வருவார்கள், கடவுள்பக்தி இல்லாத காரியங்களைத் தங்களுடைய
ஆசைப்படியெல்லாம் செய்வார்கள்"[a] என்று அவர்கள் உங்களுக்குச்
சொல்லி வந்தார்களே. **19** அந்த ஆட்கள் பிரிவினைகளை ஏற்படுத்துகிற
வர்கள்,[b] மிருகத்தனமானவர்கள், கடவுளுடைய சக்தி இல்லாதவர்கள்.
20 ஆனால் என் அன்புக் கண்மணிகளே, உங்களுடைய மகா பரிசுத்த
விசுவாசத்தை அஸ்திவாரமாக வைத்து உங்களைப் பலப்படுத்திக்கொள்
ளுங்கள்; கடவுளுடைய சக்தியின் வழிநடத்துதலோடு ஜெபம் செய்யுங்கள்.[c]
21 எப்போதும் கடவுளுடைய அன்புக்குப் பாத்திரமானவர்களாக இருங்
கள்.[d] அதேசமயத்தில், முடிவில்லாத வாழ்வுக்கு[e] வழிநடத்துகிற நம் எஜ
மானாகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கத்துக்காக ஆவலோடு காத்திருங்கள்.
22 சந்தேகப்படுகிற ஆட்களுக்குத்[f] தொடர்ந்து இரக்கம் காட்டுங்கள்.[g]
23 அழிவு என்ற நெருப்பிலிருந்து அவர்களை வெளியே இழுத்துக் காப்
பாற்றுங்கள்.[h] மற்றவர்கள்மீதும் தொடர்ந்து இரக்கம் காட்டுங்கள், ஆனால்
அப்படிச் செய்யும்போது ஜாக்கிரதையாக இருங்கள். பாவச் செயல்களால்
கறைபட்ட அவர்களுடைய உடையிலிருந்துகூட விலகியிருங்கள்.[i]

24 தடுக்கி விழாதபடி உங்களைப் பாதுகாத்து, தன்னுடைய மகிமைக்கு*
முன்னால் உங்களைக் களங்கமில்லாதவர்களாக[j] மிகுந்த சந்தோஷத்தோடு
நிறுத்துவதற்கு வல்லவரான நம் கடவுளுக்கு, **25** நம் மீட்பரான ஒரே கட
வுளுக்கு, நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மகிமையும் மாட்
சிமையும் வல்லமையும் அதிகாரமும் அன்றும் இன்றும் என்றும் இருக்
கட்டும்! ஆமென்.*

---

24 *வே.வா., "மகிமையான பிரசன்னத்துக்கு." **25** *அதாவது, "அப்படியே ஆகட்டும்."

a அப் 20:29, 30; 1தீ 4:1; 2பே 2:1; 2பே 3:2, 3
b ரோ 16:17; 3யோ 9, 10
c ரோ 8:26; எபே 6:18
d யோவா 15:10; ரோ 8:38, 39
e தீத் 3:7; 1யோ 1:2; 1யோ 2:25
f யாக் 1:6
g மத் 5:7; மத் 9:13; யாக் 2:13
h கலா 6:1; யாக் 5:19, 20
i கலா 5:19-21
j ரோ 8:33; எபே 1:4; கொலோ 1:22

யோவானுக்குக் கிடைத்த
வெளிப்படுத்துதல்

முக்கியக் குறிப்புகள்

1 இயேசு மூலம் கடவுளிடமிருந்து கிடைத்த வெளிப்படுத்துதல் (1-3)
- ஏழு சபைகளுக்கும் வாழ்த்துக்கள் (4-8)
  - "ஆல்பாவும் ஒமேகாவும் நானே" (8)
- கடவுளுடைய சக்தியால் எஜமானுடைய நாளுக்கு யோவான் கொண்டுவரப்படுகிறார் (9-11)
- மகிமைப்படுத்தப்பட்ட இயேசுவின் தரிசனம் (12-20)

2 எபேசு (1-7), சிமிர்னா (8-11), பெர்கமு (12-17), தியத்தீராவுக்குச் செய்தி (18-29)

3 சர்தை (1-6), பிலதெல்பியா (7-13), லவோதிக்கேயாவுக்குச் செய்தி (14-22)

4 யெகோவாவுடைய பரலோகப் பிரசன்னத்தின் காட்சி (1-11)
- யெகோவா சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறார் (2)
- 24 மூப்பர்கள் சிம்மாசனங்களில் உட்கார்ந்திருக்கிறார்கள் (4)
- நான்கு ஜீவன்கள் (6)

5 ஏழு முத்திரைகளைக் கொண்ட சுருள் (1-5)
- சுருளை ஆட்டுக்குட்டியானவர் வாங்குகிறார் (6-8)
- சுருளை விரிக்க ஆட்டுக்குட்டியானவர் தகுதியுள்ளவர் (9-14)

6 முதல் ஆறு முத்திரைகளை ஆட்டுக்குட்டியானவர் உடைக்கிறார் (1-17)
- வெள்ளைக் குதிரையில் ஜெயிக்கிறவராகப் போகிறார் (1, 2)
- சிவப்புக் குதிரையில் போகிறவன் சமாதானத்தை எடுத்துப் போடுவான் (3, 4)
- கறுப்புக் குதிரையில் போகிறவன் பஞ்சத்தைக் கொண்டுவருவான் (5, 6)
- மங்கிய நிறமுள்ள குதிரையில் போகிறவனின் பெயர் மரணம் (7, 8)
- கொல்லப்பட்டவர்களின் இரத்தம் பலிபீடத்தின் கீழே இருக்கிறது (9-11)
- பயங்கர நிலநடுக்கம் (12-17)

7 நாசப்படுத்தும் காற்றுகளை நான்கு தேவதூதர்கள் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் (1-3)

1,44,000 பேர் முத்திரை போடப்படுகிறார்கள் (4-8)

வெள்ளை உடையில் திரள் கூட்டம் (9-17)

8 ஏழாம் முத்திரை உடைக்கப்படுகிறது (1-6)

முதல் நான்கு எக்காளங்கள் ஊதப்படுகின்றன (7-12)

மூன்று கேடுகள் அறிவிக்கப்படுகின்றன (13)

9 ஐந்தாம் எக்காளம் (1-11)

முதலாவது கேடு போய்விட்டது, இரண்டு கேடுகள் வரப்போகின்றன (12)

ஆறாவது எக்காளம் (13-21)

10 சிறிய சுருளை வைத்திருக்கிற பலமுள்ள தேவதூதர் (1-7)
- “இனியும் தாமதமாகாது” (6)
- பரிசுத்த ரகசியம் நிறைவேற்றப்படும் (7)

சிறிய சுருளை யோவான் சாப்பிடுகிறார் (8-11)

11 இரண்டு சாட்சிகள் (1-13)
- துக்கத் துணியைப் போட்டுக்கொண்டு 1,260 நாட்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள் (3)
- கொல்லப்படுகிறார்கள், அடக்கம் செய்யப்படுவதில்லை (7-10)
- மூன்றரை நாட்களுக்குப் பிறகு உயிர் பெறுகிறார்கள் (11, 12)

இரண்டாவது கேடு போய்விட்டது, மூன்றாவது வரப்போகிறது (14)

ஏழாம் எக்காளம் (15-19)
- நம் எஜமானுக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் சொந்தமான அரசாங்கம் (15)
- பூமியை நாசமாக்குகிறவர்கள் நாசமாக்கப்படுவார்கள் (18)

12 பெண், ஆண் குழந்தை, ராட்சதப் பாம்பு (1-6)

மிகாவேலுக்கும் ராட்சதப் பாம்புக்கும் போர் (7-12)
- ராட்சதப் பாம்பு பூமிக்குத் தள்ளப்படுகிறது (9)
- கொஞ்சக் காலம்தான் இருக்கிறது என்று பிசாசுக்குத் தெரியும் (12)

ராட்சதப் பாம்பு பெண்ணைக் கொடுமைப்படுத்துகிறது (13-17)

13 ஏழு தலைகளை உடைய மூர்க்க மிருகம் கடலிலிருந்து ஏறி வருகிறது (1-10)

இரண்டு கொம்புகளைக் கொண்ட மூர்க்க மிருகம் பூமியிலிருந்து வருகிறது (11-13)

ஏழு தலைகளை உடைய மூர்க்க மிருகத்தின் உருவம் (14, 15)

மூர்க்க மிருகத்தின் அடையாளக் குறியும் எண்ணும் (16-18)

14 ஆட்டுக்குட்டியானவரும் 1,44,000 பேரும் (1-5)

மூன்று தேவதூதர்கள் சொன்ன செய்தி (6-12)
- நடுவானத்தில் பறக்கிற தேவதூதர் நல்ல செய்தியை அறிவிக்கிறார் (6, 7)

எஜமானுடைய சீஷர்களாக இறந்துபோகிறவர்கள் சந்தோஷமானவர்கள் (13)

பூமியின் இரண்டு அறுவடைகள் (14-20)

15 ஏழு தண்டனைகளோடு ஏழு தேவதூதர்கள் (1-8)
- மோசேயின் பாட்டும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டும் (3, 4)

16 கடவுளுடைய ஏழு கோபக் கிண்ணங்கள் (1-21)
- பூமி (2), கடல் (3), ஆறுகள், நீரூற்றுகள் (4-7), சூரியன் (8, 9), மூர்க்க மிருகத்தின் சிம்மாசனம் (10, 11), யூப்ரடிஸ் (12-16), காற்று (17-21) ஆகியவற்றின்மீது ஊற்றப்படுகின்றன
- அர்மகெதோனில் கடவுளுடைய போர் (14, 16)

17 ‘மகா பாபிலோனுக்கு’ நியாயத்தீர்ப்பு (1-18)
- கருஞ்சிவப்பு நிறமுள்ள மூர்க்க மிருகத்தின் மேல் பேர்போன விபச்சாரி உட்கார்ந்திருக்கிறாள் (1-3)

மூர்க்க மிருகம் ‘முன்பு இருந்தது, இப்போது இல்லை, ஆனால் மறுபடியும் அதலபாதாளத்திலிருந்து வரப்போகிறது’ (8)
பத்துக் கொம்புகள் ஆட்டுக்குட்டியானவரோடு போர் செய்யும் (12-14)
பத்துக் கொம்புகள் விபச்சாரியை வெறுக்கின்றன (16, 17)

18 “மகா பாபிலோன்” விழுந்துவிட்டாள் (1-8)
“என் மக்களே, அவளைவிட்டு வெளியே வாருங்கள்” (4)
பாபிலோனுடைய வீழ்ச்சியைப் பார்த்து புலம்பல் (9-19)
பாபிலோனுடைய வீழ்ச்சியால் பரலோகத்தில் சந்தோஷம் (20)
ஒரு கல்லைப் போல் பாபிலோன் கடலுக்குள் வீசப்படும் (21-24)

19 ‘யா’ கடவுளின் தீர்ப்புகளுக்காக அவரைப் புகழுங்கள் (1-10)
ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் (7-9)
வெள்ளைக் குதிரையில் உட்கார்ந்திருப்பவர் (11-16)
கடவுள் கொடுக்கிற மாபெரும் விருந்து (17, 18)
மூர்க்க மிருகம் தோற்கடிக்கப்படுகிறது (19-21)

20 சாத்தான் 1,000 வருஷங்களுக்குக் கட்டிப்போடப்படுகிறான் (1-3)
கிறிஸ்துவோடு 1,000 வருஷங்கள் ஆட்சி செய்கிறவர்கள் (4-6)
சாத்தான் விடுதலை செய்யப்படுகிறான், பின்பு அழிக்கப்படுகிறான் (7-10)
இறந்தவர்களுக்கு வெள்ளைச் சிம்மாசனம் முன்னால் தீர்ப்பு கிடைக்கிறது (11-15)

21 புதிய வானமும் புதிய பூமியும் (1-8)
இனிமேல் மரணம் இருக்காது (4)
எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன் (5)
புதிய எருசலேமைப் பற்றிய விவரிப்பு (9-27)

22 வாழ்வு தரும் தண்ணீர் நிறைந்த ஆறு (1-5)
முடிவுரை (6-21)
‘வருக! வருக! வாழ்வு தரும் தண்ணீரை இலவசமாக வாங்கிக்கொள்ளுங்கள்’ (17)
“எஜமானாகிய இயேசுவே, வாருங்கள்” (20)

---

1 சீக்கிரத்தில் நடக்கப்போகிற காரியங்களைக் கடவுள் தன்னுடைய
அடிமைகளுக்குத் தெரியப்படுத்துவதற்காக[a] இயேசு கிறிஸ்துவுக்கு
வெளிப்படுத்தினார்.[b] அவர் தன்னுடைய தூதரை அனுப்பி தன்னுடைய
அடிமையாகிய யோவானுக்கு[c] அடையாளங்கள் மூலம் அதை வெளிப்
படுத்தினார். 2 இந்த யோவான், கடவுள் கொடுத்த செய்தியையும் இயேசு
கிறிஸ்து கொடுத்த சாட்சியையும் பற்றி, அதாவது தான் பார்த்த எல்லா காரி
யங்களையும் பற்றி, சொல்லியிருக்கிறார். 3 இந்தத் தீர்க்கதரிசன செய்திக
ளைச் சத்தமாக வாசிக்கிறவர்களும் கேட்கிறவர்களும் இதில் எழுதப்பட்டி
ருப்பதைக் கடைப்பிடிக்கிறவர்களும் சந்தோஷமானவர்கள்;[d] ஏனென்றால்,
குறித்த காலம் நெருங்கிவிட்டது.
4 ஆசிய மாகாணத்தில் இருக்கிற ஏழு சபைகளுக்கு[e] யோவான்
எழுதுவது:
“இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமான கடவுளிடமிருந்தும்,”[f]
அவருடைய சிம்மாசனத்துக்கு முன்னால் இருக்கிற ஏழு சக்திகளிடமிருந்
தும்,[g] 5 இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அளவற்ற கருணையும்
சமாதானமும் கிடைப்பதாக. இவர்தான் “நம்பகமான சாட்சி,”[h] “முதன்முதலில்
உயிர்த்தெழுப்பப்பட்டவர்,”[i] “பூமியின் ராஜாக்களுக்குத் தலைவர்.”[j]
நம்மேல் அன்பு வைத்திருக்கிற இவர்[k] தன்னுடைய இரத்தத்தால் பாவங்
களிலிருந்து நம்மை விடுதலை செய்து,[l] 6 ராஜாக்களாகவும்,[m] தன்னுடைய

அதி. 1
a ஆமோ 3:7; வெளி 7:3, 4
b தானி 2:28
c மத் 10:2; மாற் 1:19; யோவா 21:20
d சங் 1:2; லூ 11:28; யோவா 13:17; யாக் 1:22
e வெளி 1:11
f வெளி 1:8; வெளி 4:8; வெளி 11:17
g வெளி 4:5
h வெளி 3:14
i கொலோ 1:18
j சங் 89:27; 1தீ 6:15; வெளி 19:16
k யோவா 15:9
l எபி 9:14; 1பே 1:18, 19; 1யோ 1:7
m யாத் 19:6; லூ 22:28-30

கடவுளும் தகப்பனுமானவருக்குச் சேவை செய்கிற குருமார்களாகவும்[a]
நம்மை நியமித்தார்; இவருக்கே மகிமையும் வல்லமையும் என்றென்றும்
சொந்தம். ஆமென்.*

7 இதோ! இவர் மேகங்களோடு வருகிறார்,[b] எல்லா கண்களும் இவ
ரைப் பார்க்கும், இவரைக் குத்தினவர்களும் பார்ப்பார்கள்; பூமியில் இருக்
கிற எல்லா கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் இவரைப் பார்த்து துக்கப்பட்டு
நெஞ்சில் அடித்துக்கொண்டு புலம்புவார்கள்.[c] ஆம், ஆமென்.

8 “ஆல்பாவும் ஒமேகாவும் நானே;*[d] இருந்தவரும் இருக்கிறவரும்
வருகிறவருமான சர்வவல்லமையுள்ளவர் நானே”[e] என்று கடவுளாகிய
யெகோவா# சொல்கிறார்.

9 இயேசுவின் சீஷனாக[f] உபத்திரவத்திலும்[g] கடவுளுடைய அரசாங்கத்
திலும்[h] சகிப்புத்தன்மையிலும்[i] உங்களோடு பங்குகொள்கிற உங்கள் சகோ
தரன் யோவானாகிய நான், கடவுளைப் பற்றிப் பேசியதற்காகவும் இயேசு
வைப் பற்றிச் சாட்சி கொடுத்ததற்காகவும் பத்மு என்ற தீவில் இருந்தேன்.
10 நான் கடவுளுடைய சக்தியால் நம் எஜமானுடைய நாளுக்குக் கொண்டு
வரப்பட்டேன். அப்போது, எனக்குப் பின்னால் எக்காளம்போல் முழங்கிய
ஒரு குரலைக் கேட்டேன். **11** அது, “நீ பார்க்கப்போவதை ஒரு சுருளில்
எழுதி எபேசு,[j] சிமிர்னா,[k] பெர்கமு,[l] தியத்தீரா,[m] சர்தை,[n] பிலதெல்பியா,[o]
லவோதிக்கேயா[p] ஆகிய இடங்களில் இருக்கிற ஏழு சபைகளுக்கு
அனுப்பு” என்று என்னிடம் சொன்னது.

12 என்னோடு பேசுவது யார் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்
திரும்பிப் பார்த்தேன். அப்போது, ஏழு தங்கக் குத்துவிளக்குகளையும்,[q]
13 அந்தக் குத்துவிளக்குகளுக்கு நடுவில் மனிதகுமாரனைப் போன்ற ஒரு
வரையும்[r] பார்த்தேன். பாதம்வரை நீளமான ஓர் உடையை அவர் போட்
டிருந்தார், மார்பில் தங்க இடுப்புக்கச்சையைக் கட்டியிருந்தார். **14** அவ
ருடைய தலைமுடி வெண்கம்பளியைப் போலவும், வெண்பனியைப்
போலவும் வெள்ளையாக இருந்தது. அவருடைய கண்கள் தீ ஜுவாலை
யைப் போல் இருந்தன.[s] **15** அவருடைய பாதங்கள், உலையில் தகதகக்
கும் சுத்தமான செம்பைப் போல் இருந்தன.[t] அவருடைய குரல் சீறிப்பாய்
கிற வெள்ளத்தின் சத்தத்தைப் போல் இருந்தது. **16** அவருடைய வலது
கையில் ஏழு நட்சத்திரங்கள் இருந்தன.[u] இரண்டு பக்கமும் கூர்மையான
நீண்ட வாள் ஒன்று அவருடைய வாயிலிருந்து புறப்பட்டது.[v] அவருடைய
முகம் நடுப்பகலில் பிரகாசிக்கிற சூரியனைப் போல் இருந்தது.[w] **17** நான்
அவரைப் பார்த்தபோது, செத்தவனைப் போலாகி அவருடைய பாதத்தில்
விழுந்தேன்.

அவர் தன்னுடைய வலது கையை என்மேல் வைத்து, “பயப்படாதே.
முதலானவரும்[x] கடைசியானவரும்[y] உயிருள்ளவரும்[z] நான்தான். **18** மர
ணமடைந்தேன்,[a] ஆனால் இதோ! என்றென்றும் உயிரோடு இருக்கிறேன்,[b]
மரணத்தின் சாவியும் கல்லறையின்* சாவியும் என்னிடம் இருக்கின்றன.[c]
19 அதனால் நீ பார்த்ததையும், இப்போது நடப்பதையும், இதற்குப் பின்பு
நடக்கப்போவதையும் எழுது. **20** நீ என்னுடைய வலது கையில் பார்த்த

1:6 * அதாவது, “அப்படியே ஆகட்டும்.” **1:8** * கிரேக்க எழுத்துக்களில் ஆல்பா என்பது முதல் எழுத்து, ஒமேகா என்பது கடைசி எழுத்து. # இணைப்பு A5-ஐப் பாருங்கள். **1:18** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 1
a 1பே 2:5; வெளி 5:9, 10; வெளி 20:6
b மத் 26:64; மாற் 13:26
c மத் 24:30
d ஏசா 48:12; வெளி 21:6; வெளி 22:13
e யாத் 6:3
f ரோ 8:17
g மத் 24:9
h லூ 12:32
i மத் 10:22; 2தீ 2:12
j எபே 1:1; வெளி 2:1
k வெளி 2:8
l வெளி 2:12
m வெளி 2:18
n வெளி 3:1
o வெளி 3:7
p வெளி 3:14
q வெளி 1:20
r தானி 7:13
s வெளி 19:12
t வெளி 2:18
u வெளி 1:20
v ஏசா 49:2
w மத் 17:1, 2
x அப் 26:23; கொலோ 1:18; வெளி 1:5
y வெளி 2:8
z 1கொ 15:45
a 1பே 3:18
b ரோ 6:9; 1தீ 6:16
c மத் 16:18; யோவா 6:54; யோவா 11:25

ஏழு நட்சத்திரங்களையும், ஏழு தங்கக் குத்துவிளக்குகளையும் பற்றிய பரி
சுத்த ரகசியம் இதுதான்: அந்த ஏழு நட்சத்திரங்கள் ஏழு சபைகளின் தூதர்
களைக் குறிக்கின்றன. அந்த ஏழு குத்துவிளக்குகள் ஏழு சபைகளைக் குறிக்
கின்றன” என்று சொன்னார்.[a]

2 “எபேசு[b] சபையின் தூதருக்கு[c] நீ எழுத வேண்டியது என்னவென்றால்:
ஏழு நட்சத்திரங்களைத் தன்னுடைய வலது கையில் பிடித்திருக்கிறவ
ரும் ஏழு தங்கக் குத்துவிளக்குகளின் நடுவில் நடக்கிறவரும்[d] சொல்வது
இதுதான்: **2** ‘உன் செயல்களையும் உழைப்பையும் சகிப்புத்தன்மையை
யும் நான் அறிந்திருக்கிறேன். கெட்டவர்களை நீ பொறுத்துக்கொள்வ
தில்லை என்பதும், அப்போஸ்தலர்களாக இல்லாவிட்டாலும் தங்களை அப்
போஸ்தலர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்களைச் சோதித்துப் பார்த்து[e]
அவர்கள் பொய் பேசுகிறவர்கள் என்று கண்டுபிடித்தாய் என்பதையும்
அறிந்திருக்கிறேன். **3** நீ சகிப்புத்தன்மையையும் காட்டுகிறாய். என்னு
டைய பெயருக்காக[f] எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு, சோர்ந்துபோகா
மல் இருக்கிறாய்.[g] **4** ஆனாலும், உன்னிடம் ஒரு குறை இருக்கிறது.
ஆரம்பத்தில் இருந்த அன்பை நீ விட்டுவிட்டாய்.

5 அதனால், நீ எந்த நிலையிலிருந்து விழுந்தாய் என்று நினைத்துப்
பார்த்து, மனம் திருந்தி,[h] ஆரம்பத்தில் செய்துவந்த செயல்களைச் செய்.
நீ மனம் திருந்தவில்லை என்றால்,[i] நான் உன்னிடம் வந்து, உன் குத்துவி
ளக்கை[j] அதன் இடத்திலிருந்து நீக்கிவிடுவேன். **6** இருந்தாலும், உன்னிடம்
இன்னொரு நல்ல விஷயத்தையும் பார்க்கிறேன். நான் வெறுக்கிற நிக்கொ
லாய் மதப்பிரிவைச்[k] சேர்ந்தவர்களுடைய செயல்களை நீயும் வெறுக்கிறாய்.
7 கடவுளுடைய சக்தி சபைகளுக்குச் சொல்வதைக் காதுள்ளவன் கேட்கட்
டும்:[l] ஜெயிக்கிறவன் எவனோ அவனுக்கு,[m] கடவுளுடைய பூஞ்சோலையில்
இருக்கிற வாழ்வுக்கான மரத்தின் பழத்தைச் சாப்பிடக் கொடுப்பேன்.’[n]

8 சிமிர்னா சபையின் தூதருக்கு நீ எழுத வேண்டியது என்ன
வென்றால்: ‘முதலானவரும் கடைசியானவரும்,’[o] மரணமடைந்து உயிரோடு
எழுந்தவரும்[p] சொல்வது இதுதான்: **9** ‘நீ உபத்திரவப்படுகிறாய் என்றும்,
வறுமையில் வாடுகிறாய் என்றும் எனக்குத் தெரியும். ஆனால், நீ பணக்கா
ரனாக இருக்கிறாய்.[q] யூதர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்கள் கட
வுளை நிந்திப்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் உண்மையில் யூதர்கள்
அல்ல, சாத்தானுடைய கூட்டத்தை* சேர்ந்தவர்கள்.[r] **10** உனக்கு வரப்
போகிற கஷ்டங்களை நினைத்து பயப்படாதே.[s] இதோ! உங்களை முழு
மையாய்ச் சோதிப்பதற்காகப் பிசாசு உங்களில் சிலரைச் சிறையில் தள்ளிக்
கொண்டே இருப்பான். பத்து நாட்கள் உங்களுக்கு உபத்திரவம் இருக்கும்.
நீ சாகும்வரை உண்மையோடு இரு, அப்போது வாழ்வுக்கான கிரீடத்தை
நான் உனக்குத் தருவேன்.[t] **11** கடவுளுடைய சக்தி சபைகளுக்குச் சொல்
வதைக் காதுள்ளவன் கேட்கட்டும்:[u] ஜெயிக்கிறவன் எவனோ அவனுக்கு[v]
இரண்டாம் மரணம் வரவே வராது.’[w]

12 பெர்கமு சபையின் தூதருக்கு நீ எழுத வேண்டியது என்னவென்றால்:
இரண்டு பக்கமும் கூர்மையான நீண்ட வாளை வைத்திருப்பவர்[x] சொல்வது
இதுதான்: **13** ‘நீ எங்கே குடியிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும்; அங்
கேதான் சாத்தானின் சிம்மாசனம் இருக்கிறது. ஆனாலும், நீ எனக்கு

அதி. 1
a மத் 5:16 பிலி 2:15

அதி. 2
b அப் 19:1 எபே 1:1
c வெளி 1:20
d வெளி 1: 12, 13
e அப் 20:29, 30 2கொ 11:13 1யோ 4:1
f 1பே 4:14
g கலா 6:9
h வெளி 3:19
i வெளி 2:16
j வெளி 1:20
k 1கொ 11:19 வெளி 2:15
l மத் 11:15 வெளி 2: 17, 29
m 1யோ 5:4
n ரோ 2:6, 7 வெளி 2:10
o வெளி 1: 13, 17
p ரோ 14:9
q 2கொ 6:4, 10 1தீ 6:18, 19 யாக் 2:5
r வெளி 3:9
s மத் 10:28
t ரோ 2:6, 7 2தீ 4:7, 8 யாக் 1:12 வெளி 20:4
u வெளி 13:9
v 1யோ 5:5
w வெளி 20:6 வெளி 20:14 வெளி 21:8
x வெளி 1: 13, 16 வெளி 19:15

2:9 * நே.மொ., “ஜெபக்கூடத்தை.”

உண்மையோடு* இருக்கிறாய்.[a] சாத்தான் குடியிருக்கிற உன் நகரத்தில், உண்
மையுள்ள என் சாட்சியான[b] அந்திப்பா கொலை செய்யப்பட்ட காலத்திலும்
கூட[c] என்மேல் வைத்திருக்கிற விசுவாசத்தை நீ விட்டுவிடவில்லை.[d]

14 ஆனாலும், உன்னிடம் சில குறைகள் இருக்கின்றன. பிலேயாமின்
போதனைகளைப் பின்பற்றுகிறவர்கள்[e] உன் மத்தியில் இருக்கிறார்கள்.
இந்த பிலேயாம், இஸ்ரவேலர்களைப் பாவம் செய்ய வைப்பதற்கு, அதா
வது சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றைச் சாப்பிடவும் பாலியல் முறை
கேட்டில்*[f] ஈடுபடவும் வைப்பதற்கு, பாலாக்[g] என்பவனுக்குக் கற்றுக்கொ
டுத்தவன். **15** அதேபோல், நிக்கொலாய் மதப்பிரிவைச் சேர்ந்தவர்களின்
போதனையைப் பின்பற்றுகிறவர்களும் உன் மத்தியில் இருக்கிறார்கள்.[h]
16 அதனால், மனம் திருந்து. இல்லையென்றால், நான் உன்னிடம் சீக்கிர
மாக வந்து, என் வாயிலிருந்து புறப்படும் நீண்ட வாளால் அவர்களோடு
போர் செய்வேன்.[i]

17 கடவுளுடைய சக்தி சபைகளுக்குச் சொல்வதைக் காதுள்ளவன்
கேட்கட்டும்:[j] ஜெயிக்கிறவன் எவனோ அவனுக்கு,[k] மறைத்து வைக்கப்
பட்ட மன்னாவிலிருந்து கொஞ்சத்தையும்[l] வெள்ளைக் கூழாங்கல் ஒன்றை
யும் கொடுப்பேன். அந்தக் கூழாங்கல்லில் ஒரு புதிய பெயர் எழுதப்பட்டி
ருக்கும். அதைப் பெற்றுக்கொள்கிறவனைத் தவிர வேறு யாருக்கும் அந்தப்
பெயர் தெரியாது.'

18 தியத்தீரா[m] சபையின் தூதருக்கு நீ எழுத வேண்டியது என்னவென்
றால்: தீ ஜுவாலை போன்ற கண்களும்,[n] சுத்தமான செம்பு போன்ற பாதங்
களும்[o] உள்ள கடவுளுடைய மகன் சொல்வது இதுதான்: **19** 'உன் செயல்
களையும் உன் அன்பையும் உன் விசுவாசத்தையும் உன் ஊழியத்தையும்
உன் சகிப்புத்தன்மையையும் அறிந்திருக்கிறேன். ஆரம்பத்தில் செய்ததை
விட இப்போது நீ அதிகமான செயல்களைச் செய்கிறாய் என்பதையும்
அறிந்திருக்கிறேன்.

20 ஆனாலும், உன்னிடம் ஒரு குறை இருக்கிறது. அந்த யேசபேலை[p]
நீ பொறுத்துக்கொள்கிறாய்; அவள் தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லிக்
கொள்கிறாள். பாலியல் முறைகேட்டில்* ஈடுபடும்படியும்,[q] சிலைகளுக்
குப் படைக்கப்பட்டவற்றைச் சாப்பிடும்படியும் என் அடிமைகளுக்குக் கற்
றுக்கொடுத்து அவர்களைத் தவறாக வழிநடத்துகிறாள். **21** மனம் திருந்த
நான் அவளுக்கு அவகாசம் கொடுத்தேன், ஆனால் பாலியல் முறை
கேட்டில்* ஈடுபடுவதைவிட்டு மனம் திருந்த அவளுக்கு விருப்ப
மில்லை. **22** இதோ! நான் அவளைப் படுத்த படுக்கையாக்கப்போகி
றேன். அவளோடு முறைகேடான உறவுகொள்கிறவர்கள் அவள் செய்வது
போன்ற செயல்களைவிட்டு மனம் திருந்தவில்லை என்றால், அவர்களுக்கு
மிகுந்த உபத்திரவத்தைக் கொடுப்பேன். **23** அடிமனதின் யோசனைகளை
யும்* இதயங்களையும் ஆராய்ந்து பார்க்கிறவர் நான்தான் என்பதை எல்லா
சபைகளும் தெரிந்துகொள்ளும்படி, அவளுடைய பிள்ளைகளைக் கொடிய
கொள்ளைநோய்க்குப் பலியாக்குவேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் அவ
ரவருடைய செயல்களுக்கு ஏற்ற பலனைக் கொடுப்பேன்.[r]

2:13 *நே.மொ., "என் பெயரை உறுதியாகப் பிடித்துக்கொண்டு." **2:14, 20, 21** *சொல் பட்டியலைப் பாருங்கள். **2:23** *வே.வா., "ஆழமான உணர்ச்சிகளையும்." நே.மொ., "சிறுநீரகங்களையும்."

அதி. 2
a மாற் 13:9, வெளி 2:3
b அப் 1:8
c மத் 24:9
d லூ 12:8, 1யோ 2:23
e எண் 31:16, 2பே 2:15, யூ 11
f எண் 25:1, 2, அப் 15:28, 29, எபே 5:5
g எண் 22:4
h 2பே 2:1, வெளி 2:6
i வெளி 1:13, 16
j வெளி 2:7
k 1யோ 5:5, வெளி 3:12
l யாத் 16:15, 31, சங் 78:24, எபி 9:4
m அப் 16:14
n வெளி 19:12
o வெளி 1:13-15
p 1ரா 16:31, 2ரா 9:22
q 1கொ 5:11, கலா 5:19, எபே 5:5
r வெளி 22:12

24 தியத்தீராவில் இருக்கிற மற்றவர்களே, யேசபேலின் போதனையைப்
பின்பற்றாதவர்களே, “சாத்தானுடைய ஆழங்கள்”[a] என்று அவர்கள் சொல்
வது என்னவென்று தெரியாதவர்களே, நான் உங்களுக்குச் சொல்வது இது
தான்: உங்கள்மேல் நான் வேறெந்தச் சுமையையும் சுமத்த மாட்டேன்.
25 உங்களிடம் இருப்பதை நான் வரும்வரை தக்க வைத்துக்கொள்ளுங்
கள்.[b] **26** என் தகப்பனிடமிருந்து நான் அதிகாரம் பெற்றதுபோல், முடிவு
வரை என் கட்டளைகளைக் கடைப்பிடித்து ஜெயிக்கிறவன் எவனோ அவ
னுக்குத் தேசங்கள்மீது நான் அதிகாரத்தைக் கொடுப்பேன்.[c] **27** அவன்
இரும்புக் கோலால் தேசங்களை நொறுக்குவான்.*[d] அவற்றை மண்பாத்தி
ரங்களைப் போல் சுக்குநூறாக்குவான். **28** அவனுக்கு நான் விடியற்கால
நட்சத்திரத்தையும் கொடுப்பேன்.[e] **29** கடவுளுடைய சக்தி சபைகளுக்குச்
சொல்வதைக் காதுள்ளவன் கேட்கட்டும்.’”

3 “சர்தை சபையின் தூதருக்கு நீ எழுத வேண்டியது என்னவென்
றால்: கடவுளுடைய ஏழு சக்திகளையும்[f] ஏழு நட்சத்திரங்களையும்[g]
வைத்திருப்பவர் சொல்வது இதுதான்: ‘உன்னுடைய செயல்களை நான்
அறிந்திருக்கிறேன். நீ உயிருள்ளவன் என்று பெயர் எடுத்திருந்தாலும்
செத்தவனாகவே இருக்கிறாய்.[h] **2** நீ செய்ய வேண்டியவற்றை என் கடவு
ளுக்குமுன் முழுமையாகச் செய்யாமல் இருப்பதை நான் பார்க்கிறேன். அத
னால் விழித்தெழு![i] சாகப்போகும் நிலையில் இருந்தவற்றைப் பலப்
படுத்து. **3** நீ கற்றுக்கொண்டதையும் கேட்டதையும் எப்போதும் நினை
வில் வை; அவற்றைக் கடைப்பிடித்துக்கொண்டே இரு. மனம் திருந்து.[j]
நீ விழித்துக்கொள்ளவில்லை என்றால் நான் ஒரு திருடனைப் போல் வரு
வேன்.[k] எந்த நேரத்தில் உன்னிடம் வருவேன் என்பது உனக்குத் தெரியப்
போவதில்லை.[l]

4 ஆனாலும், தங்கள் உடையைக் கறைபடுத்திக்கொள்ளாத[m] சிலர் சர்
தையில் இருக்கிறார்கள். அவர்கள் வெள்ளை உடையைப்[n] போட்டுக்
கொண்டு என்னோடு நடப்பார்கள். ஏனென்றால், அவர்கள் அதற்குத்
தகுதியுள்ளவர்கள். **5** அதேபோல், ஜெயிக்கிறவன் எவனோ அவனுக்கு[o]
வெள்ளை உடை போட்டுவிடப்படும்.[p] அவனுடைய பெயரை வாழ்வின்
புத்தகத்திலிருந்து ஒருபோதும் துடைத்தழிக்க மாட்டேன்.[q] அதற்குப் பதி
லாக, அவனை எனக்குத் தெரியும் என்று என் தகப்பனுக்கு முன்பாகவும்
அவருடைய தூதர்களுக்கு முன்பாகவும் சொல்வேன்.[r] **6** கடவுளுடைய
சக்தி சபைகளுக்குச் சொல்வதைக் காதுள்ளவன் கேட்கட்டும்.’

7 பிலதெல்பியா சபையின் தூதருக்கு நீ எழுத வேண்டியது என்னவென்
றால்: பரிசுத்தமானவரும்,[s] உண்மையானவரும்,[t] தாவீதின் சாவியை வைத்
திருப்பவரும்,[u] ஒருவராலும் பூட்ட முடியாதபடி திறக்கிறவரும், ஒருவராலும்
திறக்க முடியாதபடி பூட்டுகிறவரும் சொல்வது இதுதான்: **8** ‘உன்னுடைய
செயல்களை நான் அறிந்திருக்கிறேன். உனக்குக் கொஞ்சம் வல்லமை இருக்
கிறது; நீ என் வார்த்தையைக் கடைப்பிடித்தாய், என்னை* ஒதுக்கித்தள்ள
வில்லை. இதோ! உனக்கு முன்பாகக் கதவைத் திறந்தே வைத்திருக்கிறேன்.[v]
இதை யாராலும் பூட்ட முடியாது. **9** இதோ! சாத்தானின் கூட்டத்தை* சேர்ந்
தவர்கள் தங்களை யூதர்கள் என்று பொய்யாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.[w]

2:27 *நே.மொ., “மேய்ப்பான்.” **3:8** *நே.மொ., “என் பெயரை.” **3:9** *நே.மொ., “ஜெபக்கூடத்தை.”

அதி. 2
a யோவா 8:44
b வெளி 3:11
c சங் 2:8, 9; மத் 19:28; லூ 22:28-30; வெளி 3:21; வெளி 20:4
d வெளி 12:5; வெளி 19:15
e வெளி 22:16

அதி. 3
f வெளி 1:4; வெளி 4:5
g வெளி 1:13, 16
h யாக் 2:26
i லூ 21:34; எபே 5:15; 1தெ 5:6
j 2கொ 7:11
k வெளி 16:15
l மத் 24:42; லூ 12:37, 39
m யாக் 1:27
n வெளி 6:11
o 1யோ 5:4
p வெளி 4:4; வெளி 19:8
q பிலி 4:3
r லூ 12:8
s யோவா 6:69; எபி 7:26
t வெளி 3:14; வெளி 19:11
u ஏசா 22:22; லூ 1:32
v 1கொ 16:9; 2கொ 2:12
w ரோ 2:28; வெளி 2:9

இதோ! அவர்களை உன்னிடம் வரவழைத்து உன் காலில் விழ வைப்பேன்.
நான் உன்னை நேசிக்கிறேன் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளும்படியும்
செய்வேன். **10** என் சகிப்புத்தன்மையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அதன்
படியே நடந்துகொண்டாய்.*[a] அதனால், பூமி முழுவதும் குடியிருக்கிறவர்
களைச் சோதிப்பதற்காக அவர்கள் எல்லார்மீதும் வரப்போகிற சோதனை
நேரத்தில் நான் உன்னைப் பாதுகாப்பேன்.[b] **11** நான் சீக்கிரமாக வரப்
போகிறேன்.[c] உன் கிரீடத்தை யாரும் எடுத்துப்போடாதபடி உன்னிடம் இருப்
பதைத் தக்க வைத்துக்கொள்.[d]

12 ஜெயிக்கிறவன் எவனோ அவனை என் கடவுளுடைய ஆலயத்தில்
ஒரு தூணாக நிறுத்துவேன்; அங்கிருந்து ஒருபோதும் அவன் நீக்கப்பட
மாட்டான். என் கடவுளுடைய பெயரையும் என் கடவுளுடைய நகரத்தின்
பெயரையும், அதாவது என் கடவுளிடமிருந்து பரலோகத்தைவிட்டு இறங்கி
வருகிற புதிய எருசலேமின் பெயரையும்,[e] என்னுடைய புதிய பெயரையும்[f]
அவன்மேல் எழுதுவேன்.[g] **13** கடவுளுடைய சக்தி சபைகளுக்குச் சொல்
வதைக் காதுள்ளவன் கேட்கட்டும்.'

14 லவோதிக்கேயா சபையின்[h] தூதருக்கு நீ எழுத வேண்டியது என்ன
வென்றால்: நம்பகமான, உண்மையான[i] சாட்சியும்,[j] கடவுளுடைய படைப்
புகளிலேயே முதல் படைப்புமான[k] ஆமென்*[l] என்பவர் சொல்வது
இதுதான்: **15** 'உன்னுடைய செயல்களை அறிந்திருக்கிறேன். நீ குளிர்ச்
சியாகவும் இல்லை, சூடாகவும் இல்லை. நீ குளிர்ச்சியாகவோ சூடாகவோ
இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! **16** ஆனால், நீ சூடாகவும்[m] இல்
லாமல் குளிர்ச்சியாகவும்[n] இல்லாமல் வெதுவெதுப்பாக இருப்பதால், என்
வாயிலிருந்து உன்னைத் துப்பிவிடப்போகிறேன். **17** "நான் பணக்காரன்,[o]
செல்வத்தைச் சேர்த்து வைத்திருக்கிறேன், இனி எனக்கு எதுவும் தேவை
யில்லை" என்று சொல்கிறாய். ஆனால், நீ இழிவானவன், பரிதாபமானவன்,
ஏழ்மையானவன், பார்வையில்லாதவன், நிர்வாணமானவன் என்பதையெல்
லாம் உணராமல் இருக்கிறாய். **18** அதனால் நான் உனக்குப் புத்தி
சொல்கிறேன்: நீ பணக்காரனாகும்படி நெருப்பில் புடமிடப்பட்ட தங்
கத்தை என்னிடமிருந்து வாங்கிக்கொள். அதோடு, வெட்கக்கேடான
நிர்வாணக் கோலத்தில் உன்னை மற்றவர்கள் பார்க்காதபடி[p] நீ போட்டுக்
கொள்ள வெள்ளை உடைகளை என்னிடமிருந்து வாங்கிக்கொள். பார்வை
கிடைக்கும்படி[q] உன் கண்களில் பூசிக்கொள்ள கண்மருந்தையும்[r] என்னிட
மிருந்து வாங்கிக்கொள்.

19 என் பாசத்துக்குரிய எல்லாரையும் நான் கண்டித்துத் திருத்துவேன்.[s]
அதனால், பக்திவைராக்கியத்தோடு இரு, மனம் திருந்து.[t] **20** இதோ! நான்
கதவுக்குப் பக்கத்தில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். ஒருவன் என் குர
லைக் கேட்டு கதவைத் திறந்தால், நான் அவனுடைய வீட்டுக்குள் போய்
அவனோடு உணவு சாப்பிடுவேன், அவனும் என்னோடு உணவு சாப்பி
டுவான். **21** நான் ஜெயித்து என் தகப்பனின் சிம்மாசனத்தில் அவரோடு
உட்கார்ந்ததுபோல்,[u] ஜெயிக்கிறவன் எவனோ அவனை[v] என் சிம்மாச
னத்தில் என்னோடு உட்கார வைப்பேன்.[w] **22** கடவுளுடைய சக்தி சபை
களுக்குச் சொல்வதைக் காதுள்ளவன் கேட்கட்டும்.'"

3:10 *அல்லது, "என்னுடைய சகிப்புத்தன்மையை நீ பின்பற்றினாய்." **3:14** *அதா
வது, "அப்படியே ஆகட்டும்."

அதி. 3
a லூ 8:15; லூ 21:19; 2தீ 2:12; எபி 10:36; எபி 12:3
b 2தெ 3:3
c வெளி 2:16
d யாக் 1:12; வெளி 2:10
e எபி 12:22; வெளி 21:2
f வெளி 14:1; வெளி 19:12
g வெளி 22:3, 4
h கொலோ 4:16
i யோவா 1:14; வெளி 19:11
j யோவா 18:37; 1தீ 6:13; வெளி 1:5
k நீதி 8:22; கொலோ 1:15
l 2கொ 1:20
m 2கொ 9:2
n நீதி 25:13
o ஓசி 12:8
p வெளி 16:15
q 1தீ 6:17-19
r சங் 19:8
s நீதி 3:12
t வெளி 2:5; வெளி 3:3
u எபி 10:12
v 1யோ 5:4; வெளி 12:11
w மத் 19:28; லூ 22:28-30; வெளி 2:26

4 இதற்குப் பின்பு நான் பார்த்தபோது, இதோ! பரலோகத்தின் கதவு
திறந்திருந்தது. முதலில் நான் கேட்ட குரல் எக்காளம்போல் முழங்கி
யது. அது என்னிடம், “இங்கே ஏறி வா, நடக்கப்போகும் காரியங்களை
நான் உனக்குக் காட்டுகிறேன்” என்று சொன்னது. **2** உடனடியாகக் கடவு
ளுடைய சக்தி என்மேல் வந்தது. இதோ! பரலோகத்தில் ஒரு சிம்மாசனம்
இருந்தது; அந்தச் சிம்மாசனத்தில் ஒருவர் உட்கார்ந்திருந்தார்.[a] **3** அவரு
டைய தோற்றம் சூரியகாந்தக் கல்[b] போலவும் சுநீரம்* போலவும் இருந்தது.
சிம்மாசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது. அது பார்ப்பதற்கு மரகதம்
போல் இருந்தது.[c]

4 அந்தச் சிம்மாசனத்தைச் சுற்றி 24 சிம்மாசனங்கள் இருந்தன. அந்தச்
சிம்மாசனங்களில் 24 மூப்பர்கள்[d] உட்கார்ந்திருந்தார்கள். இவர்கள்
வெள்ளை உடைகளைப் போட்டுக்கொண்டு, தலையில் தங்கக் கிரீடங்க
ளைச் சூடியிருந்தார்கள். **5** அந்தச் சிம்மாசனத்திலிருந்து மின்னல்களும்[e]
குரல்களும் இடிமுழக்கங்களும்[f] வந்தன. சிம்மாசனத்துக்கு முன்னால் ஏழு
பெரிய விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. இவை கடவுளுடைய ஏழு சக்தி
களைக் குறிக்கின்றன.[g] **6** அதோடு, சிம்மாசனத்துக்கு முன்னால் பளிங்கு
போன்ற கண்ணாடிக் கடல்[h] இருந்தது.

சிம்மாசனத்தின் நடுவிலும்* சிம்மாசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்கள்
இருந்தன.[i] அந்த ஜீவன்களின் முன்பக்கமும் பின்பக்கமும் கண்களால்
நிறைந்திருந்தன. **7** முதலாவது ஜீவன் சிங்கத்தைப் போலவும்,[j] இரண்டா
வது ஜீவன் இளம் காளையைப் போலவும்,[k] மூன்றாவது ஜீவன்[l] மனித முகத்
தைப் போன்ற முகமுள்ளதாகவும் நான்காவது ஜீவன்[m] பறக்கிற கழுகைப்
போலவும்[n] இருந்தது. **8** அந்த நான்கு ஜீவன்கள் ஒவ்வொன்றுக்கும் ஆறு
சிறகுகள் இருந்தன. சிறகுகள் முழுவதிலும் அவற்றின் உள்பக்கத்திலும் கண்
கள் இருந்தன.[o] அவை, “இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமான[p] சர்
வவல்லமையுள்ள கடவுளாகிய யெகோவா* பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்”[q]
என்று இரவு பகலாகத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தன.

9 சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தவருக்கு, அதாவது என்றென்றும்
வாழ்கிறவருக்கு,[r] அந்த ஜீவன்கள் மகிமையும் மாண்பும் நன்றியும் செலுத்தி
யபோதெல்லாம், **10** இருபத்து நான்கு மூப்பர்களும்[s] சிம்மாசனத்தில் உட்
கார்ந்திருந்தவருக்கு முன்னால் விழுந்து, என்றென்றும் வாழ்கிற அவரை
வணங்கினார்கள். அதோடு, தங்கள் கிரீடங்களைக் கழற்றி சிம்மாசனத்துக்கு
முன்னால் வைத்துவிட்டு, **11** “எங்கள் கடவுளாகிய யெகோவாவே,* நீங்
கள் மகிமையும்[t] மாண்பும்[u] வல்லமையும்[v] பெற்றுக்கொள்ளத் தகுதியான
வர். ஏனென்றால், நீங்கள்தான் எல்லாவற்றையும் படைத்தீர்கள்,[w] உங்களு
டைய விருப்பத்தின்படியே# அவை உண்டாயின, படைக்கப்பட்டன” என்று
சொன்னார்கள்.

5 சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தவருடைய[x] வலது கையில் ஒரு சுரு
ளைப் பார்த்தேன். அதன் இரண்டு பக்கத்திலும்* எழுதப்பட்டிருந்தது,
ஏழு முத்திரைகளால் நன்றாக முத்திரை போடப்பட்டிருந்தது. **2** அதோடு,
பலமுள்ள ஒரு தேவதூதர் உரத்த குரலில், “முத்திரைகளை உடைத்து,

அதி. 4
a 1ரா 22:19; ஏசா 6:1; எசே 1:26, 27; தானி 7:9; அப் 7:55
b வெளி 21:10, 11
c 1யோ 1:5
d வெளி 4:10; வெளி 5:8; வெளி 11:16; வெளி 19:4
e எசே 1:13
f யாத் 19:16
g வெளி 1:4; வெளி 5:6
h யாத் 30:18; 1ரா 7:23
i எசே 1:5-10
j நீதி 28:1; ஏசா 31:4
k யோபு 39:9-11; வெளி 6:3
l வெளி 6:5
m வெளி 6:7
n யோபு 39:27, 29; எசே 1:10
o எசே 10:9, 12
p வெளி 1:4
q ஏசா 6:2, 3
r சங் 90:2; தானி 12:7
s வெளி 5:8
t மத் 5:16; வெளி 14:7
u வெளி 19:10
v வெளி 5:13; வெளி 7:12; வெளி 11:17; வெளி 12:10
w வெளி 10:6

அதி. 5
x வெளி 4:2, 3

4:3 * வே.வா., “விலைமதிப்புள்ள சிவப்புக் கல்.” **4:6** * வே.வா., “நடுவில், சிம்மாசனம் இருந்த இடத்திலும்.” **4:8, 11** * இணைப்பு A5-ஐப் பாருங்கள். **4:11** # வே.வா., “சித்தத்தின்படியே.” **5:1** * நே.மொ., “உள்ளேயும் வெளியேயும்.”

சுருளை விரிக்க யாருக்குத் தகுதி இருக்கிறது?” என்று கேட்டார்.
3 ஆனால், சுருளை விரிப்பதற்கும் அதைப் படித்துப் பார்ப்பதற்கும், பர
லோகத்திலோ பூமியிலோ பூமிக்கடியிலோ இருக்கிற ஒருவரால்கூட முடிய
வில்லை. **4** சுருளை விரிப்பதற்கும் அதைப் படித்துப் பார்ப்பதற்கும் தகுதி
யுள்ளவர் ஒருவர்கூட இல்லை என்பதால் நான் தேம்பித் தேம்பி அழுதேன்.
5 ஆனால் மூப்பர்களில் ஒருவர் என்னிடம், “அழாதே. இதோ! யூதா கோத்
திரத்துச் சிங்கமும்[a] தாவீதின்[b] வேருமானவர்[c] ஜெயித்துவிட்டார்.[d] அத
னால், அந்தச் சுருளின் ஏழு முத்திரைகளையும் உடைத்து அவரால் அதை
விரிக்க முடியும்” என்று சொன்னார்.

6 சிம்மாசனத்துக்கும் நான்கு ஜீவன்களுக்கும் மூப்பர்களுக்கும்[e] நடுவில்
ஓர் ஆட்டுக்குட்டி[f] நிற்பதைப் பார்த்தேன். அது வெட்டப்பட்டதுபோல்
இருந்தது.[g] அதற்கு ஏழு கொம்புகளும் ஏழு கண்களும் இருந்தன. இந்தக்
கண்கள், பூமி முழுவதும் அனுப்பப்பட்டிருக்கிற கடவுளுடைய ஏழு சக்தி
களைக் குறிக்கின்றன.[h] **7** உடனே, அந்த ஆட்டுக்குட்டியானவர் சிம்மாச
னத்தில் உட்கார்ந்திருந்தவரிடம்[i] போய், அவருடைய வலது கையிலி
ருந்த சுருளை வாங்கினார். **8** அவர் அந்தச் சுருளை வாங்கியபோது,
நான்கு ஜீவன்களும் 24 மூப்பர்களும்[j] ஆட்டுக்குட்டியானவருக்கு முன்னால்
மண்டிபோட்டு தலைவணங்கினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் யாழை
யும், தூபப்பொருள் நிறைந்த தங்கக் கிண்ணங்களையும் வைத்திருந்தார்
கள். அந்தத் தூபப்பொருள் பரிசுத்தவான்களின் ஜெபங்களைக் குறிக்கிறது.[k]
9 அவர்கள் இந்தப் புதுப்பாட்டைப் பாடிக்கொண்டிருந்தார்கள்:[l] “சுருளை
வாங்கிக்கொள்வதற்கும் அதன் முத்திரைகளை உடைப்பதற்கும் உங்களுக்
குத்தான் தகுதி இருக்கிறது. ஏனென்றால், நீங்கள் வெட்டிக் கொல்லப்பட்டீர்
கள், உங்களுடைய இரத்தத்தால் எல்லா கோத்திரங்களையும் மொழிகளை
யும் இனங்களையும் தேசங்களையும் சேர்ந்தவர்களிலிருந்து[m] ஆட்களைக்
கடவுளுக்காக விலைகொடுத்து வாங்கினீர்கள்.[n] **10** அவர்களை ராஜாக்
களாகவும்[o] நம்முடைய கடவுளுக்குச் சேவை செய்கிற குருமார்களாக
வும்[p] நியமித்தீர்கள்; அவர்கள் ராஜாக்களாகப் பூமியின் மீது ஆட்சி செய்
வார்கள்.”[q]

11 அதன் பின்பு, சிம்மாசனத்தையும் நான்கு ஜீவன்களையும் மூப்
பர்களையும் சுற்றி கோடிக்கணக்கிலும்* லட்சக்கணக்கிலும் தேவதூதர்
கள் இருப்பதைப் பார்த்தேன்,[r] அவர்களுடைய குரலையும் கேட்டேன்.
12 அவர்கள் உரத்த குரலில், “வெட்டிக் கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டியான
வர்[s] அதிகாரத்தையும் செல்வத்தையும் ஞானத்தையும் பலத்தையும் மாண்
பையும் மகிமையையும் புகழையும் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்”[t]
என்று சொன்னார்கள்.

13 பரலோகத்திலும் பூமியிலும் பூமிக்கடியிலும்[u] கடலிலும் அவை எல்
லாவற்றிலும் இருக்கிற ஒவ்வொரு ஜீவனும், “சிம்மாசனத்தில் உட்கார்ந்தி
ருப்பவருக்கும்[v] ஆட்டுக்குட்டியானவருக்கும்[w] புகழும் மாண்பும்[x] மகிமை
யும் வல்லமையும் என்றென்றும் உண்டாவதாக”[y] என்று சொல்வதைக் கேட்
டேன். **14** அந்த நான்கு ஜீவன்களும், “ஆமென்!”* என்றன. அந்த மூப்
பர்கள் மண்டிபோட்டு, கடவுளை வணங்கினார்கள்.

5:11 * நே.மொ., “பத்தாயிரம் தடவை பத்தாயிரமும்.” **5:14** * அதாவது, “அப்படியே
ஆகட்டும்!”

அதி. 5
a ஆதி 49:9, 10; எபி 7:14
b 2சா 7:8, 12; வெளி 22:16
c ஏசா 11:1, 10; ரோ 15:12
d யோவா 16:33
e எபே 1:22
f ஏசா 53:7; யோவா 1:29; 1பே 1:19
g யோவா 19:30; வெளி 5:12
h வெளி 1:4
i சங் 47:8; ஏசா 6:1
j வெளி 5:14; வெளி 19:4
k சங் 141:2; வெளி 8:4
l சங் 33:3; சங் 144:9; ஏசா 42:10; வெளி 14:3
m வெளி 14:4
n மத் 26:27, 28; 1கொ 6:20; எபி 9:12; 1பே 1:18, 19
o லூ 12:32; லூ 22:28-30
p யாத் 19:6; 1பே 2:9; வெளி 1:5, 6
q மத் 19:28; வெளி 20:4, 6; வெளி 22:5
r தானி 7:9, 10
s ஏசா 53:7; வெளி 5:6
t மத் 28:18
u பிலி 2:9, 10
v வெளி 4:2, 3
w யோவா 1:29; வெளி 7:17
x யோவா 5:23; 1தீ 6:16
y 1பே 4:11

6 ஏழு முத்திரைகளில்[a] ஒன்றை ஆட்டுக்குட்டியானவர்[b] உடைப்ப
தைப் பார்த்தேன். அப்போது நான்கு ஜீவன்களில்[c] ஒன்று இடிமுழக்
கம் போன்ற குரலில், “வா!” என்று சொல்வதைக் கேட்டேன். **2** அப்போது,
ஒரு வெள்ளைக் குதிரை[d] வந்தது. அதன்மேல் உட்கார்ந்திருந்தவரின்
கையில் ஒரு வில் இருந்தது. அவருக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது.[e]
அவர் ஜெயிக்கிறவராகப் புறப்பட்டுப் போனார், ஜெயித்து முடிப்பதற்காகப்
புறப்பட்டுப் போனார்.[f]

3 அவர் இரண்டாவது முத்திரையை உடைத்தபோது, இரண்டாவது
ஜீவன்[g] “வா!” என்று சொல்வதைக் கேட்டேன். **4** அப்போது வேறொரு
குதிரை வந்தது. அது சிவப்புக் குதிரை; அதன்மேல் உட்கார்ந்திருந்தவ
னுக்கு, பூமியிலிருந்து சமாதானத்தை எடுத்துப்போடும் அதிகாரம் கொடுக்
கப்பட்டது; பூமியில் இருக்கிற மக்கள் ஒருவரை ஒருவர் வெட்டிப்போடுவ
தற்காக அந்த அதிகாரம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது; அவனுக்கு ஒரு
பெரிய வாளும் கொடுக்கப்பட்டது.[h]

5 அவர் மூன்றாவது முத்திரையை உடைத்தபோது,[i] மூன்றாவது ஜீவன்[j]
“வா!” என்று சொல்வதைக் கேட்டேன். அப்போது, ஒரு கறுப்புக் குதிரை
வந்தது. அதன்மேல் உட்கார்ந்திருந்தவனின் கையில் ஒரு தராசு இருந்தது.
6 பின்பு, நான்கு ஜீவன்களின் நடுவிலிருந்து ஒரு குரல் வருவதுபோல்
எனக்குக் கேட்டது; அது, “ஒரு தினாரியுவுக்கு*[k] ஒரு படி# கோதுமை, ஒரு
வெள்ளிக் காசுக்கு மூன்று படி பார்லி; ஒலிவ எண்ணெயையும் திராட்சமது
வையும் தீர்த்துவிடாதே”[l] என்று சொன்னது.

7 அவர் நான்காவது முத்திரையை உடைத்தபோது, நான்காவது ஜீவன்[m]
“வா!” என்று சொல்வதைக் கேட்டேன். **8** அப்போது, மங்கிய நிறமுள்ள
ஒரு குதிரை வந்தது. அதன்மேல் உட்கார்ந்திருந்தவனின் பெயர் ‘மரணம்.’
கல்லறை* அவனை நெருக்கமாகப் பின்தொடர்ந்து போனது. நீண்ட வாளா
லும், பஞ்சத்தாலும்,[n] கொடிய கொள்ளைநோயாலும், கொடிய விலங்குகளா
லும் பூமியின் நான்கிலொரு பகுதியை அழிக்க அவற்றுக்கு அதிகாரம்
கொடுக்கப்பட்டது.[o]

9 அவர் ஐந்தாவது முத்திரையை உடைத்தபோது, கடவுளுடைய வார்த்
தையின் காரணமாகவும் சாட்சி கொடுத்ததன்[p] காரணமாகவும் கொல்லப்
பட்டிருந்தவர்களின்[q] இரத்தத்தைப் பலிபீடத்தின்[r] கீழே பார்த்தேன்.
10 அவர்கள் உரத்த குரலில், “பரிசுத்தமானவரே, உண்மையானவரே,[s]
உன்னதப் பேரரசரே, எங்கள் இரத்தத்தைச் சிந்திய உலக மக்களை நீங்கள்
இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் நியாயந்தீர்க்காமலும் பழிவாங்காம
லும் இருப்பீர்கள்?”[t] என்று கேட்டார்கள். **11** அப்போது, அவர்கள் ஒவ்
வொருவருக்கும் ஒரு வெள்ளை உடை கொடுக்கப்பட்டது.[u] இன்னும்
கொஞ்சக் காலம் பொறுத்திருக்கும்படி சொல்லப்பட்டது. அதாவது, அவர்
களைப் போலவே கொலை செய்யப்படவிருந்த சக அடிமைகளான[v] அவர்
களுடைய சகோதரர்களின் எண்ணிக்கை நிறைவு பெறும்வரை பொறுத்தி
ருக்கும்படி சொல்லப்பட்டது.

6:6 *ஒரு நாள் கூலிக்குச் சமமான ஒரு ரோம வெள்ளிக் காசு. இணைப்பு B14-ஐப் பாருங்கள். #நே.மொ., “குவார்ட்.” இணைப்பு B14-ஐப் பாருங்கள். **6:8** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 6
a வெளி 5:5
b வெளி 5:6
c வெளி 4:7
d வெளி 19:11
e வெளி 14:14
f சங் 45:4; சங் 110:1, 2; வெளி 12:7; வெளி 17:14
g வெளி 4:7
h மத் 24:7; லூ 21:10
i வெளி 5:5
j வெளி 4:7
k மத் 20:2
l மாற் 13:8
m வெளி 4:7
n லூ 21:11
o எரே 15:2, 3; எசே 14:21
p மத் 24:9, 14; யோவா 18:37; வெளி 17:6; வெளி 20:4
q லேவி 17:11
r லேவி 4:7; வெளி 8:3
s 1யோ 5:20
t உபா 32:43; லூ 18:7; வெளி 19:1, 2
u வெளி 3:5
v மத் 24:9; அப் 9:1; 2கொ 1:8

12 அவர் ஆறாவது முத்திரையை உடைப்பதைப் பார்த்தேன்; அப்
போது, பயங்கர நிலநடுக்கம் உண்டானது; ரோமத்தாலான* கறுப்பு துக்கத்
துணியைப் போல் சூரியன் கறுப்பானது; சந்திரன் முழுவதும் இரத்தம்போல்
சிவப்பானது.[a] **13** காற்று பலமாக அடிக்கும்போது அத்தி மரத்திலிருந்து
காய்கள் உதிர்வதுபோல் வானத்திலிருந்து நட்சத்திரங்கள் பூமியில் விழுந்
தன. **14** சுருள் சுருட்டப்படுவதுபோல் வானமும் சுருட்டிப்போடப்பட்டது.[b]
எல்லா மலைகளும் எல்லா தீவுகளும் அவை இருந்த இடத்திலிருந்து அகற்
றப்பட்டன.[c] **15** அப்போது பூமியின் ராஜாக்களும், உயர் அதிகாரிகளும்,
படைத் தளபதிகளும், பணக்காரர்களும், பலசாலிகளும், அடிமைகள் எல்
லாரும், சுதந்திர மக்கள் எல்லாரும் மலைகளில் இருக்கிற பாறைகளுக்கு
நடுவிலும் குகைகளிலும் ஒளிந்துகொண்டார்கள்.[d] **16** பின்பு, அந்த மலை
களையும் பாறைகளையும் பார்த்து, "சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பவ
ரின்[e] முகத்துக்கும் ஆட்டுக்குட்டியானவரின் கோபத்துக்கும்[f] எங்களை
மூடி மறைத்துக்கொள்ளுங்கள்.[g] **17** ஏனென்றால், அவர்களுடைய கடும்
கோபத்தின் மகா நாள் வந்துவிட்டது.[h] அதை எதிர்த்துநிற்க யாரால் முடி
யும்?"[i] என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

7 இதற்குப் பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தேவதூதர்கள்
நின்றுகொண்டு, பூமியின் மீதோ கடலின் மீதோ எந்தவொரு மரத்தின்
மீதோ காற்று வீசாதபடி பூமியின் நான்கு காற்றுகளை இறுக்கமாகப் பிடித்
துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். **2** வேறொரு தேவதூதர் சூரியன்
உதிக்கும்* திசையிலிருந்து ஏறிவருவதைப் பார்த்தேன். உயிருள்ள கடவு
ளின் முத்திரையை அவர் வைத்திருந்தார். பூமியையும் கடலையும் நாசப்
படுத்துவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்த நான்கு தேவதூதர்களி
டம், **3** "நம் கடவுளுடைய ஊழியர்களின் நெற்றிகளில்[j] நாங்கள் முத்திரை
போட்டு[k] முடிக்கும்வரை பூமியையோ கடலையோ மரங்களையோ நாசப்
படுத்தாதீர்கள்" என்று உரத்த குரலில் சொன்னார்.

4 பின்பு, முத்திரை போடப்பட்டவர்களின் எண்ணிக்கை சொல்லப்படுவ
தைக் கேட்டேன். இஸ்ரவேல் வம்சத்தின் எல்லா கோத்திரங்களிலும்[l] முத்
திரை போடப்பட்டவர்கள் 1,44,000 பேர்:[m]

5 யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் 12,000 பேர்;
ரூபன் கோத்திரத்தில் 12,000 பேர்;
காத் கோத்திரத்தில் 12,000 பேர்;
6 ஆசேர் கோத்திரத்தில் 12,000 பேர்;
நப்தலி கோத்திரத்தில் 12,000 பேர்;
மனாசே[n] கோத்திரத்தில் 12,000 பேர்;
7 சிமியோன் கோத்திரத்தில் 12,000 பேர்;
லேவி கோத்திரத்தில் 12,000 பேர்;
இசக்கார் கோத்திரத்தில் 12,000 பேர்;
8 செபுலோன் கோத்திரத்தில் 12,000 பேர்;
யோசேப்பு கோத்திரத்தில் 12,000 பேர்;
பென்யமீன் கோத்திரத்தில் 12,000 பேர்.

6:12 * அநேகமாக, ஆட்டின் ரோமம். **7:2** * வே.வா., "கிழக்கு."

அதி. 6
a யோவே 2:31
மத் 24:29
b ஏசா 34:4
c வெளி 16:20
d ஏசா 2:10, 19
e வெளி 4:2, 3
f வெளி 5:6
g ஓசி 10:8
லூ 23:30
h செப் 1:14, 18
ரோ 2:5
i யோவே 2:11

அதி. 7
j வெளி 9:4
k 2கொ 1:22
எபே 1:13
எபே 4:30
l ரோ 2:29
ரோ 9:6
கலா 6:16
வெளி 21:12
m வெளி 14:1, 3
n ஆதி 41:51

9 இதற்குப் பின்பு, எந்த மனிதனாலும் எண்ண முடியாதளவுக்குத் திரள் கூட்டமான மக்கள் சிம்மாசனத்துக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முன்னால் நிற்பதைப் பார்த்தேன்; அவர்கள் எல்லா தேசங்களையும் கோத்திரங்களையும் இனங்களையும் மொழிகளையும் சேர்ந்தவர்கள்.[a] அவர்கள் வெள்ளை உடைகளைப் போட்டுக்கொண்டு,[b] கைகளில் குருத்தோலைகளைப் பிடித்திருந்தார்கள்.[c] **10** அவர்கள் உரத்த குரலில், “சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிற[d] எங்கள் கடவுளாலும் ஆட்டுக்குட்டியானவராலும்தான் எங்களுக்கு மீட்பு கிடைக்கும்”[e] என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

11 தேவதூதர்கள் எல்லாரும் சிம்மாசனத்தையும் மூப்பர்களையும்[f] நான்கு ஜீவன்களையும் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் சிம்மாசனத்துக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து கடவுளை வணங்கி, **12** “ஆமென்!* புகழும் மகிமையும் ஞானமும் நன்றியும் மாண்பும் வல்லமையும் பலமும் என்றென்றும் எங்கள் கடவுளுக்கே சொந்தம்.[g] ஆமென்” என்று சொன்னார்கள்.

13 அப்போது, மூப்பர்களில் ஒருவர் என்னிடம், “வெள்ளை உடைகள் போட்டிருக்கிற[h] இவர்கள் யார், எங்கிருந்து வந்திருக்கிறார்கள்?” என்று கேட்டார். **14** உடனடியாக நான், “எஜமானே, அது உங்களுக்குத்தான் தெரியும்” என்று சொன்னேன். அப்போது அவர், “இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து[i] தப்பித்தவர்கள். தங்களுடைய உடைகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் துவைத்து வெண்மையாக்கியவர்கள்.[j] **15** அதனால்தான், கடவுளுடைய சிம்மாசனத்துக்கு முன்பாக இருக்கிறார்கள். இரவும் பகலும் அவருடைய ஆலயத்தில் அவருக்குப் பரிசுத்த சேவை செய்கிறார்கள். சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறவர்[k] இவர்களைப் பாதுகாப்பார்.*[l] **16** இனி இவர்களுக்குப் பசியும் எடுக்காது, தாகமும் எடுக்காது. வெயிலோ உஷ்ணமோ இவர்களைத் தாக்காது.[m] **17** ஏனென்றால், சிம்மாசனத்தின் பக்கத்தில்* இருக்கிற ஆட்டுக்குட்டியானவரே[n] இவர்களை மேய்ப்பார்,[o] வாழ்வு தரும் நீரூற்றுகளிடம் வழிநடத்துவார்.[p] கடவுள் இவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீரையெல்லாம் துடைத்துவிடுவார்”[q] என்று சொன்னார்.

8 அவர்[r] ஏழாவது முத்திரையை உடைத்தபோது,[s] சுமார் அரை மணி நேரத்துக்குப் பரலோகத்தில் அமைதி உண்டானது. **2** பின்பு, கடவுளுக்கு முன்னால் நிற்கிற ஏழு தேவதூதர்களைப் பார்த்தேன்.[t] அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டன.

3 இன்னொரு தேவதூதர் பலிபீடத்தின்[u] பக்கத்தில் வந்து நின்றார்; அவருடைய கையில் தங்கத் தூபக்கிண்ணம் இருந்தது; பரிசுத்தவான்கள் எல்லாருடைய ஜெபங்களும் கேட்கப்பட்ட நேரத்தில், சிம்மாசனத்துக்கு முன்பாக இருந்த தங்கப் பீடத்தில்[v] போடுவதற்குப் பெருமளவு தூபப்பொருள்[w] அவரிடம் கொடுக்கப்பட்டது. **4** தேவதூதரின் கையிலிருந்து தூபப்பொருளின் புகை பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடு[x] சேர்ந்து கடவுளிடம் மேலே போனது. **5** உடனடியாக, தேவதூதர் பலிபீடத்திலிருந்து கொஞ்சம் நெருப்பை எடுத்து தூபக்கிண்ணத்தில் நிரப்பி அதைப் பூமியில் கொட்டினார். அப்போது, இடிமுழக்கங்களும் குரல்களும் மின்னல்களும்[y]

அதி. 7
a ஏசா 2:2, வெளி 15:4
b வெளி 7:14
c லேவி 23:40, யோவா 12:13
d வெளி 4:2, 3
e அப் 4:12, வெளி 5:6
f வெளி 4:4, வெளி 11:16
g வெளி 4:11
h வெளி 7:9
i மத் 24:21, மாற் 13:19
j யோவா 1:29, எபி 9:14, 1யோ 1:7, வெளி 1:5
k வெளி 4:2
l சங் 15:1, வெளி 21:3
m சங் 121:6, ஏசா 49:10
n வெளி 5:6
o யோவா 10:11
p வெளி 22:1
q ஏசா 25:8, வெளி 21:4

அதி. 8
r வெளி 6:1
s வெளி 5:1
t வெளி 15:1
u யாத் 30:1, 3
v வெளி 9:13
w வெளி 5:8
x சங் 141:2, லூ 1:10
y யாத் 19:16, வெளி 4:5

7:12 * அதாவது, “அப்படியே ஆகட்டும்!” **7:15** * நே.மொ., “இவர்கள்மேல் தன்னுடைய கூடாரத்தை விரிப்பார்.” **7:17** * வே.வா., “நடுவில்.”

நிலநடுக்கமும் வந்தன. **6** ஏழு எக்காளங்களை வைத்திருந்த ஏழு தேவ
தூதர்கள்[a] அவற்றை ஊதுவதற்குத் தயாரானார்கள்.

7 முதலாவது தேவதூதர் தன்னுடைய எக்காளத்தை ஊதினார். அப்
போது, இரத்தம் கலந்த ஆலங்கட்டியும் நெருப்பும் பூமியில் கொட்டப்பட்
டன.[b] அதனால், பூமியில் மூன்றிலொரு பகுதி எரிந்துபோனது; மரங்களில்
மூன்றிலொரு பகுதி எரிந்துபோனது; பசுமையான செடிகொடிகளெல்லாம்
எரிந்துபோயின.[c]

8 இரண்டாவது தேவதூதர் தன்னுடைய எக்காளத்தை ஊதினார். அப்
போது, தீப்பற்றி எரிகிற பெரிய மலை போன்ற ஒன்று கடலுக்குள்[d] தள்ளப்
பட்டது. அதனால் கடலில் மூன்றிலொரு பகுதி இரத்தமானது.[e] **9** கடலில்
வாழ்கிற உயிரினங்களில் மூன்றிலொரு பகுதி செத்துப்போனது.[f] கப்பல்க
ளில் மூன்றிலொரு பகுதி நாசமானது.

10 மூன்றாவது தேவதூதர் தன்னுடைய எக்காளத்தை ஊதினார்.
அப்போது, ஒரு பெரிய நட்சத்திரம் தீப்பந்தம்போல் எரிந்துகொண்டே
வானத்திலிருந்து பாய்ந்து வந்து, ஆறுகளிலும் நீரூற்றுகளிலும் மூன்றிலொரு
பகுதிமீது விழுந்தது.[g] **11** அந்த நட்சத்திரத்தின் பெயர் எட்டி. அதனால்,
தண்ணீரில் மூன்றிலொரு பகுதி எட்டிபோல் கசப்பானது. தண்ணீர் இப்படிக்
கசப்பானதால்[h] அதைக் குடித்த நிறைய பேர் செத்துப்போனார்கள்.

12 நான்காவது தேவதூதர் தன்னுடைய எக்காளத்தை ஊதினார். அப்
போது, சூரியனில் மூன்றிலொரு பகுதியும்,[i] சந்திரனில் மூன்றிலொரு பகுதி
யும், நட்சத்திரங்களில் மூன்றிலொரு பகுதியும் சேதமடைந்தன. அதனால்,
அவை எல்லாவற்றிலும் மூன்றிலொரு பகுதி இருளடைந்தது; பகலில்
மூன்றிலொரு பகுதி வெளிச்சம் இல்லாமல் போனது;[j] இரவிலும் அப்ப
டியே ஆனது.

13 பின்பு, நடுவானத்தில் ஒரு கழுகு பறப்பதைப் பார்த்தேன்; அது
உரத்த குரலில், "இன்னும் மூன்று தேவதூதர்கள் தங்களுடைய எக்காளங்
களை ஊதப்போகிறார்கள்,[k] அவர்களுடைய எக்காள முழக்கங்களால் பூமி
யில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, கேடு!"[l] என்று சொல்
வதைக் கேட்டேன்.

9 ஐந்தாவது தேவதூதர் தன் எக்காளத்தை ஊதினார்.[m] அப்போது,
பரலோகத்திலிருந்து பூமியின் மீது விழுந்திருந்த ஒரு நட்சத்திரத்
தைப் பார்த்தேன்; அதலபாதாளத்தின் சாவி[n] அவருக்குக் கொடுக்கப்பட்டது.
2 அவர் அதலபாதாளத்தைத் திறந்தார்; அப்போது, பெரிய உலையிலி
ருந்து வருகிற புகையைப் போல் அதிலிருந்து புகை வந்தது; அந்தப் புகை
யால் சூரியனும் காற்றுமண்டலமும் இருண்டுபோயின.[o] **3** அந்தப் புகையி
லிருந்து வெட்டுக்கிளிகள் கிளம்பி பூமிக்கு வந்தன.[p] பூமியிலுள்ள
தேள்களுக்கு இருக்கிற அதே அதிகாரம் அவற்றுக்கும் கொடுக்கப்பட்டது.
4 பூமியிலுள்ள எந்தச் செடிகொடிக்கோ தாவரத்துக்கோ மரத்துக்கோ தீங்கு
செய்யாமல், நெற்றிகளில் கடவுளுடைய முத்திரை[q] இல்லாத ஆட்களுக்கு
மட்டும்தான் தீங்கு செய்ய வேண்டுமென்று அவற்றுக்குச் சொல்லப்பட்டது.

5 ஆனால், அவர்களைக் கொல்வதற்கான அதிகாரம் அவற்றுக்குக்
கொடுக்கப்படவில்லை. ஐந்து மாதம்வரை வேதனைப்படுத்துவதற்குத்தான்
அதிகாரம் கொடுக்கப்பட்டது. அந்த வேதனை, தேள் கொட்டும்போது ஏற்
படும் வேதனையைப் போன்றது.[r] **6** அந்த நாட்களில் மனிதர்கள் சாவைத்

அதி. 8
a வெளி 8:7, 8
வெளி 8:10, 12
வெளி 9:1, 13
வெளி 11:15
b வெளி 16:2
c யாத் 9:23–25
சங் 97:3, 5
d ஏசா 17:12, 13
ஏசா 57:20
e யாத் 7:20
f வெளி 16:1, 3
g வெளி 16:1, 4
h ஆமோ 5:7
i வெளி 16:1, 8
j யாத் 10:22
k வெளி 8:2
l வெளி 9:12
வெளி 11:14

அதி. 9
m வெளி 8:2
n லூ 8:30, 31
வெளி 9:11
வெளி 20:1–3
o யோவே 2:2, 10
p யாத் 10:12
q வெளி 7:2, 3
r வெளி 9:10

தேடிப் போவார்கள், ஆனால், ஒருபோதும் அதைக் கண்டடைய மாட்டார்
கள். சாக விரும்புவார்கள், ஆனால் சாவு அவர்களைவிட்டு ஓடிக்கொண்டே
இருக்கும்.

7 அந்த வெட்டுக்கிளிகளின் தோற்றம் போருக்குத் தயார் செய்யப்பட்ட
குதிரைகளைப் போல் இருந்தது.[a] அவற்றின் தலைகளில் தங்கக் கிரீடத்
தைப் போன்ற கிரீடங்கள் இருந்தன. அவற்றின் முகங்கள் மனித முகங்க
ளைப் போல் இருந்தன. **8** ஆனால், அவற்றின் முடி பெண்களின் கூந்த
லைப் போல் இருந்தது. அவற்றின் பற்கள் சிங்கங்களின் பற்களைப் போல்
இருந்தன.[b] **9** அவற்றின் மார்பில் இரும்புக் கவசத்தைப் போன்ற கவ
சங்கள் இருந்தன. அவற்றின் சிறகுகள் எழுப்பிய சத்தம், குதிரைகள் பூட்
டப்பட்ட போர் ரதங்கள் வேகமாகப் போகிற சத்தத்தைப் போல் இருந்தது.[c]
10 அதோடு, தேள்களைப் போல் அவற்றின் வால்களில் கொடுக்குகள்
இருந்தன; ஐந்து மாதம் மனிதர்களுக்குத் தீங்கு உண்டாக்கும் அதிகாரம்
அவற்றின் வால்களுக்கு இருந்தது.[d] **11** அதலபாதாளத்தின் தேவதூதர்
தான்[e] அவற்றுக்கு ராஜா. எபிரெய மொழியில் அவருடைய பெயர்
அபெத்தோன்,* கிரேக்க மொழியில் அவருடைய பெயர் அப்பொல்லி
யோன்.#

12 முதலாவது கேடு போய்விட்டது. இதோ! இவற்றுக்குப் பின்பு, இன்
னும் இரண்டு கேடுகள்[f] வரப்போகின்றன.

13 ஆறாவது தேவதூதர்[g] தன்னுடைய எக்காளத்தை ஊதினார்.[h] அப்
போது, கடவுளுக்கு முன்பாக இருந்த தங்கப் பீடத்தின்[i] முனைகளிலிருந்து*
வந்த ஒரு குரலைக் கேட்டேன். **14** அது, எக்காளத்தை வைத்திருந்த
ஆறாவது தேவதூதரிடம், "பெரிய ஆறான யூப்ரடிசில்[j] கட்டப்பட்டிருக்
கிற நான்கு தேவதூதர்களை அவிழ்த்துவிடு" என்று சொன்னது. **15** அப்
போது, மனிதர்களில் மூன்றிலொரு பகுதியினரைக் கொல்வதற்கான நேரம்,
நாள், மாதம், வருஷத்துக்காகத் தயார்படுத்தப்பட்டிருந்த அந்த நான்கு
தேவதூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்.

16 குதிரைப் படைகளின் எண்ணிக்கை சொல்லப்படுவதைக் கேட்டேன்;
அது இருபது கோடி. **17** குதிரைகளையும் அவற்றின் மீது ஏறியிருந்தவர்
களையும் நான் தரிசனத்தில் பார்த்தேன்; அவர்கள் நெருப்பு போன்ற
சிவந்த நிறமும், கருநீல நிறமும், கந்தகம் போன்ற மஞ்சள் நிறமும் உடைய
மார்புக் கவசங்களைப் போட்டிருந்தார்கள். குதிரைகளின் தலைகள் சிங்கங்
களின் தலைகளைப் போல்[k] இருந்தன; அவற்றின் வாய்களிலிருந்து நெருப்
பும் புகையும் கந்தகமும் வந்தன. **18** அவற்றின் வாய்களிலிருந்து வந்த
நெருப்பு, புகை, கந்தகம் ஆகிய இந்த மூன்று தண்டனைகளால் மனிதர்க
ளில் மூன்றிலொரு பகுதியினர் கொல்லப்பட்டார்கள். **19** அந்தக் குதிரை
களின் அதிகாரம் அவற்றின் வாய்களிலும் வால்களிலும் இருந்தது. அவற்
றின் வால்கள் பாம்புகளைப் போல் இருந்தன, தலைகளோடு இருந்தன;
அந்த வால்களால் அவை தீங்கு செய்தன.

20 இந்தத் தண்டனைகளால் கொல்லப்படாத மற்ற மனிதர்கள் தங்களு
டைய கைவேலைப்பாடுகளை வணங்குவதைவிட்டு மனம் திருந்தவில்லை;
பேய்களையும், தங்கம், வெள்ளி, செம்பு, கல், மரம் ஆகியவற்றால்

அதி. 9
a யோவே 2:4, 5
b யோவே 1:6
c யோவே 2:4, 5
d வெளி 9:5
e வெளி 9:1 வெளி 20:1-3
f வெளி 8:13
g வெளி 8:6
h வெளி 11:15
i வெளி 8:3
j வெளி 16:1, 12 வெளி 17:1, 15
k நீதி 28:1

9:11 *அர்த்தம், "அழிவு." #அர்த்தம், "அழிக்கிறவர்." **9:13** *நே.மொ., "கொம்புக
ளிலிருந்து." அதாவது, "கொம்பு போன்ற நான்கு முனைகளிலிருந்து."

செய்யப்பட்ட சிலைகளையும், அதாவது பார்க்கவோ கேட்கவோ நடக்
கவோ முடியாத சிலைகளையும்,[a] வணங்குவதை விட்டுவிடவில்லை.
21 அதோடு கொலை, ஆவியுலகத் தொடர்பு, பாலியல் முறைகேடு,*
திருட்டு ஆகியவற்றைவிட்டு அவர்கள் மனம் திருந்தவில்லை.

10 பலமுள்ள இன்னொரு தேவதூதர் பரலோகத்திலிருந்து இறங்கி வரு
வதைப் பார்த்தேன்; மேகம் அவருக்கு உடையாக* இருந்தது; அவ
ருடைய தலைக்குமேல் ஒரு வானவில் இருந்தது; அவருடைய முகம் சூரி
யனைப் போலவும்,[b] அவருடைய கால்கள்# நெருப்புத் தூண்களைப்
போலவும் இருந்தன; **2** விரிக்கப்பட்ட ஒரு சிறிய சுருள் அவருடைய
கையில் இருந்தது. அவர் தன்னுடைய வலது காலைக் கடலின் மீதும், இடது
காலைப் பூமியின் மீதும் வைத்தார். **3** பின்பு, சிங்கம் கர்ஜிப்பதுபோல்[c]
உரக்கச் சத்தம் போட்டார். அப்படி அவர் சத்தம் போட்டபோது, ஏழு இடிக
ளின் குரலைக்[d] கேட்டேன்.

4 ஏழு இடிகள் பேசியபோது, அவற்றை நான் எழுதப்போனேன்.
ஆனால், பரலோகத்திலிருந்து ஒரு குரல்,[e] “ஏழு இடிகள் சொன்னதை முத்
திரை போடு; அவற்றை எழுதாதே” என்று சொல்வதைக் கேட்டேன்.
5 கடலின் மீதும் பூமியின் மீதும் நின்றுகொண்டிருந்த அந்தத் தேவதூ
தர் வானத்தை நோக்கித் தன்னுடைய வலது கையை உயர்த்தினார். **6** என்
றென்றும் வாழ்கிறவரும்,[f] வானத்தையும் அதில் இருக்கிறவற்றையும் பூமி
யையும் அதில் இருக்கிறவற்றையும் கடலையும் அதில் இருக்கிறவற்றையும்
படைத்தவருமான[g] கடவுளின் பெயரில் அவர் ஆணையிட்டு, “இனியும்
தாமதமாகாது. **7** ஏழாவது தேவதூதர்[h] தன்னுடைய எக்காளத்தை ஊதப்
போகிற நாட்களில்,[i] கடவுளுடைய பரிசுத்த ரகசியம்[j] நிறைவேற்றப்படும்.
இதுதான் கடவுள் தன்னுடைய அடிமைகளாகிய தீர்க்கதரிசிகளுக்கு அறி
வித்த நல்ல செய்தி”[k] என்று சொன்னார்.

8 பரலோகத்திலிருந்து நான் கேட்ட குரல்[l] மறுபடியும் என்னிடம், “கட
லின் மீதும் பூமியின் மீதும் நிற்கிற தேவதூதரின் கையில் இருக்கிற விரிக்
கப்பட்ட சுருளை நீ போய் வாங்கிக்கொள்”[m] என்று சொன்னது. **9** அதன்
படியே நான் அந்தத் தேவதூதரிடம் போய், அந்தச் சிறிய சுருளைக்
கொடுக்கும்படி கேட்டேன். அதற்கு அவர், “இதை வாங்கிச் சாப்பிடு;[n]
இது உன் வாயில் தேன்போல் இனிக்கும், ஆனால் உன் வயிற்றில் கசக்கும்”
என்று சொன்னார். **10** நான் அந்தத் தேவதூதரின் கையிலிருந்த சிறிய
சுருளை வாங்கிச் சாப்பிட்டேன்;[o] அது என்னுடைய வாயில் தேன்போல்
இனித்தது;[p] ஆனால், அதைச் சாப்பிட்டு முடித்தவுடன் என் வயிற்றில்
கசப்பாக இருந்தது. **11** அப்போது, “பல இனத்தினரையும் தேசத்தினரை
யும் மொழியினரையும் ராஜாக்களையும் பற்றி நீ மறுபடியும் தீர்க்கதரிசனம்
சொல்ல வேண்டும்” என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

11 பின்பு, கோல்* போன்ற ஒரு நாணற்தண்டு[q] என்னிடம் கொடுக்கப்
பட்டது; அப்போது ஒரு குரல், “நீ எழுந்து, கடவுளுடைய பரி
சுத்த இடத்தையும்# பலிபீடத்தையும் அளந்துபார், அங்கே வழிபடுகிறவர்க
ளைக் கணக்கிடு. **2** ஆனால், பரிசுத்த இடத்துக்கு வெளியே இருக்கிற

9:21 *சொல் பட்டியலைப் பாருங்கள். **10:1** *வே.வா., “அவரைச் சுற்றி.” #நே.மொ., “பாதங்கள்.” **11:1** *வே.வா., “அளவுகோல்.” #அதாவது, “ஆலயத்தின் பரிசுத்த அறையையும் மகா பரிசுத்த அறையையும் கொண்ட மையப் பகுதியையும்.”

அதி. 9
a சங் 115:4-7

அதி. 10
b மத் 17:1, 2
c வெளி 5:5
d யாத் 19:16, வெளி 4:5, வெளி 11:19
e வெளி 10:8
f சங் 90:2, வெளி 4:9
g யாத் 20:11, நெ 9:6, சங் 146:6
h வெளி 8:6
i வெளி 11:15
j மாற் 4:11
k ஆமோ 3:7
l வெளி 10:4
m வெளி 10:1, 2
n எசே 2:8
o எரே 15:16
p சங் 119:103, எசே 3:1-3

அதி. 11
q எசே 40:3

பிரகாரத்தை அளக்காமல் விட்டுவிடு. ஏனென்றால், அது மற்ற தேசத்து மக்
களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; பரிசுத்த நகரத்தை[a] அவர்கள் 42
மாதங்களுக்கு மிதிப்பார்கள்.[b] **3** என்னுடைய இரண்டு சாட்சிகளை அனுப்
புவேன்; அவர்கள் துக்கத் துணியைப் போட்டுக்கொண்டு 1,260 நாட்க
ளுக்குத் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்” என்று என்னிடம் சொன்னது.
4 பூமியின் எஜமானுக்கு முன்னால் நிற்கிற[c] இரண்டு ஒலிவ மரங்களும்[d]
இரண்டு குத்துவிளக்குகளும்[e] அந்த இரண்டு சாட்சிகளை அடையாளப்ப
டுத்துகின்றன.

5 எதிரிகள் யாராவது அவர்களுக்குத் தீங்கு செய்ய நினைத்தால், அவர்
களுடைய வாயிலிருந்து நெருப்பு வந்து அந்த எதிரிகளை எரித்துவிடும்.
அவர்களுக்குத் தீங்கு செய்ய நினைக்கிற எவனும் இப்படித்தான் கொல்லப்
பட வேண்டும். **6** அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்கிற நாட்களில் மழை
பெய்யாதபடி[f] வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது.[g]
அதோடு, தண்ணீரை இரத்தமாக்கவும்,[h] விரும்பும்போதெல்லாம் பூமியை
எல்லா விதமான தண்டனைகளால் தாக்கவும் அவர்களுக்கு அதிகாரம்
இருக்கிறது.

7 அவர்கள் சாட்சி கொடுத்து முடித்ததும், அதலபாதாளத்திலிருந்து
மேலே வருகிற மூர்க்க மிருகம் அவர்களோடு போர் செய்து, அவர்களை
ஜெயித்து, கொன்றுபோடும்.[i] **8** அவர்களுடைய பிணங்கள் மகா நகரத்
தின் முக்கியத் தெருவில் கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும், எகிப்து
என்றும் அடையாளப்பூர்வமாக அழைக்கப்படுகிறது. அங்கேதான் அவர்க
ளுடைய எஜமான் மரக் கம்பத்தில் அறைந்து கொல்லப்பட்டார். **9** அவர்
களுடைய பிணங்கள் அங்கே கிடப்பதைப் பல இனங்களையும் கோத்திரங்
களையும் மொழிகளையும் தேசங்களையும் சேர்ந்தவர்கள் மூன்றரை
நாட்களுக்குப்[j] பார்ப்பார்கள். ஆனால், அவற்றைக் கல்லறையில் வைப்
பதற்கு விடமாட்டார்கள். **10** அந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியில் குடி
யிருப்பவர்களை வேதனைப்படுத்தியதால், அந்த இரண்டு பேரும் செத்துப்
போனதை நினைத்து அவர்கள் சந்தோஷமாகக் கொண்டாடுவார்கள். ஒருவ
ருக்கொருவர் பரிசுப் பொருள்களைக் கொடுத்துக்கொள்வார்கள்.

11 மூன்றரை நாட்களுக்குப் பின்பு, கடவுள் அவர்களுக்கு உயிர்சக்தி
கொடுத்தார்.[k] அப்போது, அவர்கள் காலூன்றி நின்றார்கள். அவர்களைப்
பார்த்த எல்லாரும் மிகவும் பயந்துபோனார்கள். **12** பின்பு, வானத்திலி
ருந்து உரத்த குரல் ஒன்று, “இங்கே ஏறி வாருங்கள்” என்று அவர்களிடம்
சொல்வதைக் கேட்டார்கள். அதன்படியே, அவர்கள் மேகத்தில் ஏறி வானத்
துக்குப் போனார்கள். அவர்களுடைய எதிரிகள் அவர்களைப் பார்த்தார்கள்.
13 அப்போது பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. நகரத்தில் பத்திலொரு
பகுதி அழிந்தது. அந்த நிலநடுக்கத்தால் 7,000 பேர் கொல்லப்பட்டார்
கள். மற்றவர்கள் பயந்துபோய், பரலோகத்தின் கடவுளை மகிமைப்படுத்தி
னார்கள்.

14 இரண்டாவது கேடு[l] போய்விட்டது. இதோ! மூன்றாவது கேடு சீக்கி
ரமாக வரப்போகிறது.

15 ஏழாவது தேவதூதர் தன்னுடைய எக்காளத்தை ஊதினார்.[m] அப்
போது, பரலோகத்தில் உரத்த குரல்கள் முழங்கி, “உலகத்தின் அரசாங்கம்
நம் எஜமானுக்கும்[n] அவருடைய கிறிஸ்துவுக்கும்[o] சொந்தமான அரசாங்க
மானது. அவர் என்றென்றும் ராஜாவாக ஆட்சி செய்வார்”[p] என்றன.

அதி. 11
a வெளி 21:2
b வெளி 13:5
c சக 4:14
d சக 4:3, 11
e சக 4:12; மத் 5:14
f 1ரா 17:1; யாக் 5:17
g லூ 4:25
h யாத் 7:19
i வெளி 12:17; வெளி 13:7
j வெளி 11:11
k எசே 37:5, 10
l வெளி 9:12
m வெளி 8:6
n 1நா 29:11; சங் 22:28; தானி 4:17, 34; வெளி 12:10
o சங் 2:6; தானி 7:13, 14; லூ 1:32, 33; லூ 22:28, 29; 2பே 1:11
p சங் 145:13; தானி 2:44

16 கடவுளுக்கு முன்னால் தங்கள் சிம்மாசனங்களில் உட்கார்ந்திருந்த
24 மூப்பர்களும்[a] சாஷ்டாங்கமாக விழுந்து கடவுளை வணங்கி,
17 “யெகோவாவே,* சர்வவல்லமையுள்ள கடவுளே, இருக்கிறவரும்[b] இருந்
தவருமான உங்களுக்கு நன்றி. நீங்கள்தான் உங்களுடைய மகா வல்லமை
யால் ராஜாவாக ஆட்சி செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.[c] **18** ஆனால்,
தேசங்களுக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. அப்போது உங்களுடைய கடும்
கோபத்தைக் காட்டினீர்கள். இறந்தவர்களை நியாயந்தீர்ப்பதற்கும், உங்க
ளுடைய அடிமைகளாகிய தீர்க்கதரிசிகள்,[d] பரிசுத்தவான்கள், உங்களுடைய
பெயருக்குப் பயந்து நடக்கிற சிறியவர்கள், பெரியவர்கள் ஆகிய எல்லாருக்
கும் பலன் கொடுப்பதற்கும்[e] குறித்த காலம் வந்துவிட்டது. பூமியை நாசமாக்
குகிறவர்களை நாசமாக்குவதற்கான* காலமும் வந்துவிட்டது”[f] என்று சொன்
னார்கள்.

19 அப்போது, பரலோகத்தில் கடவுளுடைய பரிசுத்த இடம்* திறக்கப்
பட்டது. அவருடைய ஒப்பந்தப் பெட்டி அவருடைய பரிசுத்த இடத்தில்[g]
காணப்பட்டது. அதோடு, மின்னல்களும் குரல்களும் இடிமுழக்கங்களும்
நிலநடுக்கமும் வந்தன, மிகப் பெரிய ஆலங்கட்டிகளும் விழுந்தன.

12 பின்பு, பரலோகத்தில் ஒரு பெரிய அடையாளம் தோன்றியது: ஒரு
பெண்,[h] சூரியனை ஆடையாக அணிந்திருந்தாள்; அவளுடைய
பாதங்களின் கீழே சந்திரன் இருந்தது, அவளுடைய தலையில் 12 நட்சத்
திரங்கள் கிரீடமாகச் சூட்டப்பட்டிருந்தன. **2** அவள் கர்ப்பிணியாக இருந்
தாள்; பிரசவ வேதனைப்பட்டு, வலியில் கதறிக்கொண்டிருந்தாள்.

3 பரலோகத்தில் இன்னொரு அடையாளம் தோன்றியது. இதோ! சிவப்பு
நிற ராட்சதப் பாம்பு[i] இருந்தது; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்பு
களும் இருந்தன; அதன் தலைகளில் மொத்தம் ஏழு மகுடங்கள் இருந்தன.
4 அதன் வால், வானத்து நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை[j] இழுத்து
பூமியின் மீது போட்டது.[k] அந்தப் பெண்ணுக்குக் குழந்தை பிறந்தவுடன்
அதை விழுங்குவதற்காக அந்த ராட்சதப் பாம்பு அவள் முன்னால் நின்று
கொண்டே இருந்தது.[l]

5 எல்லா தேசங்களையும் இரும்புக் கோலால் நொறுக்கப்போகிற* ஓர்
ஆண் குழந்தையை,[m] ஓர் ஆண்மகனை, அவள் பெற்றெடுத்தாள்.[n] கடவு
ளிடமும் அவருடைய சிம்மாசனத்திடமும் அவளுடைய குழந்தை எடுத்துக்
கொள்ளப்பட்டது. **6** அந்தப் பெண் வனாந்தரத்துக்கு ஓடிப்போனாள்;
அங்கே 1,260 நாட்கள் அவளுக்கு உணவு கொடுக்கப்படுவதற்காக ஓர்
இடத்தைக் கடவுள் ஏற்பாடு செய்திருந்தார்.[o]

7 பரலோகத்தில் போர் ஆரம்பித்தது. மிகாவேலும்*[p] அவருடைய தூதர்
களும் ராட்சதப் பாம்போடு போர் செய்தார்கள். அந்த ராட்சதப் பாம்பும்
அதனுடைய தூதர்களும் எதிர்த்துப் போர் செய்தார்கள். **8** ஆனால்
வெற்றி பெறவில்லை;* அதன் பின்பு பரலோகத்தில் அவர்களுக்கு இடமில்
லாமல் போனது. **9** உலகம் முழுவதையும் ஏமாற்றுகிற[q] பழைய பாம்
பாகிய[r] ராட்சதப் பாம்பு,[s] அதாவது பிசாசு[t] என்றும் சாத்தான்[u] என்றும்

11:17 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **11:18** *வே.வா., “அழிக்கிறவர்களை அழிப்பதற்கான.” **11:19** *அதாவது, “ஆலயத்தின் மகா பரிசுத்த அறை.” **12:5** *நே.மொ., “மேய்க்கப்போகிற.” **12:7** *அர்த்தம், “கடவுளைப் போன்றவர் யார்?” **12:8** *அல்லது, “அது [அதாவது, ராட்சதப் பாம்பு] தோற்கடிக்கப்பட்டது.”

அதி. 11
a வெளி 4:10
b வெளி 1:4
வெளி 16:5
c சங் 99:1
சக 14:9
வெளி 19:6
d ஆமோ 3:7
எபி 1:1
யாக் 5:10
e எபி 11:6
f ஆதி 6:11
g 1ரா 8:1, 6
எபி 8:1, 2
எபி 9:11

அதி. 12
h ஆதி 3:15
i வெளி 12:9
வெளி 20:2
j யோபு 38:7
k ஆதி 6:2
யூ 6
l ஆதி 3:15
m சங் 2:9
சங் 110:2
வெளி 19:15
n வெளி 11:15
o வெளி 12:14
p தானி 10:13
தானி 12:1
யூ 9
q 2கொ 4:4
2கொ 11:14
எபே 2:2
1யோ 5:19
r ஆதி 3:1
2கொ 11:3
வெளி 12:14
s வெளி 12:3
வெளி 20:2
t மத் 4:1
யோவா 8:44
எபி 2:14
யாக் 4:7
1பே 5:8
u 1நா 21:1
யோபு 1:6
சக 3:2
மத் 4:10
யோவா 13:27
ரோ 16:20
2தெ 2:9

அழைக்கப்படுகிறவன், கீழே தள்ளப்பட்டான். அவன் பூமிக்குத் தள்ளப்பட்
டான்;[a] அவனோடு அவனுடைய தூதர்களும் தள்ளப்பட்டார்கள். **10** அப்
போது, பரலோகத்தில் ஓர் உரத்த குரல்,

“இதோ! நம் கடவுளிடமிருந்து மீட்பு வந்துவிட்டது![b] அவருடைய வல்
லமைக்கு வெற்றி கிடைத்துவிட்டது! அவருடைய அரசாங்கம் ஸ்தாபிக்கப்
பட்டுவிட்டது![c] அவருடைய கிறிஸ்துவின் அரசாட்சி ஆரம்பித்துவிட்டது!
நம் கடவுளுக்கு முன்னால் இரவும் பகலும் நம்முடைய சகோதரர்கள்மீது குற்
றம்சாட்டுகிறவன்[d] கீழே தள்ளப்பட்டுவிட்டான்! **11** ஆட்டுக்குட்டியானவ
ரின் இரத்தத்தாலும்,[e] தாங்கள் சாட்சியாகச் சொன்ன செய்தியாலும்[f] அவர்
கள் அவனை ஜெயித்தார்கள்.[g] சாவைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையிலும்
தங்களுடைய உயிர்மீது ஆசை வைக்கவில்லை.[h] **12** இதன் காரணமாக,
பரலோகங்களே, அவற்றில் குடியிருக்கிறவர்களே, சந்தோஷப்படுங்கள்!
பூமிக்கும் கடலுக்கும் ஐயோ, கேடு![i] ஏனென்றால், பிசாசு தனக்குக் கொஞ்
சக் காலம்தான் இருக்கிறது என்று தெரிந்து பயங்கர கோபத்தோடு உங்களி
டம் வந்திருக்கிறான்”[j] என்று சொல்வதைக் கேட்டேன்.

13 தான் பூமிக்குத் தள்ளப்பட்டதை உணர்ந்த ராட்சதப் பாம்பு,[k] ஆண்
குழந்தையைப் பெற்றெடுத்த அந்தப் பெண்ணைக் கொடுமைப்படுத்தியது.[l]
14 ஆனால், ராட்சதப் பாம்பின்[m] முகத்துக்கு விலகி வனாந்தரத்தில் தன்னு
டைய இடத்துக்குப் பறந்துபோவதற்காக மிகப் பெரிய கழுகின் இரண்டு சிற
குகள்[n] அந்தப் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்டன. அங்கே அவளுக்கு ஒரு
காலத்துக்கும் இரண்டு காலங்களுக்கும் அரைக் காலத்துக்கும்* உணவு
கொடுக்கப்படவிருந்தது.[o]

15 அந்தப் பெண்ணை வெள்ளத்தில் மூழ்கடிப்பதற்காக ராட்சதப் பாம்பு
தன்னுடைய வாயிலிருந்து தண்ணீரை ஆறுபோல் அவள் பின்னால் பாய
வைத்தது. **16** ஆனால், பூமி அந்தப் பெண்ணுக்கு உதவி செய்தது. அது
தன் வாயைத் திறந்து, அந்தப் பாம்பின் வாயிலிருந்து பாய்ந்துவந்த வெள்
ளத்தைக் குடித்தது. **17** அப்போது, ராட்சதப் பாம்பு அந்தப் பெண்மீது
பயங்கர கோபமடைந்து, அவளுடைய சந்ததியில்[p] மீதியாக இருக்கிறவர்
களோடு, அதாவது கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து இயேசு
வைப் பற்றிச் சாட்சி கொடுக்கும் வேலையைச் செய்கிறவர்களோடு, போர்
செய்யப் போனது.[q]

13 பின்பு, அது* கடற்கரை மணலில் அசையாமல் நின்றது.
அப்போது, மூர்க்க மிருகம்[r] ஒன்று கடலிலிருந்து ஏறி வருவதைப்
பார்த்தேன்.[s] அதற்குப் பத்துக் கொம்புகளும் ஏழு தலைகளும் இருந்தன;
அதன் கொம்புகளில் பத்து மகுடங்கள் இருந்தன, ஆனால் அதன் தலை
களில் கடவுளை நிந்திக்கும் பெயர்கள் இருந்தன. **2** நான் பார்த்த அந்த
மூர்க்க மிருகம் சிறுத்தையைப் போல் இருந்தது; ஆனால், அதன் கால்கள்
கரடியின் கால்களைப் போல் இருந்தன, அதன் வாய் சிங்கத்தின் வாயைப்
போல் இருந்தது. அந்த மிருகத்துக்கு வல்லமையையும் சிம்மாசனத்தையும்
மிகுந்த அதிகாரத்தையும் ராட்சதப் பாம்பு[t] கொடுத்தது.[u]

3 அதன் தலைகள் ஒன்றில் பயங்கரமான வெட்டுக்காயம் இருந்தது;
ஆனால், சாவுக்குரிய அந்த வெட்டுக்காயம் குணமானது.[v] பூமியிலிருந்த

12:14 * அதாவது, “மூன்றரைக் காலங்களுக்கு.” 13:1 * அதாவது, “ராட்சதப் பாம்பு.”

அதி. 12
a லூ 10:18; வெளி 12:13
b ரோ 13:11; எபி 9:28; 1பே 1:5
c வெளி 11:15, 17
d யோபு 1:9; சக 3:1
e 1பே 1:18, 19
f அப் 1:8; 2தீ 1:8; வெளி 1:9
g 1யோ 2:14
h மத் 16:25; லூ 14:26; அப் 20:24
i ஏசா 57:20; ஏசா 60:2; வெளி 17:15
j மத் 24:34; ரோ 16:20; 2தீ 3:1; 2பே 3:3
k லூ 10:18
l ஆதி 3:15; வெளி 12:1
m ஆதி 3:1; 2கொ 11:3
n யாத் 19:4; ஏசா 40:31
o வெளி 12:6
p ஆதி 3:15
q மத் 24:9; அப் 1:8; வெளி 1:9; வெளி 6:9

அதி. 13
r வெளி 11:7; வெளி 13:18
s ஏசா 57:20; வெளி 21:1
t வெளி 12:9
u லூ 4:6
v வெளி 13:14

எல்லாரும் அதை வியந்து பாராட்டிக்கொண்டு அதன் பின்னால் போனார்
கள். **4** அந்த மூர்க்க மிருகத்துக்கு ராட்சதப் பாம்பு அதிகாரம் கொடுத்த
தால் அந்த ராட்சதப் பாம்பை அவர்கள் வணங்கினார்கள்; அதோடு,
“இந்த மூர்க்க மிருகத்தைப் போல் யார் இருக்கிறார்கள், இதனோடு
யாரால் போர் செய்ய முடியும்?” என்று சொல்லி அந்த மூர்க்க மிருகத்
தையும் வணங்கினார்கள். **5** வீண்பெருமையையும் நிந்திக்கும் வார்த்தைக
ளையும் பேசுகிற வாய் அந்த மிருகத்துக்குக் கொடுக்கப்பட்டது; 42 மாதங்
கள் தன்னுடைய இஷ்டப்படி செயல்பட அதற்கு அதிகாரமும்
கொடுக்கப்பட்டது.[a] **6** கடவுளை நிந்திப்பதற்காக அது தன் வாயைத் திறந்
தது; அவருடைய பெயரையும், அவருடைய குடியிருப்பையும், பரலோகத்
தில் குடியிருக்கிறவர்களையும்[b] அது நிந்தித்தது.[c] **7** பரிசுத்தவான்களோடு
போர் செய்து அவர்களை ஜெயிக்க அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது;[d]
அதோடு, எல்லா கோத்திரத்தையும் இனத்தையும் மொழியையும் தேசத்தை
யும் சேர்ந்தவர்கள்மீது அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. **8** பூமியில்
குடியிருக்கிற எல்லாரும் அதை வணங்குவார்கள்; உலகம் உண்டானதுமுதல்
அவர்களில் யாருடைய பெயரும், வெட்டப்பட்ட ஆட்டுக்குட்டி[e] வைத்
திருந்த வாழ்வின் சுருளில்[f] எழுதப்படவில்லை.

9 காதுள்ளவன் எவனோ அவன் கேட்கட்டும்.[g] **10** சிறைபிடிக்கப்பட
வேண்டியவன் எவனோ அவன் சிறைபிடிக்கப்படுவான். வாளால் கொல்கி
றவன்* எவனோ அவன் வாளால் கொல்லப்படுவான்.[h] அதனால்தான் பரி
சுத்தவான்களுக்குச்[i] சகிப்புத்தன்மையும்[j] விசுவாசமும்[k] தேவை.

11 பின்பு, வேறொரு மூர்க்க மிருகம் பூமியிலிருந்து எழுந்து வரு
வதைப் பார்த்தேன்; அதற்கு ஆட்டுக்குட்டியின் கொம்புகளைப் போன்ற
இரண்டு கொம்புகள் இருந்தன; ஆனால், அது ராட்சதப் பாம்பைப் போல்
பேச ஆரம்பித்தது.[l] **12** அது முதலாவது மூர்க்க மிருகத்தின்[m] முழு அதி
காரத்தையும் அதன் முன்னால் செயல்படுத்தியது. பின்பு, சாவுக்குரிய வெட்
டுக்காயத்திலிருந்து குணமான[n] முதலாவது மூர்க்க மிருகத்தைப் பூமியும்
அதில் குடியிருக்கிறவர்களும் வணங்கும்படி செய்தது. **13** அது பெரிய
அடையாளங்களைச் செய்தது; மனிதர்களின் கண் முன்னால் வானத்திலி
ருந்து நெருப்பு வந்து பூமியில் விழும்படியும் செய்தது.

14 முதலாவது மூர்க்க மிருகத்தின் முன்னால் செய்யும்படி அனுமதிக்
கப்பட்ட அந்த அடையாளங்களின் மூலம் பூமியில் குடியிருக்கிறவர்
களை அது மோசம்போக்கியது. அதோடு, வாளால் வெட்டப்பட்டும் பிழைத்
துக்கொண்ட[o] அந்த மூர்க்க மிருகத்தைப் போன்ற ஓர் உருவத்தை[p]
உண்டாக்கும்படி பூமியில் குடியிருக்கிறவர்களிடம் சொன்னது. **15** அந்த
மூர்க்க மிருகத்தின் உருவத்தைப் பேச வைப்பதற்கும், அதை வணங்க மறுக்
கிறவர்களைக் கொல்லும்படி செய்வதற்கும் அந்த உருவத்துக்கு உயிர்மூச்சு
கொடுக்கும்படி இரண்டாவது மிருகத்துக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

16 சிறியவர்கள், பெரியவர்கள், பணக்காரர்கள், ஏழைகள், அடிமைகள்,
சுதந்திர மக்கள் என எல்லாரும் தங்கள் வலது கையிலாவது நெற்றியிலா
வது ஓர் அடையாளக் குறியைப் பெற்றுக்கொள்ளும்படி அது கட்டாயப்ப
டுத்தியது.[q] **17** அதோடு, அந்த மூர்க்க மிருகத்தின் பெயரையோ அந்தப்
பெயரின் எண்ணையோ[r] அடையாளக் குறியாகப்[s] பெற்றவர்களைத் தவிர

13:10 * அல்லது, “வாளால் கொல்லப்பட வேண்டியவன்.”

அதி. 13
a வெளி 11:2, 3
b வெளி 12:12
c தானி 7:25
d வெளி 12:17
e ஏசா 53:7; மத் 27:50; வெளி 5:6, 12
f வெளி 3:5; வெளி 21:27
g மத் 11:15
h மத் 26:52
i தானி 7:18; 1கொ 6:2; வெளி 20:6
j மத் 24:13; எபி 10:36; எபி 12:3
k வெளி 2:10
l வெளி 16:13; வெளி 20:2
m வெளி 13:1
n வெளி 13:3
o வெளி 13:3
p வெளி 19:20; வெளி 20:4
q வெளி 14: 9, 10; வெளி 16:2; வெளி 19:20
r வெளி 15:2
s வெளி 14:11

வேறு யாராலும் எதையும் வாங்கவோ விற்கவோ முடியாதபடி செய்தது.
18 இதைப் புரிந்துகொள்வதற்கு ஞானம் தேவை: விவேகம் உள்ளவர்கள்
அந்த மூர்க்க மிருகத்தின் எண்ணைக் கணக்குப் போட்டுப் பார்க்கட்டும்;
அது ஒரு மனிதனுடைய எண்; அந்த எண் 666.[a]

14 பின்பு நான் பார்த்தபோது, சீயோன் மலைமீது[b] ஆட்டுக்குட்டி
யானவர்[c] நின்றுகொண்டிருந்தார்; அவருடைய பெயரும் அவரு
டைய தகப்பனின் பெயரும்[d] நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த 1,44,000
பேர்[e] அவரோடு நின்றுகொண்டிருந்தார்கள். **2** அதன் பின்பு, பரலோகத்
திலிருந்து வந்த ஒரு சத்தத்தைக் கேட்டேன்; அது சீறிப்பாய்கிற வெள்ளத்
தின் சத்தத்தைப் போலவும், பயங்கர இடிமுழக்கத்தைப் போலவும் இருந்தது.
நான் கேட்ட அந்தச் சத்தம், யாழ் இசைத்துப் பாடுகிறவர்களின் சத்தத்
தைப் போல் இருந்தது. **3** சிம்மாசனத்துக்கும் நான்கு ஜீவன்களுக்கும்[f] மூப்
பர்களுக்கும் முன்னால்[g] புதிய பாட்டைப்[h] போன்ற ஒரு பாட்டை
அவர்கள் பாடிக்கொண்டிருந்தார்கள். பூமியிலிருந்து விலைகொடுத்து வாங்
கப்பட்ட 1,44,000[i] பேரைத் தவிர வேறு யாராலும் அந்தப் பாட்டைக்
கற்றுக்கொள்ள முடியவில்லை. **4** அவர்கள் பெண்களால் தங்களைக் கறை
படுத்திக்கொள்ளாதவர்கள், கற்புள்ளவர்கள்.[j] ஆட்டுக்குட்டியானவர் போகிற
இடங்களுக்கெல்லாம் அவர் பின்னாலேயே போகிறவர்கள்;[k] கடவுளுக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும் முதல் விளைச்சலாக[l] மனிதகுலத்திலிருந்து
விலைகொடுத்து வாங்கப்பட்டவர்கள்.[m] **5** அவர்களுடைய வாயிலிருந்து
பொய்யும் புரட்டும் வந்ததில்லை. அவர்கள் களங்கம் இல்லாதவர்கள்.[n]

6 பின்பு, இன்னொரு தேவதூதர் நடுவானத்தில்* பறப்பதைப் பார்த்தேன்;
பூமியில் குடியிருக்கிற எல்லா தேசத்தினருக்கும் கோத்திரத்தினருக்கும்
மொழியினருக்கும் இனத்தினருக்கும் நித்திய நல்ல செய்தியை அவர் அறி
வித்துக்கொண்டிருந்தார்.[o] **7** ஆம், “கடவுளுக்குப் பயந்து அவரை மகி
மைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நேரம் வந்துவிட்டது;[p]
அதனால், வானத்தையும் பூமியையும் கடலையும்[q] நீரூற்றுகளையும் படைத்
தவரை வணங்குங்கள்” என்று சத்தமாக அறிவித்துக்கொண்டிருந்தார்.

8 பின்பு, இரண்டாவது தேவதூதர் அவரைப் பின்தொடர்ந்து போய்,
“அவள் விழுந்துவிட்டாள்! மகா பாபிலோன்[r] விழுந்துவிட்டாள்![s] பாலியல்
முறைகேட்டில்* ஈடுபடத் தூண்டுகிற தன்னுடைய திராட்சமதுவை எல்லா
தேசத்தினருக்கும் குடிக்கக் கொடுத்தவள் விழுந்துவிட்டாள்!” என்று அறி
வித்தார்.[t]

9 அதன் பின்பு, மூன்றாவது தேவதூதர் அவர்களைப் பின்தொடர்ந்து
போய், “ஒருவன் மூர்க்க மிருகத்தையும்[u] அதன் உருவத்தையும் வணங்கி,
தன் நெற்றியிலோ கையிலோ அதன் அடையாளக் குறியைப் பெற்றுக்
கொண்டால்,[v] **10** கடவுளுடைய கடும் கோபம் என்ற கிண்ணத்தில் கலப்
பில்லாமல் ஊற்றப்படுகிற அவருடைய கோபமாகிய திராட்சமதுவை[w]
அவனும் குடிக்க வேண்டியிருக்கும். பரிசுத்த தேவதூதர்கள் முன்பாகவும்
ஆட்டுக்குட்டியானவர் முன்பாகவும் நெருப்பாலும் கந்தகத்தாலும்[x] அவன்
சித்திரவதை செய்யப்படுவான். **11** அவனைப் போன்றவர்கள் சித்திர
வதை செய்யப்படும்போது உண்டாகும் புகை என்றென்றும் மேலே போய்க்
கொண்டிருக்கும்.[y] மூர்க்க மிருகத்தையும் அதன் உருவத்தையும்

14:6 * வே.வா., “தலைக்கு மேல்.” **14:8** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 13
a தானி 3:1

அதி. 14
b சங் 2:6; எபி 12:22; 1பே 2:6
c யோவா 1:29; வெளி 5:6; வெளி 22:3
d வெளி 3:12
e வெளி 7:4
f வெளி 4:6
g வெளி 4:4; வெளி 19:4
h சங் 33:3; சங் 98:1; சங் 149:1; வெளி 5:9
i வெளி 7:4
j 2கொ 11:2; யாக் 1:27; யாக் 4:4
k 1பே 2:21
l யாக் 1:18
m 1கொ 6:20; 1கொ 7:23; வெளி 5:9
n எபே 5:25-27; யூ 24
o மத் 24:14; மாற் 13:10; அப் 1:8
p 2பே 2:9
q யாத் 20:11; சங் 146:6
r வெளி 17:18
s ஏசா 21:9; வெளி 18:21
t எரே 51:7, 8; வெளி 17:1, 2; வெளி 18:2, 3
u வெளி 13:1
v வெளி 13:15, 16
w சங் 75:8; வெளி 11:18; வெளி 16:19
x வெளி 21:8
y மத் 25:46; 2தெ 1:9; வெளி 19:3

வணங்கியவர்களும் அதன் பெயரின் அடையாளக் குறியைப்[a] பெற்றவர்க
ளும் இரவு பகலாக விடாமல் சித்திரவதை செய்யப்படுவார்கள். **12** அத
னால்தான், கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து இயேசுமீது
வைத்திருக்கிற விசுவாசத்தைக் காத்துக்கொள்கிற[b] பரிசுத்தவான்களுக்குச்
சகிப்புத்தன்மை தேவைப்படுகிறது"[c] என்று சத்தமாகச் சொன்னார்.

13 பின்பு, வானத்திலிருந்து ஒரு குரல் என்னிடம், "இதை எழுது:
இப்போதுமுதல் எஜமானுடைய சீஷர்களாக இறந்துபோகிறவர்கள் சந்தோ
ஷமானவர்கள்.[d] ஆம், அவர்கள் தங்களுடைய கடினமான வேலைகளிலி
ருந்து ஓய்வெடுக்கட்டும், அவர்களுடைய நல்ல செயல்கள் அவர்கள்
கூடவே போகும் என்று கடவுளுடைய சக்தி தெரிவிக்கிறது" என்று சொல்
வதைக் கேட்டேன்.

14 பின்பு, ஒரு வெள்ளை மேகத்தையும், அதன்மேல் மனிதகுமார
னைப் போன்ற ஒருவர்[e] உட்கார்ந்திருப்பதையும் பார்த்தேன். அவருடைய
தலையில் தங்கக் கிரீடமும் அவருடைய கையில் கூர்மையான அரிவாளும்
இருந்தன.

15 அதன் பின்பு இன்னொரு தேவதூதர் பரிசுத்த இடத்திலிருந்து*
வெளியே வந்து மேகத்தின் மேல் உட்கார்ந்திருந்தவரிடம், "பூமியின் பயிர்
நன்றாக முற்றிவிட்டது, அதை அறுவடை செய்வதற்கான காலம் வந்து
விட்டது. அதனால் உங்களுடைய அரிவாளை எடுத்து அறுவடை செய்
யும்படி கேட்டுக்கொள்கிறேன்"[f] என்று சத்தமாகச் சொன்னார். **16** மேகத்
தின் மேல் உட்கார்ந்திருந்தவர் உடனே தன்னுடைய அரிவாளைப் பூமியின்
மேல் நீட்டினார், பூமியின் பயிர் அறுவடை செய்யப்பட்டது.

17 பின்பு, இன்னொரு தேவதூதரும் பரலோகத்தில் இருக்கிற பரிசுத்த
இடத்திலிருந்து வெளியே வந்தார். அவரிடமும் கூர்மையான அரிவாள்
இருந்தது.

18 பின்பு, வேறொரு தேவதூதர் பலிபீடம் இருக்கிற இடத்திலிருந்து
வெளியே வந்தார்; நெருப்பின் மீது அவருக்கு அதிகாரம் இருந்தது. கூர்மை
யான அரிவாளை வைத்திருந்தவரிடம், "திராட்சைப் பழங்கள் பழுத்துவிட்
டன, அதனால் உங்களுடைய கூர்மையான அரிவாளால் பூமியின் திராட்
சைக்கொடியில் இருக்கிற குலைகளை அறுத்தெடுங்கள்"[g] என்று அவர்
சத்தமாகச் சொன்னார். **19** அதன்படியே, அந்தத் தேவதூதர் தன்னுடைய
அரிவாளை நீட்டி பூமியின் திராட்சைக்கொடியில் இருக்கிற குலைகளை
அறுத்தெடுத்து, கடவுளுடைய கோபம் என்ற மாபெரும் ஆலையில்[h]
அவற்றைப் போட்டார். **20** நகரத்துக்கு வெளியில் இருந்த அந்த ஆலை
யில் திராட்சைப் பழங்கள் மிதிக்கப்பட்டன. அந்த ஆலையிலிருந்து இரத்
தம் குதிரைகளின் கடிவாளம்வரை பெருகி, சுமார் 296 கிலோமீட்டர்* தூரத்
துக்குப் பாய்ந்தோடியது.

15 பின்பு பரலோகத்தில் இன்னொரு அற்புதமான, பெரிய அடையா
ளத்தைப் பார்த்தேன். ஏழு தண்டனைகளை வைத்திருந்த ஏழு தேவ
தூதர்கள்[i] இருந்தார்கள். அந்தத் தண்டனைகள்தான் கடைசி தண்டனைகள்.
ஏனென்றால், அந்தத் தண்டனைகளோடு கடவுளுடைய கோபம் தீரும்.[j]

14:15 *அதாவது, "ஆலயத்தின் மகா பரிசுத்த அறையிலிருந்து." **14:20** *நே.மொ., "1,600 ஸ்டேடியா." ஒரு ஸ்டேடியம் என்பது 185 மீ. (606.95 அடி). இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அதி. 14
a வெளி 13:16-18; வெளி 16:2; வெளி 20:4
b எபி 10:38
c வெளி 13:10
d 1கொ 15:51, 52; 1தெ 4:16, 17
e தானி 7:13
f மத் 13:30
g யோவே 3:13
h வெளி 19:11, 15

அதி. 15
i வெளி 16:1
j வெளி 16:17

அதி. 15
a 1ரா 7:23
வெளி 4:6
b வெளி 13:15
c வெளி 13:18
d வெளி 2:7
e யாத் 15:1
உபா 31:30
f யோவா 1:29
g யாத் 6:3
h யாத் 15:11
சங் 111:2
சங் 139:14
i எரே 10:10
1தீ 1:17
j உபா 32:4
சங் 145:17
k எரே 10:6, 7
l சங் 86:9
மல் 1:11
m அப் 7:44
எபி 8:1, 2
எபி 9:11
n வெளி 11:19
o வெளி 15:1
p சங் 75:8
எரே 25:15
வெளி 14:9, 10
q யாத் 40:34, 35
1ரா 8:10, 11
ஏசா 6:4
எசே 44:4
r வெளி 15:1

அதி. 16
s வெளி 16:17
t சங் 69:24
செப் 3:8
u வெளி 8:7
v வெளி 13:16, 18
w வெளி 13:15
வெளி 19:20
x யாத் 9:10
y வெளி 8:8
z யாத் 7:20
a ஏசா 57:20
b வெளி 8:10
c யாத் 7:20
சங் 78:44

2 பின்பு, நெருப்புக் கலந்த கண்ணாடிக் கடல்[a] போன்ற ஒன்றைப் பார்த்
தேன். மூர்க்க மிருகத்தின் மீதும் அதன் உருவத்தின் மீதும்[b] அதன் பெய
ருக்குரிய எண்ணின் மீதும்[c] வெற்றி பெற்றவர்கள்[d] அந்தக் கண்ணாடிக் கட
லுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். கடவுளால் கொடுக்கப்பட்ட
யாழ்களை அவர்கள் வைத்திருந்தார்கள். **3** கடவுளுடைய அடிமையான
மோசேயின் பாட்டையும்[e] ஆட்டுக்குட்டியானவரின்[f] பாட்டையும் அவர்
கள் பாடிக்கொண்டிருந்தார்கள்:

“சர்வவல்லமையுள்ள கடவுளாகிய[g] யெகோவாவே,* உங்களுடைய
செயல்கள் மகத்தானவை, அதிசயமானவை.[h] என்றென்றுமுள்ள ராஜாவே,[i]
உங்களுடைய வழிகள் நீதியானவை, உண்மையானவை.[j] **4** யெகோ
வாவே,* யார் உங்களுக்குப் பயந்து உங்களுடைய பெயரை மகிமைப்படுத்
தாமல் இருப்பார்கள்? நீங்கள் ஒருவர்தான் உண்மையுள்ளவர்.#[k] எல்லா
தேசத்தாரும் உங்கள் முன்னால் வந்து உங்களை வணங்குவார்கள்.[l] ஏனென்
றால், உங்களுடைய கட்டளைகள் நீதியானவை என்பது அவர்களுக்குத்
தெளிவாகியிருக்கிறது.”

5 இதற்குப் பின்பு நான் பார்த்தபோது, சாட்சிக் கூடாரத்தில்[m] இருக்கிற
பரிசுத்த இடம்* பரலோகத்தில் திறக்கப்பட்டது.[n] **6** ஏழு தண்டனை
களை வைத்திருந்த ஏழு தேவதூதர்கள்[o] அந்தப் பரிசுத்த இடத்திலிருந்து
வெளியே வந்தார்கள்; அவர்கள் சுத்தமான, பளபளப்பான நாரிழை* உடை
போட்டுக்கொண்டு, மார்பைச் சுற்றி தங்கக் கச்சைகளைக் கட்டியிருந்தார்கள்.
7 அப்போது, நான்கு ஜீவன்களில் ஒன்று, என்றென்றும் வாழ்கிற கடவுளின்
கோபத்தால் நிறைந்திருந்த ஏழு தங்கக் கிண்ணங்களை[p] அந்த ஏழு தேவ
தூதர்களுக்குக் கொடுத்தது. **8** அந்தச் சமயத்தில், கடவுளுடைய மகிமை
யாலும் அவருடைய வல்லமையாலும் பரிசுத்த இடம் புகையால் நிறைந்
தது.[q] அந்த ஏழு தேவதூதர்களுடைய ஏழு தண்டனைகள்[r] முடியும்வரை
ஒருவராலும் அந்தப் பரிசுத்த இடத்துக்குள் நுழைய முடியவில்லை.

16 பின்பு, பரிசுத்த இடத்திலிருந்து*[s] வந்த ஒரு குரல் அந்த ஏழு தேவ
தூதர்களிடம், “நீங்கள் போய், கடவுளுடைய ஏழு கோபக் கிண்
ணங்களிலும் இருப்பதைப் பூமியில் ஊற்றுங்கள்”[t] என்று சத்தமாகச் சொல்
வதைக் கேட்டேன்.

2 அதன்படியே, முதலாவது தேவதூதர் புறப்பட்டுப் போய்த் தன்னு
டைய கிண்ணத்தில் இருந்ததைப் பூமியில் ஊற்றினார்.[u] அப்போது,
மூர்க்க மிருகத்தின் அடையாளக் குறியைப் பெற்றிருந்தவர்களும்,[v] அதன்
உருவத்தை வணங்கியவர்களும்[w] மிகக் கொடிய புண்ணால்[x] அவதிப்பட்
டார்கள்.

3 பின்பு, இரண்டாவது தேவதூதர் தன்னுடைய கிண்ணத்தில் இருந்த
தைக் கடலில் ஊற்றினார்.[y] அப்போது, கடல்நீர் செத்தவனின் இரத்தத்தைப்
போலானது.[z] கடலில்[a] இருந்த எல்லா உயிரினங்களும் செத்துப்போயின.

4 பின்பு, மூன்றாவது தேவதூதர் தன்னுடைய கிண்ணத்தில் இருந்ததை
ஆறுகளிலும் நீரூற்றுகளிலும் ஊற்றினார்.[b] அப்போது, அவையெல்லாம்
இரத்தமாயின.[c] **5** பின்பு, தண்ணீர்மீது அதிகாரமுள்ள தேவதூதர் இப்படிச்

15:3, 4 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **15:4** #வே.வா., “பற்றுமாறாதவர்.” **15:5** *அதாவது, “ஆலயத்தின் மகா பரிசுத்த அறை.” **15:6** *அதாவது, “லினன்.” **16:1** *அதாவது, “ஆலயத்தின் மகா பரிசுத்த அறையிலிருந்து.”

சொல்வதைக் கேட்டேன்: “இருக்கிறவரே, இருந்தவரே,[a] உண்மையுள்ள
வரே,*[b] நீங்கள் நீதியுள்ளவராக இருப்பதால் இந்தத் தீர்ப்புகளைக்[c] கொடுத்
திருக்கிறீர்கள். **6** பரிசுத்தவான்களின் இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளின்
இரத்தத்தையும் சிந்தியவர்களுக்கு[d] நீங்கள் இரத்தத்தைக் குடிக்கக் கொடுத்
திருக்கிறீர்கள்.[e] அது அவர்களுக்குத் தகுந்ததுதான்.”[f] **7** பின்பு, பலிபீடம்
இப்படிச் சொல்வதைக் கேட்டேன்: “ஆம், சர்வவல்லமையுள்ள கடவுளா
கிய யெகோவாவே,*[g] உங்களுடைய தீர்ப்புகள்# உண்மையானவை, நீதியா
னவை.”[h]

8 அதன் பின்பு, நான்காவது தேவதூதர் தன்னுடைய கிண்ணத்தில் இருந்
ததைச் சூரியன்மேல் ஊற்றினார்.[i] அப்போது, மனிதர்களை நெருப்பால் சுட்
டுப்பொசுக்கும் அதிகாரம் சூரியனுக்குக் கொடுக்கப்பட்டது. **9** மனிதர்கள்
கடும் வெப்பத்தால் சுட்டுப்பொசுக்கப்பட்டார்கள்; ஆனால், இந்தத் தண்ட
னைகளின் மேல் அதிகாரமுள்ளவரான கடவுளுடைய பெயரை அவர்கள்
நிந்தித்தார்கள், மனம் திருந்தி அவரை மகிமைப்படுத்தவில்லை.

10 பின்பு, ஐந்தாவது தேவதூதர் தன்னுடைய கிண்ணத்தில் இருந்ததை
மூர்க்க மிருகத்தின் சிம்மாசனம்மேல் ஊற்றினார். அப்போது, அதன் அர
சாங்கத்தை இருட்டு சூழ்ந்துகொண்டது;[j] வலி தாங்க முடியாமல் மனிதர்
கள் தங்களுடைய நாக்கைக் கடித்துக்கொண்டார்கள். **11** தங்களுக்கு ஏற்
பட்ட வலிகளின் காரணமாகவும் புண்களின் காரணமாகவும் பரலோகத்தின்
கடவுளை நிந்தித்தார்கள், தங்கள் செயல்களைவிட்டு அவர்கள் மனம் திருந்
தவே இல்லை.

12 பின்பு, ஆறாவது தேவதூதர் தன்னுடைய கிண்ணத்தில் இருந்ததைப்
பெரிய ஆறான யூப்ரடிசில்*[k] ஊற்றினார். அப்போது, அதன் தண்ணீர் வற்
றிப்போனது.[l] அதனால், சூரியன் உதிக்கும்# திசையிலிருந்து வரும் ராஜாக்
களுக்கு வழி தயாரானது.[m]

13 பின்பு, ராட்சதப் பாம்பின்[n] வாயிலிருந்தும், மூர்க்க மிருகத்தின் வாயி
லிருந்தும், போலித் தீர்க்கதரிசியின் வாயிலிருந்தும் தவளை போன்ற மூன்று
அசுத்தமான செய்திகள் வெளியே வந்ததைப் பார்த்தேன். **14** உண்மை
யில், அவை அற்புத அடையாளங்கள் செய்கிற[o] பேய்களுடைய செய்தி
கள். அந்தப் பேய்கள் சர்வவல்லமையுள்ள கடவுளின் மகா நாளில்[p]
நடக்கப்போகும் போருக்காகப் பூமி முழுவதுமுள்ள ராஜாக்களைக் கூட்டிச்
சேர்க்கப் புறப்பட்டுப் போயின.[q]

15 “இதோ! நான் ஒரு திருடனைப் போல் வரப்போகிறேன்.[r] நிர்
வாணமாக நடப்பதையும் வெட்கக்கேடான கோலத்தில் இருப்பதையும் மக்
கள் பார்க்காதபடி,[s] விழிப்புடன் இருந்து[t] தன்னுடைய உடைகளைக் காத்
துக்கொள்கிறவன் சந்தோஷமானவன்.”

16 எபிரெய மொழியில் அர்மகெதோன்*[u] என்று அழைக்கப்பட்ட
இடத்தில் அவை அவர்களைக் கூட்டிச்சேர்த்தன.

17 பின்பு, ஏழாவது தேவதூதர் தன்னுடைய கிண்ணத்தில் இருந்ததைக்
காற்றில் ஊற்றினார். அப்போது, பரிசுத்த இடத்தில்*[v] இருக்கிற சிம்மாசனத்

16:5 *வே.வா., “பற்றுமாறாதவரே.” **16:7** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். #வே.வா., “நீதித்தீர்ப்புகள்.” **16:12** *அதாவது, “ஐப்பிராத்தில்.” #வே.வா., “கிழக்கு.” **16:16** *“மெகிதோ மலை” என்ற அர்த்தமுள்ள எபிரெய வார்த்தையிலிருந்து வந்தது. **16:17** *அதாவது, “ஆலயத்தின் மகா பரிசுத்த அறையில்.”

அதி. 16
a வெளி 1:4
b சங் 145:17; வெளி 15:4
c உபா 32:4; சங் 119:137
d சங் 79:3
e ஏசா 49:26
f வெளி 18:20
g யாத் 6:3
h சங் 19:9; சங் 119:137; வெளி 19:1, 2
i வெளி 8:12
j யாத் 10:21; ஏசா 8:22
k வெளி 9: 13, 14
l எரே 50:38
m ஏசா 44:27, 28
n வெளி 12:3
o வெளி 13: 11, 13
p ஏசா 13:6; எரே 25:33; எசே 30:3; யோவே 1:15; யோவே 2: 1, 11; செப் 1:15; 2பே 3:11, 12
q வெளி 19:19
r 1தெ 5:2; 2பே 3:10
s வெளி 3:18
t லூ 21:36
u 2நா 35:22; சக 12:11; வெளி 19:19
v வெளி 16:1

திலிருந்து, “முடிந்துவிட்டது!” என்று ஒரு குரல் சத்தமாகச் சொன்னது.
18 அதோடு, மின்னல்களும் குரல்களும் இடிமுழக்கங்களும் பயங்கர நில
நடுக்கமும் வந்தன. மனிதர்கள் பூமியில் தோன்றிய நாள்முதல் இவ்வ
ளவு பெரியளவில், இவ்வளவு பயங்கரமான நிலநடுக்கம் வந்ததே இல்லை.[a]
19 மகா நகரம்[b] மூன்று பாகங்களாகப் பிளவுபட்டது, மற்ற தேசத்து மக்க
ளின் நகரங்கள் வீழ்ந்தன. கடவுள் தன்னுடைய கடும் கோபம் என்ற திராட்ச
மது நிரம்பிய கிண்ணத்தை[c] மகா பாபிலோனுக்குக்[d] கொடுக்க வேண்
டும் என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டார். **20** அதோடு, தீவுகள் எல்லாம்
மறைந்து போயின, மலைகளும் காணப்படாமல் போயின.[e] **21** பின்பு,
வானத்திலிருந்து மிகப் பெரிய ஆலங்கட்டிகள் மனிதர்கள்மேல் விழுந்தன;[f]
ஒவ்வொரு ஆலங்கட்டியும் சுமார் ஒரு தாலந்து* எடையுள்ளதாக இருந்தது.
ஆலங்கட்டியால் உண்டான இந்தத் தண்டனை[g] மிகக் கொடியதாக இருந்த
தால், மனிதர்கள் கடவுளை நிந்தித்தார்கள்.

17 ஏழு கிண்ணங்களை[h] வைத்திருந்த ஏழு தேவதூதர்களில் ஒருவர்
என்னிடம் வந்து, “வா, திரளான தண்ணீர்மேல் உட்கார்ந்திருக்
கும் பேர்போன விபச்சாரிக்குக் கிடைக்கப்போகிற தண்டனையை உனக்குக்
காட்டுகிறேன்.[i] **2** பூமியின் ராஜாக்கள் அவளோடு பாலியல் முறைகேட்
டில்*[j] ஈடுபட்டார்கள், பூமியில் குடியிருக்கிறவர்களோ அவளுடைய பாலி
யல் முறைகேடாகிய* திராட்சமதுவை போதையேறக் குடித்தார்கள்”[k] என்று
சொன்னார்.

3 பின்பு, கடவுளுடைய சக்தியின் தூண்டுதலால் அவர் என்னை வனாந்
தரத்துக்குக் கொண்டுபோனார். அங்கே ஒரு பெண் கருஞ்சிவப்பு நிற
முள்ள மூர்க்க மிருகம் ஒன்றின் மேல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன்.
அந்த மிருகத்தின் உடல் முழுவதும் கடவுளை நிந்திக்கும் பெயர்கள் இருந்
தன. அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன. **4** அந்தப்
பெண் ஊதா நிறத்திலும்[l] கருஞ்சிவப்பு நிறத்திலும் உடை உடுத்தி, தங்கத்தா
லும் ரத்தினங்களாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தாள்.[m] அரு
வருப்புகளாலும் தன்னுடைய பாலியல் முறைகேட்டின்* அசுத்தங்களாலும்
நிறைந்த ஒரு தங்கக் கிண்ணத்தைக் கையில் வைத்திருந்தாள். **5** அவளு
டைய நெற்றியில், “மகா பாபிலோன், விபச்சாரிகளுக்கும்[n] பூமியில் இருக்
கிற அருவருப்புகளுக்கும்[o] தாய்” என்ற மர்மப் பெயர் எழுதப்பட்டிருந்தது.
6 அந்தப் பெண், பரிசுத்தவான்களின் இரத்தத்தையும் இயேசுவின் சாட்சிக
ளுடைய இரத்தத்தையும்[p] போதையேறக் குடித்திருப்பதைப் பார்த்தேன்.

அவளைப் பார்த்துப் பயங்கரமாக ஆச்சரியப்பட்டேன். **7** அதனால்
அந்தத் தேவதூதர் என்னிடம், “நீ ஏன் ஆச்சரியப்படுகிறாய்? அந்தப்
பெண்ணைப் பற்றிய மர்மத்தையும்,[q] அவளைச் சுமக்கிற ஏழு தலைகளை
யும் பத்துக் கொம்புகளையும் கொண்ட மூர்க்க மிருகத்தைப்[r] பற்றிய மர்மத்
தையும் நான் உனக்குச் சொல்கிறேன்: **8** நீ பார்த்த மூர்க்க மிருகம் முன்பு
இருந்தது, இப்போது இல்லை; ஆனாலும், அது அதலபாதாளத்திலிருந்து[s]
ஏறி வரப்போகிறது. பின்பு, அது அழிந்துபோகும். பூமியில் இருக்கிற மக்
கள், அதாவது உலகம் உண்டானதுமுதல் வாழ்வின் சுருளில் பெயர் எழுதப்
படாதவர்கள்,[t] அந்த மூர்க்க மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

16:21 * ஒரு கிரேக்க தாலந்து 20.4 கிலோவுக்குச் சமம். இணைப்பு B14-ஐப் பாருங்கள்.
17:2, 4 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 16
a எசே 38:19; தானி 12:1; எபி 12:26
b வெளி 17:18
c எரே 25:15; வெளி 15:7
d வெளி 18:2
e வெளி 6:14
f யோபு 38:22, 23
g யாத் 9:24

அதி. 17
h வெளி 16:1
i எரே 51:13; வெளி 17:15; வெளி 19:2
j யாக் 4:4; வெளி 18:9
k எரே 51:7; வெளி 14:8; வெளி 18:3
l லூ 16:19
m வெளி 18:11, 12; வெளி 18:19
n வெளி 19:2
o வெளி 18:5
p வெளி 6:9; வெளி 18:24; வெளி 19:2
q வெளி 17:5
r வெளி 17:3
s வெளி 20:1
t யாத் 32:32; சங் 69:28; பிலி 4:3

ஏனென்றால், அது முன்பு இருந்தது, இப்போது இல்லை, ஆனால் மறுபடி
யும் வரப்போகிறது.

9 “இதைப் புரிந்துகொள்வதற்குப் புத்தியும் ஞானமும் தேவை: ஏழு
தலைகள்[a] அந்தப் பெண் உட்கார்ந்திருக்கும் ஏழு மலைகளைக் குறிக்கின்
றன. **10** அவை ஏழு ராஜாக்களைக் குறிக்கின்றன: அவர்களில் ஐந்து பேர்
வீழ்ச்சியடைந்தார்கள், ஒருவன் இருக்கிறான், இன்னொருவன் இன்னும்
வரவில்லை; ஆனால், அவன் வரும்போது கொஞ்சக் காலம் இருப்பான்.
11 முன்பு இருந்ததும் இப்போது இல்லாததுமான மூர்க்க மிருகம்தான்[b] எட்
டாவது ராஜா. ஆனால், இந்த ராஜா அந்த ஏழு ராஜாக்களில் இருந்தே வரு
வான், பின்பு அழிந்துபோவான்.

12 “நீ பார்த்த பத்துக் கொம்புகள் பத்து ராஜாக்களைக் குறிக்கின்றன;
அவர்கள் இன்னும் அரசாங்கத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால்,
மூர்க்க மிருகத்தோடு சேர்ந்து ஒரு மணிநேரத்துக்கு ராஜாக்களாக ஆட்சி
செய்யும் அதிகாரத்தை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். **13** அவர்
களுக்கு ஒரே எண்ணம் இருக்கிறது. அதனால், தங்கள் வல்லமையையும்
அதிகாரத்தையும் மூர்க்க மிருகத்துக்குக் கொடுப்பார்கள். **14** அவர்கள்
ஆட்டுக்குட்டியானவரோடு[c] போர் செய்வார்கள்; ஆனால், அவர் எஜ
மான்களுக்கெல்லாம் எஜமானாகவும் ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாகவும்[d]
இருப்பதால் அவர்களை ஜெயித்துவிடுவார்.[e] அவரோடு இருக்கிறவர்களும்
ஜெயிப்பார்கள்.[f] அவர்கள் அழைக்கப்பட்டவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்
கள், உண்மையுள்ளவர்கள்” என்று சொன்னார்.

15 அவர் என்னிடம், “அந்த விபச்சாரி உட்கார்ந்திருக்கும் தண்ணீரைப்
பார்த்தாயே, அது இனங்களையும் சமுதாயங்களையும் தேசங்களையும்
மொழிகளையும் சேர்ந்த மக்களைக் குறிக்கிறது.[g] **16** நீ பார்த்த பத்துக்
கொம்புகளும்[h] மூர்க்க மிருகமும்,[i] அந்த விபச்சாரிமீது[j] வெறுப்படைந்து
அவளிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துவிட்டு அவளை நிர்வாணமாக்கி
விடும். பின்பு, அவளுடைய சதையைத் தின்று, அவளை நெருப்பில்
முழுவதுமாகச் சுட்டெரித்துவிடும்.[k] **17** ஏனென்றால், கடவுள் தன்னுடைய
எண்ணத்தை அவர்களுடைய இதயங்களில் வைத்தார்;[l] தன்னுடைய வார்த்
தைகள் நிறைவேறும்வரை, அவர்கள் அந்த ஒரே எண்ணத்தோடு தங்களு
டைய அரசாங்கத்தை மூர்க்க மிருகத்திடம் ஒப்படைப்பதற்காக அப்படிச்
செய்தார்.[m] **18** நீ பார்த்த அந்தப் பெண்,[n] பூமியின் ராஜாக்கள்மீது ஆட்சி
செய்கிற மகா நகரத்தைக் குறிக்கிறாள்” என்று சொன்னார்.

18
இவற்றுக்குப் பின்பு, இன்னொரு தேவதூதர் மிகுந்த அதிகாரத்
தோடு பரலோகத்திலிருந்து இறங்கி வருவதைப் பார்த்தேன். அவ
ருடைய மகிமையால் பூமி பிரகாசமானது. **2** அவர் சத்தமாக, “அவள்
விழுந்துவிட்டாள்! மகா பாபிலோன் விழுந்துவிட்டாள்![o] அவள் பேய்க
ளின் குடியிருப்பாகவும், பேய்களும்* அசுத்தமான, அருவருப்பான எல்
லாவித பறவைகளும் தங்குகிற இடமாகவும் ஆகிவிட்டாள்![p] **3** பாலி
யல் முறைகேட்டில்* ஈடுபடத் தூண்டுகிற அவளுடைய திராட்சமதுவுக்கு
எல்லா தேசத்தாரும் பலியாகியிருக்கிறார்கள்;[q] பூமியின் ராஜாக்கள் அவ
ளோடு பாலியல் முறைகேட்டில் ஈடுபட்டார்கள்,[r] பூமியில் இருக்கிற வியா

18:2 * அல்லது, “சுவாசமும்; விஷக் காற்றும்.” **18:3** * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 17
a வெளி 17:7
b வெளி 17:8
c யோவா 1:29, வெளி 5:6
d மத் 28:18, அப் 2:36, 1தீ 6:15
e வெளி 19:11, 15
f ரோ 16:20
g ஏசா 57:20, எரே 51:13
h வெளி 17:12
i வெளி 17:8
j வெளி 17:7
k லேவி 21:9, வெளி 18:8
l யோசு 11:19, 20, நீதி 21:1
m வெளி 17:12
n வெளி 17:5

அதி. 18
o ஏசா 21:9, எரே 51:8, வெளி 14:8
p ஏசா 13:21, எரே 50:39
q எரே 51:7
r வெளி 17:1, 2

அதி. 18
a எரே 51:6, 45; 2கொ 6:17
b ஏசா 48:20; ஏசா 52:11; எரே 50:8
c எரே 51:9
d வெளி 16:19
e எரே 50:29; 2தெ 1:6
f சங் 137:8; எரே 50:15
g சங் 75:8
h வெளி 16:19
i ஏசா 47:7-9
j லேவி 21:9
k எரே 50:34
l தானி 4:30

பாரிகள்* அவளுடைய மிதமிஞ்சிய ஆடம்பரத்தால் பணக்காரர்களானார்
கள்" என்று சொன்னார்.

4 பின்பு, பரலோகத்திலிருந்து வந்த இன்னொரு குரலைக் கேட்டேன்;
அது, "என் மக்களே, அவளுடைய பாவங்களுக்குத் துணைபோகாமலும்
அவளுக்கு வரப்போகும் தண்டனைகளில் பங்குகொள்ளாமலும் இருக்க
வேண்டுமென்றால்[a] அவளைவிட்டு வெளியே வாருங்கள்.[b] **5** அவள்
செய்த பாவங்கள் பரலோகம்வரை எட்டியிருக்கின்றன;[c] அவள் செய்த
அநியாயங்களை* கடவுள் நினைத்துப் பார்த்திருக்கிறார்.[d] **6** அவள் மற்ற
வர்களுக்குச் செய்தது போலவே நீங்கள் அவளுக்குச் செய்யுங்கள்.[e] அவள்
செய்ததை இரண்டு மடங்காக அவளுக்குச் செய்யுங்கள்.[f] அவள் மற்றவர்
களுக்குத் திராட்சமதுவைக் கலந்துகொடுத்த கிண்ணத்தில்[g] இரண்டு மடங்
காக அவளுக்குக் கலந்துகொடுங்கள்.[h] **7** எந்தளவுக்கு அவள் தன்னையே
பெருமைப்படுத்தி, மிதமிஞ்சிய ஆடம்பரத்தோடு வாழ்ந்தாளோ அந்தள
வுக்கு அவளைச் சித்திரவதை செய்யுங்கள், துக்கத்தில் தள்ளுங்கள். ஏனென்
றால், 'நான் ஒரு ராணியாக உட்கார்ந்திருக்கிறேன், நான் விதவை அல்ல,
நான் ஒருபோதும் துக்கப்பட மாட்டேன்'[i] என்று அவள் தன்னுடைய இதயத்
தில் சொல்லிக்கொண்டிருக்கிறாள். **8** அதனால்தான் சாவு, துக்கம், பஞ்சம்
ஆகிய தண்டனைகள் ஒரே நாளில் அவளுக்கு வரும். அவள் நெருப்பில்
முழுவதுமாகச் சுட்டெரிக்கப்படுவாள்.[j] அவளை நியாயந்தீர்த்த கடவுளாகிய
யெகோவா* பலமுள்ளவராக இருக்கிறார்.[k]

9 அவளுடன் பாலியல் முறைகேட்டில்* ஈடுபட்டு மிதமிஞ்சிய ஆடம்
பரத்தோடு வாழ்ந்த பூமியின் ராஜாக்களும் அவள் எரியும்போது உண்
டாகிற புகையைப் பார்த்து துக்கப்பட்டு நெஞ்சில் அடித்துக்கொண்டு அழு
வார்கள். **10** அவள் அப்படிச் சித்திரவதை செய்யப்படுவதைப் பார்த்துப்
பயந்து, தூரத்தில் நின்றுகொண்டு, 'ஐயோ! மகா நகரமே! ஐயோ! பலமுள்ள
பாபிலோன் நகரமே![l] ஒரு மணிநேரத்தில் உனக்குத் தண்டனைத் தீர்ப்பு
வந்துவிட்டதே!' என்று சொல்வார்கள்.

11 அதோடு, உலகத்தில் இருக்கிற வியாபாரிகளும் அவளுக்காகத் துக்
கப்பட்டு அழுது புலம்புவார்கள். ஏனென்றால், அவர்களுடைய சரக்கு
களை வாங்க இனி யாருமே இருக்க மாட்டார்கள். **12** தங்கம், வெள்ளி,
விலைமதிப்புள்ள கற்கள், முத்துக்கள், உயர்தரமான நாரிழை* துணி, ஊதா
நிற துணி, பட்டுத் துணி, கருஞ்சிவப்புநிற துணி, வாசனை மரத்தால்
செய்யப்பட்ட எல்லா விதமான பொருள்கள், யானைத்தந்தத்தாலும் விலை
உயர்ந்த மரத்தாலும் செம்பினாலும் இரும்பினாலும் பளிங்குக்கல்லினாலும்
செய்யப்பட்ட எல்லா விதமான பொருள்கள், **13** லவங்கப்பட்டை, ஏலக்
காய்,* தூபப்பொருள், வாசனை எண்ணெய், சாம்பிராணி, திராட்சமது, ஒலிவ
எண்ணெய், நைசான மாவு, கோதுமை, ஆடுமாடுகள், குதிரைகள், வண்டி
கள் ஆகியவற்றையும், அடிமைகள், மக்கள் ஆகியோரையும் வாங்க இனி
யாருமே இருக்க மாட்டார்கள். **14** நீ ஆசைப்பட்ட நல்ல பொருள்கள்*

18:3 *வே.வா., "பயண வியாபாரிகள்." **18:5** *வே.வா., "குற்றங்களை." **18:8** *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **18:9** *சொல் பட்டியலைப் பாருங்கள். **18:12** *அதாவது, "லினன்." **18:13** *வே.வா., "இந்தியாவில் கிடைக்கும் நறுமணப் பொருள்." **18:14** *நே.மொ., "அருமையான பழம்."

உன்னைவிட்டுப் போய்விட்டன. உன்னிடம் இருக்கிற ருசியான உணவு
வகைகளும் அழகான பொருள்களும் ஒரேயடியாக ஒழிந்துபோய்விட்டன.
15 இந்தச் சரக்குகளை விற்று அவளால் பணக்காரர்களான வியாபாரி
கள் அவள் சித்திரவதை செய்யப்படுவதைப் பார்த்துப் பயந்து, தூரத்
தில் நின்றுகொண்டு, **16** 'ஐயோ! ஐயோ! உயர்தரமான நாரிழை உடையும்
ஊதா நிற உடையும் கருஞ்சிவப்புநிற உடையும் போட்டுக்கொண்டு, தங்க
நகைகளாலும் ரத்தினங்களாலும் முத்துக்களாலும் அலங்கரித்திருந்த மகா
நகரமே![a] **17** ஒரு மணிநேரத்தில் இவ்வளவு செல்வமும் அழிந்து
போனதே!' என்று துக்கத்தில் புலம்பி அழுவார்கள்.
கப்பல் தலைவர்கள் எல்லாரும், கப்பல் பயணம் செய்கிற எல்லாரும்,
கப்பலோட்டிகளும், கடலில் தொழில் செய்கிற எல்லாரும், **18** அவள் எரி
யும்போது வருகிற புகையைப் பார்த்து, தூரத்தில் நின்று, 'இந்த மகா நகரத்
தைப் போல வேறு எந்த நகரமாவது இருக்கிறதா?' என்று சத்தமாகக் கத்து
வார்கள். **19** அதோடு, தங்கள் தலையில் மண்ணைப் போட்டுக்கொண்டு,
'ஐயோ! ஐயோ! கப்பல் முதலாளிகள் எல்லாரையும் தன்னுடைய செல்வச்
செழிப்பால் பணக்காரர்களாக்கிய மகா நகரமாகிய அவள் ஒரு மணிநேரத்
தில் அழிந்துபோனாளே!'[b] என்று சத்தமாகப் புலம்பி அழுவார்கள்.
20 பரலோகமே![c] பரிசுத்தவான்களே![d] அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசி
களே! அவளுக்கு வந்த அழிவை நினைத்து சந்தோஷப்படுங்கள். ஏனென்
றால், உங்களுக்காகக் கடவுள் அவளுக்குத் தண்டனைத் தீர்ப்பு கொடுத்து
விட்டார்!"[e]
21 அப்போது, பலமுள்ள ஒரு தேவதூதர் பெரிய திரிகைக் கல்லைப்
போன்ற ஒரு கல்லை எடுத்துக் கடலில் எறிந்து, "இப்படித்தான் பாபிலோன்
மகா நகரமும் வேகமாக வீசப்பட்டு, இனி ஒருபோதும் இல்லாமல்போகும்.[f]
22 பாபிலோனே, யாழ் இசைத்துப் பாடுகிறவர்கள், குழல் ஊதுகிறவர்கள்,
எக்காளம் முழங்குகிறவர்கள் போன்ற இசைக்கலைஞர்களின் சத்தம் இனி
ஒருபோதும் உன் நடுவில் கேட்காது; கைத்தொழில் செய்கிற எந்தத் தொழி
லாளியும் இனி உன் நடுவில் இருக்க மாட்டார்; திரிகைக் கல்லின் சத்தம்
இனி ஒருபோதும் உன் நடுவில் கேட்காது. **23** விளக்குகளின் ஒளி இனி
ஒருபோதும் உன் நடுவில் பிரகாசிக்காது; மணமகனின் சத்தமும் மணமக
ளின் சத்தமும் இனி ஒருபோதும் உன் நடுவில் கேட்காது; உன் வியா
பாரிகள் பூமியில் மிகுந்த செல்வாக்குள்ளவர்களாக இருந்தார்கள், உன்னு
டைய ஆவியுலகத் தொடர்பு[g] பழக்கங்களால் எல்லா தேசத்தாரும்
ஏமாற்றப்பட்டார்கள். **24** தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்க
ளுடைய இரத்தமும்[h] பூமியில் ஈவிரக்கமில்லாமல் கொல்லப்பட்ட எல்லா
ருடைய இரத்தமும்[i] அவளிடம் காணப்பட்டது" என்று சொன்னார்.

19 இதற்குப் பின்பு, பரலோகத்தில் திரளான கூட்டத்தார் உரத்த குர
லில் ஆரவாரம் செய்வதைப் போன்ற சத்தத்தைக் கேட்டேன்.
அவர்கள், "'யா'வைப் புகழுங்கள்!*[j] மீட்பும் மகிமையும் வல்லமையும் நம்
முடைய கடவுளுக்குத்தான் சொந்தம். **2** ஏனென்றால், அவருடைய தீர்ப்பு
கள் உண்மையானவை, நீதியானவை.[k] பாலியல் முறைகேட்டால்* பூமியைக்

19:1 * வே.வா., "அல்லேலூயா!" "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம்.
19:2 * சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 18
a வெளி 17:4
b ஏசா 47:11
c எரே 51:48
d வெளி 14:12
e உபா 32:43
ரோ 12:19
வெளி 6:9, 10
வெளி 19:1, 2
f எரே 51: 63, 64
g ஏசா 47:9
கலா 5:19, 20
h வெளி 6:9, 10
வெளி 16:5, 6
i ஆதி 9:6
எரே 51:49

அதி. 19
j சங் 150:6
k உபா 32:4
சங் 19:9
வெளி 15:3

கெடுத்த பேர்போன அந்த விபச்சாரியை அவர் தண்டித்திருக்கிறார்; தன்னு
டைய அடிமைகளின் இரத்தத்துக்காக அவளைப் பழிவாங்கியிருக்கிறார்”[a]
என்று சொன்னார்கள். **3** உடனே இரண்டாவது தடவையாக, “‘யா’வைப்
புகழுங்கள்!”*[b] என்று சொன்னார்கள். “அவள் எரிவதால் உண்டாகிற புகை
என்றென்றும் மேலே போய்க்கொண்டிருக்கிறது”[c] என்றும் சொன்னார்கள்.

4 அப்போது, 24 மூப்பர்களும்[d] நான்கு ஜீவன்களும்[e] சிம்மாசனத்
தில் உட்கார்ந்திருக்கிற கடவுள் முன்னால் விழுந்து வணங்கி, “ஆமென்!#
‘யா’வைப் புகழுங்கள்!”*[f] என்று சொன்னார்கள்.

5 அதோடு, சிம்மாசனத்திலிருந்து வந்த ஒரு குரல், “நம் கடவுளுடைய
அடிமைகளே,[g] அவருக்குப் பயந்து நடக்கிற சிறியவர்களே, பெரியவர்
களே,[h] எல்லாரும் அவரைப் புகழ்ந்துகொண்டே இருங்கள்” என்று
சொன்னது.

6 அப்போது, திரளான கூட்டத்தாரின் சத்தத்தைப் போலவும், சீறிப்பாய்
கிற வெள்ளத்தின் சத்தத்தைப் போலவும், பலத்த இடிமுழக்கத்தைப் போல
வும் உண்டான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அவர்கள், “‘யா’வைப் புகழுங்
கள்!”*[i] ஏனென்றால், சர்வவல்லமையுள்ள நம் கடவுளாகிய யெகோவா,#[j]
ராஜாவாக ஆட்சி செய்ய ஆரம்பித்துவிட்டார்.[k] **7** நாம் மகிழ்ந்து, சந்தோ
ஷத்தில் துள்ளிக் குதிப்போமாக, அவருக்கு மகிமை சேர்ப்போமாக. ஏனென்
றால், ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் வந்துவிட்டது, மணமகளும்
மணக்கோலத்தில் தயாராக இருக்கிறாள். **8** பளபளப்பான, சுத்தமான, உயர்
தரமான நாரிழை* உடையைப் போட்டுக்கொள்கிற பாக்கியம் அவளுக்
குக் கொடுக்கப்பட்டது; உயர்தரமான அந்த நாரிழை உடை பரிசுத்தவான்க
ளுடைய நீதியான செயல்களைக் குறிக்கிறது”[l] என்று சொன்னார்கள்.

9 அதோடு அவர் என்னிடம், “ஆட்டுக்குட்டியானவரின் திருமண
விருந்துக்கு[m] அழைக்கப்பட்டவர்கள் சந்தோஷமானவர்கள் என்று எழுது”
என்றும், “இவை கடவுளுடைய சத்திய வார்த்தைகள்” என்றும் சொன்னார்.
10 அப்போது, அவரை வணங்குவதற்காக அவருடைய காலில் விழுந்
தேன். ஆனால் அவர் என்னிடம், “வேண்டாம்! அப்படிச் செய்யாதே![n] உன்
னைப் போலவும், இயேசுவைப் பற்றிச் சாட்சி கொடுக்கிற உன் சகோதரர்க
ளைப் போலவும் நானும் ஓர் அடிமைதான்; கடவுளை மட்டும் வணங்கு![o]
ஏனென்றால், இயேசுவைப் பற்றிச் சாட்சி கொடுப்பதுதான்[p] தீர்க்கதரிசனங்
களின் நோக்கம்”[q] என்று சொன்னார்.

11 பரலோகம் திறந்திருப்பதைப் பார்த்தேன்; இதோ! ஒரு வெள்
ளைக் குதிரை[r] இருந்தது. நம்பகமானவர்[s] என்றும், உண்மையானவர்[t]
என்றும் அழைக்கப்படுகிறவர் அதன்மேல் உட்கார்ந்திருந்தார்; அவர் நீதி
யாக நியாயந்தீர்க்கிறவர், நீதியாகப் போர் செய்கிறவர்.[u] **12** அவருடைய
கண்கள் தீ ஜுவாலை போல் இருந்தன.[v] அவருடைய தலையில் நிறைய
மகுடங்கள் இருந்தன. அவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாத ஒரு
பெயர் அவர்மேல் எழுதப்பட்டிருந்தது. **13** இரத்தக் கறைபடிந்த* மேலங்
கியை அவர் போட்டிருந்தார். அவர் கடவுளுடைய வார்த்தை[w] என்று

அதி. 19
a உபா 32:43; 2ரா 9:7; சங் 79:10; வெளி 18: 20, 24
b சங் 117:1
c ஏசா 34:10
d வெளி 4:4
e வெளி 4:6
f சங் 106:48
g சங் 134:1; சங் 135:1
h சங் 115:13
i சங் 113:1
j யாத் 6:3
k சங் 97:1; ஏசா 52:7; வெளி 11:15
l ஏசா 61:10; எபே 5:25-27; வெளி 14:4
m மத் 22:2; மத் 25:10
n அப் 10:25, 26; வெளி 22:8, 9
o மத் 4:10; யோவா 4:23
p மத் 28:19, 20; அப் 1:8
q லூ 24:27; அப் 10:43; 1பே 1:10, 11
r வெளி 6:2
s வெளி 1:5
t யோவா 1:14; வெளி 3:14
u ஏசா 11:4, 5; எபி 1:8, 9
v வெளி 1: 13, 14
w யோவா 1:1

19:3, 4, 6 * வே.வா., “அல்லேலூயா!” “யா” என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். **19:4** # அதாவது, “அப்படியே ஆகட்டும்!” **19:6** # இணைப்பு A5-ஐப் பாருங்கள். **19:8** * அதாவது, “லினன்.” **19:13** * அல்லது, “இரத்தம் தெளிக்கப்பட்ட.”

அழைக்கப்படுகிறார். **14** அதோடு, பரலோகப் படைவீரர்கள் வெள்ளைக்
குதிரைகளின் மேல் ஏறி, அவருக்குப் பின்னால் போனார்கள். வெண்மை
யும் சுத்தமுமான உயர்தர நாரிழை உடையை அவர்கள் போட்டிருந்தார்கள்.
15 தேசத்தாரை வெட்டிப் போடுவதற்காகக் கூர்மையான நீண்ட வாள்[a]
ஒன்று அவருடைய வாயிலிருந்து வெளிப்பட்டது. இரும்புக்கோலால்
அவர்களை அவர் நொறுக்குவார்.*[b] அதோடு, சர்வவல்லமையுள்ள கடவு
ளுடைய கடும் கோபம் என்ற திராட்சரச ஆலையில் திராட்சைப் பழங்
களை மிதிப்பார்.[c] **16** ராஜாக்களுக்கெல்லாம் ராஜா, எஜமான்களுக்கெல்
லாம் எஜமான்[d] என்ற பெயர் அவருடைய மேலங்கியில், அவருடைய
தொடைப்பகுதியில், எழுதப்பட்டிருந்தது.

17 பின்பு, ஒரு தேவதூதர் சூரியனில் நிற்பதைப் பார்த்தேன். அவர்
நடுவானத்தில்* பறக்கிற எல்லா பறவைகளையும் பார்த்து, உரத்த குர
லில், "இங்கே வாருங்கள், கடவுள் கொடுக்கிற மாபெரும் விருந்துக்குக் கூடி
வாருங்கள்.[e] **18** ராஜாக்களின் சதையையும், படைத் தளபதிகளின் சதை
யையும், பலசாலிகளின் சதையையும்,[f] குதிரைகளின் சதையையும், அவற்
றின் மேல் ஏறியிருக்கிறவர்களின் சதையையும்,[g] சுதந்திர மக்கள், அடிமை
கள், சிறியவர்கள், பெரியவர்கள் என எல்லாருடைய சதையையும் சாப்பிட
வாருங்கள்" என்று கூப்பிட்டார்.

19 பின்பு, குதிரைமேல் உட்கார்ந்திருந்தவரையும் அவருடைய படை
வீரர்களையும் எதிர்த்துப் போர் செய்வதற்காக, மூர்க்க மிருகமும் பூமியின்
ராஜாக்களும் அவர்களுடைய படைவீரர்களும் கூடிவந்ததைப் பார்த்தேன்.[h]
20 அந்த மூர்க்க மிருகம் பிடிக்கப்பட்டது. மூர்க்க மிருகத்தின் முன்னால்
அற்புதங்கள் செய்த போலித் தீர்க்கதரிசியும்[i] பிடிக்கப்பட்டான். இவன்தான்
மூர்க்க மிருகத்தின் அடையாளக் குறியைப் பெற்றிருந்தவர்களையும்[j] அதன்
உருவத்தை வணங்கியவர்களையும்[k] தன்னுடைய அற்புதங்களால் ஏமாற்றி
யவன். கந்தகம் எரிகிற நெருப்பு ஏரியில் அவன் உயிரோடு தள்ளப்பட்
டான்,[l] அவனோடு மூர்க்க மிருகமும் உயிரோடு தள்ளப்பட்டது. **21** மற்ற
வர்களோ, குதிரைமேல் உட்கார்ந்திருந்தவருடைய வாயிலிருந்து புறப்பட்ட
நீண்ட வாளால் கொல்லப்பட்டார்கள்.[m] எல்லா பறவைகளும் அவர்களு
டைய சதையைச் சாப்பிட்டுத் திருப்தி அடைந்தன.[n]

20 பின்பு, ஒரு தேவதூதர் அதலபாதாளத்தின் சாவியையும்[o] மிகப்
பெரிய சங்கிலியையும் தன்னுடைய கையில் பிடித்துக்கொண்டு பர
லோகத்திலிருந்து இறங்கி வருவதைப் பார்த்தேன். **2** அவர் பழைய பாம்
பாகிய[p] ராட்சதப் பாம்பை,[q] அதாவது பிசாசாகிய[r] சாத்தானை,[s] பிடித்து
1,000 வருஷங்களுக்குக் கட்டிப்போட்டார். **3** அந்த 1,000 வருஷங்கள்
முடியும்வரை தேசங்களை அவன் ஏமாற்றாதபடி அவனை அதலபாதா
ளத்துக்குள்[t] தள்ளியடைத்து, அதற்கு முத்திரை போட்டார். இதற்குப் பின்பு,
அவன் கொஞ்சக் காலத்துக்கு விடுதலை செய்யப்பட வேண்டும்.[u]

4 பின்பு, சிம்மாசனங்களைப் பார்த்தேன். அதன்மேல் உட்கார்ந்திருந்
தவர்களுக்கு நியாயந்தீர்க்கிற அதிகாரம் கொடுக்கப்பட்டது. இயேசுவைப்
பற்றிச் சாட்சி கொடுத்ததற்காகவும், கடவுளைப் பற்றிப் பேசியதற்காகவும்
கொல்லப்பட்டவர்களை* பார்த்தேன். அவர்கள் மூர்க்க மிருகத்தையோ

19:15 * நே.மொ., "மேய்ப்பார்." **19:17** * வே.வா., "தலைக்கு மேல்." **20:4** * நே.மொ., "கோடாலியால் கொல்லப்பட்டவர்களை."

அதி. 19
a 2தெ 2:8; வெளி 1:13, 16
b சங் 2:9; வெளி 2:26, 27
c யோவே 3:13; வெளி 14:19, 20
d மத் 28:18; பிலி 2:9-11; 1தீ 6:15; வெளி 17:14
e எசே 39:4, 17
f எசே 39:18
g எசே 39:20
h வெளி 16:14, 16
i வெளி 16:13
j வெளி 13:16, 17
k வெளி 13:15
l மத் 10:28; 2பே 2:6; யூ 7; வெளி 20:14
m வெளி 2:16; வெளி 6:2
n எசே 39:4

அதி. 20
o வெளி 9:1
p ஆதி 3:1
q வெளி 12:3
r யோவா 8:44
s சக 3:1; வெளி 12:9
t வெளி 9:11
u வெளி 20:7

அதன் உருவத்தையோ வணங்காதவர்கள், தங்கள் நெற்றியிலும் தங்கள்
கையிலும் அதன் அடையாளக் குறியைப் பெறாதவர்கள்.[a] அவர்கள் உயி
ரோடு எழுந்து கிறிஸ்துவுடன் 1,000 வருஷங்கள் ராஜாக்களாக ஆட்சி
செய்தார்கள்.[b] **5** (மரணமடைந்த மற்றவர்கள்[c] அந்த 1,000 வருஷங்கள்
முடியும்வரை உயிரோடு எழுந்திருக்கவில்லை.) இதுதான் முதலாம் உயிர்த்
தெழுதல்.[d] **6** முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிற எல்லாரும் சந்
தோஷமானவர்கள்,[e] பரிசுத்தமானவர்கள்; இவர்கள்மேல் இரண்டாம் மர
ணத்துக்கு[f] அதிகாரம் இல்லை;[g] இவர்கள் கடவுளுக்கும் கிறிஸ்துவுக்கும்
சேவை செய்கிற குருமார்களாக இருந்து,[h] அவரோடு 1,000 வருஷங்கள்
ராஜாக்களாக ஆட்சி செய்வார்கள்.[i]

7 அந்த 1,000 வருஷங்கள் முடிந்த உடனேயே சாத்தான் தன்னுடைய
சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுவான். **8** பூமியின் நான்கு திசைக
ளிலும் இருக்கிற தேசங்களாகிய கோகையும் மாகோகையும் ஏமாற்றுவதற்
காகவும், அவர்களைப் போருக்குக் கூட்டிச்சேர்ப்பதற்காகவும் புறப்பட்டுப்
போவான். அவர்கள் கடற்கரை மணலைப் போல் எண்ண முடியாத அள
வுக்கு இருப்பார்கள். **9** அவர்கள் பூமி முழுவதும் போய், பரிசுத்தவான்க
ளுடைய முகாமையும் பிரியமான நகரத்தையும் வளைத்துக்கொள்வார்கள்.
ஆனால், பரலோகத்திலிருந்து நெருப்பு வந்து அவர்களைச் சுட்டெரித்து
விடும்.[j] **10** அதோடு, அவர்களை ஏமாற்றிக்கொண்டிருந்த பிசாசு, நெருப்
பும் கந்தகமும் எரிகிற ஏரியில் தள்ளப்படுவான். அங்கேதான் மூர்க்க மிரு
கமும்[k] போலித் தீர்க்கதரிசியும் தள்ளப்பட்டிருந்தார்கள்.[l] அவர்கள் இரவும்
பகலும் என்றென்றுமாகச் சித்திரவதை செய்யப்படுவார்கள்.*

11 பின்பு, பெரிய வெள்ளைச் சிம்மாசனத்தையும் அதில் உட்கார்ந்திருக்
கிறவரையும் பார்த்தேன்.[m] அவருக்கு முன்னால் பூமியும் வானமும் மறைந்து
போயின,[n] இடம் தெரியாமல் காணாமல்போயின. **12** இறந்துபோன பெரி
யவர்களும் சிறியவர்களும் சிம்மாசனத்துக்கு முன்னால் நிற்பதைப்
பார்த்தேன். அப்போது சுருள்கள் திறக்கப்பட்டன. வாழ்வின் சுருள்[o] என்ற
வேறொரு சுருளும் திறக்கப்பட்டது. அந்தச் சுருள்களில் எழுதப்பட்டிருக்கி
றபடியே, இறந்தவர்கள் தங்களுடைய செயல்களுக்கு ஏற்ப தீர்ப்பு பெற்றார்
கள்.[p] **13** கடல் தன்னிடம் இருக்கிற இறந்தவர்களை ஒப்படைத்தது; அதே
போல், மரணமும் கல்லறையும்* தங்களிடம் இருக்கிற இறந்தவர்களை
ஒப்படைத்தன. ஒவ்வொருவரும் தங்களுடைய செயல்களுக்கு ஏற்ப தீர்ப்பு
பெற்றார்கள்.[q] **14** மரணமும் கல்லறையும்* நெருப்பு ஏரியில் தள்ளப்பட்
டன.[r] இந்த நெருப்பு ஏரி[s] இரண்டாம் மரணத்தைக்[t] குறிக்கிறது. **15** வாழ்
வின் புத்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள்[u] எல்லாரும் நெருப்பு ஏரியில்
தள்ளப்பட்டார்கள்.[v]

21

பின்பு, புதிய வானத்தையும் புதிய பூமியையும்[w] நான் பார்த்
தேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின.[x]
கடலும்[y] இல்லாமல்போனது. **2** புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் கட
வுளிடமிருந்து பரலோகத்தைவிட்டு இறங்கி வருவதையும் பார்த்தேன்.[z] அது
மணமகனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணமகளைப் போல் தயாராக்கப்பட்டி
ருந்தது.[a] **3** அப்போது, சிம்மாசனத்திலிருந்து வந்த உரத்த குரல் ஒன்று,

20:10 *வே.வா., “அடைக்கப்பட்டிருப்பார்கள்.” **20:13, 14** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 20
- *a* வெளி 13:15-17
- *b* மத் 19:28, லூ 22:28-30, 2தீ 2:12, வெளி 1:6
- *c* அப் 24:15
- *d* 1கொ 15:23, 52, பிலி 3:10, 11, 1தெ 4:16
- *e* வெளி 14:13
- *f* வெளி 2:11, வெளி 20:14
- *g* 1கொ 15:54
- *h* 1பே 2:9
- *i* வெளி 1:6, வெளி 5:9, 10
- *j* 2ரா 1:10
- *k* வெளி 13:1
- *l* வெளி 19:20
- *m* வெளி 4:2, 3
- *n* 2பே 3:7
- *o* யாத் 32:33, சங் 69:28, தானி 12:1
- *p* யோவா 5:28, 29
- *q* அப் 10:42
- *r* ஏசா 25:8, 1கொ 15:26
- *s* மத் 5:22, மத் 18:9, வெளி 21:8
- *t* வெளி 2:11, வெளி 20:6
- *u* வெளி 17:8
- *v* நீதி 10:7

அதி. 21
- *w* ஏசா 65:17, ஏசா 66:22, 2பே 3:13
- *x* 2பே 3:10, வெளி 20:11
- *y* ஏசா 57:20
- *z* வெளி 3:12
- *a* வெளி 19:7

“இதோ! கடவுளுடைய கூடாரம் மனிதர்களோடு இருக்கும், அவர்களோடு
அவர் குடியிருப்பார்; அவர்கள் அவருடைய மக்களாக இருப்பார்கள். கட
வுளே அவர்களோடு இருப்பார்.[a] **4** அவர்களுடைய கண்ணீரையெல்லாம்
கடவுள் துடைத்துவிடுவார்.[b] இனிமேல் மரணம் இருக்காது,[c] துக்கம் இருக்
காது, அழுகை இருக்காது, வேதனை இருக்காது.[d] முன்பு இருந்தவை ஒழிந்து
போய்விட்டன” என்று சொல்வதைக் கேட்டேன்.

5 சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறவர்,[e] “இதோ! நான் எல்லாவற்றை
யும் புதிதாக்குகிறேன்”[f] என்று சொன்னார். அதோடு, “இந்த வார்த்தை
கள் நம்பகமானவை, உண்மையானவை, இவற்றை எழுது” என்று சொன்
னார். **6** பின்பு என்னிடம், “இவை நிறைவேறிவிட்டன! ஆல்பாவும்
ஒமேகாவும் நானே,* ஆரம்பமும் முடிவும் நானே.[g] தாகமாயிருக்கிற
வன் எவனோ அவனுக்கு வாழ்வு தரும் நீரூற்றிலிருந்து இலவசமாகத் தண்
ணீர் கொடுப்பேன்.[h] **7** ஜெயிக்கிறவன் எவனோ அவனுக்கு இவையெல்
லாம் கிடைக்கும்.* நான் அவனுடைய கடவுளாக இருப்பேன், அவன்
என்னுடைய மகனாக இருப்பான். **8** ஆனால் கோழைகள், விசுவாசமில்
லாதவர்கள்,[i] அசுத்தமும் அருவருப்பும் நிறைந்தவர்கள், கொலைகாரர்கள்,[j]
பாலியல் முறைகேட்டில்* ஈடுபடுகிறவர்கள்,[k] ஆவியுலகத் தொடர்புகொள்
கிறவர்கள், சிலைகளை வணங்குகிறவர்கள், பொய் பேசுகிறவர்கள்[l] ஆகிய
எல்லாருக்கும் நெருப்பும் கந்தகமும் எரிகிற ஏரிதான் கதி;[m] இது இரண்டாம்
மரணத்தைக் குறிக்கிறது”[n] என்று சொன்னார்.

9 கடைசி ஏழு தண்டனைகளால் நிறைந்த ஏழு கிண்ணங்களை வைத்
திருந்த ஏழு தேவதூதர்களில்[o] ஒருவர் என்னிடம் வந்து, “இங்கே வா,
நான் உனக்கு மணமகளை,[p] ஆட்டுக்குட்டியானவரின் மனைவியை, காட்
டுகிறேன்” என்று சொன்னார். **10** பின்பு, கடவுளுடைய சக்தியின்
தூண்டுதலால் உயரமான ஒரு பெரிய மலைமேல் அவர் என்னைக் கொண்
டுபோனார். பரிசுத்த நகரமான எருசலேம் கடவுளிடமிருந்து பரலோகத்
தைவிட்டு இறங்கி வருவதை எனக்குக் காட்டினார்.[q] **11** அதற்குக் கடவு
ளுடைய மகிமை[r] இருந்தது. அது மிகவும் விலை உயர்ந்த கல்லாகிய
சூரியகாந்தக் கல்லைப் போல் பளபளவென்று பிரகாசித்தது.[s] **12** அதற்கு
உயரமான பெரிய மதிலும், 12 நுழைவாசல்களும் இருந்தன. நுழைவாசல்
களுக்குப் பக்கத்தில் 12 தேவதூதர்கள் இருந்தார்கள். அந்த நுழைவாசல்க
ளின் மேல் இஸ்ரவேல் வம்சத்தாரின் 12 கோத்திரங்களுடைய பெயர்கள்
பொறிக்கப்பட்டிருந்தன. **13** கிழக்கே மூன்று நுழைவாசல்களும், வடக்கே
மூன்று நுழைவாசல்களும், தெற்கே மூன்று நுழைவாசல்களும், மேற்கே
மூன்று நுழைவாசல்களும்[t] இருந்தன. **14** நகரத்தின் மதிலுக்கு 12 அஸ்தி
வாரக் கற்கள் போடப்பட்டிருந்தன. அவற்றின் மீது ஆட்டுக்குட்டியானவ
ரின் 12 அப்போஸ்தலர்களுடைய 12 பெயர்கள்[u] எழுதப்பட்டிருந்தன.

15 என்னோடு பேசிக்கொண்டிருந்தவர், நகரத்தையும் அதன் நுழைவா
சல்களையும் அதன் மதிலையும் அளப்பதற்கு ஒரு தங்கக்கோலைப் பிடித்
திருந்தார்.[v] **16** அந்த நகரம் சதுரமாக இருந்தது. அதன் நீளமும் அகல
மும் ஒரே அளவுதான். அவர் அந்தக் கோலால் நகரத்தை அளந்தார். அது

21:6 *கிரேக்க எழுத்துக்களில் ஆல்பா என்பது முதல் எழுத்து, ஒமேகா என்பது கடைசி எழுத்து. **21:7** *நே.மொ., “ஆஸ்தியாகக் கிடைக்கும்.” **21:8** *சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 21
a எசே 37:27
b வெளி 7:17
c ஏசா 25:8, 1கொ 15:26
d ஏசா 35:10, ஏசா 65:19
e வெளி 4:2, 3
f 2பே 3:13
g வெளி 1:8, வெளி 22:13
h சங் 36:9, ஏசா 55:1, வெளி 7:17, வெளி 22:1
i 1யோ 5:10
j 1யோ 3:15
k எபே 5:5
l யோவா 8:44
m வெளி 19:20
n நீதி 10:7, எபி 10:26, 27, வெளி 2:11, வெளி 20:6
o வெளி 15:1
p வெளி 19:7
q எபி 12:22, வெளி 3:12, வெளி 21:2
r ஏசா 60:1, 2
s யாத் 24:9, 10
t வெளி 22:14
u மத் 10:2-4, லூ 6:13-16, அப் 1:13
v எசே 40:3, 5

சுமார் 2,220 கிலோமீட்டராக* இருந்தது. அதன் நீளமும் அகலமும் உய
ரமும் ஒரே அளவுதான். **17** அவர் அதன் மதிலை அளந்தபோது, மனி
தர்களுடைய அளவின்படியும் சரி, தேவதூதருடைய அளவின்படியும் சரி,
அதன் உயரம் 144 முழமாக* இருந்தது. **18** அதன் மதில் சூரியகாந்
தக் கல்லால்[a] கட்டப்பட்டிருந்தது. நகரமோ தெளிவான கண்ணாடி போன்ற
சுத்தமான தங்கத்தால் கட்டப்பட்டிருந்தது. **19** நகரத்து மதில்களின் அஸ்
திவாரங்கள் எல்லா விதமான ரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்
தன; முதலாவது சூரியகாந்தம், இரண்டாவது நீலமணி, மூன்றாவது சந்திர
காந்தம், நான்காவது மரகதம், **20** ஐந்தாவது கோமேதகம், ஆறாவது
சுநீரம், ஏழாவது படிகப்பச்சை, எட்டாவது சமுத்திரவர்ணக்கல், ஒன்பதாவது
புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது பதுமராகம், பன்னிரண்
டாவது செவ்வந்திக் கல் ஆகியவையே. **21** அந்த 12 நுழைவாசல்களும்
12 முத்துக்களாக இருந்தன. ஒவ்வொரு நுழைவாசலும் ஒவ்வொரு முத்தாக
இருந்தது. நகரத்தின் முக்கியத் தெரு தெளிவான கண்ணாடி போன்ற சுத்த
மான தங்கத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

22 நான் அங்கே ஆலயத்தைப் பார்க்கவில்லை; ஏனென்றால், சர்வ
வல்லமையுள்ள கடவுளாகிய யெகோவா*[b] அதன் ஆலயமாக இருக்கி
றார், ஆட்டுக்குட்டியானவரும் அதன் ஆலயமாக இருக்கிறார். **23** நகரத்
துக்கு வெளிச்சம் கொடுக்கச் சூரியனோ சந்திரனோ தேவைப்படவில்லை.
ஏனென்றால், கடவுளுடைய மகிமையால் அது பிரகாசித்தது,[c] ஆட்டுக்குட்
டியானவர்தான் அதன் விளக்கு.[d] **24** மக்கள் அதன் வெளிச்சத்தில் நடப்
பார்கள்.[e] பூமியின் ராஜாக்கள் தங்களுடைய மகிமையை அங்கே கொண்டு
போவார்கள். **25** அதன் நுழைவாசல்கள் நாள் முழுவதும் பூட்டப்படாமல்
இருக்கும், அங்கே இரவே இருக்காது.[f] **26** மக்களுடைய மகிமையையும்
பெருமையையும் அங்கே அவர்கள் கொண்டுபோவார்கள்.[g] **27** ஆனால்,
களங்கமான எதுவும் அதில் நுழையவே நுழையாது. அதேபோல், அரு
வருப்பானதைச் செய்கிறவர்களும் ஏமாற்றுகிறவர்களும் அதில் நுழையவே
மாட்டார்கள்;[h] ஆட்டுக்குட்டியானவருடைய வாழ்வின் சுருளில் பெயர் எழு
தப்பட்டவர்கள் மட்டும்தான் அதில் நுழைவார்கள்.[i]

22 பின்பு, வாழ்வு தரும் தண்ணீர் நிறைந்த ஆற்றை அவர் எனக்குக்
காட்டினார்;[j] அது பளிங்குபோல் பளபளத்தது. கடவுளுடைய சிம்
மாசனத்திலிருந்தும் ஆட்டுக்குட்டியானவருடைய[k] சிம்மாசனத்திலிருந்தும்
அது புறப்பட்டு, **2** நகரத்தின் முக்கியத் தெரு நடுவில் பாய்ந்தோடியது.
ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் வாழ்வு தரும் மரங்கள் இருந்தன. அவை
மாதத்துக்கு ஒரு தடவை என வருஷத்துக்கு 12 தடவை பழம் கொடுத்தன;
அவற்றின் இலைகள் தேசத்தார் குணமாவதற்கு உதவின.[l]

3 அங்கே இனி எந்தச் சாபமும் இருக்காது. கடவுளுடைய சிம்மாசன
மும் ஆட்டுக்குட்டியானவருடைய சிம்மாசனமும்[m] அந்த நகரத்தில் இருக்
கும். அவருடைய அடிமைகள் அவருக்குப் பரிசுத்த சேவை செய்வார்
கள். **4** அவருடைய முகத்தை அவர்கள் பார்ப்பார்கள்.[n] அவருடைய
பெயர் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்.[o] **5** இனி இரவு என்பதே

21:16 *நே.மொ., “12,000 ஸ்டேடியாவாக.” ஒரு ஸ்டேடியம் என்பது 185 மீ. (606.95 அடி). இணைப்பு B14-ஐப் பாருங்கள். **21:17** *சுமார் 64 மீ. (210 அடி). இணைப்பு B14-ஐப் பாருங்கள். **21:22** *இணைப்பு A5-ஐப் பாருங்கள்.

அதி. 21
a வெளி 4:3, வெளி 21:10, 11
b யாத் 6:3
c ஏசா 60:19, 20, வெளி 22:5
d யோவா 1:9, அப் 26:13, 15, எபி 1:3
e ஏசா 60:3
f ஏசா 60:11, 20
g ஏசா 60:5
h சங் 5:6, ஏசா 52:1, 1கொ 6:9, 10, கலா 5:19-21, வெளி 21:8
i தானி 12:1, பிலி 4:3, வெளி 13:8

அதி. 22
j எசே 47:1
k யோவா 1:29
l எசே 47:12
m வெளி 3:21
n மத் 5:8
o வெளி 14:1

இருக்காது.[a] விளக்கோ சூரிய ஒளியோ அவர்களுக்குத் தேவைப்படாது. ஏனென்றால், கடவுளாகிய யெகோவா* அவர்கள்மீது ஒளிவீசுவார்.[b] அவர்கள் என்றென்றும் ராஜாக்களாக ஆட்சி செய்வார்கள்.[c]

6 பின்பு, அவர் என்னிடம், "இந்த வார்த்தைகள் நம்பகமானவை, உண்மையானவை;[d] தீர்க்கதரிசிகளுக்குத் தன்னுடைய வார்த்தைகளைக் கொடுக்கிற கடவுளாகிய யெகோவா,*[e] சீக்கிரத்தில் நடக்க வேண்டியவற்றைத் தன்னுடைய அடிமைகளுக்குக் காட்டுவதற்காகத் தன்னுடைய தூதரை
அனுப்பினார். 7 இதோ! நான் சீக்கிரமாக வருகிறேன்;[f] இந்தச் சுருளில் இருக்கிற தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கடைப்பிடிக்கிறவன் எவனோ அவன் சந்தோஷமானவன்"[g] என்று சொன்னார்.

8 யோவானாகிய நான்தான் இவற்றைக் கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டும் இருந்தேன். நான் கேட்டும், பார்த்தும் முடித்த பின்பு, இவற்றை எனக்குக் காட்டிய தேவதூதரை வணங்குவதற்காக அவருடைய காலில்
விழுந்தேன். 9 ஆனால் அவர், "வேண்டாம்! இப்படிச் செய்யாதே! உன்னைப் போலவும், தீர்க்கதரிசிகளாகிய உன் சகோதரர்களைப் போலவும், இந்தச் சுருளின் வார்த்தைகளைக் கடைப்பிடிக்கிறவர்களைப் போலவும் நானும் ஓர் அடிமைதான்; கடவுளை வணங்கு"[h] என்று சொன்னார்.

10 அதோடு அவர் என்னிடம், "இந்தச் சுருளில் இருக்கிற தீர்க்கதரிசன வார்த்தைகளை முத்திரை போட வேண்டாம். ஏனென்றால், குறித்த காலம்
நெருங்கிவிட்டது. 11 அநீதியைச் செய்கிறவன் தொடர்ந்து அநீதியைச் செய்யட்டும்; அசுத்தமானவன் தொடர்ந்து அசுத்தமானதைச் செய்யட்டும்; நீதியுள்ளவன் தொடர்ந்து நீதியைச் செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் தொடர்ந்து பரிசுத்தமாக நடக்கட்டும்.

12 "'இதோ! நான் சீக்கிரமாக வருகிறேன். அவரவர் செய்த செயல்களுக்கு ஏற்ப அவரவருக்குப் பலன் கொடுப்பேன்.[i]
13 நானே ஆல்பாவும் ஒமேகாவும்,*[j] முதலும் கடைசியும், ஆரம்பமும் முடிவுமாக இருக்கிறேன்.
14 வாழ்வு தரும் மரங்களின் பழங்களைச் சாப்பிடும் உரிமை கிடைப்பதற்காகவும்,[k] நுழைவாசல்கள் வழியாக நகரத்துக்குள் நுழைகிற வாய்ப்புக் கிடைப்பதற்காகவும்[l] தங்கள் அங்கிகளைத் துவைத்தவர்கள்[m] சந்தோஷமா
னவர்கள். 15 நாய் போன்றவர்களும்,* ஆவியுலகத் தொடர்புகொள்கிறவர்களும், பாலியல் முறைகேட்டில்# ஈடுபடுகிறவர்களும், கொலைகாரர்களும், சிலைகளை வணங்குகிறவர்களும், பொய்யை விரும்பி பொய்யிலே புரளுகிறவர்களும்[n] வெளியே இருப்பார்கள்.'

16 'சபைகளுடைய நன்மைக்காக இவற்றை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படி இயேசுவாகிய நான் என் தூதரை அனுப்பினேன். நான் தாவீதின் வேராகவும் சந்ததியாகவும்[o] இருக்கிறேன், பிரகாசமான விடியற்கால நட்சத்திரமாகவும்[p] இருக்கிறேன்.'"

17 "வருக! வருக!" என்று கடவுளுடைய சக்தி அழைத்துக்கொண்டே இருக்கிறது, மணமகளும்[q] அதேபோல் அழைக்கிறாள். கேட்கிற எவரும்

22:5, 6 *இணைப்பு A5-ஐப் பாருங்கள். **22:13** *கிரேக்க எழுத்துக்களில் ஆல்பா என்பது முதல் எழுத்து, ஒமேகா என்பது கடைசி எழுத்து. **22:15** *அதாவது, "கடவுள் அருவருக்கிற காரியங்களைச் செய்கிறவர்களும்." #சொல் பட்டியலைப் பாருங்கள்.

அதி. 22
a வெளி 21:25
b ஏசா 60:19, 20; 1யோ 1:5
c தானி 7:18; வெளி 3:21
d தீத் 1:2
e 2தீ 3:16
f வெளி 16:15; வெளி 22:20
g யோவா 13:17; வெளி 1:3
h மத் 4:10; அப் 10:25, 26; வெளி 19:10
i சங் 62:12; ஏசா 40:10; ரோ 2:6
j ஏசா 44:6; ஏசா 48:12; வெளி 1:8; வெளி 21:6
k வெளி 2:7
l வெளி 21:10, 12
m 1யோ 1:7
n கலா 5:19-21; எபே 5:5; வெளி 21:8
o ஏசா 11:1, 10; ஏசா 53:2; எரே 23:5; எரே 33:15; வெளி 5:5
p எண் 24:17; வெளி 2:28
q வெளி 21:9

"வருக, வருக!" என்று அழைக்கட்டும்; தாகமாயிருக்கிற எவரும் வரட்டும்;[a]
விருப்பமுள்ள எவரும் வாழ்வு தரும் தண்ணீரை இலவசமாக வாங்கிக்
கொள்ளட்டும்.[b]
18 "இந்தச் சுருளில் இருக்கிற தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கேட்கிற
எல்லாருக்கும் சாட்சியாக நான் சொல்கிறேன்: ஒருவன் இவற்றோடு எதை
யாவது கூட்டினால்,[c] இந்தச் சுருளில் எழுதப்பட்டிருக்கிற தண்டனைகளைக்
கடவுள் அவன்மேல் கூட்டுவார்.[d]
19 ஒருவன் இந்தத் தீர்க்கதரிசனச் சுரு
ளின் வார்த்தைகளிலிருந்து எதையாவது எடுத்துவிட்டால், இந்தச் சுருளில்
எழுதப்பட்ட காரியங்களிலிருந்து கடவுள் அவனுடைய பங்கை எடுத்து
விடுவார்; வாழ்வு தரும் மரங்களின் பழத்தைச் சாப்பிடவோ[e] பரிசுத்த நக
ரத்துக்குள்[f] நுழையவோ அவனை அனுமதிக்க மாட்டார்.

20 இவற்றைச் சாட்சியாக அறிவிக்கிறவர், 'ஆம், நான் சீக்கிரமாக வரு
கிறேன்'"[g] என்று சொல்கிறார்.

"ஆமென்!* எஜமானாகிய இயேசுவே, வாருங்கள்."

21 நம்முடைய எஜமானாகிய இயேசுவின் அளவற்ற கருணை பரிசுத்த
வான்கள்மீது இருக்கட்டும்.

22:20 * அதாவது, "அப்படியே ஆகட்டும்!"

அதி. 22
a யோவா 4:14
b ஏசா 55:1; யோவா 7:37; வெளி 7:17; வெளி 21:6
c உபா 4:2; உபா 12:32; கலா 1:8; 1யோ 4:3; 2யோ 9
d வெளி 15:1
e வெளி 2:7
f வெளி 21:2
g வெளி 3:11; வெளி 22:7

பைபிள் புத்தகங்களின் பட்டியல்

கிறிஸ்துவுக்கு முன்பு எழுதப்பட்ட எபிரெய வேதாகமத்தின் புத்தகங்கள்

புத்தகத்தின் பெயர்	எழுதியவர்(கள்)	எழுதப்பட்ட இடம்	முடிக்கப்பட்ட வருஷம் (கி.மு.)	காலப்பகுதி (கி.மு.)
ஆதியாகமம்	மோசே	வனாந்தரம்	1513	'ஆரம்பத்திலிருந்து' 1657 வரை
யாத்திராகமம்	மோசே	வனாந்தரம்	1512	1657-1512
லேவியராகமம்	மோசே	வனாந்தரம்	1512	1 மாதம் (1512)
எண்ணாகமம்	மோசே	வனாந்தரம், மோவாப் பாலைநிலம்	1473	1512-1473
உபாகமம்	மோசே	மோவாப் பாலைநிலம்	1473	2 மாதங்கள் (1473)
யோசுவா	யோசுவா	கானான்	ஏ. 1450	1473–ஏ. 1450
நியாயாதிபதிகள்	சாமுவேல்	இஸ்ரவேல்	ஏ. 1100	ஏ. 1450–ஏ. 1120
ரூத்	சாமுவேல்	இஸ்ரவேல்	ஏ. 1090	நியாயாதிபதிகளுடைய ஆட்சியில் 11 வருஷங்கள்
1 சாமுவேல்	சாமுவேல்; காத்; நாத்தான்	இஸ்ரவேல்	ஏ. 1078	ஏ. 1180-1078
2 சாமுவேல்	காத்; நாத்தான்	இஸ்ரவேல்	ஏ. 1040	1077–ஏ. 1040
1 ராஜாக்கள்	எரேமியா	[யூதா மற்றும்	[1 சுருள்	ஏ. 1040-580
2 ராஜாக்கள்	எரேமியா	எகிப்து	580	
1 நாளாகமம்	எஸ்றா	எருசலேம் (?)	[1 சுருள்	[1 நாளாகமம் 9:44-க்குப் பிறகு:
2 நாளாகமம்	எஸ்றா	எருசலேம் (?)	ஏ. 460	ஏ. 1077-537
எஸ்றா	எஸ்றா	எருசலேம்	ஏ. 460	537–ஏ. 467
நெகேமியா	நெகேமியா	எருசலேம்	443-க்குப் பின்	456–443-க்குப் பின்
எஸ்தர்	மொர்தெகாய்	சூசான், ஏலாம்	ஏ. 475	493–ஏ. 475
யோபு	மோசே	வனாந்தரம்	ஏ. 1473	1657-க்கும் 1473-க்கும் இடைப்பட்ட 140-க்கும் அதிகமான வருஷங்கள்
சங்கீதம்	தாவீதும் மற்றவர்களும்		ஏ. 460	
நீதிமொழிகள்	சாலொமோன்; ஆகூர்; லேமுவேல்	எருசலேம்	ஏ. 717	
பிரசங்கி	சாலொமோன்	எருசலேம்	1000-க்கு முன்	
உன்னதப்பாட்டு	சாலொமோன்	எருசலேம்	ஏ. 1020	
ஏசாயா	ஏசாயா	எருசலேம்	732-க்குப் பின்	ஏ. 778–732-க்குப் பின்
எரேமியா	எரேமியா	யூதா; எகிப்து	580	647-580
புலம்பல்	எரேமியா	எருசலேமுக்குப் பக்கத்தில்	607	
எசேக்கியேல்	எசேக்கியேல்	பாபிலோன்	ஏ. 591	613–ஏ. 591
தானியேல்	தானியேல்	பாபிலோன்	ஏ. 536	618–ஏ. 536
ஓசியா	ஓசியா	சமாரியா (மாகாணம்)	745-க்குப் பின்	804-க்கு முன்–745-க்குப் பின்
யோவேல்	யோவேல்	யூதா	ஏ. 820 (?)	
ஆமோஸ்	ஆமோஸ்	யூதா	ஏ. 804	
ஒபதியா	ஒபதியா		ஏ. 607	
யோனா	யோனா		ஏ. 844	
மீகா	மீகா	யூதா	717-க்கு முன்	ஏ. 777-717
நாகூம்	நாகூம்	யூதா	632-க்கு முன்	
ஆபகூக்	ஆபகூக்	யூதா	ஏ. 628 (?)	
செப்பனியா	செப்பனியா	யூதா	648-க்கு முன்	
ஆகாய்	ஆகாய்	திரும்பக் கட்டப்பட்ட எருசலேம்	520	112 நாட்கள் (520)
சகரியா	சகரியா	திரும்பக் கட்டப்பட்ட எருசலேம்	518	520-518
மல்கியா	மல்கியா	திரும்பக் கட்டப்பட்ட எருசலேம்	443-க்குப் பின்	

பைபிள் புத்தகங்களின் பட்டியல்

கிறிஸ்துவுக்குப் பின்பு எழுதப்பட்ட கிரேக்க வேதாகமத்தின் புத்தகங்கள்

புத்தகத்தின் பெயர்	எழுதியவர்	எழுதப்பட்ட இடம்	முடிக்கப்பட்ட வருஷம் (கி.பி.)	காலப்பகுதி
மத்தேயு	மத்தேயு	இஸ்ரவேல்	ஏ. 41	கி.மு. 2–கி.பி. 33
மாற்கு	மாற்கு	ரோம்	ஏ. 60-65	கி.பி. 29-33
லூக்கா	லூக்கா	செசரியா	ஏ. 56-58	கி.மு. 3–கி.பி. 33
யோவான்	அப்போஸ்தலன் யோவான்	எபேசு அல்லது அதற்குப் பக்கத்தில்	ஏ. 98	முகவுரைக்குப் பின், கி.பி. 29-33
அப்போஸ்தலர்	லூக்கா	ரோம்	ஏ. 61	கி.பி. 33–ஏ. 61
ரோமர்	பவுல்	கொரிந்து	ஏ. 56	
1 கொரிந்தியர்	பவுல்	எபேசு	ஏ. 55	
2 கொரிந்தியர்	பவுல்	மக்கெதோனியா	ஏ. 55	
கலாத்தியர்	பவுல்	கொரிந்து அல்லது சீரியாவின் அந்தியோகியா	ஏ. 50-52	
எபேசியர்	பவுல்	ரோம்	ஏ. 60-61	
பிலிப்பியர்	பவுல்	ரோம்	ஏ. 60-61	
கொலோசெயர்	பவுல்	ரோம்	ஏ. 60-61	
1 தெசலோனிக்கேயர்	பவுல்	கொரிந்து	ஏ. 50	
2 தெசலோனிக்கேயர்	பவுல்	கொரிந்து	ஏ. 51	
1 தீமோத்தேயு	பவுல்	மக்கெதோனியா	ஏ. 61-64	
2 தீமோத்தேயு	பவுல்	ரோம்	ஏ. 65	
தீத்து	பவுல்	மக்கெதோனியா (?)	ஏ. 61-64	
பிலேமோன்	பவுல்	ரோம்	ஏ. 60-61	
எபிரெயர்	பவுல்	ரோம்	ஏ. 61	
யாக்கோபு	யாக்கோபு (இயேசுவின் சகோதரர்)	எருசலேம்	62-க்கு முன்	
1 பேதுரு	பேதுரு	பாபிலோன்	ஏ. 62-64	
2 பேதுரு	பேதுரு	பாபிலோன் (?)	ஏ. 64	
1 யோவான்	அப்போஸ்தலன் யோவான்	எபேசு அல்லது அதற்குப் பக்கத்தில்	ஏ. 98	
2 யோவான்	அப்போஸ்தலன் யோவான்	எபேசு அல்லது அதற்குப் பக்கத்தில்	ஏ. 98	
3 யோவான்	அப்போஸ்தலன் யோவான்	எபேசு அல்லது அதற்குப் பக்கத்தில்	ஏ. 98	
யூதா	யூதா (இயேசுவின் சகோதரர்)	இஸ்ரவேல் (?)	ஏ. 65	
வெளிப்படுத்துதல்	அப்போஸ்தலன் யோவான்	பத்மு	ஏ. 96	

[சில புத்தகங்களை எழுதியவர்களுடைய பெயர்களும் எழுதப்பட்ட இடங்களும் சரியாகத் தெரியவில்லை. நிறைய தேதிகள் தோராயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏ. என்றால் “ஏறக்குறைய” என்று அர்த்தம்.]

மேற்கோள்குறிகள்: பொதுவாக, ஒருவர் சொல்லும் வார்த்தைகளைத் தனித்துக் காட்டுவதற்கு இரட்டை மேற்கோள்குறி (“ ”) இந்த பைபிளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரட்டை மேற்கோள்குறிக்குள் வரும் இன்னொருவரின் வார்த்தைகளைத் தனித்துக் காட்டுவதற்கு ஒற்றை மேற்கோள்குறி (‘ ’) பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்படி, இரண்டு மேற்கோள்குறிகளும் மாறிமாறி பயன்படுத்தப்பட்டுள்ளன.

அடைப்புக்குறிகள்: ஒரு விவரிப்பில் கோர்வை தடைபடாமல் இருப்பதற்காகவோ, அதிலுள்ள கூடுதல் விளக்கத்தைத் தனித்துக் காட்டுவதற்காகவோ சில வார்த்தைகள் அடைப்புக்குறிகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

சுருக்கக் குறியீடுகளின் விளக்கம்

நே.மொ.	நேரடி மொழிபெயர்ப்பு	கி.மீ.	கிலோமீட்டர்
வே.வா.	வேறு வார்த்தையில்	செ.மீ.	சென்டிமீட்டர்
லி.	லிட்டர்	அங்.	அங்குலம்
மீ.	மீட்டர்	மே.கு.	மேல்குறிப்பு

பைபிள் வார்த்தைகளின் அட்டவணை

பைபிள் புத்தகங்களின் பெயர்ச் சுருக்கங்களைப் பக்கம் 40-ல் பாருங்கள்.

அ

அகங்காரம், உபா 17:12 அ.மாக நடக்கிறவன் கொல்லப்பட
1சா 15:23 அ.த்தோடு நடந்துகொள்வது
சங் 19:13 அ.மான செயல்கள் செய்யாமல்
நீதி 11:2 அ. வந்தால் அவமானம்
அகம்பாவம், நீதி 16:18 அ. வந்தால் அழிவு
அக்கம்பக்கத்தார், யோபு 31:34 அ. என்னை அவமதிப்பார்கள்
அக்கறை, பிலி 2:4 உங்கள் நலனில் மட்டும் அ. காட்டாமல்
1பே 5:7 உங்கள்மேல் அ.யாக
அக்கிரமக்காரர்கள், சங் 37:9 அ. அழிக்கப்படுவார்கள்
மத் 7:23 அ.ளே, போய்விடுங்கள்
லூ 22:37 அ.ளில் ஒருவராக அவர்
அக்கிரமக்காரன், நீதி 29:2 அ. ஆட்சி செய்யும்போது
2தெ 2:3 அ. வெளிப்பட்டால் தவிர
அக்கிரமம், மத் 24:12 அ. அதிகமாவதால்
2தெ 2:7 மர்மமாக இருக்கிற அ.
அசுத்தமான, கொலோ 3:5 அ. நடத்தை
அசையாமல், 2நா 20:17 அ. அப்படியே நில்லுங்கள்
அடக்கம், மீ 6:8 அ.த்தோடு கடவுளுடைய வழியில்
1தீ 2:9 பெண்கள் அ.த்தினால் தங்களை
அடக்கி, ஆதி 3:16 கணவன் உன்னை அ.
பிர 8:9 மனுஷனை மனுஷன் அ.
அடக்கியொடுக்கி, 1கொ 9:27 உடலை அ.
அடக்குகிறவன், நீதி 10:19 உதடுகளை அ.
அடிகள், 2கொ 6:5 அ., சிறைவாசங்கள்
அடிச்சுவடுகளை, 1பே 2:21 அவருடைய அ.
அடிபணிந்து, தீத் 3:1 அதிகாரிகளுக்கு அ. நடக்க
எபி 13:17 வழிநடத்துகிறவர்களுக்கு அ.
அடிப்படைக் காரியங்களுக்கு, கலா 4:9 அ. ஏன்
அடிமரம், ஏசா 11:1 ஈசாய் என்ற அ.த்திலிருந்து
தானி 4:15 அ.த்தை விட்டுவையுங்கள்
அடிமனதின், வெளி 2:23 அ. யோசனைகளை ஆராய்ந்து
அடிமை, மத் 24:45 உண்மையும் விவேகமும் உள்ள அ.
மத் 25:21 உண்மையுள்ள நல்ல அ.யே
லூ 17:10 ஒன்றுக்கும் உதவாத அ.கள்
யோவா 8:34 பாவம் செய்கிறவன், பாவத்துக்கு அ.
ரோ 6:12 பாவம் உங்களை அ.ப்படுத்தி
கலா 5:13 அன்பினால் அ.களாக
பிலி 2:7 ஓர் அ.யைப் போல் ஆனார்
அடியெடுத்து, கலா 6:1 தவறான பாதையில் அ.
அடைக்கல நகரங்களை, யோசு 20:2 அ. தேர்ந்தெடுங்கள்
அடைக்கலம், சங் 9:9 யெகோவா அ.மாக
அடையாளக் குறி, வெளி 13:17 மூர்க்க மிருகத்தின் அ.
அடையாளங்கள், லூ 21:25 சந்திரனில் அ.
2தெ 2:9 பொய்யான அ.ளும்
அடையாளம், எசே 9:4 நெற்றியில் அ. போடு
மத் 24:30 மனிதகுமாரனின் அ.
அண்ணகர்களை, ஏசா 56:4 அ. பற்றி அவர் சொல்வது
அதலபாதாளம், வெளி 11:7 அ.த்திலிருந்து மூர்க்க மிருகம்
வெளி 20:3 அவனை அ.த்துக்குள் தள்ளி
அதிகமாக, ரோ 12:3 அளவுக்கு அ. எண்ணாமல்
அதிகம், லூ 12:48 எவனிடம் அ. கொடுக்கப்பட்டதோ
அதிகாரத்தில், ரோ 13:1 அ. இருக்கிறவர்களுக்கு
2பே 2:10 அ. உள்ளவர்களைக் கேவலமாக
அதிகாரம், மத் 28:18 எல்லா அ.மும் கொடுக்கப்பட்டிருக்கிறது
லூ 4:6 அ. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது
அதிபதி, சங் 45:16 அ.களாக பூமியெங்கும் நியமிப்பீர்கள்
ஏசா 9:6 சமாதானத்தின் அ.
ஏசா 32:1 அ.களும் நியாயமாக ஆட்சி
தானி 10:13 பெர்சிய சாம்ராஜ்யத்தின் அ.
அப் 3:15 வாழ்வின் அ.
எபி 12:2 விசுவாசத்தின் அ.
அதிர்ச்சியாக, யோவா 6:60 இவர் சொல்வது அ.
அதிர்ஷ்ட, ஏசா 65:11 அ. தெய்வத்துக்காக உணவையும்
அத்தி மரம், 1ரா 4:25 அ.த்தின் நிழலில் பாதுகாப்பாக
மீ 4:4 ஒவ்வொருவரும் தங்கள் அ.த்தின்
மத் 21:19 உடனே அ. பட்டுப்போனது
மாற் 13:28 அ. உவமையிலிருந்து
அநாதைகளையும், யாக் 1:27 அ. விதவைகளையும்
அநியாயம், உபா 32:4 கடவுள் அ.மே செய்யாதவர்
ரோ 9:14 கடவுளிடம் அ. இருக்கிறதா?
அநீதிமான்கள், அப் 24:15 அ.ளும் உயிரோடு எழுப்ப
1கொ 6:9 அ. அரசாங்கத்துக்குள் அனுமதிக்கப்பட
அந்திக்கிறிஸ்துக்கள், 1யோ 2:18 அ. நிறைய பேர்
அபா, ரோ 8:15 அ., தகப்பனே!
அபிகாயில், 1சா 25:3 அ. புத்திசாலி, அழகானவள்
அபிஷேகம், 1சா 16:13 சாமுவேல் தாவீதை அ.
சங் 2:2 அ. செய்யப்பட்டவருக்கு விரோதமாக
அப்பா, ஆதி 2:24 மனிதன் தன் அ.வையும் அம்மாவையும்
சங் 68:5 அ. இல்லாத பிள்ளைகளுக்கு அ.வாக
சங் 103:13 அ. தன் மகன்களுக்கு இரக்கம்
அப்பொல்லோ, அப் 18:24 அ. திறமையாகப் பேசுபவர்
அப்போஸ்தலர்கள், மத் 10:2 12 அ.ளின் பெயர்கள்
அப் 15:6 அ.ளும் மூப்பர்களும் ஒன்றுகூடினார்கள்
1கொ 15:9 அ. எல்லாரிலும் அற்பமானவன்
2கொ 11:5 உங்கள் அருமை அ.
அமைதி, நீதி 14:30 அ.யான உள்ளம் உடலுக்கு
ஏசா 53:7 மயிர் கத்தரிப்பவர்கள் முன் அ.யாக
1பே 3:4 அ.யும் சாந்தமுமான குணம்
அம்புகள், சங் 127:4 மாவீரனின் கையிலுள்ள அ.
அம்மா, சங் 27:10 அப்பாவும் அ.வும் கைவிட்டாலும்
நீதி 23:22 அ.வுக்கு வயதாகிவிட்டதால்
லூ 8:21 இவர்கள்தான் என் அ.
யோவா 19:27 இதோ! உன் அ.!
அரங்கில், 1கொ 4:9 அப்போஸ்தலர்கள், அ. கடைசியாக
அரசனுடையதை, மத் 22:21 அ. அரசனுக்கும்
மாற் 12:17 அ. அரசனுக்கும்
அரசாங்கம், மத் 6:10 உங்களுடைய அ. வர வேண்டும்
மத் 6:33 கடவுளுடைய அ.த்துக்கு முதலிடம்
மத் 24:14 அ.த்தைப் பற்றிய நல்ல செய்தி
லூ 22:29 அ.த்துக்காக ஒரு ஒப்பந்தம்
யோவா 18:36 என் அ. இந்த உலகத்தின்
அப் 1:6 இந்தச் சமயத்திலா அ.த்தை மீட்டு
கலா 5:21 அ.த்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்
கொலோ 1:13 தன்னுடைய மகனின் அ.த்துக்கு
அரசாட்சியே, தானி 4:34 அவருடைய அ. என்றென்றும்
அரண், லூ 19:43 கூர்முனை கம்பங்களால் அ.
அரராத், ஆதி 8:4 பேழை அ. மலையில் நின்றது
அரியோபாகுவின், அப் 17:22 அ. நடுவில் பவுல்
அருகதை, லூ 15:19 மகன் என்று சொல்வதற்குக்கூட அ.யில்லை
அரைகுறையான, 1கொ 13:9 நமக்கு அ. அறிவுதான்
அர்த்தத்தை, சங் 119:27 உங்கள் ஆணைகளின் அ.
அர்த்தமியே, அப் 19:34 அ. மகா தேவி!
அர்ப்பணிப்பேன், 2கொ 12:15 என்னையே அ.
அர்ப்பணியுங்கள், ரோ 6:13 உங்களையே அவருக்கு அ.
அர்மகெதோன், வெளி 16:16 எபிரெய மொழியில் அ.

அலங்கரிக்க, தீத் 2:10 கடவுளுடைய போதனைகளை அ.
அலங்காரம், 1பே 3:3 வெளிப்புற அ. வேண்டாம்
அலசி, தானி 12:4 பலர் அ. ஆராய்வார்கள்
அலைக்கழிக்கப்படவோ, எபே 4:14 அலைகளால் அ.
அவசர, 2தீ 4:2 அ. உணர்வோடு பிரசங்கி
அவசரப்பட்டு, நீதி 29:20 அ. வார்த்தைகளைக் கொட்டுகிறவன்
அவமானப்பட, அப் 5:41 அவருடைய பெயருக்காக அ.
அவமானப்படுத்த, ரோ 1:24 உடல்களை அ. விட்டுவிட்டார்
1பே 2:23 அ.ப்பட்டபோது பதிலுக்கு
அவமானமாக, எபி 11:16 கடவுள் என அழைக்கப்படுவதை அ.
அழகினால், எசே 28:17 அ. பெருமை வந்துவிட்டது
அழகு, நீதி 19:11 மன்னிப்பது அவனுக்கு அ.
நீதி 31:30 அ. வீணானது
அழித்துப்போடுங்கள், கொலோ 3:5 உறுப்புகளை அ.
அழிந்தாலும், 2கொ 4:16 உடல் அ. உள்ளம்
அழிந்துபோகிற, 2பே 3:7 கடவுள்பக்தி இல்லாதவர்கள் அ.
அழியாமையுள்ளதாக, 1கொ 15:53 அழிவுக்குரியது அ.
அழிவில்லாததாக, 1கொ 15:42 அ. உயிர்த்தெழுப்பப்படும்
அழிவை, 2தெ 1:9 நிரந்தர அ. தண்டனையாக
அழுகிற, லூ 6:21 இப்போது அ. நீங்கள்
ரோ 12:15 அ.வர்களோடு அழுங்கள்
அழுகை, ஏசா 65:19 அ. சத்தம் இனி கேட்காது
அழுததை, 2ரா 20:5 நீ அ. பார்த்தேன்
அழுதார், மத் 26:75 வெளியே போய்க் கதறி அ.
அழைக்கப்படுகிறவர்கள், மத் 22:14 அ. பலர்
அழைப்புக்கு, எபே 4:1 அ. தகுதியானவர்களாக
அளவற்ற கருணை, யோவா 1:17 இயேசு மூலம் அ.
2கொ 6:1 அ.யின் நோக்கத்தை
2கொ 12:9 என் அ. உனக்குப் போதும்
அளவுக்கு மீறிய, நீதி 14:16 அ. தன்னம்பிக்கையோடு
அளவையால், லூ 6:38 எந்த அ. அளக்கிறீர்களோ
அறிக்கைகளை, தானி 11:44 அ. கேட்டு கலக்கம்
அறியாமையின், 1தீ 1:13 அ. காரணமாக நான்
அறிவாளிகளுக்கு, லூ 10:21 அ. மறைத்து
அறிவிக்கப்படுவதற்குமே, யாத் 9:16 என் பெயர் அ.
அறிவிக்கும்போது, ரோ 10:10 வாயினால் அ. மீட்பு
அறிவு, நீதி 1:7 யெகோவாவுக்குப் பயப்படுவதே அ.
ஏசா 11:9 பூமி யெகோவா பற்றிய அ.வால்
தானி 12:4 உண்மையான அ.ம் பெருகும்
ஓசி 4:6 அ.வை ஒதுக்கித்தள்ளினீர்கள்
லூ 11:52 அ. என்ற சாவியை
1கொ 8:1 அ. தலைக்கனத்தை உண்டாக்கும்
அறிவுரை, ரோ 15:4 அ. கொடுப்பதற்காக எழுதப்பட்டன
அறுவடை, பிர 11:4 மேகத்தையே பார்த்தால் அ.
மத் 9:37 அ. அதிகமாக இருக்கிறது
கலா 6:7 எதை விதைக்கிறானோ அதையே அ.
கலா 6:9 ஏற்ற காலத்தில் அ.
அறைந்தார்கள், யோவா 19:3 கன்னத்தில் அ.
அற்ப மனுஷனை, சங் 8:4 அ. நீங்கள் ஞாபகம்
அற்பமாகவும், 1கொ 1:28 உலகம் அ. தாழ்வாகவும்
அற்புதமாக, சங் 139:14 என்னை அ. படைத்து
அனனியா, அப் 5:1 அ., மனைவி சப்பீராள்
அனுக்கிரக, 2கொ 6:2 இப்போதே அ. காலம்
அனுதாபப்பட, எபி 4:15 பலவீனங்களைக் குறித்து அ.
அனுபவமில்லாதவன், நீதி 22:3 அ. மாட்டிக்கொண்டு
அனுப்புங்கள், ஏசா 6:8 இதோ, என்னை அ.!
அன்பளிப்பு, ரோ 1:11 கடவுள் தரும் அ.பை
ரோ 6:23 கடவுள் தரும் அ.போ
அன்பிருந்தால், யோவா 14:15 என்மேல் உங்களுக்கு அ.
அன்பிலிருந்து, ரோ 8:39 கடவுள் காட்டுகிற அ. பிரிக்க
அன்பு, உபா 6:5 யெகோவாமேல் முழு இதயத்தோடு அ.
நீதி 31:26 நாவில் அ.பின் சட்டம் இருக்கிறது
உன் 8:6 அ., மரணத்தைப் போல் வலிமையானது
மத் 3:17 இவர் என் அ. மகன்
மத் 22:37 யெகோவாமேல் முழு மூச்சோடு அ.
மத் 24:12 பெரும்பாலானவர்களின் அ. குறைந்துவிடும்
லூ 10:27 மற்றவர்கள்மேலும் அ. காட்ட
யோவா 3:16 கடவுள் இந்தளவுக்கு அ. காட்டினார்
யோவா 13:34 ஒருவர்மேல் ஒருவர் அ.
யோவா 15:13 மேலான அ. வேறு எதுவும் இல்லை
ரோ 13:8 அ. காட்டுவதுதான் ஒரே கடனாக
ரோ 13:10 அ. திருச்சட்டத்தை நிறைவேற்றுகிறது
1கொ 13:2 அ. இல்லையென்றால் நான் ஒன்றுமே
1கொ 13:8 அ. ஒருபோதும் ஒழியாது
1கொ 13:13 இவற்றில் அ.தான் தலைசிறந்தது
1கொ 16:14 எல்லாவற்றையும் அ.போடு செய்யுங்கள்
கொலோ 3:14 பரிபூரணமாக இணைப்பது அ.தான்
கொலோ 3:19 மனைவிமேல் எப்போதும் அ.
1பே 4:8 ஆழ்ந்த அ. காட்டுங்கள்
1யோ 2:15 உலகத்தின் மீது அ. வைக்காதீர்கள்
1யோ 4:8 கடவுள் அ.பாகவே இருக்கிறார்
1யோ 4:10 கடவுள் நம்மேல் அ. காட்டியதால்
1யோ 4:20 சகோதரன்மேல் அ. காட்டாதவன்
1யோ 5:3 கட்டளைகளைக் கடைப்பிடிப்பதே அ.
யூ 21 கடவுளுடைய அ.க்குப் பாத்திரமான
வெளி 2:4 ஆரம்பத்தில் இருந்த அ.பை நீ
அன்னாள், லூ 2:36, 37 அ. 84 வயது விதவை
அன்னியர்களுடைய, யோவா 10:5 அ. குரல்
அஸ்திவாரம், லூ 6:48 பாறைமேல் அ.
ரோ 15:20 வேறொருவன் கட்டிய அ.த்தின்
1கொ 3:11 போடப்பட்டிருக்கிற அ.த்துக்குப் பதிலாக

ஆ

ஆகான், யோசு 7:1 ஆ., பொருள்களை எடுத்தான்
ஆக்கில்லா, அப் 18:2 ஆ. என்ற யூதர்
ஆசீர்வதி, ஆதி 1:28 என்று சொல்லி ஆ.த்தார்
ஆதி 32:26 ஆ.த்தால்தான் போகவிடுவேன்
நியா 5:24 யாகேல், பெண்களில் ஆ.க்கப்பட்டவள்
லூ 6:28 சபிக்கிறவர்களை ஆ.யுங்கள்
யோவா 12:13 யெகோவா பெயரில் வருகிறவர் ஆ.க்கப்பட்டவர்
ரோ 12:14 கொடுமைப்படுத்துகிறவர்களை ஆ.க்க
ஆசீர்வாதம், உபா 30:19 ஆ.த்தையும் சாபத்தையும் வைக்கிறேன்
நீதி 10:22 யெகோவாவின் ஆ.தான் சொத்து
மல் 3:10 அளவில்லாத ஆ.ங்களைப் பொழிகிறேனா
ஆசை, சங் 145:16 எல்லா உயிர்களின் ஆ.களையும்
கலா 5:16 எந்தவொரு பாவ ஆ.யையும்
எபே 2:3 நம் பாவ ஆ.களின்படி
2தீ 2:22 இளமைப் பருவத்தின் ஆ.களை
யாக் 1:14 ஒவ்வொருவனும் தன் ஆ.யால்
1பே 1:14 உங்கள் ஆ.களின்படி நடப்பதை
1பே 2:11 பாவ ஆ.களிலிருந்து விலகி
1யோ 2:16 உடலின் ஆ.யும்
ஆசைப்படுவதே, எசே 18:32 யாரும் சாக வேண்டும் என்று ஆ.
ஆடுகள், சங் 100:3 நாம் அவருடைய ஆ.
எசே 34:12 ஆ.ளைக் கவனித்துக்கொள்வேன்
ஆட்சி, நீதி 29:2 அக்கிரமக்காரன் ஆ. செய்தால்
ஏசா 9:7 ஆ.யின் வளர்ச்சிக்கும்
வெளி 11:15 அவர் என்றென்றும் ஆ.
ஆட்டுக்குட்டி, ஏசா 40:11 ஆ.களை வாரிக்கொள்வார்
யோவா 1:29 கடவுளால் அனுப்பப்பட்ட ஆ.!
யோவா 21:16 ஆ.களை மேய்க்க
ஆட்டை, ஏசா 53:7 வெட்ட கொண்டுபோகப்படும் ஆ.
ஆணவத்தை, நீதி 8:13 ஆ. வெறுக்கிறேன்
ஆணோடு, லேவி 20:13 ஒருவன் ஆ. உடலுறவுகொண்டால்
ஆண்களோடு உறவுகொள்ளும், 1கொ 6:9 ஆ. ஆண்கள்
ஆதாம், ஆதி 5:5 ஆ. 930 வருஷம் வாழ்ந்தான்
1கொ 15:22 ஆ.மினால் எல்லாரும் சாகிறதுபோல்
1கொ 15:45 கடைசி ஆ.
1தீ 2:14 ஆ. ஏமாற்றப்படவில்லை, பெண்தான்
ஆதாயம், 2கொ 7:2 யாரிடமும் ஆ. தேடவில்லை

ஆபத்து, சங் 91:5 ராத்திரியில் வருகிற ஆ.களுக்கும்
நீதி 22:3 சாமர்த்தியசாலி ஆ.தைப் பார்த்து
ஏசா 11:9 எந்த ஆ.ம் கேடும் வராது
ஆபாசம், ரோ 1:27 ஆண்கள் ஆ.மாக நடந்து
எபே 5:4 ஆ.மான கேலிப் பேச்சு
ஆபிரகாம், ஆதி 21:12 ஆ.மிடம், சாராள் பேச்சைக் கேள்
2நா 20:7 உங்கள் நண்பர் ஆ.
மத் 22:32 ஆ.மின் கடவுள், உயிருள்ளவர்களின்
ரோ 4:3 ஆ. விசுவாசம் வைத்தார், நீதிமானாக
ஆபேல், ஆதி 4:8 காயீன் ஆ.லைக் கொலை செய்தான்
மத் 23:35 நீதிமானாகிய ஆ.லின் இரத்தம்முதல்
ஆப்பிள், நீதி 25:11 வெள்ளித் தட்டில் தங்க ஆ.
ஆமென், 2கொ 1:20 அவர் வழியாக ஆ. சொல்கிறோம்
ஆம், மத் 5:37 ஆ. என்று சொல்வது ஆ.
ஆயிரம், சங் 91:7 உன் பக்கத்தில் ஆ. பேரும்
ஏசா 60:22 கொஞ்சம் பேர் ஆ. பேராக
2பே 3:8 ஒரு நாள் ஆ. வருஷங்கள்
ஆயுதமும், ஏசா 54:17 எந்த ஆ. ஒன்றுமில்லாமல்
ஆயுள், சங் 90:10 ஆ. 70 வருஷம்
ஆரம்பத்திலிருந்தே, ஏசா 46:10 நடக்கப்போவதை ஆ. சொல்கிறேன்
ஆரம்பம், மத் 24:8 இவையெல்லாம் வேதனைகளுக்கு ஆ.
ஆரம்பிக்கப்பட்ட, சக 4:10 சிறியளவில் ஆ. வேலை
ஆராய்கிறார், நீதி 21:2 யெகோவா இதயங்களை ஆ.
ஆராய்ந்து, சங் 26:2 என்னை ஆ. பாருங்கள்
அப் 17:11 வேதவசனங்களை ஆ.
கலா 6:4 ஒவ்வொருவனும் தன் செயல்களை ஆ.
ஆராய்வது, நீதி 25:2 தீர ஆ. ராஜாவுக்கு
ஆர்வத்துடிப்போடு, ரோ 12:11 ஆ. செயல்படுங்கள்
ஆர்வத்தையும், பிலி 2:13 ஆ. வல்லமையையும்
ஆர்வமாக, ரோ 1:15 நல்ல செய்தியைச் சொல்ல ஆ.
ஆர்வம், 2கொ 8:12 ஆ. ஒருவனுக்கு இருந்தால்
பிலி 2:21 தங்கள் விஷயங்களிலேயே ஆ.
ஆலயப் பணியாளர்கள், எஸ்றா 8:20 ஆ. 220 பேர்
ஆலயம், 2சா 7:13 என் பெயருக்காக ஆ.த்தை
சங் 27:4 அவருடைய ஆ.த்தை ரசித்துக்கொண்டு
சங் 73:17 பரிசுத்த ஆ.த்துக்கு வந்தேன்
எரே 7:4 இது யெகோவாவின் ஆ.!
மல் 3:1 எஜமான் ஆ.த்துக்கு வருவார்
மத் 21:12 இயேசு ஆ.த்துக்குள் போய் துரத்தினார்
யோவா 2:19 இந்த ஆ.த்தை இடித்துப் போடுங்கள்
அப் 7:48 கைகளால் கட்டப்பட்ட ஆ.ங்களில்
1கொ 3:16 நீங்கள்தான் கடவுளுடைய ஆ.
ஆலோசகர், நீதி 15:22 ஆ.கள் நிறைய பேர் இருந்தால்
ஏசா 9:6 ஞானமுள்ள ஆ.
ஆல்பாவும், வெளி 1:8 ஆ. ஒமேகாவும் நானே
ஆவிகளோடு, உபா 18:11 ஆ. பேசுகிறவரிடம் போகவோ
ஆவியுலகத் தொடர்பு, கலா 5:20 ஆ., பகை
ஆவேன், யாத் 3:14 ஆ. என்பவர் உங்களிடம்
ஆழத்தில், ரோ 7:22 உள்ளத்தின் ஆ. சந்தோஷம்
ஆழமான, ரோ 11:33 ஞானமும் அறிவும் ஆ.வை
1கொ 2:10 கடவுளுடைய ஆ. காரியங்களை
ஆழமும், எபே 3:18 நீளமும் உயரமும் ஆ.
ஆளுகிறவன், யோவா 12:31 இந்த உலகத்தை ஆ.
ஆறு, வெளி 22:1 வாழ்வு தரும் தண்ணீர் நிறைந்த ஆ.
ஆறுதலளித்து, 1தெ 2:11 அறிவுரை கொடுத்து, ஆ
ஆறுதல், யோபு 2:11 யோபுவுக்கு ஆ. சொல்ல
யோபு 16:2 ஆ.படுத்துவதற்குப் பதிலாக
ஏசா 49:13 யெகோவா தன் ஜனங்களுக்கு ஆ.
எரே 31:15 ராகேல் ஆ. அடையவே
மத் 5:4 துக்கப்படுகிறவர்களுக்கு ஆ.
ரோ 15:4 வேதவசனங்கள் ஆ.
2கொ 1:3 ஆ.லின் கடவுள்
ஆற்றும், நீதி 12:18 ஞானமுள்ள நாவு காயத்தை ஆ.
ஆனேன், 1கொ 9:22 எல்லா விதமாகவும் ஆ.
ஆன்மீக, மத் 5:3 ஆ. விஷயங்களில் ஆர்வப்பசி
1கொ 2:15 ஆ. சிந்தையுள்ள மனிதன்
1கொ 3:3 ஆ. சிந்தை இல்லாதவர்களாக
கலா 6:1 ஆ. தகுதிகளையுடைய நீங்கள்
ஆஸ்தி, கொலோ 3:24 யெகோவாவிடமிருந்து ஆ.
1பே 1:4 களங்கமில்லாத, மறையாத ஆ.

இ

இக்கட்டான, சங் 46:1 இ. காலங்களில்
இக்கட்டில், 2சா 22:7 இ. தவித்தபோது நான்
இசைந்து, ரோ 8:28 ஒன்றுக்கொன்று இ.
இசைவாக, எபே 4:16 இ. இணைக்கப்பட்டு ஒற்றுமையாக
இடித்துப்போடாதீர்கள், ரோ 14:20 கடவுள் கட்டியதை இ.
இடுக்கமான, மத் 7:13 இ. வாசல் வழியாக
இடுப்புவார், ஏசா 11:5 நீதி அவருக்கு இ.
இடைவிடாமல், தானி 6:16 நீ இ. வணங்குகிற
அப் 5:42 இ. கற்பித்து
இணைத்து, மத் 19:6 கடவுள் இ. வைத்ததை
இணைபிரியாத நேசம், உன் 8:6 இ. கல்லறையைப் போல்
இணைப்பது, கொலோ 3:14 பரிபூரணமாக இ. அன்பு
இதயம், உபா 6:6 இந்த வார்த்தைகளை உங்கள் இ.த்தில்
எஸ்றா 7:10 எஸ்றா, இ.த்தைத் தயார்படுத்தி
சங் 51:10 சுத்தமான இ.த்தை எனக்குள்
நீதி 4:23 இ.த்தைப் பாதுகாத்துக்கொள்
நீதி 17:3 இ.த்தை ஆராய்கிறவர் யெகோவா
நீதி 28:26 இ.த்தை நம்புகிறவன் முட்டாள்
எரே 17:9 இ.மே நயவஞ்சகமானது
எரே 17:10 நான் இ.த்தை ஆராய்ந்து
மத் 15:19 கொலை, திருட்டு இ.த்திலிருந்தே
மத் 22:37 யெகோவாமேல் முழு இ.த்தோடும்
லூ 12:34 பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே இ.
லூ 21:34 உங்கள் இ. பாரமடையாதபடி
லூ 24:32 இ. கொழுந்துவிட்டு எரிந்தது
அப் 16:14 அவளுடைய இ.த்தை திறந்தார்
1யோ 3:20 நம் இ.த்தைவிட உயர்ந்தவர்
இயல்பு, ரோ 1:26 இ.க்கு மாறான உறவு
ரோ 1:27 ஆண்களும் இ.பான முறையில்
இயற்கைக்கு, லேவி 18:23 அது இ. முரணானது
யூ 7 இ. மாறான பாலியல்
இயேசு, மத் 1:21 அவருக்கு இ. என்று பெயர்
இரக்கமுள்ள, உபா 4:31 யெகோவா இ. கடவுள்
இரக்கம், 1நா 21:13 யெகோவா மகா இ.முள்ளவர்
நீதி 28:13 குற்றங்களை ஒத்துக்கொண்டால் இ.
ஏசா 55:7 யெகோவாவிடம் திரும்பினால் இ.
மத் 5:7 இ. காட்டுகிறவர்கள் சந்தோஷமானவர்கள்
மத் 9:13 பலியை அல்ல, இ.த்தை
லூ 6:36 இ.முள்ளவர்களாக இருங்கள்
யாக் 2:13 இ. நியாயத்தீர்ப்பை ஜெயிக்கும்
யாக் 5:11 யெகோவா இ. நிறைந்தவர்
இரண்டாம் மரணம், வெளி 2:11 இ. வராது
வெளி 20:6 இவர்கள்மேல் இ.த்துக்கு
வெளி 20:14 நெருப்பு ஏரி, இ.
இரண்டிரண்டு, லூ 10:1 இயேசு 70 பேரை, இ. பேராக
இரண்டு மனதாக, 1ரா 18:21 எத்தனை நாளைக்குத்தான் இ.
யாக் 1:8 அவன் இ. இருப்பவன்
இரத்தப்போக்கு, மத் 9:20 அப்போது, 12 வருஷம் இ.
இரத்தம், ஆதி 9:4 இ. சாப்பிடக் கூடாது
லேவி 7:26 எந்த இ.த்தையும் சாப்பிடக் கூடாது
லேவி 17:11 உயிரினங்களின் உயிர் இ.த்தில்
லேவி 17:13 இ.த்தை ஊற்றிவிட வேண்டும்
சங் 72:14 அவர்கள் இ. அருமையானது
மத் 26:28 ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் இ.
அப் 15:29 இ.த்துக்கு விலகியிருங்கள்
அப் 20:28 மகனின் இ.த்தால் வாங்கிய சபை
எபே 1:7 இ.த்தை மீட்புவிலையாகக் கொடுத்தார்

1பே 1:19 விலைமதிப்புள்ள இ.த்தால்
1யோ 1:7 இயேசுவின் இ. சுத்தமாக்கும்
இரவு, சங் 19:2 ஒவ்வொரு இ.விலும் அறிவை
ரோ 13:12 இ. முடியப்போகிறது
இரவு விருந்தை, 1கொ 11:20 எஜமானின் இ.
இருட்டில், மத் 4:15 இ. இருந்த ஜனங்கள்
இருண்ட, செப் 1:15 அது மங்கலான, இ. நாள்
இருண்டு, ஏசா 60:2 பூமி இ.போகும்
யோவே 2:31 சூரியன் இ.விடும்
எபே 4:18 மனம் இ. போயிருக்கிறது
இரும்பு, நீதி 27:17 இ.பை இ. கூர்மையாக்குவது போல
ஏசா 60:17 இ.க்குப் பதிலாக வெள்ளியை
தானி 2:43 களிமண்ணோடு இ. கலந்திருந்ததை
இரும்புக்கோலால், வெளி 12:5 இ. நொறுக்க
இருளிலிருந்து, 1பே 2:9 இ. அழைத்தவருடைய
இருளையே, யோவா 3:19 ஒளிக்குப் பதிலாக இ.
இலவசமாக, மத் 10:8 இ. பெற்றீர்கள், இ.
வெளி 22:17 விருப்பமுள்ளவர் இ. வாங்கி
இலைகள், எசே 47:12 அவற்றின் இ. மருந்தாக
மத் 24:32 இ. துளிர்க்க ஆரம்பித்ததுமே
இல்லாததையும், லேவி 19:16 இ. பொல்லாததையும்
இழுவலை, மத் 13:47 பரலோக அரசாங்கம், இ.
இளமை, யோபு 33:25 இ.யில் இருந்ததைவிட ஆரோக்கியம்
1கொ 7:36 இ. மலரும் பருவம்
இளைஞர்களுடைய, நீதி 20:29 இ. அழகு, பலம்
இளைஞனாக, 1தீ 4:12 இ. இருப்பதால் அற்பமாக
இறந்தவர்களின், லூ 20:38 அவர் இ. கடவுளாக
இறந்தவர்களுக்கு, பிர 9:5 இ. எதுவுமே தெரியாது
1தெ 4:13 இ. என்ன நடக்கும்
இறந்தவர்கள், 1தெ 4:16 கிறிஸ்துவின் சீஷர்களாக இ.
இறந்தாலும், யோவா 11:25 இ. உயிர்பெறுவான்
ரோ 14:8 இ. யெகோவாவுக்கு சொந்தம்
இறந்து, யோவா 11:26 விசுவாசம் வைக்கிற யாரும் இ.போகவே
2கொ 5:15 தங்களுக்காக இ. உயிரோடு
இறந்துபோகிறவர்கள், வெளி 14:13 எஜமானுடைய சீஷர்களாக இ.
இறுகிப்போகாதபடி, எபி 3:13 பாவத்தின் சக்தியால் இ.
இறுகிப்போய், மத் 13:15 ஜனங்களின் இதயம் இ.
இறைச்சி, நீதி 23:20 அதிகமாக இ. சாப்பிடுகிறவர்களோடு
1கொ 8:13 இ. தடைக்கல்லாக இருந்தால்
இனிமையாய், 2தீ 4:3 காதுகளுக்கு இ.
இனிமையானது, சங் 147:1 அவரைப் புகழ்வது இ.
இஸ்ரவேலர்களுக்கு, கலா 6:16 கடவுளுடைய இ. சமாதானம்
இஸ்ரவேல், ஆதி 35:10 இனிமேல் உன் பெயர் இ.
சங் 135:4 இ.லை விசேஷ சொத்தாக
இஷ்டத்துக்கு, நீதி 29:15 பிள்ளையை இ. விட்டால்
இஷ்டப்படி, 2பே 2:10 இ. நடக்கிறவர்கள்

ஈ

ஈசாக்கு, ஆதி 22:9 ஈ.கின் கை காலை கட்டி
ஈசாய், 1சா 17:12 ஈ.க்கு எட்டு மகன்கள்
ஏசா 11:1 ஈ. என்ற அடிமரத்திலிருந்து
ஈடாக, மத் 16:26 உயிருக்கு ஈ. எதை
ஈட்டியை, 1சா 18:11 தாவீதை கொல்ல ஈ.
ஈர்க்காவிட்டால், யோவா 6:44 தகப்பன் ஒருவனை ஈ.

உ

உசியா, 2நா 26:21 உ. ராஜா தொழுநோயாளி
உடம்பு, ஏசா 33:24 உ. சரியில்லை என்று
உடலாக, ஆதி 2:24 அவர்கள் ஒரே உ.
1கொ 15:44 பூமிக்குரிய உ. விதைக்கப்படுவது
உடலில், 1கொ 12:18 கடவுள் ஒவ்வொரு உறுப்பையும் உ.
உடலை, மத் 10:28 உ. கொல்ல முடிந்தாலும்
மத் 26:26 இது என் உ. குறிக்கிறது
லூ 12:4 உ. கொல்ல முடிந்தாலும்
ரோ 6:13 உ. கடவுளுக்கு அர்ப்பணியுங்கள்
ரோ 12:1 உ உயிருள்ள பலியாக
உடலோடு, 1கொ 15:50 உ. கடவுளின் அரசாங்கத்துக்குள்
உடல், யோபு 33:25 உ. இளமையில் இருந்ததைவிட
1கொ 7:4 உ.மீது அதிகாரம், மனைவிக்கு
உடுத்தியிருந்தாள், நீதி 7:10 விபச்சாரிபோல் உ.
உடை, ஆதி 3:21 நீளமான தோல் உ.களை
யாக் 2:15 சகோதரனுக்கோ சகோதரிக்கோ உ.
உடைந்த மனம், சங் 51:17 உ.தான் பிரியமான பலி
உடைந்து, சங் 34:18 உள்ளம் உ.போனவர்களின்
நீதி 18:14 மனம் உ.போகும்போது
உடைமைகள், லூ 14:33 உ. எல்லாவற்றையும் விட்டுவிட்டு
எபி 10:34 உங்களுடைய உ. பறிக்கப்பட்டபோது
உட்கார்ந்திரு, சங் 110:1 வலது பக்கத்தில் உ.
உணர்ச்சிகள், 1கொ 7:5 உ.ளைக் கட்டுப்படுத்த முடியாத
யாக் 5:17 நமக்கு இருக்கும் உ.தான் எலியாவுக்கும்
உணர்த்துங்கள், யோபு 6:24 என் தப்பை உ.
உணவால், மத் 4:4 உ. மட்டுமல்ல
உணவு, சங் 37:25 உ.க்காகக் கையேந்துவதை
சங் 145:15 அந்தந்த சமயத்தில் உ. தருகிறீர்கள்
மத் 24:45 ஏற்ற வேளையில் உ. கொடுக்க
யோவா 4:34 வேலையை முடிப்பதே என் உ.வாக
யோவா 6:27 அழிந்துபோகும் உ.க்காக அல்ல
யோவா 6:35 வாழ்வு தரும் உ. நான்தான்
யோவா 21:17 என் ஆட்டுக்குட்டிகளுக்கு உ.
உணவை, நெ 9:15 வானத்திலிருந்து உ.
தானி 1:5 தான் சாப்பிடுகிற அதே உ.
மத் 6:11 இன்றைக்குத் தேவையான உ.
அப் 14:17 மழையையும், ஏராளமான உ.யும்
உண்டானதுமுதல், மத் 25:34 உலகம் உ. உங்களுக்காக
உண்மை, எபே 4:25 ஒவ்வொருவரும் உ. பேசுங்கள்
உண்மைத்தன்மை, மீ 6:8 உ.யை நெஞ்சார நேசித்து
உண்மையாக, யோசு 23:8 யெகோவாவுக்கு உ.
சங் 16:10 உங்களுக்கு உ. இருப்பவரை
ஆப 2:4 உ. இருப்பதன் மூலம்
லூ 16:10 சின்ன விஷயத்தில் உ.
உண்மையான, யோவா 17:3 ஒரே உ. கடவுளாகிய
பிலி 4:8 உ.வை எவையோ
1தீ 6:19 உ. வாழ்வை உறுதியாக
உண்மையுள்ள, 1சா 2:9 உ.வர்களின் ஒவ்வொரு அடியையும்
2சா 22:26 உ.வரிடம் நீங்கள் உ.வராக
லூ 16:10 சின்ன விஷயத்தில் உ.வனாக
உண்மையை, சங் 15:2 இதயத்தில் உ. பேசுகிறவன்
உண்மையோடு, 1கொ 4:2 நிர்வாகிகள் உ.
வெளி 2:10 சாகும்வரை உ.
உதடு, நீதி 10:19 உ.களை அடக்குகிறவன் விவேகமாக
ஓசி 14:2 எங்கள் உ.களால் புகழை
எபி 13:15 உ.களின் கனியைப் பலி
உதட்டளவில், ஏசா 29:13 உ. புகழ்கிறார்கள்
உதவி ஊழியர்கள், 1தீ 3:8 உ. பொறுப்புடன்
உதாரணங்களாக, 1கொ 10:6 இவை நமக்கு உ.
உத்தம, யோபு 27:5 சாகும்வரை உ.த்தை விட மாட்டேன்
சங் 26:11 நான் உ.மாக நடப்பேன்
சங் 101:2 வீட்டுக்குள்ளே உ. இதயத்தோடு
உத்தரவாதத்தை, அப் 17:31 உயிர்த்தெழுப்பியதன் மூலம் உ.
உத்தரவாதமாக, 2கொ 1:22 ஆஸ்திக்கு உ. சக்தியை
எபே 1:14 ஆஸ்தியைப் பெறுவதற்கு உ.
உபசரி, ரோ 12:13 உ.ப்பதைப் பழக்கமாக்கி
1பே 4:9 முணுமுணுக்காமல் உ.யுங்கள்
3யோ 8 அப்படிப்பட்டவர்களை உ.க்கும் கடமை
உபசரிக்கும் குணம், தீத் 1:7, 8 கண்காணி உ.முள்ளவராக
எபி 13:2 உ.த்தை காட்ட மறந்துவிடாதீர்கள்
உபத்திரவம், மத் 24:21 மிகுந்த உ. உண்டாகும்
அப் 14:22 அரசாங்கத்துக்குள் போக உங்களை
ரோ 5:3 உ. சகிப்புத்தன்மையை
ரோ 12:12 உ.த்தில் சகித்திருங்கள்
1கொ 7:28 திருமணம் செய்தால் உ.ங்கள்

2கொ 4:17 நமக்கு வரும் உ. லேசானது
வெளி 7:14 மிகுந்த உ.த்திலிருந்து தப்பித்தவர்கள்
உப்பு, ஆதி 19:26 உடனே உ. சிலையானாள்
மத் 5:13 நீங்கள் பூமிக்கு உ.
உயர்குடியில், 1கொ 1:26 உ. பிறந்தவர்களாகவோ
உயர்ந்தவர், 1யோ 3:20 கடவுள் நம் இதயத்தைவிட உ.
உயர்ந்தவர்களாக, பிலி 2:3 மற்றவர்களை உ.
உயர்வாக, பிலி 2:29 சகோதரர்களை உ. மதியுங்கள்
1தெ 5:13 அவர்களை மிக உ. கருதி
உயிருள்ள, தானி 6:26 அவர்தான் உ. கடவுள்
உயிருள்ளவர்களின், லூ 20:38 அவர் உ. கடவுள்
உயிரை, லூ 9:24 உ. காப்பாற்றிக்கொள்ள
லூ 23:46 என் உ. உங்கள் கைகளில்
உயிரோடிருப்பவர்கள், 1தெ 4:15 நம்மில் உ.
உயிரோடு, யோபு 14:14 மனுஷன் செத்த பின்பு உ.
யோவா 6:39 கடைசி நாளில் உ. எழுப்ப
அப் 2:24 கடவுள் அவரை உ. எழுப்பினார்
அப் 24:15 நீதிமான்களும் அநீதிமான்களும் உ.
1கொ 15:13 இறந்தவர்கள் உ. எழுப்பப்பட
உயிர், சங் 31:5 என் உ.ரை உங்கள் கையில்
சங் 36:9 உ.ரின் ஊற்று நீங்கள்தான்
யோவா 5:26 உ. கொடுக்கும் வல்லமை தகப்பனுக்கு
அப் 20:24 என் உ. எனக்கு முக்கியமல்ல
எபி 4:12 கடவுளுடைய வார்த்தைக்கு உ.
உயிர்சக்தி, சங் 146:4 உ. போய்விடுகிறது, அவர்கள் மண்ணுக்கு
பிர 12:7 உ. கடவுளிடமே திரும்பிவிடும்
உயிர்த்தெழுதல், மத் 22:23 உ. இல்லை என்று சதுசேயர்கள்
யோவா 11:24 உ. நடக்கும்போது அவன்
யோவா 11:25 நானே உ.லும்
உயிர்த்தெழுப்ப, யோவா 5:29 வாழ்வு பெறும்படி உ.
உயிர்ப்பிக்கப்பட்டார் , 1பே 3:18 பரலோகத்துக்குரிய உடலில் உ.
உயிர்மூச்சை, ஆதி 2:7 மூக்கில் உ. ஊதினார்
உரிமை, எரே 10:23 தன் வழியைத் தீர்மானிக்கும் உ.
உரிமைக்காரர், எசே 21:27 உ. வரும்வரை
உருகி, மத் 20:34 இயேசு மனம் உ.
உருகியது, மத் 9:36 அவருடைய மனம் உ.
உருண்டை, ஏசா 40:22 உ.யான பூமிக்கு மேலே
உருவங்களையும், யாத் 20:4 உ., சிலைகளையும் உண்டாக்கக் கூடாது
உருவத்தில், யோவா 4:24 கடவுள் பார்க்க முடியாத உ.
உலகச் சிந்தை, 1கொ 2:14 உ.யுள்ள மனிதன்
கொலோ 2:18 உ.யால் வீண் பெருமை
உலகத்தின், யோவா 15:19 உ. பாகமாக இருந்திருந்தால்
யோவா 17:16 இவர்களும் உ. பாகமாக
1யோ 2:15 உ. மீது அன்பு வைக்காதீர்கள்
உலகத்தை, லூ 9:25 உ. சம்பாதித்தாலும், உயிரை இழந்தால்
உலகமும், 1யோ 2:17 உ. அதன் ஆசையும் ஒழிந்து
உலுக்குவேன், ஆகா 2:7 எல்லா தேசங்களையும் உ.
உவமைகள், மத் 13:34 உ. மூலமாக இயேசு சொன்னார்
மாற் 4:2 உ.ளால் கற்பிக்க ஆரம்பித்தார்
உழைக்க, எபே 4:28 திருடாமல், உ. வேண்டும்
உழைக்கும், நீதி 10:4 கடினமாக உ. கைகள்
உழைப்பால், பிர 2:24 கடின உ. வரும் சந்தோஷத்தை
உளறுகிறவர்களாக, 1கொ 14:9 உ.த்தான் இருப்பீர்கள்
உள்நோக்கத்தை, நீதி 16:2 உ. யெகோவா ஆராய்கிறார்
உள்ளப்பூர்வமாக, யாத் 35:5 உ. காணிக்கை கொடுக்க
உள்ளம், ஆதி 8:21 உ.த்தின் ஆசைகள் மோசமாக
யாத் 36:2 யாருடைய உ. தூண்டியதோ
சங் 51:17 உடைந்த உ.த்தை ஒதுக்கித்தள்ள
நீதி 17:22 சந்தோஷமான உ. மருந்து
நீதி 17:25 புத்தியில்லாத மகன் அம்மாவின் உ.த்தை
எரே 31:33 அவர்கள் உ.த்தில் என் சட்டங்களை
மத் 26:41 உ. ஆர்வமாக இருக்கிறது
2கொ 4:16 நம் உ. புதுப்பிக்கப்பட்டு
உள்ளம் உடைந்து, சங் 34:18 உ.போனவர்களின் பக்கத்தில்
சங் 147:3 உ.தவர்களைக் குணமாக்குகிறார்
உள்ளறை, ஏசா 26:20 ஜனங்களே, உ.களுக்கு
உறுதியாக, உபா 10:20 யெகோவாவை உ. பிடித்துக்கொள்ள
யோசு 1:7 தைரியமாக, ரொம்பவே உ.
ரோ 12:9 நல்லதை உ. பிடித்துக்கொள்ளுங்கள்
உறுதியானவர்களாகவும், 1கொ 15:58 உ. அசைக்க
உறுதியோடு, 1கொ 1:8 முடிவுவரை உ. இருக்க
உறுப்பு, ரோ 12:4 எல்லா உ.களும் ஒரே வேலையை
1கொ 12:18 கடவுள் ஒவ்வொரு உ.பையும்
உற்சாகப்படுத்த, எபி 10:25 ஒன்றுகூடிவந்து உ.
உற்சாகப்படுத்தி, எபி 10:24 அன்பு காட்ட உ.
உற்சாகப்படுத்து, அப் 13:15 உ.வதற்கு ஏதாவது
உற்சாகம், ரோ 1:12 ஒருவருக்கொருவர் உ. பெற
1கொ 14:31 கற்றுக்கொண்டு, உ. பெற
உன்னதப் பேரரசர், சங் 73:28 உ.ரான யெகோவா
அப் 4:24 உ.ரே, பூமியையும் கடலையும்
உன்னதமான, சங் 83:18 யெகோவா உ. கடவுள்
தானி 4:17 உ. கடவுள்தான் ராஜா
உன்னிப்பாக, 2நா 16:9 யெகோவாவின் கண்கள் உ.

ஊ

ஊக்கமாகவும், 1பே 1:10 **ஊ**. கவனமாகவும் அலசி
ஊக்குவித்து, 2கொ 5:11 மக்களை **ஊ**. வருகிறோம்
ஊதாரித்தனமாக, லூ 15:13 சொத்துகளை **ஊ**.
ஊரீம் தும்மீம், யாத் 28:30 மார்ப்பதக்கத்தில் **ஊ**.
ஊர்வலத்தில், 2கொ 2:14 வெற்றி **ஊ**. நடத்தி
ஊழல், தானி 6:4 தானியேல் **ஊ**. செய்யாதவர்
ஊழியத்தில், 2கொ 6:3 **ஊ**. குறை கண்டுபிடிக்க
ஊழியத்தை, அப் 20:24 **ஊ**. முடிப்பதுதான் முக்கியம்
ரோ 11:13 என் **ஊ**. மகிமைப்படுத்துகிறேன்
2கொ 4:1 **ஊ**. இரக்கத்தால் பெற்ற
2தீ 4:5 **ஊ**. முழுமையாக முடி
ஊழியர், ஏசா 42:1 இவர்தான் என் **ஊ**.
ஏசா 65:13 என் **ஊ**.கள் சாப்பிடுவார்கள்
2கொ 3:6 **ஊ**.களாகப் போதிய தகுதியை
2கொ 6:4 கடவுளுடைய **ஊ**.களாகச் சிபாரிசு
ஊற்றி, சங் 62:8 இதயத்தை **ஊ**.விடுங்கள்
ஊற்று, சங் 36:9 உயிரின் **ஊ**. நீங்கள்தான்
ஊனமானவர்கள், மத் 15:31 **ஊ**. குணமானதையும்

எ

எகிப்திலிருந்து, மத் 2:15 எ. என் மகனை
எசேக்கியா, 2ரா 19:15 [எ.] இப்படி ஜெபம் செய்தார்
எச்சரித்தும், எசே 33:9 பொல்லாதவனை எ., அவன்
எச்சரிப்பு, எசே 3:17 எ. செய்தி சொல்ல
எசே 33:4 எ.பை அசட்டை செய்தால்
1கொ 10:11 நம்மை எ.பதற்காக எழுதப்பட்டன
எண்ணங்கள், ஆதி 6:5 உள்ளத்தின் எ.ளும் ஆசைகளும்
2கொ 10:5 எல்லா எ.ளையும் கிறிஸ்துவுக்கு
எண்ணத்தை, வெளி 17:17 கடவுள் தன் எ.
எண்ணத்தோடு, எபே 6:7 நல்ல எ. வேலை செய்யுங்கள்
எண்ணாமல், ரோ 12:3 அளவுக்கு அதிகமாக எ.
எண்ணெயை, மத் 25:4 புத்தியுள்ளவர்கள் எ.
மாற் 14:4 இந்த வாசனை எ. ஏன்
எதிராக, அப் 17:7 ரோம அரசனின் கட்டளைக்கு எ.
எதிரி, ரோ 12:20 எ. பசியாக இருந்தால்
எதிரிகள், சங் 110:2 எ.ளின் நடுவே ஆட்சி
மத் 5:44 எ.ளிடம் அன்பு காட்டுங்கள்
மத் 10:36 குடும்பத்தாரே எ.ளாக
எதிர்காலத்தில், பிர 7:14 எ. என்ன நடக்குமென்று
எதிர்காலமே, நீதி 24:20 அக்கிரமம் செய்கிறவனுக்கு எ.
எதிர்க்க, ரோ 8:31 யாரால் நம்மை எ. முடியும்?
எதிர்பாராத, பிர 9:11 எ. நேரத்தில் எ.
எதிர்பார்த்ததை, யோபு 23:12 எ.விட அதிகமாகவே
எதிர்பார்த்து, லூ 3:15 மக்கள் கிறிஸ்துவை எ.
எதிர்பார்ப்பு, நீதி 13:12 எ. நிறைவேற தாமதமானால்
எதிர்ப்பின், 1தெ 2:2 எ. மத்தியில் தைரியம்

எதிர்ப்பு காட்டுகிறவர்களோடு, நீதி 24:21 எ. சேராதே
எத்தியோப்பிய, அப் 8:27 எ. அதிகாரி ஒருவர்
எந்தளவுக்கு, 2பே 3:11 எ. பரிசுத்த நடத்தை
எபேசு, 1கொ 15:32 எ.வில் கொடிய மிருகங்களோடு
எப்பிக்கூரர்கள், அப் 17:18 எ. ஸ்தோயிக்கர்கள்
எயோதியா, பிலி 4:2 எ.ளையும் சிந்திகேயாளையும்
எரிச்சலூட்டாதீர்கள், எபே 6:4 பிள்ளைகளுக்கு எ.
எரிச்சல், 1கொ 13:5 எ. அடையாது
கொலோ 3:21 பிள்ளைகளுக்கு எ. உண்டாக்காதீர்கள்
எரிச்சல்பட்டு, சங் 37:8 எ. தப்பு செய்துவிடாதே
எருசலேம், யோசு 18:28 எபூசி, அதாவது எ.
தானி 9:25 எ.மைப் புதுப்பித்துக் கட்ட
மத் 23:37 எ.மே, எ.மே
லூ 21:20 எ.மைப் படைகள் சுற்றிவளை
லூ 21:24 எ. மற்ற தேசத்தாரால் மிதிக்க
அப் 5:28 எ. முழுவதையும் போதனையால்
கலா 4:26 மேலான எ. சுதந்திரமாக
எபி 12:22 பரலோக எ.மையும்
வெளி 3:12 புதிய எ.மின் பெயரையும்
வெளி 21:2 புதிய எ.மாகிய பரிசுத்த நகரம்
எரேமியா, எரே 38:6 எ.வை கிணற்றுக்குள்
எலியா, யாக் 5:17 எ. நம்மைப் போன்ற
எலும்பு, ஆதி 2:23 என் எ.பின் எ.
நீதி 25:15 மென்மையான நாவு எ.பை நொறுக்கும்
எலும்புகள், 2ரா 13:21 எலிசாவின் எ.மீது பட்டவுடன்
எரே 20:9 நெருப்பை எ.ளுக்குள் அடைத்து
யோவா 19:36 அவருடைய எ.ளில் ஒன்றுகூட
எல்லை, சங் 119:96 உங்கள் கட்டளைகளுக்கு எ.யே
1தெ 4:6 யாரும் எ. மீறிப் போய்
எழுதப்பட்ட, ரோ 15:4 அன்று எ. வேதவசனங்கள்
1கொ 4:6 எ. விஷயங்களுக்கு மிஞ்சி
எழுப்புவதற்காக, யோவா 11:11 அவனை எ. போகப்போகிறேன்
எளியவர்களுக்கு, ஏசா 57:15 எ. புத்துயிர் அளிக்கிறேன்
எளியவர்களை, 1சா 2:8 எ. புழுதியிலிருந்து எழுப்பி
எறும்புகள், நீதி 30:25 கோடையில் உணவு சேர்க்கும் எ.
எறும்பை, நீதி 6:6 சோம்பேறியே, எ. பார்
என்றென்றும், ஆதி 3:22 சாப்பிட்டு எ. வாழாதபடி
சங் 37:29 நீதிமான்கள் எ. வாழ்வார்கள்
பிர 3:11 எ. வாழும் எண்ணத்தை
1பே 1:25 யெகோவாவின் வார்த்தை எ.
எஜமான், உபா 10:17 யெகோவா எ.களுக்கெல்லாம் எ.
மத் 6:24 யாராலும் இரண்டு எ.களுக்கு
மத் 9:38 அறுவடையின் எ.னிடம்
மத் 22:44 யெகோவா என் எ.னிடம்
ரோ 6:14 பாவம் உங்கள் எ.னாக
1கொ 7:39 நம் எ.னைப் பின்பற்றுகிற
1கொ 8:5 நிறைய எ.கள் இருந்தாலும்
கொலோ 4:1 உங்கள் எ. பரலோகத்தில்
எஸ்றா, எஸ்றா 7:11 குருவாகிய எ.வுக்கு

ஏ

ஏக்கத்தை, 1பே 2:2 பாலுக்காக ஏ. வளர்த்து
ஏக்கமாக, யோபு 14:15 என்னைப் பார்க்க ஏ. இருப்பீர்கள்
ஏங்கி, சங் 84:2 பிரகாரங்களுக்குப் போக ஏ.
ஏங்குகிறது, ஏசா 26:9 என் உள்ளம் உங்களை நினைத்து ஏ.
ஏங்குகிறேன், பிலி 1:8 உங்கள் எல்லாரையும் பார்க்க ஏ.
ஏசா, ஆதி 25:34 மூத்த மகனின் உரிமையை ஏ.
எபி 12:16 ஏ.வைப் போல் பரிசுத்த காரியங்களை
ஏதேதோ, யோபு 6:3 வேதனை தாங்க முடியாமல் ஏ.
ஏதேனில், ஆதி 2:8 ஏ. ஒரு தோட்டம்
ஏமாந்துவிடாதீர்கள், கலா 6:7 ஏ. எதை விதைக்கிறானோ
ஏமாற்றம், ரோ 5:5 நம்பிக்கை ஏ. தராது
ரோ 9:33 விசுவாசம் வைக்கிறவன் ஏ.
ஏமாற்றுக்காரனை, நீதி 3:32 ஏ. யெகோவா அருவருக்கிறார்
ஏமாற்றுவதற்கு, மத் 24:24 தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக்கூட ஏ.
ஏராளமான, லூ 12:15 ஏ. சொத்து வாழ்வைத் தராது
ஏரியில், வெளி 19:20 கந்தகம் எரிகிற நெருப்பு ஏ.
ஏலி, 1சா 1:3 ஏ.யின் மகன்கள் குருமார்களாக
ஏழைகள், சங் 9:18 ஏ. மறக்கப்பட மாட்டார்கள்
சங் 69:33 ஏ.ளுடைய ஜெபத்தை
லூ 4:18 ஏ.ளுக்கு நல்ல செய்தி
யோவா 12:8 ஏ. எப்போதும் உங்களோடு
ஏழைக்கு, சங் 41:1 ஏ. கரிசனையோடு உதவுகிறவன்
ஏழையானார், 2கொ 8:9 கிறிஸ்து உங்களுக்காக ஏ.
ஏறிப் போனதில்லை, யோவா 3:13 பரலோகத்துக்கு ஏ.
ஏற்ற விதத்தில், கொலோ 1:10 யெகோவாவுக்கு ஏ. நடந்து
ஏற்றுக்கொள், லூ 3:22 நான் உன்னை ஏ.கிறேன்
ரோ 14:1 பலவீனமாக இருப்பவனை ஏ.ளுங்கள்
ஏனோக்கு, ஆதி 5:24 ஏ. கடவுள் வழியில் நடந்தார்
ஏனோதானோ, எரே 48:10 யெகோவாவின் வேலையை ஏ.

ஒ

ஒடுக்கியவர், பிர 4:1 ஒ.களுக்கு அதிகாரம்
ஒடுக்குதல், பிர 7:7 ஒ. ஞானமுள்ளவரைக்கூட
ஒட்டகம், மத் 19:24 ஊசியின் காதுக்குள் ஒ.
ஒதுக்கப்படாதபடி, 1கொ 9:27 எந்த விதத்திலும் ஒ.
ஒதுக்கப்பட்டார், ஏசா 53:3 ஜனங்களால் வெறுத்து ஒ.
ஒதுக்கித்தள்ளி, தீத் 1:16 செயல்களால் கடவுளை ஒ.
ஒதுக்கினார்கள், எரே 8:9 யெகோவாவின் வார்த்தையை ஒ.
ஒத்துக்கொண்டால், நீதி 28:13 குற்றங்களை ஒ. இரக்கம்
1கொ 7:5 இருவரும் ஒ. மட்டுமே
ஒத்துக்கொண்டேன், சங் 32:5 பாவத்தை ஒ.
ஒத்துக்கொள்ளுங்கள், யாக் 5:16 பாவங்களை ஒ.
ஒப்படைத்தார், 1பே 2:23 தீர்ப்பு கொடுக்கிறவரிடம் ஒ.
ஒப்படைப்பார்கள், லூ 16:11 உண்மையான செல்வங்களை ஒ.
1பே 4:19 படைப்பாளரிடம் தங்களை ஒ.ளாக
ஒப்பந்தம், ஆதி 15:18 ஆபிராமுடன் யெகோவா ஒ.
எரே 31:31 புதிய ஒ. செய்வேன்
லூ 22:20 இரத்தத்தின் அடிப்படையில் புதிய ஒ.
லூ 22:29 நானும் உங்களோடு ஒரு ஒ.
ஒப்பிடுவீர்கள், ஏசா 46:5 என்னை யாரோடு ஒ.?
ஒப்பிட்டு, கலா 6:4 மற்றவனோடு தன்னை ஒ.
ஒருபோதும், யோவா 1:18 கடவுளை ஒருவரும் ஒ.
ஒருமனதாக, அப் 15:26 ஒ. தீர்மானித்தோம்
ஒரே உள்ளத்தோடும், பிலி 2:2 ஒரே சிந்தையோடும் ஒ.
ஒரே கடவுள், 1கொ 8:6 ஒ.தான் இருக்கிறார்
ஒரே மகன், யோவா 1:18 அவருடைய ஒ.னே
யோவா 3:16 தன்னுடைய ஒ.மேல்
ஒலிவ மர, சங் 52:8 செழிப்பான ஒ.த்தை
ரோ 11:17 காட்டு ஒ. கிளைகள்
ஒலிவ மலை, லூ 22:39 ஒ.க்குப் போனார்
அப் 1:12 ஒ., எருசலேமுக்குப் பக்கத்தில்
ஒழுக்க, எபே 4:19 ஒ. உணர்வு துளிகூட
ஒழுங்கீனமாக, 1தெ 5:14 ஒ. இருப்பவர்களை எச்சரியுங்கள்
2தெ 3:6 ஒ. நடக்கிற சகோதரனை
ஒழுங்குள்ளவராக, 1தீ 3:2 கண்காணி ஒ.
ஒளி, சங் 36:9 உங்களுடைய ஒ.யால் நாங்கள்
ஏசா 42:6 தேசங்களுக்கு ஒ.யாக
மத் 5:14 நீங்கள் உலகத்துக்கு ஒ.யாக
மத் 5:16 ஒ.யை மனுஷர்களுக்கு முன்னால்
யோவா 8:12 நான் இந்த உலகத்துக்கு ஒ.
ஒளிவீசிக்கொண்டு, பிலி 2:15 விளக்குகளாக ஒ.
ஒற்றுமையை, எபே 4:3 ஒ. காத்துக்கொள்ள
ஒன்றுக்கும் உதவாத, லூ 17:10 ஒ. அடிமைகள்
ஒன்றுபட்டு, எபே 4:13 விசுவாசத்தில் ஒ.
1யோ 3:6 அவரோடு ஒ.டிருக்கிற யாரும்

ஓ

ஓடிக்கொண்டிருந்தீர்கள், கலா 5:7 நன்றாக ஓ.
ஓடுகிறவர்கள், பிர 9:11 வேகமாக ஓ. எல்லா சமயத்திலும்
ஓடுங்கள், 1கொ 9:24 பரிசு பெறும் விதத்தில் ஓ.

ஓட்டத்தை, அப் 20:24 **ஓ.** முடிப்பதுதான்
2தீ 4:7 என் **ஓ.** கடைசிவரை
ஓநாய், ஏசா 11:6 **ஓ.** செம்மறியாட்டுக் குட்டியோடு
மத் 7:15 செம்மறியாட்டுத் தோல் போர்த்திய **ஓ.**கள்
லூ 10:3 **ஓ.**கள் நடுவில் ஆட்டுக்குட்டிகளை
அப் 20:29 **ஓ.** போன்ற ஆட்கள்
ஓய்வுகாலம், எபி 4:9 கடவுளுடைய மக்களுக்கு **ஓ.**
ஓய்வுநாள், யாத் 20:8 **ஓ.**ளை மறந்துவிடாதீர்கள்
மத் 12:8 மனிதகுமாரன் **ஓ.**ளுக்கு
மாற் 2:27 மனுஷனுக்காகத்தான் **ஓ.**
லூ 14:5 **ஓ.**ளில் காளை கிணற்றில் விழுந்தால்
கொலோ 2:16 **ஓ.** பற்றி குற்றப்படுத்தாமல்
ஓய்வெடு, லூ 12:19 **ஓ.**, சாப்பிட்டுக் குடித்து
ஓய்வெடுப்பாய், தானி 12:13 அதன்பின் **ஓ.**
ஓரத்தில், லேவி 23:22 வரப்பு **ஓ.** உள்ள கதிர்களை

க

கஞ்சத்தனம், உபா 15:7 **க.** காட்டாதீர்கள்
கஞ்சன், நீதி 23:6 **க.** தரும் உணவை
கடத்தியவன், உபா 24:7 **க.** கொல்லப்பட வேண்டும்
கடமை, பிர 12:13 மனுஷனின் முக்கியமான **க.**
1யோ 3:16 உயிரைக் கொடுக்கக் **க.**ப்பட்டு
கடலை, யாத் 14:21 **க.** இரண்டாகப் பிளந்தார்
ஏசா 57:20 கெட்டவர்கள் கொந்தளிக்கிற **க.**
கடவுளின் வார்த்தை, ஏசா 40:8 **க.**யோ என்றென்றும்
கடவுளுடைய சக்தி, லூ 1:35 **க.** உன்மேல் வரும்
லூ 3:22 **க.** புறா வடிவில்
அப் 1:8 **க.** வரும்போது
அப் 2:4 **க.**யால் நிரப்பப்பட்டார்கள்
எபே 4:30 **க.**யைத் துக்கப்படுத்தாமல்
2தீ 3:16 வேதவசனங்கள் **க.**யின்
கடவுளுடைய வார்த்தை, மாற் 7:13 **க.**யை மதிப்பற்றதாக்கி
1தெ 2:13 **க.**யாக ஏற்றுக்கொண்டீர்கள்
எபி 4:12 **க.**க்கு உயிர்
கடவுளே, மத் 27:46 என் **க.**, என் **க.**, ஏன்
கடவுளைவிட்டு விலகியவன், நீதி 11:9 **க.** அடுத்தவர்களைச் சீரழிக்கிறான்
கடவுள், யோவா 1:18 **க.**ளை ஒருவரும் பார்த்ததில்லை
யோவா 17:3 ஒரே உண்மையான **க.**ளாகிய
யோவா 20:17 நான் என் **க.**ளிடமும் உங்கள்
1கொ 8:4 ஒரே **க.**ளைத் தவிர வேறு **க.**
2கொ 4:4 இந்த உலகத்தின் **க.**
எபே 4:6 ஒரே **க.**ளும் தகப்பனும்
1யோ 4:8 **க.** அன்பாகவே இருக்கிறார்
கடவுள்பக்தி, 1தீ 4:7 **க.** காட்டுவதைக் குறிக்கோளாக
1தீ 6:6 **க.** மிகுந்த ஆதாயம் தரும்
2தீ 3:12 **க.**யோடு வாழ விரும்புகிற
கடன், சங் 37:21 **க.** வாங்கிவிட்டுத் திருப்பிக்கொடுக்காமல்
நீதி 11:15 **க.**னுக்குப் பொறுப்பு ஏற்கிறவன்
நீதி 19:17 யெகோவாவுக்குக் **க.** கொடுக்கிறான்
நீதி 22:7 **க.** வாங்கியவன் கடன் கொடுத்தவனுக்கு
மத் 6:12 எங்கள் **க.**களை மன்னியுங்கள்
லூ 6:35 எதிர்பார்க்காமல் **க.** கொடுங்கள்
1கொ 7:3 மனைவிக்குக் கொடுக்க வேண்டிய **க.**னை
1கொ 7:5 ஒருவருக்கொருவர் கொடுக்க வேண்டிய **க.**னை
கடன்படாதீர்கள், ரோ 13:8 யாருக்கும் **க.**
கடன்பட்டிருக்கிறேன், ரோ 1:14 நான் **க.**
கடித்து, கலா 5:15 ஒருவரை ஒருவர் **க.** குதறினால்
கடின உழைப்பு, நீதி 12:27 **க.** பொக்கிஷமாக
கடினமாக உழைக்கிறவனுடைய, நீதி 21:5 **க.** திட்டங்கள்
கடுகடுப்பாக, நீதி 15:1 **க.** பேசுவது கோபத்தை
கொலோ 3:19 மனைவியிடம் **க.** நடக்காதீர்கள்
கடுகு, லூ 13:19 **க.** விதையைப் போல்
கடுமையாக, 1தீ 5:1 வயதான ஆண்களிடம் **க.** பேசாதே
கடைசிக் கட்டம், மத் 28:20 சகாப்தத்தின் **க.**வரை
கடைசி நாட்களில், ஏசா 2:2 **க.** இப்படி நடக்கும்
2தீ 3:1 **க.** சமாளிக்க முடியாத
கடைப்பிடிக்கும்படி, மத் 28:20 எல்லாவற்றையும் **க.**
கட்ட, உபா 25:4 மாட்டின் வாயைக் **க.**
சங் 127:1 வீட்டைக் **க.**வில்லையென்றால்
கட்டளை, மத் 22:40 இரண்டு **க.**கள்தான் திருச்சட்டத்துக்கு
மாற் 12:28 முதலாவது **க.** எது?
மாற் 12:31 இவற்றைவிட முக்கியமான **க.**
யோவா 13:34 அன்பு காட்ட புதிய **க.**
கட்டளையிட்ட, மத் 28:20 நான் உங்களுக்குக் **க.**
கட்டி, ஏசா 65:21 வீடுகளைக் **க.** அதில்
கட்டிக்கொண்டும், லூ 17:28 நட்டுக்கொண்டும் **க.**
கட்டு, எசே 34:16 காயப்பட்டதுக்குக் **க.** போடுவேன்
கட்டுப்படுத்தி, 2கொ 10:5 எல்லா எண்ணங்களையும் **க.**
கட்டுப்படுத்துகிறவனே, நீதி 16:32 கோபத்தைக் **க.**
கட்டுப்படுத்துவதற்காக, 1கொ 7:35 உங்களைக் **க.** அல்ல
கட்டுப்பட்டு, லூ 2:51 தொடர்ந்து **க.** நடந்தார்
ரோ 13:1 அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்கு **க.**
1பே 2:13 எஜமானை முன்னிட்டு **க.**
கட்டும், 1கொ 3:10 **க.** விதத்தைக் குறித்து
கணக்கு, லூ 14:28 செலவைக் **க.** பார்க்காமல்
ரோ 14:12 நாம் **க.** கொடுக்க வேண்டும்
1கொ 13:5 தீங்கை **க.** வைக்காது,
கணவருக்கு, கொலோ 3:18 மனைவிகளே, **க.** கட்டுப்பட்டு
கணவர்களே, எபே 5:25 **க.**, மனைவிமீது அன்பு
கணவன், 1கொ 7:2 சொந்த **க.**னோடு வாழட்டும்
1கொ 7:14 விசுவாசியாக இல்லாத **க.**
கண், சங் 115:5 [சிலைக்கு] **க.**கள் இருக்கின்றன
நீதி 15:3 யெகோவாவின் **க.**கள் எங்கும்
மத் 5:38 கண்ணுக்குக் **க.**
மத் 6:22 **க.**தான் உடலுக்கு விளக்கு
1கொ 2:9 **க.**கள் பார்க்கவும் இல்லை
1கொ 12:21 **க.** கையைப் பார்த்து
கண்காணி, அப் 20:28 கடவுளுடைய சக்தி, **க.**களாக
1தீ 3:1 **க.**யாவதற்கு முயற்சி செய்கிற
1பே 2:25 உயிரைப் பாதுகாக்கிற **க.**யாக
1பே 5:2 **க.**களாகச் சேவை செய்து
கண்டித்த, நீதி 29:1 **க.** பிறகும் பிடிவாதம் பிடிக்கிறவன்
கண்டித்தாலும், சங் 141:5 **க.**, அது எண்ணெய் போல
கண்டித்து, நீதி 19:18 மகனைக் **க.** திருத்து
வெளி 3:19 பாசத்துக்குரியவர்களை **க.**
கண்டிப்பதே, நீதி 27:5 வெளிப்படையாகக் **க.**
கண்டிப்புடன், அப் 5:28 கற்பிக்கக் கூடாதென்று **க.**
கண்டிப்பும், எபி 12:11 எந்தக் **க.** அந்தச் சமயத்தில்
கண்டிப்பை, பிர 7:5 ஞானமுள்ளவரின் **க.**
கண்ணாடி, 1கொ 13:12 உலோகக் **க.**யில்
2கொ 3:18 **க.**போல் பிரதிபலிக்கிறோம்
யாக் 1:23 **க.**யில் தன் முகத்தை
கண்ணி, சங் 91:3 வேடனுடைய **க.**யிலிருந்தும்
நீதி 29:25 மனித பயம், **க.**
லூ 21:34, 35 அந்த நாள் **க.**யைப் போல்
கண்ணிமைக்கும், 1கொ 15:52 **க.** நேரத்தில்
கண்ணியமாக, ரோ 13:13 **க.** நடக்க வேண்டும்
1கொ 14:40 **க.**வும் ஒழுங்காகவும் நடக்க
கண்ணியமான, 2தீ 2:20 பாத்திரங்கள், **க.** காரியத்துக்காக
கண்ணீர், சங் 6:6 என் படுக்கையைக் **க.**ரால்
சங் 126:5 **க.**ரோடு விதைக்கிறவர்கள்
பிர 4:1 ஒடுக்கப்பட்டவர்களின் **க.**ரை
அப் 20:19 **க.**ரோடு ஊழியம் செய்தேன்
அப் 20:31 **க.**ரோடு புத்தி சொன்னதை
எபி 5:7 கிறிஸ்து **க.**விட்டுக் கதறி
வெளி 21:4 அவர்களுடைய **க.**ரையெல்லாம்
கண் தெரியாத, லேவி 19:14 **க.**வனைத் தடுக்கி விழ
ஏசா 35:5 **க.**வர்களுக்குக் கண் தெரியும்
கண்மணி, சங் 17:8 **க.**போல் என்னை
சக 2:8 உங்களைத் தொடுகிறவன் என் **க.**யை
கண்மருந்து, வெளி 3:18 கண்களில் பூச **க.**

கண்மூடித்தனமாக, நீதி 14:16 முட்டாள் **க.**
கதவு, யோவா 20:19 **க.**களைப் பூட்டியிருந்தாலும், இயேசு
1கொ 16:9 வாய்ப்பு என்ற பெரிய **க.**
வெளி 3:20 நான் **க.**க்குப் பக்கத்தில்
கதறி, மத் 26:75 வெளியே போய்க் **க.** அழுதார்
கதிர்களை, லேவி 19:9 சிந்திய **க.** எடுக்கக் கூடாது
கதிர் பொறுக்க, ரூ 2:8 **க.** வேறு வயலுக்கு
கப்பல், 2கொ 11:25 மூன்று தடவை **க.** விபத்தில்
1தீ 1:19 விசுவாசக் **க.**லை மூழ்கடித்து
கமாலியேல், அப் 22:3 **க.**லின் காலடியில் கல்வி
கம்பளித் தோலில், நியா 6:37 **க.** மட்டும் பனி
கயிறுகளை, ஏசா 54:2 கூடாரத்தின் **க.** நீளமாக்கு
கயிற்றை, பிர 4:12 மூன்று இழைகள் சேர்ந்த **க.**
கரடி, 1சா 17:37 சிங்கம், **க.**யின் பிடியிலிருந்து
ஏசா 11:7 பசுவும் **க.**யும் சேர்ந்து மேயும்
கரிசனை, யாத் 34:6 யெகோவா இரக்கமும் **க.**யும்
கொலோ 3:12 கனிவான பாசத்தையும் **க.**யையும்
1யோ 3:17 **க.** காட்ட மறுத்தால்
கரிசனையோடு, சங் 41:1 ஏழைக்கு **க.** உதவுகிறவன்
கருச்சிதைவு, யாத் 23:26 பெண்களுக்குக் **க.** ஏற்படாது
கருணை, நீதி 11:17 **க.**யுள்ளவன் தனக்கு நன்மை
ஏசா 26:10 கெட்டவனுக்குக் **க.** காட்டினாலும்
கருத்துகளை, ரோ 14:1 தனிப்பட்ட **க.** வைத்து
கருவாக, சங் 139:16 நான் **க.** இருந்தபோதே
கருவியாக, அப் 9:15 அவனை ஒரு **க.**
கர்த்தாவே, மத் 7:22 **க.**, **க.**, உங்கள் பெயரில்
கர்ப்பிணிக்கு, யாத் 21:22 ஒரு **க.** அடிபட்டு
1தெ 5:3 **க.** பிரசவ வலி
கர்வமுள்ள, நீதி 16:5 இதயத்தில் **க.** எவனையும்
கலந்துபேசாமல், நீதி 15:22 **க.** இருந்தால்
கலப்படம், 2கொ 4:2 கடவுளுடைய வார்த்தையைக் **க.**
கலப்பை, லூ 9:62 **க.** மேல் கை வைத்த
கல், தானி 2:34 கைகளால் பெயர்க்கப்படாத **க.**
மத் 21:42 கட்டுகிறவர்கள் ஒதுக்கித்தள்ளிய **க.**
கல்யாணம், யோவா 2:1 கானா ஊரில் **க.**
கல்லறை, யோபு 14:13 என்னைக் **க.**யில் புதைத்து
பிர 9:10 நீ போய்ச்சேரும் **க.**யில்
ஓசி 13:14 **க.**யின் பிடியிலிருந்து விடுவிப்பேன்
அப் 2:31 கிறிஸ்து **க.**யில் விட்டுவிடப்பட
வெளி 1:18 **க.**யின் சாவி என்னிடம்
வெளி 20:13 மரணமும் **க.**யும் இறந்தவர்களை
கல்வியறிவு, அப் 4:13 யோவானும் **க.** இல்லாத
கவசம், எபே 6:11 கடவுள் தருகிற முழு **க.**
எபே 6:13 முழு **க.**த்தையும்
கவலை, நீதி 12:25 **க.** இதயத்தைப் பாரமாக்கும்
2கொ 11:28 சபைகளைப் பற்றிய **க.**
கவலைகள், சங் 94:19 **க.** திணறடித்தபோது, ஆறுதல் தந்து
மாற் 4:19 உலகத்தின் **க.**ளும், செல்வத்தின்
லூ 8:14 **க.**ளும் செல்வங்களும் சுகபோகங்களும்
லூ 21:34 **க.**ளால் இதயம் பாரமடையாதபடி
கவலைப்படாதீர்கள், மத் 6:34 நாளைக்காக ஒருபோதும் **க.**
மத் 10:19 எப்படி, என்ன பேசுவது என்று **க.**
பிலி 4:6 எதைப் பற்றியும் **க.**
கவலைப்படாதே, ஏசா 41:10 **க.** நான் உன் கடவுள்
கவலைப்படுகிறான், 1கொ 7:32 எஜமானின் காரியங்களுக்காகக் **க.**
கவலைப்படுவதால், லூ 12:25 **க.** ஒரு நொடியை கூட்ட முடியுமா?
கவலையில்லாமல், 1கொ 7:32 **க.** இருக்க வேண்டும்
கவனச்சிதறல், 1கொ 7:35 **க.** இல்லாமல் எஜமானுக்கு
கவனம், அப் 20:28 மந்தை முழுவதுக்கும் **க.**
1தீ 4:16 உன் போதனைமீது **க.**
கவிஞர்களில், அப் 17:28 உங்கள் **க.** சிலர்கூட
கவிழ்ப்பேன், எசே 21:27 **க.**, **க.**, **க.**
கழுகுகளை, ஏசா 40:31 **க.** போல இறக்கைகளை
கழுதை, எண் 22:28 யெகோவா அந்தக் **க.**யை
சக 9:9 உன் ராஜா **க.**யின் மேல்
கழுவப்பட்டீர்கள், 1கொ 6:11 சுத்தமாகக் **க.**
கழுவி, சங் 51:2 என் குற்றங்களை **க.**விடுங்கள்
யோவா 13:5 சீஷர்களின் பாதங்களைக் **க.**
களிமண், ஏசா 45:9 **க.** குயவனிடம்
ஏசா 64:8 நாங்கள் **க.**, நீங்கள்
தானி 2:42 பாதி இரும்பு பாதி **க.**
களைத்துப்போக, ஏசா 40:31 ஓடினாலும் **க.**
கறைகளையும், 2கொ 7:1 எல்லா **க.** நீக்கி
கறையில்லாதவர்களாக, 2பே 3:14 அவர் முன்னால் **க.**
கற்களே, லூ 19:40 **க.** சத்தமிடும்
கற்பலகைகளை, யாத் 31:18 இரண்டு **க.**
கற்பாறை, எண் 20:10 **க.**யிலிருந்து தண்ணீர் வேண்டுமா?
உபா 32:4 அவர் **க.** போன்றவர்
கற்பிக்க, ஏசா 54:13 உன் பிள்ளைகள் யெகோவாவினால் **க.**
கற்பிக்கிற, ரோ 2:21 மற்றவர்களுக்குக் **க.** நீங்களே
கற்பிக்கும் கலையை, 2தீ 4:2 **க.** பயன்படுத்தி பேசு
கற்பித்த, மத் 7:28 அவர் **க.** விதத்தை
கற்பித்தார், மத் 7:29 அதிகாரம் பெற்றவராக **க.**
கற்றுக்கொடு, சங் 143:10 உங்கள் விருப்பப்படி நடக்க **க.**ங்கள்
நீதி 9:9 நீதிமானுக்குக் **க.**
கற்றுக்கொடுக்க, எஸ்றா 7:10 **க.** இதயத்தைத் தயார்படுத்தி
மல் 2:7 குருவானவர் **க.** வேண்டும்
1தீ 2:12 **க.** பெண்களை அனுமதிக்க மாட்டேன்
கற்றுக்கொடுக்கிறேன், ஏசா 48:17 பிரயோஜனமானதை **க.**
கற்றுக்கொண்டவற்றை, பிலி 4:9 நீங்கள் என்னிடம் **க.**
கற்றுக்கொண்டே, 2தீ 3:7 எப்போதும் **க.** இருந்தாலும்
கற்றுக்கொள்வதற்காக, உபா 4:10 **க.** ஒன்றுகூடிவரச் செய்
கனவு, பிர 5:3 ஏகப்பட்ட யோசனைகளால் **க.**
கனி, மத் 7:20 அவர்களுடைய **க.**களை வைத்து
மத் 21:43 அதற்கேற்ற **க.**களைத் தருகிற
யோவா 15:8 நீங்கள் அதிகமதிகமாகக் **க.** தந்து
கனிவான, யாக் 5:11 யெகோவா **க.** பாசமும்
கனிவும், 2கொ 1:3 **க.** இரக்கமும் உள்ள தகப்பன்
கன்றுக்குட்டி, யாத் 32:4 **க.** சிலையைச் செய்தார்
ஏசா 11:6 **க.**யும் சிங்கமும்
கன்னத்தில், மத் 5:39 வலது **க.** அறைந்தால்
கன்னிப்பெண்களை, மத் 25:1 பத்துக் **க.** போல்
கஷ்டங்கள், சங் 34:19 நீதிமானுக்குப் பல **க.**
மத் 16:22 இந்தக் **க.** வேண்டாம்!
2தெ 1:4 **க.**ளை தாங்கிக்கொண்டு சகிப்புத்தன்மை
யாக் 1:2 பலவிதமான **க.** வரும்போது
கஷ்டப்பட, 1பே 3:14 நீதிக்காக **க.** வேண்டியிருந்தால்
கஷ்டப்படுகிறவர்களை, யோபு 36:15 **க.** கடவுள் காப்பாற்றுகிறார்
கஷ்டப்படும்போது, சங் 119:50 **க.** அதுதான் எனக்கு ஆறுதல்
கஷ்டப்பட்டது, சங் 119:71 நான் **க.** நல்லதுதான்
கஷ்டம், 1பே 4:18 நீதிமான் காப்பாற்றப்படுவதே **க.**
காக்காய்வலிப்பால், மத் 4:24 **கா.** கஷ்டப்பட்டவர்களையும்
காசை, லூ 15:8 **கா.** தொலைத்த பெண்
காட்சி, 1கொ 7:31 இந்த உலகத்தின் **கா.**
காட்சிப்பொருளாக, 1கொ 4:9 நாங்கள் **கா.**
காட்டிக்கொடுப்பான், மத் 26:21 உங்களில் ஒருவன் **கா.**
காட்டுப் பூக்கள், லூ 12:27 **கா.** வளருவதை
காட்டு மிருகங்களை, எசே 34:25 மூர்க்கமான **கா.** ஒழிப்பேன்
காணாமல், சங் 119:176 **கா.**போன ஆடுபோல்
லூ 15:24 என் மகன் **கா.** போயிருந்தான்
காணிக்கை, 1நா 29:9 மக்கள் **கா.** கொடுத்ததால்
1நா 29:17 **கா.**களை விருப்பப்பட்டுக் கொடுத்தேன்
காது கேட்காத, லேவி 19:14 **கா.**வனை சபித்து
ஏசா 35:5 **கா.**வர்களுக்கு காது
மாற் 7:37 **கா.**வர்களைக்கூட கேட்க
காதுகொடுத்து, நீதி 1:5 ஞானமுள்ளவர்கள் **கா.** கேட்டு
லூ 10:16 நீங்கள் சொல்வதைக் **கா.** கேட்கிறவன்
யாக் 1:19 **கா.** கேட்கிறவர்களாக

காத்திரு, சங் 37:7 யெகோவாவுக்காக **கா.**
மீ 7:7 நான் யெகோவாவுக்காக **கா.**ப்பேன்
ஆப 2:3 அதற்காகக் **கா.**
காத்து, மத் 16:25 உயிரைக் **கா.**க்கொள்ள
ரோ 8:25 சகிப்புத்தன்மையுடன் **கா.**க்கொண்டிருப்போம்
காபிரியேல், லூ 1:19 **கா.**, கடவுளின் முன்னிலையில்
காப்பாற்றுவேன், எரே 39:18 உன் உயிரைக் **கா.**
காமப்பசி, ரோ 1:26 கட்டுக்கடங்காத **கா.**
1தெ 4:5 கட்டுக்கடங்காத **கா.**க்கு இடம்
காயங்கள், நீதி 27:6 நண்பன் **கா.**ளை ஏற்படுத்துகிறான்
ஏசா 53:5 **கா.**ளால்தான் குணமானோம்
காயீன், 1யோ 3:12 **கா.**, சகோதரனைப் படுகொலை
காலடிகளை, எரே 10:23 தன் **கா.** நடத்தும்
காலடியில், ரோ 16:20 சாத்தானை உங்கள் **கா.**
காலணியாக, எபே 6:15 நல்ல செய்தியைக் **கா.**
காலத்தை, 1பே 4:3 ஏற்கெனவே நிறைய **கா.**
காலம், தானி 7:25 ஒரு **கா.**, இரண்டு **கா.**ங்கள்
1கொ 7:29 இன்னும் கொஞ்சக் **கா.**தான்
காலேப், எண் 13:30 **கா.** ஜனங்களை அமைதிப்படுத்த
எண் 14:24 **கா.** கீழ்ப்படிந்துவருகிறான்
காவற்கோபுரத்தில், ஏசா 21:8 **கா.** நிற்கிறேன்
காளைகளை, ஓசி 14:2 இளம் **கா.** செலுத்துவதுபோல்
காற்றடித்து, மத் 7:25 **கா.** வீட்டின் மேல் மோதிய
காற்று, பிர 11:4 **கா.**றை பார்க்கிறவன் விதைக்க
1கொ 9:26 **கா.**றோடு குத்துச்சண்டை
எபே 2:2 **கா.**போல் சூழ்ந்திருக்கிற சிந்தை
எபே 4:14 போதனைகளாகிய பலவித **கா.**றால்
வெளி 7:1 பூமியின் நான்கு **கா.**களை
கானா, யோவா 2:1 **கா.** ஊர் கல்யாணம்
கிண்ணம், மத் 20:22 நான் குடிக்கப்போகும் **கி.**த்தில்
லூ 22:20 இந்தக் **கி.** உங்களுக்காக
லூ 22:42 இந்தக் **கி.**த்தை என்னிடமிருந்து
1கொ 11:25 அதேபோல் **கி.**த்தையும் எடுத்து
கிதியோன், நியா 7:20 **கி.**னின் போர்!
கிபியோன், யோசு 9:3 **கி.**னின் ஜனங்களும்
கிரயப் பத்திரத்தை, எரே 32:12 **கி.** பாருக்கிடம்
கிரீடம், நீதி 12:4 மனைவி தன் கணவனுக்குக் **கி.**
மத் 27:29 முட்களால் ஒரு **கி.**
1கொ 9:25 அழிந்துபோகிற **கி.**த்தை
கிழக்கிலிருந்து, ஏசா 41:2 **கி.** ஒருவரை வர
கிழியுங்கள், யோவே 2:13 உள்ளத்தைக் **கி.**
கிளை, யோவா 15:4 **கி.** தானாகக் கனி தர
கிறிஸ்தவர்கள், அப் 11:26 முதன்முதலாக **கி.** என்று
கிறிஸ்து, மத் 16:16 **கி.**, கடவுளுடைய மகன்
லூ 24:26 **கி.** பாடுகளை அனுபவிப்பது
யோவா 17:3 நீங்கள் அனுப்பிய இயேசு **கி.**
அப் 18:28 இயேசுவே **கி.** என்று
1கொ 11:3 **கி.**வுக்குக் கடவுள் தலை
கீழ்ப்படி, 1சா 15:22 பலியைவிட **கீ.**வதுதான்
1சா 15:23 **கீ.**யாமல் போவது பில்லிசூனியத்துக்கு
1ரா 3:9 **கீ.**கிற இதயத்தைக் கொடுங்கள்
சங் 51:12 **கீ.**யும் ஆசையை எனக்குள்
ரோ 5:19 ஒரே மனிதன் **கீ.**ந்ததால்
எபே 6:5 எஜமான்களுக்குக் **கீ.**ந்து
எபி 13:17 வழிநடத்துகிறவர்களுக்குக் **கீ.**ந்து
கீழ்ப்படிதலை, பிலி 2:8 சாகும் அளவுக்கு, **கீ.**
எபி 5:8 கஷ்டங்கள் மூலம் **கீ.**
கீழ்ப்படிய, அப் 5:29 கடவுளுக்குத்தான் **கீ.**
கீழ்ப்படியாதவனுக்கு, யோவா 3:36 மகனுக்குக் **கீ.**
கீழ்ப்படுத்தினார், 1கொ 15:27 காலடியில் **கீ.**
கீறி, லேவி 21:5 உடலைக் **கீ.**க்கொள்ளவோ
குகை, தானி 6:7 சிங்கக் **கு.**யில் வீச
மத் 21:13 கொள்ளைக்காரர்களின் **கு.**
குடிகாரர்கள், நீதி 23:21 **கு.** ஏழைகளாவார்கள்
1கொ 6:10 **கு.** கடவுளுடைய அரசாங்கத்துக்குள்
குடிகாரனோடு, 1கொ 5:11 **கு.** பழகுவதை விட்டுவிட
குடியிருப்பதற்காகவே, ஏசா 45:18 பூமியை **கு.** படைத்தார்
குடியுரிமை, பிலி 3:20 நம் **கு.** பரலோகத்தில்
குடிவெறியை, எபே 5:18 **கு.** விட்டுவிட்டு
குடும்பத்தாரும், யோசு 24:15 நானும் என் **கு.** யெகோவாவை
குடும்பத்தை, 1தீ 5:8 **கு.** கவனித்துக்கொள்ளவில்லை
குடும்பமும், எபே 3:15 ஒவ்வொரு **கு.** அவரால்தான்
குணங்கள், கலா 5:22 கடவுளின் சக்தியால் உண்டாகிற **கு.**
குணப்படுத்த, ஏசா 61:1 உள்ளம் உடைந்தவர்களைக் **கு.**
குணமாக்கப்பட்டார்கள், அப் 5:16 அத்தனை பேரும் **கு.**
குணமாக்கிக்கொள், லூ 4:23 மருத்துவனே, உன்னைக் **கு.**
குணமாக்கினார், லூ 9:11 நோயாளிகளைக் **கு.**
குணமாக்குகிறார், சங் 147:3 உள்ளம் உடைந்தவர்களை **கு.**
குணமாக்குங்கள், லூ 10:9 நோயாளிகளைக் **கு.**
குணமாவதற்கு, வெளி 22:2 இலைகள் **கு.** உதவின
குதிரை, வெளி 6:2 வெள்ளைக் **கு.** வந்தது
வெளி 19:11 இதோ! வெள்ளைக் **கு.**
குத்தினார்களோ, சக 12:10 யாரைக் **கு.** அவரை
குப்பையாக, 1கொ 4:13 இந்த உலகத்தின் **கு.**
பிலி 3:8 அவற்றையெல்லாம் **கு.**
குமுறல், யாத் 2:24 அவர்களுடைய **கு.**லைக் கேட்டார்
ரோ 8:26 நம் உள்ளக் **கு.**களைப் பற்றி
குமுறிக்கொண்டு, ரோ 8:22 எல்லா படைப்புகளும் **கு.**
குமுறுகிற, எசே 9:4 **கு.** ஆட்களின் நெற்றியில்
கும்பலாக, அப் 17:5 **கு.** சேர்த்துக்கொண்டு
கும்மாளம், ரோ 13:13 குடித்துக் **கு.** போடுதல்
கலா 5:21 குடிவெறி, குடித்துக் **கு.** போடுதல்
குயவர், ஏசா 64:8 நீங்கள்தான் எங்கள் **கு.**
குயவனுக்கு, ரோ 9:21 **கு.** அதிகாரம் இல்லையா?
குரலை, யோவா 5:28 அவருடைய **கு.** கேட்டு
யோவா 10:27 என் ஆடுகள் என் **கு.**
குரல், 1ரா 19:12 அமைதியான, மென்மையான **கு.**
குரு, சங் 110:4 நீ என்றென்றும் **கு.**வாக
எபி 2:17 இரக்கமுள்ள தலைமைக் **கு.**
குருடன், மத் 15:14 **கு.**னுக்குக் **கு.** வழிகாட்டினால்
குருடாக்கி, ஆதி 19:11 எல்லா கண்களையும் **கு.**னார்கள்
2கொ 4:4 மனக்கண்களைக் **கு.**யிருக்கிறான்
குருட்டு, மத் 15:14 **கு.** வழிகாட்டிகள்
குருமார்கள், யாத் 19:6 ஆட்சி செய்கிற **கு.**ளாகவும்
மீ 3:11 **கு.** பணத்துக்காகப் போதிக்கிறார்கள்
அப் 6:7 **கு.**ளும் சீஷர்களானார்கள்
1பே 2:9 ராஜ அதிகாரமுள்ள **கு.**ளாக
வெளி 20:6 **கு.**, 1,000 வருஷங்கள்
குருவானவர், மல் 2:7 **கு.** கற்றுக்கொடுக்க
குலுக்கல், சங் 22:18 என் உடைக்காகக் **கு.**
குலைக்காதவர்களாக, பிலி 1:10 விசுவாசத்தைக் **கு.**
குழந்தை, நியா 13:8 **கு.**யை எப்படி வளர்க்க
1கொ 13:11 **கு.**யாக இருந்தபோது
1கொ 14:20 கெட்ட குணத்தில் **கு.**களாக
குழந்தை பாக்கியம், உபா 7:14 **கு.** இல்லாமல்
குழந்தை பெறாதவளே, ஏசா 54:1 **கு.**, சந்தோஷ ஆரவாரம் செய்
குழப்பத்தின், 1கொ 14:33 **கு.** கடவுள் அல்ல
குழி, நீதி 26:27 ஒருவன் **கு.** வெட்டினால்
குளிர்ந்த, நீதி 25:25 நல்ல செய்தி, **கு.** தண்ணீரைப் போல்
குள்ளநரிகளுக்கு, மத் 8:20 **கு.** குழிகளும்
குறிக்கப்பட்ட காலங்கள், லூ 21:24 மற்ற தேசத்தாருக்கு **கு.**
குறிசொல்கிறவர்கள், லேவி 19:31 **கு.**ளிடம் குறி கேட்டு
குறிசொல்ல, எண் 23:23 இஸ்ரவேலுக்கு எதிராக **கு.**
உபா 18:10 உங்களில் யாரும் **கு.**வோ
குறித்திருக்கிற, யோபு 14:13 **கு.** காலம் முடிந்ததும்
குறித்து வைத்து, 2தெ 3:14 அவனைக் **கு.**
குறுக்கு வழியில், நீதி 15:27 **கு.** சம்பாதிப்பவன்
குறை சொல்கிறார்கள், யூ 16 முணுமுணுத்து, **கு.**
குறையில்லாத, லேவி 22:21 அது **கு.** மாடாக
குறையும், சங் 84:11 யெகோவா ஒரு **கு.** வைக்க மாட்டார்

குறையே, சங் 19:7 யெகோவாவின் சட்டம் **கு.**
குற்றங்கள், சங் 40:12 **கு.** மலைபோல் குவிந்து
சங் 40:12 **கு.** என் தலைமுடியைவிட
சங் 130:3 நீங்கள் **கு.**ளைக் கவனிக்க
குற்றச்சாட்டை, 1தீ 5:19 மூப்பர்மேல் **கு.** ஏற்றுக்கொள்ளாதே
குற்றத்துக்காக, ஏசா 53:5 நம் **கு.**த்தான் அவர்
குற்றத்தை, நீதி 17:9 **கு.** பற்றியே பேசுகிறவன்
குற்றம்சாட்ட, ரோ 8:33 யாரால் **கு.** முடியும்
தீத் 1:7 கண்காணி **கு.**ப்படாதவராக
குற்றம்சாட்டுகிறவன், வெளி 12:10 சகோதரர்கள்மீது **கு.** தள்ளப்பட்டான்
கூச்சலையும், எபே 4:31 கோபத்தையும், **கூ.**
கூடப்பிறந்தவன், நீதி 18:24 **கூ.**னைவிட பாசமாக
கூடாரத்தில், சங் 15:1 யார் உங்களுடைய **கூ.**
கூடாரத்தை, யாத் 25:8 எனக்கு வழிபாட்டுக் **கூ.**
யோசு 18:1 சீலோவில் சந்திப்புக் **கூ.**
சங் 78:60 வழிபாட்டுக் **கூ.** கைவிட்டார்
சங் 84:1 **கூ.** எவ்வளவாய் நேசிக்கிறேன்
ஏசா 54:2 உன் **கூ.** பெரிதாக்கு
கூடாரத் தொழில், அப் 18:3 **கூ.** செய்பவர்கள்
கூடாரம், 2கொ 12:9 கிறிஸ்துவின் வல்லமை **கூ.**போல்
வெளி 21:3 கடவுளுடைய **கூ.** மனிதர்களோடு
கூடைகள், மத் 14:20 மீதியிருந்ததை 12 **கூ.** நிறைய
கூட்டங்களுக்கு, எபி 10:25 சபைக் **கூ.** வராமல்
கூட்டிச்சேர்க்கப்பட்டு, எபே 1:10 கிறிஸ்துவுக்குள் **கூ.**
கூர்ந்து, 1பே 1:12 **கூ.** கவனிக்க தேவதூதர்களும்
கெஞ்சி, 2கொ 5:20 சமரசமாகுங்கள் என்று **கெ.** கேட்கிறோம்
பிலே 9 அன்பின் அடிப்படையில் **கெ.**
கெட்ட, எபே 4:29 **கெ.** வார்த்தை ஒன்றும்
1தெ 5:22 **கெ.** செயலை விட்டு விலகுங்கள்
கெட்டது, ஏசா 5:20 நல்லதைக் **கெ.** என்று சொல்கிறவர்கள்
கெட்டதையே, ரோ 7:19 விரும்பாத **கெ.** செய்கிறேன்
கெட்டவன், ஏசா 26:10 **கெ.**னுக்குக் கருணை காட்டினாலும்
ஏசா 57:21 **கெ.**ர்களுக்கு நிம்மதியே இருக்காது
கெஹென்னா, மத் 10:28 **கெ.**வில் அழிக்க முடிந்தவருக்கே
கேடயம், சங் 84:11 யெகோவா ஒரு **கே.**
எபே 6:16 விசுவாசம், பெரிய **கே.**
கேடு, ஏசா 5:20 நல்லதைக் கெட்டது என்பவர்களுக்கு **கே.**
1கொ 9:16 நல்ல செய்தி அறிவிக்காவிட்டால், **கே.**
வெளி 12:12 பூமிக்கும் கடலுக்கும், **கே.**
கேட்கப்படும், லூ 12:48 அதிகம் **கே.**
கேட்கிறார், உபா 10:12 யெகோவா உங்களிடம் என்ன **கே.**?
கேட்கிறார்களோ, எசே 2:7 **கே.** இல்லையோ நீ சொல்ல
கேட்கிறீர்களோ, மாற் 11:24 கடவுளிடம் எதையெல்லாம் **கே.**
கேட்டாலும், யோவா 14:13 என் பெயரில் எதைக் **கே.**
1யோ 5:14 கடவுளின் விருப்பப்படி எதைக் **கே.**
கேட்டால், சங் 2:8 நீ **கே.** தேசங்களைக் கொடுப்பேன்
கேட்டுக்கொண்டே, மத் 7:7 **கே.** இருங்கள், கொடுக்கப்படும்
கேட்பதற்கு, மத் 6:8 **கே.** முன்பே தகப்பனுக்குத் தெரியும்
கேட்பதையும், எபே 3:20 நாம் **கே.** நினைப்பதையும்விட
கேபா, 1கொ 15:5 **கே.**வுக்கும், அதன் பின்பு
கலா 2:11 அந்தியோகியாவுக்கு **கே.** வந்தபோது
கேயாசி, 2ரா 5:20 எலிசாவின் ஊழியன் **கே.**
கேருபீனாக, எசே 28:14 பாதுகாக்கும் **கே.** உன்னை
கேருபீன்கள், ஆதி 3:24 தோட்டத்தின் கிழக்கே **கே.**
கேலி, லூ 18:32 **கே.** செய்து, துப்புவார்கள்
லூ 22:63 அவரைக் **கே.** செய்யவும்
2பே 3:3 **கே.** செய்கிறவர்கள் வருவார்கள்
கேலியாகச் சிரிக்கிறார்கள், எரே 20:7 என்னைப் பார்த்துக் **கே.**
கேளுங்கள், மத் 17:5 இவர் சொல்வதைக் **கே.**
கேள்விப்படுவார்கள், ரோ 10:14 பிரசங்கிக்காவிட்டால் எப்படி **கே.**
கை, சங் 145:16 உங்கள் **கை**யைத் திறந்து
ஏசா 35:3 பலமில்லாத **கை**களைப் பலப்படுத்து
ஏசா 41:10 என் வலது **கை**யால் உன்னை
ஏசா 59:1 யெகோவாவின் **கை** சின்னதா
மத் 6:3 வலது **கை** செய்வது இடது **கை**க்கு
கைகொடுப்பவர், சங் 46:1 இக்கட்டான காலங்களில் **கை.**
கைதேர்ந்த, நீதி 8:30 **கை.** கலைஞனாக இருந்தேன்
கைமாறு, சங் 116:12 யெகோவாவுக்கு என்ன **கை.**
கைவிட, உபா 31:8 விலகவும் மாட்டார் **கை.**வும் மாட்டார்
1சா 12:22 யெகோவா உங்களைக் **கை.** மாட்டார்
எபி 13:5 ஒருபோதும் **கை.** மாட்டேன்
கைவிட்டாலும், சங் 27:10 அப்பா அம்மா என்னைக் **கை.**
கொஞ்ச, ஏசா 26:20 **கொ.** நேரத்துக்கு ஒளிந்து
கொஞ்சம், ஏசா 60:22 **கொ.** பேர் ஆயிரம் பேராகவும்
கொடுங்கோல், சங் 72:14 **கொ.** ஆட்சியிலிருந்து விடுவிப்பார்
கொடுப்பதில்தான், அப் 20:35 வாங்குவதைவிட **கொ.**
கொடுமைப்படுத்த, 2கொ 4:9 **கொ.**ப்படுகிறோம், ஆனால்
கொடுமைப்படுத்து, சங் 119:86 காரணமே இல்லாமல் **கொ.**கிறார்கள்
1கொ 4:12 மற்றவர்கள் **கொ.**ம்போது சகித்துக்கொள்கிறோம்
கொடூரமாக, நீதி 12:10 பொல்லாதவனின் இரக்கம்கூட **கொ.**
கொமோரா, ஆதி 19:24 சோதோம், **கொ.**வில் நெருப்பை
கொம்பு, தானி 7:7 அதற்குப் பத்துக் **கொ.**கள்
தானி 8:8 பெரிய **கொ.** முறிக்கப்பட்டது
கொர்நேலியு, அப் 10:24 **கொ.**, காத்திருந்தார்
கொலை, யாத் 20:13 **கொ.** செய்யக் கூடாது
எண் 35:6 **கொ.** செய்தவன் அங்கே ஓடலாம்
யோவா 16:2 உங்களைக் **கொ.** செய்கிறவர்கள்
கொலைகாரனாக, யோவா 8:44 ஆரம்பத்திலிருந்தே **கொ.**
கொல்கொதா, யோவா 19:17 மண்டையோடு இடம், **கொ.**
கொல்ல, யோவா 8:37 என்னைக் **கொ.** வழிதேடு
கொள்ளைநோய்கள், லூ 21:11 பல இடங்களில் **கொ.**
கொள்ளையடிக்க, லேவி 19:13 **கொ.** கூடாது
கோடாலியை, பிர 10:10 மழுங்கிப்போன **கோ.**
கோடைக் காலம், மத் 24:32 **கோ.** நெருங்கிவிட்டது
கோட்டை, சங் 18:2 யெகோவாதான் என் **கோ.**
நீதி 18:10 யெகோவாவின் பெயர் ஒரு **கோ.**
கோட்பாடு, மத் 15:9 மனுஷர்களுடைய **கோ.**களைத்தான்
கோணலாக, பிர 1:15 **கோ.** இருப்பதை நேராக்க
கோதுமைக்கு, மத் 13:25 **கோ.** இடையே களை
கோபக்காரியான, நீதி 21:19 **கோ.** மனைவியோடு
கோபத்தை, சங் 37:8 **கோ.**யும் ஆத்திரத்தையும் விட்டுவிடு
நீதி 16:32 **கோ.** கட்டுப்படுத்துகிறவனே மேல்
கோபப்படாதவர், சங் 103:8 யெகோவா சீக்கிரத்தில் **கோ.**
கோபப்படாதவன், நீதி 15:18 சீக்கிரத்தில் **கோ.**
கோபப்படுகிறவன், நீதி 14:17 சட்டென்று **கோ.** முட்டாள்தனமாக
கோபம், எபே 4:26 சூரியன் மறையும் முன் **கோ.** தணிய
கொலோ 3:8 கடும் **கோ.**, பழிப்பேச்சு
கோபுரத்தை, ஆதி 11:4 ஒரு **கோ.** கட்டி
கோபுரம், லூ 13:4 சீலோவாம் **கோ.** இடிந்து
கோயில்களில், அப் 17:24 மனுஷர்களால் கட்டப்பட்ட **கோ.**
கோராகு, எண் 26:11 **கோ.**வின் மகன்கள் சாகவில்லை
யூ 11 **கோ.**வைப் போல் கலகத்தனமான
கோரேஸ், எஸ்றா 6:3 **கோ.** ஆலயத்தை கட்டி
ஏசா 45:1 **கோ.**சைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்
கோலியாத், 1சா 17:4 மாவீரன், அவன் பெயர் **கோ.**
கோழி, மத் 23:37 **கோ.** தன் குஞ்சுகளை
கோழைத்தனத்தை, 2தீ 1:7 கடவுள் தருகிற சக்தி **கோ.**

ச

சகதியில், 1பே 4:4 அதே மோசமான **ச.**
சகரியா 1., லூ 11:50 **ச.**வின் இரத்தம்வரை
சகரியா 2., எஸ்றா 5:1 ஆகாயும் **ச.**வும்
சகரியா 3., லூ 1:5 **ச.** என்ற ஆலய குரு
சகவாசம், 1கொ 15:33 கெட்ட **ச.** நல்ல பழக்கங்களை
சக வேலையாட்கள், 1கொ 3:9 கடவுளுடைய **ச.**
சகாயர், யோவா 14:16 இன்னொரு **ச.**ரை தருவார்
யோவா 14:26 அவருடைய சக்தியாகிய **ச.**

சகித்திருங்கள், ரோ 12:12 உபத்திரவத்தில் **ச.**
சகித்திருந்து, லூ 8:15 **ச.** பலன் கொடுக்கிறார்கள்
சகித்திருப்பதன், லூ 21:19 **ச.** மூலம் உயிரை
சகித்திருப்பவர், மத் 24:13 முடிவுவரை **ச.**தான்
சகித்து, 2ரா 10:16 யெகோவாவை எதிர்க்கிற யாரையும் **ச.**
ரோ 9:22 கோபத்துக்குரிய பாத்திரங்களை **ச.**
1பே 2:20 பாடுகள் படும்போது **ச.**க்கொண்டால்
சகிப்புத்தன்மை, ரோ 5:3 உபத்திரவம் **ச.**யையும்
யாக் 1:4 **ச.** முழுமையாக வேலை
யாக் 5:11 யோபுவின் **ச.**
சகேயு, லூ 19:2 **ச.**, வரி வசூலிப்பவர்
சகோதர அன்பை, ரோ 12:10 **ச.** காட்டுங்கள்
சகோதரர்கள், சங் 133:1 **ச.** ஒன்றாகக் கூடி வாழ்வது
மத் 13:55 இவன் **ச.** யாக்கோபு, யோசே
மத் 23:8 நீங்கள் எல்லாரும் **ச.**
மத் 25:40 என் **ச.**ளாகிய இவர்களில் ஒருவருக்கு
1பே 2:17 **ச.** எல்லாரிடமும் அன்பு காட்டுங்கள்
1பே 5:9 உலகத்திலுள்ள உங்கள் **ச.**
சகோதரன், நீதி 17:17 உதவுவதற்காகப் பிறந்த **ச.**
1கொ 5:11 **ச.** என்று அழைக்கப்படுகிற எவனும்
சகோதரியோடு, உபா 27:22 **ச.** உடலுறவுகொள்பவன்
சக்கரம், எசே 1:16 **ச.**த்துக்குள் இன்னொரு **ச.**த்தை
சக்தி, யாத் 31:18 கடவுளுடைய **ச.**யால் எழுதப்பட்ட
எண் 11:25 **ச.**யில் கொஞ்சத்தை எடுத்து
2சா 23:2 யெகோவாவின் **ச.** என் மூலம்
சங் 51:11 உங்கள் **ச.**யை எடுத்துவிடாதீர்கள்
நீதி 3:27 உதவி செய்ய **ச.** இருக்கும்போது
ஏசா 40:29 சோர்ந்துபோகிறவர்களுக்கு **ச.**
ஏசா 61:1 யெகோவாவின் **ச.** என்மேல்
யோவே 2:28 என் **ச.**யைப் பொழிவேன்
சக 4:6 மனித **ச.**யால் அல்ல, என் **ச.**யால்
மத் 3:16 கடவுளுடைய **ச.**, புறாவை
மத் 12:31 **ச.**க்கு விரோதமான நிந்தனை
லூ 11:13 தகப்பன் **ச.**யை எந்தளவு கொடுப்பார்
யோவா 14:26 அவருடைய **ச.**யாகிய சகாயர்
யோவா 16:13 சத்தியத்தை வெளிப்படுத்துகிற **ச.**
அப் 5:32 அவருடைய **ச.**யும் சாட்சி
ரோ 8:16 **ச.** ஊர்ஜிதப்படுத்துகிறது
ரோ 8:26 **ச.** பரிந்து பேசுகிறது
2கொ 3:17 யெகோவாவின் **ச.** எங்கேயோ
2கொ 4:7 இயல்புக்கு மிஞ்சிய **ச.**
கலா 5:16 **ச.** காட்டுகிற வழியில்
கலா 5:22 **ச.**யால் உண்டாகிற குணங்கள்
கலா 6:8 **ச.**க்காக விதைக்கிறவன்
சட்டத்தை, சங் 119:97 உங்கள் **ச.** நேசிக்கிறேன்
ரோ 7:22 கடவுளுடைய **ச.** குறித்து
கலா 6:2 கிறிஸ்துவின் **ச.**
யாக் 2:8 இந்த ராஜ **ச.** நீங்கள்
சட்டப்பூர்வ உரிமையை, பிலி 1:7 **ச.** பெற
சட்டம், சங் 19:7 யெகோவாவின் **ச.** குறையே
சங் 94:20 **ச.**த்தின் பெயரில் பிரச்சினை
எரே 31:33 உள்ளத்தில் என் **ச.**ங்களை
சண்டை சச்சரவு, நீதி 6:19 **ச.**களை மூட்டிவிடுதல்
சண்டைபோட, 2தீ 2:24 எஜமானின் ஊழியன் **ச.**
சதித்திட்டங்கள், 2கொ 2:11 அவனுடைய **ச.** நமக்கு
சத்தம், சங் 19:4 அவற்றின் **ச.** பூமியெங்கும்
சத்தியம், ஆதி 22:16 என்மேல் **ச.**மாகச் சொல்கிறேன்
சங் 119:160 **ச.**தான் உங்கள் வார்த்தையின் சாராம்சம்
நீதி 23:23 **ச.**த்தை வாங்கு, விற்காதே
மத் 5:34 **ச.** செய்ய வேண்டாம்
யோவா 4:24 கடவுளை வணங்குகிறவர்கள் **ச.**த்தோடு
யோவா 8:32 **ச.** உங்களை விடுதலை
யோவா 14:6 நானே வழியும் **ச.**மும்
யோவா 16:13 **ச.**த்தை வெளிப்படுத்துகிற சக்தி
யோவா 17:17 உங்களுடைய வார்த்தைதான் **ச.**
யோவா 18:38 **ச.**மா? அது என்ன?
3யோ 4 என் பிள்ளைகள் **ச.**த்தில்
சந்ததி, ஆதி 3:15 உன் **ச.**க்கும் அவள் **ச.**க்கும்
ஆதி 22:17 உன் **ச.**யை பெருக
கலா 3:16 அந்தச் **ச.** கிறிஸ்துதான்
கலா 3:29 ஆபிரகாமின் **ச.**யாக
வெளி 12:17 **ச.**யில் மீதியாக இருக்கிறவர்களோடு
சந்தர்ப்பம், லூ 4:13 நல்ல **ச.** வரும்வரை பிசாசு
சந்தித்து, அப் 15:36 சகோதரர்களைச் **ச.** அவர்கள் எப்படி
சந்திரன், யோவே 2:31 **ச.** இரத்த நிறமாகி
லூ 21:25 **ச.**னிலும் அடையாளங்கள்
சந்தேகப்படாமல், மத் 21:21 **ச.** விசுவாசத்தோடு
யாக் 1:6 கொஞ்சம்கூட **ச.**
சந்தையில், அப் 17:17 **ச.** சந்தித்த ஆட்களிடம்
சந்தோஷமாக, 1நா 28:9 கடவுளுக்குச் **ச.** சேவை
யோபு 38:7 விடியற்கால நட்சத்திரங்கள் **ச.**
சங் 100:2 **ச.** யெகோவாவுக்குச் சேவை
நீதி 8:30 அவர்முன் எப்போதும் **ச.**
பிர 8:15 சாப்பிட்டு, குடித்து, **ச.**
ஏசா 65:13 என் ஊழியர்கள் **ச.**
லூ 8:13 செய்தியை **ச.** ஏற்று
அப் 5:41 **ச.** நியாயசங்கத்தைவிட்டு
ரோ 12:12 நம்பிக்கையில் **ச.**யிருங்கள்
2கொ 9:7 **ச.** கொடுப்பவரைக் கடவுள்
பிலி 3:1 தொடர்ந்து **ச.** இருங்கள்
பிலி 4:4 எஜமானுடைய சேவையில் **ச.**
சந்தோஷம், 1நா 29:9 காணிக்கை கொடுத்ததால் **ச.**ப்பட்டார்கள்
நெ 8:10 யெகோவா தரும் **ச.**தான் கோட்டை
சங் 32:1 பாவம் மூடப்படுகிறதோ, அவர் **ச.**மானவர்
சங் 40:8 உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் **ச.**
சங் 94:12 யாரைத் திருத்துகிறீர்களோ, அவர் **ச.**மானவர்
சங் 144:15 யெகோவாவின் மக்கள் **ச.**மானவர்கள்
நீதி 27:11 என் இதயத்தைச் **ச.**ப்படுத்து
பிர 2:24 உழைப்பால் வரும் **ச.**த்தை
மத் 5:3 ஆன்மீக விஷயத்தில் ஆர்வப்பசி உள்ளவர்கள் **ச.**மானவர்கள்
லூ 15:7 ஒரே பாவி குறித்துப் பரலோகத்தில் **ச.**
யோவா 16:22 உங்கள் **ச.**த்தை யாராலும் பறிக்க
அப் 20:35 கொடுப்பதில் அதிக **ச.**
ரோ 5:3 உபத்திரவங்களிலும் **ச.**ப்படலாம்
ரோ 7:22 கடவுளுடைய சட்டத்தைக் குறித்து **ச.**ப்படுகிறேன்
ரோ 12:15 **ச.**ப்படுகிறவர்களோடு **ச.**ப்படுங்கள்
1தீ 1:11 **ச.**முள்ள கடவுள்
எபி 12:2 தன் முன்னால் வைக்கப்பட்ட **ச.**த்தின்
சபாஷ், மத் 25:21 **ச.**! நல்ல அடிமையே
சபிக்க, எண் 23:8 ஜனங்களை நான் **ச.** முடியுமா?
சபிக்கப்பட்டவர்கள், யோவா 7:49 திருச்சட்டம் புரியாத மக்கள் **ச.**
சபிக்காதீர்கள், ரோ 12:14 அவர்களைச் **ச.**
சபை, சங் 22:25 பெரிய **ச.**யில் புகழ்வேன்
சங் 40:9 நல்ல செய்தியை மாபெரும் **ச.**யில்
மத் 16:18 என் **ச.**யை இந்தக் கற்பாறைமேல்
அப் 20:28 கடவுளின் **ச.**யை மேய்க்க
ரோ 16:5 வீட்டில் கூடுகிற **ச.**க்கு வாழ்த்து
சமநிலை, 2கொ 8:14 உங்கள் மத்தியில் **ச.**
சமமாக, பிலி 2:6 கடவுளுக்கு **ச.** இருக்கவோ
சமமான, சங் 26:12 என் கால்கள் **ச.** இடத்தில்
சமரசம், ரோ 5:10 கடவுளோடு **ச.**
1கொ 7:11 கணவனோடு **ச.** செய்து
2கொ 5:19 உலக மக்களை **ச.**மாக்கி
சமாதான, ஏசா 9:7 அவருடைய ஆட்சியின் **ச.**த்துக்கு
ஏசா 54:13 உன் பிள்ளைகள் மிகுந்த **ச.**த்தோடு
மத் 5:24 முதலில் அவனோடு **ச.**மாகுங்கள்
அப் 9:31 சபை **ச.** காலத்தை
சமாதானத்தை, ஏசா 60:17 **ச.** உன் கண்காணியாக
யோவா 14:27 என் **ச.**யே தருகிறேன்
ரோ 5:1 இயேசு மூலம் கடவுளோடு **ச.**
ரோ 8:6 வாழ்வையும் **ச.**யும் அடை
1பே 3:11 **ச.** தேடி, அதற்காகப் பாடுபட
வெளி 6:4 பூமியிலிருந்து **ச.** எடுத்துப்போடும்

சமாதானமாக, மாற் 9:50 ஒருவருக்கொருவர் **ச.**
ரோ 12:18 எல்லாரோடும் **ச.** இருங்கள்
ரோ 14:19 **ச.** இருப்பதற்கு உங்களால்
எபே 4:3 **ச.** வாழ முயற்சி
சமாதானம், சங் 29:11 யெகோவா **ச.** அருளுவார்
சங் 72:7 சந்திரன் இருக்கும்வரை **ச.**
சங் 119:165 சட்டத்தை நேசிக்கிறவர்களுக்கு **ச.**
நீதி 17:1 **ச.** நிறைந்த வீட்டில் ரொட்டி
ஏசா 48:18 உங்கள் **ச.** ஆற்றை போல
எரே 6:14 **ச.** இருக்கிறது! **ச.** இருக்கிறது!
மத் 5:9 **ச.** பண்ணுகிறவர்கள்
பிலி 4:7 தேவ **ச.** உங்கள் இதயத்தை
1தெ 5:3 இதோ! **ச.**, பாதுகாப்பு!
சமாரிய, யோவா 4:7 **ச.** பெண் தண்ணீர் எடுக்க
சமாரியர், லூ 10:33 **ச.** மனம் உருகினார்
சமாளிக்க, 2தீ 3:1 **ச.** முடியாத அளவுக்கு
சம்பந்தம், உபா 7:3 அவர்களோடு **ச.** பண்ணக் கூடாது
சம்பளம், ஆதி 31:7 **ச.**த்தை 10 தடவை
ரோ 6:23 பாவத்தின் **ச.** மரணம்
சரளமாக, யாத் 4:10 எனக்குச் **ச.** பேச வராது
சரிப்படுத்த, கலா 6:1 சாந்தமாகச் **ச.**
சரிப்படுத்தி, 2கொ 13:11 உங்களைச் **ச.**க்கொள்ளுங்கள்
சரியான அளவு, எரே 30:11 **ச.**க்குக் கண்டித்து
சலித்துப்போய், மல் 1:13 ச்சே! **ச.**விட்டது!
சவால், 1சா 17:26 எப்படி கடவுளின் படைக்குச் **ச.**விடலாம்?
சவுலே, அப் 9:4 **ச.**, **ச.**, ஏன் என்னை
சவுல், 1சா 15:11 **ச.**லை ராஜாவாக்கியதற்காக
அப் 7:58 **ச.** என்ற இளம் மனிதனின்
அப் 8:3 **ச.**, சபையைத் துன்புறுத்தி
அப் 9:1 **ச.**, சீஷர்களை மிரட்டி
சறுக்கலான, சங் 73:18 **ச.** தரையில் நிற்க
சனகெரிப், 2ரா 19:16 உங்களைப் பழித்து **ச.**
சாக, எசே 18:32 யாரும் **சா.** வேண்டும் என்று
சாகவே, யோவா 8:51 யாரும் **சா.** மாட்டார்கள்
சாகாமலேயே, சங் 89:48 எந்த மனிதனாவது **சா.**
சாகிற, ரூ 1:17 **சா.** வரைக்கும் உங்களைவிட்டு
சாக்காக, யூ 4 அளவற்ற கருணையை ஒரு **சா.**
சாக்குப்போக்கு, யோவா 15:22 அவர்களுடைய பாவத்துக்கு **சா.**
ரோ 1:20 அவர்கள் **சா.** சொல்ல முடியாது
சாட்சி, லேவி 5:1 **சா.**யாக இருக்கிறவன் தெரிவிக்காவிட்டால்
உபா 19:15 இரண்டு **சா.**களின் வாக்குமூலத்தை
ஏசா 43:10 நீங்கள் என் **சா.**கள்
மத் 18:16 இரண்டு அல்லது மூன்று **சா.**களின்
மத் 24:14 நல்ல செய்தி **சா.**யாக
யோவா 7:7 **சா.** கொடுப்பதால் உலகம் வெறுக்கிறது
யோவா 18:37 சத்தியத்தைப் பற்றிச் **சா.**
அப் 1:8 எனக்குச் **சா.**களாக இருப்பீர்கள்
அப் 10:42 முழுமையாகச் **சா.** கொடுக்க
அப் 28:23 அரசாங்கத்தைப் பற்றி **சா.**
வெளி 1:5 இயேசு, நம்பகமான **சா.**
வெளி 11:3 இரண்டு **சா.**கள், 1,260 நாட்கள்
சாதகமாக, கலா 6:10 காலம் **சா.** இருக்கும்போதே
சாதாரண, அப் 4:13 கல்வியறிவு இல்லாத **சா.**
சாத்தான், யோபு 1:6 **சா.**னும் வந்து நின்றான்
மத் 4:10 அப்பாலே போ, **சா.**னே
மத் 16:23 பின்னால் போ, **சா.**னே
மாற் 4:15 செய்தியை **சா.** எடுத்துவிடுகிறான்
ரோ 16:20 **சா.**னை உங்கள் காலடியில்
1கொ 5:5 அவனைச் **சா.**னிடம் ஒப்படைத்து
2கொ 2:11 **சா.** தந்திரமாக ஏமாற்றி
2கொ 11:14 **சா.**னும்கூட ஒளியின் தூதனை
வெளி 12:9 ராட்சதப் பாம்பு, **சா.**
வெளி 20:2 **சா.**னை, 1,000 வருஷம்
சாந்தமுமான, 1பே 3:4 அமைதியும் **சா.** குணம்
சாப்பிடவும், 1கொ 5:11 அப்படிப்பட்டவனோடு **சா.** கூடாது
2தெ 3:10 வேலை செய்யாதவன் **சா.** கூடாது
சாமர்த்திய, நீதி 12:23 **சா.**சாலி தன் அறிவை
நீதி 14:15 **சா.**மாக நடக்கிறவன் யோசித்து
நீதி 22:3 **சா.**சாலி ஆபத்தைப் பார்த்து
சாமுவேல், 1சா 1:20 குழந்தைக்கு **சா.** என்று
1சா 2:18 **சா.** சிறுவனாக இருந்தாலும்
சாயலில், ஆதி 1:26 மனுஷனை நம்முடைய **சா.**
சாராம்சம், பிர 12:13 **சா.** என்னவென்றால்
சாராள், ஆதி 17:19 **சா.** ஒரு மகனை
1பே 3:6 **சா.**ளும்கூட ஆபிரகாமை எஜமானே
சாலொமோன், 1ரா 4:29 **சா.**னுக்கு ஞானத்தை
மத் 6:29 **சா.**கூட இந்தப் பூக்களை
சாவி, மத் 16:19 பரலோக அரசாங்கத்தின் **சா.**களை
லூ 11:52 அறிவு என்ற **சா.**யை
வெளி 1:18 மரணத்தின் **சா.**யும்
சாவுக்கு, 1சா 22:22 உங்கள் அப்பாவின் குடும்பத்தாருடைய **சா.**
எசே 3:18 அவன் **சா.** நீ பொறுப்பாளி
மத் 27:25 இவன் **சா.** நாங்கள் பொறுப்பு
அப் 20:26 யாருடைய **சா.**ம் நான் பொறுப்பல்ல
சிங்கம், 1சா 17:36 **சி.**, கரடியைக் கொன்றேன்
சங் 91:13 **சி.**த்தையும் நாகப்பாம்பையும் மிதிப்பாய்
ஏசா 11:7 **சி.** மாட்டைப் போல வைக்கோல்
தானி 6:27 தானியேலைச் **சி.**ங்களிடமிருந்து
1பே 5:8 பிசாசு கர்ஜிக்கிற **சி.**போல்
வெளி 5:5 யூதா கோத்திரத்துச் **சி.**
சிங்காரமான, தானி 11:45 **சி.** பரிசுத்த மலை
சிசுப் பருவம், 2தீ 3:15 **சி.**த்திலிருந்தே அறிந்திருக்கிறாய்
சிட்டுக்குருவிகளை, மத் 10:29 இரண்டு **சி.**
சிதேக்கியா, எரே 52:11 **சி.**வை குருடாக்கி
சித்திரவதைக் கம்பத்தை, மத் 10:38 **சி.** சுமந்து
லூ 9:23 **சி.** தினமும் சுமந்து
சிந்தனை, பிலி 3:19 பூமிக்குரிய காரியங்களிலேயே **சி.**
சிந்தை, 1கொ 2:16 நமக்கோ கிறிஸ்துவின் **சி.**
சிபாரிசு, 2கொ 6:4 கடவுளுடைய ஊழியர்களாகச் **சி.**
சிம்சோன், நியா 13:24 **சி.** என்று பெயர்
சிம்மாசனம், சங் 45:6 கடவுள்தான் உங்கள் **சி.**
ஏசா 6:1 உயர்ந்த **சி.**த்தில் யெகோவா
தானி 7:9 **சி.**ங்கள் வைக்கப்பட்டன
மத் 25:31 மனிதகுமாரன் மகிமையான **சி.**த்தில்
லூ 1:32 தந்தையான தாவீதின் **சி.**த்தை
சிரித்து, ஆதி 18:13 சாராள் ஏன் **சி.**
நீதி 14:13 வெளியே **சி.**தாலும் உள்ளத்தில்
சிரிப்பார், சங் 2:4 சிம்மாசனத்தில் இருப்பவர் **சி.**
சிலை, சங் 115:4 **சி.**கள் வெள்ளியும் தங்கமும்தான்
தானி 2:31 பிரமாண்டமான **சி.**யைப் பார்த்தீர்கள்
தானி 3:18 நீங்கள் நிறுத்திய தங்கச் **சி.**யை
1யோ 5:21 **சி.**களுக்கு விலகி உங்களை
சிலையை வணங்குகிறவர்கள், 1கொ 6:9 **சி.** அரசாங்கத்துக்குள்
சிலை வழிபாட்டிலிருந்து, 1கொ 10:14 **சி.** விலகி ஓடுங்கள்
சிவப்பாக, ஏசா 1:18 பாவங்கள் **சி.** இருந்தாலும்
சிவப்பான, ஆதி 25:30 அந்தச் **ச.** கூழை தா!
சிறகுகள், ரூ 2:12 யெகோவாவின் **சி.**ளின் கீழ்
சிறியளவில், சக 4:10 **சி.** ஆரம்பிக்கப்பட்ட வேலை
சிறுத்தை, ஏசா 11:6 வெள்ளாட்டுக் குட்டி **சி.**யோடு
தானி 7:6 **சி.**யைப் போன்ற மிருகத்தை
சிறுபிள்ளைகளுக்கு, லூ 10:21 **சி.** வெளிப்படுத்தி
சிறுமந்தையே, லூ 12:32 பயப்படாதே **சி.**
சிறுமி, மாற் 5:42 **சி.** எழுந்து நடக்க
சிறுவயதிலிருந்து, சங் 71:17 **சி.** கற்றுக்கொடுத்திருக்கிறீர்கள்
மாற் 10:20 எல்லாவற்றையும் **சி.**
சிறைச்சாலை, அப் 5:18 அப்போஸ்தலர்களை **சி.**யில்
அப் 5:19 தூதர் **சி.**யின் கதவுகளை
அப் 16:26 **சி.**யின் அஸ்திவாரங்கள் ஆட்டம்
சிறையில், மத் 25:36 **சி.** இருந்தேன், பார்க்க
அப் 12:5 பேதுரு **சி.**, சபையார் ஜெபம்
எபி 13:3 **சி.** இருப்பவர்களை ஞாபகத்தில்
வெளி 2:10 பிசாசு சிலரைச் **சி.**

சீமோன், அப் 8:18 **சீ.** பணத்தைக் கொண்டுவந்து
சீயுஸ், அப் 14:12 பர்னபாவை **சீ.** என்றும்
சீயோன், சங் 2:6 **சீ.**னில், என் ராஜாவை
சங் 48:2 **சீ.**, மகா ராஜாவின் நகரம்
ஏசா 66:8 **சீ.**, மகன்களைப் பெற்றெடுத்தாள்
வெளி 14:1 **சீ.** மலைமீது ஆட்டுக்குட்டியானவர்
சீராக, கலா 5:25 தொடர்ந்து **சீ.** நடப்போமாக
சீனாய், யாத் 19:20 யெகோவா **சீ.** மலையின்
சீஷர்கள், மத் 28:19 எல்லா தேசத்தாரையும் **சீ.**ளாக்கி
யோவா 8:31 நிஜமாகவே என் **சீ.**ளாக
யோவா 13:35 அன்பு காட்டினால், என் **சீ.**
சுகபோகங்கள், லூ 8:14 **சு.** அவர்களைத் திசைதிருப்பி
சுகமில்லாமல், சங் 41:3 **சு.** படுத்துக் கிடக்கும்போது
சுதந்திரம், 2கொ 3:17 சக்தி எங்கேயோ அங்கே **சு.**
1பே 2:16 **சு.**த்தை போர்வையாக
சுத்தப்படுத்தி, தானி 12:10 பலர் தங்களைச் **சு.**
2கொ 7:1 கறைகளை நீக்கி **சு.**க்கொள்வோமாக
சுத்தப்படுத்துங்கள், சங் 51:2 பாவத்தை நீக்கி, **சு.**
சுத்தமான, செப் 3:9 **சு.** பாஷையாக
மத் 5:8 **சு.** இதயமுள்ளவர்கள்
சுபாவத்தை, எபே 4:24 புதிய **சு.** அணிந்து
கொலோ 3:9 பழைய **சு.** களைந்து
சுமத்த, அப் 15:28 வேறெதையும் உங்கள்மேல் **சு.**
சுமை, சங் 38:4 குற்றங்கள் பாரமான **சு.**போல்
லூ 11:46 **சு.**களை மக்கள்மேல் சுமத்துகிறீர்கள்
கலா 6:2 ஒருவர் **சு.**களை ஒருவர்
வெளி 2:24 வேறெந்தச் **சு.**யையும் சுமத்த
சுயக்கட்டுப்பாடு, கலா 5:22, 23 சாந்தம், **சு.**
சுயநலமாக, 1கொ 13:5 [அன்பு] **சு.** நடந்துகொள்ளாது
சுருள்கள், வெளி 20:12 **சு.** திறக்கப்பட்டன
சுரைக்காய்க் கொடி, யோனா 4:10 **சு.**க்காக வருத்தப்படுகிறாயே
சுவரில், தானி 5:5 அரண்மனை **சு.** எழுத
சுவாசமுள்ள, சங் 150:6 **சு.** எல்லா உயிர்களும்
சுவையாக, கொலோ 4:6 உங்கள் பேச்சு **சு.**
சுறுசுறுப்பாக, ரோ 12:11 **சு.** இருங்கள்
எபி 6:11 தொடர்ந்து **சு.** சேவை
சூரியன், யோசு 10:12 **சூ.**னே, அசையாமல் நில்
மத் 24:29 உபத்திரவத்துக்குப் பின், **சூ.** இருண்டு
அப் 2:20 **சூ.** இருண்டுவிடும்
சூளை, தானி 3:17 **சூ.**யிலிருந்து காப்பாற்ற முடியும்
சூனியக்காரன், அப் 13:6 பர்யேசு, **சூ.**
செங்கோல், ஆதி 49:10 யூதாவைவிட்டு **செ.**
சங் 2:9 தேசங்களை இரும்புச் **செ.**லால்
செத்த, யோபு 14:14 மனுஷன் **செ.** பின்பு
எபே 2:1 பாவங்களால் **செ.** நிலையில்
செத்துப்போக, ஆதி 3:4 கண்டிப்பாகச் **செ.** மாட்டீர்கள்
செத்துப்போயிருந்தான், லூ 15:24 என் மகன் **செ.**
செம்மறியாடுகளை, மத் 25:33 **செ.** வலது பக்கம்
செயலற்றவர்களாக, 2பே 1:8 நீங்கள் **செ.** ஆகிவிட
செயலில், லூ 3:8 மனம் திருந்தியதை **செ.** காட்டுங்கள்
செயல்களை, யோவா 14:12 அவற்றைவிட பெரிய **செ.**
செயல்படுவதற்கு, 1பே 1:13 மும்முரமாகச் **செ.** மனதை
செய்கிறவர்களாக, யாக் 1:22 வார்த்தையின்படி **செ.**
செய்தி, சங் 112:7 கெட்ட **செ.** கேட்டு பயப்பட
செய்ய முடியாதது, ஆதி 18:14 யெகோவாவினால் **செ.**
யோபு 42:2 உங்களால் **செ.** எதுவுமே இல்லை
செலவு, 1கொ 9:18 **செ.** வைக்காமல் நல்ல செய்தியை
செலவை, லூ 14:28 முதலில் **செ.** கணக்கு
செல்லப்பிள்ளையாக, நீதி 8:30 நான் அவருக்குச் **செ.**
செல்லம், நீதி 29:21 **செ.** கொடுத்தால், நன்றிகெட்டவனாக
செல்வத்தையோ, நீதி 30:8 வறுமையையோ **செ.**
செல்வந்தர்கள், 1தீ 6:17 **செ.** ஆணவமாக
செல்வம், எசே 28:5 **செ.** வந்ததும் செருக்கும்
ஆகா 2:7 எல்லா தேசங்களின் **செ.**ங்களும்
மத் 6:24 கடவுளுக்கும் **செ.**த்துக்கும் அடிமையாக
மத் 13:22 **செ.**த்தின் வஞ்சக சக்தியும்
லூ 16:9 அநீதியான **செ.**ங்களை
சேவல், மத் 26:34 **சே.** கூவுவதற்கு முன்
சேவை, 1நா 28:9 முழு இதயத்தோடு **சே.** செய்
தானி 7:10 ஆயிரமாயிரம் பேர் **சே.**
மத் 20:28 மனிதகுமாரனும் **சே.**யைப் பெற
மாற் 10:43 உயர்ந்தவன் **சே.** செய்கிறவனாக
1பே 4:10 ஒருவருக்கொருவர் **சே.** செய்ய
சொத்தாக, யாத் 19:5 விசேஷ **சொ.**
சொத்து, எண் 18:20 நானே உன் **சொ.**
சங் 127:3 பிள்ளைகள் யெகோவா தரும் **சொ.**
நீதி 10:2 அநியாயமாகச் சேர்க்கிற **சொ.**களால்
நீதி 10:22 யெகோவாவின் ஆசீர்வாதம், **சொ.**
நீதி 18:11 **சொ.**, கோட்டைச் சுவர்போல்
பிர 5:10 **சொ.**களை விரும்புகிறவன், திருப்தியடைய
எபி 10:34 உயர்ந்த, நிலையான **சொ.**
சொத்துப்பத்துகள், நீதி 11:4 கோபத்தின் நாளில், **சொ.** உதவாது
நீதி 11:28 **சொ.**ளை நம்புகிறவன் விழுந்துபோவான்
சொந்தக்காரர்களை, அப் 10:24 கொர்நேலியு **சொ.**
சொந்த மக்களால், 1தெ 2:14 **சொ.** துன்பப்படுகிறீர்கள்
சொந்தமாகும், மத் 5:5 சாந்தமானவர்களுக்கு பூமி **சொ.**
சொந்தமாக்கி, மத் 25:34 அரசாங்கத்தைச் **சொ.**க்கொள்ளுங்கள்
சொந்தம், ரோ 14:8 இறந்தாலும் யெகோவாவுக்கு **சொ.**
1கொ 6:19 நீங்கள் உங்களுக்குச் **சொ.** கிடையாது
சொல்லி, ரோ 10:13 யெகோவாவின் பெயரைச் **சொ.**
சோகத்தில், 2கொ 2:7 அவன் **சோ.** மூழ்கிவிடாதபடி
சோகமாக, சங் 38:6 நாள் முழுவதும் **சோ.**
சோதனை, மத் 6:13 **சோ.**க்கு இணங்கிவிடாமல் இருக்க
மத் 26:41 **சோ.**க்கு இணங்கிவிடாதபடி
லூ 8:13 **சோ.** காலம் வந்தவுடன்
லூ 22:28 **சோ.**கள் வந்தபோது என்னோடுகூட
1கொ 10:13 மனிதர்களுக்குப் பொதுவாக வருகிற **சோ.**யை
2கொ 1:8 எங்கள் சக்திக்கு மிஞ்சிய **சோ.**
யாக் 1:12 **சோ.**களைச் சகித்துக்கொண்டே
சோதிக்கப்பட, 1தீ 3:10 தகுதியுள்ளவர்களா என்று **சோ.**
சோதிக்கப்பட்ட, யாக் 1:3 **சோ.** விசுவாசம்
சோதித்தீர்கள், அப் 5:9 யெகோவாவின் சக்தியை ஏன் **சோ.**?
சோதித்து, உபா 13:3 யெகோவா உங்களைச் **சோ.**
மல் 3:10 என்னைச் **சோ.** பாருங்கள்
1கொ 10:9 நாமும் அவரைச் **சோ.** பார்க்க
1கொ 11:28 தகுதியுள்ளவனா என்று **சோ.**
2கொ 13:5 விசுவாசத்தில் நிலைத்திருக்கிறீர்களா என்று **சோ.**
1யோ 4:1 கடவுளிடமிருந்து வந்ததா என்று **சோ.**
சோதிப்பது, நீதி 27:21 ஒருவனைச் **சோ.** புகழ்ச்சி
சோதோம், ஆதி 19:24 **சோ.**, நெருப்பு கந்தகம்
2பே 2:6 **சோ.**, கொமோராவைத் தண்டித்தார்
யூ 7 **சோ.** கொமோரா எச்சரிக்கை
சோம்பேறி, நீதி 6:6 **சோ.**யே, நீ எறும்பைப் பார்
நீதி 10:26 கண்களுக்குப் புகை போல, **சோ.**யும்
நீதி 19:24 **சோ.** பாத்திரத்துக்குள் கை
மத் 25:26 பொல்லாத அடிமையே, **சோ.**யே
ரோ 12:11 **சோ.**யாக இருக்காதீர்கள்
சோர்ந்து, நீதி 24:10 இக்கட்டு நாளில் **சோ.**போனால்
ஏசா 40:28 யெகோவா **சோ.**போவது இல்லை
ஏசா 40:29 **சோ.**போகிறவர்களுக்கு சக்தி
2கொ 4:16 அதனால், நாம் **சோ.**போவதில்லை
கலா 6:9 **சோ.**போகாமல் இருந்தால் ஏற்ற காலத்தில்
கொலோ 3:21 பிள்ளைகள் **சோ.**போவார்கள்
எபி 12:3 **சோ.**போய் பின்வாங்கிவிட

ஞ

ஞாபகம், சங் 8:4 அற்ப மனுஷனை நீங்கள் **ஞா.**
ஞானத்தை, 1ரா 3:11 **ஞா.** கேட்டிருக்கிறாய்
சங் 111:10 யெகோவாவுக்குப் பயப்படுவதுதான் **ஞா.**
நீதி 2:6 யெகோவா **ஞா.** கொடுக்கிறார்
நீதி 2:7 **ஞா.** அவர் பொக்கிஷம்போல்
நீதி 3:21 **ஞா.** பாதுகாத்துக்கொள்

லூ 21:15 எதிர்த்து பேச முடியாதபடி **ஞா.**
1கொ 2:6 உலகத் தலைவர்களுடைய **ஞா.**
ஞானமாக, சங் 119:98 எதிரிகளைவிட **ஞா.**
நீதி 27:11 என் மகனே, **ஞா.** நடந்து
பிர 10:10 **ஞா.** நடந்தால் நல்லபடியாக
லூ 16:8 நிர்வாகி **ஞா.** நடந்து
லூ 16:8 உலகத்தின் பிள்ளைகள் அதிக **ஞா.**
ஞானமுள்ளவர், நீதி 13:20 **ஞா.**களோடு நடக்கிறவன்
மத் 11:19 நீதியான செயல்கள் **ஞா.** என்பதை
எபே 5:15 **ஞா.**களாக நடப்பதற்கு
ஞானம், நீதி 4:7 **ஞா.**தான் முக்கியம்
நீதி 8:11 **ஞா.** பவளங்களைவிட சிறந்தது
நீதி 24:3 வீடு **ஞா.**த்தால் கட்டப்படும்
பிர 7:12 **ஞா.**மும் பாதுகாப்பு தரும்
ரோ 11:33 கடவுளுடைய **ஞா.**மும் அறிவும்
1கொ 2:5 மனித **ஞா.**த்தின் அடிப்படையில்
1கொ 3:19 உலகத்தின் **ஞா.**, முட்டாள்தனம்
கொலோ 2:3 **ஞா.**, அறிவு ஆகிய பொக்கிஷங்கள்
யாக் 1:5 ஒருவனுக்கு **ஞா.** குறைவாக இருந்தால்
யாக் 3:17 பரலோகத்திலிருந்து வருகிற **ஞா.**மோ
ஞானஸ்நானம், மத் 3:13 யோவானிடம் **ஞா.** பெற இயேசு
மத் 28:19 சீஷர்களாக்கி, **ஞா.** கொடுங்கள்
லூ 3:3 மனம் திருந்தியதற்கு அடையாளம் **ஞா.**
அப் 2:41 3,000 பேர் **ஞா.** எடுத்தார்கள்
அப் 8:36 **ஞா.** எடுக்க என்ன தடை?
ரோ 6:4 அவருடைய மரணத்துக்குள் **ஞா.**
1பே 3:21 **ஞா.** உங்களைக் காப்பாற்றுகிறது
ஞானி, நீதி 3:7 நீயே உன்னை **ஞா.** என்று
ஏசா 5:21 தங்களை **ஞா.**கள் என்று
மத் 11:25 **ஞா.**களுக்கு மறைத்து
1கொ 1:26 மனிதரின் பார்வையில், **ஞா.**களாகவோ

ட

டார்டரஸ், 2பே 2:4 தேவதூதர்களை **டா.**சுக்குள்

த

தகப்பன், சங் 2:7 நான் உனக்குத் **த.**னாக ஆனேன்
சங் 89:26 நீங்கள்தான் என் **த.**
ஏசா 9:6 என்றென்றுமுள்ள **த.**
மத் 6:9 பரலோகத்தில் இருக்கிற **த.**னே
லூ 2:49 நான் என் **த.**னுடைய வீட்டில்
யோவா 5:20 மகன்மேல் **த.** பாசம் வைத்து
யோவா 10:30 நானும் என் **த.**னும் ஒன்றாய்
யோவா 14:6 என் மூலமாக மட்டுமே **த.**னிடம்
யோவா 14:9 என்னைப் பார்த்தவன் **த.**னையும்
யோவா 14:28 என் **த.** என்னைவிட பெரியவர்
யோவா 14:28 நான் **த.**னிடம் போவதை நினைத்து
தகர்த்தெறிகிற, 2கொ 10:4 வேரூன்றியவற்றைத் **த.**
தகுதி, 2கொ 3:5 கடவுள்தான் போதிய **த.**யை
2தீ 2:2 கற்றுக்கொடுக்க **த.** பெறுவார்கள்
2தீ 3:17 எல்லா விதமான **த.**களையும்
தகுதியற்றவர்களாக, அப் 13:46 முடிவில்லாத வாழ்வுக்கு **த.**
தகுதியானவர், எபே 4:1 அழைப்புக்குத் **த.**களாக
பிலி 1:27 நல்ல செய்திக்குத் **த.**களாக
வெளி 4:11 மகிமையைப் பெற்றுக்கொள்ளத் **த.**
தகுதியில்லாமல், 1கொ 11:27 **த.** கிண்ணத்திலிருந்து
தகுதியுள்ளவர், மத் 10:11 **த.** யார் என்று
2தெ 1:5 அரசாங்கத்துக்கு **த.**களாக
தங்க, தானி 3:1 நேபுகாத்நேச்சார் ஒரு **த.** சிலை
தங்கம், எசே 7:19 வெள்ளியோ **த.**மோ காப்பாற்றாது
தச்சன், மாற் 6:3 இவன் **த.**தானே?
தஞ்சம், செப் 3:12 யெகோவாவின் பெயரில் **த.**
தடவியாவது, அப் 17:27 தட்டித் **த.**
தடுமாறி, சங் 119:165 எதுவுமே **த.** விழ வைக்காது
தடைக்கல், 1கொ 8:13 இறைச்சி **த.**லாக இருந்தால்
1கொ 10:32 **த.**லாகிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்
தடையாக, 2தெ 2:6 **த.** செயல்படுவது எது
தட்டிக்கொண்டே, மத் 7:7 **த.** இருங்கள்
தணலை, ரோ 12:20 நெருப்புத் **த.** தலைமேல்
தண்டனை, யாத் 11:1 பார்வோனுக்கு இன்னுமொரு **த.**
பிர 8:11 உடனடியாகத் **த.** கிடைக்காததால்
2கொ 1:9 மரண **த.** கொடுக்கப்பட்டதை
வெளி 18:4 அவளுக்கு வரப்போகும் **த.**களில்
தண்டிக்காமல், நீதி 23:13 பிள்ளையைத் **த.**
தண்ணீர், நீதி 20:5 உள்ளத்தில் யோசனைகள் ஆழமான **த.**
நீதி 25:25 தாகத்துக்கு குளிர்ந்த **த.**ரைப் போல்
ஏசா 35:6 வனாந்தரத்தில் **த.** ஊற்றெடுக்கும்
ஏசா 55:1 தாகமாக இருப்பவர்களே, வந்து **த.**
எரே 50:38 அவளுடைய **த.** வற்றிப்போகும்
யோவா 4:10 உனக்கு வாழ்வு தரும் **த.**ரை
1கொ 3:6 அப்பொல்லோ **த.** ஊற்றினார்
வெளி 17:1 **த.**மேல் விபச்சாரி
தத்தளிப்பார்கள், லூ 21:25 தேசத்தாரெல்லாம் **த.**
தத்துவங்கள், கொலோ 2:8 **த.** மூலம் அடிமையாக
தத்தெடுக்கப்படுவதற்கு, ரோ 8:15 மகன்களாகத் **த.** வழிநடத்தி
தந்திரமாக, யூ 4 சிலர் **த.** நுழைந்து
தந்தை, மத் 23:9 பூமியில் யாரையும் **த.**
தபீத்தாள், அப் 9:36 **த.** என்ற சிஷ்யை
தயவுசெய்து, ஆதி 15:5 **த.** வானத்தைப் பார்
தயவை, கலா 1:10 மனிதர்களுடைய **த.** பெற
தயாராக, மத் 24:44 **த.** இருங்கள்
தயார்படுத்த, யோவா 14:2 ஒரு இடத்தைத் **த.**
தராசு, லேவி 19:36 சரியான **த.**சையும்
நீதி 11:1 கள்ளத் **த.**களை யெகோவா
தானி 5:27 **த.**சில் நிறுத்தப்பட்டு, குறையுள்ளவராக
தரிசனம், தானி 10:14 **த.** நிறைவேற பல நாட்கள்
ஆப 2:3 நிறைவேற வேண்டிய காலத்தில் **த.** நிறைவேறும்
தர்க்கரீதியில், அப் 9:22 கிறிஸ்து என்று **த.** நிரூபித்து
தர்ஷீஸ், யோனா 1:3 யோனா, **த.**சுக்கு
தலை, ஆதி 3:15 உன் **த.**யை நசுக்குவார்
தானி 2:32 சிலையின் **த.** சொக்கத்தங்கம்
1கொ 11:3 பெண்ணுக்கு ஆண் **த.**
எபே 5:23 கிறிஸ்து சபைக்குத் **த.**
எபே 5:23 கணவனும் மனைவிக்குத் **த.**
தலைக்கல், சங் 118:22 மூலைக்குத் **த.**
தலைக்கவசமாக, எபே 6:17 மீட்பைத் **த.**
தலைக்கனம், யாக் 4:6 **த.** உள்ளவர்களை எதிர்க்கிறார்
தலைசுற்றும், லூ 21:26 பயத்தில் மக்களுக்குத் **த.**
தலைப்பாகையை, எசே 21:26 **த.** கழற்று
தலைமுடி, லூ 21:18 உங்கள் **த.**யில் ஒன்றுகூட
1கொ 11:14 ஆணுக்கு நீளமான **த.**
தலைமுறை, ஏசா 65:23 அவர்களின் வருங்காலத் **த.**கள்
மத் 24:34 இந்தத் **த.** ஒழிந்துபோகாது
தலைமை, ரோ 12:8 **த.** தாங்குகிறவர்கள் ஊக்கம் தளராமல்
தலைமைத் தூதர், 1தெ 4:16 **த.**ருக்குரிய குரலோடும்
யூ 9 **த.**ராகிய மிகாவேலுக்கும் பிசாசுக்கும் விவாதம்
தலையிடாதீர்கள், அப் 5:38 இவர்கள் விஷயத்தில் **த.**
தலையிடாமல், 1தெ 4:11 மற்றவர்கள் விஷயத்தில் **த.**
தலையிடுகிறவர்களாக, 1தீ 5:13 அநாவசியமாகத் **த.**
தலைவர், மத் 23:10 கிறிஸ்து ஒருவர்தான் உங்கள் **த.**
யோவா 12:42 **த.**களில்கூட நிறைய பேர் விசுவாசம்
தவறாக, 1கொ 9:18 உரிமையைத் **த.** பயன்படுத்தவில்லை
தீத் 2:8 நம்மைப் பற்றித் **த.** பேச
தவறு, யாக் 3:2 பல தடவை **த.** செய்கிறோம்
தளிரை, எரே 23:5 நீதியான **த.** துளிர்க்க
தற்காலிக, எபி 11:13 **த.** குடிகள் என்றும்
எபி 11:25 பாவத்தால் வரும் **த.** சந்தோஷங்களைவிட
தனிமைப்படுத்துகிறவன், நீதி 18:1 தன்னைத் **த.**
தனியாக, யோவா 8:29 என்னைத் **த.** விட்டுவிடவில்லை
யோவா 16:32 நான் **த.** இல்லை
தாகத்தில், ஏசா 49:10 **தா.** தவிக்க மாட்டார்கள்
தாகமாக, ஏசா 55:1 **தா.** இருப்பவர்களே, வாருங்கள்
யோவா 7:37 ஒருவன் **தா.** இருந்தால்

தாத்தா பாட்டிக்கு, 1தீ 5:4 **தா.** செய்ய வேண்டிய
தாமதிக்க, ஏசா 46:13 மீட்பதற்கு **தா.**
தாமதிக்காது, ஆப 2:3 அது கொஞ்சம்கூடத் **தா.**
தாமதிக்கிறார், லூ 12:45 எஜமான் வரத் **தா.**
தாமதிப்பதாக, 2பே 3:9 வாக்குறுதியை நிறைவேற்ற **தா.**
தாம்பத்திய உறவின், எபி 13:4 **தா.** புனிதத்தைக் கெடுக்காதீர்கள்
தாய், கலா 4:26 மேலான எருசலேம் **தா.**
தாராள குணமுள்ளவன், நீதி 11:25 **தா.** செழிப்பான்
தாராளமாக, உபா 15:8 **தா.** அள்ளிக் கொடுங்கள்
நீதி 11:24 **தா.** கொடுக்கிறவன் ஏராளமாக
1தீ 6:18 **தா.** கொடுக்கிறவர்களாகவும்
யாக் 1:5 **தா.** கொடுக்கிற கடவுள்
தாலந்து, மத் 25:15 ஐந்து **தா.**, இரண்டு **தா.**
மத் 25:15 திறமைக்கு ஏற்றபடி **தா.**
தாவீது, 1சா 16:13 சாமுவேல், **தா.**தை அபிஷேகம்
லூ 1:32 **தா.**தின் சிம்மாசனத்தை
அப் 2:34 **தா.** பரலோகத்துக்கு
தாழ்த்தி, லூ 9:48 தன்னைத் **தா.**க்கொள்கிறவனே
1பே 5:6 கடவுளுடைய கைக்குள் **தா.**
தாழ்த்துங்கள், யாக் 4:10 யெகோவா முன்னால் **தா.**
தாழ்ந்த குரலில், யோசு 1:8 திருச்சட்டத்தை **தா.**
சங் 1:2 யெகோவாவின் சட்டத்தை **தா.**
தாழ்மை, உபா 8:2 **தா.**யைக் கற்றுக்கொடுப்பதற்கும்
சக 9:9 உன் ராஜா **தா.**யுள்ளவர்
மத் 18:4 சின்னப் பிள்ளை போல் **தா.**
யாக் 4:6 **தா.** உள்ளவர்களுக்கோ கருணை
தாழ்மையானவர்கள், சங் 37:11 **தா.** பூமியைச் சொந்தமாக்கி
தானியம், சங் 72:16 ஏராளமாகத் **தா.** விளையும்
தானியேல், தானி 6:13 **தா.** தினமும் மூன்று தடவை
திட, எபி 5:14 **தி.** உணவோ
திடீரென, லூ 21:34 அந்த நாள் **தி.** உங்கள்மேல்
திட்டங்கள், நீதி 15:22 கலந்துபேசாமல் இருந்தால் **தி.**
நீதி 19:21 மனிதன் நிறைய **தி.**ளை
திட்டித் தீர், யோபு 2:5 உங்களைத் **தி.**ப்பான்
யோபு 2:9 அவரைத் **தி.**த்துவிட்டு
திண்டாடுகிறேன், பிலி 1:23 இரண்டுக்கும் நடுவில் **தி.**
தியாகம், மத் 19:29 வீடுகளையோ நிலங்களையோ **தி.**
தியானிக்கிற, சங் 19:14 இதயத்தில் **தி.** விஷயங்களும்
தியானித்து, சங் 77:12 நீங்கள் செய்த காரியங்களை **தி.**
தியானிப்பதற்காக, ஆதி 24:63 [ஈசாக்கு] **தி.**
திரள் கூட்டமான, வெளி 7:9 **தி.** மக்கள்
திராட்சமது, லேவி 10:9 **தி.** குடித்துவிட்டு வரக் கூடாது
சங் 104:15 இதயத்தைச் சந்தோஷப்படுத்த **தி.**
நீதி 20:1 **தி.** கேலி செய்யும்
நீதி 23:31 **தி.**வின் சிவப்பு நிறத்தை
ஏசா 25:6 அருமையான **தி.** விருந்து
ஓசி 4:11 **தி.** சரியானதைச் செய்கிற எண்ணத்தை
யோவா 2:9 **தி.**வாக மாற்றப்பட்ட தண்ணீரை
1தீ 5:23 வயிற்றுக் கோளாறுக்காக, **தி.**வை
திராட்சமது காணிக்கை, பிலி 2:17 நான் **தி.** போல்
திராட்சைக் கொடி, மீ 4:4 **தி.**யின் கீழும்
யோவா 15:1 நான்தான் உண்மையான **தி.**
திராட்சைத் தோட்டம், ஏசா 65:21 **தி.**ங்களை அமைத்து
மத் 20:1 **தி.**த்துக்கு கூலியாட்களை
மத் 21:28 மகனே, **தி.**த்துக்குப் போய்
லூ 20:9 **தி.** போட்டு, தூர தேசத்துக்கு
திரியையும், ஏசா 42:3 மங்கியெரிகிற எந்தத் **தி.**
திருச்சட்டம், ரோ 10:4 கிறிஸ்து **தி.**த்தின் முடிவு
ரோ 13:8 அன்பு காட்டுகிறவன் **தி.**த்தை
கலா 3:24 **தி.**, பாதுகாவலராக இருந்து
திருட, யாத் 20:15 **தி.** கூடாது
திருடர்கள், மத் 6:20 பரலோகத்தில், **தி.** திருடி
1கொ 6:10 **தி.** கடவுளுடைய அரசாங்கத்துக்குள்
திருடனாக, நீதி 30:9 **தி.** மாறி, உங்கள் பெயரை
திருடன், மத் 24:43 எந்த நேரத்தில் **தி.** வருவான்
1தெ 5:2 இரவில் **தி.** வருவதுபோல்
திருடாமல், எபே 4:28 திருடுகிறவன் இனி **தி.**
திருடினால், நீதி 6:30 வயிற்றுப் பசிக்காகத் **தி.**
திருத்தமான அறிவு, ரோ 10:2 **தி.**க்கு ஏற்ற வைராக்கியம்
கொலோ 3:10 **தி.** மூலம் புதிய சுபாவம்
1தீ 2:4 மக்கள் **தி.** பெற வேண்டுமென்பது
திருத்துகிறீர்களோ, சங் 94:12 யாரைத் **தி.**
திருத்துவது, உபா 8:5 அப்பா மகனை **தி.** போல
திருப்பிக்கொடுக்காமல், சங் 37:21 பொல்லாதவன் கடனை **தி.**
திருமண, மத் 22:2 **தி.** விருந்துக்கு ஏற்பாடு செய்த ராஜா
எபி 13:4 **தி.** ஏற்பாட்டை மதியுங்கள்
திருமணம், மத் 22:30 உயிரோடு எழுப்பப்படுகிறவர்கள் **தி.**
1கொ 7:9 காமத் தீயில் பற்றியெரிவதைவிட **தி.**
1கொ 7:32 **தி.** ஆகாதவன் எஜமானுக்கு பிரியமாக
1கொ 7:36 அப்படிப்பட்டவர்கள் **தி.** செய்யட்டும்
1கொ 7:38 **தி.** செய்யாமல் இருப்பது
1கொ 9:5 கிறிஸ்தவப் பெண்ணைத் **தி.**
வெளி 19:7 ஆட்டுக்குட்டியானவரின் **தி.**
திரும்பி, யோவே 2:12 என்னிடம் **தி.** வாருங்கள்
மல் 3:7 என்னிடம் **தி.** வாருங்கள், நானும்
திரை, 2கொ 3:15 இதயத்தை ஒரு **தி.**
திறப்பதெல்லாம், மத் 18:18 நீங்கள் பூமியில் **தி.**
திறமை, யாத் 18:21 **தி.**யான ஆண்களை தேர்ந்தெடு
யாத் 35:35 கைவேலைகள் செய்ய **தி.** தந்திருக்கிறார்
நீதி 22:29 **தி.**யாக வேலை செய்கிறவனை
நீதி 31:29 **தி.**சாலியான பெண்கள்
தினாரியு, லூ 7:41 500 **தி.** கடன்
தீட்டு, லேவி 13:45 **தீ.**, **தீ.**! என்று கத்த
தீமை, ஆதி 3:5 நன்மை **தீ.** தெரிந்து கடவுளைப் போல
ரோ 12:17 **தீ.**க்குத் **தீ.** செய்யாதீர்கள்
2தீ 2:24 **தீ.**யை பொறுத்துக்கொள்கிறவனாக
தீமோத்தேயு, அப் 16:1 **தீ.** என்ற சீஷர்
1தீ 1:2 உண்மையான மகனாகிய **தீ.**
தீயை, 1தெ 5:19 ஆர்வத் **தீ.** அணைத்துவிடாதீர்கள்
தீர்க்கதரிசன, 2பே 1:19 **தீ.** வார்த்தைகள் உறுதியாகி
தீர்க்கதரிசனம், யோவே 2:28 மகன்களும் மகள்களும் **தீ.**
2பே 1:21 தங்களுடைய விருப்பத்தால் **தீ.**
தீர்க்கதரிசி, உபா 18:18 உன்னைப் போன்ற **தீ.**யை
1ரா 18:4 [ஒபதியா] 100 **தீ.**களை
எசே 2:5 அவர்கள் நடுவே ஒரு **தீ.**
ஆமோ 3:7 ரகசியத்தை **தீ.**களிடம்
ஆமோ 7:14 நான் **தீ.**யும் இல்லை
அப் 10:43 எல்லா **தீ.**களும் அவரைப் பற்றி
தீவனத் தொட்டியில், லூ 2:7 குழந்தையை **தீ.**
தீனாள், ஆதி 34:1 **தீ.**, பொழுதைக் கழிக்க
துக்க, பிர 7:2 **து.** வீட்டுக்குப் போவது
துக்கப்பட, 1தெ 4:13 மற்றவர்களைப் போல் **து.**
துக்கப்படுகிறவர்கள், மத் 5:4 **து.** சந்தோஷமானவர்கள்
துக்கப்படுத்தாமல், எபே 4:30 கடவுளின் சக்தியைத் **து.**
துக்கப்படுத்தினார்கள், சங் 78:41 கடவுளை **து.**
துக்கம், சங் 31:10 வாழ்நாள் **து.**த்தில்தான் கழிகிறது
ஏசா 51:11 வேதனையும் **து.**மும் போய்விடும்
துடைத்தழிக்கப்படும், அப் 3:19 பாவங்கள் **து.**
துப்பி, மத் 26:67 அவருடைய முகத்தில் **து.**
துயரமும், ஏசா 35:10 துக்கமும் **து.** பறந்துவிடும்
துரோகம், மல் 2:15 மனைவிக்குத் **து.** செய்யாதீர்கள்
துறந்து, மத் 16:24 அவர் தன்னையே **து.**
துன்பங்களை, 1பே 5:9 சகோதரர்களும் இதேபோன்ற **து.**
துன்புறுத்த, மத் 5:10 **து.**ப்படுகிறவர்கள் சந்தோஷமானவர்கள்
மத் 13:21 **து.**லோ வந்தவுடன் விசுவாசத்தை
மாற் 10:30 **து.**ல்களோடுகூட, 100 மடங்கு
துன்புறுத்தி, யோவா 15:20 என்னைத் **து.**யிருந்தால்
அப் 22:4 சிறையில் அடைத்தேன், **து.**னேன்
தூக்கத்தில், ரோ 13:11 **தூ.**லிருந்து எழுந்திருக்க
தூக்க மயக்கம், நீதி 23:21 **தூ.**, கந்தல் துணி
தூக்கமில்லாத, 2கொ 6:5 **தூ.** இரவுகள்

தூக்கமில்லாமல், 2கொ 11:27 **தூ.** பல இரவுகளை
தூங்க, நீதி 6:10 கொஞ்ச நேரம் **தூ.** வேண்டும்
தூங்கிக்கொண்டிருக்க, 1தெ 5:6 மற்றவர்களைப் போல் **தூ.**
தூசி, ஏசா 40:15 தேசங்கள் தராசில் படிந்த **தூ.**
மத் 7:3 சகோதரன் கண்ணில் **தூ.**
தூணும், யாத் 13:22 மேகத் **தூ.** நெருப்புத் **தூ.**
1தீ 3:15 சத்தியத்துக்குத் **தூ.**
தூண்கள், கலா 2:9 சபையின் **தூ.** என்று
தூண்டுங்கள், சங் 51:12 கீழ்ப்படியும் ஆசையை **தூ.**
தூதர், 2ரா 19:35 **தூ.** 1,85,000 வீரரைக் கொன்றார்
யோபு 4:18 **தூ.**களிடமே குறை கண்டுபிடிக்கிறார்
யோபு 38:7 கடவுளுடைய **தூ.**கள் ஆரவாரம்
சங் 34:7 யெகோவாவின் **தூ.** சூழ்ந்து நின்று
மத் 13:41 **தூ.**களை அனுப்பி, பிரித்தெடுத்து
அப் 5:19 **தூ.** சிறைக் கதவை திறந்தார்
எபே 6:12 பொல்லாத **தூ.** கூட்டத்தோடு
தூதனை, தானி 3:28 **தூ.** அனுப்பி காப்பாற்றினார்
தூதுவர், மல் 3:1 என்னுடைய **தூ.**ரை அனுப்புகிறேன்
2கொ 5:20 கிறிஸ்துவின் சார்பில் **தூ.**களாக
தூரமானவராக, அப் 17:27 ஒருவருக்கும் **தூ.**
தெரிந்துகொள்ளுங்கள், எரே 31:34 யெகோவாவை **தெ.** என்று
தெரியாதவன், 1கொ 9:26 சேரவேண்டிய இடம் **தெ.** போல்
தெரியாதென்று, மாற் 14:30 **தெ.** மூன்று தடவை
தெரியும், கலா 4:9 கடவுளுக்கு உங்களை **தெ.**
தெளிவாக, 1கொ 14:8 எக்காள சத்தம் **தெ.** இல்லையென்றால்
தென்திசை ராஜா, தானி 11:11 **தெ.** கடும் கோபத்தோடு
தானி 11:40 **தெ.** சண்டைக்கு நிற்பான்
தேசத்தார், ஆதி 22:18 பூமியிலுள்ள எல்லா **தே.**ரும்
மத் 25:32 எல்லா **தே.**ரும் அவர் முன்னால்
லூ 21:24 மற்ற **தே.**ருக்கு குறிக்கப்பட்ட
தேசத்து, அப் 17:26 ஒரே மனுஷனிலிருந்து எல்லா **தே.**
தேசம், சங் 33:12 யெகோவாவைக் கடவுளாகக் கொண்ட **தே.**
ஏசா 66:8 ஒரே நாளில் ஒரு **தே.** உருவாகுமா
தேடி, எசே 34:11 என் ஆடுகளைத் **தே.**
யோவா 4:23 தகப்பன் **தே.**கொண்டிருக்கிறார்
தேடினால், 1நா 28:9 நீ அவரைத் **தே.**
தேடுங்கள், ஏசா 55:6 யெகோவாவைத் **தே.**
செப் 2:3 யெகோவாவைத் **தே.**
தேர்ந்தெடுக்க, உபா 30:20 வாழ்வைத் **தே.** வேண்டும்
தேர்ந்தெடுக்கப்பட்ட, மத் 24:22 **தே.**வர்களுக்காக நாட்கள்
மத் 24:31 **தே.**வர்களை கூட்டிச்சேர்ப்பார்கள்
தேர்ந்தெடுக்கிற, ரோ 9:13 **தே.** அவரையே சார்ந்திருக்கிறது
தேர்ந்தெடுத்தவர்கள்மேல், சங் 105:15 நான் **தே.** கை வைக்காதீர்கள்
தேவதூதர்கள், ஆதி 6:2 **தே.** தங்களுக்குப் பிடித்த பெண்களை
ஆதி 28:12 **தே.** ஏறிக்கொண்டு, இறங்கிக்கொண்டு
மத் 22:30 பரலோகத்திலுள்ள **தே.**ளைப் போல்
மத் 24:31 **தே.** கூட்டிச்சேர்ப்பார்கள்
1கொ 4:9 **தே.**ளுக்குக் காட்சிப்பொருளாக
1கொ 6:3 **தே.**ளையும் நியாயந்தீர்ப்போம்
எபி 13:2 தெரியாமல் **தே.**ளை உபசரித்தார்கள்
1பே 1:12 கூர்ந்து கவனிக்க **தே.**ளும் ஆவலாக
யூ 6 **தே.** ஸ்தானத்தைக் காத்துக்கொள்ளாமல்
தேவதூதனோடு, ஓசி 12:4 [யாக்கோபு] **தே.** போராடினார்
தேவை, மத் 6:32 இவையெல்லாம் உங்களுக்குத் **தே.**
தேனும், யாத் 3:8 பாலும் **தே.** ஓடுகிற தேசம்
தேன், நீதி 25:27 அதிகமாகத் **தே.** சாப்பிடுவது
தைரியமாக, யோசு 1:7 **தை.**வும் ரொம்பவே உறுதியாகவும்
நீதி 28:1 சிங்கம் போலத் **தை.**
ஏசா 35:4 **தை.** இருங்கள், பயப்படாதீர்கள்
அப் 4:31 வார்த்தையைத் **தை.** பேச
1கொ 16:13 **தை.** செயல்படுங்கள்
எபே 6:20 **தை.** பேச எனக்காக ஜெபம்
பிலி 1:14 வார்த்தையை **தை.** அறிவித்து
தைரியம், அப் 28:15 பவுல் அவர்களைப் பார்த்து, **தை.**
1தெ 2:2 **தை.**த்தை வரவழைத்துக்கொண்டோம்
தொங்கல், எண் 15:39 **தொ.**களைப் பார்க்கும்போது
தொடாதீர்கள், ஏசா 52:11 அசுத்தமான எதையும் **தொ.**
2கொ 6:17 அசுத்தமானதைத் **தொ.**
தொட்டியில், நீதி 5:15 உன் **தொ.** இருக்கும் தண்ணீரை
தொட்டு, மத் 8:3 கையை நீட்டி அவனைத் **தொ.**
தொலைந்துபோனதை, எசே 34:4 **தொ.** தேடிப்போகவில்லை
தொழுநோயாளி, லேவி 13:45 **தொ.**, தீட்டு, தீட்டு!
தொழுநோய், எண் 12:10 மிரியாமைத் **தொ.**
லூ 5:12 உடல் முழுவதும் **தொ.**யால்
தொழுவத்தை, யோவா 10:16 இந்தத் **தொ.** சேராத வேறே
தோட்டத்தில், ஆதி 2:15 ஏதேன் **தோ.** குடிவைத்து
தோள், செப் 3:9 **தோ.**ளோடு **தோ.** சேர்ந்து
தோற்றம், 1சா 16:7 **தோ.**த்தைப் பார்க்காதே
மத் 17:2 அவருடைய **தோ.** மாறியது

ந

நகரங்களிலும், லூ 4:43 மற்ற **ந.** அறிவிக்க
நகரத்தில், 2கொ 11:26 **ந.** வந்த ஆபத்துகளையும்
நகரம், எபி 11:10 அஸ்திவாரங்களைக் கொண்ட **ந.**
நகலை, உபா 17:18 திருச்சட்டத்தின் **ந.** எழுதி
நங்கூரம், எபி 6:19 நம்பிக்கை நம் உயிருக்கு **ந.**
நடக்க முடியாதவர்கள், ஏசா 35:6 **ந.** மான்போல் துள்ளி
நடத்தை, 1பே 2:12 உலக மக்கள் மத்தியில் நல்ல **ந.**
1பே 3:2 உங்கள் **ந.**யால் விசுவாசியாக
1பே 3:16 உங்கள் நல்ல **ந.**யைப் பழிக்கிறவர்கள்
நடந்து, யோவா 6:19 இயேசு கடல்மேல் **ந.**
நடனமாடிக்கொண்டு, நியா 11:34 அவருடைய மகள் **ந.**
நடுக்கத்தோடும், பிலி 2:12 பயத்தோடும் **ந.** மீட்புக்காக
நடுங்குகிறவன், நீதி 29:25 மனிதனைப் பார்த்து **ந.**
நட்சத்திரங்கள், சங் 147:4 **ந.**ளை பெயர் சொல்லி
மத் 24:29 **ந.** விழும்
வெளி 2:1 ஏழு **ந.**ளை வலது கையில்
நட்டேன், 1கொ 3:6 நான் **ந.**, அப்பொல்லோ
நட்பு, யாக் 4:4 உலக **ந.** கடவுளுக்குப் பகை
நண்பர், சங் 25:14 யெகோவா நெருங்கிய **ந.**ராக
நீதி 14:20 பணக்காரனுக்கு ஏகப்பட்ட **ந.**கள்
நீதி 16:28 உயிர் **ந.**களைக்கூட பிரித்து
லூ 16:9 அநீதியான செல்வங்களால் **ந.**களை
யோவா 15:13 **ந.**களுக்காக உயிரைக் கொடுக்கிற
யோவா 15:14 என் கட்டளைப்படி நடந்தால் என் **ந.**களாக
யாக் 2:23 ஆபிரகாம் யெகோவாவின் **ந.**
நண்பன், 2நா 20:7 உங்கள் **ந.**னான ஆபிரகாம்
நீதி 17:17 உண்மையான **ந.** எப்போதும்
நீதி 18:24 பாசமாக ஒட்டிக்கொள்ளும் **ந.**னும்
நம்பகமான, யாத் 18:21 **ந.** ஆட்களைத் தேர்ந்தெடு
நம்பகமானது, சங் 19:7 யெகோவாவின் நினைப்பூட்டுதல் **ந.**
சங் 33:4 யெகோவாவின் செயல்கள் **ந.**
நம்பகமானவர், 1கொ 10:13 கடவுள் **ந.**
எபி 10:23 வாக்குறுதி தந்தவர் **ந.**
நம்பாதீர்கள், சங் 146:3 அதிகாரிகளை **ந.**
நம்பாமல், 2தெ 2:12 சத்தியத்தை **ந.** அநீதியை
நம்பிக்கை, சங் 56:11 கடவுள்மேல் **ந.** வைத்திருக்கிறேன்
சங் 62:8 எப்போதும் அவர்மேல் **ந.**
சங் 84:12 உங்கள்மேல் **ந.** வைக்கிறவன்
சங் 146:5 யெகோவாமேல் **ந.**யாக இருக்கிறவன்
நீதி 3:26 யெகோவா உன் **ந.**
ரோ 8:24 பார்ப்பதை நம்புவது **ந.**யே அல்ல
ரோ 12:12 **ந.**யில் சந்தோஷமாயிருங்கள்
ரோ 15:4 வேதவசனங்கள் **ந.** தருகின்றன
2கொ 1:9 எங்கள்மேல் **ந.** வைக்காமல்
எபே 1:18 அழைத்ததால் பெற்ற **ந.**
எபே 2:12 **ந.** இல்லாதவர்களாகவும்
தீத் 2:10 **ந.**க்குரியவர்கள் என்பதைக் காட்ட
எபி 6:19 **ந.** நங்கூரம் போன்றது
நம்பு, நீதி 3:5 யெகோவாவை முழு இதயத்தோடு **ந.**

நம்புகிறவர்கள், யோவா 20:29 பார்க்காமலேயே **ந.** சந்தோஷமானவர்கள்
நம்புகிறவன், நீதி 28:26 இதயத்தையே **ந.** முட்டாள்
எரே 17:5 மனுஷனை **ந.** சபிக்கப்படுவான்
நயமான, ரோ 16:18 **ந.** பேச்சினாலும்
நரைமுடி, நீதி 16:31 **ந.** அழகான கிரீடம்
நல்ல செய்தி, நீதி 25:25 தூர தேசத்திலிருந்து வருகிற **ந.**
ஏசா 52:7 **ந.** சொல்கிறவரின் பாதங்கள்
மத் 24:14 அரசாங்கத்தைப் பற்றிய **ந.**
லூ 4:43 மற்ற நகரங்களிலும் **ந.**யை
ரோ 1:16 **ந.** சொல்ல வெட்கப்படுவதில்லை
1கொ 9:16 **ந.**யை அறிவிக்காவிட்டால்
1கொ 9:23 எல்லாவற்றையும் **ந.**க்காக
நல்லது, நீதி 3:27 **ந.** செய்ய வேண்டியவர்களுக்கு
நல்லதை, யோபு 2:10 கடவுளிடமிருந்து **ந.** மட்டும்
ரோ 7:19 நான் விரும்புகிற **ந.** செய்யாமல்
நல்லவனுக்காக, ரோ 5:7 **ந.** உயிரைக் கொடுக்க
நற்செய்தியாளர், அப் 21:8 **ந.**ரான பிலிப்பு
2தீ 4:5 **ந.**ரின் வேலையைச் செய்
நன்மை, ஆதி 3:5 **ந.** தீமை தெரிந்துகொண்டு
உபா 8:16 எதிர்கால **ந.**யை மனதில் வைத்து
உபா 10:13 உங்களுடைய **ந.**க்காக
அப் 20:20 **ந.**யான எல்லாவற்றையும்
ரோ 15:2 மற்றவர்களுக்கு **ந.** செய்ய
1கொ 7:35 உங்கள் சொந்த **ந.**க்காக
கலா 6:9 **ந.** செய்வதை விட்டுவிடாமல்
கலா 6:10 எல்லாருக்கும் **ந.** செய்ய
நன்றாக, ஆதி 1:31 எல்லாமே மிகவும் **ந.**
நன்றி, சங் 95:2 சன்னிதிக்கு வந்து **ந.** சொல்வோம்
யோவா 11:41 ஜெபத்தைக் கேட்டதற்கு **ந.**
அப் 28:15 அவர்களைப் பார்த்ததும், பவுல் **ந.**
எபே 5:20 எல்லாவற்றுக்காகவும் **ந.**
நன்றிகெட்டவனாக, நீதி 29:21 செல்லம் கொடுத்தால், **ந.**
நன்றியுள்ளவர்களாக, கொலோ 3:15 **ந.** இருப்பதை
நன்றியோடு, 1தீ 1:12 கிறிஸ்து இயேசுவுக்கு **ந.**
நஷ்ட ஈடு, யாத் 21:36 அவன் **ந.** கொடுக்க
நஷ்டம், பிலி 3:7 கிறிஸ்துவுக்காக **ந.** என்று
நாகப்பாம்பு, ஏசா 11:8 **நா.** புற்றின் மேல்
நாக்கை, யாக் 1:26 **நா.** அடக்காமல்
யாக் 3:8 **நா.** எந்த மனிதனாலும் அடக்க
நாசமாக்குகிறவர்களை, வெளி 11:18 பூமியை **நா.**
நாட்கள், மத் 24:22 **நா.** குறைக்கப்படவில்லை என்றால்
நாத்தான், 2சா 12:7 **நா.**, நீங்கள்தான் அந்த மனிதன்
நாயின், நீதி 26:17 **நா.** காதுகளைப் பிடிப்பதும்
நாயீன், லூ 7:11 **நா.** என்ற நகரத்துக்கு
நாயே, பிர 9:4 செத்த சிங்கத்தைவிட உயிருள்ள **நா.**
நாய், 2பே 2:22 **நா.** தான் கக்கியதை
நாவின், நீதி 18:21 சாவும் வாழ்வும் **நா.**
நாவை, சங் 34:13 கெட்டதைப் பேசாதபடி **நா.**
நாளும், மத் 24:36 அந்த **நா.** அந்த நேரமும்
நாளைக்கு, நீதி 27:1 **நா.** செய்யப்போவதைப் பற்றி
1கொ 15:32 சாப்பிடுவோம், **நா.** சாவோம்
நாள், சங் 84:10 பிரகாரங்களில் ஒரு **நா.**
எசே 4:6 ஒரு **நா.**ளுக்கு ஒரு வருஷம்
2பே 3:8 ஒரு **நா.** ஆயிரம் வருஷம்
நான் யெகோவா, யாத் 7:5 **நா.** என்று
எசே 39:6 **நா.** என்று தெரிந்துகொள்வார்கள்
நிச்சயத்தோடும், 1தெ 1:5 முழு **நி.**
நிச்சயப்படுத்தி, பிலி 1:10 முக்கியமான காரியங்களை **நி.**
1தெ 5:21 நல்லது எது என்று **நி.**
நிதானமாக, யாக் 1:19 **நி.** பேசுகிறவர்களாக
நிதானம், 2தெ 2:2 **நி.** இழந்து பரபரப்பாகி
நிந்தனை, மாற் 3:29 சக்திக்கு விரோதமாக **நி.**
நிம்மதியே, ஏசா 57:21 கெட்டவர்களுக்கு **நி.**
நியாயங்காட்டி, அப் 17:2 வேதவசனங்களிலிருந்து **நி.**
நியாயசங்கத்தை, அப் 5:41 சந்தோஷமாக **நி.**
நியாயத்தீர்ப்பு, 1கொ 11:29 குடிக்கிறவன் தனக்கே **நி.**பை
1பே 4:17 **நி.** கடவுளுடைய வீட்டில்
நியாயத்தீர்ப்பு மேடை, யோவா 19:13 பிலாத்து **நி.**யில்
ரோ 14:10 கடவுளுடைய **நி.**க்கு
நியாயந்தீர், ஏசா 26:9 பூமியை நீங்கள் **நி.**க்கும் சமயங்களில்
மத் 7:2 மற்றவர்களை எப்படி **நி.**க்கிறீர்களோ
லூ 6:37 **நி.**ப்பதை நிறுத்துங்கள்
லூ 22:30 12 கோத்திரங்களையும் **நி.**க்க
யோவா 5:22 **நி.**க்கிற அதிகாரம் முழுவதையும்
அப் 17:31 உலகத்தை **நி.**க்க ஒரு நாளை
ரோ 14:4 வேறொருவருடைய வேலைக்காரனை **நி.**க்க
1கொ 6:2 பரிசுத்தவான்கள் உலகத்தை **நி.**ப்பார்கள்
யாக் 4:12 மற்றவர்களை **நி.**க்க நீங்கள் யார்?
நியாயமானவர்கள், பிலி 4:5 நீங்கள் **நி.** என்பது
நியாயம், யோபு 34:12 **நி.**த்தைப் புரட்ட மாட்டார்
சங் 37:28 யெகோவா **நி.**த்தை நேசிக்கிறார்
நீதி 29:4 அரசன் **நி.**மாக நடந்தால்
பிர 5:8 நீதி **நி.** புரட்டப்படுவதை
ஏசா 32:1 அதிபதிகளும் **நி.**மாக ஆட்சி
மீ 6:8 **நி.**த்தைக் கடைப்பிடித்து
லூ 18:7 அவர் **நி.** வழங்காமல் இருப்பாரா?
நிரப்புங்கள், ஆதி 1:28 பூமியை **நி.**
நிர்வாகம், எபே 1:10 ஒரு **நி.**
நிர்வாகி, லூ 12:42 உண்மையுள்ள **நி.** யார்?
1கொ 4:2 **நி.**கள் உண்மையோடு இருக்க
நிலநடுக்கங்கள், லூ 21:11 பெரிய **நி.** ஏற்படும்
நிலம், மத் 13:23 நல்ல **நி.**த்தைப் போல்
1கொ 3:9 கடவுளால் பண்படுத்தப்படுகிற **நி.**
நிலைகுலைந்து, 1தெ 3:3 உபத்திரவங்களால் **நி.**
நிலைத்திருந்தவர்கள், லூ 22:28 என்னோடுகூட **நி.**
நிலைத்திருப்பான், 1யோ 2:17 என்றென்றும் **நி.**
நிழல், 1நா 29:15 வாழ்க்கை **நி.**லைப் போல்
சங் 91:1 சர்வவல்லமையுள்ளவரின் **நி.**லில்
கொலோ 2:17 வரப்போகிற காரியங்களின் **நி.**
யாக் 1:17 அவர் **நி.**லைப் போல்
நிறைந்திருப்பதை, லூ 6:45 இதயத்தில் **நி.** வாய் பேசும்
நிறைவேற்றவே, மத் 5:17 திருச்சட்டத்தை **நி.**
நிற்பதாக, 1கொ 10:12 **நி.** நினைக்கிறவன்
நினிவே, யோனா 4:11 **நி.** மாநகரத்துக்காக
நினைக்காத, மத் 24:44 நீங்கள் **நி.** நேரத்தில்
நினைப்பூட்டுதல்களை, சங் 119:24 உங்கள் **நி.**
நினைவாக, லூ 22:19 என் **நி.** இதை
நினைவுக் கல்லறைகளில், யோவா 5:28 **நி.** இருக்கிற
நிஜமானவர், யோவா 7:28 என்னை அனுப்பியவர் **நி.**
நீக்கிவிடுங்கள், 1கொ 5:13 பொல்லாத மனிதனை **நீ.**
நீதி, உபா 32:4 அவர் **நீ.**யும் நேர்மையும்
சங் 45:7 **நீ.**யை நேசித்தீர்கள்
ஏசா 32:1 ஒரு ராஜா **நீ.**யாக ஆட்சி
ஏசா 60:17 **நீ.**யை மேற்பார்வையாளராக
2பே 3:13 **நீ.** குடியிருக்கிற
நீதிநியாயம், அப் 28:4 **நீ.**த்திடமிருந்து தப்பிக்க
நீதிநெறிகளை, செப் 2:3 **நீ.** தேடுங்கள்
நீதிபதி, ஏசா 33:22 யெகோவா நம்முடைய **நீ.**
லூ 18:2 ஒரு **நீ.**, கடவுளுக்குப் பயப்படாதவர்
நீதிமன்றம், தானி 7:10 **நீ.** கூடியது
மாற் 13:9 மக்கள் உங்களை **நீ.**ங்களுக்கு
1கொ 6:6 சகோதரனுக்கு எதிராக **நீ.**த்தில்
நீதிமானாக, ஆதி 15:6 ஆபிராமை **நீ.**
நீதிமான், ஆதி 18:25 **நீ.**களையும் சேர்த்து அழிப்பதை
சங் 34:19 **நீ.**னுக்குப் பல கஷ்டங்கள்
சங் 37:25 **நீ.**னைக் கடவுள் கைவிட்டதை
சங் 72:7 அவர் ஆட்சியில் **நீ.**கள் செழிப்பார்கள்
சங் 141:5 **நீ.** என்னை அடித்தால்
நீதி 24:16 **நீ.** ஏழு தடவை விழுந்தாலும்
1பே 3:12 யெகோவாவின் கண்கள் **நீ.**களை

நீரூற்று, எரே 2:13 வாழ்வு தரும் நீ.ராகிய என்னை
வெளி 7:17 வாழ்வு தரும் நீ.களிடம்
நீளமாக்கு, ஏசா 54:2 கூடாரத்தின் கயிறுகளை நீ.
நுகத்தடி, மத் 11:30 என்னுடைய நு. மென்மையாக
நெஞ்சார நேசிப்பான், எபே 5:29 கவனித்துக்கொண்டு நெ.
நெஞ்சில், ஏசா 40:11 தன் நெ. வைத்து சுமப்பார்
நெருக்கி, மாற் 4:19 செய்தியை நெ. போடுகின்றன
நெருங்கி, சங் 73:28 கடவுளிடம் நெ.ப்போவது
யாக் 4:8 கடவுளிடம் நெ. வாருங்கள்
நெருப்பு, எரே 20:9 நெ.பை என் எலும்புக்குள்
மத் 25:41 என்றென்றும் அணையாத நெ.
1கொ 3:13 வேலைப்பாடு நெ.பால்
2தீ 1:6 வரத்தை நெ.போல் மூட்டிவிட்டு
2பே 3:7 வானமும் பூமியும் நெ.க்காக
நெற்றி, எசே 3:9 நெ.யை வைரம் போல
எசே 9:4 நெ.யில் அடையாளம் போடு
நேசிக்கிறவன், யோவா 12:25 தன் உயிரை நே.
நேபுகாத்நேச்சார், தானி 2:1 நே. பல கனவுகளை
நேரம், பிர 3:1 எல்லாவற்றுக்கும் ஒரு நே.
மத் 24:36 நாளும் நே.மும் யாருக்கும் தெரியாது
யோவா 7:8 என்னுடைய நே. இன்னும்
எபே 5:16 உங்கள் நே.த்தை மிக நன்றாக
நேர்ந்து, உபா 23:21 யெகோவாவுக்கு நே.கொண்டால்
நியா 11:31 [யெப்தா] நே.கொண்டார்.
நேர்மையாக, 2கொ 8:21 எல்லாவற்றையும் நே. செய்ய
எபி 13:18 நே. நடக்க விரும்புகிறோம்
நேர்மையானவன், யோபு 1:8 யோபு நே.
நொடி, சங் 30:5 அவருடைய கோபம் ஒரு நொ.
மத் 6:27 ஒரு நொ.யை கூட்ட
நொடிப்பொழுது, 2கொ 4:17 உபத்திரவம் நொ.தான்
நொண்டியான, மல் 1:8 நொ. மிருகத்தை
நொறுங்கிய, சங் 51:17 நொ. நெஞ்சத்தை ஒதுக்கி
ஏசா 57:15 நெஞ்சம் நொ.வர்களோடும்
நோக்கத்தின்படி, நீதி 16:4 எல்லாவற்றையும் தன் நோ.
எபே 3:11 நித்திய நோ.
நோய்களையும், மத் 9:35 எல்லா விதமான நோ.
நோவா, ஆதி 6:9 நோ. கடவுளின் வழியில்
மத் 24:37 நோ.வின் நாட்கள் போல

ப

பகட்டாக, 1யோ 2:16 வசதிகளைப் ப. காட்டிக்கொள்கிற
பகட்டான, 1கொ 2:1 ப. வார்த்தைகளாலோ
பகுத்தறிவை, மத் 24:15 வாசிப்பவர் ப. பயன்படுத்தி
பகை, ஆதி 3:15 உனக்கும் பெண்ணுக்கும் ப.
லேவி 19:18 அவர்கள்மேல் ப. வைத்திருக்க
பக்கத்தில், சங் 145:18 யெகோவா ப. இருக்கிறார்
பக்கவாதத்தால், லூ 5:24 ப. பாதிக்கப்பட்டவனிடம்
பக்குவமாக, ஏசா 50:4 ப. பேசும் திறமையை
2தீ 3:14 ப. எடுத்துச்சொல்லப்பட்ட
பக்திவைராக்கியம், சங் 69:9 வீட்டின் மேலுள்ள ப.
ரோ 10:2 கடவுள்மீது ப.
பங்கு, புல 3:24 யெகோவாதான் என் ப.
பங்கை, தானி 12:13 உன் ப. பெற எழுந்திருப்பாய்
பசி, ஏசா 55:2 ப.யைத் தீர்க்காத ஒன்றுக்காக ஏன்
ஏசா 65:13 நீங்கள் ப.யில் வாடுவீர்கள்
பச்சை குத்திக்கொள்ள, லேவி 19:28 ப. கூடாது
பஞ்சங்களும், மத் 24:7 பல இடங்களில் ப.
பஞ்சமோ, ஆமோ 8:11 உணவு கிடைக்காத ப.
படிக்கட்டு, ஆதி 28:12 பரலோகத்தைத் தொடும் ப.
படை, சங் 68:11 பெண்கள் ப. ஏராளமாக
சக 4:6 ப. பலத்தாலும் அல்ல
படைக்கப்படுகின்றன, சங் 104:30 சக்தியை அனுப்பும்போது, ப.
படைக்கப்பட்ட, ரோ 1:20 உலகம் ப. சமயத்திலிருந்தே
படைக்கப்பட்டன, கொலோ 1:16 அவர் மூலம்தான் ப.
வெளி 4:11 உங்கள் விருப்பத்தின்படியே ப.
படைக்கவில்லை, ஏசா 45:18 பூமியை காரணம் இல்லாமல் ப.
படைத்தார், ஆதி 1:1 ஆரம்பத்தில் கடவுள் ப.
படைப்பாக, 2கொ 5:17 அவன் புதிய ப.
படைப்பாளரை, பிர 12:1 உன் மகத்தான ப.
படைப்பு, சங் 104:24 உங்கள் ப.கள்தான் எத்தனை எத்தனை!
ரோ 8:20 ப. வீணான வாழ்க்கை வாழும்
வெளி 3:14 ப.களிலேயே முதல் ப.
படைவீரர்கள், வெளி 19:14 பரலோகப் ப. பின்னால் போனார்கள்
படைவீரனாக, 2தீ 2:4 ப. சேவை செய்கிற
பண, 1தீ 6:10 ப. ஆசை எல்லா தீமைக்கும்
எபி 13:5 ப. ஆசையில்லாமல்
பணக்காரர், லூ 14:12 விருந்துக்கு ப.களை
2கொ 6:10 ஏழைகளாகத் தோன்றினாலும் ப.களாக
1தீ 6:9 ப.ராக ஆவதில் குறியாக இருக்கிறவர்கள்
பணக்காரன், வெளி 3:17 நான் ப. என்று சொல்கிறாய்
பணம், பிர 7:12 ப. பாதுகாப்பு
பிர 10:19 ப. எல்லாவற்றுக்கும் உதவும்
பணயம், ரோ 16:4 உயிரையே ப. வைத்தார்கள்
பண்டிகைகளை, லேவி 23:4 யெகோவாவின் ப.
பதரை, செப் 2:2 ப. போல அந்த நாள்
பதிய, உபா 6:7 பிள்ளைகளின் மனதில் ப. வைக்க
கொலோ 3:2 பரலோக காரியங்கள் மீது மனதைப் ப.
பதிலடி, ரோ 12:19 நானே ப. கொடுப்பேன்
பதில், நீதி 15:1 சாந்தமான ப. கோபத்தைத் தணிக்கும்
நீதி 15:28 நீதிமான் ப. சொல்லும் முன் யோசிப்பான்
நீதி 18:13 முழுமையாகக் கேட்கும்முன் ப.
ஏசா 65:24 கூப்பிடுவதற்கு முன்பே ப. சொல்வேன்
கொலோ 4:6 எப்படிப் ப. சொல்ல வேண்டும்
1பே 3:15 ப. சொல்ல தயாராக
பத்சேபாள், 2சா 11:3 உரியாவின் மனைவி ப.
பத்திரத்தை, உபா 24:1 விவாகரத்துப் ப. எழுதி
மத் 19:7 விவாகரத்துப் ப. மோசே ஏன்
பத்திலொரு, நெ 10:38 லேவியர்கள் ப. பாகத்தை
மல் 3:10 ப. பாகம் முழுவதையும்
பத்துக் கட்டளைகளை, யாத் 34:28 ப. எழுதி
பயங்கரமாக, எபி 10:31 கடவுள் கையில் சிக்குவது ப.
பயத்தில், ஏசா 44:8 ப. உறைந்து போக
லூ 21:26 என்ன நடக்குமோ என்ற ப.
பயப்பட, சங் 56:4 கடவுள்மேல் நம்பிக்கை, அதனால் ப. மாட்டேன்
சங் 118:6 யெகோவா என் பக்கம், ப. மாட்டேன்
ஏசா 28:16 விசுவாசம் காட்டுகிறவர்கள் ப.
பயப்படாதீர்கள், 2நா 20:15 பெரிய படையைப் பார்த்துப் ப.
பயப்படாதே, ஏசா 41:10 ப. நான் உன்னோடு இருக்கிறேன்
வெளி 2:10 வரப்போகிற கஷ்டங்களை நினைத்து ப.
பயப்படாமல், பிலி 1:28 எதிரிகளைப் பார்த்து ப.
பயமுறுத்த, மீ 4:4 ப. யாரும் இருக்க மாட்டார்கள்
பயம், ஆதி 9:2 உயிரினங்கள் உங்களைப் பார்த்துப் ப.ப்படும்
சங் 111:10 யெகோவாவுக்கு ப.ப்படுவதுதான் ஞானம்
நீதி 8:13 யெகோவாவுக்கு ப.ப்படுகிற ப.
1யோ 4:18 அன்பில் ப. இல்லை
பயனுள்ள, 2தீ 1:13 ப. வார்த்தைகளை மாதிரியாக
தீத் 2:1 ப. போதனைகளுக்கு இசைவான
பயன்படுத்துகிறவர்கள், 1கொ 7:31 உலகத்தைப் ப.
பயிற்சியை, 1பே 5:10 உங்களுடைய ப. முடிப்பார்
பரந்த மனப்பான்மை, அப் 17:11 பெரோயா, ப.
பரலோகத்துக்கு, யோவா 3:13 எந்த மனுஷனும் ப.
2கொ 12:2 மூன்றாம் ப.
பரலோகத்துக்குரிய, 1கொ 15:44 ப. உடலாக எழுப்பப்படும்
கொலோ 3:1 ப. காரியங்களை
1பே 3:18 ப. உடலில் உயிர்ப்பிக்க
பரிசு, எபே 4:8 மனிதர்களைப் ப.களாக
கொலோ 2:18 ப. கிடைக்காமல் செய்துவிட
யாக் 1:17 நல்ல ப.கள் ஒவ்வொன்றும்
பரிசுத்த அறை, யாத் 26:33 ப., மகா ப.

பரிசுத்த சேவை, ரோ 12:1 சிந்திக்கும் திறனோடு ப.
பரிசுத்தப்பட, லூ 11:2 உங்கள் பெயர் ப.
பரிசுத்தப்படுத்துவேன், எசே 36:23 என் பெயரை ப.
பரிசுத்தமாக, லேவி 19:2 நீங்களும் ப. இருக்க
1பே 1:15 எல்லாவற்றிலும் ப. இருங்கள்
பரிசுத்த ரகசியம், ரோ 16:25 ப. மறைபொருள்
எபே 3:4 ப.த்தை புரிந்துவைத்து
பரிசுத்தர், வெளி 4:8 யெகோவா ப., ப., ப.
பரிசுத்தவான்கள், தானி 7:18 ப. ராஜ்யத்தைப் பெறுவார்கள்
பரிசை, 1கொ 9:24 ஒருவர் மட்டும்தான் ப.
பரிதாபத்திற்குரியவர்களாக, 1கொ 15:19 நாம்தான் ப.
பரிதாபமான, ரோ 7:24 ப. நிலையில் இருக்கிறேன்
பரிந்து, ரோ 8:34 கிறிஸ்து நமக்காகப் ப.
பரிபூரண, மத் 5:48 நீங்களும் ப.ராக இருக்க
எபி 2:10 பாடுகளால் ப.மாக்குவது
பர்னபா, அப் 9:27 ப. அவருடைய உதவிக்கு வந்து
பலத்தோடு, மாற் 12:30 முழு ப. அன்பு
பலப்படுத்தி, அப் 14:22 சீஷர்களைப் ப.னார்கள்
யூ 20 உங்களைப் ப.க்கொள்ளுங்கள்
பலப்படுத்து, லூ 22:32 உன் சகோதரர்களைப் ப.
ரோ 14:19 ஒருவரை ஒருவர் ப.வதற்கும்
1கொ 8:1 அன்போ ப.கிறது
1கொ 10:23 எல்லாமே ப.வதில்லை
பிலி 2:13 ஆர்வத்தை கொடுத்து ப.கிறார்
பலப்படுத்துகிறவர், பிலி 4:13 என்னைப் ப. மூலம்
பலப்படுத்துவேன், ஏசா 41:10 நான் உன்னைப் ப.
பலமடையுங்கள், 1கொ 16:13 விழிப்புடன் இருங்கள், ப.
பலம், 1சா 30:6 யெகோவாவின் உதவியால் ப.
சங் 29:11 மக்களுக்குப் ப. தருவார்
சங் 84:7 ப.த்துக்குமேல் ப. அடைந்து
நீதி 17:22 உடைந்த உள்ளம் ப.தை உறிஞ்சி
ஏசா 35:3 ப.மில்லாத கைகளை
பலவீனங்களை, ரோ 15:1 ப. தாங்கிக்கொள்ளக் கடமை
பலவீனமாக, ரோ 14:1 விசுவாசத்தில் ப. இருப்பவனை
ரோ 15:1 ப. இருக்கிறவர்களைத் தாங்கி
1கொ 1:27 ப. இருப்பவர்களைத் தேர்ந்தெடுத்தார்
2கொ 12:9 நீ ப. இருக்கும்போது என் பலம்
2கொ 12:10 ப. இருக்கும்போது பலமுள்ளவனாக
1பே 3:7 பெண் ப. இருப்பதாலும்
பலனும், ஏசா 45:19 எந்தப் ப. எதிர்பார்க்காமல்
பலனை, நீதி 14:23 கடின உழைப்பு நல்ல ப. தரும்
பலன், ரூ 2:12 யெகோவா ப. தரட்டும்!
ஏசா 55:11 ப. தராமல் திரும்பி வராது
லூ 8:15 சகித்திருந்து ப. கொடுக்கிறார்கள்
எபி 11:6 ப. கொடுக்கிறார் என்றும்
பலி, லேவி 7:37 தகன ப., பாவப் பரிகார ப.
2சா 24:24 இலவசமாக ப. கொடுக்க
சங் 51:17 உடைந்த மனம், பிரியமான ப.
நீதி 15:8 பொல்லாதவன் கொடுக்கிற ப.
ஏசா 1:11 தகன ப.கள் எனக்கு வெறுப்பாக
ஓசி 6:6 ப.களை அல்ல, விசுவாசத்தைதான்
ரோ 12:1 உடலை உயிருள்ள ப.யாக
பலிபீடம், ஆதி 8:20 நோவா ப. கட்டினார்
மத் 5:24 ப. முன் காணிக்கையை வைத்துவிட்டு
அப் 17:23 அறியப்படாத கடவுளுக்கு ப.
பலியை, 1சா 15:22 ப.விட கீழ்ப்படிவதுதான்
சங் 40:6 ப.யும் காணிக்கையையும்
எபி 13:15 புகழ்ச்சிப் ப.
பவுல். காண்க: சவுல், 1கொ 1:12 நான் ப.லைச் சேர்ந்தவன்
பழகுவதை, 2தெ 3:14 அவனோடு ப. நிறுத்திவிடுங்கள்
பழக்கு, நீதி 22:6 பிள்ளையைப் ப.
பழத்தை, ஆதி 3:3 ப. தொடக் கூடாது
பழிக்குப்பழி, நீதி 20:22 ப. வாங்குவேன்
ரோ 12:19 நீங்கள் ப. வாங்காமல்
பழித்து, நீதி 27:11 ப. பேசுகிறவனுக்கு என்னால் பதிலடி
பழிப்பேச்சு, எபே 4:31 கடும் கோபம், கூச்சல், ப.
பழிவாங்குவது, உபா 32:35 ப. என் பொறுப்பு
பழிவாங்குவார், 2தெ 1:8 கீழ்ப்படியாதவர்களைப் ப.
பள்ளிகளுக்கு, யோவா 7:15 ப. போகாத இவனுக்கு
பறவைகளை, மத் 6:26 வானத்துப் ப. கவனியுங்கள்
பனி, உபா 32:2 என் வார்த்தைகள் ப.போல்
ஏசா 1:18 பாவங்கள் ப.போல்
பனித்துளி, சங் 110:3 வாலிபர்கள் ப. போல
பன்றி, லூ 8:33 பேய்கள் ப.களுக்குள் புகுந்து
லூ 15:15 தன் ப.களை மேய்க்க
2பே 2:22 ப.யைக் குளிப்பாட்டினாலும்
பஸ்கா, யாத் 12:11 அது யெகோவாவின் ப.
1கொ 5:7 ப. ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து
பாகாலுக்கு, எரே 19:5 பா. பிள்ளைகளைத் தகன பலி
பாசத்தை, மத் 10:37 என்மேல் காட்டும் பா.விட
கொலோ 3:12 கனிவான பா. காட்டுங்கள்
பாசம், யோவா 21:17 சீமோனே, என்மேல் பா. இருக்கிறதா?
வெளி 3:19 என் பா.த்துக்குரிய எல்லாரையும் கண்டித்து
பாடல், சங் 98:1 புதிய பா. பாடுங்கள்
அப் 16:25 பவுலும் சீலாவும் பா.
கொலோ 3:16 பக்திப் பா.களாலும் உற்சாகப்படுத்தி
பாடிவிட்டு, மத் 26:30 கடவுளைப் புகழ்ந்து பா.
எபே 5:19 பக்திப் பாடல்களை பா.
பாடுகளால், எபி 2:10 மீட்பின் அதிபதியைப் பா.
பாடுகளை, ரோ 8:17 கிறிஸ்துவோடு பா. அனுபவித்தால்
பிலி 1:29 அவருக்காகப் பா. அனுபவிப்பதற்கும்
பாடுகள், ரோ 8:18 நாம் படும் பா. ஒன்றுமே இல்லை
பாடுங்கள், சங் 96:1 புதிய பாடல் பா.
பாடுபடுங்கள், யோவா 6:27 அழியாத உணவுக்காகவே பா.
பாணியை, ரோ 12:2 உலகத்தின் பா.
பாதங்கள், ஏசா 52:7 பா. எவ்வளவு அழகாக
யோவா 13:5 சீஷர்களின் பா.ளைக் கழுவ
பாதுகாத்து, நீதி 4:23 இதயத்தைப் பா.க்கொள்
பாதுகாப்பாக, நீதி 3:23 நீ பா. நடப்பாய்
ஓசி 2:18 பா. படுத்துக்கொள்ள
பாதுகாப்பு, பிர 7:12 ஞானமும் பா. தரும்
ஏசா 32:17 நீதியின் பலனாகப் பா. இருக்கும்
பிலி 3:1 உங்கள் பா.க்காகத்தான் எழுதுகிறேன்
பாதை, நீதி 4:18 நீதிமான்களின் பா. நடுப்பகல்வரை
பாதையோரத்தில், மத் 13:4 விதைகள் பா.
பாத்திரம், ரோ 9:21 கண்ணியமான காரியத்துக்காக ஒரு பா.
பாபிலோன், எரே 51:6 பா.னைவிட்டுத் தப்பித்து ஓடுங்கள்
எரே 51:37 பா. வெறும் கற்குவியலாகும்
வெளி 17:5 மகா பா. விபச்சாரிகளுக்குத் தாய்
வெளி 18:2 மகா பா. விழுந்துவிட்டாள்
பாபேல், ஆதி 11:9 பா. என்ற பெயர் வைக்கப்பட்டது
பாம்பு, ஆதி 3:4 பா. அவளிடம்
யோவா 3:14 பா. உயர்த்தப்பட்டதுபோல்
பாரத்தை, சங் 55:22 யெகோவாமேல் உன் பா.
சங் 68:19 நம் பா. சுமக்கிற யெகோவா
கலா 6:5 ஒவ்வொருவனும் அவனவன் பா.
பாரபட்சம், உபா 10:17 யெகோவா பா. காட்டாதவர்
அப் 10:34 கடவுள் பா. காட்டாதவர்
யாக் 2:9 பா. காட்டுகிறீர்கள் என்றால்
பாரமடையாதபடி, லூ 21:34 இதயம் பா.
பாரமான, 1ரா 12:14 அப்பா பா. சுமையை
எபி 12:1 பா. எல்லாவற்றையும் உதறிவிட்டு
பாரமானவை, 1யோ 5:3 கட்டளைகள் பா. அல்ல
பாரம்பரியங்களை, கலா 1:14 பா. கடைப்பிடிப்பதில்
பாரம்பரியத்தால், மத் 15:3 பா. ஏன்
மாற் 7:13 பா. கடவுளுடைய வார்த்தையை
பாராட்டுகிறேன், 1கொ 11:2 உங்களைப் பா.
பாருக், எரே 45:2 பா., யெகோவா சொல்வது இதுதான்
பார்க்க, மத் 6:1 மற்றவர்கள் பா. வேண்டும் என்பதற்காக
பார்க்க முடியாத, ரோ 1:20 பா. குணங்களை
2கொ 4:18 பா. காரியங்கள் மீதே
எபி 11:27 பா.வரைப் பார்ப்பதுபோல்

பார்க்கும்போது, கொலோ 3:22 பா. மட்டும் வேலை செய்யாமல்
பார்த்தவன், யோவா 14:9 என்னைப் பா. தகப்பனையும்
பாலியல் முறைகேடு, மத் 15:19 இதயத்திலிருந்து, பா.
கலா 5:19 பா., அசுத்தமான நடத்தை
எபே 5:3 பா. பற்றிய பேச்சுகூட
பாலியல் முறைகேட்டில், 1கொ 5:9 பா. ஈடுபடுகிறவர்களோடு
1கொ 6:9 பா. ஈடுபடுகிறவர்கள் அனுமதிக்கப்பட
1கொ 6:18 பா.லிருந்து ஓடுங்கள்
பாலியல் முறைகேட்டுக்கு, அப் 15:20 பா. விலகியிருக்க
பாலுக்காக, 1பே 2:2 கலப்படமில்லாத பா. ஏக்கம்
பாலூட்டுகிற, 1தெ 2:7 பா. தாய் தன் குழந்தைகளை
பாலைநிலம், ஏசா 35:1 பா. பூ பூத்து
ஏசா 35:6 பா.த்தில் ஆறுகள்
பால், யாத் 3:8 பா.லும் தேனும் ஓடுகிற தேசம்
ஏசா 60:16 தேசங்களிடமிருந்து பா.
எபி 5:12 திரும்பவும் பா. குடிக்கிறவர்களாக
பாவ, ரோ 8:5 பா. வழியில் நடக்கிறவர்கள்
ரோ 13:14 பா. ஆசைகளின்படி நடக்க
கலா 5:19 பா. இயல்புக்குரிய செயல்கள்
பாவங்கள், ஏசா 1:18 உங்கள் பா. இரத்தம்போல்
ஏசா 38:17 பா.ளை முதுகுக்குப் பின்னால்
அப் 3:19 பா. துடைத்தழிக்கப்படும்
1தீ 5:24 மற்றவர்களுடைய பா. பிற்பாடு
யாக் 5:15 அவன் பா. செய்திருந்தால்
1யோ 1:7 இயேசுவின் இரத்தம் பா.ளிலிருந்து
பாவப் பரிகாரம், லேவி 16:34 வருஷத்துக்கு ஒருமுறை பா.
பாவமுள்ளவன், யோபு 14:4 பா. பாவமில்லாதவனை
பாவம், ஆதி 4:7 பா. கதவுக்கு வெளியில்
ஆதி 39:9 கடவுளுக்கு விரோதமாகப் பா.
2சா 12:13 தாவீது, பா. செய்துவிட்டேன்
1ரா 8:46 பா. செய்யாத மனிதன் யாரும்
சங் 32:1 யாருடைய பா. மூடப்படுகிறதோ
சங் 38:18 பா. வாட்டி வதைத்தது
ஏசா 53:12 பலரின் பா.ங்களைச் சுமப்பார்
எரே 31:34 அவர்களுடைய பா.த்தை இனியும்
எசே 18:4 பா. செய்கிற எவனும்
எசே 33:14 பொல்லாதவன் பா. செய்வதை
மத் 5:29 வலது கண் பா. செய்ய
மத் 13:41 மற்றவர்களைப் பா. செய்ய வைக்கிற
மத் 18:15 சகோதரர் பா. செய்துவிட்டால்
மாற் 3:29 தீராத பா.த்துக்கே அவன்
லூ 17:2 சிறியவர்களில் ஒருவரை பா. செய்ய
யோவா 1:29 உலகத்தின் பா.த்தைப் போக்க
ரோ 3:23 எல்லாருமே பா. செய்து
ரோ 5:12 ஒரே மனிதனால் பா.மும்
ரோ 6:14 பா. உங்கள் எஜமானாக
ரோ 6:23 பா.த்தின் சம்பளம் மரணம்
யாக் 4:17 சரியானதைச் செய்யாவிட்டால் பா.
1யோ 2:1 யாராவது பா. செய்துவிட்டால்
1யோ 5:17 அநீதியான செயல், பா.தான்
பாவி, லூ 15:7 திருந்துகிற ஒரே பா.யை
லூ 18:13 இந்தப் பா.க்குக் கருணை
பாவிகள், சங் 1:5 நீதிமான்களின் கூட்டத்தில் பா.
யோவா 9:31 பா.ளுடைய ஜெபத்தைக் கடவுள்
ரோ 5:8 நாம் பா.ளாக இருந்தபோதே
பாழாக்கும், மத் 24:15 பா. அருவருப்பு
பாழாய்ப்போன, எண் 21:5 பா. மன்னா
பாறைமேல், மத் 7:24 பா. வீட்டை
பாஷை, செப் 3:9 பா.யைச் சுத்தமான பா.யாக
சக 8:23 எல்லா பா.க்காரர்களிலும் பத்துப் பேர்
பிசாசு, மத் 25:41 பி.க்காக அணையாத நெருப்பு
யோவா 8:44 பி.தான் உங்களுக்குத் தகப்பன்
எபே 4:27 பி.க்கு வாய்ப்பு கொடுத்துவிடாதீர்கள்
எபே 6:11 பி.சின் சூழ்ச்சிகளை எதிர்க்க
யாக் 4:7 பி.க்கு எதிர்த்து நில்லுங்கள்
1பே 5:8 பி. சிங்கம்போல்
1யோ 3:8 பி.சின் செயல்களை ஒழிக்க
வெளி 12:12 பி. பயங்கர கோபத்தோடு
வெளி 20:10 பி., நெருப்பு ஏரியில்
பிடிப்பாய், லூ 5:10 மனிதர்களை பி.
பிணைக்கப்படாதீர்கள், 2கொ 6:14 விசுவாசிகளாக இல்லாதவர்களோடு பி.
பிரசங்கி, மத் 9:35 இயேசு பி.த்தார்
மத் 24:14 நல்ல செய்தி பி.க்கப்படும்
லூ 8:1 பி.த்தும் அறிவித்தும் வந்தார்
2தீ 4:2 வார்த்தையைப் பி.
2பே 2:5 நீதியைப் பி.த்தவராகிய நோவா
பிரசங்கிக்காத, ரோ 15:23 பி. பகுதிகள் எதுவும் இல்லை
பிரசன்னம், மத் 24:3 பி.த்துக்கு அடையாளம்
மத் 24:37 மனிதகுமாரனின் பி.த்தின்போதும்
பிரதிநிதி, யோவா 7:29 நான் அவருடைய பி.
பிரம்பை, நீதி 13:24 பி. கையில் எடுக்காதவன்
பிரயோஜனமான, ஏசா 48:17 பி.தைக் கற்றுக்கொடுக்கிறேன்
1கொ 6:12 எல்லா காரியங்களும் பி.வை கிடையாது
1கொ 10:24 தனக்குப் பி.தைத் தேடாமல்
பிரயோஜனமுள்ளவை, 2தீ 3:16 வேதவசனங்கள் பி.
பிராயச்சித்த பலி, ரோ 3:25 அவரை பி.யாக
1யோ 2:2 பி. அவர்தான்
பிரிக்க, மத் 10:35 பி. வந்தேன்
ரோ 8:39 கடவுளுடைய அன்பிலிருந்து பி.
பிரித்துப் பார்க்க, எபி 5:14 சரி தவறை பி.
பிரிந்துபோக, 1கொ 7:10 மனைவி பி. கூடாது
1கொ 7:15 விசுவாசியாக இல்லாதவர் பி.
பிரிப்பதுபோல், மத் 25:32 மேய்ப்பன் பி.
பிரியத்தின்படியும், எபே 1:5 அவருடைய பி.
பிரியமாக, ரோ 15:1 நமக்குப் பி. நாம்
ரோ 15:3 கிறிஸ்துவும் தனக்குப் பி.
1கொ 7:33 மனைவிக்கு எப்படிப் பி. இருக்கலாம்
பிரியமான, யோவா 8:29 நான் எப்போதும் அவருக்குப் பி.
1கொ 12:18 கடவுள் தனக்குப் பி.படியே
பிரியமானது, எபே 5:10 எஜமானுக்கு எது பி. என்று
பிரியமானவன், தானி 9:23 நீ மிகவும் பி.
பிரிவினைகள், ரோ 16:17 பி.ளை ஏற்படுத்துகிறவர்களை
1கொ 1:10 உங்களுக்குள் பி. இல்லாமல்
தீத் 3:10 பி.ளை உண்டாக்குகிறவனுக்கு
பிரிஸ்கில்லாள், அப் 18:26 பி.ளும் ஆக்கில்லாவும்
பிலாத்து, யோவா 19:6 பி., இவனிடம் எந்தக் குற்றத்தையும்
பிலிப்பு, அப் 8:26 பி.விடம் தேவதூதர்
அப் 21:8 நற்செய்தியாளரான பி.
பிலேயாமிடம், எண் 22:28 கழுதை பி. கேட்டது
பிள்ளை, நீதி 22:6 பி.யைப் பழக்கு, வயதானாலும்
லூ 9:47 சின்னப் பி.யைக் கொண்டுவந்து
பிள்ளைகளே, எபே 6:1 பி., கீழ்ப்படிந்து
கொலோ 3:20 பி., எல்லா விஷயத்திலும் கீழ்ப்படிந்து
பிள்ளைகள், ஆதி 1:28 பி.ளைப் பெற்று, ஏராளமாக
சங் 8:2 பி.ளின் வாயினாலும்
ஏசா 54:13 உன் பி. எல்லாரும்
மத் 11:16 சந்தையில் பி.
மத் 18:3 சின்னப் பி.ளைப் போல்
மத் 19:14 பி.ளை வரவிடுங்கள்
ரோ 8:21 பி.ளுக்குரிய விடுதலை
1கொ 7:14 உங்கள் பி. அசுத்தமாக
2கொ 12:14 பெற்றோருக்குப் பி. சேர்த்து வைக்க
1யோ 3:2 நாம் கடவுளுடைய பி.ளாக
பிறக்கும், யோபு 14:1 பெண்ணிடம் பி. மனுஷன்
பிறந்த நாள், ஆதி 40:20 பார்வோனின் பி.
மத் 14:6 ஏரோதுவின் பி.
பிறந்தேன், சங் 51:5 குற்றம் குறையோடு பி.
பிறப்பை, 1பே 1:3 புதிய பி. கொடுத்தார்
பிறவிக் குறைபாட்டினால், மத் 19:12 சிலர் பி. திருமணம்
பினெகாஸ், எண் 25:7 பி. ஈட்டியை எடுத்து
பின்பற்றி, மத் 19:21 என்னைப் பி. வா

பின்பற்றுங்கள், எபி 13:7 அவர்களுடைய விசுவாசத்தைப் பி.
பின்வாங்கி, எபி 10:39 பி. அழிந்துபோகிறவர்களாக
பின்னால், மத் 4:20 வலைகளை விட்டுவிட்டு அவர் பி.
லூ 9:62 கலப்பையில் கை வைத்து, பி. திரும்பி
யோவா 10:27 என் ஆடுகள் என் பி.
வெளி 14:4 ஆட்டுக்குட்டியானவர் பி.லேயே
புகழட்டும், நீதி 27:2 இன்னொருவன் உன்னைப் பு.
புகழ்ச்சி, நீதி 27:21 ஒருவனைச் சோதிப்பது பு.
புகழ்ந்து, சங் 147:1 கடவுளைப் பு. பாடுவது
புடமிடப்பட்டு, தானி 11:35 முடிவு காலம்வரை பு.
புடமிடுகிறவரை, மல் 3:3 அவர் பு. போல
புடமிடுவது, சக 13:9 வெள்ளியைப் பு.
புண்படுத்தி, சங் 78:40 பாலைவனத்தில் அவரை பு.
புதிதாக்குகிறேன், வெளி 21:5 எல்லாவற்றையும் பு.
புதிய, யோவா 13:34 பு. கட்டளையை
வெளி 21:1 பு. வானம் பு. பூமி
புதுத்தெம்பு, ஏசா 40:31 யெகோவாவை நம்புகிறவர்கள் பு.
புதுப்புது, அப் 17:21 பு. விஷயங்களைப் பேசுவதில்
புதையல்களை, நீதி 2:4 பு. தேடுவதுபோல்
புத்தகங்கள், பிர 12:12 பு. எழுதுவதற்கு முடிவே இல்லை
அப் 19:19 பு.ளைக் கொளுத்தினார்கள்
புத்தகம், யாத் 32:33 பு.த்திலிருந்து துடைத்தழிப்பேன்
மல் 3:16 நினைவுப் பு. எழுதப்பட்டது
வெளி 20:15 வாழ்வின் பு.த்தில் பெயர்
புத்தி, லூ 15:17 அவனுக்குப் பு. வந்தபோது
புத்திமதியை, நீதி 1:7 பு. அலட்சியம்
நீதி 3:11 பு. ஒதுக்கித்தள்ளாதே
புத்தியில்லாதவனே, லூ 12:20 பு., இன்று ராத்திரி
புத்தியை, நீதி 3:5 சொந்த பு. நம்பாதே
நீதி 4:7 பு. சம்பாதிக்க மறந்துவிடாதே
புத்திவந்து, 1ரா 8:47 பு., திரும்பி வந்தால்
புத்துணர்ச்சி, மத் 11:28 நான் பு. கொடுப்பேன்
அப் 3:19 யெகோவாவிடமிருந்து பு.
புத்துயிர், ஏசா 57:15 எளியவர்களுக்குப் பு.
புரிந்துகொள்ள, நெ 8:8 அர்த்தத்தை பு. உதவி
புரிந்துகொள்ளும், 1கொ 14:20 பு. திறனில், முதிர்ச்சி
புளித்த மாவை, மத் 13:33 பரலோக அரசாங்கம் பு.
புளிப்புள்ள, 1கொ 5:6 பு. கொஞ்சம் மாவு
புறா, மத் 3:16 கடவுளுடைய சக்தி பு.வை
மத் 10:16 பு.க்களைப் போல் கள்ளம்கபடம் இல்லாமல்
புனிதப்படுத்தினேன், 1ரா 9:3 இந்த ஆலயத்தைப் பு.
பூஞ்சோலை, லூ 23:43 நீ என்னோடு பூ.யில்
2கொ 12:3 பூ.க்குள் எடுத்துக்கொள்ளப்பட்ட
பூட்டுவதெல்லாம், மத் 16:19 பூமியில் பூ. பரலோகத்தில்
பூமி, ஆதி 1:28 பூ.யை நிரப்புங்கள்
யோபு 38:4 பூ.க்கு அஸ்திவாரம் போட்டபோது
சங் 37:11 தாழ்மையானவர்கள் பூ.யை
சங் 37:29 நீதிமான்கள் இந்தப் பூ.யை
சங் 104:5 பூ. ஒருபோதும் அசைக்கப்படாது
சங் 115:16 பூ.யை மனிதர்களுக்கு
நீதி 2:21 நேர்மையானவர்கள் மட்டும் பூ.யில்
ஏசா 45:18 பூ.யை குடியிருப்பதற்காகவே
மத் 5:5 சாந்தமாக இருப்பவர்களுக்கு பூ.
பெசலெயேல், யாத் 31:2 ஊரியின் மகனுமான பெ.
பெட்டி, யாத் 25:10 வேல மரத்தில் ஒரு பெ.
2சா 6:6 ஊசா பெ.யைப் பிடித்தான்
1நா 15:2 கடவுளின் பெ.யைச் சுமக்க லேவியர்கள்
பெண், ஆதி 3:15 உனக்கும் பெ.ணுக்கும் பகை
பிர 7:26 மரணத்தைவிட கொடூரமான பெ.
வெளி 12:1 ஒரு பெ., சூரியனை ஆடையாக
பெண் எடுத்து, மத் 24:38 பெருவெள்ளத்துக்கு முன் பெ.
பெண்கள், உபா 31:12 பெ.ளையும் ஜனங்களையும் ஒன்றுகூட்ட
நீதி 31:3 வீரியத்தைப் பெ.ளிடம் வீணடிக்காதே
பெத்தேல், ஆதி 28:19 பெ. என்று பெயர் வைத்தார்
பெத்லகேம், மீ 5:2 எப்பிராத்தா என்ற பெ.
பெயரில், 1சா 17:45 யெகோவா பெ. வருகிறேன்
சங் 94:20 சட்டத்தின் பெ. பிரச்சினை உண்டாக்கு
யோவா 14:14 என் பெ. நீங்கள் கேட்பதை
பெயருக்கென்று, அப் 15:14 தன் பெ. ஒரு ஜனத்தை
பெயரை, யாத் 20:7 கடவுளின் பெ. வீணாக
சங் 9:10 உங்கள் பெ. தெரிந்தவர்கள்
சங் 79:9 உங்கள் பெ. மனதில் வைத்து
நீதி 22:1 நல்ல பெ. சம்பாதிப்பது
எரே 23:27 என் பெ. மறந்துவிட்டது போல
எசே 39:25 என் பெ. கட்டிக்காப்பேன்
மல் 3:16 அவர் பெ. நினைக்கிறவர்களுக்காக
யோவா 12:28 தகப்பனே, உங்கள் பெ.
யோவா 17:26 உங்கள் பெ. தெரியப்படுத்தினேன்
அப் 4:12 அவருடைய பெ. தவிர
ரோ 10:13 யெகோவாவின் பெ. சொல்லி
பெயர், யாத் 3:13 அவருடைய பெ. என்ன?
யாத் 3:15 என்றென்றும் இதுதான் என் பெ.
யாத் 9:16 பூமியெங்கும் என் பெ.
நீதி 18:10 யெகோவாவின் பெ. கோட்டை
பிர 7:1 எண்ணெயைவிட நல்ல பெ.
மத் 6:9 உங்கள் பெ. பரிசுத்தப்பட
பிலி 2:9 எல்லா பெ.களுக்கும் மேலான
பெரியவர், யோவா 14:28 தகப்பன் என்னைவிட பெ.
பெருமூச்சுவிட்டு, எசே 9:4 பெ. குமுறுகிற ஆட்களின்
பெருமை பேசுகிறவன், 1கொ 1:31 பெ. யெகோவாவைப் பற்றி
பெருமையாக, 2தெ 1:4 சபைகளில் உங்களைப் பற்றிப் பெ.
பெருவெள்ளம், மத் 24:38 பெ. வருவதற்கு முந்தின
பெல்ஷாத்சார், தானி 5:1 பெ. ராஜா விருந்து வைத்தான்
பெற்றெடுத்தாள், ஏசா 66:7 பிரசவத்துக்கு முன் குழந்தை பெ.
பெற்றோர், லூ 18:29 அரசாங்கத்துக்காக பெ.ரை தியாகம்
லூ 21:16 பெ.ரும் உங்களை அதிகாரிகளிடம்
2கொ 12:14 பெ.ருக்குப் பிள்ளைகள் சேர்த்து
பேச முடியாதவர்கள், ஏசா 35:6 பே. பாடுவார்கள்
பேசாமல், பிர 3:7 பே. இருப்பதற்கு ஒரு நேரம்
பேசினாலும், 2கொ 6:8 புகழ்ந்து பே. கேவலமாகப் பே.
பேச்சினாலும், ரோ 16:18 தங்கள் நயமான பே.
பேச்சு, நீதி 14:23 வெட்டிப் பே. வறுமையை
அப் 15:32 நிறைய பே.களைக் கொடுத்து
எபே 5:3 பே.கூட இருக்கக் கூடாது
பேச்சை, யாத் 24:7 அவர் பே. கேட்டு நடப்போம்
பேதுரு, மத் 14:29 பே. தண்ணீர்மேல் நடந்து
லூ 22:54 பே. தூரத்திலிருந்தபடி அவர்களை
யோவா 18:10 பே. தன் வாளை உருவி
அப் 12:5 பே.வைச் சிறையிலேயே
பேதையை, சங் 19:7 பே. ஞானியாக்குகிறது
பேய், அப் 16:16 குறிசொல்ல வைக்கிற பே.
1கொ 10:21 பே.களின் மேஜையிலும்
யாக் 2:19 பே.களும்கூட அப்படி நம்பி
பேய் பிடித்த, மத் 8:28 பே. இரண்டு பேர்
பேராசை, லூ 12:15 பே.யைக் குறித்து எச்சரிக்கை
1கொ 5:11 பே.ப்படுகிறவனோடு பழகுவதை
1கொ 6:10 பே.க்காரர்கள் அரசாங்கத்துக்குள்
கொலோ 3:5 சிலை வழிபாட்டுக்குச் சமமான பே.
பேரும், ஆதி 11:4 பே. புகழும் சம்பாதிப்போம்
பேலிக்ஸ், அப் 24:2 மாண்புமிகு பே.
பேழை, ஆதி 6:14 நீ ஒரு பே.யைக் கட்டு
பைத்தியம், யோவா 10:20 இவன் ஒரு பை.
பையன், ஏசா 11:6 சின்னப் பை. அவற்றை ஓட்டி
எரே 1:7 சின்னப் பை. என்று சொல்லாதே
பொக்கிஷம், மத் 6:21 பொ. எங்கேயோ, இதயமும்
மத் 13:44 நிலத்தில் புதைத்த பொ.
லூ 6:45 இதயம் என்ற நல்ல பொ.த்திலிருந்து
லூ 12:33 பொ.த்தைப் பரலோகத்தில்
2கொ 4:7 பொ.த்தை மண்பாத்திரங்களில்
பொய், சங் 34:13 பொ. பேசாதபடி உதடுகளை
சங் 101:7 பொ. பேசுகிற யாரும் என் முன்னால்

மத் 26:59 நியாயசங்கம் பொ. குற்றச்சாட்டுகள்
எபே 4:25 பொ.யைக் களைந்து
கொலோ 3:9 பொ. சொல்லாதீர்கள்
தீத் 1:3 பொ. சொல்ல முடியாத கடவுள்
பொய்யன், நீதி 19:22 பொ.னாக இருப்பதைவிட ஏழையாக
யோவா 8:44 பிசாசு பொ.னும் பொய்க்கு
பொல்லாதவர்கள், சங் 37:10 இன்னும் கொஞ்ச நேரம்தான், பொ.
பொல்லாதவன், நீதி 15:8 பொ. கொடுக்கிற பலி
1யோ 5:19 உலகம் பொ.னுடைய கட்டுப்பாட்டில்
பொறாமை, சங் 37:1 பொல்லாதவர்கள்மேல் பொ.ப்படாதே
சங் 73:3 ஆணவம் பிடித்தவர்கள்மேல் பொ.ப்பட்டேன்
சங் 106:16 மோசேயைப் பார்த்துப் பொ.
நீதி 14:30 பொ. எலும்புருக்கி
1கொ 13:4 அன்பு பொ.ப்படாது
பொறுத்து, எபே 4:2 ஒருவரை ஒருவர் பொ.க்கொள்ளுங்கள்
பொறுப்பல்ல, அப் 20:26 சாவுக்கு நான் பொ.
பொறுப்பேற்று, நீதி 17:18 கடனுக்குப் பொ.
பொறுப்பை, அப் 1:20 அவனுடைய கண்காணிக்கும் பொ.
பொறுமை, நெ 9:30 எத்தனையோ வருஷமாக பொ.
நீதி 14:29 பொ. இல்லாதவன் முட்டாள்தனமாக
நீதி 25:15 பொ.யால் அதிகாரியை வெல்லலாம்
ரோ 9:22 அழிவுக்குரிய பாத்திரங்களை பொ.யோடு
1கொ 13:4 அன்பு பொ.யும் கருணையும்
யாக் 5:8 பொ.யோடு இருங்கள்
2பே 3:9 யெகோவா உங்கள்மேல் பொ.யாக
2பே 3:15 நம் எஜமானுடைய பொ.
போக்கு ஆடாக, லேவி 16:8 போ. விட குலுக்கல் போட வேண்டும்
போட்டி, கலா 5:26 போ. போடாமலும்
போதகர், சங் 119:99 என் போ.களைவிட விவேகமாக
எபே 4:11 சிலரை போ.களாகக் கொடுத்தார்
போதனை, யோவா 7:16 என் போ. என்னுடையதல்ல
போதும், 1தீ 6:8 உணவும் உடையும் போ.
போராட, எபே 6:12 தூதர் கூட்டத்தோடு போ.
போராடு, 1தீ 6:12 சிறந்த போராட்டத்தைப் போ.
யூ 3 விசுவாசத்துக்காகப் போ.ம்படி
போராயுதங்கள், 2கொ 10:4 எங்களுடைய போ.
போருக்கு, 1கொ 14:8 போ. யார் தயாராவார்கள்?
போரை, ஓசி 2:18 போ. ஒழித்துக்கட்டுவேன்
போர், 1சா 17:47 இது யெகோவாவின் போ.
2நா 20:17 போ. செய்ய வேண்டியதில்லை
சங் 46:9 போ.களுக்கு முடிவுகட்டுகிறார்
ஏசா 2:4 போ. செய்ய யாரும்
அப் 5:39 கடவுளோடு போ. செய்கிறவர்களாக
வெளி 12:7 பரலோகத்தில் போ. ஆரம்பித்தது
வெளி 16:14 கடவுளின் மகா நாளில், போ.
போர் ரதங்கள், நியா 4:13 சிசெரா 900 போ.ளோடும்
2ரா 6:17 போ. எலிசாவைச் சூழ்ந்து
போலி, கலா 2:4 போ. சகோதரர்கள் பிரச்சினையை
2பே 2:3 போ. போதனைகளால்
போலிக் கிறிஸ்துக்கள், மத் 24:24 போ. வருவார்கள்
போலித் தீர்க்கதரிசிகள், மத் 7:15 போ.ளைக் குறித்து
மத் 24:11 போ. வந்து
மாற் 13:22 போ., அற்புதங்களை
போலியாக, நீதி 29:5 அடுத்தவனைப் போ. புகழ்கிறவன்
ரோ 12:9 அன்பு போ. இருக்க வேண்டாம்
யூ 16 லாபத்துக்காக போ. புகழ்கிறார்கள்

ம

மகத்தான, பிர 12:1 ம. படைப்பாளரை நினை
மகள், யோவே 2:28 ம.களும் தீர்க்கதரிசனம்
லூ 8:49 உங்கள் ம. இறந்துவிட்டாள்
அப் 21:9 திருமணமாகாத நான்கு ம.கள்
மகன், சங் 2:12 ம.னுக்கு மதிப்பு கொடுங்கள்
நீதி 13:24 பிரம்பை எடுக்காதவன் ம.னை
நீதி 15:20 ஞானமுள்ள ம. அப்பாவை
மத் 3:17 இவர் என் அன்பு ம.
லூ 15:13 இளைய ம., ஊதாரி
மகன்கள், ஏசா 66:8 சீயோன், ம.ளைப் பெற்றெடுத்தாள்
ரோ 8:14 சக்தியால் வழிநடத்தப்படுகிறவர்கள், ம.
மகிமை, நீதி 3:9 பொருள்களால் யெகோவாவை ம.ப்படுத்து
யோவா 12:43 கடவுளிடமிருந்து வரும் ம.யைவிட
ரோ 3:23 கடவுளின் ம.யான குணங்களை
1கொ 10:31 கடவுளுடைய ம.க்காகவே
வெளி 4:11 நீங்கள் ம.யும் மாண்பும்
மகிமையானவர்களை, 2பே 2:10 ம. பழிக்க
மக்கெதோனியா, அப் 16:9 ம.வுக்கு வந்து உதவி
மணத்துணைக்குத் துரோகம், யாத் 20:14 ம. செய்யக் கூடாது
1கொ 6:9 ம. செய்கிறவர்கள், அனுமதிக்கப்பட மாட்டார்கள்
மணமகள், வெளி 21:9 ம., ஆட்டுக்குட்டியானவரின்
மணலை, ஆதி 22:17 சந்ததியை கடற்கரை ம. போல
வெளி 20:8 அவர்கள் கடற்கரை ம. போல்
மண், ஆதி 2:7 ம.ணை எடுத்து, மனிதனை
ஆதி 3:19 நீ ம.ணிலிருந்து உருவாக்கப்பட்டதால்
சங் 103:14 நாம் ம. என்பதை அவர்
மதப்பிரிவு, அப் 28:22 இந்த ம.க்கு விரோதமாக
2பே 2:1 அழிவை ஏற்படுத்துகிற ம.களை
மதிக்காததால், 2சா 12:14 யெகோவாவை துளிகூட ம.
மதிப்பு, யாத் 20:12 அப்பா அம்மாவுக்கு ம.
ரோ 12:10 ம. கொடுப்பதில் முந்திக்கொள்
1தீ 5:17 இரட்டிப்பான ம.பைப் பெற
மதிப்புமிக்க, நீதி 3:9 ம. பொருள்களை கொடுத்து
மதிப்புள்ளவர்கள், மத் 6:26 அவற்றைவிட நீங்கள் அதிக ம.
மதியுங்கள், 1கொ 16:18 இப்படிப்பட்டவர்களை ம.
மதில், யோசு 6:5 ம. தரைமட்டமாகும்
எசே 38:11 ம.களோ கதவுகளோ இல்லாத
யோவே 2:7 வீரர்கள் போல ம.லைத் தாண்டும்
மதுபானம், நீதி 20:1 ம. அடாவடித்தனம் பண்ணும்
மத்தியஸ்தர், 1தீ 2:5 ஒரே ம.தான் இருக்கிறார்
மந்தமாக, எபி 5:11 கேட்பதில் ம. இருப்பதால்
மயக்கினாள், நீதி 7:21 கொஞ்சிப் பேசி ம.
மரக் கம்பத்தில், மாற் 15:25 ம. ஆணியடித்தபோது
லூ 23:21 இவனை ம. அறைந்து
கலா 3:13 ம. தொங்கவிடப்பட்ட எவனும்
மரங்கள், ஏசா 61:3 நீதியின் பெரிய ம.
எசே 47:12 இரண்டு கரைகளிலும் ம.
வெளி 22:14 வாழ்வு தரும் ம.ளின் பழங்களை
மரண, எபி 2:15 ம. பயத்துக்கு அடிமை
மரணத்தை, ஏசா 25:8 ம. அடியோடு ஒழித்து
மரணமடையும்படி, எபி 2:9 எல்லாருக்காகவும் ம.
மரணமே, ஓசி 13:14 ம., உன் கொடுக்குகள்
மரணம், ரோ 5:12 ம. எல்லா மனிதர்களுக்கும்
ரோ 6:23 பாவத்தின் சம்பளம் ம.
1கொ 15:26 கடைசி எதிரி ம.
வெளி 21:4 இனிமேல் ம. இருக்காது
மரத்துப்போயிருந்ததை, மாற் 3:5 இதயம் ம. நினைத்து
மரம், ஆதி 2:9 நன்மை தீமை அறிவதற்கான ம.
ஆதி 2:9 வாழ்வுக்கான ம.த்தை
சங் 1:3 வாய்க்கால் ஓரமாய் ம.
தானி 4:14 இந்த ம.த்தை வெட்டிச்சாயுங்கள்
வெளி 2:7 ஜெயிக்கிறவனுக்கு, வாழ்வுக்கான ம.த்தின்
மரியாதை, எபே 5:33 மனைவி கணவனுக்கு ம.
1தெ 5:12 வழிநடத்துகிற சகோதரர்களுக்கு ம.
1பே 3:2 ஆழ்ந்த ம.யையும் பார்த்து
1பே 3:15 ஆழ்ந்த ம.யோடு பதில்
மரியாள் 1., மாற் 6:3 ம.ளின் மகன்தானே?
மரியாள் 2., லூ 10:39 ம. கேட்டுக்கொண்டிருந்தாள்
லூ 10:42 ம. மிகச் சிறந்ததைத் தேர்ந்தெடுத்து
யோவா 12:3 ம. வாசனை எண்ணெயை
மரியாள் 3., மத் 27:56 மகதலேனா ம.
லூ 8:2 பேய்களிடமிருந்து விடுபட்ட மகதலேனா ம.

மரியாள் 4., மத் 27:56 யாக்கோபுக்கு அம்மாவான ம.
மரியாள் 5., அப் 12:12 மாற்குவின் அம்மாவான ம.
மருத்துவர், லூ 5:31 ஆரோக்கியமானவர்களுக்கு ம.
மருந்து, நீதி 17:22 சந்தோஷ உள்ளம், ம.
மலஜலம், உபா 23:13 ம. கழித்துவிட்டு மண்போட்டு
மலை, ஆதி 7:20 ம.களுக்கு மேலே தண்ணீர்
ஏசா 11:9 பரிசுத்த ம.யில் எந்த ஆபத்தும்
தானி 2:35 கல் ஒரு பெரிய ம.யாகி
மலைக்கு, சங் 24:3 யெகோவாவின் ம. யார் ஏறி
ஏசா 2:3 யெகோவாவின் ம. போகலாம்
மழை, ஆதி 7:12 நாற்பது நாட்கள் ம.
உபா 32:2 என் அறிவுரைகள் ம.போல்
ஏசா 55:10 ம.யும் பனியும் நிலத்தை
மத் 5:45 அநீதிமான்களுக்கும் ம.யை
மறந்தபடியே, பிலி 3:13 பின்னால் இருப்பவற்றை ம.
மறந்து, எபி 6:10 அன்பை ம.விடுவதற்குக் கடவுள்
மறப்பாளா, ஏசா 49:15 தாய் தன் குழந்தையை ம.
மறுமனைவி, 1ரா 11:3 300 ம.களும்
மறைக்க, நீதி 28:13 குற்றங்களை ம. பார்த்தால்
மறைவிடத்தில், சங் 91:1 கடவுளுடைய ம. இருக்கிறவன்
மற்ற தேசத்து ஜனங்களை, யாத் 22:21 ம. மோசமாக நடத்த
மனக்கசப்பு, எபே 4:31 ம., சினம், கடும் கோபம்
மனக்குறை, கொலோ 3:13 ஏதாவது ம. இருந்தால்
மனசாட்சி, ரோ 2:15 ம. சொல்கிற சாட்சி
ரோ 13:5 ம.யின் காரணமாகவும்
1கொ 8:12 பலவீனமான ம.க்குப் பாதிப்பு
1தீ 4:2 மரத்துப்போன ம.யுள்ள
எபி 9:14 ம.யை எந்தளவு தூய்மையாக்கும்
1பே 3:16 நல்ல ம.யோடு இருங்கள்
1பே 3:21 நல்ல ம.க்காகக் கடவுளிடம்
மனச்சோர்வடைந்து, பிலி 2:26 [எப்பாப்பிரோதீத்து] ம.
மனச்சோர்வால், 1தெ 5:14 ம. வாடுகிறவர்களிடம்
மனதாக, 1ரா 18:21 எத்தனை நாளைக்கு இரண்டு ம.
மனதால், ரோ 7:25 என் ம. கடவுளின் சட்டத்துக்கும்
மனதுக்கு, ஏசா 65:17 கஷ்டங்கள் இனி ம.
மனதை, சங் 51:10 அலைபாயாத புதிய ம.
கொலோ 3:2 பரலோகத்துக்குரிய காரியங்கள் மீதே ம.
மனதோடு, மத் 22:37 யெகோவாமேல் முழு ம.
மனத்தாழ்மை, நீதி 15:33 ம.யாக இருந்தால் மதிப்பு
மனத்தாழ்மையுள்ள, செப் 2:3 ம. ஜனங்களே, யெகோவாவைத் தேடுங்கள்
மனநிறைவோடு, பிலி 4:11 எந்தச் சூழ்நிலையிலும் ம.
மனப்பான்மை, எபே 4:23 ம.யை புதுப்பித்துக்கொண்டே இருங்கள்
பிலி 2:5 கிறிஸ்துவுக்கு இருந்த இதே ம.
மனப்பூர்வமாக, சங் 110:3 ம. தங்களை அர்ப்பணிப்பார்கள்
ரோ 6:17 போதனைக்கு ம. கீழ்ப்படிந்தீர்கள்
1பே 5:2 மந்தையை ம. மேய்த்து
மனமுள்ளவர், பிலி 2:20 அவரைப் போன்ற ம.
மனம் திருந்த, 2கொ 7:10 கடவுளுக்கு ஏற்ற வருத்தம் ம. வைக்கிறது
மனம் திருந்தி, அப் 3:19 ம., வழியை மாற்றி
அப் 26:20 ம.யதைச் செயலில்
மனம் திருந்து, லூ 15:7 ம.கிற ஒரே பாவியை
அப் 17:30 ம.ம்படி மக்களுக்குச் சொல்கிறார்
மனவலிமை, எபே 3:16 உங்களுக்கு ம. கொடுக்கும்படி
மனாசே, 2நா 33:13 யெகோவாதான் கடவுள் என்று ம.
மனிதகுமாரன், தானி 7:13 ம. மேகங்களோடு
மத் 10:23 ம. வருவதற்குள்
லூ 21:27 ம. மேகத்தில் வருவதை
மனிதர்கள், கலா 2:6 ம. பார்க்கிற விதமாகக் கடவுள்
மனிதாபிமானத்தோடு, அப் 28:2 அளவுகடந்த ம.
மனுஷர்களைப் பிடிப்பவர்களாக, மத் 4:19 ம. ஆக்குவேன்
மனைவி, ஆதி 2:24 ம.யோடு சேர்ந்திருப்பான்
யாத் 20:17 அடுத்தவன் ம.யை
நீதி 5:18 இளவயதில் கைப்பிடித்த ம.யோடு
நீதி 12:4 திறமைசாலியான ம., கிரீடம்
நீதி 18:22 நல்ல ம.யைத் தேடிக்கொள்கிறவன்
நீதி 21:19 சண்டைக்காரியும் கோபக்காரியுமான ம.
நீதி 31:10 திறமைசாலியான ம.யை யாரால்
பிர 9:9 உன் அருமை ம.யோடு
மல் 2:15 இளவயதில் கைப்பிடித்த ம.க்குத் துரோகம்
எபே 5:28 சொந்த உடல்போல், ம.மீது
மனைவிகள், 1ரா 11:3 சாலொமோனுக்கு 700 ம.
எபே 5:22 ம. கணவருக்குக் கட்டுப்பட்டு
மனோவா, நியா 13:8 ம., குழந்தையை எப்படி
மன்றாட்டு, எபி 5:7 கிறிஸ்து ம.களை ஏறெடுத்தார்
யாக் 5:16 நீதிமானின் ம.
மன்னா, யாத் 16:31 அந்த உணவுக்கு ம. என்று
யோசு 5:12 அதே நாளில் ம. நின்றுபோனது
மன்னிக்க, மத் 18:21 எத்தனை தடவை ம.
மன்னிக்கிறவன், நீதி 17:9 குற்றத்தை ம.
மன்னித்தது, கொலோ 3:13 யெகோவா தாராளமாக ம.போல்
மன்னித்தால், மத் 6:14 நீங்கள் ம.
மன்னித்துவிடுங்கள், சங் 25:11 என் குற்றத்தை ம.
மன்னிப்பார், ஏசா 55:7 கடவுள் தாராளமாக ம.
மன்னிப்புக்கென்று, மத் 26:28 இரத்தம் பாவ ம.
மாகோகு, எசே 38:2 மா. தேசத்தின் கோகு
மாடு, யாத் 21:28 மா. முட்டியதால்
மாடுகள், 1கொ 9:9 மா. மீதுள்ள அக்கறையால்
மாட்டிக்கொண்டு, நீதி 27:12 அனுபவமில்லாதவன் மா.
மாட்டின், உபா 25:4 போரடிக்கிற மா. வாயை
மாட்டை, நீதி 7:22 இழுத்துச் செல்லப்படுகிற மா.
மாதவிலக்கு, லேவி 15:19 மா., ஏழு நாட்கள் தீட்டு
லேவி 18:19 மா. நாட்களில் உடலுறவு
மாதிரி, யாத் 26:30 மலையில் காட்டிய மா.யின்படி
2தீ 1:13 பயனுள்ள வார்த்தைகளை மா.யாக
மாதிரிப் படிவமாக, எபி 8:5 பரலோகக் காரியங்களின் மா.
மாயமந்திரம், எண் 23:23 யாக்கோபுக்கு எதிராக மா.
உபா 18:10 யாருமே மா. செய்யவோ
அப் 19:19 மா.ங்கள் செய்தவர்கள் புத்தகங்களை
மார்க்கத்தை, அப் 9:2 இந்த மா. சேர்ந்த
மார்த்தாள், லூ 10:40 மா. நிறைய வேலைகளை
லூ 10:41 மா., மா. நீ நிறைய
மார்புகள், நீதி 5:19 அவளுடைய மா. உன்னை
மார்புக் கவசமாக, எபே 6:14 நீதியை மா.
மாவீரர், எரே 20:11 மிரள வைக்கும் ஒரு மா.ரைப் போல
மாறாத அன்பு, யாத் 34:6 யெகோவா மா. காட்டுபவர்
சங் 13:5 மா. காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை
சங் 136:1-26 என்றென்றும் மா.பைக் காட்டுகிறவர்
மாறுவதில்லை, மல் 3:6 நான் யெகோவா; நான் மா.
மாற்கு, கொலோ 4:10 பர்னபாவின் ஒன்றுவிட்ட சகோதரர் மா.
மாற்ற, ஏசா 14:27 யெகோவாவின் முடிவை யாரால் மா.
மாற்றுவதன், ரோ 12:2 யோசிக்கும் விதத்தை மா.
மிகச் சிறந்த, 1கொ 12:31 மி. வழி ஒன்றை
மிகாவேல், தானி 10:13 ஒரு பெரிய அதிபதி, மி.
தானி 12:1 மி. செயலில் இறங்குவார்
வெளி 12:7 மி.லும் அவருடைய தூதர்களும்
மிஞ்சி, 1கொ 4:6 எழுதப்பட்ட விஷயங்களுக்கு மி.
மிதித்து, எபி 10:29 கடவுளுடைய மகனை மி.
மிதிபட்ட, ஏசா 42:3 மி. எந்த நாணலையும்
மிரட்டவில்லை, 1பே 2:23 துன்புறுத்தப்பட்டபோது மி.
மிரட்டாதீர்கள், எபே 6:9 அடிமைகளை மி.
மிரட்டி, அப் 4:17 இவர்களை மி. வைப்போம்
மிரியாம், எண் 12:1 மி.மும் ஆரோனும் முணுமுணுத்து
மிருகங்கள், ஆதி 7:2 சுத்தமான மி.ளில் ஏழு
தானி 7:3 நான்கு பெரிய மி. கடலிலிருந்து
ஓசி 2:18 காட்டு மி.ளோடு ஒப்பந்தம்
மிருகத்துடன், லேவி 18:23 மி. உறவுகொண்டு
மினா, லூ 19:16 நீங்கள் கொடுத்த மி.வை வைத்து

மினுமினுத்தவனே, ஏசா 14:12 நட்சத்திரமாக **மி.**
மின்னல், மத் 24:27 **மி.** கிழக்கில் தோன்றி
லூ 10:18 சாத்தான் **மி.** வேகத்தில்
மீட்கவே, சங் 49:7 இன்னொருவனின் உயிரை **மீ.**
மீட்பதற்குமே, லூ 19:10 **மீ.** மனிதகுமாரன்
மீட்பர், அப் 5:31 அதிபதியாகவும் **மீ.**ராகவும்
மீட்பு, சங் 3:8 நீங்கள்தான் **மீ.** தருகிறீர்கள்
அப் 4:12 வேறு யாராலும் **மீ.**
ரோ 13:11 கிறிஸ்தவர்களான சமயத்தைவிட, **மீ.**
பிலி 2:12 **மீ.**க்காக உழைத்து வாருங்கள்
1தீ 4:16 நீயும் **மீ.** பெறுவாய்
வெளி 7:10 கடவுளால் எங்களுக்கு **மீ.**
மீட்புவிலை, சங் 49:7 அவனுக்காக **மீ.**யை
மத் 20:28 தன் உயிரை **மீ.**யாக
ரோ 8:23 **மீ.**யால் உடலிலிருந்து விடுதலை
மீதியிருந்த, மத் 14:20 **மீ.** துண்டுகளை 12 கூடைகள்
மீன், யோனா 1:17 யோனாவை விழுங்க **மீ.**
மீன்கள், யோவா 21:11 வலையில் 153 **மீ.**
முக்காடு, 1கொ 11:6 பெண் **மு.** போடவில்லை
முக்கியமான, மத் 23:23 மிக **மு.** காரியங்களை விட்டுவிட்டீர்கள்
பிலி 1:10 மிக **மு.** காரியங்கள் எவை
முக்கியமானவனாக, கலா 6:3 **மு.** இல்லாமலிருந்தும்
முங்கியெழுங்கள், 2ரா 5:10 யோர்தானில் ஏழு தடவை **மு.**
முடித்திருக்கிறேன், 2தீ 4:7 ஓட்டத்தை ஓடி **மு.**
முடிந்தவரை, ரோ 12:18 **மு.** சமாதானமாக
முடிப்பது, அப் 20:24 ஊழியத்தை **மு.**தான் முக்கியம்
முடியாது, மத் 19:26 மனுஷர்களால் இது **மு.**
முடியெல்லாம், மத் 10:30 தலையிலுள்ள **மு.**
முடிவில்லாத வாழ்வு, லூ 18:30 வரப்போகும் காலத்தில் **மு.**வையும்
யோவா 3:16 அழிந்துபோகாமல் **மு.**வை
யோவா 17:3 தெரிந்துகொண்டே இருந்தால் **மு.**
அப் 13:48 **மு.**வைப் பெறுவதற்கேற்ற
ரோ 6:23 கடவுளின் அன்பளிப்போ **மு.**
1தீ 6:12 **மு.**வை உறுதியாகப் பிடித்துக்கொள்
முடிவு, சங் 73:17 அவர்களுக்கு வரப்போகிற **மு.**வை
மத் 24:14 பின்பு **மு.** வரும்
யோவா 13:1 இயேசு **மு.**வரை அன்பு காட்டி
முட்டாளாக்க, கலா 6:7 கடவுளை **மு.** முடியாது
முட்டாள்கள், சங் 14:1 யெகோவா கிடையாது என்று **மு.**
முட்டாள்தனம், நீதி 19:3 மனிதனின் **மு.** அவன் வழியை
நீதி 22:15 பிள்ளையின் நெஞ்சில் **மு.**
1கொ 3:19 உலக ஞானம் கடவுளுக்கு **மு.**
முட்புதர், அப் 7:30 **மு.** நடுவில் தேவதூதர்
முணுமுணு, எண் 14:27 [இஸ்ரவேலர்கள்] **மு.**த்து
1கொ 10:10 நாமும் **மு.**க்காமல்
பிலி 2:14 எல்லாவற்றையும் **மு.**க்காமல்
முதலானவராக, மாற் 9:35 **மு.** இருக்க விரும்பினால்
முதல் படைப்பு, கொலோ 1:15 படைப்புகளிலேயே **மு.**
முதியவனாக, சங் 37:25 இப்போது **மு.**
முதிர்ச்சி, 1கொ 14:20 புரிந்துகொள்வதில் **மு.**
எபி 5:14 திட உணவோ **மு.**யுள்ளவர்களுக்கு
எபி 6:2 **மு.**யை நோக்கி முன்னேற
முத்தம், லூ 22:48 மனிதகுமாரனை **மு.** கொடுத்தா
முத்திரை, உன் 8:6 இதயத்தில் என்னை **மு.**யாக
தானி 12:9 முடிவு காலம்வரை **மு.**
2கொ 1:22 நம்மேல் தன் **மு.**யை
எபே 1:13 கடவுளுடைய சக்தியால் **மு.**
வெளி 7:3 ஊழியர்களின் நெற்றிகளில் **மு.**
முத்துக்களை, மத் 7:6 **மு.** பன்றிகளுக்கு
மத் 13:45 அரசாங்கம், **மு.** தேடி
முந்தின, எபி 10:32 **மு.** நாட்களை எப்போதும்
முந்தினவர்கள், மத் 19:30 **மு.** பிந்தினவர்களாக
முயற்சி, லூ 13:24 தீவிரமாக **மு.** செய்யுங்கள்
2பே 1:7 ஊக்கமாக **மு.** செய்யுங்கள்
முரண்பாடில்லாமல், 1கொ 1:10 **மு.** பேச வேண்டும்
முழு இதயத்தோடு, 1நா 28:9 கடவுளுக்கு **மு.** சேவை
2நா 16:9 **மு.** நம்புகிறவர்களுக்கு
முழு பக்தியை, யாத் 34:14 **மு.** எதிர்பார்க்கும் கடவுள்
முழு மூச்சோடு, எபே 6:6 கடவுளுடைய விருப்பத்தை **மு.**
கொலோ 3:23 யெகோவாவுக்காக **மு.**
முழு வளர்ச்சி, எபே 4:13 **மு.** அடைவதற்காக
முள், 2கொ 12:7 என் உடலில் ஒரு **மு.**
முள்கிரீடம், மாற் 15:17 **மு.** செய்து தலையில்
முறைகளை, 1கொ 4:17 நான் பயன்படுத்தும் **மு.**
முறைகேடான உறவு, மத் 5:28 இதயத்தில் **மு.**
மத் 19:9 வேறொரு பெண்ணைத் திருமணம், **மு.**
முறையை, 1நா 15:13 நாம் சரியான **மு.**
முன்பு, ஏசா 65:17 **மு.** பட்ட கஷ்டங்கள் இனி
முன்மாதிரி, யோவா 13:15 உங்களுக்கு **மு.** வைத்தேன்
1கொ 11:1 என் **மு.**யைப் பின்பற்றுங்கள்
எபே 5:1 கடவுளுடைய **மு.**யைப் பின்பற்றுங்கள்
1தீ 4:12 உண்மையுள்ளவர்களுக்கு **மு.**யாக
யாக் 5:10 தீர்க்கதரிசிகளை **மு.**களாக
1பே 2:21 கிறிஸ்து ஒரு **மு.**யை
1பே 5:3 மந்தைக்கு **மு.**களாக
முன்னேற்ற, பிலி 3:16 **மு.** பாதையில் எதுவரை
முன்னேற்றம், 1தீ 4:15 உன்னுடைய **மு.** தெரியவரும்
மூச்சோடு, மத் 22:37 முழு **மூ.** அன்பு
மூடி, லூ 8:17 **மூ.** வைக்கப்படுகிற எதுவும்
மூடுபனியை, யாக் 4:14 **மூ.** போல் இருக்கிறீர்கள்
மூத்த மகன்கள், யாத் 11:5 எகிப்தின் **மூ.**
மூப்பர்களை, தீத் 1:5 ஒவ்வொரு நகரத்திலும் **மூ.**
மூலைக்கல், எபே 2:20 இயேசுவே **மூ.**
மூழ்கியிரு, 1தீ 4:15 யோசித்துக்கொண்டிரு, **மூ.**
மூன்று, உபா 16:16 வருஷத்தில் **மூ.** தடவை, ஆண்கள்
மெதுவாக, ஆதி 33:14 ஆடுமாடுகளோடு **மெ.** வருகிறேன்
மெலித்தா, அப் 28:1 அந்தத் தீவின் பெயர் **மெ.**
மெல்கிசேதேக்கு, ஆதி 14:18 சாலேமின் ராஜா **மெ.**
சங் 110:4 **மெ.**கைப் போலவே குருவாக
மென்மை, நீதி 25:15 **மெ.**யான நாவினால் எலும்பை
1தெ 2:7 உங்களிடம் **மெ.**யாக நடந்து
2தீ 2:24 எல்லாரிடமும் **மெ.**யாக நடந்து
மேகம், பிர 11:4 **மே.**த்தையே பார்க்கிறவன்
மத் 24:30 மனிதகுமாரன் **மே.**கள்மேல்
எபி 12:1 **மே.** போன்ற சாட்சிகள்
மேசியா, தானி 9:26 **மே.** கொல்லப்படுவார்
யோவா 1:41 **மே.**வைக் கண்டுகொண்டோம்
யோவா 4:25 கிறிஸ்து என்ற **மே.** வருவார்
மேட்டிமையான, ரோ 12:16 **மே.** விஷயங்களைப் பற்றி
மேய்த்து, எசே 34:2 தங்களையே **மே.**க்கொண்டு
1பே 5:2 மந்தையை **மே.**வாருங்கள்
மேய்ப்பதற்கு, அப் 20:28 கண்காணிகள், மந்தையை **மே.**
மேய்ப்பர், சங் 23:1 யெகோவா என் **மே.**ராக
யோவா 10:16 ஒரே **மே.**, ஒரே மந்தை
எபே 4:11 சிலரை **மே.**களாகவும்
மேய்ப்பன், ஏசா 40:11 **மே.**னைப் போல மந்தையை
எசே 37:24 தாவீது, ஒரே **மே.**தான்
சக 13:7 **மே.**னை வெட்டு, ஆடுகள்
மத் 9:36 **மே.** இல்லாத ஆடுகளை
யோவா 10:11 நல்ல **மே.** உயிரையே
யோவா 10:14 நான்தான் நல்ல **மே.**
மேற்கோள்கள், அப் 17:3 நிரூபிக்கிற விதத்தில் **மே.**
மேஜை, தானி 11:27 ஒரே **மே.**யில் உட்கார்ந்து பொய்
1கொ 10:21 யெகோவாவின் **மே.**யிலும்
மொட்டை, லேவி 21:5 **மொ.** போட்டுக்கொள்ளக் கூடாது
மொழிகளையும், வெளி 7:9 எல்லா தேசங்களையும் **மொ.**
மொழிபெயர்க்கிறவர்களா, 1கொ 12:30 எல்லாருமே **மொ.**
மொழியில், ஆதி 11:7 **மொ.** குழப்பத்தை
மோகம்கொண்டு, ரோ 1:27 ஆண்களும் **மோ.**

மோசடி, லேவி 19:13 **மோ.** செய்யக் கூடாது
1கொ 6:7 **மோ.**யை ஏன் சகிக்க
மோசே, எண் 12:3 **மோ.** மிகவும் தாழ்மையானவராக
அப் 7:22 **மோ.** சொல்லிலும் செயலிலும்
2கொ 3:7 **மோ.**யின் முகத்தைப் பார்க்க

ய

யா, யாத் 15:2 **யா**வே என் பலம்
சங் 146:1 **யா**வைப் புகழுங்கள்
சங் 150:6 எல்லா உயிர்களும் **யா**வைப் புகழட்டும்
ஏசா 12:2 **யா** யெகோவாதான் என் பலம்
வெளி 19:1 திரள் கூட்டத்தார், **யா**வைப் புகழுங்கள்!
யாக்கோபு 1., ஆதி 27:46 **யா.** ஒரு ஏத்தியப் பெண்ணை
ஆதி 32:24 ஒரு மனிதர் **யா.**போடு போராடினார்
யாக்கோபு 2., லூ 6:16 **யா.**பின் மகன் யூதாஸ்
யாக்கோபு 3., அப் 12:2 யோவானின் சகோதரன் **யா.**
யாக்கோபு 4., மாற் 15:40 சின்ன **யா.**க்கு அம்மா மரியாள்
யாக்கோபு 5., மத் 13:55 இவனுடைய சகோதரர்கள் **யா.**
அப் 15:13 அவர்கள் பேசி முடித்த பின்பு, **யா.**
1கொ 15:7 **யா.**க்கும், அதன் பின்பு
யாக் 1:1 கடவுளுக்கு அடிமையான **யா.**
யுகம் யுகமாக வாழ்கிறவர், தானி 7:9 **யு.** உட்கார்ந்தார்
யூத, சக 8:23 ஒரு **யூ.**னுடைய உடையை
ரோ 3:29 கடவுள் **யூ.**ர்களுக்கு மட்டுமா
1கொ 9:20 **யூ.**ர்களுக்கு **யூ.**னைப் போல்
யூதா, ஆதி 49:10 **யூ.**வைவிட்டு செங்கோல்
யூதாஸ், மத் 27:3 **யூ.**, மனம் வருந்தினான்
யெகோவா, யாத் 3:15 என்றென்றும் என் பெயர் **யெ.**
யாத் 5:2 யார் அந்த **யெ.**?
யாத் 6:3 **யெ.** என்ற என் பெயரைப் பற்றி
யாத் 20:7 **யெ.**வின் பெயரை வீணாக
உபா 6:5 **யெ.**மேல் முழு இதயத்தோடும்
உபா 7:9 **யெ.**தான் உண்மைக் கடவுள்
சங் 83:18 **யெ.** என்ற பெயருள்ள ஒருவர்தான்
ஏசா 42:8 நான் **யெ.** அதுதான் என் பெயர்
ஓசி 12:5 பரலோகப் படைகளின் கடவுளான **யெ.**
மீ 6:8 **யெ.** உன்னிடம் என்ன கேட்கிறார்?
மல் 3:6 நான் **யெ.**; நான் மாறுவதில்லை
மாற் 12:29 **யெ.** ஒருவரே **யெ.**
யெகோவாவின் நாள், யோவே 2:1 **யெ.** வருகிறது
ஆமோ 5:18 **யெ.**ளில் உங்களுக்கு
1தெ 5:2 திருடன் போல் **யெ.**
2தெ 2:2 **யெ.** வந்துவிட்டது
2பே 3:12 **யெ.**ளை எப்போதும்
யெகோவாவின் மகா நாள், செப் 1:14 **யெ.**
யெப்தா, நியா 11:30 **யெ.** யெகோவாவிடம்
யேசபேல், 1ரா 21:23 **யே.**லின் உடலை நாய்கள்
வெளி 2:20 **யே.**லை நீ பொறுத்துக்கொள்கிறாய்
யோசபாத், 2நா 20:3 **யோ.** பயந்துபோனார்
யோசனை, 1நா 28:9 மனதில் இருக்கிற ஒவ்வொரு **யோ.**யையும்
யோசனைகள், சங் 26:2 அடிமனதின் **யோ.**ளைப் புடமிட்டு
சங் 139:17 உங்களுடைய **யோ.** அருமையானவை
சங் 146:4 அதே நாளில் அவர்களுடைய **யோ.**
நீதி 20:5 உள்ளத்தில் இருக்கும் **யோ.**
ஏசா 55:8 என் **யோ.** வேறு, உங்கள் **யோ.** வேறு
யோசிக்காமல், நீதி 12:18 **யோ.** பேசுவது வாள் போல
யோசிக்கும், நீதி 15:28 பதில் சொல்வதற்குமுன் **யோ.**
யோசிக்கும் திறனை, நீதி 1:4 இளைஞர்களுக்கு **யோ.**
யோசிப்பவர்கள், ரோ 8:6 பாவ காரியங்களைப் பற்றியே **யோ.**
யோசியா, 2ரா 22:1 **யோ.** 31 வருஷங்கள் ஆட்சி
யோசுவா, யாத் 33:11 நூனின் மகன் **யோ.**
யோசேப்பு, ஆதி 39:23 யெகோவா **யோ.**டனேயே இருந்தார்
லூ 4:22 இவன் **யோ.**பின் மகன்களில்
யோபு, யோபு 1:9 **யோ.** சும்மாவா பயந்து நடக்கிறான்
யாக் 5:11 **யோ.**வின் சகிப்புத்தன்மையை
யோர்தான், யோசு 3:13 **யோ.** ஆற்றின் தண்ணீர் நிற்கும்
2ரா 5:10 **யோ.**னில் ஏழு தடவை முங்கி
யோவான் 1., மத் 21:25 ஞானஸ்நானம் கொடுக்கிற **யோ.**
மாற் 1:9 இயேசு **யோ.**னிடம் ஞானஸ்நானம்
யோவான் 2., யோவா 1:42 **யோ.**னுடைய மகன் சீமோன்
யோவான் 3., மத் 4:21 செபெதேயுவின் மகன் **யோ.**
யோனத்தான், 1சா 18:3 **யோ.** தாவீதோடு ஒப்பந்தம்
1சா 23:16 **யோ.** தாவீதுக்கு உதவினார்
யோனா, யோனா 2:1 மீனின் வயிற்றில் **யோ.** ஜெபம்

ர

ரகசியங்களை, நீதி 25:9 **ர.** அம்பலப்படுத்தாதே
ரகசியத்தை, நீதி 11:13 **ர.** காப்பாற்றுகிறான்
பிலி 4:12 திருப்தியோடு இருப்பதற்கான **ர.**
ரகசியமான, ஆமோ 3:7 எந்தவொரு **ர.** விஷயத்தையும்
ரகசியம், எபே 3:5 அந்த **ர.** அப்போஸ்தலர்களுக்கும்
ரசித்துக்கொண்டு, சங் 27:4 ஆலயத்தைப் பிரமிப்போடு **ர.**
ராகேல், ஆதி 29:18 **ரா.**லுக்காக ஏழு வருஷம்
எரே 31:15 **ரா.** அழுதுகொண்டிருக்கிறாள்
ராட்சதப் பாம்பு, வெளி 12:9 **ரா.**, பிசாசு
ராட்சதர்கள், ஆதி 6:4 பூமியில் **ரா.**
ராணி, 1ரா 10:1 சேபா தேசத்து **ரா.**
ராஜா, நியா 21:25 இஸ்ரவேலர்களுக்கு **ரா.** இல்லை
1சா 23:17 நீ **ரா.**வாக இருப்பாய், நான்
சங் 2:6 சீயோனில், என் **ரா.**வை
நீதி 21:1 **ரா.**வின் இதயம் நீரோடைபோல்
ஏசா 32:1 **ரா.** நீதியாக ஆட்சி செய்வார்
தானி 4:17 உன்னதமான கடவுள்தான் **ரா.**
சக 14:9 முழு பூமிக்கும் யெகோவா **ரா.**
மத் 21:4 உன் **ரா.** உன்னிடம் வருகிறார்
மத் 27:29 யூதர்களுடைய **ரா.**வே, வாழ்க!
யோவா 19:15 ரோம அரசனைத் தவிர வேறெந்த **ரா.**வும்
1கொ 15:25 காலடியில் வீழ்த்தும்வரை **ரா.**வாக
ராஜாக்கள், நீதி 22:29 திறமைசாலி, **ரா.** முன்னால்
லூ 21:12 நீங்கள் **ரா.**ளுக்கும் ஆளுநர்களுக்கும்
அப் 4:26 பூமியின் **ரா.** அணிவகுத்து
வெளி 1:6 **ரா.**ளாகவும், குருமார்களாகவும்
வெளி 5:10 **ரா.**ளாகப் பூமிமீது ஆட்சி
வெளி 18:3 பூமியின் **ரா.** அவளோடு
ராஜ்யம், தானி 2:44 பரலோகத்தின் கடவுள் ஒரு **ரா.**த்தை
தானி 7:14 அரசாட்சியும் மேன்மையும் **ரா.**மும்
மத் 4:8 பிசாசு இந்த உலக **ரா.**ங்களையும்
ருசித்து, சங் 34:8 யெகோவா நல்லவர் என்பதை **ரு.**
1பே 2:3 எஜமான் கருணையுள்ளவர் என்று **ரு.**
ருசிபார்த்தும், எபி 6:4 பரலோக அன்பளிப்பை **ரு.**
ரெபெக்காள், ஆதி 26:7 **ரெ.** அழகாக
ரேகாபிய, எரே 35:5 **ரே.** ஆண்களுக்கு திராட்சமது
ரொட்டி, மத் 26:26 இயேசு **ரொ.**யை எடுத்து
1கொ 10:17 **ரொ.** ஒன்றுதான்
ரோம அரசன், மத் 22:17 **ரோ.**னுக்கு வரி கட்டுவது
யோவா 19:15 **ரோ.**னைத் தவிர வேறெந்த
அப் 25:11 **ரோ.**னிடம் மேல்முறையீடு

ல

லஞ்சம், 1சா 8:3 **ல.** வாங்கினார்கள், நியாயத்தை
பிர 7:7 **ல.** உள்ளத்தைக் கெடுக்கும்
லட்சக்கணக்கிலும், வெளி 5:11 **ல.** தேவதூதர்கள்
லாசரு, லூ 16:20 **லா.** என்ற பிச்சைக்காரன்
யோவா 11:11 நம்முடைய நண்பன் **லா.**
யோவா 11:43 **லா.**வே, வெளியே வா!
லீதியாள், அப் 16:14 தியத்தீராவைச் சேர்ந்த **லீ.**
லூக்கா, கொலோ 4:14 அன்பான மருத்துவர் **லூ.**
லேவி, மல் 3:3 **லே.**யின் மகன்களைச் சுத்தப்படுத்துவார்
லேவியர்கள், எண் 3:12 **லே.** எனக்குச் சொந்தமாவார்கள்
2நா 35:3 திருச்சட்டத்தைச் சொல்லித்தர, **லே.**
லோத்து, ஆதி 19:26 **லோ.**வின் மனைவி, உப்புச் சிலை
லூ 17:32 **லோ.**வின் மனைவியை
2பே 2:7 நீதிமானாகிய **லோ.**வைக் காப்பாற்றி

வ

வசீகரமான, 1கொ 2:4 வ. வார்த்தைகளோ
வசீகரம், நீதி 31:30 வ. பொய்யானது
வடதிசை ராஜா, தானி 11:7 வ.வின் கோட்டை
தானி 11:40 வ. ரதங்களோடும்
வணங்க, மத் 4:10 யெகோவாவை மட்டுமே வ.
யோவா 4:24 சத்தியத்தோடு வ. வேண்டும்
வணங்குவது, யோசு 24:15 யாரை வ.தென்று முடிவு
வதந்திகளை, யாத் 23:1 வ. பரப்பக் கூடாது
வம்பளக்கிற, 1தீ 5:13 வ.வர்களாகவும்
வயதான, சங் 71:9 வ. காலத்தில் என்னை
சங் 92:14 வ. காலத்திலும் திடமாக
வயல், மத் 13:38 வ., இந்த உலகம்
வயல்களை, யோவா 4:35 வ. ஏறெடுத்துப் பாருங்கள்
வயிறு, பிலி 3:19 வ.தான் அவர்களுடைய கடவுள்
வரங்கள், ரோ 12:6 வித்தியாசமான வ. இருக்கின்றன
வரத்தை, 1கொ 7:7 ஒவ்வொருவனும் தன்தன் வ.
1தீ 4:14 கடவுள் கொடுத்த வ. அலட்சியம்
வரவேற்றது, ரோ 15:7 கிறிஸ்து வ.போல்
வரி, மத் 17:25 ராஜாக்கள் வ.யை யாரிடம்?
லூ 20:22 ரோம அரசனுக்கு வ.
லூ 23:2 ரோம அரசனுக்கு வ. கட்டக் கூடாது
ரோ 13:6 அதனால்தான், வ.யும் கட்டுகிறீர்கள்
ரோ 13:7 யாருக்கு வ. கொடுக்க
வரிசையில், யோவே 2:7 அதனதன் வ. போகும்
லூ 1:3 சரியான வ. எழுத
1கொ 15:23 அவரவர் வ. எழுப்ப
வரி வசூலிக்கிற, லூ 18:11 வ. இவனைப் போல
வரி வசூலிப்பவரை, மத் 18:17 வ. போல இருக்கட்டும்
வருக, வெளி 22:17 வ., வ! என்று
வருத்தத்தை, 2கொ 7:9 கடவுளுக்கு ஏற்ற வ.
வருமானம், பிர 5:10 எவ்வளவு வ. வந்தாலும் திருப்தியடைய
வருஷம், எண் 14:34 ஒரு நாளுக்கு ஒரு வ.
வரைபடம், 1ரா 6:38 வ.த்தின்படி ஆலயம்
1நா 28:12 சக்தியால் வெளிப்படுத்தப்பட்ட வ.த்தை
வலைகளை, லூ 5:4 உங்கள் வ. போட்டு
வல்லமை, மாற் 5:30 வ. வெளியேறியதை இயேசு
அப் 1:8 சக்தி வரும்போது வ. பெற்று
வெளி 3:8 உனக்குக் கொஞ்சம் வ.
வழக்கமான பலி, தானி 11:31 வ.யை நீக்கிவிடும்
வழக்காடி, பிலி 1:7 நல்ல செய்திக்காக வ.
வழக்கு, 1கொ 6:6 உலக மக்களுக்கு முன்னால் வ.
1கொ 6:7 ஒருவருக்கு எதிராக ஒருவர் வ.
வழி, சங் 32:8 நடக்க வேண்டிய வ.யை உனக்கு
நீதி 16:25 சரியென்று தோன்றுகிற வ.
ஏசா 30:21 இதுதான் சரியான வ., இதிலே
யோவா 14:6 நானே வ.யும் சத்தியமும்
1கொ 10:13 சோதனையிலிருந்து விடுபட வ. செய்வார்
வழிதவறி, சங் 119:176 காணாமல்போன ஆடுபோல் வ.
வழிநடத்தி, 1தெ 5:12 வ., புத்திசொல்கிறவர்களுக்கு
வழிநடத்து, எபி 13:7, 17 உங்களை வ.கிறவர்களை
வழுக்கை, லேவி 13:40 வ. விழுந்தால் தீட்டில்லாதவன்
2ரா 2:23 வ. தலையா, ஏறிப் போ!
வளங்களை, ஏசா 61:6 தேசங்களின் வ. நீங்கள்
வறட்சி, எரே 17:8 வ. காலத்தில்கூட வாட
வறட்டு கௌரவத்தினாலோ, பிலி 2:3 எதையும் வ.
வறுமை, நீதி 30:8 வ.யையோ செல்வத்தையோ கொடுக்காமல்
நீதி 30:9 வ.யால் திருடனாக மாறி
2கொ 8:2 கொடிய வ.யில் வாடியபோதிலும்
கலா 2:10 வ.யிலுள்ள சகோதரர்களை
வனாந்தரத்தை, ஏசா 41:18 வ. நாணற்புல் குளமாக
வன்முறை, ஆதி 6:11 பூமியெங்கும் வ. நடந்தது
சங் 5:6 வ.யில் இறங்குகிறவர்களை அருவருக்கிறார்
சங் 11:5 வ.யை விரும்புகிறவனை
வாக்கு, 2பே 3:4 அவர் வருவதாக வா. கொடுத்தாரே
வாக்குவாதம், நீதி 17:14 வா. வெடிப்பதற்கு முன்
அப் 15:39 பவுல், பர்னபா கடுமையான வா.
வாக்குறுதி, 1ரா 8:56 வா.களில் ஒன்றுகூட
2கொ 1:20 வா.கள் அத்தனையும் அவர் மூலம்
எபி 10:23 வா. தந்தவர் நம்பகமானவர்
வாக்கை, சங் 15:4 கொடுத்த வா. மீற மாட்டான்
வாசல், மத் 7:13 இடுக்கமான வா. வழியாக
மத் 7:14 வாழ்வுக்குப் போகிற வா.
வாசிக்க, உபா 17:19 வாழ்நாளெல்லாம் அதை வா.
வாசிப்பது, அப் 8:30 வா. புரிகிறதா?
வாயிலிருந்து, யாக் 3:10 புகழ்வதும் சபிப்பதும் ஒரே வா.
வாயினால், சங் 8:2 பிள்ளைகளின் வா.
ரோ 10:10 வா. அறிவிக்கும்போது
வாய், நீதி 26:28 பொய்யாகப் புகழ்கிற வா.
வாரம், தானி 9:24 70 வா.ங்களை குறித்திருக்கிறார்
1கொ 16:2 வா.த்தின் முதல்நாளிலும்
வாரிசுகளாக, ரோ 8:17 கடவுளுடைய வா.
கலா 3:29 வாக்குறுதியின்படி வா.
வாருங்கள், ஏசா 55:1 தாகமாக இருப்பவர்களே, வா.
வார்த்தை, நீதி 25:11 சரியான சமயத்தில் சொல்லும் வா.
ஏசா 55:11 என் வாயிலிருந்து வருகிற வா.யும்
யோவா 1:1 ஆரம்பத்தில் வா. இருந்தார்
யோவா 17:17 உங்கள் வா.தான் சத்தியம்
2கொ 2:17 கடவுளுடைய வா.யை வைத்து பணம்
2தீ 2:15 சத்திய வா.யைச் சரியாய்
வாலிபர்கள், சங் 110:3 வா. விடியற்கால பனித்துளி
வாழாமல், 2கொ 5:15 தங்களுக்காக வா.
வாழ்த்து, 2யோ 10 அவனுக்கு வா. சொல்லாதீர்கள்
வாழ்நாட்களை, சங் 90:12 வா. நன்றாகப் பயன்படுத்த
வாழ்வு, உபா 30:19 உங்கள் முன் வா.வையும் சாவையும்
யோவா 11:25 நானே உயிர்த்தெழுதலும் வா.மாக
வாழ்வோ, ரோ 8:38 சாவோ, வா., தேவதூதர்களோ
வாளாக, எபே 6:17 வார்த்தையை வா.
வாளை, மத் 26:52 உன் வா. உறையில்
எபி 4:12 எந்த வா.யும்விட கூர்மையானது
வாள்களை, ஏசா 2:4 வா. மண்வெட்டிகளாக
வானம், சங் 8:3 வா.த்தைப் பார்க்கும்போது
சங் 19:1 வா. கடவுளுடைய மகிமையை
கொலோ 1:23 வா.த்தின் கீழ் இருக்கிற எல்லா
2பே 3:13 புதிய வா.மும் புதிய பூமியும்
வானவில், ஆதி 9:13 வா. அடையாளம்
விசுவாச, கலா 6:10 வி. குடும்பத்தாருக்கு நன்மை
விசுவாசதுரோகம், 2தெ 2:3 வி. முதலில் ஏற்பட்டு
விசுவாசமாக, ஓசி 6:6 எனக்கு வி. இருக்க வேண்டும்
விசுவாசம், லூ 17:6 கடுகளவு வி.
லூ 18:8 இப்படிப்பட்ட வி.த்தைப் பார்ப்பாரா?
யோவா 3:16 மகன்மேல் வி. வைக்கிற
ரோ 1:17 வி.த்தால் நீதிமான் வாழ்வு
ரோ 4:20 வி.த்தில் பலமுள்ளவராகி
ரோ 14:13 சகோதரனுடைய வி. பலவீனமாவதற்கோ
2கொ 4:13 வி. வைத்தேன், அதனால்
2கொ 5:7 வி.த்தின்படி நடக்கிறோம்
எபே 4:5 ஒரே எஜமானும் ஒரே வி.மும்
2தெ 3:2 எல்லாரிடமும் வி. இல்லை
2தீ 1:5 வெளிவேஷமில்லாத உன் வி.
எபி 11:1 வி. என்பது
எபி 11:6 வி.மில்லாமல் யாரும்
யாக் 2:26 செயல்கள் இல்லாத வி.
1பே 1:7 சோதிக்கப்பட்ட உங்கள் வி.
விசுவாசிகளாக, 2கொ 6:14 வி. இல்லாதவர்களோடு பிணைக்க
விசுவாசியாக, 1கொ 7:12 வி. இல்லாத மனைவி, சேர்ந்து வாழ
விசேஷ, எரே 1:5 பிறப்பதற்கு முன்பே, வி. வேலைக்காக
விடுதலை, எஸ்தர் 4:14 வி. வேறொரு வழியில்
லூ 21:28 வி. நெருங்கிவருகிறது
யோவா 8:32 சத்தியம் உங்களை வி.யாக்கும்

ரோ 6:7 இறந்தவன் பாவத்திலிருந்து **வி.**
ரோ 8:21 மகிமையான **வி.**யைப் பெறும்
2தெ 1:7 உபத்திரவப்படுகிறவர்களுக்கு **வி.**
விடுதலை வருஷம், லேவி 25:10 உங்களுக்கு **வி.**
விதத்திலேயே, அப் 1:11 அந்த **வி.** வருவார்
விதவை, சங் 146:9 **வி.**களுக்கு ஆதரவாக இருக்கிறார்
மாற் 12:43 ஏழை **வி.**தான் அதிகமாகப் போட்டாள்
லூ 18:3 **வி.** ஓயாமல் அவரிடம் போய்
யாக் 1:27 அநாதைகளையும் **வி.**களையும்
விதி, ஏசா 65:11 **வி.** தெய்வத்துக்காக
விதிமுறை, கலா 6:16 இந்த **வி.**ப்படி சீராக
2தீ 2:5 போட்டிகளில் **வி.**களை
விதை, பிர 11:6 காலையில் விதை **வி.**
லூ 8:11 **வி.** கடவுளுடைய செய்தி
விதைக்கிறவர்கள், சங் 126:5 கண்ணீரோடு **வி.**
விதைக்கிறானோ, கலா 6:7 ஒருவன் எதை **வி.**
வித்தியாசம், லேவி 11:47 சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும் **வி.**
மல் 3:18 நீதிமானுக்கும் கெட்டவனுக்கும் **வி.**
விபச்சாரி, நீதி 7:10 **வி.**போல் உடுத்தியிருந்தாள்
லூ 15:30 **வி.**களோடு உல்லாசமாயிருந்து
1கொ 6:16 **வி.**யோடு சேர்ந்திருக்கிறவன்
வெளி 17:1 திரளான தண்ணீர்மேல் **வி.**
வெளி 17:16 **வி.**மீது வெறுப்படைந்து
வியாதிகளை, ஏசா 53:4 நம் **வி.** சுமந்தார்
வியாதியாக, யாக் 5:14 எவனாவது **வி.**
வியாபாரி, மத் 13:45 முத்துக்களைத் தேடுகிற **வி.**
வெளி 18:3 **வி.**கள் பணக்காரர்களானார்கள்
விரதம், ஏசா 58:6 எப்படி **வி.** இருக்க வேண்டும்
லூ 18:12 வாரத்தில் இரண்டு தடவை **வி.**
விருத்தசேதனம், ரோ 2:29 **வி.** இதயத்தில்
1கொ 7:19 **வி.** முக்கியமல்ல
விருந்தாளி, சங் 15:1 யெகோவாவின் கூடாரத்தில் **வி.**
விருந்தை, ஏசா 25:6 மலையில் **வி.** ஏற்பாடு செய்வார்
விருப்பம், சங் 40:8 உங்கள் **வி.**த்தை நிறைவேற்றுவதே
சங் 143:10 **வி.**ப்படி நடக்க கற்றுக்கொடுங்கள்
மத் 6:10 உங்களுடைய **வி.** பூமியிலும்
மத் 7:21 தகப்பனுடைய **வி.**த்தின்படி
லூ 22:42 என் **வி.**த்தின்படி அல்ல
யோவா 6:38 அனுப்பியவருடைய **வி.**த்தின்படி
ரோ 7:18 நல்லது செய்வதற்கான **வி.**
ரோ 12:2 பிரியமானதும் பரிபூரணமானதுமான **வி.**
1தெ 4:3 பரிசுத்தமாக இருப்பது, கடவுளுடைய **வி.**
1யோ 2:17 கடவுளுடைய **வி.**த்தை செய்கிறவனோ
1யோ 5:14 கடவுளுடைய **வி.**த்துக்கு ஏற்றபடி கேட்டால்
விரும்புகிறேனோ, ரோ 7:15 எதைச் செய்ய **வி.** அதை
விலகி ஓடுங்கள், 1கொ 6:18 பாலியல் முறைகேட்டிலிருந்து **வி.**
விலங்குகளுக்கும், பிர 3:19 மனுஷருக்கும் **வி.** ஒரே முடிவு
விலங்குகளை, நீதி 12:10 நீதிமான் வீட்டு **வி.** கவனிப்பான்
விலா எலும்பை, ஆதி 2:22 **வி.** வைத்து பெண்ணை
விலைகொடுத்து, வெளி 5:9 இரத்தத்தால் **வி.** வாங்கினீர்கள்
விலைக்கு, 1கொ 7:23 நீங்கள் **வி.** வாங்கப்பட்டீர்கள்
விலைமதிப்புள்ள, 1பே 1:19 கிறிஸ்துவின் **வி.** இரத்தத்தால்
விவரம் தெரியாதவன், நீதி 14:15 **வி.** எதையும் நம்பி
விவாகரத்து, மத் 19:9 வேறெந்தக் காரணத்துக்காகவும் **வி.**
மாற் 10:11 மனைவியை **வி.** செய்துவிட்டு
விவாகரத்தை, மல் 2:16 **வி.** வெறுக்கிறேன்
விவாதங்களில், 1தீ 6:4 **வி.** மூழ்கிப்போய்
விவேகமும், மத் 24:45 உண்மையும் **வி.** உள்ள அடிமை
விவேகம், சங் 119:99 என் போதகர்களைவிட **வி.**மாக
நீதி 19:11 **வி.** கோபத்தைத் தணிக்கும்
தானி 12:3 **வி.**முள்ளவர்கள் பிரகாசிப்பார்கள்
விழித்திருந்து, மத் 26:41 **வி.**, ஜெபம்
லூ 21:36 **வி.** எப்போதும் மன்றாடுங்கள்
விழிப்புடன், 1கொ 16:13 **வி.** இருங்கள், விசுவாசத்தில் உறுதியாக
வெளி 16:15 **வி.** இருக்கிறவன் சந்தோஷமானவன்
விழிப்போடு, 1பே 4:7 ஜெபம் செய்ய **வி.**
விழுந்தாலும், நீதி 24:16 நீதிமான் ஏழு தடவை **வி.**
விழுந்தால், பிர 4:10 ஒருவன் **வி.** இன்னொருவன்
விழுந்துவிடாதபடி, 1கொ 10:12 நிற்பதாக நினைக்கிறவன் **வி.**
விளக்கி, நெ 8:8 திருச்சட்ட புத்தகத்தை **வி.**
அப் 17:3 மேற்கோள்கள் காட்டி **வி.**னார்
விளக்கு, சங் 119:105 உங்கள் வார்த்தை கால்களுக்கு **வி.**
மத் 6:22 கண்தான் உடலுக்கு **வி.**
மத் 25:1 **வி.**களோடு கன்னிப்பெண்கள்
விளைச்சலை, ஏசா 65:22 ஒருவருடைய **வி.** இன்னொருவர்
விளையாட்டு, நீதி 10:23 முட்டாளுக்கு **வி.**
நீதி 26:19 **வி.**க்காகச் செய்தேன்!
விறகு, நீதி 26:20 **வி.** இல்லையென்றால் நெருப்பு
வீடு, ஏசா 56:7 என் வீடு ஜெப **வீ.**
ஏசா 65:21 **வீ.**களைக் கட்டி அதில்
அப் 5:42 தினமும் **வீ.** வீடாகக் கற்பித்து
அப் 20:20 பொது இடங்களிலும் **வீ.** வீடாகவும்
2கொ 5:1 பரலோகத்தில் நிலையான **வீ.**
எபி 3:4 ஒவ்வொரு **வீ.**ம் ஒருவரால்
வீட்டாராக, எபே 2:19 கடவுளுடைய **வீ.**
வீட்டில், லூ 2:49 நான் என் தகப்பன் **வீ.**
யோவா 14:2 என் தகப்பனின் **வீ.** நிறைய
வீட்டுக்குள்ளே, சங் 101:2 **வீ.** உத்தம இதயத்தோடு
வீட்டை, சங் 127:1 யெகோவா **வீ.** கட்டவில்லையென்றால்
யோவா 2:16 என் தகப்பன் **வீ.** சந்தைக்கடை
வீணான, சங் 101:3 **வீ.** எதையும் என் கண் முன்னால்
எபே 4:17 மக்கள் **வீ.** எண்ணங்களின்படி
வீண், பிர 1:2 வீணிலும் **வீ.**!
ஏசா 65:23 கடின உழைப்பு **வீ.**போகாது
மத் 15:9 என்னை வணங்குவது **வீ.**
1கொ 15:58 உழைப்பது **வீ.**போகாதென்று
1தீ 1:4 **வீ.** கேள்விகளைத்தான்
வெட்கக்கேடான, எபே 5:4 **வெ.** நடத்தை
வெட்கங்கெட்ட நடத்தை, கலா 5:19 பாலியல் முறைகேடு, **வெ.**
2பே 2:7 **வெ.**யைப் பார்த்து, லோத்து
வெட்கப்படாத, 2தீ 2:15 **வெ.** வேலையாளாக
வெட்கப்படாதீர்கள், 1பே 4:16 கிறிஸ்தவராகக் கஷ்டப்பட்டால், **வெ.**
வெட்கப்படாதே, 2தீ 1:8 சாட்சி கொடுப்பதை நினைத்து **வெ.**
வெட்கப்படுத்துவதற்காக, 1கொ 4:14 **வெ.** எழுதவில்லை
வெட்கப்படுவதில்லை, ரோ 1:16 நல்ல செய்தியைச் சொல்ல **வெ.**
வெட்கப்பட்டால், மாற் 8:38 என்னைக் குறித்து **வெ.**
வெட்டப்படுகிற, சங் 44:22 **வெ.** ஆடுகள் போல
வெட்டுக்காயம், வெளி 13:3 தலைகள் ஒன்றில் **வெ.**
வெட்டுக்கிளிகள், ஏசா 40:22 மனுஷர்கள் **வெ.**போல்
யோவே 1:4 முதல் வகையான **வெ.**
வெண்மையாக்கி, வெளி 7:14 இரத்தத்தில் துவைத்து **வெ.**
வெதுவெதுப்பாக, வெளி 3:16 நீ **வெ.** இருப்பதால்
வெல்லுங்கள், ரோ 12:21 தீமையை நன்மையால் **வெ.**
வெவ்வேறு மொழி, அப் 2:4 **வெ.**களில் பேச
1கொ 13:8 **வெ.** பேசுகிற வரமானாலும்
1கொ 14:22 **வெ.**கள் பேசுவது அடையாளமாக
வெளிச்சம், சங் 119:105 என் பாதைக்கு **வெ.**மாகவும்
நீதி 4:18 நீதிமான்களின் பாதை விடியற்கால **வெ.**
2கொ 4:6 இருளிலிருந்து **வெ.** பிரகாசிக்கட்டும்
வெளித்தோற்றம், மத் 22:16 மனுஷர்களுடைய **வெ.**த்துக்கு
யோவா 7:24 **வெ.**த்தை பார்த்துத் தீர்ப்பு கொடுக்காதீர்கள்
2கொ 10:7 **வெ.**த்தை வைத்து எடை
வெளிப்படுத்தி, மத் 11:25 சிறுபிள்ளைகளுக்கு **வெ.**
1கொ 2:10 சக்தியின் மூலம் **வெ.**யிருக்கிறார்
வெளிப்படுவதற்காக, ரோ 8:19 மகன்கள் **வெ.**
வெளியே, 1கொ 5:12 **வெ.** இருக்கிறவர்களைக் கடவுளே
கொலோ 4:5 **வெ.** இருப்பவர்களிடம் ஞானமாக

வெளியே வாருங்கள், ஏசா 52:11 வெ., அசுத்தமான எதையும்
வெளி 18:4 அவளைவிட்டு வெ.
வெள்ளம், ஆதி 9:11 இனி வெ.த்தால் அழிக்க
2பே 2:5 உலகத்தின் மீது பெரிய வெ.த்தை
வெளி 12:16 பூமி வெ.த்தை குடித்தது
வெள்ளாடுகளையும், மத் 25:32 செம்மறியாடுகளையும் வெ.
வெள்ளி, நீதி 2:4 வெ.யைத் தேடுவதுபோல்
எசே 7:19 வெ.யை வீதிகளில் வீசி
செப் 1:18 வெ.யோ தங்கமோ காப்பாற்றாது
வெள்ளிக் காசுகளில், லூ 15:8 பத்து வெ. ஒன்று தொலைந்தால்
வெள்ளைப்பூண்டு, எண் 11:5 வெங்காயம், வெ.
வெறியோடு, அப் 26:11 அவர்கள்மேல் பயங்கர வெ.
வெறுக்காதீர்கள், லேவி 19:17 சகோதரனை வெ.
வெறுக்கிறது, யோவா 7:7 உலகம் என்னை வெ.
வெறுக்கிறவர்களுக்கு, லூ 6:27 வெ. நல்லது செய்
வெறுக்கிறவன், 1யோ 3:15 சகோதரனை வெ.
வெறுக்கிறார், நீதி 6:16 யெகோவா ஆறு காரியங்களை வெ.
வெறுங்கையோடு, உபா 16:16 யாருமே வெ. வரக் கூடாது
வெறுத்தார்கள், யோவா 15:25 காரணமில்லாமல் என்னை வெ.
வெறுத்தீர்கள், சங் 45:7 அக்கிரமத்தை வெ.
வெறுத்து, சங் 97:10 கெட்ட காரியங்களை வெ.விடுங்கள்
ஏசா 53:3 ஜனங்களால் வெ. ஒதுக்கப்பட்டார்
ஆமோ 5:15 கெட்டதை வெ.விடுங்கள்
ரோ 12:9 பொல்லாததை வெ., நல்லதை
வெறுப்பதே, நீதி 8:13 கெட்டதை வெ.
வெறுப்பார்கள், மத் 24:9 எல்லா மக்களும் உங்களை வெ.
வெறுப்பை, நீதி 3:11 அவர் கண்டிக்கும்போது வெ.
வெறுமையானவை, ஏசா 41:29 சிலைகள் வெ.
வெற்றி, யோசு 1:8 வாழ்க்கையில் உனக்கு வெ.
1ரா 2:3 எதைச் செய்தாலும் வெ.
2நா 20:20 தீர்க்கதரிசிகளை நம்புங்கள், வெ. நிச்சயம்
சங் 1:3 அவன் செய்வதெல்லாம் வெ.
ரோ 8:37 நாம் முழு வெ.
வேகமாக, ஏசா 60:22 நானே இது வே. நடக்கும்படி
வேடனுடைய, சங் 91:3 வே. கண்ணியிலிருந்தும்
வேடிக்கையாக, ஆதி 19:14 லோத்து வே. சொல்கிறார்
வேட்டையாடி, லேவி 17:13 வே. பிடித்தால், இரத்தத்தைக் கீழே
வேண்டுதல்கள், சங் 20:5 வே. எல்லாவற்றையும் யெகோவா
வேண்டுமென்றே, எபி 10:26 வே. பாவங்கள்
வேதவசனங்கள், மத் 22:29 வே.ளும் தெரியவில்லை
லூ 24:32 வே.ளை விளக்கியபோது,
அப் 17:2 வே.ளிலிருந்து நியாயங்காட்டி
அப் 17:11 வே.ளை ஆராய்ந்து
ரோ 15:4 வே. ஆறுதல்படுத்துகின்றன
2தீ 3:16 வே. எல்லாம்
வேதனை, 1சா 1:15 ரொம்ப வே.யில் இருக்கிறேன்
யோபு 6:2 என் வே.யை எடை போடுங்கள்
நீதி 14:10 வே. இதயத்துக்குத்தான் தெரியும்
ஏசா 38:14 யெகோவாவே, தாங்க முடியாத வே.யில்
ரோ 8:22 எல்லா படைப்புகளும் வே.ப்பட்டு
ரோ 9:2 இதயத்தில் தீராத வே.
1கொ 12:26 ஓர் உறுப்பு வே.ப்பட்டால்
வேரூன்றிய, 2கொ 10:4 ஆழமாக வே.வற்றை
கொலோ 2:7 வே.வர்களாகவும்
வேர், லூ 8:13 அவர்களுக்குள் வே. இல்லை
வேலை, நெ 4:6 ஜனங்கள் முழு மூச்சோடு வே.
யோவா 5:17 தகப்பன் இதுவரை வே.
எபே 4:16 ஒவ்வொரு உறுப்பும் அதன் வே.யை
1தெ 2:9 இரவும் பகலும் வே. செய்து
2தெ 3:10 வே. செய்ய இஷ்டம் இல்லை என்றால்
வேலையாள், லூ 10:7 வே. கூலியைப் பெற
வேளைகளை, தானி 2:21 காலங்கள், வே. மாற்றுபவர்
அப் 1:7 வே. தெரிந்துகொள்ள அவசியமில்லை
1தெ 5:1 இவை நடக்கப்போகிற வே.
வேறு தேசத்து ஜனங்கள், எண் 9:14 உங்களுக்கும் வே.க்கும் ஒரே சட்டம்
வேறே ஆடுகளும், யோவா 10:16 வே. எனக்கு
வைக்கோல், ஏசா 65:25 சிங்கம் வை.லைத் தின்னும்
1கொ 3:12 அஸ்திவாரத்தின் மீது வை.
வைராக்கியமுள்ள, தீத் 2:14 நல்ல செயல்கள் செய்வதில் வை.
வைராக்கியம், ஏசா 37:32 யெகோவாவுடைய வை.

ஜ

ஜனமாக, யாத் 19:6 பரிசுத்த ஜ. இருப்பீர்கள்
ஜனம், மத் 21:43 அதற்கேற்ற கனி தருகிற ஜ.த்திடம்
மத் 24:7 ஜ.த்துக்கு எதிராக ஜ.மும்
1பே 2:9 பரிசுத்த ஜ.
ஜன்னல், அப் 20:9 ஐத்திகு ஜ. ஓரத்தில்
ஜாக்கிரதையாக, நீதி 14:16 ஞானமுள்ளவன் ஜா.
மத் 10:16 பாம்புகளைப் போல் ஜா.
ஜெபங்களை, 1பே 3:7 ஜெ. கடவுள் கேட்க மாட்டார்
ஜெபங்களோடு, வெளி 8:4 பரிசுத்தவான்களுடைய ஜெ.
ஜெபம், 2ரா 19:15 [எசேக்கியா] ஜெ. செய்தார்
சங் 65:2 ஜெ.த்தைக் கேட்கிறவரே
சங் 141:2 என் ஜெ. தூபப்பொருள்போல்
நீதி 15:8 நேர்மையானவன் செய்கிற ஜெ.
நீதி 28:9 ஜெ. அருவருப்பானதாக
மத் 5:44 துன்புறுத்துகிறவர்களுக்காக ஜெ.
மத் 6:9 இப்படி ஜெ. செய்யுங்கள்
மாற் 1:35 விடியற்காலையில், ஜெ. செய்ய
லூ 5:16 ஜெ. செய்ய தனிமையான
அப் 12:5 பேதுரு சிறையில், சபையார் ஜெ.
ரோ 12:12 விடாமல் ஜெ. செய்யுங்கள்
1தெ 5:17 எப்போதும் ஜெ. செய்யுங்கள்
2தெ 3:1 சகோதரர்களே, ஜெ. செய்யுங்கள்
யாக் 5:15 விசுவாசத்தோடு செய்யப்படுகிற ஜெ.
ஜெபிப்பதென்று, ரோ 8:26 என்ன ஜெ. தெரியாதபோது
ஜெயிக்க, எரே 1:19 அவர்கள் ஜெ. மாட்டார்கள்
ஜெயிக்கிறவன், வெளி 2:7 ஜெ. எவனோ அவனுக்கு
ஜெயித்து, யோவா 16:33 உலகத்தை ஜெ.விட்டேன்
வெளி 6:2 ஜெயிக்கிறவராக, ஜெ. முடிப்பதற்காக
ஜோதிடர்கள், மத் 2:1 ஜோ. எருசலேமுக்கு வந்து

ஷ

ஷியோல். காண்க: கல்லறை.
ஷைலோ, ஆதி 49:10 ஷை. வரும்வரை

0–9

10, ஆதி 18:32 **10** நீதிமான்கள் இருந்தால்கூட
12, மாற் 3:14 **12** அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து
24, வெளி 4:4 **24** சிம்மாசனங்கள், **24** மூப்பர்கள்
70, சங் 90:10 எங்கள் ஆயுள் **70** வருஷம்
தானி 9:2 எருசலேம் **70** வருஷம் பாழாய்
தானி 9:24 உன் ஜனங்களுக்காக **70** வாரங்களை
லூ 10:1 இயேசு **70** பேரை அனுப்பினார்
77, மத் 18:22 ஏழு தடவை அல்ல, **77** தடவை
100, மத் 13:8 **100** மடங்காக, பலன் தந்தன
மத் 18:12 **100** ஆடுகளில் ஒன்று வழிதவறினால்
மாற் 10:30 **100** மடங்கு அதிகமாக
300, நியா 7:7 **300** பேரை வைத்து காப்பாற்றுவேன்
500, 1கொ 15:6 **500**-க்கும் அதிகமானோருக்குத் தோன்றினார்
666, வெளி 13:18 அந்த எண் **666**
1,000, வெளி 20:2 சாத்தானை **1,000** வருஷம் கட்டிப்போட்டார்
வெளி 20:4 கிறிஸ்துவுடன் 1,000 வருஷம் ஆட்சி
4,000, மாற் 8:20 ஏழு ரொட்டிகள், **4,000** ஆண்கள்
5,000, மத் 14:21 **5,000** ஆண்கள் சாப்பிட்டார்கள்
1,44,000, வெளி 7:4 முத்திரை போடப்பட்டவர்கள், **1,44,000**
வெளி 14:3 பூமியிலிருந்து **1,44,000** பேர்
1,85,000, 2ரா 19:35 **1,85,000** வீரர்களைக் கொன்றார்

பைபிள் வார்த்தைகளின் சொல் பட்டியல்

அ

அகாயா. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின்படி, கிரேக்கு தேசத்தின் தென் பகுதியில் இருந்த ரோம மாகாணம். இதன் தலைநகரம் கொரிந்து. பிலபனிஸ் தீபகற்பம் முழுவதும் கிரேக்கு தேசத்தின் மத்திய பகுதி முழுவதும் இதில் அடங்கும். (அப் 18:12)—இணைப்பு B13-ஐப் பாருங்கள்.

அசைவாட்டும் காணிக்கை. காணிக்கை வைத்திருப்பவரின் கைகளுக்குக் கீழே குரு தன்னுடைய கைகளை வைத்து, அவருடைய கைகளை முன்னும் பின்னும் ஆட்டுவார். அல்லது குருவே தன்னுடைய கைகளில் அந்தக் காணிக்கையை வைத்து முன்னும் பின்னும் ஆட்டுவார். இப்படிச் செய்வது, யெகோவாவிடம் அந்தக் காணிக்கையைக் **கொடுப்பதற்கு** அடையாளமாக இருந்தது.—லேவி 7:30.

அடமானம். உத்தரவாதம் என்றும் இது அழைக்கப்பட்டது. ஏழைகளையும் ஆதரவற்றவர்களையும் பாதுகாப்பதற்காக, அடமானம் சம்பந்தமான விதிமுறைகள் திருச்சட்டத்தில் இருந்தன.—யாத் 22:26; எசே 18:7.

அடைக்கல நகரங்கள். தெரியாத்தனமாகக் கொலை செய்தவன் தன்னைப் பழிவாங்க வருகிறவனிடமிருந்து தப்பித்து, அடைக்கலம் புகுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லேவி கோத்திரத்து நகரங்கள். யெகோவா சொன்னபடி மோசேயும் பின்பு யோசுவாவும் இவற்றைத் தேர்ந்தெடுத்தார்கள். வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தில் ஆங்காங்கே மொத்தம் ஆறு நகரங்களை அடைக்கல நகரங்களாக ஒதுக்கினார்கள். தெரியாத்தனமாகக் கொலை செய்தவன் ஓர் அடைக்கல நகரத்துக்கு வந்தவுடன், நகரவாசலிலுள்ள பெரியோர்களிடம் நடந்த விஷயத்தைச் சொல்வான், அவர்களும் அவனை அங்கே தங்குவதற்கு அனுமதிப்பார்கள். வேண்டுமென்றே கொலை செய்தவன், இந்தச் சலுகையைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு ஓர் ஏற்பாடு இருந்தது. அதாவது, அடைக்கலம் தேடி வருகிறவன், கொலை நடந்த நகரத்துக்குக் கொண்டுபோய் விசாரிக்கப்படுவான். நிரபராதி என்பது நிரூபிக்கப்பட்டால் அவன் மறுபடியும் அடைக்கல நகரத்துக்குத் திரும்பி வந்து, தன் வாழ்நாள் முடியும்வரை அல்லது தலைமைக் குரு சாகும்வரை அங்கேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது, அந்த நகரத்தைவிட்டு வெளியே போக அவனுக்கு அனுமதி இல்லை.—எண் 35:6, 11-15, 22-29; யோசு 20:2-8.

அடையாளம். நிகழ்காலத்தில் நடக்கிற அல்லது எதிர்காலத்தில் நடக்கப்போகிற ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்டுகிற ஒரு பொருள், செயல், சூழ்நிலை அல்லது அசாதாரணக் காட்சி.—ஆதி 9:12, 13; 2ரா 20:9; மத் 24:3; வெளி 1:1.

அண்ணகர். ஆண்மை நீக்கம் செய்யப்பட்டவர் என்பதுதான் இதன் நேரடி அர்த்தம். பெரும்பாலும், அரண்மனைகளில் ராணிக்கும் மறுமனைவிகளுக்கும் பாதுகாவலர்களாகவோ பணியாளர்களாகவோ இப்படிப்பட்ட ஆண்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆண்மை நீக்கம் செய்யப்படாத அரசவை அதிகாரிகளைக் குறிப்பதற்கும் இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடவுளுடைய சேவையை முழுமூச்சோடு செய்வதற்காகச் சுயக்கட்டுப்பாட்டோடு இருப்பவரை, பரலோக 'அரசாங்கத்துக்காக அண்ணகராய்' இருப்பவர் என்று பைபிள் சொல்கிறது.—மத் 19:12, எஸ்தர் 2:3, அப் 8:27 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்.

அதலபாதாளம். இதற்கான கிரேக்க வார்த்தை *அபிஸோஸ்.* "படு ஆழமான," "ஆழம் காண முடியாத" அல்லது "அளவிட முடியாத" என்பதுதான் இதன் அர்த்தம். அடைத்து வைக்க பயன்படுத்தப்படுகிற ஓர் இடத்தை அல்லது அடைத்து வைக்கப்பட்ட ஒரு நிலையைக் குறிப்பிட கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கல்லறையையும் குறிக்கும். இதைத் தவிர வேறு சிலவற்றையும் குறிக்கும்.—லூ 8:31; ரோ 10:7; வெளி 20:3.

அதிபதி. இதற்கான கிரேக்க வார்த்தைக்கு, "முதன்மையான தலைவர்" என்று அர்த்தம். பாவத்தின் படுபயங்கர பாதிப்புகளிலிருந்து உண்மையுள்ள மக்களை விடுவித்து, அவர்களை முடிவில்லாத வாழ்வுக்கு வழிநடத்த இயேசு கிறிஸ்துவுக்கு இருக்கிற முக்கியப் பொறுப்பை இந்த வார்த்தை குறிக்கிறது.—அப் 3:15; 5:31; எபி 2:10; 12:2.

அந்திக்கிறிஸ்து. இதற்கான கிரேக்க வார்த்தை கிறிஸ்துவுக்கு **எதிராகச் செயல்படுகிற** ஒன்றைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் **ஸ்தானத்தை எடுத்துக்கொள்கிற** ஒரு போலிக் கிறிஸ்துவையும் இது குறிக்கலாம். கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகக் காட்டிக்கொள்கிற, மேசியா என்று சொல்லிக்கொள்கிற, கிறிஸ்துவையும் அவருடைய சீஷர்களையும் எதிர்க்கிற எல்லா மக்களையும் அமைப்புகளையும் தொகுதிகளையும் அந்திக்கிறிஸ்துக்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கிறது.—1யோ 2:22.

அப்போஸ்தலர். "அனுப்பப்பட்டவர்" என்பது இதன் அர்த்தம். மற்றவர்களுக்குச் சேவை செய்ய அனுப்பப்பட்ட இயேசுவையும் வேறு சிலரையும் குறிப்பதற்காக இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசுவின் பிரதிநிதிகளாக இருப்பதற்கு அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 சீஷர்களைக் குறிப்பதற்காகப் பெரும்பாலும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—மாற் 3:14; அப் 14:14.

அபிஷேகம். இதற்கான எபிரெய வார்த்தைக்கு, "திரவத்தை வைத்து பூசு" என்று அர்த்தம். ஒரு விசேஷ வேலைக்காக அர்ப்பணிக்கப்படுவதைக் காட்ட ஓர் ஆளின் மீதோ ஒரு பொருளின் மீதோ எண்ணெய் ஊற்றப்பட்டது. பரலோகத்துக்குப் போகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்கள்மீது கடவுளுடைய சக்தி பொழியப்படுவதைக் குறிப்பதற்கும் கிரேக்க வேதாகமத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—யாத் 28:41; 1சா 16:13; 2கொ 1:21, அடிக்குறிப்பு.

அர்ப்பணிப்பின் பரிசுத்த அடையாளம். தலைமைக் குருவுடைய தலைப்பாகையின் முன்பகுதியில் கட்டப்பட்ட பளபளப்பான தகடு. இது சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது. இதில், "யெகோவா பரிசுத்தமே உருவானவர்" என்று எபிரெயுவில் பொறிக்கப்பட்டிருந்தது. (யாத் 39:30)—இணைப்பு B5-ஐப் பாருங்கள்.

அர்மகெதோன். *ஹர் மெகிதோன்* என்ற எபிரெய வார்த்தையிலிருந்து இந்தப் பெயர் வந்தது. "மெகிதோ மலை" என்பதுதான் இதன் அர்த்தம். 'சர்வவல்லமையுள்ள கடவுளின் மகா நாளில் நடக்கப்போகும் போரோடு' இந்த வார்த்தை சம்பந்தப்பட்டிருக்கிறது. "பூமியெங்கும் உள்ள ராஜாக்கள்" யெகோவாவை எதிர்த்துப் போர் செய்வதற்காக அப்போது கூடிவருவார்கள். (வெளி 16:14, 16; 19:11-21)—மிகுந்த உபத்திரவம் என்ற தலைப்பைப் பாருங்கள்.

அரமேயிக். இந்த மொழி எபிரெய மொழியோடு நெருங்கிய தொடர்புடையது, இதை எழுதுவதற்கு எபிரெய எழுத்

துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது ஆரம்பத்தில் அரமேயர்களால் பேசப்பட்டு வந்தது. காலப்போக்கில் அசீரியா மற்றும் பாபிலோன் சாம்ராஜ்யங்களில் வர்த்தகத்துக்கும் தகவல்தொடர்புக்கும் பயன்படுத்தப்பட்ட சர்வதேச மொழியாக ஆனது. பெர்சிய சாம்ராஜ்யத்தின் அதிகாரப்பூர்வ மொழியாகவும் இது இருந்தது. (எஸ்றா 4:7) எஸ்றா, எரேமியா மற்றும் தானியேல் புத்தகங்களில் சில பகுதிகள் அரமேயிக் மொழியில் எழுதப்பட்டன.—எஸ்றா 4:8–6:18; 7:12-26; எரே 10:11; தானி 2:4ஆ–7:28.

அராம்; அரமேயர்கள். இவர்கள் சேமின் மகனாகிய அராமின் வம்சத்தில் வந்தவர்கள். லீபனோன் மலைகளிலிருந்து மெசொப்பொத்தாமியா வரையுள்ள பகுதிகளிலும், வடக்கே டாரஸ் மலைகளிலிருந்து தெற்கே தமஸ்கு வரையிலும் அதற்கு அப்பால் இருக்கிற பகுதிகளிலும் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். எபிரெய மொழியில் அராம் என்று அழைக்கப்பட்ட இந்தப் பகுதி பிற்பாடு சீரியா என்று அழைக்கப்பட்டது. அதில் குடியிருந்தவர்கள் சீரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.—ஆதி 25:20; உபா 26:5; ஓசி 12:12.

அரியோபாகு. அத்தேனே நகரத்தில், அக்ரோபாலிசின் வடமேற்குப் பகுதியிலுள்ள உயரமான குன்று அரியோபாகு என்று அழைக்கப்பட்டது. இங்கே கூட்டங்கள் நடத்திய ஒரு சங்கமும் (நீதிமன்றமும்) அரியோபாகு என்று அழைக்கப்பட்டது. பவுலின் மத நம்பிக்கைகளைப் பற்றிக் கேட்பதற்காக தத்துவ ஞானிகளான ஸ்தோயிக்கர்களும் எப்பிக்கூரர்களும் அவரை இங்கே கூட்டிக்கொண்டு வந்தார்கள். —அப் 17:19.

அல்மோத். இசை சம்பந்தப்பட்ட வார்த்தை. இதற்கு "கன்னிப் பெண்கள், இளம் பெண்கள்" என்று அர்த்தம். இளம் பெண்களின் உச்சக்குரலை இது குறிக்கலாம். இசையை அல்லது பக்கவாத்தியத்தை உயர் சுருதியில் வாசிக்க வேண்டும் என்பதைக் குறிக்க இது பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது. —1நா 15:20; சங் 46-ன் மேல்குறிப்பு.

அளவற்ற கருணை. மனதுக்குப் பிரியமான, இனிமையான ஒன்று என்பதுதான் இதற்கான கிரேக்க வார்த்தையின் முக்கிய அர்த்தம். அன்பான பரிசையோ அன்பாகக் கொடுக்கிற விதத்தையோ குறிப்பிடுவதற்கு இந்த வார்த்தை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. கடவுளுடைய அளவற்ற கருணையைப் பற்றிச் சொல்லும்போது இந்த வார்த்தை, எதையும் எதிர்பார்க்காமல் கடவுள் தாராளமாகக் கொடுக்கிற இலவச அன்பளிப்பைக் குறிக்கிறது. அப்படியானால், தாராள குணத்தினாலும் அளவற்ற அன்பினாலும் கருணையினாலும் தூண்டப்பட்டே கடவுள் இதைக் கொடுக்கிறார் என்பது தெரிகிறது. இதற்கான கிரேக்க வார்த்தை 'பிரியம்,' "நன்கொடை" என்றெல்லாம்கூட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அளவற்ற கருணையை யாராலும் சம்பாதிக்க முடியாது, இதைப் பெற்றுக்கொள்ள யாருக்கும் தகுதி கிடையாது. கொடுப்பவரின் தாராள குணத்தால் மட்டும்தான் இது கிடைக்கிறது.—2கொ 6:1; எபே 1:7.

அளவுகோல். பொதுவாக இந்த அளவுகோல் நாணற்தண்டிலிருந்து செய்யப்பட்டது. இதன் நீளம் 6 முழம். சிறிய முழத்தின்படி, 2.67 மீட்டர் (8.75 அடி). பெரிய முழத்தின்படி, 3.11 மீட்டர் (10.2 அடி). (எசே 40:3, 5; வெளி 11:1, அடிக்குறிப்பு.)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

அற்புதங்கள்; வல்லமையான செயல்கள். மனித அறிவுக்கு எட்டாத நிகழ்வுகள் அல்லது செயல்கள்; இவை இயற்கைக்கு அப்பாற்பட்ட ஊற்றுமூலத்திலிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. பைபிளில் உள்ள "அடையாளம்," "அற்புதம்" போன்ற வார்த்தைகள் சில சமயம் ஒரே அர்த்தத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளன.—யாத் 4:21; அப் 4:22; எபி 2:4.

அறுவடைப் பண்டிகை; வாரங்களின் பண்டிகை.—பெந்தெகொஸ்தே என்ற தலைப்பைப் பாருங்கள்.

அஸ்தரோத். போர் மற்றும் கருவளத்திற்கான கானானியப் பெண் தெய்வம். பாகாலின் மனைவி.—1சா 7:3.

ஆ

ஆசியா. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின்படி, இன்றைய துருக்கி நாட்டின் மேற்குப் பகுதியையும், சாமு, பத்மு போன்ற சில கடலோரத் தீவுகளையும் உள்ளடக்கிய ரோம மாகாணம். இதன் தலைநகரம் எபேசு. (அப் 20:16; வெளி 1:4)—இணைப்பு B13-ஐப் பாருங்கள்.

ஆதார். பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு, யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 12-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 6-ஆம் மாதம். இது பிப்ரவரி பாதியில் ஆரம்பித்து மார்ச் பாதியில் முடிவடைந்தது. (எஸ்தர் 3:7)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

ஆப். பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு, யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 5-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 11-ஆம் மாதம். இது ஜூலை பாதியில் ஆரம்பித்து ஆகஸ்ட் பாதியில் முடிவடைந்தது. பைபிளில் இதன் பெயர் குறிப்பிடப்படவில்லை; வெறுமனே "ஐந்தாம் மாதம்" என்று சொல்லப்பட்டுள்ளது. (எண் 33:38; எஸ்றா 7:9)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

ஆபிப். யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி முதலாம் மாதத்துக்கும், அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 7-ஆம் மாதத்துக்கும் ஆரம்பத்தில் இருந்த பெயர். ஆபிப் என்பதற்கு "பச்சைக் கதிர்கள்" என்று அர்த்தம். இது மார்ச் பாதியில் ஆரம்பித்து ஏப்ரல் பாதியில் முடிவடைந்தது. யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பிய பின்பு இது நிசான் என்று அழைக்கப்பட்டது. (உபா 16:1)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

ஆமென். "அப்படியே ஆகட்டும்" அல்லது "நிச்சயமாக நடக்கட்டும்" என்று அர்த்தம். "உண்மையாக, நம்பகமாக இருப்பது" என்ற அர்த்தத்தைத் தருகிற *ஆமன்* என்ற எபிரெய மூல வார்த்தையிலிருந்து இது வந்திருக்கிறது. ஓர் உறுதிமொழியையோ ஒரு ஜெபத்தையோ ஒரு வாக்கியத்தையோ ஆமோதிக்கும்போது, "ஆமென்" என்று சொல்லப்பட்டது. வெளிப்படுத்துதல் புத்தகத்தில் இயேசுவுக்குப் பட்டப்பெயராக இது பயன்படுத்தப்பட்டுள்ளது.—உபா 27:26; 1நா 16:36; வெளி 3:14.

ஆயத்த நாள். ஓய்வுநாளுக்கு முந்தின நாள். இந்த நாளில்தான் ஓய்வுநாளுக்குத் தேவையான ஏற்பாடுகளை யூதர்கள் செய்தார்கள். இப்போது வெள்ளிக்கிழமை என்று அழைக்கப்படுகிற நாளின் சூரிய அஸ்தமனத்தோடு இந்த நாள் முடிவுக்கு வந்தது; பின்பு ஓய்வுநாள் ஆரம்பமானது. யூதர்களுக்கு ஒரு நாள் என்பது, ஒரு சாயங்காலத்தில் ஆரம்பித்து அடுத்த சாயங்காலத்தில் முடிந்தது.—மாற் 15:42; லூ 23:54.

ஆராதனை மேடு. பொதுவாக மலை உச்சியிலோ குன்றின் உச்சியிலோ இருந்த வழிபாட்டு இடம் அல்லது மனிதர்களால் அமைக்கப்பட்ட மேடை. உண்மைக் கடவுளை வழிபடுவதற்காகச் சில சமயங்களில் இது பயன்படுத்தப்பட்டிருந்தாலும், பொய் தெய்வங்களை வழிபடுவதற்காகத்தான் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது.—எண் 33:52; 1ரா 3:2; எரே 19:5.

ஆல்பா; ஒமேகா. கிரேக்க எழுத்துக்களில், முதல் எழுத்து ஆல்பா, கடைசி எழுத்து ஒமேகா. இவை இரண்டும் ஒன்றுசேர்ந்து வெளிப்படுத்துதல் புத்தகத்தில் கடவுளுடைய பட்டப்பெயராக மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆல்பா, ஒமேகா என்ற வார்த்தைகளுக்கும், "முதலும் கடைசியும்," 'ஆரம்பமும் முடிவும்' என்ற

வார்த்தைகளுக்கும் அர்த்தம் ஒன்றுதான்.—வெளி 1:8; 21:6; 22:13.

ஆலய அர்ப்பணப் பண்டிகை. அந்தியோக்கஸ் எப்பிபானஸ் என்பவனால் தீட்டாக்கப்பட்ட ஆலயம் பிற்பாடு சுத்தப்படுத்தப்பட்டது. இதன் நினைவாக ஒவ்வொரு வருஷமும் இந்தப் பண்டிகை கொண்டாடப்பட்டது. கிஸ்லே மாதம் 25-ஆம் தேதி ஆரம்பித்து மொத்தம் 8 நாட்களுக்கு இது கொண்டாடப்பட்டது.—யோவா 10:22.

ஆலயம். இடம்விட்டு இடம் மாற்றப்பட்ட வழிபாட்டுக் கூடாரத்துக்குப் பதிலாக, எருசலேமில் கட்டப்பட்ட நிரந்தரக் கட்டிடம். இஸ்ரவேலர்களுடைய வழிபாட்டின் மைய இடமாக இது இருந்தது. முதல் ஆலயத்தை சாலொமோன் கட்டினார், அது பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டது. பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, இரண்டாவது ஆலயத்தை செருபாபேல் கட்டினார். பின்பு, மகா ஏரோது அதை மறுபடியும் கட்டினான். பைபிள் இதை 'யெகோவாவின் வீடு' என்று பல இடங்களில் குறிப்பிடுகிறது. (யாத் 23:19; 34:26; 1ரா 6:1) ஆலயம் என்ற வார்த்தை, யெகோவா குடியிருக்கிற பரலோகத்தையும் குறிக்கிறது. (யாத் 25:8, 9; 2ரா 10:25; 1நா 28:10; வெளி 11:19)—இணைப்பு B8-ஐயும் B11-ஐயும் பாருங்கள்.

ஆவிகளோடு பேசுகிறவர். இறந்தவர்களோடு பேசுவதாகச் சொல்லிக்கொள்ளும் நபர்.—லேவி 20:27; உபா 18:10-12; 2ரா 21:6.

ஆவியுலகத் தொடர்பு. உயிரோடு இருக்கிறவர்களிடம் செத்தவர்களின் ஆவியால் பேச முடியும் என்ற நம்பிக்கையோடு சம்பந்தப்பட்ட பழக்கம். ஒருவர் சாகும்போது, உடல் அழிந்தாலும் அவருடைய ஆவி அழிவதில்லை என்றும், அது தன் பிடியில் சிக்கிய ஆட்களைப் பயன்படுத்தி மற்ற மனிதர்களோடு பேசுகிறது என்றும் நம்பப்படுகிறது. "ஆவியுலகத் தொடர்புகொள்வது" என்பதற்கான கிரேக்க வார்த்தை, *ஃபார்மக்கியா.* "போதைப்பொருளைப் பயன்படுத்துவது" என்பது இதன் நேரடி அர்த்தம். பழங்காலத்தில், பில்லிசூனியம் செய்வதற்காகப் பேய்களிடம் சக்தியைக் கேட்கும்போது போதைப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டன. அதனால், இந்த வார்த்தை, காலப்போக்கில் ஆவியுலகத் தொடர்போடு சம்பந்தப்படுத்திப் பேசப்பட்டது.—கலா 5:20; வெளி 21:8.

ஆழம். தண்ணீரின் ஆழத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் அளவு. ஓர் ஆழம் என்பது 6 அடிக்குச் சமம். (அப் 27:28)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

இ

இகாயோன். இசை சம்பந்தப்பட்ட குறிப்பு. இதை சங்கீதம் 9:16-ல் பார்க்கலாம். பாட்டின் இடையில் வரும் பயபக்தியூட்டுகிற, குறைந்த சுருதியில் இசைக்கப்படுகிற யாழ் இசை அல்லது தியானிப்பதற்காகப் பாட்டின் இடையில் வரும் நிறுத்தம்.

இசைக் குழுவின் தலைவன். சங்கீதங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள இதற்கான எபிரெய வார்த்தை, குறிப்பிட்ட விதத்தில் பாடல்களை ஒழுங்கமைத்த, அந்தப் பாடல்கள் பாடப்படுவதை மேற்பார்வை செய்த, லேவியப் பாடகர்களுக்குப் பயிற்சி கொடுத்து ஒத்திகை பார்த்த, இசை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கிய நபரைக் குறித்தது. மற்ற மொழிபெயர்ப்புகளில், "இராகத்தலைவன்" அல்லது "பாடகர் தலைவன்" என்று உள்ளது.—சங் 4 மற்றும் 5-ன் மேல்குறிப்பு.

இடுக்கிகள். தங்கத்தால் செய்யப்பட்ட கருவிகள், பார்ப்பதற்குக் குறடு போல இருந்திருக்கலாம். வழிபாட்டுக் கூடாரத்திலும் ஆலயத்திலும் இருந்த விளக்குகளை அணைப்பதற்கு இவை பயன்படுத்தப்பட்டன.—யாத் 37:23.

இல்லிரிக்கம். கிரேக்கு தேசத்தின் வடமேற்கில் இருந்த ரோம மாகாணம். ஊழியத்திற்காக இல்லிரிக்கம்வரை பவுல் பயணம் செய்தார் என்று பைபிள் சொல்கிறது. ஆனால், அவர் இல்லிரிக்கத்தில் ஊழியம் செய்தாரா அல்லது இல்லிரிக்கம் வரைதான் ஊழியம் செய்தாரா என்று சொல்வதில்லை. (ரோ 15:19)—இணைப்பு B13-ஐப் பாருங்கள்.

இறைவாக்கு சொல்பவர். கடவுளுடைய தீர்மானங்களைப் புரிந்துகொள்ளும் திறனை கடவுளிடமிருந்தே பெற்றவர்; மற்ற மனிதர்களுக்குத் தெரியாத விஷயங்களைப் பார்க்கவும், புரிந்துகொள்ளவும் கடவுள் இவர்களுடைய கண்களைத் திறந்திருந்தார். இதற்கான எபிரெய வார்த்தைக்கு "பார்ப்பது" என்று அர்த்தம். இது நேரடியாகப் பார்ப்பதையோ அடையாள அர்த்தத்தில் பார்ப்பதையோ குறிக்கலாம். ஜனங்களுக்குப் பிரச்சினை வந்தபோது, இறைவாக்கு சொல்பவரிடம் போய் ஞானமான அறிவுரைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள்.—1சா 9:9.

இஸ்ரவேல். யாக்கோபுக்குக் கடவுள் கொடுத்த பெயர். பிற்பாடு, ஒரே காலப்பகுதியில் வாழ்ந்த அவருடைய வம்சத்தாரை ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. யாக்கோபுடைய 12 மகன்களின் வம்சத்தார் இஸ்ரவேலின் மகன்கள், இஸ்ரவேல் வம்சத்தார், இஸ்ரவேல் மக்கள் (ஆண்கள்), இஸ்ரவேலர்கள் என்றெல்லாம் பெரும்பாலும் அழைக்கப்பட்டார்கள். தெற்கு ராஜ்யத்திலிருந்து பிரிந்த பத்துக் கோத்திர வடக்கு ராஜ்யமும் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டது. பிற்பாடு, பரலோக நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்கள் "கடவுளுடைய இஸ்ரவேலர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள்.—கலா 6:16; ஆதி 32:28; 2சா 7:23; ரோ 9:6.

உ

உண்மைக் கடவுள். *ஹா-ஏலோஹிம், ஹா-எல்* ஆகிய எபிரெய வார்த்தைகள், "உண்மைக் கடவுள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நிறைய வசனங்களில், மற்ற பொய் தெய்வங்களிலிருந்து ஒரே உண்மையான கடவுளான யெகோவாவை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்காக இந்த எபிரெய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. **"உண்மைக்** கடவுள்" என்ற வார்த்தைகள், இந்த எபிரெய வார்த்தைகளின் முழு அர்த்தத்தையும் தருகின்றன.—ஆதி 5:22, 24; 46:3; உபா 4:39.

உதவி ஊழியர். இதற்கான கிரேக்க வார்த்தை *டையக்கொனொஸ்.* இந்த வார்த்தை பெரும்பாலும், "ஊழியர்" அல்லது 'வேலையாள்' என்று மொழிபெயர்க்கப்படுகிறது. சபையிலுள்ள மூப்பர் குழுவுக்கு உதவியாக இருப்பவர் "உதவி ஊழியர்" என்று அழைக்கப்படுகிறார். பைபிளில் சொல்லப்பட்டுள்ள தகுதிகள் இருந்தால்தான் ஒருவர் உதவி ஊழியராகச் சேவை செய்ய முடியும்.—1தீ 3:8-10, 12.

உயிர்த்தெழுதல். இறந்தவர்கள் உயிரோடு எழுவது. *அனஸ்டாசிஸ்* என்ற கிரேக்க வார்த்தைக்கு "எழுவது, நிற்பது" என்று அர்த்தம். இயேசுவை யெகோவா தேவன் உயிர்த்தெழுப்பியதையும் சேர்த்து மொத்தம் 9 உயிர்த்தெழுதல்களைப் பற்றி பைபிள் சொல்கிறது. எலியா, எலிசா, இயேசு, பேதுரு, பவுல் ஆகியோர் உயிர்த்தெழுப்பி இருந்தாலும், அவர்கள் கடவுளின் சக்தியால்தான் அப்படிச் செய்தார்கள். கடவுளுடைய நோக்கம் நிறைவேறுவதற்கு, "நீதிமான்களும் அநீதிமான்களும்" இந்தப் பூமியில் உயிர்த்தெழுப்பப்படுவது அவசியம். (அப் 24:15) பரலோக உயிர்த்தெழுதலைப் பற்றியும் பைபிள் சொல்கிறது. அதை 'முந்தின உயிர்த்தெழுதல்' அல்லது 'முதலாம் உயிர்த்தெழுதல்' என்று குறிப்பிடுகிறது. கடவுளுடைய சக்தியால் அபிஷேகம் செய்யப்பட்ட இயேசுவின் சகோதரர்கள் பரலோகத்துக்கு உயிர்த்தெழுப்பப்படுகிறார்கள்.—பிலி 3:11; வெளி 20:5, 6; யோவா 5:28, 29; 11:25.

உலை; சூளை. உலோகத் தாதுப்பொருளையோ உலோகத்தையோ உருக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகிற அமைப்பு. மண்பாத்திரங்களைச் சுடுவதற்கும் சுண்ணாம்பை எரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிற அமைப்பு சூளை என்று அழைக்கப்படுகிறது. பைபிள் காலங்களில், உலையும் சூளையும் செங்கல் அல்லது கல்லால் அமைக்கப்பட்டிருந்தன.—ஆதி 15:17; தானி 3:17; வெளி 9:2.

உறுதிமொழி. ஒரு விஷயம் உண்மையென்று ஆணையிட்டுக் கொடுப்பது அல்லது ஒரு விஷயத்தைச் செய்வதாகவோ செய்யாமல் இருப்பதாகவோ சத்தியம் செய்வது. பொதுவாக, இது தன்னைவிட உயர்ந்தவரிடம், முக்கியமாகக் கடவுளிடம் நேர்ந்துகொள்வதைக் குறிக்கிறது. ஆபிரகாமிடம் செய்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்காக யெகோவா உறுதிமொழி கொடுத்தார்.—ஆதி 14:22; எபி 6:16, 17.

உன்னதம்(ம்). இந்த வார்த்தை மிகமிக உயர்ந்த ஸ்தானத்தைக் குறிக்கிறது. (சங் 83:18) இது பொதுவாக "கடவுள்" என்ற வார்த்தையோடும், "பேரரசர்" என்ற வார்த்தையோடும் சேர்ந்து வருகிறது. (உபா. 32:8; தானி. 7:25; சங். 78:56; 69:6; அப். 7:48) யெகோவாதான் மற்ற எல்லாரையும்விட மிகமிக உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறார் என்பதை வலியுறுத்துகிறது. பைபிளில் முதன்முதலாக ஆதியாகமம் 14:18-ல் இது காணப்படுகிறது. அங்கே "உன்னதமான கடவுளுக்குச் சேவை செய்துவந்த குரு" என்று மெல்கிசேதேக்கு அழைக்கப்படுகிறார்.

ஊ

ஊதுகொம்பு. கொம்பு என்ற தலைப்பைப் பாருங்கள்.

ஊரீம்; தும்மீம். தேசத்தில் சிக்கலான பிரச்சினைகள் வந்தபோது, யெகோவாவின் தீர்மானத்தைத் தெரிந்துகொள்ள தலைமைக் குரு இவற்றைப் பயன்படுத்தினார். இவற்றால் குலுக்கல் போட்டு பார்த்தார். தலைமைக் குரு வழிபாட்டுக் கூடாரத்துக்குள் போனபோது, அவருடைய மார்ப்பதக்கத்துக்குள் இவை வைக்கப்பட்டன. பாபிலோனியர்கள் எருசலேமை அழித்த பிறகு இந்த வழக்கம் முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது.—யாத் 28:30; நெ 7:65.

எ

எக்காளம். வாயினால் ஊதப்படும் உலோகக் கருவி. அறிவிப்பு செய்வதற்காகவும் இசை இசைப்பதற்காகவும் இது பயன்படுத்தப்பட்டது. இரண்டு வெள்ளி எக்காளங்களை யெகோவா செய்யச் சொன்னதாக எண்ணாகமம் 10:2 சொல்கிறது; மக்களை ஒன்றுகூட்டுவதற்கும், ஒரு இடத்திலிருந்து புறப்படச் செய்வதற்கும், போர் அறிவிப்பு செய்வதற்கும் வெவ்வேறு தொனிகளில் இவை ஊதப்பட்டன. மிருகங்களின் கொம்புகளில் செய்யப்பட்ட 'ஊதுகொம்பை' போல வளைவாக இல்லாமல் இவை நேராக இருந்திருக்கலாம். ஆலயத்தில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகளில் எக்காளங்களும் இருந்தன. ஆனால், இவை எப்படிச் செய்யப்பட்டிருந்தன என்று பைபிள் குறிப்பிடுவதில்லை. யெகோவாவின் தீர்ப்புகள் அறிவிக்கப்பட்டபோதும், அவர் மூலமாகச் சில முக்கியச் சம்பவங்கள் நடந்தபோதும் அடையாள அர்த்தத்தில் எக்காளம் முழங்கப்பட்டது.—2நா 29:26; எஸ்றா 3:10; 1கொ 15:52; வெளி 8:7-11:15.

எட்டி. இது பொதுவாக, பயங்கர கசப்பும், பயங்கர வாசமும் உள்ள செடி வகைகளைக் குறிக்கிறது. இவற்றின் தண்டுகள் மிகவும் உறுதியாக இருக்கும். ஒழுக்கக்கேடு, அடிமைத்தனம், அநியாயம், விசுவாசதுரோகம் ஆகியவற்றின் கசப்பான விளைவுகளை விவரிப்பதற்கு பைபிள் இந்த வார்த்தையை அடையாள அர்த்தத்தில் பயன்படுத்துகிறது. வெளிப்படுத்துதல் 8:11-ல், "எட்டி" என்ற வார்த்தை கசப்பான, விஷத்தன்மையுள்ள ஒரு பொருளைக் குறிக்கிறது; இது அப்சிந்தே என்றும் அழைக்கப்படுகிறது.—உபா 29:18; நீதி 5:4; எரே 9:15; ஆமோ 5:7.

எத்தியோப்பியா. எகிப்தின் தெற்குப் பகுதியில் இருந்த பண்டைய தேசம். தற்போதைய எகிப்தின் தெற்குப் பகுதியும் தற்போதைய சூடானின் வடக்குப் பகுதியும் இதன் பாகமாக இருந்தன. சில இடங்களில், "கூஷ்" என்ற எபிரெயப் பெயருக்குப் பதிலாக இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.—எஸ்தர் 1:1.

எதித்தூன். 39, 62, 77-ஆம் சங்கீதங்களின் மேல்குறிப்பில் இருக்கும் பெயர். இதன் அர்த்தம் சரியாகத் தெரியவில்லை. ஒரு சங்கீதத்தை எப்படிப் பாட வேண்டும், அதாவது எந்தப் பாணியில் பாட வேண்டும் அல்லது எந்த இசைக் கருவி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான அறிவுரையாக இது இருந்திருக்கலாம். எதித்தூன் என்ற பெயரில் லேவிய இசைக் கலைஞர் ஒருவர் இருந்தார். அதனால், இந்தப் பாணி அல்லது இசைக் கருவி அவரோடோ அவருடைய மகன்களோடோ சம்பந்தப்பட்டதாக இருக்கலாம்.

எப்பா. இது ஒரு திட அளவை. தானியங்களை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பாத்திரமும் எப்பா என்று அழைக்கப்பட்டது. இது ஒரு பாத் அளவுக்குச் சமமாக இருந்தது. அதனால் இதன் அளவு 22 லிட்டர். (யாத் 16:36; எசே 45:10) —இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

எப்பிராயீம். யோசேப்பின் இரண்டாவது மகனுடைய பெயர். பிற்பாடு, ஓர் இஸ்ரவேல் கோத்திரமும் இந்தப் பெயரில் அழைக்கப்பட்டது. இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு, பத்துக் கோத்திர ராஜ்யம் முழுவதும் எப்பிராயீம் என்று அழைக்கப்பட்டது. ஏனென்றால், எப்பிராயீம் அதன் மிக முக்கியக் கோத்திரமாக இருந்தது.—ஆதி 41:52; எரே 7:15.

எபிரெயர். இந்தப் பட்டப்பெயர் முதன்முதலில் ஆபிராமுக்கு (ஆபிரகாமுக்கு) கொடுக்கப்பட்டது. அவர் வாழ்ந்த இடத்தைச் சுற்றியிருந்த எமோரியர்களிடமிருந்து இது அவரை வித்தியாசப்படுத்திக் காட்டியது. பிற்பாடு, ஆபிரகாமின் பேரனான யாக்கோபின் வம்சத்தாரைக் குறிப்பதற்காகவும் இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டது.—ஆதி 14:13; யாத் 5:3.

எபிரெயு. எபிரெயர்கள் பேசிய மொழி. இயேசுவின் காலத்துக்குள், இதில் நிறைய அரமேயிக் வார்த்தைகள் கலந்துவிட்டன. இந்த மொழியைத்தான் கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் பேசினார்கள்.—அப் 26:14.

எலூல். பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு, யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 6-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 12-ஆம் மாதம். இது ஆகஸ்ட் பாதியில் ஆரம்பித்து செப்டம்பர் பாதியில் முடிவடைந்தது. (நெ 6:15)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

எழுத்தர். எபிரெய வேதாகமத்தை நகலெடுத்தவர்.—எஸ்றா 7:6, அடிக்குறிப்பு.

எஜமானின் இரவு விருந்து. கிறிஸ்துவின் உடலுக்கும் இரத்தத்துக்கும் அடையாளமாக இருந்த புளிப்பில்லாத ரொட்டியும் திராட்சமதுவும் பரிமாறப்பட்ட விருந்து. இது இயேசுவின் மரண நினைவு நாள். இயேசுவின் நினைவாக கிறிஸ்தவர்கள் இதை அனுசரிக்க வேண்டும் என்று பைபிளில் சொல்லப்பட்டிருப்பதால், இது "நினைவு நாள்" என்று அழைக்கப்படுகிறது.—1கொ 11:20, 23-26.

ஏ

ஏத்தானீம். யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 7-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி முதல் மாதம். இது செப்டம்பர் பாதியில் ஆரம்பித்து அக்டோபர் பாதியில் முடிவடைந்தது. யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பி வந்த பிறகு, இது திஷ்ரி என்று

அழைக்கப்பட்டது. (1ரா 8:2)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

ஏதோம். ஈசாக்கின் மகனான ஏசாவின் இன்னொரு பெயர். ஏசாவின் (ஏதோமின்) வம்சத்தார், சவக்கடலுக்கும் ஆகாபா வளைகுடாவுக்கும் இடையிலுள்ள சேயீர் மலைப்பகுதியை ஆக்கிரமித்தார்கள். இந்தப் பகுதி பின்பு ஏதோம் என்று அழைக்கப்பட்டது. (ஆதி 25:30; 36:8)—இணைப்பு B3 மற்றும் B4-ஐப் பாருங்கள்.

ஏபோத். குருமார்கள் தங்களுடைய அங்கிமேல் அணிந்திருந்த உடை. தலைமைக் குரு ஒரு விசேஷ ஏபோத்தை அணிந்திருந்தார். இதன் முன்பகுதியில் விலை உயர்ந்த 12 கற்கள் பதிக்கப்பட்ட மார்ப்பதக்கம் இருந்தது. (யாத் 28:4, 6) —இணைப்பு B5-ஐப் பாருங்கள்.

ஏரோது. யூதர்களை ஆட்சி செய்த ஓர் அரச பரம்பரையின் குடும்பப் பெயர். இந்த ஆட்சியாளர்கள் ரோமர்களால் நியமிக்கப்பட்டார்கள். மகா ஏரோதுதான் எருசலேம் ஆலயத்தைத் திரும்பக் கட்டினான்; இயேசுவைத் தீர்த்துக்கட்டுவதற்காகப் பிள்ளைகளைக் கொல்லும்படி கட்டளையிட்டவனும் இவன்தான். (மத் 2:16; லூ 1:5) இவனுடைய ஆட்சிக்குட்பட்ட சில பகுதிகளை ஆளுவதற்கு, இவனுடைய மகன்களான ஏரோது அர்கெலாயுவும் ஏரோது அந்திப்பாவும் நியமிக்கப்பட்டார்கள். (மத் 2:22) கால்பங்கு தேசத்தை ஆட்சி செய்த ஏரோது அந்திப்பா, "ராஜா" என்று அழைக்கப்பட்டான். இவன், இயேசு ஊழியம் செய்த மூன்றரை வருஷ காலப்பகுதி முழுவதிலும், அப்போஸ்தலர் 12-ஆம் அதிகாரத்திலுள்ள சம்பவங்கள் நடந்த காலப்பகுதி வரையிலும் ஆட்சி செய்தான். (மாற் 6:14-17; லூ 3:1, 19, 20; 13:31, 32; 23:6-15; அப் 4:28; 13:1) அதற்குப் பின்பு, மகா ஏரோதுவின் பேரனான முதலாம் ஏரோது அகிரிப்பா, ஆட்சிக்கு வந்த கொஞ்சக் காலத்திலேயே தேவதூதரால் கொல்லப்பட்டான். (அப் 12:1-6, 18-23) பிறகு, இவனுடைய மகனான இரண்டாம் ஏரோது அகிரிப்பா ராஜாவானான்; யூதர்கள் ரோமர்களுக்கு எதிராகக் கலகம் செய்த காலம்வரை இவன் ஆட்சி செய்தான்.—அப் 23:35; 25:13, 22-27; 26:1, 2, 19-32.

ஏரோதுவின் ஆதரவாளர்கள். இவர்கள் ஏரோதியர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள்; இவர்கள் தேசியவாத கட்சியைச் சேர்ந்தவர்கள். ரோமர்களின்கீழ் ஆட்சி செய்துகொண்டிருந்த ஏரோது ராஜாக்களின் அரசியல் லட்சியங்களை ஆதரித்தவர்கள். சதுசேயர்களில் சிலர் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். இயேசுவை எதிர்ப்பதற்காக பரிசேயர்களோடு இந்த ஏரோதியர்களும் கூட்டுச் சேர்ந்துகொண்டார்கள்.—மாற் 3:6.

ஏறுதலின் பாடல். 120 முதல் 134-வரையான சங்கீதங்களின் மேல்குறிப்பு. இதற்கு நிறைய அர்த்தங்கள் சொல்லப்பட்டாலும், கடவுளை வணங்க எருசலேமுக்கு 'ஏறிப்போனபோது' இஸ்ரவேலர்கள் இந்த 15 சங்கீதங்களையும் சந்தோஷமாகப் பாடினார்கள் என்று நிறைய பேர் நம்புகிறார்கள். முக்கியமான மூன்று வருடாந்தரப் பண்டிகைகளுக்காக, யூதா மலைகளின் உச்சியில் அமைந்திருந்த எருசலேமுக்கு இஸ்ரவேலர்கள் ஏறிப்போனார்கள்.

ஒ

ஒப்பந்தப் பெட்டி. இது சாட்சிப் பெட்டி என்றும் அழைக்கப்பட்டது. வேல மரத்தால் செய்யப்பட்டு தங்கத் தகட்டால் மூடப்பட்டிருந்தது. முதலில், வழிபாட்டுக் கூடாரத்தின் மகா பரிசுத்த அறையில் வைக்கப்பட்டிருந்தது. பின்பு, சாலொமோன் கட்டிய ஆலயத்தின் மகா பரிசுத்த அறையில் வைக்கப்பட்டிருந்தது. இதன் மூடி முழுவதும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது. அந்த மூடியின் மேல் இரண்டு கேருபீன்கள் நேருக்கு நேராக இருந்தன. முக்கியமாக, பத்துக் கட்டளைகள் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகள் அந்தப் பெட்டிக்குள் இருந்தன. இந்தக் கற்பலகைகள், சாட்சிப் பலகைகள் என்றும் அழைக்கப்பட்டன. (யாத் 25:22; 31:18; உபா 31:26; 1ரா 6:19; எபி 9:4)—இணைப்பு B5 மற்றும் B8-ஐப் பாருங்கள்.

ஒப்பந்தம். ஏதோ ஒன்றைச் செய்வதற்கோ செய்யாமல் இருப்பதற்கோ, கடவுளுக்கும் மனிதர்களுக்கும் நடுவில் அல்லது இரண்டு மனிதர்களுக்கு நடுவில் செய்யப்படுகிற உடன்படிக்கை. சில சமயங்களில், ஒருவர் மட்டுமே ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டபடி செய்ய வேண்டியிருந்தது (இது ஒரு வாக்குறுதியாக இருந்தது). மற்ற சமயங்களில், இரண்டு தரப்பினருமே அந்த ஒப்பந்தத்தின்படி செய்ய வேண்டியிருந்தது. கடவுள் மனிதர்களோடு செய்த ஒப்பந்தங்களைப் பற்றியும் தனி நபர்களும், கோத்திரங்களும், தேசங்களும், மக்கள் தொகுதிகளும் தங்களுக்குள் செய்துகொண்ட ஒப்பந்தங்களைப் பற்றியும் பைபிள் சொல்கிறது. ஆபிரகாமோடும், தாவீதோடும், இஸ்ரவேல் தேசத்தோடும் (திருச்சட்ட ஒப்பந்தம்), கடவுளுடைய இஸ்ரவேலர்களோடும் (புதிய ஒப்பந்தம்) கடவுள் செய்த ஒப்பந்தங்கள் மிக முக்கியமானவை. இவற்றைப் போன்ற ஒப்பந்தங்களால் நீண்ட கால நன்மைகள் கிடைத்திருக்கின்றன.—ஆதி 9:11; 15:18; 21:27; யாத் 24:7; 2நா 21:7.

ஓ

ஓமர். இது ஒரு திட அளவை. 2.2 லிட்டருக்குச் சமம்; அதாவது எப்பாவில் பத்திலொரு பங்கு. (யாத் 16:16, 18) —இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

ஓய்வுநாள். இதற்கான எபிரெய வார்த்தைக்கு, "ஓய்வு எடுப்பது; நிறுத்துவது" என்று அர்த்தம். யூத வாரத்தின் ஏழாவது நாள். (வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்திலிருந்து சனிக்கிழமை சூரிய அஸ்தமனம்வரை) சில பண்டிகை நாட்களும் ஓய்வுநாட்களாக இருந்தன. ஆலயத்தில் செய்யப்பட்ட குருத்துவச் சேவைகளைத் தவிர, ஓய்வுநாளில் வேறெந்த வேலையையும் செய்ய யாரும் அனுமதிக்கப்படவில்லை. 7-ஆம் மற்றும் 50-ஆம் வருஷங்கள் ஓய்வு வருஷங்கள் என்று அழைக்கப்பட்டன. ஓய்வு வருஷங்களில், நிலம் பயிர் செய்யப்படாமல் அப்படியே விடப்பட்டது. அதோடு, கடனைத் திருப்பித் தர வேண்டும் என்று எபிரெயர்கள் தங்கள் சகோதரர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. ஓய்வுநாள் பற்றிய திருச்சட்ட விதிமுறைகள் நியாயமாக இருந்தன. ஆனால், காலப்போக்கில் மதத்தலைவர்கள் வேறுபல விதிமுறைகளையும் அதனோடு சேர்த்தார்கள். அதனால், இயேசுவின் நாட்களில் வாழ்ந்த மக்களுக்கு அவற்றைக் கடைப்பிடிப்பது கஷ்டமாக இருந்தது.—யாத் 20:8; லேவி 25:4; லூ 13:14-16; கொலோ 2:16.

ஓரேப்; ஓரேப் மலை. சீனாய் மலையைச் சுற்றியுள்ள மலைப்பகுதி ஓரேப் என்று அழைக்கப்பட்டது. சீனாய் மலை, ஓரேப் மலை என்றும் அழைக்கப்பட்டது. (யாத் 3:1; உபா 5:2)—இணைப்பு B3-ஐப் பாருங்கள்.

க

கடவுள்பக்தி. யெகோவாவுக்குப் பயபக்தி காட்டுவது, அவரை வணங்குவது, அவருக்குச் சேவை செய்வது, அவருடைய சர்வலோக பேரரசாட்சியை உண்மையோடு ஆதரிப்பது ஆகியவை இதில் அடங்கும்.—1தீ 4:8; 2தீ 3:12.

கடவுளுடைய அரசாங்கம். இந்த வார்த்தைகள், கடவுளுடைய பேரரசாட்சியைப் பிரதிநிதித்துவம் செய்கிற அவருடைய மகன் கிறிஸ்து இயேசுவின் தலைமையிலான அரசாங்கத்தைக் குறிப்பிடுவதற்கு முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.—மத் 12:28; லூ 4:43; 1கொ 15:50.

கடவுளுடைய சக்தி. தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகக் கடவுள் பயன்படுத்துகிற சக்தி. இதை நம்மால் பார்க்க முடியாது. இது பரிசுத்தமானது; ஏனென்றால்,

மகா பரிசுத்தமானவராகவும் நீதியானவராகவும் இருக்கிற யெகோவாவிடமிருந்து வருகிறது; பரிசுத்த காரியங்களை நிறைவேற்ற கடவுள் இதைப் பயன்படுத்துகிறார்.—லூ 1:35; அப் 1:8.

கடைசி நாட்கள். வரலாற்றுச் சம்பவங்கள் உச்சக்கட்டத்தை அடையும் சமயத்தைக் குறிப்பதற்காக பைபிள் தீர்க்கதரிசனங்கள் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றன. (எசே 38:16; தானி 10:14; அப் 2:17) கடைசி நாட்கள் என்பது சில வருஷங்களையோ பல வருஷங்களையோ குறிக்கலாம், இது அந்தந்த தீர்க்கதரிசனத்தைப் பொறுத்தே இருக்கிறது. முக்கியமாக, இந்தச் சகாப்தத்தின் 'கடைசி நாட்களை' குறிப்பதற்கு இந்த வார்த்தைகளை பைபிள் பயன்படுத்துகிறது. இது இயேசு கிறிஸ்துவுடைய பிரசன்னத்தின் சமயமாக இருக்கிறது.—2தீ 3:1; யாக் 5:3; 2பே 3:3.

கண்காணி. சபையை வழிநடத்தி, அதை நன்றாகக் கவனித்துக்கொள்கிற ஆண்; இது அவருடைய மிக முக்கியப் பொறுப்பு. பாதுகாப்பான மேற்பார்வை என்ற அர்த்தத்தைத் தரும் *எப்பிஸ்கோபஸ்* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து இந்த வார்த்தை வந்திருக்கிறது. கிறிஸ்தவ சபையில், "கண்காணி," "மூப்பர்" (*பிரஸ்பிட்டிரோஸ்*) ஆகிய இரண்டு வார்த்தைகளும் ஒரே ஸ்தானத்தைக் குறிக்கின்றன. "மூப்பர்" என்ற வார்த்தை, நியமிக்கப்பட்டவருக்கு இருக்கிற முதிர்ச்சியான குணங்களைச் சுட்டிக்காட்டுகிறது. "கண்காணி" என்ற வார்த்தை நியமிக்கப்பட்டவரின் கடமைகளைச் சுட்டிக்காட்டுகிறது.—அப் 20:28; 1தீ 3:2-7; 1பே 5:2.

கதிர் பொறுக்குதல். அறுவடை செய்பவர்கள் தெரிந்தோ தெரியாமலோ விட்டுவிடும் கதிர்களை மற்றவர்கள் சேகரிக்கிற ஒரு வழக்கம். அறுவடை செய்யும்போது வரப்பு ஓரத்தில் இருக்கிற கதிர்களை முழுமையாக அறுக்கக் கூடாது என்றும், ஒலிவப் பழங்களையும், திராட்சைப் பழங்களையும் முழுமையாக அறுவடை செய்யக் கூடாது என்றும் திருச்சட்டம் கட்டளையிட்டிருந்தது. அறுவடைக்குப் பிறகு மீதியாக இருப்பதை எடுத்துக்கொள்கிற உரிமையை ஏழைகளுக்கும், பாவப்பட்டவர்களுக்கும், வேறு நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களுக்கும், அப்பா இல்லாத பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் கடவுள் கொடுத்திருந்தார்.—ரூ 2:7.

கப்பம். ஓர் அரசாங்கம் அல்லது ஓர் ஆட்சியாளர் வேறொரு அரசாங்கத்துக்கு அல்லது ஆட்சியாளருக்கு அடிபணிவதைக் காட்டுவதற்காகவோ, அவரோடு சமாதானமாக இருப்பதற்காகவோ அவருடைய பாதுகாப்பைப் பெறுவதற்காகவோ செலுத்துகிற பணம் அல்லது பொருள். (2ரா 3:4; 18:14-16; 2நா 17:11) தனி நபர்கள்மீது விதிக்கப்படுகிற வரியையும் இது குறிக்கிறது.—நெ 5:4, ரோ 13:7 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்.

கரண்டிகள். தங்கம், வெள்ளி அல்லது செம்பால் இவை செய்யப்பட்டிருந்தன. வழிபாட்டுக் கூடாரத்திலும் ஆலயத்திலும் தூபப்பொருளை எரிக்கவும், பலிபீடத்திலிருந்து தணலை அள்ளவும், தங்கக் குத்துவிளக்கில் இருந்த தீய்ந்துபோன திரிகளை எடுக்கவும் இவை பயன்படுத்தப்பட்டன. இவை தூபக்கரண்டிகள் என்றும் அழைக்கப்பட்டன.—யாத் 37:23; 2 நா 26:19; எபி 9:4.

கருவாய்ப்பட்டை. கருவாய்ப்பட்டை மரத்திலிருந்து (*சினமோமம் காஸியா*) கிடைக்கும் பொருள். இந்த மரம், லவங்கப்பட்டை மர வகையைச் சேர்ந்தது. நறுமணப் பொருளாகவும் பரிசுத்த அபிஷேகத் தைலம் செய்வதற்காகவும் கருவாய்ப்பட்டை பயன்படுத்தப்பட்டது.—யாத் 30:24; சங் 45:8; எசே 27:19.

கல்தேயா; கல்தேயர்கள். ஆரம்பத்தில் டைகிரீஸ் மற்றும் யூப்ரடிஸ் ஆறுகளின் டெல்டா பகுதிதான் கல்தேயா தேசமாக இருந்தது; அங்கே வாழ்ந்த மக்கள் கல்தேயர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். காலப்போக்கில், பாபிலோன் முழுவதும் கல்தேயா என்று அழைக்கப்பட்டது, பாபிலோனிய மக்கள் கல்தேயர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அறிவியல், வரலாறு, வானவியல், மொழிகள் ஆகியவற்றில் புலமை பெற்றவர்களையும், அதேசமயத்தில் மாயமந்திரம், ஜோதிடம் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களையும் குறிப்பிடுவதற்குக்கூட "கல்தேயர்கள்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது.—எஸ்றா 5:12; தானி 4:7, அடிக்குறிப்பு; அப் 7:4.

கல்லறை. சில சமயங்களில், இந்த வார்த்தை தனிப்பட்ட ஒருவருடைய கல்லறையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்ற சமயங்களில், இறந்தவர்களின் நிலையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான எபிரெய வார்த்தை "ஷியோல்"; கிரேக்க வார்த்தை "ஹேடீஸ்." எல்லா செயல்களும் எல்லா நினைவுகளும் முடிவுக்கு வருகிற அடையாளப்பூர்வ இடம் அல்லது நிலை என பைபிளில் இது விவரிக்கப்பட்டுள்ளது.—ஆதி 47:30, அடிக்குறிப்பு; பிர 9:10; அப் 2:31.

கவண். தோலாலான ஒரு பட்டை அல்லது மிருகங்களின் தசை நாண்கள், நாணல்கள், முடி ஆகியவற்றைக் கொண்டு பின்னப்பட்ட ஒரு வார். இதனுடைய அகலமான நடுப்பகுதியில், வீசியெறிய வேண்டிய பொருள் (பெரும்பாலும், கல்) வைக்கப்பட்டது. கவணின் ஒரு முனை, கையில் அல்லது மணிக்கட்டில் கட்டப்பட்டது; மறுமுனை இன்னொரு கையால் பிடித்துக்கொள்ளப்பட்டு, இழுத்துவிடப்பட்டது. பண்டைய தேசங்கள், கவண்கல் எறிகிறவர்களைத் தங்கள் படையில் வைத்திருந்தன.—நியா 20:16; 1சா 17:50.

களத்துமேடு. தானியம் போரடிக்கப்பட்ட இடம்; இது வட்டமாகவும் சமதளமாகவும் இருந்தது. பெரும்பாலும், நன்றாகக் காற்று வீசுகிற உயரமான இடத்தில் இவை அமைக்கப்பட்டிருந்தன. (ரூ 3:2; மத் 3:12)—போரடித்தல் என்ற தலைப்பைப் பாருங்கள்.

காட்டாற்றுப் பள்ளத்தாக்கு. மழைக் காலத்தைத் தவிர மற்ற சமயங்களில் வறண்டு கிடக்கும் பள்ளத்தாக்கையோ நீரோடையின் அடிப்பரப்பையோ குறிக்கலாம். இந்த வார்த்தை நீரோடையையும் குறிக்கலாம். சில நீரோடைகளுக்கு, நீரூற்றுகளிலிருந்து தண்ணீர் கிடைத்ததால், அவை எப்போதும் வற்றாமல் இருந்தன.—ஆதி 26:19, எண் 34:5 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்; 1ரா 18:5; யோபு 6:15.

காவல்காரர். முக்கியமாக, ராத்திரி நேரத்தில் மக்களையும் உடைமைகளையும் பாதுகாப்பவர். ஆபத்து வருவதைப் பார்த்தால் மற்றவர்களை எச்சரிப்பார். நகரத்தை நோக்கி வருபவர்களைத் தூரத்திலேயே பார்ப்பதற்கு வசதியாக, இவர் பெரும்பாலும் நகரத்து மதில்களில் அல்லது கோபுரங்களில் நிறுத்தப்பட்டார். படைப்பிரிவில் இருந்த காவல்காரர், காவலாளி என்றும் படைக்காவலர் என்றும் அழைக்கப்படுகிறார். தீர்க்கதரிசிகள் அடையாள அர்த்தத்தில் இஸ்ரவேல் தேசத்துக்குக் காவல்காரர்களாக இருந்து, வரப்போகிற அழிவைப் பற்றி எச்சரித்தார்கள்.—2ரா 9:20; எசே 3:17.

கானான். நோவாவின் பேரன்; காமின் நான்காவது மகன். கானானின் வம்சத்தில் வந்த 11 கோத்திரத்தார் காலப்போக்கில் மத்தியதரைக் கடலின் கிழக்கே, எகிப்துக்கும் சீரியாவுக்கும் இடையிலுள்ள பகுதியில் குடியிருந்தார்கள். இந்தப் பகுதிதான் 'கானான் தேசம்' என்று அழைக்கப்பட்டது. (லேவி 18:3; ஆதி 9:18; அப் 13:19)—இணைப்பு B4-ஐப் பாருங்கள்.

கித்தீத். இசை சம்பந்தப்பட்ட இந்த வார்த்தையின் சரியான அர்த்தம் தெரியவில்லை. *காத்* என்ற எபிரெய வார்த்தையிலிருந்து இது வந்திருக்கலாம். இந்த வார்த்தை திராட்சரச ஆலையைக் குறிக்கிறது. அதனால், கித்தீத் என்ற வார்த்தை திராட்சமது தயாரிக்கப்பட்ட சமயத்தில் பாடப்பட்ட

பாடல்களின் இசையாக இருக்கலாம் என்று சிலர் சொல்கிறார்கள்.—சங் 81-ன் மேல்குறிப்பு.

கிரேக்கர்கள். கிரேக்கு தேசத்தில் பிறந்தவர்கள் அல்லது கிரேக்கு தேசத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். யூதரல்லாத மக்களையும், கிரேக்க மொழி மற்றும் கலாச்சாரத்தின் செல்வாக்கின்கீழ் இருந்தவர்களையும்கூட கிரேக்கர்கள் என்று கிறிஸ்தவ கிரேக்க வேதாகமம் சொல்கிறது. —யோவே 3:6; யோவா 12:20.

கிரேக்கு. கிரேக்கு தேசத்து மக்கள் பேசும் மொழி.

கிறிஸ்தவர்கள். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்குக் கடவுள் கொடுத்த பெயர்.—அப் 11:26; 26:28.

கிறிஸ்து. இயேசுவின் பட்டப்பெயர். இது *கிறிஸ்டோஸ்* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கான எபிரெய வார்த்தை, "மேசியா," அதாவது "அபிஷேகம் செய்யப்பட்டவர்" என்று மொழிபெயர்க்கப்படுகிறது.—மத் 1:16; யோவா 1:41.

கிஸ்லே. யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பி வந்த பின்பு பயன்படுத்திய பரிசுத்த காலண்டரின்படி 9-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 3-ஆம் மாதம். இது நவம்பர் பாதியில் ஆரம்பித்து டிசம்பர் பாதியில் முடிவடைந்தது. (நெ 1:1; சக 7:1)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

கீலேயாத். யோர்தான் ஆற்றின் கிழக்கே, யாபோக் பள்ளத்தாக்கின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிவரை பரந்து விரிந்திருந்த செழிப்பான இடம்தான் கீலேயாத். ஆனால், யோர்தானுக்குக் கிழக்கே ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தார் குடியிருந்த இஸ்ரவேல் பகுதி முழுவதையும் குறிப்பதற்காகக்கூட இந்த வார்த்தை சில சமயங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (எண் 32:1; யோசு 12:2; 2ரா 10:33) —இணைப்பு B4-ஐப் பாருங்கள்.

கும்பம். ஒரு தூணின் உச்சியில் வேலைப்பாடுகளுடன் அமைந்த பகுதி. சாலொமோனுடைய ஆலயத்தின் முன்னால் யாகீன், போவாஸ் என்ற இரண்டு தூண்களின் உச்சியில் மாபெரும் கும்பங்கள் இருந்தன. (1ரா 7:16) —இணைப்பு B8-ஐப் பாருங்கள்.

குயவர். மண் பானைகளையும் மற்ற மண் பாத்திரங்களையும் செய்பவர். இதற்கான எபிரெய வார்த்தைக்கு "உருவாக்குபவர்" என்று அர்த்தம். களிமண்மீது குயவருக்கு இருக்கிற அதிகாரத்தைப் பற்றி பைபிள் குறிப்பிடுகிறது. மக்களையும் தேசங்களையும் ஆட்சி செய்கிற உரிமை யெகோவாவுக்கு இருக்கிறது என்பதை விளக்குவதற்கு பைபிள் பெரும்பாலும் இந்த உதாரணத்தைப் பயன்படுத்துகிறது.—ஏசா 64:8; ரோ 9:21.

குரு. இவர் கடவுளின் பிரதிநிதியாக மக்களுக்குச் சேவை செய்தார்; கடவுளைப் பற்றியும் கடவுளின் சட்டங்களைப் பற்றியும் மக்களுக்குக் கற்பித்தார். கடவுள் முன்னால் மக்களின் பிரதிநிதியாகவும் சேவை செய்தார்; அவர்களுக்காகப் பலிகளைச் செலுத்தினார், பரிந்து பேசினார், வேண்டுதல் செய்தார். திருச்சட்டம் கொடுக்கப்படுவதற்கு முன்பு, ஒவ்வொரு குடும்பத் தலைவரும் அந்தந்த குடும்பத்துக்குக் குருவாகச் சேவை செய்தார். திருச்சட்டத்தின்படி, லேவியரான ஆரோனின் வம்சத்து ஆண்கள் குருமார்களாகச் சேவை செய்தார்கள். லேவியர்களான மற்ற ஆண்கள் அவர்களுக்கு உதவியாளர்களாக இருந்தார்கள். புதிய ஒப்பந்தம் அமலுக்கு வந்தபோது, கடவுளுடைய இஸ்ரவேலர்கள் குருமார் தேசமாக ஆனார்கள், இயேசு கிறிஸ்து அவர்களுடைய தலைமைக் குருவானார்.—யாத் 28:41; எபி 9:24; வெளி 5:10.

குலதெய்வச் சிலைகள். சில சமயங்களில், குறி கேட்பதற்காக இவை பயன்படுத்தப்பட்டன. (எசே 21:21) சில சிலைகள், உருவத்திலும் உயரத்திலும் மனிதனைப் போல் இருந்தன. மற்ற சிலைகளோ, சிறியவையாக இருந்தன. (ஆதி 31:34; 1சா 19:13, 16) இந்தச் சிலைகளை வைத்திருந்தவருக்குப் பரம்பரைச் சொத்து கிடைத்தது என்பதை மெசொப்பொத்தாமியாவில் நடந்த புதைபொருள் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. (ராகேல் தன் அப்பாவிடமிருந்து குலதெய்வச் சிலையை எடுத்ததற்கான காரணம் இதிலிருந்து புரிகிறது.) ஆனால், இஸ்ரவேலில் இந்த வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. நியாயாதிபதிகளின் காலத்திலும், ராஜாக்களின் காலத்திலும் குலதெய்வச் சிலைகளை மக்கள் வழிபட்டார்கள்; உண்மையுள்ள ராஜாவான யோசியா, மற்ற பொருள்களோடு சேர்த்து குலதெய்வச் சிலைகளையும் அழித்துப்போட்டார்.—நியா 17:5; 2ரா 23:24; ஓசி 3:4.

குலுக்கல். தீர்மானங்களை எடுப்பதற்காகக் குலுக்கல் போடப்பட்டது. கூழாங்கற்கள், சிறிய மரத்துண்டுகள் அல்லது கற்கள் ஆகியவை குலுக்கிப் போடப்பட்டன. உடையின் மடிப்புகளில் அல்லது பாத்திரங்களில் போடப்பட்டு பின்பு குலுக்கப்பட்டன. அதிலிருந்து வெளியே வந்து விழுந்த அல்லது வெளியே எடுக்கப்பட்ட ஒன்றுதான் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கருதப்பட்டது. ஜெபத்துக்குப் பின்புதான் பெரும்பாலும் குலுக்கல் போடப்பட்டது. "குலுக்கல்" என்பதற்கான மூலமொழி வார்த்தைக்கு, "பங்கு" அல்லது "சொத்து" என்ற அர்த்தங்களும் உள்ளன.—யோசு 14:2; சங் 16:5; நீதி 16:33; மத் 27:35.

குற்ற நிவாரண பலி. தான் செய்த பாவங்களுக்காக ஒருவர் செலுத்தும் பலி. இது மற்ற பாவப் பரிகார பலிகளிலிருந்து சற்று வித்தியாசமானது. பாவம் செய்ததால் இழந்துவிட்ட சில ஒப்பந்த உரிமைகளை மறுபடியும் பெற்றுக்கொள்வதற்காகவும், தண்டனையிலிருந்து விடுபடுவதற்காகவும், மனம் திருந்திய ஒருவர் செலுத்துகிற பலி.—லேவி 7:37; 19:21, 22; ஏசா 53:10.

குறிசொல்கிறவர். எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்கூட்டியே தெரிவிக்கிற சக்தி இருப்பதாகச் சொல்லிக்கொள்கிறவர். மந்திரவாதிகள், ஜோதிடர்கள் போன்ற ஆட்களை பைபிள் இந்தப் பட்டியலில் சேர்க்கிறது.—லேவி 19:31; உபா 18:11; அப் 16:16.

கூடாரப் பண்டிகை. சேகரிப்புப் பண்டிகை என்றும் இது அழைக்கப்படுகிறது. இந்தப் பண்டிகை, ஏத்தானீம் மாதம் 15-ஆம் தேதியிலிருந்து 21-ஆம் தேதிவரை நடந்தது. இஸ்ரவேலர்களின் விவசாய வருடத்தின் முடிவில் அறுவடைக்குப் பிறகு இது கொண்டாடப்பட்டது. தங்களுடைய விளைச்சலை ஆசீர்வதித்ததற்காக யெகோவாவுக்கு நன்றி சொல்லவும், சந்தோஷமாக இருக்கவும் இஸ்ரவேலர்கள் இதைக் கொண்டாடினார்கள். எகிப்திலிருந்து விடுதலையானதை நினைத்துப் பார்ப்பதற்காக, இந்தச் சமயத்தில் ஜனங்கள் கூடாரங்களில், அதாவது பந்தல்போட்ட இடங்களில், தங்கினார்கள். ஒவ்வொரு வருஷமும் ஆண்கள் எருசலேமுக்குப் போய்க் கொண்டாட வேண்டியிருந்த மூன்று பண்டிகைகளில் இதுவும் ஒன்று.—லேவி 23:34; எஸ்றா 3:4.

கெஹென்னா. பண்டைய எருசலேமின் தென்மேற்கில் இருந்த இன்னோம் பள்ளத்தாக்கின் கிரேக்கப் பெயர். (எரே 7:31) இது பிணங்கள் சிதறிக் கிடக்கிற இடமாக இருக்கும் என்று தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டிருந்தது. (எரே 7:32; 19:6) மிருகங்களும் மனிதர்களும் கெஹென்னாவுக்குள் போடப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்டதற்கோ சித்திரவதை செய்யப்பட்டதற்கோ எந்த ஆதாரமும் இல்லை. அதனால், மனிதர்களுடைய ஆத்துமாக்கள் என்றென்றும் நெருப்பில் வாட்டி வதைக்கப்படுகிற, பார்க்க முடியாத ஓர் இடத்துக்கு இந்த வார்த்தை அடையாளமாக இருக்க முடியாது. மாறாக, நிரந்தரத் தண்டனையான "இரண்டாம் மரணத்துக்கு," அதா

வது நிரந்தர அழிவுக்கு, அடையாளமாகத்தான் இயேசுவும் அவருடைய சீஷர்களும் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார்கள்.—வெளி 20:14; மத் 5:22; 10:28.

கேப். 1.22 லிட்டருக்குச் சமமான திட அளவை. இது பாத் அளவையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. (2ரா 6:25, அடிக்குறிப்பு)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

கேமோஷ். மோவாபியர்களின் முக்கியத் தெய்வம்.—1ரா 11:33.

கேரா. 0.57 கிராமுக்குச் சமமான ஓர் எடை. ஒரு சேக்கலில், 20-ல் ஒரு பங்கு. (லேவி 27:25)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

கேருபீன்கள். விசேஷப் பொறுப்புகளைப் பெற்று, உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிற தேவதூதர்கள். சேராபீன்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது.—ஆதி 3:24; யாத் 25:20; ஏசா 37:16; எபி 9:5.

கைகளை வைத்தல். ஒருவரை விசேஷமான வேலைக்கு நியமிக்கும்போது அவர்மீது கைகள் வைக்கப்பட்டன. அதோடு, ஒருவரை ஆசீர்வதிக்கவும் குணப்படுத்தவும் கடவுளுடைய சக்தியின் வரத்தைக் கொடுக்கவும் அவர்மீது கைகள் வைக்கப்பட்டன. சில சமயங்களில், மிருகங்களைப் பலி கொடுப்பதற்கு முன்பு அவற்றின் மீது கைகள் வைக்கப்பட்டன.—யாத் 29:15; எண் 27:18; அப் 19:6; 1தீ 5:22, அடிக்குறிப்பு

கொம்பு. இது மிருகங்களின் கொம்பைக் குறிக்கிறது. பானங்களை ஊற்றிக் குடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. எண்ணெய், மை, அழகு சாதனப் பொருள்கள் ஆகியவற்றை வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. இசைக் கருவியாகவும் அறிவிப்பு செய்வதற்கான கருவியாகவும் பயன்படுத்தப்பட்டது. (1சா 16:1, 13; 1ரா 1:39; எசே 9:2) பலம், வெற்றி, கைப்பற்றுதல் ஆகியவற்றைக் குறிப்பதற்காக "கொம்பு" என்ற வார்த்தை பல தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது.—உபா 33:17; மீ 4:13; சக 1:19.

கொழுந்தன்முறை கல்யாணம். திருச்சட்டத்தில் பிற்பாடு சேர்த்துக்கொள்ளப்பட்ட வழக்கம். ஆண் குழந்தை இல்லாமல் இறந்துபோன ஒருவனுக்கு வாரிசு உண்டாக்குவதற்காக அவனுடைய மனைவியை அவனுடைய சகோதரன் கல்யாணம் செய்துகொள்ளும் வழக்கம்.—ஆதி 38:8; உபா 25:5.

கொள்ளைநோய். மிக வேகமாகப் பரவி மாபெரும் அளவில் மரணத்தை ஏற்படுத்துகிற எந்தவொரு தொற்றுநோயும் கொள்ளைநோய்தான். பெரும்பாலும், கடவுள் கொடுக்கிற தண்டனையோடு இது சம்பந்தப்படுத்தப்படுகிறது.—எண் 14:12; எசே 38:22, 23; ஆமோ 4:10.

கோமேதகம். கருப்பு, பழுப்பு, சிவப்பு, சாம்பல், பச்சை நிறங்களில் கிடைக்கிற விலைமதிப்புள்ள கல். இவற்றில் இடையிடையே வெள்ளை வரிகள் இருக்கும். தலைமைக் குருவின் விசேஷ உடைகளில் இது பொருத்தப்பட்டிருந்தது.—யாத் 28:9, 12; 1நா 29:2; யோபு 28:16.

கோர். திடப்பொருள்களையும் திரவப்பொருள்களையும் அளக்கும் அளவை. இது 220 லிட்டருக்குச் சமம். இது பாத் அளவையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. (1ரா 5:11)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

ச

சகாப்தத்தின் கடைசிக் கட்டம். சாத்தானின் ஆதிக்கத்தில் இருக்கிற சகாப்தத்தின், அதாவது உலக நிலைமைகளின், முடிவுக்கு முந்தைய காலப்பகுதியைக் குறிக்கிறது. இயேசுவின் பிரசன்னமும் இந்தச் சகாப்தத்தின் கடைசிக் கட்டமும் ஒரே சமயத்தில் இருக்கும். தேவதூதர்கள் இயேசுவின் கட்டளைப்படி, 'நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைத் தனியாகப் பிரித்து' அவர்களை அழிப்பார்கள். (மத் 13:40-42, 49) 'கடைசிக் கட்டம்' எப்போது ஆரம்பிக்கும் என்று தெரிந்துகொள்ள இயேசுவின் சீஷர்கள் ஆர்வமாக இருந்தார்கள். (மத் 24:3) சகாப்தத்தின் கடைசிக் கட்டம்வரை தன்னைப் பின்பற்றுகிறவர்களோடு இருப்பதாகப் பரலோகத்துக்குப் போவதற்கு முன்பு இயேசு வாக்குக் கொடுத்தார்.—மத் 28:20.

சகாப்தம் (சகாப்தங்கள்). இதற்கான கிரேக்க வார்த்தை *ஏயோன்.* ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியை மற்ற காலப்பகுதிகளிலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுகிற உலக நிலைமைகளைப் பற்றிச் சொல்வதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. 'இந்தச் சகாப்தம்' என்று பைபிள் குறிப்பிடும்போது, அது இந்த உலகத்தில் பொதுவாகக் காணப்படுகிற நிலைமையையும் உலக மக்களின் வாழ்க்கை முறையையும் அர்த்தப்படுத்துகிறது. (2தீ 4:10, அடிக்குறிப்பு) திருச்சட்ட ஒப்பந்தத்தின் மூலம் கடவுள் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தார். சிலர் அதை இஸ்ரவேலர்களின் காலகட்டம் அல்லது யூதர்களின் காலகட்டம் என்று சொல்கிறார்கள். மீட்புப் பலியின் மூலம் ஒரு வித்தியாசமான சகாப்தத்தை ஆரம்பிக்க இயேசு கிறிஸ்துவைக் கடவுள் பயன்படுத்தினார்; முக்கியமாக, பரலோக நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்கள் அந்தப் புதிய சகாப்தத்தில் உட்பட்டிருந்தார்கள். இந்தப் புதிய காலகட்டம் ஆரம்பித்தபோது, திருச்சட்ட ஒப்பந்தத்தில் முன்நிழலாகச் சொல்லப்பட்டிருந்த விஷயங்கள் நிஜமாக நடக்க ஆரம்பித்தன. சகாப்தங்கள் என்று பன்மையில் சொல்லும்போது, ஏற்கெனவே இருந்த அல்லது எதிர்காலத்தில் வரப்போகிற பல்வேறு சகாப்தங்களை அல்லது உலக நிலைமைகளைக் குறிக்கலாம்.—மத் 24:3; மாற் 4:19; ரோ 12:2; 1கொ 10:11 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்.

சங்கீதம். கடவுளைப் புகழ்ந்து பாடும் பாட்டு. இசையோடு சேர்த்து மக்கள் இதைப் பாடினார்கள். எருசலேம் ஆலயத்தில் மக்கள் ஒன்றுகூடி யெகோவாவை வணங்கியபோது சங்கீதங்களைப் பாடினார்கள்.—லூ 20:43; அப் 13:33; யாக் 5:13.

சடாமாஞ்சி எண்ணெய். இளஞ்சிவப்பு நிறமுள்ள விலை உயர்ந்த வாசனை எண்ணெய். சடாமாஞ்சி (*நார்டோஸ்டாகிஸ் ஜட்டமான்ஸி*) என்ற செடியிலிருந்து இது எடுக்கப்பட்டது. இது மிகவும் விலை உயர்ந்ததாக இருந்ததால், தரம் குறைந்த எண்ணெய்களோடு இது பெரும்பாலும் கலக்கப்பட்டது. சில சமயம், போலியான சடாமாஞ்சி எண்ணெய் விற்கப்பட்டது. ஆனால், இயேசுமீது 'சுத்தமான சடாமாஞ்சி எண்ணெய்' ஊற்றப்பட்டதென மாற்குவும் யோவானும் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது.—மாற் 14:3; யோவா 12:3.

சதுசேயர்கள். யூத மதத்தின் பிரபலமான பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆலய நடவடிக்கைகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த வசதியான உயர்குடி மக்களும் குருமார்களும் இந்தப் பிரிவில் இருந்தார்கள். பரிசேயர்களுடைய வாய்மொழி பாரம்பரியங்களையும் மற்ற நம்பிக்கைகளையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தேவதூதர்கள், உயிர்த்தெழுதல் ஆகியவற்றையும் நம்பவில்லை. இயேசுவை இவர்கள் எதிர்த்தார்கள்.—மத் 16:1; அப் 23:8.

சந்திப்புக் கூடாரம். இது மோசேயின் கூடாரத்தையும், முதன்முதலாக வனாந்தரத்தில் அமைக்கப்பட்ட வழிபாட்டுக் கூடாரத்தையும் குறிக்கிறது.—யாத் 33:7; 39:32.

சபிப்பது. ஓர் ஆளுக்கோ பொருளுக்கோ கெட்டது நடக்கும் என்று அறிவிப்பது அல்லது மிரட்டுவது. அசிங்கமாக அல்லது ஆவேசமாகக் கத்துவதை இது அர்த்தப்படுத்தாது. பெரும்பாலும், கெட்டது நடக்கப்போவதைப் பற்றிய அதிகாரப்பூர்வமான அறிவிப்பாக அல்லது முன்னறிவிப்பாக

இது இருக்கிறது. கடவுளோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவரோ அதை அறிவிக்கும்போது, ஒரு தீர்க்கதரிசனத்துக்கு இருந்த மதிப்பையும் வலிமையையும் இது பெறுகிறது.—ஆதி 12:3; எண் 22:12; கலா 3:10.

சபை. ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக அல்லது வேலைக்காக ஒன்றுகூடிய மக்கள் கூட்டம். எபிரெய வேதாகமத்தில், இது பொதுவாக இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கிறது. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில், இது கிறிஸ்தவர்களுடைய தனித்தனி சபைகளைக் குறிக்கிறது. ஆனால், பெரும்பாலும் ஒட்டுமொத்த கிறிஸ்தவ சபையைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.—1ரா 8:22; அப் 9:31; ரோ 16:5.

சமாதான பலி. யெகோவாவுடன் சமாதான உறவை விரும்பியவர்கள் செலுத்திய பலி. இந்தப் பலியைக் கொண்டு வந்தவரும் அவருடைய குடும்பத்தாரும், இந்தப் பலியைச் செலுத்திய குருவும், அந்தச் சமயத்தில் அங்கே சேவை செய்த மற்ற குருமார்களும் அதைச் சாப்பிட்டார்கள். எரிக்கப்பட்ட கொழுப்பிலிருந்து வந்த வாசனையை யெகோவா ஏற்றுக்கொண்டார். உயிருக்கு அடையாளமாக இருக்கிற இரத்தமும் யெகோவாவுக்கே செலுத்தப்பட்டது. குருமார்களும் பலி செலுத்துபவர்களும் யெகோவாவோடு சேர்ந்து உணவு சாப்பிடுவதுபோல் இருந்தது. அவரோடு சமாதான உறவு இருப்பதை இது குறித்தது.—லேவி 7:29, 32; உபா 27:7.

சமாரியர்கள். ஆரம்பத்தில், பத்துக் கோத்திர வடக்கு ராஜ்யத்தைச் சேர்ந்த இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயர். கி.மு. 740-ல் அசீரியர்கள் சமாரியாவைக் கைப்பற்றிய பின்பு, அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்ட மற்ற தேசத்தாரும் சமாரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இயேசுவின் காலத்தில், "சமாரியர்கள்" என்ற பெயர், ஓர் இனத்தையோ தேசத்தையோ சேர்ந்தவர்களைக் குறிப்பிட பயன்படுத்தப்படவில்லை. பண்டைய சீகேமுக்கும் சமாரியாவுக்கும் அருகில் வாழ்ந்த ஒரு மதப்பிரிவினரையே குறித்தது. இவர்களுடைய சில நம்பிக்கைகள், யூத மத நம்பிக்கைகளிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக இருந்தன.—யோவா 8:48.

சமாரியா. சுமார் 200 வருஷங்களுக்கு இஸ்ரவேல் தேசத்துடைய பத்துக் கோத்திர வடக்கு ராஜ்யத்தின் தலைநகரமாக இது இருந்தது. அதோடு, அந்த ராஜ்யத்துக்குட்பட்ட பகுதி முழுவதும்கூட சமாரியா என்று அழைக்கப்பட்டது. சமாரியா மலைமேல் இந்த நகரம் கட்டப்பட்டிருந்தது. இயேசுவின் காலத்தில், வடக்கே கலிலேயாவுக்கும் தெற்கே யூதேயாவுக்கும் இடையிலிருந்த ரோம மாகாணம் சமாரியா என்று அழைக்கப்பட்டது. பொதுவாக, சமாரியாவில் ஊழியம் செய்வதை இயேசு தவிர்த்தபோதிலும், சில சமயங்களில் இதன் வழியாகப் போனார், இந்த நகரத்தாரிடம் பேசினார். சமாரியர்களுக்குக் கடவுளுடைய சக்தி கிடைத்தபோது, பேதுரு கடவுளுடைய அரசாங்கத்தின் இரண்டாவது சாவியை அடையாள அர்த்தத்தில் பயன்படுத்தினார். (1ரா 16:24; யோவா 4:7; அப் 8:14)—இணைப்பு B10-ஐப் பாருங்கள்.

சாண். நீளத்தை அளப்பதற்கான அளவை. தோராயமாக, கையை விரிக்கும்போது கட்டை விரலின் நுனிக்கும் சுண்டு விரலின் நுனிக்கும் இடையிலுள்ள தூரத்துக்குச் சமம். 44.5 சென்டிமீட்டருள்ள முழத்தின் அடிப்படையில், ஒரு சாண் என்பது 22.2 சென்டிமீட்டர் நீளம் இருக்கலாம். (யாத் 28:16; 1சா 17:4, அடிக்குறிப்பு)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

சாத்தான். "எதிர்ப்பவன்" என்பது இதற்கான எபிரெய வார்த்தையின் அர்த்தம். பைபிளில் இது பெரும்பாலும் கடவுளுடைய முக்கிய எதிரியான பிசாசாகிய சாத்தானைக் குறிக்கிறது.—யோபு 1:6; மத் 4:10; வெளி 12:9.

சாம்பிராணி. *பாஸ்வெலியா* இனத்தைச் சேர்ந்த சில குறிப்பிட்ட வகை மரங்களிலிருந்தும் புதர்ச்செடிகளிலிருந்தும் கிடைத்த காய்ந்த பிசின். இதை எரிக்கும்போது, நல்ல வாசனை வரும். வழிபாட்டுக் கூடாரத்திலும் ஆலயத்திலும் பயன்படுத்தப்பட்ட பரிசுத்த தூபப்பொருளில் இதுவும் கலக்கப்பட்டிருந்தது. உணவுக் காணிக்கையோடு சேர்த்து இதுவும் கொடுக்கப்பட்டது. பரிசுத்த அறையில் வைக்கப்பட்டிருந்த படையல் ரொட்டிகளின் ஒவ்வொரு அடுக்கின் மீதும் இது தூவப்பட்டது.—யாத் 30:34-36; லேவி 2:1; 24:7; மத் 2:11.

சாலொமோன் மண்டபம். இயேசுவின் காலத்தில், ஆலயத்தின் வெளிப்பிரகாரத்துக்குக் கிழக்கே இருந்த நடைபாதை; இதன்மீது கூரை போடப்பட்டிருந்தது. இது, முன்பு சாலொமோன் கட்டிய ஆலயத்தின் பாகமாக இருந்ததென பொதுவாக நம்பப்படுகிறது. 'குளிர்காலத்தில்' இயேசு இங்கே நடந்தார். ஆரம்பகால கிறிஸ்தவர்கள் வழிபாட்டுக்காக இங்கே கூடினார்கள். (யோவா 10:22, 23; அப் 5:12)—இணைப்பு B11-ஐப் பாருங்கள்.

சித்திரவதைக் கம்பம். இதற்கான கிரேக்க வார்த்தை *ஸ்டவ்ரஸ்.* செங்குத்தான கம்பம் என்பது இதன் அர்த்தம். இப்படிப்பட்ட கம்பத்தில்தான் இயேசு கொல்லப்பட்டார். கிறிஸ்து வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பொய் மதங்கள் சிலுவையை ஒரு மத சின்னமாகப் பயன்படுத்தின. ஆனால், *ஸ்டவ்ரஸ்* என்ற கிரேக்க வார்த்தை சிலுவையைக் குறிக்கிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. "**சித்திரவதைக்** கம்பம்" என்ற வார்த்தை, *ஸ்டவ்ரசின்* முழு அர்த்தத்தையும் தருகிறது. ஏனென்றால், இயேசுவின் சீஷர்கள் அனுபவிக்கவிருந்த சித்திரவதையையும், கஷ்டத்தையும், அவமானத்தையும் பற்றிக் குறிப்பிடுவதற்கும் *ஸ்டவ்ரஸ்* என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. (மத் 16:24; எபி 12:2)—மரக் கம்பம் என்ற தலைப்பைப் பாருங்கள்.

சியா. ஒரு திட அளவை. திரவ அளவையான பாத்தின் அடிப்படையில், இது 7.33 லிட்டருக்குச் சமம். (2ரா 7:1)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

சிர்ட்டிஸ். வட ஆப்பிரிக்காவில் இருக்கும் லீபியா நாட்டின் கடலோரத்தில் உள்ள ஆழமில்லாத இரண்டு பெரிய வளைகுடாக்கள். அவற்றில் இருந்த மணல்திட்டுகள், அலைகளால் இடம் மாறிக்கொண்டே இருந்ததால், பூர்வகால மாலுமிகள் அவற்றை நினைத்து பயப்பட்டார்கள். (அப் 27:17)—இணைப்பு B13-ஐப் பாருங்கள்.

சிலை; சிலை வழிபாடு. நிஜமான அல்லது கற்பனையான ஏதோவொன்றை அடையாளப்படுத்துகிற உருவம்தான் சிலை; மக்கள் இதை வழிபட்டார்கள். சிலைக்குப் பயபக்தி காட்டுவதையும், வணங்குவதையும், பூஜிப்பதையும், அதை நேசிப்பதையுமே சிலை வழிபாடு என்று சொல்கிறோம்.—சங் 115:4; அப் 17:16; 1கொ 10:14.

சிவ். யூதர்களுடைய பரிசுத்த காலண்டரின்படி 2-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 8-ஆம் மாதம். இது ஏப்ரல் பாதியில் ஆரம்பித்து மே பாதியில் முடிவடைந்தது. பாபிலோன் சிறையிருப்புக்குப் பிறகு, யூத தால்முட்டிலும் மற்ற பதிவுகளிலும் இதன் பெயர் அய்யார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (1ரா 6:37)—இணைப்பு B-15-ஐப் பாருங்கள்.

சிறைபிடிக்கப்படுதல். தேசத்தைக் கைப்பற்றியவரின் கட்டளைப்படி சொந்த தேசத்திலிருந்தோ வீட்டிலிருந்தோ வெளியேற்றப்படுவது. "புறப்படுதல்" என்பதுதான் இதற்கான எபிரெய வார்த்தையின் அர்த்தம். இஸ்ரவேலர்கள் இரண்டு தடவை சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள். பத்துக் கோத்திர வடக்கு ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் அசீரியர்களாலும், பிற்பாடு இரண்டு கோத்திர தெற்கு ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் பாபிலோனியர்களாலும் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

இந்த இரண்டு தொகுதியினரில் மீதி இருந்தவர்கள் பெர்சிய ராஜாவான கோரேசின் கட்டளைப்படி தங்கள் சொந்த தேசத்துக்கே திரும்ப அனுப்பப்பட்டார்கள்.—2ரா 17:6; 24:16; எஸ்றா 6:21.

சீயுஸ். கிரேக்கர்கள் வழிபட்ட ஏராளமான தெய்வங்களில் இது மிக முக்கியமான தெய்வம். லீஸ்திராவில் இருந்த மக்கள் பர்னபாவை சீயுஸ் என்று தவறாக நினைத்தார்கள். லீஸ்திராவுக்குப் பக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பழங்கால கல்வெட்டுகளில், "சீயுசின் பூசாரிகள்," "சூரியக் கடவுளாகிய சீயுஸ்" ஆகிய வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருந்தன. மெலித்தா தீவிலிருந்து பவுல் பயணம் செய்த கப்பலின் முன்பகுதியில் "சீயுசின் மகன்களுடைய" சின்னங்கள், அதாவது, இரட்டைச் சகோதரர்களான கேஸ்டர் மற்றும் போலக்ஸின் சின்னங்கள் இருந்தன.—அப் 14:12; 28:11.

சீயோன்; சீயோன் மலை. எபூசியர்களின் கோட்டை நகராகிய எபூசுவின் பெயர்தான் சீயோன். இது எருசலேமின் தென்கிழக்கு மலைமீது இருந்தது. தாவீது இந்த நகரத்தைக் கைப்பற்றிய பின்பு, இங்கே தன் அரண்மனையைக் கட்டினார். இது "தாவீதின் நகரம்" என்று அழைக்கப்பட்டது. (2சா 5:7, 9) ஒப்பந்தப் பெட்டியை தாவீது சீயோனுக்குக் கொண்டுவந்த பின்பு, இந்த மலை யெகோவாவுக்குப் பரிசுத்தமான மலையாக ஆனது. பிற்பாடு, இந்தப் பெயர் மோரியா மலைமீது இருந்த ஆலயப் பகுதியையும், சில சமயங்களில், எருசலேம் நகரம் முழுவதையும் குறித்தது. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில், இந்தப் பெயர் பெரும்பாலும் அடையாள அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.—சங் 2:6; 1பே 2:6; வெளி 14:1.

சீரியா; சீரியர்கள்.—அராம்; அரமேயர்கள் என்ற தலைப்பைப் பாருங்கள்.

சீவான். பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு, யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 3-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 9-ஆம் மாதம். இது மே பாதியில் ஆரம்பித்து ஜூன் பாதியில் முடிவடைந்தது. (எஸ்தர் 8:9)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

சீஸர். இது ரோமர்களின் குடும்பப் பெயராக இருந்தது, பிற்பாடு ரோமப் பேரரசர்களின் பட்டப்பெயராக ஆனது. அகஸ்து, திபேரியு, கிலவுதியு ஆகியோரின் பெயர்கள் பைபிளில் உள்ளன. நீரோவின் பெயர் பைபிளில் இல்லையென்றாலும் இந்தப் பட்டப்பெயர் அவருக்கும் பொருந்துகிறது. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில், மனித அரசாங்கத்தைக் குறிப்பதற்கும் இந்தப் பட்டப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.—மாற் 12:17, அப் 25:12 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்.

சுத்தம். பைபிளில், இந்த வார்த்தை உடல் சுத்தத்தை மட்டுமே குறிப்பதில்லை. களங்கமில்லாத, கறைபடியாத நிலையை அல்லது அந்த நிலைக்குத் திரும்பி வருவதைக் குறிக்கிறது. ஒழுக்க ரீதியிலோ ஆன்மீக ரீதியிலோ கறைபடுத்துகிற, கெடுக்கிற எல்லாவற்றிலிருந்தும் விலகியிருப்பதைக் குறிக்கிறது. திருச்சட்டத்தின்படி, இந்த வார்த்தை சடங்காச்சார முறைப்படி சுத்தமாக இருப்பதைக் குறிக்கிறது.—லேவி 10:10; சங் 51:7; மத் 8:2; 1கொ 6:11.

சுருள். தோல் அல்லது பாப்பிரஸ் புல்லால் செய்யப்பட்ட நீளமான தாள். இதன் ஒரு பக்கத்தில் மட்டும்தான் எழுத்துக்கள் எழுதப்பட்டன. பொதுவாக, ஒரு குச்சியில் இது சுற்றப்பட்டிருந்தது. வேதவசனங்கள் இதில் எழுதப்பட்டு, பின்பு நகலெடுக்கப்பட்டன. இன்று புத்தகங்கள் பயன்படுத்தப்படுவது போல், பைபிள் காலங்களில் சுருள்கள் பயன்படுத்தப்பட்டன.—எரே 36:4, 18, 23; லூ 4:17-20; 2தீ 4:13.

செங்கோல். ராஜா வைத்திருக்கிற கோல். இது ராஜ அதிகாரத்தைக் குறிக்கிறது.—ஆதி 49:10; எபி 1:8.

செமினீத். "எட்டாவது" என்ற அர்த்தத்தைத் தரும் இசை சம்பந்தப்பட்ட வார்த்தை; குறைந்த சுருதியை இது அர்த்தப்படுத்தலாம். இசைக் கருவியோடு சம்பந்தப்படுத்திப் பேசும்போது, குறைந்த தொனியில் வாசிப்பதைக் குறிக்கலாம். பாடல்களோடு சம்பந்தப்படுத்திப் பேசும்போது, குறைந்த சுருதியில் இசை இசைப்பதையும் அதற்கு ஏற்ப பாடுவதையும் அர்த்தப்படுத்தலாம்.—1நா 15:21; சங் 6-ன் மேல்குறிப்பு; 12-ன் மேல்குறிப்பு.

சேக்கல். எபிரெயர்கள் பயன்படுத்திய சிறிய எடை. இது பணமாகவும் பயன்படுத்தப்பட்டது. இது 11.4 கிராமுக்குச் சமம். எடை துல்லியமாக இருக்க வேண்டும் அல்லது வழிபாட்டுக் கூடாரத்தில் வைக்கப்பட்டிருந்த நிர்ணயிக்கப்பட்ட எடைக்கல்லுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக 'பரிசுத்த சேக்கல்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கலாம். சாதாரண சேக்கலிலிருந்து வித்தியாசப்பட்ட ராஜ சேக்கல் என்ற ஒன்று இருந்திருக்கலாம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஓர் எடைக்கல் அரண்மனையில் இருந்திருக்கலாம்.—யாத் 30:13.

சேபாத். பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு, யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 11-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 5-ஆம் மாதம். இது ஜனவரி பாதியில் ஆரம்பித்து பிப்ரவரி பாதியில் முடிவடைந்தது. (சக 1:7)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

சேராபீன்கள். பரலோகத்தில், யெகோவாவின் சிம்மாசனத்தைச் சுற்றியிருக்கிற தேவதூதர்கள். "எரிகிறவர்கள்" என்பது *செராஃபிம்* என்ற எபிரெய வார்த்தையின் நேரடி அர்த்தம்.—ஏசா 6:2, 6.

சேலா. சங்கீதம், ஆபகூக் புத்தகங்களில் உள்ள இசை சம்பந்தப்பட்ட வார்த்தை. இது ஒப்பிப்பதையும் குறிக்கலாம். பாடும்போதோ இசை இசைக்கப்படும்போதோ அல்லது இந்த இரண்டு சமயங்களின்போதோ இடையில் சற்று நிறுத்த வேண்டும் என்பதை இது குறிக்கலாம். அமைதியாய் தியானிப்பதற்காக அல்லது உணர்ச்சிப்பூர்வமான பாடல் வரிகளை வலியுறுத்திக் காட்டுவதற்காக இந்த நிறுத்தம் கொடுக்கப்பட்டிருக்கலாம். கிரேக்க *செப்டுவஜன்ட்* இதை *டையாசால்மா* என்று மொழிபெயர்த்திருக்கிறது; இதற்கு "இசை இடைவேளை" என்று அர்த்தம்.—சங் 3:4; ஆப 3:3.

ஞ

ஞானஸ்நானம். ஞானஸ்நானம் கொடுப்பது என்றால், "அமிழ்த்துதல்," அல்லது தண்ணீரில் முக்கியெடுத்தல் என்று அர்த்தம். தன்னைப் பின்பற்றுகிறவர்கள் கண்டிப்பாக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்று இயேசு சொன்னார். யோவானின் ஞானஸ்நானம், கடவுளுடைய சக்தியால் ஞானஸ்நானம், நெருப்பால் ஞானஸ்நானம் போன்ற வேறு சில ஞானஸ்நானங்களைப் பற்றியும் பைபிள் குறிப்பிடுகிறது.—மத் 3:11, 16; 28:19; யோவா 3:23; 1பே 3:21.

ட

டார்டரஸ். கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில், இந்த வார்த்தை சிறையில் இருப்பது போன்ற தாழ்ந்த நிலையைக் குறிக்கிறது. நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமல்போன தேவதூதர்கள் இந்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். 2 பேதுரு 2:4-ல் உள்ள *டார்டரூ* ("டார்டரசில் தள்ளுதல்") என்ற வினைச்சொல், பொய்மத புராணங்களிலுள்ள டார்டரசுக்குள் (அதாவது, சின்னச் சின்ன தெய்வங்களுக்கென்று இருக்கிற இருட்டான பாதாளச் சிறைக்குள்) 'பாவம் செய்த தேவதூதர்கள்' தள்ளப்பட்டதைக் குறிப்பதில்லை. அதற்குப் பதிலாக, கீழ்ப்படியாத அந்தத் தூதர்கள் பரலோகத்தில் அவர்களுக்குரிய இடத்திலிருந்தும், பொறுப்புகளிலிருந்தும் கடவுளால் நீக்கப்பட்டார்கள் என்பதையே

குறிக்கிறது; அதோடு, அவருடைய அருமையான நோக்கங்களைப் புரிந்துகொள்ள முடியாதபடி மனம் இருளடைந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் குறிக்கிறது. அவர்களுடைய எதிர்காலமும் இருண்டுபோய் இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் தங்களுடைய தலைவனான பிசாசாகிய சாத்தானோடு சேர்ந்து நிரந்தரமாக அழிக்கப்படப் போகிறார்கள். அதனால், கலகக்கார தேவதூதர்கள் தள்ளப்பட்டிருக்கிற கீழ்த்தரமான நிலைமையைத்தான் டார்டரஸ் என்ற வார்த்தை அர்த்தப்படுத்துகிறது. வெளிப்படுத்துதல் 20:1-3-ல் உள்ள 'அதலபாதாளம்' வேறு, டார்டரஸ் வேறு.

த

தகன பலி. கடவுளுக்கு முழுமையான காணிக்கையாகப் பலிபீடத்தின்மீது எரிக்கப்பட்ட மிருக பலி. காளை, ஆடு, வெள்ளாடு, புறா, புறாக்குஞ்சு ஆகியவற்றைத் தகன பலியாகக் கொடுத்தவர் அவற்றின் எந்தப் பாகத்தையும் தனக்காக எடுத்துக்கொள்ளவில்லை.—யாத் 29:18; லேவி 6:9.

தத்துவ ஞானிகளான எப்பிக்கூரர்கள். இவர்கள் கிரேக்க தத்துவ ஞானியான எப்பிக்கூரசை (கி.மு. 341-270) பின்பற்றியவர்கள். இன்பம்தான் வாழ்க்கையின் லட்சியம் என்ற கருத்து இவர்களுடைய தத்துவத்துக்கு அடிப்படையாக இருந்தது.—அப் 17:18.

தத்துவ ஞானிகளான ஸ்தோயிக்கர்கள். கிரேக்க தத்துவ ஞானிகளில் ஒரு பிரிவினர். பகுத்தறிவோடு நடந்துகொள்ளும்போதும், இயற்கையோடு ஒன்றி வாழும்போதும் சந்தோஷம் கிடைக்கும் என்று நம்பினார்கள். இன்ப துன்பத்தால் பாதிக்கப்படாத நபர்தான் உண்மையான ஞானி என்றும் நம்பினார்கள்.—அப் 17:18.

தம்மூஸ். (1) எருசலேமில் இருந்த விசுவாசதுரோக எபிரெயப் பெண்கள் இந்தத் தெய்வத்துக்காக அழுதார்கள். தம்மூஸ் என்பது உண்மையில் ஒரு ராஜா என்றும், அவன் இறந்ததுக்குப் பின்பு தெய்வமாக வணங்கப்பட்டான் என்றும் சொல்லப்படுகிறது. சுமேரிய எழுத்துக்களில், தம்மூஸ் என்பது டுமுசீ என்று அழைக்கப்படுகிறது. இது, கருவள தெய்வமான இனென்னாவின் (பாபிலோனிய இஷ்டாரின்) காதலன் அல்லது துணை என்று சொல்லப்படுகிறது. (எசே 8:14) (2) பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு, யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 4-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 10-ஆம் மாதம். இது ஜூனின் பாதியில் ஆரம்பித்து ஜூலை பாதியில் முடிவடைந்தது.—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

தர்ஷீஸ் கப்பல்கள். பண்டைய தர்ஷீசுக்கு (தற்போதைய ஸ்பெயின்) போய் வந்த கப்பல்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயர். காலப்போக்கில், நீண்ட தூரம் பயணம் செய்த பெரிய கப்பல்கள் இந்தப் பெயரில் அழைக்கப்பட்டன. வியாபாரத்துக்காக சாலொமோனும் யோசபாத்தும் இந்தக் கப்பல்களைப் பயன்படுத்தினார்கள்.—1ரா 9:26; 10:22; 22:48.

தரிசனம். கடவுள் மூலமாகச் சிலருக்குக் கிடைத்த அற்புதக் காட்சி. பகலிலோ இரவிலோ ஒருவர் மெய்மறந்த நிலையில் இருக்கும்போது அல்லது கனவு காணும்போது இது கொடுக்கப்பட்டது.—ஆதி. 46:2; தானி. 8:2; அப். 10:3; 11:5; 16:9.

தலைப்பாகை. தலையைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் துணி. உயர்தர நாரிழையால் செய்யப்பட்ட தலைப்பாகையை தலைமைக் குரு கட்டியிருந்தார். நீல நிற நாடாவால் ஒரு தங்கத்தகடு அதன் முன்பக்கத்தில் கட்டப்பட்டிருந்தது. ராஜாக்கள் தங்களுடைய கிரீடத்துக்குக் கீழே தலைப்பாகையைக் கட்டியிருந்தார்கள். நியாயம் தனக்குத் தலைப்பாகை போல இருப்பதாக யோபு சொன்னார்.—யாத் 28:36, 37; யோபு 29:14; எசே 21:26.

தலைமைக் குரு. திருச்சட்டத்தின்படி, கடவுளுக்குமுன் மக்களுடைய பிரதிநிதியாகச் சேவை செய்த முக்கிய குரு. மற்ற குருமார்களை இவர் மேற்பார்வை செய்தார். “முதன்மை குரு” என்றும் அழைக்கப்பட்டார். (2நா 26:20; எஸ்றா 7:5) வழிபாட்டுக் கூடாரத்திலும் பிற்பாடு ஆலயத்திலும் இருந்த மகா பரிசுத்த அறைக்குள் நுழைவதற்கு இவர் மட்டும்தான் அனுமதிக்கப்பட்டார். பாவப் பரிகார நாளில் மட்டும்தான் அந்த அறைக்குள் இவர் போனார். “தலைமைக் குரு” என்ற பட்டப்பெயர் இயேசு கிறிஸ்துவுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.—லேவி 16:2, 17; 21:10; மத் 26:3; எபி 4:14.

தலைமைத் தூதர். இந்த வார்த்தைகளுக்கு “தேவதூதர்களின் தலைவர்” என்று அர்த்தம். “தலைமை” என்ற வார்த்தைக்கு “தலைவர்,” “முக்கியமானவர்” என்று அர்த்தம். பைபிளில் இந்த வார்த்தை ஒருமையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது ஒரேவொரு தலைமைத் தூதர்தான் இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்தத் தலைமைத் தூதரின் பெயர் “மிகாவேல்” என்று பைபிள் சொல்கிறது.—தானி 12:1; யூ 9; வெளி 12:7.

தாகோன். பெலிஸ்தியர்களின் தெய்வம். இந்த வார்த்தை எப்படி வந்தது என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால், *தக்* (மீன்) என்ற எபிரெய வார்த்தையிலிருந்து இது வந்திருக்கலாம் என்று சில அறிஞர்கள் சொல்கிறார்கள்.—நியா 16:23; 1சா 5:4.

தார்க்கோல். கூர்மையான உலோக முனையைக் கொண்ட நீளமான தடி. விலங்குகளை ஓட்ட விவசாயிகள் இதைப் பயன்படுத்தினார்கள். ஞானமுள்ளவரின் வார்த்தைகள், கேட்பவர்களைச் செயல்படத் தூண்டுவதால் அவை தார்க்கோலுக்கு ஒப்பிடப்படுகின்றன. அடங்காத ஒரு காளையைத் தார்க்கோலால் குத்தினாலும், அது பணிந்து போகாமல் தார்க்கோலை உதைத்து உதைத்து தன்னையே காயப்படுத்திக்கொள்ளும். இதை வைத்துதான் “தார்க்கோலை உதைத்துக்கொண்டே இருப்பது” என்ற சொற்றொடர் வந்தது.—அப் 26:14; நியா 3:31.

தாரிக். 8.4 கிராம் எடையுள்ள பெர்சிய தங்கக் காசு. (1நா 29:7, அடிக்குறிப்பு)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

தாலந்து. எபிரெயர்கள் பயன்படுத்திய மிகப்பெரிய எடை; இது பணமாகவும் பயன்படுத்தப்பட்டது. இதன் எடை 34.2 கிலோ. கிரேக்க தாலந்தின் எடை இதைவிட குறைவாக இருந்தது. அதன் எடை 20.4 கிலோ. (1நா 22:14; மத் 18:24)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

தாவீதின் நகரம். தாவீது எபூசு நகரத்தைக் கைப்பற்றி, தன்னுடைய அரண்மனையைக் கட்டிய பிறகு, அந்த நகரத்துக்குக் கொடுக்கப்பட்ட பெயர். இது சீயோன் என்றும் அழைக்கப்படுகிறது. இது எருசலேமின் தென்கிழக்குப் பகுதி, அதன் மிகப் பழமையான இடம்.—2சா 5:7; 1நா 11:4, 5.

தாவீதின் மகன். இயேசுவைக் குறிப்பிட இந்த வார்த்தைகள் அடிக்கடி பயன்படுத்தப்பட்டன. தாவீதின் வம்சத்தில் வருகிற ஒருவரால்தான் அரசாங்க ஒப்பந்தம் நிறைவேற வேண்டியிருந்தது; அந்த வாரிசு இயேசுதான் என்பதைக் காட்டுவதற்கு இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன.—மத். 12:23; 21:9.

தானதர்மம். கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதற்காகக் கொடுக்கப்படுகிற தானம். இதைப் பற்றி எபிரெய வேதாகமத்தில் நேரடியாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டிய கடமையைப் பற்றி இஸ்ரவேலர்களுக்குத் திருச்சட்டத்தில் திட்டவட்டமான கட்டளைகள் இருந்தன.—மத் 6:2.

திராக்மா. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில், இது 3.4 கிராம் எடையுள்ள கிரேக்க வெள்ளிக் காசைக் குறிக்கிறது.

எபிரெய வேதாகமத்தில், பெர்சியர்களின் காலப்பகுதியைச் சேர்ந்த தங்க திராக்மாவைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது; இந்த திராக்மா, தாரிக் காசு என்று கருதப்படுகிறது. (நெ 7:70, அடிக்குறிப்பு; மத் 17:24)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

திராட்சமது காணிக்கை. பலிபீடத்தின்மீது காணிக்கையாக ஊற்றப்பட்ட திராட்சமது. பெரும்பாலான மற்ற பலிகளோடு சேர்த்து இது கொடுக்கப்பட்டது. சக கிறிஸ்தவர்களுக்காகத் தன்னையே தியாகம் செய்யத் தயாராய் இருப்பதைத் தெரியப்படுத்த பவுல் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். —எண் 15:5, 7; பிலி 2:17.

திராட்சரச ஆலை. பொதுவாக, சுண்ணாம்புக் கல்லில் வெட்டப்பட்ட இரண்டு தொட்டிகளைக் குறிக்கிறது. ஒரு தொட்டி இன்னொன்றைவிட உயரத்தில் இருந்தது. இவை இரண்டும் ஒரு சிறிய கால்வாய் மூலம் இணைக்கப்பட்டிருந்தன. மேலே இருந்த தொட்டியில் திராட்சைப் பழங்கள் மிதிக்கப்பட்டபோது, கீழே இருந்த தொட்டியில் திராட்சரசம் நிரம்பியது. கடவுளின் நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாக இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—ஏசா 5:2; வெளி 19:15.

திரி வெட்டும் கருவிகள். இந்தக் கருவிகள் வழிபாட்டுக் கூடாரத்திலும் ஆலயத்திலும் பயன்படுத்தப்பட்டன. இவை தங்கம் அல்லது செம்பால் செய்யப்பட்டிருந்தன. விளக்குத் திரிகளை வெட்டுவதற்கான இந்தக் கருவிகள் பார்ப்பதற்குக் கத்தரிக்கோல் போல இருந்திருக்கலாம்.—2ரா 25:14.

திரிகைக் கல். ஒரு வட்ட வடிவ கல்மீது வைக்கப்பட்ட இன்னொரு வட்ட வடிவ கல்; தானியங்களை அரைக்க இது பயன்படுத்தப்பட்டது. மேற்கல்லை சுழற்றுவதற்காக, அடிக்கல்லின் நடுவில் ஒரு முளை பொருத்தப்பட்டிருந்தது. பைபிள் காலங்களில், கையினால் சுற்றப்பட்ட திரிகைக் கல் பெரும்பாலான வீடுகளில் இருந்தது, பெண்கள் இதைப் பயன்படுத்தினார்கள். அன்றாட உணவான ரொட்டியைத் தயாரிக்க இது கட்டாயம் தேவைப்பட்டதால், திரிகையின் அடிக்கல்லையோ அதன் மேற்கல்லையோ யாரும் அடமானமாக வாங்கக் கூடாது என்ற கட்டளை திருச்சட்டத்தில் இருந்தது. பெரிய திரிகைக் கல் விலங்குகளை வைத்து இயக்கப்பட்டது.—உபா 24:6, மாற் 9:42 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்.

திருச்சட்டம். கி.மு. 1513-ல் இஸ்ரவேலர்கள் சீனாய் வனாந்தரத்தில் இருந்தபோது மோசே மூலமாக யெகோவா அவர்களுக்குக் கொடுத்த முழு சட்டத் தொகுப்பை அல்லது பைபிளின் முதல் 5 புத்தகங்களைக் குறிக்கிறது. (யோசு 23:6; லூ 24:44; மத் 7:12; கலா 3:24) சில சமயங்களில், 'சட்டம்' என்று மட்டுமே குறிப்பிடப்படுகிற வசனங்களில், அது திருச்சட்டத்திலுள்ள ஒரு தனி சட்டத்தை அல்லது ஒரு சட்டத்திலுள்ள நியமத்தை அர்த்தப்படுத்தலாம்.—எண் 15:16; உபா 4:8, அடிக்குறிப்பு.

திரைச்சீலை. வழிபாட்டுக் கூடாரத்திலும் சரி, ஆலயத்திலும் சரி, பரிசுத்த அறைக்கும் மகா பரிசுத்த அறைக்கும் நடுவில் தொங்கவிடப்பட்டிருந்த துணி; இது அழகாக நெய்யப்பட்டிருந்தது; இதில் கேருபீன் வடிவத்தில் தையல் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (யாத் 26:31; 2நா 3:14; மத் 27:51; எபி 9:3)—இணைப்பு B5-ஐப் பாருங்கள்.

தினாரியு. சுமார் 3.85 கிராம் எடையுள்ள ரோம வெள்ளிக் காசு. இதன் ஒரு பக்கத்தில் ரோம அரசனுடைய உருவம் இருந்தது. இது ஒரு கூலியாளின் தினக் கூலியாக இருந்தது. யூதர்களிடமிருந்து 'தலைவரியாக' ரோமர்களால் வசூலிக்கப்பட்டது. (மத் 22:17, அடிக்குறிப்பு; லூ 20:24)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

திஷ்ரி.—ஏத்தானீம் என்ற தலைப்பையும் இணைப்பு B15-ஐயும் பாருங்கள்.

தீட்டு. உடல் அசுத்தமாக இருப்பதையோ ஒழுக்கச் சட்டங்களை மீறுவதையோ இது அர்த்தப்படுத்தலாம். திருச்சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ள முடியாத அசுத்தமான விஷயங்களைக் குறிப்பிட தீட்டு என்ற வார்த்தை பைபிளில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (லேவி 5:2; 13:45; அப் 10:14; எபே 5:5)—சுத்தம் என்ற தலைப்பைப் பாருங்கள்.

தீர்க்கதரிசனம். கடவுளிடமிருந்து வருகிற செய்தி. அவருடைய தீர்மானத்தை வெளிப்படுத்துவதற்காக அல்லது அறிவிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட செய்தி. இது கடவுளால் கொடுக்கப்பட்ட ஒழுக்க சம்பந்தமான போதனையாகவோ, கடவுளுடைய கட்டளையை அல்லது தீர்ப்பைப் பற்றிய அறிவிப்பாகவோ, எதிர்காலத்தில் நடக்கப்போவதைப் பற்றிய அறிவிப்பாகவோ இருக்கலாம்.—எசே 37:9, 10; தானி 9:24; மத் 13:14; 2பே 1:20, 21.

தீர்க்கதரிசி. கடவுளுடைய நோக்கங்களைத் தெரியப்படுத்த அவரால் பயன்படுத்தப்பட்ட நபர். தீர்க்கதரிசிகள் கடவுளின் சார்பாக மக்களிடம் பேசினார்கள். எதிர்காலத்தில் நடக்கவிருந்த விஷயங்களை மட்டுமல்ல, யெகோவாவுடைய போதனைகளையும் கட்டளைகளையும் தீர்ப்புகளையும்கூட அறிவித்தார்கள்.—ஆமோ 3:7; 2பே 1:21.

துக்கத் துணி. சாக்கு அல்லது பை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட சொரசொரப்பான துணி; இதில் தானியங்கள் சேமித்து வைக்கப்பட்டன. பெரும்பாலும், இவை கருப்பு நிற ஆடுகளின் ரோமத்திலிருந்து தயாரிக்கப்பட்டன. பொதுவாக, துக்கம் அனுசரிக்கிற சமயத்தில் மக்கள் இதைப் போட்டுக்கொண்டார்கள்.—ஆதி 37:34; லூ 10:13.

துக்கம் அனுசரிப்பது. யாராவது இறந்துவிட்டாலோ, துயரமான சம்பவம் நடந்துவிட்டாலோ அந்தத் துக்கத்தை வெளிப்படையாகக் காட்டுவது. பைபிள் காலங்களில், குறிப்பிட்ட நாட்கள்வரை துக்கம் அனுசரிப்பது வழக்கமாக இருந்தது. துக்கம் அனுசரிப்பவர்கள் சத்தமாக அழுவது மட்டுமல்லாமல், இதற்கென்றே இருக்கிற உடைகளை அணிந்துகொள்வார்கள், சாம்பலைத் தலையில் போட்டுக்கொள்வார்கள், உடைகளைக் கிழித்துக்கொள்வார்கள், நெஞ்சில் அடித்துக்கொள்வார்கள். கூலிக்காகத் துக்கம் அனுசரிப்பவர்கள் சில சமயம் சவ அடக்க நிகழ்ச்சியின்போது அழைக்கப்பட்டார்கள்.—ஆதி 23:2; எஸ்தர் 4:3; வெளி 21:4.

தூண். முக்கியமான விஷயங்களின் அல்லது சம்பவங்களின் நினைவாக இவை வைக்கப்பட்டன. சாலொமோன் கட்டிய ஆலயத்திலும், அவர் கட்டிய மற்ற மாளிகைகளிலும் மண்டபங்களிலும் இவை இருந்தன. பொய் தெய்வங்களை வணங்கிய ஜனங்கள் தங்களுடைய தெய்வங்களுக்காகப் பூஜைத் தூண்களை வைத்தார்கள். சில சமயங்களில், இஸ்ரவேலர்களும் இவர்களைப் போலவே செய்தார்கள். (நியா 16:29; 1ரா 7:21; 14:23)—கும்பம் என்ற தலைப்பைப் பாருங்கள்.

தூபப்பொருள். நறுமணப் பிசின்களும் வாசனை எண்ணெய்களும் சேர்ந்த கலவை. இது மெதுவாக எரிந்து, வாசனையான புகையைத் தரும். வழிபாட்டுக் கூடாரத்திலும் ஆலயத்திலும் பயன்படுத்துவதற்காக நான்கு பொருள்கள் கலந்த விசேஷ தூபப்பொருள் தயாரிக்கப்பட்டது. பரிசுத்த அறையில் இருந்த தூபபீடத்தில் காலையிலும் மாலையிலும் இது எரிக்கப்பட்டது. பாவப் பரிகார நாளன்று மகா பரிசுத்த அறையில் இது எரிக்கப்பட்டது. கடவுள் ஏற்றுக்கொள்கிற விதத்தில் அவருடைய உண்மையுள்ள ஊழியர்கள் செய்யும் ஜெபங்களுக்கு இது அடையாளமாக இருந்தது. கிறிஸ்தவர்கள் இதைப் பயன்படுத்தும்படி எதிர்பார்க்கப்படவில்லை.—யாத் 30:34, 35; லேவி 16:13; வெளி 5:8.

தெக்கப்போலி. பல கிரேக்க நகரங்கள் அடங்கிய பகுதி; ஆரம்பத்தில், பத்து நகரங்கள் இதில் இருந்தன. (*தெக்கா* என்ற கிரேக்க வார்த்தைக்கு "பத்து" என்றும், *போலிஸ்* என்ற கிரேக்க வார்த்தைக்கு "நகரம்" என்றும் அர்த்தம்.) இந்த நகரங்களில் பெரும்பாலானவை யோர்தான் ஆறு மற்றும் கலிலேயா கடலின் கிழக்குப் பகுதியில் இருந்தன. இந்தப் பகுதியும் தெக்கப்போலி என்று அழைக்கப்பட்டது. இந்த நகரங்கள், கிரேக்க கலாச்சார மையமாகவும் வர்த்தக மையமாகவும் இருந்தன. இயேசு இந்தப் பகுதி வழியாகப் பயணம் செய்தார். ஆனால், இந்த நகரங்களுக்குள் போனதாக எந்தப் பதிவும் இல்லை. (மத் 4:25; மாற் 5:20) —இணைப்பு A7 மற்றும் B10-ஐப் பாருங்கள்.

தேபேத். பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு, யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 10-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 4-ஆம் மாதம். இது டிசம்பர் பாதியில் ஆரம்பித்து ஜனவரி பாதியில் முடிவடைந்தது. பொதுவாக, 'பத்தாம் மாதம்' என அழைக்கப்படுகிறது. (எஸ்தர் 2:16)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

தேவதூதர்கள். இதற்கான எபிரெய வார்த்தை *மாலக்;* கிரேக்க வார்த்தை *ஆகிலோஸ்.* இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் "தூதுவர்" என்று அர்த்தம். பரலோகத் தூதுவர்களைப் பற்றிச் சொல்லும்போது, "தூதர்கள்," 'தேவதூதர்கள்' என்று இவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. (ஆதி 16:7; 32:3, அடிக்குறிப்பு; யாக் 2:25; வெளி 22:8) மனிதர்களைப் படைப்பதற்குப் பல காலத்துக்கு முன்பே கடவுள் இந்தத் தேவதூதர்களைப் படைத்தார். இவர்களுக்கு அபார பலம் இருக்கிறது. இவர்களை "பரிசுத்த தூதர்கள்," "கடவுளின் மகன்கள்," "விடியற்கால நட்சத்திரங்கள்" என்று பைபிள் குறிப்பிடுகிறது. (உபா 33:2; யோபு 1:6, அடிக்குறிப்பு; 38:7) இனப்பெருக்கம் செய்யும் தன்மையுடன் இவர்கள் படைக்கப்படவில்லை, தனித்தனி நபர்களாகப் படைக்கப்பட்டார்கள். இவர்கள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். (தானி 7:10) ஒவ்வொரு தேவதூதருக்கும் ஒரு பெயர் இருப்பதாகவும், தனித்தன்மை இருப்பதாகவும் பைபிள் சுட்டிக்காட்டுகிறது; அப்படியிருந்தும், மனிதர்களிடமிருந்து வணக்கத்தைப் பெற மறுத்து மனத்தாழ்மையைக் காட்டியிருக்கிறார்கள். பெரும்பாலான தேவதூதர்கள் தங்களுடைய பெயரைக் கூட சொன்னதில்லை. (ஆதி 32:29; லூ 1:26; வெளி 22:8, 9) அவர்களுக்கு வித்தியாசமான ஸ்தானங்களும் பொறுப்புகளும் இருக்கின்றன. யெகோவாவின் சிம்மாசனத்துக்கு முன்னால் சேவை செய்வது, அவருடைய செய்திகளை மற்றவர்களுக்குச் சொல்வது, பூமியிலுள்ள அவருடைய ஊழியர்களுக்கு உதவி செய்வது, அவருடைய நியாயத்தீர்ப்புகளை நிறைவேற்றுவது, பிரசங்க வேலையை ஆதரிப்பது என நிறைய பொறுப்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. (2ரா 19:35; சங் 34:7; லூ 1:30, 31; வெளி 5:11; 14:6) எதிர்காலத்தில் நடக்கப்போகும் அர்மகெதோன் போரில் இவர்கள் இயேசுவோடு சேர்ந்து போரிடுவார்கள்.—வெளி 19:14, 15.

தொழுநோய்; தொழுநோயாளி. இது பயங்கரமான தோல் நோய். இன்று தொழுநோய் என்று அழைக்கப்படுகிற நோயை மட்டுமே இது குறிப்பதில்லை. ஏனென்றால், பைபிளில் சொல்லப்பட்டுள்ள தொழுநோய் மனிதர்களை மட்டுமல்லாமல் உடைகளையும் வீடுகளையும்கூட பாதித்தது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் தொழுநோயாளி என்று அழைக்கப்படுகிறார்.—லேவி 14:54; லூ 5:12.

தொழுமரம். சித்திரவதை செய்வதற்காகவும் தண்டனை கொடுப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்ட கருவி. சில கருவிகளில், கால்கள் மட்டுமே மாட்டி வைக்கப்பட்டன. மற்ற கருவிகளில், கால்கள், கைகள், கழுத்து ஆகியவையும் மாட்டி வைக்கப்பட்டன.—எரே 20:2; அப் 16:24.

தோல் சுருள். செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் கன்றுக்குட்டியின் தோலால் செய்யப்பட்ட பொருள்; இது எழுதுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. பாப்பிரஸ் புல் சுருள்களைவிட நீடித்து உழைத்தது. அதனால் பைபிள் எழுதுவதற்கு இது பயன்படுத்தப்பட்டது. பவுல் தீமோத்தேயுவிடம் கொண்டுவரச் சொன்ன தோல் சுருள்கள், அநேகமாக எபிரெய வேதாகமத்தின் சில பாகங்களாக இருந்திருக்கலாம். சவக்கடல் சுருள்களின் சில பாகங்கள் தோல் சுருள்களில் எழுதப்பட்டிருந்தன.—2தீ 4:13.

தோல் பை. திராட்சமதுவை நிரப்பி வைப்பதற்காக, வெள்ளாடு, செம்மறியாடு போன்ற விலங்குகளின் முழு தோலால் செய்யப்பட்ட பை. திராட்சமது புளிக்கும்போது, அதிலிருந்து கரியமில வாயு (கார்பன்-டை-ஆக்ஸைடு) உருவாவதால், தோல் பைகளில் அழுத்தம் ஏற்படும். அதனால், புதிய தோல் பைகளில்தான் திராட்சமது நிரப்பப்பட்டது. புதிய தோல் பைகள் விரிவடைந்தன; ஆனால், பழைய தோல் பைகள் அழுத்தம் தாங்க முடியாமல் வெடித்தன.—யோசு 9:4; மத் 9:17.

ந

நசரேயர். 'தேர்ந்தெடுக்கப்பட்டவர்,' 'அர்ப்பணிக்கப்பட்டவர்,' 'பிரித்து வைக்கப்பட்டவர்' என்ற அர்த்தத்தைத் தரும் எபிரெய வார்த்தையிலிருந்து இது வந்தது. நசரேயர்களில் இரண்டு பிரிவினர் இருந்தார்கள். ஒரு பிரிவினர், நசரேயராக இருக்க தாங்களாகவே முன்வந்தவர்கள்; மற்றொரு பிரிவினர், கடவுளால் நியமிக்கப்பட்டவர்கள். ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நசரேயராக இருக்க விரும்புவதாக ஓர் ஆணோ பெண்ணோ யெகோவாவிடம் நேர்ந்துகொள்ளலாம். தாங்களாகவே முன்வந்து நேர்ந்துகொள்பவர்களுக்கு மூன்று முக்கியமான கட்டுப்பாடுகள் இருந்தன: (1) மது குடிக்கக் கூடாது, திராட்சைக் கொடியிலிருந்து கிடைக்கிற எதையும் சாப்பிடக் கூடாது. (2) தலைமுடியை வெட்டக் கூடாது. (3) பிணத்தைத் தொடக் கூடாது. கடவுளால் நியமிக்கப்பட்ட நசரேயர்கள், வாழ்நாள் முழுவதும் நசரேயர்களாகவே இருந்தார்கள்; அவர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்பதை யெகோவாவே அவர்களுக்குச் சொல்லியிருந்தார்.—எண் 6:2-7; நியா 13:5.

நடுவர்கள். பாபிலோனிய அரசாங்கத்தின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட மாகாணங்களில் இருந்த காவல்துறை நடுவர்கள், படைத்துறை சாராத ஊழியர்களாக இருந்தார்கள். இவர்களுக்குச் சட்டம் தெரிந்திருந்தது, தீர்ப்பளிக்கும் அதிகாரமும் ஓரளவு இருந்தது. ரோமக் குடியேற்றப் பகுதிகளில் இருந்த அரசு நடுவர்கள் அரசு நிர்வாகிகளாக இருந்தார்கள். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவது, நிதி நிலைமையைக் கட்டுப்படுத்துவது, குற்றவாளிகளுக்குத் தீர்ப்பு கொடுப்பது, தண்டனையை நிறைவேற்ற கட்டளை கொடுப்பது போன்றவை இவர்களுடைய வேலையாக இருந்தது.—தானி 3:2; அப் 16:20.

நல்ல செய்தி. கடவுளுடைய அரசாங்கத்தைப் பற்றிய செய்தியும், இயேசு கிறிஸ்துமீது விசுவாசம் வைப்பதால் கிடைக்கிற மீட்பைப் பற்றிய செய்தியும், நல்ல செய்தி என்று கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் சொல்லப்படுகிறது.—லூ 4:18, 43; அப் 5:42; வெளி 14:6.

நன்மை தீமை அறிவதற்கான மரம். ஏதேன் தோட்டத்தில் இருந்த ஒரு மரம். எது "நன்மை," எது "தீமை" என்பதைத் தீர்மானிக்கிற உரிமை கடவுளுக்கு மட்டும்தான் இருக்கிறது என்பதை இது அடையாளப்படுத்தியது.—ஆதி 2:9, 17.

நன்றிப் பலிகள். கடவுள் கொடுத்த எல்லாவற்றுக்காகவும், அவருடைய மாறாத அன்புக்காகவும் அவரைப் புகழ்வதற்காகக் கொடுக்கப்பட்ட சமாதான பலி. மிருக பலியின் இறைச்சியும், புளிப்பான மற்றும் புளிப்பில்லாத ரொட்டி

யும் சாப்பிடப்பட்டன. இறைச்சியை அதே நாளில் சாப்பிட வேண்டியிருந்தது.—2நா 29:31.

நாசரேத்தூரார். நாசரேத் என்ற ஊரைச் சேர்ந்தவராக இருந்ததால் இயேசுவுக்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டது. ஏசாயா 11:1-ல், "தளிர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தையோடு இது சம்பந்தப்பட்டிருக்கலாம். பிற்பாடு, இயேசுவின் சீஷர்களைக் குறிப்பிடும்போதும் இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டது.—மத் 2:23; அப் 24:5.

நாரிழைத் துணி; நாரிழை உடை. ஆளிவிதைச் செடியின் நாரிலிருந்து தயாரிக்கப்பட்ட விலை உயர்ந்த துணி அல்லது உடை. இது லினன் என்றும் அழைக்கப்படுகிறது.

நிசான். இது யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி முதல் மாதம், அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 7-ஆம் மாதம். ஆரம்பத்தில் இது ஆபிப் என்று அழைக்கப்பட்டது; பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்கள் திரும்பி வந்த பின்பு, நிசான் என்று மாற்றப்பட்டது. இது மார்ச் பாதியில் ஆரம்பித்து ஏப்ரல் பாதியில் முடிவடைந்தது. (நெ 2:1)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

நிதனீமியர்கள். இஸ்ரவேலர்களாக இல்லாத ஆலயப் பணியாளர்கள். "கொடுக்கப்பட்டவர்கள்" என்பதுதான் இதற்கான எபிரெய வார்த்தையின் அர்த்தம். இவர்கள் ஆலய வேலைக்காகக் கொடுக்கப்பட்டவர்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. நிதனீமியர்களில் பலர் கிபியோனியர்களின் வம்சத்தாராக இருந்திருக்கலாம். 'ஜனங்களுக்கும் யெகோவாவின் பலிபீடத்துக்கும் தேவைப்படுகிற விறகுகளை வெட்டவும் தண்ணீரைச் சுமக்கவும்' யோசுவா இவர்களை நியமித்திருந்தார்.—யோசு 9:23, 27; 1நா 9:2, அடிக்குறிப்பு; எஸ்றா 8:17, அடிக்குறிப்பு.

நியாயசங்கம். எருசலேமில் இருந்த யூத உயர் நீதிமன்றம். இயேசுவின் காலத்தில் 71 உறுப்பினர்கள் இதில் இருந்தார்கள். தலைமைக் குரு, முன்னாள் தலைமைக் குருமார்கள், தலைமைக் குருவின் குடும்பத்தார், பெரியோர்கள், கோத்திரத் தலைவர்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள், வேத அறிஞர்கள் ஆகியோர் இதில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.—மாற் 15:1; அப் 5:34; 23:1, 6.

நியாயத்தீர்ப்பு நாள். குறிப்பிட்ட தொகுதிகளுக்கு, தேசங்களுக்கு, அல்லது மனிதகுலத்துக்குக் கடவுள் தீர்ப்பு கொடுக்கிற நாள், அதாவது காலப்பகுதி. மரணத் தீர்ப்பு கொடுக்கப்பட்டவர்கள் கொல்லப்படும் சமயமாக இது இருக்கலாம், அல்லது சிலர் காப்பாற்றப்பட்டு முடிவில்லாத வாழ்வைப் பெற்றுக்கொள்ளும் சமயமாக இது இருக்கலாம். எதிர்காலத்தில் வரப்போகும் 'நியாயத்தீர்ப்பு நாளை' பற்றி இயேசு கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் சொன்னார்கள். உயிரோடு இருப்பவர்கள் மட்டுமல்ல, கடந்த காலத்தில் இறந்து போனவர்களும்கூட அப்போது நியாயந்தீர்க்கப்படுவார்கள்.—மத் 12:36.

நியாயத்தீர்ப்பு மேடை. பொதுவாக, இது ஒரு திறந்தவெளி மேடையாக இருந்தது. இதற்குப் படிக்கட்டுகள் இருந்தன. அதிகாரிகள் இந்த மேடையில் உட்கார்ந்துகொண்டு மக்களிடம் பேசினார்கள், தீர்ப்பு கொடுத்தார்கள். "கடவுளுடைய நியாயத்தீர்ப்பு மேடை" மற்றும் "கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு மேடை" என்ற வார்த்தைகள், மனிதகுலத்தை நியாயந்தீர்க்க யெகோவா செய்திருக்கிற ஏற்பாட்டுக்கு அடையாளமாக இருக்கின்றன.—ரோ 14:10; 2கொ 5:10; யோவா 19:13.

நியாயாதிபதிகள். இஸ்ரவேல் ராஜாக்களின் காலத்துக்கு முன்பு, யெகோவா தன்னுடைய மக்களைக் காப்பாற்றுவதற்காக நியமித்த ஆண்கள்.—நியா 2:16.

நினைவுக் கல்லறை. இறந்தவர்களின் உடல் வைக்கப்படுகிற இடம். "நினைவுபடுத்து" என்ற அர்த்தத்தைத் தரும் *நிமியான்* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து இது வருகிறது. இறந்தவர் இன்னும் நினைவில்தான் இருக்கிறார் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.—யோவா 5:28, 29.

நீதி. எது சரி, எது தவறு என்பது சம்பந்தமான கடவுளுடைய நெறிமுறைப்படி சரியானதைச் செய்வதுதான் நீதி என்று பைபிள் குறிப்பிடுகிறது.—ஆதி 15:6; உபா 6:25; நீதி 11:4; செப் 2:3; மத் 6:33.

நீதிமொழி; பழமொழி. முக்கியமான உண்மையை ரத்தினச் சுருக்கமாகச் சொல்கிற ஒரு பொன்மொழி அல்லது நீதிக் கதை. பைபிளிலுள்ள நீதிமொழி, ஒரு விடுகதையாகவோ புதிராகவோ இருக்கலாம். இந்த நீதிமொழிகளில் உண்மைகள் தத்ரூபமான மொழிநடையில், பெரும்பாலும் உருவக நடையில் சொல்லப்படுகின்றன. குறிப்பிட்ட மக்களைக் கேலி செய்வதற்காக அல்லது அவர்கள்மீது வெறுப்பைக் காட்டுவதற்காகச் சில பழமொழிகள் பயன்படுத்தப்பட்டன.—பிர 12:9; 2பே 2:22.

நுகத்தடி. ஒரு நபரின் தோள்களில் வைக்கப்பட்டு, இரண்டு பக்கங்களிலும் சுமைகள் தொங்கவிடப்பட்ட ஒரு மரத்தடி. அல்லது, விவசாயக் கருவியையோ வண்டியையோ இழுப்பதற்காக, இரண்டு விலங்குகளின் (பொதுவாக, கால்நடைகளின்) கழுத்தில் வைக்கப்பட்ட மரத்தடி அல்லது மரச்சட்டம். பாரமான சுமைகளைச் சுமப்பதற்கு அடிமைகள் நுகத்தடியைப் பயன்படுத்தியதால், அடிமைத்தனத்தையும், அடிபணிந்திருப்பதையும், ஒடுக்கப்படுவதையும், துன்பப்படுவதையும் குறிப்பதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. நுகத்தடியை எடுத்துப்போடுவது அல்லது உடைப்பது என்ற வார்த்தைகள், அடிமைத்தனம், கொடுமை, சுரண்டப்படுதல் ஆகியவற்றிலிருந்து விடுதலையாவதற்கு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டன.—லேவி 26:13; மத் 11:29, 30.

நெஃபெஷ்; சைக்கீ. எபிரெய வார்த்தையான *நெஃபெஷ்,* கிரேக்க வார்த்தையான *சைக்கீ* ஆகியவை பெரும்பாலான தமிழ் பைபிள்களில் ஆத்துமா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால், இது சரியான மொழிபெயர்ப்பு கிடையாது. ஏனென்றால், இது அழியாத ஆத்துமா இருக்கிறது என்ற பொய் கோட்பாட்டை ஆதரிக்கிறது. *நெஃபெஷ், சைக்கீ* ஆகிய வார்த்தைகள் முக்கியமாக (1) நபரை, (2) மிருகத்தை, (3) ஒரு நபரின் அல்லது மிருகத்தின் உயிரை அர்த்தப்படுத்துகின்றன. (ஆதி 1:20; 2:7; 1பே 3:20) ஆகவே, இந்த மொழிபெயர்ப்பில், இந்த மூல மொழி வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்துகின்றன என்பதைப் பொறுத்து அவற்றை "உயிர்," "உயிரினம்," "மனிதன்," "நபர்" என்று வெவ்வேறு விதங்களில் மொழிபெயர்த்திருக்கிறோம். பிணத்தைக் குறிப்பிடவும் இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.—எண் 6:6; ஆகா 2:13.

நெகிலோத். 5-ஆம் சங்கீதத்தின் மேல்குறிப்பில் இருக்கும் வார்த்தை; இதன் அர்த்தம் சரியாகத் தெரியவில்லை. இது புல்லாங்குழலைப் போன்ற ஓர் இசைக்கருவியாக இருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஏனென்றால், *சாலில்* (புல்லாங்குழல்) என்ற வார்த்தையோடு தொடர்புடைய மூல எபிரெய வார்த்தையோடு இதை அவர்கள் சம்பந்தப்படுத்துகிறார்கள். ஒருவேளை, இது ஓர் இன்னிசையின் பெயராகவும் இருக்கலாம்.

நெசவுத் தறி. நூல்களை அல்லது நூலிழைகளைத் துணியாக நெய்வதற்குப் பயன்படுத்தப்படுகிற மரச்சட்டம்.—நியா 16:14.

நெருப்பு ஏரி. "நெருப்பும் கந்தகமும் எரிகிற" அடையாளப்பூர்வ இடம். இது 'இரண்டாம் மரணம்' என்றும் விவரிக்கப்பட்டுள்ளது. மனம் திருந்தாத பாவிகள் இதில் தள்ளப்படுவார்கள்; அதோடு, பிசாசும், மரணமும், கல்லறையும் (அதாவது, ஹேடீஸும்) இதில் தள்ளப்படும். மரணத்தையும், கல்லறையையும், ஆவி உடலைக் கொண்ட பிசாசையும் நெருப்பால் சுட்டெரிக்க முடியாது. அதனால், இந்த

நெருப்பு ஏரி நிரந்தர சித்திரவதைக்கு அல்ல, நிரந்தர அழிவுக்கே அடையாளமாக இருக்கிறது என்பது தெளிவாகிறது. —வெளி 19:20; 20:14, 15; 21:8.

நேர்ந்துகொண்ட பலி. ஒருவர் தான் நேர்ந்துகொண்டதை நிறைவேற்றும்போது, அவராகவே விருப்பப்பட்டுக் கொடுக்கிற காணிக்கையைக் குறிக்கிறது.—லேவி 23:38; 1சா 1:21.

நேர்ந்துகொள்ளுதல். ஒரு செயலைச் செய்வதாகவோ, பலி அல்லது காணிக்கை செலுத்துவதாகவோ ஏதோவொரு சேவையைச் செய்வதாகவோ, சட்டவிரோதமாக இல்லாத சிலவற்றைத் தவிர்ப்பதாகவோ கடவுளுக்குக் கொடுக்கும் வாக்குறுதி. இது சத்தியம் செய்வதற்குச் சமமாக இருந்தது. —எண் 6:2; பிர 5:4; மத் 5:33.

ப

படையல் ரொட்டி. வழிபாட்டுக் கூடாரத்திலும் ஆலயத்திலும் இருந்த பரிசுத்த அறையின் மேஜைமீது வைக்கப்பட்டிருந்த 12 ரொட்டிகள். ஓர் அடுக்கில் 6 ரொட்டிகள் என இரண்டு அடுக்குகள் வைக்கப்பட்டிருந்தன. கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட இந்த ரொட்டிகள், ஓய்வுநாள்தோறும் மாற்றப்பட்டன. பழைய ரொட்டிகளுக்குப் பதிலாகப் புதிய ரொட்டிகள் வைக்கப்பட்டன. பழைய ரொட்டிகளைப் பொதுவாகக் குருமார்கள் சாப்பிட்டார்கள். (2நா 2:4; மத் 12:4; யாத் 25:30; லேவி 24:5-9; எபி 9:2)—இணைப்பு B5-ஐப் பாருங்கள்.

பத்திலொரு பாகம் (தசமபாகம்). எந்தவொரு பொருளிலும் பத்திலொரு பாகம் அல்லது பத்து சதவீதம்; இது மத சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காகக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. இது “தசமபாகம்” என்றும் அழைக்கப்பட்டது. (மல் 3:10, அடிக்குறிப்பு; உபா 26:12; மத் 23:23) திருச்சட்ட கட்டளைப்படி, நிலத்தின் விளைச்சலிலிருந்தும், மந்தையின் அதிகரிப்பிலிருந்தும் பத்திலொரு பாகம் வருஷா வருஷம் லேவியர்களுக்கு உதவி செய்வதற்காகக் கொடுக்கப்பட்டது. லேவியர்கள் தங்களுக்குக் கிடைத்த பாகத்திலிருந்து பத்திலொரு பாகத்தை ஆரோன் வம்சத்து குருமார்களுக்குக் கொடுத்து உதவினார்கள். இஸ்ரவேலர்கள், வேறு சில விஷயங்களுக்காகவும் பத்திலொரு பாகத்தைக் கொடுத்தார்கள். இன்று, கிறிஸ்தவர்கள் இதைக் கொடுக்க வேண்டியதில்லை.

பதர். போரடிக்கும்போதும் புடைக்கும்போதும் தானியத்திலிருந்து பிரிந்து வரும் உமி. வீணானவற்றையும் வேண்டாதவற்றையும் குறிப்பதற்காக பைபிளில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—சங் 1:4; மத் 3:12.

பரிசுத்த அறை. வழிபாட்டுக் கூடாரத்திலும் ஆலயத்திலும் இருந்த முதல் அறை. இது உள்ளறையான மகா பரிசுத்த அறையைவிட பெரியது. வழிபாட்டுக் கூடாரத்தின் பரிசுத்த அறையில் தங்கக் குத்துவிளக்கு, தங்கத் தூபபீடம், படையல் ரொட்டிகளுக்கான மேஜை ஆகியவை இருந்தன. ஆலயத்தின் பரிசுத்த அறையில் தங்கப் பீடம், பத்துத் தங்கக் குத்துவிளக்குகள், படையல் ரொட்டிகளுக்கான பத்து மேஜைகள் ஆகியவை இருந்தன. (யாத் 26:33; எபி 9:2) —இணைப்பு B5 மற்றும் B8-ஐப் பாருங்கள்.

பரிசுத்த சேவை. கடவுளுக்குச் செய்கிற ஊழியம் அல்லது வேலை. கடவுளை வணங்குவதோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால் இது பரிசுத்தமாக இருக்கிறது.—ரோ 12:1; வெளி 7:15.

பரிசுத்த ரகசியம். இது கடவுளுடைய நோக்கத்தோடு சம்பந்தப்பட்டது; அவரிடமிருந்தே வருகிறது. அவர் குறித்திருக்கும் நேரம் வரும்வரை ரகசியமாக இருக்கிறது. தான் தேர்ந்தெடுக்கிற ஆட்களுக்கு மட்டுமே அவர் இதை வெளிப்படுத்துகிறார்.—மாற் 4:11; கொலோ 1:26.

பரிசுத்தம். யெகோவாவுக்கு இயல்பாகவே இருக்கிற ஒரு பண்பு. இது மிக உயர்ந்த ஒழுக்கச் சுத்தத்தையும் புனிதத்தன்மையையும் குறிக்கிறது. (யாத் 28:36; 1சா 2:2; நீதி 9:10; ஏசா 6:3) மனிதர்கள், (யாத் 19:6; 2ரா 4:9, அடிக்குறிப்பு), மிருகங்கள் (எண் 18:17), பொருள்கள் (யாத் 28:38; 30:25; லேவி 27:14), இடங்கள் (யாத் 3:5; ஏசா 27:13), காலப்பகுதிகள் (யாத் 16:23; லேவி 25:12), வேலைகள் (யாத் 36:4) ஆகியவற்றைப் பற்றிச் சொல்லும்போதும் ‘பரிசுத்த’ என்ற வார்த்தையை பைபிள் பயன்படுத்தியிருக்கிறது. இதற்கான எபிரெய வார்த்தை, பிரித்து வைக்கப்படுவதை, ஒதுக்கி வைக்கப்படுவதை, பரிசுத்தமுள்ள கடவுளுக்காகப் புனிதப்படுத்துவதை அர்த்தப்படுத்துகிறது. யெகோவாவின் சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்டிருப்பதையும் குறிக்கிறது. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்திலும், ‘பரிசுத்த’ என்ற வார்த்தை கடவுளுக்காகப் பிரித்து வைக்கப்படுவதை அர்த்தப்படுத்துகிறது. ஒருவருடைய சுத்தமான நடத்தையைக் குறிப்பதற்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—மாற் 6:20; 2கொ 7:1; 1பே 1:15, 16.

பரிசேயர்கள். கி.பி. முதல் நூற்றாண்டில் இருந்த யூத மதத்தின் முக்கியப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் குருமார் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் கிடையாது. திருச்சட்டத்தில் இருந்த சின்னச் சின்ன விஷயங்களைக்கூட மிகக் கறாராகப் பின்பற்றினார்கள். திருச்சட்டத்துக்குக் கொடுக்கிற அதே முக்கியத்துவத்தை வாய்மொழி பாரம்பரியங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கற்றுக்கொடுத்தார்கள். (மத் 23:23) கிரேக்க கலாச்சாரத்தின் செல்வாக்கை எதிர்த்தார்கள். திருச்சட்டத்தையும், பாரம்பரியங்களையும் நன்றாகத் தெரிந்து வைத்திருந்ததால் மக்கள்மீது அதிகாரம் செலுத்தினார்கள். (மத் 23:2-6) சிலர் நியாயசங்க உறுப்பினர்களாக இருந்தார்கள். ஓய்வுநாள், பாரம்பரியங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கிற விஷயத்திலும், பாவிகள், வரி வசூலிப்பவர்கள் ஆகியோரோடு பழகுகிற விஷயத்திலும் இவர்கள் இயேசுவைப் பலமுறை எதிர்த்தார்கள். தர்சு நகரத்தைச் சேர்ந்த சவுல் உட்பட பரிசேயர்களில் சிலர் கிறிஸ்தவர்களாக ஆனார்கள்.—மத் 9:11; 12:14; மாற் 7:5; லூ 6:2; அப் 26:5.

பரிமளத் தைலம். சில செடிகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் கிடைத்த வாசனைப் பிசின். இது மருந்தாகவும் வாசனைப் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டது. இது மிகவும் விலை உயர்ந்ததாக இருந்தது.

பலி. கடவுளுக்கு நன்றி காட்டவும், குற்றத்தை ஒத்துக்கொள்ளவும், அவரோடு மறுபடியும் ஒரு நல்ல பந்தத்தை வைத்துக்கொள்ளவும் கொடுக்கப்படுகிற காணிக்கை. ஆபேல் தொடங்கி நிறைய பேர், மிருக பலிகள் உட்பட வெவ்வேறு காணிக்கைகளை மனப்பூர்வமாகக் கொடுத்தார்கள். பிறகு திருச்சட்டத்தில், பலி செலுத்துவது ஒரு கட்டளையாகக் கொடுக்கப்பட்டது. இயேசு தன் உயிரைக் குறையில்லாத பலியாகக் கொடுத்த பிறகு, மிருக பலிகள் தேவைப்படவில்லை. ஆனால், கிறிஸ்தவர்கள் ஆன்மீகப் பலிகளைக் கொடுக்கிறார்கள்.—ஆதி 4:4; எபி 13:15, 16; 1யோ 4:10.

பலிபீடத்தின் கொம்புகள். சில பலிபீடங்களின் நான்கு மூலைகளிலும் வெளியே நீட்டிக்கொண்டிருந்த கொம்பு போன்ற பகுதிகள். (லேவி 8:15; 1ரா 2:28)—இணைப்பு B5 மற்றும் B8-ஐப் பாருங்கள்.

பலிபீடம்; தூபபீடம். மண், கற்கள், பாறாங்கல் ஆகியவற்றால் செய்யப்பட்ட மேடை அல்லது, மரத்தால் செய்யப்பட்டு உலோகத் தகடு அடிக்கப்பட்ட மேடை. கடவுளை வணங்குவதற்காகப் பலிபீடத்தின்மீது பலிகள் கொடுக்கப்பட்டன, தூபபீடத்தில் தூபப்பொருள் எரிக்கப்பட்டது. தூபப் பொருளை எரிப்பதற்காக வழிபாட்டுக் கூடாரத்திலும் சரி, ஆலயத்திலும் சரி, முதல் அறையில் ஒரு சிறிய “தங்

கப் பீடம்” இருந்தது. இது மரத்தால் செய்யப்பட்டு தங்கத் தகட்டால் மூடப்பட்டிருந்தது. தகன பலிகளைச் செலுத்து வதற்காக அதைவிடப் பெரிய “செம்புப் பலிபீடம்” ஒன்று வெளியே பிரகாரத்தில் இருந்தது. (யாத் 27:1; 39:38, 39; ஆதி 8:20; 1ரா 6:20; 2நா 4:1; லூ 1:11)—இணைப்பு B5 மற்றும் B8-ஐப் பாருங்கள்.

பவளம். சின்னஞ்சிறிய கடல் பிராணிகளுடைய எலும்புக் கூடுகளிலிருந்து உருவாகிற கல்போன்ற உறுதியான பொருள். சிவப்பு, வெள்ளை, கறுப்பு போன்ற பல நிறங்களில் இவை கடலில் இருக்கின்றன. இவை செங்கடலில் ஏராளமாக இருந்தன. பைபிள் காலங்களில், சிவப்பு நிற பவளம் விலை உயர்ந்ததாக இருந்தது; பாசிமணிகள் செய்வதற்கும் மற்ற நகைகள் செய்வதற்கும் இது பயன்படுத்தப்பட்டது. —நீதி 8:11.

பஸ்கா. ஆபிப் மாதம் (பிற்பாடு நிசான் என்று அழைக்கப்பட்டது) 14-ஆம் தேதியில் கொண்டாடப்பட்ட வருடாந்தரப் பண்டிகை. எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் விடுதலையானதை நினைத்துப் பார்ப்பதற்காக இது கொண்டாடப்பட்டது. அந்த நாளில், செம்மறியாட்டையோ வெள்ளாட்டையோ வெட்டி, தீயில் வாட்டி, கசப்பான கீரையோடும் புளிப்பில்லாத ரொட்டியோடும் அதைச் சாப்பிட்டார்கள். —யாத் 12:27; யோவா 6:4; 1கொ 5:7.

பாகால். கானானியர்களின் தெய்வம்; வானத்தின் எஜமானாகவும், மழையின் தெய்வமாகவும், கருவள தெய்வமாகவும் கருதப்பட்டது. கானானில் இருந்த மற்ற சின்னச் சின்ன தெய்வங்களுக்கு “பாகால்” என்ற பட்டப்பெயர் இருந்தது. “சொந்தக்காரர், எஜமான்” என்பதுதான் இதற்கான எபிரெய வார்த்தையின் அர்த்தம்.—1ரா 18:21; ரோ 11:4.

பாத். இந்தப் பெயர் பொறிக்கப்பட்ட சில ஜாடிகளுடைய துண்டுகள் புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில், இந்தத் திரவ அளவை சுமார் 22 லிட்டருக்குச் சமம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பைபிளிலுள்ள பெரும்பாலான திட அளவைகளும் திரவ அளவைகளும் இந்த பாத் அளவையின் அடிப்படையில்தான் கணக்கிடப்படுகின்றன. (1ரா 7:38, அடிக்குறிப்பு; எசே 45:14)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

பாப்பிரஸ் புல். தண்ணீரில் வளரும் தாவரம். பார்ப்பதற்கு நாணற்புல் போல் இருக்கும். கூடைகள், கலங்கள், படகுகள் போன்றவற்றைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதை வைத்து காகிதம் போன்ற ஒரு பொருள் தயாரிக்கப்பட்டது. எழுதுவதற்காக இந்தப் பொருள் பயன்படுத்தப்பட்டது. பல சுருள்கள் இதை வைத்துதான் தயாரிக்கப்பட்டன. —யாத் 2:3, அடிக்குறிப்பு.

பார்வோன். எகிப்து ராஜாக்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர். ஐந்து பார்வோன்களின் பெயர்கள் பைபிளில் உள்ளன. (சீஷாக், சோ, திராக்கா, நேகோ, ஒப்பிரா.) ஆனால் ஆபிரகாம், மோசே, யோசேப்பு ஆகியவர்களோடு அதிகமாகச் சம்பந்தப்பட்டிருந்த பார்வோன்களின் பெயர்களும், மற்ற பார்வோன்களின் பெயர்களும் பைபிளில் இல்லை.—யாத் 15:4; ரோ 9:17.

பாலியல் முறைகேடு. இது எல்லா விதமான முறையற்ற உடலுறவுகளையும் குறிக்கிறது; *போர்னியா* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. மணத்துணைக்குத் துரோகம், விபச்சாரம், கல்யாணமாகாதவர்கள் வைத்துக்கொள்கிற உடலுறவு, ஆணோடு ஆணும் பெண்ணோடு பெண்ணும் வைத்துக்கொள்கிற உடலுறவு, மிருகங்களோடு வைத்துக்கொள்கிற உடலுறவு ஆகிய எல்லாமே இதில் அடங்கும். வெளிப்படுத்துதல் புத்தகத்தில், பொய் மதங்கள் “மகா பாபிலோன்” என்று அழைக்கப்படுகிற விபச்சாரியாகச் சித்தரிக்கப்படுகின்றன. இந்தப் பொய் மதங்கள், அதிகாரத்துக்காகவும் பணம் பொருளுக்காகவும் இந்த உலக ஆட்சியாளர்களோடு கூட்டுச் சேர்ந்திருக்கின்றன; அதனால்தான், இவை பாலியல் முறைகேட்டில் ஈடுபடுவதாக பைபிள் சொல்கிறது. (வெளி 14:8; 17:2; 18:3; மத் 5:32; அப் 15:29; கலா 5:19)—விபச்சாரக்காரர் என்ற தலைப்பைப் பாருங்கள்.

பாவப் பரிகார நாள். இஸ்ரவேலர்களின் மிக முக்கியமான பரிசுத்த நாள். இது யொம் கிப்புர் என்றும் அழைக்கப்படுகிறது. (*யொம் ஹக்கிப்புரிம்* என்ற எபிரெய வார்த்தையிலிருந்து இது வந்தது. இதற்கு “மூடுவதற்கான நாள்” என்று அர்த்தம்) ஏத்தானீம் மாதம் 10-ஆம் நாள் இது அனுசரிக்கப்பட்டது. வருஷத்தின் இந்த ஒரு நாளில் மட்டும்தான், வழிபாட்டுக் கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த அறைக்குள் தலைமைக் குரு போவார். தன்னுடைய பாவத்துக்காகவும், மற்ற லேவியர்களுடைய பாவத்துக்காகவும், மக்களுடைய பாவங்களுக்காகவும் கொடுக்கப்பட்ட பலிகளின் இரத்தத்தை அங்கே செலுத்துவார். அன்று மக்கள் எல்லாரும் புனித மாநாட்டுக்காகக் கூடிவந்து விரதம் இருப்பார்கள். அது ஓய்வு நாளாகவும் இருந்ததால் மக்கள் அன்றாட வேலைகளைச் செய்யாமல் இருப்பார்கள்.—லேவி 23:27, 28.

பாவப் பரிகார பலி. பாவத்தன்மையின் காரணமாக ஒருவர் தெரியாமல் செய்துவிட்ட பாவத்துக்காகச் செலுத்துகிற பலி. பாவப் பரிகாரம் செய்கிறவரின் வசதி அல்லது சூழ்நிலையைப் பொறுத்து புறாவோ காளையோ வேறு மிருகங்களோ பலியாகக் கொடுக்கப்பட்டன.—லேவி 4:27, 29; எபி 10:8.

பாவப் பரிகாரம். கடவுளை அணுகுவதற்கும் அவரை வணங்குவதற்கும் கொடுக்கப்பட்ட பலிகளுடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுதான் எபிரெய வேதாகமத்தில் பாவப் பரிகாரம் என்று அழைக்கப்பட்டது. தனி நபர்களோ தேசமோ பாவம் செய்திருந்தாலும், கடவுளோடு சமரசமாவதற்காகத் திருச்சட்டத்தின்படி பலிகள் கொடுக்கப்பட்டன; முக்கியமாக, ஒவ்வொரு வருஷமும் பாவப் பரிகார நாளில் இந்தப் பலிகள் கொடுக்கப்பட்டன. மனிதர்களுடைய பாவங்களுக்கு ஒரே தடவை முழுமையான பரிகாரம் செய்வதற்காகவும், இதன் மூலமாக ஜனங்கள் யெகோவாவோடு சமரசமாவதற்காகவும் இயேசு கொடுக்கவிருந்த மீட்புபலிக்கு இந்தப் பலிகள் அடையாளமாக இருந்தன.—லேவி 5:10; 23:28; கொலோ 1:20; எபி 9:12.

பிசாசு. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில், சாத்தானுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர். பிசாசு என்றால் “அவதூறு பேசுகிறவன்” என்று அர்த்தம். யெகோவாவையும், அவருடைய அருமையான வார்த்தையையும், அவருடைய பரிசுத்தமான பெயரையும் பற்றி அவதூறாகப் பேசி, அவர் மேல் பொய்க் குற்றம் சுமத்துவதில் முக்கியப் பங்கு வகிப்பதால் இவனுக்குப் பிசாசு என்ற பெயர் வந்தது.—மத் 4:1; யோவா 8:44; வெளி 12:9.

பிம். உலோகக் கருவிகளைத் தீட்டுவதற்காக பெலிஸ்தியர்கள் வசூலித்த பணம்; இது ஓர் எடையாகவும் இருந்தது. புதைபொருள் ஆராய்ச்சியின்போது இஸ்ரவேலில் கண்டுபிடிக்கப்பட்ட நிறைய எடைக்கற்களில் ‘பிம்’ என்பதற்கான எபிரெய மெய்யெழுத்துக்கள் இருந்தன. பிம்முடைய சராசரி எடை 7.8 கிராம்; இது ஒரு சேக்கலில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு.—1சா 13:20, 21, அடிக்குறிப்பு.

பிரகாரம்; முற்றம். வழிபாட்டுக் கூடாரத்தைச் சுற்றியிருந்த திறந்தவெளிப் பகுதி பிரகாரம் என்று அழைக்கப்பட்டது. இந்தப் பகுதியைச் சுற்றிலும் ஒரு மறைப்பு இருந்தது. பிற்பாடு, ஆலயத்தின் முக்கியக் கட்டிடத்தைச் சுற்றியிருந்த திறந்தவெளி பகுதியும் பிரகாரம் என்று அழைக்கப்பட்டது; இதைச் சுற்றிலும் சுவர் இருந்தது. வழிபாட்டுக் கூடாரத்தின் பிரகாரத்திலும், ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் தகன பலி செலுத்துவதற்காகப் பலிபீடம் வைக்கப்பட்டிருந்தது. (இணைப்பு B5, B8, B11-ஐப் பாருங்கள்.) அரண்மனை

மற்றும் வீடுகளில் திறந்தவெளிப் பகுதிகள் இருந்ததாக பைபிள் சொல்கிறது; இவை முற்றம் என்று அழைக்கப்படுகின்றன.—யாத் 8:13; 27:9; 1ரா 7:12; எஸ்தர் 4:11; மத் 26:3.

பிரசன்னம். கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்திலுள்ள சில வசனங்களில் இந்த வார்த்தை, இயேசு மேசியானிய ராஜாவாக வந்திருப்பதைக் குறிக்கிறது. மனித கண்களால் பார்க்க முடியாத அவருடைய பிரசன்னம், அவர் ராஜாவாக முடிசூட்டப்பட்ட சமயத்தில் ஆரம்பமாகி, இந்தச் சகாப்தத்தின் கடைசி நாட்களில் தொடர்கிறது. ஆகவே, கிறிஸ்துவின் பிரசன்னம் என்பது, அவர் வந்துவிட்டு உடனே திரும்பிப் போவதை அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, அவர் வந்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தொடர்ந்து இருப்பதையே அர்த்தப்படுத்துகிறது.—மத் 24:3.

பிராயச்சித்த மூடி. ஒப்பந்தப் பெட்டியின் மூடி; பாவப் பரிகார நாளில், பாவப் பரிகார பலியின் இரத்தத்தை தலைமைக் குரு இதன்மீது தெளித்தார். இதற்கான எபிரெய வார்த்தை, "(பாவத்தை) மூடுவது," "(பாவத்தை) துடைப்பது" என்ற அர்த்தத்தைத் தருகிற வினைச்சொல்லிலிருந்து வந்தது. இந்த மூடி முழுவதும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது; இதன் இடது ஓரத்தில் ஒன்று, வலது ஓரத்தில் ஒன்று என இரண்டு கேருபீன்கள் வைக்கப்பட்டிருந்தன. இது, சில வசனங்களில் "மூடி" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. (யாத் 25:17-22; 1நா 28:11; எபி 9:5)—இணைப்பு B5-ஐப் பாருங்கள்.

பிராயச்சித்தம்.—பாவப் பரிகாரம் என்ற தலைப்பைப் பாருங்கள்.

பில்லிசூனியம். பேய்களிடமிருந்து கிடைக்கும் சக்தியைப் பயன்படுத்திச் செய்யப்படுகிற செயல்.—2நா 33:6.

புலம்பல் பாடல். நண்பர், அன்புக்குரியவர் ஆகியோரின் மரணத்தால் அல்லது அதுபோன்ற துக்க சம்பவங்களால் ஏற்படும் தாங்க முடியாத வேதனையை வெளிப்படுத்துகிற பாடல்.—2சா 1:17; சங் 7-ன் மேல்குறிப்பு.

புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகை. இஸ்ரவேலர்களின் முக்கியமான மூன்று பண்டிகைகளில் இது முதல் பண்டிகை. பஸ்காவுக்கு அடுத்த நாளான நிசான் 15-ஆம் தேதி ஆரம்பித்து 7 நாட்களுக்கு இது கொண்டாடப்பட்டது. எகிப்திலிருந்து விடுதலையாகி வந்ததை நினைத்துப் பார்ப்பதற்காக, புளிப்பில்லாத ரொட்டி மட்டுமே இந்தச் சமயத்தில் சாப்பிடப்பட்டது.—யாத் 23:15; மாற் 14:1.

புளிப்பு. மாவு அல்லது திரவங்களைப் புளிக்க வைப்பதற்காகச் சேர்க்கப்படும் பொருள்; முக்கியமாக, ஏற்கெனவே புளித்துப்போன மாவிலிருந்து தனியாக எடுத்து வைக்கப்பட்ட சிறிதளவு மாவு. பாவத்துக்கும் முறைகேட்டுக்கும் அடையாளமாக இந்த வார்த்தை அடிக்கடி பைபிளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கண்களால் பார்க்க முடியாத, பரவலான வளர்ச்சியைக் குறிப்பிடுவதற்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—யாத் 12:20; மத் 13:33; கலா 5:9.

பூஞ்சோலை. அழகான பூங்கா அல்லது பூந்தோட்டம். ஏதேன் தோட்டம்தான் முதல் பூஞ்சோலை. முதல் மனித தம்பதிக்காக யெகோவா அதை உண்டாக்கினார். தன் பக்கத்திலிருந்த சித்திரவதைக் கம்பத்தில் ஏற்றப்பட்ட குற்றவாளியிடம் இயேசு பேசும்போது, இந்தப் பூமி ஒரு பூஞ்சோலையாக மாறும் என்பதைத் தெரியப்படுத்தினார். 2 கொரிந்தியர் 12:4-ல் உள்ள இந்த வார்த்தை, எதிர்காலத்தில் வரப்போகும் பூஞ்சோலையைக் குறிப்பதாகத் தெரிகிறது. வெளிப்படுத்துதல் 2:7-ல், இந்த வார்த்தை பரலோகப் பூஞ்சோலையைக் குறிக்கிறது.—உன் 4:13; லூ 23:43.

பூரீம். ஆதார் மாதத்தின் 14, 15 தேதிகளில் கொண்டாடப்பட்ட வருடாந்தர பண்டிகை. எஸ்தர் ராணியின் காலத்தில், அழிவிலிருந்து தாங்கள் தப்பித்ததை நினைத்துப் பார்ப்பதற்காக யூதர்கள் இதைக் கொண்டாடினார்கள். இது எபிரெய வார்த்தை அல்ல, "குலுக்கல்" என்பதுதான் இதன் அர்த்தம். யூதர்களை அழிப்பதற்கான தன் திட்டத்தை எந்த நாளில் நிறைவேற்றுவது என்பதைத் தெரிந்துகொள்ள, ஆமான் "பூர்" என்ற குலுக்கலைப் போட்டான். அதனால், இதற்குப் பூரீம் பண்டிகை அல்லது குலுக்கல் பண்டிகை என்ற பெயர் வந்தது.—எஸ்தர் 3:7; 9:26.

பூல். யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி 8-ஆம் மாதம்; அவர்களுடைய மதசார்பற்ற காலண்டரின்படி 2-ஆம் மாதம். "விளைச்சல்; மகசூல்" என்ற அர்த்தத்தைத் தருகிற மூல வார்த்தையிலிருந்து இது வருகிறது. அக்டோபர் பாதியில் ஆரம்பித்து நவம்பர் பாதியில் இது முடிவடைந்தது. (1ரா 6:38)—இணைப்பு B15-ஐப் பாருங்கள்.

பூஜைக் கம்பம். *அஷேரா* என்ற எபிரெய வார்த்தை, (1) கருவளத்துக்கான கானானியப் பெண் தெய்வம் அஷேராவின் அடையாளமான பூஜைக் கம்பத்தை, அல்லது (2) அஷேராவின் உருவத்தைக் குறிக்கலாம். இந்தக் கம்பங்கள் செங்குத்தாக நிறுத்தப்பட்டன; இவற்றின் சில பகுதிகள் மரத்தால் செய்யப்பட்டிருந்தன. இவை செதுக்கப்படாத கம்பங்களாகவோ மரங்களாகவோ இருந்திருக்கலாம்.—உபா 16:21; நியா 6:26; 1ரா 15:13.

பூஜைத் தூண். செங்குத்தான தூண்; இது பொதுவாகக் கல்தூணாக இருந்தது. பாகாலின் அல்லது வேறு பொய் தெய்வங்களின் ஆண் உறுப்பை இது குறித்தது.—யாத் 23:24.

பெந்தெகொஸ்தே. யூத ஆண்கள் எல்லாரும் எருசலேமில் கொண்டாட வேண்டியிருந்த முக்கியமான மூன்று பண்டிகைகளில் இது இரண்டாவது பண்டிகை. பெந்தெகொஸ்தே என்றால் "ஐம்பதாவது (நாள்)" என்று அர்த்தம். அறுவடையின் பண்டிகை அல்லது வாரங்களின் பண்டிகை என்று எபிரெய வேதாகமத்தில் அழைக்கப்படுகிற பண்டிகைதான், கிரேக்க வேதாகமத்தில் பெந்தெகொஸ்தே என்று அழைக்கப்படுகிறது. நிசான் 16-ஆம் தேதியிலிருந்து சரியாக 50-வது நாளில் இது கொண்டாடப்பட்டது.—யாத் 23:16, அடிக்குறிப்பு; 34:22; அப் 2:1.

பெயல்செபூப். பேய்களின் தலைவனான சாத்தானுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர். எக்ரோனில் பெலிஸ்தியர்களால் வணங்கப்பட்ட பாகால் தெய்வமான பாகால்-செபூப் என்ற பெயரின் மாற்று வடிவமாக இது இருக்கலாம்.—2ரா 1:3; மத் 12:24.

பெர்சியா; பெர்சியர்கள். பெர்சியா என்பது ஒரு தேசம், அதில் வாழ்ந்தவர்கள் பெர்சியர்கள். இவர்கள் பெரும்பாலும் மேதியர்களோடு சேர்த்து குறிப்பிடப்படுகிறார்கள். பெர்சியர்களுக்கும் மேதியர்களுக்கும் சம்பந்தம் இருந்ததாகத் தெரிகிறது. ஆரம்பத்தில், ஈரான் பீடபூமியின் தென்மேற்குப் பகுதிதான் பெர்சியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. மேதியாவும் பெர்சியாவும் இரட்டை ஆட்சியாக இருந்தபோதிலும், மகா கோரேசுவின் (பழங்கால சரித்திர ஆசிரியர்களின்படி, இவருடைய அப்பா பெர்சியாவைச் சேர்ந்தவர், அம்மா மேதியாவைச் சேர்ந்தவர்) ஆட்சியில் பெர்சியர்கள் மேதியர்கள்மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். கி.மு. 539-ல், கோரேசு பாபிலோன் சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றினார். பிறகு, அங்கே சிறைபட்டிருந்த யூதர்களைத் தங்களுடைய தாய் நாட்டுக்குத் திரும்பிப் போக அனுமதித்தார். கிழக்கே சிந்து நதிமுதல் மேற்கே ஏஜியன் கடல்வரை பெர்சியர்களுடைய சாம்ராஜ்யம் பரந்துவிரிந்திருந்தது. கி.மு. 331-ல் மகா அலெக்ஸாண்டர் பெர்சியர்களைத் தோற்கடிக்கும்வரை யூதர்கள் பெர்சியர்களுடைய ஆட்சியின்கீழ் இருந்தார்கள். பெர்சிய சாம்ராஜ்யம் உருவாவதைப் பற்றி தானியேல் முன்கூட்டியே ஒரு தரிசனத்தில் பார்த்திருந்தார். எஸ்றா, நெகேமியா, எஸ்தர் ஆகிய புத்தகங்களிலும் பெர்சிய சாம்ராஜ்யத்தைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. (எஸ்றா 1:1; தானி 5:28)—இணைப்பு B9-ஐப் பாருங்கள்.

பெலிஸ்தியா; பெலிஸ்தியர்கள். இஸ்ரவேல் தேசத்தின் தெற்குக் கடலோரத்தில் இருந்த பகுதிதான் பெலிஸ்தியா. கிரேத்தா தீவிலிருந்து இங்கே வந்து குடியேறியவர்கள் பெலிஸ்தியர்கள். தாவீது இவர்களைத் தோற்கடித்தார். ஆனாலும், இவர்கள் தனி தேசமாகச் செயல்பட்டார்கள்; இவர்கள் இஸ்ரவேலர்களை எதிர்த்துக்கொண்டே இருந்தார்கள். (யாத் 13:17; 1சா 17:4; ஆமோ 9:7)—இணைப்பு B4-ஐப் பாருங்கள்.

பேய்கள். நம் கண்களால் பார்க்க முடியாத, அபார பலம் படைத்த கெட்ட தூதர்கள். ஆதியாகமம் 6:2-ன் அடிக்குறிப்பில் "கடவுளின் மகன்கள்" என்றும், யூதா 6-ல் "தேவதூதர்கள்" என்றும் இந்தப் பேய்கள் அழைக்கப்படுகின்றன. இவை கெட்டவையாகப் படைக்கப்படவில்லை. நோவாவின் நாட்களில், இவை கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் போய் அவருக்கு எதிரிகளாயின, யெகோவாவுக்கு விரோதமாக சாத்தான் செய்த கலகத்தில் அவனோடு கூட்டுச்சேர்ந்துகொண்டன.—உபா 32:17; லூ 8:30; அப் 16:16; யாக் 2:19.

பொது சதுக்கம். ஒரு திறந்தவெளிப் பகுதி. அநேகமாக, நகரவாசலுக்குப் பக்கத்தில் இருந்திருக்கலாம். வியாபாரம் செய்வதற்காகவோ, திருச்சட்டம் வாசிக்கப்பட்டு, விளக்கப்படுவதைக் கேட்பதற்காகவோ மக்கள் இங்கே கூடிவந்திருக்கலாம். (ஆதி 23:10-18; நெ 8:1-3; எரே 5:1) வழக்குகளை விசாரிப்பதற்காக ஊர்ப் பெரியோர்கள் இங்கே ஒன்றுகூடினார்கள்.

பொல்லாதவன். கடவுளையும் அவருடைய நீதியான சட்டதிட்டங்களையும் எதிர்க்கிற பிசாசாகிய சாத்தானுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர்.—மத் 6:13; 1யோ 5:19.

போக்கு ஆடு. "மறைந்து போகும் ஆடு" என்பது இதற்கான எபிரெயப் பெயரின் அர்த்தமாக இருக்கலாம். பாவப் பரிகார நாளில் போக்கு ஆடாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடு வனாந்தரத்துக்கு அனுப்பப்பட்டது. வருஷம் முழுவதும் மக்கள் செய்த பாவங்களைச் சுமந்துகொண்டு போவதற்கு அடையாளமாக இது இருந்தது.—லேவி 16:8, 10.

போர்னியா.—பாலியல் முறைகேடு என்ற தலைப்பைப் பாருங்கள்.

போரடித்தல். கதிரிலிருந்தும் உமியிலிருந்தும் தானியத்தைப் பிரித்தெடுக்கிற வேலை. பொதுவாக, தானியங்களைத் தடியால் அடித்து போரடித்தார்கள். நிறைய தானியங்களைப் போரடிக்க வேண்டியிருந்தால், பலகைகள், உருளைகள் போன்ற விசேஷ கருவிகளைப் பயன்படுத்தினார்கள். இவற்றை இழுக்க விலங்குகள் பயன்படுத்தப்பட்டன. களத்துமேட்டில் பரப்பி வைக்கப்பட்டிருந்த தானியங்களின்மேல் இவை ஓட்டப்பட்டன. (ஏசா 41:15; 1கொ 9:9)—களத்துமேடு என்ற தலைப்பைப் பாருங்கள்.

ம

மக்கெதோனியா. கிரேக்கு தேசத்தின் வடக்குப் பகுதி. இது மகா அலெக்ஸாண்டருடைய காலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றது. ரோமர்களால் கைப்பற்றப்படும்வரை சுதந்திரமாக இருந்தது. பவுல் ஐரோப்பாவுக்கு முதல் தடவை போனபோது இது ஒரு ரோம மாகாணமாக இருந்தது. மூன்று தடவை அவர் அங்கே போயிருக்கிறார். (அப் 16:9)—இணைப்பு B13-ஐப் பாருங்கள்.

மகலாத். சங்கீதம் 53 மற்றும் 88-ன் மேல்குறிப்பில் இருக்கிற இசை சம்பந்தப்பட்ட வார்த்தை. "பலவீனமாகி வருகிற; வியாதிப்படுகிற" என்ற அர்த்தம் தருகிற எபிரெய வினைச்சொல்லோடு இது சம்பந்தப்பட்டிருக்கலாம். அதனால், சோகமான வார்த்தைகளை உடைய இந்த இரண்டு சங்கீதங்களும் வேதனையான தொனியில் பாடப்பட்டதாகத் தெரிகிறது.

மகா பரிசுத்த அறை. வழிபாட்டுக் கூடாரம் மற்றும் ஆலயத்தின் உள்ளறை. இங்குதான் ஒப்பந்தப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. 'பரிசுத்தத்திலும் பரிசுத்தமானது' என்றும் அழைக்கப்பட்டது. திருச்சட்டத்தின்படி, தலைமைக் குருவுக்கு மட்டும்தான் இதற்குள் போக அனுமதி இருந்தது. அதுவும், பாவப் பரிகார நாளில் மட்டும்தான் உள்ளே போக அனுமதி இருந்தது.—யாத் 26:33; லேவி 16:2, 17; 1ரா 6:16; எபி 9:3.

மணத்துணைக்குத் துரோகம்; முறைகேடான உறவு. கல்யாணமான ஓர் ஆணோ பெண்ணோ வேறொருவரோடு வைத்துக்கொள்ளும் உடலுறவு.—யாத் 20:14; மத் 5:27; 19:9.

மத்தியஸ்தர். இரண்டு தரப்பினருக்கு நடுவில் தலையிட்டு சமரசம் செய்பவர். பைபிளின்படி, திருச்சட்ட ஒப்பந்தத்தின் மத்தியஸ்தர் மோசே; புதிய ஒப்பந்தத்தின் மத்தியஸ்தர் இயேசு.—கலா 3:19; 1தீ 2:5.

மதப்பிரிவு. ஒரு கோட்பாட்டை அல்லது ஒரு தலைவரைப் பின்பற்றுகிற மக்கள் தொகுதி; இவர்களுக்கென்று சில நம்பிக்கைகள் இருக்கும். யூத மதத்தில், பரிசேயர்கள், சதுசேயர்கள் என இரண்டு முக்கியமான மதப்பிரிவினர் இருந்தார்கள். யூத மதத்திலிருந்து பிரிந்ததுதான் கிறிஸ்தவ மதம் என்று கிறிஸ்தவர்களாக இல்லாதவர்கள் நினைத்தார்கள். அதனால், கிறிஸ்தவ மதத்தை ஒரு 'மதப்பிரிவு' அல்லது 'நாசரேத்தூராரின் மதப்பிரிவு' என்று அழைத்தார்கள். காலப்போக்கில், கிறிஸ்தவ சபையில் மதப்பிரிவுகள் உருவாயின; "நிக்கொலாய் மதப்பிரிவை" பற்றி வெளிப்படுத்துதல் புத்தகம் குறிப்பிடுகிறது.—அப் 5:17; 15:5; 24:5; 28:22; வெளி 2:6; 2பே 2:1.

மதம் மாறியவர்கள். பைபிளைப் பொறுத்தவரை, இந்த வார்த்தைகள் யூத மதத்துக்கு மாறியவர்களைக் குறிக்கின்றன. அப்படி மதம் மாறிய ஆண்கள், விருத்தசேதனம் செய்ய வேண்டியிருந்தது.—மத் 23:15; அப் 13:43.

மரக் கம்பம். செங்குத்தான கம்பம்; கொல்லப்படப்போகும் நபரைக் கட்டி வைப்பதற்கு இது பயன்படுத்தப்பட்டது. மரண தண்டனையை நிறைவேற்றுவதற்காகவும் இறந்தவரின் உடலைத் தொங்கவிடுவதற்காகவும் சில நாடுகளில் இது பயன்படுத்தப்பட்டது; மற்றவர்களை எச்சரிப்பதற்காக அல்லது இறந்துபோனவரை அவமானப்படுத்துவதற்காக உடல்கள் இப்படித் தொங்கவிடப்பட்டன. காட்டுமிராண்டித்தனமாகப் போர் செய்வதில் பேர்போனவர்களான அசீரியர்கள், கூர்மையான கம்பங்களை எதிரிகளின் அடிவயிற்றில் குத்தி, நெஞ்சுவரைக்கும் துளைத்து, அப்படியே தொங்கவிட்டார்கள். ஆனால், யூதர்களின் சட்டப்படி, கடவுளை நிந்தித்தல், சிலைகளை வழிபடுதல் போன்ற பயங்கரமான குற்றங்களைச் செய்தவர்கள், முதலில் கல்லெறியப்பட்டோ வேறு ஏதாவது முறையிலோ கொல்லப்பட்டார்கள். பின்பு, மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருப்பதற்காக அவர்களுடைய உடல் கம்பங்களிலோ மரங்களிலோ தொங்கவிடப்பட்டது. (உபா 21:22, 23; 2சா 21:6, 9) ரோமர்கள் சில சமயங்களில் குற்றவாளிகளை வெறுமனே கம்பத்தில் கட்டித் தொங்கவிட்டார்கள். வலியாலும், தாகத்தாலும், பசியாலும், வெயிலாலும் பல நாட்கள் கஷ்டப்பட்டு பின்பு செத்துப்போவதற்காக அப்படித் தொங்கவிட்டார்கள். மற்ற சமயங்களில், இயேசுவுக்குச் செய்ததுபோல் குற்றவாளிகளின் கைகால்களை மரக் கம்பத்தில் ஆணியடித்தார்கள். (லூ 24:20; யோவா 19:14-16; 20:25; அப் 2:23, 36)—சித்திரவதைக் கம்பம் என்ற தலைப்பைப் பாருங்கள்.

மருவு. மெல்லிய கிளைகளையும் இலைகளையும் கொண்ட செடி; சுத்திகரிப்பு சடங்குகளின்போது, இரத்தத்தையோ தண்ணீரையோ தெளிப்பதற்காக இது பயன்படுத்தப்பட்டது. இதற்காக பைபிளில் பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகள் பல்வேறு வகையான செடிகளைக் குறிக்கலாம். யோவான் 19:29-ல் சொல்லப்பட்டிருப்பது, ஒரு கிளையில் கட்டப்பட்டிருந்த ஒருவகை மருவுச்செடியாக (*ஆரிகேனம் மாரு; ஆரிகேனம் சிரியாக்கம்*)

இருந்திருக்கலாம்; அல்லது, சோளப்பயிர் வகையை (*சோர்கம் வல்கேர்*) சேர்ந்ததாக இருந்திருக்கலாம். ஏனென்றால், புளிப்பான திராட்சமதுவில் முக்கியெடுக்கப்பட்ட கடற்பஞ்சை இயேசுவின் வாய்க்குப் பக்கத்தில் கொண்டு போகும் அளவுக்கு அதன் தண்டு நீளமாக இருந்தது. —யாத் 12:22; சங் 51:7.

மல்காம். ஒருவேளை, அம்மோனியர்களின் முக்கியத் தெய்வமான மோளேகாக இருக்கலாம். (செப் 1:5)—மோளேகு என்ற தலைப்பைப் பாருங்கள்.

மறுமனைவி. இரண்டாம்பட்சமான மனைவி. பெரும்பாலும், இவள் ஓர் அடிமைப் பெண்ணாக இருந்தவள்.—யாத் 21:8; 2சா 5:13; 1ரா 11:3.

மன்னா. இஸ்ரவேலர்கள் 40 வருஷங்களாக வனாந்தரத்தில் இருந்தபோது சாப்பிட்ட முக்கிய உணவு. யெகோவா இதை அவர்களுக்குக் கொடுத்தார். ஓய்வு நாளைத் தவிர ஒவ்வொரு நாள் காலையிலும், தரைமேல் இது அற்புதமாகக் கிடந்தது. பனிப் படலம் இதை மூடியிருந்தது. இஸ்ரவேலர்கள் இதை முதன்முதலில் பார்த்தபோது, "இது என்ன?" (எபிரெயுவில், *"மான் ஹூ?"*) என்று கேட்டார்கள். (யாத் 16:13-15, 35) மற்ற வசனங்களில், 'வானத்தின் தானியம்' (சங் 78:24), 'வானத்திலிருந்து வந்த உணவு' (சங் 105:40), 'பலசாலிகளின் உணவு' (சங் 78:25) என்றெல்லாம் இது விவரிக்கப்பட்டுள்ளது. இயேசுவும் மன்னாவைப் பற்றி அடையாள அர்த்தத்தில் குறிப்பிட்டார்.—யோவா 6:49, 50.

மனம் திருந்துதல். ஒருவர் தன்னுடைய பழைய வாழ்க்கையை, செய்த தவறை அல்லது செய்யத் தவறியதை நினைத்து மனப்பூர்வமாக வருந்தி, மனம் மாறுவதைக் குறிக்கிறது. உண்மையாகவே மனம் திருந்தும்போது நல்ல பலன்கள் கிடைக்கிறது, ஒருவருடைய வாழ்க்கையே மாறுகிறது.—மத் 3:8; அப் 3:19; 2பே 3:9.

மனிதகுமாரன். சுவிசேஷப் புத்தகங்களில், இந்த வார்த்தை சுமார் 80 தடவை இருக்கிறது. இது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. இந்தப் பூமியில் பிறந்ததன் மூலம், இயேசு ஒரு மனிதராகவே ஆனார், அவர் வெறுமனே மனித உடலில் வந்த ஒரு தேவதூதர் அல்ல என்பதை இந்த வார்த்தை காட்டுகிறது. தானியேல் 7:13, 14-ல் உள்ள தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றுவார் என்பதையும் இந்த வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. எபிரெய வேதாகமத்தில், எசேக்கியேலுக்கும் தானியேலுக்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவர்களைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கும், இவர்கள் சொன்ன செய்தியின் சொந்தக்காரரான கடவுளுக்கும் இருக்கும் வித்தியாசத்தைத் தெளிவாய்க் காட்டுவதற்காக இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—எசே 3:17; தானி 8:17; மத் 19:28; 20:28.

மஸ்கீல். 13 சங்கீதங்களின் மேல்குறிப்புகளில் இது இருக்கிறது. இசை சம்பந்தப்பட்ட இந்த எபிரெய வார்த்தையின் அர்த்தம் சரியாகத் தெரியவில்லை. ஒருவேளை, "தியானக் கவிதை" என்பது இதன் அர்த்தமாக இருக்கலாம். இதைப் போன்றே இருக்கிற இன்னொரு வார்த்தை "விவேகமாகச் சேவை செய்" என்று மொழிபெயர்க்கப்படுகிறது. அதனால், இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் அர்த்தம் ஒன்றாக இருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள்.—2நா 30:22; சங் 32-ன் மேல்குறிப்பு.

மாதப்பிறப்பு. யூத காலண்டரில் இருக்கும் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாள். இந்த நாளில், மக்கள் ஒன்றுகூடி வந்தார்கள், விருந்து சாப்பிட்டார்கள், விசேஷ பலிகளைக் கொடுத்தார்கள். பிற்பாடு, இது முக்கியமான தேசிய பண்டிகையாக ஆனது; மக்கள் அன்று எந்த வேலையும் செய்யவில்லை. —எண் 10:10; 2நா 8:13; கொலோ 2:16.

மாநாடு. ஒன்றுகூடும்படி அழைக்கப்பட்ட சமயத்தில் கூடி வந்த மக்கள் கூட்டம். எபிரெய வேதாகமத்தில் இந்த வார்த்தை பெரும்பாலும் மதப் பண்டிகைகளுக்காக அல்லது தேசத்தின் மிக முக்கிய நிகழ்ச்சிகளுக்காக இஸ்ரவேலர்கள் கூடிவந்ததைக் குறிக்கிறது.—உபா 16:8; 1ரா 8:5.

மாநில ஆளுநர். ரோமக் குடியரசின் ஆட்சிப்பேரவையால் நிர்வகிக்கப்பட்ட ஒரு மாநிலத்தின் முக்கிய ஆளுநர். தீர்ப்பு கொடுக்கிற அதிகாரமும் ராணுவ அதிகாரமும் இவருக்கு இருந்தது. இவர் எடுக்கிற தீர்மானங்கள் சரியா, தவறா என்று விசாரிக்கும் உரிமை ஆட்சிப்பேரவைக்கு இருந்தது. ஆனாலும், மாநிலத்தைப் பொறுத்தவரை இவருக்குத்தான் முழு அதிகாரம் இருந்தது.—அப் 13:7; 18:12.

மார்க்கம். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் "இந்த மார்க்கத்தை" சேர்ந்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றினார்கள், இயேசுமீது விசுவாசம் வைத்திருப்பதைத் தங்கள் வாழ்க்கை முறை மூலம் காட்டினார்கள்.—அப் 19:9.

மார்ப்பதக்கம். பரிசுத்த அறைக்குள் போகும்போதெல்லாம் தலைமைக் குரு தன் மார்பில் கட்டிக்கொண்ட ஒரு சின்னப் பை. விலை உயர்ந்த கற்கள் இதில் பதிக்கப்பட்டிருந்தன. யெகோவாவின் தீர்ப்புகளைத் தெரிந்துகொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஊரீமும் தும்மீமும் இந்த மார்ப்பதக்கத்தில் இருந்ததால் இது 'நியாயத்தீர்ப்பு மார்ப்பதக்கம்' என்று அழைக்கப்பட்டது. (யாத் 28:15-30)—இணைப்பு B5-ஐப் பாருங்கள்.

மாறாத அன்பு. *கிசெத்* என்ற எபிரெய வார்த்தை பெரும்பாலும் இப்படி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கடமையுணர்ச்சி, உத்தம குணம், உண்மைத்தன்மை, பற்று ஆகியவற்றால் தூண்டப்படுகிற அன்பை இது குறிக்கிறது. மனிதர்கள்மீது கடவுள் வைத்திருக்கும் அன்பைப் பற்றிச் சொல்வதற்கு இந்த வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. மனிதர்களுக்கு இடையே காட்டப்படுகிற அன்பையும் இது குறிக்கிறது.—யாத் 34:6; ரூ 3:10, அடிக்குறிப்பு.

மிக்தாம். மொத்தம் ஆறு சங்கீதங்களின் மேல்குறிப்பில் இந்த எபிரெய வார்த்தை உள்ளது. (சங் 16, 56-60) இதன் அர்த்தம் சரியாகத் தெரியவில்லை. "எழுத்துப் பொறிப்பு" என்பதோடு சம்பந்தப்பட்ட வார்த்தையாக இது இருக்கலாம்.

மிகுந்த உபத்திரவம். "உபத்திரவம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை, பயங்கரமான சூழ்நிலை காரணமாக வருகிற கஷ்டத்தையும் வேதனையையும் குறிக்கிறது. எருசலேமுக்கு அதுவரை வந்திருக்காத "மிகுந்த உபத்திரவம்" வரும் என்று இயேசு சொன்னார். குறிப்பாக, தான் எதிர்காலத்தில் 'மகிமையோடு வரும்போது' மனிதகுலத்துக்கு மிகுந்த உபத்திரவம் வரும் என்று சொன்னார். (மத் 24:21, 29-31) 'கடவுளைப் பற்றித் தெரியாதவர்களுக்கும் இயேசுவைப் பற்றிய நல்ல செய்திக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும்' எதிராகக் கடவுள் எடுக்கப்போகிற நீதியான நடவடிக்கைதான் மிகுந்த உபத்திரவம் என்று பவுல் விளக்கினார். 'மூர்க்க மிருகத்துக்கும் பூமியின் ராஜாக்களுக்கும் அவர்களுடைய படைவீரர்களுக்கும்' எதிராக இயேசு தன்னுடைய பரலோகப் படைவீரர்களோடு வருவார் என்று வெளிப்படுத்துதல் 19-ஆம் அதிகாரம் சொல்கிறது. (2தெ 1:6-8; வெளி 19:11-21) இந்த மிகுந்த உபத்திரவத்திலிருந்து ஒரு 'திரள் கூட்டம்' தப்பிக்கப்போகிறது என்றும் பைபிள் சொல்கிறது. (வெளி 7:9, 14)—அர்மகெதோன் என்ற தலைப்பைப் பாருங்கள்.

மில்கோம். அம்மோனியர்களின் தெய்வம். இது அநேகமாக மோளேகுவாக இருக்கலாம். (1ரா 11:5, 7) தன்னுடைய ஆட்சிக் காலத்தின் முடிவில், சாலொமோன் இந்தப் பொய் தெய்வத்துக்காக ஆராதனை மேடுகளைக் கட்டினார்.—மோளேகு என்ற தலைப்பைப் பாருங்கள்.

மில்லோ. தாவீதின் நகரம் அமைந்திருந்த இடம் அல்லது அதன் கட்டமைப்பு. இது ஒருவேளை ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சுவராக அல்லது வேறொரு ஆதாரக் கட்டமைப்பாக இருந்திருக்கலாம்.—2சா 5:9; 1ரா 11:27.

மினா. எசேக்கியேல் புத்தகத்தில் மேனா என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒரு எடையாகவும் நாணயமாகவும் பயன்படுத்தப்பட்டது. ஒரு மினா என்பது 50 சேக்கலுக்குச் சமம் என்பதும், ஒரு சேக்கலின் எடை 11.4 கிராம் என்பதும் புதைபொருள் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால், எபிரெய வேதாகமத்தில் உள்ள மினாவின் எடை 570 கிராம். இரண்டு விதமான முழ அளவுகள் இருந்ததைப் போல, மினாவிலும் சாதாரண மினா, ராஜ மினா என்று இரண்டு வகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில், ஒரு மினா 100 திராக்மாவுக்குச் சமம். அதன் எடை 340 கிராம். 60 மினா ஒரு தாலந்துக்குச் சமம். (எஸ்றா 2:69, அடிக்குறிப்பு; லூ 19:13)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

மீட்கும் உரிமையுள்ளவர். அடிமையாக இருக்கிற ஒருவரை அல்லது ஒருவருடைய சொத்தை மீட்பதற்கான உரிமையும் கடமையும் உள்ள நெருங்கிய உறவினர். (லேவி 25:25-27, 47-54) அதோடு, ஒருவர் இறந்துவிட்டால், அவருடைய மனைவியைத் திருமணம் செய்து வாரிசு உருவாக்கும் கடமையுள்ள நெருங்கிய உறவினர்.—ரூ 4:7-10.

மீட்புவிலை. அடிமைத்தனம், தண்டனை, கஷ்டம், பாவம் ஆகியவற்றிலிருந்து அல்லது ஏதோ ஒரு கடமையிலிருந்து விடுபடுவதற்காகக் கொடுக்கப்படும் தொகை. பணம் மட்டுமே மீட்புவிலையாகக் கொடுக்கப்படவில்லை. (ஏசா 43:3) பல்வேறு சூழ்நிலைகளில் மீட்புவிலை தேவைப்பட்டது. உதாரணத்துக்கு, முதலில் பிறந்த ஆண் பிள்ளைகள் அல்லது மிருகங்களின் முதல் ஆண் குட்டிகள் யெகோவாவுக்குச் சொந்தமாக இருந்தன. யெகோவாவின் சேவைக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டிய இந்தப் பிள்ளைகளை அல்லது குட்டிகளை, அதிலிருந்து விடுவிப்பதற்கு மீட்புவிலை தேவைப்பட்டது. (எண் 3:45, 46; 18:15, 16) கட்டிவைக்கப்படாத ஒரு முரட்டு மாடு யாரையாவது கொன்றுவிட்டால், அந்த மாட்டின் சொந்தக்காரர் மரண தண்டனையிலிருந்து விடுபடுவதற்காக மீட்புவிலை கொடுக்க வேண்டியிருந்தது. (யாத் 21:29, 30) ஆனால், வேண்டுமென்றே கொலை செய்தவருக்காகக் கொடுக்கப்பட்ட மீட்புவிலை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. (எண் 35:31) கீழ்ப்படிதலுள்ள மனிதர்களைப் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுவிப்பதற்காக இயேசு தன் உயிரையே பலியாகக் கொடுத்தார். இந்த மீட்புவிலையைப் பற்றித்தான் பைபிள் முக்கியமாகப் பேசுகிறது.—சங் 49:7, 8; மத் 20:28; எபே 1:7.

முத்திரை. அடையாளம் பதிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள். பொதுவாக, களிமண்மீது அல்லது மெழுகு மீது முத்திரை போடப்பட்டது. ஒரு பொருளின் உரிமையாளர் யார் என்பதைக் காட்டுவதற்கு, நம்பகத்தன்மையைக் காட்டுவதற்கு, அல்லது ஒரு விஷயத்தை ஒத்துக்கொண்டதைக் காட்டுவதற்கு முத்திரை போடப்பட்டது. பண்டைய கால முத்திரைகள், கடினமான பொருளால் (கல், யானைத் தந்தம் அல்லது மரத்தால்) செய்யப்பட்டன. இதில், எழுத்துக்கள் அல்லது உருவங்கள் தலைகீழாகப் பொறிக்கப்பட்டிருந்தன. ஒரு விஷயம் நம்பகமானது, ரகசியமானது அல்லது ஏதோவொன்று ஒருவருக்குச் சொந்தமானது என்பதைக் காட்டுவதற்கு முத்திரை என்ற வார்த்தை அடையாள அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.—யாத் 28:11; நெ 9:38; வெளி 5:1; 9:4.

முத்திரை மோதிரம். ஒருவகை முத்திரை; இது விரலில் போடப்பட்டிருந்தது அல்லது ஒரு சிறிய கயிற்றில் கட்டப்பட்டிருந்தது; அநேகமாக, கழுத்தில் தொங்கவிடப்பட்டிருக்கலாம். ஓர் அதிகாரியின் அல்லது ஆட்சியாளரின் அதிகாரத்தை இது குறித்தது. (ஆதி 41:42)—முத்திரை என்ற தலைப்பைப் பாருங்கள்.

முத்லபேன். 9-ஆம் சங்கீதத்தின் மேல்குறிப்பிலுள்ள வார்த்தை. “மகனுடைய மரணத்தைப் பற்றியது” என்பது இதன் அர்த்தம் எனப் பல காலமாக நம்பப்பட்டுவருகிறது. இது ஒரு பிரபல பாடலின் பெயராகவோ, அதன் ஆரம்ப வார்த்தையாகவோ இருந்திருக்கலாம்; இந்தப் பாடலின் இசையை 9-ஆம் சங்கீதத்தைப் பாடுவதற்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்று சிலர் சொல்கிறார்கள்.

முதல் பிறப்பு. முக்கியமாக, ஓர் ஆணின் (ஒரு பெண்ணின் அல்ல) மூத்த மகனைக் குறிக்கிறது. பைபிள் காலங்களில், மூத்த மகனுக்கு விசேஷ அந்தஸ்து இருந்தது. அப்பா இறந்த பின்பு குடும்பத்தின் தலைமை ஸ்தானம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. முதல் பிறப்பு என்ற வார்த்தை மிருகங்களின் முதல் ஆண்குட்டியைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.—யாத் 11:5; 13:12; ஆதி 25:33; கொலோ 1:15, அடிக்குறிப்பு.

முதல் விளைச்சல். அறுவடைக் காலத்தில் கிடைக்கிற முதல் விளைபொருள்; ஒன்றிலிருந்து கிடைக்கிற முதல் பலன் அல்லது முதல் விளைபொருள். இஸ்ரவேலர்கள் தங்களுடைய முதல் விளைச்சலைத் தனக்குக் கொடுக்க வேண்டும் என்று யெகோவா கட்டளையிட்டிருந்தார். இது முதல் மகனாகவோ, முதல் குட்டியாகவோ, நிலத்தின் முதல் விளைபொருளாகவோ இருக்கலாம். புளிப்பில்லாத ரொட்டிப் பண்டிகையின்போதும், பெந்தெகொஸ்தே பண்டிகையின்போதும், இஸ்ரவேலர்கள் ஒரு தேசமாகத் தங்கள் முதல் விளைச்சலைக் கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்கள். கிறிஸ்துவையும் பரலோக நம்பிக்கையுள்ளவர்களையும் குறிப்பிடும்போதுகூட ‘முதல் விளைச்சல்’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—1கொ 15:23, அடிக்குறிப்பு; எண் 15:21; நீதி 3:9; வெளி 14:4.

முதன்மை குரு. எபிரெய வேதாகமத்தில் ‘தலைமைக் குருவின்’ மற்றொரு பட்டப்பெயர். கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில், குருத்துவச் சேவை செய்த முக்கியமான ஆட்களைக் குறிப்பிடுவதற்கும் இது பயன்படுத்தப்பட்டது. அநேகமாக, குருத்துவச் சேவையிலிருந்து நீக்கப்பட்ட தலைமைக் குருமார்களையும் 24 குருத்துவப் பிரிவுகளின் தலைவர்களையும் குறிப்பிடுவதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.—2நா 26:20; எஸ்றா 7:5; மத் 2:4; மாற் 8:31.

முழம். தோராயமாக, முழங்கையிலிருந்து நடுவிரலின் நுனிவரை உள்ள அளவு. பொதுவாக, இஸ்ரவேலர்கள் பயன்படுத்திய முழத்தின் அளவு 44.5 செ.மீ. (17.5 அங்குலம்). இதைத் தவிர, பெரிய முழத்தையும் அவர்கள் பயன்படுத்தினார்கள். இது முழத்தைவிட ஒரு கையளவு கூடுதலாக இருந்தது. இதன் அளவு சுமார் 51.8 செ.மீ. (20.4 அங்குலம்). (ஆதி 6:15; லூ 12:25, அடிக்குறிப்பு)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

மூப்பர்கள்; பெரியோர்கள். பொதுவாக, வயதில் மூத்தவர்கள் என்று அர்த்தம்; பைபிளின்படி, சமுதாயத்திலோ தேசத்திலோ அதிகாரமும் பொறுப்பும் உள்ள நபர்களை இது குறிக்கிறது. பரலோக ஜீவிகளைப் பற்றிச் சொல்வதற்கும் இந்த வார்த்தை வெளிப்படுத்துதல் புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்தவ சபையை வழிநடத்துகிறவர்களைப் பற்றிச் சொல்லும்போது *பிரஸ்பிட்டிரோஸ்* என்ற கிரேக்க வார்த்தை “மூப்பர்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.—யாத் 4:29; நீதி 31:23; 1தீ 5:17; வெளி 4:4.

மூலைக்கல். ஒரு கட்டிடத்தின் இரண்டு சுவர்கள் இணையும் இடத்தில், மூலையில் வைக்கப்பட்ட கல்; சுவர்களை இணைப்பதற்கும் அவை இடிந்துவிழாமல் இருப்பதற்கும் இது அவசியமாக இருந்தது. அஸ்திவாரத்தில்

வைக்கப்பட்ட மூலைக்கல் முக்கியமான மூலைக்கல்லாக இருந்தது. பொதுக் கட்டிடங்களையும் நகரத்தின் மதில்களையும் கட்டுவதற்கு மிக உறுதியான மூலைக்கல் தேர்ந்தெடுக்கப்பட்டது. பூமி படைக்கப்பட்டதைப் பற்றிச் சொல்வதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆன்மீக வீடாக இருக்கிற கிறிஸ்தவ சபையின் "மூலைக்கல்" என்று இயேசு அழைக்கப்படுகிறார்.—எபே 2:20; யோபு 38:6.

மெரொதாக். பாபிலோன் நகரத்தின் முக்கியத் தெய்வம். பாபிலோனின் ராஜாவும் சட்டத்தொகுப்பை உருவாக்கியவருமான ஹமுராபி, பாபிலோன் நகரத்தை பாபிலோனியாவின் தலைநகரமாக்கிய பிறகு, மெரொதாக்குக்கு (அதாவது, மார்டுக்குக்கு) அதிக முக்கியத்துவம் கிடைக்க ஆரம்பித்தது. கடைசியில், முன்பு இருந்த மற்ற பாபிலோனிய தெய்வங்களுக்குப் பதிலாக, இது முக்கியத் தெய்வமானது. பிற்காலத்தில், மெரொதாக் (அதாவது, மார்டுக்) என்ற பெயருக்குப் பதிலாக "பேலு" ("எஜமான்") என்ற பட்டப்பெயர் பயன்படுத்தப்பட்டது. மெரொதாக் பொதுவாக, பேல் என்று அழைக்கப்பட்டது.—எரே 50:2.

மேசியா. இதற்கு "அபிஷேகம் செய்யப்பட்டவர்" என்று அர்த்தம்; இது ஓர் எபிரெய வார்த்தையிலிருந்து வந்தது. "கிறிஸ்து" என்ற வார்த்தைக்கும் இதே அர்த்தம்தான்; இது கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது.—தானி 9:25; யோவா 1:41.

மேதியர்கள்; மேதியா. யாப்பேத்தின் மகனான மாதாயின் வம்சத்தில் வந்தவர்கள்தான் மேதியர்கள். மலைப்பகுதியான ஈரான் பீடபூமியில் இவர்கள் குடியேறினார்கள். பிற்பாடு இது மேதிய தேசமானது. அசீரியாவைத் தோற்கடிப்பதற்காக பாபிலோனியர்களோடு மேதியர்கள் சேர்ந்துகொண்டார்கள். பெர்சியா அந்தச் சமயத்தில் மேதியாவின் கீழ் ஒரு மாகாணமாக இருந்தது. கோரேஸ் கலகம் செய்ததால், பெர்சியாவோடு மேதியா இணைக்கப்பட்டு மேதிய-பெர்சிய சாம்ராஜ்யம் உருவானது. புதிய பாபிலோன் சாம்ராஜ்யத்தை கி.மு. 539-ல் இது தோற்கடித்தது. கி.பி. 33 பெந்தெகொஸ்தே நாளன்று மேதியர்கள் சிலர் எருசலேமில் இருந்தார்கள். (தானி 5:28, 31; அப் 2:9) —இணைப்பு B9-ஐப் பாருங்கள்.

மேல்குறிப்பு. சில சங்கீதங்களின் ஆரம்பத்தில் இருக்கும் தலைப்பு. சங்கீதத்தை எழுதியவருடைய பெயர், அது எழுதப்பட்ட சூழல், இசைக் குறிப்புகள், எழுதப்பட்டதற்கான காரணம் அல்லது நோக்கம் ஆகியவற்றை நாம் தெரிந்துகொள்வதற்காக இது கொடுக்கப்பட்டுள்ளது.—சங்கீதம் 3, 4, 5, 6, 7, 30, 38, 60, 92, 102 ஆகியவற்றின் மேல்குறிப்புகளைப் பாருங்கள்.

மைல். இது தூரத்தை அளக்கும் அளவீடு. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் மூலப் பதிவில் மத்தேயு 5:41-ல் மட்டும்தான் இந்த வார்த்தை வருகிறது. இது சுமார் 1.5 கிலோமீட்டர் (4,854 அடி) நீளமுள்ள ரோம மைலைக் குறிக்கிறது. —இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

மோளேகு. அம்மோனியர்களின் தெய்வம். மல்காம், மில்கோம், மோளோகு ஆகிய தெய்வங்களும் இதுவும் ஒரே தெய்வமாக இருக்கலாம். இந்தப் பெயர் ஒரு தெய்வத்தின் தனிப்பட்ட பெயராக இல்லாமல் ஒரு பட்டப்பெயராக இருக்கலாம். மோளேகு தெய்வத்துக்குத் தங்கள் பிள்ளைகளைப் பலி கொடுப்பவர்கள் கொல்லப்பட வேண்டுமென திருச்சட்டம் கட்டளையிட்டது.—லேவி 20:2; எரே 32:35; அப் 7:43.

மோளோகு.—மோளேகு என்ற தலைப்பைப் பாருங்கள்.

ய

யாக்கோபு. ஈசாக்கு மற்றும் ரெபெக்காளின் மகன். பிற்பாடு, கடவுள் இவருக்கு இஸ்ரவேல் என்று பெயர் வைத்தார். இவர் இஸ்ரவேல் மக்களின் மூதாதை ஆனார். (இவர்கள் இஸ்ரவேலர்கள் என்றும், பிற்பாடு யூதர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள்.) இவருடைய 12 மகன்களும் அவர்களுடைய வம்சத்தாரும்தான் இஸ்ரவேல் தேசத்தின் 12 கோத்திரங்களாக ஆனார்கள். இஸ்ரவேல் தேசத்தையும் இஸ்ரவேல் மக்களையும் குறிப்பிடுவதற்கு யாக்கோபு என்ற பெயர் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது.—ஆதி 32:28; மத் 22:32.

யூதர். இஸ்ரவேலின் பத்துக் கோத்திர ராஜ்யம் வீழ்ச்சி அடைந்த பின்பு, யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வார்த்தை. (2ரா 16:6) பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு இஸ்ரவேலுக்குத் திரும்பி வந்த வெவ்வேறு கோத்திரங்களைச் சேர்ந்த இஸ்ரவேலர்களைக் குறிப்பிடுவதற்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. (எஸ்றா 4:12) பிற்பாடு, மற்ற தேசத்து மக்களிடமிருந்து இஸ்ரவேலர்களை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்காக உலகம் முழுவதும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. (எஸ்தர் 3:6) ஒருவர் எந்தத் தேசத்தைச் சேர்ந்தவர் என்பது கிறிஸ்தவ சபையில் முக்கியம் அல்ல என்பதை விளக்கும்போது பவுல் இந்த வார்த்தையை அடையாள அர்த்தத்தில் பயன்படுத்தினார்.—ரோ 2:28, 29; கலா 3:28.

யூதா. யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த நான்காவது மகன். என்றென்றும் ஆட்சி செய்கிற மகத்தான ராஜா ஒருவர் யூதா வம்சத்திலிருந்து வருவார் என்று தான் சாவதற்கு முன்பு யாக்கோபு தீர்க்கதரிசனமாகச் சொன்னார். யூதா வம்சத்தில்தான் இயேசு பிறந்தார். யூதா என்ற பெயர் யூதா கோத்திரத்தையும், பிற்பாடு யூதா ராஜ்யத்தையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. யூதா ராஜ்யம், தெற்கு ராஜ்யம் என்று அழைக்கப்பட்டது. யூதா, பென்யமீன் கோத்திரத்தாரும் குருமார்களும் லேவியர்களும் இந்த ராஜ்யத்தில் இருந்தார்கள். தேசத்தின் தெற்குப் பகுதியில் இருந்த யூதா ராஜ்யத்தில்தான் எருசலேமும் ஆலயமும் இருந்தன.—ஆதி 29:35; 49:10; 1ரா 4:20; எபி 7:14.

யூப்ரடிஸ். தென்மேற்கு ஆசியாவின் மிகவும் நீளமான, மிகவும் முக்கியமான ஆறு. மெசொப்பொத்தாமியாவின் இரண்டு பெரிய ஆறுகளில் இதுவும் ஒன்று. இந்தப் பெயர் முதன்முதலில் ஆதியாகமம் 2:14-ல் வருகிறது. ஏதேனின் நான்கு ஆறுகளில் இதுவும் ஒன்று. இது பல வசனங்களில், பெயர் குறிப்பிடப்படாமல் 'ஆறு' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ஆதி 31:21) இஸ்ரவேலர்களுடைய தேசத்தின் வடக்கு எல்லையில் இது இருந்தது. (ஆதி 15:18; வெளி 16:12)—இணைப்பு B2-ஐப் பாருங்கள்.

யெகோவா. கடவுளுடைய பெயரைக் குறிக்கிற நான்கு எபிரெய எழுத்துக்களின் தமிழ் மொழிபெயர்ப்பு. இந்த பைபிளில் இது 7,000-க்கும் அதிகமான தடவை இருக்கிறது. —இணைப்பு A4 மற்றும் A5-ஐப் பாருங்கள்.

ர

ரதம். குதிரைகளால் இழுத்துச் செல்லப்பட்ட இரண்டு சக்கர வாகனம். இது பெரும்பாலும் போரில் பயன்படுத்தப்பட்டது. —யாத் 14:23; நியா 4:13; அப் 8:28.

ராகாப். யோபு, சங்கீதம், ஏசாயா ஆகிய புத்தகங்களில் இந்த வார்த்தை அடையாள அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (இது யோசுவா புத்தகத்தில் உள்ள ராகாப் அல்ல.) யோபு புத்தகத்தில், வசனங்களின் சூழமைவை வைத்து, இது ஒரு ராட்சதக் கடல் பிராணி என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. மற்ற வசனங்களில், இந்தக் கடல் பிராணி எகிப்துக்கு அடையாளமாக இருக்கிறது.—யோபு 9:13; சங் 87:4; ஏசா 30:7; 51:9, 10.

ராட்சதர்கள். பெருவெள்ளத்துக்கு முன்பு, மனித உருவில் வந்த தேவதூதர்களுக்கும் பூமியிலிருந்த பெண்களுக்கும்

பிறந்த ஆண் பிள்ளைகள். இவர்கள் மிகவும் கொடூரமான வர்களாக இருந்தார்கள்.—ஆதி 6:4.

ரூவக்; நியூமா. எபிரெய வார்த்தையான *ரூவக்*, கிரேக்க வார்த்தையான *நியூமா* ஆகியவை பெரும்பாலான தமிழ் பைபிள்களில் ஆவி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இது சரியான மொழிபெயர்ப்பு கிடையாது. ஏனென்றால், மனிதர்களுக்குள் அழியாத ஆவி ஒன்று இருக்கிறது என்ற பொய் நம்பிக்கையை அவை ஆதரிக்கின்றன. "சுவாசம்" என்பதுதான் *ரூவக், நியூமா* ஆகிய வார்த்தைகளின் அடிப்படை அர்த்தம். இவற்றுக்கு (1) காற்று, (2) உயிர்சக்தி, (3) ஏதோவொரு விஷயத்தைச் சொல்லவோ செய்யவோ ஒருவருடைய இதயத்தில் ஏற்படும் தூண்டுதல், (4) கடவுளிடமிருந்து அல்லது பேய்களிடமிருந்து வரும் செய்திகள், (5) பரலோக ஜீவிகள் அல்லது பேய்கள், (6) கடவுளுடைய சக்தி என வேறுபல அர்த்தங்களும் இருக்கின்றன. அதனால், இந்த மொழிபெயர்ப்பில் சூழமைவுக்கு ஏற்றபடி இந்த வார்த்தைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ரோம அரசனின் மெய்க்காவல் படை. ரோம அரசனைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டிருந்த ரோமப் படைவீரர்களின் குழு. அரசனை ஆதரிக்கும் அளவுக்கு அல்லது அவருடைய ஆட்சியைக் கவிழ்க்கும் அளவுக்கு மிகப் பெரிய அரசியல் சக்தியாக இந்தப் படை உருவெடுத்தது. —பிலி 1:13.

ல

லாகு. பைபிளில் சொல்லப்பட்டுள்ள மிகச் சிறிய திரவ அளவை. யூத தால்முட்டின்படி, இது ஹின் அளவின் 12-ல் ஒரு பங்கு. அப்படியானால், லாகு என்பது 0.31 லிட்டர். (லேவி 14:10, அடிக்குறிப்பு)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

லிவியாதான். இந்தப் பிராணி பொதுவாகத் தண்ணீரோடு சம்பந்தப்படுத்தப்படுகிறது. அநேகமாக, நீர்வாழ் உயிரினமாக இருக்கலாம். யோபு 3:8-லும் 41:1-லும் உள்ள இந்த வார்த்தை, முதலையை அல்லது தண்ணீரில் வாழும் அபார பலம்கொண்ட ஒரு ராட்சதப் பிராணியைக் குறிப்பதாகத் தெரிகிறது. சங்கீதம் 104:26-ல் இந்த வார்த்தை ஒருவகை திமிங்கலத்தைக் குறிக்கலாம். மற்ற இடங்களில், அடையாள அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது; எந்த ஒரு குறிப்பிட்ட உயிரினத்தோடும் சம்பந்தப்படுத்த முடியவில்லை.—சங் 74:14; ஏசா 27:1.

லீபனோன் மலைத்தொடர். லீபனோன் தேசத்தில் இருக்கிற இரண்டு மலைத்தொடர்களில் ஒன்று. இந்த மலைத்தொடர் மேற்கில் இருக்கிறது, இதற்கு எதிராக இருக்கிற மலைத்தொடர் கிழக்கு லீபனோன் மலைத்தொடர் என்றழைக்கப்படுகிறது. நீளமான, செழிப்பான ஒரு பள்ளத்தாக்கு இந்த இரண்டு மலைத்தொடர்களையும் பிரிக்கிறது. இந்த மலைத்தொடர் மத்தியதரைக் கடலோரத்திலிருந்தே ஆரம்பித்துவிடுகிறது; இதன் மலைச் சிகரங்களின் உயரம் சராசரியாக 1,800-லிருந்து 2,100 மீட்டர் வரையாக (6,000-லிருந்து 7,000 அடி வரையாக) இருக்கிறது. பூர்வ காலங்களில், உயர்ந்தோங்கிய தேவதாரு மரங்கள் லீபனோன் முழுவதும் ஏராளமாக இருந்தன. சுற்றியுள்ள தேசங்களில் இந்த மரங்களுக்கு அதிக மதிப்பு இருந்தது. (உபா 1:7; சங் 29:6; 92:12)—இணைப்பு B7-ஐப் பாருங்கள்.

லெப்டன். கிறிஸ்தவ கிரேக்க வேதாகமக் காலப்பகுதியில், யூதர்கள் பயன்படுத்திய மிகச் சிறிய காசு. இது செம்பால் அல்லது வெண்கலத்தால் தயாரிக்கப்பட்டிருந்தது. (மாற் 12:42, லூ 21:2 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்.) —இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

லேவி; லேவியர்கள். யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த மூன்றாவது மகன்; இவருடைய பெயர் ஒரு கோத்திரத்துக்கும் கொடுக்கப்பட்டது. லேவியர்களுடைய மூன்று முக்கியப் பிரிவுகள் இவருடைய மூன்று மகன்களின் மூலமாகத்தான் வந்தன. சில சமயம் "லேவியர்கள்" என்ற வார்த்தை, அந்தக் கோத்திரத்தார் எல்லாரையுமே குறிக்கிறது. ஆனால் பொதுவாக, குருமார்களான ஆரோனின் வம்சத்தார் இதில் சேர்க்கப்படுவதில்லை. வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தில், லேவி கோத்திரத்தாருக்குப் பங்கு கொடுக்கப்படவில்லை. ஆனால், மற்ற கோத்திரங்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்கிலிருந்து மொத்தம் 48 நகரங்கள் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.—உபா 10:8; 1நா 6:1; எபி 7:11.

வ

வழிபாட்டுக் கூடாரம். எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் விடுதலையாகி வந்த பின்பு, வழிபாட்டுக்காகப் பயன்படுத்திய கூடாரம். இதை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோக முடிந்தது. கடவுளுடைய பிரசன்னத்துக்கு அடையாளமாக இருந்த ஒப்பந்தப் பெட்டி அதில் வைக்கப்பட்டிருந்தது. மக்கள் அங்கே பலி செலுத்தினார்கள், கடவுளை வணங்கினார்கள். இது சில சமயங்களில், 'சந்திப்புக் கூடாரம்' என்று அழைக்கப்பட்டது. இது மரச்சட்டங்களால் செய்யப்பட்டிருந்தது. மரச்சட்டத்தைச் சுற்றி நாரிழை விரிப்பு போடப்பட்டிருந்தது. இதில் கேருபீன் வடிவத்தில் தையல் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. வழிபாட்டுக் கூடாரம் இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று, பரிசுத்த அறை. இன்னொன்று, மகா பரிசுத்த அறை. (யோசு 18:1; யாத் 25:9)—இணைப்பு B5-ஐப் பாருங்கள்.

வாழ்வுக்கான மரம். ஏதேன் தோட்டத்தில் இருந்த ஒரு மரம். இந்த மரத்தின் பழத்துக்கு வாழ்வு தரும் சக்தி இருந்ததாக பைபிள் சொல்வதில்லை. அந்தப் பழத்தைச் சாப்பிட கடவுள் யாரை அனுமதிக்கிறாரோ, அவருக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்கும் என்ற கடவுளின் உத்தரவாதத்தை இந்த மரம் அடையாளப்படுத்தியது.—ஆதி 2:9; 3:22.

விசுவாசதுரோகம். இதற்கான கிரேக்க வார்த்தை (*அப்போஸ்டேசியா*) "தள்ளிப் போய் நிற்பது" என்ற அர்த்தத்தைத் தருகிற வினைச்சொல்லிலிருந்து வந்திருக்கிறது. இதற்கான பெயர்ச்சொல்லுக்கு "கைவிடுதல்," "விட்டுவிடுதல்," "கலகம் செய்தல்" என்ற அர்த்தங்களும் இருக்கின்றன. முக்கியமாக, உண்மை வணக்கத்திலிருந்து விலகிப்போவதைக் குறிப்பதற்கு கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—நீதி 11:9, அப் 21:21 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்; 2தெ 2:3.

விடிவெள்ளி. இதுவும் 'விடியற்கால நட்சத்திரமும்' ஒன்றுதான். சூரியன் உதிப்பதற்கு முன்பு, கிழக்கிலுள்ள தொடுவானத்தில் கடைசியாகத் தோன்றும் நட்சத்திரம். புதிய நாள் உதயமாகிவிட்டதை இது தெரியப்படுத்துகிறது.—வெளி 22:16; 2பே 1:19.

விடுதலை வருஷம். வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்துக்குள் இஸ்ரவேலர்கள் போன பின்பு வந்த ஒவ்வொரு 50-வது வருஷமும் விடுதலை வருஷம் என்று அழைக்கப்பட்டது. இந்த வருஷத்தில் நிலத்தைப் பயிர் செய்யாமல் அப்படியே விட்டுவிட வேண்டியிருந்தது, எபிரெய அடிமைகளை விடுதலை செய்ய வேண்டியிருந்தது. விற்கப்பட்ட பரம்பரை நிலங்கள் அவற்றின் சொந்தக்காரர்களுக்குத் திரும்பவும் கொடுக்கப்பட வேண்டியிருந்தது. அந்த வருஷம் முழுவதும் பண்டிகை வருஷமாக, சுதந்திர வருஷமாக இருந்தது என்று சொல்லலாம். இஸ்ரவேல் தேசத்தைக் கடவுள் முதன்முதலில் உருவாக்கிய போது இஸ்ரவேலர்கள் அனுபவித்த நல்ல நிலையை விடுதலை வருஷத்தில் மறுபடியும் அனுபவித்தார்கள்.—லேவி 25:10.

விண்ணரசி. எரேமியாவின் காலத்தில், விசுவாசதுரோக இஸ்ரவேலர்கள் வணங்கிய பெண் தெய்வத்தின் பட்டப்பெயர். இஷ்டார் (அஸ்டார்ட்) என்ற பாபிலோனியப் பெண்

தெய்வத்தை இது குறிக்கலாம் என்று சிலர் சொல்கிறார்கள். இந்தப் பெண் தெய்வத்துக்கு இணையான இனென்னா என்ற சுமேரிய தெய்வத்துடைய பெயரின் அர்த்தமும் விண்ணரசி என்பதுதான். விண்ணுக்கு அரசி என்று சொல்லப்பட்டாலும், இது ஒரு கருவள தெய்வமாக இருந்தது. எகிப்திய கல்வெட்டு ஒன்றில், "விண்ணகப் பெண்" என்று அழைக்கப்படுகிறது.—எரே 44:19.

விபச்சாரக்காரர். தன்னுடைய கணவனாகவோ மனைவியாகவோ இல்லாத நபரோடு உடலுறவு வைத்துக்கொள்கிறவர். இது பெரும்பாலும் பணத்துக்காகச் செய்யப்படுகிறது. ("விபச்சாரி" என்பதற்கான கிரேக்க வார்த்தை *பார்னி* என்பதாகும். இது "விற்பனைக்கு" என்ற அர்த்தத்தைத் தரும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது.) ஆண் விபச்சாரக்காரர்களைப் பற்றி பைபிளில் சொல்லப்பட்டிருந்தாலும் பொதுவாக இந்த வார்த்தை பெண்களைக் குறிக்கிறது. கோயிலுக்கு வருமானம் சேர்ப்பதற்காக, அங்கே விபச்சாரக்காரர்களை வைத்திருப்பது பொய் மத பழக்கமாக இருந்தது. ஆனால், திருச்சட்டத்தின்படி விபச்சாரம் தண்டனைக்குரிய செயலாக இருந்தது. விபச்சாரத்தின் மூலம் கிடைத்த கூலி யெகோவாவின் ஆலயத்தில் காணிக்கையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. (உபா 23:17, 18; 1ரா 14:24) கடவுளை வணங்குவதாகச் சொல்லிக்கொண்டு, ஏதோவொரு விதத்தில் சிலை வழிபாட்டில் ஈடுபடுகிற மக்களை, தேசங்களை அல்லது அமைப்புகளைக் குறிப்பதற்கும் இந்த வார்த்தையை பைபிள் பயன்படுத்துகிறது. உதாரணத்துக்கு, "மகா பாபிலோன்" என்று அழைக்கப்படும் மத அமைப்பை வெளிப்படுத்துதல் புத்தகம் "விபச்சாரி" என்று சொல்கிறது. ஏனென்றால், அதிகாரத்துக்காகவும் பணம் பொருளுக்காகவும் இந்த உலக ஆட்சியாளர்களோடு இவள் கூட்டுச் சேர்ந்திருக்கிறாள்.—வெளி 17:1-5; 18:3; 1நா 5:25, அடிக்குறிப்பு.

விரதம். குறிப்பிட்ட சமயத்துக்கு எந்த உணவும் சாப்பிடாமல் இருப்பது. பாவப் பரிகார நாளிலும், கஷ்ட காலங்களிலும், கடவுளுடைய வழிநடத்துதல் தேவைப்பட்ட சமயங்களிலும் இஸ்ரவேலர்கள் விரதம் இருந்தார்கள். தங்கள் வரலாற்றில் நடந்த மோசமான சம்பவங்களை நினைத்துப் பார்ப்பதற்காக, வருஷத்தில் நான்கு தடவை விரதம் இருக்கும் வழக்கத்தை யூதர்கள் ஏற்படுத்தினார்கள். கிறிஸ்தவர்கள் விரதம் இருக்கும்படி எதிர்பார்க்கப்படுவதில்லை.—எஸ்றா 8:21; ஏசா 58:6; லூ 18:12.

விருத்தசேதனம். ஆண் பிறப்புறுப்பின் நுனித்தோலை நீக்குவது. ஆபிரகாமும் அவருடைய வம்சத்தாரும் இதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டியிருந்தது. ஆனால், கிறிஸ்தவர்கள் இதைச் செய்ய வேண்டியதில்லை. பல வசனங்களில், அடையாள அர்த்தத்திலும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.—ஆதி 17:10; 1கொ 7:19; பிலி 3:3.

வெட்கங்கெட்ட நடத்தை. *அசெல்ஜியா* என்பதுதான் இதற்கான கிரேக்க வார்த்தை. கடவுளுடைய சட்டங்களுக்கு விரோதமாகப் பயங்கர குற்றங்கள் செய்வதையும், வெட்கக்கேடாகவோ திமிராகவோ துணிச்சலாகவோ நடப்பதையும் இது குறிக்கிறது; அதிகாரம், சட்டங்கள், தராதரங்கள் ஆகியவற்றைக் கொஞ்சம்கூட மதிக்காமல் இருப்பதையும், அவற்றை வெறுத்து ஒதுக்குவதையும்கூட குறிக்கிறது. இது சின்னச் சின்னத் தவறுகளைக் குறிப்பதில்லை.—கலா 5:19; 2பே 2:7.

வெட்டுக்கிளிகள். ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கூட்டம் கூட்டமாகப் பறந்து போகிற பூச்சி இனம். திருச்சட்டத்தின்படி, இவை சாப்பிடுவதற்குத் தகுந்தவையாகக் கருதப்பட்டன. கூட்டம் கூட்டமாகப் பறந்து போய் வழியிலுள்ள எல்லாவற்றையும் தின்றுதீர்த்து பயங்கர நாசத்தை ஏற்படுத்திய வெட்டுக்கிளிக் கூட்டம் கொடிய தண்டனையாகக் கருதப்பட்டது.—யாத் 10:14; மத் 3:4.

வெண்சலவைக்கல் குப்பி. வாசனை எண்ணெய் ஊற்றி வைக்கப் பயன்படுத்தப்பட்ட சிறிய குப்பி. எகிப்திலுள்ள அலபாஸ்ட்ரான் என்ற இடத்துக்குப் பக்கத்தில் கிடைத்த கல்லால் செய்யப்பட்டது. அதிலிருக்கும் விலைமதிப்புள்ள வாசனை எண்ணெய் ஒழுகாமல் இருக்க அதன் கழுத்துப் பகுதி குறுகலாகச் செய்யப்பட்டு, நன்றாக அடைக்கப்பட்டிருந்தது. அந்தக் குப்பியைச் செய்ய பயன்படுத்தப்பட்ட கல் வெண்சலவைக்கல் என்று அழைக்கப்பட்டது.—மாற் 14:3.

வெள்ளைப்போளம். இது ஒரு வாசனைப் பிசின். *காமிஃபோரா* இனத்தைச் சேர்ந்த பல்வேறு முட்செடிகளிலிருந்தோ சிறிய மரங்களிலிருந்தோ இது எடுக்கப்பட்டது. பரிசுத்த அபிஷேகத் தைலத்தைத் தயாரிப்பதற்கு இது பயன்படுத்தப்பட்டது. உடை அல்லது படுக்கை வாசனையாக இருப்பதற்காகவும் இது பயன்படுத்தப்பட்டது. மசாஜ் செய்வதற்கும் உடம்பில் பூசுவதற்கும் பயன்படுத்தப்பட்ட எண்ணெயில் இது கலக்கப்பட்டது. அடக்கம் செய்வதற்காக இறந்தவரின் உடலைத் தயார் செய்யும்போதும் இது பயன்படுத்தப்பட்டது.—யாத் 30:23; நீதி 7:17; யோவா 19:39.

வேத அறிஞர்கள். இயேசுவின் காலத்தில், எபிரெய வேதாகமத்தை நகலெடுத்த இந்த ஆண்கள் வெறுமனே நகலெடுப்பவர்களாக (செயலாளர்களாக) மட்டுமல்ல, திருச்சட்ட நிபுணர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் இயேசுவை எதிர்த்தார்கள்.—மாற் 12:38, 39; 14:1.

வேதவசனங்கள். கடவுளுடைய புத்தகத்தில் இருக்கிற பரிசுத்தமான வசனங்கள். கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் மட்டும்தான் இந்த வார்த்தை இருக்கிறது.—லூ 24:27; 2தீ 3:16.

ஜ

ஜெபக்கூடம். "ஒன்றாகக் கூட்டிச் சேர்; கூட்டம்" என்பது இதன் அர்த்தம். ஆனால் நிறைய வசனங்களில், ஜெபக்கூடம் என்ற வார்த்தை வசனங்களை வாசிப்பதற்கும், கற்றுக்கொள்வதற்கும், பிரசங்கிப்பதற்கும், ஜெபம் செய்வதற்கும் யூதர்கள் கூடிவந்த கட்டிடத்தை அல்லது இடத்தைக் குறிக்கிறது. இயேசுவின் காலத்தில் இஸ்ரவேலில் இருந்த ஓரளவு பெரிய ஊர்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஜெபக்கூடம் இருந்தது, பெரிய நகரங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஜெபக்கூடங்கள் இருந்தன.—லூ 4:16; அப் 13:14, 15.

ஷ

ஷியோல். "ஹேடீஸ்" என்ற கிரேக்க வார்த்தையோடு சம்பந்தப்பட்ட எபிரெய வார்த்தை. இறந்துபோனவர்களின் நிலையைக் குறிப்பிடுவதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.—ஆதி 37:35, சங் 16:10, அப் 2:31 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்.

ஹ

ஹின். இது ஒரு திரவ அளவை; அதோடு, திரவத்தை அளப்பதற்கான பாத்திரம். இது 3.67 லிட்டருக்குச் சமம். (யாத் 29:40, அடிக்குறிப்பு)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

ஹெர்மஸ். இது ஒரு கிரேக்க தெய்வம், சீயுசின் மகன். தெய்வங்களின் தூதுவனாகவும் பேச்சுத் திறமையுள்ள தெய்வமாகவும் இது கருதப்பட்டது. அதனால், பவுல் லீஸ்திராவில் இருந்தபோது மக்கள் அவரைத் தவறுதலாக ஹெர்மஸ் என்று அழைத்தார்கள்.—அப் 14:12.

ஹேடீஸ். இது ஒரு கிரேக்க வார்த்தை. இதற்கான எபிரெய வார்த்தை "ஷியோல்." இறந்துபோனவர்களின் நிலையைக் குறிப்பிடுவதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.—கல்லறை என்ற தலைப்பைப் பாருங்கள்.

ஹோமர். திடப்பொருளை அளக்கும் அளவை, இது கோர் அளவை போன்றது. 220 லிட்டருக்குச் சமமானது. இது பாத் அளவையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. (லேவி 27:16)—இணைப்பு B14-ஐப் பாருங்கள்.

இணைப்பு A

பைபிள் மொழிபெயர்ப்புக்கு உதவும் நியமங்கள்	A1
இந்த மொழிபெயர்ப்பின் சிறப்பம்சங்கள்	A2
பைபிள் நமக்குக் கிடைத்த விதம்	A3
எபிரெய வேதாகமத்தில் கடவுளுடைய பெயர்	A4
கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் கடவுளுடைய பெயர்	A5
பட்டியல்: யூதாவிலும் இஸ்ரவேலிலும் இருந்த தீர்க்கதரிசிகள் மற்றும் ராஜாக்கள்	A6
இயேசுவின் பூமிக்குரிய வாழ்க்கையில் நடந்த முக்கியச் சம்பவங்கள்	A7

A1 பைபிள் மொழிபெயர்ப்புக்கு உதவும் நியமங்கள்

பைபிள் முதன்முதலில் பழங்கால எபிரெய மொழியிலும், அரமேயிக் மொழியிலும், கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டது. பைபிள் இன்று கிட்டத்தட்ட 2,600 மொழிகளில் முழுமையாகவோ பகுதியாகவோ கிடைக்கிறது. பைபிளைப் படிக்கும் பெரும்பாலான மக்களுக்கு அந்தப் பழங்கால மொழிகள் தெரியாது. அதனால், அவர்கள் ஏதாவது ஒரு மொழிபெயர்ப்பைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. பைபிள் மொழிபெயர்ப்புக்கு எந்த நியமங்களைப் பின்பற்ற வேண்டும்? *பரிசுத்த பைபிளின் புதிய உலக மொழிபெயர்ப்பில்* அந்த நியமங்கள் எப்படிப் பின்பற்றப்பட்டிருக்கின்றன?

இன்டர்லீனியர் மொழிபெயர்ப்பைப் போல வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்த்தால்தான் பழங்கால மொழிகளில் இருப்பதை அப்படியே புரிந்துகொள்ள முடியும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால், அது எல்லா சமயங்களிலும் பொருந்தாது. அதற்குச் சில உதாரணங்களை இப்போது பார்க்கலாம்:

- ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு விதமான இலக்கண விதிகளும் வார்த்தைகளும் வாக்கிய அமைப்புகளும் இருக்கின்றன. இதைப் பற்றி எபிரெய மொழியின் பேராசிரியர் எஸ். ஆர். டிரைவர் இப்படிச் சொல்கிறார்: "[மொழிகள்] இலக்கண விதிகளிலும் அவை உருவான விதங்களிலும் மட்டுமே மாறுபடுவதில்லை . . . கருத்துகளை வாக்கியங்களாக அமைக்கும் விதத்திலும் மாறுபடுகின்றன." சொல்லப்போனால், மனிதர்கள் யோசிக்கும் விதம்கூட மொழிக்கு மொழி வேறுபடுகிறது. "அதனால்தான், வாக்கிய அமைப்பு எல்லா மொழிகளிலும் ஒரே மாதிரி இருப்பதில்லை, அது மொழிக்கு மொழி வேறுபடுகிறது" என்று பேராசிரியர் டிரைவர் சொல்கிறார்.
- முதன்முதலில் பைபிள் எழுதப்பட்ட மொழிகளின், அதாவது எபிரெயு, அரமேயிக் மற்றும் கிரேக்கு மொழிகளின், வார்த்தைகளும் இலக்கண விதிகளும் இன்றுள்ள எந்த மொழியோடும் அப்படியே ஒத்துப்போவதில்லை. அதனால், பைபிளை வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்தால் தெளிவாக இருக்காது. சிலசமயங்களில், தவறான அர்த்தத்தைக்கூட கொடுத்துவிடலாம்.
- ஒரு வார்த்தை அல்லது சொற்றொடரின் அர்த்தம், அதன் சூழமைவைப் பொறுத்து மாறுபடலாம்.

சிலசமயம், பழங்கால மொழிகளில் இருக்கும் வார்த்தைகளை ஒரு மொழிபெயர்ப்பாளரால் அப்படியே மொழிபெயர்க்க முடியும். ஆனால், அப்படிச் செய்யும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பது எப்படித் தவறான அர்த்தத்தைத் தந்து விடலாம் என்பதற்குச் சில உதாரணங்கள்:

- பைபிளில் 'தூக்கம்' என்ற வார்த்தை வெறுமனே தூக்கத்தைக் குறிப்பதற்கு மட்டுமல்லாமல் மரணத்தைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத்தேயு 28:13; அப்போஸ்தலர் 7:60, அடிக்குறிப்பு) அப்படிப்பட்ட வசனங்களில் 'தூங்கிவிட்டார்' என்ற வார்த்தையை 'இறந்துவிட்டார்' என்று மொழிபெயர்ப்பது சரியாக இருக்கும். அப்போதுதான், இன்றைய வாசகர்களுக்கு எந்தக் குழப்பமும் வராது.—1 கொரிந்தியர் 7:39; 1 தெசலோனிக்கேயர் 4:13; 2 பேதுரு 3:4.
- எபேசியர் 4:14-ல் அப்போஸ்தலன் பவுல் பயன்படுத்திய ஒரு சொற்றொடரை, "மனிதர்களுடைய பகடைக்காய் விளையாட்டு" என்று வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கலாம். இந்தப் பழங்கால மரபுத்தொடர், பகடைக்காய் விளையாட்டில் மற்றவர்களை ஏமாற்றும் பழக்கத்தைக் குறித்தது. இதை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே மொழிபெயர்த்தால், பெரும்பாலான மொழிகளில் சரியான அர்த்தத்தைக் கொடுக்காது. ஆனால், 'மனிதர்களுடைய தந்திரம்' என்று மொழிபெயர்க்கும்போது, அர்த்தம் தெளிவாகப் புரியும்.
- ரோமர் 12:11-ல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் ஒரு கிரேக்க சொற்றொடரின் நேரடி மொழிபெயர்ப்பு, 'ஆவி கொதிக்கிறது' என்பதாகும். இது தமிழில் சரியான அர்த்தத்தைக் கொடுக்காததால், "ஆர்வத்துடிப்போடு செயல்படுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.
- புகழ்பெற்ற மலைப்பிரசங்கத்தில் இயேசு பயன்படுத்திய ஒரு சொற்றொடர், "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்றே பெரும்பாலும் மொழிபெயர்க்கப்படுகிறது. (மத்தேயு 5:3, *தமிழ் O.V.)* ஆனால், இது சரியான அர்த்தத்தைத் தருவதில்லை; ஏனென்றால், எளிமையாக இருப்பதைப் பற்றி இயேசு பேசவில்லை. ஒருவருடைய சந்தோஷம் எதைச் சார்ந்திருக்கிறது என்பதைத்தான் கற்றுக்கொடுத்தார். அதாவது, கடவுளுடைய வழிநடத்துதல் தேவை என்று உணர்வதால் மட்டுமே ஒருவருக்குச் சந்தோஷம் கிடைக்கும், உடல் தேவைகளைத் திருப்தி செய்வதால் அல்ல என்பதைத்தான் கற்றுக்கொடுத்தார். (லூக்கா 6:20) ஆகவே, பழங்கால மொழியில் சொல்லப்பட்ட இந்தக் கருத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், "ஆன்மீக விஷயங்களில் ஆர்வப்பசியோடு இருக்கிறவர்கள்" என்றோ, "ஆன்மீகத் தேவையை உணர்ந்தவர்கள்" என்றோ மொழிபெயர்க்க வேண்டும். —மத்தேயு 5:3.

ΟΙΠΤΩΧΟΙ
ΤΩΠΝΕΥΜΑΤΙ

மத்தேயு 5:3

தமிழில் நேரடி மொழிபெயர்ப்பு: "ஆவியில் எளிமையுள்ளவர்கள்"

அர்த்தம்: "ஆன்மீக விஷயங்களில் ஆர்வப்பசியோடு இருக்கிறவர்கள்"

- நிறைய வசனங்களில், "பொறாமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை, நெருக்கமானவர்கள் துரோகம் செய்ததாக நினைத்துக் கோபப்படுவதையோ மற்றவர்களுடைய வசதிகளைப் பார்த்து வயிற்றெரிச்சல் படுவதையோ குறிக்கிறது. (நீதிமொழிகள் 6:34; ஏசாயா 11:13) ஆனால், அதே எபிரெய வார்த்தை நல்ல குணங்களையும் குறிக்கிறது. உதாரணத்துக்கு, யெகோவா தன்னுடைய ஜனங்களைப் பாதுகாப்பதற்காகக் காட்டும் 'வைராக்கியத்தை' அல்லது தன்னுடைய ஜனங்களிடம் எதிர்பார்க்கிற "முழு பக்தியை" குறிக்கலாம். (யாத்திராகமம் 34:14; 2 ராஜாக்கள் 19:31; எசேக்கியேல் 5:13;

சகரியா 8:2) அதுமட்டுமல்ல, உண்மையான ஊழியர்கள் கடவுளுக்காகவும் அவருடைய வணக்கத்துக்காகவும் காட்டுகிற 'பக்திவைராக்கியத்தை' குறிக்கலாம்; அவருக்குத் துரோகம் செய்கிறவர்களை அவர்கள் சகித்துக்கொள்ளாமல் இருப்பதையும் குறிக்கலாம்.—சங்கீதம் 69:9; 119:139; எண்ணாகமம் 25:11.

- "கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தைக்கு நிறைய அர்த்தங்கள் இருக்கின்றன. சூழமைவைப் பொறுத்து இந்த வார்த்தையை, 'கட்டுப்பாடு,' 'தாராளம்,' 'அதிகாரம்' என்றெல்லாம் மொழிபெயர்க்கலாம். (2 சாமுவேல் 8:3; 1 ராஜாக்கள் 10:13; நீதிமொழிகள் 18:21) சொல்லப்போனால், ஆங்கில *பரிசுத்த பைபிளின் புதிய உலக மொழிபெயர்ப்பில்* இந்த வார்த்தை 40-க்கும் அதிகமான விதங்களில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

יד

யாத் **என்ற எபிரெய வார்த்தை பொதுவாக "கை" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், சூழமைவைப் பொறுத்து இந்த வார்த்தையை, 'கட்டுப்பாடு,' 'தாராளம்,' 'அதிகாரம்' என்றெல்லாம் மொழிபெயர்க்கலாம்**

இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, பைபிள் மொழிபெயர்ப்பைப் பற்றி ஒரு விஷயம் புரிகிறது; பழங்கால மொழிகளிலுள்ள வார்த்தைகளை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி மொழிபெயர்ப்பது சரியாக இருக்காது. அதனால், ஒரு மொழிபெயர்ப்பாளர் பழங்கால மொழியிலுள்ள வார்த்தைகளின் கருத்துகளை அப்படியே சொல்வதற்குத் தன் மொழியில் சரியான வார்த்தைகளை விவேகமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதோடு, படிப்பதற்குச் சுலபமாய் இருப்பதற்காகத் தன்னுடைய மொழியின் இலக்கண விதிகளைப் பின்பற்றி வாக்கியங்களை அமைக்க வேண்டும்.

அதேசமயத்தில், வார்த்தைகளை இஷ்டம்போல் மாற்றுவதைத் தவிர்க்க வேண்டும். பைபிளிலுள்ள கருத்துகளை ஒரு மொழிபெயர்ப்பாளர் தன்னுடைய புரிந்துகொள்ளுதலுக்கு ஏற்றபடி சொந்த வார்த்தைகளில் தொகுத்து எழுதினால் அவற்றின் அர்த்தமே மாறிவிடலாம். எப்படி? அவர் மூலப் பதிவிலுள்ள கருத்துகளில் தன்னுடைய கருத்தைத் தவறுதலாகத் திணித்துவிடலாம் அல்லது மூலப் பதிவிலுள்ள முக்கியமான விவரங்களை விட்டுவிடலாம். ஒரு மொழிபெயர்ப்பாளர் சொந்த வார்த்தைகளில் பைபிளைத் தொகுத்து எழுதினால் படிக்கிறவர்களுக்கு அதைப் படிப்பது சுலபமாக இருக்கலாம்; ஆனால், மூலப் பதிவிலுள்ள உண்மையான கருத்து அவர்களுக்குத் தெரியாமலேயே போய்விடலாம்.

மொழிபெயர்ப்பாளர் நம்புகிற மத கோட்பாடுகள் அவருடைய மொழிபெயர்ப்பை எளிதில் பாதித்துவிடலாம். உதாரணத்துக்கு, "அழிவுக்குப் போகிற வாசல் அகலமானது" என்று மத்தேயு 7:13 சொல்கிறது. சில மொழிபெயர்ப்பாளர்கள், "அழிவு" என்ற வார்த்தைக்குப் பதிலாக "நரகம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஒருவேளை, அவர்கள் நம்புகிற மத கோட்பாட்டின் அடிப்படையில் இப்படிச் செய்திருக்கலாம்; ஆனால், கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தையின் அர்த்தம் "அழிவு" என்பதுதான்.

விவசாயிகள், மேய்ப்பர்கள், மீனவர்கள் போன்ற சாதாரண ஜனங்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய மொழியில்தான் பைபிள் எழுதப்பட்டது என்பதையும் ஒரு மொழிபெயர்ப்பாளர் ஞாபகத்தில் வைக்க வேண்டும். (நெகேமியா 8:8, 12; அப்போஸ்தலர் 4:13) ஒரு பைபிள் மொழிபெயர்ப்பு, எல்லா பின்னணிகளையும் சேர்ந்த நல்மனமுள்ள ஜனங்களுக்குச் சுலபமாகப் புரிந்தால், அதை நல்ல மொழிபெயர்ப்பு என்று சொல்லலாம். சாதாரண ஜனங்கள் அடிக்கடி பயன்படுத்தாத வார்த்தைகளுக்குப் பதிலாக எல்லாருக்கும்

தெரிந்த, எளிதில் புரிந்துகொள்ள முடிந்த, தெளிவான வார்த்தைகளைப் பயன் படுத்துவது நல்லது.

பழங்கால பைபிள் கையெழுத்துப் பிரதிகளில் யெகோவா என்ற கடவுளுடைய பெயர் காணப்பட்டாலும், நிறைய மொழிபெயர்ப்பாளர்கள் அதைப் பயன்படுத் தாமல் விட்டுவிட்டிருக்கிறார்கள்; இந்தத் துணிச்சலான செயலுக்கு எந்த நியாய மான காரணத்தையும் அவர்களால் கொடுக்க முடியாது. (இணைப்பு A4-ஐப் பார்க் கவும்.) கடவுளுடைய பெயருக்குப் பதிலாக "கர்த்தர்" என்ற வார்த்தையை நிறைய மொழிபெயர்ப்பாளர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் சில மொழி பெயர்ப்பாளர்கள், கடவுளுக்கு ஒரு பெயர் இருக்கிறது என்ற உண்மையையே மறைத்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு, சில மொழிபெயர்ப்புகள் யோவான் 17: 26-ல், "உம்மை நான் அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்" என்றும், யோவான் 17: 6-ல் "நான் அவர்களுக்கு உம்மை வெளிப்படுத்தினேன்" என்றும் இயேசு ஜெபம் செய்ததாகச் சொல்கின்றன. ஆனால் இயேசுவின் ஜெபத்தைச் சரியாக மொழிபெ யர்த்தால், "**உம் பெயரை** நான் அவர்களுக்கு வெளிப்படுத்தினேன்" என்றும், "நான் அவர்களுக்கு **உம் பெயரை** வெளிப்படுத்தினேன்" என்றும்தான் அங்கு வந்திருக்க வேண்டும்.

புதிய உலக மொழிபெயர்ப்பு பைபிளின் முதல் ஆங்கிலப் பதிப்பின் முன்னுரை யில் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது: "வசனங்களை நாங்கள் சொந்த வார்த்தை களில் தொகுத்து எழுதவில்லை. முடிந்தவரை எல்லா வசனங்களையும் வார்த் தைக்கு வார்த்தை மொழிபெயர்க்க முயற்சி செய்திருக்கிறோம்; முக்கியமாக, இன்றைய ஆங்கில மரபுத்தொடர்கள் அதே கருத்தைத் தரும்போதும், நேரடி மொழிபெயர்ப்பு கருத்தைக் குழப்பிவிடாமல் இருக்கும்போதும் அப்படிச் செய் திருக்கிறோம்." இப்படி, புதிய உலக பைபிள் மொழிபெயர்ப்புக் குழு, மூலப் பதி வில் இருக்கும் வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் அப்படியே மொழி பெயர்க்க முயற்சி செய்திருக்கிற அதேசமயத்தில், அர்த்தம் புரியாத விதத்திலோ வாசிக்க நெருடலாக இருக்கும் விதத்திலோ மொழிபெயர்க்காதபடி கவனமாக இருந்திருக்கிறது. அதனால், பைபிளைச் சுலபமாக வாசிக்க முடிகிறது. அதோடு, கடவுளுடைய வார்த்தை சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது என்ற முழு நம் பிக்கையோடு படிக்க முடிகிறது.—1 தெசலோனிக்கேயர் 2:13.

நம்பகமான ஒரு மொழிபெயர்ப்பு...

- கடவுளுடைய பெயரைப் பரிசுத்தப்படுத்த வேண்டும்; அதாவது, அது இருக்க வேண்டிய எல்லா இடங்களிலும் அதைப் பயன்படுத்த வேண்டும்.—மத் தேயு 6:9.
- கடவுளுடைய சக்தியின் தூண்டுதலால் எழுதப்பட்ட தகவல்களை மிகச் சரி யாக மொழிபெயர்க்க வேண்டும்.—2 தீமோத்தேயு 3:16.
- பழங்கால மொழிகளில் இருக்கும் வார்த்தைகளையும் வாக்கிய அமைப்புக ளையும் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்க முடிந்தால், அதை அப்ப டியே மொழிபெயர்க்க வேண்டும்.
- நேரடி மொழிபெயர்ப்பு ஒரு வார்த்தையின் அல்லது சொற்றொடரின் அர்த் தத்தை மாற்றிவிடும் என்றால் அல்லது தெளிவற்றதாக்கிவிடும் என்றால், அதன் சரியான கருத்தை மொழிபெயர்க்க வேண்டும்.
- ஆர்வத்தோடு படிக்கத் தூண்டுகிற, இயல்பான, புரிந்துகொள்வதற்குச் சுலப மான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்.—நெகேமியா 8:8, 12.

A2 இந்த மொழிபெயர்ப்பின் சிறப்பம்சங்கள்

1950-ல் *கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் புதிய உலக மொழிபெயர்ப்பு* ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. பிறகு 1961-ல் *பரிசுத்த பைபிளின் புதிய உலக மொழிபெயர்ப்பு* ஆங்கிலத்தில் முழுமையாக வெளியிடப்பட்டது. அதுமுதல் 120-க்கும் அதிகமான மொழிகளில் கோடிக்கணக்கான வாசகர்கள் இந்தத் திருத்தமான, எளிமையான மொழிபெயர்ப்பினால் பயனடைந்திருக்கிறார்கள்.

இன்றுள்ள வாசகர்களின் இதயத்தைத் தொடும் மொழிநடையில் பைபிள் இருக்க வேண்டும் என்பது புதிய உலக பைபிள் மொழிபெயர்ப்புக் குழுவினருக்கு நன்றாகத் தெரியும். அதனால், பின்வரும் குறிக்கோள்களை மனதில் வைத்து இந்த மொழிபெயர்ப்பில் பொருத்தமான மொழிநடையையும் வார்த்தைகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

- **எளிமையான, நவீன மொழியைப் பயன்படுத்துவது.** தமிழ் பைபிள்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சில வார்த்தைகள் புரிந்துகொள்வதற்குக் கஷ்டமாக இருப்பதால் எளிமையான, நவீன வார்த்தைகளை இந்த மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியிருக்கிறோம். உதாரணத்துக்கு, "செவ்வையானவர்கள்" (நீதிமொழிகள் 2:21), "கர்த்தராகிய ஆண்டவர்" (ஆமோஸ் 9:8), "சேனைகளின் கர்த்தர்" (2 சாமுவேல் 5:10), "ஆயக்காரர்" (லூக்கா 7:29), "ராஜ்யபாரம்" (1 ராஜாக்கள் 16:23), "ஸ்தானாபதி" (ஏசாயா 37:14), "நாமம்" (எசேக்கியேல் 20:22) போன்ற வார்த்தைகளுக்குப் பதிலாக நவீன வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறோம்.

  "வித்து" என்பதற்கான பழங்கால எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகள், செடியின் விதையையும் குறிக்கலாம், மனிதர்களின் வம்சத்தை அல்லது வாரிசையும் குறிக்கலாம். அதனால் இந்த பைபிள் மொழிபெயர்ப்பில், சூழமைவைப் பொறுத்து சரியான அர்த்தத்தைத் தரும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.—ஆதியாகமம் 3:15; எண்ணாகமம் 24:7; மத்தேயு 22:24; யோவான் 8:37.

- **பைபிள் வார்த்தைகளைத் தெளிவாக்குவது.** சில பைபிள் மொழிபெயர்ப்புகளில், சில வார்த்தைகள் தவறான அர்த்தத்தைத் தருகின்றன. அதனால், அந்த வார்த்தைகள் இந்த மொழிபெயர்ப்பில் சரியான அர்த்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணத்துக்கு, இயேசு "சிலுவையில் அறையப்பட்டார்" என்று சில பைபிள் மொழிபெயர்ப்புகள் சொல்கின்றன. ஆனால், உண்மையில் அவர் சிலுவையில் அறையப்படவில்லை. அதனால் இந்த பைபிளில், "மரக் கம்பத்தில் அறைந்து கொல்லப்பட்டார்," அல்லது "மரக் கம்பத்தில் வைத்து ஆணியடிக்கப்பட்டார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (மத்தேயு 20:19; 27:31, 35) அதேபோல், 'திராட்சரசம்' என்ற வார்த்தை "திராட்சமது" என்று சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.—நெகேமியா 5:15.

  சிலசமயம், பைபிளில் ஒரு வார்த்தைக்கு நேரடியான அர்த்தமும் இருக்கும், அடையாள அர்த்தமும் இருக்கும். உதாரணத்துக்கு, இதயம் என்ற வார்த்தையை எடுத்துக்கொள்ளுங்கள். 1 சாமுவேல் 28:5-ல் அது "இதயம்" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், ஆதியாகமம் 20:6-ல் அது 'எண்ணம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதேபோல், ஆதியாகமம் 45:18-ல் "கொழுமை" என்ற வார்த்தைக்குப் பதிலாக 'அருமையான உணவு' என்றும், ஆதியாகமம் 6:12-ல் 'மாம்சம்' என்ற வார்த்தைக்குப் பதிலாக "மனிதர்கள்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த மொழிபெயர்ப்பின் மற்ற சிறப்பம்சங்கள்:

இந்த பைபிள் மொழிபெயர்ப்பில் வித்தியாசப்பட்ட அடிக்குறிப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை:

“வேறு வார்த்தையில்” (வே.வா.)	இந்த அடிக்குறிப்புகள் எபிரெயு, அரமேயிக், கிரேக்கு மொழிகளில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை வேறு விதமாகச் சொல்கின்றன, ஆனால் அந்த விஷயங்களின் அர்த்தம் மாறுவதில்லை.—ஆதியாகமம் 1:2-ல், “சக்தி” என்பதற்கான அடிக்குறிப்பு; யோசுவா 1:8, “வாசி.”
“அல்லது”	இந்த அடிக்குறிப்புகள் எபிரெயு, அரமேயிக், கிரேக்கு மொழிகளில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை வேறு விதமாகச் சொல்கின்றன, ஆனால் அந்த விஷயங்களின் அர்த்தம் மாறுகிறது. மூலப் பதிவை இப்படியும் புரிந்துகொள்ளலாம் என்பதை இந்த அடிக்குறிப்பு காட்டுகிறது.—ஆதியாகமம் 21:6, “என்னோடு சேர்ந்து”; சகரியா 14:21, “கானானியன்.”
“நேரடி மொழிபெயர்ப்பு” (நே.மொ.)	இந்த அடிக்குறிப்புகள் எபிரெயு, அரமேயிக், கிரேக்கு மொழிகளில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கின்றன அல்லது அவற்றின் அடிப்படை அர்த்தத்தைக் கொடுக்கின்றன.—ஆதியாகமம் 30:22, “தந்தார்”; யாத்திராகமம் 32:9, “பிடிவாதக்காரர்கள்.”
அர்த்தம், பின்னணித் தகவல்	இந்த அடிக்குறிப்புகள் பெயர்களின் அர்த்தங்களையும் (ஆதியாகமம் 3:17, “ஆதாம்”; யாத்திராகமம் 15:23, “மாரா”), எடைகள் மற்றும் அளவுகளின் விவரங்களையும் (ஆதியாகமம் 6:15, “முழமுமாக”), சுட்டுப்பெயர்கள் குறிக்கிற நபர்களையும் (உபாகமம் 32:12, “அவனை”), இணைப்பிலும் சொல் பட்டியலிலும் நமக்கு உதவியாக இருக்கும் சில தகவல்களையும் குறிப்பிடுகின்றன.—ஆதியாகமம் 37:35, “கல்லறைக்குள்”; மத்தேயு 5:22, “கெஹென்னாவுக்குள்.”

“கடவுளுடைய புத்தகத்துக்கு ஓர் அறிமுகம்” என்ற ஆரம்பப் பகுதி, பைபிளிலுள்ள அடிப்படை போதனைகளைச் சுருக்கமாகச் சொல்கிறது. பைபிளின் கடைசி புத்தகத்துக்கு அடுத்ததாக, “பைபிள் புத்தகங்களின் பட்டியல்,” “பைபிள் வார்த்தைகளின் அட்டவணை,” “பைபிள் வார்த்தைகளின் சொல் பட்டியல்” ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன. சில வார்த்தைகள் பைபிளில் என்ன அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்வதற்கு “சொல் பட்டியல்” உதவியாக இருக்கிறது. இணைப்பு A-ல் உள்ள பகுதிகள்: “பைபிள் மொழிபெயர்ப்புக்கு உதவும் நியமங்கள்,” “இந்த மொழிபெயர்ப்பின் சிறப்பம்சங்கள்,” “பைபிள் நமக்குக் கிடைத்த விதம்,” “எபிரெய வேதாகமத்தில் கடவுளுடைய பெயர்,” “கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் கடவுளுடைய பெயர்,” “பட்டியல்: யூதாவிலும் இஸ்ரவேலிலும் இருந்த தீர்க்கதரிசிகள் மற்றும் ராஜாக்கள்,” “இயேசுவின் பூமிக்குரிய வாழ்க்கையில் நடந்த முக்கியச் சம்பவங்கள்.” இணைப்பு B-ல் உள்ள பகுதிகள்: வரைபடங்கள், பட்டியல்கள் மற்றும் பைபிளை ஆராய்ந்து படிப்பவர்களுக்குத் தேவையான மற்ற தகவல்கள்.

ஒவ்வொரு பைபிள் புத்தகத்தின் ஆரம்பத்திலும் “முக்கியக் குறிப்புகள்” என்ற பகுதி இருக்கிறது. ஒவ்வொரு அதிகாரத்தின் முக்கியமான குறிப்புகளும், அவற்றோடு சம்பந்தப்பட்ட வசனங்களும் இதில் இருக்கின்றன. அந்தந்த பைபிள் புத்தகத்தின் சாராம்சத்தை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஒவ்வொரு பக்கத்திலும் இணைவசனங்களின் பட்டியல் இருக்கிறது.

A3 பைபிள் நமக்குக் கிடைத்த விதம்

பைபிளின் நூலாசிரியராகிய கடவுள், பைபிளைக் கொடுத்தது மட்டுமல்லாமல் அதைப் பாதுகாத்தும் வந்திருக்கிறார். அவர்தான் இந்த வார்த்தைகள் பதிவாகும்படி செய்திருக்கிறார்:

‘நம் கடவுளின் வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கிறது.’
—ஏசாயா 40:8.

எபிரெய-அரமேயிக் வேதாகமம்* மற்றும் கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் முதல் கையெழுத்துப் பிரதிகள் நம்மிடம் இல்லையென்றாலும், மேலே சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகள் உண்மையே. கடவுளுடைய தூண்டுதலால் முதன்முதலில் எழுதப்பட்ட விஷயங்கள் இன்றுள்ள பைபிளில் அப்படியே மாறாமல் இருக்கின்றன என்று நாம் எப்படி உறுதியாகச் சொல்லலாம்?

நகல் எடுப்பவர்கள் பைபிளைப் பாதுகாத்தார்கள்

ஆரம்பக் காலத்திலிருந்தே எபிரெய வேதாகமம் நகலெடுக்கப்பட்டு வந்தது; இதை வழக்கமாகச் செய்ய வேண்டுமென்று கடவுள்தான் சொல்லியிருந்தார்.# உதாரணத்துக்கு, இஸ்ரவேல் ராஜாக்கள் திருச்சட்டப் பதிவைத் தங்களுக்கென நகலெடுத்துக்கொள்ள வேண்டுமென்று யெகோவா கட்டளை கொடுத்திருந்தார். (உபாகமம் 17:18) அதோடு, திருச்சட்டத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அதை மக்களுக்குக் கற்றுத்தரும் பொறுப்பையும் லேவியர்களுக்குக் கொடுத்திருந்தார். (உபாகமம் 31:26; நெகேமியா 8:7) யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போன பிறகு, நகலெடுப்பவர்கள் அல்லது எழுத்தர்களின் (சோஃபெரிம்) ஒரு வகுப்பு உருவானது. (எஸ்றா 7:6, அடிக்குறிப்பு) காலப்போக்கில், அந்த எழுத்தர்கள் எபிரெய வேதாகமத்தின் 39 புத்தகங்களையும் ஏராளமாக நகலெடுத்தார்கள்.

பல நூற்றாண்டுகளாக, எழுத்தர்கள் இந்தப் புத்தகங்களை மிகவும் கவனமாக நகலெடுத்தார்கள். இடைக்காலத்தில் (கி.பி. 500–1500-ல்), யூத எழுத்தர்களின் ஒரு தொகுதியாகிய மசோரெட்டுகள் அந்த நகலெடுக்கும் வேலையைத் தொடர்ந்தார்கள். மிகவும் பழமையான, முழுமையான மசோரெட் கையெழுத்துப் பிரதி, லெனின்கிரேட் கோடெக்ஸ் என்று அழைக்கப்படுகிறது. இது கி.பி. 1008/1009-ஆம் வருஷத்தைச் சேர்ந்தது. ஆனால், 20-ஆம் நூற்றாண்டின் மத்தியில் கண்டெடுக்கப்பட்ட சவக்கடல் சுருள்களில் சுமார் 220 பைபிள் கையெழுத்துப் பிரதிகள் அல்லது அதனுடைய துண்டுகள் இருந்தன. அந்தக் கையெழுத்துப் பிரதிகள் லெனின்கி

---

* இனிவரும் பாராக்களில் எபிரெய வேதாகமம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும்.

கையெழுத்துப் பிரதிகளை நகலெடுக்க வேண்டியிருந்ததற்கு ஒரு காரணம், அவை அழியக்கூடிய பொருள்களில் எழுதப்பட்டிருந்தன.

ரேட் கோடெக்சைவிட ஆயிரம் வருஷங்கள் பழமையானவை. அந்தச் சவக்க டல் சுருள்களையும் லெனின்கிரேட் கோடெக்சையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் ஒரு முக்கியமான விஷயம் உறுதியானது: சவக்கடல் சுருள்களில் உள்ள வார்த்தை களில் சில வித்தியாசங்கள் இருந்தாலும் அவற்றின் கருத்து எந்த விதத்திலும் மாறவே இல்லை.

கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் 27 பைபிள் புத்தகங்களைப் பற்றி என்ன சொல் லலாம்? அவை இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களாலும் ஆரம்ப கால சீஷர்கள் சிலராலும் முதன்முதலில் எழுதப்பட்டன. யூத எழுத்தர்களின் பாரம்பரி யத்தைப் பின்பற்றி ஆரம்பக் கால கிறிஸ்தவர்கள் அவற்றை நகலெடுத்தார்கள். (கொலோசெயர் 4:16) ரோமப் பேரரசர் டயக்லீஷியனும் மற்றவர்களும் ஆரம்பக் கால கிறிஸ்தவ புத்தகங்கள் எல்லாவற்றையும் அழிப்பதற்கு முயற்சி செய்தபோதி லும், இன்றுவரை ஆயிரக்கணக்கான பழங்கால கையெழுத்துப் பிரதிகளும் அவற் றின் துண்டுகளும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

கிறிஸ்தவ புத்தகங்கள் மற்ற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன. ஆரம்பக் காலத்தில், அர்மீனியன், எத்தியோபிக், ஜார்ஜியன், காப்டிக், லத்தீன், சிரியாக் போன்ற பழங்கால மொழிகளில் பைபிள் மொழிபெயர்க்கப்பட்டது.

மொழிபெயர்ப்புக்கு அடிப்படையான எபிரெய மற்றும் கிரேக்கப் பதிவுகள்

பழங்கால பைபிள் கையெழுத்துப் பிரதிகள் எல்லாமே ஒரேபோல் இல்லை. அப்படியிருக்கும்போது முதன்மு தலில் எழுதப்பட்ட பதிவில் என்ன தகவல் இருந்த தென்று நமக்கு எப்படித் தெரியும்?

இதைப் புரிந்துகொள்வதற்கு ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம். ஆசிரியர் ஒருவர், ஒரு புத்தகத்தி லுள்ள பாடத்தைக் கைப்பட நகலெடுக்கும்படி வகுப் பில் இருக்கும் 100 மாணவர்களிடம் சொல்கிறார். ஒருவேளை அந்தப் புத்தகம் தொலைந்துபோனாலும், அந்த 100 நகல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே, அந்தப் புத்தகத்தில் என்ன தக வல் இருந்ததென்று தெரிந்துகொள்ளலாம். நகலெடுத்தபோது ஒவ்வொரு மாண வனும் சில தவறுகள் செய்திருக்கலாம். ஆனால், எல்லா மாணவர்களும் ஒரே மாதிரி தவறுகள் செய்திருக்க மாட்டார்கள். அதேபோல், ஆயிரக்கணக் கான பைபிள் கையெழுத்துப் பிரதிகளின் துண்டுகளையும் பழங்கால பைபிள் புத்தகங்களின் நகல்களையும் பைபிள் அறிஞர்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், நகலெ டுத்தவர்கள் செய்த தவறுகளையும் முதன்முதலில் எழுதப்பட்டிருந்த வார்த்தை களையும் கண்டுபிடித்துவிடலாம்.

"எந்தப் பழங்கால புத்தகமும் இந்தளவு துல்லியமாக நம்மிடம் வந்து சேர்ந்ததில்லை என்று தாராளமாகச் சொல்லலாம்"

முதன்முதலில் எழுதப்பட்ட பைபிள் பதிவிலுள்ள கருத்துகள் மாறாமல் நம்மிடம் வந்து சேர்ந்திருக்கின்றன என்று எப்படி உறுதியாக நம்பலாம்? எபிரெய வேதாக மத்தைப் பற்றி அறிஞர் வில்லியம் எச். க்ரீன் இப்படிச் சொல்கிறார்: "எந்தப் பழங் கால புத்தகமும் இந்தளவு துல்லியமாக நம்மிடம் வந்து சேர்ந்ததில்லை என்று தாராளமாகச் சொல்லலாம்." புதிய ஏற்பாடு என்று அழைக்கப்படும் கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தைப் பற்றி பைபிள் அறிஞர் எஃப். எஃப். ப்ரூஸ் இப்படிச் சொல்கிறார்: "பழங்கால கிரேக்க எழுத்தாளர்கள் எழுதிய நிறைய புத்தகங்களுக்கு இருக்கும் ஆதாரங்களைவிட, புதிய ஏற்பாட்டின் புத்தகங்களுக்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அதனால், புதிய ஏற்பாட்டின் நம்பகத்தன்மையைப்

சவக்கடல் சுருள்களில் இருக்கும் ஏசாயா புத்தகத்தின் 40-வது அதிகாரம் (கி.மு. 125-100 வரையான காலப்பகுதி)

ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு கண்டுபிடிக்கப்பட்ட எபிரெய கையெழுத்துப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சின்னச் சின்ன வித்தியாசங்கள்தான் இருக்கின்றன, அதுவும் பெரும்பாலும் வார்த்தைகளிலுள்ள எழுத்துக்களில்தான்!

சுமார் கி.பி. 930-ஐச் சேர்ந்த முக்கியமான எபிரெய மசோரெட்டிக் கையெழுத்துப் பிரதியான அலெப்போ கோடெக்சில் இருக்கும் ஏசாயா 40-வது அதிகாரம்

பற்றிக் கேள்வி கேட்க யாருமே நினைத்துக்கூட பார்ப்பதில்லை.” அதோடு, “புதிய ஏற்பாடு மதசார்பற்ற புத்தகங்களின் ஒரு தொகுப்பாக இருந்திருந்தால், அதன் நம்பகத்தன்மையைப் பற்றி யாருமே துளிகூட சந்தேகப்பட்டிருக்க மாட்டார்கள்” என்று அவர் சொல்கிறார்.

எபிரெயப் பதிவு: ருடால்ஃப் கிட்டெல் என்பவரின் *பிப்ளியா ஹெப்ராய்காவை* அடிப்படையாக வைத்துத்தான் *எபிரெய வேதாகமத்தின் புதிய உலக மொழி பெயர்ப்பு* (1953-1960) ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அதுமுதல், சவக்க டல் சுருள்கள் மற்றும் வேறு சில பழங்கால கையெழுத்துப் பிரதிகளை ஆராய்ச்சி செய்ததன் அடிப்படையில் திருத்தப்பட்ட எபிரெய பதிவுகளான *பிப்ளியா ஹெப் ராய்கா ஸ்டட்கார்டென்சியா* மற்றும் *பிப்ளியா ஹெப்ராய்கா க்வின்ட்டா* வெளி யிடப்பட்டன. நிபுணர்களின் இந்தப் பதிவுகளில், லெனின்கிரேட் கோடெக்சில் உள்ள வார்த்தைகள் அப்படியே கொடுக்கப்பட்டிருப்பதோடு, சமாரிய ஐந்தாக மம், சவக்கடல் சுருள்கள், கிரேக்க *செப்டுவஜன்ட்,* அரமேயிக் டார்கம்ஸ், லத்தீன் *வல்கேட்,* சிரியாக் *பெஷிட்டா* போன்றவற்றில் காணப்படுகிற அவற்றுக்கு இணையான வார்த்தைகள் அடிக்குறிப்புகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆங் கில *புதிய உலக மொழிபெயர்ப்பின்* தற்போதைய திருத்திய பதிப்பு தயாரிக்கப் பட்டபோது *பிப்ளியா ஹெப்ராய்கா ஸ்டட்கார்டென்சியா, பிப்ளியா ஹெப்ராய்கா க்வின்ட்டா* ஆகிய இரண்டுமே ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டன.

கிரேக்கப் பதிவு: 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பி. எஃப். வெஸ்ட்காட் மற்றும் எஃப். ஜெ. ஏ. ஹார்ட் என்ற அறிஞர்கள், மூலப் பதிவோடு மிகவும் ஒத் திருந்ததாக நினைத்த அன்றைய பைபிள் கையெழுத்துப் பிரதிகளையும் அவற் றின் துண்டுகளையும் ஒப்பிட்டுப் பார்த்து கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் அடிப்படைப் பதிவைத் தயாரித்தார்கள். அந்த அடிப்படைப் பதிவை வைத்து தான் 20-ஆம் நூற்றாண்டின் மத்தியில் புதிய உலக பைபிள் மொழிபெயர்ப்புக் குழுவினர் தங்கள் பைபிளை மொழிபெயர்த்தார்கள். அதோடு, கி.பி. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த நாணல் சுருள்களும் ஆராய்ச்சிக்கு எடுத் துக்கொள்ளப்பட்டன. அதுமுதல், நிறைய நாணல் சுருள்கள் கிடைக்க ஆரம்பித் தன. அதோடு, நிபுணர்கள் சமீபத்தில் செய்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில் நெஸ்லே மற்றும் ஆலன்ட் பதிவு, ஐக்கிய பைபிள் சங்கங்களின் பதிவு போன்ற அடிப்படைப் பதிவுகள் தயாரிக்கப்பட்டன. இவற்றை ஆராய்ந்ததால் கண்டு பிடிக்கப்பட்ட சில விஷயங்கள், தற்போதைய ஆங்கில திருத்திய பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படைப் பதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, *கிங் ஜேம்ஸ் வர்ஷன்* போன்ற பழைய மொழிபெயர்ப்புகளில் இருக்கும் கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத் திலுள்ள சில வசனங்கள், நகலெடுப்பவர்களால் பிற்பாடு சேர்க்கப்பட்டவை என் பதும், அவை கடவுளுடைய சக்தியின் தூண்டுதலால் எழுதப்பட்டவை அல்ல என்பதும் தெளிவாகத் தெரிகிறது. ஆனால், சேர்க்கப்பட்ட இந்த வசனங்களை நீக் குவது நிறைய பைபிள்களிலுள்ள வசனங்களின் எண்களில் குழப்பத்தை ஏற்படுத் தியுள்ளது. அதற்குக் காரணம், வசனங்களைப் பிரிக்கும் முறை 16-ஆம் நூற்றாண் டிலேயே முடிவு செய்யப்பட்டுவிட்டது. அந்த வசனங்கள் இவைதான்: மத்தேயு 17:21; 18:11; 23:14; மாற்கு 7:16; 9:44, 46; 11:26; 15:28; லூக்கா 17:36; 23:17; யோவான் 5:4; அப்போஸ்தலர் 8:37; 15:34; 24:7; 28:29; ரோமர் 16:24. இந்த பைபிள் மொழிபெயர்ப்பில், இவை விடப்பட்ட வசனங்கள் என்பது அடிக்குறிப் பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மாற்கு 16-ஆம் அதிகாரத்தின் விரிவான முடிவுரையும் (9-20 வசனங்கள்), அதன் சுருக்கமான முடிவுரையும், யோவான் 7:53–8:11-ல் இருக்கும் வார்த்தைகளும்

மூல கையெழுத்துப் பிரதிகளில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அதனால், தவறாகச் சேர்க்கப்பட்ட இந்த வசனங்கள் இந்த மொழிபெயர்ப்பில் சேர்க்கப்படவில்லை.

பொதுவாக, மூலப் பதிவுகளோடு எவை மிக நெருக்கமாக ஒத்துப்போகின்றன என்று பைபிள் அறிஞர்கள் நினைக்கிறார்களோ, அவற்றை அடிப்படையாக வைத்து சில வார்த்தைகள் இந்த மொழிபெயர்ப்பில் மாற்றப்பட்டிருக்கின்றன. உதாரணத்துக்கு, சில கையெழுத்துப் பிரதிகளின்படி, "இடுக்கமான வாசல் வழியாகப் போங்கள்; அழிவுக்குப் போகிற **வாசல்** அகலமாக இருக்கிறது, பாதையும் விசாலமாக இருக்கிறது" என்று மத்தேயு 7:13 சொல்கிறது. முன்பு வந்த ஆங்கில *புதிய உலக மொழிபெயர்ப்பு* பதிப்புகளில், இந்த வசனத்தில் "வாசல்" என்ற வார்த்தை ஒரு தடவைதான் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால், கையெழுத்துப் பிரதிகளைக் கூடுதலாக ஆராய்ச்சி செய்து பார்த்ததில் மூலப் பதிவில் "வாசல்" என்ற வார்த்தை இரண்டு தடவை இருப்பது தெரியவந்துள்ளது. இதுபோன்ற சில மாற்றங்கள் நிறைய இடங்களில் இருந்தாலும், இவை சிறிய மாற்றங்கள்தான். இவற்றால் கடவுளுடைய வார்த்தையாகிய பைபிளின் அடிப்படைச் செய்தி எந்த விதத்திலும் மாறவில்லை.

2 கொரிந்தியர் 4:13–5:4 வசனங்கள் காணப்படும் நாணல் கையெழுத்துப் பிரதி, இது சுமார் கி.பி. 200-ஐச் சேர்ந்தது

A4 எபிரெய வேதாகமத்தில் கடவுளுடைய பெயர்

எபிரெய வேதாகமத்தில் கடவுளுடைய பெயர் கிட்டத்தட்ட 7,000 தடவை வருகிறது. நான்கு எபிரெய மெய்யெழுத்துக்கள் (יהוה) கொண்ட அந்தப் பெயர், "யெகோவா" என்று இந்த பைபிளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பைபிளில் மிக அதிகமான தடவை வருகிற பெயர் இதுதான். "சர்வவல்லமையுள்ள கடவுள்," "உன்னதமான கடவுள்," "எஜமான்" போன்ற பல பட்டப்பெயர்களை பைபிள் எழுத்தாளர்கள் கடவுளுக்குப் பயன்படுத்தியிருந்தாலும், அவருடைய தனிப்பட்ட பெயரைக் குறிப்பிடுவதற்கு அந்த எபிரெய நான்கெழுத்துக்களைத்தான் பயன்படுத்தினார்கள்.

யெகோவாதான் தன்னுடைய பெயரைப் பதிவு செய்யும்படி பைபிள் எழுத்தாளர்களை வழிநடத்தினார். உதாரணத்துக்கு, "யெகோவாவின் பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்கிற ஒவ்வொருவரும் மீட்புப் பெறுவார்கள்" என்று எழுதும்படி தீர்க்கதரிசியான யோவேலைத் தன் சக்தியால் தூண்டினார். (யோவேல் 2:32) அதேபோல், "யெகோவா என்ற பெயருள்ள நீங்கள் ஒருவர்தான், இந்தப் பூமி முழுவதையும் ஆளுகிற உன்னதமான கடவுள் என்று மக்கள் புரிந்துகொள்ளட்டும்" என்று சங்கீத எழுத்தாளர்களில் ஒருவரை எழுத வைத்தார். (சங்கீதம் 83:18) சொல்லப்போனால், கடவுளுடைய மக்கள் மனப்பாடம் செய்து பாட வேண்டியிருந்த பாடல்களைக் கொண்ட சங்கீத புத்தகத்தில் மட்டுமே கடவுளுடைய பெயர் சுமார் 700 தடவை வருகிறது. அப்படியென்றால், இன்று இருக்கும் பல பைபிள் மொழிபெயர்ப்புகளில் கடவுளுடைய பெயர் ஏன் இல்லை? இந்த மொழிபெயர்ப்பு "யெகோவா" என்ற உச்சரிப்பை ஏன் பயன்படுத்துகிறது? யெகோவா என்ற கடவுளுடைய பெயரின் அர்த்தம் என்ன?

யூதர்களின் பாபிலோனிய சிறையிருப்புக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட பழங்கால எபிரெய எழுத்துக்களில் கடவுளுடைய பெயர்

יהוה

யூதர்களின் பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு பயன்படுத்தப்பட்ட எபிரெய எழுத்துக்களில் கடவுளுடைய பெயர்

நிறைய பைபிள் மொழிபெயர்ப்புகளில் கடவுளுடைய பெயர் ஏன் இல்லை? அதற்கு வித்தியாசப்பட்ட காரணங்கள் இருக்கின்றன. சர்வவல்லமையுள்ள கடவுளுக்குத் தனிப்பட்ட ஒரு பெயர் தேவையில்லை என்று சிலர் சொல்கிறார்கள். இன்னும் சிலர், யூதர்களின் பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறார்கள்; அதாவது, கடவுளுடைய பெயரைப் பயன்படுத்தினால் அதன் புனிதம் கெட்டுவிடுமோ என்று பயந்து அதைப் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். வேறு சிலர், கடவுளுடைய பெயரை எப்படிச் சரியாக உச்சரிப்பது என்று யாருக்கும் தெரியாததால், "கர்த்தர்," "தேவன்" போன்ற பட்டப்பெயர்களைப் பயன்படுத்துவதுதான் சிறந்தது என்று நினைக்கிறார்கள். ஆனால், இந்தக் காரணங்கள் எதுவுமே நியாயமானவை அல்ல. ஏன் என்று கவனியுங்கள்:



கி.பி. முதல் நூற்றாண்டின் முதல் பகுதியைச் சேர்ந்த சவக்கடல் சுருளில் இருந்த சங்கீத புத்தகத்தின் சில பகுதிகள் இவை. இவற்றிலுள்ள வார்த்தைகள் யூதர்களின் பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு பயன்படுத்தப்பட்ட எபிரெய எழுத்துக்களின் வடிவத்தில் இருக்கின்றன. ஆனால், நான்கு மெய்யெழுத்துக்கள் மட்டும் எல்லா இடங்களிலும் பழங்கால எபிரெய எழுத்துக்களில் இருக்கின்றன

- கடவுளுக்கு ஒரு தனிப்பட்ட பெயர் தேவையில்லை என்று சொல்கிறவர்கள், ஒரு முக்கியமான அத்தாட்சியையே அலட்சியம் செய்கிறார்கள்; அதாவது, கடவுளுடைய பெயர் பழங்கால பைபிள் சுருள்களில் இருக்கிறது, அதுவும் கிறிஸ்துவின் காலத்துக்கு முன்பிருந்தே பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிற சுருள்களில் இருக்கிறது என்ற அத்தாட்சியைப் புறக்கணிக்கிறார்கள். மேலே குறிப்பிடப்பட்டபடி, பைபிளில் கிட்டத்தட்ட 7,000 தடவை யெகோவா தன்னுடைய பெயரைப் பதிவு செய்து வைத்திருக்கிறார். அப்படியானால், நாம் அவருடைய பெயரைத் தெரிந்துகொண்டு அதைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர் விரும்புவது தெளிவாகத் தெரிகிறது.
- யூதர்களின் பாரம்பரிய நம்பிக்கைக்கு மதிப்புக் கொடுத்து கடவுளுடைய பெயரை பைபிளிலிருந்து நீக்கியவர்கள், முக்கியமான ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள். யூத அறிஞர்கள் சிலர், கடவுளுடைய பெயரை உச்சரிக்க மறுத்தார்களே தவிர, பைபிள் சுருள்களிலிருந்து அதை நீக்கிவிடவில்லை. சவக்கடலுக்குப் பக்கத்தில் கும்ரான் என்ற இடத்தில் பழங்கால சுருள்கள் கண்டெடுக்கப்பட்டன; அவற்றில் கடவுளுடைய பெயர் நிறைய தடவை வருகிறது. சில பைபிள் மொழிபெயர்ப்பாளர்கள், கடவுளுடைய பெயர் வரும் இடங்களில் "**கர்த்தர்**" என்று தடித்த எழுத்துக்களில் போட்டிருக்கிறார்கள்; மூலப் பதிவில் அந்த இடங்களில் கடவுளுடைய பெயர்தான் இருந்தது என்பதை இதன் மூலம் மறைமுகமாகக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், மூலப் பதிவில் கடவுளுடைய பெயர் ஆயிரக்கணக்கான தடவை இருக்கிறதென்று தெரிந்திருந்தும், மொழிபெயர்ப்பாளர்கள் ஏன் தங்கள் இஷ்டத்துக்கு அதை பைபிளிலிருந்து நீக்கினார்கள் அல்லது வேறு வார்த்தையைப் பயன்படுத்தினார்கள்? இப்படி மாற்ற அவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்ததாக நினைக்கிறார்கள்? இதற்கு அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்!
- கடவுளுடைய பெயரின் சரியான உச்சரிப்பு தெரியாததால் அதைப் பயன்படுத்தக் கூடாதென்று சொல்கிறவர்கள், இயேசு என்ற பெயரை மட்டும் தாராளமாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், இயேசுவின் பெயரை முதல் நூற்றாண்டிலிருந்த அவருடைய சீஷர்கள் உச்சரித்த விதத்துக்கும், இன்றுள்ள பெரும்பாலான கிறிஸ்தவர்கள் உச்சரிக்கும் விதத்துக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. இயேசுவின் பெயரை *யெஷூவா* என்றும், "கிறிஸ்து" என்ற பட்டப்பெயரை *மஷியாக்* (அதாவது, "மேசியா") என்றும் யூதக் கிறிஸ்தவர்கள் உச்சரித்திருக்கலாம். கிரேக்க மொழி பேசிய கிறிஸ்தவர்கள் அவரை *ஈசோஸ் கிறிஸ்டோஸ்* என்று அழைத்தார்கள். லத்தீன் மொழி பேசிய கிறிஸ்தவர்கள் *ஈசஸ் கிறிஸ்டஸ்* என்று அழைத்தார்கள். கடவுளுடைய சக்தியின் தூண்டுதலால் பைபிள் எழுத்தாளர்கள், அந்தப் பெயரின் கிரேக்க மொழிபெயர்ப்பைத்தான் பயன்படுத்தினார்கள்; அப்படியென்றால், அப்போது புழக்கத்திலிருந்த உச்சரிப்பைப் பயன்படுத்துவதுதான் ஞானமானது என்பதை முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் உணர்ந்தார்கள் எனத் தெளிவாகத் தெரிகிறது. அதேபோல, பழங்கால எபிரெய மொழியில் கடவுளுடைய பெயர் வேறு விதமாக உச்சரிக்கப்பட்டிருந்தாலும், "யெகோவா" என்ற உச்சரிப்பைப் பயன்படுத்துவது நியாயமென்று புதிய உலக பைபிள் மொழிபெயர்ப்புக் குழுவினர் நினைக்கிறார்கள்.

***புதிய உலக மொழிபெயர்ப்பு* பைபிள் ஏன் "யெகோவா" என்ற உச்சரிப்பைப் பயன்படுத்துகிறது?** கடவுளுடைய பெயரைக் குறிக்கும் நான்கு எபிரெய மெய்யெழுத்துக்களுக்கு (יהוה) இணையான தமிழ் மெய்யெழுத்துக்கள் ய்ஹ்வ்ஹ் என்பதாகும். பழங்கால எபிரெய மொழி, உயிரெழுத்துக்கள் இல்லாமல்தான் எழுதப்பட்டது; அதனால் இந்த எபிரெய நான்கெழுத்துக்களிலும் உயிரெழுத்துக்கள் இல்லை. பழங்கால எபிரெய மொழி புழக்கத்தில் இருந்தபோது, அதை வாசித்தவர்கள் பொருத்தமான உயிரெழுத்துக்களைச் சேர்த்து எளிதில் அவற்றை வாசித்தார்கள்.

ஆதியாகமம் 15:2-ல் காணப்படும் கடவுளுடைய பெயர்; 1530-ல் வில்லியம் டின்டேல் மொழிபெயர்த்த ஐந்தாகமம்


After these deades / ye worde of God
came vnto Abram in a vision sayinge
feare not Abram / I am thy shilde /
and thy rewarde shalbe exceadynge greate. And
Abram answered: LORDe Iehouah what wilt
thou geue me: I goo childlesse / and the carer
of myne housse / this Eleasar of Damasco hath
a sonne. And Abram sayd: se / to me hast thou
geven no seede: lo / a lad borne in my housse shal
be myne heyre.

And beholde / the worde of the LORDe spake vnto Abram sayenge: He shall not

எபிரெய வேதாகமம் எழுதி முடிக்கப்பட்டுக் கிட்டத்தட்ட 1,000 வருஷங்களுக்குப் பின்பு, உச்சரிப்புக் குறியீடுகளைப் பயன்படுத்தும் முறையை யூத அறிஞர்கள் உருவாக்கினார்கள்; எபிரெய வார்த்தைகளைப் பொருத்தமான உயிரெழுத்துக்களோடு சேர்த்து வாசிப்பதற்கு இந்தக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. அந்தச் சமயத்துக்குள், கடவுளுடைய தனிப்பட்ட பெயரை உச்சரிக்கக் கூடாது என்ற மூடநம்பிக்கை பல யூதர்கள் மத்தியில் பரவியதால், கடவுளுடைய பெயருக்குப் பதிலாக மாற்று வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். அந்த **மாற்று வார்த்தைகளிலுள்ள** உயிரெழுத்துக்களைக் கடவுளுடைய பெயரைக் குறிக்கும் நான்கு மெய்யெழுத்துக்களோடு சேர்த்து எழுதினார்கள்; அந்த நான்கு மெய்யெழுத்துக்களை நகலெடுத்த ஒவ்வொரு சமயத்திலும் அப்படித்தான் அவர்கள் செய்ததாகத் தெரிகிறது. அதனால், உச்சரிப்புக் குறியீடுகள் அடங்கிய கையெழுத்துப் பிரதிகளிலிருந்துகூட, எபிரெய மொழியில் கடவுளுடைய பெயரின் சரியான உச்சரிப்பைத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. கடவுளுடைய பெயர் “யாவே” என்று உச்சரிக்கப்பட்டதாகச் சிலர் நினைக்கிறார்கள். வேறு விதமாகவும் அது உச்சரிக்கப்பட்டிருக்கலாம் என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். லேவியராகம புத்தகத்தின் ஒரு பகுதியைக் கொண்ட சவக்கடல் சுருள் ஒன்றில், கடவுளுடைய பெயர் *யாவோ* என்று கிரேக்கில் எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, *யாயே, யாபே, யாவூவே* என்றெல்லாம் அது உச்சரிக்கப்பட்டிருக்கலாம் என்று ஆரம்பக் கால கிரேக்க எழுத்தாளர்கள் சொல்கிறார்கள். ஆனால், எது சரியான உச்சரிப்பு என்று நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது. கடவுளுடைய பூர்வ கால ஊழியர்கள் இந்தப் பெயரை எபிரெயுவில் எப்படி உச்சரித்திருப்பார்கள் என்று நமக்குத் தெரியாது. (ஆதியாகமம் 13:4; யாத்திராகமம் 3:15) ஆனால், மனிதர்களோடு தொடர்புகொண்டபோது கடவுள் பல தடவை தன் பெயரைப் பயன்படுத்தினார் என்றும், மக்கள் அந்தப் பெயரைச் சொல்லித்தான் ஜெபம் செய்தார்கள் என்றும், மற்றவர்களோடு பேசும்போது அந்தப் பெயரைச் சகஜமாகப் பயன்படுத்தினார்கள் என்றும் நமக்குத் தெரியும்.—யாத்திராகமம் 6:2; 1 ராஜாக்கள் 8:23; சங்கீதம் 99:9.

இந்த பைபிள் மொழிபெயர்ப்பு ஏன் “யெகோவா” என்ற உச்சரிப்பைப் பயன்படுத்தியிருக்கிறது? ஏனென்றால், கடவுளுடைய பெயரின் இந்த உச்சரிப்பு தமிழில் பல வருஷங்களாகப் புழக்கத்தில் இருந்துவருகிறது.

உதாரணத்துக்கு, 1840-ல் ஜஃப்னா பைபிள் சங்கம் வெளியிட்ட பைபிள் மொழிபெயர்ப்பில் “யெகோவா” என்ற உச்சரிப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. 1850-ல் வெளியிடப்பட்ட *பழைய புதிய உடன்படிக்கைகள் அடங்கிய வேதபுத்தகம்* “யெகோவா”

என்ற உச்சரிப்பை ஆயிரக்கணக்கான தடவை பயன்படுத்தியிருக்கிறது. அதேபோல், 1936-ல் *பிரித்தானிய சர்வதேச வேதாகமச் சங்கத்து சென்னை உதவிச் சங்கம்* வெளியிட்ட பரிசுத்த வேதாகமமும் “யெகோவா” என்ற உச்சரிப்பை ஆயிரக்கணக்கான தடவை பயன்படுத்தியிருக்கிறது. 2001-ல் வெளியான *ஈஸி டு ரீட் வர்ஷன்* பைபிள் “யேகோவா” என்ற உச்சரிப்பைச் சுமார் 20 தடவை பயன்படுத்தியிருக்கிறது. 2005-ல் வெளியிடப்பட்ட *இணைவசன வேதாகமத்தில்* “யெகோவா” என்ற பெயர் சில அடிக்குறிப்புகளில் காணப்படுகிறது. எத்தனையோ வருஷங்களாகவும் மிகப் பரவலாகவும் உபயோகிக்கப்படும் *பரிசுத்த வேதாகமம்-தமிழ் O.V.* பைபிள் “யேகோவா” என்ற உச்சரிப்பைப் பல தடவை பயன்படுத்தியிருக்கிறது. அதுமட்டுமல்ல, மகாகவி பாரதியார் எழுதிய “விநாயகர் நான்மணிமாலை” என்ற பாடலில் “யெஹோவா” என்ற உச்சரிப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. பல சர்ச் பாடல்களிலும்கூட இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, கடவுளுடைய பெயரின் இந்த அடிப்படை உச்சரிப்பு தமிழில் பல பத்தாண்டுகளாகப் புழக்கத்தில் இருந்துவருவது தெளிவாகத் தெரிகிறது.

மற்ற மொழிகளிலும் இதேபோன்ற உச்சரிப்பு புழக்கத்தில் இருக்கிறது. உதாரணத்துக்கு, 1530-ல் வில்லியம் டின்டேல் மொழிபெயர்த்த ஐந்தாகமப் புத்தகத்தில், கடவுளுடைய பெயர் முதன்முதலாக ஆங்கிலத்தில் இருந்தது. “ஈஹோவா” என்ற உச்சரிப்பு அதில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

யெகோவா என்ற பெயரின் அர்த்தம் என்ன? “ஆகும்படி” என்ற அர்த்தமுள்ள எபிரெய வினைச்சொல்லிலிருந்து யெகோவா என்ற பெயர் வருகிறது. அந்த வினைச்சொல், ஒருவர் ஒன்றைச் செய்வதைக் குறிப்பதாக நிறைய அறிஞர்கள் நம்புகிறார்கள். அதனால், “ஆகும்படி செய்பவர்” என்பதே கடவுளுடைய பெயரின் அர்த்தம் என்று புதிய உலக பைபிள் மொழிபெயர்ப்புக் குழுவினர் நம்புகிறார்கள். இது சம்பந்தமாக அறிஞர்கள் வித்தியாசமான கருத்துகளைச் சொல்கிறார்கள். அதனால், அதனுடைய அர்த்தம் இதுதான் என்று நம்மால் அடித்துச் சொல்ல முடியாது. இருந்தாலும், யெகோவா எல்லாவற்றையும் படைத்தவராகவும், தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறவராகவும் இருப்பதால் இந்த விளக்கம் அவருக்கு நன்றாகப் பொருந்துகிறது. அவர் இந்தப் பிரபஞ்சத்தையும் புத்திக்கூர்மையுள்ள படைப்புகளையும் உண்டாக்கியதோடு, தொடர்ந்து தன்னுடைய விருப்பமும் நோக்கமும் படிப்படியாக நிறைவேறிக்கொண்டே இருக்கும்படி செய்கிறார்.

יהוה

எபிரெய நான்கெழுத்துக்கள், <u>ய்ஹ்வ்ஹ்</u>: “ஆகும்படி செய்கிறவர்”

הוה

வினைச்சொல் <u>ஹ்வ்ஹ்</u>: “ஆகும்படி”

அதனால், யெகோவா என்ற பெயரின் அர்த்தம், யாத்திராகமம் 3:14-ல் உள்ள வினைச்சொல்லின் அர்த்தத்தை மட்டுமே குறிப்பதில்லை. அந்த வசனத்தில், “நான் எப்படியெல்லாம் ஆக நினைக்கிறேனோ அப்படியெல்லாம் ஆவேன்” என்று கடவுள் தன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். இந்த வார்த்தைகள் கடவுளுடைய பெயரின் முழுமையான அர்த்தத்தைத் தருவதில்லை. மாறாக, கடவுளுடைய சுபாவத்தின் ஓர் அம்சத்தை மட்டுமே அவை காட்டுகின்றன; அதாவது, தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற ஒவ்வொரு சூழ்நிலையிலும் எப்படியெல்லாம் ஆக வேண்டுமோ, அப்படியெல்லாம் ஆகிறார் என்று காட்டுகின்றன. ஆகவே, அவருடைய பெயருக்கு இந்த அர்த்தமும் இருக்கலாம் என்றாலும் இது மட்டும்தான் அர்த்தம் என்று சொல்ல முடியாது. தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தன்னுடைய படைப்புகள் எப்படியெல்லாம் ஆக வேண்டுமோ அப்படியெல்லாம் ஆக வைக்கிறார் என்ற அர்த்தமும் அதற்கு இருக்கிறது.

A5

கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் கடவுளுடைய பெயர்

எபிரெய வேதாகமத்தின் மூலப் பதிவில் கடவுளுடைய தனிப்பட்ட பெயரைக் குறிக்கும் நான்கெழுத்துக்கள் (יהוה) கிட்டத்தட்ட 7,000 தடவை வருகின்றன என்பதை பைபிள் அறிஞர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால், கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் மூலப் பதிவில் அந்தப் பெயர் இருக்கவில்லை என்று பலர் நினைக்கிறார்கள். இதனால், புதிய ஏற்பாடு என்றழைக்கப்படுகிற பகுதியில் யெகோவா என்ற பெயரைப் பெரும்பாலான நவீன பைபிள் மொழிபெயர்ப்புகள் பயன்படுத்துவதில்லை. அந்த நான்கெழுத்துக்களைக் கொண்ட எபிரெய வேதாகம மேற்கோள்களை அவர்கள் மொழிபெயர்க்கும்போதுகூட, கடவுளுடைய தனிப்பட்ட பெயருக்குப் பதிலாக "கர்த்தர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால், *பரிசுத்த பைபிளின் புதிய உலக மொழிபெயர்ப்பில்* இப்படிச் செய்யப்படவில்லை. கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் மொத்தம் 237 தடவை யெகோவா என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதை மொழிபெயர்த்தவர்கள் இரண்டு முக்கியமான விஷயங்களை மனதில் வைத்தே அப்படிச் செய்திருக்கிறார்கள்: (1) இன்றைக்கு நம்மிடம் இருக்கும் கிரேக்க கையெழுத்துப் பிரதிகள் மூலப் பதிவுகள் கிடையாது. இன்றுள்ள ஆயிரக்கணக்கான நகல்களில் பெரும்பாலானவை, மூலப் பதிவுகள் எழுதப்பட்டு குறைந்தபட்சம் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்டவை. (2) இதற்கிடையில், கையெழுத்துப் பிரதிகளை நகலெடுத்தவர்கள் கடவுளுடைய பெயரைக் குறிக்கும் நான்கெழுத்துக்கள் இருந்த இடங்களில் *கைரியாஸ்* (கர்த்தர்) என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார்கள்; அல்லது, *கைரியாஸ்* என்று ஏற்கெனவே இருந்த நகல்களைப் பார்த்து நகலெடுத்தார்கள்.

மூல கிரேக்க கையெழுத்துப் பிரதிகளில் அந்த நான்கெழுத்துக்கள் இருந்தன என்பதற்கு ஆணித்தரமான ஆதாரங்கள் இருப்பதாக புதிய உலக பைபிள் மொழிபெயர்ப்புக் குழுவினர் முடிவு செய்தார்கள். அந்த ஆதாரங்கள் இவைதான்:

- **இயேசுவின் காலத்திலும் அப்போஸ்தலர்களின் காலத்திலும் பயன்படுத்தப்பட்ட எபிரெய வேதாகமத்தின் பிரதிகளில் அந்த நான்கெழுத்துக்கள் எல்லா இடங்களிலும் இருந்தன.** இது உண்மை இல்லை என்று முன்பு சிலர் வாதாடினார்கள். ஆனால், முதல் நூற்றாண்டைச் சேர்ந்த எபிரெய வேதாகமத்தின் பிரதிகள் கும்ரான் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, இது உண்மைதான் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபணமானது.
- **இயேசுவின் காலத்திலும் அப்போஸ்தலர்களின் காலத்திலும் பயன்படுத்தப்பட்ட *செப்டுவஜன்ட்* மொழிபெயர்ப்பிலும் கடவுளுடைய பெயர் இருந்தது.** *செப்டுவஜன்ட்டின்,* அதாவது எபிரெயுவிலிருந்து கிரேக்கில் மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வேதாகமத்தின், கையெழுத்துப் பிரதிகளில் அந்த நான்கெழுத்துக்கள் இல்லை என்று பல நூற்றாண்டுகளாக அறிஞர்கள் நினைத்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் மத்திபத்தில், இயேசுவின் காலத்தைச் சேர்ந்த கிரேக்க *செப்டுவஜன்ட்* மொழிபெயர்ப்பின் மிகப் பழமையான சில துண்டுகள் அறிஞர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. அவற்றில் கடவுளுடைய தனிப்பட்ட பெயர் எபிரெய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தன. இதிலி

ருந்து, இயேசுவின் நாளிலிருந்த *செப்டுவஜன்ட்* நகல்களில் கடவுளுடைய பெயர் இருந்ததென்று நன்றாகத் தெரிகிறது. ஆனால் கி.பி. நான்காம் நூற்றாண்டுக்குள், கிரேக்க *செப்டுவஜன்ட்டின்* முக்கியமான கையெழுத்துப் பிரதிகளில் (கோடக்ஸ் வாட்டிகானஸ், கோடக்ஸ் சைனைட்டிகஸ் போன்றவற்றில்) கடவுளுடைய பெயர் ஆதியாகமத்திலிருந்து மல்கியா வரையிலான புத்தகங்களில் இல்லாமல் போய் விட்டது. (ஆனால், பழமையான கையெழுத்துப் பிரதிகளில் அந்தப் பெயர் இருந் தது.) அதனால், அந்தக் காலப்பகுதி முதற்கொண்டு பாதுகாக்கப்பட்ட "புதிய ஏற் பாடு" என்றழைக்கப்படுகிற கிரேக்க வேதாகமத்தின் பிரதிகளில் கடவுளுடைய பெயர் இல்லாதது ஆச்சரியமில்லை.

- **கடவுளுடைய பெயரை இயேசு அடிக்கடி பயன்படுத்தியதாகவும், அதை மற்றவர்களுக்குச் சொன்னதாகவும் கிறிஸ்தவ கிரேக்க வேதாகமமே குறிப் பிடுகிறது.** (யோவான் 17:6, 11, 12, 26) 'நான் என்னுடைய தகப்பனின் பெயரில் வந்திருக்கிறேன்' என்று இயேசு நேரடியாகச் சொன்னார். அதோடு, 'தகப்பனுடைய பெயரில்தான்' எல்லா செயல்களையும் செய்ததாகச் சொன்னார்.—யோவான் 5:43; 10:25.

- **கிறிஸ்தவ கிரேக்க வேதாகமம் கடவுளுடைய சக் தியின் தூண்டுதலால்தான் பரிசுத்த எபிரெய வேதாகமத்தோடு சேர்க்கப்பட்டது என்பதால், இதில் மட்டும் யெகோவாவின் பெயர் இல்லா மல் போனது முரண்பாடாக இருக்கிறது.** சுமார் கி.பி. முதல் நூற்றாண்டின் மத்திபத்தில், எருசலேமில் இருந்த மூப்பர்களிடம் சீஷராகிய யாக்கோபு இப் படிச் சொன்னார்: "கடவுள் முதல் தடவையாக மற்ற தேசத்து மக்கள்மேல் தன் கவனத்தைத் திருப்பி, அவர் கள் மத்தியிலிருந்து தன்னுடைய பெயருக்கென்று ஒரு ஜனத்தைப் பிரித்தெடுத்த விதத்தைப் பற்றி சிமியோன் நமக்கு நன்றாக விவரித்துச் சொன்னார்." (அப்போஸ்த லர் 15:14) முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யாருமே கடவுளுடைய பெயரைத் தெரியாமலோ பயன்படுத்தா மலோ இருந்திருந்தால், யாக்கோபு இப்படிச் சொன்ன தில் அர்த்தமே இருந்திருக்காது.

'நான் என்னுடைய தகப்பனின் பெயரில் வந்திருக்கிறேன்' என்று இயேசு நேரடியாகச் சொன்னார். அதோடு, 'தகப்பனுடைய பெயரில்தான்' எல்லா செயல்களையும் செய்ததாகச் சொன்னார்

- **கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் கடவுளுடைய பெயரின் சுருக்கம் இருக் கிறது.** வெளிப்படுத்துதல் 19:1, 3, 4, 6 ஆகிய வசனங்களிலுள்ள "அல்லேலூயா" என்ற வார்த்தையில் கடவுளுடைய பெயரின் சுருக்கம் காணப்படுகிறது. இந்த எபிரெய வார்த்தையின் நேரடி அர்த்தம் "'யா'வைப் புகழுங்கள்" என்பதாகும். "யா" என்பது யெகோவா என்ற பெயரின் சுருக்கம். கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத் தில் வருகிற நிறைய பெயர்கள் கடவுளுடைய பெயரிலிருந்து எடுக்கப்பட்டவை. சொல்லப்போனால், இயேசு என்ற பெயருக்கு "யெகோவாவே மீட்பு" என்பதுதான் அர்த்தம் என்று சில புத்தகங்கள் விளக்குகின்றன.

- **யூத கிறிஸ்தவர்கள் கடவுளுடைய பெயரைப் பயன்படுத்தினார்கள் என் பது அவர்கள் எழுதிய பழங்கால யூத புத்தகங்களிலிருந்து தெரிகிறது.** ஓய்வுநாளில் எரிக்கப்பட்ட கிறிஸ்தவ புத்தகங்களைப் பற்றி டோஸெப்டா (சுமார் கி.பி. 300-ஆம் வருஷத்துக்குள் எழுதி முடிக்கப்பட்ட வாய்மொழி சட்டங்களின் தொகுப்பு) இப்படிச் சொல்கிறது: "நற்செய்தியாளர்களுடைய புத்தகங்களையும், *மினிம்* என்பவர்களுடைய [யூத கிறிஸ்தவர்கள் என்று கருதப்பட்டவர்களுடைய] புத்தகங்களையும் அவர்கள் தீயிலிருந்து காப்பாற்றுவதில்லை. அவை இருந்த



உபாகமம் 6:4
நாஷ் பாப்பிரஸ்
கி.மு. இரண்டாம் அல்லது முதலாம் நூற்றாண்டு

பழங்கால எபிரெய பிரதியில் கடவுளின் பெயர் இரண்டு தடவை வருகிறது



உபாகமம் 18:15,16 காணப்படுகிற பாப்பிரஸ் துண்டு
பி. ஃபவுட் Inv. 266
கி.மு. முதலாம் நூற்றாண்டு

எபிரெய எழுத்துக்களில் கடவுளுடைய பெயரைக் குறிப்பிடும் கிரேக்க செப்டுவஜன்ட் மொழிபெயர்ப்பு

உபாகமம் 18:15, 16
கோடெக்ஸ் அலெக்ஸாண்ட்ரினஸ்
கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

கடவுளுடைய பெயர் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக *KC*, *KY* என்று போடப்பட்டுள்ளன; இவை, *Ky′ri·os* (கர்த்தர்) என்ற கிரேக்க வார்த்தையின் சுருக்கங்கள்



உபாகமம் 18:15-ஐ மேற்கோள் காட்டும்
அப்போஸ்தலர் 3:22
ஆங்கில *புதிய உலக மொழிபெயர்ப்பு*
கி.பி. 20-ஆம் நூற்றாண்டு

புதிய உலக மொழிபெயர்ப்பு கடவுளுடைய பெயரை அதற்குரிய இடங்களில் பயன்படுத்தியிருக்கிறது

இடத்திலேயே அவற்றை எரித்துவிடுகிறார்கள். கடவுளுடைய பெயர் இருந்த எல்லா பாகங்களோடும் சேர்த்து அந்தப் புத்தகங்களை எரித்துவிடுகிறார்கள்." கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த கலிலேயரான ரபீ யோசே இப்படிச் சொன்னதாக அதே தொகுப்பு குறிப்பிடுகிறது: ஓய்வுநாள் தவிர மற்ற நாட்களில், "அந்தப் புத்தகங்களில் [அதாவது, கிறிஸ்தவ புத்தகங்களில்] கடவுளுடைய பெயர் வருகிற இடங்களை வெட்டி எடுத்து பத்திரமாக வைத்துவிடுகிறார்கள், மற்ற பாகங்களை எரித்துவிடுகிறார்கள்."

- **கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்திலுள்ள எபிரெய வேதாகம மேற்கோள்களில் கடவுளுடைய பெயர் இருந்திருக்கும் என்று சில பைபிள் அறிஞர்கள் ஒத்துக்கொள்கிறார்கள்.** "புதிய ஏற்பாட்டில் கடவுளுடைய பெயரைக் குறிக்கும்

நான்கெழுத்துக்கள்" என்ற தலைப்பில் *தி ஆன்க்கர் பைபிள் டிக்‌ஷனரி* இப்படிச் சொல்கிறது: "பு[திய] ஏற்[பாடு] முதன்முதலில் எழுதப்பட்டபோது, அதிலுள்ள ப[ழைய] ஏற்[பாட்டின்] சில மேற்கோள்களிலோ எல்லா மேற்கோள்களிலுமோ கடவுளுடைய பெயரைக் குறிக்கும் நான்கெழுத்துக்கள், அதாவது யாவே என்ற பெயர், பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரம் இருக்கிறது." பேராசிரியர் ஜார்ஜ் ஹோவார்ட் இப்படி எழுதினார்: "ஆரம்பக் கால சர்ச் பயன்படுத்திய கிரேக்க பைபிளின் [*செப்டுவஜன்ட்டின்*] பிரதிகளில் கடவுளுடைய பெயரைக் குறிக்கும் நான்கெழுத்துக்கள் இருந்தன. அதனால், பு[திய] ஏற்[பாட்டை] எழுதியவர்கள் வசனங்களை மேற்கோள் காட்டியபோது அந்த நான்கெழுத்துக்களை அப்படியே பயன்படுத்தியிருப்பார்கள் என்று நம்புவது நியாயமானதே."

• **பிரபல பைபிள் மொழிபெயர்ப்பாளர்கள் கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் கடவுளுடைய பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.** இந்த மொழிபெயர்ப்பாளர்களில் சிலர், *புதிய உலக மொழிபெயர்ப்பு* வெளியிடப்படுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே கடவுளுடைய பெயரைப் பயன்படுத்தினார்கள். அந்த மொழிபெயர்ப்பாளர்களும் அவர்களுடைய மொழிபெயர்ப்புகளும் இவைதான்: ஹெர்மன் ஹைன்ஃபெட்டர் என்பவரின் *எ லிட்ரல் டிரான்ஸ்லேஷன் ஆஃப் த நியு டெஸ்டமென்ட் . . . ஃப்ரம் த டெக்ஸ்ட் ஆஃப் த வாடிகன் மேனுஸ் கிரிப்ட்* (1863); பென்ஜமின் வில்சன் என்பவரின் *த எம்ஃபடிக் டயக்லாட்* (1864); ஜார்ஜ் பார்க்கர் ஸ்டீவன்ஸ் என்பவரின் *எபிஸில்ஸ் ஆஃப் பால் இன் மாடர்ன் இங்லிஷ்* (1898); டபிள்யூ. ஜி. ரதர்ஃபர்ட் என்பவரின் *செயின்ட் பால்ஸ் எபிஸில் டு த ரோமன்ஸ்* (1900); லண்டன் பிஷப் ஜெ.டபிள்யு.சி. வேன்ட் என்பவரின்



அப்போஸ்தலர் 2:34-ல் கடவுளுடைய பெயர்,
பென்ஜமின் வில்சன் என்பவரின் *த எம்ஃபடிக் டயக்லாட்* (1864)

த நியு டெஸ்டமென்ட் லெட்டர்ஸ் (1946). அதோடு, 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பைபிளை ஸ்பானிஷ் மொழியில் மொழிபெயர்த்த பெப்லோ பெஸ்ஸன் என்பவர், "ஜெஹோவா" என்ற பெயரை லூக்கா 2:15-ம் வசனத்திலும் யூதா 14-ம் வசனத்திலும் பயன்படுத்தியிருக்கிறார். அதோடு, கடவுளுடைய பெயர் எங்கெல்லாம் வருவது சரியாக இருக்கும் என்பதைக் கிட்டத்தட்ட 100 அடிக்குறிப்புகளில் காட்டியிருக்கிறார். இந்த மொழிபெயர்ப்புகள் வெளிவருவதற்குப் பல வருஷங்களுக்கு முன்பே, அதாவது 16-ஆம் நூற்றாண்டிலிருந்தே, கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் எபிரெய மொழிபெயர்ப்புகள், கடவுளுடைய பெயரைக் குறிக்கும் நான்கெழுத்துக்களைப் பல இடங்களில் பயன்படுத்தின. ஜெர்மன் மொழியில் மட்டும், குறைந்தபட்சம் 11 மொழிபெயர்ப்புகள் "ஜெஹோவா" என்ற பெயரை (அல்லது, "யாவே" என்ற எபிரெய வார்த்தையின் எழுத்துப்பெயர்ப்பை) கிறிஸ்தவ கிரேக்க

வேதாகமத்தில் பயன்படுத்தியிருக்கின்றன; வேறு நான்கு மொழிபெயர்ப்பாளர்கள் “கர்த்தர்” என்ற வார்த்தைக்குப் பக்கத்தில் “ஜெஹோவா” என்று அடைப்புக்குறிக்குள் போட்டிருக்கிறார்கள். 70-க்கும் மேற்பட்ட ஜெர்மன் மொழிபெயர்ப்புகள் கடவுளுடைய பெயரை அடிக்குறிப்புகளில் அல்லது விளக்கவுரைகளில் பயன்படுத்தியிருக்கின்றன.

- **நூற்றுக்கும் அதிகமான மொழிகளில் வெளிவந்த கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் கடவுளுடைய பெயர் இருக்கிறது.** ஆப்பிரிக்கர்கள், பழங்குடி அமெரிக்கர்கள், ஆசிய மக்கள், ஐரோப்பியர்கள், பசிபிக் தீவு மக்கள் ஆகியவர்களின் பல மொழிகளிலுள்ள பைபிளிலும் கடவுளுடைய பெயர் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (2510, 2511 பக்கங்களில் உள்ள பட்டியலைப் பாருங்கள்.) மேலே சொல்லப்பட்டதைப் போன்ற காரணங்களுக்காகத்தான் இந்த மொழிபெயர்ப்பாளர்கள் கடவுளுடைய பெயரைப் பயன்படுத்தினார்கள். கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தின் இந்த மொழிபெயர்ப்புகளில் சில, சமீபத்தில்தான் வெளிவந்தன. உதாரணமாக, ரோட்டுமன் பைபிளில் (1999) 48 வசனங்களில் 51 தடவை “ஜிஹோவா” என்ற பெயர் இருக்கிறது; இந்தோனேஷியாவைச் சேர்ந்த பாடாக் (டோபா) மொழிபெயர்ப்பில் (1989) “ஜஹோவா” என்ற பெயர் 110 தடவை வருகிறது.

அதனால், கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் யெகோவா என்ற கடவுளுடைய பெயரை அதற்குரிய இடங்களில் பயன்படுத்துவதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. *புதிய உலக மொழிபெயர்ப்பு* பைபிளை மொழிபெயர்த்தவர்கள் அதைத்தான் செய்திருக்கிறார்கள். கடவுளுடைய பெயர்மேல் இருக்கும் ஆழ்ந்த மரியாதையினாலும், மூலப் பதிவிலுள்ள எதையும் நீக்கிவிடக் கூடாதென்ற பயத்தினாலும் அப்படிச் செய்திருக்கிறார்கள்.—வெளிப்படுத்துதல் 22:18, 19.



மாற்கு 12:29, 30-ல் கடவுளுடைய பெயர்,
ஹவாய் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பைபிள்

கிறிஸ்தவ கிரேக்க வேதாகமத்தில் கடவுளுடைய பெயர் இருக்கும் மொழிகள்/கிளைமொழிகள்

மொழி அல்லது கிளைமொழி: **கடவுளுடைய பெயர்**

அநிட்யம்: **Ihova**
அரவக்: **Jehovah**
அவபாகல்: **Yehóa**
ஆங்கிலம்: **Jehovah**
இஃபிக்: **Jehovah**
இஃபேட் (வடக்கு): **Yehova**
இந்தோனேஷியன்: **YAHWEH**
இலா: **Yaave**
இலிக்கூ (லூசெங்கோவின் கிளைமொழி): **Yawe**
உம்பண்டு: **Yehova**
உரிபிவ்: **Iova**
எண்டாவ்: **Jehova**
எபிரெயு: **יהוה**
ஏவே: **Yehowa**
ஃபாங்: **Jehôva**
ஃபிரெஞ்சு: **IHVH**, ***yhwh***
ஃபிஜியன்: **Jiova**
கலங்கா: **Yehova**; **Yahwe**
கலா லகாவ் யா: **Iehovan**
கலென்ஜின்: **Jehovah**
கா: **Iehowa**
கிசோங்கே: **Yehowa**
கிபாரியோ (கெரெவோவின் கிளைமொழி): **Iehova**
கிப்சிகிஸ்: **Jehoba**
கிரபாட்டீ: **Iehova**
கிரேபோ: **Jehova**
கிலூபா: **Yehova**
குரோஷியன்: **Jehova**
குவானுவா: **Ieova**
கெரெவோ: **Iehova**
கொரியன்: **여호와**
கொஸ்ரேயன்: **Jeova**
சகாவோ: **Ihova**; **Iehova**
சமோவன்: **Ieova**
சாக்கோபோ: **Jahué**
சாக்டா: **Chihowa**
சி: **Iehōva**
சிப்பேவா: **Jehovah**
சிலூபா: **Yehowa**
சின் (ஹக்கா): **Zahova**
சுகுமா: **Yahuwa**; **Jakwe**
சூக்கீஸ்: **Jiowa**
செசோத்தோ: **Yehofa**
செரோக்கீ: **Yihowa**
செனிகா: **Ya'wĕn**
சென்கெல்: **Yawe**
டகோடா: **Jehowa**
டச்சு: **Jehovah**
டிம்னே: **Yehŏ́fa**; **Yehofa**
டூஆலா: **Yehowa**
டோங்கன்: **Jihova**; **Sihova**
டோங்கா: **Jehova**
டோபு: **Ieoba**
தஹித்தியன்: **Iehova**
தாய்: **Yahowa**
தேகி-இபூ: **Yawe**
தோவரிபி: **Jehova**; **Iehova**
நகான்டோ: **Yawe**
நடோம்பா: **Yawe**
நவஜோ: **Jîho'vah**
நவ்ரூவன்: **Jehova**
நாகா, அங்கமி: **Jihova**
நாகா, கோன்யாக்: **Jihova**
நாகா, சங்டம்: **Jihova**
நாகா, மாவோ: **Jihova**
நாகா, லோத்தா: **Jihova**
நாகா, வட ரெங்மா: **Jihova**
நார்ரின்யேரி: **Jehovah**

நான்டி: **Jehova**
நுகுவோரோ: **Jehova**
நெம்பி: **Jehovah**
நென்கோன் (அல்லது, மாரே): **Iehova**
பங்கி: **Yawe**
படாக் (டோபா): **Jahowa**
புல்லோம் சோ: **Jehovah**
பூபே: **Yehovah**
பெங்கா: **Jĕhova**
போர்ச்சுகீஸ்: **Iáhve**
போலியா: **Yawe**
போலிஷ்: **Jehowa**
மபவுங்வே (மயேனின் கிளைமொழி): **Jehova**
மயேன்: **Yeôva**
மலகாஸி: **Jehovah**; **Iehôvah**
மஸ்கோஜி: **Cehofv**
மார்க்யுசன்: **Iehova**
மார்ஷலீஸ்: **Jeova**
மாலோ: **Iova**
மாஸ்கெலைநெஸ்: **Iova**
மிசிமா-பனேயாதி: **Iehova**
மிசோ: **Jehovan**; **Jihova'n**
மெரியம்: **Iehoua**
மென்டாவாய்: **Jehoba**
மோட்டு: **Iehova**
மோர்ட்லோகீஸ்: **Jioua**
மோஹாக்: **Yehovah**
ராரோடோங்கா: **Jehova**; **Iehova**
ரெரேப்: **Iova**
ரோட்டுமன்: **Jihova**
லவோஷியன்: **Yehowa**
லிங்காலா: **Yawe**
லுண்டா: **Yehova**
லுய்ம்பி: **Yehova**
லுவாலே: **Yehova**
லூக்பாரா: **Yehova**
லூனா: **Yeoba**
லெவோ: **Yawe**
லெவோ: **Yehova**
லேலே: **Jehova**
லோகோ: **Yehova**
லோமோங்கோ: **Yawe**; **Yova**
லோன்வோல்வோல்: **Jehovah**
வாம்பனோக்: **Jehovah**
வெல்ஷ்: **Iehofah**
ஜெர்மன்: **Jehovah**; **Jehova**
ஸாண்டே: **Yekova**
ஸுலு: **Jehova**; **YAHWE**
ஸோஸா: **Yehova**
ஸ்பானிஷ்: **Jehová**; **Yahvé**; **YHWH**; **Yahweh**
ஸ்ரானன்டோங்கோ: **Jehova**
ஸ்வானா: **Jehofa**; **Yehova**; **Yehofa**
ஹவாயன்: **Iehova**
ஹிந்துஸ்தானி: **Yihováh**
ஹிரி மோட்டு: **Iehova**
ஹோ-சன்க் (வின்னெபேகோ): **Jehowa**

(இந்தப் பட்டியலில் உள்ள மொழிகள் தவிர, வேறு பல மொழிகளிலும் கிளைமொழிகளிலும் வெளிவந்த பைபிள்களின் அடிக்குறிப்பில் அல்லது விளக்கவுரையில் கடவுளுடைய பெயர் இருக்கிறது.)

120-க்கும் அதிகமான மொழிகளில்

A6

பட்டியல்: யூதாவிலும் இஸ்ரவேலிலும் இருந்த தீர்க்கதரிசிகள் மற்றும் ராஜாக்கள்

தெற்கிலிருந்த இரண்டு கோத்திர யூதா ராஜ்யத்தின் ராஜாக்கள்

997
ரெகொபெயாம்: 17 வருஷங்கள்

980
அபியா (அபியாம்): 3 வருஷங்கள்

978
ஆசா: 41 வருஷங்கள்

937
யோசபாத்: 25 வருஷங்கள்

913
யோராம்: 8 வருஷங்கள்

சுமார் 906
அகசியா: 1 வருஷம்

சுமார் 905
அத்தாலியாள் ராணி: 6 வருஷங்கள்

898
யோவாஸ்: 40 வருஷங்கள்

858
அமத்சியா: 29 வருஷங்கள்

829
உசியா (அசரியா): 52 வருஷங்கள்

தீர்க்கதரிசிகள்

கி.மு. 1000

கி.மு. 950

எலியா

எலிசா

கி.மு. 900

கி.மு. 850

யோனா

யோவேல்

ஆமோஸ்

கி.மு. 800

வடக்கிலிருந்த பத்துக் கோத்திர இஸ்ரவேல் ராஜ்யத்தின் ராஜாக்கள்

997
யெரொபெயாம்: 22 வருஷங்கள்

சுமார் 976
நாதாப்: 2 வருஷங்கள்

சுமார் 975
பாஷா: 24 வருஷங்கள்

ஏலா: 2 வருஷங்கள்

சுமார் 952
சிம்ரி: 7 நாட்கள் (சுமார் 951)

சுமார் 947
உம்ரி, திப்னி: 4 வருஷங்கள்

சுமார் 940
உம்ரி (மட்டும்): 8 வருஷங்கள்

ஆகாப்: 22 வருஷங்கள்

சுமார் 920
அகசியா: 2 வருஷங்கள்

சுமார் 917
யோராம்: 12 வருஷங்கள்

சுமார் 905
யெகூ: 28 வருஷங்கள்

876
யோவாகாஸ்: 14 வருஷங்கள்

சுமார் 862
யோவாகாஸ், யோவாஸ்: 3 வருஷங்கள்

சுமார் 859
யோவாஸ் (மட்டும்): 16 வருஷங்கள்

சுமார் 844
இரண்டாம் யெரொபெயாம்: 41 வருஷங்கள்

சுமார் 803

தெற்கு ராஜ்யத்தின் ராஜாக்கள்
(தொடர்ச்சி)

உசியா (அசரியா): 52 வருஷங்கள்

777

யோதாம்: 16 வருஷங்கள்

762

ஆகாஸ்: 16 வருஷங்கள்

746

எசேக்கியா: 29 வருஷங்கள்

716

மனாசே: 55 வருஷங்கள்

ஆமோன்: 2 வருஷங்கள்

661

659

யோசியா: 31 வருஷங்கள்

யோவாகாஸ்: 3 மாதங்கள்

628

யோயாக்கீம்: 11 வருஷங்கள்

618

யோயாக்கீன்: 3 மாதங்கள், 10 நாட்கள்

617

சிதேக்கியா: 11 வருஷங்கள்

607

நேபுகாத்நேச்சார் தலைமையில் வரும் பாபிலோனிய படை எருசலேமையும் ஆலயத்தையும் அழிக்கிறது. தாவீதின் வம்சத்தில் வந்த ராஜாக்களில் கடைசியாகப் பூமியில் ஆட்சி செய்கிற சிதேக்கியா பதவி இழக்கிறார்

கி.மு. 800

ஓசியா

மீகா

ஏசாயா

கி.மு. 750

கி.மு. 700

நாகூம்

செப்பனியா

எரேமியா

கி.மு. 650

ஆபகூக்

ஒபதியா

எசேக்கியேல்

தானியேல்

கி.மு. 600

வடக்கு ராஜ்யத்தின் ராஜாக்கள்
(தொடர்ச்சி)

சுமார் 803

சகரியா: பதிவின்படி ஆட்சிக்காலம் 6 மாதங்கள் மட்டுமே

சுமார் 791

சல்லூம்: 1 மாதம்

சுமார் 780

மெனாகேம்: 10 வருஷங்கள்

சுமார் 778

பெக்காகியா: 2 வருஷங்கள்

பெக்கா: 20 வருஷங்கள்

சுமார் 758

ஓசெயா: சுமார் 748-லிருந்து 9 ஆண்டுகள்

சுமார் 748

740

சமாரியாவை அசீரியா கைப்பற்றி, இஸ்ரவேலை ஆதிக்கம் செய்கிறது; இஸ்ரவேலின் பத்துக் கோத்திர வடக்கு ராஜ்யம் முடிவுக்கு வருகிறது

சுமார் 748-ல் ஓசெயாவின் கைக்கு ஆட்சி முழுமையாக வந்திருக்கலாம் அல்லது அவருடைய ஆட்சிக்கு அசீரிய பேரரசன் மூன்றாம் திகிலாத்பிலேசரின் ஆதரவு கிடைத்திருக்கலாம்

ஏதோவொரு விதத்தில், சகரியா ஆட்சி செய்ய ஆரம்பித்தார்; ஆனால் அநேகமாக, சுமார் 792 வரை அவருக்கு ராஜ அதிகாரம் முழுமையாகக் கிடைக்கவில்லை

A7 இயேசுவின் பூமிக்குரிய வாழ்க்கையில் நடந்த முக்கியச் சம்பவங்கள்

நான்கு சுவிசேஷப் புத்தகங்களிலிருந்து காலவரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளது

பின்வரும் அட்டவணைகளோடு வரைபடங்களும் இருக்கின்றன; இயேசு பயணம் செய்த இடங்களையும், பிரசங்கம் செய்த இடங்களையும் அவை காட்டுகின்றன. வரைபடங்களில் இருக்கும் அம்புக்குறிகள் திசையை மட்டும்தான் காட்டுகின்றன, அவர் போன வழிகளை அல்ல.

இயேசு ஊழியத்தை ஆரம்பிக்கும்வரை

காலம்	இடம்	சம்பவம்	மத்தேயு	மாற்கு	லூக்கா	யோவான்
கி.மு. 3	எருசலேம், ஆலயம்	யோவான் ஸ்நானகருடைய பிறப்பைப் பற்றி காபிரியேல் தூதர் சகரியாவிடம் முன்னறிவிக்கிறார்			1:5-25	
சுமார் கி.மு. 2	நாசரேத்; யூதேயா	இயேசுவின் பிறப்பைப் பற்றி காபிரியேல் தூதர் மரியாளிடம் முன்னறிவிக்கிறார்; மரியாள் தன் சொந்தக்காரப் பெண்ணாகிய எலிசபெத்தைச் சந்திக்கிறாள்			1:26-56	
கி.மு. 2	யூதேய மலைப்பிரதேசம்	யோவான் ஸ்நானகர் பிறக்கிறார், அவருக்குப் பெயர் வைக்கப்படுகிறது; சகரியா தீர்க்கதரிசனம் சொல்கிறார்; யோவான் வனாந்தரத்தில் வாழ்வார்			1:57-80	
கி.மு. 2, சுமார் அக். 1	பெத்லகேம்	இயேசுவின் பிறப்பு; 'அந்த வார்த்தை ஒரு மனிதரானார்'	1:1-25		2:1-7	1:1-5, 9-14
	பெத்லகேம் பக்கத்தில்; பெத்லகேம்	மேய்ப்பர்களுக்குத் தேவதூதர் நல்ல செய்தி சொல்கிறார்; தேவதூதர்கள் கடவுளைப் புகழ்கிறார்கள்; மேய்ப்பர்கள் போய் குழந்தையைப் பார்க்கிறார்கள்			2:8-20	
	பெத்லகேம்; எருசலேம்	இயேசுவுக்கு விருத்தசேதனம் செய்யப்படுகிறது (8-ஆம் நாள்); பெற்றோர் அவரை ஆலயத்துக்குக் கொண்டுபோகிறார்கள் (40-ஆம் நாளுக்குப் பின்பு)			2:21-38	
கி.மு. 1 அல்லது கி.பி. 1	எருசலேம்; பெத்லகேம்; எகிப்து; நாசரேத்	ஜோதிடர்கள் சந்திக்கிறார்கள்; குடும்பம் எகிப்துக்குத் தப்பியோடுகிறது; சிறு பையன்களை ஏரோது கொல்கிறான்; குடும்பம் எகிப்திலிருந்து திரும்பிவந்து நாசரேத்தில் குடியேறுகிறது	2:1-23		2:39, 40	
கி.பி. 12, பஸ்கா	எருசலேம்	12 வயது இயேசு ஆலயத்தில் போதகர்களிடம் கேள்வி கேட்கிறார்			2:41-50	
	நாசரேத்	நாசரேத்துக்குத் திரும்பிப்போகிறார்; பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார்; தச்சுத்தொழில் கற்றுக்கொள்கிறார்; மரியாளுக்கு இன்னும் நான்கு மகன்களும் சில மகள்களும் இருக்கிறார்கள் (மத் 13:55, 56; மாற் 6:3)			2:51, 52	
29, வசந்த காலம்	வனாந்தரம், யோர்தான் ஆறு	யோவான் ஸ்நானகர் ஊழியத்தை ஆரம்பிக்கிறார்	3:1-12	1:1-8	3:1-18	1:6-8, 15-28

வரைபடம் 1

குறியீடுகள்

- ✦ தொடக்கம்
- ● இடம் ஓரளவு உறுதியாகத் தெரியும்
- ○ இடம் அந்தளவு உறுதியாகத் தெரியாது
- ? இந்தப் பகுதியில் இந்த இடம் சரியாக எங்கே இருக்கிறதென்று தெரியாது



இயேசுவுடைய ஊழியத்தின் ஆரம்பம்

வரைபடம் 2

காலம்	இடம்	சம்பவம்	மத்தேயு		மாற்கு	லூக்கா	யோவான்
29, இலையுதிர் காலம்	யோர்தான் ஆறு, யோர்தானுக்கு அக்கரையிலே பெத்தானியாவில் அல்லது அதற்குப் பக்கத்தில்	இயேசு ஞானஸ்நானம் எடுக்கிறார், அபிஷேகம் செய்யப்படுகிறார்; அவர் தன் மகன் என்று யெகோவா அறிவிக்கிறார், ஏற்றுக்கொள்கிறார்	3:13-17		1:9-11	3:21-38	1:32-34
	யூதேயா வனாந்தரம்	பிசாசால் சோதிக்கப்படுகிறார்	4:1-11		1:12, 13	4:1-13	
	யோர்தானுக்கு அக்கரையிலே பெத்தானியா	இயேசுவைக் கடவுளுடைய ஆட்டுக்குட்டி என்று யோவான் ஸ்நானகர் அடையாளம் காட்டுகிறார்; முதல் சீஷர்கள் இயேசுவோடு சேர்ந்துகொள்கிறார்கள்					1:15, 29-51
	கலிலேயாவிலுள்ள கானா; கப்பர்நகூம்	கல்யாணத்தில் செய்த முதல் அற்புதம், தண்ணீரைத் திராட்சமதுவாக மாற்றுகிறார்; கப்பர்நகூமுக்குப் போகிறார்					2:1-12
30, பஸ்கா	எருசலேம்	ஆலயத்தைச் சுத்தப்படுத்துகிறார்					2:13-25
		நிக்கொதேமுவிடம் பேசுகிறார்					3:1-21
	யூதேயா; அயினோன்	யூதேயாவின் கிராமப்புறங்களுக்குப் போகிறார், சீஷர்கள் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள்; இயேசுவைப் பற்றி யோவான் கொடுக்கும் கடைசி சாட்சி					3:22-36
	திபேரியு; யூதேயா	யோவான் சிறையில் தள்ளப்படுகிறார்; இயேசு கலிலேயாவுக்குப் புறப்படுகிறார்	4:12; 14:3-5		6:17-20	3:19, 20	4:1-3
	சமாரியாவிலுள்ள சீகார்	கலிலேயாவுக்குப் போகும் வழியில், சமாரியர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்					4:4-43

யூதேயா வனாந்தரம்



கலிலேயாவில் இயேசு பெரியளவில் செய்த ஊழியம்

வரைபடம் 3A

காலம்	இடம்	சம்பவம்	மத்தேயு	மாற்கு	லூக்கா	யோவான்
30	கலிலேயா	“பரலோக அரசாங்கம் நெருங்கி வந்துவிட்டது” என்று இயேசு முதன்முதலில் அறிவிக்கிறார்	4:17	1:14, 15	4:14, 15	4:44, 45
	கானா; நாசரேத்; கப்பர்நகூம்	அதிகாரியின் மகனைக் குணப்படுத்துகிறார்; ஏசாயா சுருளிலிருந்து வாசிக்கிறார்; கப்பர்நகூமுக்குப் போகிறார்	4:13-16		4:16-31	4:46-54
	கலிலேயா கடல், கப்பர்நகூம் பக்கத்தில்	நான்கு சீஷர்களைக் கூப்பிடுகிறார்: சீமோன், அந்திரேயா யாக்கோபு, யோவான்	4:18-22	1:16-20	5:1-11	
	கப்பர்நகூம்	சீமோனின் மாமியாரையும் மற்றவர்களையும் குணப்படுத்துகிறார்	8:14-17	1:21-34	4:31-41	
	கலிலேயா	நான்கு சீஷர்களோடு கலிலேயாவில் செய்த முதல் பயணம்	4:23-25	1:35-39	4:42, 43	
		தொழுநோயாளி குணமாகிறார்; கூட்டம் பின்தொடர்கிறது	8:1-4	1:40-45	5:12-16	
	கப்பர்நகூம்	பக்கவாத நோயாளியைக் குணப்படுத்துகிறார்	9:1-8	2:1-12	5:17-26	
		மத்தேயுவைக் கூப்பிடுகிறார்; வரி வசூலிப்பவர்களோடு சாப்பிடுகிறார்; விரதத்தைப் பற்றிய கேள்வி	9:9-17	2:13-22	5:27-39	
	யூதேயா	ஜெபக்கூடங்களில் பிரசங்கிக்கிறார்			4:44	
31, பஸ்கா	எருசலேம்	பெத்சதாவில் நோயாளியைக் குணப்படுத்துகிறார்; யூதர்கள் அவரைக் கொல்லப் பார்க்கிறார்கள்				5:1-47
	எருசலேமிலிருந்து (?) திரும்புகிறார்	சீஷர்கள் ஓய்வுநாளில் கதிர்களைப் பறிக்கிறார்கள்; இயேசு “ஓய்வுநாளுக்கு எஜமானாக” இருக்கிறார்	12:1-8	2:23-28	6:1-5	
	கலிலேயா; கலிலேயா கடல்	ஓய்வுநாளில் ஒருவனின் கையைக் குணப்படுத்துகிறார்; மக்கள் பின்தொடர்கிறார்கள்; நிறைய பேர் குணமாகிறார்கள்	12:9-21	3:1-12	6:6-11	
	கப்பர்நகூம் பக்கத்திலுள்ள மலை	12 அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுக்கிறார்		3:13-19	6:12-16	
	கப்பர்நகூமுக்குப் பக்கத்தில்	மலைப்பிரசங்கம்	5:1–7:29		6:17-49	
	கப்பர்நகூம்	படை அதிகாரியின் வேலைக்காரன் குணமடைகிறான்	8:5-13		7:1-10	
	நாயீன்	விதவையின் மகனை உயிரோடு எழுப்புகிறார்			7:11-17	
	திபேரியா; கலிலேயா (நாயீன் அல்லது அதற்குப் பக்கத்தில்)	யோவான், இயேசுவிடம் சீஷர்களை அனுப்புகிறார்; சிறுபிள்ளைகளுக்குச் சத்தியம் வெளிப்படுத்தப்படுகிறது; மென்மையான நுகத்தடி	11:2-30		7:18-35	
	கலிலேயா (நாயீன் அல்லது அதற்குப் பக்கத்தில்)	பாவியான பெண் அவர் பாதங்களில் வாசனை எண்ணெய் ஊற்றுகிறாள்; கடனாளிகள் உவமை			7:36-50	
	கலிலேயா	12 பேருடன், இரண்டாவது ஊழியப் பயணம்			8:1-3	
		பேய்களைத் துரத்துகிறார்; மன்னிக்க முடியாத பாவம்	12:22-37	3:19-30		
		யோனாவின் அடையாளத்தை மட்டும் தருகிறார்	12:38-45			
		அவருடைய அம்மாவும் சகோதரர்களும் வருகிறார்கள்; சீஷர்கள்தான் தன் சொந்தக்காரர்கள் என்று சொல்கிறார்	12:46-50	3:31-35	8:19-21	



காலம்	இடம்	சம்பவம்	மத்தேயு	மாற்கு	லூக்கா	யோவான்
31 அல்லது 32	கப்பர்நகூம் பகுதி	கடவுளுடைய அரசாங்கம் பற்றிய உவமைகளை இயேசு சொல்கிறார்	13:1-53	4:1-34	8:4-18	
	கலிலேயா கடல்	படகிலிருந்து புயலை அடக்குகிறார்	8:18, 23-27	4:35-41	8:22-25	
	கதரா பகுதி	பேய்களைப் பன்றிகளுக்குள் அனுப்புகிறார்	8:28-34	5:1-20	8:26-39	
	ஒருவேளை கப்பர்நகூம்	இரத்தப்போக்கால் அவதிப்படும் பெண்ணைக் குணப்படுத்துகிறார்; யவீருவின் மகளை உயிரோடு எழுப்புகிறார்	9:18-26	5:21-43	8:40-56	
	கப்பர்நகூம் (?)	பார்வை இல்லாதவர்களையும், பேச முடியாதவர்களையும் குணப்படுத்துகிறார்	9:27-34			
	நாசரேத்	சொந்த ஊரில் மறுபடியும் நிராகரிக்கப்படுகிறார்	13:54-58	6:1-5		
	கலிலேயா	கலிலேயாவில் மூன்றாம் பயணம்; அப்போஸ்தலர்களை அனுப்பி ஊழியத்தை விரிவுபடுத்துகிறார்	9:35–11:1	6:6-13	9:1-6	
	திபேரியா	யோவான் ஸ்நானகருடைய தலை வெட்டப்படுகிறது; இயேசுவை நினைத்து ஏரோது குழப்பமடைகிறான்	14:1-12	6:14-29	9:7-9	
32, பஸ்கா நெருங்குகிறது (யோவா 6:4)	கப்பர்நகூம் (?); கலிலேயா கடலின் வடகிழக்கு	ஊழியம் முடிந்து அப்போஸ்தலர்கள் திரும்பி வருகிறார்கள்; 5,000 ஆண்களுக்கு இயேசு உணவளிக்கிறார்	14:13-21	6:30-44	9:10-17	6:1-13
	கலிலேயா கடலின் வடகிழக்கு; கெனேசரேத்	இயேசுவை ராஜாவாக்க மக்கள் முயற்சி செய்கிறார்கள்; கடல்மேல் நடக்கிறார்; நிறைய பேரைக் குணப்படுத்துகிறார்	14:22-36	6:45-56		6:14-21
	கப்பர்நகூம்	“வாழ்வு தரும் உணவு நான்தான்” என்று சொல்கிறார்; நிறைய பேர் அதிர்ச்சியடைந்து விலகிப்போகிறார்கள்				6:22-71
32, பஸ்காவுக்குப் பின்பு	ஒருவேளை கப்பர்நகூம்	மனித பாரம்பரியங்களை அம்பலமாக்குகிறார்	15:1-20	7:1-23		7:1
	பெனிக்கே; தெக்கப்போலி	சீரியாவிலுள்ள பெனிக்கேயைச் சேர்ந்த பெண்ணின் மகளைக் குணப்படுத்துகிறார்; 4,000 ஆண்களுக்கு உணவு தருகிறார்	15:21-38	7:24–8:9		
	மக்தலா	யோனாவின் அடையாளத்தை மட்டும் தருகிறார்	15:39–16:4	8:10-12		

வரைபடம் 3B





கலிலேயா கடலுக்குப் பக்கத்தில் நடப்பவை

(இந்தக் கடல் கெனேசரேத்து ஏரி, திபேரியா கடல் என்றும் அழைக்கப்படுகிறது)

1. படகிலிருந்து புயலை அடக்குகிறார்
2. பேய்களைப் பன்றிகளுக்குள் அனுப்புகிறார்
3. 5,000 ஆண்களுக்கு உணவு கொடுக்கிறார்
4. கடல்மேல் நடக்கிறார்
5. 4,000 ஆண்களுக்கு உணவு கொடுக்கிறார்
6. அவர் மலைப்பிரசங்கம் கொடுத்த இடம் என்று கருதப்படுகிறது

காலம்	இடம்	சம்பவம்	மத்தேயு		மாற்கு	லூக்கா	யோவான்
32, பஸ்காவுக்குப் பின்பு	கலிலேயா கடல்; பெத்சாயிதா	பெத்சாயிதாவுக்குப் படகில் போகிறார்கள், பரிசேயர்களின் புளித்த மாவைப் பற்றி இயேசு எச்சரிக்கிறார்; பார்வை இல்லாதவனைக் குணப்படுத்துகிறார்	16:5-12		8:13-26		
	பிலிப்புச் செசரியா பகுதி	பரலோக அரசாங்கத்தின் சாவிகள்; தன்னுடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றி முன்னறிவிக்கிறார்	16:13-28		8:27–9:1	9:18-27	
	ஒருவேளை எர்மோன் மலை	தோற்றம் மாறுகிறார்; யெகோவா பேசுகிறார்	17:1-13		9:2-13	9:28-36	
	பிலிப்புச் செசரியா பகுதி	பேய்பிடித்த பையனைக் குணப்படுத்துகிறார்	17:14-20		9:14-29	9:37-43	
	கலிலேயா	தன் மரணத்தைப் பற்றி மறுபடியும் முன்னறிவிக்கிறார்	17:22, 23		9:30-32	9:43-45	
	கப்பர்நகூம்	மீன் வாயிலிருந்து எடுத்த காசில் வரி கட்டுகிறார்	17:24-27				
		பரலோக அரசாங்கத்தில் உயர்ந்தவர்; உவமைகள்: காணாமல்போன ஆடு, மன்னிக்காத அடிமை	18:1-35		9:33-50	9:46-50	
	கலிலேயா-சமாரியா	பரலோக அரசாங்கத்துக்காக எல்லாவற்றையும் ஒதுக்கி வைக்கும்படி எருசலேமுக்குப் போகும் வழியில் சீஷர்களிடம் சொல்கிறார்	8:19-22			9:51-62	7:2-10

யூதேயாவில் இயேசு பிற்பாடு செய்த ஊழியம்

32, கூடாரப் பண்டிகை	எருசலேம்	பண்டிகையின்போது கற்பிக்கிறார்; கைது செய்வதற்கு அதிகாரிகள் அனுப்பப்படுகிறார்கள்					7:11-52
		“நான் இந்த உலகத்துக்கு ஒளி” என்று சொல்கிறார்; பிறவியிலேயே கண்தெரியாதவனைக் குணப்படுத்துகிறார்					8:12–9:41
	ஒருவேளை யூதேயா	70 பேரை அனுப்புகிறார்; சந்தோஷமாகத் திரும்பி வருகிறார்கள்.				10:1-24	
	யூதேயா; பெத்தானியா	நல்ல சமாரியனின் உவமை; மரியாள் மற்றும் மார்த்தாளின் வீட்டுக்குப் போகிறார்				10:25-42	
	ஒருவேளை யூதேயா	மாதிரி ஜெபத்தை மறுபடியும் கற்றுக்கொடுக்கிறார்; விடாப்பிடியாகக் கெஞ்சும் நண்பனின் உவமை				11:1-13	
		கடவுளின் சக்தியால் பேய்களைத் துரத்துகிறார்; மறுபடியும் யோனாவின் அடையாளத்தை மட்டும் கொடுக்கிறார்				11:14-36	
		பரிசேயர்களோடு சாப்பிடுகிறார்; பரிசேயர்களின் வெளிவேஷத்தைக் கண்டனம் செய்கிறார்				11:37-54	
		உவமைகள்: புத்தியில்லாத பணக்காரன், உண்மையுள்ள நிர்வாகி				12:1-59	
		கூன்விழுந்த பெண்ணை ஓய்வுநாளில் குணப்படுத்துகிறார்; உவமைகள்: கடுகு விதை, புளித்த மாவு				13:1-21	
32, ஆலய அர்ப்பணப் பண்டிகை	எருசலேம்	உவமைகள்: நல்ல மேய்ப்பர், ஆட்டுத்தொழுவம்; அவர்மேல் கல்லெறிய யூதர்கள் முயற்சி செய்கிறார்கள்; யோர்தானுக்கு அக்கரையில் உள்ள பெத்தானியாவுக்குப் போகிறார்					10:1-39



யோர்தானுக்குக் கிழக்கே இயேசு பிற்பாடு செய்த ஊழியம்

வரைபடம் 5

காலம்	இடம்	சம்பவம்	மத்தேயு	மாற்கு	லூக்கா	யோவான்
32, ஆலய அர்ப்பணப் பண்டிகைக்குப் பின்பு	யோர்தானுக்கு அக்கரையிலுள்ள பெத்தானியா	யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடத்துக்குப் போகிறார்; நிறைய பேர் இயேசுமேல் விசுவாசம் வைக்கிறார்கள்				10:40-42
	பெரேயா	நகரங்களிலும் கிராமங்களிலும் கற்றுக்கொடுக்கிறார், எருசலேமை நோக்கிப் போகிறார்			13:22	
		இடுக்கமான கதவு வழியாகப் போகச் சொல்கிறார்; எருசலேமுக்காகப் புலம்புகிறார்			13:23-35	
	ஒருவேளை பெரேயா	மனத்தாழ்மையைக் கற்றுக்கொடுக்கிறார்; உவமைகள்: முதன்மையான இடம், சாக்குப்போக்கு சொன்ன விருந்தாளிகள்			14:1-24	
		சீஷருக்குரிய பொறுப்புகளை யோசித்துப் பார்ப்பது			14:25-35	
		உவமைகள்: காணாமல்போன ஆடு, தொலைந்துபோன காசு, ஊதாரி மகன்			15:1-32	
		உவமைகள்: அநீதியான நிர்வாகி, பணக்காரனும் லாசருவும்			16:1-31	
		பாவக்குழியில் விழ வைக்கிற காரியங்கள், மன்னிப்பு, விசுவாசம் ஆகியவற்றைப் பற்றிக் கற்றுக்கொடுக்கிறார்			17:1-10	
	பெத்தானியா	லாசருவின் மரணம், உயிர்த்தெழுதல்				11:1-46
	எருசலேம்; எப்பிராயீம்	இயேசுவைக் கொல்ல சதி; அங்கிருந்து புறப்படுகிறார்				11:47-54
	சமாரியா; கலிலேயா	பத்துத் தொழுநோயாளிகளைக் குணப்படுத்துகிறார்; கடவுளுடைய அரசாங்கம் எப்படி வருமென்று சொல்கிறார்			17:11-37	
	சமாரியா அல்லது கலிலேயா	உவமைகள்: விடாமல் கெஞ்சும் விதவை, பரிசேயனும் வரி வசூலிப்பவனும்			18:1-14	
	பெரேயா	திருமணம், விவாகரத்து பற்றிக் கற்றுக்கொடுக்கிறார்	19:1-12	10:1-12		
		குழந்தைகளை ஆசீர்வதிக்கிறார்	19:13-15	10:13-16	18:15-17	
		பணக்காரனின் கேள்வி; திராட்சைத் தோட்ட வேலையாட்கள் மற்றும் சமமான கூலி பற்றிய உவமை	19:16–20:16	10:17-31	18:18-30	
	ஒருவேளை பெரேயா	தன் மரணத்தைப் பற்றி மூன்றாவது தடவை முன்னறிவிக்கிறார்	20:17-19	10:32-34	18:31-34	
		யாக்கோபும் யோவானும் கடவுளுடைய அரசாங்கத்தில் முக்கிய இடம் கேட்கிறார்கள்	20:20-28	10:35-45		
	எரிகோ	வழியாகப் போகிறார், கண் தெரியாத இரண்டு பேரைக் குணப்படுத்துகிறார்; சகேயுவைச் சந்திக்கிறார்; பத்து மினாவைப் பற்றிய உவமை	20:29-34	10:46-52	18:35–19:28	



எருசலேமில் இயேசு செய்த கடைசி ஊழியம்

வரைபடம் 6

காலம்	இடம்	சம்பவம்	மத்தேயு	மாற்கு	லூக்கா	யோவான்
33, நிசான் 8	பெத்தானியா	பஸ்காவுக்கு ஆறு நாட்கள் முன்பு இயேசு வந்துசேருகிறார்				11:55–12:1
நிசான் 9	பெத்தானியா	அவர் தலையிலும் பாதத்திலும் மரியாள் வாசனை எண்ணெயை ஊற்றுகிறாள்	26:6-13	14:3-9		12:2-11
	பெத்தானியா-பெத்பகே-எருசலேம்	எருசலேமுக்குள் நுழைகிறார், கழுதையின்மேல் வெற்றிபவனி	21:1-11, 14-17	11:1-11	19:29-44	12:12-19
நிசான் 10	பெத்தானியா-எருசலேம்	அத்திமரத்தைச் சபிக்கிறார்; ஆலயத்தை மறுபடியும் சுத்தப்படுத்துகிறார்	21:18, 19; 21:12, 13	11:12-17	19:45, 46	
	எருசலேம்	முதன்மை குருமார்களும் வேத அறிஞர்களும் இயேசுவைக் கொல்ல சதித்திட்டம் போடுகிறார்கள்		11:18, 19	19:47, 48	
		யெகோவா பேசுகிறார்; இயேசு தன்னுடைய மரணத்தை முன்னறிவிக்கிறார்; யூதர்கள் விசுவாசம் வைக்க மறுப்பது ஏசாயா தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்				12:20-50
நிசான் 11	பெத்தானியா-எருசலேம்	பட்டுப்போன அத்தி மரத்திலிருந்து பாடம்	21:19-22	11:20-25		
	எருசலேம், ஆலயம்	அவருடைய அதிகாரத்தைப் பற்றிய கேள்வி; இரண்டு மகன்களைப் பற்றிய உவமை	21:23-32	11:27-33	20:1-8	
		உவமைகள்: கொலைவெறி பிடித்த தோட்டக்காரர்கள், திருமண விருந்து	21:33–22:14	12:1-12	20:9-19	
		கடவுளும் ரோம அரசனும், உயிர்த்தெழுதல், தலைசிறந்த கட்டளை போன்ற கேள்விகளுக்குப் பதில்	22:15-40	12:13-34	20:20-40	
		கிறிஸ்து தாவீதின் மகனா என்று கூட்டத்தாரிடம் கேட்கிறார்	22:41-46	12:35-37	20:41-44	
		வேத அறிஞர்களையும் பரிசேயர்களையும் கண்டனம் செய்கிறார்	23:1-39	12:38-40	20:45-47	
		விதவையின் காணிக்கையைக் கவனிக்கிறார்		12:41-44	21:1-4	
	ஒலிவ மலை	எதிர்கால பிரசன்னத்துக்கு அடையாளம்	24:1-51	13:1-37	21:5-38	
		உவமைகள்: பத்துக் கன்னிப்பெண்கள், தாலந்து, செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள்	25:1-46			
நிசான் 12	எருசலேம்	அவரைக் கொல்ல யூதத் தலைவர்கள் சதி	26:1-5	14:1, 2	22:1, 2	
		காட்டிக்கொடுக்க யூதாஸ் ஏற்பாடு செய்கிறான்	26:14-16	14:10, 11	22:3-6	
நிசான் 13 (வியாழன் மதியம்)	எருசலேமிலும் அதற்குப் பக்கத்திலும்	கடைசி பஸ்காவுக்காக ஏற்பாடு	26:17-19	14:12-16	22:7-13	
நிசான் 14	எருசலேம்	அப்போஸ்தலர்களோடு பஸ்கா உணவைச் சாப்பிடுகிறார்	26:20, 21	14:17, 18	22:14-18	
		அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவுகிறார்				13:1-20



காலம்	நேரம்	சம்பவம்	மத்தேயு		மாற்கு	லூக்கா	யோவான்
நிசான் 14	எருசலேம்	யூதாஸ் காட்டிக்கொடுப்பான் என்று அடையாளம் காட்டுகிறார், அவனை வெளியே அனுப்புகிறார்	26:21-25		14:18-21	22:21-23	13:21-30
		எஜமானின் இரவு விருந்தை ஆரம்பிக்கிறார் (1கொ 11:23-25)	26:26-29		14:22-25	22:19, 20, 24-30	
		பேதுரு தன்னைத் தெரியாதென்று சொல்லிவிடுவார், அப்போஸ்தலர்கள் சிதறிப்போவார்கள் என்றெல்லாம் முன்னறிவிக்கிறார்	26:31-35		14:27-31	22:31-38	13:31-38
		சகாயரை அனுப்புவதாக வாக்குக் கொடுக்கிறார்; உண்மையான திராட்சைக் கொடி உவமை; அன்பு காட்ட வேண்டுமென்ற கட்டளை; அப்போஸ்தலர்களோடு செய்யும் கடைசி ஜெபம்					14:1–17:26
	கெத்செமனே	தோட்டத்தில் மிகுந்த வேதனை; காட்டிக்கொடுக்கப்பட்டு கைது செய்யப்படுகிறார்	26:30, 36-56		14:26, 32-52	22:39-53	18:1-12
	எருசலேம்	அன்னாவின் கேள்விகள்; காய்பாவும் நியாயசங்கமும் விசாரணை; பேதுரு அவரைத் தெரியாதென்று சொல்கிறார்	26:57–27:1		14:53–15:1	22:54-71	18:13-27
		காட்டிக்கொடுத்த யூதாஸ் தூக்குப் போட்டுக்கொள்கிறான் (அப் 1:18, 19)	27:3-10				
		பிலாத்துவிடம், பின்பு ஏரோதுவிடம், மறுபடியும் பிலாத்துவிடம் கொண்டு போகப்படுகிறார்	27:2, 11-14		15:1-5	23:1-12	18:28-38
		அவரை விடுதலை செய்ய பிலாத்து முயற்சி செய்கிறான், யூதர்கள் பரபாசை விடுவிக்கச் சொல்கிறார்கள்; சித்திரவதைக் கம்பத்தில் மரண தண்டனை	27:15-30		15:6-19	23:13-25	18:39–19:16
(மதியம் சுமார் 3 மணி, வெள்ளி)	கொல்கொதா	சித்திரவதைக் கம்பத்தில் இறந்துபோகிறார்	27:31-56		15:20-41	23:26-49	19:16-30
	எருசலேம்	சித்திரவதைக் கம்பத்திலிருந்து உடல் இறக்கப்பட்டு கல்லறையில் வைக்கப்படுகிறது	27:57-61		15:42-47	23:50-56	19:31-42
நிசான் 15	எருசலேம்	குருமார்களும் பரிசேயர்களும் கல்லறைக்குக் காவல்வைத்து, அதை முத்திரை போடுகிறார்கள்	27:62-66				
நிசான் 16	எருசலேமும் சுற்றுப்புறமும்; எம்மாவு	இயேசு உயிரோடு எழுப்பப்படுகிறார்; சீஷர்களுக்கு முன்னால் ஐந்து முறை தோன்றுகிறார்	28:1-15		16:1-8	24:1-49	20:1-25
நிசான் 16-க்குப் பின்பு	எருசலேம்; கலிலேயா	சீஷர்களுக்கு முன்னால் நிறைய தடவை தோன்றுகிறார் (1கொ 15:5-7; அப் 1:3-8); கற்றுக்கொடுக்கிறார்; சீஷராக்கும்படி கட்டளை கொடுக்கிறார்	28:16-20				20:26–21:25
அய்யார் 25	ஒலிவ மலை, பெத்தானியாவுக்குப் பக்கத்தில்	உயிர்த்தெழுந்த பின்பு 40-ஆம் நாளில் பரலோகத்துக்குப் போகிறார் (அப் 1:9-12)				24:50-53	

இணைப்பு B

பைபிளின் செய்தி B1

வரைபடங்கள்

ஆதியாகமப் பதிவும் முன்னோர்களின் பயணமும் B2

எகிப்திலிருந்து பயணம் B3

வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தைக் கைப்பற்றுதல் B4

வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தில் குடியேறுதல் B6

தாவீது மற்றும் சாலொமோனின் ராஜ்யம் B7

தானியேல் முன்னறிவித்த உலக வல்லரசுகள் B9

இயேசுவின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் B10

கிறிஸ்தவம் பரவுகிறது B13

குறியீடுகள்

- ● இடம் ஓரளவு உறுதியாகத் தெரியும்
- ○ இடம் அந்தளவு உறுதியாகத் தெரியாது
  ? சரியான இடம் தெரியாது
- — வழி

எல்லா வரைபடங்களும் வடதிசையைப் பார்த்தபடி இருக்கின்றன

ஓர் இடத்துக்கு அதே காலப்பகுதியில் இன்னொரு பெயரும் இருந்திருந்தால், அது காற்புள்ளிக்குப் பின் கொடுக்கப்பட்டிருக்கும்

ஓர் இடத்தின் பெயர் காலப்போக்கில் மாறியிருந்தால், அது அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டிருக்கும்

விளக்கப்படங்கள்

வழிபாட்டுக் கூடாரமும் தலைமைக் குருவும் B5

சாலொமோன் கட்டிய ஆலயம் B8

முதல் நூற்றாண்டு ஆலயம் B11

காலம்

பூமியில் இயேசுவின் கடைசி வாரம் B12

எபிரெய காலண்டர் B15

அளவுகள்

வணிகமும் வர்த்தகமும் B14

B1 பைபிளின் செய்தி

ஆட்சி செய்ய யெகோவாவுக்கு உரிமை இருக்கிறது. அவர் ஆட்சி செய்யும் விதம் சிறந்தது. பூமியையும் மனிதர்களையும் அவர் எந்த நோக்கத்துக்காகப் படைத்தாரோ, அந்த நோக்கம் நிறைவேறும்.

கி.மு. 4026-க்குப் பின்

ஆட்சி செய்ய யெகோவாவுக்கு உரிமை இருக்கிறதா, அவர் ஆட்சி செய்யும் விதம் சரியானதா என்று “பாம்பு” கேள்வி கேட்கிறது. ஒரு “சந்ததி,” அதாவது வாரிசு, வருவார்; அவர் கடைசியில் பாம்பை, அதாவது சாத்தானை, நசுக்குவார் என்று யெகோவா வாக்குக் கொடுக்கிறார். (ஆதியாகமம் 3:1-5, 15) ஆனாலும், சாத்தானுடைய செல்வாக்கின் கீழ் மனிதர்கள் தங்களையே ஆட்சி செய்ய யெகோவா காலத்தை அனுமதிக்கிறார்.

கி.மு. 1943

வாக்குக் கொடுக்கப்பட்ட “சந்ததி,” ஆபிரகாமின் வழியில் வருமென்று யெகோவா சொல்கிறார்.—ஆதியாகமம் 22:18.

கி.மு. 1070-க்குப் பின்

வாக்குக் கொடுக்கப்பட்ட “சந்ததி,” தாவீது ராஜா மற்றும் அவருடைய மகன் சாலொமோனின் வழியில் வருமென்று யெகோவா உறுதியளிக்கிறார். —2 சாமுவேல் 7:12, 16; 1 ராஜாக்கள் 9:3-5; ஏசாயா 9:6, 7.



கி.பி. 29

வாக்குக் கொடுக்கப்பட்ட ‘சந்ததியும்,’ தாவீதின் சிம்மாசனத்துக்கு வாரிசும் இயேசுதான் என்று யெகோவா அடையாளம் காட்டுகிறார்.—கலாத்தியர் 3:16; லூக்கா 1:31-33; 3:21, 22.



கி.பி. 33

இயேசுவைக் கொல்வதன் மூலம், வாக்குக் கொடுக்கப்பட்ட ‘சந்ததியை’ பாம்பாகிய சாத்தான் தற்காலிகமாகக் காயப்படுத்துகிறான். இயேசுவை யெகோவா பரலோகத்துக்கு உயிர்த்தெழுப்பி, அவருடைய பரிபூரண உயிரின் மதிப்பை ஏற்றுக்கொள்கிறார். அதன் அடிப்படையில் பாவங்களை மன்னித்து, ஆதாமின் சந்ததிக்கு முடிவில்லாத வாழ்வைக் கொடுப்பார்.—ஆதியாகமம் 3:15; அப்போஸ்தலர் 2:32-36; 1 கொரிந்தியர் 15:21, 22.

கி.பி. சுமார் 1914

பாம்பை, அதாவது சாத்தானை, இயேசு பூமிக்குத் தள்ளி, கொஞ்சக் காலம் அங்கே விட்டுவைத்திருக்கிறார்.—வெளிப்படுத்துதல் 12:7-9, 12.

எதிர்காலம்

1,000 வருஷங்களுக்குச் சாத்தானை இயேசு சிறையில் அடைப்பார். பின்பு அவன் தலையை நசுக்குவார், அதாவது அவனை அழிப்பார். யெகோவா எந்த நோக்கத்துக்காக இந்தப் பூமியையும் மனிதர்களையும் படைத்தாரோ, அந்த நோக்கம் நிறைவேறும். அவருடைய பெயர்மீது சுமத்தப்பட்ட களங்கம் நீங்கும், அவர் ஆட்சி செய்யும் விதம்தான் சரியானது என்று நிரூபிக்கப்படும்.—வெளிப்படுத்துதல் 20:1-3, 10; 21:3, 4.

B2

ஆதியாகமப் பதிவும் முன்னோர்களின் பயணமும்

ஆதாம் படைக்கப்படுகிறான் கி.மு. 4026
ஆபிரகாமோடு செய்த ஒப்பந்தம் அமல் கி.மு. 1943
யோசேப்பு இறக்கிறார் கி.மு. 1657

கி.மு. 4000 | கி.மு. 2000 | கி.மு. / கி.பி. | கி.பி. 2000

B3 எகிப்திலிருந்து பயணம்

இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து பயணம், திருச்சட்ட ஒப்பந்தம் கி.மு. 1513

மோசேக்குப் பின்பு யோசுவா தலைவராகிறார் கி.மு. 1473

கி.மு. 4000 | கி.மு. 2000 | கி.மு. / கி.பி. | கி.பி. 2000

B4 வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தைக் கைப்பற்றுதல்

இஸ்ரவேலர்கள் கானானில் நுழைகிறார்கள் கி.மு. 1473
பெரும்பாலான பகுதிகள் கைப்பற்றப்படுகின்றன கி.மு. 1467

கி.மு. 4000 | கி.மு. 2000 | கி.மு. / கி.பி. | கி.பி. 2000

B5

வழிபாட்டுக் கூடாரமும் தலைமைக் குருவும்





தலைமைக் குரு

இஸ்ரவேலுடைய தலைமைக் குருவின் உடையைப் பற்றி யாத்திராகமம் 28-ஆம் அதிகாரம் விளக்குகிறது



வழிபாட்டுக் கூடாரத்தில் இருந்தவை

1 பெட்டி (யாத் 25:10-22; 26:33)

2 திரைச்சீலை (யாத் 26:31-33)

3 திரைச்சீலை தொங்கவிடப்பட்ட தூண் (யாத் 26:31, 32)

4 பரிசுத்த அறை (யாத் 26:33)

5 மகா பரிசுத்த அறை (யாத் 26:33)

6 திரை (யாத் 26:36)

7 திரை தொங்கவிடப்பட்ட தூண் (யாத் 26:37)

8 செம்புப் பாதங்கள் (யாத் 26:37)

9 தூபபீடம் (யாத் 30:1-6)

10 படையல் ரொட்டிகளுக்கான மேஜை (யாத் 25:23-30; 26:35)

11 குத்துவிளக்கு (யாத் 25:31-40; 26:35)

12 நாரிழை விரிப்பு (யாத் 26:1-6)

13 வெள்ளாட்டு மயிராலான கம்பளி (யாத் 26:7-13)

14 செம்மறியாட்டுக் கடாத் தோல் விரிப்பு (யாத் 26:14)

15 கடல்நாய்த் தோல் விரிப்பு (யாத் 26:14)

16 சட்டம் (யாத் 26:15-18, 29)

17 சட்டத்தின் கீழே இருக்கும் வெள்ளிப் பாதம் (யாத் 26:19-21)

18 கம்பு (யாத் 26:26-29)

19 வெள்ளிப் பாதம் (யாத் 26:32)

20 செம்புத் தொட்டி (யாத் 30:18-21)

21 தகன பலிக்கான பலிபீடம் (யாத் 27:1-8)

22 பிரகாரம் (யாத் 27:17, 18)

23 நுழைவாசல் (யாத் 27:16)

24 நாரிழை மறைப்பு (யாத் 27:9-15)



B6

வாக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தில் குடியேறுதல்

கைப்பற்றப்பட்ட தேசம் கோத்திரங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது கி.மு. 1467

சவுல் ராஜாவாக அபிஷேகம் செய்யப்படுகிறார் கி.மு. 1117

கி.மு. 4000 | கி.மு. 2000 | கி.மு. / கி.பி. | கி.பி. 2000

B7

தாவீது மற்றும் சாலொமோனின் ராஜ்யம்

தாவீதின் ஆட்சி கி.மு. 1077-1038 **சாலொமோனின் ஆட்சி** கி.மு. 1037-998
தாவீதுடன் ஒப்பந்தம் செய்யப்படுகிறது சுமார் கி.மு. 1070

கி.மு. 4000 | கி.மு. 2000 | கி.மு. / கி.பி. | கி.பி. 2000

B8

சாலொமோன் கட்டிய ஆலயம்





ஆலயத்தில் இருந்தவை

1. மகா பரிசுத்த அறை (1ரா 6:16, 20)
2. பரிசுத்த அறை (2நா 5:9)
3. மாடி அறைகள் (1நா 28:11)
4. பக்கவாட்டு அறைகள் (1ரா 6:5, 6, 10)
5. யாகீன் (1ரா 7:21; 2நா 3:17)
6. போவாஸ் (1ரா 7:21; 2நா 3:17)
7. நுழைவு மண்டபம் (1ரா 6:3; 2நா 3:4) (உயரம் சரியாகத் தெரியாது)
8. செம்புப் பலிபீடம் (2நா 4:1)
9. செம்பு மேடை (2நா 6:13)
10. உட்பிரகாரம் (1ரா 6:36)
11. செம்புக் கடல் தொட்டி (1ரா 7:23)
12. தள்ளுவண்டிகள் (1ரா 7:27)
13. பக்கவாட்டு வாசல் (1ரா 6:8)
14. சாப்பாட்டு அறைகள் (1நா 28:12)



B9 தானியேல் முன்னறிவித்த உலக வல்லரசுகள்

எருசலேமை பாபிலோன் அழிக்கிறது
கி.மு. 607

கி.மு. 4000 கி.மு. 2000 கி.மு. / கி.பி. கி.பி. 2000



பாபிலோன்

தானியேல் 2:32, 36-38; 7:4

கி.மு. 607-ல் நேபுகாத்நேச்சார் ராஜா எருசலேமை அழிக்கிறான்

மேதிய-பெர்சியா

தானியேல் 2:32, 39; 7:5

கி.மு. 539-ல் பாபிலோனைக் கைப்பற்றுகிறது

கி.மு. 537-ல் எருசலேமுக்குத் திரும்பிப்போகும்படி யூதர்களுக்கு கோரேஸ் கட்டளை

கிரேக்கு

தானியேல் 2:32, 39; 7:6

கி.மு. 331-ல் பெர்சியாவை மகா அலெக்ஸாண்டர் கைப்பற்றுகிறார்

ரோம்

தானியேல் 2:33, 40; 7:7

கி.மு. 63-ல் இஸ்ரவேலை ஆளுகிறது

கி.பி. 70-ல் எருசலேமை அழிக்கிறது

ஆங்கிலோ-அமெரிக்கா

தானியேல் 2:33, 41-43

கி.பி. 1914-1918-ல் முதல் உலகப் போரின்போது, ஆங்கிலோ-அமெரிக்க உலக வல்லரசு உருவாகிறது

B10 இயேசுவின் காலத்தில் இஸ்ரவேல் தேசம்

இயேசு பிறக்கிறார் கி.மு. 2
இயேசு இறக்கிறார் கி.பி. 33

கி.மு. 4000 | கி.மு. 2000 | கி.மு. / கி.பி. | கி.பி. 2000

B11 முதல் நூற்றாண்டு ஆலயம்

இரண்டாம் ஆலயத்தின் அஸ்திவாரம் போடப்படுகிறது கி.மு. 536

ஆலயம் அழிக்கப்படுகிறது கி.பி. 70

கி.மு. 4000 | கி.மு. 2000 | கி.மு. / கி.பி. | கி.பி. 2000



ஆலயத்தில் இருந்தவை

1. மகா பரிசுத்த அறை
2. பரிசுத்த அறை
3. தகன பலிக்கான பலிபீடம்
4. செம்புக் கடல் தொட்டி
5. குருமார்களுக்கான இடம்
6. இஸ்ரவேலர்களுக்கான இடம்
7. பெண்களுக்கான இடம்
8. மற்ற தேசத்தாருக்கான இடம்
9. தடுப்புச்சுவர்
10. அரசவை மண்டபம்
11. சாலொமோன் மண்டபம்
12. அன்டோனியா கோட்டை

B12

பூமியில் இயேசுவின் கடைசி வாரம்

கி.பி. 33-ல் **இயேசு இறக்கிறார்**

கி.மு. 2000 | கி.மு. / கி.பி. | கி.பி. 2000

யூதர்களின் நாள் சூரிய அஸ்தமனத்தில் ஆரம்பித்து, சூரிய அஸ்தமனத்தில் முடியும்

எருசலேமும் சுற்றுப்புறமும்

1. ஆலயம்
2. கெத்செமனே தோட்டம் (?)
3. ஆளுநர் மாளிகை
4. காய்பாவின் வீடு (?)
5. ஏரோது அந்திப்பா பயன்படுத்திய மாளிகை (?)
6. பெத்சதா குளம்
7. சீலோவாம் குளம்
8. நியாயசங்க மன்றம் (?)
9. கொல்கொதா (?)
10. அக்கெல்தமா (?)



சூரிய அஸ்தமனம் ▶

சூரிய உதயம் ▶

சூரிய அஸ்தமனம் ▶

நிசான் 8 (ஓய்வுநாள்)

- பஸ்காவுக்கு ஆறு நாட்கள்முன் பெத்தானியாவுக்கு வருகிறார்

யோவான் 11:55–12:1

நிசான் 9

- தொழுநோயாளியாக இருந்த சீமோனின் வீட்டில் விருந்து சாப்பிடுகிறார்
- சடாமாஞ்சி எண்ணெயை இயேசுவின் மேல் மரியாள் ஊற்றுகிறாள்
- இயேசுவையும் லாசருவையும் பார்க்க யூதர்கள் வருகிறார்கள்

மத்தேயு 26:6-13

மாற்கு 14:3-9

யோவான் 12:2-11

- எருசலேமுக்குள் வெற்றிபவனி
- ஆலயத்தில் கற்பிக்கிறார் 1

மத்தேயு 21:1-11, 14-17

மாற்கு 11:1-11

லூக்கா 19:29-44

யோவான் 12:12-19

நிசான் 10

- ராத்திரி பெத்தானியாவில் தங்குகிறார்

- விடியற்காலையில் எருசலேமுக்குப் போகிறார்
- ஆலயத்தைச் சுத்தப்படுத்துகிறார்
- பரலோகத்திலிருந்து யெகோவா பேசுகிறார்

மத்தேயு 21:18, 19; 21:12, 13

மாற்கு 11:12-19

லூக்கா 19:45-48

யோவான் 12:20-50

நிசான் 11

- ஆலயத்தில் உவமைகளைச் சொல்லிக் கற்பிக்கிறார்
- பரிசேயர்களைக் கண்டனம் செய்கிறார்
- விதவை போடும் காணிக்கையைக் கவனிக்கிறார்
- ஒலிவ மலையில், எருசலேமின் அழிவைப் பற்றி முன்னறிவிக்கிறார்; தன்னுடைய எதிர்கால பிரசன்னத்திற்கு அடையாளம் தருகிறார்

மத்தேயு 21:19–25:46

மாற்கு 11:20–13:37

லூக்கா 20:1–21:38

நிசான் 12

- சீஷர்களோடு அமைதியான நாள்
- காட்டிக்கொடுக்க யூதாஸ் திட்டம் போடுகிறான்

மத்தேயு 26:1-5, 14-16

மாற்கு 14:1, 2, 10, 11

லூக்கா 22:1-6

நிசான் 13

- பேதுருவும் யோவானும் பஸ்காவுக்கு ஏற்பாடு செய்கிறார்கள்
- சாயங்காலம் நெருங்கும் நேரத்தில் இயேசுவும் மற்ற அப்போஸ்தலர்களும் வந்துசேருகிறார்கள்

மத்தேயு 26:17-19

மாற்கு 14:12-16

லூக்கா 22:7-13

நிசான் 14

- சீஷர்களோடு பஸ்காவைச் சாப்பிடுகிறார்
- அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவுகிறார்
- யூதாசை அனுப்பிவிடுகிறார்
- எஜமானின் இரவு விருந்தை ஆரம்பித்து வைக்கிறார்

மத்தேயு 26:20-35

மாற்கு 14:17-31

லூக்கா 22:14-38

யோவான் 13:1–17:26

- கெத்செமனே தோட்டத்தில் காட்டிக்கொடுக்கப்பட்டு, கைது செய்யப்படுகிறார்
- அப்போஸ்தலர்கள் ஓடிப்போகிறார்கள் 2
- காய்பாவின் வீட்டில் நியாயசங்கத்தாரால் விசாரிக்கப்படுகிறார் 4
- இயேசுவைத் தெரியாதென்று பேதுரு சொல்கிறார்

மத்தேயு 26:36-75

மாற்கு 14:32-72

லூக்கா 22:39-65

யோவான் 18:1-27

- மறுபடியும் நியாயசங்கத்தாரின் முன் நிற்கிறார் 8
- பிலாத்துவிடமும், 3 பின்பு ஏரோதுவிடமும், 5 மறுபடியும் பிலாத்துவிடமும் கொண்டு போகப்படுகிறார் 3
- மரணதண்டனை விதிக்கப்படுகிறார், கொல்கொதாவில் கொலை செய்யப்படுகிறார் 9
- மதியம் சுமார் மூன்று மணிக்கு இறந்து போகிறார்
- உடல் கீழே இறக்கப்பட்டு அடக்கம் செய்யப்படுகிறது

மத்தேயு 27:1-61

மாற்கு 15:1-47

லூக்கா 22:66–23:56

யோவான் 18:28–19:42

நிசான் 15 (ஓய்வுநாள்)

- இயேசுவின் கல்லறையில் காவலர்களை நிறுத்த பிலாத்து அனுமதிக்கிறார்

மத்தேயு 27:62-66

நிசான் 16

- அடக்கம் செய்வதற்கு நறுமணப் பொருள்கள் கூடுதலாக வாங்கப்படுகின்றன

மாற்கு 16:1

- உயிரோடு எழுப்பப்படுகிறார்
- சீஷர்கள்முன் தோன்றுகிறார்

மத்தேயு 28:1-15

மாற்கு 16:2-8

லூக்கா 24:1-49

யோவான் 20:1-25

B13 கிறிஸ்தவம் பரவுகிறது

B14 வணிகமும் வர்த்தகமும்

திரவ அளவைகள்

கோர் (10 பாத் / 60 ஹின்)
220 லி.

பாத் (6 ஹின்)
22 லி.

ஹின் (12 லாகு)
3.67 லி.

லாகு (1⁄12 ஹின்)
0.31 லி.

திட அளவைகள்

ஹோமர் (1 கோர் / 10 எப்பா)
220 லி.

எப்பா (3 சியா / 10 ஓமர்)
22 லி.

சியா (3⅓ ஓமர்)
7.33 லி.

ஓமர் (1⅘ கேப்)
2.2 லி.

கேப்
1.22 லி.

குவார்ட்
1.08 லி.

நீட்டல் அளவை

பெரிய அளவுகோல் (6 பெரிய முழம்)
3.11 மீ. / 10.2 அடி

அளவுகோல் (6 முழம்)
2.67 மீ. / 8.75 அடி

ஆழம்
1.8 மீ. / 6 அடி

பெரிய முழம்
(7 கையளவு)
51.8 செ.மீ. / 20.4 அங்.

முழம்
(2 சாண் / 6 கையளவு)
44.5 செ.மீ. / 17.5 அங்.

சிறிய முழம்
38 செ.மீ. / 15 அங்.

1 விரலளவு
(¼ கையளவு)
1.85 செ.மீ. / 0.73 அங்.

2 கையளவு
(4 விரலளவு)
7.4 செ.மீ. / 2.9 அங்.

3 சாண்
(3 கையளவு)
22.2 செ.மீ. / 8.75 அங்.



1 ரோம ஸ்டேடியம்
⅛ ரோம மைல்
= 185 மீ. / 606.95 அடி

எபிரெய வேதாகமத்தில் நாணயமும் எடையும்

கேரா (1⁄20 சேக்கல்)
0.57 கிராம்
10 கேரா = 1 பெக்கா

பெக்கா
5.7 கிராம்
2 பெக்கா = 1 சேக்கல்

பிம்
7.8 கிராம்
1 பிம் = 2⁄3 சேக்கல்

சேக்கல்
11.4 கிராம்
50 சேக்கல் = 1 மினா

மினா
570 கிராம்
60 மினா = 1 தாலந்து

தாலந்து
34.2 கிலோ

சேக்கல் எடை

தாரிக்
(பெர்சிய நாணயம், தங்கம்)
8.4 கிராம்
எஸ்றா 8:27

ராத்தல் (ரோம அளவு)
327 கிராம்
யோவான் 12:3
‘சுத்தமான சடாமாஞ்சி என்ற வாசனை எண்ணெய் ஒரு ராத்தல்’

மினா
100 திராக்மா
340 கிராம்
லூக்கா 19:13
= சுமார் 100 நாள் கூலி

தாலந்து
60 மினா
20.4 கிலோ
மத்தேயு 18:24
வெளிப்படுத்துதல் 16:21
= சுமார் 20 வருஷ கூலி

கிரேக்க வேதாகமத்தில் நாணயமும் எடையும்

லெப்டன்
(யூத நாணயம், செம்பு அல்லது வெண்கலம்)
½ குவாட்ரன்
லூக்கா 21:2

குவாட்ரன்
(ரோம நாணயம், செம்பு அல்லது வெண்கலம்)
2 லெப்டன்
மத்தேயு 5:26

அசாரியன்
(ரோம் மற்றும் அதன் மாகாணங்களின் நாணயம், செம்பு அல்லது வெண்கலம்)
4 குவாட்ரன்
மத்தேயு 10:29

தினாரியு
(ரோம நாணயம், வெள்ளி)
64 குவாட்ரன்
3.85 கிராம்
மத்தேயு 20:10

திராக்மா
(கிரேக்க நாணயம், வெள்ளி)
3.4 கிராம்
லூக்கா 15:8

டை-திராக்மா
(கிரேக்க நாணயம், வெள்ளி)
2 திராக்மா
6.8 கிராம்
மத்தேயு 17:24

அந்தியோகியாவின் டெட்ரா-திராக்மா
தீருவின் டெட்ரா-திராக்மா (தீருவின் வெள்ளி சேக்கல்)

டெட்ரா-திராக்மா
(கிரேக்க நாணயம், வெள்ளி; வெள்ளி ஸ்தாத்தேர் காசு என்றும் அழைக்கப்படுகிறது)
4 திராக்மா
13.6 கிராம்
மத்தேயு 17:27

1 நாள் கூலி (12 மணிநேரம்)
2 நாள் கூலி
3 நாள் கூலி
4 நாள் கூலி

B15

எபிரெய காலண்டர்

சராசரி வெப்பநிலை

0°C 32°F | 10°C 50°F | 20°C 68°F | 30°C 86°F

ஏப்.	நிசான் (ஆபிப்)	**14** பஸ்கா **15-21** புளிப்பில்லாத ரொட்டி **16** முதல் விளைச்சலைச் செலுத்துதல்	மழையாலும், உருகும் பனியாலும் யோர்தான் கரைபுரண்டோடுகிறது	பார்லி
மே	அய்யார் (சிவ்)	**14** பிந்திய பஸ்கா	வறண்ட காலம் ஆரம்பம், பெரும்பாலும் தெளிந்த வானம்	கோதுமை
ஜூன்	சீவான்	**6** வாரங்களின் பண்டிகை (பெந்தெகொஸ்தே)	கோடை உஷ்ணம், தெளிவான காற்று	கோதுமை, முதல் அத்திப் பழங்கள்
ஜூலை	தம்மூஸ்		உஷ்ணம் அதிகரிக்கிறது, சில இடங்களில் கடும் பனி	முதல் திராட்சைப் பழங்கள்
ஆக.	ஆப்		உஷ்ணம் உச்சத்தை எட்டுகிறது	கோடைக் கால பழங்கள்
செப்.	எலூல்		உஷ்ணம் நீடிக்கிறது	பேரீச்சை, திராட்சை, அத்தி
அக்.	திஷ்ரி (ஏத்தானீம்)	**1** எக்காள முழக்கம் **10** பாவப் பரிகார நாள் **15-21** கூடாரப் பண்டிகை **22** விசேஷ மாநாடு	கோடை முடிவு, முதல் மழை ஆரம்பம்	உழவு
நவ.	எஷ்வன் (பூல்)		லேசான மழை	ஒலிவப் பழம்
டிச.	கிஸ்லே	**25** ஆலய அர்ப்பணப் பண்டிகை	பலத்த மழை, உறைபனி, மலையில் பனிப்பொழிவு	தொழுவத்தில் மந்தை அடைக்கப் படுகிறது
ஜன.	தேபேத்		கடும் குளிர், மழை, மலையில் பனிப்பொழிவு	தாவரங்கள் வளர்கின்றன
பிப்.	சேபாத்		குளிர் குறைகிறது, மழை தொடர்கிறது	வாதுமைப் பூ பூக்கிறது
மார்ச்	ஆதார்	**14, 15** பூரீம்	அடிக்கடி இடியும் ஆலங்கட்டி மழையும்	ஆளிவிதைச் செடி
	வியாதார்	இந்த மாதம், 19 வருஷங்களில் 7 தடவை சேர்க்கப்பட்டது		

கூடுதல் தகவல்களுக்கு **www.jw.org** வெப்சைட்டைப் பாருங்கள். அல்லது கீழே உள்ள பொருத்தமான முகவரியைப் பயன்படுத்தி யெகோவாவின் சாட்சிகளுக்கு எழுதுங்கள்.